# வாழ்வியற் களஞ்சியம்

**தொகுதி ஐந்து**



தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

Digitized by the Internet Archive
in 2022 with funding from
University of Toronto Scarborough Library

https://archive.org/details/socialscienceshu05unse

# வாழ்வியற் களஞ்சியம்

# வாழ்வியற் களஞ்சியம்

## தொகுதி ஐந்து

உரிப்பொருள் — ஏகாந்தராமையர்

தமிழ்ப் பல்கலைக் கழகம்

தஞ்சாவூர்

ISBN: 81 7090 – 099 - 9

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு 53 – 5

திருவள்ளுவராண்டு 2018 - அக்டோபர் 1987

| | | |
|---|---|---|
| நூல் | : | வாழ்வியற் களஞ்சியம் |
| | | தொகுதி ஐந்து |
| முதன்மைப் பதிப்பாசிரியர் | : | முனைவர் நா. பாலுசாமி |
| மொழி | : | தமிழ் |
| பொருள் | : | களஞ்சியம் |
| பதிப்பு | : | முதற் பதிப்பு 1987 |
| | | மறுபதிப்பு - 2003 **2009** |
| பக்கம் | : | XXIV + 1004 = 1028 |
| தாள் | : | டி.என்.பி.எல் மேப்லித்தோ 16kg |
| அளவு | : | 1/4 டெம்மி |
| நூற்கட்டுமானம் | : | முழு காலிகோ கட்டு |
| விலை | : | உரூ. **800/-** |
| படிகள் | : | **500** |
| அச்சு | : | **நடராஜ் ஆர்ட்ஸ் கிராப்ட்ஸ் சிவகாசி.** |

# வாழ்வியற் களஞ்சியம்

புரவலர்

**மாண்புமிகு டாக்டர் திரு. எம்.ஜி. இராமச்சந்திரன்**

முதலமைச்சர், தமிழ்நாடு

வேந்தர்

**மேதகு திரு. எஸ்.எல். குரானா**

ஆளுநர், தமிழ்நாடு

இணைவேந்தர்

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்**

சட்டம் மற்றும் கல்வி அமைச்சர், தமிழ்நாடு

துணைவேந்தர்

**பேரா. டாக்டர் ச. அகத்தியலிங்கம்**

முதன்மைப்பதிப்பாசிரியர்

**பேரா. டாக்டர் நா. பாலுசாமி**

பொறுப்பாசிரியர்கள்

**பேரா. டாக்டர் அ.மா. பரிமணம்**

**திரு. வீ. சேகர்**

# பதிப்புக் குழு

*முதன்மைப் பதிப்பாசிரியர்:*

பேராசிரியர் டாக்டர் நா. பாலுசாமி, எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., பிஎச்.டி., (4.4.84)

*பதிப்பாசிரியர்:*

1. டாக்டர் (திருமதி) அரோமா குளோரி சாம், எம்.ஏ., பிஎச்.டி., (28.9.83) — பொருளியல், வணிகவியல்
2. டாக்டர் அ.மா. பரிமணம், எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி., (20.9.84) — மொழி, மொழியியல்
3. டாக்டர் இரா. கோலப்பப்பிள்ளை, எம்.ஏ., பிஎச்.டி., (24.7.85) — தத்துவம்
4. டாக்டர். பா. சூரியநாராயணன், எம்.ஏ. (வரலாறு), எம்.ஏ. (அரசியல்), எம்.லிட்., பிஎச்.டி., (1.12.85) — அரசியல்
5. திரு. புலமை வேங்கடாசலம், எம்.ஏ., பி.எல்., (25.7.86 - 15.5.87) — சட்டம்
6. பேராசிரியர் தெ. பாலசுப்பிரமணியன், பி.ஏ. (ஆனர்சு), எம்.ஏ., எம்.ஏ. (விசுகான்சின்), (எப்.ஐ.எச்.) (5.8.86) — வரலாறு, அகழாய்வு

*செய்தி திரட்டுவோர்:*

1. திரு. சு. இராசவேலு, எம்.ஏ., எம்.பில்., (25.4.84) — வரலாறு, அகழாய்வு
2. திரு. வீ. சேகர், எம்.ஏ., எம்.பில்., பி.எட்., (1.8.84) — மொழி, மொழியியல்
3. டாக்டர் சீ. தங்கசாமி, எம்.ஏ., எம்.எட்., பிஎச்.டி., (7.1.85 - 30.4.87) — கல்வியியல்
4. திரு. சீ. பக்தவச்சலு, எம்.ஏ., (4.2.85) — மானிடவியல்
5. திரு. பூ. தர்மலிங்கம், எம்.ஏ., எம்.பில்., (1.8.86) — உளவியல், சமூகவியல்
6. டாக்டர் பெ. சுயம்பு, எம்.ஏ., பிஎச்.டி., (1.8.86) — முதன்மைப் பதிப்பாசிரியரின் செய்தி திரட்டுவோர்

*மொழிவல்லுநர் - மெய்ப்புத்திருத்துநர்:*

திரு. உ. பழநி, எம்.ஏ., பி.ஓ.எல். (1.10.84)

# ஐந்தாம் தொகுதி: கட்டுரையாளர்கள்

**அ. இரா.**

பேரா. அ. இராமசாமி
மனை எண்: 213
கே. கே. நகர்
மதுரை.

**அ. கா.**

டாக்டர் அ. காமாட்சிநாதன், எம். ஏ., பிஎச். டி.
மொழியியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
அண்ணாமலைநகர்.

**அ. கு. சா.**

டாக்டர் திருமதி அரோமா குளோரி சாம்,
எம். ஏ., பிஎச். டி.
பதிப்பாசிரியர் - பொருளியல் / வணிகவியல்
களஞ்சிய மையம்
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

**அ. கே.**

பேரா. அ. கேசவன்
3, மேட்டுக்கம்மாரத் தெரு
காஞ்சிபுரம்.

**அ. கோ.**

டாக்டர் அ. கோபிநாத், எம். ஏ.,
பி. எட்., பிஎச். டி.
இணைப் பேராசிரியர், தமிழ்த் துறை
பிஷப் ஈபர் கல்லூரி
திருச்சி.

**அ. த.**

பேரா. அ. தட்சிணாமூர்த்தி, எம். ஏ., எம். பில்.
தமிழ்ப் பேராசிரியர்
அ. வீ. வா. நினைவு திருபுட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சாவூர் மாவட்டம்.

**அ. பா.**

டாக்டர் அ. பாண்டுரங்கன், எம். ஏ., பிஎச். டி.
தமிழ்ப் பேராசிரியர்
தாகூர் கலைக் கல்லூரி
இளங்கோநகர்
பாண்டிச்சேரி.

**அ. மா. ப.**

டாக்டர் அ. மா. பரிமணம், எம். ஏ., எம். லிட்.,
பிஎச். டி.
பதிப்பாசிரியர் – மொழி/மொழியியல்
களஞ்சிய மையம் – வாழ்வியல்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

**அ. மு. ப.**

பேரா. அ. மு. பரமசிவானந்தம், எம். ஏ.,
எம். லிட்.
'தமிழ்க்கலை' இல்லம்
18, அய்யாவு நாயுடு தெரு
செனாய் நகர்
சென்னை.

**ஆ. க.**

பேரா. ஆ. கணேசன், எம். ஏ.
14, யாகப்பா நகர்
தஞ்சாவூர்.

**ஆ. கா.**

டாக்டர் ஆ. கார்த்திகேயன், எம். ஏ., பிஎச். டி.
மொழியியல் துறை
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

**ஆ. ச.**

திரு ஆ. சந்திரசேகரன், எம். ஏ., எம். எல்.
துணை முதல்வர்
சட்டக் கல்லூரி
கோயம்புத்தூர்.

**ஆ. செ.**

திரு ஆ. செல்லப்பெருமாள், எம். ஏ.
ஆய்வாளர்
மானிடவியல் துறை
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை.

ஆ. ந.

டாக்டர் ஆனந்த நடராசன், எம். ஏ., பிஎச். டி.
இணைப் பேராசிரியர்
தமிழ்த் துறை
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
அண்ணாமலைநகர்.

ஆர். எஸ்.

திரு ஆர். சுப்பிரமணியம், எம். ஏ., எம். எல்.
இளநிலைப் பேராசிரியர்
சட்டக் கல்லூரி
கோயம்புத்தூர்.

ஆர். சீ.

திரு ஆர். சீனிவாசன், எம். ஏ., எம். எட்.
கல்வியியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்
மதுரை.

ஆர். சு.

திரு ஆர். சுப்பிரமணியன், எம். ஏ., எம். லிட்.
இணைப் பேராசிரியர்
காந்திகிராம ஊரகப் பல்கலைக் கழகம்
காந்திகிராமம்.

ஆர். ம.

திருமதி ஆர். மங்கையர்க்கரசி
தமிழ்ப் பேராசிரியை
சாரா டக்கர் கல்லூரி
பாளையங்கோட்டை.

இ. அ.

டாக்டர் இ. அண்ணாமலை, எம். ஏ., பிஎச். டி.
துணை இயக்குநர்
இந்திய மொழிகளின் நடுவண் ஆராய்ச்சி மையம்
மானச கங்கோத்திரி
மைசூர்.

இ. ந.

பேரா. இரத்னா நடராசன்
திட்ட இயக்குநர்
நாட்டுநலப் பணித்திட்டம்
பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகம்
சென்னை.

இர. ஆ.

பேரா. இர. ஆலாலசுந்தரம், எம்.ஏ.
முதல்வர்
திரு வி. க. கல்லூரி
திருவாரூர்.

இரா. அ.

பேரா. இரா. அண்ணாமலை, எம். ஏ., எம். லிட்., பி. எட்.
54, அண்ணா நகர் கிழக்கு
சென்னை.

இரா. அர.

பேரா. இரா. அரங்கசாமி, எம். ஏ., எம். எட்.
வயதுவந்தோர் கல்வித் துறை
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்
மதுரை.

இரா. குரு.

திரு. இரா. குருநாதன், எம். ஏ., எம். பில்.
தமிழ்த் துணைப் பேராசிரியர்
கரந்தைப் புலவர் கல்லூரி
கரந்தை
தஞ்சாவூர் மாவட்டம்.

இரா. கோ.

டாக்டர் இரா. கோலப்பப் பிள்ளை, எம். ஏ., பிஎச். டி.
பதிப்பாசிரியர் – தத்துவம்
களஞ்சிய மையம்
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

இரா. ச.

வித்துவான். அம்பை இரா. சங்கரன்
பேரகராதித் துறை
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

இரா. சு.

திரு இரா. சுவாமிநாதன்
சென்னை உரத் தொழிற்சாலை
மணலி
சென்னை.

**இரா. செ.**

டாக்டர் இரா. செயபால், எம். ஏ., பிஎச். டி.
தமிழ்ப் பேராசிரியர்
அ. வீ. வா. நினைவு திருபுட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சாவூர் மாவட்டம்.

**இரா.பி.தே.**

டாக்டர் இராசம்மாள் பி. தேவதாஸ், எம்.எஸ்சி., பிஎச்.டி.,டி.எஸ்சி.,
இயக்குநர்
அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரி
கோயம்புத்தூர்.

**இரா.வி.**

திருமதி. இரா. விமலா, எம்.ஏ.
துணைப் பேராசிரியர்
மதுரை சமூகப் பணிக் கல்லூரி
அழகர் கோயில் ரோடு
மதுரை.

**இரா.வே.**

டாக்டர் இரா. வேங்கடபதி, எம்.ஏ.,பிஎச்.டி.
பாரதியார் நிர்வாகம் & இயக்குநர் வளர்ச்சிப் பள்ளி
பாரதியார் பல்கலைக் கழகம்
கோயம்புத்தூர்.

**இரா.ஜெ.**

டாக்டர் இரா. ஜெயகோபால், எம்.ஏ.,எம்.எட்., பிஎச்.டி
பேராசிரியர்
முறைசாராக் கல்வித் துறை
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை.

**இல.மு.**

பேரா.இல. முத்துக்குமாரசுவாமி
தத்துவப் பேராசிரியர்
பூம்புகார் கல்லூரி
மேலையூர்
தஞ்சாவூர் மாவட்டம்.

**உ.சு.**

பேரா. உ. சுப்பிரமணிய பிள்ளை, எம்.ஏ.
சமூகவியல் துறை
இந்துக்கல்லூரி
நாகர்கோவில்.

**எம்.இரா.**

டாக்டர் எம். இராசமாணிக்கம், எம்.ஏ., பிஎச்.டி.
உளவியல் பேராசிரியர்
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
அண்ணாமலைநகர்.

**எம்.சீ.**

திரு. எம். சீராளன், பி.ஏ.
நூலகர்
மன்னர் சரபோசி சரசுவதி மகால் நூல்நிலையம்
தஞ்சாவூர்.

**எம்.சு.**

டாக்டர் எம். சுசிலா, எம்.ஏ.,பிஎச்.டி.
மொழியியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
அண்ணாமலைநகர்.

**எம்.சுவா.**

திரு. எம். சுவாமிநாதன், எம்.ஏ.,எம்.லிட்.
உளவியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
அண்ணாமலை நகர்.

**எம்.தே.**

பேரா.எம். தேவதாசு
திரு புட்பம் கல்லூரி
அ.வீ.வா. நினைவு
பூண்டி
தஞ்சாவூர் மாவட்டம்.

**எம்.ப.**

டாக்டர் எம். பரதன், எம்.ஏ,,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
அரசியல் துறை
அஞ்சல் வழிக் கல்வித் துறை
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்
மதுரை.

**எல்.பி.வெ.**

டாக்டர் எல்.பி. வெங்கடரங்கன், எம்.சி.,எம்.பில்., பிஎச்.டி.
துறைத் தலைவர் & பேராசிரியர்
மக்கள் தொகை இயல் மையம்
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
அண்ணாமலைநகர்.

என்.எஸ்.ச.

திரு. என்.எஸ். சத்தியநாதன்
அரசியல் விரிவுரையாளர்
அஞ்சல் வழிக் கல்வித் துறை
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்
மதுரை.

என்.எஸ்.தா.

திரு. என்.எஸ். தாதாச்சாரியார்
1168, பாலோபா சந்து
மேலவீதி
தஞ்சாவூர்.

என்.எஸ்.பா.

டாக்டர் என்.எஸ். பாலசுப்பிரமணியன், எம்.ஏ,, பிஎச்.டி.
துறைத் தலைவர் & பேராசிரியர்
பொருளியல் துறை
என்.எம்.எஸ்.எஸ். வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி
மதுரை.

என்.மா.தெ.

திருமதி என். மாலதி தெய்வராஜன், எம்.எஸ்சி., எம்.ஏ.,எம்.பில்.
விரிவுரையாளர், பொருளியல் துறை
அண்ணாமலைப்பல்கலைக் கழகம்
அண்ணாமலைநகர்.

எஸ்.அ.

பேரா. எஸ். அன்புக்கொடி
318/3, எச்.ஐ.ஜி. பெல்லி ஏரியா
அண்ணா நகர்
சென்னை.

எஸ்.இரா.

டாக்டர் எஸ். இராமன், எம்.ஏ.,பிஎச்.டி.
ஆங்கிலப் பேராசிரியர்
அ.வீ.வா. நினைவு திரு புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சாவூர் மாவட்டம்.

எஸ்.கி.

டாக்டர் எஸ். கிருட்டிணமூர்த்தி, எம்.ஏ.,பிஎச்.டி.
துறைத் தலைவர் & பேராசிரியர்
மக்கள் தொகை இயல் மையம்
பாரதியார் பல்கலைக் கழகம்
கோயம்புத்தூர்.

எஸ்.ச.

திரு. எஸ். சந்தானம்
ஓய்வு பெற்ற முதல்வர்
44, காந்தி நகர் மேற்கு
வேலூர்.

எஸ்.த.

டாக்டர் எஸ். தங்கசாமி, எம்.ஏ.,எம்.எட்.,பிஎச்.டி.
செய்தி திரட்டுநர்-கல்வியியல்
களஞ்சிய மையம்
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

எஸ்.நீ.

டாக்டர் எஸ். நீலகண்டன், எம்.ஏ.,பி.எல்.,எம்,ஏ., பிஎச்.டி.
துறைத் தலைவர் & பேராசிரியர்
பொருளியல் துறை
பாரதிதாசன் பல்கலைக் கழகம்
திருச்சி.

எஸ்.மோ.

டாக்டர் எஸ். மோகன், எம்.ஏ,,எம்.எட்.,பிஎச்.டி.
விரிவுரையாளர்
கல்வியியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்
மதுரை.

ஏ.ஆ.

டாக்டர் ஏ. ஆதித்தன், எம்.ஏ.,பிஎச்.டி.
மொழியியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்
மதுரை.

ஏ.ப.

திரு. ஏ. பரிபூரணம், எம்.ஏ.,எம்.எல்.
துணை முதல்வர்
சட்டக் கல்லூரி
மதுரை.

**க.இரா.**

டாக்டர் க. இராமையன், எம்.,ஏ.,பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
அ.வீ.வா. நினைவு திருபுட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சாவூர் மாவட்டம்.

**க.சு.**

டாக்டர் க. சுப்பிரமணியம், எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
யோவான் கல்லூரி
பாளையங்கோட்டை.

**க.சொ**

செல்வி. கஸ்தூரி சொக்கையா, எம்.ஏ.,எம்.லிட்.
துறைத்தலைவர் & பேராசிரியர்
பொருளியல் துறை
மீனாட்சி மகளிர் கல்லூரி
மதுரை.

**க.நா.**

பேரா. க. நாராயணன், எம்.ஏ.
தத்துவப் பேராசிரியர்
தாகூர் கலைக்கல்லூரி
பாண்டிச்சேரி.

**க.மு.**

டாக்டர் க. முருகையன், எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
மொழியியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

**கா.ஜெ.**

திரு. கா. ஜெயராமன், எம்.காம்.,எம்.பி.ஏ.
வாழ்வியல் மற்றும் சமூக அறிவியல் துறை
அரசினர் பொறியியல் கல்லூரி
கோயம்புத்தூர்.

**கி.இரா.**

டாக்டர் கி. இராசேந்திரன், எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர், உளவியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
அண்ணாமலைநகர்.

**கி.கோ.**

பேரா. கி. கோதண்டபாணி, எம்.ஏ.,பி.ஓ.எல்.
தமிழ்ப் பேராசிரியர் (ஓய்வு)
11/13, திருமகள் இல்லம்
சீநிவாசபுரம்
தஞ்சாவூர்.

**கி.ர.அ.**

பேரா. கி.ர. அனுமந்தன்
113, பி. ஆழ்வார்நகர்
நாகமலை
மதுரை.

**கி.ஸ்ரீ.**

திரு. கி. ஸ்ரீதரன்
தொல்பொருள் அலுவலர்
தமிழ்நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத்துறை
சென்னை.

**கு.அ.**

டாக்டர் கு. அண்ணாதுரை, எம்.ஏ.,பிஎச்.டி.
மொழியியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
அண்ணாமலைநகர்.

**குரு.கோ.**

பேரா.குரு. கோவிந்தராசன், எம்.ஏ.
தமிழ்ப் பேராசிரியர்
அ.வீ.வா. நினைவு திருபுட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சாவூர் மாவட்டம்.

**கே.இரா.**

திரு. கே. இராஜன், எம்.ஏ.,எம்.ஏ., டிப்.இன். ஆர்க்.
கல்வெட்டுத் துறை
தமிழ்ப்பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

**கே.நி.**

டாக்டர் கே. நிர்மலானந்தரெட்டி, எம்.எஸ்சி., பிஎச்.டி.
விரிவுரையாளர்
மலையின மக்கள் ஆய்வு மையம்
தமிழ்ப் பல்கலைக் கழகம்
உதகமண்டலம்.

**கே.ஜி.கி.**

திரு. கே.ஜி. கிருட்டிணன்
711, வைஜந்தி
16ஆவது மெயின் ரோடு
சரஸ்வதிபுரம்
மைசூர்.

**கே.ஜி.சே.**

பேரா. கே.ஜி. சேஷாத்ரி, எம்.ஏ.
கல்லூரி முதல்வர் (ஓய்வு)
வடக்கு வீதி
தஞ்சாவூர்.

**கொ.இ.**

செல்வி. கொ. இந்துமதி, எம்.ஏ.,எம்.பில்.
உளவியல் துறை ஆய்வாளர்
பாரதியார் பல்கலைக் கழகம்
கோயம்புத்தூர்.

**கொ.இல.**

டாக்டர் கொ. இலக்குமணசாமி, எம்.ஏ.,பிஎச்.டி.
பதிப்பாசிரியர்
பேரகராதித் துறை
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

**கோ.இ.**

திரு. கோவை இளஞ்சேரன்
பதிப்புத் துறை
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

**கோ.க.**

திரு.கோ. கருணாநிதி, எம்.ஏ.,எம்.பில்.
சமூகவியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக் கழகப்
பட்ட மேற்படிப்பு விரிவாக்க மையம்
பாளையங் கோட்டை.

**கோ.சு.**

டாக்டர் கோ. சுப்பிரமணியப் பிள்ளை,
எம்.ஏ., எம்.எட்.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
கல்வியியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்
மதுரை.

**ச.அ.**

டாக்டர் ச. அகத்தியலிங்கம், எம்.ஏ.,பிஎச்.டி.
(கேரளா),பிஎச்.டி. (இந்தியானா)
இயக்குநர்
மொழியியல் உயர் ஆய்வு மையம்
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
அண்ணாமலைநகர்.

**ச.அர.**

திரு.ச. அரங்கராசன், எம்.ஏ.,எம்.பில்.,எம்.எச்.இ.டி.
103, ஏ.கே.சாமி நகர்
கீழ்ப்பாக்கம்
சென்னை.

**ச.சா.**

டாக்டர் ச. சாம்பசிவம், எம்.ஏ., பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
அஞ்சல் வழிக் கல்வித் துறை
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்
மதுரை.

**ச.பா.**

பேரா. ச. பாலசுந்தரம்
தமிழ்ப் பேராசிரியர் (ஓய்வு)
367, மேலவீதி
தஞ்சாவூர்.

**சா.ச.செ.**

டாக்டர் சான் சகாயம் செல்லையா, எம்.ஏ.,பி.எச்.டி.
இணைப் பேராசிரியர், அரசியல் துறை
அஞ்சல் வழிக் கல்வித் துறை
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்
மதுரை.

**சா.சா.**

டாக்டர் சா. சாத்தப்பன், எம்.ஏ., பிஎச். டி.
19, பகீரதியம்மாள் தெரு
தியாகராய நகர்
சென்னை.

**சா.தி**

திருமதி சாந்தி திலக் சாமுவேல், எம்.ஏ.
சி.எஸ்.ஐ.சர்ச்
வால்பாறை
கோயம்புத்தூர் மாவட்டம்.

**சா.பா.**

பேரா. சாலமன் பாப்பையா, எம்.ஏ.
1/4, விசுவாசபுரி
மதுரை.

**சி.அ.**

மகாவித்துவான் சி. அருணைவடிவேல் முதலியார்
சித்தாந்தப் பேராசிரியர்
தத்துவ மையம்
தமிழ்ப் பல்கலைக் கழகம்
காஞ்சிபுரம்.

**சி.என்.ந.**

டாக்டர் சி.என். நடராசன், எம்.ஏ., பி.எல்., பிஎச்.டி.
சமூகவியல் இணைப் பேராசிரியர்
மதுரை காமராசர் பல்கலைக் கழகப் பட்ட
மேற்படிப்பு விரிவாக்க மையம்
பாளையங்கோட்டை.

**சி.ஞா.**

டாக்டர் சி. ஞானப்பிரகாசம்
விரிவுரையாளர், அரசியல் துறை
அஞ்சல் வழிக் கல்வித் துறை
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்
மதுரை.

**சி.ந**

டாக்டர் சி. நயினார் முகமது, எம்.ஏ., பிஎச். டி.
முதல்வர்
சமால் முகம்மது கல்லூரி
திருச்சி.

**சி.பா.**

டாக்டர் சி. பாலசுப்பிரமணியன், எம்.ஏ., எம்.லிட்., பிஎச். டி.
பேராசிரியர் & தலைவர், தமிழ் மொழித் துறை
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை.

**சீ.ப.**

திரு. சீ. பக்தவச்சலு, எம்.ஏ.
செய்தி திரட்டுநர் - மானிடவியல்
களஞ்சிய மையம்
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

**சீனி.நா.**

டாக்டர் சீனி. நாராயணன், எம்.ஏ., பிஎச். டி.
பேராசிரியர் & தலைவர்
உளவியல் துறை
பாரதியார் பல்கலைக் கழகம்
கோயம்புத்தூர்.

**சு.**

டாக்டர் சுப்பிரமணியன், எம்.ஏ., பிஎச். டி.
சுத்திகரிப்பு நிறுவனம்
மணலி
சென்னை.

**சு.ஆ.**

திரு. சு. ஆறுமுகம், எம்,ஏ., பிஎல்.ஐ.எஸ்.
நூலக உதவியாளர்
களஞ்சிய மையம்
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

**சு.இரா.**

திரு. சு. இராசவேலு, எம்.ஏ., எம்.பில்.
செய்தி திரட்டுநர், வரலாறு /தொல்லியல்
களஞ்சிய மையம்
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

**சு.ச.**

டாக்டர் சு. சக்திவேல், எம்.ஏ., எம்.ஏ., பிஎச். டி.
மொழியியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
அண்ணாமலைநகர்.

**சு.சா.**

டாக்டர் சு. சாவித்திரி, எம்.ஏ., பிஎச்.டி.
5, கேனல் ரோடு
கீழ்ப்பாக்கம் கார்டன் காலனி
சென்னை.

சு.சு.

பேரா. சு. சுவர்ண காளீச்சுரன்
தமிழ்ப் பேராசிரியர் (ஓய்வு)
தியாகராாசர் காலனி
திருவையாறு
தஞ்சாவூர் மாவட்டம்.

சு.ந.சொ.

பேரா. சு.ந. சொக்கலிங்கம், எம்.ஏ.
கல்லூரிக் கல்வித் துணை இயக்குநர்
18, திருச்செந்தூர் ரோடு
முருகன் குரிச்சி
பாளையங்கோட்டை.

சு.மு.

திரு. சு. முத்துகிருஷ்ணன்
அரசியல் விரிவுரையாளர்
அஞ்சல் வழிக் கல்வித் துறை
மதுரை காமராாசர் பல்கலைக் கழகம்
மதுரை.

சூ.இ.

டாக்டர் சூ. இன்னாசி, எம்.ஏ., பிஎச்.டி.
பேராசிரியர் & தலைவர்
கிறித்தவத் தமிழ் இலக்கியத் துறை
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை.

செ.வை.

பேரா. செ. வைத்தியலிங்கன், எம்.ஏ., எம்.லிட்.
தமிழ் இணைப் பேராசிரியர்
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
அண்ணாமலைநகர்.

செ.வை.ச.

டாக்டர் செ.வை. சண்முகம், எம்.ஏ., பிஎச்.டி.
இயக்குநர்
மொழியியல் உயராய்வு மையம்
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
அண்ணாமலைநகர்.

சே.கூ.

திரு. சே. கூடலிங்கம், எம்.ஏ.
துணைப் பேராசிரியர்
மதுரை சமூகப் பணிக் கல்லூரி
மதுரை.

சை.வே.சி.

பேரா. சை.வே. சிட்டிபாபு
முன்னாள் துணைவேந்தர்
4, இராசாராம் மேத்தா நகர் சாலை
சென்னை.

சோம.லெ.

திரு. சோமலெ
அஞ்சல் அலுவலகக் கட்டிடம் (மாடி)
சாஸ்திரி நகர்
அடையாறு
சென்னை.

ஞா.செ.

திரு. ஞா. செயவீரன், எம்.ஏ., எம்.பில்.
ஆங்கிலத் துணைப் பேராசிரியர்
அ.வீ.வா. நினைவு திரு புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சாவூர் மாவட்டம்.

டி.வி.இரா.

டாக்டர் டி.வி. இராகவராவ், எம்.ஏ., பிஎச்.டி.
இயக்குநர்
மலையின மக்கள் ஆய்வு மையம்
தமிழ்ப் பல்கலைக் கழகம்
உதகமண்டலம்.

த.அ.

திரு த. அகோரம், எம்.ஏ.
தமிழ்த் துணைப் பேராசிரியர்
பூம்புகார் கலைக்கல்லூரி
பூம்புகார்
தஞ்சாவூர் மாவட்டம்.

தா.எ.

டாக்டர் தா. எட்மண்ட்சு, எம்.ஏ., பிஎச்.டி.
வரலாறு, அரசியல் துறைத் தலைவர்
தரங்கம்பாடி பிசப்பு மாணிக்கம் சுந்தரம் கல்லூரி
பொறையாறு.

தா.ஏ.ச.

டாக்டர் தா.ஏ. சண்முகம், எம்.ஏ., பிஎச்.டி.
உளவியல் சிறப்புப் பேராசிரியர்
10, மூன்றாம் குறுக்குத் தெரு
மேற்கு சி.ஐ.டி. நகர்
சென்னை.

**தி.அர.இரா.**

பேரா. தி.அர. இராமச்சந்திரன்
செனாய் நகர்
37, 8 ஆவது குறுக்குத் தெரு
சென்னை.

**தி.க.**

டாக்டர் தி. கல்யாணி, எம்.ஏ., பிஎச்.டி.
அரசியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்
மதுரை.

**தி.சீ.**

டாக்டர் தி. சீனிவாசன், எம்.ஏ., பிஎச்.டி.
உளவியல் பேராசிரியர்
அரசு கலைக் கல்லூரி
கோயம்புத்தூர்.

**தி.சு.**

திரு. தி. சுப்பிரமணியம்
காப்பாளர்
இராசராசன் அருங்காட்சியகம்
தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை
தஞ்சாவூர்.

**தி.மு.**

டாக்டர் தி. முருகரத்தினம், எம்.ஏ., பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
திருக்குறள் இருக்கை
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்
அழகர் கோயில் சாலை
மதுரை.

**தெ.ஞா.**

டாக்டர் தெ. ஞானசுந்தரம், எம்.ஏ., பிஎச்.டி
தமிழ்ப் பேராசிரியர்
சி. கந்தசாமி நாயுடு கல்லூரி
அண்ணாநகர் கிழக்கு
சென்னை.

**தெ.பா.**

பேரா. தெ. பாலசுப்பிரமணியன், எம்.ஏ., எம்.ஏ., (விசுகான்சின்)
பதிப்பாசிரியர், வரலாறு - தொல்லியல்
களஞ்சிய மையம்
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

**தே.ந.**

திரு. தேவ நடராஜன், எம்.ஏ., எப்.ஆர்.இ.எஸ்.
நிதிச் சார்பு அலுவலர்
தமிழக அரசுச் செயலகம்
சென்னை.

**ந.இரா.**

பேரா. ந. இராமநாதன், எம்.ஏ., பி.ஓ.எல்.
முதல்வர்
பெரியார் அஞ்சல்வழிப் பயிற்சிக் கல்லூரி
பெரியார் திடல்
சென்னை.

**ந.க.ம.**

பேரா. ந.க. மங்களமுருகேசன்
வரலாற்றுத் துறை
அஞ்சல் வழிக் கல்வி
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை.

**ந.சு.**

பேரா. ந. சுப்பிரமணியன்
30, கல்யாணி அம்மாள் லேஅவுட்
காந்தி நகர்
உடுமலைப்பேட்டை
கோயம்புத்தூர் மாவட்டம்.

**நடன.கா.**

திரு. நடன காசிநாதன், எம்.ஏ.
துணை இயக்குநர்
தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத் துறை
31, தெற்குக் கூரைச்சாலை
மந்தவெளிப்பாக்கம்
சென்னை.

**ந.மா.**

டாக்டர் ந. மாரியப்பன், எம்.ஏ., பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
தியாகராசர் கல்லூரி
மதுரை.

**ந.மெ.**

திரு. ந. மெய்ப்பொருள், எம்.ஏ.
தமிழ்த் துணைப் பேராசிரியர்
அ.வீ.வா. நினைவு திரு புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சாவூர் மாவட்டம்.

ந.வ.கே.

பேரா. ந.வ. கேசவன்
வரலாற்றுத் துறை
பச்சையப்பன் கல்லூரி
சென்னை.

நா.ப.

பேரா. நா. பக்தவச்சலு
604, அண்ணாநகர் மேற்கு
சென்னை.

நா.ஜெ.

பேரா. நா. ஜெயபாலன்
வரலாற்றுத் துறை
அரசு கலைக்கல்லூரி
கரூர்.

நே.தே.

திரு. நே. தேவசகாயம், எம்.எஸ்சி., எம்.ஏ., எம்.ஏ.
காப்பாட்சியர்-மானிடவியல்
அரசு அருங்காட்சியகம்
சென்னை.

ப.அ.

டாக்டர் பழனி அரங்கசாமி, எம்.ஏ.,பி.ஓ.எல்.
பிஎச்.டி.

234, பெரியார் தெரு
நாகமலை புதுக்கோட்டை
மதுரை.

ப.சு.ம.

பேரா. ப.சு. மணியம்
28/350, இலாலிச்சாலை
சுப்பிரமணியபுரம்
கோயம்புத்தூர்.

ப.ரா.க.

பேரா. ப.ரா. கந்தசாமி, எம்.ஏ.
10-C, வெங்கமேடு
வேலூர்
சேலம் மாவட்டம்.

பா.சூ.

டாக்டர் பா. சூரியநாராயணன், எம்.ஏ., எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.
பதிப்பாசிரியர் – அரசியல்
களஞ்சிய மையம்
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

பா.ஜ.

திரு பா. ஜவகர், எம். ஏ.
காப்பாட்சியர்
அரசு அருங்காட்சியகம்
சென்னை.

பி.ஆர்.ந.

டாக்டர் பி. ஆர். நரசிம்மன், எம். ஏ., பிஎச். டி.
தத்துவத் துறைப் பேராசிரியர்
அருள்மிகு பழனியாண்டவர் கலைப் பண்பாட்டுக்
கல்லூரி
பழனி.

பி.என்.மு.

டாக்டர் பி. என். முத்தையா, எம். ஏ., எம், எட்.,
பிஎச். டி.

கல்வியியல் விரிவுரையாளர்
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்
மதுரை.

பி.எஸ்.பா.

டாக்டர் பி. எஸ். பாலசுப்பிரமணியன், எம். ஏ.,
எம். எட்., பிஎச். டி.

இணைப் பேராசிரியர்
கல்வியியல் துறை
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை.

பி.எஸ்.வே.

பேரா. செல்வி. பி. எஸ். வேதவல்லி, எம். ஏ.
கல்லூரி முதல்வர் (ஓய்வு)
'ரேவதி'
1, இரண்டாவது தெரு
ஸ்ரீபுரம்
சென்னை.

பி.தெ.

டாக்டர் பி. தெட்சிணாமூர்த்தி, எம். ஏ., பிஎச். டி.
தமிழ்ப் பேராசிரியர்
5, வ. உ. சி. தெரு
திருநெல்வேலி.

**பி.பா.உ.**

டாக்டர் பி. பா. உமாமகேசுவரி, எம். ஏ., பிஎச். டி.
முதல்வர்
அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக்கல்லூரி
பழனி.
மதுரை மாவட்டம்.

**பு.கி.க.**

திரு பு. கி. கணேசன், எம். ஏ.
தமிழ்ப் பேராசிரியர்
அய்யநாடார் சானகி அம்மாள் கல்லூரி
சிவகாசி
காமராசர் மாவட்டம்.

**பு.வே.**

புலமை வேங்கடாசலம், எம். ஏ., பி. எல்.,
பதிப்பாசிரியர்-சட்டம்
களஞ்சிய மையம்
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

**பூ.த.**

திரு பூ. தர்மலிங்கம், எம். ஏ., எம். பில்.
செய்தி திரட்டுநர் – சமூகவியல்
களஞ்சிய மையம்
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

**பெ.இரா.**

திரு பெ. இராசாராம்
பீட்டர்சு சாலை
இராயப்பேட்டை
சென்னை.

**பொன்.சு.**

பேரா. பொன். சுப்பிரமணியன்
வரலாற்றுத் துறை
அரசு கலைக் கல்லூரி
செங்கற்பட்டு.

**பொன்.சௌ.**

டாக்டர் பொன். சௌரிராசன், எம். ஏ., பிஎச். டி.
தமிழ்த் துறைத் தலைவர்
திருவேங்கடவன் பல்கலைக் கழகம்
திருப்பதி.

**ம.இர.சி.**

டாக்டர் ம. இரகுராம்சிங், எம். ஏ., எம். எட்., பிஎச். டி.
பேராசிரியர்
தமிழ்நாடு கல்வியாராய்ச்சிப் பயிற்சி நிறுவனம்
சென்னை.

**ம.இரா.த.**

பேரா. ம. இராசசேகரதங்கமணி
வரலாற்றுத் துறை
அரசு கலைக்கல்லூரி
கரூர்.

**ம.கா.**

திரு ம. காந்தி, எம். ஏ., எம். எல்.
விரிவுரையாளர்
டாக்டர் அம்பேத்கார் சட்டக் கல்லூரி
பாண்டிச்சேரி.

**ம.தி.**

டாக்டர் ம. திருநாவுக்கரசு, எம். ஏ., பி. எட்., பிஎச். டி.
முதல்வர்
சி. பி. எம். கல்லூரி
கோறைபுதூர்
கோயம்புத்தூர்.

**ம.ந.பு.**

திருமதி. ம. ந. புஷ்பா, எம். ஏ.
உதவிக் காப்பாட்சியர்
அரசு அருங்காட்சியகம்
சென்னை.

**மா.இரா.**

டாக்டர் மா. இராமலிங்கம், எம். ஏ., பிஎச். டி.
பேராசிரியர் & தமிழ்த் துறைத் தலைவர்
பாரதிதாசன் பல்கலைக் கழகம்
திருச்சி.

**மா.கா.**

டாக்டர் மா. காந்திதாசன், எம். ஏ., பிஎச். டி.,
வரலாற்றுத் துறைத் தலைவர்
வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி
மதுரை.

மா.செ.

டாக்டர் மா. செபஸ்தியான், இ. ச.,எம். ஏ., பிஎச். டி.
முதல்வர்
புனித ஜோசப் கல்லூரி
திருச்சி.

மா.பா.கு.

டாக்டர் மா. பா. குருசாமி, எம். ஏ., எம். லிட்., பிஎச். டி.
துறைத்தலைவர் & பேராசிரியர்
பொருளியல் துறை
ஆதித்தனார் கல்லூரி
திருச்செந்தூர்.

மா.பெ.

டாக்டர் மா. பெரோசு, எம். ஏ., பிஎச். டி.
உளவியல் பேராசிரியர்
கல்வியியல் கல்லூரி
இராமகிருட்டிண வித்தியாலயம்
கோயம்புத்தூர்.

மீ.அ.

திரு மீ. அப்துல் ரசாக் கபூர்கான், எம். ஏ., எம். எல்.
விரிவுரையாளர்
டாக்டர் அம்பேத்கார் சட்டக் கல்லூரி
பாண்டிச்சேரி.

மீ.மு.

டாக்டர் மீனாட்சி முருகரத்தினம், எம். ஏ., பிஎச்.டி.
தமிழ் இணைப் பேராசிரியர்
அஞ்சல் வழிக் கல்வித் துறை
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்
மதுரை.

மு.அ.

பேரா. மு. அருணகிரி, எம். ஏ.,
தமிழ்ப் பேராசிரியர்
தியாகராசர் கல்லூரி
மதுரை.

மு.அ.க.

திரு. முகமது அப்துல் கலாம், எம். ஏ.,
விரிவுரையாளர்
மானிடவியல் துறை
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை.

மு.இரா.

டாக்டர் மு. இராமதாஸ், எம்.ஏ..பிஎச்.டி.
துறைத் தலைவர் & பேராசிரியர்
பொருளியல் துறை
பாண்டிச்சேரிப் பல்கலைக் கழகம்
பாண்டிச்சேரி.

மு.ச.

பேரா. மு. சண்முகம்பிள்ளை,
ஓலைச்சுவடித்துறைப் பேராசிரியர்
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

மு.நா.

டாக்டர் மு. நாகநாதன், எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர், பொருளியல் துறை
சென்னைப் பல்கலைக் கழகம்.
சென்னை.

மு.வை.அ.

பேரா. மு.வை. அரவிந்தன், எம்.ஏ.,
தமிழ்த் துறை
அரசு கலைக் கல்லூரி
கிருட்டிணகிரி
தருமபுரி மாவட்டம்.

வ.தே.சா.

டாக்டர் வ.தே. சாமிநாதன், எம்.ஏ.,பிஎச்.டி.
40, முத்தியாலு செட்டி தெரு
வேப்பேரி அஞ்சல்
சென்னை.

வி.ஆர்.அ.

பேரா. வி.ஆர். அங்கப்பன், எம்.ஏ.,எம்.பில்.
ஆங்கிலத் துறை
அ.வீ.வா. நினைவு திருபுட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சாவூர் மாவட்டம்.

வி.கோ.

டாக்டர் வி. கோமதிநாயகம், எம்.ஏ.,பிஎச்.டி.
பேராசிரியர் & தலைவர்
சமூகவியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
அண்ணாமலைநகர்.

**வீ.ப.**

திரு. வீ. பழநியப்பன், எம்.ஏ.
தமிழ்த் துணைப் பேராசிரியர்
அரசு கலைக் கல்லூரி
சிதம்பரம்.

**வீ.சே.**

திரு. வீ. சேகர், எம்.ஏ.,எம்.பில்.,பி.எட்.
காட்டுக்கூடலூர் அஞ்சல்
பேர்பெரியான் குப்பம் (வழி)
பண்ருட்டி வட்டம்
தெ.ஆ. மாவட்டம்.

**வே.க.**

டாக்டர் வேதகிரி கணேசன், எம்.ஏ.,பிஎச்.டி.
உளவியல் துறை
பாரதியார் பல்கலைக் கழகம்
கோயம்புத்தூர்.

**வே.சா.அ.**

டாக்டர் வே.சா. அருள்ராஜ், எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்ப் பல்கலைக் கழகக் கடலகழாய்வு மையம்
மண்டபம்
இராமநாதபுரம் மாவட்டம்.

**ஹ.சு.**

பேரா. ஹஸ்ரத் சுஹ்ரவர்த்தி
தலைவர்
உருதுத்துறை
ஜமால் முகம்மது கல்லூரி
திருச்சி.

**ஹ.பா.**

டாக்டர் ஹயத் பாஷா, எம்.ஏ.,பிஎச்.டி.
அயல்நாட்டுக் கல்வித் துறை
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

**ஜி.ஆர்.கி.**

டாக்டர் ஜி.ஆர். கிருட்டிணமூர்த்தி, எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
அ.வீ.வா. நினைவு திரு புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சாவூர் மாவட்டம்.

**ஜி.இரா.**

டாக்டர் ஜி. இராஜமோகன், எம்.ஏ.,பிஎச்.டி.
உளவியல் துறை
மாநிலக் கல்லூரி
சென்னை.

**ஜி.வி.**

திரு. ஜி. வினாயகம், எம்.ஏ.,எம்.பில்.
இணைப் பேராசிரியர்
பொருளியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
அண்ணாமலைநகர்.

**ஜெ.கோ.பி.**

டாக்டர் ஜெயா கோதைப் பிள்ளை, எம்.ஏ., எம்.எட்.,பிஎச்.டி.
கல்வியியல் பேராசிரியை
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்
மதுரை.

**ஜெ.நீ.**

டாக்டர் ஜெ. நீதிவாணன், எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
மொழியியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்
மதுரை.

**ஜே.பா.**

டாக்டர் ஜே. பார்த்தசாரதி, எம்.ஏ.,பிஎச்.டி.
விரிவுரையாளர்
மலையின மக்கள் ஆய்வு மையம்
தமிழ்ப் பல்கலைக் கழகம்
உதகமண்டலம்.

**ஜோ.லூ.**

டாக்டர் ஜோசபின் லூயி, எம்.ஏ.,எம்.எட்,,பிஎச்.டி.
கல்வியியல் பேராசிரியை
அன்னை தெரசா பல்கலைக் கழகம்
கோடைக்கானல்.

# சுருக்கக் குறியீட்டு விளக்கம்

| | | |
|---|---|---|
| அகத். | — | அகத்திணையியல் |
| அதி. | — | அதிகாரம் |
| அரங். | — | அரங்கேற்றுகாதை |
| அரும்பத. | — | அரும்பதவுரை |
| அலங். | — | அலங்காரப் படலம் |
| ஆறு. | — | ஆறுமுக நாவலர் |
| இ.வி. | — | இலக்கண விளக்கம் |
| இளம். | — | இளம்பூரணர் |
| இறை. அகப். | — | இறையனாரகப்பொருள் |
| எ-டு. | — | எடுத்துக்காட்டு |
| ஒழி. | — | ஒழிபியல் |
| கலி. | — | கலித்தொகை |
| களவு. | — | களவியல் |
| கற்பு. | — | கற்பியல் |
| காண். | — | காண்டிகை உரை |
| காரிகை. | — | யாப்பருங்கலக்காரிகை |
| கி.பி. | — | கிறித்துவுக்குப்பின் |
| கி.மு. | — | கிறித்துவுக்குமுன் |
| கி.மீ. | — | கிலோ மீட்டர் |
| குறள். | — | திருக்குறள் |
| குறுந். | — | குறுந்தொகை |
| ச.கி.மீ. | — | சதுரக் கிலோ மீட்டர் |
| சீவக. | — | சீவகசிந்தாமணி |
| செய். | — | செய்யுளியல் |
| சொல். | — | சொல்லதிகாரம் |
| திருவள்ளுவ. | — | திருவள்ளுவமாலை |
| திருவாய். | — | திருவாய்மொழி |
| தும்பை. | — | தும்பைத்திணை |
| தொல். | — | தொல்காப்பியம் |
| நம்பி. | — | நம்பியகப்பொருள் |
| நற். | — | நற்றிணை |
| நன். | — | நன்னூல் |

| | | |
|---|---|---|
| பதிற். | — | பதிற்றுப்பத்து |
| ப.பா. | — | பன்னிரு பாட்டியல் |
| பரி. | — | பரிபாடல் |
| புகார். | — | புகார்க் காண்டம் |
| பு.பொ.வெ. | — | புறப்பொருள்வெண்பாமாலை |
| புறத். | — | புறத்திணையியல் |
| புறம். | — | புறநானூறு |
| பிங். | — | பிங்கலம் |
| பி.ம. | — | பிரபந்த மரபியல் |
| பி.வி. | — | பிரயோக விவேகம் |
| பொருந. | — | பொருநராற்றுப்படை |
| பொருள். | — | பொருளதிகாரம் |
| மணி. | — | மணிமேகலை |
| மரபி. | — | மரபியல் |
| மலர் வனம். | — | மலர் வனம் புக்க காதை |
| மீ. | — | மீட்டர் |
| மேற். | — | மேற்கோள் |
| யாப்ப. | — | யாப்பருங்கலம் |
| யா.வி. | — | யாப்பருங்கல விருத்தி |
| ரூ. | — | உரூபாய் |
| வீர. | — | வீரசோழியம் |

# நன்றியுரை

## ஐந்தாம் தொகுதியில் இடம்பெற்றுள்ள ஒளிப்படங்களுக்குப் பயன்பட்ட நூல்கள்

Encyclopaedia Britannica, Encyclopedia Americana, Compton's Encyclopaedia, The Illustrated Encyclopaedia of Mankind, The Art of India By Sivarama Murthi, C., Archaeological Remains, Monuments and Museums, Parts I & II., Larousse Encyclopaedia of Archaeology, The World Book Encyclopaedia.

## ஒளிப்படங்கள் வழங்கிய தனியார் மற்றும் பொது நிறுவனங்கள்

சோவியத்துத் தூதரகம் சென்னை; கலாட்சேத்திரம், அடையாறு, சென்னை; அரசு அருங்காட்சியகம், சென்னை.

மேலே கண்ட நூல்களின் உரிமையாளர்களுக்கும், தனிப்பட்ட பெரு மக்களுக்கும் பொது நிறுவனங்களுக்கும், தமிழ்ப் பல்கலைக் கழக வாழ் வியற் களஞ்சிய மையத்தின் சார்பில் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முந்திய தொகுதிகளைப் போன்றே இத்தொகுதியும் சிறப்பாக அமைவதற்கு ஆலோசனைகள் வழங்கிய மதிப்பிற்குரிய துணைவேந்தர் பேரா. டாக்டர். ச. அகத்தியலிங்கம் அவர்களுக்கு எனது உளமார்ந்த நன்றி உரியது. அயராது உழைத்துவரும் வாழ்வியற் களஞ்சிய அனைத் துப் பணியாளர்க்கும், களஞ்சியச் செயற்பாட்டிற்குத் துணைநிற்கும் திரு. இரா. சுப்பராயலு (பதிவாளர், பொறுப்பு) அவர்களுக்கும், பொறுப்புடன் விரைவாக அச்சிட்டு உதவிய அண்ணாமலைநகர் கே.பி.டி. அச்சக உரிமை யாளர் திரு. சேரன் அவர்களுக்கும், அழகிய முறையில் வெளியிட்டுதவிய தமிழ்ப் பல்கலைக் கழக மறுதோன்றி அச்சகத்தார்க்கும், ஓவியர் திரு. தே. நெடுஞ்செழியனுக்கும் எனது நன்றி.

தஞ்சாவூர்
1.6.'87

நா. பானுசாமி
முதன்மைப் பதிப்பாசிரியர்

# வாழ்வியற் களஞ்சியம்

***உரிப்பொருள்*** என்னும் சொல்லைத் தொல்காப்பியர் முதன்முதலில் எடுத்தாண்டுள்ளார். இதற்கு உரையாசிரியர் பலரும் பலவாறாகப் பொருளுரைப்பர். சொல்லால் உணரப்படும் பொருள் முதல், கரு, உரி என மூவகைப்படும். இவற்றுள், மக்கட்கு உரிய பொருள் உரிப்பொருள் ஆகும். இவ் உரிப்பொருள் அகம், புறம் என இருவகைப்படும். அகப்பொருள் என்பது போக நுகர்ச்சி. அதனான் ஆய பயன் தானே அறியப்படுவதாதலின் அது 'அகம்' எனப்பட்டது. புறப்பொருள் என்பது மறஞ்செய்தலும் அறஞ்செய்தலும் ஆம். அவற்றான் ஆய பயன் பிறர்க்குப் புலனாக உணர்த்தத்தக்கதாதலின் 'புறம்' எனப்பட்டது. அகம், புறம் என்னும் இவ்விரண்டும் தனித்தனியே ஏழு வகைப்படும். கைக்கிளை, முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல், பெருந்திணை என்னும் இவ் ஏழும் அகத்தின்பாற்படும். வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் ஆகிய ஏழும் புறத்தின்பாற்படும். இவ்வகையில் இவை பதினான்கு ஆயின. எனினும், 'வெட்சி தானே குறிஞ்சியது புறனே' (தொல். புறத். 2) எனத் தொல்காப்பியர் ஒவ்வொரு புறத்திணையும் ஒவ்வோர் அகத்திணைக்குப் புறனாகும் என்கிறாராதலின், இவை ஏழே எனல் பொருந்தும்.

கைக்கிளை முதலாகப் பெருந்திணை இறுதியாக இயம்பப்பட்ட ஏழு திணைகளுள் நடுவண் ஐந்திணை எனச் சிறப்பிக்கப்பெறும் முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல் என்பன முதல், கரு, உரி என்னும் மூவகைப் பொருள்களால் சிறப்பாகப் பாடப்படும். அவற்றைக் கொண்டு அப்பாடல் எந்தத் திணைக்குரியது எனத் தெளியலாம். சில பாடல்களில் இம் மூன்றும் ஒருங்கே வாராமல், கரு, உரி என்னும் இரண்டு மட்டுமே வரலாம். அவற்றைக் கொண்டு திணை உணரலாம். அன்றி உரிப்பொருள் ஒன்று மட்டுமே கொண்டு பாடல் அமைவதும் உண்டு. அவ்வாறாயின் அதனைக் கொண்டு திணை காண்டல் கூடும். ஐந்திணைக்குமுரிய உரிப்பொருள் வருமாறு:

புணர்தலும் புணர்தல் நிமித்தமும்
— குறிஞ்சி உரிப்பொருள்

பிரிதலும் பிரிதல் நிமித்தமும்
— பாலை உரிப்பொருள்

இருத்தலும் இருத்தல் நிமித்தமும்
— முல்லை உரிப்பொருள்

இரங்கலும் இரங்கல் நிமித்தமும்
— நெய்தல் உரிப்பொருள்

ஊடலும் ஊடல் நிமித்தமும்
— மருத உரிப்பொருள்.

இவற்றுள், புணர்தல் என்பது தலைவனும் தலைவியும் ஒன்றுகூடுதல். களவொழுக்கத்தின்போது தோழியிடம் இரந்து பின்னிற்கும் தலைமகன், 'அவள் (தலைவி) பருவம் வாய்ந்தவள்' என்று கூறுதல் போல்வன புணர்தல் நிமித்தம் ஆம் (நிமித்தம் = காரணம்). பிரிதல் என்பது தலைமக்கள் ஒருவரினின்றும் ஒருவர் பிரிந்து போதல். பிரிவுக்கு முன்னர், 'பொருளே காதலர்' எனத் தலைவி கூறுதல் போல்வன பிரிவு நிமித்தம் ஆம். இருத்தல் என்பது பிரிந்து சென்ற தலைமகன் வருந்துணையும் ஆற்றியிருத்தல். 'இது உண்மையான பருவமன்று' என்று கூறுதல் போல்வன இருத்தல் நிமித்தம் ஆகும். இரங்கல் என்பது பிரிந்து

சென்ற தலைவன் குறித்த காலத்து வாராது போனால் தலைவி ஆற்றாது இரங்குதல். 'மாலைக் காலம் வந்தது; இது என்னை வருத்துமே' எனக் கருதுதல் போல்வன இரங்கல் நிமித்தம் ஆகும். ஊடல் என்பது அவன் வந்தபோது சிறிது பிணங்கல். பரத்தையிற் பிரிவு போல்வன ஊடல் நிமித்தம். இங்ஙனம் வருதலே பெரும்பான்மை.எனினும் எல்லாப் பொருளும் எல்லாத் திணைக்கும் உரியவாக வருதலு முண்டு. ஆங்ஙனம் வருதல் சிறுபான்மையாம்.

பிரிதலும் பிரிதல் நிமித்தமும் பாலைக்குரிய உரிப்பொருளேயாயினும், 'கொண்டுதலைக் கழிதல்' (அதாவது உடன்போக்கு) என்பதும் பாலையின் உரிப்பொருளே என்பர் இளம்பூரணர்.

ஏழு அகத்திணைகளுள் கைக்கிளை என்பதற்குப் 'பெருமையில்லாத தலைமக்கள் உறவு' எனப் பொரு ளுரைப்பர் இளம்பூரணர். கை = சிறுமை; கிளை = உறவு.இதனைப் பிற்காலத்தவர்'ஒருதலை வேட்கை' அல்லது 'ஒருதலைக் காமம்' என்பர். 'காமஞ் சாலா' (தொல். அகத்.53) என்னும் நூற்பா இக் கைக்கிளைக் குரிய இலக்கணத்தை இயம்பும். இத்திணைக்கு முதற் பொருள் (அதாவது நிலம், பொழுது) என்னும் வரை யறை இல்லை. ஆனால் இதற்குக் 'கலந்தபொழுது, காட்சி' என்னும் உரிப்பொருள்கள் உண்டு என்பர் இளம்பூரணர். கலந்த பொழுது என்பது, 'தலை மகளை முதன்முதலிற் கண்ணுற்றவழி மனநிகழ்ச்சி உண்டாகும் காலம்' ஆகும். காட்சி என்பது 'தலை வியை எதிர்ப்படுதல்'. இவ்விரு உரிப்பொருள்களும் கைக்கிளைக்கு உரியன.

பெருந்திணை என்பது நடுவண் ஐந்திணையாகிய ஒத்த காமத்தின் மிக்கும் குறைந்தும் வரும். பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தருவம், அசுரம், இராக்கதம், பைசாசம் என வடநூலார் கூறும் எண்வகை மணத்தினுள் பிரமம், பிரசாபத்தி யம், ஆரிடம், தெய்வம் என்னும் நான்கும் இப் பெருந்திணைப்பாற்படும். இந்நான்கு மணமும் மேன் மக்கள் மாட்டு நிகழும். இவை உலகினுள் பெருவழக் காய்ப் பயின்று வருவன. எனவே, பெருந்திணை எனப்பட்டது எனக் காரணங் காட்டுவர் இளம்பூர ணர். இதனை, 'ஒவ்வாக் கூட்டம்' அல்லது 'பொருந் தாக் காமம்' எனப் பிற்காலத்தார் கூறுவர். 'ஏறிய மடற்றிறம்' என்னும் தொல்காப்பிய நூற்பா (அகத். 54) இப் பெருந்திணைக்குரிய இலக்கணத்தைக் கூறும். இத்திணைக்கும் நிலம், பொழுது ஆகிய வரையறை இல்லை. ஆனால் இதற்கென உரிப்பொருள் உண்டு. அது, 'பிரிந்தவண் இரங்கல்' (அகத். 17) என்பதாம். அதாவது, 'தலைமக்கள் ஒருவரையொருவர் பிரிந்த விடத்து இரங்கல்' என்பதாம்.

ஒரு திணைக்குரிய முதற்பொருளோ கருப் பொருளோ வேறொரு திணையில் கலந்து வருதலும் உண்டு. இதனைத் திணை மயக்கம் என்பர் அறிஞர். ஆனால், உரிப்பொருள் மட்டும் மயங்குதல் கூடாது. இதனை,'உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே' (தொல். அகத். 15) என்று தொல்காப்பியர் கூறுகி றார்.

உரிப்பொருள் என்பதற்கு விரிவாக உரை தரும் இளம்பூரணர் புறத்திணை ஏழும் உரிப்பொருளே என் றும் கூறுவர். உரிப்பொருள் மயங்கி வரலாகாது என இளம்பூரணர் கூறியிருக்க, நச்சினார்க்கினியரோ, 'திணைமயக்குறுதலும்' (அகத். 12) என்னும் தொல் காப்பிய நூற்பாவுக்கு உரை கூற வந்தவிடத்து, ஒரு நிலத்தின்கண் இரண்டு உரிப்பொருள் மயங்கிவரும் என்றும் ஓர் உரிப்பொருளோடு பிறிதோர் உரிப் பொருள் மயங்கும்; ஓர் உரிப்பொருள் நிற்றற்குரிய இடத்துப் பிறிதோர் உரிப்பொருள் வந்து மயங்கும் என்றும் விளக்குவர்.

தொல்காப்பியத்திற்குப் பின்னர்த் தோன்றிய நம்பியகப் பொருள் ஒவ்வோர் உரிப்பொருளுக்குமுரிய நிமித்தம் என்பதனையும் சேர்த்து, உரிப்பொருள் பத்து வகை என்று கூறும். மேலும், முதல், கரு, உரி என்னும் இம்மூன்றுமே மயங்கி வரும் என்றும் இந்நூல் கூறுகிறது.

தொல்காப்பியத்திற்குப் பின்னர்த் தோன்றிய பல இலக்கண நூல்களிலும் உரிப்பொருள் பற்றிய குறிப்பு உண்டு. அவற்றுள், தொல்காப்பியத்திற்கு விளக்க நூல் போல் அமைந்த இலக்கண விளக்கம் என்னும் நூலில் உரிப்பொருள் பத்து வகைப்படும்; முதல், கரு, உரி, என்னும் முத்திறப் பொருளும் தத்தம் திணையொடு மயங்கியும் வரும்; கைக்கிளைத் திணைக்கு உரிய உரிப்பொருள் ஒரு தலைக் காமம்; பெருந்திணைக்குரிய உரிப்பொருள் பொருந்தாக் காமம்; இவ்விரு உரிப்பொருளும் குறிஞ் சித் திணை முதலிய ஐந்து திணையோடு மயங்கியும் வரும் என்னும் குறிப்புக் காணப்படுகின்றது (இ.வி. 21, 22, 23).

இறையனாரகப் பொருள் உரைகாரர், 'திணைக்கு உரிய பொருள் உரிப்பொருள்' என்பர். நாவலர் ச.சோமசுந்தர பாரதியார், 'அகப்பாட்டு களில் உரிப்பொருளே தலையாயதென்பதும், அதற்கு முதலும் கருவும் சிறப்புதவும் துணையாகச் சார்ந்து வரு பொருள்களாமென்பதும் வெளிப்படை. எங்கு எவ்வொழுக்கம் நிகழினும் அதனால் நிலத்தியல் மாறாது. காடு புணர்ச்சி நிகழ்வதால் குறிஞ்சியாகாது, முல்லை நிலமேயாம். பிரிவாற்றாக் குறமகளிர் இரங்

குவதால் மலைநிலம் நெய்தலாகாது, குறிஞ்சியே யாம்' என்று உரிப்பொருள் பற்றி விளக்குவார். இவர் நிமித்தம் என்பதற்கு ஒவ்வோர் ஒழுக்கத்தை யடுத்து முன்னும் பின்னும் முதலும் முடிவுமாகத் தொடுத்து, அவ்வொழுக்கத்திற்கு இன்றியமையாத் தொடர் புடையனவற்றைச் சுட்டுவதாம் என்ற விளக்கமும் தருவார்.

எனவே, மக்கட்கு உரிய பொருள் உரிப்பொருள்; திணைக்கு உரிய பொருள் உரிப்பொருள் என்று கூறும் உரைகளைநோக்குமிடத்து, 'ஒழுக்கமேஉரிப்பொருள்' என்பது பெறப்படும். குறிஞ்சி முதலானவற்றிற்குப் புணர்தல் முதலான ஒழுக்கங்கள் இயம்பப்படும் என்பது பொதுவிதி. இனி, உரிப்பொருள் என்பதற்கு இயக்கம், பாட்டின் நடை என்ற வேறு பொருள் களும் உண்டு. வரிக்கும் ஆடற்கும் உரிப்பொருள் இயக்கி (சிலப் : புகார்: அரங். 29) என்பது சிலப் பதிகாரம். ச. சா.

**உரிமம்**: சட்டத்தால் கட்டுப்படுத்தப்பட்ட ஒரு தொழிலை அல்லது வாணிகத்தைச் செய்ய அர சாங்கம் ஒருவருக்கு உரிமை வழங்குவது உரிமம் (Licence) ஆகும். ஒருவர் செய்யும் தொழில் அல்லது வாணிகம் சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் தீமையினை ஏற்படுத்தாமல் காப்பதற்குக் கட்டுப்பாடுகள் விதிப்ப தும் கட்டணங்கள் பெறுவதும் பழங்காலத்திலிருந்தே வரும் ஒரு வழக்கம். சமூக நல அரசினை அமைக்கும் கொள்கையை மேற்கொண்ட அனைத்து நாடுகளி லும் கட்டுப்பாடுகளும் அவற்றை விதிக்கும் சட்டங் களும் பெருகி உள்ளன. உரிமம் வழங்குவதற்கு உரிய அலுவலர்களின் பணியமர்த்தம், கட்டணங்கள் முதலி யவற்றைப் பற்றி விதிகள் முறையாக வகுக்கப்பட் டுள்ளன.

உரிமம் வழங்கும் அதிகாரம் நிருவாக அலுவலர் களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் அவர்கள் தம் விருப்பம்போல் உரிமம் வழங்க முடியாது. ஒழுங்கு படுத்தி வகுக்கப்பட்டுள்ள விதிகளையும் விண்ணப்ப தாரரின் தகுதிகளையும் மனத்திற்கொண்டு விதிமுறை களின்படி வழங்க வேண்டும். அனுமதி வழங்க மறுக் கும் ஆணைகளை எதிர்த்து மேல் முறையீடு (Appeal) செய்துகொள்ள விதிகள் வகுக்கப்பட்டுள்ளன.

நிருவாக அலுவலர்கள் செய்யும் இம் முடிவுகளை ஆராய்ந்து செய்யும் அதிகாரம் பிரான்சிலும் மற்றும் பல ஐரோப்பிய நாடுகளிலும் நிருவாக, தொழில், நீதி வல்லுநர்களைக் கொண்ட நிருவாக நீதிமன்றங் களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இங்கிலாந்தும் ஆங்கில நீதி முறையைப் பின்பற்றும் நாடுகளும் இம்முடிவு களை உயர் நீதிமன்றங்களிலும் உச்ச நீதிமன்றத்தி லும் பரிசீலனைக்குக் கொண்டு வரலாம். நியாய உணர்வுடன் செய்யப்படாத முடிவுகளை மாற்றும் அதிகாரம் இந்நீதிமன்றங்களுக்கு உண்டு.

இந்தியக் குடிமக்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அடிப் படை உரிமைகளில் தாம் விரும்பிய தொழிலையோ வாணிகத்தையோ செய்யும் உரிமையும் ஒன்று. அர சாங்கம் விதிக்கும் கட்டுப்பாடுகள் நியாயமானவையாக வும்பொது நலத்திற்குத் தேவையானவையாகவும் இருந் தால்தான் அவ்வடிப்படை உரிமை கட்டுப்படுத்தப் படலாம். ஆகையால், உரிமம் வழங்க விதிக்கும் சட் டமோ வழங்குவதற்கு உள்ள விதிகளோ ஏற்படுத்தப் பட்ட கட்டணமோ வழங்குவதில் செய்யும் முடிவோ அடிப்படை உரிமையை மீறினவாகத் தோன்றினால், அவற்றை விதிக்கு முரண் என்று முடிவு செய்யும் அதி காரம் இந்திய உச்ச நீதிமன்றத்திற்கும் உயர்நீதி மன்றங்களுக்கும் உண்டு. டி. வே.

**உரிமை இழப்பு**: ஒருவர் ஒன்றைச் செய் தமையால் அல்லது செய்யத் தவறியமையால் சொத் தினையோ உரிமையினையோ சிறப்புரிமையினையோ (Privilege) நலனையோ இழப்பது உரிமை இழப்பு (Forfeiture) எனப்படுகிறது.

உரிமை இழப்பு, பொதுவாகக் குத்தகை விடுதலில் நிகழ்கிறது. இது குத்தகையில் மூன்று விதங்களில் நிகழ்கிறது. 1) குத்தகை நிபந்தனையை முறிக்கும் போதோ மீறும் போதோ குத்தகைக்கு விடுபவர் குத் தகைச் சொத்தை மீண்டும் கைப்பற்றலாம் என்ற நிபந்தனை இருந்து அப்படி முறிக்கப்படும் போதும், 2) குத்தகைக்கு விடுபவரின் உரிமைகளை மறுக்கும் போது அல்லது சொத்தின் பாத்தியதை உரிமை தம் முடையது அல்லது மூன்றாமவரது என உரிமை பாராட்டும் போதும், (3) குத்தகைக்கு எடுப்பவர் நொடிப்பு நிலையர் எனத் தீர்ப்பளிக்கப்பட்டால், குத் தகைக்கு விடுபவர் சொத்தினைத் திரும்பக் கைப்பற் றிக் கொள்ளலாம் என்று நிபந்தனையிருந்து, அப்படித் தீர்ப்பளிக்கப்படும்போதும் உரிமை இழப்பு நிகழ் கிறது.

குத்தகைக்கு விடுபவர் திரும்பச் சொத்தினைக் கைப்பற்றும் உரிமையைக் குறிப்பாகத் தமக்கென ஒதுக்கீடு செய்து வைத்திருந்தால்தான் உரிமை இழப்பு ஏற்படும். குத்தகைக்கு விடுதலில் சொத்தினைக் கைப் பற்றும் உரிமை குறிப்பிடப்படாவிட்டால், குத்தகைக்கு எடுத்தவருக்கு எதிராகக் குத்தகைக்கு விடுபவர் இழப் பீடோ செயலுறுத்துக் கட்டளையோ வேண்டி வழக் கிடலாமே அல்லாமல், அவரைச் சொத்திலிருந்து அகற்ற வழக்கிட முடியாது.

உரிமை இழப்புநிலை ஏற்பட்டபின், குத்தகைக்கு விடுபவர் குத்தகைக்கு முடிவு காணும் தம் எண்ணத்

தினைக் குத்தகைக்கு எடுத்தவருக்கு எழுத்தின்மூலம் அறிவிக்கவேண்டும். அதன்பின்னர், சொத்தினைத் திரும்ப அடையச் சொத்தின் சொந்தக்காரர் வழக்கிடலாம். வழக்கிடுமுன் குத்தகை பெற்றுக் கொண்டாலோ குத்தகைக்கு விடுபவர் குத்தகை நடைமுறையில் இருப்பதற்கான தம் எண்ணத்தை ஏதாவது ஒரு செயல்மூலம் வெளிப்படுத்தினாலோ உரிமை இழப்பு நிலை நீக்கப்படும்.

குத்தகை கொடுக்காததால் குத்தகைக்கு எடுத்தவரைக் குத்தகைச் சொத்திலிருந்து வெளியேற்றக் குத்தகைக்கு விடுபவர் வழக்கு தொடுத்து வழக்கு விசாரணையிலிருக்கும் போது, குத்தகைக்கு எடுத்தவர் நிலுவைக் குத்தகையை வட்டியோடு செலுத்தும் போதும் வழக்குச் செலவினங்களை அளிக்கும்போதும் குத்தகையினை 15 நாட்களுக்குள் கொடுப்பதாக ஈட்டுறுதி அளிக்கும்போதும் நீதிமன்றம் அவரை உரிமை இழப்பிலிருந்து விடுவித்து உத்தரவு பிறப்பிக்கும். அதன்பின்னர், குத்தகைக்கு எடுத்தவர் அச் சொத்தினைத் தம்வசம் வைத்து, உரிமை இழப்பு ஏற்படாததுபோல் குத்தகையினைத் தொடருவார். ஏ.ப.

**உரிமை இறக்கம்**: ஒரு சொத்தின் பாத்தியதை மற்றும் ஒரு பதவி வகித்தலின் உரிமை ஒருவருக்குப் பின் மற்றொருவரைச் சென்றடைதல் உரிமை இறக்கம் (Succession) எனப்படும். சொத்துகளைப் பொறுத்த மட்டில் உரிமை இறக்கம் இருவகைப்படும். அவை (1) உயில்வழி உரிமை இறக்கம் (Testamentary Succession), (2) உயில் இல்வழி உரிமை இறக்கம் (Intestate Succession) என்பன. ஒருவர் தமக்குப்பின் தம் சொத்துகள் எவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்ற தம் எண்ணத்தினை எழுத்து வடிவில் உருவாக்கிய ஆவணத்தினை உயில் அல்லது விருப்பாவணம் என்பர். உயிலில் கண்ட கருத்தின்படி அவரது சொத்துகளின் உரிமை வேறொருவரைச் சென்றடைதல் உயில்வழி உரிமை இறக்கம் எனப்படும். உயில் ஏதும் எழுதி வைக்காமல் எதிர்பாராத நிலையில் ஒருவர் திடீரென இறந்தால், அவரது சொத்துகள் நாட்டில் நடைமுறையில் உள்ள அவரவர் இன முறைச் சட்டத்தின்படி பிரித்துக் கொடுக்கப்படும்; அல்லது ஒருவர் உயில் எழுதி வைத்திருந்து சில காரணங்களால் அவ்வுயிலினைச் செயற்படுத்த இயலாவிட்டாலும் அந்நாட்டுச் சட்டப்படி சொத்துகளைப் பிரிக்க நேரிடும். இது உயில் இல்வழி உரிமை இறக்கம் எனப்படும்.

இந்தியாவில் பல சமயத்தினர் வாழ்கின்றமையால் சமய அடிப்படையில் ஒவ்வொரு சமயத்தினருக்கான உரிமை இறக்கச் சட்டங்கள் உண்டு. இந்து உரிமை இறக்கச் சட்டம் இந்துக்களையும் இசுலாமிய உரிமை இறக்கச் சட்டம் இசுலாமியரையும் கட்டுப்படுத்தும். கிறித்தவர்களுக்கும் பார்சிகளுக்கும் மற்றும் ஒரு சமயம் விட்டு மறு சமயம் புகுந்து திருமணம் புரிவோருக்கும் இந்திய வாரிசுரிமைச் சட்டம், 1925 பொருந்தும். ஏ.ப.

**உரிமை ஊதியம்** என்பது புனைவுரிமையாளர் (Patentee) ஒருவருக்கு அவர் செய்யும் புனை பொருளுக்கு ஏற்ப ஒப்பந்தப்படி அளிக்கப்படும் தொகை அல்லது விற்கப்படும் ஒவ்வொரு படிக்கும் நூலாசிரியர் ஒருவருக்கு நூல் வெளியீட்டாளரால் வழங்கப்படும் தொகை அல்லது கனிமப்பொருள்களின் உரிமையாளருக்கு அதனை வெட்டி எடுப்பதற்கான உரிமைக்காகக் கொடுக்கப்படும் தொகை ஆகும்.

குத்தகைக்கு விடுபவருக்குக்(அல்லது உரிமை மாற்றம் ஒன்றினை ஏற்படுத்துபவருக்குக்) குத்தகைக்கு விடப்பட்ட நிலத்தில் வேலை செய்வதற்குச் செலுத்தப்படும் தொகை எனவும் இதனை வரையறுக்கலாம்.

உரிமை ஊதியம் (Royalty) என்னும் சொல் சுரங்கங்களைக் குறித்துப் பயன்படுத்தப்படுவதைவிட, புனை பொருள் உரிமைக்கும் (Patent) பதிப்புரிமைக்கும் (Copy right) சிறப்பாகப் பயன்படுத்தப்படுகிறது. அரசிற்குரிய கனிமப் பொருள்கள், தச்சுமரம் (Timber) அல்லது வேறு சொத்துகளைப் பெறுவதற்காக அரசு கோரும் தொகையையும் இது குறிக்கும். இதன் இரு சிறப்பியல்புகள்: 1. பொருளை எடுப்பதற்கான சிறப்புரிமையின் மீது இது விகிதாசாரப்படி வழங்கப்படுகிறது; 2. இது ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்படுகிறது என்பனவாகும்.

சுரங்கங்கள், கனிமப்பொருள்கள் மீதான உரிமை ஊதியம் என்பது ஒரு கூலி அன்று; வரிவிதிப்புப் போன்ற தன்மை கொண்டது. ஆ.ச.

**உரிமைகள்**: உரிமை என்பது சட்டம் அல்லது அறத்தின் அடிப்படையில் ஏதாவது ஒன்றைப் பெறவோ அடையவோ ஒரு வகைச் செயலைச் செய்யவோ நேர்மையாக வேண்டிப் பெறும் தகுதியாகும். சட்ட அடிப்படையில் கிடைக்கும் சட்ட உரிமைகளைச் சட்டவியலில் காணலாம். ஒரு நில உரிமையாளரிடம் பொதுமக்களின் போக்குவரத்துக்கென நிலத்தைக் கேட்பது சட்ட உரிமையாகும். இவ்வுரிமையைச் சட்டமன்றத்தார் வலியுறுத்தி ஏற்கச் செய்ய முடியும்.

ஓர் உரிமை பொது நலனைப் பெருக்க வழி கோலுவதாக இருப்பின், அவ்வுரிமை சட்டத்தால்

வலியுறுத்தப்படுவதாக அமைகிறது. சமுதாய நலனைக் கருத்தில் கொண்டே சொத்துரிமை போன்ற உரிமைகள் சட்டத்தால் வலியுறுத்தப்படுகின்றன. தனி ஒருவரின் நலன் நாடும் உரிமைகளைச் சட்டத் தால் வலியுறுத்த முடியாது. மாணவர்களின் நன் மதிப்பைப் பெற வலுக்கட்டாயமான வழிகளை ஓர் ஆசிரியர் கடைப்பிடித்தால், அதன் விளைவுகள் பள்ளியின் பொது நலனுக்குத் தீங்காக அமையலாம். உரிமை உள்ளது என்பதனாலேயே ஒருவர் அவ் வுரிமையை அனைத்து வழிகளிலும் பயன்படுத்தக் கடமைப்பட்டவர் என்று பொருள்படாது; சில நிலைகளில் அவ்வாறு செய்வது அவரது கடமையாக வும் அமையலாம். சான்றாக, ஒரு நில உரிமையாளர் தம் நிலத்தில் மற்றவர்கள் செல்வதைத் தடைசெய்ய முயன்றால், பொதுநலக் கடமையுணர்வு உள்ளவர் கள் அந்நிலத்திலுள்ள பாதையைப் பயன்படுத்த விழைய, வலுவற்றவர்களும் அப்பாதையைப் பயன் படுத்த முடிகிற நிலை தோன்றுகிறது.

தனிமனிதன் பொது நலனுக்கு ஒவ்வாத ஓர் உரிமையை வலியுறுத்தும்பொழுது மக்களின் பெரும் பகைமையை எதிர்கொள்ள நேரிடும் என்றுணர்ந்து, அவ்வுரிமையை வலியுறுத்தாமல் விட்டுவிடுதலே நலம் எனக் கொள்ளலாம். சான்றாக, ஒரு குடும்பத் தில் உடன் பிறந்தவர்களுள் ஒருவர் தம் குடும்பத் தின் நலனுக்காகத் தம் தந்தை தமக்களித்த தனி யுரிமையைக் கைவிடலாம். வலியுறுத்தும் உரிமை இருப்பது பொதுவாக நல்லது. எனினும் சில நிகழ்ச்சி களில் உரிமையை வலியுறுத்துவது நலனுக்கு உகந்த தன்று.உரிமையை எப்பொழுது வலியுறுத்த வேண்டும் அல்லது எப்பொழுது தவிர்க்க வேண்டும் என்றறியும் திறன் மனிதனின் மிகச் சிறந்த குணங்களுள் ஒன் றாகும். நல்லொழுக்கம் உடையோர் இத்திறனை உள்ளுணர்வினால் அறிவர். ஆனால் இதனை அறி வினால் திட்டமிடும்போது உரிமையை வலியுறுத்து வதால் அடையும் உள்ளார்ந்த நலன்களை மதிப் பிட்டு, இம்மதிப்பிட்டு உரிமையைத் தவிர்க்கும் பொழுது ஏற்படும் நலன்களுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டியதிருக்கும்.

மனித உரிமைகள்: இயற்கையில் மனிதனுக்குப் பல அடிப்படை உரிமைகள் உள்ளன. இக்கருத்து அமெரிக்கச் சுதந்திர அறிக்கையின் ஒரு பகுதியாக உள்ளது. உலகத் தலைவர்களான ரூசுவெல்ட்டும் சர்ச்சிலும் இக்கருத்தை உலக முழுமைக்கும் பொருந்தும் வகையில் ஐந்து சுதந்திரங்களாகக் கூறி யுள்ளனர். மெக்கன்சி பின்வரும் மனித உரிமைகள் பற்றிக் கூறுகிறார்.

1. வாழ்வுரிமை: மனித நலன் முழுமை அடையத் தொடர்ந்து வாழும் உரிமை இன்றியமையாதது. எனவே, வாழ்க்கையின் புனிதத்தன்மை மதிக்கப்பட வேண்டும். பழைய காலத்திய சில சமுதாய வடிவங் களில் இவ்வடிப்படை உரிமைகூட அங்கீகரிக்கப் பட்டதன்று. குழந்தைகளும் போர்க்கைதிகளும் முறையின்றிக் கொல்லப்பட்டனர். ஓரளவு வளர்ந்த சமுதாயங்களில் கூட இவ்வுரிமை மிக எளிதாகக் கருதப்பட்டதை அங்கு நிலவிய சச்சரவுகளிலிருந்து அறியலாம். வாழ்க்கையின் மதிப்பை முழுமையாக உணர்ந்தால் இன்றைய நாகரிக உலகில் போர்கள் கூடத் தவிர்க்கப்படலாம். ஆனால் இன்றைய நிலை யிலும்கூட வாழ்வதற்குரிய வழிகள் கிடைக்கப்பெறாத நிலையில் வாழ்வுரிமை முழு அளவிற்கு உள்ளதாகக் கொள்ள முடியாது.

2. சுதந்திர உரிமை: இவ்வுரிமை மனிதன் தன் நலனை அடைவதற்கு உரிய தன்னாட்சியைக் குறிக்கும்.தன் எண்ணத்தைப் பயன்படுத்தச் சுதந்திரம் இன்றேல், மனிதன் தன் நலனை ஒருபோதும் அடைய முடியாது. மனித வாழ்க்கையின் சுதந்திரமான வளர்ச்சியிலேயே சமுதாய ஒழுங்கு நிலை நாட்டப் படும்.

3. சொத்துரிமை: மனிதன் அடைய நினைக்கிற அனைத்து முடிவுகளுக்கும் கருவிகள் இன்றியமை யாதன. இக்கருவிகளைப் பயன்படுத்தும் உரிமை மனிதனுக்கு இல்லாவிடில், அவன் பெற விரும்பும் முடிவுகளுக்குரிய சுதந்திரமும் பயனற்றதாகி விடும். எனவே, சொத்துரிமை என்பது மனிதன் கருவிகளைக் கொண்டு வாழ்க்கையின் சுதந்திரமான வளர்ச்சியைப் பெறுதலாகும்.

4. ஒப்பந்த உரிமை: ஒரு மனிதன் சில சேவையை மற்றொருவற்கு அளிக்க முற்படும் பொழுது மற்றவர் அச்சேவையை அடைய உரிமை உள்ளவராவார். பழைய காலங்களில் இத்தகைய ஒப்பந்த உரிமைகள் வழக்கத்தில் இல்லை.

5. கல்வியுரிமை: இவ்வுரிமை மனிதனின் நலனை அடைவதற்கு மிகவும் இன்றியமையாதது. எனவே சமுதாயத்தில் ஒவ்வொருவருக்கும் தம் அறிவுத் துறைகளை வளர்த்துக் கொள்வதற்குரிய உரிமைகள் இருக்கவேண்டும்.

இவ்வியற்கை உரிமைகளின் இயல்பை அவற்றின் திறன்களை உணர்வதாலும் நிறைவை அடைவதா லும் அறியலாம். நல்ல நாகரிகம் படைத்த சமுதாயத் திலும் கூட இவ்வுரிமைகள் நுகர்வில் பல தடைகள் உள்ளன. சான்றாக, போர் மற்றும் அமைதிக் காலங் களிலும் பொது நலனுக்காக ஒரு சமுதாயம் மக்கள் தங்கள் வாழ்கையையும் சுதந்திரத்தையும் தியாகம்

செய்யப் பணிக்கிறது. சமுதாயத்தின் தொழிலும் ஒரு வகைக் கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தப்படுகிறது. உடைமைகளின் மேல் கொள்ளும் உரிமை பொது உடைமை மற்றும் முதலாளித்துவச் சமுதாயங்களில் மாறுபடுகிறது. ஒப்பந்த உரிமையால் முழுச் சமுதாயத்திற்கும் தீங்கு விளைவதாக இருப்பின் அது ஏற்புடையதாகாது. கல்வி கற்கும் உரிமைகூடச் சிற்சில கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டதே. சமுதாயத்தின் பொது நலனுக்குப் பயன்படுவதைப் பொறுத்தே எந்த உரிமையும் வலுப்பெறும். பொது நலன் என்பது உரிமையை வலியுறுத்துவதால் சமுதாயத்தின் தனித்த மனிதர்கள் துய்க்கக்கூடிய நலனையே குறிக்கும். இவையே முதலில் கூறப்பட்ட இயற்கை உரிமைகள் ஆகும். உடைமைகளைக் கொள்வது போன்ற சில உரிமைகள் கருவி நலன்களாகவும் சுதந்திரத்தை நுகர்தல் போன்றவை உள்ளார்ந்த நலன்களாகவும் விளங்குகின்றன. ஒவ்வொரு மனிதனும் இவ்வாறு பொது நலனுக்குக் கருவியாக விளங்குவதால் மக்களின் உரிமை ஓர் எல்லைக்குள் சமுதாயத்தால் கட்டுப்படுத்தப்படுகிறது. பி. ஆர். ந.

துணை நூல்கள்:

Bradley, F.H., Ethical Studies, Oxford, 1927.

Meldon, A.I., Rights and Right Conduct, Oxford, 1959.

**உரிமைகள் சாசனம்:** முதலாம் என்றியின் உரிமைகள் சாசனம்: இங்கிலாந்து வரலாற்றில் இரண்டு உரிமைகள் சாசனங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. அவற்றுள் முதலாவதை முதலாம் என்றி (கி.பி. 1100–1135) வழங்கினார். அவருக்குமுன் ஆண்ட அரசருடைய தீய நடவடிக்கைகளைக் கைவிடப்போவதாக அதில் அவர் தெளிவாகக் கூறினார். திருச்சபையை அடிமைப்படுத்தவோ கொள்ளை அடிக்கவோ முற்படுவதில்லை என்றும் அவர் உறுதி அளித்தார். பிரபுக்களிடமிருந்து நியாயமான நிலமானியம் சார்ந்த கட்டணங்கள் தவிர, வேறு வகையில் பணம் பறிக்கக்கூடாது என்றும் அதில் கூறப்பட்டிருந்தது. அவருடைய முன்னோர்கள் காலத்தில் வசூலிக்கப்பட்ட கடுமையான அபராதங்கள் இனி வசூலிக்கப்படா என்பதும் குற்றங்களின் தரத்திற்கேற்ப அபராதத் தொகைகள் விதிக்கப்படும் என்பதும் அதன் மூலம் அறிவிக்கப்பட்டன. பக்தியுள்ள எட்வர்டு காலத்திய சட்டம் மீண்டும் புதுப்பிக்கப்படும் என்றும் அவர் வாக்குறுதி வழங்கினார். அரசருடைய அதிகாரத்தைக் கட்டுப்படுத்திய சாசனமாக இது கருதப்படுகிறது. ஆனால், உண்மையில் என்றியின் அதிகாரங்கள் இதனால் குறையவில்லை.

**உரிமைகள் மகாசாசனம்:** இரண்டாம் உரிமைகள் சாசனம் கி.பி. 1215–ஆம் ஆண்டில் சான் மன்னரால் வழங்கப்பட்டது. இங்கிலாந்தின் அரசியலமைப்புப் பற்றிய செய்திகள் பல இதில் கூறப்பட்டிருக்கின்றன. எனவே,இது இங்கிலாந்தின் அரசியலமைப்பு வரலாற்றில் சிறந்ததோர் இடத்தை வகிக்கிறது. முதலாம் சாசனத்தினின்றும் வேறுபடுத்திக் காட்ட இது உரிமைகள் மகாசாசனம் (Magna Carta) எனப்படுகிறது.

சான் மன்னர் ஒரு கொடுங்கோலர்; மக்களுடைய வெறுப்பைப் பல வழிகளில் தேடிக் கொண்டவர். பிரான்சுடன் மேற்கொண்ட போரில் அவர் தோல்வி அடைந்து, நாட்டின் பெருமையைக் குலைத்தார் என்பதால் மக்களுடைய வெறுப்புக்கு ஆளானார். காண்டர்பரித் தலைமைச் சமய குருவின் நியமனத்தையொட்டி, அவர் போப்பாண்டவருடன் சண்டையிட்டுச் சமயக் குருமார், பொது மக்கள் ஆகியோரின் வெறுப்பைத் தேடிக் கொண்டார். ஏராளமான பணத்தைக் கொடுக்குமாறு பிரபுக்களை வற்புறுத்தி, அவர்களுடைய பகைமையையும் தேடிக் கொண்டார். இந்த எதிர்ப்புச் சக்திகள் அனைத்தையும் ஒன்று திரட்டி, அவற்றிற்கு ஒரு கொள்கையை வகுத்துக் கொடுக்கும் தலைவராகக் காண்டர்பரித் தலைமைக்குரு இசுட்டீபன்லாங்டன் முன்வந்தார். அப்போதுதான் புனித ஆல்பன்சு (St.Albans) என்னுமிடத்தில் அரசவைக் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் மறைந்துபோன முதலாம் என்றியின் உரிமைகள் சாசனம் நினைவுக்குக் கொண்டுவரப்பட்டது. நுண்ணறிவு வாய்ந்த இசுட்டீபன் லாங்டனுக்கு முதலாம் என்றியின் உரிமைகள் சாசனத்தின் பெருமையை அறிய நீண்ட நேரம் பிடிக்கவில்லை; என்றியின் சாசனம் போன்ற மற்றொரு சாசனத்தைச் சான் மன்னரிடமிருந்து பெறுவதால் மக்களுடைய உரிமைகள் காக்கப்படும் என்றும், அவர்களுடைய குறைகள் போக்கப்படும் என்றும் கருதினார். எனவே, புனித பால் என்னுமிடத்தில் நடைபெற்ற பிரபுக்களின் இரகசியக் கூட்டத்தில் என்றியின் சாசனத்தைப் படித்துக் காட்டி, அதனை அடித்தளமாகக் கொண்டு தேவைப்பட்ட சீர்திருத்தங்களை அரசரிடமிருந்து பெறுமாறு கூறினார். அப்போதுதான் சான் பிரான்சில் நடைபெற்ற போரில் தோல்வியடைந்தார் என்ற செய்தி வந்தது. அச்செய்தி பிரபுக்களுக்கு மிகுந்த ஊக்கத்தை அளித்தது. அரசர் நாடு திரும்பியதும் பிரபுக்கள் இரகசியமாக புனித எட்மண்ட்சுபரி (St. Edmundsbury) என்னுமிடத்தில் கூடி, தம் உரிமைகளை ஒரு சாசனத்தின் வாயிலாக மீண்டும் அளிக்குமாறு அரசரை வற்புறுத்தவேண்டும் என்றும், அதற்காகப் படைக்கருவிகளைத் தாங்க நேரினும்

அதற்குத் தயாராக இருக்க வேண்டும் என்றும் உறுதி பூண்டனர்.

பிரபுக்கள் கி. பி. 1215-ஆம் ஆண்டு சனவரி மாதம் படைக்கருவிகளை ஏந்திக் கொண்டு அரசர் முன் தங்கள் கோரிக்கையை அளித்தனர். சமயக் குருமாரும் இலண்டன் மற்றும் சில நகர மக்களும் பிரபுக்களுக்கு ஆதரவளித்தனர். வேறுவழியின்றி அரசர் 15—6—1215-இல் தேம்சு ஆற்றிலுள்ள இரன்னிமீடு என்ற தீவில் நடைபெற்ற கூட்டத்தில், பிரபுக்களின் கோரிக்கைகளைக் கொண்ட உரிமைகள் சாசனத்தை ஆராய்ந்து ஏற்றுக்கொண்டு, தம் ஒப்புதலைத் தெரிவிக்கும் வகையில் அதில் அரசு முத்திரையையும் பதித்தார்.

**தற்காலிகமான உட்பிரிவுகள்:** உரிமைகள் சாசனம் முகவுரையும் 63 உட்பிரிவுகளும் கொண்டது. அவற்றுள் பதின்மூன்று உட்பிரிவுகள் சான் அரசரையும் அவருடைய ஆதரவாளர்களையும் பற்றியன. எனவே, அவை அக்காலத்திற்கு மட்டுமே பொருந்துவனவாக உள்ளன. மற்ற உட்பிரிவுகள் மிக முக்கியமானவை.

**திருச்சபை பற்றிய உட்பிரிவுகள்:** அவற்றுள் இரண்டு உட்பிரிவுகள் திருச்சபையைப் பற்றியன. திருச்சபை சுதந்திரமாக இயங்கும் வகையில் தாம் நடந்துகொள்வதாகவும் அதனுடைய உரிமைகளைப் பாதுகாப்பதாகவும் சான் வாக்குறுதி அளித்தார்.

ஆறு உட்பிரிவுகள் நகரங்களைப் பற்றியன. அதில் அவர் நகரங்களுக்கு அளிக்கப்பட்டிருந்த உரிமைகளை மதித்து நடப்பதாகக் கூறினார். நாடு முழுவதும் ஒரே வகையான அளவுமுறைகள் அமைக்கப்பெறவேண்டும் என்ற கோரிக்கையையும், அமைதிக் காலத்தில் அயல் நாட்டு வணிகர்கள் இங்கிலாந்திலுள்ள நகரங்களுக்குள் தடையின்றி நுழையவும் வசிக்கவும் பயணம் மேற்கொள்ளவும் அனுமதிக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையையும் மன்னர் ஏற்றார். நியாயமற்ற சுங்க வரிகளை விதிப்பதில்லை என்றும் ஆறுகளின் குறுக்கே மீன்பிடிப்பதற்காகக் கட்டப்பட்டிருந்த அணைகள் அப்புறப்படுத்தப்படும் என்றும் மன்னர் வாக்குறுதி அளித்தார். ஆறுகளில் போக்குவரத்து தங்குதடையின்றி நடைபெற இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது. மேலும், இங்கிலாந்து நாட்டு வணிகர்கள் அரசருடைய ஒப்புதலின்றி அயல்நாடுகளுக்குச் செல்ல அனுமதிக்கப்படவேண்டும் என்பதும் இதில் வற்புறுத்தப்பட்டது.

**பிரபுக்கள் பற்றிய உட்பிரிவுகள்:** 24 உட்பிரிவுகள் பிரபுக்களின் நலன்களைக் காக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் 12-ஆம் பிரிவும் 14-ஆம் பிரிவும் மிக முக்கியமானவை. 12-ஆம் பிரிவின்படி வழக்கமாக வசூலிக்கப்படும் படைமானியமுறை சார்ந்த மூன்று உதவிப் பணங்களைத் தவிர, வேறு காரணங்களுக்காக உதவிப் பணத்தை மானியதாரர்களிடமிருந்து வசூலிக்கக்கூடாது என்பதும் கேடயவரி (Scutage)என்ற கட்டணத்தையும் வசூலிக்கக் கூடாது என்பதும் அவற்றை வசூலிக்கவேண்டிய நிலை ஏற்படும்போது நாட்டின் பொதுச்சபையின் ஒப்புதலைப் பெறவேண்டும் என்பதும் அறிவிக்கப்பட்டன.

பொதுச்சபையில் தலைமைச் சமய குருவும் சமய வட்டத் தலைமைக் குருமாரும் மடாதிபதிகளும் கோமகன்களும் பெரிய பிரபுக்களும் சிறிய பிரபுக்களும் இடம் பெறுதல் வேண்டும் என்று 14-ஆம் பிரிவில் கூறப்பட்டுள்ளது. வட்ட அதிகாரிக்கு (Sheriff) பொதுவான ஆணை அனுப்பி, அவர் வாயிலாகச் சிறிய பிரபுக்களைக் கூட்டத்திற்கு வரவழைக்க வேண்டும் என்பதும் ஏனையோருக்குத் தனித்தனியான அழைப்பு ஆணைகளை அனுப்பவேண்டும் என்பதும் கோரப்பட்டுள்ளன. ஒவ்வோர் அழைப்பாணையிலும் எக்காரணங்களுக்காக அவர்கள் அழைக்கப்படுகின்றனர் என்பதைக் குறிக்கவேண்டும் என்று கூறப்படுதல் வேண்டும்.

நிலமானிய முறையைச் சார்ந்த உதவிப்பணம் வசூலிக்கும் உரிமையை அரசர் தகாத முறையில் பயன்படுத்துவதைத் தடைசெய்தனவேயன்றி, ஏனைய வரிகளை மக்கள் சபையின் ஒப்புதல் பெற்றே வசூலிக்க வேண்டும் என்ற கருத்தை இவை நிலைநாட்டவில்லை. பொதுச்சபையில் நிலமானியத் திட்டத்தைச் சார்ந்த பிரபுக்களும் சமய குருமார்களும் மட்டுமே இடம் பெற்றிருந்தனர். மேலும், நிலமானியதாரர்களின் பொதுவான ஒப்புதலைப் பெற்று உதவிப் பணத்தை வசூலிக்க வேண்டும் என்பது நிலமானியத் திட்டத்தின் தொன்று தொட்டு வந்த மரபு ஆகும். உரிமைகள் சாசனம் புதிதாக ஏற்படுத்திவிட்ட மரபாக இதனைக் கருத இயலாது.

நியாயமான ஊழியங்களைத் தவிர வேறு ஊழியங்களைச் செய்ய மானியதாரர்கள் வற்புறுத்தப்படக்கூடாது; கொடுங்குற்றத்தைச் செய்தவர்களின் நிலத்தை ஓர் ஆண்டு ஒரு நாள் மட்டுமே மன்னர் தம்கீழ் வைத்திருக்கவேண்டும்; அதன் பின்னர் அதனை அதன் மேலாளரிடம் (Lord) ஒப்படைத்துவிடவேண்டும் என்பது கோரப்பட்டது. தலைமை மானியதாரர்களின் (Tenents- in-Chief) நிலத்தை மன்னர் மீண்டும் பெற நேர்ந்தாலோ பறிமுதல் செய்ய நேர்ந்தாலோ, அம்மானியதாரர்களின் கீழிருந்த சிறு மானியதாரிடமிருந்து (Teuants) அதிகமான பின்னுரிமைப் பணத்தை (Relief) வசூலிக்கக் கூடாது என்பதும் இதில் கூறப்பட்டுள்ளது.

மடாதிபதிகளின் பதவி காலியாகும்போது அம்மடங்களைத்தோற்றுவித்த பிரபுக்களுக்கே அவற்றைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தை வழங்கவேண்டும் என்பது இச்சாசனத்தில் குறிப்பிடப்பட்டது. கடன் தொல்லைகள் மட்டுப்படுத்தப்பட்டன. பாலங்களைப் பராமரிக்கத் தவறிய நகரங்கள், தனி மனிதர்கள் ஆகியோரின் உடைமைகளை அதற்காகப் பறிமுதல் செய்வதையும் வரிவசூல் பற்றிய குத்தகைப் பணத்தை உயர்த்துவதையும் இச்சாசனம் தடை செய்தது. மேற்கூறியவற்றில் ஒரு சில சலுகைகள் எல்லா மக்களுக்கும் பொருந்துவனவாகத் தோன்றினாலும் உண்மையில் பிரபுக்களே அவற்றின் காரணமாகப் பெரும் பயன் அடைந்தார்கள்.

நீதிபற்றிய உட்பிரிவுகள்: உரிமைகள் சாசனத்தின் 17 உட்பிரிவுகள் நீதி வழங்குதலைப் பற்றியன. பொது வழக்கு மன்றம் (Court of Common Place) அரசர் கூடவே ஆங்காங்கே செல்வதற்குப் பதிலாக ஓர் இடத்தில் நிலையாக நிறுவப்படவும், அரசருடைய வழக்குகளைச் சட்ட வல்லுநர்களும் சட்ட அனுபவம் பெற்றவர்களும் விசாரிக்கவும், சண்டை மூலமாக விசாரணை நடத்தும் முறைக்குப் (Trial by Battle) பதிலாகச் சான்றாய முறையைப் (Trial by Jury) பயன்படுத்தவும் இச்சாசனம் வழிவகுத்தது. நீதித்துறை பற்றிய உட்பிரிவுகளுள் மிக முக்கியமானவை 39-ஆம் மற்றும் 40-ஆம் உட்பிரிவுகளாகும். எல்லாச் சுதந்திரக் குடியானவர்களும் தங்களுக்குச் சமநிலையில் உள்ளவர்களால் அல்லது நாட்டின் சட்டத்திற்கேற்ப விசாரிக்கப்படவேண்டும் என்பதும், விசாரணையின் முடிவில் குற்றவாளியென முடிவு கட்டியபிறகே சிறையில் அடைக்கப்படவோ நாடு கடத்தப்படவோ சொத்துகள் பறிமுதல் செய்யப்படவோ இயலும் என்பதும் 39-ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளன. அதற்கடுத்த பிரிவில் எல்லா மக்களுக்கும் தக்க நீதி வழங்குவதில் காலதாமதம் ஏற்படக்கூடாது என்பதும் எவருக்கும் நீதி மறுக்கப்படக்கூடாது என்பதும் அறிவிக்கப்பட்டுள்ளன. இவ்விரு பிரிவுகளில் பல முக்கிய கருத்துகள் அடங்கியுள்ளன. அவை 1. விசாரணையின் முடிவு அறிவிக்கப்பட்டபிறகே ஒருவர் தண்டிக்கப்படவேண்டும்; 2. தீர்ப்பளிக்கும் உரிமை குற்றவாளிக்குச் சமநிலையில் இருப்பவர்களிடம் ஒப்படைக்கப்படவேண்டும்; 3. நடைமுறையில் இருக்கும் நாட்டின் சட்டத்தையொட்டி விசாரணை நடத்தப்படவேண்டும் என்பன. இவ்விரு பிரிவுகள் மக்களின் சுதந்திரம், சான்றாய முறை விசாரணை, சட்டத்தின்முன் யாவரும் சமம், அரசரைவிடச் சட்டமே உயர்ந்தது போன்ற உயரிய கருத்துகள் வளரத் துணை செய்தன.

நடைமுறைப்படுத்துவதற்கான பிரிவு: ஒரு பிரிவு உரிமைகள் சாசனத்தைத் தொடர்ந்து நடைமுறைப் படுத்துவதற்கான ஏற்பாட்டினை (Implementation) வகுத்துள்ளது. அதன்படி, 25 பிரபுக்கள் அடங்கிய ஒரு குழு அமைக்கப்படவேண்டும் என்றும், சாசனத்தை மன்னர் மீறும்போது இக்குழுவோ இதனைச் சார்ந்த நால்வரோ உடனே அதனை அவருடைய கவனத்திற்குக் கொண்டுவரவேண்டும் என்றும், நாற்பது நாட்களுக்குள் அக்குறைகளை அவர் நீக்கத் தவறினால் பிரபுக்களைக் கிளர்ச்சி செய்யத் தூண்டவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. இப்பிரிவு வரம்பிற்குட்பட்ட முடியாட்சியை ஏற்படுத்தும் முயற்சியில் கையாளப்பட்ட முதல் நடவடிக்கையைத் தோற்றுவித்ததாகக் கருதப்படுகிறது.

சிறப்பு: இங்கிலாந்து மக்களின் உரிமையைக் காக்கும் தெய்வம் என்றும் உயிர்நாடி என்றும் அரசியலமைப்பின் வேதம் என்றும் பல வரலாற்றாசிரியர்கள் இதனைக் கூறுகின்றனர். ஆனால், உண்மையில் பிரபுக்களின் நிலமானிய உரிமைகளைக் காப்பதற்கும் அப்போது ஏற்பட்டிருந்த குறைகளை நீக்குவதற்கும் ஏற்படுத்தப்பட்டதே யொழிய, எக்காலத்திற்கும் எல்லா மக்களுக்கும் உகந்த காப்புறுதிகளை இச்சாசனம் பெற்றிருக்கவில்லை. எனவே, இங்கிலாந்து மக்களின் சுதந்திரத்தைக் காக்கும் தேசிய உரிமைப்பத்திரமாக இதனைக் கருத இயலாது. ஆயினும் இதன் சிறப்புக்குச் சில காரணங்களைக் கூறமுடியும். 1. நாட்டு மக்களுடைய உரிமைகளை மன்னர் மதித்து நடக்கவேண்டும் என்ற கோட்பாட்டினை இது தொடங்கிவைத்தது. 2. மன்னர் மக்களின் உரிமைகளை மதித்து நடக்கத்தவறியபோது, அவற்றை அவர் மதித்து நடக்கும்படி செய்ய மக்கள் உரிமை பெற்றுள்ளார்கள் என்ற கருத்தை இது வலியுறுத்தியது. 3. நாட்டில் சட்டமே எல்லோரையும் விட மேலானது என்ற கருத்தை இது வற்புறுத்துகிறது. 4. இடைக்கால இங்கிலாந்து மக்கள் பற்றிய செய்திகளை அறிய இது உதவுகிறது. 5. கி.பி.17-ஆம் நூற்றாண்டில் மன்னருக்கும் நாடாளுமன்றத்திற்கும் கருத்துவேறுபாடு ஏற்பட்டபோது இதன் பிரிவுகளுக்குப் புதுமாதிரியான விளக்கங்கள் கொடுக்கப்பட்டன. அதன் காரணமாக மக்களுடைய உரிமைகள் நிலைநாட்டப்பட்டன. தி. அர. இரா.

**உரிமைகள் மசோதா** இரண்டாம் சேம்சு (James II) மன்னருடைய (கி.பி. 1685–1688) கொடுங்கோலாட்சியின் விளைவாகும். இங்கிலாந்து நாட்டின் அரசியலமைப்பு வரலாற்றில் உரிமைகள் மசோதா மகாசாசனத்திற்கு(Great Charter) அடுத்த நிலையில் வைத்துப் போற்றப்படுகிறது. இது கி.பி. 1689-இல்

இங்கிலாந்து நாடாளு மன்றத்தில் நிறைவேற்றப் பட்டதாகும்.

**சூழ்நிலைகள்:** சேம்சு கத்தோலிக்கச் சமயத்தில் மிகுந்த பற்றுக் கொண்டவர். அவர் இங்கிலாந்தின் அரசராகஇருப்பதை விரும்பாத சில மறுப்புரையாளர் கள் (Protestants) மான்மவுத்து (Monmouth) என்பவரின் தலைமையில் கலகம் செய்தனர். அது எளிதாக ஒடுக்கப்பட்டது. கலகக்காரர்கள் பலர் மரண தண்டனை பெற்றனர். வேறு பலர் நாடு கடத்தப் பட்டு, மேற்கிந்தியத் தீவுகளில் அடிமைகளாக விற்கப் பட்டனர். இவ்வகையான கொடூரச் செயல்கள் சேம்சுக்கு எதிராக மக்களைத் தூண்டிவிடப் பயன்பட்டன.

இங்கிலாந்தின் அரசுமுறையான சமயம் ஆங்கிலிகன் திருச்சபை (Anglican Church) எனப்படுகிறது. இது ஒருவகையான மறுப்புரைச் சமயம். அச்சமயத்தைச்சார்ந்த சமயக்குருக்களின் செல்வாக்கை அழிக்கச் சமயச் செய்திகள் பற்றிய ஆணையர்கள் மன்றம் (Court of Commissioners for Ecelesiastical Courses) ஒன்று சேம்சால் நிறுவப்பட்டது. சமய நிறுவனத்தைச் சார்ந்த எல்லாப் பணியாளர்களும் ஆசிரியர்களும் அதன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப் பட்டனர். சமய வழக்குகளை விசாரிக்கும் உரிமை அதற்கு வழங்கப்பட்டது. இத்தகைய நீதிமன்றம் ஏற்படுத்தப்பெறுவதை நாடாளுமன்றச் சட்டங்கள் தடை செய்திருந்தன. எனவே, அதனை அமைப்பதன் வாயிலாகச் சேம்சு ஆங்கிலிகன் சமயக் குருமார்களின் வெறுப்பைத் தேடிக்கொண்டார்.

சேம்சு மன்னர் சட்டவிலக்கு அதிகாரத்தைப் (Dispensing Power)பயன்படுத்திச் சோதனைச் சட்டத்திலிந்து (Test Act) தனிப்பட்ட கத்தோலிக்கர்களுக்கு விலக்கு அளித்து, அவர்களை நீதிபதிகளாகவும் படைத்தலைவர்களாகவும் நியமித்தார். ஆங்கிலிகன் சமய நிறுவனத்தைச் சார்ந்த பதவிகளிலும் அவர்கள் அமர்த்தப்பட்டனர். தைர்கானல் (Tyrconnel) என்ற கத்தோலிக்கர் அயர்லாந்து அரசப் பேராளராக நியமிக்கப்பட்டார். கல்வி நிறுவனங்களிலும் கத்தோலிக்கர்கள் பதவி பெறலாயினர். ஆக்சுபோர்டிலுள்ள கிறித்து திருச்சபைக்கல்லூரியில் துறைத்தலைவராகக் கத்தோலிக்கர் ஒருவர் பதவியேற்றார். மாக்டன் கல்லூரிக் கல்விக் கழகத்தில் கத்தோலிக்கர்கள் இடம் பெற்றனர். சேம்சு கி.பி. 1687-இல் சட்டத்தை நிறுத்தி வைக்கும் அதிகாரத்தைப்(Suspending Power) பயன்படுத்தினார். ஆங்கிலிகன் திருச்சபையை ஏற்காத மறுப்புரையாளர்களாகிய இணங்காதவர்களைத் (Non-conformists) தண்டிக்கும் வகையில் இயற்றப் பட்டிருந்த சமயம் பற்றிய சட்டங்களை நிறுத்தி வைக்கத் தாம் விரும்புவதாகச் சேம்சு ஓர் அறிக்கை வெளியிட்டார். இவ்வறிக்கையைத் தொடர்ந்து இணங்காதவர்கள் பலரை நகரசபைகளில் உறுப்பினர்களாகச் சேம்சு நியமித்தார். சேம்சினுடைய செய்கை இணங்காதவர்களுக்கு ஐயப்பாட்டை ஏற்படுத்தியது. கத்தோலிக்கச் சமயத்தை மீண்டும் அரசு சமயமாக ஆக்க மேற்கொள்ளப்பட்ட சதித் திட்டமாக அவர்கள் கருதி, இவ்வறிக்கையை எதிர்த் தார்கள். அவர்கள் எண்ணியது போல் சேம்சு சமய உரிமைகள் பற்றிய இரண்டாம் அறிக்கையை வெளியிட்டு, அதனை எல்லாத் திருச்சபைகளிலும் படிக்க வேண்டும் என்று கூறினார். ஆறு சமய வட்டத் தலைவர்களும் தலைமைச் சமயக் குருவும் அதை எதிர்த்தனர். அவர்களை அரசர் விசாரணைக்குட் படுத்தினார். அவர்கள் குற்றமற்றவர்கள் என்று தீர்ப் பளிக்கப்பட்டது. அது கத்தோலிக்கச் சமயத்தின் செல்வாக்கை உயர்த்த விரும்பிய சேம்சுக்கும் பேரதிர்ச்சியைக் கொடுத்தது.

அரசத் தெய்வீகக் கோட்பாட்டில் (Divine Right of Kings) சேம்சு நம்பிக்கை கொண்டவர்; நாடாளு மன்ற அரசுமுறையை (Parliamentary Government) அறவே வெறுத்தார். சட்டவிலக்கு அதிகாரத்தைப் பயன்படுத்தி நாடாளுமன்றத்தைத் தேவையற்றதாக மாற்ற முயற்சி செய்தார். நாடாளுமன்றத்தை ஆதரவாளர்களைக் கொண்டு நிரப்பப் பல வழிகளைக் கையாண்டார். தங்களுடைய வட்டங்களில் வாழும் தகுதியான கத்தோலிக்கர்களின் பெயர்களை எழுதி அனுப்புமாறு வட்ட அதிகாரிகளுக்கு ஆணை இட்டார்.

தமக்கு ஆதரவாக இருக்கும் பொருட்டுப் படைப் பலத்தை 30,000 ஆக உயர்த்தினார். கத்தோலிக்கர் களைப் படைத்தலைவர்களாக அமர்த்தினார். அதனை இலண்டனுக்கு அருகில் நிறுத்திவைத்து மக் களைப் பயமுறுத்தினார். பொதுநலக்குடியரசுக்காலத் திலிருந்தே (கி.பி. 1649-1660) நிலையான படையை உண்டாக்குவதை மக்கள் வெறுத்து வந்தனர். இராணுவ ஆட்சியிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள மக்கள் முனைந்து நின்றதில் வியப்பேதும் இல்லை.

சேம்சு மன்னருக்கு கி.பி. 1688-இல் ஆண் மகவு பிறந்தது. அதற்கு முன்பு அவருடைய மூத்த மகள் மேரியே பட்டத்துக்குரியவராக இருந் தார். அவரும் அவருடைய கணவரான வில்லியமும் மறுப்புரைச் சமயத்தை ஏற்றிருந்தனர். ஆகவே சேம்சு இறக்கும் வரை பொறுமையாக இருக்க மக்கள் தீர்மானித்தனர். ஆனால், இப்போது

சேம்சுக்குப் பிறகு அவருடைய மகனே பட்டம் பெறத் தகுதி பெற்றவனானான். தந்தையைப் போலவே தனயனும் கத்தோலிக்கச் சமயத்திற்கு ஆதரவு தருவானோ என்ற அச்சத்தால் நாட்டுத் தலைவர்கள் ஒன்று கூடி, வில்லியத்தைப் படையுடன் இங்கிலாந்துக்கு வருமாறு கேட்டுக்கொண்டனர். அவரும் அவ் வேண்டுகோளை ஏற்று இங்கிலாந்திற்கு வந்தார். மக்கள் ஆதரவினால் அவருடைய படைப்பலம் நாள்தோறும் பெருகியது. சேம்சினுடைய படைப்பலம் குறையலாயிற்று. எனவே, சேம்சு 23—12—1688-இல் இங்கிலாந்தை விட்டு ஓடினார்.

வில்லியம் இலண்டனைத் தம்வசமாக்கிக் கொண்டார்; பொதுத்தேர்தல் நடத்தப் போதிய நேரமின்மையால், முறையாக அமைக்கபடாத நடைமுறை வழக்கியல் நாடாளுமன்றத்தைக் (Convention Parliament) கூட்டி, தம் செய்கைக்கு மக்கள் ஆதரவைத் தேட முற்பட்டார். வில்லியம், மேரி ஆகிய இருவருக்கும் இங்கிலாந்தை ஆளும் பொறுப்பை அந்நாடாளுமன்றம் அளித்தது. அம்மன்றம் உரிமை அறிவிப்புப் பத்திரம் (Declaration of Rights) ஒன்றைத் தயாரித்தது. அதில் சேம்சின் சட்ட முறையற்ற செய்கைகள் அனைத்தையும் குறிப்பிட்டு, அது ஒவ்வொன்றும் சட்டத்திற்குப் புறம்பானது என்று அறிவித்து, அதனைப் புதிய அரசர்களை ஏற்றுக்கொள்ளும்படி செய்தது. அதன் விளைவாக உரிமை அறிவிப்புப் பத்திரம் இப்போது உரிமைகள் மசோதாவாகியது. இம்மசோதாவில் சில புதிய வாசகங்களும் சேர்க்கப்பட்டன.

உட்பிரிவுகள்: இரண்டாம் சேம்சின் முறையற்ற செயல்கள் அனைத்தும் இதில் குறிப்பிடப்பட்டுள்ளன. சட்டத்தை நிறுத்தி வைத்தல், சட்டவிலக்கு அதிகாரத்தைப் பயன்படுத்துதல், ஆணையர்கள் மன்றம் அமைத்தல், நாடாளுமன்றத்தின் ஒப்புதலின்றி வரி வசூலித்தல், அரசரிடம் விண்ணப்பம் செய்துகொண்டவர்களைச் சிறையிலடைத்தல், அமைதிக்காலத்தில் நிலையான படையை நிறுத்திவைத்தல் ஆகியவை அவற்றுள் அடங்கியிருந்தன. அவை யாவும் நாட்டின் சட்டதிட்டங்களுக்குப் புறம்பானவை என்பதும் மக்கள் சுதந்திரத்தைப் பாதிக்க வல்லவை என்பதும் அறிவிக்கப்பட்டன.

பல்வேறு நிபந்தனைகள் கூறப்பட்டுள்ளன. மறுப்புரையாளர்கள் தங்கள் பாதுகாப்பிற்காகப் படைக்கலன்கள் வைத்திருக்க அனுமதி வழங்க வேண்டும். நாடாளுமன்றத் தேர்தலில் எவரும் தலையிடலாகாது. நாடாளுமன்ற விவாதங்களின் போது உறுப்பினர்கள் கூறும் கருத்திற்காக அவர்கள்மீது வழக்குத் தொடரக் கூடாது. தேவைக்கு மீறிய ஈட்டுத் தொகையைக் கட்டுமாறு எவரையும் வற்புறுத்தக்கூடாது. முறையற்ற தண்டனைகளை விதிக்கக் கூடாது. அரசத் துரோகக் குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது விசாரணை நடத்தும் போது தகுதி உள்ளவர்களையே சான்றாயர்களாக (Jurors) அமர்த்த வேண்டும். தீர்ப்பு அளிப்பதற்கு முன்னரே தண்டத் தொகைகள், பறிமுதல்கள் ஆகியன பற்றி உறுதி அளிக்கக் கூடாது. இத்தகைய குறைபாடுகளை நீக்குவதற்கும் சட்டங்களைக் காப்பாற்றுவதற்கும் அவற்றை மேலும் வலுப்படுத்துவதற்கும் நாடாளுமன்றத்தை அடிக்கடி கூட்டவேண்டும் என்னும் நிபந்தனைகள் இம்மசோதாவில் குறிப்பிடப்பட்டுள்ளன.

உரிமைகள் மசோதாவில் வில்லியம், மேரி ஆகியோரிடம் அரசப்பதவி ஒப்படைக்கப்படுவதாக குறிப்பிடப்பட்டது. வாரிசுரிமையைப் பற்றிய ஏற்பாடு அதன் பின்னர்க் கூறப்பட்டது. வில்லியம், மேரி ஆகியோருக்குப் பிறகு அவர்களுடைய வழித்தோன்றல்கள் அரசுரிமை பெற வேண்டும். அவர்களுக்குப் பிள்ளைப்பேறு இல்லையெனில், சேம்சின் இளைய மகளான ஆனும் (Anne) அவர் கால்வழியினரும் பட்டம் பெற வேண்டும். அவருக்கும் பிள்ளைப்பேறு இல்லையெனில், வில்லியத்திற்கும் மேரிக்கும் பிறகு அவர் திருமணம் புரிந்துகொள்ளும் மனைவிக்குப் பிறக்கும் குழந்தை அரசுரிமை பெறுதல் வேண்டும். கத்தோலிக்கர்களும் கத்தோலிக்கர்களை மணம் புரிந்துகொண்டவர்களும் அரசப்பதவிக்குத் தகுதியற்றவர்களாக அறிவிக்கப்பட்டனர். பட்டமெய்தும் போது ஒவ்வொருவரும் சோதனைச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடி உறுதிமொழி எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது கூறப்பட்டது.

சிறப்பு: அரசருக்கும் நாடாளுமன்றத்திற்கும் இடையே சற்றேறக்குறைய நூறு ஆண்டுகளாக நடைபெற்று வந்த போராட்டத்தை இம்மசோதா நாடாளுமன்றத்திற்குச் சாதகமான வகையில் முடித்து வைத்தது. இது சேம்சின் சட்ட விரோதமான செயல்களை வன்மையாகக் கண்டித்ததன் வாயிலாகப் பிற்காலத்தில் அத்தகைய செயல்கள் நடைபெறாமல் தடுத்துவிட்டது. இதில் சில குறைபாடுகளும் உள்ளன. இதனை அரசியலமைப்புச் சட்டமாகக் கருத இயலாது. இது புதுவகையான அரசு நிறுவனங்களை அமைத்து அவற்றின் அதிகாரங்களை வரையறுக்கவில்லை. ஆட்சித்தலைமை அதிகாரம் (Sovereignty) எங்கு உள்ளது என்பதை இது தெளிவாகக் குறித்துக் காட்டவில்லை. சட்டமுறையற்ற செயல்களில் அரசர் மீண்டும் ஈடுபடுவதைத் தடை செய்யக் கூடிய அரசியலமைப்புச் சார்ந்த கட்டுப்பாடுகளை இது உருவாக்கவில்லை. இம்மசோதா முழுவதையும் ஒரு

சாதாரணச் சட்டத்தின் வாயிலாக நீக்கிவிடுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டிருந்தது. அரசியல் தத்துவங்கள் ஏதும் இதில் இடம் பெறவில்லை. எல்லாக் காலத்திற்கும் பொருந்தவல்ல பொதுக்கருத்துகள் இதில் இடம் பெறவில்லை. அரசாங்கத்தை நாடாளுமன்றத்தின் கட்டுக்குள் கொண்டு வருவதற்கான முயற்சியும் நாடாளுமன்றத்தை மக்களின் உண்மையான பேராளராக அமைப்பதற்கான முயற்சியும் இதில் மேற்கொள்ளப்படவில்லை.

இதனை உருவாக்கியவர்கள் சேம்சு காலத்தில் ஏற்பட்டிருந்த இன்னல்களைத் தடைசெய்வதுடன் மனநிறைவு கொண்டனர். ஆயினும் இது புரட்சிகரமான மாறுதலை உண்டாக்கியது என்பதை எவரும் மறுக்க இயலாது. தெய்விக உரிமைக் கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்ட முடியாட்சியை இது முழுமையாக மறுத்தது. இதனை ஒரு சட்டம் என்று கூறுவதற்குப் பதிலாக அரசருக்கும் மக்களுக்கும் இடையே ஏற்படுத்தப்பெற்ற ஓர் ஒப்பந்தம் என்று கூறுவது பொருத்தமாகும். வில்லியமும் மேரியும் இதில் கூறப்பட்டிருக்கும் நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டால்தான் அவர்களை ஆட்சியாளர்களாக மக்கள் ஏற்றுக் கொள்வர் என்பது அறிவிக்கப்பட்டது. அந்நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டதன் வாயிலாக வில்லியமும் மேரியும் சேம்சு மன்னருடைய செயல்கள் சட்ட விரோதமானவை என்பதை ஒத்துக்கொண்டனர் என்பது தெளிவாயிற்று. அதன் காரணமாக இங்கிலாந்தின் அரசியலமைப்பு இச்சட்டத்தின் வாயிலாக முழுமை அடைந்து விட்டது என்று உறுதியாகக் கூறமுடியும். ஏனெனில், இங்கிலாந்து அரசியலமைப்பின் அடித்தளமாக விளங்கும் சட்ட ஆதிக்கக் (Supremacy of Law) கோட்பாடு இச்சட்டத்தின் வாயிலாக ஐயத்திற்கும் விவாதத்திற்கும் இடமற்ற வகையில் நிலைநாட்டப்பெற்றுவிட்டது. தி.அர.இரா.

**உரிமைகள் மசோதா[2]**: ஐக்கிய அமெரிக்க நாட்டின் அரசியலமைப்புக்குச் செய்யப்பட்ட முதல் 10 திருத்தங்களும் ஒரே கூறாகக் கருதப்பட்டு, 15—12—1791 –இல் அவ்வரசியலமைப்பின் பாகமாக அறிவிக்கப்பட்டன. இந்த முதல் 10 திருத்தங்களின் தொகுப்பே அமெரிக்க உரிமைகள் மசோதா ஆகும். இவையே தனியார் உரிமைகளுக்கு அரசாங்கம் அளிக்கும் பொறுப்புகளையும் (Guarantees) கூட்டாட்சி அரசாங்கம், மாநில அரசாங்கம் ஆகியவற்றின் மீது விதிக்கப்படும் வரம்புகளையும் குறிப்பிடுகின்றன. அமெரிக்க உரிமைகள் மசோதாவிற்கு ஆதாரமாக இருப்பவை, 1. ஆங்கில மாபெரும் பட்டயம் (English Magna Carta, 1215), 2. ஆங்கில உரிமைகள் மசோதா (English Bill of Rights, 1689), 3. அமெரிக்காவிலுள்ள குடியேற்ற நாடுகள் ஆங்கில அரசரோடும் பாராளுமன்றத்தோடும் நடத்திய போராட்டங்கள், 4. அமெரிக்க வெர்சினிய மாநிலம் வரைந்த (கி.பி.1776–இல்) உரிமைகள் அறிவிப்பு (Declaration of Rights), 5. சமத்துவக் கருத்து அமெரிக்க மக்களிடையே பரவலாக வளர்தல் முதலியவை ஆகும். அதில் கூறப்பட்ட அரசாங்கத்தின் குறிக்கோள்களும், உரிமைகளுக்குள்ள பாதுகாப்புகளும் யாவரையும் கட்டுப்படுத்தக் கூடியவை. கூட்டாட்சிச் சட்டமன்றம் (Congress) செய்யும் எந்தச் சட்டமும் இவ்வுரிமைகளுக்கு மாறாக இருப்பின், வழக்கு ஆய்வில் இத்தகைய மாறுபட்ட சட்டங்களைச் செல்லுபடி ஆகமாட்டா என்று கூறித் தள்ளுபடி செய்வதற்கு ஐக்கிய அமெரிக்க நாட்டின் தலைமை நீதிமன்றத்துக்கு அதிகாரம் உண்டு.

அமெரிக்க உரிமைகள் மசோதாவின் பிரிவுகள்: பிரிவு 1. ஏதேனுமொரு சமய நிறுவனத்தைப் பற்றிய சட்டத்தையோ ஒரு சமய நெறியை மக்கள் தம் விருப்பம்போல் பின்பற்றுதலைத் தடை செய்யும் சட்டத்தையோ பேச்சுரிமை, கருத்துகளை அச்சிடும் உரிமை, மக்கள் அமைதியாகக் கூடும் உரிமை, தம் குறைகளைத் தீர்க்குமாறு வேண்டி அரசாங்கத்துக்கு விண்ணப்பம் செய்து கொள்ளுதற்கு மக்களுக்கு இருக்கும் உரிமை முதலிய உரிமைகளைச் சுருக்கி விடும் சட்டத்தையோ கூட்டாட்சிச் சட்டமன்றமாகிய காங்கிரசு செய்தல் கூடாது.

பிரிவு 2. ஒரு சுதந்திர நாட்டைப் பாதுகாப்பதற்குத் தேவையான நன்கு ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு படையை வைத்திருக்கும் உரிமையும் போர்க் கருவிகளை வைத்திருத்தற்கும் தாங்கிச் செல்லுதற்கும் மக்களுக்கு இருக்கும் உரிமையும் மீறப்படமாட்டா.

பிரிவு 3. அமைதிக் காலத்தில் போர் வீரர் எவரும் எந்த வீட்டிலும் வீட்டு உடைமையாளருடைய உடன்பாடு இல்லாமல் தங்கி இருக்குமாறு அனுமதிக்கப்படமாட்டார். போர்க்காலத்திலும்கூட, சட்டப்படியாக மட்டுமே போர்வீரர் தனியார் வீட்டில் தங்குதல் இயலும்.

பிரிவு 4. மக்கள் தங்கள் உடம்புகளையும் வீடுகளையும் கடிதங்களையும் பிற உடைமைகளையும் எவரும் காரணமின்றிச் சோதனை போடுவதினின்றும் கைப்பற்றுவதினின்றும் காப்பாற்றிக் கொள்ளுவதற்கு இருக்கும் உரிமை மீறப்படவோ அழிக்கப்படவோ மாட்டாது. இவற்றைப் பரிசோதனை செய்தற்குரிய இடமும் கைப்பற்றுதற்குரிய ஆளின் அல்லது பொருளின் பெயர்குறிப்பிடப்படாமலும், தக்க காரணம்

இல்லாமலும் உறுதி மொழி ஆதாரம் இல்லாமலும் பிடி ஆணை (Warrant) எதுவும் விடுக்கப்பட மாட்டாது.

பிரிவு 5. போர்ப்பணியில் ஈடுபட்டிருக்கிற அல்லது நாட்டின் அமைதிக்கு இடர்ப்பாடான சூழ்நிலையில் தரை, கடற்படைகள் பணி செய்யும்போது தோன்றுகிற வழக்குகளைத் தவிர, மற்றவற்றில் சான்றாயரால் (Juror) குற்றஞ்சாட்டப்பட்டாலல்லாமல், எவரும் ஏதேனும் கொலைக் குற்றத்துக்காகவோ அது போன்ற வேறெந்தக் குற்றத்துக்காகவோ காரணம் காட்டுமாறு கட்டாயப்படுத்தப்படலாகாது. மேலும், எவரும் ஒரே குற்றத்துக்காக (தம் உயிரோ உடலோ துன்புறும் வகையில்) இரண்டு தடவை துன்பமான தண்டனைக்கு உட்படுத்தப்படலாகாது; எவரும் எந்த ஒரு குற்ற வழக்கிலும் தமக்கெதிராகத் தாமே சாட்சியாக இருக்குமாறு கட்டாயப்படுத்தப்படுதலும் சட்டமுறையின்படியாக அல்லாமல் எவருடைய உயிரும் உரிமையும்உடைமையும்பறிக்கப்படுதலும்கூடாது. நியாமான அளவு இழப்பீடு எதுவும் இல்லாமல், பொதுப் பயன்களுக்காகத் தனியாருடைய உடைமை எதுவும் எடுத்துக் கொள்ளப்படக் கூடாது.

பிரிவு 6. எல்லாக் குற்றச்சாட்டுகளிலும் ஓரஞ்சாராத அரசாங்கத் தீர்ப்புச் சான்றாயர் முன்பாகக் குற்றம் செய்யப்பட்ட மாவட்டத்தில் விரைவான, வெளிப்படையான வழக்கு விசாரணை நடத்துமாறு கேட்டுப் பெறுவதற்குக் குற்றம் சாட்டப்பட்டவருக்கு உரிமை உண்டு. மேலும், அவர் மீது குற்றம் சாட்டப்படுதற்கான காரணமும் குற்றச்சாட்டின் இயல்பும் அவருக்குத் தெரிவிக்கப்படுதல் வேண்டும். அவருக்கெதிரான சாட்சிகளை அவர் கேள்வி கேட்டற்கும் தமக்கு உதவியான சாட்சிகளைத் தாம் கொண்டு வருதற்கும் தம் உரிமையைக் காப்பாற்றிக் கொள்ளுதற்குதவியாக வழக்கறிஞரை அமர்த்திக் கொள்ளுதற்கும் அவருக்கு உரிமை உண்டு.

பிரிவு 7. பொதுச் சட்டத்தில் வரும் வழக்குகளில், இருபது தாலருக்குக் (Dollars) கூடுதலாகாத மதிப்புடைய வழக்கு, சான்றாயர் வாயிலாகத்தான் விசாரிக்கப்பட்டுத் தீர்ப்புச் செய்யப்படுதல் வேண்டும். சான்றாயர் உதவியுடன் விசாரிக்கப்பட்ட எந்த வழக்கும் ஐக்கிய அமெரிக்க நாட்டின் எந்த நீதிமன்றத்தாலும் பொதுச் சட்டத்தின் விதிகளின்படியல்லாமல் மீண்டும் விசாரிக்கப்படலாகாது.

பிரிவு 8. அளவுக்கு மீறிய பிணையத்தொகை கேட்கப்படுதலும், அளவுக்கு மீறிய தண்டப்பணம் (Fines) விதிக்கப்படுதலும் வழக்கத்துக்கு மீறிய கொடிய தண்டனைகள் வழங்கப்படுதலும் கூடாது.

பிரிவு 9. அரசியலமைப்புச் சட்டத்தில் சில உரிமைகள் குறிப்பிடப்பட்டுள்ள காரணத்தால், மக்களால் பின்பற்றப்பட்டு வரும் உரிமைகள் மறுக்கப்படுகின்றன என்றோ மதிக்கப்படவில்லை என்றோ கருதுதற்கு இடமில்லை.

பிரிவு 10. ஐக்கிய அமெரிக்க நாட்டின் நடுவண் அரசாங்கத்துக்கு அரசியலமைப்புச் சட்டத்தின் வாயிலாகக் கொடுக்கப்படாத அதிகாரங்களும் அவ்வரசியலமைப்புச் சட்டத்தினால் மாநிலங்களுக்கு மறுக்கப்படாத அதிகாரங்களும் முறையே மாநிலங்களுக்கோ மக்களுக்கோ ஒதுக்கி வைக்கப்படுகின்றன.

ஐக்கிய அமெரிக்க நாட்டில் கி.பி. 1861க்கும் கி.பி. 1865க்கும் இடையே நடைபெற்ற உள்நாட்டுப் போரின் விளைவாக அடிமைநிலை ஒழிக்கப்பட்டு, கி.பி.1868-இல் நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்பின் 14-ஆம் திருத்தத்தின்படி, ஐக்கிய அமெரிக்க நாட்டில் பிறந்தோரும் அந்நாட்டுக் குடியுரிமை பெற்றோரும் (Naturalized) அந்நாட்டின் அதிகாரத்துக்கு உட்பட்டோரும் அந்நாட்டின் குடிமக்கள் ஆவரென்பது அறிவிக்கப்பட்டது.

**உரிமைகள் மசோதாவின் அரசியல் முக்கியத்துவம்:** அமெரிக்க அரசியலமைப்பில் இணைக்கப்பட்டுள்ள உரிமைகள் மசோதா ஆங்கிலத் தாராளக் குடியாட்சிக் கோட்பாடுகளை, சிறப்பாகச் சான் இலாக்கு (John Locke), மாண்டசுக்கியூ (Montesquieu) ஆகியோரின் குடியாட்சிக் கோட்பாடுகளை எடுத்துக் காட்டுகிறது. அது பெருமளவு ஆங்கில உரிமைகள் மசோதாவைப் பின்பற்றியே தோன்றியது. மேலும், அது கி.பி. 1789-இல் பிரஞ்சுப் புரட்சியாளர் விடுத்த மனித உரிமைகள் அறிக்கைக்கும் வழிகாட்டியாக இருந்தது. கூட்டாட்சி அரசியலமைப்பும் தாராளக் குடியாட்சி அரசியலமைப்பும் உடைய நாடுகளெல்லாம் சிறிதளவேனும் அமெரிக்க அரசியலமைப்பில் இணைந்துள்ள உரிமைகள் மசோதாவை முன்மாதிரியாகக் கொண்டே அமைக்கப்பட்டுள்ளன.

தி. அர.இரா.

துணை நூல்கள்:

Brogan, D.W., The American Political System, Hamish Hamilton, 1943.

Goodman, P., American Constitution, John Wiley, NewYork, 1970.

**உரிமைத் தொகுப்பு:** இது பல்வேறு உரிமைகளின் தொகுப்பாகும். இதன் ஆசிரியர் நதானியேல் வார்டு (Nathaniel Ward, கி.பி. 1528-1652). இவர் ஓர் ஆங்கிலேயர்; சிறந்த எழுத்தாளர்; கிறித்தவத்

தூய்மைவாதி (Puritan). இவர் ஒரு சமயக் குருவும் ஆவர். ஆங்கில அரசர் இரண்டாம் சார்லசு (Charles II) காலத்தில் நாடாளுமன்றத்தில் தூய்மையாளர்களுக்கு எதிர்ப்பான பல சட்டங்கள் இயற்றப்பட்டன. இச்சட்டங்களை வெறுத்த நதானியேல் இங்கிலாந்தை விட்டு, வட அமெரிக்காவிலுள்ள ஆங்கிலக் குடியேற்ற நாடாகிய மாசாசூசெட்சில் (Massachussetts) குடியேறினார். அங்குத்தான் இவர் கி.பி. 1641-இல் இவ்வுரிமைத் தொகுப்பினை (The Body of Liberties) எழுதினார். இதில் கூறப்பட்ட உரிமைகளையும் விதிகளையும் மாசாசூசெட்சு மக்கள் பின்பற்ற வேண்டும் என்பது இவரது விருப்பம்.

இத்தொகுப்பில் பழைய ஏற்பாட்டில் (Old Testament) இடம் பெற்றுள்ள நியதிகளையும் ஆங்கிலப் பொதுச் சட்டத்தில் அமைந்துள்ள விதிகளையும் இவர் சேர்த்தார்.

இவ்வுரிமைத் தொகுப்பு தோன்றுவதற்கு அக்காலத்தில் நிலவிய சூழ்நிலையே காரணமாகும். மாசாசூசெட்சில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கையை ஒழுங்குபடுத்தும் சட்டதிட்டங்கள் எவையும் இல்லை. இக்குறையை உணர்ந்த அறிஞர் சிலர் சான் விந்திராப்பு (John Winthrop) என்பவரை கி.பி. 1635-இல் ஆங்கில நாட்டுப் பேருரிமைப் பட்டயம் (Magna Carta) போன்ற ஒன்றனை உருவாக்கித் தருமாறு வேண்டினர். ஆனால் அது நிறைவேறவில்லை. நீண்ட இடைவெளிக்குப்பின்னரே நதானியேல் வார்டு இந்த உரிமைத் தொகுப்பினை உருவாக்கிக் கொடுத்தார்.

இத்தொகுப்பு விரிவான சட்டத் தொகுப்பு அன்று; சில அடிப்படை உரிமைகளை நிரல்படுத்திக் காட்டும் உரிமைக் கோவை ஆகும். இது 100 விதிகளைக் கொண்டது. மக்களுக்கு வேண்டும் சட்ட நடைமுறைகளையும் நீதிமன்றப் பாதுகாப்புகளையும் இது வரையறுத்தது. இத் தொகுப்பினால் நினைத்தவாறெல்லாம் ஆட்சி நடத்தும் போக்குக் கட்டுப்படுத்தப்பட்டது. இதில் கண்ட விதிகள் ஆங்கில நாட்டு மரபுகளையும் வழக்கங்களையும் விவரித்ததோடன்றி, ஆங்கிலச் சட்டத்திற்கு மேற்பட்ட சில விளக்கங்களையும் அளித்தது. ஆனால் மாசாசூசெட்சு மக்கள் காலப்போக்கில் இவ்வுரிமைத் தொகுப்பினாலும் மன நிறைவு எய்தாமல் மேலும் சில திருத்தங்களையும் விதிகளையும் வேண்டினர். எனவே கி.பி. 1648-இல் இதற்குப் பதிலாக மிகவும் விரிந்த பல்வேறு நடைமுறை விதிகளைத் தன்னகத்தே கொண்ட மிகச் சீரிய தொகுப்பொன்று வெளிவந்தது. இது 'மாசாசூசெட்சின் பொது விதிகளும் உரிமைகளும்' (Massachussetts General Laws and Liberties) என்னும் நூலாகும். பா. சூ.

**உரிமை மனு:** பெரிதும் போற்றப்படுகிற உரிமை மனுவானது கி.பி. 1628-இல் சார்லசு மன்னன் ஆட்சிக்காலத்தில், அவனது வல்லாட்சிப் போக்கிற்கு எதிர்ப்பாக ஆங்கிலேயப் பாராளுமன்றத்தில் மக்களவையால் (House of Commons) தாக்கல் செய்யப்பட்டது.

பாராளுமன்ற ஒப்புதலின்றிப் பெறப்பட்ட சுங்க வரிக் கொடுமைகளும் தனிமனிதன்மேல் கடனாகக் கேட்டுப் பெறப்பட்ட பணச்சுமைகளும் அவ்வாறு கடனளிக்க இயலாதவர்களைச் சிறையிலிடும் கொடுமைகளும் போர்வீரர்களைச் சிறைப்படுத்தலும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வெறுப்பூட்டியதின் விளைவாக எழுந்ததே இவ்வுரிமை மனு. சார்லசு மன்னனுக்கு உரிமை மனுவை ஏற்றுக் கொள்வதில் விருப்பமில்லாதிருந்த போதிலும், நெருக்கடிச் சூழ்நிலையில் அம்மனு சட்டமாக்கப்பட்டது.

உரிமை மனு தாக்கலானதற்கான உடனடிக் காரணம் இம்மன்னனின் வெளியுறவுக் கொள்கையே. அதாவது, பிரான்சு நாட்டு மன்னனான பதின்மூன்றாம் உலூயிக்குத் துணையாக இலாரோசேலில் (La Rochelle) உள்ள ஊகிநாட்டுக் (Huguenot) கோட்டையை முற்றுகையிடுவதற்காக இவன் திறனற்றுப் போயிருந்த தன் கடற்படையை அனுப்பினான். இது ஒரு திட்டமிடப்படாத செயலாக இருந்ததால், கடற்படையினர் தோல்விகண்டு திரும்பினர். இதனால் வெறுப்புற்ற மன்னன் போர் வீரர்களைச் சிறையிலிட்டான். மேலும், இராணுவஆட்சி அறிவிப்புச் செய்யப்பட்ட பகுதிகளில் ஊதியம் கிடைக்காமையினாலும் ஒழுக்கமின்மையாலும் போர் வீரர்கள் பொது மக்களின் சொத்துகளைக் கவர்ந்தனர்.

மேற்சுட்டிய காரணங்கள் பொதுமக்களின் எதிர்ப்புணர்வை மிகுதிப்படுத்தின. இந்நிலையில் கீழ்க்காணும் கொள்கை நோக்குடன் பாராளுமன்றத்தில் உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டது.

அ. எவ்வகையான வரியோ கடனோ பொதுமக்கள் மீது பாராளுமன்ற ஒப்புதலின்றிப் பெறுவதற்கு மன்னனுக்கு உரிமை இல்லை.

ஆ. தனிமனிதர் யாரும் சட்டத்திற்குப் புறம்பாகச் சிறையிடப்படக்கூடாது.

இ. போர் வீரர்களைச் சிறைப்படுத்தக்கூடாது. அவர்கள் அனைவர்க்கும் ஊதியம் கொடுக்காமலிருக்கக் கூடாது.

ஈ. அமைதிக் காலங்களில் இராணுவ ஆட்சி ஏற்படுத்தக் கூடாது.

சார்லசு மன்னன் இவ்வுரிமை மனுவிற்கு எதிர்ப்புத் தெரிவித்த போதிலும், அன்றைய பணத் தேவைக்காகக் கையொப்பமிட்டான். இருப்பினும், இது பாராளுமன்றத்திற்கு அப்போது ஏற்பட்ட வெற்றியாகவே கருதப்பட்டது. மன்னன் தனது சருவாதிகாரப் போக்கைத் தொடர்ந்து நடத்தினான் என்று வரலாற்றுச் சான்றுகள் விளக்குகின்றன. தொடர்ந்து ஏற்பட்ட உள்நாட்டுப் போரின் விளைவாக கி.பி. 1649–இல் சார்லசு மன்னன் கொல்லப்பட்டான்.

உரிமை மனுவிற்கான உடனடி விளைவு பொது மக்களுக்கு இல்லாதிருந்த போதிலும், உரிமை மனு சட்டத்தின் ஆட்சியைத் தெளிவுபடுத்தியது; மன்னனின் விருப்பு வெறுப்பைக் கண்டித்தது. அன்றியும், இது வல்லாட்சிப் போக்கிற்குக் கண்டனக் குரலாக அமைந்தது.

உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டதன் விளைவாக அமெரிக்கச் சுதந்திரப் போர் அறிவிப்புச் செய்யப்பட்டது. மேலும், அமெரிக்க அரசியல் சட்டத்தில் உரிமை மனுவின் குரல் எதிரொலித்ததாகவும் கருதப்படுகிறது. பா.சு.

**உரிமை மூலம்** சமூக வாழ்வைப் பயனுள்ளதாக மாற்றுவதற்குப் பல்வேறு உரிமைகள் மனிதனுக்குத் தேவைப்படுகின்றன. இவ்வுரிமைகள் அனைத்தும் திடீர் என்று மனிதனை வந்தடையவில்லை. ஒவ்வொரு வகை உரிமையும் ஒவ்வொரு வழியில் மனிதனை வந்தடைகின்றது. உரிமை எவ்வழியில் அதனைப் பெற்றோரை வந்தடைந்ததோ, அவ்வழியினையே 'உரிமை மூலம்' (Title) என்கின்றனர்.

சில உரிமைகள் எவ்விதச் செயல்களும் இன்றி வந்து அடைகின்றன. மனித முனைவின்றிப் பெறுகின்ற இவ்வகை உரிமைகள் மனிதன் இம்மண்ணுலகிற் பிறந்தவுடன் இயல்பாகவே அமைந்துவிடுகின்றன. உயிரின் மீதும் சுதந்திரத்தின் மீதும் மனிதர்க்கு இருக்கின்ற உரிமைகள் மனித முனைவின்றி இயல்பாகப் பெறுகின்ற உரிமைகள் ஆகும். இவ்வாறு பெற்ற உரிமைகளானாலும் ஈட்டிய உரிமைகளானாலும் இவ்வுரிமைகளுக்குச் சில பொருண்மைகள் (Facts) மூல ஆதாரமாக விளங்குகின்றன. உரிமை பெறவும், உரிமை இழக்கவும் இப்பொருண்மைகளே காரணமெனலாம். ஒருவர் ஓர் உரிமையைப் பெறுகின்றபோது, மற்றவர் அதே உரிமையைப் பெறாது நிற்றலின் காரணம் யாது என ஆராய்ந்தால், ஒருவர் உரிமையைப் பெறக் காரணமாயிருந்த பொருண்மையானது மற்றவருடன் தொடர்பு அற்று இருந்தமையே ஆகும்.

எடுத்துக்காட்டாக, 'அ' என்பவர் ஒரு குளத்தில் மீன் பிடிக்கிறார். அவர் பிடிக்கும் மீன்கள் மீது அவர் உரிமையைப் பெறுகிறார். ஏனெனில், அம்மீன்களை அவர் பிடித்த பின் அவை 'அ' வுக்கே சொந்தமாகின்றன. அதுவரை மீன்கள் மீது (அவை குளத்தினுள் இருந்தது வரை) எவரும் உரிமை கொண்டாடவில்லையாதலினால் அவர் ஈட்டிய உரிமை 'முதல் உரிமை' (Original Title) ஆகிறது. 'அ' என்பார் மீன் பிடித்துக் கொண்டிருந்த பொழுது 'ஆ' என்பார் அதனைக் கரையிலிருந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறார். அது அந்த மீன்களின் மீது ஏதேனும் உரிமையை ஏற்படுத்துமா? ஏற்படுத்தாது. ஏனெனில், 'மீன் பிடித்தல்' என்ற பொருண்மை(Fact) மட்டும் 'அ' விற்கு மீன்களின் மீது உரிமை பெற்றுத் தந்ததே தவிர, வேறு பொருண்மைகள் அல்ல. எனவே 'ஆ' விற்கு 'மீன்பிடித்தல்' என்ற பொருண்மையுடன் தொடர்பு அற்ற காரணத்தினால் அவருக்கு மீன்கள் மீது உரிமை இல்லை.

மற்றோர் எடுத்துக்காட்டு: மீன்களைப் பிடித்துக் கொண்ட 'அ' அதன்மீது உரிமையுடையவராகிறார் என்பது மேற்கண்ட எடுத்துக்காட்டால் விளங்கும். கரையில் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த 'ஆ' மீன்கள் மீது மிகுந்த ஆசை கொண்டு, அவற்றினை 'அ' விடமிருந்து விலைக்கு வாங்குகிறார். அதன்பின் 'ஆ' என்பவர் அம்மீன்கள் மீது உரிமை பெறுகிறார். ஏனெனில், 'மீன் விற்றல்' என்ற பொருண்மையானது மீன்கள் மீதிருந்த 'அ'வின் உரிமையை அழிப்பதும் 'ஆ' வை அம்மீன்களுக்குச் சொந்தக்காரராக மாற்றுவதும் காரணமாக அமைவது. இந்த எடுத்துக்காட்டுகள் பொருண்மைகள் எவ்வாறெல்லாம் உரிமையை ஆக்கவும் அழிக்கவும் ஆற்றல் பெறுகின்றன என்பதைப் புலப்படுத்தும்.

உரிமை மூலம் என்பது முதல் உரிமை மூலமாகவோ (Original Title) முன்பு உரிமைபெற்றிருந்தோரிடமிருந்து உரிமை மாற்றம் காரணமாகப் பெற்ற வழி உரிமை மூலமாகவோ (Derivative Title) ஏற்படலாம் என்பதையும் மேற்கண்ட எடுத்துக்காட்டுகள் விளக்கும். அவற்றில் எ-டு. 1, முதல் உரிமை மூலத்தைக் (Original Title) காட்டுவதாகவும் எ-டு. 2, உரிமை மாற்றம் வாயிலாகப் பெற்ற வழி உரிமை மூலத்தைக் (Derivative Title) காட்டுவதாகவும் அமைந்துள்ளன.

**உரிமைத் தொடர்பான பொருண்மைகள்:** பொருண்மைகளை அவற்றின் குணநலன்களைக்

கொண்டு இருவகையாகப் பிரிப்பர் பெந்தம். அவை யாவன:

1) விதிக்கின்ற பொருண்மைகள் (Investitive Facts),
2) விலக்குகின்ற பொருண்மைகள் (Divestitive Facts).

எவ்வகைப் பொருண்மைகளெல்லாம் ஒரு மனிதனுக்கு உரிமையை விதிக்கின்றனவோ, அவற்றை விதிக்கின்ற பொருண்மை என்று கூறலாம். எடுத்துக்காட்டு 1-இல் 'மீன் பிடித்தல்' என்பது விதிக்கின்ற பொருண்மையாகும். ஏனெனில், அப்பொருண்மையே மீன்களின் மீது 'அ' கொண்ட உரிமைக்கு ஆதாரமாயிற்று.

எவ்வகைப் பொருண்மைகளெல்லாம் முன்பு நிலவி வந்த உரிமையை அவ்வுரிமை உடையோரிடத்தினின்று விலக்கி (அல்லது அழித்து) விடுகிறதோ, அவற்றை விலக்குகின்ற பொருண்மைகள் (Divestitive Facts) என்று கூறுவர். எடுத்துக்காட்டு 2-இல் 'மீன் விற்றல்' என்ற பொருண்மையானது, மீன்கள் மீது 'அ' கொண்டிருந்த உரிமையை விலக்குவதாக அமைகின்ற காரணத்தால் விலக்குகின்ற பொருண்மை (Divestitive Fact) ஆகும்.

விலக்குகின்ற பொருண்மையைச் சால்மண்டு (Salmond) இருதிறமாகப் பிரிப்பர். அவையாவன: 1) அழிக்கின்ற பொருண்மை (Extinctive Fact), 2) மாற்றுகின்ற பொருண்மை (Alienative Fact). விலக்குகின்ற பொருண்மையானது உரிமையை உரிமையுடையோரிடத்தினின்று விலக்குகின்ற தன்மையுடையது. இவ்வாறு உரிமை விலக்கல் நடைபெறுங்கால், உரிமையுடையோரிடத்தினின்று விலக்கப்பட்ட உரிமை அழிக்கப்படலாம்; அல்லது வேறு ஒருவருக்கு மாற்றப்படலாம். அவ்வுரிமை அழிக்கப்படும்பொழுது அழிக்கின்ற பொருண்மையும், அது மாற்றப்படுகின்ற பொழுது மாற்றப்படுகின்ற பொருண்மையும் தோற்றுவிக்கப்படுவதலால், ஒருவரிடமிருந்த உரிமை அழிந்தோ மற்றவருக்கு மாற்றம் செய்யப்பட்டோ மறைந்துவிடுகிறது. எ-டு. 'அ' என்பவர் 'ஆ' விடமிருந்து உரூ. 2000/- கடன் வாங்கியிருந்தார். குறிப்பிட்ட நாட்களுக்குள் வட்டியுடன் அக்கடனை 'அ' என்பவர் 'ஆ' விற்குச் செலுத்திவிடுகிறார். பணம் திரும்பச் செலுத்துதல் என்ற பொருண்மை 'ஆ' என்பவர் 'அ' என்பவர் மீது கொண்டிருந்த பணம் திரும்பப் பெறுகின்ற உரிமையை அழித்துவிடுகிறது. இப்பொருண்மை 'ஆ'வின் உரிமையை அவரிடமிருந்து விலக்குவது மட்டுமன்றி, 'அ' வுக்கு எதிரான அவ்வுரிமையை அழித்தும் விடுகிறது. எனவே, இப்பொருண்மை விலக்குகின்ற பொருண்மையாகவும் அழிக்கின்ற பொருண்மையாகவும் விளங்குதலைக் காணலாம்.

பொருண்மைகளைச் (Facts) செயல்களாகவும் (Acts) நிகழ்வுகளாகவும் (Events) இருவகைப்படுத்தலாம். எல்லாச் செயல்களும் எல்லா நிகழ்வுகளும் உரிமையை உண்டாக்கவோ மாற்றவோ முற்றும் அழிக்கவோ தகுந்தவை அல்ல. சிலவகை நிகழ்வுகளும் செயல்களுமே உரிமை உண்டாக்குதல், மாற்றுதல், அழித்தல் போன்றவற்றிற்கு ஆதாரமாகின்றன.

மனித முனைவின்றி இயற்கையிலேயே ஏற்படுகின்ற நிகழ்வுகள் (Events) சில நேரங்களில் ஒருவரது உரிமையை அழிக்கவோ மாறுதல் நிகழ்த்தவோ ஆற்றல் பெற்று விளங்குதலைக் கண்கூடாகக் காணலாம். எ-டு. 'அ' என்ற ஒருவர் 'ஆ' என்ற நிலத்திற்கு உரிமை உடையவர். அந்நிலம் கடற்கரைக்கு மிகவும் அண்மையில் அமைந்திருந்தது. ஒருநாள் இரவு கடல் கொந்தளித்தது. 'ஆ' என்ற அவரது நிலத்தைக் கடல் கொண்டது. அதன்பிறகு கடல் அந்நிலத்தை விடுவிக்கவேயில்லை.

இவ்வெடுத்துக்காட்டில் 'ஆ' என்ற 'அ' வின் நிலம் ஓர் இயற்கை நிகழ்வின் காரணமாக அழிந்தது. நிலம் அழிந்த காரணத்தால் அவரது நில உரிமையும் அழிந்தது.

மனித முனைவினால் செய்கின்ற ஒரு செயல் உரிமையை உண்டாக்குவதாகவோ அழிப்பதாகவோ அமைவதும் உண்டு. காட்டுக்கு வேட்டையாடச் செல்கின்ற ஒருவர் காட்டுவிலங்கு ஒன்றினை வேட்டையாடுவாரேயானால், வேட்டையாடிய அவ்விலங்கின் மீது அவர் உரிமை பெறுகின்றார். இங்கு 'வேட்டையாடுதல்' என்ற அவரது செயல் அவருக்கு உரிமையைப் பெற்றுத் தந்தது.

மேற்கண்ட எடுத்துக்காட்டுகள் எந்த ஓர் ஆளுக்கும் உரிமைகளையோ கடமைகளையோ உண்டாக்குகின்ற ஆற்றல் (Power) உண்டு என்பதனையும், எவ்விதச் செயல்கள் (Acts) சட்டப்படி உரிமைகளையும் கடமைகளையும் தோற்றுவிக்கும் இயல்புடையனவோ, அவ்விதச் செயல்களை மனிதன் செய்யும் பொழுது அவன் உரிமையையோ கடமையையோ உருவாக்குகிறான் என்பதனையும் காட்டுகின்றன. இவ்விதச் செயல்களையே சட்டச் செயல்கள் (Juristic Acts) என்பர் சட்ட வல்லுநர்.

விற்றல், வாங்குதல், அளித்தல், போன்ற சட்டச் செயல்கள் உரிமைகளை உண்டாக்குவதிலும் மாற்று

வதிலும் அழிப்பதிலும் பெரும்பங்கு ஆற்றுவதனால், இவையே உரிமை மூலச் செயல்களும் ஆகின்றன. உரிமை மூலச் செயல்கள் ஒருவர் இச்சைப்படியோ சட்டத்தின் விளைவாகவோ நிகழ்கின்றன.

சால்மண்டு என்பார் சட்டச் செயல்களை (Juristic Acts) சட்டவழிச் செயல் (Act in the Law) என்றும் சட்டத்தின் செயல் (Act of Law) என்றும் இரு வகைப்படுத்துவார்.

**சட்டவழிச் செயல்:** தனி மனிதர்களின் சட்டச் செயலானது உரிமைகளையும் கடமைகளையும் சட்டப்படி தோற்றுவிக்கும் இயல்புடையதாக அமையும்பொழுது, உரிமைகளும் கடமைகளும் உருவாகின்றன. அது போலவே ஒப்பந்தங்களின் வாயிலாக, ஒப்பந்தத் தரப்பினர் அவர்களுக்கிடையே உரிமைகளையும் கடமைகளையும் உருவாக்க இயலும். அவ்வாறு உருவாக்கப்பட்ட, மாற்றப்பட்ட மற்றும் அழிக்கப்பட்ட சட்ட உரிமைகள் தனிமனித அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தரப்பினரின் விருப்பின் பேரில் செயலாக்கப்படுதலால், இவை சட்ட வழிச் செயல்களாக அமைகின்றன.

**சட்டத்தின் செயல்:** தனி மனிதர்களின் அல்லது தரப்பினரின் முனைவோ இசைவோயின்றிச் சட்டத்தின் இயக்கத்தால் மட்டுமே சில உரிமைகள் உருவாக்கவோ மாற்றவோ அழிக்கவோ படுகின்றன. இவைபோன்ற செயல்கள் சட்டத்தால் மட்டுமே ஏற்படுத்தப்படுவதால், இவை சட்டத்தின் செயல் எனப்பெயர் பெறும். எ-டு. 'அ' என்ற மனிதர் தம் சொத்துகளை உயில் (Will) எதுவும் எழுதாத நிலையில் விட்டுவிட்டு இறந்து விடுகிறார். அவரது விருப்பம் எவ்வாறு இருந்ததாயினும், அவரது சொத்து அதன்படியல்லாது சட்டவிதிகளின்படி எவரெவருக்கெல்லாஞ் சேரவேண்டுமோ, அவரவருக்குப் போய்ச் சேருகிறது. எனவே, இது சட்டத்தின் செயலாகும்.

சட்டவழிச் செயல்களையும் இருவகையாகப் பிரிக்கலாம். அவையாவன:

1) ஒருதலைச் செயல் (Unilateral Act),

2) இருதலைச் செயல் (Bilateral Act) அல்லது உடன்படு செயல். ஒருதலைச் செயல் என்பது ஒருதரப்பினரின் விருப்பினால் நிகழ்வதாகும். உயில் விருப்பாவணம் வழியாகத் தம் உரிமைகளை மற்றவருக்கு மாற்றுதல் ஒருதலைச் செயலுக்கு நல்லதொரு எடுத்துக்காட்டாகும்.

இருதலைச் செயல் அல்லது உடன்படு செயல் என்பது ஒன்றுக்கு மேற்பட்ட தரப்பினர்களால் ஒத்த விருப்புடன் இசைந்து செய்கின்ற செயலாகும். ஒப்பந்தம், அடமானம், குத்தகை போன்றவை உடன்படு செயல்களாம்.

உடன்பாடு என்பது இருதரப்பினரும் கருத்து ஒன்றிச் செய்து கொள்ளுகின்ற உடன்படிக்கையாகும். இருதரப்பினரும் ஒத்த கருத்தினராய் முழு இசைவுடன் ஒரு கருமம் குறித்து உடன்பட்டு நிற்பதனால், இதனை உடன்பாடு என்பர். உரிமை உருவாக்குகின்ற பொருண்மைகளுளெல்லாம் உடன்பாடே தலையாயது.

ஒருவருக்கு எது நன்மை பயக்கும், எது தீமை பயக்கும் என்பதனை, அவரைவிட வேறொருவரும் சிறந்த முறையில் சீர்தூக்கிப் பார்க்க முடியாது. எனவே, உடன்பாட்டுத் தரப்பினர்கள் அவர்களுக்கு எது நன்மை பயக்கும், எது தீமை பயக்கும் என்பதனைச் சீர்தூக்கிப் பார்த்து, தக்க உரிமைகளையும் கடமைகளையும் தமக்கிடையே உண்டாக்கிக் கொள்ள உடன்பாடு பெரிதும் உதவுகிறது. உடன்பாடு செய்து கொண்ட ஒவ்வொரு தரப்பினரும் ஏனைய தரப்பினர் உடன்பாட்டின்படி ஒழுக வேண்டும் என எதிர்பார்க்கின்ற காரணத்தாலும் அவ்வுடன்பாட்டினை முழுதும் நம்பி வேறுபல காரியங்கள் ஆற்றுவதனாலும் உடன்பாடுகளை நிறைவேற்ற வழி வகை செய்வது சட்டத்தின் கடமை ஆகிறது.

**உடன்பாட்டின் மூலக் கூறுகள்:** எவ்வகை உடன்பாடும் கீழ்க்கண்ட ஐவகை மூலக்கூறுகளைக் (Elements of Agreement) கொண்டு விளங்க வேண்டும்:

1) உடன்பாட்டிற்குக் குறைந்தது இரண்டு தரப்பினராவது இருத்தல் வேண்டும்.

2) உடன்பாட்டின் தரப்பினர்கள் அனைவருக்கும் பொது எண்ணம் (Common Intention) நிலவுதல் வேண்டும்.

3) ஒவ்வொரு தரப்பினரும் தத்தம் எண்ணங்களை ஏனைய தரப்பினருக்குத் தெரிவித்திடல் வேண்டும்.

4) தரப்பினருக்கிடையே நிலவுகின்ற பொது எண்ணமானது அவர்களிடையே நிலவுகின்ற சட்டப்படியான உறவுகளைப் பாதிப்பதாக அமைதல் வேண்டும்.

5) தரப்பினர்களுக்கு இடையே நிலவுகின்ற சட்டப்படியான உறவுகளை மட்டுமே இது பாதிப்பதாக அமைவதால், உடன்பாட்டுத் தரப்பினரைத் தவிர எவரின் சட்டப்படியான உறவுகளையும் இது

பாதித்தல் கூடாது. மேலும், இவ்வுடன்பாட்டினை எட்டுகின்ற தரப்பினர் அனைவரும் சட்டப்படியான உடன்பாடு செய்துகொள்ளத் தகுதியுடையராக இருத்தல் வேண்டும். அவ்வுடன்பாட்டின் நோக்கம் சட்டத்திற்கு முரணாக இருத்தல் கூடாது.

**உடன்பாட்டின் வகைகள்:** உடன்பாடுகளை அவற்றின் தன்மைக்கேற்ப மூன்று வகையாகப் பிரிக்கலாம். உடன்பாடு உரிமையை ஆக்கவும் மாற்றவும் அழிக்கவும் பயன்படுத்தப்படுகின்ற ஒரு கருவியாதலால், இதனை இதன் நோக்கத்திற்கேற்ப உரிமை உண்டாக்குகின்ற உடன்பாடுகள், உரிமை மாற்றுகின்ற உடன்பாடுகள் மற்றும் உரிமை அழிக்கின்ற உடன்பாடுகள் என்று மூன்று வகையாகப் பிரிப்பர். இதில் முதலாம் வகையான உரிமை உண்டாக்குகின்ற உடன்பாடு இரு உட்பிரிவுகளைக் கொண்டு விளங்குகின்றது. அவை ஒப்பந்தம் (Contract), வழங்கடைவு (Grant) எனப்படும்.

ஒப்பந்தம் என்பது இருதரப்பினருக்கிடையே சட்டக் கடப்பாட்டினை (Legal Obligation) உருவாக்குகின்ற உடன்பாடாகும். இதன் மூலம் ஆள் சுட்டிய உரிமை உருவாக்கப்படுகிறது.

மேற்கூறிய முறைகளைத் தவிர்த்து, இரண்டுக்கு மேற்பட்ட தரப்பினர்க்கு இடையில் வேறு எவ்வகை உரிமைகளும் ஏற்படுத்துவதாக அமையுமேயானால், அதனை வழங்கடைவு (Grant) என வகைப்படுத்தலாம். குத்தகை, வசதியுரிமை, பதிப்புரிமை போன்ற உரிமைகள் வழங்கடைவின்கீழ் வருகின்ற உரிமைகளேயாகும். இவ்வகை உரிமைகள் மன்று சுட்டிய உரிமைகளாகும்.

உரிமைகளை மாற்றவும் அழிக்கவும் உடன்பாடுகள் எட்டுவதும் உண்டு. இவற்றை முறையே 'மாற்றடைவு' (Assignment) என்றும் 'விடுப்படைவு' (Release or Discharge or Surrender) என்றும் குறிப்பர். எனினும், பெரும்பாலான உடன்பாடுகள் இதுவரை கண்ட நான்கு கூறுகளையும் ஒருசேரப் பெற்று வருதலும் உண்டு.

**ஒப்பந்தம் (Contract)** உடன்பாட்டுத் தரப்பினரிடையே ஆள் சுட்டிய உரிமையை ஏற்படுத்துகின்ற வகை உடன்பாட்டை 'ஒப்பந்தம்' எனக் கூறுவார் சால்மண்டு. இவ்வகை உடன்பாட்டின் மூலம் உருவாக்கப்பட்ட உரிமைகளும் கடமைகளும் உடன்பாட்டுத் தரப்பினர்களுக்கு இடையில் மட்டுமே இலங்குகின்றன. எனவே, ஒப்பந்த வழிக் கடமைகள் மற்றும் உரிமைகள் தரப்பினரின் மீதே விதிக்கப்படுகின்றன.

ஒப்பந்தத்தின் மூலக்கூறுகளையும் ஒப்பந்தம் நடப்பில் எவ்வாறு செயற்படுகிறது என்பதையும் உற்று நோக்கிய சில சட்டவல்லுநர்கள், ஒப்பந்தமெதுவும் பல நேரங்களில் உடன்பாடாகவிருப்பதேயில்லை என வாதிடுவர். ஏனெனில், உடன்பாட்டின் முக்கிய கூறாக விளங்குகின்ற 'ஒத்த எண்ணம்' (Common Intention) மற்றும் 'எண்ணங்களின் சந்திப்பு' (Meeting of Minds) பெரும்பாலும் நிகழ்வதேயில்லை என்றும், ஒரு தரப்பினரின் எண்ணம் மட்டுமே மறு தரப்பினரின் இசைவுக்கு உட்படுத்தப்பட்டு ஒப்பந்தமாக மாறுகிறது என்றும், ஏனைய தரப்பினரின் விருப்பங்கள் ஒப்பந்தங்களில் இடம் பெறுவதுமில்லை என்றும், மாறாக, அவர்களது 'இசைவே' இடம் பெறுகிறது என்றும் வாதிடுவர்.

உடன்பாடு எட்டுவதற்கு முன்பாகவே, உடன்பாடு எட்டியாயிற்று என்ற ஊகத்தின் அடிப்படையில் சட்டம் ஒப்பந்தத்தை உடன்பாடு எனக் கொள்கிறது என்பதே இவர்கள் கருத்து.

ஒப்பந்தமென்பது ஒருவகை உடன்பாடே என்று வாதிடுவதைப் போல ஒப்பந்தம் என்பது சட்டப்படி நடவடிக்கை எடுக்கத் தகுந்த வாக்குறுதி (Promise) என்றும் இவ்வாக்குறுதி தந்தோர் வாக்குறுதியினை மீறுங்கால் அவ்வாக்குறுதியினை நம்பியவர் வாக்குறுதி தந்தோரை அவரது வாக்குறுதிப்படி நடக்கச் சட்டப்படி கட்டாயப்படுத்த முடியும் என்றும் அவர் அது போல் நடக்காதபோது அதற்கு இழப்பீடு பெறமுடியும் என்றும் வாதம் புரிவர்.

இவ்வகையிலான வாதத்தால் எல்லாவகையிலான வாக்குறுதியும் ஒப்பந்தமாகாது என்பதும், எவ்வகை வாக்குறுதிகளெல்லாம் சட்டப்படியான கடமைகள் என்று அவற்றைத் தந்தோரால் மதிக்கப்படுகின்றனவோ, எவ்வகை வாக்குறுதிகள் அவை மீறப்படும்போது வாக்குறுதி பெற்றோர்கள் அவற்றை மீறியவர் மீது சட்டப்படியான நடவடிக்கை தொடர வழி வகுக்கிறதோ, அவ்வகை வாக்குறுதிகள் மட்டுமே ஒப்பந்தமாகின்றன என்பதும் விளங்கும்.

சட்டம் எல்லாவகையான உடன்பாடுகளையும் செயற்படுத்த விழைவதில்லை. மாறாக, உடன்பாட்டுத் தரப்பினரால் சட்டப்படியான உறவு உண்டாக்கும் எண்ணங்கொண்டு உருவாக்கப்பட்டவற்றை, அவை சட்டத்திற்கு முரணானவையாக அமையாதபோது மட்டுமே செயற்படுதல் விளைகின்றது. மேலும், உடன்பாடுகள் செயலுறுத்தம் செய்யப்பட வேண்டுமாயின் அவ்வுடன்பாடுகள் மறுபயன் (Consideration) கருதிச் செய்யப்பட்டனவாகவும் அமைதல் வேண்டும்.

சட்டப்படியான பயனுறுதியின் (Validity) அடிப்படையில் உடன்பாட்டை மூவகைப்படுத்தலாம். அவையாவன 1. செல்லுறு உடன்பாடு (Valid Agreement), 2. இல்லாநிலை உடன்பாடு(Void Agreement), 3. தவிர்தகு உடன்பாடு(Voidable Agreement) என்பனவாம்.

செல்லுறு உடன்பாடு என்பது உடன்பாடு செய்து கொண்ட தரப்பினரது எண்ணத்திற்கு ஒப்பச் செயலுறுத்தம் செய்யக்கூடிய உடன்பாடாகும். இல்லாநிலை உடன்பாடானது (Void Agreement) சட்டத்தின் அங்கீகாரம் இல்லாத காரணத்தினால் செயலுறுத்தம் செய்ய இயலாத உடன்பாட்டினைக் குறிக்கும். இவ்வகை உடன்பாடுகள் முற்றிலும் பயனற்றவையாகும்.

தவிர்தகு உடன்பாடுகள் மேற்காட்டிய இரு வகை உடன்பாடுகளுக்கும் இடைப்பட்ட நிலையில் திகழ்பவையாகும். உடன்பாடு தோன்றிய காலத்தே ஏற்பட்ட சில குறைபாடுகள் காரணமாக ஓர் உடன்பாடு இல்லாநிலை உடன்பாடாக மாறலாம். இவ்வகை உடன்பாட்டை விரும்பினால் அழிக்குந்திறன் உடன்பாட்டின் தரப்பினருக்கு உண்டு. இவ்வாறு தரப்பினரின் விருப்பத்தினால் தவிர்த்தொதுக்கப்பட்ட உடன்பாடு தொடக்கநிலையிலிருந்தே இல்லாநிலை உடன்பாடாக இருந்து வந்ததாகவே கருதப்படும்.

மேற்குறிப்பிட்ட இல்லாநிலை மற்றும் தவிர்தகு உடன்பாடுகளைச் செல்லாநிலை உடன்பாடுகள் (Invalid) எனவும் கூறுவர்.

உடன்பாடுகள் செல்லுறாமற் போவதற்கான காரணங்கள் ஆறு வகைப்படும். அவையாவன:

1) திறனின்மை (Incapacity),
2) முறையின்மை (Informality),
3) சட்ட முரண்பாடு (Illegality),
4) தவறு (Error),
5) வல்லந்தம் அல்லது வற்புறுத்தம் (Coercion),
6) எதிர்பயனின்மை (Want of consideration).

**திறனின்மை:** நல்லது எது? கெட்டது எது? என்பதனை மனநலம் குன்றியவர்களும் வயது வாராதோரும் அறிந்து கொள்ளும் ஆற்றல் பெற்றோர் அல்லர் என்ற காரணத்தால், உடன்பாட்டின் தரப்பினராக இவர்களைக் கொளலாகாது எனச் சட்டம் கூறுகிறது. மேற்கண்டோர் உடன்பாட்டின் தரப்பினராக இருக்க இசைந்து உடன்பாடு இயற்றினாலும் அவ்வுடன்பாடு செல்லத்தகுந்தது அன்று. எனவே, இவ்வகை மாந்தரைத் தரப்பினராகக் கொண்ட உடன்பாடு செல்லுறா உடன்பாடு ஆகும்.

**முறையின்மை:** சாதாரண முறையிற் செய்யத்தக்க உடன்பாடு என்றும், சட்ட முறை வழாது செய்யத்தக்க உடன்பாடு என்றும் உடன்பாட்டினை இருவகையாகப் பிரிக்கலாம். சாதாரண முறையில் செய்யத்தக்க உடன்பாடானது, இந்த முறையில் தான் செய்யவேண்டும் என்று சட்டம் வரையறை செய்யாத உடன்பாடு ஆகும். ஆனால், சில குறிப்பிட்ட உடன்பாடுகள் குறிப்பிட்ட விதத்தில்தான் அமைய வேண்டுமென்று சட்டம் பணிக்கின்றது. இவ்வகை உடன்பாடுகள் முறை தவறிச் செய்யப்படுமேயானால், அவற்றைச் செயலுறுத்தம் செய்ய இயலாது.

முத்திரைக் காகிதத்தில் மட்டுமே எழுதவேண்டிய உடன்பாடுகள் என்றும் இரண்டுக்கு மேற்பட்ட சான்றாளர்கள் முன்னிலையில் எழுதப்பட வேண்டிய உடன்பாடுகள் என்றும் வெவ்வேறு முறைகளை ஒவ்வொரு வகை உடன்பாட்டிற்கும் பின்பற்ற வேண்டியிருப்பதால், இவ்வகை உடன்பாடுகளை முறை தவறாது செய்யவேண்டும். இதில் ஏதேனும் முறை தவறுமேயானால், முறையின்மை (Informality) காரணமாகச் செயலுறுத்தம் செய்ய இயலாது.

**சட்டமுரண்பாடு:** எதைக்குறித்தும் உடன்பாடு இயற்றிட மக்களுக்கு உரிமை இருந்தாலும், இவ்வுரிமையானது கட்டுப்பாடு அற்ற உரிமை அன்று. உடன்பாடு எட்டுகின்ற தரப்பினரின் நலனையும் ஏனைய பொது நலன்களையும் பாதுகாக்கும் பொருட்டுச் சட்டம் சில கட்டுப்பாடுகளை உடன்பாடு எட்ட விளைவோர் மாட்டு விதிக்கின்றது. அவற்றுள் தலையாயது யாதெனில், எந்த ஓர் உடன்பாடும் இப்போது நடப்பிலிருக்கும் சட்டத்திற்கு முரணாக அமைதல் கூடாது என்பதே. அவ்வாறு செய்யப்பட்ட உடன்பாடு எதுவும் செல்லுறா உடன்பாடு ஆகும். எ-டு. குறிப்பிட்ட ஒருவர் வீட்டிலிருக்கும் நகைகளைத் திருடினால், திருடியவருக்கு உரூ. 5,000/- தருவதாகத் திருடச் சொன்னவர் திருடவிருப்பவரிடம் உடன்பாடு செய்து கொள்கிறார். இவ்வகை உடன்பாடு எட்டுவதும் உடன்பாட்டை நிறைவேற்றுவதும் சட்டத்திற்கு முரணான காரணத்தினால் செல்லுறா உடன்பாடாகும்.

**தவறு:** உடன்பாடு செய்பவர்கள் எந்த நோக்கத்திற்காக உடன்பாடு செய்து கொள்கிறார்களோ, அந்நோக்கத்தில் உடன்பாட்டுத் தரப்பினருக்கு முழு இசைவு இருத்தல் வேண்டும். அவ்வாறு இசைவு இல்லையெனில் அது உடன்பாட்டினைப் பாதிக்கும். எ-டு. 'அ' என்ற ஒருவர் 'ஆ' என்பவருக்குத் தமது

'இ' என்ற நிலத்தினை விற்பனைக்குக் காட்டுகிறார். 'ஆ'என்பார் 'இ'க்கு பதிலாக அதன் அண்மையிலிருக்கும் 'ஈ' எனப்படும் 'அ' வினுடைய நிலத்தை அவர் காட்டுவதாக நினைத்து இசைவு தெரிவிக்கிறார். அதன்பின், 'அ'க்கும் 'ஆ'க்கும் இடையில் நடந்தேறுகின்ற விற்பனை உடன்பாடு உடன்பாடே அன்று. ஏனெனில்,' அ' என்பவர் விற்க விரும்பிய நிலமும் 'ஆ' என்பவர் வாங்க விரும்பிய நிலமும் வெவ்வேறாகும். எனவே, அவ்வுடன்பாடு இசைவற்ற உடன்பாடு ஆகிய காரணத்தினால் உடன்பாடே அன்று. இதுபோன்ற பிழைகள் (தவறுகள்) மிகவும் அடிப்படையான பிழைகள் ஆன காரணத்தினால் இது உடன்பாட்டின் செல்லுறு தன்மையைப் பாதிப்பதாக அமைகிறது. மாறாக, உடன்பாட்டில் மிகச்சிறிய பிழைகள் ஏற்படுமேயானால் அவை உடன்பாட்டைப் பாதிக்கா.

**வல்லந்தம் அல்லது வற்புறுத்தம்**: வற்புறுத்தலால் எட்டப்பட்ட எந்த உடன்பாடும் சட்டப்படி செல்லத்தக்க உடன்பாடு ஆகாது. ஆசைகாட்டியோ அச்சுறுத்தியோ உடன்பாட்டிற்கு இசைவு பெறப்படுமேயானால், பெறப்பட்ட இசைவானது மனமொத்த இசைவு இல்லாத காரணத்தினால் அதன் வழிப்பிறந்த உடன்பாடு செல்லுறா உடன்பாடாக மாறுகிறது.

**எதிர்பயன் இன்மை**: உடன்பாடு என்பது எதிர்பயன் விளைவிப்பதாக அமைதல் வேண்டும். 'எதிர்பயன் என்பது உடன்பாட்டுத் தரப்பினர் அதற்கு இசைவு தந்த காரணம், நோக்கம் மற்றும் தூண்டுதல் குறித்தது' என்பார் சால்மண்டு. சட்டம் வேண்டுகின்ற எதிர்பயன் அளவு என்ன என்பதையும் சட்டமே வரையறை செய்கிறது. இவ்வகை எதிர்பயனில்லாத உடன்பாடுகள் பல நேரங்களில் செயலுறுத்தம் செய்ய இயலா உடன்பாடுகளாகவே கருதப்படுகின்றன. மேலும், ஒப்பந்தங்களைப் பொறுத்தமட்டில் எதிர்பயன் என்பது இன்றியமையாத ஒன்றாகும். எ-டு. 'அ' என்பவர் 'ஆ' விற்குத் தமது வீட்டை உரூ. 5,000/-க்கு விற்கிறார். இதில் 'ஆ' விற்குவீடு எதிர்பயனாகவும், 'அ' விற்கு உரூ. 5,000/- எதிர்பயனாகவும் அமைகின்றன. ஏனெனில், உரூ. 5,000/- மே 'அ'தமது வீட்டை விற்கத் தூண்டுதலாகவும், 'ஆ' வினது வீடே 'அ' உரூ. 5,000/- தருவதற்குத் தூண்டுதலாகவும் அமைகின்றன.

இதுபோலவே, ஒருவர் தாம் தரும் வாக்குறுதிக்கும் எதிர்பயன் பெறக்கூடும். மேற்குறிப்பிட்ட எடுத்துக்காட்டில், 'ஆ' தமது வீட்டினை ஒரு குறிப்பிட்ட தேதிக்குள் 'அ' விற்கு உரூ. 5,000/-க்கு விற்பதாக வாக்குறுதி தருவதன் மூலம் அவ்வாக்குறுதிக்கு எதிர்பயனாக உரூ. 2,000/- பெறலாம்.



மேற்கண்ட எடுத்துக்காட்டுகளிலிருந்து எதிர்பயனாகத்தரும் எந்த ஒரு பொருளுக்கும் மதிப்பு (Value) இருக்க வேண்டுமென்பது நன்கு புலனாகும். இருப்பினும், சில சமயங்களில் சட்டம் வெறும் வாக்குறுதியை அளிப்போரின் சட்டப்பொறுப்பினை மட்டுமே எதிர்பயனாகப் பெற அனுமதி அளிக்கிறது. வாக்குறுதிச் சீட்டின் (Promissory note) வழியே பெறுகின்ற பணமானது வெறும் வாக்குறுதியை மட்டுமே எதிர்பயனாகக் கொள்ளும்.

**ஒப்பந்தவியலின் வளர்ச்சி**: இக்கால ஒப்பந்தவியற் சட்டங்கள் ஒப்பந்தஞ் செய்து கொள்ளுகின்றவர்கள் தாங்கள் நினைத்தவாறு ஒப்பந்தம் செய்து கொள்ளுகின்ற சுதந்திரத்தை அவர்களுக்கு அளிப்பதில்லை. முன்பொரு காலத்தில் ஒப்பந்தஞ்செய்து கொள்ளுவோர் சுதந்திரத்தில் அரசின் தலையீட்டை எண்ணிக்கூடப் பார்த்திட இயலாது.ஆனால், இன்றோ ஒப்பந்தச் சட்டங்கள் பொருளாதார வலிவுற்றோருக்கும் பொருளாதார நலிவுற்றோருக்கும் இடையே ஏற்படுகின்ற ஒப்பந்தங்களில், நலிவுற்றோர் நலனில் மிகவும் அக்கறை செலுத்தி வலிவுற்றோர் நலிவுற்றோர்மீது ஆதிக்கம் செலுத்தாதவாறு பாதுகாக்கின்றன.

ஒப்பந்தங்கள் செய்வதில் ஏற்படும் காலதாமதத்தைக் கருத்திற்கொண்டு இக்காலத்தில் ஒப்பந்த விதிகள் ஒரு தரப்பினரால் வகுக்கப்பட்டு, ஏனைய தரப்பினர்கள் அவ்விதிகளுக்கு இசைந்தால் ஒப்பந்தம் நிகழ்ந்ததாகவோ ஏற்கவில்லையாயின் ஒப்பந்தம் நிகழாததாகவோ கருதப்படுகின்றது. இவ்வகையில் ஆயுட்காப்புறுதிக் கழகத்தினருடன் செய்யப்படுகின்ற ஆயுட் காப்புறுதி ஒப்பந்தங்களைக் கூறலாம். இது போலவே, அரசு மற்றும் தொழில் நிறுவனங்களில் பணிபுரிவோருக்கும் அந்நிறுவனங்களுக்கும் இடையே நிகழும் பணி அமர்த்தும் ஒப்பந்தமும் ஒருதரப்பினரின் உடன்பாட்டு விதிகளுக்கு ஏனைய தரப்பினர் இசைவு தெரிவிப்பதின் மூலம் எட்டப்படுகின்றது. எனவே, இக்காலத்தில் உடன்பாடு பலவிதமான உரிமைகளுக்கு மூலமாக அமைகிறது எனலாம். ம. கா.

**துணை நூல்கள்**:

**Fitzgerald, P. J.**, Salmond on Jurisprudence, Twelfth Edn., Sweet & Maxwell, 1966.

**Paton, G. W. (Ed)**, A Text book of Jurisprudence, Oxford, 1972.

**Marris R. Cohen**, Law and the Social Order, Archon Books, 1967.

**Atiyah**, Promises, Morals and Law, Oxford, 1981.

 உரிமையியல் சட்டம்

*உரிமையியல் சட்டம்*: வரலாறு: இந்திய நாட்டில் இப்போது நிலவுகிற சட்ட அமைப்பு இங்கிலாந்து நாட்டில் நிலவும் சட்ட அமைப்பினைப் பெரிதும் ஒத்திருக்கிறது. ஆங்லேயர்களின் வருகைக்கு முன்பு நடப்பிலிருந்து வந்த உரிமையியல் சட்டங்களில் பெரும்பகுதி சமயச் சட்டங்களின் ஒரு பகுதியாகவே நிலவி வந்தது. மேலும், தனித்தனி ஆட்சி முறைகளின் கீழிருந்து வந்த அன்றைய இந்தியாவின் பெரும்பகுதிகளில் வெவ்வேறு விதமான உரிமையியற் சட்டங்களே (Civil Laws) வழக்கில் இருந்தன.

வெவ்வேறு ஆட்சிகளின் கீழ் இருந்த பெரும் நிலப்பரப்பை, ஒரே ஆட்சியின் கீழும் ஒரே சட்ட முறையின் கீழும் ஆங்கிலேய ஆட்சி கொண்டு வந்தது ஆங்கிலேயச் சட்டங்களே இந்தியாவுக்கும் சட்டமாயின. இதனைச் சர் பிரடரிக்கு பொல்லாக்கு என்பார் 'திருத்தி அமைக்கப்பட்ட ஆங்கிலச் சட்டம் பிரிட்டிசு இந்தியாவின் பொதுச் சட்டமானது' என்று குறிப்பிட்டார். இதனின்று இக்கால உரிமையியற் சட்டங்கள் பெரும்பான்மையும் இங்கிலாந்தில் வழக்கிலிருந்த சட்டங்களின் அடிப்படையிலேயே செய்யப்பட்டன என்பது புலனாகும். இப்போது நடப்பிலிருக்கிற சட்டங்களில் பெரும்பான்மை ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில் இயற்றப்பட்டமையாலும், விடுதலை பெற்ற இந்தியாவின் சட்டங்கள் பழையசட்டங்களின்சாயலையே ஒத்திருந்தமையாலும் ஆங்கிலச் சட்டங்கள் எவ்வாறெல்லாம் வகைப்படுத்தப்பட்டனவோ அவ்வாறே இந்தியச் சட்டங்களும் வகைப்படுத்தப்பட்டு வருகின்றன.

பழைய ஆங்கிலச் சட்டங்களில உரோமானியச் சட்டத்தின் தாக்கம் அதிகம் இருந்தது என்பதை ஆங்கிலச் சட்ட வரலாற்றினைப் படிக்கும் ஒவ்வொருவரும் எளிதில் உணர்ந்து கொள்ள முடியும். பண்டைய உரோமானியச் சட்டங்கள் தோன்றுவதற்கு முன்னர்ச் சமுதாயத்தில் நிகழ்கிற தீங்குகள் எவற்றிற்கும் பரிகாரம் தேடும் உரிமை குடிகளுக்கு இருந்து வந்தது. தீங்கிற்குப் பரிகாரம் தேடுபவர் அன்று நிலவி வந்த இரண்டு வழிமுறைகளுள் ஏதேனும் ஒரு வழிமுறையின்படி தமக்கு நேர்ந்த தீங்கிற்குப் பரிகாரம் தேடுவார். அவையாவன: 1. உரிமை கோரல் (Demand), 2. முறையீடு செய்தல் (Complaint). இவ்விரண்டு வழிமுறைகளும் தீங்கிற்கு உட்படுத்தப்பட்டவர் தேடுகிற பரிகாரத்தின் தன்மையைப் பெரிதும் சார்ந்து நின்றன.

தீங்கிற்கு உட்படுத்தப்பட்டவர் தீங்கு செய்தவரிடமிருந்து தாம் இழந்த பொருளை மீட்க விரும்புவாரேயாயின், அவர் உரிமை கோரல் என்ற வழிமுறையைப் பின்பற்றிப் பரிகாரந்தேடலாம். மாறாக, தீங்குக்கு உட்படுத்தப்பட்டவர் தீங்கு செய்தவரைத் தண்டிக்க விரும்பினால் அவர் மீது முறையீடு என்ற வழிமுறையின்படி பரிகாரம் தேடலாம்.

காலப்போக்கில் தீங்குகளையும் அவை தொடர்பாகத் தீங்குக்குட்பட்ட்வர்கள் தேடுகிற பரிகாரத்தின் நடைமுறையையும் வைத்து அது உரிமையியலைச் சார்ந்ததா குற்றவியலைச் சார்ந்ததா எனத் தீர்மானித்தனர்.

கீழ்க்காணும் எடுத்துக்காட்டு நடைமுறைக்கும் தீங்குகளை வகைப்படுத்துவதற்கும் உள்ள தொடர்பினைத் தெள்ளெனக் காட்டுவதாக அமைந்துள்ளது.

பரிகாரந் தேடுகிற நடைமுறைகள் உரிமையியற் சட்டங்களுக்கும் முன்பே வழக்கில் இருந்த காரணத்தால் பரிகாரந் தேடுகிற நடைமுறைகளைக் கொண்டே பரிகாரந் தேடக் காரணமாயிருந்ததீங்கு, குற்றவியலைச் சார்ந்ததா உரிமையியலைச் சார்ந்ததா எனத் தீர்மானிக்கப்பட்டது. சட்டத் தீங்கிற்கு

எ–டு.

| தீங்கு | நடவடிக்கைக்கான அல்லது பரிகாரந்தேடும்நடைமுறை | தீங்குஎவ்வியலைச் சார்ந்தது |
|---|---|---|
| 'அ' என்பவரின் நிலச் சொத்து 'ஆ' என்பவரால் கவர்ந்து கொள்ளப்பட்டது. | 'அ' என்பவர் அச்சொத்தை 'ஆ' என்பாரிடமிருந்து திரும்பக் கோரினார். | உரிமையியலைச் சார்ந்தது. |
| 'அ' என்பவர் 'ஆ' என்பவரைத் தாக்கிக் கொடுங்காயம் விளைவித்தார். | 'ஆ' என்பவரால் 'அ' என்பவர் மீது முறையீடு செய்யப்படுகிறது. | குற்றவியலைச் சார்ந்தது |

எதிராகத்தீங்கில்உட்படுத்தப்பட்டவரின் நடவடிக்கைகளையும் அவருக்குச் சட்டம் அளித்திருக்கும்பரிகாரங்களையுமே உரிமையியற் சட்டத்தின் மிகுதியான பகுதிகள் விளக்குகின்றன.

இக்கால உரிமையியற் சட்டம் உரிமைக்கு ஊறு விளைவித்தவருக்கு எதிராக உரிமையுடையோரால் இரண்டு வகையான நடவடிக்கைகள் எடுப்பதற்கு வகை செய்கிறது. அவை 1. நிலை பொருள் குறித்த நடவடிக்கை (Real Action), 2. நபர் குறித்த நடவடிக்கை (Personal Action).

ஒரு நிலைபொருளின் மீது இருக்கிற ஒருவரது உரிமைக்கு ஊறு விளைவித்திடும்போது ஊறு விளைவித்தவர் அவ்வுரிமையை உடையோரிடத்தில் சேர்ப்பாரேயானால், அது நிலைபொருள் குறித்த நடவடிக்கை ஆகிறது. எ-டு. 'அ' வின் சொத்து (நிலைபொருள்) 'ஆ' வினால் கவர்ந்துகொள்ளப்படுகிறது.'ஆ' விடமிருந்து அதனை மீட்டுத் தம்மிடம் தர வேண்டும் என்று 'அ' வழக்கு மன்றத்தை வேண்டுகிறார். 'அ' வின் கோரிக்கை நிலைபொருள் குறித்த நடவடிக்கை ஆகிறது. இழந்த நிலைபொருளைத் திரும்பக் கேட்பதால் இது நிலைபொருள் குறித்த நடவடிக்கை.

மாறாக, தாம் இழந்த பொருளைத் திரும்பவும் கேட்காமல் அதற்கு ஈடாகப் பணமாகக்கோருவாரேயாயின், அக்கோரிக்கை நிலைபொருளைச் சுட்டிநில்லாது உரிமைக்கு ஊறு விளைவித்தவரைச் சுட்டிநிற்கிற காரணத்தாலும், இழப்பீடோ தீங்கீடோ அளிக்கிற கடமை தீங்கு விளைவித்தவரைச் சார்தல் காரணமாகவும் இதனை நபர்குறித்த நடவடிக்கை எனச் செப்புவர்.

காலப்போக்கில் இது போன்ற வகைப்படுத்தல்கள் மிகுந்த முரண்பாடுகளுக்குக் காரணமாயிருந்தமையால் நடவடிக்கைகள் கீழ்க்காணும் இரு பெரும் பகுதியாகப் பிரிக்கப்பட்டன:

1. நபருக்கெதிரான நடவடிக்கை (Action in Personam),
2. மன்றுக்கெதிரான நடவடிக்கை (Action in Rem).

பொதுவாக, சட்டத் தீங்குகளுக்குப் பரிகாரம் தேடுவது ஒரு தரப்பினர் நடவடிக்கையாக விளங்கும் பொழுது மறுதரப்பினர் அதற்கு எதிரான சட்ட வாதங்களை வழக்குமன்றத்தில் வைப்பர். எனவே வாதியின் வாதங்களையும் எதிர்வாதியின் வாதங்களையும் சீர்தூக்கிப் பார்த்து இறுதியில் வழக்கு மன்றம் தன் தீர்ப்பை வெளியிடும். வழக்கு மன்றத்தின் தீர்ப்போ தீர்ப்பாணையோ வாதிக்கும் எதிர்வாதிக்கும் இடையில் நிகழும் சட்டப்படியான உரிமைகள் மற்றும் கடமைகளைக் குறித்தோ வாதியோ எதிர்வாதியோ ஏனைய மக்களுக்கெதிராய்ப் பெற்றிருக்கும் உரிமை மற்றும்கடமைகளைக் குறித்தோ அமையும்.

வாதிக்கும் எதிர்வாதிக்கும் இடையில் நிகழ்ந்த வழக்கில் வழக்குமன்றம் மேற்குறிப்பிட்டவருள் யாரேனும் ஒருவருக்குச் சாதகமாகத் தீர்ப்பு வழங்கும். அந்தத் தீர்ப்பு எவருக்கு எதிராக வழங்கப்பட்டதோ அவரை மட்டும் கட்டுப்படுத்தினால் (அல்லதுஅவரது உரிமை மற்றும் கடமைகளில் மட்டும் மாற்றத்தை ஏற்படுத்தினால்) அவருக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கை நபருக்கெதிரான நடவடிக்கையாகும்.

எ-டு. 'அ' என்பவர் 'ஆ' விடம் உரூ. 1000/ ஒரு கடனுறுதிச் சீட்டின் வழியாகப் பெற்றார். 'ஆ' தம் பணத்தைத் திரும்பிப் பெறத் தம் கடனுறுதிச் சீட்டை ஆதாரமாகக் காட்டி, வழக்குமன்றத்திலிருந்து 'அ' விற்கு எதிராகத் தீர்ப்பாணை ஒன்றினைப் பெற்றார். அத்தீர்ப்பாணை நிறைவேற்றப் படும்பொழுது 'அ' என்பவர் 'ஆ' விற்கு வழக்கு மன்றத்தின் ஆணைப்படி பணம் திருப்பித் தர வேண்டும்.

மேற்கண்ட எடுத்துக்காட்டில் 'ஆ' வாங்கிய தீர்ப்பாணை 'அ' என்ற நபரை மட்டுமே கட்டுப்படுத்தும். எனவே இதனை நபருக்கெதிரான நடவடிக்கை எனக்கூறுவர். நபருக்கெதிரான நடவடிக்கை நிலைபொருள் குறித்த நடவடிக்கையாகவோ (Real Action) நபர் குறித்த நடவடிக்கையாகவோ (Personal Action) அமையும்.

வழக்கு மன்றத்தின் சில தீர்ப்புகள் மன்று சுட்டி நிற்கும். எடுத்துக்காட்டாக, உரிமை மூலம் (Title) தொடர்பான வழக்குகளைக் கொள்ளலாம். எ-டு. 'அ' என்பவர் 'இ' என்ற சொத்தின் மீது சட்ட உரிமை கொண்டாடுகிறார் என வைத்துக் கொண்டு, இவ்வுரிமையை'ஆ'என்பவர் எதிர்ப்பதாகவும் அவரும் மேற்கண்ட சொத்தின்மேல் சட்ட உரிமை கொண்டாடுவதாவும் வைத்துக் கொண்டால், இவர்கள் இருவருக்கும் இடையில் நடக்கிற இவ்வழக்கின் முடிவு இவ்விருவரை மட்டுமன்றி, உலகிலுள்ள ஏனையோரையும் கட்டுப்படுத்துவதாக அமைகிறது. எடுத்துக்காட்டாக, இவ்வழக்கின் முடிவில் வழக்குமன்றம் 'இ' என்ற சொத்தின் மீது 'ஆ' என்பவருக்குச் சிறந்த உரிமை மூலம் இருக்கிறது என்றும், எனவே அவரே இச்சொத்தின் மீது உரிமை

உடையவர் என்றும் தீர்ப்புக் கூறுகிறது என வைத்துக் கொள்ளலாம். இந்தத் தீர்ப்பு 'அ' என்பவரை மட்டுமன்றி, உலகில் உள்ள அனைவரையும் கட்டுப்படுத்தும். அதாவது, 'ஆ' என்பவரைத் தவிர வேறெவருக்கும் அச்சொத்தில் உரிமையில்லை என்பதே தீர்ப்பின் முடிவு. எனவே இவ்வெடுத்துக்காட்டில் 'அ'வுக்கு எதிராக 'ஆ'வினால் எடுக்கப்பட்ட நடவடிக்கை மன்றுக் கெதிரான நடவடிக்கை என்று பெயர் பெறும்.

இதுகாறும் உரிமையியற் சட்டத்தின் கீழ் எடுக்கப்படும் நடவடிக்கைகளும் சட்ட வழி முறைகளும் விளக்கப்பட்டன. இனி உரிமையியற் சட்டம் சார்ந்த உரிமைகள் மற்றும் அவற்றிற்கு ஊறு விளைந்தக்கால் சட்டம் தருகிற பரிகாரங்கள் குறித்து விளக்கப்படும்.

இக்கால உரிமையியற் சட்டங்கள் தருகிற பரிகாரங்களை 4 வகையாகப் பிரிக்கலாம். அவை 1. இழப்பீடு(Damage ), 2. உறுத்துக் கட்டளை (Injunction), 3. குறித்த செயல் நிறைவேற்றுக் கட்டளை (Specific Performance), 4. மீட்டடைவித்தல் குறித்த கட்டளை (Specific Restitution) என்பனவாம்.

மேற்கூறிய நான்கு வகைப் பரிகாரங்களுள் 1-இல் கண்ட பரிகாரம் வழக்குமன்றத்தில் நீதி கேட்டு வருவோரால் பெருமளவிற் கோரப்படுவது. இதன்படி, சட்டத் தீங்கிற்கு உட்படுத்தப்பட்டவர் தம் உரிமைக்குத் தீங்கு விளைவித்தவரிடமிருந்து, தாம் பெற்ற இழப்பிற்கு ஈடு (பண ஈடு) பெறுகிற உரிமையை வழக்கு மன்றம் தருகிற தீர்ப்பாணையின் வாயிலாகப் பெறுகிறார். இவ்வுரிமையை இழப்பீடு பெறும் உரிமை என்றும் கூறலாம்.

**உறுத்துக் கட்டளை** உரிமையியல் நீதிமன்றங்களால் வழங்கப்படும் ஒருவகை ஆணை. இது ஒருவரின் உரிமைக்குத் தீங்கு விளைவித்துக் கொண்டிருக்கும் மற்றவருக்கு எதிராக வழங்கப்படுகிறது.

**குறித்த செயல் நிறைவேற்றுக் கட்டளை**: இதுவும் உரிமையியல் நீதிமன்றத்தின் ஒருவகை ஆணையேயாகும். ஒப்பந்தத்தின் மூலமாக உரிமை பெற்ற ஒருவர் தம்முடன் ஒப்பந்தம் செய்து கொண்டவரது ஒப்பந்த மீறலினால் தமது உரிமைக்கு ஊறு விளைவிக்கப்படும் போது, ஒப்பந்தப்படி மற்றவர் தமக்கு ஆற்ற வேண்டிய செயலைச் செய்ய வேண்டி வழக்கு மன்றத்தில் வழக்குத் தொடரலாம். இதில் அவரது கோரிக்கை ஒப்பந்தப்படி மற்றவர் ஏற்றதை ஆற்றவேண்டியமை குறித்த காரணத்தினால் வழக்கு மன்றம் ஒப்பந்தம் மீறியவரை ஏற்றதை ஆற்றுமாறு ஆணையிடலாம். இவ்வாணையைக் குறித்த செயலை நிறைவேற்றுக் கட்டளை எனக் கூறலாம். இவ்வாணை 'ஏற்றது ஆற்றல்' எனவும் வழங்கப்பெறும்.

**குறித்த மீட்டடைவிப்பு**: சட்டத்திற்குப் புறம்பாக ஒருவரிடமிருந்து எடுத்துக் கொண்ட பொருளை (பொருளின் நிலை மாறாதிருக்கும் பொழுது) மீட்டடைவிக்க வேண்டி, பொருளை இழந்தவர் வழக்கு மன்றத்தை நாடலாம். இங்கு அவர் கோருகிற பரிகாரம் பொருளை மீட்டடைவித்தல் குறித்தது. இதற்கு வழக்குமன்றம் குறித்த வகை மீட்டடைவிப்பு என்ற கட்டளையை வழங்கும்.

**இழப்பீட்டை அளவிடும் சட்டமுறை**: உரிமைக்கு ஊறு விளைவிக்கப்படும் பொழுது, அந்த ஊறினால் உரிமையுடையோருக்கு ஏற்பட்ட இழப்பின் அடிப்படையிலேயே இழப்பீடு அளவிடப்படுகிறது.

**உரிமையியல் சட்டங்கள்**: இந்தியாவில் பின் குறிப்பிடப்படுபவை உரிமையியல் சட்டங்களாகும்: (1) ஒப்பந்தச் சட்டம், (2) சொத்துரிமை மாற்றுச் சட்டம், (3) தீங்கியற் சட்டம், (4) இனமுறைச் சட்டம்.

**ஒப்பந்தச் சட்டம்** என்பது ஒப்பந்தங்களைக் குறித்த சட்டமாகும். ஒப்பந்தம் என்பது சட்டப்படி நிறைவேற்றக்கூடிய ஓர் உடன்படிக்கையாகும். இவ்வொப்பந்தம் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்டவர்களுக்கு இடையில் நிலவும். இவ்வொப்பந்தப்படி ஒப்பந்தஞ் செய்து கொண்டவர்களுக்கு இடையில் சில உரிமைகளும் கடமைகளும் ஏற்படுத்தப்படுகின்றன. ஒப்பந்தத்தை மீறுவதன் காரணமாகவோ நிறைவேற்ற மறுப்பதன் காரணமாகவோ ஒப்பந்தம் செய்து கொண்டவருள் ஒருவர் மற்றவரது உரிமைக்குத் தீங்கு விளைவிக்கும்போது, ஒருவர் ஒப்பந்தப்படி ஏற்றதை ஆற்றவேண்டியோ ஒப்பந்த முறிவால் இழப்பீடு அளிக்கவேண்டியோ வழக்கிடலாம்.

**சொத்துரிமை மாற்றுச் சட்டம்**: சொத்துரிமை என்றால் என்ன? சொத்துரிமை மாற்றம் எந்தெந்த வகைகளில் நிகழ்கிறது? எந்தெந்தப் பொருளை உரிமை மாற்றம் செய்யலாம்? என்பன போன்ற விவரங்களையெல்லாம் இச்சட்டம் விளக்கியுரைக்கிறது.

**உரிமை மாற்றம்**: உரிமை ஒன்று ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு மாறிச் செல்வது. இது பரந்த பொருளில் சட்டத்தில் பயன்படுத்தப்படுகிறது. ஒரு சொத்தில் உரிமை கொண்டிருக்கும் ஒருவர் அத்தகைய உரிமையை அதுவரை பெற்றிராத மற்

றொருவருக்கு மாற்றியளிப்பது உரிமை மாற்றம் (Transfer) ஆகும். இத்தகைய உரிமை மாற்றம் தரப்பினர் செயல்களால் (by Act of Parties) அல்லது சட்டத்தின் செயலால் (by Operation of Law) அல்லது தாமாக நடைபெறும் உரிமை மாற்றங்கள் வாயிலாக (by Involuntary Transfers) நிகழலாம். விற்பனை, கொடை, பரிமாற்றம், அடைமானம், குத்தகை போன்ற வாழ்வோரிடையேயான உரிமை மாற்றமாக (Transfer Inter Vivos) அது இருக்கலாம். அன்றி, உரிமையிழப்பு(Forfeiture), நொடிப்பு நிலை (Insolvency), விருப்புறுதியற்ற இறங்குரிமை (Interstate Succession) போன்று சட்டத்தின் செயலால் நிகழும் உரிமை மாற்றங்களாகவும் இருக்கலாம். மேலும், அடைமானத்தைக் குறித்த அல்லது பணத்தைத் திரும்பப் பெறுவது குறித்த தீர்ப்பாணையைச் செயற்படுத்தும் நீதிமன்றம் வழியாக நடைபெறும் உரிமை மாற்றங்களாகவும் இருக்கலாம்.

உரிமை மாற்றம் முழுமையாகவோ நிபந்தனைக்குட்பட்டோ இருக்கலாம். கி.பி. 1882-ஆம் ஆண்டுச் சொத்துரிமை மாற்றுச் சட்டம் அசையும் மற்றும் அசையாப் பொருள்களின் உரிமை மாற்றங்களைப் பற்றியும் எடுத்துரைக்கிறது.

'சொத்துரிமை மாற்றம்' என்பது சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் 5-ஆம் பிரிவில் பின்வருமாறு வரையறுக்கப்பட்டுள்ளது: 'சொத்துரிமை மாற்றம் என்பது உயிருடன் வாழும் ஒருவர், நிகழ்காலத்தில் அல்லது எதிர்காலத்தில் உயிருடன் வாழும் ஒருவர்' அல்லது ஒருவருக்கு மேற்பட்ட உயிருடன் வாழ்பவர்களுக்குச் சொத்தினை மாற்றியளிக்கும் செயலாகும்.

ஒவ்வொரு உரிமை மாற்றத்திற்கும் மறுபயன் இருக்க வேண்டும் என்பதில்லை. உரிமை மாற்றம் வாய்மொழி உரிமை மாற்றமாகக் கூட இருக்கலாம். உரிமை மாற்றத்திற்கான கருப்பொருள் மாற்றப்படக் கூடிய சொத்தாக இருக்க வேண்டும். உரிமை மாற்றம் சட்டம் கூறும் வடிவத்தில் அமைந்திருக்க வேண்டும்.

**உரிமை மாற்றம் செய்பவர்** : ஓர் உரிமை மாற்றத்தினை மற்றொருவர் பேரில் ஏற்படுத்துபவர் உரிமை மாற்றம் செய்பவர் (Transferor) ஆவார். சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் 7-ஆம் பிரிவு யார் யார் சொத்துரிமை மாற்றத்தினை ஏற்படுத்தத் தகுதி பெற்றவர்கள் என்பது பற்றிக் கூறுகிறது. இதன்படி, ஓர் ஒப்பந்தம் செய்யத் தகுதி பெற்றோரும், மற்றும் மாற்றப்படக் கூடிய சொத்தினை மாற்ற உரிமை கொண்டோரும் அல்லது தமதல்லாத மாற்றப்படக் கூடிய சொத்தினை மாற்ற அதிகாரம் பெற்றோரும் உரிமை மாற்றங்களை ஏற்படுத்த முடியும். மேலும், ஒரு சொத்தின் உரிமையாளர் உரிமை மாற்றம் செய்யலாம் அல்லது ஓர் இந்துக் கூட்டுக் குடும்பத் தலைவர், காப்பாளர், நிறைவேற்றாளர், பொறுப்புரிமையர் போன்ற மற்றவர் சொத்தினை மாற்றும் அதிகாரம் கொண்டவர் உரிமை மாற்றம் செய்யலாம்.

**உரிமை மாற்றம் பெறுபவர்** : மற்றொருவரிடமிருந்து அவரது உரிமைகளைப் பெறுபவர் உரிமை மாற்றம் பெறுபவர் (Transferee) ஆவார். சொத்துரிமை மாற்றுச் சட்டம் யார் உரிமை மாற்றம் செய்பவராக இருக்க முடியும் என்பதைக் கூறுகிறது. ஆனால், யார் உரிமை மாற்றம் பெறுபவராக இருக்கலாம் என்பதைக் கூறவில்லை. பிரிவு 6 (h) (3) உரிமை மாற்றம் பெறத் தகுதியற்றவர்கள் பேரில் உரிமை மாற்றம் செய்ய முடியாது என்று மட்டுமே கூறுகிறது. இதன்படி, இளையர் மற்றும் திடசித்தம் இழந்தவர்கள் சில சூழ்நிலைகளில் உரிமை மாற்றம் பெறுபவராக இருக்க முடியாது. சொத்துரிமைச் சட்டத்தின் 136-ஆம் பிரிவின்படி, நீதிபதிகள், வழக்குரைஞர்கள் மற்றும் நீதிமன்றங்களைச் சார்ந்த அதிகாரிகள் தொடர்தகு பாத்தியங்களை வாங்குவதற்குத் தகுதியற்றவர்கள் ஆவர். இதுபோலவே இந்தியப் பொறுப்புரிமைச் சட்டத்தின் 52-ஆம் பிரிவின்படி பொறுப்புரிமையரோ அவரது முகவரோ பொறுப்புரிமை சம்பந்தப்பட்ட சொத்துகளை வாங்கத் தகுதியற்றவர்கள் ஆவர். இவர்கள் உரிமை மாற்றம் பெறுபவர்களாக இருக்க முடியாது.

**தீங்கியற் சட்டம்** உரிமைக்கு ஊறு விளைவிக்கப்படும்போது, ஊறு விளைவிப்பவரிடமிருந்து இழப்பீடு பெறுவதைப் பற்றி உரைக்கும் சட்டமாகும்.

**இனமுறைச் சட்டம்** மண உறவு, மண முறிவு, மகவேற்பு, வாழ்க்கைப் பொருளுதவி தொடர்பான சட்டப் பிரிவுகளைத் தன்னகத்தே கொண்டிலங்குகிறது.

ம.கா., ஆ.ச.

**துணை நூல்கள்:**

**Barker, J.H.**, An Introduction to English Legal History, Bulterworths, London, 1971.

**Eddey, K.J.**, The English Legal System, Sweet & Maxwell, London, 1971.

**Setalvad, M.C.**, The Role of English Law in India, Hebrew University of Jerusalam, 1966.

*உரிமையியல் நடைமுறைச் சட்டத் தொகுப்பு:* நீதிமன்றங்களில் நடக்கும் வழக்குகளில் மிக முக்கியமானவை உரிமையியல் வழக்குகளும் குற்றவியல் வழக்குகளுமே. உடல், உடைமைக்கு எதிராக ஊறு விளைப்பது தொடர்பாக எழுவது குற்றவியல் வழக்குகள் என்றும், சொத்துகள், வாணிகம், ஒப்பந்தம், வாரிசுரிமை, உரிமைத்தீங்கு, வசதியுரிமைகள் (Easement Rights), பணம் கொடுக்கல் வாங்கல் ஆகியவை குறித்து எழும் வழக்குகள் உரிமையியல் வழக்குகள் என்றும் வழங்கப்படுகின்றன.

நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடைபெறுவதற்கு விதிமுறைகள் தேவை. அவை இல்லாவிடில் வழக்கு விசாரணை கட்டுப்பாடற்ற முறையில் நீடித்துச் செல்லும்; நீதி வழங்குவதிலும் தவறுதல் ஏற்படும். எனவே, இந்தியாவில் குற்றவியல் வழக்கு விசாரணை சம்பந்தமாகக் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தொகுப்பம் (Code of Criminal Procedure), உரிமையியல் நடைமுறைச் சட்டத் தொகுப்பும் (Code of Civil Procedure) இயற்றப்பட்டன.

முதன்முறையாக உரிமையியல் நடைமுறைச் சட்டத் தொகுப்பு இந்தியாவில் கி. பி. 1859-ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது. தொடக்க காலத்தில் இச் சட்டம் மாநகர் நீங்கிய பகுதிகளுக்கு மட்டும் செல்லத் தக்கதாயிருந்தது. கி.பி. 1861-ஆம் ஆண்டு இந்திய உயர்நீதிமன்றச் சட்டம் மூலம் சென்னை, கல்கத்தா, பம்பாய் போன்ற பகுதிகளில் உயர்நீதிமன்றங்கள் ஏற்படுத்திய பிறகு, இது மாநகர், மாநகர் நீங்கிய பகுதிகளில் உள்ள நீதிமன்றங்களுக்கும் பொருந்துவதாயிற்று. கி.பி. 1859-ஆம் ஆண்டைய நடைமுறைச் சட்டத்தொகுப்பு கி.பி.1877-ஆம் ஆண்டு நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாக வேறொரு உரிமையியல் சட்டத் தொகுப்பு உருவாக்கப்பட்டது. கி.பி. 1877-ஆம் ஆண்டைய உரிமையியல் சட்டத் தொகுப்பும் பின்னர் நீக்கப்பட்டு, உரிமையியல் சட்டத்தொகுப்பு1908-இல் இயற்றப்பட்டு, சனவரி 1 முதல் அமலுக்கு வந்தது. இச்சட்டத்தொகுப்புக்கு 1951, 1956, 1976 ஆகிய ஆண்டுகளில் முக்கிய திருத்தங்கள் கொண்டுவரப் பட்டன.

இச் சட்டத்தொகுப்பு சம்மு-காசுமீர், நாகலாந்து, பழங்குடி மக்களின் பகுதிகள் ஆகியவற்றைத் தவிர்த்து இந்தியா முழுமையையும் அளாவும். இச் சட்டத் தொகுப்பில் உரிமையியல் வழக்குகள் தாக்கல் செய்யப்படவேண்டிய முறை, விசாரணை நடத்தப் படும் முறை, வழக்கு விசாரணை முடிந்தபின் தீர்ப்பு, அதையொட்டித் தீர்ப்பாணை (Decree) பிறப்பிக்க வேண்டிய முறை, தீர்ப்பாணை நிறைவேற்றம், தீர்ப்பாணையினால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் பரிகாரம் ஆகியவை விவரமாக விளக்கப்படுகின்றன.

இச்சட்டத் தொகுப்பு இரண்டு பகுதிகளைக் கொண்டது. சட்டத் தொகுப்பின் 158 பிரிவுகளை உள்ளடக்கிய பகுதி முதற் பகுதி எனவும், கட்டளைகளையும் விதிகளையும் உள்ளடக்கிய பகுதி இரண்டாம் பகுதி எனவும் சொல்லப்படுகிறது.

முதற் பகுதி (1) தோற்றுவாய் (Preliminary), (2) பொது வழக்குகள் (Suits in General), (3) நிறைவேற்றம் (Execution), (4) இடைப்பட்ட நடவடிக்கைகள் (Incidental Proceedings), (5) குறிப்பிட்ட நேர்வுகளில் வழக்குகள் (Suits in Particular Cases), (6) சிறப்பு நடவடிக்கைகள் (Special Proceedings), (7) கூடுதல் நடவடிக்கைகள் (Supplemental Proceedings), (8) மேல் முறையீடுகள் (Appeals), (9) மேலாய்வு (Reference), மறு ஆய்வு (Review), சீராய்வு (Revisions), (10) உயர்நீதிமன்றம் தொடர்புடைய சிறப்பு வகையங்கள் (Special Provisions Relating to High Court), (11) விதிகள் (Rules), (12) பல்வகையம் (Miscellaneous) ஆகிய பகுதிகளைக் கொண்டது.

**தோற்றுவாய்:** இது இச்சட்டத் தொகுப்பின் முகப்பை அலங்கரித்து நிற்கும் பகுதி; எட்டுப் பிரிவுகளைக் கொண்டது. இதன் முதற் பிரிவு குறுந்தலைப்பு, தொடக்கம், சட்ட அளாவுகை ஆகியவற்றையும், இரண்டாம் பிரிவு சட்டத் தொகுப்பு (Code), தீர்ப்பாணை (Decree), தீர்ப்பாணை பெற்றவர் (Decree Holder), மாவட்டம் (District), அயல் நீதிமன்றம் (Foreign Court), அயல் தீர்ப்புரை (Foreign Judgement), அரசாங்க வாதுரைஞர் (Government Pleader), உயர்நீதிமன்றம் (High Court), இந்தியா, நீதிபதி (Judge), தீர்ப்புரை (Judgement), தீர்ப்புக் கடனாளி (Judgement-Debtor), சட்டப்படியான பிரதிநிதி (Legal Representative), தவறான பலன்கள் (Meswe Profits), அசைவியல் சொத்து (Movable Property), கட்டளை (Order), வாதுரைகள் (Pleas), பொது அலுவலர் (Public Officer), விதிகள் (Rules), கூட்டமைப்பில் பங்கு, கையொப்பம் தொடர்பான விளக்கங்களையும், மூன்றாம் பிரிவு உயர்நீதி மன்றம் மற்றும் மாவட்ட நீதிமன்றங்களுக்கு உட்பட்ட கீழமை நீதிமன்றங்கள் யாவை என்பதையும், நான்காம் பிரிவு விலக்கமுறு பகுதிகளையும், ஐந்தாம் பிரிவு இச்சட்டத் தொகுப்பு வருவாய்த்துறை நீதிமன்றங்களுக்குப் பயன்படும் பாங்கினையும், ஆறாம் பிரிவு நிதிவழி ஆள்வரையையும் (Pecuniary Jurisdiction), ஏழாம், எட்டாம் பிரிவுகள்

மாகாணச் சிறுவழக்கு நீதி மன்றங்கள் (Provincial Small Cause Courts) பற்றிய செய்திகளையும் உரைக்கின்றன.

பொது வழக்குகள் என்பது இச்சட்டத் தொகுப்பின் முதற் பாகம். இதன்கண் நீதிமன்ற ஆள்வரை (Jurisdiction of Court), முன் தீர்ப்புத் தடை விதி (Res Judicate), வழக்கிடும் இடம், வழக்குத் தொகுப்பு (Institution of Suit), தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை, வழக்குச் செலவினங்கள் பற்றிய கூறுகள் அடங்கியுள்ளன.

நிறைவேற்றம் என்பது இத் தொகுப்பின் இரண்டாம் பாகம். இதன்கண் தீர்ப்பாணைகள் நிறைவேற்றத்திற்கான நடைமுறைகள் அடங்கியுள்ளன.

இடைப்பட்ட நடவடிக்கைகள் என்பது இத் தொகுப்பின் மூன்றாம் பாகம். இதன்கண் நீதிமன்றமொன்று ஆணையாளர்களை நியமிப்பது தொடர்பான செய்திகள் அடங்கியுள்ளன.

குறிப்பிட்ட நேர்வுகளில் வழக்குகள் என்பது இத்தொகுப்பின் நான்காம் பாகம். இதன்கண் அரசாங்கத்தால் அல்லது அரசாங்கத்திற்கு எதிராக வழக்குத் தொடுத்தல் பற்றிய செய்திகள் அடங்கியுள்ளன.

சிறப்பு நடவடிக்கைகள் என்பது இத்தொகுப்பின் ஐந்தாம் பாகம். இதன்கண் பொது மக்களைப் பாதிக்கக்கூடிய பொதுத் தொல்லைகள் மற்றும் தீங்குச் செயல்கள் குறித்து மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்த செய்திகள் அடங்கி உள்ளன.

கூடுதல் நடவடிக்கைகள் என்பது இத்தொகுப்பின் ஆறாம் பாகம். இதன்கண் நீதியின் குறிக்கோளை நிறைவேற்றும் வகையில், 1) எதிர் வாதியைக் கைது செய்யவும் பிணை வேண்டவும் அதை அவர் மறுக்கும் வேளைகளில் அவரை உரிமையியல் சிறைக்கு அனுப்பவும், 2) பிணை மூலம் எதிர்வாதியின் சொத்தை நீதி மன்றத்திற்குக் கொண்டுவரச் செய்யவும் அதனை நீதிமன்றம் தம் பாதுகாப்பில் வைத்துக்கொள்ளவும் சொத்தைக் கைப்பற்றவும், 3) இடைக் காலத்தடை விதிக்கவும் அல்லது செயலுறுத்துக் கட்டளையைப் பிறப்பிக்கவும், 4) நீதிமன்றச் சார்பில் சொத்தாட்சி அலுவலரை நியமிக்கவும் உரிமையியல் நீதிமன்ற நீதிபதிக்கு உள்ள அதிகாரங்கள் விளக்கப்படுகின்றன.

மேல் முறையீடுகள் என்பது இத்தொகுப்பின் ஏழாம் பாகம். இதன்கண் கீழமை நீதிமன்றத் தீர்ப்புகளை எதிர்த்து எழும் மேல் முறையீடுகள் தொடர்புடைய நடைமுறைகள் விளக்கியுரைக்கப் பட்டுள்ளன.

மேலாய்வு, மறுஆய்வு, சீராய்வு என்பது இச்சட்டத் தொகுப்பின் எட்டாம் பாகம். இதன்கண் மேலாய்வு, மறு ஆய்வு, சீராய்வு குறித்த நடைமுறைகள் விளக்கியுரைக்கப்படுகின்றன.

விதிகள் என்பது இத்தொகுப்பின் பத்தாம் பாகம். இதன்கண் முதல் அட்டவணையிலுள்ள கட்டளைகள் மற்றும் விதிகளை மாற்றுவதற்கு உயர் நீதிமன்றங்களுக்கு உள்ள அதிகாரங்கள் விளக்கியுரைக்கப்படுகின்றன.

பல்வகையம் என்பது இச்சட்டத் தொகுப்பின் பதினோராம் பாகம். இதன்கண் நீதிமன்றத்தின் கட்சிக்காரர்களில் சிலர் நேரடியாகத் தோன்றாதிருப்பதற்கிருக்கும் சில விதிவிலக்குகள், கீழமை நீதிமன்றங்களின் அலுவல்மொழி, உறுதி மொழி ஆவணம் (Affidavit), மீட்டளிப்பு (Restitution), கப்பல் தேசம் குறித்துக் கண்காணிப்பாளர் நியமிப்பு, உத்தரவாத நிறைவேற்றுகை, நீதி மன்றங்களுக்குரிய இயல்பான அதிகாரம் குறித்த நடைமுறைகள் ஆகியவை விளக்கியுரைக்கப்படுகின்றன. பு. வே.

**உரிமையியல் வழக்கு**: ஒருவர் மற்றொருவருக்கு எதிராக உரிமையியல் வகையில் எடுக்கும் சட்டப்படியான நடவடிக்கை உரிமையியல் வழக்கு (Suit) எனப்படும்.

திருக்குறளுக்கு உரை எழுதிய பரிமேலழகர் தம் உரைப் பாயிரத்தில் உரிமையியல் வழக்கை 'வழக்கு' என்று குறிப்பிட்டு அதற்கான விளக்கத்தைத் தருகிற போது, 'வழக்காவது ஒரு பொருளைத் தனித்தனியே எனது எனது என்றிருப்பார், அது காரணமாகத் தம்முள் மாறுபட்டு அப்பொருள் மேற்செல்வது. அது கடன்கோடல் முதற் பதினெட்டுப் பதத்ததாம்' என்கிறார்.

உரிமையியல் வழக்குகளை இடும் முறையையும் தீர்ப்புகளின் இலக்கணத்தையும் தீர்வழிகளின் வகையையும் விரிவாகக் கூறுவது 'உரிமையியல் நடைமுறைச் சட்டத் தொகுப்பு' (Civil Procedure Code) ஆகும். பு. வே.

**உரிமை விரைவு**: எதிர்நோக்கு உரிமை சுவாதீனத்தில் வந்தடையுங்காலம், சரணடைதல், இணைதல் அல்லது முந்தைய நலன் மறைதல் மூலம் குறைந்து, பிந்தைய நலன் முன்னோக்கிச் செயற்

பாட்டிற்கு வருவது ‘உரிமை விரைவு’ (Doctrine of Acceleration) எனப்படும்.


உரிமை மாற்றம் ஒன்றினை நிபந்தனைகளுக்கு உட்படுத்தி ஏற்படுத்தலாம். அதே போல, ஓர் உரிமை மாற்றத்தில் பல நலன்களையும் (Interests) ஏற்படுத்த லாம். அவ்வாறு பல நலன்களுக்கு உட்பட்டு உரிமை மாற்றம் ஒன்று ஏற்படுத்தப்படும்போது முந்தைய நலனானது ஏதாவது காரணத்தினால் இல்லா நிலையது ஆகும்போது பின்னர்க் கொடுக்கப்பட்ட நலனும் இல்லா நிலையது ஆகும். முந்தைய கட்டுப் பாட்டின் கீழ்க் கொடுக்கப்பட்ட நலனைச் செயற் படுத்த முடியாது. ஏனெனில், இத்தகைய செயற் பாட்டினை உரிமைமாற்றம் செய்தவர் கருதியிரார்.

ஒரு கொடையோ ஓர் உரிமை மாற்றமோ வரையிலா நிலைக்கு எதிரான விதியின் காரணமாக முந்தைய நலன் தோல்வியுறும்போது, பிந்தைய நலனும் தோல்வியுறும். அதைப் போலக் குறைபாடு கொண்ட நிபந்தனையாலும் தோல்வியுறும்.

சில நேரங்களில் முதலில் உரிமை மாற்றம் முறைப்படி செல்லக் கூடியதாக இருக்கும்; ஆனால் உரிமை மாற்றம் பெறுபவரால் அந்த நிபந்தனையை நிறைவேற்ற முடியாமல் போகக் கூடும். இதுபோன்ற சூழ்நிலைகளில் முந்தைய உரிமை மாற்றம் தோல்வி யுறுமானால், அடுத்து வேறொருவருக்குச் செல்ல வேண்டும் என்று கருதப்பட்டது. சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் 27-ஆம் பிரிவில் கொடுக்கப் பட்ட உரிமை விரைவுச் சட்ட நெறியைப் பயன்படுத்த லாம். இதன்படி, முந்தைய பலன் நிபந்தனையை நிறைவேற்ற முடியாமல் தோல்வி காணுமானால், சொத்தினைப் பெற அடுத்த வரிசையில் முன்நிற்பவர் அதனைப் பெறுவார். ஆனால், நிபந்தனையும் உரிமை மாற்றமும் முறைப்படியானதாக இருத்தல் வேண்டும். இதற்கான காரணம் என்னவெனில், சட்டம் விரைவாகச் சேர்ந்தடைவதையே விரும்புகிறது. இதனாலேயே, பின் நிபந்தனைகள் கண்டிப்பான முறையில் நிறைவேற்றப்படுகின்றன. உரிமை இழப்பினைச் சட்டம் விரும்புவதில்லை.

இவ்வாறான பிந்தைய நலன் விரைவுபடுத்தப படும் கோட்பாடு உரிமை விரைவுக் கோட்பாடு எனச் சொல்லப்படுகிறது. பு .வே.

**உருக்கு** தென் ஈராக்கில் யூப்ரட்டிசு ஆற்றின் கரையில் பாக்தாதிலிருந்து தென் கிழக்காக 240 கி.மீ. தொலைவிலமைந்துள்ள தொன்மையான சுமேரிய நகரம். இன்று இது வார்க்கா (Warka) எனக் கூறப்படுகிறது. உருக்கு (Uruk) நகரம் விவிலிய நூலில் ஈரிக்கு (Erech) எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஊர் என்னும் பண்டைய நகரிலிருந்து 56 கி.மீ. வட மேற்காக இவ்வூர் உள்ளது. இங்கு 1912-ஆம் ஆண்டு முதல் செருமானியத் தொல்லியலறிஞர்கள் அகழாய்வு களை மேற்கொண்டனர்.




உருக்கு அமைவிடம்

உருக்கு, சுமர் (Sumer) அரசின் தலை சிறந்த நகரங்களுள் ஒன்றாக விளங்கியது. இந்நகரத்தினைச் சுற்றி உள்ள மதிற்சுவர் ஏறக்குறைய 9.6. கி.மீ. சுற்றளவு கொண்டது. இச்சுவர் செங்கற்களால் கட்டப்பட்டது. இச்சுவரைக் கில்காமிசு (Gilgamesh) என்னும் அரசர் கட்டியதாக மரபு வழிச் செய்திகள் குறிப்பிடுகின்றன. மதிற் சுவரின் உட்பகுதியான நகரத்தில் அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இங்கு உபயது காலப் பண்பாட்டுக் கூறுகள் முதல் பார்த்தியன் காலம் வரை தடயங்கள் தொடர்ந்து அகழாய்வுகளில் கிடைத்துள்ளன. ஏறக்குறைய கி.மு. 5000-த்திற்கு முன்பிருந்து கி.மு. 224 வரை இந்நகரம் சிறப்புப்பெற்று விளங்கியது. இந்நகர மக்கள் அனு (Anu) என்னும் ஆண் கடவுளையும் இனான்னா (Inanna) என்னும் பெண் கடவுளையும் வழிபட்டனர். இந்நகரத்தில் அனு கடவுளின் கோயில் கண்டு பிடிக்கப்பட்டது. இது வெள்ளைக் கோயில் (White Temple) எனக் கூறப்படுகிறது. இக்கோயில் பொன், வெள்ளி, செம்புப்பொருள் ஆகியவற்றால் பெரிதும் அலங்கரிக்கப்பட்டது. முத்திரைகளும் பதக்கங்களும் இங்குக் கண்டுபிடிக்கப்பட்டன. உருக்கில் சிக்குரத்து (Ziggurat) எனப்படும் மற்றொரு கோயிலும் கண்டுபிடிக்கப்பட்டது. ஊர் - நம்மு என்னும் அரசர் இந்நகரில் பல கோயில்கள் கட்டினார். இவரது காலத்தில் இந்நகரம் பெரிதும் வளர்ச்சி அடைந் தது. இசின் இலார்சா (Isin-Larsa, கி.மு.2017-1763)

காலத்திலும், காசைட்டுகள் காலத்திலும் (Kassite Period, கி.மு. 1595–1157) இந்நகரத்தில் பல கட்டடங்கள் கட்டப்பட்டன. காசைட்டுகளை அடுத்து அசிரியர்கள், புதிய பாபிலோனியர், அக்குமினிய அரசர்கள் ஆகியோரின் ஆதிக்கத்தின் கீழ் இந்நகரம் வந்தது. களிமண் வரைபடப் பலகைகள் பெருமளவில் இங்குக் கண்டெடுக்கப்பட்டன. இவற்றில் சித்திர எழுத்துகள் காணப்படுகின்றன. ஆப்பு வடிவ எழுத்துகளுக்கு உருக்கில் கண்டுபிடிக்கப்பட்ட இவ்வெழுக்துகளே



உருக்கு அரசர்–கில்காமிசின் சிற்பம்


முன்னோடியாக விளங்கியிருத்தல் வேண்டுமென அறிஞர்கள் கருதுகின்றனர். இங்கு வாழ்ந்த மக்களே எழுதும் கலையை முதலில் அறிந்தனர் என்பதும் கருதப்படுகிறது. காண்க: உபயது தால் அல்; ஊர்–நம்மு; ஊர்.
சு.இரா.

**உருக்குமணி கல்யாணம்**: இது திருக்குடந்தை சதுர்சாத்திர பண்டிதராகிய சக்கரபாணி ஐயங்காரின் மகள் வேப்பம்மாள் எழுதியது.

மணி மங்கலம் வடிவேலு முதலியாரால் பரிசோதிக்கப்பெற்று, மதுரை–புதுமண்டபம் புத்தகக்கடை பி.என்.சி. கடைகாரியம் என். குருசாமி நாயுடு என்பவரால், பிடாரித்தாங்கல் நாராயணசாமி முதலியாரின் குமாரர் சிதம்பர முதலியாரின் வித்தியாரத்னாகர அச்சுக்கூடத்தில்1903–இல் பதிப்பிக்கப்பட்டது.

இதிலுள்ள பாட்டுகள் இசையோடு அந்தணர் திருமண வீடுகளில் பாடப்படும். இசையோடு பாடுதற்குகந்த வகையில் பாடல்கள் எழுதப்பட்டுள்ளன.
பு. கி. க.

**உருக்குமணிதேவி அருண்டேல் (1904-1986)** சென்னைக் கலாட்சேத்திர நிறுவனத்தைத் தோற்றுவித்தவர்; தலைசிறந்த பரதநாட்டியக் கலையரசி. இந்த அம்மையார் 1904–ஆம் ஆண்டு பிப்பிரவரி 29–ஆம் நாள் பிறந்தார். இவர் தந்தையார் நீலகண்ட சாத்திரி வடமொழி அறிஞரும் பொறியாளருமாவார்; தாயார் பெயர் சேசம்மாள்.



உருக்குமணி தேவி

உருக்குமணி தேவி (Rukmini Devi) தம் 16-ஆம் வயதில் டாக்டர் சி.எசு. அருண்டேல் (Dr.G.S. Arundale)என்னும் ஆசுத்திரேலியரை மணந்துகொண்டார். அருண்டேல் பிரமஞான சபையைச் (Theosophical Society) சேர்ந்த கல்வியாளர்; டாக்டர் அன்னி பெசண்டு அம்மையாரின் மாணவர். ஆன்மிகக்கல்வி கற்க இந்தியா வந்தபோது உருக்குமணிதேவி அவரைக் கலப்புமணம் செய்துகொண்டார். இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் இத்திருமணம் புரட்சிகரமானதெனக் கருதப்பட்டது.

உருக்குமணிதேவியும் அருண்டேலும் ஆசுத்திரேலியாவில் பயணம் செய்து கொண்டிருந்தபோது, உருசியரான அன்னா பாவ்லோவா என்னும் அம்மையாரைக் கண்டனர். பாவ்லோவா மேனாட்டு நடன மேதை. அந்த அம்மையார் உருக்குமணி தேவியை நடனம் கற்றுக்கொள்ளுமாறு தூண்டினார். கிளியோர் சோர்டி தலைமையில் பாவ்லோவாவின் பாலே நடனக் குழுவில் இவர் சேர்ந்து பாலே நாட்டியத்தைப் பயின்றார். பின்னர், பரதநாட்டியக் கலையைக் கற்றார். உயர்சாதிப் பெண்கள் நாட்டியக்கலையில் நாட்டம் கொள்ளாத அக்காலத்தில் உருக்குமணிதேவி அக்கலையைப் பயின்று புரட்சி செய்தார்.

இவ்வம்மையார் தம் நாட்டியப் பள்ளியைத் தொடங்கியபோது இவர் மருமகளான இராதா பர்னியர்தான் முதல் மாணவி. ஏறத்தாழ 20 நடன நாடகங்களைத் தமிழ், தெலுங்கு, வடமொழி, வங்காளி போன்ற மொழிகளில் உருவாக்கி அரங்கேற்றியுள்ளார் இவர்.

உருக்குமணிதேவி 1936-ஆம் ஆண்டில் அடையாறு பிரமஞான சங்க நிலையத்தில் கலாட்சேத்திரம் என்னும் நுண்கலை அமைப்பினை உருவாக்கினார். இன்று பேரும் புகழும் பெற்ற நாடகக் கலைஞர்கள் பலரை இந்த அமைப்பு பயிற்றுவித்துக் கலையுலகுக்குக் கொடுத்துள்ளது. யாமினி கிருட்டிணமூர்த்தி, மிருணாளினி சாராபாய், செயலட்சுமி, தனஞ்சயன் போன்றோர் அவர்களுள் குறிப்பிடத்தக்கோர். கலாட்சேத்திரம் இப்போது திருவான்மியூரில் இயற்கைச் சூழ்நிலையில் தனக்கென்ற தனியமைப்பை உருவாக்கிக் கொண்டுள்ளது. நுண்கலைக்கெனத் தொடங்கப்பெற்ற பார்புகழ் பள்ளியாக இதனைக் கொள்ளலாம்.

பரதநாட்டியக் கலையில் உருக்குமணிதேவியார் பல ஆய்வுகளைச் செய்துகாட்டி, அக்கலைக்கு ஆக்கத்தையும் ஊக்கத்தையும் பெற்றுத் தந்தார். 'குற்றாலக் குறவஞ்சி'யை நாடகமாக 1944-ஆம் ஆண்டில் இவர் அரங்கேற்றினார். பின்னர், இராமாயணத் தொடர் நாட்டிய நாடகங்களையும் அரங்கேற்றினார். இவருடைய நாடகக் குழுவில் துணை இசைக் கருவிகளாக வீணை, புல்லாங்குழல் போன்றவையும் இடம் பெற்றன. நாடகக் கலைஞர்கள் நாட்டியத்தின்போது அணிந்துகொள்ளும் ஆடை அணிகலன்கள் போன்றவற்றையும் திருத்தியமைத்துப் புதுமைப்படுத்தினார். நாடகக் கலையை இறையருள் மணம் கமழும்படி செய்த பெருமை உருக்குமணிதேவியாரைச் சாரும்.

கலைகளின் பேராளரான இவரைப் பண்டிதசவகர்லால் நேரு 1952-இல் நாடாளுமன்ற மேலவை உறுப்பினராக நியமிக்க வகை செய்தார். இப்பதவியை இவர் ஆறு ஆண்டுகள் வகித்தார். இக்காலத்தில் விலங்குகளுக்குக் கொடுமை செய்வதைத் தடுக்கும் சட்ட முன்வரைவொன்றினை மேலவையில் கொண்டுவர வழிசெய்தார். விலங்கு நல வாரியத்தின் தலைவராக இவர் பொறுப்பேற்றார். உலகச் சைவ உணவாளர்கள் மாநாட்டின் வரவேற்புக் குழுவின் தலைவராகவும் (World Vegetarian Congress) பணியாற்றினார்.

இந்திய அரசு இவருடைய தொண்டுகளைப் பாராட்டும் முகத்தான் இவருக்குப் 'பத்மபூசண்' Padma Bhushan) என்ற விருதினை வழங்கியது. மத்திய பிரதேச அரசு 'காளிதாசர் சன்மானம்' என்னும் விருதினையும், ஆசியச் சங்கம் இரவீந்திர நாத தாகூர் நூற்றாண்டு விழாப் பட்டயத்தையும் (Plaque), அமெரிக்காவிலுள்ள வெயின் பல்கலைக் கழகமும் (Wayne University) காசியிலுள்ள இந்துப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த மகிளா மகாவித்தியாலயமும் (பெண்கள் கல்லூரி) முனைவர் பட்டங்களையும், மேற்கு வங்காளத்திலுள்ள விசுவபாரதி பல்கலைக்கழகம் 'தேசிகோத்தம' (Desikothama) என்னும் விருதினையும் வழங்கிப் பாராட்டின. விலங்குகளுக்குக் கொடுமை இழைப்பதைத் தடுக்கும் பிரிட்டானியக் கழகம் இவருக்கு விக்டோரியா அரசியார் வெள்ளிப் பதக்கத்தை அளித்துப் பெருமைப்படுத்தியது.

உருக்குமணிதேவி அருண்டேல் 1986-ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதம் 24-ஆம் நாள் தம் 82-ஆம் வயதில் காலமானார். இரா.அ.

**உருக்குமாங்கத மகாராசன் திவ்விய சரித்திரம்**: இது புரந்தரதாசரின் வரலாற்றைக் கூறும் நூல். இதனை இயற்றியவர் சிரீநிவாச இராமானுசதாசர். எளிய செய்யுள் நடையில்

அமைந்த இந்நூல் கி.பி.1890-இல் வெளிவந்தது. கீர்த்தனம், விருத்தம், சிந்து முதலிய எளிய யாப்பு அமைதியில் இவ்வரலாறு அமைந்துள்ளது. பி.தெ.

**உருக்குமாங்கதன்** வீமனின் மகனாவான். இவன் காட்டிற்கு வேட்டையாடச் சென்றபோது தண்ணீர்த் தாகம் ஏற்பட்டது. கவிமுனிவர் ஆசிரமம் போய்த் தாகத்திற்கு நீர் கேட்டான். முனிவரின் மனைவியாகிய முகந்தை என்பவள் இவனைக் கண்டு காதல் கொண்டழைக்க, அரசன் மறுத்தான். அதனால் முனிவர் மனைவி அரசனுக்குச் சாபம் கொடுத்தாள். அரசன் வெண்குட்ட நோயை அடையட்டும் என்ற அவளது சாபம் பலித்தது. நோயுடன் நாட்டிற்குச் செல்ல மன்னன் விரும்பவில்லை; காட்டில் தவமிருந்தான். நாரதர் தோன்றினார். சிந்தாமணி தீர்த்தம் முதலிய புண்ணிய தீர்த்தங்களில் குளிக்கும்படி கூறினார். அரசனும் அவ்வாறு நீராடிப் பழைய உருவைப் பெற்றான். பி.தெ.

**உருக்குமாங்கதன் சரித்திரம்**: உருக்குமாங்கத மன்னன் ஏகாதசி விரதம் இருந்த வரலாற்றைச் சிறப்பித்துச் சொல்வது. இது டி.வி.எசு. மகாதேவ சாத்திரியால் இயற்றப்பட்டது. இந்நூல் கதாகாலட்சேபம் செய்யும் கலைஞர்களுக்கு ஏற்ற முறையில் செய்யப்பட்டது. மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்ட இந்நூலின் முதற் பகுதியில் உருக்குமாங்கதனின் வரலாற்றுச் சுருக்கம் வடமொழிச் சுலோகமாகவும் தமிழ் உரைநடையாகவும் கொடுக்கப்பட்டுள்ளது. இரண்டாம் பகுதியிலமைந்துள்ள நாபசித்தாந்தம் என்னும் தலைப்பில் அச்சரித்திரம் கதாகாலட்சேபம் செய்வதற்குரிய முறைப்படி சுலோகங்கள், இசைப் பாடல்கள், எடுத்துக்காட்டுகள் ஆகியவற்றுடன் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. மூன்றாம் பகுதியில், கதாகாலட்சேபத்திற்கேயுரிய சாகி, ஆரியா, திண்டி, ஒவி முதலியவற்றுடன் இசைப்பாடல்கள் பற்றியும் அவற்றைப் பாடவேண்டிய இடங்கள் பற்றியும் ஆசிரியர் எழுதியுள்ளார். இவ்வரலாற்றின் மையக் கருத்து. மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய செய்திகள் ஆகியவற்றை விளக்கும் இறுதிப் பகுதியோடு இந்நூல் முற்றுப் பெறுகிறது. இந்நூல் 1924-ஆம் ஆண்டில் வெளிவந்தது. வீ.சே.

**உருகுவே**: தென்னமெரிக்காவின் மிகச்சிறிய நாடாகிய உருகுவே 177,508 ச.கி.மீ. பரப்பளவுள்ளது. இதன் தலை நகரம் மாண்டிவிடியோ (Montevideo). மற்றத் தென்னமெரிக்க நாடுகளைப் போல உருகுவேயும் (Uruguay) கி.பி. 16 முதல் 19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரை இசுபெயினின் ஆதிக்கத்திலிருந்தது. பின்னர், கி.பி. 1822-இல் இது தன்னாட்சி உரிமை பெற்றது. அன்றிருந்து 20-ஆம் நூற்றாண்டின் நடுப் பகுதிவரை இது அமைதியும் நிலையான ஆட்சியும் பெற்றிருந்தது. இந்நாட்டின் பொருளாதார இடர்ப்பாடுகளும் சமூகக் கொந்தளிப்பும் நாட்டிற்குச் சில சிக்கல்களைத் தோற்றுவித்ததோடு, துபாக்கு உமாரு (Tubac Umaru) என்ற ஒரு வன்முறைக் கிளர்ச்சி இயக்கமும் இந் நாட்டின் அரசியல் வாழ்வில் புதிய திருப்பத்தைத் தோற்றுவித்தது. கால் நடை வளர்ப்பும், வேளாண்மையும் நாட்டின் முக்கிய தொழில்கள். இந்நாடு தொழில்வளம் மிகுதியும் உடையது அன்று. மக்கள் இசுபெயின், இத்தாலி மற்றும் பல ஐரோப்பிய நாடுகளிலிருந்து குடியேறியவர்கள். இங்கு அரசாங்கம் பல சமூகப் பணி நிறுவனங்களை அமைத்து நடத்துகிறது.




உருகுவே

அரசாங்கம்: இந்நாட்டிற்கு 1966-ஆம் ஆண்டில் ஒரு புதிய அரசியலமைப்புச் சட்டம் வரையப்பட்டது. இச்சட்டம் இதற்கு முன்பிருந்த பன்முக நிருவாக முறையை (Plural Executive) நீக்கிவிட்டு, அதற்கும் முன்பிருந்த குடியரசுத் தலைவர் முறை அரசாங்கத்தை (Presidential System of Government) மீண்டும் ஏற்படுத்திற்று. இந்த 1966-ஆம் ஆண்டின் அரசியலமைப்பில் குடியரசுத் தலைவரே நாட்டின் தலைமை அதிகாரியாகவும் படைகளின் தளபதியாகவும் இருந்தார். இதன்சட்டமன்றம் சார்பாளர் அவை (Chamber of Deputies), ஆளவை (Senate) ஆகிய

இரு அவைகளை உடையது. இவற்றின் உறுப்பினர்கள் வயது வந்த வாக்காளர்களால் 4 ஆண்டுக் காலத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அரசியற் கட்சிகளுக்கு விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைப்படிஅரசியலில் பங்கு எடுத்துக் கொள்ளுதற்கு வாய்ப்பு இருக்கிறது.

உள்ளாட்சி முறை: உருகுவே 19 மாகாணங்களை (Departments) உடையது. ஒவ்வொரு மாகாணத்துக்கும் ஒரு சட்டமன்றம் உள்ளது. மாகாண நிருவாகக் குழுக்களும், சட்டமன்றங்களும் மக்களுடைய வாக்கெடுப்பின் வாயிலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டன. எனவே, 1966-ஆம் ஆண்டின் அரசியலமைப்பு ஒரு குடியாட்சி அரசாங்க முறையை மாகாணங்களிலும் நிறுவியிருந்தது.

அரசியற் கட்சிகள்: மூன்று முக்கியமான அரசியற் கட்சிகள் இந்நாட்டில் உள்ளன. நகர மக்களிடையே ஆதரவு பெற்ற கொலராடோ கட்சி ஒன்று (Colorado Party); நிலவுடைமையாளருடைய ஆதரவைப் பெற்ற பிளாங்கோ கட்சி(Blanco Party) ஒன்று; கிறித்தவக் குடியாட்சியினர், சமநிலையாளர், பொதுவுடைமையர் முதலியவர் சேர்ந்த கூட்டணியாகிய பிரண்டே அம்புலியோ (Frente Amplio) என்ற கட்சி மூன்றாவதாகும்.



மாண்டி விடியோவிலுளள உயர்ந்த கட்டிடம்

இராணுவ ஆட்சி: இந்த 1966-ஆம் ஆண்டின் அரசியலமைப்பை 1973-ஆம் ஆண்டில் நாட்டின் இராணுவம் நிறுத்திவைத்து, அரசாங்கத்தைத் தான் ஏற்றுக் கொண்டது. நடுவண் அரசாங்கத்தில் இவ்வாறு இராணுவ ஆட்சி ஏற்பட்டதும், மாகாணங்களில் செயற்பட்டுவந்த குடியாட்சி அரசாங்கங்களும் நீக்கப்பட்டு, அவையெல்லாம் நடுவண் அரசாங்கத்தால் அமர்த்தப்பட்ட அதிகாரிகளால் ஆளப்பட்டன. சில ஆண்டுகளுக்கு முன் தோன்றிய துபாமரோசு (Tupamaros) என்ற தீவிரப் புரட்சி இயக்கம் நகரங்களில் ஒளிந்துகொண்டு தாக்கித் தப்பிச் செல்லும் முறையைக் கையாண்டது. இது நாட்டின் பாராளுமன்ற அமைப்புக்கு மாறாகச் செயற்படுகிறது. இதன் வன்செயல்களே அரசாங்கத்தை இராணுவம் ஏற்றுக் கொண்டதற்குக் காரணமாகுமென்று கூறப்படுகிறது. இராணுவ ஆட்சியானது கொலராடோ கட்சியையும், பிளாங்கோ கட்சியையும் தவிர மற்றக் கட்சிகளைத் தடை செய்துள்ளது.

நீதித்துறை: ஒரு தலைமை நீதி மன்றம் (Supreme Court) இருக்கிறது; இதன் 10 நீதிபதிகளும் நாட்டின் சட்டமன்றங்களாகிய ஆளவையும் சார்பாளர் அவையும் இணைந்த கூட்டு அவையினால் 10 ஆண்டுக் காலத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். முதலில் சுதந்திரமாகச் செயற்பட்ட நீதித்துறை இராணுவ ஆட்சிக்குப்பின் அரசாங்கத்தின் நிருவாகப் பிரிவால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இந்நாட்டில் 1907-ஆம் ஆண்டிலிருந்து மரண தண்டனை நீக்கப்பட்டுள்ளது.

படை: தரைப்படையில் ஒன்று அல்லது இரண்டாண்டுகளுக்குச் சேர்க்கப்பட்ட வீரர்கள் உள்ளனர்; இதனோடு குதிரைப்படை, இராணுவப்பொறியாளர், பீரங்கிப்படை, இயங்குபீரங்கிப்படை (Tank), ஒரு சிறிய கப்பற்படை, வானப்படை முதலியவையும் இருக்கின்றன. கட்டாய இராணுவப் பயிற்சிச் சட்டத்தின்படி, நிலைப்படை ஒன்றுக்கு ஒவ்வோராண்டிலும் பயிற்சி கொடுக்கப்பட்டு வருகிறது. இரா்.அ.

உருகுவே நாட்டில் கல்வி: தென்னமெரிக்க நாடுகளுள் உருகுவே நகரியத் தன்மை மிக்க நாடாகும். கல்வியறிவு மிக்க நாடாகையால் உருகுவே நாட்டு மக்கள் பல செய்திகளை அறிந்தவர்களாக உள்ளனர்.

இங்குத் தொடக்க நிலைக் கல்வி கட்டாயமாகும். எல்லாக் குழந்தைகளும் 6 வயதிலிருந்து 14 வயது வரை தொடக்கப் பள்ளிக்குப் போக வேண்டும். ஒரு மாதத்தில் மூன்று நாட்களுக்கு மேல் ஒரு குழந்தை உரிய காரணங்கள் இல்லாமல் பள்ளிக்கு வாராமல் இருந்தால், அக்குழந்தையின் பெற்றோர்களுக்கு அரசே தண்டம் விதிக்கிறது. இச்சட்டம் நகர்ப் புறங்களில் கடுமையாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. ஊர்ப் புறக் குழந்தைகள் வேளாண்மைத் தொழிலில் இறங்கி விட நேரிடுவதாலும், பள்ளிகள் மிகச் சிலவே இருப்பதாலும், ஊர்ப்புறங்களில் இச்சட்டம் 10 வயதுக் குழந்தைகள் வரையே கடைப்பிடிக்கப்படுகிறது.

மழலையர் பள்ளிகளில் குழந்தைகள் 3 வயதில் சேருகின்றனர். இப்பள்ளிகளில் குழந்தைகள் 5 வயது வரை ஒழுக்க நெறி, உடற்பயிற்சி, மனவளர்ச்சிக்கான பயிற்சி ஆகியவற்றில் கல்வி பெறுகின்றனர்.

தொடக்க நிலைக் கல்விக்கு இருவகைப் பள்ளிகள் உண்டு. முதல்வகை, முழுமைபெற்ற தொடக்கப்பள்ளிகள் (Complete Primary Schools). இவை நகர்ப் புறங்களில் உள்ளன. இங்கு ஆறாண்டுத் தொடக்கக் கல்விகற்பிக்கப்படும். இரண்டாம்வகை, முழுமையுறாத் தொடக்கப் பள்ளிகள் (Incomplete Primary Schools). இவை ஊர்ப் பகுதிகளில் உள்ளன. இங்கு 6 ஆண்டுக்குக் குறைவாகக் கல்வி தரப்படுகின்றது. இக்கல்வி முடித்தவர்கள் வேளாண்மைப் பயிற்சிப் பள்ளிகளிலோ முழுமை பெற்ற தொடக்கப் பள்ளிகளிலோ சேர்ந்து கல்வியை முடிக்கின்றனர். வகுப்பறைகளில் மாணவர், ஆசிரியர் விகிதம் 24:1 என்ற அளவில் உள்ளது.

**பள்ளிக் கல்வி:** உயர்நிலைக் கல்வி 'இலைசு' (Liceos) என்று சொல்லப்படும் உயர்நிலைப் பள்ளிகளில் 6 ஆண்டுகள் வழங்கப்படுகின்றது. முதல் 4 ஆண்டுகளில் மாணவர்கள் பொதுவான பாடங்களைப் பயிலுகின்றனர். இறுதி 2 ஆண்டுகளும் பல்கலைக் கழக நுழைவுக்கான (University Preparatory) கல்வியைப் பெறுகின்றனர். ஆறாண்டுக் கல்வி முடித்தவர்களுக்குக் (Bachilleratto) கல்விச் சான்றிதழ் வழங்கப்படுகின்றது. இந்நாட்டில் பொதுக் கல்வி தரும் உயர்நிலைப் பள்ளிகளுக்கு இணையான தொழிற் கல்விப் பள்ளிகளும் உள்ளன. தொழிற் கல்விப் பள்ளிகளில் இருவகைப் பள்ளிகள் உள. அவை வாழ்க்கைத் தொழிற் பள்ளிகளும் (Vocational Schools), வழிகாட்டிப் பள்ளிகளும் (Pilot Schools) ஆகும். வழிகாட்டிப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு 5 ஆண்டுகளுக்கான சிறப்புத் தொழிற் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இக்கல்வி முடித்தவர்கள் பல்கலைக் கழக நுழைவுக்கான கல்விப் பிரிவில் சேரத் தகுதியுடையவர்கள்.

தொழிற் கல்விக்கு இந்நாட்டில் மாணவர்களிடம் வரவேற்பு இல்லை. ஏனெனில், தொழிற்கல்வி பயின்று உடலுழைப்புச் செய்வது இந்நாட்டு மக்களிடம் மதிப்புக் குறைவாகக் கருதப்படுவதோடு, இக் கல்வி கற்றோருக்கு அலுவலகப் பணியாளர்களை விடக் குறைவான ஊதியமும் கொடுக்கப்படுகிறது.

**பல்கலைக் கழகக் கல்வி:** ஒரே ஒரு 'குடியரசுப் பல்கலைக்கழகம்' (University of the Republic) இந்நாட்டில் உண்டு. உயர்நிலைப் பள்ளிக் கல்விச் சான்றிதழ் (Bachillerate) பெற்றவர்கள் பல்கலைக் கழகத்தில் சேரத் தகுதி பெற்றவர்கள். இப் பல்கலைக் கழகத்தில் சேர மாணவர்கள் நுழைவுத் தேர்வு எழுத வேண்டியதில்லை. கல்விக் கட்டணம் மாணவர்கள் செலுத்த வேண்டியதில்லை. திறமை மிக்க பல்கலைக் கழக மாணவர்களுக்கு உதவித்தொகையும் உண்டு. சட்டவியலில்தான் இப்பல்கலைக்கழக மாணவர்கள் மிகுதியாகச் சேருகின்றனர்.

**வயது வந்தோர் கல்வி:** இந்நாட்டில் வயது வந்தோர் பள்ளிகள் உண்டு. ஆனால், இங்குக் கற்க வருபவர்களுக்கு எழுத்தறிவு தரப்படுவதில்லை. தொடக்கநிலைக் கல்வி கட்டாயமாக்கப்பட்டிருப்பதால், பெரும்பாலும் அனைவரும் எழுத்தறிவு பெற்றுள்ளனர். ஆதலால், வயது வந்தோர் பள்ளிகளில் பண்பாட்டு மேம்பாடு, சமுதாயச் சேவை, செய் தொழில் ஆகியவற்றில் பயிற்சி தரப்படுகின்றது. இந் நாட்டு மக்கள் தொகையுள் கல்வியறிவு பெற்றவர்கள் 96.3 விழுக்காடு ஆவர்.

**நிருவாகமும் நிதியும்:** கல்விப் பொறுப்பு முழுதும் உருகுவே நாட்டின் மைய அரசிடம் உள்ளது. மைய அரசின் பொறுப்பிலுள்ள தேசிய தொடக்கநிலைப் பொதுக் கல்விக் கழகம் (National Council of Primary and Normal Education) இந்நாட்டிலுள்ள தொடக்க நிலைக் கல்வி, மழலையர் கல்வி ஆகியவற்றினைப் பொறுப்பேற்று நடத்தி வருகிறது. மேலும், இக்கழகம் மழலையர் பள்ளி, தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சி தந்து உருவாக்குகிறது. உருகுவே நாட்டின் மைய அரசின் பொறுப்பில் இருக்கும் தேசிய உயர்நிலைப் பள்ளிக் கல்விக் கழகம் (National Council of Secondary Education) உயர்நிலைப் பள்ளிக் கல்வியையும் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் பயிற்சியையும் நிருவகிக்கின்றது. மாணவர் பாடநூல்கள் மட்டுமே வாங்க வேண்டும். மற்ற

அனைத்துக் கல்விச் செலவையும் அரசே ஏற்றுக் கொள்கிறது. ஏறத்தாழ, தேசிய வரவு செலவுத் திட்டத்தில் ஐந்தில் ஒரு பங்கு கல்விக்காக இந்நாட்டில் செலவிடப்படுகிறது.

தனியார் அறக்கட்டளை மூலம் இயங்கும் தனியார் பள்ளிகளும் உண்டு. சில தனியார் பள்ளிகள் மாணவர்களுக்கு இலவசக் கல்வி வழங்குகின்றன. அப்பள்ளிகளுக்கு அரசு வரிவிலக்கு வசதி செய்து தருகிறது. எஸ்.த.

துணை நூல்கள்:

**Well**, T.E., Area Handbook for Uruguay, U.S. Government Printing Office, Washington, DC, 1971.

UNESCO, Statistical year Book 1981, Paris, 1982.

***உருச்சிதைத்தல்***: உலகத்தின் அனைத்துச் சமுதாயங்களிலும் மக்கள் வாழ்வின் ஒவ்வோர் அமைப்பிலும் பல மரபுகளையும் நம்பிக்கைகளையும் பின்பற்றி வாழ்கின்றனர். தம் எண்ணங்களையும் உணர்வுகளையும் வெளிப்படுத்த மொழி பயன்படுவது போன்றே, உடலின் உறுப்புகளும் அசைவுகளும் அமைப்பும் தம் எண்ணங்கள், உணர்வுகள், பண்பாட்டின் மரபுகள் ஆகியவற்றை வெளிப்படுத்துகின்றன. இதனால், உடல் உறுப்புகளை அழகுபடுத்துவதிலும் மாற்றிக் கொள்வதிலும் மக்கள் வரலாற்றுக் காலம் முதற்கொண்டே ஈடுபட்டுள்ளனர். உடல் உறுப்புகளை மாற்றிக் கொள்ளும் பல்வேறு முறைகளில் உருச்சிதைத்தல் முதன்மையானதாகும். இதற்கான காரணங்கள் பல. பெரும்பாலான சமுதாயங்களில் சமூக, சமயச் சடங்குகளைக் கடைப்பிடிக்கும் பொருட்டும் மருத்துவ முறையாகவும் உருச்சிதைத்தல் செய்து கொள்கின்றனர். சில சமுதாயங்களில் குற்றவாளிகளைத் தண்டிக்கும் பொருட்டும் உருச்சிதைத்தல் நிகழ்வதுண்டு. உடலை அழகுபடுத்துதல், சமயச் சடங்கு முறைகளைக் கடைப்பிடித்தல், மருத்துவம், தண்டனை ஆகிய நான்கு அடிப்படைச் செயல்கள் தவிர நூற்றுக்கணக்கான பிற நோக்கங்களுக்கும் உருச்சிதைத்தல் செய்யப்படுகின்றது.

உருச்சிதைத்தலில் உறுப்புகளைக் குறைத்தல், உறுப்புகளில் வேறுபாட்டினை ஏற்படுத்துதல், உறுப்புகளை நீக்குதல் ஆகிய மூன்றே முதன்மையானவையாகும். ஒவ்வொரு நோக்கத்திற்கும் செயலிற்கும் ஏற்ப அதனுடன் தொடர்புற்ற உறுப்பு அல்லது உடலின் பகுதி எடுத்துக் கொள்ளப்படுகிறது. இவற்றுள் முதன்மையாக மூக்கு, காது, பல், உதடு, கை, கால், மயிர், மார்பகங்கள், பாலுறுப்புகள் முதலானவையே பெரும்பாலான பண்பாடுகளில் பாதிக்கப்படுகின்றன. எனினும், உடலின் அனைத்துப் பகுதிகளும் உருச்சிதைத்தலுக்கு உள்ளாவதைக் காண முடியும்.

ஈக்குவடார் (Ecuador) நாட்டின் மந்தாசு இந்தியர்கள் (Mantas Indians) தலையின் உருவத்தை மாற்றியமைக்கின்றனர். இதனால், அவர்களின் குழந்தைகள் உடல்நலத்தையும் கடினமாக வேலைசெய்யும் உடல் வலிமையையும் பெறுகின்றனர் என நம்புகின்றனர். இதே வழக்கத்தினை வட பிரேசிலுள்ள திரியோ (Tirio) என்னும் தென்னமெரிக்கப் பழங்குடியினரும் கொண்டுள்ளனர். தங்கள் குழந்தைகளை மரப்பலகைகளால் நெற்றியின் இருபக்கங்களிலும் வைத்து நெருக்கித் தலையை நீளவாக்கில் வளர்க்க முயல்வர். மங்குபொத்து(Mangbotu)என்னும்காங்கோ நாட்டுப் பழங்குடியினருள் பெண்கள் தலையின் வடிவத்தினை ஒருவகைத் திண்டின் (Pad) உதவியுடன் தலை மயிரைப் பின்தள்ளி மாற்றிக் கொள்வர். இது தங்களுக்குத் தனி அழகினையும் சமூகத் தகுதியையும் தருகிறது என்னும் நம்பிக்கை கொண்டுள்ளனர். இதனால், ஆண்கள் வேற்றுக் குடியினரை மணப்பது விலக்கப்படுகிறது. இம்முறை இன்காப்பழங்குடியினருள் இரு பாலாரிடமும் உள்ளது.

உருச்சிதைத்தல் முறை சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகும். உருச்சிதைத்தலின்போது ஏற்படும் காயமும் வலியும் பொறுத்துக் கொள்வது ஒரு தனித்தன்மையையும் பெருமையையும் கொடுப்பதாக எண்ணுவர். இதனால், தம்முடன் உள்ள ஆவிகளை வெளியேற்றி விட்டதாகவோ ஆவிகளைச் சாந்தப்படுத்திவிட்டதாகவோ நம்புவர். ஆப்பிரிக்கப் புசுமென் (Bushmen) பெண்கள் தம் நெருங்கிய உறவினர் ஒருவர் இறக்கும்போதோ தம் குழந்தைகள் மிகமோசமாக உடல் நலம் கெடும் போதோ தம் விரலை மேல் நுனிக்கணுவுடன் வெட்டிவிடுவர். உருகுவே நாட்டின் தொன்மை மக்களான சாருவாசுவினரும் (Charruas) இழவுத் துயர்க் காலங்களில் இதைப் போல் செய்து கொள்வர். மேலும், பெண்கள் கத்தியாலும் ஈட்டியாலும் தம் உடலைக் கிழித்துக் கொள்வர். குரோ இந்தியர்கள் (Crow Indians) தம் கையில் ஒரு பகுதித் தோலைக் கிழித்துக் கொள்வர். பாலினேசியத் தொங்கோப் (Tongo) பழங்குடியினர் தம் உடலைப் பலவகைக் கருவிகளால் புண்படுத்திக் கொள்வர்.


உருச்சிதைத்தலில் ஒவ்வோர் உறுப்பையும் சிறப்பாக ஒடுக்குவதில் தனித்தன்மை காட்டுவர். பல

சமுதாயங்களில் குழந்தைகளுக்கு நன்முறையில் பாலூட்ட இயலாப் பெண்கள் தம் மார்பகங்களைக் கீறிக் கொள்கின்றனர். ஒரு குடியில் உறுப்பினராக வும் சிறப்புத் தன்மை பெறவும் தம் கைவிரலின் கணுப்பகுதியை வெட்டியும், நகம், மயிர் முதலான வற்றை வெட்டியும் விடுகின்றனர். இந்தியாவின் சில பகுதிகளில் பெண்கள் பேரக் குழந்தைகள் பிறந்தவு டன் இம்மாதிரியான உருச்சிதைத்தலைச் செய்து கொள்கின்றனர்.

ஒரு குறிப்பிட்ட பல்லை எடுத்தலும் சிலவற்றை நறுக்குதலும் சிலவற்றைத் தேய்த்துப் பல்வேறு வகையான வடிவங்களுக்கு மாற்றுதலும் ஏற்புச் சடங்குகளின் (Initiation rites) ஒரு பகுதியாகப் பல் வேறு சமுதாயங்களில் காணப்படுகின்றன. சீ.ப.

**உருசியா** உலகிலேயே மிகப் பெரிய பொது வுடைமை நாடாகும். ஐரோப்பாக் கண்டத்தின் பாதிக்கு மேற்பட்ட நிலப்பரப்பையும் ஆசியாக் கண்டத்தின் ஏறத்தாழ ஐந்தில் இரண்டு பங்கையும் உள்ளடக்கிக் கொண்டுள்ள மாபெரும் நாடு உருசியா (Russia). இதனைச் சோவியத்து ஒன்றியம் (Soviet Union) என்றும் கூறுவர். உலக மொத்த நிலப்பரப்பில் உருசியா மட்டும் ஏழில் ஒரு பங்கிற்கும் மேலாக உள்ளது. தென் அமெரிக்கா, அண்டார்க்டிகா, ஐரோப்பா, ஆசுத்திரேலியா போன்ற கண்டங்களை விடப் பெரியது உருசியா. வட அமெரிக்காக் கண்டமும் உருசியாவும் ஏறத்தாழ ஒரே அளவு பரப்புடையவை. மக்கள் தொகையில் இது மூன்றாம் இடத்தைப் பெறுகின்றது. இந்நாட்டின் தலைநகரம் மாசுக்கோ (Moscow) மாநகரமாகும்.

எல்லைகள்: ஐரோப்பா, ஆசியா ஆகிய இரு கண்டங்களிலும் பரந்து விரிந்துள்ள உருசியா மேற்கில் பால்டிக்குக் கடலிலிருந்து கிழக்கில் பசிபிக்குப் பெருங் கடலின் பாகமான பேரிங்கு நீர்ப்பிரிவு வரை நீண்டுள்ளது. வடக்கில் ஆர்டிக்குப் பெருங்கடலி லிருந்து தெற்கில் கருங்கடல் வரையிலும் பரந்துள்ளது. பால்டிக்குக் கடலிலிருந்துபசிபிக்குப்பெருங்கடல் வரை




சோவியத்து ஒன்றிய பொதுவுடைமை குடியரசு

நீளம் 9,700 கி.மீ. உருசியாவின் மொத்தப் பரப்பு 2,24,02,200 ச.கி.மீ. மக்கள் தொகை 26,88,00,000.

நிலப்பிரிவுகள்: உருசியாவில் பெரும் புல்வெளிகள் பரந்துள்ளன. இதனை வன்பாலை (Steppes) என்பர். இதனுடன் அடர்ந்த காடுகள், உயர்ந்த மலைகள், கரடுமுரடான மேட்டு நிலங்கள் போன்ற வற்றையும் காணலாம். சோவியத்து ஒன்றியத்தை (உருசியா) ஆறு பெரும் நிலப்பிரிவுகளாகப் பிரிக்க லாம். அவை (1) ஐரோப்பியச் சமவெளி, (2) ஊரல் மலைத்தொடர்கள், (3) ஏரல்-காசுப்பியத் தாழ்நிலம், (4) மேற்குச் சைபீரியச் சமவெளி, (5) நடு சைபீரிய மேட்டு நிலம், (6) கிழக்குச் சைபீரிய மேட்டுநிலங்கள் என்பனவாம்.

ஐரோப்பியச் சமவெளியில் உருசிய மக்களில் முக்கால் பங்கினர் வாழ்கிறார்கள். இந்நாட்டின் பெரும்பாலான தொழிற்சாலைகளும் அதன் வளமான மண் நிலங்களும் இப்பகுதியில்தான் அடங்கியுள்ளன. இச் சமவெளி பெரும்பாலும் ஒரே சீரானது; கடல் மட்டத்தைவிட 180 மீ. உயரமுள்ளது. இதன் தென் கோடியில் காக்கசசு (Caucasus) மலைத் தொடர்கள் எழுந்துள்ளன. அங்குள்ள எல்புருசு மலையுச்சியே ஐரோப்பாவின் மிக உயர்ந்த பகுதியாகும். அது 5,633 மீ. உயரமுடையது. இம் மலைத்தொடர் உருசியாவின் தென் எல்லையிலிருந்து சைபீரியாவில் பைக்கல் ஏரி வரை படர்ந்துள்ளது.

ஊரல் மலைத்தொடர்கள் உருசியாவிற்கும் சைபீரியாவுக்கும் இடையில் எல்லையாக அமைந் துள்ளன. உருண்டு திரண்ட பழைமையான இம் மலைத்தொடர்களை ஆறுகள் அரித்து அவற்றின் உயரத்தைச் சராசரி 610 மீட்டர் அளவுக்குக் குறைத்துவிட்டன. இத்தொடரின் வடக்கிலும் தெற்கிலும் பல மலையுச்சிகள் 1500 மீ. உயரம் எழுந்துள்ளன. இம்மலைத்தொடரின் நடுப்பாகம் மக்கள் நெருக்கம் மிகுந்த பிரிவாகும். இப்பிரிவில் மலைத்தொடர் பல்வேறு தாழ்ந்த மலைமுகடுகளாகப் பிளவுண்டு காணப்படுகிறது. ஊரல் மலைத்தொடரில் கனிமச் செல்வங்கள் மிகுதியாகப் படிந்துள்ளமையால் அங்குப் பல தொழிற்சாலைகள் தோன்றியுள்ளன.

ஏரல்-காசுப்பியத் தாழ்நிலம் அல்லது சோவியத்து நடு ஆசியா எனப்படும் நிலப்பிரிவு அகன்றது; மணற் பாங்கான பாலை நிலங்களையும் தாழ்ந்த, புற்றரை களைக் கொண்ட மேட்டு நிலங்களையும் கொண்டுள்ளது. பாலை நிலப்பகுதியில் கர கும் (Kara Kum) என்னும் கறுப்பு மணலையும் கிசல் கும் (Kyzyl Kum) என்னும் செம்மணலையும் காணலாம். காராகியே (Karagiye) பள்ளம் கடல் மட்டத்தினின்று 132 மீ. தாழ்ந்தது. இதுதான் சோவியத்து ஒன்றியத் தின் மிகத் தாழ்ந்த இடமாகும். இது மாங்கிசுலாக்கு முந்நீரகத்தில் (Mangyshlak Peninsula) உள்ளது. இம்முந்நீரகம் காசுப்பியக் கடலில் நீண்டு செல்கிறது.

மேற்குச் சைபீரியச் சமவெளி ஆல்டாய் மலைத் தொடர்களுக்கு வடபால் உள்ளது. இதுதான் உலகி லேயே மிகப்பெரிய சமவெளிப் பகுதியாகும்; 26 இலட்ச ச.கி.மீ. பரந்துள்ளது இச்சமவெளி. இப் பகுதியில்தான் ஒபு ஆறும் அதன் துணையாறுகளும் வடக்காகப் பாய்ந்து இறுதியில் ஆர்டிக்குப் பெருங் கடலில் கலக்கின்றன. நீர்ப்பாசன வசதி மிகக் குறைந்த இச்சமவெளி சதுப்புநிலங்களைக் கொண் டது.

நடு சைபீரிய மேட்டு நிலம் சராசரியாக ஏறத் தாழ 610 மீ. உயரமுள்ளது. கடற்கரைச் சமவெளி களிலிருந்து ஆர்டிக்குப் பெருங்கடலை ஒட்டினாற் போல் இப்பகுதி தென்பாகத்தில் மேடாகச் சரிந்துள் ளது. இப்பகுதியில் சயன் (Sayan) மற்றும் பைக்கல் என்னும் மலைத் தொடர்கள் 3350 மீ. மேட்டுநிலத் தின் தென்கோடிவரை உயர்ந்துள்ளன. ஆறுகள் இம் மேட்டு நிலத்தை மிகவும் பள்ளமாக்கியுள்ளன. எனவே, பல ஆறுகள் ஆற்றுக் குடைவுகளின் வழியாகப் பாய்ந் தோடுகின்றன. இப்பகுதியிலும் விதவிதமான கனிமப் படிவங்கள் படிந்துள்ளன.

கிழக்குச் சைபீரிய மேட்டுநிலங்கள் மனிதச் சுவடு படாத மலைத்தொடர்களையும் மேட்டுநிலங் களையும் சிறப்பாகக் கொண்டுள்ளன. இங்குள்ள மலைத்தொடர்கள் 3000மீ. வரை ஓங்கி உயர்ந் துள்ளன. ஆசியாவின் கிழக்குக் கடற்கரையையும் அதனை அடுத்துள்ள தீவுகளையும் ஒட்டியுள்ளது இப்பகுதி. காம்சட்கா (Kamchatka) முந்நீரகம் ஏறத் தாழ 25 எரிமலைகளைக் கொண்டுள்ளது. இப்பகுதி யிலுள்ள பனி மூடிய குளுயூசெவசுக்காயா (Klyuche-vskaya) மலையுச்சி 4750 மீ. உயரமுள்ளது.

ஆறுகள்: உருசியாவுக்குள்ளேயே பாயும் ஆறான இலேனா 4270 கி.மீ. நீளமானது. இது சைபீரியா வில் ஓடுகிறது. ஆமூர் (Amur), ஒபு (ob), எனிசி (Yeni-sey) என்பன சைபீரியாவில் பாயும் ஏனைய ஆறு களாம். ஆண்டில் ஏழு முதல் ஒன்பது மாதங்கள் வரை இந்த ஆறுகள் உறைந்துவிடுகின்றன. ஐரோப் பாவிலேயே மிகப் பெரியது வால்கா ஆறாகும். இந்த ஆறு வால்டாய் குன்றுகளிலிருந்து தொடங்கி மாசுக் கோவிற்கு வடமேற்காகப் பாய்ந்து காசுப்பியன் கடலில் கலக்கிறது. வால்கா ஆறும் ஆண்டில் மூன்று


மாதங்களுக்கு உறைந்துவிடுகிறது. நீப்பர், தான், நீமன் மற்றும் வடக்கு மேற்கு துவினா (Dvina) போன்ற ஆறுகள் உருசியாவின் பிற ஆறுகளாகும். ஆமுதர்யா, சிர்தர்யா ஆறுகள் ஏரல் கடலில் கலக்கின்றன.

**ஏரிகள்:** உலகிலேயே மிகப்பெரிய உள்நாட்டு உப்பு ஏரியான காசுப்பியன் கடல் (Caspian Sea) உருசியாவில் உள்ளது. இந்த ஏரி கடல் மட்டத்தை விட 28 மீ. தாழ்ந்தது; இது 3,72,000 ச.கி.மீ. பரப்புடையது; தென் உருசியாவில் ஐரோப்பாவிற்கும் ஆசியாவுக்கும் இடையிலுள்ளது. இலடோகாவும் (Ladoga) ஓனேகாவும் (Onega) ஐரோப்பாவின் வடமேற்கில் உள்ள நன்னீர் ஏரிகளாகும். இலடோகா ஏரி 17,703 ச.கி.மீ. பரப்புடையது. ஐரோப்பாவிலேயே மிகப்பெரிய ஏரி இதுதான். பைக்கல் ஏரி சைபீரியாவிலுள்ளது. இது 1741 மீ. ஆழமுடையது. இதுதான் உலகிலேயே மிக ஆழமான நன்னீர் ஏரியாகும். உப்பு ஏரியான ஏரல் (Aral) ஏரியும் பால்காசு (Balkhash) ஏரியும் சோவியத்து நடு ஆசியாவில் உள்ளன..

சோவியத்து ஒன்றியத்தின் கடற்கரைகள் அந்நாட்டு மக்களுக்குப் பெரிதும் பயன்படுவதில்லை. அவை ஆண்டு முழுவதுமோ பெரும் பகுதியோ பனியால் உறைந்துவிடுவன. ஆண்டு முழுதும் திறந்த கடல்களுக்கு நேரிடையாகப் போகவரப் பயன்படும் துறைமுகம் மர்மான்சுக்கு(Murmansk) என்பதாகும். இது நார்வே நாட்டு எல்லைக்கருகில் அமைந்துள்ளது. வெதுவெதுப்பான காற்றும் வட அட்லாண்டிக்குப் பெருங்கடல் நீரோட்டங்களும் இத்துறைமுகத்தை உறைபனியிலிருந்து காக்கின்றன. உருசியாவுக்கு நன்கு பயன்படும் துறைமுகங்கள் மிகக் குறைவே.

**தட்பவெப்பநிலை:** நீண்ட கடுங்குளிருக்கு உருசியா பெயர் பெற்றது. உருசியாவை வெல்ல நினைத்த நெப்போலியனும் இட்லரும் அங்கு வீசிய பனிக்காற்றினால்தான் தோற்றார்கள். உருசியாவின் பெரும் பகுதி ஆர்டிக்கு வட்டத்திற்கு வடபால் அமைந்துள்ளது. இப்பகுதி குளிருக்குப் பெயர் பெற்றதாகும். உருசியாவின் வடகிழக்குச் சைபீரியாவே மிகக் குளிரான பகுதியாகும். தட்பவெப்ப நிலையில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகள் உருசியாவில் காணப்படுவதுபோல் உலகில் வேறெங்கும் காணப்படுவதில்லை. இங்குக் கோடைக்காலம் கடும் வெப்பமாகவும், வெதுவெதுப்பாகவும் இருக்கும்.

**மழை:** காக்கசசுப் பகுதியில்தான் மிக அதிக




இயற்கைத் தாவரங்கள்

மழை பொழிகிறது. இங்குள்ள சில குன்றுகளில் ஆண்டுக்கு 250 செ.மீ. மழை பெய்கிறது. சைபீரியா வின் மேற்குப் பகுதியிலும் நடு சைபீரியாவிலும் மிக அதிகம் பனி பெய்கிறது. சில ஆண்டுகளில் பனி யின் அளவு 120 செ.மீட்டரை மிஞ்சுவதுண்டு.

மக்கள்: உருசியாவில் மக்கள்தொகை எல்லா விடங்களிலும் ஒரே மாதிரியாக அமையவில்லை. இந் நாட்டின் முக்கால்வாசி மக்கள் ஐரோப்பிய உருசியா வில் வாழ்கிறார்கள். அது நிலப்பரப்பளவில் நாலில் ஒரு பங்காகும். ஆசிய உருசியாவில்ஒரு ச.கி.மீ. க்கு 4 பேர் வீதம் இருந்தால் ஐரோப்பிய உருசியாவில் ஒரு ச.கி.மீ. க்கு 34 பேர் வீதம் வாழ்கிறார்கள்.

தேசிய இனங்களும் மொழிகளும்: உருசிய மக்கள் பல்வேறு பின்னணியில் வந்தவர்கள்; வித விதமான மொழிகளைப் பேசுபவர்கள். சோவியத்து மக்கள்தொகைக் கணக்குப்படி உருசியாவில் நூறு தேசிய இனக்குழுவினர் இருக்கின்றனர். அவர்கள் பேசும் மொழியின் அடிப்படையில் அவர்களை அடையாளம் காட்டுகிறார்கள். தேசிய இனக்குழுவி னருள் பெரும்பாலானோர் வெள்ளை நிறத்தவராகிய காகசாயி (Caucasoids) மரபினைச் சார்ந்தவர்கள்; ஏனையோர் மஞ்சள் நிற மங்கோலிய மரபினர்; அல்லது மேற்கூறிய இருவினக் கலப்பினர்.

இசுலாவிய தேசிய இனக்குழுவினரே உருசியா வின் மொத்த மக்கள்தொகையில் முக்கால் பங்கி னர். அவர்கள் வெவ்வேறு கிளை மொழிகள் பேசுப வர்கள்; எனினும், இசுலாவிய மொழிகளுக்கிடையே நெருங்கிய தொடர்புண்டு. இசுலாவியரின் மூதாதை யர்களே 1000 ஆண்டுகளுக்கு மேலாக உண்மையான உருசிய அரசை நிலைநாட்டியவர்கள்.

இசுலாவிய இன மக்களுள் பெரும்பாலானவர்கள் உருசியர்களே. எனினும், அனைத்துச் சோவியத்து மக்களையும் உருசியர்கள் என்று பொதுவாகக் கூறுவ தும் உண்டு. இக்குழுவின் மக்களைப் பெரும் உருசியர் கள் (Great Russians) என்று ஒருகாலத்தில் குறிப்பிட் டார்கள். இவர்கள் உருசியாவின் மக்கள்தொகையில் 53 விழுக்காட்டினர். உருசியர்கள் நாடு முழுவதிலும் வாழ்கிறார்கள். பொதுவுடைமைக் கட்சியிலும் அர சாங்கப் பதவிகளில் தலைமை தாங்கி நடத்துவதிலும் உருசியர்களே முன்னணியில் நிற்கிறார்கள். உருசிய மொழியே ஆட்சி மொழி. எனவே, அனைத்துச் சோவியத்துப் பள்ளிகளிலும் இம்மொழி கற்பிக்கப்படு கிறது. பெரும்பாலும், அனைத்துச் சோவியத்துக் குடிமக்களும் உருசிய மொழியை முதல் மொழியா கவோ இரண்டாம் மொழியாகவோ பேசுகின்றனர்.

உக்ரேனியர்கள் இசுலாவிய இன மக்களில் இரண்டாம் இடத்தைப் பெறுபவர்கள். இக்குழுவும் மிகப் பெரியதே. இவர்கள் தென் ஐரோப்பிய உருசி யாவில் வாழ்கிறார்கள். பைலோருசியர்கள் மூன்றாம் இடத்தைப் பெறும் இசுலாவிய இனமக்கள். இவர் களை வெள்ளை உருசியர் என்றும் கூறுவர். இவர் கள் மேற்கு ஐரோப்பிய உருசியாவில் வாழ்கிறார் கள். மேற்கூறிய மூவகை இசுலாவிய இனமக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள் போலந்துக் காரர்கள்.

இசுலாவிய இன மக்களுக்கு அடுத்தபடியாக எண் ணப்படுகிறவர்கள் துருக்கி மக்களாவர். அவர்களு டைய மொழிகளும் நெருங்கிய தொடர்புகொண் டவை. ஒருசில துருக்கி மக்கள் மங்கோலிய இனத் தைச் சார்ந்தவர்கள். துருக்கி இனமக்களுள் பெரும் பான்மையோர் சோவியத்து நடு ஆசியாவில் வாழ் கிறார்கள். இப்பகுதி காசுப்பியன் கடலுக்கும் சீனா வுக்கும் இடையிலுள்ளது. இப்பகுதியில் வாழும் உசு பெக்குகள் எண்ணிக்கையில் பெரும்பான்மையின ராய் இருப்பதோடு, முன்னேற்றம் மிக்கவர்களாயும் இருக்கிறார்கள். காகசுகள், கிர்கிசுத் துர்க்மன் போன்றவர்கள் ஏனைய துருக்கி இனமக்களைச் சார்ந்தவர்கள்; சோவியத்து நடு ஆசியாவில் வாழ் கிறார்கள். துவினியர்களும் (Tuvinians)யாகூத்துகளும் (Yakuts) சைபீரியாவில் வாழ்கிறார்கள். இப்பகுதி ஆசிய உருசியாவின் பெரும் பகுதியாகும். அசர் பைசானியர் காசுப்பியன் கடலுக்கு மேற்கில் காகசசு மலைத் தொடர்ப் பகுதியில் வாழ்கிறார்கள். ஐரோப் பிய உருசியாவில் வால்கா ஆற்றுப் பள்ளத்தாக்குப் பகுதியில் துருக்கி இனமக்கள் பெரும் எண்ணிக்கை யில் வாழ்கிறார்கள். இவர்களைப் பசுகிர்கள், சுவாசு, தார்த்தார்கள் (Tartars) என்பர்.

வட உருசியாவில் பால்டிக்குக் கடலுக்கும் நடு சைபீரியாவுக்கும் இடைப்பட்ட பகுதியில் பின்னோ–உக்ரிக்கு இனமக்கள் (Finno–Ugric Peoples) வசிக் கிறார்கள். பால்டிக்குக் கடலுக்கருகில் வாழும் எசுத் தோனியர் மிகுந்த எண்ணிக்கையினர். பின்லாந்துக் கருகில் பின்னியரும் கரிலினியரும், வால்காப் பள்ளத் தாக்கில் மரி, மோர்டோவியர் போன்றோரும் வசிக் கின்றனர்.

உருசியாவின் பல பகுதிகளில் செருமானியர்கள் வாழ்கிறார்கள். இவர்தம்மூதாதையர்கி.பி.18,19ஆம் நூற்றாண்டளவில் வந்து குடியேறினர். மால்டேவியர் உருமேனியாவுக்கு அருகில் வாழ்கிறார்கள். இவர்க ளுக்குஉருமேனியர்களுடன் நெருங்கிய தொடர்புண்டு. இவர்கள் பேசும் மொழியும் உருமேனிய மொழி

போன்றேயுள்ளது. எனினும், இதை உருசிய எழுத்தில் எழுதுகிறார்கள்.

**சமயம்:** பொதுவுடைமைக் கட்சி பதவிக்கு வரும் முன்னர், உருசியத் திருச்சபையின் அனுமதி பெற்ற சமயமாயிருந்தது உருசிய வைதிகத் திருச்சபை (Russian Orthodox Church) ஆகும். பொதுவுடைமைக் கட்சியினர் நாத்திகர்கள். சமயம் பொதுவுடைமைக் கொள்கைக்கு எதிரானது என்று அவர்கள் கருதுவர். சமயம் மக்களுக்கு அபினி போன்றது என்பது அவர்களின் கூற்றாகும். பொதுவுடைமைக் கட்சியினர் பல திருச்சபைகளை அழித்தனர்; ஏனையவற்றை அருங்காட்சியகங்களாக மாற்றினர். எனினும், சோவியத்து ஒன்றியத்தில் சமய வழிபாடுகள் தப்பிப் பிழைத்ததுடன், சமய ஒறுத்தலும் படிப்படியாகக் குறையலாயிற்று. சமயத்திற்குப் போடப்பட்டிருந்த தடைகள் பல 1940–முதல் நீக்கப்பட்டன. இதற்குக் காரணம் சமயத் தலைவர்கள் இரண்டாம் உலகப் பெரும்போரில் உருசியாவின் முயற்சியை ஆதரித்ததாகும். ஆயினும் இத்தடைகள் மீண்டும் கொண்டுவரப்பட்டன. திருச்சபைகள் பல மூடப்பட்டதுடன், அரசாங்கம் தான் அனுமதித்த வழிபாட்டு இடங்களைத் தவிர வெளியிடங்களில் சமயத் தொழுகைகள் நடத்துவதையும் தடுத்தது.

இன்று விளம்பரங்கள் மூலமாகவும் கல்வி நிலையங்களின் மூலமாகவும் சமயத்தைப் பொதுவுடைமைக் கட்சியினர் எவ்வாறெல்லாம் முடியுமோ அவ்வாறெல்லாம் தடுக்க முயலுகின்றனர். இருப்பினும், பல உருசியர்கள் இரகசியமாகவும் வெளிப்படையாகவும் வழிபாடு செய்கிறார்கள். உருசிய வைதிகத் திருச்சபையினர் எண்ணிக்கையும் ஏறத்தாழ 4 கோடி உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இசுலாமியர் உருசியாவில் எண்ணிக்கையில் இரண்டாம் இடத்தைப் பெறுகிறார்கள். பௌத்தர்கள், வைதிகக் கிறித்தவர்கள், யூதர்கள், உலூதரைப் பின்பற்றுபவர்கள், உரோமானியக் கத்தோலிக்கர்கள், ஆர்மீனியத் திருச்சபையினர் போன்ற ஏனைய சமயத்தவர்களும் வாழ்கிறார்கள்.

**பொருளாதாரம்:** நடுவண் அரசினால் திட்டமிடப் பெற்ற பொருளாதாரத்தின் அடிப்படையில் உலகிலேயே முதன்முதலாக உருவாக்கப்பெற்று, எடுத்துக் காட்டாய் அமைகிறது உருசியாவின் சமநிலைப் பொருளாதாரம். நாட்டின் வங்கிகள், தொழிற்சாலைகள், நிலங்கள், சுரங்கங்கள், போக்குவரத்து, செய்திப் போக்குவரத்து முறை போன்ற அனைத்தும் சோவியத்து அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளன. அனைத்துப் பொருள்களின் உற்பத்தி அளவு, பகிர்ந்தளிக்கும் முறை, விலை முடிவு செய்தல் போன்றவற்றைத் திட்டமிட்டுக் கட்டுப்படுத்துவதும் சோவியத்து அரசாங்கமேயாகும். தொழில்மயமாக்கும் நோக்குடன் 1928 முதல் பல முன்னேற்றத் திட்டங்களைச் செயற்படுத்தியுள்ளது.

வாரத்திற்கு 40 மணிநேரம் உருசியர்கள் உழைக்கிறார்கள். அவர்களின் ஊதியம் அரசாங்கத்தால் முடிவு செய்யப்படுகிறது. தொழிலுக்குத்தகவும் தொழிற்சாலைக்குத்தகவும் ஊதியம் மாறுபடுகிறது. எடுத்துக்காட்டாக, சிலதொழிற்சாலை ஊழியர்களை விட நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்கள் இரண்டு மடங்கு ஊதியம் பெறுகிறார்கள். தாம் விரும்பினால் தாம் செய்யும் தொழிலிலிருந்து விடுபடலாம் என்று 1955–ஆம் ஆண்டிலிருந்து உருசியத் தொழிலாளிகளுக்கு உரிமை வழங்கப்பட்டுள்ளது.

**இயற்கைச் செல்வங்கள்:** சோவியத்து ஒன்றியத்தில் உலகிலேயே செழுமை மிக்க மண்வளம் கொண்ட நிலப்பகுதிகள் பலவிடங்களில் அமைந்துள்ளன. பண்ணை நிலங்கள், கனிமப் படிவங்கள், காடுகள், நீர்மின்சக்தி ஆகியவற்றில் உருசியா மற்ற நாடுகளை விட முன்னணியில் உள்ளது. அதுபோல், பயிர் பச்சைகளிலும் விலங்குகளின் எண்ணிக்கையிலும் உருசியா முன்னணியில் நிற்கிறது.

**மண்வளம்:** உருசியாவின் வன்பாலை நிலம் செழுமைமிக்க மண்வளத்தைக் கொண்டுள்ளது. இதனைச் செர்னோசன் மண் (Chernozen Soil) என்பர். இது ஒருவகைக் கருமண்; மிகச் செழுமையானது. கருமண் வளையம் (Black Earth Belt) எனப்படும் பகுதி மேற்கு உக்ரேனிலிருந்து தென்மேற்குச் சைபீரியா வரை பரவியுள்ளது. கருமண் வளையப் பகுதிக்குத் தெற்கில் சோவியத்து நடு ஆசியாவில் பாலைநிலங்கள் அமைந்துள்ளன. காகசுப் பகுதியில் வளமான மஞ்சள் நிற மண்ணும் செம்மண்ணும் களிமண்ணுடன் கலந்து காணப்படுகின்றன. கடற்பாசி போன்றதும் சகதி நிறைந்ததுமான மண்ணுள்ள பகுதிகள் ஆர்டிக்குப் பெருங்கடலை அடுத்துள்ள தூந்திரப் பிளவு எனப்படும் தாழ்நிலச் சமவெளிகளில் உள்ளன.

**கனிவளம்:** தொழில்களுக்கும் தொழிற்சாலைகளுக்கும் தேவையான கனிமங்கள் அனைத்தும் உருசியாவில் பெருமளவில் கிடைக்கின்றன. தகரம் மட்டும் போதுமான அளவு கிடைக்கவில்லை. உலக நிலக்கரிப் படிவத்தில் ஐந்திலொரு பங்கு உருசியாவில் படிந்துள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. போதுமான அளவு இருப்பில் பெட்ரோலும் இயற்கை வாயுவும்

உள்ளன. உக்ரேன், ஊரல் மலைத்தொடர்கள், காசக்தான் போன்ற பகுதிகளில் இரும்புத் தாதுக்கள் மிகுதியாக இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சார்சியாக் குடியரசிலும் உக்ரேன் குடியரசிலும் உலகிலேயே அதிகமான மாங்கனீசுப் படிவங்கள் உள் ளன. குரோமியம், நிக்கல் போன்ற தாதுக்கள் ஊரல் பகுதியில் தென்படுகின்றன. செம்பு, ஈயம், துத்த நாகம் போன்றவை பெருமளவில் காசக்தானில் படிந் துள்ளன.


காடுகள்: உருசியாவின் மூன்றிலொரு பங்கு நிலம் காடுகளைக் கொண்டுள்ளது. உலக உற்பத்தி யில் ஐந்திலொரு பங்கு மரங்கள் இந்நாட்டில் வளர் கின்றன. ஊசியிலைக் காடுகள் வட உருசியாவின் குறுக்காகப் பின்லாந்திலிருந்து பசிபிக்குப் பெருங்கடல் வரை ஏறத்தாழ 8000 கி.மீ. தொலைவு பரந்துள் ளன. காடுகளுக்கும் மரங்களற்ற வன்பாலை நிலத் திற்கும் இடையில் ஊசியிலை மரங்களுடன் பிற மரங் களும் விரவியுள்ளன.

பாசிவகைகள், ஒருவிதப் பூண்டுகள், தாழ்ந்த புதர்கள் போன்றவை உருசியாவின் தூந்திரப் பகுதி யில் காணப்படும் செடிவகைகளாகும். சிறிய புதர் போன்ற, எளிதில் வளையக்கூடிய மரங்களும் வளரு கின்றன. சைபீரியாவில் சதுப்பு நிலங்களையும் நிலக்கரிச் சதுப்பு நிலக் காடுகளையும் காணலாம். காடுகளும் புல்வெளிகளும் இணைந்துள்ள பகுதிகளில் திறந்தவெளிப் புற்றரைகள் உள்ளன.

விலங்குகள்: தூந்திரப் பகுதிகளில் கலைமான்கள், நரிகள், கீரிகள், முயல்கள் போன்ற விலங்குகளைக் காணலாம். ஆர்டிக்குக் கடற்கரையை அடுத்துள்ள பகுதிகளில் நீர்ப்பறவைகள் கோடைக்காலத்தைக் கழிக்கக் கூட்டங் கூட்டமாக வருகின்றன. நீர்நாய், குழிமுயல், அணில் போன்ற விலங்குகள் சிறுகாடு களில் உலவுகின்றன. மறிமான் என்னும் மான் வகை கிழக்கு வன்பாலை நிலப்பகுதிகளில் வாழ்கிறது. சோவியத்து நடு ஆசிய மலைத்தொடர்களிலும் பாலைநிலங்களிலும் கரடி, மான், கழுதைப்புலி, சிறுத்தைப் புலி போன்றவை வாழ்கின்றன. உருசியக் கடற்கரை நீர்நிலைகளிலும் ஏரிகளிலும் ஆறுகளிலும் விதவிதமான மீன்வகைகள் உள்ளன.

செய்தொழில்கள்: முதல் உலகப் பெரும்போர் முடியும் தறுவாயில் உருசியா பண்ணைகளை நம்பிய நாடாகவே இருந்தது. ஆனால், இன்றோ இது பெரும் தொழில்மயமான நாடாகிவிட்டது.

உருசியாவில் 1928-இலிருந்து ஐந்தாண்டுத் திட்டங் களின்மூலம் தொழில்கள் பெருகி வளர்ந்தன. ஒவ் வொரு திட்டக் காலத்திலும் நிதி முதலீடு செய்து, உற்பத்தி அளவுக்கான குறியீடுகளையும் உறுதி செய்து செயற்படுத்தினர். தொடக்கத்தில் கனரக எந்திரங்களுக்கான தொழிற்சாலைகளுடன் இரசாய னப் பொருள்கள், கட்டுமானப் பொருள்கள், உருக் குப் பொருள்கள் போன்ற எந்திரக் கருவிகள் முத லியவற்றைச் செய்தனர். துணிமணிகள், உணவுப் பொருள்கள், வீட்டுக்குப் பயன்படும் பொருள்கள் போன்றவை போதுமானஅளவுஉற்பத்தியாகவில்லை. மக்களுக்கான நுகர்ச்சிப் பொருள்களை உற்பத்தி செய்வதில் 1955-ஆம் ஆண்டுக்குப் பின்னர் உருசிய அரசு கருத்துச் செலுத்தியது. என்னென்ன பொருள் களை எந்த அளவுக்கு உற்பத்தி செய்யவேண்டும் என் பதும் அவற்றின் விலையை முடிவு செய்வதும் அர சின் பொறுப்பிலிருக்கிறது. தொழிற்சாலைகளின் ஆதாயத்தில் ஐந்தில் மூன்று பங்கை அரசு வரியாக எடுத்துக்கொள்கிறது. எஞ்சிய ஆதாயத்தை முத லீடு செய்து உற்பத்திப் பெருக்கத்திற்கு ஊக்க மளிக்கிறது. தொழிலாளர்களுக்கும் தொழிற் சாலை மேலாளர்களுக்கும் விடுப்பூதியம் கொடுக்கவும் இந்த ஆதாயம் பயன்படுகிறது.



இலெனின் கிராடிலுள்ள தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் நூற்பு எந்திரம்

மாசுக்கோ மாநகரத்தைச் சுற்றியுள்ள பகுதியே உருசியாவின் செய்தொழில் மையமாகும். பேருந்துகள், தாமியங்கிகள், இழு வண்டிகள், இரசாயனப் பொருள்கள், மின்சாரக்கருவிகள், மின்னணுக் கருவிகள், பதப்படுத்தப்பட்ட உணவு வகைகள், உருக்கு, துணிமணிகள் போன்றவை இத் தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் ஏனைய பொருள்கள். கப்பல், தொழிற்சாலைகளுக்குப் பயன்படும் கருவிகள் முதலியன இலெனின்கிராடைச் சுற்றியுள்ள இடங்களில் உற்பத்தியாகின்றன. உக்ரேன் பகுதியே இரும்பு உருக்கு உற்பத்தி செய்வதில் முதன்மையான இடத்தைப் பெறுகிறது. இங்குப் பல்விதமான எந்திரங்கள் உற்பத்தியாகின்றன. ஊரல் மலைத்தொடர்ப் பகுதியில் உலோக வேலைகளும் எந்திர உற்பத்தியும் சிறப்பாக நடைபெறுகின்றன. வால்கா–ஊரல் எண்ணெய் வயல்களில் உருசியாவின் பெரும்பாலான பெட்ரோல் கிடைக்கிறது. மரமும் காகிதமும் பல பகுதிகளில் உற்பத்தி செய்யப்படுகின்றன. சைபீரியாவில் பல புதிய தொழிற்சாலைகள் உருவாகி வருகின்றன. இங்குக் கிடைக்கும் கனிமங்களையும் நீர்மின் சக்தியையும் பயன்படுத்தித் தொழிற்சாலைகள் இயங்குகின்றன.



எந்திர வேளாண்மை

**வேளாண்மை:** இங்கு 58 இலட்சம் ச.கி.மீ. பரப்பளவு பண்ணை நிலம் உள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. ஆர்டிக்குப் பெருங்கடலை யொட்டியுள்ள பகுதியில் பண்ணைநிலம் மிகுதியாக இருக்கிறது. எனவே, இங்குக் குறுகிய காலப் பயிர்களைத்தான் பயிரிட முடியும்.

உருசியாவின் பண்ணைநிலத்தில் மூன்றில் இரண்டு பங்கு அரசுப் பண்ணைகளாகும். இவ்வரசுப் பண்ணைகள் அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழிற்சாலைகளைப் போல் இயங்குகின்றன. பண்ணைத் தொழிலாளர்கள் கூலி பெறுகிறார்கள். நாட்டின் மொத்தப் பண்ணைநிலப்பரப்பில் மூன்றிலொரு பங்கில் கூட்டுறவுப்பண்ணைகள்அமைந்துள்ளன.கூட்டுறவுப்பண்ணை ஒவ்வொன்றிலும் 400க்கு மேற்பட்ட குடும்பங்கள்வாழ்கின்றன. உழவர்கள் குறைந்த கூலி பெறுவர். ஆனால், உற்பத்தியிலும் ஆதாயத்திலும் அவர்களுக்குப் பங்குண்டு. கூட்டுறவுப்பண்ணைகளில் வாழும் குடும்பங்கள் தத்தமக்குவேண்டிய சிறு நில மனைகளை அமைத்துக் கொள்ளலாம். இங்குள்ள உழவர்கள் தானியங்களைப் பயிரிடவும் கால்நடைகளை வளர்க்கவும் தாம் உற்பத்தி செய்யும் பொருள்களைத் தனியாக விற்கவும் உரிமை பெற்றிருக்கிறார்கள்.



சர்க்கரைக் கிழங்கு எடுத்தல்

பார்லி, கோதுமை போன்ற சிறப்பான உணவுப் பொருள்களின் உற்பத்தியில் உருசியா முன்னணியில் நிற்கிறது. கோதுமை உக்ரேன், தென்மேற்குச் சைபீரியா, வடக்குக் காசக்தான் பகுதிகளில் சிறப்பாக விளைகிறது. பார்லி பல பகுதிகளில் விளைகிறது. சணல், உருளைக்கிழங்கு,சர்க்கரைக் கிழங்கு போன்றவற்றின் உற்பத்தியில் சோவியத்து ஒன்றியம் மற்ற நாடுகளை மிஞ்சுகிறது. உருளைக்கிழங்கு உருசியா

வின் அனைத்துப் பகுதிகளிலும் விளைகிறது. சோவியத்து நடு ஆசியாவின் நீர்ப்பாசன வசதிபெற்ற பகுதிகளில் பருத்தி விளைகிறது. கருங்கடலை அடுத்துள்ள பகுதிகளில் வாழும் உழவர்கள் தேயிலை பயிரிடுகிறார்கள். தேநீரே உருசியாவின் தேசிய பானமாகும். சோளம், பழவகைகள், புகையிலை, காய்கறிகள் ஆகியன ஏனைய விளைபொருள்களாகும். கால்நடைச்செல்வம் உருசியாவில் மிகுதியாக இல்லை எனலாம். எனினும் உருசியர்கள் இறைச்சி உண்பவர்களே. மாட்டிறைச்சியும் பால் கொடுக்கும் கால் நடைகளும் பன்றிகளும் உக்ரேனிலும் வட பகுதியிலும் சிறப்பாக உள்ளன. செம்மறியாடுகள் சோவியத்து நடு ஆசியாவின் புல்வெளிகளிலும் ஏனைய பகுதிகளிலும் வளர்க்கப்படுகின்றன. ஆட்டு மயிர் சிறப்பான உற்பத்திப் பொருள்களுள் ஒன்று. கோழிப் பண்ணைகளை உழவர்கள் தம் சொந்த நிலங்களில் அமைத்துக்கொண்டுள்ளனர்.

**சுரங்கத் தொழில்**: நிலக்கரி, இரும்புத்தாது, மாங்கனீசு, பெட்ரோலியம், பிளாட்டினம் வகையைச் சார்ந்த கனிமப்பொருள் போன்றவற்றில் பிற நாடுகளைவிட உருசியாவே முதன்மையான இடத்தைப் பெற்றுள்ளது. உக்ரேன் பகுதியில் தோன்சு ஆற்று வடிநிலப் பகுதியிலும், சைபீரியாவில் கரகண்டா (Karaganda), குசுநெட்சுக்கு வடிநிலங்களிலும் உருசியாவின் மிகப்பெரிய நிலக்கரிச் சுரங்கங்கள் இருக்கின்றன. கிழக்கு உக்ரேன், ஊரல், காசக்தான் போன்ற பகுதிகளில் 85 விழுக்காடு இரும்புத் தாதுக்கள் கிடைக்கின்றன. உக்ரேன், சார்சியாப் பகுதிகளில் ஏறத்தாழ 39 விழுக்காடு மாங்கனீசு கிடைக்கிறது. ஐரோப்பிய உருசியாவிலும் ஊரல் பகுதிகளிலும் 75 விழுக்காடு பெட்ரோல் கிடைக்கிறது. வடமேற்குச் சைபீரியாவில் 1970-ஆம் ஆண்டளவில் எண்ணெய் வயல்களைக் கண்டுபிடிக்கும் பணி தொடங்கியது. பிளாட்டினம் ஊரல் பகுதியிலும் வட சைபீரியாவிலும் சுரங்கங்களிலிருந்து வெட்டியெடுக்கப்படுகிறது.

செம்பு, பொன், ஈயம், இயற்கை வாயு, நிக்கல், வெள்ளி, துத்தநாகம் போன்ற பொருள்களின் உற்பத்தியில் சோவியத்து ஒன்றியம் இரண்டாம் இடத்தை வகிக்கின்றது. தகரமும் போதுமான அளவு கிடைக்கத்தொடங்கியுள்ளது. மேற்குச் சைபீரியாவில் பாக்சைட்டும் காசக்தானில் செம்பும் வெட்டியெடுக்கப்படுகின்றன. கல்நார், வைரம், மக்னீசியம், உப்புப் போன்றவை பிற கனிமப் பொருள்களாம்.

**மரமறுக்கும் தொழில்**: மரமறுக்கும் தொழில் ஐரோப்பிய உருசியாவில் சிறப்பாக நடைபெறுகிறது. ஆசிய உருசியாவில் நிறைய மரங்கள் கிடைத்தாலும், அவற்றைக் கொண்டு செல்லும் போக்குவரத்துச் செலவு மிகுதியாகியுள்ளமையால் அப்பகுதியில் இத்தொழில் போதுமான அளவு வளர வில்லை.

**மீன்பிடித்தல்**: பேரண்டசுக் கடலிலும் (Barents Sea) வெள்ளைக் கடலிலும் (White Sea) உருசியச் செம்படவர்கள் பல வகை மீன்கள் பிடிக்கிறார்கள். காசுப்பியன் கடலில் இசுடர்சியன் (Sturgeon)என்னும் மீன்வகை கிடைக்கிறது. இம்மீனின் முட்டைகளை உப்பிட்டு உலர்த்தி, கருப்புநிறக் 'கவியர்' (Cavier) என்னும் புகழ்பெற்ற உணவினைத் தயாரிக்கிறார்கள். திமிங்கல வேட்டையில் உருசியர்கள் முன்னணியில் நிற்கிறார்கள்.

**மின்சக்தி**: எரிபொருளைப் பயன்படுத்தும் ஆலைகள் உருசியாவின் மின்சக்தி உற்பத்தியில் ஐந்தில் நான்கு பங்கை உற்பத்தி செய்கின்றன. எஞ்சிய மின்சக்தியை நீரிலிருந்தும்அணுவிலிருந்தும் தயாரிக்கிறார்கள். ஆசிய-உருசியாவில் நீர்மின்சக்தி இன்னும்போதுமான அளவு உற்பத்தி செய்யப்படவில்லை. இங்குக் கடலலைகளைப் பயன்படுத்தி,மின்சாரஉற்பத்தி செய்யும் நிலையம் ஒன்று 1969முதல் பணியாற்றுகின்றது.

**வெளி நாட்டுவாணிகம்**: உருசியப் பொருளாதாரத்தில் வெளிநாட்டு வாணிகத்தின் பங்கு மிக மிகக் குறைவு. பொதுவுடைமை அரசு வெளியார் சந்தையையோ வெளியிலிருந்து பொருளைத் திரட்டிக் கொடுக்கும் தனியார்களையோ நம்பி வாழ விரும்புவதில்லை.

இரும்பு-உருக்குப் பொருள்கள், மரத்துண்டுகள், எந்திரக் கருவிகள், பெட்ரோல் போன்றவை உருசியாவின் சிறப்பான ஏற்றுமதிப் பொருள்களாகும். தொழிற்சாலைகளுக்கான கருவிகளும் நுகர்வுப் பொருள்களும் (Consumer Goods) சிறப்பான இறக்குமதிப் பொருள்களாகும்.

உருசியாவின் வாணிகத்தில் 70 விழுக்காடு பொதுடைமை நாடுகளுடன், குறிப்பாகக் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுடன் நடைபெறுகின்றது. இவ்வாணிகத்தை ஏற்று நடத்தக் காமிகான் (Comecon) எனப்படும் நிறுவனம் உருவாக்கப்பட்டுள்ளது. ஒருவருக்கொருவர் பொருளாதார உதவி செய்யும் குழு என்று இதனைக் கூறுவர். இந்நிறுவனம் பொருளாதாரத் திட்டத்தை வகுக்கிறது. இதில் உருசியாவும் வேறு ஒன்பது பொதுவுடைமை நாடுகளும் இணைந்துள்ளன.

**போக்குவரத்து**: உருசியப் பொருள்கள் மூன்றிலிரண்டு பங்கு இருப்புப் பாதைகள் மூலம் ஏற்றிச்

செல்லப்படுகின்றன. மக்கள் தொகையில் ஏறத்தாழ பாதிப்பேர் இருப்புப்பாதைகள் மூலம் பயணம் செய்கிறார்கள். இங்குள்ள இருப்புப்பாதைகள் 1,38,000 கி.மீ. நீளமுள்ளவை. உருசியாவின் போக்குவரத்து மையமாக மாசுக்கோ மாநகர் அமைந்துள்ளது. இங்கிருந்து 11 இருப்புப் பாதைத் தொடர்கள் புறப்பட்டு, நாட்டின் அனைத்துப் பாகங்களுக்கும் செல்லுகின்றன. விளாடிவாசுடாக்கு என்னும் நகரத்திலிருந்து மாசுக்கோ வரை ஓர் இருப்புப் பாதை செல்கிறது. இதுவே சைபீரியாவின் பெருவழிப் (Trans Siberian Railway) பாதையாகும். இது ஏறத்தாழ 9000 கி.மீ. நீளமுள்ளது. மற்றோர் இருப்புப்பாதைத் தொடர் சோவியத்து நடு ஆசியாவில் தாசுகண்டிலிருந்து மாசுக்கோ வரை செல்லுகிறது.

உருசியாவில் ஏறத்தாழ 30 இலட்சம் பேருந்து வண்டிகள் ஓடுகின்றன. இங்கு 5,39,100 கி.மீ. நீளமுள்ள சாலைகள் உள்ளன.

உருசியாவின் வானவெளி அமைப்பை 'ஏரோபுளோட்டு' (Aeroflot) என்பர். உலகில் அரசின் சொந்தத்தில் இயங்கும் மிகப் பெரு வானவெளி நிறுவனம் இதுதான். இந்த வானவெளி அமைப்புச் சோவியத்து ஒன்றியத்தின் அனைத்துப் பெரு நகரங்களையும் இணைப்பதுடன், உருசியாவை எண்பதிற்கும் மேற்பட்ட உலகநாடுகளுடன் இணைக்கிறது. உருசியாவின் தலைநகரான மாசுக்கோவிலிருந்துகியூபா நாட்டின் தலைநகரான அவானாவுக்கு 'ஏரோபுளோட்டு' விமானம் வழியில் வேறெங்கும் நிற்காமல் வான வெளியில் செல்கிறது. இதன் தொலைவு 10,900 கி.மீ. இதுவே உலகில் மிக நீண்ட வான் வழியாகும். மாசுக்கோவுக்கருகிலுள்ள தொமோதெடோவா (Domodedovo) விமான நிலையமே உருசியாவின் மிகப்பெரிய வானவெளி நிலையமாகும்.

உள்நாட்டு நீர்வழிகள் மூலம் 4 விழுக்காடு சரக்குகள் ஏற்றிச் செல்லப்படுகின்றன. பெரும்பாலான ஆறுகள் ஆண்டில் பல மாதங்கள் உறைந்துவிடுவதால் உள்நாட்டு நீர்வழிகள் அவ்வளவாகப் பயன்படவில்லை. ஆறுகளையும் கடல்களையும் பல கால்வாய்கள் இணைக்கின்றன. வால்கா-டான் கால்வாயும், வெண்கடல்-பால்டிக்குக் கால்வாயும் சிறப்பானவை. மாசுக்கோக் கால்வாய் மாசுக்கோவை வால்கா ஆற்றுடன் இணைக்கின்றது.

உருசியாவின் துறைமுகங்கள் பெரும்பாலும் பல மாதங்கள் பனிக்கட்டியால் உறைந்து விடுகின்றன. கருங்கடல், பால்டிக்குக் கடல் போன்றவற்றில் மட்டும் பனி உறையாத துறைமுகங்களைக் காணலாம். நீண்ட ஆர்டிக்குக் கடற்கரை ஆண்டில் ஒன்பது மாதங்கள் பனியால் உறைந்துவிடுகிறது. வெப்பம் நிறைந்த மாதங்களில் ஆர்டிக்குக் கடற்கரை நகரங்களான மர்மான்சுக்கு, ஆர்க்கேஞ்சல் துறைமுகங்களிலிருந்து கப்பல்கள் தொலைவிலுள்ள சைபீரியத் துறைமுகங்களுக்குச் செல்லுகின்றன.

செய்திப் போக்குவரத்து: உருசியாவின் செய்திப் போக்குவரத்துக் கருவி அனைத்தும் சோவியத்து அரசின் கட்டுப்பாட்டில் உள்ளன. வானொலி, திரைப்படம், செய்தித்தாள் வெளியீடு போன்றவை அவற்றுள் அடங்கும். பொதுவுடைமைக் கட்சி, வானொலியையும் வெளியீடுகளையும் கட்டுப்படுத்துகிறது. நூல்கள், செய்தித் தாள்கள், இதழ்கள் போன்றவற்றையும் கட்சியே வெளியிடுகிறது. சோவியத்து ஒன்றியத்தின் செய்திப் போக்குவரத்து மையமாக மாசுக்கோ திகழ்கிறது.

உருசியாவில் ஏறத்தாழ 3000 வானொலி நிலையங்கள் உள்ளன. இருவர்க்கு ஒருவரிடம் வானொலியுண்டு. பல வானொலி நிலையங்கள் தத்தம் உள்ளூர் மொழிகளில் ஒலிபரப்புகின்றன. நாடு முழுவதிலும் 130முதன்மைத் தொலைக்காட்சி நிலையங்கள் செயற்படுகின்றன. உருசியாவில் 5½ கோடி தொலைக்காட்சிப் பெட்டிகள்பயன்படுத்தப்படுவதாகக் கணக்கிட்டுள்ளார்கள். திரைப்படங்கள், இசை, விளையாட்டுப்போட்டிகள் போன்ற நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படுகின்றன.

பொதுவுடைமைக் கட்சிக் கருத்துகளை பரப்பும் பணியில் திரைப்படங்கள் பெரும்பங்கு பெறுகின்றன. நாடு முழுதும் 30 திரைப்படம் தயாரிக்கும் நிலையங்கள் உள்ளன. உருசியாவில் ஏறத்தாழ இலட்சம் திரையரங்குகள் உள்ளன.

ஆயிரக்கணக்கான செய்தித்தாள்களை உருசியா வெளியிடுகிறது. செய்தித்தாள்கள் 50க்கும் மேற்பட்ட மொழிகளில் வெளியாகின்றன. நாடு முழுவதும் 25 நாளிதழ்கள் விற்பனையாகின்றன. பிராவ்தா (உண்மை) என்னும் மாசுக்கோ நாளிதழ் நாளொன்றுக்கு 1 கோடி படிகள் அச்சடிக்கப்படுகின்றது. இதுவே உலகில் மிகப் பெருமளவில் வெளியிடப்படும் நாளிதழாகும். பிராவ்தாவைப் பொதுவுடைமைக்கட்சி வெளியிடுகிறது. இசுவெசுத்தியா (Izvestia) என்பது மற்றொரு நாளிதழின் பெயர். இதுவும் மாசுக்கோவிலிருந்தே வெளியாகின்றது. இசுவெசுத்தியா என்பதற்குச் 'செய்தி'(News) என்பது பொருள். இது உருசியாவின் இரண்டாவது பெரிய நாளிதழ். தொண்ணூறு இலட்சம் படிகள் விற்பனையாகின்றன. இந்த நாளிதழ் சோவியத்து அரசினால் வெளியிடப்படுகிறது. தாசு (Tass) என்பது உருசியாவின் செய்தி நிறுவனம் (News Agency) ஆகும்.

ஏறத்தாழ 6000 இதழ்கள் உருசியாவிலிருந்து வெளியாகின்றன. ஆண்டுதோறும் சற்றேறக்குறைய 85,000 நூல்களையும் வெளியீடுகளையும் இந்நாடு வெளியிடுகின்றது. வேறு எந்தவொரு நாடும் உருசியாவை இத்துறையில் விஞ்சமுடியாது. அச்சு மூலம் வெளியிடும் தொழில் பொதுவுடைமைக்கருத்துகளைப் பரப்பச் சிறப்பாகப் பயன்படுகிறது. உருசியாவில் ஒரு கோடியே இருபது இலட்சம் தொலைபேசிகள் உள்ளன.

கல்வி: இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் உருசியா வளர்ச்சிபெறாத நாடாகவே இருந்தது. பொதுவுடைமைக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றியபின், கல்வி வளர்ச்சிக்கு இது முதலிடம் கொடுத்தது.

இன்று உருசியாவில் $5\frac{1}{2}$ கோடி முழுநேர மாணவர்கள் உள்ளனர். பெரும்பாலும் அனைவருக்கும் எழுதப்படிக்கத் தெரியும். கல்வித் திட்டமே வளர்ச்சியில் திறன் வாய்ந்த நாடாகப் பேருதவி புரிந்ததெனில் மிகையாகாது. பள்ளிகள் அறிவியலுக்கும் தொழில் நுட்பக் கலைக்கும் சிறப்பிடம் கொடுக்கின்றமையால், சோவித்து ஒன்றியம் பெருஞ்சாதனைகளைப் புரிந்துள்ளதெனலாம்.

பள்ளி வேலைகளுடன் மாணவர்களுக்குக் குணநலப் பண்புப் பயிற்சிகளும் தலைமை தாங்கும் பயிற்சியும் அளிக்கப்படுகின்றன. மதிப்பெண் குறைந்த மாணவர்களுக்குக் குறிப்பிட்ட அளவுக்குமேல் கவ்வி தரப்படுவதில்லை. சோவியத்துச் சட்டப்படி (1930) குழந்தைகள் நான்காண்டுகள் கட்டாயம் பள்ளியில் படிக்க வேண்டும். இது 1970-இல் 10 ஆண்டுகளாக உயர்த்தப்பட்டது. 7 முதல் 17 வயது வரையான குழந்தைகள் கட்டாயம் பள்ளியில் படிக்கவேண்டும். உருசியாவில் தனியார் பள்ளிகள் கிடையா. கல்வி அனைவருக்கும் இலவசம். பாடப் புத்தகங்கள் குறைந்த விலையில் மாணவர்களுக்குக் கிடைக்கின்றன. உயர் கல்வி படிக்கும் மாணவர்களில் முக்கால் பங்கினர் அரசிடமிருந்து வாழ்க்கைச் செலவுக்காக உதவி பெறுகின்றனர்.

உருசியா முழுவதிலும் ஒரேமுறையான பாடத் திட்டங்களை மாணவர்கள் கற்கின்றனர். பொதுவுடைமைக் கட்சி பாடத்திட்டங்களை வரையறை செய்கிறது. பள்ளிகளில் பொதுவுடைமைக் கட்சிக் கோட்பாடுகள் வலியுறுத்தப்படுகின்றன. பொதுவுடைமைச் சமுதாயமே தலைசிறந்த சமுதாயம் என்பது கற்பிக்கப்படுகிறது.

பள்ளிகளுள் பெரும்பாலானவை உள்ளூர் மொழிகளிலேயே பாடங்களைக் கற்பிக்கின்றன. எனினும் அனைத்துப் பள்ளிகளிலும் உருசிய மொழி பொது மொழியாகக் கற்பிக்கப்படுகிறது. ஐந்தாம் வகுப்பிலிருந்து பத்தாம் வகுப்பு வரை மாணவர்கள் ஆங்கிலம், பிரெஞ்சு அல்லது செருமானிய மொழிகளையும் கற்க வேண்டும்.

உருசியாவில் தொடக்கக் கல்வி 4 வகுப்பு வரையிலானது. வகுப்புகள் வாரத்திற்கு 6 நாள்கள். திங்கள் முதல் வெள்ளி வரை நாளொன்றுக்கு $4\frac{1}{2}$ மணி நேரம் வகுப்புகள் நடைபெறுகின்றன. சனியன்று



கல்விக்கூடத்தில் உடற்பயிற்சி

குறுகிய கால வகுப்புகள் நடைபெறும். கணக்கு, கலை, மொழி, இசை, உடற்பயிற்சி, திறமை வளர்க்கும் எளிய செயல்முறைகள் போன்றவை கற்பிக்கப்படுகின்றன. மாணவர்கள் இயற்கைக் கல்வியையும் சோவியத்து வரலாற்றையும் நாலாம் வகுப்பிலிருந்து கற்கிறார்கள்.

ஐந்து முதல் எட்டாம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்கள் இடைநிலைத் தரத்தினராவர். இவர்களுக்கு வாரத்திற்கு 30 மணி நேரம் வகுப்புகள் நடைபெறுகின்றன. ஒவ்வொரு பாடமும் வெவ்வேறு ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகிறது. கணக்கு, தாவர இயல், நிலநூல், வரலாறு, மொழி, பணிமனைத்திறன் பாடங்கள் பாட வரிசையில் அடங்கும். குறிக்கணக்கியல், வடிவியல், இலக்கியம், இயற்பியல், உயிரியல் பாடங்கள் ஆறாம் வகுப்பிலிருந்து கற்பிக்கப்படுகின்றன. வேதியியல் ஏழாம் வகுப்பிலும் உடலமைப்பியலும் உடல் கூற்றியலும் எட்டாம் வகுப்பிலும் கற்றுத் தரப்படுகின்றன.

உயர்நிலைப்பள்ளி வகுப்புகளாக ஒன்பதாம், பத்தாம் வகுப்புகள் கருதப்பெறும். உயர்நிலைக் கல்வி கற்கும் 60 விழுக்காட்டிற்கு மேலான மாணவர்கள் கணக்கு, அறிவியல், பல்வேறு தொழில் தொடர்பான திறன்கள் போன்றவற்றைக் கற்கிறார்கள். வரலாறு, மொழி, இலக்கியம், உடற்பயிற்சி, சமூக இயல் போன்ற பாடங்களையும் உயர்நிலைக் கல்வி மாணவர்கள் கற்கின்றனர். உயர்ந்த மதிப்பெண்களைப் பெறும் இளங்கலைப் பட்டதாரிகள் பொன் அல்லது வெள்ளிப் பதக்கங்கள் பெறுவர். அத்தகையோர் கட்டாய இராணுவப் பயிற்சியிலிருந்து விடுதலை பெறுவர்.

**சிறப்புப் பள்ளிகள்**: எட்டாம் வகுப்பிற்குப் பின்னர், மாணவர்கள் தொழில் நுட்பப் பள்ளிகளுக்கோ தொழிற்கூடங்களுக்கோ செல்லலாம். இப்பள்ளிகள் மாணவர்களைத் தொழிற்றிறன் வாய்ந்தவர்களாகவும் வேளாண்மையில் வல்லுநர்களாகவும் ஆக்குவதோடு பொறியியல், தொழிற்சாலை மற்றும் ஏனைய துறைகளில் இளைஞர்களுக்குப் பயிற்சி கொடுத்துத் திறமைசாலிகளாக்குகின்றன. இத்தகைய பள்ளிகளில் படித்துப் பட்டம் பெற்ற பட்டதாரிகளுக்குச் சோவியத்துச் சட்டப்படி வேலை கொடுக்கவேண்டும்.

திறமை மிகுந்த குழந்தைகளுக்குக் கற்பிக்கும் பல பள்ளிகள் சோவியத்து ஒன்றியத்தில் நடத்தப்படுகின்றன. இங்குக் கலைகள், வேற்று மொழிகள், கணக்கு, இயற்பியல் போன்ற பாடங்கள் கற்றுத்தரப்படுகின்றன. பொதுக்கல்விக்கான திட்டங்களும் அதற்கான பாடங்களும் இவற்றுடன் இணைக்கப்படும்.

**உயர்கல்வி**: உருசியாவில் 800 சிறப்பு நிறுவனங்களும் ஏறத்தாழ 40 பல்கலைக் கழகங்களும் உள்ளன. 45 இலட்ச மாணவ-மாணவியர் முழுநேர மாணவர்களாயும் பகுதி நேர மாணவர்களாயும் இவ்வுயர் கல்வி நிலையங்களுக்குச் செல்கிறார்கள். 85 முதல் 90 விழுக்காட்டு மாணவர்கள் இத்தகைய சிறப்பு நிறுவனங்களில் பயிலுகிறார்கள். எஞ்சியோர் பல்கலைக் கழகங்களுக்குச் செல்கின்றனர்.

சிறப்பு நிறுவனங்களில் மாணவர்கள் வேளாண்மை, மொழியியல், மருத்துவம், கற்பிக்கும் துறை போன்ற துறைகளில் பயிற்சி பெறுகிறார்கள். ஐந்தில் இரண்டு பங்கு மாணவர்கள் தம்மைப் பொறியியல் கல்விக்குத் தகுதி படைத்தவர்களாக்கிக் கொள்கின்றனர். பல்கலைக்கழக மாணவர்கள் ஆய்வாளர்களாகவும் அறிஞர்களாகவும் ஆசிரியர்களாகவும் பயிற்சி பெறுகிறார்கள். மாசுக்கோப் பல்கலைக் கழகமே உருசியாவின் மிகப்பெரிய பல்கலைக் கழகமாகும். அதில் 30,000 மாணவர்களுக்கு மேல் கற்கிறார்கள்.

மாணவர்கள் நான்கு முதல் ஐந்தரை ஆண்டுகள் வரை கற்கும் வகையில் உயர் கல்வி அமைந்துள்ளது. தம் கல்வியைப் படித்துமுடித்தபின், மாணவர்கள் மூன்றாண்டுகளுக்கு அவரவர் துறையில் அரசாங்கம் சுட்டிக் காட்டும் பணிகளில் பணியாற்றுகிறார்கள். முன்னேறி வரும் பகுதிகளுக்கு அவர்களுள் பலர் அனுப்பப்பெறுகின்றனர். ஓராண்டு பணியாற்றிய பின்னர் மாணவர்கள் சான்றிதழ்கள் பெறுகின்றனர்.

**பள்ளிப் படிப்பிற்குப் பின்னர் நடைபெறும் நடவடிக்கைகள்**: உருசிய மாணவர்கள் பள்ளிப்படிப்பை முடித்த பின்னரும் கைத்தொழில்திறன், கிராமிய நடனம், இசை, விளையாட்டுகள், பள்ளிகளைத் துப்புரவு செய்து பழுதுபார்த்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். பொதுவுடைமைக் கட்சியின் மேற்பார்வையில் இயங்கும் நிறுவனங்களில் சேர்ந்தும் குழந்தைகள் பணியாற்றலாம். 7 வயது முதல் 9 வயது வரையிலான குழந்தைகள் சிறியோர் அக்டோபர் இயக்கத்தில் (Little Octoberists) சேர்ந்து செயலாற்றலாம். 1917 அக்டோபர்ப் புரட்சியின் நினைவாக இக்குழு உருவாக்கப்பட்டுள்ளது. நாடகம், விடுமுறை கழிக்கும் விழாக்கள் போன்றவற்றை இவ்வியக்கத்தினர் நடத்திக் காட்டுவர். 9 வயது முதல் 15 வயது வரையிலான குழந்தைகள் 'இளம் முன்னோடி' (Young Pioneers)இயக்கத்தில் சேர்ந்து படகு கட்டல், வீடு கட்டல், இசை, ஓவியம், வானொலி இயக்கம் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவர்.

15 வயது முதல் 28 வயது வரையிலான குழந்தைகள் காம்சோமோல் (Comsomol) எனப்படும் இளம்

பொதுவுடைமைக் குழுவில் (Young Communist League) ஈடுபடுகிறார்கள். இதில் சேராத மாணவர் களுக்கு மேனிலைக் கல்விக்கு வாய்ப்பு கிட்டாது. இக் குழு பொதுவுடைமைக் கருத்துகளைப் பரப்பும் கருவி யாக அமைந்துள்ளது.

இளைஞர்கள் அறிவியல், தொழில்நுட்பக் குழாம்களிலும் பணியாற்றலாம். இக்குழாத்திற்கு வேண்டிய கருவிகள், அலுவலகங்கள், பணிமனைகள் போன்றவற்றைச் சோவியத்துத் தொழிற்சாலைகள் தயாரித்துக் கொடுக்கின்றன. நடிப்புக்கலை, நடனம், இசை போன்றவற்றில் ஆர்வம் மிக்க இளைஞர்களுக் கும் வயதுவந்தவர்களுக்கும் உதவுதற்காக வெவ்வேறு குழாங்கள் செயற்படுகின்றன.

**நூலகங்கள்:** பிற நாடுகளைக் காட்டிலும் உருசியாவில் மிகுதியாக நூலகங்கள் உள்ளன. ஏறத் தாழ 3,60,000 நூலகங்கள் சோவியத்து ஒன்றியத்தில் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளன. அவற்றுள் 1,28,000 நூலகங்கள் பொதுமக்கள் பயன்படுத்தும் பொது நூலகங்களாகும். ஒவ்வொரு மாநகரம், நக ரம், கிராமம் ஆகியவற்றில் ஒரு பொது நூலகம் அமைக்கப்பட்டுள்ளது. பண்ணைகள், தொழிற்சாலை கள், பள்ளிகள், ஒன்றியங்கள், ஏனைய நிறுவனங்கள் போன்றவற்றில் சிறப்பான நூலகங்கள் உள்ளன. மாசுக்கோவில் உள்ள இலெனின் அரசு நூலகமே (Lenin State Library) உலகின் மிகப் பெரும் நூலக மாகும். இந்நூலகத்தில் நூல்கள், இதழ்கள், செய்தித் தாள்கள் போன்றவை $2\frac{1}{2}$ கோடி படிகள் உள்ளன. இலெனின்கிராடிலுள்ள அறிவியல் கழக நூலகத்தில் ஏறத்தாழ 2 கோடித்தொகுதிகள் உள்ளன. இலெனின் கிராடிலுள்ள அரசு நூலகம் ஒன்றில் 170 இலட்சம் நூல் தொகுதிகள் சேர்க்கப்பட்டுள்ளன.

**அருங்காட்சியகங்கள்:** உருசியாவில் ஆயிரத் திற்கும் மேற்பட்ட அருங்காட்சியகங்கள் உள்ளன. ஒவ்வொரு பெருநகரமும் நகரமும் குறைந்த அளவு ஓர் அருங்காட்சியகத்தையாவது கொண்டுள்ளன. அருங்காட்சியகங்கள் கலை, வரலாறு, அறிவியல் தொடர்பான பொருள்களைக் கொண்டுள்ளன. விடு முறை நாட்களில் மக்கள் குடும்பங் குடும்பமாக இவ் வருங்காட்சியகங்களுக்கு வருகின்றனர். மாசுக்கோ மாநகரில் உள்ள அரசு வரலாற்று அருங் காட்சியகம் சிறப்பான வரலாற்று அருங்காட்சியக மாக விளங்குகிறது. மாசுக்கோவில் உருசியப்புரட் சியை விளக்கும் அருங்காட்சியகம் ஒன்றும் செயற்படு கிறது.

**வாழ்க்கைமுறை:** வருக்கபேதமற்ற சமுதா யத்தை (Classless Society) உருவாக்கப்போவதாகத் தொடக்க காலப் பொதுவுடைமைக் கட்சியினர் நம்பி னர். பணக்காரர்கள் பெற்றிருந்த பல சிறப்புச் சலு கைகள் அழிந்துவிட்டன. எனினும், பொதுவுடைமைக் கட்சியின் முதன்மையான அலுவலர்கள், கலைஞர் கள், பொறியியல் வல்லுநர்கள், அறிவியல் அறிஞர் கள் போன்றோர் பல சிறப்பான சலுகைகளைப் பெற்று வாழ்கின்றனர். அவர்கள் மகிழுந்துகள் (Automobile Cars), வாழுவதற்கு வசதியான வீடு கள், கிராமப்புற வீடுகள் மற்றும் பல ஆடம்பரமான பொருள்களை நுகர்ந்து, மற்றவர்களிடமிருந்து பிரிந்து மேனிலையில் காணப்படுகின்றனர். பெரும்பாலான உருசியர்கள் எளிய வாழ்க்கையே வாழ்கின்றனர்.

**நகரவாழ்க்கை:** மக்களுள் மூன்றிலிரண்டு பங் கினர் மாநகரங்களிலோ நகர்ப்புறங்களிலோ வாழ் வர். 45 உருசிய நகரங்களில் ஒவ்வொன்றிலும் 5 இலட்சம் மக்களுக்குமேல் வாழ்கிறார்கள். மாசுக்கோ, இலெனின்கிராடு, கீவு ஆகிய மூன்று நகரங்களில் ஒவ் வொன்றிலும் இருபது இட்சம் மக்களுக்குமேல் வாழ் கின்றனர். உருசிய மாநகரங்கள் மக்கள் நெரிசல் மிக் கவை. இலட்சக் கணக்கான குடும்பங்கள் சிறு வீடு களில் வாழ்கின்றன. வீட்டு வசதிகளைப் பெருக்க அரசும் சீரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. பல பொருள்கள் பற்றாக்குறையாகத்தான் இருக்கின் றன. அவர்களின் உடையும் எளிமையானது. விதவித மான உடைகளை அவர்கள் அணிவதில்லை.

**கிராமவாழ்க்கை:** ஆண்டுதோறும் இலட்சக் கணக்கான உருசியர்கள் கிராமங்களை விட்டு நகர்ப் புறங்களுக்கேகி வாழ்கின்றனர். கிராமப் புறங்களில் வேலைவாய்ப்புகள் மிகுதி; ஆனால் வாழ்க்கை வசதி கள் மிகக்குறைவு. கிராமப்புற உருசியர்கள் மரவீடு களிலும் சமூகக் கூடங்களிலும் வாழ்கின்றனர். கிராமப்புற வாழ்க்கை தொல்லைகள் நிறைந்தது என்கிறார்கள். கிராமப்புறங்களில் வாழும் உருசியர் அரசாங்கக் கட்டுப்பாட்டின் கீழுள்ள பண்ணைகளில் பணியாற்றுகிறார்கள். உருசிய உழவர்கள் சிறு நிலத் தில் உழுதுபயிரிட அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர் கள் பால் பண்ணைப் பொருள்கள், இறைச்சி, காய் கறிகள் போன்றவற்றை விற்று வாழவும் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

**குடும்ப வாழ்க்கை:** ஆண், பெண் வேறுபாடின்றி அனைவரும் பணியாற்றுகின்றனர். தாய்மார்கள் தம் குடும்பத்தாருடன் குறைந்த நேரமே செலவிடுகிறார் கள். உருசியத் தொழிலாளர்களுள் பாதிப் பேருக்கு மேல் பெண்கள். இரண்டாம் உலகப் பெரும்போரில் பல இலட்சக்கணக்கான ஆண்கள் கொல்லப்பட்ட தால் இந்நிலை உருவாகியது. ஆண்களைப்போல்



இலெனின் நூலகம் - மாசுக்கோ



வோல்காகிரேடு இருப்புப்பாதை நிலையம்

பெண்களும் வாரத்தில் ஐந்துநாட்களும் எல்லாவித மான பணிகளையும் செய்கின்றனர். செங்கல் அறுத் தல், சாய்க்கடைப் பள்ளங்கள் தோண்டுதல், தெருக் களைப் பழுதுபார்த்தல் போன்ற தொழில்களைக் கூடப் பெண்கள் செய்கிறார்கள். உருசியாவின் மருத் துவர்களில் 75 விழுக்காட்டினர் பெண்கள். பெண்கள் கடைவீதிகளுக்குச் சென்று வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்குஞ் செயலில் பெருமளவு நேரத்தைப் பயன்படுத்துவர்.

அரசு 83,000 குழந்தைப் பள்ளிகளையும் இளஞ்சிறுவர் பள்ளிகளையும் நடத்துகிறது. ஒவ் வொரு குழந்தைப் பள்ளியிலும் 200 குழந் தைகள், 2½ மாதம் முதல் 3 ஆண்டுக்குட்பட்ட குழந்தைகள் பராமரிக்கப்படுகிறார்கள். 3 வயது முதல் 7 வயது வரையிலான குழந்தைகள் இளஞ் சிறுவர் பள்ளிகளில் படிக்கிறார்கள். இதனால், பெண்கள் தாம் பெற்ற குழந்தைகளை இப்பள்ளி களில் ஒப்படைத்துவிட்டுப் பணிசெய்யச் செல்வர். காலையில் 7.30 மணிக்குக் குழந்தைகளை விட்டுச் செல்லும் தாய்மார்கள் மீண்டும் மாலையில் 5.30 மணிக்கு அவர்களை அழைத்துச் செல்வர்.

பொழுது போக்கு: உருசியர்கள் ஆர்வமாக விளை யாட்டுகளில் பங்கு பெறுகின்றனர். அதனால் உலக விளையாட்டு அரங்கில் சிறப்பிடம் பெற்று வருகி றார்கள். குழந்தைப் பருவத்திலேயே அவர்களுக்கு உடற்பயிற்சிகள் கற்றுத்தரப்படுகின்றன. பெரும்பா லான தொழிலாளர்களும் அலுவலகப் பணியாளர் களும் நாள்தோறும் உடற்பயிற்சி செய்கிறார்கள். உடற்பயிற்சிமுறைகள் வானொலியில் ஒலிபரப்பப்படு கின்றன.

சாக்கர் என்னும் ஒருவகை கால்பந்து போட்டி யில் உருசியர் மிகுந்த கவனம் செலுத்துகிறார்கள். தொழிற்சங்கங்களும் ஏனைய குழுக்களும் கால்பந்துப் போட்டியைத் தொடங்கி நடத்தும் குழந்தைகளுக்குப் 12 வயது முதல் பயிற்சி கொடுக்கின்றன. குழந்தைகள் கூடைப்பந்து, வளைகோல் பந்து விளையாட்டு, பனிச் சறுக்கு விளையாட்டு, ஓட்டப்பந்தயங்கள் போன்ற வற்றில் ஈடுபட்டு மகிழ்கிறார்கள். அரசும் விளை யாட்டுப் போட்டிகளுக்கு ஆர்வம் காட்டுகிறது. சது ரங்கத்தில் உலகில் முதலிடம் வகிக்கிறது உருசியா. இதையும் பொதுமக்கள் ஆர்வத்துடன் விளையாடு கிறார்கள். இளம் பருவத்திலிருந்து பயிற்றுவிக்கப் படும் ஆண்களும் பெண்களும் இப்போட்டிகளை நாட் டுணர்வுடன் விளையாடி உருசியாவிற்குப் புகழ்சேர்க் கிறார்கள்.

வரலாறு: கிறித்தவ ஆண்டின் தொடக்ககால நூற் றாண்டுகளில் இசுலாவிய (Slavs) மக்கள் கார்ப் பேத்திய மலைத்தொடருக்கு வடபால் அமைந்திருந்த தம் தாயகத்திலிருந்து பல பகுதிகளுக்குப் பரவிச் சென்றனர். அவர்களுள் சில மரபினர் கிழக்கிலிருந்த உருசியாவிற்கும் குடிபெயர்ந்து, புல்வெளிகள் நிறைந்த வன்பாலை நிலத்திற்கு வடக்கிலிருந்த அடர்ந்த காடுகளில் நிலையாக வாழத் தொடங்கி னர்.

அக்காடுகளில் வாழ்ந்து வந்த பின்னிய (Finnish) மரபினரை இசுலாவிய மக்கள் வடக்கே மிகத் தொலை வுக்கு விரட்டியடித்தனர். பின்னர், அவர்கள் தென் பாகத்திலிருந்து புல்வெளிகள் மிகுந்த வன்பாலை நிலப்பகுதியைத் தம் கட்டுப்பாட்டின்கீழ்க் கொணர்ந் தனர். கி.பி.மூன்றாம், நான்காம் நூற்றாண்டுகளில் அவர்கள் சுவீடனிலிருந்து படையெடுத்து வந்த காத்தியரையும் ஆசியாவிலிருந்து படையெடுத்து வந்த ஊணர்களையும் (Huns) தடுத்து நிறுத்தினர்.

உருசியப் பேரரசுத் தொடக்கம்: இசுலாவியர் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் கூடச் சிறுசிறு குடும் பக் குழுக்களாகவே வாழ்ந்தனர். அவர்களிடம் ஒன்று படுத்தப்பட்ட ஐக்கிய அரசின்மை இருந்து வந்தது. தமக்குள் தொடர்ந்து சண்டையிட்டுக் கொண்டனர். இசுகாண்டிநேவிய முந்நீரகப் பகுதியிலிருந்து வந்த நார்த்மன் (Northman) என்னும் இனமக்கள் மீது




நோவ்கோராடு மக்களுடன்
உருசு இனத் தலைவர் ஊரிக்கு

இசுலாவியர் பெருமதிப்புக் கொண்ருடிந்தனர். நார்த்மன்களை அவர்கள் வரன்சியர் (Varengians) என்றழைத்தனர். நோவ்கோராடு (Novgorod) என்னும் இடத்து மக்கள் தங்களை ஆள்வதற்கு ஒரு தலைவரைக் கொடுக்குமாறு வேண்டினர்.

வரன்சிய இனங்களுள் ஒன்றான உருசு (Rus) இனத்தின் தலைவர் ஊரூரிக்கு (Rurik) என்பார் அவ் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டார். உருசு என்ற சொல்லிலிருந்தே உருசியா (Russia) என்னும் பெயர் தோன்றியது. ஏழு நூற்றாண்டுகளுக்கு மேல் உருசியாவில் தலைமை தாங்கி வழிநடத்திய பெருமை இவ்வினத்தையே சாரும். இவ்வினமே உருசியாவை ஆண்ட முதல் இனமாகும். ஊரூரிக்கு வருகை புரிந்த கி.பி.862-இலிருந்தே உருசியப் பேரரசு தொடங்குவதாக உருசியர்கள் கணக்கிட்டுள்ளனர்.

ஊரூரிக்கு காலமானபோது அவருடைய உறவினருள் ஒருவரான ஒலெகு (Oleg) என்பார் நோவ்கோராடுவின் ஆட்சியை ஏற்றார்.அவர் கி.பி.878-இல் கீவுப் (Kiev) பகுதியைத் தம் ஆட்சிப் பகுதியுடன் இணைத்துக்கொண்டார். அந்நகர் அவருடைய தலைநகராயிற்று. சிவியாட்டோசுலாவு (Sviatoslov) என்னும் ஆட்சியாளர் கீவுப்பகுதியைத் தான்யூபு ஆற்றிலிருந்து வால்கா ஆறு வரை விரிவாக்கினார். அவர் கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர்.

**கீவின் எழுச்சியும் வீழ்ச்சியும்:** சிவியாட்டோசு-லாவின் மகன் விளாதிமிர் (Vladimir) கி.பி.988-இல் கிறித்தவச் சமயத்தில் சேர்ந்தார். அதன் பின்னர்க் கிரேக்க நாட்டுக் கிறித்தவச் சமயப் பிரசாரகர்கள் உருசியாவில் நுழைந்தனர். அவர்கள் தம் கிறித்தவச் சமயத்தையும், பைசாண்டியக் கலையையும், கட்டடக்




விளாதிமிர் கிறித்தவச் சமயத்தை ஏற்றுக்கொள்ளுதல்

கலையையும், இசுலாவு மக்களின் மொழிக்குரிய எழுத்து வடிவத்தையும் உருசியாவில் புகுத்தினர்.

விளாதிமிரின் மகன் யாரோசுலாவின் ஆட்சிக் காலத்தில் கீவு செல்வங்கொழிக்கும் சீர்மிகு நகரமாயிற்று. அவரைக் கூர்த்தமதியர் யாரோசுலாவு (Yaroslav, the wise) என்பர். யாரோசுலாவு கால மானதற்குப் பின்னர்க் கீவு நலிவடையத் தொடங்கியது. நீப்பர் ஆற்றுடன் போட்டி போட்டுக்கொண்டு வால்கா ஆறு வாணிக வழியாக மாறத் தொடங்கியது. இதனால், கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் மாசுக் கோவில் புதியதொரு வாணிக மையம் பெருகி வளரலாயிற்று.

**தார்த்தார்களின் படையெடுப்பு:** மங்கோலியத் தார்த்தார்கள் கி.பி.13-ஆம் நூற்றாண்டில் உருசியாவின்மீது படையெடுத்தனர். அவர்கள் கி.பி.1237-ஆம் ஆண்டில் உருசியர்களைக் கடற் போரில் தோற்கடித்தனர். கி.பி.1240-ஆம் ஆண்டளவில் கருங்கடலுக்கும் தான் (Don) ஆற்றுக்கும் இடையிலுள்ள நிலப்பகுதியை அவர்கள் தம் கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டு வந்தனர். அங்கு அவர்கள் தம் அரசை நிலைநாட்டிச் சராய் (Sarai) என்னும் நகரைத் தலைநகராக்கிக் கொண்டனர். இந்நகரம் வால்காவின் துணையாற்றங் கரையிலுள்ளது.



தார்த்தார் படையெடுப்பு

அடுத்த நூற்றாண்டில் மங்கோலியத்தார்த்தார்களின் ஆட்சி உருசியாவின் அனைத்துப் பகுதிகளிலும் விரிந்து பரந்தது. அவர்கள் மக்கள்மீது வரி விதித்துத் தண்டினார்கள். உருசியர்கள் கீழைநாட்டுப் பழக்க வழக்கங்களையும் சிந்தனை முறைகளையும் பின்பற்றினர். அவர்களுக்கு மேலைநாடுகளுடன் இருந்த தொடர்பும் பிணைப்பும் குறையத் தொடங்கின.

ஏறத்தாழ 250 ஆண்டுகள் உருசியா தார்த்தார்களின் வல்லாட்சியில் சிக்கித் தவித்தது.

**உருசியா மீண்டும் எழுச்சி கொள்ளல்:** உள்நாட்டுக் குழப்பங்களாலும் போர்களாலும் தார்த்தார்களின் ஆட்சி நலிவடையத் தொடங்கியது. படிப்படியாக மாசுக்கோவின் செல்வாக்குப் பெருகி வளரலாயிற்று. அதன் பெரும் பிரபுக்கள் ஊரிக்கின் வழித் தோன்றிய மரபுகளுள் ஒன்றைச் சார்ந்தவர்கள். அவர்களை அனைத்து உருசியர்களின் தலைவர்களாக மக்கள் கருதலாயினர். மாசுக்கோவின் இளவரசரையே வரிவசூலிக்கவும் மங்கோலியத் தார்த்தார்கள் அனுமதித்தனர். வரி வசூலிக்கும் இப்பழக்கம் கி.பி.1330–ஆம் ஆண்டளவில் முதலாம் ஐவன் காலத்திலிருந்து தொடங்கியது. முதலாம் ஐவனைப் 'பணமூட்டை' என்றழைப்பர். அவர் தாம் வசூல் செய்த வரிப் பணத்தில் ஒரு பகுதியைத் தாமே வைத்துக் கொண்டு, பெருமளவில் நிலத்தை விலைக்கு வாங்கியதுடன் தம் ஆட்சிப் பரப்பையும் விரிவாக்கிக் கொண்டார். ஏனைய இளவரசர்களும் போயர்களும் (உயர் பதவி வகித்த நிலவுடைமையாளர்கள்) மாசுக்கோவின் படைவீரர்களாகவும் அரசு ஊழியர்களாகவும் பணியாற்றினர். உருசிய வைதிகத் திருச்சபையின் தலைமைப் பேராயரை (Chief Bishop) மாசுக்கோவிலேயே தங்கும்படி ஐவன் தூண்டினார். அன்று வரை கீவு நகரமே உருசியாவின் ஆன்மிக மையமாக இருந்தது.

காலப்போக்கில் மாசுக்கோ செல்வச் செழிப்பு மிக்கு, வலிமை மிக்கதாக உருமாறலாயிற்று. மாசுக்கோ கி.பி. 15–ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் உருசியாவின் மிக்க திறல்வாய்ந்த நகரமாயிற்று. மூன்றாம் ஐவனை மகா ஐவன் (Ivan, the Great) என்றும் கூறுவர். தம் முதன்மை எதிரிகளான நோவ்கோராடு (Novgorod), திவர் (Tver) போன்ற பகுதியாளர்களை வென்று, தம் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவந்தது அவருடைய பெருஞ் சாதனையாகும். போயர்கள் பெருமளவில் அவருடைய படையில் சேர்ந்தனர். ஐவன் கி.பி. 1480–இல் இறுதியாக மங்கோலியர்களிடமிருந்து முழு விடுதலை பெற்றதுடன், தார்த்தார்களுக்குவரிகொடுக்கவும் மறுத்துவிட்டார். மங்கோலியப் படைவீரர்கள் மாசுக்கோவைத் தாக்க முன்னேறியபோது, தம் தலைநகரை உருசியரின் தாக்குதலிலிருந்து காக்கத் திரும்ப வேண்டியவராயினர்.

**ஐவன்:** மாசுக்கோவின் எழுச்சிக்குப் பின்னர், அதன் ஆட்சியாளர் சார் (Czar) என்று குறிக்கப்பட்டார். நான்காம் ஐவன் என்பார் கி.பி. 1547–இல் சார் மன்னராக முடிசூட்டிக்கொண்டார். சார் மன்னரின் அதிகாரம் உருசியா முழுமையும் தன்னுள் அடக்கிய நிலை நான்காம் ஐவன் காலத்திலிருந்து தொடர்ந்தது எனலாம்.



நான்காம் ஐவன்

ஐவன் கொடுமையானவர். இவர் சிறப்புக் காவல் படையொன்றினை உருவாக்கிக் கொடுங்கோலாட்சியைத் தொடங்கினார். இதன் விளைவாக நூற்றுக்கணக்கான நிலக்கிழார்கள், இளவரசர்கள், போயர்கள் போன்றவர்கள் சிறை செய்யப்பட்டனர். கொலை செய்யவும்பட்டனர். அவ்வாறு கொலை செய்யப்பட்டவர்களின் பண்ணைகளை அரசாங்கத்திலும் படையிலும் பணியாற்றியவர்களுக்கு ஊதியமாக இவர் பகிர்ந்தளித்தார். உழுது பயிரிடும் உழவர்கள் உழு நிலத்தை விட்டு வெளியேறக்கூடாது என்னும் கடுமையான சட்டத்தை நிறைவேற்றிய ஐவனும் அவரையடுத்து வந்த சார் மன்னர்களும் உழவர்களை அடிமைகள் (Serfs) நிலைக்குத் தாழ்த்தினர்.

நான்காம் ஐவன் தென்கிழக்கில் மங்கோலியத் தார்த்தார்களுடன் அசுட்ராகான் (Astrakhan), காசான் (Kazan) என்னுமிடங்களில் போரிட்டார். அவர்தம் நிலங்கள் கைப்பற்றப்பட்டன. உருசியப் படைவீரர்கள் யூரல் மலைத்தொடர்களைத் தாண்டி




செஞ்சதுக்கம்—மாசுக்கோ



சீவ்செங்கோ நகரம் (உருசியா)



சிசுவைத் தேவாலயம் (உருசியா)




ஐ—தோடர்முனையில் உள்ள மலைக்கோட்டை



இலெனின் பகுதி - துசான்பீ (உருசியா)



மின்சுகை நகரம் (உருசியா)



வில்னியசுநகரம் - உருசியா.



தாலின் நகரம்  (உருசியா)



தோனட்சு நகரம்



கீவ் நகரம் (உருசியா)



செஞ்சதுக்கத்தில் இலெனின்




மாசுக்கோ நகரம் (உருசியா)




மே தின விழா



மேதினவிழா நிகழ்ச்சி.



கிரிமியாவிலுள்ள ஓய்வுமாளிகை



கார்பசேவும் இராசீவ்காந்தியும்

மேற்குச் சைபீரியாவை வென்றார்கள். பால்டிக்குக் கடலுக்கு வடமேற்கில் உள்ள நிலங்களையும் ஐவன் வெல்லப் பெருமுயற்சி செய்தார். ஆனால், இலிது வேனிய, போலந்து, சுவீடியப் படையினர் இவரைத் தோற்கடித்தனர். நான்காம் ஐவன் கி.பி. 1584-இல் காலமானார்.

**தொல்லைகள் நிறைந்த காலம்:** நான்காம் ஐவன் காலமான பின்னர், சார் மன்னர்களின் அதி காரம் சீர்குலையவே உருசியாவில் பல தொல்லைகள் தோன்றலாயின. ஐவனின் இரண்டாம் மகன் முத லாம் தியோடர் என்பவர் பட்டத்திற்கு வந்தார். இவர் திறமை குறைந்தவர். இவர் ஆண் சந்ததி யின்றி கி.பி. 1598-இல் காலமானார். எனவே, செம் சுக்கி சோபர் (Zemskii Sobor) எனப்படும் நிலக் குழுவினர் போரிசு கோடுனாவைச் சார் மன்னராகத் தேர்ந்தெடுத்தனர். இந்நிலக்குழு வினர் பாராளுமன்றத்தைப் போன்ற ஒருவகை அமைப்பு உடையவர்; மிகக் குறைந்த அதிகாரத்தைக் கொண்ட குழுவினர். முன்னாளைய சமயத்துறவி யான கிரிகரி ஓட்ரிபியாவு (Gregory Otrepiev) என்ப வர் தம்மைத் திமித்திரி (Dmitri – முதலாம் தியோட ரின் இறந்து போன தம்பி) என்று கூறிக்கொண்டு, உருசிய அரசைக் கைப்பற்ற எண்ணி, கி.பி. 1604 –இல் போலந்துப் படைவீரர்களின் துணையோடு உருசியாவின்மீது படையெடுத்தார். சார் மன்னர் களின் ஆட்சியை விரும்பாத அனைத்து வகுப்புகளை யும் சார்ந்த உருசியர்கள் பெரும் எண்ணிக்கையில் படையெடுத்தவர்களுடன் இணைந்துகொண்டனர். இப்படையெடுப்புத் தொல்லைகள் நிறைந்த காலத்தை உருசியாவில் உருவாக்கியது. உருசியாவில் உள்நாட் டுப் போரும் படையெடுப்பும் அரசியல் குழப்பத்தை கி.பி. 1613 – வரை நீடிக்கச் செய்தன.

போலித் திமித்திரி கி.பி. 1605-இல் சார் மன்னராக அரியணை ஏறினார். ஆனால், போயர்களின் குழு வொன்று அடுத்தாண்டில் அவரைக் கொன்றுவிட்டது. பின்னர், பாசில் சூயிசுக்கி (Basil Shuisky) என்பார் சார் மன்னரானார். கி.பி. 1610-இல் போலந்துப் படையெடுப்பாளர்கள் மாசுக்கோவைக் கைப்பற்றிக் கொண்டனர். போயர்களின் திறமையற்ற குழு ஒன் றின் துணையுடன் கி.பி. 1612-வரை அவர்கள் ஆட்சி செய்தனர். இதனிடையில் பிறிதொரு போலித் திமித் திரியும் வேறுபல போலிகளும் அரியணையைப் பெறப் போட்டியிடவே, அவர்களைப் பின்பற்றவும் பல ஆட்கள் சேர்ந்தனர். உருசியா முழுவதிலும் குடியான வர்கள் கலகங்கள் மூண்டன. நிலவுடைமையாளர் களும் எல்லைப்புற மக்களும் தத்தமக்குள் சண்டை யிட்டுக் கொண்டனர். மாசுக்கோ நகரைப் போலந்து மக்களிடம் இருந்து விடுவிக்கும் நோக்குடன், உருசி யர்கள் அனைவரும் இணைந்து படையெடுப்பாளர் களை விரட்டியடித்தனர். அவர்கள் தலைநகரை கி.பி. 1612-இல் மீண்டும் கைப்பற்றிக்கொண்டனர்.

**உரோமனாவு அரச மரபினர் ஆட்சி:** போலந்து மக்கள் தோற்கடிக்கப்பட்ட பின்னர், அரியணை யேற அரசக் குடும்பத்தில் பிறந்தவர்கள் ஒருவரும் இல்லாத நிலையேற்பட்டது. செம்சுக்கி சோபர் எனப்படும் நிலக்குழுவினர் மைக்கேல் உரோமனாவு என்பாரை கி.பி. 1613-இல் சார் மன்னராகத் தேர்ந் தெடுத்தனர். அடுத்த முந்நூறு ஆண்டுகளுக்கு உரோமனாவு சார் மன்னர்களே உருசியாவை ஆண்டனர். இம் மரபினர் ஆட்சி 1917-ஆம் ஆண்டு பிப்பிரவரிப் புரட்சியின் போது ஒழிக்கப்பட்டது.

**பேரரசர் மகாபீட்டர்:** கி.பி. 1682-ஆம் ஆண்டில் ஏற்பட்ட பதவிப் போட்டியில் ஒன்றுவிட்ட இரண்டு சகோதரர்களான பேரரசர் மகாபீட்டரும் (கி.பி. 1682 –1725), ஐந்தாம் ஐவனும் அரசராக முடிசூட்டிக் கொள்ளும் நிலை ஏற்பட்டது. இவ்விருவரும் இணை சார் மன்னர்களாக முடிசூட்டப்பெற்றனர். ஆனால், இருவருமே சிறு குழந்தைகளாக இருந்தமையால்,



இலெனின் கிராடில் உள்ள மகாபீட்டர் சிலை

ஐவனின் சகோதரியான சோபியா என்பார் அரசப் பிரதிநிதியாக ஆண்டார். மகாபீட்டரின் துணைவர்கள் சோபியா பதவியிலிருந்து விலகவேண்டுமென்று வற்புறுத்தவே, வேறு வழியின்றி அவர் கி.பி. 1689–இல் பதவியிலிருந்து விலகினார். அக்காலத்தில் மாசுக் கோவில் வாழ்ந்த மேலைநாட்டு ஐரோப்பியர்கள் பலருடன் நெருங்கிய தொடர்பு கொண்ட பீட்டர் அவர்களிடமிருந்து பல புதிய செய்திகளைத் தெரிந்து கொண்டார். ஐவன் கி.பி. 1696–இல் காலமானதும், பீட்டர் முழு அதிகாரத்தையும் பெற்றுச் சார் மன்னரானார்.

ஐரோப்பாவில் கி.பி. 17–ஆம் நூற்றாண்டில் மக்கள் நலம் பேணும் வல்லரசர்கள் பலர் ஆண்டனர். அவர்களுள் உருசியாவை ஆண்ட பீட்டரும் ஒருவர். பீட்டரின் ஆட்சிக்காலத்தில் உருசியாவின் எல்லை பால்டிக்குக் கடல் வரை விரிந்தது. சுவீடன் நாட்டுடன் இவர் போர் செய்து தம் நாட்டின் எல்லையை விரிவாக்கினார். இப்போரை வட பெரும் போர் (Great Northern War) என்பர். பீட்டர் கி.பி. 1703–ஆம் ஆண்டில் புனித பீட்டர்சுபர்கு என்னும் நகரை உருவாக்கினார். இப்போது இது இலெனின்கிராடு எனக் கூறப்படுகிறது. இந்நகரம் பால்டிக்குக் கடலை யொட்டியுள்ளது. இதனையே இவர் தம் தலைநகர் போல் கருதினார். பீட்டர் ஐரோப்பா முழுவதிலும் பயணம் செய்து, அந்த நாடுகளில் ஏற்பட்ட அறிவியல் முன்னேற்றங்களை நேரடியாகப் பார்த்து வந்தார். பின்னர், உருசியாவிலும் மேலைநாட்டுப் பாணி உடை உடுத்தல், தொழிற்சாலைகள் அமைத்தல், பள்ளிகளை உருவாக்கல் போன்றவற்றைச் செய்தார். நிலப்பிரபுக்கள், திருச்சபைக் குருமார்கள், செர்பு என்னும் அடிமைகள் போன்றோரைவிடச் சார் அரசரின் வலிமையைப் பெருக்கினார்.

உருசியாவின் உள்நாட்டுச் சீர்திருத்தங்கள் பலவற்றைப் பீட்டர் மேற்கொண்டார். பொருளாதாரப் பிற்போக்கு நிலையிலிருந்த உருசியாவை முற்போக்கு நாடாக்குவதே இவரின் நோக்கமாகும். இவர் நிலத்தைப் பிரபுக்களுக்கும் செர்பு அடிமைகளுக்கும் பகிர்ந்துகொடுத்தார். வேளாண்மைத் துறையில் பீட்டர் பெருமளவிற்குத் தலையிடவில்லை; மாறாக, செய்தொழில்களை உற்பத்தி செய்வதில் மிகுந்த கவனஞ் செலுத்தினார். வணிகர்களைப் பாதுகாக்க இவர் சுங்கவரிக் கொள்கையிலும் பல மாறுதல்களைச் செய்தார். தரைப்படையையும் கப்பற் படையையும் உருவாக்கிப் பீட்டர் வல்லாட்சியை உறுதிப்படுத்தியதுடன், அரசு நிருவாக முறையையும் திருத்தியமைத்தார். சமயத்துறையிலும் மாற்றம் ஏற்பட்டது. சார் மன்னரே கி.பி. 1721–இல் வைதிகத் திருச்சபையின் முதன்மைச் சமய குருவாகப் பதவியேற்றார். பீட்டரின் ஆட்சிக்காலத்தில் அனைத்து அறிவியல் துறைகளிலும் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டது. நிலநூல் பற்றிய அறிவு பெருகி வளர்ந்தது. உருசிய அறிவியல் கழகம் கி.பி. 1724–இல் நிறுவப்பட்டது. இலக்கியம், கலை, கட்டடக்கலை போன்ற நுண்கலைகளும் வல்லாட்சியை வலுவாக்கின. பீட்டர் கி.பி. 1725–இல் காலமானார்.

பீட்டர் இறந்தவுடன் மீண்டும் உருசியாவில் அரியணையைக் கைப்பற்றப்பல சச்சரவுகள் மூண்டன. பதவி வகித்த பெருங்குடி மக்களுக்கும் முதன்மைப் பிரபுக்களுக்கும் இடையே தகராறு ஏற்பட்டுப் பகைவர்களாயினர். பதவி வகித்த பெருங்குடிமக்களின் ஆதரவு பெற்ற போட்டியாளர்கள் பல வெற்றிகளைப் பெற்றுத் தம்ஆதரவாளர்களுக்கு அன்பளிப்புகளை வாரி வழங்கினர். அரசர்களும் இப்பெருங்குடி மக்களின் அதிகாரத்தைப் பெருக்கினர். பெருங்குடி மக்களின் கட்டாயச் சேவை படிப்படியாகக் குறைக்கப் பட்டு, கி.பி. 1762–இல் முழுதுமாக ஒழிக்கப்பட்டது.

பகட்டான அரண்மனை விருந்துகளும் ஏனைய விழாக்களும் மேலைநாட்டுப் பாணியில் கி.பி. 18–ஆம் நூற்றாண்டில் உருசியாவிலும் புகுத்தப்பட்டன. கலைகள் ஆக்கமும் ஊக்கமும் பெற்றன. பல புதிய பள்ளிகள் தொடங்கப் பெற்றன. இப்பள்ளிகள் மேற்குடி மக்களுக்குப் பேருதவி செய்தன. உருசியப் பேரரசுக் குழுநிலையாட்டப் பள்ளியும், இத்தாலிய இசைநாடகமும், அறையில் இசைக்கும் இசையும் உருசியாவுக்குள் கொண்டுவரப்பட்டன. பேரரசி இரண்டாம் காதரீன் என்பார் ஆட்சியின்போது விடுதலை, சமூகச் சீர்திருத்தம் போன்றவற்றின் புதிய மேலைநாட்டுக்கருத்துகள் உருசியாவில் பெரிதும் வரவேற்கப்பட்டன. பேரரசி காதரீன் கி.பி. 1767–இல் உருசியாவின் சட்டங்களைத் திருத்த மாபெரும் சட்டமன்றப் பேரவையைக் கூட்டினார். ஆனால், இச் சட்டமன்றத்தால் பயனேதும் நிகழவில்லை.

இத்தருணத்தில் பெருவாரியான உருசியக் குடிமக்கள் சொல்லொணா வறுமையாலும் அறியாமையாலும் வாடி வதங்கினர். எமிலியன் புகச்சேவு (Emelian Pugachev) என்பாரின் தலைமையில் குடியானவர்களின் உள்ளக்குமுறல் கி.பி. 1773–74–இல் கலகமாக வெடித்தது. யூரல் மலைத்தொடரிலிருந்து வால்கா ஆறு வரை உருசியா முழுவதையும் இக்கலகம் திக்குமுக்காடச் செய்தது. இது மாசுக்கோவைத் தாக்கக்கூடிய சூழலை ஏற்படுத்தியது. ஆனால், அதற்குள் அரசுப்படைகள் கலகத்தை அடக்கி விட்டன.

காதரீன் கி.பி. 1775-இல் செர்பு அடிமைகளை நிலக்கிழார்கள் கட்டுப்படுத்தும் சட்ட திட்டங்களை மேலும் கடுமையாக்கினார்.

காதரீன் பேரரசியின் ஆட்சிக்காலத்தில் உருசியா முதன்மையான அரசாக உருவாகிப் புதியதோர் சிறப்பினைப் பெற்றது எனலாம். போலந்து நாட்டினிடமிருந்து பைலோருசியக் குடியரசு என்றழைக்கப்படும் பெரும் பகுதியை உருசியப் படைவீரர்கள் வென்றனர். அன்றைய உதுமானியப் பேரரசிடமிருந்து போரிட்டுக் காதரீன் கிரிமியாவையும் ஏனைய துருக்கியப் பகுதிகளையும் பெற்றார். காதரீன் கி.பி. 1796-இல் காலமானார். காதரீன் மகன் பால் என்பார் சார் மன்னராக முடிசூட்டிக்கொண்டார். பால் சார் மன்னராக ஐந்தாண்டுகள் ஆட்சி நடத்தினார். அவர் கி.பி. 1801-இல் கொலைசெய்யப்பட்டதால் அவருடைய ஆட்சி முடிவுற்றது.

பால் மன்னரின் மகன் முதலாம் அலெக்சாந்தர் சார் மன்னரானார். அவர் செர்புகளின் அடிமைத்தளையைக் கிள்ளிக் களையப் போவதாகச் சூளுரைத்தார். அனைத்து இளம்உருசியர்களும்கற்கப்பள்ளிகள் கட்டித்தரப் போவதாகக் கூறினார்; அரியணையைத் துறந்து விட்டு உருசியாவைக் குடியரசு நாடாக்கப் போவதாகவும் பறைசாற்றினார். அலெக்சாந்தர் பல சீர்திருத்தங்களைக் கொணர்ந்தார். பல அரசியல் கைதிகள் விடுதலையானார்கள். மேலை நாட்டுப் பழக்க வழக்கங்களும் கருத்துகளும் பின்பற்றப்பட்டன. ஆனால், சார் மன்னர்களின் பெருகி வளர்ந்திருந்த அதிகாரத்தைக் குறைக்கவோ அடிமைத்தளையைக் கிள்ளிக் களையவோ அவரால் இயலவில்லை. அவருடைய ஆட்சிக்காலத்தில் உருசியா பாரசீகர்கள், சுவீடியர்கள், துருக்கர்கள் போன்றோரிடமிருந்து தொடர்ந்து நிலங்களைப் பெற்று ஆட்சிப் பரப்பை விரிவுபடுத்தியது.



நெப்போலியன் படையெடுப்பு

முதலாம் நெப்போலியன் கி.பி. 1812-இல் உருசியாவின் மீது படையெடுத்தார். உருசியாவுக்கும் இங்கிலாந்துக்கும் இடையே நடைபெற்று வந்த வாணிகத்தையும் பால்கன் பகுதியில் அந்நாடுகள் முன்னேறி வருவதையும் நிறுத்த நெப்போலியன் விழைந்தார். அப்போது இங்கிலாந்து பிரான்சின் கடும் பகை நாடாக இருந்தது. பிரெஞ்சுப் படைகள் கி.பி. 1812, செப்டம்பர் மாத அளவில் முன்னேறி மாசுக்கோவைச் சென்றடைந்தன. அந்நகரில் வாழ்ந்திருந்த பெரும்பாலான மக்கள் நகரை விட்டு வெளியேறி விட்டார்கள். போராட்டம் ஏதுமின்றி நெப்போலியன் அந்நகருள் நுழைந்தார்.


மாசுக்கோவின் பெரும் பகுதி தீக்கிரையாயிற்று. 35 நாள்களுக்குப் பின்னர், உருசியாவின் அடுத்து வரவிருக்கும் கடுங்குளிரைக் கண்டஞ்சிய பிரெஞ்சியர் அம்மாநகரை விட்டு வெளியேறினர். உணவுப் பற்றாக்குறையும் தொடர்ந்து தாக்கிய உருசியர்களின் போர் நடவடிக்கையும் பிரெஞ்சியரைப் பின்வாங்க வைத்தன. பின்னர், நெப்போலியனைத் தோற்கடிக்க ஐரோப்பிய நாடுகள் செய்த கூட்டு முயற்சியில் உருசியா பெரும் பங்கு வகித்தது.

முதலாம் அலெக்சாந்தர் சில சீர்திருத்தங்களை மேற்கொண்ட போதிலும், உருசியாவில் தொடர்ந்து கொடூர ஆட்சியே நீடித்தது. பல நிலக்கிழார்கள் கி.பி. 1816-இன் தொடக்கத்தில் புரட்சிவாதிகளாக மாறினர். இரகசிய இயக்கங்கள் உருவாக்கப்பட்டு, உருசியாவிற்குப் புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தை அவ்வியக்கத்தினர் இயற்றினர். மேலும், கலகம் ஒன்றையும் செய்ய ஆயத்தமாயினர். இந்நிலையில் கி.பி. 1825-இல் அலெக்சாந்தர் காலமானார். முதலாம் நிக்கோலசு சார் மன்னரானார். அதே ஆண்டு திசம்பர் மாதத்தில் புரட்சிவாதக் குழுக்களுள் ஒன்றான திசம்பர் வாதிகள் (Decembrists) கலகம் உண்டாக்கினர். அரசாங்கப் படைவீரர்கள் கடுமையாகத் தாக்கி அக்கலகத்தை அடக்கினர்.

திசம்பர்வாதிகளின் கலகம் முதலாம் நிக்கோலசு மன்னரைப் பெரிதும் பாதித்தது. அவர் நிலவுடைமையாளர்களைப் பதவியிலிருந்து விலக்கிப் படைவீரர்களைப் பதவியில் அமர்த்தினார். பத்திரிகைகளையும் கல்வியையும் கட்டுப்படுத்தியதுடன் உருசியாவிற்கு வெளியே பயணம் செய்வதும் கட்டுப்படுத்தப்பட்டது. அரசியல் செல்வாக்குள்ள இயக்கங்கள் தடைசெய்யப்பட்டன. ஆறு தனிச் சிறப்பு வாய்ந்த

அரசுத் துறைகளை நிக்கோலசு தோற்றுவித்தார். அத்துறைகளுள் இரகசியக் காவல் அமைப்பினைக் கொண்டது ஒன்று. இவ்வமைப்புச் சீரிய பொருளாதாரத்தோடு, அரசியல் தொடர்பான செயல்களைக் கையாண்டது. இத்துறைகளின் வாயிலாக நிக்கோலசு உருசிய அரசின் நடவடிக்கைகளைப் புறக்கணித்து விட்டுத் தம் அதிகாரத்தைப் பெருக்கிக் கொண்டார்.



கோகல், தால்சுடாய், தோசுத்தோவுசுக்கி, புசுகின்

நிக்கோலசு மன்னரின் ஆட்சி கொடுங்கோலாட்சியாக இருந்தபோதிலும், அது உருசிய இலக்கியத் துறையில் சாதனை படைக்கும் அளவிற்கு உயர்ந்திருந்தது. நிக்கோலாய் கோகல் (Nikolai Gogol), மைக்கேல் இலெர்மொண்டோவு (Mikhail Lermontov), அலெக்சாந்தர் புசுகின் (Alexander Pushgin) போன்றோர் தலைசிறந்த நூல்களை எழுதி இலக்கியத்திற்குப் புகழ் சேர்த்தனர். பயோடர் தோசுத்தோவ்சுக்கி (Fyodor Dostoevsky), இலியோ தால்சுடாய் (Leo Tolstoy), ஐவன் தர்கினாவு (Ivan Turgenov) போன்றவர்கள் சிறந்த இலக்கியங்களை இயற்றினர். படித்த உருசியர்கள்பலர் மேலைநாட்டுப் பாணியில் அமையும் உருசிய வாழ்க்கைமுறை பழைய உருசிய வாழ்க்கையைவிடச் சிறந்ததென வாதிட்டனர். மேலைநாட்டுப் பாணியை விரும்பிய உருசியர்கள் மேலை நாடுகளிடமிருந்து பல விவரங்களைக் கற்றுக் கொள்வதுடன், பொருளாதாரத் துறையிலும் அரசியல் துறையிலும் அவர்களைப் பின்பற்றுவதன் சிறப்பினை வலியுறுத்தினர். ஆனால், பழமை விரும்பிகள் பழையதே தலைசிறந்தது என்று கூறிச் சாரின் ஆட்சி முறை, வலிமை வாய்ந்த திருச்சபை, அமைதியான நாட்டுப்புற உருசிய வாழ்க்கை முறை ஆகியவற்றின் தேவையை வற்புறுத்தினர்.

முதலாம் நிக்கோலசு மன்னருக்கு ஐரோப்பாவின் காவல்காரன் (Policeman of Europe) என்னும் பெயரும் உண்டு. போலந்து, அங்கேரி நாடுகளில் மூண்ட புரட்சிகளை அடக்க அவர் இராணுவத்தை அனுப்பியதால் இப்பெயர் பெற்றார். 'கீழைநாட்டு வைதிகத் திருச்சபையின் காவலர், என்று தம்மைக் கூறிக்கொண்ட நிக்கோலசு முசுலிம்களின் உதுமானியப் பேரரசுடன் இரு போர்களைச் செய்தார். உருசியா கி.பி. 1828-இலும் கி.பி. 1829-இலும் நடைபெற்ற போர்களில் பால்கன் பகுதியில் உதுமானியப் பேரரசுக்குச் சொந்தமான பகுதிகளைப் பெற்றது. துருக்கியர்களின் கட்டுப்பாட்டின் கீழுள்ள நீர்ப்பிரிவுகளின் வழியாகக் கருங்கடலிலிருந்து மத்தியதரைக்கடலுக்கு வாணிகக் கப்பல்கள் சென்றுவரும் உரிமையையும் இக்காலத்தில் உருசியா பெற்றது.

உருசியாவுக்கும் உதுமானியப் பேரரசுக்கும் இடையே கி.பி. 1853-இல் கிரிமியப்போர் மூண்டது. துருக்கியருக்கு ஆதரவாக இங்கிலாந்து, ஆசுத்திரியா, பிரான்சு, சார்டீனியா போன்றவை திரண்டன. பால்கன் முந்நீரகத்தில் உருசியாவின் ஆதிக்கம் பெருகி வளர்வதை அவர்கள் எதிர்த்தனர். கிரிமியப்போரில் உருசியா தோற்று கி.பி. 1856-இல் பாரீசு உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டது. இதன்படி, ஏற்கனவே துருக்கியரிடமிருந்து கைப்பற்றிக் கொண்டிருந்த பகுதியை விட்டுக் கொடுக்கும்படி உருசியா வற்புறுத்தப் பட்டது.

கிரிமியப் போரில் தோற்ற பின்னர், உருசியா ஆசியாவில் தன் ஆதிக்கத்தைப் பரப்பத்தொடங்கியது. கிழக்கு ஆசியாவில் சீனாவிடமிருந்து பல இடங்களைக்

கைப்பற்றியது. ஆமூர் ஆற்றுக்கு வடக்கிலும் உசுரி ஆற்றுக்குக் கிழக்கிலும் உள்ள பகுதிகளை உருசியாவுக்குக் கொடுப்பதாக கி.பி. 1858-இலும், கி.பி. 1860-இலும் சீனா உடன்படிக்கை செய்து கொண்டது. உருசியப் படைகள் கி.பி. 1864-ஆம் ஆண்டளவில் காகசசுப் பகுதியில் கலகம் விளைவித்த இனங்களைத் தோற்கடித்தன. உருசியா கி.பி. 1865 க்கும் கி.பி. 1876 க்கும் இடைப்பட்ட காலத்தில் பல படையெடுப்புகளை நடத்தி, நடு ஆசியாவையும் வென்றது. உருசியா கி.பி.1867-இல் அலாசுக்கா என்னும் பகுதியை அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு 72,00,000 தாலருக்கு விற்றது. முதலாம் நிக்கோலசின் காலம் சார் மன்னர்களின் வல்லாட்சி மலர்ந்திருந்த காலமாயினும், உருசியா பலவகை முன்னேற்றங்களையும் கண்டது. முதலாம் நிக்கோலசு கி.பி. 1855-இல் கிரிமியப் போர் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது காலமானார்.



இரண்டாம் அலெக்சாந்தர்

நிக்கோலசுக்குப்பின் அவர்தம் மகன் இரண்டாம் அலெக்சாந்தர் சார் மன்னராக முடிசூட்டிக் கொண்டார். உருசியா கிரிமியப் போரில் தோல்வியுற்றது அவருக்குப் பாடமாக அமைந்தது. பெரும் வல்லரசு நாடாகத் திகழ வேண்டுமாயின் உருசியா மேலைநாடுகளுக்கு இணையாகப் போட்டியிடல் வேண்டும் என்னும் உண்மையை அவர் உணர்ந்து கொண்டார். பொருளாதாரத் துறையில் வலிவு பெறவும் பொதுவாக உருசியர்களின் வாழ்க்கைத்தரம் உயரவும் அலெக்சாந்தர் பல சீர்திருத்தங்களை மேற்கொண்டார். அவர் கி.பி. 1861-ஆம் ஆண்டில் அடிமைத்தளையினைக் களைந்து, அடிமைகளுக்கும் நிலம் வழங்கினார். இருப்புப் பாதையைப் பெருக்கும் பணியைத் தொடங்கியதுடன், வங்கி அமைக்கும் முறையையும் அவர் அமைத்தார். அலெக்சாந்தர் கல்வித் துறையில் பல சீர்திருத்தங்களை மேற்கொண்டார். பத்திரிகைக் கட்டுப்பாடுகளைக் குறைத்தல், நீதிமன்றங்களில் நடுவர்குழு (Jury) முறையைப் புகுத்துதல் முதலிய பல சீர்திருத்சுங்களையும் செய்தார். நகர்ப்புறங்களிலும் நாட்டுப் புறங்களிலும் தன்னாட்சி அமைப்புகளையும் உருவாக்கினார். எனினும், அவரால் அனைத்து உருசியர்களையும் கவர முடியவில்லை.

இளம் உருசியர்கள் பலர் அவர்தம் சீர்திருத்தங்கள் போதுமானவை அல்ல என்று எண்ணலாயினர். அவர்கள் மிகத் தீவிரமான மாற்றங்களை விரைவில் செய்ய விரும்பியவர்கள். புரட்சிவாதக் குழுக்கள் சில உருசியாவில் சமதருமக் கொள்கையை நிலைநாட்ட விழைந்தன. ஒரு சிலர் அரசியல் அமைப்புத்திட்டம் வேண்டுமெனக் கோரினர். வேறு சிலர் உருசியாவில் குடியரசு முறையில் ஆட்சி நடைபெறவேண்டுமென எண்ணினர். மேற்குறிப்பிடப்பட்ட குழுக்கள் பல பொது நிறுவனங்களையும் இரகசிய நிறுவனங்களையும் அமைத்துக்கொண்டன. புரட்சிவாதிகளுள் ஒருவர் கி.பி. 1866-ஆம் ஆண்டில் இரண்டாம் அலெக்சாந்தரைக் கொல்ல முயன்றார். இதனால், மனம் உடைந்த சார் மன்னர் முன்னரே நடை முறைப்படுத்திய பல சீர்திருத்தங்களைக் கைவிட்டுவிட்டார். எனவே, சீர்திருத்த வேகம் குறையலாயிற்று. புரட்சிவாதிகள் இரண்டாம் அலெக்சாந்தரைக் குறைகூறி, அவருக்கு என்றுமே சீர்திருத்தத்தில் நம்பிக்கை இருந்ததில்லை என வாதிட்டனர். புரட்சிவாதிகள் குடியானவர்களைக் கலகம் செய்யத் தூண்டினர். நாட்டில் சமதருமக் கொள்கை அல்லது ஆட்சி வேண்டாக் கொள்கை செயற்படுவதில் அவர்கள் ஆர்வம் காட்டினர். ஆனால், இந்த முயற்சியும் தோல்வியுற்றது. மக்களின் விருப்பம் (Will of the People) என்னும் பெயர்கொண்ட பயங்கரவாதக் குழுவொன்று சார் மன்னரைக் கொல்லப் பல முறை முயன்றது. அலெக்சாந்தர் சீர்திருத்தங்களை மேற்கொள்ளப் புதிய திட்டமொன்றை உருவாக்கிச் செயற்படுத்த முடிவு செய்தார். ஆனால், கி.பி. 1881-ஆம் ஆண்டில் அவர் புனித பீட்டர்சுபர்கு என்னுமிடத்தில் பயங்கரவாதிகள் அவர்மீது எறிந்த குண்டு ஒன்றினால் தாக்குற்று இறந்தார்.

இரண்டாம் அலெக்சாந்தர் மாண்டபின் அவர் மகன் சார் மன்னரானார். அவரும் கொடூர ஆட்சி

யைத் தொடர்ந்தார் என்று கூறுவதுதான் பொருத்தம். அவரை மூன்றாம் அலெக்சாந்தர் என்பர். பத்திரிக்கைச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தவும், பல்கலைக் கழகங்களைக் கட்டுப்படுத்தவும் முற்பட்டார். தலத் தன்னாட்சி நிறுவனங்களின் அதிகாரத்தையும் அவர் குறைத்தார். நிலக்கிழார்கள் தம் சொத்துகளை மிகுதியாக்கிக் கொள்ள வழிவகை செய்யும் சிறப்பு வங்கியொன்றையும் அவர் தோற்றுவித்தார். மேலுமவர், நிலத்தலைவர்கள் என்போரை நிலக்கிழார்களிடமிருந்து தேர்ந்தெடுத்து அவர்களைப் பதவியில் அமர்த்திக் குடியானவர்களை விட அவர்களுக்கு மிகுந்த அரசியல் அதிகாரத்தைக் கொடுத்தார். குடியானவர்களுக்கும் தொழிற்சாலைப் பணியாளர்களுக்கும் உதவும் நோக்குடன் அலெக்சாந்தர் சில திட்டங்களைத் தொடங்கினார். எனினும் அவர்களின் வாழ்க்கைத்தரம் சிறிதும் உயரவில்லை என்பதுதான் உண்மை. மூன்றாம் அலெக்சாந்தர் கி.பி. 1894– ஆம் ஆண்டில் காலமானார்.

இரண்டாம் நிக்கோலசு உருசியாவின் அடுத்த சார் மன்னரானார். சார் மன்னருள் கி.பி. 1894–ஆம் ஆண்டில் அரசரான அவரே இறுதியானவர். புரட்சி இயக்கம் கி.பி. 1890–ஆம் ஆண்டுவரை அமைதியான முறையிலேயே நடைபெற்று வந்திருந்தது. ஆனால், தொடர்ந்து குறைந்துவந்த சாகுபடியால் குடியானவர்கள் வறுமையுற்று வாடினர். மேலும், நாட்டில் தொழில்மயம் பெருகி வளர்ந்தமையால், நகர்ப்புறங்களில் வாழ்ந்த நடுத்தர வகுப்பு மக்களிடையேயும் தொழிலாளர்களிடையேயும் மனக்கசப்பு மிகுந்தது. மனக்குறை கொண்டிருந்த உருசியர் பல அரசியல் நிறுவனங்களை நிறுவினர். அவற்றுள் பின்வரும் மூன்றினைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். (1) முற்போக்கு அரசியலமைப்புவாதிகள் (Liberal Constitutionalists). இவர்கள் சார் மன்னரின் ஆட்சிக்கு மாறாக மேலைநாட்டுப் பாணியில் பாராளுமன்ற முறை அரசாங்கத்தை நிலைநாட்ட விரும்பியவர்கள். (2) சமூகப் புரட்சிவாதிகள்; குடியானவர்களிடம் புரட்சியைக் கொணர விழைந்தவர்கள். (3) மார்க்சியவாதிகள்; நகரத் தொழிலாளர்களிடையே புரட்சியை உருவாக்க முனைந்தவர். மார்க்சியவாதிகள் காரல்மார்க்சு (Karl Marx ) என்பாரின் சமுதாயச் சிந்தனைகளைப் பின்பற்றியவர்கள். மார்க்சு ஒரு செருமானியத் தத்துவ ஞானியாவார்.

மார்க்சியவாதிகள் உருசியச் சமுதாய மக்களாட்சித் தொழிலாளர் கட்சியை (Russian Social Democratic Labour Party) கி.பி. 1898–ஆம் ஆண்டில் அமைத்தார்கள். இக்கட்சி 1903–ஆம் ஆண்டில் இரு குழுக்களாகப் பிரிந்தது. பெரும்பான்மையோர் இருந்த குழுவைப் போல்சுவிக்குகள் (Bolsheviks) என்றும், சிறுபான்மையோர் இருந்த குழுவை மென்சுவிக்குகள் (Mensheviks) என்றும் கூறினர். போல்சுவிக்குத் தலைவராயிருந்தவர் விளாதிமிர் ஐ. இலியநாவு என்பார். அவரை இலெனின் என்றும் அழைத்தனர். போல்சுவிக்குகள் தம் கட்சியின் உறுப்பினர் எண்ணிக்கையைச் சிறிதாகவே வைத்துக் கொள்ளவேண்டுமென்றும், அவ்வுறுப்பினர்கள் அனைவரும் முழுநேரப் புரட்சி வாதிகளாக இருக்கவேண்டும் என்றும், அவர்கள் தலைமைதாங்கித் தொழிலாளர்களை நடத்திச்செல்ல வேண்டுமென்றும் விரும்பினர். மென்சுவிக்குகள் பெரும் எண்ணிக்கையில் உறுப்பினர்களைச் சேர்த்துக்கொண்டு, மக்களாட்சி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படும் தலைமையை விரும்பினர்.

உருசியாவில் கி.பி. 1899–ஆம் ஆண்டில் ஏற்பட்ட பொருளாதார மந்தத்தின் விளைவாக அந்நாட்டு மக்களிடையே சொல்லொணா அமைதியின்மை பெருகி வளரலாயிற்று. மாணவர் கிளர்ச்சிகள், குடியானவர் கலகங்கள், தொழிலாளர் வேலை நிறுத்தங்கள் போன்றவற்றின் எண்ணிக்கை நாள் தோறும் உயர்ந்தது. உருசியாவுக்கும் சப்பானுக்கும் 1904–ஆம் ஆண்டில் போர் மூண்டது. போருக்குப் பின்னர் அமைதியின்மை மேலும் பெருகலாயிற்று. கிழக்கு ஆசியாவில் உருசியாவின் நாட்டைப் பெருக்கும் திட்டத்தைக் கண்ணுற்ற சப்பான் அதிர்ச்சியுற்றது. இவ்விரு நாடுகளுக்கும் இடையே அடுத்தடுத்துப் பல சிக்கல்கள் தோன்றியதன் விளைவாக, ஆர்தர் துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த உருசியக் கப்பல்களைச் சப்பானியர் தாக்கினர். ஆர்தர் துறைமுகம் சீனர்களுக்குச் சொந்தமானது. அப்போது அதை உருசியர் குத்தகைக்கு எடுத்திருந்தனர். இருநாடுகளுக்கும் இடையே நிலத்திலும் நீரிலும் நடைபெற்ற போர்களில் குறைந்த எண்ணிக்கையிலிருந்தும் நன்கு ஆயத்தப்படுத்தப்பட்டிருந்த சப்பானியப் படைகள் 1905–இல் உருசியாவைத் தோற்கடித்தன.

**1905–ஆம் ஆண்டுப் புரட்சி:** படைக்கலம் தரிக்காத பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் 1905–ஆம் ஆண்டு சனவரி மாதம் 22–ஆம் நாள் புனித பீட்டர்சுபர்கிலுள்ள சார் மன்னரின் குளிர் கால மாளிகையை நோக்கிப் படையெடுத்தார்கள். தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்திருந்ததோடு இரண்டாம் நிக்கோலசு மன்னரிடம் சீர்திருத்தங்கள் வேண்டும் வேண்டுகோளை விடுக்கவும் திட்டமிட்டிருந்தனர். வேண்டுகோள் விடுக்க வந்த கூட்டத்தை நோக்கி மன்னரின் படைகள் துப்பாக்கியால் சுட்டன. நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள்



இலெனினும் இசுடாலினும்

குண்டடிபட்டு இறந்தும் புண்பட்டும் வீழ்ந்தனர். இந்நிகழ்ச்சியைக் 'குருதி தோய்ந்த ஞாயிறு' (Bloody Sunday) என்பர். முற்போக்கு அரசியலமைப்புத் திட்டத்தை விரும்பியவர்களால் வழிநடத்தப்பட்ட புரட்சி இயக்கம் இக்கலகத்திற்குப் பின்னர் வலிமை பெறலாயிற்று. அதன் விளைவாக வேலை நிறுத்தங்கள் மிகுந்தன; குடியானவர்களும் படைவீரர்களும் கலகம் செய்தனர்.

உருசியநாட்டில் 1905–ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் ஏற்பட்ட பொது வேலை நிறுத்தம் நாட்டையே செயலிழக்கச் செய்தது. புனித பீட்டர்சுபர்கிலிருந்து புரட்சிவாதிகள் குழுவொன்றை உருவாக்கிக் கொண்டார்கள். இக்குழுவைச் 'சோவியத்து' என்றனர். தொழிலாளர்களின் பேராளர்களைக் கொண்ட இவ்வகைச்சோவியத்துக் குழு புரட்சியின் போது பெரும்பங்காற்றியது. தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட 'தூமா' (Duma) என்னும் நாடாளுமன்றத்தை நிறுவ நிக்கோலசு மன்னர் இசைந்தார். முன் மொழியப்பெற்ற அனைத்துச் சட்டங்களையும் நிறைவேற்றவோ தள்ளிவிடவோ அந்நாடாளுமன்றத்தால் முடியும் என்ற காரணத்தால் பல உருசியர்கள் மகிழ்ச்சியுற்றனர். ஆனால், மகிழ்ச்சியுறாத மற்றவர்களும் இருந்தனர். மாசுக்கோவில் புரட்சி தொடர்ந்து நடைபெற்று வந்தது. திசம்பர் மாதத்தில் அங்கு மூண்ட தீவிரக் கலகத்தை இராணுவம் நசுக்கியது.

தூமா என்னும் உருசிய நாடாளுமன்றம் 1906–ஆம் ஆண்டிலும் 1907–ஆம் ஆண்டிலும் கூட்டப்பட்டாலும் ஒவ்வொரு முறையும் சில மாதங்கள் கூடிய பின்னர்க் கலைக்கப்பட்டது. நிக்கோலசுடனும் அவர்தம் உயர் அதிகாரிகளுடனும் நாடாளுமன்றத்தால் தொடர்ந்து பணியாற்ற இயலவில்லை.அவர்கள் தாம் இது நாள்வரை அனுபவித்த மிகுதியான அதிகாரத்தைக் கைவிட மனம் ஒப்பவில்லை. தேர்தல் கூட்டத்தை நிக்கோலசு அத்துமீறி மாற்றினார். அதற்குப் பின்னர்த் தேர்ந்தெடுக்கப்பட்ட தூமா உறுப்பினர்கள் குறைந்த அளவு மக்களாட்சி முறையுடன் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.தூமா மன்றத்தில் குடியானவர்கள், தொழிலாளர்கள் போன்றவர்களின் உறுப்பினர் எண்ணிக்கை குறைந்தது. மேல்குடி மக்களின் உறுப்பினர் எண்ணிக்கை பெருகலாயிற்று. மூன்றாம், நான்காம் தூமா மன்றங்கள் சார் மன்னருடன் ஒத்துழைத்தன. எனவே, அவை தொடர்ந்து 1907 முதல் 1917 வரை பத்தாண்டுகள் ஒவ்வொன்றும் ஐந்தாண்டுக் காலமாகப் பதவி வகித்தன. இந்த இடைக்காலத்தில் உருசியா கலைகள், கல்வி, பண்ணைகள், தொழிற்சாலைகள் போன்றவற்றில் தொடர்ந்து முன்னேறிப் பல அரும்பணிகளை நிறைவேற்றிச் சாதனை புரிந்தது.

முதல் உலகப் போர்: முதல் உலகப் போர் 1914–ஆம் ஆண்டில் தொடங்கியது. அப்போது ஐரோப்பா இருபெரும் பாசறைகளாகப் படைக்கலம் ஏந்திப் பிரிந்திருந்தது. ஒரு பக்கம் முக்கூட்டு உடன்படிக்கை நாடுகளாக உருசியா, பிரான்சு, இங்கிலாந்து ஆகிய மூன்றும் அணிதிரண்டிருந்தன. உருசியாவும் பிரான்சும் கி.பி. 1894–ஆம் ஆண்டில் ஒப்பந்தம் செய்து கொண்டன. அதன்படி மேற்குறிப்பிட்ட இருநாடுகளில் யாதேனும் ஒன்று தாக்குதலுக்குள்ளானால் மற்றொன்று அதற்கு உதவ வேண்டும் என்பது உறுதியாயிற்று. பிரான்சும் இங்கிலாந்தும் 1904–இல் நட்புறவு கொள்ளும் உடன்படிக்கையைச் செய்து கொண்டன. இதனை வரலாற்றில் நேச இணைப்பு (Entente Cordiale) என்பர். உருசியாவும் இங்கிலாந்துடன் 1907–ஆம் ஆண்டில் அத்தகைய உடன்படிக்கையைச் செய்து கொண்டது. மேற்கூறிய உடன்படிக்கைகளின் மூலம் உருவானதுதான் முக்கூட்டு இணைப்பு (Triple Entente) ஆகும். இம் முக்கூட்டுக்கு எதிராக உருவானது முக்கூட்டு ஒப்பந்தம் (Triple Alliance) ஆகும். இக்கூட்டில் செருமனி, ஆசுத்திரிய–அங்கேரி, இத்தாலி ஆகிய மூன்று நாடுகள் இணைந்திருந்தன. எனவே, முதல் உலகப் பெரும்போர் தொடங்கு முன் ஐரோப்பிய நாடுகள் முக்கூட்டு உடன்படிக்கை நாடுகள் என்றும் (Triple Entente), முக்கூட்டு ஒப்பந்த நாடுகள்

என்றும் (Triple Alliance) பிரிந்திருந்தன என்பது நினைவிற் கொள்ளத் தக்கது.

செருமனி 1914-ஆம் ஆண்டு ஆகசுட்டுத் திங்கள் முதல் நாள் உருசியா மீது போர் தொடுத்தது. பால்கன் முந்நீரகத்தில் பெருகிவந்த உருசியாவின் செல்வாக்கிற்கு எதிராக இப்போர் மூண்டது. இதன் பின்னரே செருமானிய மொழியில் ஒலித்த புனித பீட்டர்சுபர்கு என்னும் நகரத்தின் பெயரைப் பெட்ரோகிராடு என உருசியா மாற்றிக் கொண்டது. செருமானியப் படைகள் உருசியர்களைச் செருமனியில் உள்ள தேனன்பர்கு (Tannenberg) என்னும் ஊரில் நடந்த போரில் தோற்கடித்தன. ஆனால், உருசியர்கள் ஆசுத்திரியப் படையை ஆசுத்திரிய-அங்கேரியிலிருந்த இலெம்பர்கு, கலீசியா என்னுமிடங்களில் நடைபெற்ற போர்களில் தோற்கடித்தனர்.

ஆசுத்திரிய-செருமானியப்படைகள் 1915-ஆம் ஆண்டில் உருசியர்களை விரட்டியடித்தன. அடுத்த ஆண்டில் உருசியர்கள் கலீசியா முனையில் 113 கி.மீ. தொலைவுக்குத் தாக்கினார்கள். அவர்கள் 97 கி.மீ. தொலைவு முன்னேறினர். உருசியப் படைகள் கார்ப்பேத்திய மலைத்தொடர்கள் வரை 1917-இல் முன்னேறிச் சென்றன. எனினும், செருமானியர் அப்படைகளை விரட்டியடித்தனர்.


முதல் உலகப் பெரும்போரின்போது உருசியாவின் பொருளாதார நிலை மிகவும் தாழ்ந்திருந்தது. இது படைவீரர்களின் தேவைகளையும் குடிமக்களின் தேவைகளையும் நிறைவுசெய்ய முடியாத சூழலில் சிக்கித் தவித்தது. இருப்புப் பாதை வண்டிகள் மக்களை ஏற்றிச் செல்வதற்கு மாறாகப் படைவீரர்களுக்கான தளவாடங்களை ஏற்றிச் சென்றன. உணவு, எரிபொருள்,வீட்டுவசதி போன்ற அடிப்படைத் தேவைகளின் பற்றாக்குறையினால் மக்கள் சொல்லொணாத் துயருற்றனர். படித்த உருசியர்களுள் பெரும்பாலோர் 1916-ஆம் ஆண்டளவில் சார்மன்னரின் ஆட்சியை எதிர்த்தனர். நிக்கோலசு மன்னர் திறன் படைத்த உயர் அரசு அலுவலர்களைப் பதவியினின்று விலக்கி, திறமையற்றவர்களையும் மக்களின் நம்பிக்கைக்கு ஆளாகாதவர்களையும் பதவியில் அமர்த்தினார். அத்தகைய நடவடிக்கைகளால் அரசர் போர் முயற்சிகளை நலியச் செய்கிறார் என்று மக்கள் குறைகூறினர். அரசரும் அரசியாரும் கிரிகோரி ஒய். இரசுபுட்டின் (Grigori Y. Rasputin) என்பாரின் செல்வாக்கிற்கு அடிபணிந்து விட்டனர் என்று பல உருசியர்கள் கண்டனம் தெரிவித்தனர். இரசுபுட்டின் புனிதமானவர் என்றும் நோயுற்றிருந்த தம் மகனைக் காப்பாற்றக் கூடியவர் என்றும் அரசரும் அரசியாரும் நம்பினர். பிரபுக்களின் கூட்டம் ஒன்று 1916-ஆம் ஆண்டு திசம்பர் மாதத்தில் இரசுபுட்டினைக் கொலை செய்தது. எனினும், அவரால் நியமிக்கப் பட்டிருந்த அலுவலர்களின் செல்வாக்கு ஒரு சிறிதும் குறையாமல் இருந்தது. இதனால் மக்கள் கோபம் கொண்டனர்.

மக்கள் 1917-ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் கலகம் செய்தனர். உருசிய நாட்டுப் பஞ்சாங்கப்படி அது பிப்பிரவரி மாதமாகும். எனவே, உருசியர்கள் அதனைப் பிப்பிரவரிப் புரட்சி என்றனர். பழைய பஞ்சாங்க முறை 1918-இல் மாற்றியமைக்கப்பட்டது. பெட்ரோகிராடில் ரொட்டி, நிலக்கரி முதலியவற்றின் பற்றாக்குறைகளுக்கெதிராகக் கலகங்களும் வேலைநிறுத்தங்களும் பெருகி வன்முறை மிகுதியாயிற்று. கலகத்தை அடக்க வந்த படைவீரர்கள் கலகக்காரர்களுடன் சேர்ந்து கொண்டனர். நில உரிமையாளர்களும் அவ்வண்ணமே சார் மன்னருக்கெதிராக அணிதிரண்டனர். பெட்ரோகிராடு மக்கள் உருசிய நாடாளுமன்றமான தூமாவை அணுகித் தங்களுக்குத் தலைமை தாங்க வேண்டினர். அதைக் கண்ட நிக்கோலசு மன்னர் தூமாவையே கலைத்து விட்டதாக ஆணையிட்டார். ஆனால், நாடாளுமன்றம் அவருடைய ஆணையை ஏற்க மறுத்து விட்டது. தூமா உறுப்பினர் சிலரையும் பொது மக்களுள் சிலரையும் கொண்ட அப்போதைய அரசு ஒன்றைத் தூமா நிறுவியது. இளவரசர் சார்சு இலெவாவு என்பார் முதல் அமைச்சராகப் பொறுப்பேற்றார். நிக்கோலசு 1917-இல் முடிதுறந்தார். நிக்கோலசும் அவர் குடும்பத்தினரும் 1918 வரை சிறையில் அடைக்கப்பட்டனர். அவ்வாண்டில் போல்சுவிக்குப் புரட்சிவாதிகள் அவர்களைக் கொன்றனர்.

மார்ச்சு மாதத்திலேயே சோவியத்துத் தொழிலாளர், படைவீரர் ஆகியவர்களின் பேராளர் குழுவொன்று புதிதாகப் பெட்ரோகிராடில் நிறுவப்பட்டது. அக்குழு அப்போதைய அரசுக்கு உறுதுணையாக நின்றது. அதுபோன்ற சோவியத்துக் குழுக்கள் பல உருசியா முழுவதிலும் உருவாக்கப் பட்டன. போர் நடவடிக்கைகளில் அரசாங்கத்தின் ஈடுபாட்டைச் சோவியத்துகள் பெருமளவிற்கு நலியவைத்துவிட்டன. உருசியப் படை அணிகளுள் பல போரிட மறுத்துவிட்டன. ஏப்பிரல் மாதத்தில், 'அனைத்து அதிகாரங்களும் சோவியத்துகளுக்கே' என்று இலெனின் கோரினார். எனினும்,சோவியத்துகள் அப்போது அரசாங்கத்தை ஏற்று நடத்த மறுத்து விட்டன. இருப்பினும், சூலை மாதத்தில் படைக்கலமேந்திய தொழிலாளர்களும் படை வீரர்களும் பெட்ரோகிராடில் அதிகாரத்தைக் கைப்பற்ற முயன்றனர்.



ஒடிசா துறைமுகம்



இலெனின் கிரேடு

எனினும், அவர்களின் முயற்சி தோல்வியுற்றது. இலெனின் பின்லாந்திற்குத் தப்பியோடினார். அவர் தம் நெருங்கிய தோழர்கள், தப்பித்தோ சிறைப் பட்டோ வாழவேண்டியவரானார்கள். அம்மாத இறுதியில் அலெக்சாந்தர் கெரன்சுகி முதல் அமைச்சரானார் அவர் ஒரு சமதருமவாதி.

**அக்டோபர்ப்புரட்சி,1917:** போரில் ஏற்பட்ட தோல்விகளுக்குக் கெரன்சுகியைத் திறன் மிக்க உருசியர்களுள் பலர் குறைகூறிக் கண்டித்தனர்; அவருடைய சமதருமக் கொள்கைகளையும் எதிர்த்தனர். படைத் தலைவர் இலாவர் கொர்னிலாவு (Lavr Kornilov) ஆட்சியைக் கைப்பற்றத் திட்டமிட்டார். கெரன்சுகி சிறையிலடைக்கப்பட்டிருந்த போல்சுவிக்குகளை விடுதலை செய்து, பெட்ரோகிராடு தொழிலாளர்களுக்குப் படைக்கலக் கருவிகளைக் கொடுத்துக் கொர்னிலாவிற்கு எதிராகக் கிளப்பி விட்டார். படைத்தலைவர் பெட்ரோகிராடின் மீது 1917, செப்டம்பர் மாதத்தில் படையெடுத்தார். ஆனால், அவருடைய குழுவினர் தலைநகரை நெருங்கு முன்னரே சிதறுண்டனர். போல்சுவிக்குகளுக்குப் பணியேயில்லாமல் போய்விட்டது. ஆனால், தொழிலாளர்களுக்கு அப்போது துப்பாக்கிகள் கிடைத்துவிட்டன.

அந்த மாதத்தில் போல்சுவிக்குகள் பெட்ரோகிராடு சோவியத்தில் பெரும்பான்மைப் பலத்துடன் வெற்றிபெற்றனர். அக்டோபர் மாதத்தில் பின்லாந்திவிருந்து திரும்பிய இலெனின், இனி ஒரு சிறிதும் தாமதியாது ஆட்சியைக் கைப்பற்ற முயலவேண்டுமென்று கூறினார். உருசியாவில் புரட்சி ஏற்பட்டால், ஏனைய மேலை நாடுகளிலுள்ள சமதருமவாதிகளும் கலகங்களில் ஈடுபடுவர் என்று அவர் நம்பினார். இலெனின் வலக்கை போன்றிருந்த இலியான் திராட்சுகி ஆட்சியைக் கைப்பற்றும் திட்டத்தைத் தீட்டினார். பெட்ரோகிராடின் சிறப்பான இடங்களைப் படைக்கலம் ஏந்திய தொழிலாளர்கள் 1917-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 7-ஆம் நாள் கைப்பற்றிக் கொண்டனர். அதே நாள் பிற்பகலில் தொழிலாளர்களும் போல்சுவிக்குகளால் நடாத்திச்செல்லப்பட்ட படை வீரர்களும், மாலுமிகளும், அப்போதைய அரசின் தலைமையிடமாயிருந்த குளிர்கால மாளிகையைத் தாக்கி அதனைக் கைப்பற்றிக்கொண்டனர். அரசு உறுப்பினர்கள் சிறை செய்யப்பட்டனர். பெரும் இரத்தக்களறிக்குப்பின் மாசுக்கோ மாநகரமும் நவம்பர் மாதம் 15-ஆம் நாள் போல்சுவிக்குகளின் கட்டுப்பாட்டின்கீழ் வந்தது.

இலெனின் தலைமையில் போல்சுவிக்குகள் புதிய தோர் உருசிய அரசாங்கத்தை நிலைநாட்டினர். தல சோவியத்துகளின் மூலம் அவர்கள் போல்சுவிக்குகளின் ஆட்சியைப் பரப்பினர். பெரும் பண்ணை நிலங்களையும் கைப்பற்ற வேண்டுமெனக் குடியானவர்களை இலெனின் அனுமதித்தார். தொழிலாளர்கள் தொழிற்சாலைகளைத் தம் கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டுவர வேண்டுமென்று அனுமதித்து, அவர்கள் தல சோவியத்துகளில் சீரிய பங்குபெற வேண்டுமென்று கூறினார். ஆனால், விரைவில் அரசும் தன் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தலாயிற்று. குடியானவர்கள் தாம் உற்பத்தி செய்த பொருள்களில் பெரும்பாலானவற்றை அரசுக்கே கொடுக்க வேண்டுமென வற்புறுத்தப்பட்டார்கள். உருசியாவின் தொழிற்சாலைகளையும் எடுத்துக்கொண்டு, நடுவண் மேலாண்மைக் குழுக்களை நிறுவி, அவற்றைக் கட்டுப்படுத்தும் பொறுப்பினை அரசு ஏற்றுக்கொண்டது. சீக்கா (Cheka) என்னும் இரகசியக் காவற் படையும் நிறுவப்பட்டது. உருசியாவில் போல்சுவிக்குகளின் ஆட்சி முழுமையாக நிறுவப்பட்டது.

போல்சுவிக்குகள் அரசாங்கத்தைக் கைப்பற்றிய பின், உருசியா முதல் உலகப் பெரும்போரிலிருந்து விலகிக் கொண்டது. செருமனியுடன் அமைதிப் பேச்சுகளையும் தொடங்கியது. உருசியா 1918-ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் செருமனியுடன் பிரசுட்-இலிட்டோவுக்சு என்னுமிடத்தில் உடன்படிக்கை செய்துகொண்டது. அதன்படி மேற்கு, தென்மேற்குப் பகுதிகளிலிருந்த செழுமையான பெரும் பரப்பிலான பகுதிகளை உருசியா விட்டுக் கொடுக்க வேண்டியதாயிற்று. செருமனி 1918 நவம்பரில் தோற்றுச் சரணடைந்த பின்னர், விட்டுக் கொடுத்த பகுதிகளில் பெரும்பாலானவற்றை உருசியா திரும்பப் பெற்றது.

போல்சுவிக்குகள் 1918-இல் உருசியாவின் தலைநகரை மீண்டும் மாசுக்கோவிற்கே மாற்றினர். உருசியச் சமூக மக்களாட்சித் தொழிலாளர் கட்சி என்னும் தம் கட்சியின் பெயரை உருசியப் பொதுவுடைமைக் கட்சி (போல்சுவிக்குகள்) என்றும் மாற்றினர். பின்னர், இப்பெயர் சோவியத்து ஒன்றியத்தின் பொதுவுடைமைக் கட்சி என்று மாற்றப்பட்டது. போல்சுவிக்குகள் செஞ்சேனையை உருவாக்கி அமைத்ததுடன், பொதுவுடைமைக் கட்சியின் கொடியைச் செங்கொடி என்று அமைத்தும் வழங்கினர். பொதுவுடைமைக் கட்சியினரையே செங்கொடியினர் என்றும் அழைத்தனர்.

**உள்நாட்டுப் போர்:** உருசியாவில் 1918க்குப் 1920க்கும் இடைப்பட்ட காலத்தில், பொதுவுடைமைக் கட்சியினருக்கும் அவர்களை எதிர்ப்போருக்கு

மிடையே உள்நாட்டுப் போர் மூண்டது. பொதுவுடைமைக் கட்சியை எதிர்த்தவர்கள் வெள்ளையர் என்றழைக்கப்பட்டனர். வெள்ளையர் போரில் வெற்றிபெற நேர்ந்தால் தம் நிலங்கள் அனைத்தும் பறிக்கப்பட்டுப் பழைய நிலவுடைமையாளர்களிடம் கொடுத்துவிட நேருமோ என்று நம்பிய குடியானவர்கள் பொதுவுடைமைக் கட்சியினரான செங்கொடியினரை ஆதரித்தனர். பிரான்சு, இங்கிலாந்து, சப்பான், அமெரிக்க ஐக்கிய நாடுகள் போன்றவையும் பொதுவுடைமை அரசினை எதிர்த்த ஏனைய நாடுகளும் வெள்ளையருக்கு உதவின. ஆனால், இந்நாடுகள் போதுமான உதவியைச் செய்யவில்லை. முதல் உலகப் பெரும் போர் முடிந்தவுடனேயே பிறிதொரு போரைச் செய்ய அந்நாடுகள் விரும்பவில்லை. வெள்ளையருக்குக் கிட்டிய உதவி பொதுவுடைமைக் கட்சிக்குத் தீமை பயப்பதற்கு மாறாக நன்மையையே விளைத்தது. படையெடுத்தவர்களை எதிர்த்துப் போரிட்டமையால், பொதுவுடைமைக் கட்சியினர் உருசியாவைக் காத்தவர்கள் என்று உரிமை கொண்டாட அவர்களுக்கு இது பயன்பட்டது. வெள்ளையர்கள் செங்கொடி வீரர்களால் தோற்கடிக்கப்பட்டனர்.

**போலந்துடன் போர்:** செஞ்சேனை 1920-இல் போலந்திலிருந்து படையெடுத்தவர்களை எதிர்த்து வெற்றிபெற இயலவில்லை. பைலோ உருசியா, உக்ரேன் போன்ற பகுதிகளைச் சொந்தம் கொண்டாடிய போலந்து, பிரெஞ்சியரின் உதவியுடன் உருசியாவைத் தோற்கடித்தது. போலந்து உரிமை கொண்டாடிய பெரும் பகுதிகளை உருசியா 1921-இல் முடிவான உடன்படிக்கையின்படி விட்டுக்கொடுத்தது.

**புதிய பொருளாதாரக் கொள்கை:** ஏழாண்டுகள் நடைபெற்ற போர், புரட்சி, உள்நாட்டுப்போர், படையெடுப்புப் போன்றவற்றால் உருசியா 1921-ஆம் ஆண்டளவில் களைத்துப்போய் இருந்தது. உள்நாட்டுப் போரின்போது மட்டிலும் 2 கோடி மக்களுக்குமேல் கொடிய தொற்று நோய்கள், பசிப்பிணி போன்றவற்றிற்கு இரையாகி மடிந்தனர். வேளாண்மைச் சாகுபடியும் தொழிற்சாலை உற்பத்தியும் பெரும்அளவில் குறைந்தன. படித்துத் திறன்வாய்ந்த பத்து இலட்சம் உருசியர்கள் நாட்டை விட்டே வெளியேறியிருந்தனர். வேளாண்மையில் ஏற்பட்ட சரிவின் விளைவாகப் புதிய குடியானவர்களால் கலகங்கள் மூண்டன; பெட்ரோகிராடிற்கு அண்மையிலிருந்த குரோன் சுடாட்டுக் கடல்தளத்தைச் சார்ந்த மாலுமிகளும் கலகம் செய்தனர். தொழிலாளர்களிடையே வேலை நிறுத்தங்கள் ஏற்பட்டன.

இலெனின் 1921 ஆம் ஆண்டில் புதியதொரு பொருளாதாரக் கொள்கையை வெளியிட்டு நாட்டினைப் பலப்படுத்தினார். இதற்குமுன்னர்த் தொடங்கப்பெற்றிருந்த சமதருமக் கொள்கையின் அடிப்படையில் மேற்கொண்டிருந்த நடவடிக்கைகள் மாற்றியமைக்கப்பட்டன. சிறுதொழில்களும் சில்லறை வாணிகமும் தத்தம் சொந்தக் கட்டுப்பாட்டின்கீழ்ச் செயற்பட அனுமதிக்கப்பட்டன. தாம் உற்பத்தி செய்தபண்ணைப் பொருள்கள் பெரும்பாலானவற்றை அரசுக்கு அளிக்கவேண்டுமென்னும் கொள்கையும் கைவிடப்பட்டது. வரி கட்டிவிட்டு வாடிக்கையாளர்களுக்குச் சுதந்திரமாக விற்க அவர்கள் முற்பட்டனர். பெருந்தொழில்கள், போக்குவரத்துக் கருவிகள், வங்கித் துறைகள், அந்நிய நாட்டு வாணிகம் போன்றவை மட்டும் அரசாங்கக் கட்டுப்பாட்டின்கீழ் வந்தன. புதிய பொருளாதாரக் கொள்கையின் விளைவாக, உருசியாவின் பொருளாதார நிலை படிப்படியாக நலிவிலிருந்து மீட்சிபெறலாயிற்று. மீண்டும் தனியார் வாணிகம் வெகுவாக வளரலாயிற்று. சில்லறை வாணிகத்தில் முக்காற் பகுதி 1923 ஆம் ஆண்டளவில் தனியார் கட்டுப்பாட்டின்கீழ் வந்தது. எனினும் பெருந்தொழில்கள் அரசின் கட்டுப்பாட்டின்கீழே இருக்குமாறு கவனம் செலுத்தப்பட்டது.

ஐக்கிய சோவியத்துச் சமதரும ஒன்றியம் (Union of Soviet Socialist Republics - USSR) என்னும் அமைப்பை உருசிய அரசு 1922-ஆம் ஆண்டு திசம்பர் மாதத்தில் நிறுவியது. இவ்வமைப்பு கூட்டாட்சி அடிப்படையில் இணைக்கப்பட்டது. கூட்டாட்சியில் இணையும் குடியரசுகள் விருப்பப்படின் பிரிந்து செல்லும் உரிமையும் வழங்கப்பட்டது.

இலெனின் 1924-ஆம் ஆண்டு சனவரியில் காலமானார். அவருடைய மறைவுக்குப் பின்னர், அரசின் பொறுப்பு சோசப்பு இசுடாலின் (Joseph Stalin), இலெவுகாமனாவு (Lev Kamenev), கிரிகோரி சினோவிவு (Grigori Zinoviev) என்னும் மூவர் அடங்கிய குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது. திராட்சுகி (Trotsky) என்பாரைக் கட்சி புறக்கணித்துவிட்டது. அவர் இசுடாலினின் கடும் எதிரியாகக் கருதப்பட்டார். திராட்சுகி நாடுகடத்தப்பட்டு, பின்னர் மெக்சிகோ நாட்டில் கொலைசெய்யப்பட்டார். இசுடாலினை எதிர்த்தவர்கள் பதவிகளிலிருந்து விலக்கப்பட்டார்கள். அவர் 1936க்கும் 1938க்கும் இடைப்பட்ட காலத்தில் பொதுவுடைமைக் கட்சியிலிருந்து பெருமளவு ஊழியர்களை விலக்கி வைத்தார். அப்போது ஏறத்தாழப் பத்து இலட்சம் பேர் பொதுவுடைமைக் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

சோவியத்து அரசு 1920-ஆம் ஆண்டு முதல் திட்டமிட்ட பொருளாதார முன்னேற்றத்திற்கு வழி

வகை செய்தது. அவ்வாண்டில் முதல் ஐந்தாண்டுத் திட்டம் நடைமுறைக்கு வந்தது. அத்திட்டம் தடையிலா வாணிகத்தையும் தனியார் வாணிகத்தையும் முடிவுக்குக் கொண்டுவந்தது. மேலும்அது புதிதாக உருவாக்கப்பட்டிருந்த வணிகவகுப்பையும் செல்வச் சிறப்புற்றிருந்த குடியானவர்களையும் அழித்தொழித்தது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தை அடுத்து இரண்டாம் திட்டமும், பின்னர் மூன்றாம் திட்டமும் கொண்டு வரப்பட்டன. மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டம் இரண்டாம் உலகப் போரினால் தடைப்பட்டது. மூன்றாம் பொதுவுடைமைப் பன்னாட்டமைப்பு (Third Communist International) என்னும் இரகசிய அமைப்பின் வாயிலாகச் சோவியத்து அரசு வெளியுறவுக் கொள்கையைச் செயற்படுத்தியது. இக்கொள்கையின்படி உலகம் முழுவதிலும் பொதுவுடைமைப் புரட்சிகளைத் தூண்டிவிட்டனர். இவ்வமைப்பு சீனாவில் தீவிரமாகச் செயற்பட்டது. சப்பான், செருமனி நாடுகளில் இராணுவத் தலைவர்கள் ஆட்சிக்கு வந்ததையடுத்து இக்கொள்கையைச் சோவியத்து அரசு மாற்றிக் கொண்டது. சர்வதேச சங்கத்தில் (League of Nations) 1934-ஆம் ஆண்டு உருசியா சேர்ந்தது. அமெரிக்கா சோவியத்து ஒன்றியத்துடன் 1933-ஆம் ஆண்டிலிருந்து மீண்டும் தூதரகத்தை ஏற்படுத்தி உறவு கொள்ளலாயிற்று. சப்பான் 1937-ஆம் ஆண்டில் சீனாவின்மீது படையெடுத்தபோது, உருசியா சீனாவை ஆண்ட சியாங்கேசேக்கு(Chiang Kai-Shek) அரசுக்கு உதவி செய்தது.

மேற்கூறிய வெளியுறவுக் கொள்கை செருமனி நாட்டுடன் வெற்றிகரமாகச் செயற்படவில்லை. எனவே, இசுடாலின் 1939-இல் புதிய கொள்கையொன்றினைப் பின்பற்றுவதென முடிவு செய்தார். அதன்படி செருமானியரும் உருசியரும் உடன்படிக்கையொன்றைச் செய்துகொண்டனர். இதனை 'நாசி-சோவியத்து ஒப்பந்தம்' (Nazi-Soviet Pact) என்பர். இதற்கு 'இரிப்பன்டிராப்-மாலட்டோவு உடன்படிக்கை' (Ribbentrop-Molotov Pact) என்னும் பெயரும் உண்டு. இதனை ஆக்கிரமிப்பு எதிர்ப்பு ஒப்பந்தம் (Non-aggression Pact) என்று கூறுவது பொருந்தும். இருநாடுகளும் போலந்து நாட்டைப் பங்குபோட்டுக் கொள்ள இவ்வுடன்படிக்கை உதவியது.

போலந்து நாட்டின்மீது 1939 செப்டம்பர் மாதம் முதல் நாள் செருமனி படையெடுத்தது. இரு வாரங்களுக்குப் பின்னர், உருசியாவும் போலந்துநாட்டின் மீது படையெடுத்துக் கிழக்குப் பகுதிகளைத் தாக்கியது. போலந்தின் பகுதியைக் கைப்பற்றிக்கொண்டபின், உருசியா அண்டை நாடுகளைக் கைப்பற்ற முனைந்து எசுத்தோனியா (Estonia), பின்லாந்து (Finland), இலாட்வியா (Latvia), இலிதுவேனியா (Lithuania) போன்ற நாடுகளை 1940-ஆம் ஆண்டளவில் கைப்பற்றியது; உருமேனியா (Romania) அரசின் மீது வலிமையான கட்டுப்பாடுகளை விதித்து அதனைக் கட்டுப்படுத்த முயன்றது. பெசரேபியாவையும் (Bessarabia) உருசியா தன் வசமாக்கிக் கொண்டது. எனினும், உருசியாவுக்கும் செருமனிக்குமிடையே உறவு 1941-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் சீர்குலையத் தொடங்கியது. செருமனியின் நாசிப் படைகள் உருசியாவின்மீது படையெடுத்து வேகமாக முன்னேறின. இச்சமயத்தில் உருசியா அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் ஏனைய நேசநாடுகளின் உதவியை நாடியது. செருமானியப் படைகள் 1941 நவம்பர் மாத அளவில் மாசுக்கோ (Mascow) நகருக்கு 160 கி.மீ. தொலைவு வரை சென்றுவிட்டன. இலெனின்கிராடு (Leningrad) நகரமும் முற்றுகையிடப்பட்டது. ஆனால், 1942-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் போர் செருமனிக்கு எதிராகத் திசைமாறியது. உருசியப் படைவீரர்கள் செருமானியப் படைகளை விரட்டியடித்தனர். உருசியாவின் கடுங்குளிரைச் செருமானியரால் தாங்கிக் கொள்ள இயலவில்லை. இருப்பினும், இலெனின்கிராடு முற்றுகை தொடர்ந்து நீடித்தது. சூகாவு (Zhukov) என்னும் படைத்தலைவர் செருமானியர்களை விரட்டியடித்து வெற்றி பெற்றார். செருமானியப் படைவீரர்கள் சரணடைந்தனர். இதனை 'இசுடாலின்கிராடு வெற்றி'யென்பர். உருசியப் படைகள் தொடர்ந்து முன்னேறி, நேசப் படைகளின் உதவியுடன் செருமானியப் படைகளைத் தோற்கடித்தன. அமெரிக்கா இப்போரின்போது பெருந்தொகையைக் கொடுத்து உருசியாவுக்கு உதவி செய்தது.

பசிபிக்குப் பகுதியிலும் உருசியா நேசப்படைகளுடன் சேர இசுடாலின் இசைந்தார். சப்பான்மீது அணுக்குண்டுகளை வீசிக் கிழக்கு எல்லைப் போரை அமெரிக்கா முடிவுக்குக் கொணர்ந்தது. மஞ்சூரியாவிலும் (Manchuria) வடகொரியாவிலும் (North Korea) இருந்த சப்பானியப் படைகள் உருசியரிடம் சரணடைந்தன.

இரண்டாம் உலகப் போர் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது உருசியா கிழக்கு ஐரோப்பாவை விடுதலை பெறச் செய்யச் செயல் திட்டம் ஒன்றை இசுடாலின் உருவாக்கினார். அதன்படி மக்களின் சனநாயக அமைப்புகள் (People's Democracies) என்னும் பெயரில் பொதுவுடைமைக் கொள்கைக்குச் சார்புடைய அரசுகள் அல்பேனியா (Albania), பல்கேரியா (Bulgaria), அங்கேரி (Hungary), போலந்து

(Poland), உருமேனியா (Romania) போன்ற நாடுகளில் நிறுவப்பட்டன. கிழக்குச் செருமனியிலும் உருசியரின் ஆட்சி நிறுவப்பட்டது. செக்கோசுலோவாக்கியா நாட்டில் 1948-ஆம் ஆண்டில் பொதுவுடைமை ஆட்சி நிறுவப்பட்டது. எனினும் யூகோசுலேவியா என்னும் நாடு உருசியாவின் கொள்கையை ஏற்க மறுத்து விட்டது. அதன் தலைவரான திட்டோ (Tito) என்பார் நீக்கி வைக்கப்பட்டார். உருசியா யூகோசுலேவியாவையும் கோமின்பார்ம் (Cominform) என்னும் அமைப்பிலிருந்து விலக்கி வைத்தது. இசுடாவின் இறக்கும்வரை (1953) உருசியா யூகோசுலேவியாவைக் குறைகூறியே வந்தது. கிழக்குத் திசையில் உருசியா சியாங் கே சேக்கின் தேசிய சீன அரசை விரட்டியடிக்க முயன்று வெற்றிபெற்றது. மா சே துங்கு (Mao Tse Tung) அந்நாட்டின் தலைவரானார்.

இரண்டாம் உலகப்போர் முடிவுக்கு வருமுன்னர் உலக நாடுகளில் புரட்சி இயக்கத்தைக் கிளப்பிவிட உருசியா பெருமுயற்சி செய்தது. பன்னாட்டு அரசியல் வானில் ஒருவகை நம்பிக்கையற்ற நிலையை உருவாக்கியது. இதனைக் கெடுபிடிப்போர் (Cold War) என்பர். இதன்படி உருசியாவும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் அனைத்து உறவுகளையும் மேற்கு ஐரோப்பிய நாடுகளுடன் துண்டித்துக் கொண்டன. இதனையே இங்கிலாந்து நாட்டின் தலைமை அமைச்சர் வின்சுட்டன் சர்ச்சில் (Winston Churchill) 'இரும்புத்திரை' (Iron Curtain) என்று கூறினார். ஐ.நா. அவையில் அமெரிக்காவும் உருசியாவும் தம் வெட்டு அதிகாரத்தைப் (Veto Power) பயன்படுத்தி வருகின்றன. காசுமீரம், காங்கோ, சூயசுக் கால்வாய் போன்ற பகுதிகளில் தீர்க்கப்படாத சிக்கல்களுக்கு இரு பெரும் வல்லரசுகளின் மோதல் போக்கே காரணம் எனலாம். வியத்நாம் இவ்வாறு உருவான சிக்கல்களுள் ஒன்றுதான். ஆனால், அண்மைக்காலத்தில் அச்சிக்கல் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு, வட தென் வியத்நாம் நாடுகள் இணைந்து வியத்நாம் என்னும் ஒரே நாடாகி விட்டன.

உருசியாவின் அதிபரான சோசப்பு இசுடாலின் 1953-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 5-ஆம் நாள் காலமானார். அவரை அடுத்து மாலங்கோவு (Malenkov) என்பார் தலைவரானார். மாலங்கோவும் குருச்சேவு (Khrushchev) என்பாரும் இணைந்து உருசியாவை ஆட்சி செய்தனர். 'கூட்டுத் தலைமைப் பொறுப்பு' (Collective Leadership) கொள்கை உருவாக்கப்பட்டது. மாலங்கோவை அடுத்துப் புல்கானின் (Bulganin) என்பார் தலைமை அமைச்சரானார். குருச்சேவு கட்சிச் செயலாளராகப் பணியாற்றிய காலத்தில், இசுடாலினால் பேணிக் காக்கப்பட்ட பல கொள்கைகளில் மாறுதல்கள் செய்யப்பட்டன. புல்கானினுக்குப் பின்னர்க் குருச்சேவே தலைமை அமைச்சராகவும் பொறுப்பேற்றார்.

புதிய மாற்றத்தால் உருசியாவில் நீடித்த கெடுபிடிக் கொள்கைகள் மாறி, மக்கள் வாழ்க்கை நலமுறலாயிற்று. பொருளாதாரக் கொள்கைகளும் மாற்றியமைக்கப்பட்டன. ஆறாம் ஐந்தாண்டுத் திட்டம் விலக்கிக் கொள்ளப்பட்டு 1958-ஆம் ஆண்டில் புதிய ஏழாண்டுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. தொழில்வளத்திலும் வேளாண்மைத்துறையிலும் உருசியா அமெரிக்காவை மிஞ்சுமளவுக்கு அத்திட்டம் தீட்டப்பட்டது. அதேபோல் வெளியுறவுக் கொள்கையிலும் உருசியா புதிய கொள்கையொன்றைக் கடைப்பிடிக்கத் தொடங்கியது. வெளிநாடுகளுக்குச் சென்று வருதல், பண்பாட்டுத் துறைகளில் பரிமாற்றம் ஆகியவற்றிற்கு ஏற்றவாறு இப்புதிய கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்டது. மேற்கு நாடுகளுடன் உருசியா நல்லுறவு கொள்ளும் சமாதான சகவாழ்வுக் (Peaceful Coexistence) கொள்கை கடைப்பிடிக்கப்பட்டது. இதன்படி உலகப் புரட்சிக் கொள்கையை உருசியா கைவிட்டுப் புதியபார்வை (New Look) பெற்று வருவதாகப் பலர் எண்ணினர். கிழக்கு ஐரோப்பிய நாடுகளுடனும் உருசியா நல்லுறவுக் கொள்கையைப் பின்பற்றத் தொடங்கியது. யூகோசுலேவியா, போலந்து, அங்கேரி போன்ற நாடுகளுடன் நல்லுறவு நீடிக்க வழிவகை செய்யப்பட்டது.

உருசியாவின் அறிவியல் அறிஞர்கள் விண்வெளிக் கலத்தை வான வீதியில் முதன்முதலாகச் செலுத்தி (1957) முன்னேறினர். இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர், உருசியாவின் செயற்கைக் கோள் சந்திரனைத் தொட்டு வந்தது. வானத்தில் உள்ள பிறிதொரு கோளைத் தொட்டு வந்த முதல் நாடு உருசியாவே ஆகும்.

குருச்சேவு 1964-ஆம் ஆண்டில் பதவி விலகினார் அவர் 1971-இல் காலமானார். குருச்சேவுக்குப் பின்னர் உருசியப் பொதுவுடைமைக் கட்சியின் பொதுச் செயலாளராக வந்தவர் இலியோனிடு பிரசுனேவு (Leonid Brezhnev) என்பவராவர். அவர் பின்பற்றிய நடுநிலைக் கொள்கை (Centrist Policy) அவருக்குப் பெயரையும் புகழையும் ஈட்டிக் கொடுத்தது. பிரசுனேவும் பல கொள்கைகளை மாற்றியும் புதுப்பித்தும் மக்களால் போற்றப்பட்டவரானார். தலைமை அமைச்சராகப் பணியாற்றிய கோசிசின் (Kosygin) 1980-இல் ஓய்வுபெற்றார்.

பிரசுனேவு காலமானதும், ஆந்திரப்போவு (Andropov) என்பார் சில மாதங்களும், அவரை

யடுததுக் கான்சுடன்டின் செர்னென்கோவும் (Konstantin Chernenko) ஆட்சித் தலைவராயினர். இப்போது மிகேயில் கார்பச்சேவு (Mikhail Gorbachev) என்பார் தலைவராகவும் ஆட்சியின் பொதுச் செயலாளராகவும் உள்ளார்.

உருசியாவின் மக்கள்தொகை 27,63,00,000(1985)
இரா. அ.

அரசியலமைப்பு (1977): உருசியாவில் இதுவரை நான்கு அரசியலமைப்புகள் வரையப்பட்டுள்ளன. முதல் அரசியலமைப்பு 1918-ஆம் ஆண்டு சூலைத் திங்கள்10-ஆம் நாள் நடைமுறைக்கு வந்தது. அந்த அரசியலமைப்பை வடிப்பதில் இலெனின் (Lenin) முக்கிய பங்கு வகித்தார். அவ்வரசியலமைப்பு மக்களின் உரிமைகளையும் கடமைகளையும் உறுதி செய்து அறிவிக்கும் பிரிவுகளைக் கொண்டிருந்தது. இரண்டாம் அரசியலமைப்பு 1924-ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்தது. அதன்மூலம் உருசிய நாட்டிற்குச் 'சோவியத்துச் சமநிலைக் குடியரசுகளின் ஒன்றியம்' (USSR) என்னும் புதிய பெயர் கொடுக்கப்பட்டது. அது 'அனைத்து ஒன்றிய சோவியத்துக் காங்கிரசு', 'அனைத்து ஒன்றிய மையக்குழு', 'அனைத்து ஒன்றியத் தலைமையகத் தலைமை நீதிமன்றம்' ஆகிய உயர் நிறுவனங்களை ஏற்படுத்தியது. இசுடாலினைத் (Stalin) தலைவராகக்கொண்டு அரசியலமைப்பு வடிக்கும்குழு ஒன்று 1935-ஆம் ஆண்டு அமைக்கப்பட்டு, 1936-ஆம் ஆண்டு திசம்பர்த் திங்கள் அது ஏற்றுக் கொள்ளப்பட்டு, 1937-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் அந்த மூன்றாம் அரசியலமைப்பு நடை முறைக்கு வந்தது. அது கூட்டாட்சி அமைப்பைத் தெளிவு படுத்தியதோடு, சமதருமப் பொருளாதார அமைப்புகளையும் விரிவுபடுத்தியது.

இப்போது நடைமுறையிலுள்ள அரசியலமைப்பு 1977-ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்தது. உருசிய நாட்டின் சமுதாய, பொருளாதார, அரசியல் நிலைகளில் ஏற்பட்ட மாற்றங்களின் காரணமாக அரசியலமைப்பும் மாற்றப்பட வேண்டும் என்ற கருத்து நிலவியது. மறைந்த முன்னாள் அதிபரும் பொதுவுடைமைக் கட்சியின் பொதுச் செயலாளருமான இலியோனிடு பிரசுனேவின் (Leonid Brezhnev) மேற்பார்வையில் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டது. பிரசுனேவு முன்மொழிந்த சட்ட வரைவிற்குப் பொதுமக்கள் பெரும் ஆதரவு காட்டினர். நாடு தழுவிய விவாதத்தில் 140,000,000 பொதுமக்கள் பங்கு பெற்றனர். தொழிற்சாலைகள், இராணுவப் பிரிவுகள், குடியிருப்புகள், மற்ற நிறுவனங்கள் ஆகியவற்றில் பதினைந்து இலட்சத்திற்கும் மேற்பட்ட கூட்டங்கள் இதை விவாதிப்பதற்காக நடத்தப்பட்டன. பொதுவுடைமைக் கட்சி மட்டுமே சுமார் 4,50,000 பகிரங்கக் கூட்டங்களை நடத்தியது. அரசியலமைப்பு வரைவில் 4,00,000 திருத்தப் பிரேரணைகள் கொண்டுவரப்பட்டன. திருத்தப் பிரேரணைகளை ஆழ்ந்து ஆராய்ந்த பிறகு, முன்வரைவின் 173 விதிகளில் 110 விதிகள் திருத்தப்பட வேண்டும் என்றும், ஒரு புதிய விதி சேர்க்கப்பட வேண்டும் என்றும் அரசியல் சட்ட ஆணைக்குழு பரிந்துரைத்தது. ஆனால், இத்திருத்தங்கள் அரசியலமைப்பின் தன்மையை மிகச் சிறிய அளவிலேயே மாற்றியமைத்தன என்பது கவனிக்கத் தக்கது.

புது அரசியல் சட்ட வரைவு பொதுவுடைமைக் கட்சியின் மையக் குழுவின் ஒப்புதலைப் பெற்றபின், 1977-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 7-ஆம் நாள் தலைமைச் சோவியத்தால் (Supreme Soviet) ஏற்றுக் கொள்ளப்பட்டது. இவ்வரசியலமைப்பு முன்னுரையையும், ஒன்பது பகுதிகளையும், 174 விதிகளையும் கொண்டுள்ளது.

புதிய அரசியலமைப்பு சோவியத்துச் சமநிலைக் குடியரசுகளின் ஒன்றியத்தை அனைத்து மக்களின் சமநிலை அரசாக அறிவிக்கிறது. அரசியலமைப்பின் முன்னுரை நாட்டின் எல்லா நிலைகளிலும் பொதுவுடைமைக் கட்சி வழிகாட்டும் பாங்கினை வெளிப்படுத்துகின்றது. அன்றியும், மக்களுக்கு வழங்கியுள்ள உரிமைகளையும் தெளிவாக்குகின்றது.

முதலாவதாக, அரசியலமைப்பு அரசியல் முறையைத் தெளிவாக்குகிறது. எல்லா அதிகாரங்களும் மக்களைச் சார்ந்தவை என உறுதி செய்கிறது. பொதுவுடைமைக் கட்சியே உருசியச் சமுதாயத்தின் வழிகாட்டி என அறிவிக்கிறது. அரசியல் கட்சி அரசியலமைப்பின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. சமதரும மக்களாட்சியின் விரிவாக்கம், அரசின் நிருவாகத்தில் மக்களின் விரிவான பங்கு, மக்கள் கருத்திற்கு மதிப்பளித்தல் போன்றவை உருசிய அரசியல் முறையின் முக்கிய நோக்கங்கள் என அரசியலமைப்புக் கூறுகின்றது.

இரண்டாவதாக, இந்த அரசியலமைப்பு அரசின் பொருளாதார முறையைப் பற்றிக் கூறுகிறது. உருசிய நாட்டின் பொருளாதார உற்பத்தியின் மூலங்கள் அரசு உரிமைக்கு உட்பட்டவை. மேலும், பொதுச் சொத்தை யாரும் தனிமனித நலனுக்குப் பயன்படுத்தலாகாது என்றும் அரசியலமைப்புக் கூறுகிறது.

மூன்றாவதாக, சமுதாய வளர்ச்சி, பண்பாடு ஆகியவைபற்றி அரசியலமைப்பு எடுத்தியம்புகிறது. உருசிய நாட்டுச் சமுதாய அடிப்படை என்பது உழைப்பாளிகள், உழவர்கள் இடையே நிலவும் உடைக்க முடியாத பந்தமேயாகும். ஒவ்வொருவருடைய முன்னேற்றமும் மற்றவர்களுடைய முன்னேற்றத்துடன் பிணைந்தே உள்ளது.

நான்காவதாக, உருசிய அரசியலமைப்பு வெளியுறவைப் பற்றிக் கூறுகிறது. பொதுவுடைமை அமைப்பிற்குச் சாதகமாகப் பன்னாட்டு நிலைமைகளை உறுதிப்படுத்துவதையும், ஆக்கிரமிப்புப் போர்களைத் தடுப்பதையும், உலகச் சமதரும நிலைகளைப் பலப்படுத்துவதையும், தேச விடுதலைக்காகவும் சமூக முன்னேற்றத்திற்காகவும் மக்கள் நடத்தும் போராட்டத்தை ஆதரிப்பதையும் இந்நாட்டின் வெளிநாட்டுக் கொள்கை நோக்கங்களாகக் கொண்டிருக்கிறது.

ஐந்தாவதாக, மக்களின் உரிமைகளை அரசியலமைப்பு வரிசைப்படுத்துகிறது. அனைத்து மக்களும் சமஉரிமை உடையவர்கள். ஆண், பெண் பாகுபாடு கிடையாது. வேற்றுநாட்டுக் குடியுரிமை இழந்தவர்களுக்கு உருசியா அரசியல் புகலிடம் அளித்துப் பாதுகாப்புக் கொடுக்கிறது. வேலைவாய்ப்பு உரிமை, பொழுது போக்கு உரிமை, குடியிருப்பு, சுகாதாரம், கல்வி போன்ற வசதிகளுக்கான உரிமை ஆகியவை மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. மனச்சாட்சிப்படி உழைத்தல், சமுதாயச் சொத்தைப் பாதுகாத்தல், தாயகத்தைக் காத்தல்,குழந்தைகளைச் சமதருமச்சமுதாயத்திற்குப் பொறுப்புடையவர்களாக வளர்த்தல், அனைத்துநாட்டு நட்பு மற்றும் நல்லுறவுக்காகப் பாடுபடுதல் போன்ற மக்களாற்ற வேண்டிய கடமைகளையும் அரசியலமைப்புக் கூறியுள்ளது.

ஆறாவதாக, கூட்டாட்சிச் சட்டமன்றமாகிய தலைமைச் சோவியத்தின் (Supreme Soviet) அமைப்பு, தேர்தல் முறை, அதிகாரங்கள் போன்றவற்றை அரசியலமைப்பு விளக்குகிறது.

ஏழாவதாக, தலைமைச் சோவியத்தால் தேர்ந்தெடுக்கப்படும் புதுமை நிறுவனமாகிய தலைமைக் குழுவைப் பற்றி அரசியலமைப்பு எடுத்தியம்புகிறது. இதன் தலைவர் நாட்டின் அதிபர் ஆவார். அமைச்சரவையை நாட்டின் மிக உயர்ந்த நிருவாக அமைப்பாக அரசியலமைப்பு அறிவிக்கிறது.

கடைசியாக, தலைமைச் சோவியத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைமை நீதிமன்றத்தைக் கொண்ட நீதித்துறையைப் புதிய அரசியலமைப்பு உருவாக்கியுள்ளது. இவை உருசிய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகளாகும்.

**சட்டமன்றம்:** உருசியாவுக்கு 1936–ஆம் ஆண்டில் இசுடாலினால் (Stalin) ஏற்படுத்தப்பட்ட தலைமைச் சட்டமன்றம் (Supreme Soviet), அமைச்சர் அவை (Council of Ministers), தலைமையகம் (Presedium) என்ற புதுமையான அமைப்பு, தலைமை நீதிமன்றம் (Supreme Court) முதலிய கூறுகளெல்லாம் 1977–ஆம் ஆண்டின் பிரசுனேவு அரசியலமைப்புச் சட்டத்திலும் தொடர்ந்துள்ளன; ஆனால், அவையெல்லாம் 1977–ஆம் ஆண்டின் அரசியலமைப்புச் சட்டத்தின் புதிய குறிக்கோள்களுக்கிணங்கச் செயலாற்றுகின்றன. தலைமைப் பாராளுமன்றத்தில் இணையத்தின் மன்றம் (Soviet of the Union), தேசிய இனங்களின் மன்றம் (Soviet of Nationalities)என்ற இருமன்றங்களுள்ளன. இணையத்தின் மன்ற உறுப்பினர்கள் 300,000 மக்களுக்கு ஓர் உறுப்பினர் என்ற விகிதத்தில் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இம்மன்றத்தில் ஏறக்குறைய 740 உறுப்பினர்கள் உள்ளனர். தேசிய இனங்களின் மன்றம் என்பது 640 உறுப்பினர்களை உடையது. ஒன்றியக் குடியரசு ஒவ்வொன்றிலிருந்தும் (Union Republic) 32 உறுப்பினர்கள், தன்னாட்சிக் குடியரசு ஒவ்வொன்றிலிருந்தும் (Autonomous Republic) 11 உறுப்பினர்கள், தன்னாட்சி நிலப்பிரிவு ஒவ்வொன்றிலிருந்தும் (Autonomous Region) 5 உறுப்பினர்கள், ஒவ்வொரு தேசியப் பகுதியிலிருந்தும் (National Area) ஓர் உறுப்பினர் என்ற விகிதத்திலும், ஒன்றியக் குடியரசு, தன்னாட்சிக் குடியரசு, தன்னாட்சி நிலப்பிரிவு, தேசியப் பகுதி முதலிய உட்பிரிவுகளிலுள்ள வயது வந்த வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். உறுப்பினரின் பதவிக்காலம் பழைய அரசியலமைப்பில் 4 ஆண்டுகளாயிருக்க, 1977–ஆம் ஆண்டின் சட்டப்படி 5 ஆண்டுகளாகும்.

வாக்களிக்கும் உரிமை பதினெட்டு வயதடைந்த ஆண், பெண் குடிமக்களனைவருக்கும், இன, தேசிய, சமய, கல்வி, வாழுமிடம் (Residence), சமூக நிலை, சொத்து, கடந்தகாலச் செயல் முதலிய வேறுபாடின்றி அளிக்கப்பட்டுள்ளது. சித்த சுவாதீனமற்றோர், நீதிமன்றத்தின் தீர்ப்பின் விளைவாக வாக்களிக்கும் உரிமை இழந்தோர் ஆகியோருக்கு வாக்குரிமை இல்லை. ஒருவருக்கு ஒருவாக்கு, இரகசிய வாக்கெடுப்பு முதலிய முறைகளும் உண்டு. வேட்பாளர்கள் 2௦ வயதினராய், உழைப்பாளர் கழகங்கள், பொதுவுடைமைக் கட்சி அமைப்புகள், தொழிற் சங்கங்கள, கூட்டுறவு அமைப்புகள்

இளைஞர் கழகங்கள்,பண்பாட்டு நிறுவனங்கள் ஆகியவற்றுள் ஏதேனுமொன்றினால் வேட்பாளராக வழிமொழியப்படுதல் வேண்டும்.

சட்டமன்றம் ஆண்டுக்கிருமுறை கூடுகிறது. இரு மன்றங்களுக்கும் சட்ட வரைவுகளைத் தொடங்குவதற்குச் சம அதிகாரம் உண்டு. ஒரு சட்டம் நிறைவேறுதற்கு ஒவ்வொரு மன்றத்திலும் சாதாரணப் பெரும்பான்மை இருந்தால் போதும். இரு மன்றங்களுக்குமிடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டால், அதை நீக்க ஒரு நல்லிணக்கக்குழு (Conciliation Committee) ஒவ்வொரு மன்றத்திலிருந்தும் சம எண்ணிக்கை உறுப்பினர்களைக் கொண்டு அமைக்கப்படுகிறது. அதனுடைய முயற்சியும் பயனளிக்காவிடில் இரு மன்றங்களும் கலைக்கப்பட்டுப் புதிய தேர்தல்கள் நடத்தப்படுகின்றன. இரு மன்றங்களும் சேர்ந்த இணைப்புக் கூட்டத்தில் அமைச்சர் குழு உறுப்பினர், தலைமையகம் (Presedium)என்றஅமைப்பின் 33 உறுப்பினர், உருசிய நாட்டின் தலைமை நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

தலைமையகத்துக்குச் சில ஆட்சி அதிகாரங்களும் சட்டமியற்றும் அதிகாரங்களும் இருக்கின்றன. தலைமைப்பாராளுமன்றத்தின் ஆண்டுக்கு இரு கூட்டங்களைக் கூட்டுதல், அதன் மன்றங்களுக்குள் முரண்பாடு ஏற்படின் அவற்றைக் கலைத்துப் புதிய தேர்தல் நடத்துதல், தனது விருப்பத்தின் பேரிலோ ஒன்றியக் குடியரசு ஒன்றின் வேண்டுகோளின் பேரிலோ குடிஒப்பந்தத்துக்கு ஏற்பாடு செய்தல்,தலைமைப்பாராளுமன்றம் கூடியிராதபோது அமைச்சர்களை நீக்குதல், அமர்த்துதல், பட்டங்கள் அளித்தல், மன்னிப்பு வழங்குதல், படைத்தளபதிகளை அமர்த்துதல், மாற்றுதல், சட்டங்களை விளக்குதல், அமைச்சரவையின் ஆணைகளைத் தள்ளுபடி செய்தல், ஆணைகளை விடுத்தல் முதலிய செயல்களைச் செய்தற்குத் தலைமையகத்துக்கு அதிகாரங்கள் இருக்கின்றன.

உருசிய நாட்டின் தலைமை நீதிமன்றத்தின் நீதிபதிகளும் நீதிமதிப்பாளர்களும் (Assessors) பாராளுமன்றத்தால் 5 ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். உருசிய நாடு கூட்டாட்சி அமைப்புடையதாயினும், நடுவண் அரசாங்கச் சட்டங்கள் அரசியலமைப்புக்கு மாறானவை என்று தீர்ப்பளிக்கக்கூடிய அதிகாரம் உருசியத் தலைமை நீதிமன்றத்துக்கு இல்லை. நடுவண் சட்டத்துக்கும் உறுப்பு மாநிலக் குடியரசின் சட்டத்துக்குமிடையே முரண்பாடு ஏற்படுமானால், நடுவண் அரசாங்கத்தின் சட்டமே செல்லுபடி ஆகுமென்று அரசியலமைப்பின் 20-ஆம் பிரிவு கூறுகிறது.

அரசாங்கத்தை இயக்குவதும் நாட்டின் பொருளாதார, அரசியல் வாழ்வைப் பொதுவுடைமைச் சமநிலைக் கோட்பாட்டிற்கிணங்கக் கட்டுப்படுத்துவதும் உருசிய நாட்டில் அனுமதிக்கப்பட்ட ஒரே கட்சியான பொதுவுடைமைக் கட்சியேதான். இது கீழ்மட்டத்திலிருந்து மேல்மட்டம் வரை பல அடுக்குகளில் குடியாட்சி இயல்பான அதிகாரக் குவிப்பு (Democratic Centralism) என்ற கோட்பாட்டை ஒட்டி அமைக்கப்பட்டுள்ளது. இது ஒன்றே அரசியலில் கலந்துகொள்ள உரிமை பெற்றுள்ளதாலும், மாற்று அரசியல் கட்சி இல்லாததாலும்,அதிகாரக் குவிப்புக் காணப்படுவதாலும் உருசியாவில் காணப்படுவது குடியாட்சி முறை அன்று என்று கூறப்படுகிறது. சா. ச. செ.

உருசிய-துருக்கிப் போர்கள் ஏறத்தாழ 300 ஆண்டுகள் நடைபெற்றன. உருசியப் பேரரசும் உதுமானியப் பேரரசும்(இன்றைய துருக்கி நாடு)இப்போரில் ஈடுபட்டிருந்தன. இப்போர்கள் கி.பி.17-ஆம் நூற்றாண்டிலிருந்து தொடர்ந்து நடைபெறலாயின. தொடக்கத்தில் துருக்கியே ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் இறங்கியது. உருசியாவின் தென்புற எல்லைப் பகுதிகளில் துருக்கியர் குறுக்கிட்டு உருசியா நாட்டின் பண்டைய எதிரிகளான கிரிமியத் தார்த்தார்களுக்கு (Tartars) உறுதுணையாக நின்றனர். உருசியா கி. பி. 17-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதிவரை துருக்கி நாட்டின்மீது வெளிப்படையான நேரடித் தாக்குதல்களைத் தவிர்த்து வந்தது. ஏனெனில், அக்காலத்தில் துருக்கி அன்றைய உருசியாவை விட மிகுந்த வலிமை கொண்டதாய் இருந்தது. ஆனால், காலப்போக்கில் துருக்கி நலிந்து மெலிந்து 'ஐரோப்பாவின் நோயாளியாக' மாறிவிட்டது. இத்தருணத்தில் உருசியா வலிமைபெற்றுக் கருங்கடல், பால்கன் தீபகற்பம் போன்ற பகுதிகளில் தன் ஆட்சியை விரிவுபடுத்த விழைந்தது. இவ்விரு பகுதிகளும் துருக்கியின் கட்டுப்பாட்டின்கீழிருந்தன. துருக்கி பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடலாயிற்று. வேறொரு நாட்டின் உதவி கிட்டிய போது மட்டும் இந்நாடு உருசியாவின்மீது தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டது.


உருசியாவின் சார் மன்னர் மகா பீட்டரும் (Peter, the Great) மகா காதரினும் (Catherine, the Great) துருக்கியின்மீது தத்தம் ஆட்சிக் காலத்தில் தாக்குதல் நடத்தி வெற்றி பெற்றனர். இன்று உக்ரேன் பகுதியிலிருந்து துருக்கியர்களை விரட்டியடித்த பெருமை மகாபீட்டரைச் சாரும். காதரின் அரசியார் கிரிமியாவை (Crimea) வென்று, உருசியர்கள் தென்பாகத்தில் குடியேற்றங்களை நிலைநாட்ட வழிகோலினார். மேலும், உருசியாவுக்குச் சொந்தமான வணிகக் கப்பல்கள் கருங்கடலில் சென்றுவரும் உரிமை

யையும்துருக்கியரை வற்புறுத்திக் காதரின் பெற்றார். மேலும், உருசியாவில் நிலவி வந்த வைதிகக் கிறித்த வர்களுக்கான (Orthodox Christians) சில சிறப்பதி காரங்களையும் அவர் பெற்றுத் தந்தார். இத்தகைய வைதிகக் கிறித்தவர்கள் உதுமானியப் பேரரசுப் பகுதிக்குள் வாழ்ந்துவந்தார்கள். இவ்வுரிமையைச் சுட்டிக்காட்டிப் பின்னர் உருசியா இத்தகைய கிறித்த வர்களின் பாதுகாவலர் என்று தன்னைக் கூறிக் கொண்டது. இதுவே, பின்னர் மூண்ட கிரிமியப் போருக்குக் காரணமாய் அமைந்தது. இப்போர் கி. பி. 1854–56-ஆம் ஆண்டுகளுக்கிடையில் நடைபெற்றது.

உருசியாவும் ஆசுத்திரியாவும் கூட்டாகச் சேர்ந்து துருக்கியுடன் கி. பி. 18-ஆம் நூற்றாண்டில் மூன்று போர்களைச் செய்தன. முதற்போர் கி. பி. 1736–1739-ஆம் ஆண்டுகளிலும், இரண்டாம் போர் கி. பி. 1768–1774-ஆம் ஆண்டுகளிலும், மூன்றாம் போர் கி. பி. 1787–1792-ஆம் ஆண்டுகளிலும் மூண்டன. உருசியாவும் துருக்கியும் கி. பி. 19-ஆம் நூற்றாண் டின் தொடக்கத்தில் சிறிதுகாலம் நட்பு நாடுகளாக இருந்தன. எனினும், செயற்கையான இவ்வுறவு நீண்டகாலம் நீடிக்கவில்லை. கி. பி. 19-ஆம் நூற் றாண்டில் உருசியாவும் துருக்கியும் நான்கு போர்களில் மோதிக்கொண்டன. முதற்போர் கி. பி. 1806–1812-இலும், இரண்டாம் போர் கி. பி. 1828–29-இலும், மூன்றாம் போர் கி. பி. 1853–1856-இலும், நான்காம் போர் கி. பி. 1877–1878-இலும் எழுந்தன. முதற்போரின் முடிவில் பெசராபியப் (Bessarsbia) பகுதியையும் பால்கன் தீபகற்பத்தில் சிறப்பு நிலையையும் உருசியா பெற்றது. இரண்டாம் போரின் விளைவாகக் கருங்கடல் பகுதியின் கிழக்குக் கடற்கரை உருசியாவின் கட்டுப்பாட்டின்கீழ் வந்தது. மூன்றாம் போரைக் கிரிமியப் போர் என்பர். இப் போரில் துருக்கி வெற்றி பெற்றது. பால்கன் தீபகற் பத்திலும் கருங்கடற் பகுதியிலும் தான் பெற்றிருந்த ஆதிக்க நிலையை உருசியா இழந்தது. நான்காம் போரின் முடிவில், மூன்றாம் போரின்போது இழந்த பகுதிகளில் சிலவற்றைத் திரும்பப் பெற்றது. இதன் விளைவே சான் இசுடீபானோ (San Stefano) உடன் படிக்கையாகும்.

துருக்கி செருமனியுடன் 1914-ஆம் ஆண்டில் உடன்படிக்கை யொன்றைச் செய்துகொண்டமை யால், மீண்டுமோர் உருசிய-துருக்கிப் போருக்கு நேரடியாக வழிபிறந்தது. இப்போர் முதல் உலகப் போரின் பகுதியாய் அமைந்தது. கான்சுடாண்டி நோபிளையும் தார்டனல்சு நீர்ப்பிரிவையும் பெற்று விட முடியும் என்று உருசியா நம்பிக்கை கொண்டி ருந்தது. உருசியாவும் துருக்கியும் இரண்டாம் உலகப் போரின் போது நேசநாடுகளுடன் சேர்ந்திருந்தன.

**உருசிய - சப்பானியப் போர். (1904-05):** உருசியாவை ஆண்ட சார் மன்னர் இரண்டாம் நிக் கோலசு கடுமையான ஆக்கிரமிப்புக் கொள்கையைத் தூரக் கிழக்கு நாடுகளில் கடைப்பிடித்தார். இதன் பயனாகச் சப்பான் நாட்டிற்கும் உருசியாவுக்கு மிடையே சச்சரவுகள் தோன்றலாயின. அப்போது சப்பானின் பேரரசராக இருந்த முட்சுகிட்டோ (Mutsuhito) உருசியாவுடன் மோத உறுதி பூண்டார். இரு நாடுகளுக்கிடையே நீண்ட உரையாடல்கள் நடந்த போதிலும் அவை இறுதியில் தோல்வியுற்றன. இத்தருணத்தில் சப்பானின் கப்பற்படைத் தலைவர் எய்காசிரோ தோகா (Heihachiro Togo) என்பார் திடீர்த் தாக்குதலுக்குப் பேர் பெற்ற படகுகள் பல வற்றை ஏவி, ஆர்தர் (Arthur) என்னும் துறைமுகத் தில் நிறுத்தி வைக்கப் பெற்றிருந்த உருசியக் கப்பற் படைகளை 1904-ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதம் 8-ஆம் நாள் தாக்கினார். இரண்டு நாட்களுக்குப் பிறகு போர் மூண்டுவிட்டதாக அறிவிக்கப்பட்டது. சப்பானியர் தொடர்ந்து பல போர்களில் வெற்றிக்கு மேல் வெற்றி பெற்றனர். அமைதி உடன்படிக்கைக் காக அமெரிக்க அதிபர் தியோடார் உரூசுவெல்ட்டு (Theòdore Roosevelt) இரு நாடுகளையும் கூட்டிப் பேச்சுவார்த்தைகள் நடத்தினார். உருசியா, சப்பான் நாடுகளுக்கிடையே 1905-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5-ஆம் நாள் அமெரிக்காவிலுள்ள போர்ட்சு -




நாடுகள் 1904- 1905-ஆம் ஆண்டு-களின் அமைப்பின்படி வரையப்பட்டுள்ளன.

உருசிய-சப்பானியப் போர்

மத்தில் அமைதி உடன்பாடு கையெழுத்தாயிற்று. சப்பானுக்குக் கொரியாவின் (Korea) மீதிருந்த ஆதிக்கத்தை உருசியா ஏற்றுக் கொள்ள வேண்டிய தாயிற்று. உருசியா இலியோதுங்குத் தீபகற்பத்தையும் (Liaotung Peninsula), சகாலின் (Sakhalin), தென் பாதியையும் நன்கொடையாகக் கொடுக்க உடன் பட்டது. இருநாடுகளும் மஞ்சூரியாவை விட்டு வெளி யேறி அதைச் சீனாவுக்கு விட்டுக் கொடுக்க உறுதி யளித்தன. இரா.அ.

இராணுவப் பணிச் சட்டம்: உருசிய நாட்டின் இக்கால வரலாற்றில் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி என்னவெனில், அது எவ்வாறு செருமானிய நாசிச சருவாதிகாரியாகிய இட்லர் (Hitler) நடத்திய தாக்குதலை (1941-1945) இரண்டாம் உலகப்போரின் பிற்பகுதியில் வென்றது என்பதேயாகும். இட்லர் ஆசுத்திரியா, செக்கோசுலேவேகியா முதலிய நாடு களைக் கைப்பற்றிய பின்னர், 1939-ஆம் ஆண்டில் போலந்தைத் தாக்குதல் கூடுமென்று ஐரோப்பிய அரசியலறிஞர்கள் நன்கு உணர்ந்தனர். சோவியத்து உருசிய நாடு இசுடாலின் ஆட்சியில் ஐந்தாண்டுப் பொருளாதாரத் திட்டங்களை நிறைவேற்றி வந்தது. அது இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தை 1933-இலிருந்து1937-வரை நிறைவேற்றிற்று. ஆனால், செரு மனியினால் தாக்கப்பட்க் கூடிய இடர்ப்பாடான சூழ் நிலை இருந்ததால், சோவியத்து உருசியாவின் இரண் டாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தொழில் எவ் வளவு வளர்ந்ததோ, அதைப்போல இரண்டரைப் பங்குப்பாதுகாப்புக்கான போர்க் கருவிகளைச்செய்யும் தொழிலும் வளர்ந்தது. தரைப்படைக்கும் கப்பற் படைக்கும் 1938-ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத் தில் 23,200,000,000 உரூபிள்களும், 1940-ஆம் ஆண் டில் 56,800,000,000 உரூபிள்களும் ஒதுக்கப்பட்டன. போர் தொடங்குதல் கூடுமென்று எண்ணிப் போர்க் கருவித் தொழிற்சாலைகள் நாடெங்கிலும் பரவலாக ஏற்படுத்தப்பட்டன. இச்சூழ்நிலையில் நாட்டின் நிலைப்படையின் (Standing Army) அளவை விரிவாக் கும் நோக்கத்துடன் கொண்டுவரப்பட்டதே 1939 -ஆம் ஆண்டின் உருசிய (அல்லது அனைவருக்குமான) இராணுவப்பணிச் சட்டம் (Universal Military Service Act) ஆகும்.

நாட்டின் படைகளில் பணி செய்தல் வேண்டு மென்பது எல்லாக் குடிமக்களுக்கும் கட்டாயமான ஒன்றாகுமென்று இச்சட்டம் கூறிற்று. முன்பு படை யில் சேருவதற்குரிய உயர்ந்த வயதுத் தகுதி இச் சட்டத்தின் படி 19-ஆகக் குறைக்கப்பட்டது. சேமப் படையில் (Reserve Force) சேருவதற்கு முன்பு வயது 45 என்று இருந்தது; இப்போது அது 50-ஆக உயர்த் தப்பட்டது. முன்பு கடல், வான் படைகளில் பணிக் காலம் வரம்புக்குட்படுத்தப்பட்டிருந்தது; இப்போது அவற்றிலும் இயந்திரக் கருவிகளையுடைய படை களிலும் பணிபுரிய வேண்டிய காலம் நீட்டிக்கப்பட் டது.

இவ்வாறு தீவிரமாகப் போருக்கு ஆயத்தம் செய் யப்பட்டாலும், 1941-இல் செருமானிய நாசிப்படைகள் சோவியத்து நாட்டைத் தாக்கியபோது, சோவியத்துப் படைகள் தற்காப்புக்குப் போதிய அளவுக்கு வலிமை பெறாதிருந்ததாலும், வேறுசில காரணங்களினாலும், அந்நாடு செருமானியத் தாக்குதலினால் பெரும் அழி வுக்கும் இடர்ப்பாட்டுக்கும் ஆளாயிற்று. அது 1944 -ஆம் ஆண்டிற்குப் பின்னரே நாசிசப் படைகளின் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளவும், இறுதியில் செருமனியைத் தாக்கி வெல்லவும் முடிந் தது.

உருசிய வேளாண் வகுப்பு: உருசிய வேளாண் வகுப்பு (Russian Peasantry) 1917-ஆம் ஆண்டில் நடந்த போல்சுவிக்குப் புரட்சியோடு ஒத்த முக்கியத்து வம் உடையது. இலெனின் மார்க்சியப் பொது வுடைமைத் தத்துவத்தையும் ஐரோப்பிய மூலதன வளர்ச்சியையும் ஆராய்ந்து, 1917-ஆம் ஆண்டில் உருசியப் புரட்சிக்கு ஏற்றதாகப் புரட்சிச் சமநிலைக் கோட்பாட்டை (Revolutionary Socialism) வரைந்த போது, உருசியா தொழில் வளர்ச்சி இல்லாமல் பெரும்பாலும் வேளாண்மைப் பொருளாதாரத்தை (Agricultural Economy) உடையதாக இருந்ததையும், அந்நாட்டில் அளவிற் பெரிய வேளாண் வகுப்பு இருந்ததையும் கண்டார். அவர் வகுத்த இலெனி னியக் கோட்பாடு (Leninism) என்பது தொழில் வளர்ச்சி இல்லாத பொருளாதார முறைகளுக்கும், அளவிற்பெரிய வேளாண் வகுப்புகளையுடைய சமூகங்களுக்கும் ஏற்றதாகச் சில புரட்சி முறைகளோடு மாற்றி அமைக்கப்பட்ட மார்க்சியக் கோட்பாடு ஆகும்.

உருசிய வேளாண் வகுப்பும் சமநிலைக் கோட் பாடும்: இலெனின் உருசிய உழவர் வகுப்பின் தன்மையை உணர்ந்து சில முடிவுகளை வகுத்தார். சமநிலைக் கோட்பாட்டைப் பற்றிய பரப்புரை (Propaganda) உருசிய வேளாண் வகுப்பாரிடமே செய்யப் படுதல் வேண்டும். அப்போதுதான் நிலமானிய முறை யிலிருந்து (Feudalism) முதலாளித்துவமுறைக்கும் (Capitalism) சமநிலை முறைக்கும் (Socialism) பரிணாம வளர்ச்சியில் மாறுதல் ஏற்படும். உருசியா வில் ஆலைத் தொழிலாளர் வகுப்புதான் அவர் வகுத்த புரட்சிக் கருத்துகளை ஏற்கக் கூடியதா

யிருந்தாலும், அது அளவில் மிகச் சிறியதாக இருந்த காரணத்தால், அளவிற் பெரிய வேளாண் வகுப்பின் ஒத்துழைப்பு இல்லாமல் எந்தப் புரட்சியும் வெற்றி பெறுதல் இயலாது என்று இலெனின் உணர்ந்தார். இந்தச் சூழ்நிலைகளில் அவர் 1917-ஆம் ஆண்டில் உருசிய வேளாண் வகுப்பாரின் உழைப்பின் பயனை நாட்டுடைமையாக்குதலையோ சமநிலைப்படுத்துதலையோ செய்யாமல், அதனை ஒத்திப்போட்டு, அதன் வாயிலாக அவர்களுடைய ஆதரவைத் தமது புரட்சிச் செயல்களுக்குப் பெற்றார். இடைத்தர வகுப்பாராகிய (Middle Class) வேளாண் வகுப்புதான் உருசியாவில் புரட்சியைத் தொடங்க இயலுமாகையால், அது அவ்வாறு புரட்சி செய்து நிலமானிய முறையை ஒழித்து, அரசியலைத் தாராள இயல்புடையதாக ஆக்குதற்கு மார்க்சியர்கள் இடைத்தர வகுப்புக்கு ஆதரவு தருதல் வேண்டும். புரட்சிக்குப்பின்னர்ச் சமநிலைக் கட்சியார் இடதுசாரி எதிர்க்கட்சியாக அமைந்து, சமநிலைப் புரட்சிக்கு (Socialist Revolution) ஏற்ற காலம் வரும்வரை செயற்படுதல் வேண்டும். உருசிய வேளாண் வகுப்பைப் பொறுத்தவரை மார்க்சியர்களுக்குத் திட்டம் ஏதும் இல்லை. புரட்சியை ஏற்படுத்துதல் வேண்டுமாயின், நடுத்தர வகுப்பை நம்பி இருத்தல் இயலாதென்றும், ஆகையால் அவ்வகுப்புக்கு மாற்றாக, அளவிற் சிறிய தொழிலாளர் வகுப்புக்கும் அளவிற் பெரிய வேளாண் வகுப்புக்குமிடையே சிறிது காலத்துக்கு நட்பு உடன்படிக்கை ஏற்படுத்துதல் வேண்டுமென்றும் இலெனினும் திராட்சுகியும் (Trotsky) கூறினர்.

**உருசிய வேளாண் வகுப்பும் புரட்சித் திட்டமும்:** புரட்சியின் முதல் நிலையில் உழவர் புரட்சி செய்து, பெரிய நிலக்கிழார்களை அகற்றுவர்; பின்னர், ஆலைத் தொழிலாளர் வகுப்பின் தலைமையில் தொடங்கிய புரட்சி, நடுத்தர மக்களின் புரட்சியாக வளரும். பெரிய நிலக்கிழார்கள் அகற்றப்பட்ட பின்னர், உழவர்களுக்குப் பயிர் நிலங்களைப் பிரித்தளித்து, அவர்களைச் சிறு நிலக்கிழார்களாக (Peasant Proprietors) ஆக்குதல் வேண்டுமென்று இலெனினோ திராட்சுகியோ 1905-ஆம் ஆண்டிலோ அதற்குப் பின்னரோ ஒருபோதும் கூறவில்லை. விளை நிலங்களை நாட்டுடைமை ஆக்குதலும் (Nationalisation), பின்னர் உருசிய உழவர் வகுப்பை அல்லது வேளாண் வகுப்பை அரசாங்கத்தின் குத்தகைதாரராக (Tenants) ஆக்குதலுமே இலெனினின் கோட்பாடாகும். இவ்வாறு செய்தால்தான் நடுத்தர வகுப்புப் பொருளாதார முறை (Bourgeois Economy) ஏற்படுதல் இயலுமென்று இலெனின் கூறினார். இதுவே பின்னர்ப்(அரசாங்கத்துக்கு உடைமை ஆகிய) பொதுப் பண்ணை முறை (Collectivist Agriculture) உருசிய நாட்டில் தோன்றுதற்கு வழி வகுத்தது. பொதுப் பண்ணை முறையில் நிலம் அரசாங்கத்துக்கே உரியது. இந்தியா போன்ற நாடுகளிலே உள்ள கூட்டுடைமைப் பண்ணை முறையில் நிலம் பயிரிடுவோருக்கு உரிமையாக இருக்கிறது. பொதுப்பண்ணை முறை உருசியாவில் 1930-ஆம் ஆண்டளவில் கொண்டு வரப்பட்டது.

**உழவர் வகுப்புக்குப் புதிய சமநிலை அரசாங்கத்திலுள்ள பங்கு:** சமநிலைப் புரட்சி நடந்த பின்னர், உருசியாவில் 1917-ஆம் ஆண்டில் அமைக்கப்படும் புதிய அரசாங்கம் 'குடியாட்சி இயல்பும் புரட்சி இயல்பும் உடைய தொழிலாளர்-உழவர் வகுப்புகளின் முற்றதிகாரம் (Democratic-Revolutionary Dictatorship of the Proletariat) எனப்படுதல் வேண்டும் என்று இலெனின் முன்னரே கூறியதற்கொப்ப, 1917-ஆம் ஆண்டில் அரசாங்கம் அவ்வாறே அமைக்கப்பட்டது. பெரிய நிலக்கிழார்களை அகற்றிய உழவர் வகுப்புக்கு வலிமை பெருகவும், புதிய உருசியச் சமநிலை அரசாங்கம் அதைக்கண்டு அஞ்சி, அரசியலதிகாரமெல்லாம் உழைப்பாளர் மன்றங்களுக்கே இருத்தல் வேண்டு மென்று கூறி (All Power to the Soviets) உழவர் வகுப்புக்கு (Kulaks) எதிராகப் போராட்டம் நடத்திற்று. புரட்சி வெற்றியாக முடிந்த பின்னர்ச் சோவியத்து மன்றங்களின் அதிகாரமும் குறைந்தது. அரசாங்கத்துக்கு ஆதாரமாக இருக்கக்கூடிய ஒரே நிறுவனமாகக் கட்சி ஒன்றுதான் வளர்ந்தது. இலெனினால் நிறுவப்பட்டு, இசுடாலினால் மரபுரிமையாகப் பெறப்பட்ட அரசாங்கமானது நகர்ப்புறத் தொழிலாளர் வகுப்பும் ஊரகத் தொழிலாளர் வகுப்பும் சேர்ந்து உடன்பாட்டின் வாயிலாக அமைத்த ஒன்று ஆகும். பா.சு.

**உருசிய மொழி:** சோவியத்து உருசியாவின் அரசாங்க முதல் மொழியாகும். இதுவே சோவியத்து நாட்டின் பண்பாட்டு மொழியாகவும் இலங்குகிறது. இசுலாவு (Slav) கிழக்கு மொழியான இது, இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்தது.

இம்மொழி 1970-ஆம் ஆண்டு எடுத்த மக்கள் தொகைக் கணக்கின்படி, ஏறத்தாழ 14 கோடி மக்களின் இனமொழியாகத் திகழ்கிறது. அந்நாட்டு மக்கள் தொகையில் 58 விழுக்காடு உருசியமொழி பேசுகிறார்கள். மேலும், சீனா, பிரான்சு, செருமனி, இசுரேல், ஐக்கிய அமெரிக்க நாடுகள் ஆகியவற்றில் வாழும் அரசியல் அகதிகளும் (Political Refugees) இம்மொழியினைப் பேசுகிறார்கள். சோவியத்து

ஒன்றியத்துள் மாசுக்கோ, இலெனின்கிராடினை உள்ளடக்கிய ஐரோப்பிய உருசியப் பகுதி, திரான்சு சைபீரியன் இருப்புப் பாதை செல்லும் சைபீரியாவின் பெரும்பகுதி ஆகிய இடங்களில் வாழ்கின்றவர்கள் இம்மொழியைப் பேசுகிறார்கள்.

சோவியத்து ஒன்றியத்துள் உருசியக் குடியரசு அல்லாத மற்றக் குடியரசுகளில் இது இரண்டாம் மொழியாகப் பயன்பட்டு வருகிறது. சோவியத்து நாட்டின் செல்வாக்கு மிகுந்த நாடுகளில் இம்மொழி பரவலாகக் கற்கப்பட்டு வருகிறது; இசுலாவிய இன மொழிகளோடு இம்மொழியையும் அங்கு வாழ்வோர் ஆர்வமுடன் கற்றுவருகிறார்கள். உருசியக் கிளை மொழிகள் (Russion Dialects) வடக்குக் கிளைமொழி, தெற்குக் கிளைமொழி, மத்திய கிளைமொழி எனப் பகுக்கப்பட்டுள்ளன. இலெனின்கிராடிலிருந்து சைபீரியா வரையிலுள்ள பகுதியில் பேசப்பட்டு வருவது வடக்குக் கிளைமொழி. மத்திய தெற்கு உருசியப் பகுதியில் வழங்கி வருவது மத்திய கிளை மொழி. புதிய இலக்கிய உருசியமொழி மாசுக்கோவின் கிளைமொழியை அடிப்படையாகக் கொண்டது. வடக்குக் கிளைமொழிப் பகுதியைச் சேர்ந்ததாக முன்னர் மாசுக்கோ நகர் இருந்தது. வடக்குக் கிளைமொழி, தெற்குக் கிளைமொழி ஆகியவற்றின் கலப்பால், புதிய மையக் கிளைமொழி வகை (Central Dialect type) ஏற்பட்டது. இப்போது இதுவே மாசுக்கோ நகரில் வழங்கி வருகிறதாகச் சொல்லப் படுகிறது. இதில் வடக்குக் கிளைமொழியின் மெய் யெழுத்து முறையும் (Consonant System), தெற்குக் கிளைமொழியின் உயிரெழுத்து முறையும் (Vowel System) கலந்துள்ளன.

உக்ரேனிய மொழி, பைலோ உருசியமொழி ஆகிய மொழிகளும் உருசிய மொழியும் கி.பி. பதின் மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து பதி னாறாம் நூற்றாண்டு வரையில் பிரிந்திருக்கவில்லை. பழைய உருசிய மொழி என்பது பொதுவாகக் கிழக்கு இசுலாவிய மொழியையே குறித்து வந்தது. மேலும், இசுலாவோனிக்குக் கிறித்தவக் கோயில்களின் செல் வாக்கினுக்கு உட்பட்டதாக இம்மொழி இருந்து வந் தது. முதலாம் பீட்டரின் மேல்நாட்டு நாகரிகமாக்கும் கொள்கையின் காரணமாக கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டிலிருந்து மேற்கு ஐரோப்பிய மொழிகளி லிருந்து பல சொற்களைக் கடன் வாங்கத் தொடங் கிற்று. இம்மொழியின் சிறந்த வளர்ச்சிக் கூறுகளை கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டில் சீரோடும் சிறப்போடும் வாழ்ந்த அலெக்சாண்டர் புசுகின் (Alexander Puskin) இயற்றிய உயிரோட்டமுள்ள இலக்கியத்தில் தெளிவாய்க் காணலாம். இவர் நடையில், பேச்சு வழக்கும் இசுலாவோனிக்குக் கிறித்தவக் கோயில் வழக்கும் விரவியிருந்தன. இவ் வாறு இவர் எழுதியது, இலக்கியத்திற்கு எது நடை யாக இருக்கவேண்டும் என்னும் சொற்போருக்கு முற்றுப்புள்ளி வைத்ததுபோல் ஆயிற்று.

இக்கால உருசிய மொழியில் ஆறு வேற்றுமை வடிவங்களே உள்ளன. எழுவாய் வேற்றுமை (Nominative Case), இரண்டாம் வேற்றுமை(Accusative Case), மூன்றாம் வேற்றுமை(Instrumental Case), நான்காம் வேற்றுமை (Dative Case), ஆறாம் வேற்றுமை (Genitive Case), ஏழாம் வேற்றுமை (Locative Case) ஆகியவை பெயர்ச் சொற்களின் ஒருமை, பன்மை வடிவங்களில் இடம் பெற்றுள்ளன. ஒலிமுறையைப் பார்க்கும்போது, இம்மொழியில் எண்ணற்ற சீறொலி மெய்யெழுத்துகளும் (Sibilant Consonants) மெய்யெழுத்துத் தொகுதிகளும் (Consonant Clusters), அண்ணத்தில் பிறக்கிற மெய் யெழுத்துளும் (Palatalized Consonant) அடங்கி யுள்ளன. நாவின் நுனி அண்ணத்தை நோக்கி வளையும்போது இந்த ஒலிகள் பிறக்கின்றன. இவை தளர் உறழ்வான மெய்யெழுத்துகள் (Soft-Consonants), அதாவது ஒலிவகையில் மெல்லதிர்வான மெய் யெழுத்துகள் எனப்படுகின்றன. முன்னோர் மரபின தான இசுலாவிய மொழியிலிருந்த எளிதாக்கப்பட்ட உயிரொலிகள் (Reduced Vowels) உருசிய மொழியில் இல்லாமற் போயின.

உலகில் இலக்கியச் சிறப்புடைய இன்றைய மொழிகளுள் ஒன்றாக உருசியமொழி விளங்குகிறது. மேலும், சோவியத்து ஒன்றியத்தின் சிறப்புப் பெரு மையும் பெருகி வருவதால் கடந்த நூற்றாண்டி லிருந்து உருசிய மொழியின் முதன்மை படிப்படியாக உணரப்பட்டு வருகிறது. இது உலகப் பெரிய மொழி களுள் ஒன்றாய் மதிக்கப்பட்டு வருகிறது.

உருசிய மொழி இலக்கியம் கி.பி.11-ஆம் நூற் றாண்டிலிருந்து வளர்ந்து வருகிறது. இலக்கிய வளர்ச் சியை கி.பி.11-ஆம் நூற்றாண்டிலிருந்து 17-ஆம் நூற்றாண்டு வரையிலான பழைய உருசிய மொழிக் காலம் என்றும், கி.பி.17-ஆம் நூற்றாண்டிலிருந்து இன்றுவரையிலான இக்கால உருசிய மொழிக் காலம் என்றும் இரண்டாகப் பகுக்கலாம். இக்காலம் என் பது புரட்சிக்கு முந்திய காலம் (Pre-revolutionary Period), புரட்சிக்குப் பிந்திய காலம் (Post-revolutionary Period) என இரண்டாகப் பகுக்கப்பட்டுள் ளது. பழைய உருசிய மொழி கீவு நகரில் வளர்ந்து முன்னேறியது. பின்பு, கி.பி.15-ஆம் நூற்றாண்டின் முடிவில், மாசுக்கோ நகரே இம்மொழியின் இலக்கிய

மையம் ஆயிற்று. உருசிய இலக்கியம் பிரெஞ்சு மொழி இலக்கியத்தின் செல்வாக்கைப்பெற்றிருந்தது. பின்னர், இது அலெக்சாண்டர் புசுகின், கொகொல், தாசுத வேசுகி, துர்கெனவு, தால்சுடாய், செகேவு ஆகியோரால் வளம் மிகுவதாயிற்று. சு. ந. சொ.

**உருசிய நாட்டுத் தத்துவம்:** பண்டைய உருசிய நாட்டில் ஆசியா, ஐரோப்பா ஆகியவற்றில் காணப் பட்ட தத்துவ அமைப்புகளின் பிரதிபலிப்புகள் தோன்றின. உருசியப் புரட்சிக்கு முன், சார் மன்னர் கள் ஆட்சியில் கிறித்தவச் சமயத் தொடர்புள்ள தத் துவக் கோட்பாடுகள் மக்கள் வாழ்க்கையினை நெறிப் படுத்துவனவாகப் பெருமளவு அமைந்திருந்தன. அக் டோபர்ப் புரட்சிக்குப் பின் எழுந்த சமுதாய அரசியல் மாற்றங்கள் பொதுவுடைமைக் கொள்கையினை உரு சிய வாழ்க்கைத் தத்துவமாக உறுதிப்படுத்தியது. இன்றும் இந்நிலை தொடர்ந்து வருகிறது. பொது வுடைமைக் கொள்கையின் அடிப்படையாகத் திகழ் வது மார்க்சியத் தத்துவம் (Marxism) ஆகும். மார்க்சி யத் தத்துவம் உருசிய நாட்டின் அடிப்படை வாழ்க்கை நெறியாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருத்த லால் இதனையே உருசிய நாட்டுத் தத்துவமாகக் (Russian Philosophy) குறிப்பிடலாம்.

மார்க்சியத் தத்துவம் சடக் கொள்கையின் (Materialism) ஒரு வளர்ச்சிப் பிரிவாகும். சடக் கொள்கையைக் கருத்துக்கொள்கைக்கு (Idealism) நேர் எதிரான தத்துவ ஒருமைக்கொள்கை (Monism) எனலாம். ஆன்மிக அல்லது கருத்துகளின் அடிப் படையில் அமைவன எவையும் இல்லை எனச் சடக் கொள்கை குறிப்பிடுகிறது. சடப்பொருள் (Matter) ஒன்றே உண்மை நிலையின் (Reality) கருப்பொருள். உலகின் பல்வகைப்பட்ட நிகழ்ச்சிகள் யாவற்றையும் பொருளறிவியல் கோட்பாடுகளின் துணைக்கொண்டு முழுமையாக விளக்கவியலும். சடப் பொருள் எழுத லும் அழிதலும் அற்ற நிலையான பொருளாகும். உள்ளத்தின் செயல்கள் எனப்படுவனவும் சடப் பொருளின் விளைவுகளும் மாற்றங்கள் ஆகும். இத் தகைய சடக் கொள்கை உலகின் எக்காலத்துத் தத்துவ அமைப்புகளிலும் காணப்படுவதாகும். சடக் கொள்கையின் பல குறைபாடுகளை இதற்கு மாறுபட்ட தத்துவக் கோட்பாட்டினை ஆதரிக் கும் அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர். எனினும் மனித சமுதாய வளர்ச்சியிலும் மனித அறிவின் வர லாற்றுப் போக்கிலும் சடக் கொள்கை குறிப்பிடத் தக்க செல்வாக்கினைப் பெற்று வந்துள்ளதென்பது தெளிவு.

சடக் கொள்கையின் பல்வேறு பிரிவுகளுள் மார்க் சியத்தின் மையமாகத் திகழ்வது 'முரண் நிலைத் தருக்கம்சார் சடக் கொள்கை' (Dialectical Materia-lism) ஆகும். முரண் நிலைத் தருக்க முறையினைத் தத்துவ அமைப்பினை உருவாக்க முதன் முதல் பயன் படுத்தியவர் எகல் (Hegel) என்னும் செருமானிய நாட்டுத் தத்துவ மேதையாவார். இதன் அடிப்படை யில் காரல் மார்க்சு (கி.பி.1818-1883) முழுமை யான ஒரு வாழ்க்கைத் தத்துவத்தைத் தோற்று வித்தார். இதுவே உருசிய நாட்டுப் பொது வுடைமை அரசியலின் மையக் கோட்பாடாகும். கி.பி.1848-ஆம் ஆண்டில் மார்க்சு எழுதி வெளியிட்ட பொதுவுடைமைக் கொள்கை அறிக்கை (Communist Manifesto) என்ற சிறு நூலிலும், பின்னர் கி.பி.1859 -ஆம் ஆண்டில் வெளிவந்த அவரது 'அரசியல், பொருளாதாரம் பற்றிய திறனாய்வு' என்னும் நூலின் முன்னுரையிலும் முரண் நிலைசார் சடக் கொள்கையினை அவர் தெளிவுபடுத்தினார். எந்த ஒரு மக்கள் சமுதாயத்திலும் உற்பத்தி அமைப்பிற்கு ஏற்ப உடைமை அல்லது சொத்துப் (Property) பற்றிய அமைப்புக் காணப்படும். ஆனால், காலப்போக்கில் உற்பத்தி அமைப்பு அறிவியல்-தொழில் நுட்பக் கார ணிகளின் விளைவாகத் துரித மாற்றம் பெறுவது வரலாற்றின் மாற்றவியலாத ஓர் உண்மை நிலைமை யாகும். இதற்கேற்பச் சமுதாயத்தின் அமைப்பில் உடைமைமாற்றம் எழுவதற்கு அதில் வசதியும் வாய்ப் பும் மிகுதியாகப் பெற்றுள்ள வலிமை மிகுந்த பகுதியின ரிடமிருந்து எதிர்ப்பு எழும். எனவே இவ்விரு அமைப்பு களுக்குமிடையே முரண்பாடு சமுதாயத்தில் இனப் போராட்டத்திற்குக் (Class Struggle) காரணமாக அமையும். இது தவிர்க்க முடியாத ஒன்றாகும். இம் முரண்பாட்டினின்றும் எழும் போராட்டம் சம நிலைப்பட்ட பொதுவுடைமைச் சமுதாயம் எழும் போது இறுதியாக முடிவுறும் என்று மார்க்சு குறிப் பிடுகிறார். இவர் கருத்துகள் மேலும் முழுமை பெற உதவியவர் எங்கல்சு (Engels) என்பவராவார். மார்க்சு எழுதிய நூல்களுள் மிகப் பெருமை பெற் றது 'மூலதனம்' (Capital) பற்றியதாகும்.

மார்க்சியத் தத்துவத்தினை வரலாற்றுப் பின்ன ணியில் பொருளியற் கருத்துகளுடன் இணைத்து ஆராய்ந்ததன் விளைவாக எழுந்த ஒரு வாழ்க்கைத் தத்துவம் எனக் கருதுதல் பொருத்தமாகும். சம நிலைச் சமுதாயமும் (Socialist Society) அதன் பின் னர் முழுமையான பொதுவுடைமைச் சமுதாயமும் உல கில் எழுவது இன்றியமையாததுடன் தவிர்க்கவிய லாததுமாகும் என்பது மார்க்சியக் கருத்து. பொது வுடைமைச் சமுதாயம் எனப்படும் குறிக்கோட் சமு தாயத்தில் பல நிலைப்பட்ட, பொருளியல்சார் பிரிவுகளான இனங்கள் (Classes) இருக்க மாட்டா.

இச்சமுதாய உறுப்பினர்கள் யாவரும் ஒருங்கிணைந்து கூட்டுக் குழுவாகப் பொதுநலனுக் கென உழைத்துச் செயற்படுவர். இது தொழில் புரிவோர் சமுதாயமாகத் திகழும். சமுதாயத்தின் உற்பத்திப் பொருள்கள் யாவும் உறுப்பினர்களின் தேவைகளுக்கேற்பப் பங்கிட்டளிக்கப்படும். சுரண்டலற்ற இந்தச் சமுதாயத்தில் இன்று முக்கியமானவையாகக் கருதப்படும் அரசியல் கோட்பாடுகள், சட்டங்கள், பொருளாதாரக் கருத்துகள் போன்றன யாவும் தேவையும் பலனுமற்றுத் தாமாகவே மங்கி மறைந்தொழியும் என்று மார்க்சு கூறுகிறார்.

உருசிய மார்க்சியத்தத்துவத்தின்முக்கிய கொள்கைகளுள்ஒன்று நியதிவாதம் (Determinism) ஆகும். வரலாற்றுப் போக்கில் அடுத்தடுத்து எழும் தொடர் நிகழ்ச்சிகளுள் ஒவ்வொன்றும் திட்டவட்டமான விதிகளின் அடிப்படையில் எழுகின்றதென்றும், இதனை நன்கு அறிந்து கொண்டு மனித சமுதாயம் எதிர்காலத்தில் எத்தன்மையதாக உருவாகும் என்பதை முன்கூட்டியே ஊகித்துணரவியலும் என்றும் மார்க்சியம் நம்புகிறது. இவ்வாறு ஆராயும் போது, எதிர்கால உலகம் உழைப்போர்தம் (Working Class) முழு வெற்றியின் அடிப்படையில் அமையும் என்றும் இத்தத்துவம் வலியுறுத்துகிறது.

சமுதாய மாற்றம் நிகழும் திசையினை வரையறுக்கப்படும் முக்கிய காரணிகள் பொருளாதார வளர்ச்சிக் கூறுகளாகும் என்பது மற்றொரு கோட்பாடு. சமுதாயத்தில் பரவிவரும் சிந்தனைகள், சமூகத்தில் இயங்கிவரும் பல்வேறு நிலையங்கள், சட்டங்கள், அரசு முறைகள், பண்பாட்டுக் கூறுகள், சமயக் கோட்பாடுகள் போன்றவையும் சமூகப் பொருளாதார மாற்றத்தினைச் சார்ந்தே மாற்றமும், வளர்ச்சியும் பெறுகின்றன என்று மார்க்சும் அவரைச் சார்ந்தோரும் கருதுவர். இக்கோட்பாடு இன்றைய அறிவியல்–தொழில் நுட்பச் சமுதாயத்திற்கு மிகவும் பொருத்தமானதாகக் கருதப்படுகிறது. இன்றைய தொழில் நுட்பத் துரித முன்னேற்றம் தோற்றுவித்துள்ள மாபெரும் தொழிற் கூடங்களை நன்கு நிருவகிக்கச் சமுதாயக் கூட்டு முயற்சி தேவையாகும். மனித சமுதாய வரலாற்று வளர்ச்சியில் பொருளாதாரக் காரணிகளின் ஆதார முக்கியத்துவத்தை வலியுறுத்தும் மார்க்சியத் தத்துவம் இவ் வளர்ச்சியில் மனிதனது சிந்தனை, எண்ணங்கள் போன்றவற்றின் சிறப்புப் பங்கினைப் புறக்கணிப்பதாகக் கொள்ளக் கூடாது. இவ்வெண்ணங்கள், சிந்தனைகள் ஆகியவற்றின் தன்மையினையும் பொருளியற் காரணிகள் பாதிக்கின்றன என்பதே மார்க்சியவாதிகளது கூற்று. இக்காரணிகளின்செயற்பாடு மனித சமுதாய உயர் பண்புகளெனப்படும் தன்னலமின்மை, நாட்டுப் பற்று, சமய நம்பிக்கை போன்றன எவற்றிற்கும் உதவவல்லது எனப்படுகிறது. பொருளியற் காரணிகளை, உற்பத்திச் சாதனங்கள், பகிர்ந்தளிப்பு முறைகள், நுகர்வோர் தேவைகள் ஆகிய யாவற்றையும் உள்ளடக்கியதாகக் கருதினால், இக்காரணிகள் சமுதாயத்தின் பிற பகுதிகளின் வளர்ச்சியினைக் கட்டுப்படுத்தும் என்பதனை மறுக்க முடியாது. இதே போன்று, சமுதாயத்தின் பிற பகுதிகளில் புதிய திருப்பங்கள், மாற்றங்கள், தேவைகள் ஆகியன எழும்போது, இவை பொருளாதார அமைப்பிலும் மாற்றங்களைத் தோற்றுவிக்க வல்லன என்பதனை மறுக்கவியலாது. மற்றும், மனித வரலாற்றின் போக்கினைப் பொருளியற் காரணிகளின் அடிப்படையில் முழுமையாக விளக்க மார்க்சு முயற்சி மேற்கொள்ளாததும் குறிப்பிடத்தக்கது. பொருளியல் மாற்றங்கள் என மார்க்சு குறிப்பிட்டவை இம் மாற்றங்களினால் தோற்றுவிக்கப்படும் சடப் பொருள் மாற்றங்களே (Physical and Material Changes) என்று கொண்டால் இவை பிற வளர்ச்சிகளுக்கு அடிப்படைகளாகும் என்றும் இவற்றினைக் கொண்டு பிற துறைகளின் மாற்றங்களின் போக்கினை முன் கூட்டியே குறிப்பிடுதல் இயலும் என்றும் கருதலாம். ஆயினும், மனித வரலாறு முழுவதும் பொருளியற் காரணிகளின் பிரதிபலிப்பு எனக் கொள்வது, மனித இனத்தின் அறிவு மற்றும் ஆன்மிகச் சக்திகளின் தனித்தன்மைகளையும் வலுவினையும் அறவே புறக்கணிப்பதாக முடியும்.

மனித வரலாற்றின் போக்கும் வளர்ச்சியும் முரண் நிலைத் தருக்க முறைப்படி (Dialectics) அமைவதாக மார்க்சு கருதினார். சமுதாய அமைப்புகளுள் பழமைக்கும் புதுமைக்கும் நேரடி மோதல் ஏற்பட்டு, பழமைச் சின்னங்கள் முழுமையாக மறைந்தழிதல் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் காரணமாகும். இத்தகைய சமுதாய மோதல்களை ஓரளவு குறைக்கச் செயற்படுத்தப்படும் எந்த ஒரு சீர்திருத்தமும் உண்மையான சமூக முன்னேற்றத்திற்குத் தடையாகவே அமையும் என்று மார்க்சு கருதினார். படிப்படியாக மக்களிடையே மோதல்களைத் தவிர்த்து முன்னேறுவது என்பது மார்க்சியத் தத்துவத்திற்கு ஏற்புடைய கருத்தன்று. புரட்சியின் வழியேதான் உண்மையான, பயனுள்ள சமுதாய முன்னேற்றம் எழும். இதேபோன்று, புரட்சி வழியினை மட்டிலுமே மார்க்சு ஆதரித்தார் எனல் பொருந்தாது என்பதற்கான பல சான்றுகளும் அவர் நூல்களில் உள்ளன. தொழில் நுட்ப வளர்ச்சி மற்றும் அதனுடன் இணைந்த பொருளியற் காரணிகளால் தோன்றும்

படிப்படியான நேர்நிலைப்பட்ட சமூக வளர்ச்சி ஆகிய வற்றை அவர் ஏற்கிறார் என்பது தெளிவாகிறது.

இனப் போராட்டத்தின் (Class Struggle) இன்றியமையாமை மார்க்சியத் தத்துவத்தின் பிறிதொரு கோட்பாடாகும். முதலாளித்துவம் (Capitalism) முழுமையாக அழிவுற்றுச் சமுதாயத்தில் தொழிலாளர் ஆதிக்கம் நன்கு வேரூன்றும்வரை இப் போராட்டம் கட்டாயம் தொடர்ந்து நிகழும் என்று மார்க்சு கருதுகிறார். எனினும், இதேபோன்று மக்களாட்சிச் சமரசப் பண்புகளிலும் அவருக்கு நம்பிக்கை இல்லை என்று கூறவியலாது. முதலாளிகள் தமது நலனுக்கென முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளும் சுரண்டல் போக்கினை மாற்றப் புரட்சியும் போராட்டமும் வழிகளாகும் என மார்க்சு கூறியது அவர் வாழ்ந்த காலச்சமுதாய நிலைமைகளுக்குப் பொருத்தமாக இருந்தது.

மார்க்சியத் தத்துவம் உலகத் தொழிலாளர்களது ஒற்றுமை ஓங்கவும் சமுதாயத்தில் அவர்களுக்கு நீதி கிடைக்க உதவவும் பெருந்துணை புரிந்துள்ளது. தொழில் நுட்ப வள்ர்ச்சி, சமுதாயத்தின் பொருளாதார வளர்ச்சியில் புதிய உத்திகளைப் பயன் படுத்துதல், தொழிலாளர் தனித்திறன் வளர்ச்சி ஆகிய யாவற்றுக்கும் மார்க்சியத் தத்துவம் உதவியுள்ளது. மனித வரலாற்றில் பொருளியல் அமைப்பின் முக்கியத்துவத்தையும் செல்வாக்கினையும் இத்தத்துவம் தெளிவு படுத்தியுள்ளது. உருசிய நாடு இன்று உலகப் பெரும்வல்லரசு நாடாகக் குறுகிய காலத்தில் உயர்ந்து நிற்றலுக்கு மார்க்சியத் தத்துவம் முக்கிய தூண்டுகோலாக விளங்கியது. இன்று காரல் மார்க்சின் தத்துவத்தில் காலத்துக் கேற்ற சில புதிய கருத்துகள் புகுத்தப்பட்டு, புதிய மார்க்சியத் தத்துவங்கள் (Neo-Marxist Philosophies) தோன்றியிருத்தலும் கவனத்திற்குரியது. எஸ்.ச.

துணை நூல்கள்:

**Basil Dmytryshyn,** A History of Russia, Prentice Hall of India Pvt. Ltd., New Delhi, 1981.

**Berg, Lev. Semyonavich,** Natural Regions of the U.S.S.R, tr. by Olga Adler Titelbaum, ed. by John A. Morrison and C.C. Nikiforoff, Macmillan, London, 1950.

**Dewdney, John, C.,** The U.S.S.R., Dawsons of Pall Mall, England, 1976.

**Florinsky, Michael, T.,** Russia : Short History, Macmillan, London, 1969.

**Isabel de Madariaga,** Russia in the Age of Catherine the Great, Weidenfeld and Nicolson, London, 1981.

**Jagjit Singh Anand,** Soviet Union in World Affairs, Sterling Pub., New Delhi, 1977.

**Robert G. Wesson,** The Soviet Russian State, John Wiley & Sons Inc., New York, 1972.

**Valdimir Poletayev, Valentina Mironova Leonora Rutes,** A Short History of the U.S.S.R., Sterling Publishers Pvt. Ltd, New Delhi, 1976.

**உருட்டு வண்ணம்:** தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ள செய்யுள் உறுப்புகளுள் ஒன்று வண்ணம். வண்ணம் என்பதற்குப் ‘பாவின்கண் நிகழும் ஓசை விகற்பம்’ என்பது பொருள். வண்ணங்கள் 20 எனத் தொல்காப்பியர் வரையறுத்துள்ளார். அவற்றுள் உருட்டு வண்ணம் என்பது ஒன்றாகும். இது நிரை அசைகள் இரட்டை இரட்டையாக வர, முடுகி இயலும் சந்தமுடையது. இது அராகம் என்னும் கலிச்செய்யுளுறுப்பில் அமையும். ‘உருட்டு வண்ணம் அராகம் தொடுக்கும்’ என்று தொல்காப்பியர் (தொல். பொருள். செய்யுள். 223) குறிப்பிடுகிறார். (எ-டு) ‘தாதுறு முறிசெறி தடமல ரிடையிடை, தழலென விரிவன பொழில்’. அ.மா.ப.

**உருத்திரகோடிப் புலவர்** புராணச் சொற்பொழிவாளர்; தொண்டை நாட்டுக் காமக்கூரில் 1901-இல் பிறந்தார். இவர் தந்தை அரங்கசாமிப் பிள்ளை. இவர் பாரத, இராமாயணக் கதைச் சொற் பொழிவுகளை 4 ம நேரமும் கந்தபுராணச் சொற்பொழிவுகளை 3 முதல் 5 மாதம் வரையும் தொடர்ந்து செய்ய வல்லவர். இவர் நூலாராய்ச்சித் திறனும் கவிதை பாடும் புலமையும் பெற்றவர். சுகவாரி, சீர்திருத்தப்பாடல்கள் ஆகியன இவர் இயற்றிய செய்யுள் நூல்களாகும். இவர் தம் 42-ஆம் வயதில் சென்னையில் காலமானார். பி.தெ.

**உருத்திரங்கண்ணனார், கடியலூரர்** சங்க காலப் புலவர்களுள் ஒருவர். இவர் திருநெல்வேலி மாவட்டத்துக் கடியலூரைச் சேர்ந்தவர் என்பதும் சிவ வழிபாட்டினர் என்பதும் இவர் தம் பெயரால் அறியவருகின்றன. பத்துப்பாட்டில் இடம் பெற்றுள்ள பட்டினப்பாலையும் பெரும்பாணாற்றுப் படையும் இவரால் இயற்றப்பட்டவையே. பட்டினப் பாலை சங்க காலத்துச் சோழநாட்டின் துறைமுகமான காவிரிப்பூம்பட்டினத்தையும் பெரும்பாணாற்றுப்படை காஞ்சிபுரத்தையும் கவினுறத் தெளிவாக

விளக்கிக் காட்டி, அந்நகர்களில் வாழ்ந்த சங்க கால மக்களின் பல்வேறுபட்ட வாழ்வியலையும் படிப்போர் தம் மனக்கண்முன் வெளிப்படுத்துகின்றன. தென் பாண்டி நாட்டில் பிறந்த இப்புலவர் சோழநாடு, தொண்டை நாடு போன்ற ஏனைய தமிழகப்பகுதி மன்னர்களிடமும் மக்களிடமும் நற்புகழ் பெற்றிருந் தார் என்பது இவ்விரு நூல்களின்வழிப் புலனாகிறது. பட்டினப்பாலையின் கவிதைப் பெற்றியைப் பாராட்டிய சோழ மன்னன் இவருக்கு 16 இலட்சம் பொற்காசுகள் பரிசளித்தான் என்பர்.

இவர் பாடல்கள் அகநானூற்றிலும் குறுந்தொகை யிலும் ஒவ்வொன்று இடம்பெற்றுள்ளன. இவர் இயற்கையையும் மக்கள் வாழ்வையும் உள்ளவாறு பாடும் திறம் பெற்றவர். பி.தெ.

**உருத்திரசன்மன்** 'இறையனாரகப் பொருள்' எனப் பெயரிய அக இலக்கண நூலின் உரைகளைக் கேட்டுச் சிறந்த உரையிதுவென உணர்த்தியவர். இவர்உரை கேட்ட வரலாறு நக்கீரர் இயற்றியதாகக் கருதப்பெறும் இறையனார் களவியலுரையில் கூறப் பட்டுள்ளது. பாண்டியனின் வேண்டுகோளால் இறைவன் இயற்றிய களவியல் நூலைப் பெற்று உரை எழுதிய புலவர் பலரும் தத்தம் உரையே சிறந்ததென முரண்ணினர். அவர்கள் அரசன்பால் சென்று உரைகளைச் சீர்தூக்கி அறியவல்லார் ஒரு வரைத் தருமாறு வேண்டினர். அரசன் மீண்டும் இறைவனிடம் வேண்டி வரங்கிடக்க, இடையாமத்தில் வானொலியாக ஓர் உரை கேட்டனன். 'உப்பூரி குடிகிழார் மகனாவான் உருத்திர சன்மன் என்பான் பைங்கண்ணன், புன்மயிரன், ஐயாட்டைப் பிராயத் தான், ஒரு மூங்கைப் பிள்ளை உளன்; அவனை அன்னன் என்றிகழாது கொண்டுபோந்து, ஆசனத்தின் மேல் இரீஇக் கீழிருந்து சூத்திரப் பொருள் உரைத் தால் கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர் சிலிர்க் கும். மெய்யாயின உரை கேட்டவிடத்து. மெய்யல்லா உரை கேட்டவிடத்து வாளாஇருக் கும் அவன் குமார தெய்வம்; அங்கோர் சாபத்தி னால் தோன்றினான்'. இவ்வாறு இறைவனால் வானொலியாக அறிவிக்கப் பெற்றவன் உருத்திர சன்மன். புலவர்களும் உப்பூரி குடிகிழார்பால் சென்று நிகழ்ந்தது கூறி உருத்திரசன்மனைப் பெற்று வந்து, 'வெள்ளுடை உடுத்து, வெண்பூச்சூட்டி, வெண்சாந்து அணிவித்துக் கன்மாப் பலகையில் இருக்கச் செய்து தத்தம் உரையினை விரித்துரைத் தனர். மற்ற அனைவர் உரையும் கேட்டவிடத்து வாளாவிருந்த உருத்திரசன்மன், மருதன் இள நாகனார் உரைத்தபோது ஒரோவிடத்துக் கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர் சிலிர்க்க நின்றான். நக்கீரனார் உரை கேட்டவிடத்துப் பதந்தோறும் கண்ணீர் வார்ந்து, மெய்ம் மயிர் சிலிர்க்க நின்றான். அனை வரும் மகிழ்ந்து நக்கீரர் உரையே சிறந்த உரை என ஏற்றனர். இச்செய்தியும் இறையனார் களவியல் உரையில் கூறப்பட்டுள்ளது.

உருத்திரசன்மன் இறையனார் களவியலுக்கு உரை எழுதினார் என்று சிலர் கூறுவர் எனக் குறிப்பிடும் இவ்வுரை அதனை மறுத்து, 'அவர் செய்திலர் மெய்யுரை கேட்டார்' என்ற விளக்கமும் தந்துள்ளது. இறையனார் களவியலுரையில் குறிப்பிடப்பட்டுள்ள இத்தந்தை, மகன் ஆகிய இருவர் பெயரும் சங்கப் புலவர் வரிசையில் இடம் பெறவில்லை.

திருவள்ளுவ மாலையின் முதற்கண் வானொலிக் கூற்றாக அமைந்த வெண்பா 'திருத்தகு தெய்வத் திருவள்ளுவரோடு உருத்தகு நற்பலகை ஒக்க-இருக்க -உருத்திரசன்மர்' என்று ஓர் உருத்திரசன்மரைக் குறிப்பிடுகிறது.

அகநானூற்றினைத் தொகுத்தவன் 'மதுரை உப்பூரி குடிகிழான் மகனாவான் உருத்திரசன்மன்' என்று அதன் பாயிரத்தினைத் தொடர்ந்து அமைந் துள்ள குறிப்புக் கூறுகிறது. இவற்றில் குறிப்பிடப் பெற்ற உருத்திர சன்மர்கள் ஒருவரா பலரா என் பதனை உறுதி செய்து கூற இயலவில்லை. டாக்டர். உ. வே. சாமிநாதஅய்யர் தம் சிலப்பதிகாரப் பதிப் பில்,ஒரு சிலப்பதிகார ஏட்டில் கிடைத்ததாகக் குறிப் பிட்டுப் பதிப்பித்துள்ள நெடிய ஆசிரியப்பா 'முப் பாலுணரும் உப்பூரி குடிகிழார்-உருத்திர சன்மர்' என்று தந்தை மகன் ஆகிய இருவர் பெயரையும் குறிப்பிட்டுள்ளது. ஆனால், இப்பாடல் பிற்காலப் புலவரால் செய்யப்பட்டது என்பது அறிஞர்கள் கருத்து. தமிழிலுள்ள இரண்டு திருவிளையாடற் புராணங்களிலும் உருத்திரசன்மன் பற்றிய செய்திகள் சில வேறுபாடுகளுடன் இடம்பெற்றுள்ளன. அ.மா.ப.

**உருத்திரதாமன், முதலாம் (கி.பி. 130-150)** பண்டைய இந்தியாவில் அரசாண்ட சக வமிச அர சர்களுள் மிகுந்த புகழ் பெற்றவர். சகர்கள் உச்ச யினியை மையமாகக் கொண்டு வடமேற்கு இந்தி யாவை ஆண்ட மகாசத்திரப மரபினைச் சார்ந்த வர்கள். சாசுத்தானா (Chachtana) என்பார் இம் மரபினைத் தோற்றுவித்தவர் என்பர். அவர் பேரரே முதலாம் உருத்திரதாமன் (Rudradaman I) ஆவார்.

இவரைப் பற்றிய மெய்க்கீர்த்தியொன்று குச ராத்து மாநிலம் கிர்நாரில் (Girnar) கிடைத்துள்ளது.

இது சமசுகிருதச் செம்மொழியில் பொறிக்கப்பட்டுள்ளது. மெய்க்கீர்த்தியை வடமொழியில் பிராசசுட்டி (Prasasti) என்பர். இக் கல்வெட்டு சுதர்சன ஏரியைப் பற்றிய சுருக்கமான வரலாற்றைக் குறிப்பிடுகிறது. இதைக் கட்டியவர் சந்திரகுப்த மௌரியரின் மாநில ஆளுநர்களுள் ஒருவரான புசியகுப்தவைசியர் என்பது தெரிய வருகிறது. ஆனால், சுதர்சன ஏரி 16—11—150 - இல் ஏற்பட்ட கடும் புயலாலும் மழையாலும் வெள்ளத்தாலும் அடித்துச் செல்லப்பட்டது. வெள்ளச்சேதம் பற்றிய குறிப்பொன்றும் இக்கல்வெட்டில் குறிக்கப் படாமையால், இம் மெய்க்கீர்த்தி வெள்ளம் ஏற்படும் முன்னரே எழுதப்பட்டிருக்க வேண்டும். சுதர்சன ஏரியை முதலாம் உருத்திரதாமன் பழுது பார்த்து உறுதியாகக் கட்டினார்.

கிர்நார் கல்வெட்டிலிருந்து உருத்திரதாமனின் குணநலன்களையும் சாதனைகளையும் அறியலாம். உருத்திரதாமன் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசர் என்றும், போர்க்களத்தில் தவிரப் பிற இடங்களில் மக்களைக் கொல்லாதவர் என்றும், இவர் ஆட்சிப் பகுதியில் திருடர்கள், பாம்புகள், கடும்நோய்கள் போன்றவை அணுகவில்லை என்றும், இலக்கணம், அரசியல், இசை, அளவையியல் (Logic), போர்த்திறன் போன்ற கலைகளில் தேர்ந்தவரென்றும், இவர் எழுதிய உரைநடை, கவிதை போன்றவை தெளிவாகவும் இனிமையாகவும் சுவையாகவும் அழகாகவும் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் தன்மை படைத்தனவாகவும் இருந்தன வென்றும், தம் சொந்த முயற்சியாலேயே மகாசத்திரபர் என்னும் விருதினைப் பெற்றார் என்றும், அழகான உடற்கட்டையும் நெஞ்சுரத்தையும் பெற்றவர் என்றும், தம் மக்கள் மீது வரிகள், கட்டாயத்தொண்டு, கட்டாயக் கடன் போன்றவற்றை அச்சுறுத்தி வாங்காதவர் என்றும் அறியமுடிகிறது. இக் கல்வெட்டில் குறிப்பிடப்பெற்றுள்ள அனைத்தும் வரலாற்றுத் தொடர்புடையன என்று கொள்வது சரியாகாது. எனினும், அக்காலப் பண்பாட்டையும் நிருவாகம், இலக்கியம் போன்றவற்றையும் அறிய உதவும் சான்றாக இக் கல்வெட்டு பயன்படுகிறது. பிறசமயத்தவர் இந்துக்களாக மாறியதையும் இது குறிப்பிட்டுள்ளது.

இக்கல்வெட்டிலிருந்து உருத்திரதாமனது பேரரசின் எல்லையைத் தெற்றென அறியலாம். யவுதேயர்கள் (Yaudheyas), சதகர்ணி (Satakarni) போன்றவர்களை வென்றமையால் உருத்திரதாமனின் பேரரசு விரிந்து பெருகியது. இவர் சுதர்சன ஏரியைப் பழுது பார்த்தது குறிப்பிடத்தகுந்த வரலாற்றுச் செய்தியாகும். முதலாம் உருத்திரதாமன் சாதவாகன அரசர் வசிட்டிபுத்திர புலுமாயி (Vasishtiputira Pulumayi) என்பாரைத் தோற்கடித்து, அவரைப் பெருந்தன்மையுடன் நடத்தினார் என்ற செய்தியும் இக்கல்வெட்டில் இடம் பெற்றுள்ளது. தோற்ற பின்னரும் சாதவாகனர் நாசிக்குப் போன்ற பகுதிகளைத் தம்மிடமே கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

முதலாம் உருத்திரதாமனின் பேரரசு மாளவம், கத்தியவார், மார்வார், கட்சு, சிந்து, வடகொங்கணம் போன்ற பகுதிகளை உள்ளடக்கியிருந்தது. முதலாம் உருத்திரதாமன் கி.பி. 130 முதல் 150 வரை அரசாண்டிருக்கலாம் என்பது வரலாற்றறிஞர் கருத்தாகும். இவர் கலைகளையும் பண்பாட்டையும் புரந்தவர். சு. இரா.

**உருத்திர பசுபதி நாயனார்** சைவம் வளர்த்த 63 நாயன்மார்களுள் ஒருவர். இவர் வரலாற்றைச் சேக்கிழார் பெரியபுராணத்தில் சிறப்பித்து விளக்கியுள்ளார். இந்த நாயனார் சோழநாட்டுத் திருத்தலையூரில் அந்தணர் குலத்தில் தோன்றினார்.

எசுர்வேதம் ஏழு காண்டங்கள் கொண்டது. அதன் நான்காம் காண்டத்தின் நடுப்பகுதியில் உருத்திரம் உள்ளது. இது உருத்திர உபநிடதம் என்றும் கூறப்படும். ஆன்மாக்களின் பிறவித் தளை நீக்கி வீடு தரவல்லது என்று இம்மந்திரம் போற்றப்படுகிறது. வேத புருடனுக்கு உருத்திரம் கண்ணும் இதன் உட்பகுதியில் உள்ள பஞ்சாட்சரம் கண்மணியும் ஆகும்.

இவர் நாள்தோறும் விடியற் காலையில் எழுந்து, செந்தாமரைப் பொய்கையின் குளிர்ந்த நீரில் கழுத்தளவு மூழ்கி நிற்பார்; கைகளை உச்சிமேற் கூப்பி, உருத்திர மந்திரத்தைப் பலமுறை ஓதிச் சிவனை வழிபடுவார். இவர் புலனடக்கத்தோடு உருத்திர மந்திரத்தை இரவும் பகலும் வழுவாமல் ஓதி, உள்ளத்தில் ஒருமையற்ற தன்மையினை அறிந்து சிவன் மகிழ்ந்தார். காதலால் மறை ஓதும் அன்பரின் தவப் பெருமையையும், வேத மந்திரங்கள் இறைவனை அடைவிக்கும் சிறப்புடையன என்பதனையும் உலகோர்க்கு உணர்த்த சிவன் இவருக்கு அருள் செய்தார். பசுபதியார் கயிலாயத்தில் சிவனை வழிபடும் சிறப்புப் பெற்றார். உருத்திரம் ஓதி சிவன் திருவடி அடைந்த பெருமையால் உருத்திர பசுபதி நாயனார் என்று இவர் சிறப்பிக்கப்பட்டார். ஜி. ஆர்.கி.

**உருத்திரம்**: வேதங்களை இருக்கு, எசுர், சாமம், அதர்வணம் என நான்காகவும், அதர்வணம் நீங்கிய மூன்றாகவும் கொள்ளும் மரபுகள் உண்டு. அதர்வண வேதம் ஏனைய மூன்று வேதங்களினின்றும் தொகுக்

கப்பட்டதாகலின், அதனை நீக்கி மூன்றாகக் கொள்வர். அதனால், வேதங்களுக்குத் 'திரயீ' என்னும் பெயரும் வழங்கப்படுகிறது. மூன்று வேதங்களுள் இடைப்பட்டதான எசுர்வேதத்தின் நடுவில் அமைந்த பகுதி 'உருத்திரம்' என்பதாகும். இது திருவுருத்திரம் (ஸ்ரீருத்ரம்) என்றும் வழங்கப்பெறும். வடமொழியில் 'ஸ்ரீருத்ர ப்ரச்னம்', 'ஸ்ரீருத்ர சூக்தம்', 'ஸ்ரீருத்ரானுவாகம்' முதலிய பெயர்களாலும் இது குறிக்கப்படுகிறது.

எசுர்வேதம் ஏழு காண்டங்கள் கொண்டது. அவற்றுள் நடுவணதாகிய பதினோராம் அனுவாகத்தின் நடுவில் அமைந்த ஆறாம் சூக்தத்தில் திருவுருத்திர மந்திரம் உள்ளது. அதன் நடுவில் சீபஞ்சாட்சரமும் (திருவைந்தெழுத்து) அதன் நடுவில் 'சிவ' என்னும் திருநாமமும் அமைந்து விளங்குகின்றன. இந்த உயர்ந்த சிவமந்திரத்தினை வேத நடுவுள் விளங்கும் 'அட்சரத்துவயம்' (இரண்டெழுத்துக்கள்) என்று அறிஞர் போற்றுவர். இதனால், இந்த உருத்திரப் பகுதி மிக்க சிறப்புடையதாகும். இது ஆத்திகர்களால் வழிபாடு, வேள்வி முதலியவற்றில் போற்றிக் கொள்ளப்படுகிறது. நாள்தோறும் பாராயணம் செய்வதற்குரிய மந்திரப் பகுதிகளுள் ஒன்றாகவும் இது விளங்குகிறது.

இது உலக வாழ்வில் உண்டாகும் பந்தங்களை அகற்றி, மக்கள் வீடு பேறு அடைவதற்கு அமைந்த சாதனமாக உள்ளமையால், இதனை 'உருத்திரோப நிடதம்' என்றும் குறிப்பிடுவர். சிவபரம்பொருளாகிய உருத்திரனை நூற்றுக்கும் மேற்பட்ட வடிவங்களில் கண்டு போற்றுவதனால் இது 'சதருத்திரீயம்' என்றும் கூறப்படும். ஒரு மரத்தின் வேரில் நீர் சொரிந்தால் அதன் கிளைகள் அனைத்தும் செழித்து விளங்குவதுபோல, உருத்திர செபத்தினால் எல்லாத் தெய்வங்களும் மனநிறைவெய்துகின்றன என்று இதன் சிறப்பினைச் சூதசம்கிதை விளக்குகிறது.

கண்ணால் உடம்பு சிறப்படைவதுபோல, உருத்திரத்தைத் தன்னகத்தே கொண்டிருப்பதனால் வேதம் பெருமை பெறுகிறது என்றுஅறிஞர் கூறுவர். வேத புருடனுக்கு உருத்திரம் கண்ணாகும்; உருத்திரத்தினுள் ஒளிரும் பஞ்சாட்சரம் (திருவைந்தெழுத்து) கண்மணியாகும். 'இறைவனை 'நம நம' என்று வணங்கிப் போற்றுபவனை, எல்லாக் காமங்களும் வந்து வணங்கும்' என்று தைத்திரிய உபநிடதம் கூறுகிறது. அவ்வாறு இறைவனை வணங்குவதற்கு உருத்திரம் சிறந்த கருவியாகும். இந்த உருத்திரம் மந்திரமாகவும் பிராமணமாகவும் உபநிடதமாகவும் கருதத்தக்க சிறப்புடையது.

ஞானத்தின் முடிந்த நிலை இதனால் பெறப்படும். சிவபரம்பொருளின் வடிவத்தினை மனத்தில் தியானித்து, உருத்திரத்தினால் போற்றினால் எல்லா நன்மைகளும் கைகூடும். சிவபரம்பொருளே உலகில் காணும் உயிர்ப் பொருள்களாகவும் உயிரில் பொருள்களாகவும் விளங்குகிறது. திருடர் முதலிய கொடியவர் உடலிலும் சிவபரம்பொருள் உறைவதனை இது சிறப்புறக் காட்டியுள்ளது. சிவபரம்பொருள் உட்கார்ந்து கொண்டிருப்பவராகவும், படுத்திருப்பவராகவும் உறங்குபவராகவும் விழித்துள்ளோராகவும் நிற்பவர்களாகவும் ஓடுபவர்களாகவும் தச்சராகவும் குயவராகவும் வேடராகவும் இன்னபிறராகவும் விளங்குகிறது என்று இது குறிப்பிடுகிறது. எளிய தும்பை மலரும் ஊமத்தை மலரும் கூட அப்பரம் பொருளை வழிபட உதவும் என்பது இதன் கூற்று.

உருத்திரத்தின் முதல் அனுவாகம் இறைவனுக்கு மாறாக நடந்தவர்முன்னும் அவர் தோன்ற வேண்டுமென்று வேண்டுகிறது. இரண்டாவது முதல் ஒன்பதாவது முடிய உள்ள அனுவாகங்கள் இறைவனின் பல்வேறு இயல்புகளைக் குறித்தமைந்த பெயர்களால் அவனை வணங்குவனவாக அமைந்துள்ளன. பத்தாம் அனுவாகம் தம் முன்னர்த் தோன்றிய இறைவனிடம் தம் விருப்பத்தை நிறைவு செய்யவும், வேண்டாதவற்றை நீக்கவும் இறைஞ்சும் வேண்டுகோளாக அமைகிறது. பதினோராம் அனுவாகம் உருத்திர கணங்களுக்கு வணக்கம் கூறுவதாக உள்ளது.

சிவபரம்பொருளாகிய உருத்திரமூர்த்தியின் வடிவங்கள் அனைத்தையும் கோர வடிவம், சாந்த வடிவம் என இருவகையில் அடக்கலாம். கோர வடிவம் பிறவிப் பிணிக்கு மருந்தாகவும் சாந்த வடிவம் சிவத்துவ விளக்கத்திற்கு ஏதுவாகவும் அமையும் என அறிஞர் கூறுவர். திருவுருத்திரத்தில் அமைந்துள்ள நமக மந்திரங்கள் கோர வடிவையும் சமக மந்திரங்கள் சாந்த வடிவையும் துதிப்பனவாக அமைந்து, இருவகைப் பயன்களையும் நல்குவனவாக விளங்குகின்றன.

உருத்திர செபம் செய்வோர் அதனை ஐந்து முறையில் மேற்கொள்வர். பொதுவாக உருத்திரத்தினைப் பாராயணம் செய்து, பின் அதன் சமகத்தைப் பாராயணம் செய்வது மேற்கொள்ளப்படும். சிறப்பாகப் பின்வரும் பாராயண முறை மேற்கொள்ளப்படும். ஒருமுறை உருத்திரத்தின் பதினோர் அனுவாகத்தையும் செபித்த பின்னர்ச் சமகத்தின் முதல் அனுவாகத்தைச் செபிக்க வேண்டும். இவ்வாறே உருத்திரத்தைப் பதினோரு முறை செபித்த பின்னர்ச் சமகத்தின் பதினோர் அனுவாகங்களும் பாராயணம்

செய்யப்படும். இது 'உருத்ரைகாதசனி' என்று கூறப்படும். இவ்வாறு பதினோர் உருத்ரைகாதசனி பாராயணம் செய்யப்பட்டால் அது ஓர் இலகுருத்திரம் என்றும், அவ்வாறு பதினோர் இலகுருத்திரம் பாராயணம் செய்யப்பட்டால் அது ஒரு மகாருத்திரம் என்றும் அவ்வாறு பதினோரு மகாருத்திரம் பாராயணம் செய்யப்பட்டால் அது ஓர் அதிருத்திரம் என்றும் கூறப்படும்.

நிற்பனவும் நடப்பனவும் ஆகிய உயிர்ப்பொருள் உயிரில் பொருள் எல்லாவற்றிலும் இறைவன் பாகுபாடின்றி, அவையேயாய்க் கலந்து நிற்றல் பற்றி இறைவனை விசுவரூபனாகவும் விசுவேசனாகவும் புகழ்ந்து, உருத்திரம் அவனுக்கு வணக்கம் கூறுகிறது. பெரியபுராணத்தில் இடம்பெறும் உருத்திர பசுபதி நாயனார் இந்த உருத்திரத்தைப் பாராயணம் செய்து சிவப்பேறு பெற்றவராவார். அவர் இந்த உருத்திர மந்திரத்தினைக் கழுத்தளவு நீரிடை நின்று, புலனடக்கி ஓதி வழிபட்டார் எனப் பெரிய புராணம் குறிப்பிடுகிறது (காண்க. உருத்திரபசுபதி நாயனார்). சேக்கிழார் உருத்திரத்தினை, 'ஆய அந்தணர் அருமறை உருத்திரம்' என்றும், 'அருமறைப் பயனாகிய உருத்திரம்' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தமிழில் அமைந்துள்ள சிவஞானபோத நூலின் முதல் நூற்பா 'அரனே முதற்கடவுள்' என்னும் உண்மையைத் தெளிவுபடுத்துகிறது. அவ்வாறே உருத்திரம், உருத்திரனே பரமன் ஆவான் என்னும் உண்மையை விரிவாகவும் விளக்கமாகவும் குறிப்பிட்டு அவனுக்கு வணக்கம் கூறுகிறது. திருநாவுக்கரசர் அருளிய, 'இருநிலனாய்த் தீயாகி நீருமாகி' எனத் தொடங்கும் நின்ற திருத்தாண்டகம், சிவபரம்பொருள் இயங்கியல் நிலையியற் பொருள் ஆகிய அனைத்திலும் கலந்து நிற்கும் பாங்கினை விளக்கிப் போற்றுகிறது. இத்திருத் தாண்டகம் உருத்திரத்தின் வழிவந்தது என்று சிலர் குறிப்பிட்டுள்ளனர். நின்ற திருத்தாண்டகம், உருத்திரம் ஆகிய இரண்டினையும் நன்கு கற்று ஆராய்வோர் அவற்றினிடையே விளங்கும் நுட்பமான வேறுபாட்டினை உணர்தல்கூடும்.

வடமொழி வேதங்களில் உருத்திரம் பெற்றுள்ள இடத்தையும் சிறப்பையும் அறிந்த ஆய்வாளர்கள், தமிழ் மறையாகிய திருமறையிலும் அத்தகையதொரு சிறப்பு விளங்குவதனைக் கண்டு காட்டியுள்ளனர். வடமொழியில் வேதங்கள் நான்கு என்றும் மூன்றுஎன்றும் கூறப்படும் மரபிற்கேற்ப, தமிழ் வேதங்களும் நால்வர் அருளிச் செயல்களையும் (தேவாரம், திருவாசகம் திருக்கோவையார்) மூவர் தேவாரத்தையும் நான்கு மூன்று என்ற எண்ணிக்கையில் அமைத்துப் போற்றும் மரபுண்டு. மூவர் தேவாரங்களுள் இடையில் விளங்குவது அப்பர் தேவாரமாகும். அவர்தம் தேவாரத் திருமுறைகளுள் இடையில் நிற்பது ஐந்தாம் திருமுறையாகும். அத்திருமுறையின் நடுவே 51-ஆம் பதிகமாக இருப்பது திருப்பாலைத் துறைப் பதிகமாகும். அப்பதிகத்தின் நடுவில் அமைந்துள்ள 6-ஆம் பாடலுள் 'சிவாய' என்னும் பாசம் நீங்கிய சீபஞ்சாட்சரம் (திருவைந்தெழுத்து) இடம்பெற்றுத் திகழ்கிறது. வடமொழித் திருமறையிலும் தமிழ்மொழித் திருமுறையிலும் சீபஞ்சாட்சரம் இவ்வாறு அமைந்துள்ள சிறப்பின் அருமையை உணர்ந்து அறிஞர் போற்றியுள்ளனர். அ.மா.ப

**உருத்திரமாதேவி (கி.பி. 1259-95)** தக்காணத்தில் வாரங்கல்லை ஆண்ட காகதீய அரசியார். உருத்திரமாதேவி (Rudramadevi) கணபதிதேவரின் மகள். இவளுக்கு உருத்திராம்பா, உருத்திராம்பதேவி, உருத்திராதேவா என்னும் பல பெயர்கள் உண்டு. இவர் கி.பி. 1259-இல் கணபதிதேவரைஅடுத்து அரசியாக முடி சூட்டிக் கொண்டார். இவருடைய தொடக்ககால ஆட்சியின்போது கோப்பெருஞ்சிங்கரும் ஏனைய குறுநில மன்னர்களும் பல தொல்லைகள் கொடுத்தனர். ஆனால், அனைத்துத் தொல்லைகளையும் அரசிக்கு உறுதுணையாக இருந்த காயசுத்தத் தலைவர் அம்பதேவர் அடக்கிவிட்டார். யாதவத் தலைவரான மகாதேவர் இவருக்கு எதிராகப் படையெடுத்துத் தோற்றுப் போனார். எனினும், மகாதேவருக்குப் பின்னரும் யாதவர்களுடன் இருந்த தொல்லை தொடர்ந்தது. இவர்தம் பேரர் பிரதாபருத்திரதேவர் இப்போர்களில் வெற்றிவாகை சூடினார். இவர் பிரதாப ருத்திர தேவரை இளவரசராக கி.பி. 1280-ஆம் ஆண்டில் நியமித்தார். எட்டாண்டுகளுக்குப் பின்னர் அம்பதேவரும் ஒய்சலர், யாதவர் போன்றவர்களின் துணையோடு இவர் மீது போர் தொடுத்தார். ஆனால், பிரதாபருத்திரர் அதனையும் கி.பி. 1291-இல் அடக்கி ஒடுக்கினார். உருத்திராம்பா கி.பி. 1295-இல் காலமானபோது இவருடைய பேரர் இரண்டாம் பிரதாபருத்திரர் என்னும் பெயருடன் முடிசூட்டிக் கொண்டார். இரா.அ.

**உருத்திரவர்மன்** தென்கிழக்கு ஆசியாவில் இருக்கும் இந்தோ-சீனாத் தீபகற்பத்தில் பூனான் **(Funan)** என்னும் பகுதியை ஆண்ட மன்னர். இவரை, 'பதவியைப் பறித்துக் கொண்டவர்' என இகழ்வர். இவர் காலத்தில் உள்நாட்டுக் குழப்பங்கள் மிகுந்திருந்தன. எனினும், இவர் ஆறு தூதுக் குழுக்களைச் சீனாவிற்கு கி.பி. 514-க்கும் 539-க்கும் இடைப்பட்ட காலத்தில் அனுப்பினார் என்பது தெரியவருகிறது. தென்பாகத்திலிருந்து படையெடுத்த கெமர் (Khmer)

அரசின் தாக்குதல்களின் விளைவாக இவர் கி.பி 540–ஆம் ஆண்டளவில் பதவியை இழந்தார்.

இரா.அ.

**உருத்திரனார்** சங்க காலப் புலவர்களுள் ஒருவர். இவர் பெயர் உருத்திரன் என்றும் குறிக்கப் பட்டுள்ளது. இவரது ஒரே பாடல் குறுந்தொகை 274–ஆம் பாடலாக அமைந்துள்ளது. பாலைத் திணையிலமைந்துள்ள அப்பாடல் பொருள் வலித்த தன் நெஞ்சிற்குத் தலைவன் கூறுவதாக உள்ளது. அப்பாடலில் இவர், விடுகணைகளை வில்லொடு பற்றி, மரக்கிளையில் ஏறி, அவ்வழியே வருபவர்களைத் தாக்கிப் பறித்தற்கு எதிர்நோக்கியிருக்கும் வன்கண் ஆடவர் 'நீர் நசை வேட்கையின் நார் மென்று தணி யும் இன்னாக் கானம்' என்று பாலை நிலத்தின் வெம்மைக் கொடுமையினைக் கவின் பெறக் காட்டி யுள்ளார்.

அ.மா.ப.

**உருத்திராட்சம்** என்பது கண்மணிபோல் உருண்டை வடிவில் அமைந்த ஒருவகை மரத்தின் கொட்டையாகும். இதன் மேலமைப்பு கண்ணீர்த் துளிகள் சிதறிக் கிடப்பன போன்று சிறுசிறு உருண்டை களால் பொதியப்பட்டுக் காணப்படும். கொட்டை கடினமாகவும், நீளத்தில் பள்ளங்கள் உள்ளதாகவும், மேலெல்லாம் கோணலான கரடுகள் உள்ளதாகவும் இருக்கும். சாதாரணமாக 5 அறைகள் இருக்கும். ஒவ்வோர் அறையின் வெளிப்புறத்தை ஒரு முகம் என்பர். சிலவற்றில் 6 முதல் 13 முகம் வரையிலும், வேறு சிலவற்றில் 1 முதல் 5 முகம் வரையிலும் இருக் கும். மணிகள் ஆறுமுகம் அல்லது அதற்கு மேற்பட்ட முகங்களுள்ளவையும், ஐந்துக்குக் குறைந்த முகங்கள் உள்ளவையும் மேம்பட்டவையாகக் கருதப்படும்.

முப்புரங்களை எரிக்க எழுந்த உருத்திரனுடைய சினமிக்க கண்ணிலிருந்து வந்த ஓர் அமுதத் துளியி னின்றும் இந்த மணி உண்டானதால் இது உருத்தி ராட்சம் என்று பெயர் பெற்றதென்றும், இதை அணி வோர் பாவங்கள் நீங்குமென்றும் சைவர்கள் நம்பு கின்றனர். இதன் பெருமையைச் சாபால உபநிடதம், கந்தபுராணம், உபதேச காண்டம், சூத சாங்கிதை, பெரிய புராணம் முதலிய நூல்கள் கூறுகின்றன.

இது சைவ சமயத்தின் புனிதச் சின்னங்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. இதனை அணிவோர் கொல்லாமை, புலாலுண்ணாமை, அருளுடைமை போன்ற விரதங்களை மேற்கொண்டொழுக வேண் டும் என்பது வலியுறுத்தப்படுகிறது.

இரா.கோ

**உருதுமொழி** இந்தோ–ஆரிய மொழிக் குடும் பத்தைச் சார்ந்தது. இது பிற்காலத்தில் தோன்றிய மொழி ஆகும். முசுலிம்கள் இந்தியாவிற்குள் நுழைந்த போது தங்களுக்கென ஒரு மொழியையும் உடன் கொண்டு வந்தனர். அம்மொழி அராபிய, பாரசீக, துருக்கிய மொழிகளின் கலவையாலானது. இந்தியா விற்குள் நுழைந்த முசுலிம் படை தில்லியிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் குடியேறியது. முதலில் மொழி தெரியாத காரணத்தால், மக்களுடன் உரையாட அவர்கள் மிகவும் துன்பப்பட்டனர். இச்சிக்கலைத் தீர்க்கக் 'கடிபோலி' என்னும் புதிய மொழியை உரு வாக்கி, அதற்குத் தங்களின் பாரசீக எழுத்து வடிவத் தைத் தந்தனர். அம்மொழியை 'உருது' எனக் குறிப் பிட்டனர். 'உர்தூ' என்னும் துருக்கிமொழிச் சொல் லுக்கு இராணுவ இருப்பு என்பது பொருளாகும். இம் மொழியை இதே பொருளில் 'இலசுகர் மொழி' என வும் குறிப்பிட்டனர்.

இம்மொழி பாகிசுத்தானில் ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இந்திய அரசியல் சட்டப்படி (1950) ஏற்றுக்கொள்ளப்பட்ட 15 இந்தி யத் தேசிய மொழிகளுள் இதுவும் ஒன்று. இது இந்தி யாவில் சம்மு–காசுமீர் மாநிலத்தில் மட்டும் ஆட்சி மொழியாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. பீகார் மாநிலத்தில் இது இரண்டாம் ஆட்சி மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. உருது பேசும் மக்கள் இந்திய மாநிலங்கள் எல்லாவற்றிலும் பரந்து வாழ் கிறார்கள். அங்கெல்லாம் அவர்களுடைய தொகை சிறுபான்மையாக உள்ளது. இந்தியா, பாகிசுத்தா னைத் தவிர ஆப்கானிசுத்தான், பர்மா, இந்தோனே சியா, ஈரான், ஈராக்கு, மலேசியா, மொரீசியசு, சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலும் இதைப் பேசுபவர்கள் உள்ளனர்.

உருது மொழியில் வரலாற்றுக் காரணங்களால் பார்சி, அரபு மொழிகளின் செல்வாக்குப் பலவகை யில் இடம்பெற்று இருந்தாலும், இலக்கண முறையில் இது முற்றிலும் ஓர் இந்திய மொழியாகவே திகழ் கிறது. உருதுச் சொற்களின் புள்ளிவிவரப்படி இம் மொழியில் இந்திய மொழிச் சொற்கள் 73.45 விழுக்காடும், பார்சி, அரபுச் சொற்கள் 25.55விழுக் காடும், மற்ற ஐரோப்பிய மொழிகளின் சொற்கள் 1 விழுக்காடும் அமைந்துள்ளமை தெரியவருகிறது. ஆகையால் இது அடிப்படையில் ஓர் இந்திய மொழியே என்பதில் ஐயமில்லை.

உருதுவில் மொத்த எழுத்துகள் 37. இது பார்சி, அரபு மொழிகளின் வரிவடிவத்தில் எழுதப்படுகிறது. இதன் நெடுங்கணக்கும் பார்சி, அரபு மொழிகளி லிருந்து கடன் வாங்கப்பட்டதாகும். சில இந்திய மொழி ஒலிகளுக்குரிய எழுத்துகள் புதிதாக இதில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன.

உருது மொழியின் தோற்றம் பற்றி மொழியிய லாளர்களிடையே கருத்து வேறுபாடுகள் காணப்படு கின்றன. சிலர் பஞ்சாபி மொழியிலிருந்து தோன்றி யது என்ற கருத்தை வெளியிட்டனர். சிலர் பாலி மொழியிலிருந்து வந்தது என்று கூறினர். ஆனால் பெரும்பாலான மொழியியலாளர்களின் கருத்தின் படி இதற்கு மூலம் கடிபோலி(Khari Bo li) மொழி யாகும். கடிபோலி என்பது தில்லியிலும் அதன் கிழக்குப் பகுதியிலும் பேசப்பட்டுவரும் மொழி. அது மேற்கு இந்தியாவின் கிளை மொழிகளுள் ஒன்று. அதிலிருந்து தோன்றியவையே உருதுவும் இந்தியும். இரண்டையும் சேர்த்து இந்துசுத்தானி என்று கூறு வர். உருதுவின் மூலமும் இந்தியின் மூலமும் ஒன்றே. ஆனால் வரலாற்றுக் காரணங்களால் இவை தனித் தனி மொழிகளாக வளர்ந்து விட்டன.

வரலாறறு முறையாகப்பார்த்தால் இந்தியாவின் வடபகுதிக்கு முசுலிம்கள் முதன்முதலாக வந்த காலத் திலிருந்து இந்த மொழி தன் உருவத்தைப் பெறத் தொடங்கியது எனலாம். புதிதாக வந்த முசுலிம்கள் இந்திய மக்களின் தொடர்புக்கும் நட்புக்கும் ஒரு கருவியாக இதனைப் பயன்படுத்தினர். அவர்களி டையே கருத்துகளைப் பரிமாறுவதற்கு ஏற்பட்ட ஒரு பொது மொழியின் இன்றியமையாமையை இது நிறை வேற்றியது. அவர்கள் தம் மொழியின் சில சொற்களை யும் சில இந்திய மொழிச் சொற்களையும் பயன்படுத் தித் தம்மை அறியாமலேயே ஒரு புதுமொழி தோன்று வதற்கு வழி வகுத்தனர். அதுவே படிப்படியாக வளர்ச்சி பெற்று உருது என்னும் பெயர் பெற்றது. ஆகையால் இந்தியப் பண்பாடும் முசுலிம் பண்பாடும் இணைந்தமைவதற்கு ஒரு பாலமாக உதவியது என்று இம்மொழியைச் சொல்லலாம். கட்டடக்கலை,இசை, ஓவியம் போன்ற பல துறைகளில் காணப்படும் இந்து -முசுலீம் கூட்டிணைப்பு உருதுவிலும் காணப்படுகிறது. இதில் பல மொழிகளின் சொற்கள் இணைந்துள்ளன. அரபு, பாரசீகம், துருக்கி, சமசுகிருதம், ஆங்கிலம் போன்ற பல மொழிகளின் சொற்களும் இம்மொழி யில் கலந்துள்ளன.

இம்மொழிக்கு உருது என்ற பெயர் மொகலாய மன்னர் சாசகானுடைய (Shah Jahan) காலத்தில் (கி.பி.1627-1658) உண்டாயிற்று. இதற்கு முன்னர் இது பல பெயர்களால் கூறப்பட்டு வந்தது. இந்துயி (Hin-dui), இந்தவி (Hindavi), சபானே இந்தி (Zaban-e-Hindi), சபானே தெகலவி (Zabane Dehlavi), சபானே இந்துசுத்தான் (Zabane Hindustan), சபானே உர்துயே முயல்லா (Zabane Urdu -e- Mualla), இரீக்தா (Rekhta), மூர் (Moore), இந்தோசுத்தான்(Indostan), இந்துசுத்தானி ஆகிய பல பெயர்களால் இது குறிப் பிடப்பட்டு வந்தது.

சுல்தான் அலாவுதீன் கில்சி (கி.பி.1296-1316)காலத் தில் அரசாங்க எல்லை தென் இந்தியா வரை பரவி யது. அப்பொழுது தில்லியிலும் அதன் சுற்றுப்புறத்தி லும் பேசப்பட்டு வந்த இம்மொழியைத் தென்னிந்தி யாவில் நுழைப்பதற்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தது. தென்னிந்தியாவில் இம்மொழி நுழைவதற்கு மற் றொரு நிகழ்ச்சி பெரும் உதவியாக இருந்தது. அது முகம்மது துக்ளக்கு (கி.பி.1325-1351) ஆட்சிக்காலத்தில் இந்தியாவின் தலைநகரம் தில்லியில் இருந்து தென் னிந்தியாவில் தேவகிரி (தௌலதாபாது)என்ற நகரத் துக்கு மாற்றப்பட்டது. பின்னர்த் தில்லி ஆட்சியி லிருந்து விடுதலை பெற்ற கோல்கொண்டா அரசும் பீசப்பூர் அரசும் உருது மொழியின் வளர்ச்சிக்குப் பெரும் உதவியாக விளங்கின. தென்னிந்தியாவில் பாரசீக மொழிச் செல்வாக்கு இல்லாததால், வட இந்தியாவில் தோன்றுவதற்கு முன்னரே தென்னிந்தி யாவில் உருது மொழியில் இலக்கியங்கள் தோன்றி விட்டன. தென்னிந்தியாவில் வழங்கிய இம்மொழி யைத் 'தக்கணி உருது' (தென்னாட்டு உருது) என்ற பெயரால் வழங்கினர். தக்கணி உருதுவில் முதன் முதலாக எழுதப்பட்ட நூல் 'மேராசுல் ஆசிகைன்' (Merajul Ashiqain) என்பதாகும். இது உருதுவிலும் முதல் நூலாகக் கருதப்படுகிறது. இதன் ஆசிரியர் காசா பந்தே நவாசு கேசுத்ராசு (கி.பி.1321-1422) முகம்மது துக்ளக்கு ஆட்சிக் காலத்தில் குல்பர்கா நக ரத்தில் வாழ்ந்தவர் ஆவர்.

இப்பொழுது தக்கணி உருது இம்மொழியின் ஒரு கிளைமொழியாகக் கருதப்பட்டுப் பேச்சு மொழியாக மட்டும் பயன்படுத்தப்படுகிறது. வட இந்தியாவில் பேசப்படுகிற உருது மொழிக்கும் தென்னிந்தியாவில் பேசப்படுகிற உருது மொழிக்கும் வேறுபாடு உள்ள தால், தென்னிந்திய உருதுமொழியாகிய தக்கணி உருதுவைத் தனிப் பேச்சு மொழியாகப் பாகுபடுத்தி யுள்ளனர். ஆனால், எழுதுவதற்கு வட இந்தியாவில் பேசப்படுகிற உருது மொழியையே பயன்படுத்தி வரு கின்றனர். பேச்சு வழக்கில் இரண்டுக்கும் இடையி லுள்ள ஒரு முதன்மையான வேறுபாடு குறிப்பிடத் தக்கதாகும். தக்கணி உருதுவில் வினைச் சொல் எழு வாயின் பாலையும் எண்ணையும் உடையதாயிருக்கும். செயப்படுபொருள் குன்றா இறந்தகால வினைச் சொல்லின் முன்னால் எழுவாயுடன் 'நே' வருவது தக்கணி உருதில் இல்லை.

தக்கணி உருது சுற்றுப்புறத்தில் பேசி வருகிற திராவிட மொழிகளின் செல்வாக்கையும் உள்ளடக்கி

யுள்ளது. தென் மாநிலங்களில் வழங்கிவரும் தக்கணி மொழி அந்தந்த மாநிலப் பெயர்க்கு ஏற்றவாறுபெயர் பெற்று விளங்குகிறது. இதனை ஆந்திராவில் ஆந்திரத் தக்கணி என்றும், கருநாடகத்தில் கருநாடகத் தக்கணி என்றும், தமிழ் நாட்டில் தமிழ்நாட்டுத் தக்கணி (மதராசு தக்கணி) என்றும் குறிப்பிடுகின்றனர். பொதுவாக இலக்கண அமைப்பில் வேறுபாடு காண முடியாது. ஆனால், பல சொற்களும் மரபுத் தொடர்களும் அந்தந்த மாநில மொழியின் செல்வாக்கைப் பெற்றுள்ளன. ஹ.பா.

**இலக்கியம்:** உருது கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் மக்கள் பேசும் மொழியாகியது. கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் பல்வேறு இலக்கியங்களும் கவிதைகளும் இம்மொழியில் தோன்றலாயின. மீர் அம்மான், முகம்மது உசைன் ஆசாத்து, நிகல்சந்து, முன்சி பியாரி, அல்தாபு உசைன் போன்றோர் உருது இலக்கிய வளர்ச்சியில் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

உருது மொழியில் பல்வேறு இசுலாமிய இலக்கியங்கள் உருவாக்கப்பட்டன. இசுலாமிய நெறியின் வரலாற்றினை அடியொற்றியும் இசுலாமியக் கொள்கை விளக்கங்களாகவும் அச்சமயத்தின் அறிவுரைகளாகவும் எண்ணற்ற இலக்கியங்கள் இம்மொழியில் வெளிவரலாயின. உருது இலக்கிய ஆசிரியர்கள் அரபு மொழியிலுள்ள பல்வேறு சிறந்த நூல்களையும் இம்மொழியில் பெயர்த்தனர். இன்று உருது இலக்கியங்கள் இந்திய இலக்கிய வரலாற்றில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளன.

இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட இசுலாமியத் தமிழிலக்கியத்தில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க எண்ணிக்கையில் அமைந்த இலக்கியங்கள் உருது இலக்கியங்களை மூலமாகக் கொண்டமைந்த மொழிபெயர்ப்பு நூல்களே எனலாம். தமிழகத்தில் உள்ள முசுலிம் புலவர்கள் உருது மொழியில் அமைந்துள்ள இசுலாம் தொடர்பான இலக்கியங்களைத் தமிழாக்கம் செய்தனர். இதன் பயனாக இசுலாமியத் தமிழிலக்கியத்தில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் உருது இலக்கியங்களின் மொழிபெயர்ப்புகள் இடம் பெற்றுள்ளன.

உருது இலக்கியத்தின் பயனாக இசுலாமியத் தமிழ் பெற்றுள்ள இலக்கியங்கள் அனைத்தையும் இங்குச் சுட்டிக்காட்டுதல் இயலாததாகும். ஆனால் அவற்றைச் சில தலைப்புகளில் வகைப்படுத்திக் காட்ட இயலும். அவை: இசுலாம் சமயத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை எடுத்துக் கூறுபவை, வரலாற்றுத் தொடர்பானவை, பெருமானார் நபிகளின் (சல்) வாழ்வியலுடன் தொடர்பானவை, இசுலாமியத் தத்துவத் தொடர்பானவை, பிற கவிதைகள் ஆகியன வாகும்.

'ஆகீதயே இசுலாம் சம்சூல் இசுலாம்' என்னும் நூல் இசுலாம் நெறியின் வரலாற்றையும் அது பல்வேறு நாடுகளில் எவ்வாறு வளர்ச்சியுற்றது என்பதையும் விரிவாக ஆராய்கிறது. அதனை முகம்மது அப்துல்லா என்பவர் கி.பி. 1892-இல் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார். பெருமானாரின் (சல்) புகழையும்பாக்தாதில் நல்லடக்கம்செய்யப்பெற்றுள்ள முகியித்தீன் ஆண்டவர் புகழையும் சிறப்பிக்கும் 'மின் ஊசுசமாத் பிடார்மு சாதுல்சுபாத்து' என்னும் நூலை அகமது மௌலவி 1924-இல் மொழிபெயர்த்துள்ளார்.

உருது மொழியில் இசுலாமியத் தத்துவம் தொடர்பான நூல்களுள் குறிப்பிடத்தக்கது இமாம் கசாலியின் கீமீயாயெச ஆதத்து' என்பதாகும். இவ்விலக்கியத்தின் நான்கு தொகுதிகளையும் நெல்லிக்குப்பத்தைச் சார்ந்த அப்துர் இரகுமான் என்பவர் தமிழில் பெயர்த்துள்ளார். கீமியாயெச ஆதத்தின் முதல் தொகுதி 1906-இல் வெளியிடப்பட்டுள்ளது. இதில் தொழுகை முதலியவற்றின் தத்துவநுட்பங்கள் விவரிக்கப்பட்டுள்ளன. இந்நூலின் இரண்டாம் பகுதி அப்துர் இரகுமான் என்பவரால் 1908-இல் வெளியிடப்பட்டது. இப்பிரிவில் பத்துப் பகுதிகள் உள்ளன. ஒவ்வொரு பகுதியும் இசுலாமியர்களின் பழக்க வழக்க ஒழுகலாறுகளை விவரிக்கிறது. மூன்றாம் பகுதி 1911-இல் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இதில் இசுலாமியர்கள் தீயவற்றை அகற்றுவதற்கு மேற்கொள்ள வேண்டிய நெறிமுறைகள் விவரிக்கப்பட்டுள்ளன. நான்காம் பகுதி 1912-இல் வெளிவந்துள்ளது. மனிதன் அல்லாவை வணங்கி, அதன் பயனாகப் பேரானந்தத்தையும் இவ்வுலகில் அவன் பெற வேண்டிய பேறுகளையும் விளக்கிக் காட்டுவது இந்நூல். இவைபோன்று எண்ணற்ற நூல்களை முசுலிம் தமிழ்ப் புலவர்கள் உருதுமொழியை அடியொற்றித் தமிழில் அளித்துள்ளார்கள்.

இக்காலத்தில் குறிப்பாக உருதுக் கவிஞர் காலி, தர்து, சௌக்கு, அக்பர் இலாகி, மகாகவி அல்லாமா இக்பால் போன்றோரின் கவிதைகள் பல தமிழாக்கம் பெற்றுள்ளன. சி.ந.

**இலக்கியவரலாறு:** உருதுமொழி தில்லியிலும் அதன் சுற்றுப்புறத்திலும் தோன்றி வளர்ந்தாலும், அதன்இலக்கிய வளர்ச்சி தெற்கேதக்காணத்தில்தான் ஏற்பட்டது. இதற்குக் கீழ்க்காணும் இரு வரலாற்று நிகழ்ச்சிகளைக் கூறலாம்:

**1.** அலாவுதீன் கில்சியால் அனுப்பப்பட்ட இராணுவம் தெற்கே இராமேசுவரம் வரை சென்றது. அதில் பல இராணுவ வீரர்கள் தென்னகத்தின் இறுதிப் பகுதிவரை சென்று நிலையாகக் குடியேறினர்.

**2.** முகம்மது பின் துக்ளக்கு தம் தலைநகரைத் தில்லியிலிருந்து தக்காணத்திலிருந்த தேவகிரிக்கு மாற்றித் தௌலதாபாது எனப் பெயரிட்டார். இவ்விரு நிகழ்ச்சிகளும் உருதுமொழியின் இலக்கிய வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கின. தக்கணி உருதுவில் திராவிட மொழிகளின் ஆதிக்கம் அதிகமாகக் காணப்படுகிறது. எனினும் மூத்த தலைமுறையைச் சார்ந்த உருதுக் கவிஞர்களும் உரைநடையாசிரியர்களும் இத்தென்னகப் பகுதியில்தான் தோன்றியுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வகையில் காசா (**Haja**) கெசுதராசு, முகம்மது காகுலி குதுப்சா, வசுகி இப்னே நிசாத்தி முதலியோர் என்றும் நினைவு கூரத்தக்கவர்கள். இவர்கள் உருதுமொழியைப் பெரும்பான்மை மொழியாகப் பாவித்து, இம்மொழிக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்தார்கள். மேற்கூறிய கவிஞர்களும் எழுத்தாளர்களும் பீசப்பூர், கோல்கொண்டா அரசுகளைச் சார்ந்தவர்கள்.

வடக்கே பெரும்பான்மையான பாமர மக்களின் பேச்சுமொழி உருதுவாக இருப்பினும், ஆட்சிமொழி பாரசீகமாகவே இருந்தது. எனினும் இலக்கியத்தில் இம்மொழியின் பங்கு மிகக் குறைவாகவே இருந்தது. ஆயினும் கவிஞர்அமீர்குசுரு இதற்கு ஒரு விதிவிலக்காவார். இவர் ஆங்காங்கே உருது மொழியைப் பாரசீகத்துடன் கையாண்டார்.

ஔரங்கசீபு காலத்தில் பாரதத்தின் பெரும்பகுதி தில்லியின் ஆதிக்கத்தில் இருந்தது. இக்காலத்தில் தான் புகழ் பெற்ற உருதுக் கவிஞரான வாலிதக்கனி தெற்கேயிருந்து தில்லிக்குச் சென்றார். அவரைப் பொதுமக்கள் அன்பாக வரவேற்றனர். அறிஞர் பெருமக்கள் அவர்தம் கவித்திறத்தால் ஈர்க்கப்பட்டு, பாரசீக மொழியினின்றும் நீங்கி உருதுவைப் போற்றத் தலைப்பட்டனர். இவ்வாறாக, உருது மொழி இலக்கியங்கள் மிகக் குறுகிய காலத்தில் செல்வாக்குப் பெற்றன.

வாலிதக்கனியின் வாயிலாக மிர்சா, சானே சானான், மிர்சா ஆத்திம் போன்ற சான்றோர்களையும் உருதுமொழி ஆட்கொண்டது. சுருங்கக்கூறின், வடநாட்டில் உருதுமொழி பாரசீக மொழியின் செல்வாக்கைக் குறைத்துப் புகழ் பெற்று விளங்கியது எனலாம். உருது மொழியில் மிகச்சிறந்த இலக்கியப் படைப்பாளர்களாக விளங்கிய தில்லி, இலக்னோ ஆகிய நகரங்களைச் சார்ந்த நசீர் அக்பராபாதி, மீர்தக்கி மீர், மிர்சா சவுதா, அனீசு, மீர்அசன், தயாசங்கர் நசீம், முசாபி நாசிக்கு, ஆத்திசு, பிரிசு நாராயணன் சக்பசுது, பண்டிட் இரத்தனாத்சர்சார் போன்றோர் என்றும் நினைவு கூரத்தக்கவர்கள்.

மொகலாய ஆட்சிச் சூழல் மறைந்து கொண்டிருந்த போது, உருது மொழியாகிய கதிரவன் உச்சிவானில் உலா வந்தது எனக் கூறுவது பொருத்தமுடையதாகும். ஆங்கில ஆட்சித்தொடக்கத்திலிருந்தே உருது மொழி உயர்நிலை பெறத் தொடங்கிற்று. தில்லி, இலக்னோ மட்டுமல்லாது, வடக்கே இலாகூரும் தெற்கே அய்தராபாதும் உருதுமொழியின் வளர்ச்சிக்கான மையங்களாயின. தில்லியில் புதிய கவிஞர்பெருமக்கள் பலர் தோன்றினர். இவர்களுள் இறுதி மொகலாய மன்னரான பகதூர்சா சாபர், மிர்சா காலிபு, மோமீன், சாக்கு ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். கவிஞர் காலிபு கசல் என்னும் மேடை இசையை அதன் உச்சத்திற்கே உயர்த்திச் சென்றார். அவர் உருது இலக்கியத்திற்குக் குறிப்பாகக் கவிதைக்கு ஆற்றிய அரும்பணி என்றும் எண்ணுதற்குரியது. கவிதைப் பணி மட்டுமன்றி, புதுவகையான கடித நடையொன்றினையும் அறிமுகப்படுத்தினார். உருது இலக்கியங்களின் ஒரு பகுதியாகக் கருதப்பெறும் அவருடைய கடிதங்கள் என்றும் பாதுகாக்கப்பட வேண்டியவை.

ஆங்கிலேயரால் தோற்றுவிக்கப்பட்ட தொழிற் புரட்சியினால், இலக்கியங்களிலும் சில மாறுதல்கள் தவிர்க்க முடியாதவையாயின. முகம்மது உசேன் ஆசாத்–அல்தாபு உசைன் அலி, சர் சையது அகமத் கான் போன்றோரால் ‘சீர்திருத்த இயக்கம்’ தோற்றுவிக்கப்பட்டது. இச் சான்றோர்கள் தம் கவிதையிலும் உரைநடையிலும் இயற்கைத் தன்மையை வலியுறுத்தினார்கள். ‘ஆபே அயாத்து’ என்ற உருது மொழி இலக்கிய வரலாற்றை முதன் முதலில் ஆசாத்து படைத்தளித்தார். கசல் கவிதைகளின் குறைகளைச் சுட்டிக் காட்டி, பல இன்றியமையா மாற்றங்களை அலி ஏற்படுத்தினார். முதல் கசல் செய்யுளிலக்கியத்தை உருதுவில் எழுதியவர் சந்திரபான் பிரமன் ஆவார். சர் சையது அகமது கான் பல அறிவியல் கட்டுரைகளை உருதுமொழியில் எழுதியதோடு, அதன் உரைநடையில் பல புதுமைகளையும் புகுத்தினார்; இதற்காக ஓர் அறிவியல் சங்கத்தை நிறுவிப் பல நிலைகளிலும் நல்லவற்றையே பின்பற்றப் பாடுபட்டார்; பல உயர்ந்த ஆங்கில இலக்கியப் பகுதிகளை உருதுமொழியில் மொழி பெயர்த்தார். இவ்வகையில் மௌலவி சக்காவுல்லா, எடபுடி நசீர் அகமது, மௌலானா சிப்லி ஆகியோரையும் நினைவு கூர்தல் இன்றியமை

யாதது. இவர்கள் அனைவரும் சர் சையது அகமது கானின் சீர்திருத்த முயற்சிகளுக்குப் பல்லாற்றானும் உறுதுணையாக நின்று உதவினர்.

இந்திய விடுதலைப் போராட்டத்தின் போது இந்திய இலக்கியங்களின் தன்மை முழுமையும் மாறுபட்டது. இப்போராட்டத்தில் இந்தியாவிலுள்ள பல்வேறு மொழிகளின் எழுத்தாளர் அனைவரும் இதில் முதன்மையான பங்கு கொண்டனர். உருதுமொழி எழுத்தாளர்களும் இதில் சிறப்பாக ஈடுபட்டனர். 'இன்குலாப் சிந்தாபாத்' என்ற கவர்ச்சியான முழக்கத்தை உலகுக்கு ஈந்தது உருதுமொழியேயாகும். அக்பர் அல்காபாதி, சிகர், பானி, யாசுயா கானூ, சாத்அப்துல் வதூத்து, டாக்டர் அப்துல்லா, அர்சிராம்புரி, மாலிக்ராம், மௌலவி அப்துல் அக், இரசீது அகமது சித்திக்கீ ஆகிய உரைநடை ஆசிரியர்களும் உருதுமொழியில் குறிப்பிடத்தக்கவர்கள். 'அல்பலாகு', 'அல்கலால்' என்ற தம் இரு பத்திரிகைகளின் வாயிலாக மௌலானா அபுல்கலாம் ஆசாத்து பெரும் மறுமலர்ச்சியை மக்களிடையே உருவாக்கினார். சமயச் சார்புடைய கட்டுரைகள் எழுதுதல், புனித குரானை மொழி பெயர்த்தல் போன்ற பணிகளுக்கும் மேலாக, அவர் அகமது நகர்ச் சிறையிலிருந்து எழுதிய 'குபாரே காதிர்' என்ற தலைப்பில் வாழ்க்கையின் தத்துவக் கருத்துகளடங்கிய கடிதங்கள் என்றென்றும் நினைத்தற்குரியன. உருதுமொழி இலக்கிய வரலாற்றை முதன் முதலில் எழுதிய பெருமை இராம்பாபு சக்சேனாவையே சாரும்.

முகம்மது இக்பாலின் கவிதைத் தொகுதிகளின் ஒரு பகுதி முழுக்க முழுக்க நாட்டு நலம் பற்றியது. 'அகில உலகிலேயே சிறந்தது எங்கள் இந்துசுத்தானம்' எனத் தொடங்கும் அவரது இனிய கவிதை இந்திய மக்களின் நெஞ்சங்களை ஈர்த்தது. கவிஞர் காலிப் பிற்குப்பின் இக்பாலின் படைப்புகள் உருதுக் கவிதைகளுக்குப் புதிய திசையைக் காட்டின.

உருசியப் புரட்சி (1917) உலகையே மாற்றியமைத்துச் செயற்பட வைத்தது. இந்திய இலக்கியங்களிலும் அதன் தாக்கம் ஏற்பட்டது. அதனால் முற்போக்கு எழுத்தாளர் அமைப்புத் தோன்றி, அதன் வழி பல இளங்கவிஞர்களும் உரைநடையாசிரியர்களும் உருவாயினர். அவர்களுள் பைசு அகமதுபைசு, சோசு, பிராக்கு, மக்தூம், கைபி, மச்ரு சுல்தான்புரி, சாகிர், சான்னிசார் அக்தர், மசாசு, சர்தார் சாப்ரி, காலிசு பத்ரீ, சபாநவீதி, தானிசு பராசி, அசீசு தமன்றாயி, அசரத் சுகர்வர்தி போன்ற கவிஞர்களும் அலே அகமது, சுரூர், இகேதி சாம் உசேன், இபாதத் பிரல்வி, சோ அன்சாரி, சச்சாத் சாகிர், கிருசின் சந்தர், கோபிசந்து, நராங்கு, தயான் சந்து கலீலுர் இரகுமான், ஆசுமி, இராசேந்தர் சிங் பேடி, மிண்டோ, ஏ.கே. அப்பாசு போன்ற உரைநடை ஆசிரியர்களும் குறிப்பிடத்தக்கவர்கள். பிரேம் சந்து குறிப்பிடத்தக்க உருது நாவலாசிரியர்களுள் ஒருவர்.

இந்திய மொழிகளுள் உருதுமொழி மிகவும் இளைய மொழியாக இருந்தபோதிலும், அம்மொழியின் இலக்கியங்கள் செழுமையும் செறிவும் கொண்டவை.

உருது மொழியில் வெளிவந்த முதல் செய்தித்தாள் எது என்பதில் மாறுபட்ட கருத்து உண்டு. எனினும் 'செய்யிது உல் அக்பார்' என்ற செய்தித்தாளே கி.பி. 1835–இல் வெளிவந்தது எனக் கருதப்படுகிறது. சிலர் இராசாராம் மோகன்ராய்தாம் முதல் செய்தித்தாளை வெளியிட்டவர் என்பர். கடந்த காலங்களில் மௌலானா ஆசாத்து தம் 'அல் இலால்' வாயிலாகவும் மௌலானா முகம்மது அலி தம் 'அம்தர்த்' வாயிலாகவும் மௌலானா சாபர் அலி கான் தம் 'சமீந்தார்' வாயிலாகவும் உருது பத்திரிகை உலகிற்கு உயர்ந்த பணியாற்றினர். ஐதராபாதிலிருந்து வெளிவரும் 'சியாசத்', 'இரகுநுமா – ஏ – தக்கன்'; ஐதராபாது, சலந்தர், தில்லி முதலிய இடங்களிலிருந்து வெளிவரும் 'பிரதாப்', 'மிலாப்'; பெங்களூரிலிருந்து வெளிவரும் 'சாலார்' போன்றவை இற்றை நாளில் காணப்படும் தலைசிறந்த உருது மொழிச் செய்தித் தாள்களாகும்.

அதபே-இலத்தீபு, சாயர், ஆசுகல், நுக்சசு, நயாதௌர், சப்ரசு, பிசுவின்சதி, சமா ஆகியவை உருது மொழியில் வெளிவரும் மாத ஏடுகளாகும்.

ஐரோப்பிய மொழிகளிலும் இந்திய மொழிகளிலும் உள்ள பல தலைசிறந்த காவியங்கள் உருது மொழியில் பெயர்க்கப்பட்டுள்ளன. அதுபோலவே பல சிறந்த உருதுமொழி இலக்கியப் படைப்புகளும் உலகின் பல மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளன.

உருதுமொழி தன் பிறப்பிடமான இந்தியாவில் மட்டுமல்லாது, பாகிசுத்தான், உருசியா, அமெரிக்கா, இங்கிலாந்து, செக்கோசுலோவாகியா, துருக்கி, ஈரான், எகிப்து போன்ற அயல்நாடுகளிலும் வளர்ச்சியடைந்து வருகிறது.

ஹ.சு.

துணை நூல்கள்:

**RamBabu Saksena,** A History of Urdu Literature, Allahabad, 1927.

**Sadiq, M.,** History of Urdu Literature. Oxford University Press, London, 1964.

Grierson, G. A., Linguistic Survey of India, vol. IX, Part I, Motilal Banarsidas, Delhi, 1968.

**உருப்படி**: உறுப்புச்சிதைவில்லாமல் முழுதுமாக அமைந்துள்ள பொருள் உருபபடி எனப்படும். இசை உலகில் அவ்வாறு அமைந்து விளங்கும் இசைப்பாட்டும் உருப்படி என்னும் பெயரால் வழங்கப்படுகிறது. இசைப்பாட்டினுள்ளும் தாளக்கட்டினோடு அமைந்த பாடலையே உருப்படி என்று கூறுவர். பாடப்பெறும் இசைப்பாட்டு தாள அறுதிக்கு உட்படுமாறு அமைக்கப்பட்டது என்றும், அவ்வாறு அமைக்கப்படாதது என்றும் இருவகைப்படும். 'தான தனதன தான தன தன' என்ற சந்தக் குழிப்பில் ஓர் அடி பாடப்படுமாயின், தொடர்ந்து வரும் அடிகளும் அந்தக் குழிப்பிலேயே அமைவதாகும். 'பாதி மதிநதி போது மணி சடை' என்று ஓர் அடி தொடங்கினால், அடுத்தது பாகு கனிமொழி மாது குறமகள்' என்று அமையும். சந்தம் மாறுபடாமையால் இவ்வடிகள் தாள அமைப்பில் சிதையாமல் ஒத்து நிற்கும். இவ்வாறு தாள அமைதியில் அமைந்த பாடல்களைப் பாடுதற்கு ஒரே அளவான காலம் தேவைப்படும்.

சந்த அமைப்பில் அமையும் தாள அறுதி பெறாமல் அடிகள் உருவாக்கப்படுமாயின், அவை யாப்புச் சிதைவில்லாவிட்டாலும் இசைத்துப்பாடுங்கால் வெவ்வேறு கால அளவுட்படும். 'காருலாவிய' 'கல்மனத்தினால்' என்னும் சீர்கள் 'நேர் நிரை நிரை' என்னும் ஒரே வாய்ப்பாட்டில்அமைந்தனவாயினும், சாகித்தியத்தில் அமைத்துப் பாடும்போது அவை வெவ்வேறு கால அளவு பெற்று இசை வேறுபட்டுவிடும். அதனால் உருப்படி என்னும் இசைப்பாட்டில் ஒரே கால அறுதிக்குப்படும் சொற்கட்டு அமைந்தால் இசை மாறுபடாமல் அமையும். தாள அமைப்போடு கூடிய இசைப் பாடலாகிய உருப்படியில் அமைந்துள்ள இசை 'தாது' என்றும், சாகித்தியம் (சொற்கோவை) மாது என்றும் பெயர் பெறும். சாகித்தியம் இல்லாத உருப்படிகளும் அமைவதுண்டு. நாட்டியங்களில் இடம்பெறும் அலங்காரம், சதிசுரம் முதலியவையும் இராக சஞ்சாரிகளும் இவ்வகையில் அமைவனவாகும். இவற்றைப் பாட்டாக அல்லாமல் சுரவடிவாகவே பாடுவர்.

உருப்படிகளை இசையரங்கில் இசைத்தற்குரியன என்றும், பயிற்சிக்குரியன என்றும் பாகுபடுத்தலாம். இசையரங்கிற்குரிய உருப்படிகள் இராகத்தின் பாவத்தினைத் தெளிவுபட விளக்கும் வகையில் உயர்ந்த இசையில் அமைக்கப்பட்டிருக்கும். கிருதி, இராக மாலிகை, பதம், சாவளி போல்வன இதற்கு எடுத்துக் காட்டாம். பயிற்சிக்குரிய உருப்படிகள் குரல் பயிற்சிக்காகவும் இசைக் கருவிகளில் மேற்கொள்ளும் விரல் பயிற்சிக்காகவும் அமைக்கப்படுவன. அலங்காரம், கீதம் சுரசதி, தாளவருணம் முதலியன இதற்கு எடுத்துக் காட்டு. பயிற்சிக்குரிய உருப்படிகளை நன்கு பயில்வதனால் இசைப்பாடல்களை அழகாகவும், கமகச் சிறப்பு முதலிய நயங்கள் பொருந்தவும் பாடும் திறம் பெறலாம். உருப்படி என்னும் இசைப்பாட்டினைச் சிலப்பதிகார உரையாசிரியர்கள் உரு என்னும் பெயரால் குறிப்பிட்டுள்ளனர்: இவ்வாறு குறிப்பிடுவது இசைத் தமிழ் வழக்கமாகும். அ.மா.ப.

**உருப்படிப் பகுப்பாய்வு**: ஒரு தேர்வு என்னென்ன குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக அமைக்கப்பட்டுள்ளதோ, அக்குறிக்கோள்களை நிறைவுபடுத்துவதில் ஒவ்வோர் உருப்படியும் அல்லது கேள்வியும் (Item) செவ்வனே அமைதல் வேண்டும். அவ்வகையான உருப்படிகளை அல்லது கேள்விகளைத் தெரிவு செய்யும் முறையே உருப்படிப் பகுப்பாய்வு (Item Analysis) ஆகும். உருப்படிப் பகுப்பாய்வின் மூலம் தேர்வின் தரத்தை உயர்த்த இயலும். தரம் தாழ்ந்த கேள்விகளைக் கண்டறிந்து, அவற்றிற்குப் பதிலாக மேலும் சிறந்த பொருத்தமான உருப்படிகளை உருவாக்க இயலும்.

உருப்படிகளின் தரத்தைப் புள்ளியியல் அளவுகளால் முடிவு செய்யலாம். கடினக் குணகம் (Difficulty Index), வேறுபடுத்தும் குணகம் (Discrimination Index) என்ற இரு புள்ளியியல் அளவுகள் கேள்வியின் தரத்தை அளக்க உதவுகின்றன. ஒரு குறிப்பிட்ட தேர்வில் (அதிலும்) குறிப்பிட்ட ஒரு கேள்விக்கு விடை அளித்தவர்களுள் எத்தனை விழுக்காடு சரியான விடையளித்துள்ளனர் என்ற அளவீடு கடினக் குணகமாகும். எடுத்துக்காட்டாக, ஒரு கேள்விக்குச் சரியான விடைக்கு '1' மதிப்பெண் எனவும் தவறான விடைக்கு '0' எனவும் கொண்டால், பதிலளித்தவர்களுள் எத்தனை பேர் சரியான விடை அளித்துள்ளனர்? அவர்கள் மொத்த விடையளித்தவர்களுள் எத்தனை விழுக்காடு என்று கணக்கிடக் கடினக்குணகம் கிடைக்கும். கடினத்தன்மை எத்தனை விழுக்காடு மாணவர்கள் வினாவிற்குச் சரியான விடை கொடுத்துள்ளார்கள் என்ற அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது. கடினக் குணகம் அதிகமுள்ள வினாக்களுக்கு அதிக விழுக்காடு மாணவர்கள் சரியான விடை கொடுத்திருப்பர்.

மற்றோர் அளவீட்டுக் குணகமான வேறுபடுத்தும் குணகம் ஒரு குறிப்பிட்ட வினாவிற்குச் சரியான விடை அளித்தவர்களுள் தேர்ச்சித் திறன் அதிகம் பெற்றோர், தேர்ச்சித் திறன் அதிகம் பெறாதோர் ஆகிய இருவரையும் வேறுபடுத்திக்

காட்டும் அளவாகும். எடுத்துக்காட்டாக, ஒரு தேர்வில் 100 மாணாக்கர்கள் விடையளித்துள்ளனர் எனின், அவர்கள் மதிப்பெண்களை இறங்கு வரிசையில் எழுதினால் முதல் 27 இடங்களைப் பெற்றோர் உயர் தேர்ச்சிக் குழு (High-Achieving Group) என்றும் இறுதி 27 இடங்களைப் பெற்றோர் தாழ் தேர்ச்சிக் குழு (Low-Achieving Group) என்றும் கூறப்படுவர். இவ்விரு குழுவினரின் மதிப்பெண்களை மட்டும் உருப்படிப் பகுப்பாய்வுக்குப் புள்ளியியலார் பயன்படுத்துவர். இவ்விரு குழுவினருக்கும் இடைப்பட்டோரின்(மொத்தம் 46 விழுக்காட்டினர்) மதிப்பெண்களை உருப்படிப் பகுப்பாய்விற்குப் பயன்படுத்துவதில்லை.

குறிப்பிட்ட ஒரு வினா வேறுபடுத்தியறியும் தன்மை கொண்டிருந்தால் அவ்வினாவிற்குச் சரியான விடைதந்தோர் உயர்குழுவையும், தவறான விடைதந்தோர் தாழ்குழுவையும் சார்ந்தவராதல் வேண்டும். இவ்வாறாகும்போது வேறுபடுத்தியறியும் குணகம் 1 என்றாகும். பொதுவாக வேறுபடுத்தியறியும் குணகத்தைக் காண உயர் குழுவில் சரியாக விடை தந்தோரின் எண்ணிக்கையில் இருந்து தாழ்குழுவில் சரியாக விடை தந்தோரின் எண்ணிக்கையைக் கழித்து, அதனை ஒரு குழுவில் இருந்தோரின் (இரு குழுவிலும் சம எண்ணிக்கையிலேயே இருப்பர்) எண்ணிக்கையால் வகுக்க வேறுபடுத்தியறியும் குணகம் கிடைக்கும்.

கடினக் குணகம், வேறுபடுத்தும் குணகம் ஆகியவை கணக்கிடும் முறையைக் கீழ்வரும் எடுத்துக்காட்டினின்றும் தெளியலாம். தேர்வு எழுதியோர் 37பேர் எனக் கொண்டால், உயர் குழுவில் 10 பேரும் (37-இல் 27 விழுக்காடு) தாழ் குழுவில் 10 பேரும் இருப்பர்.

| வினா | சரியான விடை தந்தோர் | | கடினக் குணகம் | வேறுபடுத்தும் குணகம் |
|---|---|---|---|---|
| | உயர்குழு | தாழ்குழு | | |
| 1 | 7 | 3 | $\frac{7+3}{20} \times 100 = 50$ | $\frac{7-3}{10} = 0.4$ |
| 2 | 8 | 2 | $\frac{8+2}{20} \times 100 = 50$ | $\frac{8-2}{10} = 0.6$ |
| 3 | 5 | 5 | $\frac{5+5}{20} \times 100 = 50$ | $\frac{5-5}{10} = 0$ |
| 4 | 4 | 6 | $\frac{4+6}{20} \times 100 = 50$ | $\frac{4-6}{10} = -.2$* |

$$\text{கடினக் குணகம்} = \frac{\text{உயர்குழுவில் சரியான விடை தந்தோர் எண்ணிக்கை} + \text{தாழ்குழுவில் சரியான விடை தந்தோர் எண்ணிக்கை}}{\text{இரு குழுவிலுமுள்ளோர் எண்ணிக்கை}}$$

$$\text{வேறுபடுத்தும் குணகம்} = \frac{\text{உயர்குழுவில் சரியான விடை தந்தோர் எண்ணிக்கை} - \text{தாழ்குழுவில் சரியான விடை தந்தோர் எண்ணிக்கை}}{\text{ஒரு குழுவில் உள்ளோர் எண்ணிக்கை}}$$

* எதிர்மறை வேறுபடுத்தும் குணகமுள்ள வினாக்கள் தவிர்க்கப்பட வேண்டும்.

பலவற்றுள் ஒரு தெரிவு (Multiple Choice) வினாவிற்கு எத்தனை மாற்றுவிடைகள் (Distractors) கொடுக்கப்பட்டுள்ளன என்பதைப் பொருத்தும் அதன் கடினக் குணகத்தின் தரம் முடிவு செய்யப்படுகிறது. இரண்டு 'மாற்றுகள்' உள்ள பலவற்றுள் தெரிவு வினாவின் கடினக் குணகம் 0.75 என்றும் நான்கு மாற்றுகள் உள்ள பலவற்றுள் தெரிவு வினாவின் கடினக் குணகம் 0.63 என்றும் இருப்பின், அப் பலவற்றுள் தெரிவு வினா சிறந்ததாகலாம் எனச் சில கல்விப் புள்ளியலார் கருதுவர். மாற்றுகளின் எண்ணிக்கை கூடுதலாகக் கடினக் குணகத்தின் அளவு 0.50 என்ற அளவில் அமைவது சிறப்பு எனக் கூறப்படுகிறது. சில சமயம் மிகவும் கடினமான அல்லது மிகவும் எளிதான உருப்படி அல்லது கேள்வியை எடுத்துக் கொள்ளவேண்டிய சூழ்நிலைகளும் ஏற்படுகின்றன. திட்ட விவர அட்டவணையின் (Table of Specifications) கருத்துக்கு இன்றியமையாத நிலை அளிக்க வேண்டிய சமயத்தில், கடினக் குணகம் அதிகமாகவோ குறைவாகவோ இருப்பினும் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

தேர்வுகளின் வகைகளைப் பொறுத்துக் கடினக் குணகம், வேறுபடுத்தும் குணகம் ஆகியவற்றின் விரும்பப்படும் அளவுகள் மாறுபடுகின்றன. சான்றாக, ஒரு தேர்வின் நோக்கம் முழுஅறி திறனளவு (Mastery Level) எனக் கொண்டால், கடினக் குணகத்தின் அளவு 0.80 எனவும், வேறுபடுத்தும் குணகத்தின் அளவு 0.80-இலிருந்து 1.00 வரை எனவும் அமைய வேண்டும் என முடிவு செய்திடல் வேண்டும். தேர்வுகளின் நோக்கங்களுக்கு ஏற்ப இக்குணகங்களின் மதிப்பை முடிவு செய்தல் வேண்டும். பொதுவாக, மிக அதிகக் கடினக் குணகமுடைய (எளிய) வினாக்களும் மிகக் குறைந்த கடினக் குணகமுடைய (கடின) வினாக்களும் விலக்கப்பட வேண்டும். குறைந்த வேறுபாட்டுக் குணக வினாக்களும் தவிர்க்கப்பட வேண்டுவனவே.

ஒரு தேர்வில் சரியான விடைக்கு '1' எனவும் தவறான விடைக்கு '0' எனவும் மதிப்பிட்டால் எவ்வாறு கடினக் குணகம் கணக்கிடுவது என்பது முன்னர் விவரிக்கப்பட்டது. சில வினாக்களுக்கு விடைகள் 1 முதல் 5 மதிப்பெண்கள் பெறுதற்கான வரம்பு கொண்டிருந்தால், கடினக் குணகத்தை எவ்வாறு கணக்கிடுவது என்பது கீழே விளக்கப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக,

ஒரு கட்டுரை வகை வினாவிற்கு (Essay-Type Question) உயர்மதிப்புக்குழு, தாழ் மதிப்புக்குழு ஆகியவற்றிலுள்ள மாணாக்கர்கள் மதிப்பெண் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| உயர் மதிப்புக் குழு | | | தாழ் மதிப்புக் குழு | | |
|---|---|---|---|---|---|
| x | f | fx | x | f | fx |
| 5 | 3 | 15 | 5 | 0 | 0 |
| 4 | 3 | 12 | 4 | 1 | 4 |
| 3 | 3 | 9 | 3 | 3 | 9 |
| 2 | 1 | 2 | 2 | 2 | 4 |
| 1 | 0 | 0 | 1 | 2 | 2 |
| 0 | 0 | 0 | 0 | 2 | 0 |
| Ef = 10 Efx = 38 | | | Ef = 10 Efx = 19 | | |

$$\text{கடினக் குணகம்} = \frac{SH + SL - (nT \times Min.)}{nT\ (X\ Max. - X\ Min.)}$$

SH = உயர் தேர்ச்சிக் குழுவினர் பெற்ற மொத்த மதிப்பெண்

SL = தாழ் தேர்ச்சிக் குழுவினர் பெற்ற மொத்த மதிப்பெண்

nT = மாணவர் மொத்த எண்ணிக்கை

X Min. = உருப்படியின் குறைந்த அளவு மதிப்பெண்

X Max. = உருப்படியின் உயர்ந்த அளவு மதிப்பெண்

$$\text{கடினக் குணகம்} = \frac{38 + 19 - 20\ (0)}{20\ (5-0)}$$

$$= \frac{57-0}{20 \times 5}$$

$$= 57/100$$

$$= 0.57$$

தேர்வின் நோக்கம் குறியளவெய்துவதாக (**Criterion Referenced**) இருந்தால்,

$$\text{கடினக் குணகம்} = \frac{RP}{np} - \frac{RF}{nf}$$

என்ற வாய்பாட்டின்படி கணக்கிட வேண்டும்.

RP — மொத்தத் தேர்வில் வெற்றி பெற்றுக் குறிப்பிட்ட உருப்படியில் வெற்றி பெற்றவர்கள்

np — மொத்தத் தேர்வில் வெற்றி பெற்றவர்கள்.

RF — மொத்தத் தேர்வில் வெற்றி பெற்றுக் குறிப்பிட்ட உருப்படியில் தோல்வி அடைந்தவர்கள்.

nf — மொத்தத் தேர்வில் தோல்வி அடைந்தவர்கள்.

எ-கா :

| | மொத்தத் தேர்வில் | | |
|---|---|---|---|
| ஓர் உருப்படி (அ) கேள்வி | வெற்றி பெற்றோர் | தோல்வியுற்றோர் | மொத்தம் |
| சரி | 38 | 5 | 43 |
| தவறு | 2 | 5 | 7 |
| | 40 | 10 | 50 |

$$\text{வேறுபடுத்தும் குணகம்} = \frac{38}{40} - \frac{5}{10} = 0.45$$

சரியான விடைக்கு 1 முதல் 5 வரை மதிப்பெண்கள் வழங்கக் கூடிய வகையில் அமைந்த வினாக்களுக்கு

$$\text{வேறுபடுத்தும் குணகம்} = \frac{SH - SL}{nH\,(X\,Max. - X\,Min.)}$$

$$= \frac{38-19}{10(5-0)}$$

$$= \frac{19}{50} = 0.38$$

அறிஞர் இலாஞ்சே (Lange), இலேமன் (Lehmann), மெக்ரன்சு (Mchrens) ஆகியோர் புதுப்புது உருப்படிகள் தெரிவு செய்யும் பொழுது, மீளவும் புதுப்புது உருப்படிகள் தெரிவு செய்தலைவிட ஒதுக்கிவிட்ட உருப்படிகளை மறுபடியும் புனரமைத்துத் திருத்தம் செய்தலே சாலச் சிறந்தது என்றும், பழைய உருப்படிகளில் இருந்து தெரிந்தெடுப்பதற்கான முயற்சியில் செலவிடப்படும் கால அளவு புதிய உருப்படிகள் தேர்ந்தெடுக்கும் கால அளவீட்டில் $\frac{1}{5}$ பங்கு ஆகிறது என்றும் கூறுவர்.

ஒரு தேர்வில் கடினக் குணகம், வேறுபடுத்தும் குணகம் என்ற இரண்டின் அடிப்படையில் தெரிவு செய்தல் மட்டும் போதாது. ஒவ்வொரு தேர்வு முடிந்ததும் தேர்வு முழுவதற்குமான சராசரி (Mean), தரவிலக்கம் (Standard Deviation) ஆகியனவும் கணக்கிடப்படவேண்டும். எஸ்.மோ.

துணை நூல்கள்:

**Hopkins, D., Kenneth and Julian C. Stanley.,** Educational and Psychological Measurement and Education, Prentice Hall, New Jersey, 1981.

**Scannell, Tracy,** Testing and Measurement in the Classroom, Houghton Mufflin Company, Boston, 1975.

**உருபன் வகைகள்**: ஒருமொழியில் காணப்பெறும் பொருள் தரும் மிகச் சிறிய குறியீட்டு வடிவம் உருபன் (Morpheme) எனப்படும்.

ஒரு மொழியிலுள்ள அனைத்து உருபன்களையும் அவற்றின் உள்ளமைப்பு, பிற உருபன்களோடு அவை கொண்டுள்ள தொடர்பு ஆகிய இரு அடிப்படைகளிலும் வகைப்படுத்துதல் இயலும். உருபன்களின் உள்ளமைப்பு உருபன்கள் உருவாகத் துணையாய் அமைந்த ஒலியன்கள் (Phonemes), உருபன்களின் வடிவம், உருபன்களின் உறுப்புகளுக்கிடையே காணப்பெறும் தொடர்புஆகிய மூன்றின் அடிப்படையில் அமையும். உருபன்களின் உள்ளமைப்பு அடிப்படையில் உருபன்களைக் கீழ்க்காணுமாறு பகுக்கலாம்.

ஒலியன் அடிப்படை: உருபன்களை அவை உருவாகத் துணைபுரியும் ஒலியன்களின் அடிப்படையில் மூன்று வகையாகப் பகுக்கலாம். சில உருபன்கள் பகுப்பொலியன்களால் (Segmental Phonemes) உருவாகும். இத்தகைய உருபன்கள் முதல் வகையினைச் சாரும். 'கல்', 'மண்' போன்ற உருபன்கள் முறையே மூன்று பகுப்பொலியன்களால் (க் + அ +ல், ம் + அ + ண்) உருவானவையாகும்.

சில உருபன்கள் மேற்பகுப்பொலியன்களால் (Supra segmental Phonemes) மட்டுமே ஆக்கம் பெறும். இத்தகைய உருபன்கள் இரண்டாம் வகையினைச் சாரும். பேச்சுத் தமிழில் 'வந்தான்' என்னும் வினைச்சொல்லின் பால் காட்டும் உருபனாகிய 'ன்' இழப்புற்றுத் தனக்கு முன்னுள்ள 'ஆ' என்னும் இட உருபனோடு (Personal Morpheme) இணைந்து, அவ்வுருபனை ('ஆ'வை) மூக்கினச்சாயல் (Nasalization) பெறவைக்கிறது. இங்ஙனம் மூக்கினச்சாயல் பெற்ற உருபனைக் கொண்ட வினைவடிவம் ' ' (வந்தா) எனக் குறியீடிட்டுச் சுட்டப் பெறும். ஈண்டுப் பால் காட்டும் உருபன் ' ' இட உருபனுக்கு மேற்பகுதியில் அமையப் பெறுவதால் இது மேற்பகுப்பொலியனால் அமையப் பெற்ற உருபனாகக் கருதப்படுகிறது. இத்தகைய உருபன்கள் எண்ணிக்கையில் மிகக் குறைவாகவே ஒரு மொழியில் காணப்படும்.

பகுப்பொலியன்களாலும் மேற்பகுப்பொலியன்களாலும் அமையப் பெற்ற உருபன்கள் மூன்றாவது வகையினைச் சாரும். 'மலர்', 'கல்' என்ற உரு

பன்கள் பெயர்ச் சொற்களாகவும் வினைச் சொற்களாகவும் செயலாற்றுதல் உண்டு. 'மலர்' என்னும் உருபன் 'ம் + அ + ல் + அ + ர்' என்னும் பகுப்பொலியன்களாலும், ஒலியழுத்தம் (Stress) என்னும் மேற்பகுப்பொலியனாலும் இணைந்து அமையப்பெற்றுள்ளது. இம்மேற்பகுப்பொலியனின் அடிப்படையில் இவ்வுருபன் பெயராகவும் வினையாகவும் செயற்படுகிறது. இவ்வுருபன் (மலர்) ஒலியழுத்தம் முதல்நிலை ஒலியழுத்தமாக (Primary Stress) அமையும் நிலையில் வினையாகவும், இரண்டாம்நிலை ஒலியழுத்தமாக (Secondary Stress) அமையும் நிலையில் பெயராகவும் செயற்படுகிறது.

**உருபன்களின் வடிவ அடிப்படை:** கோட்பாட்டு அடிப்படையில் உருபன்களின் வடிவத்திற்கு எவ்வித வரையறையும் கிடையாது. எனினும் வடிவ அடிப்படையில் உருபன்களை மூன்றாக வகைசெய்தல் இயலும்.

ஒலியன்களின் எண்ணிக்கை அடிப்படையில் ஓர் ஒலியனால் அமையப் பெற்ற உருபன்கள், இரண்டு ஒலியன்களால் அமையப்பெற்ற உருபன்கள், பல ஒலியன்களால் அமையப்பெற்ற உருபன்கள் என மூன்று வகையினவாக உருபன்களைப் பகுக்கலாம்.

'ஈ, 'ஆ' போன்றவை ஓர் ஒலியனால் அமையப் பெற்ற உருபன்களாகும். 'தீ' (த் + ஈ), 'பூ' (ப்+ஊ) போன்றவை இரண்டு ஒலியன்களாலும், 'மரம்', 'இராமன்' போன்றவை பல ஒலியன்களாலும் அமையப்பெற்ற உருபன்களாகும்.

உருபன்களில் காணப்பெறும் ஒலியன்களின் அமைப்பினை அடிப்படையாகக் கொண்டு மெய்யெழுத்தால் ஆகிய உருபன்(C), உயிரும் மெய்யும் இணைந்து அமையப்பெற்ற உருபன் (VC), மெய், உயிர், மெய் என்ற முறையில் அமையப்பெற்ற உருபன் (CVC)என ஆங்கிலமொழியில் உருபன்களை வகைப்படுத்துதல் உண்டு. இதற்குக் குறிப்பிட்ட வடிவ அமைப்புடைய உருபன்கள் வாய்பாட்டு வடிவங்கள் (Canonical Forms) எனப்படும். பெரும்பாலும் மெய், உயிர், மெய் (CVC) அமைப்புடைய உருபன்கள் பின்னொட்டுக்களாக (Suffixes) அமையப் பெறும். இப்பாகுபாடு தமிழ் மொழிக்கும் பொருந்தும். பால் காட்டும் உருபன் 'ன்' (C), இறந்தகால உருபன் 'இன்' (VC), 'கள்' (CVC) ஆகியன இம்மூன்று வகை உருபன்களுக்கும் தக்க சான்றுகளாகும்.

ஈண்டுக் குறிப்பிடப்பெற்ற மூன்று அமைப்புகள் தவிரப் பிற அமைப்புடைய உருபன்களும் மொழியில் காணப்பட்ட போதிலும், பெரும்பான்மை உருபன்கள் இம்மூன்று வகைகளுக்குள்ளாக அமையப் பெறுவதால் இம்மூன்று வகைகளுக்கு மட்டுமே முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளது.

**உருபன்களின் உறுப்புகளின் உறவு அடிப்படை:** உருபன்களின் உறுப்புகளுக்கிடையே காணப்பெறும் உறவு அடிப்படையில் உருபன்களைத் தொடர் உருபன் (Contiguous Morpheme), தொடர் அல் உருபன் (Non-Contiguous Morpheme) என இரண்டு வகையாகப் பாகுபாடு செய்யலாம்.

ஓர் உருபனின் உறுப்புகள் அனைத்தும் தொடர்ச்சியாக அமையுமாயின் அவ்வுருபனைத் தொடர் உருபன் எனலாம். 'பார்' என்னும் உருபனில் அதன் உறுப்புகள் (ப்+ஆ+ர்) தொடர்ச்சியாக அமையப் பெற்றுள்ளமையால் அது தொடர் உருபனாகும்.

ஓர் உருபனின் உறுப்புகள் அனைத்தும் தொடர்ச்சியாக அமையப் பெறாத நிலையில் அவ்வுருபன் தொடர் அல் உருபன் எனக் கருதப்பெறும். இத்தகைய உருபனின் உறுப்புகளுக்கிடையே பிற உருபன்களின் உறுப்புகளின் உள்ளடக்கம் (Inclusion) காணப்பெறும். இதற்குச் சோக்கு மொழியில் hapya 'வருவான்' என்ற வினைவடிவத்தினைச் சான்றாகக் கூறலாம். hay என்பது 'வருதல்' என்னும் வினைப் பொருண்மையினைச் சுட்டும் அடிச்சொல் ஆகும். pa என்பது எதிர்கால உருபன். இவ்விரண்டும் இணைந்து எதிர்கால வினைச்சொல் அமையப்பெறும் நிலையில் pa என்னும் உருபனின் முதல் உறுப்பு hay என்னும் உருபனுக்குள்ளாக அமைந்து, இரு உருபன்களும் தொடர்ச்சி இல்லாத உருபன்களாக (hapya) அமைகின்றன. இங்ஙனம் தன் உறுப்புகள் அனைத்தும் தொடர்ச்சி இன்றி அமையும் உருபன் தொடர் அல் உருபன் எனப்படும்.

ஓர் உருபன் பிற உருபன்களோடு கொண்டுள்ள உறவுநிலை அமைப்பு (Structure), அமைவிடம் (Position) ஆகியவற்றின் அடிப்படையில் அமையப் பெறலாம்.

**அமைப்பு அடிப்படை:** அமைப்புநிலை சேர்க்கை (Addition), மாற்றுகை (Replacing), கழிக்கை (Substraction) என மூவகைப்படும். இம்மூவகைகளிலும் மூவகை உருபனியல் இயக்கங்கள் (Morphological Processes) நடைபெறும். இம்மூன்று இயக்கங்களின் அடிப்படையில் உருபன்களைச் சேர்க்கை உருபன்கள் (Additive Morphemes) எனவும், மாற்றுகை உருபன்கள்(Replacive Morphemes)எனவும், கழிக்கை

உருபன்கள் (Subtractive Morphemes) எனவும் மூன்று வகையாகப் பகுக்கலாம்.

பிற உருபன்களோடு இணைக்கப் பெறும் தகுதியினை உடைய உருபன்கள் சேர்க்கை உருபன்கள் எனப்படும். 'கள்' என்னும் உருபன் 'நாடு' என்னும் உருபனோடு சேர்ந்து 'நாடுகள்' என்னும் சொல் அமையப்பெறும். இந்நிலையில் 'கள்' என்னும் உருபன் சேர்க்கை உருபனாகும். சேர்க்கை உருபன்கள் வேர் (Root), முன்னொட்டு (Prefix), உள்ளொட்டு (Infix), மேலொட்டு (Suprafix), பின்னொட்டு (Suffix), இரட்டிப்பு (Reduplicative) என ஐந்து வகைப்படும்.

ஒரு சொல்லின் பொருள் சிறந்து நிற்கும் பகுதியே வேர் எனப்படும். இதனை மேலும் பொருள் தரும் பகுதிகளாகப் பிரித்தறிதல் இயலாது. பெரும்பாலும் வேர்ச்சொற்கள் தனித்து வரும் பண்பினை உடையன. 'பார்', 'கல்' என்பன தமிழ் மொழியில் வேர்களாக அமையப்பெற்றுள்ளன.

அடிச்சொல்லின் முன்னர்ச் சேர்க்கப் பெறும் ஒட்டுகள் முன்னொட்டுகள் எனப்படும். 'நீதி' என்னும் சொல்லின் முன்பாக 'அ' என்னும் முன்னொட்டு சேர்க்கப் பெறும் நிலையில் இது 'அநீதி' என எதிர் மறைச் சொல்லாக ஆக்கம் பெறுகிறது. 'அ' என்னும் இவ்வொட்டு அடிச்சொல்லின் முன்னர்ச் சேர்க்கப் பெறுவதால் முன்னொட்டாகக் கருதப்பெறுகிறது.

அடிச்சொல்லின் உள்ளே சேர்க்கப் பெறும் ஒட்டுகள் உள்ளொட்டுகள் எனப்படும். தமிழில் உள்ளொட்டுகளுக்கு முறையான சான்றுகள் இல்லை. சமோயன் மொழியில் mate என்பதன் பொருள் 'இறக்கிறான்' என்பதாகும்; mamate என்பது 'இறக்கிறார்கள்' என்பதனைக் குறிக்கும். ஈண்டுப் பன்மை உருபனாகிய ma என்பது அடிச்சொல்லின் உள்ளே சேர்க்கப் பெறுவதால் இதனை உள்ளொட்டாகக் கருதலாம்.

அடிச்சொல்லின் மேற்பகுதியில் சேர்க்கப்பெறும் ஒட்டுகள் மேலொட்டுகள் எனப்படும். பெல்சியன்-காங்கோமொழியில் 'wa' என்பது 'சுத்தப்படுத்துகின்றமை என நிகழ்காலப் பொருண்மையினைக் குறிக்கவும் 'wa' என்பது 'சுத்தப்படுத்தியமை' என இறந்தகாலப் பொருண்மையினைக் குறிக்கவும் பயன்படுத்தப்படுகின்றன. ஈண்டு இறந்தகாலப் பொருண்மையினை உணர்த்தத் துணை நிலை ஒலியழுத்தம் (/) மேலொட்டாகப் பயன்படுத்தப்படுகிறது. மேலொட்டுகள் எப்போதும் மேற்பகுப்பொலியன்களால் அமையப் பெற்றிருக்கும்.

அடிச்சொல்லின் பின்னர்ச் சேர்க்கப்படும் ஒட்டுகள் அனைத்தும் பின்னொட்டுகள் எனப்பெறும். 'கல்' என்னும் பகுதியோடு இணைந்துவரும் 'கள்' என்னும் பன்மை உருபன் (கற்கள்) பின்னொட்டாகும். வினைச் சொற்களில் காணப்பெறும் கால உருபன்கள், இட உருபன்கள், பால்-எண் உருபன்கள் அனைத்தும் பின்னொட்டுகளே. ஒட்டுகள் அனைத்தும் தனித்து வருதல் இல்லை. இவை பிற வடிவங்களோடு இணைந்து கட்டுவடிவங்களாகச் (Bound Forms) செயற்படும்.

இரட்டிப்பு அல்லது அடுக்கு இருவகைப்படும். ஒன்று முழுமை இரட்டிப்பு மற்றொன்று குறைஇரட்டிப்பு. முழுமை இரட்டிப்பில் அடிச்சொல் முழுமையாக இரட்டிக்கப் பெறும். 'குழந்தை குறு குறு என நடந்தது' என்னும் வாக்கியத்தில் 'குறு' என்னும் வடிவம் முழுமையாக இரட்டிக்கப் பெற்றுக் 'குறுகுறு' என அமையப்பெற்றுள்ளது.

குறை இரட்டிப்பில் அடிச்சொல்லின் ஒரு பகுதியே இரட்டிக்கப் பெறும். பப்பத்து என்னும் வடிவம் குறை இரட்டிப்பிற்குத் தக்க சான்றாகும். குறை இரட்டிப்பில் இரட்டிக்கப்பெறும் வடிவம் அடிச்சொல்லிற்கு முன்பாகவே பின்பாகவோ மேலாகவோ இடையிலோ அமையப்பெறலாம்.

பல உருபன்களால் ஆக்கம் பெற்ற ஓர் அமைப்பிலிருந்து ஓர் உருபனை நீக்கி, பிறிதோர் உருபனை நீக்கப் பெற்ற உருபனுக்கு மாற்றாகச் சேர்க்கும் நிலையில் மாற்றுகை என்னும் செய்கை நிகழப் பெறும். மாற்றுகை என்னும் உருபனியல் செய்கையின் கண் மாற்றம் பெறும் உருபன்களை 'மாற்றுகை உருபன்கள்' எனலாம். ஆங்கிலத்தில் foot என்ற சொல் 'fut' என்ற சொல் ஒலியன் வடிவத்தை உடையது. இதில் 'u' என்னும் உறுப்பினை நீக்கிப் பின்னர் 'iy' என்னும் உறுப்பினைச் சேர்க்கும் நிலையில் foot என்பது 'feet' என்னும் பன்மை வடிவமாக மாறுகிறது. ஈண்டு 'u' என்பது நீக்கப் பெற்று 'iy' என்னும் உருபன் சேர்க்கப் பெறுவதால் இது மாற்றுகை உருபனாகக் கருதப்படுகிறது. தமிழில் இத்தகைய மாற்றுகை உருபன்கள் காணப்பெறவில்லை.

ஒரு குறிப்பிட்ட சொல்லமைப்பினின்றும் ஓர் உருபனைக் கழிக்கையில் அச்சொல்லமைப்புப் புதிய பொருளைக் கொடுக்குமாயின், அப்பொருள் வேறுபாட்டிற்கு அடிப்படையாக அமைந்த உருபனைக் 'கழிக்கை உருபன்' எனலாம். பிரெஞ்சு மொழியில் 'movez' என்பது 'குறைவானது' என்னும் பொருளில் ஆண்பாலுக்கு உரியதாக அமைந்துவரும். இச்சொல்லிலுள்ள 'z' என்னும் பகுதியினைக் கழிக்கையில் இச்சொல் அதே பொருளில் பெண்பாலுக்கு உரியதாக

மாறி விடுகிறது. ஈண்டு 'z' என்பது கழிக்கை உருபனாகக் கருதற்குரியது.

அமைவிடம் அடிப்படை: உருபன்களைப் பிற உருபன்களோடு அவை கொண்டுள்ள அமைவிட அடிப்படையில் அடுத்தடுத்து வரும் உருபன்கள் (Successive Morphemes), அடக்குகை உருபன்கள் (Included Morphemes), ஒருங்கிணை உருபன்கள் (Simultaneous Morphemes) என மூன்று வகையாகப் பகுத்தல் இயலும்.

ஓர் உருபன் சொல்லமைப்பின்கண் பிறிதோர் உருபனுடன் தொடர்ச்சியாக இணைந்து வருமாயின் அது அடுத்தடுத்து வரும் உருபன் எனப்படும். 'கண்டான்' என்னும் வினைச்சொல்லில் (காண் + ட் + ஆ + ன்) காணப்பெறும் அனைத்து உருபன்களும் ஒன்றையொன்று தொடர்ந்து வருகின்றமையால், இவற்றை அடுத்தடுத்து வரும் உருபன்கள் எனலாம்.

சில உருபன்கள் தொடர்ச்சியாக அமையப்பெறாமல் இவற்றின் பகுதி அன்றி முழுமையும் பிற உருபன்களின் உறுப்புகளுக்குள்ளாக அமையப் பெறுதலுண்டு. இத்தகைய உருபன்கள் 'அடக்குகை உருபன்கள்' எனப்படும். சோக்கு மொழியில் hay என்னும் உருபனும், pa என்னும் எதிர்கால உருபனும் இணைந்துவரும் பொழுது 'hapya' என்னும் சொல்வடிவம் அமையப் பெறுகிறது. ஈண்டு 'pa' என்னும் உருபனின் ஒரு பகுதி 'hay' என்னும் உருபனின் உறுப்புக்குள் அடக்கப் பெற்றிருப்பதால் இது அடக்குகை உருபனாகக் கருதப் பெறுகிறது.

சில உருபன்கள் பிற உருபன்களோடு எப்போதும் ஒருங்கிணைந்தே அமையப்பெறும். இத்தகைய உருபன்களை ஒருங்கிணை உருபன்கள் எனலாம். பெரும்பாலும் மேற்பகுப்பு உருபன்கள் எப்போதும் பகுப்பு உருபன்களோடு ஒருங்கிணைந்தே காணப்பெறும். பேச்சுத் தமிழில் 'கண்டான்' என்னும் வினைச் சொல்லின் இறுதி னகரம் அதற்கு முந்தைய உயிரொலியினை மூக்கினச் சாயல் பெற்ற ஒலியனாக மாற்றியமைக்கிறது. ஈண்டுக் கண்டான் என்பதில் படர்க்கை இட உருபனாகிய ஆகாரமும், ஆண்பால் ஒருமை உருபனாகிய ~ என்னும் வடிவமும் ஒருங்கிணைந்து அமையப் பெறுவதால் மூக்கினச்சாயல் பெற்ற வடிவம் ஒருங்கிணை உருபனாகக் கருதப்படுகிறது.

இத்தகைய பாகுபாடு தவிர, உருபன்களை அவை மொழியில் செயற்படும் பான்மையினை அடிப்படையாகக் கொண்டும் வகைப்படுத்துதல் இயலும். மொழியில் காணப்பெறும் அனைத்து உருபன்களையும் அவற்றின் வருகையினை அடிப்படையாகக் கொண்டு தனி உருபன்கள் (Free Morphemes) கட்டு உருபன்கள் (Bound Morphemes) என இரு வகையாகப் பகுக்கலாம்.

சில உருபன்கள் மொழியில் பிற உருபன்களோடு இணைந்து வருதலின்றித் தனித்துச் செயற்படும் தன்மையன. இத்தகைய உருபன்கள் தனி உருபன்கள் எனப்படும். தமிழில் 'ஆண்', 'கல்' போல்வன தனி உருபன்களுக்குத் தக்க சான்றுகளாகும்.

சில உருபன்கள் எப்போதும் பிற உருபன்களோடு இணைந்தே காணப்பெறும். இவ்வுருபன்கள் மொழியில் தனித்து வருதல் இல்லை. இவை கட்டு உருபன்கள் எனப்படும். பெரும்பாலும் கட்டு உருபன்கள் ஒட்டுகளாக இருக்கும். பன்மை உருபனாகிய 'கள்' எப்போதும் பிறிதோர் உருபனுடன் இணைந்தே மொழியில் செயற்படுவதால் இது கட்டு உருபன் எனப்படும்.

மேலும், உருபன்களை வேர்ச்சொல் உருபன்கள் (Root Morphemes) எனவும், வேர்ச்சொல் அல்லா உருபன்கள் (Non - root Morphemes) எனவும் பகுத்தல் இயலும். சொல்லின் அகராதிப் பொருளைச் (Lexical Meaning) சுட்டும் உருபன் வேர்ச்சொல் உருபன் எனப்படும். இவை பெரும்பாலும் தனித்து வழங்கும் தன்மையன. தமிழில் 'நில்', 'பார்' என்பன வேர்ச்சொல் உருபன்களாகும். அகராதிப் பொருளைச் சுட்டுதலின்றி இலக்கணப் பொருளைச் (Grammatical Meaning) சுட்டும் உருபன்கள் வேர்ச்சொல் அல்லா உருபன்கள் எனப்படும். கால உருபன்கள், பால் காட்டும் உருபன்கள் போன்றவை தமிழில் அடிச்சொல் அல்லா உருபன்களாகும்.

மேலும், உருபன்களை அவை சொல்லில் இடம் பெறும் இடத்தினை அடிப்படையாகக் கொண்டு சொல் முடிப்பு உருபன்கள் (Word-closing Morphemes) எனவும், சொல்முடிப்பு அல்லா உருபன்கள் (Non-word closing Morphemes) எனவும் இருவகைப்படுத்துதல் இயலும். சொல்முடிப்பு உருபன்கள் ஒரு சொல்லின் இறுதியில் இடம்பெறும். இவ்வுருபன்களுக்குப் பின்னால் பிறிதோர் உருபனை இணைத்தல் இயலாது. தமிழில் 'இராமனுமா வந்தான்' என்னும் வாக்கியத்தில் காணப்பெறும் 'ஆ' என்னும் உருபனுக்குப் பின்னால் பிறிதோர் உருபனை இணைக்க முடியாது. எனவே இவ்வுருபன் சொல்முடிப்பு உருபனாகக் கருதப்படுகிறது. மொழியின் சொல்லமைப்புகளில் காணப்பெறும் சொல் முடிப்பு உருபன்களாகச் செயற்படாத உருபன்கள்

அனைத்துமே சொல்முடிப்பு அல்லா உருபன்கள் எனப்படும். தமிழ்மொழியில் காணப்பெறும் கால உருபன்கள், பால் காட்டும் உருபன்கள் போன்றவை அனைத்தும் சொல்முடிப்பு அல்லா உருபன்களே.

ஏ.ஆ.

துணை நூல்கள்:

**Hocket , Charles, F.**, A Course in Modern Linguistics, The Macmillan Company, New York, 1958.

**Karunakaran, K. and Edward Williams, T**, Morphology: An Introduction, Grace Publications, Nagercoil, 1984.

**Nida,E.A.**, Morphology: The Descriptive Analysis of Words, The University of Michigan Press, Anna Arbor, 1946.

**உருபனும் மாற்றுருபும்:** மொழியின் கூட்டமைப்பினைப் பல்வேறு துணையமைப்புகளாகப் பிரித்துக் கண்ட கட்டமைப்பியலார் அக அமைப்பாகக் கொண்ட மூன்று உட்பிரிவுகளுள் ஒன்றாக இலக்கணத் திட்டத்தைக் குறிப்பிடுவர். இத்திட்டம் மொழியில் பயன்படுத்தப்படும் உருபன்களையும், அவை ஒன்றோடொன்று கொண்டுள்ள உறவினடிப்படையில் கட்டப்படும் முறையினையும் விளக்குவதாகும். மொழியின் இரண்டு தன்மைகளான வடிவம், கருத்து ஆகிய இரண்டிற்கும் ஒலியும் உருபும் முறையே அடிப்படை உறுப்புகளாக அமைகின்றன. இவையே ஒரு குறிப்பிட்ட மொழியின் ஒலியன் எனவும் உருபன் எனவும் வழங்கப்படுகின்றன.

உருபன் (Morpheme) என்பது ஒரு மொழியின் மிகச் சிறிய பொருள் பொதிந்த கூறாகும். ஒலியனை இனங்காண்பதற்கு இரு ஒலிகள் ஒன்றிலிருந்து மற்றொன்று வேறுபடும் தன்மை மட்டுமே போதுமானதாக இருக்க, உருபனை இனங்காண்பதற்கு அங்ஙனம் வேறுபடும் பொருளும் தேவையாகிறது. கட்டமைப்பியலார் நெறிப்படி இவ்வுருபன் நிலையிலேயே பொருளும் மொழி ஆய்வில் பயன்படுத்தப்படுகிறது.

உருபன்களை இனங்காணப் பல்வேறு வழிமுறைகள் கூறப்பட்டாலும் 'பயின்றுவரும் பகுதிகளை ஒப்பிட்டும் வேறுபடுத்தியும் காணுதல்' என்பதே அடிப்படையாகும். இவ்விரு தன்மைகளும் இல்லாதவிடத்து உருபன்களை இனங்காணல் எளிதன்று.

என்னய், அம்மாவய், நாயய், பூவய் போன்ற எடுத்துக்காட்டுகளுள் -அய் என்னும் வடிவம் பயின்று வருதலைக் காணலாம். இவ்வடிவம் தனி உறுப்பாகப் பாகுபாடு செய்யப்பட்டு, இவற்றிடையே காணப்படும் பொருளை ஒப்பிட்டு நோக்கினால், அனைத்து இடங்களிலும் ஒரே பொருள் கிடைப்பதைக் காணலாம். மேலும் -அய் என்பதனை இதற்கு மேலும் அ + ய் எனப் பிரித்துப் பொருள் காண முடியாது. -அய் என்பதே மிகச் சிறிய, பொருள் பொதிந்த ஒரு கூறாகும்; அதாவது உருபனாகும்.

தாமரய், முல்லய், கய்தய் போன்றவற்றுள்ளும் இறுதியில் -அய் என்னும் வடிவம் பயின்று வந்துள்ளது. ஆனால் இந்த வடிவத்தின் 'பொருளும்' முன்னர்க் கண்ட வடிவத்தின் பொருளும் ஒன்றன்று. உண்மையில் இவ்வெடுத்துக்காட்டுகளில் -அய் என்பதைத் தனியே பிரிக்கவே முடியாது. எனவே இது மிகச்சிறிய கூறுமன்று; பொருள் பொதிந்ததுமன்று; உருபனுமன்று.

பையன்கள், பெண்கள், குழந்தைகள் போன்றவற்றில் உள்ள -கள் என்னும் வடிவம் பயின்று வருவதனாலும், மிகச்சிறிய கூறாக இருப்பதனாலும், ஒரே பொருளைக் கொண்டிருப்பதனாலும் இதனைத் தனி உருபனாகக் கொள்ளலாம். இதைப் போன்றே தங்கைமார், மாமாமார் போன்றவற்றில் உள்ள -மார் என்பதையும் கொள்ளலாம். இவ்விரண்டு உருபன்களுமே ஒரே பொருளைக் கொண்டிருந்தாலும், வேறுபட்ட வடிவங்களைக் கொண்டவை. ஆனால், மொழியில் இவை வழங்குமுறையை ஒப்பிட்டு நோக்கும்போது ஓர் உண்மை புலனாகும். -மார் என்னும் உருபன் உறவுமுறைச் சொற்களோடு மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. கள், மார் என்னும் இரண்டுமே ஒன்றுக்கொன்று மாற்றாக நின்று துணைநிலை வழக்கில் அமைந்துள்ளன. இவ்வாறு வடிவத்தால் வேறுபட்டாலும், பொருளால் ஒன்றுபட்டு, ஒன்றோடொன்று துணைநிலை வழக்கில் அமைந்துள்ள பகுதிகளும் ஒரே உருபனாகவே கொள்ளப்படும். இவை ஓர் உருபனின் மாற்று வடிவங்களாகக் கருதப்படுகின்றன; இவையே மாற்றுருபுகள் (Allomorphs) எனப்படுகின்றன.

-கள் என்னும் பன்மை உருபன் ஆண்கள் என்னும் போது -gaḷ எனவும், ஆடுகள் என்னும் போது -xaḷ எனவும், பூக்கள் என்னும்போது -kaḷ எனவும் ஒலிக்கப்படுவதனைக் காணலாம். இவ்வேறுபாடுகள் தனக்கு முன்னே நிற்கும் ஒலியினால் ஏற்படுபவை. மூக்கொலியை அடுத்து ஒலிப்புடைத் தடையொலியும், இரண்டு உயிர்களுக்கிடையே உரசொலியும், ஏனை இடங்களில் ஒலிப்பிலாத் தடையொலியும் வழங்குவது தமிழ் ஒலியக் கட்டமைப்பில் காணப்

படும் தன்மையாகும். இவை மற்றோர் ஒலியினால் வேறுபடுத்தப்படுவதனால், ஒலியினாற் கட்டுண்ட மாற்றுருபுகள் எனப்படுகின்றன. -கள், -மார் ஆகிய இரண்டும் சில சொற்களினால் வேறுபடுத்தப்படுவதனால், இவை உருபனாற் கட்டுண்ட மாற்றுருபுகள் ஆகும். ஜே. நீ.

துணை நூல்கள்:

**Hocket**, C.F., A Course in Modern Linguistics, The Macmillan Co., New York, 1958.

**Nida**, E.A., Morphology, The University of Michigan Press, Anna Arbor, 1972.

**உருபாரி** தென்னமெரிக்க இந்தியப் பழங்குடியினராவர். வடகிழக்கு அமேன் பகுதியில் வாழும் இவர்கள் மங்கோலிய இனத்தைச் சேர்ந்தவர்கள். உருபாரிப் (Yurupary) பழங்குடியினர் உயரமானவர்கள்; உடல் வலிமைமிக்கவர்கள்.

இவர்கள் கலப்புப் பொருளாதார வாழ்க்கை மேற்கொண்டிருப்பவர்களாவர். வேட்டையாடுதல், மீன் பிடித்தல், கால்நடை வளர்த்தல், தோட்டப் பயிரிடுதல் முதலானவை இவர்களின் முதன்மைத் தொழில்கள். துணிநெய்தல், மட்பாண்டங்கள் செய்தல், கூடைமுடைதல், வேட்டைக் கருவிகள் செய்தல் முதலானவை இவர்களின் துணைத் தொழில்கள். இவர்கள் நடுஅமெரிக்க இந்தியர்களைப் போன்று கற்களாலான வீடுகளைக் கட்டுவதில்லை. இவர்களின் வீட்டுப் பொருள்கள் பெரும்பான்மையாக மரப் பொருள்களாலும் விலங்குத் தோல்களாலும் விலங்குகளின் கொம்புகளாலும் ஆனவை. குலவழி அடிப்படையில் சிறு குடும்பங்களாக வாழும் இவர்கள் ஒரு மண முறையைக் கொண்டவர்கள். பலதுணை மணம் சில குடும்பங்களில், குறிப்பாகத் தலைவன் குடும்பங்களில் உள்ளது.

உருபாரிகள் சமூகத்தில் ஏற்புச் சடங்குகள் (Initiation Ceremonies) மிகவும் விரிவானவை.இரகசியச் சமூகங்களுக்கு அனுப்பி வைப்பதில் இச்சடங்கு முதன்மை இடம் பெறுகிறது. இவர்கள், உடலின் பல இடங்களில் கோடுகளும் அடையாளங்களும் வரையப்பட்டு, வயதுவந்தோரின் இரகசியச் சங்கத்தில் உறுப்பினராகின்றனர்; உடலில் பல வகையான வண்ணப் பூச்சுகளைப் பூசி அலங்கரித்துக் கொள்கின்றனர்.

வேட்டையாடும் கருவிகளும் தோட்டப் பயிரிடும் கருவிகளும் வீட்டுச் சாமான்களுமே முதன்மையான சொத்தாதலால், இவர்களிடையே மரபுரிமை வழக்குகளும் சிக்கல்களும் எழுவதில்லை. இவர்களது சமூக அமைப்பும் எளிதானது. ஆதலால் இவர்களின் பழங்குடித் தலைவனே இவர்களிடையே எழும் சிக்கல்களைத் தீர்த்து வைக்கிறான். இவர்கள் ஆவியுலக நம்பிக்கை கொண்டு, முன்னோர் ஆவிகளையும் இயற்கைப் பொருள்களையும் வழிபடுகின்றனர். தெய்வத் தன்மையுற்றவனைக் (Shaman) கொண்டும் கூட்டுச் சடங்குகள் மூலமும் இயல்பிறந்த இயற்கையையும் ஆவிகளையும் தம் நலனுக்காகவும் சமூக நலனுக்காகவும் செயற்பட வைக்கின்றனர். உருபாரிகள் சமயச் சடங்குகளில் பிற அமெரிக்க இந்தியப் பழங்குடிகளைப் போன்று மாய வித்தையையும் பில்லி சூனியத்தையும் கொண்டுள்ளனர். தெய்வத் தன்மையுற்றவர் இச் சமூகத்தினரின் சமயச் செயற்பாடுகளை நிகழ்த்துபவராக மட்டுமல்லாமல், மருத்துவராகவும் சமூகச் சடங்குகளை நடத்துபவராகவும் உள்ளார். சீ.ப.

**உருபு புணர்ச்சி**: வேற்றுமை எட்டு ஆயினும், செயப்படுபொருள் முதலாக இடப்பொருள் ஈறாக வேறுபடுத்தும் ஆறுவகை உருபுகளையே வேற்றுமை உருபு என்றும், அவை மறைந்து நின்று அப்பொருள் புலப்படப் புணரும் புணர்ச்சியை "வேற்றுமைப் புணர்ச்சி" என்றும், விரிந்து நிற்குமிடத்து அவ்வுருபுகள் பெயர்ச் சொல்லோடு புணரும் புணர்ச்சியை 'உருபுபுணர்ச்சி' என்றும் கூறுவர்.

பெயர்ச் சொற்களின் பின் ஐ முதலிய உருபுகள் புணருமிடத்துச் சிறுபான்மை இயல்பாகவும் பெரும்பான்மை திரிபாகவும் புணரும். திரிபாவது பெரும்பான்மை சாரியை பெறுதலும் சிறுபான்மை உருபேற்கும் பெயர்கள் வடிவு திரிதலுமாம்.

பெயர்சொற்கள் ஐ, ஒடு, கு, இன், அது,கண் என்னும் உருபுகள் புணருமிடத்து, புறா+ஐ=புறாவை என இயல்பாகவும், பலா+இன்+ஐ=பலாவினை எனச்சாரியை பெற்றும், நிலாவை / நிலாவினை என இரு நிலைமையாகவும் புணரும்.

பெயரொடு உருபுகளை இணைக்கும் சாரியைகள் இன், வற்று, அன், ன், ஒன், அத்து, தம், நம், நும், தன் என்பனவாகும். வற்று என்பதை அற்று எனக் கொள்வார் பிற்கால இலக்கண நூலோர்.

மகர ஈற்றுச் சொற்கள் பெரும்பான்மை அத்துச் சாரியை பெறும். மரத்தை, மரத்தொடு என்றும் சிறுபான்மை அத்தொடு 'இன்'னும் பெற்று மரத்தினை என்றும் வரும். உருமினை,திருமினை எனச் சில மகர ஈற்றுச் சொற்கள் இன் சாரியை மட்டும் பெறும்.

உருபேற்கும் பொழுது சில பெயர்கள் திரிபுறும்; தாம், நாம், யாம், தான், யான், நீர், நீ என்பவை குறுகித் தம், நம், எம், தன், என், நும், நின் என்று வரும். தம், எம், நும், தன், என், நின் என்பன நான்காம் உருபு ஏற்கும்போது ஓர் அகரத்தைச் சாரியையாகப் பெறும். திசைப்பெயர்கள் ஏழாம் உருபேற்கும் போது இறுதி கெட்டு, வடக்கண் தெற்கண் என வருதலும் உண்டு.

ஐ, ஒடு, கு முதலாக வகுக்கப் பெற்ற வேற்றுமை உருபுகளேயன்றி, உருபின் பொருள்பட வரும் பொருட்டு, நின்று, உடைய அகம், புறம், சார், புடை என வரும் சொல்லுருபுகள் வரினும் அவ்விதி களைப் பெறும். ச.பா.

**உருபு மயக்கம்**: மயக்கம் என்னும் சொல் ஒன்று மற்றொன்றினோடு கலப்பதனை உணர்த்தும். ஒரு வேற்றுமை உருபு நிற்க வேண்டிய இடத்தினில் பிறிதொரு வேற்றுமை உருபு நின்று, தனது பொருளைத் தாராமல், எப்பொருளைத் தரவேண்டுமோ அப்பொருளைத் தந்து நிற்பது வேற்றுமை மயக்கம் என்று இலக்கண ஆசிரியர்கள் விளக்கியுள்ளனர். இது வேற்றுமை உருபு மயங்கிவருதல், வேற்றுமைப் பொருள் மயங்கிவருதல் ஆகிய காரணங்களால் உருபு மயக்கம், பொருள் மயக்கம் என்று இரு வகைப்படும். முதல் வேற்றுமையும் எட்டாம் வேற்றுமையும் நீங்க, எஞ்சிய ஆறு வேற்றுமைகளே இவ்வாறு மயங்கி வரப்பெறும்.

உருபு மயக்கம் என்பது ஒரு வேற்றுமைக்குரிய உருபு தனக்குரிய வேற்றுமைப் பொருளை விடுத்து, வேறொரு வேற்றுமைப் பொருளில் மயங்கிவருவதாகும். 'கிளையரி நாணற் கிழங்கு மணற்கீன்ற, முளையோரன்ன முள்ளெயிற்றுத் துவர்வாய்' என்னும் அகநானூற்றுப் பாடற் (212) பகுதியில், தலைவியின் அழகிய கூரிய வெண்பல்லினுக்கு மணலில் தோன்றியுள்ள நாணற்கிழங்கின் முளை உவமையாகக் கூறப்பட்டுள்ளது. 'நாணற் கிழங்கு மணற்கீன்ற' என்ற தொடரில் உருபு மயக்கம் அமைந்துள்ளது. நான்காம் வேற்றுமை உருபாகிய 'கு' என்பது கொடை, பகை, நேர்ச்சி, தகவு, அதுவாதல் என்னும் பொருள்களில் வரும். நான்காம் வேற்றுமை உருபேற்று வந்துள்ள 'மணற்கீன்ற' என்னும் தொடரில் 'மணல்' என்னும் சொல் தான் ஏற்ற நான்காம் வேற்றுமை உருபிற்குரிய பொருள் எதனையும் கொள்ளாமல், 'மணற்கண்' என்னும் ஏழாம் வேற்றுமையின் இடப் பொருளில் அமைந்துள்ளது. தொடரில் நான்காம் வேற்றுமை உருபு அமைந்திருந்தாலும் அவ்வேற்றுமைப் பொருளில் பொருள் கொள்ளாமல், அவ்விடத்திற்குப் பொருந்துமாறு ஏழாம் வேற்றுமை இடப் பொருளையே கொள்ளவேண்டியுள்ளது. அதாவது, அமைந்துள்ள உருபிற்கேற்பப் பொருளைக் கொள்ளாமல் பொருளுக்கேற்ப உருபினை மாற்றிக் கொள்ள வேண்டியுள்ளது. இதனால் 'கிழங்குமணற் கீன்ற' என்பது ஏழாவதன்கண் நான்காவது வந்த உருபுமயக்கம் எனப்படும். அ. மா. ப.

**உருபொலியன் எழுத்து**: ஒருமொழியில் வழங்கும் எழுத்துகள் ஒவ்வொன்றும் மொழி அமைப்பில் ஒலி, ஒலியன், உருபொலியன் ஆகியவற்றில் எதைக் குறிக்கிறது என்ற அடிப்படையில் எழுத்துகளைப் பாகுபடுத்தலாம். ஓர் எழுத்து ஒலியை எப்பொழுதும் குறித்தால் அதற்கு ஒலி எழுத்து என்றுபெயர். அப்படியில்லாமல் ஓர் எழுத்து ஒன்றுக்கு மேற்பட்ட ஒலிகளைக் குறித்து நின்று, அந்த ஒலிகள் வருமிடம் வரையறுக்கக் கூடியதாயும், அந்த ஒலிகளின் பண்பில் ஒற்றுமை உடையதாயும் இருந்தால் அது ஒலியன் எழுத்து எனப்படும்.

தமிழில் சொல்லுக்கு முதலில் க, த, ப ஆகிய எழுத்துகள் இசையிலா ஒலி(Voiceless)யாகவும் (உரோமன் எழுத்தில் k, t, p என்று குறிக்கப் பெறுவன). அவை மெல்லெழுத்துக்குப் பிறகு வரும்போது இசை ஒலி (Voiced) யாகவும் (உரோமன் எழுத்தில் g, d, b என்று குறிக்கப் பெறுவன), சொல்லுக்கு நடுவில் இரண்டு உயிரொலிகளுக்கு இடையே வரும்போது உரசொலி (Fricative) ஆகவும் இருந்தாலும், அந்த மூன்று இடங்களிலும் ஒரே வரிவடிவத்தையே (க, த, ப,) பயன்படுத்துவதால் மேலே குறிப்பிட்ட மூன்று வல்லின எழுத்துகளும் ஒலியன் எழுத்துகள் ஆகும். இந்த முறையை இரண்டு சொற்கள் சேரும்போது கடைப்பிடிப்பதால் சொல்லுக்குரிய எழுத்துகளில் சொல்லெழுத்து (Spelling) மாற்றம் ஏற்படுகிறது. (எ–டு) மரம் என்ற சொல்லைக் குறிது, சிறிது, பெரிது போன்ற சொற்களோடு சேர்க்கும்போது மரங்குறிது, மரஞ்சிறிது, மரம்பெரிது என்று எழுதுவர். இங்கு மரம் என்பதை மரங், மரஞ் என்று மாற்றுவதற்கு உச்சரிப்பு வேறுபாடும், ஒலியன் வேறுபாடும் காரணங்கள் ஆகும். எனவே இப்படி எழுத்து அமைந்தால் அது ஒலியன் எழுத்து (Phonemic spelling) என்று பெயர்பெறும்.

ஒரு மொழியில் இரண்டு ஒலிகள் வேறுவேறு ஒலியனாக இருந்து தனித்தனி எழுத்துகளைப் பெற்றிருந்து, சில இடங்களில் அந்த இரண்டு ஒலியன்களும் துணைநிலை வழக்கில் (ஒன்று வருமிடத்தில் மற்றொன்று வருவதில்லை) இருக்குமானால், ஒரே எழுத்தில் எழுதப்படுவது உருபொலியன் எழுத்து (Morphophonemical spelling) என்று கூறப்படும். தமி

ழில் அகரமும் ஐகாரமும் வேற்றுநிலை வழக்கில் (கட-கடை; நட-நடை) இருப்பதால் இரண்டும் வெவ்வேறு வரிவடிவம் பெற்றுள்ளது. ஆனாலும் தலை, தலைமை ஆகிய இரண்டு சொற்களிலும் ஐகார ஒலி அமையா விட்டாலும் ஐகார வடிவமே எழுதப்பட்டுள்ளது. தலைமை என்ற சொல்லில் 'லை' என்பது 'ல' என்றே உச்சரிக்கப்படுகிறது. அங்கு 'அ' (அதாவது தலமை) என்று எழுதாமல் 'ஐ' (அதாவது தலைமை) என்று எழுதுவது உருபொலியன் எழுத்துமுறை என்று சொல்லப்பட வேண்டும். ஏனென்றால் சொல்லுக்கு நடுவிலும் கடைசியிலும் இரண்டு ஐகாரம் வரும் போது முதல் ஐகாரம் அகரமாக உச்சரிக்கப்படு கிறது. எனவே, இங்கு ஐ, அ என்ற ஒலியன்கள் மாற்று வடிவமாக (தலை என்ற சொல்லில் ஐகார மாகவும் தலைமை என்ற சொல்லில் தலமை என்று அகரமாகவும்) இருந்தும் வரிவடிவில் ஒரே எழுத்து கையாளப்படுவதால் அது உருபொலியன் எழுத்து ஆகும்.

பழை என்ற அடிச்சொல்லில் இருந்து பிறந்த மற்றொரு சொல்லான பழைமை என்ற சொல்லைப் பழமை என்றே பலரும் எழுதுகிறார்கள். இங்கு அது ஒலியன் எழுத்தாகக் கருதப்பட வேண்டும். ஆனால் அதே சமயத்தில் பழைய என்ற சொல்லில் அகர உச்சரிப்பு (பழய) காணப்பட்டாலும் ஐகாரமே எழுதப் படுவதால், பழைய என்பதில் உருபொலியன் எழுத்து உளது என்று கருதவேண்டும்.

இந்த முறை ஆங்கிலம் போன்ற மொழிகளிலும் காணப்படுகிறது. பன்மையைக் குறிக்க - S என்று எழுதினாலும், அது இசை ஒலியை இறுதியாக உடைய சொற்களில் (Z) என்றும் (எ-டு bags, cubs), இசை யிலா ஒலியை இறுதியாக உடைய சொற்களில் (S) என்றும் (cooks, tips) உச்சரிக்கப்படுகின்றது. ஆங்கில மொழியில் (S), (Z) என்று தனித்தனி வரிவடிவங் களைப் பெற்றிருந்து, பன்மை விகுதியில் இரண்டு உச்சரிப்பு இருந்தும் ஒரே எழுத்தில் எழுதுவதால் உரு பொலியன் எழுத்து முறையாக அமைகிறது.

மொழியில் உருபொலியன் எழுத்து முறை அதிக மாகக் காணப்படுவதில்லை. செ.வை.ச.

**உருபொலியனியல் அமைப்பு**: ஒரு மொழி யின் மைய அமைப்பின் (Central system) மூன்று பெரும் பிரிவுகளுள் ஒன்று உருபொலியனியல் அமைப்பு (Morphophonemic system) ஆகும். இவ்வமைப்பு மைய அமைப்பின் பிற இரு அமைப்புகளாகிய ஒலியனியல் அமைப்பையும் (Phonological system) இலக்கண அமைப்பையும் (Grammatical system) இணைக்கும் ஒரு பாலமாகச் செயற்படுகின்றது.

ஒலியனியல் அமைப்பு, ஒலியன்கள் (Phonemes), அவற்றின் வருகை முறை (Distribution) ஆகியவற் றையும், இலக்கண அமைப்பு, உருபன்கள் (Morphemes), அவற்றின் வருகைமுறை ஆகியவற்றையும் விவரிக் கும். சொற்கள் புணருங்கால் அவற்றின்கண்ணுள்ள ஒலியன்களில் ஏற்படும் மாற்றங்களை உருபொலியனி யல் அமைப்பு விவரிக்கும். இங்ஙனம் புணர்ச்சியின் போது உருபன்களிலுள்ள ஒலியன்களில் ஏற்படும் மாற்றங்களைச் சித்திரிக்கும் வகையில் இவ்வமைப்பு ஒலியனியல் அமைப்பினையும் இலக்கண அமைப்பி னையும் இணைக்கும் அமைப்பாகச் செயற்படுகின் றது.

உருபன்களின் மாற்றுருபுகளே (Allomorphs) உரு பொலியனியல் அமைப்பின் அடிப்படையாக அமை கின்றன. புணர்ச்சி காரணமாகவும் ஓர் உருபனுக்குப் பல்வேறு மாற்றுருபுகள் அமைதலுண்டு. இரண்டு சொற்கள் புணருங்கால் அவற்றின் ஒலியன்கள் சூழ லுக்கேற்ப மாற்றமடைதலுண்டு. இத்தகைய மாற் றங்கள் உருபொலியனியல் மாற்றங்கள் (Morpho-phonemic Changes) அல்லது புணர்ச்சி மாற்றங்கள் (Sandhi Changes) எனப்படும்.

புணர்ச்சியின்கண் மாற்றமடைகின்ற ஒலியன் உருபொலியன் (Morphophoneme) எனப்படும். 'மரம்' என்னும் உருபன் 'காடு', 'சோலை', 'தொட்டி', 'பெட்டி', 'வேர்' ஆகிய உருபன்களோடு புணரும் நிலையில் முறையே 'மரக்காடு', 'மரச்சோலை', 'மரத் தொட்டி', 'மரப்பெட்டி', 'மரவேர்' என அமைகின் றது. ஈண்டு 'மரம்' என்னும் உருபனின் ஈற்று மகரம் உருபொலியனாகக் கருதத்தக்கது.

தமிழில் புணர்ச்சியின்கண் திரிதல் (Replacement/ Substitution), தோன்றல் (Addition), கெடுதல் (Deletion), இயல்பு (No Change) ஆகிய நான்கு வகை யான மாற்றங்கள் நடைபெறுதலுண்டு. புணர்ச்சியில் ஈடுபடும் முதற்சொல் நிலைமொழி அல்லது நிறுத்த சொல் எனவும் இரண்டாம் சொல் வருமொழி அல் லது குறித்துவருகிளவி எனவும் சுட்டப்பெறும்.

தமிழ் மொழியில் புணர்ச்சியினை வெவ்வேறு நிலைகளில் வெவ்வேறு வகையினவாக வகைப்படுத்து தல் இயலும். அடிப்படை நிலையில் புணர்ச்சியினைப் புறப்புணர்ச்சி (External Sandhi or Syntactical Sandhi) எனவும், அகப்புணர்ச்சி (Internal Sandhi or Morphological Sandhi) எனவும் இருவகைப்படுத்த லாம். இரு தனி வடிவங்கள் (Free Forms) புணர்வது புறப்புணர்ச்சி எனப்படும். மண், குடம் என்னும் இரண்டு வடிவங்களும் புணர்ந்து 'மட்குடம்' என மாற்றம் பெறுவது இவ்வகையாகும். ஒரு தனிவடிவ

மும் ஒரு கட்டுவடிவமும் (Bound Form)அல்லது இரண்டு கட்டுவடிவங்கள் புணர்வது அகப்புணர்ச்சி எனப்படும். குயில் என்னும் தனிவடிவமும் ஐ என்னும் கட்டுவடிவமும் குயிலை எனப் புணர்வது அல்லது எ, படி என்னும் இரு கட்டுவடிவங்களும் 'எப்படி' எனப் புணர்வது அகப்புணர்ச்சியின் பாற்படும். சமசுகிருத மொழியில் அகப்புணர்ச்சி,புறப்புணர்ச்சி ஆகிய இரண் டிற்கும் தனித்தனி விதிகள் உண்டு. ஆனால், தமிழில் இவ்விரண்டிற்கும் ஒரே வகையான விதிகளே காணப் படுகின்றன.

இன்னமும் புணர்ச்சியினை அதன் நிலைக்கேற்பத் தன்னியல்புப் புணர்ச்சி (Automatic Sandhi) எனவும், தன்னியல்பில்லாப் புணர்ச்சி (Non-automatic Sandhi) எனவும் பகுத்தல் இயலும். எவ்வித விதிவிலக்கும் (Exception) இன்றி இயல்பாகச் சொற்கள் புணர்வது தன்னியல்புப் புணர்ச்சி எனப்படும். தமிழில் இரண்டு உயிர்கள் புணருங்கால் அவற்றிடையே உடம்படுமெய் (Glide) தோன்றும் (கோ + இல் > கோவில்)அல்லது ஓர் உயிர் மறைந்துவிடும்(ஒய்வு + இடம் >ஒய்விடம்). இதற்கு எவ்வித விதிவிலக்கும் இல்லையாதலின் இதனைத் தன்னியல்புப் புணர்ச்சி எனலாம். யகர உடம் படுமெய் 'இ', 'ஈ', 'ஐ'என்னும் ஒலியன்களை அடுத்து அவற்றிற்கு முன்னர் வரும். ஆனால்,மாயிருஞாலம், ஆயிடை என்னும் தொடர்களில் யகர உடம்படுமெய் ஆகாரத்தின் முன்னர் வருகின்றது. இப்புணர்ச்சி இயல்புப்புணர்ச்சிக்குப் புறம்பாக அமைவதால் தன்னி யல்பில்லாப் புணர்ச்சி எனப்படும்.

மேலும், புணர்ச்சியினை அதன் தன்மைக்கேற்ப ஒழுங்குடைப் புணர்ச்சி (Regular Sandhi) எனவும் ஒழுங்கில்லாப்புணர்ச்சி (Irregular Sandhi) எனவும் இருவகைப்படுத்தமுடியும். ஒரு குறிப்பிட்ட வகைப் புணர்ச்சி பெரும்பான்மையான இடங்களுக்குப் பொருந்தி வருமாயின், அது ஒழுங்குடைப் புணர்ச்சி எனப்படும். தமிழில் வேற்றுமைப் புணர்ச்சியில் மகர ஈறு வருமொழி வல்லினத்திற்கேற்ப வல்லின ஒலியாக மாற்றம் பெறும்(மரம் + கொம்பு > மரக்கொம்பு). இப்புணர்ச்சி எல்லா இடங்களுக்கும் பொருந்தி வருவதால் ஒழுங்குடைப்புணர்ச்சிக்குத் தக்க சான்றாகும்.

ஒரு குறிப்பிட்ட வகைப்புணர்ச்சி பெரும்பான்மை யான இடங்களுக்குப் பொருந்தி வாராதிருக்குமாயின் அது ஒழுங்கில்லாப்புணர்ச்சி எனப்படும். சோழன், நாடு என்பன 'சோணாடு' என்று புணர்வது ஒழுங் கில்லாப் புணர்ச்சியின்பாற்படும். இப்புணர்ச்சி எல்லா இடங்களுக்கும் பொருந்தி வருவதில்லை.

வேற்றுமைப் பொருளை அடிப்படையாகக் கொண்டு புணர்ச்சியினை வேற்றுமைப்புணர்ச்சி (Casal Sandhi), அல்வழிப்புணர்ச்சி(Non-Casal Sandhi) எனவும் வகைப்படுத்தலாம். தமிழில் வேற்றுமைப் புணர்ச்சியில் மகர ஈறு வருமொழி வல்லினத்திற் கேற்ப வல்லொலியாகவும் (மரம் + செதிள் > மரச் செதிள்), அல்வழிப் புணர்ச்சியில் வருமொழி வல்லி னத்தின் இனமெல்லொலியாகவும் (மரம்+ சிறிது > மரஞ்சிறிது) மாறும்.

புணர்ச்சியில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஒலியன் களும் உருபன்களும் சூழல்களாக அமைதலுண்டு. ஒலியனைச் சூழலாகக் கொண்டமையும் புணர்ச்சி ஒலியனால் கட்டுண்ட புணர்ச்சி (Phonemically Conditioned Sandhi) எனவும், உருபனைச் சூழலாகக் கொண்டமையும் புணர்ச்சி உருபனால் கட்டுண்ட புணர்ச்சி (Morphemically Conditioned Sandhi) என வும் கூறப்படும்.

மரம் என்னும் வடிவமும் கிளை என்னும் வடிவ மும் மரக்கிளை எனப் புணரும் நிலையில் மரம் என் னும் உருபனுக்கு 'மரக்' என்னும் மாற்றுருபு கிடைக் கப்பெறுகின்றது. ஈண்டு வருமொழி முதலொலிக் கேற்ப நிலைமொழி ஈற்று மகரம் ககரமாக மாற்ற மடைந்து 'மரக்' என்ற மாற்றுருபு கிடைக்கப்பெறு கின்றது.

'நாழி' என்னும் வடிவமும் 'உரி' என்னும் வடிவ மும் 'நாடுரி' எனப் புணரும் நிலையில் 'நாழி' என் னும் உருபனுக்கு 'நாடு' என்னும் மாற்றுருபு கிடைக் கப் பெறுகின்றது. 'உரி' என்னும் உருபனுடன் மட் டுமே புணரும் நிலையில் 'நாடு' என்னும் மாற்றுபுருபு கிடைக்கப்பெறுவதால் இப்புணர்ச்சி உருபனால் கட் டுண்ட புணர்ச்சியாகும்.

புணர்ச்சியில் மாற்றமடையும் ஒலியன்களின் தன் மைக்கேற்பப் புணர்ச்சியினை ஓரினமாதல் (Assimilation), வேறினமாதல் (Dissimilation) எனவும் வகைப் படுத்தலாம்.

புணர்ச்சியில் வேறுவேறு இனத்தைச் சார்ந்த நிலைமொழி ஈற்றொலியன், வருமொழி முதலொலி யன் ஆகியன ஓரினமாக மாற்றம் பெறுமாயின் அப் புணர்ச்சி ஓரினமாதல் எனப்பெறும்.

ஓரினமாதல் ஓரளவு ஓரினமாதல் (Partial Assimilation) முற்றிலும் ஓரினமாதல் (Complete Assimilation)என இருவகைப்படும். புணர்ச்சியில் ஒரு குறிப்பிட்ட ஒலியனின் தாக்கத்தால் மாற்றம்பெறும் ஒலியன் இம் மாற்றத்திற்குச் சூழலாக அமையும் ஒலியனுக்கு இன ஒலியனாக மாறுமானால் (மரம்+செடி > மரஞ்செடி), அப்புணர்ச்சி ஓரளவு ஓரினமாதல் எனப்படும். ஈண்டு

வருமொழி முதலொலியனாகிய சகரத்திற்கேற்ப நிலைமொழி ஈற்றொலியனாகிய மகரம் சகரத்தின் இன ஒலியனாகிய ஞகரமாக மாறுகின்றமையால் இது ஓரளவு ஓரினமாதலுக்குத் தகுந்த சான்றாகும். சூழல் ஒலியனின் தன்மைக்கேற்ப, மாற்றமடையும் ஒலியன் முற்றிலும் மாறிவிடும் சூழலில் (மரம்+கொம்பு>மரக்கொம்பு) அப்புணர்ச்சி முற்றிலும் ஓரின மாதல் எனப்படும். இச்சான்றில் வருமொழி முதல் ஒலியனுக்கு (க்) ஏற்ப நிலைமொழி ஈற்றொலியன்(ம்) வெடிப்பொலியனாக(க்)மாறுகிறது.

ஓரினமாதல் மாற்றமடையும் ஒலியனின் நிலையிடத்திற்கு (Position) ஏற்ப, நிலைமொழி நோக்கிய ஓரினமாதல் (Regressive Assimilation), வருமொழி நோக்கிய ஓரினமாதல் (Progressive Assimilation), இருமொழி நோக்கிய ஓரினமாதல் (Reciprocal Assimilation) என மூன்று வகைப்படும். புணர்ச்சியின் போது நிலைமொழி ஈற்றொலியன் வருமொழி முதலொலியனுக்கு ஏற்ப மாற்றமடையுமாயின் (மரம்+தோல்>மரத்தோல்) அது நிலைமொழி நோக்கிய ஓரினமாதல் ஆகும். வருமொழி முதலொலியன் நிலைமொழி ஈற்றொலியனுக்கு ஏற்ப மாற்றமடையுமாயின் (பொன்+தீது>பொன்றீது) அது வருமொழி நோக்கிய ஓரினமாதல் எனப்படும். நிலைமொழி ஈற்றொலியன், வருமொழி முதலொலியன் ஆகிய இரண்டும் தத்தம் தாக்கத்தால் மாற்றமடையின் (மண்+தீமை>மட்டீமை)அது இருமொழி நோக்கிய ஓரினமாதல் எனப்படும். இருமொழி நோக்கிய ஓரினமாதலுக்குக் கொடுக்கப்பட்ட சான்றில் முதல்நிலையில் வருமொழி முதலொலியனுக்கேற்ப நிலைமொழி ஈற்றொலியன் மாற்றமடைகிறது (மட்தீமை). இரண்டாம் நிலையில் நிலைமொழி ஈற்றொலியனுக்கேற்ப வருமொழி முதலொலியன் மாற்றமடைகிறது (மட்டீமை).

ஒரே இனத்தைச் சார்ந்த நிலைமொழி ஈற்றொலியனும் வருமொழி முதலொலியனும் புணர்ச்சியில் வேறுவேறு இனத்தைச் சார்ந்த ஒலியன்களாக மாற்றம்பெறின் அப்புணர்ச்சி வேறினமாதல் எனப்படும். தமிழில் வேறினமாதலுக்கு முறையான சான்றுகள் இல்லை.

உருபொலியனியல் அமைப்பில் இருவகை மாற்றங்கள் நடைபெறலாம். முதல்வகை மாற்றம் வடிவ மாற்றம் (Shape Change) எனப்படும். தமிழில் 'இரா' என்னும் வடிவம் புணர்ச்சியின்கண் 'இரவு' என மாற்றம் பெறுகிறது. காலப் போக்கில் 'இரவு' என்னும் வடிவமே நிலைபெற்று விடுகின்றமையால் இத்தகைய மாற்றத்தினை வடிவமாற்றம் எனலாம். இரண்டாம் வகை மாற்றம் மாற்றுவடிவ மாற்றம் (Alternation Change) ஆகும். தமிழில் 'மண்' என்னும் உருபனுக்கு 'மட்', 'மண்' என்னும் இரு மாற்றுருபுகள் உண்டு. இக்காலத்தில் பேச்சுவழக்கில் 'மம்பானை' என்பதில் வரும் 'மம்' என்பது புதிய ஒரு மாற்றுருபாகச் செயற்படுகிறது. புணர்ச்சி காரணமாக 'மண்' என்னும் உருபனுக்கு 'மம்' என்னும் புதிய மாற்றுருபு தோற்றம் பெறுவது மாற்று வடிவ மாற்றத்திற்குத் தக்க சான்றாக அமைகிறது. ஏ.ஆ.

துணை நூல்கள்:

**Elson, S. and Picket, V.S.**, An Introduction to Morphology and Syntax, Summer Institute of Linguistics, California, 1953.

**Gleason Henry A.Jr.**, An Introduction to Descriptive Linguistics, New York, 1955.

**Hocket, Charles, F.**, A Course in Modern Linguistics, Oxford and IBH Publishing Co., New-Delhi, 1976.

**உருமண்ணுவா** கொங்குவேளிர் இயற்றிய பெருங்கதைக் காப்பியக் கதை மாந்தர்களுள் ஒருவன். வத்தவ நாட்டு அரசன் உதயணனுக்கு உற்ற நண்பராயும், அமைச்சராயுமிருந்த நால்வருள் யூகி என்பானுக்கு அடுத்த நிலையில் இவன் இருந்தான். இவன் யாராலும் நுழைய இயலாத அரண்மனையையும், பெருமை மிக்க படையையுமுடையவன்; சிறந்த வீரன்; நூற்கேள்விமிக்கவன்.

உதயணனும் வாசவதத்தையும் இவன் நாட்டில் தான் திருமணம் புரிந்து கொண்டனர். உதயணன் வாசவதத்தையின் மீது கொண்ட தீராக் காதலினால் ஆட்சியில் நாட்டமில்லாதவனாக இருந்தபோது, யூகி என்பான் உருமண்ணுவாவின் துணைக்கொண்டு உதயணனுக்கு நன்மை விளையும் செயல்களைச் செய்தான். உதயணன் இருந்த அரண்மனைக்குத் தீ வைத்து, வாசவதத்தையைப் பிரித்துச் சாங்கியத் தாய் மூலம் யூகி இறந்துபட்டானென, உதயணனுக்கு மறைமுகமாக அறிவித்தான். அதனால் வேதனையுற்ற உதயணனை இவன், தேற்றுகிறான். வாசவதத்தையையும் சாங்கியத்தாயையும் சுரங்கப் பாதை வழியே வெளியேற்றி யூகியிடம் சேர்ப்பித்தான். தீயில் இறந்துபட்ட கள்வர் இருவர் உடலைக்காட்டி வாசவதத்தையும் சாங்கியத்தாயும் இறந்துபட்டனரென நம்பச் செய்து, அவனுக்கு ஏதும் தீங்கு நேராவண்ணம் விழிப்புடனிருக்கிறான். அவன் இறந்துபடாமலிருக்கக் காகதுண்டன் என்னுந் துறவியைக் கொண்டு, அவன் மனைவி அவனை

வந்தடைவாள் எனக் கூறச் செய்ததன்வழி அவனைக் காப்பாற்றினான்.

மற்ற நண்பரான வயந்தகன், இடபகனுடன் மகதநாட்டு மன்னன் தருசகனுடன் உதயணன் உறவு கொள்ளுதற்குரியநிலை ஆராய்ந்து, அவன் குறிப்பறிந்து அவனை மகதம் அழைத்துச் சென்று துறவோர் பள்ளியில் தங்கச் செய்தான். அங்கே உதயணனும் தருசகன் தங்கை பதுமாவதியும் காதல் கொண்டது உதயணனுக்கு ஆக்கம் தரும் என மகிழ்ச்சியும் கொண்டான். தருசகன் உதயணனுடன் நட்புப் பூண்டு அவனை அரண்மனையில் தங்கச் செய்த பொழுது அவனைக் காப்பதற்காக, அரண்மனையில் உருக்கரந்து வாழ்ந்தான்.

தருசகனோடு போர் செய்ய விரிசகன் முதலிய பகைவர் எண்மர் வந்தபோது உதயணனுக்கு உறுதுணையாக நின்று, பகைவர் புறங்காட்டி ஓடச் சூழ்ச்சி செய்தான். மேலும் உதயணன், தருசகன் ஆகிய இருவர் தந்தையரும் நண்பர்கள் என்பதை எடுத்துக்காட்டி, உதயணன் பதுமாவதியின் களவொழுக்கம் கூறப்படின் தருசகன் பதுமையைக் கேகய நாட்டரசன் அச்சுவனுக்குத்தாரான் என எடுத்துக் காட்டினான். உருமண்ணுவாவைச் சங்க மன்னர் சிறை வைத்தபோது, தருசகன் இவனைச் சிறையினின்றும் விடுவித்தான். இச்சங்க மன்னரையும் உதயணனுக்கு நண்பராக்கும் செயல்களைச் செய்தான் உருமண்ணுவா.

சாதகன் என்னும் இளையோன் வாயிலாக யூகியிடமிருந்து ஆற்றவேண்டிய காரியங்களை அறிந்து அவ்வண்ணமே நடந்தான். சத்தியூதி என்பானைத் தன்னொடு அழைத்துக் கொண்டு புண்டர நகரத்தை அடைந்து, கரந்துறையும் வாசவதத்தை முதலியோரைக் கண்டு, அவர்களை மதுகம்பீர வனத்தில் மறைத்து வைத்துவிட்டுக் கோசம்பி சென்றான். இறுதியில் அனைவரும் ஒன்றுபட வைத்தான்.

இவ்வாறு உற்ற நண்பனாக இருந்த உருமண்ணுவாவைச் சிறப்பிக்க ஏழுநாள் விழா எடுத்தான் உதயணன். அவ்விழாவில் அவன் முத்தீ வளர்ப்போரும், ஐம்பெருங்குழுவும், செல்வரும், செல்வச்சிறப்பு மிக்க பெருங்குடி மாந்தரும், வாசவதத்தையும், பதுமாவதியும், படைத்தலைவர்களும் தன்னைச் சூழ்ந்து நிற்கத் தான் அணிந்துள்ள தன் பெயர் பொறிக்கப்பட்ட மோதிரத்தை, 'இப்பெருமகன் நம் படைத்தலைவன் ஆகட்டும்' எனக் கூறி, உருமண்ணுவாவிற்கு அணிவித்தான்.

மேலும், பதுமாவதியின் தோழி இராசனை என்பவளையும் அவனுக்குத் திருமணம் செய்து, பல்வேறு பரிசில்களையும் தந்து, சயந்தி, இலாவாணக நகரங்களுக்கு அரசனாக்கினான். பி.பா.உ.

**உருமேனியா** கிழக்கு ஐரோப்பாவிலுள்ள பொதுவுடைமை நாடுகளுள் ஒன்று. உரோமானியர்களைத் தம் மூதாதையராகவும் உரோமானிய மொழியைத் தம் மொழியின் அடிப்படையாகவும் கொண்டு, கிழக்கு ஐரோப்பாவில் நிலைத்திருப்பவர்கள் உருமேனியர்களே.

புகாரெசுட்டு (Bucharest) உருமேனியாவின் தலைநகரும் பெருநகருமாகும்.


இருப்பிடம்: உருமேனியா உருசியா நாட்டிற்குத் தென்மேற்கிலும் பால்கன் தீபகற்பத்திற்கு வடக்கிலும் அமைந்துள்ளது. இதன் கிழக்குக் கரையில் கருங்கடல் உள்ளது.

பரப்பு: உருமேனியாவின் பரப்பளவு 2,37,500 ச.கி.மீ.

மக்கள்தொகை: இந்நாட்டின் மக்கள் தொகை 1981-ஆம் ஆண்டு மதிப்பீட்டின்படி 2,25,37,000 ஆகும். மக்கள்தொகையில் 51 விழுக்காட்டினர் நகர்ப்புறங்களிலும் 49 விழுக்காட்டினர் நாட்டுப்புறங்களிலும் வாழ்கிறார்கள். இதன் மக்கள்தொகை 1986-இல் 2,36,87,000 இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. உருமேனியாவின் மக்கள்தொகையில் 85 விழுக்காட்டினர் உரோமானிய மரபில் வந்தவர்கள். அங்கேரியர்கள் உருமேனியாவில் வாழும் சிறுபான்மையினர். அவர்களின் தொகை 8 விழுக்காடாகும். செருமானியர் 2 விழுக்காடு இங்கு உள்ளனர். பல்கேரியர்கள், நாடோடிகள், யூதர்கள், துருக்கியர் போன்றோர் எஞ்சியவர்கள்.

மொழி: உருமேனிய மொழியே நாட்டின் ஆட்சிமொழி. அனைத்து மக்களும் இம்மொழியையே பேசுகின்றனர். இங்கு வாழும் செருமானியர்களும் அங்கேரியர்களும் தம்தம் மொழியைப் பேசுகிறார்கள்.

உருமேனிய மொழி இலத்தீன் மொழியிலிருந்து உருவாகி வளர்ந்துள்ளது. கிழக்கு ஐரோப்பிய மொழிகளுள் இலத்தீன் தொடர்புள்ள மொழி இம்மொழி ஒன்றேதான் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே, இம்மொழி கிழக்கு ஐரோப்பாவில் வழங்கும் ஏனைய மொழிகளிலிருந்து வேறுபட்டது. பிரெஞ்சு, இத்தாலியம், போர்த்துகீசியம், இசுபானியம் போன்ற




உருமேனியா

மேற்கு ஐரோப்பிய மொழிகளும் இலத்தீன் மொழித் தொடர்பு கொண்டவையே.

மக்கள் வாழ்க்கை: ஐரோப்பாவிலேயே மிகக் குறைந்த வருவாயைக் கொண்டவர்கள் உருமேனியர்களே. அவர்கள் வாழ்க்கைத்தரம் மிகத் தாழ்ந்த நிலையிலுள்ளது. பகட்டாக வாழ்வதற்குதவும் பொருள்களை விலைகொடுத்து வாங்க முடியாத நிலையில் அவர்கள் வாழ்கிறார்கள். நாட்டுப்புற உருமேனியர்களுள் பெரும்பாலோர் 2 அல்லது 3 அறைகளைக் கொண்ட மரத்தால் கட்டப்பட்ட எளிய வீடுகளில் வாழ்கின்றனர். வீடுகளைப் பல் வேறு அழகிய கலைப் பொருள்களால் ஒப்பனை செய்து மகிழ்வர். விழாக் காலங்களில் வண்ண வண்ண ஆடைகள் உடுத்தும், ஆடியும், பாடியும் மகிழ்கிறார்கள்.

உருமேனியாவின் அக்கால நகரங்களுக்கும் இக் கால நகரங்களுக்குமிடையே வேறுபாடு உண்டு. பல நகரக் கட்டடங்கள் நூற்றுக்கணக்கான ஆண்டு களுக்கு முன் கட்டப்பெற்றவை. ஏனைய கட்டடங் கள் தொழில்மயமான பின்னர், அதாவது 1960 க்குப் பின்னர்க் கட்டப்பட்டவை. நகரமக்கள் சிறுசிறு குடித்தன அறைகளில் வாழ்கிறார்கள்.

உருமேனியர்களின் வாழ்க்கை பொதுவுடைமை அரசாட்சியினால் மிகுதியும் மாறுதலுக்குட்பட்டுள் ளது. பள்ளிகளில் மாணவர்களுக்கேற்ற பாடங்களை அரசே முடிவுசெய்கிறது. நாட்டின் வாணிகமும் பண்ணைகளும் அரசுக்குச் சொந்தமானவை. மக்களில் பெரும்பாலோர் அரசு ஊழியர்களே. அரசின் முன் னனுமதியின்றித் தொழிலை மாற்றிக்கொள்வதோ நாட்டைவிட்டு வெளியேறுவதோ முடியாது.



புகாரெசுட்டு நகரம்

பொழுதுபோக்கு: உருமேனியர் மலைகளையும் கருங்கடல் கடற்கரையையும் பொழுது போக்கிடங்களாகக் கொண்டு மகிழ்கிறார்கள். மலைகளில் பனிச் சறுக்கு விளையாட்டு, மலையேறுதல், உலாவுதல் போன்றவை நிகழ்கின்றன. கதிரொளியில் ஓய்வெடுத்துக் கருங்கடலில் நீந்தி விளையாடுகிறார்கள். உருமேனியாவின் தலைசிறந்த விளையாட்டு கால்பந்தாட்டமாகும்.

உணவு: இறைச்சியைப் பல வகைகளில் வேக வைத்த இறைச்சி உருண்டைகளையும், காரப்பணியாரங்களையும் உண்டு களிப்பர். மமலிகா (Mamaliga) என்னும் உரொட்டி உணவையும் முந்திரித் தேறலையும் பிளம்பழச் சாற்றையும் சுவைத்துக் குடிக்கிறார்கள். இம்மக்கள் துசுய்கா (Tzuica) என்னும் மதுவை விரும்பிக் குடிப்பர்.

கல்வி: 6 வயது முதல் 16 வயது வரையிலுள்ள அனைத்துக் குழந்தைகளும் கட்டாயமாகப் பள்ளி செல்ல வேண்டுமென்று உருமேனியச் சட்டம் வலியுறுத்துகிறது. உருமேனியாவில் 6 பல்கலைக் கழகங்கள் உள்ளன. புகாரெசுட்டில் உள்ள பல்கலைக் கழகமே அனைத்திலும் பெரியது. பொதுவுடைமைக் கட்சி, கல்விக்கான முடிவுகளை மேற்கொள்கிறது. பாடவகைகளையும் கட்சியியே வரையறுக்கிறது.



சமயம்: உருமேனியர்களுள் முக்கால் பங்கினர் கீழைநாட்டு வைதிகத் திருச்சபையின் பிரிவான உருமேனிய வைதிகத் திருச்சபையைச் சார்ந்த கிறித்தவர்கள். அங்கேரியர்களுள் 7 விழுக்காட்டினர் உரோமானியக் கத்தோலிக்கர்கள்.

நிலம்: ஏறத்தாழ இரண்டரை இலட்சம் ச.கி.மீ. பரப்பினைக் கொண்ட உருமேனியா, கீழ்மேலாக 724 கி.மீ. நீளமும், தென் வடலாக 515 கி.மீ. அகலமும் கொண்டது. இதன் வடக்கிலும் வடகிழக்கிலும் உருசியாவும், மேற்கில் அங்கேரியும் யூகோசுலேவியாவும், தெற்கில் பல்கேரியாவும் அமைந்துள்ளன.

இந்நாட்டில் உள்ள மலைத்தொடர்கள் அனைத்தும் கார்ப்பேத்திய மலைப் பகுதிகளே. மலைகள் மிக உயரமானவை அல்ல. மலைகளுக்கு இடையே கணவாய்கள் பல உள்ளன. அவை போக்குவரத்திற்குப் பெரிதும் பயன்படுவன. மோல்டோவீனு மலையுச்சி 2543 மீ. உயரமுள்ளது; இதுவே உருமேனியாவின் மிக உயர்ந்த மலையுச்சியாகும்.

உருமேனியாவில் உள்ள ஆறுகளில் தான்யூபு ஆறு மிக நீண்டதும் பெரிதும் பயன்படுவதுமாகும். இந்த ஆறு உருமேனியாவில் மட்டும் 1400 கி.மீ. தொலைவு பாய்கிறது. மேற்கிலிருந்து கிழக்காகப் பாயும் இதனுடன் பல சிற்றாறுகள் கலக்கின்றன. ஏரிகள் பல மலைகளுக்கிடையில் இயற்கையழகினை மிகுதியாக்குகின்றன. இங்கு ஏறத்தாழ 2500 ஏரிகள் இருப்பதாகக் கூறுகிறார்கள்.

நிலப்பிரிவுகள்: உருமேனியாவை 6 நிலப்பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை 1. திரான்சில்வேனியா, 2. புகோவினா, 3. மால்டோவியா, 4. வலேச்சியா 5. பனத்து, 6. தோப்ருசா என்பனவாம்.

திரான்சில்வேனியா நிலப்பிரிவே இந்நாட்டின் மிகப் பெரியதும் பல்வேறுபட்ட அமைப்புகளைக் கொண்டதுமான பகுதி. இது பெரும்பாலான மலைத் தொடர்களையும் திரான்சில்வேனிய மேட்டுநிலத்தையும் வடமேற்குச் சமவெளியையும் கொண்டுள்ளது. இது மேட்டுநிலமும் சமவெளியும் பண்ணைகளுக்கேற்ற மண்வகைகளையுங் கொண்டது. மேட்டுநிலமும் மலைப்பகுதியும் விலைமதிப்புள்ள காடுகளையுங் கொண்டுள்ளன. காட்டுப் பொருள்களும் கனிமங்களும் இப்பகுதிகளில் சிறப்பாகக் கிடைக்கின்றன. பனிச்

சறுக்கு விளையாட்டிடங்கள் மலைப்பகுதிகளைக் கவரும்படி செய்துள்ளன. இப்பகுதியின் செழுமையினால் பல நகரங்கள் எழுந்துள்ளன.

திரான்சில்வேனியாவுக்கு வடகிழக்கில் அமைந்துள்ள புகோவினா அடர்ந்த காடுகளைக் கொண்டுள்ளது. மால்டோவியக் கார்ப்பேத்திய மலைத் தொடர்ப் பகுதிகளில் இக்காடுகள் சிறப்பானவை. கண் கொள்ளா இயற்கைக் காட்சிகளுக்கு நிலைக்களனான இம்மலைச்சரிவுகள் சுற்றுலா மையங்களாகும். இப்பகுதியில் நகரங்கள் இல்லை. மக்கள் பள்ளத்தாக்குகளில் நாட்டுப்புறங்களில் வாழ்கிறார்கள்.

உருமேனியாவின் வடகிழக்குப் பகுதியில் உள்ளது மால்டோவியா. வலேச்சியா தெற்கில் உள்ள மலைத்தொடர்களிலிருந்து தான்யூபுஆறு வரை பரந்துள்ளது. பனத்து மேற்கு உருமேனியாவில் உள்ளது. மால்டோவியா, வலேச்சியா, பனத்து ஆகிய மூன்று பகுதிகளும் ஏறத்தாழ ஒரே தன்மையான இயற்கையமைப்பைக் கொண்டவை. வலேச்சியாவில் மக்கள் தொகை மிகுதி. இப்பகுதியில்தான் புகாரெசுட்டு உள்ளது. தோப்ருசா ஒரு சிறிய சமவெளி. தான்யூபு ஆற்றின் வடக்கிலிருந்து கருங்கடல் வரை படர்ந்துள்ளது இப்பகுதி. தான்யூபு ஆற்றின் கழிமுகப் பகுதி இப்பகுதியின் வடகிழக்கிலுள்ளது. சதுப்புநிலக் காடுகளைக் கொண்ட இப்பகுயில் பல்வகைப்பட்ட விலங்குகளைக் காணலாம். இங்குள்ள நீரில் பல்வேறு வகை மீன்கள் உள்ளன. கருங்கடல் கடற்கரைப் பகுதியில் மணற்பாங்கான கடற்கரையும் அழகான கடற்கரையை யொட்டிய தங்குமிடங்களும் அமைந்துள்ளன. கான்சுடண்டா கருங்கடலிலுள்ள உருமேனியத் துறைமுகம்.

தட்பவெப்பம்: வெப்பம் மிகுந்த, சூரிய ஒளி மிக்க கோடையும், குளிர்ந்த மேகமூட்டத்தைக் கொண்ட குளிர்காலமும் உருமேனியாவில் தென்படுகிறது. சமவெளிகள் மலைப்பகுதிகளைவிட வெதுவெதுப்பானவை. மழையளவு 50 செ.மீ. முதல் 100 செ.மீ. வரை பெய்கிறது. மலைப்பகுதிகளில் மழை மிகுதி.

பொருளாதாரம்: உருமேனியாவின் பொருளாதாரம் 1960 க்கு முன்னர் வேளாண்மையின் அடிப்படையில் அமைந்திருந்தது. அதன் பின்னர்ப் பொதுவுடைமைக் கட்சி அரசு இந்நாட்டில் பல புதிய தொழிற்சாலைகளையும் மின் அமைப்புகளையும் உருவாக்கி, நாட்டின் தொழில்வளத்தைப் பெருக்க வழிவகை செய்துள்ளது. அதன் பயனாக உருமேனியா வேளாண்மைப் பொருளாதாரத்திலிருந்து தொழிற்சாலை நாடாக உருமாறி வருகிறது.

தேசிய அரசு உருமேனியாவின் பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்துகிறது. தொழிற்சாலைகள், சுரங்கங்கள், வங்கிகள், பெரும்பாலான பண்ணைகள் ஆகியவை அரசாங்கத்திற்குச் சொந்தமானவை. உற்பத்தி செய்யவேண்டிய பொருள்களின் அளவையும் விலையையும் அரசே கட்டுப்படுத்துகிறது.

**இயற்கைச் செல்வங்கள்:** உருமேனியாவின் 60 விழுக்காட்டு நிலம் வளமான விளைச்சல் நிலமாகவும் செழுமையான மேய்ச்சல் நிலமாகவும் உள்ளது; 25 விழுக்காட்டு நிலம் காடுகளும் மலைத் தொடர்களும் மேட்டு நிலங்களும் கனிமப் படிவங்கள் நிறைந்தது. இயற்கை வாயுவும் பெட்ரோலியப் பொருள்களும் மிகுதியாகக் கிடைக்கும். பாக்சைட்டு, நிலக்கரி, செம்பு, பொன், இரும்புத்தாது, ஈயம், வெள்ளி, துத்தநாகம் போன்றவை ஏனைய கனிமப் பொருள்களாகும். இவை உருமேனியாவின் பொருளாதாரத்திற்குச் சிறப்பாக உதவுவன.

வாணிகம்: தொழிற்சாலைகளுக்குப் பயன்படும் இயந்திரங்கள் சிறப்பான ஏற்றுமதி இறக்குமதிப் பொருள்களாகும். சிமெண்டு, உணவுப் பொருள்கள், இயற்கை எரிவாயு, பெட்ரோல், பெட்ரோலியப் பொருள்கள், மரம், செருப்புகள் போன்றவை ஏற்றுமதிப் பொருள்கள். நிலக்கரி, பருத்தி, இரும்புத்தாது, உலோகங்கள், இரப்பர் போன்றவை இறக்குமதிப் பொருள்களாகும். உருமேனியர் 1960–வரை தம் வாணிகத்தில் 80 விழுக்காட்டை, உருசியாவுடனும் ஏனைய பொதுவுடைமை நாடுகளுடனும் மேற்கொண்டிருந்தனர். இப்போது மேற்கு ஐரோப்பிய நாடுகளுடனும் அமெரிக்க ஐக்கிய நாடுகளுடனும் கூட வாணிகத் தொடர்பு கொண்டுள்ளனர்.

வரலாறு: உருமேனியாவில் கி.மு. 300– ஆம் ஆண்டளவில் தேசியர்(Dacians) என்னும் மக்கள் வாழ்ந்து வந்தனர். அக்காலத்தில் உருமேனியாவைத் தேசியா (Dacia) என்று கூறினர்.


உரோமானியப் பேரரசர் திரேசன் (Trajan) என்பார் கி.பி. 106–இல் தேசியாவை வென்று, அதை உரோமானியப் பேரரசுக்கு அடங்கிய மாநிலமாக்கினார். அங்கு உரோமானியக் குடியேற்றங்களை அமைத்தார். இருசாராரின் பண்பாடுகளும் பரிமாறிக் கொள்ளப்பட்டன. உரோமானியரின் ஆட்சிச் செல்வாக்கினால் தேசியா நாடு உருமேனியா எனப் பெயர்பெற்றது.

உருமேனியா கி.பி. 13–ஆம் நூற்றாண்டு வரை பல்வேறு துண்டுப் பகுதிகளாகச் சிதறிக் கிடந்தது. கி.பி. 1250க்கும் கி.பி. 1350க்கும் இடைப்பட்ட

காலத்தில் உருமேனியாவின் இணைப்பியக்கம் தொடங்கியது. தென் உருமேனியாவிலுள்ள வலேச்சிய மக்கள் படிப்படியாக இணைத்து, ஓர் அரசரின் கீழ்ச் சுதந்திர நாடாக அமைத்தனர். கிழக்கு உருமேனியாவிலுள்ள மால்டோவிய மக்களும் அவ்வாறே ஆயினர். இணைக்கப் பெற்ற ஒவ்வொரு நாட்டையும் ஒவ்வோர் இளவரசர் ஆண்டார்.

**துருக்கியராட்சி:** ஆசியாவின் துருக்கியிலிருந்து கிளம்பிய உதுமானியத் துருக்கர்கள் கி.பி. 15-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் ஐரோப்பாவின் மீது படையெடுத்துத் தாக்கினர். அவர்கள் வலேச்சியாவை கி.பி. 1476-இலும், மால்டோவியாவை கி.பி. 1506-இலும் வென்றனர். ஏறத்தாழ 300 ஆண்டுகள் துருக்கியர் இப்பகுதிகளைத் தொடர்ந்து ஆண்டனர். இப்பகுதிகளில் வாழ்ந்த எளிய குடியானவர்கள் துருக்கியர் ஆட்சியில் கடும் இன்னலுக்குள்ளாயினர். கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் துருக்கியர்கள் கிரேக்கர்களை உருமேனியப் பகுதிகளை ஆட்சி செய்ய அமர்த்தினர். அவர்களின் கொடுங்கோலாட்சிக்கு எதிராக உருமேனியர்கள் கி.பி. 1821-இல் கலகம் செய்ததால், கிரேக்கர்கள் பதவி நீக்கம் செய்யப் பெற்றனர்.

**உருசியராட்சி:** துருக்கியர்கள் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உருசியர்களால் பல போர்களில் தோற்கடிக்கப்பட்டனர். சிறிதுசிறிதாகத் துருக்கி தன் மாபெரும் பேரரசுப் பகுதிகளை இழந்தது. உருமேனியா உருசியர் வசமானது.




உருமேனிய வளர்ச்சி கி.பி. 1878-இலிருந்து 1920 வரை

உருமேனியாவிலிருந்த சிற்றரசுகளுக்கென உருசியா கி.பி. 1830-ஆம் ஆண்டளவில் அரசியல் அமைப்புத் திட்டமான உறுப்புகளுக்கான நாட்டுச்சட்டங்களை (Organic Statutes) உருவாக்கியது. இச்சட்டங்கள் 'பிரபுக்கள் குழு ஒவ்வொன்றினிடமும் ஒவ்வொரு சிற்றரசை ஆட்சிசெய்யும் அதிகாரத்தை அளித்தன. இவ்வாறு உருமேனியாவில் பிரதிநிதித்துவ அரசாங்கம் செயற்படத்தொடங்கியது. உருசியப் படைகள் இச்சிற்றரசுகளிலிருந்து கி.பி. 1834-இல் விலகிக் கொண்டன.

**இக்கால உருமேனியா:** மால்டோவியாவும் வலேச்சியாவும் தத்தம் அருகிலிருந்த பகுதிகளை இணைத்துக் கொண்டு சிற்றரசுகளாயின. கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் இணைப்பியக்கம் விரைந்து வளரலாயிற்று. கி.பி. 1859-இல் மேற்கூறிய இரு சிற்றரசுகளின் சட்ட மன்றங்கள், அலெக்சாந்தர் சான் குசா (Alexander John Cuza) என்னும் இளவரசரைத் தம் பொது அரசராகத் தேர்ந்தெடுத்தன. இச்சிற்றரசுகள் கி.பி. 1861-இல் ஒன்றாக இணைந்து, உருமேனியா என்னும் நாடு உருவாகியது.

பாரிசில் படித்து ஐரோப்பியப் புரட்சிக் கருத்துகளால் ஈர்க்கப்பட்ட உருமேனிய இளைஞர்கள் தம் நாட்டிலும் சீர்திருத்தத்தைக் கோரினார்கள். இளவரசர் குசா அவர்களின் கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டார். அவருடைய அரசு பணக்கார உருமேனியர்களிடமிருந்து நிலத்தை விலைக்கு வாங்கி, ஏழை உழவர்களுக்குக் கொடுத்தது. ஏழைகளுக்கு இலவசக் கல்வி கற்பிக்கப் பள்ளிகளும் மிகுதியாக்கப் பட்டன. பணம் படைத்த உருமேனியர்கள் குசாவை எதிர்த்தனர். அவர் கி.பி. 1866-இல் பதவியிலிருந்து விலகவேண்டியவரானார்.

குசாவிற்குப் பதிலாக அப்பணக்கார உருமேனியர்கள் ஒகன்சோலன் மரபினைச் சார்ந்த காரல் என்பவரைத் தேர்ந்தெடுத்தனர். காரல் செருமானிய இளவரசர்களுள் ஒருவர். அவருக்கு உருமேனியாவைப் பற்றிப் போதிய அறிவு இல்லை. எனினும், அவர் கரோல் இளவரசர் என்று பெயர் சூட்டிக் கொண்ட போது ஐரோப்பாவின் பெரும் நாடுகள் உருமேனியாவைச் சுதந்திர நாடாக ஏற்றுக் கொண்டன. துருக்கியின் ஆதிக்கம் முடிவுற்றது. உருமேனியா கி.பி. 1881-இல் ஓர் அரசரால் ஆளப்பெறும் நாடாகியது. முதலாம் கரோல் அதன் அரசரானார்.

கரோலின் ஆட்சித் தொடக்கத்தில் உருமேனியாவில் அரசியற் கட்சிகள் தோற்றுவிக்கப்பட்டன. தாம் விரும்பும் அரசாங்கத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும்உரிமையை மக்கள் பெற்றனர். எனினும், குடியான

வர்களுக்குப் போதுமான இடம் அரசியலில் கிட்டவில்லை. உருமேனியாவின் பொருளாதாரம் முன்னேறியது. பொருளாதார முன்னேற்றத்தால் பணக்கார உருமேனியர்களே பயனடைந்தனர். எனவே, 1907-இல் உருமேனிய உழவர்கள் கலகஞ் செய்தனர். நிலக்கிழார்களின் வீடுகளும் பயிர்களும் தீக்கிரையாயின. உருமேனியப்படை கலகத்தைஅடக்கியது. உழவர்கள் 10,000 பேர் உயிர்துறந்தனர். கரோல் 1914-இல் காலமானார். அவருக்குப்பின் அவருடைய உறவினர் பெர்டினாண்டு என்பார் அரசரானார்.

முதல் உலகப் பெரும்போரின்போது உருமேனியா,தொடக்கத்தில்நடுநிலைமையினை மேற்கொண்டது. ஆனால், 1916-இல் அது பிரான்சு, இங்கிலாந்து முதலிய நேசநாடுகளுடன் சேர்ந்துகொண்டது. பனத்து, புகோவினா, திரான்சில்வேனியா போன்ற பகுதிகள் செருமானியக் கூட்டில் இணைந்திருந்தன. ஆசுத்திரியா அங்கேரி நாட்டிடம் இருந்தது. அவற்றைத் தம் நாட்டுடன் சேர்த்துக் கொள்ள உருமேனியர்கள் எண்ணினர். அப்பகுதியில் உருமேனியர்களே மிகுதியாக வாழ்ந்தனர். போரில் நேசநாடுகள் வெற்றிபெற்றபோது, உருமேனியா மேற்கூறிய பகுதிகளைப் பெற்று இருமடங்குப் பரப்பளவு பெருகிய நாடாக உருமாறியது. இதுவே உருமேனியா போரில் ஈடுபடக்காரணம்.

உலகம் முழுவதையும் தாக்கிய பொருளாதார மந்தம் உருமேனியாவையும் 1929-இல் தாக்கியது. பல இலட்ச உருமேனியர்கள் வேலையிழந்தனர். நாடெங்கும் வறுமை பரவியது. இவ்வேளையில் இரும்புக் காவலர் (Iron Guard) என்னும் நாசிசக் கட்சி உருமேனியாவின் பெரும் அரசியல் கட்சியாயிற்று.

பெர்டினாண்டு 1927-இல் காலமானார். அவர் தம் மகன் கரோல் இரண்டாம் கரோல் என்னும் பெயருடன் மூன்றாண்டுகளுக்குப் பின்னர் அரசரானார். இரும்புக் காவலர் கட்சியின் செல்வாக்குப் பெருகி வளர்வதைக் கண்ணுற்ற கரோல், தம்மை உருமேனியாவின் வல்லாட்சியாளராக அறிவித்துக் கொண்டார். இரும்புக் காவலர் கட்சியோடு அனைத்து அரசியல் கட்சிகளையும் அவர் தடை செய்தார்.

இரண்டாம் உலகப் பெரும்போரின் தொடக்கத்தில் உருமேனியா நடுநிலைமை மேற்கொண்டது. ஆனால், ஐரோப்பிய நாடுகள் உருமேனியாவின் சில பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டன. அங்கேரி வட திரான்சில்வேனியாவையும் உருசியா வடகிழக்கு உருமேனியாவையும் பல்கேரியா தென்கிழக்குப் பகுதியையும் பிடித்துக்கொண்டன. அரசர் 1940-இல் முடிதுறந்து தம் மகன் மைக்கேலை அரசராக்கினார். முதலமைச்சராக இருந்த அயன் அண்டோனெசுக்கியூ (Ion Antonescu) செருமானியர்களுடன் நல்லுறவு கொண்டபோது உருமேனியா செருமனியுடன் சேர்ந்து கொண்டு, இரண்டாம் உலகப் பெரும் போரில் ஈடுபட்டது. செருமனி 1944-இல் தோற்கடிக்கப்படவே, அரசர் மைக்கேல் முதலமைச்சரை விலக்கிவிட்டு, நேசநாடுகளுடன் சேர்ந்து கொண்டார். போர் 1945-இல் முடிவுக்கு வந்ததும் வட திரான்சில்வேனியா மீண்டும் உருமேனியாவுக்குக் கிடைத்தது. உருசியாவும் பல்கேரியாவும் தாம் கைப்பற்றிய பகுதிகளை உருமேனியாவுக்குத் திருப்பிக் கொடுக்கவில்லை.

இரண்டாம் உலகப் பெரும்போரில் உருசியா நேசநாடுகளுடன் சேர்ந்துகொண்டது. உருசியப் படைகள் உருமேனியாவை 1944-இல் கைப்பற்றி 1950 வரை அங்கேயே நிலைத்திருந்தன. உருமேனியாவின் பொதுவுடைமைக் கட்சியினர் உருசியப் படைகளின் துணையுடன் அரசாங்கத்தைக் கைப்பற்றினர். அரசியல் பகைவர்கள் கொல்லப்பட்டார்கள். மைக்கேல் அரசர் 1947-இல் முடிதுறந்தார். உருமேனியா சுதந்திர நாடாகியது. அது பொதுவுடைமை அரசியலை ஏற்றது. உருமேனியப் பொதுவுடைமைக் கட்சியினர் 1960-இல் உருசியாவின் தலையீட்டை ஏற்க மறுத்தனர். தலைமை அமைச்சராக இருந்தவரும் இக்கருத்தை ஏற்றனர்.

பொதுவுடைமைக் கட்சி நாடுகள் 1962-இல் பொருளாதாரத்தின் அடிப்படையில் இயங்கவேண்டும் என்னும் கொள்கையை வற்புறுத்தி, வெற்றி பெற்றன. உருமேனியா 1964 முதல் அமெரிக்க ஐக்கிய நாடுகளுடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொண்டது. அது 1965-இல் முழுச் சுதந்திர நாடாகத் தனக்கென அரசியல் அமைப்புத் திட்டத்தையும் உருவாக்கிக் கொண்டது. இரா.அ.

**கல்விமுறை:** பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றைப் பேணிக் காக்கும் கருவியாகக் கல்வி உருமேனியாவில் கருதப்படுகிறது. சமுதாய, பொருளாதார, பண்பாட்டுச் செயல்களைத் திறம்பட நடத்துவதற்குரிய திறன்களை மாணவர்களிடம் வளர்ப்பதைத் தலையாய குறிக்கோளாக இந்நாட்டுக் கல்வி கொண்டுள்ளது. உயர்தரமான அறிவியல், தொழில் நுட்பம் ஆகியவற்றைக் கற்பித்தல், பொதுவுடைமைக் கட்சியின் அரசியற் கொள்கைகளைக் கற்பித்தல், உழைப்பை நேசித்தல், பொதுச் சொத்துகளைக்

காத்தல், தாம் வாழும் சமுதாயத்தையும் நாட்டையும் நேசித்தல் போன்ற பண்புகளை மாணவர்களிடையே வளர்த்தல், தேசிய ஒற்றுமையிலும் சகோதரத்துவத்திலும் தொழிலாளர் ஒற்றுமையிலும் நம்பிக்கையை இளைஞர்களிடம் வளர்த்தல், உண்மை, நீதி, கண்ணியம், நேர்மை, பொறுப்புணர்ச்சி, பிறரிடம் மரியாதை, இளைஞர் ஒற்றுமை ஆகிய பண்புகளை வளர்த்தல் ஆகியவற்றை உருமேனியா நாடு தன் கல்விக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

**பள்ளிக் கல்வி:** முன் தொடக்கப் பள்ளிக் கல்வி உருமேனியாவில் 2 அல்லது 3 வயதிலேயே தொடங்கிவிடுகிறது. இளஞ்சிறார் பள்ளிகளில் குழந்தைகள் 5 வயது வரை கல்வி பயிலுகின்றனர்.

பள்ளிக் கல்வி 3 நிலைகளில் வழங்கப்படுகிறது. தொடக்கப் பள்ளிகளில் 6 வயதிலிருந்து 9 வயது நிறைந்த குழந்தைகள், மொத்தம் 4 ஆண்டுகள் பயிலுகின்றனர். தொடக்கப் பள்ளிக்கல்வி முடித்தவர்கள் 10 வயதில் உயர் தொடக்கப் பள்ளிகளில் (Upper Primary Schools) சேர்ந்து, 13 வயது வரை மொத்தம் 4 ஆண்டுகள் கல்வி பயிலுகின்றனர். உயர்நிலைப் பள்ளிக்கல்வி (Secondary Education) மொத்தம் 4 ஆண்டுகள். உயர் தொடக்கக் கல்வியை முடித்தவர்கள் உயர்நிலைப் பள்ளிகளில் 17 வயது வரை பயிலுகின்றனர்.

உருமேனியாவில் உயர்தொடக்கக் கல்வி வரை மொத்தம் 10 ஆண்டுகள் மாணவர்களுக்குக் கட்டாயக் கல்வி வழங்கப்படுகிறது. எனவே, உயர்தொடக்கப்பள்ளிகளில் பெரும்பாலான மாணவர்கள் தவறாது வந்து கல்வி பயிலுகின்றனர். தொடக்கப் பள்ளிகளில் மாணவர் ஆசிரியர் விகிதம் 20:1 ஆகும். உயர் தொடக்கப் பள்ளிகளிலும் இதே விகிதம் உள்ளது.

உயர்கல்வி 3 ஆண்டிலிருந்து 6 ஆண்டுகள் வரை நீடிக்கிறது. அறிவியல், தொழில்நுட்பவியல் போன்றவை 3 ஆண்டுக் கால அளவு கொண்டவை. கட்டடவியல், மருத்துவவியல் போன்ற பட்டப் படிப்புகளின் கால அளவு 6 ஆண்டுகள். பல்கலைக்கழகங்களில் மாணவர் ஆசிரியர் விகிதம் 13:1 ஆகும்.

**பள்ளிசாராக் கல்வி:** ஆசிரியர்கள், இளைஞர் கழக உறுப்பினர்கள் ஆகியோரின் கூட்டு முயற்சியால் பள்ளிசாராக் கல்வி இந்நாட்டில் கற்பிக்கப்படுகிறது. பள்ளிசாராக் கல்வியில் முன்னோடிகள் பொதுவுடைமை இளைஞர் சங்கம் (Pioneers and the Communist Youth Union) முழு முயற்சியுடன் ஈடுபட்டு வருகிறது. வாரமொரு முறை கூடுதல், சுற்றுலாச் செல்லுதல், விளையாட்டுப் போட்டிகள், அறிவியல் சாதனைப் போட்டிகள் ஆகியன பள்ளிசாராக் கல்வி பயிலுவோரிடையே நடத்தப்படுகின்றன. கல்வியறிவு பெற்றோர் 1980-ஆம் ஆண்டுக் கணக்கின்படி 95.9 விழுக்காடு ஆவர்.

**கல்வி நிருவாகம்:** கல்விக் கொள்கைகளைத் தனியொரு கழகமோ நிருவாகமோ முடிவு செய்வதில்லை. நாட்டின் கல்விக் கொள்கைகளைக் கூட்டுச் செயலாட்சி (Collective Directions) மூலம் பல துறைகள் செயற்படுத்துகின்றன. கல்வி கற்பித்தல் பேரவை (Educational and Teaching Congress), கல்வி கற்பித்தல் உயர்நிலைக் கழகம் (Higher Council of Education and Teaching), கல்வி கற்பித்தல் அமைச்சகம் (Ministry of Education and Teaching) ஆகியன உருமேனியாக் கல்வி வளர்ச்சித் திட்டமிடலில் பங்குகொள்கின்றன. ஆசிரியர் பணியிடைப் பயிற்சி, உதவித்தொகை வழங்குதல், கல்வித்திட்டம் தயாரித்தல், ஆராய்ச்சித் திட்டங்களை அனுமதித்தல் போன்றவற்றை இக்கழகங்களே கண்காணிக்கின்றன.

**நிதி:** உருமேனியா அரசு கல்விக்காக வரவு செலவுத் திட்டத்தில் பெருந்தொகை ஒதுக்குகிறது. அரசு 1950-இல் செலவு செய்த தொகையைவிட 1980-இல் அது கல்விக்காகச் செலவு செய்த தொகை 14 மடங்கு அதிகமாகும். ஆய்வகம், கல்விப் பட்டறை ஆகியவற்றுக்காக அரசு மிகுதியான பணம் செலவழிக்கிறது. அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவசமாகப் பாடநூல் வழங்கப்படுகிறது. ஏறத்தாழ 500,000 மாணவர்கள் ஒவ்வோராண்டும் அரசு உதவித்தொகை பெறுகின்றனர்.

**ஆசிரியர் பயிற்சி:** உருமேனியாவில் 1981-இல் மட்டிலும் மொத்தம் 265,555 ஆசிரியர்கள் பணியிலிருந்தனர். முன் தொடக்கக் கல்விப்பள்ளி, தொடக்கப் பள்ளி ஆகியவற்றிற்கான ஆசிரியர்கள் கல்லூரிகளில் பயிற்சி பெறுகின்றனர். உயர்தொடக்கப் பள்ளி, உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் பல்கலைக்கழகங்களில் 4 ஆண்டுகள் பயிற்சி பெறுகின்றனர். வேளாண்மை, தொழில்நுட்ப நிறுவனங்களில் தொழில்நுட்பவியல் ஆசிரியர்கள் பயிற்சி பெறுகின்றனர். ஆசிரியர்கள் 3 ஆண்டுக் கற்பித்தல் அனுபவத்திற்குப் பின், ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை ஆசிரியர் கல்வியில் புத்தறிவுப் பயிற்சி பெற்றுத் தேர்வு எழுத வேண்டும். இதனால், ஆசிரியர் தரம் மேம்படும் என்று கருதப்படுகிறது. பல்கலைக்கழகங்களில் சிறப்பாகத் தேர்வு பெறும் மாணவர்கள் உதவி ஆசிரியர்களாக அமர்த்தப் பெறுகின்றனர். பேராசிரியர் போன்ற பெரிய பதவிகளுக்கு ஆசிரியர்களின் கற்பித்தல், அனுபவம்,

வெளியீடுகள், ஆராய்ச்சிக் கட்டுரைகள் ஆகியவற்றின் அடிப்படையில் சீர்தூக்கி ஆசிரியர்களை அமர்த்துகின்றனர்.

பாடத்திட்டம்: பாடத் துறைகளில் திறமைமிக்க வல்லுநர் குழுக்கள் பள்ளிப் பாடத்திட்டத்தை உருவாக்குகின்றன. நாடு முழுவதற்கும் ஒரே சீரான பாடத்திட்டம் கற்பிக்கப்படுகிறது. பல்கலைக்கழகக் கல்வியைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு புலமும் (Faculty) தத்தமக்கு ஏற்ற வகையில் பாடத்திட்டத்தை அமைத்துக் கொள்கின்றது. பல துறையறிவும் ஆய்வும் பல்கலைக்கழகப் புலத்தில் நிகழும் வகையில் இன்று புதிய பாடத்திட்டங்கள் உருவாக்கப்படுகின்றன.

தேர்வு முறைகள்: மாணவர்களின் கற்றல் திறனைப் பல்வேறு முறைகளில் ஆசிரியர்கள் மதிப்பீடு செய்கின்றனர். வாய்மொழித் தேர்வு, எழுத்துத் தேர்வு, செய்முறைத் தேர்வு, தொடர்முறைத் தேர்வு, பருவமுறைத் தேர்வு ஆகிய தேர்வு முறைகளால் மாணவர்கள் மதிப்பீடு செய்யப்பட்டு, மேல் வகுப்புகளுக்கு அனுப்பப்படுகின்றனர். உயர்நிலைப் பள்ளிகளுக்கும் பல்கலைக்கழகங்களுக்கும் மாணவர்கள் போட்டித் தேர்வுகள் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இத்தேர்வுகளைக் கல்வியமைச்சகமே நடத்துகிறது.

கல்வியியலாய்வு: புகாரெசுட்டு (Bucharest) நகரிலுள்ள கல்வியியலாய்வு நிறுவனம் (Institute of Educational Research) கல்வியியல் தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டிருக்கும் முதன்மையான நிறுவனங்களுள் ஒன்று. இங்குப் பல்கலைக்கழகப் பேராசிரியர்களும் ஆய்வு மாணவர்களும் ஆராய்ச்சிப் பணியில் ஈடுபட்டுள்ளனர். இளைஞர் சிக்கல் ஆய்வு மையம் (Centre for Youth Problems) பண்பாடு, சமூகவுடைமைக் கல்விக் கழகம் (Council for Culture and Socialist Education), சமூக, அரசியல் கழகம் (Academy of Social and Political Sciences) ஆகியன கல்வியியலாய்வுப் பணிகளில் ஈடுபடுகின்றன.

உருமேனிய அரசு 1990-99-ஆம் ஆண்டுகளில் கட்டாயக் கல்வியைப் 10-ஆண்டுகளிலிருந்து 12 ஆண்டுகளாக உயர்த்த முடிவு செய்துள்ளது. புதிய கற்பித்தல் முறைகள், பாடத்திட்ட முறைகள் ஆகியவற்றைப் பள்ளி, கல்லூரிக் கல்விகளில் புகுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

எஸ்.த.

தத்துவம்: உருமேனிய நாட்டுத் தத்துவ அறிஞர்கள் கி.பி. 15-ஆம் நூற்றாண்டிற்கும் 17-ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் வாழ்ந்தவர்கள். சமயத் துறவிகள் மறைமெய்ம்மை சார்ந்த கதைகளை மக்களிடத்து எடுத்துரைத்து மேலைநாட்டுப் பண்பாட்டுடன் தொடர்பு கொண்டிருந்தனர்.

உருமேனிய நாட்டுத் தத்துவ அறிஞர்களான திமிட்ரி (Dimitre), கேண்டீமிர் (Cantemir) போன்றோர் அளவையியல் (Logic), புலன்கடந்த மெய்ப்பொருளியியல் (Meta-Physics), புதிய இயற்கைத் தத்துவம் (New Natural Philosophy) பற்றிய கருத்துகளைத் தெளிவாக எடுத்துக்கூறினர். தங்கள் கருத்துகளை நூல்களின் வாயிலாக மறைமுகமாகவும் செருமன், கிரேக்க, பிரஞ்சு நூல் நிறுவனத்தின் வாயிலாக வெளிப்படையாகவும் பரப்பிவந்தனர்.

சில வரலாற்று அறிஞர்களும் கல்வியாளர்களும் உருமேனிய நாட்டில் வாழ்ந்தனர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர் நிக்கோலே பால்சிசுகுவும் (Nicolae Balcesgu), சியாம் பட்டிதவிக்கோவும்(Giam Battigta vico) ஆவர்.

உருமேனிய நாட்டுக் கதாசிரியர்களும் எழுத்தாளர்களும் எகல் (Hegel), எர்டர் (Herder), பிரஞ்சுக் களஞ்சிய அறிஞர்கள் (French Encyclopedists)போன்றோரிடமிருந்து தங்கள் கருத்துகளைப் பெறலாயினர். உருமேனிய நாட்டுத் தத்துவ போதகர்களான சாசியும் (Jassy), பியூச்சாரெசுட்டும் (Bucharest) இந்நாட்டில் அறிவும் தத்துவமும் வளரத் துணைபுரிந்தனர். இந்நாட்டின் அறிவு வளர்ச்சிக்கு உதவிய பல்கலைக்கழகப் பேராசிரியர்களுள் திடு மெய்யோரசும்(TituMaiorescu, கி.பி. 1840-1917) திமிட்டரசு-ஐசியும் (Dimitrescu-Iasi, கி.பி.1849-1923) குறிப்பிடத்தக்கவர். உருமேனிய நாட்டின் சீரிய கவிஞர்பெருமகன் மிகெயல் எமினிசின் (Mihail-Eminescu, கி.பி. 1850-1884) தத்துவமும், பிரபஞ்ச இயல்பு பற்றி எழுதிய வசில் காண்டா (Vasile conta)வின் கருத்தும் ஒக்கும். இவர் கருத்துகள் உலகாயதக்கருத்தைப்போதிக்கும் பள்ளிகளில் முக்கிய இடம்பெற்றன.

உருமேனிய நாட்டுப் பிற்கால மக்கள், கருத்துமுதற் கொள்கை (Idealism), உண்மையியல் கொள்கை (Realism) என்னும் இரு தத்துவங்களை ஏற்றுக்கொண்டனர். கருத்து முதற் கொள்கையை இசுடீபன் சிலேடினும் (Stefan Zeletin, கி. பி. 1882-1934), உண்மையியல் கொள்கையை இசினியு இசுபரந்தியாவும் (Eugeniu Sperantia) உருவாக்கினர். உருமேனிய மக்கள் எந்த ஒரு கோட்பாட்டையும் சீர்

தூக்கிப் பாராமல் ஒப்புக்கொண்டதில்லை. அவர்கள் பழைமையான பண்பாட்டில் ஆர்வம் உள்ளவர்களாகக் காணப்பட்டார்கள். இரா.கோ.

துணை நூல்:

**Georghiu, M.,** Social and Political Science in Romania, Academia Republicie Socialiste Romania, Bucharest, 1981.

**உருவக் கந்தம்**: இது பௌத்த மதத்தில் 'சௌத்திராந்திகம்' என்னும் பிரிவில் சொல்லப்படுகிற ஒரு தத்துவம்.

கந்தம் என்பது இத் தத்துவத்தில் சமூகம் அல்லது தொகுதி என்னும் பொருளில் சொல்லப்படுகிறது. அம்மதக் கொள்கையின்படி அறிவு புறச் சமுதாயம், அகச் சமுதாயம் என்னும் இருவகைச் சமுதாயம் பற்றி உண்டாகும். அவற்றுள் அகச் சமுதாயம் சித்தம், சித்தப் பகுதி என இரண்டு ஆகும். அவ்விரண்டிற்கும் காரணமாய் இருப்பவை ஐந்து வகைக் கந்தம். அவை உருவக் கந்தம், வேதனைக் கந்தம், ஞானக் (அறிவு) கந்தம், குறிக்கந்தம், வாசனைக் கந்தம் என்பன. உருவக் கந்தம் என்பது ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் என்னும் ஐம்புலன்களும் மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் பொறிகளும் அடங்கியதாகும். சி.அ.

**உருவகம்**: இரண்டு பொருள்களுள் ஒன்றை மற்றொன்றின் மேல் ஏற்றிக் கூறுதல் உருவகம். தாமரை, முகம் என்பன இரண்டு வேறுபட்ட பொருள்கள். 'இம்முகம் தாமரை' என்று கூறும் பொழுது முகம் தாமரை மேல் ஏற்றிக் கூறப்படுகிறது. இதனை உருவகம் என்பர். 'தாமரை போன்ற முகம்' என்று கூறும்பொழுது அதனை உவமை என்பர். 'இம்முகம் தாமரை' என்னும் தொடரில், தாமரையும் முகமும் வெவ்வேறானவை என்னும் வேற்றுமை நீக்கப்பட்டு, இரண்டும் ஒன்றே என்னும் பொருள் புலப்படுகிறது. 'தாமரை போன்ற முகம்' என்னும் பொழுது, தாமரையும் முகமும் வெவ்வேறானவை; இரண்டிற்கும் இடையிலுள்ள பொதுப் பண்பு அழகு மட்டுமே என்னும் கருத்து அமைகிறது.

தமிழ் மொழியில் அணி இலக்கணம் முதன்முதலாகத் தொல்காப்பிய உவம இயலில் பேசப்படுகிறது. தொல்காப்பியர் உவமஅணி ஒன்றினை மட்டுமே விளக்கியுள்ளார். ஏனைய அணிகள் உவமையுள் அடங்கும் என்பதனைத் தொல்காப்பியர் குறிப்பாக உணர்த்துகிறார். 'உவமையே அணிகளுக்குத் தாய்' என்று வடமொழி அறிஞர் அப்பைய தீட்சிதர் கூறியுள்ளார்.

உருவகம் என்னும் சொல்லைத் தொல்காப்பியர் ஆளவில்லை எனினும், உருவகம் பற்றிய கருத்து அவருடைய உவமஇயலுள் உள்ளது. 'பொருளே உவமம் செய்தனர் மொழியினும், மருளறு சிறப்பின் அஃது உவமமாகும்' என்பது அவருடைய நூற்பா. பொருளினை உவமம் ஆக்கி, உவமத்தை உவமிக்கப் படும் பொருளாக்கிக் கூறினும், அதுவும் உவமை எனப்படும் என்பது இந்நூற்பாவின் கருத்து. 'திருமுகம் மலர்ந்த தெய்வத் தாமரை' என்பது இந்நூற்பாவுக்கு எடுத்துக் காட்டாகக் கூறப்படுகிறது. திருமுகம், தெய்வத் தாமரை என்னும் இருவேறு பொருள்களில் திருமுகம் உவமேயம்; தெய்வத் தாமரை உவமானம். 'தெய்வத் தாமரை போல் அலர்ந்த திருமுகம்' என்று சொற்களை அமைத்தால் இத்தொடர் உவம அணி ஆகும். உவமிக்கப்படும் பொருளான திருமுகத்தை உவமம் ஆக்கி, உவமம் ஆன தெய்வத் தாமரையை உவமிக்கப்படும் பொருளாக்கி, மாற்றிக் கூறும்பொழுது 'திருமுகம்மலர்ந்த தெய்வத் தாமரை' என்னும் தொடர் கிடைக்கிறது. இவ்வாறு மொழிவதை அணிநூலார் உருவகம் என்று கூறுகின்றனர். ஆயின், தொல்காப்பியர் 'இதனையும் உவமை என்றே கொள்கிறார். பவளவாய் உவமை; வாய் பவளம் உருவகம் என்று தொல்காப்பிய உரையாசிரியர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

தமிழில் அணியிலக்கணம் பற்றிக் கூறும் தண்டியலங்காரத்தில் பொருளணிகளுள் ஒன்றாக உருவகம் கூறப்படுகிறது. உவமானம், உவமேயம் என்னும் இரண்டிற்கும் இடையிலுள்ள வேற்றுமையை நீக்கிக் கூறுதல் உருவகம் என்பது தண்டியலங்காரம் தருகிற இலக்கணம். 'கண் வண்டு' உருவகம் என்பதில் கண்ணுக்கும் வண்டுக்கும் இடையிலுள்ள வேற்றுமையை ஒழித்துக் கண்ணையே வண்டு எனக் கூறுவது உருவகம்.

தண்டியலங்காரம் உருவகத்தை 15 வகைகளாகப் பகுத்து விளக்குகிறது. உருவகம் பிற அணிகளோடும் கலந்துவரும் என்பதும் இந்நூலில் கூறப்படுகிறது. பரத முனிவர் (Bharata) இயற்றிய நாடக நூலில் உருவகம் ஓர் அணியாகக் கூறப்பட்டுள்ளது. பாமகர் (Bhamaha), உருத்திரடர் (Rudrata), தண்டி (Dandin) போன்ற அணிநூலார் உருவகத்தைப் பல பகுப்புகளாகப் பகுத்து விளக்கியுள்ளனர்.

வேறுபட்டவை போலத் தோன்றும் பொருள்களுக்கிடையிலும் ஓர் ஒப்புமை காண்பதுதான் உருவகம் என்று கிரேக்கச் சிந்தனையாளர் அரிசுடாட்டில் (Aristotle) கூறுகிறார். மாந்தனின் சிந்தனை உருவகத்தை அடித்தளமாகக் கொண்டே முகிழ்க்கிறது என்று இரிச்சர்டுசு (I.A. Richards)

கூறுகிறார். மொழியியல் உருவகத்தைப்பொருண்மை இயலில் (Semantics) ஆராய்கிறது. மொழியில் வழங்கும் சொற்களில் பல, மொழியின் தொடக்க நிலையில் உருவகங்களாக இருந்தன என்று மொழியியல் கூறுகிறது.

ஒரு மொழியில் எண்ணற்ற புதுப்புதுத் தொடர்கள் அமைவதைப் போன்று, எண்ணற்ற புதுப்புது உருவகங்களும் அமைகின்றன. மக்கள் தம் பேச்சு மொழியில் உருவகங்களை அவ்வப்போது புத்தம் புதிதாகப் படைத்துக் கொள்கின்றனர். குறிப்பாக ஒருவரைக் கேலி செய்யும் முறையில் எருமை, கரடி, மாடு என்று மக்கள் சூட்டும் பெயர்கள் உருவகங்களாக அமைகின்றன. உருவகம், சூழமைச் சார்புடையது (Context Dependent) என்று மொழியியலார் கூறுகின்றனர். சூழமைவினைத் தெளிவாக விளங்கிக் கொள்ளாவிட்டால் பொருள் புலப்பாடு கடினமாகிறது. 'கறுப்பை வெள்ளைஆக்கினான்' என்னும் தொடர் இதற்கு எடுத்துக்காட்டு. சட்டத்திற்குப் புறம்பாக ஈட்டிய பொருள் கறுப்புப்பணம் என்றும், அதனைச் சட்டப்படி செல்லுபடி ஆக்குதல் வெள்ளைப் பணம் ஆக்குதல் என்றும் கூறப்படுகிறது. இதனை விளங்கிக் கொள்ளாவிட்டால் இத்தொடரின் பொருளை உணர இயலாது. புதுக்கவிதைகளில் உருவகங்களை மிகுதியாகப் பயன்படுத்துகின்றனர். அக்கவிதைகளில் இருண்மை (Obscurity)மிகுந்திருப்பதற்கு இதுவும் ஒரு காரணம் ஆகும்.
அ.பா.

**உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னி** புறநானூற்றில் பரணராலும் பெருங்குன்றூர் கிழாராலும் சிறப்பித்துப் பாடப்பெற்ற சோழ இளவரசன். யானை, தேர், குதிரை, காலாள் ஆகிய நாற்படைகளும் உடைய இவன், தேரில் வரும்போது பொலிவோடும் வலிவோடும் காட்சி தருவான் என்று பரணர் பாடுகிறார். வீரன், கொடையாளி என்று சிறப்பாகப் பேசப்படும் இச்சோழனுக்குப் பல்வகைத் தேர்கள் உடைமையாக இருந்தன. பல்வேறுபட்ட உருவங்களில் அமைந்த பல தேர்கள் இருந்தமையால் உருவப் பஃறேர் என்ற அடைமொழியுடன் அழைக்கப்பட்டான் என்பர். பேரரசர், சிற்றரசர் வீடுகளில் பெண் கேட்பதும் மணப்பதும் வழக்கமாக இருந்ததால், இவன் அழுந்தூர்வேள் என்னும் வேளிர் குலத் தலைவன் மகளை மனைவியாக ஏற்றான்.

இச்சோழன் இவனுடைய தமையனுக்காகப் போர்க்களம் சென்று பகைவர்களைத் தோற்கடித்துள்ளான். எனினும், இவன் முடி சூடா மன்னனாகவே இருந்திருக்கிறான். அதனால், இவனுடைய பெயர் இளஞ்சேட் சென்னி என்றும் வழங்கப்பெற்றது. இவ் விளஞ்சேட் சென்னியின் மகனே கரிகாலன். இவன் பிறக்குமுன் தந்தை இளஞ்சேட் சென்னி இறந்துவிட்டான். கரிகாலனுக்கு மற்றொரு பெயர் 'உருவப்பஃறேர் இளையோன் சிறுவன்' என்பதாகும். தாய்வயிற்றில் இருக்கும்போதே அரச உரிமையைப் பெற்றுவிட்டதாகப் பொருநராற்றுப்படை கூறுவதால், இக்கரிகாலன், தந்தை முகம் காணாச் சிறுவன் ஆவான்.
பி. தெ.

**உருவப்பள்ளிச் செப்பேடு**: இது பல்லவ இளவரசர் விட்டுணு கோபவர்மன் வழங்கியது. இச் செப்பேட்டில் விட்டுணுகோபவர்மன்,இரண்டாம் கந்தவர்மனின்(கி.பி. 400-436)மகன் என்றும், வீரவர்மனின் (கி. பி.385-400)பெயரனென்றும், கந்தவர்மனின்(கி. பி. 370-385) கொள்ளுப்பெயரன் என்றும் கூறப்பட்டுள்ளது. கோபவர்மன் இச்செப்பேட்டினைத் தம் அண்ணன் முதலாம் சிம்மவர்மனின் (கி. பி. 436-460) ஆட்சிக் காலத்தில் வழங்கியுள்ளான்.

இச்செப்பேடுகளின் மைப்படம் சர். வால்டர் எலியட்டு என்பவரால் சேகரித்து வைக்கப்பட்டிருந்தது. இதனை, டாக்டர் பிளீட்டு என்பார் முதன் முதல் உரிய குறிப்புகளுடன் வெளியிட்டார். இது ஐந்து செப்பேடுகளைக் கொண்டது. செப்பேட்டில் உள்ள முத்திரையின் நடுவில் படுத்திருக்கும் ஒரு விலங்கின் உருவம் காணப்படுகிறது. ஏறத்தாழ இது மங்களூர்ச் சாசனங்களின் எழுத்தை ஒத்திருக்கிறது. இவ்வெழுத்தைப் பெட்டித்தலை(Box headed)எழுத்து எனவும் கூறுவர்.

சேனாதிபதியான விட்டுணுவர்மன் எடுப்பித்த விட்டுணுஆரதேவகுலம் என்ற திருமால் கோயிலுக்கு, முண்டராட்டிரத்தில் உள்ள உருவப்பள்ளி என்னும் சிற்றூரில் 200 நிவர்த்தன நிலத்தைத் தேவபோகமாக அளித்த செய்தியை இச்செப்பேடு கூறுகிறது. உருவப் பள்ளியில் உள்ள நிலத்தைத் தானமாக அளித்ததால் இச்செப்பேடு இப்பெயர் பெற்றது.

இக்கோயில் எடுப்பித்த விட்டுணுவர்மன், கதம்ப குலத்து வேந்தனும், அசுவமேதயாகம் புரிந்தவனுமான முதலாம் கிருட்டிணவர்மன் மகன் என்று அறிஞர் கருதுவர்.

பல்லவர்களின் முன்னோர் பற்றி அறிந்து கொள்ள இச்செப்பேடு பயன்படுகிறது.விட்டுணுகோபவர்மன் மக்களின் சேவைக்கே தன்னை அர்ப்பணித்துக் கொண்டவன் என்று இச்செப்பேடு கூறுகிறது.
ம. இரா. த.

**உருவ வழிபாடு**: அறிவு முதிர்ச்சி பெறாத எளியமக்களுக்கு இறை நம்பிக்கையை ஏற்படுத்துவதில்

உருவ வழிபாடு இணையற்று விளங்குகிறது. முனிவர்களும் மெய்யுணர்வாளர்களும் அனுபூதிமான்களும், தங்கள் அனுபவத்தில் கண்ட இறைக் காட்சியை மறைகளிலும் புராணங்களிலும் இதிகாசங்களிலும் விளக்கியுள்ளனர். அவற்றை ஆதாரமாகக் கொண்டே எங்கும் நிறைந்த இறைவனுக்கு உருவங்கள் வடிக்கப்பட்டுள்ளன. இறைவன் எங்கும் நிறைந்திருந்தாலும், ஓரளவு அறிவுள்ள மக்களுக்கு ஓர் உருவத்தைப் பார்க்கும்பொழுதுதான் இறை நம்பிக்கையும், பக்தியுடன் கூடிய மனஎழுச்சியும் மேலிடுகின்றன. இந்து சமயத்தில் உருவ வழிபாடு என்பது வரலாற்றிற்கு முற்பட்ட காலத்திலிருந்து நடைமுறையில் இருந்து வருவதாகும்.

'உலகமே வெறும் வெற்றுக் காட்சி' என்ற வாதத்தை நிலை நாட்டிய அத்துவைத நிறுவனராகிய 'ஆதிசங்கரர்' கூட உருவ வழிபாட்டை விலக்கவில்லை.

உருவ வழிபாட்டிற்கு மறுமலர்ச்சி தந்த பெருமை ஆழ்வார்களையும் நாயன்மார்களையுமே சாரும். அவர்கள் ஏற்றுக் கொண்ட கடவுளர்களாகிய நாராயணன், சிவன் ஆகியோரின் உருவங்களைக் காடுகளையும் மலைகளையும் கடந்து இமயம் முதல் குமரி வரை நடந்து சென்று பாடிப் பரவியுள்ளார்கள். அவர்கள் சென்ற கோயில்கள் மங்களாசாசனம் பெற்ற திருப்பதிகள் என்றும், பாடல் பெற்ற பதிகள் என்றும் இன்றும் தனிச்சிறப்புடன் கொண்டாடப்படுகின்றன. மனிதனால் தெரிந்தெடுக்கப்பட்டதோர் உலோகத்தால் அல்லது ஒரு பொருளால் ஆக்கப்பட்ட சிலைகளில் இறைவன், அந்த உலோகம் அல்லது அந்தப் பொருள் சம்பந்தப்படாத ஓர் உடம்புடன் விளங்குகிறான். பாஞ்சராத்திர ஆகமங்கள், இறைவனுக்குப் பரநிலை, வியூக நிலை, அவதார நிலை, அந்தர்யாமி நிலை, உருவ நிலை, என ஐந்து நிலைகள் உள்ளதாகக் கூறுகின்றன. இந்த ஐந்தனுள் உருவ நிலை மட்டுமே மக்களால் நேருக்கு நேர் காணக்கூடிய நிலையாகும். ஞானிகளால் மட்டுமே இறைவனுடைய அந்தர்யாமி நிலையை உள்ளூர உணர முடியும். இறைவன் அவதாரம் எடுத்த காலத்தில் வாழ்ந்தவர்கள் மட்டுமே அவதார நிலையை உணர முடியும். பரநிலையும், வியூக நிலையும் மனிதர்களுடைய சக்திக்கு அப்பாற்பட்டவையாகும். 'என்னுடைய பக்தன் எந்த உருவத்தில் நினைத்து என்னை வணங்கினாலும், அந்த உருவத்தில் இருந்து அவனுக்கு நான் காட்சியளித்து அவனுடைய குறைகளைத் தீர்த்து வைப்பேன்' என்று பகவத் கீதையில் கண்ணன் கூறுவது நினைக்கற்பாலது.

காலத்தையும் இடத்தையும் கடந்த கடவுள் கருணையின் காரணமாய் உருவத்தை மேற்கொள்கிறான். உலகில் பொருள்களாகவும், அவற்றில் விளங்கும் ஆற்றல்களாகவும், இயற்கையின் ஒருமைப்பாட்டின் பின்னணியாகவும் விளங்கும் கடவுளின் தன்மைக்கும், செயல் முறைகளுக்கும் உருவங்கள் குறியீடுகளாக விளங்குகின்றன. நாம் வெறும் உருவங்களை வணங்குவதில்லை. உருவங்களைக் குறியீடுகளாகக் கொண்ட கடவுளைத்தான் வணங்குகிறோம். எல்லாமாகவும் விளங்கும் கடவுள், உருவங்களிலும் இருக்கவேண்டிய உண்மை அளவையியலின்படி ஏற்புடையதாகும். உயிர்கள் ஓர் உருவத்தைப் பற்றி நின்றே சிந்திக்க முடிகிறது. உருவத்தைப் பெறாத ஒன்று அனுபவத்திற்கு வர வாய்ப்பில்லை. இப்படி உருவங்களில் இருந்து விளங்குவதால் கடவுளினுடைய அளவிலா நலங்களுக்குக் குறைகள் ஏற்படுவதில்லை. ஆதியந்தமில்லாத பரம்பொருள் அன்பிற்குக் கட்டுப்பட்டு உருவங்களில் விளங்குகிறது. இந்த உலகத்தையே தனது உடலின் வெளிப்பாடாகக் கொண்டுள்ள இறைவன், உருவ நிலையில் தன் பக்தனின் உடைமையாக ஆகிவிடுகிறான். உருவ வழிபாட்டில் மனிதன் தனது மனத்தை உருவத்தினிடம் பறிகொடுக்கிறான். உருவ வழிபாட்டினால் இவனுக்குத் தன்னையறியாத மனத்திட்பமும் தன்னம்பிக்கையும் ஏற்படுகின்றன. உருவ வழிபாட்டின்போது செய்யப்படும் அபிடேகம், அலங்காரம், தூபம், தீபம், படையல் போன்ற செயல் முறைகள் வணங்குபவனுக்கு நம்பிக்கையையும் புத்துணர்வையும் அளிக்கின்றன.

உருவ வழிபாட்டினால், மனிதனுக்கு உடல் தூய்மை, உள்ளத் தூய்மை, பணிவு, ஒழுங்கு முறை, அடக்கமுடைமை முதலிய நற்பண்புகள் வளர்கின்றன. உருவ வழிபாடு பலதரப்பட்ட மக்கள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒன்றுகூடவும், தங்கள் பண்பாட்டினைப் பரிமாறிக் கொள்ளவும், பரந்த மனப்பான்மை வளரவும் வழி வகுக்கிறது. இல. மு.

**உருவாக்கப் பொருளியல்**: இலக்கணத்தில் பொருளியலின் இடம் பற்றியும் தன்மை பற்றியும் மொழியியலாளர் பல்வேறு கருத்துகளைக் கொண்டிருக்கின்றனர். ஐம்பதுகளின் மத்தியில் சோம்சுகி (Chomsky) தொடங்கிய உருவாக்க மாற்றிலக்கணத்தின் (Generative Transformational Grammar) வரலாற்றில் பொருளியலின் இடமும் தன்மையும் மாறி வந்திருக்கின்றன. சோம்சுகியின் தொடரமைப்பு (Syntactic Structure, 1957) என்ற நூலில் ஒரு சொற்றொடரின் இலக்கணத் தன்மை (Grammaticality) பொருளை நோக்காமலேயே முடிவு செய்யப்பட்டது.

'மலடி மகன் முயல் கொம்பால் நீண்ட நீரை உடைத்தான்' போன்ற தொடர்கள் பொருளற்றனவாயினும், இலக்கணத்தன்மை உடையனவாகக் கொள்ளப்பட்டன.

சோம்சுகியின் தொடரமைப்புக் கொள்கைக் கூறுகள் (Aspects of Theory of Syntax, 1965) என்ற நூல் தொடரின் இலக்கியத் தன்மையை முடிவு செய்யப் பொருளையும் சேர்த்துக் கொண்டது. மேலே காட்டிய தொடர்கள் போலப் பொருள் முரண்படுகிற சொற்கள் சேர்ந்து சொற்றொடர் உருவாகாமல், 'சொல் தேர்வு விதிகள்' (Selectional Restrictions) வகுக்கப்பட்டன. சொற்றொடர் விதிகளுக்கு (Syntactic Rules) உட்படும் எல்லாத் தொடர்களையும் இலக்கணம் உருவாக்காமல் சொல் தேர்வு விதிகள் கட்டுப்படுத்தின.

இலக்கணம் பொருளுடைய சொற்றொடர்களையே உருவாக்க வேண்டும் என்ற புதிய கொள்கையின்படி பொருள், இலக்கணத்தில் ஓர் அங்கமாக இடம் பெற்றது. சொற்றொடர்களின் பொருளை விவரிக்கப் பொருள் விளக்க விதிகள் (Rules of Semantic Interpretation) இலக்கணத்தின் பொருளியல் அங்கத்தில் (Semantic Component) இடம் பெற்றன. இந்த நிலையிலும் சொற்றொடரியலே இலக்கணத்தின் நடுநாயகமாக இருந்தது. சொற்றொடர்கள் தொடரமைப்பு விதிகளால் (Phrase Structure Rules) உருவாக்கப்பட்டன. அவை மொழியின் புறநிலையில் (Surface Level) காணப்படும் சொற்றொடர்களின் அமைப்பிலிருந்து வேறுபட்டுப் பொருளை விளக்குவதற்கு ஏற்ற அமைப்புடன் அமைந்தன. அவற்றின் அமைப்பு சொற்றொடர்களின் அகஅமைப்பு (Deep Structure) எனப்பட்டது. பொருள் விளக்க விதிகள் அகஅமைப்பின் மீதே செயற்பட்டன. மாற்று விதிகளும் (Transformational Rules) அகஅமைப்பின் மீது செயற்பட்டு, அக அமைப்புச் சொற்றொடர்களைப் புறஅமைப்புச் (Surface Structure) சொற்றொடர்களாக மாற்றின.

சொல்லின் பொருள், எழுவாய் போன்ற சொல்லின் தொடர் இலக்கணக் கூறுகள், செய்வோன் போன்ற இலக்கணப் பொருட் கூறுகள் முதலான பொருள் விளக்கத்துக்குத் தேவையான எல்லாச் செய்திகளும் சொற்றொடரின் அகவமைப்பில் இருக்க வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் ஒரு சொற்றொடரின் அகவமைப்பு அதன் புறவமைப்பிலிருந்து மிகவும் விலகிச் சென்றது. சொற்றொடரின் அகத்தன்மை அதிகமாக அதிகமாக, அதன் தொடரமைப்புக்கும் (Syntactic Structure) பொருளமைப்புக்கும் (Semantic Structure) உள்ள இடைவெளி சுருங்கியது. பொருளமைப்பே தொடரமைப்பு என்று சொல்லக்கூடிய நிலை பிறந்தது. எடுத்துக்காட்டாக, 'நான் கதவைத் திறந்தேன்' என்ற தொடரில் 'நான்' செய்வோன் (Agent). 'சாவி கதவைத் திறந்தது' என்ற தொடரில் 'சாவி' எழுவாயாக இருந்தாலும், செய்வோன் அல்லன்; தொடரைப் பொருள் கொள்ளும் போது, அதைக் கருவியாகவே பொருள் கொள்கிறோம். இந்தப் பொருளை இந்தத் தொடரின் அகஅமைப்பில் பெறவேண்டுமானால், அது 'யாரோ சாவியால் கதவைத் திறந்தார்கள்' என்ற அமைப்பைக் கொண்டிருக்கவேண்டும். இதேபோல, 'கசாப்புக் கடைக்காரன் ஆட்டைக் கொன்றான்' என்ற தொடர் அகநிலையில் 'கசாப்புக் கடைக்காரன் ஆட்டை உயிரோடு இல்லாமல் இருக்கச் செய்தான்' என்ற அகஅமைப்பைப் பெற்றிருக்க வேண்டும்.

மேலும், பொருளுடைய சொற்றொடர்களை உருவாக்கத் தேவைப்படும் சொல் தேர்வு விதிகள் செய்யும் தேர்வு, சொல்லின் அடிப்படையில் நடக்கவில்லை; பொருளின் அடிப்படையிலேயே நடக்கிறது. எடுத்துக்காட்டாக, 'மலடி மகன்' என்பது சேர்ந்து வாராதது போலவே, 'பிள்ளை பெறாதவள் மகன்' என்பதும் சேர்ந்து வாராது. எனவே, பொருளுடைய சொற்றொடர்களை உருவாக்கப் பொருளே அடிப்படை, சொல் அன்று என்பது தெளிவாயிற்று.

இந்த இரண்டு காரணங்களினாலும், வேறு சில காரணங்களினாலும், இலக்கணத்துக்குத் தொடரைவிட, சொல்லைவிட, பொருளே அடிப்படை என்ற எண்ணம் வலுப்பட்டது. தொடரமைப்பை உருவாக்குவதற்குப் பதில், உருவாக்க விதிகளின் மூலம் பொருளமைப்பையே உருவாக்கலாம். அப்படி உருவாக்குவதே கூறியது கூறாத (Non-redundant) நல்ல இலக்கணத்தைத் தரும். இலக்கணத்துக்கு அகநிலைபோல் இடைப்பட்ட நிலை எதுவும் தேவை இல்லை என்ற கருத்தின் அடிப்படையில் உருவாக்கப் பொருளியல் (Generative Semantics) மாற்றிலக்கணத்தில் ஒரு தனிக்கொள்கையாக அறுபதுகளின் மத்தியில் உருப்பெற்றது. இதை உருவாக்கியவர்களில் முதன்மையானவர்கள் சோம்சுகியின் மாணவர்களான போசுடல் (Paul Postal), மெக்காலே (James McCawley), இலேக்காபு (George Lakoff), முதலானோர். உருவாக்கப் பொருளியலின் அடிப்படைக் கொள்கைத் தொடரியலுக்கும் பொருளியலுக்கும் நடுவே வரையறுத்த எல்லைக்கோடு இல்லை. பொருளமைப்பு தொடரமைப்பைப் போன்றது. பொருளமைப்பு தொடரமைப்பு விதிகளின் மூலம் உருவாக்கப்படலாம்.

உருவாக்கப் பொருளியலில் பொருளியலின் எல்லை விரிந்தது. சொற்களும் அமைப்பு விதிகளும் தரும்

பொருள் மட்டுமன்றி, மொழியைப் பேசுவோரின் நம்பிக்கைகளும் (Beliefs), நோக்கங்களும் (Intensions) ஒரு தொடரின் இலக்கணத் தன்மையை முடிவு செய்யத் தேவைப்படுகின்றன. எனவே, அவையும் இலக்கணத்தில் இடம் பெற வேண்டும் என்பது கருதப் பட்டது. எடுத்துக்காட்டாக, 'என் அப்பா என்னைக் கழுதை என்றார்; நானும் அவரைத் திட்டினேன்' என்னும்போது இலக்கணத் தன்மையில் இடர்ப்பாடு இல்லை. ஆனால், 'என் அப்பா என்னைச் சிங்கக் குட்டி என்றார், நானும் அவரைத் திட்டினேன்' என்னும் போது இடர்ப்பாடு வருகிறது. ஏனென்றால், ஒருவனைச் சிங்கக்குட்டி என்பது திட்டுவது ஆகாது என்பது நம்பிக்கை. 'என் அப்பா என்னைக் கறுப்புச் சட்டைக்காரன் என்றார், நானும் அவரைத் திட்டினேன்' என்னும்போது இலக்கணத் தன்மையில் இடர்ப்பாடு இருக்கிறதா என்று அறிய, ஒருவனைக் கறுப்புச் சட்டைக்காரன் என்பது திட்டுவது ஆகுமா என்ற ஐயத்தின் பாற்பட்ட கேள்விக்கு விடை தெரிய வேண்டும். இதன்படி, ஒரு தொடரின் இலக்கணத் தன்மை அதைப் பேசுவோரின் உளக்கருத்தைச் சார்ந்து முடிவு செய்யப்படுகிறது.


இதைப்போல, 'நீங்கள் கதவைத் திறக்கிறீர்களா' என்ற தொடரைக் கேள்வியாகப் பொருள் கொள்ளாமல், வேண்டுகோளாகப் பொருள் கொள்ளும்போது, சொல்லுவோரின் நோக்கம், பொருளை விளக்க எடுத்துக்கொள்ளப்படுகிறது. இதன்படி பொருள் விளக்க விதிகள் சொல்லுவோனின் நோக்கத்தை வெளிப்படுத்தும் உரையாடல் விதிகளைச் சார்ந்து வரவேண்டும்.

இப்படிப் பொருளியலின் எல்லை விரிந்தபோது இதுவரை இலக்கணத்தின் அங்கமாகக் கருதப்படாத புதுவகைச் செய்திகள் இலக்கணத்தில் பங்கு பெற்றன. இதன் விளைவாகப் புதுவகையான இலக்கண விதிகள் தேவைப்பட்டன. மேலும், அக அமைப்பின் இடையீடு இல்லாமல் நேரடியாகப் பொருளமைப்பிலிருந்து புறநிலைத் தொடர்களை மாற்று விதிகளின் மூலம் கொண்டுவந்த போது,புதிய சக்திமிக்க மாற்று விதிகள் தேவைப்பட்டன.

இந்த இரண்டு தன்மைகளும் இலக்கணத்தின் அடிப்படைத் தன்மைகளையே மாற்றின. இலக்கணத்தின் கட்டுப்பாட்டுத் தன்மை (Constraints) குறைந்தது. இலக்கண விதிகளைக் கட்டுக்கோப்பான வடிவத்தில் (Rigid Formalism) அமைப்பது கடினமாயிற்று. தொடரின் இலக்கணத் தன்மைக்கும் ஏற்புத் தன்மைக்கும் (Acceptability) வேறுபாடு குறைந்தது. இலக்கணத்தின் இந்த நிலைகளைச் சிலர் ஏற்கவில்லை. மேலும், உருவாக்கப் பொருளியலை வளர்த்தவர்களும் இலக்கணத்தின் வரம்பை விரிப்பதில் காட்டிய கவனத்தைக் கட்டுக்கோப்பான விதிகள் அமைப்பதில் (Formulation of Rules)காட்டவில்லை. இவை போன்ற காரணங்களால் எழுபதுகளின் மத்தியிலிருந்து உருவாக்கப் பொருளியலைத் தீவிரமாகப் பின்பற்றுவோர் குறைந்தனர். இ.அ.

**உருவாண்டா** உலகநடுக்கோட்டிற்குத் தெற்கில் கிழக்கு ஆப்பிரிக்காவின் நடுவில் உள்ளதொரு சிறுநாடு. மக்கள்தொகை மிக்க ஆப்பிரிக்க நாடுகளுள் இதுவும் ஒன்று.

உருவாண்டா (Rwanda) ஆப்பிரிக்கக் கண்டத்தின் ஏழை நாடுகளுள் ஒன்று. இந்நாட்டில் தொழிற்சாலைகளோ இருப்புப்பாதைகளோ இல்லை. இந்நாட்டு மண்ணும் வளம் குறைந்தது.




உருவாண்டா

கிகாலி (Kigali) இந்நாட்டின் பெருநகரமும் தலைநகருமாகும்.

பரப்பு: உருவாண்டாவின் பரப்பளவு 26,338 ச.கி.மீ. இது தென் வடலாக 144 கி.மீ.அகலமும், கிழக்கு மேற்காக 233 கி.மீ. நீளமும் கொண்டது.

மக்கள்தொகை: இந்நாட்டின் மக்கள்தொகை 49,75,000 ஆகும் (1981).

**இயற்கையமைப்பு:** உருவாண்டா நாட்டின் இயற்கையமைப்பு கரடுமுரடானது; மலைப்பாங்கானது. இங்கு, மேற்கிலும் வடமேற்கிலும் உள்ள மிக உயர்ந்த மலைகள் எரிமலைப் பாறைகளாலானவை. இதன் மேற்கு எல்லை கிவு (Kivu) ஏரியையொட்டிச் செல்கிறது. ககேரா (Kagera) ஆறு இதன் கிழக்கு எல்லையாக அமைகிறது. அகன்யாறு (Akanyaru) என்னும் ஆறு இதன் தென் எல்லையாகப் பாய்கிறது. உருசிசி (Ruzizi) ஆறு இந்நாட்டின் தென் மேற்கு எல்லையில் பாய்கிறது. இந்நாட்டின் நிலம் கிவு ஏரியிலிருந்து உயர்ந்து, ஏறத்தாழக் கடல் மட்டத்தைவிட 2700 மீ. உயரம் வரை செல்கிறது. வடமேற்கில் விருங்கா (Virunga) மலைத்தொடர் ஏறத்தாழ 4510 மீ. வரை உயர்ந்துள்ளது. மேற்கு உருவாண்டாவில் பெய்யும் கடும் மழை நிலத்தை வளமாக்கும் இரசாயனப் பொருள்களை அடித்துச் சென்று விடுகிறது. பெரும் பண்ணைகளும் மண் அரிப்பை உருவாக்குகின்றன.

உருவாண்டாவின் கிழக்குப் பகுதியில் பல மேட்டு நிலங்கள் உள்ளன. அவை 1500 முதல் 2100மீ. வரை உயரமானவை. இம்மேட்டு நிலங்கள் கிழக்கு நோக்கிச் சரிந்துள்ளன. மேட்டு நிலங்கள் ஒவ்வொன்றும் சரிந்து கிழக்கில் முடிவடையும்போது செங்குத்தான முனையுடன் கூடிய சதுப்பு நிலத்தை எல்லையாகக் கொண்டுள்ளன. இம்மேட்டு நிலங்கள் ஒருகாலத்தில் காடுகளாக இருந்தவை. ஆனால், •பண்ணைகளை உருவாக்கும் நோக்குடன் மக்கள் பெரும்பாலான காடுகளை அழித்துவிட்டனர்.



கிவு ஏரி

மேற்கிலுள்ள பிளவுப் பள்ளத்தாக்குப் பகுதிகளில் ஆண்டு வெப்பம் மிதமாக உள்ளது. இங்கு ஆண்டுக்கு 75 செ.மீ. மழையும் பெய்கிறது. மலைப்பாங்கான பகுதிகளில் ஆண்டு வெப்பம் பிளவுப் பள்ளத்தாக்கு வெப்பத்தை விடச் சிறிது குறைவாக உள்ளது ஆனால், இப்பகுதியில் ஆண்டு மழை மிகுதி. ஏறத்தாழ 150 செ.மீ. மழை இப்பகுதியில் பொழிகிறது. விருங்கா மலைப்பகுதிகளில் இதைவிடக் கனமழை பெய்கிறது. மேட்டுநிலப் பகுதிகளில் ஆண்டுவெப்பநிலை மிதமாக உள்ளது. இங்கு மழையளவு ஏறத்தாழ 120 செ.மீ. பெய்கிறது.

**மக்கள் வாழ்க்கை:** உருவாண்டா நாட்டு மக்களைப் பகூட்டு (Bahutu), வட்டுசி (Watusi) என இரு பெரும் இனங்களாகப் பிரிக்கலாம். பகூட்டு இன மக்கள் குடியானவர்கள். வட்டுசி இனத்தவர் கால்நடை வளர்ப்போர். வட்டுசி இனத்தவர் மரியாதை மிக்கவர்; உயரமானோர்; நடனமாடும் திறமைபெற்றோர். நூற்றுக்கணக்கான ஆண்டுகள் இன்றைய உருவாண்டாவை அவர்கள் தம் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தனர். அக்காலத்தில் பகூட்டு இனத்தவர்களை அவர்கள் அடிமைகள்போல் ஆட்டிப் படைத்தனர். ஆனால், 1959-இல் நாடு ஐ.நா. அறக்கட்டளைப் பகுதியாக இருந்த காலத்தில், பகூட்டு இனத்தவர்கள் வட்டுசி



வட்டுசி இனத்தின் உயரமான மனிதன்

களுக்கெதிராகக் கலகம் செய்தனர். அதன் பயனாக வட்டுசி அரசரும் ஏறத்தாழ $1\frac{1}{2}$ இலட்சம் வட்டுசி மக்களும் உருவாண்டாவை விட்டு வெளியேறினர். அவர்கள் அருகாமையில் இருந்த நாடுகளில் குடியேறினர். அப்படிக் குடியேறிய பகுதிகளுள் ஒன்று இன்று புருண்டி (Burundi) எனப்படுவது. அதனை முன்னர் உருண்டி (Urundi) என்றனர். அங்கு வட்டுசி அரசர் ஒருவரும் ஆண்டார். அரசர் உருவாண்டாவை விட்டு வெளியேறிய பின்னர், மக்கள் நாட்டைச் சுதந்திரக் குடியரசாக்குவதென முடிவு செய்தனர். பகூட்டு இனத்தவர் ஆட்சியைக் கைப்பற்றிக்கொண்டனர்.

இப்போதைய உருவாண்டா மக்களுள் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் பகூட்டு இனத்தைச் சார்ந்தவர்களே. இம்மக்கள் உழுது பயிரிடும் உழவர்களாக இருப்பதால், தமக்குத் தேவையான உணவுப் பொருள்களை மட்டும் உற்பத்தி செய்து கொள்கிறார்கள். உருவாண்டாவின் முக்கிய ஏற்றுமதிப் பொருளான காப்பியை (Coffee) இவர்களுள் சிலர் பயிரிடுகிறார்கள்.

இந்நாட்டு மக்கள்தொகையில் 10 விழுக்காடு வட்டுசிகள் உள்ளனர். இவர்கள் தங்கள் உணவுக்குத் தேவையான கால்நடைகளை வளர்க்கிறார்கள். மாட்டிறைச்சி, பால், பால் பொருள்கள் போன்றவற்றை உண்டு வாழும் இவர்கள், உயிருடன் வாழும் கால்நடைகளின் இரத்தத்தைக் குடிப்பதிலும் ஆர்வம் காட்டுகிறார்கள். சிலர் கால்நடைகளின் தோல், மயிர் போன்றவற்றில் ஆடை நெய்து பிழைக்கிறார்கள்.

உருவாண்டாவில் ஏறத்தாழ 30,000 பிக்மிக் குள்ளர்கள் வாழ்கிறார்கள். பிக்மிகள் முன்னர் வேட்டையாடி வாழ்ந்தார்கள். இக்காலத்தில் அவர்களுள் சிலர் நகரங்களில் பணியாற்றுகிறார்கள். உருவாண்டாவில் வாழும் ஐரோப்பியர்கள் வெகு சிலரே. சிலர் தேயிலை உற்பத்தியிலும் செவ்வந்தி வகைச் செடியினங்களைப் பயிரிடுதலிலும் ஈடுபட்டுள்ளனர். செவ்வந்திச் செடியினம் பூச்சிக்கொல்லி மருந்து செய்யப் பயன்படுகிறது. ஐரோப்பியர்களுள் ஒருசிலர் சுரங்கத் தொழிற்சாலைகளின் நிருவாகிகளாகப் பணிபுரிகின்றனர். ஏனையோர் கிறித்தவப் பாதிரிமார்.

உருவாண்டாவின் ஆட்சி மொழிகள் பிரெஞ்சு மொழியும் கின்யர்வாண்டா (Kinyarwanda) என்னும் மொழியுமாகும். பண்டு (Bantu) மொழியினத்தைச் சார்ந்த இம் மொழியைப் பெரும்பாலான மக்கள் பேசுகிறார்கள். மக்கள்தொகையில் ஏறத்தாழப்பாதிப் பேர் பல்வேறு சமயங்களைப் பின்பற்றுகிறார்கள். மந்திர, தந்திரங்களைப் பயன்படுத்திப் பேய் பிசாசுகளிடமிருந்து தங்களைக் காத்துக் கொள்ளும் வகையில், இவர்களின் சமயப் பழக்கவழக்கங்கள் அமைந்துள்ளன. ஏனையோருள் பெரும்பாலோர் உரோமானியக் கத்தோலிக்கச் சமயத்தைச் சார்ந்தவர்கள். உருவாண்டாவின் பெரும்பாலான தொடக்கப் பள்ளிகளை உரோமானியக் கத்தோலிக்கரும் ஏனைய சமயப் பற்றுள்ளவர்களும் இயக்கி வருகிறார்கள். ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளும் தொழில்நுட்பப் பள்ளிகளும் செயற்படுகின்றன. புட்டாரே (Butare) நகரில் 1963-இல் சிறியதொரு பல்கலைக்கழகம், தொடங்கப்பட்டது. ஏழு முதல் 16 வயது வரையுள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் கட்டாய இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. ஆனால், அனைத்து மாணவர்களும் கல்வி கற்கப் போதுமான வகுப்பறைகள் கிடையா. உருவாண்டா மக்களுள் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் எழுத்து வாசனையற்றவர்கள்.

பொருளாதார நிலை: உருவாண்டாவின் பொருளாதார வளர்ச்சி, பெருகி வரும் மக்கள் தொகையால் தடைப்பட்டு நிற்கிறது..மேலும், இந்நாட்டிற்குக் கடற் போக்குவரத்து இல்லாமையும் பெருங்குறையாகும். வாழை, மரவள்ளிக் கிழங்கு, சர்க்கரைவள்ளிக் கிழங்கு, பயறு வகைகள், சோளம், உருளைக்கிழங்கு போன்ற முக்கிய உணவுப் பொருள்கள் இந்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்றன. காப்பி, தேயிலை, செவ்வந்தி வகைச் செடியினம் போன்றவை பணப்பயிர்கள். பெருமளவில் மாடுகள் , செம்மறியாடு, வெள்ளாடு போன்றவை வளர்க்கப்படுகின்றன. பெரும்பாலான கால்நடைகள் துத்சி (Tutsi) என்னும் இடையர்கள் வசம் உள்ளன. கால்நடைகளின் எண்ணிக்கையைப் பொறுத்து மக்களின் செல்வ வளம் கணிக்கப்படுகிறது. நிறைய கால்நடை வைத்திருப்பவர் சமூகத்தில் உயர்நிலையில் உள்ளவராகக் கருதப்படுகிறார்.

தகர மூலப் பொருள், உல்புராமைட்டு (Wolframite) என்னும் தாதுக் கனிப்பொருள், இரத்தினக்கற்கள், கொழும்பு-தாண்டலைட்டு (Colombo tantalite) என்னும் உலோகவகை போன்றவை குறிப்பிடத்தகும் அளவு சுரங்கங்களிலிருந்து வெட்டியெடுக்கப்படுகின்றன. கிவு ஏரிக்கரைப் பகுதியில் இயற்கை வாயு எடுக்கப்படுகிறது. ஆடைகள், இரசாயனப் பொருள்கள், பதமாக்கப்பட்ட உணவு வகைகள், பீர் போன்ற போதைப்பொருள்கள், துணிமணிகள், மிதியடிகள் போன்ற நுகர்வோர் விரும்பும் பொருள்கள் உற்பத்தி செய்யப்படும் பொருள்களுள் சில.

இந்நாட்டில் நல்ல சாலைப் போக்குவரத்துண்டு; இருப்புப் பாதைத் தொடர்கள் கிடையா. ஏற்றுமதிப்

பொருள்களைவிட இறக்குமதிப் பொருள்கள் மிகுதி. உணவுப்பொருள்கள், ஆடைகள், துணிமணிகள், எந்திரங்கள், பேருந்து வண்டிகள், எரிபொருள் போன்றவை முக்கிய இறக்குமதிப் பொருள்கள். காப்பி, தகரமூலப் பொருள், உல்புராமைட்டு, தேயிலை, செவ்வந்தி வகைச் செடியினம் போன்றவை முக்கிய ஏற்றுமதிப் பொருள்கள். உருவாண்டா பெல்சியம், இலக்சம்பர்கு, உகாண்டா, சப்பான், மேற்குச் செருமனி, கினியா போன்ற நாடுகளுடன் வணிகத் தொடர்பு கொண்டுள்ளது. இந்நாடு வெகுவாக அந்நிய நிதியுதவியை நம்பி வாழ்கிறது.

உருவாண்டாவின் பொருள்கள் புருண்டி (Burundi) வழியாகத் தான்சானியாவின் (Tanzania) தலைநகரான தாரு-சலாம் (Dar-es Salaam) துறைமுகத்தின் வழியாகவும், அங்கோலா நாட்டிலுள்ள உலோபிட்டோ (Lobito) வழியாகவும் மொசாம்பிக்கைச் (Mozambique) சார்ந்த பேய்ரா (Beira) வழியாகவும் ஏற்றுமதியாகின்றன. பகூட்டு, வட்டுசி மோதல்களின் விளைவாக இக்காலத்தில் உருவாண்டாவின் ஏற்றுமதிப் பொருள்கள் உகாண்டாவின் தலைநகரான கம்பாலாவிற்குக் (Campala) கொண்டு போகப்பட்டு இருப்புப்பாதை மூலம் கினியாவின் தலைநகரான மொம்பாசா(Mombaso)சென்றடைகின்றன. இதனால் ஏற்றுமதி, இறக்குமதிப் பணிகளுக்கு உருவாண்டா பெரும் பொருள் செலவு செய்கிறது.

வரலாறு: இன்றைய உருவாண்டாவில் முதன்முதலாகக் குடியேறியவர்கள் பகூட்டுக் குடியானவர்களும் பிக்மிக்குக் குள்ளர்களுமாவர். ஏறத்தாழ 400 ஆண்டுகளுக்கு முன்னர், வட்டுசி எனப்படும் வீரமரபினைச் சார்ந்த மக்கள் வடதிசையிலிருந்து இந்நாட்டின்மீது படையெடுத்தனர். பகூட்டு மக்களால் வட்டுசிகளை வெற்றிகொள்ள இயலாமையால், ஒவ்வொரு பகூட்டுவும் ஒவ்வொரு வட்டுசியைத் தலைவராக (Lord) ஏற்றுக்கொண்டு, அவருக்குத் தொண்டுசெய்ய உடன்பட்டனர். அதற்குக் கைம்மாறாக வட்டுசிகள் பகூட்டு அடிமைகளைக் காக்க ஏற்றுக்கொண்டு, அவ்வடிமைகள் வட்டுசிகளின் பசுவொன்றைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதித்தனர்.

இன்றைய உருவாண்டா கி.பி.18-ஆம் நூற்றாண்டின் இறுதியில் துத்சிகளால் ஆளப்பட்டது. இதன் அரசர் முவாமி (Mwami) எனப்பட்டார். அவர் பல அடிமைப் பகுதிகளை ஆண்டு வந்தார். இவர்கள் ஊத்து (Hutu) என்று கூறப்பட்ட பெரும்பான்மையான மக்கள்மீது ஆதிக்கம் செலுத்தினர். இரண்டாம் முத்தரா (Mutara II), நான்காம் கிகேரி (Kigeri IV) என்பவர்களின் ஆட்சிக் காலத்தில் உருவாண்டா அதிகாரத்தின் உச்சநிலையை எட்டியிருந்தது. கிகேரி நிலையான படையை உருவாக்கியதுடன், தம் நாட்டிற்குள் அந்நியர்கள் நுழைவதையும் தடுத்தார். உருவாண்டா கி.பி.1890-இல் எவ்வித எதிர்ப்பும் இன்றிச் செருமானியர்களின் ஆட்சியை ஏற்றுக்கொண்டு, செருமானியக் கிழக்கு ஆப்பிரிக்கா என்று கூறப்பட்டது. எனினும், செருமானியர் இந்நாட்டின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாமலும், பொருளாதார வளர்ச்சி குறித்த பணிகளைத் தொடங்காமலும் காலங் கழித்தனர்.

முதல் உலகப் போரின்போது பெல்சிய நாட்டுப் படைகள் 1916-இல் உருவாண்டாவைக் கைப்பற்றிக் கொண்டன. இதனை 1919-இல் உருவாண்டா உருண்டி (Rwanda-Urundi) என்று குறிப்பிட்டனர். (1946-ஆம் ஆண்டு வரை இது ஐ.நா.வின் அறக்கட்டளையால் கண்காணிக்கப்பட்டது). பெல்சியத்தின் ஆட்சி நீடித்த காலம் வரை உருவாண்டாவின் மரபு வழி வந்த சமூக அமைப்பு முறை ஒரு சிறிதும் மாறவில்லை. இவ்வேளையில் கிறித்தவப் பாதிரிமார் மதம் மாற்றும் பணியில் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர். உருவாண்டாவின் அதிகார அமைப்பு மாறவேண்டும் என்றும், தங்களுக்கு நாட்டின் விவகாரத்தில் பங்கு வேண்டுமென்றும் ஊத்துகள் 1957-இல் வேண்டினர். ஊத்துகள் இரண்டு அரசியல் கட்சிகளை உருவாக்கினர். சோசப்பு கிட்டீரா (Joseph Gitera)என்பார் ஒரு கட்சிக்கும், கிரிகோரி கயிபண்டா (Gregorie Kayibanda) என்பார் பிறிதொரு கட்சிக்கும் தலைமை தாங்கினர்.

மூன்றாம் முத்தரா (Mutara III) 1959-இல் காலமானபோது, அவரையடுத்து ஐந்தாம் கிகேரி (Kigeri V) அரசரானார். ஊத்துகள் புதிய அரசரை ஏற்றுக்கொள்ள மறுத்தனர். இதன் விளைவாக ஊத்துகளுக்கும் துத்சிகளுக்குமிடையே மோதல் மூண்டது. ஊத்துகள் வெற்றி பெற்றனர். ஏறத்தாழ 1,00,000 துத்சிகள் அண்டை நாடுகளுக்கு ஓடிப் போனார்கள். கயிபண்டா 1960-இல் இடைக்காலத் தலைமை அமைச்சராகப் பதவியேற்றார். 1961-ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் உருவாண்டா ஒரு குடியரசு நாடு என அறிவிக்கப்பட்டது. ஐ.நா.வின் வற்புறுத்துதலின் பேரில் பெல்சியம் உருவாண்டாவிற்கு 1962-சூலை, 1-ஆம் நாள் சுதந்திரம் வழங்கியது.

குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரே உருவாண்டாவின் தலைமையமைச்சராகவும் ஆக்கப்பட்டார். அவரே 47 உறுப்பினர் கொண்ட தேசிய அவையின் கட்டுப்பாட்டின்கீழ் ஆட்சி நடத்தினார். கயிபண்டா முதல் குடியரசுத் தலைவராகத்

தேர்ந்தெடுக்கப்பட்டார். மீண்டும் அவர் 1965, 1969 -ஆம் ஆண்டுகளிலும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

துத்சிகள் மிகுதியாயுள்ள புருண்டியில் ஏற்பட்ட தாக்குதல் ஒன்றின் விளைவாக 1964-இல் உருவாண்டாவில் பல துத்சிகள் கொல்லப்பட்டனர்; எண்ணற்றோர் நாட்டை விட்டு வெளியேறினர். மேலும், அண்டை நாடான செய்ரேயுடன்(Zaire)இடைக்காலத்தில் 1967-68-ஆம் ஆண்டுகளில் உறவில் நெருடல் ஏற்பட்டது.அப்போது கூலிப்பட்டாளமாய்ப் பணியாற்றிய சில வெள்ளையர்கள் உருவாண்டாவில் தஞ்சம் புகுந்தனர். உகாண்டாவுடன் 1971-72-இல் உறவு முறை சீர்கெட்டது. உகாண்டாவின் குடியரசுத் தலைவர் இடி அமீன் (Idi Amin) மீது குற்றஞ்சாட்டி, அவரைப் பதவியிலிருந்து அகற்றப்பாடுபட்ட கலகக்காரர்களுக்கு உருவாண்டா உறுதுணை நின்றதாகத் தூற்றினார். மீண்டும் 1973-ஆம் ஆண்டின் தொடக்க மாதங்களில் ஊத்துகளுக்கும் துத்சிகளுக்கும் இடையே போர் மூண்டது. ஏறத்தாழ 600 துத்சிகள் உகாண்டாவிற்கு ஓடிச் சென்றனர். உருவாண்டாவில் 1973-இல் இராணுவப் புரட்சியொன்று நிகழ்ந்தது. கயிபண்டா பதவியிலிருந்து விலக்கப்பட்டார். தேசியபாதுகாப்புப் படையின் தலைவரான சுவினல் அப்யலிமனா (Juvenal Habyalimana) குடியரசுத் தலைவரானார்.

இப்புரட்சி குருதியற்ற புரட்சி'ஆகும். பரமகுத்து (Paramehutu) எனப்படும் 'குடியரசு மக்களாட்சி இயக்கம்' என்னும் ஒரே சட்டமுறையில் அமைக்கப்பட்ட அரசியல் கட்சி, சிறிதுகாலம் நிறுத்திவைக்கப்பட்டது; தேசிய அவையும் கலைக்கப்பட்டது. அப்யலிமனா நாட்டின் வடபகுதியிலிருந்து வந்த ஊத்துகளுள் ஒருவராவார். அவர் ஊத்துகளுக்கும் துத்சிகளுக்குமிடையே நல்லுறவை நிலைநாட்ட முயன்றார். மேலும், அரசியல் அதிகாரத்தை ஊத்து மக்களிடையே பரவலாகப் பகிர்ந்தளிக்கவும் முயன்றார். வாக்காளர்கள் அப்யலிமனாவை 1978-இல் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுத்தனர். இரா.அ.

**உருவிலா மாற்றம்** என்பது, மொழியில் ஏற்படும் மாற்றங்களில் ஒரு வகையினைக் குறிக்கும். மொழி மக்களால் தோற்றுவிக்கப்பட்டு, அவர்களின் வாழ்விலும் வளத்திலும் பங்கு கொண்டு, அவர்களோடே வளர்ந்து வருகிறது. எனவே, அது தன் வரலாற்றில் பல மாற்றங்களுக்கு உள்ளாகிறது. ஒலியில், சொல்லில், இலக்கணத்தில், தொடரில் மாற்றங்கள் விளைகின்றன.

மொழியில் ஏற்படும் மாற்றங்கள் இருவகைப்படும். காலப்போக்கில் முயற்சி எளிமை காரணமாகவும், மிகை காரணமாகவும் ஒலிகளில் நிகழும் மாற்றங்கள் ஒரு வகை; சந்தியில் நிகழும் மாற்றங்கள் மற்றொரு வகை. இவ்விரு நிலைகளிலும் நிகழும் மாற்றங்களை இலக்கண ஆசிரியர்கள் விகாரம் என்பர். அவ்விகாரம் தோன்றல், திரிதல், கெடுதல் என மூவகைப்படும். இவற்றுள் கெடுதல் என்று சொல்லப்படுவதனை இக்கால மொழியியலார் உருவிலா மாற்றம் (Zero Change) என்று குறிப்பிடுவர்.

காலப்போக்கில் மொழியில் ஏற்படும் ஒலிமாற்றம் வரலாற்று ஒலி மாற்றம் (Historical Sound Change) எனப்படும். யாறு, யாண்டு என்பவை பழந்தமிழ்ச் சொற்கள். இச் சொற்களின் முதலில் உள்ள யகரம் இடைக் காலத் தமிழில் மறைந்து ஆறு, ஆண்டு என்று வழங்கப்படுகிறது. அதனால், யானை என்னும் சொல் இன்று ஆனை என்று வழங்கவும் எழுதவும் படுகிறது. இலக்கியத் தமிழில் சொல்லிறுதியில் காணப்படும் பல மெய்கள் பேச்சுத் தமிழில் காணப்படுவதில்லை. அவை உருவிழந்து விட்டன. எடுத்துக்காட்டாகப் பேச்சுத் தமிழில் சொல்லிறுதியில் அமையும் பல்லசைச் சொற்களில் உள்ள லகர, ளகர மெய்களும், மெல்லின மெய்களும் காணப்படுவதில்லை.

மூலத்திராவிடத்தில் மொழிமுதலில் இருந்த சகரம் தமிழ் மொழியில் காத்துக் கொள்ளப்படவில்லை. தமிழில் உள்ள 'உப்பு'என்னும் சொல் மூலத்திராவிட மொழியில் 'சுப்பு' என இருந்தது என்று அறிஞர்கள் நிறுவி உள்ளனர்.

எ-டு.

| ப.த. | இடை.த. | |
|---|---|---|
| யாறு | ஆறு | முதல் யகரம் கெட்டது |
| யாண்டு | ஆண்டு | |
| **இல.த.** | **பே.த.** | |
| வாய்க்கால் | வாய்க்கா | |
| அவள் | அவ | இறுதி மெய் கெட்டது. |
| குடம் | குட | |
| **மூ. தி. மொ.** | **தமிழ்** | |
| சுப்பு | உப்பு - முதல் சகரம் கெட்டது. | |

சொற்கள் இணையும் போதும், சொற்களோடு உருபுகள் சேரும் போதும் சந்தி மாற்றம் விளையும். சந்தியிலும் உருவிலாமாற்றம் நிகழும்.

எ-டு.

பட்டு+ஆடை — பட்டாடை (உகரம் கெட்டது)
மேல்+நாடு — மேனாடு (லகரம் கெட்டது)
தரும்+வளவன் — தருவளவன் (மகரம் கெட்டது)
காடு+ஆ — காடா (உகரம் கெட்டது)

க.மு.

**உருவிலா மாற்றுருபு**: உருபன் எல்லா இடங்களிலும் ஒரே வடிவத்தைக் கொண்டிராமல் ஒட்டிவரும் மற்ற உருபனுக்கும் (Morpheme) ஒலியனுக்கும் (Phoneme) தக்கபடி மாற்றுருக் கொண்டிருக்கும். ஓர் உருபனின் மாற்றுருக்கள் மாற்றுருபுகள் (Allomorphs) எனப்படும். மாற்றுருபு ஒலி வடிவம் இல்லாமலும் இருக்கலாம். அத்தகைய மாற்றுருபு, உருவிலா மாற்றுருபு (Zero Allomorph) எனப்படும். மொழியில் வடிவமில்லாத நிலையும் பொருள் உணர்த்தும் என்ற கருத்தை முதன்முதல் பாணினி கூறியிருக்கிறார். இக்கால மொழியியலில் புளூம்பீல்டு (Bloomfield) இதை உருவிலா மாற்றுருபு என்று அறிமுகப்படுத்துகிறார்.

ஆங்கிலத்தில் பன்மையைக் குறிக்க, -s,-en முதலான மாற்றுருபுகள் இருக்கின்றன. செம்மறியாடுகள் என்று பன்மைப் பொருளில் வரும் 'Sheep' என்ற சொல்லில் பன்மையைக் குறிக்க உருபு எதுவும் இல்லை. ஆங்கிலச் சொல்லமைப்பின்படி ஒருமைப் பெயருக்குப் பின் பன்மையைக் குறிக்க உருபு வர வேண்டும். வரவேண்டிய இடத்தில் உருபு இல்லாத போது இங்கு ஓர் உருபு இருப்பதாகக் கொண்டு, உருவில்லாததால் உருபிலா மாற்றுருபு வந்திருக்கிறது என்று கொள்வர்.

தமிழில் செய்யமாட்டான், செய்யாது என்ற சொற்களில் இரண்டாவது சொல்லை செய்+ஆது என்று பிரித்து, எதிர்மறையைக் குறிக்க மாட்டு - என்ற உருபு வரவேண்டிய இடத்தில் உருபு எதுவும் வராததால், ஒன்றன்பால் விகுதிக்கு முன்னால் எதிர்மறை உருவிலா மாற்றுருபால் உணர்த்தப்படுகிறது எனலாம். (ஆனால் - ஆது என்ற உருபன் எதிர்மறையையும் ஒன்றன்பாலையும் உணர்த்துகிறது என்று விளக்கம் சொன்னால் உருபிலா மாற்றுருபு தேவை இல்லை.) மாறாக,இச்சொல்லைச் செய்+அ+அது என்று பிரித்தால் எதிர்மறையைக் குறிக்க -அ- என்ற மாற்றுருபு இருக்கிறது. இந்த இரண்டில் ஒன்றே சரியான விளக்கம் என்பதால் தமிழில் உருவிலா மாற்றுருபு இல்லை எனலாம்.

உருவிலா மாற்றுருபு இலக்கணம் பொருளைக் குறிக்கவே வரும். அடிச்சொற்களின் மாற்றுருபுகளில் உருபிலா மாற்றுருபு இராது. உருவிலா மாற்றுருபு பொதுவாக ஒட்டுநிலை (Agglutinative) மொழிகளிலேயே இருக்கும்.

ஆங்கிலத்திலும் தமிழிலும் ஒருமையைக் குறிக்க எந்தச் சொல்லுக்கும் உருபு சேர்ப்பதில்லை. ஓர் இலக்கணப் பொருளைக் குறிக்க எந்தச் சொல்லோடும் உருபு வாராதபோது, அதை உருவிலா மாற்றுருபு என்று சொல்வதில்லை. உருபிலா உருபன் (Zero Morpheme) என்று வேண்டுமானால் சொல்லலாம். ஆனால், தேவை இல்லை. அது இலக்கணத்தில் பல உருபிலா உருபன்களைத் தோற்றுவித்து. உருபிலா உருபன் என்ற கருத்தைப் பொருளற்றதாக்கி விடும். எந்தச் சொல்லோடும் உருபு வாராத நிலையைக் குறியிடாத (Unmarked) இலக்கணக் கூறு என்பர்.

தமிழில் பன்மையைக் குறிக்கும் பெயர் பன்மை உருபன் பெற்றும் வரலாம்; பெறாமலும் வரலாம். எ-டு. மாடு வந்தன; மாடுகள் வந்தன. இவ்வாறு விரவிவரும் (Optional) உருபன் வாராமல் இருக்கும் போது, அந்த இடத்தில் மாற்றுருபு உருவில்லாமல் இருக்கிறது என்று சொல்ல முடியாது. அதை விரவு உருபன் (Optional Morpheme) என்று சொல்வர்.

இ.அ.

**உருவேலா** என்பது ஓர் ஊரின் பெயர்; மிகத் தொன்மையானது. இதனைச் சுற்றிலும் அழகான ஏரிகளும், நிழல் மரங்களும், சம நிலங்களும் சூழ்ந்திருந்தன. உருவேலா (Uruvella) பண்டைக்கால அரசான மகத நாட்டில் அமைந்திருந்தது. இந்த இடத்தையே தியானம் செய்வதற்கேற்றதெனக் கௌதம புத்தர் தேர்ந்தெடுத்தார். இங்குத்தான் புத்தர் ஞானம் பெற்றாரெனக் கூறுவர். இவ்வூரிலுள்ள இலீலாசன் (Lilajan) என்று இப்பொழுது கூறப்படும் நிரஞ்சனா ஆற்றில் புத்தர் மூழ்கி, அரசமரத்தடியிலமர்ந்து ஞானம் பெற்றார் எனக் கூறப்படுகிறது. ஞானம் பெற்றபின் புத்தர் உருவேலாவில் அசபாலா என்னும் ஆலமரத்தடியில் அமர்ந்து வாழத் தொடங்கினார் என்பர். உருவேலா இன்றைய பீகார் மாநிலத்தைச் சார்ந்த கயா (Gaya) என்னும் நகரத்திற்கு அருகில் உள்ளது. புத்தியை அறிந்தவரானபடியால் கௌதமரைப் புத்தர் என்று கூறுவர். இரா.அ.

**உருசுவெல்ட்டு, எப்.டி.,**(கி.பி. 1882-1945): வளம்கொழிக்கும் அமெரிக்க ஐக்கிய நாட்டில் வறுமை. சாதாரணமான வறுமை அன்று; பயங்கர வறுமை.

அது 1929-ஆம் ஆண்டில் தான் தொடங்கியது. எளிய, ஏழை மக்கள் சொல்லொணாத் துயருற்றனர். பணம் படைத்திருந்தோரும் தம் செல்வத்தை இழந்தனர். அதுவரை அமெரிக்கர்கள் கண்டறியாத வகையில் ஒரு பெரும் பொருளாதார மந்தம், மக்களை வாட்டி வதைத்தது. பல வங்கிகள் முறிந்தன. அமெரிக்காவிற்குக் கடன்பட்டிருந்த நாடுகளால் அக்கடன்களைத் திருப்பித் தரமுடியாத நிலை ஏற்பட்டது. தொழிலாளர்களிடையே வேலையின்மைச் சிக்கல் நாளுக்குநாள் விடம்போல ஏறிவந்தது. அங்கு 20 இலட்சத்திற்கும் மிகுதியான ஆட்கள் வேலையின்றியிருந்தனர். பண்டங்களின் விலை நாளுக்குநாள் ஏறிவந்தது. நாற்பது விழுக்காட்டிற்கும் மிகுதியான குடும்பங்கள் 1500 தாலருக்குக் குறைவான வருவாயையே பெற்றிருக்கும் அவல நிலை அமைந்திருந்தது. பெருவாரியான மக்கள் வாங்கும் சக்தியை இழந்திருந்தனர். ஒரே நாளில் 30 மிலியன் தாலர் (Dollar) மதிப்புள்ள காகிதச் செல்வம் மாயமாய் மறைந்தது. அனைத்துப் பண்டங்களின் உற்பத்தியும் குறைந்தது. அயல்நாட்டு வாணிகமும் நின்றுவிட்டது.



உருசுவெல்ட்டு, எப்.டி.

இலட்சக்கணக்கானோர் 1932-இல் உணவு தேடி ஊர்ஊராக அலைந்தனர். குடியரசுத் தலைவர் ஊவர் (Hoover) மேற்கொண்ட கொள்கை, வெற்றி அளிக்கவில்லை. மக்கள் மனம் நொந்தனர். குடியரசுத்தலைவர்மீது கொண்ட சினம் காரணமாக, தாங்கள் புதிதாக அமைத்து வாழ்ந்த தகரக் குடிசைகள் கொண்ட சேரிகளை 'ஊவர் குடியிருப்புகள்' என்றும், துணிக்கு மாற்றாகத் தாங்கள் உடம்பில் சுற்றியிருந்த செய்தித்தாள்களை 'ஊவர் ஆடைகள்' என்றும் குறிப்பிட்டனர். சிலர் கிளர்ச்சி செய்தனர். சிலர் இன்னல்களை அமைதியுடன் பொறுத்துக் கொண்டனர்.

'இந்த அவலநிலையிலிருந்து நாட்டைக் காப்பாற்றுவேன், யாரும் அஞ்ச வேண்டாம்; நாம் அஞ்ச வேண்டியது ஒன்றே ஒன்றுதான்; அதுதான் அச்சம்' என்று முழங்கிக் கொண்டு மக்களாட்சிக் கட்சி (Democratic)யிலிருந்து ஒருவர் வீறுகொண்டு முன்னணிக்கு வந்தார். அவர்தாம் பிராங்க்லின் திலானோ உருசுவெல்ட்டு (Franklin Delano Roosevelt).

உருசுவெல்ட்டு கி.பி. 1882-இல் நியூயார்க்கில் உள்ள ஐடு பார்க்கில் செல்வக்குடும்பம் ஒன்றில் பிறந்தவர். குடியரசுத் தலைவராக 1900 முதல் 1908 வரை விளங்கிய தியோடோர் உருசுவெல்ட்டுக்கு இவர் உறவினர். போராட்டமே இல்லாத ஒரு சூழ்நிலையில் இவரது இளமைக்கால வளர்ச்சி அமைந்திருந்தது.

பதினான்கு வயது வரை இவர் வீட்டிலேயே கல்வி கற்றார். பள்ளிக்கூடம் போகவில்லை. ஏனைய குழந்தைகளை இவர் அதிகாரம் செய்துகொண்டிருந்ததைக் கண்ட இவர் தாயார்,'மகனே, மற்றவர்களையும் அதிகாரம் பண்ணவிடாமல் நீயே எப்பொழுதும் அதிகாரியாக இருக்கிறாயே என்று கேட்டதற்கு, உருசுவெல்ட்டு, பின்வருமாறு விடையிறுத்தாராம். 'தாயே, நான் அதிகாரம் பண்ணாவிட்டால் எதுவுமே நடக்காது'! அவரது படிப்பு ஓரளவு கட்டுப்பாட்டுக்கு உட்பட்டிருந்தபோதிலும், பல்வேறு செய்திகளையும் அறிந்து கொள்ள வேண்டுமென்ற ஆர்வம் அவரிடம் மிகுதியாக இருந்தது. தம் ஒன்பதாம் வயதிலேயே இவர்,அகராதியைத் (Dictionary) தொடக்கம் முதல் இறுவரை படித்து முடித்து விட்டாராம். ஏழாம் வயதுமுதல் தம் பதினைந்தாம் வயதுக்குள், இவர் தம் பெற்றோருடன் ஒவ்வோராண்டும் ஐரோப்பாவுக்குச் சென்றுவந்தார். அப்போது அந்தக் கண்டத்தைப் பற்றி இவர் அறிந்துகொண்ட அனுபவங்கள், பிற்காலத்தில் இவர் மனப்பான்மையை உருவாக்க உதவின. இவர் பதினான்காம் வயதில் ஐடு பார்க்கிலிருந்து கிரோடன் பள்ளிக்கு அனுப்பப்பெற்றார். அங்கே இவர் பல விவாதங்களில் பங்குபெற்றார். ஒரு சமயம், ஆவாய்த் தீவை அமெரிக்காவுடன் இணைத்துக்கொள்வதைஎதிர்த்தும்,பிலிப்பைன்சுத்தீவு

களுக்குச் சுதந்திரம் வழங்கவேண்டியது இன்றியமை யாதது என்றும் வாதிட்டாராம். இவரது தாராள மனப்பான்மைக்கு இது ஓர் எடுத்துக் காட்டாகும். இவருக்கு நீக்கிரோ மக்கள் மீது அன்பு உண்டு. அவர்கள் கூட்டங்களுக்குச் செல்வதில் இவருக்கு மகிழ்ச்சி. தென்னாப்பிரிக்காவில் ஆங்கிலேயரோடு போராடிய போயர்கள்பால் அக்கறைகொண்டு அவர்களுக்காக நிதிதிரட்டுவதிலும் இவர் ஈடுபட்டி ருந்தார். இசுபானிய அமெரிக்கப்போர் (கி.பி. 1897-89) தொடங்கியதும், கிரோடனிலிருந்து தப்பிச்சென்று அப்போரில் பங்குகொள்ள முயன்றார். ஆனால், இவர் அம்மை நோய்க்கு உட்பட்டதால் இவர் நினைத்தபடி செய்ய முடியவில்லை.

உருசுவெல்ட்டு 1900-ஆம் ஆண்டில் ஆர்வார்டு கல்லூரியில் பயிலச் சென்றார். அங்கே நான்கு ஆண்டு கள் சிறந்த பயிற்சி பெற்றார். அங்கிருந்து இவர் தம் தாயாருக்கு எழுதிய கடிதத்தில் ‘அம்மா, நீ எதற்கும் கவலைப்படாதே. நான் எப்பொழுதும் என் காலால்தான் நிற்பேன், என்று குறிப்பிட்டுள்ளார்.

இவர் தம் குடும்பத்தைச் சேர்ந்த அன்னா எலி யனார் என்ற பெண்ணை மணம் செய்துகொள்ள விரும்பினார். திருமணம் 1905-ஆம் ஆண்டு நடை பெற்றது. அப்போது மணமகனுக்கு வயது 23, மண மகளுக்கு வயது 21. பிற்காலத்தில் இவர்கள் ஆறு குழந்தைகளைப் பெற்றனர்.

உருசுவெல்ட்டு 1910-ஆம் ஆண்டில் தம் 28-ஆம் வயதில் அரசியலில் புகுந்தார். வழக்கறிஞராக விளங் கிய உருசுவெல்ட்டு மாநில ஆளவைத் தேர்தலில் (Senate) போட்டியிட்டு அதில் வெற்றி கண்டார். வழக்கறிஞர் தொழிலை விட்டுவிட்டு ஆல்பனித் தொகுதியின் மாநில ஆளவையினராக மிகவும் புகழ் பெற்றார். இவரைப் பற்றி உட்ரோ வில்சன், ‘இவரைப் போன்ற அழகிய இளம் இராட்சசனை நான் கண்டதே இல்லை’ என்று குறிப்பிட்டார். உருசுவெல்ட்டு அதே ஆல்பனித் தொகுதியில் 1916-ஆம் ஆண்டிலும் வெற்றி பெற்றார். 1912-ஆம் ஆண்டு நிகழ்ந்த குடியரசுத் தலைவர் தேர்தலில் மக்களாட்சிக் கட்சியைச் சேர்ந்த உட்ரோ வில்சனுக்கும், உறுப்பினராக இருந்த குடிய ரசுக் கட்சியைச் (Republic) சார்ந்த தியோடோர் உருசுவெல்ட்டுக்கும் நேரடிப் போட்டி இருந்தது. அப்போட்டியில் இவர் கொள்கைக்காகத் தம் உறவி னர் தியோடோர் உருசுவெல்ட்டை எதிர்த்து மக்க ளாட்சிக் கட்சித் தலைவர் உட்ரோ வில்சனைத் தீவிர மாக ஆதரித்தார். உட்ரோ வில்சன் வெற்றியும் பெற் றார். கட்சிக் கொள்கை முக்கியமே தவிர உறவுமுறை அன்று என்று அவர் கருதியது போற்றற்குரிய ஒன்றா கும். தீவிரமாக உழைத்து இளைஞர்களையெல்லாம் வில்சனின் மக்களாட்சிக் கட்சியில் சேர்த்த பெருமை உருசுவெல்ட்டுக்கு உரியது. இவரது விருப்பம் போலவே, இவர் கடற்படையில் உதவிச் செயலாள ராக நியமனமும் பெற்றார். கடற்படை வரலாற்றி லேயே வயது குறைந்த உதவிச் செயலாளர் இவரே யாவார். இவர் 1920 வரை அப்பதவியில் அருஞ் செயலாற்றினார்.

கடற்படை நிலையத் தொழிலாளர்களின் சிக்கல் ஒன்று தோன்றிய பொழுது அதை வளர விடாமல் செய்ய அந்தத் துறையின் பொறுப்பைத் தாமே ஏற்றுக்கொண்டு அமைதியை நிறுவினார். அதன் விளைவாக அடுத்த 7½ ஆண்டுக் காலத்திற்கு எவ் விதத் தொழிலாளர் சிக்கலும் எழவில்லை. பகுத்தறி வும் அனுபவ சாத்தியமும்தான் இவருடைய அளவு கோல். சட்ட வரம்புக்குள்ளேயே அழுந்தி இடையூறு களை வரவழைத்துக் கொள்ள இவர் விரும்பவில்லை. இன்றியமையாத செயல் என்றால், சட்டத்தையும் சம்பிரதாயத்தையும்கூட இவர் மீறத் தயங்கிய தில்லை. இவர் 1920-ஆம் ஆண்டுத் தேர்தல் பேச்சு ஒன்றில், தாம் செயலராகப் பணியாற்றிய காலத்தில் 999 வருட காலம் சிறையில் இருக்கச் செய்யப் போது மான அளவு சட்டங்களையும் விதிகளையும் மீறியிருப் பதாகவும் அதற்காகத் தாம் பெருமைப்படுவதாகவும் அமெரிக்கர் உயிரைக் காப்பாற்றிப் போரில் வெற்றி பெறும் ஒரே நோக்கத்துடன் தாம் அவ்வாறு செய்த தாகவும் கூறினார்.

எத்தோல்வியும் இவரை மனம் சலிக்கச் செய்த தில்லை. இவர், 1914-இல் நியூயார்க்கு ஆளவை உறுப் பினர் பதவிக்குப் போட்டியிட்டபொழுதும் 1920-இல் துணைக் குடியரசுத் தலைவர் பதவிக்கு நின்று தோற்றுப் போனபோதும் கலங்கவே இல்லை. தோல்வி, வெற்றிக்கு வழிசெய்யும் சிறந்த பாதை என்பதே இவர் கருத்து. இவர் 1918-இல் ஒரு தூதுக் குழுவிற்குத் தலைவராகஐரோப்பாப்போர்முனைக்குச் சென்றார். சருவதேச சங்க அமைப்புப் பற்றிய வாசகங்களை எதன்மீது வைத்துக்கொண்டு குடியரசுத் தலைவர் உட்ரோ வில்சன் எழுதினாரோ அதனையே (சாய்வு மேசை)குடியரசுத் தலைவர் உருசுவெல்ட்டுக் குப் பரிசளித்தனர். அதை இன்றும் ஐடு பார்க்கில் காணலாம்.

உருசுவெல்ட்டுக்கு 1921-ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதம் பக்கவாத நோய் ஏற்பட்டுக் கால் முடக் கம் பெற்றது. இளம்பிள்ளை வாத நச்சுக் கிருமிகள், இவர் உடலில் எப்போது எவ்விதம் புகுந்தன என்பது பெரும் ஆய்வுக்குரிய செய்தி. ஏராளமாகப் பொருட்

செலவு செய்து மருத்துவம் நடைபெற்றது. ஓரளவு குணம் ஏற்பட்டது. ஆனால், நடக்க முடியவில்லை. சக்கர நாற்காலியில்தான் அவர் நகரவேண்டியிருந்தார். அக்காலத்திலும் அவரிடம் திட நம்பிக்கை இருந்ததைப் பலர் கண்டு வியந்தனர். இருபதுக்கு மேற்பட்ட ஆண்டுக் காலத்தில் ஐந்தாறு தடவைகளே தடுமாறியோ விழுந்தோ இருக்கிறார். இவரது அரசியல் ஈடுபாடு இவர் நோயினால் மறையவில்லை. தம் குறையைப் பற்றி இவர் யாரிடமும் வாய்விட்டுக் கூறியதில்லை. மற்ற எவரும் இவருக்காகப் பரிதாபப் படுவதையோ தயைகாட்டுவதையோ இவர் வெறுத்தார். 'ஒரு குழந்தை வியாதியை வயதான ஒருவன் வெல்ல முடியாதா என்ன? என்று திடமனத்தோடு இவர் பேசுவது வழக்கம். இவர் ஒரு முடவர் என்பதைச் செய்தித்தாள்களும் மிகுதியாகப் பிரசுரித்து அம்பலப்படுத்தவில்லை. இவருக்கு ஏற்பட்ட இந்த நோய் இவரது குணத்தன்மையிலிருந்த அச்சத்தை அகற்றிவிட்டு நம்பிக்கையைத் தூண்டிவிட்டது. தம் ஆற்றலைச் சேமித்து அதை ஒருமுனைப்படுத்த இவர் கற்றுக்கொண்டார். முடவரான இவர் உலகில் எவராலும் செய்ய இயலாத செயல்களைச் செய்துகாட்டினார். நான்கு தடவைகள் குடியரசுத் தலைவராக இருந்தாரே அதுவே போதும்.

இவர் 1928 முதல் 1932 வரை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு நியூயார்க்கு ஆளுநராகப் பதவி வகித்தார். அக்காலத்தில்தான் பெரும் பொருளாதார மந்தம் நாட்டைத் தொடர்ந்து வாட்டி வதைத்தது. நாட்டின் நிருவாகப் பொறுப்பை ஏற்றிருந்த குடியரசுக் கட்சியினர், பொருளாதாரச் சிக்கல்களைத் தீர்க்க முடியாமல் தவித்தனர். எதிர்க்கட்சியான மக்களாட்சிக் கட்சியினர், எதையும் சாதிக்கவல்ல தீரன், உருசுவெல்ட்டின் தலைமையை நாடினர். இவர் 1933–ஆம் ஆண்டு மார்ச்சுமாதம் நான்காம் நாள் அமெரிக்காவின் முப்பத்திரண்டாம் குடியரசுத் தலைவராகப் பதவியில் அமர்ந்தார். மக்களின் பெருவாரியான வாக்குகள் இவருக்குப் புதிய வலிமையைத் தந்தன.அழகிய தோற்றம், தன்னம்பிக்கை, சுறுசுறுப்பு, இனிமையுடன் கூடிய ஆற்றல் ஆகியவற்றைப் பெற்றிருந்த புதிய தலைவர் புதுத்திட்டம் ஒன்றை நாட்டுக்கு வகுத்து இருள்சூழ்ந்த பொருளாதார மந்தத்தை அறவே அகற்றுவதற்காக அரும்பாடுபட்டார். புதிய திட்டம் (New Deal) எனப்பெறும் புதிய அணுகுமுறை இவருக்கு மிகப்பெரும் வெற்றியைத் தந்தது.

நாட்டில் ஏழ்மையால் யாரும் வருந்தக்கூடாது; ஒவ்வொருவரும் எல்லா நலன்களுடனும் வாழவேண்டும் என்ற இவருடைய பெருவிருப்பத்தில் எழுந்ததுதான், 'தென்னசி ஆற்றுப் பள்ளத்தாக்குத் திட்டம்'. அதற்காக இவர், கோடிக்கணக்கான தாலர்களைச் செலவிட்டார். மாரிக்காலத்தில் அந்த ஆறு பெருக்கெடுத்து ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களைப் பாழ்படுத்தி வந்தது. ஒவ்வோர் ஆண்டும் புதிய புதிய இடங்களில் சேதம் ஏற்படுவது வழக்கம். அதைத் தடுக்க ஆற்றின் குறுக்கே அணை கட்டி, கால்வாய்கள் வழியாகப் புதிய நிலங்களைச் சீர்திருத்த 'டி.வி.ஏ' (T.V.A.) என்ற திட்டம் தொடங்கப் பெற்றது. அது வீண் செலவு என்று புகழ்பெற்ற அறிவியல் அறிஞர் பலர் கருதினர். அதனால், எதிர்ப்பும் ஏற்பட்டது. அதை உருசுவெல்ட்டு பொருட்படுத்தவே இல்லை. எண்ணித்துணிந்த கருமத்தை ஊக்கத்துடன் நிறைவேற்றினார். பின்பு அப்பள்ளத்தாக்கில் புதிய கைத்தொழில்கள் தொடங்க வசதியிருப்பதாகக் கண்டுபிடித்தனர். கைத்தொழில் வளர்ச்சிக்கு இன்றியமையாததாகிய மின்சார உற்பத்திக்குத் தென்னசி ஆற்றுப் பள்ளத்தாக்கில் ஒரு மாபெரும் மின்சார நிலையம் எழுந்தது. இலட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள் வேளாண்மைக்குள் வந்தன. திட்டம் வெற்றிபெற்ற பின்னரே எதிர்ப்பு ஓரளவு அடங்கியது. உருசுவெல்ட்டின் ஆணைப்படி தாலர்கள் கோடிக்கணக்கில் செலவிடப்பட்டன. இவரது புதிய திட்டப்பணி நிவாரணம், மீட்பு, சீர்திருத்தம் (Relief, Recovery & Reform–3Rs.) என்ற பெயருடன் செயற்படலாயிற்று. மூடப்பட்டிருந்த வங்கிகளைத் திறப்பதற்கான அவசரச்சட்டங்கள் பிறந்தன. வங்கிகளுக்குக் கடனுதவி செய்யப் புனரமைப்பு நிதி வாரியம் அமைக்கப்பெற்றது. மூன்றே நாட்களில் பெரும்பகுதி வங்கிகள் உருசுவெல்ட்டின் ஆணையின்பேரில் திறக்கப் பெற்றன. தகுதியற்ற வங்கிகள் தம் உரிமைகளை இழந்தன. பொதுவாகப் பல ஆண்டுகளுக்கு இயற்றப்படக்கூடிய சட்டங்களை மூன்றே மாதங்களில், மக்கள் பேரவை (Congress) இயற்றும்படி செய்த பெருமை உருசுவெல்ட்டுக்கு உரியது. அந்த நாட்கள், வரலாற்றில் 'நூறு நாட்கள்' (Hundred Days) என்று புகழ்பெற்று விளங்கலாயின. அன்று, 50 கோடி தாலர் பணத்துடன் மைய அரசின் நெருக்கடி நிவாரணத்துறை (Federal Emergency Relief Administration) என்பதை மக்கள் பேரவை நிறுவிற்று. வேலையற்ற இளைஞர்களுக்குப் பல வேலைவாய்ப்புகளைத் தருவதற்காகக் குடிமக்கள் பணிப்பாதுகாப்பு அமைப்பு (Civilian Conservation Corps) என்ற அமைப்பு ஏற்பட்டது. இவ்வாறு பற்பல சீர்திருத்தங்கள் வாயிலாக அமெரிக்காவிற்குப் புத்துயிர் தந்த பெருமை உருசுவெல்ட்டைச் சாரும். தொடக்கத்தில் அமைதிக் கொள்கையை நாடிய உருசுவெல்ட்டு, செருமணி, இத்தாலி, சப்பான் ஆகிய அச்சுநாடுகளின் ஆக்கிரமிப்புக் கொடுமைகளைக் காணப் பொறாமல், இரண்டாம் உலகப் போரில் தம்

நாடு பங்கு கொள்ளுமாறு செய்ததுடன், இறுதியில் வெற்றியையும் பெற்றுத் தந்தார். உத்தமர் உருசு வெல்ட்டு, அமெரிக்காவின் அயல்நாட்டுக் கொள்கை யில் வரவேற்கத்தக்க பல நல்மாறுதல்களையும் தோற்றுவித்தார். 'ஒதுங்கி நிற்கும் அமெரிக்கக் கொள்கை கைவிடப்பட்டது. உலக அரங்கில் தலைமை வகிக்கும் எண்ணத்துடன், அட்லாண்டிக் குச் சாசனம், ஐக்கிய நாடுகள் அறிக்கை ஆகியவற் றில் உருசுவெல்ட்டு காட்டிய ஆர்வம் மிகவும் போற் றத்தக்கது. இரண்டாம் உலகப்போரின் கொடுமை களைக் கண்ட உருசுவெல்ட்டு, இனி, மீண்டும் போரே எழாத வண்ணம் செய்வதற்காகப் பல ஒப் பந்தங்களில் கையெழுத்திட்டார். இவர் ஐக்கியநாடு கள் சபை பற்றிய திட்டங்களை வரைவதற்காக, அமெ ரிக்க, சோவியத்து, ஆங்கிலேய,சீனப் பேராளர்கள் அமெரிக்காவில் பலமுறை கூடிப் பேச ஏற்பாடுகள் செய்தார். வாசிங்டனில் உள்ள தம்பர்ட்டன் ஓக்சு என்னும் மாளிகையில் ஐ.நா. சாசனம் 1944-இல் இறுதி வடிவம் பெற்றது. உள்நாட்டுச் சீர்கேடுகளைப் போக்கியதுடன், 1939முதல் நடைபெற்ற இரண்டாம் உலகப் போரையும் திறம்பட நடத்திவந்த உருசு வெல்ட்டை அமெரிக்க நாட்டு மக்கள், தம் சட்டம், மரபு முதலிய எதனையும் பொருட்படுத்தாது மீண் டும் மீண்டும் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுத் ததில் எவ்வித வியப்பும் இல்லை.

குடியரசுத்தலைவர் தேர்தல்களில் (1932, 1936, 1940, 1944 ஆகிய ஆண்டுகளில் நடந்தன) உருசுவெல்ட் டையே மக்கள் தேர்ந்தெடுத்த நிகழ்ச்சி, வரலாறு காணாத மாபெரும் சாதனையாகும். இவருடைய வாழ்க்கை வெற்றிக்கு மிகவும் அடிப்படையான இரக சியம் இவர் பொதுமக்களுடன் ஏற்படுத்திக் கொண்ட தொடர்புதான். அமெரிக்க வரலாற்றிலேயே இல்லாத முறையில் இவர் வானொலி வாயிலாகப் பொது மக்க ளுடன் பழகிவந்தார். இவர் மனைவியார் திருமதி உருசுவெல்ட்டும் சமூக ஊழியத்தில் ஊக்கம் காட்டி அயராது உழைத்து வந்தார். கணவன், மனைவி இரு வரும், உலகில் ஒரு புது யுகத்தினைத் தோற்றுவிக்க அயராது உழைத்தனர். உருசுவெல்ட்டு, முன்னரே நோய்வாய்ப்பட்டு முடமானவர். மனித உடல் எந்த அளவுக்குக் கடும் சோதனைகளைத் தாங்க முடியும்? அல்லும் பகலும் அயராது உழைத்த உருசுவெல்ட்டு 1945-ஆம் ஆண்டு ஏப்ரல் 12-ஆம் நாள் மாரடைப் பினால் மரணமுற்றார்.

நாடு, தமக்கு என்ன நன்மைகளைச் செய்யும் என்று கேட்டுக் கொண்டிராமல், நாட்டுக்காகவே தம்முடைய உடலையும் உயிரையும் தியாகம் செய்த அரும்பெருந்தலைவர்களுள் உருசுவெல்ட்டு மிக முக்கி யமான ஒருவர் என்பதில் ஐயமில்லை. இந்தியாவுக்கு மிகுதியான நலங்களைச் செய்யமுடியாத சூழ்நிலை யில் இவர் இருந்தபோதிலும், இந்தியர்களிடம் இவ ருக்குப் பரிவும் பாசமும் நிரம்ப இருந்தது. மறக்க முடியாத தலைவர்களுள் இவரும் ஒருவர். சை.வே.சி.

துணை நூல்கள்:

**Rosenman, Samuel I.**, The Public Papers and Addresses of Franklin D. Roosevelt, 13 Vol. 1938.

**Leuchtenberg, William E.**, Franklin D. Roosevelt and the New Deal, 1932-40.

**உருசுவெல்ட்டு, தியோடோர்: (கி.பி. 1858-1919)** ஐக்கிய அமெரிக்க நாட்டின் இருபத்தா றாம் குடியரசுத் தலைவராகிய தியோடோர் உருசு வெல்ட்டு (Theodore Roosevelt) கி.பி. 1858-ஆம் ஆண்டில் நியூயார்க்கு நகரத்தில் தியோடோர் என்ப வருக்கும், மார்த்தா புல்லோக் உருசுவெல்ட்டு என்ப வருக்கும் பிறந்தார். இவர் மூதாதையர் ஐரோப்பா விலுள்ள ஆலந்து நாட்டிலிருந்து கி.பி 17-ஆம் நூற் றாண்டின் நடுவில் நியூயார்க்கு நகரத்திற்குச் சென்று குடியேறினர். அங்கு அவர்கள் பொருள் தேடி வசதி யுடனிருந்தனர். இளமையில் தியோடோர் உருசு வெல்ட்டு நோயினால் நலிவுற்றிருந்தமையால், இவர் பள்ளிக் கூடத்தில் சேராமல், வீட்டிலிருந்தே ஒரு ஆசிரியரிடம் கல்வி கற்றார். ஆர்வர்டுப்பல்கலைக்கழ கத்தில் (Harvard University) பயின்ற பின்னர் ஐரோப்பாவில் பயணம் செய்தார். இவர் கல்லூரியில் பயிலும்போதே, 'கி.பி. 1812-ஆம் ஆண்டுப் போரின் கடற்படை வரலாறு' என்ற நூலை எழுதினார். பின்னர் 'மேற்கை வெல்லுதல்' என்ற நூலை (Winning of the West) நான்கு பாகங்களில் எழுதினார். இவர் மேலும் பல நூல்களெழுதியுள்ளார். இவர் ஆர்வர்டில் கல்லூரிப் படிப்பை முடித்துக் கொண்டு, கி.பி.1880-இல் ஆலிசு அதாவே லீ என்ற பெண்ணை மணந்து கொண்டார். முதல் மனைவி கி.பி.1884-இல் இறந்ததும், எடித் கெர்மிட் காரோ என்ற பெண் ணைத் திருமணம் செய்தார். இவருக்கு முதல் மனைவி யிடம் ஒரு குழந்தையும் இரண்டாம் மனவியிடம் ஐந்து குழந்தைகளும் பிறந்தன. இவர் கி.பி. 1881-இல் அரசியல் வாழ்வில் ஈடுபட்டார்; நியூ யார்க்கு மாநிலச் சட்டமன்ற உறுப்பினர் பதவிக்குக் குடியரசுக் கட்சியின் சார்பாகப் (Republican Party) போட்டியிட்டார். ஊழலை ஒழித்து, நல்லாட்சி முறையை நிறுவுவதே தம் நோக்கமென்று கூறினார். இவர் சில கருத்துகளிலும், செயல்களிலும் தம் கட்சி யாளருக்கு விட்டுக் கொடுக்காததனால், வெற்றிபெற வில்லை. இவருடைய சுதந்திர உணர்வு எல்லோர்



உருசுவெல்ட்டு, தியோடோர்

மதிப்பையும் இவருக்குத் தேடித் தந்தது. இவர் தேர்தலில் தோல்வியுற்றதனால் மனந்தளர்ந்து, மேற்கு மாநிலமாகிய வடதக்கோட்டாவில் ஒரு மாட்டுப் பண்ணையை நிறுவி வாழ்ந்து வந்தார். இவர் நியூயார்க்கிற்கு கி.பி. 1886-இல் திரும்பி வந்து மாநகராட்சித் தலைவர் பதவிக்குப் போட்டியிட்டும் வெற்றி பெறவில்லை. எனினும், மனந்தளராமல் நூலெழுதும் பணியிலீடுபட்டிருந்தார். குடியரசுத் தலைவராகிய பெஞ்சமின் ஆரிசன் (Benjamin Harrison) இவரைக் குடிமைப் பணி ஆணையாளராக (Civil Service Commissioner) கி.பி. 1889-இல் அமர்த்தினார். பல சீர்திருத்தங்களைச் செய்தல் வேண்டுமென்று முயன்ற இவருக்குப் பல தடைகள் ஏற்பட்டன. சீர்திருத்த நோக்கமுடைய நகர ஆட்சியாளர் உருசுவெல்ட்டை கி. பி. 1895-இல் காவல்ஆணையாளராக (Police Commissioner) அமர்த்தினார். சட்டமன்றத்தில் இளைஞரான இவர், நகரக் காவற்படையில் காணப்பட்ட ஊழலை ஆராய்ந்தார். காவல் துறையினருக்கும் இரகசியக் குற்றவாளிகளுக்குமிடையேயுள்ள தொடர்பைத் துண்டிக்கும் பொருட்டு இவர் ஒரு கவர்ச்சியான இயக்கம் நடத்தினார். அதனால், ஒரு பயனும் ஏற்படவில்லையாயினும் இவருடைய நோக்கமும் செயல் முறைகளும் யாவராலும் எப்போதும் பாராட்டப்பட்டன. பொது வாழ்வின் மதிப்பு உயர்தல் வேண்மென்ற குறிக்கோளை இவர் ஆதரித்தார். இவர் கி.பி. 1896-இல் குடியரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிட்ட வில்லியம் மக்கின்லியை ஆதரித்தார். வெற்றி பெற்ற மக்கின்லி கி.பி. 1897-இல் உருசுவெல்ட்டைக் கப்பற் படைத் துறையின் துணைச் செயலாளராக அமர்த்தினார்.

**உருசுவெல்ட்டு இசுபெயினோடு நடத்திய போர்:** உருசுவெல்ட்டும் மற்றுமுள்ள உயர் அதிகாரிகளும் இசுபெயினோடு போர் செய்தல் தவிர்க்க இயலாதென்று எண்ணினர். உருசுவெல்ட்டு சில செயல்களில் தம் மேலதிகாரிகளைக் கண்டித்தும், தம் அதிகார எல்லையை மீறியும் செயற்பட்டார்; போருக்காகக் கப்பற்படையை ஆயத்த நிலையில் வைத்திருந்தார். இதனால், கப்பற்படை பல வெற்றிகளைப் பெற்றது. போரில் இவர் தம் அரசாங்கப் பதவியைத் துறந்து, ஒரு குதிரைப் படையைத் திரட்டி வைத்திருந்தார். இவ்வீரர்கள் 'முரட்டு வீரர்கள்' (Rough Riders) எனப்பட்டனர். இப் படையில் உருசுவெல்ட்டு தளபதியாக அமர்த்தப்பட்டு, கியூபாவில் (Cuba) பெரும் பாராட்டினைப் பெறுமளவுக்குப் பணி செய்தார். போரினிறுதியில் இவர் தேசிய வீரராகக் கருதப்பட்டார்.

**நியூயார்க்கு ஆளுநராகவும், குடியரசுத் தலைவராகவும் உருசுவெல்ட்டு ஆட்சி செய்தல்:** நியூயார்க்கு ஆளுநர் பதவிக்கு கி.பி. 1898-இல் நடந்த தேர்தலில் தாமசு சி. பிளாட்டு என்பாரின் ஆதரவில் உருசுவெல்ட்டு தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் பல சீர்திருத்தங்களைச் செய்தல் வேண்டுமென்று ஆர்வத்தோடிருந்தது பலருக்கு வெறுப்பை அளித்தது. ஆளுநராக இருந்த போது, இவர் நியூயார்க்கு மாநில ஆட்சிப் பணித்துறையிலும், தொடக்கநிலைத் தேர்தல் முறையிலும் பல சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தார். தனியார் தொழிற்கழகங்களின் மீது வரி விதிக்கும் சட்டம் ஒன்று இவருடைய ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது. இச்சிறு சீர்திருத்தங்களால் இவர்மீது வெறுப்புக் கொண்ட பிளாட்டு, இவரை மறுமுறையும் ஆளுநர் பதவிக்குப் போட்டி இடாமல் தடுக்கும் பொருட்டு, 1900-இல் குடியரசின் துணைத் தலைவர் பதவிக்குப் போட்டியிடுமாறு செய்து ஆதரவளித்தார். வெற்றி பெற்ற உருசுவெல்ட்டு, துணைத் தலைவர் பதவியில் ஒன்றும் செய்ய இயலாதென்பதனை உணர்ந்தார். ஆனால், 1901, செப்டம்பரில் குடியரசுத் தலைவர் மக்கன்லி கொலை செய்யப்படவே, அவருடைய 4 ஆண்டுப் பதவிக் காலத்தில்

எஞ்சியிருந்த காலத்துக்கு உருசுவெல்ட்டு தலைவராகப் பணி செய்தார். அப்போது இவருக்கு வயது 42 தான். எனவே, இவர் ஊக்கத்துடனும், உறுதியுடனும் வேலை செய்தார். இவர் உடல் நலம் பாதுகாத்து, 'முயற்சியோடிணைந்த வாழ்வு' (Strenuous Life) என்ற நோக்கத்தைத் தம் பொதுவாழ்வின் குறிக்கோளாகக் கருதினார். இவர் இருமுறை குடியரசுத் தலைவராக இருந்த காலத்தில், ஒவ்வொரு நாளும் செய்தித் தாளின் முதல் பக்கத்தில், இவர் ஆற்றிய பணி ஏதேனுமொன்று வெளியாகி இருக்கும். இவருடைய எடுப்பான தோற்றமும், நாடக வடிவில் செயற்படக்கூடிய திறமும், சொற்றொடர்களை அமைக்க வல்ல திறமும் இவரை ஒவ்வோர் அமெரிக்கரும் விரும்புமாறு செய்தன. இவர் ஆட்சியில் பயனுள்ள சீர்திருத்தங்கள் நிறைவேற்றப்பட்டன. நகராட்சி முறையில் ஊழலை நீக்கித் தூய ஆட்சி ஏற்பட இவர் வழி செய்தார். இதன் பொருட்டுத் தோன்றிய இயக்கத்துக்கு இவர் தலைமை தாங்கினார்; குற்றம் செய்தோரை மிகவும் கண்டித்தார். இவருடைய முதல் தடவைப் பதவிக் காலத்தில் சட்டமன்றம் இவருடன் ஒத்துழைக்காமலிருந்தது. ஆயினும், இவர் செல்வாக்குள்ள சில தனியார் தொழிற் கழகங்களின்மீது சட்டத்தின் கட்டுப்பாட்டை நிறுவினார். நிலக்கரித் தொழிலாளர் வேலை நிறுத்தத்தில் தலையிட்டார். இவர் ஒழுக்க இயலை வற்புறுத்தி, உரைகள் பல ஆற்றி, நாடெங்கும் சீர்திருத்த உணர்வு தோன்றச் செய்தார். இரண்டாம் முறை வெற்றி பெற்றுப் பதவிக்கு வந்ததும், நாட்டின் இருப்புப் பாதைகளை ஒழுங்கு படுத்துதற்கு அதிக அதிகாரங்களை மாநில வாணிக ஆணையத்துக்கு வழங்கும் ஒரு சட்டத்தைச் செய்தார். இவர் செய்த (1906-இல்) பிறிதொரு சட்டம், கலப்பட உணவுகளைச் சமைத்தலையும் விற்றலையும் குற்றங்களாக ஆக்கிற்று. இரண்டாம் முறைப் பதவிக் காலத்தில் நாட்டின் இயற்கை வளங்களைப் பாதுகாக்கும் பொருட்டுப் பல சட்டங்களைச் செய்தார். எதிர்காலத்தில் தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்படுதலினின்றும் நாட்டைக் காப்பாற்றும் முன்னுணர்வுடன் 1907-இல் உள்நாட்டு நீர்வழி ஆணையத்தை நிறுவி, நீர் ஆதாரங்களைப் பாதுகாத்தார். அயல்நாட்டு உறவுகளில் உருசுவெல்ட்டு ஒரு நாட்டுப் பற்றாளரென்ற போக்கில் செயலாற்றினார். இவர் நாட்டின் தரைப் படையையும் கடற்படையையும் வலுவாக்கி, அதனால் தம் நாட்டிற்குக் கிடைத்த குடியேற்ற நாடுகளைக் காப்பாற்றினார். இவருடைய முயற்சியினால் தான் இரு அமெரிக்கக் கண்டங்களையும் பிரிக்கும் பனாமாக்கால்வாய் தோண்டும் வேலை தொடங்கப் பட்டது. இவர் கால்வாயைச் சுற்றியுள்ள பகுதியை வாங்க ஏற்பாடு செய்தார்.

இவர்தம் அரசியல் சூழ்வலியின் விளைவாக, இலத்தீன் அமெரிக்க நாடுகளெல்லாம் மன்றோ கோட்பாட்டை ஒட்டி, வெளியுலகத் தாக்குதலுக்கெதிராக ஐக்கிய அமெரிக்க நாட்டைத் தற்காப்புக்காகச் சார்ந்திருத்தலைப் போன்று, அவை தத்தமக்குரிய பன்னாட்டுக் கடமைகளை நிறைவேற்றுதலில் ஐக்கிய அமெரிக்க நாட்டிற்குக் கட்டுப்பட்டிருத்தல் வேண்டுமென்ற நிலை தோன்றிற்று. வெனிசுலா நாட்டில் 1902-இல் முற்றுகை நடந்தபோது உருசுவெல்ட்டு எடுத்த நடவடிக்கையும், 1903-இல் ஐக்கிய அமெரிக்க நாட்டிற்கும் கனடாவுக்குமிடையே அலாசுகா எல்லைத் தகராறு தோன்றியபோது, அயலவருடைய தலையீட்டிற்கு எதிராக ஐக்கிய அமெரிக்கா தன் நலன்களை அமெரிக்கக் கண்டத்தில் காப்பாற்றிக் கொள்ள இயலுமென்று இவர் விடுத்த அறிக்கையும் இவருடைய உறுதிப்பாட்டைக் காட்டின. உருசியாவுக்கும் சப்பானுக்குமிடையே நடந்த போரை, 1905-ஆம் ஆண்டு போர்ட்சுமித்து உடன்படிக்கையின் வாயிலாக முடிவுக்குக் கொண்டு வருவதில், உருசுவெல்ட்டு இரு நாடுகளுக்குமிடையே பேச்சுகள் நடத்தினார். பிரிட்டன், செருமனி முதலிய ஐரோப்பிய வல்லரசுகளுக்கிடையே தோன்றிய மொராக்கோ தகராறில் உருசுவெல்ட்டு தலையிட்டு, 1906-இல் ஆல்செசிராசு மாநாட்டில் அவற்றுக்கிடையே நல்லிணக்கம் செய்து வைத்தார். இவ்வாறு அமெரிக்காவின் அரசியலாதிக்கம் ஐரோப்பாவிலும், ஆசியாவிலும் பரவ இவர் வழி வகுத்தார். நல்லிணக்கப் பேச்சு நடத்துதலில் வல்லவரென இவருக்கு 1906-இல் 'நோபல் பரிசு' வழங்கப்பட்டது. இவர் தம் அமைதி நோக்கத்தை உலகறியச் செய்யும் பொருட்டு, ஐக்கிய அமெரிக்கக் கப்பற்படையை உலக முழுவதும் அமைதிப் பயணம் செய்து சுற்றி வருமாறு 1907-இல் விடுத்தார். இவருடைய அயல்நாட்டுக் கோட்பாடு, 'மெல்லப் பேசு, ஆனால் ஒரு பெரிய கழியை எடுத்துப் போ' (Speak softly, but carry a big stick) என்பதாகும். தற்காப்புக்கு ஆவன செய்தே நாம் அமைதிக்கு முயலுதல் வேண்டுமென்பது இதன் பொருள். இவர் தம் பின்தோன்றலாகிய வில்லியம் ஒவார்டு தாப்டு என்பவரை ஆதரித்தார். நியூயார்க்கு ஆளுநருக்காக இவர் ஆற்றிய உரையில் 'புதிய தேசியம்' (New Nationalism) என்ற கொள்கையை வகுத்தார். நாட்டின் பொருளாதார வாழ்வைக் கட்டுப்படுத்துவதற்குக் கூடுதல் அதிகாரம் அரசாங்கத்துக்கு வேண்டுமென்பதுதான் இக்கொள்கை ஆகும். இவர் தாப்டோடு மாறுபட்டு உட்ரோ வில்சனை ஆதரித்து வெற்றி பெறச் செய்தார். முதல் உலகப் போர் தொடங்கியதும் இவர், நாடு தற்காப்புப் போருக்காயத்தமாக இருத்தல் வேண்டுமென்றும், மெக்சிகோவில் அமெரிக்கா

தலையிட்டுக் கட்டுப்படுத்தல் வேண்டுமென்றும் கூறினார். தன்னூரிலிருந்து கொண்டே போர் முயற்சிகளை ஆதரித்தார். இவர் 1919-இல் நியூயார்க்கில் ஆயிசுடர்பே (Oyster Bay)யிலுள்ள தம் இல்லத்தில் காலமானார்.

ஐக்கிய அமெரிக்க நாட்டிற்கு உறுதியான வெளிநாட்டுக் கொள்கையையும், பெரும்பாலரான ஏழைகளின் நலத்தின் பொருட்டுச் செயற்படத்தக்க அதிகாரங்கள் மிக்குடைய அரசாங்கத்தையும் இவர் ஆதரித்தார். பா.சு.

துணை நூல்கள்:

**Harbaugh, William Henry**, Power and Responsibility: The Life and Times of Theodore Roosevelt, New York, 1961.

**Pringle, Henry F.**, Theodore Roosevelt, New York, 1956.

**Putnam, Carleton**, Theodore Roosevelt: The Formative Years,1858-1886, New York, 1956.

உருசோ: உலக வரலாற்றில் மிகச் சிறப்பு வாய்ந்த நிகழ்ச்சிகளுள் ஒன்றாகிய பிரஞ்சுப்புரட்சிக்கு ஆர்வமூட்டிய கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் ஐரோப்பிய எழுத்தாளர்களுள் சீன் சாக்கு உரூசோ (கி.பி. 1712-1778) ஒருவராவர். அரசியலில் இவர் வகுத்த சமூக ஒப்பந்தக் கோட்பாடு (Theory of Social Contract), இவர் காலத்திய ஆங்கிலத்தாராளப் பொருளாதாரச் சிந்தனையாளர்களுடைய (Economic Liberalism of English Thinkers) கருத்தையும், மாண்டெசுக்கு (Montesquieu) என்ற இன்னொரு மாண்புமிக்க பிரஞ்சு அரசியற் சிந்தனையாளருடைய நேர்காட்சி வாதக் கொள்கையையும் (Positivist Attitude) விடப் புகழ் மிக்க ஒன்றாக ஆயிற்று.



உரூசோ

வாழ்க்கை: சீன் சாக்கு உரூசோ (Jean Jacques Rousseau) சுவிட்சர்லாந்து நாட்டில் செனிவா (Geneva) நகரத்தில் ஐசக் உரூசோ என்ற கடிகாரத்தொழிலாளிக்கும் கால்வினியக்கிறித்தவ நெறியைச் சேர்ந்த அவர்தம் மனைவிக்கும் பிறந்தார். இளமையில் செனிவா நகர ஒதுக்குப் புறத்தில் தொழிலாளர் வாழ்தலையும், செல்வரும் வணிகரும் நகரத்தின் வசதியான பகுதியில் வாழ்தலையும் உரூசோ கண்டார். தொழிலாளர் குழுவில் பழகிய அவர் குடியரசுக் கொள்கையை (Republican Principle) ஆதரித்தார். இவர் நகரத்துக்கு வெளியே வேறொருவருடன் சிலகாலம் தங்கி, பின்னர் வெளியேறிச் சவாய்(Savoy) சென்று, அங்கு உரோமானியக் கிறித்தவ நெறியை ஏற்றார். இறைமைக்கோட்பாடு, அதிகார ஒப்படைப்பின் தீங்குகள் (Delegation of Authority), மக்கள் வாக்கெடுப்பின் வாயிலாக வரி விதிப்பு, மக்களுடைய விருப்பத்தோடு நடைபெறும் தேர்தல் ஆகியவை பற்றி இவர் சில கருத்துகளைக் கொண்டிருந்தார். சிறிது காலம் குருமார் பயிற்சிப்பள்ளியிலிருத்தல், சிறிது காலம் பெண்களுக்கு இசை கற்றுக் கொடுத்தல், சில காலம் வாரன்சு என்ற அம்மையாருடன் வாழ்க்கை நடத்தல், சில காலம் வரி அலுவலராகப் பணிபுரிதல், சில காலம் வேலையின்றித் திரிதல் என்று இவ்வாறாக இவர் இளமைக்காலம் கழிந்தது. ஆனால், இவர் நூல்கள் பல பயின்றும் சிந்தித்தும் எழுதியும் வந்தார். பாரிசு நகரத்திலிருந்தபோது இசைநூல் ஒன்று வெளியிட்டார். வெனிசில் பிரஞ்சுத் தூதரகத்தில் பணியாற்றிவிட்டு, முரண்பாட்டின் காரணமாக அதை விட்டு நீங்கி, மீண்டும் பாரிசுக்கு வந்து, அங்கு ஒரு விடுதிப் பெண்ணை மணந்து, குழந்தைகள் பெற்றுப் பின் நீங்கினார். திதரோ என்ற தத்துவ ஆசிரியருடன் உரூசோ தொடர்பு கொள்ள, அவருடைய தூண்டுதலின் பேரில், 'மீட்கப்பட்ட அறிவியல்களும், கலைகளும் ஒழுக்கத் தூய்மைக்கு உதவி செய்தனவா?' என்ற தலைப்பில் போட்டிப் பரிசுக்கு ஓர் ஆய்வுக்கட்டுரை எழுதி, திசான் கழகத்துக்கு (Dijon Academy) அளிக்க, அது அக்கட்டுரைக்கு முதற்பரிசு அளித்தது. அதில் இவர், 'அரசர்கள் தங்கள் குடிகளிடையே கலைகளின்மீதும், மேம்போக்கான வாழ்க்கையின் மீதும் பற்று ஏற்படுதலை விரும்புவர்; அத்தகைய பற்றின் விளைவாக நாட்டின் செல்வம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகாத வரையில் அப்பற்று வளருதல் விரும்பத்தக்கதே; மக்களிடையே அடிமைத் தன்மை பரவுதற்கு மிக ஏற்றதான ஆன்மிகச் சிறுமையை (Spiritual Pettiness) அவர்களுடைய தேவைகள் வளர்ப்பது மட்டுமன்றி, அவர்களைப் பிணிக்கின்ற அடிமைத் தளைகளுமாகும். மக்களைப் பிணிக்கின்ற இரும்புத்தளைகளைச் சுற்றி அமைந்துள்ள மலர்மாலைகளே அறிவியல்களும் இலக்கியங்களும் கலைகளுமாகும்.

அவர்கள் உயிர்வாழ்வதற்கு ஆதாரமாகிய தன்னுணர்வை இவ்வறிவியல்களும், கலைகளும் அமுக்கிவிட்டு, மக்கள் தங்களுடைய அடிமைநிலையை விரும்புமாறு செய்து, அவர்கள் நாகரிகமக்களெனப் பிறரால் அழைக்கப்படுமாறு ஆக்கிவிடுகின்றன' என்று கூறினார். மேலும், இவர் உரிமையைப் புகழ்ந்தும், அரசர்களின் கொடுங்கோன்மையையும், குருமாரின் போலித்தன்மையையும் (Hypocrisy) தாக்கியும் எழுதினார். இவர்தம் கண்டனக் கருத்துகள் முடியாட்சி ஐரோப்பிய நாடுகளிலுள்ள எல்லாநிறுவனங்களையும் தாக்குதற்குரியனவாக அமைந்தன. இக்கருத்துகள் தோற்றுவித்த எதிர்ப்புகளிடையே உரூசோ மேலும் பல முற்போக்குக் கருத்துகளை வெளியிட்டார். இவர் ஆடம்பர வாழ்க்கையைக் (Luxury) கண்டித்து, அதற்கான காரணங்களைத் தம் காலச் சமூக அமைப்பிலே சுட்டிக்காட்டி 'ஆய்வுகள்' (Observations) என்ற நூலில் சில கருத்துகளைக் கூறினார். 'எல்லாத் தீங்குகளுக்கும் தோற்றுவாயாக இருப்பது சமத்துவமின்மையே (Inequality) ஆகும்; சமத்துவமின்மைதான் சிலரிடத்தில் பொருள்குவிப்பு ஏற்படுதற்குக் காரணமாக இருக்கிறது; செல்வன், வறியன் என்ற சொற்களெல்லாம் தராதரம் அல்லது விகிதநிலையைக் குறிப்பிடுகிற, ஒன்றுக்கொன்று தொடர்பான சொற்களேயாம்; எப்பொழுது மக்கள் சமத்துவமுடையவர்களாகின்றார்களோ, அப்பொழுது செல்வருமில்லை, வறியோருமில்லை. செல்வநிலை ஆடம்பர வாழ்வைத் தோற்றுவிக்கிறது. ஆடம்பர வாழ்வு கலைப் படைப்புக்கு ஏற்றதாகவும், சோம்பல் (Idleness) அறிவியல் படைப்புக்கு ஏற்றதாகவும் இருக்கின்றன' என்பன இவர்தம் கருத்துப்பிழிவுகள். இவர் எழுதிய இசைநூல்கள் பிரஞ்சுக் களஞ்சிய நூலில் சேர்க்கப்பட்டன. திசான் கழகம், மக்களிடையே சமத்துவமின்மை தோன்றக் காரணம் யாது? அந்த நிலையை இயற்கையின் சட்டம் ஆதரிக்கிறதா? என்று வினாக்களை எழுப்பியபோது, கி.பி. 1753-ஆம் ஆண்டில் இவ்வினாக்களுக்கு விடையாக உரூசோ தம் அரசியற்கருத்துகளை வெளியிட்டார். மனிதனின் இயற்கைநிலை (State of Nature) என்பதை ஒரு கருதுகோளாக அல்லது கற்பனையாக (Hypothesis) வைத்து ஒரு விளக்கம் கொடுத்து, மக்கள் இயற்கையில் சமத்துவமில்லாமல் ஆக்கப்பட்டிருப்பினும், அவர்கள் ஒரு காலத்தில் சமத்துவமாகவே இருந்தார்களென்றும், கொடிய விலங்குகள் ஒன்றையொன்று நெருங்காதிருத்தல் போல, ஒருவரை ஒருவர் நெருங்காமலிருந்தனரென்றும் கூறுகிறார். இதுவே மனித சமுதாய வளர்ச்சியின் முதல் நிலை ஆகும். உலகில் நடைபெற்ற சில மாறுதல்களின் விளைவாக மனிதர்கள் நல்வாழ்வு என்னும் பொற்காலத்தை அடையும் பொருட்டு, ஒன்றாக வாழத் தலைப்பட்டனர். அப்போது காதல், நட்பு, இசை, நடனம் முதலியவற்றில் இன்பத்தையும் பொறாமை, வெறுப்பு, போர் முதலியவற்றில் துன்பத்தையும் அவர்கள் கண்டறிந்தனர். இதுவே, அவர்களது வாழ்வின் இரண்டாம் நிலையாகுமென்று இவர் கூறுகிறார். மேலும், இவர் இரும்பையும் கோதுமையையும் மனிதன் கண்டுபிடித்துப் பயன்படுத்தத் தொடங்கிய போது, மனித வளர்ச்சியின் மூன்றாம் நிலை தொடங்கிற்று என்றும், அப்போது தனியார் உடைமை (Private Property) என்ற தேவை தோன்றிற்று என்றும் கூறுகிறார். மரபுரிமை (Inheritance) கையாளப்படவே, பூமி முழுவதுமே பலரால் மரபுரிமையாகக் கொள்ளப்படவும், ஒருவருடைய பங்கு மற்றவர்களுடைய நில எல்லைகளோடு தொடர்புடனமையவும், சிலருடைய நிலங்கள் மற்றவர்களுடைய பங்குகளையும் அழித்துப் பெருகவுமாகிய நிலை உண்டாயிற்று. இதனால் வளரும் சமூகமானது மாறி, மிகவும் அஞ்சத்தக்க போர்ச்சூழ்நிலை உருவாயிற்று. இந்தப் போர்ச் சூழ்நிலைதான், தங்களுடைய சொத்துகளைப் பாதுகாக்கும் பொருட்டுச் சட்டங்களை இயற்றி அவற்றைச் செயற்படுத்துமாறு செல்வமிக்க நிலவுடைமையாளர்களைத் தூண்டிற்று. பண்டைய இயற்கை நிலையிலுள்ள சமத்துவ நிலையை மீண்டும் அடைதலென்பது இயலாதாகையால், அதனை மனிதர் அடைதல் வேண்டுமென்று உரூசோ வற்புறுத்தாமல், சமூக சமத்துவமின்மையால் விளையக் கூடிய தீங்குகளை எவ்வளவு குறைத்தலியலுமோ, அவ்வளவு குறைத்தற்கு யாவரும் முயலுதல் வேண்டுமென்று மூன்று வழிகளைச் சுட்டிக் கூறினார்: (1) அரசியலுரிமைகளிலும் கடமைகளிலும் சமத்துவம் இருத்தல் வேண்டும், (2) எல்லாக் குழந்தைகட்கும் தமது நாட்டிடத்துப் பற்றுறுதியையும், பண்டைய சுபார்ட்டா நகரரசிலிருந்தது போன்ற (Ancient Sparta) ஒழுக்க உறுதிப்பாட்டையும் வளர்க்கக்கூடிய அரசாங்கக் கல்விப்பயிற்சி முறையை ஏற்படுத்துதல் வேண்டும், (3) மரபுரிமைகளின் மீதும், ஆடம்பரங்களின் மீதும் வரிவிதித்தலைப் பொதுவான அல்லது அரசாங்கச் சொத்துமுறையோடு இணைத்தல் வேண்டும். இவர் கூறும் முதல் வழியில் தான் 'பொதுநல விருப்பம்' (General Will) என்ற இவருடைய சிறப்பான அரசியற்கோட்பாடு கூறப்படுகிறது. இவர் கி.பி. 1754-ஆம் ஆண்டில் மீண்டும் செனிவாவுக்கு வர, அங்குக் குடிமை உரிமைகள் பெற்றார். பாரிசு நீதிமன்றமும் திருச்சபையும் இவரையும், மற்றக் களஞ்சிய ஆசிரியர்களையும் எதிர்த்துக் கண்டனம் செய்தன. சிறிதுகாலம் பாரிசுக்கருகில் ஒரு தனி இடத்தில் தங்கி, கி.பி. 1762-இல் எமிலி என்ற தலைப்பில் புதியதொரு கல்விமுறையைப் பற்றிக்கூறும் ஒரு நூலையும், சமூக ஒப்பந்தம் (Du Contract Social) என்ற ஓர் அரசியல் நூலையும் எழுதினார். சமூகச் சார்பான சமய நெறியே (Civil Reli-

gion) அரசியலின் தேவை என்று இவர் கருதினார். இவருடைய இந்தக் கருத்தையும், கல்விக்கோட்பாட்டையும், அரசியற்கோட்பாட்டையும் பாரிசுப் பேராயரும் (Arch-Bishop), நீதிமன்றத்தினரும் சமய நெறிக்கு மாறானவையென்று மறுத்துரைத்தனர். பாரிசிலிருந்து இவர் சுவிட்சர்லாந்துக்குத் தப்பிச் செல்ல, அங்கும் இவருடைய நூல்கள் தடை செய்யப்பட்டிருந்த காரணத்தால், இவர் ஒரு போலியான மனிதர் (Hypocrite), இரக்கமற்ற தகப்பன், பற்றுறுதியற்ற நண்பன் என்றெல்லாம் பழிக்கப்பட்டுத் துண்டு வெளியீடுகள் தோன்றின. இதனால், மிகவும் மனம் கவன்ற இவர் தமது வாழ்க்கை வரலாற்றை ''ஒப்புதல்கள்'' (Confessions) என்ற நூலில் எழுதினார். இங்கிலாந்தில் கி.பி. 1766-ஆம் ஆண்டிலும், சுவிட்சர்லாந்து மாநிலங்களில் சிறிது காலமும் இவர் நாடோடியாக வாழ்ந்துவிட்டுப் பிரான்சில் இறுதி நாட்களைக் கழித்து, கி.பி. 1778-ஆம் ஆண்டு மறைந்தார். புதைக்கப்பட்ட இவரது உடலின் சின்னங்கள் பிரஞ்சுப் புரட்சியின்போது பாரிசுக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

அரசியற் கருத்துகள்: உயர் அறிவாளருடைய ஆட்சியே (Aristocracy) சிறந்தது; உயர் அறிவும் உயர் ஒழுக்கமும் சேர்ந்ததுதான் பண்பு (Virtue) ஆகும். பிறப்பு, பண்பாடு, கல்வி, வீரம், செல்வம் முதலியவற்றில் உயர்ந்தோராட்சியே சிறந்தது. ''தங்களுடைய நலனுக்காக அல்லாமல் மற்றவருடைய நலனுக்காகவே அறிவிற் சிறந்தோர் ஆளுவாரென்ற உறுதிப்பாடு தோன்றும்போது, சிறுபான்மையராகிய அறிவுடையோரே மற்றையோரையெல்லாம் ஆளுதலே சிறந்த இயற்கைக்குப் பொருத்தமான ஏற்பாடு ஆகும்'' என்று கூறினார்.

சமுதாயத்தின் ஆற்றலுக்கு இன்றியமையாத ஒற்றுமையை ஏற்படுத்துவது முடியாட்சியாகையால் அதுவே மிக்க ஊக்கமுடைய அமைப்பும் ஆகும். மக்களுடைய விருப்பத்தை இணைத்து, அரசருடைய விருப்பமாக ஆக்குதற்கு முடியாட்சி (Monarchy) சிறந்தது.

சுதந்திரம் என்பதற்கு மனித ஆர்வம் தொடர்ச்சியாக வளரும் ஆற்றல் என்று பொருள் கொண்டு, அது சமத்துவமுடையவர்கள் நிறைந்த சமூகத்தில்தான் காணப்படும் என்ற இலாசுகியின் (Laski) கருத்தை ஒட்டி உருசோவும் கூறினார். தன்னுரிமை என்பது தன்விருப்பத்தின் பேரில் ஒப்புக்கொள்ளப்படுகிற சட்டத்தில்தான் காணப்படுகிறது. ஒருவர் தம் உணர்ச்சிகளுக்கு உட்படுதல் என்பது அடிமைத்தனமாகும்; ஆனால், அவர் தாமே தமக்கு விதித்துக் கொண்ட ஒரு சட்டத்துக்குக் கட்டுப்படுதலென்பது தான் தன்னுரிமை அல்லது சுதந்திரம் (Liberty) ஆகும். இவ்வாறு மக்களால் விதிக்கப்பட்ட சட்டமானது செல்வருக்கு மட்டிலுமே பயன்படுதலைத் தவிர்த்தல் வேண்டுமாயின், ஒவ்வொருவருக்கும் ஏதேனும் சிறிது பொருளுள்ள நிலைமையும், எவருக்கும் அளவுக்கு மீறிய பொருள் வசதி இல்லாத நிலைமையும் தோன்றுதல் வேண்டும்.

உருசோ கூறும் சுதந்திரம் பற்றிய இந்தக் கருத்திலிருந்து பெறப்படும் முடிபுகள் யாவை என்றால், மக்களே இறைமை அல்லது தலைமை அதிகாரமுடையவர்கள் என்பதும், அவர்களுடைய இறைமை அதிகாரமானது அவர்களால் எந்த நேரத்திலும் நீக்கப்படுவதற்குரிய ஓர் அரசாங்கத்தின் வாயிலாகக் கையாளப்படுகிறது என்பதும் ஆகும். அரசாங்க அமைப்புகள் அல்லது வகைகள் (Forms of Government) நடைமுறையிலுள்ள வரலாற்று, புவியியல் சூழ்நிலைகளுக்கு ஏற்ப மாற்றியமைக்கப்படவேண்டும்.

சட்டத்தின் முன்னர்ச் சமத்துவமும், ஒவ்வொருவருக்கும் அரசாங்கத்தில் பங்கும் இருத்தலே முழுச் சமத்துவமாகும். சமத்துவமில்லாமல் சுதந்திரம் இருத்தல் இயலாது. செல்வர்களையோ பிச்சைக்காரர்களையோ சமூகத்தில் இருக்கவிடலாகாது. பிரிக்க இயலாத இவ்விரண்டு வகுப்புகளும், பொது நலனுக்குக் கேடுவிளைவிப்பவையே ஆகும். ஒரு வகுப்பிலிருந்து கொடுங்கோலாட்சியாளருக்கு நண்பர்கள் அல்லது ஆதரவாளர்கள் தோன்றுகிறார்கள்; மற்ற வகுப்பிலிருந்து கொடுங்கோலாட்சியாளர்களே (Tyrants) தோன்றுகிறார்கள். இவ்விருவகுப்பாருக்குமிடையேதான் அரசியல் சுதந்திரம் ஏலம் விடப்படுகிறது. ஒரு வகுப்பு சுதந்திரத்தை வாங்க, மற்ற வகுப்பு அதை விற்கிறது. அரசியல் உரிமைகளிலும், கடமைகளிலும் சமத்துவம் இருத்தல் வேண்டும்.

பொது நலனைக் காத்தல் என்ற போர்வையில் தமது சொந்த நலனைக் காப்பாற்ற உதவும் கருவியாகப் பயன்படுகிற ஒரு தீங்கு, கட்சி அமைப்பில் இருக்கிறது. எனவேதான் எந்தச் சமூகங்களில் கட்சிகள் இருக்கின்றனவோ, அவற்றில் உண்மையான பொது நலவிருப்பம் (General Will) அமைவது அரிது.

மனிதன் இயல்பிலேயே நல்ல தன்மையும் இரக்க உணர்வும் உடையவன். இயற்கை நிலை (State of Nature) என்பது கவிதையில் புகழப்படத்தக்க இன்பம் நிறைந்த காலமாகும். அதில் மக்கள் சுதந்திரமும் சமத்துவமும் பெற்றிருந்தனர். ஆனால், விரைவில் தனியார் உடைமை முறையும், மக்கள் தொகைப்

பெருக்கமும் தோன்ற, பூசல்கள் எழுந்தன. மனிதன் இச்சூழ்நிலையில் தனது இயற்கைச் சுதந்திரத்தை விட்டுக்கொடுக்க வேண்டியதாயிற்று. அவனுக்குள் எழுந்த ஒரு சிக்கல் என்னவென்றால், சமூகத்திலுள்ள ஒவ்வொருவருடைய சுதந்திரத்தையும், உடைமையையும் பாதுகாக்கவல்ல ஓர் அமைப்பின் வடிவத்தை நிறுவுதல் வேண்டும். அந்த அமைப்பு, சமூகத்திலுள்ள எல்லோருடைய பொதுவான முழு ஆற்றலின் உதவி கொண்டுஒவ்வொருவருடைய சுதந்திரத்தையும் பாதுகாத்தல் வேண்டும் என்பதாகும். இத்தகைய அமைப்புத்தான் குடிமைப்பண்புடைய சமூகம் (Civil Society) ஆகும். இந்தக் குடிமைப்பண்புடைய சமூகத்தை அல்லது அரசைத் தோற்றுவித்தற்காக ஓர் ஒப்பந்தத்தை (Contract) இயற்கை நிலையிலுள்ள மனிதர்கள் செய்தனர்.

சமூக ஒப்பந்தம்: இயற்கை நிலையில் வாழ்ந்த ஒவ்வொரு மனிதனும், சமூகத்திடம் தம் உரிமைகளெல்லாவற்றையும் ஒப்படைக்கிறான். இதனால், சமூகமே (Community) அதிலுள்ள யாவருடைய உரிமைகளையும் பெறுவதனால், அதுவே தலைமையான அதிகாரத்தை, அதாவது அரசாங்கத்தையும் கட்டுப்படுத்தவல்ல உயர்தர அதிகாரத்தை, அல்லது இறைமையைப் பெறுகிறது.

இறைமை: சமூகம் பெறுகிற இறைமை அதிகாரம் வரம்பற்றது. சமூகத்தில் உள்ள தனியார்களால் இந்த இறைமைச் சமூகம் (Sovereign Community) அமைக்கப்படுகிறபடியாலும், அதிலுள்ள குடிமக்களின் நலனுக்கு மாறாக எதுவும் அதற்கு இருக்க இயலாதாகையாலும், அதன் இறைமையை (Sovereignty) வரம்புபடுத்த வேண்டிய தேவை இல்லை. எது இருத்தல் வேண்டுமோ, அதுவாக இறைமையுடைய சமூகம் இருக்கிறது. இறைமையுடைய சமூகம் அமைக்கப்படுகிறது என்ற காரணத்தினாலேயே, அந்தச் சமூகத்தில் யாவருடைய தனிப்பட்ட நலன்களும் மறைந்துவிடுகின்றன. தனியார் விருப்பம் (Individual Will), சமூகத்தினுடைய பொதுநல விருப்பத்தோடு (General Will) முரண்படுமேயானால், பொதுநல விருப்பம் இறைமையுடையதாக இருக்கிற காரணத்தால், சமூக ஒப்பந்தத்தின்படி, பொதுநலவிருப்பத்தை ஏற்றுக்கொள்ளாதவர் எவரும், சமூகம் முழுவதனாலும், அத்தகைய முரண்பாட்டினின்றும் விடுபடும்படி கட்டாயப்படுத்தப்படுவர். இவ்வாறு முரண்படும் தனியார் தம நலனை விடுத்து, சமூகத்தின் பொதுநல விருப்பத்துக்கு உட்படும்படி கட்டாயப் படுத்தப்படுவர் என்பது சமூக ஒப்பந்தத்தில் காணப்படும் மறைவான ஒப்புதல் (Tacit Agreement) ஆகும்.

பொதுநலவிருப்பம்தான் சமூக ஒப்பந்தம் செய்யப்படுதற்குக் காரணமாக உள்ளது. இறைமையே பொதுநல விருப்பம் ஆகும்; அது முழுமையானது; வரம்பற்றது; யாவரையும் கட்டுப்படுத்த வல்லது; யாவருக்கும் மேலான அதிகாரம் உடையது; இதனைச் சமூகத்திலுள்ள ஒவ்வொருவரும் ஏற்றுக் கொண்டே ஆகவேண்டுமென்பது கட்டாயமாகும். ஏனெனில், இதற்கு ஏற்பவே ஒவ்வொருவரும் செயற்படுதலால், எவரும் மற்றவரைச் சார்ந்திராமல் விடுதலைபெற்றிருப்பதற்குரிய உறுதிநிலை (Guarantee) ஏற்படுகிறது. பொதுநல விருப்பம் என்பது பெரும்பாலானவருடைய விருப்பம் அன்று; அது ஒருவரிடத்திலும் காணப்படுதல் கூடும்.

சட்டம் என்பது பொதுநல விருப்பத்தை வெளிப்படுத்துவதாகும்; அது மக்கள் யாவரும் கூடிய ஒரு மன்றத்தில்தான் இயற்றப்படுதல் வேண்டும்.

அரசாங்கம் என்பது இறைமை ஆகாது; அது நிருவாக அதிகாரம் மட்டுமே (Executive Authority) உடையது ஆகும். சட்டம் இயற்றும் அதிகாரமும் அதற்கு இல்லை. நிருவாக அதிகாரத்தைச் சட்டத்தின்படி கையாளுதலே அரசாங்கம் ஆகும். சமூக ஒப்பந்தம் செய்யப்படும்போது அரசாங்கம் அவ்வொப்பந்தத்தோடு எவ்வகையிலும் தொடர்புடையது அன்று. ஓர் அரசாங்கம் ஏற்படுத்தப்படுதல் வேண்டுமென்று இறைமையுடைய சமூகம் ஒரு சட்டத்தைச் செய்ய, அச்சட்டத்தின்படி ஆட்சியாளர்களை அமர்த்தி, அச்சட்டத்தை நிறைவேற்றும்போது அரசாங்கம் தோன்றுகிறது.

மதிப்பீடு: உரூசோவின் அரசியற் கோட்பாடுகளுள் பாராட்டத்தக்கவையும் குறைபாடுள்ளவையும் கலந்தே காணப்படுகின்றன. எதேச்சாதிகார முடியாட்சியையும் செல்வராட்சியையும் ஒழித்த பிரஞ்சுப்புரட்சிக்குச் சுதந்திரம், சமத்துவம் என்ற அரிய கருத்துகளைக் கொடுத்த உரூசோவின் அரசியற் கோட்பாடு பாராட்டத்தக்கதாகும். சட்டத்தின் அடிப்படையில் அரசாங்கம் அமைக்கப்பட்டு, அது இறைமையுடைய சமூகத்தின் கருத்தையே சட்ட வடிவத்தில் நிறைவேற்றுகிறது என்ற உரூசோவின் கோட்பாடு இக்காலக் குடியாட்சி அரசாங்கத்தின் ஆதாரக்கோட்பாடு ஆகும். ‘மக்களே இயற்கையில் சுதந்திரத்தோடும் சமத்துவத்தோடும் இருப்பவர்கள்; அரசாங்கத்தின் உரிமைகளெல்லாம் மக்களுடைய விருப்பத்தால் செய்யப்பட்ட ஓர் ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே அமைந்துள்ளன; அரசுக்கு ஆதாரமாக அமைந்திருப்பது மக்களுடையவிருப்பமே (Will) தவிர வல்லந்தம் (Force) அன்று ; அரசாங்கம் ஆளப்

படுவோரின் ஒப்புதலையே சார்ந்துள்ளது. நியாய மாகப் பார்க்கும்போது, சட்டம் இயற்றும் அதிகாரத் தைப் பெற்றிருப்பது இறைமையுடைய சமூகம் ஒன்று தான்.' இந்தக் கருத்துகளே உரூசோவை இக்காலக் குடியாட்சிக்கு அடித்தளம் அமைத்தவராகக் காட்டு கின்றன. சுவிட்சர்லாந்து நாட்டில் பரவலாகவும், மற்றுச்சில நாடுகளில் ஓரளவிலும் நடைமுறையிலிருக் கும் நேர்முகக் குடியாட்சி முறைகளான குடியொப்பம் (Referendum), மக்கள் தொடக்கம் (Initiative) முதலியவை உரூசோவின் குடியாட்சிக் கோட்பாடு களுள் ஆதாரம் உடையவை ஆகும்.

இத்தகைய சிறப்புகளுடைய உரூசோவின் அரசியற்கோட்பாடுகளில் முரண்பாடுகளும் குறை களும் காணப்படுகின்றன. இவர்கூறும் இறைமை யுடைய பொதுநல விருப்பமானது அதிகாரக் குவிப் புக்கும் எதேச்சாதிகாரத்துக்கும் பெரும்பான்மை யாளரின் சருவாதிகாரத்துக்கும் வழிவகுக்கிறது. சமூகத்தின் விருப்பமானது, பொதுநலனுக்கு உகந்த தாகவே எப்போதும் இருக்குமென்ற உறுதிப்பாடு இல்லை. பொதுநல விருப்பம் என்பதற்கும், யாவ ருடைய மொத்தமான விருப்பம் என்பதற்குமிடையே வேறுபாடு காண்பதரிது என்று உரூசோவே ஒப்புக் கொள்ளுகிறார். மேலும், இவர் விளக்கம் தரும் சமூக ஒப்பந்தக்கோட்பாட்டின் கூறுகளான இயற்கை நிலை, ஒப்பந்தம் முதலியவற்றுக்கெல்லாம் வரலாற்றில் சான்றுகளே இல்லை. அரசு என்பதே ஒப்பந்தத்தின் வாயிலாகத்தான் தோன்றிற்று என்றால், அவ்வொப் பந்தத்தைச் செய்த மக்களுக்கு அரசைப் பற்றிய ஒரு கருத்தும், அரசைப் பற்றிய செயலறிவும் (அனுபவ மும்) இருந்திருத்தல்வேண்டும். அப்படியாயின் அவர் கள் ஏன் ஒப்பந்தம் செய்தல்வேண்டுமென்ற கேள்வி யும் எழுகிறது. ஆகையால், தருக்க வகையாகப் பார்க்கும்போதும் முரண்பாடுகள் காணப்படுகின்றன. இவர் இயற்கைநிலை என்ற கற்பனையை ஒரு கருது கோளாக வைத்தே தமது கோட்பாட்டை விளக்கு தலால், இவரை 'இயற்கையின் குழந்தை' (Nature's Child) என்றும், முரண்பாடுகளும் தெளிவின்மையும் இவருடைய கோட்பாடுகளில் காணப்படுவதால், இவரை ஒரு 'சித்தசுவாதீனமற்ற சாக்ரட்டிசு' (Insane Socrates) என்றும், 'நாடோடித் தத்துவஞானி' (Vagabond Philosopher) என்றும் இகழ்ந்துரைப்பர். எனினும், தன்னலமற்ற, பொதுநல நோக்குடைய ஒரு சிறந்த சமூகத்தையே தமது அரசியற்கோட் பாட்டின் மையக்கருத்தாக இவர் சுட்டிக்காட்டுவது பாராட்டத்தக்கதாகும். பா. சு.

**கல்விக் கொள்கை:** உரூசோ பிரெஞ்சு நாட்டின் தத்துவ அறிஞர். இவர் எழுதிய 'எமிலி' (Emile) என்னும் நூல் தான், இவரை ஒரு பெரிய கல்வியாள ராக உலகுக்கு உணர்த்தியது. இந்நூலில், இயற்கை முதற் கொள்கை (Naturalism) வழியே கல்வியளிக் கும் பாங்கினை இவர் விவரித்துள்ளார். இதில் 'எமிலி' என்னும் பையனுக்கு, ஓர் ஆசிரியர் எவ்வா றெல்லாம் கல்வி புகட்டுகிறார் என்பதைத்தான் உரூசோ ஒரு கதை போல் விவரித்துள்ளார். எமிலியின் குழந்தைப் பருவம், இளமைப் பருவம், குமரப் பருவம் ஆகியவற்றில் எவ்வகையான கல்வி வழங்கப்படுகிறது என்பதையும் உரூசோ விவரித்துள்ளார். உரூசோவின் கருத்தின்படி, ஒவ்வொரு குழந்தைக்கும் இயற்கையே தாயும் பாதுகாப்பாளரும் ஆகும். மேலும், ஆசிரியர் குழந்தைகளுக்குக் கல்வி கற்பிப்பது என்பதைவிட நெறிப்படுத்தி வழிகாட்டுதலே சிறந்தது என்று உரூசோ கூறியுள்ளார். ஒவ்வொருவரின் இயற்கை யான உள்ளுணர்ச்சிகளும் மனநிலைகளும் பாட நூல் களிலிருந்து படித்து உணர்வதை விட இயற்கை யோடு இயையும் போதுதான் முழுநிறைவடை கின்றன என்கிறார் உரூசோ.

'இயற்கையின் கையிலிருந்து பெறும் ஒவ்வொன் றும் நல்லதாக அமைகிறது. ஆனால், அது மனிதன் கையை அடையும் பொழுது, அதன் தரம் குறைகிறது. அதனால், குழந்தை சமுதாயத்தினின்றும் பிரிந்து, இயற்கையுடன் தொடர்பு கொள்ளுதல் வேண்டும்' என்று உரூசோ குறிப்பிட்டுள்ளார்.

இயற்கை என்பது குழந்தையின் உள்ளுணர்வு களையும் இயற்கையாயமையும் திறன்களையும் குறிக் கும். அது, இயற்கையான தீர்ப்புகள், மனவெழுச்சி கள், இயல்பான உணர்வுகள் எனப் பொருள்படும். இவற்றின் வளர்ச்சிக்கு அடிப்படையாகக் கல்வி இருத்தல் வேண்டும்.

உரூசோ மனித இனத்தைச் சமுதாயத்திலிருந்து பிரித்துப் பேசுகிறார். இவர் மனிதனையும் குடி மகனையும் வேறுபடுத்திக் கூறுகிறார். உரூசோ கடந்து வந்த சமுதாயங்கள் யாவும் ஊழல் நிறைந்தனவாகக் காணப்பட்டன. அதனால்,அப்படிப் பட்ட சமுதாயங்களிலிருந்து உருவாகும் மனிதர் களும், செயற்கையான தொன்முறைகளையுடைய சமுதாயத்திலிருந்து பிரிக்கப்பட்டு, இயற்கையினால் பயிற்றுவிக்கப்பட வேண்டும் என வலியுறுத்துகிறார். அதனால்தான் 'நகரங்கள் மனித இனத்தின் கல் லறை' என அவர் மொழிந்தார்.

உரூசோவின் கொள்கையின்படி மாணவனிடம் பயில்வதற்கு ஆவலை உண்டுபண்ணுவதே ஆசிரியரின் வேலை. ஒவ்வொரு மாணவனும் அவனவனுடைய தனித்தன்மையுடன் இருக்கிறான். ஆகையால், ஒரே

சீராக அவர்களை நடத்த இயலாது. அப்படிச் செய்ய முயன்றால், அது சுவையற்ற ஒரே சீரான அமைப் பாக அமையும். அதனால், வெவ்வேறு குழந்தை களுக்குத் தகுந்த பல்வேறு முறைகளைக் கையாள வேண்டுமென உரூசோ கூறுகிறார்.

உரூசோ, 'மனிதன் அமைத்துத் தரும் பாடங்கள் முழுமை பெறாதவை' என்கிறார். மேலுமவர் 'குழந்தைகள் மனிதர்களாகுமுன் குழந்தைகளாகவே இருக்க வேண்டும்' எனவும் மொழிகிறார். குழந்தை கள் குழந்தைகளாகவே நடத்தப்பட வேண்டும். அவர்களை முதியவர்களைப் போல் நடத்தக் கூடாது என்பதும் இவர்கருத்து. இவர் கொள்கைப்படி ஒவ் வொரு நேரமும் குழந்தைகளுக்கு மகிழ்ச்சியை விளை விக்கக்கூடிய, அல்லது தூண்டக் கூடிய கல்வி முறையாக இருத்தல் வேண்டும்.

இளங்குழந்தைப் பருவத்துப் (5 வயது வரை) பிள்ளைகளுக்கு உடற் பயிற்சியைக் (Physical Education) கற்றுத் தர வேண்டும் என்றும், குழந்தை யின் இயல்பான குறைகளை நீக்க வேண்டியது இப் பருவத்தில்தான் என்றும் உரூசோ விவரிக்கிறார். இப்பருவத்தில் குழந்தையின் தாயே இயற்கையான செவிலித் தாயும், தந்தையே இயற்கையான ஆசிரியரும் ஆவர்.

'கல்வி சீரிய பண்புகளைக் கற்றுத் தருவதில்லை; ஆனால், தீய ஒழுக்கத்திலிருந்து பாதுகாக்கிறது. இது சத்தியத்தைப் புகட்டுவதில்லை; ஆனால், தவறு செய்வதிலிருந்து தப்புவிக்கிறது' என உரூசோ கூறு கிறார். 'நேரத்தைச் சேமிக்காதே; ஆனால், செல வழித்து விடு' என்று கூறும் உரூசோ குழந்தைப் பருவத்தில் மிகுதியான நேரம் செலவிடப்பட வேண் டும் என்கிறார். 'வாசிப்பது குழந்தைப் பருவத்திற் குரிய சாபம்' எனக்கூறும் உரூசோ, புத்தகங்களை வெறுக்கிறார். இவர் புத்தகங்கள் மூலம் அறிவைக் கொடுக்கச் சொல்லவில்லை; குழந்தைகள் அவர்களின் முயற்சியாலே சிந்திக்க உதவி செய்ய வேண்டும் என்கிறார். 'பள்ளிக் குழந்தைகளிடமிருந்து கல்வி நூல்களைப் பிரிப்பதால் அவர்களுடைய துன்பங் களை நீக்கலாம்' என்று கூறுகிறார் உரூசோ.

'நாம் வெறுக்கும் பாடத்திலிருந்து ஒன்றும் கற்றுக் கொள்வதில்லை' என்று கூறும் உரூசோ, எழுத்து மூலமான கல்வியின் (Verbal Lessons) பலன் களில் நம்பிக்கை அற்றவர். அவர், மொழிகளைக் கற்பது கல்வி அமைப்பில் தேவையற்ற ஒன்று என் கிறார். குழந்தைப் பருவத்தில் பூகோளம், வரலாறு ஆகியவற்றைப் பயிற்றுவிப்பது தேவையற்றதே. ஏனெனில், இவ்வயதில் அதன் காரண விளைவுகளை (Causes & Consequences) அவர்களால் ஒப்பிட்டுப் பார்க்க இயலாது. அதனால், இப்பருவத்தில் வரையறுக்கப்பட்ட பாடத்திட்டம் என்று ஒன்றும் சொல்லப்படவில்லை. மேலும், 'பாடங்களை வைக்காததால், நாம் வருத்தத்தை ஏற்படுத்தும் மூல காரணத்தை அகற்றுகிறோம். அதனால் மாணாக்கர் களை மகிழ்விக்கிறோம்' என்கிறார்.

'குழந்தைகள் ஒரு பழக்கத்தை உண்டுபண்ணிக் கொள்ள வேண்டும். அதுதான் பழக்கங்களை ஏற் படுத்திக் கொள்ளாமல் இருக்கும் பழக்கமாகும்'. குழந்தை பழக்கவழக்கங்களுக்கு (Habits) அடிமை ஆவதை உரூசோ விரும்பவில்லை. குழந்தை கட்டுப் பாட்டுக்குள்ளாகாமல் சுதந்திரமாக வளர வேண்டும்.

குழந்தைகளுக்கு நீதி நெறிகள் சொல்லிக் கொடுக்க வேண்டியதில்லை. அவர்கள் கற்றுக் கொள்ள வேண்டிய நீதி நெறி ஒன்றே. அது 'பிறரை நோகச் செய்யாமல் நடந்து கொள்வதே' என்பார் உரூசோ.

ஒவ்வொரு குழந்தையும் சமூகத்திலிருந்து தள்ளியே பயிற்றுவிக்கப்பட வேண்டும். நகரங்கள் மனித இனத்தின் கல்லறை என்பதால், குழந்தை விலகியிருந்து சமூகத்தில் காணப்படும் நிறைகுறை களைக் காணுதல் வேண்டும். அப்படிச் செய்தால் தான் குழந்தை தன்னைப் பாதுகாத்துக் கொள்ள இயலும்.

இயற்கையான விளைவுகள், குழந்தைக்குப் பல பாடங்களைப் பயிற்றுவிக்கும். அதனால், ஒருவிதக் கட்டுப்பாட்டை வலியுறுத்தத் தேவையில்லை. குழந்தைகள் தாங்கள் செய்கின்ற காரியங்களின் விளைவுகளை அவர்களே அனுபவிக்க வேண்டும். அப்படிச் செய்வதால் அவர்கள் தாங்களாகவே கற்றுக் கொள்கிறார்கள். பெரியவர்கள் தலையிட்டுக் குழந்தைகளைப் பாதுகாக்கவோ தண்டனை கொடுக் கவோ வேண்டியதில்லை.

உடற்பயிற்சி, புலன்களுக்குப் பயிற்சி, வாழ்க்கை யில் அனுபவங்களை அடைதல் ஆகியவற்றைக் குழந்தைகளுக்கு வழங்குவதில் உரூசோ உடன்படு கிறார். உடற்பயிற்சியால் குழந்தைகளின் உடல் வலுவடைகிறது. எளிமையான உணவுப் பழக்க வழக்கங்கள், திறந்த வெளிப்பயிற்சி ஆகியவற்றை உரூசோ ஆதரிக்கிறார். புலன்களின் பயிற்சி, அறிவு பெறுதற்குரிய அரிய வழியாகும். உணர்வதும் காண் பதும் கற்பதில் மிகவும் வலியுறுத்தப்படுகின்றன. உணர்ந்து அனுபவத்தில் கற்பது பசுமரத்து ஆணி

போல நிற்கும் என்கிறார். அறிவியல் கற்பதால், தவறான எண்ணங்கள் விலக வழியுண்டு. 'எமிலி ஒரு மணிநேரம் வேலை செய்து கற்றுக் கொள்வது அவன் ஒரு நாள் முழுவதும் வாய்மொழியாகக் கற்றுக் கொள்வதைவிட நீண்ட நாள் இருக்கும்' என்று கூறு கிறார். அவர் செயல்முறைக் கல்விக்கு (Active Method) முதலிடம் தருகிறார். காளைப்பருவமே (15-20 வயது) கற்பிக்கக் கூடிய சரியான பருவம். இப் பருவத்தில்தான் உண்மையான கல்வி தொடங்கப்பட வேண்டும் என்கிறார். இப்பருவத்தில் நீதிநெறிகள், சமூகப்பயிற்சி ஆகியவற்றை மாணவருக்கு அறிமுகப் படுத்தப் பரிந்துரைக்கிறார். எஸ்.த.

துணை நூல்:

**Veughan, C.E.,** Political Writings of Jean Jacques Rousseau, 2 vols, Combridge, 1915.

**உருடால்பு** (கி.பி. 1858-1889) என்பார் ஆசுத்திரியா-அங்கேரியைச் சார்ந்த பட்டத்து இளவர சர்; திறமையாளர். இவர் பேரரசர் முதலாம் பிரான் சிசு சோசப்பு (Emperor Francis Joseph I) என்பாருக் கும் பவேரியாவைச் சார்ந்த எலிசபெத்து என்பாருக் கும் மகனாக கி.பி. 1858-இல் பிறந்தார். வியன்னா (Vienna) பட்டத்து இளவரசர் என்னும் தகுதிக்கேற்ப இவர் இராணுவப் பயிற்சியை உள்ளிட்ட பள்ளிக் கல்வியைத் தொடர்ந்தார். பாடங் கற்பித்த நல்லாசிரியர்கள் இவருக்கு இயற்கை அறிவியலிலும், பொருளியல் போன்ற பாடங்களிலும் மிகுந்த நாட்டங் கொள்ளும்படி தூண்டினார்கள். மொழிகளைக் கற் கும் மனப் பக்குவத்தை வளர்த்திருந்த இவர் பல நாடுகளுக்கும் பயணம் செய்தார். 'கீழைநாட்டுப் பயணங்கள்' (Travels in the East) என்னும் இவருடைய நூலுக்கு வியன்னாப் பல்கலைக் கழகம் மதிப்பியல் முனைவர் பட்டம் கொடுத்துப் பாராட்டி யது. ஆப்சுபர்கு மரபினரின் இன அமைப்பு, வரலாறு குறித்துப் பல தொகுதிகளில் எழுதும் பணியைத் திட்டமிடும் நிகழ்ச்சியிலும் இவர் பங்கு பெற்றார்.

உருடால்பு கிளர்ச்சி செய்யும் உணர்ச்சி கொண்ட வர்; சமயக் கோட்பாடுகளில் சுதந்திரச் சிந்தனை யாளர். அரண்மனை நடவடிக்கைகளை இவர் பெரி தும் வெறுத்தார். தம் பேச்சிலும் எழுத்திலும் உயர் குடிச் சமுதாயத்தைக் கடுமையாகக் குறை கூறினார். இவர் ஒரு முற்போக்குவாதி; பிரான்சு நாட்டின் மீது நட்புறவு கொண்டவர். ஆசுத்திரிய-அங்கேரியப் பேரரசினால் செக்கு (Czech), குரோட்டுச் (Croat) சிறுபான்மை மக்கள் நன்கு நடத்தப்படவேண்டு மென்னும் கருத்துக் கொண்டவர். அதேபோல், ஏழைக் குடியானவர்கள் மீதும் இரக்கவுணர்வு கொண்டவர். கிழக்கு ஐரோப்பாவில் மேலை நாகரிகத்தைப் பரப்பும் பொறுப்பு அரச மரபுக்குண்டு என்பது இவர்தம் ஆழ்ந்த நம்பிக்கை. பழைய மரபுகளில் ஆழ்ந்த பற்றுக் கொண்டிருந்த இவர்தம் தந்தையார், உருடால்பின் மரபுக்கெதிரான தனிப்பட்ட வாழ்க்கையைச் சாடி னார். எனவே, பொதுப் பணிகளில் இவருக்குப் போதுமான வாய்ப்புகளை அரசர் நல்கவில்லை. தம் தந்தையாரின் நோக்கத்தைக் கண்டு உணர்ச்சிவயப் பட்ட இவர் சொல்லொணா வருத்தமுற்றார்.

உருடால்பு (Rudholph of Hapsburg) கி.பி. 1881-ஆம் ஆண்டில் பெல்சிய நாட்டைச் சார்ந்த இசுடீபெனி (Stephanie) என்பவளைத் திருமணம் செய்து கொண்டார். ஆனால், இவ்விருவரின் மண வாழ்க்கை இன்பம் பயப்பதாய் இருக்கவில்லை.

உருடால்பு[2] (கி.பி. 1552-1612): இவர் இரண் டாம் உருடால்பு ஆவார். இவர் புனித உரோமானியப் பேரரசர். இவர் இனிமையான பழக்க வழக்கங்களைக் கொண்டவர்; இலக்கிய ஆர்வம் மிக்கவர். கிறித்தவ மறுப்புரையாளர்களைக் (Protestants) கட்டுப்படுத்த இவர் பல கட்டளைகளைப் பிறப்பித்தபோது, சில மாவட்டங்களில் உள்நாட்டுப் போர் மூண்டது. பேரரசின் மேற்குப் பகுதியினர் அரசரின் திட்டங் களைச் செயற்பட முடியாமல் தடுத்தனர். பின்னர், இவர்கள் தம் உரிமைகளைக் காக்க உடன்படிக்கை செய்து கொண்டனர். எனினும், ஆசுத்திரியா, பொகீமியா, அங்கேரி போன்ற பகுதிகளில் இவர் களின் சமயம் ஒடுக்கப்பட்டது. இத்தருணத்தில் துருக்கியர்கள் பேரரசின் கிழக்குப் பகுதியைத் தொடர்ந்து தாக்கி வந்தனர். அவர்களின் தலை வரான முகமது என்பான் கி.பி. 1596-ஆம் ஆண்டில் அங்கேரியின் மீது படையெடுத்து எர்லா (Erlau) என் னும் ஊரைக் கைப்பற்றிக்கொண்டு ஆசுத்திரியர் களையும் தோற்கடித்தான். ஆனால், அதன் பின்னர் முகமது தன் படையெடுப்பை நிறுத்திக் கொண்டான். உருடால்பின் சகோதரர் மத்தியாசு (Matthias) துருக்கியருடன் உடன்படிக்கை செய்து கொண்டு, அங்கேரியர்களை அமைதிப்படுத்திவிட்டுத் தம்மையே அங்கேரியின் அரசராகவும், ஆசுத்திரியா, மோரோ வியா பகுதிகளின் ஆளுநராகவும் அமர்த்தும்படி உருடால்பை வலியுறுத்தினார். வேறு வழியின்றி மத்தியாசுவை இவர் ஏற்றுக் கொண்டபோது ஆசுத் திரியாவில் சமயச் சலுகைகளும் உறுதிப்படுத்தப்பட் டன. உருடால்பு கி.பி. 1611-ஆம் ஆண்டில் பதவியி லிருந்து இறக்கப்பட்டு மத்தியாசு அரசரானார். கெப்லர் (Keplar), தைச்சோ பிராகி (Tycho Brahe)

போன்ற வானநூல் ஆய்வாளர்களைப் போற்றிய புரவலர் இவர். இவ்விரு வானநூல் அறிஞர்களின் முடிவுகள் (Calculations) உருடால்பின் பட்டியல்கள் (Rudolphine Tables) எனப்படுகின்றன. இவர் கி.பி. 1612–ஆம் ஆண்டு பிரேகு (Prague) நகரில் காலமானார். இரா.அ.

**உருடால்பு ஏரி** உலக நடுக்கோட்டிற்கு அண்மையில், நடு ஆப்பிரிக்காவிலுள்ள கெனியாவின் வடமேற்குப் பகுதியில் அமைந்துள்ளது. இந்த ஏரி நீண்டு குறுகலானது. இதன் பரப்பளவு ஏறத்தாழ 6475 ச.கி.மீ. ஆகும். எத்தியோப்பியாவின் தென் எல்லையை இந்த ஏரி தொட்டு நிற்கிறது. இந்த ஏரியைச் சுற்றியுள்ள பகுதி வறண்டுள்ளது. ஆசுத்திரிய ஆய்வாளர் இதனை கி.பி. 1888–ஆம் ஆண்டில் கண்டுபிடித்தனர். அதன் பின்னரே இவ்வேரியை ஐரோப்பியர் அறியலாயினர். கவுண்டு பால் தெலேக்கி (Count Paul Teleki) என்பாரே இவ்வாய்வுப் பயணத்திற்குத் தலைமையேற்றவர். ஆசுத்திரியாவின் இளவரசர் உருடால்பு என்பாரின் பெயரால் இந்த ஏரிக்கு உருடால்பு ஏரி (Lake Rudolf) என்னும் பெயர் வழங்கலாயிற்று.

இந்த ஏரியைச் சுற்றிலும் எரிமலைகள் அமைந்துள்ளன. இதன் நீர் வெளியே பாய்வதற்கான வாய்க்கால்கள் இல்லாமையால், இது உப்புநீர் ஏரியாக உருமாறி வருகிறது. இரா.அ.

**உருபர்** பஞ்சாபு மாநிலத்தில் அம்பாலா மாவட்டத்தில் சிந்து ஆற்றின் துணையாறான சட்லசின் இடக்கரையில் அமைந்துள்ள பேரூர். இவ்வூர் சிந்துச்சமவெளிநாகரிகத்தின் சின்னங்களைக் கொண்டு விளங்குகிறது. உருபரில் (Rupar) இந்தியத் தொல்லியல் பரப்பாய்வுத் துறையினர் ஒய்.டி.சர்மா என்பவரின் தலைமையில் 1953–ஆம் ஆண்டு முதல் 1955–ஆம் ஆண்டுவரை அகழாய்வினை மேற்கொண்டனர். ஏறக்குறைய 21 மீ. உயரம் கொண்ட பழம் மண்மேட்டில் அகழாய்வுகள் நடத்தப்பட்டன. சிந்துச்சமவெளி நாகரிகம் முதல் இக்காலம் வரை ஆறு பண்பாட்டுக் காலத் தொன்மைக் கூறுகள் இவ்வகழாய்வுகளில் கண்டுபிடிக்கப்பட்டன. இதில் முதல் இருவகைக் கூறுகள் வரலாற்றுத் தொடக்க (Proto-History) காலத்தைச் சார்ந்தவை.

முதற்காலம்: (கி.மு.2000–1400) சிந்துச்சமவெளி நாகரிகத்தை எடுத்துணர்த்தும் வகையில் சிந்துச்சமவெளி எழுத்துகளுடன் கூடிய முத்திரைகள், முத்திரையிடப்பட்ட சுடுமண்ணால் செய்யப்பட்ட விளக்கு,'செர்ட்டு'



உருபர்–புதைக்கப்பட்ட மனிதனின் எலும்புக்கூடும் ஈமப் பொருள்களும்

வகைக் கற்களால் செய்யப்பட்ட இருபக்க முனைக் கருவிகள், செம்பினால் செய்யப்பட்ட பாத்திரங்கள் மற்றும் கருவிகள், சுடுமண்ணால் செய்யப்பட்ட முக்கோண வடிவ வில்லைகள் (Terracotta Cakes), மணிகள், 'பியான்சு' மணி வகையில் செய்யப்பட்ட வளையல்கள் முதற்கால மண்ணடுக்குகளில் கிடைத்தன. இவை தவிர வீடுகள் இருந்தமைக்கான சான்றுகளும் கிட்டியுள்ளன. இவ்வீடுகள் கூழாங்கற்கள், செங்கற்கள், சுண்ணாம்புக்கட்டிகள் முதலியவற்றால் கட்டப்பட்டவை. செங்கற்களின் வடிவமைப்பு அரப்பா, மொகஞ்சதாரோ, காலிபங்கன் போன்ற இடங்களில் கிட்டிய செங்கற்களை ஒத்துள்ளன. பொதுவாக வீடுகள் கற்களால் கட்டப்பட்ட மேடைகளின் மீது எழுப்பப்பட்டுள்ளன. இது இங்கு அடிக்கடி வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதைக் காட்டுகிறது.

இறந்தவர்களைக் குழிகளில் புதைத்தனர். பிணத்தின் தலைப்பாகம் வடபுறத்தில் வைக்கப்பட்டு அதனுடன் ஈமப்பொருள்கள் முதலியனவும் வைக்கப்பட்டன. இந்நாகரிகம் ஏறக்குறைய கி.மு. 2000–1400 முதல் வழக்கில் இருந்தது. மீண்டும் இங்கு ஏறக்குறைய கி.மு. 1000–இல் புதிய குடியேற்றம் ஏற்பட்டது.

இரண்டாம் காலம் (கி.மு. 1000–700): வண்ணம் தீட்டப்பெற்ற சாம்பல் நிற மட்கலன்களைப் பயன்படுத்திய மக்கள் இக்காலத்தில் இங்கு வாழ்ந்தனர். இவ்வண்ணப் பூச்சுப் பெற்ற சாம்பல் நிற ஓடுகள், சுடுமண்ணால் செய்யப்பட்ட மணிகள், வளையல்கள், அரிய மணிக்கற்கள், எலும்பு முனைகள், தந்தத்தில் செய்யப்பட்ட அஞ்சனம் தீட்டும் குச்சிகள், செம்புக் கருவிகள் ஆகியவை இக்கால மண்ணடுக்குகளில் கிடைத்தன. சிந்து வெளி மக்கள் கண்ணாடியை அறிந்திலர். ஆனால், இக்காலப் பண்பாட்டு மக்கள் அதனை அறிந்திருந்தனர். இம்மக்களே கண்ணாடியை அறிமுகப்படுத்தியிருக்கக்கூடும்.

மூன்றாம் காலம் (கி.மு. 600–200): வடஇந்தியாவில், குறிப்பாக கங்கை வெளிப் பகுதியில் சிறப்புடன் ஒரு வகையான கறுப்பு வண்ணம் தீட்டப்பட்ட மெருகூட்டிய மட்கலன்களைப் (N.B.P.) பயன்படுத்திய மக்கள் இங்குச் சிறு இடைவெளிக்குப் பின் ஏறக்குறைய கி.மு. 600–இல் குடியேறியிருக்க வேண்டும். இக்கால கட்டத்தில் (கி.மு. 600–200) முத்திரையிடப்பட்ட நாணயங்களும் முத்திரையிடப்படாத நாணயங்களும் இங்குக் கிட்டின. இவை தவிர செம்பு மற்றும் இரும்பினால் ஆன கருவிகளும் மௌரியர் காலத்தைச் சார்ந்த பிராமி எழுத்துடன் கூடிய தந்த முத்திரைகளும் கிடைத்தன. மேலும், மௌரியர் காலத்திற்கே உரித்தான மெருகூட்டிய கல்லால் செய்யப்பட்ட சிறுவில்லை ஒன்றும் அகழாய்வில் கிட்டியது. இச் சிறு வில்லையில் வளமைக் கடவுள் உருவம் (Fertility Cult) ஒன்று பொறிக்கப்பட்டுள்ளது. இதைப் போன்ற சிறு வில்லைகள் தட்சசீலத்திலும் பாட்னாவிலும் கிட்டின. வீடுகள் சுட்ட செங்கற்களால் கட்டப்பட்டுச் சுண்ணாம்புப் பூச்சுப் பெற்று விளங்கின. சுட்ட செங்கற்களால் எழுப்பப்பட்ட குளம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. உறைக் கிணறுகளும் கண்டுபிடிக்கப்பட்டன.

நான்காம் காலம் (கி.மு. 200–கி.பி.500): இக்கால கட்டத்தில் கங்கர், குசானர், குப்தர் கால மக்கள் இங்கு வாழ்ந்தனர். இக்கால கட்டத்தில் குசானர், குப்தர் காலத்தைச் சார்ந்த செப்புக் காசுகள் ஓர் இடத்தில் புதையலாகக் கிட்டின. சுடுமண் பொம்மைகளும் முத்திரைகளும் இங்குக் கிடைத்தன.

ஐந்தாம் காலம் ( கி.பி. 500–800): இக்காலத்தில் மிகிரகுலர் தோரமானர், ஊணஅரசர்களின் நாணயங்கள் இங்குக் கிடைத்தன.

ஆறாம் காலம்: சிறிது இடைவெளிக்குப் பின் ஆறாம் கால கட்டத்தில் மொகலாயர் காலத்தைச் சேர்ந்த இலகோரிச்(Lakhauri) செங்கற்களும் முகமதியர் கால நாணயங்களும் கிடைத்தன. கே.இரா.

***உரூபர்ட்சுலாந்து*** என்பது கனடா நாட்டில் அட்சன் விரிகுடாவை வளப்படுத்தும் ஆறுகள் பாயும் பகுதியைக் குறிப்பதாகும். உரூபர்ட்டு இளவரசரின் (Rupert, Prince) நினைவாக இப்பகுதிக்கு உரூபர்ட்சுலாந்து (Rupertsland) எனப் பெயரிடப்பட்டுள்ளது. உரூபர்ட்டு அட்சன் விரிகுடா வணிகக் குழுவின் (Hudson's Bay Company) முதல் ஆளுநராக அமர்த்தப் பெற்றிருந்தார். இப்பகுதிக்கான பட்டயத்தை இங்கிலாந்து நாட்டை ஆண்ட இசுடுவேர்ட்டு மரபின் அரசரான இரண்டாம் சார்லசு (Charles II) வழங்கினார். ஆனால் கி.பி. 1870-இல் இவ்வணிகக் குழுவின் ஆதிக்கம் முடிவுற்று, உரூபர்ட்சுலாந்து கனடாவின் பகுதியாக்கப் பெற்றது. கனடா நாட்டின் வடமேற்கு மாநிலத்தை முதலில் உரூபர்ட்சுலாந்து மற்றும் வடமேற்குப்பகுதி என்றே அழைத்தனர். இன்று இதனை வடமேற்குப் பகுதிகள் மாநிலம் (North West Territories) என்று கூறுவர். இரா.அ.

***உரூபர்ட்டு இளவரசர்* (கி.பி. 1619–1692)** பிரேகு (Prague) நகரில் கி.பி. 1619–இல் பிறந்தார். இவர் பொகீமியா நாட்டுப் பட்டத்து அரசராயிருந்த

ஐந்தாம் பிரடரிக்குக்கும் (Frederick V) இங்கிலாந்தை ஆண்ட இசுடுவர்ட்டு மரபின் முதல் அரசரான முதலாம் சேம்சு (James I) மன்னரின் மகள் எலிசபெத்துக்கும் பிறந்தவர். இவர் பொகீமியாவில் ஏற்பட்ட போரின்போது உயிருக்கஞ்சி, தம் பெற்றோர்களுடன் தப்பியோடி ஆலந்து (Holland) நாட்டில் குடியேறினார். உருபர்ட்டு (Rupert, Prince) கி.பி. 1636-இல் இங்கிலாந்து சென்றார். அங்குத் தம் தாய்மாமன் சார்லசு மன்னரால் பாராட்டப்பெற்றார்.

இங்கிலாந்தில் அரசருக்கும் பாராளுமன்றத்திற்கும் இடையே எழுந்த கருத்து வேறுபாடு உள்நாட்டுப் போரில் முடிவுற்றது. அப்போரில் உருபர்ட்டு அரசரால் குதிரைப்படைத் தலைவராக அமர்த்தப்பட்டார். இவருடைய தொடக்க காலப் போர்கள் இவருக்குப் பெரும் வெற்றியைக் கொடுத்தன. இதனால் இவர் அரசரின் அன்புக்கு உரியவரானார். இவர் கி.பி. 1643-இல் பிரிசுட்டல் நகரையும், அடுத்தாண்டில் இலிவர்ப்பூல் நகரையும் கைப்பற்றினார். அரசர் இவருக்குப் பல விருதுகளை வழங்கினார். அவற்றுள் ஒன்று கம்பர்லாந்து கோமான் (Cumberland Duke) என்பது.

இவர் மார்சுட்டன் மூர் (Marston Moor) என்னும் போர்க்களத்திலும், நேசபி (Naseby) என்னும் போர்க்களத்திலும் படுதோல்வியுற்றபோது அரசர் கட்சிக்குத் தளர்வு ஏற்பட்டது. இவர் அரசர் பாராளுமன்றத்தின் அரசியல் தீர்வினை ஏற்க வேண்டுமெனத் தூண்டியதோடு, இங்கிலாந்தை விட்டுப் பிரான்சுக்குச் சென்றார்.

உள்நாட்டுப் போருக்குப் பின்னர் உருபர்ட்டு மேற்கு இந்தியத் தீவுகளிலும், அசோர்சுத் (Azores) தீவிலும், ஏனைய இடங்களிலும் ஆங்கிலக் கலகக்காரர்களின் கப்பல்களை அரசருடைய கப்பல்கள் தாக்கியபோது, அரசரின் கப்பற்படைத் தளபதியாகப் பணியாற்றினார்.

உள்நாட்டுப் போரில் தோல்வியுற்ற இசுடுவர்ட்டு மரபினரின் ஆட்சி கி.பி. 1649-இல் விலக்கப்பட்டு, இங்கிலாந்தில் ஆலிவர் கிராம்வெல்(Oliver Cromwell) என்பாரின் பொதுநலக் குடியரசு அமைக்கப்பெற்றது. பதினோராண்டுகள் (1649-1660) நடைபெற்ற இவ்வாட்சியின்போது மட்டும் இங்கிலாந்தில் அரசு மரபினர் ஆட்சி நடைபெறவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. கிராம்வெல்லின் வழித் தோன்றல்களால் ஆட்சியைச் சரிவர நடத்த முடியவில்லை. எனவே மீண்டும் இசுடுவர்ட்டு மரபினரின் ஆட்சி அமையப் பெற்றது. வரலாற்றாசிரியர் இதனை மீட்சி (Restoration) என்பர். முதலாம் சார்லசு மன்னர் கழுவேற்றப்பட்டு கி.பி. 1649-இல் கொல்லப்பட்டார். அவர் தம் மகனான இரண்டாம் சார்லசு கி.பி. 1660-இல் மீண்டும் அரசராக்கப் பெற்று இசுடுவர்ட்டு மரபினரின் ஆட்சி தொடர்ந்தது. உருபர்ட்டு இரண்டாம் சார்லசு மன்னரின் ஆட்சியின்போது கடற்படைத் தலைவராக்கப்பட்டார். பின்னர் கி.பி. 1673-இல் கடற்படை அமைச்சராக்கப்பட்டார்.

உருபர்ட்டு இளவரசர் அறிவியலிலும் வேதியியலிலும் ஆர்வம் கொண்டு, புதுமுறை வெடிமருந்தையும் துப்பாக்கிகளை அடைக்கும் புதுமுறைகளையும் கண்டறிந்தார். அரசர் கழகம் (Royal Society) என்னும் இயக்கத்தை இவர் உருவாக்கினார். இவர் கி.பி. 1682-இல் இலண்டனில் காலமானார். இரா.அ.

**உருபன்சு, சர் பீட்டர் பால்** (கி.பி. 1577-1640) புகழ் பெற்ற பிளமிய (Flemish) ஓவியர். இவர் தலைசிறந்த கலைஞராகவும் அரசியல் வல்லுநராகவும் அறிஞராகவும் திகழ்ந்தார்.

உருபன்சு (Rubens, Peter Paul) வரலாற்று நிகழ்ச்சிகளையும் சமயத் தொடர்பான நிகழ்ச்சிகளையும் இயற்கைக் காட்சிகளையும் ஓவியமாகத் தீட்டினார். மேலும், அரசர்கள், தலைசிறந்த அரசியல் அறிஞர்கள், தம் குடும்பத்தினர் போன்றோர் உருவப் படங்களையும் இவர் ஓவியங்களாக வரைந்து புகழ் பெற்றார். இவர்தம் படங்களில் ஒரே படத்தில் பல உருவங்களைக் கொண்டவையே செயலாற்றல் நிறைந்தவை. கற்பனைத் திறனுக்கும் கட்டுக் கோப்பிற்கும் இவர் படங்கள் எடுத்துக்காட்டானவை.

அமேசான்களின் போர் (The Battle of Amazons), சிலுவையின் எழுச்சி (Elevation of the Cross), சிலுவையிலிருந்து இறக்கம் (Descent from the Cross), காதல் பூங்கா (Garden of Love) போன்றவை உருபன்சின் புகழ்பெற்ற படைப்புகளுள் சில.

உருபன்சு செருமனி நாட்டில் வெசுட்டுபேலியாவைச் (Westphalia) சேர்ந்த சீகன் (Siegen) என்னும் ஊரில் பிறந்தார். தம் தந்தையார் காலமானதும், இவர் தம் தாயுடன் ஆண்ட்வெர்ப்பு (Antwerp) நகரில் வாழ்ந்தார்.

உருபன்சு கி.பி. 1598-இல் ஓவியர் கழகத்தின் உறுப்பினரானார். பின்னர், இத்தாலி சென்று மாண்டுவா கோமகனிடம் பணியில் அமர்ந்து, பல ஓவியங்களைத் தீட்டினார். இவர் உரோமாபுரி, செனோவா (Genova), வெனிசு (Venice) போன்ற நகரங்களுக்குச் சென்று மறுமலர்ச்சிக்கால ஓவியர்களின் கலைச்செல்



உருபன்சு, சர் பீட்டர் பால்

வங்களின் தனிச்சிறப்புகளைக் கற்றுத் தெளிந்தபின், கி.பி. 1608-இல் ஆண்ட்வெர்ப்பிற்குத் திரும்பினார்.

உருபன்சு, இசுபெல்லா பிராண்டு (Isabella Brant) என்பவரை மணந்தார். இவர் இளவரசர் ஆல்பர்ட்டின் (Archduk Albert) அரண்மனை ஓவியராக அமர்த்தப்பட்டார். இக்காலத்தில் திருச்சபைக்கான பல பணிகளையும் இவர் மேற்கொண்டார். இவர் தாம் வாழ்ந்த பெரிய அரண்மனையில் பண்டைக் காலம் முதல் இக்காலம் வரையிலான உயர்ந்த ஓவியங்களைத் தொகுத்துவைத்து அலங்கரித்தார்.

பிரான்சு மன்னர் 13-ஆம் உலூயியின் தாயாரின் வாழ்வில் நிகழ்ந்த பல நிகழ்ச்சிகளை ஓவியமாக வரையப் பணிக்கப் பெற்றார். இவ்வோவியங்கள் பாரிசிலுள்ள இலக்சம்பர்கு மாளிகையில் உள்ள கலைக்கூடத்தில் காட்சிக்காக வைக்கப்பட்டன. இவர் இவ்வோவியங்களில் கிரேக்கப் புராணங்களில் வரும் சித்திரங்களையும் இணைத்து வரைந்தார்.

உருபன்சு சிறிது காலம் அரசியல் வல்லுநராகவும் பணியாற்றினார். இவர் இசுபெயின், இங்கிலாந்து போன்ற நாடுகளுக்குப் பயணம் சென்று, இடைக்கால அமைதியை அவ்விரு நாடுகளுக்குமிடையே நிலைநாட்ட முயன்றார். பன்மொழிப் புலவரான இவருக்கு இங்கிலாந்து மன்னர் முதலாம் சார்லசு (Charles I) விருது வழங்கிப் பாராட்டினார். கேம்பிரிட்சு பல்கலைக் கழகம் இவருக்கு மரியாதைப் பட்டம் கொடுத்துப் பாராட்டியது. அரசியற்பணி இவருக்கு மனநிறைவு அளிக்கவில்லை. எனவே, தம் இறுதி நாட்களை மீண்டும் ஆண்ட்வெர்ப்பிலேயே கழிக்க எண்ணி அங்குத் திரும்பினார். நோய்வாய்ப்பட்ட நிலையிலும் உருபன்சு ஓவியங்களைத் தீட்டி வந்தார். இவர் கி.பி. 1640-இல் காலமானார். இரா.அ.

**உரூபாவதி** என்பது தலைமைப் பாத்திரத்தைத் தலைப்பாகக் கொண்ட ஒரு தமிழ் நாடகம். பரிதிமாற் கலைஞர் என்ற வி.கோ. சூரிய நாராயண சாத்திரியார் இயற்றியது. இந்நாடகத்தை இவர் கி.பி. 1895-இல் வெளியிட்டபோது வீணர் பலர் கண்டனம் தெரிவித்தனர். நாடகத்தமிழ் வளரவேண்டும் என்ற கருத்தில் சாத்திரியார் முதன் முதலாக இயற்றிய நூலான இந்நாடகம் இரட்டைத்தலைப்புடையது. சாத்திரியார் குற்றம் குறை இருக்கக்கூடாது என்று கருதி எழுதிய தம் நாடகத்தில் குறைவந்துவிட்டதே என்று வருந்தி, அதன் இரண்டாம் பதிப்பில் (1902) சில திருத்தங்களைச் செய்து, எம்.எசு. பூரணலிங்கம் பிள்ளையின் முகவுரையுடன் வெளியிட்டுத் தாமே உரூபாவதி வேடமிட்டு நடித்தும் காட்டினார். உயரிய செந்தமிழ்நடை உடையது; கற்றவர் மட்டுமே கண்டு சுவைப்பதற்குரியது. பி.தெ.

**உரூர்** என்பது இரைன் ஆற்றின் துணை ஆறுகளுள் ஒன்று. ஐரோப்பாவில் மேற்குச் செருமனி நாட்டின் மேற்குப் பகுதியில் உரூர் (Ruhr) ஆறு பாய்கிறது. வட இரைன்-வெசுட்டுபேலியா (North Rhine-Westphalia) என்னும் மாநிலத்தில் பாயும் உரூர் ஆற்றின் பெயராலேயே இங்குள்ள புகழ் மிக்க பள்ளத்தாக்கை உரூர்ப் பள்ளத்தாக்கு (Ruhr Valley) என்பர். மேற்குச் செருமனியின் செல்வ வளம் மிக்க ஆலைகளும், நிலக்கரிச் சுரங்கங்களும் உரூர்ப் பள்ளத்தாக்கில் அமைந்துள்ளமை இதன் சிறப்புக்குக் காரணமாகும்.

சாயர்லாந்து மேட்டு நிலங்களில் (Sowerland Highlands)உள்ள விண்டர்பர்கு(Winterburg) நகருக்கு வடபால் கடல் மட்டத்தைவிட 600 மீ. உயர்ந்துள்ள மேட்டு நிலங்களிலிருந்து இந்த ஆறு தோன்றுகிறது. இது வடமேற்காகப் பாய்ந்து, ஆழ்ந்த காடுகளைக் கொண்ட பள்ளத்தாக்கின் வழியாக ஓடி, ஆற்றின் நீளத்தின் பாதி அளவில் மேற்குப் பக்கமாகத் திரும்பி உரூர் மாவட்டத்தில் பாய்ந்து, தியூசுபர்கு (Duisburg) என்னுமிடத்தில் இரைன் ஆற்றுடன் இணைகிறது. இது 4558 ச.கி.மீ. பரப்பிற்கு வடிகாலாகப் பயன்படுகிறது. வலப்பக்கத் துணை ஆறாக மோகினேயும்(Mohne) இடப்பக்கத் துணை ஆறுகளாக ஒன் (Honne), இலென் (Lenne) என்பனவும் இதனுடன் இணைகின்றன.

உரூர்ப் பள்ளத்தாக்கு அனைத்து வளங்களையும் கொண்ட பகுதியாகும். இங்கு நகர்ப்புறத் தொழிற்

சாலை வளாகங்கள் காணப்படுகின்றன. இப்பகுதியில் இருப்புப்பாதைகள் வலை பின்னினாற்போல் அடுத்தடுத்து அமைக்கப்பட்டுள்ளன. மேலும், ஆற்றுப் போக்குவரத்து வசதிகளையும் கால்வாய்ப் போக்குவரத்து வசதிகளையும் பெருமளவில் கொண்டு விளங்குகிறது. படகுப் போக்குவரத்தும் விட்டன் (Witten) என்னும் நகர் வரை செல்கிறது. இந்த ஆற்றுநீர் மிகத் தெளிவானதும் துப்புரவானதுமாகும். எனவே பஞ்சாலைத் தொழிற்சாலைகளுக்குப் பயனளிப்பவை. அதைப்போல் உரூர்ப் பகுதியிலுள்ள கனரகத் தொழிற்சாலைகள் இவ்வாற்றின் பெருமளவு நீரை ஆற்றுப்போக்கின் தாழ்நிலை, இடைநிலைப் பகுதிகளில் பயன்படுத்திக் கொள்கின்றன.

உரூர்ப் பள்ளத்தாக்கில் மிகுதியான நிலக்கரியும் உருக்கும் கிடைப்பதால் இப்பகுதி செருமனி, பிரான்சு நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்திற்குப் பெருங்காரணம் எனக் கருதப்படுகிறது.

உரூர்ப் பள்ளத்தாக்கு உலகிலேயே மிக உயர்ந்தளவு ஒருமைப்படுத்தப்பெற்ற தொழிற்சாலைப் பகுதியாகும். இங்கு இரசாயனம், பஞ்சாலை, நிலக்கரிச் சுரங்கம், உலோகத் தொழில், மின்சக்தி போன்ற தனித்தனித் துறைகள் அனைத்தும் நன்கு ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. முதல் உலகப் போரின் போது செருமனியின் போர்த்தேவைகள் அனைத்தையும் உரூர்ப் பள்ளத்தாக்கே சமாளித்தது.

இரண்டாம் உலகப் போரின்போதும் உரூர்ப் பகுதி செருமனியின் போர்த்தளவாட உற்பத்தியின் மையமாக இருந்தது. இதனால், இப்பகுதியில் இருந்த மாநகரங்களும் தொழிற்சாலைகளும் பெரும் சேதமுற்றன. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னால் அமெரிக்க ஐக்கிய நாட்டின் வெளியுறவு அமைச்சர் மார்சல் (Marshall) என்பாரின் பெயரில் அமைக்கப்பட்ட திட்டம் (Marshall Plan) போரினால் அழிவுற்ற ஐரோப்பாவைச் சீர்படுத்தப் பொருளாதார உதவி வழங்கியது. இத்திட்டம் நலிந்திருந்த உரூர்ப் பள்ளத்தாக்கை வளப்படுத்தவும் புதுவாழ்வு பொலிந்திடவும் உதவியது. இன்றும் மேற்குச் செருமனியின் முன்னேற்றத்திற்கு உரூர்ப் பள்ளத்தாக்கே அடித்தளமாக அமைந்துள்ளது. இரா.அ.

**உரூர்க்கிப் பல்கலைக்கழகம்** உத்தரப் பிரதேசமாநிலத்திலுள்ள தொழில் நகரான உரூர்க்கியில் (Roorkee) கங்கை ஆற்றின் கிழக்குக் கரையில் ஏறத்தாழ 400 ஏக்கர் பரப்பளவு கொண்ட இயற்கைச் சூழல் மிகுந்த பகுதியில் அமைந்துள்ளது. பொறியியல் சார்ந்த அனைத்துத் துறைகளையும் ஒரே இடத்தில் கற்பிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் உரூர்க்கிப் பல்கலைக்கழகம் செயற்பட்டு வருகிறது. இது பிற கல்லூரிகளையோ நிறுவனங்களையோ தன்னோடு இணைத்துக் கொள்ளாமல், தனியொரு பல்கலைக்கழகமாக (Unitary University) விளங்குகிறது. ஆசிரியர்களும் மாணவர்களும் பல்கலைக்கழக வளாகத்திலேயே உறைவது இப்பல்கலைக் கழகத்தின் சிறப்பியல்பாகும்.

கங்கைக் கால்வாயை வெட்டிய சர் புரோபி காட்லி (Sir Proby Cautley) என்பவரது ஊக்குவிப்பால் கி.பி. 1847-இல் தாமசன் பொறியியற் கல்லூரி (Thomason College of Civil Engineering) நிறுவப் பெற்றது. இதுவே இந்தியாவில் மிகப் பழமையான பொறியியற் கல்லூரியாகும். இக்கல்லூரியே பின்னர் 1947-இல் பெரியதொரு பல்கலைக்கழகமாக வளர்ந்தது. இப்பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தர் டாக்டர் சி. எ. ஆர்ட்டு (C. A. Hart) ஆவர்.

இன்று (1985) உரூர்க்கிப் பல்கலைக்கழகத்தில் 1500 இளநிலைப் பட்டப் படிப்பு மாணவர்களும், 1000 பட்டமேற்படிப்பு, ஆராய்ச்சி மாணவர்களும், 450 ஆசிரியர்களும் உள்ளனர். இளம் பொறியியல் பட்டப் படிப்புக்கு (B. E.) இந்திய நாட்டு அளவில் நடைபெறும் நுழைவுத் தேர்வு மூலம் ஒவ்வோராண்டும் 365 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

உரூர்க்கிப் பல்கலைக்கழகத்தில் உள்ள நிலநடுக்கப் பொறியியல் (Earthquake Engineering), நீர்வள மேம்பாட்டுப் பயிற்சி மையம் (Water Resources Development Training Centre), உயிரறிவியல் மையம் (Centre of Bio-Sciences) ஆகியன உலகப் புகழ் பெற்றவை. பொறியியல், கட்டடக் கலை ஆகிய துறைகளில் பத்துக்கும் மேற்பட்ட பிரிவுகளில் இளநிலைப் படிப்பும், அறிவியல், தொழில்நுட்பவியல், பொறியியல், கட்டடக்கலை ஆகிய துறைகளில் 52க்கும் அதிகமான பிரிவுகளில் பட்டமேற்படிப்பும் வழங்கப்படுகின்றன. இவை தவிர, வாழ்வியல் (Humanities) துறையில் பொருளியல், உளவியல், ஆங்கிலம், வரலாறு ஆகிய பிரிவுகளும் உள்ளன.

பொறியியல், தொழில்நுட்பவியல், கட்டடக் கலை ஆகிய துறைகளில் ஆராய்ச்சியை மேற்கொள்வதற்கான வசதியும் இப்பல்கலைக் கழகத்தில் உள்ளது. இப்பல்கலைக் கழகத்தில் பயிற்று மொழியாகவும் தேர்வு மொழியாகவும் ஆங்கிலமே இருந்து வருகிறது. டி. எசி.(D. SC.), டி. இஞ். (D. Engg) போன்ற மதிப்புப் பட்டங்களை இப்பல்கலைக் கழகம் பொறியியல் சார்ந்த துறைகளில் சிறந்த வல்லுநர்களுக்கு வழங்கி வருகிறது. எஸ்.த.

**உரூர்க்கேலா**: இங்கு இரும்பு-உருக்கு ஆலையொன்று இயங்குகிறது. இந்திய அரசின் பொதுத்துறையால் செருமானியரின் பொருளுதவியுடன் இத்தொழிற்சாலை செயற்படுகின்றது.

உரூர்க்கேலா (Rourkela) இரும்பு-உருக்குத் தொழிற்சாலையை இந்திய அரசு செருமானிய நிறுவனமான குரூப்-தெமாகு (M/s. Krupp and Demag) என்பதுடன் இணைந்து உருவாக்கியது. இந்திய அரசு உரூ.171 கோடி இத்திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்தது. இத்தொழிற்சாலை 1959, பிப்பிரவரியிலிருந்து உற்பத்தி செய்யத் தொடங்கியது. இத்தொழிற்சாலையில் உருவாகும் ஒருவகைச் சிறப்பு உருக்கு, பேருந்துத் தொழில்களுக்கும் இருப்புப் பாதைகளுக்கும் கப்பல் தொழிலுக்கும் உதவுகிறது. இத்தொழிற்சாலைக்கு வேண்டிய கச்சாப்பொருள்கள் உரூர்க்கேலா, கர்கலி-பொக்காரோ (Kargali-Bokaro), சாரியா(Jharia), பிர்மித்திராபூர்-அத்தியாபரி (Birmitrapur-Hathiabari), மந்தோசா அணை (Mandoja Dam) போன்ற இடங்களிலிருந்து கிடைக்கின்றன. உரூர்க்கேலாவில் ஒரு சிறப்புச் செயற்கை உரத்தொழிற்சாலையும் இயங்கி வருகிறது.

உரூர்க்கேலா ஒரிசா மாநிலத்தின் சுந்தர்கார் மாவட்டத்தில் உள்ளது. இதன் மக்கள்தொகை 3,21,326 (1981). உரூர்க்கேலா உருக்கு நகரியம் மற்றும் ஏனைய தொழிற்சாலைகளும் உள்ளூர் குடியிருப்புகளும் அவற்றின் மக்கள்தொகையும் இதனுள் அடங்கும். இரா.அ.

**உருவன்சோரி மலைத் தொடர்** கிழக்கு ஆப்பிரிக்காவில் உகாண்டா (Uganda) நாட்டிற்கும் செய்ரே (Zaire) நாட்டிற்கும் எல்லையாக அமைந்துள்ளது. இம்மலைத்தொடர் உலக நடுக்கோட்டிற்கு வடபால் அதன் அண்மையில் அமைந்துள்ளது. உருவன்சோரிமலைத்தொடர் (Ruwenzori Range) தென்வடலாக 120 கி.மீ.நீளமும் ஏறத்தாழ 65 கி.மீ. அகலமும் கொண்டது. இதன் வடக்கில்ஆல்பர்ட்டு (Albert) ஏரியும் தெற்கில் எட்வர்டு ஏரியும் அமைந்துள்ளன.

உருவன் சோரி மலைத்தொடரின் மிக உயர்ந்த பகுதிகளில் பனிமூடிய உச்சிகளும் பனிப்பாறைகளும் உள்ளன. இப்பகுதியை ஆறு பிரிவுகளாகப் பிரிப்பர். இவை அனைத்தும் 4200 மீட்டருக்கு மேல் உயரமானவை. இவற்றை ஆழமான கெவிமலைப்பள்ளங்கள் பிரிக்கின்றன. இசுடான்லி மலைத்திரள் அவற்றுள் மிக உயரமானது. மார்சிரித்தா மலையுச்சி எனப்படும் இச்சிகரம் 5109 மீட்டர் உயரமானது.



உருவன்சோரி மலைத்தொடர்

உருவன்சோரி மலைத்தொடரின் 2700 மீ. க்குமேல் உயரமான பகுதிகள் பெரும்பாலும் மேகக்கூட்டங்களால் எப்போதும் மூடப்பட்டுள்ளன. அதனால் ஈரக் கசிவு மிகுதி; மழையும் ஏறத்தாழ 500 செ.மீ. க்கும் மிகுதியாகப் பொழிகிறது. மிகுதியான மழையினால் பெருக்கெடுத்தோடும் அருவிகள் கெவிப்பள்ளங்களை ஏற்படுத்திக் கொண்டு விரைந்து பாய்கின்றன. மேற்குத் திசையில் ஓடும் ஆறுகள் செம்லிக்கி (Semliki) ஆறு வரை வடிகாலாய், அமைந்து எட்வர்டு, ஆல்பர்ட்டு ஏரிகளை இணைக்கின்றன. கிழக்குத் திசையில் பாயும் ஆறுகள் வேகம் குறைந்தவை. அவற்றுள் பல சார்சு ஏரியில் (Lake George) கலக்கின்றன. பின்னர், கசிங்கா (Kazinga) கால்வாய் மூலமாகவும், எட்வர்டு ஏரி வழியாகவும் நீர் ஓடி செம்லிக்கி ஆற்றில் சேர்கின்றன.

உருவன்சோரி மலைத்தொடரில் பல்வகையான பயிர் பச்சைகளைக் காணலாம். மலைத்தொடரின் தாழ்ந்த சரிவுகளில் முன் காலத்தில் காடுகள் இருந்தன. ஆனால் இப்போது 2300மீ. வரை புற்றரைகள் நிரம்பியுள்ளன. இச்சரிவுகளின் சிலபகுதிகளில் வேளாண்மை செய்யப்படுகின்றது. புற்றரைகளுக்கு மேலே ஏறத்தாழ 3300மீ.அளவில் அடர்ந்த காடுகளையும் மூங்கில் புதர்களையும் காணலாம். அதைவிட உயர்ந்த பகுதிகளில் ஒருவகை மரப்புதர்களும், உலோப்லியாசு (Lobelias) என்னும் ஒருவகை மலர்ச் செடிகளும் புற்களும் வளர்ந்துள்ளன. அதற்கும் மேலான உயரத்தில் பனி மூடிய பகுதிகளைக் காணலாம்.

உருவன்சோரி மலைத்தொடரைப் பற்றிப் பண்டைய நிலநூல் ஆசிரியரான தாலமி (Ptolemy) குறிப்பிடும்போது, நைல் ஆறு இம்மலைத் தொடரிலிருந்து உற்பத்தியாவதாக எழுதியுள்ளார். இது உண்மையன்று. இத் தொடரை முதன்முதலாகக் கண்டறிந்து ஆய்வு செய்த முதல் ஐரோப்பியர் என்றி மார்ட்டன் இசுடான்லி (Henry Morton Stanley) ஆவார். அவரே இதற்கு உருவன்சோரி எனப் பெயரிட்டார். உருவன் சோரி என்னும் பெயருக்கு மழையை உருவாக்குவது என்பது பொருள்.

உருவன்சோரி மலைத்தொடரின் கிழக்கு அடிவாரத்தில் செம்பு, கோபால்ட்டு (Gobalt) போன்ற உலோகங்கள் கிடைக்கின்றன. இரா.அ.

**உரேனசு** கிரேக்கப் புராணங்களால் கடவுள்களின் முதல் தந்தை எனக் குறிக்கப்படுபவர். ஊழிக் காலத்தில் கேயா (Gaea) என்னும் நிலக்கடவுள், உரேனசையும் (Uranus) மலைகளையும் கடல்களையும் தோற்றுவித்தார். உரேனசு என்பதற்குச் சொர்க்கம் (Heaven) என்பது பொருள். இவர் வானுலகத்தின் தந்தை எனக் கருதப்படுகிறார். உரேனசுக்கும் கேயாவுக்கும் தைட்டன்சு(Titans),சைகிளோப்சு (Cyclopes), எகாடோன்சேர்சு (Hecatoncheires) என்னும் மூவர் பிறந்தனர். உரேனசு தமக்குப் பிறந்த பிள்ளைகளை வெறுத்தார். இதனால், அவரைப் பழிவாங்க கேயா தம் பிள்ளைகளிடம் முறையிட்டாள். தைட்டன்சு என்பவன் மட்டும் தாயின் வேண்டுகோளை ஏற்று உரேனசைப் பழி வாங்கினான். உரேனசின் உடலிலிருந்து கொட்டிய குருதியிலிருந்து மூன்று பெண்கள் தோன்றினர். இவர்கள் பழிக்குப் பழி வாங்கும் (Furies) தெய்வ மகளிர் எனக் கிரேக்கப் புராணக் கதைகளில் குறிப்பிடப்படுகின்றனர். பண்டைய கிரேக்கத்தில் உரேனசு வழிபடும் கடவுளாகக் கருதப்படவில்லை. சு.இரா.

**உரை** என்பதன் பொருள் உருப்பெற்று விளங்குவது என்பதாகும். அதாவது, தெளிவாகப் பலர் விளங்கிக் கொள்ளுதற்கு இயலாமல், நுண்மையாக அமைந்து நிற்கும் சொல், ' சொற்றொடர்களை யாவர்க்கும் விளங்குமாறு பருமையாக உருப்படுத்தி அமைப்பதாகும்.

உரை என்பது பாட்டு முதலாகிய எழுவகைச் செய்யுளையும் விளக்கிக் காட்டும் கருவியாகும். நூல் எனப்படுவதாகிய இலக்கணச்செய்யுட்களை(சூத்திரங்கள்) உரை என்னும் கருவியைக் கொண்டே விளங்கிக் கொள்ள இயலும். ஆதலின், உரை என்பது சிறப்பாக இலக்கணச் சூத்திர உரைகளையும், பொதுவாக ஏனைய இலக்கிய உரைகளையும் சுட்டி வழங்கும்.

தொல்காப்பியம் நூல் என்பதற்கு இலக்கணங் கூறுமிடத்து, ‘உள்நின்றகன்ற உரையொடு பொருந்தி, நுண்ணிதின் விளக்கல் அதுவதன் பண்பே’ (தொல்-செய்-இளம்-159) என்றும், சூத்திரம் என்பதற்கு இலக்கணங் கூறுமிடத்து, ‘சில்வகை எழுத்தின் செய்யுட் டாகிச், சொல்லுங்காலை உரையகத் தடக்கி’ (தொல்-மரபியல்-இளம் 102) என்றும், உரை பற்றி விதி கூறுமிடத்து, ‘சூத்திரத்துட் பொருளன்றியும் யாப்புற, இன்றியமை யாதியைபவை யெல்லாம், ஒன்ற உரைப்பது உரை எனப்படுமே’ (தொல், மர. இளம். 105) என்றும் கூறும்.

பொதுவாக உரை பாடம், கருத்து, சொல் வகை, சொற்பொருள், தொகுத்துரை, எடுத்துக்காட்டு, வினா, விடை, விசேடம், விரிவு, அதிகாரம், துணிவு, பயன், ஆசிரியவசனம் என 14 வகையாக அமைந்து நடைபெறும் என்பர் (நன்-பாயிரம்-21).

அவற்றுள், பாடம் என்பது யாப்பு நெறியானும் எழுத்தியல் முறையானும் புணர்ந்து நிற்கும் தொடர்களைச் செஞ்சொல்லாகப் பிரித்தமைத்தலாகும். சொல்வகை என்பது சொற்களை வகைப்படுத்திக் கூறுதல். இதனைக்கண்ணழித்தல் என்றும் கூறுவர்.

சொற்பொருள் என்பது பதவுரை. தொகுத்துரை என்பது பொழிப்புரை. சொற்பொருள் விளக்கத்திற்கு வேண்டியவற்றையெல்லாம் விரித்துக் கூறுதல் விசேடமாம். வேற்றுமை உருபு முதலியவற்றை விரித்துச் சொல்லுதல் விரிவு என்பதாகும். தலைப்பாக அமைந்துள்ள அதிகாரத்திற்கு ஏற்பப் பொருள் கூறுதல் அதிகார அமைதியாகும். வினா ஐயம் பற்றியும் மறுப்புப் பற்றியும் எழும். ஐயங் களைந்து ஒன்றை உறுதி செய்து கூறுதல் துணிவு ஆகும். முன்னோர் (ஆசிரியன்மார்) கூறிய விதிகளை அப்படியே எடுத்து இணைத்துரைத்தல் ஆசிரிய வசனமாகும். ஆசிரிய வசனத்தை மேற்கோள் எனவும் கூறுப.

இலக்கண நூலுரைகள் பெரும்பான்மையும் காண்டிகையுரை என்றும் அகலவுரை (விருத்தியுரை) என்றும் இருமுறையாக அமைந்துள்ளன. கருத்து, சொற்பொருள், எடுத்துக்காட்டு, வினா, விடை ஆகிய ஐந்து கூறுகளொடு கூடி அமைந்ததைக் காண்டிகை உரை என்பர் (நன். பா. 22). நூல் நுதலிய பொருளையெல்லாம் நன்கு தெளிவுபடுத்தவேண்டியவற்றை விரித்து, மேற்கூறிய 14 வகையானும் விளக்க முறப் பிற நூற்கருத்துகளையும் ஒப்பிட்டுக் காட்டி, தன் கருத்தையும் கூட்டி ஐயந்திரிபற விரிவாக அமைந்ததை அகலவுரை என்பர் (நன். பா. 23). பொதுவாக உரை எனின் அது அகலவுரையையே குறிக்கும்.

நல்லாசிரியன்மார் செய்த நூல்களும் செய்யுள்களும் காலத்தை வென்று இறப்பின்றி வழங்கி வருதலான், காலந்தொறும் அவற்றிற்குப் பேரறிஞர் உரை கண்டு கூறிவருகின்றனர். அவ்வுரையாளர் தமக்கு முன்னையுரையாளர்தம் உரையுள் நிறைகாணுமிடத்து அவ்வுரையை மெய்யுரை, வாயுரை (வாய்மையுரை), நல்லுரை, செவ்வுரை என்றும், குறை காணுமிடத்து வல்லுரை, வலிந்துரை, மயக்குரை, போலியுரை, குற்றுறை (குறுகிய – குற்றமுள்ள உரை), திரிபுரை, கட்டுரை (தாமே கட்டிக் கூறும் உரை), வெற்றுரை, வெள்ளுரை என்றும் கூறுவர். அங்ஙனம் கூறுதல் உரை மரபாகக் காணப்படுகிறது. ஒருவர் கொள்கையினை மற்றொருவர் பொருந்தாதென விளக்கும் உரையை மறுப்புரை என்பர்.

ஒரு மொழிக்குரிய பண்பாட்டடிப்படையிற் கூறப்படும் உரையை மரபுரை என்ப. முன்னையோர் கூறியவற்றுள் சில ஆராயுங்கால் பொருந்தாதவை எனத் தோன்றினும் அவற்றை அவ்வாறே கொண்டு கூறுதலும் மரபுரையேயாம்.

பயின்று வாராத சொற்களுக்கும் திரிசொற்களுக்கும் மட்டும் பொருள் கூறி, வேண்டுமிடத்து மட்டும் மேற்கோள் காட்டிக் கருத்துரைகளை ஆங்காங்கே கூட்டி உரைக்கும் உரையைக் குறிப்புரை என்பர். பதவுரையோ பொழிப்புரையோ கூறாமல் பாடற்கருத்தினை எளிய இனிய இயற்சொற்களால் தொகுத்துக் கூறுதலைத் தெளிவுரை என்பர்.

பல நூல்களொடு ஒப்பிட்டு நடுவுநிலையொடு நோக்கி ஒன்றன் நிறையையும் குறையையும் தக்க காரணமும் மேற்கோளும் காட்டி விரித்துக் கூறுதலை ஆய்வுரை என்பர். ச.பா.

**உரைக் கோவை** உயர்கல்வியில் பயன்படுத்தப் படும் ஒரு கற்பித்தல் முறை. உரைக்கோவையில் (Symposium) ஒன்றுக்கு மேற்பட்ட அறிஞர்கள் அல்லது துறை வல்லுநர்கள் பேசுவர்; தம் கருத்துகளைப் பிற அறிஞர்களுடன் பங்கிட்டுக் கொள்வர். உரைக்கோவையில் பங்கேற்கும் அறிஞர்கள் அனைவரும் ஒரே பொருளைப் (Subject) பற்றி வெவ்வேறு கோணங்களில் கருத்துரைத்துப் பேசலாம்; அல்லது ஒவ்வோர் அறிஞரும் ஒரே பொருளில் பொதிந்துள்ள வெவ்வேறு கூறு அல்லது தன்மைகளைப் (Aspect) பற்றியும் பேசலாம். கல்வி என்ற தலைப்பில் பள்ளி முன் தொடக்கப் பள்ளிக் கல்வி, தொடக்கப் பள்ளிக் கல்வி, உயர்நிலைப் பள்ளிக் கல்வி, மேல்நிலைப் பள்ளிக் கல்வி, கல்லூரிக் கல்வி, பல்கலைக் கழகக் கல்வி, தொழிற் கல்வி என வெவ்வேறு கோணங்களில் அறிஞர்கள் பேசுவதும், பல்கலைக் கழகக் கல்வி என்னும் தலைப்பில் ஆராய்ச்சி (Research), கற்பித்தல் (Teaching), நிருவாகம் (Administration), நிதி (Finance), மாணவர் சேர்க்கை (Enrolment), வேலை வாய்ப்பு (Employment) ஆகிய பல்வேறு கூறுகள் குறித்து அறிஞர்கள் கருத்துரைப்பதும் உரைக்கோவைக்கு எடுத்துக்காட்டாகும்.

ஒரு சிக்கலான பொருள் குறித்து வல்லுநர்களின் ஆழ்ந்த கருத்துகளை வெளிக் கொணர்வதும், குறிப்பிட்ட பொருளில் துறையறிவினை மேலோங்கச் செய்வதுமே இதன் தலையாய நோக்கம். உரைக் கோவையில் பங்கேற்பவர் வல்லுநர்கள் மட்டுமே. உரைக் கோவை கேட்கவருவோர் கருத்துரைத்துப் பங்கேற்பதில்லை. அவர்கள் கருத்துகளைச் சேகரிக்க வரும் வெறும் பார்வையாளர்களே. உரைக்கோவை என்ற கற்பித்தல் முறையால் உயர்கல்வி பயிலும் மாணவர்

கள் பல்வேறு கோணங்களில் அறிஞர்களின் கருத்து களைக் கேட்டு, ஒரு குறிப்பிட்ட பாடத்துறையில் ஆழ்ந்த செயலறிவையும் சிந்தனையையும் பெற இயலுகிறது.

பல்கலைக் கழகங்களில் உரைக்கோவை ஒரு கற்றல் முறையாகவும் பயன்படுகிறது. உயர்கல்வி பயிலும் மாணவர்களின் சீர்தூக்கியறியும் சிந்த னைத் திறனையும் ஒரே பொருளைப் பல்வேறு கோணங்களில் ஆராய்ந்தறியும் பண்பினையும் வளர்க் கும் நோக்கத்துடன் உரைக்கோவை முறையினைப் பல்கலைக் கழகங்கள் பயன்படுத்தி வருகின்றன.

ஜெ. கோ. பி.

துணை நூல்கள்:

**Haddan, E. E.,** Evolving Instruction, Collier-Macmillan, London, 1976.

**Leonard, J.M., et. al.,** General Methods of Effective Teaching, Crowell Company, New York, 1978.

**உரை கடிலகம்** என்பது உமறுப்புலவரின் சீறாப்புராணத்தில் உள்ள நபியவதாரப் படலத்திற்கு எழுதப்பட்ட விளக்க உரை நூலாகும். இதனை எழுதியவர் பரங்கிப்பேட்டையைச் சார்ந்த காதி ரசனா மரைக்காயார். அவர் உரைகடிலகத்தை கி.பி.1890-இல் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.

இந்த உரைநூல் தோன்றுவதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், நபியவதாரப் படலத்திற்கு வா. குலாம் காதிறு நாவலர் ஓர் உரையைக் கல்வி கற்கும் மாணவர்களுக்குப் பயன்படும் நோக்கில் எழுதி வெளியிட்டார். நாவலரின் உரையை மறுக்கும் நோக்கில் உரைகடிலகம் எழுதி வெளியிடப்பட்டது. இதன் ஆசிரியர் ஒவ்வொரு பாடலுக்கும் உரை எழுதும்போது இதன் முந்தைய நூலான நாவலரின் உரையைச் சுட்டிக்காட்டியே எழுதியுள்ளார்; பல இடங்களில் நாவலரின் உரை தவறு என்பதை வலிந்து சுட்டிக்காட்ட வேண்டி, பல செய்யுட்களின் சொற் களைத் தவறாகப் பிரித்துப் பொருள் கூறியுள்ளார். இவ்வாறு அவர் தம் பிழையறியாது பிரித்துப் பொருள் கூறுமிடத்து, முந்தைய உரையாசிரியருக்கு இது தெரியவில்லை எனவும் சுட்டிக்காட்டுகிறார்.

தம் உரையைக் குறைகூறும் நோக்கில் காதி ரசனா மரைக்காயர் செய்த தவறுகளை வெளி யுலகுக்கு எடுத்துக்காட்டும் நோக்கில், குலாம் நாவலர் மீண்டும் அதே படலத்திற்கு 'உரைகடிலக நிராகர ணம்' என்னும் பெயரில் ஓர் உரை எழுதியுள்ளார். இவ்வுரையில் உரைகடிலக ஆசிரியர் செய்த பிழை களை விரிவாகக் குலாம்காதிறு நாவலர் சுட்டிக் காட்டியுள்ளார்.

சி. ந.

**உரைகள்** (அளவை இயல்): மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் பொறிகள் புறவுல கோடு தொடர்பு கொண்டு உணர்வுகளைத் தருகின் றன. மனம் இவ்வுணர்வுகளைக் கோவைப்படுத்தி முடிவு செய்கிறது. இம்முடிவுக்கு 'அளவையியல் தீர்ப்பு' என்பது பெயர். ஒரு மலரின் மணம், நிறம், வடிவம், மென்மை ஆகிய புலன் உணர்வுகளை ஒன்று சேர்த்து, அது ஓர் உரோசாமலர் என்று மனம் உறுதி செய்கிறது. மனத்துள் நிகழும் இவ்வுறுதி மொழிவாயி லாகவோ சில குறியீடுகள் வாயிலாகவோ வெளிப் படும்போது உரை (Proposition) தோன்றும். (எ-டு) 'சில அறிஞர்கள் ஆசிரியர்களாக இருக்கின்றனர்' என்பது. இது மொழிவாயிலாக வரும் உரை. $4+3=7$ என்பது குறியீடுகளால் அமைந்த உரை.

உரை சிந்தனையின் அடிப்படை அலகு. ஒரு சிந் தனைத் தொகுதியைப் பகுத்துக்கொண்டே போனால் அது உரையில் முடியும். அதே போல் தொடர்புள்ள உரைகளைத் தொகுத்தால் சிந்தனை முழுமை பெறும். சிந்தனையை அலகிட்டுப் பார்க்கும்போது தான் அது ஏற்புடையதா இல்லையா என்பதைத் தெளிய முடியும். எனவே சிந்தித்த முடிவுகளைச் செம்மையாக வெளியிடவும் வெளியிடப்பட்ட முடிவு களை ஆய்ந்திடவும் உரைகள் பற்றிய அறிவு இன்றி யமையாததாகிறது.

**உரையும் மொழியும்:** உரை மொழிவாயிலாக வாக்கிய வடிவில் வெளியிடப்பட்டாலும் அது மொழி யிலிருந்து பெரிதும் வேறுபடுகிறது. உரை சொற் களைக் குறிப்பதில்லை; சொற்கள் உணர்த்தும் பொரு ளைக் குறிக்கிறது. ஒரே உரையை வேற்றுமொழி வாக்கியங்களில் கூறும்போது மொழிக்கேற்பச் சொற் களும் சொல்முறையும் வேறுபடும். ஆனால், அவ் வாக்கியங்களின் பொருள் மாறாது. 'உணவு பசியைப் போக்கும்' என்பது தமிழில் அமைந்த உரை. இதனைப் பிற மொழிகளில் வெளியிட்டால் சொற் களும் வாக்கிய வடிவும் வேறுபடும். ஆனால், அவ்வாக் கியங்களின் பொருள் வேறுபடாது. வேறுபடாத வாக் கியப் பொருளை உரையென அளவையியல் சுட்டு கிறது.

**உரையும் வாக்கியமும்:** வாக்கியங்கள் பல வகைப் படும். எல்லாவகை வாக்கியங்களுக்கும் உண்மை பொய் என்ற மதிப்பீடு கிடையாது. 'தேன்மொழி

கடைக்குச் சென்றாளா?', 'கோபால்! கதவைத்திற', 'நீவீர் நீடுவாழ்க!' என்ற வாக்கியங்கள் சுட்டும் வினா, கட்டளை, வாழ்த்து போன்றவைக்கு உண்மை/பொய் என்ற மதிப்பீடு தரவியலாது. செய்தி வாக்கியம் மட்டுமே உண்மை/பொய் என்ற மதிப்பீட்டைப் பெறும் தகுதியுடையது. 'செங்கதிர் கடைக்குச் சென்றான்' என்பது ஒரு செய்தி வாக்கியம். இவ்வாக்கியம் உணர்த்தும் பொருள், செங்கதிர் கடைக்குச் சென்றிருந்தால் உண்மை என்றும், செல்லவில்லை என்றால் பொய் என்றும் மதிப்பிடப் பெறும். உண்மை அல்லது பொய் என்ற ஒரு மதிப்பீட்டைப் பெறுகிற செய்தி வாக்கியம் மட்டுமே அளவையியலில் உரையாகும் தகுதியுடையது. உண்மை/பொய் என்ற மதிப்பீடு அளவையியல் உரையின் அடிப்படைப் பண்பு.

**உரை வகைகள்:** அளவையியல் உரைகள் பல வகைப்படும். உரையின் வடிவம், உரையில் இடம் பெறும் பதங்களின் இயல்பும் எண்ணிக்கையும், பதங்களுக்கிடையே உள்ள தொடர்பு, உண்மை/பொய் மதிப்பீட்டு முறை என்பனவற்றை அளவுகோலாக்கி உரையை வகைப்படுத்துகின்றனர். உரையை உண்மையா பொய்யா என்று முடிவுசெய்ய இரு வழிகள் உண்டு. உரையின் பொருளைப் பகுத்தாய்ந்து முடிவு செய்வது ஒரு வழி; அனுபவத் தொகுப்போடு பொருத்திப்பார்த்து முடிவு செய்வது மற்றொரு வழி. இவ்விரு முறைகளையும் அளவுகோலாக்கி உரைகளைப் பகுப்புரை, தொகுப்புரை என இரு வகைப்படுத்தலாம்.

**பகுப்புரைகள்:** அனுபவத்திற்குச் செல்லாமல் ஆராய்ச்சியால் மட்டுமே மதிப்பீடு பெறுபவை பகுப்புரைகள் (Deductive Logic). உரையின் வடிவம், பொருள் ஆகியவற்றைக்கொண்டு பகுப்புரையின் உண்மை/பொய் மதிப்பீட்டைக் காணலாம். 'மணமாகாதவர் எவரும் மணந்து கொண்டவர் அல்லர்' என்ற உரை தனக்குத்தானே உண்மை என்ற மதிப்பீடு பெறுகிறது. அனுபவத் தொகுதியோடு பொருத்திப் பார்த்து மதிப்பீடு செய்யவேண்டிய தேவையில்லை. அதேபோல், 'மலடியொருத்தி தான் பெற்ற பிள்ளைக்குப் பால் கொடுத்தாள்' என்ற உரை தனக்குத்தானே பொய் என்ற மதிப்பீட்டைப் பெறுகிறது. இவ்வுரைகளை மதிப்பீடு செய்வதற்குச் சொற்களின் பொருளும் அச்சொற்கள் அமைந்துள்ள வடிவமும் தெரிந்தாலே போதும். இத்தகைய உரைகளைப் பகுப்புரைகள் என்பர். கணக்கியலிலும் அளவையியலிலும் பகுப்புரைகள் மிகுதியாக இடம் பெறுகின்றன.

**தொகுப்புரைகள்:** உலகில் அனுபவத்தைக் கொண்டு உண்மை/பொய் என்ற மதிப்பீடு பெறுபவை தொகுப்புரைகள் (Inductive Logic). 'கோள்கள் நீள் வட்டத்தில் சுற்றுகின்றன', 'காந்தக்கல் இரும்புத் துண்டை ஈர்க்கும்' என்பன போன்ற உரைகள் உலகியல் அனுபவத்தால் மதிப்பீடு செய்யப்படுகின்றன. இவ்வுரைகளின் கருத்தும் உலகியல் அனுபவமும் ஒத்திருந்தால் உரை உண்மை என்றும், வேறாயின் உரை பொய் என்றும் கருதப்படும். இத்தகைய உரைகளைத் தொகுப்புரைகள் என்பர். கணக்கியல், அளவையியல் தவிர மற்ற அறிவியல்களில் தொகுப்புரைகள் இடம் பெறுகின்றன.

**பண்டைய உரைவகைகள்:** எழுவாய் – பயனிலைப் பதங்களுக்கிடையே நிலவும் தொடர்பின் தன்மையைக் கொண்டு அரிசுடாட்டில் உரைகளை வகைப்படுத்துகிறார். ஓர் உரை எதைப்பற்றிப் பேசுகிறதோ, அது எழுவாய்; எழுவாயைப் பற்றி அந்த உரை என்ன சொல்கிறதோ அது பயனிலை. எழுவாய் – பயனிலைப் பதங்களின் தொடர்பின் தன்மையைக் கொண்டு பண்டைய அளவையியல் அறிஞர்கள் உரைகளை மூன்று வகைகளாக்கினர். அவை சார்பற்ற உரை, சார்புரை, பிரிநிலைஉரை எனப்படும்.

**சார்பற்ற உரை:** கட்டுப்பாடு ஏதுமின்றி எழுவாய் – பயனிலை தொடர்பு கொண்டால் அது சார்பற்ற உரை. இருபதங்களுக்கு இடையே உள்ள தொடர்பு வேறொரு பதத்தைச் சார்ந்ததில்லை என்பதால் அவ்வுரை 'சார்பற்ற உரை' என்ற பெயர் பெறுகிறது. எடுத்துக்காட்டாக, 'மனிதர்கள் அனைவரும் சிரிக்கத் தெரிந்தவர் ஆவர்', 'பெண்கள் எவரும் தேவதைகள் அல்லர்' என்பனவற்றைக் கூறலாம். இவற்றில் வேறொன்றின் துணையின்றி எழுவாய் – பயனிலைப் பதங்கள் தொடர்பு கொள்கின்றன.

சார்பற்ற உரையை நான்கு பகுதிகளாகப் பிரிக்கலாம். அவை எழுவாய், பயனிலை இரண்டு பதங்களும், அவற்றை இணைக்கும் 'ஆகும்/அல்ல' என்ற இணைப்புறுப்பும், எழுவாய்ப் பதத்தின் அளவினைக் குறிக்கும் 'அனைத்தும்/சில' என்ற அளவுக்குறிப்பும் ஆகும்.

**சார்புரை:** எழுவாய் – பயனிலைச் சொற்கள் வேறொரு கட்டுப்பாட்டுக்கு உட்பட்டுத் தொடர்பு கொண்டால் அவ்வுரைக்குச் சார்புரை என்பது பெயர். 'வெப்பப்படுத்தப்பட்டால் பொருள்கள் விரிவடையும்' என்பது சார்புரை. இவ்வுரையில் 'பொருள்கள்' என்ற எழுவாயும், 'விரிவடையும்' என்ற பயனிலையும் 'வெப்பப்படுத்தப்படுதல்' என்ற கட்டுப்பாட்டால் தொடர்புகொள்கின்றன. ஒரு கட்டுப்பாட்டைச் சார்ந்து இவ்வுரையின் தொடர்பு அமைவதால் இதற்குச் 'சார்புரை' என்ற பெயர் வழங்குகிறது.

சார்புரை இரண்டு பகுதிகளால் ஆனது. அவ்விரு பகுதிகளும் இரு நிகழ்ச்சிகளைக் குறிக்கும். அவை முன்னிகழ்ச்சி, பின்னிகழ்ச்சி எனப்படும். முன்னிகழ்ச்சி முதலில் நிகழும் காரணத்தையும், பின்னிகழ்ச்சி பின்னர் விளையும் காரியத்தையும் சுட்டும். முன்னிகழ்ச்சி சார்புரையின் முற்பகுதியாகவும் பின்னிகழ்ச்சி அதன் பிற்பகுதியாகவும் அமைவது இயல்பு.

பிரிநிலை உரை: எழுவாய்த் தொகுதி பல பயனிலைகளாகப் பிரிக்கப்பட்டு ஓர் உரை அமையுமானால், அவ்வுரைக்குப் பிரிநிலை உரை என்பது பெயர். 'மாணவர்கள் கல்லூரிக்கு வீட்டிலிருந்து வருகின்றனர் அல்லது விடுதியிலிருந்து வருகின்றனர்' என்பது பிரிநிலை உரை. இவ்வுரையில் 'கல்லூரி மாணவர்கள்' என்ற தொகுதி இருபகுதிகளாகப் பிரிக்கப்படுகிறது. இப்பகுதிகளுக்குப் பிரிநிலைகள் என்பது பெயர். எழுவாய் ஒவ்வொரு பிரிநிலையோடும் தொடர்பு கொள்வதால் இதற்குப் பிரிநிலை உரை என்பது பெயர்.

பிரிநிலை உரை எழுவாயும் அதன் பிரிநிலைகளும் என்று இருபகுதிகளைக் கொண்டது. பிரிநிலைகள் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்டதாக இருக்கலாம். சரியான பிரிநிலை உரையில் 'முற்றும் நீக்கி'களாகவும், 'மொத்தத்தில் முழுமை'யாகவும் இருக்கவேண்டும்.

சார்பற்ற உரையின் வகைகள்: சார்பற்ற உரையில் பயன்படுத்தப்படும் எழுவாய்ச் சொல்லின் அளவு, எழுவாய் – பயனிலைச் சொற்களிடைக் காணும் தொடர்பின் தன்மை ஆகியவற்றைக் கொண்டு சார்பற்ற உரைகளை வகைப்படுத்துவர். சார்பற்ற உரைகள் 5 வகைப்படும். அவை உடன்பாட்டு நிறையுரை, எதிர்மறை நிறையுரை, உடன்பாட்டுக் குறையுரை, எதிர்மறைக் குறையுரை, ஒற்றையுரை எனப்படும்.

நிறையுரையும் குறையுரையும்: எழுவாய்ச் சொல் உரையில் முழுமையாகப் பயன்படுகிறதா குறைவாகப் பயன்படுகிறதா என்பதைக் கொண்டு உரையின் அளவு முடிவு செய்யப்படும். எழுவாய்ச் சொல் உரையில் முழுமையாக இடம்பெற்றால் அது நிறையுரை; முழுமைக்குக் குறைவாகப் பேசப்பட்டால் அது குறையுரை. சான்றாக, 'மனிதர்கள் அனைவரும் இறப்பவராவர்', 'பெண்கள் எவரும் தேவதைகள் அல்லர்' என்பன நிறையுரைகள். இவ்வுரைகளில் 'மனிதர்கள்', 'பெண்கள்' என்ற எழுவாய்ச் சொற்கள் முழுமையாக நிறையளவில் பேசப்படுகின்றன. சில உரைகளில் எழுவாய்ச் சொல் முழுமையாகப் பேசப்படிராது. எடுத்துக்காட்டாக, 'சில ஆசிரியர்கள் அறிஞர்கள் ஆவர்', 'சில வழக்கறிஞர்கள் பொய்யுரைப்போர் அல்லர்' என்பனவற்றைக் கூறலாம். இவ்வுரைகளில் 'ஆசிரியர்கள்' 'வழக்கறிஞர்கள்' என்ற எழுவாய்ச் சொற்கள் முழுமைக்குக் குறைவாகவே பேசப்படுகின்றன. 'அனைத்து ஆசிரியர்கள்' பற்றியும் 'அனைத்து வழக்கறிஞர்கள்' பற்றியும் இவ்வுரைகள் குறிப்பிடவில்லை. எனவே, இத்தகைய உரைகள் குறையுரைகள் எனப்படும்.

உடன்பாட்டுரையும் எதிர்மறை உரையும்: எழுவாய் பயனிலைச் சொற்களின் தொடர்பு இரு வகைப்படும். எழுவாய்ச் சொல் பயனிலைச் சொல்லின் உட்புகல் ஒருவகைத் தொடர்பு; பயனிலைச் சொல்லிருந்து எழுவாய் நீங்கல் மற்றொரு வகைத் தொடர்பு. இத்தொடர்புகள் முறையே 'உட்புகல்' 'வெளிநீங்கல்' எனப்படும். உட்புகல் தொடர்பமைந்த உரையை உடன்பாட்டுரை யென்றும் வெளிநீக்கத் தொடர்பமைந்த உரையை எதிர்மறை உரையென்றும் கூறுவர். எடுத்துக்காட்டாக, 'மனிதர்கள் அனைவரும் இறப்பவர் ஆவர்', 'சில ஆசிரியர்கள் அறிஞர்கள் ஆவர்' என்பனவற்றைக் கூறலாம். இவ்வுரைகளில் பயனிலைச் சொல்லோடு எழுவாய்ச் சொல் முழுமையாகவோ பகுதியாகவோ உட்புகுவதைக் காணலாம். இத்தகைய உரைகள் உடன்பாட்டு உரைகள் எனப்படும். 'பெண்கள் எவரும் தேவதைகள் அல்லர்', 'சில வழக்கறிஞர்கள் பொய் பேசுவோர் அல்லர்' என்ற உரைகளில் எழுவாய்ச் சொல் முழுமையாகவோ பகுதியாகவோ பயனிலைப் பதத்திலிருந்து வெளிநீக்கம் பெறுவதைக் காணலாம். இதுபோன்ற உரைகள் எதிர்மறை உரைகள் எனப்படும்.

சார்பற்ற உரை ஒவ்வொன்றுக்கும் அளவு, தன்மை என இரண்டு உண்டு. அவ்விரண்டின் அடிப்படையில் உரைகளை நான்கு வகையாகப் பிரிக்கலாம். அவை உடன்பாட்டு நிறையுரை, எதிர்மறை நிறையுரை, உடன்பாட்டுக் குறையுரை, எதிர்மறைக் குறையுரை எனப்படும். இந்நால்வகை உரைகளுக்கும் வரையறுக்கப்பட்ட வடிவமுண்டு. இவ்வடிவத்தில் தான் உரைகள் வெளியிடப்பட வேண்டும். உரைகளும் அவற்றுக்கான வடிவமும் பின்வருமாறு:

(குறிப்பு: எ – எழுவாய்; ப– பயனிலை)

உடன்பாட்டு நிறையுரை :
'எ' அனைத்தும் 'ப' ஆகும்.

எதிர்மறை நிறையுரை :
'எ' எதுவும் 'ப'ஆகா.

உடன்பாட்டுக் குறையுரை :
'எ' சில 'ப' ஆகும்.

எதிர்மறைக் குறையுரை :
'எ' சில 'ப' ஆகா.

**ஒற்றையுரை:** தனிப்பட்ட ஒருவரைப் பற்றிப்பேசு கிற உரை 'ஒற்றையுரை' எனப்படும். எடுத்துக்காட்டாக, 'அரிசுடாட்டில் அளவையியலறிஞர் ஆவார்', 'காந்தி அடிகள் வன்முறையாளர் அல்லர்' எனக் கூறலாம். இவ் உரைகள் தனிப்பட்டவர்களைப் பெயர் சுட்டிப் பேசுவதால் இவை ஒற்றையுரைகளாகும். ஒற்றையுரைகள் யாவும் நிறையுரைகளாகக் கருதப்படும்.

**இக்கால உரை வகைகள்:** பண்டை அளவையியல் அறிஞர்கள் எழுவாய், பயனிலைச் சொற்களின் அளவுக்கும் அவற்றினிடையே உள்ள தொடர்பின் தன்மைக்கும் முதன்மை தந்து உரைகளை வகைப்படுத்தினர். இக்கால அறிஞர்கள் எழுவாய், பயனிலை என்று கொள்ளாமல், சொற்களின் தன்மை, சொற்களின் தொடர்பு, உரையின் வடிவம் ஆகியவற்றைக் கொண்டு உரைகளை வகைப்படுத்துகின்றனர்.

**தனியுரையும் கூட்டுரையும்:** உரைகள் பொதுவாக இருவகைப்படும். அவை தனியுரை, கூட்டுரை எனப் படும். இரண்டு சொற்களும், அவற்றுக்கிடையே எளிய தொடர்பும் இருந்தால் அது தனியுரை எனப்படும். தனியுரைகள் இரண்டும் இரண்டுக்கு மேலும் சேர்ந்தால் அது கூட்டுரை எனப்படும். தனியுரை நான்கு வகைப்படும். அவை எழுவாய் அற்ற உரை, எழுவாய்-பயனிலை உரை, இன-உறுப்பு உரை, தொடர்பு உரை ஆகியன.

**எழுவாய் அற்ற உரை:** விருப்பு, வியப்பு, அச்சம், சினம் போன்ற உணர்வுகள் மேலிடும்போது கருத்துகள் விரைந்து வெளிவரும். அப்போது பயனிலை மட்டுமே குறிப்பிடப்படுகிறது. எழுவாய் இல்லை என்றாலும் குரல் ஒலியும் தொனியும் பொருளைத் தெளிவுபடுத்திவிடும். செய்திகளை வெளிப்படுத்தும் வாக்கியங்கள் எல்லாம் உரைகளே என்னும் இக்கால அளவையியல் கருத்துப்படி எழுவாய் அற்ற இவ் வாக்கியங்களும் உரைகளே. எடுத்துக்காட்டாக, 'ஐயோ! தீ!' என்றும் 'திருடன்! திருடன்!' என்றும் வெறும் பயனிலையைச் சொல்லிக் கத்துகின்றனர். கேட்கிற பிறரும் பொருளைப் புரிந்து கொள்கின்றனர். 'கூரையின் மேல்காணப்படுவது தீ ஆகும்', 'அதோ ஓடுகிறவன் திருடன் ஆவான்' என்று எழுவாய் வைத்துச் சொல்லப்படும் உரை அச் சூழ்நிலைக்குப் பொருந்தாது.

**எழுவாய்-பயனிலை உரை:** பயனிலை என்பது ஒன்றின் பண்பை அல்லது குணத்தைக் குறிக்கும். எழுவாய், அதன் குணம் என்ற இரு சொற்கள் ஓர் உரையில் தொடர்பு கொண்டால் அது எழுவாய்-பயனிலை உரை எனப்படும். எடுத்துக்காட்டாக, 'இந்தத் தாளின் நிறம் வெண்மை', 'வணிகர்களுக்கு நேர்மை இல்லை' எனக் கூறலாம். இவை எழுவாய்-பயனிலை உரைகள்.

**இன-உறுப்பு உரை:** ஓர் இனமும் அதன் உறுப்பும் ஆகிய இருசொற்கள் தொடர்பு கொள்ள அமைவது இன-உறுப்பு உரை. எடுத்துக்காட்டாக, 'என் நண்பன் ஒரு மாணவன்' என்பதைக் குறிப்பிடலாம். 'மாணவன்' என்ற இனத்தில் 'என் நண்பன்' ஓர் உறுப்பினன் என்பதை இவ்வுரை காட்டுகிறது. சில இடங்களில் ஓர் இனமும் அதன் உள் இனமும் தொடர்புபடுத்தப்படலாம். எடுத்துக்காட்டாக, 'சைவர்கள் அனைவரும் இந்துக்கள்' இதுவும் இன-உறுப்பு உரையாகும். இவ்வுரையில், 'இந்துக்கள்' ஒரு பெரும் இனம்; 'சைவர்கள்' ஓர் உள் இனம்.

இக்காலக் குறியீட்டளவை, உரைகளைக் குறியீடுகள் மூலம் வடிவமைக்கிறது. இனத்தைக் குறிக்க 'க', 'ச', 'ட', ...... என்ற உயிர்மெய் எழுத்துகளையும், உறுப்பைக் குறிக்க 'அ' 'இ', 'உ' ...... என்ற உயிர் எழுத்துகளையும் பயன்படுத்தலாம். '$\in$' என்ற குறியீடு 'இதில் ஓர் உறுப்பு' என்ற பொருள் தரும். இக்குறியீடுகளைப் பயன்படுத்தி, 'என் நண்பன் ஒரு மாணவன்' என்ற உரையை வடிவமைத்தால், 'அ $\in$ க' ('அ', 'க' வில் ஓர் உறுப்பு) என்றமையும். (எ-டு) தமிழ் ஓர் இலக்கியமொழி அ $\in$ க, சிங்கம் வீட்டு விலங்கன்று அ$\in$க. இங்கு (– –) என்ற குறியீடு 'அன்று' என்று பொருள்படும்.

**தொடர்புரைகள் :** சொற்களுக்கு முதன்மை தாராமல், சொற்களின் இடம், தொடர்பின் தன்மை, தொடர்பின் போக்கு என்பனவற்றுக்கு முதன்மை தரும் உரைகள் தொடர்புரைகள் ஆகும். இவ்வகை உரைகள் உரையில் இடம்பெறும் சொற்களின் எண்ணிக்கைக்கேற்ப இருசொல், முச்சொல், நாற்சொல் தொடர்பெனப் பெயர்பெறும். தொடர்பு ஒரு சொல்லிலிருந்து தொடங்கிப் பிற சொற்களுக்குச் செல்லும். இதனைத் தொடர்பின் போக்கு அல்லது திசை என்பர். எந்தச் சொல்லிலிருந்து தொடர்பு தொடங்குகிறதோ அது தொடர்பு கொள் சொல் என்றும், எந்தச் சொல்லுக்குத் தொடர்பு செல்கிறதோ அது தொடர்புபடு சொல் என்றும் சொல்லப்படும். 'தேசிய வருவாய் பாதிப்பது வாழ்க்கைத் தரத்தை' என்பது ஒரு தொடர்புரை. இவ்வுரையில் 'தேசிய

வருவாய்' என்பது தொடர்பு கொள்சொல்; 'வாழ்க்கைத்தரம்' என்பது தொடர்பு-படுசொல்; 'பாதிப்பது' என்பது தொடர்புச்சொல். தொடர்பு கொள் சொல்லிலிருந்து தொடர்புபடுசொல்லிற்குத் தொடர்பின் திசை செல்கிறது.

குறியீட்டு அளவையியலில் தொடர்புரையைப் பின்வருமாறு வடிவமைக்கின்றனர். 'அ,இ,உ...' என்ற எழுத்துகள் சொற்களையும் 'தொ' என்ற எழுத்து தொடர்பினையும் குறிக்கும். இரண்டு சொற்கள் கொண்ட உரையின் வடிவம் 'அதொஇ' என்றும், இரண்டுக்கு மேற்பட்ட சொற்கள் இருப்பின் 'தொ (அ,இ,உ)' என்றும் குறிக்கப்படுகிறது.

**தொடர்புரையின் வகைகள்:** பதங்களின் இடம் மாறும் தன்மையைப் பொறுத்துத் தொடர்புரைகளைச் சமச்சீர், அசமச்சீர், ஐயச்சமச்சீர்த்தொடர்புரை என வகைப்படுத்துகின்றனர். சொற்களை இடம் மாற்றினாலும், தொடர்புசெல் திசையை மாற்றினாலும் உரையின் பொருள் மாறாதிருக்குமானால் அது சமச்சீர் தொடர்புரை எனப்படும். இவ்வுரையில் தொடர்பு கொள் சொல் தொடர்புபடு சொல் ஆகிய இரண்டுக்கும் சமமான இடமும் மதிப்பும் உண்டு. எனவே, சொற்கள் இடம் மாறுவதால் உரையின் பொருள் மாறுவதில்லை. 'இராமன் சகோதரன் இலக்குவன்' என்பது சமச்சீர் தொடர்புரை. சமச்சீர் தொடர்புரைகளின் மாற்றம் எப்போதும் ஏற்புடைய அனுமானமாக இருக்கும்

சொற்களை இடம் மாற்றினாலும், தொடர்பு செல் திசையை மாற்றினாலும் உரையின் பொருள் முற்றிலும் மாறிவிடும் என்றால் அவ்வுரை 'அசமச்சீர் தொடர்புரை' எனப்படும். அசமச்சீர் தொடர்புரையில் சொற்களுக்கு இடம் மாறும் தகுதி கிடையாது. எடுத்துக்காட்டு, 'இராமன் இராவணனை வென்றான்' என்பது. இது அசமச்சீர் தொடர்புரை. 'வென்றான்' என்ற தொடர்பின் திசை இராமனிலிருந்து இராவணனுக்குச் செல்லுமே தவிர, மாறிச் செல்லாது.

சில தொடர்புகளைச் சமச்சீர் என்றோ, அசமச்சீர் என்றோ உறுதியாகச் சொல்ல முடியாது. சில தொடர்புகள் சமச்சீராகச் சில இடங்களிலும், அசமச்சீராகச் சில இடங்களிலும் அமையக்கூடும். அவற்றை 'ஐயச்சமச்சீர்' என்பர். எடுத்துக்காட்டு, 'என் நண்பன் ஒரு பெண்ணை விரும்புகின்றான்' என்பது. இது ஐயச்சமச்சீர் தொடர்புரை. அந்தப் பெண் என் நண்பனை விரும்பலாம் அல்லது விரும்பாமலும் இருக்கலாம். உறுதிப்படுத்த முடியாதென்பதால் இது ஐயச் சமச்சீர் தொடர்பு எனப்படுகிறது.

**கூட்டுரைகள்:** ஒன்றுக்கு மேற்பட்ட தனியுரைகள் ஒன்று சேர்ந்து அமைகிற உரைக்குக் கூட்டுரை என்பது பெயர். எடுத்துக்காட்டு, 'ஒருவன் நஞ்சுண்டான் எனின் அவன் இறந்து விடுவான்' என்பது. இக்கூட்டுரையில், 'ஒருவன் நஞ்சுண்டான்', 'அவன் இறந்துவிடுவான்' என்று இரண்டு தனியுரைகள் சேர்ந்திருப்பதைக் காணலாம். கூட்டுரையில் இடம் பெறும் தனியுரைகளை, 'க,ச,ஞ...' என்ற எழுத்துகளால் குறிக்கலாம். தனியுரைகள் சேர்கிற தன்மையைக் கொண்டு ஆறு வகையான கூட்டுரைகளை அமைக்கின்றனர். அவை எதிர்மறை உரை, இணைப்புரை, உட்கிடையுரை, தழுவும் பிரிப்புரை, தழுவாப் பிரிப்புரை, சமநிலை உரை எனப்படும்.

**எதிர்மறை உரை:** இவ் உரையும் ஒரு கூட்டுரையே என்பது இக்கால அளவையியல் கருத்து. ஒரு தனியுரை என்பது உடன்பாட்டுரையாக இருக்க வேண்டும். 'என்பது உண்மையன்று' என்ற மற்றொரு தனியுரையைச் சேர்ப்பதால் எதிர்மறை உரை கிடைக்கும். 'மாணவர்கள் கல்லூரிக்கு வரவில்லை' என்பது சரியான எதிர்மறையுரை அன்று. 'மாணவர்கள் கல்லூரிக்கு வந்தனர் என்பதுண்மையன்று' என்று கூட்டுரையாக அமைப்பதே சரியான எதிர்மறை உரையாகும். 'என்பது உண்மையன்று' என்ற எதிர்மறையைக் காட்ட '—' என்ற குறியீட்டைப் பயன்படுத்துகின்றனர். எடுத்துக்காட்டாக, உரை: வல்லரசுகள் படைக்குறைப்பு ஒப்பந்தம் செய்தன. (க) எதிர்மறை உரை: வல்லரசுகள் படைக்குறைப்பு ஒப்பந்தம் செய்தன என்பது உண்மையன்று (–க) உரை: வழக்குரைஞர்கள் உண்மை பேசுவதில்லை (க) எதிர்மறை உரை: வழக்குரைஞர்கள் உண்மை பேசுவர் என்பது உண்மையன்று (–க).

**இணைப்புரை:** ஒன்றுக்கு மேற்பட்ட தனியுரைகள் ஆழ்ந்த அளவையியல் தொடர்பின்றி 'மற்றும்', 'மேலும்' என்னும் சாதாரண இணைப்புச் சொற்களைக் கொண்டு சேர்க்கப்படும் கூட்டுரையை இணைப்புரை என்பர். 'மற்றும்', 'மேலும்' என்னும் இணைப்புச் சொற்களுக்கு '.' என்னும் குறியீடு தரப்படுகிறது. குறியீட்டளவையில் 'க' 'ச' என்பவை தனியுரைகள்; இவ்விரு உரைகளைச் சேர்த்து உண்டாக்கும் இணைப்புரை (க.ச) என அமையும். (எ–டு) சிற்றூர் மக்கள் உழவர்கள். மேலும் அவர்கள் பண்புள்ளவர்கள் (க.ச). அரசியல்வாதிகள் பொதுநலவாதிகள். மேலும் அவர்கள் நல்லவர்கள் (க.ச).

**உட்கிடையுரை:** விளைவைக் காட்டும் தனியுரையும் அதற்கான காரணத்தைக் காட்டும் தனியுரையும்

சேர்ந்த அமைப்பு உட்கிடை உரை எனப்படும். உட்கிடையுரையின் ஒரு பகுதி மற்றொரு பகுதியில் மறைந்து கிடப்பதால் இது இப்பெயர் பெறுகிறது. எடுத்துக்காட்டு, 'பொருள்களின் தேவை மிகுந்தால் விலை உயரும்' என்பது ஒருவழி. கட்டுப்பாட்டுரை என்றும் இதனைக் கூறுவர். 'எனின்', 'என்றால்', 'அதனால்', 'ஆல்' போன்ற கட்டுப்பாட்டுச் சொற்கள் உட்கிடை இணைப்பைக் காட்டும். உட்கிடை இணைப்பைக் குறிக்க ' ' என்ற குறியீட்டைப் பயன்படுத்துகின்றனர். உட்கிடை உரையில் இடம்பெறும் தனியுரைகள் பொருள் தொடர்பு உடையனவாக இருக்க வேண்டிய தேவை இல்லை. உட்கிடை இணைப்பிருந்தால் போதும். அக்கட்டுரை உட்கிடையுரை எனக் கருதப்படும். குறியீட்டளவையில் உட்கிடை உரை க$>$ச எனக் குறிக்கப்பெறும். எடுத்துக்காட்டு: நல்லாட்சி நடக்கிறது என்றால் அங்கே மக்கள் மகிழ்ச்சியாக இருப்பார்கள் (க$>$ச). உலோகங்கள் வெப்பப்படுத்தப்பட்டால் அவை விரிவடையும் (க$>$ச).

**தழுவும் பிரிப்புரை**: ஒன்றையொன்று தழுவி நிற்கும் தனியுரைகள் சேர்ந்த கூட்டுரை தழுவும் பிரிப்புரையாகும். இக்கூட்டுரையில் அமையும் தனியுரைகள் அனைத்தும் உண்மையாக இருக்கலாம். 'பேராசிரியர்கள் பயிற்றுவதில் திறமைசாலிகள் அல்லது ஆராய்ச்சித்திறம் உள்ளவர்கள்' என்பது உரை தழுவும் பிரிப்புரை. பேராசிரியர்களைப்பற்றி இக்கூட்டுரையில் வரும் இரண்டு தனியுரைகளும் உண்மையாகலாம். இரண்டு தனியுரைகளும் முற்றும் நீக்கிகளாக இல்லாமல் ஒன்றையொன்று தழுவும் நிலையில் உள்ளன. எனவே, இக்கூட்டுரை தழுவும் பிரிப்புரை எனப்படுகிறது. தழுவும் பிரிப்புரையில் 'அல்லது' என்ற இணைப்புச் சொல் செயற்படுகிறது. 'அல்லது' என்ற இணைப்புச் சொல்லுக்குக் குறியீடாக '$\vee$' என்பதைக் குறிக்கின்றனர். எனவே, தழுவும் பிரிப்புரையின் குறியீட்டு வடிவம் (க$\vee$ச) என்பதாகும். (எ-டு) மகாத்மா காந்தி அரசியலறிஞர் அல்லது சீர்திருத்தவாதி (க$\vee$ச). அவன் கல்வியில்லாதவன் அல்லது பண்பில்லாதவன் (க$\vee$ச).

**தழுவாப் பிரிப்புரை**: ஒரே சூழ்நிலையில் உண்மையாக இருக்கமுடியாத இரண்டு தனியுரைகள் சேர்ந்த கூட்டுரைக்குத் தழுவாப் பிரிப்புரை என்பது பெயர். இக்கூட்டுரையில் இடம்பெறும் தனியுரைகளுள் குறைந்த அளவு ஒன்றேனும் பொய்யென அமைய வேண்டும். 'இரண்டும் உண்மையல்ல', 'எல்லாம் உண்மையல்ல' என்னும் தொடர்கள் தழுவாப் பிரிப்புரையின் இணைப்புகளாக அமைகின்றன. எடுத்துக்காட்டாக, 'ஒரு குழந்தை ஆணாகவும் இருக்கிறது பெண்ணாகவும் இருக்கிறது என்னும் இரண்டும் உண்மையல்ல' என்பதைக் குறிப்பிடலாம். இவ்விரு தனியுரைகளும் உண்மையாக இருத்தல் முடியாது. ஏதேனும் ஒன்று பொய்யாக இருக்கும். 'இரண்டும் உண்மையல்ல' என்ற தொடருக்கு '$\wedge$' என்று குறியீடு தரப்படுகிறது. எனவே, இக்கூட்டுரையின் அமைப்பு (க$\wedge$ச) என்பதாகும். (எ-டு) எண்கள் ஒற்றையாகவும் இரட்டையாகவும் இருக்கமாட்டா (க$\wedge$ச). ஒரு பெண் தாயாகவும் மலடியாகவும் இருக்க முடியாது (க$\wedge$ச).

**ஒத்தநிலை உரை (இருவழிக் கட்டுப்பாட்டுரை)**: இரண்டு தனியுரைகள் அளவையில் ஒத்தநிலை உடையவையாகும். சேர்க்கப்பட்டிருந்தால் அக்கூட்டுரை ஒத்தநிலை உரை எனப்படும். இக்கூட்டுரையில் தனியுரைகளை இணைக்கும் இணைப்புச் சொல்லாக, 'என்றால் மட்டுமே', என்ற தொடர் வருகிறது. எடுத்துக்காட்டாக, 'ஒரு பெண் தன் கணவனை இழந்தால் மட்டுமே விதவையாவாள்' என்பது ஒத்தநிலையுரை. இத்தனியுரைகள் இரண்டும் ஒன்றுக்கொன்று உட்கிடையாக இருப்பதாலும், ஒன்றுக்கு மற்றொன்று கட்டுப்பாடானதாலும் இக்கூட்டுரை இருவழிக் கட்டுப்பாட்டுரை என்றும் பெயர்பெறும். இக்கூட்டுரையில் வரும் 'என்றால் மட்டுமே' என்னும் இணைப்புச் சொல்லுக்கு $\equiv$ என்னும் குறியீடு தரப்படுகிறது. எனவே குறியீட்டு அளவையில் இக்கூட்டுரை (க$\equiv$ச) என்ற வடிவம் பெறுகிறது.

**கட்டுரையின் உண்மை/பொய் மதிப்பீடு**: ஒரு கூட்டுரையின் உண்மை/பொய் மதிப்பீடு தனியுரைகளின் உண்மை/பொய் மதிப்பீட்டையும், அத்தனியுரைகளை இணைக்கும் இணைப்புச் சொல்லின் தன்மையையும் கருத்திற்கொண்டு கணிக்கப்படுகிறது. உண்மை/பொய் மதிப்பீடு செய்யப் பின்வரும் நெறிகள் வழிகாட்டுகின்றன. 1. தனியுரையின் உண்மை மதிப்பீட்டுக்கு மாறாக எதிர்மறை உரையின் மதிப்பீடிருக்கும். 2. தனியுரைகளனைத்தும் உண்மையென்றால் மட்டுமே இணைப்புரை உண்மையாகும். 3. முன்னிகழ்ச்சியுரை உண்மையாகவும் பின்னிகழ்ச்சியுரை பொய்யாகவும் இருக்கும்போது மட்டுமே உட்கிடையுரை பொய்யாகும். 4. பிரிநிலைத்தனியுரைகள் அனைத்தும் பொய்யென்றால் மட்டுமே பிரிப்புரை பொய்யாகும். 5. தனியுரைகளின் உண்மை/பொய் மதிப்பீடு ஒன்று போல் இருந்தால் மட்டுமே ஒத்தநிலை உரை உண்மையாகும். க.நா.

துணை நூல்கள்:

**Ambrose, A. and Lazerowitz, M.,** Fundamental of Symbolic Logic, Holt, Rinehart & Winston Inc., New York, 1962.

Copi, I., Symbolic Logic, The Macmillian Co., New York, 1967.

Lewis C.I. And Langford, C.H., Symbolic Logic, The Centry Co., New York, 1932.

Stebbing, L.S., A Modern Introduction to Logic, Thomas, Y. Crowel Co., New York, 1930.

**உரைச்சூத்திரம்**: உரையாசிரியர்கள் தாம் எடுத்துக்கொண்ட நூற்பொருளைப் புலப்படுத்தற்கு விரித்துக் கூறும் விளக்கங்களுள், பயில்வோருக்கு இன்றியமையாதவை எனக் கருதும் பொருளைப் பயில்வோர் மீண்டும் மீண்டும் நினைவுகூர்தற் பொருட்டு, அமைத்துக் கூறும் எளிய இனிய செய்யுளை உரைச்சூத்திரம் என்பர்.

உரைச்சூத்திரங்கள் பெரும்பான்மையும் நூற்பா யாப்பிலும் வெண்பா யாப்பிலும் அமைந்திருக்கும்; சிறுபான்மை காரிகை யாப்பிலும் அமைந்திருக்கும்.

வீரசோழிய உரையாளர் சாதித்தன்மை என்னும் அணியை விளக்குமிடத்து, கருங்காக்கை வெண்குருகு என எடுத்துக்காட்டி உரைக்கருத்தாக, 'இன்மை இகழா தினத்திற் கொத்த, தன்மை யிட்டுரைப்பது சாதித் தன்மை' என நூற்பா யாப்பில் உரைச் சூத்திரம் செய்தார் (வீர. அலங் 10. உரை).

யாப்பருங்கல விருத்தி உரையாளர் விருத்தச் சந்தங்களின் எழுத்து வரையறை பற்றிக் கூறுமிடத்து, 'ஓரடியுள் எழுத்தெண்ணி அவற்றை நான்கினான் மாற நான்கடிக்கும் எழுத்தாமெனக் கொள்க' என்று விளக்கி, பின் அக்கருத்தினையே, 'அடியுள் எழுத்தினை நான்கினான் மாற, முடியுமாம் நான்கடிக்கும் எண்' என வெண்பா யாப்பினால் உரைச்சூத்திரம் செய்தார் (யா. வி. 95 உரை).

பிரயோக விவேக நூலாசிரியர் தம் நூலுரையுள் 98 உரைச்சூத்திரங்கள் செய்தமைத்துள்ளார். அவர் பிரதிக்கினை என்பதற்குப் பொருள் கூறுமிடத்து, 'பிரதிக்கினை மேற்கோளெனப் பெயர் பெறும்' என நூற்பா யாப்பில் உரைச்சூத்திரம் கூறினார் (பி.வி. 2. உரை). ச.பா.

**உரைச் செய்யுள்** செய்யுள் வகையாகத் தொல்காப்பியம் (செய்.75) கூறும் ஏழனுள் ஒன்று. இது சீரான் அமையும் அடிகளும் பா ஓசையுமின்றி அளவு வரைப்படாமல் செய்யப்படுவதாகும்.

உரைச்செய்யுள் அறமுதலாய மும்முதற்பொருள் பற்றியும், வீடு பேற்றிற்குரிய நெறிபற்றியும், அகமும் புறமுமாகிய ஒழுகலாறு பற்றியும் வெளிப்படையும் குறிப்புமாக மெய்ப்பாடமைய யாக்கப்படுவதாகும்.

இது தொடைநயமும் வண்ணமும் அணியும் கொண்டும் அவையின்றியும் அமையும். உரைச் செய்யுளை உரைநடை என்றும் கட்டுரையென்றும் வழங்குவர். தொல்காப்பியம் அடி வரையறை இல்லாத செய்யுள் வகையுள் ஒன்றாக இதனைக் கூறும்.

உரைச்செய்யுள் நான்கு வகைப்படும் எனத் தொல்காப்பியம் (செய். 165) கூறும். (1) கதை தழுவி வரும் ஏனைய தொடர்நிலைச் செய்யுள் இலக்கியத்துள் கதைநிகழ்வுகளைத் தொடர்புபடுத்தற்கு இடையிடையே ஓரிரு சொற்களின் அளவாகவும், சில பல தொடர்கள் அளவாகவும் அமைந்து வருதல் ஒருவகை. இது சிலப்பதிகாரத்துள் இடையிடையே கூறப்பெறும் உரையும், உரைபெறு கட்டுரையும் போல்வதாகும். அவ்வாறு வருவனவற்றைப் 'பாட்டிடை வைத்த குறிப்பு' என்பார் தொல்காப்பியர்.

(2) பாவடிவாக நடவாமல் அறஞ்செயவிரும்பு, ஆறுவது சினம், கண்டொன்று சொல்லேல் என்றாங்குப் பாட்டுத் தொடர்போல வருவதும், அகமும் புறமும் பற்றிய பாக்களுக்குத் திணையும் துறையும் கூறும் குறிப்பாக வருவதும் ஒருவகை. இதனை அவர், 'பாவின்றெழுந்த கிளவி' என்பார்,

(3) இயங்குதிணையும் நிலைத்திணையும் பற்றிவரும் காட்சிப்பொருளும் கருத்துப்பொருளும் உள்பொருளும் இல்பொருளுமாக உள்ள அஃறிணைப் பொருள்களை உவம வேறுபாடாகிய உருவகத்தான் உயர்திணைக்குரிய பண்பும் செயலும் உடையன போல வைத்து, ஒரு பயன் கருதிக் கற்பனை மொழியாகச் செய்யப்படுவது ஒருவகை (பஞ்சதந்திரக்கதை போல்வன). இதனைத் தொல்காப்பியர், 'பொருளொடு புணராப் பொய்ம் மொழி' என்பார்.

(4) ஆடலும் பாடலும் கொண்டு கதை தழுவி வரும் கூத்தின்கண் முன்னரும் பின்னரும் கதையை இயக்குவோன் (விதூடகன்) கூற்றாகத் தோன்றி, எள்ளல், இளமை, பேதைமை, மடமை என்னும் பொருள்களின் அடிப்படையில் கேட்போர் வெண்ணகை கொள்ளுமாறு நகைமொழியாக வருவன ஒருவகை. இதனை அவர், 'பொருளொடு புணர்ந்த நகைமொழி' என்பார்.

இந்நூல் வகை யாவும் பற்றித் தெளிவாக விளங்கிக் கொள்ளுதற்குரிய பண்டையிலக்கியங்கள் இக்காலத்து அரியவாயின.

இனி, 'இம்மகள் கண் நல்லவோ கயல்நல்லவோ' என்றாற்போல உவமம் முதலிய அணிநயம்பட வரும் தொடர்களை உரையென்னும் செய்யுள் என்பார் ஒரு சாரார் (சேனாவரையர், தொல். சொல். 16). யாப்பருங்கல விருத்தியுரையாசிரியர் போல்வார் சூத்திரத்திற்குரிய உரைவிளக்கங்களை ஓரோவிடத் துப் பாவாக அமைத்து, இவற்றை விரித்துரைத்துக் கொள்க என்பார். இவை போல்வன உரையாகிய செய்யுள் என்பது அவர் கருத்தாகத் தெரிகின்றது. திருச்சிற்றம்பலக் கோவையார் பாக்களுள் சிலவற்றை எடுத்து, அவற்றின் பொருள் நுட்பங்களை ஆசிரியப் பாவாலமைத்துக் கூறும் கல்லாடத்தையும், அது போன்ற இலக்கியங்களையும் உரைச்செய்யுளின் ஒருவகை வளர்ச்சியாகக் கருதலாம்.

இக்காலத்துப் பலதுறையினரால் வெளியிடப் பெறும் விளம்பர உரைகளுள் பல உரைச்செய்யுள் எனக் கொள்ளுவதற்கு ஏற்பனவாக விளங்குகின்றன.

ச.பா.

**உரைத்தாம் என்றல்** நன்னூலார் கூறியுள்ள உத்திகள் முப்பத்திரண்டனுள் (நன். 14) ஒன்று. முன்னர் யாதானுமொரு காரணம் பற்றிக் கூறப்பட்டுள்ள தனைப் பின்னருங் கூறவேண்டிய சூழ்நிலை உண்டாகும்போது, இதனை முன்னரே கூறினோம் என்னும் கருத்தில் பின்னர்க் கூறவேண்டிய இடத்தில் கூறாது விடுவது உரைத்தாம் என்னும் உத்தியின் பாற்படும். உரைத்தாம் என்பதற்குக் 'கூறினோம்' என்பது பொருள்.

நன்னூலார் (99) எழுத்துகளுக்கு மாத்திரை கூறும்போது அளபெடை, நெடில், குறில், குறுக்கம் ஆகிய வகையில் அமையும் எழுத்திற்கெல்லாம் அவற்றிற்குரிய மாத்திரையினை 'மூன்றுயிர் அளபு' எனத் தொடங்கும் நூற்பாவில் கூறியுள்ளார். அந்த நூற்பாவில் உயிர்மெய் எழுத்திற்குத் தனியாக மாத்திரை இவ்வளவு என்பதைக் குறிப்பிடவில்லை. ஆனால், அவ்வாசிரியர் (நன். 89) உயிர்மெய் எழுத்தினை விளக்கும்போது 'உயிர் அளவாய்' என்று குறிப்பிட்டுள்ளார். அதனை உளங்கொண்ட உரை யாசிரியர், 'உயிரளவாய்' என்றமையால், ஒரு மெய் எழுத்து உயிர்மெய் ஆனபோதும், அதற்கு மாத்திரை அம்மெய்யின்மேல் ஏறி நிற்கும் உயிரெழுத்தின் அளவேயாகும் எனக் கொண்டு உரை கூறியுள்ளார். உயிர்மெய்க்கு அதன்கண் ஏறியுள்ள உயிர் மாத்திரையே அளவாகும் என்னும் செய்தியினை மாத்திரை கூறும் நூற்பாவில் கூறாது விடுத்தமை, 'உரைத்தாம்' என்னும் உத்தியின்பாற்படுவதாகும் என்று சங்கர நமச்சிவாயர் முதலிய உரையாசிரியர் கள் விளக்கியுள்ளனர்.

அ.மா.ப.

**உரைத்தும் என்றல்**: நன்னூலாசிரியர் பவணந் தியார் (நன். 14) தொகுத்துக் கூறியுள்ள முப்பத்திரண்டு உத்திகளுள் 'உரைத்தும் என்றல்' ஒன்றாகும். நூலின் பிற்பகுதியில் விரிவாகச் சொல்லப்படும் ஒன்றினை, ஒரு காரணம் பற்றி முன்னர்க் கூறவேண்டிய சூழ்நிலை உண்டாகுமானால், இதனைப் பின்னர் விரிவாக விளக்குவோம் என்னும் கருத்தில் சுருக்கமாக உரைப் பது என்பது இவ்வுத்தியின் பொருளாகும். நன்னூ லார் பெயர், வினை, இடை, உரி என்னும் தமிழ்ச் சொல் வகை நான்கினையும், நூலின் பிற்பாதியாக அமைந்த சொல்லதிகாரத்தில் பெயரியல், வினை யியல், இடையியல், உரியியல் என்னும் நான்கு இயல் களில் விரிவாகக் கூறுகிறார். முன்னர் அமைந்துள்ள எழுத்ததிகாரப் பதவியலின் தொடக்கத்தில் பதங் களைப் பகாப்பதம், பகுபதம் என இருவகைப் படுத்திக் கூறுகிறார். பெயர், வினை, இடை, உரி ஆகிய சொற்களை விரிவாகக் கூறி, அவையே பகாப் பதம், பகுபதம் என்று இருவகைப்படும் என்று கூற வேண்டியவர், அவற்றைப் பின்னர் விரிவாகக் கூறப் போவதனை உளத்திற்கொண்டு, இவ்விடத்தில் 'பெயர் வினை இடை யுரி நான்கும் பகாப்பதம்' என்றும் 'பொருளிடம் காலம் சினை குணம் தொழி லின், வருபெயர் பொழுது கொள் வினை பகுபதமே' என்றும் (நன். 131, 132) சுருக்கமாகச் சுட்டிக்கூறி யுள்ளார். இவ்வாறு கூறியிருப்பது உரைத்தும் என் றல் என்னும் உத்தியின்பாற்படும் என்று சங்கர நமச் சிவாயர் முதலிய உரையாசிரியர்கள் குறிப்பிட் டுள்ளனர்.

அ.மா.ப.

**உரைநடை** என்னும் தொடர்மொழி உரை, நடை என்னும் இருசொற்களால் அமைந்தது. உரை நடந்து செல்லும் நெறியே உரைநடையாகிறது. பல்வேறு சந்தங்களுக்கும் தாள அமைதிக்கும் ஏற்பப் பாவி நடக்கும் பாவிலும் வேறுபடுத்த வேண்டி இதை உரைநடை என்று வழங்கினார்கள் எனக் கொள்ளுதல் பொருத்தமாகும். உரை என்னும் சொல் தமிழில் நெடுங்காலமாகவே வழக்கில் இருந்து வருகிறது. உரை என்பதற்கு எழுத்துகள் வரி வடிவாய் அமைந்து, ஒலி வடிவாய் அவற் றின் தன்மையை விளக்க வருதல் என்றே பலரும் பொருள் கொள்கின்றனர். அவர்கள், 'உரைக் கப்படுவதால் உரையாயிற்று' என்றனர்; அதாவது, வாயினால் ஒன்றைப் பற்றிப் பொருள் தோன்ற உரைப்பதே உரை எனக் கொண்டனர். எனினும், வெற்றொலியை இச்சொல் குறித்த காலமும் ஒன்று உண்டு. உரை என்பது வெறும் முழக்கத்தையும்

குறிக்க வழங்கியது. மேகங்கள் மலையுச்சியில் சூழ்ந்து இடித்து எழுப்பும் பேரொலியாகிய முழக்கத்தையும் பழங்காலத்தில் உரை என்றே வழங்கினார்கள். 'குன் றம் குமுறிய உரை' என்பது பரிபாடல் (8.35) அடி. எனவே, அக்காலத்தில் ஒலியும் முழக்கமும் உரை யாகக் கொள்ளப்பட்டன என்பது தெரிகிறது.

உரைக்கப்படுவன வெல்லாம் உரையாயின், பாட் டும் வாய்திறந்து உரைக்கப்படுவதுதானே? அதையும் கொள்ளலாமோ? எனின், அவ்வாறு வழக்காறு இன் மையின், அவ்வாறு கொள்ளுதல் பொருத்தமாகாது என்று முடிவு செய்தல் வேண்டும். சிலப்பதிகாரத்தை 'உரை யிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்' என்று கூறுவதும் இது பற்றியேயாம். உரை பாட்டினும் வேறுபட்டது என்பதை இத்தொடர் நன்கு விளக்கு கிறது. இனி, உரை பாட்டினும் வேறுபட்டதாயினும், அதையும் செய்யுளில் அடக்கலாம் என்பர் சிலர். அவர் தம் கருத்துக்கு ஏற்பவே, ஆசிரியர் தொல்காப்பியரும் உரையினைச் செய்யுளியலுள் அமைத்துள்ளமை நோக்கற்பாலது. செய்யப்படுவனவெல்லாம் செய்யுள். எனவே, பாட்டாகச் செய்யப்படுவன பாட்டுச் செய் யுளாதல் போன்று உரையால் செய்யப்படுவனவெல் லாம் உரைநடைச் செய்யுள் என்று கொள்ளல் பொருந்தும். 'செய்யுள்' என்னும் சொல்லுக்குப் பாட்டு, காவியம், உரை என்னும் மூன்று பொருள் களைத் தமிழ் அகராதிகள் குறிக்கின்றன. எனவே, உரையும் ஒருவகைச் செய்யுள் தொகுதி எனக் கொள்ளலாம்.

உரை என்பது பொருளின் தன்மையை உள்ள வாறு உரைப்பதாகும். இதனை ஒரு சான்றினால் விளக்கலாம். தட்டான் பொன்னுக்கு உரை காணும் வழக்கம் பல கட்டுப்பாடுகளுக்கிடையில், நாட்டில் இன்றும் உள்ளது. பொன் சிறந்ததா இல்லையா என்பதை-அதன் உண்மை நிலை, பண்பு, தரம் முத லியன இன்ன வகையன என்பதை உரைத்துக் காண் பது நாடறிந்த ஒன்று. அதன் தன்மையை உணர்த் தும் கல் 'உரை கல்' எனப்படும். எனவே, பொருள் களின் இயல்பை உள்ளது உள்ளவாறே உலகுக்கு உணர்த்துவது உரையாகும். இதைத்தான் 'அடிப் படை மொழி' என்பர் ஆய்வாளர். கற்பனை கல வாததாய் – உணர்ச்சியோ பிற உள்ள நெகிழ்ச்சி களோ காய்தல் உவத்தல் என்ற வேறுபாடுகளோ கல வாதனவாய் ஒரு பொருளின் தன்மையை உரையிட்டு உணரத்தக்க வகையில் காட்டுவதே உரை. ஆனால், பாட்டோ இதற்கு நேர்மாறாக உணர்ச்சி, கற்பனை ஆகியவற்றினிடையே தோய்ந்து, அணிநலம் முதலியன பெற்றுப் பாடுவோன் உள்ளத்தளவு உயர்வோ அன்றித் தாழ்வோ பொருந்தப் பொருளை விளக்குவதாகும். இந்த உண்மையை மேலை நாட்டு அறிஞர்கள் நன்கு விளக்கியுள்ளார்கள். மொழி, இலக்கியம் இரண்டையும் வரையறுத்த ஆய்வாளர் எண்ணத்தை உணர்த்துவது மொழியென்றும் உணர்வை உணர்த்துவது இலக்கியம் என்றும் கூறுவர்.

இவ்வாறு எழுத்துக்கு வரிவடிவம் கொடுக்கும் நிலையிலேயே 'உரை' உண்டாகியிருக்க வேண்டும். உள்ளத்துத் தோன்றிய எண்ணத்தை மற்றவருக்கு உணர்த்த நினைத்த மனிதன் எண்ணி, எண்ணி, எழுத்தெழுத்தாக உச்சரித்து, சொல்லின் பின் சொல் லாக மெல்ல உரைத்திருப்பான். எனவே, முதலில் தோன்றியது உரை எனக் கொள்ளல் பொருத்த மானது.

பாட்டுக்கு அமைந்த இலக்கண வரம்பின்றி, மக்க ளால் எளிமையாக ஒளிமறைவு இன்றி எழுதவும் பேசவும் பயன்படும் ஒன்றே உரைநடையாகும். செய்யுளிலிருந்து உரைநடையைப் பிரித்துக் காட்டு வது எளிதாயினும், இன்றும் திட்டமாக இரண்டை யும் வரையறுக்க இயலாது. ஏனெனில், உயர்ந்த நடையில் செய்யுள் இலக்கணத்தோடு கலவாமல், நல்ல ஓசை நயத்துடன் எழுதும் உரைநடையை 'உரைப் பாட்டு' என்று சொல்வதும் உண்டு. எனவே, செய்யு ளிலிருந்து உரைநடையைப் பிரித்துக் காண்பதை விடுத்து, உரைநடை என்பதை உள்ளவாறு விளக்க முற்படுவது ஏற்புடையதாகும். உரைநடை என்பது இலக்கிய மரபு கெடாத நல்ல நடையில், ஆழ்ந்த கருத்தோடு செய்யுட் சந்தச் சேர்க்கை இன்றியே நல்ல ஓசைநயம் உடையதாகி, ஒளிமறைவு இன்றி உள்ளதை உள்ளபடி உரை இட்டுக் காட்டும் வகை யிலே நேரிய முறையில், கருத்துக்கும் காரணத்துக்கும் பொருத்தமானதாக (ஒன்றனைப் பற்றியோ ஒரு வனைப் பற்றியோ) விளக்கி உரைப்பதாகும்.

கட்டுக்கடங்காது பேசும் அல்லது எழுதும் எல்லா வசனங்களையும் உரைநடை எனக் கொள்வதாகாது. உரைநடை வாக்கியங்கள் இழுமென் மொழியால்- நல்ல ஒழுகிசை நடையால்-தொடர் நலமுடன் ஓசை உணர்த்தும் நெறியான்-நன்கு வளர்ச்சியுற்ற தெள் ளிய நடையில் தெளிந்து செல்லுவனவாக அமைய வேண்டும். மொழிக்கு இன்றியமையாத பெயர் வினை களுடன் சேரும் உரிச்சொற்களின் தகுதியும், அள வறிந்து அவற்றைச் சேர்த்து வழங்கும் முறையும் உரைநடையில் வரையறை செய்யப்பெறல் வேண் டும். தேவையற்ற சிலவற்றை விட்டொழித்தலும் உரைநடைக்கு இன்றியமையாதது. எனவே, உரை நடை என்பது செய்யுள் விதிகளுக்கு விலக்காய் நின்று இலக்கிய நலம் கெடா வகையில், மக்கள்

உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை உலகுக்கு எடுத்துக்காட்டப் பயன்படுவது என்று கொள்ளல் பொருந்தும்.

உலக இலக்கிய வழக்கியல் அகராதி உரைநடை என்பது, பொதுவான சொற்கள் கொண்டு எளிமையில் உரைப்பதென்றும், பாட்டு என்பது அதனினும் வேறுபட்டு எளிமையினும் மாறுபட்டமைவது என்றும் குறிப்பிடுகிறது. இவ் வுரைநடை தமிழ் நாட்டிலும் தொல்காப்பியர் கால முதல் இருந்தது என்றாலும், அது எந்த வகையில் இயங்கிற்று என்பதைக் காண முடியவில்லை. எனினும் மேலை நாடுகளில் மிகவும் பழங்காலத்திலிருந்தே உரைநடை தோன்றி வளர்ந்தது என்பதை அறிஞர் நன்கு காட்டியுள்ளனர். மேலை நாட்டு மொழிகளில் மிக்க பழமை வாய்ந்த கிரேக்க, இலத்தீன் மொழிகளில் கிறித்து பிறப்பதற்கு முன்பிருந்தே உரைநடை வழக்கத்தில் இருந்துள்ளது. கிரேக்க மொழியில் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிலேயே உரைநடை இலக்கியம் இருந்ததாகக் கூறப்படுகிறது. இலத்தீன் மொழியிலும் அவ்வாறே மிகவும் பழங் காலத்தில் (கி.மு. 70 அல்லது 60) உரைநடை இலக்கியம் இருந்தது எனக் காட்டுகின்றனர். அக்காலத்தில் உரைநடை கண்டவர் சிசரோ (Cicero) என்பவர். ஆங்கில, செருமனி நாடுகளில் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டிலேதான் உரைநடைகள் தோன்றி வளர்ச்சியுற்றன என்பர். ஆப்பாட்டு என்பார் கி.பி. 887-இல் ஆங்கிலத்தில் உரைநடை எழுதினார். செருமன் மொழியில் கி.பி.342-இல் முதல் உரைநடை தோன்றிற்று.

கதை வாயிலாக உரைநடையைக் காணும் அட்சன் (Hudson) உரைநடையைப் பற்றி மிகுதியாகக் கூறவில்லை என்றாலும், இரண்டொரு கருத்துகளைத் தெளித்துச் சென்றுள்ளார். அவர் உரைநடையையும் நாடகத்தையும் ஒப்பிட்டுக் காட்டி, உரைநடை மிக எளிமையானது என்கிறார்; உரைநடைக் கதை நூல்கள் சிறியனவாயினும் பெரியனவாயினும், அமைப்பு, கதைமாந்தர் நிலை, அவற்றின் பேச்சு முறை, செயலாற்றலின் காலமும் இடமும் கடந்த நிலை, நடைப் போக்கு, வாழ்க்கைக்குத் தேவையான உண்மையை உணர்த்தும் தன்மை ஆகியவற்றை இன்றியமையாது கொண்டவையாக இருக்க வேண்டும் என்கிறார். இவ்வாறு உரைநடை நூல்கள் நாடகமாயினும் கதையாயினும் கட்டுரையாயினும் வெறுஞ்சொற்களால் ஆக்கப்பட்டுப் பொருளற்ற முறையிலே செல்லாதனவாக, மக்கள் வாழ்வுக்கு ஏற்ற வகையில் நல்ல பொருள் பொதிந்தனவாக, இனிமையும் எளிமையும் உடையனவாக, செம்மை நடையில் செல்வனவாக அமையவேண்டும் என்ற உண்மையை அட்சன் மட்டுமன்றி, வேறு மேலைநாட்டு அறிஞர் பலரும் வற்புறுத்தியுள்ளனர்.

தமிழ் இலக்கியத்தில் இவ்வுரைநடை முன் தோன்ற, நெடுங்காலத்துக்குப் பின் இவ்வுரைநடை போன்றமைந்த நூற்பாக்கள் தோன்றின. பின்னரே பாட்டுத் தோன்றிற்று எனல் பொருந்தும். பொதுவாக நூற்பாக்கள் உண்டான காலம் கிறித்துப் பிறப்பதற்கு ஐந்தாறு நூற்றாண்டுகளுக்கு முற்பட்டது என்பர் ஆய்வாளர். வடமொழி நூற்பாக்களும் ஏறக்குறைய அந்த நூற்றாண்டுகளில்தான் தோன்றியிருக்க வேண்டும். எனவே, உரைநடையை அடுத்து, இந்நூற்பாக்கள் தோன்றியிருக்க வேண்டும். தொல்காப்பியமும் ஏறக்குறைய இக்காலத்திற்குச் சற்றுமுன்பு தோன்றிய ஒன்று என்பது அறிஞர் பலரும் ஏற்றுக் கொள்ளும் உண்மையாகும். இனி, இத்தொல்காப்பியத்தின் செய்யுளியலில் உரையும் பாட்டும் உள்ள நிலைமை காண முடிகிறது. மற்றும், இத்தொல்காப்பியத்தின் வழியே இதற்கு முன்னும் பல இலக்கிய நூல்கள் தோன்றி நிலைத்திருந்தன என்பதையும் உணர முடிகிறது. தமிழ் மொழியின் தொன்மை பல பேரறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப்பெற்ற ஒன்றானமையால், இந்நாட்டுப் பிறமொழிகளைக் காட்டிலும் தமிழில் பழங்காலத்திலேயே உரையும் நூற்பாவும் பாட்டும் ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றி வளர்ந்து நிலவ, அவற்றைத் தொல்காப்பியர் தொகுத்துக் கூறி இலக்கண வரம்பினை உறுதி செய்தார் எனக் கொள்வது பொருத்தமானதாகும். எனவே, உரைநடை பாட்டினும் முந்தியது என்பது தேற்றம்.

பொனுமிடோபிரீ இக்கால உரைநடை நூல்களை மூவகையாகப் பிரிக்கிறார். அவை அனைத்தும் சிறப்பான உரைநடை இலக்கியங்களாகவே அமைகின்றன. வருணனை உரை, விளக்க உரை, உணர்ச்சி உரை என்னும் மூன்று வகைகளே அவர் காட்ட விரும்புவன. ஒரு செயலையோ ஒரு பொருளையோ ஒரு மனிதனையோ பற்றி ஆசிரியர் விளக்கி உரைப்பதே வருணனை உரை. எவ்வாறு செயல்கள் நிகழ்கின்றன என்ற அறிவியல் ஆய்வுகளைக் கூறுவதும், திறனாய்வு முறைகளைக் காட்டுவதும், பொருளில் உள்ள சிறப்பியல்புகளை விளக்கிக் காட்டுவதும் விளக்க உரையாகும். துன்ப எல்லையிலோ இன்பத்தின் பிடிப்பிலோ மகிழ்ச்சிப் பெருக்கிலோ தம்மை மறந்தும் மீறியும் உரைப்பதே உணர்ச்சியுரை.

தமிழ் உரைநடை வளர்ந்தாலும் அதன் வரலாற்றைத் தொடர்ச்சியாக அறிய முடியவில்லை என்பதை எண்ணும் போது சற்றே வருத்தம் உண்டாகிறது.

எழுதப்பெற்ற, வரையறுத்த, திட்டமான வரலாறு இல்லையாயினும், தமிழில் உரைநடை மிகப் பழங் காலந்தொட்டே தொடர்ந்து வாழ்ந்து வருகிற ஒன்று என்பதைக் காட்டச் சான்றுகள் உள்ளன. தொல் காப்பியர் காலத்திலும் அதற்கு முன்பும் இருந்த உரைநடையைக் காண முடியாவிட்டாலும், அதன் நூற்பாவாலும் உரைகளாலும், அவ்வுரையின் விளக் கங்களுக்கு எடுத்துக்காட்டுகளாகக் கூறும் இன்றில லாது அழிந்த சில நூற்பெயர்களாலும் (இராம சரி தமும் பாண்டவ சரிதமும் பெருந்தேவனார் பாரத மும் தகடூர் யாத்திரையும் முதலியன என்று தொல் காப்பிய உரையாசிரியர்களால் காட்டப் பெறுவன) உரை தொன்மை வாய்ந்ததே என்பதை உணர முடி கிறது. மேலும், சங்க இலக்கியங்களுள் சில உரைநடை யைப் போன்றே தனிச்சொல் பெற்றும் பெறாமலும் அமைந்துள்ளன. கடைச்சங்க காலத்து இறுதி எல்லை யில் தோன்றிய சிலப்பதிகாரத்தில் உரைநடையைத் தெளிவாகக் காண முடிகிறது. இதனாலேயே தொல் காப்பிய நூற்பாவிற்கு (செய். 228) உரைகாண வந்த நச்சினார்க்கினியர் அதற்குச் சிலப்பதிகாரத்தையே மேற்கோளாகக் காட்டியுள்ளார்.

‘உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்’ எனப் போற்றப் பெற்ற சிலப்பதிகாரத்தில் உரை நன்கு போற்றப் பெறுகிறது என்றாலும், அடுத்த சில நூற் றாண்டுகளில் தமிழில் உரைநடை வழக்குப் பற்றிய விளக்கம் கிடைக்கவில்லை. கி.பி. எட்டாம் நூற்றாண் டினை ஒட்டிய ‘இறையனார் களவியல் உரை’யே சிறந்த உரையாகக் கிடைத்துள்ளது. அது பாட்டின் நடை உடையதாக உள்ளது.

அடுத்துத் தொல்காப்பியம் போன்ற இலக்கண நூல்களுக்கும், பத்துப்பாட்டு போன்ற இலக்கிய நூல்களுக்கும் உரை கண்ட உரையாசிரியர்கள் தமிழ் உரைநடையினை வளர்த்தார்கள் எனலாம். பின், தொடர்ந்து உரைநடை தமிழில் வளர்ந்ததாயினும் இடையில் பலப்பல வேறுபாடுகளைப் பெற்றது.

இடைக்காலத்தில் ‘மணிப்பிரவாளம்’ என்ற வட மொழி பெரிதும் விரவிய உரை எழுதப்பெற்றது. நாலாயிரத் திவ்வியப் பிரபந்த உரை அந்த வகையி னதே. எனினும் அம்முறை இயற்கைக்கு மாறுபட்ட மையின் வழக்கொழிந்தது. பிற்காலத்தில் பல நூல் களுக்கு உரைகளும் பல இலக்கியங்களுக்கு உரை நடை அமைப்பும் உண்டாயின. இடைக்காலக் கல் வெட்டுகளும் உரைநடையை வளர்த்தன.

மேலைநாட்டவர் தமிழகத்துக்கு வந்தபோது உரைநடையில் ஒரு திருப்பம் ஏற்பட்டது. பல உரை நடை நூல்கள் எழுதப்பெற்றன. விவிலிய நூல் உரை நடையில் மொழி பெயர்க்கப் பெற்றது. புதினம், நாட் குறிப்பு, சிறுகதை போன்றவை தோன்றின. சென்ற நூற்றாண்டில் அரசாங்கப் பதிவேடுகளும், நாளிதழ் சிலவும், பிற கடிதப் போக்குவரத்துகளும் தமிழ் உரைநடையில் அமைந்தன.

இந்த இருபதாம் நூற்றாண்டில் தமிழ் உரை நடை மிகவும் வளர்ந்துள்ளது. இதழ்கள், மலர்கள் புதினங்கள், சிறுகதைகள், நாடகங்கள், கட்டுரைகள் மிகவும் மலிந்து உரைநடையில் தோன்றின. அவற் றுள் சில, வேற்று மொழிச் சொற்கள் இடையிடை கலக்கப் பெற்றனவாயினும், வழக்கற்றுப் போகும் தன்மையில் உள்ளன. தெள்ளிய, இனிய பொருள் தரும் தமிழ் உரைநடையே – அதன் வழி வரும் உரைநடை நூல்களே – காலத்தை வென்று வாழும் என்பது உறுதி. அ.மு.ப.

**உரைபெறு கட்டுரை** என்பது சிலப்பதி காரத்தின் தொடக்கத்தில் அமைந்துள்ள பதிகத்திற் கும் மங்கல வாழ்த்துப் பாடலுக்கும் இடையில மைந்த ஒரு கட்டுரையாகும். அரும்பத உரையாசிரி யர் இதற்கு ‘உரைத்துப் போதுகின்ற கட்டுரை’ என்றும், அடியார்க்கு நல்லார், ‘முற்கூறிய கட்டுரைச் செய்யுள்’ என்றும் பொருள் கூறியுள்ளனர். மேலும், அடியார்க்கு நல்லார், ‘உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் உரைசால் அடிகள் அருள’ என்றமையால் காப்பியங்களுக்குச் சிறுபான்மை இவ்வுறுப்புகளும் சில வரும் எனக் கொள்க’ என்று விளக்கமும் தந்துள் ளார். இதனால், உரை பெறு கட்டுரை பெறுவதும் காப்பிய இலக்கணங்களுள் ஒன்று என்பது புலனா கிறது.

ஒரு கட்டுரை பாட்டினாலோ உரையினாலோ அமையலாம். இவ்விரு வகையாலும் அமைந்த கட்டு ரைகள் சிலப்பதிகாரத்துள் இடம் பெற்றுள்ளன.மூன்று காண்டங்களின் இறுதியிலும் ஒவ்வொரு கட்டுரை உள்ளது. நூலின் இறுதியில் நூற்கட்டுரை என ஒரு கட்டுரையும் உள்ளது. இவை நான்கும் பாவினால் அமைந்தனவாகும். காண்ட இறுதிக் கட்டுரை அக் காண்டத்துக் கூறப்பட்ட சிறப்புச் செய்திகளையும், நூலிறுதிக் கட்டுரை நூலிற் கூறப்பட்ட சிறப்புச் செய்திகளையும் பொருளாகக் கொண்டுள்ளன. நூலின் தொடக்கத்தில் அமைந்த இக்கட்டுரை உடை நடையால் அமைந்துள்ளதனால் இது ‘உரைபெறு கட்டுரை’ என்று குறிப்பிடப்பட்டது.

புகார் நகரக் கோவலன் மதுரையில் கொலை யுண்ட பின்னர், கண்ணகி பாண்டியன்பால் வழக் குரைத்து, மதுரை நகரினை எரித்து மலைநாடு சென்ற பின்னர், அதனைக் கேட்ட சேரன் செங்குட்

டுவன் கண்ணகிக்குக் கோட்டம் அமைத்துச் சிலை நிறுவி வழிபாடு செய்ததையும், அவ்விழாவில் கண்ணகித் தெய்வம் தோன்றி வாழ்த்தியதையும் சிலப்பதிகாரம் கூறுகிறது. கோவலன் கொலைக்குப் பின்னர்ப் பாண்டிய நாட்டு நிலையும் சோழர், கொங்கர் முதலியவர்களின் நாட்டு நிலையும் எவ்வாறமைந்தன என்பதையும், செங்குட்டுவன் தொடங்கிய பத்தினித் தெய்வ வழிபாட்டின் செல்வாக்குத் தமிழகத்திலும் பிறவிடங்களிலும் எவ்வாறமைந்தது என்பதையும் விளக்கும் குறிப்பினைச் சிலப்பதிகார நூலுள் அறிதற்கான வாய்ப்பின்மையால், அவற்றை உணர்த்தும் குறிப்பாக 'உரைபெறு கட்டுரை' அமைந்துள்ளது. நூல், காண்டம் ஆகியவற்றின் இறுதியில் இடம்பெற்ற குறிப்புகளைக் கொண்ட கட்டுரைகள் அவற்றின் இறுதியில் அமைக்கப்பட்டமையால், நூலிற்குப் புறம்பாக அந்நாளில் சேரநாடு தவிர்ந்த தமிழகத்திலும், தமிழகத்தை அடுத்துள்ள நாட்டுப் பகுதிகளிலும் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைக் கூறும் இவ்வுரை பெறு கட்டுரை நூலின் முற்பகுதியில் அமைந்துள்ளது.

உரைபெறு கட்டுரை, 'அன்று தொட்டுப் பாண்டிய நாடு' என்று தொடங்குகிறது. இதில் 'அன்று' என்பதிலுள்ள சுட்டு பண்டறி சுட்டாக நின்று, கோவலன் மதுரையில் கொலைப்பட்ட நிகழ்ச்சி நடந்த நாளைக் குறிக்கிறது. 'குணவாயிற் கோட்டத்து' என்று தொடங்கும் சிலப்பதிகாரப் பதிகம் நூற்பொருளை விளக்கமுறக் கூறுதலின், நூலுக்குப் புறம்பாகக் கூறப்படும் செய்திகளைக் குறிப்பிடும் உரைபெறு கட்டுரை அதனை அடுத்தும், நூலின் தொடக்கத்திற்கு முன்னும் அமைந்திருப்பது பொருத்தமுடையதாக உள்ளது.

உரைபெறு கட்டுரையிற் கூறப்படும் செய்திகள் வருமாறு: கோவலன் கொலைக்குப் பின்னர்ப் பாண்டி நாட்டில் மழை வளம் மாறி, வறுமை மிக்கது. அதனால், நாட்டில் வெப்பு நோயும் குருநோயும் மிகுந்து மக்களைத் துன்புறுத்தின. கொற்கையினைத் தலைநகராகக் கொண்டு பாண்டி நாட்டினை ஆண்ட வெற்றி வேற் செழியன், நாட்டின் துயர் துடைக்கும் முயற்சியாக ஆயிரம் பொற்கொல்லர்களைக் களப்பலி கொடுத்து, சாந்தி வேள்வி செய்ய, நாட்டில் மழை வளம் மலிந்து துன்பம் நீங்கியது. இதனை அறிந்த கயவாகு என்னும் ஈழநாட்டு மன்னன் தன்னாட்டில் பத்தினிக்குக் கோட்டம் எடுத்து, பல முறை ஆடித்திங்களில் விழாவும் சாந்தியும் செய்வித்தான்; அங்கு மழைவளம் சிறக்க நாடு நலம் பெற்றது. அதனைக் கேட்டு, உறையூரிலிருந்து அரசு புரிந்த பெருங்கிள்ளி என்னும் சோழமன்னன், 'கண்ணகி வரமருளும் வான்பெருந் தெய்வமாவாள்' என்று கருதி, தன்னாட்டில் பத்தினிக் கோட்டம் அமைத்து அங்குச் சிறப்பொடு பூசனை நடைபெறச் செய்தான்.

இந்த உரைபெறு கட்டுரை இளங்கோவடிகளுக்குப் பின்னர்த் தோன்றிய புலவர் ஒருவர் எழுதியதாகும் என்று கூறப்படுகிறது. அ.மா.ப.

**உரையளவை** நியாயக் கருத்து முறையின் இயலும் வைசேடிகக் கருத்து முறையின் புலன் கடந்த பொருளியலும் சேர்ந்து விளங்குகிறது. உரையளவை (Verbal Testimony) உண்மையான அறிவு பெறுவதற்குரிய வழியாகுமா என்பது குறித்த சிறந்த ஆய்வு வைசேடிக நூல்களில் காணப்பெறுகிறது. உரையளவை (Sabda Pramana) என்பது சொல் அல்லது உரையைப் பற்றியது; உண்மையான அறிவுடைய ஒருவனது உரையைப் பற்றியது. பொருள் குறித்தோ உரை குறித்தோ சரியான அறிவைப் பெற்றுள்ள ஒருவன், தான் பெற்ற அறிவினை மற்றையோர்க்குத் தெரிவிக்கும் விருப்பத்தால் உரைப்பது உரையாகும். காங்கேசர் என்பார் எச்சொல் அதன் உண்மையான பொருள் உணர்விற்கு வாயிலாக அமைகிறதோ அது உரையளவையாகும் எனக் குறிப்பிடுகிறார்.

வேத உண்மையையும் அதன் தலைமையையும் உடன்படுகிற வைதிக அறிஞர்கள் காங்கேசர் கருத்தினை ஆதரித்து, உரையளவை நிகழ்வதற்குரிய முக்கிய காரணங்களைப் பின்வருமாறு குறிப்பிடுகின்றனர். 1. எது குறித்து ஒருவன் தன் கருத்தினை வெளியிட விரும்புகிறானோ அது குறித்த சொல் அல்லது உரை பற்றிய சரியான பொருளறிவை அவன் பெற்றிருத்தல் வேண்டும். 2. பொருளறிவு குறித்த அறிவு அவனிடத்தில் அமைந்திருத்தல் வேண்டும். 3. அவனது உரைமூலம் மற்றையோரும் சரியான அறிவு பெற வேண்டும்.

உரையளவை கேள்விப் புலனால் ஒரு சொல்லின் வாயிலாகவோ உரையின் வாயிலாகவோ அறிவினைத் தருவதாகும். வங்க நாட்டுக் கருத்து முறையைக் கொண்ட மெய்ப் பொருளியலார், கேள்வியினால் மற்றவர் சொல்ல அறிகிற அறிவோடு கேட்டறிந்த அறிவினை வழியளவையின் மூலமாகவும் அறிதல் முடியும் எனக் கருதுகின்றனர். மேலும், அவர்கள் வழியளவையில் அறிவு பெறுதற்குத் துணையாக அமைவது தக்க குறி எனவும் கூறுகின்றனர்.

ஒரு சொல்பற்றிய அறிவு கேட்கப்பெறுகிற நிலையில் அல்லது அறியப்பெற்ற நிலையில்மட்டும் உரையளவை அதற்குரிய தகுதி பெறுகிறது. ஒரு

கருத்து அல்லது ஒரு நிகழ்ச்சி பற்றிய உரையளவையின் தோற்றம் சொல்லின் வாயிலாகவோ உரையின் வாயிலாகவோ அமைகிறது. இத்தோற்றத்திற்குரிய பல தொடர்நிலைகள் வருமாறு: 1.ஒலிக்கப்பெற்ற ஒலிகளைக் கேட்டு அறிதல், 2. சொற்களுக்கும் அவற்றிற்குரிய பொருள்களுக்கும் உள்ள தொடர்பினை நினைவில் வைத்தல், 3. சொற்களால் உணர்த்தப்பெறும் கருத்துப் பொருள்களை அறிதல் ஆகியன. கருத்தில் இவ்வாறு தோன்றுவதற்குத் துணையாக அமையும் வெவ்வேறு வகை அறிவுகளாவன: 1. எதிர்நோக்குவதன் அறிவு அல்லது ஒரு சொல் இல்லாமையின் காரணத்தினாலே அச்சொல்லிற்குரிய பொருளை வெளிப்படுத்த இயலாமை, 2. பொருந்தும் தன்மை பற்றிய அறிவு அல்லது சொல்லினால் குறிக்கப்பெறும் பொருள் (சொற்பொருள்) உண்மைப் பொருளோடு முரணாது இருத்தல், 3. சொற்கள் தொடர்ந்து ஒலிக்கப்பெறுவதால் அத்தொடர்ச்சியின் காரணமாக ஏற்படும் அறிவு, 4. கருத்துப்பொருள் பற்றிய அறிவு.

ஒருவன் மற்றொருவனுக்குத் தன் பேனாவின் கறுப்பு நிறத்தைத் தெரிவிக்க விரும்பி 'இப்பேனா கறுப்பு நிறம் உடையது' என்று உரைக்கிறான். பேனாவைப் பற்றிய அறிவு பெறுவதற்குரியவன் முதலில் பேனாவினை உடையவன் சொல்லுகிற சொற்களை, அச்சொற்களுக்கு உரிய ஒலிகளின் வாயிலாக உணர்தல் வேண்டும். பின்னர், அச்சொற்களுக்கும் அச்சொற்களால் குறிக்கப்பெறும் பொருள்களுக்கும் இடையே அமையும் உறவினை நினைவு கொள்ள வேண்டும். இவ்வாறு நினைவு கூர்தலின் வாயிலாகக் கேட்கிறவன் கேட்கப் பெறும் பொருள் குறித்த அறிவினைப் பெறுகிறான். கேட்கிறவனின் எதிர் நோக்குகிற அறிவு, பொருந்துகிற அறிவு, சொற்கள்பற்றிய அறிவு, கருதிய பொருள் குறித்த அறிவு ஆகியன துணை செய்யச் சொற்கள் கருத்தினைத் தெரிவிக்கின்றன. கேட்கிறவனிடத்துக் கேட்ட ஒலிக்குறிப்புகள் வாயிலாகப் பெற்ற அறிவும், சொல்லுவான் கருதிய அறிவும் ஒருங்கே இயைய இப்பேனா கறுப்புநிறமுடையது என்ற அறிவு உண்டாகிறது. இவ்வறிவு உரையளவையால் வருவதாகும். ஒரு சொல்லிற்கும் அச்சொல்லின் பொருளுக்கும் இடையே இருவகை உறவுகள் இருப்பனவாகக் கருதப்பெறுகின்றன.

ஒவ்வொரு தனிச் சொல்லும் ஒவ்வொரு தனிக் கருத்தை உடையது என்பதை விளக்கச் சக்தி, இலட்சணம் என்னும் இருவகை உறவு நிலைகள் ஏற்றுக்கொள்ளப்பெற்றுள்ளன. சக்தி என்பது பல காலமாக மரபு வழிச் சொற்களுக்கு அமைந்த பொருளாகும். இலட்சணம் அல்லது குறிப்புப் பொருள் என்பது மரபுவழி அறியப்பெறும் பொருளோடு மறை முகமாகத் தொடர்புடைய கருத்துப் பற்றிய குறிப்பாகும். நடுவர் ஒருவர் வழக்குத் தீர்க்க வீற்றிருக்கும் இருக்கையை நினைவில் வைத்து, நடுவரையே நடுவர் இருக்கையெனக் குறிக்கின்றனர். நடுவர் ஓர் இருக்கையினின்று வழக்கு விசாரிப்பது மரபு. காலப்போக்கில் விசாரணைக்கு அமையும் நடுவரை அவர் இருந்து விசாரிக்கிற இருக்கையினால் 'பெஞ்சு' எனக் குறிப்பிடும் வழக்கம் வந்துவிட்டது.

மரபு வழி அமைந்துள்ள உறவுபற்றிய அறிவு இலக்கணம், உவமம், அகராதி, தகுதி, வழக்கு, சொற்களால் குறிக்கப்பெறும் சூழ்நிலை, எளிய கருத்துரை, தொடர்ச்சி என்னும் எட்டு வகைகளால் கிடைக்கப்பெறுகிறது. இவ்வாறு எழுகின்ற அறிவு தொடக்க நிலையில் வழக்காற்றலால் அறியப்பெறுவதாகும். மேலே குறிக்கப்பெற்ற மற்றைய வழிகள் சார்பு நிலையில் அமைவனவாகும்.

ஒரு குழந்தை 'அ' என்பவனிடத்து ஒரு செயலைக் காண்கிறது. அச் செயல் 'அ' என்பவன் 'ஆ' என்பவனிடத்துப்பெறுகின்ற ஒலிக் குறிப்பைப் பெற்ற பின்னரே நிகழ்கிறது. செயலுக்கும் செயலுக்குக் காரணமான ஒலிக்கும் இடையேயுள்ள உறவு பற்றிய அறிவே குழந்தையின் அறிவிற்கு அடிப்படையாகும். 'அ' என்பவன் ஈடுபடுகிற செயல் குறிப்பிட்ட ஓர் இலட்சியத்தை அடைதற் பொருட்டேயாகும். அடைதலைக் குறித்த உள்ள உறுதி ஆர்வத்தினால் எழுகிறது. இலட்சியத்தைப் பற்றிய அறிவும் அதைப் பெறும் வழியின் அறிவும் உள்ளஉறுதிக்கு முன்னரேயுள்ளன என்பதைக் குறிக்கின்றன. அறிவு எங்ஙனம் தோற்றம் பெறுகிறது என்பதைப் பற்றி ஆராயும்போது உறவு பற்றிய அறிவை அறிவதற்கு நேர்கிறது. இரா.கோ.

**உரையறி நன்னூல்** என்னும் நூலின் ஆசிரியர் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆண்டிப் புலவர் ஆவார். இவர் தந்தை பாவாடை வாத்தியார் என்று அழைக்கப்படும் பசுதேவன். ஆண்டிப்புலவர் வளையறுக்கும் குலத்தில் பிறந்தமையின் இவருக்கு நக்கீரர் என்ற பெயருமுண்டு. இவர் தொண்டை மண்டலச் செஞ்சியையடுத்த ஊற்றங்கால் என்னும் ஊரில் பிறந்தவர்.

உரையறி நன்னூல் என்பது நன்னூலின் முதலிரண்டு இயல்களுக்கும் பாக்களால் பொருள் கூறும் உரைநூலாகும். இப்பாக்கள் ஆசிரிய விருத்தத்தால் ஆனமையின் இந்நூல் ''நன்னூலாசிரிய விருத்தம்'' என்றும் வழங்கப்பெறும். ஆசிரியப்பாவாலான நன்

னூல் நூற்பாக்களுக்கு எளிய விருத்தத்தால் உரை செய்ய முனைந்திருக்கிறார் இவ்வாசிரியர்.

இவ்வுரை நூல் இப்பொழுது கிடைத்திலது. மதுரைத் தமிழ்ச் சங்கப் புத்தகசாலையில் சங்கர நமச்சிவாயப் புலவரின் உரையல்லாத வேறோர் உரை உண்டென்றும், அவ்வுரை ஆண்டிப்புல வரின் உரையாகலாம் என்றும் அண்ணாமலைப் பல் கலைக்கழக வெளியீடான தமிழ்ப்புலவர் வரலாற்றுக் களஞ்சியம் கூறுகிறது.

இந்நூல் பற்றி ஆண்டிப்புலவர் இயற்றிய மற் றொரு நூலாகிய ஆசிரிய நிகண்டு தன் பாயிரத்தில் 'இயம்பிய நிகண்டின் உரையறி நன்னூலினொடு இரண்டுமே செய்து வைத்தார்' எனக் குறிப்பிடு கிறது. க.இரா.

***உரையாசிரியர்***: காண்க: இளம்பூரணர்.

***உரையாசிரியர்கள்*** எனப்படுவோர் செய்யுளால் ஆன பழந்தமிழ் நூல்களுக்குப் பிற்காலத்தில் உரை நடையில் விளக்கம் எழுதியவர்களாவர். அவர்கள் எழுதிய விளக்கம் உரைகள் எனப்படும். தமிழில் உள்ள இலக்கியம், இலக்கணம், தத்துவம் ஆகிய மூன்று துறைகளிலும் காலந்தோறும் உரையாசிரியர் பலர் தோன்றியுள்ளனர்.

தமிழில் கி.பி. 8-ஆம் நூற்றாண்டிற்கும் 13-ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்டகாலத்திலேயே மிகுதி யான உரைகள் தோன்றின. இந்தக் காலப் பகுதியில் தான் மிகச் சிறந்த தமிழ்நூல்களுக்குப் பல உரைகள் தோன்றியுள்ளன. தொல்காப்பியம், திருக்குறள், சிலப் பதிகாரம், திருவாய்மொழி போன்ற சிறந்த நூல் களுக்குச் சிறந்த உரைகளை எழுதிய சான்றோர்கள் அனைவரும் இந்தக் காலப் பகுதியில்தான் வாழ்ந்த, னர்.

உரையாசிரியர்கள் தக்க காலங்களில் தோன்றி, பழைய நூல்களுக்கு உரை எழுதாமல் இருந்திருப் பின், பல நூல்கள் விளக்கம் பெறாமலும் மக்க ளிடையே பரவாமலும் ஒதுங்கி நின்று, காலப் போக் கில் மறைந்திருக்கும். சில நூல்கள் பல நுட்பமான கருத்துகளையும் புதுமையான விளக்கங்களையும் காலந்தோறும் பெற்று, நாடெங்கும் பரவிப் புகழ் பெறாமல் போயிருக்கும்.

உரைகளால் பழைய நூல்கள் எழிலும் இனிமை யும் பெறுகின்றன என்னும் கருத்தைப் பாரதியார், பாஞ்சாலி சபதத்தின் தொடக்கத்தில் உள்ள கலை மகள் வணக்கப் பாடலில், 'வேதத் திருவிழியாள் - அதில், மிக்கபல் உரையெனும் கருமை யிட்டாள்' என்று கூறியுள்ளார். இதற்கு, 'வேதமாகிய கண்ணில் (ஞானநூல்களாகிய கண்ணில்) பலவித வியாக்கி யானங்கள், பாடியங்கள் என்னும் கரிய மையைப் பூசியவள். மை கண்ணுக்கு நல்லது. அழகுங் கூட' என அவர் பொருள் வி ரக்கமும் தந்துள்ளார்.

**உரையாசிரியர்களின் சிறப்பியல்புகள்:** உரை யாசிரியர்கள் ஏதேனும் ஒரு நூலுக்கு உரை எழுதத் தொடங்குமுன், அதனோடு தொடர்புடைய பல்வேறு நூல்களையுங் கற்றுப் புலமை பெற்றனர். பின்னர்த் தாம் தேர்ந்தெடுத்துக் கொண்ட நூலைப் பல ஆண்டுகள் ஆழ்ந்து பயின்றனர்; தம் புலமைத் திறன் முழுவதையும் வெளிப்படுத்தி அந்த நூலுக்குச் சிறந்த உரை எழுதினர். எவ்வெத் துறையில் தமக்குப் பயிற்சியும் புலமையும் மிகுதியாக உள்ளனவோஅவ்வத் துறை நூல்களில் சிறந்த ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு, நூலாசிரியரின் உள்ளக் கருத்தைத் தெளி வாக அறிந்த பின்னர் உரை எழுதினர்.

உரையாசிரியர்களிடம் பல வகையான திறன் கள் உள்ளன. பழந்தமிழ் நூல்களில் உள்ள சொற் களின் பொருளைத் தெளிவாக அறியும் அகராதிப் புலமை, செய்யுளின் அமைப்பையும் போக்கையும் ஆராய உதவும் இலக்கண அறிவு, நூலாசிரியரின் வாழ்க்கையை உணரும் வரலாற்றுக் கல்வி, நூல் தோன்றிய காலத்து மக்களின் பழக்க வழக்கங்களைத் தெரிந்து கொள்ளும் சமுதாய உணர்வு, பிற நூல் களோடு ஒப்புமை காணும் ஒப்பியல் ஆய்வுத்திறன் ஆகியவை அவர்களிடம் நிரம்பி உள்ளன. உரையாசி ரியர்களுள் சிலர் கல்வி புகட்டும் பேராசிரியர்களாய் இருந்தனர்; சிலர் நூலாசிரியர்களாய்ச் சிறந்து விளங் கினர்; சிலர் சமய உண்மைகளை உணர்த்தும் ஞான ஆசிரியர்களாய்த் திகழ்ந்தனர்.

உரையாசிரியர்கள் உரைநடை எழுதும் ஆற்றலில் சிறந்து விளங்கினர். பயனற்ற சொற்களையும் ஆழ மற்ற கருத்துகளையும் ஆராய்ந்து நீக்கிவிட்டு, பொருட்செறிவு மிகுந்த பயனுள்ள சொற்களைத் தேர்ந்தெடுத்து அமைத்துச் செப்பமான உரை நடையை உருவாக்கினர்.

நூலாசிரியர்களுக்கு உரிய சிறப்புகள் யாவும் உரையாசிரியர்களுக்கும் உண்டு. நூலாசிரியர்களைப் போலவே உரையாசிரியர்களும் அறிஞர்களால் போற்றப்படுகின்றனர். மூல நூல்களைப் போலவே உரை நூல்களும் ஆர்வத்துடன் கற்கப்படுகின்றன. தொல்காப்பியம், திவாகரம் முதலிய நூல்கள் அவற்றை இயற்றிய ஆசிரியர்களின் பெயர் பெற்றுள்

ளமை போல, உரையாசிரியர்களின் பெயரை அவர்கள் இயற்றிய உரைகள் பெற்றுள்ளன. இளம் பூரணம், சேனாவரையம், பேராசிரியம், நச்சினார்க் கினியம் என்பன இவ்வகையான் அமைந்த பெயர் களாகும்.

தமிழில் தோன்றிய முதல் உரையாசிரியர் இறையனார் அகப்பொருள் என்னும் இலக்கண நூலுக்கு உரை எழுதிய நக்கீரர் ஆவார். அவர் கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். அவரே பிற் காலத்தில் தோன்றிய எல்லா உரையாசிரியர்களுக்கும் உரை எழுத வழிகாட்டியவர்.

நக்கீரர் உரைக்குப் பின், பழந்தமிழ் நூல்கள் பல வற்றிற்கு உரைகள் தோன்றின. அந்த நூல்களில் உள்ள அரிய சொற்களின் பொருளையும், பாடல் களின் திரண்ட கருத்தையும் உரையாசிரியர் மேற் கோளாகக் கையாண்டனர். அவ்வுரைகளுக்கு அரும்பத வுரை, குறிப்புரை, பொழிப்புரை, பழையவுரை முதலிய பெயர்கள் வழங்கி வருகின்றன.

தொல்காப்பியம் முழுமைக்கும் முதன் முதலாகக் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் உரை எழுதி, 'உரை யாசிரியர்' என்ற பெயரைப் பெற்றவர் இளம் பூரணர். அவருக்குப் பின், அந்நூலின் சொல்லதிகாரத் திற்கு மட்டும் சேனாவரையர், தெய்வச் சிலையார், கல்லாடர் ஆகியோர் ஒருவர் பின் ஒருவராக உரை எழுதினர். பேராசிரியர் அதன் பொருளதிகாரப் பகுதிக்கு மட்டும் உரை இயற்றினார்.

திருக்குறளுக்கு, கி.பி. 12, 13 ஆகிய இரு நூற் றாண்டுகளிலும் பத்து உரையாசிரியர்கள் உரை எழுதி னர். இவர்கள் இயற்றிய உரைகளுள் பரிதி, மணக் குடவர், பரிப்பெருமாள், காளிங்கர், பரிமேலழகர் ஆகிய ஐவர் உரைகள் மட்டுமே இப்போது உள்ளன. ஏனையோர் உரைகள் மறைந்து போய்விட்டன. பத்து உரைகளுள் பத்தாவதாகத் தோன்றிய பரி மேலழகர் உரையே சிறந்து விளங்குகிறது.

சிலப்பதிகாரத்திற்கு, கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் அடியார்க்கு நல்லார் தமிழ்க் கலைகளின் நுட்பங்களை எல்லாம் விளக்கி விரிவுரை எழுதியுள்ளார்.

வைணவ அடியவர்களாகிய ஆழ்வார்கள் பாடி யுள்ள நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்திற்கு11,12, 13 ஆகிய மூன்று நூற்றாண்டுகளிலும் விளக்கங்கள் பல தோன்றின. அவை வியாக்கியானங்கள் என்னும் பெயரைப் பெற்றன. திருப்பெரும்புதூரில் கி.பி. 1017 -ஆம் ஆண்டில் தோன்றிய இராமாநுசர் வைணவ சமயத்தைத் தமிழகமெங்கும் பரப்பியபோது, அவருக் குச் சீடர்கள் பலர் தோன்றினர். அப்போது திரு வரங்கத்தில் வாழ்ந்த சீடர்களுள் சிலர், நம்மாழ் வாரின் திருவாய்மொழிக்கு விளக்கவுரைகளை எழுதி னர். பிள்ளான் நஞ்சீயர், பெரியவாச்சான் பிள்ளை, வடக்குத் திருவீதிப் பிள்ளை, மணவாள யோகி ஆகியோர் ஒருவர் பின் ஒருவராகத் திருவாய்மொழி உரையைப் படிப்படியாக வளர்த்து விரிவாக்கினர். அவர்களுள் பெரியவாச்சான் பிள்ளை எல்லா ஆழ் வார்களின் பாடல்களுக்கும் வியாக்கியானங்கள் எழுதி,'வியாக்கியான சக்கரவர்த்தி' என்னும் சிறப்புப் பெயரைப் பெற்றார்.

காலந்தோறும் பலர் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் தோன்றிய இலக்கண நூலாகிய நன்னூலுக்கு உரை களை எழுதியுள்ளனர். அவர்களுள் மயிலைநாதர், சங்கர நமச்சிவாயர், சிவஞான முனிவர், ஆறுமுக நாவலர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவராவர்.

ஒரு நூலுக்குப் பலர் உரை எழுதியது மட்டு மன்றி, ஒருவரே பல நூல்களுக்கு உரை எழுதியுமுள் ளார். மதுரையில் கி.பி. ·14-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த நச்சினார்க்கினியர் பல நூல்களுக்குச் சிறந்த உரைகளை எழுதினார். அவர் தொல்காப்பியம், பத்துப்பாட்டு, கலித்தொகை, சீவகசிந்தாமணி ஆகிய பழம்பெரு நூல்களுக்கு உரை எழுதியுள்ளார். அவரை இலக்கணம், இலக்கியம் ஆகிய இரு துறைகளிலும் வல்லவர் என்றும், மிகுதியான நூல்களுக்கு உரை எழுதிய வித்தகர் என்றும் அறிஞர்கள் போற்று கிறார்கள்.

சிவஞானமுனிவர் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து, இலக்கணம், தத்துவம் ஆகியவை பற்றிய பல நூல்களுக்கு உரைஎழுதியுள்ளார். தொல்காப்பிய முதற் சூத்திர விருத்தியுரை, நன்னூல் விருத்தியுரை, சிவஞானபாடியம், சிவஞான போதச் சிற்றுரை, சிவ ஞான சித்தியார் (சுபக்கம்) பொழிப்புரை ஆகியவை இவர் இயற்றியுள்ள உரைநூல்களாகும். இவையே யன்றி, இலக்கண விளக்கச் சூறாவளி, சித்தாந்த மரபு கண்டன கண்டனம், சிவசமய வாதவுரை மறுப்பு, கம்பராமாயண முதற் செய்யுள் சங்கோத்தர விருத்தி ஆகிய மறுப்புரைநூல்களையும் இயற்றினார். பல உரைகளை இயற்றிய அவர் நூலாசிரியராகவும் விளங்கினார். அவருக்குப் பின்னர்க் காலந்தோறும் உரையாசிரியர்கள் பலர் தோன்றித் துறைதோறும் உரைகள் பல் இயற்றியுள்ளனர்.

உரையாசிரியர்கள் செய்யும் நன்மைகளைப் பின் வருமாறு பாகுபாடு செய்யலாம். அவை தமிழில் உள்ள இலக்கியங்களை முறையாகக் கற்றுச் சுவைக்க, இலக்கணம் பயின்று மொழித்திறன் பெற உதவுதல்;

இலக்கியத் திறனாய்வில் ஈடுபடவும், மொழியியல் சிந்தனையிற் பங்கு கொள்ளவும், தமிழ் அகராதியை உருவாக்கவும் உதவுதல்; பழங்காலத்து நாட்டு நிகழ்ச்சி, அரசியல் நிலை, மக்களின் பழக்கவழக்கங்கள், கலை நுட்பம் ஆகியவை பற்றி அறிவித்தல்; தமிழில் தனித்துறையாகவளர்ச்சி பெற்றுப்பரவாத 'அளவை (தருக்க) இயல்' பற்றிய கருத்துகளைத் தருதல்; காலந்தோறும் வளர்ந்து வந்துள்ள தமிழ் உரைநடையின் வரலாற்றையும்'பலவகையான உரைநடைகளின் இயல்புகளையும் அறிந்து கொள்ளத் துணை செய்தல்; பல ஆண்டுகளுக்கு முன் நாட்டில் வழங்கிய பழங்கதை விடுகவி, பழமொழி, மரபுத்தொடர், வட்டார வழக்குச்சொல் ஆகியவற்றைத் திரட்டித் தருதல்; பல்வேறு காலங்களில் தோன்றி ஆங்காங்கே உலவி வந்த தனிப்பாடல்களைத் தருதல்; பிற நூல்களி லிருந்து மேற்கோள் காட்டும் இடங்களில் அந்நூல் களில் உள்ள சரியான பாடத்தையும் செய்யுள் வடிவ அமைப்பினையும் அறிந்து கொள்ள உதவுதல்; மறைந்துபோன தமிழ் நூல்களைப் பற்றிய செய்தி களையும், அந்த நூல்களிலிருந்து சில பாடல்களையும் உணர்த்தல் போன்றனவாகும். மு.வை.அ.

**உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்** என்பது உரைநடையும் பாட்டும் விரவி அமையும் பழந்தமிழ் இலக்கிய வகை ஆகும். இப்பெயரில் அமைந்துள்ள செய்யுள் என்னுஞ் சொல் செய்யுள் களால் ஆகிய நூலினைக் குறிக்கும். இவ்வகை நூலுள் செய்யுள்களின் இடையிடையே அந்நூலின் பொருளோடு தொடர்புடைய உரைநடைப் பகுதிகள் இடம் பெற்று அமையும். பொதுவாக, இவ்வகை நூல்களில் பாடல்கள் மிகுதியாகவும் உரைநடைப் பகுதிகள் குறைவாகவும் இடம்பெறும். இதற்கு மாறாக உரையும் பாட்டும் ஒத்த அளவிலும், உரைநடை மிக்க அளவிலும் கொண்டுள்ள நூல்களும் தமிழில் உள்ளன.

சிலப்பதிகாரப் பதிகம், 'உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள், உரைசால் அடிகள் அருள மதுரைக் கூல வாணிகன் சாத்தன் கேட்டனன்' என்னும் பகுதியில் இதனைக் குறிப்பிடுகிறது. அடியார்க்கு நல்லார் இத்தொடர்ப் பொருளினை, 'உரையிடையிட்டனவும் பாட்டுடையனவுமாகிய செய்யுள்' என்று விளக்கியுள்ளார். சிலப்பதிகாரத்தில் மிகவும் குறைந்த அளவிலேயே உரைநடை இடம் பெற்றுள்ளது. அவ்வுரைநடையும் எதுகை மோனைச் சிறப்போடு, செய்யுளோசை பெற்றுள்ள உரைநடையாகவே உள்ளது. இது பேச்சு வழக்கில் அமைந்த உரைநடை ஆகாது. இதற்குக் 'குமரியொடு வடவிமயத் தொரு மொழிவைத் துலகாண்ட சேரலாதற்குத் திகழொளி ஞாயிற்றுச் சோழன் மகள் ஈன்றமைந்தன், கொங்கர் செங்களம் வேட்டுக் கங்கைப் பேரியாற்றங் கரை போகிய, செங்குட்டுவன்' என்று வாழ்த்துக் காதையில் இடம் பெறும் உரைநடைப் பகுதியினை எடுத்துக் காட்டாகச் சுட்டுதல் இயலும்.

பழங்காலத்தில் இருந்து இப்பொழுது அழிந்து விட்டதாகக் கருதப்படும் 'தகடூர் யாத்திரை' என்னும் நூலும் பாரத வெண்பா என்னும் நூலும் இவ்வகை இலக்கியமாகும். இதில் உரையும் பாட்டும் ஏறத்தாழ ஒத்த அளவில் இடம் பெற்றுள்ளன. மேலும், இந் நூலில் பாட்டுகள் கதை மாந்தர்களின் கூற்றாகவும் உரைநடைப் பகுதிகள் வருணனை, வரலாறு ஆகியவற்றைக் கூறுவனவாகவும் அமைந்துள்ளன. இந் நூலில் செய்யுள் போலவே உரைநடையும் ஒத்த சிறப்பினதாய் நூலுணர்ச்சிக்கு இன்றியமையாததாக இருக்கிறது. இதில் அமைந்துள்ள உரைநடையில் பேச்சு வழக்குத் தன்மையும் வடசொற் கலப்பும் மிக் குள்ளன. அ.மா.ப.

**உரையிற்கோடல்**: கருத்துகளைச் சொல்லப் பயன்படுத்தும் முறை உத்தியாகும். தொல்காப்பியத் திலும் நன்னூலிலும் கூறப்படுகிற உத்திகள் நூற்பா நுவலப்படும் முறையைக் கூறுவனவாகும். எனினும் அவற்றை உரை சொல்லும் முறைக்கும் பொருந்து வனவாகக் கொள்ளலாம். ஆனால், ஆறுமுகநாவலர் தம் காண்டிகையுரையில் உரைப்போக்கிற்கேற்ப நூற் பாவின் பொருளைத் தெளிவுபடுத்துவதற்காகச் சில உத்திகளை மேற்கொண்டுள்ளார். அவ்வகையில் இவ் வுத்தி உரையாசிரியர்கள் புலமையைக் காட்டுதற்கு ஏதுவாக நிற்கிறது. 'மொழியாததனை முட்டின்று முடித்தல்' என்று தொல்காப்பியத்தில் கூறப்பட்ட உத்தியை உரையிற்கோடல் என்று இளம்பூரணர் (தொல். பொருள். 656) தம் உரையில் கூறுவர். நூற்பாவில் எடுத்துச் சொல்லப்படாத கருத்தை முட்டுப்படாமல் உரையால் கூறுதல் என்பது இதன் பொருள்.

ஆண், பெண் ஆகிய இருபாற்கும் பொதுவாய் வருகிற ஒருவர் என்னும் சொல் உயர்திணைப் பன்மை வாய்பாட்டு வினையைக் கொண்டு முடியும் என்பதனை, 'ஒருவ ரென்ப துயரிரு பாற்றாய்ப், பன்மை வினைகொளும் பாங்கிற் றென்ப' என்று நன்னூல் கூறுகிறது. உயர்வு கருதி'ஆர்' என்னும் விகுதியை ஈற்றில் பெற்று வரும் இருதிணைப் பொதுப் பெயரும், பால் பகா அஃறிணைப் பெயரும், சில உயர்திணைப் பெயரும் மேற்கூறப்பட்டது போன்று (நன். ஆறு. காண். 289) பன்மை வாய்பாட்டு வினை முடிவைப் பெறும் இயல்புடையன. (எ-டு) அரசனார் வந்தார், தந்தையார் வந்தார், கீரியார் வந்தார், நம்பியார் வந்தார்,

நங்கையார் வந்தார், தொல்காப்பியனார் வந்தார். ஆனால், இக்கருத்து நூற்பாவில் கூறப்படவில்லை. எனவே, இதனை உரையிற்கோடல் என்னும் இவ்வுத்தி கொண்டு ஆறுமுகநாவலர் அந்நூற்பா உரையுள் கூறியுள்ளார். வீ.சே.

**உரொக்கு இந்தியர்:** வடஅமெரிக்காவில் இன்றளவும் தனித்தன்மையுடன் வாழும் பழங்குடிகளுள் உரொக்கு இந்தியரும் (Yurok Indians) ஓரினத்தவர். இவர்கள் தம்மை ஓலேக்வல் (Olekwol) என்றும் கூறிக் கொள்வர். ஓலேக்வல் என்பதன் பொருள் 'மனிதர்கள்' (Persons) என்பதாகும். வேறு சில வட அமெரிக்கப் பழங்குடிகளும் தம்மை ஓலேக்வல் என்று கூறிக் கொள்வர். உரொக்கு இந்தியர்கள் வீட்சுபெக்கன் (Weitspekan) மொழிக்குடும்பத்தைச் சேர்ந்த மொழியைப் பேசுகின்றனர். இவர்கள் கிளாமத்து ஆற்றின் (Klamath River) தாழ்நிலப்பகுதியிலும் கலிபோர்னியக் கடற்கரைப் பகுதியிலும் வாழ்கின்றனர். இவர்கள் வட அமெரிக்க இந்தியப் பழங்குடிகளுள் உயரமான ஓர் இனத்தவர். நல்ல உயரத்தையும் கட்டான உடலையும் கொண்ட இவர்கள் குறைந்த ஆடையே அணிகின்றனர். இவர்கள் தம் உடல் முழுதும் பச்சை குத்தி அழகுபடுத்திக் கொள்கின்றனர்; தலையிலும் இடுப்பிலும் இறகுகளைக் கொண்டு அலங்கரித்துக் கொள்வர்; மர வீடுகள் கட்டுவதில் வல்லவர்கள். காட்டுப் பகுதியில் வாழும் இவர்கள் அங்குக் கிடைக்கும் மரங்களைக் கொண்டே வீடுகளையும் மீன்பிடி படகுகளையும் கட்டிக் கொள்கின்றனர்.

உரொக்கு இந்தியர்கள் கலைத் தொழிலிலும் வல்லவர்கள். பெண்கள் கூடைத் தொழிலில் சிறந்து விளங்குகின்றனர். இவர்கள் பல்வேறு அளவுகளில் தயாரிக்கும் உடைகளை அண்டைப் பகுதிகளில் வாழும் கரோக்கு (Karok), உப்பா (Hupa) முதலான பழங்குடிகள் விரும்பி வாங்குகின்றனர். இவர்கள் செய்யும் பல்வேறு அழகு மிகுந்த கலைப்பொருள்களுக்குப் பறவைகளின் இறகுகள், மரங்கள், கிளிஞ்சல்கள், எலும்புகள் முதலானவற்றைப் பயன்படுத்துகின்றனர். பளிங்குக் கற்களும் கிளிஞ்சல்களும் இவர்களிடையே நாணயமாகப் பயன்படுத்தப்படுகின்றன. நாணயங்களைக் கொண்டு செல்லும் பணப்பையை அழகிய மான்கொம்பைக் கொண்டு செய்கின்றனர்.

இவ்வின மக்கள்மீனை மிகுதியாக உண்கின்றனர்; புகைப்பதற்காகப் புகையிலையைப் பயிரிடுகின்றனர். பழங்குடிச் சமுதாயங்களில் பெரும்பாலும் சண்டைகள் மிகுதியாகக் காணப்படும் நிலையில், இம்மக்கள் அமைதியாக வாழ்கின்றனர். வெள்ளையர்கள் கி.பி. 1850-இல் இப்பகுதிக்குத் தங்கம் தேட வருதற்குமுன் இவர்கள் சண்டைகளை அறியாதவர்கள். உரொக்கு இந்தியர்களின் சமய நம்பிக்கைகள் சிக்கலானவை. ஆண்டிற்கொருமுறை இவர்கள் நடத்தும் விழாவில் குதிக்கும் நடனம் (Jumping Dance), வெள்ளை மான் நடனம் (White Deear Dance) முதலானவை குறிப்பிடத்தக்கவை. இவ்விழாவில் பெருமளவில் சேர்த்து வைத்திருக்கும் பளிங்குக் கற்களை அனைவரும் கண்டு களிக்கக் காட்சிக்கு வைப்பர். சீ.ப.

**உரொடீசிய மனிதன்:** இக்கால மனித இனத்தைச் சார்ந்த புதைபடிவங்கள் முதன்முதலாக கி.பி. 1848-இல் இசுபெயின் (Spain) நாட்டில் சிப்ரால்டரில் (Gibraltar) உள்ள ஒரு குகையில் கண்டெடுக்கப்பட்டன. புதைபடிவங்கள் 'நியாண்டர்தால்' மனிதனுடையவை என்றும், அம்மனிதன் வரலாற்றுக் காலத்திற்கு முந்தியவன் (Pre-historic Man) என்றும் பொதுவாகக் கருதுகின்றனர். நியாண்டர்தால் மனிதன் மூன்றாம் பனியாற்றுக் காலத்தில் (Glacial Period) தோன்றி நான்காம் பனியாற்றுக் காலத்திலும் வாழ்ந்தான். இவன் வாழ்ந்த நாகரிகக் காலம் பழங்கற்காலமாகும். நியாண்டர்தால் மனிதனின் காலத்தில் ஆப்பிரிக்காவிலுள்ள உரொடீசியாவில் வாழ்ந்த ஒரு வகை மனிதனே 'உரொடீசிய மனிதன்' (Rhodesian Man) என்று கூறப்படுகிறான்.

வட உரொடீசியாவில் 'கபூ' (Kafue) ஆற்றிற்கு அருகிலுள்ள 'புரோக்கன் மலையின்' (Broken Hill) ஒரு குகையிலிருந்து மனித எலும்புகளும் கற்கருவிகளும் 1921-இல்கண்டெடுக்கப்பட்டன. அவற்றுடன், மேலும் சில உடைந்த எலும்புகளும் கலந்திருந்தன. அந்த எலும்புகள் அங்கு வாழ்ந்த மனிதன் உணவிற்காக வேட்டையாடிய பிராணிகளின் எலும்புகளாக இருக்கலாமென்று கருதப்பட்டன. இவை அனைத்தும் குகையின் நுழைவாயிலிருந்து சுமார் 120 அடி தூரத்தில் 90 அடி ஆழத்திலிருந்து தோண்டியெடுக்கப்பட்டன. மனித எலும்புகளுடன் கிடைத்த பிராணிகளின் எலும்புகள் ஈயம், துத்தநாகம் ஆகிய தாதுப் பொருள்களால் மூடப்பட்டு நல்ல நிலையில் இருந்தன.

அந்த இடத்தில் மனிதனின் முழு மண்டையோட்டின் மேல்தாடையின் பகுதி ஒன்றும், கால் எலும்புகளின் பகுதிகளும், இடுப்பு எலும்பின் பகுதியும், இடுப்படி எலும்பும் (Sacrum) தோண்டியெடுக்கப்பட்டன. அம்மண்டையோட்டில் மிகப் பெரிய அளவுடைய முக எலும்புகளும், தடித்த புருவ விளிம்புகளும் (Brow ridge) உள்ளன. இத்தகைய பெரிய உருவமைப்புக் கொண்ட மண்டையோடு அதுவரையிலும் கண்டெடுக்

கப்பட்ட மனித மண்டையோடுகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாக இருந்தது. இம்மண்டையோட்டின் தடித்த மேல்தாடையும், அகன்ற மேலண்ணமும், பக்க வாட்டு மூளையின் அமைப்பும் நியாண்டர்தால் மனிதனை ஒத்திருந்தன. ஆனால், மூக்கமைப்பும் காது அமைப்பும் பெரிதும் வேறுபட்டிருந்தன. மண்டையோட்டுத் துவாரம் சிறிது முன்புறமாக அமைந்திருந்தது. மூளையின் கனஅளவு சுமார் 1300 க.செ.மீ.க்குக் குறைவாகும். பெரிய முக அமைப்பைக் கொண்ட அம்மண்டையோட்டில் காணப்பட்ட மூளை அமைப்பு ஆய்வுக்குரியதாயிற்று.

இத்தகைய வழக்கத்திற்கு மாறுபட்ட உருவமைப்புடைய உரொடீசிய மனிதனின் மண்டையோட்டையும், அதனுடன் சேர்ந்திருந்த கால் எலும்புகளின் துண்டுகளையும் புற அமைப்பின் அடிப்படையில் இக்கால மனிதனின் மண்டையோடு, கால் எலும்புகள் ஆகியவற்றிலிருந்து வேறுபடுத்த இயலவில்லை. மேலும், அம்மண்டையோடும் கால் எலும்புப் பகுதிகளும் ஒரே மனிதனுடையவையா என்ற கேள்வியும் எழுந்தது. இதனால், இந்த எலும்புத்துண்டுகள் நிறப்பிரிகைப்பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டன. ஓரளவே புதைபடிவமாக்கப்பட்டிருந்த உரொடீசிய மனித எலும்புகளைச் சுத்தம் செய்து பார்த்தபோது, மண்டையோட்டின் (கீழ்த்தாடை இல்லாமல்) இடப் பக்கத்தில் ஒரு பகுதி தவிர மற்றப் பாகங்கள் சேதமடையாமல் மிக நல்ல நிலையில் காணப்பட்டன. உரொடீசிய மனித மண்டையோடு உருவ அமைப்பில் தொன்மை மிக்க மனிதக் குரங்குகளின் மண்டையோட்டைப் போன்று தோற்றமளித்தாலும், தாடைகளின் அமைப்பிலும் காதுப்புறப் பொருத்துவாய்களின் அமைப்பிலும் இக்கால மனித மண்டையோட்டின் அமைப்பை நினைவூட்டியது.

இம்மண்டையோட்டில் நியாண்டர்தால் மனித மண்டையோட்டில் காணப்பட்டதை விட மூளைக்குழி அழுந்தியும், புருவ விளிம்புகள் தெளிவாகவும் தடித்தும் காணப்பட்டன. வேறு எந்த மனித மண்டையோட்டிலும் இருந்ததை விட இம்மண்டையோட்டில் மூக்குத் துவாரத்திலிருந்து மேல் வரிசைப் பற்களுக்கிடையில் இருந்த தூரம் மிக அதிகமாகக் காணப்பட்டது. மேலண்ணமும் மிகப் பெரியதாகக் காணப்பட்டது. பொட்டெலும்பின் கூம்பு முனைப்பு இக்கால மனிதனுக்கு இருப்பது போன்றே நல்ல வளர்ச்சி பெற்றிருந்தது. பின் மண்டை விளிம்பும் தசை இணைப்புகளும் நல்ல வளர்ச்சியைப் பெற்றிருப்பினும், பின் மண்டைப் பகுதி நியாண்டர்தால் மனிதனைவிட உயரமான உருவமைப்பைக் கொண்டிருந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.

தொல்லுயிரியல் சான்றுகளினால் உரொடீசிய மனிதனின் தொன்மையைப் பற்றிச் சரியாக வரையறுக்க இயலவில்லை. குகையில் கண்டெடுக்கப்பட்ட பிராணிகளின் எலும்புகளிலிருந்து மண்டையோடு புதியதாகத் தோன்றியதால், அது மிகத் தொன்மை வாய்ந்ததாக இருக்காது என்ற கருத்து நிலவியது.

உரொடீசிய மனிதனின் மண்டையோட்டை ஒத்த அமைப்பைக் கொண்ட 'சால்டன்கா மனித (Saldanha Man) மண்டையோடும் 'சோலோ மனித' (Solo Man) மண்டையோடும் தென்னாப்பிரிக்காவில் சால்டன்கா வளைகுடாவிலும் (Saldanha Bay) சாவாவிலும் (Java) ஈற்றயலூழிக் (Pleistocene) காலத்திலேயே கிடைத்துள்ளன. அம்மண்டையோடுகள் உரொடீசிய மனிதனின் தொன்மையை வரையறுக்க உதவுகின்றன.

கேப்பு நகரப் பல்கலைக் கழக(University of Cape Town) அறிஞர்கள் 1953-இல் மேற்கொண்ட ஆராய்ச்சியின்போது, தென்னாப்பிரிக்காவில் கேப்பு நகருக்கு 80 மைல் வடக்கிலுள்ள சால்டன்கா வளைகுடாவிற்கு அருகிலுள்ள 'ஒப்பீல்டு' (Hopefield) என்னுமிடத்தில் மண்டையோடு ஒன்று கண்டெடுக்கப்பட்டது. இது உரொடீசிய மனித மண்டையோட்டை ஒத்த தோற்றத்தைப் பெற்றிருந்தது. இம் மண்டையோட்டு மூளையின் கனஅளவு சுமார் 1250 க.செ.மீ. எனக் கணக்கிடப்பட்டது. இம்மண்டையோட்டில் புருவ விளிம்புகள் மிகப் பெரியனவாகக் காணப்பட்டன. இதனுடன் இருந்த கற்கருவிகள் விலங்குகளின் எலும்புகள், புவியியல் சான்றுகள் முதலானவை இம்மண்டையோடு இடைக்கால ஈற்றயலூழிக் காலத்திற்கும் பிற்கால ஈற்றயலூழிக் காலத்திற்கும் இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்தது என்பதைக் காட்டுகின்றன. எனவே உரொடீசிய மனிதனையும் சால்டன்கா மனிதனையும் சமகாலத்தவர்களாகக் கருதுகின்றனர்.

உரொடீசிய மனிதனின் மண்டையோட்டை ஒத்த பதினோரு மண்டையோடுகளும் இரண்டு முன்னங்கால் எலும்புகளும் சாவாவில் (Java) 'கடாங்கு' (Ngadong) என்னுமிடத்தில் சோலோ ஆற்றிற்கருகில் கண்டெடுக்கப்பட்டன. இம்மண்டையோடுகளில் முக எலும்புகள் இல்லாதது ஆய்வாளர்களுக்குக் குறைபாடாக அமைந்தது. இவற்றின் புருவ விளிம்புகள் தடித்து வலிமையானவையாக இருந்தன. மண்டையோட்டுத் துவாரம்இக்கால மனிதனுக்கு அமைந்துள்ள நிலையில் காணப்பட்டது. மூளையின் அளவு சுமார் 1150 க.செ.மீ. முதல் 1300 க.செ.மீ. வரை இருந்ததாகக் கணக்கிடப்பட்டது. இவற்றுடன் கிடைத்த முன்


னங்கால் எலும்பு நியாண்டர்தால் மனிதனின் கால் எலும்புகளிலிருந்து வேறுபட்டு, இக்கால மனிதனின் கால் எலும்புகளோடு ஒத்திருந்தது. இம் மனிதனது மூளை இக்கால மனித மூளையின் அளவிற்கு இருந்தது. இம்மனிதன் மனிதக் குரங்கைப் போன்ற தோற்றமுடைய முக அமைப்பைப் பெற்றிருந்தாலும், உடலமைப்பில் இக்கால மனிதனை ஒத்திருந்தான். மேலும், சில புதை படிவங்களை ஆராய்ந்தபோது அவற்றின் உடற்கூற்று அமைப்புகள் மனிதப் பண்புகளை ஒத்திருந்தமையால் அறிஞர்கள் இம்மனிதனுக்கு தனிப் பெயரிட்டனர். சோலோ ஆற்றிற்கருகில் அவ்வெலும்புகள் கிடைத்தமையால், அம்மனிதனுக்கு ''ஓமோ சோலோன்சிசு' (Homo Soloensis) எனப் பெயரிடப்பட்டது.

சால்டன்கா மனிதனும் சோலோ மனிதனும் பெரும்பான்மையான பண்புகளில் உரொடீசிய மனிதனை ஒத்திருந்தனர் என்பது வெளிப்படையாகிறது. ஐரோப்பிய நியாண்டர் மனித இனத்தைப் போன்றே உரொடீசிய மனிதனும் பரிணாமத்தில் சிறப்புத் தன்மை பெற்று, இக்கால மனிதனாகப் பரிணாம வளர்ச்சி பெறுதற்கு ஒரு நிலையாக இருந்திருக்கலாம்.

'உரொடீசிய மனிதன் இக்கால மனிதனைவிட நியாண்டர்தால் மனிதனுடைய மிக நெருங்கிய பண்புகளைப் பெற்றிருந்தாலும், மண்டையோட்டு அமைப்பிலும் முக எலும்புகளின் அமைப்பிலும் தனித்தன்மை பெற்று, நியாண்டர்தால் மனிதனிலிருந்தும் இக்கால மனிதனிலிருந்தும் முற்றிலும் வேறுபட்டவன்' என உரொடீசிய மனித மண்டையோட்டை ஆராய்ந்த டாக்டர் சி.எம். மொராண்டு (Dr.G.M. Morant) கூறுகிறார்.

வீடன்ரீச்சு (Weidenreich) என்ற செருமானிய நாட்டு அறிஞர் உரொடீசிய மனிதன், மண்டையோட்டு அமைப்பில் சோலோ மனிதனோடு தொடர்புடையவன் என்றும், மனிதனின் மூதாதையர் தோன்றும்போது பெரிய உருவமுடையவர்களாகவும் காலம் செல்லச் செல்ல உருவத்தில் சிறுத்தும் குறைந்தும் வந்துள்ளனர் என்றும் கூறியுள்ளார். உரோடீசிய மனிதன் ஐரோப்பிய நியாண்டர்தால் மனிதனை ஒத்திருப்பினும் வேறு பல பண்புகளில் அவனினின்றும் வேறுபட்டவன் எனக் கருதும் உடல்சார் மானிடவியலாளர்கள் இம்மனிதனைத் தனி இனமாகக் கொண்டு 'ஓமோ உரொடீசியன்சிசு' (Homo Rhodesiensis) என்று பெயரிட்டுள்ளனர். பா.ஜ.

***உரொடீசியா***: இக்காலத்தில் தென்நடு ஆப்பிரிக்காவிலுள்ள சாம்பியாவும் (Zambia) அதன் தெற்கே உள்ள சிம்பாப்வேயும் (Zimbabwe) ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்தபோது உரொடீசியா(Rhodesia) எனப்பட்டன. முன்னர், சாம்பியா நாடு வட உரோடீசியா




வட உரொடீசியா (சாம்பியா)

என்றும், சிம்பாப்வே நாடு உரொடீசியா அல்லது தென் உரொடீசியா என்றும் சொல்லப்பட்டன.

**சாம்பியா:** இதன் பரப்பளவு 752,614 ச.கி.மீ. மக்கள் தொகை 4.5 மிலியன். வடக்கில் செய்ரே (Zaire), வடகிழக்கில் தான்சானியா (Tanzania),கிழக்கில் மாலாவி (Malavi),தென்கிழக்கில் மொசாம்பிக்கு (Mozambique), தெற்கில் உரொடீசியாவும் போட்சுவானாவும், தென்மேற்கில் தென்மேற்கு ஆப்பிரிக்கா, மேற்கில் அங்கோலா (Angola) ஆகிய நாடுகள் இதனைச் சூழ்ந்துள்ளபடியால், இதற்குக் கடலோடு தொடர்பு இல்லை.

இது செம்புக்கனி நிறைந்த நாடு. ஆப்பிரிக்காவின் பேராறுகளுள் ஒன்றான சாம்பெசி (Zambesi) இதன் எல்லையில் பாய்ந்து, இந்நாட்டையும் தெற்கு உரொடீசியாவையும் வளமாக்கி, 340 அடி உயரத்திலிருந்து விக்டோரியா நீர் வீழ்ச்சியாக மின்சாரம் அளித்துத் தொழில் வளம் பெருக்கி, கிழக்கே சென்று இந்துமாக்கடலைச் சேர்கிறது. இதன் தலைநகரம் உலுசாகா.

மக்களுள் பெரும்பாலோர்பாண்டு என்னும் இனத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் வெளிநாட்டிலிருந்து



சாம்பசி ஆறு

குடியேறியவர்களின் வழிவந்தவர்கள்; இவர்கள் கி.பி. 1200-இல் வடக்கிலிருந்து தெற்கு நோக்கிவர, இவர்களால் முன்னே தள்ளப்பட்ட பிக்மிகளும்(Pig - mies) புசுமன்களும் (Bushmen), கிழக்காப்பிரிக்காவி லிருந்து குடியேறிய அமிட்டிக்குகளும் (Hamitics) நிலோட்டிகளும்(Nilotics) ஒன்றாகக் கலந்தனர். இப் போது சாம்பியாவிலுள்ள மக்கள் 73 கிளைகளாகவும் (Tribes) 8 இனங்களாகவும் பிரிக்கப்படுகின்றனர். இவர்கள் பேசும் மொழிகள் 30 ஆகும். இங்கு ஆங்கிலம் ஆட்சி மொழி ஆகும். இந்நாட்டின் 8 மாகா ணங்களுள் ஒன்றான பரோட்சிலாந்தில்தான் மக்கள் வேளாண்மை, ஆடுமாடு வளர்ப்பு, சுரங்கத்தொழில் (Mining) முதலியவற்றிலீடுபட்டுச் சிறிது ஆட்சித் துறையிலும் முன்னேற்றம் அடைந்துள்ளனர். இந் நாட்டின் பல இடங்களில் பெரிய வடிவமுள்ள தெசெட்சி (Tsetse) என்ற ஒரு வகை ஈ வேளாண் மைத் தொழிலுக்கும் ஆடுமாடு வளர்ப்புக்கும் மக் கள் வாழ்தற்கும் இடையூறாக உள்ளது. வடஏரி களில் மீன்பிடித்தல், செப்புச் சுரங்கங்களில் தொழில் செய்தல் முதலியவை முக்கியமான தொழில்களாகும்.

வடபகுதியில் அதிகாரக் குவிப்புடைய ஆட்சி நடைபெறுகிறது. ஓரளவு ஐரோப்பியரும் ஆசியர் களும் நகரங்களில் தொழில் செய்கின்றனர். சாம்பிய ரல்லாதார் ஊரகப்பகுதிகளில் சட்டப்படி தொழில் செய்ய இயலாது. ஆயினும் சாம்பிய மக்கள் வேளாண் தொழிலை விட்டு வேறு தொழில்களையே விரும்பு கின்றனர். நாடு சுதந்திரம் அடைந்த பின் இலவசக் கல்விமுறை கொண்டு வரப்பட்டுள்ளது. தலைநகர மாகிய உலுசாகாவில் ஒரு பல்கலைக் கழகம் நிறுவப் பட்டுள்ளது. பெரும்பாலான மக்கள் பண்டைய ஆப் பிரிக்கச் சமய நெறிகளைப் பின்பற்றுகின்றனர். தென் னாப்பிரிக்காவிற்கு அடுத்தபடியாக, ஆப்பிரிக் காவில் மிக உயர்ந்த வருமானமுடைய இந்த நாட் டில், இதன் வருமானம் இதனுடைய செப்புச் சுரங்கங் களிலிருந்து கிடைக்கிறது. செசில் உரோட்சு (Cecil Rhodes) என்ற ஆங்கிலேயர் கி. பி. 19-ஆம் நூற் றாண்டின் கடைசியில் இங்குள்ள செம்புக்கனிகளை எடுத்தற்காகப் பெருமளவு முதலீடு செய்தார். இங்கு 1925-இல் செம்புக் கந்தகை கண்டுபிடிக்கப்பட்டது. 4 பெரிய செம்புச் சுரங்கங்கள் 1927க்கும் 1933க்கும் இடையே தோண்டப்பட்டன. ஒருபிலியன் தாலர் முத லீடு செய்யப்பட்டு 1970-இல் ஆண்டுக்கு 700,000 கண்டி (Tonnes)செம்பு உற்பத்தி செய்யப்பட்டது. செம்பைத் தாதிலிருந்து பிரிக்கும் தொழிற்சாலைகள் ஐரோப்பி யர்களால் நடத்தப்படுகின்றன. அடுத்த 70 ஆண்டுக் காலத்தில் 1000 கண்டிச் செம்பு கிடைத்தல் கூடும். கோபால்ட்டு (Cobalt) என்னும் உலோகமும் கிடைக் கிறது. வெள்ளையர்களும் தொழிலாளிகளாகச் சுரங் கங்களில் பணிசெய்கின்றனர். பல தொழில் நுட்ப அலுவல்களை ஆப்பிரிக்கர்களே செய்கின்றனர். ஆப் பிரிக்கர்கள் சுரங்கத் தொழிலில் வெள்ளையர்களை நீக்குமளவுக்குப் பயிற்சி பெறாமலிருத்தலால், சுரங் கங்களை நாட்டுடைமையாக்கும் திட்டங்களைக் குடி யரசுத் தலைவர் டாக்டர் கென்னத்து கவுண்டா (Dr. Kenneth Kaunda) ஒத்திப்போட்டுள்ளார்.




கென்னத்து கவுண்டா

இவர் 1968-இல் 25 அயல் நாட்டவருடைய பெரிய தொழிற்சாலைகளில் 51 சதவிகிதப் பங்கை

அரசாங்கம் வாங்குமாறும், உயிர்காப்பீட்டு நிறுவனங்களையும் வங்கிகளையும் அரசாங்கமே ஏற்குமாறும் செய்தார். இவர் நிறுவிய அரசாங்கத்தின் தொழில்வளர்ச்சிக்கழகமே (Industrial Development Corporation) நாட்டின் மிகப்பெரிய பொருளாதார அமைப்பாகும். இந்நாட்டை கி. பி. 1889 முதல் 1924 வரை ஆட்சி செய்த பிரிட்டானியதென்னாப்பிரிக்கக் கழகம் (British South African Company) செம்புப் பாளங்களை எடுத்துச் செல்லுதற்கு இருப்புப்பாதைகளை நிறுவி, மின்சார உற்பத்தியையும் பெருக்கிற்று.

சாம்பியாவின் வரலாறும் அரசாங்கமும்:இந்நாட்டின் முதற்குடிகள் வேளாண்மை, ஆடுமாடு வளர்ப்பு முதலிய தொழில்களைச் சாம்பசி ஆற்று வெளியில் செய்தனர். இந்நாட்டிற்கு வந்த ஐரோப்பியருள் கி. பி. 1514-இல் இந்த நாட்டை ஆராய வந்த போர்ச்சுகீசியரே முதன்மையானவர். பின்னர் கி. பி. 1850-இல் இசுகாட்லாந்திய சமய குருவாகிய தாவீது இலிவிங்சுடன் (David Livingstone) என்பவர் வந்து 1855-இல் விக்டோரியா அருவியைக் கண்டு பிடித்தார். இவர் கி.பி. 1873-இல் அவ்வாற்று வெளி முழுவதையும் ஆய்ந்து, அங்கு அராபியர் செய்து வந்த அடிமை வணிகத்தை ஒழிப்பதற்காக நிறுவனங்களை அமைத்து, ஆங்கிலேயரைக் குடியேறச் செய்தார். கேப்புக் குடியேற்றப் (Cape Colony) பகுதியிலிருந்த செசில் உரோட்சு கி.பி. 1889-இல் இப்பகுதியில் வாணிகம் செய்தற்கும், அரசாங்கத்தை நிறுவுதற்கும், பிரிட்டானிய தென்னாப்பிரிக்கக் கழகத்திடமிருந்து ஓர் அரசப்பட்டயம் பெற்றார். அவர் முயற்சியின் விளைவாகப் பரோட்சிலாந்தின் தலைவர் தம் நாட்டைப் பிரிட்டனின் பாதுகாப்பு நாடாக (British Protectorate) ஆக்கி, அங்குப் படைகளையும் காவலரையும் நிறுவினார்.

தென் உரொடீசியா அல்லது சிம்பாப்வே: சிம்பாப்வே என்ற சொல்லுக்கு 'கல் வீடுகள்' (Stone Houses) என்பது பொருள். உரொடீசியா என்ற பெயர் ஆங்கில நிதியாளரும் (Financier) பேரரசாளருமான (Empire Builder)செசில் உரோட்சு என்பவர் பெயரிலிருந்து பெறப்படுகிறது. இப்போது சிம்பாப்வே (Zimbabwe) எனப்படும் நாடு முன்பு தென் உரொடீசியா எனப்பட்டது. இதனுடைய ஆட்சித் துறை சார் பெயர் (Official Name) 1979-இல் சிம்பாப்வே உரொடீசியா (Zimbabwe Rhodesia) என வழங்கப் பட்டது. இதன் வடக்கிலும் வடகிழக்கிலும் மொசாம்பிக்கு (Mozambique), தெற்கே தென்னாப்பிரிக்கக் குடியரசு (Republic of South Africa), தென்மேற்கில்




தென்உரொடீசியா (சிம்பாப்வே)

போட்சுவானா (Botswana), வடமேற்கில் சாம்பியா முதலிய நாடுகள் இருக்கின்றன. இதன் பரப்பளவு 390,622 ச.கி.மீ. இதனுடைய பெயரான சிம்பாப்வே என்பது ஆப்பிரிக்க மக்கள் இட்ட தேசியப் பெயர். உரொடீசியா என்பது வெள்ளையருடைய குடியேற்ற நாடாக அது இருந்தபோது வெள்ளையரிட்ட பெயர். மக்களுள் 96 சதவிகிதம் கறுப்பு இனமக்களேயாவர். அவர்கள் மட்டபிலி (Matabele), மசோனா மொழிகள் பேசும் கூட்டத்தாராகப் பிரிந்துள்ளனர். மொத்த மக்கள் தொகையில் வெள்ளையர் 3 சதவிகிதமே உள்ளனர். மக்களுள் ஒரு சதவிகிதம் ஆசியர்கள். கறுப்பர்களுள் பெரும்பாலோர் சிற்றூர்களிலும், மற்றவர்கள் நகரங்களிலும் வாழ்கிறார்கள். இந்நாட்டின் தலைநகரம் சாலிசுபரி (Salisbury). புலவாயோ (Bulawayo) மற்றொரு பெரிய நகரம். வெள்ளையர்கள் பெரும்பாலும்பிரிட்டானியதேசிய இனத்தவர்கள்; மறுப்புரையாளர் பிரிவைச் சேர்ந்த(Protestant)கிறித்தவர்கள். கறுப்பர்களுள் பலர் ஆப்பிரிக்கக் கிறித்தவத் திருச்சபையைச் சேர்ந்தவர்கள். சோளம், கோதுமை, பருத்தி, கரும்பு, புகையிலை ஆகியவற்றைப் பயிரிடுந் தொழிலும் தங்கம், செம்பு, நிக்கல், குரோம் ஆகியவற்றை வெட்டி எடுக்கும் சுரங்கத்தொழிலும் நடைபெறுகின்றன. தென்னாப்பிரிக்கப் பேரரசாளரான செசில் உரோட்சு நிறுவிய பிரிட்டானிய தென்னாப்பிரிக்கக் கழகம் மட்டபில் தலைவரான உலோபன்கூலா (Lobenkula)என்பவரிடமிருந்து கி.பி. 1888-இல் தங்கச் சுரங்கங்களை ஏற்படுத்தும் உரிமை பெற்று, கி.பி. 1889-இல் இரு உரொடீசியாவையும் ஆளும் உரிமை பெற்றது. பின்னர்ச் சிறுபடை ஒன்று வெள்ளையரால் அனுப்பப்பட்டது. சாலிசுபரி கி.பி. 1890-இல் நிறுவப்பட்டு, உலோபன்கூலா தோற்கடிக்கப்பட்டார். இந்நாட்டிற்கு கி.பி.1895-இல் உரொடீ



சாலிசுபசரி நகரத்தின் ஒரு தோற்றம்

சியா என்ற பெயர் கொடுக்கப்பட்டது. செசில் உரோட்சு நிறுவிய குடியேற்றக் கழகம் இந்நாட்டை 25 ஆண்டுகள் ஆட்சி செய்து, அதன் சுரங்கத் தொழிலை வளர்த்தது. இக்கழகம் தன்னோடு பிரிட்டன் 1923-இல் செய்து கொண்ட ஓர் ஒப்பந்தத்தின் படி பிரிட்டானிய தென் உரோடீசியாவை இணைத்து, அதை அதனுடைய சிறுபான்மை வெள்ளையராலாளப்படுகிற ஒரு குடியேற்ற நாடாக ஆக்கிற்று.

வரலாறு: இரு உரொடீசியாக்களையும் ஒன்றாக இணைத்தல் வேண்டுமென்று, 1915-ஆம் ஆண்டிலிருந்து அவற்றில் குடியேறியிருந்த வெள்ளையர்கள் வற்புறுத்தினர். இவ்வாறு இணைத்தல் கூடாதென்று ஆப்பிரிக்கர்கள் வாய்மொழியாக எதிர்த்து வந்தனர். அவர்களுடைய எதிர்ப்பைப் புறக்கணித்து, 1953-செப்டம்பரில் உரொடீசியா-நியாசாலாந்துக்(Rhodesia – Nyasaland) கூட்டரசைப் பிரிட்டன் நிறுவிற்று. கலகங்களும் வேலை நிறுத்தங்களும் நடந்தன; நெருக்கடி நிலை ஆணை நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. வடஉரொடீசியாவில் வெள்ளையராட்சிக்கு எதிராக ஆப்பிரிக்கருடைய எழுச்சிக்கு உதவும் பொருட்டு, ஆப்பிரிக்கத் தேசிய காங்கிரசு (African National Congress) என்ற ஓர் அமைப்புத் தோன்றிற்று. இது தங்கனிகா ஏரிக்கும் சாம்பசி ஆற்றுக்குமிடையே வாழ்ந்த ஆப்பிரிக்க மக்களை இணைத்தது. இது ஆரிநுகும்பாவின் தலைமையில் போராட்டம் நடத்திற்று. இராணுவ இயல்புடையஅமைப்பொன்று இதிலிருந்துபிரிந்து, ஐக்கிய தேசிய சுதந்திரக் கட்சி (United National Independent Party) என்னும் பெயருடன் கென்னத்துகவுண்டாவின் தலைமையில் மக்களுடைய பேராதரவைப் பெற்றுப் போராட்டம் நடத்திற்று. வடஉரொடீசியாவில் 1962-ஆம் ஆண்டுத் தேர்தலில் ஆப்பிரிக்கத் தேசிய காங்கிரசும், ஐக்கிய தேசிய சுதந்திரக் கட்சியும் கூட்டாக நின்று வெற்றி பெற்று ஐரோப்பியரிடமிருந்து ஆட்சி அதிகாரத்தை முதலில் பெற்றன. பிரிட்டன் 1963-இல் உரொடீசிய - நியாசாலந்துக் கூட்டரசைக் கலைத்துவிடவே, 1964 அக்டோபரில் வட உரொடீசியா சாம்பியா என்ற பெயரில் சுதந்திர நாடாயிற்று; கவுண்டா அதன் முதல் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவருடைய கட்சி ஒன்றைத் தவிர மற்றவை தடை செய்யப்பட்டன. பாராளுமன்றம் 136 உறுப்பினர்களை உடையதாக விரிவாக்கப்பட்டது. தென் உரொடீசியாவும் சாம்பியாவும் தம் எல்லைப்புற வழிகளை மூடிவிட்டமையால், கவுண்டா தம் நாட்டிற்குக் கடலோடு தொடர்பை ஏற்படுத்துவதற்கு மாற்று வழிகளை நிறுவுதலில் ஈடுபட்டுள்ளார். தென் உரொடீசியாவின் வெள்ளை அரசாங்கம் 1965-இல் அந்நாட்டைச் சட்டத்துக்கு முரணாக உரொடீசியா என்ற புதிய பெயரில் சுதந்திர நாடாக ஆக்கி, 1970-இலிருந்து அதை ஒரு குடியரசாக அறிவித்தது. இதனால் பன்னாட்டுச் சமுதாயத்தால் தென் உரொடீசியா ஒதுக்கிவைக்கப்பட்டும், அந்நாட்டின் கறுப்பு இனமக்களுடைய மறைவான தாக்குதலுக்கு உட்பட்டும் வந்தது. கறுப்பு இனமக்கள் பெரும்பான்மையாளரான தங்களுடைய ஆட்சி நிறுவப்படுதல் வேண்டுமெனக் கூறினர். வெள்ளையருடைய சிறுபான்மை ஆட்சியை நடத்திவந்த இயான்சுமித்து (Ian Smith) 1979-இல் கறுப்பு இனத்தலைவருடைய தலைமையின் கீழ் இரு இனத்தைச் சேர்ந்த பேராளர்களடங்கிய ஒரு கூட்டு அரசாங்கத்திடம் அதிகாரத்தை ஒப்படைத்துவிட்டு விலகினார். ஆயினும் இதில் போரிலிறங்கிய கறுப்பர்களுக்குப் பங்கு ஏதும் இல்லை. வெள்ளையருடைய சலுகைகள் பாதுகாப்பாக இருந்தன. அதனால், உலக நாடுகளின் ஒப்புதலும் இக்கூட்டு அரசாங்கத்துக்குக் கிடைக்கவில்லை. கொரில்லாக்களின் எதிர்ப்பும் நிற்கவில்லை. இந்நாட்டில் எதிர்காலத்தில் நிலையாக இருக்கக்கூடிய அரசாங்கம் யாவராலும் ஒப்புக்கொள்ளப்படக்கூடிய கறுப்பரின் பெரும்பான்மை ஆட்சியாகத்தான் இருத்தல் இயலுமென்று யாவருக்கும் தெளிவாகத் தெரிந்தது. வயதுவந்தோருக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டுப் பாராளுமன்ற அரசாங்கமுறையும் நிறுவப்பட்டது. இன ஒதுக்கல் தடை செய்யப்பட்டது. தலைவர் பெரும்பான்மைக் கட்சியிலிருந்து தலைமை அமைச்ச

சரை அமர்த்துகிறார். பாராளுமன்றத்தின் கீழ்ச்சபையில் 100 இடங்களுள் 28 வெள்ளையருக்கு ஒதுக்கப்பட்டு, அவர்களுடைய சொத்துரிமையும் நாட்டின் படை, காவல், நீதித்துறை, ஆட்சிப் பதவிகள் முதலியவற்றில் கணிசமான பங்கும் பாதுகாப்பாக இருக்கின்றன.

இரா.அ.

**உரோகிணி** ஒரு நாள்மீன். இது சகடத்தின் உருவில் ஐந்து மீன்களால் அமைந்துள்ள ஒரு குழுமீன். 'வானூர் மதியம் சகடு அணைய வானத்துச், சாலி ஒரு மீன் தகையாளைக் கோவலன், தீவலம் செய்வது காண்பார் கண் நோன்பு என்னை' என்னும் சிலப்பதிகார மங்கல வாழ்த்துக் காதையில் வரும் பகுதியில் நிலா உரோகிணி நாள்மீனைச் சேர்கிற நன்னாள் குறிப்பிடப்பட்டுள்ளது. கோவலன் கண்ணகி திருமணம் அந்நாளில் நடைபெற்றதாக இளங்கோ வடிகள் குறிப்பிட்டுள்ளார்.

கார்த்திகை மாதத்தில் முழுநிலா உரோகிணியைச் சேரும் நன்னாள், திருமணத்திற்குச் சிறந்த நாளாகக் கருதிப் பண்டைத் தமிழர் தங்கள் திருமணத்தை நடத்தியுள்ளனர். பழங்காலத்தில் ஒரு திருமணம் நடைபெற்ற நாளினை அகநானூறு பின்வருமாறு குறிப்பிடுகிறது: 'கோள் கால் நீங்கிய கொடுவெண் திங்கள், கேடில் விழுப்புகழ் நாள் தலை வந்தென' என்பது (அகம். 86-6, 7) அப்பகுதியாகும். அதனை விளக்க வந்த உரையாசிரியர்கள், 'திங்கள் உரோகிணியை வந்தெய்திய நாள்' என்றே குறிப்பிட்டுள்ளனர்.

உரோகிணிக்குத் தேர், வையம், பார், ச்கடு ஆகிய வேறு பெயர்களும் உண்டு. இது அசுவினி முதலாக எண்ணப்படும் நாள்மீன்களுள் நான்காவதாக உள்ளது. 'ஏற்றியல்' என்று பரிபாடலில் குறிப்பிடப்படும் இடப இராசியில் இந்நாள்மீன் 10 பாகை முதல் 23 பாகை 20 கலை வரை இடம்பெற்றுள்ளது. உரோகிணி சந்திரனுக்குரிய மூன்று நாள்மீன்களுள் ஒன்று. உரோகிணி 'சந்திரனுக்கு' உரிய நாள் மீனாக இருப்பதால் உரோகிணியில் பிறந்தவர்கள் சந்திர திசையில் பிறந்தவர்கள் என்று கருதப்படுவர்.

ப. ரா. க.

**உரோகில்லாப்போர்கள் (கி.பி.1774):** உத்தரப் பிரதேசத்தின் ஒரு பகுதியாக உரோகில்கண்டு (Rokhilkhand) உள்ளது. முற்காலத்தில் இதற்குக் கதேகர் (Katehar) என்பது பெயர். மொகலாயப் பேரரசின் ஒரு பகுதியாக விளங்கிய கதேகர், கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்திலிருந்து உரோகில் கண்டு என்னும் பெயர் பெற்றது.

கதேகரில் முதன்முதலில் குடியேறிய ஆப்கானியர்களான சா ஆலமும் (Shah Alam) உசைன் கானும் (Hussain Khan) கி.பி.1673-இல் மொகலாய அரசுப் பணியில் சேர்ந்தனர். விரைவில் உசைன்கான் ஆப்கானிசுத்தானத்திற்குத் திரும்பிவிட்டார். அவர் தம் அடிமைகளுள் ஒருவரான தாவூத் கானைக் (Daud Khan) கதேகருக்கு அனுப்பி வைத்தார். அங்கு வந்து சேர்ந்த தாவுத்கான் திறமைசாலியாகவும் சிறந்த வீரராகவும் திகழ்ந்து, தம் செல்வாக்கினை விரைவில் பெருக்கிக் கொண்டார்.

தாவூத்கான் இறந்தவுடன் அவர் அதிகாரத்தின் கீழ் இருந்த பகுதிகள் அவர்தம் வளர்ப்பு மகன் அலி முகமதுவின் வசமாயின. மொகலாய மன்னர் அவுரங்கசீபின் மறைவிற்குப் பின்னர், மொகலாயப் பேரரசு சிதைவுறத் தொடங்கியது. மைய அரசின் வலு குறையத் தொடங்கியதைப் பயன்படுத்திக் கொண்டு, ஆப்கானியர்கள் தங்கள் ஆட்சியை நிலைநாட்டினர். அலி முகமதுவைத் தொடர்ந்து, நசீப்கான் (Najib Khan), குயாம் சங்கு (Quiam Jung) போன்ற தளபதிகள் தங்கள் செல்வாக்கினைத் தத்தம் பகுதிகளில் நிலைநாட்டிக் கொண்டனர்.

மொகலாயப் பேரரசின் வலிமை குறைந்த நிலையைப் பயன்படுத்திக் கொண்டு அலி முகமது பேரரசுக்குக் கொடுக்க வேண்டிய திறை செலுத்த மறுத்துவிட்டார். அத்திறைப் பொருளைத் தம் இராணுவ வலிமையைப் பெருக்கிக் கொள்வதற்குப் பயன்படுத்திக் கொண்டார். சா ஆலத்தின் புதல்வரான அபீசு ரகமத் கானைத் (Hafiz Rahamat Khan) தம் பக்கம் சேர்த்துக் கொண்டு, அவருக்குச் சில சாகீர்களை (Jagir) வழங்கி, அவருடன் உறவை வலுப்படுத்திக் கொண்டார். அலி முகமது இறந்தவுடன் அவர்தம் மூன்றாம் மகன் பதவி ஏற்றார். அவர் அபீசு ரகமத் கானைத் தம் காப்பாளராக நியமித்துக்கொண்டார். வலிமையற்ற இவ்வரசரின் நிலையைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, ஆப்கானியத் தலைவர்கள் பெரும் பகுதியைத் தங்களுக்குள் பகிர்ந்து கொண்டனர். அவர்களுள் அபீசு ரகமத்து பெரும் பங்கினை எடுத்துக் கொண்டு, உரோகில்லாக் கூட்டரசு (Rohilla Confederacy) அமைத்து, அதன் தலைவரானார். இவர் பல சீர்திருத்தங்களைச் செய்து நாட்டை வளப்படுத்தினார். இவர்தம் முயற்சியால் பரெய்லி (Bareilly) ஒரு சிறந்த வணிக நகரமாயிற்று.

போரின் காரணங்களும் போக்கும்: பேசுவா மாதவராவின் (கி.பி. 1761-1772) ஆட்சியின்போது வட இந்தியாவில் பல இடங்களை மராத்தியர்

தாக்கிச் சேதம் விளைவித்தனர். மொகலாயப் பேரரசர் சா ஆலமும் மராத்தியர் பாதுகாப்பில் சென்றார். மராத்தியர் கி.பி. 1771-இல் சா ஆலத்தைக் கட்டாயப்படுத்தி, கோரா (Kora), அலகாபாது (Allahabad) என்ற இரு மாவட்டங்களைப் பெற்றுக்கொண்டனர். இச்செயலை வங்காளத்தின் ஆளுநரான வாரன் ஏசுடிங்சு (Warren Hastings) விரும்பவில்லை.

மூன்றாம் பானிப்பட்டுப் போரில் (கி.பி. 1761) மராத்தியருக்கு எதிராக அயோத்தி நவாபு, அகமது சா அப்தாலி ஆகியோருடன் சேர்ந்து உரோகில்லாக்கள் போரிட்டதுவே உரோகில்லாப் போரின் முக்கிய காரணமாகும்.

உரோகில்லாக்களுக்கு எதிராகப் பழிதீர்ப்பதற்கான காலத்தை எதிர்நோக்கி மராத்தியர் காத்திருந்தனர். மராத்தியர் கி.பி. 1769-இலும் கி.பி. 1772-இலும் உரோகில்கண்டுமீது படையெடுத்துப் பெருஞ் சேதம் விளைவித்தனர். இதன் விளைவாக, அயோத்தி நவாபும் உரோகில்லாக்களும் தம் பொதுப் பகைவரான மராத்தியர்களுக்கு எதிராக கி.பி. 1772-இல் உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொண்டனர். இவ்வுடன்படிக்கை ஆங்கிலேயப் படைத்தலைவர் இராபர்ட்டு பர்க்கர் (Robert Barker) என்பவர் முன்னிலையில் சகாபாது (Shahabad) என்ற இடத்தில் செய்து கொள்ளப்பட்டது. இவ்வுடன்படிக்கையின்படி, மராத்தியர் உரோகில்கண்டுமீது படையெடுத்தால் அயோத்தி நவாபு உரோகில்கண்டிற்கு உதவவேண்டும். இவ்வுதவிக்காக நவாபிற்கு உரூபா 40 இலட்சம் தர வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

மராத்தியர் கி.பி. 1773-இல் உரோகில்கண்டுமீது படையெடுத்தனர். பேசுவா மாதவராவு திடீரெனக் காலமானதால் படையெடுப்பை மராத்தியர் இடையிலேயே கைவிட்டுச் சென்றனர். மராத்தியர் ஆட்சியில் உள்நாட்டுப் பூசலும் குழப்பமும் ஏற்பட்டன. இந்நிலையில் தங்கள் படையெடுப்பை மராத்தியர் மீண்டும் தொடங்கவில்லை. ஆங்கிலேயர்களும் அயோத்தி நவாபும் உரோகில்கண்டுக்குப் பாதுகாப்பு அளித்தனர். ஒப்பந்தப்படி உரோகில்லாக்கள் தமக்கு 40 இலட்ச உரூபாயைத் தரவேண்டுமென்று அயோத்தி நவாபு சூசா-உத்-தௌலா (Shuja-ud-daulah) கேட்டார். உரோகில்கண்டின் அரசர் அபீசு ரகமத்கான் ஒப்பந்த விதியின்படி நடக்காமல் பணத்தைக் கொடுக்காமலும், அதற்கான காரணம் கூறாமலும் காலம் கடத்தினார். அவர் மராத்தியருக்கு எதிராகப் போரிடவில்லை என்று அயோத்தி நவாபிடம் கூறினார். இதனால், சினமுற்ற அயோத்தி நவாபு ஆங்கிலேயரின் உதவியை நாடினார்.

அப்போது ஆங்கிலேய வணிகக் குழுவின் நிதி நிலைமை சீராக இல்லாத காரணத்தினால், நிதி நிலைமையைச் சீர்படுத்திக்கொள்வதற்காக கி.பி. 1773-இல் வாரன் ஏசுடிங்சு காசியில் உடன்படிக்கை ஒன்றை அயோத்தி நவாபுடன் செய்துகொண்டார். இதன்படி, மொகலாயப் பேரரசர் மராத்தியரின் பாதுகாப்பில் சென்றதால் அவருக்குக் கொடுக்கப்பட்டு வந்த ஓய்வூதியத் தொகை 26 இலட்ச உரூபா நிறுத்தப்பட்டது. கோரா, அலகாபாது ஆகிய மாவட்டங்களை அயோத்தி நவாபு 50 இலட்ச உரூபா கொடுத்துப் பெற்றார். உரோகில்கண்டைத் தாக்குவதற்கு வாரன்ஏசுடிங்சு உதவியைப் பெற்றார். உரோகில்கண்டைத் தாக்குவதற்கு ஆங்கிலேயர்கள் படை உதவி செய்தால், தமக்கு அபீசு இரகமத்கான் தருவதாக உறுதி மொழி கூறியிருந்த 40 லட்ச உரூபாயைஆங்கிலேயருக்குக் கொடுக்க அயோத்தி நவாபு இசைந்தார்.

வாரன் ஏசுடிங்சு உரோகில்கண்டு விவகாரத்தில் ஈடுபடக் காரணம் மராத்தியரின் வளர்ச்சியைத் தடுக்கவும்,அயோத்தியைத் தம் செல்வாக்குக்குட்பட்ட இடைப்படுநாடாக (Buffer State) எப்போதுமே வைத்துக்கொள்ளவும் விரும்பியதே ஆகும். மேலும், நிதிநிலைமை சீர்பெறத் தேவையான பொருள் கிடைக்கும் என்பதும் பிறிதொரு காரணமாகும்.

அயோத்தி நவாபின் படையும் ஆங்கிலேயப் படையும் கி.பி. 1774-இல் உரோகில்கண்டைத் தாக்கின. கர்னல் சாம்பியன் (Colonel Champion) ஆங்கிலேயப் படைத்தலைவராயிருந்தார். மீரான்பூர் கத்ரா (Miranpur Katra) என்னுமிடத்தில் நடைபெற்ற போரில் உரோகில்லாக்கள் தோல்வியுற்றனர். அபீசு ரகமத்கான் போரில் இறந்தார்.

வெற்றி பெற்ற அயோத்தி நவாபின் படைகள் உரோகில்கண்டைச் சூறையாடின. நவாபு 20,000க்கும் மேற்பட்ட உரோகில்லாக்களைக் கங்கைக்கு அப்பால் விரட்டி நாடு கடத்தினார். உரோகில்கண்டு அயோத்தியுடன் இணைக்கப்பட்டது. உரோகில்கண்டில் ஆப்கானிய முசுலிம்களின் ஆட்சியை ஏற்படுத்திய அலி முகமதுவின் மகனான பைசுல்லாகானை(Faizullah Khan) இராம்பூர் என்னும் சிறு பகுதிக்கு அரசராக்கினார். பைசுல்லாகான் 5000 வீரர்களை மட்டும் கொண்ட படைப்பிரிவை வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டார். அயோத்தி நவாபு ஆங்கிலேயர் தவிர,ஏனைய வெளி அரசுகளுடன் தொடர்பு கொள்ளக் கூடாதெனத் தடை செய்யப்பட்டார். எஸ்.அ.

துணை நூல்கள்:

**Ishwari Prasad,** India in the Eighteenth Century, Allahabad, 1973.

**Chopra**, G.S., Advanced Study in the History of Modern India, Vol.I, 1707-1813, New Delhi, 1971.

**உரோகிலா** உத்தரப் பிரதேசத்தில் வாழ்ந்து வரும் ஆப்கானிய நாட்டுப் பட்டாணியப் (Pathan) பழங்குடியினர் ஆவர். இவர்கள் பரீய்லித் தொடரைச் (Bareilly Tract) சார்ந்த உரோகில்கண்டு (Rohilkhand) என்னும் பகுதியில் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் பேசும் புசுத்தோ (Pushtoo) மொழியில் உரோ (Roh) என்னும் சொல் மலை என்னும் பொருளைச் சுட்டும். உரோகிலா என்பதற்கு மலைப் பகுதியில் வாழ்பவர்கள் என்பது பொருள்.

உரோகிலாப்(Rohilla) பழங்குடியினர் தங்களைப் பண்டைய எகிப்திய மரபினரான கிறித்தவ (Copic) இனத்தின் வழிவந்தவர்களென்று கூறிக்கொள்வர். பண்டைய எகிப்திய அரசரால் துரத்தப்பட்டு, இவர்கள் ஆப்கானியச் சுலைமானி கோ (Sulaimani Koh) என்னும் மலைகளில் குடியேறினர். இவர்கள் கடன் கொடுக்குந் தொழிலராக (Money Lender) இருந்த நிலையை மாற்றிக் கொண்டு, இக்காலத்தில் வாணிகத்தையும் பிற தொழில்களையும் ஏற்றுள்ளனர். சீ.ப.

**உரோசாக்கு எர்மன் (கி.பி. 1884-1922)** சுவிட்சர்லாந்து நாட்டு உளவியல் அறிஞர்; உரோசாக்கு சோதனை என்ற சிறப்பு வாய்ந்த மை ஒற்றுச் சோதனையை உருவாக்கியவர். ஓவிய ஆசிரியருக்கு மகனாகப் பிறந்த இவர், தம் மருத்துவப் படிப்பைச் சூரிச்சுப் (Zurich) பல்கலைக் கழகத்தில் புளூலரின்கீழ் (Bleuler) நிறைவுசெய்தார். இவர் ஓல்கா இசுடெம்ளின் என்ற உருசியப் பெண்ணை மணந்தார். இவர் சுவிட்சர்லாந்திற்கு வருவதற்கு முன்னர், மாசுக்கோ அருகிலுள்ள மருத்துவ மனையில் பணிபுரிந்தார்.

இவர் உருவாக்கிய மைஒற்றுச் சோதனை உளவியல் துறையின் வரலாற்றில் குறிப்பிடத்தக்கது. இச்சோதனை முறை மனநல மருத்துவ மனைகளில் உள நோயாளிகளைச் சோதனை செய்ய மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டது (பார்க்க: ஆளுமை மதிப்பீடு). இச்சோதனையில் பத்து மைத்தட அட்டைகளைத் தயார் செய்து, நோயாளிகளின் மனநிலைகளை அறியப் பயன்படுத்தினார். இச்சோதனை உருவாவதற்குப் புளூலர், யுங்கு, பிராய்டு ஆகியோரின் கோட்பாடுகள் உதவியாக இருந்தன.

உரோசாக்கு(Hermann Rorshach)சுவிட்சர்லாந்தில் ஏற்படுத்தப்பட்ட உளப்பகுப்பாய்வு நிறுவனத்திற்குத் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் எழுதிய'உள ஆய்வு முறை'(Psychodiagnostics) என்ற நூல் சிறப்புடையது. இந்நூல் 300மனநோயாளிகளையும் மனநோயற்ற 100 பேர்களையும் பத்தாண்டுகளாகச்சோதனைசெய்ததின்ஆய்வறிக்கையாகும்.சு.சா.

**உரோசுடி** குசராத்து மாநிலத்தில் இராசுகோட்டு மாவட்டத்தில் இராசுகோட்டு (Rajkot) நகரத்திற்குத் தெற்கே 56 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள தொல்லியல் சிறப்புப் பெற்ற ஊர். இவ்வூர் அரப்பாப் பண்பாட்டின் சிதைவுகளைக் கொண்டு விளங்குகிறது. இந்நகரத்தின் பழைமையை முதன்முதலாகப் பி.பி. பாண்டியா (P.P. Pandya) 1957-இல் கண்டுபிடித்தார். பின்னர், 1962-இல் குசராத்து மாநிலத் தொல்லியல் ஆய்வுத் துறையைச் சார்ந்த சே.எம். நானாவதி (J.M. Nanavati) தலைமையில் அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது.

இவ்வகழாய்வுகளின் மூலம் 1) அரப்பாப் பண்பாடு, 2) வரலாற்றுக் காலப் பண்பாடு என்ற இரு பண்பாடுகள் இங்கு இருந்தன என்பது கண்டறியப் பட்டது. அரப்பாக்காலத்திற்குப்பின் நீண்ட காலம் வரை மக்கள் இங்கு வாழவில்லை. நீண்ட இடைவெளிக்குப்பின் வரலாற்றுக் காலம் தொடங்கியது. ஆயினும், அரப்பாக் காலத்திற்குமுன்னரே, இங்கு மக்கள் வாழ்ந்தமைக்கான அறிகுறிகளைக் கள ஆய்வில் கிடைத்த நுண்கற்கருவிகள்(Microliths)தெரிவிக்கின்றன. அரப்பாப் பண்பாட்டுக்காலம் மூன்றாகப் பிரிக்கப்பட்டு, அ,ஆ,இ எனப் பெயரிடப்பட்டுள்ளது.

'அ' பிரிவுக் காலத்திய கடினமான சிவப்பு மண்பாண்டங்கள் இங்குக் கிடைத்தன; குவிந்த பக்கங்களையுடைய கிண்ணங்களும், துளையிட்ட சாடிகளும், குவளைகளும், தாங்கியுடன் கூடிய தட்டுகளும், தொட்டிகளும் கிடைத்தன. பொதுவாக இவற்றின் மீது கறுப்புவண்ணம் தீட்டப்பட்டிருந்தது.

இவைதவிர, படிகக் கல்லினால் (Chert) செய்யப்பட்ட இரு பக்கமும் கூரிய பட்டைக் கத்திகள் (Blades), செம்பினால் செய்யப்பட்ட உளிகள், வளையங்கள், தங்கத்தினால் செய்யப்பட்ட வளையங்கள், இளஞ்சிவப்பு நிற மணிக்கற்கள் (Cornelian)ஆகியவையும் கிடைத்துள்ளன.

'ஆ' பிரிவுக்கால்த்தைச் சேர்ந்தனவாகச் சிவப்பும் சாம்பல் நிறமும் கலந்த மஞ்சள் நிற (Red and Buff Ware) உட்கவிந்த கிண்ணங்கள், துளையிடப்பட்ட பானைகள்,குவளைகள், தாங்கியுடன் கூடிய தட்டுகள், தொட்டிகள் போன்றவை அகப்பட்டன. இவற்றின்மீது வெளிப்புறத்தில் மீன், இலைகள், முக்கோண வடிவங்கள், வளையங்கள், வளைவுக்கோடுகள் முதலியன

தீட்டப்பட்டிருந்தன. இவை தவிர, கூர்மையான பட்டைக் கத்திகள், செம்பினால் ஆன உளிகள், கழிகள் (Rods), வளையல்கள், சுடுமண்ணினால் ஆன பொருள்கள் ஆகியனவும் கண்டெடுக்கப்பட்டன.

அரப்பாப் பண்பாட்டு இறுதிக் காலமான 'இ' பிரிவில் துளையிடப்பட்ட பானைகள் (Perforated jars) காணப்படவில்லை. மற்ற இரு பிரிவுகளில் கிடைத்த பொருள்களும் இப்பிரிவில் குறைவாகவே கிடைத்தன. மேலும், பரபாசு என்ற இடத்தில் காணப்படும் பானைகளை ஒத்த பானை ஓடுகள் இதில் காணப்பட்டன.

இக்காலப் பிரிவிற்குப் பின்னர், இங்கு மக்கள் வாழ்ந்ததற்கான அறிகுறி காணப்படவில்லை. ஆனால், நீண்ட இடைவெளிக்குப்பின் வரலாற்றுக் காலத்தில் மக்கள் இங்கு வாழ்ந்துள்ளனர். கே.இரா.

**உரோசுபரி (கி.பி. 1847-1929)** இங்கிலாந்தின் அரசியல் வல்லுநர்; முற்போக்குக் (Liberal) கட்சியின் தலைவராகப் பொறுப்பேற்றவர். இவர் கிளாடுசுடன் (Gladstone)என்பாரை அடுத்து அக்கட்சியின் தலைவரானார். உரோசுபரி (Rosebery) கி.பி. 1847-இல் பிறந்தார்; ஈட்டனிலும் ஆக்சுபோர்டைச்சார்ந்த கிறித்துச் சபையிலும் கல்வி கற்றார். இவர் கிளாடுசுடனின் இறுதி அரசில் வெளியுறவுத் துறைச் செயலாளராக கி.பி. 1892 முதல் 1894 வரை பணிபுரிந்தார். கிளாடுசுடன் கி.பி. 1894-இல் பதவியைத் துறந்தபோது இவர் தலைமை அமைச்சரானார்.

முற்போக்குக் கட்சியினர் அடுத்து நிகழ்ந்த தேர்தலில் தோல்வியுற்றனர். எனினும், உரோசுபரி கி.பி. 1896 வரை அக்கட்சியின் தலைவராக இருந்தார். இங்கிலாந்துக்கும் தென் ஆப்பிரிக்காவில் இருந்த இசுபானிய குடியேற்றவாதிகளான போயர்களுக்கும் இடையே போர் (Boer War) மூண்டபோது இவர் பேரரசுவாதியானார். முற்போக்குக் கட்சியினரின் நிருவாகத்தின்போது இவர் பல முறை பதவி வகித்தார்.

உரோசுபரி பல நூல்களை எழுதியுள்ளார். அவற்றுள் பிட்டு (Pitt) என்பாரையும் பீல் (Peel) என்பாரையும் பற்றி இவர் எழுதிய நூல்கள் குறிப்பிடத்தக்கவை.

உரோசுபரிக்கு வாழ்க்கையில் மூன்று ஆசைகள் இருந்ததாக வெளியிட்டிருந்தார். முதலாவது, தெர்பி (Derby)போட்டியில் வெற்றிபெறுவது. இரண்டாவது, நிறைந்தசொத்துள்ள உயர்குடிச் சீமாட்டி ஒருத்தியை மணந்துகொள்வது. மூன்றாவது, இங்கிலாந்தின் தலைமை அமைச்சராவது. இவர் தம் மூன்று ஆசைகளும் நிறைவேறப்பெற்றார். இவர் 1929-இல் காலமானார். இரா.அ.

**உரோசெட்டாக் கல்வெட்டு** தொன்மையான மூன்று மொழிகளில் வெட்டப்பட்டது. இக்கல்வெட்டு எழுத்துகளைக் கொண்டு, தொன்மையான எகிப்திய எழுத்து முறையை அறியும் வாய்ப்பு ஏற்பட்டது. முதலாம் நெப்போலியன் எகிப்தின்மீது, படையெடுத்த பொழுது அவருடைய கப்பற்படையில் இருந்த போச்சர்டு (Bouchard) என்பவரால் கி.பி. 1799-இல் இக்கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டது. நைல் ஆற்றின் மேற்கு முகத்துவாரத்தில் அமைந்துள்ள உரோசெட்டா (Rosetta) என்னும் ஊரிலுள்ள புனித சூலியன் கோட்டையில் (Port St. Julian) இக்கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டது. பிரெஞ்சுப் படை ஆங்கிலேயரால் தோற்கடிக்கப்பட்டபின், இக்கல்வெட்டு இங்கிலாந்திற்குக் கொண்டு செல்லப்பட்டு இன்று பிரிட்டானிய அருங்காட்சியகத்தில் (British Museum) வைக்கப்பட்டுள்ளது.



உரோசெட்டாக் கல்வெட்டு

இக்கல்வெட்டின் கல் ஒழுங்கற்ற வடிவமுடையது. திண்ணிய கருமை நிறமுடைய இக்கல்லின் உயரம் 1.1 மீ. அகலம் 0.75 மீ. உடைந்து

காணப்படும் இக்கல்லிலுள்ள எழுத்துகளை மெம்பிசு (Memphis) நகரச் சமயக் குருமார் எழுதினர். இக்கல்வெட்டு 5-ஆம் தாலமி எபிபனசு (Ptolemy. V Epibhanes) என்ற அரசர் அளித்த கொடையைப் புகழ்ந்து எழுதப்பட்டது. இக்கல்வெட்டு இவ்வரசரின் 9-ஆம் ஆட்சி ஆண்டான கி.மு. 196-இல் வெட்டப்பட்டது. இக்கல்வெட்டில் மூன்று வகை எழுத்துகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. எகிப்திய தேவ்வரிவடிவிலும் (Hieroglyphics), எகிப்திய பொது வழக்கு வடிவிலும் (Demotic), கிரேக்க எழுத்திலும் இக்கல்வெட்டு எழுதப்பட்டுள்ளது. எகிப்திய மொழியும் கிரேக்க மொழியும் இக்கல்வெட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

உரோசெட்டாக் கல்வெட்டைப் படித்தறிந்தவர்களுள் தாமசு யங்கும் (Thomas Young), சம்போலியனும்(Champollion) குறிப்பிடத்தக்கவர்கள்.இக்கல்லில் வரையப்பட்டுள்ள நீள்வட்ட வளையங்களினுள் அரசர்களின் பெயர்கள் உள்ளன என்பது கண்டுபிடிக்கப்பட்டது. இக்கல்வெட்டில் தாலமியின் பெயரைத் தாமசு யங்கு கண்டுபிடித்தார். இவரே பிற கல்வெட்டுகளில் காணப்படும் நீள்வட்ட வளையங்களும் அரசர்களின் பெயரைக் குறிப்பனவே என்று கூறினார். சம்போலியன் இக்கல்வெட்டினை அடிப்படையாகக் கொண்டு எகிப்திய எழுத்தாய்வுக் கட்டுரையை வெளியிட்டார். இவர் இதன்மூலம் வரிவடிவத்தை உருவாக்கினார். எகிப்திய எழுத்துகளில் அகரவரிசை (Alphabets) அசை எழுத்துகள் (Syllabic) மற்றும் குறிப்பெழுத்துகள் (Determinatives) ஆகியவற்றைக் கண்டுபிடித்துப் படிக்கும் முறையையும் இவரே வரையறுத்தார். சு.இரா.

**உரோட்சிப் பழங்குடி** தென்மேற்குச் சாம்பியாவில் வாழும் ஓரினம். இவ்வின மக்களின் அரசியல் முறைகளும் சட்டமுறைகளும் மிக மேம்பட்டவை. உரோட்சியினர் (Rotse) பரோட்சி (Barotse) அல்லது உலோசி (Lozi) எனவும் அழைக்கப்படுவர். இம்மக்கள் வாழும் பகுதி வளமற்ற மணற்பாங்கானது. இப்பகுதியின் நடுவில் சாம்பசி (Zambezi) ஆறு ஓடினாலும், பயிர்கள் செழித்து வளரும் தன்மையினை இப்பகுதி பெற்றிருக்கவில்லை. இம்மக்கள் வெள்ளப் பெருக்கு ஏற்படும்போது சமநிலப் பகுதியை அடுத்த மணல்மேடுகளில் அமைக்கப்பட்டிருக்கும் குடியிருப்புகளுக்குச் சென்றுவிடுவர். வெள்ளப் பெருக்கு பிப்பிரவரி முதல் சூலை மாதத்திற்குள் ஏற்படும். வெள்ளப் பெருக்கின் அறிகுறியைக் கணக்கிட்டு, அரசன் சமநிலப் பகுதியிலிருந்து புதர் அடர்ந்த எல்லைப் பகுதிக்குச் செல்லும் பயணத்தைக் கண்ட பின்னரே இம் மக்கள் மேட்டு மணற் பகுதிக்குச் செல்வர். குவம்போகா (Kuomboka) எனக் கூறப்படும் இப்பயணத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட படகோட்டிகளே அரசர் செல்லும் நீண்ட படகினை ஓட்டுவர். அரசர் செல்லும் படகை ஓட்டுவதற்குத் தேர்ந்தெடுக்கப்படுவதை இவர்கள் மிகச் சிறப்பாகக் கருதுகின்றனர்.



உரோட்சியினர் படகினை ஓட்டுதல்

சமூக, பொருளாதார, அரசியல் வாழ்க்கையில் இவர்கள் வாழும் வெள்ளச் சமவெளியே முதன்மையான பங்கினைப் பெற்றுள்ளது. முற்காலத்தில் பரோட்சி மக்களே உரோட்சியினர் வாழும் பகுதியில் வாழ்ந்து வந்தனர். இவர்கள் ஆதிக்கக் குழுவினராகவும் இருந்தனர். பிற்காலத்தில் இரு குழுவினரும் கலப்படைந்து விட்டனர். பல நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து இரு குழுவினரும் பெருமளவிலான கலப்பு மணமுறையைக் கொண்டிருந்ததால் இன்று இவர்களிடையே வேறுபாடுகள் காண்பதரிது.

உரோட்சியினரின் அரசியலமைப்பு மிகவும் வளர்ச்சியடைந்ததாகும். ஓரிடத்தில் அதிகாரம் குவிந்த தலைமையமைப்பைக் கொண்டிருக்கும் இவர்களிடையே அதிகாரத்தைச் செயற்படுத்துவதில் பல படிநிலை அமைப்புகளும் காணப்படுகின்றன. இவர்களின் ஆட்சியமைப்பைச் செயற்படுத்த இலீலுய்(Lealui), நலலோ(Nalolo) என்னும் இரு தலைநகரங்களை

அமைத்துள்ளனர். வட பகுதியில் அமைந்துள்ள இலீலுயில் அரசரும் நலலோவில் அரசியும் அரசின் செயற்பாடுகளைக் கவனிப்பர். தென் பகுதி ஆட்சியர்பெண்ணாக இருக்க வேண்டுமென்பது இவர்களிடையே உள்ள மரபாகும். வடபகுதி ஆட்சியிடத்தில் ஆளும் அரசரிடமே முடிவெடுக்கும் அதிகாரம் குவிந்திருப்பினும், தென்பகுதி ஆட்சியரான அரசிக்கும் அதிகார வரம்பு உள்ளது. உரோட்சி ஆட்சியமைப்பில் மிகுந்த அதிகாரம் பெற்றவர்களுள் இரண்டாம் இடம் பெறுபவர் அரசியே. சிக்கல் மிகுந்த காலங்களில் இலீலுய் அரசர் நலலோ அரசியின் கருத்துகளை ஏற்காமலும் போவதுண்டு.

அரசர், ஆட்சியுரிமையைக் காம்பெலா (Ngambela) எனக் கூறப்படும் தலைமையமைச்சருடன் பகிர்ந்து கொள்ள வேண்டும். தலைமையமைச்சர் மரபுவழியில் வருபவரல்லர். அதிகாரப் படிநிலை அமைப்பில் ஆட்சி மன்றங்களும் (Councils) துணை ஆட்சி மன்றங்களும் அடங்கும். உரோட்சி ஆட்சி மன்றங்கள் 'மாட்சு' (Mats) எனக் கூறப்படும். இவர்களிடையே மூன்று வகையான ஆட்சி மன்றங்கள் உள்ளன. முதல் ஆட்சிமன்றத்தில் சாதாரண குடிமக்கள் உறுப்பினர்களாக உள்ளனர். அவர்கள் அனைத்து மக்கள் சார்பில் பேராளர்களாக இருப்பர். இரண்டாம் மன்றத்தில் அரசர் நியமிக்கும் மேற்பார்வையாளர்கள் இருப்பர். அவர்கள் அரசரது அலுவலகத்தையும் அதனைச் சார்ந்த உடைமைகளையும் கவனித்துக் கொள்வர். மூன்றாம் மன்றத்தில் அரசகுடிக் குடும்பப் பேராளர்கள் இருப்பர். அவர்கள் தங்கள் குடும்பச் செயற்பாடுகளைக் கவனிக்கும் பொறுப்பையே பெற்றுள்ளனர். அனைத்து 'மாட்சு' களிலும் உள்ள தலைவர்கள் 'இந்துநாசு' (Indunas) எனக் கூறப்படுவர்.

'மாட்சு' ஆட்சி மன்றங்களையடுத்து வேறு சில மன்றங்களும் நியமிக்கப்பட்டுள்ளன. 'சிக்காலோ' (Sikalo) எனப்படும் மன்றத்தில், மேற்கூறிய மூன்று ஆட்சி மன்றங்களின் மூத்த உறுப்பினர்கள் இடம் பெறுவர். 'சா' (Saa) எனப்படும் வேறொரு மன்றத்தில் 'மாட்சு'களின் இளைய உறுப்பினர்கள் இடம் பெறுவர். இவ்விரு மன்றங்களும் நாட்டின் நலன் பற்றியும் புதிய சட்டங்கள் இயற்றுவது பற்றியும் விவாதிக்கும். இரு மன்றங்களின் ஆலோசனைகளும் அரசர்க்கு அனுப்பி வைக்கப்படும். அரசர் தம்மால் நியமிக்கப்பட்ட மூத்த அதிகாரிகளையும் 'மாட்சு' களின் தலைவர்களான 'இந்துநாசு'க்களையும் கொண்ட தனி அவை உறுப்பினர்களுடன் கலந்து ஆலோசித்து முடிவெடுப்பார்.

'மாட்சு' மன்றங்களுடன் 'இந்துநாசு'க்களும் உரோட்சி மக்களின் அனைத்துப் பகுதியிலும் பரவி உள்ளனர். அவர்கள் ஆட்சிமுறையில் பகுதிப் பாகுபாடு கிடையாது. இதனாலேயே ஆட்சியாளர்களிடமும் மக்களிடமும் தப்பெண்ணம் (Prejudice) தோன்றாமலுள்ளது. மக்கள் தம் குறைகளைத் தாம் சார்ந்துள்ள இந்துநாசுவிடம் கூற, அவர் அதைத் தலைநகரில் உள்ள அவையில் எடுத்துரைப்பார்.

உரோட்சி மக்களின் பொருளாதாரம் தன்னிறைவு பெற்றதன்று. வெள்ளச் சமவெளியில் வாழ்பவர்களும்,எல்லைப்புறக் காடுசார்ந்த பகுதியில் வாழ்பவர்களும் ஒருவரை ஒருவர் சார்ந்து வாழ வேண்டியுள்ளது. ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறான சூழலமைப்பைப் பெற்றது. வெள்ளச் சமவெளி மக்கள் கால்நடைகள் வளர்த்தல், சோளவகைகள் முதலான வற்றைப் பயிரிடுதல், மீன்பிடித்தல் முதலான தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் காடுசார்ந்த எல்லைப் பகுதி மக்களிடமிருந்து விறகு, மரச்சாமான்கள், கயிறு செய்யும் மரப்பட்டைகள், கூடைகள், புகையிலை, நிலக்கடலை, தேன் முதலான பொருள்களைப் பெறுகின்றனர். உரோட்சியினர் பொதுவாகக் கால்நடை வளர்ப்பதில் திறமையற்றவர்கள். இவர்களது பொருளாதாரம் கூலி வேலைகளைச் சார்ந்தது. பெரும்பான்மையானவர்கள் தம் அண்டைய மக்கள் பகுதிக்குக் கூலிகளாகச் செல்கின்றனர். சாம்பியா அரசு இவர்களின் தனித்தன்மையை எதிர்க்க விரும்பவில்லையாயினும், படிப்படியாக மாநில அமைப்புகளின் நேரடி ஆட்சியில் இவர்களைக் கொண்டுவர முடிவு செய்துள்ளது.

சீ.ப.

**உரோட்சு, செசில் சான்** (கி.பி. **1853–1902)** ஆங்கிலக் குடியேற்றவாதிகளுள் ஒருவர்; வைரச் சுரங்கச் சொந்தக்காரர். இவரது முயற்சியால் ஆங்கிலேயப் பேரரசு ஆப்பிரிக்காக் கண்டத்தில் பெருகிப் பரந்தது. உரோட்சு (Rhodes) இங்கிலாந்து நாட்டைச் சார்ந்த எர்ட்போர்டுசயர் (Hertfordshire) மாவட்டதில் 5–7–1853–இல் பிறந்தார். இவர் தந்தை பிரான்சிசு வில்லியம் உரோட்சு ஒரு பாதிரியார். உரோட்சு இளமையில் எலும்புருக்கி நோய்க்கு ஆட்பட்டார். தொடக்கக் கல்வியை முடித்தபோது, தொடர்ந்து படிக்க இவருடைய உடல் நலம் இடம் கொடுக்கவில்லை. தென் ஆப்பிரிக்காவிலுள்ள நேட்டாலுக்கு இவர் கி.பி. 1870–இல் அனுப்பப்பட்டார். அங்கு இவர் தம் தமையனார் எர்பர்ட்டோடு (Herbert) வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டுப் பருத்தி பயிரிட்டுக் கொண்டிருந்தார். அத்தொழில் தோல்வியுற்றது. பின்னர், இவர் வைரச் சுரங்கம் ஒன்றின் கண்காணிப்பாளராகப் பொறுப்பேற்றார்.



உரோட்சு, செசில் சான்

மேற்குக் கிரிகுவாலாந்து (Griqualand West) என்னும் பகுதியிலிருந்து வைர வயல் குறித்த உரிமை கோரி உரோட்சு கி.பி.1871-இல் வழக்கொன்றினைத் தொடர்ந்தார். தென் ஆப்பிரிக்காவின் தட்ப வெப்ப நிலை இவருடைய எலும்புருக்கி நோயைத் தீர்க்க உதவியது. இவர் ஆக்சுபோர்டுப் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து கி.பி. 1881-இல் பட்டம் பெற்றார்.

உரோட்சு, கேப்பு காலனிச் சட்டமன்றத்தில் உறுப்பினராக கி.பி. 1881-இல் தேர்ந்தெடுக்கப்பெற்றார். ஆங்கிலப் பேரரசின் செல்வாக்கைத் தென் ஆப்பிரிக்காவில் முன்னேற்றுவிக்கும் பணியில் இவர் தீவிரமாக முயன்றார். இன்று போட்சுவானா (Botswana) என்று சொல்லப்படும் பெச்சுவானாலாந்துப் (Bechuanaland) பகுதியை கி.பி. 1875-இல் ஆங்கிலப் பேரரசுடன் இணையுமாறு வற்புறுத்தினார். சில ஆண்டுகள் கழித்து, மட்டாபிலே (Matabele) என்னும் பழங்குடியினரை வற்புறுத்தி, அவர்களின் பெரும்பாலான நிலப்பகுதிகளை இங்கிலாந்துக்கு வழங்கச் செய்தார். இப்பகுதியே பின்னர் உரொடீசியா எனப்பட்டது. இக்காலத்தில் இப்பகுதி சாம்பியா, சிம்பாப்வே என்னும் நாடுகளாக விளங்குகின்றது. ஆங்கிலேயத் தென் ஆப்பிரிக்க வணிகக் குழுவிடத்தில் இப்பகுதி ஒப்படைக்கப்பட்டது.

கூட்டுச் சேர்ந்தும் குழுக்களை இணைத்தும் ஏற்பட்ட மாறுதல்களினால் இவர் தி பீர்சுச் சுரங்கக் குழுவை (De Beers Mining Company) உருவாக்கினார். காலப்போக்கில் பார்னெட்டு பர்னாட்டோ (Barnett Barnato) என்பாருடன் சேர்ந்து கிம்பர்லிச் சுரங்கத்தைக் கட்டுப்படுத்தும் பொறுப்பேற்றார். தி பீர்சு ஒருங்கிணைக்கப்பெற்ற குழு உருவானபோது உரோட்சு பெருஞ்செல்வரானதுடன், செல்வாக்கு மிக்கவராகவும் விளங்கினார்.

ஆப்பிரிக்காக்கண்டம் முழுவதும் ஆங்கிலேயரின் ஆட்சி அமையும் வகையில் வட ஆப்பிரிக்காவில் குடியேற்றப் பகுதிகளை உருவாக்குமாறு ஆங்கில அரசுக்கு உரோட்சு பரிந்துரை செய்தார். சிறிது காலத்திற்குள் இவர் தம்மைத் தென் ஆப்பிரிக்கர் என்று கூறிக்கொண்டு, தெற்கிலிருந்து வடக்கு வரை சாலையமைக்கும் பணியில் ஈடுபட்டார். அப்பணியில் இவர் வெற்றிபெறவில்லை.

தென் ஆப்பிரிக்காவில் ஏற்கனவே தச்சியர் (The Dutch) காலூன்றியிருந்தனர். ஆப்பிரிக்காவின் வடக்கில் ஆங்கிலப் பேரரசுக்கு விரிவான நிலம் தேவைப்பட்டது. அதைக் கைப்பற்ற வேண்டுமெனின் தச்சியருடன் மோதியே ஆகவேண்டும் என்னும் சூழல் தோன்றியது. நூறாண்டுகளுக்குமேல் செல்வாக்குப் பெற்றிருந்த தச்சியருடன் திரான்சுவால் (Transval) பகுதியில் இவர் தலையிடத் தயங்கவில்லை. இவர் சேம்சன் தாக்குதல் (Jameson Raid) என்னும் படையெடுப்பைத் திரான்சுவால் மீது நடத்தினார். இப்படையெடுப்பு உரிய முறையில் திட்டமிடப்படாமையால் பழிப்புக்கு ஆளாயிற்று. எனவே, உரோட்சு 'கேப் காலனியின்' தலைமையமைச்சர் பதவியிலிருந்து விலகினார்.

ஆங்கிலேயருக்கும் தச்சியருக்கும் இடையே நடைபெற்ற போரைப் 'போயர் போர்' என்பர். தச்சுக் குடியானவர்களுக்குப் போயர் (Boer) என்பது பெயர். இப்போயர் கலகம் கி.பி. 1899-இல் மூண்டது. அப்போது உரோட்சு கிம்பர்லியில் தங்கியிருந்து, அந்நகரத்தைக் காக்கப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டார். ஆனால், போயர்களின் போர் முடிவுக்கு வரும் முன்னர், உரோட்சு மாரடைப்பால் 1902-இல் காலமானார்.

மறைவுக்குப் பின்னர் உரோட்சின் சொத்துகள் அனைத்தும் பொதுத் தொண்டிற்காகச் செலவிடப்பட்டன. இவர் பெயரில் ஆக்சுபோர்டு பல்கலைக் கழகத்தில் உரோட்சு உதவித்தொகை வழங்கும் திட்டம் செயற்பட்டு வருகிறது. இரா.அ.

**உரோடா** குசராத்து மாநிலத்தில் சபர்-கந்தா (Sabar-Kantha) மாவட்டத்தில் உள்ளதொரு சிற்றூர்.

இன்று சிறப்பிழந்து காணப்படும் உரோடா (Roda) பழங்காலத்தில் கோயிற் கட்டடக் கலைச் சிறப்புப் பெற்று விளங்கியது. இவ்வூரில் கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கோயில்கள் உள்ளன. அவற்றுள் எட்டுக் கோயில்கள் கட்டடக் கலைத்திறனுக்குச் சான்று பகர்வனவாக அமைந்துள்ளன. இக்கோயில்கள் இன்று இடிபாடுகளுடன் சிதைந்து காணப்படுகின்றன. நாகரம் (Nagara) என்னும் கட்டடக் கலைப் பாணியில் இக்கோயில்கள் கட்டப்பட்டுள்ளன. மாளவத்தை ஆண்ட மைத்ரகர்கள் (Maitrakas) என்னும் மரபினரின் காலத்திலும் பரமாரர்களின் (Paramaras) காலத்திலும் இக்கோயில்கள் கட்டப்பட்டன. இக்கோயில்கள் முத்தேர், ஐந்தேர்க் கருவறைகளையும் முகமண்டபங்களையும் மாடச் சிற்பங்களையும் பெற்றுள்ளன. மாடக்குழிகள் பொதுவாகக் கட்டடத்தின் மூலைகளில் அமைக்கப்பட்டுள்ளன. இக்கோயில்கள் சிற்ப வேலைப்பாடுகள் மிகுந்து காணப்படுகின்றன. இக்கோயில்களின் சிற்பங்களுள் சிவன், திருமால், அரகௌரி, நான்கு கைகளுடைய கணேசன், ஏழு கன்னிமார் சிற்பங்கள் குறிப்பிடத்தக்கவை. இங்கு கி.பி. 8,9-ஆம் நூற்றாண்டுகளைச் சார்ந்த சிற்பங்களும் உள்ளன.


சு. இரா.



உரோடாக் கோயில்கள்

**உரோடுத் தீவு** அமெரிக்க ஐக்கிய நட்டின் ஐம்பது மாநிலங்களுள் ஒன்று. இதுவே அமெரிக்க மாநிலங்களில் மிகச் சிறியதாகக் கருதப்படுகிறது. இதனைப் பெருங்கடல் மாநிலம் (Ocean State) என்றும் சின்ன உரோடி (Little Rhody) என்றும் புனைபெயரிட்டுச் சொல்கின்றனர்.

எல்லைகள்: உரோடுத் தீவின் (Rhode Island) கிழக்கிலும் வடக்கிலும் மசாசுசெட்சு மாநிலமும், மேற்கில் கனக்டிகட்டு மாநிலமும், தெற்கில் அழகான தீவுகளும் அட்லாண்டிக்குப் பெருங்கடலும் எல்லைகளாகும்.




உரோடுத் தீவு

பரப்பு: இம்மாநிலத்தின் பரப்பு 3144 ச.கி.மீ. இதில் 427 ச.கி.மீ. பரப்பு உள்நாட்டு நீர்நிலைகளாகவும், 36 ச.கி.மீ. பரப்பு கடற்கரை நீராகவும் உள்ளன. வடக்குத் தெற்காக இதன் நீளம் 77 கி.மீ; கிழக்கு மேற்காக ஏறத்தாழ 60 கி.மீ; இதன் கடற்கரைப் பகுதியின் நீளம் 64 கி.மீ. ஆகும். மக்கள் தொகை 9,47,154 (1980).


இயற்கையமைப்பு: அட்லாண்டிக்குப் பெருங்கடலைச் சார்ந்த நரகன்செட்டு விரிகுடா (Narragansett Bay) இம்மாநிலத்தில் ஆழ்ந்த பிளவொன்றை உருவாக்கியுள்ளது. இப்பிளவின் அகலம் 5 கி.மீ. முதல் 14 கி.மீ. வரை ஆகும். இவ்விரிகுடாவில் 36 தீவுகள் அடங்கியுள்ளன. அவற்றுள் உரோடுத்தீவு மிகப்

பெரியது. இதனை அகுட்நெக்கு (Aquidneck) என்றும் கூறுவர். பிளாக்குத் தீவு (Block Island) அட்லாண்டிக்குப் பெருங்கடலில் கடற்கரையிலிருந்து 15 கி. மீ. க்கு அப்பால் அமைந்துள்ளது.

உரோடுத் தீவை இயற்கையமைப்பின் அடிப்படையில் இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை 1 கடற்கரைத் தாழ்நிலம், 2 நியூ இங்கிலாந்து மேட்டு நிலம் என்பனவாம்.

கடற்கரை மேட்டு நிலங்கள் உரோடுத் தீவின் பாதிக்கும் மேற்பட்ட நிலத்தை அடைத்துக் கொண்டுள்ளன. நரகன்செட்டு விரிகுடாவில் உள்ள தீவுகளும், விரிகுடாவிற்குக் கிழக்கில் உள்ள நிலங்களும் இப்பிரிவில் அடங்குவன. சூடித்து (Judith) முனைக்கருகில் பல மணற்பாங்கான கடற்கரைகளும் உப்பங்கழிகளும் உப்புச் சுனைகளும் உள்ளன. தீவுகளிலும் விரிகுடாவையொட்டியுள்ள கடற்கரைகளிலும் செங்குத்தான பாறைகள் உள்ளன. உள்நாட்டிலுள்ள நிலம் உயர்ந்து மேட்டு நிலமாக உருமாறுகிறது. நரகன்செட்டு விரிகுடாவின் கிழக்கில் தாழ்ந்த உருண்டை வடிவில் அமைந்த மலைச்சரிவுகளையும் கருகி நிற்கும் மரங்களையும் காணலாம். விரிகுடாவின் மேற்கில் கரடுமுரடான நிலங்களையும் காடுகளையும் காணலாம்.

நியூ இங்கிலாந்து மேட்டுநிலம் உரோடுத்தீவின் வடமேற்குப் பாகத்தின் மூன்றிலொரு பங்கை உள்ளடக்கிக் கொண்டுள்ளது. நியூ இங்கிலாந்து மேட்டுநிலம் மெயின் (Maine) மாநிலத்திலிருந்து கனக்டிகட்டு (Connecticut) வரை பரவியுள்ள முழு இடத்தையும் அடைத்துள்ள பகுதியாகும். உரோடுத்



பிராவிடன்சு நகரம்

தீவின் இப்பகுதியை மேற்குப் பாறை மேட்டு நிலம் (Western Rocky Upland) என்பர். இப்பகுதி கடற்கரைத் தாழ்நிலங்களை விடப் படிப்படியாக உயர்ந்து குன்றுகளாக மாறியுள்ளது. இங்கு நிலம் கிழக்கில் 60 மீட்டர் வரை கடல்மட்டத்தைவிட உயர்ந்தும் வடமேற்கில் 240 மீட்டர் வரை உயர்ந்தும் காணப்படுகிறது. ஏரிகள், நீர்த்தேக்கங்கள், குளங்கள் போன்றவற்றை இப்பகுதியின் குன்றுகளுக்கிடையில் காணலாம். இத்தகைய குன்றுகளில் ஒன்றைச் செரிமாத்து (Jerimoth Hill) என்பர். இம் மாநிலத்தில் மலைகளே இல்லை.

தீவுகள்: உரோடுத் தீவில் 36 தீவுகள் உள்ளன. அவை அளவிலும் உருவிலும் வெவ்வேறான அமைப்பைக் கொண்டவை. உரோடுத் தீவுக்கும் அதனைச் சார்ந்துள்ள பெருந்தீவுகளுக்கும் பாலங்களும் படகுத் துறைகளும் உள்ளன.

கடற்கரை: உரோடுத் தீவின் கடற்கரைகள், தீவுகளைச் சுற்றிலுமுள்ள கடற்கரைகள் போன்றவற்றின் மொத்த நீளம் 618 கி.மீ. அவற்றுள் மிகப் பெரிய கடற்கரையான நரகன்செட்டு விரிகுடா 45 கி.மீ. நீளமுள்ளது.

ஆறுகள்: பிராவிடன்சு (Providence), சகோனட்டு (Sakonnet), சீகாங்கு (Seekonk) போன்றவை முக்கிய ஆறுகள். இவை உப்புநீர் ஆறுகள். இவற்றுடன் நன்னீர் ஆறுகள் பல நரகன் செட்டு விரிகுடாவில் கலக்கின்றன. இம்மாநிலத்தின் உள்நாட்டு ஆறுகள் சிறியவை; ஆனால், வேகமாகப் பாயக்கூடியவை. இவற்றில் நீர்வீழ்ச்சிகளும் உள்ளன. இந்நீர் வீழ்ச்சிகளிலிருந்து பெறப்பட்ட நீர்மின் சக்தியை ஆலைகளையும் தொழிற்சாலைகளையும் இயக்க முன்காலத்தில் பயன்படுத்தினர்.

ஏரிகள்: சிட்சுவேட்டு நீர்த்தேக்கமே இம்மாநிலத்தின் மிகப்பெரிய நீர்த்தேக்கமாகும். இத்தேக்கமே உரோடுத் தீவின் தலைநகரமான பிராவிடன்சு நகர மக்களுக்கு நீர் வழங்குகிறது. வட்சாங்குக் குளமும் ஓர்டன் குளமும் (Watchang Pond and Worden Pond) ஏனைய பெரும் நீர்நிலைகளாகும்.

தட்பவெப்ப நிலை: உரோடுத் தீவு ஈரக்கசிவான கண்டத் தட்பவெப்பநிலையைக் கொண்டுள்ளது. அதனால், இங்குக் கோடைக்காலம் குறைந்தும் குளிர்காலம் மிகுந்தும் இருக்கும். எனினும் கடற்காற்று வீசுவதால் இதன் தட்பவெப்ப நிலையில் மாற்றங்கள் ஏற்படுவது இயற்கை. குறிப்பாக, கடற்கரைத் தாழ்நிலங்கள் இத்தகைய 'தட்ப

வெப்பநிலையைப் பெற்றுள்ளன. ஆண்டு வெப்பநிலை 10° செண்டிகிரேடு அளவுடையது. பொதுவாகக் கூறின், உரோடுத் தீவு மிதமான தட்ப வெப்பநிலையைக் கொண்டுள்ளது எனலாம். சனவரியில் வெப்பம் மிகக் குறைந்து நீர் உறையும் அளவுக்குச் சென்றுவிடும். சூலை மாதத்தில் வெப்பம் 21° செண்டிகிரேடு வரை உயரும்.

மழையளவு என்னும்போது, பெய்யும் மழையையும் பனி உருகி வருவதால் ஏற்படும் நீரையும் ஏனைய ஈரக்கசிவு போன்றவற்றையும் கணக்கிட வேண்டும். உரோடுத் தீவின் ஆண்டு மழையளவு ஏறத்தாழ 112 செ.மீ. பனியளவு 79 செ. மீ. வரை இருக்கும். சில வேளைகளில் இத்தீவின் கடற்கரை புயற்காற்றுகளுக்கும் கடல் அலைகளுக்கும் ஆளாகிறது.

பொருளாதார நிலை: செய்தொழில்களே உரோடுத் தீவின் மிக முக்கிய பொருளாதார நடவடிக்கையாகும். சுற்றுலாத்துறை வருமானம் பெற்றுத் தருவதில் இரண்டாமிடத்தைப் பெறுகிறது. வேளாண்மைத்துறை அடுத்த இடத்தைப் பெறுகிறது. தலைநகர் பிராவிடன்சு மாநகரமே செய்தொழில்களின் மையமாகும்.

இயற்கைச் செல்வங்கள் : இம்மாநிலத்தின் ஐந்தில் மூன்று பாகங்களில் காடுகள் நிறைந்துள்ளன. காடுகளிலிருந்து கிடைக்கும் பொருள்களால் நிறைய வருமானம் கிடைக்கிறது. இங்குக் கனிப் பொருள்கள் பெருமளவு கிடைப்பதில்லை.

காடுகளில் ஏறத்தாழ 60 வகை மரங்கள் பயிராக்கப்படுகின்றன. ஆசு (Ash), பிரிச்சு (Birch), செடார் (Sedar), எல்ம் (Elm), இக்கரி (Hickory), மாபில் (Maple), ஓக்கு (Oak), பைன் (Pine), பாப்லர் (Poplar), வில்லோ (Willow) போன்ற மரவகைகள் அவற்றுள் சில.


நரகன்செட்டு விரிகுடாவில் காணப்படும் பழுப்பு நிற மண், ஈரக் கசிவு கொண்டுள்ளதால் வேளாண்மைக்குப் பெரிதும் பயன்படுகிறது. உரோடுத் தீவில் கிடைக்கும் ஒருவகைக் கருங்கல், கட்டடம் கட்ட உதவுகிறது. இத்தகைய கருங்கல் படிவங்கள் வெசுட்டர்லி (Westerly) என்னும் நகருக்கண்மையில் படிந்துள்ளன. கடற்கரைத் தாழ்நிலங்களில் பெருமளவு மணலும் கூழாங்கற்களும் கிடைக்கின்றன. சுண்ணாம்புக் கற்களும் மணற்கற்களும் இங்குக் கிடைக்கும் ஏனைய கனிப்பொருள்களாகும்.

உரோடுத் தீவுக் கடற்கரையில் பலவகைக் கடற்பாசிகள் வளருகின்றன. பலவகை மலர்கள் போன்றவையும் இங்குப் பயிராகின்றன. உப்புநீரில் பயிராகும் கடற்பாசி உரமாகப் பயன்படுகிறது.

மான், குள்ளநரி, கீரி, மூஞ்சூறு, முயல், அணில் போன்ற விலங்குகள் உரோடுத்தீவுகளில் வாழ்கின்றன. இவை தவிரப் பல்வேறு விலங்குகளும் இங்குக் காணப்படுகின்றன.

'பாசு' (Bass), 'எல்'(Eel), 'பெர்ச்சு' (Perch), 'பிக்கரீல்' (Pickerel), 'திரௌட்டு' (Trout) போன்ற மீன்வகைகள் நன்னீர் மீன்களாகும். நீலமீன் (Bluefish), 'பட்டர்மீன்' (Butterfish), 'பிளவுண்டர்' (Flounder), 'மக்கரீல்' (Mackerel), 'மன்ஏடன்' (Manhaden), 'துனா' (Tuna), 'சீபாசு' (Sea Bass), 'இசுட்ரிப்டு பாசு' (Striped Bass) போன்றவை உப்புநீர் மீன்கள்.

நகைகள், வெள்ளியாலான பொருள்கள் போன்றவை செய் பொருள்களுள் முக்கியமானவை. பிராவிடன்சு நகரம் அணிகலன்களுக்குப் பெயர் பெற்றது. இதுவே செய்பொருள்களின் மையமுமாகும். இரசாயன' பொருள்கள், மின் கருவிகள், மின்னியல் நுட்பப் பொருள்கள், கருவிகள், மின் கருவிகளல்லாத பிற பொருள்கள், அச்சிடும் பொருள்கள், இரப்பர்ப் பொருள்கள், நெகிழிப் (Plastic) பொருள்கள் போன்றவை ஏனைய செய்பொருள்களாகும்.




வேளாண்மை, தொழில், மூலவளங்கள்

வேளாண்மை: உரோடுத் தீவில் 720 பண்ணைகள் உள்ளன. அருஞ்செடி கொடிகளைப் பாதுகாப்பாக வைக்கும் கண்ணாடிக் கூடுகள், நாற்றுச் செடிகள் போன்றவற்றின் மூலம் மாநிலத்திற்கு நல்ல வருமானம் கிடைக்கிறது. அணிசெய்யும் மரங்கள், புதர்ச் செடிகள் போன்றவையும் வருமானம் ஈட்டுகின்றன. பால்பண்ணைப் பொருள்களும் நிறைய வருமானத்திற்கு உதவுகின்றன. காய்கறிகள் பயிரிடுதலும் நல்ல வருமானத்தை அளிக்கிறது. கோழிப் பண்ணைகளும் வருமானத்திற்கு வழிவகை செய்கின்றன. கோழிக் குஞ்சுகளையும் வான்கோழிக் குஞ்சுகளையும் உரோடுத் தீவு உழவர்கள் வளர்க்கிறார்கள். ஆப்பிளும் பீச்சுகளும் இத்தீவின் முக்கிய பழங்கள். மீன் ஏற்றுமதியாலும் நிறைய வருவாய் கிட்டுகிறது. மணலும் கூழாங்கல்லும் பொருள் கொடுக்கும் கனிமங்களும் கருங்கல்லும் சுண்ணாம்புக்கல்லும் நிறையக் கிடைக்கின்றன.

வரலாறு: உரோடுத் தீவுக்குச் சீரிய வரலாற்று மரபும் அரசியல் சுதந்திரமும் உண்டு. இங்கிலாந்தின் பிடியிலிருந்து கி.பி.1776-ஆம் ஆண்டிலேயே சுதந்திரமானதாக அறிவித்துக் கொண்ட முதல் அமெரிக்கக் குடியேற்றப் பகுதி இது. இது கூட்டாட்சி அரசியலமைப்பை கி.பி.1790-இல் ஏற்றுக்கொண்ட இறுதி மாநிலமாகும்.

புரட்சிப் போர்க் காலத்திற்குப் பல்லாண்டுக்குப் பின்னரும் உரோடுத் தீவின் எல்லைகள் வரையறுக்கப்படவில்லை. இதற்குக் காரணம் கனக்டிகட்டு மாநிலத்திற்கும் மசாசுசெட்சு மாநிலத்திற்கும் இடையே நிலவிய பூசல்தான். மேற்கு எல்லை கி.பி.1887-ஆம் ஆண்டிற்குப் பின்னரும் வடக்கு எல்லை கி.பி.1883-ஆம் ஆண்டிலும் கிழக்கெல்லை கி.பி.1899-ஆம் ஆண்டிலும் திட்டவட்டமாக முடிவு செய்யப்பட்டன.

இப்பகுதியை கி.பி.16-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் போர்ச்சுகீசியர், பிரெஞ்சுக்காரர், இத்தாலியர், தச்சியர்(Dutch)ஆகியோருள் ஆய்வாளர்களும் வணிகர்களும் ஆராயத் தொடங்கினர். பிளாக்குத் தீவு தச்சியக் கப்பற்படைத் தலைவரான ஏட்ரியன் பிளாக்கு (Adriaen Block) என்பாரின் பெயர் கொண்டு விளங்கியது. அவர் கி.பி.1614-ஆம் ஆண்டில் இக்கடற்கரைப் பக்கம் பயணம் செய்தார்.

உரோடுத் தீவுக் குடியேற்றத்தைத் தோற்றுவித்தவர் உரோசர் வில்லியம்சு (Roger Williams) என்பவராவர். மசாசுசெட்சில் நிலவிய சமய ஒறுப்பிலிருந்து தப்பியோடிய வில்லியம்சு கி.பி. 1636-ஆம் ஆண்டில் பிராவிடன்சு என்னும் இடத்தில் முதல் குடியேற்றத்தைத் தோற்றுவித்தார். பின்னர்ச் சமய ஒறுப்பிலிருந்து தப்பிவந்தவர்கள் பலர் இங்கு வந்து குடியேறினர். அகுட்நெக்கு (Aquidneck) எனப்பட்ட இக்குடியேற்றப் பகுதியே கி.பி.1644-ஆம் ஆண்டில் உரோடுத் தீவு என்று பெயர் மாற்றப்பட்டது. அரசர் வழங்கிய கி.பி. 1663-ஆம் ஆண்டுப் பட்டயத்தின்படி இக்குடியேற்றப் பகுதிகள் 'உரோடுத் தீவும் பிராவிடன்சுத் தோட்டங்களும்' (Rhode Island and Providence Plantations) என்னும் பெயரால் குறிக்கப்பட்டன.



உரோசர் வில்லியம்சு

புரட்சிப்போரின்போதும் அதற்கு முன்னரும் உரோடுத் தீவின் குடிமக்கள் முக்கிய பங்காற்றினார்கள். காசுபீ (Gaspee) என்னும் ஆங்கிலக் கப்பல் எதிர்பாராவகையில் நரகன்செட்டு விரிகுடாவில் தரைதட்டியபோது, பிராவிடன்சு நகரத்தைச் சார்ந்த மக்களுள் சிலர் அக்கப்பலின் மீதேறி, அதனைத் தீக்கிரையாக்கினர். புரட்சியின்போது இத்தீவு மக்கள் 'கண்டத்தின் கப்பற்படை'யை (Continental Navy) உருவாக்கினர். எசக்கு ஆப்கின்சு (Esek Hopkins) என்னும் இத்தீவினரே இக்கப்பற் படையின் முதல் தளபதியானார். இவருக்கு அடுத்தபடியாக இருந்த நத்தானியேல் கிரீன் (Nathaniel Greene) என்பாரும் உரோடுத் தீவினரே. ஆங்கிலேயர் நியூபோர்ட்டு (Newport) என்னும் ஊரை கி.பி.1776 முதல் 1779-ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் கைப்பற்றிக் கொண்டு, அங்கிருந்து ஏனைய உரோடுத் தீவின் ஊர்களைத் தாக்கினர். அமெரிக்காவின் பிரெஞ்சுக்கார நண்பர்கள் கி. பி. 1780-81-ஆம் ஆண்டுகளில் நியூபோர்ட்டைத் தம் தலைமையகமாகக் கொண்டார்கள்.

புரட்சிப் போருக்குப் பின்னர் இம்மாநில வணிகர்கள் செல்வாக்குப் பெற்றனர். குறிப்பாக நெசவுத் தொழில் பெருகி வளரலாயிற்று. பஞ்சாலைகள் அமைந்திருந்த நகரங்களில் பணிபுரிய மக்கள் அங்குச் சென்று வாழத் தொடங்கினர். சொத்து உள்ளவர்களுக்கே வாக்களிக்கும் உரிமையுண்டென்னும் கோட்பாட்டின் அடிப்படையில் ஏறத்தாழப் பாதி அளவினருக்கு கி.பி. 1840-இல் ஏற்பட்ட சட்டத்தின்படி வாக்குரிமை வழங்கப்படவில்லை. இதனை எதிர்த்து கி.பி. 1842-இல் தாமசு டபிள்யூ. தோர் (Thomas W. Dorr) என்பார் கலகம் செய்தார். அதன் விளைவாகப் புதியதோர் அரசியலமைப்புத் திட்டம் உருவாக்கப்பட்டது. இருப்பினும் அனைத்து ஆண்களுக்கும் வாக்குரிமை அளிக்கப்படாமையாகிய குறை சட்டத்தில் இருந்தது. இத்தடைகள் அனைத்தும் கி.பி. 1888-ஆம் ஆண்டில் ஒழிந்தன. வாக்குரிமை 21 வயதைக் கடந்த அனைத்து ஆண்களுக்கும் வழங்கப்படலாயிற்று.

உள்நாட்டுப் போரின்போது இம்மாநிலத்தின் படைவீரர்கள் பெரும்பாலும் அனைத்துப் போர்களிலும் பங்கு பெற்றனர். அம்புரோசு ஈ. பர்ன்சைடு (Ambrose E. Burnside) என்னும் படைத்தலைவர் உரோடுத் தீவினைச் சார்ந்தவர். இவர் அமெரிக்க ஒன்றியப் படைத்தலைவராகப் பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. பின்னர் இவர் உரோடுத் தீவின் ஆளுநரானார்.



டபிள்யூ. தோர்

உரோடுத் தீவு எப்போதுமே ஒரு முற்போக்கு மாநிலமாகக் கருதப்படுகிறது. தூக்குத் தண்டனையை ஒழித்த மாநிலங்களுள் இதுவே முதலாவதாகும். தொழிலாளர்களுக்கு நட்ட ஈடு கொடுக்கும் சட்டங்களைச் செயற்படுத்தியதிலும் இதுவே முதலிடம் பெறுகிறது. பெண்களுக்கும் வாக்குரிமை கி.பி. 1919-ஆம் ஆண்டில் கொடுக்கப்பட்டது. உரோடுத் தீவு கப்பற்படை மையங்களுள் ஒன்று. தேவிசுவிலியில் (Davisville) கப்பல் கட்டும் படைப்பிரிவொன்று அமைக்கப்பட்டுள்ளது. இம்மாநிலம் படிப்படியாக முன்னேறியுள்ளது. தெ.பா.



அம்புரோசு ஈ. பர்ன்சைடு

**உரோடோகத்துக் கந்தரத்தனார்** சங்க காலப் புலவர்களுள் ஒருவர். கந்தரத்தன் என்பது இவர் இயற்பெயர். இவர் ஊர் உரோடோகம். இப்பெயர் உரோடகம், ஓரோடகம், ஓரோடோகம் எனப் பலவாறாக ஏடுகளில் காணப்படுகிறது. இதனால் இவர் பெயர் உரோடகத்துக்கந்தரத்தனார், ஓரோடகத்துக் கந்தரத்தனார், ஓரோடோகத்துக் கந்தரத்தனார் எனப் பலவாறாகக் காணப்படுகிறது. உரோடோகம் இக்காலத்தில் ஓரகடகமென்று திரிந்து வழங்குகிறது. இவ்வூர் காஞ்சிபுரம் வட்டத்திலுள்ளது.


அகநானூற்றில் மூன்று பாடல்களும் (23, 95, 191), குறுந்தொகையில் ஒரு பாடலும் (155), நற்றிணையில் ஒரு பாடலும் (306) இவர் பெயரில் காணப்படுகின்றன. கந்தரத்தனார் என்னும் பெயரில் நற்றிணையில் மேலும் மூன்று பாடல்கள் (116, 146, 238) காணப்படுகின்றன. இந்த எட்டுப் பாடல்களையும் வையாபுரிப்பிள்ளை தம் சங்க இலக்கியப் பதிப்பில் கந்தரத்தனார் என்னும் பெயரிலேயே பதிப்பித்துள்ளார். ஆனால், உ.வே. சாமிநாதையர் தம் குறுந்தொகைப் பதிப்பில் இவர் பெயரை உரோகடத்துக் காரத்தன் (155) என்று குறிப்பிட்டுள்ளார். இப்புலவர் பாடல்கள் அனைத்தும் அகப்பாடல்களாகக்

குறிஞ்சி, முல்லை, பாலை ஆகிய திணைகளில் தோழி, தலைவி, தலைவன் கூற்றுகளாக அமைந்துள்ளன.

பாலைத்திணையில் அமைந்த அகநானூற்றுப் பாடல் (23) பொருள் தேடச் சென்ற தலைவன் தான் திரும்பி வருவதாகக் குறித்த காலம் வந்தும் வாராமை கண்டு, ஆற்றாமை மிக்க தலைவி தோழியிடம் கூறுவதாக அமைந்துள்ளது. 'கார்காலத்தில் வருவதாகக் கூறிச் சென்றார். அக்கார்காலம் வந்து அக்காலத்தில் மலரும் முல்லை மலர்ந்தும் அவர் வரவில்லையே' என்னும் தன் ஏக்கத்தினை, தலைவி நொச்சியைப் பற்றி மலரும் முல்லைக்கொடியைக் காட்டி, 'அவ்வளவு என்றார் ஆண்டுச் செய் பொருளே' என்று கூறுவதாக எடுத்துரைப்பது நயமிக்கதாக அமைந்துள்ளது. வீ.சே.

**உரோம்** ஐரோப்பாவில் உள்ள இத்தாலி நாட்டின் தலைநகரம். இதனை ஒரு நகரம் என்பதற்கு மாறாக மூன்று மாநகரங்கள் என்று கூறுவது பொருந்தும். பழம்பெருமைக்குப் பெயர் பெற்ற உரோமாபுரி, போப்பாண்டவர்களின் உரோம், இக்கால உரோமாபுரி என்பவை அம்மூன்றும் ஆகும். இருப்பினும் அவை தனித்து நில்லாமல் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்துள்ளன.

உரோமாபுரியை 'என்றுமுள எழில்நகரம்'(Eternal City) என்று கூறுவர். போர்கள், கொடு நோய்கள்,




உரோம்

வெள்ளப் பெருக்குகள், நிலநடுக்கங்கள் போன்றவற்றை இம்மாநகரம் எதிர்த்து இன்றும் நிலைத்துள்ளமையால் இதனை என்றுமுள்ள எழில்நகரம் என்று கூறுவது பொருந்தும்.

**இருப்பிடம்:** இத்தாலிய முந்நீரகத்தின் மேற்கு நடுப்பகுதியில் தைபர் ஆற்றங்கரையில் உரோமாபுரி (Rome) அமைந்துள்ளது. மத்தியதரைக்கடலின் கால் போன்று அமைந்துள்ள திரைகினீயக் கடலிலிருந்து (Tyrrhenian Sea) 27 கி.மீ. தொலைவில் தைபர் ஆற்றங்கரையின் இருமருங்கிலும் உரோமாபுரி அமைந்துள்ளது. இம்மாநகரம் ஏறத்தாழ 20 குன்றுகளின் மீது அமைந்துள்ளது. இதன் புறப்பகுதி சமவெளி



தைபர் ஆற்றங்கரையில் உள்ள உரோம் நகரம்

களாலானது. இக்குன்றுகளுள் புகழ்பெற்ற ஏழுகுன்று களின்மீதுதான் பண்டைய உரோமாபுரி கட்டப்பட்டது. அவெண்டைன் (Aventine), காலியன் (Caelian), காபிடலைன் (Capitaline), எசுகிலைன் (Esquiline), பாலடைன் (Palatine), குரினல் (Quirinal), விமினல் (Viminal) என்னும் பெயருடையன மேற்குறிப்பிடப் பெற்ற ஏழு குன்றுகள். எனவே, இதனை 'ஏழுமலை நகரம்' என்றும் கூறலாம்.

உரோமாபுரியில் குளிர்காலத்தில் பெரும்பாலும் மழை பொழிகிறது. கோடையில் மழை மிகக் குறைவாகப் பெய்கிறது. உரோமாபுரியில் அமைக்கப் பெற்றுள்ள செயற்கை நீரூற்றுகள் இம்மாநகருக்கு இன்பமூட்டும் இனிய காற்றைக் கொடுக்கின்றன.

**காட்சிப் பொருள்கள்**: உரோமாபுரியில் காணப்படும் காட்சிப்பொருள்களை இருவகையாகப் பிரிக்கலாம். அவை 1 பண்டைக்கால நினைவுச் சின்னங்கள், 2 இக்காலக் காட்சிப்பொருள்கள் என்பனவாம்.

**பண்டைக்கால நினைவுச் சின்னங்கள்**: பண்டைக் கால உரோமாபுரியின் நினைவுச் சின்னங்களை நகரம் முழுவதிலும் கண்டுகளிக்கலாம். அழிவுச் சின்னங்களிருந்த பகுதிகளை கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து துப்புரவு செய்து, அவற்றைச் சுற்றி மரங்களை வளர்த்தும் தோட்டங்களைஅமைத்தும் அழகுபடுத்தியுள்ளனர். இதனைக் கண்டு மகிழ ஆயிரமாயிரம் சுற்றுலாப் பயணிகள் ஆண்டு தோறும் வந்து செல்கின்றனர்.

பண்டைய உரோமாபுரியின் பல சாலைகள் குறுகலானவை; கோணலானவை. ஆனால், ஒருசில அகன்றவை; அழகானவை. அவை உயர்ந்த வளைவுகளையும் வெண்ணிறப் பளிங்குக் கட்டடங்களையும் கொண்டு திகழ்கின்றன. அவற்றுள் வியா சக்ரா (Via Sacra) என்னும் கட்டடம் உரோமானியப் பொதுமன்றத்தைக் குறிக்கிறது. 'வியா சக்ரா' என்றால் புனிதமான வழி என்பது பொருள். வாகை சூடிப் போரிலிருந்து திரும்பிய உரோமானியப் பேரரசர்கள் இச் சாலைகளின் வழியாகப் பவனி வந்தனர்.

பல உரோமானிய அரசர்கள் தமக்குச் சொந்தமாகப் பயன்படும் பொது மன்றங்களைக் கட்டினர். அவற்றுள் ஐந்து பொதுமன்றங்களின் நினைவுச்சின்னங்கள் இன்றும் நிலைத்துள்ளன. அவை அகசுடசு, சூலியசு சீசர், நெர்வா, திரேசன், வெசுபேசியன் என்னும் ஐந்து உரோமானியப் பேரரசர்கள் நிறுவியவை. அவற்றுள் திரேசன் கட்டிய பொதுமன்றம் மிகுந்த அழகுடையது. அங்குள்ள உல்பியா அரண்மனையும் திரேசன் கோயிலும் அழிந்த நிலையில் காணப்படுகின்றன. ஆனால், 30 மீட்டர் உயரமுள்ள திரேசன் தூண் முழுமையாக இருக்கிறது. அதில் திரேசனின் போர்கள் பற்றிய சிற்பங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. அதன் அருகில் திரேசனின் சந்தைக் கடைகள்



கொலோசியம்


உள்ளன. அவை பெரிய அரைவட்ட வடிவமான மூன்று மாடிக் கட்டடங்களாகும். அவற்றுள் ஒரு கடையைப் புதுப்பித்துக் கட்டி, அது பண்டைக்காலத்தில் எவ்வாறு இருந்திருக்கும் என்று காட்டியுள்ளார்கள்.

கொலோசியம் உரோமாபுரியில் மிகச் சிறப்பான கலையரங்கமாகும். இது மிகப் பெரியதும் ஓரளவு அழிந்த நிலையிலுள்ளதுமான அரைவட்டக் கலையரங்கமாகும். கொலோசியத்தில் (Colosseum) பண்டைய உரோமானியர்கள், போராளிகள் கொடிய விலங்குகளுடன் போராடுவதைக் கண்டுகளித்தார்கள். இங்குச் சமய ஒறுத்தலுக்கு ஆளான கிறித்தவர்களைச் சிங்கங்கள் கொல்லுவதையும் உரோமானியர்கள் பார்த்து மகிழ்ந்தார்கள்.

குளிக்குமிடங்கள்: பழங்காலத்தில் பணக்கார உரோமானியர்களுக்கு மட்டிலும் சொந்தமான குளியல் அறைகள் இருந்தன. எனவே, உரோமாபுரியில் பொதுவான குளிக்குமிடங்கள் பல இருந்தன. உரோமானியப் பேரரசர்கள் ஆட்சி நடத்திய காலத்தில் இத்தகைய பொதுவான குளிக்குமிடங்கள் பகட்டாகக் கூட்டம் நடத்தும் இடங்களாயின. பெரிய சதுர வடிவமான நீச்சல் குளங்களாக அவை காட்சியளித்தன. அவற்றைச் சுற்றித் தோட்டங்களும் பளிங்குத் தூண்களைப் கொண்ட கட்டட முகப்புகளும் நூலகங்களும் அமைக்கப்பட்டிருந்தன. குளியல் அறைகளில் வெந்நீர் ஊற்றிக் கொள்ளவும் தண்ணீர் ஊற்றிக்கொள்ளவும் நீராவிக் குளியலுக்கும் உடல் தசைப் பிடித்து விடுதலுக்கும் (Massage) வசதிகள் அமைக்கப்பட்டிருந்தன.

கரகல்லா, தயாகிளீசியன் போன்ற உரோமானியப் பேரரசர்கள் பயன்படுத்திய குளியலறைகளின் சின்னங்கள் இன்றும் மிக அழகாகக் காணப்படுகின்றன. கரகல்லாவின் குளியலறைகள் கி.மு. 3-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கட்டப்பட்டவை. அவை கண்களையும் கருத்தையும் கவருவன. தயாகிளீசியனின் குளியலறைகள் மிகப் பெரியவை; ஒரே சமயத்தில் 3000 பேர் குளிக்கக் கூடியவை. இக்கட்டடத்தின் பெரும் பகுதிகளில் புதுக் கட்டடங்கள் எழுப்பப்பட்டுள்ளன. எனினும், ஒருசில அறைகளை இன்றும் காணலாம்.

நிலத்தடிக் கல்லறைகள் (Cata combs) இறந்த கிறித்தவர்களைப் புதைக்கும் இடுகாடுகளாகவும் தொழுமிடங்களாகவும் அமைக்கப்பெற்ற ஒருவகை அமைப்பாகும். தொடக்க கால உரோமானியர்கள் கி.பி. இரண்டாம் நூற்றாண்டுமுதல் ஐந்தாம்



நிலத்தடிக் கல்லறைகள்

நூற்றாண்டின் தொடக்க காலம் வரை இத்தகைய கல்லறைகளில் இறந்தோரைப் புதைத்துவைத்தனர். இத்தகையநிலத்தடிக் கல்லறைச் சுவர்களையும் தளங்களையும் ஓவியங்களால் அழகு செய்தனர். இவற்றுடன் கிறித்தவ அடையாளங்களும் எழுதப்பெற்றிருந்தன. சான்காலிசுட்டோ (San Callisto), சான் செபாசுடியானோ, புனித அக்னீசு போன்றவை மிகச் சிறப்பான கல்றைகளாகக் கருதப்படுபவையாகும்.

ஏனைய நினைவுச் சின்னங்கள்: பண்டைய உரோமாபுரியின் நன்கு பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னங்களுள் பாந்தியன் கோயில் ஒன்றாகும். இக்கோயிலே உரோமானியக் கடவுள்கள் அனைத்தையும் போற்றுமுகத்தான் கட்டப்பட்டதாகும். கான்சுடண்டைன் முவ்வளைவுகள் என்னும் சின்னமும் நன்கு பாதுகாக்கப்பட்டு வருகிறது. இது கி.பி. 315-ஆம் ஆண்டில் கட்டப்பட்டதாகும். ஒன்றோடொன்று தொடர்புள்ள மூன்று வளைவுகளைக் கொண்டு அடுத்தடுத்துக் காணப்படும் இவ்வளைவுகள் கலைத்திறன் மிகுந்த சிற்பங்களைக் கொண்டுள்ளன.

அழிவுச்சின்னங்களின் சுவர்களில் ஓவியங்களும் தென்படுகின்றன. பிறிதொரு நினைவுச் சின்னம் மார்க்கசு அரேலியசு என்பார் காலத்ததாகும். நன்கு பாதுகாக்கப்பட்டு வரும் இத்தூண் கி.பி. இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும். உரோமானியர் பெற்ற போர் வெற்றிகளைப் போற்றி எழுதப் பெற்றுள்ள வரிகள் இத்தூணில் பொறிக்கப்பட்டுள்ளன. போர்க்களக் காட்சிகளையும் இதில் வடித்துள்ளார்கள். மாடிப்படிகளின் வழியாக மேலே சென்றால் அங்கே புனிதபால் நின்று கொண்டிருக்கும்

காட்சியைக் காணலாம். இச்சிலை கி.பி. 1589-ஆம் ஆண்டில் வைக்கப்பட்டது.

அகசுடசு என்பாரின் கல்லறை பிறிதொரு நினைவுச் சின்னம். இக் கல்லறையில் அகசுடசும் அவருடைய குடும்பத்தினரும் புதைக்கப்பட்டுள்ளனர். இக்கல்லறையை கி.மு. 28-ஆம் ஆண்டில் கட்டத் தொடங்கினர். இதன் அருகில் அமைதி மேடை எனப்படும் ஆரா பாசிசு (Ara Pacis) கட்டப்பட்டுள்ளது. காட்டுமிராண்டியான நாடோடிகள் பேரரசைத் தாக்கிய போது உரோமாபுரியினர் அரேலியன் மதில் (Aurelian Wall) என்னும் சுவரைக் கட்டி நகரைப் பாதுகாத்தனர். அதன் பல பகுதிகள் இன்றும் நிலைத்துள்ளன. மேற்கூறிய நினைவுச் சின்னங்களை இன்றும் காணலாம்.

வரலாறு: உரோமாபுரியை கி.மு. 753 ஆம் ஆண்டில் உரோமுலசு (Romulus), இரீமசு (Remus) என்னும் பெயர் கொண்ட இரு சகோதரர்கள் கட்டினர் என்பது மரபு வழிச் செய்தியாகும். உரோமாபுரி பெருகி வளர்ந்து மேற்கத்திய உலகில் பெரும் சக்தியாக உருவாகியது. உரோமானியப் பேரரசு கி.பி. 476-ஆம் ஆண்டு வீழ்ச்சியுற்றது.

செருமானிய நாடோடிகளின் தாக்குதல்களுக்கு இரையான பின்னர்க் காண்போரைக் கவர்ந்த கவின் மிகு மாநகரம் கவனிப்பாரற்றுப் புதர்கள் மலிந்த சதுப்புநிலங்களாக மாறியது. பேரரசர் முதலாம் சசுட்டீனியன் என்பார் கி.பி. ஆறாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் கிழக்கத்தியக் கோத்துகளை உரோமாபுரியிலிருந்து விரட்டி அடித்தார். அவர் பைசாண்டியப் பேரரசர்களுள் ஒருவர். இந்நகரில் மீண்டும் உரோமானியர் ஆட்சி நிலைநாட்டப் பெற்றது. ஆனால்,இப்போது அது பைசாண்டியப் பேரரசுப் பகுதியாகவுள்ளது. எனினும் உரோமாபுரி தொடர்ந்து நலிந்துவந்தது.

கிறித்தவத் திருச்சபையின் முதன்மை மையமாக உரோமாபுரி திகழ்ந்ததால் பெரிய விளைவுகள் ஏற்பட்டன. போப்பாண்டவர்கள் கி.பி. ஏழாம், எட்டாம் நூற்றாண்டுகளில் தம் அரசியல் அதிகாரத்தைப் பெரிதும் பெருக்கிக் கொண்டிருந்தார்கள். இலம்பார்டி நாடோடிகள் உரோமாபுரியைத் தாக்கப் போவதாக அச்சுறுத்தியபோது, இரண்டாம் இசுடீபன் என்னும் பெயர் கொண்ட போப்பாண்டவர், பிராங்கியர்களின் அரசரான குறளர் பெபின் (Pepin the Short) என்பாரிடம் உதவி கேட்டார். பெபின் உரோமாபுரியை இருமுறை காப்பாற்றினார். அவர் உரோமாபுரியையும் அதனைச் சுற்றியுள்ள நிலங்களையும் போப்பாண்டவருக்கு கி.பி. 756-ஆம் ஆண்டில் கொடுத்தார். பெபினின் மகன் சார்லமென்,பின்னர் இப்போப்பாண்டவரின் ஆட்சிப் பகுதிகளை மேலும் விரிவாக்கினார்.

நில மானியத் திட்டக் காலம்: கி.பி. எட்டாம் நூற்றாண்டுக்குப் பல நூறு ஆண்டுகளுக்குப் பின்னர், அரசர்களுக்கும் இளவரசர்களுக்குமிடையே மூண்ட சச்சரவுகளினால் உரோமாபுரி பல கூறுகளாகப் பிரிந்தது. திறன் மிகுந்த போப்பாண்டவர்களைப் பல்வேறு ஐரோப்பிய அரசர்கள் கட்டுப்படுத்த முயன்றனர். குறிப்பாகப் போப்பாண்டவர் பதவிக்கான தேர்தல் நடைபெறுங் காலத்தில் தேர்ந்தெடுக்கப்படவிருக்கும் போப்பாண்டவர்களைத் தம் செல்வாக்கின்கீழ் வைத்துக் கொள்ள அவர்கள் முயன்றனர். பிரான்சு மன்னர் நான்காம் பிலிப்பின் முயற்சியால், 1305-ஆம் ஆண்டு பிரெஞ்சுப் பேராயர்களுள் ஒருவர் போப்பாண்டவராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றார். அவர் பெயர் ஐந்தாம் கிளமண்டு. புதிதாகத் தேர்ந்தெடுக்கப் பெற்ற அப்போப்பாண்டவர் தம் தலைமையிடத்தைப் பிரான்சில் அவிக்னான் என்னுமிடத்திற்கு மாற்றிக் கொண்டார். அப்போது உரோமாபுரியின் சிறப்பு ஓரளவு மங்கலாயிற்று. மீண்டும் கி.பி. 1377-இல் உரோமாபுரியே போப்பாண்டவர்களின் மையமாயிற்று.

இத்தருணத்தில் கோலா டி ரியன்சி (Cola di Rienzi) என்னும் உரோமானிய தேசபக்தர் பிரபுக்களுக்கெதிராகக் கலகம் செய்தார். அவர் கி.பி. 1347-இல் உரோமாபுரியில் மக்களாட்சிக் குடியரசு ஒன்றை ஏற்படுத்தினார். ஆனால், காலப்போக்கில் இரியன்சி பதவிப் பேராசையால் பீடிக்கப்பட்டவராய்க் கொடுமையாளராக மாறினார். பின்னர் ஏற்பட்ட கலகம் ஒன்றில் அவர் கொல்லப்பட்டார்.

மறுமலர்ச்சியின்போது (Renaissance) உரோமாபுரி சீரும் சிறப்பும் மிக்க மாநகரங்களுள் ஒன்றாகத் திகழலாயிற்று. உரோமாபுரியின் மீது கி.பி. 1527-இல் படையெடுத்த செருமானிய, இசுபானியப் படைவீரர்கள் இம்மாநகரத்தின் கலைச் செல்வங்களை அழித்தும் சூறையாடியும் சென்றதோடு, ஆயிரக்கணக்கான உரோமானியர்களைக் கொன்றும் குவித்தார்கள்.பின்னர் உரோமாபுரியைத் திருத்தி அமைக்கும் பணியும் தொடங்கியது. போப்பாண்டவர்கள் கி.பி. 1500க்கும் கி.பி.1600க்கும் இடைப்பட்ட காலத்தில் நூற்றுக்கணக்கான கவின்மிகு கட்டடங்களைக் கட்டி, உரோமாபுரிக்கு மீண்டும் புகழை உண்டாக்கினர். மைக்கேலேஞ்சலோ போன்ற புகழ் பெற்ற ஓவியர்களையும் சிற்பிகளையும் வேலைக்கமர்த்தி அக்கட்டடங்களுக்கு மேலும் அழகூட்டினர்.

நெப்போலியன் என்னும் பிரெஞ்சுப் பேரரசர் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் இறுதி ஆண்டுகளில் இத்தாலிய முந்நீரகத்தை வென்றார். வெற்றி வீரர்களாகப் பிரெஞ்சுப் படைவீரர்கள்உரோமாபுரிக்குள் நுழைந்தனர். போப்பாண்டவரின் அரசியல் ஆதிக்கம் கி.பி. 1809- இல் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. அவர் போப்பாண்டவரின் ஆட்சிப் பகுதியைத் தம் பேரரசுடன் இணைத்துக் கொண்டார். உரோமாபுரியைப் பேரரசின் இரண்டாம் பெருநகரம் என்றும் நெப்போலியன் அறிவித்தார். பாரிசு முதல் நகரமாயிருந்தது. போப்பாண்டவர் ஏழாம் பயசு (Pope Pius VII) இம் மாறுதல்களை எதிர்த்துப் போராடினார்.



போப்பாண்டவர் ஏழாம் பயசு

நெப்போலியனின் வீழ்ச்சிக்குப் பின்னர்,போப்பாண்டவர் ஆட்சிப் பகுதி, கி.பி. 1875-இல் போப்பாண்டவருக்கே திருப்பி அளிக்கப்பட்டது.

இத்தாலிய முந்நீரகத்தில் இத்தாலியை அயலாரிடமிருந்து மீட்டு விடுதலைசெய்ய கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பல இயக்கங்கள் எழுந்தன. ஆனால்,போப்பாண்டவர்கள் இத்தகைய இயக்கங்களை எதிர்த்தனர். புரட்சியாளர்கள் கி.பி. 1848-இல் உரோமாபுரியை ஒரு குடியரசாக ஆக்கினார்கள்.போப்பாண்டவர்ஒன்பதாம் பயசு உரோமாபுரியை விட்டு ஓடினார். பிரஞ்சுப் படைகள் கி.பி. 1849-இல் உரோமாபுரியைக் கைப்பற்றின. அடுத்த ஆண்டில் மீண்டும் போப்பாண்டவர் தம் அதிகாரத்தைத் திரும்பப் பெற்றார்.

ஒன்றுபடுத்தப்பட்ட இத்தாலியின் அரசராக இரண்டாம் விக்டர் இமானுவேல் கி.பி. 1861-இல் முடிசூட்டிக் கொண்டார். எனினும், உரோமாபுரி புதிய அரசின் பகுதியாக இணையவில்லை. இத்தாலியத் தொண்டர்கள் கி.பி. 1867-இல் உரோமாபுரியைக் கைப்பற்றி ஒன்றுபடுத்தப்பட்ட இத்தாலியுடன் இணைக்க முயன்றனர். ஆனால்,போப்பாண்டவரைக் காக்க வந்திருந்த பிரெஞ்சுப் படைவீரர்கள் அம்முயற்சியைத் தடுத்து நிறுத்தினர். பிரெஞ்சுப் படைகள் கி.பி. 1870-இல் உரோமாபுரியை விட்டகன்றன. விக்டர் இமானுவேல் எதிர்ப்பேதுமின்றி உரோமாபுரிக்குள் நுழைந்தார். போப்பாண்டவரின் அரசியல் அதிகாரத்தை அவர் முடிவுக்குக் கொண்டு வந்ததுடன், உரோமாபுரியைத் தம் அரசின் தலைநகரமாக்கினார். இதை ஏற்க மறுத்த போப்பாண்டவர் ஒன்பதாம் பயசு, வாத்திகன் மாளிகையில் அடைக்கலம் புகுந்து, அரசுடன் பேச்சுகள் தொடர மறுத்துவிட்டார். அவரையடுத்துப் போப்பாண்டவர்கள் அனைவரும் அதே கொள்கையை 1929 வரை கடைப்பிடித்தனர். அந்த ஆண்டில் (1929) அரசு வத்திகன் மாநகரைச் சுதந்திர நாடாக அறிவித்தது. உரோமானியக் கத்தோலிக்கத் திருச்சபை அதிகாரிகள் உரோமாபுரியை இத்தாலியின் தலைநகராக ஏற்றுக் கொண்டனர்.

உரோமாபுரியில் இருபதாம் நூற்றாண்டில் விரிவாகப் பல சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. புதுக்கட்டடங்களும் சாலைகளும் அமைக்கப்பட்டன. நகரிலிருந்த பல தொன்மையான கட்டடங்களையும் நினைவுச் சின்னங்களையும் பாதுகாத்து நிருவகிக்கும் பொறுப்பும் மேற்கொள்ளப்பட்டது. பெனிட்டோ முசோலினியின் பாசிச வல்லாட்சியாளர் 1920க்கும் 1930 க்கும் இடைப்பட்ட காலத்தில் மேலும்உரோமாபுரியைத் திருத்தியமைக்க முயற்சி செய்தனர். அம் முயற்சிகளால் உரோமாபுரியில் ஒழுங்கிலா வகையில் அமைக்கப்பட்ட சாலைகளாலும் கட்டடங்களாலும் போக்குவரத்து நெரிசல்களும் பல்வேறு சிக்கல்களும் எழுந்தன. முசோலினி 1935-இல் உரோமாபுரிப் பல்கலைக்கழக வளாகத்தை முழுமையாக்கினார். மிகப் பெரிய மத்திய இருப்புப் பாதை நிலையமொன்றையும் முசோலினி 1938-இல் அமைத்துக் கொண்டிருந்தபோது இரண்டாம் உலகப் பெரும்போர் மூண்டது. அதனால், அப்பணி இடையில் நின்றது. போரினால் உரோமாபுரிக்கு மிகுதியான சேதம் ஏற்படவில்லை. இருப்புப்பாதை நிலையம் 1950-ஆம ஆண்டில் முழுமையாக்கப்பட்டது. புதுமுறையில் பல திருத்தங்களும் அப்போது மேற்கொள்ளப்பட்டன.

முசோலினி 1926–ஆம் ஆண்டில் உரோமாபுரியில் பெரும் கண்காட்சிக் கூடம் (Universal Exhibitions of Rome) ஒன்றை அமைக்கத் தொடங்கினார். இக் கண்காட்சி 1942–இல் திறந்து வைக்கப்பட்டிருக்க வேண்டும். அதற்கான திட்டங்கள் தீட்டப்பட்டன. இருப்பினும் போரின் விளைவாக அப்பணியை நிறை வேற்ற முடியாத சூழல் தோன்றியது. மீண்டும் அதனை அமைக்கும் பணி 1951–இல் தொடங்கப்பட்டது. இந்த உரோமாபுரிப் பெருங் கண்காட்சிக் கூடத்தில் அரசாங்க அலுவலகத்திற்கும் தனியார் அலுவலகத்திற்கும் உரிய கட்டடங்கள் கட்டப்பெற்றன. தனிக்குடியிருப்புகள், அருங்காட்சியகங்கள், உணவு விடுதிகள் போன்றவையும் அங்கே அமைக்கப் பட்டன. உரோமாபுரியில் 1955–இல் கட்டப்பெற்ற சுரங்கப்பாதையில் அமைந்த இருப்புப் பாதை 435 எக்டேர் பரப்பில் அமைக்கப்பட்ட உரோமாபுரிப் பெருங்கண்காட்சிக் கூடத்தை அடையத் துணைபுரிந்தது. இக்கண்காட்சிக் கூடத்திற்கு அருகில் 1960–ஆம் ஆண்டு ஒலிம்பிக்கு விளையாட்டுகள் நிகழ்ந்தன. இறுதியாக 1976–ஆம் ஆண்டில் உரோமாபுரிப் பெருங்கண்காட்சிக் கூடம் முழுமையாக்கப்பட்டது. இங்குப் பல பெரும் வாணிகக் குழுக்களும் அரசாங்க நிறுவனங்களும் இன்றும் இயங்குகின்றன. இரா.அ.

உரோமானியப் பேரரசு பண்டைக்கால உலகப் பேரரசுகளுள் ஒன்று. இத்தாலிய நாட்டில் தைபர் (Tiber) ஆற்றங்கரையில் தோன்றிய ஒரு நகரமான உரோமாபுரி சிறிது சிறிதாக வளர்ச்சியுற்று, ஐரோப்பாவின் பெரும் பகுதியையும் சில ஆசிய நாடுகளையும் தன்னுள் கொண்ட ஒரு சிறந்த பேரரசாக வளர்ந்தது. இத்தாலியின் வளத்தைப் பெருக்கிய உரோமானியர் பண்டைய எகிப்தியர், கிரேக்கர், பொயனீசர் (Phoenicians) முதலியோருடைய நாகரிகங்களின் பயனைத் துய்த்தனர். இந்தியருடன் முற்காலத்தில் உரோமானியர் நெருங்கிய வாணிகத் தொடர்பு பூண்டிருந்தனர். உரோமானிய வரலாறே பண்டைய இத்தாலியின் வரலாறாகும்.

கிறித்து பிறப்பதற்கு ஏறத்தாழ 12 நூற்றாண்டுகள் முன்னரே இத்தாலியில் பல்வேறு மக்கள் கூட்டங்கள் வாழ்ந்தன. அவர்களுள் காலர், கிரேக்கர், எட்ரசுகர், இலிகூரியர், இலத்தீனியர், செபினியர், யாப்பிசியர் முதலியோர் குறிப்பிடத்தக்கோர். உரோமானியர் ஆரிய இனத்தவர். ஏழு குன்றுகள் மீது ஏற்பட்ட குடியேற்றங்கள் கி.மு. 753–இல் ஒன்றாக இணைக்கப்பட்டு, உரோமாபுரி தோற்றுவிக்கப்பட்டதாக அறியக் கிடக்கிறது. இப்பொழுது அக்குன்றுகள் காணப்படவில்லை. ஏழு மன்னர்கள் கி.மு. 510 வரை உரோமாபுரியில் ஆட்சிபுரிந்து பல அருஞ்செயல்களைப் புரிந்ததுடன் அரசியல், பொருளாதாரம், சமயம், இனம் ஆகிய யாவற்றிலும் முன்னேற்றத்தை உண்டாக்கினர். இறுதி அரசனின் கொடுங்கோன்மை




உரோமானியப் பேரரசு

யால் மக்கள் கலகம் செய்து, முடியாட்சியை ஒழித்துக் குடியரசை நிறுவினர்.

உரோமானியக் குடியரசு போற்றத்தக்க அரசியலமைப்பைப் பெற்றது. ஆண்டுதோறும் தேர்ந்தெடுக்கப்பட்ட இரு ஆட்சித் தலைவர் 'கான்சல்' என்ற பட்டத்துடன் நிறைவேற்றத் துறை அதிகாரிகளாயினர். ஆட்சிமன்றமும் (Senate) மக்கள் சபைகளும் சட்டமியற்றி வந்தன. குடியரசின் உருவம் காணப்பட்டதெனினும், மேன்மக்களுக்கு ஏற்ற முறையில்தான் உண்மையில் ஆட்சி நடைபெற்றது. நாட்டுக்குப் பெரிய இடையூறுகள் நேருங்கால் பல்வேறு அதிகாரங்களும் ஆறுமாதங்களுக்கு ஒரு சருவாதிகாரியிடம் ஒப்புவிக்கப்பட்டது. அக்குறுகிய காலத்துக்குக் கட்டுப்பாடின்றி அச்சருவாதிகாரி ஆணை செலுத்துவார். உரோமாபுரியின் பல்வேறு அரசியல் உறுப்புகளும் ஒன்றையொன்று கட்டுப்படுத்தும் வகையில் அமைந்தன. பிற்காலத்திய ஐரோப்பியர் உரோமானியரின் முறைகளையும் அரசியலமைப்பையும் பின்பற்றினர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**இனப்போராட்டம்:** உரோமானிய இனத்தில் மேன்மக்கள், தாழ்ந்தோர் என்ற இரு பெரும் பிரிவுகள் காணப்பட்டன. பெட்ரீசியர் (Patricians) என்னும் உயர் குலத்தினர் எண்ணிக்கையில் குறைவாயிருப்பினும், பல அதிகாரங்களையும் உரிமைகளையும் பெற்று, முறையற்ற வகையில் பெரும்பான்மையினரான பிளீபியரை (Plebians) அடக்கி ஆண்டு வந்தனர். வேளாண்மை, போர் முதலிய தொழில்களில் ஈடுபட்டு நாட்டின் முன்னேற்றத்துக்காக ஓயாது உழைத்த பிற்பட்ட வகுப்பினர் உரிமையற்றுப் பல இன்னல்களுக்கிடையே வாடினர். அரசியலில் அவர்கள் பங்கேற்க இயலாது. ஆனால், கட்டாயமாகப் போரில் சேர்ந்து தொண்டாற்ற வேண்டும். அவர்கள் குருதி சிந்தி வெல்லப் பெற்ற பகுதிகளிலும் பெட்ரீசியர் ஆதிக்கமே நிறுவப்பட்டது.

கடன் சட்டங்கள் செல்வருக்குச் சார்பாக எளியோரை அடிமைகளாக்கும் வகையில் அமைந்திருந்தன. தாழ்த்தப்பட்ட அவ்வகுப்பினருடன் சமயத் துறையிலும், மணவினைச் சடங்குகளிலும் பெட்ரீசியர் எவ்விதத் தொடர்பும் கொள்ள மறுத்தனர். குடியரசு ஏற்பட்ட பின்னும் இத்தகைய முறையற்ற அமைப்பு நீண்டகாலம் நீடிப்பதென்பது இயலாது. ஆகவே, பொறுமையுடன் இருந்த பிளீபியர் கி.மு. 494-இல் ஆர்த்தெழுந்தனர். இரு வகுப்பினருக்கும் போராட்டம் கி.மு. 300 வரை நடைபெற்றது. ஆனால், அப்போராட்டம் அமைதியான முறையில் நடந்தது.

பிளீபியர் உரோமாபுரியை விட்டு வெளியேறி வேறிடத்தில் புதிய நகரை அமைத்துக்கொள்வதாக அறிவித்தவுடன் பெட்ரீசியர் மனங் கலங்கினர். ஏனெனில் அப்பெரும்பான்மையினரின்றி உரோமாபுரி எவ்வகையிலும் முன்னேற முடியாதென்பதை மேன்மக்கள் உணர்ந்திருந்தனர். அக்காலத்தில் உரோமாபுரி சுற்றியிருந்த சிறுநாடுகளுடன் போரிட்டு வந்தபடியால், பிளீபியரின் உதவி மிகவும் இன்றியமையாததாயிருந்தது. ஆகவே, மன வெறுப்புக் கொண்ட மக்களை மகிழ்விக்கப் பல உடன்பாடுகள் செய்து கொண்டனர். சிறிது சிறிதாக அவர்களுக்கு உரிமைகள் வழங்கப்பெற்றன. பின்பு மக்கள் யாவரும் ஒத்துழைத்து உரோமாபுரியின் வளர்ச்சியை விரைவுறச் செய்தனர். கத்தியின்றி, இரத்தமின்றிப் பிளீபியர் தம் குறிக்கோளை நிறைவேற்றிக் கொண்டனர்.

**இத்தாலி முழுவதும் உரோமாபுரியின் ஆட்சி:** இயல்பாகவே உரோமானியர் சிறந்த வீரத்தைப் பெற்றிருந்தனர். குடியாட்சி முறை அரசியலாரை மேலும் வலிமையுறச் செய்தது. தவிர, இத்தாலியின் நடுப்பகுதியில் உரோமாபுரி அமையப் பெற்றிருப்பதால் பல வசதிகள் அவர்களுக்குக் கிடைத்தன. நில அமைப்பும் நாட்டைச் சுற்றிக் கடலமைப்பும் வாணிக முன்னேற்றத்துக்கும் செல்வப் பெருக்குக்கும் ஏற்றனவாக இருந்தன. போர்களை நடத்தி வந்த ஆட்சிமன்றம் அனுபவமும் ஆற்றலும் வாய்ந்த பெருமக்களைக் கொண்டிருந்தது. உரோமாபுரியின் இத்தகைய நிலைக்கு மாறாக, இத்தாலியில் இருந்த பல பிரிவினரிடையே ஒற்றுமையின்மை, ஆற்றலின்மை போன்ற பல குறைபாடுகள் காணப்பட்டன. ஆகவே, உரோமாபுரி சிறிது சிறிதாகத் தன்னாதிக்கத்தைப் பரப்பியது. பல போர்கள் நிகழ்ந்தன. பல இன்னல்கள் ஏற்பட்ட காலத்திலும் உரோமானியர் ஊக்கமும் விடாமுயற்சியும் கொண்டு தம் நாட்டைப் பேணி, இறுதியில் வெற்றி கண்டனர். அவர்கள் தாம் வென்ற பகுதிகளைத் தம் வசப்படுத்தி, அங்குக் குழப்பமும் எதிர்ப்பும் ஏற்படாதவாறு தக்க முன்னேற்பாடுகளைச் செய்துகொள்வதில் மிகவும் வல்லவர்கள். அவர்களின் அரசியல் தந்திரம் இக்கால ஐரோப்பியரால், குறிப்பாக ஆங்கிலேயரால் பின்பற்றப்பட்டது.

வெல்லப்பட்ட பல்வேறு பகுதிகளில் கலகமில்லாதிருக்கவும், உரோமானியக் கொள்கைகள் பரவவும் உரோமானியர் குடியேற்ற நகரங்களைத் தோற்றுவித்தனர். அவை உரோமாபுரியின் இராணுவ நிலையங்களாகவும் அமைந்தன. மேலும், பல புதிய சாலைகளை அமைத்து, அவற்றைப் படைவழிகளாகவும் தலைநகருடன் மற்ற பகுதிகளை இணைக்கும்

பிணைப்புகளாகவும் ஆக்கினர். உரோமானியரின் பிரித்தாளும் கொள்கை குறிப்பிடத்தக்கது. பல பகுதிகளுக்கு உள்நாட்டு அமைப்பில் உரிமையளித்து மக்களை மகிழ்வித்துப் பிற துறைகளில் உரோமாபுரியின் ஆதிக்கத்தை நிறுவினர். இத்தகைய அரசியல் தந்திரங்களினாலும் ஆற்றலினாலும் உரோமானியர் தாம் நிகழ்த்திய பல போர்களில் இறுதியில் வெற்றி கண்டனர். ஏறக்குறைய கி.மு.489 முதல் 266 வரையுள்ள இரண்டு நூற்றாண்டுகளில் இத்தாலி நாட்டுக் குடிகளான சாம்நித்தியர், இலத்தீனியர், எட்ரசுக்கர், வால்சியர் முதலிய பலருடன் தனித்தனிப் போர்கள் பல நிகழ்த்தியதுடன், இத்தாலியிலிருந்த காலர், கிரேக்கர் ஆகியோருடனும் போராட்டங்கள் நடத்தி அனைவரையும் முறியடித்தனர். ஆகவே இத்தாலிய முந்நீரகம் முழுவதிலும் உரோமாபுரி ஆட்சி செலுத்தத் தொடங்கியது.

**உரோமாபுரி ஆதிக்கம் பரவுதல்: பியூனிக்குப் போர்கள்:** உரோமாபுரிக்குப்பகையாக வடஆப்பிரிக்காவில் கார்த்தேசு (Carthage) என்னும் பொயனீசக் குடியேற்ற நாடு முளைத்திருந்தது. வாணிகத் துறையிலும் கடல் வலிமையிலும் இணையில்லாப் புகழுடன் விளங்கிய அந்நாட்டின் வாணிகக் குடியேற்றங்கள் மிகவும் விரிந்து கிடந்தன. சார்தீனியா, கார்சிகாத் (Sardinia, Corsica) தீவுகள் அவர்களுக்கு உரியனவாயிருந்தன. சிசிலித் தீவு (Sicily) முழுவதிலும் ஆதிக்கம் செலுத்த கார்த்தசீனியர் முயன்றனர். அதனால் அச்சமடைந்த உரோமானியர் அவர்களுடன் போரிட முடிவு செய்தனர். இருநாடுகளுக்குமிடையே கி.மு. 264 முதல் 241 வரை நடந்த முதற்போரில் ஆமில்கார் பார்க்கா (Hamilcar Barca) என்ற கார்த்தசீனியத் தலைவன் வீரச் செயல் புரிந்தான். எனினும் அக்ரிகண்டம், மைலே, அகேடியன் தீவுகள் முதலிய இடங்களில் உரோமானியர் அடைந்த வெற்றிகளின் பயனாய் உரோமாபுரி சிசிலித் தீவைப் பெற்றது. தோல்வியுற்ற கார்த்தேசு தளர்ச்சியடையாது, ஆனிபால் (Hannibal) என்பான் தலைமையில் உரோமாபுரியுடன் இரண்டாம் போர் (கி.மு. 219–202) நிகழ்த்தியது.

ஆனிபால் இசுபெயினிலிருந்து புறப்பட்டு, இத்தாலியின் வடக்கில் படையெடுத்துப் பல வெற்றிகளை அடைந்தான். எனினும், முடிவில் வட ஆப்பிரிக்காவில் சாமா (Sama) என்ற இடத்தில் கார்த்தசீனியர் முடிவான தோல்வியை அடைந்தனர். உரோமானியத் தளபதி பேபியசு (Fabius) நேர்முகமாக ஆனிபாலை எதிர்க்காமல், மறைமுகமாக அவனைத் துன்புறுத்தி அவனுக்கு உதவி கிடைக்கக் கூடிய வழிகளைத் தடுத்து, பகைவன் முடிவான வெற்றியை அடைய முடியாமல் காலந்தாழ்த்தி, இறுதியில் உரோமாபுரிக்கு வெற்றி கிடைக்கச் செய்தான். அவனது போர்த் தந்திர முறை பேபியசு முறை எனக் கூறப்படுகிறது. போரின் முடிவாக இசுபெயின், நுமிதியா நாடுகளையும் மிகுதியான பொருளையும் உரோமாபுரி கார்த்தேசிடமிருந்து பெற்றது.

கார்த்தேசு பிற்காலத்தில் விரைவாக வளர்ச்சியுற்றுத் தமக்கு இடையூறுகளை விளைவிக்கக் கூடுமென்று கருதிய உரோமானியர், அந்நாட்டை அடியோடு அழிக்கத் திட்டமிட்டு, கி.மு. 149-இல் மூன்றாவது போரைக் கார்த்தேசு மீது திணித்தனர். கார்த்தசீனியர் வீரப்போர் புரிந்த போதிலும் பயனற்றதாகி, ஒரு காலத்தில் ஓங்கி வளம் பெற்றுத் திகழ்ந்த கார்த்தேசு கி.மு. 146-இல் அழிக்கப்பட்டது. வட ஆப்பிரிக்கா முழுவதிலும் உரோமானியர் தம் ஆணையைச் செலுத்தினர்.

உரோமாபுரி தொடக்கத்தில் கீழ் நாடுகளின் சிக்கல்களில் தலையிடவில்லை. ஆனால் அந்நாடுகளில் நிலவிய நிலை உரோமானியரின் தலையீட்டை இன்றியமையாததாக்கியது. கார்த்தசீனியருடன் உரோமாபுரியும் போரிடுகையில், ஆந்திகோனசு வழியில் வந்த ஐந்தாம் பிலிப்பு என்ற மாசிடோனிய மன்னன் அவர்களுக்கு உதவி புரிந்ததால், உரோமானியர் அவனுடன் போர் தொடுத்தனர். நான்கு போர்களின் முடிவாக கி.மு. 149-இல் மாசிடோனிய அரசு உரோமானியப் பேரரசின் ஒரு மண்டலமாக்கப் பெற்றது. சிரியா அரசன் மூன்றாம் ஆந்தியாகசு உரோமானியருடன் பகைமை பூண்டு தோல்வியுற்று, தம் நாட்டின் பெரும்பகுதியை இழந்தான். கிரீசு முழுவதிலும் கி.மு. 146-இல் உரிமை ஆட்சி மறைந்து உரோமானியராட்சி நிறுவப்பெற்றது. பர்காமம் (Pergamum) நாட்டின் இறுதி மன்னனான அட்டாலசு கி.மு. 133-இல் தன் அரசைத் தானாகவே உரோமாபுரிக்கு வழங்கினான். இவ்வாறு ஆசியாவிலேற்பட்டிருந்த செல்யூசிட்டு அரசு மெலிவடைந்து, சிறிது சிறிதாக உரோமானியராட்சியின்கீழ் வந்தது. உரோமாபுரி கி.மு. 264-இல் மத்தியதரைக்கடல் அரசுகளில் ஐந்தில் ஒன்றாக இருந்தது. ஆனால் கி.மு. 133-இல் அதற்கு இணையாக எந்நாடும் மேற்கில் காணப்படவில்லை. மேற்கு உலகில் 'புவியரசி' என்ற புகழுடன் உரோமாபுரி விளங்கியது.

**உள்நாட்டுக் கலகம்:** உரோமாபுரி அடைந்த மாபெரும் வெற்றிகள் காரணமாக அங்கே செல்வமும் பகட்டான வாழ்வும் மிகுதியாயின. போர்களின் விளைவாக நாட்டில் அடிமைகளும் வீணரும் யுத்த வெறிகொண்ட தொழிலற்ற வீரரும் நிரம்பினர். போரிலேயே கருத்தைச் செலுத்திய உரோமானியர்

வேளாண்மையைப் புறக்கணித்தனர். நாட்டில் ஒரு பக்கத்தில் செல்வமும் மற்றொரு பக்கத்தில் வறுமையும் வளர்ந்தன. பிரபுக்கள் மேலும் மேலும் பணக்காரராயினர். ஏழைகள் மேன்மேலும் வறியவராயினர். பொதுமக்கள் சபை முக்கிய அதிகாரங்களைப் பெற்றுத் தன் விருப்பம் போல் ஆட்சி நடத்தியது.

போர்களின் விளைவாக அடிமைகள் பெருகினர். ஆடுமாடு போலவே அவர்கள் நடத்தப்பட்டனர். எளிய மக்களின் அடிமைத்தனத்தின் மீதும், அவர்கள் மனம் துயருற்று ஆற்றாது அழுத கண்ணீரின் மீதும் உரோமானியச் செல்வர் பேரின்பப் பெரு வாழ்க்கை நடத்தினர். மேன்மக்கள் பொழுதுபோக்குக்காகப் பயனற்ற பல விளையாட்டுகளை ஏற்படுத்தினர்; தாம் கண்டுகளிப்பதற்காக மல்லர்கள் ஒருவருடன் ஒருவர் போர் செய்து, ஒருவரை ஒருவர் கொல்லுமாறு வற்புறுத்தினர். தேர்தல்களில் கைக்கூலியும் ஏமாற்றும் மிகுந்திருந்தன.


மக்களுள் பலர் தொழிலற்றுக் கடன்பட்டு வருந்தினர். ஆட்சி நாடுகளில் மண்டலத் தலைவர்கள் பொருளீட்டும் ஒரே நோக்குடன் மக்களைக் கசக்கிப் பிழிந்து கொடுங்கோலோச்சினர். வரி தண்டும் அதிகாரம் பிரபுக்களிடையே ஏலம் விடப்பட்டது. ஆகவே, உரோமானிய அரசில் குழப்பங்கள் மிகுந்து அரசியலாருக்குப் பகையாக எழுச்சிகள் ஏற்பட்டன. வருந்தத்தக்க இந்நிலையை அமைதியான வகையில் சீர்திருத்தத் தைபீரியசு கிரேக்கசு (Tiberius Grachus) என்பவரும் அவருக்குப்பின் அவர் தம்பி கயசு கிரேக்கசு (Gaius Grachus) என்பவரும் மிகுந்த முயற்சிகள் எடுத்துக்கொண்டனர். ஆனால் அவை வீணாயின. மக்கள் ஈவு இரக்கமின்றி ஒடுக்கப்பட்டனர். ஆயிரக்கணக்கானோர் சிலுவையில் அறையப்பட்டனர். உரோமானியரிடையே கீழ் மக்கள், மேன் மக்கள் என்ற பிரிவுகள் வலிமையடைந்து ஒன்றுடனொன்று போர்புரியலாயின. கீழ்மக்கள் கட்சி 'குடியரசுக் கட்சி' எனப் பெயர் பெற்றது. பொறுமையை விட்டு எவ்வித மாறுதலையும் ஏற்க மக்கள் தயாராகி விட்டனர்.



பாம்பே

சில படைத்தலைவரின் தலைமையில் புரட்சிகளும் கலகங்களும் பெருகின. படைத்தலைவர் தமக்குள் போரிடலாயினர். ஆயிரக்கணக்கில் மக்கள் கொலையுண்டனர். அந்நிலையில் உள்நாட்டுப் போர்களுடன் வெளிநாட்டுப் போரையும் உரோமானியர் சமாளிக்க வேண்டியவராயினர். வட ஆப்பிரிக்காவில் சுகர்த்தா (Jugurtha) என்பானுடனும் கருங்கடற் பகுதியில் மித்திரடாட்டசு(Mithridates)என்பானுடனும் பெரும் போர்கள் பல புரிய வேண்டியதாயிற்று. இத்தகைய போர்களில் வெற்றி பெறுவோனுக்கே உரோமாபுரியின் தலைமைப் பதவி என்ற நிலை ஏற்பட்டது.

இச்சூழ்நிலையைத் தம் முன்னேற்றத்துக்காகப் பயன்படுத்திக் கொண்டோருள் மாரியசு சல்லா (Marius Sulla), பாம்பே (Pompey), சூலியசு சீசர் (Julius Caesar) ஆகியோர் குறிப்பிடத் தக்கவர். மற்றவரை விடப் பல மடங்கு ஆற்றல் வாய்ந்தவர் சூலியசு சீசர். இவர் இறுதியில் அனைவரையும் வென்று தனிக்கோலோச்ச முற்பட்டார்.



சூலியசு சீசர்

**சூலியசு சீசர்**: மேன்மக்கள் குலத்தில் கி.மு. 102–இல் பிறந்தார். 'சூலியன்' என்பது இவர் குடும்பப் பெயர். இவர் உயர் குலத்தவராயினும் குடியரசுக் கட்சியை ஆதரித்தார். தாம் முன்னேறுவதற்கு

இவர் கடைப்பிடித்த தந்திரம் இது. சின்னா என்ற குடியரசுக் கட்சித் தலைவனொருவனின் மகளையே சீசர் மணம் புரிந்தார். இவர் இளமையில் கூடாவொழுக்கம் பூண்டு கடன் பெற்று வாழ்க்கை நடத்தியபோதிலும், விரைவில் சூழ்நிலையைத் தமக்கு ஏற்றவகையில் பயன்படுத்திக்கொண்டு முன்னேறினார். தொடக்கம் முதல் உரோமானியப் பேரரசின் தனித் தலைவராக வேண்டுமென்ற பேராசை நோக்குடன், இவர் தம்கொள்கைகளையும் அவற்றிற்கேற்பச் செயல்களையும் அமைத்துக் கொண்டார்.

சீசர் இளமையிலேயே சிறந்த போர்வீரராகவும் பல கலைகளையும் கற்ற அறிஞராகவும் சொல்வன்மை வாய்ந்தவராகவும் விளங்கினார். அடுத்தடுத்துப் பல பதவிகளைப் பெற்று, மக்கள் விரும்பிய மாறுதல்களை ஆதரித்து, அவர்கள் நன்மதிப்பை இவர் பெற்றார். இவர்தம் பெருந்தன்மை மக்களை இவர்பால் ஈர்த்தது.முதன்மைச்சமயத்தலைவன்,பொருட் கணக்கன், மராமத்து அதிகாரி, முறை வழங்குவோன், இசுபெயின் நாட்டுத் தலைவன் முதலிய பல பதவிகளை இவர் வகித்துப் புகழ் பெற்றார்.

போர் வீரரைத் தம் வசப்படுத்தும் முறையில் சீசர் கைதேர்ந்தவர்; சிறு தோல்வியினால் மனம் நடுங்காதவர்; தோல்வியைப் பெரும் வெற்றிக்கு வழிகாட்டியாகப் பயன்படுத்தியவர். போர் முறைகளைக் காலத்திற்கேற்றவாறு மாற்றி அமைத்துக்கொள்வதிலும் இவர் திறமையாளர். இவர் சிறந்த வழக்கறிஞராகவும்வரலாற்றறிஞராகவும் இலக்கண வல்லுநராகவும் விளங்கினார். ஆகவே, மக்கள் கட்சியினாதரவு கிடைத்தது. ஆனால் மேன்மக்கள் சபையான ஆட்சி மன்றம் சீசரை வெறுத்தது.

சீசர் கி.மு.60-இல் உரோமாபுரிக்குத் திரும்பிய பொழுது, மேன்மக்கள் கட்சியைச் சேர்ந்த பாம்பே உரோமாபுரியின் தலைவராக வீற்றிருந்தார். சீசர் தம் தந்திரத்தால் பாம்பேயுடன் நட்புப் பூண்டு, ஆட்சி மன்றத்திற்குப் பகையான ஒரு கூட்டுறவை ஏற்படுத்தினார். உரோமாபுரியிலேயே மிகவும் பணக்காரனான கிராசசை (Crassus) அக்கூட்டுறவில் இணைத்துக் கொண்டார். இம்மூவர் கூட்டுறவு (கி.மு.60) சீசருக்கு மிகுந்த செல்வாக்கைக் கொடுத்தது. இது கி.மு. 53 வரை நீடித்தது. விரைவில் 'கான்சல்' (Consulship) எனப்படும் உரோமாபுரியின் தலைமைப் பதவி சூலியசு சீசருக்குக் கிடைத்தது. ஆனால், அதனுடன் இவர் மகிழ்ச்சியடையவில்லை. இவர் விரும்பியவாறே பிரான்சு எனப்படும் பண்டைய கால் (Gaul) நாட்டின் இராணுவத் தலைமை, அரசியல் தீர்மானப்படி கி.மு. 58-இல் இவருக்குக் கொடுக்கப்பட்டது.



சீசரின் போர் வெறிக்குக் கால் நாட்டின் சூழ்நிலை உதவியாயிருந்தது. தாம் அங்கே நிகழ்த்திய போர்களின் வரலாற்றை இலத்தீன் மொழியில் எளிய நடையில் இவர் எழுதினார். இவர் சிறந்த எழுத்தாளர் என்பதற்கு அந்நூல் எடுத்துக்காட்டு. இவர் தம் ஆற்றலினால் சாம பேத தான தண்ட முறைகளைக் கையாண்டு விரைவில் கால் நாட்டை அடிமைப்படுத்தினார்; உள்நாட்டில் ஒரு வகுப்பினர்க்குப் பகையாக மற்ற வகுப்பினரை வேறுபடுத்தி, இறுதியில் கால் நாடு முழுவதையும் உரோமானியராட்சியின்கீழ்க் கொணர்ந்தார். அந்நாட்டில் இவருடைய அரசியல் சீர்திருத்தங்கள் புதிய காலப் பிரான்சுக்கு அடிகோலின. கால் நாட்டினருக்குப் பிரிட்டிசுத் தீவினர் உதவி புரிந்தமையால், இவர் கி.மு.54-இல் பிரிட்டன்மீது படையெடுத்தார். ஆனால், அந்நாட்டில் நிலையாகத் தன்னாதிக்கத்தை ஏற்படுத்த இவர் விரும்பவில்லை. அக்காலத்தில் பிரிட்டனில் சிறந்த நகரங்கள் எதுவும் இல்லை என்றும் மக்கள் நாகரிகமற்றவராயிருந்தனர் என்றும் சீசரின் குறிப்புக் கூறுகிறது.

சீசர் இவ்வாறு வெற்றிமேல் வெற்றி அடைந்து கொண்டிருக்கையில், இத்தாலியில் பாம்பே தாமே தனித்தலைமை பெறவும் சீசரின் வலிமையைக் குறைக்கவும் முற்பட்டார். முக்கூட்டுறவு கி.மு.53-இல் குலைந்தது. கிராசசு ஒரு போரில் மாண்டுபோனார். ஆட்சி மன்றம் பாம்பேயுடன் சேர்ந்துகொண்டு, சீசரின் படையைக் கலைக்குமாறு ஆணையிட்டது. சீசர் படையுடன் கி.மு.49-இல் உரோமாபுரியை நோக்கிப் புறப்பட்டு, பகைவர்களை அழிக்க ஆயத்தமானார். பொதுமக்களின் ஆதரவு இவருக்குக் கிடைத்தது. இரண்டே மாதங்களில் இத்தாலி இவருக்கு அடிமைப்பட்டது. பாம்பே கிரீசுக்குத் தப்பியோடினார்.

சீசர் இசுபெயினிலிருந்த பாம்பேயின் படையை முறியடித்துவிட்டுக் கிரீசுக்குச் சென்று பர்சாலசு என்ற இடத்தில் பாம்பேயை கி.மு.48-இல் தோற்கடித்தார். பாம்பே எகிப்துக்கு ஓடிச்சென்று அங்குக் கொலையுண்டார். சீசர் எகிப்துக்குச் சென்று நைல் ஆற்றங்கரையில் மீண்டும் பாம்பேயின் கட்சியினரை கி.மு.47-இல் தோல்வியுறச் செய்தார். அந்நாட்டில் சீசர் தங்கிய காலத்தில் தாலமி (Ptolemy) குலத்தைச் சார்ந்த கிளியோபாட்ரா (Cleopatra) என்ற பெண்ணின் அழகில் மயங்கினார்.

சீசர் ஆசியா மைனர் சென்று வெற்றிக்கொடி நாட்டியபின், உரோமாபுரிக்குத் திரும்பினார். உரோமானிய மக்கள் மிக்க மகிழ்ச்சியுடன் சீசரை வரவேற்று வாழ்த்தி ஆரவாரித்தனர். சீசரின் உருவச்

சிலைகளைச் செய்து மக்கள் வழிபடவும் தொடங்கினர். இவர் வட ஆப்பிரிக்காவுடனும் பொருது வெற்றி பெற்றார்.

சீசர் தனித் தலைமை பூண்டு ஆட்சி புரிந்தது ஓராண்டுக்கும் குறைவான காலமேயாயினும், அக்குறுகிய காலத்தில் வியக்கத்தக்க வகையில் சீர்திருத்தங்கள் செய்து, ஏற்கனவே அரசியல், பொருளாதாரத்தில் கேடுற்றிருந்த உரோமானியப் பேரரசை ஒழுங்குறச் செய்தார். நாட்டை வளமாக்கும் திட்டங்கள் விரைவில் வகுக்கப்பட்டன. அயலாராகிய எகிப்தியர், இசுபானியர், ஆப்பிரிக்கர், கால் நாட்டினர், கிரேக்கர் முதலியோருக்கு உரோமானியக்குடியுரிமைகள் வழங்கப்பெற்றன. இவர் வரிதண்டும் அதிகாரம், ஏலம் விடப்படும் முறை ஆகியவற்றை ஒழித்தார்; மக்கள் கணக்கெடுப்புக்கு ஏற்பாடு செய்தார். இவர்காலத்தில் முறைவழங்கல், இராணுவம், பொருளமைப்பு முதலிய பல துறைகளிலும் முன்னேற்றம் தோன்றியது. உரோமானியச் சட்டங்கள் தொகுக்கப் பெற்றன. நாட்டில் பல நூல் நிலையங்கள் தோன்றின. அறிஞர்கள் அரசியலாரின் ஆதரவைப் பெற்றனர். உரோமானியக் குடியேற்ற நாடுகள் மிகுதியாயின. உரோமானிய அரசின் எல்லைகளைப் பெருக்கியதுடன், அது ஒரு பேரரசாகப் பின்னர் நிலைக்கவும் சீசர் வழிகள் வகுத்தார். இவர் முறைகள் ஐரோப்பிய நாகரிகத்தை உருவாக்கின.

சீசரைப் பேரரசராக முடிசூட்டச் சிலர் முயன்றனர். சீசரின் வலக்கை போலிருந்த அந்தோணி அவர்களுள் குறிப்பிடத்தக்கவர். ஆனால், உரோமாபுரியில் நீண்ட காலமாக நிலவிய குடியரசு முறை சீசர் முடிசூட்டிக் கொள்வதற்கு இடையூறாக இருந்தது. குடியரசுக் கட்சியினர் சீசரின் பேராசையைக் கண்டு அஞ்சினர். புரூட்டசு (Brutus) என்ற குடியரசுவாதி சீசரின் நண்பராக இருந்தபோதிலும்,இப்பேராசையை வளரவிடாமல் தடுக்க விரும்பினார். காசியசு (Cassius) போன்ற தன்னலக்காரர்கள் ஒழுக்க நெறியாளரான புரூட்டசைத் தந்திரத்தால் தம்முடன் இணைத்துக் கொண்டு, வஞ்சனையாக கி.மு.44-இல் சீசரை ஆட்சிமன்ற மண்டபத்தில் கொலை செய்தனர்.

புரூட்டசு குடியரசை உரோமாபுரியில் நிலைநாட்டவே சீசரைக் கொன்றார். ஆனால், அவ்வெண்ணம் நிறைவேறவில்லை. சீசரின் நண்பனான அந்தோணி தம் சொல்வன்மையால் மக்கள் கருத்தைச் சீசரின் அரிய சாதனைகள்பால் திருப்பினார். அவர் நாவன்மையால் மக்கள் தூண்டப்பெற்று, புரூட்டசுக் கட்சியினருக்கு எதிராகத் திரண்டனர். புரூட்டசும் அவர் கட்சியினரும் தப்பி ஓடினர். சீசரின் வளர்ப்பு மகனான ஆக்டேவியசும் அந்தோணியும் சேர்ந்து, கி.மு. 42-இல் கிளர்ச்சிக்காரரைக் கிரீசில் பிலிப்பை என்ற இடத்தில் முறியடித்தனர். குடியரசுக் கட்சி அழிந்தது.

அந்தோணி எகிப்தின் அரசி கிளியோபாட்ராவுடன் இன்ப வாழ்க்கை நடத்தினார். அவளை உரோமாபுரியின் அரசியாக்கஅவர் முயற்சிசெய்வதாக ஊரலர் பரவியது. உரோமானியர் அந்தோணியை வெறுக்கலாயினர். அவ்வமயத்தைப் பயன்படுத்திக் கொண்டு ஆக்டேவியசு தம் படையுடன் சென்று, கிரீசுக்கு அருகில் ஆக்தியம் விரிகுடாவில் கி.மு.31-இல் அந்தோணியை முறியடித்தார். அடுத்த ஆண்டில் அந்தோணியும் கிளியோபாட்ராவும் தற்கொலை செய்து கொண்டனர். எகிப்து உரோமானியப் பேரசுடன் இணைக்கப்பட்டது. தாலமிகள் ஆட்சி அந்நாட்டில் முடிவுற்றது. உரோமாபுரியில் சீசரின் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட வல்லாட்சி ஆக்டேவியசினால் ஏற்படுத்தப்பட்டது. சீசர் என்ற பட்டப் பெயரை அவருக்குப்பின் வந்த ஆக்டேவியசு முதலியோர் சூட்டிக்கொண்டனர்.



அகசுடசு சீசர்

உரோமாபுரியில் கி.மு.இரண்டாம் நூற்றாண்டினிறுதியில் தோன்றிய போராட்டத்தை நிலையான முடிவுக்குக் கொண்டு வந்த பெருமை ஆக்டேவியனுடையதாகும்.அவருக்கு அகசுடசு (Augustus) என்னும் பெயரும் உண்டு. ஆனால், வெளிப்பொலிவை விரும்பாத அவர், குடிமக்களுள் முதல்வன் என்றே தம்மைக் கூறிக்கொண்டார். எளிய வாழ்க்கையையும் அமைதியையும் மக்கள் நலத்தையும் கருத்திற் கொண்டு அவர்ஆட்சி நடத்தினார். வரம்பற்ற அதி

காரங்களைப் பெற்றிருந்தாரெனினும், குடியரசு அமைப்பை அவர் அடியோடு அழிக்க வில்லை.

அககுடசு சீசரின் ஆட்சி பொற்காலம் எனப் போற்றப்படுகிறது. குடியாட்சியை அக்கால மக்கள் வெறுத்தனர். அககுடசைக் கடவுளாகவும் வழிபட முற்பட்டனர். உரோமாபுரி அண்மையிலிருந்த நாடுகளை எதிர்த்துப் போர் தொடங்கிய காலத்திலிருந்து நாட்டில் காணப்படாத அமைதியையும் வளத்தையும் ஆக்டேவியசினாட்சியில் மக்கள் துய்த்தனர். உரோமானியப் பேரரசு அட்லாண்டிக்குக் கடலிலிருந்து யூப்ரடீசு ஆறு வரையிலும் பரவியிருந்தது. ஆப்பிரிக்கப் பாலைநிலம் அதன் தெற்கு எல்லையாயிருந்தது. வடக்கில் இரைன் ஆற்றைக் கடந்து செருமானியரை வெல்ல அககுடசு எடுத்துக் கொண்ட முயற்சி பயனற்றதாகியது. உள்நாட்டில் செழிப்பு ஓங்குவதற்கான பல திட்டங்களை அவர் வகுத்தார். வலுக்கட்டாய முறையில் எதையும் செயலாற்ற விரும்பாமல், மக்களைப் பல வகைகளிலும் மகிழ்வுறச்செய்து, தமக்குக் கீழ்ப்படியுமாறு அககுடசு செய்து கொண்டார்.

அககுடசு ஆட்சியின்போது குடியேற்றப் பகுதிகள் தோற்றுவிக்கப்பெற்றன. அழிவுற்றிருந்த வழிபாட்டிடங்கள் புதுப்பிக்கப்பட்டன. புதிய கோயில்கள் பல தோன்றின. உரோமானியச் சமயம் புத்துயிர் பெற்றது. வாணிகம் ஓங்கியது. சாலைகள் செப்பனிடப்பட்டன. பேரரசின் பற்பல பகுதிகளும் தொடர்பு கொள்வதற்கான பல முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. முறையான வரிவிதிப்புக்காக மக்கள்தொகையும் அவர்களின் பொருள்களும் கணக்கெடுக்கப்பட்டன. கல்வியறிவாளர் அரசியல் ஆதரவைப் பெற்றனர். இலத்தீனிய இலக்கியம் மேன்மையுற்றது. வரலாற்றறிஞர் இலிவி (Livy), பெருங்கவிஞர்களான வர்சில் (Virgil), ஓவிடு (Ovid) முதலானோர் அரசவையில் இருந்தனர். அககுடசு கி.பி.14-இல் காலமானதும் அவருக்காகப் பல கோவில்களும் நினைவுச் சின்னங்களும் எடுக்கப்பெற்றன.

## உரோமானியப் பேரரசு (கி.பி.14 முதல் 476 வரை)

அககுடசுக்குப் பின் வந்த மன்னர்கள் குடியரசு முறையை முழுவதும் மாற்றிவிட்டு, முடியாட்சி முறையை நிலையாக நிறுவலாயினர். உரோமானியப் பேரரசை முற்பகுதி (கி.பி.180 வரை), பிற்பகுதி (கி.பி.476 வரை) எனப் பகுத்து வரலாற்றறிஞர் விளக்குவர். முற்பகுதியில் பேரரசு மிகவும் உயர்ந்த நிலையிலிருந்தது. அககுடசு காலத்தின் சிறப்புகள் தொடர்ந்து வந்தன. உள்நாட்டு அமைதியும் ஒற்றுமையும் நிலவின. ஆயினும் ஒருசில கொடுங்கோலர் தோன்றியிருந்தனர். குறிப்பாக, தைபீரியசு (Tiberius) என்பார் காலத்தில் (கி.பி.14-37) ஏசுநாதர் சிலுவையில் அறையப்பட்டார். நீரோ (Nero) என்பான் (கி.பி.54-64) அவன் தாய், மனைவி, ஆசிரியர் முதலியோரையும் பல உறவினர்களையும் பல மக்களையும் சினம் காரணமாக வெட்டி வீழ்த்தினான். நீண்டகாலம் உரோமானியப் பேரரசர்கள் கிறித்தவச் சமயத்தினரைச் சிலுவையிலறைந்தும், உயிருடன் எரித்தும், கொடிய விலங்குகளுக்கு இரையாக்கியும் பலவகையில் துன்புறுத்தி வந்தனர்.

கலிகுலா (கி.பி.37-41), கிளாடியசு (கி.பி.41-54), வெசுபாசியன் (கி.பி.70-79), திதசு (கி.பி.79-81), தாமிசியன் (கி.பி.81-96), நெர்வா (கி.பி.96-98), திராசன் (கி.பி.98-117), அந்தோனினசுபயசு (கி.பி.138-161), மார்க்கசு அரீலியசு (கி.பி. 161-180) முதலிய பேரரசர்கள் காலத்தில் பல சிறப்புகள் நாட்டில் தோன்றின. அரசர்களின் அதிகாரங்கள் வரம்பு கடந்து பெருகி இருந்தன. அவர்கள் வணக்கத்துக்கு உரியவராயினர். பல பொதுக்கட்டடங்கள் தோன்றின. பிரிட்டிசுத் தீவு கி.பி. முதல் நூற்றாண்டின் முடிவுக்குள் உரோமானியரால் கைப்பற்றப்பட்டது. பேரரசு அளவில் பெருகியது. மார்க்கசு அரீலியசு நேர்மைவழியைக் கடைப்பிடித்து, இலக்கிய முன்னேற்றத்திலும் மெய்யறிவு வளர்ச்சியிலும் பெரிதும் கவனம் செலுத்தினார்.

அரீலியசின் மகன் கம்மோடசு(கி.பி. 180-192) ஆற்றலற்றவனாய் அரசியல் அலுவல்களைப் பிறரிடம் ஒப்புவித்து, இழிவொழுக்கம் பூண்டு, முடிவில் தம் காதலியினால் கொலைசெய்யப்பட்டான். அவன் காலம் முதல் பேரரசின் சிதைவுக்கான அறிகுறிகள் தோன்றின. அக்காலத்தில் மன்னர்களின் திறமையைப் பொறுத்தே பேரரசு அமைந்திருந்தது. தைகிரீசு ஆற்றுக்கு அப்பாலிருந்த பார்த்தியர் என்ற கூட்டத்தாரும் தான்யூபு, இரைன் ஆறுகளுக்கு அப்பாலிருந்த செருமானியரும் மற்றொருபுறமிருந்த அராபிய-ஆப்பிரிக்கப் பாலைநில மக்களும் உரோமானியப் பேரரசின் பகைவர்களாயிருந்தபடியால், மன்னர்கள் மிகவும் திறமை வாய்ந்தோராக இருத்தல் இன்றியமையாததாயிற்று. ஆனால், பேரரசர்களைத் தெரிந்தெடுப்பதில் குழப்பங்கள் மேலிட்டன. பேரரசுப் பட்டம் ஏலம் விடப்படும் நிலையும் சில காலங்களிலேற்பட்டது. போர் வீரர்கள் தங்கள் விருப்பத்திற்கிணங்கப் பேரரசர்களை ஆதரித்தும், சிலரை நீக்கியும் வந்தனர்.

கிறித்தவச் சமயத்தின் வளர்ச்சி உரோமானியரிடையே இன ஒற்றுமையைக் குலைத்தது. உரோமானிய நாகரிகத்தின் தன்மை மாறுதலடையத் தொடங்கியது. அது உண்மையான அறிவு வளர்ச்சியை அடிப்

படையாகக் கொள்ளாமல் வெளிப்பகட்டாயிருந்தது. மேன்மக்கள் உண்டுகளித்து இன்பமாகப் பொழுது போக்கிக் கொண்டிருந்தனர். ஆனால், எளியோர் துயரத்தில் ஆழ்ந்திருந்தனர். உள்நாட்டுக் கலகங் களும் படை வீரரின் கொடுங்கோன்மையும் கி.பி. மூன் றாம் நூற்றாண்டில் காணப்பட்டன. ஒரே காலத்தில் பல பேரரசர்கள் தோன்றித் தமக்குள் போட்டியிட்ட மையும் நேர்ந்தது. மக்கள் போதுமான பாதுகாப் பின்றி வருந்தினர்.

உள்நாட்டுச் சீர்கேடுகளைப் பயன்படுத்திக் கொண்டு அயலார் படையெழுச்சிகள் ஏற்பட்டன. குழப்பங்களைப் பயன்படுத்திக் கொண்டு மாகாணத் தலைவர்கள் உரிமை பெற முற்பட்டனர். இத்தகைய இடையூறுகளுக்குட்பட்ட பேரரசு கி. பி. ஐந்தாம் நூற்றாண்டு வரை நீடித்ததற்கு, இடையிடையே தோன்றிய சிறப்பான சில பேரரசர்களே காரணமா வர். அரீலியன் (கி. பி. 270-275), தயோகிலேசியன் (கி. பி. 285-305), கான்சுடண்டைன் (கி. பி. 324-337) முதலிய குறிப்பிடத்தக்க பேரரசர்களின் காலங் களில் பல சிறந்த சீர்திருத்தங்கள் ஏற்பட்டன.

கான்சுடண்டைன், பைசாண்டியம் என்ற இடத்தில் புதிய தலைநகர் ஒன்றை நிறுவினார். கான்சுடாண்டி நோபிள் எனப்பெறும் இந்நகர் கிழக்கு, மேற்கு நாடு களின் தொடர்புக்கும் வாணிக முன்னேற்றத்துக்கும் மிகவும் உதவியாயிருந்தது. கான்சுடண்டைன் கிறித்த வச் சமயத்தை அரசியலாரின் சமயமாகச் செய்து புகழ்பெற்றதுடன், பல அரிய அரசியல் சீர்திருத்தங் களையும் செய்தார். பேரரசு 116 மண்டலங்களாகவும் ஒவ்வொரு மண்டலமும் பல மாவட்டங்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தன.

பரந்த உரோமானியப் பேரரசு முழுவதையும் ஆட்சி புரிந்த இறுதிப்பேரரசர் தியோடோசியசு(கி. பி. 379-395) ஆவார். அவருக்குப்பின் அவர் புதல்வர்கள் ஆர்கேடியசும் அனோரியசும் முறையே கிழக்கு உரோ மப் பேரரசையும் (கான்சுடாண்டிநோபிளைத் தலை நகராகக் கொண்டது) மேற்கு உரோமப் பேரரசை யும் ஆட்சி புரிந்தனர். அன்று முதல் அவை இரண் டும் தனித்தனி வரலாறுகளைப் பெறலாயின.

**வீழ்ச்சி:** உரோமாபுரி ஒரே நாளில் உருவாக்கப் பட்டதன்று. அதனைப் போல் அதன் சீர்குலைவும் ஒரேநாளில் ஏற்படவில்லை. பேரரசுக்கு வெளிநாட்டி னரால் இடையூறுகள் ஏற்படுவதற்கு முன்னரே, உள் நாட்டு இனக்கட்டுக்கோப்பு பல சிக்கல்களால் அரிக் கப்பட்டு வந்தது. பல குறைபாடுகளைக் கொண்ட உரோமானிய அரசு அந்நியப் படையெழுச்சி ஏற்பட்ட வுடன் வீழ்ச்சியுற்றது.

மிகப் பழங்காலத்திலேயே வட ஐரோப்பாவில் பரவியிருந்த செருமானியக் கூட்டத்தினர், பிற்காலத் தில் கிறித்தவச் சமயத்தைப் பின்பற்றிப் ,பல நாகரி கப் பண்புகளைப் பெற்றனர். காதியர், பிராங்கியர், ஆங்கிலர், சாக்சனர், சூட்சு, பர்கண்டியர், வாண்ட லர், தேனர் முதலிய பல தனிப் பிரிவினர் அவர்களி டையே காணப்பட்டனர். அவர்களுக்குப் பின்னர், கி. பி. நான்காம் நூற்றாண்டில் கிழக்கிலிருந்து மேற்கே படையெடுத்துச் சென்ற ஊணரும் செரு மானியரும் கி. பி. 5-ஆம் நூற்றாண்டில் உரோமானி யப் பேரரசின் ஆற்றலின்மையைப் பயன்படுத்திக் கொண்டு அதைத் தாக்கலாயினர்.

விசிகாதியர் (மேற்குக் காதியர்) தலைவன் அல ரிக்கு, கிரீசிலும் இத்தாலியிலும் படையெடுத்தான். உரோமாபுரி கி. பி. 410-ஆம் ஆண்டில் சூறையாடப் பட்டது. 800 ஆண்டுகளாகப் பகைவரிடம் சிக்காமலி ருந்த உரோமாபுரி, பகைவரிடம் சிக்கிச் சீரழிந்தது. அட்டில்லா (Attila) என்பான் தலைமையில் கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் ஊணர். பல நகரங்களைத் தீக் கிரையாக்கினர். போர்களில் கணக்கற்ற வீரர்கள் இறந்தொழிந்தனர். பல ஆண்டுகள் கொடிய அல்லல் களுக்கிடையே அவதியுற்ற உரோமானியப் பேரரசு, முடிவில் செருமானியப் படையெடுப்பாளரால் பகிர்ந்து கொள்ளப்பட்டது.

ஓடாசர் என்ற செருமானிய வீரர் கி.பி. 476-இல் இறுதி உரோமானியப் பேரரசரானஉரோமுலசு அகசு டசை நாடு கடத்திவிட்டுத் தாம் ஆட்சிப்பீடத்தில் அமர்ந்தார். பண்டைய உரோமாபுரி வீழ்ந்தது. ஆனால், கான்சுடாண்டி நோபிளைத் தலைநகராகக் கொண்ட கிழக்கு உரோமானியப் பேரரசு படை யெழுச்சிகளால் நிலைகுலையாமல், கி. பி. 1453 வரை நிலைத்திருந்தது. மேற்குப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின் தனித்தனி அரசுகள் தோன்றின. இங்கி லாந்தில் ஆங்கிலேயர், சாக்சனர், சூட்சுகளும்; மேற்குக் கால், ஆலந்து, இரைன் ஆற்றுப் பகுதிகளில் பிராங்கி யரும்; உரோன் பள்ளத் தாக்கில் பர்கண்டியரும்; தெற்குக் கால், இசுபெயின் நாடுகளில் விசிகாதியரும் (கி. பி. 410 முதல்); இத்தாலியில் கிழக்குக் காதியரும் (கி. பி. 493 முதல்) இலம்பார்டியரும்(கி. பி. 568-774); ஆப்பிரிக்காவில் வாண்டலரும் (கி. பி. 439 முதல்) அரசாண்டனர்.

நாகரிக வளர்ச்சிக்கு உரோமானியரின் தொண்டு கள் பலப்பலவாகும். வாணிகம், சாலைகள் அமைத் தல், சட்டங்கள் தொகுத்தல், முறை வழங்கல், பேர ரசு அமைத்தல், இராணுவ அமைப்பு முதலிய பல பண்புகளைப் பொறுத்தவரை பிற்கால உலகம்

உரோமாபுரிக்கு மிகவும் கடப்பாடுடையது. கிரேக்கக் கலைகளைப் போற்றியதுடன், கிழக்கு நாடுகளையும் மேற்கு உலகையும் இணைக்க உரோமானியர் முற்பட்டனர். பிற்காலத்தில் உருவான இசுபானிய, இத்தாலிய, போர்ச்சுகீசிய, பிரெஞ்சு, உருமேனிய மொழிகள் இலத்தீன் மொழியினின்று தோன்றின. ஆங்கில மொழியிலும் பல இலத்தீனியச் சொற்கள் வழக்கிலிருப்பதைக் காணலாம். பண்டைக் காலத்திய இலக்கியம், தத்துவம், பிற கலைகள் யாவும் உரோமானியப் பேரரசின் வழியாகவே புதிய காலத்தில் வளர்ந்து சிறப்புற்றன. பேரரசின் வளர்ச்சியால் மக்களிடையே காணப்பட்ட குறுகிய மனப்பான்மை மறைந்தது.

தெ. பா.


**உரோமானியக் கட்டடக்கலை:** உரோமாபுரியை கி.மு. ஆறாம் நூற்றாண்டில் ஆண்ட எட்ருசுகன் (**Etruscan**) அரசர்கள் கட்டடக் கலைக்குப் பெரிதும் ஆதரவு அளித்து உரோமில் பல கட்டடங்களைக் கட்டினர். இவர்களே உரோமிலுள்ள சூப்பிட்டர் கடவுளின் கோயிலான கேப்பிட்டல் (**Capitol**) கோயிலை கி.மு. 509– இல் கட்டினர். இக்காலத்தில் கிரேக்கக் கட்டடக் கலையை ஒத்த கட்டடக்கலை உரோமாபுரியிலும் வளரத் தொடங்கியது. இக்காலத்தைச் சார்ந்த கோயில்கள் பொதுவாக உயர் மேடைகள் அமைத்துக் கட்டப்பட்டன. கோயிலின் உள்ளே செல்ல உயர் மேடையின் முன்பக்கத்தில் ஒரே நுழைவாயில் கட்டப்பட்டது. கோயிலின் உட்பகுதி ஒரு பெரிய அறையாகவும் அவ்வறையே மூன்று சிறு அறைகளாகப் பிரிக்கப்பட்டும் விளங்கியது. பரந்த மஞ்சடைப்பு முகடுடைய (**Spreading Gabled**) கூரைகளைக் கொண்டு இக்கோயில்கள் விளங்கின. கூரைகளின் மேல் சுடுமண் ஓடுகள் பரப்பப்பட்டன. கோயில்களின் முன் பக்கப் பகுதிகளில் தூண்கள் காணப்பட்டன. பின்பகுதியில் தூண்கள் காணப்படவில்லை. கோயில்களில் வரிமுக்கோண முகப்பு முகடுகள் (**Pediments**) காணப்பட்டன. இம்முகப்பு முகடுகளில் சுடுமண்ணால் செய்யப்பட்ட சிற்பங்கள் அமைக்கப்பட்டன.

காலப் போக்கில் இவ்வடிப்படைக் கூறுகள் பல மாற்றங்களைப் பெற்றதனால் உரோமானியக் கட்டடக் கலை வளர்ச்சியடையத் தொடங்கியது. பல மாற்றங்களின் விளைவாகக் கட்டடங்களில் பல அழகு மிக்க அமைப்புகளும் கூறுகளும் இடம் பெறலாயின. மிகப்பெரும் பரப்பில் பல பகுதிகளைக் கொண்டு கோயில்கள் கட்டப்பட்டன.

உரோமானியக் கட்டடங்கள் கட்ட முதன்முதலில் இலேசான நுண்துளைகள் உள்ள பாறை வகைக் கற்களே (**Tufa**) பயன்படுத்தப்பட்டன. இப்பாறை வகைக் கற்கள் வெட்டவும் இவற்றில் செதுக்கு வேலைகள் செய்யவும் எளிதாக இருந்தமையால் இவை கட்டடங்கள் கட்டப் பயன்படுத்தப்பட்டன. உரோமானியக் குடியரசு ஆட்சிக் காலத்தில் இக்கற்களைப் பயன்படுத்தி வட்டரங்குகளில் உயர் மேடைகள் கட்டப்பட்டன. தூண்களின் மேல் தலைப்பகுதிகளிலும் இக்கற்களே பயன்படுத்தப்பட்டன. இக்கற்களின் பயன்பாடு கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் மறைந்து போயிற்று. இவற்றிற்குப் பதிலாகச் சுண்ணம் படிந்த பொற்படிகக்கல் (**Travertine**)கட்டடங்களுக்குப் பயன்படுத்தப்பட்டது.கட்டடங்களின்முகப்புப் பகுதிகளிலும் தரைப்பகுதிகளிலும் இக்கல் பயன்படுத்தப்பட்டது. அகசுடசு சீசரின்காலத்தில் இக்கல்லினால் கட்டடங்கள் கட்டுவதுஅருகிப் போயிற்று. அகசுடசு சீசர் காலத்தில் சலவைக் கற்களினால் கோயில்களும் அரண்களும் கட்டப்பட்டன. இத்துடன் மெல்லோட்டுப் பலகைகளும் கட்டடங்களில் பயன்படுத்தப்பட்டன. கட்டடங்களின் சுவர்களிலும் தரைகளிலும் பலவகை நிறமுள்ள சலவைக் கற்கள் பதிக்கப்பட்டு அழகு செய்யப்பட்டன. களிமண்ணால் செய்து சுடப்பட்ட ஓடுகள் கூரைகளில் இடம் பெற்றன. உரோமானியக் குடியரசின் கடைக் காலத்திலிருந்து பைசாண்டியப் பேரரசுக் காலம் வரை செங்கற்களினால் கட்டடங்கள் கட்டப்பட்டன. தரைகளிலும் செங்கற்களே பயன்படுத்தப்பட்டன.

உரோமானியக் கட்டடங்களில் முதன்முதலில் சுண்ணாம்பு மேற்பூச்சுக்குப் பயன்படுத்தப்பட்டது. பின்னர்ப் பலவகைச் சாந்துகளை உரோமானியக் கட்டடக் கலை வல்லுநர்கள் மேற்பூச்சுக் கலவைகளாகப் பயன்படுத்தினர். இப்பூச்சுகள் சுவரின் இரு பக்கங்களிலும் பூசப்பட்டன. இதனால் சுவர் வழவழப்புத் தன்மையும் பளபளப்பும் மிக்கதாய் விளங்கிற்று. உரோமானியர்கள் கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலேயே தங்கள் கட்டடங்களில் கிரேக்கக் கட்டடக் கலை நுணுக்கங்களைப் புகுத்தினர். இதனால் மணலும் சிமிண்டும் கலந்த கலவையும் செங்கற்களும் கருங்கற்களும் கட்டடங்கள் கட்டும் மூலப் பொருள்களாக விளங்கின. கற்காரை (**Concrete**) மிகப்பெரிய கட்டடங்கள் கட்டுவதை எளிதாக்கியது.

உரோமானிய வட்டரங்குகள் கற்காரை கொண்டே கட்டப்பட்டன. இதன்மூலம் வளைவுகளும் கவினகமாட அமைப்புகளும் எளிதில் கட்ட முடிந்தது. உரோமிலுள்ள பிளவியன் கேளிக்கை வட்டரங்கம் (**Flavian Amphitheatre**) கற்காரைக் கட்டடமாகும். இக்கட்டடம் சுண்ணாம்புக் கல்லினால் அணிவகை செய்யப்பட்டது. உருளை வடிவக் கவிகை மாட



உரோமானிய வட்டரங்கு – ஆரஞ்சு

நுழைவாயில்கள் இவ்வரங்கில் அமைக்கப்பட்டன. இந்நுழைவாயில்கள் நேராகக்களரிப் (Arena) பகுதியைச் சென்றடைந்தன. வளை வடிவ அமைப்புகளை இவ்வரங்கம் பெற்றுத் திகழ்ந்தது. பெலிசுடிரினாவிலுள்ள (Palestrina) போர்த்துனா (Fortuna) ஆலயம் இவ்வகை அமைப்பை உடையதாகும். இவ்வாலயம் கி.மு. 2– ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது ஆகும்.

உரோமில் அகழாய்வு செய்ததின் மூலம் எட்ருசுகன் காலக் கட்டடங்களின் அமைப்பை அறிய முடிந்தது. பல எட்ருசுகன் அரசர்களின் கல்லறைகளும் அகழாய்வுகளில் கண்டுபிடிக்கப்பட்டன. வீடுகள் பல்வேறு அமைப்புகளில் பெரிதும் சிறிதுமாகக் கட்டப்பட்டிருந்தன. உரோமானியப் பேரரசர் தோமிடியன் (Domitian) என்பவர் பிளவியன் அரண்மனையைக் கட்டினார். இது பல தளங்களைக் கொண்ட அரண்மனையாகும். இதன் உள்ளே பல தோட்டங்களும் காணப்பட்டன. இவ்வரண்மனை பாலத்தின் குன்றின் மேல் (Palatine Hill) கட்டப்பட்டது. இவ்வரண்மனை முழுவதும் செங்கற்களாற் கட்டப்பட்டது. தரையில் கருங்கற் பலகைகள் பதிக்கப்பட்டன. இவ்வரண்மனையில் பொது நிகழ்ச்சிகளும் அரச நிகழ்ச்சிகளும் நடக்கும் அறைகளும் பார்வையாளர் மன்றமும் தனித்தனியே இருந்தன.

இவ்வரண்மனையை அடுத்து நீரோ மன்னர் உரோம் நகரம் தீப்பற்றி எரிந்த பின் கி.பி.64–இல் உரோம் நகரின் மையப்பகுதியில் ஒரு மாளிகையைக் கட்டினார். இது பொன்வீடு (Golden House)எனக் கூறப்படுகிறது. இம்மாளிகை பல்வேறு பகுதிகளைக் கொண்டு விளங்குகிறது. இப்பகுதிகளை நீண்ட புகுமுக மண்டபங்கள் ஒன்றுடன் ஒன்று இணைக்கின்றன. உரோமில் வேளாண் மக்கள் தாங்கள் வசிப்பதற்குத் தோட்டத்திற்கு உள்ளேயே வீடுகள் (Villa) கட்டி வாழ்ந்தனர். இவை பல அறைகளையும் சேமிப்பு அறையையும் பெற்று விளங்கின. உரோமாபுரியில் அரைவட்ட வடிவ நீள்சதுர மண்டபங்கள் டல கட்டப்

பட்டன. இவை பெரும் தூண்களுடையவை. இவ்வகை மண்டபங்கள் பொது நிகழ்ச்சிகள் நடைபெறும் இடமாகவும் அங்காடிகளாகவும் விளங்கின. உரோம் நகரில் திரோசன் அங்காடி (Trojan's Market) இவ்வகை மண்டபமாகும். இம்மண்டபங்கள் பெரும்பாலும் மஞ்சடைப்பு முகடுடைய மரக் கூரைகளைப் பெற்று விளங்கின. திரோசன் கட்டிய உல்பியா அரை வட்ட மண்டபம் இக்கூரையின் அமைப்பை உடையது. இம்மண்டபங்களின் இறுதிப் பகுதியில் தான் குறுகலான நுழைவாயில் காணப்பட்டது. இம்மண்டபங்களின் பக்கச் சுவர்களில் சாளரங்கள் காணப்பட்டன. உரோமானியக் கட்டடங்களுள் குறிப்பிடத்தக்கவை கல்லறைகளும் வெற்றிச் சின்னங்களும் ஆகும். இக் கல்லறைகளில் பெயர்களும் பிற செய்திகளும் கல்வெட்டுகளாக வெட்டப்பட்டுள்ளன. கல்லறைகளுள் அகசுடசுசீசர், ஆட்ரியன் ஆகியோர் கல்லறைகள் குறிப்பிடத் தக்கவை. துருக்கியிலுள்ள அலிகார்சைசு என்னும் இடத்திலுள்ள பல அடுக்குக் கல்லறையை ஒத்த கல்லறைகள் உரோமானியப் பேரரசுக் காலத்தில் உரோமில் கட்டப்பட்டன.

**உரோமானியப்பாணிக் கட்டடக் கலை:** மேற்கு ஐரோப்பாவில் கி.பி. 1050 முதல் 1200 வரை நிலவிய கட்டடக் கலை உரோமானியர் கட்டடக் கலையின் பொதுத் தன்மைகளைக் கொண்டும் இடத்திற்கு இடம் சில மாறுபட்ட தன்மைகளைப் பெற்றும் கவின்மிகு சிறப்புடன் வளர்ந்ததால் இப்பெயர் பெற்றது. இக்கட்டடங்கள் பண்டைய உரோமானியக்கட்டடக் கலையின் பொதுவான தன்மைகளைப் பெரிதும் பெற்றிருந்தமையால், அறிஞர்கள் இக்கட்டடக் கலையை உரோமானியப் பாணியைச் சார்ந்த கட்டடக் கலை (Romanesque Architecture) எனக் குறிப்பிட்டனர். இக் கட்டடக் கலையுடன் இதே காலத்தில் சிற்ப, ஓவிய, ஒப்பனைக் கலைகளும் வளர்ச்சியடைந்தன.

ஐரோப்பாவில் கி.பி. 11-ஆம், 12-ஆம் நூற்றாண்டுகளில் பல அரசியல் சமூக மாற்றங்கள் ஏற்பட்டன. மேற்கு ஐரோப்பாவைப் பல்லாண்டுகளாகத் தொடர்ந்து தாக்கி அழித்துவந்த நாடோடிக் கூட்டத்தினர், இக்கால கட்டத்தில் ஒரு நிலையான வாழ்க்கையைத் தான்யூபு, அங்கேரிப் பகுதிகளில் அமைத்துக் கொண்டனர். முசுலீம்களின் அச்சுறுத்தல்களும் இக் காலத்தில் குறைந்தன. நில மானிய முறை இக்காலத்தில் வளர்ச்சி அடைந்தது. இச்சூழ்நிலை கலைகளை வளர்க்க உதவியாக அமைந்தது. நில மானிய முறை



பைசா நகரத்துத் தேவாலயமும் சாய்ந்த கோபுரமும்

யால் சில நகரங்கள் வளர்ச்சி பெற வாய்ப்பேற்பட்டது. மக்கள் நில மானியப் பிரபுக்களிடம் இருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளத் திருச்சபைகளையும் அரண்மனைகளையும் பலமிக்கதாகக் கட்டினர். இக்காலத்தில் திருச்சபைகளே பெரிதும் கட்டப்பட்டன.

இப்பாணிக் கட்டடங்களுள் முதலில் கட்டப்பட்ட சில திருச்சபைகள் கரடு முருடான அமைப்பிலும் மிகப் பெரியனவாகவும் கட்டப்பட்டன. இவற்றைக் கட்டிய கலைஞர்கள் கட்டடக் கலைத் திறனைச் சிறிதளவே பெற்றிருந்தமையால் இக்கட்டடங்கள் இவ்வாறு காட்சியளித்தன. ஆனால், கி.பி. 1100-ஆம் ஆண்டிற்குப் பின்னர் எழுந்த கட்டடங்கள் அழகு மிக்கனவாக விளங்கின. இக்காலத்தில் இங்கிலாந்து, இத்தாலி, தென்பிரான்சு ஆகிய நாடுகளில் சிறந்த கட்டடக்கலை அறிஞர்களினால் திருச்சபைகளும் அரண்மனைகளும் மிக நேர்த்தியான முறையில் கட்டப்பட்டன. திருச்சபைகளின் அருகிலேயே பல மடாலயங்கள் கட்டப்பட்டன.

திருச்சபைகள் பொதுவாக உயரமற்றவையாகவும், உள்பகுதி வெளிச்ச மற்றதாகவும் கட்டப்பட்டன. திருச்சபைகளின் கூரைகள் வளைந்த வண்டிக்கூடு அமைப்பைப் பெற்று விளங்கின. திருச்சபைகள் பொதுவான ஓர் உயர்ந்த நடுப்பகுதியையும் அதன் இருபக்கங்களிலும் தாழ்வான பக்கச் சிறைகளையும் கொண்டு விளங்கின. இப்பகுதிகளுக்கு இடைப்பட்ட பகுதி பெரிய தூண்களாலும் பெரிய தடித்த சுவர்களாலும் பிரிக்கப்பட்டிருந்தன. திருச்சபையின் சாளரங்களின் மேற்பகுதி, நுழை வாயில்களின் மேற்பகுதி, ஒரு தூணுக்கும் பிறிதொரு தூணுக்கும் இடையிலுள்ள மேற்பகுதி ஆகியன வட்டமான வளைவுகளைப் பெற்று விளங்கின. தூண்களிலும் வட்ட வளைவுகளிலும் சிற்பங்கள் பல குடையப்பட்டன. சுவர்கள் ஓவியங்கள் தீட்டப்பட்டு அழகு மிகுந்து காணப்பட்டன. இவ்வோவியங்கள் பொதுவாகச் சமயச் சார்பு உடையனவாகவே விளங்கின. இக்கட்டடக் கலையின் இறுதிக் காலத்தில் உன்னதமான கட்டடங்கள் பல எழுப்பப்பட்டன. இவை உயரமாகவும் வெளிச்சம் உட்புகும் முறையிலும் கட்டப்பட்டு, கோதிக்குக் (Gothic) கட்டடக் கலையின் முன்னோடியாக விளங்கின. இக் கட்டடக் கலையைச் சார்ந்த திருச்சபைகள் இலம்பார்டி (Lombardy), கடலோனியா (Catalonia) ஆகிய பகுதிளில் காணப்படுகின்றன. பைசா நகரத்தில் உள்ள தேவாலயமும் இக் கட்டடக் கலையைச் சார்ந்த கட்டடங்களுள் ஒன்றாகும். காண்க: கட்டடக் கலை.

சு.இரா.

உரோமானியப் பொருளியல் கருத்துகள் கிரேக்க அறிஞர்களின் தத்துவங்களையே பேரளவில் தழுவி இருந்தன. உரோமானியத் தத்துவம், சட்டம், அரசியல் ஆகியவற்றிலிருந்து உரோமானியப் பொருளியல் கருத்துகள் தொகுக்கப்பட்டுள்ளன. செயலில் சிறப்புற்றிருந்த உரோமானியர் பேரும் புகழும்பெற்ற வல்லரசுகளை உருவாக்குவதில் திறமை வாய்ந்தவர்களாயிருந்தனர். எனினும் அவர்களின் சட்ட இயலும் சில பொருளியற் கோட்பாடுகளும் பொருளியல் கருத்துத் தொகுப்பில் நீங்கா இடம் பெற்றுள்ளன.

தொடக்க காலத்தில் உரோமானியப் பொருளாதாரம் நகரியத்தைத் தலைமையாகக் கொண்டு, வேளாண்மையை அடிப்படையாகக் கொண்டிருந்தது. பேரரசுகளை நிலைநாட்டுவதில் மிகவும் அக்கறை செலுத்திய உரோமானிய அரசுகளின் தனித்தன்மையினால் போரும் வீரர்களின் நல்வாழ்வும் பொருளாதாரக் குறிக்கோள்களாயிருந்தன. வேளாண்மையின் வளர்ச்சி பல சிக்கல்களின் காரணமாகப் படிப்படியாக முன்னேறியது. அடிக்கடி நிகழ்ந்த போர்ச் சூழ்நிலையினால் பேரளவில் பாதிக்கப்பட்ட பொருளாதாரத்தில் ஏற்பட்ட மாற்றங்கள், மக்களிடையே ஏற்றத் தாழ்வுகளை உண்டாக்கின. அவற்றால் சிற்றளவில் பயிரிட்டு வாழ்ந்த வேளாண்மையினர் பெரும் துன்பத்துக்குள்ளாயினர். செல்வமிக்க நிலக்கிழார்களும் வட்டித் தொழிலரும் வணிகர்களும் பெரும் செல்வம் ஈட்டினர். உரோமானியப் பேரரசு வீழ்ச்சியுறத் தொடங்கிய காலம் வரையிலும்(கி.பி. 4-ஆம் நூற்றாண்டு) இந்நிலை நீடித்தது. அதற்குப் பின்னர், நாட்டுப் பொருளாதாரமும் சட்ட ஒழுங்கு நடவடிக்கைகளும் வளர்ச்சி பெற்றன.

வேளாண்மை: உரோமானியப் பொருளாதார நடவடிக்கைகள் செயல்முறையில் நாட்டு நிருவாக அமைப்பு (Civil Service), சட்ட மன்றங்கள் ஆகியவற்றை முற்றிலும் சார்ந்து இருந்தன. எனவே தத்துவ அறிஞர்கள், அன்றாடச் செய்திகளை ஆராய்ந்த வல்லுநர்கள், வேளாண்மைத் துறை வல்லுநர்கள், சட்ட வல்லுநர்கள் ஆகியோர் பொருளியற் கருத்துகளையும் படைத்தனர். பிற தொன்மைப் பொருளியல் கருத்துகளைப் போன்று இவர்களின் கருத்துகளிலும் வேளாண்மை முதலிடம் பெற்றது. இவர்கள் வேளாண்மையை ஆதாயம் ஈட்டும் துறையாகவும், மகிழ்ச்சியையும் மதிப்பையும் உடைய வேலைவாய்ப்புகளை அளிக்கும் துறையாகவும் கருதினர். ஆடம்பரச் செலவினங்களையும் ஆடம்பர வாழ்க்கையையும் கண்டித்தனர். அவற்றைக் கட்டுப்படுத்தி எளிய வாழ்க்கை வாழ

வலியுறுத்தினர். சிசரோ (Cicero) என்னும் தத்துவ அறிஞர் வட்டித் தொழிலர், உடல் உழைப்பாளர், சில்லறை வணிகர், மீன் வணிகர், இறைச்சி வணிகர், தொழில்நுட்ப உதவியாளர், சமையல் தொழிலர் ஆகியோரைச் சமூக விரோதிகள் எனக் குறிப்பிடு கிறார். மொத்த வாணிகத்தை ஆதரித்த இவர் வேளாண்மையை மட்டுமே பாதுகாப்பான, ஆதாயம் அளிக்கக்கூடிய, கண்ணியமான உழைப்பாளன் பணி யாற்றக்கூடிய தொழில் எனக் கூறுகிறார்.

வாணிகம்: உரோமானியத் தத்துவ அறிஞர்கள் வட்டித் தொழிலைக் கடுமையாக வெறுத்தனர். அதனைக் கொலைக் குற்றத்திற்கு ஈடாகக் கருதினர். செனகா (Seneca) என்ற அறிஞர் பணம் பெரும் பான்மையான தீய காரியங்களை விளைவிக்கும் வேர் எனக் குறிப்பிட்டார். பன்னாட்டு வாணிகத்தையும் அதனால் நாடுகள் பெறும் நன்மைகளையும் விளக்குங் கால், ஒவ்வொரு நாடும் தன் நாட்டு நலனுடன் பிற நாட்டுத் தேவைகளையும் கருத்தில் கொண்டு, அவற்றை நிறைவேற்றும் நோக்கத்துடன் வாணிகம் செய்ய வேண்டும் எனக் கூறுகிறார். அறிஞர் பிளைனி (Pliny) தங்கத்தைப் பொருள் வளமாகப் பயன்படுத்து வதைக் கண்டித்துள்ளார்; தங்கக் கண்டுபிடிப்பு மனித குலத்தின் வீழ்ச்சிக்கே காரணமாகும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

அடிமைகள்: வேளாண்மைத் தொழில் வல்லு நர்கள் பண்ணை நிலங்களின் நிருவாகம், மேலாண்மை ஆகியவை பற்றிய கோட்பாடுகளை நடைமுறைக் குகந்தவகையில் வகுத்தனர். பயிரிடும் பண்ணைகளின் அளவு, அடிமைகளைப் பண்ணைகளில் உழைக்கும் படி பணித்தல் ஆகியவை பற்றிய கருத்துகளைப் பல கோணங்களில் பொதுமக்களின் கலந்துரை யாடலுக்கு அளித்தனர். மிகப் பெரிய பண்ணை களை ஆதரித்தனர். ஆனால், அது கோட்பாட்டு அளவில் மட்டுமே இருந்தது. பேரளவுப் பண்ணை முறை போற்றப்பட்டாலும் சிறிய பண்ணை முறையே பின்பற்றப்பட்டது. காலப்போக்கில் பெரிய பண்ணைகள் சிறிய பண்ணைகளைப் பேரளவிற்கு அழித்துவிட்டன. பெரிய பண்ணைகளின் நிருவாக மேலாண்மையில் குறைகள் பல காணப்பட்டதால் இழப்புகள் மிகுந்தன. அதற்கு அடிமைத் தொழி லாளர்களே காரணம் எனச் சில அறிஞர்கள் கருதினர். அடிமைத் தொழிலாளர் இயற்கையாகவே திறமையற்றவர்கள் என்ற கருத்தும் நிலவியது.

அறிஞர் பிளைனியின் கருத்துப்படி இத்தாலியின் பெரு வீழ்ச்சிக்கு அடிமைகளே காரணமாவர். உரோ மானியப் பண்ணைகளில் நம்பிக்கையிழந்த திறமை யற்ற அடிமைகள் ஊக்கமின்றி உழைப்பதால், அம் முறையில் மாற்றம் ஏற்படாமல் எத்திட்டமும் வெற்றி பெறாது எனப் பிளைனி கருதினார். பிளேட்டோ (Plato), அரிசுடாட்டில் (Aristotle) போன்ற கிரேக்க நாட்டு அறிஞர்கள் அடிமைத் தனத்தை இன்றியமையாத் தேவை என வலி யுறுத்திய அதே காலத்தில், உரோமானிய அறிஞர்கள் அடிமைத்தனத்தை முழுவதுமாக ஏற்றுக் கொள்ள வில்லை. குறிப்பாக, வேளாண்மையில் அடிமைகளி னால் இழப்புகளே ஏற்படும் என அவர்கள் உறுதி யாகக் கருதினர். எனினும், அடிமைகள் உரோ மானியப் பொருளாதாரத்திலும் சமுதாயத்திலும் பேரளவில் காணப்பட்டனர். அவர்கள் தங்களை அடிமைப்படுத்தும் முதலாளிகளால் பெருந்துன்பம் அனுபவித்தனர்; மிருகங்களைப் போல் வாழ்ந்தனர்; உழைக்க இயலா முதிர்வயதில் முதலாளிகளால் விற்கப்பட்டனர்.

சட்டம்: மரபுவழிப் பெறப்படும் உரோமானியச் சட்டமுறைகள் உலகத்திற்கு உரோம் அளித்துள்ள செல்வம் எனக் கருதப்படுகிறது. பொருளியல் வர லாற்று ஆய்வில் இவை இன்றியமையாப் பங்கு வகிக் கின்றன. உலக நாடுகள் பல உரோமானியச் சட்டங் களை அடிப்படையாகக் கொண்டு தங்கள் சட்டங் களை உருவாக்கின. உரோமானிய நீதிபதிகள் பொது மக்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தனித் துறை சாரா மனிதர்களாவர். அவர்களுக்குச் சட்ட வல்லுநர்கள் அறிவுரையாளர்களாக அமர்த்தப் பட்டனர். சட்ட வல்லுநர்கள் நாட்டின் பேரறிஞர் களாகவும் பெருமதிப்பிற்குரிய மாண்புமிகு உரோ மானிய மக்களாகவும் மதிக்கப்பட்டனர். இவர்கள் வகுத்த உரோமானியச் சட்டம் இருவகைப்படும்: (1) உரிமைச் சட்டம் (Civil Law), (2) இயற்கைச் சட்டம் (Natural Law). உரிமைச் சட்டம் குடிமக் களின் நலனைப் பாதுகாக்கும் நோக்கமுடையது. இயற்கைச் சட்டம் பொருளாதார வாணிக நடவடிக் கைகள், அயல் நாட்டு மக்களின் உறவுகள் ஆகிய வற்றின் நலனைச் சார்ந்தது. இயற்கைச் சட்டம் தொடக்க காலத்தில் கிரேக்க நாட்டுச் சட்டத்தைப் பின்பற்றியதாக இருந்தது. பின்னர், கி.பி.7-ஆம் நூற் றாண்டு அளவில் நாடுகளின் சட்டமாக (Law of Nations) மறு உருப்பெற்றது.

பொருளியற் கருத்துத் தொகுப்பு வரலாற்றில் உரோமானியச் சட்டம் விளக்கும் தனியார் சொத் துரிமை ஒப்பந்தங் குறித்த உரிமைச் சட்டக் கோட் பாடுகள் தனிச் சிறப்பிடம் பெறுகின்றன. உரோ மானியச் சட்டப்படி தனியொருவர் தம் சொத்தில் முழு உரிமை பெறுகிறார். அதனை விற்கவும் வாங்

கவும் ஒப்பந்தப் பேரங்கள் பற்றிய முடிவுகளை எடுக்கவும் அவருக்கு முழு உரிமை உண்டு. பிற்காலத்திய பொருளியல் அறிஞர் மார்சல் (Marshall) முதலாளித்துவப் பொருளாதாரத் தீங்குகளுக்கு, உரோமானியத் தனியார் துறை உரிமைச் சட்டக் கோட்பாடுகள் மறைமுகமான காரணிகளுள் ஒன்று எனக் கூறுகிறார். உரோமானியச் சட்ட வல்லுநர்கள் தனியார் சொத்துரிமைக்கு முதலிடம் அளித்துக் கட்டுப்பாடற்ற ஒப்பந்தப் பேரங்களை அளித்தமையால், சட்டத்துக்கும் அப்பாற்பட்ட உரிமைகளைத் தனியார் பயன்படுத்திச் சுரண்டலுக்கும் செல்வக் குவிப்பிற்கும் வழி வகுத்தனர்.

பொருளாதார ஒழுங்கு நடவடிக்கைகளில் தனியார் நலன்களைவிடப் பொதுநலன்களுக்குச் சிறப்பிடம் அளிக்கும் கோட்பாடு உரோமானியச் சட்டக் கூறுகளினின்று தோன்றியதே என்பது கூறப்படுகிறது. பொருளாதாரத்தில் கூட்டுரு அமைப்பு (Corporation) முக்கியமானது. உரோமானியக் கூட்டுருச் சட்டப்படி, கூட்டுருவின் சொத்துகள் கூட்டுருவின் உரிமையாளர்களின் சொத்துகளினின்று வேறுபட்டவை. கூட்டுருவின் உரிமையாளர்கள் மாறினாலும் சொத்துகள் மாற்றப்படலாகா. வாணிகத்தில் பயன்படுத்தப்படும் நியாய நடவடிக்கைகள், நியாயவிலை, நியாய மதிப்பு ஆகிய கோட்பாடுகளுக்கு அடிப்படை உரோமானியச் சட்டமே எனக் கருதப்படுகிறது.

உரோமானியச் சட்டம் விலை, பணம், விற்றல், வாங்கல், கடன், வைப்பு (Deposits) ஆகிய கருத்துகளுக்கு (Concepts) நுட்பம் மிகுந்த விளக்கங்களை அளிக்கிறது. இவை பொருளாதார ஆய்வுக்கான அடிப்படைத் தேவைகளாகும். பொருளியல் அறிஞர் எரிக்ரோல் (Eric Roll) கூறியுள்ளபடி, அரிசுடாட்டில் இடைக்காலத் தத்துவ அறிஞராகச் சட்டக் கோட்பாடுகளை வகுத்தார். எனினும், உரோமானியச் சட்டமே சட்டத் தத்துவங்களுக்கும் முதலாளித்துவப் பொருளாதார வளர்ச்சிக்கும் அடிப்படையாக விளங்குகிறது.

உரோமானியச் சட்டக் கருத்துகள் அறிவியல் அறிவாக வளர்ச்சி பெற்றன. வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த உரோமானிய இராணுவமும் அரசியலும் சட்ட முறையும் அடிப்படையில் நாட்டு மக்களின் பொதுநல நோக்கம் கொண்டனவாகவே இருந்தன. உரோமானியப் பொருளியல் கருத்துத் தொகுப்பில் ஆழ்ந்த பொருளியல் ஆய்வுக் கோட்பாடுகள் காணப்படவில்லை; எனினும் அது பிற்காலக் கோட்பாடுகள் பலவற்றிற்கான அடிப்படை விளக்கங்களைக் கொண்டிருந்தது. அ.கு.சா.

**உரோமானியத் தத்துவம்:** உரோமானியத் தத்துவம் சிசரோ, உலுக்கிரிட்டியசு, மார்க்கசு அரியலிசு, செனக்கா முதலியவர்களின் கருத்துகளால் உருவாயிற்று.

சிசரோ (கி.மு. 106–43) ஓர் உரோமானிய அரசியல்வாதி; தத்துவ ஞானி. இவர் கி.மு.106–இல் உரோமில் அர்ப்பிமை என்னும் இடத்தில் செல்வக் குடும்பத்தில் பிறந்தார். சிசரோ (Cicero, Marcus Tullius) கிரேக்கத் தத்துவக் கோட்பாடுகளுடன் தொடர்பு கொண்டிருந்தார். தத்துவத்தையும் சொல்லணிக் கலையையும் (Rhetoric) இணைத்து ஆராய்ந்த பெருமை இவருக்கு உண்டு. ஒருவன் தான் பெற்ற அறிவினை மனித இனத்தின் நன்மைகளுக்காகப் பயன்படுத்துவதே அவன் செய்யும் உயர்ந்த சாதனையாகும். சிறந்த மனிதர்கள் தம் நாட்டினை நல்வழியில் நடத்திச் செல்லாவிடில் நாட்டில் சுதந்திரத்திற்கு இடையூறு ஏற்படும் என்று இவர் கூறினார்.

சிசரோவின் தத்துவ நூல்கள் உரையாடல் வடிவில் உள்ளன. அதனால் அவை மக்களைப் பெரிதும் கவர்ந்தன. அவற்றில் அளவையியல் கருத்துகளும் அறவியல் கருத்துகளும் உள்ளன. இவர்தம் அறிவியற் கொள்கை நிகழ்ச்சி உறுதிப்பாட்டை (Certainty) விட நம்பக் கூடிய தன்மையில் (Probability) நம்பிக்கை உடையது. அறவியலில் (Ethics) இவருடைய பிடிவாதக் கொள்கை (Dogmatism) இன்ப துன்பச் சமநோக்காளர்களைப் (Stoics) பெரிதும் கவர்ந்தது. இவர் குடியாட்சி (Democracy), குழு ஆட்சி (Oligarchy), முடியாட்சி (Monarchy) ஆகியவற்றை எதிர்த்தார்; தத்துவச் சருவாதிகார ஆட்சியை (Philosophical Autocracy) விரும்பினார். தத்துவச் சருவாதிகாரியால்தான் நடுநிலை வகிக்க முடியும் என்று இவர் கருதினார். இவருடைய நோக்கம் உரோமாபுரிக்கு ஒரு தத்துவக் கலைக்களஞ்சியம் உருவாக்கிக் கொடுப்பதுவேயாகும்; பண்பு, தனிமனிதன், ஒழுக்கம், வரையறை (Definition), கருத்து (Notion), அறிவுணர்வு (Comprehension), முடிவின்மை (Infinity) போல்வனவற்றிற்கு இவர் தந்த விளக்கங்கள் மக்களுக்குப் பெரிதும் பயன்பட்டன. சிசரோ மனிதன் எப்படி எண்ண வேண்டும் என்று கற்றுக் கொடுத்தார் என்று வால்டையர் (Voltaire) கூறினார்.

**உலுக்கிரிட்டியசு** (கி.மு. 94–55) இன்பக்கோட்பாட்டின் (Epicureanism) இயற்கை விதிகளை விரிவாக விளக்கியவர். ஆனால், இவர் இன்பக் கோட்பாட்டின் அறவியலை விளக்கவில்லை. உலகிலுள்ள நல்வினையும் தீவினையும் அவற்றின் பலன்களாகிய இன்ப துன்பங்களில் அடங்கியிருக்கின்றன என்பது

உலுக்கிரிட்டியசின் (Lucretius) கொள்கை. இவர் இயற்கை விதிகளை மனிதன் புரிந்து கொண்டால் அறியாமையும் பயமும் மனத்திலிருந்து அகலும் என்று கூறினார்.

இவர்தம் பாடல்கள் படைப்புத் தொழில் செய்கிற பெண் தெய்வத்தை வணங்கித் தொடங்குகின்றன; தொடர்ந்து, ஏதென்சில் (Athens) இருந்த கொள்ளை நோயைப் (Plague) பற்றிக் கூறுகின்றன. இதனால், தோற்றுவித்தலும் அழித்தலும் மறைமுகமாக விளக்கப்படுகின்றன. கடவுளர்கள் மனிதனுக்கு அப்பால் இருக்கின்றனர்; இறப்பு என்பது தவிர்க்க முடியாதது; பேரவா எப்பொழுதும் துன்பம் தருவது; உண்மையான இன்பம் உலகப் பொருள்களிலுள்ள நாட்டத்திலிருந்து மனத்தை விடுவிப்பதில் அமைந்திருக்கிறது. இவை இவர்தம் கருத்துகள். பொருள்களின் தன்மை பற்றிய இவர் பாடல்கள் சிறப்பு வாய்ந்தவை.

**மார்க்கசு அரிலியசு** (கி.மு. 180–121) இன்ப துன்பச் சம நோக்குத் தத்துவ அறிஞர் (Stoic Philosopher); துறவி; ஆட்சியாளர்; போர் வீரர். இவர் 11–ஆம் வயதில் தத்துவ அறிஞர் தையோகினெட்டசு (Diognetus) என்பவரிடம் இன்ப துன்பச் சம நோக்குக் கோட்பாட்டைக் (Stoicism) கற்றார். பேரரசர் அந்தோணியசு (Antonius) மார்க்கசு அரிலியசைத் (Marcus Aurelius Antoninus) தேர்ந்தெடுத்து அரசர் பதவி அளித்தார்.

இவர் நூல்களுள் தியானங்கள் (Meditations) என்னும் அறிவியல் பற்றிய நூலே சிறந்தது. இந்நூல் பன்னிரண்டு தொகுதிகள் கொண்டது. இதில் சமயக் கட்டுரைகளும் கருத்துகளும் இடம்பெற்றுள்ளன. சிறப்பாக வாழ்வது பற்றிய பல வழிகள் இந்நூலில் கூறப்பட்டுள்ளன. இவர்தம் இன்ப துன்பச் சமநோக்குக் கோட்பாடு பருப்பொருள் தன்மை வாய்ந்ததாக அமைந்தபோதிலும், சமய உணர்வுகள் ஒழுக்கமும் இரக்கமுமுள்ள ஒரு சக்தியின்பால் கவனத்தை வலுவடையச் செய்வனவாக உள்ளன. இவர் கிறித்தவத்தில் தியாக மனப்பண்பை வலியுறுத்தினார்.

**செனக்கா** (கி.மு. 5 – கி.பி. 65) உரோமானிய இன்ப துன்பச் சமநோக்கு அறிஞர். இவர் இசுபெயின் (Spain) நாட்டில் கார்டுபா (Corduba) என்னும் இடத்தில் கி.மு. 5–இல் பிறந்தார். இவர் பேச்சுத் திறமை வாய்ந்தவர்; சிறந்த தத்துவ அறிஞர்.

செனக்கா (Ceneca Lucius Annacus) இன்ப துன்பச் சமநோக்குக் கோட்பாட்டை மாற்றியமைத்தார். உரோமானிய விருப்பாற்றல் (Will) கொள்கையை அறிவாற்றலுடன் இணைத்து அதன் போக்கினை மாற்றினார். 'ஒரு பக்கம் உலகப் பொருள்களில் பேரவாவும், மற்றொரு பக்கம் இன்ப துன்பச் சமநோக்குக் கோட்பாட்டில் நாட்டமும்' என்னும் முரண்பாடு இவரிடம் காணப்பட்டது.

மனிதன் தன் அறிவை உலக நன்மைகளுக்காகப் பயன்படுத்த வேண்டும் என்பதையே உரோமானியத் தத்துவம் வலியுறுத்துகிறது. குடியாட்சி, குழு ஆட்சி, முடியாட்சி ஆகியவற்றை எதிர்த்துத் தத்துவ அறிஞனின் சருவாதிகாரத்தை அது விரும்புகிறது. மன்னனும் மக்களும் நாட்டின் எல்லையை விரிவுபடுத்துவதைவிடப் பரந்த மனப்பான்மையுடன் வாழ்தல் சிறந்தது. வழிமுறைகளைவிடக் (Means) குறிக்கோளை (End) அடைவதற்கே இத்தத்துவம் முதலிடம் அளிக்கிறது. இரா.கோ.

**உரோமானிய மொழிகள்:** இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்த 'கென்றம்' என்ற பிரிவின்கீழ்க் 'கெல்டிக்கு' என்னும் உட்பிரிவின்கண் அமைந்த முக்கிய மொழிகள் உரோமானிய மொழிகள் என்பதில் அடங்கும். உரோம் நகர மொழியாகத் திகழ்ந்த இலத்தீன் உரோமப் பேரரசால் அரசியல் மொழியாகப் பரவி, உரோமானிய மொழிகளைத் (Romance Language) தோற்றுவித்து, வடமொழி போன்று பேச்சு வழக்கற்றுப் போய்விட்டது. இது கத்தோலிக்க மதத்தினரால் இன்றும் புனிதமாகக் கருதப்படுகிறது. இலக்கிய இலத்தீன் மொழிக்கும் பேச்சு இலத்தீன் மொழிக்கும் வேறுபாடுகள் உண்டு. பேச்சு இலத்தீன் மொழியிலிருந்து கிளைத்த மொழிகளை 'உரோமானிய மொழிகள்' அல்லது 'உரொமான்சு மொழிகள்' எனக் குறிப்பர். இது 'உரோமானிக்கு' என்ற சொல்லிலிருந்து வந்ததாகும். உரோமப் பேரரசின் விரிவாலும் உரோமர்களின் மொழித் திணிப்புக் கொள்கையாலும் இம்மொழிகள் வளர்ச்சி அடைந்தன எனக் கூறுவர். உரோமப் பேரரசு இத்தாலி, பிரான்சு, இசுபெயின், போர்ச்சுகல், உருமேனியா, கிரீசு போன்ற இடங்களில் பரவி நின்றபோது, அவ்வரசின்கீழ் இருந்த இடங்களை 'உரோமானியா' என்றும், அங்கிருந்த மக்களை 'உரோமானி' என்றும் குறித்தனர். பிற பகுதியில் வாழ்ந்தோரைப் 'பார்பாரி' என்று குறித்தனர். அது செருமானியரைக் குறிக்கலாயிற்று. உரோமானி மக்களால் பேசப்பட்ட மொழிகளையே 'உரோமான்சு மொழிகள்' என்றனர்.

கெல்டிக்கு, ஐபீரியன் போன்ற மொழிகள் வாழ்ந்த இடங்களில் உரோமான்சு மொழிகள் தோன்றின என்

பர். இம்மொழிகள் முழுக்க முழுக்க இலத்தீன் அமைப்பையும் சொற்களையும் கொண்டுள்ளமையால் இவற்றைப் புதிய இலத்தீன் (Neo Latin) என்றும் கூறுவர். இலத்தீனுக்கும் இவற்றுக்குமிடையே வேற்றுமை உள்ளதால் இவற்றை 'உரொமான்சு மொழிகள்' எனக் கூறுவதே பொருத்தம் என்பர் பலர். உரொமான்சு மொழிகளில், 1. காலோ — ரொமான்சு (Gallo-Romance), 2. இசுபானோ — ரொமான்சு (Hispano-Romance), 3. இத்தாலோ — ரொமான்சு (Italo - Romance), 4. இரெட்டோ — ரொமான்சு (Rheto-Romance), 5. பால்கன் — ரொமான்சு (Balkan-Romance) போன்ற பல பிரிவுகள் அடங்கும். இவற்றுள் காலோ உரொமான்சு பிரெஞ்சு நாட்டில் வழங்கும் பிரெஞ்சையும், பிரான்சு நாட்டின் தென் பகுதியிலும் இத்தாலியின் வடபகுதியிலும் பேசப்படுகிற பிராவன்சல் (Provencal) மொழியையும் தன்னுள் கொண்டது. இசுபானிசு, போர்ச்சுகீசு, காட்டலன் மொழிகள் இசுபானோ-ரொமான்சுப் பிரிவில் அடங்கும். இத்தாலியும் சார்டினியாவில் வழங்கும் மொழியும் இத்தாலோ-ரொமான்சுப் பிரிவினுள் அடங்கும். இத்தாலியின் வட பகுதியில் வழங்கும் சின்னஞ்சிறு மொழிகள் இரெட்டோ-ரொமான்சுப் பிரிவினுள் அடங்கும். உருமேனியா மொழியும் பால்கன் பகுதியில் பேசப்படும் பால்கன்-கிளைமொழிகளும் பால்கன்- ரொமான்சுப் பிரிவினுள் அடங்கும். காலோ-ரொமான்சையும் இசுபானோ-ரொமான்சையும் 'மேற்கு உரொமான்சு' என்றும், இத்தாலோ-ரொமான்சு, இரெட்டோ-ரொமான்சு, பால்கன்-ரொமான்சு போன்றவற்றைக் 'கிழக்கு ரொமான்சு' என்றும் வழங்குவர்.

கி.மு. 4-ஆம் நூற்றாண்டில் இலக்கிய இலக்கணங்கள் எதுவுமின்றிப் பேச்சு மொழியாக மக்களிடையே பரவியிருந்த இலத்தீன், கிரேக்க மொழியின் செல்வாக்காலும் உரோமப் பேரரசின் வீழ்ச்சியாலும் மிக வேகமாக வளர்ந்தது என்பர். ஏனியசு, சிசரோ, குயிண்டிலியன், சீசர் போன்றோர் இவ்வளர்ச்சிக்குக் காரணமாக இருந்தனர். அரசு மொழியாக இலக்கிய இலத்தீன் இருந்தபோதிலும், பேச்சு இலத்தீன் பாமர மக்களின் நாவில் விளையாடி வளரத் தொடங்கியது. பேச்சு இலத்தீன் மொழியே உரொமான்சு மொழிகளின் பிறப்புக்குக் காரணம் என்பர். பேச்சு இலத்தீனில் பல்வேறு கிளைமொழிகள் இருந்தன. அவையே உரோமான்சு மொழிகளாகப் பெயர்பெற்றன.

உரோம் தன்னுடைய ஆட்சியை இத்தாலி, சார்டினியா, இசுபெயின், ஆசுத்திரியா,கால்,தாசியா போன்றவிடங்களில் பரப்பியபோது, மொழியையும் அங்கே நிலை நிறுத்தியது. கிரீசு,எகிப்து,இங்கிலாந்துபோன்ற நாடுகளில் இலத்தீன் மொழி நிலைபெறவில்லை. இலத்தீன் மொழிச் சொற்கள் பிறமொழிகளில் காணப்பட்டாலும் இம்மொழி அவ்விடங்களில் நிலைபெற இயலவில்லை. இசுபெயினில் உரோம்நாட்டுக் கலை, பண்பாடு ஆகியவற்றிற்குப் பெருமதிப்பிருந்தது. அதன் காரணமாக மொழி வளர்ச்சியடைய வாய்ப்பிருந்தது.

தொடக்ககால முதலே இலக்கிய இலத்தீனுக்கும் பேச்சு இலத்தீனுக்கும் மிகுந்த வேறுபாடு இருந்தது. பேச்சு இலத்தீனில் கி.பி. 2,5-ஆம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலப் பகுதியில் நெடில் உயிர்கள் மறைந்து, அடைப்பு உயிர்களாக மாறி அமைந்தன என்பர். ஆனால், இலக்கிய இலத்தீனில் குறில், நெடில் பாகுபாடு உயிர் ஒலிகளில் உண்டு. எனவே, உரொமான்சு மொழிகளில் நெடில் உயிர்களுக்குப் பதிலாக அடைப்பு உயிர்களே (Closed Vowels) உண்டு. உரொமான்சு மொழிகளில் முன்னுருபுகளே (Prefixes) வேற்றுமை உருபுகளின் வேலையைச் செய்யும். உரொமான்சு மொழிகளில் ஆண், பெண் பால்கள் இருக்க, இலக்கிய இலத்தீனில் அஃறிணையும் இருக்கக் காணலாம். காரணம் சொற்களில் இறுதி மகரம் கெட்டமையும், இரண்டாவது, நான்காவது பெயர் மாற்றங்களில் ஏற்பட்ட மாற்றங்களும் ஆகும். இலக்கிய இலத்தீனில் சிறப்புச் சுட்டுகள் இல்லை. ஆனால், பேச்சு இலத்தீனில் சிறப்புச் சுட்டுகள் (Definite Articles) உண்டு. இலக்கிய இலத்தீனில் எதிர்காலம் கால இடைநிலையால் காட்டப்படுகிறது. உரொமான்சு மொழிகளில் முக்கிய வினையின் 'செய்' என்னும் எச்சத்துடன் துணைவினையினை இணைத்துக் கூறும் நிலை ஏற்பட்டது. இத்தகைய மாற்றங்கள் பிணைப்பு மொழியாகயிருந்த இலத்தீனை ஒரு பிரிப்பு மொழியாக மாற்றியது என்பர்.

உரொமான்சு மொழியின் தந்தையாகக் கருதப்படுபவர் பிரடரிக்கு தயசு (Friedrich Diez) ஆவார். இராசுகு போன்று இவர் உரொமான்சு மொழிகளை நன்கு ஆராய்ந்தார். இவர்தம் நூல்களே இம்மொழிகளைப் பற்றி அறிய அடிப்படை நூல்களாகக் கருதப்படுகின்றன.

இலத்தீனிலிருந்து பிறந்த மொழிகளில் இன்று அதிகமான மக்களால் பேசப்படும் மொழி இசுபானிசு ஆகும். இன்று இசுபெயின் நாட்டில் வழங்கும் இசுபானிசு மொழியைக் காசுடிலியன் என்றும் வழங்குவர். உரோமப் பேரரசின் வீழ்ச்சியின்போது காசுடில் என்னும் சிறிய பகுதியில் வழக்கிலிருந்த இலத்தீன் மொழியே இன்றைய இசுபானிசு மொழியாக வளர்ந்துள்ளது.

போர்ச்சுகீசு மொழியும் பேச்சு இலத்தீன் மொழியிலிருந்து பிறந்ததாகும். ஆப்பிரிக்காவிலுள்ள கினியாப் பகுதிகளிலும் வெர்த்துத் தீவிலும் வாழும் மக்களால் போர்ச்சுகீசு கிரியோல் பேசப்படுகிறது. இசுபெயின் நாட்டிலுள்ள காட்டலேனியா, வாலன்சியா போன்ற இடங்களில் வாழும் மக்களும் பிரெஞ்சு நாட்டைச் சார்ந்த உரோசிலோன் மக்களும் காட்டலன் மொழியைப் பேசுகின்றனர். பேச்சு இலத்தீனிலிருந்து பிறந்த இம்மொழி கி.பி. 15-ஆம் நூற்றாண்டு வரை செல்வாக்குடன் திகழ்ந்தது. காட்டலனின் தோற்றத்தைச் சார்லமென் காலத்திலிருந்தே கணிப்பர்.

உலக அரங்கில் ஆங்கிலத்திற்கு அடுத்தபடியாக முதன்மை வாய்ந்த மொழி பிரெஞ்சு மொழியாகும். இன்றைய பிரான்சு அன்று கால் (Gaul) எனச் சொல்லப்பட்டது. கி.மு. மூன்றாம் நூற்றாண்டு முதலே உரோமப்பேரரசின் செல்வாக்கைக் காணலாம். எய்ட்டியில் வழங்கும் பேச்சுமொழியைப் பிரெஞ்சு கிரியோல் எனக் கூறுவர். கால் நாட்டில் (பிரான்சு) இலத்தீன் மொழியின் அழிவில் இரு கிளை மொழிகள் தோன்றின. வடக்கே வளர்ந்ததைப் பிரெஞ்சாகவும் தெற்கே வளர்ந்ததைப் பிராவன்சாகவும் குறிப்பிட்டனர் ('Langue d'oui'; 'Langue d'oc').

இரெட்டோ-ரொமான்சு என்ற மொழிகள் சுவிட்சர்லாந்திலும் இத்தாலியிலும் பேசப்படுகின்றன. உரோமான்சு (Romansh), எங்காடினிசு (Engadinish), இலேடின் (Ladin), பிரியுலியன் (Friulian) என நான்கு மொழிகள் உண்டு. இத்தாலிய மொழியில் ஆறு கிளைமொழிகள் உள்ளன எனக் கூறுவர். இவையும் இலத்தீன் பேச்சு மொழியிலிருந்து உருவாகியனவாகும். சார்டினியனை இத்தாலியின் கிளைமொழியாகச் சிலர் கருதினும், பலர் தனிமொழியாகவே கருதுகின்றனர். உருமேனியன் மொழியும் பிற உரொமான்சு மொழிகளைப் போல, இலத்தீன் மொழியிலிருந்து பிறந்ததாகும். இது கிழக்குப் பிரிவைச் சார்ந்ததாகும்.

அன்றைய பேச்சு இலத்தீனைப் பற்றி அறியச்சில சான்றுகள் கிடைத்துள்ளன. கொச்சை மொழிக் கூறுகள் கி.மு. 2, 3-ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த பிளாத்தூசின் நாடகங்களில் கலந்திருந்தன. சிசரோ கடிதங்களிலும் கொச்சை மொழிக் கூறுகள் காணப்பட்டதாகக் கூறுகின்றனர். இலக்கிய இலத்தீனில் காணப்படாத பல முன்னுருபுகளை இவர் பயன்படுத்தியுள்ளார்.

கிடைக்கிற பழமையான எழுத்துச் சான்றுகளுள் கி.பி. 842-இல் எழுதப்பட்ட இசுடிராசுபர்குச் சூளுரையே மிகவும் பழமையானது. இது சார்லமன் பேரர்கள் செய்துகொண்ட உடன்படிக்கையாகும். இது காலோ உரொமான்சு மொழியில் எழுதப் பெற்றுள்ளது.

பிரெஞ்சு நாட்டுப் பிக்கார்டுக் கிளைமொழியில் கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட இருபது வரிக் கவிதையே அடுத்துக் கிடைத்த பழைய எழுத்துச் சான்றாகும்.

உரொமான்சு மொழிகள் வரிவடிவம் பெறக் கிறித்தவக்குருமார்களும் அரசவைகளும் பெரும்பங்கு பெற்றன. பிரெஞ்சு மொழியே சின்னஞ்சிறு கவிதைகளை எழுத்துருவில் கண்டு, இலக்கியப் பாரம் பரியத்தை உருவாக்கியது.

பிராவன்சு மொழியில் கி.பி. 10-ஆம் நூற்றாண்டிலேயே கவிதைகள் கிடைத்துள்ளன. இசுபெயின் நாட்டில் கிடைத்துள்ள எழுத்துகள் கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தன வென்று கூறுகின்றனர். போர்ச்சுகீசு, காட்டலன் மொழிகளில் கி.பி. 12-ஆம் நூற்றாண்டு முதல் பல உரைநடைகள் காணக் கிடக்கின்றன. போர்ச்சுகீசில் சட்டம் பற்றிய நூல்களும் காட்டலனில் சமயம் பற்றிய நூல்களும் கிடைத்தன.

இத்தாலி மொழியின் முதல் எழுத்துருவம் கி.பி. 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும். உரோமானிய மொழிகளின் பிறப்புக்குக் காரணமாக இருந்த தாய் மொழி இலக்கிய இலத்தீன் அன்று; பேச்சு இலத்தீன் தான் என்பது மொழியியல் பேரறிஞர்களின் முடிந்த முடிபாகும். சு.ச.

**உரோம்-பெர்லின்-தோக்கியோ அச்சு:** உரோம்-பெர்லின்-தோக்கியோ அச்சு என்பது சருவாதிகார நாடுகளான இத்தாலி, செருமனி, சப்பான் முதலியவற்றின் தலைவர்கள் இரு உலகப்போர்களுக்கும் இடைப்பட்ட காலத்தில் (1938-இல்) குடியாட்சி நாடுகளான பிரிட்டன், பிரான்சு, ஐக்கிய அமெரிக்க நாடு முதலியவற்றிற்கும் பொதுவுடைமை நாடான சோவியத்து உருசியாவுக்கும் எதிராகச் செய்து கொண்ட ஓர் இராணுவ ஒப்பந்தமாகும்.

சருவாதிகார அரசுகளின் தோற்றம்: இத்தாலியில் தமது கட்சியான பாசிசக் கட்சியைமட்டும் அரசாங்கத்தில் பங்கு கொள்ளச் செய்து, மற்றக் கட்சிகளை ஒழித்துவிட்டு, 1922 அக்டோபரில் ஆட்சியைக் கைப்பற்றிய முசோலினி (Mussolini) உள் நாட்டில் நல்ல பல சீர்திருத்தங்களைக் கொண்டு

வந்தாலும், படிப்படியாகக் குடியாட்சி உரிமைகளை ஒடுக்கிவிட்டுத் தமது சருவாதிகார அரசாங்கத்தை நிறுவினார். இதேபோலச் செருமனியில் இட்லரும் (Hitler) தமது தேசிய சமநிலைக் கட்சியாளர் ஆகிய நாசிக் கட்சியினரை, 1933-ஆம் ஆண்டுத் தேர்தலில் சிறிது இடங்களைச் சட்டமன்றத்தில் கைப்பற்றச் செய்து, சூழ்ச்சியால் தாமே முதலமைச்சராகி (Chancellor), எல்லா அதிகாரங்களையும் தம்மிடமே குவித்து வைத்துக் கொண்டு, பல பொருளாதாரச் சீர்திருத்தங்களை மிகவிரைவில் நிறைவேற்றி, மிக்க திறமையும் வலிமையுமுடைய பெரும் போர்ப்படையைத் திரட்டி, அண்டை நாடுகளை அஞ்சச் செய்தார். அறிவியல் துறையில் மற்ற நாடுகளை விட மிகவும் முன்னேறியிருந்த செருமனி, இப்போது போரிலும் அறிவியற் கருவிகளைக் கையாளும் பயிற்சி பெற்றிருந்தது. கிழக்காசியாவில் சப்பான் நாடு 1919 க்குப்பின்னர்த் தொழிலிலும் படைவலியிலும் மிகவும் முன்னேற்றமடைந்திருந்தது. அதனுடைய தொழில் வளர்ச்சிக்கு வேண்டிய மூலப் பொருளைப் பெறுதற்கும், தான் உற்பத்தி செய்த பொருள்களை விற்பதற்கும் சந்தைகளைப் பெறும் நோக்கத்துடன், ஐரோப்பியநாடுகளின் ஆட்சியிலிருந்த இந்தோ-சீனா, கிழக்கிந்தியத் தீவுகள், மலாயா, பர்மா முதலியவற்றைத் தான் அடையவும், இவற்றைக் குடியேற்ற நாடுகளாக ஆண்ட பிரான்சு, ஆலந்து, பிரிட்டன் ஆகியவற்றை அவற்றிலிருந்து ஓட்டவும், இவற்றின் மக்களைத் தம் நண்பர்களாக ஆக்கிக் கொள்ளவும், கொரியா, மஞ்சூரியா, வடசீனா முதலியவற்றுக்கு நடுவான தலைவராகத் தன்னை ஆக்கிக்கொள்ளவும் கருதி, 'கிழக்காசியப் புதுத் திட்டம்' ('A New Order in East Asia') அல்லது 'ஓர் இணை வளமண்டலத்' (A Co-Prosperity Sphere) திட்டம் வகுத்து, வடசீனாவைத் தாக்கி ஆக்கிரமி...ச் செயல்களிலீடுபட்டது. சருவதேசச் சங்கத்தால் ... வல்லரசுகளின் ஆக்கிரமிப்புச் செயல்களைத் தடு... இயலவில்லை.

**அச்சு ஒப்பந்தம் ஏற்பட்ட சூழ்நிலை:** இம்மூன்று சருவாதிகார நாடுகளும் பிரிட்டன், பிரான்சு, ஐக்கிய அமெரிக்க நாடு முதலிய குடியாட்சி நாடுகளை வெறுத்தபோதும், இவை பொதுவுடைமை நாடான சோவியத்து உருசியாவையே மிகுதியும் வெறுத்தன; மேலைநாட்டு குடியாட்சி நாடுகளை இவை வெறுத்ததற்குக் காரணம் அவற்றின் நாடுபிடிக்கும் கொள்கையேயாகும். எனினும், முசோலினி எத்தியோப்பியாவை 1935-இல் தாக்கிச் சருவதேசச்சங்கத்தின் எச்சரிக்கையைப் புறக்கணித்தார். 1936-இல் வெர்சே உடன்பாட்டை மீறி, செருமானியப் படை அளவைப் பெருக்கி, உலொகார்னோ (Locarno) உடன்படிக்கையை மீறி, இரைன்லாந்தில் (Rhineland) செருமானியப் படைகளை விடுத்து அப்பகுதியைக் கைப்பற்றி இணைத்தார். பிரான்சில் உள்நாட்டுச் சிக்கல்கள் தோன்றி, அரசாங்கத்தை வலுவற்றதாக ஆக்கி, நிலையில்லாமலும் ஆக்கின. இட்லர் 1934-இல் ஆசுத்திரியாவைச் செருமனியோடு இணைப்பதற்காகச் செய்த முயற்சி, ஆசுத்திரிய, இத்தாலிய எதிர்ப்புகளால் வெற்றியடையவில்லை. முசோலினி 1936-இல் எத்தியோப்பியாவை வென்றது. இட்லரை வல்லந்தச் செயலிலிறங்க ஊக்கமளித்தது. இசுபெயினில் பொதுவுடைமைக் குடியரசுக் கட்சியினருக்கும் தளபதி பிரான்சிசுகோ பிராங்கோவைத் தலைவராகக் கொண்ட முடியரசுக் கட்சியினருக்குமிடையே 1936 சூலையில் உள்நாட்டுப்போர் தொடங்கிற்று. இதில் பிரிட்டனோ பிரான்சோ தலையிடவில்லை. சோவியத்து உருசியா பொதுவுடைமைக் குடியரசுக் கட்சியினருக்குப் பெருமளவு இராணுவ உதவி செய்தது. இதுவே, உரோம் பெர்லின் அச்சு ஒப்பந்தம் ஏற்படக் காரணமாயிற்று. இட்லரும் முசோலினியும் தளபதி பிராங்கோவுக்குக் கூட்டாக இராணுவ உதவி செய்வதென்றுஓர் இராணுவ ஒப்பந்தத்தை 1938-ஆம் ஆண்டு அக்டோபர் 23-இல் செய்தனர். இந்தப் பெர்லின் ஒப்பந்தங்களே உரோம்-பெர்லின் அச்சு எனப்படும். தங்களுடைய அச்சு ஒப்பந்தத்தின் நோக்கம் உலகில் அமைதியை நிலவச் செய்தலே என்று இவர்கள் கூறிக்கொண்டாலும், உண்மையில் இவர்களுடைய நோக்கம் நாடுபிடித்தலே ஆகும். இவ்வஞ்சகப் போக்கை அவர்களுடைய ஆக்கிரமிப்புச் செயல்கள் நன்கு எடுத்துக் காட்டின.

**ஒப்பந்தம் செயற்படுதல்:** ஒப்பந்தத்தின்படி இரு சருவாதிகாரிகளும் தளபதி பிராங்கோவுக்கு இராணுவ உதவி செய்து, இசுபெயினில் பிராங்கோவின் சருவாதி...ர ஆட்சியை நிலைநிறுத்தினர். மேலைநாடுகள் ...ருக்கு ஆயத்தமின்றி இருந்த நிலையை நன்றாகக் ...ண்டுகொண்ட இரு சருவாதிகாரிகளும் ஆக்கிரமிப்புச் செயல்களில் துணிந்து ஈடுபட்டனர். இட்லர் ஆசுத்திரியாவை 1938 மார்ச்சிலும், செக்கோசுலோவேகியாவை 1930 அக்டோபரிலும் இணைத்தார்; முசோலினி அல்பேனியாவை 1939-இல் இணைத்தார். இருவருடைய உள்நோக்கங்களையும் நன்குணர்ந்த மேலைநாட்டு குடியரசுகள் அடுத்தாற்போல் இட்லர் போலந்தைத் தாக்கக்கூடுமென்று எதிர்பார்த்து, அவ்வாறு தாக்கப்பட்டால் அதற்கு உதவி செய்வதாக உறுதிகூறிப் போருக்கு விரைந்து ஆயத்தம் செய்தன. இட்லர் 1939 செப்டம்பரில் போலந்தைத் தாக்கியதும் பிரிட்டனும் பிரான்சும் செருமனிக்கெதிராகப் போரிலிறங்கிப் போலந்துக்கு உதவ முன் வந்தன. இட்லர் பிரான்சைத்

தோற்கடிக்கவே, சப்பான் 1940-இல் இந்தோ சீனாவைக் கைப்பற்றி, உரோம்-பெர்லின் அச்சு ஒப்பந்தத்தில் சேர, உரோம்-பெர்லின்-தோக்கியோ அச்சு ஒப்பந்தம் தோன்றிற்று.

**அச்சுமுறிதலும் சருவாதிகார ஆட்சியின் வீழ்ச்சியும்:** இரண்டாம் உலகப் போரின் தொடக்கத்தில் மூன்று அச்சு நாடுகளும் குடியாட்சிகளுக்கெதிராகப் பல வெற்றிகளைப் பெற்றாலும், நெடுங் காலத்துக்கு அவற்றால் குடியாட்சி நாடுகளை எதிர்க்க இயலவில்லை. இட்லர் 1941-இல் உருசியாவைத் தாக்கிக் கைப்பற்றுவதற்காகச் செய்த முயற்சி 1945-இல் தோல்வியில் முடிந்தது; செருமனியின் கிழக்குப்பகுதியையும் பெர்லினின் கிழக்குப் பகுதியையும் உருசியாவும், மேற்குப் பெர்லினையும் மேற்குச் செருமனியையும் பிரிட்டனும் பிரான்சும் ஐக்கிய அமெரிக்க நாடும் கைப்பற்றின; பிரான்சு மீட்கப் பட்டது. இத்தாலி தோற்கடிக்கப்பட்டு, முசோலினியும் பாசிசுட்டுக் கட்சியாளரும் பதவியிலிருந்து நீக்கப் பட்டனர். சப்பானிய நாடு தான் பிடித்த நாடுகளை இழந்து, முற்றுகைப்போரால் உணவின்றி வாடி, அணுக்குண்டு வீச்சினால் அழிவுக்குள்ளாகி ஐக்கிய நாடுகளிடம் சரணடைய வேண்டியதாயிற்று. இவ்வாறு அச்சு முறிந்தது; சருவாதிகார ஆட்சிகளும் வீழ்ந்தன. இரா.அ.

துணை நூல்கள்:

**Pierre Renouin,** World War II and Its Origins: International Relations (1929-45), London, 1968.

**Calier, Basil,** A Short History of the Second World War, New York, 1967.

**உரோமசன்மர்** பாரதக் கதையில் இடம் பெறும் ஒரு முனிவர். இவர் தேவருலகத்திலிருந்து இந்திரனால் பூமிக்கு அனுப்பப்பட்டவர். இந்திரன் கட்டளைப்படி அங்கு அர்ச்சுனன் செய்த வீர விளையாட்டுகளையெல்லாம் தருமன் முதலியோரிடம் தெரிவித்தார் என்றும், பின்னர்க் காட்டில் வாழ்ந்து வந்த தருமனிடம் நளன் வரலாற்றினைக் கூறினார் என்றும் இவரைப் பற்றிய செய்திகள் பாரதத்தில் இடம்பெற்றுள்ளன. வீ.சே.

**உரோமதத்தன்** சிதம்பர புராணத்தில் இடம் பெறும் ஒரு வேடன். இப்புராணத்தை கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புராணத் திருமலைநாதர் என்பவர் இயற்றியுள்ளார். உரோமதத்தன் என்பவன் வேடர் உருவில் காட்டில்திரிந்துகொண்டு, வழிப் போக்கர்களை மறித்துக் கொள்ளையடித்து வாழ்ந்து வந்தான். ஒருநாள் அந்தணர் ஒருவர் நட்பு அவனுக்குக் கிடைத்தது. அவரது அருள் விளக்கத்தைக் கேட்டு நடராசப் பெருமான் கோபுரத்தினைத் தூரத்தில் நின்றே தரிசனம் செய்தான். பின்னர், அவ்வாறு கோபுர தரிசனம் செய்கிற அடியார்களைப் போற்றியும் வந்தான். அவ்வருள் ஒளியால் இவன் முத்தி பெற்றான் என்னும் செய்தி சிதம்பர புராணத்தில் காணப்படுகிறது. வீ.சே.

**உரோம பாதன்** இராமாயணத்தில் இடம் பெறும் கதை மாந்தர்களுள் ஒருவன். இவன் பிரமனுக்கு மகனான சுவாயம்பு மனு என்னும் அரசரின் பேரனும், உத்தானபாதன் என்பவனுக்கு மகனுமாவான். இவன் உரோமபதன் எனவும் வழங்கப்பட்டான். பாதத்தில் உரோமம் கொண்டவன் என்பது இப்பெயரின் பொருளாகும். இவன் மகன் பெயர் சதுரங்கன். இவன் அங்க நாட்டிற்கு அரசனாக விளங்கினான். நெடுங்காலம் மழை பெய்யாமையால் இவன் நாடு வளங்குறைந்து வறுமைத் துயரில் வாடியது. இம்மன்னன் தன் ஆட்சியில் அறந் தவறியமையால் இவ்வாறாயிற்று என்று கூறப்படுகிறது. வேதங்கள் வல்ல பல முனிவர்களை அழைத்து, அவர்களுக்கு அறங்கள் பல செய்தும் மழை பெய்யவில்லை. கலைக்கோட்டு முனிவர் எனப்படும் இருசிய சிருங்க முனிவர் வந்தால் மழை பெய்யும் என்று முனிவர்கள் கூறினார்கள். 'உலக மக்களை விலங்குகள்' என்றே எண்ணி வாழும் அம் முனிவனைத் தந்திரத்தால் மயக்கித் தன்னாட்டிற்கு அழைத்து வருமாறு இம்மன்னன் சில விலைமகளிரை அனுப்பினான். அவர்கள் சென்று முனிவரைத் தந்திரமாக அங்க நாட்டின் எல்லைக்கு அழைத்து வந்த அளவில், நாட்டில் மழை பெய்து வளஞ்சிறந்தது. அதனை உணர்ந்த இவ்வரசன் தன் படைகளோடு சென்று, முனிவரை எதிர்கொண்டு போற்றி, நிகழ்ந்த உண்மைகளைக் கூறித் தன்னைப் பொறுத்தருளுமாறு வேண்டிக் கொண்டான். அவரைத் தலைநகருக்கு அழைத்து வந்து அரியாசனத்தில் அமர்த்தினான். அமர்த்தி, அம்முனிவருக்குத் தசரத மன்னனின் மகளும் தன் வளர்ப்பு மகளுமான சாந்தை என்பவளை மணம் செய்து வைத்தான். கம்பரும் தம் இராமாயணப் பாலகாண்டத் திருவவதாரப் படலத்தில் இந்த உரோமபாத மன்னனின் வரலாற்றினை வசிட்டன் வாயிலாகக் கூறியுள்ளார்.

2) விதர்ப்ப நாட்டு மன்னனின் மைந்தன். இவன் மகன் பெயர் புரு. அ.மா.ப.

**உரோமமுனி**: இவர் தமிழகத்தில் வாழ்ந்த சித்தர்களுள் ஒருவர். சித்தி பெற்றவர் சித்தராவர். சித்தி என்பதனை அட்டமாசித்தி என்றும் பிற பேராற்றல்கள் என்றும் விளக்குவர். மெய்யுணர்வால் இறைவனை உணர்ந்து எப்போதும் இறையொடு கலந்து நிலை நிற்கப் பெற்றவர் சித்தர் எனப்படுவர். சித்தர்களுள் மருத்துவம், சோதிடம், யோகம், இரசவாதம் போன்றவற்றில் தாம் பெற்ற ஞான அனுபவம் மக்களுக்குப் பயன்படுமாறு வாழ்ந்து மறைந்தவர்களும், அவற்றை எளிய கவிதைகளில் வெளிப்படுத்தி நூல்கள் இயற்றிச் சென்றவர்களும் உள்ளனர். தமிழ் மக்கள் அவ்வாறு மருத்துவம் முதலிய பல்துறைகளில் தாம் பெற்ற ஞானத்தை நூலாக வடித்துத் தந்த சித்தர்களைத் தொகுத்துப் பதினெண் சித்தர் என்று போற்றவும், அவர்தம் நூலைப் பதினெண் சித்தர் கோவை என்று வெளியிட்டுப் போற்றவும் செய்து வருகின்றனர். திருமூலர், இராம தேவர், அகத்தியர் முதலிய 18 முனிவர்களைப் பதினெண் சித்தர்கள் எனக் கொண்டு, அவர்கள் நூல்களைச் சித்தர் கோவையில் தொகுத்துள்ளனர். பதினெண் சித்தர் பெயர்ப் பட்டியலில் உள்ள பெயர்களில் வேறுபாடு உண்டு. உரோம முனியின் பெயர் சித்தர் பலரைத் தொகுத்துக் கூறும் பட்டியல் பலவற்றிலும் இடம்பெற்றுள்ளது. முனி இருடி எனப்படுதலின், இவர் உரோமஇருடி என்றும் கூறப் பெறுவர். இவரை உரோமஇருடி நாயனார் என்று கூறும் மரபும் உண்டு. இவர் பெயரால் அமைந்த பல நூல்கள் உள்ளன. உரோம முனி 500, உரோம முனி 100, உரோமஇருடி கற்பமுறை 20, உரோம இருடி சுருக்கம் 16, உரோமர் கற்பமுறை 16, உரோம இருடி நாயனார் சூத்திரம் 50 எனப் பலவாறாக இவர் நூல்கள் அமைந்துள்ளன. மேலும், உரோம இருடி சூத்திரம் 25, 51, 100, 16 என்று இவர் பெயரோடு தொகைஎண் சேர்த்து வழங்கப் பெறும் நூல்களும் உள்ளன. இவர் நூல் இரசவாதம், வைத்தியம், யோகம் முதலிய பொருள்கள் பற்றி அமைந்துள்ளன.

உரோம இருடி சூத்திரம் 500 என்னும் நூலின் இறுதியில் 'புசுண்டருமே எனக்குச் சொன்னார்' என்று காணப்படுவதால், இவர் ஆசிரியர் காகபுசுண்டர் என்னும் மற்றொரு சித்தர் என்பது புலனாகிறது. இவர்தம் பெயரை உரோமன் என்று குறிப்பிட்டுள்ளார். இவர் சட்டை முனியின் காலத்தவராவார் என்று கூறுகின்றனர். இவருடைய காலம் கி.பி. 16-ஆம் நூற்றாண்டாகலாம் என்பது ஆய்வாளர் கருத்து.

இவர் புசுண்ட முனிவருக்குப் புதல்வராவார் என்றும் கூறப்படுகிறார். இவர் இயற்றிய நூலினைச் சட்டைமுனி கிழிக்காதபடி புசுண்டர் அதனைத் தம் சடையில் ஒளித்து வைத்திருந்தார் என்றும், அதைப் பின் அகத்தியருக்குக் காட்டினார் என்றும், அவர் பலநாள் கழித்துப் பின்னர்த் திருப்பிக் கொடுத்தார் என்றும் இவரைப் பற்றிப் பழவரலாறு கூறப்படுகிறது. இவர் உடலெல்லாம் முடிநிறைந்தவராக இருந்தமையால் உரோமமுனி என்னும் பெயர் பெற்றார் என்றும் கூறுகின்றனர். இவருடைய ஆயுட்கால மிகுதி பற்றிப் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. 'ஒரு பிரமன் இறந்தால் இவர் உடல்முடி ஒன்று உதிரும். அவ்வாறு மூன்றரைக் கோடிப் பிரமர்கள் இறந்தால் இவர் ஆயுட்காலம் முடிந்து இவர் இறந்துபடுவார்.' இவர்தம் மிகமிக நெடிய ஆயுட் காலத்தைக் குறிப்பதற்கமைந்த புராணக் கற்பனை இதுவாகும்.

அ.மா.ப.

**உரோமல், எர்வின்** (கி.பி. 1891-1944) இரண்டாம் உலகப்போரின் போது இட்லரின் தலைமைப் படைத்தலைவர்களுள் ஒருவராக விளங்கியவர்; வட ஆப்பிரிக்காவிலும் ஐரோப்பாவிலும் செருமானியப் படைகளைத் தலைமை தாங்கி நடத்தியவர்.



உரோமல், எர்வின்

உரோமல் (Rommel, Erwin) செருமனியிலுள்ள சுவாபியா (Swabia) என்னுமிடத்தில் 15-11-1891 -இல் பிறந்தார். இசுடட்கார்ட்டு(Stuttgart) என்னும் நகரிலிருந்த இராணுவப்பயிற்சிப் பள்ளியில் இவர் கல்வி கற்றார். படையில் எளிய தொண்டனாக இவர் 1910-ஆம் ஆண்டில் சேர்ந்தார்; முதல் உலகப் போரின்போது இவர்பதவி உயர்வு பெற்றுப் படையின் துணைத்தலைவரானார். போருக்குப் பின்னர் உரோமல் நாசிக்கட்சியின் பணியில் ஈடுபாடு கொண்டார். போர் ஓர் உயர்தரமான கலை என்பது இவரது கருத்து. மீண்டும் செருமனி பெரும் புகழ் பெற்று உயரும் என்று இவர் நம்பினார்.

பின்னர்,உரோமல் போட்சுடாம் போர்க்கல்லூரியில் (Potsdam War College) ஆசிரியராகப் பணியாற்றினார். இரண்டாம் உலகப்போர் தொடங்கிய போது அப் பதவியை விட்டுவிடுமாறு இவருக்கு ஆணையிடப்பட்டது. அதன்படி பதவியைவிட்டு விலகிய இவர் பிரான்சு, ஆசுத்திரியா, போலந்து போன்ற நாடுகளில் முக்கியமான இராணுவப் பொறுப்புகளை ஏற்றார். ஐரோப்பியப் போர் முனைகளில் செருமனியும் இத்தாலியும் இணைந்து வெற்றிகளைக் குவித்துக் கொண்டிருந்த வேளையில், வட ஆப்பிரிக்கா முனையில் போதுமான முன்னேற்றம் ஏற்படாததைக் கண்ட இட்லர் துயருற்றார். வட ஆப்பிரிக்காவில் இத்தாலியருக்கு உறுதுணையாக இருக்க உரோமல் 1941-ஆம் ஆண்டு செருமானியப் படைகளின் தலைவராகப் பொறுப்பேற்றார்.

பீரங்கிப் படைவண்டிகள் எனப்படும் தாங்கிப் (Tank) போர்களில் உரோமல் தனித்திறமையை வெளிப்படுத்தினார். இவர் 1942-ஆம் ஆண்டு மே மாதத்தில் ஆங்கிலப் படைகளை எகிப்தின் எல் அலாமீன் (El Alamein) பகுதியிலிருந்து விரட்டி அடித்துப் புகழ் பெற்றார். பின்னர் உரோமல் எகிப்திலிருந்து விரட்டப்பட்டுத் துனீசியாவுக்கு ஓடிப்போனார். இவரை நேசப்படையினர் ‘பாலைநிலக் குள்ளநரி’ (Desert Fox) என்று குறிப்பிட்டுப் பேசினர். எனினும், இவர் தம் பெரும்படைகளைக் காப்பாற்றியதுடன் பகைவர்களால் பிடிபடாமலும் தப்பினார். வட ஆப்பிரிக்காவில் செருமானியர் தோற்பது உறுதி என்ற நிலை தோன்றியபோது, இட்லர் 1943-இல் இவரைப் பெர்லின் நகருக்குத் திரும்புமாறு ஆணையிட்டார். சிறிதுகாலம் உரோமல் அச்சு நாட்டுப் படைகளை இத்தாலியில் தலைமையேற்று நடத்தினார். இவர் பிரான்சுக்குச் சொந்தமான நார்மானியக் கடற்கரைகளில் நடைபெற்ற போர் நடவடிக்கையின்போது படுகாயமுற்றார்.இவர் நார்மண்டிப் போரை எதிர்த்ததுடன்,செருமனி போரில் தொடர்ந்து ஈடுபடுவதால் பயனில்லை என்றும் இட்லரிடம் அறிவுறுத்தினார். இத்தருணத்தில் இட்லரைக் கொல்லச் சதி செய்தார் என்று 1944 சூலை மாதத்தில் இவர்மேல் குற்றஞ் சாட்டப்பட்டது. விசாரணைக்கு உடன்படவேண்டும்; இல்லையேல் நஞ்சுண்டு சாக வேண்டும் என்று இவருக்கு ஆணையிடப்பட்டது. உரோமல் நஞ்சுண்டு இறப்பதே மேல் என்று முடிவு செய்தார். அவ்வண்ணமே இவர் நஞ்சுண்டு இறந்தார். இரா.அ.

**உரோமனாவு மரபினர்** உருசியாவை கி.பி, 1613-ஆம் ஆண்டு முதல் 1917-ஆம் ஆண்டு வரை ஆண்ட அரச மரபினர் ஆவர். இம் மரபினைத் தொடங்கியவர் மைக்கேல் உரோமனாவு (Michael Romanov) என்பாராவார். இவரே சார் (Czar)மன்னராக கி.பி. 1613-இல் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவரை அடுத்து இவர் மகன் அலெக்சியசு (Alexius) கி.பி. 1645-இல் அரசரானார். அலெக்சியசு காலமான போது அரியணை முதன்முதலாக அவருடைய மூத்த மகன் மூன்றாம் தியோடோருக்கு(Theodore III) கி.பி. 1676-இலும், பின்னர் ஏனைய ஆண்மக்களான ஐந்தாம் ஐவானுக்கும் (Ivan V) முதலாம் பீட்டருக்கும் (Peter I) சென்றது. முதலாம் பீட்டரையே வரலாற்றில் மகா பீட்டர் (Peter, the Great) என்பர். அவர் கி.பி. 1682 முதல் 1725 வரை சார் மன்னராக அரசாண்டார். உருசியாவின் அரசியலிலும் சமூகத்திலும் பல அரும் மாற்றங்களை ஏற்படுத்திப் புகழ்பெற்றவர் இம்மகாபீட்டர்.

பீட்டருக்குப்பின் அவர் மனைவி காதரின் (Catherine) அரசியானாள். பின்னர்ப் பீட்டரின் பேரர் இரண்டாம் பீட்டர் அரசராகும் தகுதி பெற்றிருந்தார். எனினும்,அவ்விளவரசர் முடிசூட்டிக் கொள்ளும் முன்னரே இறந்துபோனார். அதனால், ஐந்தாம் ஐவானின் மகளான கூர்லாந்தைச் சார்ந்த ஆன் (Aune of Courland) அரசி (கி.பி. 1730) ஆனாள். அவளை அடுத்து அவள் பெரியப்பாவின் பேரர் ஆறாம் ஐவான் Ivan VI) அரியணை ஏறினார். அவரை மக்கள் விரும்பாமையான் அவர் பதவியிலிருந்து அகற்றப்பட்டார். அவரையடுத்து எலிசபெத்து (Elizabeth, கி.பி. 1741) அரசியானாள். அவள் முதலாம் பீட்டரின் மகள். எலிசபெத்து கி.பி. 1762-ஆம் ஆண்டில் காலமானார். அவளுக்குப் பிறகு அவள் பெரியப்பாவின் மகன் மூன்றாம் பீட்டர் (Peter III) சார் மன்னரானார். மூன்றாம் பீட்டரும் பதவியிலிருந்து அகற்றப்பட்டார். அவர் மனைவியான இரண்டாம் காதரின் (Catherine II) என்பாள் சாரினா (Czarina) ஆனாள் (சார் என்னும் சொல்லின் பெண்பால் சாரினா). காதரின் 34 ஆண்டு (கி.பி. 1762-1796) ஆட்சிபுரிந்தாள். அவளுக்குப் பின் அவள் மகன் பால் (Paul) சார் மன்னரானார்.

அரியணையில் அமர்ந்த சார் மன்னர்களுள் பால் மக்கள் அஞ்சத் தக்க மனிதராவார். அவர் அடிக்கடி மனநிலை கெட்டு மனநோயால் பீடிக்கப்பட்டார். அக்காலங்களில் அவர் அறிவிலியாகவும் கொடுமையான ஆணைகளைப் பிறப்பித்தும் கொடுங்கோலாட்சி நடத்தினார். அவர் கி.பி. 1801-ஆம் ஆண்டில் கொலையுண்டார். அவர் மகன் முதலாம் அலெக்சாந்தர் (Alexander I) என்பார் சார் மன்னரானார். அவருக்கு ஆண்மக்கள் இல்லாமையால் அவர்தம் தம்பி முதலாம் நிக்கோலசு (Nicholas I) கி.பி.1825-ஆம் ஆண்டில் மன்னராக முடிசூட்டிக் கொண்டார். நிக்கோலசு கி.பி. 1855-ஆம் ஆண்டில் தாம் சாகும் வரை அரசாண்டார். அவரையடுத்து அவர் மகன் இரண்டாம் அலெக்சாந்தர் (Alexander II) பட்டமெய்தினார்.

இத்தருணத்தில் உருசியர்களுள் பலர் உரோமனாவு மரபினைச் சார்ந்த அரசர்களின் கொடுமை நிறைந்ததும், மக்களாட்சி முறைக்கு முரணானதுமான அரசினைக் கண்டு மனம் நொந்தனர். அவர்கள் அடிப்படைச் சீர்திருத்தங்கள் வேண்டுமென வேண்டினர். ஆனால், இரண்டாம் அலெக்சாந்தருக்கு மக்களாட்சி முறையில் நம்பிக்கையில்லை. அதனால் ,அவர் தலசுயஆட்சியை மட்டும் அனுமதித்தார். மக்கள் அதனைப் போதுமானதாக ஏற்றுக் கொள்ளவில்லை. அனைத்து மக்களையும் இச்சீர்திருத்தம் மகிழ்வுறச் செய்யவில்லை. அவர் கி.பி. 1881-ஆம் ஆண்டில் கொல்லப்பட்டார். அவர் மகன் மூன்றாம் அலெக்சாந்தர் (Alexander III) பட்டத்திற்கு வந்தார். தம் தந்தையாரின் கொலையால் அவர் மனக் கசப்பு மிக்கவராய் இருந்தார். எனவே, சீர்திருத்தம் எதையும் ஏற்க அவர் மறுத்தார்.

மூன்றாம் அலெக்சாந்தரின் மகன் இரண்டாம் நிக்கோலசு (Nicholas II) உருசியாவை ஆண்ட இறுதி சார் மன்னராவார். அவர் கி.பி. 1894-ஆம் ஆண்டில் முடிசூட்டிக் கொண்டு 1917 வரை ஆட்சி செய்தார். அரசியலில் மக்களுக்கு எவ்வித உரிமையையும் அவர் கொடுக்கவில்லை. இக்கால கட்டத்தில்தான் புரட்சி இயக்கம் தோன்றித் தீவிரம் அடைந்தது. இதனை அக்டோபர்ப்புரட்சி என்றும் உருசியப்புரட்சி என்றும் கூறுவர். இரண்டாம் நிக்கோலசு பதவியிலிருந்து 1917-ஆம் ஆண்டில் வலுக்கட்டாயமாக இறக்கப்பட்டார். அடுத்த ஆண்டில் அவரும் அவர் குடும்பத்தினரும் கொல்லப்பட்டபோது உரோமனாவு மரபினரின் ஆட்சியும் முடிவுற்றது.

உரோமனாவு மரபினரின் ஆட்சியின்போது உருசியா ஐரோப்பிய மயமாக்கப்பட்டது. ஐரோப்பாவில் ஏற்பட்ட தொழில் புரட்சி உருசியாவின் சார் மன்னர்களைப் பெரிதும் கவர்ந்தது. உருசியாவை ஐரோப்பிய மயமாக்கப் பெரிதும் பாடுபட்டவர் மகாபீட்டர் என்னும் உரோமனாவு மன்னர் என்பது குறிப்பிடத் தக்கது. இரா.அ.

**உரோமா** அமெரிக்கா, கனடா, உருசியா முதலான நாடுகளிலும் பல ஐரோப்பிய நாடுகளிலும் பரவலாக வாழும் நாடோடிக் கூட்டத்தினர். உரோமா (Roma) நாடோடியினர் ஐரோப்பிய நாடோடிகள் என்றும் கூறப்படுவர். உலகத்தின் பல பகுதிகளிலும் வாழும் இவர்களது எண்ணிக்கை சற்றேறக் குறைய 12 மிலியனாகும். உரோமா நாடோடியினர் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவின் வடக்கிலிருந்து இடம் பெயர்ந்து உலகின் பல பகுதிகளுக்கும் பரவினர் எனக் கூறுவர். இவர்களைப் பற்றிய மானிடவியல் ஆய்வுகள் இவர்கள் இராசபுத்திரர், சாட்டுகள் (Jats) முதலானவரின் மரபிலிருந்து (Descent) வந்தவர்களென்று தெரிவிக்கின்றன. இவர்களைப் பற்றிய இரத்தச் சோதனைகளும் வடஇந்திய மக்களின் பண்புகளையே காட்டுவதாக உடல்சார் மானிடவியலார் (Physical Anthropologist) கூறுகின்றனர்.

உலகின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள இவர்கள் ஒருங்கிணைந்து செயற்பட வைத்துக் கொண்ட புதுப் பெயரே உரோமா என்பது. இவர்கள் இப்போது ஒருங்கிணைந்து செயற்பட்டு வருகின்றனர். இவர்களின் பன்னாட்டு அமைப்பும் பன்னாட்டுக் குழுவும் பாரிசு மாநகரைத் தலைநகராகக் கொண்டுள்ளன. இந்த அமைப்புகளின் கிளைகள் உலகின் பல பகுதிகளிலும் உள்ளன. உரோமா மக்களின் முதல் உலக மாநாடு இலண்டனில் 1971-இல் நடந்தது. இந்திய உரோமானிய ஆய்வு நிறுவனம் (Indian Institute of Roman's Studies) சார்பாக 1976-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 27 முதல் 29-ஆம் நாள் வரை அனைத்துலக உரோமா விழா நடைபெற்றது. இந்த விழாவில் ஐம்பதுக்கும் மேற்பட்ட உலகக் கலைஞர்கள் பங்கு பெற்றுத் தத்தம் நாட்டின் நடனக் கலையைச் செய்து காட்டினர்.

செய்ந்தி சரா (Sainte Sara) என்னும் பெண் தெய்வத்தை இவர்கள் வழிபடுகின்றனர். தம் தலைவிதியையும் நல்வாழ்வையும் நிருணயிக்கும் கடவுளாகப் போற்றப்பட்டு, கிறித்தவ முறையில் வழிபடப்படும் இத்தெய்வம் இந்துக்களின் கடவுளான காளியின் மறுவடிவமாகும்.

உரோமா மக்கள் உரோமானி (Romani) என்னும் மொழியைப் பேசுகின்றனர் இது சமசுகிருதத்தோ

அடிப்படையாகக் கொண்டு இந்தி, பஞ்சாபி, இராசசுத்தானி (Rajasthani) முதலிய வட இந்திய மொழிகளுடனும் தொடர்பினைக் கொண்டுள்ளது. இது இந்தோ - ஆரிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்தது. இது இந்தியாவிற்கு அப்பால் பேசப்படும் இந்திய மொழிகளுள் ஒன்றாகும். இம்மொழியின்கண் பல இந்தோ - ஈரானியச் சொற்களும் இடம்பெற்றுள்ளன. இந்தியாவிலிருந்து இடம் பெயர்ந்து பல்வேறு நாடுகளில் இவர்கள் வாழ்ந்து வருவதால், அந்தந்த நாட்டுச் சொற்களையும் தம்முள் ஏற்று ஒலியமைப்பிலும் மாற்றம் செய்துள்ளனர். இவர்கள் மொழியைப்பற்றி டபுள்யு. ஆர். இருசி (W.R. Rishi) என்பவர் எழுதியுள்ள பன்மொழி உரோமானி அகராதி (Multilingual Romani Dictionary) இவர்களின் மொழியிலுள்ள சொல்வளத்தை அறியப் பெரிதும் உவுதம். சீ.ப.

**உரோமிலி, சர் சாமுவேல் (கி.பி. 1757-1818)** இங்கிலாந்தைச் சார்ந்த அரசியல் வல்லுநர்; சட்டப் பேரறிஞர். இவர் 1—3—1757-இல் வெசுட்டுமினிசுடரில் பிறந்தார். தொடக்கக் கல்வியை வீட்டிலேயே கற்றபின், இவர் சட்டக் கல்லூரியில் சேர்ந்து சட்டம் பயின்றார். இவர் கி.பி. 1783-இல் வழக்குரைஞராகத் தம்மைப் பதிந்து கொண்டார். பிரான்சில் பயணம் மேற்கொண்ட போது, மிராபோ (Mirabeau) என்பாருடன் இவருக்குத் தொடர்பேற்பட்டது. இங்கிலாந்து நாட்டின் மக்களவைச் செயல் முறைகளை உரோமிலி (Romilly, Sir Samuel) மிரோபோவுக்கு வழங்கினார். அவர் அதனைப் பிரெஞ்சு மொழியில் கி.பி. 1789-இல் மொழி பெயர்த்தார். இக்காலத்தில் உரோமிலி புரட்சிக்காரர்களுக்கு ஆதரவளித்தார்.

படிப்படியாக வழக்குரைஞர் பணியில் முன்னேறிய இவர், சட்டத் துறையில் தலையாய இடத்தைப் பெற்றவர் எனப் போற்றப்பட்டார். இங்கிலாந்தில் சார்லசு சேம்சு பாக்சு (Charles James Fox), கிரென்வில் பிரபு போன்றவர்களின் நிருவாகத்தின்போது, இவர் அரசின் முதன்மை வழக்குரைஞராக அமர்த்தப் பட்டார். இவருக்குப் பெருந்தகை (Knight) விருது வழங்கப்பட்டது. பின்னர், குவின்சுபரோவின்(Queensborough) நாடாளுமன்ற உறுப்பினராக மக்கள் சபையில் அமர்ந்தார். இவர் பல்வேறு தொகுதிகளிலிருந்து தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, இறக்கும் வரை அப்பதவியில் இருந்தார்.

இவர் சட்டத்தைச் சீர்திருத்துவதில் பெற்றிருந்த திறமையால் புகழ் பெற்றார்; குற்றவியல் சட்டத் தொகுப்பை முழுதும் திருத்தியமைத்தார். இவர்தம் சட்டத் திருத்தங்கள் இவருடைய சாவிற்குப் பின்னர்ப் போற்றப்பட்டன. உரோமிலி 2—11—1818-இல் இலண்டனில் காலமானார். இரா.அ.

**உரோலோ (கி.பி. 869-932)** நார்மண்டியில் வாழ்ந்த வைகிங்குத் தலைவர். இவர் கி.பி. 10-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் புதியதோர் வாழ்வைத்தொடங்கும் நோக்குடன், பிரான்சு நாட்டிற்குப் போர்த்திறம் வாய்ந்த படைவீரர்களைக் கொண்டு சென்றார். எளியவர் சார்லசு (Charles, the simple) என்னும் பிரான்சு அரசர், புதிய இடம் தேடிச் செல்லும் இவருக்கு வட பிரான்சிலிருந்த பகுதியொன்றைக் கொடுத்தார். இவரும் இவர் துணைவர்களும் இசுகாண்டிநேவியாவிலிருந்து (Scandinavia) மீண்டும் வந்து உரிமை கொண்டாடுவதைத் தடுக்கும் நோக்குடனேயே இப்பகுதி கொடுக்கப்பட்டது. இப்பகுதியே பின்னர் நார்மண்டி தச்சி (Duchy of Normandy) எனப் பெயர் பெற்றது. உரோலோ (Rolle) கிறித்தவ சமயத்தை ஏற்றுக் கொள்வதாகவும் சார்லசு மன்னரைத் தம் தலைவர் என்று ஒப்புக் கொள்வதாகவும் தெரிவித்தார். இரா.அ.

**உரோன் பண்பாடு** சுவிட்சர்லாந்து, கிழக்குப் பிரான்சு ஆகிய நிலப்பகுதிகளில் நிலவிய பண்பாடு. நடு ஐரோப்பாவில் இருந்த ஊனிடைட்சுப் (Unetitz) பண்பாட்டினை ஒத்த பண்புகளை உரோன் (Rhone) பண்பாடும் கொண்டிருந்தது. உரோன் பண்பாட்டு மக்கள் உலோகப் பொருள்களைச் செய்வதில் வல்லவர்களாகத் திகழ்ந்தனர்.

காண்க: ஊனிடைட்சுப் பண்பாடு. சு.இரா.

**உல்சி தாமசு (கி.பி. 1475-1530)** இங்கிலாந்தைச் சார்ந்தவர்; சமயத் தலைவராகவும் அரசியல் வல்லுநராகவும் திகழ்ந்தவர். இவர் சப்போக்கு (Suffolk) மாவட்டத்திலுள்ள இப்சுவிச்சு (Ipswich) என்னும் ஊரில் நடுத்தர வகுப்பில் பிறந்தார். இவர் தந்தை வாணிகத்திற்காக ஆடு மாடுகளை மேய்த்து வாழ்க்கையை நடத்தியவர். தம் சொந்த ஊரில் உள்ள இலக்கணப் பள்ளியிலும், ஆக்சுபோர்டிலுள்ள மாக்டலன் கல்லூரியிலும் படித்துத் தம் 15-ஆம் வயதிலேயே பட்டம் பெற்றார்.

உல்சி தாமசு (Wolsey Thomas) இலிங்கன் சமய வட்டத் துணைத் தலைவராக (Dean of Lincoln) வாழ்க்கையைத் தொடங்கி, தம் அறிவுத்திறனாலும், நாவன்மையாலும், அயராத உழைப்பாலும், விடாமுயற்சியாலும் படிப்படியாக முன்னேறி, சமயத் துறையிலும் அரசியல் துறையிலும் உயர்ந்த பதவிகளைப் பெற்றார். அரசர் குடும்ப மதக் குருவாகவும்,



உல்சி தாமசு

(Royal Chaplain), தூர்னே சமயவட்டத் தலைவராக வும் (Bishop of Tournai), இலிங்கன் சமயவட்டத் தலைவராகவும் (Bishop of Lincoln), யார்க்குத் தலைமைக் குருவாகவும் (Arch Bishop of York) சிறந்த முறையில் பணியாற்றி, போப்பு 10–ஆம் இலியோவின் ஆதரவைப் பெற்று, போப்புப் பத விக்கு அடுத்த நிலையான கத்தோலிக்கத் துணைத் தலைவர் (Cardinal) பதவிக்கு நியமனம் பெற்றார். இவர் போப்பாகப் பணியாற்ற வேண்டும் என விரும் பினார். அதன் காரணமாக இவர் அமைச்சர் பொறுப் பிலிருந்தபோது, இங்கிலாந்து நாட்டின் அயல்நாட் டுக் கொள்கையை மாற்றி அமைத்தார். ஆயினும் இவரது ஆசை நிறைவேறவில்லை.

எட்டாம் என்றி இவரை அமைச்சராக (Chancellor) நியமித்து, இங்கிலாந்தின் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்தார். அரச அதிகாரத்தைப் பெருக்க வேண்டும் என்று என்றி எண்ணினார். அதற்கு முட் டுக்கட்டையாகப் பிரபுக்கள் இருப்பதை இவர் உணர்ந்தார். எனவே, பிரபுக்களுக்குப் பதிலாக ஆற் றல் மிக்க நடுத்தர வகுப்பினர்களை அமைச்சராக நியமிப்பதென முடிவு செய்தார். திறமை வாய்ந்த உல்சி, என்றியின் கவனத்தை ஈர்த்துவிட்டார். உல்சி 14 ஆண்டுகள் இங்கிலாந்து நாட்டு அரசின் மூலவிசை யாக விளங்கினார்.

மூன்று சமய வட்டங்களும் பல மடாலயங்களும் இவர் பொறுப்பில் இருந்தமையால், அவற்றின் வரு வாயை இவர் பெற நேர்ந்தது. அதன் காரண மாக இவர் நாட்டிலேயே மிகப் பெரிய பணக்காரரா கத் திகழ்ந்தார்.

இவர் தம் வருவாயின் பெரும் பங்கைக் கல்விப் பணிக்காகச் செலவிட்டார்; ஆக்சுபோர்டில் கார்டினல் கல்லூரியை நிறுவினார்; சில மடங்களை அழித்து அவற்றின் செல்வங்களைக் கல்வி நிறுவனங்களுக்கு அளித்து, அவற்றின் மேம்பாட்டிற்கு அடிகோலி னார்.

அரசியல் துறையில் அரச அதிகாரத்தைப்பெருக் குவதென்பது இவர்தம் நோக்கங்களுள் ஒன்றாகும். பிரான்சுடன் போர் மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டபோது, மக்கள் சபை போதிய பணத்தை அளிப்பதற்கு இணங்கவில்லை. அதை அறிந்து தாமே மக்கள் சபைக்குச் சென்று அதனை அச்சுறுத்தினார். அவ்வச்சுறுத்தலை அது பொருட்படுத்தாது போகவே, அதனைக் கூட்டாமலேயே பணத்தை வேறு வழிகளில் பெறத் தொடங்கினார். அவற்றுள் ஒன்று நட்பிணக் கமான கடன்கள் (Amicable Loans). அவை உண்மை யில் சொத்து வரியாகும். மற்றொன்று நன்கொடை கள். நாட்டுச் சட்டங்களையும் மக்கள் உரிமைகளை யும் புறக்கணித்தமையால் இவர் மக்களுடைய பழிச் சொல்லுக்கு இலக்கானார்.

இவர் பதவியேற்றபோது ஐரோப்பிய அரசியலில் இங்கிலாந்து இரண்டாந்தர இடத்தைப் பெற்றிருந் தது. இவர் பதவியை விட்டு நீக்கப்படுவதற்குமுன் ஐரோப்பிய நாடுகளிடையே அது ஒரு நடுவர் நிலை யைப் பெற்றுவிட்டது. ஐரோப்பிய அரசியலில் இங்கி லாந்தின் பெருமையை இவ்வாறாக உயர்த்திய முதல் அரசியல் வல்லுநர் இவரே. பிரான்சை வெல்லவேண் டும் என்ற இடைக்காலக் கொள்கையைக் கைவிட்டு, அதனுடன் நட்புக்கொள்ள வேண்டும் என்ற புதிய தோர் அயல்நாட்டுக் கொள்கையை இவர் தொடங்கி வைத்தார். நெடுங்காலமாக இவர் வகுத்த கொள்கை யின் அடிப்படையில் இங்கிலாந்தின் அயல்நாட்டுக் கொள்கை செயற்பட்டு வந்தது.

உல்சி பதவியேற்றவுடன் பிரான்சுடன் நட்புக் கொள்வதற்காக 18 வயது நிரம்பிய என்றியின் சகோதரியான மேரியை, 52 வயதான பிரெஞ்சு மன் னர் 12-ஆம் உலூயிக்கு மணம் செய்து வைத்தார். உலூயி கி.பி. 1515–இல் இறக்கவே அத்திருமணம் பயனற்றதாகிவிட்டது. அதே ஆண்டில் இசுபெயின் நாட்டில் சார்லசு மன்னரானார். அவர் வலிமை மிக்கவராக இருந்தமையால் அவருக்கு ஈடு கொடுக்கும் வகையில் இவர் மீண்டும் பிரான்சின் நட்பை நாடி னார். என்றியின் மகள் மேரிக்கும் பிரஞ்சு இளவர சருக்கும் திருமணம் உறுதி செய்யப்பட்டது. அந்த நேரத்தில் பிரஞ்சு மன்னர் முதலாம் பிரான்சிசு (Francis I) மிலான் மீது (Milan) படையெடுத்துச் சென்று, ஐரோப்பிய அமைதிக்கு ஊறு விளைவித்தார் ஐரோப்பிய அமைதிக்காகப் பாடுபட்டு வந்த உல்சி கி.பி. 1516–இல் 'முழுமையான அமைதி' (Universa

Peace) என்ற திட்டத்தை வகுத்தார். அதில் இசுபெயின், பிரான்சு, இங்கிலாந்து, இசுகாட்லாந்து ஆகிய நாடுகள் சேர்ந்தன.

ஐரோப்பிய அமைதிக்கு கி.பி. 1519-இல் மீண்டும் ஊறு ஏற்பட்டது. அவ்வாண்டில் பேரரசர் இறந்தார். பேரரசர் பதவிக்குப் போட்டியிட்ட மூவருள் என்றியும் ஒருவர். அதற்காக அவர் பெரும் பொருள் செலவிட்டார்; பின்னர்ப் போட்டியிலிருந்து விலகினார். எஞ்சியிருந்த பிரான்சிசுக்கும் சார்லசுக்கும் இடையே ஏற்பட்ட போட்டியில் இங்கிலாந்தை நடுநிலை வகிக்கும்படி உல்சி செய்தார். முடிவில் சார்லசு தேர்ந்தெடுக்கப்பட்டார். அதனால், பிரான்சுக்கும் இசுபெயினுக்கும் போர் ஏற்படக்கூடிய நிலை உருவாகியது. இரு நாடுகளும் இங்கிலாந்தின் நட்பை நாடின. அவற்றுள் ஏதேனும் ஒன்று வெற்றி பெறின், ஐரோப்பாவில் வல்லமைச் சமநிலை (Balance of Power) பாதிக்கப்படும் என்றும், அதனால் இங்கிலாந்து சமநிலையை நிலைநிறுத்தும் வகையில் சமநிலைப்படுத்தும் எடைக்கல் போன்று இயங்கவேண்டும் என்றும் உல்சி கூறினார். ஆனால், இவருடைய உண்மை நோக்கம் இருநாடுகளையும் ஒன்றோடு ஒன்று மோதவிட்டு இங்கிலாந்திற்கு ஆதாயம் தேடுவதும், பிரான்சுடன் நிலையான நட்பை ஏற்படுத்துவதுமேயாகும். முதலில் என்றியையும் பிரான்சிசையும் கலே (Calais) என்னுமிடத்தில் ஆடம்பரமான சூழ்நிலைக்கிடையில் சந்தித்துப் பேசும்படி செய்தார்.

அதையடுத்து என்றியும் சார்லசும் கிரேவ்லைன்சு (Gravelines) என்னுமிடத்தில் கூடிப் பேசினார்கள். இறுதியில் இங்கிலாந்து இசுபெயினுடன் சேர்ந்து பிரான்சின் மீது கி.பி.1521-இல் இருமுறை படையெடுத்தது. இசுபெயினைச் சார்ந்த காதரின் என்றியின் பட்டத்தரசியாவார். அவருடைய நச்சரிப்பும், இங்கிலாந்திற்கும் சார்லசுக்கும் சொந்தமான பிளாண்டர்சுக்குமிடையே ஏற்பட்டிருந்த வாணிகத் தொடர்பும், உல்சி போப்புப் பதவி பெறுவதற்குச் சார்லசின் உதவி தேவைப்பட்ட நிலையும் இதற்குக் காரணங்களாக அமைந்திருந்தன. முடிவில் சார்லசு பாவியா என்னுமிடத்தில் பிரான்சிசைத் தோற்கடித்தார். அதன் விளைவாக ஐரோப்பிய வல்லமைச் சமநிலை பாதிக்கப்பட்டது. அதனைச் சரிசெய்யும் நோக்குடன் உல்சியும் என்றியும் பிரான்சுடன் சமாதானம் செய்துகொண்டனர். இதுவே வல்லமைச் சமநிலைக் கொள்கையின் தொடக்கமாகும். இதுமட்டுமன்றி வேறுசில காரணங்களும் இதற்குக் கூறலாம். போப்புப் பதவி காலியான போது உல்சி அப்பதவியைப் பெறுதற்கு உதவவில்லை. காதரினை மணவிலக்குச் செய்ய என்றி திட்டமிடலானார். எனவே, இசுபெயினுக்கு எதிராகப் பிரான்சுடன் சேரும் கொள்கைக்கு அரசருடைய ஆதரவு கிட்டியது.

உல்சியின் வீழ்ச்சிக்குக் காரணம் காதரின் மணவிலக்குப் பிரச்சினையாகும். காதரின் என்றியின் அண்ணனை மணந்திருந்தார். அவர் மரணத்திற்குப் பின் இசுபெயின் நாட்டுடன் கொண்டிருந்த நட்புறவு முறியக் கூடாது என்பதற்காகக் காதரினுக்கும் என்றிக்கும் திருமணம் போப்பின் சிறப்பு அனுமதி பெற்று நடத்தப்பட்டது. அவ்விருவருக்கும் ஒரு மகள் பிறந்தாள். தமக்குப்பின் பட்டம் பெற மகன் இல்லையே என்ற குறை என்றியை வரட்டியது. காதரினுக்கு இனி மகப்பேறு உண்டாவதற்கும் வழியில்லை. ஆன் பொலீன் என்பவள் அழகில் மயங்கிய என்றி அவளை மணக்க விரும்பினார். அதற்குக் காதரினை மணவிலக்குச்செய்வது தேவையாயிற்று. இம்மணவிலக்கைப் போப்பிடமிருந்தே பெறவேண்டும் என்ற விதி அப்போது இருந்தது. எனவே, அப்பணியினை உல்சிக்கு அளித்தார். என்றிக்குப்பின் வாரிசுரிமை காரணமாக நாட்டில் குழப்பம் ஏற்படாதவாறு தடுக்கவும், மணவிலக்கிற்குப்பின் பிரஞ்சு இள்வரசியை என்றிக்கு மணமுடித்துப் பிரான்சுடன் கொண்டிருந்த நட்புறவை வலுப்படுத்தவும், இசுபெயினுடன் ஏற்பட்டிருந்த உறவை ஒழிக்கவும் உல்சி மணவிலக்கை ஆதரித்தார்.

காதரின் மகள் மேரியைப் பிரஞ்சு இளவரசருக்குத் திருமணம் செய்துவைக்க உறுதி செய்யப்பட்டிருந்தது. மணவிலக்குச் செய்தால் மேரியை என்றியின் சட்டமுறையான மகளாகக் கருதமாட்டார்கள். எனவே திருமணம் தடைபடக்கூடும். சார்லசினுடைய நெருங்கிய உறவினர் காதரின். அப்போது சார்லசின் கட்டுப்பாட்டில் போப்பு இருந்தார். மணவிலக்கு அளித்துச் சார்லசின் வெறுப்பையும் அதை அளிக்காமல் என்றியின் பகைமையையும் பெறப் போப்பு விரும்பவில்லை. ஆகவே, அது பற்றிய தீர்ப்பு வழங்குவதில் காலம் தாழ்த்தினால் நல்லதென்று அவர் எண்ணினார். அந்தக் கால தாமதத்திற்கு உல்சியும் உடந்தையானார். ஏனெனில், ஆன்பொலீனை மணக்கவே என்றி மணவிலக்குக் கேட்கிறார் என்பது இப்போது தெளிவாயிற்று. ஆன்பொலீனை உல்சி வெறுத்தார். ஆகவே, இங்கிலாந்தில் இவ்வழக்கை விசாரிக்கப் போப்பு ஏற்பாடு செய்தார்.

உல்சியும் இத்தாலியைச் சார்ந்த காம்பெச்சியோவும் போப்பின் பேராளர்களாக இருந்து வழக்கை நடத்த முடிவு செய்யப்பட்டது. எவ்வளவு காலம் தாழ்த்த முடியுமோ அவ்வளவு காலம் தாழ்த்தும்படி அவர்களுக்கு மறைமுகமாகக் கூறப்பட்டது. மேலும், தீர்ப்பளிக்கும் உரிமை அவர்களுக்கு வழங்கப்பட

வில்லை. காம்பெச்சியோ நீண்டநாள் கழித்து இங்கிலாந்து வந்தார். வழக்கு முடியும் வேளையில் வழக்கை இரண்டு மாதங்கள் ஒத்திப் போட்டனர். அதனால் என்றி சீற்றம் கொண்டார். தமக்கு உதவவில்லை என்பதால் சீற்றத்தை முதலில் உல்சியிடம் காட்டினார்; பிரெமுனைர்ச் சட்டத்தை மீறியதாகக் (Statute of Pramunire) குற்றம் சாட்டினார். ஆயினும் அரசருக்குப் பணிவதே மேல் என்று எண்ணி உல்சி தம் பொருள் அனைத்தையும் அரசருக்கு அளித்துவிட்டார். அவற்றைப் பெறுவதுடன் மன நிறைவுகொள்ளாது, உல்சியை அமைச்சர் பதவியிலிருந்தும் யார்க்குத் தலைமைக் குருப் பொறுப்பிலிருந்தும் விலக்கி, யார்க்குச் சிறையில் அடைத்தார். அவர் அரசத் துரோகக் குற்றம் சாட்டப்பட்டு, இலண்டனுக்குக் கொண்டுவரப்பட்டார். மனமுடைந்துபோன உல்சி வழியில் இலேசெசுட்டர் (Leicester) என்னுமிடத்தில் கி.பி.1530-இல் உயிர் நீத்தார். உயிர் நீங்குதற்கு முன்னர், அரசருக்கு உழைத்ததில் பாதி அளவு உண்மையாகக் கடவுளுக்குத் தொண்டு செய்திருந்தால், தம் முதுமைக் காலத்தில் கடவுள் தம்மைக் கைவிட்டிருக்க மாட்டார் என்று கூறி நொந்து கொண்டார்.

தி.அர.இரா.

**உல்சுடன் தாமசு (கி.பி.1670-1731)** கிறித்தவச் சமயத்தின் சீர்திருத்த இறைமைக் கோட்பாட்டாளர். இவர் இங்கிலாந்தில் நார்த்தாம்டன் (Northampton) என்னும் இடத்தில் கி.பி. 1670-இல் பிறந்தார். இவர் கி.பி.1692-இல் எம்.ஏ. பட்டமும் கி.பி. 1699-இல் பி.டி. (B.D.) பட்டமும் பெற்றார்.

உல்சுடன் (Woolston, Thomas) விவிலியத்தையும் அதுபற்றிய ஆய்வு நூல்களையும் படித்துத் தேர்ந்தார். இவர் தம் கருத்துகளைத் தெளிவாகவும் வெளிப்படையாகவும் நகைச்சுவை ததும்பக் கேட்போர் மனங்கொள்ளும் வகையில் எடுத்துரைக்கும் திறமை பெற்றவர். கிறித்தவச் சமயக்குருமார்களும் பழைமை விரும்பிகளும் விவிலியத்தில் கூறப்பட்டிருக்கும் செய்திகளைப் பகுத்தாராயாமல், கண்மூடித்தனமாகப் போதித்த முறையை இவர் ஏற்றுக்கொள்ளவில்லை. இவர் விவிலியக் கோட்பாடுகளையும் இயேசு கிறித்துவின் வாழ்க்கைச் செய்திகளையும் உலகியலோடு பொருத்தி ஆராய்ந்தார்; விவிலியத்தில் இடம்பெற்றுள்ள இயற்கைக்கு மாறுபட்ட கருத்துகளை மறுத்துரைத்தார்; இயேசு ஓர் ஆன்ம நெறியாளர்; அவர் இறைவனின் தூதர்களுள் ஒருவர் என்று கூறினார். கிறித்தவச் சமயக் குருமார்கள் இயேசுவை இறைவனின் முந்நிலையினருள் ஒருவர் என்றும் இறைமகன் என்றும் வலியுறுத்திய கருத்தினை இவர் ஏற்றுக்கொள்ளவில்லை. மேலும், இவர் விவிலியத்தில் இடம்பெற்றுள்ள பேய், சாத்தான், நரகம், வீடுபேறு போல்வன மனித மனத்தின் வெவ்வேறு நிலைகளே என்றும் எடுத்துரைத்தார்.

உல்சுடன் பகுத்தறிவு, வஞ்சப் புகழ்ச்சி, தொடர் உருவக (Allegorical) முறைகளில் தம் கருத்துகளை வெளியிட்டதன் வாயிலாகச் சீர்திருத்த எண்ணங் கொண்ட பலரைக் கவர்ந்தார். இவர் புகழ் நாளுக்கு நாள் மிகுந்தது. இவர் தம் கருத்துகளை ஐந்து பெருந் தொகுதிகளாகத் தொகுத்து கி.பி.1733-இல் வெளியிட்டார். இவர் இயற்றியவற்றுள் 'யூத குரு', 'இயேசு இறந்தபின் தோன்றிய உருவம்' என்பன நகைச்சுவை மிக்கவை. உல்சுடனின் புகழைப் பொறாதவர்கள் இவர் மீது தெய்வ இகழ்ச்சி செய்பவர் என்றும் கிறித்தவச் சமயத்திற்குப் புறம்பானவர் என்றும் குற்றம் சாட்டினர். அதனால், இவர் தண்டமாக நூறு பவுன் செலுத்த வேண்டும் என்றும், ஓராண்டு சிறையில் இருக்கவேண்டும் என்றும், வாழ்நாள் முழுவதும் நன்னடத்தைக்குப் பொறுப்புறுதி அளிக்கவேண்டும் என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

உல்சுடன் இறைபக்தி மிக்கவர்; கிறித்தவச் சமய வளர்ச்சியில் ஆர்வம் உள்ளவர்; சமயக் கருத்துகளை எடுத்துரைப்பதில் சுதந்திரத்தை வலியுறுத்தியவர். தம் கோட்பாடுகளுக்காக வாழ்ந்த இவர் கி.பி. 1731-இல் காலமானார்.

இரா.கோ

**உல்பியன்:** பண்டைய கிழக்கத்திய உரோமானியப் பேரரசில் கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த புகழ்மிக்க சட்ட அறிஞர் (Jurist) உல்பியன் ஆவார். இவர் பொனீசியாவிலுள்ள (Phoenicia) தயர் (Tyre) என்னும் ஊரினர். சட்டத்துறையில் இவருக்கு மூத்தவரே பாப்பினியன் என்பவர் ஆவார்; இவருக்குக் கீழ்ப்பட்ட அலுவலராக உல்பியன் (Ulpian) இருந்தார். இவர் பாப்பினியனுடைய சட்டங்களுக்கு விளக்கங்கள் எழுதினார். உரோமானியப் பேரரசருக்குக் குடிமக்களால் விடுக்கப்படும் விண்ணப்பங்களைப் பார்வையிடும் அலுவலராக உல்பியன் பேரரசர்கள் காரகல்லா, செவரசு, அலெக்சாண்டர் ஆகியோருடைய ஆட்சியில் பணிசெய்து, கி.பி. 222 முதல் கி.பி. 228 வரை பிரிட்டோரியன் அலுவலராக இருக்கையில், கி.பி. 228-இல் கொலையுண்டார்.

உல்பியனுக்கு ஏறக்குறைய 300 ஆண்டுகளுக்குப் பிறகு பேரரசராக வந்த முதலாம் சசுடினியன் (Justinian I, ஆட்சிக் காலம் கி.பி. 527-565) கி.பி. 533-ஆம் ஆண்டில் பழைய உரோமானியச் சட்டங்களை ஒன்று திரட்டிச் சட்டத் தொகுப்பு (Digest) என்ற வடிவத்தில் வெளியிட்டார். இதற்குப்

பாண்டெக்ட்டசு (Pandects) என்று பெயர். இச் சட்டத் தொகுப்பு நூலில் அடங்கியுள்ள மொத்தச் சட்டங்களில் மூன்றில் ஒரு பங்கு இச்சட்டவல்லுநரால் எழுதப்பட்டவையேயாகும். உல்பியன் மூவகைச் சட்டங்களுக்கு – அதாவது 1. உரோமானியக் குடி மக்களுக்காக உரோமானிய அரசாங்கத்தால் செய்யப்பட்ட சட்டங்கள், 2. உரோமானியரல்லாதாருக்காக உரோமானியச் சட்டங்களை விளக்கி, அவ்வழியாக உரோமானிய நீதிபதிகளால் இயற்றப்பட்ட சட்டங்கள், 3. உரோமானியப் பேரரசர் விடுத்த ஆணைகள் ஆகியவற்றுக்கு விளக்கங்கள் எழுதினார். இவருடைய விளக்கங்கள் மிகத் தெளிவாக உள்ளன. இவர் தாமாக எண்ணி எழுதிய சட்டங்கள் மிகச் சிலவே என்றும், இவரெழுதிய சட்ட விளக்கங்களே புகழ் மிக்கவை என்றும் கூறுவர். இவர் உரிமை இயல் சட்டங்களை விளக்கி (Civil Laws), 51 நூல்களும், பிரிட்டோரிய அலுவலர் விடுத்த ஆணைகளைத் தொகுத்து 81 நூல்களும் எழுதினார்.

உல்பியனுடைய தொகுப்பில் காணப்படும் அரசியற் கருத்துகள்: உரோமானியச் சட்டத்தில் 1. உரிமை இயல் சட்டங்கள் (Ius Civile), 2. நாடுகளின் சட்டம் (Ius Gentium), 3. இயற்கையின் சட்டம் (Ius Naturale) என்னும் மூன்று கூறுகள் இருக்கின்றன. உரிமை இயல் சட்டங்கள் ஒரு குறிப்பிட்ட நாட்டில் அல்லது அரசில் இயற்றப்பட்ட அல்லது வழக்கத்தில் இருந்து வருகிற சட்டமாகும். இரண்டாவதாகிய நாடுகளின் சட்டத்துக்கும், மூன்றாவதாகிய இயற்கையின் சட்டத்திற்கும் பண்டைய உரோமானியச் சட்ட அறிஞர் சிசரோவும் மற்றும் சிலரும் வேறுபாடு எதுவும் காணவில்லை. ஆனால், உல்பியனும் அவருக்குப் பிற்பட்ட காலத்தில் பேரரசர் சசுட்டினியனுடைய சட்டத்தொகுப்பை வெளியிட்டவர்களும் நாடுகளின் சட்டத்திற்கும் இயற்கையின் சட்டத்திற்கும் இடையே வேறுபாடு காட்டினர். உல்பியன் எடுத்துக்காட்டிய வேறுபாட்டின் வாயிலாக, இயற்கைச் சட்டத்தில் காணப்படும் சில ஒழுக்க விதிகளும் மனித நியாய உணர்வுக் கருத்துகளும் நாடுகளின் சட்டத்தில் பெரும்பாலும் காணப்படவில்லை என்பதும், இதனால் இத்தகைய வேறுபாடு காணப்பட வேண்டியது இன்றியமையாத ஒரு தேவையேயாகுமென்பதும், இவ்வேறுபாட்டின் காரணமாக இயற்கையின் சட்டம் சிறப்புடையது என்பதும் தெரிய வருகின்றன.

1. முதலாவதாக மனிதன் சுதந்திரமும் சமத்துவமும் (Liberty and Equality) உடையவன் என்ற 'இசுதாயிக்கு' (Stoic Theory of Natural Law) இயற்கைச் சட்டக் கோட்பாடு இயற்கையின் சட்டத்தில் தான் காணப்படுகிறதே தவிர, நாடுகளின் சட்டத்தில் காணப்படவில்லை. மனித சமத்துவக் கோட்பாடு இயற்கையின் சட்டத்தில் ஒப்புக் கொள்ளப்படுகிறபடியால், நாடுகளின் சட்டத்தில் ஒப்புக் கொள்ளப்படும் அடிமைநிலை என்பது இயற்கைச் சட்டத்தில் மறுக்கப்படுகிறது; இதனைச் சுட்டிக் காட்டும் உல்பியனின் விளக்கம் பாராட்டத்தக்கதாகும்.

2. இரண்டாவதாக, பகுத்தறிவும் சமுதாய உணர்வுமுடைய மனித இயல்புக்கு மாறுபடாத சட்டமும் நியாயமும் தான் நிலைபெறும்; அவற்றுக்கு ஏற்பவே நாட்டின் அரசாங்கச் சட்டம் இருத்தல் வேண்டும் என்ற இயற்கையின் சட்டக் கருத்துகளை எடுத்துக்காட்டி உல்பியன் விளக்கங்கள் எழுதியுள்ளார். இவை இன்பதுன்பச்சமநோக்குக்கருத்துகளினின்றே பெறப்படுகின்றன. சட்டத்தைப் பற்றிய இந்தக் கருத்தை ஆதாரமாக வைத்தே உல்பியனின் நீதி பற்றிய கருத்தும் கூறப்படுகிறது. 'நீதி என்பது ஒவ்வொருவருக்கும் உரியவற்றை வழங்குதல் வேண்டுமென்ற நிலையான ஓர் இயல்பாகும்; யாவரும் மனிதர் என்ற மதிப்புடன் வாழ்தல் வேண்டும் என்றும், எவரும் மற்றவருக்குத் தீங்கு செய்தலாகாது என்றும், ஒவ்வொருவருக்கும் உரியவை வழங்கப்படுதல் வேண்டுமென்றும் சட்டத்தின் ஆணைகள் கூறுகின்றன. மனித, தெய்விக இயல்புடையவற்றைப் பற்றியும் நியாயம், நியாயமல்லாதன ஆகியவற்றைப் பற்றியும் அறிவதே சட்ட அறிவாகும்'. உல்பியன் வகுத்த இக்கருத்தை ஆதாரமாக வைத்தே சசுடினியன் காலத்தில் உரோமானியச் சட்ட அறிஞர்கள் அறிவியலை ஒட்டிய சட்டத் தொகுப்பை ஏற்படுத்தினர்.

3. இன்ப துன்பச் சம நோக்கிலிருந்து இயற்கையின் சட்டத்திற்குக் கொண்டுவரப்பட்ட சில நல்ல, எக்காலத்திற்கும் பொருந்தக்கூடிய விதிகளை உல்பியன் வற்புறுத்துகிறார். எடுத்துக்காட்டு: சட்டத்தின் முன் யாவரும் சமம்; வாக்குறுதிகளைக் காப்பாற்றும் மன உறுதி வேண்டும்; ஒவ்வொருவரும் மற்றவரிடத்து அறிவுணர்வோடு செயற்படுதல் வேண்டும்; வெறும் சொற்களை விட நோக்கத்தையே பெரிதெனக் கொள்ளுதல் வேண்டும்; சார்ந்தாரைக் காப்பாற்றுதல் வேண்டும்; உறவின் அடிப்படையிலான கடமைகளை ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும்; தகப்பனுக்குத் தன் குழந்தைகளின் ஆள் சுதந்திரம், உடைமை ஆகியவற்றின் மீது வரம்பற்ற கட்டுப்பாட்டதிகாரம் இல்லை; திருமணமான பெண்கள் தங்கள் கணவர்களுடன் சட்டப்படி முழுமையான நிலையிலுள்ளவர்கள் ஆவர்; எனவே, அவர்தம் குழந்தைகளையும், உடைமைகளையும் கையாளுவதில் தம் கணவர்களோடு சமத்துவம் உடையவர். அடிமை

களுக்குச் சுதந்திரம் அளிக்கவும், பாதுகாப்பு அளிக்கவும், இயற்கையின் சட்டக் கருத்துகள் இடம் அளித்தன. இந்த இயற்கையின் சட்டக் கருத்துகளை உல்பியனும் மற்றச் சட்ட அறிஞர்களும் ஒத்துக் கொண்டதனால், இவற்றின் அடிப்படையிலேயே மற்றெந்தச் சட்ட விதிகளையும் ஆராய்ந்து சீர்தூக்கிக் காணுதற்கு வாய்ப்பு ஏற்பட்டது.

4. உல்பியன் விளக்கிய பிறிதோர் அரிய இயற்கையின் சட்டக் கருத்து, அரசாங்கத்தின் அதிகாரம் மக்களிடமிருந்தே பெறப்படுகிறது என்னும் குடியாட்சிக் கொள்கை ஆகும். பேரரசரின் விருப்பமே சட்டத்தின் ஆற்றலைப் பெறுகிறது. எவ்வாறெனில், சட்டத்தை நிறைவேற்றுவதன் வாயிலாக மக்கள் தங்களுடைய சொந்த அதிகாரத்தை எல்லாம் பேரரசருக்கு மாற்றி, அவரிடத்தில் தங்கும்படி செய்கிறார்கள். மக்கள் யாவருக்கும் பொதுவாக உரியதுதான் சட்டமாகும். அது அவர்கள் யாவருடைய ஒப்புதலையும் பெறுகிறது. சட்டம் இயற்றுபவர் யாராயினும் அத்தகைய அதிகாரம் அவருக்கு மக்களால் கொடுக்கப்பட்டதாகும்.

5. யாவரும் சட்டத்துக்குக் கட்டுப்பட்டு நடத்தல் என்பது அவர்களுடைய சுதந்திரத்துக்கும் மதிப்புக்கும் முரணான ஒன்று அன்று. சட்டம் என்பது ஒரு குறிப்பிட்ட ஆளின் அறிவோ, ஓர் ஆளை மட்டும் சார்ந்திருக்கும் அறிவைக் காட்டுவதோ அன்று.

இத்தகைய இயற்கையின் சட்டக் கருத்துகளை ஆதாரமாக வைத்து உல்பியன்உரோமானியச் சட்டங்களுக்கு எழுதியுள்ள விளக்கங்களெல்லாம் பண்டைய உரோமானியச் சட்டத்தை இக்கால அறிவியலுக்கொத்த ஒரு திரட்டாக அல்லது தொகுப்பாக மாற்றின. சிறப்பாக, அவர் விளக்கிய மனித சமத்துவக் கருத்தே இக்கால உரிமை இயல் சட்டத்திலும், உலக நாடுகள் சட்டத்திலும் (பன்னாட்டுச் சட்டத்திலும்) ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

பா. சு.


துணை நூல்கள்:

**Sabine, G.H.**, A History of Political Theory, Oxford & I.B.H. Publishing Company, Calcutta, 1971.

**Carlyle, R.W.**, and **Carlyle, A.T.**, A History of Mediaeval Political Theory in the West, London, 1903.

**Arnold, E.V.**, Roman Stoicism, Cambridge, 1911.

**உல்பிரைட்டு வால்ட்டர்** (**கி.பி. 1893-1973**) என்பார் கிழக்குச் செருமனி நாட்டைச் சார்ந்த பொதுவுடைமைக் கட்சித் தலைவர். இவர் செருமானிய மக்களாட்சிக் குடியரசு என வழங்கப் பெறும் கிழக்குச் செருமனியின் குடியரசுத் தலைவருமாவார். உல்பிரைட்டு (Ulbright) செருமனியைச் சார்ந்த இலீப்சிகு (Leipzig) நகரத்தில் கி.பி. 1893-ஆம் ஆண்டு சூன் மாதம் 30-ஆம் நாள் பிறந்தார். இவர் எட்டாண்டுகள் மட்டுமே பள்ளிப் படிப்பைப் பெற்றார். செருமானியச் சமதருமக் கட்சியில் 1912-ஆம் ஆண்டில் சேர்ந்தபோது இவரது கல்வி முடிவுக்கு வந்தது.



உல்பிரைட்டு, வால்ட்டர்

உல்பிரைட்டு முதல் உலகப் போரினில் பங்கு பெற்ற பின்னர், அப்போது புதிதாக உருவாக்கப் பெற்றிருந்த பொதுவுடைமைக் கட்சியின் தீவிர உறுப்பினரானார்; பெர்லின் மாவட்டத்தின் பொதுவுடைமைக் கட்சிச் செயலாளராக 1926-இல் நியமிக்கப் பெற்றார். செருமானிய மக்களவையில் (Reichstag) உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1929 முதல் 1933வரை பணியாற்றினார். செருமானிய நாசிக் கட்சியினர் கைப்பற்றிக் கொண்ட தருணத்தில் 1933-ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் நாட்டை விட்டு முதலில் பாரிசு மாநகருக்கும், பின்னர் மாசுக்கோவிற்கும் தப்பிச் சென்றார். இரண்டாம் உலகப் போரின்போது உருசியப் படையில், இவர் அரசியல் நிருவாகக் குழுமத்தில் பணியாற்றினார். குறிப்பாக இவர் பணி செருமானியப் போர்க் கைதிகளினூடே தொடர்ந்தது.


உல்பிரைட்டு 1945-ஆம் ஆண்டில் செருமனிக்குத் திரும்பினார். அப்போது செருமனியில் உருசியர்களின் கைவசமாகியிருந்த பகுதியில் பொதுவுடை

மைக் கொள்கையின் அடிப்படையில் அரசியல் ஆதிக்கத்தை நிலைநாட்ட ஏவப்பட்ட குழுவின் தலைவராக இவர் அனுப்பப்பட்டார். இவர் 1950-இல் பொதுவுடைமைக் கட்சியின் முதற்செயலாளராகவும் 1960-இல் மேல்சபையின் (Council of State) தலைவராகவும் ஆக்கப்பட்டார். கிழக்குச் செருமனியைத் திறம்பட ஆட்சி செய்தவர் என்ற நிலையில் இவர் உருசியாவின் (U.S.S.R.) உறுதுணைவராக இருந்தார். இந்தப் பொறுப்பில் இவர் பொதுவுடைமைக் கோட்பாடுகளுக்கு முரண்படாமலும், உரிய முறைமையோடும் பணியாற்றினார். பொதுவுடைமைக் கட்சியின் தலைமைப் பதவியை உல்பிரைட்டு 1971-ஆம் ஆண்டு மே மாதம் 3-ஆம் நாள் துறந்தார். ஆனால், மேல்சபையின் தலைமைப் பதவியைத் தாம் இறக்கும் வரை விடாது பணியாற்றி, இவர் 1973-ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதம் முதல் நாள் பெர்லின் நகருக்கு அருகிலிருந்த தம் நாட்டுப்புற இல்லத்தில் காலமானார். இரா.அ.

**உல் பிளாசு (கி.பி.311-383)** கோத்திய மக்களின் (Goths) ஆயராக (Bishop) இருந்தவர்; விவிலிய நூலைத் தம் தாய்மொழியான கோத்திய மொழியில் மொழிபெயர்ப்புச் செய்தவர். உல் பிளாசு (Ulfilas) தான்யூபு (Danube) என்னும் ஆற்றுக்கு வடபால் பிறந்தார். ஆண்டியாக்கு (Antioch) நகரில் கி.பி. 341-இல் நிக்கோமீடியாவைச் சார்ந்த ஈயூசிபியசு (Eusebius) என்பாரால் ஆயராகப் பதவிப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார். எல்லாக் கோத்தியர்களையும்போல் இவரும் ஆரியான் கொள்கையை (Arian) மேற்கொண்டவர். ஏழாண்டுகள் இவர் விசிகோத்துகளிடையே கிறித்தவச் சமயப் பரப்புநராகத் தான்யூபு ஆற்றுக்கு வடபால் பணியாற்றினார். பின்னர்ப் பேரரசர் கான்சுடாண்டியசு (Constantius) என்பாரின் அனுமதியுடன், நீசுபோலிசு (Nicepolis) நகருக்கருகில் மோசியாவில் (Moesia) நிலையாகக் குடியேறினார். இவர் கி.பி. 383-ஆம் ஆண்டில் கான்சுடாண்டிநோபிளில் காலமானார்.

உல்பிளாசின் தாய்மொழி கோத்தியமொழியாயினும், அவர் கிரேக்கம், இலத்தீன் போன்ற மொழிகளில் பேசவும் எழுதவும் வல்லவர். விவிலியத்தின் புதிய ஏற்பாட்டைக் கிரேக்க மூலத்திலிருந்து மொழிபெயர்த்தார். கோத்தியமொழியின் எழுத்து வடிவங்களைக் கண்டுபிடித்தவரும் இவரே. இதனை இவர் கிரேக்க மொழிவடிவத்தின் அடிப்படையில் உருவாக்கினார். இவரது மொழிபெயர்ப்பு நூலையே இசுபெயின், இத்தாலி போன்ற நாடுகளுக்குக் குடிபெயர்ந்து சென்ற கோத்தியர்கள் பயன்படுத்தினர். ஆனால், தென் ஐரோப்பாவில் கோத்தியமொழி சீர்குலைந்து அழிந்தபோது, உல்பிளாசின் நூலும் மறைந்தது. எனினும் அந்த விவிலியத்தின் சிறுசிறு பகுதிகள் இன்றும்நிலைத்துத் தியூட்டானிய மொழிகளின் முன்மாதிரியாக அமைந்துள்ளன. சுவீடன் நாட்டைச் சார்ந்த உப்சலாப் பல்கலைக்கழகத்தில்(University of Uppsala) இவருடைய முக்கிய கையெழுத்துப் படிவம் இன்றும் காப்பாற்றப்பட்டு வருகிறது. இரா.கோ.

**உல்பு, கிறிசுட்டியன் (கி.பி. 1679-1754)** செருமானிய ஆன்மிகப் பகுத்தறிவாளர். இவர் கி.பி.1679-இல் பிரசுலாவு (Breslau) என்னும் இடத்தில் பிறந்தார். இவர் சேனாப் (Jena) பல்கலைக்கழகத்தில் சமய சித்தாந்தம் பயின்றார். எனினும், இவர் தம் ஆர்வம் கணிதவியலிலேயே இருந்தது. உல்பு (Wolff, Christian) இலெய்ப்சிகில் (Leipzig) முதுகலைப்பட்டம் பெற்று, கி.பி. 1707-ஆம்ஆண்டு ஏல் (Halle) பல்கலைக் கழகத்தில் கணிதவியற் பேராசிரியராக அமர்த்தப் பெற்றார்.



உல்பு, கிறிசுட்டியன்

இலெபிரிசு (Leibriz) என்னும் தத்துவ அறிஞரின் பரிந்துரைக்கேற்ப உல்பு கி.பி. 1711-இல் பெர்லின் கல்விக் கழகத்தில் (Berlin Academy) உறுப்பினராகத் தேர்வுசெய்யப்பட்டார். இவர்தம் புலமை இவருக்கு நாளுக்குநாள் புகழைப் பெருக்கியது. இதனால் கடவுட் பற்றாளர்கள் (Theists) இவர்பால் பொறாமை கொண்டனர். அவர்கள் அரசனிடம் தமக்கு இருந்த செல்வாக்கைப் பயன்படுத்தி, இவரை நாடுகடத்துமாறு தூண்டினார்கள். பிரசிய (Prussia) அரசன் முதலாம் பிரடெரிக்கு (Frederick William I) கி.பி. 1723-இல் இவரை நாடுகடத்தினான். மார்பர்கில் (Marburg) உள்ள கால்வினிசுட்டுப் (Calvinist) பல்கலைக் கழகம் இவர் நாடுகடத்தப்பட்ட உடனேயே, இவரைக் கணிதம், தத்துவம் ஆகிய துறைகளில் பேராசிரியராக அமர்த்தியது. பிரசியாவில் இரண்டாம் பிரடெரிக்கு கி.பி. 1740-இல் ஆட்சிக்கு

வந்ததும் இவரை மீண்டும் தம் நாட்டிற்கு அழைத்து, இவருக்கு ஏல் பல்கலைக் கழகத்தின் சட்டவியல் பேராசிரியர் மற்றும் துணைவேந்தர் போன்ற உயர் பொறுப்புகளை அளித்தான். இவர் கி.பி. 1743-இல் ஏல் பல்கலைக் கழக வேந்தராகவும், கி.பி. 1745-இல் புனித உரோமப் பேரரசின் குறுநில ஆளுநராகவும் (Baron)அமர்த்தப்பெற்றார்.

உல்பு கத்தோலிக்கர், உலூத்தர், மறுப்புரையாளர் (Protestant) போன்ற பல்வேறு கிறித்தவர் கோட்பாடுகளையும், அரிசுடாட்டில் (Aristotle), தெகார்ட்டே (Descartes) போன்ற முற்காலத் தத்துவ அறிஞர்களின் கருத்துகளையும் நன்கு கற்றுத் தேர்ந்தார். இவர் தம் காலத்து அறிஞரான ஏராடு வெய்கலின் (Erhard Weigel) கணித முறையினைத் தத்துவக் கோட்பாடுகளில் புகுத்திக் கற்பித்தார். இவரே முதல்முதலில் அறிவியற் கோட்பாடுகளையும் நடைமுறை அறிவியலையும் வேறுபடுத்திக் காட்டியவர். பயிலுவோரின் அறிவு நுட்பத்தைப் பண்படுத்துவதும் அனைத்து அறிவியற் செய்திகளையும் கற்கும் வகையில் அவர்களின் மனத்தை உருவாக்குவதுமே கணிதம் கற்பதன் நோக்கமாகும் என்பது இவர் கருத்து.

உல்பு கணிதவியல், தத்துவவியல், சட்டவியல், அளவையியல், உளவியல், அறவியல் போன்ற பல துறைகளில் சிறந்து விளங்கினார். இவர்தம் கோட்பாடுகள் புதியனவல்ல; அவை முந்தைய மரபுகளிலிருந்து உருவாக்கப்பட்டவை. இவர் கடவுளை நம்பினார். இவர் கண்மூடித்தனமான பக்திக்கு எதிராகச் சமய சித்தாந்தங்களைப் பகுத்தறிவு முறையில் விளக்கினார். மனிதன் பகுத்தறிவினால் தொழில் புரியத் தூண்டப்படுகிறான்; அவனுக்குச் சுதந்திரமான கடமைகள் உள்ளன; அக்கடமைகளே அவனுக்கு நலன்களையும் தண்டனைகளையும் வழங்குகின்றன; புலன்கள் பகுத்தறிவை மீறும்போது பாவம் உண்டாகிறது. இவையே உல்பின் கருத்துகள். இவர்தம் அரசியல் கருத்துகள் அறவியலை அடிப்படையாகக் கொண்டவை. இவர்தம் கருத்துகள் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் மறுப்புரைக் கிறித்தவரிடம் மிக்க செல்வாக்குப் பெற்றன.

இவர் புலன்கடந்த நுண்பொருளியல் (Metaphysics), அறவியல் (Ethics), அரசியல், இயற்பியல் (Physics), இயல்திட்ட வாதம் (Teleology), உயிரியல் (Biology) போன்ற துறைகளில் செருமன்மொழியிலும் இலத்தீனிலும் பல நூல்கள் இயற்றியுள்ளார். இவற்றுள் சில இசுபானியம் (Spanish) போன்ற மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளன. இவர்தம் கோட்பாடுகள் செருமனி, பிரான்சு போன்ற மேலைநாடுகளில் பெரிதும் செல்வாக்குப் பெற்றவை. பல துறைகளில் புலமை பெற்று விளங்கிய உல்பு கி.பி. 1754-இல் காலமானார்.

இரா.கோ.

**உல்பு, சேம்சு (கி.பி. 1727-1759)** ஆங்கில இராணுவ உயர் அதிகாரி. இவர் கனடாவில் பிரெஞ்சுப் படையை எதிர்த்துப் போரிட்டுக் கியுபெக்கு நகரத்தைக் கைப்பற்றினார். அதன் விளைவாக ஆங்கில ஆதிக்கம் கனடாவில் ஏற்படுத்தப்பட்டது; பிரெஞ்சு அதிகாரம் கனடாவிலிருந்து முழுமையாக வெளியேற்றப்பட்டது.

சேம்சு உல்பு (James Wolfe) கெண்டு நகரத்தில் பிறந்தார். இவர் தந்தையார் எட்வர்டு உல்பும் ஆங்கில இராணுவ அதிகாரியே. சேம்சு உல்பு கிரீன் விச்சில் இருந்த இசுவிண்டெரன் பள்ளியில் படித்தார்; தம் 14-ஆம் வயதிலேயே ஆங்கில இராணுவத்தில் சேர்ந்தார். அஞ்சா நெஞ்சம் கொண்ட இவர் போர்த்திறங்களை நன்கு கற்றார். இவர் பதினேழாம் வயதில் சிறிய படைத்தலைவராகவும் இருபத்திரண்டாம் வயதில் பெரிய இராணுவ அதிகாரியாகவும் நியமிக்கப்பட்டார். இவர் ஆசுத்திரிய வாரிசு உரிமைப் போரில் (கி.பி. 1740-1748) ஐரோப்பாவின் பல பகுதிகளில் சிறப்பாகப் போரிட்டார்.

மூத்த வில்லியம் பிட்டு (William Pitt, the Elder) இங்கிலாந்தின் தலைமை அமைச்சரான பின்னர், இராணுவத்தில் தகுதியும் திறமையும் மிக்கவர்களுக்கே பதவி உயர்வுகளைக் கொடுத்தார். அவர் காலத்தில் இராணுவம் மேலும் வலுப்படுத்தப்பட்டது. வில்லியம் பிட்டு கி.பி. 1758-இல் சேம்சு உல்பைப் படைப்பகுதித் தளபதியாகப் (Brigadier-General) பதவி உயர்த்தினார். அப்பொழுது நடைபெற்று வந்த ஏழாண்டுப் போரில் (கி.பி. 1756-1763) பிரெஞ்சுப் படையை எதிர்த்துப் போரிட உல்பு கனடாவுக்கு அனுப்பப்பட்டார். அப்போரில் நோவாசு கோசியாப்பகுதியில் உள்ள இலூயிசுபர்கு நகரத்தை இவர் கைப்பற்றினார். அது இவருடைய குறிப்பிடத்தக்க வெற்றியாகக் கருதப்பட்டது. அடுத்த சில மாதங்களுக்குள் இவர் படைத்தளபதியாகப் (Major General) பதவி உயர்த்தப்பட்டார். கியுபெக்கு (Quebec) நகரத்தை கி.பி. 1759-இல் கைப்பற்றுவதற்குப் பிரெஞ்சுப் படைகளுக்கும் ஆங்கிலப் படைகளுக்கும் நீண்ட போராட்டம் நடைபெற்றது.

சேம்சு உல்பு இப்போரில் இறுதியாகக் கியுபெக்கு நகரத்தைக் கைப்பற்றினார். அன்று முதல் பிரெஞ்சு அதிகாரம் கனடாவில் வீழ்ச்சியுற்றது. எனினும் சேம்சு உல்பு போரின்போது படுகாயமுற்று, வெற்றிச்

செய்தி கிடைத்த சில மணி நேரத்திற்குப் பின்னர்க் காலமானார். உல்பின் கியுபெக்கு வெற்றியினாலேயே ஆங்கில ஆதிக்கத்தைக் கனடாவில் ஏற்படுத்த முடிந்தது என்பதால் ஆங்கிலேயர்கள் இவரை ஒரு வீரத் திருமகனாகக் கருதுகிறார்கள். நா.ப.

**உல்புராம் வான் எசன்பாக்கு** ஒரு செருமானியக் கவிஞரும் பாடகருமாவார். இவர் காலம் கி.பி. 1165-1220-ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்டதாகும். இவர் பவேரியாவைச் சேர்ந்த பெருங்குடி ஒன்றில் தோன்றியவர். இவர் துருஞ்சியாவின் மன்னன் எர்மான் (Hermann) என்பாரின் அவைக்களத்தில் 15 ஆண்டுக் காலம் இருந்துள்ளார். வாழ்நாள் முழுதும் வறுமையுற்றிருந்த உல்புராம் வான் எசென்பாக்கு (Wolfram Von Eschenbach) இம்மன்னன் ஆதரவால் மத்திய, தெற்குச் செருமனி நாட்டுப் பகுதிகளில் நிரம்பப் பயணம் செய்துள்ளார் என்பது இவருடைய எழுத்துகளிலிருந்து தெரிகிறது. இக்கவிஞரின் மிகச் சிறந்த இலக்கியப் படைப்பு பெர்சிவல் (Percival) எனப்பெயர் பெற்ற காதல்-வீர காவியமாகும். 25000 அடிகள் கொண்ட அந்நூல் கி.பி. 1195-ஆம் ஆண்டிற்கும் 1210-ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டதாகும். செரிடியன் (Chretien) என்பாரின் பெர்சிவல் (Percival) என்னும் நூலைத் தழுவி அமைந்த போதிலும், ஆசிரியரின் தனித்தன்மை இந்நூலில் நன்கு விளங்குகிறது. மனிதத் தன்மை நிறைந்த அரியதொரு கலைப் படைப்பாக இந்நூல் அமைந்துள்ளது. இது மரபு வழிப்பட்ட செருமானிய யாப்பில் அடங்கும் ஈரடிச் செய்யுள்களால் ஆகியது. கவிஞராகத் திகழும் இவர், ஒரு பாடகராகவும் விளங்கினார். இவர் காதற் பாட்டிசைக்கும் பாடகராகத் தம் இலக்கியப் பணியைத் தொடங்கினார். இவர்தம் பாடல்களிற் சிலவே இன்று கிடைத்துள்ளன. திதுரெல் (Titurel) என்னும் பெயரில் இவர் எழுதிய காதற் காவியத்தின் சில பகுதிகள் இப்போதும் கிடைக்கின்றன. இக்காவியப் பகுதிகள் நான்கடிச் செய்யுள்களால் அமைந்துள்ளன. இறுதியாக, 'வில்ஆல்ம்' (Willehalm) என்னும் பெயரில் இவர் எழுதிய செய்யுட் காவியம் முடிவு பெறாமல் உள்ளது. அ.மா.ப.

**உல்பு வர்சீனியா** 20-ஆம் நூற்றாண்டின் சிறந்த புதினஆசிரியை. இந்த அம்மையார் கி.பி. 1882-இல் இலண்டனில் பிறந்தார். நினைவோடை உத்தியினைக் (Stream of Consciousness) கையாண்டு புதினங்கள் எழுதிய சிலருள் இவரும் ஒருவர். புதினங்களேயன்றித் திறனாய்வுக் கட்டுரைகள், கதைகள், வாழ்க்கை வரலாற்று நூல்கள், நூல் மதிப்புரைகள் ஆகியவற்றையும் இவர் எழுதியுள்ளார். பள்ளியிலோ கல்லூரியிலோ இவர் படித்தறியாதவர்.



உல்பு வர்சீனியா

இவர் தந்தையார் இலசுலி இசுடீபன்; தாயார் சூலியா. தந்தையார் ஒரு பத்திரிகையாளர்; இங்கிலாந்து நாட்டின் புகழ்பெற்ற தேசிய வாழ்க்கை வரலாற்று நூற்றொகுதியினை வெளியிட்டவர். தம் இல்லத்திலிருந்த நூலகமே வர்சீனியாவுக்குக் கல்விக்கூடமாக விளங்கியது. தாய் மொழியாகிய ஆங்கிலமேயன்றி இலத்தீன், கிரேக்க மொழிகளும் இவருக்கு வீட்டில் பயிற்றுவிக்கப்பட்டன. பெற்றோரை இளமையிலேயே இழந்தமையால், வர்சீனியாவின் மனநிலை பெரிதும் பாதிக்கப்பட்டது. அதனால், இவர் அடிக்கடி மனநோயாளியாக மாறினார்.

இவர் 1912-இல் இலியோனார்டு உல்பு என்பவரைத் திருமணஞ் செய்து கொண்டார். வர்சீனியாவுக்கு உடலுறவில் விருப்பமில்லை என்ற உண்மையை இலியோனார்டு உணர்ந்து கொண்டார். ஆயினும், இலியோனார்டு தம் துணைவியாகிய வர்சீனியாவை எக்காலத்திலும் கைவிட்டு விடவில்லை. இவர் உடல்நிலையும் உள்ளமும் சீரடைந்த பிறகு புதினம் எழுதத் தொடங்கினார். அரைகுறையாக எழுதி வைத்திருந்த புதினங்களையும் தொடர்ந்து எழுதி முடித்தார்.

வர்சீனியா 1915-ஆம் ஆண்டில் அச்சகம் ஒன்றைத் தொடங்கினார். இவர் தம் புதினங்களையும், கட்டுரைகளையும் தம் அச்சகத்திலேயே வெளியிட்டதாகத் தம் நாட்குறிப்பில் எழுதியுள்ளார். தம் சொந்த நூல்களையேயன்றி, தம் கால முன்னணி எழுத்தாளர்களாக இருந்த காத்தரையன் மான்சு

பீல்டு, டி. எசு. எலியட்டு, இ. எம். பாசுட்டர் ஆகியோரின் நூல்களையும் உல்பு வெளியிட்டார்.

வெளிக்கடற் பயணம் (1915) என்னும் புதினமே முதன் முதலாக வர்சீனியாவால் எழுதப்பட்டதாகும். கடல் போலப் பரந்துபட்ட வாழ்க்கைப் பயணத்தின் முடிவு மரணமே என்னும் கருத்தை வலியுறுத்தும் வகையில், தாச்சேல் வின்ரேசு என்னும் இளம் பெண்ணின் வாழ்வை இது சித்திரிக்கிறது.

யாகோபின் அறை (1922) என்ற புதினத்திலேயே இவர் முதன்முதலாக நினைவோடை உத்தியைக் கையாண்டுள்ளார். யாகோபின் இளமைக்கால நிகழ்ச்சிகள் நினைவோடையாக இப்புதினத்தில் இடம் பெற்றுள்ளன. எனினும், இவ்வுத்தி இதில் சிறப்பாகப் பயன்படுத்தப்படவில்லை. ஆனால், 'திருவாட்டி இடல்லோவோ' (1925) என்னும் புதினத்தில் நினைவோடை உத்தி மிகவும் திறம்படக் கையாளப் பட்டுள்ளது. மேலும், இப் புதினத்தில் உருவகங்களும் உவமைகளும் மனத்தில் ஆழ்ந்து பதியும் வகையில் சிறப்புற அமைக்கப்பட்டுள்ளன. படிமக் காட்சிகளுக் கும் குறைவில்லை. இவற்றோடு கதையின் பல்வேறிடங்களில் கவிதையினைப் படிப்பது போன்ற உணர்வு ஏற்படுகிற முறையில் உரைநடை மிகவும் சிறப்புற அமைந்துள்ளது.

கலங்கரை விளக்கத்துக்கு (1927) என்னும். புதினத்தில் அலைகடலின் நடுவே கலங்கரை விளக்கம் அமைக்கப்பட்டுள்ள ஒரு சிறிய குன்றும், வெளிர் நிறமான வானமும் அழகுறச் சித்திரிக்கப்பட்டுள்ளன. மேலும், ஒரு ருடும்பத்திலுள்ள உறுப்பினர்களின் வெவ்வேறு குண நலன்கள் பற்றிய காட்சியினையும் இப்புதினம் வெளிப்படுத்துகிறது. வர்சீனியா இதற்கு இராம்சே என்னும் ஒருவரின் குடும்பத்தைக் கருப் பொருளாகக் கொண்டுள்ளார்.

வர்சீனியா எழுதிய 'ஆர்லண்டோ' (1928) என்னும் நூல் புதுமையானதொரு வரலாற்றுக் கற்பனையாகும். இந்நூலில் வருகிற நாயகனும் நாயகியும் கி.பி. 15-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்களாயினும், அவர்கள் இருவரையும் 20-ஆம் நூற்றாண்டுச் சமுதாயத்தில் வாழ்கின்றவர்களாகக் கற்பனை செய்து வர்சீனியா இந்த நூலை எழுதியுள்ளார். வழக்கமாக எழுதப்படும் வாழ்க்கை வரலாற்று நூல்களைக் கேலியும் கிண்டலும் செய்வது போல் இந் நூல் எழுதப்பட்டுள்ளது.

இவர் எழுதிய 'தனிப்பட்ட ஒருவரது அறை' (1929) என்னும் ஒரு கட்டுரை நூல் கதையினைப் போன்றே சுவைபட எழுதப்பட்டதாகும். இவர் 1928-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்களில் கேம்பிரிட்சுப் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த இரு கல்லூரிகளில் பெண்களும் புதினங்களும் என்ற தலைப்பில் ஆற்றிய சொற்பொழிவுகளே இந்நூலை வெளியிடக் காரணமாக இருந்தன. ஐந்து பாகங்களாக உள்ள இந் நூலில் கல்லூரிகளில் பெண்கள் நிலைமை, ஆண்கள் எழுதிய நூல்களில் பெண்கள் என்பவை பற்றி முதலிரண்டு பகுதிகளும் விரிவாகப் பேசுகின்றன.

நூல் வெளியீடுகளிலிருந்தும் அச்சகத்திலிருந்தும் வந்த கணிசமான வருவாய் அதிகரித்தது. இந்தக் காலகட்டத்தில்தான் வர்சீனியாவின் 'அலைகள்' (1931) என்னும் புதினம் வெளியாயிற்று. இவர் 1929-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்களில் இந்நூலை எழுதத் தொடங்கினார். இப் புதினத்தின் கதை முழுவதும் கதைமாந்தர் அறுவர் தத்தம் வாழ்க்கையின் இளமைக்காலம், காளைப்பருவம், மனிதப்பருவம் என்றின்ன பல்வேறு கட்டங்களிலும் வயதுக்கேற்றவாறு தம் எண்ணங்களை வெளிப்படுத்துகிற தனி நிலைப் பேச்சாகவே அமைந்துள்ளது.


நாயின் வாழ்க்கை வரலாறாக இவர் எழுதிய நூல் நகைச்சுவை நிரம்பியது. ஓவியராகவும் கலையுள்ளம் படைத்தவராகவுமிருந்த உரோசர் பிரை என்பாரின் வாழ்க்கை வரலாற்று நூல் வர்சீனியாவால் 1940-இல் வெளியிடப்பட்டது.

தைம்சு (Times) இதழ் நடத்திய இலக்கிய மதிப்புரை இதழில் (Times Literary Supplement) தம் வாழ்வின் கடைசிக் காலம் வரை அளவற்ற நூல்களுக்கு மதிப்புரை எழுதினார். பற்பல மதிப்புரைகளில் தம் பெயரை விட்டுவிட்டமையான், வர்சீனியாவின் மறைவுக்குப் பிறகு இவர் எழுதிய அனைத்துப் மதிப்புரைகளையும் அறிந்து கொள்ள முடியவில்லை. இந்த இதழில் மட்டுமன்றி நியூயார்க்கிலிருந்து வெளிவரும் எரால்டு (Herold), திரிபியூன்(Tribune)போன்ற பெருமை சான்ற இதழ்களிலும் வர்சீனியா கட்டுரைகள் எழுதினார். சியாப்ரே சாசர் தொடங்கித் (கி.பி. 15-ஆம் நூற்றாண்டு) தம் காலத்தில் விளங்கிய பல்வேறு படைப்பாளர்களையும் பற்றி எண்ணற்ற இலக்கியக் கட்டுரைகளை எழுதிக் குவித்துள்ளார். நினைவாற்றல் மிக்க வர்சீனியாவின் ஆழ்ந்த மதிநுட்பமும், கற்பனை வளமும் இவரது எழுத்தில் காணப்படும் சிறப்பியல்புகளாகும்.

கதை, கட்டுரை, திறனாய்வு மற்றும் நுண்கலைகள் ஆகியவற்றில் ஈடுபாடு காட்டியவர் வர்சீனியா. இவருக்கு அரசியலில் எந்தவிதப் பற்றும் கிடையாது.

ஆயினும், இரண்டாம் உலகப் போர் நடந்து கொண்டிருந்தபோது தம் கணவரிடம் ஒரு நாள்'இங்கிலாந்து முற்றுகை இடப்பட்டுத் தோற்றுப்போனால் தற்கொலை செய்து கொள்வேன்' என்று வேடிக்கையாகக் கூறினார். போரின் உச்சக் கட்டத்தில் இங்கிலாந்தின் தெற்குப்பகுதி கடுமையான விமானத் தாக்குதலுக்கு உள்ளாயிற்று. இவர்கள் இல்லம் குண்டு வீச்சினால் தீப்பிடித்துக் கொண்டது. இதனைப் பற்றிக் கவலையோ வருத்தமோ இன்றி வர்சீனியா அளவுக்கு விஞ்சிய மகிழ்ச்சியுடன் காணப்பட்டார். வழக்கமான மனநோயின் அறிகுறியே இது என்று நெருங்கிய சில நண்பர்கள் கருதினர். அந்நிலைமை நீடிக்கவில்லை. ஒரு நாள் தம் கணவருக்குக் கடிதம் எழுதி வைத்துவிட்டு, தான் அணிந்திருந்த மேலங்கியின் பைகளில் கூழாங்கற்களைப் போட்டு நிரப்பிக் கொண்டு அருகில் ஓடிக்கொண்டிருந்த ஆற்றில் விழுந்து உயிர் துறந்தார். ப. அ.

**உல்ம்** மேற்குச்செருமனி நாட்டிலுள்ள தொழிற்சாலைகள் நிறைந்த மாநகரம். பேடன்-விருட்டம்பர்கு (Baden-Wurttemberg) மாநிலத்தில் இந்நகரம் அமைந்துள்ளது. உல்ம் (Ulm) என்னும் இந்நகரம் இசுடட்கார்ட்டு (Stuttgart) என்னும் நகருக்கு ஏறத்தாழ 70 கி. மீ. தென்கிழக்கில் இசுவாபியன் சூரா மலைத்தொடரின் (Swabian Jura Mountain) அடிவாரத்தில் தான்யூபு ஆற்றின் இடக்கரையில் உள்ளது.



தான்யூபு ஆற்றங்கரையிலுள்ள உல்ம் தலைமைக் கிறித்தலக் கோயில்

உல்ம் நகருக்குத் தொன்மையான வரலாறு உண்டு. இதனைப் பற்றிய விவரங்கள் கி. பி. 854-ஆம் ஆண்டைச் சார்ந்த ஆவணங்களில் காணப்படுகின்றன. இங்கிருந்த கோட்டையில் புனித உரோமானியப் பேரரசர்கள் வாழ்ந்தார்கள் என்றும் தெரிகிறது. இந்நகரம் சுதந்திரப் பேரரசு நகரமாக கி.பி. 1154-ஆம் ஆணடில் அறிவிக்கப்பட்டது. இத்தாலியிலிருந்து ஆல்ப்சு மலைக் கணவாய்களின் வழியாக வந்த வாணிக வழித்தடங்கள் இந்நகரை மையமாகக் கொண்டிருந்தமையால் இது சிறப்புப் பெற்றது. பிரடரிக்குபார்பரோசா (Frederick Barbarossa) என்னும் பெயர் கொண்ட புனித உரோமானியப் பேரரசர் இந்நகருக்குப் பட்டயம் வழங்கிச் சிறப்பித்தார். உல்ம் கி.பி. 1350-ஆம் ஆண்டளவில் முழுவதும் தன்னாட்சி பெற்ற பகுதியாய் விளங்கலாயிற்று. இதுவே இசுவாபியாப் பகுதியின் மாபெரும் நகரமாக கி. பி. 1377-ஆம் ஆண்டில் கருதப்பட்டது. பிந்தைய இடைக் காலத்தில் ஐரோப்பாவிலேயே சிறப்பானதொரு வாணிக மையமாக உருப்பெற இந்த நகரின் அமைவிடம் உதவி செய்தது. இங்கு உற்பத்தியான பசுட்டியன் (Fustian) என்னும் பருத்தியாலான கருநிறத் துணி ஐரோப்பாக் கண்டமெங்கும் பயன்படுத்தப்பட்டது. இசுமால்கல்தன் (Schmalkalden) கூட்டணியின் உறுப்பு நகரமாகிய உல்ம் கி. பி. 1803-ஆம் ஆண்டில் பவேரியாவின் (Bavaria) ஆதிக்கத்தின் கீழ் வந்த போது இது தன் சுதந்திரத்தை இழந்தது.

பிரான்சு நாட்டின் படைத்தலைவரான முதலாம் நெப்போலியன் (Napoleon I) உல்ம் போரில் (கி. பி. 1805) ஆசுத்திரியாவின் படைகளைத் தோல்வியுறச் செய்தார். பின்னர் கி. பி. 1810-ஆம் ஆண்டில் பவேரியாவுடன் இணைந்திருந்த இந்நகரம் விருட்டம்பர்குடன் இணைந்தது. ஆசுத்திரியப் படைகளை கி. பி. 1805-ஆம் ஆண்டு அக்டோபரில் நெப்போலியன் கைப்பற்றிக் கொண்டார்.

இரண்டாம் உலகப் போரின்போது இந்நகரிலிருந்த இடைக்காலக் கட்டடங்கள் குண்டு வீச்சுகளுக்கு இரையாகிச் சேதமுற்றன. எனினும், போருக்குப்பின்னர் இந்நகரமும் இங்கிருந்த கோத்தியத் திருச்சபையும் (Gothic Cathedral) மீண்டும் புதுப்பிக்கப்பட்டன. இத்திருச்சபையே செருமனியிலுள்ள இரண்டாம் பெருந் திருச்சபையாகும். கோலோன் திருச்சபை (Cologne Cathedral) முதலிடத்தைப் பெறும்.

உல்ம் நகரம் இருப்புப் பாதைகள், சாலைகள் ஆகியவற்றின் சந்திப்பாகும்; நெரிசல் நிறைந்த நகரங்களுள் இதுவும் ஒன்று. இங்கு விதவிதமான செய்பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. மின்சாதனங்கள், தொழிற்சாலைகளுக்குத் தேவையான இயந்திரங்கள், பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருள்கள் போன்றவை இங்கு உற்பத்தியாகின்றன.

உல்ம் நகரின் மக்கள்தொகை 1,00,700 (1981).

இரா.அ.

**உல்ரிச்சு** புகழ் பெற்ற மேனாட்டுத் தத்துவ அறிஞர்களுள் ஒருவர். இவர் ஆல்பர்ட்டு

என்னும் அறிஞரிடம் தயானிச இலக்கியங்களையும் (Dionysian Corpus) அரிசுடாட்டிலின் அறவியற் கோட்பாடுகளையும் பயின்றார்; சமய சிந்தாந்தத்தில் பட்டம் பெற்று, பாரிசில் சிறந்த விரிவுரையாளராகப் பணியாற்றினார்; செருமனியில் தொமினிகன் மடத்தில் (Dominican Priorys) உறுப்பினராகிக் கிறித்தவப் பாதிரியாராகப் பணிபுரிந்தார்.

உல்ரிச்சின் (Ulrich) கொள்கைகள் புனித அகசுட்டின் கருத்துகளையும் புதிய பிளேட்டோவின் கருத்துகளையும் (Neo Platonism) பெரிதும் தழுவிக் காணப்படுகின்றன. கடவுள் அனைத்துக்கும் மேம்பட்ட உண்மையாகவும் நிறைவான ஆற்றலுடையவராகவும் விளங்குகிறார். அவரே எல்லா உயிரினங்களின் நிலையான தன்மைக்கும் காரணமாவார். அவர் எல்லாவற்றிற்கும் மேலான காரணமாக உள்ளார்; ஓரறிவு கொண்ட செடிமுதல் ஆறறிவு கொண்ட மனிதன் ஈறாக உள்ள அனைத்து உயிரினங்களையும் படைத்துள்ளார். கடவுளைப் பற்றியும் அவர்தம் பேரின்ப உலகைப் பற்றியும் மனிதன் அறிந்துகொள்ளும் பொருட்டு வேதங்கள் கடவுளால் அருளப்பட்டுள்ளன. அதன் பொருட்டே மனிதனுக்கு அவர் ஆறாவதான பகுத்தறிவைப் படைத்துள்ளார். எனவே, மனிதன் கடவுளையும் அவர்தம் உலகு, வேதங்கள் ஆகியவற்றையும் நம்புதல் வேண்டும். இவை உல்ரிச்சின் கருத்துகள்.

உல்ரிச்சு சமய சித்தாந்தங்கள் குறித்து எழுதிய நூல்களுள் 'உயர் குறிக்கோள் நலம்' (De Summo Bono) என்பது குறிப்பிடத்தக்கது. இது எட்டுத் தொகுதிகள் அடங்கிய பெருநூலாகும். இத்தொகுதிகள் கி.பி. 1262 முதல் 1272 வரையுள்ள காலத்தில் தொகுக்கப்பெற்றன. இவர் கி.பி. 1278-இல் காலமானார். இரா.கோ.

**உல்லாடன்** கேரளப் பழங்குடிகளுள் ஒன்று. இக்குடியினருள் ஒரு பிரிவினர் தமிழ் நாட்டிலும் வாழ்கின்றனர். உல்லாடன் (Ulladan) பழங்குடியினர் குட்டையானவர்கள்; கருத்த மேனியினர். இவர்கள் கண்கள் கருமையானவை; முகம் நீண்டது, குறுகியது; மூக்கு நேரானது; உதடுகள் நடுத்தரமானவை; தலை குறுகி அகன்றது; மயிர் சுருள் சுருளானது. ஏ.எச். கானே (A.H. Kane) என்பவர் இவர்கள் நீக்கிரிட்டோ (Negrito) இனத்தைச் சேர்ந்தவர்களென்றும் தென்னிந்திய முதுகுடியினருள் ஒருவகையினரென்றும் கூறுவார்.

உல்லாடன் என்னும் சொல் 'உள்' (Ull), 'ஒட்டுண்ணு' (Ottunnu) ஆகிய சொற்களின் பொருள்களைக் கொண்டதாகும். உள் என்பது 'உள்ளே' என்றும், ஒட்டுண்ணு என்பது 'ஓடுதல்' என்றும் பொருள்படும். ஆதலின், உல்லாடன் என்பது காட்டிற்குள் ஓடுதல் எனப்பொருள்படும். இப்பழங்குடியினர் கேரளாவில் இரிஞ்ஞாலக்குடா (Irinjalakuda), பள்ளிபுரம் (Pallipuram), எடகொச்சி (Edakochi), கும்பாளம் (Kumbalom), எழுவின்னா (Ezhuvinna), நீண்டக்கரா (Neendakara), மணச்சேரி (Manacheri), செல்லானம் (Chellanam) ஆகிய பகுதிகளில் மிகுதியாகக் காணப்படுகின்றனர். இவர்களுள் பெரும்பாலானோர் இடம்விட்டு இடம் பெயர்ந்து செல்லுபவர்களல்லர்; ஒரே இடத்தில் நிலையாக வாழ்பவர்கள்.

உல்லாடன் பழங்குடியினர் ஐந்து அகமணக் குழுக்களாகப் (Endogamous) பாகுபட்டுள்ளனர். ஒவ்வொருவரும் அவரவர் குழுக்களுக்குள் மட்டுமே மணஞ் செய்து கொள்வர். உல்லாடன், சேரப்பன் (Cherappan), தாளிப்பன் (Thalippan), நாயாதியர் (Nayadis), ஆகிய நான்கு உட்பிரிவினருமே மற்றொரு குழுவினருடன் உணவு உட்கொள்வதில்லை. நாயாதியரும் உல்லாடன் குழுவினரும் தனிப்பழங்குடி எனவும் கூறப்படுவர். தாளிப்பன் குழுவினர் மற்றவர்களுக்கு இறப்புக் காலச் சடங்குகளில் பூசாரிச் செயல்களைச் செய்பவராக உள்ளனர்.

உல்லாடன் பழங்குடியினர் தம் எளிய குடிசைகளைச் சமநிலக் காட்டுப் பகுதியில் குறிப்பாக, நெல் வயல்களுக்கு அருகில் அல்லது தென்னந் தோப்புகளுக்கு அருகில் அமைத்துக் கொள்கின்றனர். இக் குடிசைகள் மூங்கில்களாலும் தென்னங் கீற்றுகளாலும் கட்டப்பட்டவையாகும். குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் ஒரே குடிசையில் உறங்குவர். மணஞ் செய்து கொண்டவர்கள் சில காலங்களில் தனிக் குடிசை அமைத்துத் தங்குவதும் உண்டு. இவர்களது வாழிடம் உயர் சாதியினர் வசிக்கும் இடங்களுக்கு மிகத் தொலைவில் உள்ளதாகவே இருக்கும். சிரியன் கத்தோலிக்கச் சமயத்தைச் சார்ந்தவர்களே இவர்கள்தம் அண்டைய மக்களாகக் காணப்படுகின்றனர். மட்பாண்டங்களும் தென்னை, கோரை முதலானவற்றால் பின்னப்பட்ட பொருள்களும் இவர்களின் முதன்மையான வீட்டுப் பொருள்களாகும்.

கரையோர உல்லாடன் பழங்குடியினர் படகுகள் கட்டுதல், மரங்களை வெட்டுதல் முதலான தொழிலில் ஈடுபட்டுள்ளனர். இப்பழங்குடியினரின் பிற அகமணக் குழுக்கள் படகுகட்டும் தொழில் தெரியாதவர்கள். ஆனால் சிறு புதர், மரங்கள், மண் முதலானவற்றிலிருந்து தேன் சேகரிப்பதில் வல்லவர்கள். காட்டுப்

பொருள்களைச் சேகரிப்பது இவர்களது துணைத் தொழிலாகும். வேளாண்மைக் காலங்களில் எல்லா விதமான பணிகளிலும் கூலிகளாக ஈடுபடுகின்றனர். ஆண்டின் பாதிக் காலங்களில் காட்டுப் பொருள் களையும் வேட்டையில்பெறும் உணவுகளையுமே உண் கின்றனர். காட்டுப் பகுதிகளில் திரிந்து விலங்குகளைத் தாக்கிப் பிடிப்பதைக்காட்டிலும் வலையாலும் வேறுமுறைகளாலும் எளிமையாகப் பிடிப்பதையே இவர்கள் பெரிதும் விரும்புகின்றனர்.



உல்லாடன் இழுவிசை வில்கொண்டு வேட்டையாடல்

இவர்களிடையே காணப்படும்வேட்டைமுறைகுறிப் பிடத்தக்கது. திருமணக்காலங்களில் பலவகை இறைச்சி உணவளிக்க மணவீட்டார் வேட்டையாடும் குழுவை அமைப்பர். வேட்டையாடும் நாட்களில் அவர்களுக்கு உணவையும் தானியங்களையும் அளிப்பர். வேட்டை யாடும்போது கொல்லப்படும் விலங்கின் பிற்பகுதி யின் வலப்பகுதி அரசாங்கத்திற்குக் கொடுக்கப்படும். காட்டு அதிகாரி அதனை ஏலத்தில் விட்டு அப் பணத்தை வட்ட நிதியகத்திற்கு (Taluk Treasury) அனுப்பி வைப்பார். பின்பகுதியின் இடப்பகுதி இவ்விலங்கினைக் கொன்றவனுக்குக் கொடுக்கப்படும். இவனுக்கு அந்த விலங்கின் தலையையும் நாக்கையும் கொடுப்பது இவர்களின் மரபு. உல்லாடன் பழங்குடி யின் தலைவனுக்கு எஞ்சியவற்றுள் ஒரு பகுதியைத் தருவர். மீதியை வேட்டைக் குழுவினர் சமமாகப் பகிர்ந்து கொள்வர். இறைச்சியைப் பங்கிட்டுக் கொள்வதில் ஏற்படும் சச்சரவுகளை அந்த விலங் கினைக் கொன்றவன் தீர்த்து வைக்கும் பொறுப்பை ஏற்பது இவர்களது வேட்டை முறையில் காணப் படும் சிறப்பாகும். இவர்கள் மற்றக் குழுவினரிடம் கூலிபெற்று வேட்டையாடுதலுமுண்டு; பிற பணி களைச் செய்தலுமுண்டு.

இப்பழங்குடிகளிடையே நடக்கும் திருமணம் வயதுவந்தோர் திருமணமாகும். இந்து சமயத்தாரைப் போன்றே தாலி கட்டும் சடங்கே திருமணத்தின் முதன்மையான சடங்காகக் கருதப்படுகிறது. இவர் கள் உறவுக்குள் பெரும்பாலும் மணம் செய்து கொள்வதில்லை. சிலர் தாய்மாமன் மகளை மணம் செய்து கொள்கின்றனர். மணப்பெண்ணைப் பேசி முடிப்பதில் தந்தையும் தாய்மாமனும்சிறப்பிடம் பெறு கின்றனர். மணப்பெண் பரிசு கொடுக்கும் மரபு இவர் களிடம் உண்டு. இந்தத் தொகை பெருமளவு மாறு படுகிறது. மணப்பெண்ணைப் பார்த்த பிறகு பெண் வீட்டார் மணமகன் இல்லம் சென்று மண மகனைப் பார்த்துத் திரும்புவர். இவ்விரு நிகழ்ச்சி களிலும் சிறப்பான விருந்திற்கு ஏற்பாடு செய்வர். திருமணத்திற்குப் பின் மணமகள், மணமகன் தந்தை யின் இல்லத்திலோ தனியாக அமைக்கப்பட்ட குடிசையிலோ வசிப்பாள். திருவாங்கூர்ப் பகுதி உல்லாடன் பழங்குடிகளின் திருமணச் சடங்கு வேறு பட்ட எளிய சடங்காகும். ஓலைகளால் பின்னப்பட்ட வட்டக் குடிசையில் மணப்பெண்ணை அமர்த்தி, சற்றுத் தள்ளிப் பெண்ணின் தந்தையோ ஆண் உற வினரோ இசைக் கருவிகளுடன் அமர்வர். பின்னர் அந்த வாழிடப் பகுதியிலுள்ள மணம் செய்து கொள்ளும் தகுதியுடைய ஆண்மக்கள் அழைக்கப் படுவர். அவர்களிடம் மூங்கில் குச்சிகள் கொடுக்கப் படும். மணப்பெண்ணின் அருகில் அமர்ந்திருப்பவர் பாட அந்தக் குடிசையைச் சுற்றி ஆண்மக்கள் வட்ட மிட்டு ஆடுவார்கள். ஒருமணி நேரம் ஆடியபின் இவர் கள் தம் கையில் உள்ள மூங்கில் குச்சிகளை குடிசைக் குள் நீட்டுவார்கள். மணப்பெண் எந்தக் குச்சியை இழுத்து விடுகிறாளோ அக்குச்சிக்குரிய ஆடவனே அவள்தன் கணவனாவான். இச் சடங்கிற்குப் பின் விருந்துண்டு மகிழ்வர். இவர்களிடையே மணவிலக்கு எளிமையானது.

உல்லாடன் பழங்குடியினர் தாய்வழி மரபுரிமை யைக் (Matrilineal Inheritance) கொண்டவராவர். இறந்த ஒருவரது சொத்து அவர் உடன்பிறந்தாளின்

மகனுக்குச் செல்லும். சிலபோது சொந்த மகனுக்கும் கொடுக்கப்படும். குழந்தைகள் தாயின் குடும்பப் பெயரைப் பெறுவார்கள். இவர்களின் சமூக நடைமுறைகளைக் கவனிக்கும் குழுவின் உறுப்பினர்கள் முதியோரே. மூப்பன் என்னும் தலைவர் அனைத்துச் சிக்கல்களையும் முன்னின்று தீர்த்து வைப்பார். குற்றங்களுக்குத் தண்டனையும் வைதலும் இவர்களின் தண்டனை முறைகளாகும்.

ஆவிகளின் பால் நம்பிக்கையும், பேய் வழிபாடுமே இவர்களின் சமய நம்பிக்கைகளாகும். இவர்கள் தமக்கு ஏற்படும் இன்னல்கள் பேய்களின் சீற்றத்தினால் வருகின்றன என நம்புகின்றனர். கொட்டில் என்னும் குடிசையில் கல்லாலான கப்பிரி, தீக்குட்டி, சாத்தன் ஆகிய தெய்வங்களை வழிபடுகின்றனர். செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் வரும் வெள்ளிக் கிழமைகளில் ஆடு, கோழி, கள், அரிசி மாவு, சோறு, தேங்காய், வாழைப்பழம் முதலானவற்றைப் படைத்து வழிபடுவர். இச்சடங்குகளின் போது இவர்களுள் ஒருவர் உள்தூண்டலால் குறி கூறுபவராக மாறித் தம் குடியினர் கேட்கும் கேள்விகளுக்கு மறுமொழி கூறுவார். அவர் கூறுவதைத் தெய்வ மொழியாக ஏற்பர்.

இறந்தவரைப் புதைக்கும் வழக்கமுடையவர்கள் இப்பழங்குடியினர். இவர்கள் இடுகாட்டினைச் சொட்டலா (Chotala) என்று கூறுவார்கள். ஒரு சிலர் தத்தம் குடிசைகளுக்கு அருகில் புதைக்கும் வழக்கத்தையும் கொண்டுள்ளனர். இறந்தபின் பதினைந்து நாட்களைத் தீட்டு நாளாகக் கொள்வர். பின்னர் 16–ஆம் நாள் தாளிப்பன் வீட்டைச் சாணமிட்டுச் சுத்தப்படுத்துவான். குளித்துத் திரும்பும் அனைவருக்கும் உணவிட்டுத் தீட்டை விலக்க, பின்னர் அன்றாடச் செயல்களில் முழுமையாக ஈடுபடுவர். உல்லாடன் பழங்குடியினர் விருந்துக்குச் செல்லும் போது அரிசி, காய்கறிகள், கள், குறைந்தளவு பணம் முதலானவற்றை எடுத்துச் செல்லும் வழக்கமுடையவர். இது விருந்தளிப்பவனுக்கு ஏற்படும் செலவைக் குறைப்பதற்காக அளிப்பதாகும். சண்டாளர் எனப் பிறரால் அழைக்கப்படும் இவர்களின் சமூக, பொருளாதார அமைப்பில் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. சீ.ப.

**உல்லி, சர் (சார்லசு) இலியோனார்டு** இங்கிலாந்தைச் சார்ந்த தொல்லியல் அறிஞர். இவர் இலண்டனில் கி.பி. 1880–ஆம் ஆண்டு பிறந்தார். இவர் ஈராக்கில் உள்ள 'ஊர்' என்னும் சுமேரியர்களின் பண்டைய நகரை அகழாய்வு செய்து புகழ் பெற்றார். மண்ணியல் ஆய்வுகளும் இவர் மேற்கொண்டார். உல்லி (Wolley Sir (Charles) Leonard) சூடான் நாட்டில் தொல்லியலாய்வுப் பயணங்களை 1907 முதல் 1911 வரை மேற்கொண்டார். இவ்வாய்வுப் பயணங்கள் மூலம் இப்பகுதி தொன்மை மிக்க



உல்லி, சர் (சார்லசு) இலியோனார்டு

எகிப்திய நாகரிகத்தினைக் கொண்டு விளங்கியது என்பதனைக் கண்டறிந்தார். மேலும், வடக்குச் சிரியாவில் கார்க்கெமிசில் (Carchemish) இவர் இலாரன்சு (T.W. Lawrence) என்னும் அறிஞருடன் இணைந்து அகழாய்வுகள் மேற்கொண்டார். அவை 1912 முதல் 1914 வரை நடைபெற்றன. பின்னர், எகிப்திய அரசர் அக்னதானின் தலைநகரமான தெல் எல் – அமர்னாவை (Tell el – Amarna) உல்லி அகழாய்வு செய்தார். இவர் 1922 முதல் 1934 வரை 'ஊர்' நகரில் அகழாய்வு மேற்கொண்டார். இந்நகரம் கி.மு. 400 வரை தலைசிறந்த நகரமாக விளங்கியிருந்தது என இவ்வகழாய்வுகள் மூலம் கண்டறியப்பட்டது. உல்லி இந்நகரத்தின் கலை, இலக்கியம், பண்பாடு, மக்களின் வாழ்க்கை நிலை, சமயம் ஆகியவற்றை ஆராய்ந்து வெளியிட்டார். அங்கு நடைபெற்ற அகழாய்வுகளில் அரசர்களின் கல்லறைகள் கண்டுபிடிப்பு இவர்தம் ஆய்வுகளில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இவர் 'ஊர்' நகரைப் பற்றி 10 தொகுதிகள் (Ur Excavations) 1927–ஆம் ஆண்டு வெளியிட்டார். மெசபடோமிய நாகரிகத்திற்கும், ஈசியன், (Aegean) கிரேக்க நாகரிகங்களுக்கும் உள்ள தொடர்பை உல்லி ஆராய்ந்து உறுதி செய்தார். தெற்குத் துருக்கியில் ஆண்டியாக்கிற்கு (Antioch) வடக்கிலுள்ள தெல் அட்சனா (Tell Atchana) என்ற இடத்திலும் இவர் அகழாய்வுகள் மேற்கொண்டு 'ஊரியன்' (Hurrian) மக்களின் பண்பாட்டைக் கண்டறிந்தார். அங்கு கி.மு. 4000 த்திற்கும் முற்பட்ட தொன்மைப் பொருள்கள் கிடைத்தன. இவர் 1935 –ஆம் ஆண்டில் 'கருணைமறவன்' (Knight) என்ற விருதைப் பெற்றார். இவர் 1960–இல் காலமானார். சு.இரா.

**உலக்கைப் பாட்டு** என்பது பெண்கள் தினை, நெல் முதலியவற்றை உரலில் இட்டு மாறி மாறிக் குற்றும்போது பாடும் இசைப்பாட்டினைக் குறிக்கும். இது வள்ளை, வள்ளைப்பாட்டு எனவும் கூறப்படும். இப்பாட்டு தலைவன் பெருமையைச் சிறப்பித்துக் கூறுவதாக அமையும். மேலும், இது தலைவனிடம் இப்பெண்கள் கொண்ட காதலைக் குறிப்பாக வெளிப் படுத்தும் பாங்கில் அமைவதும் உண்டு. புகார் நகரப் பெண்கள் முத்துகளை உரலில் இட்டு, கரும்பினை உலக்கையாகக் கொண்டு, காஞ்சி மர நிழலில் குற்றிய போது, சோழ மன்னனது புகழ் பாடியமை சிலப்பதி காரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மூங்கில் நெல்லைப் பாறையாகிய உரலிலே பெய்து, யானைத் தந்த மாகிய உலக்கையால் குற்றிச் சேம்பிலையாகிய முறத்தில் இட்டுப் புடைக்கும்போது, தலைவியும் தோழியும் தலைவனது புகழ்பாடும் காட்சியினைக் கபிலர் குறிஞ்சிக் கலியில் குறிப்பிட்டுள்ளார். அ.மா.ப.

**உலக அஞ்சல் இணையம்**: அஞ்சற் பணி யின் மூலம் உலகத்தை ஒன்றாக இணைக்கவல்ல ஓர் அமைப்பு உலக அஞ்சல் இணையமாகும் (Universal Postal Union). அஞ்சற் பணியை மேம்படுத்தி அனை வருக்கும் எளிதாகக் கிடைக்க வழிசெய்து கொடுக்க வல்ல நிறுவனம் இது. இந்த ஆணையம் கி.பி. 1874 –ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 9–ஆம் நாள் சுவிட் சர்லாந்து நாட்டிலுள்ள பெர்ன் (Berne) என்ற நக ரத்தில் முதன் முதலாக நிறுவப்பட்டது. ஆனால், உலக அஞ்சல் இணையம் என்ற இப்பெயர் கி.பி. 1878–ஆம் ஆண்டுதான் வைக்கப்பட்டது. இந்நிறுவ னத்தை ஐக்கிய நாடுகள் சபை 1947–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15–ஆம் நாள் ஒரு செயலாண்மை யாக ஏற்றுக்கொண்டது. இது சமூக, பொருளாதார மன்றத்தின் (Social and Economic Council) ஒப்புத லால் ஐக்கிய நாடுகள் அவையின் செயலாண்மையாக மாறியது. ஐக்கிய நாடுகள் அவையின்கீழ் இயங்கு கிற பல்வேறு செயலாண்மைகளுள் இதுவும் ஒன்று. இது 1948–ஆம் ஆண்டு சூலை மாதம் முதல் நாளி லிருந்து செயற்பட்டு வருகிறது.

இவ்விணையத்தின் ஆட்சி மொழி (Official Language) பிரெஞ்சுமொழி ஆகும். உலக அஞ்சல்அமைப்பு (Universal Postal Congress), ஆட்சிக் குழு (Executive Council), அஞ்சல் ஆய்வு ஆலோசனை மன்றம்(Consultative Council for Postal Studies), பன்னாட்டுப் பிரிவு (International Bureau) ஆகியன இதில் அமைந் துள்ள முக்கியமான அமைப்புகளாகும். உலக அஞ்சற் குழுவில் பல உறுப்பினர்கள் உள்ளனர். இந்த இணையத்தைஏற்றுக்கொண்டுள்ள எல்லா நாடுகளும் இதில் உறுப்பினர்கள். இதன் ஆட்சிக் குழுவில் 40 உறுப்பினர்கள் உள்ளனர். அஞ்சல் ஆய்வு ஆலோ சனை மன்றத்தில் 35 உறுப்பினர்கள் செயற்பட்டு வருகின்றனர்.

ஐக்கிய நாடுகள் அவையின் செயலாண்மைகளில் மிகவும் பழமையான அமைப்பு இந்தஅமைப்பு. இந்த அமைப்பை முதன்முதலாகப் பாரிசு நகரத்தில் கி.பி. 1863-ஆம் ஆண்டு கூடிய பன்னாட்டு அஞ்சல் மாநாடு (International Postal Conference) ஏற்படுத்தியது. எல்லா நாடுகளுக்கிடையேயும் அஞ்சல்வழித் தொடர் புகளை ஏற்படுத்த வேண்டுமென்று இம்மாநாட்டில் கலந்துகொண்ட 15 நாடுகளும் வலியுறுத்தி, ஓர் ஒப்பந்தத்திற்கு வந்த பின்னரே இந்த அமைப்பு ஏற்பட்டது. பாரிசு நகரத்தில் கி.பி 1874-ஆம் ஆண்டு நடைபெற்ற இரண்டாம் பன்னாட்டு அஞ்சல் மாநாடு (கி.பி.1878) இதற்கு‘உலக அஞ்சல்இணையம்’ எனப் பெயரிட்டது. ஐக்கிய நாடுகளின் பொது அவை 1948-இல் இதனையும் தனது சிறப்புச் செய லாண்மைகளில் (Specialised Agencies) ஒன்றாக அங் கீகரித்தது. அதற்குப் பின்னர் இதனுடைய அமைப்பு செயற்படும் விதம் ஆகியன ஐக்கிய நாடுகள் அவையின் பிற செயலாண்மைகளுக்கொப்ப 1964-ஆம் ஆண்டில் மாற்றியமைக்கப்பட்டன. வியன்னா (Vienna) நகரில் நடைபெற்ற 15-ஆம் உலக அஞ்சல் மாநாடு இந்த மாற்றங்களைப் பரிந்துரைத்தது. இத னுடைய அமைப்பு, பொது ஒழுங்குவிதிகள், கூட்டப் நடத்தல் (Convention) போன்றவற்றில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன. அவை 1966-ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வந்தன. இந்த அமைப்பு அர சியல் சார்பில்லாத அமைப்பு; அஞ்சல் பணிக்கென ஏற்படுத்தப்பட்ட அமைப்பு. இதில் மிகப் பல உறுப் பினர்கள் உள்ளனர். இந்த உறுப்பினர்களின் எண் ணிக்கை ஐக்கிய நாடுகள் அவையின் பிற செயலாண் மைகளில் இருக்கக் கூடிய உறுப்பினர்களின் எண் ணிக்கையைவிட அதிகம். இதில் 1976-ஆம் ஆண்டில் 154 உறுப்பினர்கள் இருந்தனர். இந்த அமைப்பின் மற்றொரு முக்கியமான கூறு, ஐக்கிய நாடுகள் அவை யில் உறுப்புநாடுகளாக உள்ள நாடுகள் மட்டும் அல் லாமல், உறுப்பினர்களாக இல்லாத நாடுகளும் இதில் உறுப்பினர்களாக இருப்பதேயாகும்.

உலக அஞ்சல் அமைப்பில் எல்லா நாடுகளும் உறுப்பு நாடுகளாக இருக்கின்றன. அதாவது, உலக அஞ்சல் அமைப்பானது (Universal Postal Congress) ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை தனது கூட்டத் தொடரை நடத்துகிறது. இக் கூட்டத்தில் அஞ் சல் இணையத்தின் செயல்திட்டங்கள், வரவு

செலவுத் திட்டத்தின் கணக்குகள் ஆகியன விவாதிக்கப்படுகின்றன. செயல் திட்டங்கள், வரவு செலவுக் கணக்குகள் போன்றவை முறையாக நேரத்திற்கு நேரம் திறனாய்வு செய்வதோடு, மேம்பாட்டிற்குரிய வழிமுறைகளையும் இவ்வமைப்பு தெரிவிக்கிறது. உலக அஞ்சல் இணையத்தின் பொதுக் கொள்கைகளை வரையறுக்கக்கூடிய அமைப்பாக இது இயங்குகிறது.

உலக அஞ்சல் இணைய ஆட்சிக் குழுவில் 40 உறுப்பினர்கள் உள்ளனர். அவர்களை உலக அஞ்சல் அமைப்பு (Congress) தேர்ந்தெடுக்கிறது. இந்த உறுப்பினர்கள் அனைவரும் ஆண்டிற்கு ஒரு முறை கூடி முடிவுகள் எடுக்கின்றனர். சுவிட்சர்லாந்தில் பெர்ன் என்ற இவ்விணையத்தின் தலைமையிடத்தில் இவர்கள் கூடுகின்றனர். இவர்கள் பலதரப்பட்ட பொருள்பற்றி விவாதித்து முடிவு செய்கின்றனர். இவர்கள் அஞ்சற் பணி சம்பந்தமாகப் பன்னாட்டு அமைப்புகளோடு வைக்கக்கூடிய தொடர்புகள், ஐக்கிய நாடுகள் அவையுடன் தொடர்பு முதலியன பற்றி விவாதித்து முடிவெடுப்பார்கள். இம்முடிவுகள் அனைத்தும் உலக அஞ்சல் அமைப்பிற்குப் பரிந்துரை செய்யப்படும். இப்பரிந்துரைகள் மீது முடிவெடுக்கும் பொறுப்பு உலக அஞ்சல் அமைப்பைச் சார்ந்ததாகும். உலக அஞ்சல் இணைய ஆட்சிக் குழுவின் மற்றொரு முக்கியமான பணி, தலைமை இயக்குநரை (Director-General) நியமனம் செய்வதாகும். அவர்தான் உலக அஞ்சல் இணையத்தை நடத்திச் செல்லும் பொறுப்பு வாய்ந்தவர்.

அஞ்சல் ஆய்வு ஆலோசனை மன்றப் பிரிவு (Consultative Council for Postal Studies)1957- ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. இது ஆலோசனை வழங்கும் அமைப்பாகும். அஞ்சல் குறித்த செயல்கள், செயல்முறைகள், நுட்பத்திறங்கள், பொருளாதாரம் ஆகியன குறித்து ஆய்வுகள் நடத்தி, அறிக்கைகள் மூலமாக ஆலோசனை வழங்குவது இதன் முக்கிய பணி.

பன்னாட்டுப் பிரிவு (International Bureau) என்பது உலக அஞ்சல் இணையத்தின் நிலையான செயலகம் ஆகும். இதற்குத் தலைவராகத் தலைமை இயக்குநர் திகழ்வார். அஞ்சல் மூலமாக எல்லா நாடுகளையும் இணைத்தல், அஞ்சல் மேம்பாட்டு ஆலோசனை, செய்தித் திரட்டல் போன்ற பணிகளுடன், பன்னாட்டு அஞ்சற் பணிகளின் கணக்குகளைத் தீர்த்து முறைப்படுத்தும் தீர்வு அமைப்பாகவும் (Clearing House) இது செயற்படுகிறது.

உலக அஞ்சற் பணிகளை மேம்படுத்தவும், எல்லா நாடுகளிலும் ஒரே மாதிரியான அஞ்சல் விகிதங்களை (Postal rates) வரையறை செய்யவும் ஒரே அஞ்சற் பணி எல்லைச் சார்பில் பிரித்துச் செயற்பட வேண்டுமென்ற முயற்சி 1963-ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. இதேபோல், உலக அஞ்சல் இணையத்தின் பணிகள் எல்லாமே அஞ்சற் பணிகளை மையமாகக் கொண்டு அவற்றைச் சீர்படுத்திச் செம்மைப்படுத்தவும், அஞ்சற் போக்குவரத்தை விரைவாக்கவும் பல முயற்சிகளை இந்நிறுவனம் எடுத்துவருகிறது. என்.எஸ்.ச.

துணை நூல்:

**Arthur S. Banks**, Political Handbook of the World, McGraw Hill, 1976.

**உலக அமைதிக் கல்வி**: கொடுங்கோன்மை, வறுமை, வன்முறை, போர் ஆகியவற்றால் மனித இனம், சமுதாய வாழ்க்கை ஆகியவற்றுக்கு நேரக்கூடிய பேரின்னல்கள் குறித்துச் சிறுவயதிலிருந்தே குழந்தைகளுக்குப் பாடம் புகட்டுவதே அமைதிக் கல்வியின் (Peace Education) தலையாய குறிக்கோளாகும். அமைதிக் கல்வியானது குழந்தையின் ஏதோ ஒரு குறிப்பிட்ட பருவத்தில் கற்பித்தபின் நிறுத்தப்பட்டு விடுவதன்று. அது மனிதனின் வாழ்க்கை-குழந்தைப் பருவம், இளமைப் பருவம், காளைப் பருவம், முதுமைப் பருவம் - முழுவதும் கற்பிக்கப்பட வேண்டிய ஒன்று என்று உல்பு (Wulf) என்னும் கல்வியாளர் கூறியுள்ளார்.

அமெரிக்கா, சோவியத்து ஒன்றியம், சப்பான், ஐரோப்பிய நாடுகள் ஆகியவையும், இந்தியா போன்ற அணிசேரா நாடுகளும் உலக அமைதிக் கல்வியில் நாட்டம் கொண்டு புதிய முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. இம்முயற்சிகளில் நாடுகளிடையே மாறுபாடுகள் உள்ளன. நாட்டின் பொருளாதார, சமுதாய வளர்ச்சியை மேம்பாடு அடையச் செய்வதன் மூலமாக, உலக அமைதியை மூன்றாம் உலக நாடுகள் (Third World Countries) வலுவடையச் செய்கின்றன. பொதுவுடைமை நாடுகள் தங்கள் நாட்டுக் கல்வியமைப்பே அமைதியை வளர்க்கும் வகையில் அமைந்திருப்பதாகக் கூறுகின்றன. அந்நாடுகள் சமுதாய வளர்ச்சியின் குறிக்கோளே அமைதியில் தான் உள்ளது என்னும் கொள்கையைக் கொண்டுள்ளன. அமெரிக்க ஐக்கியக் குடியரசு, ஐரோப்பிய நாடுகள் ஆகியன அங்கு மட்டுமன்றி, உலக அளவிலும் அமைதிப் பணிக்காகப் பாடுபட்டு வருகின்றன.

அனைத்து நாட்டுக் கல்வி (International Education), உயிர் பிழைப்பதற்கான கல்வி (Survival Education), உலகக் கல்வி (Global Education), உலகக் குடிமைக் கல்வி (Education for World Citizenship), வளர்ச்சிநிலைக் கல்வி (Developmental Education) ஆகிய கல்வி முறைகள் ஒவ்வொன்றும் ஒரு சில வகைகளில் அமைதிக் கல்வியின் கூறுபாடுகளைக் கொண்டதேயாகும். இக்கல்வி முறைகளும் இளைஞர் நலம் சிறப்படையச் செய்ய உதவுகின்றன.

கால்டங்கு (Galtung) என்பவர் 'அமைதி என்னும் சொல்லுக்குப் போரின்மை, தாக்குதலின்மை என்று எதிர்மறையாகப் பொருள் கொள்ளுவதைவிடப் போர், தாக்குதல் ஆகியவற்றை உருவாக்கும் சூழலை முழுமையாக அறிந்து கொள்ள உதவும் கருவி எனப் பொருள் கொள்ள வேண்டும்' என்று விளக்கியுள்ளார். அதன்படி போர், வன்முறை ஆகியன மட்டுமன்றிச் சமுதாயத்தில் வன்முறைக்கு வித்திடும் ஒரு சிறிய சூழல் கூட அமைதிக் கல்வியின் உள்ளடங்கும். ஒரு பள்ளியிலோ குடும்பத்திலோ நடைபெறும் வன்முறைகள்கூட, அமைதிக் கல்வி விவாதத்தில் இடம் பெறக் கூடிய தகுதியுடையனவே என்று ஆவல்சுருடு (Haavelsrud), உல்பு (Wulf) ஆகிய அமைதிக் கல்வியியலறிஞர்கள் கருதுகின்றனர்.

அமைதிக் கல்வியில் கிழக்கு, மேற்கு நாடுகளிடையே நிலவும் தகராறும், அந்நாடுகளின் அணு ஆயுதப் போட்டியின் விளைவாக மனித குலத்திற்கு விளையக்கூடிய பேராபத்தும் முதலாவதாகப் பேசப்படுகின்றன. இரண்டாவதாக, உலகின் வடபாக நாடுகளின் செல்வச் செழிப்பும், தென்பாக நாடுகளின் வறுமையும் அமைதிக் கல்வியில் பேசப்படுகின்றன. மூன்றாவதாக, தூய்மைச் சீர்கேடும் இயற்கையை அழித்தலும் விவாதிக்கப்டுகின்றன. உணவுப் பற்றாக்குறையும் செல்வப் பற்றாக் குறையும் நான்காவதாகச் சொல்லப்படுகின்றன. ஐந்தாவதாக, மக்கள் தொகைப் பெருக்கமும், ஆறாவதாக மனித உரிமைகள், சமுதாய நியாயங்கள் ஆகியனவும் அமைதிக் கல்வியில் விவாதிக்கப்படுகின்றன.

மேற்கூறியவற்றைச் சீரமைப்பதில் கல்விக்குப் பெரும் பங்குண்டு. இச்சிக்கல்களைத் தீர்த்திடக் கல்வி தவறுமானால், வருங்கால இளைஞர்களைச் செம்மையுற வடிவமைக்கும் பொறுப்பில் கல்வி தோல்வியுற்றது என்று கருத இடமுண்டாகும். பிறர்மீது தப்பெண்ணங்களைத் தவிர்த்தல், தன்னை நேசிப்பது போல் பிறரை நேசித்தல், சமுதாயச் சிக்கல்களில் நாட்டம் கொள்ளச் செய்தல், தன் சொந்தச் சிக்கலை உலகச் சிக்கலோடு தொடர்புபடுத்திப் பார்த்தல், அமைதி இயக்கத்தில் ஆர்வத்துடன் இணைத்துக் கொள்ளுதல் போன்ற செயல்களைச் செய்யவல்ல மனப்பாங்கு வளர்ச்சியைக் (Attitude Development) கல்வியால் மட்டுமே இளைஞர்களிடம் வளர்க்க இயலும்.



அமைதிக் கல்வியினை வன்முறையற்ற சூழலில் தான் மாணவர்கள் பெறுதல் இயலும். பங்குகொண்டு கற்றல் (Participatory Learning), தாமே கற்கத் தொடங்குதல் (Self-initiated Learning) ஆகிய கற்றல் முறைகள், மாணவர்களிடம் பொறுப்புணர்ச்சியையும் செயல்திறனையும் வலுப்படுத்தக்கூடியன. உலகச் சிக்கல்களின் தோற்றம் வரலாற்றுப் பின்னணி, காரணங்கள் ஆகியவற்றை மாணவர்களுக்குக் கற்பித்தலின் மூலம், உலகச்சிக்கலுக்கான தீர்வுகளைப் பற்றிய சிந்தனைகளை மாணவர்கள் பெறமுடியும்.

உலக அமைதிக்கான கல்வி, குடும்பம், பள்ளி, சமுதாயம் ஆகிய மூன்று நிலைகளிலும் நடைபெறக் கூடிய குடும்பச் சிக்கல்கள் எழும்போது, பெற்றோர்கள் அமைதியான நெறிமுறைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம், அவர்கள் தங்கள் குழந்தைகளுக்கு அமைதியின் எடுத்துக்காட்டாக விளங்கமுடியும். அமைதிக்கு ஊறுவிளைவிக்கும் காரணங்கள் குறித்து மாணவர்கள் பள்ளிகளில் விவாத மேடையில் முழங்கி, பிற மாணவர்களின் சிந்தனையைத் தூண்ட முடியும். அமைதித் தொடர்பான பாடக் கருத்துகளைக் கற்பிக்கும் போது, ஆசிரியர் உலக அமைதியின் தேவை, அதைப் பாதுகாத்து வளர்த்தல் போன்றவற்றின் இன்றியமையாமையை வலியுறுத்தலாம். அமைதிக் கல்வியின் தேவையினை வரலாறு, இலக்கியம், சமயம், சமுகவியல், அரசியல், பொருளாதாரம் ஆகிய பாடங்களைக் கற்பிக்கும்போது ஆசிரியர் எடுத்துக்கூறலாம். வானொலி, தொலைக் காட்சி, செய்தித்தாள்கள் ஆகியனவும் அமைதிக் கல்வியைப் பரப்புவதில் பங்காற்ற முடியும். கோயில்கள், அரசியல் பொதுக்கூட்டங்கள், பொதுமேடைகள் ஆகியவற்றிலும் உலக அமைதியைப் பாதுகாத்து நடப்பதன் தேவையைப் பேசலாம். அமைதித் தொடர்பான ஆய்வுகள், நடைமுறை அரசியல் ஆகியவற்றின் மூலம் உலக அமைதிக் கல்வியை மனித குலத்திற்குப் புகட்டலாம். எஸ்.த.

துணை நூல்கள்:

**Henderson, G. (Ed),** Education for Peace: Focus on Mankind, Association for Supervision and Curriculum Development, Washington D.C., 1973.

**Wulf, Ch. (Ed),** Handbook on Peace Education, International Peace Association, Oslo, 1974.

**உலக அரசாங்கம்:** உலகம் முழுமையும் ஒரு கட்டுப்பாட்டிற்குள் அமையும்படி எல்லா நாடுகளுக்கும் பொதுவாக ஏற்படும் ஆட்சி அமைப்பே உலக அரசாங்கம் ஆகும். அரசியல் சிந்தனையாளர்கள் இது பற்றிப் பலவிதமான கருத்துகளைக் கூறியுள்ள போதும், அவை நடைமுறைக்கு வரவில்லை. உலகில் அமைதியை நிலைநாட்ட உலக அரசாங்கம் தேவை யென்பதை 1905-ஆம் ஆண்டு என்றி காம்பெல் (Henry Campell) என்பார் எடுத்துக் கூறியுள்ளார். முதல் உலகப்போர் முடிவுற்ற பின்னர் உலக அரசாங்க நிறுவனத்தின் முன்மாதிரியாக உருவாக்கப்பட்டதுதான் அனைத்து நாடுகள் சங்கம் (League of Nations). முதல் உலகப் போர் நடைபெற்று வந்த பொழுது, நாடுகளுக்கிடையே கூட்டுப்பாதுகாப்பு, நடுவர் தீர்ப்பு, பொருளாதார, சமுதாய ஒத்துழைப்பு, படைக் குறைப்பு, தூதுவர்கள் பரிமாற்றம் போன்ற வற்றின் அடிப்படையில் உலக அரசாங்கம் அமைக்க வேண்டுமென்ற கருத்துகள் நிலவின. அமெரிக்க அதிபர் உட்ரோ வில்சன் (Woodrow Wilson) 1918-இல் பதினான்கு அமிசங்கள் (Fourteen Points) அடங்கிய அறிக்கையை வெளியிட்டார். அதில் அரசியல் சுதந்திரத்தையும் எல்லைப் பாதுகாப்பையும் சிறிய நாடுகளுக்கும் பெரிய நாடுகளுக்கும் அளிக்கக்கூடிய ஒரு பொதுக் கூட்டமைப்பை உருவாக்க வேண்டுமெனக் கூறியிருந்தார். இங்கிலாந்தும் பிரான்சும் உலக அரசாங்கம் அமைக்க வழிமுறைகள் கூறச் சிறப்புக் குழுக்களை நியமித்தன. அவ்வமயம் தென்னாப்பிரிக்க அரசியல் தலைவராக இருந்த சுமட்சு (Field Marshal J.C. Smuts) என்பவர் உலக நாடுகள் அமைப்பு மனித சமுதாயத்தின் அமைதிப் பாங்கான வாழ்விற்கு ஏற்ப ஓர் உயர் நிறுவனமாக அமைய வேண்டும் என்ற கருத்தினை வெளியிட்டார். அவ்வாறே, அனைத்து நாடுகள் சங்கம் 1919-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 28-ஆம் நாள் தொடங்கப்பட்டது.

இரண்டாம் உலகப் போர் தோன்றியதன் விளைவாக, முதல் உலக அரசாங்க அமைப்பின் முன்னோடியான அனைத்துநாடுகள் சங்கம் முடிவிற்கு வந்தது. அதனை அடுத்து, ஐக்கிய நாடுகள் அவை(U.N.O.)உருவாக்கப்பட்டது. தொடக்கத்தில் அது 50 நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்டிருந்தது. அந்த உறுப்பு நாடுகளின் எண்ணிக்கை இன்று 150 க்கு மேலாக உயர்ந்துள்ளது. உலக ஒற்றுமைக்கும், உலக சமாதானத்திற்கும், பாதுகாப்பிற்குமாக ஐக்கிய நாடுகள் அவை ஏற்படுத்தப்பட்டது. முன்னைய சங்கத்தில் இருந்த குறைபாடுகள் நீக்கப்பட்டு, இப்புதிய அவை அமைக்கப்பட்டது.

உலக அரசாங்கத்தின் முன்னோடியாக ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டமைப்பைக் (European Economic Community)குறிப்பிடலாம். பல நாடுகளின் ஒத்துழைப்பிற்குச் சிறந்த எடுத்துக்காட்டான இந்த அமைப்பு, ஐரோப்பியப் பாராளுமன்றம் ஒன்றை உருவாக்கியுள்ளது. மொழி, இனம் போன்ற வேற்றுமைகளுக்கு அப்பாற்பட்டு, பல நாடுகள் இணைந்து செயற்படமுடியும் என்று இக்கூட்டமைப்பு காட்டுகிறது. இந்தக் கூட்டமைப்பில் உறுப்பு நாடுகளிடையே இரண்டாம் உலகப் போருக்குப்பின் அரசியல் மற்றும் எல்லைகள் பற்றிய கேள்வி எதுவும் தலைதூக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. வட்டார முறையில் அமைக்கப்பட்டுள்ள தென் கிழக்காசிய நாடுகளின் கழகம் (ASEAN), அராபிய நாடுகளின் அமைப்பு (OAU), ஆப்பிரிக்க நாடுகளின் அமைப்பு (OAS) போன்ற அமைப்புகள் அந்தந்த வட்டாரத்திலுள்ள நாடுகளிடையே ஒத்துழைப்பைத் தூண்டுகின்றன. இத்தகைய ஒத்துழைப்பு உலகம் தழுவியதாக அமையும்பொழுது உலக அரசாங்கம் தோன்ற வாய்ப்புகள் அதிகரிக்கும். அந்நிலை தோன்றும் பொழுது நாட்டு இறைமை (National Soverignty) என்பது ஒரு முட்டுக் கட்டையாக இராது.

எம்.ப.

**உலக அறவி** என்பது மணிமேகலைக் காப்பியத்தில் இடம் பெற்றுள்ள பொது மன்றம் ஒன்றினைக் குறிக்கிறது. இது ஊரம்பலம் எனவும் வழங்கப்பட்டது. காவிரிப்பூம்பட்டினத்தில் குற்றமற்ற பெருந்தவத்திற்குரியோர் வாழ்கிற இடமாகச் சக்கரவாளக் கோட்டம் அமைந்திருந்தது. அதன்கண் விளங்கிய சம்பாபதிக் கோயிலுக்கு முன்புறத்தில் பலரும் ஒருசேர நுழையுமாறு திறந்த பெரிய வாயிலினையுடையதாக இந்த 'உலக அறவி' விளங்கியது. இதனைப்'பலர் புகத் திறந்தபகுவாய் வாயில் உலக அறவி' என்று மணிமேகலை ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். பல ஊர்களிலிருந்தும் வந்து, பசியினால் வருந்திய மக்கள் பலர் இங்குக் குழுமியிருந்தனர்;காயசண்டிகையின் சொற் கேட்டு மணிமேகலை, இவ்விடத்திற்கு வந்து, பசித்து வந்தோர்க்கெல்லாம் தன் கையிலுள்ள அமுதசுரபி என்னும் பாத்திரத்தின் மூலம் உணவு வழங்கிப் பசிப்பிணி போக்கினாள். இந்த இடத்தைத் தருமசாலை என்றும் கூறலாம். இவ்விடம் அம்பலப் பீடிகை என்றும், பொதியில் என்றும், மன்றமென்றும், மன்றப் பொதியில் என்றும் மணிமேகலையில் குறிப்பிடப்பட்டுள்ளது. கந்திற்பாவை என்னும் தெய்வம் உறைந்த இடமும் இதுவேயாகும்.

வீ.சே.

**உலக இடைகழி** என்பது மக்கள் கடந்து செல்வதற்கமைந்த நகரப் பெருவாயில். அந்த வாயிலை அடைத்துவிட்டால் நகரமக்கள் நகருக்கு வெளியே செல்லவோ வெளிமக்கள் நகருக்கு உள்ளே நுழையவோ இயலாது. பழங்காலத்தில் காவிரிப்பூம்பட்டி

னத்திற்கு அமைந்திருந்த பெருவாயிலை 'உலக இடைகழி' என்று சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது. அப்பெருவாயில் வழியாக நகரின் வெளியே செல்லுதற்கமைந்த வழியினைக் குறிப்பிடும்போது, அது ஆறு போல் உள்ளது என்று கூறப்பட்டுள்ளது. காவிரிப் பூம்பட்டினம் மலை போலவும் அதினின்றும் புறப்பட்டுச் செல்லும் சாலை பெரிய ஆறு போலவும் காணப்பட்டன என்றும், அங்குள்ள உலக இடைகழியினைக் கடந்து, கோவலனும் கண்ணகியும் புகார் நகரினை நீங்கிச் சென்றனர் என்றும் இளங்கோவடிகள் கூறியுள்ளார். 'மலைதலைக் கொண்ட பேரியாறு போலும், உலக இடைகழி ஒருங்குடன் நீங்கி' என்பது அவர் கூற்று. இதன்கண் உள்ள உலகஇடைகழி என்பதற்கு 'ஊர் வாயில்' என்று அடியார்க்கு நல்லார் பொருள் கூறியுள்ளார்.

நகர எல்லையைக் கடந்து செல்வதற்கமைந்த பெருவாயிலைப் போலவே ஒரு நாட்டின் எல்லையைக் கடந்து வெளிநாட்டிற்குச் செல்லுவதற்கமையும் வாயிற்பகுதியும் 'உலக இடைகழி' என்று கூறப்பட்டது. கள்ளில் ஆத்திரையனார் தம் புறநானூற்றுப் பாடலில் (புறம். 175) இத்தொடரை இப்பொருளில் பயன்படுத்தியுள்ளார். மோரிய மன்னர் பிற நாடுகளை வெல்லக் கருதித் தேர் ஊர்ந்து செல்லுதற்கமைந்த வழியினைச் சுட்டும் போது, 'விண்பொரு நெடுங்குடைக் கொடித்தேர் மோரியர், திண்கதிர்த் திகிரி திரிதரக் குறைந்தஉலக இடைகழி' என்று அவர் குறிப்ட்டுள்ளார்.

அ.மா.ப.

**உலக இந்தியத் தன்மை:** உலகில் ஒவ்வொரு நாட்டவரும் தங்களுக்கென்ற தனிப்பண்பாட்டையும் வரலாற்றையும் கொண்டுள்ளனர். ஒவ்வொருவரும் தத்தம் வாழ்க்கை முறை, சமூக அமைப்பு, அரசியலமைப்பு, பொருளாதார அமைப்பு, கலை, இலக்கியம் முதலான பிற பண்பாட்டுக் கூறுகளின் தன்மை போன்றவற்றில் வேற்று நாட்டவரிடமிருந்து தனித்துக் காணப்படுகின்றனர். இன்று உலகப் பண்பாடுகள் அனைத்திலுமே மக்கள்தம் தனித்தன்மையைக் காத்துக் கொள்வதிலும் தம் பண்பாட்டின் மரபுகளைப் பிற பண்பாட்டினருக்குப் பரப்புவதிலும், அதனை அழிவுறாமல் வளர்ச்சி பெறச் செய்வதிலும் மிகுந்த ஆர்வம் கொண்டவர்களாக உள்ளார்கள்.

இன்று ஒரு நாட்டவர் வேறு நாடுகளில் குடியுரிமை பெற்றுப் பெருமளவில் வாழ்ந்து வருகின்றனர்; அவர்கள் அனைவரையும் ஒன்றுபடுத்தித் தம் நாட்டுத் தன்மையைக் காக்கவும், உலகந் தழுவிய ஒரு நாட்டவரிடையே ஒற்றுமை உணர்வையும் கட்டுக்கோப்பான நிலையையும் ஏற்படுத்தவும் பல அரசு அமைப்புகள் செயற்படுகின்றன. அரசு சாரா அமைப்புகளும் உள்ளன. அந்த அமைப்புகள் தனி நோக்கங்களைக் கொண்டும் செயற்படுவனவாகக் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, 'உலக அமெரிக்கர் தன்மை' அல்லது 'அனைத்து அமெரிக்கர் பாங்கு' (Pan-Americanism) என்று அரசு சார்பில் இயங்கும் அமைப்பு, உலகம் முழுவதிலும் உள்ள அமெரிக்கர்களிடையே ஒற்றுமையையும் இணக்கத் தன்மையையும் வளர்க்கும் நிலையைக் கொண்டது. 'உலகச் செருமானியர் பாங்கு' (Pan-Germanism), 'உலக அடிமையர் பாங்கு' (Pan-Slavism), உலகத் துருக்கியர் பாங்கு (Pan-Turkism) ஆகிய அனைத்து அமைப்புகளும் இனச்சார்புடையனவும் பேரரசுச் சார்புடையனவுமான தேசியப் போராளியர் இயக்கங்களாகக் காணப்படுகின்றன. 'உலக இசுலாமியம்'(Pan-Islamism) உலக நாடுகளிலுள்ள இசுலாமிய மக்களை ஒன்றிணைப்பதற்காகவும் ஐரோப்பியக் குடியேற்ற ஆதிக்கத்தை எதிர்ப்பதற்காகவும் ஏற்பட்டது. ஒவ்வோர் அமைப்பின் சூழலும் மையக் கருத்துகளும் நோக்கங்களும் அமைப்பும் செயல்முறைகளும் வேறுபட்ட தன்மையைக் கொண்டவை.

உலக இந்தியத் தன்மை (Pan-Indianism) ஓர் அண்மைக்காலத் தோற்றமாகும்; பல மொழிகளையும் சமயங்களையும் பண்பாட்டையும் கொண்ட இந்தியர்களை ஒற்றுமையுணர்வுடனும் இணக்கத்தன்மையுடனும் காணும்பொருட்டு ஏற்பட்டதாகும். இந்தியர்களின் வரலாறு சற்றேறக்குறைய ஐயாயிரம் ஆண்டுகள் முன்னர்வரை குறிப்பிடப்படுகிறது. இருப்பினும், கி.மு. 600-ஆம் ஆண்டிற்கு முந்திய வரலாறு முழுமையற்றதும் தெளிவற்றதுமாகும். ஆரியர்களின் வளர்ச்சி கி.மு. 1500 முதல் கி.மு. 1000 வரை காணப்பட்டதிலிருந்தே இந்திய மண்ணில் நாகரிகத்தின் வளர்ச்சி செழித்தோங்கியது. தொன்மக் கதைகளில் கூறப்படும் அரசுகள் முதல், இந்திய வரலாறு பல அரசுகளைக் கண்டது.

சாகர் (Sakas), ஊணர்(Huns), கிரேக்கர், முகமதியர், இராசபுத்திரர், போர்ச்சுகீசியர், தச்சுக்காரர் (Dutch), பிரெஞ்சுக்காரர், ஆங்கிலேயர் முதலானோர் இந்திய மண்ணில் அரசுகளை அமைத்து ஆட்சி செய்தனர். இவர்கள் தவிர, பல பகுதிகள் பழங்குடி ஆட்சியாளர்களால் ஆளப்பட்டு வந்தன. அவர்கள் அனைவருமே பல காலங்களில் பல்வேறு பகுதிகளைத் தம் ஆட்சிக்கு உட்படுத்தி வந்திருந்தாலும், அந்தந்தப் பகுதி மக்களின் பண்பாட்டில் இடையூறுகளை ஏற்படுத்தாமையினால் பல்வேறு பண்பாடுகளும் வளரலாயின. மக்களின் அன்றாட வாழ்க்கை அமைப்பில் இடையூறுகளை இந்த ஆட்சியாளர்களும் அரசுகளும் ஏற்படுத்தவில்லை. இதனால், தத்தம் உரி

மையுடன் தங்களின் விருப்பங்களை நிலைநிறுத்தித் தமக்கெனத் தனிப் பாங்கினை வளர்த்துக் கொண்டனர்.

பல நூற்றாண்டுகள் கடந்த இந்திய வரலாறு ஒன்றியத்தையும் கூட்டிணைப்பையும் (Synthesis) வளர்ச்சியையும் உடையது. இதன்வழி பழைய மரபுகளும் புதிய மதிப்புகளும் (Values) கூடியிணைந்து புதுப் பரிமாணத்தை அடைந்துள்ளன. நீண்டு வளைந்த இந்திய நிலப்பரப்பு பல புவியியற் பண்புகளைக் கொண்டுள்ளதனால், இந்தமண்ணில் வாழும் மக்கள் வேறுபட்ட உடற்கூற்றுப் பண்புகளையுடைய பல இனங்களாகக் காணப்படுகின்றனர். இவர்கள் அனைவரும்இந்த மண்ணின் அணிகலன்கள்.இன்றைய இந்தியத் தன்மை' என்பது பல இனக்கூறுகளையுடைய இந்திய மக்களின் பல வரிவடிவ மொழிகளையும், எழுத்து வடிவம் பெறாத கிளைமொழிகளையும், பல சமயங்களையும் கொண்டது. இந்திய மக்கள் பொருள்சார் பண்பாட்டுத் (Material Culture) தன்மையிலும் உணர்வுகள், கலை, மொழி, இலக்கியம் முதலான பொருள்சாராப் பண்பாட்டுத் (Non-Material Culture) தன்மையிலும் பல வேறுபாடுகளைக் கொண்டவர்கள். இதனால், இவர்களின் பண்பாடு பலவண்ணக் கல்லைப் போன்றது. இணக்கத் தன்மையும் ஒன்றியமும் உலக நாடுகளில் தனி இடம் பெற்றது.

இந்திய நாகரிகம் பல வண்ணக் கூறுகளைக் கொண்டது. பழங்குடித் தன்மையையும் (Tribalism), ஊரகத் தன்மையையும் (Ruralism) மிகப்பெருமளவில் கொண்ட இந்தியத்தன்மை மொழிகள், மரபுகள், நம்பிக்கைகள், கலைகள், இலக்கியங்கள், தத்துவம் முதலானவற்றில் வேற்றுமைகளைக் கொண்டது. எனினும் இந்தியமக்கள் ஒரே அரசியலமைப்பைக் கொண்டு ஒன்றுபடுகின்றனர். இவை அனைத்தையும் ஒன்றுபடுத்தி இந்தியப் பண்பாட்டையும் இந்தியர்களின் தன்மையையும்தம்மனப்பாங்கையும்வேற்றுமையில் ஒற்றுமை' (Unity in Diversity) என்னும் தன்மையில் ஏற்றுக் கொண்டுள்ளனர். உலகின் அனைத்துக்கண்டங்களிலும்வாழும் அனைத்து இந்தியரின் தன்மையும் இதுவே. கே.நி.

**உலக உடல்நல நிறுவனம்** உலக மக்களின் ஆரோக்கிய நிலையை உயர்த்துவதற்காக அமைக்கப்பட்ட நிறுவனம் உலக உடல்நல நிறுவனம் (World Health Organization). இந் நிறுவனம் அமைக்கப்படுவதற்கு முன்னர் ஒரு தற்காலிக ஆணையம் உலக மக்களின் உடல்நலத்தைப் பேணும் பணியைச் செய்து வந்தது. நியூயார்க்கு நகரில் 1946-இல் கூடிய ஓர் உலக உடல்நல மாநாடு இத்தகைய பணியைச் செய்ய ஒரு நிரந்தர அமைப்பு வேண்டும் என்று தீர்மானித்து, அதற்கான அமைப்புச் சட்டத்தைத் தொகுத்தளித்தது. அவ்வமைப்புச் சட்டத்தின் அடிப்படையில் உலக உடல்நல நிறுவனம் ஐக்கிய நாடுகள் சபையின் ஒரு சார்பு அமைப்பாக 1948-ஆம் ஆண்டுஏப்பிரல் 7-ஆம் நாள் நிறுவப்பட்டு, ஏற்கெனவே இருந்த ஆணையத்தின் பணிகளை மேற்கொண்டது.

**உறுப்பினர்கள்**: இந்நிறுவனத்தில் எந்த நாடும் உறுப்பினராகலாம். சுயமாக ஆளும் உரிமை இல்லாத நாடுகள் கூட இதில் உறுப்பினராகலாம். இந்நிறுவனம் 1948-இல்தொடங்கப்பட்டபோது 26 நாடுகளே இதில் உறுப்பினராக இருந்தன. இவ்வெண்ணிக்கை 1963-இல் 120-ஆகவும், 1972-இல் 133-ஆகவும் பெருகி, 1981-இல் 150-ஐ எட்டியுள்ளது.

**நோக்கமும் பணிகளும்**: உலக உடல்நல நிறுவன அமைப்புச் சட்டத்தின்படி, உடல்நலம் என்பது வெறும் நோயின்மையையும், சீர்கேடின்மையையும் மட்டும் குறிப்பதன்று; உடல், உள்ளம், சமூகம் ஆகிய இம் மூன்றும் முழு நலத்துடன் இருக்கும் நிலையைக் குறிப்பதாகும். மக்கள் எல்லோரும் இத்தகைய நலனைப் பெற வேண்டும் என்பதே உடல்நல நிறுவனத்தின் நோக்கமாகும்.

உலக உடல்நல நிறுவனம் பின்வரும் பணிகளில் ஈடுபடுகிறது. முதலாவதாக, உலக நாடுகளில் நிலவும் உடல்நல நிலைகளைக் கண்டு ஆராய்ந்து, அவற்றைப் பற்றிய தகவல்களைச் சேகரித்து உலகம் முழுவதும் பரப்புகிறது. எடுத்துக்காட்டாக, உலகில் எப்பகுதியிலாவது ஏதாவதொரு நோய் ஏற்பட்டால் உலக உடல்நல நிறுவனம் உடனே அது பற்றிய தகவல்களைத் திரட்டி, உலகம் முழுவதும் வானொலிகள் மூலம் ஒலிபரப்புகிறது. வெளியீடுகள், அறிக்கைகள், புள்ளி விவரத் தொகுப்புகள் முதலியவற்றின் மூலமாக உறுப்பு நாடுகளுக்கு அம்மை குத்துதலில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி, புற்றுநோய் ஆராய்ச்சி, உணவுச் சத்துகள் ஆராய்ச்சி, போதை மருந்தடிமைப் பழக்கத்தைக் கட்டுப்படுத்துதல், அணுக்கதிர் வீச்சினால் ஏற்படும் உடல் நலக் கேடுகள், மருந்துகளின் தன்மை ஆகிவை பற்றிச் செய்திகள் சேகரித்து அளிக்கிறது.

இரண்டாவதாக, கொள்ளை நோய் (Plague), திணையின (Endemic) நோய்கள், முதலியவற்றைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கிறது. குறிப்பாக, தொற்று நோய்களுக்கெதிராக உலக உடல்நல நிறுவனம் விரிவான அளவில் இயக்கங்கள் நடத்து

கிறது. இவ்வியக்கங்களுள் சில ஐ.நா. குழந்தைகள் நிதியின் உதவியுடன் நடத்தப்படுகின்றன. இவற்றின் விளைவால் வளர்ந்து வரும் நாடுகளில் பெரியம்மை, எலும்புருக்கி நோய், முறைக்காய்ச்சல் (Malaria), பால்வினை நோய்கள் முதலியவை குறிப்பிடத்தக்க அளவில் குறைக்கப்பட்டிருக்கின்றன. இந் நிறுவனம் உலகம் முழுவதும் முறைக்காய்ச்சல் ஒழிப்புக்கென ஓர் இயக்கத்தைத் தொடங்கியிருக்கிறது; வாந்தி பேதி, மஞ்சள் காய்ச்சல், தோல் நோய் (Yaws), கண்ணிமையரிப்பு நோய் (Trachoma), தொழுநோய் முதலிய நோய்களைக் கட்டுப்படுத்தும் முயற்சியிலும் தீவிரமாக இறங்கியிருக்கிறது. அதில் கணிசமான அளவு வெற்றியும் அடைந்து வருகிறது. நோய்களுக் கெதிரான இந்த இயக்கங்களில் இது தேசிய அளவி லான நோய்த் தடுப்புத் திட்டங்களைச் செயற்படுத் துகிறது; மக்களுக்கு நோய்க் கிருமிக் கொல்லி மருந்துகள், பூச்சிக் கொல்லிகள் ஆகியவற்றைப் பயன் படுத்துவது தொடர்பாக ஆலோசனைகள் வழங்கு கிறது; நோய்களை இனங் காணவும் குணப்படுத்த வும் ஆய்வுக் கூட, மருத்துவ மனை வசதிகளை விரிவு படுத்திக் கொடுக்கிறது. மக்களுக்குத் தூய குடிநீர் வழங்கவும், மகளிர், குழந்தைகள் இவர்களின் உடல் நலனைப் பேணவும், பொதுச் சுகாதார முறையை மேம்படுத்தவும், கிராம மக்களுக்குச் சுகாதாரக் கல்வி அளிக்கவும் உறுப்பு நாட்டு அரசுகளுக்கு இது உதவி யளிக்கிறது.

நோய்களுக்கு மூல காரணமாக உள்ள வளி மண் டல மாசைக் (Air Pollution) கட்டுப்படுத்தவும் உலக உடல் நல நிறுவனம் இப்பொழுது நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. இது வளி மண்டல மாசு பற்றி ஆராயவும், அதற்குக் காரணமான பொருள்களைக் கண்டுபிடித்து அவற்றைக் கட்டுப்படுத்தும் வழிமுறை களை இயற்றவும் ஒரு வல்லுநர் ஆலோசனைக் குழுவை 1963-இல் அமைத்துச் செயலாற்றி வரு கிறது.

மூன்றாவதாக, உலக உடல்நல நிறுவனம் உறுப்பு நாடுகளுக்கு அவற்றின் பொது உடல்நல நிருவாக அமைப்பை வலுப்படுத்தவும், விரிவுபடுத்தவும் உதவி செய்கிறது. குறிப்பாக ஆசிய, ஆப்பிரிக்க, தென் அமெரிக்க நாடுகளில் தேசிய அளவிலும் உள்ளூர் அளவி லும் உடல்நலப் பணிகளை வலுப்படுத்தித் தருகிறது. இந்தப் பணியில் இந்தஉலக நிறுவனம் பலநடவடிக் கைகளை மேற்கொள்ளுகிறது; உறுப்பு நாட்டு அரசு களுக்கு நீண்ட காலத் தேசிய உடல்நலத் திட்டங் களை உருவாக்குவதில் தொழில் நுட்ப ஆலோசனை தருகிறது. தன் வல்லுநர்களைக் கொண்டு அந் நாடுகளின் உடல்நல ஆய்வுத் திட்டங்களும் செயல் முறை விளக்கப் பணிகளும் நடைபெற உதவுகிறது. நல்வாழ்வு நிலையங்கள் அமைத்திட உதவுகிறது. மருத்துவர்களுக்கும் செவிலியர்களுக்கும் பயிற்சி தரக் கூடிய தேசிய நிறுவனங்களை அமைத்திட உதவு கிறது. உடல்நலப் பணியாளர்களுக்குக் களப் பயிற்சி தரத் தன் வல்லுநர்களை ஆசிரியர்களாக அமர்த்திக் கொடுக்கிறது. மருத்துவர்கள், செவிலியர்கள், பொது உடல்நல நிருவாகிகள், உடல்நல ஆய்வாளர்கள், ஆய்வுக் கூடத் தொழில்நுட்ப வல்லுநர்கள் ஆகி யோர் தம்தொழிலில் சிறப்புத் தேர்ச்சி எய்திட மேம்பாடடைந்த நாடுகளுக்குச் செல்லப் பயண உதவித்தொகை வழங்குகிறது.

நிதியாதாரங்கள்: இத்தகைய பணிகளை ஆற்ற உலக உடல் நல நிறுவனத்திற்கு நிதியாதாரங்கள் தேவைப்படுகின்றன. உறுப்பு நாடுகள் ஆண்டு தோறும் செலுத்தும் பங்குத் தொகைகளே இதன் முதன் மையான நிதியாதாரமாக அமைகின்றன (ஓர் உறுப்பு நாட்டின் பங்குத் தொகை அதன் செலுத்தும் சக்திக் கேற்ப நிருணயிக்கப்படுகிறது). இவ்வகையில் 1949-இல் இந் நிறுவனத்திற்கு 5 மிலியன் தாலர் (Dollars) நிதி சேர்ந்தது. இன்றைக்கு அது 34 மிலியன் தாலருக்கு மேல் வளர்ந்திருக்கிறது. சில வேளைகளில் உறுப்பு நாடுகள் இதற்குத் தாமாக நன்கொடைகளும் தருவ துண்டு. அந்த நன்கொடைகளைக் கொண்டு உலக உடல் நல மேம்பாட்டுக்கென மற்றொரு நிதியும் ஆக இரண்டு நிதிகளை ஏற்படுத்தியிருக்கிறது. தவிர, வளர்ச்சியுறாத நாடுகளுக்குத் தொழில் நுட்ப உதவி வழங்குவதற்கென ஐ. நா. சபையில் இருக்கும் ஒரு நிதியிலிருந்தும் ஒரு கணிசமான தொகை உலக உடல்நல மேம்பாட்டுப் பணிகளுக்குக் கிடைக் கிறது. ஐ. நா. குழந்தைகள் நிதி நிறுவனமும் இந் நிறுவனத்தின் பணிகளுக்கு உதவுகிறது. அந்நிதி நிறு வனம் இது மேற்கொள்ளும் அனைத்து நாட்டுக் களப் பணித் திட்டங்களுக்கு வேண்டிய பொருள்களையும் வசதிகளையும் அமைத்துக் கொடுக்கிறது. தனிப் பட்ட அறக் கொடை நிறுவனங்களும், தனிப்பட்ட அரசாங்கங்களும் அவ்வப்பொழுது இந்தஉலக நிறுவ னத்தின் சிறப்புத் திட்டங்களுக்கு மானியங்கள் வழங்கி உதவுகின்றன.

அமைப்பு முறை: இந்நிறுவனத்தின் தலைமை யகம் சுவிட்சர்லாந்தில் செனிவா (Geneva) நகரில் உள்ளது. இது மூன்று உள்ளமைப்புகளைக் கொண் டிருக்கிறது. அவை: 1. உலக உடல்நலப் பேரவை (World Health Assembly), 2. நிருவாக வாரியம் (Executive Board), 3. செயலகம்(Secretariat). இவற் றில் உலக உடல்நலப் பேரவையே உடல் நல நிறு வனத்தின் ஆட்சி மன்றக் குழுவாகும். உறுப்பு நாடு

களின் பிரதிநிதிகள் அனைவரும் இதில் இடம் பெறுவர். இப்பேரவை ஆண்டுக்கு ஒரு முறை கூடும். இக்கூட்டம் பொதுவாக, செனிவாவில் நடைபெறும். சில வேளைகளில் ஏதாவதோர் உறுப்பு நாட்டில் அதன் கோரிக்கைக்கிணங்கக் கூடுவதுண்டு. உலக உடல் நல நிறுவனத்தின் கொள்கைத் திட்டங்கள், செயல் திட்டங்கள், நிதி நிலை அறிக்கை முதலியவற்றை இப்பேரவையே தீர்மானிக்கும்.

நிருவாக வாரியம் 24 உறுப்பினர்களைக் கொண்டது. இவ்வுறுப்பினர்கள் பேரவையினால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இதன் பொதுஇயக்குநர் தீட்டுகிற செயல் திட்டங்களையும் நிதி நிலை அறிக்கைகளையும் பரிசீலித்துப் பேரவையின் ஒப்புதலுக்கு அனுப்பிவைப்பதும், பேரவை குறிப்பிடுகிற ஆய்வுகளையும் அளவீடுகளையும் நிறைவேற்றி, அறிக்கைகள் வழங்குவதும் இவ்வாரியத்தின் பணிகள்.

செயலகம் நிறுவனத்தின் பொது இயக்குநர் தலைமையில் இயங்குகிறது. செயலகத்தின் அன்றாட அலுவல்களைக் கவனிப்பது இவ்வியக்குநரின் பணி. இதன் தலைமையகத்திலும் மண்டல அலுவலகங்களிலும் களப் பணித் திட்டங்களிலும் பணிபுரிவோரை நியமனம் செய்வது இயக்குநரே.

உலக உடல்நல நிறுவனம் ஆறு மண்டலப் பகுதிகளில் தன் கிளைகளை அமைத்திருக்கிறது. உலகம் ஐரோப்பா, வட-தென் அமெரிக்கா, ஆப்பிரிக்கா, கிழக்கு மத்திய தரைக்கடல் பகுதி, தென்கிழக்கு ஆசியா, மேற்குப் பசிபிக்குப் பகுதி என்று ஆறு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு மண்டலத்துக்கும் ஒரு நிறுவனம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இம் மண்டல நிறுவனங்களின் தலைமையகங்கள் முறையே கோபன்கேகன் (தென்மார்க்கு), வாசிங்டன் (அமெரிக்க ஐக்கியநாடுகள்), பிராசவில் (காங்கோ), அலெக்சாண்டிரியா (எகிப்து), புதுதில்லி (இந்தியா), மணிலா (பிலிப்பைன்சு) ஆகிய நகரங்களில் அமைந்துள்ளன. இம்மண்டலத் தலைமையகங்கள் அந்தந்த மண்டலங்களில் இந்நிறுவனத்தின் திட்டப் பணிகளை நிறைவேற்றி வருகின்றன.

ஒரு மண்டல நிறுவனத்தில் மண்டலக் குழு, மண்டல அலுவலகம் என்று இரண்டு உள்ளமைப்புகள் இருக்கின்றன. மண்டலக் குழு அந்தந்த மண்டலத்தைச் சேர்ந்த அரசுகளின் சார்பாளர்களைக் கொண்டிருக்கிறது. மண்டல அலுவலகம் மண்டல நிறுவனத்தின் அன்றாடப் பணிகளைப் புரிகிறது.

சி.என்.ந.

***உலக ஊழியனார்,வீ.*** **(1906-1965)** தஞ்சை மாவட்டம் கறையான் பட்டியில் 6.1.1906-இல் பிறந்தார். இவர்தந்தையார்வீறுக்கொடும்புரார்என்பவர்; தாயார் சொர்ணத்தம்மாள். தந்தையாரைப் போன்று உலக ஊழியனாருக்கும் சித்த மருத்துவம், காலக்கணிதம் இரண்டிலும் இளமையிலிருந்தே பயிற்சியும் புலமையும் உண்டு. இவர் தொடக்கக் கல்வியைத் தந்தையாரிடமே பயின்றார்.

இவர் இயற்பெயர் உலோக தாசன் என்பது. மறைமலையடிகளாரின் தனித்தமிழ் இயக்கக் கருத்தை ஒட்டி, இவர் தம் பெயரை உலக ஊழியர் என்று தமிழ்ப்படுத்திக்கொண்டார். தம் தமக்கையார் கவுசலை ஊட்டிய இலக்கிய அறிவே இவரைப் பிற்காலத்தில் பெரும் இலக்கியப் புலவராக உருவாக்கியது.

இவர் கோயம்புத்தூர், சேலம், நாமக்கல், இராசிபுரம், திருச்செங்கோடு ஆகிய ஊர்களில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளில் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார். அப்போது சென்னைப் பல்கலைக் கழகத்துத் தமிழ் வித்துவான் தேர்வில் வெற்றிபெற்றார். பின்னர், இவர் சேலம் நகராண்மைக் கல்லூரியிலும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார்.

இவர் இனிமையாகப் பாடி உரையாற்றுவதில் வல்லவர்; சமய நூல்களிலும் கம்பராமாயணத்திலும் புலமை மிக்கவர். இவருக்குத் தெலுங்கு, மலையாளம், இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் ஓரளவு பயிற்சி உண்டு. தமிழ்ப்பொழில்போன்ற இதழ்களில் சொல்லாராய்ச்சி, இலக்கியம் தொடர்பான பல கட்டுரைகளை எழுதி வெளியிட்டுள்ள உலக ஊழியனார், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பணிபுரிந்த காலத்தில் 4.4.1965-இல் காலமானார்.

ந.இரா.

**உலகக் கருவளக் கணக்கெடுப்பு:** உலக மக்களின் கருவள நிலையையும்போக்கையும் அறிவியலடிப்படையில் அமைந்த திட்டமிடப்பட்ட கணக்கெடுப்புகளின் வாயிலாக, பல நாடுகளும் குறிப்பாக வளரும் நாடுகளும் ஆய்ந்தறிய உதவும் வண்ணம் ஏற்படுத்தப்பட்டதே உலகக் கருவளக் கணக்கெடுப்பு (World Fertility Survey) என்னும் அமைப்பாகும். இது ஐக்கிய நாடுகளின் நிறுவனத்தோடு ஒருங்கிணைந்து, அனைத்து நாட்டு மக்கள்தொகையியல் கூட்டமைப்பின் ஒத்துழைப்போடு 1972-ஆம் ஆண்டு நிறுவப்பட்டு, அனைத்து நாட்டுப் புள்ளியியல்

நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் நடத்தப்பட்டு வருகிறது. மக்கள்தொகைத் தொடர்பான செயல்களுக்கான ஐக்கிய நாடுகளின் நிதி நிறுவனமும் அமெரிக்காவின் அனைத்துலக வளர்ச்சிக்கான பங்கீட்டு அமைப்பும் இதற்குப் பேரளவில் நிதி உதவி செய்கின்றன. பிற நாடுகளும் பல நிதி உதவி அளிக்கின்றன.

உலகக் கருவளக் கணக்கெடுப்பின் தலையாய குறிக்கோள் உறுப்பு நாடுகளுக்கு அந்தந்த நாட்டுக் கருவள நிலையைத் தெளிவாக அறிவிப்பதும், அதற்கான காரணங்கள் எடுத்தியம்புவதற்குத் தேவையான துல்லியமான புள்ளி விவரங்களைத் தொகுக்க உதவுவதுமேயாகும். கருவளம், மக்கள்தொகைக் கணக்கெடுப்பு ஆகியவற்றின் ஆய்வுத் திறனை வளரும் நாடுகளில் உயர்த்துவதும் இதன் குறிக்கோளாகும். உறுப்பு நாடுகளுக்கும் பிற நாடுகளுக்குமிடையே காணப்படும் கருவள நிலைகள், வேறுபாடுகள், குடும்ப அளவு இலட்சியங்கள், மகப்பேறு தொடர்பான புள்ளி விவரம், அவற்றின் அறிவுப்பயன் ஆகியவற்றை ஒப்பிட்டு ஆராய்வதற்கு வாய்ப்பளிப்பதும் உலகக் கருவளக் கணக்கெடுப்பின் முக்கிய நோக்கமாகும்.

வளரும் நாடுகளின் உலகக் கருவளக் கணக்கெடுப்பினை 41 நாடுகளில் 1972க்கும் 1984க்கும் இடையே இவ்வமைப்பு ஆராய்ச்சி செய்துள்ளது. இவற்றைத் தவிர 21 வளர்ச்சியடைந்த நாடுகளுடன் இணைந்து, நிதி உதவி ஏதும் பெறாமலேயே ஆங்காங்கிலும் (Hong Kong) குவடெலோப் மார்டினியிலும் அந்நாடுகளின் கருவளக் கணக்கெடுப்பை ஆராய்ந்தது. இவ்வாய்விற்காக 400,000 பெண்கள் தனித்தனியாகப் பேட்டி காணப்பட்டனர். இவ்வமைப்பில் பங்கேற்கும் நாடுகளுக்கு உதவிடும் வகையிலும் வழிகாட்டக் கூடிய முறையிலும் உலகக் கருவளக் கணக்கெடுப்புக்கான கருவிகளை இது உருவாக்குகிறது. ஆய்வுக்குட்படுபவர்களைத் தேர்ந்தெடுக்க உதவும் குடும்பப் பட்டியல், தனியாள் வினாப்பட்டியல், இவற்றோடு தொடர்பான பலவகை வினாப்பட்டியல் அலகுகள் (Modules), கணக்கெடுப்பு ஆய்வாளர்கள், துணை அலுவலர்களுக்கான குறிப்பேடுகள் போன்றவை இதனுள் அடங்கும்.

குடும்பப் பட்டியல் மூன்று வகைகளில் பயன்படுகிறது. அவை (1) தனியாள் வினாப்பட்டியலுக்கு விடையளிக்கத் தகுதியானவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு அடிப்படையான குடும்ப உறுப்பினர்களின் பெயர்ப் பட்டியல் இதிலிருந்து எடுக்கப்படுகிறது, (2) மக்கள் தொகையியல் புள்ளிகளைக் கணிப்பதற்குத் தேவையான குடும்ப உறுப்பினர்களின் வயது, பால், மணமானவர்/ஆகாதவர் போன்ற விவரங்களைச் சேகரிப்பதற்கு உதவுகிறது, (3) கருவளத்தோடு தொடர்புள்ள ஏனைய புள்ளிவிவரங்கள்–புதுமைப் பொருள் உடைமை, இனப் பண்பாட்டில் உறுப்பினர் நிலை, பொருளாதார நிலை போன்றவற்றைச் சேகரிக்கவும் இது மிகவும் பயன்படுகிறது.

உலகக் கருவளக் கணக்கெடுப்பு பரிந்துரை செய்துள்ள அடிப்படைத் தனியாள் வினாப்பட்டியல் ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவையாவன: (1) பேட்டி அளிப்பவரின் சமுதாயப் பின்னணி, (2)அவரது மகப்பேறு தொடர்பான செய்திகள், (3) அவரின் கருத்தடை பற்றிய அறிவும் பட்டறிவும், (4)அவரின் மணநிலை வரலாறு, (5) கருவளக் கட்டுப்பாட்டு நிலை (Fertility Regulation), (6) தொழில் வரலாறு, (7) இப்போதைய, (முந்திய) கணவரின் சமுதாயப் பின்னணி. தனியாள் வினாப்பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்களில் குறிப்பிட்ட சிலவற்றை ஆழ்நிலை ஆய்வு செய்வதற்கென அதனுடன் பகுதியாகவோ முழுமையாகவோ இணைத்துக் கொள்ளத் தக்க வகையில் ஆறு வினாப்பட்டியல் அலகுகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. அவை: (1) கருவளக் கட்டுப்பாட்டு நிலை, (2) குடும்பக் கட்டுப்பாடு, (3) கருச்சிதைவு, (4) குடும்பக் கட்டுப்பாட்டுச் சாதனமல்லாத கருவளத்தைப் பாதிக்கக் கூடிய பிற காரணிகள், (5) சமுதாய நிலை மாறிகள், (6) இறப்பு.

வகைப்படுத்தலும் பகுப்பாய்வும்: வினாப்பட்டியல் உருவாக்கல், மாதிரித் திட்டமைப்புப் பேட்டி காண்பவர்களுக்கான பயிற்சி, களப்பணிப் புள்ளிவிவரங்களைக் குறியீடு செய்தல் (Coding), தேர்ந்து திரட்டல் (Editing), தகவல்களை வகைப்படுத்துதல், ஆய்வு அறிக்கை எழுதுதல் போன்ற அனைத்து நிலைகளிலும் வளரும் நாடுகளுக்கு உதவுவதே உலகக் கருவளக் கணக்கெடுப்பின் தலைமைச் செயலகத்தில் பணியாற்றும் வல்லுநர்களின் தலையாய பணியாகும்.

இலத்தீன் அமெரிக்க மக்கள்தொகையியல் மையத்தில் (Centre Latino Americano de Demographia) புள்ளிவிவரங்களைத் தேர்ந்து திரட்டல் அல்லது சரிசெய்தலுக்கான கணிப்பொறித் தொகுப்பு ஒன்று உருவாக்கப்பட்டது. இம்மையத்தோடு சேர்ந்து உலகக் கருவளக் கணக்கெடுப்பு இந்தக் கணிப்பொறித் தொகுப்பை மேம்பாடு செய்தது. இதன் விளைவாகப் புள்ளிவிவரங்கள் சேகரிப்பதற்கும் புள்ளிவிவரப் பட்டியல்கள் உருவாக்குவதற்கும் இடையேயான காலம் குறிப்பிடத் தக்க அளவு குறைந்தது. அதேபோல வணிகக் கணிப்பொறிப்பட்டியல் முறைக் கணக்கெடுப்பு COCENTS) என்றுசொல்லப்படும் ஒரு

வகைச் செயல்முறைக் கட்டளைத் தொகுப்பையும் உலகக் கருவளக் கணக்கெடுப்பு நிறுவியது. பல வகைப்பட்ட கணிப்பொறிகளிலும் பயன்படுத்தக் கூடிய இந்தக் கட்டளைத் தொகுப்பின் உதவியால் நேரடியாகப் பட்டியல்களை உண்டாக்கலாம்.

ஆய்வின் முடிவுகளைத் துல்லியமாகப் பொருள் விளக்கம் செய்து ஆய்வுக் கட்டுரை வரையுங்கால் புறக்கணிக்க வேண்டி முடிவுகளைக் குறிப்பிடத்தக்க வையாகக் கருதி, தவறாக எழுதிவிடாமலிருப்பதற்குத் தேவையான மாதிரி தேர்தற் பிழை ஆய்வு, அதனைச் சார்ந்த கூறுகளின் அளவைகளைக் கணிப்பொறி மூலம் கணிக்க ஒரு செயல்முறைக் கட்டளைத் தொகுப்பு ஆகியவற்றை உலகக் கருவளக் கணக் கெடுப்பு நிறுவியுள்ளது.

சேகரிக்கப்பட்ட புள்ளிவிவரங்களைப் பங்கேற் கும் நாடுகள் திறமையாகப் பயன்படுத்தக் கூடிய முறையில் பன்னிரண்டு தலைப்புகளைத் தேர்ந் தெடுத்து, அவற்றை அணுகும் முறைகளை விளக்கும் வகையில் எடுத்துக்காட்டுப் பகுத்தாய்வுக் கட்டுரை கள் வெளியிடப்பட்டன. அவை:(1) மகப்பேறு நிலைத் தொடர்பான புள்ளிவிவரங்களிலிருந்து மகப்பேறு நிலைகளையும் போக்குகளையும் மதிப்பீடு செய்தல் (இலங்கை), (2) மகப்பேறு நிலைகளையும் போக்கு களையும் ஆய்ந்து மதிப்பிடுதல் (கொலம்பியா), (3) ஆயுள் அட்டவணை முறையைப் பயன்படுத்தி மகப் பேறுகளுக்கிடைப்பட்ட காலத்தைப் பகுப்பாய்வு செய்தல் (கொலம்பியா), (4) திருமணநிலை பகுப் பாய்வு செய்தல் (இலங்கையும் தாய்லாந்தும்), (5) கருத்தடைஅறுவைச்சிகிச்சையும் தடுக்கப்பட்ட பிறப் புகளும் (பனாமா), (6) கருத்தடைக் கருவிப் பயன் பாட்டை வரையறுக்கும் சமூகப் பொருளாதாரக் கூறுகள் (தாய்லாந்து), (7) தாய்ப் பாலூட்டுதலும் அதனால் கருவளத்தில் ஏற்படும் விளைவுகளும் (பாகிசுத்தான்), (8) மகப்பேறு விருப்பங்களை முடிவு செய்யும் சமூகப் பொருளாதாரக் காரணிகள் (இலங்கை), (9) கருத்தடைக் கருவிகளைப் பயன்படுத் தல், மகப்பேறு விருப்பங்கள் ஆகியவற்றிற்கிடையே யுள்ள தொடர்புகள் (கொலம்பியா), (10) குடும்ப அமைப்பும் கருவளமும் (வங்காள தேசமும் இலங்கை யும்), (11) திரள் மகப்பேற்றின் சமூகப் பொருளா தார வேறுபாடுகள் (இலங்கை), (12) குழந்தைப் பருவ மற்றும் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு நிலைகளும் வேறுபாடுகளும் (கொலம்பியா).

உலகக் கருவளக் கணக்கெடுப்புத் திட்டம் 1984-ஆம் ஆண்டு திசம்பர் திங்களில் முடிவு பெற்றிருந் தாலும் சேகரிக்கப்பட்ட புள்ளி விவரங்களடங்கிய கணிப்பான் காந்த நாடாக்கள் ஆவணங்களில் ஆய் வாளர்களுக்குக் கிடைத்திடும் வகையில் பாதுகாப் பாக வைக்கப்பட்டுள்ளன. அனைத்து நாட்டுப் புள்ளியியல் நிறுவனத்தின் உறுப்பான ஓர் ஆய்வு மையம் இந்த ஆவணத்தைப் பாதுகாத்து வருகிறது.

பல நாடுகள் பங்கேற்ற நிலையில், உலகில் இது வரை நடத்தப்பட்டுள்ள சமூகக் கணக்கெடுப்பிலேயே பரந்த அளவில் மேற்கொள்ளப்பட்ட உலகக் கருவளக் கணக்கெடுப்பின் புள்ளிவிவரங்களின் உதவியால் நூற்றுக்கணக்கான ஆய்வுக் கட்டுரைகள் வெளியிடப் பட்டுள்ளன. இவற்றில் குறிப்பிட்ட சில நாடுகளுக் கான ஒருசில கருவளத் தொடர்பு விழுக்காடுகளை மட்டும் அட்டவணையில் காணலாம்.

உலகக் கருவளக் கணக்கெடுப்பில் பங்கேற்ற நாடுகளின் கருவளப் புள்ளிவிவரங்கள்

| உலக நாடுகள் | கூட்டு மகப்பேறு வீதம் | விரும்பும் குழந்தை களின் சராசரி | கருத்தடை பயன்படுத்து வோரின் விழுக்காடு | புதிய கருத்தடை முறைகளுள் ஒன்றே னும் தெரிந்திருப் பவரின் விழுக்காடு | இறப்பு நேரா விடில் பெண்களின் சராசரி மண வயது |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| ஆப்பிரிக்கா | | | | | |
| பெனின் 1981-82 | 7.1 | 7.6 | 20 | 13 | 18.2 |
| கமரூன் 1978 | 6.4 | 8.0 | 3 | 28 | 17.5 |

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| கானா 1979–80 | 6.5 | 6.0 | 10 | 61 | 19.3 |
| ஐவரி கோசுட்டு 1980–81 | 7.4 | 8.4 | 3 | 18 | 17.8 |
| கென்யா 1977–78 | 8.3 | 7.2 | 7 | 89 | 19.9 |
| இலெசோதோ 1977 | 5.8 | 6.0 | 5 | 61 | 19.6 |
| மியூரிடானியா 1981 | 6.3 | 8.8 | 1 | 6 | 19.2 |
| நைசீரியா 1981–82 | 6.3 | — | 5 | 20 | 18.5 |
| செனகல் 1978 | 7.2 | 8.3 | 4 | 21 | 17.7 |
| சூடான் (வடக்கு) 1978–79 | 6.0 | 6.4 | 5 | 50 | 21.3 |
| ஆசியாவும் பசிபிக்கு நாடுகளும் | | | | | |
| வங்காளதேசம் 1975–76 | 6.1 | 4.1 | 8 | 80 | 16.3 |
| பிசி 1974 | 4.2 | 4.2 | 42 | 100 | 21.8 |
| இந்தோனேசியா (சாவாவும் பாலியும்) 1976 | 4.7 | 4.2 | 28 | 79 | 19.4 |
| கொரியா குடியரசு 1974 | 4.3 | 3.1 | 37 | 98 | 23.2 |
| மலேசியா (முந்நீரகம்) 1974 | 4.7 | 4.3 | 35 | 92 | 23.1 |
| நேபாளம் 1976 | 6.2 | 3.9 | 3 | 23 | 17.1 |
| பாகிசுத்தான் 1975 | 6.3 | 4.2 | 5 | 75 | 19.8 |
| பிலிப்பைன்சு 1978 | 5.2 | 4.3 | 39 | 95 | 24.5 |
| இலங்கை 1975 | 3.8 | 3.7 | 34 | 92 | 25.1 |
| தாய்லாந்து 1975 | 4.6 | 3.6 | 36 | 97 | 22.5 |
| இலத்தீன் அமெரிக்காவும் மேற்கிந்தியத் தீவுகளும் | | | | | |
| கொலம்பியா 1976 | 4.7 | 4.0 | 45 | 96 | 22.1 |
| கோசுட்டாரிகா 1976 | 3.3 | 4.7 | 67 | 100 | 22.7 |
| தொமினிகன் குடியரசு 1975 | 5.7 | 4.7 | 33 | 98 | 20.5 |
| ஈக்குவடார் 1979 | 5.3 | 4.1 | 35 | 90 | 22.1 |

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| கயானா 1975 | 5.0 | 4.6 | 35 | 95 | 20.0 |
| கெயிட்டி 1977 | 5.5 | 3.6 | 19 | 82 | 21.8 |
| சமைகா 1975-76 | 5.0 | 4.1 | 40 | 98 | 19.2 |
| மெக்சிகோ 1976-77 | 6.2 | 4.4 | 32 | 90 | 21.7 |
| பனாமா 1976 | 3.8 | 4.3 | 55 | 99 | 21.2 |
| பரகுவே 1979 | 5.0 | 5.2 | 31 | 94 | 21.4 |
| பெரு 1977-78 | 5.6 | 3.8 | 33 | 79 | 23.2 |
| திரினிடாடும் தொபாக்கோவும் 1977 | 3.3 | 3.8 | 55 | 99 | 20·9 |
| வெனிசுவேலா 1977 | 4.5 | 4.3 | 49 | 98 | 21.8 |
| அரேபிய வடஆப்பிரிக்க நாடுகள் | | | | | |
| எகிப்து 1980 | 5.3 | 4.1 | 25 | 90 | 21.3 |
| சோர்டான் 1976 | 7.5 | 6.2 | 26 | 97 | 21.6 |
| மொராக்கோ 1979-80 | 5.9 | 4.9 | 20 | 83 | 21.3 |
| சிரியா 1978 | 7.5 | 6.1 | 20 | 78 | 22.1 |
| துனிசியா 1978 | 5.9 | 4.1 | 32 | 95 | 23.9 |
| ஏமன் அரேபியக் குடியரசு 1979 | 8.5 | 5.5 | 1 | 24 | 16.9 |

அட்டவணையில் கூட்டு மகப்பேறு வீதம் (Total Fertility Rate) என்று குறிப்பிட்டிருப்பது, ஒரு பெண் கணக்கெடுப்புக் காலத்தில் இருந்த பிறப்பு வீதத்தில் குழந்தைகளைப் பெற்றுக் கொண்டாளேயானால், அவளுடைய மகப்பேற்று வயதைக் கடக்கும்போது சராசரியாக இத்தனைக் குழந்தைகளை ஈன்றெடுத் திருப்பாள் என்பதாகும். இறப்பு நேராவிடில் பெண் களின் சராசரி மண வயது என்பது சராசரி வயதையே குறிக்கும். சமூக இயல் ஆராய்ச்சித் திட்டங்களில் 1985-ஆம் ஆண்டு வரையில் உலகிலேயே மிகப்பெரிய அளவில் செய்யப்பட்டதாகக் கருதப்படுவது உலகக் கருவளக் கணக்கெடுப்பாகும். எனினும், இந்தியா இதில் பங்கேற்கவில்லை. எஸ்.கி.

துணை நூல்கள்:

**Cleland, John & John Hoberaft (Ed.)**, Reproductive Change in Developing Countries, Oxford University Press, New York, 1985.

**London, Kathy, A., Jeanne Cushing, Shea O. Rutstein, Cleland John, John E. Anderson, Leo Morris, and Sidney H. Moore,** Fertility and Family Planning Surveys, Population Information Program, The Johns Hopkins University, Maryland, U.S.A., 1985.

## உலகக் கல்வித் திட்டமிடல் நிறுவனம்

உலகின் பல்வேறு நாடுகளிலும் கல்விமுறைகளைத் திட்டமிடுதலில் ஈடுபட்டுள்ள கல்வியாளர்களுக்குப் பயிற்சியும் பயனறிவும் தருவதற்காக, 1963-இல் பிரான்சிலுள்ள பாரீசு நகரில் அனைத்துலகக் கல்வி அறிவியல் பண்பாட்டுக் கழகத்தால் நிறுவப்பட்டது.

ஆப்பிரிக்கா (1961), இலத்தீன் அமெரிக்கா (1962), சப்பான் (1962) ஆகிய நாடுகளில் நிகழ்ந்த உலக நாடுகளின் கல்வி அமைச்சர்கள் மாநாடுகள் கல்வி நிலையங்கள் பெருகி வருதலையும், அவற்றில் பயிலுவோர் எண்ணிக்கை மிகுந்து வருதலையும் சுட்டிக்காட்டியதோடு, ஒவ்வொரு நாடும் தங்கள் நாட்டுக் கல்விமுறையில் திட்டமிடுதலின் இன்றியமையாமையையும் வற்புறுத்தின. இக்கருத்தை உடனடியாக ஏற்றுக் கொண்ட அனைத்துலகக் கல்வி அறிவியல் பண்பாட்டுக் கழகம், உலகநாடுகளில் கல்வித் திட்டமிடுதலையும் நிருவாகத்தையும் மேம்படுத்தும் நோக்கத்துடன் உலகக் கல்வித் திட்டமிடல் நிறுவனம் (International Institute for Educational Planning-IIEP) என்னும் அமைப்பினைத் தோற்றுவித்தது.

இந்நிறுவனத்தின் ஆட்சிக் குழுவில் 12 உறுப்பினர்கள் உள்ளனர். ஐக்கிய நாடுகள் (UN), உலகவங்கி ஆகிய ஒவ்வொன்றிலிருந்தும் ஒவ்வொருவரும் உலகத் தொழிலாளர் கழகம் (ILO), உலக நலக் கழகம்(WHO), உணவு வேளாண்மை நிறுவனம் (FAO) ஆகிய மூன்றிலிருந்து சுழல்வரிசை முறையில் ஒருவரும், ஐக்கிய நாடுகளின் மண்டலப் பொருளாதார நிறுவனங்களிலிருந்து ஒருவரும் சேர்ந்து மொத்தம் நான்கு பன்னாட்டு நிறுவனங்களிலிருந்து 4 உறுப்பினர்கள் உள்ளனர். மீதமுள்ள 8 உறுப்பினர்களை அவர்களது கல்வித் திறப்பாட்டின் அடிப்படையில் ஆட்சிக்குழு தேர்ந்தெடுக்கிறது. இவர்களுள் 4 உறுப்பினர்கள் ஆசியா, ஆப்பிரிக்கா, இலத்தீன் அமெரிக்கா, அரேபிய நாடுகள் ஆகியவற்றிலிருந்தே தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

ஆட்சிக் குழுவின் தலைவராகத் தமிழ்நாட்டைச் சேர்ந்த மால்கம் எசு. ஆதிசேடையா சில ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். இதில் 50 பேர் பணி செய்கின்றனர். அவர்களுள் 15 பேர் கல்வி ஆராய்ச்சி வல்லுநர் ஆவர்.

ஒவ்வோர் ஆண்டும் ஏறத்தாழ 40 பேர் இந்நிறுவனத்தில் பயிற்சி பெறுகின்றனர். பெரும்பாலும் இவர்கள் வளரும் நாடுகளிலிருந்து வரும் கல்வியாளர்கள் அல்லது கல்வி நிருவாகத்தினர்களே. பயிற்சி தருவதற்காகப் பிற நாடுகளிலுள்ள வல்லுநர்கள் சிலரும் வருகின்றனர்.

இந்நிறுவனத்திற்கு அனைத்துலகக் கல்வி அறிவியல் பண்பாட்டுக் கழகம் ஒவ்வோராண்டும் நிதியுதவி செய்கிறது. மேலும், தம் வரவுசெலவிலிருந்து பத்துக்கும் மேற்பட்ட நாடுகள் இதற்கு அதன் வரவுசெலவில் பெருமளவு (40-இலிருந்து 50 சதம் வரை) நிதியுதவி செய்துவருகின்றன.

சில நாடுகள் இந்நிறுவனத்திடம் பணம் தந்து தங்கள் நாட்டுக் கல்வியாளர்களுக்குக் கல்வித் திட்டமிடலில் பயிற்சியும் ஆராய்ச்சியும் தருமாறு கேட்டுக் கொள்கின்றன. எடுத்துக்காட்டாக, ஐக்கிய அமெரிக்கக் குடியரசு இரண்டாண்டுப் (1980, 1981) பயிற்சிக்கும் ஆராய்ச்சிக்குமாக 4 மிலியன் தாலர்களை இந்நிறுவனத்திற்கு உதவியது.

இந்நிறுவனத்தில் பயிற்சி பெறுவதற்குப் பல்வேறு நாடுகளிலிருந்து அந்நாட்டுக் கல்வி அமைச்சகத்தால் கல்வியாளர்களும் கல்வி நிருவாகத்தினரும் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர். பயிற்சிக்கான செலவினை இந்நிறுவனமும், பயிற்சியாளரின் போக்குவரத்து, தங்கும் வசதிக்கான செலவு ஆகியவற்றை 'ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டம்' (United Nations Development Programme)என்ற அமைப்பும் ஏற்றுக்கொள்கின்றன. இந்நிறுவனத்தில் பயிற்சி பெற்றவர்கள் மீண்டும் அதே பணியில் தொடர்ந்து வேலை செய்வர் என்று பயிற்சியாளரின் நாடு கூறும் முன்னுறுதியின் பேரிலேயே அவர்களுக்குப் பயிற்சி தரப்படுகிறது.

இந்நிறுவனம் ஆராய்ச்சியிலும் ஈடுபட்டு வருகிறது. இது ஒவ்வொரு நாட்டுக் கல்வி அமைச்சகத்துடனும் தொடர்பு கொண்டு, அந்நாடுகள் திரட்டிய செய்தியினைப் பெற்று, அவற்றை ஆராய்ந்து தன் முடிவினை அறிவிக்கிறது. சென்ற பதின்மூன்று ஆண்டுகளில் (1969-82) ஏறத்தாழ 50க்கும் மேற்பட்ட ஆய்வுகளை இந்நிறுவனம் செய்து முடித்துள்ளது.

இந்நிறுவனம் தான் கண்டறிந்த ஆராய்ச்சி முடிவுகளைக் 'கல்வித் திட்டமிடலின் அடிப்படைகள்' என்னும் வரிசையில் தொகுப்புகளாக வெளியிட்டு வருகிறது. இத்தகு நூல்கள் 1981 வரை 32 வெளிவந்துள்ளன.

இந்நிறுவனம் 1981-இலிருந்து செய்தி மலர் (Documentation Bulletin) என்னும் காலாண்டு இதழையும் வெளியிட்டு வருகிறது.

உலகக் கல்வித் திட்டமிடல் நிறுவனத்தின் நூல்களையும், பிற செய்திகளையும் அந்நிறுவனத்தின் நெறியாளருக்கு(The Director IIEP, 7-9 rue Eugene Delacroix, 75016, Paris, France) எழுதிப் பெற்றுக் கொள்ள இயலும். ஜெ. கோ. பி.

**உலகக் கல்வி நிறுவனம்**: செனீவா(Geneva) நகரில் 1912-இல் உரூசோ கல்வி நிறுவனம்(Rousseau Institute of Education) என்ற அமைப்பு இராக்பெல்லர் நிறுவன (Rockefeller Foundation) நிதியுதவியுடன் தொடங்கப்பெற்றது. இந்நிறுவனம் 1925-இல்

உலகக் கல்வி நிறுவனம் (International Bureau of Education) என்னும் புதிய அமைப்பைத் தோற்றுவித்து, ஆண்டுதோறும் நிதியுதவியும் ஒதுக்கித் தந்தது.

உலகக் கல்வி நிறுவனம் இயற்றிய 1926-ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி, கல்வியியல் குறித்த செய்திகளைத் திரட்டிப் பதிவுசெய்தல், கல்வியியல் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல், உலகக் கல்வியாளர்கள் சந்தித்து உரையாட ஊக்குவிக்கும் ஒருங்கிணைப்பு மையமாக விளங்குதல் ஆகியன இந்நிறுவனத்தின் குறிக்கோள்களாம். உரோசல்லா (Rossello)என்னும் பேரறிஞர் முயற்சியால் இந்நிறுவனம் உலகின் பல்வேறு அரசுகளும் இடம்பெறும் தகுதியினை 1929-இல் பெற்றது. ஏறத்தாழ 40 ஆண்டுகளுக்கும் மேலாக, நெறியாளராகப் பொறுப்பேற்றிருந்த சீன் பியாசே (Jean Piaget) என்னும் கல்வியறிஞர் இந்நிறுவனத்தின் வளர்ச்சியில் பேரார்வம் காட்டினார். உலகக் கல்வி நிறுவனம் பொதுக் கல்வி குறித்துப் பல்வேறு மாநாடுகளை நடத்தியது. மேலும், கல்வியியலில் ஆண்டு நூல்களையும்(International Year-book of Education) வெளியிட்டது.

அனைத்துலகக் கல்வி அறிவியல் பண்பாட்டுக் கழகம் தொடங்கப் பெற்றபின், உலகக் கல்வி நிறுவனம் 1969-ஆம் ஆண்டில் அக்கழகத்தின் ஓர் இணைந்த நிறுவனமாக மாறியது. இந்நிறுவனம் 1979-இலிருந்து அக்கழகத்தின் அனைத்து உறுப்பு நாடுகளுக்கும் கேள்வி-காட்சிக் கருவிகள் (Audio-Visual Aids)வழங்கி வருகிறது. இலியோ பெர்னிங்கு (Leo Ferning) என்பவர் 1969-ஆம் ஆண்டிலிருந்து உலகக் கல்வி நிறுவனத்தின் தலைமைப் பொறுப்பினை ஏற்று நடத்தி வந்தார். அனைத்துலகக் கல்வி அறிவியல் பண்பாட்டுக் கழகத்தின் 24 உறுப்பு நாடுகளின் பேராளர்களைக் கொண்டு, இந்நிறுவனத்தின் செயற்குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவே இந்நிறுவனத்தின் கொள்கைத் திட்டங்கள்(Policies),ஆராய்ச்சி, செய்தி திரட்டுதல், வெளியீடுகள் ஆகியவற்றை மேற்பார்வை செய்கிறது. மேலும், இப்போது ஈராண்டுகளுக்கு ஒரு முறை இந்நிறுவனத்தால் கூட்டப்பெறும் உலகக் கல்வியாளர் மாநாட்டுக்கான தலைப்பையும் பொருளையும் முன்மொழிகிறது. இந்நிறுவனத்தால் வெளியிடப்பட்டு வந்த கல்வியியல் குறித்த ஆண்டு நூல்கள் 1968-ஆம் ஆண்டு நிறுத்தப்பெற்றன. எனினும், இந்நூல்கள் 1980-இலிருந்து மீண்டும் வெளியிடப்படுகின்றன. உலக நாடுகளின் கல்வியமைப்புப் பற்றிய செய்திகளையும் இது வெளியிட்டு வருகிறது.

உலகச் செய்திப் பதிவு மையம் (International Documentation Centre) உலகக் கல்வி நிறுவனத்தின் ஒரு பிரிவாகச் செயற்பட்டு வருகிறது. இம்மையம் புதிய முறைகளில் செய்திகளைச் சேர்த்தும் தொகுத்தும் வெளியிட்டு வருகிறது. இந்நிறுவனத்திலிருந்து வெளிவரும் 'ஐபிஇ செய்தியறிக்கை' (I.B.E Bulletin) கல்வியியலின் தலையாய செய்திகளை உள்ளடக்கி வருகிறது. இதனுடன், மேலும் சிறு சிறு வெளியீடுகள், செய்திக் கடிதம் (News Letter), செய்திக் கொத்து போன்றவையும் இந்நிறுவனத்திலிருந்து வெளியிடப் படுகின்றன.

இவ்வாறு உலக நாட்டுக் கல்விச் செய்திகளைச் சேகரித்தல், வகைப்படுத்துதல், பதிவு செய்தல் ஆகிய பணிகளைச் செய்து வரும் உலகக்கல்வி நிறுவனம், ஒப்பீட்டுக் கல்வியாளர்களுக்கு (Comparative Educationists) நம்பகமான செய்திகளை வழங்கும் பெரும் சேவை நிறுவனமாக இயங்கி வருகிறது.

எஸ்.த.

**உலகக் கல்வி மதிப்பீட்டுக் கழகம்:** ஆதாய நோக்கம் எதுவுமின்றிப் பல்வேறு நாடுகளில் கல்வி மதிப்பீடுகளில் ஈடுபட்டுள்ள தன்னுரிமை பெற்ற நிறுவனங்களின் அனைத்து நாட்டு அமைப்பாக உலகக் கல்வி மதிப்பீட்டுக் கழகம்(International Association for Educational Assessment IAEA) விளங்கி வருகிறது. உலகிலுள்ள பல்வேறு கல்வி நிறுவனங்களில் கல்வி மதிப்பீட்டு உத்திகளை வகுப்பதும், அவற்றைப் பயன்படுத்திக் கல்வித் தரத்தை உயர்த்துவதும் இக்கழகத்தின் விரிந்த நோக்கமாகும்.

இக்கழகம் அமைப்பதற்கான முதல் முயற்சி 1974-இல் மேற்கொள்ளப்பட்டது. இதற்காக 18 நாடுகளைச் சேர்ந்த கல்வியியற் சார்பாளர்கள் அமெரிக்காவிலுள்ள நியூசெர்சியைச் சேர்ந்த பிரின்சுடன் (Princeton) நகரில் கூடி, இக்கழகம் அமைப்பதற்கான வழிமுறைகள் குறித்துப் பேசினர். செனீவாவிலுள்ள உலகக் கல்வி நிறுவனத்தின் உதவியுடன், இக்கழகம் 1975-ஆம் ஆண்டு மே மாதம் அமைக்கப்பட்டது. உலகக் கல்வி மதிப்பீட்டுக் கழகத்தின் தலையாய குறிக்கோள்கள் கீழ்வருவன: 1. பல நாடுகளில் உள்ள கல்வி வளர்ச்சியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்கிடையே தொடர்புகளை மேம்படுத்துதல், 2. கல்வி மதிப்பீட்டுக்கான வல்லுநர்களைத் தேவையான அளவுக்கு உருவாக்கித் தருதல், 3. கல்வி மதிப்பீடு தொடர்பான ஆராய்ச்சித் திட்டங்களை மேற்கொள்வதற்கான அடிப்படைகளை அமைத்துத் தருதல், 4. கல்வி வளர்ச்சியில் ஈடுபட்டுள்ள பிற நிறுவனங்களுடன் ஒத்துழைத்தல், 5. கல்வி மதிப்பீட்டு உத்திகளை மேம்படுத்துவது, அவற்றைப் பயன்படுத்துவது போன்ற பிற செயல்களில் ஈடுபடுதல்

இக்கழகத்தில் 27 நாடுகளைச் சேர்ந்த 50 நிறுவனங்கள் சேர்ந்துள்ளன. இவற்றோடு நான்கு அனைத்து நாட்டு நிறுவனங்களும் இதில் சேர்ந்து பணியாற்றுகின்றன. அனைத்துலகக் கல்வி அறிவியல் பண்பாட்டுக்கழகம் (UNESCO) இக்கழகத்தை 1981-இல் இரண்டாம் வகை (B Status) நிறுவனமாக அனுமதித்துள்ளது.

இக்கழகம் தோற்றுவிக்கப்பட்டபின், உலகின் பல்வேறு நாடுகளில் இதன் ஆண்டு மாநாடு நடைபெற்று வந்துள்ளது. மண்டல மாநாடுகள் இதுவரை ஐரோப்பா, ஆசியா, இலத்தீன் அமெரிக்கா ஆகிய பகுதிகளில் நடந்துள்ளன. பின்வரும் பொருளில் ஆய்வுக் கட்டுரைகள் படிக்கப்பட்டுள்ளன: 1. பதினாறு நாடுகளில் உயர்கல்விக்கான அனுமதி முறைகள், 2. பள்ளியிறுதி வகுப்புச் சான்றிதழ் வழங்குவதற்குரிய அடிப்படைகள், 3. கல்வி அமைப்பையும் செயற்பாட்டையும் மதிப்பீடு செய்தல், 4. கல்விக்கும் வேலைக்கும் வாய்ப்பினை மிகுதிப்படுத்தும் வகையில் மதிப்பீடு செய்தல், 5. கல்வி மதிப்பீட்டின் மூலம் வாய்ப்புகளை மிகுதிப்படுத்துதல்.

பல நாடுகளில் கல்வி வளர்ச்சியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்கிடையே தொடர்புகளை மேம்படுத்துவதன் நோக்கத்தை நிறைவேற்றும் வகையில், பல்வேறு நாடுகளிலுள்ள இவ்வகை நிறுவனங்கள் ஆங்காங்கே மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சித் திட்டத்தின் முடிவுகளை வெளியிட்டு, அவற்றைக் கழகத்தில் சேர்ந்துள்ள நாடுகளுக்கு அனுப்பி வருகின்றன.

இக்கழகம் மேற்கொண்டுள்ள இரு ஆராய்ச்சித் திட்டங்கள் குறிப்பிடத்தக்கன. 1. ஆசிரியர்க்கான மதிப்பீட்டு வழிகாட்டி(A Teacher's Guide to Assessment)-மாணவர்களை எவ்வெவ் வகையில் திறம்பட மதிப்பீடு செய்வது? அதற்காக ஆசிரியர்கள் பெற வேண்டிய திறன்கள் எவையெவை என்பன இவ்வழி காட்டியில் தொகுக்கப்பட்டுள்ளன. 2. வளர்திறன் பன்னாட்டுச் சோதனை(International Test of Developed Abilities)-வெவ்வேறு நாடுகளைச் சார்ந்த மாணவர்கள் பிற நாடுகளில் குடியேறும்போது, அவர்களின் திறமைகளை அளப்பதற்காகச் செய்யப்பட்டதாகும். இச்சோதனை அரபு, சீனம், ஆங்கிலம், போர்ச்சுகீசு ஆகிய நான்கு மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

எஸ்.த.

**உலகக் கல்வியடைவு மதிப்பீட்டுக் கழகம்** கல்வியியல் தொடர்பான ஆராய்ச்சியினை உலக நாடுகளில் மேம்படுத்தும் நோக்கத்துடன் 1967-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. உலகின் பல்வேறு நாடுகளின் ஆராய்ச்சி நிறுவனங்கள் உலகக் கல்வியடைவு மதிப்பீட்டுக் கழகத்தில் (International Association for the Evaluation of Educational Achievement-IEA) சேர்ந்துள்ளன. இந்தியா, அமெரிக்கா, இங்கிலாந்து, சப்பான், கனடா, சிங்கப்பூர், சுவீடன், தாய்லாந்து, செருமனி, பிரான்சு, பெல்சியம், ஆசுத்திரேலியா, இசுரேல், கென்யா முதலிய நாடுகள் இக்கழகத்தில் சேர்ந்துள்ளன.

இக்கழகம் 1967-இல் சட்டப்படியான அமைப்பாக மாற்றப்படுவதற்கு முன்னர், இது 1962-இலிருந்து 1966 வரை இடைக்கால ஏற்பாடாக அம்பர்கு (Hamburg) நகரிலுள்ள அனைத்துலகக் கல்வி அறிவியல் பண்பாட்டுக் கழகத்தின் கல்வி நிறுவனத்திலேயே இயங்கி வந்தது. சுவீடன் நாட்டிலுள்ள இசுடாக்கோம் (Stockholm) பல்கலைக் கழகத்தில் அமைந்திருக்கும் உலகக் கல்வி நிறுவனத்தில் 1967-இலிருந்து இக்கழகம் இயங்கி வருகிறது.

இக்கழகம் 1966-இலிருந்து 1975 வரையில் 6 பாடத்துறைகளில் தன் ஆராய்ச்சியை மேற்கொண்டது. அவை அறிவியல், நூலைப் படித்துணர்தல், இலக்கியம், அயல்மொழியாகப் பிரெஞ்சு மொழி, அயல்மொழியாக ஆங்கில மொழி, குடிமைக் கல்வி ஆகியனவாம்.

அறிவியல் துறையில் மாணவர்கள் பயன்படுத்தும் உயர்திறன்களை அளந்திட, இக்கழகம் சோதனைகள் (Tests) தயாரித்துள்ளது. மாணவர்களின் நூலைப் படித்துணர் திறனையறிவதற்காகச் சொல்லறிவு, சொற்களைப் படிக்கும் வேகம், புரிந்துகொள்ளுதல் ஆகியவற்றில் இக்கழகம் சோதனைகள் தயாரித்துள்ளது. அயல்மொழிகளாகப் பிரெஞ்சு மொழியையும் ஆங்கில மொழியையும் கற்கும்போது, படித்தல், கேட்டல், எழுதுதல், பேசுதல் ஆகிய திறன்களையும், மொழி மீதுள்ள ஆர்வத்தையும் கண்டறிய இக்கழகம் சோதனைகள் தயாரித்துள்ளது. குடிமைக் கல்வியில் மாணவர்களின் சமூகவியல் பண்புகளைக் கண்டறியவும், சமுதாயப் பணிகள், சமுதாயத்தின் மீது அவர்களின் மனப்பாங்கு ஆகியவற்றைக் கண்டறியவும் சோதனைகளை இது தயாரித்துள்ளது.

உலகக் கல்வியடைவு மதிப்பீட்டுக் கழகம் 1973-இலிருந்து 1976 வரையில் தன் உறுப்பு நிறுவனங்களுடன் சேர்ந்து ஏறத்தாழ 40 நூல்களும், 400க்கு மேற்பட்ட சிறுநூல்களும் (Monographs) வெளியிட்டுள்ளது.

கல்வியியல் ஆராய்ச்சிப் பயிற்சிக் கருத்தரங்குகளையும் இக்கழகம் மேற்கொண்டுள்ளது. இக்கழகம்

1968-இலிருந்து 1972 வரையில் மூன்று பயிற்சிக் கருத்தரங்குகளை (Training Seminars) நடத்தியுள்ளது. அமெரிக்க ஐரோப்பிய ஆராய்ச்சியாளர்களுக்கு ஆங்கிலத்திலும், பிரெஞ்சு மொழி பேசும் ஆராய்ச்சியாளர்களுக்குப் பிரெஞ்சுமொழியிலும், செருமன் மொழி பேசும் ஆராய்ச்சியாளர்களுக்கு செருமன்மொழியிலும் ஆங்கிலத்திலுமாக மூன்று ஆராய்ச்சிப் பயிற்சிக் கருத்தரங்குகளை நடத்தியுள்ளது.

இக்கழகம் 1986-ஆம் ஆண்டுக்குள் முடிப்பதற்காக ஐந்து பெரும் ஆராய்ச்சித் திட்டங்களை மேற்கொண்டுள்ளது. அவை: 1. கணக்கு கற்பதிலுள்ள புதிய முறைகள்: இத்திட்டத்தில் 26 நாடுகள் பங்கு கொண்டுள்ளது. 2. வகுப்பறைச் சூழல்; கற்றலுக்காகக் கற்பித்தல்: இவ்வாராய்ச்சியில் மொத்தம் 17 நாடுகள் பங்கு கொண்டுள்ளன. 3. சோதனைக் கேள்வி வங்கி முறை (Test-Item Banking System): இத்திட்டத்தில் 16 நாடுகள் பங்கு கொண்டுள்ளன. 4. மாணவர்களின் கட்டுரை எழுத்தாற்றல்: இவ்வாராய்ச்சிகளில் 14 நாடுகள் செயற்படுகின்றன. 5. அறிவியல் பாடத்திட்டமும் மாணவர் தேர்ச்சியும்: இவ்வாராய்ச்சியில் 37 நாடுகள் பங்கு கொண்டுள்ளன.

இக்கழகம் கல்விமுறையில் மிகவும் பயன்தரத்தக்க ஆராய்ச்சித் திட்டங்களை மட்டுமே மேற்கொள்வதை வழக்கமாகக் கொண்டுள்ளது. மேலும், இது தான் மேற்கொள்ளும் ஆராய்ச்சித் திட்டத்தை நிறைவேற்ற, சோதித்தறியப்பட்ட, பலனளிக்கக் கூடிய ஆய்வு முறைகளையே பயன்படுத்தி வருகிறது. மேலும், எந்தவோர் ஆய்வுத் திட்டத்தைப் பல நாடுகள் மேற்கொள்ள முன்வருகின்றனவோ அந்த ஆய்வுத் திட்டத்திற்கே இக்கழகம் முன்னுரிமை அளித்து வருகிறது. இது மேற்கொள்ளும் ஆய்வுத் திட்டத்தைச் செய்துபார்க்க விழையும் நாடுகளனைத்தும் ஒரே வகையான ஆய்வு முறையைப் பயன்படுத்துகின்றன. இதற்கான ஒருங்கிணைப்புப் பணியோடு, பயிற்சித் திட்டங்களையும் இக்கழகமேசெய்கிறது. அவ்வாறு பல நாடுகளும் கூட்டாகக் கண்டறிந்த ஆய்வு முடிவுகளை இக்கழகமே பல்வேறு உறுப்பு நாடுகளுக்கும் தெரியப் படுத்துகிறது. எஸ்.த.

**உலகக் கல்வியாய்வுக் கழகம்** நார்வே நாட்டின் தலைநகரான ஆசுலோவில் (Oslo) 1961 இல் தொடங்கப் பெற்றது. தொடக்கத்தில் இக்கழகம் 'அனைத்துநாட்டுக் கல்வி மேம்பாட்டுக் கழகம்' என்னும் பெயரில் வழங்கிவந்தது. உலகக் கல்வியாய்வுக் கழகம் (World Association for Educational Research) என்னும் பெயர் 1977-இல் இதற்கு சூட்டப்பெற்றது.

இக்கழகம் 1961-இல் தொடங்கப்பெற்றது என்றாலும், இதன் வரலாறு 1953-இலிருந்தே தொடங்கிவிட்டது. பெல்சியம் நாட்டின் கெண்டு (Ghent) மாநிலப் பல்கலைக் கழகத்தின் கல்வியறிவியல் நிறுவனம் அதன் 25-ஆம் ஆண்டு நிறைவு விழாக் கொண்டாட்டத்தைக் குறிக்கும் வகையில், 1953-இல் அனைத்து நாட்டுப் பல்கலைக் கழகக் கல்வி மாநாடு ஒன்றினைக் கூட்டியது. இம்மாநாடு உலக நாடுகளில் நடைபெறும் கல்வியாராய்ச்சிகளுக்கிடையே பல்கலைக்கழகங்களின் வலுவான ஒத்துழைப்பின் இன்றியமையாமையை வற்புறுத்தியது. எனவே, அம்மாநாட்டிலேயே ஓர் அனைத்து நாட்டுக் கல்வியாராய்ச்சிக் கழகம் தோற்றுவிக்கப்படுவதற்கான முடிவு எடுக்கப்பட்டது. பேராசிரியர் பிளாங்கியின் (Plancke) தலைமையில் கெண்டு நகரிலேயே ஒரு செயலகம் அமைக்கப்பட்டது. பல்வேறு நாட்டுச் சார்பாளர்களைக் கொண்ட இடைக்காலக் குழுவொன்றும் இக்கழகத்தின் செயல்களைக் கவனிக்கும்பொருட்டு அமைக்கப்பட்டது.

இத்தாலி நாட்டின் பிளாரன்சு (Florence) நகரில் 1957-இல் இரண்டாம் அனைத்து நாட்டுப் பல்கலைக்கழகக் கல்வி மாநாடு கூடி, உலகக் கல்வியாராய்ச்சிக் கழகம் தோற்றுவித்தல் பற்றிய முதலாம் மாநாட்டு முடிவினை உறுதிப்படுத்தியது. இதற்காக, 20 பல்வேறு நாட்டுக் கல்வியாளர்களைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டது. இதிலிருந்து ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட செயற் குழு ஒன்றும் தேர்ந்தெடுக்கப்பட்டது. இவை ஆராய்ச்சிக் கழகத்திற்கான சட்டவிதிகளை இயற்றின.

இக்கழகம் உலக நாடுகளில் நடை பெறும் கல்வியாராய்ச்சிப் பணிகளை மேம்படுத்துவதைத் தலையாய நோக்கமாகக் கொண்டுள்ளது. இக்கழகத்திற்கு ஆதாய நோக்கு ஏதுமில்லை. உலகக் கல்வி மாநாடுகளைக் கூட்டுவது, அறிவியல் கண்டுபிடிப்புகளை வெளியிடுவது, உலக நாடுகளுக்கிடையே கல்விக் கருத்துகளைப் பரிமாற்றம் செய்வது, அனைத்துலகக் கல்வி அறிவியல் பண்பாட்டுக் கழகம் (UNESCO) போன்ற நிதி நிறுவனங்களுக்கும் பல்கலைக்கழக ஆராய்ச்சி மையங்களுக்கும் ஒரு பாலமாக விளங்குவது போன்றவை இக்கழகத்தின் பணிகளுள் அடங்கும்.

இக்கழகத்தின் நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் ஒத்துழைப்பு நல்கக் கூடிய உலகின் எந்தவொரு பல்கலைக் கழகத்தின் பேராசிரியரும் இக்கழகத்தில் உறுப்பினராகச் சேரத் தகுதியுடையவர் ஆவார்.

ஒவ்வொரு நான்காண்டுகளுக்கும் ஒருமுறை இக் கழகம் அனைத்து நாட்டுப் பல்கலைக்கழகக் கல்வி மாநாட்டைக் கூட்டி வருகிறது. இக்கழகத்தின் செயற்குழு கல்வி மாநாடு நடைபெறும் இடம், மாநாட்டில் விவாதிக்கப்பட வேண்டிய முதன்மை யான பொருள் ஆகியவற்றை முடிவு செய்கிறது.

இக்கழகம்,1953-இலிருந்து 1982 வரையுள்ள காலத்தில் எட்டு மாநாடுகளை நடத்தியுள்ளது. அம் மாநாடுகள் நிகழ்ந்த நகரங்களும் அவற்றில் உரை யாற்றி விளக்கப்பட்ட செய்திகளும் வருமாறு: 1. கெண்டு நகரில் (பெல்சியம், 1953) 'மேற்கு ஐரோப் பாவின் அறிவியல் கற்பித்தல்', 2. பிளாரன்சு நகரில் (இத்தாலி, 1957) 'கல்வி ஆய்வுச் சோதனைகள் அமைத்தல்', 3. ஆசுலோ நகரில் (நார்வே, 1961) 'சமு தாயக் கல்வியில் கல்வியாராய்ச்சியின் பங்கு', 4. கேம் பிரிட்சு நகரில் (இங்கிலாந்து, 1965) 'கல்வி வளர்ச்சிக் கும் மாறுதலுக்கும் கல்வியாய்வின் கடப்பாடு', 5. வார்சா நகரில் (போலந்து, 1969) 'சமகாலப் பண் பாட்டு நாகரிகத் தேவைகளையொட்டிய அறிவியலின் கடமைகளும் சூழ்நிலைகளும்', 6. பாரிசில் (பிரான்சு, 1973) 'கற்பித்தலுக்குரிய அறிவியலுக்கு அடிப்படை அறிவியலின் பங்கு' 7. கெண்டு நகரில் (பெல்சியம், 1977) 'கல்வியின் வழித் தன்னை முழுமையாகக் கண்டறிதல்', 8. இறுதியாகக் எல்சிங்கிநகரில் (பின் லாந்து, 1981) 'ஆளுமை, கல்வி, சமுதாயம்'.

உலகக் கல்வியாய்வுக் கழகத்திலிருந்து 'அனைத்து நாட்டுக் கல்விச் சோதனையாய்வு இதழ்' (International Journal of Experimental Research in Education)ஆண்டிற்கு இருமுறை வெளிவருகிறது.இவ் வாய்வு இதழ் கழகத்தின் உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. இதனால், பல்வேறு நாடுகளில் நடத்தப்பெறும் ஆய்வு முடிவுகளைப் பலரும் அறிந்து கொள்ளும் வாய்ப்புக் கிட்டுகிறது. மேலும், இக்கழ கம் அனைத்துலகக் கல்வி அறிவியல் பண்பாட்டுக் கழ கத்துடன் இணைந்து பல்வேறு நாடுகளிலும் வகுப் பறைச் சூழ்நிலைகளுக்கான, மேலும் உடனடிப்பயன் படுத்துதலுக்குரிய கல்வியாராய்ச்சிப் பணிகளில் ஈடு பட்டு வருகிறது. எஸ்.த.

**உலகக் கல்வி வளர்ச்சிக் கழகம்**: கல்வி வளர்ச்சிக்காகவும், அதன் மூலம் சமுதாய, பொருளா தார மேம்பாடு காணவும் ஆதாய நோக்கம் எதுவு மின்றி, ஒரு தன்னாட்சி நிறுவனமாக 1970-ஆம் ஆண்டு நியூயார்க்கு நகரில் உலகக் கல்வி வளர்ச்சிக் கழகம் (International Council for Educational Development) தோற்றுவிக்கப்பட்டது.இதன் தலைமை யகம் நியூயார்க்கு நகரில் இருந்தபோதிலும், இதன் அலுவலகம் கனக்டிகட்டு (Connecticut) மாநிலத்தி லுள்ள எசக்சு (Essex) நகரில் அமைந்துள்ளது. இக் கழகம் இதற்குமுன் இயங்கிவந்த'கல்வியாய்வு, கல்வி, உலக நடவடிக்கை மையம்' (Centre for Educational and Enquiry and Euducation and World Affairs) என்னும் அமைப்பினை இணைத்து, உலகக் கல்வி வளர்ச்சிக் கழகமாகச் செயற்படத் தொடங்கியது. இது தொடக்க காலத்தில் போர்டு நிதிநிறுவனத் திலிருந்தே (Ford Foundation) நிறுவனச் செலவு களுக்குப் பணவுதவி பெற்றுவந்தது; பின்னர், தான் மேற்கொள்ளும் ஆராய்ச்சித் திட்டங்களை நிறை வேற்றப்போர்டு (Ford),இராக்பெல்லர் (Rockfeller), வால்சுவெகன் (Volkswagen), ஆசன் நிதிநிறுவனம் (Hazen Foundation) போன்ற தனியார், அரசுத் தொண்டு நிறுவனங்களிலிருந்தும், உலகவங்கி,ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் நிதி நிறுவனம் போன்ற பல்வேறு நிறுவனங்களிலிருந்தும் நிதியுதவி பெற்று வருகிறது.

உலகக் கல்வி வளர்ச்சிக் கழகத்தின் செயற் பாட்டை நிருவகிக்கும் பொறுப்பு 30 உறுப்பினர் களைக் கொண்ட பன்னாட்டுக் குழுவிடம் உள்ளது. இக்குழுவில் கிழக்கு ஐரோப்பா, மேற்கு ஐரோப்பா, ஆப்பிரிக்கா, ஆசியா, இலத்தீன் அமெரிக்கா, ஐக்கிய அமெரிக்கக் குடியரசு ஆகிய நாட்டுக் கல்வியாளர்கள், பொருளாதார வல்லுநர்கள் ஆகியோர் இடம் பெற் றுள்ளனர். இக்குழுவே இக்கழகத்தின் நிதிப் பொறுப் பைக் கண்காணித்து வருகிறது. இக்கழகத்திற்கு முழு நேரத்தலைவரும் துணைத் தலைவரும் உள்ளனர். இது ஓராண்டுக்கு ஒருமுறை கல்வி வளர்ச்சியில் மிகுந்த ஈடுபாடு கொண்ட ஏதாவது ஒரு நாட்டி லுள்ள தேசிய நிறுவனத்தின் அழைப்பின் பேரில், அந் நிறுவனமிருக்கும் நாட்டில் கூடிக்கழகத்தின் பணிகள் குறித்து விவாதிக்கின்றது. கல்வி குறித்த ஒப்பாய்வு, ஆராய்ச்சித் திட்டம், கருத்தரங்கம், கல்வி அறிவுரை, கல்வி வெளியீடுகள் போன்ற பணிகளை இக்கழகம் செய்து வருகின்றது.

அனைத்து வளரும் நாடுகளுக்கும் பொதுவான தும் பயனளிக்கக் கூடியதுமான ஆராய்ச்சித் திட்டங் களை இக்கழகம் மேற்கொள்கிறது. எடுத்துக்காட் டாக,நியூயார்க்கு நகரிலுள்ள இக்கழகத்தின் தலைமை யகம் வளர்ச்சியில் உயர்கல்வி, உயர்கல்வி வாய்ப் புகள், உயர்கல்வி மேலாண்மை, அயல் மொழியும் அனைத்து நாட்டு ஆய்வும், பல்கலைக்கழகமும் கலை யியற் பாடமும் போன்ற பன்னாட்டு ஆராய்ச்சித் திட்டங்களை நடத்தி வருகிறது. எசக்சு நகரிலுள்ள இக்கழகத்தின் அலுவலகம் மூன்றாம் உலக நாடு களில், குறிப்பாக ஊரகக் கல்வி ஆராய்ச்சியில் ஈடு

பட்டு வருகிறது. இவ்வலுவலகத்தின் மேற்பார்வையில் நிகழ்த்தப்படும் ஊரக வளர்ச்சிக்கான கல்வி, ஊரக ஏழைகளுக்கு உதவுதல், உலகக் கல்வி நெருக்கடியினை மறு ஆய்வு செய்தல் போன்ற ஆராய்ச்சித் திட்டங்கள் குறிப்பிடத்தக்கவை.

உலகக் கல்வி வளர்ச்சிக் கழகம் தான் கண்டறிந்த ஆராய்ச்சித் திட்டங்களின் முறைகளையும் கண்டுபிடிப்புகளையும் நூல்களாக வெளியிட்டு வருகிறது. ஏறத்தாழ 91 நாடுகளுக்கு இந்நூல்கள் அனுப்பப்படுகின்றன. இந்நூல்கள் வளரும் நாடுகளின் கல்வி வளர்ச்சிக்கு வழிகாட்டியாக அமையத் தக்கவை. எஸ். த.

**உலகச் சமுதாயம்**: உலகம் என்பது 'ஒரு குடும்பம்' என்னும் அளவில் இன்று ஒன்றுபட்டுச் செயற்படுகிறது. தனித்து நின்று வாழ்வது என்பது தனி மனிதனால் இயலாத ஒன்று. தனித்து வாழ்ந்த மனிதன் துணை தேடி, மக்களைப் பெற்று ஒரு குடும்பமாகி, குடும்பம் நாடாகி, நாடு உலகளாவிய நிலையில் பரந்து நிற்கிறது. எனவேதான் பண்டைய தமிழ்ப் புலவர், 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பொது நெறியை உலக அளவில் கண்டார். தனிப்பட்ட மனிதனால் செய்ய இயலாததை ஊர் மக்கள் ஒன்று கூடினால் செய்து முடித்திட முடியும். ஒரு நாட்டின் முன்னேற்றம் என்பது பொருளாதார முன்னேற்றத்தை மட்டும் குறிக்காமல் சமுதாய முன்னேற்றத்தையும் குறிப்பதாகும். அறிவியல், தொழில் நுட்ப இயல் இரண்டும் அம்முன்னேற்றத்தில் சிறப்பிடம் பெறுகின்றன.

இன்றைய உலகின் கூட்டுச் சமுதாயங்களுள் பல அறிவியலின் எல்லையைத் தொட்டுவிட்டன. என்றாலும் அதன் விளைவாகப் போரும் அச்சுறுத்தலுமே பெருகி வளர்ந்துள்ளன. சீரிய பண்பாட்டையும் நாகரிகத்தையும் பெற்றுள்ள நாடுகள் ஒன்றையொன்று தாக்கியும் அழித்தும் 'மூன்றாம் உலகப் போருக்கு வழி வகுக்குமோ' என அஞ்ச வேண்டிய சூழ்நிலையில் உள்ளன. அறிவியல் வளர்ச்சியையும் மனவியல் வளர்ச்சியையும் பண்பாட்டையும் உலகளாவிய முறையில் மக்கள் யாவரும் அடைய வேண்டியது மிகவும் தேவையாகும். நாகரிக மேம்பாடு என்பது வெறும் ஆடல் பாடல்களினால் மட்டும் அமைவதன்று. அது எப்படி வாழ்வது? எப்படிச் சிந்திப்பது? எவ்வாறு வாழ்வில் நடந்து கொள்வது? என்பவற்றையும் அறிந்து கொள்வதாகும்.

சமுதாய நலத் திட்டங்கள் பெரும்பான்மையும் ஆதரவற்ற மக்களுக்கும் நலிவுற்ற மக்களுக்குமென அமைக்கப்படுவனவாகும். விளைச்சல் பெருகிய நாடுகள் தம் நாட்டு விளைபொருள்களை வீணாகக் கடலில் கொட்டுவதைவிட, வறுமையுற்ற வளர்ச்சியடையும் நாடுகளுக்குக் கொடுத்துதவலாம். அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறையுள் மூன்றையும் உலகமக்கள் அனைவரும் பெறுதற்கு உலகச்சமுதாயம் பணியாற்ற வேண்டும்.

இறைவன் அன்பே வடிவானவர் என்பது அனைத்துச்சமயங்களும் ஏற்றுக் கொண்டதோர் உண்மையாகும். மக்கள் இனம், குலம், சாதிப் பெயர்களால் போரிட்டு மடியாது, வாழும் முறையறிந்து வாழ்தல் வேண்டும். ஈரான்–ஈராக்குப் போர், இலங்கையின் உள்நாட்டுப் போர்,வெள்ளையர் – நீக்கிரோ இனவெறிக் கொலை போல்வன நீங்கி, பகைமைகளையும் உட்பூசல்களையும் ஒழித்து உலக மக்கள் வாழ்தல் வேண்டும்.

இன்று 'இன்சாட்டு' (INSAT)போன்ற செயற்கைத் துணைக்கோள்களின் உதவியால் நல்ல தொலைக் காட்சிவசதி, கணிப்பொறி' (Computer) வளர்ச்சி, போக்குவரத்துச் சாதனங்களின் வளர்ச்சி, வெளி நாட்டு வாணிக உறவுகள், மனிதாபிமானச் சிக்கல்களில் கருத்தொருமித்தல், கால இதழ்களின் மூலம் பெறும் செய்திகள் போன்றவற்றால் உலகம் மிகவும் சுருங்கியுள்ளது. மக்கள் இணைந்து வாழப் பல வகைகளும் வழிகளும் பிறந்துள்ளன. இத்தகைய வசதியான சூழலைப் பயன்படுத்திக்கொண்டு வாழும் முறையறிந்து வாழ்ந்தால் சமுதாயத்திற்கு அது பெரும் நன்மை பயக்கும். ஆப்கானிசுத்தான், நிக்கரகுவா போன்ற சிறிய நாடுகள் வல்லரசுகளின் தூண்டுதல்களால் தம் நிலையறியாது, உள்நாட்டிலும் பிற நாடுகளுடனும் பகைமையை வளர்த்து வாழும் சூழல் தம்மழிவிற்கு வழி வகுப்பதாகும். மனிதனை மனிதன் மதித்து நடக்கும் பண்பாடு வளர்ந்தால் இத்தகைய இழிதகைமை நேராது. பின்தங்கிய நாடுகளின் வளர்ச்சிக்குத் துணையாக வல்லரசு நாடுகள் இருத்தல் வேண்டும்.

உலகச் சமுதாய ஒற்றுமைக்கு இந்திய நாடு ஒரு சான்றாக உள்ளது. பல்வேறு இனங்களையும் மொழிகளையும் இந்நாடு கொண்டிருந்தாலும், 'வேற்றுமையில் ஒற்றுமை' (Unity in Diversity)என்னும் கோட்பாட்டைப் பின்பற்றி ஒருமைப்பாட்டிற்கு வழிவகுக்கிறது. அனைத்துச் சமயங்களையும் அரவணைப்பதுடன் பிற நாடுகளுடன் நட்புக் கொண்டு, கூட்டுச் சேராக்கொள்கையைப் பின்பற்றும் நாடாக இந்தியா திகழ்வது உலகச் சமுதாயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

இந்திய ஒருமைப்பாட்டைப் போன்றே உலக ஒருமைப்பாட்டிற்கும் எல்லா வகை மனிதரையும் சமமாகக் கருதும் எண்ணம் இன்றைய உலகியல் நெறிக்கு ஏற்றது. வெள்ளையர், கறுப்பர் என்று நிறத்தாலோ உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்று குலத்தாலோ பொருளாலோ வேறுபடுத்திக் கூறுவது சமுதாய ஒற்றுமைக்கு முட்டுக்கட்டையாக அமையும். இறைவன் படைத்த மாந்தர் அனைவரும் சமம் என்ற எண்ணம் பரவ வேண்டும். எல்லோருக்கும் எல்லாம் கிடைத்தல் என்னும் பொதுவுடைமை மலரும்போது சமயப் பிணக்குகளோ உயர்வு தாழ்வுகளோ தோன்ற வாய்ப்பில்லை.

உலக மக்கள் ஐரோப்பியர், சீனர், ஆப்பிரிக்கர் என்று இடத்தாலும் சூழ்நிலைகளாலும் வேறுபட்டிருக்கலாம். எனினும், பண்பாட்டிலும் நாகரிகத்திலும் மனிதத் தன்மையிலும் அனைவரும் ஒன்றுபட்டிருப்பதுவே சிறப்பாகும். வாழ்வில் ஒருவர்க்கொருவர் விட்டுக் கொடுத்து, இனிய சூழலை உண்டாக்குதல் வேண்டும். ஒவ்வொருவரும் மக்கட் பண்புடன் நடத்தல் வேண்டும். வாழ்வு செம்மையாக அமைய இயற்கையும் செயற்கையுமான சுற்றுப்புறச் சூழல்கள் செம்மையாக அமைய வேண்டும். இயற்கையின் மாற்றங்களால் அண்மையில் மெக்சிகோவில் ஏற்பட்ட நில அதிர்ச்சி பல்லாயிரக்கணக்கான மக்களைப் பலி வாங்கியது. போபாலில் ஏற்பட்ட நச்சு வாயுவின் விளைவால் ஆயிரக்கணக்கில் மக்கள் இறந்தனர். இவ்வகை இடர்களிலிருந்து தப்பிக்கும் வழிவகைகளை அறிவியலின் துணையாற் கண்டறிவது உலகச் சமுதாயத்திற்குப் பயன்படும்.

போரில் அழிவுக்காகும் செலவினை ஆக்க வழியில் மானிட வளர்ச்சிப் பணிகளுக்குச் செலவிடலாம். பின்தங்கிய நாடுகளின் கல்வி, பண்பாடு, உணவு, சுகாதாரம் ஆகியவற்றின் மேன்மைக்குப் பயன்படுத்தலாம். உலக மக்கள் வாழ்வில் நன்மையும் தீமையும் என்ற இரண்டும் கலந்து இருக்கும். சங்கத் தமிழ்க் கூற்றுப்படி இனிமையும் துன்பமும் வாழ்வில் கலந்து காணப்படினும், 'எல்லாம் நன்மைக்கே' என்ற நோக்கில் துன்பங்களையும் இன்பங்களாக ஏற்கும் மனநிலை வந்திடின் எல்லாம் நன்மையாகவே முடியும். காந்தியடிகள், ஆபிரகாம் லிங்கன், கென்னடி, மார்ட்டின் லூதர் கிங்கு போன்ற சான்றோர்கள் போதித்த பண்பாடும் அதுவேயாகும். இயேசுநாதர், கன்பூசியசு, முகம்மது நபி, விவேகானந்தர், இராம கிருட்டிண பரமஅம்சர் போன்ற ஞானிகளின் அறிவுரைகளை ஊன்றிக் கவனித்தால் அவர்கள் காட்டும் நெறி உலகச் சமுதாயக் கோட்பாடுகளே என்பது புலனாகும். அ.கோ.

**உலகத் தமிழ்ச் சங்கம்:** சங்கம் வைத்துத் தம் மொழியை வளர்த்து வந்திருக்கும் பெருமை, உலகிலேயே பிரெஞ்சு மொழிக்கும் தமிழ் மொழிக்குமே உண்டு. காலத்தால் பிரெஞ்சு மொழியைவிட மூத்தது தமிழ்.

'முதல் ஊழி இறுதிக்கண் தென்மதுரையகத்துத் தலைச் சங்கம்' என்றும், 'இரண்டாம் ஊழியதாகிய கபாடபுரத்தில் இடைச்சங்கம்' என்றும், 'கடைச் சங்கம் இரீஇய பாண்டியருள் கவியரங்கேறிய பாண்டியன் மதிவாணனார் நாடகத் தமிழ் நூல்' என்றும் சிலப்பதிகாரம் மூன்று தமிழ்ச் சங்கங்களைக் குறிப்பிடுகிறது. 'மகாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்' என்று சின்னமனூர்ச் செப்பேடு தெரிவிக்கிறது.

சங்கப் புலவர்கள் பற்றிய செய்திகளும் அவர்கள் படைத்த இலக்கியங்களுமே தமிழ்ப் பண்பாட்டுக்கு அடித்தளமாக உள்ளன. பாலவநத்தம் குறுநில மன்னர் பாண்டித்துரைத் தேவர் கி.பி. 1901–ஆம் ஆண்டில் மதுரையில் நான்காம் தமிழ்ச் சங்கத்தைத் தம் பொருள்கொண்டு நிறுவினார்.

மதுரையில் 1981-இல் ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு-கருத்தரங்கு (World Tamil Conference-Seminar) நடைபெற்ற போது, உலகத் தமிழ்ச் சங்கத்தினைத் தமிழக அரசு மதுரையில் அமைக்கும் என்று தமிழக முதல்வர் அறிவித்தார். அது தொடர்பாக 1982—83-இல் இச்சங்கத்திற்காக, மதுரை மாநகராட்சி அருகே 20 ஏக்கர் பரப்புள்ள நிலத்தைத் தமிழக அரசு கைப்பற்றி ஒதுக்கியது; கட்டடங்கள் கட்டுவதற்கான வரைபடப்பணி முடிவு செய்யப் பெற்றது.

மதுரையில் 1986 ஏப்பிரல் 14-இல் இச்சங்கம் தொடங்கி வைக்கப் பெற்றது. தமிழக முதல்வர் கட்டடத்திற்கான கால்கோள் செய்து, சங்கப் புலவர்களைக் குறிக்கும் நினைவுத் தூணைத் திறந்து வைத்தார்.

உலகம் முழுவதும் வாழும் தமிழ் மொழி பேசும் மக்களை ஒன்று சேர்த்து, மொழி வளர்க்க இச்சங்கம் பணியாற்றும். உலகத் தமிழ்ச் சங்கப் பொறுப்பைத் தமிழறிஞர்கள் ஏற்பார்கள் என்பதும் அறிவிக்கப் பெற்றுள்ளது.

முத்தமிழும் அழியாமல் பாதுகாக்கப்பட வேண்டும்; உலகெலாம் தமிழ் பரவ வேண்டும்; உலகெங்குமுள்ள தமிழர்களின் திறம் வெளிப்பட வேண்டும்;

தமிழ் இலக்கியங்கள், இலக்கண நூல்கள், ஆராய்ச்சி நூல்கள் முதலியன பெருக வேண்டும்; உலகெங்கும் உள்ள தமிழரிடையே-அந்தந்த நாடுகளில் பிறந்த-தமிழை மறந்து விட்ட புதிய தலைமுறையினரிடையே-தமிழ்ப் பண்பாட்டையும் தமிழ்க் கலைகளையும், தமிழ்க் கல்வியையும் பரப்ப வழிவகை காணவேண்டும்; அவர்களுக்குத் தமிழ் நூல்கள் கிடைக்கச் செய்ய வேண்டும்; அதற்காகக் கிளைச் சங்கங்கள் தொடங்கப் பெறவும் வேண்டும். இத் தகைய பணிகளை மேற்கொள்ள உலகம் தழுவிய ஒரு சங்கம் உருவாக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தின் விளைவே இச் சங்கம்.

தமிழ் நாட்டில் உலகத் தமிழ் மாநாடுகள் நடைபெறும் போது, அம் மாநாடுகளை உலகத் தமிழ்ச் சங்கம் நடத்தும் என்பதும் அறிவிக்கப் பெற்றிருக்கிறது.

இச்சங்கத்திற்காகத் தமிழக அரசு 10 கோடி உரூபாய் ஒதுக்க முடிவு செய்தது. இச் சங்கம் தமிழக அரசின் தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறையின் ஒரு கூறாக இயங்கும். உலகத் தமிழ்ச் சங்கத்தில் சிறந்த நூலகம் ஒன்றும் அமைக்கப்பெறும். இதழ் ஒன்றையும் இச்சங்கம் வெளியிடும். தமிழ்ப் புலவர்களின் வரலாறுகள், தமிழ் நாகரிகக் கூறுகள் ஆகியவற்றைப் புலப்படுத்தும் சின்னங்கள், வரைபடங்கள் ஆகியவை இங்குச் சேகரித்து வைக்கப் பெறும்.

சோமலெ.

**உலகத் தமிழ் மாநாடுகள்:** தமிழ்நாடு உள்ளிட்ட அன்றைய சென்னை இராசதானியின் கல்வி அமைச்சராக இருந்த தி.சு. அவினாசிலிங்கம் 1947-இல் தனிப்பட்ட முறையில் தமிழ் வளர்ச்சிக் கழகம் நிறுவினார். அந்தக் கழகத்தின் மூவகைப் பணிகளுள் ஒன்றாகத் தமிழ் விழா நடத்தப்பட்டது. மதுரை, திருவாரூர், சென்னை, கோயம்புத்தூர், யாழ்ப்பாணம், புது தில்லி ஆகிய நகரங்களில் தமிழ் வளர்ச்சிக் கழகம் நடத்திய தமிழ் விழாக்கள் பல நூறாயிரம் மக்களிடையே அதுவரை ஏற்பட்டிராத தமிழார்வத்தைத் தூண்டிவிட்டன. அந்த விழாக்களின் விளைவே உலகத் தமிழ் மாநாடுகள் என்று சொல்லலாம். புது தில்லியில் 1964-இல் உலக அறிஞர்கள் மாநாடொன்று நடைபெற்றது. அதில் கலந்து கொண்ட தமிழ் அறிஞர்களுடன் கலந்துபேசி, உலகத் தமிழாராய்ச்சிக் கழகம் ஒன்றை ஈழநாட்டுத் (சிரீலங்கா) தமிழறிஞர் டாக்டர் சேவியர் தனிநாயக அடிகள் அமைத்தார். இந்த முயற்சிகளில் திரு. ஏ. சுப்பையா, டாக்டர்.மு.வரதராசனார், பிரெஞ்சு நாட்டுத் தமிழறிஞர் பேராசிரியர் பிலியோசா, டாக்டர் வி.ஐ. சுப்பிரமணியம் ஆகியோர் அவருக்கு உறுதுணையாக இருந்தனர்.

மலேசியாவின் தலைநகரான கோலாலம்பூரில் மலேசியா அரசின் முழு ஒத்துழைப்புடனும் மலேசியா சிங்கப்பூர்வாழ் ஆயிரக்கணக்கான தமிழர்களின் எல்லையில்லா ஆதரவுடனும் தனிநாயக அடிகள் முதல் உலகத் தமிழ் மாநாட்டை 1966-ஆம் ஆண்டு சிறந்த முறையில் மலாயாத் தமிழ்ப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைவழியாக நடத்தினார். பல வகைகளில் இந்த மாநாடு அடுத்தடுத்த மாநாடுகளுக்கு வழிகாட்டியாக விளங்கிற்று. புல்வேறு நாடுகளிலிருந்து வந்த அறிஞர்கள் ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் படித்தனர். இவை மூன்று தொகுதிகளாக வெளியிடப்பட்டன. இம்மாநாட்டில், கலந்து கொண்ட அன்றைய தமிழக முதல்வர் மீ. பக்தவச்சலம் இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டைத் தமிழக அரசு சென்னையில் நடத்தும் என்று அறிவித்தார்.

இரண்டாம் மாநாடு 1968-இல் அறிஞர் சி.என். அண்ணாதுரை முதலமைச்சராக இருந்த போது சென்னையில் நடத்தப்பட்டது. அறிஞர்கள் மட்டும் கலந்துகொண்ட கருத்தரங்கு பல்கலைக் கழக வளாகத்திலும், பொதுமக்களுக்கான விழா வேறு ஓர் இடத்திலும் நடைபெற்றன. மாநாட்டை ஒட்டித் தமிழ்ப்பணி செய்த தமிழர்கள், அயல்நாட்டார் ஆகிய சான்றோர் பதின்மரின் சிலைகள் சென்னைக் கடற்கரையில் வைக்கப்பெற்றன. தமிழ் நாட்டில் அப்போது இருந்த மூன்று பல்கலைக்கழகங்களுக்கும், ஒவ்வொரு பல்கலைக் கழகத்துக்கும் பத்து இலட்சம் உரூபாய் வீதம் திருக்குறள் பேராசிரியக் கட்டில் நிறுவத் தமிழக அரசு வழங்கிற்று. மாநாட்டை ஒட்டிச் சிறந்த முறையில் பொருட்காட்சி நடத்தப்பெற்றது. பொருட்காட்சிக் குழுவினர் அரிய விவரங்கள் கொண்ட 'கையேடு' ஒன்றை வெளியிட்டனர். மாநாட்டில் படிக்கப் பெற்ற ஆராய்ச்சிக் கட்டுரைகளை ஆங்கிலத்தில் இரண்டு தொகுதிகளாகவும் தமிழில் ஒரு தொகுதியாகவும் அச்சிட்டு வெளியிட்டனர். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ஒன்றைச் சென்னையில் நிறுவ இந்த மாநாடு தமிழக அரசைக் கேட்டுக் கொண்டது. டாக்டர். வி.ஐ. சுப்பிரமணியம், ஏ. சுப்பையா ஆகியோரின் உதவியுடன் உருவாக்கிய விரிவான அறிக்கைக்கு இணங்க, இந்த நிறுவனம் 1970-இல் சென்னையில் தொடங்கப்பெற்று இயங்கி வருகிறது. இந் நிறுவனத்திற்கு அயல்நாடுகள் மூலம் சில அரிய கருவிகளை ஐக்கிய நாடுகளின் கல்வி சமூகப் பண்பாட்டு நிறுவனத்தின் தலைமை இயக்குநரான டாக்டர் மால்கம் ஆதிசேடய்யா வழங்கினார்.

மூன்றாம் உலகத் தமிழ் மாநாடு 1970-இல் பிரெஞ்சு நாட்டின் தலைநகரான பாரிசில் நடைபெற்றது. டாக்டர் மால்கம் ஆதிசேடய்யா, டாக்டர் பிலியோசா ஆகிய இருவரும் முன்னிருந்து நடத்திய இம்மாநாடு, முந்திய இருநாடுகளினின்றும் வேறுபட்டு ஆரவாரமின்றி நடைபெற்றது. 39 நாடுகளைச் சேர்ந்த 200 பேராளர்கள் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர்.

**நான்காம் மாநாடு**: இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை இத்தகைய மாநாடு நடைபெற வேண்டும் என்பது நிறுவியவர்களின் திட்டம் ஆகும். இலங்கையில் 1972-இல் நான்காம் மாநாடு நடைபெறுவதாக இருந்தது. மாநாட்டைக் கொழும்பில் நடத்த வேண்டுமென்று அந்த நாட்டு அரசும் யாப்பாணத்தில் நடத்த வேண்டும் என்று தமிழ் மக்களும் விரும்பியதால் குழப்பம் ஏற்பட்டது. இறுதியில் 1973-இல் யாழ்ப்பாணத்தில் அந்த மாநாடு அந்த நாட்டு அரசின் கடுமையான எதிர்ப்புக்கிடையே நடைபெற்றது. வெளிநாட்டார் மாநாட்டுக்கு வருவதை அரசு தடை செய்ததால் முன்னமே இலங்கைக்குள் வந்திருந்த ஐந்தாறு வெளிநாட்டார் மட்டுமே கலந்துகொண்டனர்.

ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டை 1977-இல் ஆப்பிரிக்காவில் உள்ள செனகல் நாட்டில் நடத்த அந்த நாட்டு அதிபராக அப்போது இருந்த தமிழ் ஆர்வலர் கவிஞர் செங்கோர் முன்வந்தார். ஆனால் தமிழக அரசு தமிழ்நாட்டில் அந்த மாநாட்டை நடத்த விரும்புவதாகவும் பிறிதொருகால் செனகலில் நடத்திக் கொள்ளலாம் என்பதாகவும் வேண்டிக் கொண்டது. செங்கோர் அதற்கு உடன்பட்டார். பல்வேறு அரசியல் மாற்றங்களால் ஐந்தாம் மாநாடு 1981-இல்தான் நடைபெற்றது.

மதுரை காமராசர் பல்கலைக் கழக வளாகத்தில் கருத்தரங்கும் பந்தயத் திடலில் பொதுமக்களுக்கான சொற்பொழிவுகளும் கலைநிகழ்ச்சிகளும் பெருஞ்சிறப்புடன் நடத்தப்பெற்றன. ஆய்வுக் கட்டுரைகள் மூன்று தொகுதிகளாக அச்சிடப் பெற்றுள்ளன. இறுதி நாளில் நடந்த ஊர்வலத்தில் தமிழ்நாட்டு வரலாறு, தமிழ்ப் பண்பு, தமிழர் வீரம் ஆகியவற்றை மக்கள் உணரும் வகையில் அலங்கார வண்டிகள் இடம் பெற்றன.

இம் மாநாட்டின் விளைவாக மூன்று பெருஞ் சாதனைகளைக் குறிப்பிடலாம்: அவை தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக் கழகம் நிறுவப் பெற்றமையும், மதுரையில் உலகத் தமிழ்ச் சங்கம் அமைக்கப் பெற்றமையும், தமிழர்களைப் பின்பற்றி உலகத் தெலுங்கு மாநாடு, உலக மலையாள மொழி மாநாடு, உலகக் கன்னட மொழி மாநாடு ஆகியவை நடத்தப் பெற்று வருவதும் ஆம்.

சோமலெ.

**உலகத் தருமினி**: தருமம் என்ற சொல் சமயத்திலுள்ள நற்பயன்களையும், புறத்தில் கடமைகளையும் அகத்தில் நற்பண்புகளையும் குறிக்கும். பண்புகள் உடையவர் தருமினி ஆவர். இயலுலகப் பண்புகள் உடையவரை உலகத் தருமினி என்பர்.

சைவ சித்தாந்தத்தின்படி திரோதான சக்தியின் (மறைப்பாற்றல்) வடிவமான தலைமுடிமழித்தலின்றி இல்லற வழியில் நின்றும் சமயத்தில் ஆழ்ந்த பற்றுதலைக் கொண்டும் நாட்கடமைகளை மட்டுமே செய்வதற்குரிய நிரதிகார (நைமித்தியம், காமியம் ஆகியவற்றைச் செய்ய இயலாத) நிலையில் ஞான தீக்கையாகிய நிருவாண தீக்கையைப் பெற்றவர்களே உலகத்தருமினி எனப்படுவர். தலைமழித்தலுடன் துறவு வழி நின்று சமயப்பற்றுடனும் அனைத்துக் கடமைகளையும் செய்வதற்குரிய சாதிகார நிலையில் ஞானதீக்கையாகிய நிருவாண தீக்கையைப் பெற்றவர் சிவதருமினி எனக் குறிக்கப்படுவர். மேற்கூறியவை முறையே பௌதிக தீக்கை, நைட்டிகதீக்கை எனவும் வழங்கப்படும்.

தீக்கை என்னும் சொல் வட சொல்லினின்றும் பெறப்படுவது. தீக்கை என்பது உயிர்களின் தளைகளை நீக்கி, அவற்றைத் தீவிரமான சமயவாழ்வில் குருவானவர் ஆற்றுப்படுத்துவதாகும். இது உயிர்களின் பசுத்துவத்தை நீக்கிச் சிவத்துவத்தை விளங்கச் செய்வதாகும்.

சைவசித்தாந்தம் ஏழுவகையான தீக்கைகளைப் பற்றிப் பேசுகிறது. அவையாவன: பார்த்தல் (நயனம், சட்சு), தொடுதல் (பரிசம்), சொல்லுதல் (வாசகம்), நினைத்தல் (மானசம்), நூன்முறை (சாத்திரம்), யோகம், ஔத்திரி ஆகியவையாம். பார்த்தல் தீக்கை மூவகைப்படும். அவை சிருங்காரம், நிக்கிரக அவலோகனம், அனுக்கிரக அவலோகனம் என்பன. கருடபாவனையில் விடந்தீர்ப்பதுபோலச் சிவபாவனையினால் குரு மாணவனைப் பார்த்துத் தளை நீக்கம் செய்தல் சிருங்கார தீக்கையாகும். குரு தளையுடன் ஒன்றுபட்ட உயிரை அறிவுடன் ஒன்றுபடச் செய்வதே நிக்கிரக அவலோகன தீக்கையாகும். அனுக்கிரக அவலோகன தீக்கை என்பது உயிர்க்குக் குரு தம் அருளை அளிப்பதாகும். செம்பைப் பொன்னாக்குதல் போல், குரு தமது கையைச் சிவன் கையாகப் பாவித்துப் பூசித்து மாணவனைத் தொட்டுத் தளை நீக்குதல் தொடுதல் தீக்கையாகும். மாணவனின் தகுதிக்கேற்பத் திருவைந்தெழுத்தைக் குரு

அறிவித்தல் சொல்லுதல் தீக்கையாகும். குரு தம் தவவலிமையால் மாணாக்கன் இதயத்திற் புகுந்து, அவனுடைய அறிவைத் தமது உள்ளத்திலே சிவனறிவொடு கலக்கச் செய்து, பின்னர் அதனை மாணாக்கனின் எண்ணத்தில் நிலை நிறுத்தலே நினைத்தல் தீக்கை எனப்படும். ஆகமப் பொருளைக் கற்பித்தல் நூன் முறைத் தீக்கையாகும். யோகப் பயிற்சியளித்தல் யோக தீக்கை எனப்படும். பார்த்தல், தொடுதல், நினைத்தல் தீக்கைகளுக்கு முறையே மீன்பார்வை, கோழி அடைகாத்தல், ஆமைதன் நினைவு ஆகியவற்றால் குஞ்சு பொரித்தல் ஆகியவற்றை எடுத்துக் காட்டுகளாகவும் கூறுவர். பார்த்தல் முதல் யோகம் ஈறான ஆறு தீக்கைகளுக்கும் பொதுப் பெயர் சாம்பவ அல்லது விஞ்ஞான தீக்கையாகும். இவை ஔத்திரி தீக்கையின் உறுப்புகளாகப் பயன்படுபவை.

ஔத்திரி தீக்கை என்பது அழல் ஓம்பிச் செய்வதாகிய வேள்விக் குண்டத்தின் முன் செய்வதாகும். இத்தீக்கை ஞானவதி, கிரியாவதி என இருவகைப்படும். ஞானவதியாவது வேள்விக்குண்டம் முதலியவற்றை மனத்தில் கற்பித்துக் கொண்டு செய்வது. இது சக்தி தீக்கை எனவும் கூறப்படும். கிரியாவதி புறத்தே குண்டம் முதலியவற்றைக் கொண்டு செய்வது. இதனை மாந்திரிக தீக்கை எனவும் வழங்குவர்.

கிரியாவதி நிர்ப் பீசத்தீக்கை, சபீசத் தீக்கை என இரு வகைப்படும். மந்திரங்களைப் பீசாக்கரம் இன்றிக் கற்பித்தல் நிர்ப்பீசத் தீக்கையாகும். தளைகள் பக்குவப்பட்டிருப்பினும் நாட் கடமைகளை மட்டும் தங்கள் ஆற்றலுக்கேற்றவாறு செய்யக்கூடிய குழந்தைகள், சிறுவர்கள், முதியோர்களுக்கு இத்தீக்கை வழங்கப்பெறும். இது நிரதிகார தீக்கை எனவும் கூறப்படும். சபீசத்தீக்கை என்பது மந்திரங்களைப் பீசாக்கரத்துடன் கற்பித்தல் ஆகும். இது தளைகள் பக்குவப்பட்டும், சமய நூல்களின் அறிவு பெற்றும், நித்திய, நைமித்திய, காமிய கடமைகளை முறையாகச் செய்பவர்களுக்கு அளிக்கப்படும் தீக்கையாகும். இது சாதிகார தீக்கை எனவும் பெயர்பெறும். இத்தீக்கையைப் பெற்றவர்கள் சாதகர் எனப்படுவர். மேலும், அபிடேகத் தீக்கை பெற்று ஆச்சாரியர்களாக இருப்பவர்களும் சபீசத் தீக்கை பெற்றவர்களே. முதலில்கூறப்பட்ட உலக, சிவதருமினிகளும் நிருவாண சபீச தீக்கை பெற்றவர்களேயாவர்.

மனத்திலோ புறத்திலோ வேள்விக் குண்டத்தோடு கூடிச் செய்யப்படும் தீக்கை சமயம், விசேடம், நிருவாணம் என முவகைப்படும். சமய தீக்கை ஒருவருக்குச் சைவ சமயமாகும் உரிமையைத் தருவதாகும். சமய தீக்கை பெற்றவர் சிவபெருமானது முதன்மையை ஒருவாறு உணரும் நிலையும், திருவைந்தெழுத்தைத் தூலமாக உணர்ந்து கணிக்கும் உரிமையும், சிவாகமங்களை ஓதி உணரும் உரிமையும், அவற்றின்படி சரியையில் நிற்கும் உரிமையும் அடைவர். விசேட தீக்கை என்பது சமய தீக்கை பெற்றவரை வழிபாடு முதலியவற்றை நடத்தச் செய்வித்தலாகும். விசேட தீக்கை பெற்றவருக்குச் சிவபிரானை இலிங்க வடிவில் கண்டு வழிபடுதலாகிய கிரியைத் தொண்டில் விருப்பமுண்டாகும். அவர் கிரியை முறைப்படி சிவலிங்க மூர்த்தியை நாடோறும் வழிபட்டு நிற்பர். யோக முறையும் இந்நிலையில் உணர்த்தப்பெறும்.

நிருவாண தீக்கை ஞான வழிநின்று உயிரின் தளையை முழுவதுமாக நீக்கி, இறைவனடி சேர்தற்கு உறுதுணை புரிவதாகும். இது ஒன்றுக்குள் ஏனையவை அடங்குவனவான மந்திரம், பதம், வருணம், புவனம், தத்துவம், கலை ஆகிய ஆறு அத்துவாக்களிலும் உயிர்க்குள்ள கன்ம நுகர்வுகளை ஒரு காலத்திலேயே தொலைத்து அதனை வீடு பேற்றிற்குரியதாக்கும். இறுதி அத்துவாவான கலை திரோதான சக்தியில் அடங்கும். திரோதான சக்தி சிவத்தில் அடங்கும். இந்நிலையில் உயிர் தளை நீங்கப் பெற்று இறையருளுக்குப் பாத்திரமாகும். நிருவாண தீக்கையும் இருவகைப் படும். அசத்திய நிருவாண தீக்கை உடம்பு நீங்கும் பொழுதும், சத்திய நிருவாண தீக்கை உடனடியாகவும் உயிர்க்கு முக்தியை அளிக்கும். பி.ஆர்.ந.

**உலகந்தாதி** என்னும் நூல் விக்கிரமசிங்கபுரம் முக்களாலிங்கரின் புதல்வராகிய நமச்சிவாயரால் இயற்றப்பட்டது. இவரது காலம் கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டு. இந்நூல் பாவநாசம் என்னும் பதியில் கோவில் கொண்டு எழுந்தருளிய இறைவி மீது பாடப்பட்டதாகும். அம்பிகையைச் சுமங்கலை, பராபரை, உலகம்மை, மங்கல கல்யாண சுந்தர நாயகி, மாதங்கி, சாமளை என்ற பெயர்களால் இவர் குறிப்பிடுகிறார். உலகம்மை அந்தாதி என்பதே உலகந்தாதி என வழங்குகிறது.

கட்டளைக் கலித்துறையால் யாக்கப்பட்ட இந்நூல் காப்புச் செய்யுள் உட்பட 101 செய்யுட்களைக் கொண்டது. அன்னையின் பேரழகுத் தோற்றத்தை இவர் கற்போர் மனத்தைக் கவரும் வகையில் சிறப்பாகப் பாடுகின்றார் (8). கேட்டவற்றை வழங்கும் கற்பகப் பூங்கொம்பு! வேதமெல்லாம் வடிக்கும் இறைவி! அவளது அருளைத் தாம் எய்தியது பெறுதற்கரிய பேறு என இவர் பாடிய செய்யுள் படித்து இன்புறத் தக்கது (68).

தென்பொதிகை மலையில் அகத்திய மாமுனிவருக்கு மணக்கோலம் காட்டியது, சீகாழியில் திரு

ஞானசம்பந்தப் பெருமானுக்குப் பொற்கிண்ணத்தில் பாலூட்டியது, இறைவனின் திருமேனியில் இடப்பாகம் பெற்றது, இருநாழி நெல் பெற்று அறம் வளர்த்தது, கச்சிமா நகரில் இறைவனின் மேனி குழையத் தழுவி யது, காவிரியாறு தோன்றிய வரலாறு முதலிய திரு விளையாடற் செய்திகள் இந்நூலில் குறிக்கப் பெற் றுள்ளன.

'உன்னை யொழிய ஒருவரையும் நம்புகிலேன் பின்னை ஒருவரையான் பின்செல்லேன்' என்ற முன் னோர் வாக்கை இந்நூலாசிரியர் எடுத்தாண்டுள்ளார். இது முன்னோர்மொழி பொருளேயன்றி அவர் மொழி யும் பொன்னேபோல் போற்றும் நன்னெறியாகும்.

தந்தையும் தாயுமாய்த் தாங்குகின்ற உலகன் னையை வழிபட்டுத் தாம் அடைந்த அனுபவ நிலையைப் பிறரும் உணர்ந்து உய்ய வேண்டும் என்ற கருத்தினால், நமச்சிவாயர். இந்நூலை இயற்றினார் எனலாம். கு.சு.

**உலக நகரம்**: உலக நகரம் என்னும் அரசியற் கருத்து ஐரோப்பாவில் பண்டைய கிரேக்க நகரரசுகள் மறைந்து கொண்டு வந்த காலத்தில் — அதாவது கி.மு. நான்காம் நூற்றாண்டில் தோன்றியதாகும். இக்காலத்தில் பிளேட்டோவும் அரிசுடாட்டிலும் கூறிய அரசியற் கருத்துகளெல்லாம் மக்களுடைய உள் ளத்தைக் கவரவில்லை. இச்சூழ்நிலையில் நகரரசின் அரசாங்கமானது பலர் எண்ணியதுபோல நல்வாழ் வுக்கு இன்றியமையாதது அன்று என்ற எண்ணமும், மிகச் சிறந்த அறிவாற்றல் உடையவர்களால் நகரர சில் யாதொன்றையும் அடைதல் இயலாது என்ற எண்ணமும் பரவின. நகரரசே முழுமையான வாழ் வுக்கு உகந்தது என்ற மயக்கத்திலிருந்து யாவரும் விடுபட்டு வந்தனர். இச்சூழ்நிலையில் தனி வாழ்வே சிறந்தது என்ற எண்ணமும், பொது நலனில் ஈடு பாடற்ற போக்கும் தோன்றின. இத்தகைய போக்கு இன்பநெறியாளர்களிடத்தும் (Epicureans), ஐயக் கோட்பாட்டாளர்களிடத்திலும் (Skeptics), வெறுப்புக் கோட்பாட்டாளர்களிடத்தும் (Cynics) காணப்பட் டது. மனித நல்வாழ்வு பற்றிய ஒரு கோட்பாட்டைத் தோற்றுவிப்பதற்குரிய முக்கிய நிலையான காரணி கள் மனித இயல்பில் யாவை என்ற கேள்வி எழுந்தது. அதற்கு விடை காண முற்பட்டோர் இன்பநெறியாள ரும் வெறுப்புக் கோட்பாட்டாளரும் ஆவர்.

**வெறுப்புக் கோட்பாட்டாளர் கூறிய உலகநகரக் கோட்பாடு**: வெறுப்புக் கோட்பாட்டாளர் கூறிய கருத்துகளில் முதன்முதலாக உலக நகரம் (World City) என்னும் கருத்துக் காணப்படுகிறது. தனியாள் தன் னிறைவு பெறுவதற்கு நகரரசு என்ற கட்டுப்பாட்டி லிருந்து விடுபடுதல் வேண்டும். நகரரசும் அதற்கு ஆதாரமான சமூகப்பாகுபாடுகளும் மறுக்கப்படுதல் வேண்டும். நல்வாழ்வுக்குரிய பொருள்களைத் துறந் தும், சமூக வேறுபாடுகளை நீக்கிச் சமன்செய்தும் (Levelling down) சமூக வழக்காறுகளில் (Social Con ventions) காணப்படும் வசதிகளையும் மதிப்பீடுகளை யும் கூடக் கைவிட்டும் இருத்தலே வாழ்க்கைத் துன் பங்களினின்றும் நீங்குதற்குரிய வழி ஆகும். இக்கருத்து களை வெறுப்புக் கோட்பாட்டாளருள் முக்கியமானவ ராகிய அண்டிசுதினசும் (Antisthenes) தியாசினசும் (Diogenes) கூறி, மேலும் கூறுகின்றனர்: 'அறிவுடை யோர் முழுதும் தன்னிறைவு உடையவராயிருத்தல் வேண்டும்; அவருடைய கருத்தும் பண்பும் நல்வாழ் வுக்கு இன்றியமையாதவை; ஒழுக்கப்பண்பாட்டைத் தவிர மற்றவை எல்லாம் நல்லனவுமல்ல; தீயனவு மல்ல. இவ்வாறு நல்லனவாகவோ தீயனவாகவோ அல்லாமலிருப்பவை உடைமை (Property), திருமணம், குடும்பம், குடியுரிமை (Citizenship), கல்வியறிவு, நற் பெயர் முதலிய நாகரிக வாழ்விலடங்கிய வழக்கங்க ளாம். செல்வர், வறியர், கிரேக்கர், காட்டுமிராண்டி கள் (Barbarians), குடியாள், அயலவர், சுதந்திரர், அடிமை, உயர்பிறப்பாளர், தாழ்ந்த பிறப்பாளர் ஆகியோரெல்லாம் சமத்துவம் உடையோரே. எவ்வா றெனில் அவர்கள் யாவரும் நல்லனவும் தீயனவுமல் லாத பொதுச் சமநிலைக்குத் தாழ்த்தப்படுகின்றனர். .... பெரும்பாலானவர்கள் அறிவற்றவர்களாகையி னால் நல்வாழ்க்கை என்பது அறிவுடையவர்களுக்கு மட்டுந்தான் உரியது. உயரிய சமூகமும் அறிவாளருக்கு உ[illegible]. அவர்களுக்கு நாடும் வீடும் தேவையில்லை. அவா எங்கும் தம் வீடுபோல் இருக்கும் நிலையிலுள்ள வர். அவர்களின் பண்பே அவர்கள் பின்பற்றுகிற சட்ட மாக இருப்பதால்,அவர்களுக்குச் சட்டமோ நகரரசோ வேண்டுவதில்லை. எல்லா நிறுவனங்களும் செயற்கை யானவையே தவிர இயற்கையானவை அல்ல. ஒழுக்க இயலான தன்னிறைவு பெற்றவர்களுக்கு நிறுவனங் கள் தேவையில்லை. குடிமை உரிமை பெறுவதற்கு எந்த அரசில் உண்மை அறிவு ஒன்றுதான் தகுதியாக இருக்கிறதோ, அந்த அரசுதான் உண்மை அரசு ஆகும். அதற்கு இடமோ சட்டமோ இல்லை. எல்லா இடங்களிலுமுள்ள எல்லா அறிவாளிகளும் ஒரு சமூக மாக, அதாவது உலக நகரமாக அமைகின்றனர். அறி வாளியானவர் பொது அல்லது பரந்த நோக்குடைய உலகக்குடிமகன் ஆவர். அறிவாளிகளுடைய கடமை உணர்வினின்றும் தோன்றும் கட்டுப்பாடுகளைத் தவிர ஏனைய குடிமை, சமூகக் கட்டுப்பாடுகளெவையும் இல்லை.'

**இன்பதுன்பச் சமநோக்காளர் வகுத்த உலகநகரக் கோட்பாடு**: பண்டைய கிரேக்க அரசியல் சிந்

தனையாளரான அரிசுடாட்டில் மறைந்தவுடனேயே, தன்னாட்சியுடைய நகரரசின் ஒருபாகமாக மனிதனை ஓர் அரசியல் விலங்கு (A Political Animal) என்று கருதி அரசியற் கோட்பாடுகளை வகுக்கும் வழக்கமும் மறைந்தது. மாவீரன் அலெக்சாண்டருடைய வெற்றி களின் விளைவாக நகரரசுக்கிருந்த பழைய சிறப்பு மறைந்து, தனி ஆள் உரிமை என்ற கருத்து வளரத் தொடங்கிற்று. அதாவது, தனியார் தம் சொந்த வாழ்க்கையை ஒழுங்குபடுத்துவதும், மற்ற நாட்டு மக்களோடு தமக்கு உள்ள தொடர்புகளை ஆய்வு செய் வதும் தேவைப்பட்டன. முதலிற் கூறப்பட்ட தன் வாழ் வுச் சீர்திருத்தத்தைஆராயும் போது நடத்தை பற்றிய கருத்துகள் (Ethics) தோன்றின. இரண்டாவது, பிற ரோடு உள்ள தொடர்புகளை ஆராயும்போது, மனித சமூகத்தைப் பற்றிய சில புதிய கருத்துகள் தோன்றின. இதற்கு முன்னிருந்ததைப் போலல்லா மல், மனிதர்கள் தனியாக வாழவும், நகரரசைவிட அளவிற் பெரிய ஒரு புதிய சமூக இணைப்பில் அவர் கள் ஒன்றாக வாழவும் கற்றுக்கொள்ள வேண்டி யிருந்தது. ஆகையால் அரசியற் சிந்தனையும் இரண்டு கருத்துகளைப் பற்றி அமைந்தது. 1) தனியாளுக்கு உள்ள தனியான அல்லது சொந்த வாழ்க்கை என்ற கருத்து; 2)யாவரிடத்தும் உள்ள பொதுவான இயல்பு களையுடைய மனித இனம் என்ற கருத்து, அதாவது உலகளாவிய கருத்து (Idea of Universality). இச் சூழ்நிலையில்தான், கி.மு. 300 க்குச் சிறிது காலத் துக்கு முன்னர்ச் சிடியம் நகரத்துச்சீனோ என்பவரும் (Zeno of Citium) அவர்தம் மாணவர்களும் இன்ப துன்பச் சமநோக்குக் கோட்பாட்டை (Doctrine of Stoicism) வகுத்தனர். அவர்களுடைய கருத்துகள் தொடக்கத்தில்வெறுப்புக்கோட்பாட்டாளர்களுடைய கொள்கையிலிருந்து தோன்றிய ஒரு கிளையேயாகும். சீனோ தம் நூலில், சிறந்தஅரசில் இன,தரவேறுபாடு எதுவும் இல்லாமலும், குடும்பமோ சொத்துகளோ இல்லாமலும், பணமோ நீதிமன்றங்களோ இல்லாம லும் மனிதர்கள் யாவரும் ஒரே கூட்டமாக வாழ்தல் இயலுமென்று கூறுகிறார். உலக நகரம் என்ற கருத் துக்கு வெறுப்புக் கொள்கையாளர் எதிர்மறையான பொருளை-அதாவது நகரரசு என்பதை மறுக்கும் பொருளைக் கொடுத்திருக்கவும், இன்பதுன்பச் சம நோக்காளர் அதற்கு உலக முழுதளாவிய அரசு என்ற உடன்பாட்டு வகையான பொருளைத் தந்துள்ள னர். அரசியல், ஒழுக்க இயல், சமய இயல் உண்மை களை உடையவர்களுக்குத் தத்துவ வகையான ஆத ரவை அளிக்கக் கூடியதாக அவர்கள் கருத்துக்கு ஒரு வடிவம் கொடுத்தவர் கிரிசிப்பசு (Chrysippus) என்ப வர். தனிமனிதனுக்குத் தன்னிறைவையும் நல்வாழ் வையும் அளிக்கும் நெறி எது என்று இன்பதுன்பச்சம நோக்காளர் ஆய்வு செய்தனர். ஆய்வு செய்து அவர் கள் கூறிய கருத்துகளில் உலக நகரம் என்ற கருத்துக் காணப்படுகிறது.

தன்னிறைவு என்பதை மன உறுதிக்குக் கடுமை யான பயிற்சி அளிப்பதன் வாயிலாகத்தான் பெறுதல் இயலும். நல்ல தீர்மானம், பொறுமை, கடமையிலீடு பாடு, இன்ப உணர்வுகளைப் புறக்கணித்தல் ஆகிய வற்றால்தான் மனஉறுதி வளரும். கடமை ,உணர்வு என்பதும் இறைவனுடைய ஆற்றலில் நம்பிக்கை இருந்தால்தான் அசையாமலிருக்கும். ஒரு தளபதி யால் வீரனுக்கு அளிக்கப்படும் பணி எவ்வாறு அவனால் கருதப்படுகிறதோ, அதுபோலவே இறை வனால் அளிக்கப்பட்ட வாழ்க்கையையும் ஒவ்வொரு வரும் ஒரு பணியாகக் கருதுதல் வேண்டும். எனவே இன்பதுன்பச் சம நோக்காளர் கொள்கையானது இயற்கை என்பது முழுமையானது, முரண்பாடில்லா தது என்ற கருத்தில் நம்பிக்கையை அளிப்பதாகும். இயற்கைக்கு ஒத்த வாழ்க்கை வாழுதல் என்பது கடவு ளின் நெறிக்கு ஒருவர் முற்றிலும் கட்டுப்பட்டு வாழ்த லும் மனிதனுக்கு மேற்பட்ட ஓர் ஆற்றலைச் சார்ந்து இருத்தல் வேண்டுமென்ற உணர்வு பெற்று இருத்தலு மாகும். அவர்கள் உலகம் காரண-காரிய அடிப்படை யில் அமைந்துள்ளதென்றும், அது நல்லியல்போடு இருக்கிறது என்றும் கருதும் உணர்வினைப் பெற்றவ ராவர். இவ்வாறு மனித இயல்புக்கும், இயற்கை யின் அமைப்புக்கும் இடையே ஒழுக்க இயலான பொருத்தம் இருக்கிறது.

இக்காரணங்களினால் ஓர் உலக நகரம் என்ற கருத்துத் தோன்றிற்று. அதில் கடவுளரும் மனிதரும் குடிமக்களாவர். அதில் எதைச் செய்தல் வேண்டும், எதை நீக்குதல் வேண்டும் என்று உணர்த்துகிற பகுத் தறிவு என்னும் ஓர் அரசியலமைப்புச் சட்டம் இருக் கிறது. சரியான அறிவுதான் இயற்கையின் சட்ட மாகும். இவ்வறிவு எது நியாயமானது, எது சரி யானது என்பதைக் காட்டும் ஓர் உரைகல் ஆகும். இயற்கைச் சட்டத்தினுடைய கொள்கைகள் மாறாத வையாகும். இவை ஆளுவோரையும் ஆளப்படுப வரையும் கட்டுப்படுத்துபவையாகும்.

கிரிசுப்பசு என்பவர் தாம் எழுதிய ‘சட்டங்கள்’ என்ற நூலில், ‘சட்டம் என்பது எது உயர்வானது, எது தாழ்வானது, எது நியாயமானது, எது நியாயமல்லா தது என்று யாவருக்கும் வழிகாட்டியாக இருந்து இயக்குவதாகும்’ என்று கூறுகிறார். ஆகையால், உலகத்தின் ஆங்காங்கே சில பகுதிகளில் வழங்கும் சில வேறுபாடுகளுக்கு உலக அரசில் இடமில்லை. கிரேக் கரும் கிரேக்கரல்லாதவரும் (Barbarians), உயர்பிறப் பாளரும் பொதுமக்களும், அடிமைகளும் சுதந்திரரும்,

செல்வரும் வறியரும் சமமானவரே ஆவர். உலக நகரத்தில் மனிதருக்கிடையே இருக்கக்கூடிய ஒரே வேறுபாடு யாதெனில், அறிவாளிக்கும் அறிவற்ற வருக்குமிடையே உள்ள வேறுபாடே ஆகும். குடியுரிமை என்பது ஒருவரிடத்துக் காணப்படும் அறிவையே பொறுத்ததாகும். ஆகையால் அறிவு வளர்ச்சி அல்லது அறிவுத் தகுதி என்பது ஒன்றுதான் உலக நகரக் குடியுரிமைக்குத் தகுதி ஆகும்.

**நகரத்தின் சட்டமும் உலக நகரத்தின் சட்டமும்:** ஒவ்வொருவருக்கும் இருவகைச் சட்டங்களிருக்கின்றன. ஒன்று, மக்களுடையே உள்ள சமூக வேறுபாடுகளை நீக்குகின்ற, ஒவ்வொருவரும் வாழுகின்ற நகரத்தின் சட்டம். மற்றொன்று, நாடுகளிடையே நல்லுறவை வளர்க்கின்ற உலக நகரத்தின் சட்டம். நகரத்தின் சட்டம் வழக்கத்தின் சட்டமாகவும், உலக நகரத்தின் சட்டம் அறிவின் சட்டமாகவும் இருக்கிறது. இரண்டு சட்டங்களுள், உலக நகரத்தின் சட்டமே நகரத்தின் சட்டத்தைவிடக் கூடுதலான அளவு கட்டுப்படுத்தும் ஆற்றலைப் பெற்றும், நகரச் சட்டங்களாலும் வழக்கங்களாலும் பின்பற்றப்பட வேண்டிய குறிக்கோள்களை அளிக்கக் கூடியதாகவும் இருக்கிறது. வழக்கங்கள் பலவாக இருப்பினும் காரண அறிவு ஒன்றேயாகும். பல வழக்கங்களுக்கு ஒரு பொதுவான நோக்கம் இருத்தல் வேண்டுமாகையால், உலகத்தின் பல்வேறு பகுதிகளிலும் செயற்படக் கூடிய கிளைகளை உடைய ஓர் உலகளாவிய சட்ட அமைப்பு இருத்தல் வேண்டுமென்று இன்பதுன்பச்சம நோக்காளர் கூறினர். நகரத்தின் சட்டம் வழக்கமென்னும் வடிவத்தில் இருக்க, இயற்கையின் சட்டம் முழுமையாகவும் குறைபாடில்லாததாகவும் இருக்கிறது. இயற்கையின்சட்டத்தைப் போன்றே இயற்கை நீதி என்பதும் (Equity) நீதி என்பதற்கு இன்றியமையாதது.

இன்பதுன்பச்சம நோக்காளர் கூறிய உலக நகரமென்னும் கருத்து, பிற்காலக் கிறித்தவக் கருத்தியுள்ள இறைவனின் நகரமென்னும் கருத்துக்கு வழிவகுத்தது.

**செனக்கா கூறிய உலகநகரக் கருத்து:** உரோமானியப் பேரரசர் நீரோவின் (Nero)அமைச்சராகிய செனக்கா (Seneca) என்பவர் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் இருந்த உரோமானியப் பேரரசில் கடமையுணர்வும் பொது வாழ்வில் காணப்படவேண்டிய உண்மையும் நாணயமும் மறைந்து வருதலையும், ஊழல் மலிந்த ஆட்சி வளருதலையும் கண்டு வருத்தமுற்று, குடியாட்சியில் மக்கள் பெரும்பாலும் தீயவராகவும் ஊழல் மிக்கும் காணப்படக் கூடுமாகையால் அதைவிட எதேச்சாதிகார ஆட்சியே விரும்பத்தக்கது என்று கருதினார். சட்டமன்ற உறுப்பினராகவோ நிருவாக அலுவல்களில் அல்லது நீதித்துறை அலுவல்களில் பங்கு கொள்ளுகிறவராகவோ உள்ள அரசியல் வாழ்வினால் பயன் ஏதும் இல்லை. ஆகையால் அரசாங்கங்களுக்கிடையே வேறுபாடு காணுதலும் அவ்வளவு முக்கியமன்று. ஒருவகை அரசாங்கம் மற்றவகை அரசாங்கத்தைவிட நல்லது மன்று,தீயது மன்று. இதனால் அறிவாளிகள் சமூகத்திலிருந்து ஒதுங்கியிருத்தல் வேண்டுமென்பது பொருளன்று. சிசரோவைப் போல் செனக்காவும், நல்லவர் தம் தொண்டுகளை அளித்தல் அவருடைய ஒழுக்க இயலான கடமை ஆகுமென்று கூறினார். எவரும் பதவி ஏதும் ஏற்காமல் சமூகப்பணி செய்தல் இயலும். இதனால் இன்பதுன்பச் சமநோக்காளர் வகுத்த, ஒவ்வொருவரும் இரண்டு அரசுகளில் உறுப்பினராயிருக்கிறாரென்ற கொள்கைக்குத் தாம் உறுப்பினராயிருக்கிற குடியியல் அரசிலும் (Civil State), மனிதராயிருக்கிற காரணத்தினால் மனித சமூகமென்னும் பேரரசிலும் குடியாளாக இருக்கிறாரென்ற கொள்கைக்கு ஒரு திருப்பம் உண்டாயிற்று.

செனக்கா குறிப்பிடும் பெரிய அரசு (Greater Commonwealth) என்பது ஒரு சமூகமே ஆகும். அது ஓர் அரசு அன்று; அதிலுள்ள மக்களை இணைப்பது ஒழுக்க இயலான அல்லது சமய இயலான கருத்தே தவிர, சட்ட இயலான கருத்தோ அரசியல் கருத்தோ அன்று. ஆகையால் அறிவுடையோரும் நல்லோரும் எந்த அரசியலதிகாரத்தையும் பெற்றிராவிட்டாலும் அவர் மனித இனத்துக்கு நல்ல தொண்டு செய்தல் இயலும். அவர் அவ்வாறு செய்தற்குக் காரணம் அவருக்கு மற்ற மனிதரோடு உள்ள ஒழுக்க இயலான தொடர்பே. இவ்வாறு தம் சிந்தனையின் விளைவாக மனித இனத்தின் நல்லாசிரியராக வருபவர் அரசியலிலீடுபட்ட ஆட்சியாளரைவிட மிக உயர்வான மிக்க செல்வாக்குடைய இடத்தைப் பெறுகிறார்.

செனக்காவின் கோட்பாடு அவருக்குப் பிற்பட்ட காலத்திய மார்க்கசு அரேலியசின்(Marcus Aurelius) கோட்பாட்டைப் போலச் சமய நம்பிக்கையே ஆகும். ஆன்ம அமைதியில் நாட்டமும் விருப்பமும் கிறித்துவுக்கு முற்பட்டகாலச் சூழ்நிலையிலும் காணப்பட்டன. செனக்கா குறிப்பிட்ட இரு நாட்டுக் கொள்கை (Two Commonwealths) கிறித்தவத் திருச்சபைப் பெரியார்களால் குறிப்பிடப்பட்டது.

**கிறித்தவச் சமய நெறியில் கூறப்பட்ட உலகநகரக் கருத்து:** புனிதபால் (Saint Paul) என்னும் கிறித்தவப் பெரியார் தாம் கலேசியர்களுக்கு

(Galatians)விடுத்த கடிதத்தில், 'யூதரென்றோ கிரேக்கரென்றோ, அடிமை என்றோ சுதந்திரர் என்றோ, ஆண் என்றோ பெண் என்றோ உங்களிடையே வேறுபாடு எதுவும் இல்லை. ஏனென்றால், நீங்கள் யாவரும் இயேசு கிறித்துவைப் பொறுத்தவரை ஒருவரே ஆவீர்' என்று கூறினார்.

சமூகப் பாதுகாப்புக்காக நிறுவப்பட்ட அதிகாரியைக் கிறித்தவ மக்கள் மதித்து நடத்தல் வேண்டுமென்ற கடமையை அவர்களிடத்து ஆழமாகப் பதிய வைத்த அச்சமய நிறுவனராகிய இயேசுகிறித்துவை உரோமானியப் பேரரசருக்கு எதிரானவர் என்ற குற்றச்சாட்டுக்கு ஆளாக்குதல் வேண்டுமென்றுபரிசேயர்கள் (Pharisees) வஞ்சகமாக ஒரு முயற்சி செய்த போது, இயேசு மக்களை நோக்கி, 'சீசருக்குச் (பேரரசருக்குச்) செலுத்தவேண்டிய கடமைகளைச் சீசருக்குச் செலுத்திவிடுவீர்களாக; இறைவனுக்குச் செலுத்த வேண்டிய கடமைகளை இறைவனுக்குச் செலுத்திவிடுவீர்களாக' (விவிலியம், மத்தேயு 22, 21, மார்க்கு, 12, 17, உலூக்கு, 20, 25) என்று அறிவுறுத்தினார். புனிதபால் உரோமானியர்களுக்கு விடுத்த மற்றொரு கடிதத்தில் 'ஒவ்வொரு கிறித்தவரும் உலகியல் ஆட்சி அதிகாரிக்குக் கட்டுப்பட்டிருக்கவேண்டிய கடமையை வலியுறுத்தியுள்ளார்.

'ஒவ்வொரு மனிதரும் மேலான அதிகாரிக்குக் கீழ்ப்படிந்து நடக்கக் கடவர். ஏனெனில் கடவுளைத் தவிர வேறு அதிகாரி எவரும் இல்லை, நாம் காணும் அதிகாரிகளெல்லாரும் கடவுளால் ஆணையிட்டு அமர்த்தப்பட்டவரே ஆவர். ஆகையால் உலக அதிகாரியை எதிர்ப்பவர் கடவுளின் ஆணையை மீறுபவரே ஆவர். அவ்வாறு மீறுவோர் ஒறுப்புக்கு ஆளாவர். ஏனெனில், ஆளுவோரெல்லாம் நற்செயல்களுக்குப் பகைவரல்லர். தீச்செயல்களுக்குத்தான் அவர்கள் பகைவராவர்...ஆளுவோரெல்லாம் கடவுளுடைய அமைச்சரே ஆவர்......'' (விவிலியம், புதிய ஏற்பாடு, உரோமானியர்,13, 1-7). புனிதபால் கூறிய இக்கருத்துகள் ஒப்புக்கொள்ளப்பட்ட கிறித்தவச்சமயக் கோட்பாடாக வழக்கத்திற்கு வந்துவிட்டன. குடிமை அதிகாரிக்கு ஒவ்வொருவரும் கட்டுப்பட்டுக் கீழ்ப்படிந்து நடத்தல் வேண்டுமென்ற கடமையானது எல்லாக் கிறித்தவத் திருச்சபைத் தலைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட கிறித்தவப் பண்பு ஆகும். செனக்காவைப் போல் புனிதபாலும் நீதிபதியின் அதிகாரமானது மனிதனுடைய தீவினையின் விளைவே ஆகுமென்றும், ஆட்சியாளருடைய பணி தீயனவற்றை ஒடுக்குதலும், நல்லனவற்றை ஊக்குவித்தலும் ஆகுமென்றும், குடிமக்கள் அரசாங்கத்துக்குக் கீழ்ப்படிதல் வேண்டுமென்ற கடமையை இறைவனே விதித்துள்ளாரென்றும் வலியுறுத்தினார். ஆட்சியாளருடைய அதிகாரம் மக்களிடத்திருந்தே பெறப்படுகிறது என்ற ஒரு கருத்தை உரோமானிய அரசியலமைப்பு வரலாற்றிலிருந்து வழக்கறிஞர்கள் சுட்டிக்காட்டினர்.

அதிகாரிக்கு மதிப்புக் கொடுத்தல் வேண்டுமென்ற கருத்தை எந்தக் கிறித்தவரும் மறுக்கவில்லை. ஆனால், அவருக்கு இருவகைக் கடமைகளுண்டு. அவர் சீசருக்குக் கீழ்ப்படிதலோடு மட்டுமல்லாமல், கடவுளுக்கும் அவர் கீழ்ப்படிதல் வேண்டும். இருவகைக் கடமைகளுக்குமிடையே வேறுபாடு தோன்றினால், அவர் மனிதனைவிட இறைவனுக்கே கீழ்ப்படிய வேண்டிய கடமை உண்டு. அரசுக்குக் கீழ்ப்படிதலென்ற வரம்பில்லாத கடமையே உரோமானியப் பண்பு என்றும், அதற்கு ஒத்துவராத ஒரு கருத்து கிறித்தவச்சமயநெறியிலிருக்கிறதென்றும் பேரரசர் மார்க்கசு அரேலியசு எண்ணித் தம் கிறித்தவக் குடிமக்களை ஒறுக்கத் தொடங்கினார். கிறித்தவர்கள் தாம் பின்பற்றும் சமய நெறி கடவுளால் தமக்கு உணர்த்தப்பட்ட உண்மை என்றும், அந்த நெறி இவ்வுலக வாழ்வு அளிக்கக் கூடிய எந்த நிலையையும் விட மிக உயரிய மீட்சியை அல்லது விடுதலையை (Salvation) அளிக்கவல்லது என்றும், அந்தச் சமயநெறி தமக்கு விதித்துள்ள கடமைகளிலிருந்து எந்தப் பேரரசரும் விலக்கு அளிக்க இயலாதென்றும், இந்தக் கடமைகளினடிப்படையில்தான் ஒவ்வொருவரும் தாம் செலுத்தவேண்டிய குடியாள் கடமைகளைச் சரியானவையா நியாயமானவையா என்று ஆராய்தல் வேண்டுமென்றும் நம்பினர். இவ்வாறு கிறித்தவநெறியும் ஒவ்வொருவரும் இரண்டு அரசுகளின் குடிமகனாவர் என்ற ஒரு கருத்தைக் கூறிற்று. ஆயினும், கிறித்தவ நெறி உணர்த்திய பேரரசு என்பது மக்களனைவரும் அடங்கிய ஒரு குடும்பமன்று, அது உண்மையில் இறைவனின் அரசே (Kingdom of God) ஆகும். இதில் என்றும் வாழும் நிலைக்கு மனிதர் உரிமை உடையவர். இந்த நல்ல நிலையானது பூவுலகஅரசு அளிக்கவல்ல எத்தகைய வாழ்வையும் விட அளவிடற்கரிய சிறப்புடையது. கிறித்தவச் சமயத்தின் ஆன்மிகக் கருத்துகள் மற்றக் கீழைநாட்டுச் சமயநெறிகளிலும் காணப்படுகின்றன. பண்டைக்காலத்தில் உலக அரசு என்ற உரோமானியக் கருத்துக்குச் சமயநெறி ஆதரவளித்திருந்தது. கிறித்தவத் திருச்சபை ஒரு தனித்த உரிமையுள்ள சமய நிறுவனமாக நாளடைவில் வளர்ச்சி பெற்றதும், அரசின் ஓர்இணைப்புப் பாகமாகச் சமயத்தை ஆக்கிய பழைய மரபு மாறி மறைந்துவிட்டது. பா.சு.

துணை நூல்கள்:

Sabine, G.H., A History of Political Theory, Oxford & IBH Publishing Co., Calcutta, 1961.

**Sayre, Farrand,** A Study of Greek Cynicism, Baltimore, 1938.

**Hichs, R.D.,** Stoic and Epicurean, London, 1911.

**Carlyle, R.W., Carlyle, A.J.,** A History of Mediaeval Political Theory in the West, London, 1903-1936.

**உலகநாத சுவாமி** கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவர் தஞ்சை மாவட்டத்திலுள்ள திருவிடைமருதூர் என்னும் ஊரைச் சேர்ந்தவர்; அந்தண வகுப்பினர். இவருக்கு உலகநாத சாத்திரிகள், திருவிடைமருதூர்ப்பிச்சு சாத்திரிகள் என வேறு பெயர்களும் வழங்கின. இவர் தமிழிலும் வடமொழியிலும் புலமை மிக்கவர்.

இவர் பல நூல்களை வடமொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்த்து எழுதியுள்ளார். வடமொழியில் ஆதிசங்கரர் இயற்றிய 'சொரூபானு சந்தான துதி', 'சோபான பஞ்சகம்', 'தசகம்', 'மனிடா பஞ்சகம்', 'விவேக சட்கம்', 'விவேக சூடாமணி' முதலிய நூல்களைத் தமிழில் செய்யுளாக இயற்றியுள்ளார். இவை கி.பி. 1880-இல் பதிப்பிக்கப் பெற்றன. இவர் கோவலூர் அருணாசல சாமிகளின் ஆணையின்படி 'இரிபுகீதையை' வடமொழியிலிருந்து தமிழில் இயற்றியுள்ளார். 'சூத சங்கிதை - முக்திகாண்டத்தை'த் தமிழில் 370 செய்யுள் கொண்ட நூலாக இவர் பாடியுள்ளார்.

மேலும், இவர் கோவலூர்ப் புராணம் எனப்படும் சமிவனசேத்திர மான்மியம் என்னும் வடமொழி உரைநடை நூலையும் 'சுதகீதை' என்னும் வடமொழிச் செய்யுள் நூலினையும் மொழிபெயர்த்துள்ளார். வேதாந்தப் பொருளை விளக்கும் 'விவேக சூடாமணி' என்னும் நூலினையும் இவர் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். வீ.சே.

**உலகநாதபிள்ளை, எல்.** தஞ்சையில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிறந்து, 20-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரை வாழ்ந்த தமிழ்ப் புலவர். இவர்தம் தந்தையார் இலட்சுமணப்பிள்ளை, இவர் 'மெட்ரிகுலேசன்' தேர்வில் வெற்றி பெற்றவர். ஆழ்ந்த தமிழ்ப் புலமையும் ஆங்கில அறிவும் உடையவர். தமிழ்ப் பெரியார்களோடு கல்வி ஆராய்ச்சிப் பணிகளில் பெரிதும் ஈடுபட்டவர்.

இவர் முதலில் தஞ்சாவூர் நகராட்சி அலுவலகத்தில் பணியாளராய்ச் சேர்ந்தார். பின்னர், அவ்வூர்க் கலியாணசுந்தரம் உயர்நிலைப் பள்ளியில் தலைமைத் தமிழாசிரியராகவும், திருவையாறு தமிழ் வடமொழிக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகவும் பணியாற்றினார். மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் நடத்திய 'பிரவேச', 'பாலபண்டித', 'பண்டிதப்' பட்டத் தேர்வுகளுக்குரிய தேர்வாசிரியர் குழுவில் ஒருவராகவும் பணிபுரிந்தார்.

இவர் தமிழ்த்துறையில் ஆராய்ந்து பெற்ற கருத்துகளைச் சொற்பொழிவு வாயிலாகவும், கட்டுரைகள், கவிதைகள் வாயிலாகவும் வெளிப்படுத்திப் பலருக்கும் பயன்படச் செய்தார். கரந்தைத் தமிழ்ச் சங்கத்தோடு நெருங்கிய தொடர்புகொண்டு அதன் ஆக்கப் பணிக்குத் தம்மாலான தொண்டுகளைப் புரிந்தார். இவர் தமிழிலக்கண இலக்கிய அறிவிற் சிறந்தவராய் ஆராய்ச்சிக் கட்டுரைகள் பல எழுதியதோடு, வரலாற்றுக்குத் துணையாகத் தஞ்சையில் உள்ள கல்வெட்டுகள் சிலவற்றைக் குறித்தும் ஆய்வுரைகள் வெளியிட்டார். 'தமிழ்ப்பொழில்' இதழின் கூட்டு ஆசிரியராகக் கரந்தைக் கவியரசு ஆர். வேங்கடாசலம் பிள்ளையுடன் ஐந்து ஆண்டுகள் பணியாற்றினார்.

இவர் 'மாணவர் விருந்து' என்ற பதிப்பு வரிசையில் சோழன் கரிகாலன், கன்றுங் கனியுதவும், கற்புடைய மகள் சாவித்திரி, முதல் இராசராசன், அனுமான் இராமதூதன் முதலிய அரியதமிழ் நூல்களை எழுதினார். இவர் எழுதிய 'கன்றுங்கனியுதவும்' என்ற நூல் சிறந்த தமிழ் உரைநடை நூல் என மதிக்கப் பெற்று, அதற்காக இவர் 1921-ஆம் ஆண்டு வேல்சு இளவரசரால் (Prince of Wales) தங்கப் பதக்கமும் பொன்னாடையும் அணிவித்துச் சிறப்பிக்கப் பட்டார். திருமழுவாடிப்புராணம் என்னும் நூலை 1908-இல் தஞ்சைக் கலியாண சுந்தரம் உயர்நிலைப் பள்ளித் தமிழ் ஆசிரியராக இருந்தபோது, பார்வையிட்டுக் கொடுத்தார். இவர் அச்சிட்ட 'குலோத்துங்க சோழன் பிள்ளைத் தமிழ்' என்னும் வரலாற்று இலக்கியம் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. மேலும், பழஞ்சுவடிகளை ஆராய்ந்து, முதன்முதலாகச் சிற்றிலக்கியங்களையும், சைவசாத்திர நூல்களையும் 'தமிழ்ப்பொழில்' இதழில் பதிப்பித்தார். தஞ்சாவூர் மகாராசா சரபோசி சரசுவதி மகால் நூலகத்திலுள்ள தமிழ் ஓலைச்சுவடிகளை ஆராய்ந்து, அவற்றைப் பொருள்வாரியாகப் பிரித்து, ஒவ்வொரு சுவடி பற்றியும் பல குறிப்புகள் இவர் எழுதியுள்ளார். இவை யாவும் ஆய்வாளருக்கு மிக்க பயன் தருவன. ஆபிரகாம் பண்டிதர் எழுதிய 'கருணாமிர்த சாகரம்' என்னும் இசைத்தமிழ் நூலைப் பிழைதிருத்தம் செய்ய உதவினார்.

இவருக்கு நான்கு ஆண்மக்களும் இரண்டு பெண் மக்களும் இருந்தனர். இவர் 12—9—1941-இல் காலமானார்.

எம்.சீ.

**உலகநாத முனிவர்** என்பவர் தமிழிலுள்ள உலக நீதி என்னும் அறநூலை இயற்றிய ஆசிரியர். இவர் உலகநாதன் எனவும் உலகநாத பண்டிதர் எனவும் உலகநாத கவிராயர் எனவும் வழங்கப் பெறுவார். இவர் நாவிதர் குலத்தில் தோன்றியவர் என்று கூறப்படுகிறது. முருகப் பெருமானிடத்தில் மிக்க அன்புடையவர். இவர் இளஞ்சிறார் பயிலுவதற்கு வாய்ப்பாக அறங்களைத் தொகுத்து உலகநீதி என்னும் பெயரில் எளிமையாக ஓர் அறநூலை இயற்றியுள்ளார். அதில், 'ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்' என்றாற்போல அறங்களைத் தொகுத்து உணர்த்தியுள்ளார். இந்நூலை 13 எண்சீர் ஆசிரிய விருத்தங்களால் செய்துள்ளார். பாடல்களின் இறுதி அடிகளில் நெஞ்சை விளித்து, முருகனை வாழ்த்துவாயாக என்று கூறியுள்ளார். ஒவ்வொரு பாடலின் முதன் மூன்றடிகளிலும் தாம் கூற விரும்பும் அறங்களை எதிர்மறை வாசகத்தால் விளக்கியுள்ளார். ஒவ்வொரு பாடலிலும் முருகனை வாழ்த்தும் இவர், நூலினை விநாயகர் வணக்கத்தில் தொடங்கியுள்ளார். இறுதிப்பாடலில் தம் பெயரையும், நூலின் பெயரையும், 'ஓதுவித்த வாசகத்தால் உலகநாதன், உண்மையாய்ப் பாடிவைத்த உலகநீதி' எனப் புலப்படுத்தியுள்ளார். இவருடைய காலம் கி. பி. 18-ஆம் நூற்றாண்டு என்றும், கி. பி. 16-ஆம் நூற்றாண்டு என்றும் கூறப்படுகிறது. இவர் கமலை ஞானப்பிரகாசர் என்னும் கவிஞரைத் தூண்டி, திருமழுவாடிப் புராணம், திருவானைக்காப் புராணம் ஆகியவற்றை இயற்றச் செய்தார். கமலை ஞானப்பிரகாசர் இவரை, 'அவனியோர் போற்றும் அந்த அருஞ்சபை தன்னின் மிக்க, தவமுனி உலகநாதன்' என்றும், 'பாசம் துறந்திடும் உலகநாதன்' என்றும் குறிப்பிட்டுப் போற்றியுள்ளார். இதனால் கமலை ஞானப்பிரகாசரின் காலமாகிய கி. பி. 16-ஆம் நூற்றாண்டே இவரது காலமாகும் என்பது தெளிவாகிறது. இவர் 'சாதி பேத விளக்கம்' என்னும் நூலையும் செய்துள்ளார். இவரது 'உலகநீதி' அண்மைக் காலம் வரையில், பள்ளியிற் பயிலும் இளஞ்சிறுவர்கள் எழுத்தறிவதற்கு முன்னரே மனனமாகப் பயின்று வந்த நூலாகத் திகழ்ந்தது. இவர் தாமியற்றிய உலகநீதி என்னும் நூலினை 'உலக நீதி புராணம்' என்று குறிப்பிட்டுள்ளார்.

அ.மா.ப.

**உலக நீக்கிரோ சீர்திருத்தக் கழகம்:** உலகத்தில் பல்வேறு நாடுகளில், சிறப்பாக ஐக்கிய அமெரிக்க நாட்டில் வாழும் நீக்கிரோ மக்களிடையே தன் மதிப்பு உணர்வையும், பொருளாதாரத்தில் தன் னிறைவையும் உண்டாக்குதற்கும் அவர்களுக்கு ஆப்பிரிக்காவில் ஒரு சுதந்திர நாட்டை ஏற்படுத்துவதற்கும் அமைக்கப்பட்டதே உலக நீக்கிரோ மேம்பாட்டுக் கழகம் (Universal Negro Improvement Association). இம்வமைப்பை ஏற்படுத்தியவர் மார்க்கசு கார்வி (Marcus Garvey) என்ற அமெரிக்கர் ஆவர். இவர் இவ்வமைப்பைச் சமைக்காத் தீவில் (Jamaica) 1914-இல் தொடங்கினார். பின்னர், இவர் 1916-இல் நியூயார்க்கு (New York) நகரத்தின் அருகிலுள்ள ஆர்லம் நகரத்திற்கு வந்து தங்கிய அளவில், ஐக்கிய அமெரிக்காவின் வடபகுதி நகரங்களில் இவ்வமைப்புக்குச் செல்வாக்கு வளர்ந்தது.

நீக்கிரோக்களிடையே தேசிய உணர்வை வளர்த்தல்: ஐக்கிய அமெரிக்க நாட்டின் நகரங்களில் கறுப்பர் பகுதிகளில் (Ghettos) கார்வியின் கருத்துகளுக்கு வரவேற்பு இருந்தது. அப்பகுதிகளில் ஏழைக்கறுப்பர்களே மிகுதி; அவர்களெல்லாம் கார்விக்கு மிக்க ஆதரவு அளித்தாலும், அவர் விடுத்த ஓர் அறிவிப்பின் காரணமாக அவர் அவர்களுடைய ஆதரவை இழந்து, அவர்களுடைய எதிர்ப்புக்கு ஆளானார். அவர் தாம் ஓர் ஆப்பிரிக்கப் பேரரசை(Empire of Africa)நிறுவுவதாகவும், அதற்குத் தாமே ஓர் இடைக்காலத் தலைவராக இருக்க விரும்புவதாகவும் நியூயார்க்கில் அறிவித்தார். இதனால் அவரை ஏமாற்றுக்காரர் என்று பல கறுப்புத் தலைவர்கள் பழித்துரைத்தனர். ஆனால், வெள்ளையர் சமூகத்தில் கறுப்பர்கள் ஒரு பகுதியாகச் சேர்த்துக் கொள்ளப்படுதலையே பல கறுப்புத் தலைவர்கள் விரும்புவதாகவும், அவர்கள் தங்களுக்கு ஒரு தனிநாடு அமைக்கப்பட வேண்டுமென்று விரும்பவில்லை என்றும் கார்வி குற்றம் சாட்டினார். கார்வி நீக்கிரோக்களுக்குத் தொடர்ந்து தலைவராக இருக்க இயலாத நிலை 1923-இல் தோன்றிற்று. ஒரு நீக்கிரோக் கப்பல் போக்குவரத்துக் குழுமத்தைத் தொடங்குவதற்காக வசூலிக்கப்பட்ட மூலதனப் பணத்தைக் கார்வி கையாடல் செய்தாரென்று குற்றம்சாட்டப்பட்டார். அமெரிக்கக் குடியரசுத் தலைவர் கால்வின் கூலிட்சு (Calvin Coolidge) கார்விக்கு 1927-இல் மன்னிப்பு வழங்கினார். ஆயினும், கார்வியை ஒரு விரும்பத்தகாத அயலவர் என்று குடியரசுத் தலைவர் கூறி, அவரை நாட்டை விட்டு வெளியேற்றினார்.

கார்விக்குப் பின்னர் உலக நீக்கிரோ சீர்திருத்தக் கழகம்தொடங்கப்படவில்லை. இவ்வமைப்பு எந்த ஒரு நீக்கிரோவையும் ஆப்பிரிக்காவுக்கு அனுப்பவில்லை. ஆயினும், அவ்வமைப்புக்கு அமெரிக்க, ஆப்பிரிக்க நாடுகளில் வாழும் நீக்ரோக்களிடையே செல்வாக்கிருந்தது.

மேலும், இவ்வமைப்பு இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் அமெரிக்க ஐக்கிய நாட்டில் தோன்றிய நீக்கிரோ தேசிய உணர்வுக்கு ஒரு முன்னோடியாக விளங்கிற்று. பா.சு.

**உலகநீதி** உலகியல் நீதிகளைக் கூறும் நூல்; உலகநாத பண்டிதரால் இயற்றப்பட்டது. இவருடைய காலம் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி என்பர். இது பதின்மூன்று விருத்தப் பாக்களைக் கொண்டது. ஒவ்வொரு பாடலும் நெஞ்சை விளித்து நீதிகளைக் கூறுகிறது. ஒவ்வொரு பாடலிலும் கடைசி அடி முருகப் பெருமானின் பெருமையினைக் கூறும்.

நடைமுறை வாழ்க்கையில் கைக்கொள்ளுதற்கு உரிய உயர்ந்த ஒழுக்கங்களை எளிய முறையில் கூறுகிறது. 'தாழ்வான குலத்துடனே சேரவேண்டாம்' எனக் குலவேறுபாட்டையும் இந்நூல் கூறுகிறது.

'சிலுக்கிட்டுத் திரிதல்', 'குண்டுணியாய்த் திரிதல்' போன்ற வட்டார வழக்குகளும் தாரம், மாதா, கோபம், வாத்தியார், துர்ச்சனர் போன்ற வடசொற்களும் இதில் இடம்பெற்றுள்ளன. இந்நூலின் இறுதியில் இதைக் கற்போரும் கேட்போரும் அடையும் பயன் குறிக்கப்பட்டுள்ளது. ந.மா.

**உலகப் பண்பாட்டுப் பகுதிகள்**: ஒரு குறிப்பிட்ட நிலப் பகுதியைச் சார்ந்த மக்கள் புவிப் பரப்பு, சூழ்நிலை, சூழ்நிலையோடு கொண்டுள்ள தொடர்புகள், சமூக வாழ்க்கையமைப்பு, பொருளாதார அமைப்பு, தொழில் நுட்பம் முதலான பண்பாட்டின் அனைத்துக் கூறுகளையும் பொதுவாகக் கொண்டிருப்பர். இவ்வாறு ஒருபடித்தான பண்பாட்டுக் கூறுகளைக் கொண்ட மக்கள் பரப்பே பண்பாட்டுப் பகுதி (Culture Area) ஆகும். ஒரு பண்பாட்டுப் பகுதி என்பது ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியாகும்.

பண்பாட்டின் வரலாற்றினை ஆய்வு செய்யும்போதும் பண்பாட்டின் வரலாற்றினை மீட்டுருவாக்கம் செய்யும்போதும் குறிப்பிட்ட புவிப்பரப்பில் ஒவ்வொரு பண்பாட்டுக் கூற்றினையும் ஆராய்ந்து, அதன் வளர்ச்சி நிலைகளையும் அதன் பரவலையும் அறிவர். கிளார்க்கு விசுலர் (Clark Wissler) என்னும் மானிடவியலார் வகுத்த பண்பாட்டுப் பகுதி என்னும் கோட்பாடே நாகரிகம் பற்றிய ஆய்வுகளிலும் பண்பாடுகளை வகைப்படுத்தி அறிவதிலும் முதன்மையான அளவுகோலாகக் கையாளப்படுகிறது. பண்பாட்டுப் பரவல் பற்றிய ஆய்விற்கும் இதன் பயன்பாடு மிகுதியாகும்.

உலகப் பண்பாட்டுப் பகுதிகளை ஆசியப் பண்பாட்டுப் பகுதிகள், அமெரிக்கப் பண்பாட்டுப் பகுதிகள், ஆப்பிரிக்கப் பண்பாட்டுப் பகுதிகள் என முப்பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஆசியாவின் பண்பாட்டுப் பரப்புகள் வடக்கு ஆசியா, தெற்கு ஆசியா என இரு பிரிவாகப் பகுக்கப்படுகின்றன. வடக்கு ஆசியப் பகுதியில் தொன்மைச் சைபீரியா (Palaeo Siberia), சைபீரியா யுரேசியன் வன்பாலை (Eurasian Steppe), மங்கோலியப் பீடபூமி என்னும் மூன்று பிரிவுகள் உள்ளன. தெற்கு ஆசியாவில் தென் மையம், வடசீனா, தென் சீனா, கொரியா – சப்பான், இந்தோனேசியா ஆகிய ஐந்து பண்பாட்டுப் பகுதிகள் உள்ளன. அனைத்துப் பகுதிகளும் வேறுபாடுகள் மிகுந்த பரப்புகளாக உள்ளன. காண்க: ஆசியப் பண்பாட்டுப் பகுதிகள்.

அமெரிக்காவின் பண்பாட்டுப் பகுதிகளை வரையறை செய்யும்போது, வட அமெரிக்கப் பண்பாட்டுப் பகுதிகள் என்றும், தென் அமெரிக்கப் பண்பாட்டுப் பகுதிகள் என்றும், கரிபியப் (Caribbean) பண்பாட்டுப் பகுதி என்றும் பண்பாட்டு மானிடவியலார் பிரித்துள்ளனர். வட அமெரிக்கா, தென் அமெரிக்கா ஆகிய இரண்டு பகுதிகளுமே மிகுந்த நிலப்பரப்பையும் வேறுபட்ட இயற்கைப் பிரிவுகளையும் சூழ்நிலைகளையும் கொண்டதால், இடத்திற்கு இடம் மக்களின் பண்பாட்டிலும் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

விசுலர் வட அமெரிக்கப் பண்பாட்டுப் பகுதியைப் பத்துப் பகுதிகளாகவும், தென் அமெரிக்கப் பண்பாட்டுப் பகுதியை நான்கு பகுதிகளாகவும், கரிபியப் பகுதியை ஒரே பகுதியாகவும் பிரித்துள்ளார். அவை: 1. சமவெளி, 2. மேட்டு நிலம், 3. கலிபோர்னியா, 4. வடபசிபிக்குக் கடற்கரை, 5. எசுக்கிமோ, 6. மக்கன்சீ, 7. கிழக்குக் காட்டுப் பகுதி, அ. இராக்குவர், ஆ. மைய அல்கான்கின், இ. கிழக்கு அல்கான்கின், 8. தென்கிழக்கு, 9. தென்மேற்கு, 10. நகுவா (வட அமெரிக்கா); 11. சிப்சா, 12. இன்கா, 13. குவானகோ, 14. அமேசான் (தென்அமெரிக்கா); 15. ஆண்டிலசு (கரிபியா) என்பனவாகும்.

விசுலரின் வகைப்பாட்டில் தெளிவு பெறாத குரோபர் (Kroeber) ஏழாண்டுகளுக்குப் பின் வட அமெரிக்காவைப் பத்துப் பண்பாட்டுப் பகுதிகளாகப் பிரித்தார். இது விசுலர் வகைப்பாடு செய்த எண்ணிக்கையிலிருந்து மாறுபடவில்லை. குரோபர் ஒவ்வொரு பகுதியின் பெயரிலும் மாற்றம் செய்து அவற்றை வரிசைப் படுத்தினார்; எனினும், விசுலரின் வகைப்பாடு பண்பாட்டின் அனைத்துக் கூறுகளையும்

கருத்திற்கொண்டு, தனித்தனிப் பண்பாட்டுப் பகுதிகளை வகுத்தார். ஆனால், குரோபர் பண்பாட்டிற்கும் சூழ்நிலைக்கும் தொடர்புள்ள நிலையில் பண்பாட்டுப் பகுதிகள் பிரிக்கப்படவேண்டும் என எண்ணினார். எனினும், இந்த அனைத்து வகைப்பாடுகளும் பொதுத் தன்மையாகவே காணப்பெறுவதாக இருக்கின்றன எனக் கருதி, வடஅமெரிக்கப் பண்பாட்டுப் பகுதியை 89 துணைப் பிரிவுகளாகப் பிரித்தார். இந்த வகைப்பாடு பயன்பாட்டில் எளிமையாக அமையவில்லை. குரோபரின் வட அமெரிக்கப் பண்பாட்டுப் பகுதிகள்: 1. ஆர்க்டிக்கு அல்லது எசுக்கிமோ, 2. வட. மேற்கு அல்லது வடபசிபிக்குக் கடற்கரை, 3.கலிபோர்னியா அல்லது கலிபோர்னியா ஆற்றுப் பள்ளத்தாக்கு, 4. மேட்டு நிலம், 5. மெக்கன்சி-யூக்கன், 6. சமவெளி, 7. வடகிழக்கு அல்லது வடக்குக் காட்டுப் பகுதி, 8. தென்கிழக்கு அல்லது தென்காட்டுப் பகுதி, 9. தென்மேற்கு, 10. மெக்சிகோ.

அமெரிக்கப் பண்பாட்டுப் பகுதிகளின் தனிப் பண்புகள்: நடு அமெரிக்கா: மிகப் பெரிய விலங்குகளை வேட்டையாடுதல் நடு அமெரிக்கப் பண்பாட்டின் முதன்மைக் கூறாக விளங்கியது எனத் தொல்லியல் சான்றுகள் தெரிவிக்கின்றன. பாலைநிலப் பண்பாடும் இப்பகுதியில் காணப்பட்டதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறர்ர்கள். மேம்பட்ட வாழ்க்கையைக் கொண்டிருந்தவர்கள் வேளாண்மையைத் தொழிலாகக் கொண்டு நிலையான வாழ்க்கையை மேற்கொண்டிருந்தனர்.

நடு அமெரிக்கப் பகுதியில் தோன்றிய புகழ்பெற்ற நாகரிகம் ஆல்மக்கு (Olmec) ஆகும். இதில் (கி.மு. 1500-கி.பி. 300) வழிபாட்டுக் கூடங்கள் சிறப்பிடத்தைப் பெற்றிருந்தன. இந் நாகரிகம் பின்தோன்றிய புகழ்பெற்ற நாகரிகத்திற்கு அடிக்கல்லாக அமைந்தது. மாயா பண்பாடு (கி.மு.1000-கி.பி.1517) உயர்ந்த நிலையில் இருந்தது. மாயா இந்தியர் இருநூற்றிற்கும் மேற்பட்ட வழிபாட்டு மையங்களை கி.பி.300க்கும் 900க்கும் இடைப்பட்ட காலத்தில் அமைத்து, அவற்றில் 228 அடி உயரம் வரையிலான மிகப் பெரிய பிரமிடுகளைக் கற்களால் கட்டியிருந்தனர். அமெரிக்க இந்தியர்களிலேயே மாயா இந்தியர் பெரிதும் அறிவாற்றல் வாய்ந்தவராக விளங்கினர். இவர்கள் கணிதம், வானவியல், ஆண்டுக்குறியீட்டு முறை போன்ற துறைகளில் மேம்பட்டிருந்தாலும் எழுத்து முறையில் எகிப்தியரைப் போல் வளர்ச்சியடைந்த நிலையை எட்டவில்லை.

சபோடக்கு நாகரிகம் (கி.மு.600-கி.பி.900) இரண்டாவதாகவும் தியோடிகுவாக்கன் நாகரிகம் (கி.மு. 200-கி.பி.600) மூன்றாவது சிறந்த நாகரிகமாகவும் விளங்கின. மத்திய மெக்சிகோ அசுதக்குப் பழங்குடியினர் போர்ப்படைகளை அமைத்து அரசாட்சியை ஏற்படுத்திக் கொண்டனர். வடஅமெரிக்காவில் இசுபெயின் ஆதிக்கம் இருந்தும் அசுதக்கு ஆட்சி ஓங்கிய நிலையில் இருந்தது.

மத்திய அமெரிக்கக் குடிகளிடையே தகுதி வழியிலும், வருப்பு முறையிலும் நுண்மையான பாகுபாடுகள் காணப்பட்டன. மாயா, ஆல்மக்கு, தொல்டக்கு ஆகிய ஆதிக்குடிகள் மத்திய அமெரிக்கக் குடிகளுள் குறிப்பிடத்தக்கவர்கள்.

தென்மேற்கு அமெரிக்கா: பெரிய வேட்டையாளர்களே கி.மு.10000-இல் இப்பகுதியைக் கைக்கொண்டிருந்தனர். அரிசோனாப் பகுதியை இசுபெயின் நாட்டினர் கண்டுபிடித்தபொழுது இங்கு வாழ்ந்த பியூப்லோ இந்தியர்கள் 70 முதல் 80 தனிக் கிராமங்களில் வாழ்ந்து வந்தனர். இவர்களின் வீடுகள் 2 முதல் 6 அடுக்குகள் கொண்டனவாக இருந்தன. தாய்வழிக் குடும்ப அமைப்பையும் கூட்டுக்குடும்ப முறையையும் கொண்டிருந்தனர். சுனி, ஓப்பி, நவகோ அப்பாச்சி முதலியோர் இப்பகுதியில் வாழும் குறிப்பிடத்தக்க ஆதிக்குடிகளாவர்.

கிழக்குக் காட்டுப் பிரதேசம்: மிசிசிப்பி, புனித இலாரன்சு ஆறுகளுக்கும் மெக்சிகோ வளைகுடாவிற்கும் உட்பட்ட இக்காட்டுப் பகுதியில் முக்கிய ஆதிக்குடிகளாக சாவ்னீ, இராக்குவிசு, பாக்சு ஆகியோர் வாழ்கின்றனர். மிகப் பெரிய விலங்குகளை வேட்டையாடி வந்த இவர்கள் படிப்படியாகத் தோட்டத் தொழிலில் ஈடுபடத் தொடங்கினர். இவர்கள் கி.மு. 1000க்கும் கி. பி.700 க்கும் இடைப்பட்டகாலத்தில் அமைத்த புதைகுழிக் கோயில்களும் மண்மேடுகளும் புகழ்பெற்றவை. இதனால் இக்காலத்தைப் 'புதைகுழிக் கோயில்கள் காலம்'என்றே குறித்தனர். கிழக்கிந்தியக் காட்டுப் பிரதேசப் பண்பாட்டில் பெண்களே பயிர்த்தொழில் பணியில் பெரும் பங்கேற்கின்றனர். கால்வழிக் குழுவின் தலைவனே ஆட்சிக் குழுவில் உறுப்பினராகிறான்.

சமவெளி: இப்பகுதியில் குடியேறிய குரோ, பாவ்னீ, ஓமகர், யோவாப் பழங்குடியினர் கி.மு. 10,000 முதல் கி.மு. 4000 வரையில் பெரிய வேட்டையைக் கொண்டிருந்தனர்; பின்னர், சூரிய காந்தி, மக்காச்சோளம், புகையிலை, பீன்சு மற்றும் பல தோட்டப் பயிர்களையும் பயிரிடத் தொடங்கினர். தந்தைவழி முறையையும் கூட்டுக் குடும்ப

முறையையும் கொண்டிருக்கின்றனர். இவர்கள் ஆண்டிற்கு ஒருமுறை காட்டெருமை வேட்டையின் பொழுதோ சூரிய நடனத்தின்பொழுதோ ஒன்றாகக் கூடுவர்.

**பெரிய நதிப்படுகை:** இப்பண்பாட்டுப் பரப்பு பன்னாக்குப் பழங்குடிகளைக் கொண்டிருக்கிறது.

**கலிபோர்னியா:** பாலைநிலப் பண்பாட்டைக் கொண்டிருந்த இப்பகுதிப் பழங்குடிகளான விண்டன், போமோ, மைடு, முதலான பழங்குடிகள் கூட்டுக் குடும்ப முறையுடன் வாழ்கின்றனர்.

**தாழ் ஆர்க்டிக்கு:** அலாசுகா மற்றும் கனடாவின் வடக்குக் காட்டுப்பகுதித் தொடர்ச்சி இப்பகுதியில் அடங்கும். பொக்கிசு, கரிபோ ஆகிய பழங்குடியினர் தம் சிறிய வீடுகளைத் தரைக்குச் சற்றுக் கீழாக அமைக்கின்றனர். மீன்பிடித்தல், வேட்டையாடுதல் ஆகியவற்றை இவர்கள் முதன்மைத் தொழிலாகக் கொண்டுள்ளனர். குளிர்காலத்தில் தொபோக்கன்சிலும் கோடையில் சிறிய படகிலும் சவாரி செய்கின்றனர். இப்பெரும் பகுதியில் அத்தாப்பாசுகன், அல்கோன்கியன் என்னும் இரு மொழிக் குடும்பங்களைச் சார்ந்த மொழிகளே பேசப்படுகின்றன.

**வடமேற்குக் கடற்கரை:** சினூக்கு, ஐடா, குவாகியூட்டில் முதலான பழங்குடிகளைக் கொண்ட இப் பண்பாட்டுப் பரப்பு, தாய்வழி மற்றும் கூட்டுக் குடும்ப முறையையும், சொத்து அடிப்படையில் விரிவடைந்த தகுதி முறையையும் கொண்டிருக்கிறது. சேமித்து வைத்துள்ள உணவுப்பொருள்களை மழைக் காலத்தில் விருந்து நிகழ்ச்சியில் வழங்கி இன்புறுகின்றனர். பெருமளவில் வழங்குவதால் அதிக செல்வாக்குக் கிடைக்கும் என்பதால் இவ்வழங்கு முறை இவர்களிடையே புகழ்பெற்று விளங்குகிறது.

**ஆர்க்டிக்கு:** சைபீரியாவிற்கும் அலாசுகாவிற்கும் இடையே நிலவிய தரைவழிப் பாலத்தினூடே மரங்களற்ற இப்பகுதியில் கி.மு. 6000க்கும் கி.மு. 1000க்கும் இடைப்பட்ட காலத்தில் வந்தடைந்த மக்கள் வடஅமெரிக்க இந்தியர்களைக் காட்டிலும் சைபீரியர்களையே பெரிதும் ஒத்திருக்கின்றனர்.

வடஅமெரிக்க இந்தியப் பண்பாட்டுப் பரப்புகள் 500 முதல் 1000 மொழிகளைக் கொண்டிருந்தன. பெரும்பாலான மொழிகள் ஏட்டில் பதிவு செய்யப் படாமலேயே மறைந்துவிட்டன. இப்பொழுது பேசப்படும் 221 மொழிகளை 8 மொழிக் குடும்பங்களாக வகைப்படுத்தியுள்ளனர். அவையாவன: 1. எசுக்கிமோ - அலீயட்டு (Eskimo - Aleut), 2. நடீனீ (Nadēnē), 3. அல்கான்குயியன் (Algonguian), 4. அசுதக் - தனோவன் (Aztec Tanoan), 5. ஒகன் சியோனன் (Hokan - Sionan), 6.பெனூடியன் (Penutian), 7. கோகுய்டிகான் (Coahuitecan), 8. மாயன் (Mayon).

**தென் அமெரிக்க இந்தியர்கள்:** காரிப்பு, சிப்சா, இன்கா, அமேசான், சேக்கோ, அரொவ்கான், பிட்ட கோனியா, பியூகியன் ஆகிய எட்டுப் பண்பாட்டுப் பரப்புகளைத் தென்அமெரிக்கா கொண்டிருந்தாலும், இப்பகுதிகளில் பழங்குடியினரின் எண்ணிக்கை குறைவாகவே காணப்படுகிறது. இதனால் தென்அமெரிக்க இந்தியரைச் சுருக்கமாகக் கீழ்வரும் 4 பண்பாட்டு மரபுகளின் வழி அறியலாம்.

**ஆண்டின் நாகரிகம்:** உலகில் அதிக எண்ணிக்கையைக் கொண்ட தொல்லியல் படிமப் பகுதிகளில் மத்திய ஆண்டீசுக் கடற்கரைப் பகுதியும் ஒன்றாகத் திகழ்கிறது. ஆண்டீன் நாகரிகத்தில் சிறந்து விளங்கும் இன்கா, சிம்மூ, தியாகுவானாகா ஆகிய இம்முப் பழங்குடிகளும் கி.பி. 1000-இலிருந்து கி.பி. 1532 வரையில் மாறி மாறி ஒருவர் மற்றொருவரைக் கைப்பற்றி ஆட்சி செய்தனர். இறுதியில் இன்காவின் செல்வாக்கு இசுபெயின் நாட்டினரால் கி.பி. 1532-இல் முறியடிக்கப்பட்டது.

**தலைமையுரிமை:** தென்அமெரிக்க இந்தியர்களில் குறைந்த எண்ணிக்கையுள்ள பல்வேறு பழங்குடிகள் தலைமையுரிமை (Chiefdoms) அமைப்பை ஏற்றுள்ளன. இசுபெயின் நாட்டின் வரலாற்றுப் பதிவாளர்களும் பின்வந்த ஆராய்ச்சியாளர்களும் இவ்வமைப்பை நன்கு ஆராய்ந்து, நாடு, ஆட்சிமண்டலம், அரசாட்சி எனப் பல்வேறு பெயர்களைச் சூட்டினர். அடிப்படையில் இச்சிறு பழங்குடிகள் கூட்டுச் சமூகமாக அமைந்து, மத்திய தலைமையை அமைத்துச் செயற்படுகின்றனர். இத்தலைமையில் இரு பிரிவுகள் காணப்படுகின்றன. பெரிய ஆண்டில்சு, வெனிசுலா, கிழக்கு பொலிவியா ஆகிய பகுதிகளில் தெய்வத் தன்மையுற்ற ஆளுநர் (Theocratic Chiefdom) தலைமையுரிமையை ஏற்கிறார். சிப்பேகப் (Chibeha) பழங்குடிகளிடையே படைப்பிரிவு ஆளுநர் (Militiaristic Chiefdom) தலைமை நிலையை அடைகிறார்.

**வெப்பமண்டலக் காட்டுப்பிரதேச மக்கள்:** அமேசான் மற்றும் அதன் கிளை நதிகளின் பகுதிகளிலும், பிரேசிலின் கடற்கரைப் பகுதியிலும், பிராகுவே, பனாமா மற்றும் கொலம்பியன் தாழ்நிலப் பகுதியி

லும் வாழ்ந்து வரும் அனைவருமே ஒத்த சூழ்நிலையை ஏற்றிருப்பதால் சமூக, பொருளாதார அமைப்பில் ஒத்துக் காணப்படுகின்றனர். வகுப்புமுறை பெருமள வில் உறவு முறையோடு ஒன்றிக் காணப்படுகிறது. காட்டை எரித்து வேளாண்மை செய்யும் இவர்கள் இப்பொழுது நிலையான சமநிலங்களில் பயிரிடுகின்ற னர். இங்குக் காரிபு, அராக்கன், துப்பியன் ஆகிய பழங்குடிகள் குறிப்பிடத்தக்கவர்கள். இப்பகுதியில் பல மொழிகள் பேசப்படுகின்றன.

ஆப்பிரிக்கப் பண்பாட்டுப் பகுதிகளை 1924-இல் எர்கோயிட்சு (Herskoits) முதன் முதலில் முறைப்படுத் திக் குறிப்பிட்டார். இவருக்குமுன் இரட்சல் (Ratzal), தவுடு (Dowd) ஆகியோர் ஆப்பிரிக்கப் பண்பாட்டு வேறுபாடுகளை வேளாண்மைப் பண்பாடு என்றும், கால்நடை மேய்த்தற் பண்பாடு என்றும் இரு பிரி வாகப் பகுத்துப் பின்னர், உணவுப் பொருள் உற்பத்தி யின் அடிப்படையில் பல பண்பாட்டுப் பகுதிகளாகப் பகுத்தனர். இவர்களுக்குப்பின் ஏம்பிலி (W.D.Hambly) என்பார் ஆப்பிரிக்காவைச் சமூக, உளவியல் கூறு களின் அடிப்படையில் பண்பாட்டுப் பகுதிகளாகப் பகுத்தார். இவ்வகைப்பாடு முன்னவர்களால் மேற் கொள்ளப்பட்ட வகைப்பாட்டிலிருந்து மிகுதியாக வேறுபடவில்லை.

மேற்கூறிய அனைத்து வகைப்பாடுகளையும் ஒருங் கிணைத்து மறு ஆய்வு செய்து, 1945-இல் எர்கோ விட்சு புதிய பண்பாட்டுப் பகுதிகளை வகுத்தார். இவரது வகைப்பாட்டின்படி, ஆப்பிரிக்கா ஒன்பது பண்பாட்டுப் பகுதிகளாகப் பகுக்கப்பட்டது. அவை யாவன:

1. காய்சன் (Khoisan),
   அ. புசுமன் (Bushman),
   ஆ. ஆட்டண்டாட்டு (Hottentot),
2. கிழக்கு ஆப்பிரிக்கக் கால்நடைப் பகுதி (East African Cattle Area),
3. கிழக்கு ஆர்னு (East Horn),
4. காங்கோ (Congo),
5. கினிக்கடற்கரை (Guinea Coast),
6. மேற்குச்சூடான் (Western Sudan),
7. கிழக்குச்சூடான் (Eastern Sudan),
8. பாலைநிலப் பகுதி (Desert Area),
9. எகிப்து (Egypt).

மடகாசுகர் தீவு ஒரே பண்பாட்டுப் பகுதி என்று பல காலமாகக் கருதப்பட்டது. இலிண்டன் (R.Linton) ஆய்விற்குப்பின் அது அவ்வாறு கருதப்படவில்லை. இத்தீவின் புவியமைப்பு, கால நிலை, பழங்குடிகளின் வாழ்க்கை முதலானவற்றை மிக நுணுக்கமாகக் கண்ணுற்ற இலிண்டன், இத்தீவினைக் கிழக்குக் கடற் கரை, உள்நாட்டு மேட்டு நிலமும் மேற்குக் கடற்கரை யும், தென்முனை ஆகிய மூன்று பண்பாட்டுப் பகுதிக ளாகப் பகுத்துள்ளார். பொருள்சார் பண்பாட்டின் (Material Culture) அடிப்படையில் நியூசிலாந்து 8 பண் பாட்டுப் பகுதிகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. இது தவிர்த்து, உலகின் பிற கடற்பகுதிகளான ஆசுத்தி ரேலியா, தாசுமேனியா, பாலினீசியா, மைக்ரோனீ சியா, மெலனீசியா, இந்தோனேசியா, பசிபிக்குப் பகுதிகள் முதலானவற்றைத் தனித்தனிப் பண்பாட் டுப் பகுதிகளாகக் கருதுவது பொருத்தமாகாது என்று ஓசர் (Hojer) கூறுவார். குறிப்பாக, மெலனீசியா, இந்தோனேசியா ஆகியவற்றைப் பல பகுதிகளாகப் பகுக்க வேண்டுவது அவசியமாகும் என அவர் குறிப் பிட்டுள்ளார். ஜெ.பா.

துணை நூல்கள்:

**Driver**, H.E., The Contribution of A.L. Kroeber to Culture Area, Theory and Practice, Waverly Press, Baltimore, 1962.

**Herskovits**,M.J., Cultural Anthropology, Oxford, IBH Publishing Co., New Delhi, 1974.

**Wissler**, C., The Americans Indian, McMurtri& New York, 1917.

## உலகப் பல்கலைக் கழகங்கள் சங்கம்:

இதன் தலைமையகம் பாரிசில் (Paris) உள்ளது. உயர் கல்வி வழங்கும் உலக நாட்டுப் பல்கலைக்கழகங்களின் உயர் நிருவாகிகளிடையே தொடர்புப் பாலமாக உலகப் பல்கலைக்கழகச் சங்கம் (International Associ ation of Universities - IAU) விளங்குகிறது. இச் சங்கம் 1950-இல் தொடங்கப்பெற்றது. ஏறத்தாழ 90 நாடுகளிலுள்ள மொத்தம் 360 பல்கலைக்கழகங்கள் இச்சங்கத்தின் உறுப்பாகச் சேர்ந்துள்ளன.

உலகின் அனைத்துப் பல்கலைக் கழகங்களின் நிரு வாகம் பற்றிய தலையாய செய்திகளை வழங்கக் கூடிய முதன்மையான சங்கமாக இது விளங்குகிறது. இதற்காக இச்சங்கம் பெரும் நூலகம் ஒன்றை நடத்தி வருகிறது. இந்நூலகத்திலிருந்து உலகிலுள்ள பல் கலைக் கழகங்களின் நடைமுறைகளைப் பற்றிய செய்திகளை எளிதில் தெரிந்து கொள்ள இயலும். மேலும், 'செய்தியறிக்கை' (Bulletin) என்னும் காலாண்டு இதழ் ஒன்றினையும் இது வெளியிட்டு வரு

கிறது. இவ்விதழில் உலகின் பல்வேறு பல்கலைக் கழகங்களின் நிருவாக முறை, ஆராய்ச்சி, கல்வி, சாதனைகள் ஆகிய செய்திகள் இடம் பெறுகின்றன இச்சங்கம் உலகின் பல்வேறு நாடுகளில் ஆராய்ச்சி களை நடத்துகிறது; பெரும் கல்வி மாநாடுகள் நடத்தத் துணையாக நிற்கிறது. இது அனைத்து நாட்டுக் கல்வி அறிவியல் பண்பாட்டு நிறுவனம் (UNESCO)ஆண்டு தோறும் வழங்கும் பணக்கொடை யுதவியாலும் உறுப்பு நிறுவனங்கள் தரும் நுழைவுக் கட்டணத்தாலும் இயங்கி வருகிறது.

பொதுநல நாட்டுப் பல்கலைக் கழகங்கள் சங்கம் (Association of Commonwealth Universities-ACU), அமெரிக்கப் பல்கலைக்கழகங்களிடைச் சங்கம் (Inter-American University Association) போன்றவை உலகப் பல்கலைக் கழகச் சங்கத்தின் பணிகளைப் போன்றே, உயர்கல்வியில் பங்காற்றி வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. எஸ்.த.

துணை நூல்:

Stone, F.D., International Developments in Educational Administration University of Iowa, Iowa, 1981.

**உலகப் பொதுவுடைமை அமைப்பு:** முதலாம் உலகத் தொழிலாளர் கழகம் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் நிறுவப்பட்ட தொழிலாளர் சங்கங் களின் கூட்டமைப்பு (Federation of Labour or Trade Unions) ஆகும். இதில் இணைந்த பல்வேறு சங்கங் களுக்கிடையே கொள்கை வேறுபாடுகளிருந்தாலும், கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் தொழிலாளர்களுக் கிடையே ஒற்றுமையை ஏற்படுத்தக்கூடிய ஒரு காரணியாக இக்கூட்டமைப்பு இருந்தது.

**முதலாம் உலகப் பொதுவுடைமை அமைப்பு:** இலண்டனில் 28—9—1864-இல் செல்வாக்கு மிக்க பிரிட்டிசு, பிரஞ்சுத் தொழிற்சங்கத் தலைவர்களால் நிறுவப்பட்டது. காரல் மார்க்சு (Karl Marx) அதை அமைப்பதில் பங்கு கொள்ளாவிட்டாலும், அவர் அதனுடைய பொதுக்குழுவின் 32 உறுப்பினருள் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பல தொழிற் சங்கங்கள் கூட்டாகவும் தனித்தனியாகவும் இந்த அமைப்போடு இணைக்கப்பட்டிருந்தமையால் அதி காரக்குவிப்புடைய இவ்வமைப்பு ஒவ்வோராண்டிலும் வெவ்வேறு நகரத்தில் கூடிக் கொள்கைகளையும் முறைகளையும் வகுத்தது. இக்கழகத்தால் தேர்ந் தெடுக்கப்பட்ட பொதுக்குழு இலண்டனில் இருந்து நிருவாக உறுப்பாகச் செயற்பட்டது. இது தேசியக் கூட்டாட்சிக் கழகங்களுக்குச் செயலாளர்களை அமர்த்திற்று. தொழிலாளர் வேலை நிறுத்தங்களுக்கு நிதி உதவி செய்தற்காக நிதி வசூலிக்க ஏற்பாடு செய்தது.

இந்த முதலாம் உலகப் பொதுவுடைமை அமைப் பில் (First Communist International) ஒன்றுக்கொன்று மாறுபட்ட சமநிலைக் கோட்பாட்டாளர் இருந்தனர். இதில் மார்க்சின் கொள்கையாளர்கள் இருந்தனர்; முதலாளித்துவ முறையைச் சீராக்குதலை மட்டும் ஆதரித்த பிரஞ்சுச் சமநிலைக் கொள்கையாளராகிய பியரி சோசப்பு பிரவுதன் (Pierre Joseph Proudhon) என்பவருடைய ஆதரவாளர்கள் இருந்தனர்; தீவிரப் புரட்சிவாதிகளான 'பிளாங்குவியக்காரர்கள்' (Blanquists) இருந்தனர்; இத்தாலிய, இசுபானிய, பிரஞ் சிய, சுவிசுக் கூட்டமைப்புகளினால் ஆதரிக்கப்பட்ட மிக்கேல் பக்குனின் (Michael Bakunin) என்பவரால் உருவாக்கப்பட்ட அரசு வேண்டாக் கொள்கை யாளரும் (Anarchists) இருந்தனர்.

அதிகாரக் குவிப்பை ஆதரித்த மார்க்சியச் சம நிலையாளருக்கும் (Marxian Socialists) அரசு வேண் டாக் கொள்கையாளருக்குமிடையே பிளவு ஏற்பட் டது. இவ்வமைப்பின் பல மாநாடுகளில் பக்குனின் கொள்கையினருடைய செல்வாக்கு வளர்ந்தது. சமூ கக் குடியாட்சியாளர்கள் (Social Democrats) உலகப் பொதுவுடைமை அமைப்பிலிருந்து விலகினர். அரசு வேண்டாக் கொள்கையினரும் இவ்வமைப்பில் பிடிப்பு இழந்தனர். செருமனி, ஆசுத்திரியா, பிரான்சு, இசு பெயின் ஆகிய நாடுகளில் உலகப் பொதுவுடைமை அமைப்புத் தடைசெய்யப்பட்டதால் உறுப்பினர் எண் ணிக்கை குறைந்து அளவில் சுருங்கிய இவ்வமைப்பு கி.பி. 1868-இல் பிரான்சு, பெல்சியம், சுவிட்சர்லாந்து ஆகியநாடுகளில் நடைபெற்ற வேலை நிறுத்தங் களுக்கு உதவி செய்தது. பின்னர் இவ்வமைப்பு மறைந்தது.

**இரண்டாம் உலகப் பொதுவுடைமை அமைப்பு** உலகச் சமநிலை அமைப்பு (Socialist International) என்றும் கூறப்படும். இது கி.பி. 19-ஆம் நூற்றாண் டின் கடைசிப் பத்தாண்டு முதல் முதலாம் உலகப் போர் வரை ஐரோப்பியத் தொழிலாளர் இயக்கங் களால் பின்பற்றப்பட்ட கருத்துகள், கொள்கைகள், வழிமுறைகள் முதலியவற்றை ஏற்ற தொழிற்சங்கங் களும் சமநிலைக் கட்சிகளும் சேர்ந்த கூட்டமைப்பு ஆகும். இது கி.பி.1889-இல் பாரிசில் நிறுவப்பட்டது. இதில் தேசியக் கட்சிகளும் தொழிற்சங்கங்களும் உறுப்பினராக இருந்தன. இது அமைப்பில் அதிகாரக் குவிப்புடையதோ அமைப்பில் இறுக்கமானதோ

அன்று. இது தோன்றிய சில காலத்துக்குப்பின்னரே, இதன் செயலகம் பிரசல்சு (Brussels) நகரில் அமைக்கப்பட்டது. இது ஐரோப்பிய நாடுகள், அமெரிக்க ஐக்கிய நாடு, கனடா, சப்பான் முதலியவற்றின் சமநிலைக் கட்சிகளின் சார்பாளியாக 1912-இல் இருந்தது. இதில் 9000 பேருக்கு வாக்களிக்கும் உரிமை இருந்தது. இதன் தீர்மானங்களுக்கு உறுப்பினர்களைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் இல்லையாயினும், இதை ஓர் உயர்தரமான ஒழுக்க இயல் அதிகாரியாகக் (Higher Moral Authority) கட்சிகள் கருதின.

இவ்வமைப்பு பாராளுமன்றக் குடியாட்சி முறையை ஆதரித்தது. இம்முறையை எதிர்த்த அரசு வேண்டாதோரை (Anarchist) இது கி.பி. 1896-இல் இலண்டன் மாநாட்டில் நீக்கிற்று. ஆயினும் இது, சமநிலைக் கோட்பாட்டை ஏற்காத மற்றக் கட்சிகளோடு ஒத்துழைத்தலின் வழியாகச் சமநிலைக் குறிக்கோளை அடைதல் இயலாது என்று கூறிய மார்க்சியவாதிகளையும், அவர்கள் ஆதரித்த வருக்கப் போராட்டத்தையும், புரட்சியையும் ஆதரித்தது. அப்போது உருவாகிக் கொண்டிருந்த போரைத் தடுத்தற்கு வேலை நிறுத்த முறையை இது ஆதரிக்கவில்லை. நாடுகளுக்கிடையேயுள்ள வழக்குகளைத் தீர்ப்பதற்குக் கட்டாய அதிகாரமுள்ள நீதிமன்றங்களை ஏற்படுத்துதலையும், போர்க் கருவிகளை முதலில் படிப்படியாகக் குறைத்து முடிவில் அறவே ஒழித்தலையும், இரகசிய அரசியல் உறவுகளை நீக்குதலையும், அயல்நாட்டுக் கொள்கையைப் பொறுத்த வரை பாராளுமன்றப் பொறுப்பு நிறுவப்படுதலையும் இது ஆதரித்தது.

இதில் உருசியத் தலைவர் இலெனினும், உரோசா லக்சம்பர்கும் (Rosa Luxumburg), இன்னும் சிலரும் வரைந்து கொண்டு வந்த தீர்மானம் 1907 இல் நிறைவேற்றப்பட்டது. இத்தீர்மானம் போரில் ஈடுபட்ட நாடுகளிலுள்ள சமநிலைக் கட்சிகளைப் போரினால் தோற்றுவிக்கப்பட்ட சமூக, பொருளாதார நெருக்கடிகளைப் பயன்படுத்திக் கொண்டு சமூகப்புரட்சிகளைத் தோற்றுவிக்குமாறு தூண்டிற்று.

இரண்டாம் உலகப் பொதுவுடைமை அமைப்பில் பிளவு: இரண்டாம் உலகப்பொதுவுடைமை அமைப்பு முதல் உலகப் போரினால் (1914-1918) மிகவும் பாதிப்புக்குள்ளாயிற்று. போரில் நாடுகள் பல கூட்டாகச் சேர்ந்திருந்தன. போர்நாடுகளில் உள்ள சமநிலைக் கட்சிகள் கொள்கைகளிலும் நோக்கங்களிலும் வேறுபாடின்றி ஒரே தன்மையனவாக இருந்தாலும், அவை இருந்த நாடுகள் போரின் காரணமாகப் பிளவுண்டிருந்த காரணத்தால், அக்கட்சிகளின் நிலை இருதலைக் கொள்ளி எறும்பை ஒத்திருந்தது. செருமானிய, உருசிய நாடுகளின் சமநிலைக் கட்சிகளைத் தவிர, மற்ற எல்லா நாடுகளிலுமுள்ள சமநிலைக் கட்சிகளும் தத்தம் நாட்டரசாங்கங்களுடைய போர் முயற்சிகளை ஆதரித்தன. இதனால் இரண்டாம் உலகப் பொதுவுடைமை அமைப்பில் பிளவு உண்டாயிற்று.

இவ்வமைப்பில் உலக நோக்குடையோர் (Internationalists) சிறுபான்மையராக இருந்தனர். இவர்கள் போரை ஆதரித்த பெரும்பாலாரைக் கண்டித்தும், போர் உடனடியாக நிறுத்தப்படுதல் வேண்டுமென்றும், நாடு பிடித்தல், நட்ட ஈடு அளித்தல் முதலியவை இல்லாத அமைதிநிலை ஏற்படுத்தப்படுதல் வேண்டுமென்றும் கூறினர். இலெனினுடைய தலைமையில் ஓர் இடதுசாரிக்குழு இவ்வமைப்பில் தோன்றிற்று. பிளவுபட்டுச் செயலற்றுப் போயிருந்த இரண்டாம் உலகப்பொதுவுடைமை அமைப்பை மீண்டும் உயிர்ப்பித்தல் கூடாதென்றும், அப்போது நடந்து கொண்டிருந்த உலகப்போர் ஓர் ஏகாதிபத்தியப் போர் என்றும், அதை வருக்கப்போராக மாற்றுதற்கு முயலுதல் வேண்டுமென்றும் இவ்விடதுசாரிக்குழு கூறிற்று.

இரண்டாம் உலகப்பொதுவுடைமை அமைப்பை மாற்றிஅமைக்கும் நோக்கத்தோடு, 1920-இல் நேச நாடுகளிலுள்ள சமநிலைக் கட்சித் தலைவர்கள் அடங்கிய ஓர் ஆணையம் செனிவாவில் இவ்வமைப்பின் மாநாட்டைக் கூட்டிற்று. ஆனால், இம்மாநாட்டிற்கு இந்த அமைப்பில் போருக்கு முந்தியிருந்த உறுப்பினருள் மிகச் சிலரே வந்திருந்தனர். இம்மாநாட்டில் போர்க்கொள்கை பற்றியும், உருசிய போல்சுவிக்குகள் (Russian Bolsheviks) 1917-இல் நடத்திய புரட்சியைப் பற்றியும் சமநிலைக் கொள்கையாளரிடையே கருத்து வேறுபாடுகள் தோன்றின. இதனால், இவ் அமைப்பில் பிளவு தோன்றி மறைந்தது.

இவ் அமைப்பு 1919-இல் கூடியபோது, இதில் இலெனினுடைய நண்பர் திராட்சுகியினால் (Trotsky) வரையப்பட்ட இரண்டாம் பொதுவுடைமைத் திட்ட அறிக்கை (Second Communist Manifesto) ஏற்றுக் கொள்ளப்பட்டது. இவ்வறிக்கையில், உலகப் போரினால் மனிதருக்குத் தோன்றிய வறுமைத் துன்பத்தைப் பற்றிச் சமநிலைக் கொள்கையாளரிடையே இருந்து வந்த முரண்பாடுகள் நீக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. இலெனினின் இளைய நண்பர் நிக்கலாய் புக்காரின் (Nikholai Bukharin) இரண்டாம் பொதுவுடைமைத் திட்ட அறிக்கையின் முடிவுகளைச் சுருக்கிக் கூறினார். 'போர் நடைபெற்றதனால் தொழிலாளர்களின் அடிமைத்தளை

முறிந்துவிட்டது. ஏகாதிபத்திய அரசுக்கு அவர்கள் அடிமைப்பட்டுக்கிடந்த நிலைமையும் மாறிற்று. சருவாதிகாரமும் பழைய அரசுமுறையும் மாற்றப் பட்டு, உழைப்பாளர்களின் புதிய ஆற்றல் உருவாகு கிறது' என்பன அவர் கருத்துகள்.

இலெனினின் பொதுவுடைமைக் கருத்துகள் இவ் அமைப்பில் ஆய்வு செய்யப்பட்டன. ஏகாதிபத்தியந் தான் உலகப் போரை நடத்துகிறதென்றும், ஏகாதிபத்தியப் போர் நடைபெறுதலினால் சம நிலைப் புரட்சி நடைபெறும் வாய்ப்பு இருக்கிற தென்றும் இலெனின் கூறினார். முதல் உலகப்போர் ஏகாதிபத்திய முறையைப்பரப்புதற்காகத்தேசிய நாடு களால் தொடங்கப்படும் பல போர்களின் வரிசையில் முதலாவது ஆகும். முதலாளித்துவ முறை மாறித் தோன்றுவதாய விடுதலையைத் தவிர்த்தல் இயலாது. அடுத்தடுத்து வரும் போர்களும் பொருளாதார முடக்கங்களும் முதலாளித்துவத்தின் வலுவை உறிஞ்சிவிடும். இவ்வாறு அவர் மார்க்சின் கருத்து களை வலியுறுத்தினார். இலெனினும் காட்சுகியும் (Kautsky) 1915-இல் மேற்கு ஐரோப்பா புரட்சிக்கு ஏற்றதாக இருப்பதாகவும், மேற்கு ஐரோப்பாவிலும் புரட்சி ஏற்பட்டால்தான் உருசியப்புரட்சிக்கு அது ஆதரவு அளித்து, அதை நிலை பெறச் செய்யு மென்றும் கூறினர். சமநிலைக் கோட்பாட்டாளர்கள் 1914-இல் உலக அமைப்பிலிருந்து பிரிந்தனர்.

இரண்டாம் உலகப் பொதுவுடைமை இயக்கம் வலுவிழந்து கொண்டு வந்த காலத்தில், உருசியாவில் பொதுவுடைமை அரசாங்கமென்பது கட்சியின் கொள்கையாகவே ஆயிற்று. கட்சி என்பதுதொழிலாள ரின் முன்னணியாகவும், குடியாட்சி இயல்புடைய அதி காரக் குவிப்பு என்பது பொதுவுடைமைக் கட்சியின் அமைப்புக் கொள்கையாகவும் ஆயின. எதிர்ப் புரட்சியை விரும்பாதவரெல்லாம் போல்சுவியப் பொதுவுடைமைக் கட்சியில் இருந்தமையாலும், அதில் சேர்க்கப்படாத ஏனைய சமநிலை, மார்க்சியக் கட்சியினர் சிறுபான்மையராகித் (Mensheviks) தடை செய்யப்பட்டமையாலும், ஆளும் கட்சியான போல்சு வியக் கட்சிமட்டுமே பெரும்பான்மைக் கட்சியாக 1921-இல் ஆயிற்று. அரசாங்கத்திலும் கட்சியே அதி கார மையமாக ஆயிற்று.

மூன்றாம் உலகப் பொதுவுடைமை அமைப்பு: இலெனின் தம் கருத்துகளை ஏற்ற போல்சுவிக்கு களாகிய தீவிரக் கொள்கையாளர் உருசியாவில் 1917, அக்டோபர், நவம்பர் மாதங்களில் புரட்சியை வெற்றியாக நடத்தி, ஆட்சியைக் கைப்பற்றியதைக் கண்டு, அவர்களை மூன்றாம் உலகப் பொதுவுடைமை அமைப்பில் (1919-இல்) இணைத்து, 1920-இல் தேசியக் கட்சிகளைப் புதிய போல்சுவிக்கு அமைப்பில் சேர்ப்பதற்குரிய கட்டுப்பாடுகளை வகுத்தார். உருசியப் பொதுவுடைமைக் கட்சியே இம்மூன்றாம் உலகப் பொதுவுடைமை அமைப்புக்குத் தலைமை தாங்கிற்று.

இசுட்டாலின் (Stalin) ஆட்சிக்காலத்தில் இந்த மூன்றாம் அமைப்பு உருசியப் பொதுவுடைமைக் கட்சியின் முடிவுகளை அப்படியே ஏற்றுக்கொள்ளும் முத்திரையாக (Rubber Stamp) ஆயிற்று. இந்த மூன் றாம் அமைப்பு உலகப் புரட்சி என்னும் நோக்கத்தில் தேசிய பொதுவுடைமைக் கட்சிகளின் கழகமாக அமைக்கப்பட்டாலும், அதன் மீது சோவியத்து உருசியா தன் முழுக் கட்டுப்பாட்டையும் ஏற்படுத்து வதற்கு ஒரு கருவியாக மாறிற்று. உலகப் பொது வுடைமை இயக்கத்தை உருசியா இதன் வாயிலாகக் கட்டுப்படுத்திற்று. முதல் உலகப்போரின்போது இரண்டாம் உலகப் பொதுவுடைமை அமைப்பில் ஒற்றுமை குலைந்து, 3 பிரிவுகள் தோன்றின. அவை மூன்றாம் உலகப் பொதுவுடைமை இயக்கத்தில் சேர்ந்தன. பெரும்பாலான சமநிலைக்கட்சிகள் இவ் வமைப்பில் வலது சாரியாக அமைந்து, தம் தேசிய அரசாங்கங்களின் போர்முயற்சிகளை ஆதரித்தன. அவை தம் பகைவர்களைச் சமநிலை நெறிக்குப் பகைவர்களே என்று கருதின. இந்த வலதுசாரி களுடைய தேசிய உணர்வை இவ்வமைப்பின் நடு வண் பகுதியினர் (Centre) பழித்துரைத்து, உலக அமைதி என்ற நோக்கத்தைக் கடைப்பிடித்தனர்.

சமநிலைக் கொள்கையாளர்கள் இலெனினின் தலைமையில் தேசியத்தையும் அமைதி நெறியையும் புறக்கணித்து, நாடுகளின் போரை நாடு கடந்த வருக் கப்போராக மாற்றுதற்குக் கொள்கை வகுத்தனர். உள்நாட்டு அமைதியை நிலைநாட்டுதற்காக அன்றி, உள்நாட்டுப்போரைக் கொள்கைப்பரப்புதலின் வாயி லாகக் கொண்டுவரும் பொருட்டும், 1919-இல் நடுவண் போக்குடையவர்கள் (Moderates) ஒரு புதிய உலகப் பொதுவுடைமை அமைப்பை உருவாக்குதல் வேண்டுமென்று முயற்சி செய்தபோது அதைத் தடுத் தற்பொருட்டும், இலெனின் மாசுக்கோவில் 1919-இல் புதிய உலகப்பொதுவுடைமை அமைப்பை அமைத்து, அதன் முதற் கூட்டத்தைக் கூட்டினார். அதில் சில சார்பாளர்களே வந்திருந்தனர்.

இலெனின் மாசுக்கோவில் 1920-இல் கூட்டிய அமைப்பினர் இரண்டாம் கூட்டத்துக்கு 37 நாடுகளி லிருந்து சார்பாளர்கள் வந்திருந்தனர். அதில் இலெ னின் தம் 21 குறிப்புகளையும் பொதுவுடைமை

அமைப்பில் சேருதற்குரிய கட்டுப்பாடுகளையும் அறிவித்தார். இந்தக் கட்டுப்பாடுகளெல்லாம் இவ்வமைப்பில் சேர விரும்பும் பொதுவுடைமைக் கட்சிகள், சோவியத்துப் பொதுவுடைமைக் கட்சியை முன் அமைப்பாகக் கொண்டு தம்மை மாற்றிக் கொள்ளுதல் வேண்டுமெனவும், நடுத்தரப்போக்காளரும் அமைதி நாடுவோரும் அவற்றிலிருந்து நீக்கப்படுதல் வேண்டுமெனவும் கூறினார்.

கோமிண்டன் (Comintern) எனப்படும் மூன்றாம் உலகப்பொதுவுடைமை அமைப்பு உருசியப் பொதுவுடைமைக் கட்சியினமைப்பை ஒத்து இருந்தது. இந்த அமைப்பின் மாநாடு கூடாத காலங்களில் ஒரு செயற்குழு செயற்பட்டது. அதைவிட அளவிற்சிறிய தலைமைக் குழு (Presidium) என்னும் அமைப்பு முக்கிய நிருவாகக் குழுவாகச் செயற்பட்டது. படிப்படியாக அதிகாரமெல்லாம் உயர் நிலை அமைப்புகளில் குவித்து வைக்கப்பட்டன. அவற்றின் முடிபுகள் பொதுவுடைமை அமைப்பின் உறுப்புக் கட்சிகளெல்லாவற்றையும் கட்டுப்படுத்தின. இம் மூன்றாம் அமைப்பு சோவியத்தின் முன்முயற்சியால் நிறுவப்பட்டபடியாலும், இதன் தலைமையகம் மாசுக்கோவில் இருந்ததாலும், சோவியத்துக் கட்சிக்கு அதில் அளவுக்கு மீறிய சார்பாண்மை இருந்ததாலும், அவ்வமைப்பின் மீது சோவியத்தின் முழுக்கட்டுப்பாட்டு அதிகாரமும் நிலைநிறுத்தப்பட்டு, அயல்நாட்டுப் பொதுவுடைமையாளரெல்லாம் உருசிய நாட்டிற்குப் பற்றுறுதியுடனிருந்தனர்.

மூன்றாம் உலகப் பொதுவுடைமை அமைப்பின் நோக்கம் தேசியக் கிளை அமைப்புகளையுடைய, ஒரே மையத்தின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட உலகளாவிய பொதுவுடைமைக் கட்சியை நிறுவுதலாகும். 'பொதுவுடைமைக் கட்சி உழைப்பாளர் வகுப்பின் ஒரு பகுதி ஆகும்; அதுவே வகுப்பு உணர்வுமிக்க முற்போக்கு உள்ள, புரட்சி இயல்புடையது. இயற்கையான தேர்வின் வாயிலாகப் பொதுவுடைமைக் கட்சி சிறந்த அறிவுடையவர்களாலும், வகுப்பு உணர்வுடையவர்களாலும், மிகுந்த ஈடுபாடும் எதிர்கால உணர்வுமுடைய தொழிலாளர்களாலும் அமைக்கப்பட்டுள்ளது. தொழிலாளர் வகுப்பு முழுவதனுடைய நலனைத் தவிரப் பொதுவுடைமைக் கட்சிக்கு வேறு நலன் ஏதும் இல்லை. அது தொழிலாளர் வகுப்பு முழுவதினின்றும் வேறுபட்டது. அது தொழிலாளர் வகுப்பு முழுவதன் முழு வரலாற்றுப் பாதையையும் நன்கு கருத்தில் கொண்டு,அவ்வரலாற்றின் ஒவ்வொரு நிலையிலும் தனித்தனிக் குழுக்களின் நலன்களைப் பாதுகாக்கும் நோக்கத்தோடு இல்லாமல், தொழிலாளர் வகுப்பின் எல்லா நலன்களையும் பாதுகாக்கும் நோக்கத்தோடு இருக்கிறது. பொதுவுடைமைக் கட்சியே தொழிலாளர் வகுப்பின் மிக முன்னேற்றமடைந்த பிரிவாகும். இதுவே தொழிலாளரையும் சரியான பாதையில் இயக்குவதற்குப் பயன்படும் அரசியல் நெம்புகோலாக இருக்கிறது.'

இலெனின் பொதுவுடைமைக் கட்சிக்குச் செல்வாக்குப் பொதுவுடைமை அரசாங்கத்தோடும், தொழிலாளர் கழகங்களோடும் உள்ள தொடர்பைப் பொறுத்தே அமையுமென்று சுட்டிக்காட்டி, தொழிலாளரின் முன்னணியாகப் பொதுவுடைமைக் கட்சியின் ஆட்சியை விவரித்தார்.

பொதுவுடைமையாளரின் செயல்முறை: பொதுவுடைமையாளர்கள் பலவகையான தந்திரங்களையும், சட்டத்துக்கு மாறான முறைகளையும், இரகசியச் செயல்களையும் கையாண்டு தொழிற்சங்கங்களைக் கைப்பற்றுதல் வேண்டும். ஆகையால் தொழிலாளர் முன்னணி என்னும் கட்சி ஊடுருவல், நிலைகுலையச் செய்தல் முதலியவற்றின் வழியாக மக்கள் அமைப்புகளையும், அரசாங்கத்தில் செல்வாக்கு அல்லது கட்டுப்பாட்டு அதிகாரமுடைய பதவிகளையும் கைப்பற்றிப் பின்னர் வெளிப்படையான வல்லந்தத்தினால் அவற்றை நீக்குதல் வேண்டும்.

இத்தகைய முறைகளை இலெனின் மாநாட்டில் விளக்கியபோது, அதற்குச் சில நாட்டின் சார்பாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். அவர்கள் கூறிய எதிர்ப்பு,தொழிலாளர் வகுப்புக்குப் பதிலாகக் கட்சியையே இலெனின் வலுப்படுத்துகிறார் என்பதாகும். இலெனின் விடையாகச் சமூகச் சமநிலை (Socialism) என்பது தொழிலாளரின் ஆட்சியே என்றும், தொழிலாளர்களை ஒரு கட்சி நடத்திச் செல்லுதல் வேண்டுமென்றும், கட்சி என்பது சிறுபான்மையாகத் தானிருத்தல் வேண்டுமென்றும், இச்சிறுபான்மையரும் தொழிலாளர் வகுப்பினுடைய மிகச் சிறந்த பகுதியினரால் அமைக்கப்படுதல் வேண்டுமென்றும், இதுவே பொதுவுடைமைக் கட்சியின் நடைமுறை வடிவமாகுமென்றும் கூறினார். இசுட்டாலினும் 1927-இல் இதே முடிவை வலியுறுத்தினார்.

பொதுவுடைமைக் கட்சிக்கு உலகப் பொதுவுடைமை அமைப்பின் மாநாட்டில் கொடுக்கப்பட்ட மேற்கூறப்பட்ட விளக்கம், அக்கட்சியினுடைய 1934-ஆம் ஆண்டுப் பட்டயத்திலும், 1939-ஆம் ஆண்டின் அதனுடைய திருத்தப்பட்ட பட்டயத்திலும் சேர்க்கப்பட்டது. அதுவே 1936-ஆம் ஆண்டின் உருசிய அரசியலமைப்பிலும் சேர்க்கப்பட்டது. அதில்தான் அதற்குச் சட்டஇயல்பான நிலை கொடுக்கப்பட்டது.

குடியாட்சி அதிகாரக் குவிப்பு: உலகப் பொதுவுடைமை இயக்கம் 1920-இல் உருவாக்கப்பட்டதும், அது குடியாட்சி இயல்புடைய அதிகாரக் குவிப்பு என்ற கொள்கையை (Democratic Socialism) விளக்கிற்று. உலகப்பொதுவுடைமை அமைப்பில் சேர விரும்பும் ஒவ்வொரு கட்சியும் இக்கொள்கையைப் பின்பற்றி அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

பொதுவுடைமைக் கட்சி குடியாட்சி இயல்புடைய அதிகாரக் குவிப்பு என்ற அடிப்படையில் அமைக்கப் படுதல் வேண்டும். 1. மேல்மட்டக் கட்சிக் குழுக்களெல்லாம் கீழ்நிலைக் குழுக்களால் தேர்ந்தெடுக்கப் படுதல் வேண்டும். 2. மேல்நிலைக் குழுக்கள் விடுக்கும் ஆணைகளை எல்லாம் கீழ்நிலைக் குழுக்கள் ஏற்றுக் கட்டுப்பட்டு நடத்தல் வேண்டும். 3. ஓர் அதிகாரம் மிகுந்த கட்சி மைய நிறுவனம் ஏற்படுத்தப்பட்டு, அதனுடைய அதிகாரம் முழுக்கட்சியின் மாநாடுகளுக் கிடைப்பட்ட காலத்தில் எல்லாக்கட்சி உறுப்பினர் களையும் கட்டுப்படுத்தும்.

சமநிலைப் புரட்சி: ஒரு நாட்டில் சமநிலைக் கோட்பாடு வெற்றி பெறுமாயின், சமநிலைப் புரட்சியை வளர்த்தற்கும் உறுதி செய்தற்கும் உகந்த சிறந்த சூழ்நிலைகளை நிலைநாட்டுதலே முக்கிய பிரச்சினை ஆகும். உலகப் பொதுவுடைமை மாநாட்டில் 1920-இல் திராட்சுகி (Trotsky) பேசுகையில், சோவியத்து உருசியாவுக்கெதிராக நடத்தப்பட்ட போராட்டம் உலக ஏகாதிபத்தியத்துக்கெதிராக நடத்தப்பட்ட போராட்டத்தில் கலந்துவிட்டது என்று குறிப்பிட்டார்.

உலகப்புரட்சி தோன்றும் வாய்ப்பு அண்மையில் இல்லை என மூன்றாம் அமைப்பு மாநாட்டில் கலந்து கொண்ட பொதுவுடைமைக் கட்சிகள் உணர்ந்தமையால், 1921-இல் புதிய உலகப் பொதுவுடைமைக் கொள்கை உருவாயிற்று. இக்கொள்கையின்படி, எல்லா உழைப்பாளர் வகுப்பின் ஆதரவையும் பெறுதல் வேண்டுமென்ற நோக்கம் இருந்தது. அதனால் நடுத்தரப் போக்காளருக்குக் காட்டப்பட்ட எதிர்ப்புக் குறைக்கப்பட்டது. உழைப்பாளர்களின் அணிகள் அமைக்கப்பட்டன. இக்கொள்கையும் 1923-இல் கைவிடப்பட்டது. அப்போது இவ்வமைப்பின் இடதுசாரியின் அதிகாரம் ஓங்கிற்று.

இடதுசாரியினரை இசுட்டாலின் (Stalin) நீக்கினார். பின்னர் நடுத்தரப் போக்குடைய சமநிலை நெறியாளரோடு தொடர்பு மீண்டும் ஏற்படுத்தப் பட்டது. அவர் ஒரு நாட்டில் சமநிலைக் கொள்கை (Socialism in one country) என்ற கோட்பாட்டைக் கடைப்பிடித்தார்.

பின்னர் 1935-ஆம் ஆண்டில் புதிய கொள்கை உருவாயிற்று. செருமனியினுடைய பகைவர்களாகிய மேலைநாடுகளினுடைய ஆதரவைச் சோவியத்து உருசியா பெறுதற்காகப் புரட்சிச் சமநிலைக் கோட்பாடு பரப்பப்படாமலிருத்தல் வேண்டுமென்ற கொள்கை உருவாக்கப்பட்டு, பாசிசத்தின் தோல்வியே முக்கிய நோக்கமென்று கொள்ளப்பட்டது. பொதுவுடைமையர் நடுத்தரச் சமநிலையாளருடனும் தாராளக் குழுக்களுடனும் பாசிசத்துக்கெதிராகச் சேரலாயினர். இச் சூழ்நிலையில் உலகப் பொதுவுடைமை அமைப்பு சோவியத்து அயல் நாட்டுக் கொள்கையின் கருவியாகச் செயற்பட்டது. இரண்டாம் உலகப்போரில் 1941-இல் செருமனி உருசியாவைத் தாக்கிய அளவில் உருசியாவின் நேசநாடுகளாகிய மேலை நாடுகளில் பொதுவுடைமையாளர்கள் அவ்வரசாங்கங்களைக் கவிழ்த்தல் கூடுமென்ற அச்சத்தைப் போக்கும் பொருட்டு இசுட்டாலின் 1943-இல் மூன்றாம் உலகப்பொதுவுடைமை அமைப்பைக் கலைத்தார்.

## நான்காம் உலகப் பொதுவுடைமை அமைப்பு

திராட்சுகியின் கொள்கையாளரால் தோற்றுவிக்கப்பட்ட அமைப்புகளடங்கியது. இது சோவியத்து ஆதிக்கத்தால் நிறுவப்பெற்ற மூன்றாம் உலகப் பொதுவுடைமை அமைப்புக்கு எதிராக நிறுவப்பட்டது. இசுட்டாலினின் எதிர்ப்பாளரே இதற்கு முயன்றனர். இதில் முதலில் சிலரே ஈடுபட்டு, 1938-இல் பிரான்சில் கூடினர். இதில் திராட்சுகி வகுத்த இடைக்காலத் திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. தொழிலாளருக்குக் கூடுத[illegible]ம்பளங்களும் திருந்திய வேலைச் சூழ்நிலைகளும் அ[illegible]க்கப்படுதல் வேண்டுமென்பதே இவ்வமைப்பின் குறிக்கோள்களாகும். முதலாளித்துவத்தை ஒழித்துச்சமநிலை நெறியை நிலைநிறுத்துதல் வேண்டுமென்ற அணுகுமுறை கைவிடப்பட்டது. ஆட்சி வகுப்பாரை அகற்றுதலும், மக்களைப் புரட்சிக்கு ஆயத்தப்படுத்துதலும், தனியார் வங்கிகளை ஒழித்தலும், தொழிலாளர் தம் தற்காப்புக்காகக் கழகங்களை அமைத்தலும், குடியானவருக்குத் தனியாகத் திட்டங்களமைத்தலும் இவ்வமைப்பின் நோக்கங்களாகும். இதில் திராட்சுகிக்குப் பிறகு மைக்கேல் பாப்லோ (Michael Paplo), எர்னசுட்டு செர்மெய்ன் (Ernest Gremaine) முதலியோர் தலைவர்களாயினர். இவ்வமைப்பிலும் 1953-இல் பிளவு தோன்றிற்று.

பா.கு.

துணை நூல்கள்:

**Sabine, G.H.**, A History of Political Theory, Oxford & IBH Publishing Company, Calcutta, 1961.

Cole, G.D.H., Communism and Social Democracy: 1914-1931, London, 1958.

Schapiro, Leonard, The Communist Party of the Soviet Union, New York, 1960.

**உலகப் பொருளாதார மந்தம்** என்பது உலகளவில் 1930-ஆம் ஆண்டளவில் ஏற்பட்ட வணிகப் பொருளாதார மந்த நிலையைக் குறிக்கும். இதனைப் பொருளாதாரப் பெரு மந்தம் (The Great Depression) எனவும் குறிப்பிடுவர். பேரளவில் பொருளாதார அழிவுகளை உண்டாக்கி, ஆழ்ந்த தாக்கங்களுடன் நீண்டகாலம் நிலவிய இப் பெரு மந்தம் 1929-இல் தொடங்கி இரண்டாம் உலகப் போரின் இறுதிவரை நீடித்தது. இதனுடன் ஒப்பிடக் கூடிய பொருளாதாரச் சீர்குலைவு உலகப் பொருளியல் வரலாற்றில் நிகழ்ந்ததில்லை என ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். அக்காலத்தில் உலக வணிகத்தில் பெரும்பங்கு பெறாத சோவியத்து உருசியாவைத் தவிர, உலக நாடுகள் அனைத்தும் இம் மந்தத்தால் பாதிக்கப்பட்டன. அவற்றுள் மேலை நாடுகள், ஐக்கிய அமெரிக்கக் குடியரசு, சப்பான், சீனா ஆகிய நாடுகள் குறிப்பிடத்தக்கனவாகும். இந் நாடுகளின் அரசியலமைப்பில் மாறுதல்களும் பன்னாட்டு உறவுகளில் முறைப்பு நிலையும் (Tension) ஏற்பட்டன. பொருளாதார நடவடிக்கைகள் பன்னாட்டு வாணிகம் ஆகியவற்றின் அடிப்படைக் கூறுகளில் உள்ளார்ந்த நிலை குலைவு உருவாயிற்று. பொருளாதார, வணிக நடவடிக்கைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி மக்களிடையே வறுமை, ஏழ்மை, வேலையின்மை, அமைதியின்மை ஆகியவற்றைப் பெருக்கின.

ஐக்கிய அமெரிக்கக் குடியரசில் 1929 அக்டோபர்த் திங்கள் திடீரென இருப்புகள், பங்குகள் ஆகியவற்றின் மதிப்பு (Stock Values) வீழ்ச்சியுறத் தொடங்கியதைத் தொடர்ந்து ஏற்பட்ட பொருளாதாரத்தின் இணை விளைவுகள் (Chain Reactions) பெருமந்தத்தின் தோற்றத்திற்கு முதல் தூண்டுதலாயிருந்தன எனக் கருதப்படுகிறது. ஆயிரக்கணக்கான இருப்புப் பங்குரிமையாளர்கள் (Stock holders) பேரிழப்புக்குள்ளாயினர். பல வங்கிகள், தொழிற்சாலைகள், கடைகள் முதலியன மூடப்பட்டன. இலட்சக்கணக்கான மக்கள் வேலைகளையிழந்து வறுமைக்குள்ளாயினர். பலர் தங்கள் அன்றாட வாழ்க்கையின் இன்றியமையாத் தேவைக்கு அறக்கொடைகளையும் அரசின் உதவியையும் நாடினர். உள்நாட்டுப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட மாறுதல்கள் உலக வணிகம், பன்னாட்டுஇருப்பு அங்காடி, நிதி நிறுவனங்கள் ஆகியவற்றில் தாக்கங்களை உண்டாக்கின. ஒவ்வொரு நாடும் தத்தம் நாட்டுத் தொழில்களைப் பாதுகாக்க அக்கறை கொண்டதால் பாதுகாப்பு வரிகளை விதித்து இறக்குமதியைக் கட்டுப்படுத்தின. எனவே, உலக வணிகம் குறிப்பிடத்தக்க அளவு கீழிறங்கியது. பன்னாட்டுச் செலுத்துநிலையில் (Balance of Payments) சிக்கல்கள் ஏற்பட்டன.

உலகப் பொருளாதார மந்தம் பல நாடுகளின் அரசியல் அமைப்புகளை மாற்றியது. சில நாடுகளில் தலைவர்கள் மாற்றப்பட்டனர். செருமானியப் (German) பொருளாதாரத்தில் காணப்பட்ட ஏழ்மை நிலை வல்லாட்சி (Dictatorship) அமைக்கப்படவும் அடால்பு இட்லர் (Adolf Hitlar) வலிமை பெற்றுத் தம் பேரரசை நிலைநாட்டவும் காரணமாயிருந்தது. இட்லர் செருமனியை உலக அரங்கில் தலைமையிடம் பெறச் செய்ய எடுத்த திட்டங்கள் வெற்றிபெற்றால் நாட்டில் பொருளாதாரச் செழிப்பு உண்டாகும் எனச் செருமானியர் எதிர்பார்த்தனர். அவற்றின் அடிப்படையில் இட்லருக்கு அம் மக்கள் முழு ஆதரவு அளித்தனர். பொருளாதாரச் சீர்குலைவிலிருந்து விடுதலை பெறுவதற்காகவே சப்பான் சீனாவின் மேல் படையெடுத்தது. சப்பான் சீனநாட்டின் மஞ்சூரியாப் (Manchuria) பகுதிகளில்தொழிற்சாலைகளை நிறுவியதுடன் சுரங்கத் தொழில்களையும் வளர்ச்சியடையச் செய்தது. இவற்றால், பொருளாதார மந்தத்தால் பாதிக்கப்பட்ட சப்பானியப் பொருளாதாரம் மறுமலர்ச்சியடையும் என எதிர் பார்க்கப்பட்டது. ஒருங்கமைந்த பொருளாதாரத் துறைகளையுடைய (Onganised Economic Sector) வளர்ச்சி பெற்ற மேலைநாட்டுப் பண்பாடுகளில் பெருமந்தத்தின் தாக்கம் ஏற்பட்டு, அவற்றால் கலை, இலக்கியம், கேளிக்கை, கல்வி, அறிவியல் ஆகியவை பற்றிய கோட்பாட்டுக் கருத்துகள் மறு உருப்பெற்று, அவை புதுக் கோணங்களில் வளர்ச்சி பெறலாயின.

ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் இருப்பு அங்காடியில் (Stock Exchange) 1929-இல் ஏற்பட்ட தோல்வியே பெருமந்தம் தோன்றுவதற்கான காரணம் எனப் பொதுவாகக் கருதப்படுகிறது. எனினும் அதற்கு எதிரான கருத்துகளும் கூறப்படுகின்றன: (1) முதல் உலகப் போரின் விளைவாக உலகச் சமாதானத்தைக் குறிக்கோளாகக் கொண்டு எழுதப்பட்ட சமாதான ஒப்பந்தம் (Peace Settlement) நாடுகளின் பொருளாதார அடித்தள அமைப்பைச் சமன்பாட்டிலிருந்து விலகச் செய்தது. அது பொருளாதார ஏற்றத்தாழ்வைப் பெருக்கிப் பெருமந்தத்திற்கு அடிகோலியது. (2) ஐக்கிய அமெரிக்கக் குடியரசில் 1920-ஆம் ஆண்டளவில் நிலவிய பொருள் வளமும் பெருஞ்செழிப்பும் வேளாண்மைத் துறையையும் பிற

துறைகளையும் நலிவுறச் செய்ததுடன், ஐரோப்பியப் பொருளாதாரத்தையும் பாதித்தது. இவற்றால் ஏற்பட்ட சூழ்நிலையே இருப்பு அங்காடியைத் தாக்கி முதலீட்டாளர் பேரளவில் இழப்புகளை ஏற்க வைத்தது. அதனைத் தொடர்ந்து 1931-இல் பன்னாட்டுப் பணவாக்க நெருக்கடி (International Monetary Crisis) நிகழ்ந்து வங்கிகள் நொடிப்புக்குள்ளாயின. பெருமந்தத்தின் தாக்கங்கள் பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளையும் பாதித்தன. எனினும் வரலாறு காணாத கடுவீறுடைய மந்தநிலைக்கு ஒரு குறிப்பிட்ட காரணி (Factor) காரணமென அறுதியிட்டுக் கூற இயலாது.பல காரணிகள் முடுக்கிய கூட்டுச்செயல் தூண்டுகோலாக இருந்திருக்க வேண்டுமென ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

வேளாண்மை: ஐக்கிய அமெரிக்கக் குடியரசு பொருளாதார வளச்செழிப்பில் உச்சநிலையடைந்த 1920-ஆம் ஆண்டுக் காலத்தில், விளை பொருள்களின் விலை 40 விழுக்காடு கீழிறங்கியது. அதனால், பாதிக்கப்பட்ட வேளாண்மையினர் தங்கள் சொத்து, வீடு ஆகியவற்றை இழந்து கடன்பட்டனர். ஏற்கனவே பெற்ற நிறுவன, வணிகக் கடன்களையும் தீர்க்க இயலாமலிருந்தனர். தொடர்ந்து வேளாண்மைத் துறையில் விலைச்சரிவு நீடித்ததால் வங்கிகள் பல செயலிழந்து மூடப்பட்டன. குறிப்பாக, 1928 சூலைத் திங்களுக்கும் 1929சூன் திங்களுக்கும் இடைப்பட்ட ஓராண்டுக் காலத்தில் மட்டும் 500 வங்கிகள் நொடிப்புக்குள்ளாயின. அதே காலத்தில் விளை பொருள்களின் விலை 53 விழுக்காடு கீழிறங்கியது. பெரும்பாலான வேளாண்மையினர் தங்கள் தொழிலைக் கைவிட்டு, பிற தொழில் நாடி நாட்டின் பிற பகுதிகளுக்கு இடம்பெயர்ந்தனர். மேற்குப் பகுதியில் குடியேற்றம் பெருகியது. அக்காலத்தில் முந்தைய காலங்களைப் போல பிற நாடுகளுக்கு இடம்பெயர்ந்து செல்லும் வாய்ப்புகளும் ஊக்கமளிப்பதாக இல்லை.

முதல் உலகப் போரின் தொடக்க காலத்தில் (1914) தோன்றிய பொருளாதார வீழ்ச்சியிலிருந்து ஐரோப்பிய நாடுகள் போர் முடிவுற்றவுடன் மறுமலர்ச்சியடையவில்லை. உலக நாடுகள் அனைத்திலும் குறைந்த வருவாய், விலைச்சரிவு நிலை, வேலையின்மை போன்ற பொருளாதாரச் சிக்கல்கள் நீடித்தன. பின் தங்கிய நாடுகள் பல பன்னாட்டு நிதி உதவிகளைப் பெற்றுப் பொருளாதாரத் தன்னிறைவை அடையத்தக்க கொள்கைகளைப் பின்பற்றினமையால், அவை இறக்குமதியைக் கட்டுப்படுத்தின. போரினால் ஏற்பட்ட இழப்புகளும் காலனி ஆதிக்கத்தின் வீழ்ச்சியும் பேரரசு நாடுகள் புதிய பொருளாதாரக்கோட்பாடுகளைப் பின்பற்றத் தூண்டின. செருமனியில் நிலவிய பழிவாங்கும் உணர்வு இட்லரின் இயக்கம்(Hitlarism) வளர உதவியது.பிரிட்டன் தன் பொருளாதாரத்தைச் சீரமைக்கும் நோக்குடன் உள்நாட்டு வருமானப் பெருக்கத்தைத் தடைசெய்தது. ஏற்றுமதிப் பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிற்றுறை ஊக்குவிக்கப்பட்டுத் தங்கத் திட்டத்தை (Gold Standard) தொடர்ந்து நீடிக்க முயற்சி எடுக்கப்பட்டது. இதனால் பொருளாதார மந்தத்தின் கடுமை மேலும் தீவிரமடைந்தது. பிரான்சு தன் நாட்டுச் செலாவணியின் மதிப்பைக் குறைத்ததால் அமெரிக்க நாட்டுக் கலைத்துறை வல்லுநர்கள் பலர் பிரான்சுக்குக் குடிபெயர்ந்தனர். அது பிரான்சு நாட்டுப் பொருளாதாரத்திற்கு வலுவளிக்கவில்லை. பிரான்சு நாட்டுத் தொழிலாளரின் உண்மைக் கூலி கீழிறங்கினமையால் தொழிற்றுறை பல இடையூறுகளுக்குள்ளாயிற்று.

தொழிற்றுறை: குறைந்த வருவாய்ப் போக்கு உலகெங்கிலும் நீடித்தது மட்டுமன்றி, வருமான ஏற்றத்தாழ்வுகளும் பெருகின. தொழிற்றுறையில் சுரங்கம், இரயில்வே, நெசவு ஆகிய தொழில்களைச் சார்ந்தவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். தொழில் நுட்ப வளர்ச்சியும் புதுக் கண்டுபிடிப்புகளும் மனித உழைப்பைக் குறைத்தமையால் வேலையின்மை பெருகியது. தொழிற்றுறையில் உற்பத்தி 50 விழுக்காடு உயர்ந்தது. ஆனால், தொழிலாளரின் ஊதியம் உயரவில்லை. அதனால் உற்பத்தியான பொருள்களை வாங்கும் திறன் மக்களிடையே இல்லாமற் போயிற்று. நாடுகள் பொதுவாக இன்றியமையாப் பொருள்களை மட்டுமே இறக்குமதி செய்து, பாதுகாப்புக் கொள்கையைப் (Protectionism) பின்பற்றியமையால் பொருள்களின் ஏற்றுமதித் தேவையும் மிகக் குறைவாயிருந்தது. எனவே, தொழிற்றுறை உற்பத்திப் பொருள்களின் அங்காடியிலும் தேக்கம் காணப்பட்டது. வேளாண்மையிலும் தொழிற்றுறையிலும் மிகைத்திறன் மிகுதியாக இருந்தது. தொழில் முனைவோர் இடர்தாங்கலுக்கு அஞ்சினர்.

நிதித்துறை: மேலும் மேலும் பெருகிய வேலையின்மை, குறைந்த வருவாய், அங்காடி விலையிறக்கம், கடன்பெருக்கம் ஆகியவற்றால் மக்களிடையே பணப்புழக்கம் மிகக் குறைந்துவிட்டது. ஐரோப்பிய நாடுகளிலும் வங்கிகள் பல 1931-இல் நொடிப்பு நிலைக்குள்ளாயின. அதே ஆண்டில் அமெரிக்காவில் 2300 வங்கிகள் மூடப்பட்டன. கூடுதலாக 1456 வங்கிகள் 1932-இல் நொடிப்புக்குள்ளாயின. வங்கி நொடிப்புகளினால் பெருந்திரளான மக்கள் தங்கள் சேமிப்பை இழந்தனர். பிரிட்டன் தங்கத் திட்டத்தைக் கைவிட்டதைத் தொடர்ந்து பிற நாடுகளும் அக்

கொள்கையைப் பின்பற்றின. மக்கள் பணத்தைக் கையிருப்பாக வைத்திருக்க விரும்பினமையால் வங்கிகளிடமிருந்த வைப்புகள் பணமாக மாற்றப்பட்டன. அவ்வாறு மாற்றுவதற்கு வங்கிகள் தங்கள் சொத்துகளை விற்க வேண்டியதாயிற்று. வங்கிகள் முதலீடு செய்திருந்த இருப்புகள், பங்குகள், கடனுறுதிச் சீட்டுகள் (Bonds) முதலியன முதலீட்டு அங்காடி நொடிப்பினால் மதிப்பிழந்துவிட்டன. வைப்புகளை முழுமையுமாகப் பணமாக மாற்றிக் கொடுக்க இயலாத நிலையில் வங்கிகள் தங்கள் தொழிலை நிறுத்தின.

இச்சூழ்நிலையில் நிதி நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்டு, 1933-இல் ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் பல மாநிலங்களில் வங்கி விடுமுறைகள் அளிக்கப்பட்டன. இவ்வகையான நடவடிக்கைகள் மக்களிடையே கலக்கத்தையும் அச்சத்தையும் ஊட்டின. அதே ஆண்டில் குடியரசுத் தலைவராகப் பணியேற்ற உரூசுவெல்ட்டு (Roosevelt) மார்ச்சுத் திங்களில் நாடு முழுமையிலும் 'வங்கி விடுமுறை' இரண்டு வாரங்கள் செயற்படுவதாக அறிவித்து, வங்கித் தொழிலுக்குப் புதிய கோட்பாட்டுக் கொள்கைகளை வகுத்தார். இரண்டு வார வங்கி விடுமுறையோடு பெரும்பாலான நலிவுற்ற வங்கிகள் மூடப்பட்டன. மக்களிடையே காணப்பட்ட அச்சம் தணிந்தது. அமெரிக்காவில் தங்கத் திட்டம் கைவிடப்பட்டு, அமெரிக்கத் தாலரின் (Dollar) மதிப்பு 7 விழுக்காடு கீழிறக்கம் (Devaluation) செய்யப்பட்டது. அமெரிக்கர்கள் 24 காரட்டுத் தங்க நாணயங்களோ தங்கக் கட்டிகளோ தனிப்பட்ட சொத்தாக வைத்துக் கொள்வது தடை செய்யப்பட்டது. தாலரின் மதிப்பிறக்கத்திற்குப் பின்னர் ஓர் அவுன்சு தங்கத்தின் மதிப்பு $20.67-இலிருந்து $35 ஆக உறுதி செய்யப்பட்டது.

**புதிய பொருளாதாரக் கொள்கை:** இது பொருளாதார மந்த நிலையை மேற்கொள்வதற்காக ஐக்கிய அமெரிக்கக் குடியரசுத் தலைவர் உரூசுவெல்ட்டு எடுத்த புதிய பொருளாதாரக் கோட்பாட்டு அணுகுமுறையாகும். இவருக்கு முந்தைய தலைவராகிய ஊவர் (Hoover) மாநில உள்ளாட்சி அரசுகளின் கட்டுப்பாட்டிற்குள் பொருளாதார நடவடிக்கைகள் செயற்பட்டு, நிலைமை தானாகவேமுன்னேற்றமடையும் எனக் கருதினார். மாநிலங்கள் நிதிவளக் குறைவினால் தேவையான இடர்காப்பு நடவடிக்கைகளில் தலையிடாமலிருந்தன. அதற்கு மாறாக உரூசுவெல்ட்டு பெருமந்தத்தின் துயர்களைத் துடைப்பது மைய அரசின் கடமை என்பதை முழுமையாக ஏற்றுச் செயலாற்றினார். பாராளுமன்றத்தை உடனடியாகக் கூட்டி, நூறு நாட்களில் வரலாற்றுச் சிறப்புமிக்க பொருளாதார ஒழுங்கு முறைச் சட்டங்கள் பலவற்றை இயற்றினார். அவற்றின் முக்கிய கூறுகளாவன:(1) இன்றியமையாத் தேவைகளின்றி வறுமையால் துன்புறும் மக்களுக்கு உடனடித் துயர் தவிர்ப்பு உதவிகளை அளித்தல், (2)பொருளாதார மறுமலர்ச்சிக்குத் தேவையான அகக்கட்டுமான (Infrastructure) வசதிகளையும் வேலைவாய்ப்புகளையும் உருவாக்குதல், புதிய தொழில்களை ஊக்குவித்தல் ஆகியவற்றின் மூலம் அளித்தல், (3) நீண்டகாலத் திட்ட அடிப்படையில் மீண்டும் இத்தகைய பெருமந்தம் நிகழாதபடி பொருளாதார நடவக்கைகளைச் சட்ட ஒழுங்கு முறைக்குள் செயற்பட வரையறுத்து நிலைநிறுத்தல்.

மனிதத் துயர் துடைப்புத் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுப் பல துயர்துடைப்பு மன்றங்கள் நிறுவப்பட்டன அவற்றில் இலட்சக்கணக்கான வேலையற்ற இளைஞர்கள் பணியிலமர்த்தப்பட்டனர். இம்மன்றங்கள் மைய அரசின் நிதி உதவியைப் பெற்றுச் சமூகப் பணியிலும் கட்டடப் பணியிலும் ஈடுபட்டன. உணவு, உடை, உறைவிடமற்றோருக்கு இலவசமாக அவை வழங்கப்பட்டன. தனியார் அறநிலையங்களும் அரசின் உதவிபெற்று இத்தகைய சமூகப் பணியாற்றின. மைய அரசின் நேரடிக் கட்டுப்பாட்டிற்குள் பல நெருக்கடிக் காலத் துயர்துடைப்பு நிறுவனங்கள், வேலைவாய்ப்புகளை அளிக்கும் நிறுவனங்கள், மக்கள் நலன் பாதுகாக்கும் பன்முக நோக்கு நிறுவனங்கள் போன்றவை நாடெங்கிலும் செயற்பட்டன. இவற்றின் மூலம் அரசு பேரளவில் பணத்தைச் செலவிட்டது. பெருகிய அரசாங்கச் செலவின் மூலம் பொருளாதாரம் மந்த நிலையிலிருந்து மீட்புப் பெறும் என்பது அரசின் குறிக்கோளாகும்.

அரசின் நேரடித் தலையீடும் நிதி உதவிகளும் தனியார் துறையில் தொழில்கள் தொடங்க ஊக்குவிப்பாக அமைந்தன. பல புதிய தொழில்கள் தொடங்கப்பட்டன. நலிந்த தொழில்கள் வலுப்பெற்றன. முதல் இரண்டு ஆண்டுகளில் உற்பத்திப் பெருக்கம் கட்டுப்படுத்தப்பட்டு விலையும் ஊதியமும் உயர்த்தப்பட்டன. முற்றுரிமைக்கு எதிரான சட்டங்கள் (Anti Trust Laws) நிறுத்தி வைக்கப்பட்டன. விலை வரையறையில் போட்டி அனுமதிக்கப்பட்டது. குறைந்த நேர வேலையும் தொழிலாளர் அமைப்புகளும் நாட்டின் தொழில் மறுமலர்ச்சிச் சட்டத்தின் (National Industrial Recovery Act) மூலம் சட்டமுறையாக்கப்பட்டன. சமூகப் பாதுகாப்புச் சட்டத்தின் (Social Security Act) மூலம் 1935-இல் வேலையற்றோரும் ஓய்வு பெற்றோரும் பண உதவி பெற்றனர். கூட்டுப் பேரமும் (Collective Bargaining) ஊக்குவிக்கப்பட்டதால் தொழிலாளர் வேலைப் பாதுகாப்பு, உயர்ந்த

ஊதியம், பணியிடங்களில் தேவையான வசதிகள் ஆகியவற்றைப் பெற்றனர்.

அமெரிக்க மைய வங்கியின் மூலம் வங்கி வைப்புகளுக்கு மைய அரசு காப்பீடு (Insurance) அளித்தது. பண இருப்பு, அங்காடியின் இருப்புகள், பங்குகள், கடனுறுதிச் சீட்டுகள் ஆகியவற்றில் ஏற்படும் மதிப்பு ஏற்றத்தாழ்வுகளைக் கட்டுப்படுத்தவும், பாதுகாப்பு அளிக்கவும் பிணைய மாற்று ஆணையம் (The Securities Exchange Commission) நிறுவப்பட்டது. குறைந்த விலையில் மின் ஆற்றலை வழங்கவும்,பெருவெள்ளத்தைக் கட்டுப்படுத்தவும், நீர்வழிப் போக்குவரத்து (Navigation), பொழுதுபோக்கு வசதிகள் ஆகியவற்றைப் பெருக்கவும், தென்னசிப் பள்ளத்தாக்கு ஆணையம்(The Tennessee Valley Authority) நிறுவப்பட்டது. வாணிகம் பெருகத்தக்கதாக இறக்குமதிப் பொருள்களின்மேல் விதிக்கப்படும் சுங்க வரி குறைக்கப்பட்டது. ஐரோப்பிய நாடுகளும் சுங்க வரிகளைக் குறைத்ததனால் அமெரிக்காவின் ஏற்றுமதி பெருகியது. இராணுவ வலிமையை மையமாகக் கொண்டிருந்த செருமனியும் சப்பானும் இரண்டாம் உலகப்போருக்கு (1939 முதல் 1945 வரை) வழிவகுத்தன. இரண்டாம் உலகப் போருக்குத் தேவையான போர்க் கருவிகளை உற்பத்தி செய்யும் நோக்குடன், நாடுகள் தங்கள் பொருளாதார வாணிக நடவடிக்கைகளைப் பெருக்கின. போர்க் கருவிகளை உற்பத்தி செய்யும்தொழிற்சாலைகள் பேரளவில் நிறுவப்பட்டன. அவற்றால் உற்பத்தி பெருக்கமடைந்து,வேலை வாய்ப்புகளும்பெருகின. பணப் புழக்கம் மிகுந்ததால் மந்தநிலை சீரடையத் தொடங்கியது.

போர்ச் சூழ்நிலையில் ஏற்பட்ட நெருக்கடிக்கால நிலைமையைச் சமாளிக்கத் தேவையான அகக்கட்டுமானம், புதிய பொருளாதாரக் கொள்கையின்கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளால் பொருளாதாரத்தில் சீரான முறையில் வேரூன்றியிருந்தது. அது நிலைமை மேலும் மோசமாகாமல் அரசு போர்த் தேவைகளில் கவனம் செலுத்தப் பெரிதும் உதவியது. புதிய பொருளாதாரக் கொள்கை பெருமந்தத்திலிருந்து பொருளாதாரத்தை மீட்டது மட்டுமன்றி, மக்கள் அரசிடம் வைத்திருந்த நம்பிக்கையைப் புதுப்பித்துக் கொள்ளவும் வகை செய்தது. வேலையின்மை 1930-இல் 25 விழுக்காடாயிருந்தது. அது 1933-இல் புதிய பொருளாதாரக் கொள்கை செயற்படத் தொடங்கியவுடன் 18 விழுக்காடாகவும், 1940-இல் 15 விழுக்காடாகவும், போர் தொடங்கிய பின்னர் 1944 இல் 1 விழுக்காடாகவும் குறைந்தது.

புதிய பொருளாதாரக் கொள்கை செயற்பட உருசுவெல்ட்டு அரசுக்குத் துணையாகப் பின்னணியிலிருந்து பணியாற்றிய பொருளியல் வல்லுநர் சே.எம். கீன்சு (J.M. Keynes) ஆவார். அவரது வேலை, வட்டி, பணம் ஆகியவற்றின் பொதுக் கோட்பாடு(The General Theory of Employment, Interest & Money) பொருளியலில் தனிப் புரட்சியை உண்டாக்கியது.இன்றும் அவருடைய கருத்துகள் கோட்பாட்டளவிலும் நடைமுறையிலும் சிறப்புற்று விளங்குகின்றன.

அ.கு.சா.

துணை நூல்கள்:

**Edwin,G. Dolan,** Basic Economics, The Dryden Press, Illinois, 1980.

**Rostow, W.W.,** The World Economy: History and Prospect, University of Texas Press, U.S.A., 1978.

**Richard,T. Gill,** Economics : Text with Readings, Good year Publishing Company, Inc., California, 1975.

**உலகப்போர்**: முதலாம் (1914-1918): உலகில் உள்ள அனைத்து வல்லரசு நாடுகளும் இப்போரில் பங்கு கொண்டதாலும், உலகின் பல்வேறு பகுதிகளில் இப்போர் பரவியதாலும், ஏராளமான பொருட்சேதமும் உயிர்ச்சேதமும் முந்தைய போர்களைவிட ஏற்பட்டதாலும், உலகமே அழியக் கூடிய அளவுக்கு நச்சு வாயு போன்ற புதிய போர்க்கருவிகள் பயன்படுத்தப்பட்டதாலும், இப்போரை 'முதல் உலகப் பெரும்போர்' எனக் குறிப்பிடுகின்றனர்.

இப்போர் 1914 ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 28-ஆம் நாளில் தொடங்கப்பட்டு, 1918-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 11-ஆம் நாளன்று முடிவுற்றது. இப்போரில் 27 வல்லரசுகள்பங்கேற்றன. உலக நாடுகளில் பத்தில் ஒன்பது பங்கு மக்கள் போர்க்கொடி உயர்த்தினர்இப்போரில் கி.பி.1790-ஆம் ஆண்டிலிருந்து 1913-ஆம் ஆண்டுவரை நிகழ்ந்த அனைத்துப் போர்களிலும் ஏற்பட்ட உயிர்ச்சேதத்தைப் போன்று இரண்டு மடங்கு உயிர்ச் சேதம் ஏற்பட்டதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

செருமனியே இப்போருக்குக் காரணம் என்று சிலர் எண்ணுகிறார்கள். ஆனால், பல்வேறு நாடுகளுக்கிடையே நிலவிய வேண்டத்தகாத நிகழ்ச்சிகளும் நாளுக்கு நாள் ஆழப்பதிந்துவிட்ட பகைமைக் கருத்துகளும், அரசியல், சமூகம், பொருளாதாரம் போன்ற துறைகளில் ஏற்பட்டுவிட்ட தவிர்க்க முடியா ஏற்றத்

தாழ்வுகளுமே இப்போரின் தொடக்கத்திற்கு அடிப் படையாக அமைந்தன எனலாம்.

காரணங்கள்: செருமனியின் மண்ணாசை: கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் ஆட்டோவான் பிசுமார்க்கு என்பவர் 'குருதியும் இரும் பும்' (Blood & Iron) என்ற கொள்கையைச் செயற் படுத்திச் செருமனியை ஒரு வல்லரசு நாடாக்கினார். இரண்டாம் வில்லியம் கெய்சர் என்பவர் உலகையே ஆளலாம் என்ற எண்ணம் கொண்டார்; உலக நாடு களுக்கிடையே முக்கியத்துவத்தைப் பெறுவதற்கும், வளர்ந்து வருகிற மக்கள் தொகையைக் குடியேற்று வதற்கும் தம் நாட்டிற்குக் குடியேற்றப் பகுதிகள் அயல் நாடுகளில் தேவை என்ற அவசியத்தை உணர்ந் தார். இக்கருத்தை ஈடேற்ற ஒரு கப்பற்படை நிரந் தரமாக அமைக்கப்பட வேண்டும் என எண்ணிப் படைபலத்தைப் பெருக்கி, வடகடலில் எலிகோலாந்து (Heligoland) என்ற இடத்தில் தம் கப்பற்படை யையும் தங்க வைத்தார். இத்தகைய ஆக்கிரமிப்புக் கொள்கையே முதலாம் உலகப் பெரும் போருக்கு அடிப்படையாக அமைந்தது.

பல்வேறு உடன்படிக்கைகள்: முதலாம் உலகப் பெரும்போர் தொடங்குவதற்கு முன்னர் ஐரோப்பிய நாடுகள் இரண்டு முகாம்களாகப் பிரிந்திருந்தன. செரு மனி, ஆசுத்திரியா, இத்தாலி ஆகிய நாடுகள்கி.பி. 1882-இல் 'முக்கூட்டு உடன்படிக்கையை'யும், கி.பி. 1895-இல் பிரான்சு, உருசியா ஆகிய நாடுகள் 'இரட் டைக் கூட்டு உடன்படிக்கை'யையும் செய்துகொண் டன. பிரான்சு 1904-இல் பிரிட்டனுடன் ஒரு நேச உடன்பாட்டினைச் செய்து கொண்டது. அது 1907 -இல் உருசியாவின் இணைப்புடன் 'முக்கூட்டாக' மலர்ந்தது. செருமனித் தலைமையில் அடங்கிய அச்சு நாடுகளும், பிரிட்டன் தலைமையில் அடங்கிய நேச நாடுகளும், இந்த இரு முகாம்களிலும் உறுப்பினர் களாகச் சேர்ந்த நாடுகளும், ஒன்றை ஒன்று பகை மையுடனும் பொறாமையுடனும் பார்க்கத் தலைப் பட்டன. இவ்வாறு போர் உருவாயிற்று.

குடியேற்றப் போட்டி: புவியியல் அறிவு வளர்ந்த உல கில் பல்வேறு கண்டங்கள் கண்டுபிடிக்கப்பட்ட நாளி லிருந்தே கச்சாப் பொருள், கனிப்பொருள் போன்ற வற்றைப் பெறுவதற்காகவும், மக்களைக் குடியேற்றி அக்குடியேற்றங்களில் ஆதிக்கத்தை வளர்ப்பதற்காக வும் அனைத்து வல்லரசு நாடுகளும் முனைந்தன. எனவே, குடியேற்றப் போட்டி வல்லரசு நாடுகளுக்கிடையே தவிர்க்க முடியாததாயிற்று. இப் போட்டி மனப்பான்மையும் ஆக்கிரமிப்புத் தன்மை யும் முதலாம் போருக்கு ஆணிவேராக அமைந் தன.

வணிகப் போட்டி: தொழிற்புரட்சி ஏற்பட்ட பிறகு ஐரோப்பிய நாடுகளில் ஆக்கப்பொருள்கள் அதிக மாயின. செருமனி ஆக்கப் பொருள்களை அதிகமாக உற்பத்தி செய்கிற நாடாக விளங்கியது. செருமனியின் பொருள்கள் உலகச் சந்தையில் நன்மதிப்பைப் பெற் றன. செருமனியின் வணிக வளர்ச்சியில் பிரிட்டன் பொறாமையும் கோபமும் கொண்டது. இந்தப் பகை மைக் கருத்தும் இப்போருக்கு ஒரு வித்தாக அமைந் தது.

பால்கன் பிரச்சினை: பெர்லின் மாநாட்டின் தீர்மானத்தின்படி (கி.பி. 1878) பாசுனியா, எர்சி கோவினா என்னும் பகுதிகளைத் தம் நாட்டுடன் இணைத்துக் கொள்ளாமல், ஆளுகிற பொறுப்பினை மட்டும் அங்கேரி நாட்டுக்கு ஆசுத்திரியா வழங்கி யது. ஆனால், ஆசுத்திரியா – அங்கேரி 1908-இல் அவற்றைத் தம் நாட்டுடன் இணைத்துக் கொண் டது. உள்ளபடியே இணைத்துக் கொள்ளப்பட்ட அப் பகுதிகளில் வாழ்ந்தவர்கள் செர்பியா நாட்டில் வாழ்ந்த சிலாவு வமிசத்தைச் சேர்ந்தவர்கள். மக்கள் தொகை கணக்குப்படி அப்பகுதிகள் செர்பியாவுடன் இணைந்திருக்க வேண்டும். இல்லையேல் அண்டை நாடான உருசியாவுடன் இணைந்திருக்க வேண்டும். எனவே, செர்பியாவும் உருசியாவும் சேர்ந்து தகாத முறையில் அப்பகுதிகளை இணைத்துக்கொள்ள, ஆசுத் திரியா – அங்கேரி அரசுக்கு எதிராகப் போருக்குத் தயாராயின. மேலும், ஆசுத்திரியா – அங்கேரி அரசு செருமனியுடன் உறவு கொண்டிருப்பதை எந்த நாடும் விரும்பவில்லை.

மொராக்கோப் பிரச்சினை: மொராக்கோவைத் தன்னாட்சிக்கு உட்படுத்த பிரான்சு விரும்பியது. ஆனால், செருமனி நாட்டு இரண்டாம் கெய்சர் வில்லியம் பிரான்சின் தலையீட்டை எதிர்த்த தோடன்றி, மொராக்கோவை ஒரு சுதந்திர நாடாக்க விரும்பினார். மொராக்கோவில் ஏற்பட்ட உள்நாட்டுக் கிளர்ச்சியைப் பயன்படுத்தி, அங்கு அமைதியை உண்டாக்கும் விதத்தில் தன் செல்வாக்கை நிலை நிறுத்தப் பிரான்சு ஒரு படையை மொராக்கோவின் தலைநகரான பெசுவிற்கு அனுப்பியது. உடனே செரு மனியும் தம் படையை மொராக்கோவிற்கு அருகி லுள்ள அகாதீர் துறைமுகத்திற்கு அனுப்பியது. பிரிட் டன் பிரான்சுக்கு ஆதரவாகப் படையை ஏவியதும் செருமனி தன் படையைத் திரும்பப் பெற்றுக் கொண் டது. பிரான்சு மேலாதிக்கத்தை முழுமையாக

மொராக்கோவில் ஏற்படுத்தியது. செருமனி பிரான்சைப் போரில் சந்திக்க ஒரு நல்ல வாய்ப்பை எதிர்பார்த்துக் கொண்டு இருந்தது.

**உலொரைன் பிரச்சினை:** பிரான்சு கி.பி. 1870–1871–ஆம் ஆண்டுகளில் நிகழ்ந்த பிரெஞ்சு –பிரசியாப் போரின்போது, கனிவளம் நிறைந்த அல்சாசு உலொரைன் ஆகிய பகுதிகளை இழந்துவிட்டது. உலொரைன் பகுதியைப் பெற்றுச் செருமனி மிக வேகமாகப் பொருளாதாரத்தில் வளர்ந்தது. இழந்துவிட்ட அந்த இரு இடங்களையும் மீண்டும் பெறத்தக்க தருணத்தைப் பிரான்சு எதிர்பார்த்துக் கொண்டு இருந்தது.

**இத்தாலியின் பேராசை:** முக்கூட்டு உடன்படிக்கைகளில் அங்கம் வகித்த இத்தாலி அதிக நாடுகளைப் போரின் மூலம் கைப்பற்றும் வகையில், 1915–ஆம் ஆண்டு நேச நாடுகளுடன் உறவு கொண்டது. இந்த ஆதிக்கப் பேராசையும் இப்போருக்குக் காரணமாகும்.

**உடனடிக் காரணம்:** ஆசுத்திரியா நாட்டு இளவரசர் பெர்டினாண்டையும் அவர் துணைவியாரையும் செர்பியாவைச் சேர்ந்த ஒருவன் 1914–ஆம் ஆண்டில் சூன் 28–இல் கொலை செய்தவுடன், மற்றைய காரணங்களை மறைமுகமாகக் கொண்டிருந்த அனைத்து நாடுகளும் போரிலே தீவிரமாக இறங்கின. ஆசுத்திரியா இக்கொலைக் குற்றத்தைக் காரணமாகக் கொண்டு செர்பியாவை அழிக்க எண்ணிப் போரைத் தொடங்கியது. உருசியா செர்பியாவுக்கு ஆதரவாக வந்தது. செருமனி உருசியாவுக்கு எதிராகப் படைகளைக் குவித்தது. பிரான்சு உருசியாவுக்கு ஆதரவு அளித்தது. எனவே செருமனி பிரான்சுக்கு எதிராகப் போரிட நேர்ந்தது. இலண்டன் உடன்படிக்கையில் (கி.பி. 1839) பெல்சியம் நடுநிலைமையைக் கடைப்பிடிக்கும் நாடு என்று அனைத்து ஐரோப்பிய நாடுகளும் முடிவெடுத்த போதிலும், செருமனி அந்த நிபந்தனைகளை முறியடித்துப் பெல்சியத்தின் மீது போர் தொடுத்தது. எனவே பிரிட்டன் செருமனியை எதிர்க்க நேர்ந்தது. தவிர்க்க முடியாத நிலையில் முதலாம் உலகப் பெரும் போர் மூண்டுவிட்டது.

**போரின் பண்புகள்:** அனைத்து வல்லரசு நாடுகளும் இப்போரில் பங்கு கொண்ட காரணத்தால் உலகப் பரப்பில் எல்லாப் பகுதிகளும்–மக்கள் தொகையில் 93 விழுக்காடு இப்போரில் கலந்து கொண்டன. இப்போர் மிகக் கடுமையானதும் கொடுமையானதும் ஆகும். ஏனெனில், இதில் பீரங்கி வண்டிகளும் வான்படைகளும் இயந்திரத் துப்பாக்கிகளும் நச்சு வாயுக்களும் இராட்சதப் பீரங்கிகளும் நீர்மூழ்கிக் கப்பல்களும் முதன் முதலாகப் பயன்படுத்தப்பட்டன.



முதல் உலகப் போரில் பிரெஞ்சுப் போர் விமானம்

**போரின் போக்கு:** செருமனியைத் தலைமையாகக் கொண்டு போரில் இறங்கிய நாடுகள் அச்சு நாடுகள் எனவும், பிரிட்டனைத் தலைமையாகக் கொண்டு விளங்கிய நாடுகள் நேச நாடுகள் எனவும் கூறப்படுகின்றன.



ஆங்கிலேயரின் பீரங்கிப்படை வண்டி

ஆசுத்திரியா செர்பியாவுடன் போர் என அறி[illegible] ததும் செருமனி உடனே பெல்சியத்தைக் கடந்[illegible] பிரான்சைத் தாக்கியது. பிரிட்டனும் பிரான்சு செருமனிப் படைகளைத் தடுத்து நிறுத்த முடியாம[illegible] திணறின. ஆனால் மார்ன் என்ற இடத்தில் நடந்



உருசியப்படைகள் போரிலிருந்து திரும்பிச் செல்லல்

போரில் நேச நாடுகள் செருமனியுடன் சம பலத்தோடு சந்தித்தன.

உருசியப் படைகள் ஒரே சமயத்தில் செருமனியையும் ஆசுத்திரியாவையும் தாக்கின. பின்னர், உருசியப் படைகள் கலீசியாவினுள் புகுந்து அங்கேரியையும் பயமுறுத்தின. ஆசுத்திரியா மிக இடர்ப்பட்ட நிலையிலிருந்தபோது, அந்நாட்டிற்கு ஆபத்து நண்பனாகச் செருமனி விரைந்து வந்தது. செருமனியப் படைகள் உருசியப் படைகளைத் தோற்கடித்து ஏராளமான சேதத்தை ஏற்படுத்தியதுடன், ஆசுத்திரியப் பகுதியைவிட்டு உருசியப் படைகளை விரட்டி அடித்தன.


துருக்கி 1914 அக்டோபரில் அச்சு நாடுகளுக்கு ஆதரவாகப் போரில் ஈடுபட்டது. இந்நிகழ்ச்சி மூலம் நேசநாடுகள் உருசியாவுடன் இதுகாறும் பெற்று வந்த செய்தித் தொடர்பு துண்டிக்கப்பட்டது. எனினும், பிரிட்டன் போரைத் தொடர்ந்து நடத்தி மெசபொடேமியாவைக் கைப்பற்றியதோடு, துருக்கியரின் தொல்லைகளிலிருந்து சூயசுக் கால்வாயையும் விடுவித்துப் பாலத்தீனத்தையும் வென்றது.

மண்ணாசை கொண்ட இத்தாலி 1915-இல் நேச நாடுகளுக்கு ஆதரவாகப் போரில் இறங்கியது. இத்தாலி 1916-இல் கணிசமான வெற்றிகளைப் பெற்றது. அது 1917-இல் பகைவர்களால் நொறுக்கப்பட்டது. இருப்பினும், பிரிட்டன், பிரான்சு ஆகிய நேச நாடுகள் வட இத்தாலியை அழிவினின்று காப்பாற்றின. நேச நாடுகளுக்குப் பக்கபலமாக இத்தாலி ஆசுத்திரியாவைக் கண்காணித்தது.

பல்கேரியா 1915-இல் அச்சு நாடுகளுக்குத் துணையாகவும் 1916-இல் உருமேனியா நேச நாடுகளுக்குத் துணையாகவும் போரில் இறங்கின. உருமேனியா 1916-இல் திரான்சில் வேனியாவை நோக்கிப் படையெடுத்தபோது, அச்சு நாடுகள் உருமேனியாவைக் கடுமையாகச் சேதப்படுத்தியமையால், 1918-இல் உருமேனியா போரிலிருந்தே தன்னை விடுவித்துக் கொண்டது.

நிலத்திலுள்ளவாறே நீரிலும் படைகள் மோதிக் கொண்டன. கடலாதிக்கத்தில் குறைவில்லாத பிரிட்டன், செருமனிக்குத் தக்க பாடத்தைப் புகட்ட எண்ணிச் செருமனிக்குச் சொந்தமான ஒரு போர்க் கப்பலையே அழித்துவிட்டது. பிரிட்டனோடு செருமனியால் ஈடு கொடுத்துக் கடற்போர் செய்ய இயலவில்லை. எனவே பிரிட்டனுக்குப் பதிலடி கொடுக்க வேண்டி, செருமனி நீர்மூழ்கிக் கப்பல்களை அனுப்பியது. இந்த நீர் மூழ்கிக் கப்பல்கள் பிரிட்டனுக்குப் பெரும் இழப்பு உண்டாக்கின.

முதல் உலகப்பெரும்போர் தொடங்கிய காலத்திலிருந்தே அமெரிக்கா நடுநிலைமையை வகித்து வந்தது. ஆனால், செருமனி நீர் மூழ்கிக் கப்பல்கள் உலூசிதானியா என்ற அமெரிக்கக் கப்பலை 1915-இல் வீழ்த்தியது. இதனால் அமெரிக்கா 1917-இல் வேறு வழியின்றிச் செருமனிக்கு எதிராகப் போரில் இறங்கியது. நேச நாடுகளுக்கு ஆதரவாக அமெரிக்க ஐக்கிய நாடுகள் போரில் இறங்கி, ஐரோப்பியப் பகுதிகளில் படைகளைக் குவித்த பின்னரே, 1918-இலிருந்து முதல் உலகப் பெரும்போர் முடிவடையும் கட்டத்தை அடைந்தது.



செருமனி நீர் மூழ்கிக் கப்பல்

உருசியா இப்போரில் பெருந் தோல்வியே அடைந்தது. எனவே உருசிய நாட்டு மக்கள் சார் வமிச ஆட்சி மீது வெறுப்புக் கொண்டு ,1917 அக்டோபரில் புரட்சியைத் தொடங்கினர்; சார் மன்னர் ஆட்சியை நீக்கிவிட்டுச் சோவியத்துப் பொது உடைமைக் குடியரசினை ஆட்சியில் அமர்த்தினார்கள். உடனே உருசியா அச்சு நாடுகளுடன் 1918-இல் ஓர் உடன்படிக்கையைச் செய்து கொண்டு, உலகப் பெரும் போரிலிருந்து விலகிக் கொண்டது. இதனால் அச்சு நாடுகளுக்குச் சாதகமான நிலை போரில் உண்டாயிற்று.

உருசியாவின் விலகலால் கிழக்குப் பகுதியில் தொல்லைகள் குறைந்தன. ஆனால், மேற்குப் பகுதியில் போர் மேலும் தீவிரமாகியது. போரின் தொடக்கத்தில் அச்சுநாடுகள் சில வெற்றிகளைப் பெற்றன. எனினும், நாளடைவில் மிகவும் மந்தமான நிலையை அடைந்துவிட்டன. செருமானியப் படைகள் சிறிதுசிறிதாகப் பின்வாங்கத் தொடங்கின; துருக்கிப் படைகளும் பல்கேரியாப் படைகளும் துவண்டன. ஆசுத்திரியா உடன்படிக்கையை நாடியது. இரண்டாம் வில்லியம் கெய்சர் 1918 நவம்பரில் முடி துறந்து, ஆலந்துக்குத் (Holland) தப்பி ஓடினார். எனவே, செருமனி 1918 நவம்பர் 11-ஆம் நாளில் உடன்படிக்கைக்கு இசைந்தது; முதலாம் உலகப் பெரும்போர் முடிவு அடைந்தது.

**நேச நாடுகளின் வெற்றிக்குரிய காரணங்கள்:** இப்போரின் தொடக்க காலத்தில் நேச நாடுகள் தோல்வியே அடைந்தன. ஆனால் இறுதிக் காலத்தில் பின்வரும் காரணங்களால் வெற்றி பெற்றன. நேச நாடுகள் பொருளாதார வசதி மிகுந்தவை. போருக்கு வேண்டிய பொன்னும் பொருளும் போர்க்கருவிகளும் வீரர்களும் பிரிட்டனிடமிருந்து நேச நாடுகளுக்குக் குறைவில்லாமல் கிடைத்தன. ஆனால் அச்சு நாடுகளுக்கு இத்தகைய வசதிகள் எவையுமில்லை. வசதிகள் பிரிட்டனைப் போன்று வாய்க்கவில்லை.

பிரிட்டனின் கடல் ஆதிக்கம் நேச நாடுகளுக்கு வெற்றியைத் தேடித் தந்தது. அச்சு நாடுகளுக்கு இத்தகைய வெற்றியைத் தரும் அளவுக்கு கடல் ஆதிக்கம் கிடையாது. பிரிட்டனின் இருப்பிடம் இயற்கையிலேயே நல்ல பாதுகாப்பைப் பெற்ற இடம். ஆனால், அச்சு நாடுகள் அடையாளம் கண்டுகொள்ளக் கூடிய அளவுக்கும், தாக்குதல் நடத்த ஏதுவான அளவுக்கும் அமைந்திருந்தன.

போரின் தொடக்கத்தில் அச்சு நாடுகளில் இடம் பெற்றிருந்த இத்தாலி, உருமேனியா போன்றவை இப்போரிலிருந்து விலகின. ஒரு சில நாடுகள் நேச நாடுகளுடன் உடன்பாடு கொண்டன. செருமனியுடன் உறவு கொண்டிருந்த ஆசுத்திரியா - அங்கேரி போன்ற நாடுகள் நொண்டிக் குதிரைகளாக விளங்கின. அவை தம் தலைமைப்பீடமான செர்பியா நாட்டுக்காக உழைத்தனவே தவிர, இப்போரின் தலைமைப் பீடமான செருமனிக்காக உழைக்கவில்லை. இப் போரை விட்டு 1917-இல் விலகிய உருசியா செருமனிக் கைதிகளை விடுதலை செய்தது. அக் கைதிகள் தம் தாய் நாடு திரும்பிப் புரட்சிக் கருத்துகளையும் சமதர்ம சுதந்திரக் கருத்துகளையும் பரப்பினார்கள்; மீண்டும் செருமானியப்படையில் சேர்ந்து, செருமனியின் ஆதிக்கத்திற்கும் அட்டூழியத்திற்கும் சாவு மணிஅடித்தார்கள். போரின் இறுதிக் காலத்தில் நேசநாடுகளுடன் அமெரிக்கா சேர்ந்தது; படைப் பலத்தைப் பெருக்கியது; நேச நாடுகளுக்கு வெற்றி வாய்ப்பையும் தேடித் தந்தது.

**போரின் விளைவுகள்:** பாரிசு (Paris) உடன்படிக்கையோடு 1919-இல் முதல் உலகப் பெரும் போர் முடிவுற்றது. இப்போரில் பிரிட்டனின் தலைமையில் போரிட்ட நேசநாடுகள் வென்றன. செருமனியின் தலைமையில் போரிட்ட அச்சு நாடுகள் தோற்றன. இப்போரில் தோல்வியுற்ற ஒவ்வொரு நாட்டுடனும் தனித்தனியாக நிபந்தனைகளுடன் உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. செருமனியுடன் 'வெர்சே உடன்படிக்கை' செய்து கொள்ளப்பட்டது. ஆசுத்திரியாவுடன் 'புனித செர்மைன் உடன்படிக்கை'யும், அங்கேரியுடன் 'திரினான் உடன்படிக்கை'யும், பல்கேரியாவுடன் 'நியூல்லி உடன்படிக்கை'யும், துருக்கியுடன் 'செவ்ரேசு உடன்படிக்கை'யும் செய்து கொள்ளப்பட்டன. இந்த செவ்ரேசு உடன்படிக்கை 1923-இல் 'இலாசேல் உடன்படிக்கை'யாக மாற்றியமைக்கப்பட்டது.

அமெரிக்க அதிபர் உட்ரோ வில்சனின் 14 அம்சத் திட்டப்படி உடன்படிக்கைகள் வரையறுக்கப்பட்டன. பின்னர், ஒவ்வொரு நாட்டுக்கும் கடல் ஆதிக்கத்தில் சுதந்திரம் தர வேண்டும் எனவும், போருக்குக் காரணமாக இருந்து போரில் தோற்ற நாடுகள் இழப்பீடு தர வேண்டுமெனவும் சில குறிப்புகள் உடன்படிக்கைகளின் திருத்தங்களாக ஏற்றுக் கொள்ளப் பட்டன. செருமனி குற்றவாளியெனக் கருதப்பட்டு இழப்பீடு தர வேண்டுமென முடிவு செய்யப்பட்டது. அது தன் வசமிருந்த அல்சேசு, உலொரைன் போன்ற பகுதிகளை விட்டுக் கொடுத்தது; 'சார்' பள்ளத்தாக்கு நிலக்கரிச் சுரங்கத்தையும் 15 ஆண்டுக் காலம்வரை பிரான்சிடம் ஒப்படைத்தது. இத்தாலி ஆசுத்திரியா விடமிருந்து திரீசுடு, இசுதிரியா, திரண்டினோ, தெற்குத் தைரோல் ஆகிய பகுதிகளைப் பெற்றது. தென்மார்க்கு வடக்கு சுலசுவிக்கு என்ற பகுதியையும், செருமனி மத்திய சுலசுவிக்கு என்ற பகுதியையும் பெற்றன.

செருமனி, ஆசுத்திரியா, உருசியா ஆகிய நாடுகளிலிருந்து எடுக்கப்பட்ட பகுதிகளை இணைத்து, வரைபடத்திலிருந்து மறைந்துவிட்ட போலந்து மீண்டும் உருவாக்கப்பட்டது. பால்டிக்குப் பகுதியில் எசுத்தோனியா, இலாக்டிவியா, இலிதுவேனியா, பின்லாந்து ஆகிய புதிய நாடுகள் உருவாக்கப்பட்டன. ஆசுத்திரியாவின் பரப்பளவைக் குறைத்து அது தனிக் குடியரசாக அறிவிக்கப்பட்டது. ஆசுத்திரியாவினின்று அங்கேரி பிரிக்கப்பட்டுத் தனிகுடியரசாக அறிவிக்கப்பட்டது. செக்கோசுலோவாக்கியா, யுகோசுலோவியா ஆகிய குடியரசுகள் தோற்றுவிக்கப்பட்டன. ஆசுத்திரியா, உருசியா, பல்கேரியா ஆகிய நாடுகளிலிருந்து எடுக்கப்பட்ட பகுதிகளைச் சேர்த்து உருமேனியாவின் பரப்பு அதிகரிக்கப் பட்டது. துருக்கியின் பரப்பளவு குறைக்கப்பட்ட போதிலும், கான்சுடாண்டிநோபிள் அதனிடமே ஒப் படைக்கப்பட்டது. ஏராளமான உயிர்ச் சேதமும் பொருட் சேதமும் ஏற்பட்டன. செருமனி, உருசியா ஆசுத்திரியா, துருக்கி ஆகிய நாடுகளில் முடியாட்சி முறை ஒழிக்கப்பட்டது. இப்போரின் காரணமாக வலிமை வாய்ந்த ஒரு புரட்சி உருசியாவில் வெடித்தது. எதிர்காலப் போரைத் தடுக்கவும் உலக அமைதியைக் காக்கவும் சருவதேச சங்கம் ஒன்று அமைக்கப் பெற்றது.

குறைபாடுகள்: இப்போரினால் பல வல்லரசு நாடுகளில் வளம் குன்றியது. எடுத்துக்காட்டாக, பிரிட்டனுக்கு 12.7 விழுக்காடும், பிரான்சுக்கு 25 விழுக்காடும், இத்தாலிக்கு 20 விழுக்காடும், செருமனிக்கு 26 விழுக்காடும் தத்தம் நாட்டுச் செல்வம் குன்றியதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. அதேநேரத்தில், இப்போரின் விளைவாக அமெரிக்க ஐக்கிய நாடு மிக வலிமைபெற்ற வல்லரசானது.

செருமனியோடு செய்துகொணட பாரபட்சமான வெர்சே உடன்படிக்கை செருமனியை ஆத்திரமூட்டச் செய்தது. செருமனிக்குச் சொந்தமான நிலப்பகுதிகளும் குடியேற்றப் பகுதிகளும் பிடுங்கப்பட்டன. வெற்றி பெற்ற நாடுகளுக்கு நிறைய நட்டஈடு தர வேண்டியதாகியது. செருமனியின் அனைத்து உரிமைகளும் பறிக்கப்பட்டன. செருமனியின் படைப்பலம் குறைக்கப்பட்டது. அந்நாடு எட்டில் ஒரு பங்கு பரப்பளவையும், பத்தில் ஒரு பங்கு மக்கள் தொகையையும் இழந்தது. மூன்றில் இரண்டு பங்கு இரும்புச் சுரங்கத்தையும், நிலக்கரிச் சுரங்கத்தில் பாதியையும், நான்கில் மூன்று பங்கு துத்தநாகச் சுரங்கங்களையும், ஈயக் கனிவளத்தில் பாதியையும் அயல் நாடுகளில் முதலீடு செய்து வைத்த அனைத்துத் தொகையையும் செருமனி இழந்துவிட்டது.

படைக்குறைப்பு என்னும் கொள்கை தோற்றுவிட்ட நாடுகளில் செயற்படுத்தப்பட்டதே தவிர, வென்ற நாடுகளில் இல்லை. இப்போருக்குப்பின் விளைந்த அனைத்து உடன்படிக்கைகளும் குறிப்பாக, 'வெர்சே உடன்படிக்கை' பாரபட்சமாக அமைந்த காரணத்தால் சருவதேசச்சங்கத்தால் உலக அமைதியைப் பாதுகாக்க இயலவில்லை. எனவேதான் உடன்படிக்கையின் குறைபாடுகள் கொழுந்துவிட்டு எரிந்து, இரண்டாம் உலகப் பெரும்போருக்கு ஊது குழல்களாக அமைந்துவிட்டன. பொன்.சு.

இரண்டாம்: (1939-1945) காரணங்கள்: செருமனியின் பாதிப்பு: வெர்சே உடன்படிக்கையின் விளைவாகச் செருமனி பல பகுதிகளை இழந்தது. அது இரண்டாகப் பிரிக்கப்பட்டது. குடியேற்றங்கள் முழுமையாக அதன் பிடியிலிருந்து அகற்றப்பட்டன. இக்காரணங்களால் அதன் பொருளாதாரம் பாதிக்கப்பட்டது. அதன் ஆயுதத் தளவாடங்கள் குறைக்கப்பட்டன. செருமனியே போர் தொடங்கியது என்பதால் அது நேச நாடுகளுக்கு நட்ட ஈடு வழங்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டது.

பொருளாதாரக் காரணங்கள்: வல்லமை பொருந்திய தன் புதிய கடற்படையின் மூலம் 'வியத்தகு தொழில் வளர்ச்சியைப் பெற்ற சப்பான் (Japan), தன் உற்பத்திப் பொருள்களை ஏனைய பிற நாடுகளில் விற்று வளம் காண ஏகாதிபத்தியக் கொள்கையினைக் கடைப்பிடிக்க முனைந்தது. அவ்வாறே இத்தாலியும் குடியேற்ற மேலாண்மை வெறியால், குடியேற்ற நாடுகளைக் கொள்ளையிட முனைந்தது.

சப்பானின் போர் வேட்கையால் ஏனைய ஆசிய நாடுகள் பெருந் துயரத்திற்கு ஆளாயின. சப்பான் 1931-இல் மஞ்சூரியாவைக் (Manchuria) கைப்பற்றி, 1937-இல் சீனா மீது படையெடுத்து அதன் பல்வேறு நகரங்களைத் தன்னாட்சியின்கீழ்க் கொணர்ந்தது.


**இத்தாலியின் ஆக்கிரமிப்புகள்:** இத்தாலியில் பாசிச ஆட்சி முறையினை (Fascism) ஏற்படுத்திய பின்னர், சருவாதிகாரி முசோலினி (Mussolini) மத்தியதரைக் கடற்பகுதியை இத்தாலியின் மேலாதிக்கத்தின்கீழ்க் கொணர முனைந்தார். அவர் 1936-இல் ஆப்பிரிக்காவில் உள்ள அபிசீனியாவையும் (இன்றைய எத்தியோப்பியா) 1939-இல் அல்பேனியாவையும் (Albania) வென்றார்.

**ஐரோப்பிய மக்களாட்சி நாடுகள்:** முதல் உலகப் போருக்குப் பின்னர், இங்கிலாந்து ஐரோப்பியச் சிக்கலில் தலையிடாது தனி வணிக மேலாதிக்கத்தில் மட்டுமே நாட்டம் கொண்டிருந்தது. பிரான்சுடன் உறவினைச் சீரமைத்துக் கொள்ள அந்நாடு விரும்பவில்லை. செருமனி தன்மீது படையெடுத்தால் தான் தோல்வியைத் தழுவ நேரிடும் என்பதை நன்குணர்ந்த பிரான்சு, அமெரிக்கா மற்றும் இங்கிலாந்தின் இராணுவ உதவியினை நாடியபோது உதவி மறுக்கப்பட்டது. அதன் பின்னர், பிரான்சு தன் நிலையினை வலுப்படுத்திக் கொள்ளும் நோக்குடன் செக்கோசுலோவாக்கியா (Czechoslovakia), பெல்சியம் (Belgium), போலந்து மற்றும் பல சின்னஞ்சிறிய நாடுகளுடன் போர் உடன்படிக்கையினை ஏற்படுத்திக் கொண்டது.

**அச்சுநாடுகளின் அணி:** செருமனி 1936-இல் சப்பானுடன் 'பொதுவுடைமைஎதிர்ப்புஒப்பந்த'த்தை (Anti-Comintern Pact) ஏற்படுத்திக்கொண்டது. இந்நாடுகள் சோவியத்து உருசியாவின் மேலாதிக்கம் ஐரோப்பா மற்றும் ஆசிய நாடுகளில் வளர்ந்து, பொதுவுடைமைக் கருத்துகள் பரவத் தொடங்கினால் அதனை முறியடிக்கும் நோக்குடன் ஓரணியில் இயங்கிட முடிவு செய்தன. இவ்விரண்டு நாடுகளுடன் 1937-இல் இதே நோக்குடன் இத்தாலியும் இணைந்து கொள்ள, 'உரோம்-பெர்லின்-தோக்கியோ அச்சு' (Rome-Berlin-Tokyo Axis) என்னும் அமைப்பு உருவாயிற்று. இம்மூன்று நாடுகளின் போர் வேட்கையும், உலகாளும் குடியேற்ற மேலாண்மை உணர்வும் போர் மூளுவதற்குரிய காரணங்களாகும்.

**சருவதேசச்சங்கத்தின் வலுவற்ற தன்மை:** முதல் உலகப் போருக்குப் பின்னர், எதிர்காலத்தில் அமைதியை நிலைநாட்டச் சருவதேசச்சங்கம் ஏற்படுத்தப்பட்டது. இச்சங்கத்தின் தோற்றத்திற்குப் பெரிதும் பங்காற்றிய அமெரிக்க ஐக்கிய நாடு, பின்னர்ச் செயற்பாட்டில் முனைந்தபோது, பங்கு பெறாது அமெரிக்கச் சட்டமன்றங்கள் தடை செய்தன. இச்சங்கத்தின் விதிமுறைகளை மீறி அமைதியைக் குலைக்கும் நாடுகளைத் தண்டிக்கத் தனக்கெனச் சக்தி மிக்க படையேதும் இச்சங்கத்திடம் இல்லை. எனவே, அமைதி காக்கும் பணியினைத் திறம்படச் செய்திட இதனால் இயலவில்லை. மஞ்சூரியாவைச் சப்பான் தாக்கியபோதும் அபிசீனியாவை முசோலினி ஆக்கிரமித்த போதும் இட்லரின் (Hitler) போர் வெறியினைக் கண்டிக்கத் தவறியதும் சங்கத்தின் வலுவிழந்த நிலைக்கு நல்ல சான்றுகளாகும். சருவதேசச் சங்கம் வலுப்பெற்று இருந்தபோது, 1933-இல் செருமனி அதிலிருந்து விலகிக் கொண்டது. இதனைத் தொடர்ந்து அதே ஆண்டில் சப்பானும், 1937-இல் இத்தாலியும் விலகிக் கொண்டன.

**போருக்கான உடனடிக் காரணம்:** இட்லர் 1938-இல் ஆசுத்திரியாவைச் செருமனியுடன் இணைத்துக் கொண்டார். பின்னர், செக்கோசுலோவாகியாவின் (Czechoslovakia) ஒருபகுதியான சுடேட்டன்லாந்தைக் (Sudetanland) கைப்பற்றிக் கொண்டபோது, இங்கிலாந்தின் தலைமை அமைச்சர் நெவில் சேம்பர்லேன் (Naville Chamberlain) இதில் தலையிட்டு மியூனிச்சு ஒப்பந்தம் (Munich pact, 1938) செய்து கொண்டார். இதன்படி சுடேட்டன்லாந்தை நிருவகிக்கும் பொறுப்பினை இங்கிலாந்திற்குச் செருமனி விட்டுக்




சப்பான் ஆதிக்க விரிவு

கொடுத்தது. ஆனால், பின்னர் இட்லர் இவ்வுடன் படிக்கையினை மீறி, 1939-இல் செக்கோசுலோவாக்கியா முழுவதையும் கைப்பற்றிக் கொண்டார். போலந்தின் ஆதிக்கத்திலிருந்த தான்சிகுத் (Danzig) துறைமுகத்தைச் செருமனி தானமாகக் கேட்டதற்குப் போலந்து உடன்படவில்லை. எனவே, இட்லர் போலந்தைத் தாக்கினார். போலந்தின் நட்பு நாடுகளான இங்கிலாந்தும் பிரான்சும் செருமனிமீது தாக்குதல் தொடுக்கவே, இரண்டாம் உலகப் போர் 1939 செப்டம்பர் 3-ஆம் நாள் தொடங்கியது.

இட்லர் புதிய முறையில் பிளிட்சுகிரிகு (Blitzkrieg) என்னும் மின்னல் வேகத் தாக்குதலைத் தொடுத்து, வார்சாவைக் (Warsaw) கடும் குண்டு வீச்சிற்கு ஆளாக்கினார். ஐந்து வாரத்தில் கடும் சேதமுற்ற போலந்து 1939 அக்டோபர் 4-ஆம் நாள் பணிந்து விட்டது. அதேநேரத்தில் உருசியா 1937, செப்டம்பர் 17-ஆம் நாள் கிழக்குப் போலந்தைத் தாக்கி, கர்சான் எல்லைக்கப்பால் உள்ள பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டது. மேலும், உருசியா இலிதுவேனியா, எசுத்தோனியா, இலாட்வியா போன்ற பால்டிக்குக் கடல் நாடுகளையும் ஆக்கிரமித்துக் கொண்டது. இட்லர் 1940 ஏப்பிரலில் தென்மார்க்கையும் (Denmark), அட்லாண்டிக்குக் கடலில் மேலாதிக்கம் செலுத்த வசதியாக நார்வே (Norway) நாட்டினையும் கைப்பற்றிக் கொண்டார். இப்போர்களில் நடுநிலை வகிப்பதாக அறிவித்திருந்த ஆலந்து (Holland), பெல்சியம் (Belgium) ஆகியவற்றை இட்லர் 1940 ஏப்பிரல் 10-ஆம் நாள் தம் வசப்படுத்திக் கொண்டார்.

இட்லர் பிரான்சைத் தாக்கி ஆமியன்சு (Amiens) நகரைக் கவர்ந்து கொண்டார். அப்போது பிரான்சின் தென்கிழக்குப் பகுதியை முசோலினியும் தாக்கவே, 1940-இல் பிரான்சு வீழ்ந்தது. அதே ஆண்டில் இட்லர் இங்கிலாந்தை வீழ்த்தும் நோக்குடன் போர் விமானங்களைப் பெருமளவில் அனுப்பி, ஆயிரக்கணக்கான குண்டுகளை வீசி, இங்கிலாந்தைப் பேரழிவிற்கு ஆளாக்கினார். சர்ச்சில் (Churchill) தலைமையில் ஆங்கிலேயர்கள் எதிர்த் தாக்குதலைத் தொடுத்தனர். முசோலினி சோமாலிலாந்தைக் (Somaliland) கைப்பற்றிக் கொண்டார். ஆனால், ஆங்கிலேயர்கள் விழிப்போடிருந்து வேவல் (Wavell) தலைமையில் எரிட்ரியா, சோமாலிலாந்து ஆகியவற்றைக் கைப்பற்றி, அங்கிருந்த இத்தாலியரை விரட்டி அடித்தனர். அப்போது போரின் அச்சுறுத்தல்களை நன்கு கவனத்துடன் ஆய்ந்து கொண்டிருந்த அமெரிக்கா, 1941 மார்ச்சத் திங்களில் அமெரிக்கன் காங்கிரசைக் (American Congress) கூட்டி, அக்கூட்ட முடிவில் அச்சு நாடுகளுக்கு எதிராகப் போரில் ஈடுபட்டிருந்த நேச நாடுகளுக்கு உதவ முடிவு செய்தது.

இட்லர் 1939-இல் செய்துகொண்ட உருசியா, செருமனி நாடுகளுக்கிடையிலான ஒப்பந்தத்தை மீறி, 1941 சூன் திங்களில் உருசியா மீது போர் தொடுத்தார். அவ்வேளையில் அமெரிக்கா இட்லருக்கெதிராக அனைத்துப் போர்த் தளவாடங்களையும், புத்துலக ஆயுதங்களையும் உருசியாவிற்கும் இங்கிலாந்திற்கும் அனுப்பி உதவியது. இலெனின்கிராடில் நடைபெற்ற கடும் போருக்குப் பின்னர்ச் செருமானியினர் மாபெரும் தோல்வியுற்றனர்.



பெர்ல் துறைமுகத்தில் அழிக்கப்பட்ட அமெரிக்கக் கப்பல் ஆரிசோனா

சப்பான் 1941 திசம்பர் 7-ஆம் நாள் பசிபிக்குப் பெருங்கடலில் அவாய்த் தீவுகளைச் சார்ந்த பெர்ல் துறைமுகத்தைத் (Pearl Harbour) தாக்கி, அங்கிருந்த அமெரிக்கக் கடற்படையைக் குண்டுவீசித் தகர்த்து, ஏறத்தாழ ஏழு போர்க் கப்பல்களையும் 150 போர் விமானங்களையும் அழித்தது. இப்போரில் 2,400 வீரர்கள் உயிரிழந்தனர். இதைத் தொடர்ந்து, அமெரிக்கா அச்சு நாடுகளுக்கு எதிராகப் போரில் இறங்கியது. அமெரிக்காவின் குடியரசுத் தலைவர் பிராங்கிளின் உரூசுவெல்ட்டு (Roosevelt), ஐசனோவர் (Eisenhower) தலைமையில் ஐரோப்பாவில் போர் தொடங்கிடப் பெரும் படையொன்றினை அனுப்பி வைத்தார். மெக் ஆர்தர் (Mac Arthur) தலைமையில் பசிபிக்குப் பெருங்கடல் போர்ப்பகுதிக்கு வலிமை வாய்ந்த மற்று

மொரு படையும் புறப்பட்டது. தென்கிழக்கு ஆசியாவில் போரிடும் பணிகளை மவுண்ட்பேட்டன் பிரபு **(Lord Mountbatten)** ஏற்றுக்கொண்டார்.

மவுண்ட்பேட்டன் பிரபு சப்பானியர்களைப் பர்மாவிலிருந்து விரட்டி அடித்தார். மெக் ஆர்தர் பிலிப்பைன்சுத் தீவுகளைக் கவர்ந்து கொண்டார். ஆப்பிரிக்காவில் 1941-1943 ஆண்டுகளுக்கிடையில் இடைவிடாது கடும்போர் நடைபெற்றது. அமெரிக்கா அபிசீனியாவையும், இந்தாலி சோமாலிலாந்தையும் வெற்றிகொண்டன. இங்கிலாந்து இலிபியாவில் **(Libya)** இருந்து பென்காசி **(Benghazi)** வரை முன்னேறியது. மாண்ட்கோமரி **(General Montgomeri)** தலைமையில் அமெரிக்கா இலிபியாவிலிருந்து செருமானியர்களையும் இத்தாலியர்களையும் விரட்டி அடித்தது.

பின்னர், மாண்ட்கோமரி திரிப்போலியைக் **(Tripoli)** கைப்பற்றிக்கொண்டு துனீசியா **(Tunisia)** வரை முன்னேறினார். கிரேக்கக் கடலில் இத்தாலியக் கப்பற்படையைப் பிரிட்டன் தோற்கடித்தது. அமெரிக்க-பிரிட்டன் கூட்டுப் படையொன்று 1942 நவம்பரில் பிரெஞ்சுக் குடியேற்ற நாடான அல்சீரியாவைத் தாக்கிக் கைப்பற்றிக் கொண்டது. வட ஆப்பிரிக்கா முழுவதையும் 1943 நவம்பரில் அமெரிக்கா-ஆங்கிலக் கூட்டுப் படை கைப்பற்றிக்கொண்டது. அதே ஆண்டில் அமெரிக்காவும் பிரிட்டனும் இணைந்து



இட்லரின் செருமானியப் படைகள் பாரிசுநகரத்தினுள் நுழைதல்



சிசிலித் தீவினைக் (Sicily) கவர்ந்து கொண்டன. இத்தாலி 1943 அக்டோபரில் சரணடைந்தது. இத்தாலியில் மக்கள் புரட்சி வெடித்தது. முசோலினி 1945-இல் தப்பியோடியபோது கைது செய்யப்பட்டுச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அமெரிக்க-பிரிட்டன் கூட்டுப் படைகள் 1944 சூனில் பிரான்சை விடுவிக்க முயன்று வெற்றி பெற்றன. பல்வேறு போர்முனைகளில் செருமனி முதன் முறையாகத் தோல்வியைத் தழுவியது. அமெரிக்கா மேற்கிலிருந்தும், உருசியா கிழக்கிலிருந்தும் செருமனியைத் தாக்கின. உருசியா, அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளின் முத்தரப்பு உச்சி மாநாடுகள் மாசுக்கோவிலும் (Moscow) தெக்ரானிலும் (Tehran) கூடின. வின்சுடன் சர்ச்சில் (Winston Churchill), பிராங்கிளின் உரூசுவெல்ட்டு (Franklin Roosevelt), சோசப் இசுட்டாலின் (Joseph Stalin) ஆகிய முப்பெருந் தலைவர்கள் கிழக்கு, மேற்கு, தெற்கு ஆகிய பகுதிகளிலிருந்து தங்கள் போர் முனை நடவடிக்கைகளை ஒருமுகப்படுத்திச் செருமனியைத் தகர்த்துவிட நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இதன்பின்னர், 1944 பிப்பிரவரி 3-ஆம் நாள் கொர்சுன் காப்ரன் பகுதியில் முகாமிட்டிருந்த செருமானிய வீரர்கள் சுற்றி வளைக்கப்பட்டு அழிக்கப்பட்டனர். இப்போரில் செருமனி 55,000 படைவீரர்களையும், 500 விசைப்பீரங்கி வண்டிகளையும் (Tanks), 300க்கும் மேற்பட்ட போர் விமானங்களையும் இழந்தது. ஏறத்தாழ 18,000 பேர் கைதிகளாயினர்.

அல்பேனியா, பெல்சியம், பல்கேரியா, கிரீசு, உருமேனியா, போலந்து, பிரான்சு, செக்கோசுலோவாகியா, யூகோசுலாவியா ஆகிய நாடுகளில் 1945-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் விடுதலை வேட்கையால் மக்கள் புரட்சியில் ஈடுபட்டனர். உருசியாவின் பெரும் படையொன்று 1945-ஏப்பிரல் 20-ஆம் நாள் பெர்லின் நகரின் கிழக்கிலிருந்து தாக்கத் தொடங்கியது. போர்கன், இரியாசா நகரங்களிலிருந்த அமெரிக்கப் படைகள் உருசியாவின் நீண்ட படைப் பிரிவுகளுடன் இணைந்து கொண்டன. அப்போது சிச்வெரின், உரோசுடாக்கு நகரங்களுக்கிடையில் முகாமிட்டிருந்த உருசியப்-பிரிட்டன் படைகள்ஒன்றாக இணைந்து கொள்ள, மும்முனைத் தாக்குதலின் கொடுமையிலிருந்து மீள வழி தெரியாது செருமனி திகைத்தது. போரில் தோல்வியைத் தழுவிய இட்லர் தற்கொலை செய்து கொண்டார். உருசியாவின் 756-ஆம் படைப்பிரிவு இட்லரின் தலைமையகமான இரிசுடாக்குக் கட்டிடத்தைத் தகர்த்தது. எஞ்சியிருந்த ஏறத்தாழ 1,34,000 செருமானியர் 1945 மே 2-ஆம் நாள் பணிந்தனர். பெர்லின் போரில் மட்டும் உருசியர்கள் ஏறத்தாழ

4,80,000 செருமானியர்களைக் கைது செய்தனர். செருமனியின் கட்டுப்பாடற்ற பணிதல் ஒப்பந்தம் 1945 மே மாதம் கையெழுத்தானது. அதன் பின்னர்ப் போர் ஓய்ந்தது.

யால்டா உச்சி மாநாட்டின் முடிவிற்கிணங்க (Yalta Conference) உருசியா சப்பான் மீது ஆக சுட்டு 9-ஆம் நாள் போர் செய்ய முடிவு செய்தது. இதற்கு முன்னர், ஆகசுட்டு 6-ஆம் நாள் அமெரிக்கா இரோசிமா (Hiroshima) மீதும், ஆகசுட்டு 9-ஆம் நாள் நாகசாகி (Nagasaki) மீதும் அணுக்குண்டுகளை வீசியது. இதன் காரணமாக இரோசிமாவில் ஏறத்தாழ 3,60,000 மக்களும் நாகசாகியில் ஏறத்தாழ 1,37,000 மக்களும் கொல்லப்பட்டனர். அதே நேரத்தில் உருசியா மார்சல் ஏ.எம். வாசிலேசுகி தலைமையில் சப்பானியப் படைப்பிரிவைத் தாக்கி அழித்தது. தான் அழிவின் எல்லைக்குச் சென்று விட்டதை உணர்ந்த சப்பான் ஆகசுட்டு 14-ஆம் நாள் பணிந்தது. இப்பெரும் போரில் ஏறத்தாழ 6,00,000 சப்பானியப் படைவீரர்களை உருசியா சிறைப்படுத்தியது. அதன் பின்னர், சப்பான் நிபந்தனையற்ற முறையில் பணியக்கோரும் ஆவணத்தில் செப்டம்பர் 2-ஆம் நாள் தோக்கியோ விரிகுடாவில் நங்கூரமிட்டிருந்த மிசிரி என்னும் போர்க்கப்பலில் கையெழுத்திட்டது. இத்துடன் இரண்டாம் உலகப்போர் முடிவடைந்தது.

போரின் விளைவுகள்: இரண்டாம் உலகப் போரில் எழுபது நாடுகளைச் சார்ந்த சற்றேறக்குறைய ஐந்து கோடி மக்கள் உயிர்துறந்தனர். $1\frac{1}{2}$ கோடி உருசியர்கள், 60 இலட்சம் சுவிடீயர்கள் (Swedes), 37,00,000 செருமானியர்கள், 20 இலட்சம் போலந்து நாட்டவர்கள், 16 இலட்சம் யூகோசுலோவியர்கள், 12,00,000 சப்பானியர்கள், பத்து இலட்சம் இத்தாலியர்கள், 6,00,000 ஆங்கிலேயர்கள், 5,00,000 உருமேனியர்கள், 3,00,000 பிரெஞ்சுக்காரர்கள், 2,92,000 அமெரிக்கர்கள் மற்றும் 220 இலட்சம் சீனர்கள் போன்றோர் இறந்தவர்களுள் அடங்குவர். போர் முடிவில் ஐரோப்பாவில் மட்டும் 130 இலட்சம் படைவீரர்களும், ஏறத்தாழ 170 இலட்சம் பொது மக்களும் கொல்லப்பட்டனர். உலகம் முழுவதும் தகவல் தொடர்புகள் பெரும்பாலும் துண்டிக்கப்பட்டன. இப்போரின்போது, அதாவது 1939-ஆம் ஆண்டிலிருந்து 1945 வரை $2\frac{1}{4}$ கோடி ச.கி.மீ. பரப்பளவில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளால் பெரும்பாலான உலக மக்கள் துன்பக் கடலில் மூழ்கினர்.

பாசிச ஆட்சியாளர்கள் கட்டவிழ்த்து விட்ட உலகப் போரினால் உருசியா ஏறத்தாழ 1700 நகரங்களையும் 70,000 கிராமங்களையும் இழந்தது. பிரான்சில் ஏறத்தாழ 10,00,000 வீடுகள் தரைமட்டமாயின. கிரீசில் ஏறக்குறைய 400 சிற்றூர்கள் உருக்குலைந்தன. யூகோசுலாவியாவில் மொத்தக் கால்நடைகளில் மூன்றிலொரு பங்கு மடிந்தன.



அழிந்த செருமானிய நகரத்தை இட்லர் பார்வையிடுதல்


செருமனியில் நாசிச ஆட்சியும் இத்தாலியில் பாசிச ஆட்சியும் முடிவடைந்தன. செருமனி இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. மேற்குச் செருமனி நேச நாடுகளின் உறுப்பினர்களான அமெரிக்கா ஐக்கிய நாடு, இங்கிலாந்து, பிரான்சு ஆகிய நாடுகளின் மேற்பார்வையில் விடப்பட்டது. கிழக்குச் செருமனி உருசியாவின் மேலாதிக்கத்திற்கு உட்பட்டது. நாடு இரு பிரிவாகப் பிரிக்கப்பட்டதன் அடிப்படையில் பெர்லின் மாநகரமும் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. இத்தாலியில் குடியாட்சி முறை நடைமுறைக்கு வந்தது. இத்தாலி தன் ஆப்பிரிக்கக் குடியேற்றங்களை இழந்தது. காலப்போக்கில் ஐரோப்பிய நாடுகள் தம் குடியேற்ற நாடுகளுக்கு விடுதலை வழங்கின. இந்தியா, சிங்கப்பூர், பர்மா, இலங்கை, கொரியா முதலானவை போருக்குப் பின்னர் விடுதலை பெற்றன.

இங்கிலாந்தில் 1945-இல் நடைபெற்ற தேர்தலில் வென்று, அட்லியின் (Atlee) தலைமையின்கீழ்த் தொழிற்கட்சி (Labour Party) பதவியைக் கைப்பற்றியது. அக்கட்சி ஏகாதிபத்திய, குடியேற்றக் கொள்கைகளைக் கைவிட்டது. இவ்வமைச்சரவை இங்கிலாந்

தின் குடியேற்றங்களுக்கு மட்டுமன்றி, ஏனைய பிற ஐரோப்பிய நாடுகளின் குடியேற்றங்களுக்கும் விடு தலை கிடைத்திட முனைப்புடன் பங்காற்றியது.

வல்லரசுகள் என்ற போர்வையில் இங்கிலாந்தும் பிரான்சும் திகழ்ந்தாலும், உலக அரங்கில் அவை தம் தனித் தன்மையினை இழந்தன. ஆனால், அமெரிக்கா வும் உருசியாவும் வல்லரசு நாடுகளாகத் தம்மைப் பறைசாற்றிக் கொண்டன. சப்பானின் பொருளாதா ரம் பெரிதும் சீர்குலைந்தது. எனினும், சப்பானியரின் வியத்தகு உழைப்பினாலும் அமெரிக்காவின் அர வணைப்பினாலும் அந்நாடு பொருளியலில் தேக்க நிலையினின்றும் மீளத் தொடங்கியது.

உலகில் அமைதியை நிலையாக உருவாக்கவும் நாடுகளிடையே ஒத்த கருத்தினை உருவாக்கவும் சான் பிரான்சிசுகோவில் (San Francisco) 50 நாடுகள் கலந்து கொண்டு, ஐக்கிய நாடுகள் ஒப்பந்த ஆவணத் தில் கையொப்பமிட்டன. இதன் விளைவாக, 1945 அக்டோபர் 24-ஆம் நாள் ஐக்கிய நாடுகள் நிறுவ னம் (United Nations Organisation) தோற்றுவிக்கப் பட்டது.



சான்பிரான்சிசுகோவில் நடந்த ஐக்கியநாடுகள் முதல் கூட்டம்

அமெரிக்க ஐக்கிய நாடு குடியேற்றக் கொள்கை யினைக் கைவிட்டுப் பிலிப்பைன்சுத் தீவுகளுக்குச் சுதந்திரம்வழங்கியது. உருசியாவின் பொதுவுடைமைக் கொள்கை ஏனைய நாடுகளில் பரவாதவாறு தடுக்க, அமெரிக்கா போரில் பாதிக்கப்பட்ட கிரீசு, துருக்கி போன்ற நாடுகளுக்கு ஏறத்தாழ 40 கோடி தாலர் (Dollar) உதவி செய்தது; அதே ஆண்டு அமெரிக்க வெளியுறவுச் செயலர் மார்சல் திட்டத்தின் (Mar shall Plan) மூலம் போரில் நலிவுற்ற பதினான்கு மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு 1400 கோடி தாலர் அந்நாடுகளின் மறுவாழ்வுப் பணிகளுக்காகக் கொடுத்து உதவியது.

வட அட்லாண்டிக்கு ஒப்பந்த நிறுவனம் (NATO) 1949-இல் உருவாக்கப்பட்டது. இதில் அமெரிக்க ஐக்கிய நாடு, கனடா, இத்தாலி, இங்கிலாந்து, பிரான்சு, பெல்சியம், இலக்சம்பர்க்கு, நெதர்லாந்து, தென்மார்க்கு, ஐசுலாந்து, நார்வே, போர்ச்சுகல் ஆகிய 12 நாடுகள் சேர்ந்தன. பின்னர், துருக்கியும் கிரீசும் 1952-இலும், மேற்குச் செருமனி 1964-இலும், இசுபெயின் 1982-இலும் இந்த நிறுவனத்தில் சேர்ந் தன. இதன் தலைமை அலுவலகம் பெல்சியத்திலுள்ள பிரசல்சு (Brussels) என்னும் நகரத்திலுள்ளது. இதன் தலைமைப் பொறுப்பினை அமெரிக்கா ஏற்றுக் கொண்டது.

ஆசிய நாடுகளில் உருசியாவின் பொதுவுடை மைச் செல்வாக்குப் பரவாமல் தடுத்திடத் தென் கிழக்கு ஆசிய நாடுகளின் ஒப்பந்த நிறுவனத்தை (South East Asian Treaty Organisation) அமெரிக்க ஐக்கிய நாடு ஏற்படுத்திக் கொண்டது. சான் பிரான் சிசுகோ அமைதி உடன்படிக்கையில் 1951-இல் சப் பான் கையெழுத்திட்டது. அதன்படி, கொரியாவின் மேலாதிக்க உரிமைகளைச் சப்பான் இழந்தது. ஆமில் டன் துறைமுகம் (Hamilton), கொயில்பார்ட்டு (Quelpart), தாகலெட்டு (Dagelet) ஆகிய பகுதி களுடன், பர்மோசாவையும் (Farmosa) சப்பான் இழக்க நேர்ந்தது. அது சீனாவின் மீதிருந்தஅனைத்து உரிமைகளையும் விட்டுக் கொடுத்தது.

அல்பேனியா (Albania), எத்தியோப்பியா (Ethiyopia) ஆகிய நாடுகளின் சுதந்திர அரசாங்கங் களை இத்தாலி ஏற்றுக் கொண்டது. இத்தாலியின் படைப்பலம் ஏறத்தாழ 2,50,000 படைவீரர்களைக் கொண்டதாகக் குறைக்கப்பட்டது. உருசியாவிற்கு 10 கோடி தாலர்களை (Dollar) நட்ட ஈட்டுத் தொகை யாக அளித்திட இத்தாலி உடன்பட்டது.

போரில் 1943-இலிருந்து சிறப்பாகப் பங்காற்றி யவர்கள் பிராங்ளின் உரூசுவெல்ட்டு, வின்சுடன் சர்ச்சில், இசுட்டாலின் போன்றவர்களே. இவர் களுடன் துருமன் (Truman), அட்லி, சியாங்கே சேக்கு ஆகியோரும் பெரும்பணியாற்றி, போரில் நேச நாடுகளின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்தனர். போரில் இந்தியாவின் பங்கு கணிசமாகவே இருந்தது

போரில் இந்தியாவின் படைவீரர்கள் ஆசியப் போர் முனைகளில் நேச நாடுகளின் வெற்றிக்கு உறுதுணையாகப் போராடியதால் இறுதியில் இந்தியச் சுதந்திரத்திற்கு வழி பிறந்தது.

பாசிசுட்டுப் படையெடுப்பாளர்கள் 1941 சூன் 22-ஆம் நாள் முதல் 1945 மே 9-ஆம் நாள் வரை உருசியாவில் 1418 நாட்கள் போரிட்டுப் பெருத்த சேதத்தை விளைவித்துள்ளார்கள். போரின் போது 31,850 தொழில் துறைத் திட்ட நிலையங்கள், 98,000 கூட்டுப் பண்ணைகள், 1876 அரசுப் பண்ணைகள், 40,000 மருத்துவமனைகள், 84,000 நடுநிலைத் தொழிற்பயிற்சிப் பள்ளிகள், 43,000 நூலகங்கள், 60,00,000 கட்டடங்கள், 4100 இருப்புப்பாதை நிலையங்கள், 65,000 கி.மீ. நீள்முள்ள இருப்புப்பாதை வழிகள், 13,000 பாலங்கள் போன்றவற்றை தகர்த்து அழித்தனர். 1 கோடி 70 இலட்சம் கால்நடைகள், 2 கோடி பன்றிகள், 70 இலட்சம் குதிரைகள், 2 கோடி 70 இலட்சம் ஆடுகள் போன்ற வீட்டுவிலங்குகளைக் கொன்று குவித்தனர்.

உருசியா இழந்த சொத்துகளின் மொத்த மதிப்பு 1941-ஆம் ஆண்டின் மதிப்பின் படி, 67,900 கோடி உரூபிள்களாகும். பாசிச ஆட்சியினர் ஆக்கிரமிப்புப் பகுதிகளில் ஏற்பட்ட போர்ச் செலவினங்களையும் சேர்த்துக் கொண்டால் போரின் மொத்த இழப்பு உருசியாவிற்கு மட்டும் ஏறத்தாழ 2,56,940 கோடி உரூபிள்களாகும்.

தென்கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் பொருளாதார நெருக்கடி காரணமாகப் பொதுவுடைமை ஆதிக்கத்திற்கு ஏற்ற சூழ்நிலை உருவாகியது. இதன் காரணமாக ஐரோப்பாவின் பாதிப்பகுதிகள் உருசிய மேலாதிக்கத்தின்கீழ் வந்தன. ஆசியாவில் மஞ்சூரியாவும் வடகொரியாவும் உருசிய இராணுவக் கட்டுப்பாட்டின்கீழ் வந்தன. அணுக்குண்டுகள், மிக நுண்ணிய அணுக்கருவிகள் ஆராய்ச்சி மற்றும் உற்பத்தியில் அமெரிக்காவிற்கு இணையான முறையில் உருசியா பெரிதும் முன்னேறிவிட்டது. இசுடாலின் 1953-இல் இறந்த பின்பு, உருசியக் குடியரசின் தலைவரான புல்கானின் (Bulganin) நாடுகளிடையே அமைதியான ஒற்றுமையின் சிறப்பினை உணர்ந்து செயற்பட்டார்.

அங்கேரி போர் நட்ட ஈட்டுத் தொகையாக உருசியாவிற்கு 20 கோடி தாலர்களையும், செக்கசுலோவாக்கியா மற்றும் யூகோசுலாவியா ஆகிய நாடுகள் ஒவ்வொன்றிற்கும் 5 கோடி தாலர்களையும் அளித்தது. அங்கேரி வசமிருந்த திரான்சில்வேனியப் (Transylvenia) பகுதிகள் உருமேனியாவிற்கு அளிக்கப்பட்டன.

பல்கேரியாவின் படைப்பிரிவுகள் பெருமளவில் குறைக்கப்பட்டன. கிரீசுக்குப்போர் நட்ட ஈட்டுத் தொகையாக ஏறத்தாழ 4½ கோடி தாலர்களையும் யூகோசுலாவியாவிற்கு ஏறத்தாழ 2½ கோடி தாலர்களையும் அது அளித்தது.

உருமேனியா உருசியாவிற்கு ஏறத்தாழ 30 கோடி தாலர்களைப் பேர்ர் இழப்பீட்டுத் தொகையாக வழங்கியது. ஆசுத்திரியாவும் வியன்னாவும் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, ஆசுத்திரியாவில் தேசிய அரசாங்கம் 1945-இல் உருவாக்கப்பட்டது.

அமெரிக்கா 1949-இல் ஏற்படுத்திக் கொண்ட வட-அட்லாண்டிக்கு ஒப்பந்தத்திற்கு இணையாகவும் எதிராகவும் உருசியா கிழக்கு ஐரோப்பிய நாடுகளுடன், 'வார்சா ஒப்பந்தத்தினை' (The Warsaw Pact) ஏற்படுத்திக் கொண்டது. இதுவும் முழுமையான ஓர் இராணுவ உடன்படிக்கையேயாகும். இவ்வமைப்பில் கிழக்குச் செருமனி, போலந்து, உருமேனியா, அங்கேரி ஆகிய நாடுகள் உருசியாவின் தலைமையினை ஏற்றுச் செயற்படத் தொடங்கின. இவ்வாறு இரண்டாம் உலகப் போர் முடிவுற்ற போதிலும், அதன் பின்விளைவுகள் இன்றும் தொடர்ந்து உலக மக்களைப் பல்வேறு வழிகளில் பாதிப்புகளை உண்டாக்கி வருவது மறுக்கவியலாத வரலாற்று உண்மையாகும். எம்.தே.

**துணை நூல்கள்:**

**Chabra, H.K.**, Relations of Nations From 1914 to Present Times, Surjeet Publications, New Delhi, 1914.

**Sellman, R.R.**, The Second World War, Mathuen, 1981.

**உலகம்** என்பது பொதுப் பொருளில் 'பிரபஞ்சம்' மற்றும் அதன்கண் உள்ள உயிருள்ள, உயிரற்ற அனைத்துப் பொருள்களையும் குறிக்கும். இப்பொருளில் இது வான்வெளி, அண்டங்கள், கோளங்கள், விண் மீன்கள் முதலியவை அடங்கிய அனைத்துப் படைப்புகளையும் குறிக்கும்.

உலகம் என்பது வேறு சில பொருள்களிலும் வழங்கப்படுகிறது. ஒவ்வொருவருக்கென்றும் ஒரு தனி உலகம் உண்டு என்று சொல்வதுண்டு. இங்கு உலகம் என்பது ஒருவனுடைய சூழ்நிலையைக் குறிக்கும். குழந்தைக்குத் தாயின் மடியே தனியுலகம். அது மிகச் சிறியது. வயது செல்லச் செல்லக் குழந்தையின்

உலகம் வளர்கிறது. இப்பொருளில் உலகத்தின் அளவு அவரவர் அறிவு வளர்ச்சியையும் வாழ்க்கையையும் பொறுத்து அமைகிறது.

உலகம் வேறொரு பொருளில் ஒழுக்கத்திலும் பண்பிலும் சிறந்த சான்றோர்களைக் குறிக்கும். 'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே' என்னும் தொடர் இதனைச் சுட்டுகிறது. இச்சொல் உலக வழக்கினையும் குறிப்பிடும்.

மேலும், இலக்கியம், கலை போன்ற இயக்கங் களைக் குறிப்பிடும் பொழுது உலகம் என்ற சொல் அவற்றோடு இணைந்து வருவதுமுண்டு. இலக்கிய உலகம், அரசியல் உலகம், கலையுலகம், மாணவர் உலகம் முதலியன இவ்வாறே வழங்கப்படுகின்றன.

உலகம் பலவகைப்படும் என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. ஐத்தரேய உபநிடதம் மூன்று உலகங்களைச் சுட்டுகின்றது. அவை: நீரும் அதன் மேல் உள்ள சொர்க்கமும் அடங்கிய அம்பாசு (Ambas) என்னும் உலகம், வான்வெளியும் ஒளியுலகமு மாகிய மரீசி உலகம், நிலவுலகாகிய மார என்னும் உலகம் என்பன. பிருகத்தாரணீயக உபநிடதம் காற்று, வெளி, காந்தருவ, சூரிய-சந்திர, நட்சத்திர, இறை, இந்திர, பிரசாபதி, பிரம்ம உலகங்கள் என்று ஒன்பது உலகங்களைக் குறிப்பிடுகிறது. தைத்திரீய உபநிடதம் பூ உலகம், புவருலகம், சுவருலகம், மகருலகம், சனருலகம், தவ உலகம், சத்தியவுலகம் என்னும் ஏழுலகங்களைக் கூறுகிறது.

புராணங்கள் தைத்திரீய உபநிடதம் சொல்கிற ஏழுலகங்களை மேலுலகங்களாகவும், அதலம்,விதலம், சுதலம், தராதலம், இரசதலம், மகாதலம், பாதலம் ஆகியவற்றைக் கீழுலகங்களாகவும் கூறி, உலகங்கள் பதினான்கு என்று விரிக்கின்றன.

சைவ சமய நூலாகிய சிவஞான பாடியம் மேற் சொன்ன பதினான்கு உலகங்களைச் சற்று வேறு பாட்டுடன் குறிப்பிடுகிறது. பூவுலகம் என்னும் நிலவுலகுக்குக்கீழ்க் காலாக்கினியுருத்திர உலகும், கூர் மாண்டராச்சியுட்பட்ட 32 நரக உலகுகளும், ஆட கேசுரர் ஆட்சியுட்பட்ட ஆபாசம், பாதாளம், நிதலம் சுபத்திமான, மாதவுலகுகளும் உள்ளனவென்றும், நிலவுலகுக்கு மேல் வாயுமண்டலம், மேகமண்டலம், சந்திர மண்டலம், ஆதித்த மண்டலம் முதல் துருவ மண்டலம் வரை பரவிய புவருலகமும், இந்திரன் முதலி யோர் வாழும் சுவருலகமும், மரீசி முதலிய முனிவர் வாழும் மகருலகமும், தென்புலத்தார் முதலியோர் வைகும் சனருலகமும், சனகன் முதலியோர் வைகும் தவவுலகமும், சத்தியவுலகமும், செங்கண்மாலுலகமும் உருத்திரனுலகமும் முறையே உள்ளன எனக்குறிப்பிடு கிறது.

இராமலிங்க அடிகள் 'உலகெலாம்' எனத் தொடங்கும் பெரிய புராணச் செய்யுள் உரையில் தத்துவங்களைப் பலவாறாகப் பகுத்து, அவற்றை ஒவ்வோர் உலகாக விரித்துக் கூறுகிறார்.

வேதாந்த நூல்கள் உணர்வு நிலைகள் பதினான் கையும் உலகங்களாகக் கூறுகின்றன. சான்றாக, கைவல்லியம் என்னும் நூலில் சந்தேகம் தெளிதல் பகுதியில் சுபேட்சை, விசாரணை, தநுமாநசி, சத்து வாபத்தி, அசம்பத்தி, பதார்த்த பாவனை, துரியம் என ஞான பூமிகள் ஏழென்றும், மீகசாக்கிரம், சாக் கிரம், மகாசாக்கிரம், சாக்கிர சொப்பனம், சொப்ப னம், சொப்பன சாக்கிரம், சுழுத்தி என அஞ்ஞான பூமிகள் ஏழென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அனைத்துப் பொருள்களும் அனைத்துயிர்களும் அடங்கிய உலகத்தின் தோற்றத்தைப் பற்றிப் பல வகைகளில் இலக்கியங்கள் விளக்குகின்றன. உண்மை களுக்கெல்லாம் பேருண்மையாகவும், மையங்களுக் கெல்லாம் நடுவாகவும் உள்ள பிரசாபதி (Parajapati) என்பதிலிருந்து முதலில் பரமேசுதி (Paramesti) என்று சொல்லப்படும் நட்சத்திரக் கூட்டங்களும், அதிலி ருந்து சூரியனும் அதன் முறைகளும், அதிலிருந்து நிலவுலகும், நிலவுலகிலிருந்து சந்திரனும் தோன்றின வென்று வேதங்கள் உலகத்தோற்றம் பற்றி ஐந்து நிலைகளில் விளக்குகின்றன.

பிறிதொரு முறையிலும் உலகத் தோற்றத்தை வேதங்கள் விளக்குகின்றன. ஆதித்தி முதலில் அனைத்து மாகத் திகழ்ந்தது. இது பெண் கோட்பாடு. இதிலி ருந்து தக்சன் என்னும் ஆண் கோட்பாடு எழுகிறது. இரண்டின் இணைப்பால் புருசன் (Purusha) தோன்று கிறது. இது பிரசாபதி அல்லது விசுவகர்மன் எனப் படுகிறது. இதிலிருந்து உலகக்கருவாகிய இரணியகருப் பமும், இரணிய கருப்பத்திலிருந்து பிரமனும் தோன்ற, பிரமா உலகைப் படைக்கிறான்.

அதர்வண வேதம், பிரமனிடத்திலிருந்து உரோகி தம் எனப்படும் உருத்திரனும், அதிலிருந்து ஆண்டவன் எனப்படும் எருதும், அதிலிருந்து காலமும், இறுதியில் காமமாகிய விருப்பமும் தோன்றி உலகமாக மாறு கின்றன என்கிறது.

வேதங்களின் இரண்டாம்பகுதிகளாகிய பிராமண இலக்கியங்களில் பிரசாபதி எண்ணற்ற வேள்விகளைச் செய்து, அனைத்து உலகங்களையும் படைத்ததாகச்

சொல்லப்பட்டுள்ளது. சுயம்பு, நாராயணன், பிரமன், அல்இருப்பு (Non-Being), நீர் முதலியன பிரசாபதிக்கு இணையாகக் கருதப்படுகின்றன.

உபநிடதங்களின் உண்மைப் பொருளாகிய பிரமத்திலிருந்து உலகம் வேறாகக் கருதப்படாமல் ஒன்றாகவே கருதப்படுகிறது. பிரமம் 'நான் பலவாகப் பெருகுவேனாக' என்றெண்ணி, இவ்வுலகமாக மாறியது என உபநிடதங்கள் கூறுகின்றன. தைத்திரீய உபநிடதம் பிரமத்திடமிருந்து முதலில் வானவெளியும், பின்னர்க் காற்று, நெருப்பு, நீர், புவி, உணவு முதலியனவும் ஒன்றிலிருந்து ஒன்றாகப் படிமலர்ச்சி பெற்று வந்தன என்றும், உணவிலிருந்து விதையும் மனிதனும் ஏனைய உயிர்களும் வந்தன என்றும் உரைக்கிறது.

புராணங்களிலும் காப்பியங்களிலும் உலகின் தோற்றம் பின் வருமாறு கூறப்படுகிறது. முதலில் பிரமமும், பின்னர் நீர் அல்லது இருள், இரணியகருப்பம் அல்லது புருடன், பிரசாபதி, தாமரை, பிரமாவின் எண்ணத்தில் தோன்றிய புதல்வர்கள், ஏனைய படைப்புகள் என்று ஒன்றிலிருந்து ஒன்றாக ஏழுநிலைகளில் உலகமாகி நின்றது.

தத்துவ முறைகளில் ஒன்றான உலகாயுதம், கண்ணுக்குப் புலனாகும் நீர், நெருப்பு, காற்று, புவி ஆகியவை பல நிலைகளில் இணைந்து இவ்வுலகமாக மாறியது என்று கூறுகிறது.

சமண, நியாய, வைசேடிகத் தத்துவங்கள் உலகம் அதன் மூலப் பொருள்களான பஞ்சபூதங்கள் எனப்படும் நீர், நெருப்பு, காற்று, வெளி, புவி ஆகியவற்றின் அணுக்கள் தம்முள் இணைந்து காலம், வெளி, மனம், ஆன்மா ஆகியவற்றின் துணையுடன் உலகமாகத் தோன்றியது என்கின்றன.

சாங்கியம் மற்றும் விசிட்டாத்வைதத் தத்துவங்கள் மூலப் பொருளாகிய பிரகிருதி மாயையிலிருந்து முதலில் மகத்து அல்லது புத்தியும், அதிலிருந்து அகங்காரமும், அகங்காரத்தின் ஒரு நிலையாகிய சத்துவ அகங்காரத்திலிருந்து மனம், ஐந்து தொழில் உறுப்புகள் (கன்மேந்திரியங்கள்) ஐந்து புலனுறுப்புகள் (ஞானேந்திரியங்கள்) முதலியனவும்; தாமச அகங்காரத்திலிருந்து ஐந்து தன்மாத்திரைகளும், அவை நான்கு நிலைகளில் ஒன்றுடன் ஏனையவை இணைவதால் ஐம்பெரும் பூதங்களும்; இராசச அகங்காரத்திலிருந்து செயற் கோட்பாடும் தோன்றுகின்றன என்றும், இறுதியில் ஐம்பெரும் பூதங்கள் ஒன்றுடன் ஒன்று கலந்து உலகமாக மாறுகின்றன என்றும் தெரிவிக்கின்றன.

சைவ சமயத் தத்துவம் மூலப் பொருளாகிய சுத்த மாயையிலிருந்து நாதம், விந்து, சாதாக்கியம், சுத்தவித்தை ஈசுவரன், என்னும் ஐந்தும், சுத்தாசுத்த மாயையிலிருந்து காலம், நியதி, கலை, அராகம், வித்தை என்ற ஐந்தும், இவற்றுடன் புருடனைச் சேர்த்து ஏழு ஆன்மதத்துவங்களும்; பின்னர், அசுத்த மாயையிலிருந்து புத்தியும், புத்தியிலிருந்து அகங்காரமும், அகங்காரத்தின் மூன்று நிலைகளான வைகிருதம், தைசாசம், பூதாதி ஆகியவற்றிலிருந்து மனம், ஐந்து புலனுறுப்புகள், ஐந்து தொழில் உறுப்புகள், ஐந்து தன்மாத்திரைகள் ஆகியவையும் தோன்றுகின்றன. தன் மாத்திரைகள் தம்முள் ஒன்றுக்கொன்று இணைந்து ஐம்பெரும் பூதங்களை உண்டாக்க, அவை பின்னர் உலகமாக மாறுகிறது என்று கூறுகிறது.

உலகம் படைக்கப்படுவதன் நோக்கம் ஆன்மா தன் பழவினைகளின் பயன்களை நுகர்வதற்குரிய சூழ்நிலைகளை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம், அதனை அதன் கட்டுகளிலிருந்து விடுவித்துத் தன் சுய நிலையைப் பெறவைப்பதே என்று கூறுவதில் அனைத்துமே ஒன்றுபட்டுள்ளன.

உலகம் சிறப்புப் பொருளில் மனிதர் வாழும் இந்நிலவுலகத்தையே குறிக்கும். இது உருண்டை வடிவானது. இது கிழக்கு, மேற்கு அரைக் கோளங்களாகவோ வடக்கு, தெற்கு அரைக் கோளங்களாகவோ பிரிக்கப்படும். இது ஆசியா, ஐரோப்பா, வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, ஆசுத்திரேலியா, ஆப்பிரிக்கா, அண்டார்டிகா என்னும் ஏழுகண்டங்கள் கொண்டது. இந்நிலவுலகின் பரப்பு 510 மிலியன் ச.கி.மீ. இதில் நிலப்பகுதி 149 மிலியன் ச.கி.மீ. ஆகவும், நீர்ப்பகுதி 361 மிலியன் ச.கி.மீ. ஆகவும் உள்ளன. இதன் சுற்றளவு நிலநடுக்கோட்டின் வழியே 40,076 கி.மீ. உம், துருவங்களின் வழியே 40,009 கி. மீ. உம் உள்ளது. இதன் விட்டம் நிலநடுக் கோட்டின் வழி 12,756 கி.மீ.; துருவங்களின் வழி 12,714 கி.மீ. இதன் எடை $5{,}976 \times 10^{24}$ கிராம்கள் (Grams) ஆகும். மக்கள் தொகை சுமார் 360 கோடி; மிக நீளமான ஆறு மிசிசிப்பி மிசௌரி (7,011 1/5 கி.மீ.); மிக உயரமான மலைச் சிகரம் இமயமலையிலுள்ள எவரெசுட்டு (8,708.4 மீ.)

தொல்காப்பியர் உலகத்தைக் காடுறையுலகம் மைவரையுலகம், தீம்புனலுலகம், பெருமணலுலகம் என முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்னும் பிரிவுகளாகப் பிரிக்கிறார். பி. ஆர். ந.

**உலக மக்கள்தொகை**: உலகில் மனிதன் 600,000 முதல் 1,600,000 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றினான் எனப்பல வல்லுநர்கள் கருதுகின்றனர். உலக

நாடுகள் மக்கள்தொகைப் பெருக்கத்தின் விளைவு களை உணர்ந்து வருகின்றன. கண்டத்திற்குக் கண்டம், நாட்டிற்கு நாடு மக்கள்தொகைப் பிறப்பு வீதம் வேறுபட்டு இருப்பதால், உலக நாடுகள் அனைத்தும் மக்கள் தொகையியல் பற்றிய ஆய்விற்குச் சிறப்பிடம் அளித்து வருகின்றன. உலகம் முழுவதுமே அதைப் பற்றிய ஆய்வுகள் நடத்தப்படுகின்றன. பொருளியல், கல்வி ஆகியவற்றோடு தொடர்புடைய பன்னாட்டுக் கருத்தரங்குகளிலும் மக்கள்தொகை பற்றியசிக்கல்கள் முதலிடம் வகிக்கின்றன. மக்கள் தொகைப் பெருக்கமும்அதன் விளைவுகள் பற்றிய கோட்பாடுகளும் பெருகிக் கொண்டேயிருக்கின்றன. மக்கள் தொகை இயல் (Demography) என்ற புதிய புலம் வளர்ச்சி பெற்றுள்ளது. உலகப் பொருளியலிலும் மக்கள் தொகைப்பெருக்கம் முதலிடம் பெறுகிறது.

மக்கள்தொகை என்பது ஒரு நாட்டில் வாழும் மக்களின் எண்ணிக்கையைக் குறிக்கும். மக்கள் தொகை ஒரு குறிப்பிட்ட பகுதியைப் பொறுத்துக் கூறுவதாகும். நிலமும், நீரும் சேர்ந்த இவ் உலகின் பரப்பு ஏறக்குறைய 510 மிலியன் ச.கி.மீ. ஆகும். இதில் நீர்ப் பகுதி 71 விழுக்காட்டைக் (361 மிலியன் ச.கி.மீ.) கொண்டுள்ளது. எஞ்சிய பரப்பான 29 விழுக்காடு (149மிலியன் ச.கி.மீ.) நிலத்தைக் கொண்டுள்ளது. பெரும்பான்மையான மக்கள் சம வெளிகளிலும், குன்றுப் பகுதிகளிலும் வாழ்கிறார்கள். இவ்வாழ்வுப் பகுதிகள் பெரும்பாலும் வேளாண்மை, உற்பத்தி, வாணிகம் இவற்றிற்கு ஏற்ற இடங்களாகும். மக்கள் வாழும் நிலப் பகுதியில் 30 விழுக்காடு மக்கள் வாழுவதற்கு ஏற்றதாக அமையவில்லை. அண்டார்ட்டிக்கா போன்ற பனி மண்டலங்களிலும் பாலைவனப் பகுதிகளிலும் மக்கள் வாழுவதில்லை.

மக்கள்தொகை வளர்ச்சி: இயற்கையாகவோ இடம்பெயர்வதாலோ (Migration) ஓர் இடத்தின் மக்கள்தொகை பெருகவோ சுருங்கவோ முடியும். பிறப்பு, இறப்பு வீதங்களே இயற்கையில் மக்கள் தொகையைக் கணிக்கும் கருவிகளாகும். பிறப்பு வீதத்திலிருந்து இறப்பு வீதத்தைக் கழிப்பதால் கிடைக்கும் எண்ணிக்கையைக் கொண்டு மக்கள்தொகையின் பெருக்கத்தை அறிய முடியும். இதுவே இயற்கையான கூடுதல் (Natural Increase) ஆகும்.

சே,ஏ.பெர்ரோ (J.A.Perrow - 1971) கூற்றுப்படி 'மக்கள்தொகை பற்றிய அறிவு சிறிதும் இன்றி, பொருளியலைப் பற்றி அறிதல் என்பது இயலாத ஒன்றாகும்'. மக்கள்தொகை வளர்ச்சி வீதம் வயது, பால் பற்றிய வெளிப்பாடுகள் ஆகிய இவை அனைத்துமே பொருளாதார முன்னேற்றத்தை வரையறுக்கின்றன.

அனைத்து நாட்டுப் புள்ளி விவரங்களிலும் மக்கள் தொகை பற்றிய புள்ளி விவரங்கள் மிகப் பழமையானவையாகும். அரசு, மக்கள்தொகைக் கணிப்பின் (Census) மூலம் புள்ளி விவரங்களைச் சேகரிக்கிறது. உலகில் அனைத்து நாடுகளும் தம் மக்கள்தொகையைக் கணக்கிடுகின்றன. ஆனால், அனைத்து நாடுகளிலும் கணக்கிடும் காலம் ஒன்றாக இருப்பதில்லை. மக்கள்தொகை பற்றிய விவரங்களை அறிவதற்கு மக்கள்தொகைக் கணக்கெடுப்புகள் இன்றியமையாத முதன்மையான ஆதாரமாகும். இதைத் தவிர ஒவ்வோர் ஆண்டும் பெருகும் மக்கள்தொகையும் கணக்கிடப்படுகின்றன. இந்தியாவில் பத்து ஆண்டுகளுக்கு ஒருமுறை மக்கள்தொகைக் கணிப்புப் பணி மேற்கொள்ளப்படுகிறது. இறுதியாக 1981-இல் இந்தியாவில் மக்கள்தொகை பற்றிய கணக்கெடுப்புப் பணி நடைபெற்றது.

உலகளவில் சில பன்னாட்டு ஆய்வு வெளியீடுகள் அனைத்து நாடுகளின் மக்கள்தொகை வளர்ச்சி வீதங்களை முன்கூட்டியே கணக்கிடுகின்றன. ஆனால்,இவை எல்லாம் சார்ந்த இரண்டாம் நிலை ஆதாரங்களே (Secondary Sources) தவிர முதன்மையான ஆதாரங்கள் (Primary Sources) ஆகமாட்டா. மக்கள் தொகை ஆண்டுப் புத்தகம் (Demographic year Book) இன்றியமையாத செய்தித் தொகுப்பாகும். இம் மக்கள் தொகைச் செய்தித் தொகுப்பு ஐக்கிய நாடுகளின் அவையால் 1948-இல் இருந்து ஒவ்வோர் ஆண்டும் வெளியிடப்படுகிறது. இவ்வாறே உலக வங்கியும் சில ஆதாரங்களை அளிக்கிறது. உலக மக்கள் தொகை பற்றி ஆய்வதற்கு இன்றியமையாத முதன்மையான ஆதாரமாக மக்கள்தொகை ஆண்டுப் புத்தகம் பயன்படுகிறது.

வரலாறு: வரலாற்றுக் கண்ணோட்டத்தில் நம்பக ஆதாரமான முறையில் மக்கள் தொகைப் புள்ளி விவரங்கள் தோற்றக் காலத்திலிருந்து கிடைக்கவில்லை. மக்கள்தொகையியல் வல்லுநர்களான தாம்சன் (W.S. Thompson), உலூயிசு (D.T. Lewis) ஆகியோர் உலக நாடுகளில் மக்கள்தொகை எதிர்பார்ப்பு வீதங்கள், கி.பி. 1650-இலிருந்து கணக்கிடப்பட்டது எனக் கருதுகின்றனர். மக்கள்தொகையின் மாற்றங்களுக்கும், தாக்கங்களுக்கும் ஓர் அடிப்படையான தொடக்கமாக கி.பி. 1650-ஆம் ஆண்டை ஆய்வாளர்கள் எடுத்துக் கொள்கின்றனர். மேலும் கி.பி. 1650-ஆம் ஆண்டிற்கு முன்னால் உலக மக்கள்தொகைப் பெருக்கத்தைப் பற்றி அறிவதற்குச் சான்றுகள் இல்லை. அக்காலத்தில் உலக ஆய்வுப் பயணம் (Exploration) மேற்கொண்ட அறிஞர்களின் பயணக்

குறிப்புச் செய்திகளின் விளக்கங்களிலிருந்தே ஓரளவு அறிந்துகொள்ள முடிகிறது. முறையான உலக மக்கள் தொகைப் பெருக்கம் பற்றிய கணிப்புகள் கி.பி.1650 –ஆம் ஆண்டிலிருந்து தொடங்கப்பட்டன. கால வரையறைக்காக இதனை வரலாற்று அடிப்படைக் கண்ணோட்டத்தில் மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரித்துள்ளனர். அவையாவன: (1) தொடக்கத்திலிருந்து கி.பி. 1650–ஆம் ஆண்டு வரையான காலம், (2) கி.பி. 1650–இலிருந்து 1900 வரையிலான இடைப்பட்ட காலம், (3) 20–ஆம் நூற்றாண்டுக் காலம்.

**(1)முற்காலப் பகுதியில் மக்கள்தொகை:** தொடக்க காலங்களில் மக்கள்தொகைப் பெருக்க வீதம் மிகக் குறைவாக இருந்திருக்க வேண்டும் எனக் கணக்கிடப்படுகிறது.

அட்டவணை –1–இலிருந்து மக்கள்தொகைப் பெருக்கம் முதல் கட்டத்தில் மிகக் குறைந்த அளவில் பெருகியதாக அறியப்படுகிறது. கி.பி. 1–ஆம் ஆண்டு வரையிலும் பெருகிய மக்கள்தொகை 250 மிலியன் மட்டிலுமே. அது கி.மு. 8000–இலிருந்து கி.பி.1 வரை 0.06 விழுக்காடு என்ற அடிப்படையில் பெருகி உள்ளது. இந்தத் தொகை இரட்டிப்பாக மேலும் 1650 ஆண்டுகள் ஆகியுள்ளன. கி.பி.1–இலிருந்து 1650 வரையிலான சராசரி மக்கள்தொகை பெருக்க வீதம் 0.07 விழுக்காடு.

**கி.பி. 1650 முதல் 1900 வரை:** ஏ. எம். கார்சாண்டர்சு, வில்காக்சு ஆகியோர் கி.பி. 1650–இல் உலக மக்கள்தொகையின் எதிர்பார்ப்பு வீதங்களைத் தனித் தனியே கண்டனர். உலக மக்கள்தொகையாக கி.பி.1650 –இல் இவ்வல்லுநர்கள் எதிர்பார்த்த மக்கள்தொகை முறையே 545,470 மிலியன்கள் ஆகும். வில்காக்சின் எதிர்பார்ப்பு 75 மிலியன் குறைந்திருந்தது. ஆனால், கார் சாண்டர்சின் மதிப்பு துல்லியமானது எனக்

அட்டவணை—1

உலக மக்கள்தொகை வளர்ச்சி – கி.மு. 1 மிலியன் முதல் கி.பி. 1650 வரை

| கால ஆண்டுகள் | மொத்த மக்கள்தொகை |
|---|---|
| கி.மு. 1,000,000 | 125,000 |
| 300,000 | 1 மிலியன் |
| 25,000 | 5 மிலியன் |
| 8,000 | 10 மிலியன் |
| 1,000 | 100 மிலியன் |
| கி.பி. 1 | 250 மிலியன் |
| 1,500 | 300 மிலியன் |
| 1,650 | 545 மிலியன் |

அட்டவணை—2

உலக மக்கள்தொகை – கி.பி. 1650–இலிருந்து 1900 வரை

| ஆண்டு | மக்கள்தொகை (மிலியனில்) | ஆண்டு சராசரி வளர்ச்சி (விழுக்காட்டில்) |
|---|---|---|
| 1650 | 507 | — |
| 1750 | 711 | 0.40 |
| 1800 | 912 | 0.56 |
| 1850 | 1,131 | 0.48 |
| 1900 | 1,590 | 0.81 |

கருதப்படுகிறது. அட்டவணை-2, கி.பி. 1650-இலிருந்து 1900 வரையான உலக மக்கள்தொகையையும் வளர்ச்சி வீதத்தையும் விளக்குகிறது.

உலக மக்கள்தொகை வளர்ச்சி வீதம் கி.பி. 1650 முதல் 1900 வரையான காலத்தில் 1 விழுக்காட்டிற்கு உள்ளாகவே இருந்திருக்கிறது.

**1900 முதல் இன்று வரை**: உலக மக்கள்தொகை 20-ஆம் நூற்றாண்டில் வேகமாகப் பெருகிக் கொண்டேயிருக்கிறது. இந்நூற்றாண்டின் மக்கள் தொகைப் பெருக்கத்தை அட்டவணை-3 விளக்குகிறது.

1920-ஆம் ஆண்டிற்குப் பிறகு மக்கள்தொகைப் பெருக்கம் 1 விழுக்காட்டிற்கும் மிகையாகவே பெருகி வருகிறது. கடந்த 85 ஆண்டுகளின் சராசரி ஆண்டு வளர்ச்சி வீதம் 2.4 விழுக்காடாகும். இதனை மக்கள் தொகை எழுச்சி (Population Explosion) எனக் குறிப்பிடுகின்றனர்.

உலக நாடுகள், வளரும் நாடுகள் (Developing Countries) வளர்ச்சியடைந்த நாடுகள் (Developed Countries) என இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கப் படுகின்றன. ஐக்கிய நாடுகளின் குழு, பொருளாதார முன்னேற்றமடைந்த நாடுகளை வளர்ச்சியடைந்த நாடுகள் என்றும், பொருளாதாரத்தில் பின்தங்கிய நாடுகளை வளரும் நாடுகள் என்றும் குறிப்பிடுகிறது. ஆசுத்திரேலியா, சப்பான், கனடா, அமெரிக்கா, இங்கிலாந்து, பிரெஞ்சு, செருமனி, உருசியா போன்ற நாடுகள் வளர்ச்சியடைந்த நாடுகளாகும். இந்தியா பாகிசுத்தான், எகிப்து, நைசீரியா, பிலிப்பைன்சு, கொரியா, சைனா போன்றவை வளரும் நாடுகளாகும். இவ்விருவகை நாடுகளின் மக்கள்தொகை வளர்ச்சியை அட்டவணை-4-இல் காணலாம்.

அட்டவணை – 3

1900 முதல் இன்றைய வரையில் மக்கள்தொகைப் பெருக்கம்

| ஆண்டு | மக்கள்தொகை (மிலியனில்) | ஆண்டுச்சராசரி வளர்ச்சி (விழுக்காட்டில்) |
|---|---|---|
| 1920 | 1811 | 0.69 |
| 1930 | 2015 | 1.12 |
| 1940 | 2249 | 1.16 |
| 1950 | 2501 | 1.12 |
| 1960 | 2986 | 1.93 |
| 1970 | 3610 | 2.08 |
| 1975 | 3962 | 1.95 |
| 1983 | 4666 | 2.22 |
| 1984 | 4760 | 2.01 |
| 1985 | 4841 | 1.70 |

அட்டவணை—4

| வளர்ச்சியடைந்த, வளரும் நாடுகளின் மக்கள்தொகை | | | | |
|---|---|---|---|---|
| ஆண்டு | வளர்ச்சியடைந்த நாடுகள் (மிலியனில்) | வளரும் நாடுகள் | உலக மக்கள்தொகையின் விழுக்காடு | |
| | | | வளர்ச்சி யடைந்த நாடுகள் | வளரும் நாடுகள் |
| 1650 | 106 | 401 | 20.91 | 79.09 |
| 1750 | 147 | 564 | 20.67 | 79.33 |
| 1850 | 302 | 829 | 26.70 | 73.30 |
| 1900 | 510 | 1080 | 32.08 | 67.92 |
| 1920 | 613 | 1198 | 33.85 | 66.15 |
| 1950 | 857 | 1644 | 34.27 | 65.73 |
| 1975 | 1132 | 2836 | 28.53 | 71.47 |

மூன்றில் இரண்டு பங்கிற்கும் மிகுதியான உலக மக்கள்தொகையினர் வளரும் நாடுகளில் வாழ்கின்றனர் என்பதை அட்டவணை-4-இலிருந்து அறியலாம்.

**உலகக் கண்டங்களில்:** அட்டவணை-5-இல் ஆறு கண்டங்களிலும் 1980 முதல் 1985 வரையிலான மக்கள்தொகைப் பெருக்க வீதங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை—5

| கண்டங்களில் மக்கள்தொகை | | |
|---|---|---|
| கண்டம் | மக்கள்தொகை (1983 மதிப்புப்படி) | ஆண்டு வளர்ச்சி 1980 85 |
| ஆப்பிரிக்கா | 514,000,000 | 3.0% |
| ஆசியா | 2,810,000,000 | 1.8% |
| ஆசுத்திரேலியா | 15,000,000 | 1.2% |
| ஐரோப்பா | 674,000,000 | 0.3% |
| வட அமெரிக்கா | 387,000,000 | 1.6% |
| பசிபிக்குத் தீவுகள்(நியூசிலாந்து உட்பட) | 11,000,000 | 1.7% |
| தென் அமெரிக்கா | 255,000,000 | 2.4% |
| உலகம் | 4,666,000,000 | 1.7% |

மக்கள்தொகைப் பெருக்க அளவில் மிகப்பெரிய நாடுகள் என அவற்றைக் கீழ்க்காணும் வரிசை நிலையில் பிரிக்கலாம். இவ்விவரங்கள் 1983-ஆம் ஆண்டுப் புள்ளி விவர ஆய்வுகளிலிருந்து தொகுக்கப்பட்டவையாகும்.

அட்டவணை—6

| நாடுகள் | மக்கள்தொகை (1983) |
|---|---|
| சீனா | 1,025,844,000 |
| இந்தியா | 726,154,000 |
| உருசியா | 272,775,000 |
| அமெரிக்கா | 233,450,000 |
| இந்தோனேசியா | 156,864,000 |
| பிரேசில் | 127,427,000 |
| சப்பான் | 120,246,000 |

மக்கள்தொகைப் பெருக்கம் உயர்நிலையில் உள்ள நாடுகளில் சீனா முதன்மை இடத்தை வகிக்கிறது. இதைத் தொடர்ந்து இந்தியா, உருசியா, அமெரிக்கா, இந்தோனேசியா, பிரேசில், சப்பான் ஆகிய நாடுகள் இடம்பெறுகின்றன. முதல் ஐந்து நாடுகளின் மக்கள்தொகைப் பெருக்கம், உலக மக்கள் தொகையில் 52 விழுக்காட்டிற்கும் மேல் இருக்கிறது. மேலும், 1982-83-ஆம் ஆண்டில் மட்டும் இந்தியாவில் 15.5. மிலியனும், சீனாவில் 15 மிலியனும், இந்தோனேசியாவில் 3.5 மிலியனுமாக மக்கள்தொகை பெருகியுள்ளது.

மக்கள்தொகைப் பெருக்கத்தின் விளைவுகள்: ஐக்கிய நாடுகளின் மக்கள் தொகைத் தொடர்பான நிதிக் குழுவின் (UNFPA) 1984-ஆம் ஆண்டு அறிக்கை மக்கள்தொகைப் பெருக்கத்தின் விளைவாக வளரும் நாடுகளில் பொருளாதார முன்னேற்றம் பின்தங்கி, தனி ஆள் வருவாய் குறைந்து பல இலட்சக் கணக்கான மக்கள் அடிப்படை வாழ்க்கை வசதிகளை இழந்து ஏழ்மை நிலையையடையும் நிலை ஏற்படுகிறது எனச் சுட்டிக் காட்டுகிறது. செல்வ வளமிக்க நாடுகளில் தனி ஆள் வருவாய் ஏழ்மையான நாட்டில் இருப்பதை விட 220 பங்கு மிகையாக இருப்பதாக 1981-ஆம் ஆண்டுப் புள்ளிவிவர ஆய்வுகளிலிருந்து அறியப்படுகிறது. மக்கள்தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தாவிடில் அதனால் ஏற்படும் பொருளாதார வீழ்ச்சியையும் அவ் அறிக்கை எச்சரிக்கிறது.

மக்கள்தொகை அடர்த்தி: ஒரு குறிப்பிட்ட பகுதியில்வாழும் மக்கள்தொகைப் பெருக்க வீதமே மக்கள் தொகை அடர்த்தி (Density of Population) என்று சொல்லப்படும். வழக்கமாக 1 சதுர மைல் அல்லது 1 சதுரக் கிலோ மீட்டர் பரப்பில் வாழும் மக்களின் எண்ணிக்கையை இது குறிக்கும். மக்கள்தொகை சீரான அளவில் பகிர்ந்திருப்பதில்லை. இவ் அடர்த்தி வீதம் இடத்திற்கு இடம், நாட்டிற்கு நாடு, கண்டத்திற்குக் கண்டம் வேறுபடுகிறது. உலக மக்கள் தொகை 1983-ஆம் ஆண்டுப் புள்ளி விவரப்படி 466 கோடிச்சம அளவில் உலகம் முழுவதும் பரவி உள்ளது எனக் கொண்டால் அதன் அடர்த்தி 1 சதுர மைலுக்கு 80 பேர் என்பதாகும். ஆனால், உண்மையில் அவ்வாறு பகிர்ந்திருப்பதில்லை. அட்டவணை-7, ஒவ்வொரு கண்டத்திலும் உள்ள மக்கள்தொகை அடர்த்தியை 1983-ஆம் ஆண்டுப் புள்ளிவிவர அடிப்படையில் விளக்குகிறது.

அட்டவணை – 7

| கண்டங்களில் மக்கள்தொகையின் அடர்த்தி (1983) | |
|---|---|
| கண்டம் | மக்கள்தொகை அடர்த்தி (சதுர மைல்) |
| ஆசியா | 166 |
| ஐரோப்பா | 166 |
| ஆப்பிரிக்கா | 44 |
| வட அமெரிக்கா | 41 |
| தென் அமெரிக்கா | 36 |
| ஆசுத்திரேலியா | 5 |

மிகுந்த அடர்த்தியுடனான மக்கள்தொகைப் பரவல் ஐரோப்பாவிலும் கிழக்கு மற்றும் தெற்கு ஆசிய நாடுகளிலும் காணப்படுகிறது.

மக்கள்தொகைப் பெருக்கத்தில் 20-ஆம் நூற்றாண்டில் குறிப்பிடத் தகுந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இவ் வளர்ச்சி கி.பி. 2100 வரை நீடிக்கும் என ஐக்கிய நாட்டுப் புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. மக்கள் தொகை வல்லுநர் டாக்டர். எசு. சந்திரசேகர் குறிப்பிடும் விவரங்களாவன: உலகில், 100 கோடி மக்கள் தொகைப் பெருக்கத்திற்கு 1 மிலியன் ஆண்டுகள் ஆயின. ஆனால், அது இரட்டிப்பதற்கு 1 நூற்றாண்டும், 200 கோடி ஆவதற்கு 2 நூற்றாண்டுகளுமே ஆயின. 1960-ஆம் ஆண்டு 300 கோடியாக இருந்த மக்கள்தொகை, 15 ஆண்டுகளில் 1975-ஆம் ஆண்டு 400 கோடி ஆயிற்று. இவ்வளர்ச்சி வீதம் ஆண்டுதோறும் எவ்வளவு வேகத்தில் செல்லுகிறது என்பதைச் சுட்டுகிறது. ஒவ்வோர் ஆண்டும் 8 கோடி முதல் 9 கோடி வரை உலக மக்கள்தொகைப் பெருக்கம் உயர்ந்து கொண்டே செல்கிறது என்பதை 1984-ஆம் ஆண்டிற்கான உலக மக்கள்தொகை பற்றிய குழு ஆராய்ந்தது.

மக்கள்தொகைப் பெருக்கம் பற்றிய எந்த ஓர் ஆய்வும் அறிஞர் டி. ஆர். மால்தூசின்(T. R. Malthus) கருத்துகளை எதிரொலிப்பதாக உள்ளது. அறிஞர்மால்தூசினால் நாட்டின் பொருளாதார வளத்தைச்சார்ந்து மக்கள் தொகை பெருகும் என கி. பி. 1798-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. அடிப்படைத்தேவையான விளை பொருள்களின் வளர்ச்சி வீதத்தைவிட அவற்றைச் சார்ந்து வரும் மனிதப் பெருக்கத்தின் வளர்ச்சி வீதம் மிகையாகவுள்ளது எனவும் மால்தூசு கூறினார். இவற்றை நேரிய வழியில் தடுப்பதற்கான தடைகளையும் குறிப்பிட்டார். பி. ஆர். எர்லிச்சு, எ. எச். எர்லிச்சு (P. R. Ehrlich & A. H. Ehrlich -1970) ஆகிய வல்லுநர்களின் கருத்துப்படி, கூட்டு வட்டி முறைப்படி ஒரு குறிப்பிட்ட தொகை ஒரு குறிப்பிட்ட காலத்தில் இருமடங்கு ஆவதைவிட, மிகக் குறைந்த ஆண்டுகளில் மிகையான வீதத்தில் மக்கள்தொகைப் பெருக்கம் இரட்டிப்பாகிறது.

இவ்வுலகுக்குகந்த அளவு மக்கள்தொகையைத் திட்டவட்டமாகக் கணிக்க யாராலும் இயலவில்லை. ஆனால், மக்கள் தொகைப் பெருக்கத்திற்கு ஈடு அளித்திடும் வகையில் உணவுப்பொருள் உற்பத்தி பெருகவில்லை என அறிவியலறிஞர்களும், பொருளியல் வல்லுநர்களும், பிற பல்துறை வல்லுநர்களும் குறிப்பிடுகின்றனர். உலக மக்கள் தொகை கி. பி. 18-ஆம் நூற்றாண்டில் பெருகத் தொடங்கிய பின்னர் 1964-65-இல் உச்சநிலையான 2. 087 விழுக்காட்டை அடைந்து, பின்னர்க்குறையத் தொடங்கியது. ஐக்கிய நாடுகளில் மக்கள்தொகைத் தொடர்பான 1984-ஆம் ஆண்டு அறிக்கை, கி.பி.2000-ஆம் ஆண்டில் உலக மக்கள் தொகை 616 கோடியாகவும், கி. பி. 2095-இல் 1050 கோடியாகவும் இருக்கும் என அறிவிக்கிறது. உலக மக்கள் தொகையின் பெருக்கம் 2100 கோடி வரை நீடிக்கும் என அவ்வறிக்கை கூறுகிறது.

மக்கள் பிறப்பு வீதத்தைக் குறைப்பதற்காக அரசுகள் குடும்பநலம் சார்ந்த மக்கள்தொகைக் கட்டுப்பாட்டுத் திட்டங்களைச் செயற்படுத்துவதில் பெரிதும் ஈடுபட்டுள்ளன. ஐக்கிய நாடுகளின் பொதுக் குழு 1974-ஆம் ஆண்டை உலக மக்கள்தொகை ஆண்டாக அறிவித்து. மக்கள் தொகைப் பெருக்கத்தைக் குறைப்பதற்காகப் புகாரெசுட்டில் (Bucharest) 1974-இல் உலக மக்கள்தொகைக் கருத்தரங்கை நடத்தியது. இம்மாநாட்டில் பங்குபெற்ற 136 உலக நாடுகளின் உறுப்பினர்கள், உலக மக்கள்தொகைப் பெருக்கத்தைக் குறைப்பதற்கான வழிகளில் தங்கள் நாடுகளை ஈடுபடுத்த ஒப்புக் கொண்டனர். உலகத்தை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிற மிகப்பெரிய சிக்கல் மக்கள்தொகைப் பெருக்கமேயாகும். குறிப்பாக ஏழ்மையான நாடுகளில் மக்கள்தொகைப் பெருக்கத்தால், உணவு, உடை, உறைவிடம் ஆகியவற்றின் பற்றாக்குறை நிலை பெருகி வருகிறது. பொருளாதார முன்னேற்றத்திற்கு மக்கள்தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதே அடிப்படைக் காரணியாக விளங்கும் எனப் பொருளியல் வல்லுநர்களும்,மக்கள்தொகையியல் வல்லுநர்களும் கருதுகின்றனர். ஆர். சீ.

துணை நூல்கள்:

**Asha A. Bhende and Tara Kanitkar**, Principles of Population Studies, Himalaya Publishing House, Bombay, 1978.

**Srivastava, S. C.**, Studies in Demography, Jaiprakash Nath and Company, Meerut, 1980.

**Ehrlich, P. R. and Ehrlich, A. H.**, Population Resources Environment W. H. Freeman and Company, San Francisco, 1970.

**Perrow, J. A.**, Economics, University Tutorial Press Limited, London, 1971.

**Chandrasekar**, Infant Mortality, Population Growth and Family Planning in India, George Allen and Unwin Limited, London, 1972.

**உலக மனப்பான்மைக் கல்வி**: உலகக் கல்வியின் செயற்பாடுகளாகக் கல்வித் தொடர்பான மாநாடுகள், கருத்தரங்குகள் ஆகியவற்றை நடத்து

தல்; தொழில் நுட்ப வளர்ச்சி பற்றி அனுகூலமான மனப்பான்மை அல்லது வெளிநாடுகளில் கல்வி நிறுவனங்கள் ஏற்படுத்துதல்; அவற்றைப் பாதுகாத்து அவற்றிற்கு நிதியுதவி செய்தல்; உலகப் பண்பாட்டுக் கல்வித்திட்டம், பல்கலைக்கழகத்திற்கேற்ற கள ஆய்வுகள் (Area Studies), தகவல் தொடர்புச் சாதனங்கள், கல்வித் திட்டச் சிக்கல்கள் பற்றிய செயற்பாட்டுத் திட்டங்கள், கல்வித்திட்டத்தை அனைத்துலக அளவில் அமைத்தல் முதலியன குறிக்கப்படுகின்றன.

உலக மனப்பான்மைக் கல்வியை வளர்ப்பதில் ஐக்கிய நாடுகளின் பன்னாட்டுக் கல்வி அறிவியல் பண்பாட்டுக் கழகம் (UNESCO) ஆற்றும் பணிகள் குறிப்பிடத்தக்கவை. பல்வேறு செயல்திட்டங்களின் மூலம் பல நாடுகளுக்குப் பல்வேறு உதவிகள் கிடைக்க இவ்வமைப்புப் பாடுபடுகிறது. இக்கழகத்தின் உலக மனப்பான்மை பற்றிய புதிய அணுகுமுறைக் கல்வியை 50க்கு மேற்பட்ட நாடுகள் சோதித்துப் பார்த்துள்ளன. இக்கழகம் சோதனைக்காக எடுத்துக்கொண்ட ஆறு பெரும் பகுதிகள் கல்வி, இயற்கை அறிவியல், சமூக அறிவியல், மக்கள் தொடர்புக் கல்வி, அனைத்துலகப் பண்பாட்டுச் செயற்பாடுகள், தொழில் நுட்ப உதவி ஆகியவையாகும். தனிப்பட்ட நாடுகளின் கல்வி அமைப்புகளையும் முறைகளையும் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தாலும் அனைத்துலகக் கல்வி, உலக மனப்பான்மைக் கல்வி ஆகியவற்றை வளர்ப்பதில் இக்கழகம் பெரும் பங்கு வகிக்கிறது. மாணவர்கள், ஆசிரியர்கள் பரிமாற்றம், பாடப் புத்தகங்கள் பரிமாற்றம், கல்வித்திட்ட மாறுதல்கள், புதுப்பித்தல்கள், நாடுகளின் கல்வித் தேவைகளுக்கு உதவிபுரிதல், கல்வித் திட்டத்தையும் கற்பித்தல் முறைகளையும் மாற்றியமைக்க விரும்பும் நாடுகளுக்கு வேண்டும் தொழில் நுட்ப உதவிகள் கொடுத்தல், நாடுகளுக்கிடையேயான பல்வேறு கல்விச் சிக்கல்கள் பற்றி விவாதித்தல், கல்வி மாநாடுகள், பட்டறைகள், கருத்தரங்குகள் ஆகியவற்றை ஏற்பாடு செய்தல் ஆகிய துறைகளில் இப்பன்னாட்டுக் கழகம் சிறப்பான முறையில் செயற்பட்டு வருகிறது. மனிதச் சிக்கல்களுக்குக் கல்வி வழிமுறைகளைப் பயன்படுத்தி இப்பன்னாட்டுக் கழகம் தீர்வு காண்கிறது.

சமூகத்தை முன்னேற்றமடையச் செய்வதிலும், செல்வத்தைச் சமப்படுத்துவதிலும் கல்வி பெரிதும் செயலாற்றுகிறது என்ற நம்பிக்கை காரணமாகப் பல நாடுகள் கல்வியின் மீது தங்கள் கவனத்தைத் திருப்பியுள்ளன. கல்வி, உலக அமைதியைப் பரப்புவதிலும் உலகத்தை அனைவரும் நன்கு புரிந்து கொள்வதிலும் உதவி செய்கிறது. ஆகவே, பல்வேறு அமைப்புகள் இப்பணியை மேற்கொள்கின்றன. உலக வங்கிகளின் பொருளாதார வளர்ச்சி நிலையம், உலகச் சுகாதாரக் கழகம்,அமெரிக்க மாநிலக்கழகம், அனைத்துலக அமைதிக்கான கார்னசி நிதி, ஐக்கிய நாடுகளின் குழந்தைகளின் அவசர நிதி நிறுவனம் (UNICEF) போன்ற பல நிறுவனங்கள், உலக மனப்பான்மைக் கல்வியைப் பரப்புவதில் பங்கேற்கின்றன. சோவியத்து நாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ள பேட்டிரிசு உலும்பா மக்கள் நட்புறவுப் பல்கலைக்கழகம், ஆறு துறைகளில் சிறப்புறப் பணியாற்றி வருகிறது. வெளிநாடுகளிலிருந்து வரும் மாணவர்களும் ஆசிரியர்களுமே இங்குப் பயன் பெறுகின்றனர். இது போன்றே அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அமைதிப் படையினர் (American Peace Corps) கல்வி, ஆங்கிலம், முதியோர் கல்வி,உடற்கல்வி,தொழிற்கல்வி,வேளாண்மை ஆகிய துறைகளில் பல நாடுகளில் பணி புரிகின்றனர்.

கல்வியில் முன்னேற்றமடைந்துள்ள நாடுகள், முன்னேற்றமடைய விரும்பும் நாடுகளுடன் கூட்டுறவை வளர்த்துக் கொள்வது பொதுவாக நாடுகளுக்கு நன்மை பயக்கும். கல்வியில் விரைவான முன்னேற்றம் ஏற்பட்டால் அது பொருளாதார முன்னேற்றத்திற்கும் நாடுகளின் பொதுவான முன்னேற்றத்திற்கும் வழிவகுக்கும் என்பதற்குப் பெரு (Peru), அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆகியவற்றிற்கிடையேயான கூட்டுறவு ஓர் எடுத்துக்காட்டாகும். கல்வியில் மிகப் பெரிய சீர்திருத்தம், தனிப்பட்ட முறையில் அமெரிக்காவின் ஒத்துழைப்புடன் பெருநாட்டில் ஏற்பட்டு வருகிறது. கடந்த இருபது ஆண்டுகளில் முன்னேறிய நாடுகளிலிருந்து முன்னேறிவரும் நாடுகளுக்குப் பல வகைக் கல்வி உதவிகள் கொடுக்கப்படுகின்றன. அவ்வுதவிகள், ஆசிரியர்கள், வல்லுநர்கள் ஆகியோரை அனுப்பி வைப்பது; கடனுதவி வழங்குவது; கொடை உதவித் தொகைகள் வழங்குவது போன்ற வகைகளில் தரப்படுகின்றன. முன்னேற்றமடைந்த நாட்டின் சிறப்புத் தன்மைகள் முன்னேறத் துடிக்கும் நாடுகளில் செயற்படுத்தப்படுகின்றன. ஆங்கிலேயர்களின் இலக்கணப் பள்ளிகள், பிரஞ்சுக்காரர்களின் இலைசீசுப் பள்ளிகள் (Lycees) ஆகியவற்றைப் போன்றே ஆசியா, ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அமெரிக்கத் தொடக்கப் பள்ளிகள் பிலிப்பைன்சு, சப்பான், துருக்கி போன்ற நாடுகளில் அப்படியே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

பொருளாதாரம், அரசியல், சமூகவியல், வரலாறு, புவியியல், மொழியியல் ஆகிய பாடங்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றமும் புதுமையும் ஏற்பட்டுள்ளன. அனைத்துலகத் தொடர்புகளிலும்,

நாகரிகம் பற்றிய உலகச் செய்திகளிலும் புது ஆய்வுகளும், புதுப்புது பயிற்சி வகுப்புகளும் மேற்கொள்ளப்படுகின்றன. அமெரிக்காவில் 1966–ஆம் ஆண்டு அனைத்துலகக் கல்விச் சட்டம் நிறைவேற்றப்பட்ட போது, அங்குள்ள அனைத்துலகக் கல்வி நிறுவனங்களும் தங்கள் கல்வித்திட்டத்தை அனைத்துலக மக்களுக்கும் பயன்படும் வகையில் விரைவாக நடைமுறைப்படுத்தின.

சமூக அறிவியலில் இன்று பல புதிய வழிமுறைகள் வந்துள்ளன. விவரங்கள் சேகரிப்பு, அவற்றைப் பகுப்பாய்வு செய்தல் ஆகியவற்றில் புதிய முறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. இவ்வாறு கடைப்பிடிக்கப்படும் கொள்கைகள் ஒரு பாடத்துடன் மட்டும் நில்லாது, பிற பாடங்களுடன் இணைந்து செயற்படுகின்றன. ஆய்வு முடிவுகளின் பரிமாற்றத்தில் உலக நோக்கு ஏற்படச் செய்தல், ஆய்வுகளை மேற்கொள்வதிலும் ஆய்வில் ஒரு நாடு அடைந்துள்ள முன்னேற்றம் பற்றிய விவரங்களை மற்ற நாடுகளுக்குத் தெரிவிப்பதிலும் உலக நோக்குக் கருத்தில் கொள்ளப்படுதல், அடிக்கடி கல்வி மாநாடுகளைக் கூட்டி ஆய்வு முடிவுகளை வெளியிடுதல் போன்ற பணிகளைப் பன்னாட்டுக் கல்வியறிவியல் பண்பாட்டுக் கழகம் சிறப்புறச் செய்து வருகிறது.

உலக மனப்பான்மைக் கல்வியில் மற்றுமொரு பணியாகக் கொள்ளப்படுவது நாடுகள், பிறநாடுகளில் ஏற்படுத்தியிருக்கும் செய்தி நிலையங்களாகும். இச் செய்தி நிலையங்கள் தத்தம் நாடுகளைப் பற்றிய உண்மையான, நடுநிலைமையான அண்மைக் காலச் செய்திகளைக் கொடுக்கின்றன. மேலும், மற்ற நாடுகளிடம் தம் நாடு பற்றிய கருத்துகளைப் பரப்புதலும் செய்கின்றன. இங்குப் பணிபுரியும் அலுவலர்கள் தங்களுடைய நேரடிப் பணி மட்டுமன்றி அவர்களுடைய நடத்தை மனப்பான்மைகள் ஆகியவற்றாலும் தாம் வேலை செய்யும் நாட்டின்பால் மக்களிடையே நல்லெண்ணம் ஏற்படுமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். இச் செய்தி நிலையங்கள் பல வழிகளில் தம் நாட்டைப் பற்றிய செய்திகளைப் பிற நாடுகளுக்கு அறிவித்துக் கொண்டிருப்பதைக் காணலாம். செய்தி நிலையங்கள், நூல்நிலையங்கள் ஆகியவற்றைப் பாதுகாத்தல், கண்காட்சிகள் நடத்துதல், சினிமாப் படச்சுருள்கள் காட்டுதல், தங்கள் நாட்டுக் கலைஞர்கள் வரும்போது நாடகம், நடனம், இசை போன்றவற்றிற்கு ஏற்பாடு செய்தல், அறிஞர்கள் வரும் போது சிறப்புச் சொற்பொழிவுகளுக்கு ஏற்பாடு செய்தல் ஆகியவற்றில் ஈடுபடலாம். இதன் மூலம் உலக மனப்பான்மையை ஏற்படுத்தலாம். இது போன்ற திட்டமிடுதலின் வளர்ச்சி, புதிய தொழில்நுட்பக் கருவிகளான தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகைகள் ஆகியவற்றின் வாயிலாக விரைவுபடுத்தப்படுகின்றது.

மத நிறுவனங்கள், வாணிகக் கழகங்கள் முதலியன பல்வேறு வகைகளில் அனைத்துலக மனப்பான்மையை வளர்ப்பதில் உதவி செய்யக் கூடும். இந்நிறுவனங்கள், தங்கள் பணியினை மேற்கொள்ளும் நாடுகளில் மருத்துவ மனைகள், நூல் நிலையங்கள், பள்ளிகள் முதலியவற்றை ஏற்படுத்துகின்றன. அனைத்துலகக் கழகங்களின் சார்பில் தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்படின் அவற்றின் அருகே தொழிலாளர்களின் குடும்பங்கள் ஈர்க்கப்படுகின்றன. அவர்கட்கு மேற்குறிப்பிட்ட வசதிகள் மிகவும் தேவைப்படும். அதன் காரணமாகத் தொழிற்சாலை ஏற்படக் காரணமாயிருந்த நாடுகளின் மீது நல்லுணர்வுகள் உண்டாகும்.இவை தனியார் துறையால் மட்டுமன்றி அரசாங்கங்களாலும் செய்யப்படலாம்.

நாட்டுக்கு நாடு நேரடியான உதவிகள் செய்தல், கற்றறிந்த வல்லுநர்கள் உறவிற்கான திட்டங்கள், பரிமாற்றங்கள் ஆகிய இவை உலக மனப்பான்மைக் கல்வியின் மீது நாட்டங் கொள்ள உதவி செய்யும். பஞ்சம், பெருமழை, பெருநோய், புயற்காற்று, பூகம்பம், போர் போன்ற நெருக்கடி நேரங்களில் பிறநாடுகள் குறிப்பிட்ட காலத்தில் கொடுத்து உதவும் உதவிகள், பாதிக்கப்பட்ட மக்கள் மனத்தில் உதவி செய்த நாடுகளைப் பற்றிய நல்லெண்ணத்தை மிகுதிப்படுத்தும். இவ்வுதவிகளைச் செய்வதில் அனைத்துலக அளவில் செஞ்சிலுவைச் சங்கம், சுழற்கழகங்கள், அரிமா சங்கங்கள் போன்ற பிற ஊழிய நிறுவனங்கள் உடனடி உதவி நடவடிக்கைகளில் ஈடுபடும்போது, மக்கள் அவ்வுதவிகளை நன்றியுடன் நினைக்கின்றனர்.

ஒரு நாட்டைச் சேர்ந்தவர்கள் வேறு நாடுகளுக்குச் செல்லும்போது அங்குள்ள சில பண்பாடுகளைப் பார்த்துத் திகைப்பிற்கு உள்ளாகின்றனர். தங்கள் நாட்டுப் பண்பாட்டிற்கு நேர் எதிரான பழக்க வழக்கங்களைக் காணும்போது அத்திகைப்பு ஏற்படுகிறது. அத்திகைப்பு இனம் அல்லது நாட்டின் மீது வெறுப்புணர்ச்சியை உண்டாக்கும். ஆகவே, அத்திகைப்பு ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். தாம் செல்லும் நாட்டின் பண்பாடுகள் பற்றிய தெளிவான அறிவும் கருத்துகளும் முன் கூட்டியே பெற, மக்களுக்கு வசதிகள் செய்து கொடுக்க வேண்டும். தப்பெண்ணங்கள் பிற நாடுகளைப் பற்றி மட்டும் ஏற்படக் கூடும் என்று எண்ண வேண்டியதில்லை. இந்தியா போன்ற பரந்த நாடுகளின் பல மாநிலங்களிடையே

யும் பிற மொழி பேசும் பகுதியினரிடையேயும், பண்பாட்டுத் திகைப்பும் அதன் காரணமாக இன வெறுப்பும் ஏற்பட்டுள்ளதைக் காணலாம்.

பொறியியல், மருத்துவம், அறிவியல், தொழில் நுட்பம் ஆகிய துறையின் வல்லுநர்கள் சிறந்த பட்டங்கள், அனுபவங்கள் பெற்ற பின் தம் தாய் நாட்டுக்காகப் பணிபுரியாமல் தங்கள் சொந்த முன்னேற்றங் கருதி வளர்ந்த நாடுகளுக்குப் பணியின் பொருட்டுச் சென்று விடுவதை அறிஞர் புடைப் பெயர்ச்சி (Brain Drain) எனக் கூறுவர். ஆனால், பொருளாதாரக் கண் கொண்டும், உலக மனப்பான்மைக் கண்கொண்டும் பார்க்கும்போது அறிஞர் புடைப் பெயர்ச்சியைக் குறையுடையதாகப் பொருளாதார வல்லுநர் பலர் ஒத்துக் கொள்வதில்லை. வல்லுநர்கள் எந்த நாட்டிலிருந்தாலும் அவர்கள் பணி மனிதக் குல முழுமைக்கும் மனிதக்குல முன்னேற்றத்திற்கும் பயன்படத் தான் செய்யும் என்ற தத்துவத்தின் அடிப்படையில் பார்க்கும்போது தனிப்பட்ட நாட்டின் இழப்புப் பெரிதாகத் தோன்றுவதில்லை.

தாமே சிந்தனை செய்யும் பழக்கம் மக்களிடமும் மாணவர்களிடமும் ஏற்பட வேண்டும். எது சரி, எது தவறு என ஆய்ந்து பார்க்கும் தன்மை, விளம்பரங்களாலும் பொய்ச் செய்திகளாலும் பாதிக்கப்படாத உள்ளம் ஆகிய இவை மக்களிடம் வளர்க்கப்பட வேண்டும். மனித வாழ்வில் மொழி சிறந்த இடம் பெறுகிறது. ஒருவன் தன் தாய்மொழி மட்டுமன்றி ஒரு நாட்டின் பிற மாநிலங்களின் மொழியையும் பிற நாடுகளின் மொழியையும் கற்றிருத்தல் நலம். பிற மொழிகளைக் கற்றலால், ஒருவனுடைய இடம் பெயர்தல் (Movement) சொந்த முன்னேற்றம் ஆகியவற்றிற்கு மட்டுமன்றி, அம்மொழி பேசுவோருடன் மன எழுச்சி கலந்த ஒருறவு ஏற்படவும் அது உதவுகிறது.

கோ.சு.

துணை நூல்:

Philips H.M., Educational Co-Operation Between Developed and Developing Countries, Prager Publishers, New York, 1976.

**உலக மனித உரிமைப் பிரகடனம்:** உலகமனித உரிமைப் பிரகடனம் உலகில் மனிதாபினத்தோடு மனிதர்கள் இருக்க வேண்டுமென்பதற்காகவும், மனிதர்கள் முழுமனிதர்களாக எல்லா ஆளுமையும் பெற்று விளங்கவேண்டும் என்பதற்காகவும் கொண்டு வரப்பட்டது. உலகத்தின் முதல் மக்கள் உரிமைச் சாசனம் இது என்று கூறினால் மிகையாகாது. ஏனெனில், எல்லா மக்களுக்கும் பொதுவான உரிமைகள் கொண்டு வர முயற்சிகள் சில எடுக்கப்பட்டாலும், அவை வெற்றி பெறவில்லை. உலக மனித உரிமைப் பிரகடனம் (Universal Declaration of Human Rights) தான் ஐக்கிய நாட்டு அவையால் எல்லோருக்கும் பொருந்தக்கூடிய வகையில் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது.

உலக மனித உரிமைப் பிரகடனம் உலகிற்குத் தேவை என்பதை இரண்டாம் உலகப் போர் உணர்த்தியது. இரண்டாம் உலகப் போரில் ஏற்பட்ட மனிதாபிமானமற்ற தாங்கொணாத் துயரங்களுக்குப் பின்னர், மனித உரிமைகளைக் காக்கவேண்டும் என்ற எண்ணம் தலை தூக்கியது. ஏனெனில், இப்போரின் போது சருவாதிகார வல்லரசுகள் ஏராளமான மக்களைக் கொன்று குவித்தன. எனவே, மனிதர்களைக் காக்கவேண்டும், அவர்களுக்குப் போதுமான பாதுகாப்பு வழங்கப்பட வேண்டுமென்பதை எல்லா நாடுகளும் உணர்ந்தன. எல்லா மக்களுக்கும் சுதந்திரமும் உரிமைகளும் கொடுக்க வேண்டுமென்பதில் நாடுகள் கவனம் செலுத்தின. உலக அளவிலான ஒரு சாசனம் தேவையென்பதை உணர்ந்து அதனை உருவாக்க முயன்றன. உலகின் முதல் உரிமைச் சாசனமாக 1945-ஆம் ஆண்டு சான்பிரான்சிசுகோ சாசனத்தைக் (San Francisco Charter of 1945) கூறலாம். மதம், மொழி, பால், இனம் ஆகிய வேறுபாடு காட்டியது தான் இச்சாசனத்தின் குறை. தவிர, இச்சாசனம் உரிமைகளையும் வரையறுத்துச் சொல்லவில்லை. பன்னாட்டளவில் ஒரு நிறுவனம் இதற்கென ஏற்படுத்த வேண்டுமென்றும் சொல்லவில்லை. இக்குறைகளையெல்லம் நீக்குகின்ற வகையில் உலக மனித உரிமைப் பிரகடனத்தை ஐக்கிய நாடுகளின் பொது அவை 1948-ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 10-ஆம் நாள் நிறைவேற்றியது. இதற்கு 48 நாடுகள் ஆதரவு தெரிவித்தன. எந்த நாடும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. இருப்பினும், 8 நாடுகள் இத்தீர்மானம் நிறைவேற்றுவதில் பங்கு பெறவில்லை. உலக மனித உரிமைப் பிரகடனம் நிறைவேற்றிய திசம்பர் 10-ஆம் நாள் உலக மக்களின் உரிமை நாள் என்று உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது.

உலக மனித உரிமைப் பிரகடனத்தில் 30 பிரிவுகள் (Articles) இடம்பெற்றுள்ளன. மனித உரிமைகள் அனைத்தையும் உள்ளடக்கக்கூடிய வகையில் பரந்த அளவில் இது அமைக்கப்பட்டுள்ளது மட்டுமன்றி, எல்லா நாடுகளுக்கும் எல்லா மக்களுக்கும் பொருந்தக் கூடிய அளவில் இது அமைந்துள்ளது. மக்கள் அனைவரும் சுதந்திரமானவர்கள்; சமத்துவ உரிமை

கொண்டவர்கள். மக்கள் ஒருவருக்கொருவர் சகோதர பாசத்துடன் பழகவேண்டும். சுதந்திரமும் சமத்துவ உரிமையும் மக்கள் அனைவருக்கும் உரியவை. இனம், நிறம், பால், மொழி, மதம், அரசியல், தேசியம், சமூகம், சொத்து, பிறப்பு ஆகிய காரணிகளால் எவரையும் வேறுபடுத்திக் காட்டக் கூடாது. ஒவ்வொருவரும் உயிர்வாழ, பாதுகாப்புப் பெற, உரிமை பெற உரிமை உடையவர்கள். மனிதர்கள் எவரையும் அடிமைகளாக நடத்தக்கூடாது. மனிதர்களை அடிமைகளாக்குவது, அடிமைகளாக்கி அவர்களை விற்பனை செய்தல் போன்றவை எல்லா வகைகளிலும் தடை செய்யப்பட வேண்டும். மனிதர்களுக்குக் கொடுமையான மனிதத் தன்மையற்ற தண்டனைகள் அளிக்கக்கூடாது. தனிப் பட்டவரை எல்லா இடங்களிலும் தனிபட்டவரெனச் சட்டப்படியாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று இந் தப் பிரகடனம் கூறுகிறது.

சட்டத்தின் முன் எல்லா மக்களும் சமம், எவ் விதப் பாகுபாடுமின்றிச் சட்டமுறையில் அனைவருக் கும் பாதுகாப்பு வழங்கவேண்டும். அரசியலமைப்பு முறையால் அல்லது சட்டமுறையால் வழங்கப்பட்ட அடிப்படை உரிமைகள் பாதிக்கப்பட்டால், அதற்குத் தீர்வு காண்பதற்குப் பொருத்தமான தகுதி வாய்ந்த தேசியத் தீர்ப்பு மன்றங்கள் (National Tribunals) அமைக்கப்படவேண்டும். எதேச்சாதிகாரத்தைப் பயன் படுத்தி யாரையும் கைது செய்தல், சிறையிலடைத் தல், அல்லது நாடு கடத்தல் கூடாது. குற்ற வியல் வழக்குகள் எவர்மீதாவது சுமத்தப்பட்டால், அவ்வழக்குகள் கட்டுப்பாட்டிற்குட்படாத, பாரபட்ச மில்லாத வழக்குமன்றங்களில் பொது விசாரணை செய்யப்படுவதற்கு ஒவ்வொருவருக்கும் முழுச் சமத் துவ உரிமை வழங்க வேண்டும். சட்ட முறையில் பொது விசாரணையின் போது குற்றம் சுமத்தப்பட்ட வர் தம்மைக் காத்துக் கொள்ள வாய்ப்புகள் அளிக் கப்படவேண்டும்.

தனிப்பட்டவர் வாழ்வு, குடும்பம், வீடு, கடிதத் தொடர்புகள், அல்லது அவரது நற்பெயர் ஆகியவற் றைப் பாதிக்கக்கூடிய செயல்களில் எதேச்சாதிகார முறையில் குறுக்கீடு செய்யக்கூடாது. குறுக்கீடு ஏற் படாவண்ணம் தங்களைக் காத்துக் கொள்ள ஒவ் வொருவருக்கும் உரிமை உண்டு. நாட்டின் எல்லைக் குள் எங்கு வேண்டுமானாலும் செல்லவும் வசிக்கவும் ஒவ்வொருவருக்கும் சுதந்திரம் அளிக்கப்பட வேண் டும். ஒவ்வொருவருக்கும் தங்களுடைய நாட்டைவிட்டு வெளியே போகவும், திரும்பி வரவும் உரிமை கொடுக் கப்பட வேண்டும். குடியுரிமை (Nationality) பெற ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு. எதேச்சாதிகார முறையில் எவருடைய குடியுரிமையையும் பறிக்கக் கூடாது. குடியுரிமை மாற்றும் உரிமையையும் மறுக்கக் கூடாது.

வயது வந்த ஆணும் பெண்ணும் திருமணம் செய்துகொள்ள, குடும்பம்அமைத்துக் கொள்ள உரிமை உண்டு. அதற்கு இனம், தேசியம், மதம் போன்றவை எதிராக இருக்கக்கூடாது. அவர்கள் சுதந்திரமாகவும், முழு இணக்கத்தோடும் திருமணம் செய்துகொள்ள உரிமை வேண்டும். அதேபோல் மணவிலக்குச் செய்து கொள்ளவும் மக்களுக்கு உரிமை உண்டு. தனிப்பட்ட வர்கள் தனியாகவும், கூட்டாகவும் சொத்து வைத்துக் கொள்ளலாம். எதேச்சாதிகாரத்தைப் பயன்படுத்தி எவருடைய சொத்தையும் பறிக்கக் கூடாது. தாமே சிந்திக்கவும், தம் விருப்பப்படி மதத்தைப் பின்பற்றவும் ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு. மதத்தையும், சமய நம்பிக்கையையும் மாற்றிக் கொள்ளவும் சுதந் திரம் உள்ளது. மக்கள் தங்கள் கருத்துகளை உரு வாக்கிக் கொள்ளவும் வெளியிடவும் உரிமை உடைய வர்கள். அமைதியான முறையில் தனிப்பட்டவர்கள் கூடுவதற்கும் சங்கங்கள் அமைத்துக் கொள்ளுதற்கும் உரிமை உண்டு. ஆனால், யாரையும் கட்டாயப்படுத்தி ஒரு சங்கத்தில் உறுப்பினராக்கக் கூடாது.

தங்களுடைய நாடுகளின் அரசாங்கங்களில் நேரடி யாகவும்,தேர்ந்தெடுக்கப்பட்ட தங்கள் பேராளர்களின் மூலமாகவும் அரசாங்க நடவடிக்கைகளில் பங்குபெற மக்களுக்கு உரிமை உண்டு. அரசாங்கப் பணியில் சேர வும் அனைவருக்கும் சம உரிமை உண்டு. மக்களின் எண்ணங்களுக்கு ஏற்பத்தான் அரசாங்க நடவடிக்கை கள் இருக்கவேண்டும். மக்களின் எண்ணங்களைத் தேர் தல் மூலம் கணிக்கவேண்டும். இரகசிய வயது வந் தோர் வாக்களிக்கும் முறைக்கு ஏற்ப இரகசியமாகக் குறித்தகாலத்தில் முறையாகத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். ஒவ்வொருவரும் சமூகத்தின் உறுப்பாக இருப்பதால், சமூகப் பாதுகாப்பு, சமூக பொருளா தாரப் பண்பாட்டு உரிமைகள் போன்றவை பெற்றுத் தங்களை வளர்த்துக்கொள்ள உரிமை உண்டு.

ஒவ்வொரு தனிப்பட்டவருக்கும் வேலை பெற வும் வேலையைத் தேர்ந்தெடுக்கவும் முறையான பணிக்கட்டுப்பாடுகள் மற்றும் வேலையில்லாமை ஆகியவற்றிலிருந்து விடுபடவும் (Protection Against Unemployment) உரிமை உண்டு. எவ்விதப் பாகுபாடு மின்றிச் சமவேலைக்குச் சம ஊதியம் வழங்கப்பட வேண்டும். வேலை செய்வோர் நியாயமான ஊதியம் பெறவும், தங்களுடைய நலன்களைக் காக்கவும், பணி யாளர் சங்கங்கள் அமைக்கவும், பணியாளர் சங்கங் களில் சேரவும் உரிமை கொண்டவர்கள்; வேலையி லிருந்து ஓய்வு பெறவும் இளைப்பாறவும் உரிமை

வழங்கப்படவேண்டும். இதில் வேலை நேரம், ஊதியத்துடன் விடுப்பு ஆகியவையும் அடங்கும்.

ஒவ்வொருவரும் தமக்கும், தம்முடைய குடும்பத்தாருக்கும் தேவையான வாழ்க்கைத் தரத்தைப் (Adequate Standard of Livelihood) பாதுகாக்க வேண்டும். இதில் உணவு, உடை, உறையுள், மருத்துவ வசதிகள், சமூகப் பணிகள், வேலையில்லாமையிலிருந்து விடுபடல், நோய், இயலாமை, மூப்பு ஆகியன அடங்கும். குழந்தைகள், தாய்மார்கள் ஆகியோர்களைச் சிறப்பாகக் கவனிக்க வேண்டும். திருமணமாகிக் குழந்தை பிறந்தாலும், திருமணமாகாமல் குழந்தை பிறந்தாலும், குழந்தைகள் அனைவரும் ஒரே தன்மையான சமூகப் பாதுகாப்பிற்கு உட்பட்டவர்கள்.

மனிதனின் முழு வளர்ச்சிக்கு உதவுவது கல்வி. இக் கல்வி பெற ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு. குறைந்த அளவு தொடக்கக் கல்வியாவது இலவசக் கல்வியாகவும் கட்டாயக் கல்வியாகவும் இருக்க வேண்டும். தொழிற் கல்வி பொதுவானதாக இருத்தல் வேண்டும். உயர் கல்வியைத் தகுதியுள்ள அனைவரும் பெற உரிமை உண்டு. நாடுகளுக்கிடையே நல்லெண்ணம், நட்பு, சகிப்புத்தன்மை ஆகியன உருவாகவும் ஐக்கிய நாடுகள் அவையின் நோக்கான உலக அமைதியைப் பாதுகாக்கவும் கல்வி இன்றியமையாதது. சமூக, பண்பாட்டு நடவடிக்கைகளில் பங்குபெற ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு. சமூக, பன்னாட்டு ஒழுங்குகளில் ஈடுபாடு கொள்ள அனைவருக்கும் உரிமை உண்டு.

தனிப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகளை ஐக்கிய நாட்டு அவையின் குறிக்கோள்கள், கொள்கைகள் ஆகியவற்றிற்கு எதிராகப் பயன்படுத்தக்கூடாது. இவ்வுரிமைகளை அழித்திட அல்லது இவற்றைப் பாதிக்கவல்ல நடவடிக்கைகளை எடுக்க யாருக்கும் உரிமை இல்லை.

உலக மனித உரிமை உறுதிமொழி மிகத் தெளிவாக எல்லா உரிமைகளையும் எல்லா மக்களுக்கும் வழங்கியுள்ளதெனினும், நடைமுறையில் பல குறைபாடுகள் காணப்படுகின்றன. இந்த உரிமைகள் யாவும் உலக நாடுகள் எல்லாவற்றிலும் நடைமுறையில் காணப்படுகின்றன என்று கூறமுடியாது. சி.ஞா.

துணை நூல்கள்:

**Ian Brounlie**, Basic Documents on Human Rights, Clarendon Press, Oxford, 1971.

**Evan Luard**, The United Nations, Macmillan, 1982.

## உலக மேம்பாட்டு ஆராய்ச்சி மையம்

கனடா நாட்டின் நாடாளுமன்றம், 1970-ஆம் ஆண்டு கொண்டுவந்த சட்டத்தின்படி, ஒட்டாவா நகரில் தோற்றுவிக்கப்பட்டது. இது ஒரு தன்னாட்சியுரிமை பெற்ற அரசு நிறுவனமாக விளங்கி வருகிறது. வளரும்நாடுகளின் சிக்கல்கள் குறித்து ஆய்வு நடத்துதல், அத்தகு ஆய்விற்கு உதவுதல், ஊக்கப்படுத்துதல் ஆகியன உலக மேம்பாட்டு ஆராய்ச்சி மையத்தின் (International Development Research Centre - IDRC) தலையாய பணிகளாகும். மேலும், வளர்நாடுகளின் பொருளாதார, சமூகச் சிக்கல்களை அறிவியல், தொழில் நுட்பம் ஆகியவற்றின் துணையோடு தீர்த்திடத் தூண்டுவதும் உதவுவதும் இம்மையத்தின் பணிகளுள் அடங்கும்.

உலக மேம்பாட்டு ஆராய்ச்சி மையம் இயங்கிடக் கனடா அரசு மட்டுமே பணவுதவி செய்து வந்தாலும், இம்மையத்தின் நிருவாகப் பொறுப்பு முழுதும் 11 ஆளுநர்களைக் கொண்ட பன்னாட்டுக் குழுவிடமே உள்ளது. இக்குழுவில் கனடாவைச்சேர்ந்தவரும், பிற 10 நாடுகளைச்சேர்ந்தவர்களும் உள்ளனர். பெரும்பாலும் வளரும்நாடுகளில் உள்ளவர்களே இக்குழுவில் உறுப்பினர்களாக உள்ளனர். இக்குழுவும் இதன் செயற்குழுவும் ஆண்டிற்கு இருமுறை தனித்தனியே கூடி, இம்மையத்தின் பணிகள் குறித்துக் கலந்துரையாடுகின்றன. இக்குழுக்கள், இம்மையம் மேற்கொள்ளும் ஆராய்ச்சித் திட்டங்களுக்கு ஒப்புதலளிக்கின்றன.

மக்கள் தொகைப் பெருக்கம், அறிவியல், தொழில் நுட்பம், பொருளாதாரம், ஊரக மேம்பாடு, வேளாண்மை, உணவு உற்பத்தி, ஊட்டச் சத்துணவு, உடல்நலம், தகவல்தொடர்பு ஆகிய துறைகளில் ஆராய்ச்சிப் பணிகளுக்கு உலக மேம்பாட்டு ஆராய்ச்சி மையம், முதலிடம் தருகிறது. மேலும், வளரும் நாடுகளின் மக்கள் ஆற்றல் வளத்தினை மேம்படுத்துதலிலும் ஈடுபாடு காட்டுகிறது.

வளரும் நாடுகளில் தனியார் அல்லது அரசு நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் குறிப்பிட்ட ஆராய்ச்சித் திட்டங்களுக்கு உலக மேம்பாட்டாராய்ச்சி மையம் நேரடியாகப் பணவுதவி செய்து வருகிறது. இம்மையம் செலவிடும் மொத்தத் தொகையில், ஆராய்ச்சித் திட்டத்தை மேற்கொள்ளும் நிறுவனமும் குறிப்பிடத்தக்க அளவில் பணம் ஒதுக்குதல் வேண்டும் என்று இம்மையம் எதிர்பார்க்கிறது.

செயலாராய்ச்சி, தகவல் திரட்டுதல், தகவல் பகுப்பு, கண்டுபிடிப்புகளை வெளியிடுதல் போன்ற ஆய்வுப் பணிகளுக்கு மட்டும் உலக மேம்பாட்டாராய்ச்சி மையத்தின் பணவுதவி கிடைக்கும். ஆராய்ச்சிக்காகக் கட்டடம் கட்டுதல், வாடகைக்கு இடம் பிடித்தல், அல்லது நிலம் வாங்குதல் போன்ற செயல்களுக்குப் பணவுதவியினை இம்மையம் செய்வதில்லை. கருத்தரங்கம், கருத்தாக்கப் பட்டறை, குறுகிய காலப் பயிற்சி ஆகியவற்றுக்கு இம்மையத்தின் பணவுதவி உண்டு.

உலக மேம்பாட்டாராய்ச்சி மையம் ஆசியா, இலத்தீன் அமெரிக்கா, ஆப்பிரிக்கா, மத்திய கிழக்கு நாடுகள், கரீபியன் கடல் நாடுகள் உட்பட அனைத்து வளரும் நாடுகளிலும் செயற்பட்டு வருகிறது. இம்மையம், எந்தவொரு நாட்டிற்கும் இவ்வளவுதான் பணவுதவி என்று முன்கூட்டியே ஒதுக்குவது இல்லை. மேலும், இம்மையம் தரும் பணவுதவியால், ஆராய்ச்சித் திட்டங்களை ஒரு குறிப்பிட்ட நாட்டில் மட்டுமே நடத்தலாம்; அல்லது, பல நாடுகளின் சிக்கல்களை ஒத்தாய்ந்து அவற்றை நீக்கிடப் பன்னாட்டுத் தொடர்பிலும் நடத்தலாம். மாணவர் தாமே கற்கும் முறை, கல்வி முடித்துப் பின் தொழில் ஏற்கும் நிலைமை,ஆசிரியர் திறப்பாடு, மாணவர் வகுப்பறை நடத்தை, எழுத்தறிவு ஆய்வு, பொதுமக்கள் கல்வி, சமுதாய மேம்பாடு ஆகிய கல்வியியல் பகுதிகளில் இம்மையம், ஆராய்ச்சித் திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கியுள்ளது.

உலக மேம்பாட்டாராய்ச்சி மையத்தின் தலைமையகம் ஒட்டாவா (Ottawa) நகரில் இருந்தாலும், இம் மையத்தின் மண்டல அலுவலகங்கள் சிங்கப்பூர், நைரோபி, புதுதில்லி, தாகர் (Dakar), கெய்ரோ பொகாட்டா (Bogota) ஆகிய தலைநகர்களில் உள்ளன. இம்மையம் பற்றிய பிற செய்திகள், 'தகவல் தொடர்புப் பிரிவு, (Communications Division) IDRC, பெட்டி எண் 8500, ஒட்டாவா K1G3H9, கனடா' என்ற முகவரியுடன் தொடர்பு கொண்டால் கிடைக்கும்.

எஸ்.த.

**உலக வங்கி**: இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் பல நாடுகளில் போரின் காரணமாகப் பெருஞ் சீரழிவுகள் ஏற்பட்டன. இச்சீரழிவுகள் பொருளாதார வளர்ச்சியடைந்த நாடுகளையும் பாதித்தன. ஐரோப்பிய முதலாளித்துவ நாடுகளில் அயல்நாட்டு வாணிகம், பன்னாட்டுச் செலாவணி ஆகியவற்றில் சமனற்ற நிலைகள் தோன்றின. இந் நிலைகளை மாற்ற ஐக்கிய நாடுகளின் (UNO, பிரிட்டன் உட்சு (Bretton Woods) மாநாடு 1944-ஆம் ஆண்டு, சூலை மாதத்தில் நடைபெற்றது. உலக வங்கி என்ற அமைப்பினை உருவாக்க வேண்டும் என்ற கருத்தை அம்மாநாடு முன்மொழிந்தது. உலக வங்கியின் (World Bank) அறிவிப்பு ஆவணம் 1945-ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 27-ஆம் நாள் பிரிட்டன் உட்சு மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. பின்னர் 1946-ஆம் ஆண்டு,சூன் 25-ஆம் நாள் முதல் உலக வங்கி செயற்படத் தொடங்கியது. போரினால் பாதிக்கப்பட்ட ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார மறுசீரமைப்புக்கு உதவுவதுதான் வங்கியின் முதன் நோக்கமாக அறிவிக்கப்பட்டது. உலக வங்கி செயற்படத் தொடங்கிய சில ஆண்டுகளில் வளர்ந்து வரும் நாடுகளுக்குத் தேவையான திட்டங்களுக்கு நிதி உதவியை அளிக்கத் தொடங்கியது. இவ்வங்கி இன்று உலக நாடுகளின் பல்நோக்கு வளர்ச்சித் திட்டங்களுக்கு நிதியளிக்கும் மிகப்பெரிய அமைப்பாக விளங்குகிறது.

பன்னாட்டு நிதிக் கழகமும் பன்னாட்டு வளர்ச்சி நிறுவனமும் உலக வங்கியின் இணை உறுப்புகளாக இயங்கி வருகின்றன. பன்னாட்டு நிதிக் கழகம் (International Finance Corporation) 1956-ஆம் ஆண்டிலும், பன்னாட்டு வளர்ச்சி நிறுவனம் (International Development Agency) 1960-ஆம் ஆண்டிலும் தொடங்கப் பெற்றன. உலக வங்கியும் அதன் இணை உறுப்பு நிறுவனங்களும் ஒரே அமைப்பில் இயங்கிச் செயல்திட்டங்களை உருவாக்குகின்றன. இந்த நிறுவனங்களின் தலைமை அலுவலகம் வாசிங்டன் நகரில் அமைந்துள்ளது. கிழக்கு ஆப்பிரிக்கா, மேற்கு ஆப்பிரிக்கா, மேற்கு ஆசியா, பசிபிக்கு நாடுகள், தெற்காசிய நாடுகள், ஐரோப்பிய நாடுகள், மத்திய கிழக்கு நாடுகள், வட ஆப்பிரிக்கா, இலத்தீன் அமெரிக்கா, கரீபியன் நாடுகள் ஆகியவற்றில் வட்டார மைய அலுவலகங்கள் இயங்கி வருகின்றன.

பன்னாட்டு நிதிக் கழகம் (IFC) வளருகின்ற நாடுகளில் உள்ள தனியார் நிறுவனங்களுக்கு நிதியுதவி அளித்து வருகிறது. பன்னாட்டு வளர்ச்சி நிறுவனம் (IDA), வேளாண்மை, ஊரக வளர்ச்சி, தொழில், கல்வி, மின்சக்தி, குடிநீர் வசதி, போக்குவரத்து, செய்தித் தொடர்பு, நகர்ப்புறவளர்ச்சி போன்ற ஆக்கப் பணிகளுக்கு நிதியுதவி அளிக்கிறது. இந் நிறுவனம் ஐம்பதாண்டு நீண்டகாலக் கடன்களைப் பொருளாதார வளங்குன்றிய நாடுகளுக்கு வழங்குகிறது. இக்கடன்களுக்கு 0.75% பணிக் கட்டணத்தைத் (Service Charge) தவிர வட்டி ஏதும் கிடையாது. உலக வளர்ச்சி நிறுவனம் அளிக்கும் கடன்களுக்குச் சில நெறிகள் வரையறுக்கப்படுகின்றன. முதலாவதாகக் கடன்

பெறும் நாடுகளின் தனி ஆள் வருமானம்(Per Capita Income) குறைந்தது ஆண்டிற்கு 375 அமெரிக்கத் தாலர்கள் இருத்தல் வேண்டும். உலக வங்கியில் கடன் பெறுகின்ற நாடுகள் பன்னாட்டு நாணய நிதியமைப்பில் (International Monetary Fund) உறுப்பினராக இருக்க வேண்டும். உலக வங்கியில் அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு, மேற்குச் செருமனி, சப்பான் போன்ற நாடுகள் சக்தி வாய்ந்த பங்கு உறுப்பினர்களாகத் திகழ்கின்றன. உலக வங்கி (International Bank for Reconstruction and Development-IBRD) பன்னாட்டு வளர்ச்சி நிறுவனம் (IDA) ஆகிய நிறுவனங்களுக்குப் பொதுவான நிருவாக அமைப்பு உள்ளது.

இந்நிருவாக அமைப்பில் ஆட்சிக் குழுவினர்களும் (Board of Governors) 25 நிருவாக இயக்குநர்களும் (Executive Directors) சேர்ந்து உயர் அளவிலான கொள்கை முடிவுகளை எடுப்பார்கள். இவ்வமைப்புக் கூட்டம் ஆண்டுதோறும் ஒருமுறை கூடுகிறது. பிற நிருவாகப் பணிகள் நிருவாக இயக்குநர்களிடம் ஒப்படைக்கப்படுகின்றன. நிருவாக இயக்குநர்களுடைய கூட்டம் வாரந்தோறும் வங்கியினுடைய தலைமை அலுவலகத்தில் நடைபெறுகிறது. நிருவாக இயக்குநர்களின் தலைவரே உலக வங்கி, பன்னாட்டு வளர்ச்சி நிறுவனம் ஆகியவற்றின் தலைவராவர். அதுபோன்றே உலக வங்கியின் அலுவலர்களும் பணியாளர்களும் பன்னாட்டு வளர்ச்சி நிறுவனத்தின் அலுவலர்களாகவும் பணியாளர்களாகவும் இருப்பார்கள். ஒரு நாட்டினுடைய பொருளாதார வளம், நிதிநிலை ஆகியவற்றின் அடிப்படையில் உறுப்பினர் செலுத்துத் தொகை (Subscription) வரையறுக்கப்படுகிறது. இவ்வங்கியில் வாக்குரிமை வலிமை (Voting Power),நாடுகளின் செலுத்துத்தொகை அளவின் அடிப்படையில் அமைந்துள்ளது. வங்கியின் இருப்பிலுள்ள பங்குத் தொகையின் அடிப்படையில் ஒவ்வோர் உறுப்பினருக்கும் 250 வாக்குகளுடன் ஒரு கூடுதல் வாக்கும் (Vote) அளிக்கப்படுகிறது.

உலக வங்கியில் அமெரிக்காவே மிகப்பெரிய பங்கு உறுப்பு நாடாக உள்ளது. அதாவது 25.30 விழுக்காடு செலுத்துத் தொகை மூலதனமாகவும், 22.60 விழுக்காடு வாக்களிப்பு வல்லமையும் பெற்றிருக்கிறது. இவ்வங்கியின் மூலதனம் (Capital) செலுத்துத் தொகை மூலம் பங்காகப் பெறப்பட்டாலும், கூடுதலான நிதிஆதாரங்களை வங்கி உலக மூலதனச் சந்தையில் (Capital Market) கடனாகப் பெறுகிறது. மற்ற நிதி ஆதாரங்கள், வங்கி கொடுக்கும் கடன்களின் வட்டி, திருப்பித் தரப்படும் கடன்தொகை ஆகியவற்றின் மூலமாகப் பெறப்படுகிறது. பன்னாட்டு வளர்ச்சி நிறுவனம் (IDA)நிதி ஆதாரத்தைச் செல்வமிக்க நாடுகளின் நிதிப் பங்கின் மூலமும், வங்கியினுடைய நிகர ஆதாயம் மூலமும் பெறுகிறது. உலக வங்கியில் 1984-ஆம் ஆண்டின் புள்ளி விவரப்படி 148 நாடுகள் உறுப்பினர்களாக அங்கம் வகிக்கின்றன. உலக வங்கியினுடைய அலுவலகங்கள் நியூயார்க்கு, பாரிசு, இலண்டன், செனிவா, தோக்கியோ ஆகிய ஐந்து உலக நகரங்களில் அமைந்துள்ளன. மேலும், வட்டார மையங்கள் (Regional Missions) நைரோபி, அபிதாசன் (In West Africa), பாங்காக்கு போன்ற நாடுகளில் உள்ளன. மேலும், 29 நாடுகளில் தொடர்பு மையங்களும் உள்ளன.

உலக வங்கியின் மொத்தச் செலுத்துத் தொகை மூலதனம் (Subscribed Capital) 1984 இல் 56,010,584,000 அமெரிக்கத் தாலர்களாகும். உலக வங்கி, பன்னாட்டு வளர்ச்சி நிறுவனம் (IDA), பன்னாட்டு நிதிக் கழகம் (IFC) போன்ற மூன்று அமைப்புகளும் சேர்ந்து 1984 இல் கடனாகவும் முதலீடாகவும் கொடுத்த தொகையின் மதிப்பு 16,220 மிலியன் அமெரிக்கத் தாலர்களாகும். உலக வங்கி மட்டும் 129 கடன்களை 43 நாடுகளுக்கு 1984-ஆம் ஆண்டில் வழங்கியுள்ளது. இத்தொகையின் மொத்த மதிப்பு 11949 மிலியன் தாலர்களாகும். இத்தொகையில் 36 விழுக்காட்டை இந்தியா, பிரேசில், இந்தோனேசியா போன்ற நாடுகள் கடனாகப் பெற்றுள்ளன.

உலக வங்கி வளர்ந்து வரும் நாடுகளில் பன்னாட்டுப் பொருளாதார நெருக்கடியால் ஏற்படும் இடைக்கால ஏற்றத்தாழ்வுகளைப் போக்குவதற்கு ஒரு சிறப்புத் திட்டத்தை 1983-ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின்படி வளர்ந்து வரும் நாடுகள் பொருளாதாரத் திட்டங்களால் ஏற்படும் கூடுதல் உற்பத்திச் செலவைச் சரிகட்ட வங்கி இரண்டாண்டுகளுக்கு நிதி உதவி அளிக்கிறது.

வளர்கின்ற நாடுகளின் (Developing Nations) தொழில் நுட்பத் திறன், வளர்ச்சியடைந்த, தொழில்மயமான நாடுகளின் அளவுக்கு ஏற்படப் பல்வேறு திட்டங்களின் மூலம் உலக வங்கி உதவி செய்கிறது. இத்திட்டத்திற்காக மட்டும் 10,93.2 மிலியன் அமெரிக்கத் தாலர் 1984-ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்டது. மேலும், 135 மிலியன் அமெரிக்கத் தாலர் செலவில் இலவசத் தொழில்நுட்ப ஆலோசனைக் குழுக்களை ஏற்படுத்தியுள்ளது. வங்கியின் உறுப்பு நாடுகளில் பொருளாதார ஆய்வை மேற்கொள்வதற்கும் திட்டங்கள் உள்ளன. வங்கியின் மொத்தச் செலவில் 3 விழுக்காடு அளவிற்கு ஆய்விற்காகச் செல

விடப்படுகிறது. இந்த ஆய்வுகளை உலக வங்கியில் பணியாற்றும் ஆய்வாளர்களே மேற்கொள்கிறார்கள். ஆய்வுத் திட்டங்கள் 1984-ஆம் ஆண்டில் மட்டும் 160க்கும் மேல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. வளர்கின்ற நாடுகளுக்குத் தேவையான பொருளாதார ஆலோசனைகளையும் உலக வங்கி வழங்குகிறது. வளர்கின்ற நாடுகளில் அந்நாட்டு வல்லுநர்களே ஆய்வை மேற்கொள்வதற்குப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

இவற்றிற்கு எடுத்துக்காட்டாகச் சிலவற்றைக் குறிப்பிடலாம். உலக வங்கி ஐவரி கோசுட்டு (Ivory Coast) என்னும் நாட்டில் பொருளாதாரப் பலன்கள் நல்ல முறையில் பங்கீடு செய்யப்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்துள்ளது. இவ் வங்கி தாய்லாந்தில் வேளாண்மை உற்பத்தித் திறனைப் பற்றியும் ஈக்குவடார் (Ecuador) என்னும் நாட்டில் குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கான வீடுகட்டும் திட்டத்தைப் பற்றியும் ஆய்வுகளை மேற்கொண்டது. ஐக்கிய நாடுகளின் மற்ற உறுப்பு அமைப்புகளான அனைத்து நாட்டுக்கல்வி அறிவியல் பண்பாட்டு நிறுவனம் (UNESCO), உணவு வேளாண்மை அமைப்பு (FAO), வேளாண்மை வளர்ச்சியின் பன்னாட்டு நிதி (International Fund for Agricultural Development) உலகச் சுகாதார அமைப்பு (WorldHealth Organisation), பன்னாட்டுத் தொழில் வளர்ச்சி அமைப்புப் (International Industrial Development Organisation) போன்ற அமைப்புகளுடன் கூட்டாகப் பல ஆய்வுத் திட்டங்களை உலக வங்கி மேற்கொள்கிறது. பொருளாதார வளர்ச்சி நிறுவனம் என்ற அமைப்பும் (Economic Development Institute) வங்கியின் நேரடிப் பார்வையில் இயங்குகிறது. இந்த அமைப்பு 1955-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. வளர்கின்ற நாடுகளில் உள்ள அரசு அலுவலகங்களின் செயல் திறனை வளர்ப்பதற்காகப் பல பயிற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அரசுச் சார்பு உயர்நிலை அலுவலர்கள், நடுத்தர அலுவலர்கள் ஆகியோர்களுக்கு இப்பயிற்சி அளிக்கப்படுகிறது. நாட்டுப் பொருளாதார நிருவாகம் (National Economic Management), திட்ட ஆய்வு (Project Analysis) போன்ற துறைகளில் பயிற்சி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தால் 1983-84-ஆம் ஆண்டில் மட்டும் 1,39,52000 அமெரிக்கத் தாலர்கள் செலவில் 2400 அலுவலர்கள் பங்கேற்ற 72 கருத்தரங்குகளும் பயிற்சி வகுப்புகளும் நடைபெற்றன.

முதலீட்டுச் சச்சரவுகளைத் தீர்க்கும் பன்னாட்டு மையம் (International Centre for Settlement of Investment Disputes) என்ற மற்றோரமைப்பை 1966-ஆம் ஆண்டு உலக வங்கி உருவாக்கியது. இந்த அமைப்பு வளர்ந்து வரும் நாடுகளில் அயல்நாட்டு முதலீட்டை ஊக்குவித்துப் பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணை புரிகிறது. பன்னாட்டு முதலீடுகளில் தனியார் நிறுவனங்கள் ஈடுபடும்போது அந்தந்த நாடுகளில் ஏற்படும் சட்டச் சிக்கல்கள், இடையூறுகள் ஆகியவற்றை இம்மையம் தீர்த்து வைக்கிறது. இம்மையத்திடம் 94 நாடுகள் ஒப்பந்தம் செய்துள்ளன. இம்மையத்தில் 1984-ஆம் ஆண்டில் 8 இடையூறான சிக்கல்கள் ஆய்வில் உள்ளன.

பன்னாட்டு வேளாண்மை ஆராய்ச்சிக்கான கலந்தாலோசனைப்பிரிவு (Consultative Group for International Agricultural Research) என்ற அமைப்பும் 1971-ஆம் ஆண்டு முதல் உலக வங்கியின் கீழ் இயங்கி வருகிறது. இந்நிறுவனம் ஐக்கிய நாடுகளின் பிற ஆய்வு நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு வேளாண்மை ஆய்வை மேறகொள்கிறது. சிறப்பாக வளர்ந்து வரும் நாடுகளில் பயிர் மற்றும் கால்நடை மேம்பாட்டுத் திட்டங்களுக்கு நிதி உதவியை இந்நிறுவனம் அளிக்கிறது. இத்தகைய 13 ஆய்வு மையங்கள் 1984-ஆம் ஆண்டில் மட்டும் உருவாக்கப்பட்டன.

இவ்வாறு உலக வங்கி பல்வேறு பொருளாதார நிதி ஆக்கத் திட்டங்களில் பங்கு கொள்கிறது. அந்நாடுகளில் ஏற்படும் பட்டறிவுகளை உலக வங்கியின் வெளியீட்டுத் துறை பல அறிக்கைகளாக வெளியிடுகிறது. கடன், நிதி உதவி ஆகியவற்றை அளிப்பதன் மூலம் பல நாடுகளின் பொருளாதாரத் தனித்தன்மையில் உலக வங்கி தலையிடுகிறது என்றும், அந்நாடுகளின் நிதி அமைப்பு முறையை ஆட்டிப் படைக்கிறது என்றும் சில பொருளியல் வல்லுநர்கள் கருதுகிறார்கள். உலக வங்கியின் இப்போதைய (1986) தலைவர் கிளாசன் (A.W. Clausen) என்பவராவர். மு.நா.

கல்விப் பணி: கல்வியில் புதிய மாற்றம் செய்வது, கல்வியை விரிவு படுத்துவது ஆகியவற்றின் மூலம் மனித வளத்தைப் பெருக்குவதற்காகத் தன் உறுப்பு நாடுகளின் கல்வித் துறைக்கு நிதியுதவி செய்வதை, உலக வங்கி தன் தலையாய குறிக்கோளாகக் கொண்டுள்ளது. மேலும் உலக வங்கியானது இயன்ற அளவில் அனைத்துக் குழந்தைகளுக்கும் முதியோர்களுக்கும் அடிப்படைக் கல்வி அளித்தல்; தொலை நோக்கில் ஒரு முழுத்தன்மை வாய்ந்த – அதாவது முறை சார்ந்ததும் முறைசாராததுமான கல்வி அமைப்புகளை அனைத்து நிலைகளிலும் பெருக்குதல்; பால் வேறுபாடு, சமூகப் பொருளாதார, இன வேறுபாடுகள் இன்றி அனைவருக்கும் சமுதாயத்தில் சம

வாய்ப்புகள் கொடுத்து அதன் மூலம் உற்பத்தித் திறனை அதிகரித்தல் ஆகியவற்றைச் செயற்படுத்தவும் உதவி செய்கிறது.

உலக வங்கியால் நிதி உதவி அளிக்கப்படும் கல்வித் திட்டங்கள் பல தரப்பட்டவை. உலக வங்கியின் உதவியால், கல்வியமைப்புகள் புதுமைப்படுத்தவும் பெருக்கவும் படுகின்றன. இத்திட்டங்களை நிறைவேற்றுவதற்காகப் பாடத் திட்டச் சீர்திருத்தங்கள், பாடநூல்கள், ஆசிரியர் கையேடு போன்ற கற்பித்தல் மென் பொருள்கள் (Soft ware) உற்பத்தி செய்யத் தொழில் நுணுக்க உதவியும் நிதியுதவியும் வழங்குதல்; கல்வித் திட்டங்கள் அமைக்க உதவி அளித்தல்; அறிவியல் கற்பித்தலுக்கு முன்னுரிமையளித்து ஊக்கமளித்தல் ஆகிய செயல்களைச் செய்து வருகிறது.

உலக வங்கியானது முறை சாராக் கல்வி, கல்வி ஒலிபரப்பு, கல்வித் தொலைக் காட்சி, பயிற்றுவிக்கும் பொருள்கள், துணைப் பொருள்கள் ஆகியவற்றிற்கும் கல்வி அமைப்புகளின் மேலாண்மைப் பயிற்சிக்கும் நிதி உதவியளிக்கிறது.

நிதி உதவி வேண்டும் நாடுகளின் பொருளாதாரத்திற்கும் சமூகத் தேவைகளுக்கும் ஈடு செய்யும் வகையில் ஏற்படுத்தப்பட வேண்டிய கல்விப் பயிற்சி அமைப்புகளுக்கு உதவி அளிப்பதையே உலக வங்கி தலையாய பணியாகக் கொள்கிறது.

உலக வங்கியானது 1962 முதல் 1971 வரையிலான காலத்தில் 431.45 மிலியன் அமெரிக்கத் தாலர்களை 57 கல்வித் திட்டங்களுக்கு அளித்துள்ளது. இவற்றுள் 71.8 சதம் இடைநிலைக் கல்விக்கும், 13.0 சதம் இடைநிலை மேற்கல்விக்கும்,10.0 சதம் பல்கலைக்கழகக் கல்விக்கும், 4.1 சதம் முதியோர் கல்விக்கும், 1.1. சதம் தொடக்கக் கல்விக்கும் அளிக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட நிதி உதவியைப் பாடத் திட்ட அமைப்போடு ஒப்பிட்டால், அது முறையே 44.1 சதம் பொதுக் கல்வித் திட்டத்திற்கும், 29.3 சதம் தொழிற் கல்வித் திட்டத்திற்கும், 14.7 சதம் வேளாண்மைக் கல்வித் திட்டத்திற்கும், 11.9 சதம் ஆசிரியர் பயிற்சிக் கல்வித் திட்டத்திற்கும் தரப்பட்டுள்ளன என்பது புலனாகும்.

உலக வங்கி, கல்விப் பணிகளுக்கான கடன் உதவியைத் தொடங்கிய 1962-இலிருந்து, 1982-ஆம் ஆண்டுக் கடைசி வரை உள்ள இருபது ஆண்டுக் காலத்தில் மொத்தம் 243 கல்வித் திட்டங்களுக்கு உதவி அளித்துள்ளது. இச் சேவையினால் உலகில் உள்ள 91 வளரும் நாடுகள் பயன் அடைந்துள்ளன. இந்த இருபது ஆண்டுக் காலத்தில், உலக வங்கி மொத்தமாக 9.2 பிலியன் அமெரிக்கத் தாலரைக் கல்விக்கென உதவியாக அளித்துள்ளது. எடுத்துக்காட்டாக, உலக வங்கியின் நிதி கொண்டு துருக்கியானது அறிவியல் பயிற்றுவித்தலுக்கான துணைப் பொருள்களை, குறைந்த அளவில் எளிதில் கிடைக்கக் கூடிய எளிய பொருள்களைக் கொண்டு செலவின்றித் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறது. கென்யா, தான்சானியா ஆகிய நாடுகள் உழவர்கள் பயிற்சி மையங்களுக்கென முறைசாராக் கல்வி அமைப்புகளை ஏற்படுத்தியுள்ளன. சிலி நாடானது தொழிற் பயிற்சி அமைப்புகளைத் தொடங்கியுள்ளது. நைசர் (Niger) நாட்டின் தலை நகரான நியாமியில் (Niamey) இருபது வகுப்பறைகளில் தொலைக் காட்சிக்கான சோதனைச் செயல்திட்டம் தொடங்கப்பட்டு உள்ளது.

இந்தியா உலக வங்கியில் தொடக்க கால உறுப்பினராக இருந்து வருகிறது. இந்திய அரசின் வளர்ச்சி மேம்பாட்டுத் திட்டங்களுக்கு நிறைந்த பொருளாதாரம் தேவைப்படும் போதெல்லாம் உலக வங்கி தொடர்ந்து நிதி உதவி செய்து வரும் ஓர் அமைப்பாக இருந்து வருகிறது. இந்திய அரசின் திட்டங்களைப் பற்றி ஆராய்ந்து அதை ஊக்குவிக்கும் பொருட்டுப் பல முறை உலக வங்கிக் குழுக்கள் இந்தியாவிற்கு வந்து கொண்டே இருக்கின்றன. இந்தியாவின் பொருளாதார மேம்பாட்டில் அக்கறை கொண்ட நாடுகள் இந்திய உதவிக் கழகம் (Aid India Consortium) என்ற அமைப்பின் பெயரில் இந்தியாவின் திட்டங்களுக்கு உலக வங்கி மூலம் தொடர்ந்து உதவி செய்து வருகிறது.

உலக வங்கி தனது உறுப்பு நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்திற்குத் தடைக்கற்களாக இருக்கும் பலவற்றுள் பயிற்சி பெற்ற ஆள்வலப் பற்றாக் குறையும் ஒன்றாகும் எனக் கருதுகிறது. கல்வி அமைப்புகளின் சீர்திருத்தங்களில் உலக வங்கி தனிக் கவனம் செலுத்துகிறது. கல்வி அமைப்புகளில் பல்கலைக் கழகக் கல்வி, தொழிற் கல்வி, தொழில் நுட்பக்கல்வி, பெண் ஆசிரியர் கல்வி ஆகியவற்றில் சிறப்புக் கவனம் தேவை எனக் கருதுகிறது. வரும் 1987-ஆம் நிதி ஆண்டில் உலக வங்கி, புதிய பலபடித்தான முதலீட்டுப் பாதுகாப்பு நிறுவனத்தின் மூலம் (Multilateral Investment Guarantee Corporation) பலபடித்தான வளர்ச்சி அமைப்புகளுக்கு நிதி உதவி அளிக்கத் தீர்மானித்துள்ளது. எதிர் காலத்தில் உலக வங்கி கல்விப் பணிகளுக்கென நிறைந்த உதவி செய்யும் சிறந்த நிறுவனமாகத் திகழும். ஆர்.சீ.

துணை நூல்கள்:


World Bank: Report of the External Advisory Panel on Education, World Bank, Washington, DC, 1978.

World Bank: World Development Report 1980, World Bank, Washington, DC, 1980.

World Bank: World Bank Atlas Population, Per Capita Product, and Growth Rates, World Bank, Washington, DC, 1981.


**உலக வயதுவந்தோர் கல்விக்கழகம்:** இரண்டாம் உலகப் போருக்குப்பின் உலகிலுள்ள பல்வேறு வளரும் நாடுகள் எழுத்தறிவின்மை, மக்கள் தொகைப் பெருக்கம், நோய் பரவுதல் போன்ற சிக்கல்களைக் கட்டுப்படுத்துவதில் பேரார்வம் காட்டத் தொடங்கின. இன்று உலகம் முழுவதிலும் ஏறத்தாழ 8,000 தொண்டு நிறுவனங்கள் (Voluntary Organizations) மக்களிடையேயுள்ள எழுத்தறிவின்மையை அகற்றிக் கல்வியறிவு அளிப்பதில் ஈடுபட்டுள்ளன. அப்பணிகளைச் செய்யும் நிறுவனங்களுள் முதன்மையான நிறுவனமாக உலக வயதுவந்தோர் கல்விக் கழகம் (International Council for Adult Education) உள்ளது.

உலக மக்களிடையே எழுத்தறிவின்மையை ஒழிப்பதில் மூன்றாம் உலக நாடுகள், 1972வரை, ஐக்கிய நாட்டுக் கல்வி சமூகப் பண்பாட்டு நிறுவனத்தின் உதவிகளை மட்டுமே நம்பியிருந்தன. சில நாடுகள் சொந்த முயற்சியாலேயே தம் நாட்டு ஆற்றல் வளங்களைப் பயன்படுத்திக் கல்வி வளர்ச்சியை மேம்படுத்திக் கொண்டிருந்தன.

மாண்டிரியலில் (Montreal) அனைத்து நாட்டுக் கல்வி அறிவியல் பண்பாட்டுநிறுவனத்தின் இரண்டாம் உலக மாநாடு 1960-இல் நடைபெற்றது. 'உலகிலுள்ள வயது வந்தோர் கல்விப் பணியில் ஈடுபட்டுள்ள அனைத்துத் தொண்டு நிறுவனங்களுக்கும் உதவி செய்து அவற்றை ஊக்குவிக்க வேண்டும்' என இம் மாநாடு பல்வேறு அரசுகளுக்கும் வேண்டுகோள் விடுத்தது.

தோக்கியோ (Tokyo) நகரில் 1972-இல் கூடிய அனைத்து நாட்டுக் கல்வி அறிவியல் பண்பாட்டு நிறுவனத்தின் மூன்றாம் உலக மாநாடு, உலகில் வயதுவந்தோர் கல்வியைப் பெருமளவில் ஊக்குவிக்க வேண்டும் என்று முடிவு செய்தது. தோக்கியோ மாநாட்டில் பார்வையாளராகச் (Observer) சென்றிருந்த பேராசிரியர் இராபி கித்து (Roby Kidd) என்பார், உலகிலுள்ள பல்வேறு தொண்டு நிறுவனங்களை ஒருங்கிணைக்க உலக வயதுவந்தோர் கல்விக்கழகம் இன்றியமையாதது என எண்ணினார். வயது வந்தோர் கல்வியில் பேரார்வமிக்க பேராசிரியர் இராபி கித்துவின் முயற்சியால், 1973-ஆம் ஆண்டு உலக வயதுவந்தோர் கல்விக்கழகம் நிறுவப்பட்டது.

உலக வயது வந்தோர் கல்விக்கழகத்தின் தலைமைச் செயலகம் கனடா நாட்டிலுள்ள தொராண்டோ (Toronto) என்னுமிடத்தில் உள்ளது. இக்கழகத்தில் 70க்கும் மேற்பட்ட நாடுகள் சேர்ந்துள்ளன. இக்கழகம், அனைத்து நாட்டுக்கல்வி அறிவியல் ஐக்கிய நாட்டுக் கழகங்களான பண்பாட்டு நிறுவனம் 'யூனிசெபு' (UNICEF) போன்றவற்றுடனும், வெவ்வேறு நாடுகளிலுள்ள தேசிய தொண்டு நிறுவனங்களுடனும், பல்கலைக் கழகங்கள், ஆராய்ச்சி, பயிற்சி நிறுவனங்கள் போன்றவற்றுடனும் ஒத்துழைப்பு நல்கிப் பணியாற்றி வருகிறது.

உலக வயதுவந்தோர் கல்விக்கழகத்தின் தலையாய நோக்கம் வயதுவந்தோர் கல்வியை வெவ்வேறு வழிமுறைகளில் விரிவுபடுத்துவதேயாகும். வயதுவந்தோர் கல்வி வளர்வதன் மூலமே, தனிமனிதன் அவன் உறையும் குடி, அவன் வாழும் சமுதாயம் ஆகியன முன்னேற முடியும் என இக்கழகம் நம்புகிறது. மேலும், இக்கழகம் உலக அமைதியைக் காக்கும் வழிகளைக் கண்டறிவதிலும் ஈடுபட்டு வருகிறது. அனைத்து நாட்டுக் கல்வி அறிவியல் பண்பாட்டு நிறுவனம் வரைந்துள்ள 'வயதுவந்தோர் கல்வி வளர்ச்சிப் பரிந்துரைகளை' நடைமுறைப்படுத்துவதிலும் ஈடுபட்டு வருகிறது. இக்கழகத்தின் செயல்முறை நிருவாகங்களை மூன்று தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகளான பொதுக்குழு, செயற்குழு, நிருவாகக் குழு ஆகியன கண்காணித்து வருகின்றன.

உலக வயதுவந்தோர் கல்விக்கழகத்தில், மண்டல (Regional), தேசிய (National) அளவில் வயதுவந்தோர் கல்வியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களே உறுப்புக் கழகமாகச் சேர இயலும். பல நாடுகளுக்கும் பொதுவான மண்டல வயதுவந்தோர் கழகம் ஒரு பகுதியில் இருக்குமானால், அப்பகுதியிலுள்ள நாடுகள், முதலில் மண்டல வயதுவந்தோர் கழகத்தில் சேர்ந்த பின்பே, உலக வயதுவந்தோர் கல்விக்கழகத்தில் சேர இயலும்.

வயதுவந்தோர் கல்வித் தொடர்பாகப் பல்வேறு நாடுகளில் நடைபெறும் ஆராய்ச்சி, பயிற்சி, செய்தித் தொடர்பாகப் பல்வேறு நாடுகளில் நடைபெறும் முயற்சிகளை உலக வயது வந்தோர் கல்விக்

கழகம் ஒருங்கிணைக்கிறது. உலகம் தழுவிய கருத்தரங்கம், கருத்தாக்கப் பட்டறை, ஒப்பாய்வு போன்றவற்றை இக்கழகமே செய்து வருகிறது. வயது வந்தோர் கல்விக்கழகத்தின் சார்பில், 'குவியல்' (Convergence) என்னும் காலாண்டு ஆராய்ச்சியிதழ் வெளிவருகிறது. எஸ்.த.

துணை நூல்கள்:


International Council for Adult Education, Policies and Plans, ICAE, Toronto, Ontario, 1981.

Lowe, J., The Education of Adults, A World Perspective, UNESCO, Paris, 1975.


**உலக விவகார இந்தியக் கழகம்**: உலக நாடுகளுக்கிடையேயான உறவுகளையும், பொதுவாக உலக விவகாரங்களையும் பற்றிய அறிவும், ஆராய்ச்சியும் இந்திய நாட்டில் பெருகுதல் வேண்டுமென்ற நோக்கத்தோடு, 1943-ஆம் ஆண்டில் புது தில்லியில் நிறுவப்பட்ட ஒரு நிறுவனமே உலக விவகார இந்தியக் கழகம் (Indian Council of World Affairs) ஆகும். இக்கழகம் சிலரால் தொடங்கப்பட்ட ஒரு தன்விருப்பக் கழகமாகையால் (Voluntary Association), மற்றத் தன்விருப்பக் கழகங்களைப் போலவே இதுவும் கி.பி. 1861-ஆம் ஆண்டுக் கழகங்களின் பதிவுச் சட்டத்தின்படிபதிவு செய்யப்பட்டது. இந்தக் கழகத்துக்குச் சொந்தக் கட்டடம் பொதுமக்கள் அளித்த நன்கொடைப் பொருளுதவியால் 1952-54-இல் கட்டி முடிக்கப்பட்டு, இக்கழகம் 1955-ஆம் ஆண்டு மே மாதம் முதல் நாளன்று இந்தியத் தலைமை அமைச்சர் நேருவால் முறையாகத் தொடங்கி வைக்கப்பட்டது. இக்கழகத்தின் முதல் தலைவர் சர் தேசு பகதூர் சாப்ரு (Sir Tej Bahadur Sapru). ஆகையால், இதன் தலைமை அலுவலகத்துக்குச் சாப்ரு மாளிகை (Sapru House) எனப் பெயரிடப்பட்டது. இக்கழகத்தின் ஆராய்ச்சிப் பிரிவு ஒன்று (Research Annexe) 1965-ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டுப பணியாற்றி வருகிறது. இக்கழகத்தை ஆதரிக்கும் நோக்கத்தோடு இந்திய அரசாங்கமானது, இதற்குப் பொதுமக்கள் அளிக்கும் நன்கொடைகளுக்கு வருமான வரிவிலக்கு அளித்துள்ளது.

அமைப்பு: இக்கழகத்துக்கு ஒரு முழு நேரச் செயலராக முனைவர் ஏ. அப்பாத்துரை அமர்த்தப்பட்டார். ஓர் ஆட்சிக்குழு (Executive Committee) கழகத்தை நிருவாகம் செய்கிறது; இதன் 42 உறுப்பினர்களுள் 34 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டும், மீதி 8 பேர் மற்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டும் (Co-Opted) உள்ளனர். இந்தக் கழகத்துக்கு இந்தியா முழுவதிலும் 24 கிளைகள் இருக்கின்றன. ஒவ்வொன்றுக்கும் அதனதன் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சிக்குழு இருக்கிறது. கழகத்தில் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு 25 வயது நிரம்பிய ஒவ்வொரு இந்தியருக்கும் தகுதி உண்டு. கழக உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தற்கு அந்தந்தக் கிளை ஆட்சிக் குழுவிற்கு அதிகாரம் இருக்கிறது. தனியார்களைத் தவிர, இந்தியாவில் இணைக்கப்பட்ட நிறுவனங்களும் இக்கழகத்தில் உறுப்பினராகச் சேரலாம்.

உலக விவகார ஆராய்ச்சிகள்: ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார சமூக மன்றத்தோடு (United Nations Economic and Social Council) இக்கழகத்துக்கு ஆலோசனை பெறும்நிலை இருப்பதால், இதனால் உலக விவகாரங்களைப் பற்றிய செய்திகளையெல்லாம் உடனுக்குடன் அறிந்து கொள்ளவும் ஆராயவும் இயலும். இந்தக் கழகத்தால் 1955-ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டதுதான் உலக விவகாரங்களின் இந்திய ஆய்வு நிலையம்(Indian School of International Studies) ஆகும். இவ்வாய்வு நிலையமே 1961-ஆம் ஆண்டில் ஒரு பல்கலைக்கழக மென்ற நிலையை அடைந்தது.

கழகத்தின் பணிகள்: இக்கழகம் உலக நாடுகளில் நடைபெறும் நிகழ்ச்சிகளைப் பற்றிய செய்திகளையும், இன்றைய சிக்கல்களைப் பற்றிய முழுச் செய்திகளையும், பொதுமக்கள் அறியும் பொருட்டு விரிவுரைகள் நிகழ்த்தியும், நூல்கள் வார, மாத ஏடுகள் ஆகியவற்றை வெளியிட்டும், நூல்நிலையப் பணிகளை அளித்தும் வருகிறது. ஆனால், இக்கழகம் எந்த ஒரு கேள்வியையும் பற்றிய முழுச் செய்திகளை அறிவிக்கும் நிறுவனமே தவிர, எந்தக் கேள்வியையும் பற்றித் தனது சொந்தக் கருத்தை அறிவிக்கும் ஒரு நிறுவனம் அன்று. இக்கழகம் நிறுவப்பட்ட நாளிலிருந்தே தனது ஆய்வு முறைகளில் விருப்பு வெறுப்பற்ற போக்கை நிலைநிறுத்தும் பொருட்டும், பொதுமக்களுள் எல்லாப் பிரிவினருக்கும் தன் கருத்துகள் சென்று அடையுமாறு செய்யும் பொருட்டும், இது இந்திய, உலகச் சிக்கல்களைப் பொதுமக்கள் விவாதிக்கும்போது, அவர்களில் ஒரு சாராருக்கெதிராக மற்றொரு சாராருடன் சேராமல் இருக்கவே முயன்று வருகிறது. இது தன் தனியார் உறுப்பினர் வாயிலாகவும், உறுப்புக் கழகங்களின் வாயிலாகவும் தொடர்புகளைக் கொண்டும், இந்தியாவிலும் அயல் நாடுகளிலுமுள்ள ஆய்வு மையங்களோடு தொடர்பு கொண்டும், உலக நாடுகளின் சிக்கல்களைப் பற்றிய கொள்கைகளையும்,

அவற்றைப்பற்றிய பல்வேறு கருத்துகளையும் அறிந்து கொள்கிறது. மேலும், இது பல பன்னாட்டு மாநாடு களை நடத்தியும், பலவற்றில் பங்கு கொண்டும் வந்துள்ளது. முழுமையான தன்னாட்சி பெற்றுள்ள இந்தியா போன்ற ,ஒரு பெரிய குடியாட்சி நாடு, உலக முன்னேற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் பாதுகாப்புக்கும் அமைதிக்கும் தனது சீரிய பெரும்பங்கை அளித்தல் வேண்டுமாயின், அதற்கு அடிப்படையாக இந்திய மக்களுக்கு-சிறப்பாகப் பன்னாட்டு அரசியல் மாணவர் களுக்கு-உலக நாடுகளின் சிக்கல்களைப் பற்றிய சரி யான, முழுமையான, செய்திகளையும் அறிவிக்க வேண்டும். அத்தகைய நிறுவனமாகப் பணி செய்யும் உலக விவகார இந்தியக் கழகத்தின் தொண்டு பாராட்டுதற்கு உரியதாகும். பா.சு.

**உலகளாவிய வாக்குரிமை:** ஓர் அரசின் ஆட்சியாளர்களைத் தெரிந்தெடுக்கவோ முக்கியமான சிக்கல்களைப் பற்றி மக்களின் கருத்தை அறிவதற்கோ நடைபெறும் தேர்தல்களில் மக்கள், தம் விருப்பப்படி வாக்களிப்பதற்குள்ள உரிமை 'வாக்குரிமை' எனப் படும். அந்த வாக்குரிமை இனம், சமயம், மொழி, பால், சொத்து, கல்வித்தகுதி ஆகியவற்றின் அடிப் படையில் எத்தகைய வேற்றுமையுமின்றி எல்லாக்குடி மக்களுக்கும் சமமாக வழங்கப்பட்டிருப்பின் அது 'வயது வந்தோர் வாக்குரிமை' (Adult Suffrage) அல்லது'உலக முழுதளாவிய வாக்குரிமை' (Universal Suffrage) எனப் பெயர் பெறும்.

வளர்ச்சியுற்ற மக்களாட்சி நாடுகளில் இன்று காணக்கூடிய வயது வந்தோர் வாக்குரிமை பெரும் போராட்டங்களின் விளைவாக அடையப் பெற்ற ஓர் அரசியல் உரிமையாகும். பழங்கால மேலை நாட்டுச் சமூகங்களில் குடும்பத்தலைவர்கள், குலமரபுத் தலை வர்கள் (Chiefs of Clans) ஆகியவர்களுக்கு மட்டுந் தான் வாக்குரிமை இருந்தது. குடும்பம் அல்லது குல மரபுத் தொடர்பான சிக்கல்களைப் பற்றித் தீர்மா னங்கள் செய்யும் முழு உரிமையை அவர்கள் மட்டும் தான் பெற்றிருந்தனர். குலமரபு அல்லது நாடு சம் பந்தப்பட்ட எல்லாச் சிக்கல்களிலும் அரசர் அவர் களை மட்டும்தான் கலந்தாலோசிப்பார். பிறப்பு, சொத்து ஆகிய இரண்டும் அவர்கள் அவ்வுரிமையைப் பெறுவதற்குள்ள தகுதிகளாக இருந்தன.

வாக்குரிமையின் வளர்ச்சியில் பழங்காலக் கிரேக்க நகர அரசுகளுக்குப் பெரும் பங்கு உண்டு. கிரேக்க நகர அரசுகளில் மிகவும் முற்போக்கானதும் நன்கு வளர்ச்சியடைந்திருந்ததுமான அரசு ஏதன்சு(Athens) ஆகும். அவ்வரசு வாக்குரிமை பற்றிய சிக்கலைப் பற்றி மக்களாட்சிக் கோட்பாடுகளுக்கேற்பப் பகுத் தறிவோடு ஆராய்ந்தது. அதன் விளைவாக ஏதன்சு கி.மு. 6-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பிறப் பிற்குப்பதிலாகச் சொத்தினை வாக்குரிமைபெறுவதற் குள்ள தகுதியாக மாற்றியது.ஏதன்சின் சமூக அமைப் பில் பரம்பரைப் பிரபுக்களின் ஆதிக்கம் மறைந்து வாணிக வளர்ச்சியின் விளைவாக, நடுத்தர வகுப்பி னர் தோன்றியதன் விளைவாக அம்மாற்றம் தேவைப் பட்டது. ஏதன்சு கி.மு.5-ஆம் நூற்றாண்டில் பெரிக்கி ளிசின் (Pericles)காலத்தில் அதன் அரசியல் வளர்ச்சி யின் உச்சக்கட்டத்தை அடைந்தது. அரசியல் வளர்ச்சிக்கேற்ப வாக்குரிமையின் தகுதியும் மாற்றி யமைக்கப்பட்டது. ஆனால், அடிமைகளுக்கும் பெண் களுக்கும் குடியுரிமை (Citizenship) மறுக்கப்பட்டது. குறிப்பிட்ட வயதிற்கு மேலுள்ள ஆண்கள் மட்டுமே குடியுரிமையையும் வாக்குரிமையையும் பெற்றி ருந்தனர்.

பழங்கால உரோமானிய அரசியலும் வாக்குரி மை, போராட்டங்களின் மூலந்தான்வளர்ச்சியுற்றது. உரோமானியச் சமூகம் 'பெட்ரிசியன்சு' (Patricians) 'பிளிபியன்சு' (Plebians) என இரு வகுப்பினர்களைக் கொண்டிருந்தது. சொத்து, சமூகத் தகுதி ஆகியவற் றின் அடிப்படையில் தான் அச்சமூகத்தில் வாக்குரிமை வழங்கப்பட்டிருந்தது. எனவே, 'பெட்ரிசியன்சு' என்ற உயர்குடியினர் மட்டுமே வாக்குரிமையைப் பெற்றிருந்தனர். வாக்குரிமை மறுக்கப்பட்ட 'பிளி பியன்சு' என்ற சாதாரண மக்கள் அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராகப் பல நூற்றாண்டு கள் கடுமையாகப் போராடி இறுதியில் அவ்வுரிமை யைப் பெற்றனர். உரோமானிய அரசு காலப்போக் கில் பேரரசாக வளர்ந்தபொழுது குடியுரிமை விரிவு படுத்தப்பட்டது. பேரரசிலுள்ள எல்லாச் சுதந்திர மான மக்களுக்கும் கி.பி.212-ஆம் நூற்றாண்டில் குடி யுரிமையும் வாக்குரிமையும் வழங்கப்பட்டன. ஆனால், பேரரசு ஒரு வரம்பற்ற முடியாட்சியாக இருந்தத னால் மக்கள் அவர்களின் வாக்குரிமையைத் தலத் தொழிற்கழகத் (Guild) தேர்தலுக்குத்தான் பயன் படுத்த முடிந்தது.

மத்திய காலத்தில் மீண்டும் சொத்து, தகுதி ஆகியவை வாக்குரிமை பெறுவதற்குத் தேவையான தகுதிகளாக மாறியன. ஒருவர் வைத்திருக்கும் நிலத் தின் அளவிற்கேற்ப அவருடைய வாக்குரிமையின் தர மும் வரையறுக்கப்பட்டது. மத்திய காலம் மறைந்த தும் அக்காலத்தின் தொடக்கத்தில் நிலத்தின் அடிப் படையில் வாக்குரிமை வழங்கும் முறை மறைந்து, வரிசெலுத்துதலின் அடிப்படையில் வாக்குரிமை வழங்கும்முறை தோன்றியது.

பிரிட்டன், பிரதிநிதி அரசாங்கத்தின் (Representative Government) தாயகம் என்று சொல்லப்படுகிறது. ஆயினும், அங்கும் குறுகிய வாக்குரிமையிலிருந்து வயது வந்த எல்லோருக்கும் வாக்குரிமை என்ற நிலைமையை அடையப் பல நூற்றாண்டுகள் ஆயின. பிரித்தானியப் பாராளுமன்றம் கி.பி. 1832 வரை முழுக்க முழுக்கப் பிரபுக்களின் ஆதிக்கத்தில் இருந்தது. மிகக் குறைவான மக்கள் வாழ்ந்த 'சிதைந்த தொகுதிகள்' (Rotten Boroughs) என்ற பிரபுக்களின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகள் மிகுதியான பேராளர்களைத் தேர்ந்தெடுப்பதற்குள்ள உரிமையைப் பெற்றிருந்தமைதான் பிரபுக்களின் ஆதிக்கத்திற்குள்ள அடிப்படைக் காரணமாகும். தொழில் வளர்ச்சியின் காரணமாகப் புதிதாகத் தோன்றிய நகர்ப்புறப்பகுதிகளுக்குப் பேராளர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை இருக்கவில்லை. உரிமை இருந்தாலும் மக்கள் தொகையின் அளவிற்கேற்ப அதுஇருக்கவில்லை. இந்நிலை பாராளுமன்றப் பிரதிநிதித்துவமுறையில் சீர்திருத்தம் வேண்டுமென்ற கோரிக்கையுடைய அரசியல் போராட்டம் தோன்ற வழிகோலியது. அதன்விளைவாக கி.பி.1832–ஆம் ஆண்டு முதல் சீர்திருத்தச் சட்டம்(Reform Act) இயற்றப்பட்டது. அச்சட்டம் நகர்ப்புறத்திலுள்ள நடுத்தரமக்களில் பெரும்பாலோருக்கு வாக்குரிமை வழங்கியது. வாக்குரிமை கி.பி. 1867–ஆம் ஆண்டு நகர்ப்புறத் தொழிலாளர்களுக்கும், கி.பி. 1884–ஆம் ஆண்டு விவசாயத் தொழிலாளர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. வாக்குரிமை வளர்ச்சியில் அடுத்த முக்கிய கட்டம் 1918–ஆம் ஆண்டாகும். அவ்வாண்டில் 21 வயதையடைந்த ஆண்களுக்கும், 30 வயதையடைந்த பெண்களுக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டது. பெண்கள் வாக்குரிமையிலிருந்த வயதுக் கட்டுப்பாடு 1928–ஆம் ஆண்டில் தளர்த்தப்பட்டு, ஆண்களுடன் சம வாக்குரிமையை அவர்களும் பெற்றனர். வாக்குரிமை பெறுவதற்குள்ள வயது,1970–ஆம் ஆண்டு, 21–இலிருந்து 18–ஆகக் குறைக்கப்பட்டது. இன்று 18 வயதடைந்த பிரித்தானியக் குடிமக்கள், பால் வேற்றுமையின்றி, வாக்களிக்கவும் தேர்தலில் நிற்கவும் உரிமையுடையவர்கள் ஆவார்கள்.

அமெரிக்காவிலும் வாக்குரிமையின் வளர்ச்சி மெதுவாகத்தான் இருந்தது என்றாலும், மற்ற மக்களாட்சி நாடுகளுடன் ஒப்பிடும்பொழுது அங்கு அதன் வளர்ச்சி வேகம் சிறிது அதிகமாகவே இருந்தது எனக் கூறலாம். அமெரிக்காவின் சுதந்திர அறிவிப்பும் (Declaration of Independence), அரசியலமைப்பும் (Constitution) நாட்டு மக்கள் எல்லோருக்கும் எவ்வித வேற்றுமையுமின்றிச் சமத்துவ உரிமையை உறுதியளித்தன. ஆனால், பல மாநிலங்கள் அவ்வுரிமையை நடைமுறைக்குக் கொண்டுவரவில்லை. சமயத்தின் அடிப்படையில் வாக்குரிமை வழங்கப்பட்டு வந்த முறை சுதந்திரத்தோடு மறைந்தது. ஆயினும் சுதந்திரத்திற்குப் பிறகு பல மாநிலங்கள் சொத்து, கல்வியறிவு ஆகிய தகுதிகளின் அடிப்படையிலேயே வாக்குரிமையை வழங்கி வந்தன. அம்முறையில் முதல் மாற்றம் கி.பி. 1830–ஆம் ஆண்டிற்குப் பிறகு ஆண்ட்ரூ சாக்சனின் (Andrew Jackson) 'தீவிர மக்களாட்சி'க் (Radical Democracy) காலத்தில் ஏற்படத் தொடங்கியது. வெள்ளையரில் எல்லா ஆண்களுக்கும் கி.பி. 1860–ஆம் ஆண்டில் வாக்குரிமை வழங்கப்பட்டது. நீக்கிரோக்களுக்கும் வாக்குரிமை வழங்குவதற்காக 14, 15–ஆம் அரசியலமைப்புத் திருத்தங்கள் இயற்றப்பட்டன. ஆனால், அத்திருத்தங்களைப் பல மாநிலங்கள் நடைமுறைப்படுத்தவில்லை. கல்வியறிவும் வரிசெலுத்துதலும் வாக்குரிமை பெறுவதற்குள்ள அடிப்படைத் தகுதிகளாக அம்மாநிலங்கள் வைத்திருந்தன. அதன் விளைவாகப் பெரும்பான்மை நீக்கிரோக்களுக்கு வாக்குரிமை கிடைக்காமற் போயிற்று. ஆயினும், நீக்கிரோக்களின் போராட்டங்களும் நீதிமன்றத் தீர்ப்புக்களும் நீக்கிரோக்களுக்கு பெருமளவு வாக்குரிமை கிடைக்க வழிகோலின. பெண்களுக்கு வாக்குரிமையை 1920–ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட 19–ஆம் அரசியலமைப்புத் திருத்தம் வழங்கியது. வயோமிங் (Wyoming) போன்ற சில மாநிலங்கள் 1920–ஆம் ஆண்டிற்கு முன்பே வாக்குரிமையை வழங்கியிருந்தன. பின்னர் 1971–ஆம்ஆண்டு இயற்றப்பட்ட26–ஆம் அரசியலமைப்புத் திருத்தம், மாநிலத்திற்கு மாநிலம் வேறுபட்டிருந்த வாக்குரிமை வயதை நாடு முழுவதிலும் ஒரே தன்மைத்தாக - 18–ஆக வரையறைசெய்தது.

மக்களாட்சி முறையின் தாயகங்கள் என்று சொல்லப்படுகின்ற மேலை நாடுகளில் வயது வந்த எல்லோருக்கும் வாக்குரிமை படிப்படியாகத்தான் வழங்கப்பட்டது. ஆனால், இந்தியாவில் அது ஒரு குடியரசாக அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து – 1950–ஆம் ஆண்டிலிருந்து – 21 வயதை அடைந்த ஆண், பெண் எல்லோருக்கும் எவ்வித வேறுபாடுமின்றி வாக்குரிமை வழங்கப்பட்டிருக்கிறது.

மத்திய காலத்திலும், இக்காலத்தின் தொடக்கத்திலும் வாக்குரிமை என்பது சொத்து, தகுதி ஆகியவற்றைப் பெற்றுள்ளவர்களின் ஒரு தனிச் சிறப்புரிமை எனக் கருதப்பட்டது. ஆனால், இக்காலத்தில் வாக்குரிமையின் அடிப்படைக் கருத்து அடியோடு மாறிவிட்டது. அரசாங்கத்தின் நடைமுறையில்குடிமக்கள் பங்கேற்க வாக்குரிமை இன்றி

யமையாத ஒரு கருவியாகும் என மக்களாட்சி ஆதரவாளர்கள் வற்புறுத்திக் கூறுகின்றனர். இக்கால அரசுகளின் நிலப்பரப்பும் மக்கள் தொகையும் பெரிதாக இருப்பதனால், மக்களின் நேரடி அரசாங்கம் (Direct Government) சாத்தியமில்லை. எனவே, பேராளர் அரசாங்க முறையைக் (Representative Government) கடைப்பிடிக்க வேண்டியுள்ளது. பேராளர் அரசாங்கத்தைத் தேர்ந்தெடுக்கவும், அவ்வரசாங்கம் தவறிழைக்கும் போது அதை மாற்றிப் புதியதோர் அரசாங்கத்தைப் பதவியில் அமர்த்தவும், தல, மாநில, தேசிய அளவில் அரசியலில் பங்கேற்கவும் குடிமக்களுக்கு வாக்குரிமை இன்றியமையாததொன்றாகும். அதாவது இக்கால அரசில் வாழும் ஒரு குடிமகன் உரிமைகளும் கடமைகளும் உடையவனாவான் என்பது வாக்குரிமை பற்றிய இக்காலக் கருத்தாகும். இக்கருத்து, குடிமகன் என்பவன் அரசியலில் தீவிரமாகப் பங்கேற்க ஆற்றலுடையவனாக இருக்க வேண்டும் என்ற பழங்காலக் கிரேக்கக் கருத்துடன் ஒத்திருக்கிறது. சு.மு.

**உலகாயதம்**: மனிதன் காண்கிற இந்த உலகம் உண்மையானது; பொருள்களெல்லாவற்றையும் பொறிகளால் அறிய முடியும் என்னும் கொள்கைக்கு உலகாயதம் என்று பெயர். இதனைச் சாருவாகம் என்று குறிப்பிடுவதுமுண்டு. வேதங்களில் வேதங்களைக் குறை கூறுபவர்கள் பற்றியும் கடவுள் இல்லை என்போர் பற்றியும் குறிப்புகள் காணப்படுகின்றன. பிரசாபதி என்ற குரு அசுர மன்னன் விரோசனனுக்கு உலகாயதக் கொள்கையைக் கற்பித்தான் என்றும்,தேவர்களின் குருவான பிரகசுபதி அசுரர்களை அழிக்கும் எண்ணத்துடன் இக் கொள்கையைப் பரப்பச் செய்தார் என்றும் கூறப்படுகிறது.

உலகாயதம் (Lokayatha) புலக்காட்சி அளவையை மட்டுமே ஏற்றுக் கொள்கிறது. இக்கோட்பாடு வெளிப்படையாக உள்ள புலக்காட்சியின் அடிப்படையில் தான் எல்லாவற்றையும் சிந்திக்க வேண்டும் என்ற கருத்து உடையது. அனுமானம், ஆகமம் போன்ற பிற அளவைகளை இது ஏற்றுக் கொள்வதில்லை.

மனிதன் பொறிகளால் அறியக் கூடிய பூதங்களாகிய நிலம், நீர், தீ, காற்று ஆகிய நான்கையும் இது ஏற்றுக் கொள்கிறது. வெளி என்னும் ஐந்தாம் பூதம் இதற்கு உடன்பாடானதன்று.

இந்த உலகில் காணப்படும் அனைத்துப் பொருள்களும் மேற்கூறிய நான்கின் சேர்க்கையாலானவை; இவை தவிரக் கடவுள், ஆன்மா எனக் கூறப்படுபவை உண்மையல்ல; உடலில் ஆன்மா என்று ஒன்று இல்லை; சொர்க்கம், நரகம், மோட்சம் எனப்படுபவை வெறும் கற்பனையே; இவற்றிற்காகச் செய்யப்படுகிற வேள்வி, தவம் முதலிய யாவும் பயனற்றவை என்று உலகாயதம் கூறுகிறது.

மனிதன் ஒத்துக் கொள்கிற இன்பம், பொருள் என்ற இரண்டும் உண்மையான பொருள்கள் ஆகும்; எப்பொழுதும் இன்பம் தருகிற செயல்களையே மனிதன் செய்ய வேண்டும்; இறந்த பிறகு இன்பம் வரும் என்று எண்ணி உயிருடனிருக்கும் பொழுது இன்பங்களை மறுப்பது மரத்திலிருக்கும் மயில் கிடைக்கும் என்று எண்ணிக் கையிலிருக்கும் புறாவினை விடுவதற்கு ஒப்பாகும் என்று உலகாயதம் கூறுகிறது.

கண்மூடித்தனமாக எதையும் நம்பக்கூடாது என்னும் இதன் கோட்பாடு போற்றுதற்குரியது. உலகாயதக் கோட்பாடு சமணத்திலும் நியாயத்திலும் மறைமுகமாகக் காணப்படுகின்றது.

மேல் நாட்டுத் தத்துவத்தில் உலகாயதம் விவரிக்கப்படுகிறது. இக் கொள்கையின்படி, சடப்பொருள் ஒன்றுதான் நிலையுள்ளது. மனம், அறிவு என்று கூறுவதெல்லாம் சடப்பொருளின் குணம் ஆகும். பிரகிருதியிலிருந்து மனத்தின் தத்துவங்கள் எல்லாம் தோன்றி, அதனில் மீண்டும் அடங்கும். உலகாயதர்களுள் ஒருமை வாதிகள் மூலச் சடப்பொருள் ஒன்று என்றும், பன்மை வாதிகள் மூலச் சடப்பொருள் பல என்றும் நம்புகின்றனர்.

உலூசிப்பசு (Lucippus) என்பவரும் தெமோக்கிரிட்டசு (Democritus) என்பவரும் அணுக் கொள்கையை விவரித்தனர். அவர்களின் கருத்துப்படி, இவ்வுலகம் அணுக்களின் கூட்டத்தால் பல்வேறு வடிவங்களாக உள்ளது. மனமும் அணுக்களால் ஆகியதே. கிரேக்க உலகாயத அறிஞர்கள் உலகம் எந்த விதமான அறிவுச் சக்தியினாலும் இயக்கப்படவில்லை; அது தானாகவே சுழன்று கொண்டிருக்கிறது என்று கூறினர்.

காசெண்டி (Gossendi), ஆப்சு (Hobbes), டி.எச். அக்சுலி (D.H.Huxley), ஈ.எச். எகல் (E.H. Hegel) காரல்மார்க்சு(Karl marx), ஈ.வெ.இராமசாமி முதலியோர் இக்காலத்தில் உலகாயதத்தை விளக்கியுள்ளனர். அறிவியல் அறிவு வளரும் பொழுது மனிதன் உட்பொருளை மறந்து விடுகிறான். எனவே, இன்றைய உளவியல், பொருளாதாரம், தத்துவம்

போன்ற துறைகளைச் சார்ந்த அறிஞர்கள் பலர் உலகாயதக் கொள்கை பற்றி விளக்குவதில் பெருமை கொள்கின்றனர். இரா.கோ.

துணைநூல்கள்:


**Das Gupta**, S.N., A History of Indian Poilosophy, Vol.I, London, 1922.

**RadhaKrishnan**, S., Indian Philosophy, Vol.I, London, 1923.


**உலகுடைய நாயனார்** என்பவர் வைணவ அந்தணர்மரபில் தோன்றியவர். இவரதுகாலம் கி.பி. 17-ஆம் நூற்றாண்டாகும். சைவ சமயத்தில் மிக்க ஈடுபாடுகொண்டிருந்ததோடு துறவுநாட்டம் மிக்கவராகவும் இவர் விளங்கினார். ஆதலின் தம் எண்ணத்தைத் திருவாவடுதுறை ஆதீனத்தின் மூன்றாம் குருமூர்த்தியாக அமைந்து ஞானச் செங்கோல் ஓச்சிய அம்பலவாண தேசிக மூர்த்திகளிடம் தெரிவித்துத் தம்மை ஆட்கொள்ள வேண்டினார். அக் குருநாதரும் இவர் தம் பக்குவநிலையை அறிந்து தீட்சை செய்து ஆட்கொண்டு துறவுநிலை மேற்கொள்ளச் செய்தார். மேலும் அவர் சைவசித்தாந்த சாத்திர தோத்திர நூல்களைத் தக்காரைக் கொண்டு பயிற்றுவித்தார். உலகுடைய நாயனார் என்பது இவரது தீட்சைப் பெயராகும். இவர், தம் குருநாதரான அம்பலவாண தேசிகர் மீது அளவற்ற ஈடுபாடு கொண்டவர். அவர் மீது இயற்றியநூல் 'உலகுடைய நாயனார் கழிநெடில்' என்பதாம். பதினான்கு சீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தங்கள் பத்தினைக் கொண்டு அமைந்த இது சிறந்த ஞானகுரு வணக்க நூலாகவும் சைவசித்தாந்த சாத்திர விளக்க நூலாகவும் திகழ்கிறது. இதன் பாக்கள் சிறப்புமிக்கன; சைவ சித்தாந்த சாரமாக மிளிர்வன; ஆசிரியரின் குருபத்தியை நன்கு தெரிவிப்பன. இந்நூலின் எட்டாம் செய்யுட் கருத்து வருமாறு:- ஆதிசேடனாகிய பாம்பணை மீது அறிதுயிலிலிருந்து பின் எழுந்தருளிய திருமாலுக்கு உபதேசம் புரிந்த நடராசப் பெருமானை வழிபடு தெய்வமாகக் கொண்ட பெருமானே! திருவாடுதுறையில் அடியார்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கும் சிறந்த நிதி போன்ற அம்பலவாண தேசிக மூர்த்திகளே! மிகவும் அறிவற்றவனாகிய யான் நும் அடியார்களுள் கடையவனாக இருக்கவும் தகுதியற்றவன். அப்படியிருந்தும் என்றும் நிலையான ஆணவ மலத்தோடுள்ள குருடனாகிய எனக்கு உடலை ஓர் ஊன்றுகோல் போல் தந்து சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகியவற்றை நுகரச் செய்து, தீயவழியில் செல்வோரை அவர் மனம் போலச் செல்லவிடாது நல்வழியில் திருப்பி இருவினை ஒப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் ஆகிய நிலைகளைப் பெறச் செய்து, பேரானந்தப் பெருவாழ்வில் நும்மோடு யான் இரண்டறக் கலக்கும் நிலையை அருள்செய்தாய். இப்பேருதவிக்கு என்ன கைம்மாறுளது? 'கொடுவினை ஒப்புச் சத்திநிபாதம் கூர்மலபாகமும் குறித்தே, இணையிலா இன்ப வடிவமாம் உன்னோடு என்னையும் இரண்டற வைத்தாய்' என்பது நாயனார் திருவாக்காகும். இச் செய்யுளில் நாயனாரின் குருபத்தியும், சைவ சித்தாந்த சாத்திரக்கருத்தும் இயைந்து விளங்குமாற்றை உணரக்கூடும். இவர்தம் நூல் அளவால் சிறியதாயினும், தன்மையால் உயர்ந்து விளங்குவதாகும். இது போன்றே மற்றைச் செய்யுள்களும் சாத்திரக் கருத்துகள் நிறைந்தவையாய்க் காணப்பெறுகின்றன.

இரா.ச.

**உலகுடைய நாயனார் கழிநெடில் ஆசிரிய விருத்தம்** என்பது உலகுடைய நாயனார் இயற்றிய துதி நூலாகும். இது பத்துப்பாடல்களைக் கொண்டது; திருவாவடுதுறை அம்பலவாணர் மேல் பாடப்பெற்ற நூலாகும். அத்திருச்சந்நிதானம் சிவஞானயோகியாவார். பி.தெ.

**உலமா (உலேமா)**: உலமா அல்லது உலேமா என்பது அரபுச்சொல், இது பன்மையைக் குறிக்கும். இதற்குச் சரியான ஒருமை ஆலிம் (Alim) என்பதாகும். உலமா (Ulama) என்னுஞ் சொல், திருக்குரானில் கடவுளைப் பற்றியும் மனிதனைப் பற்றியும் கூறும்போது பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆலிம் என்பது இல்ம் (Ilm) என்ற பண்புடையவன் என்று பொருள்படும். அதாவது மிக உயர்ந்த அறிவு படைத்தவன்; மிகச் சிறந்த கல்விமான் என்று பொருள்படும். அவ்வறிவு இசுலாமிய சமயத்தின் செவிவழிச் செய்திகள், அவற்றின் காரணமாகப் பெறப்படும் சமயச் சட்டம், இறைமை இயல் ஆகியவற்றைப் பற்றியனவாகும். ஆலிம் என்ற சொல் இன்று புலமை பெற்றவன் என்ற பொருளைத் தருகிறது.

உலமா என்ற சொல் இருவகைப் பொருளில் பயன்படுத்தப்பட்டது. ஒன்று பரந்த பொருளைத் தரும். அது இல்ம் என்ற பண்புடையவர்களுடைய குழாம் என்பதாகும். அக்குழாத்திலிருந்து தான் இசுலாமியச் சமுதாயத்தின் சமய ஆசிரியர்கள் தோன்றினார்கள். அக்குழாத்தில் இறைமையியல் நூலாசிரியர் (Theologian), இறைமையியல் பேரறிஞர்கள் (Doctors of Divinity), தொழுகை இல்லங்களில் வழிபாட்டை முன்னின்று நடத்துபவர்கள் (Imam), சமயக் கட்டவிளக்குநர்கள் (Muftis), சமய நீதிபதிகள் (Qadis),

பேராசிரியர்கள்(Professors), அரசாங்கச் சமய அதிகாரிகள் (Members of Shakykh-al-Islam) ஆகியோர் இடம் பெற்றனர். மற்றொன்று சுருக்கமான பின்வரும் பொருளைத் தரும். அது இசுலாமிய அரசுகளில் உயர்ந்த அரசாங்கப் பணிகளை மேற்கொண்ட கற்றறிந்த குழாத்தைச் சேர்ந்தவர்களைக் குறிக்கும்.

வரலாற்றில் உலமா ஒரு வலிமை பொருந்திய வகுப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இசுலாமிய சமயத்தின் தொடக்க கால வரலாற்றில் அவர்களுடைய ஒருமித்த கருத்துகளே வருங்காலச் சந்ததியார்களின் இறைமையும் நியாயமும் பற்றிய நடைமுறைப் பழக்கங்களாகத் தொடக்கத்தில் மாறின. இசுலாமிய அரசும், சமுதாயமும் திருக்குரானில் காணப்பெறும் தெய்விகக் கட்டளைகளின் அடிப்படையில் நிறுவப்பட்டன. நாளடைவில் அவை பெருகிவரும் சமுதாயத்திற்கும் அரசுக்கும் போதுமானதாகக் காணப்படவில்லை. ஆகவே, அதீசுகள்(Hadis) எனப்படும் நபிகள் நாயகத்தின் கூற்றுகளையும் செயல்களையும் திருக்குரான் கட்டளைகளுடன் சேர்த்து, அவற்றின் அடிப்படையில் சமுதாயத்தையும் அரசையும் நிறுவினார்கள். நாள் ஆக ஆக அவையும் போதுமானவையாகத் தோன்றவில்லை. அதுசமயம் இசுலாமியச் செவிவழிச் செய்திகளின் காப்பாளர்கள் என்ற முறையில் அவ்வப்போது தோன்றக் கூடிய புதிய நிலைமைகளுக்கும் சிக்கல்களுக்கும் ஏற்ப உலமா தங்கள் முடிவான கருத்துகளை வெளியிட்டனர். அக்கருத்துகள் திருக்குரானையும் அதீசுகளையும் அடிப்படையாகக் கொண்டிருந்தன. அதன் காரணமாக அரசியலமைப்பு, சட்டம் இறைமையியல் ஆகியவற்றைப் பற்றிய சிக்கல்களுக்கு முடிவான கருத்து வழங்குவது அவர்களுடைய உரிமையாக மாறியது. அவர்களுடைய முடிவான கருத்துகள் சட்டத்திற்குரிய ஆற்றலைப் பெற்றிருந்தன. சமுதாயத்தில் அவர்கள் மிக்க செல்வாக்குப் பெற்றிருந்தார்கள். இசுலாமிய மக்கள் தங்களைத் தாங்களே ஆட்சி செய்யும் உரிமையைப் பெற்றுள்ளனர் என்ற கருத்தை வெளிப்படுத்தக் கூடிய நடமாடும் நிறுவனமாக அவர்கள் விளங்கினர். அரசாங்கத்தின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்துவதற்கென அமைக்கப்பட்ட குழாமாக அவர்கள் கருதப்பட்டனர். உதுமானிய, மொகலாயப் பேரரசுகளில் அவர்கள் அரசாங்கக் கொள்கைகளைக்குறிப்பிடத்தக்க வகையில் கட்டுப்படுத்தி வந்தார்கள். ஆகவே இசுலாமிய அரசுகள் தங்களுடைய செயல்களுக்கு அவர்களுடைய ஆதரவை நாடின. அவர்களை உயர் பதவிகளில் அமர்த்தியும் ஊதியம் வழங்கியும் அவ்வரசுகள் அந்த ஆதரவைப் பெற முற்பட்டன. அந்த வகையில் அவை ஓரளவு வெற்றியும் பெற்றன. அந்த வெற்றி மக்களுடைய கண்களுக்குப் புலப்படும் வகையில் பெரிதாக இருக்க நேரின், அத்தகைய அரசுகளிடம் மக்கள் வெறுப்புக் கொண்டனர். அதையடுத்துத்தங்களுடைய மரியாதையையும் அன்பையும் அரசுகளின் செல்வாக்கிற்கு அடிபணியாத தனிப்பட்ட கல்விமான்களிடம் செலுத்தினர். எல்லா இசுலாமிய நாடுகளிலும் இது அடிக்கடி தோன்றக்கூடிய நிகழ்ச்சியாக இருந்தது. மேற்கூறியவற்றிலிருந்து இரு உண்மைகள் தெரிகின்றன. ஒன்று, அரசாங்கத்தை அச்சுறுத்திய அதிகாரிகளே அல்லது அரசாங்கத்தின் செல்வாக்கினுக்குட்பட்டு நடந்த அதிகாரிகளே உலமா எனப்பட்டனர் என்பது. மற்றொன்று, தனிப்பட்ட வகையிலும் சுதந்திரமாகவும் இயங்கி வந்த சட்டம், இறைமையியல் ஆகியவற்றின் வல்லுநர்களே உலமா எனப்பட்டனர் என்பதாகும். இசுலாமிய வரலாற்றில் பற்பல அரசக் குலங்கள் தோன்றி மறைந்ததென்றாலும் அவற்றின் பின்னால் ஒரு நிலையான அரசுக்கு ஒரு திடமான இறுக்குச் சட்டமாகத் திகழ்ந்தது உலமா அமைப்பேயாகும்.

இக்காலத்தில் மேலை நாட்டுக் கல்வியைப்பெற்ற இசுலாமியர்களிடையே உலமாவினுடைய செல்வாக்கு படிப்படியாகக் குறைந்துவிட்டது. துருக்கி, குடியரசாக மாறியபோது உலமா குழாம் ஒழிக்கப்பட்டது. ஏனைய இசுலாமிய நாடுகளில் பண்டைய பழக்கங்களில் தொடர்ந்து நம்பிக்கை கொண்டிருக்கும் மக்களிடம் அவர்கள் தம் செல்வாக்கு நிலையைத் தொடர்ந்து அனுபவித்து வருகின்றனர். செவி வழிச் செய்திகளை மட்டுமே கற்றுணர்ந்த உலமாவை இக்காலச் சமயச் சார்பற்றபாடங்களை மட்டுமே படித்து அவற்றில் புலமை பெற்ற சமயப் பணியில் ஈடுபடாத இசுலாமியப் பொதுமக்களுடன் இரண்டறக் கலக்கச் செய்வது எப்படி என்ற சிக்கல் இந்த இருபதாம் நூற்றாண்டில் தோன்றியுள்ள ஒரு முக்கிய சிக்கலாகும்.

தி.அர.இரா.

**உலவாக்கிழி**: தன்கண் வைத்த பொருள் எடுக்க எடுக்கக் குறையாது விளங்கும் முடிப்பு என்பது உலவாக்கிழி என்பதன் பொருளாகும். சிவபெருமானுடைய திருவிளையாடல்களைக் கூறும் தமிழ்ப் புராணங்களில் அவன் தன்னடியார் ஒருவருக்கு உதவும் வகையில் உலவாக் கிழியினை – எடுக்கக் குறையாத பொன் முடிப்பினை – அளித்த வரலாறு கூறப்பட்டுள்ளது. அந்நிகழ்ச்சியினைப் பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற்புராணம் உலவாக் கிழி அருளிய படலம் என்ற பெயரிலும், பெரும் பற்றப் புலியூர் நம்பி திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் உலவாக்கிழி கொடுத்த திருவிளையாடல் என்ற பெயரிலும் அமைத்துக் காட்டியுள்ளன. உலவாக் கிழியினைச் சிவபெருமான் குலபூடணன் என்

னும் பாண்டி மன்னனுக்கு அளித்தான் என்று பரஞ்சோதி முனிவரும், பெயர் குறிப்பிடாமல் ஒரு பாண்டியனுக்கு அதனைச் சிவபெருமான் வழங்கினான் என்று பெரும் பற்றப் புலியூர்நம்பியும் குறிப்பிட்டுள்ளனர். உலவாக்கிழி, எடுத்துக் கொடுக்கக் கொடுக்கக் குறைவுபடாத தன்மையினை 'இந்தக் கிழியில் எத்துணைப் பொன் எடுத்து வழங்குந்தொறும் நாங்கள் தந்த அளவில் குறையாத தன்மைத்தாகும்' என்று (பரஞ்சோதி திருவிளையாடல் 31:13) சிவபெருமான் கூறியதாகப் பரஞ்சோதி குறிப்பிட்டுள்ளார். அவ்வியல்பினை நம்பி, 'கோடி பொன் எடுப்பினும் குறைவிலாததோர் ஆடக நீவி' (நம்பி திருவிளையாடல் 40:20) எனக் கூறியுள்ளார். சைவ சமயத்தில் இறைவனுடைய பேராற்றலையும் பெருங்கருணையையும் விளக்கும் வகையில் அமைந்த உலவாக்கிழி அருளிய செயல்போலப் பிற சமய நூல்களிலும் நிகழ்ச்சிகள் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வகையில் மணிமேகலை கூறும் அமுதசுரபி நிகழ்ச்சிபோல்வன கருதத்தக்கனவாகும்.

அ.மா.ப.

**உலா** என்பது சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று. சிற்றிலக்கியங்கள் தொண்ணூற்றாறு வகை என்பர். இச்சிற்றிலக்கியங்கள் பொருட்சிறப்பும் கவிதைப் பொலிவும் மிக்கன.

இறைவனது திருவுருவோ, உலகம் போற்றும் பெருமகனோ, அரசனோ யானை, தேர், குதிரை ஆகியவற்றுள் யாதானும் ஓர் ஊர்தியில் ஏறி உடன் வருவோர் சூழ, மங்கல வாத்தியங்கள் ஒலிக்க வீதியில் பவனி வருவதாகவும், அப்பொழுது பேதை, பெதும்பை மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் முதலிய ஏழு பருவ மகளிரும் பவனியில் வரும் தலைவனைக் கண்டு காதல்கொண்டு வாடுவதாகவும் புலவர் பெருமக்களால் பாடப்பெற்ற சிற்றிலக்கியமே 'உலா' என்பதாகும்.

உலா இலக்கியம் தனி ஒரு பேரிலக்கியமாகப் பிற்காலத்தில்தான் வளர்ச்சி பெற்றது. ஆனால், இதற்கான அடிபடைக்கூறு தொல்காப்பியத்திலேயே உள்ளது எனலாம். தொல்காப்பியர் புறத்திணையியலில் பாடாண்திணையினை விளக்கும்போது, 'ஊரொடு தோற்றமும் உரித்தெனமொழிப' என்று கூறுகிறார். இதற்கு 'ஊரின்கண் காமப்பகுதி நிகழ்த்தலும் உரித்து என்று சொல்லுவர் புலவர்', என்று இளம்பூரணர் உரை கூறுவார். 'ஊரொடு தோற்றம்' என்பது பேதை முதலாகப் பேரிளம்பெண் ஈறாக வருவது. தோற்றம் என்றது காமம் தேவரிடத்தும் மக்களிடத்தும் விளங்கும் விளக்கம்' என்று நச்சினார்க்கினியரும் உரை கூறுவார். இக்கூற்றே உலா இலக்கியத்திற்குரிய மூலவித்துத்தொல்காப்பியர் காலத்தில் இருந்ததை உறுதிப்படுத்துகிறது.

இக்குறிப்பே, பெருங்கதை, சீவகசிந்தாமணி, கம்பராமாயணம் போன்ற பெருங்காப்பியங்களில் தலைமகன் உலாவருதலைச் சிறப்பித்துப் பாடப்பெறும் இடங்களில் கிளைத்து வருகிறது எனலாம். பின்னர்த் தேவாரம் முதலிய பக்தி இலக்கியங்களிலும் உலா இலக்கியப் போக்கு மிளிர்வகைக் காணமுடிகிறது.

பெருங்கதையில் உதயணனும், வாசவதத்தையும் நகர்வலம் வருகின்றனர்; நகர்வலம் கண்டது என்ற பகுதி இதனை விளக்குகிறது. அப்போது அவனைக் காண மகளிர் விரைகின்றனர்; அவன்பால் மையல் கொண்டு மயங்குகின்றனர்.

சீவகசிந்தாமணியில் சீவகன் வீதிவழியே உலா வரும்போது கண்டு காமுற்று நின்ற மகளிர் நிலையினைத் திருத்தக்கதேவர் பல பாடல்களில் பாடுகிறார். பசுக்களை மீட்டுவந்த சீவகன் வீதிவழியே செல்லும் காட்சியைக் 'கோவிந்தையார் இலம்பகத்தில்' காட்டும்போது மகளிர் காதல் கொண்ட நிலையைப் பாடுகிறார்.

சீதையைத் திருமணம் செய்துகொள்ளும் முன்னர் இராமன் மிதிலை வீதிகளில் உலா வருகிறான். மகளிர் அனைவரும் கண்டு காமுற்ற நிலையைக் கம்பர் பாலகாண்டத்தில் காட்டுகிறார்

திருவாரூரில் நடைபெற்ற திருவாதிரைத் திருவிழாவினைத் திருநாவுக்கரசர் தம் தேவாரத்தில் காட்டுகிறார். இதில் திருத்தொண்டர் புடைசூழ இறைவன் தேரில் ஏறி வீதி உலா வருவான் என்று பாடுகிறார். 'முடிகள் வணங்கி மூவா தார்கண் முன் செல்ல, வடிகொள் வேய்த்தோள் வானர மங்கையர் பின்செல்ல, பொடிகள் பூசிப் பாடும் தொண்டர் புடைசூழ' இறைவன் சென்ற காட்சி உலா இலக்கியக் கூறுடையதே. இறைவன் திருவுருவைத் திருத்தேரில் ஏற்றி அலங்காரம் செய்து உலாச்செல்லும் காட்சியினைத், 'தேர்கொள்வீதி விழவார்திருப்புன்கூர்' என்ற தேவார அடி காட்டுகிறது. எனவே, திருத்தலங்களில் இறைவனுக்குத் திருவிழாவின்போது ஒப்பனைசெய்து திருத்தேரிலோ விடை வாகனத்திலோ ஏற்றித் திருவீதிகளில் உலாவாக அழைத்துவருதல் இன்றுபோலவே அன்றும் இருந்திருக்கிறது என்பதையும் அறியமுடிகிறது.

உலா இலக்கியத்திற்கான வித்து தொல்காப்பியர் காலத்திலேயே ஊன்றப்பெற்றுத்தேவார ஆசிரியர்கள்

காலத்தில் வளர்ந்து கிளைத்தாலும், இது தனியொரு சிற்றிலக்கியமாக கி.பி. 8-ஆம் நூற்றாண்டில்தான் மலர்ந்தது.

சேரமான் பெருமாள் நாயனார் எழுதிய திருக் கயிலாய ஞான உலா காலத்தால் முந்திய முழுவடிவு பெற்ற உலா இலக்கியம் ஆகும். அதனை 'ஆதியுலா' என்றும் சொல்லுவர். இறைவன் திருமுன்னர்த் திருக் கயிலாயத்தில் அரங்கேற்றப்பட்ட பெருமையும் இதற்கு உண்டு. இது 'தெய்வ உலா'என்றும், 'ஞானஉலா' என்றும் குறிக்கப்படுகிறது. சேரமான் பெருமாள்' நாய னார் சுந்தரர் காலத்தவர். எனவே, முதல் உலா இலக் கியம் தோன்றிய காலம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி என வரையறை செய்யவும் இடமுண்டு. சிறந்த ஓசைநயமும் கருத்துச் செறிவும், கொண்டு விளங்கும் இவ்விலக்கியங்கள் கற்பனை கடந்து நிற்கும் இறைவன் திருவுருவினை நயம்படக் கூறுகின்றன.

இதனை அடுத்துவந்த உலா நம்பியாண்டார் நம்பிகள் அருளிச் செய்த ஆளுடைய பிள்ளையார் திருவுலா மாலையாகும். இது திருஞான சம்பந்தர் மீது பாடப்பட்ட நூல். இவ்வுலா நூலில் ஏழு பருவ மகளிரின் செயல்கள் தனித்தனியே கூறப்படாமல் பேதை முதல் பேரிளம்பெண் ஈறாக உள்ள ஏழு பருவ மகளிரின் செயல்களும் சேர்த்தே பாடப்பட்டுள்ளன. இவ்வுலா பதினோராம் திருமுறையில் சேர்க்கப்பட் டுள்ளது.

இவ்விரு உலாக்களையும் அடுத்துவருவது 'மூவ ருலா' ஆகும். இது ஒட்டக்கூத்தரால் இயற்றப்பட்டது. இது விக்கிரம சோழன் உலா, குலோத்துங்கசோழன் உலா, இராசராசசோழன் உலா என்ற மூன்று உலாக் களைத் தன்னகத்தே கொண்டது. தெய்வத்துக்கு உரிய சிறப்பை அரசர்களுக்கும் கூறும் வழக்கம் நில விய காரணத்தால், அரசர்களைத் திருமாலின் பேரா ளர்களாகக் கருதும் மரபால், அரசர்களுக்கு உலா நூல் பாடும் மரபு ஏற்பட்டது. ஒட்டக்கூத்தரின் இம் மூன்று உலாக்களும் இவ்வாறு தோன்றியனவே. இம்மூன்று உலாநூல்களும் முறையே 342, 387, 391 கண்ணிகளைக் கொண்டுள்ளன. சோழர்களின் குலப் பெருமையையும், மூன்று மன்னர்களின் தனிப்பட்ட வீர தீரங்களையும், பெருமையையும் இவை நன்கு காட்டு கின்றன. மன்னர்களின் உலாக் காட்சியைக் கண்ட ஏழு பருவ மகளிரின் காதற்புலம்பல் பிற உலா நூல் களைப் போன்றே இவற்றிலும் முறையாக உரைக்கப் பட்டுள்ளது. பொதுவான அமைப்பு முறையில் மூன்று உலா நூல்களும் ஒத்திருக்கின்றனவே அன்றி, சிறப்புச் செய்திகள், செய்திகளை வெளிப்படுத்தும் போக்கு போன்றவை வெவ்வேறு சுவையுடன் விளங்குகின்றன.

ஒட்டக்கூத்தர் உலாப் பாடுவதில் வல்லவர் என்பதைக் 'கோவை உலா அந்தாதிக்கு ஒட்டக்கூத்தன்' என்ற பழம்பாடற்பகுதி விளக்கும். சோழர்களின் வர லாற்றை அறியத் துணை செய்யும் நூலாகவும் இது விளங்குகிறது.

இதற்குப் பின்னர்க் காளமேகப் புலவர் திரு வானைக்காவில் உள்ள இறைவன்மீது ஓர் உலாவும், தத்துவராயர் ஓர் உலாவும், புராணத் திருமலைநாதர் மற்றோர் உலாவும், அந்தகக்கவி வீரராகவ முதலியார் திருவாரூர் உலா, திருக்கழுக்குன்றத்து உலா, கயத் தாற்றில் இருந்த மன்னன் மீது ஓர் உலா போன்ற வற்றையும் பாடியுள்ளனர்.

இதுவரை 68 உலா நூல்கள் பாடப்பட்டிருப்ப தாகத் தெரிகிறது. உலாவின் இலக்கணமாகப் பின் வருவனவற்றைக் கூறமுடிகிறது. பாட்டியல் நூல்கள் சிற்றிலக்கியங்களின் இலக்கணத்தைக் கூறுகின்றன. ஆனால், உலா இலக்கியத்தின் இலக்கணத்தைச் சில பாட்டியல் நூல்களே கூறுகின்றன. பன்னிரு பாட்டி யல், வெண்பாப் பாட்டியல், சிதம்பரப் பாட்டியல், இலக்கண விளக்கப் பாட்டியல், பிரபந்தத் திரட்டு போன்றவை அவை. 'பாட்டுடைத் தலைவன் உலாப் புறவியற்கையும், ஒத்த காமத்து இளையாள் வேட்கை யும், கலிஒலி தழுவிய வெள்ளடியியலால், திரிபின்றி நடப்பது கலிவெண்பாட்டே' என்று பன்னிருபாட்டி யல் கூறுகிறது. சிதம்பரப் பாட்டியலும் இவ்வாறே விளக்குகிறது. 'குழமகனைக் கலிவெண்பாக் கொண்டு விழைதொல் குடி முதல் விளங்க உரைத்தாங்கு, இழை புனை நல்லா ரிவர்மணி மறுகின், மற்றவன் பவனி வரஏழ் பருவ, முற்ற மானார் தொழப் போந்த உலா' என்று இலக்கண விளக்கப்பாட்டியல் கூறுகிறது. 'பேதைமுதல் ஏழ்பருவப்பெண்கள் மயக்கமுற ..... புறத் தசாங்கம் தாங்கிப் போற்று' என்று பிரபந்தத் திரட்டுக் கூறுகின்றது.

இவற்றின் மூலம் பேதை முதல் எழுபருவப் பெண் களும் வீதியில் உலா வருகின்ற இறைவன் திருவுரு வையோ பெருமகனையோ மன்னனையோ கண்டு காமுற்று, தத்தம் பருவத்திற்கேற்பப் பலவாறு கூறு வதாக அமைத்துக் கலிவெண்பாவினால் பாடப் பெறு வது உலாச் சிற்றிலக்கியம் ஆகும் என்பது புலனா கின்றது.

உலாநூல் பதினாறு முதல் நாற்பத்தெட்டு வயதுவரை உள்ள ஆடவர்களுக்கு மட்டுமே பாடப் பெறும் எனப் பாட்டுடைத் தலைவர்க்குரிய வயதி னைப் பன்னிரு பாட்டியல் 'நீடிய நாற்பத்தெட்டி

ளளவு மாடவர்க் குலாப்புற முரித்தென மொழிப் என்று கூறுகின்றது. இது மனிதனைத் தலைவனாகக் கொண்டு பாடப்படும் உலா நூலுக்கே உரியது எனலாம்.

உலா நூல்களை முதனிலை, பின்னெழு நிலை என இரு பிரிவுகளாகப் பகுத்துரைப்பர். பாட்டுடைத் தலைவனின் குடிப்பிறப்பு, பெருமை, நீராடல், ஊர்திகளில் செல்லல், உடன்வருவோர் இயல்புகள் போன்றவை முதனிலையில் கூறப்படும். பின்னெழுநிலையில் ஏழுபருவ மகளிரின் இயல்புகளும் அவர்களுடைய சிற்றில், பாவை, கழங்கு, அம்மானை, ஊசல், கிளி, யாழ், புனலாட்டு, பொழிலாட்டு போன்ற செய்திகளும் கூறப்படும். இவ்விரு நிலைகளுக்குள்ளே நாடு, நகர், மலை, ஆறு, பெயர், ஊர்தி, படை, முரசு போன்ற அரசியல் உறுப்புகளும் தசாங்கமும் கூறப்படும்.

உலா இலக்கியங்களில் தலைமகனின் இயற்பெயர் கூறப்படும். உலாத்தலைவன் மீது காதல்கொள்ளும் பெண்களின் இயற்பெயர் கூறப்பட மாட்டாது. அதே போன்று, பெண்கள் தலைமகன் மீது காதல் கொள்வதாகக் காட்டப்படுமேயன்றித் தலைமகன் அப்பெண்கள் மீது காதல்கொள்வதாகப் பாடுவது மரபு அன்று. தலைவன் இயற்பெயர் மட்டும் குறிக்கப்படுவதாலும், இருபாலாருள் ஒருபாலாரிடத்துத் தோன்றும் காதல் மட்டுமே குறிக்கப்படுவதாலும், புறப்பொருளைச் சார்ந்த பெண்பாற் கைக்கிளை என்று 'உலாவினைக் கூறலாம்.

தலைமகனின் சிறப்புகளைக் கூறுவதால் உலா, பாடாண்திணைக்கு உரியது. எனவே, உலா உலாப் புறம் என்றும், புறவுலா என்றும், பவனி உலா என்றும், உலா மாலை என்றும் பல்வேறு பெயர் பெறுகிறது.

உலா, நூல் மூன்று அடிப்படையில் பெயர் பெறுவதையும் காணமுடிகிறது.

1. பாட்டுடைத் தலைவனோடு தொடர்புடைய ஊரின் பெயரால் எழும் உலா. (திருவாரூர் உலா, திருப்பனந்தாள் உலா, செப்பறை உலா, திருக்கடவூர் உலா, திருவிடைமருதூர் உலா போன்றவை).
2. பாட்டுடைத் தலைவனின் இயற்பெயரால் பெயர் பெறும் உலா. (ஏகாம்பர நாதர் உலா, விக்கிரம சோழன் உலா, இராசராச சோழன் உலா, காமராசர் உலா).
3. பாட்டுடைத் தலைவனின் ஊர்ப்பெயரோடும் இயற்பெயரோடும் இணைந்து பெயர் பெறும் உலா. (குன்றக்குடி சண்முக நாதர் உலா, மதுரைச் சொக்கநாதர் உலா, தஞ்சைப் பெருவுடையார் உலா, திருவிலஞ்சி முருகன் உலா போன்றவை).

இவை தவிரச் சிலேடையுலா எனவும் ஓர் உலா உண்டு.

உலா இலக்கியங்களில் தொடர்ந்தபொருளமைப்பும், சுவையான செய்திகளும் உண்டு. உலா என்பது தொடர்ந்த பொருளுடைய ஒரு நெடும் பாட்டால் இயங்குகின்றதாதலின், இதனைத் தொடர்நிலைச் செய்யுள்களுள் ஒன்றாகக் கருதுவதும், சிறுகாப்பிய வரிசைகளுள் ஒன்றாக வைக்கத்தகுவது எனக் கருதுவதும் ஏற்புடையனவாகும். மு. அ.

**உலாமடல்** என்பது தமிழில் வழங்கும் தொண்ணூற்றாறுவகைச் சிற்றிலக்கியங்கள் அல்லது பிரபந்தங்களுள் ஒன்றாகும். இது பற்றிய இலக்கணம் பிரபந்தமரபியல், சிதம்பரப் பாட்டியல், இலக்கண விளக்கம், முத்துவீரியம், பிரபந்த தீபிகை, சுவாமி நாதம் ஆகிய பாட்டியல் நூல்களிற் காணப்படுகிறது. ஒரு பொழிலினிடத்தே கண்டு, காதலுணர்த்தியும் அதனை ஏலாது சென்ற பெண்ணை மீட்டும் கனவிற் கண்டு, காமுற்று, கலந்து இன்புற்ற தலைவன் கண் விழித்துப் பார்த்து அவளைக் காணப்பெறாது, காம வேட்கையால் மடலூரத் துணிதலைப் பாடுதலே உலாமடலாகும். இது கலிவெண்பாட்டால் பாடப் பெறும்; தலைமகன் கூற்றாக அமையும்.

'உலா' என்னும் பிரபந்தத்தில் யானை, குதிரை போன்றவை தலைவனின் பவனிக்குரிய ஊர்திகளாகக் குறிக்கப்பட, உலா மடலில் பனங்கருக்கால் செய்யப் பட்ட 'மடல்' ஊர்தியாகக் குறிக்கப்படும். இவ்வேறு பாடு தோற்ற, இப்பிரபந்தம் 'மடல் உலா' என்று வழங்கப்பட்டு, இலக்கணப் போலியாக 'உலா மடல்' என்றாகியிருக்கலாம் எனத் தெரிகிறது. உலாவில் மகளிரின் காமவேட்கை கூறப்படும்; உலாமடலில் தலைமகனின் காம வேட்கை கூறப்படும். தன்னோடு மனம் ஒத்த, தன் காதல் தலைவியை அடைதற் பொருட்டு மடலூரத் துணிதலை 'மடல்' என்னும் பிரபந்தம் பேசும். தான் விரும்பித் தன்னை விரும்பாத கைக்கிளைத் தலைவியைக் கனவிற் கூடி விழித்த தலைவன் அவள் பொருட்டு மடலூரத் துணிதலை 'உலாமடல்' பேசும். 'பாப்பைய பிள்ளை உலாமடல்' இவ்வகையில் எழுந்த இலக்கியமாக அறியப்படுகிறது. தாசி காளி முத்துவின் 'வருணகுலாதித்தன் மடல்', காளமேகப்

புலவரின் 'சித்திர மடல்', ஆசிரியர் பெயர் அறியப் படாத 'தாயுமானவர் மடல்' என்பன 'மடல்' என்னும் பெயர்கொண்டு முடியினும், உலாமடலின் பொருண்மையைக் கொண்டனவே. ச.அர.

**உலுக்சோர்** தெற்கு எகிப்தில் நைல் ஆற்றின் கிழக்குக் கரையில் அமைந்துள்ள நகரம். இது கெய்ரோவிலிருந்து 500 கி.மீ. தொலைவில் உள்ளது. அராபியர்கள் இதனை அல் உக்சூர் (Al Uqsur) என்றும் இலக்சர் என்றும் சொல்கின்றனர். இங்குள்ள தீப்சு நகரத்தின் (Thebes) நினைவுச் சின்னங்களைக் காணச் சுற்றுலாப் பயணிகள் பெருமளவில் வருகின்றனர். மூன்றாம் அமன் ஒடெப்பு (Amen Hotep III) என்னும் மன்னரால் கட்டப்பட்ட உலுக்சோர் கோயில், இங்குள்ள புகழ்பெற்ற கோயிலாகும். இக்கோயிலின் மூலவர், கடவுளுக்குத் தலைவரான கடவுளாக விளங்கும் அமோன் ரீ என்பவராவார். அரசர்களுடைய கல்லறைகள் பலவற்றைக் கொண்ட கோயில் ஒன்று நைல் ஆற்றின் மேற்குக் கரையில் அமைந்துள்ளது. தீப்சு நகரத்தின் தெற்குப் பகுதி உலுக்சோர் (Luxor) என்றும், வடக்குப்பகுதி கார்நாக்கு (Karnak) என்றும் கூறப்படுகின்றன.

காண்க: தீப்சு, கார்நாக்கு (Karnak). சு.இரா.

**உலுசாகா** ஆப்பிரிக்காவின் தென்பாகத்திலுள்ள சாம்பியா (Zambia) என்னும் நாட்டின் தலைநகரமாகும். முற்காலத்தில் சாம்பியாவை வட உரொடீசியா (Northern Rhodesia) என்று கூறினர். உலுசாகா (Lusaka) 1935-ஆம் ஆண்டிலிருந்து சாம்பியாவின் தலைநகராகியுள்ளது. இதற்கு முன்னர் இலிவிங்சுட்டன் என்னும் நகரம் தலைநகராயிருந்தது. உலுசாகா நன்கு திட்டமிடப்பட்ட நகரமாகும். இது கடல்மட்டத்திலிருந்து 1280 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது. இதன் தட்பவெப்பநிலை இனிமையானது; உடலுக்கு இன்பம் பயப்பது.

உலுசாகா போக்குவரத்திற்கும் வாணிகத்திற்குமானதொரு சிறப்பான மையமாகும். இந்நகரம், இருப்புப்பாதை சாலையின் நடுவிலும், இரு பெருஞ்சாலை சந்திக்கும் இணைப்பிலும் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. இங்குப் பன்னாட்டு வானவூர்தி நிலையமொன்றும் உள்ளது. இதனைச் சுற்றிலும் பண்ணைகள் சூழ்ந்துள்ளன.

உலுசாகாவில் உணவுப்பொருள்கள், துணிமணிகள், சாராயக் குடிவகைப் பானங்கள், சிமெண்டு போன்றவை உற்பத்தியாகின்றன. இந்நகரை ஐரோப்பியர்கள் 1905-ஆம் ஆண்டில் உருவாக்கினார்கள். அண்மையிலிருந்த ஆப்பிரிக்கச் சிற்றூர் ஒன்றின் தலைவரின் பெயரால் இது உலுசாகா என்று பெயரிடப்பட்டது. இங்கிருந்துதான் சாம்பியாப் பல்கலைக்கழகம் இயங்குகிறது. இதன் மக்கள்தொகை 5,38,469 (1980). இரா.அ.

**உலுசாயிப்பழங்குடி** மிசோராம் மாநிலத்தின் தொன்மைப் பழங்குடியினராவர். இவர்கள் குக்கிசு (Kookies) என்றும் அழைக்கப்படுவர். இவர்கள் குர்னாபுலி (Kurnaphuli) ஆற்றுப் பகுதியிலும் அதன் கிளை நதிப் பகுதிகளிலும் மிகுதியாக வாழ்கின்றனர். இவர்களுள் பெரும் பகுதியினர் சில்கெட்டு (Sylhet), திப்பேரா (Tipperah), வடக்குக் கச்சார் மலைகள் (Cachar Hills) ஆகியவற்றின் தென் பகுதிகளிலும் சிட்டகாங்கு (Chittagong) மலைத்தொடரின் சில பகுதிகளிலும் வாழ்கின்றனர். இவர்கள் குக்கி-சின் (Kuki Chin) என்னும் கிளைமொழியைப் பேசுகிறார்கள்.

உலுசாயிப் (Lushai) பழங்குடியினர் பல குலங்களாகப் பாகுபட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் மங்கோலிய இனத்தவர்கள். குள்ளமான உடலமைப்புக் கொண்ட இவர்கள் வலிமையான உடலமைப்பைப் பெற்றுள்ளனர். பெண்கள் வலிமையானவர்கள்; ஆண்களைக் காட்டிலும் தடித்துக் குள்ளமானவர்கள். உலுசாயி மக்களின் உடலைக் கணக்கிடும்போது கால்களின் நீளம் குறைவானது; கைகள் நீளமானவை. அகன்ற முகத்தைக் கொண்ட இவர்களது முகம் வட்டமானதாகவோ சதுரவடிவமானதாகவோ உள்ளது. கன்ன எலும்புகள் உயர்ந்து காணப்படும். இவர்களின் கண்கள் சிறியவை; மூக்கு சிறியது; தட்டையானது. மூக்குத் துவாரங்கள் அகன்றவை. தோலின் நிறம் கருமையான மஞ்சள் கலந்த பழுப்பு முதல் மஞ்சள் கலந்த பச்சை நிறம்வரையானதாகும்.

இப்போதுள்ள உலுசாயிப் பழங்குடியினர் பைத்தே (Paitte) பெண்ணுக்கும் பர்மியருக்கும் கலப்பினால் உண்டானவர்கள் எனக் கூறுவர். பைத்தே மக்களின் கூற்றுப்படி, உலுசாயிகள் நெகேகுகா (Ngehguka) என்னும் பைத்தே தலைவனுக்கு முறையற்ற முறையில் பிறந்த பொக்குலா (Bokula) என்னும் மூதாதையர் வழி வந்தவர்கள் எனக் கருதப்படுகிறது. தாடோசு (Thados) மக்களின் கூற்றுப்படி, வேட்டைத் தளத்தில் ஒரு குழந்தையின் காலடி தெரிந்ததாகவும் அக்காலடியின் வழியே சென்றபோது ஒரு பெண்மானிடம் அக்குழந்தை பால் குடித்துக்கொண்டிருந்ததாகவும், அக்குழந்தையே மிகப்பெரும் தலைவனாக மாறியது என்றும் கூறுவர். இவனைத் 'தங்-உரா' (Thang Ura) அல்லது 'தங்குல்' (Thangul) என்று அழைப்பர். இத்தலைவனிடமிருந்தே இப்போதுள்ள உலுசாயிக் குலங்கள் தோன்றின என உறுதியாக நம்புகின்றனர். இவர்களை ஆராய்ந்த சே.சேக்சுபியர் (J. Shakespeare)

உலுசாயி மக்கள் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்திலிருந்து வாழ்ந்திருக்க வேண்டுமென்று நம்புகின்றார். இவர்களின் கால் வழியிலிருந்தே இரோகும் (Rokum), சாதெங்கு (Zadeng) தங்குலுவா (Thangluah), தாளியன், இரைவிங்கு (Riving). செய்லோ (Sailo) ஆகிய ஆறு குலத்தவர்களும் தோன்றி ஒவ்வொருவரும் தனித்தனிப் பகுதியில் வளர்ந்து வந்தனர். இப்பகுதிகள் உலுசாயி மலைகள் என்று சிறப்பாகக் கூறப்படும்.

உலுசாயிப் பழங்குடி ஆண்கள் 7 அடி நீளமும் 5 அடி அகலமும் உடைய நீண்ட ஆடையை அணிகின்றனர். பெண்கள் இதைக்காட்டிலும் பெரிய ஆடையை அணிகின்றனர். குளிர்காலங்களில் இறுக்கமான ஆடையை அணிவர். இவர்கள் அணியும் ஆடைகள் அனைத்தையும் இங்கு விளையும் பருத்தியைக் கொண்டு பெண்களே நெய்கின்றனர். மழைக்காலங்களில் தலையை நனைப்பதற்கு மிகவும் பயப்படுவர். இதனால் மூங்கில், நாணல் முதலானவற்றின் பட்டைகளைக் கொண்டு பின்னப்பட்ட தொப்பிகளை அணிந்து கொள்வர். பெண்கள் பலவகைப்பட்ட தலை அணிகலன்களை அணிகின்றனர். அவற்றுள் சிறப்பானது 'G' வடிவில் அமைந்த மயிர் ஊசியாகும். அது பல்வேறு வகை நீளமுடையது. ஆண்கள் காதுகளில் துளையிட்டு மரத்துண்டுகளையும் உலோக வளையங்களையும் அணிகின்றனர். இருபாலரும் கழுத்தில் மாலை அணிவர். விதவையான பெண்கள் மறுமணம் செய்து கொள்வதில்லை என முடிவு செய்யும்போது காதின் துளைகளைக் கீழ்நோக்கி அறுத்துவிடுவர். காதில் அணிந்திருந்த வளையங்களையும் கழற்றிவிடுவர். இவர்களிடையே பச்சை குத்தும் மரபு மிகக் குறைவு.

மலைப் பகுதிகளில் இவர்களின் குடிசைகள் அமைந்துள்ளன. இவர்களின் வீடுகள் மூன்று பகுதிகளைக் கொண்டதாகும். தானியங்களைச் சுத்தப்படுத்தும் 'சும்' (Sum) என்னும் பகுதியும், 'சும்-முன் (Sum Hmun) என்னும் தாழ்வாசல் பகுதியும், 'கும் அய்' (Kum-ai) கும்புய் (Kum-Pui) என்னும் படுக்கை அறைப்பகுதியும் மேற்குறிப்பிடப் பெற்ற மூன்று பகுதிகளாகும். கும்-அய் படுக்கை அறையில் குழந்தைகள் மணமாகாப் பெண்கள் ஆகியோரும், 'கும் புய்' (Kum-Pui) என்னும் பெரிய படுக்கை அறையில் பெற்றோர்களும் படுப்பர். இது தவிர்த்துத் 'திங்கை' (Thingai) என்னும் இடத்தில் எரிபொருள், தீவனம் முதலானவற்றைப் பாதுகாப்பர். மணமாகா ஆண்கள் தங்கும் இடத்தை ஒவ்வொரு குடியிருப்புக்கும் நடுவில் அமைப்பர். இது சாவுல்பக்கு (Zawlbulk) என்று சொல்லப்படுகிறது. இது இரவுக்காலங்களில் கிராமத்துக் கால்நடைகள், காட்டெருமைகள் முதலானவை தங்கும் இடமாகவும் இருக்கிறது. உலுசாயிப் பழங்குடிகளின் பூர்விகக் குடியிருப்புகள் 400 முதல் 500 வரை குடிசைகள் கொண்டவையாகும். படைப்பகுதித் தலைவர் இலிசுட்டர் (Colonel Lister) கி.பி. 1850-இல் ஒரு உலுசாயிக் கிராமத்தைக் கைப்பற்றிய போது அவர்களின் குடியிருப்பு அமைப்புகள் திட்டமிடப்பட்டுச் சிறந்த முறையில் அமைக்கப்பட்டிருந்தன வென்று குறிப்பிட்டுள்ளார். இப்போது இவர்கள் ஓரிரண்டு குடிசைகளைக் கொண்ட சிதறிய குடியிருப்புகளையே கொண்டுள்ளனர்.

உலுசாயிப் பழங்குடியினர் பெரும்பாலோர் வேளாண் தொழிலையும் ஒரு சிலர் இரும்புத் தொழிலையும் செய்கின்றனர். இவர்களது வேளாண் முறை காட்டை அழித்து எரித்து உழுநிலமாக்கிப் பயிரிடும் முறையாகும். காட்டை அழித்து எரித்து உருவாக்கிய நிலத்தில் மூன்று முதல் ஐந்தாண்டுகள் வரையே பயிரிடுகின்றனர். பின்னர் வேறு இடத்திற்குச் சென்று காட்டை அழித்து விளை நிலத்தை ஏற்படுத்துகின்றனர். இத்தகைய இவர்களது வேளாண்முறை சூம் (Jhum) என்று கூறப்படும். வேட்டையாடுதல், மீன்பிடித்தல், கூடை முடைதல், மட்பாண்டங்கள் செய்தல், இரும்பு அணிகலன்கள் செய்தல், இரும்புத் தொழில், ஆடை நெய்தல், சாயம் பூசுதல் முதலானவை இவர்களின் துணைத் தொழில்களாகும். இவர்கள் வேட்டையாடுதலிலும் இசையிலும் பெரு விருப்பமுடையவர்கள். இவர்கள் நஞ்சு கலந்து மீன் பிடிக்கும் முறையைக் கையாளுகின்றனர். 'கோகுர்' (Kokur) என்னும் ஒரு வகைச் செடியையும், 'உரு' (Ru) என்னும் ஒருவகை மரப்பட்டையையும் நச்சுப் பொருள்களாகப் பயன்படுத்துகின்றனர்.

காய்கறிகளையும் அனைத்து வகையான இறைச்சியையும் இவர்கள் உணவில் சேர்த்துக் கொள்கின்றார்கள். அரிசியிலிருந்து இருவகைக் குடிவகைகளைத் தயாரித்துக் குடிக்கின்றனர். சாதாரண நாட்களில் சிறிதளவு புளிக்க வைக்கப்பட்ட 'சூ' (Zu) என்னும் குடிவகையையும் விழாக்காலங்களில் 'சுதக்கு (Zu thak), அல்லது 'இரக்சூ' (Rakzu) என்னும் வடித்திறக்கிய குடிவகையையும் குடிக்கின்றனர்.

உலுசாயி மக்களின் ஆட்சிமுறை குறிப்பிடத்தக்கது. இவர்கள் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் இடைக் காலத்திலிருந்தே தத்தம் குலங்களுக்கென்று (Clan) தனிப் பரப்பை ஏற்படுத்திக் கொண்டு 'தாங்குர்' (Thangur) என்னும் தம் தலைவனைக் கொண்டு ஆண்டு வந்தனர். தம் பரப்பை மிகுதிப்படுத்துவதற்கும் ஏனையோரின் இயற்கை வளங்களைக் கைப்பற்றுவதற்கும்

தம் இனத்தவருள் அடங்கும் வேற்றுக் குலத்தவருடனும் இவர்கள் போரிடத் தயங்குவதில்லை. இவர்கள் மிகுதியான வெளிநாட்டுப் போர்க்கருவிகளைப் பெற்றிருக்கின்றனர். இவர்கள் கடந்த 70-80 ஆண்டுகளாகப் போர்க்கருவிகளை மிகுதியான அளவில் சேகரித்து வைத்துள்ளனர். பர்மாப் பகுதியின் வழியாக இக்கருவிகள் பெறப்படுவதாகக் கூறப்படுகிறது. பர்மா எல்லைப் பகுதிப் பழங்குடிகளிடமிருந்து இக்கருவிகளைப் பெறுவதற்கு அடிமைகளை மாற்றுப் பொருள்களாகக் கொடுத்தனர். வலிமையுள்ள ஒரு ஆணுக்கு இரண்டு துப்பாக்கிகள் வீதம் பெற்றனர். மரம், இரும்பு முதலானவற்றால் செய்யப்பட்ட போர்க்கருவிகளையும் மிகுதியாகக் கொண்டுள்ளனர்.

இவர்கள் ஆவிகளையும் இயற்கைப் பொருள்களையும் உயிரினங்களையும் மிகுதியாக வழிபடுகின்றனர். ஆவியுலக நம்பிக்கைக்குட்பட்ட (Animism) இவர்களது சமயத்தில் மலை ஆவிகள் குறிப்பிடத்தக்கவையாகும். சீ.ப.

**உலுட்சென்சு, சர் எட்வின் இலாண்சியர்** (கி.பி. 1869-1944) என்பார் ஓர் ஆங்கிலக் கட்டடக் கலைஞர். உலுட்சென்சு (Lutzens, Sir Edwin Landseer) கி.பி. 1869-ஆம் ஆண்டு இலண்டனில் பிறந்தார். சோனிங் என்னும் இடத்திலுள்ள தீனரித்தோட்டம் (Deanery Garden) என்னும் கட்டடத்தை கி.பி. 1899-ஆம் ஆண்டிலும், சாக்கு பிரிட்சு (Shockbridge) என்னும் ஊரிலுள்ள மார்சு கோர்ட்டை (Marsh Court) 1901-ஆம் ஆண்டிலும் அமைக்க இவர் வரைபடம் வரைந்து தந்தார். செங்கற்களையும் கலை-தொழில் நுட்ப மரபுகளையும் வில்லியம் மாரிசு (William Morris) என்பார் உருவாக்கியமுறையை உலுட்சென்சும் பின்பற்றினார். பின்னர் இவர் தமக்கே உரித்தான கட்டடக் கலைப்பாணியொன்றை உருவமைத்துக் கொண்டு ஈத்கோட்டு (Heathcote), ஐக்லி (Ickley) போன்ற நாட்டுப்புற வீடுகளை 1906-ஆம் ஆண்டில் அமைத்தார்.

இந்தியாவின் தலைநகரான புதுதில்லி மாநகரத்தில் இன்றும் காணப்படும் பல அரசாங்கக் கட்டடங்கள் உலுட்சென்சின் கைவண்ணங்களேயாகும். இன்று இந்தியக் குடியரசுத் தலைவர் குடியிருக்கும் இராட்டிரபதி பவன் என்னும் அரசு மாளிகையை இவர்தான் 1915-க்கும் 1930-க்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் கட்டி முடித்தார். இம்மாளிகையில்தான் ஆங்கில அரசப் பேராளர்கள் வாழ்ந்தார்கள். இம்மாளிகையில் காணப்படும் தூபிகள் (Domes) மொகலாயப் பாணியைச் சார்ந்தவை. அதனுடன் இவர் கீழை நாட்டு மரபியல்புகளையும் இணைத்து இம்மாளிகையை அழகாகக் கட்டி முடித்தார். இங்கிலாந்து நாட்டின் தலைநகரமான இலண்டனில் இருக்கும் வெள்ளை மாளிகை நினைவுச் சின்னமும் (Whitehall Cenotaph), அமெரிக்க ஐக்கிய நாட்டின் தலைநகரான வாசிங்டன் டி.சி (Washington D.C) யிலுள்ள ஆங்கிலத் தூதரக மாளிகையும் இவரால் அமைக்கப்பட்டவையாகும் (1926).

இவருடைய திறமையைப் பாராட்டிய ஆங்கில அரசு இவருக்கு விருது கொடுத்து 1918-ஆம் ஆண்டில் பாராட்டியது. புதுதில்லியின் அமைப்பை உலுட்சென்சு 1942-ஆம் ஆண்டில் உருவமைத்தார். அப்போது இவருக்கு வயது 42. இவருடைய நண்பரான எர்பர்ட்டு பேக்கர் (Herbert Baker) என்பாரும் சில கட்டடங்களை வடிவமைத்தார். இவர் வடிவமைத்துக் கொடுத்த திட்டங்களை இந்திய அரசின் பொதுப்பணித் துறையைச் சார்ந்த பொறியாளர்களான சர் அலெக்சாந்தர் இரவுசு (Sir Alexander Rouse), சர் ஆர்தர் டீன், (Sir Arthur Dean) சர் தேசா சிங்கு (Sir Teja Singh), செயற்பொறியாளர் கான்பகதூர் முகம்மது சுலைமான் (Khan Bahadur Muhammad Sulaiman) ஆகியோர் செயற்படுத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது. இரா.அ.

**உலுட்டைட்டுக் கலவரங்கள்** இங்கிலாந்தில் ஏற்பட்ட தொழிற்புரட்சியின்போது அதனை எதிர்த்து மூண்ட கலவரங்களாகும். இக்கலவரங்கள் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எழுந்தன. தொழிற்புரட்சி, மனிதர்களுக்குப் பதிலாக இயந்திரங்களைப் பயன்படுத்திய வரலாற்றை அறிவிக்கும் மாபெரும் பொருளாதார நடவடிக்கையாகும்.

ஆங்கிலத் தொழிலாளர்கள் நெசவாலை இயந்திரங்களை அமைத்துத் தொழில் மயமாக்கும் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். அரசாங்கம் தொழிலாளர்களின் நலனில் அக்கரை காட்டாததும், தொழிலாளர்களுக்கு ஏற்பட்ட வேலையில்லாத் திண்டாட்டங்களுமே இக்கலவரத்திற்குக் காரணங்களாகும். இத்தகைய தொழிலாளர்கள் கொடுத்த எச்சரிக்கைகளும் அறிவிப்புகளும் செர்வுட்டுக் காட்டில் வாழ்ந்த உலுட்டு அரசரின் பெயரில் வெளியிடப்பெற்றமையால் இக்கலவரங்கள் உலுட்டைட்டுக் கலவரங்கள் (Luddite Riots) எனப்பட்டன. அரசர் உலுட்டு (King Ludd) என்பார் புராணத் தலைவர்களுள் ஒருவர் (கற்பனைத் தலைவர்). இக்கலவரங்களுக்கு உடனடிக் காரணங்களாக கி.பி. 1800-ஆம் ஆண்டில் உருவான இசைவுத் தீர்ப்புச் சட்டத்தையும் (Arbitration

Act, 1800) கி.பி. 1808-ஆம் ஆண்டில் பொதுமக்கள் அவையில் தோற்கடிக்கப்பட்ட குறைந்த அளவு ஊதிய மசோதாவையும் குறிப்பிடலாம். இசைவுத் தீர்ப்புச் சட்டத்தை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக் காடும் உரிமைகொடுக்கப்படாமையால், தொழிலாளர்கள் கிளர்ந்தெழுந்தனர். குறைந்த அளவு ஊதிய மசோதா பொதுமக்கள் அவையில் படுதோல்வியுற்றது. இங்கிலாந்தின் மத்திய நில மாவட்டங்களில் (Midland Countries) கம்பள நெசவாலைத் தொழிலாளர்கள் கி.பி. 1811-ஆம் ஆண்டில் கலகத்தில் இறங்கினர். அகன்ற சட்டம் ஒன்றைப் புகுத்தியதன் விளைவாகத் தரம் குறைந்த கம்பளங்களை நெய்யவும், தொழிலாளர்களின் எண்ணிக்கை குறையவும் நேர்ந்தமையால் அவை கலவரத்திற்குக் காரணங்களாயின. தொழிலாளர்கள் குறைந்த ஊதியத்தைப் பெற வேண்டியவர்களாயினர். இவ்வகன்ற சட்டங்கள் முதலாளிகளுக்குச் சொந்தமானவை. எனினும், அவை தொழிலாளர்களின் குடிசைகளிலேயே வைக்கப்பட்டிருந்தன. அவற்றைப் பாதுகாப்பதும் எளிதாக இருக்கவில்லை.

கலகத்தில் ஈடுபட்டிருந்த உலுட்டைட்டுத் தலைவர்கள் மிக்க திறமை வாய்ந்தவர்கள். அவர்கள் தம் உருவம் தெரியக் கூடாதென்னும் நோக்குடன் முகமூடியை அணிந்துகொண்டனர். எனவே அவர்களை அடையாளங் கண்டுபிடிப்பது இயலாது. உள்ளூர் மக்களும் இவ்வியக்கத்திற்கு ஆதரவு நல்கினர். இதன் பலனாக இவ்வியக்கம் ஓரளவு வெற்றி பெற்றது. இதனால், முதலாளிகளை அச்சுறுத்தித் தொழிலாளர்களின் நிலைமையை முன்னேற்ற அப்போதைக்கு முயன்றனர்.

ஆனால், கி.பி. 1812-ஆம் ஆண்டில் உலுட்டைட்டுகள் பலர் படைவீரர்களால் கொல்லப்பட்டனர். பதிலடியாக முதலாளி ஒருவரும் கொல்லப்பட்டார். இதைக் கண்ட இங்கிலாந்து நாடாளுமன்றம் அடக்குமுறைச் சட்டங்களை நிறைவேற்றியது. இதனை எதிர்த்துக் கிளர்ச்சியில் ஈடுபட்ட தொழிலாளர்களுள் சிலர் இயந்திரங்களை உடைத்தார்கள் என்றசெயலுக்காகப் பொதுவிசாரணைக்கு உட்படுத்தப்பட்டு, கி.பி. 1813-ஆம் ஆண்டில் தூக்கிலிடப்பட்டனர்; வேறு சிலர் குடியேற்றப் பகுதிகளுக்கு அனுப்பப்பட்டனர். இதன் பயனாக இவ்வியக்கம் நலிந்து மெலிந்தது. எனினும், கி.பி. 1815-ஆம் ஆண்டு ஏற்பட்ட அமைதி உடன்படிக்கைக்குப் பின்னர் ஓரளவு மீண்டும் இவ்வியக்கம் கிளர்ந்தெழுந்தது. அப்போது நெப்போலியனுடன் நடைபெற்ற போர்கள் முடிவுற்றுப் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருந்தது.

இவ்வியக்கம் இலங்காசயர், யார்க்சயர் போன்ற பகுதிகளில் அமைக்கப்பெற்றிருந்த பருத்தி, கம்பள ஆலைகளில் பரவியிருந்தபோதும் இது வெற்றிபெறவில்லை. ஏனெனில், இயந்திரங்கள் பாதுகாக்கப்பட்ட தொழிற்சாலைகளில் பத்திரப்படுத்தப்பட்டிருந்தன.

இயந்திரமயத்தை எதிர்த்த பிறநாட்டு இயக்கங்கள் இங்கிலாந்தைப் போல் ஒருபோதும் வெற்றிபெறவில்லை. எனினும் பிரான்சில் ஒரு சில தொழிலாளர்கள் இயந்திரங்களை உடைக்க மரத்தாலான மிதியடிகளை வீசியெறிந்து தொல்லைகொடுத்தார்கள் என்பது நினைவு கூரத்தக்கது. இத்தகைய மர மிதியடிகள் 'சாபட்டுகள்' (Sabots) எனப்பட்டன. இச்சொல்லிலிருந்தே அழிவு வேலை எனப்பொருள் தரும் 'சபாட்டேசு' (Sobotage) என்னும் சொல் பிறந்தது.

உலுட்டைட்டுக் கலவரங்களில் கி.பி. 1811-ஆம் ஆண்டில் ஏற்பட்ட நாட்டிங்காம் (Nottingham) கலவரம் குறிப்பிடத்தக்கது. இக்கலகக்காரர்களைச் சதிகாரர்கள் என்றும் கூறுவர். ஏனெனில், இவர்களின் நடவடிக்கைகள் இரகசியமானவை. இவர்கள் நடுநிசியில் கூடித் தொழிற்சாலையை உடைத்து இயந்திரங்களை அழித்துவிட்டு யாரிடமும் பிடிபடாமல் மறைந்து விடுவர். உலட்டு (Ludd) என்னும் அறிவிலியான இளைஞன் ஒருவன், முப்பதாண்டுகளுக்கு முன்னர் நாட்டிங்காம் மாவட்டத்தில் நூல் சட்டங்களை உடைத்தான் என்றும், அவன் பெயராலேயே இக்கலகங்கள் உலட்டைட்டுக் கலவரங்கள் என வழங்குகின்றன என்றும் கூறுவர். இரா.அ.

**உலுடண்டார்பு, எரிச்சு பிரடரிக்கு வில்கெல்ம் (கி.பி. 1865-1937)** என்பார் செருமானியப் படைத்தலைவர்களுள் ஒருவர். இவர் முதலாம் உலகப் போரின்போது பால் வான் இண்டன்பர்கு (Paul Von Hindenburg) என்பாரின் தலைமை இராணுவ அதிகாரியாகப் பணியாற்றினார்.

உலுடண்டார்பு (Ludendorff, Erich Friedrich Wilhelm) இன்றைய போலந்து நாட்டைச் சார்ந்த போசன் (Posen or Poznan) என்னும் நகரில் கி.பி. 1865-ஆம் ஆண்டில் பிறந்தார். செருமானியர் பெற்ற பல வெற்றிகளுக்கு உலுடண்டார்பு இராணுவத்தைச் சீராகத் திட்டமிட்டு அமைத்ததே காரணம் என்று வரலாற்று வல்லுநர்கள் கூறுவர்.

முதலாம் உலகப் போரின்போது இரண்டாம் படையின் கப்பற் சிறுதிறப் பணியாளர் பொறுப்பிலிருந்து படிப்படியாகப் பதவியுயர்வு பெற்று, அனைத்துச் செருமானியப் படைகளின் தலைமைப் படைத்

தலைவரானார். செருமானியப் படை 1918-ஆம் ஆண்டில் வீழ்ச்சியுற்றபோது உலுடண்டார்ப்பு சுவீடன் நாட்டிற்கு ஓடிப்போனார். அடுத்த ஆண்டு (1919) செருமனி திரும்பிய இவர், அரசியலில் ஈடுபாடு கொண்டு நாசிகளுடன் தம்மை இணைத்துக் கொண்டார்.

அடால்பு இட்லர் தீட்டிய பீர் மன்றப் புரட்சியின்போது இவரும் பங்குபெற்றார். எனினும் இப்புரட்சி தோல்வியுற்றது. மியூனிச்சு (Munich) நகரில் இப்புரட்சி 1923-ஆம் ஆண்டில் திடீரெனத் தோன்றியது; இட்லருடன் உலுடண்டார்ப்பும் விசாரணைக்குக் கொண்டு செல்லப்பட்டார். ஆனால்,முதலாம் உலகப் போரின் போது இவருடைய அருஞ்செயல்களின் அடிப்படையில் இவர் விடுதலையானார். பின்னர் இவர் இட்லருடன் கூட்டுச்சேராமல் அவரைவிட்டுப் பிரிந்தார். இவர் பண்டைய பேகன் (Pagan) கடவுள் வோட்டனை (Wotan) வழிபட்டார்.

உலுடண்டார்ப்பு 1937-ஆம் ஆண்டு காலமானார்.

இரா.அ.

**உலுபே, எமிலி பிராங்கோயிசு** (கி.பி. 1838-1929) என்பார் மூன்றாம் பிரெஞ்சுக் குடியரசின் குடியரசுத் தலைவர். இவர் பெலிக்சு பார் (Felix Faure) என்பவருக்குப்பின் இப்பதவியை வகித்தார். இவர் திரைபசு (Dreyfus) என்பவரால் ஏற்பட்ட நெருக்கடியின் தொடர்பாக எழுந்த வழக்கில் ஈடுபட்டு அதனைத் தீர்த்துவைத்தார்.

உலுபே (Loubet) கி.பி. 1838-ஆம் ஆண்டில் பிறந்தார். இவர் பள்ளிப்படிப்பை முடித்துவிட்டு வழக்குரைஞராக வாழ்வைத் தொடங்கினார். பின்னர் அரசியலில் ஈடுபட்டுக் குடியரசுக் கட்சியின் துணைத் தலைவராக (Deputy) கி.பி. 1876-இல் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் ஆளவை மன்ற (Senate) உறுப்பினராக கி.பி. 1885-இல் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஓராண்டுக்குப் பிறகு அமைச்சராக்கப்பட்டார். தம் அமைச்சரவையை முதன் முதலாக இவர் கி.பி. 1892-இல் அமைத்தார். மீண்டும் கி.பி. 1894-இல் இவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்; ஆளவை மன்றத் தலைவராக கி.பி. 1896-இலும், பிரான்சு நாட்டின் குடியரசுத் தலைவராக கி.பி. 1899-இலும் இவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இவர் குடியரசுத் தலைவராக இருந்தகாலத்தில் படைத்தலைவர் திரைபசு (Captain Dreyfus) என்பார் துரோகக் குற்றம் செய்தார் என்று பொய்யான வழக்கொன்றில் குற்றஞ்சாட்டப்பட்டுத் தண்டிக்கப்பட்டிருந்தார். இக்குற்றத்தை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்ற வேண்டுகோள் எழுந்தது. மறுபரிசீலனையை எதிர்த்தவர்கள் தமக்கு ஆதரவாளராகக் குடியரசுத் தலைவராயிருந்த பெலிக்சு பார் என்பாரை அமர்த்தி, மறு பரிசீலனை செய்யக்கூடாதென்று பெருமுயற்சி செய்தனர். ஆனால்,திடீரென்று பெலிக்சுபார் கி.பி. 1899-ஆம் ஆண்டில் இறந்தபோது, மறுபரிசீலனையை வேண்டியவர்கள் உலுபேயைக் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுத்தனர். அவர்கள் படைத் தலைவர் திரைபசை மீண்டும் பதவியில் அமர்த்த முயன்றனர்.

உலுபே குடியரசுத் தலைவராக இருந்தபோது, உருசியாவின் மன்னர் இரண்டாம் நிக்கோலசு என்பவரைப் பிரான்சு நாட்டிற்கு 1901-ஆம் ஆண்டில் வந்தபோது வரவேற்றார். அடுத்த ஆண்டில் உலுபேயும் உருசியாவுக்குச் சென்று வந்தார். இவர் இங்கிலாந்து மன்னர் ஏழாம் எட்வர்டை 1903-ஆம் ஆண்டில் வரவேற்று, அடுத்த ஆண்டு இங்கிலாந்து சென்று வந்தார். இங்கிலாந்து, பிரான்சு, உருசியா ஆகிய மூன்று நாடுகளும் முதல் உலகப் போருக்குமுன் முக்கூட்டு ஒப்பந்தம் (Triple Alliance) செய்துகொள்ள இப்பயணங்கள் உதவின. ஆர்மண்டு பாலியர்சு (Armand Fallieres) உலுபேயையடுத்து 1906-இல் குடியரசுத் தலைவரானபோது உலுபே ஓய்வுபெற்றார். இவர் மாண்டிமார் என்னுமிடத்தில் மாநகர் முதல்வராக (Mayor) இருந்தபோது 1929-ஆம் ஆண்டு காலமானார்.

இரா.அ.

**உலும்பினி** நேப்பாளத்தின் தெற்கு எல்லையில் உரும்மிண்டெய் (Rummindei) என்னும் சிற்றூருக்கு அருகிலுள்ளது. கோரக்பூர் என்னும் நகரிலிருந்து உலும்பினிச் சோலை (Lumbini) 80 கி.மீ. தொலைவில் உள்ளது. இது உருபதெய் (Rupadei) என்றும் கூறப்படும். இங்குத்தான் கௌதமபுத்தர் பிறந்தார். இங்குள்ள அசோகரின் கற்றூண் கல்வெட்டு அசோகர் இங்கு வந்ததாகக் கூறுகிறது. யுவான் சுவாங்கு என்னும் சீனப் பயணிஉலும்பினிச் சோலை கபிலவாசுத்து என்னும் நகரிலிருந்து 16 கி.மீ. தொலைவில் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். இங்கு ஒரு புத்த சமயக் கோயிலும் உள்ளது. அக்கோயிலில் புத்தர் பிறப்பினைக் குறித்த உருவம் உள்ளது. இச்சோலைக்குப் புத்தமதத்தைச் சார்ந்தவர்கள் புனிதப் பயணம் மேற்கொள்கின்றனர். அழிந்துபட்ட நிலையில் உள்ள இச்சோலையைப் பாதுகாக்க அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. சு.இரா.

**உலுமும்பா, பாட்ரிசு எமரி** (1925-1961) என்பார் ஆப்பிரிக்கக் கண்டத்தின் நாடுகளுள் ஒன்றான காங்கோக் குடியரசின் முதல் தலைமை

அமைச்சராய் இருந்தவர். உலுமும்பா (Lumumba) 1925–ஆம் ஆண்டு சூலை மாதம் 2–ஆம் நாள் பெல்சியக் காங்கோவிலிருக்கும் கட்டாகோ கோம்பி (Katako Kombe) என்னும் ஊரில் பிறந்தார். இவ்வூர் தென்காங்கோவில் கசாய் மாநிலத்தில் (Kasai Province) உள்ளது. காங்கோ விடுதலை பெறும்முன் பெல்சியம் நாட்டின் குடியேற்றப் பகுதியாக விளங்கியது. மாணவராக இருந்தபோது இவர் பெல்சிய நாட்டாரால் காங்கோவில் நிறுவப் பெற்றிருந்த பள்ளிகளில் கல்வி கற்றார். இவர் தம் பத்தொன்பதாம் வயதில் தொழிலாளியாகி இசுடான்லி விலி நகரத்தில் அஞ்சல் துறையில் எழுத்தராகப் பணியில் சேர்ந்தார். பதினோர் ஆண்டுகளுக்குப் பின்னர் இவர் 2500 தாலர் மதிப்புள்ள பணத்தைக் கையாடல் செய்த குற்றத்திற்காகச் சிறையில் அடைக்கப் பட்டார். அப்பணத்தைத் தேசிய எண்ணத்தைப் பரப்புவதற்குப் பயன்படுத்தவே கையாடியதாக இவர் வலியுறுத்தினார். ஓராண்டு சிறைவாசத்திற்குப் பிறகு இவர் விடுதலையானார். தமக்கென அரசியல் கட்சியொன்றை அமைத்து, அதற்குத் தேசிய காங்கோலியர் இயக்கம் (National Congolese Movement) எனப் பெயரிட்டு, அதன் தலைவராகவும் ஆனார். மீண்டும் கலகத்தைத் தூண்டினார் என்னும் குற்றத்திற்காக இவர் 1959–ஆம் ஆண்டில் சிறையில் அடைக்கப்பட்டார். ஆனால், 1960-ஆம் ஆண்டில் பிரசல்சு (Brussels) நகரில் நடைபெற்ற மாநாடொன்றில் கலந்துகொள்ளுதற்பொருட்டு விடுதலை செய்யப் பட்டார். இம்மாநாடு காங்கோவின் சுதந்திரம் குறித்துக் கலந்துரையாடக் கூட்டப்பட்டது.

காங்கோ நாடு 1960–ஆம் ஆண்டு சூன் மாதம் 30–ஆம் நாள் சுதந்திரம் பெற்றது. வலிமை வாய்ந்த நடுவண் அரசினைக் கோரிய உலுமும்பா தலைமை அமைச்சரானார். கூட்டாட்சிஅமைப்பையும் மாநிலச் சுய ஆட்சியையும் கோரிய சோசப்பு கசவுபு (Joseph Kasavubu) குடியரசுத் தலைவரானார். உலுமும்பா தலைமை அமைச்சராகப் பதவியேற்றவுடனேயே காங்கோவில் உள்நாட்டுக் கலகம் மூண்டது. காங்கோவின் படைவீரர்கள் கலகம் செய்தனர். கட்டாங்கா என்னும் மாநிலம் தனியாகப் பிரிந்து செல்ல முனைந்து கலகத்தில் ஈடுபட்டது. காங்கோவிலிருந்த பெல்சியப்படையை மீண்டும் நாட்டில் அனுமதிக்க வேண்டுமெனவும் கலகக்காரர்கள் கோரினர். இதைத் தவிர்க்க விரும்பிய உலுமும்பா ஐக்கிய நாடுகள் (U.N.) தலையிட வேண்டுமென வேண்டுகோள் விடுத்தார். ஆனால், இவருக்குப் போதிய ஆதரவு கிட்டவில்லை. நியூயார்க்கிலிருந்து காங்கோ திரும்பிய உலுமும்பா, ஐக்கிய நாடுகள் உதவாததைப் பெருங் குறையாகக் கருதிக் கசாய் மாநிலத்தைக் கைப்பற்றத் தம் படைகளை அனுப்பினார். பின்னர் இவர் கட்டாங்கா மீதும் படையெடுக்கத் திட்டம் தீட்டியிருந்தார். இத் தருணத்தில் 1960 செப்டம்பர் 5–ஆம் நாள் காங்கோவின் குடியரசுத் தலைவரான கசவுபு நடவடிக்கையை மேற்கொண்டு உலுமும்பாவைப் பதவியிலிருந்து விலக்கினார். இராணுவத் தலைவர் மொபுட்டுவின் (Mobutu) இராணுவப் புரட்சி ஏற்பட்டதும் உலுமும்பா வீட்டுக் காவலில் வைக்கப் பட்டார். பின்னர் இவர் இலியோபோல்டுவில்லி என்னும் நகருக்கண்மையில் தைசுவிலி (Thysville) இராணுவமுகாமில் சிறைப்படுத்தப்பட்டார். பின்னர்க் கட்டாங்காவிலிருந்த தொலைதூரப் பகுதியொன்றிற்குச் சிறை மாற்றப்பட்டார். இவர் 1961 பிப்பிரவரி 10-ஆம் நாள் சிறையிலிருந்து தப்பிச் சென்றதாக அறிவிக்கப்பட்டார். ஆனால் இரு நாள்களுக்குப் பிறகு சிற்றூர்வாசிகள் யாருக்கும் தெரியாத இடத்தில் இவரைக் கொன்றுவிட்டார்கள் என்பது தெரியவந்தது. பின்னர் வந்த அறிக்கை இவர் 1961 சனவரி 17–ஆம் நாளே இறந்திருக்கவேண்டும் என்று கூறியது. ‘காங்கோ-என்நாடு’ (Congo,My Country)என்னும் நூல் இவருடைய நினைவாக 1961–ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.

உலுமும்பாவின் கொலையை எதிர்த்து உலகின் பல நாடுகள் இவருக்கு ஆதரவாக இரங்கல் தெரிவித்தன. இவருடைய அரசியல் பகைவர்களை உலக நாட்டவர்கள் பலர் குறைகூறினர். இவருக்குப் பொதுவுடைமைக் கோட்பாடுகளில் ஆழ்ந்தபற்றுண்டு. பொதுவுடைமைக் கொள்கைப் பற்றே இவருக்குப் பகையாயிற்று. சோவியத்து ஒன்றியத்தின் தலைநகரமான மாசுக்கோவில் இவர் பெயரில் உலுமும்பாப் பல்கலைக் கழகம்தோற்றுவிக்கப்பெற்று இன்றும் செயலாற்றி வருகின்றது. இரா. அ.

**உலுரிசுத்தான்** தென்மேற்கு ஈரானில் உள்ள மலைகள் நிறைந்த பகுதி. உலுரிசுத்தான் (Luristan) பகுதியில் உள்ள ஆர்சின் (Harsin), கொரமாபாது (Khoramabad), அலிசுடர்ப் பள்ளத்தாக்கு (Alishtar Valley), தெபெ சியால்க்கு (Tepe Sialk) போன்ற இடங்களில் அகழாய்வு செய்யப்பட்டபோது தொன்மையான பல வெண்கலப் பொருள்கள் கிடைத்தன. வெண்கலப் பொருள்களில் குதிரைகளுக்குப் பூட்டப்படும் சேணங்களும், கடிவாளங்களும், தட்டுமுட்டுக் கலங்களும், அணிகலன்களும், போர்க்கருவிகளும், சடங்குகளில் பயன்படுத்தப்படும் பொருள்களும் பெருமளவில் கிடைத்தன. இப் பொருள்கள் இன்று பல்வேறு அருங்காட்சியங்களில் வைக்கப்பட்டுள்ளன.

இவற்றின் காலம் கி.மு. 1500 முதல் கி.மு. 500 ஆண்டுகளுக்கு உட்பட்டது. இப்பொருள்களைச் செய்த மக்கள் யார் என்பது இன்றளவும் தெரியவில்லை. அறிஞர்கள் சிலர் தென் உருசியப் பகுதியில் நாடோடிகளாய் இருந்த கிம்மிரியன் மக்கள் (Cimmerians) கி.மு. 8-ஆம் நூற்றாண்டில் ஈரானியப் பகுதியில் படையெடுத்துச் சென்று அங்கு வாழ்ந்திருக்கலாம் என்றும், அவர்கள் பயன்படுத்திய பொருள்களே இவை என்றும் கருதுகின்றனர். சு.இரா.

**உலுவாங்கு பிரபாங்கு** இலாவோசு நாட்டிலுள்ளதொரு நகரம். உலுவாங்கு பிரபாங்கும் (Luang Prabang) வியண்டியான் (Vientiane) என்னும் நகரமும் 1975-ஆம் ஆண்டுவரை இலாவோசு நாட்டின் தலைநகரங்களாகக் கருதப்பட்டன. உலுவாங்கு பிரபாங்கை அரசருடைய தலைநகர் (Royal Capital) என்று கருதினர். ஏனெனில், அங்குத்தான் அரசரின் மாளிகை இருந்தது. பொதுவுடைமைக் கட்சியினர் இலாவோசை (Loas)1975-இல் கைப்பற்றிக் கொண்ட போது இலாவோசிய அரசமரபினரின் ஆட்சி அகற்றப்பட்டது. பின்னர் வியண்டியான் இலாவோசின் ஒரே தலைநகராயிற்று. உலுவாங்கு பிரபாங்கு என்னும் பெயரில் மாநிலம் ஒன்றும் இலாவோசு நாட்டில் உள்ளது. இது அந்நாட்டின் வடமேற்கில் மீகாங்கு ஆற்றங்கரையில் அமைந்துள்ளது. இது ஓர் ஆற்றுத் துறைமுகம். இது மீன், அரிசி, தேக்கு, இரப்பர் போன்ற பொருள்களின் வாணிக மையமாகும். இந்நகருக்கு அருகில் துத்தநாகம் வெட்டியெடுக்கப்படுகிறது. இந்தியப் புத்தசமயத் துறவிகள் உலுவாங்கு பிரபாங்கு நகரை அமைத்தனர் என்று மரபு வழிச் செய்தி அறிவிக்கிறது. பல நூற்றாண்டுகள் இது இலாவோசு-தாய் அரசின் (Laotian-Thai Kingdom) மையமாக விளங்கியது. அக்காலத்தில் பெரும்பாலான இலாவோசுப் பகுதிகளும் தாய்லாந்தின் பகுதிகளும் இந்த அரசினால் கட்டுப்படுத்தப்பட்டிருந்தன. இந்நகரின் மக்கள் தொகை 44,244 (1979). இரா.அ.

**உலுவாண்டா** என்னும் மாநகர் தென் ஆப்பிரிக்காவிலுள்ள அங்கோலா என்னும் நாட்டின் தலைநகரமும் பெருநகரமும் ஆகும். உலுவாண்டா (Luanda) அட்லாண்டிக்குப் பெருங்கடலின் கடற்கரை நகரமாகும். இந் நகரம் கார்கோ (Corgo) ஆற்றுக் கழிமுகத்தில் ஏறத்தாழ 300 கி.மீ. உள்ளே தள்ளி அட்லாண்டிக்குக் கடற்கரை நகரம் போல் தோற்றமளிக்கிறது.சகாராப்பாலைநிலத்திற்குத் தெற்கில் ஐரோப்பியர்களால் அமைக்கப்பெற்ற மிகத் தொன்மையான நகரமிது.

உலுவாண்டாவின் தொடக்ககாலக் குடியேற்றத்தை அமைத்தவர்கள் போர்ச்சுகீசியர் ஆவர். இதை அவர்கள் துறைமுகத்தைக் காக்க உதவின மணல் தீவுத்திட்டின் மீது அமைத்தனர். இக்காலத்தில் அதன் பகுதிகள் கடற்கரையில் தங்குமிடங்களாக உருமாறியுள்ளன. இத் தீவுக்குடியேற்றத்தை உள்நாட்டுப் பகுதிக்கு மாற்றிய போது அது தாழ் நகரம்(Low City) என்றும், உயர்நகரம் (High City) என்றும் இருபகுதியாயிற்று. தாழ்நகரம் விரிகுடாவையொட்டி வாணிக மையமாயிற்று. உயர் நகரம் நிருவாகப் பகுதியாயிற்று. இவற்றைத் தவிர, சா மிகல் (Sao Mighel) என்னும் கோட்டைப்பகுதியும் உண்டு. இது கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாயினும் இன்றும் நிலைத்துள்ளது. இதைப்போலவே பண்டைத் திருச்சபைகளும் மாளிகைகளும் நிலைத்துள்ளன. அவற்றுடன், உலுவாண்டாவில் ஆய்வுக்கூடங்கள், அப்கோலா அருங்காட்சியகம், வாணிக-தொழில்நுட்பப் பள்ளிகள், பல்கலைக்கழக மையம் போன்றவையும் உருவாகியுள்ளன.

உலுவாண்டாவே அங்கோலாவின் முக்கிய வாணிக மையமும் தலையாய துறைமுகமுமாகும். எண்ணெய் தூய்மைப்படுத்துதல், உணவுப் பொருள்களைப் பதப்படுத்துதல், பொறியியல் தொடர்பான பணிகள், உலோகப் பொருள்கள் ஆகியவற்றைச் செய்தல், பேருந்து வண்டிகளை இணைத்து உருவாக்கல், மீன் பண்ணைகளில் பணி செய்தல், ஆடை நெய்தல், கட்டுமானப் பொருள்கள் செய்தல், இரப்பர்ப்பொருள்கள் செய்தல், இரசாயனப்பொருள்களைச் செய்தல், பொறி வண்டிச் சக்கரக்குழாய்ப் பட்டைகள் (Tyres) செய்தல் போன்ற வெவ்வேறு வகைப் பொருள்களை இந்நகரம் உற்பத்தி செய்கிறது. காப்பி, சர்க்கரை பருத்தி, மக்காச்சோளம், எண்ணெய்ப்பொருள்கள், பெட்ரோலியப் பொருள்கள், கனிமப் பொருள்கள் முதலானவை முக்கிய ஏற்றுமதிப் பொருள்களாகும்.

தென் அமெரிக்காவிலுள்ள பிரேசில் நாட்டிற்கு அடிமைகளைக் கப்பல்களில் ஏற்றி அனுப்பும் வாணிகத்தில் இந்நகரம் கி.பி. 19-ஆம் நூற்றாண்டு வரை ஈடுபட்டிருந்தது. ஆதலின், அடிமை வாணிகம் ஒழிக்கப் பட்டபோது ஓரளவு பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. இந்நெருக்கடி 20-ஆம் நூற்றாண்டிலும் தொடர்ந்தது எனலாம். ஆனால், இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் இம்மாநகரம் பெருகி வளர்ந்ததுடன், புதிய அமைப்புடன் உருமாறலாயிற்று. அங்கோலா 1975-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11-ஆம் நாள் விடுதலை பெற்றது. இந்நாடு விடுதலை பெறுவதற்கு முன்னரும் பின்னரும் அரசியல் கட்சிகளுக்கிடையே ஏற்பட்ட மோதல்களால் உலு

வாண்டா நகரம் ஓரளவு சேதமுற்றது. இந்நகரத்தின் மக்கள் தொகை 4,80,613 (1970). இரா.அ.

**உலுவார்** பிரான்சு நாட்டில் பாயும் மிக நீண்ட ஆறு. இதன் நீளம் ஏறத்தாழ 1050 கி.மீ. ஆகும். இந்த ஆற்றுப் பாசனத்தால் பிரான்சு நாட்டின் நாலிலொரு பங்கு நிலம் பாசன வசதி பெறுகிறது. உலுவார் (Louire) ஆறு செவனசு (Cevennes) மலைத் தொடரில் உற்பத்தியாகி வடக்காகப் பாய்ந்து, ஆர்லியன்சு (Orleans) என்னுமிடத்தில் மேற்காகக் திரும்பிப் பல மாளிகைகளைக் கொண்ட பள்ளத்தாக் கொன்றின் வழியாகச் செல்லுகிறது. பின்னர் இந்த ஆறு பிசுக்கே விரிகுடாவில் (Bay of Biscay) கடலில் கலக்கிறது. உலுவார் ஆற்றில் படகுகள் செல்ல மாட்டா. ஏனெனில், இவ்வாற்றில் அவ்வப்போது வெள்ளப் பெருக்கங்கள் ஏற்படுகின்றன; மணல் மேடுகளும் குறுக்கிடுகின்றன. இந்த ஆறு புனித நசார் (St. Nazaire) என்னுமிடத்தில் அட்லாண்டிக்குப் பெருங்கடலில் இணைகிறது. நாண்டெசு (Nantes) நகரத்திலிருந்து கடல்வரையில் தூர் எடுத்துக் கடலை ஆழப்படுத்திப் பயன்படுத்துகிறார்கள். சோன்(Saone), உரோன் (Rhone), சீன் (Seine) போன்ற ஆறுகள் உலுவாருடன் கால்வாய்கள் மூலம் இணைக்கப்பட்டுள்ளன. அல்லியர் (Allier), செர் (Cher), இந்திரே (Indre), மெயின் (Maine), வியன்னா (Vienna) போன்றவை இதன் துணை ஆறுகளாகும். இரா. அ.

**உலூக்கசு** அயோனியக் கடலிலுள்ள கிரேக்கத் தீவு. இத்தீவு 303 சதுரக் கி.மீ. பரப்பளவுள்ளது. இத்தீவிலுள்ள செங்குத்தான சுண்ணாம்புப் பாறைகளினால் இத்தீவு உலூக்கசு (Leukas) என்று கூறப்படுகிறது. இத்தீவின் தலையான நகரமும் உலூக்கசுதான். இந்நகரம் தீவின் வடகிழக்கு மூலையில் அமைந்துள்ளது. இத்தீவின் பெரும்பகுதியில் மலைகள் உள்ளன. ஒலிவ எண்ணெய் தயாரித்தல், கருமுந்திரி பயிரிடுதல், மதுபானம் தயாரித்தல் போன்ற தொழில்கள் இங்கு நடைபெறுகின்றன. இத்தீவில் அடிக்கடி நிலநடுக்கம் ஏற்படும்.

இத்தீவில் உள்ள சிரோசுபிலியாக்(Chirospilia) குகைகளில் புதிய கற்காலக் கருவிகள் கிடைத்துள்ளன. நித்திரி (Nidhri) என்ற இடத்தில் செய்த அகழாய்வில் புதிய கற்காலக் கருவிகளும், செப்புக்காலப் பண்பாட்டு நாகரிகமும் இருந்ததற்கான தடயங்கள் கண்டெடுக்கப்பட்டன. செப்புக் காலத்தைச் சேர்ந்த இடுகாடுகள் இங்குள்ளன. முதற்செப்புக் கால மக்கள் இறந்தவர்களை மட்சலத்தில் வைத்துப் புதைத்தனர். இடைச் செப்புக் காலத்தைச் சேர்ந்த இரண்டு கல்லறைகளில் மின்யான் மட்பாண்டங்கள் (Minyan ware) கிடைத்தன. உலூக்கசு முனை என்ற இடத்தில் அழிந்துபட்ட அப்போலோ கோயில் உள்ளது. மைசீனிய நாகரிகத்தின் பழமைச் சின்னங்கள் இத்தீவில் கிடைத்துள்ளன. இத்தீவில் கி.மு. 625-இல் காரிந்து மக்கள் குடியேறினர். உரோமானியர்கள் கி.பி. 167-இல் இத்தீவைக் கட்டுப்பாடற்ற நகரமாக அறிவித்தனர். இத்தீவு துருக்கியர்களால் கி.பி. 1479-இல் கைப்பற்றப் பட்டது. சு.இரா.

**உலூக்குலசு உலூசியசு இலிசினியசு** என்பார் உரோமானியப் படைத்தலைவரும் கலைப்பண்பறிஞருமாவார். இவர் கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் பிறந்து கி.மு. 60 ஆண்டளவில் காலமானவர். உலூக்குலசு (Lucullus, Lucius Licinius) கி.மு. 74-ஆம் ஆண்டில் அயல்நாட்டுப் பேராளராக (Consul) இருந்தவர். பதவிக்காலம் முடிவுற்றதும் இவர் சிற்றாசியாவுக்குச் (Asia Minor) சென்று பாண்டசுப்(Pontus) பகுதியிலிருந்த மித்திரடேடசு என்பாரையும் அவருக்குத் துணைநின்ற ஆர்மீனியாவைச் சேர்ந்த தைகிரேனசு (Tigranes) என்பாரையும் எதிர்க்கப் படையுடன் சென்றார். நன்கு நடத்தப்பெற்ற பல படையெடுப்புகளில் உலூக்குலசு மேற்கூறிய பகைவர்கள் இருவரையும் பன்முறைகள் தோற்கடித்தபோதிலும், போரை முடிவுக்குக் கொண்டுவரமுடியாமல் தவித்தார். இவருடைய ஆணவத்தைப் படைவீரர்கள் வெறுத்தனர்; எனவே கலகம் செய்தனர். ஆளவை மன்றம் (Senate) இவருக்கு மாறாகப் பாம்பேயை (Pompey) அனுப்பியது.

உலூக்குலசு பெருஞ்செல்வத்துடன் நாடு திரும்பினார். பின்னர் வாழ்நாள் முழுவதையும் இன்ப விளையாட்டுகளில் கழித்தார். கவிஞர்கள், கலைஞர்கள், தொழிலாளிகள் போன்றோரை இவர் ஆதரித்தார். பகட்டான விருந்துகளை இவர் கொடுத்தார். அழகான வீடு ஒன்றைக் கட்டி, அதனை அழகுபடுத்தப் பெருந்தொகையைச் செலவிட்டார் இதனால் ஆடம்பரமானதும் சுவையானதுமான வாழ்வு வாழ்வோரை உலூக்குலன் (Lucullan) என்னும் சொல் பிற்காலத்தில் சுட்டுவதாயிற்று. இரா.அ.

**உலூசாசியா** செருமனியில் நீசி, இசுபிரி ஆறுகளுக்கு இடையில் அமைந்துள்ள நகரம். உலூசாசியாவில் (Lusatia) கி.மு. 1200-ஆம் ஆண்டளவில் இருந்த பண்பாடு 'உலூசாசேயின் பண்பாடு' எனக் கூறப்படுகிறது. இக்காலத்தைச் சார்ந்த தாழிகளும் வெண்கலப் பொருள்களும் பெருமளவில் இங்குக் கிடைத்தன. நன்கு சுடப்பட்ட கறுப்பு மட்கலன்களும் கண்

டெடுக்கப்பட்டன. இங்கு கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் இசுலாவிய மலை இனத்தவர் குடியேறினர். முதலாம் பிரடரிக்கு பொகீமியாவின் அரசரான விலாடிசுலாவு (Vladislav) என்பவருக்கு கி.பி. 1158-ஆம் ஆண்டு கீழை இலூசாசேப் பகுதியைக் கொடுத்தார். இப் பகுதி கி.பி. 1815-ஆம் ஆண்டு ஏற்பட்ட வியன்னா மாநாட்டு உடன்படிக்கையின்படி பிரசியாவிற்கும் சாக்சனிக்கும் பிரித்தளிக்கப்பட்டது. சு. இரா.

**உலூசிங்டன், சார்லசு (கி.பி. 1785-1866)** என்பார் ஆங்கிலேயர் இந்தியாவை ஆட்சி செய்த காலத்தில் வாழ்ந்த 'ஐ.சி.எசு.' (I.C.S.) அதிகாரிகளுள் ஒருவர். இவர் கி.பி. 1785-ஆம் ஆண்டில் பிறந்தார். இந்தியாவுக்கு உலூசிங்டன், சார்லசு (Lushington, Charles) கி.பி. 1801-ஆம் ஆண்டில் வந்தார். இவர் அரசுப் பணியாளராக உயர் பதவிகள் பலவற்றை ஏற்றுச் சீரிய பணியாற்றிப் புகழ்பெற்று, கி.பி. 1827-ஆம் ஆண்டில் பதவியிலிருந்து ஓய்வு பெற்றார். இவர் பல குழுக்களில் உறுப்பினராக அமர்த்தப் பெற்றார். இவர் எழுதிய நூல்களுள் ஒன்று 'கல்கத் தாச் சமய நிறுவனங்களின் வரலாறு' (கி.பி.1824-History of Calcutta's Religious Institutions) என்பதாகும். இவர் கி.பி. 1866-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23-ஆம் நாள் காலமானார். இரா.அ.

**உலூசிச் சுரங்கப்பாதை** பிரான்சு நாட்டின் வோசுகசு (Vosges) மலைகளைக் குடைந்து அமைக்கப்பெற்றதொரு சுரங்கப் பாதையாகும். இம் மலை பிரான்சின் வடகிழக்குப் பகுதியில் உள்ளது. இதன் குறுக்காக அமைக்கப்பட்ட இவ்விருப்புப்பாதையின் நீளம் 6.86 கி.மீ. ஆகும். இசுலெசுடட்டு (Selestat) என்னும் நகரத்தையும் புனித தை (St. Die) என்னும் நகரத்தையும் உலூசிச்சுரங்கப் பாதை (Luese Tunnel) இணைக்கிறது. இச்சுரங்கத்தின் பணி 1933-ஆம் ஆண்டில் தொடங்கினபோதிலும் 1937-ஆம் ஆண்டு வரை நிறைவு பெறவில்லை. பொறியியல் வல்லுநர்கள் 3 கி.மீ. நீளத்திற்குக் கருங்கல்லைக் குடைந்து இப்பாதையை அமைத்தார்கள். இரா. அ.

**உலூசிபர்** சைத்தானின் பெயர். இப்பெயர் விவிலியநூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. 'இளம் பொழுதின் மகனான ஓ உலூசிபரே! நீ பரமண்டலத் திலிருந்து எவ்வாறு கீழே வீழ்ந்தாய்' என்னும் வரியில் உலூசிபர் குறிக்கப்படுகிறது. உலூசிபர் (Lucifer) என்னும் சொல்லுக்குக் காலை விண்மீன் (Daystar) என்பது பொருள். இலத்தீன் மொழியில் இச்சொல் 'ஒளியைத் தாங்குபவர்' (Light Bearing) எனப் பொருள்படும். சான் மில்ட்டன் (John Milton) என்னும் ஆங்கிலக் கவிஞர் உலூசிபர் சைத்தானைக் குறிப்பதாகத் தாம் எழுதிய 'சுவர்க்க நீக்கம்' (Paradise Lost) என்னும் காவியத்தில் குறிப்பிட்டுள்ளார். தொடக்க கால விவிலியநூல், பரமண்டலத்தில் வாழ்ந்த தேவதை பரமபிதாவுக்கெதிராகக் கலகம் விளைவித்த குற்றத்திற்காக அப்பரமபிதாவால் பூவுலகத்திற்குத் தூக்கி எறியப்பட்டதாகக் கூறுகிறது. இரா. அ.

**உலூசியசு** என்னும் பெயரில் மூன்று போப்பாண்டவர்கள் இருந்தார்கள். முதலாம் உலூசியசு (Lucius) என்பார் கி.பி. 253-254-ஆம் ஆண்டில் போப்பாண்டவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் கி.பி. 253-ஆம் ஆண்டு உரோமானியப் பேரரசர் காலசு (Gallus) என்பார் இவரை சிவிட்டாவெச்சியா (Civitavecchia) என்னுமிடத்திற்கு நாடு கடத்தினார். பேரரசர் வேலரியன் (Emperor Valerian) இவரைச் சிறைமீட்டார். உலூசியசின் விடுதலை பற்றிய செய்தியைக் கார்த்தேசைச் (Carthage) சார்ந்த சைப்பிரியன் (Cyprian) என்பார் பாராட்டிப் பேரரசருக்குக் கடிதம் எழுதினார். உலூசியசுக்கும் சைப்பிரியன் கடிதம் எழுதியிருந்தார்.

முதலாம் உலூசியசு (Lucius I) காலமானபோது, காலிசுடசு (Callistus) கல்லறையில் புதைக்கப் பட்டார். அவருடைய நடுகல் வாசகமும் (Epitaph) கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. உரோமானியத் திருச் சபை இவரை ஆதிபத்தராக (Conferror) நியமித்தது. இவர் கி.பி 4-ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து பாராட்டப்பட்டார்.

**உலூசியசு, இரண்டாம்** (கி.பி. 1145-இல் காலமானவர்)போப்பாண்டவராக கி.பி. 1144, 1145-ஆம் ஆண்டுகளில் இவர் பணியாற்றினார். செரார்டோ சசியானிமிசி (Gerardo Caccianemici) என்பது இவருடைய இயற்பெயர். இவர் பெற்றோர் எளிய குடும்பத்தைச் சார்ந்தவர்கள். இவர் போலக்னாவில் (Bologna)பிறந்தவர். பின்னர் மதகுருவாக மாறினார், பின்னர், இரண்டாம் ஒனோரியசு(Honorius II) என்னும்பெயர் கொண்ட போப்பாண்டவர் இவரைப் போப்பாண்டவர் மன்ற உறுப்பினராக (Cardinal) உயர்த்தினார்; செருமனிக்குப் போப்பாண்டவரின் பேராளராகச் சில ஆண்டுகளுக்கு இவர் நியமிக்கப்பட்டார். உரோமாபுரி திரும்பியபோது போப்பாண்டவர் இரண்டாம் இன்னசண்டு (Innocent II) இவரை உரோமானியத் திருச்சபையின் வேந்தராக (Chancellor) நியமித்தார்.

இரண்டாம் செலசுட்டின் (Celestine II) என்பாரையடுத்து இவர் கி.பி. 1144-ஆம் ஆண்டில்

போப்பாண்டவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் அவ்வாண்டு மார்ச்சு மாதம் 12-ஆம் நாள் பொறுப்பேற்றார். இவருடைய மிகக் குறுகிய பதவிக் காலம் வன்முறைச் செயல்களால் பாதிக்கப்பட்டது. போப்பாண்டவரான இவரை எதிர்த்த பியர்லோனி (Pierloni) என்பான் உரோமாபுரியைக் குழப்பத்தில் ஆழ்த்தினான். அவனை எதிர்க்க இரண்டாம் உலூசியசு படையுடன் போருக்குச் சென்றபோது கி.பி. 1145-ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதம் 15-ஆம் நாள் கொல்லப்பட்டார்.

உலூசியசு, மூன்றாம் (கி.பி. 1097-1185) போப்பாண்டவராக கி. பி.1181 முதல் 1185 வரை பதவி வகித்தவர். இவருடைய இயற்பெயர் உபால்டோ அலுசிங்கோலி (Ubaldo Allucingoli) என்பதாகும். இவர் இத்தாலியிலுள்ள உலூக்கா (Lucca)என்னும் ஊரில் கி.பி. 1097-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11-ஆம் நாள் பிறந்தார். போப்பாண்டவர் மன்ற உறுப்பு மதகுருவாக (Cardinal - Priest) கி.பி. 1147-இலும், ஓசுட்டியா (Ostia)வின் மன்ற உறுப்புப் பேராயராக கி.பி. 1159-இலும் இவர் ஆக்கப் பெற்றார். மூன்றாம் இயூசின் (Eugene III), மூன்றாம் அலெக்சாந்தர் (Alexander III) என்னும் போப்பாண்டவர்களின் பேராளராகப் பொறுப்பேற்று, போப்பாண்டவரின் அரசுப் பகுதிகளுக்கு எதிரான வர்களோடு உடன்படிக்கை செய்து கொள்ள உதவினார். இவர் கி.பி. 1181-ஆம் ஆண்டில் போப்பாண்டவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். உலூசியசு சிறிது காலமே உரோமாபுரியில் தங்கியிருந்தார். ஏனெனில் இவரை எதிர்த்தவர்கள் பல தொல்லைகள் கொடுத்தனர். பேரரசர் பிரடெரிக்கு பார்பரோசா(Frederick Barbarossa) என்பாருடன் இணைந்து உலூசியசு, அரசு - திருச்சபைப் பேரவையொன்றில் தலைமை தாங்கினார். இம் மாநாடு கி.பி. 1184-ஆம் ஆண்டில் வெரோனா (Verona) என்னும் ஊரில் நிகழ்ந்தது. இவர் கி.பி. 1185-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25-ஆம் நாள் காலமானார். இரா.அ.

**உலூத்துலி, ஆல்பர்ட்டு சான் (கி.பி. 1896-1967)** என்பார் தென் ஆப்பிரிக்காவில் நிலவும் இனப் பாகுபாட்டை முறியடிக்க அமைதியான முறைகளைக் கையாண்டமைக்காக 1960-ஆம் ஆண்டில் நோபல் பரிசு பெற்ற ஆப்பிரிக்கர். உலூத்துலி (Luthuli) சூலூ (Zulu) மரபினைச் சார்ந்தவரும் அதன் முன்னாள் தலைவருமாவார். ஆப்பிரிக்கத் தேசிய காங்கிரசு (African National Congress) என்னும் இயக்கத்தின் தலைவராகவும் இவர் பணியாற்றினார். ஆனால், இவ்வியக்கத்தை அரசு 1960-ஆம் ஆண்டில் தடை செய்துவிட்டது. அரசியல் மேடைகளில் பேசக் கூடாதென இவரை அரசு தடுத்தது. தர்பன் (Durban) என்னும் நகருக்கு அருகிலுள்ள கிரவுட்வில்லி (Groutville) என்னும் இவர் பிறந்த ஊரைவிட்டு வெளியே நடமாடக்கூடாதெனத் தடைவிதிக்கப்பட்டார். ஆயினும், நோபல் பரிசு பெற நார்வே நாட்டிற்குச் செல்ல இவர் அனுமதிக்கப்பட்டார்.

இவர் கி.பி.1898-ஆம் ஆண்டு பிறந்தார். இவருடைய தந்தை உரொடீசியா (Rhodesia)வில் கிறித்தவச்சமய விளக்கவுரையாளராகப் பணியாற்றினார். உலூத்துலி ஆல்பர்ட்டுசான் கிறித்தவப் பள்ளிகளில் கல்வி கற்றார். இவர் 1917-இல் தொடக்கப்பள்ளி ஆசிரியராகும் தகுதியைப் பெற்றார். நான்காண்டுகளுக்குப் பின்னர்த் தென்னாப்பிரிக்காவைச் சார்ந்த நேட்டாலில் (Natal) உள்ள ஆடம்சுக் கல்லூரியில் (Adams College)பட்டம் பெற்ற இவர் ஆசிரியர் பயிற்சித் துறையில் 1936-ஆம் ஆண்டு வரை தொடர்ந்து பணியாற்றினார். இவர் 1948-இல் அமெரிக்க ஐக்கிய நாட்டில் பயணம் செய்தார். தென் ஆப்பிரிக்காவின் அரசியலில் இவர் தீவிரமாகப் பங்கு கொண்டார். இனஒதுக்கல் (Apartheid) கொள்கையை எதிர்த்து இவர் ஒத்துழையாமை இயக்கமொன்றைத் தொடங்கியபோது கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார். பின்னர் இவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் விலக்கிக் கொள்ளப்பட்டன. இவர் 1967-ஆம் ஆண்டு சூலைமாதம் 21-ஆம் நாள் இருப்புப்பாதையில் அடிபட்டுக் காலமானார். இரா.அ.

**உலூதியானா** என்னும் மாநகரம் இந்தியாவின் மாநிலங்களுள் ஒன்றான பஞ்சாபில் உள்ளது. இந்தப் பெயரில் மாவட்டம் ஒன்றுமுள்ளது. உலூதியானா மாவட்டத்தின் வடக்கில் சலந்தர் மாவட்டமும் (Jullundur), தெற்கில் சங்ரூர் (Sangrur),பாட்டியாலா மாவட்டங்களும், கிழக்கில் உரூப்நகர் (Rupnagar) மாவட்டமும், மேற்கில் பரித்கோட்டு (Faridkot) மாவட்டமும் உலூதியானாவைச் சுற்றிலும் அமைந்துள்ளன. இம்மாவட்டத்தின் மக்கள்தொகை 18.04,420 (1981).

உலூதியானா (Ludhiana) என்னும் பெயர் கொண்ட மாநகரம் பஞ்சாபு மாநிலத்தின் தொழில் வளம் மிக்க நகரங்களுள் ஒன்றாகும். இந்நகரம் தில்லி மாநகருக்கு வடமேற்கில் ஏறத்தாழ 270 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. ஒருகாலத்தில் இந்நகரம் சிந்து ஆற்றின் துணையாறுகளில் ஒன்றான சட்லசு (Sutlej) ஆற்றங்கரை நகரமாயிருந்தது. இப்போது அந்த ஆறு உலூதியானாவிற்கு 13 கி.மீ. தெற்கில் ஓடுகிறது.

இந்நகரம் கி.பி. 1480-ஆம் ஆண்டில் தில்லிச் சுல்தானிய மரபுகளில் ஒன்றான உலோடி வமிசத்தின ரால் அமைக்கப்பட்டது. உலோடி வமிசத்தின் பெயராலேயே இதனை உலூதியானா என்று குறித்தனர். ஆப்கானிசுத்தானத்தைச் சார்ந்த சா சூசா (Shah Shuja) என்பார் கி.பி. 1815-முதல் 1838-ஆம் ஆண்டு வரை இந்நகரில்தான் அடைக்கலம் புகுந்திருந்தார்.

உலூதியானா தொழில்வளம் மிக்க நகரமான படியால் இதனை இந்தியாவின் மான்செசுட்டர் (Manchester of India)என்றும் சொல்லுவர்.எண்ணற்ற கைத்தொழில்களின் இருப்பிடமான இந்நகரம் நெசவுத்தொழில், பின்னல்வேலை, சாயமிடும் தொழில், கம்பள நெசவு போன்றவற்றிற்குப் பேர்பெற்றதாகும். கம்பள ஆடைகள் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் விற்பனையாகின்றன. இங்குள்ள தொன்மையான கோட்டைக்குள் கம்பள நெசவு நிறுவனம் செயற்படுகிறது. பஞ்சாபு வேளாண்மைப் பல்கலைக் கழகம் இந்நகரிலிருந்துதான் பணியாற்றுகிறது. இங்குக் கிறித்தவ மருத்துவக் கல்லூரியொன்றும் இயங்குகிறது. இக்கல்லூரிபஞ்சாபுப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பெற்றுள்ளது.

உலூதியானா இந்தியாவின் மாநகரங்களில் 29-ஆம்இடத்தைப் பெற்றுள்ளது. இதன் மக்கள் தொகை 6,06,250 (1981). இரா.அ.

**உலூபம்பன் நுட்பம்** ஆப்பிரிக்காவில் சகாராவின் தாழ்நிலப் பகுதிகளில் வாழ்ந்த கற்கால மனிதன் கற்கருவிகள் செய்த தொழிற்கூடத்தில் காணப்பட்ட நுட்பமாகும். இதன்காலம் கடை நாலூழியின் முன்னூழி (Late Pleistocene). இது ஏறத்தாழ 40,000 ஆண்டுகளுக்கு முற்பட்டது. இங்குக் கிடைக்கும் கற்கருவிகள் சிறியனவாகவும் இரு முனைகளை உடையனவாகவும் நல்ல உருவ அமைப்பு உடையனவாகவும் விளங்குகின்றன. இங்குக் கிடைத்த கற்கருவிகளுள் நுண் கற்கருவிகளும், வாய்ச்சிக் கருவிகளும் (Adze), அலகுக்கத்தி(Blade), ஈட்டித் தலைபோன்ற வடிவுடைய கூர்மையான இருமுனைத் துளைக் கருவிகளும் குறிப்பிடத்தக்கவை. சு. இரா.

**உலூபில்யானா** வடக்கு யூகோசுலாவியாவிலுள்ள (Yugoslavia) சுலோவினியாவின் (Slovenia) தலைநகரம். இங்கு வரலாற்றுக்குமுந்தைய கால (Prehistoric) நாகரிகம் நிலவியிருந்தது. இந்நகரம் உலூபில்யானா (Ljubljana) என்று கூறப்படும் ஆற்றின் இருமருங்கிலும் அமைந்துள்ளது.

இந்நகருக்கு அருகில் உள்ள சதுப்பு நிலங்களில் வரலாற்றுக்கு முந்தைய காலச் சின்னங்கள் பல கண்டுபிடிக்கப்பட்டன. புதிய கற்காலத்தின் இறுதிக் கட்டத்திலிருந்து (Late Neolithic) செப்புக்காலம் (Copper Age) வரையிலான பண்பாட்டுக் கூறுகள் பல இங்குக் கிடைத்துள்ளன. கிழக்கு ஆல்பைன் (East Alpine) பகுதியில் இருந்த பண்பாட்டினை இப்பண்பாடுகள் ஒத்துள்ளன. உரோமானியப் பேரரசர் அகசுடசு சீசர் கி.மு. 34-இல் எமோனா (Emona) என்னும் நகரை உருவாக்கினார். இப்பகுதியில் கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் இசுலோவேனியர் குடியேறினர். இந்நகரம் கி.பி. 1277-ஆம் ஆண்டில் ஆப்சுபர்கின் அரசர் முதலாம் உருடால்பின் (Rudolf I) வசம் வந்தது. இது 1918-இல் யூகோசுலாவியாவின் ஒரு பகுதியாக மாறியது.

இந்நகரத்தின் மலைமீது அமைந்துள்ள அரண் மிகச் சிறப்பு வாய்ந்தது. பராகுக் கட்டடக் கலைப் பாணியில் (Baroque Architecture) இந்நகரத்தின் தொன்மையான கட்டடங்கள் அமைந்துள்ளன. சிறந்த தொழில் நகரமாகவும் அழகுமிக்க ஊராகவும் விளங்கும் உலூபில்யானாவில் அருங்காட்சியகமும் அரங்குகளும் பல்கலைக்கழகமொன்றும் உள்ளன. சு. இரா.

**உலூபெக்கு** என்னும் பெயரில் மேற்குச் செருமனி நாட்டில் செல்சுவிக்கு ஒல்சுடீன்(Schleswig-Holstein) மாநிலத்தில் ஒரு மாநகரம் உள்ளது. உலூபெக்கு (Lubeck) ஒரு துறைமுகமாகும். பால்டிக்குக் கடலின் விரிகுடாவில் வேக்னிட்சு(Wakenitz), திரேவே (Trave) என்னும் ஆறுகள் சந்திக்கும் இடத்திற்கு 15 கி.மீ. தள்ளி உலூபெக்கு (Lubeck) அமைந்துள்ளது. இவ்வூர் பெரியதொரு வாணிக - தொழிற்சாலை மையமாகும். இந்நகரில் வார்ப்படத் தொழிற்சாலைகள், இயந்திர ஆலைகள், பஞ்சாலைகள் போன்றவையும் பெரும் கப்பற் கட்டும் துறையும் அமைக்கப்பட்டுள்ளன. உலூபெக்கு நகரம் கி.பி. 11-ஆம் நூற்றாண்டிலேயே தெரியலாயிற்று. இங்கு கி.பி. 1138-இல் ஏற்பட்ட தீயொன்றினால் இந்நகரம் அழிந்துபோயிற்று. ஆனால், மீண்டும் கி.பி. 1143-ஆம் ஆண்டில் இந்நகரம் புதுப்பிக்கப்பட்டது. ஏறத்தாழ கி.பி. 1158-ஆம் ஆண்டில் அரிமா என்றி (Henry the Lion) என்பார் இந்நகரைக் கையகப்படுத்தி இதற்கான பட்டயம் ஒன்றையும் கொடுத்தார். இப்பட்டயம் உலூபெக்கில் வாழ்ந்த பலதரப்பட்ட வகுப்புகளுக்கான உரிமைகளை வழங்கியதால் சிறப்புற்றதாகக் கருதப்படுகிறது. இப்பட்டயத்தை 100-க்கும் மேற்பட்ட செருமானிய நகரங்கள் படியெடுத்துத் தத்தம் உரிமைகளை நிலைநாட்டிக்

கொள்ள முயன்றுள்ளன. இரண்டாம் பிரடரிக்கு என்பார் கி.பி. 1226-ஆம் ஆண்டில் உலூபெக்கு நகரத்தைச் சுதந்திர நகரென அறிவித்தார். இது செருமானியப் பேரரசின் நகரமாகவும் ஆக்கப்பட்டது. இந்நகரத்தை அப்போது வாணிகக் குழுமம் ஒன்று ஆண்டதால், வாணிகத் துறையில் இந்நகரம் சிறப்புறலாயிற்று. பால்டிக்குக் கடற்கரையில் முற்றுரிமைபெற்ற நகரம்போல் பெருமை பெற்ற உலூபெக்கு ஏன்சியாட்டிக்குக் குழுவின் (Hanseatic League) தலைநகரமாயிற்று. எனினும் தென்மார்க்கு, சுவீடன் போன்ற நாடுகள் கடல் வாணிகத்தில் சிறப்புப் பெற்றவுடன், அமெரிக்கக் கண்டங்களில் ஏற்பட்ட புரட்சிகரமானமாறுதல்கள் ஏன்சியாடிக்குச் குழுவின் செல்வாக்கைப் பெரிதும் தாக்கியதால், இதன் வாணிகம் நலிந்து மெலியலாயிற்று. அதன் விளைவாக உலூபெக்கின் சிறப்பும் குறையலாயிற்று.

பிரெஞ்சுப் புரட்சிப் போர்களின்போது கி.பி. 1803-ஆம் ஆண்டில் உலூபெக்கைப் பிரெஞ்சுப் படைகள் சூறையாடின. இந்நகரத்தையும் பிரெஞ்சுக் காரர்கள் கி.பி. 1806-ஆம் ஆண்டில் கைப்பற்றிக் கொண்டனர்.

வட செருமானியக் கூட்டிணைப்பில் உலூபெக்கு சேர்ந்தது. பின்னர்ச் செருமானியப் பேரரசிலும் இணைந்துகொண்டது. இவ் விணைப்பின்போது இந் நகரம் சுதந்திர ஏன்சியாட்டிக்கு நகரம் என்னும் தகுதியைப் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கதாகும். இத்தகுதியை உலூபெக்கு 1937-ஆம் ஆண்டுவரை பெற்றிருந்தது. அவ்வாண்டில் இந்நகரம் செல்சுவிக்-ஒல்சுடீன் (Schleswig-Holstein) என்னும் மாநிலத்துடன் இணைக்கப்பட்டது. இரண்டாம் உலகப் போரின்போது இந்த நகரம் பெருந்தாக்குதல்களுக்கு ஆனாகிக் குண்டு வீச்சினால் படுசேதம் உற்றது. எனினும் இந்நகருக்குள் இருந்த இடைக்காலக் கோதிக் கட்டடக்கலைச் சின்னங்கள் பாதுகாக்கப் பட்டன. வட ஐரோப்பாவிலேயே அவை இடைக் காலக் கட்டடக் கலைக்குச் சீரிய எடுத்துக்காட்டுகளாகும். நகர மன்றம், புனித காதரின் திருச்சபை, புனித யாகோப்பு திருச்சபை, மருத்துவமனை, பரிசுத்த ஆவித்திருச்சபை, ஓல்சுடண்டர் (Holstentor) எனப்படும் மிக உயர்ந்த நுழைவாயில், திருக்கோயில், புனித மேரியின் செங்கல் திருச்சபை போன்றவை இச்சின்னங்களுள் ஒரு சிலவாம். இச்சின்னங்கள் கி.பி. 12-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 15-ஆம் நூற்றாண்டு வரையிலான கால கட்டத்தில் கட்டப் பட்டவையாகும்.

**உலூபெக்கு உடன்படிக்கை:** முப்பதாண்டுப் போர்கள் முடிவுற்ற போது உலூபெக்கில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை வரலாற்றுச் சிறப்புமிக்கதாகும். பேரரசர் இரண்டாம் பெர்டினாண்டு என்பாருக்கும் தென்மார்க்கு (Denmark) நாட்டின் அரசர் நான்காம் கிறிசுட்டியான் (Christian IV) என்பாருக்கும் இடையே முப்பதாண்டுப் போர்கள் முடிந்தபோது கி.பி. 1629-ஆம் ஆண்டு. இவ்வுடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டது. இவ்வுடன்படிக்கை கையெழுத்தாகுமுன், நான்காம் கிறிசுட்டியான் செருமனியிலிருந்து திலி (Tilly), வாலென்சுடைன் (Wallenstein) போன்றவர்களால் விரட்டியடிக்கப்பட்டார். கிறிசுட்டியானின் பகுதிகள் அனைத்தையும் அவரே வைத்துக்கொள்ளலாம் என்றும், செருமானிய விவகாரங்களில் இனி ஒருபோதும் குறுக்கிடவில்லை என அவரே ஒப்புக் கொண்டார் என்றும் இவ்வுடன்படிக்கை கூறுகின்றது. ஒல்சுடீன் (Holstein) பகுதியின் கோமகன் (Duke) என்னும் முறையில் தலையிடவும் இவ்வுடன்படிக்கை வழி செய்தது. நான்காம் கிறிசுட்டியான் செருமானியக் கூட்டாளிகள் சார்பாக நிபந்தனையொன்றையும் ஏற்றுக்கொள்ளாமையால், அவர்களும் உலூபெக்கு உடன்படிக்கையால் (Treaty of Lubeck) கட்டுப் படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இரா.அ.

**உலூமுத்தீன்** என்பது அப்துல்காதர் சாகிபு அவர்களால் எழுதப்பட்ட நூலாகும். இந்நூலினைக் கீழக்கரையைச் சார்ந்த சையத் அகமத் காபிர் என்பவர் சென்னை சாகுல் அமீதியா அச்சகத்தில் 1924-ஆம் ஆண்டு பதிப்பித்துள்ளார். இதுவே இந்நூலுக்குரிய முதற் பதிப்பாகும்.

இசுலாமியத் தமிழிலக்கியங்களின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க இலக்கியங்கள் இசுலாத்தின் அடிப்படையான சமயக் கருத்துகளை எடுத்துரைப்பனவாக உள்ளன. இவ்வகையில் அடங்கும் ஓர் இலக்கியம் உலூமுத்தீன் ஆகும். இந்நூலுள் அப்துல் காதர் சாகிபு இசுலாமிய நெறியின் அடிப்படைக் கொள்கைகளை விளக்கியுள்ளார். ஒவ்வொர் இசுலாமியருக்கும் விதிக்கப்பட்டுள்ள சமயக் கடமைகளாகிய ஓர் இறைக் கொள்கையை வெளிப்படுத்தல், ஐந்து நேர இறை வழிபாட்டுத் தொழுகை, இரம்சான் மாதத்தில் நோன்பு நோற்றல், சகாத்து (ஒருவர் தம் சேமிப்பிலிருந்தும் 2.5 விழுக்காட்டைத் தம் செல்வத்தைத் தூய்மைப்படுத்திக் கொள்ளும் வகையில் ஆண்டு தோறும் அறஞ்செய்வது சகாத்து ஆகும்), புனிதப் பயணமான அச்சு (Haj) மேற்கொள்ளுதல் ஆகிய ஐந்தினையும் பிறவற்றையும் அப்துல் காதர் சாகிபு இந் நூலில் விரிவாக எடுத்துக் கூறியுள்ளார்.

சி.ந.

**உலூயிசுபர்கு** கனடா நாட்டைச் சேர்ந்த தொரு பட்டினம், நோவாசுகோசியா (Nova Scotia) மாநிலத்திலுள்ள பிரீட்டன் தீவு முனையின் (Cape Breton Island) கிழக்குக் கரை நகரமாகிய சிட்னிக்கு (Sydney) 32 கி. மீ. தென்கிழக்கில் அமைந்துள்ள உலூயிசுபர்கு (Louisbourg) கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் பிரெஞ்சியரின் பண்டசாலையாக நிறுவப்பட்டது. இதன் பழைய நகரம் அழிந்த நிலையில் காணப்படுகிறது. இக்கால நகரமாக உருவாக்கப்பெற்றுள்ள உலூயிசுபர்கு குளிர்காலத் துறைமுகமாகவும், சிறப்பான மீன்பிடிக்கும் மையமாகவும் அமைந்துள்ளது. மீன்களைப் பதப்படுத்திக் குளிர்சாதனப் பெட்டிகளில் அடைக்கும் பணிக்கும் இவ்வூர் புகழ் பெற்றது.

உலூயிசுபர்கைப் பிரெஞ்சுக்காரர்கள் கி. பி. 1720-ஆம் ஆண்டில் உருவாக்கித் தம் அரசர் பதினான்காம் உலூயியின் பெயரை இந்நகருக்கு இட்டனர். புனித இலாரென்சு ஆற்றின் நுழைவாயிலில் கோட்டை ஒன்று கட்டி இந்நகரைக் காத்தனர். இக்கோட்டையைக் கட்டப் பெரும் பொருள் செலவானதைக் கண்ணுற்ற உலூயி மன்னர், இதன் தெருக்கள் பொன்னால் அமைக்கப்பட்டனவா என்று வினவினார். கனடா அரசு அழிவுச் சின்னங்களில் சிலவற்றைப் புதுப்பித்ததுடன், சின்னங்களைப் போற்றிப் பாதுகாக்க அருங்காட்சியகம் ஒன்றையும் 1935-36-ஆம் ஆண்டுகளில் கட்டியது. உலூயிசுபர்குக் கோட்டை தேசியப் பூங்காவாக 1941-ஆம் ஆண்டில் கருதப்பட்டது. இதன் பரப்பு 340 ஏக்கர்களாகும்.

உலூயிசுபர்கு ஆங்கிலக் குடியேற்றங்களைத் தொடர்ந்து அச்சுறுத்தி வந்தது. பிரெஞ்சுக்காரர்கள் இவ்வூரைத் தளமாக்கிக்கொண்டு கான்சோவை (Canso) கி. பி. 1744-ஆம் ஆண்டில் தாக்கினர். ஆங்கிலேயர் எதிர்த்தாக்குதல் நடத்த நூறு கப்பல்களைப் படைப்பகுதி முதல்வர் வில்லியம் பெப்பரல் (Colonel William Pepperell) என்பவரின் தலைமையில் திரட்டினர். மேற்கிந்தியத் தீவுகளிலிருந்தும் 10 போர்க்கப்பல்கள் விரைந்தன. இப்படைகள் இணைந்து கி. பி. 1745-ஆம் ஆண்டு ஏப்பிரல் 30-ஆம் நாள் உலூயிசுபர்கைத் தாக்கின. கோட்டை சூன் 17-ஆம் நாள் சரணடைந்தது. இதனை முதலாம் உலூயிசுபர்குப் போர் என்பர். எய்-லா-சாப்பேல் (Aix-la-Chappelle) உடன்படிக்கையின்படி (1748) உலூயிசுபர்கு பிரெஞ்சுக்காரர்களுக்குத் திருப்பிக் கொடுக்கப்பட்டது.

பிரெஞ்சுக்காரர்கள் உலூயிசுபர்கை வலுப்படுத்தி ஏறத்தாழப் பத்தாண்டுகள் தம்வசம் வைத்திருந்தனர். பிரெஞ்சுக்காரர்களுக்கும் ஆங்கிலேயருக்குமிடையே கி. பி. 1758-ஆம் ஆண்டில் இரண்டாம் உலூயிசுபர்குப் போர் மூண்டது. அதுபோது படைத்துறைப் பணித்தலைவர் செப்ரி ஆம்கர்சுட்டு (Major General Jeffery Amherrst) ஆங்கிலப் படைகளின் தலைவராயிருந்தார். உலூயிசுபர்கு கைப்பற்றப்பட்டு, அதன் பெரும்பாலான பாதுகாப்பு அரண்கள் அழிக்கப்பட்டன. இரா. அ.

**உலூயி நெப்போலியன் (கி.பி. 1808-1873)** பிரான்சின் பேரரசராக கி.பி. 1852 முதல் 1870 வரை அரசாண்டார். இவரை மூன்றாம் நெப்போலியன் என்றும் வரலாற்றில் கூறுவர். இவர் முதலாம் நெப்போலியன் தம்பி மகன்.

உலூயி நெப்போலியன் (Louis Napolean) கி.பி. 1808-ஆம் ஆண்டில் பாரிசு மாநகரில் பிறந்தார். இவருடைய தந்தை உலூயி போனபார்ட்டு (Louis Bonaparte) என்பார் ஆலந்து நாட்டின் அரசராகப் பொறுப்பேற்றிருந்தார். முதலாம் நெப்போலியனின் தோல்விக்குப் பின்னர்ப் போனபார்ட்டுக் குடும்பத்தினர் கி.பி. 1816-ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட பிரெஞ்சிய சட்டப்படி பிரான்சு நாட்டிலிருந்து நாடு கடத்தப்பட்டிருந்தனர். எனவே, இவருடைய இளமைப் பருவம் இத்தாலி, செருமனி, சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளில் கழிந்தது. இவர் கி.பி. 1832-ஆம் ஆண்டில் போனபார்ட்டு மரபினரின் தலைவரானார். இத்தாலியில் பணியாற்றிய கார்பனாரி (Carbonari) போன்ற புரட்சிக் குழுக்களுடன் இவருக்கு நெருங்கிய தொடர்பிருந்தது. இவர் உலூயி பிலிப்பு (Louis Philippe) என்பாரை ஆட்சியிலிருந்து விரட்ட கி.பி.1836-இல் முயன்றார். ஆனால், இவர் சிறைப்படுத்தப்பட்டார். இவர் சிறையிலிருந்து தப்பி கி.பி.1846-ஆம் ஆண்டு இங்கிலாந்து சென்றடைந்தார். இக்காலத்தில்தான் (1839) இவர் 'நெப்போலியனின் கருத்துகள்'(Napoleanic Ideas) என்னும் நூலை எழுதினார். இதில் முதலாம் நெப்போலியனின் சாதனைகளைப் பெருமைப் படுத்தி எழுதியுள்ளார்.

ஐரோப்பாவின் நாடுகள் பலவற்றில் கி.பி. 1848-ஆம் ஆண்டுப் புரட்சி தோன்றியது. அப்புரட்சி பிரான்சு நாட்டில் மூண்டபோது, பிரான்சில் இரண்டாம் குடியரசு நிலைநாட்டப்பெற்றபோது, உலூயி நெப்போலியன் நாடு திரும்பிச் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதே ஆண்டு திசம்பர் மாதத்தில் உலூயி நெப்போலியன் பிரான்சின் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பெருமளவு வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பெற்ற

இவர் குடியரசைக் காப்பதாக உறுதிமொழியெடுத்துக் கொண்டார். எனினும், கி.பி. 1851-ஆம் ஆண்டு திசம்பர் மாதத்தில் அனைத்து அரசியல் அதிகாரங்களையும் தாமே கையகப்படுத்திக் கொண்டார். பின்னர், கி.பி. 1852-ஆம் ஆண்டில் தம்மையே பேரரசராக அறிவித்துக் கொண்டார்.

உலூயி நெப்போலியன் எனப்படும் மூன்றாம் நெப்போலியனின் உள்நாட்டுக் கொள்கைகள் முன்னுக்குப் பின் முரணானவை. இவர் வல்லாட்சியாளராக ஆட்சி நடத்தினார். இவரைச் சுற்றிலும் பதவி விரும்பிய போலிகள் இருந்தனர். அவர்கள் நேர்மையற்றவர்கள். இக்காலத்தில் சட்டமன்றம் திறனற்றதாக இருந்தது. விக்டர் இயூகோ (Victor Hugo) போன்ற சிறந்த இலக்கியவாதிகள் நாடுகடத்தப்பட்டனர். இவர்தம் நண்பர்களுள் ஒருவரான இலியான் காம்பெட்டா (Leon Gambetta) என்பார் புரட்சிகர மக்களாட்சி முறையை வேண்டினார். இவர் காலத்தில் தொழிற் புரட்சி எழுந்தது. அதன் நெளிவு சுளிவுகளை இவர் நன்கு அறிந்திருந்தார். தொழில்வளம் பெற அரசு உதவ வேண்டுமென்னும் கொள்கையினர் இவர். வங்கிகள், இருப்புப் பாதைகள் போன்றவை இவருடைய காலத்தில் நிறுவப் பெற்றன. வறுமையை விரட்ட அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்பது இவர்தம் கருத்தாகும்.

உலூயி நெப்போலியன் பொதுவான படைக் குறைப்பை ஆதரித்த முதல் ஐரோப்பியர். நாடுகளுக்கிடையே மூண்ட சிக்கல்களைப் பன்னாட்டு மாநாடுகள் கூட்டி அவற்றைத் தீர்க்கவேண்டும் என்று முயன்றார். இவர் தேசிய உணர்வை மதித்து நடந்தார். உருமேனியாவின் விடுதலைக்காகவும், இத்தாலியின் ஐக்கியத்திற்காகவும் இவர் பாடுபட்டார். தம்மையறியாமலேயே இவர் செருமனியின் ஐக்கியத்திற்கும் உதவினார்.

பேரரசரானதும் அமைதியை நிலைநாட்டப் போவதாகப் பறைசாற்றிய உலூயி நெப்போலியன், பிரான்சு நாட்டைப் பல போர்களில் சிக்கவைத்துத் தொல்லைகளுக்கு ஆளானார். இத்தாலியில் நிறுவப்பெற்றிருந்த உரோமானியக் குடியரசை இவர் கி.பி. 1849-ஆம் ஆண்டில் கலைத்துவிட்டு, அப்பகுதியைப் போப்பாண்டவரிடம் மீண்டும் ஒப்படைத்தார். உருசியாவுக்கெதிராக கி.பி. 1854-இல் இவர் இங்கிலாந்து, துருக்கி போன்ற நாடுகளுடன் உருவான கிரிமியப் போரில் (Crimean war) இணைந்து கொண்டார். இத்தாலியில் குடியேறியிருந்த ஆசுத்திரியர்களை விரட்டியடிக்க முடிவு செய்த கவூர் (Cavour) என்பவருக்கு மூன்றாம் நெப்போலியன் இரகசியமாக உதவிசெய்வதாக உறுதி கூறியிருந்தார். அந்த உதவிக்குக் கைம்மாறாக நைசு (Nice), சவாய்ப் (Savoy) பகுதிகளை இத்தாலி கொடுக்க வேண்டும் எனக் கவூரிடம் உறுதிமொழி வாங்கியிருந்தார். எனினும், கொடுத்த வாக்குறுதியைக் கவூரால் நிறைவேற்ற இயலவில்லை. இத்தாலி ஒன்றுபட்டால் வீண் தலைவலி வரும் என்று எண்ணியே அவர் தாம் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றாமல் விட்டார். உருசியாவுக்கெதிரான கலகத்தின்போது போலந்து மக்களுக்கு இவர் கி.பி. 1863-ஆம் ஆண்டில் உதவி செய்தார். பேரரசர் மாக்சிமிலியன் என்பாரை மெக்சிகோவின் பேரரசராக்க கி.பி. 1864-ஆம் ஆண்டில் திட்டமொன்றைத் தீட்டி உதவ முன்வந்தார். இதன் மூலம் பிரான்சு நாட்டின் மதிப்பு உயர வழிபிறக்கும் என்று நம்பினார் இவர். ஆனால், அமெரிக்காவின் வற்புறுத்தலின் விளைவாக கி.பி. 1867-இல் மூன்றாம் நெப்போலியன் தம் படைகளைத் திரும்ப அழைத்துக் கொண்டமையால் உதவிபெற எண்ணியிருந்த மாக்சிமிலியனைக் கைவிட்டார். இவர்காலத்தில் செருமனியின் தலைமை அமைச்சராகவிருந்தவர் ஆட்டோ வான் பிசுமார்க்கு (Otto Von Bismarck) என்பவராவர். இரைன்லாந்து (Rhineland), இலக்சம்பர்கு (Luxemburg), பெல்சியம் போன்ற ஐரோப்பியப் பகுதிகளைப் பிசுமார்க்குக் கைப்பற்றிக் கொள்ள இரகசிய வாய்ப்புகளை மூன்றாம் நெப்போலியன் அளித்தார். இவை பற்றிய விவரங்கள் வெளியானபோது செருமனியில் பெரும் குழப்பம் மூண்டது. செருமானியர்களின் கருத்தைத் திரட்டிய பிசுமார்க்கு, பிரான்சுக்கும் பிரசியாவுக்கும் இடையே கி.பி. 1870-ஆம் ஆண்டில் போர் மூளும்படி ஏற்பாடுகள் செய்தார். இப்போரில் பிரசியா வெற்றி பெற்றுச் செருமானியப்பேரரசு நிலைநாட்டப்பட்டது.

உலூயி நெப்போலியன் கி.பி. 1870 செப்டம்பர் 2-ஆம் நாள் நடைபெற்ற போரில் சரணடைந்தார். இதனைச் செடான் (Sedon) போர் என்பர். இவர் மரணமடைந்தபோது இவரிடமிருந்த 80,000 படைவீரர்களும் சரணடைய வேண்டியவராயினர். பிரெஞ்சுப் பேரரசு கி.பி. 1870-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 4-ஆம் நாள் புரட்சியாளர்களால் வீழ்த்தப்பட்டது. தம் பேரரசை இழந்த மூன்றாம் நெப்போலியன் மூன்றாண்டுகள் இங்கிலாந்தில் வாழ்ந்து சிசில்கர்சுட்டு (Chislehurst) என்னும் இடத்தில் காலமானார்.

இரா.அ.

**உலூயி பிலிப்பு (கி.பி. 1773-1850)** பிரான்சு நாட்டின் மன்னராக கி.பி. 1830 முதல் 1848 முடிய அரசாண்டவர். இவரை 'மக்கள் மன்னர்'(The Citizen King) என்று அன்புடன் அழைத்தனர். உலூயி

பிலிப்பு (Louis Philipe) கி.பி. 1773–ஆம் ஆண்டு பாரிசில் பிறந்தார். இவர் ஆர்லியன்சு கோமகன் பிலிப்பு எகலைட்டு (Philipe Egalite) என்பவரின் மூத்த மகன். பிரெஞ்சுப் புரட்சியால் தூண்டி விடப்பட்ட மக்களாட்சிக் கொள்கைகளை இவர் மனமாரப் போற்றினார்; புரட்சியின் தொடக்கத்தில் தேசியக் காவல் படையில் உறுப்பினராகச் சேர்ந்தார். இராணுவப் பணியில் படிப்படியாக உயர்வு பெற்றுத் துணைநிலைத் தலைவர் (Lieutenant General) என்ற பதவி பெற்ற இவர், வால்மி (Valmy), செமப்பிசு (Jamappes), நீர்விண்டன் (Neerwinden) போன்ற போர்களில் பங்கு கொண்டார். பின்னர்ப் பிரெஞ்சுக் குடியரசுக்கெதிராக மூண்ட சதியொன்றில் இவருக்கிருந்த தொடர்பின் விளைவாக இவர் பிரான்சை விட்டு வெளியேற வேண்டியவரானார்.



உலூயி பிலிப்பு

உலூயி பிலிப்பு கி.பி. 1814–ஆம் ஆண்டு பிரான்சுக்குத் திரும்பித் தாம் இழந்த பெரும் பண்ணை நிலம் அனைத்தும் திரும்பப் பெற்றார். இவர் அரசராகப் பதவியேற்குமுன் பிரெஞ்சு அரசராக இருந்த பத்தாம் சார்லசு (Charles X) கி.பி. 1830–ஆம் ஆண்டில் விளைந்த புரட்சியின் விளைவாகப் பதவி விலக வேண்டியவரானார். அவரை அடுத்து, உலூயி பிலிப்பு 'மக்கள் மன்னர்' என்று அறிமுகப் படுத்தப்பெற்று அரசரானார்.

உலூயி பிலிப்பு பதினெட்டாண்டுகள் (கி.பி. 1830–1848) அரசராக இருந்த காலத்தில் பிரெஞ்சு மக்கள் அனைவராலும் இகழப் பெற்றமையால் மக்கள் ஆதரவினை இழந்தார். இவர் ஆட்சிக் காலம் வளமான நல்வாழ்வுக்குப் பெயர் பெற்றதாயினும், பெரும் சாதனை எதனையும் குறிப்பிட்டுக் கூறுமளவிற்கு உயர்ந்ததாக இல்லை.

தேர்தல் சட்ட திட்டங்களைத் திருத்தியமைக்க இவர் மறுத்தபோது கி.பி. 1848–ஆம் ஆண்டு புரட்சி கிளர்ந்தெழுந்தது. இவர் பதவியிலிருந்து விலக வற்புறுத்தப்படவே, அரியணையிலிருந்து நீங்கி, இங்கிலாந்து நாட்டிற்குத் தப்பிச் சென்றார். இரண்டாண்டுகளுக்குப் பின் கி. பி. 1850–இல் இவர் காலமானார். இரா.அ.

## உலூயி பிலிப்பு, ஆர்லியன்சு பிரபு

பிரெஞ்சு அரசராகிய பதின்மூன்றாம் உலூயியின் இளைய மகன். இவர் புனித செர்மெய்னில் கி.பி. 1640–இல் பிறந்தார். இவர் தமையனாராகிய பதினான்காம் உலூயியின் ஆட்சிக் காலத்தில் இவர் ஆர்லியன்சு பிரபுவானார். இவர் கி.பி. 1661–இல் இங்கிலாந்தின் அரசர் இரண்டாம் சார்லசின் உடன் பிறந்தாளாகிய என்றியெட்டா (Henrietta) என்பவளை மணந்தார். அவள் இறந்தபின் இவர் பாலட்டைன் தேர்வாளருடைய மகள் எலிசபெத்து என்பவளை மணந்தார். பிரஞ்சுக்காரருக்கும் தச்சுக்காரருக்கும் நெதர்லாந்தில் நடைபெற்ற போரில் இவர் வெகு திறமையாகப் போர் செய்து தச்சுத் தலைவர் ஆரஞ்சு வில்லியத்துக்கெதிராகச் சில வெற்றிகளும் பெற்றார். இதனால், இவருக்குப் புகழ் வளரவே அஞ்சிய இவர்தம் உடன்பிறந்தாராகிய அரசர், இவரைப் படைத்தலைமையிலிருந்து நீக்கினார். இவர்தம் இரண்டாம் மனைவியின் வழியாக வந்த இவர்தம் மகனே, இவர் கி.பி. 1701–இல் இறந்ததும் இவருக்குப் பின்னர் ஆர்லியன்சு பிரபு ஆனார்.

பிலிப்பு, ஆர்லியன்சு பிரபு (Philippe, Duke of Orleans) இதே பெயருடைய ஆர்லியன்சு பிரபுவின் மகன் ஆவர். இவர் கி.பி. 1674 முதல் 1723 வரை வாழ்ந்தவர். இவர் பிரஞ்சு மன்னர் பதினான்காம் உலூயியின் தம்பிமகன் ஆவர். இவர் திறமையுடையவரெனினும், இன்ப வாழ்வில் நாட்டமுடையவர். மேலும், இவர் படையில் சேர்ந்து, மான்சு (Mons, 1691), இசுடீன்கர்க்கு (Steenkirk, 1692), நீர்விண்டன் (Neerwindon) முதலிய போர்க்களங்களில் சில வீரச் செயல்களைச் செய்ய, அதனைக் கண்டு இவரை ஐயுற்ற அரசர் பதினான்காம் உலூயி, தம் தகப்பனார் இறக்கும்வரை இவரைப் படைத்துறையிலிருந்து நீக்கி வைத்திருந்தார். இசுபானிய அரசுரிமைப் போரில் இவர் தியூரின் (Turin) போர்க்களத்தில் தோற்கடிக்கப்பட்டார். இவர் இசுபெயினில் புகழ்மிக்க வெற்றிகளைப்பெற்று, இலெரிடா (Lerida) என்ற இடத்தைக் கைப்பற்றினார். இந்த வெற்றியும், ஆங்கிலேயரோடு சேர்ந்து கொண்டு இவர் இசுபெயின் அரசராவதற்கு முயலுகிறாரென்ற வதந்தியும்

இவரை மீண்டும் படையிலிருந்து கி.பி. 1708-இல் நீங்கச் செய்தன. பட்டத்திளவரசர் இறந்த செய்தியைக் கேட்டபொழுதும், இவர் அரசியல் நோக்கம் எதுவுமின்றி இருந்தார். அரசர் பதினான்காம் உலூயி இறந்ததும் (1715), அடுத்த உரிமையாளரான பதினைந்தாம் உலூயியின் இளமைக் காலத்தில் கண்காணிப்பாளராதற்கு உரிமை பெற்றிருந்த (Regent) பிலிப்பு அப்பதவியைப் பெற்றுத் துணிவுடன் சில செயல்களைச் செய்தார். பதினான்காம் உலூயியின் கொள்கைக்கு மாறாக இவர் பிரபுக்களின் சில உரிமைகளை மீட்டுக் கொடுத்தார். பிரெஞ்சு மறுப்புரையாளர்களுக்கு (Protestants) எதிரான சட்டங்களை நீக்கி, நாண்டிசு ஆணையின் படி அவர்களுக்குச் சமய உரிமைகளை வழங்கினார். இங்கிலாந்து அமைத்த நான்கு நாடு கூட்டமைப்பில் (Quadruple Alliance) இவர் சேர்ந்தார். இங்கிலாந்தின் நண்பராகவே இவர் கொள்கையைக் கடைப்பிடித்தார். இவரால் பிரெஞ்சு நிதிநிலையைச் சீர்படுத்த இயலவில்லை. இவர் தம் ஆசிரியராகிய கார்டினல் துபாய் (Cardinal Dubois) என்பவரைத் தலைமை அமைச்சராக்கினார். துபாய் இறந்தபின் இவர் தாமே தலைமை அமைச்சராகி, அரசர் ஆளும் வயதை அடைந்த பின்னரும் தாமே எல்லா அதிகாரங்களையும் கையாண்டார். இவர் கி.பி. 1723-இல் இறந்த பின்னர் உலூயி தமதாட்சியைத் தொடங்கினார்.

இரா. அ.

உலூயி பிலிப்பு சோசப்பு, ஆர்லியன்சு பிரபு (Louis Philippe Joseph, Duke of Orleans) என்பவர் கி.பி. 1747க்கும், 1793க்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்தவர். இவர் அரசர் பதினான்காம் உலூயியின் உடன்பிறந்தான் மகனும், பதினைந்தாம் உலூயியின் இளமைக் காலத்தில் அவருடைய கண்காணிப்பாளராகப் பிரான்சை ஆண்டவருமாகிய பிலிப்பு ஆர்லியன்சு பிரபுவின் கொள்ளுப்பேரனும் (Great-Grandson) ஆவார். இவரும் கண்காணிப்பாளரைப் போல இன்ப வாழ்விலீடுபட்டு, ஆக்க இயல்புடைய குறிக்கோளெதுவுமின்றி வாழ்ந்தார். இவரை ஒரு கோழை என்று பிரெஞ்சு அரசாங்கம் கருதி, இவருக்கு உரிமையான கடற்படைத் தளபதிப் பதவியை இவருக்கு வழங்க மறுத்ததனால் இவர் அரசவையின் பகைவரானார். இவர் கி.பி. 1787-இல் புகழ்மிக்கோர் கழகத்தில் (Assembly of Notables) உறுப்பினராகி, அதன் உறுப்பினர் என்ற நிலையில் அமைச்சர்களுடைய திட்டங்களுக்கெதிராக ஆணை விடுத்தார். அதனால், இவர் நாடு கடத்தப்பட்டார். பிரான்சில் புரட்சி (Revolution) தோன்றுதற்குரிய அறிகுறிகளைக் கண்ட இவர் தமது பிரபுத்துவ நிலையைக் கைவிட்டு, குடியரசுவாதியாக (Republican) ஆகித் தம்மைக் குடியாள் பிலிப்பு (Citizen Philip) என்று கூறிக்கொண்டு, அரசியலமைப்பு மன்றத்தில் (Constituent Assembly) வந்த மிதமான திட்டங்களை ஆதரித்தார். பின்னர்ப் பிரான்சை ஆண்ட சட்டமன்றத்தில் (Convention) இவர் மலைக் கட்சியாரோடு (MountainParty)சேர்ந்துஅரசருக்குமரண தண்டனை விதித்த தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தார். இவருடனிருந்த மற்ற உறுப்பினர்கள் இவர் அரசராக வரும் விருப்பத்தின் பேரிலேயே தங்களுடன் சேர்ந்து கொண்டுள்ளார் என்று எண்ணினர். சட்டமன்றம் (Convention) ஆர்லியன்சு குடும்பத்தைச் சேர்ந்தவரையெல்லாம் சிறைபிடிக்குமாறு கி.பி. 1793-இல் ஆணை விடுத்தது. இவர் பெருந்துரோகக் குற்றச்சாட்டுக்கு உள்ளானார். ஆயினும், உரோன் நீதிமன்றம் இவரை மன்னித்து விடுதலை செய்தது. பின்னர் இவர் பாரிசில் புரட்சி நீதிமன்றத்தின்முன் (Revolutionary Tribunal) குற்றம் சாட்டப்பட்டு, மரணதண்டனை விதிக்கப்பட்டார். இவர் கி.பி. 1793-இல் மரணதண்டனைக்கு உள்ளானார். பா.சூ.

**உலூயி மன்னர்கள்** பிரான்சு நாட்டை ஆண்டவர்கள். இப் பெயரைக் கொண்டவர்கள் பதினெண்மர். இவர்கள் கி.பி. 8-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதிவரை பல காலகட்டங்களில் ஆட்சி நடத்தியவர்கள். இவர்களுள் சிறப்பான சிலரைப்பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் பின்வருவன:

உலூயி, முதலாம் (கி.பி. 778-840) என்பார் புனித உரோமானியப் பேரரசராகவும், பிரான்சு, செருமனி நாடுகளின் அரசராகவும் பதவி வகித்தவர். முதலாம் உலூயி (Louis I) பேரரசர் சார்லமேன் (Charlemagne) என்பாரின் மூன்றாம் மகன்; கி.பி. 778-ஆம் ஆண்டில் பிறந்தவர். சார்லமேன் காலமான பின்னர் கி.பி. 814-ஆம் ஆண்டு இவர் பதவியேற்றார். இவர் காலத்தில் அமுலாக்கப்பெற்ற பேரரசர் ஆணை (OrdinativeImperial) கி.பி. 817-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இதன்படி பேரரசின் ஒருமைத்தன்மை காக்கப்பட்டது. பிராங்கிய மரபுமுறை மாற்றியமைக்கப்பட்டது. அம்மரபுமுறைப்படி மறைந்த அரசருக்குப் பின்னர்ப் பேரரசைஇறந்தஅரசரின் மக்களுக்கிடையே பிரித்துக் கொள்ளும் மரபு நீக்கப்பட்டது. இவர் காலத்தில் கி.பி. 826-ஆம் ஆண்டில் ஏற்பட்ட உள்நாட்டுக் கலகத்தில் குழப்பம் மேலோங்கியிருந்தது. உலூயியின் மக்களும் இவருக்குத் தொல்லைகளைக் கொடுத்தனர். இவர் கி.பி. 840-ஆம் ஆண்டில் காலமானார்.

உலூயி, இரண்டாம் (கி.பி. 846-879) முதலாம் உலூயியின் பேரர்; திக்குவாயர். இரண்டாம் உலூயி (Louis II) அக்குவிடெயின் (Aquitaine) பகுதியின் அரசராக கி.பி. 867-இலும், தம் தந்தையாருக்குப் பின்னர் கி.பி. 877-இல் பிரான்சின் அரசராகவும் ஆனார். இவருடைய ஆட்சி பல தொல்லைகளுக்குட்படலாயிற்று. இவரைத் திறமையான அரசர் என்று கூற இயலாது. எனினும், இன்னல்களினூடே இவர் கி.பி. 879-ஆம் ஆண்டுவரை தொடர்ந்து ஆட்சி நடத்தினார். இலம்பார்டியைச் சார்ந்த போசோ (Boso) என்னும் கோமகன் பிராவன்சுப்(Provence)பகுதியைக் கைப்பற்றிக் கொண்டார். இவருக்குப் பின் இவர்தம் மூத்த மகன் மூன்றாம் உலூயி என்பார் அரசரானார். இரண்டாம் உலூயி கி.பி. 879-ஆம் ஆண்டில் காலமானார்.

உலூயி,மூன்றாம்(கி.பி.863-882) இரண்டாம் உலூயியின் மகன். இவரும் இவர்தம் தமையன் கார்லமன் (Carloman) என்பாரும் இணைந்து கி.பி. 879-ஆம் ஆண்டில் அரசுரிமையைப் பெற்றனர். இருவரும் ஆட்சிப் பகுதியை இரண்டாகப் பங்கிட்டுக் கொண்டனர். உலூவார் (Louire) ஆற்றுக்கு வடபகுதியிலிருந்த பிரெஞ்சுப் பகுதிகளை உலூயி பெற்றார். இவரும் இவர்தம் சகோதரரும் இணைந்து பிராவன்சுப் பகுதியைப் போசோவிடமிருந்து மீட்டனர். இவர்கள் நார்மானியர்களைச் சாக்கோர்ட்டு (Saucourt) என்னுமிடத்தில் கி.பி. 881-இல் வென்றனர். மூன்றாம் உலூயி (Louis III) கி.பி. 882-இல் காலமானார்.

உலூயி ,நான்காம் (கி.பி.921-954) என்பாருக்குக் கடல்கடந்து வந்தவர் என்னும் விருதுப் பெயர் உண்டு. இவர் இங்கிலாந்தில் கல்வி கற்று வந்ததால் இவரைக் கடல்கடந்து வந்த நான்காம் உலூயி (Louis IV, d' Outremen) என்பர். இவர் இரண்டாம் உலூயியின் பேரர். இவர்தம் தந்தையார் எளியவர் சார்லசு (Charles, the Simple) எனப்பட்டார். நான்காம் உலூயி கி.பி. 936-ஆம் ஆண்டு முதல் 954-ஆம் ஆண்டு வரை ஆட்சி புரிந்தார். பாரிசுக் கோமா (Count of Paris) இயூ (Hugh) என்பவரோடு நான்காம் உலூயி தொடர்ந்து மோத வேண்டியவரானார். இதன் விளைவாக உலூயி சிறைப்படுத்தப்பட்டார். ஆனால், இவர் கி.பி. 945-ஆம் ஆண்டில் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டார். பேரரசர் ஆட்டோ (Otto, the Great) என்பார் இவரை மீண்டும் பிரான்சின் அரசராக்கினார். இவர் கி.பி. 954-ஆம் ஆண்டு காலமானார்.

உலூயி, ஐந்தாம் (கி.பி. 966-987) நான்காம்உலூயியின் பேரர். இவரே பிரான்சை ஆண்ட கரோலிஞ்சிய மரபைச் சார்ந்த (Carolingian) இறுதி அரசராவார். இவரைச் சோம்பல் மிகுந்த உலூயி (Louis, the lazy) என்பர். இவர் கி.பி. 986-ஆம் ஆண்டில் அரசரானார். இவர்தம் தந்தையார் உலோதயர் (Lothair) என்பவரை அடுத்து இவர் அரசரானார். இவர் ஓராண்டு மட்டுமே அரசராக விளங்கினார். முடிசூட்டிக் கொண்ட சின்னாட்களில் போருக்குச் சென்று இரீம்சு (Rheims) நகரத்தைக் கைப்பற்றினார். முசுலீம்களின் மீது படையெடுக்க எண்ணித் திட்டமிட்ட இவர் திடீரெனக் காலமானார். இவர்தம் தாயார் நஞ்சிட்டு இவரைக் கொன்று விட்டதாகக் கூறுவர். இவர் கி.பி. 987-இல் காலமானார்.இவருக்குப் பின்னர் இயூ காபெட்டு(Hugh Capet) என்பார் அரசரானார்.இவர் காபெட்டிய மரபினரின் ஆட்சியைப் பிரான்சில் நிலைநாட்டினார். காபெட்டிய மரபினர் பிரான்சை ஏறத்தாழ 800 ஆண்டுகள் ஆண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

உலூயி, ஆறாம் (கி.பி. 1081-1137) காபெட்டு மரபினைச் சார்ந்தவர்; பிரான்சு நாட்டை ஆண்ட முதலாம் பிலிப்பு (Philip I) என்பாரின் மகன். ஆறாம் உலூயியின் (Louis VI) காலந்தொட்டுப் பிரான்சில் மன்னராட்சி மாட்சிமைப்பெற்றதாகக் கருதப்படுகிறது. இவருடைய ஆட்சியின் முதல் 12 ஆண்டுகள் அரசரின் ஆட்சிப்பகுதியில் தொல்லை கொடுத்தக் கலகக்காரர்களையும், கொள்ளைக் கூட்டத்தாரையும் அடக்கும் பணியில் செலவாயின. திறமைமிக்க நல்லாட்சியின் விளைவாக நாட்டில் பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டது. தரிசு நிலங்களைப் பயிரிட விழையும் குடியானவர்க்குச் சிறப்புப் பட்டயங்கள் வழங்கியதால் வேளாண்மை வளர்ச்சியுற்றது. முடிமன்னருக்கும் நிலச் சொந்தக்காரர்களுக்குமிடையே நல்லுறவை நிலைநாட்ட இவர் உறுதுணை நின்றார். இவரைத் திருச்சபைக் குருமார்கள் ஆதரித்தனர். அவர்களுள் ஒருவரான சுகர் (Suger) என்பவர் இவர்தம் பள்ளித்தோழர். அவர் அரசரின் அறிவுரையாளராக விளங்கினார். இவருடைய ஆட்சி இலிடிபிரான்சு (Ile de France) போன்ற பகுதியில் மட்டுமே செல்வாக்குப் பெற்றிருந்தது. இக்காலத்தில் ஆங்கிலேயர் பிரான்சுக்குச் சொந்தமாயிருந்த நார்மண்டியைக் கட்டுப்படுத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. நார்மண்டியை மீட்கும் நோக்குடன் இவ்வரசர் இங்கிலாந்து அரசரான முதலாம் என்றி (Henry I) என்பாருடன் ஏறத்தாழ 20 ஆண்டுகள் போரிட்டார். ஆனால், முதலாம் என்றி வெற்றிபெற்றதால், இவர் சீன் (Seine) ஆற்றுப் பகுதிகளை நன்கொடையாகக் கொடுக்க வேண்டியவரானார்.

பிரிட்டனிப் (Brittany) பகுதியில் என்றியின் ஆதிக்கத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுமெனவும் இவர் வற்புறுத்தப்பட்டார். அக்குவிடேன் கோமகன் பத்தாம் வில்லியம் (William X) என்பாருடன் இவர் நல்லுறவு கொண்டிருந்தார். வில்லியத்தின் மரணத்திற்குப் பின்னர் அவர் மகள் எலியனார், உலூயியின் மகனை மணந்து கொள்ள விரும்புவதாகத் தெரிவித்தார். இதுவே இவருடைய ஆட்சியின் பெருஞ் சாதனையாகும். இது பிரான்சின் பெருமையை உயர்த்தியது. ஆறாம் உலூயி கி.பி. 1137-ஆம் ஆண்டு பாரிசு நகரில் காலமானார்.

**உலூயி, ஏழாம்** (கி.பி.1121-1180) ஆறாம் உலூயியின் மகன்; அவருக்குப் பின்னர் அரசராக கி.பி. 1137-இல் முடிசூட்டிக் கொண்டார். ஏழாம் உலூயி மன்னரை இளையவர் உலூயி என்னும் சிறப்புப் பெயரால் அழைப்பர். இவர் தூயவர்; பொறையுடைமைக்குப் பெயர் பெற்றவர். எனினும், இவருக்குப் போதிய அரசியல் அறிவு இல்லை. அதனால், இவர் அரசியல் துறையில் பல தவறுகளைச் செய்தார். இவர் காலத்தில்தான் இரண்டாம் சிலுவைப் போர் மூண்டது. அப்போரில் பங்குபெறும் நோக்குடன் கி.பி. 1147-இல் கீழ்த்திசைக்குப் பயணமானார். தம்முடன் இவர் தம் மனைவி எலியனாரையும் கூட்டிச் சென்றார். ஆனால், இச்சிலுவைப் போர் படுதோல்வியுற்றது. இவர் கி.பி. 1149-இல் நாடு திரும்பினார். எலியனார் மீது பொறாமையுற்ற இவர் அவளை மணவிலக்குச் செய்ய எண்ணினார். ஆனால், போப் பாண்டவரும், சுகரும் அதைத் தடுத்துவிட்டனர். எலியனாருக்கு மகப்பேறு வாய்க்கவில்லை. எனவே, இவர் அவளை மணவிலக்குச் செய்து கொண்டார். இக்குழப்பத்தினால் அக்குவிடேன் பகுதி பிரான்சை விட்டுக்கை நழுவியது. இங்கிலாந்து மன்னர் இரண்டாம் என்றிக்கும் ஏழாம் உலூயிக்கும் மோதல் தொடர்ந்து நீடித்தது. ஏழாம் உலூயி கி.பி.1180-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18-ஆம் நாள் பாரிசில் காலமானார்.

இரா.அ.

**உலூயி, பதினான்காம்:** பிரெஞ்சு வரலாற்றில் மட்டுமன்றி ஐரோப்பிய வரலாற்றிலும் கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி முழுவதிலும்18-ஆம் நூற்றாண்டின் முன் பதினைந்தாண்டுகளிலும் போர்கள் முதலிய பல செயல்களைச் செய்தவரும், பிரெஞ்சுக் கருத்துகளும் உடை வகைகளும் நாகரிகங்களும் மற்ற ஐரோப்பிய நாடுகளெல்லாவற்றிலும் ஏற்றுக் கொள்ளப்படுமளவுக்கு அவற்றை ஆதரித்தவருமாகிய பிரெஞ்சு போர்போன் குடும்ப அரசர் பதினான்காம் உலூயி (Louis XIV) கி.பி. 1638 முதல் 1715 வரை 77 ஆண்டுகள் வாழ்ந்து வந்தார். இவர் தகப்பனார் பிரெஞ்சு அரசராகிய பதின்மூன்றாம் உலூயி; தாயார் ஆசுத்திரியா நாட்டு ஆன் என்பவர். இவர் தகப்பனாருடைய ஆட்சிக் காலத்திலேயே கார்டினல் இரிச்சலு(CardinalRichelieu) என்ற மேற்பார்வையாளருடைய ஆட்சியில் (1624-1642) அரசாங்கம் நடைபெற்றது. கண்காணிப்பாளராகிய இரிச்சலு கி.பி. 1642-இல் இறந்த பின்னர், அரசர் பதின்மூன்றாம் உலூயியும் கி.பி. 1643-இல் இறந்துவிடவே, அப்போது ஐந்தே வயது ஆகியிருந்த பதினான்காம் உலூயி அரியணை ஏறினார். இவரும் இளமையாக இருந்தபடியால் பிரெஞ்சு அரசாங்கம் கார்டினல் மாசரின் (Cardinal Mazarin) என்ற ஒரு திறமையான கண்காணிப்பாளருடைய (1642-1662) மேற்பார்வையிலிருந்தது. உலூயி கி.பி. 1661-இல் இசுபானிய இளவரசி மரிய தெரிசாவைத் திருமணம் செய்து கொண்டார். மாசரின் கி.பி.1662-இல் இறந்ததும் பதினான்காம் உலூயி தாமே எல்லா ஆட்சி அதிகாரங்களையும் ஏற்று, கி.பி. 1715-இல் தமது முடிவுக்காலம் வரை 'மாமன்னர்' (Grand Monarch) என்று புகழப் பெற்று, பிரான்சின் உள்நாட்டு வெளிநாட்டுக் கொள்கையை உருவாக்கியவராக ஆட்சி செய்தார்.



உலூயி, பதினான்காம்

(1)பிரான்சில் சருவாதிகார முடியாட்சி தோன்றிய **சூழ்நிலைகள்:** பிரான்சில் பதின்மூன்றாம் உலூயியின் ஆட்சிக் காலத்திலேயே உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நிலவிய சூழ்நிலைகள் அங்கு ஒரு வலுவான முடியாட்சி தேவை என்பதை எடுத்துக்காட்

டின. அரசரின் தாயார் மேரி டி மெடிசி (Mari de Medici) பிரெஞ்சு, இசுபானிய அரச குடும்பங்களுக்கிடையே திருமண உறவுகளை ஏற்படுத்துவதற்காக ஒப்பந்தங்களைச் செய்துகொள்ள முயன்றாள்; இதைப் பல பிரஞ்சுப் பிரபுக்களும், மறுப்புரையாளராகிய (Protestant) கிறித்தவர்களும் எதிர்த்தனர். பிரெஞ்சுப் பாராளுமன்றம் (States – General) 1614-ஆம் ஆண்டில் கூடிற்று. ஆனால், இது பயனுள்ள எதையும் செய்யுமளவுக்கு ஒன்றுபட்டிருக்கவில்லையாகையால் கலைந்தது. இதுவே இதனுடைய கடைசிக் கூட்டமாகும்.

இதன் பின்னர் 175 ஆண்டுகளுக்கு இது கூடாமலிருந்து, பிரஞ்சுப் புரட்சியைத் தொடங்கி வைத்து கி.பி.1789-இல் கூடிற்று. ஆசுத்திரியா மிக வலுவான நாடாக ஆயிற்று. இந்தச் சூழ்நிலையில் கி.பி.1624-இல் கார்டினல் இரிச்சலு அரசியாருக்கு ஆலோசனையாளராக வந்து, 18 ஆண்டுகளுக்குப் பிரான்சினுள்ளே பிரஞ்சு அரசருடைய அதிகாரத்துக்கு வரம்பு எதுவுமில்லாத அளவுக்கு முழுமையானதாக (Absolute) அதை ஆக்கும்பொருட்டும், பிரான்சை ஐரோப்பாவிலேயே ஒரு வலிமையும் தலைமையுமுடைய நாடாக ஆக்கும் பொருட்டும் திட்டவட்டமான உள்நாட்டு வெளிநாட்டுக் கொள்கைகளை வகுத்தார். அவர் ஒரு கத்தோலிக்கராகவும் ஆயராகவும் (Bishop) போப்பு மன்றஉறுப்பினராகவும் (Cardinal) இருந்தபோதிலும், பிரஞ்சுக் குடிமக்கள் பெரும்பாலோரும் அவர் எந்த அரசருக்குப் பணி செய்தாரோ அந்தப் பிரஞ்சு அரசரும் கத்தோலிக்கராக இருந்தபோதிலும், அவர் போப்புக்கோ கத்தோலிக்கரான ஆசுத்திரியப் பேரரசருக்கோ உதவி ஏதும் செய்யாமல், அவர்களுடைய பகைவர்களான செருமானிய மறுப்புரையாளரான கிறித்தவர்களுக்கு நல்லுதவி செய்து, அவர்கள் சமயம் செருமனியில் தழைத்திருக்குமாறு செய்தார்.

மார்ட்டின் லூதர் காலத்தில் தோன்றிய மாறுபாடான சமயக் கோட்பாடுகளுக்கெல்லாம் முக்கியத்துவம் இல்லை என்றும், அரசியல் நோக்கங்களும் தேசிய நோக்கங்களும் அரச குடும்ப நோக்கங்களுமே சமய நோக்கங்களை விட உயர்ந்தவை என்றும் அவர் கருதினார். ஆகையால், அரசருடைய அதிகார வளர்ச்சிக்குத் தடைகளாக இருந்த பிரபுக்களின் உரிமைகள், பிரஞ்சு மறுப்புரையாளர்களின் உரிமைகள், நீதிமன்றங்கள், மாகாண மன்றங்கள் ஆகியவற்றின் உரிமைகளையெல்லாம் அவர் ஒடுக்கினார். பிரஞ்சு மறுப்புரையாளர்களுக்கு (Huguentos) நாண்டிசு ஆணையின்படி வழங்கப்பட்டிருந்த தனிமன்றங்களை வைத்துக்கொள்ளும் உரிமையும், சில பட்டணங்களில் படைகளை வைத்துக் கொள்ளும் உரிமையும் அரச அதிகாரங்களுக்குத் தடையாக இருந்ததைக் கண்ட இரிச்சலு, 1627-இல் அவர்களுடைய துறைமுகக் கோட்டையாகிய இலாரோசலைத் (La Rochelle) தாக்கிக் கைப்பற்றி, அவர்களுக்குச் சமய உரிமையை மட்டும் வழங்கியும், படைகளைத் திரட்டிக் கொள்ளும் உரிமையை மறுத்தும் 1629-இல் அலெய் உடன்படிக்கை செய்தார். பலவிதச் சலுகைகளைப் பெற்றிருந்த பிரஞ்சுப் பிரபுக்களை இரிச்சலு அடக்கினார். எனினும், அவர்கள் செல்வவளம் பெற்று, அரசருடைய ஆதரவைச் சார்ந்திருந்தனர். அவர்களுடைய கோட்டைகள் அழிக்கப்பட்டன. மேலும், மாகாணங்களின் ஆட்சியில் மிகவும் செல்வாக்குப் பெற்றிருந்த பிரபுக்களின் அதிகாரத்தை ஒடுக்கும்பொருட்டு, இரிச்சலு காவல், நிதி மேற்பார்வையாளர்களை (Superintendents of Police and Finance) மாகாண ஆட்சியாளர்களாக (Intendants) அமர்த்தி, மாகாணங்களில் அரசருக்காகப் படை திரட்டவும் வரி வாங்கவும் சட்டத்தைச் செயற்படுத்தவும் அதிகாரங்களை அவர்களுக்கு வழங்கினார். நீதிமன்றங்கள் (Parlements) நீதி வழங்கும் அதிகாரங்களை மட்டுமே கையாளுமாறும், ஆட்சிக் கொள்கையை வகுக்கவோ சட்டம் இயற்றவோ இயலாதவாறும் தடுக்கப்பட்டன. மாகாணப் பிரதிநிதி மன்றங்களின் அதிகாரங்களும் ஒழிக்கப்பட்டு, அவற்றில் அரசருடைய அதிகாரிகளின் நேர்முக ஆட்சி நிறுவப்பட்டது.

நாட்டிலுள்ள சிறந்தோரடங்கிய மன்றம் ஒன்றுதான் (Notables) அரசருக்கு ஆலோசனை வழங்குதற்கு அமைக்கப்பட்டது; ஆனால், அதனுடைய ஆலோசனையை அரசர் ஏற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயம் இல்லை. இரிச்சலு ஓர் அரச மன்றத்தை (Council of the King) அமைத்து, அதிலிருந்தே எல்லா அரசாங்க ஆணைகளும் விடுக்கப்படுமாறும், அதைப் பல சிறு பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொன்றும் ஒரு குறிப்பிட்ட பணியைச் செய்யுமாறும் ஏற்பாடு செய்தார். இந்த அரச மன்றமே பதினான்காம் உலூயியின் ஆட்சிக் காலத்திலும், அதற்குப் பின்னர்ப் பிரஞ்சுப் புரட்சிதோன்றும் காலம் வரையிலும் பிரான்சுநாட்டை ஆண்டது. அயல் நாட்டு உறவுகளிலே அப்போது நடைபெற்று வந்த முப்பதாண்டுப் போரில் (1618-1648) இரிச்சலு கத்தோலிக்க நாடுகளாகிய இசுபெயின், ஆசுத்திரியா ஆகியவற்றுடன் சேரவில்லை. அவைகளைத் தடுத்துச் செருமானிய மறுப்புரையாளர்களைக் காத்து அதன் வாயிலாகப் பிரான்சின் ஆதிக்கம் ஐரோப்பாவில் நிலவுதல் வேண்டுமென்று அவர் முயன்றார். இசுபானியப்

படைகள் ஆசுத்திரியாவுக்குள் நுழைவதைத் தடுத்தற்காக வால்வீடலைன் கணவாயைக் கைப்பற்ற உதவி செய்தார். சுவீடிசு அரசராகிய கசுடாவசு அடால்பசுடன் உடன்படிக்கை செய்து கொண்டு சுவிசு (Swiss) மறுப்புரையாளர் படைகளுக்கும், செருமானிய மறுப்புரையாளர் படைகளுக்கும் நிதி உதவி செய்து, ஆசுத்திரியாவின் வலிமை மிகாதவாறு தடுத்தார்; இசுபெயினுக்கு எதிராகப் போர்ச்சுகலும், கடலோனியாவும் கலகம் செய்யுமாறு இரிச்சலு அவைகளைத் தூண்டிவிட்டார். அவர் கி.பி. 1642-இல் இறக்கும்போது பிரான்சும் அரச அதிகாரத்துக்குத் தடை ஏதுமின்றி வளர்ந்திருந்தது. ஐரோப்பாவில் பிரான்சின் எழுச்சிக்குத் தடையாக இருந்த இசுபெயினும் ஆசுத்திரியாவும் ஒடுக்கப்பட்டன.

அவருக்குப்பின் பதினான்காம் உலூயியின் இளமையில் கண்காணிப்பாளராக 18 ஆண்டுக்காலம் ஆட்சி செய்த கார்டினல் மாசரினும் இரிச்சலுவின் கொள்கைகளைப் பின்பற்றிப் பிரான்சை ஐரோப்பாவில் தலைமை நாடாக ஆக்கினார். இரிச்சலு பிரஞ்சு இனத்தவர்; உள்நாட்டு, அயல்நாட்டு நிலைமைகளைக் கட்டுப்படுத்தும் திறமை மிக்கவர். அவருடைய உதவியாளரும், அவரால் பரிந்துரை செய்யப்பட்டவரும், இத்தாலியருமான மாசரினுக்கு உள்நாட்டுஆட்சியில் திறமை இல்லாவிடினும், அயல்நாட்டு உறவுகளைக் கட்டுப்படுத்தும் அரசியல் அறிவு மிகுதியாகஇருந்தது. அவர் கோண்டி(Conde), தூரின்(Turence) என்னும் இரு சிறந்த பிரஞ்சு வீரர்களினுதவியால் ஆசுத்திரியாவுக்கும், இசுபெயினுக்கும் எதிராக இராக்ராய் (Rocroi), இலென்சு (Lens) ஆகிய இடங்களில் வெற்றிபெற்று, முப்பதாண்டுப் போரை கி.பி. 1648-இல் வெசுட்டுபேலியா உடன்படிக்கையின் வாயிலாக முடிவுக்குக் கொண்டுவந்தார். இந்த உடன்படிக்கையினால் மறுப்புரையாளர் சமயநெறி அழிவினின்றும் காப்பாற்றப்பட்டது. பிரான்சுக்கு மெட்சு (Metz), தூல் (Toul), வெர்டன் (Verdun), அல்சேசு(Alsace) முதலியவை கிடைத்தன. போரினால் செருமனி வளமும் வலுவும் இழந்து, ஒற்றுமையின்றி இருந்தது. அதில் 343 சுதந்திர நாடுகளும் நகரங்களும் இருந்தன. ஆசுத்திரிய பேரரசர்கள் ஒடுக்கப்பட்டனர். செருமனியால் நெடுங்காலத்துக்கு ஐரோப்பிய அரசியலில் தலைதூக்க இயலாதபடி வலுவற்றிருந்த நிலைமைதான், பிரான்சு பதினான்காம் உலூயியின் ஆட்சியில் ஐரோப்பிய அரசியலில் தலைமையான பங்கு கொள்ளும்படி வாய்ப்பளித்தது. மாசரினுக்கு உள்நாட்டில் எதிர்ப்புகள் இருமுறை ஏற்பட்டபோதிலும், அவற்றை அவர் அடக்கிவிட்டார். இரிச்சலு காலத்திலேற்படுத்தப்பட்ட அரசாங்க அமைப்பும் அரசருடைய தலைமையான நிலைமையும் பாதுகாப்பாகத் தொடர்ந்து இருந்தன. மாசரின் இசுபெயினோடு போரை நிறுத்தி, அமைதி உடன்படிக்கை செய்து கொண்டு பிரான்சுக்கு அர்ட்டா (Artois), உருசிலன் (Roussillon) முதலிய இடங்களைப் பெற்றார். அவருடைய முயற்சியால் செருமனி போரை நிறுத்தியது. பிரான்சு தனது விருப்பப்படி இசுபெயினோடு உடன்படிக்கை (பிரனிசு உடன்படிக்கை) செய்துகொண்டது. இருநாடுகளுக்குமிடையே நட்புறவை உறுதி செய்யும் பொருட்டுப் பதினான்காம் உலூயியிக்கு இசுபானிய இளவரசி மரிய தெரசா திருமணம் செய்து வைக்கப்பட்டாள். பெரும் பொருளைச் சீதனமாகப் பெற்றுக்கொண்டு, இசுபானிய அரசின்மீது தாம் உரிமை கோருவதில்லை என்று உலூயி வாக்களித்தார்.

**அரசாங்க அமைப்பும் அதிகாரக் குவிப்பும்:** உலூயிக்கு முற்பட்ட காலத்தில் இரிச்சலுவும் மாசரினும் பிரஞ்சு அரசருடைய அதிகாரங்களுக்கு எந்த வரம்புமில்லாமல் அதை வளர்த்து வைத்திருந்தனர். அரச அதிகாரத்துக்கு இருந்த எதிர்ப்புகளை ஒழித்து, ஐரோப்பாவில் பிரான்சின் எழுச்சிக்குத் தடையாக இருந்த செருமனி, ஆசுத்திரியா, இசுபெயின் முதலிய நாடுகளையும் அடக்கி வைத்திருந்தனர். ஆகையால் உலூயி தமது எதேச்சாதிகாரத்தைத் தமது புகழ் ஒன்றையே கருதி நடத்தத் துணிந்தார். மாசரின் இறந்ததும், உலூயி தாமே முதலமைச்சராக இருப்பதாகக் கூறித் தமது நீண்ட ஆட்சிக்காலத்தில் பிரான்சின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகளைத் தாமே வகுத்துச் செயற்படுத்தினார். இவருடைய ஆட்சிக் காலத்தில் ஐரோப்பாவில் மிக்க வலிமையுடையதாகப் பிரான்சு இருந்தது. ஐரோப்பிய நிலைமையை நன்கு அறிந்து இவர் அரசியல் திறமையுடன் செயற்பட்டார். இவர் முற்றுகைப்போரை நடத்துவதில் வல்லவர். இவருடைய புகழ் அக்கால முடியாட்சிக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கியது. இவருடைய அரசவையானது சிறப்பாக அமைக்கப்பட்டிருந்தது. கட்டடக் கலை, ஓவியம், இலக்கியம் முதலியவற்றில் பிரான்சு முன்னேற்றமடைந்திருந்தது. சிறந்த நாடகாசிரியர்களான கார்னீல் (Corneille), இரேசின் (Racine), மோலியர் (Moliere) முதலியோரும், தேக்கார்ட்டே (Descartes), பாசுகல் (Pascal) முதலிய தத்துவ ஆசிரியர்களும், போசே (Bossuet), பெனிலன் (Fenelon) முதலிய இறையியலாரும் இவ்வாட்சியில் இருந்தனர். இவருடைய அவையினர் ஈடுபட்ட ஒழுக்கக்கேடான செயல்களைப் புனித சைமனின் நினைவுக் குறிப்புகள் என்ற நூல் காட்டுகிறது. உலூயிக்குப் பற்றுறுதியுடன் பணிசெய்வதற்குத் திறமையான கோண்டி, தூரீன் என்ற இரு தளபதிகளிருந்தனர். அவர்களைப் போல அரசருடைய தவறுகளை அஞ்சாமல் அவருக்கு எடுத்

துக் கூறக்கூடிய திறமையும் பெற்றிருந்த வாபான் (Vauban) என்னும் இராணுவப் பொறியாளரும் இருந்தார். இவருடைய சிறந்த போர் அமைச்சர் இலொவெய் (Louvais) ஆவார். எல்லா ஐரோப்பிய நாடுகளினரசர்களும் பதினான்காம் உலுயியையே சிறந்த அரசருக்கு எடுத்துக்காட்டாக இருப்பவரென்றும், ஒரு நாடு சிறப்பாக ஆளப்படுதற்குப் பிரான்சு ஓர் எடுத்துக்காட்டு என்றும் கருதினார்கள். பொதுவாக எல்லா ஐரோப்பிய நாடுகளிலுமே இவருடைய ஆட்சிக் காலத்தில் பாராளுமன்ற நிறுவனங்களும், பிரதிநிதித்துவ நிறுவனங்களும் வலுவற்ற நிலையில் காணப்பட்டன. இங்கிலாந்தில் பாராளுமன்றம் ஓரளவு உரிமையோடு இருந்தாலும், அங்கும் அதற்குப் பல சோதனைகள் ஏற்பட்டன. ஆகையால், எதிர்காலத்தில் பிரதிநிதித்துவ நிறுவனங்களால் அரசாங்கத்தைக் கட்டுப்படுத்தக்கூடிய நிலை தோன்றுமா என்று எவராலும் உறுதியாகச் சொல்லமுடியாத நிலை இருந்தது. வரம்பற்ற முடியாட்சியே நீடித்து இருக்கும் எனத் தோன்றிற்று. பதினான்காம் உலூயிதான் பிரெஞ்சு அரசாங்கத்தின் மையமாக இருந்தார். இவருடைய ஆணைகளைப் பதிவு செய்யுமாறு பிரெஞ்சு நீதிமன்றம் கட்டாயப் படுத்தப்பட்டது; பிரெஞ்சுப் பாராளுமன்றத்தின் ஒப்புதலைப் பெறாமலே உலூயி தமக்கு வேண்டிய வரிகளைக் குடிகளிடமிருந்து வாங்குதற்கும், தமக்கு வேண்டிய அளவுப் படைகளைத் திரட்டி வைத்துக் கொள்ளுவதற்கும் அதிகாரத்தைப் பெற்றிருந்தமையினால், மன்றத்தைக் கூட்டவேயில்லை. எனவே, இவர் அதற்குப் பொறுப்பாகவும் இல்லை. மாகாண, நகராட்சி நிறுவனங்களெல்லாம் அரசருடைய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டன. நடைமுறையில் அரசாங்கத்தை நடத்தியவை நடுவிலுள்ள அரசமன்றமும், அதிலிருந்து தோன்றிய சிறிய மன்றங்களுமேயாம். அவை அரசாங்கத்தின் பல்வேறு துறைகளை நடத்தின. அவற்றிலுள்ள உறுப்பினர்களெல்லாம் நடுத்தர வகுப்பைச் சேர்ந்தவர்கள். அதனால், அரசர் அவர்களுடன் அதிகாரங்களைப் பகிர்ந்து கொண்டார் என்று சொல்லமுடியாது. இந்த மன்றத்தில்தான் அரசாங்க முடிவுகளெல்லாம் எடுக்கப்பட்டு அவை அரசாங்க மேற்பார்வையாளர்களிடம் செயற்படுத்துவதற்காகக் கொடுக்கப்பட்டன. இவ்வரசருடைய ஆட்சிமுறையானது அதிகாரக் குவிப்புடைய எதேச்சாதிகாரமேயாகும். உலூயியே ஒரு தடவை, ‘அரசு என்பது என்ன? நானேதான் அரசு’ என்று கூறியதும் இவருடைய எதேச்சாதிகாரப்போக்கையே காட்டுகிறது.

**உள்நாட்டுக் கொள்கை:** உலூயிக்கு மிகத் திறமையாக ஒரு நிதியமைச்சராகக் கோல்பர்ட்டு (Colbert) என்பவர் கிடைத்தார். நடுத்தர வகுப்பிலிருந்து வந்த அவர், ஓய்வு ஒழிவின்றி உழைத்து பிரான்சின் நிதி நிலையைச் சீர்திருத்தினார். அவர் புதிய வரிகளை விதிக்காமல், ஏற்கனவே விதிக்கப்பட்டிருந்த வரிகளை ஒழுங்காக வாங்குவதற்கும், அவைகளைக் கண்காணிப்பதற்கும் சிறந்த ஏற்பாடுகளைச் செய்தார். பிரான்சுக்குப் புதிய நிதி ஆதாரங்களைச் சேர்க்கும் பொருட்டு அவர் இங்கிலாந்து, ஆலந்து, இத்தாலி முதலிய நாடுகளிலிருந்து சிறந்த தொழிலாளர்களைப் பிரான்சுக்கு வரவழைத்து அவர்கள் பிரெஞ்சுத் தொழிலாளருக்கு நெசவுத் தொழிலையும், கண்ணாடித் தொழிலையும் கற்றுக்கொடுக்குமாறு செய்தார். இந்தத் தொழில்கள் பிரான்சில் தொடங்கப்படவே, அவற்றின் பொருள்களுக்கு அயல் நாட்டிலிருந்து போட்டிகள் ஏற்படாமல் தவிர்க்கும் பொருட்டு, அயல்நாட்டுப் பொருள்களின் மீது உயர்ந்த காப்புவரிகளை விதித்தார். அயல்நாடுகளில் வாணிகம் செய்வதற்காகப் பிரெஞ்சு வாணிகக் கழகங்களுக்குப் பட்டயங்கள் அளித்தார். அவற்றுள் ஒன்றுதான் பிரெஞ்சுக் கிழக்கிந்திய வாணிகக் கழகம் ஆகும். உள்நாட்டு வாணிகத்தின் பொருட்டுச் சிறந்த சாலைகளும் கால்வாய்களும் அமைக்கப்பட்டுக் கப்பல்களும் கட்டப்பட்டன. தொழிலும் வாணிகமும் வளர்ச்சியடைந்தன. இங்கிலாந்துக்கும் ஆலந்துக்கும் எதிராக ஒரு கப்பற்படையும் அவருடைய முயற்சியால் தோன்றிற்று. பிரபுகளுக்கும் சாதாரண மக்களுக்கும் இடையே எவ்வித வேறுபாடும் காட்டாமல் அவர் நீதி வழங்கினார். எனவே, அவருடைய ஆட்சியைப் பிரெஞ்சு மக்கள் ஆதரிந்தனர்.

**வெளிநாட்டுக் கொள்கை:** இந்த அமைதியான ஆட்சிக் காலம் நீடித்து நிற்கவில்லை. இவர் பல போர்களைத் தொடர்ந்து செய்தார். அவற்றில் இவர் தொடக்கத்தில் வெற்றிகள் பெற்றாலும், அவை இவருக்கு எதிராகப் பல ஐரோப்பிய நாடுகள் ஒன்றுசேரவும், அதன் விளைவாகப் பிரான்சினுடைய வளங்களெல்லாம் குறைந்து உலூயியின் பெயரும் புகழும் மங்கி மறையவும், முடியாட்சிக்கு எதிரான புரட்சி தோன்றவும் வழி வகுத்தன.

(அ) முதலில் இவர் தமது திருமணத்தின் போது வாக்களிக்கப்பட்டிருந்த சீதனப்பொருள் தமக்கு இசுபெயினால் அளிக்கப்படாததால், அதற்கு ஈடாக இசுபானிய நெதர்லாந்தைத் தமக்குத் தருமாறு கேட்க, அதை இசுபெயின் கொடுத்தற்கு மறுக்கவே, இவர் இசுபானிய நெதர்லாந்தைத் தாக்கினார். இதைக் கண்டு அதிர்ச்சி அடைந்த இங்கிலாந்து, ஆலந்து, சுவீடன் ஆகிய மூன்று நாடுகளும் பிரான்சுக்கு எதிராக ஒரு முக்கூட்டை ஏற்படுத்தவே, எய்லா சேப்பல்

உடன்படிக்கையின்படி (1668), பிரான்சு தான் கைப் பற்றிய ஒரு சில இடங்களைத் தவிர மற்றவைகளை இசுபெயினுக்குத் திருப்பிக் கொடுத்தது.

(ஆ) பிரான்சுக்கு வாணிகத்தில் போட்டியாக இருந்த ஆலந்தை ஒழிப்பதற்கும், அதனுடைய குடி யரசு முறையை ஒழிப்பதற்கும், பிரான்சிலிருந்து சமய உரிமைகளுக்காக ஆலந்தில் அடைக்கலம் புகுதற்கு 'ஊகனட்டுகளுக்கு' இடமளித்த தச்சுக்காரர் களைத் தண்டித்தற்கும், கடந்த போரில் ஆலந்து முக்கூட்டில் சேர்ந்ததற்கு அதைத் தண்டித்தற்கும் கி.பி. 1672-இல் உலூயி ஆலந்தின்மீது படையெடுத் தார். இங்கிலாந்து ஆலந்துக்கெதிராகத் தன்பக்கம் சேரும்பொருட்டு அதனரசர் இரண்டாம் சார்லசுக்குப் பணம் கொடுத்து, இங்கிலாந்தை ஆலந்திடமிருந்து பிரித்துவிட்டார். சுவீடனையும் இவர் தம்பக்கம் இழுத்துக்கொண்டார். தனித்துப் போராடிய தச்சுக் காரருக்கு உலூயியிடம் சரணடைவதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலை தோன்றியபோது, அவர் களுக்கு அரசியல் சூழ்வலிமிக்குடைய ஆரஞ்சு வில்லி யம் என்ற ஓர் ஒப்பரிய தலைவர் கிடைத்தார். அவர் முன்னேறி வந்த பிரஞ்சுப் படைகளைத் தடுப் பதற்காகக் கடலணைகளை (Dyke) வெட்டிவிட்டும், பிரான்சுக்கு எதிராக இசுபெயின், பிராண்டன்பர்க்கு, இங்கிலாந்து முதலியவைகளைத் தச்சுக்காரர் பக்கம் சேர்த்தும் பணிசெய்தார். ஆயினும், பிரஞ்சுப் படை களின் வீரம் சிறிதும் குறையவில்லை. இசுபெயின் கி.பி. 1678-இல் நிமீகன் உடன்படிக்கையின்படி பிரெஞ்சு காம்ப்டே பகுதியை பிரான்சுக்கு அளித்தது.

(இ) அமைதிக்காலத்தில் பிரான்சு தனக்கு கி.பி. 1648-இல் வெசுட்டுபாலியா உடன்படிக்கையின்படி அளிக்கப்பட்ட அல்சேசு, இலொரேன் மாகாணங்களின் எல்லைகளை வரையறை செய்யும்பொருட்டு, உலூயி தம்மால் அமைக்கப்பட்ட ஒரு நீதிமன்றத்தில் தாமே நீதிபதியாகவும், வழக்காளியாகவும் இருந்து, வழக்குத் தொடுத்து, அல்சேசை அடுத்த இசுட்டுராசு பர்கு (Strasburg), இலக்சம்பர்கு, காசேல் முதலிய இடங்களை இணைத்துக் கொண்டார். ஓரஞ்சார்ந்த இம்முறையில் இவருடைய நாடு பிடிக்கும் போக்கை 1684-இல் இராடிசுபனில் கூடிய செருமானிய மன்றம் கண்டித்தபோது, தாம்பிடித்த இடங்களைத் தமக் குக் கொடுக்க மறுத்தால், உடனே போர் தொடுப்ப தாக அச்சுறுத்தவும் மன்றம் பணிந்து போயிற்று. உலூயி 1682-இல் பிரஞ்சு உரோமானிய கத்தோலிக் கத் திருச்சபைக்குச் சில உரிமைகளை (Gallican Liberties) அளித்தார். அதன்படி போப்புக்குச் சமயத் துறையில் மட்டுமே அதிகாரம் உண்டு. பிரஞ்சு அரச ருடைய அதிகாரம் போப்பைச் சார்ந்திருக்கவில்லை. அரசரைப் பதவிநீக்கம் செய்யவோ குடிகளை அரச ருக்குக் கீழ்ப்படியாமல் தடுக்கவோ போப்புக்கு அதி காரம் இல்லை. பிரஞ்சுத் திருச்சபைக்குப் போப்பு விடுக்கும் ஆணையை அரசமன்றம் ஒப்புக்கொண் டால்தான் அது செல்லுபடியாகும். போப்பு இவற்றை எதிர்த்தாலும் உலூயி பணியவில்லை. பிரஞ்சுக் கத்தோலிக்கத் திருச்சபையில் நல்ல பல சீர்திருத்தங் களைச் செய்வதற்காகத் தோன்றிய சேன்சின் கொள்கை (Jansenism) இயக்கத்தைத் தமது அதி காரத்துக்குத் தடையானதென்று உலூயி கருதி அதை ஒழித்து விட்டார். பிரான்சில் மறுப்புரையாளர்களா கிய 'ஊகனட்டுகளுக்கு' நாண்டிசு ஆணையின்படி வழங்கப்பட்டிருந்த சமய உரிமைகளை உலூயி 1685--இல் தள்ளுபடி செய்து, சமய உரிமைகளை மறுத் தார். இது ஒரு பெரும் தவறு ஆகும். மறுப்புரை யாளர் (Protestant) நாடுகளெல்லாம் பிரான்சின் பகை நாடுகளாக ஒன்று சேர்ந்தன. பிரான்சின் நண்பரான துருக்கிய சுல்தான் போலந்து அரசரால் தோற்கடிக்கப்பட்டார். உலூயியின் கத்தோலிக்க நண்பர் இரண்டாம் சேம்சு ஆங்கில அரசராகி மூன்று ஆண்டுகளில் (1688-இல்) ஆங்கிலேயருடைய ஆதரவை இழந்து, முடிதுறந்து பிரான்சுக்குச் சென்று விட்டார். உலூயியின் பழைய பகைவரும் மறுப்பு ரையாளருமான ஆரஞ்சு வில்லியம் இங்கிலாந்தின் அரசராகிவிடவே, இங்கிலாந்தும் ஆலந்தும் பிரான் சுக்கெதிராக ஒன்றுசேர்ந்தன.

(ஈ) ஆங்கில அரசுரிமைப்போர் (கி.பி. 1688-1697): உலூயி ஆலந்துக்குச் செல்லக்கூடிய வழியிலுள்ள கொலோன் நகரத்தைத் தாக்கியபோது, ஆங்கில அரசர் மூன்றாம் வில்லியம் ஆலந்தைக் காப்பாற்றும் பொருட்டு இங்கிலாந்து, ஆசுத்திரியா, இசுபெயின், பிரான்சுடன்பர்க்கு, தென்மார்க்கு, சுவீடன் முதலிய நாடுகளையெல்லாம் ஒரு பெருங்கூட்டாக இணைத் தார். பல இடங்கள் முற்றுகைக்கு உள்ளாயின. பிரெஞ்சுக் கப்பற்படை ஆங்கில-தச்சுக் கப்பற் படையை 1690-இல் பீச்சி எட்டில் வென்றது. ஆங்கி லக் கப்பற்படை 1692-இல் பிரெஞ்சுக் கப்பற்படையை இலாகோக்கில் வென்றது. இதற்கிடையில் நாட்டை விட்டுப் பிரான்சில் அடைக்கலம் புகுந்த இரண்டாம் சேம்சு அயர்லாந்துக்குச் சென்று அதனைக் கைப்பற்ற முயன்றார். மூன்றாம் வில்லியம் சேம்சைத் தோற் கடித்து அயர்லாந்தைத் தம்வசம் வைத்துக்கொண் டார். இறுதியில் 1697-இல் செய்யப்பட்ட இரிசுவிக்கு உடன்படிக்கையின்படி, பிரான்சு 1684-இல் தன் விருப்பமாக இணைத்துக்கொண்ட நகரங்களில் இசுடு ராசுபர்க்கு, அல்சேசு முதலியவற்றை மட்டும் தன் வசம் வைத்துக் கொண்டு, மற்றவற்றைத் திருப்பிக் கொடுத்தது. மூன்றாம் வில்லியம் இங்கிலாந்தின்

அரசராக ஒப்புக்கொள்ளப்பட்டார். உலூயி தாம் இரண்டாம் சேம்சுக்கு ஆங்கில அரசுரிமையின்மீது ஆதரவளிப்பதில்லை என்று ஒப்புக்கொண்டார்.

உலூயியின் ஆட்சியில் மிக நீண்டகாலமாக நடந்ததும், பிரான்சுக்குப் பெருந்தோல்விகளையும் பொருள் இழப்புகளையும் வீழ்ச்சியையும் அளித்தது மான போர் இசுபெயின் அரசுரிமைப்போர் (1704–1713) ஆகும். இசுபெயினுக்கு நெதர்லாந்திலும் இத்தாலியிலும் அமெரிக்காவிலும் இடங்கள் இருந்தன. அதன் அரசர் இரண்டாம் சார்லசுக்குக் குழந்தை களில்லாததால், அவருக்குப்பின்னர் இசுபெயினின் அரசுரிமை யாரைச் சேருமென்ற கேள்வி அரசியல் முக்கியத்துவமுடையதாக ஆயிற்று. அவருக்குப்பின் இசுபெயின் அரசுரிமைக்குத் தக்கவராகப் பதினான் காம் உலூயியின் மகன் கருதப்பட்டார். அதேபோல் ஆசுத்திரியப் பேரரசர் இலியோபால்டும் இசுபெயினின் அரச குடும்பத்துக்கு உறவினரென்ற முறையில் உரிமை கோரினார். பவேரிய அரசரும் உறவினடிப் படையில் உரிமை கோரினார். இங்கிலாந்தின் அரச ரான மூன்றாம் வில்லியம் தமது பெரும் பகைவரான உலூயிக்கு இசுபெயினின் பெருமளவு நாடும், அதிகார மும் போய்ச் சேருமாறு விடாமல் தடுக்கும்பொருட்டு, அரசியல் சூழ்வலியைக் கையாண்டு உலூயியுடன் முதல் பங்கீட்டு ஒப்பந்தம் செய்து கொண்டார். அதன்படி இசுபெயின் பவேரிய இளவரசருக்கும், இசு பெயினின் ஆட்சியிலுள்ள மற்ற நாடுகள் பிரான்சு, ஆசுத்திரியா ஆகிய இரு நாடுகளுக்கும் கொடுக்கப்பட வேண்டுமென ஏற்பாடு செய்தார், ஆனால், பவேரிய அரசர் இறந்துவிடவே வில்லியமும் உலூயியும் இரண்டாம் பங்கீட்டு ஒப்பந்தத்தை முதலாவதைப் போல இசுபானிய அரசரைக் கலந்துகொள்ளாமலே செய்தனர். அதன்படி இசுபெயின் ஆசுத்திரிய இள வரசர் சார்லசுக்கும், அவருக்கு இத்தாலியிலிருந்த இடங்கள் பிரான்சுக்கும் கொடுக்கப்படுதல் வேண்டும். இதற்கிடையில் இசுபெயினின் அரசர் இரண்டாம் சார்லசு தம் நாட்டை முழுவதும் உலூயியின் இளைய பேரன் பிலிப்புக்கு எழுதிவைத்துவிட்டு இறந்தார். உலூயி தாம் எதிர்பார்த்ததை விடப்பெரிய நாடு தமக்குக் கிடைத்ததைக் கண்டு, தம் நி‹ இரண்டாம் பங்கீட்டு ஒப்பந்தத்தை மீற னையும் பிரான்சையும் தம் இளைய பேரன பின்கீழ் ஒரே நாடாக இணைக்க எண்ணி, இசுபா‹ நெதர்லாந்தில் பிரஞ்சுப் படைகளை விடுத்து ஆலந்தை அச்சுறுத்தினார். மேலும், இரிசுவிக்கு உடன் படிக்கையில் தாம் கொடுத்த வாக்குறுதியை மீறி, இசுடுவர்ட்டுக் குடும்பத்தைச் சேர்ந்த சேம்சு எட் வர்டை இங்கிலாந்தின் அரசுரிமைக்கு உரியராக விளம்பரம் செய்தார். ஆகவே, ஆங்கிலப் பாராளு மன்றம் மறுப்புரையாளர் சமய நெறியையும், பாராளு மன்ற உரிமைகளையும் காப்பாற்றும்பொருட்டுப் பிரான்சோடு போர் செய்தற்கு வேண்டிய பொருளும் படையும் வில்லியத்துக்கு அளித்தது. வில்லியம் கீழுள்ள இங்கிலாந்து, ஆலந்து, ஆசுத்திரியா, பிராண் டன்பர்க்கு முதலியவை ஒருபேரணியாக (Grand Alliance) பிரான்சுக்கும் இசுபெயினுக்கும் பவேரியாவுக்கும் எதிராக அமைந்தன. ஆங்கிலத் தளபதி மால்பரோ பிரபு திறமை மிக்கவர். ஆங்கிலப் படைகள் பிரெஞ்சுப் படைகளை 1704–இல் பிளன்கீமில் தோற்கடித்து ஆசுத் திரியப் படைகளோடு இணைந்தன. நெதர்லாந்தும் இத்தாலியும் பிரான்சிடமிருந்து மீட்கப்பட்டன. ஆங்கி லேயர் சிப்ரால்டரைக் கைப்பற்றினர். இராமிலிசு, உடனார்டு, மால்பிளாக்கே முதலிய இடங்களிலும் பிரான்சுக்குத் தோல்விகள் ஏற்பட்டன. உலூயி அமைதி உடன்படிக்கை செய்ய முன்வர, நேச நாட்டினர் மறுத்தனர். பொருட்செலவும் உயிரிழப்பும் தேசநாட்டினர் பக்கம் பெருகின. இங்கி லாந்தில் 1710–இல் ஆட்சிக்கு வந்த தோரிக் கட்சியி னர் போரை நிறுத்தி, 1713–இல் உட்ரெக்டு உடன் படிக்கை செய்தனர். பிரஞ்சு இளவரசர் இசுபெயி னுக்கு மட்டும் அரசராதல் வேண்டுமே தவிர, இசு பெயின்–பிரான்சு இணைப்புக்கூடாது என்றனர். ஆசுத்திரியாவுக்கு நெதர்லாந்து, மிலான், நேப்பிள்சு, சார்டினியா முதலியவையும், இங்கிலாந்துக்குச் சிப் ரால்டரும் மைனார்க்காவும் கிடைத்தன. இசுடு வர்ட்டுகளின் அரசுரிமையைப் பிரான்சு கைவிட்டது. பிரான்சு இங்கிலாந்துக்கு அமெரிக்காவிலுள்ள நியூ பவுண்டுலாந்து, நோவாசுகோசியா, அட்சன் வளை குடா முதலிய இடங்களைக் கொடுத்தது.

உலூயியைப் பற்றிய மதிப்பீடு: உலூயியின் பெரும்போர்களினால் பிரான்சுக்குப் பெரும் பொருளி ழப்பும், நிதி இல்லாக் குறையும், கடன் சுமையும் ஏற் பட்டன. ஐரோப்பாவில் அதற்கு ஒரு காலத்திலிருந்த மதிப்பும் மறைந்தது. பிரெஞ்சு மக்களுக்குத் தங்களு டைய அரசரிட ˙திருந்த நம்பிக்கையும் அழிந்தது. அரசருடைய ( ‑ள்கையை வாபான் அஞ்சாமல் [illegible] க்கூரைத்த நாடு வறுமைக்குள்ளாயிற்று. ‹மக் காலத்தில் அவருடைய மூத்த ‹பரன், கொள்ளுப் பேரன் முதலி ‹விட்டனர். தம் கட்டடக்கலை ஆர்வ ரில் இருந்த ஆர்வமும், அதிகார வெறி ‹களுக்குத் தாம் நன்மை செய்யவொட்டா மல் தடுத்ததை அவர் கடைசிக் காலத்தில் உணர்ந் தார். ஐரோப்பிய நாகரிகத்தை ஒரு நூற்றாண்டுக் குத் தலைமை தாங்கி நடத்திச் சென்ற பிரான்சு,

உலூயியின் இறப்புக்குப் பின்னர்த் தனது உயரிய நிலையை இழந்தது. அதன் இடத்தை மற்ற நாடு கள் அடைந்தன. இரா.அ.

**உலூயி, பதினைந்தாம் (கி.பி. 1710-1774):** பதினைந்தாம் உலூயி கி.பி. 1710-ஆம் ஆண்டு வெர்சே என்னுமிடத்தில் பிறந்தார். 14-ஆம் உலூயியின் இறப்புக்குப்பின் அரியணையேறிய அவர்தம் பேரனின் மகனான 15-ஆம் உலூயிக்கு வயது ஐந்து. எனவே ஆட்சிப் பொறுப்பு ஏற்கும்வரை ஆர்லியன்சு கோமகன் பிலிப்பு என்பவர் பாதுகாவலராக நியமிக்கப்பட்டார்.



உலூயி, பதினைந்தாம்

இவருடைய தொடக்க காலத்தில் பிரான்சின் பொருளாதார நிலை மிகவும் சீர்குலைந்து காணப் பட்டது. அதன் பயனாகப் பிலிப்பு பல்வேறு மாற்றங் களைக் கொண்டு வந்தார். 14-ஆம் உலூயியின் அமைச்சர்கள்மாற்றப்பட்டு, ஏழு ஆட்சிக்குழுக்கள் நியமிக்கப்பட்டன. ஒவ்வொரு குழுவும் அயல்நாட்டு உறவு, நிதி, போர் முதலிய துறைகளைக் கவனித்து வந்தன. ஆர்லியன்சு பிரபுவின் தன்னிச்சைச் செயல் களால் பிரான்சின் பொருளாதார நிலை மேலும் வலுவிழந்தது. இந்நிலையில் 15-ஆம் உலூயி உரிய வயதை அடைந்து ஆட்சிப் பொறுப்பை ஏற்றார்.


புளூரி என்பவர் முதலமைச்சராக நியமிக்கப்பட்டார். பூர்போன் கோமகன் புளூரியின் செல்வாக்குப் பெருகுவதைக் கண்டு, அவரை நாட்டைவிட்டு விரட்ட முயற்சி செய்தார். இவரது முயற்சியின் பயனாகச் செலவினங்கள் மிகவும் கட்டுப்படுத்தப்பட்டன. படைகளுக்கான செலவுகளும் கூடக் குறைக்கப் பட்டன. இவர் போலந்தின் அரசரான இசுடெனிசு லாசு என்பவரின் மகளை மணம் புரிந்து கொண்டார். போலந்து வாரிசுரிமைப் போரில் பிரான்சு தலையிட நேர்ந்தது.

ஆசுத்திரிய வாரிசுரிமைப் போரின் விளைவாகப் பிரான்சு மிகவும் பாதிக்கப்பட்டு இருந்தது. இப்போரின் விளைவாகப் பிரான்சுக்குப் பார், இலொரெயின் ஆகிய பகுதிகள் கிடைக்கப்பெற்று, அதன் கிழக்கு எல்லைக்கோடு வலுவாக்கப்பட்டது.

புளூரியின் மரணத்திற்குப்பின் உலூயி நேரிடையாக ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்டார். நீண்ட இடைவெளிக்குப்பின் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற தால் இவரால் திறம்படச் செயலாற்ற முடியவில்லை. இவர் மது, மங்கை ஆகிய இரண்டிற்கும் பெரும் பணத்தைச் செலவு செய்தார். இவர் தி பாம் படோர் என்ற பெண்மணியின் கைப்பாவையானார். பிரபுக் களும் குருமார்களும் மக்களைச் சுரண்டிக் கொழுத்த னர். அளவற்ற வரிகள் விதிக்கப்பட்டன. நாடெங்கி லும் புரட்சி தோன்றியது. அப்புரட்சி கொடுமையான முறையில் நசுக்கப்பட்டது.

ஆசுத்திரிய வாரிசுரிமைப் போர், இந்தியாவில் கருநாடகப் போர்கள், ஏழாண்டுப் போர் முதலிய பல போர்களில் பிரான்சு பங்கு கொண்டது. இதன் பயனாகத் தோல்வி மேல் தோல்வி கண்ட பிரான்சு, நிதி நிலைமையில் மிக மோசமான நிலையை அடைந்து புரட்சிக்கு வித்திட்டது. சு.ஆ.

**உலூயி, பதினெட்டாம் (கி.பி. 1755-1824)** பூர்பன் **(Bourbon)** மன்னர்களில் இறுதியாக அரசாண்ட பிரெஞ்சு மன்னர். இவர் பதினாறாம் உலூயியின் சகோதரர். பிரெஞ்சுப் புரட்சிக்குப் பின்னர் மீண்டும் மன்னராட்சி புதுப்பிக்கப் பெற்றபோது மீட்சி அரசராக **(Restoration King)** இவர் பதவியேற்றார்.




உலூயி, பதினெட்டாம்

உலூயி (Louis XVIII) கி.பி. 1755-ஆம் ஆண்டில் பிறந்தார். பிரெஞ்சுப் புரட்சியின்போது இவர் பிராவன்சுப் (Provence) பகுதியின் கோமானாக (Count) இருந்தார். ஆனால்,கி.பி.1791-ஆம் ஆண்டில் இவர் பிரான்சை விட்டுச் சென்றார். இவர் செருமனியில் காப்லன்சு (Koblenz) என்னுமிடத்தில் தம் அரண்மனையை அமைத்துக் கொண்டு, அங்கிருந்து பிரெஞ்சுப் புரட்சிக்கெதிராக ஆணைகளைப் பிறப்பித்துக் கொண்டிருந்தார். இவருடைய நடவடிக்கைகளால் அப்போது அரசராயிருந்த பதினாறாம் உலூயியின்பால் மக்கள் கடுஞ்சினம் கொண்டனர். இதன் விளைவாகப் பதினாறாம் உலூயி கழுவேற்றப்பட்டார். பதினேழாம் உலூயி கி.பி. 1795-இல் இறக்கவே, கோமானாக இருந்த உலூயி அரசராகப் பொறுப்பேற்றார். இவரையே பதினெட்டாம் உலூயி என்றழைத்தனர்.

முதலாம் நெப்போலியன் பிரான்சில் ஆட்சி நடத்திக் கொண்டிருந்த போது, உலூயி (Louis XVIII) ஐரோப்பாவின் பல நாடுகளில் வாழ வேண்டியவரானார். ஆனால் நாடு கடத்தப்பெற்றிருந்த காலகட்டத்தின் இறுதியில் இவர் இங்கிலாந்தில் வாழ்ந்தார்.

முதலாம் நெப்போலியன் கி.பி. 1814-ஆம் ஆண்டில் தோற்கடிக்கப்பட்டபோது, நேச நாடுகள் பிரான்சின் ஆட்சியை உலூயியிடம் ஒப்படைத்தன. சட்டவரம்புக்குட்பட்ட அரசராக ஆட்சி நடத்தப் போவதாக இவர் வாக்குறுதி கொடுத்திருந்தார். மீண்டும் நெப்போலியன் நாட்டிற்குத் திரும்பி வந்ததும் அவர் தம் 'நூறு நாட்கள்' (Hundred Days) எனப்புகழ்ப் பெற்ற ஆட்சியின் போது, உலூயி அரியணையிலிருந்து விரட்டப்பட்டார். ஆனால் வாட்டர்லூப் (Waterloo) போருக்குப் பின்னர் இவர்மீண்டும் பதவியில்அரசராக அமர்த்தப்பட்டார். அரியணை ஏறியதும் முற்போக்குச் சிந்தனையின் அடிப்படையில் அமைந்த அரசியல் அமைப்புத் திட்டத்தை இவர் அறிமுகப்படுத்தினார். இத் தருணத்தில் இவர் மிதவாதக் கொள்கைகளைக் கடைப்பிடித்தார். முற்போக்குக் கருத்துக் கொண்டவர்களுக்கும் பிற்போக்குக் கொள்கையாளர்களுக்கும் இடையே இவர் நடுத்தரக் கோட்பாட்டைப் பின்பற்றி ஆண்டார். இவரே பூர்பன் மரபினரில் கடைசியாக ஆண்ட பிரெஞ்சு மன்னர். இவர் கி.பி. 1824-ஆம் ஆண்டில் காலமானார். இரா.அ.

**உலூரியா-நந்தன்கர்** பீகார்மாநிலச் சம்பரான் மாவட்டத்தில் பேட்டியா (Battiah) என்னும் ஊரிலிருந்து வடமேற்கில் 24. கி.மீ. தொலைவில் அமைந்துள்ள ஊர். உலூரியாவிலிருந்து (Lauriya) நந்தன்கர் 2 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இவ்வூரில் வரலாற்றுப் புகழ் பெற்ற அசோகரின் கற்றூண் ஒன்று உள்ளது. இக் கற்றூணில் அசோகரின் ஆறு ஆணைகள் பொறிக்கப்பட்டுள்ளன. இவை அசோகப் பேரரசரின் 27-ஆம் ஆட்சியாண்டில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகளாகும். மௌரியர் காலக் கற்றூண்களில் இங்குள்ள கற்றூணே மிக்க வேலைப்பாடும் வனப்பும் மிக்கது. இக்கற்றூண் மணற்கல்லினால் (Sand Stone) ஆனது.


உலூரியா-நந்தன்கர் அசோகர் கற்றூண்

வட்டவடிவ அமைப்புள்ள இத்தூண் உயரே செல்லச் செல்லக் குறுகிச் செல்கிறது. தூணின் உச்சி மணியைப் போன்ற வடிவுடையது. தாமரை இதழ்களை அதன்மீது விரித்து வைத்தது போன்ற அமைப்பையும் இது கொண்டுள்ளது. இதன்மேலுள்ள வட்ட வடிவப் பரற்கட்டையின்மேல் அழகுறச் செய்த சிங்கமும் உள்ளது. பரற்கட்டை விளிம்புகளில் வரிசையாக வாத்துகளின் உருவம் செதுக்கப்பட்டுள்ளது. இவ்வாத்துகள் தம் அலகுகளினால் தரையைத் தொடுவது போன்று செதுக்கப்பட்டுள்ளன. இத்தூணில் அமைந்துள்ள சிங்கத்தின் வனப்பும் பெருமிதமும் அசோகரின் பிற கற்றூண்களில் காணப்படவில்லை. சிங்கம் கர்ச்சிப்பதைப் போன்ற வாயமைப்பும் வீரத்துடன் அமர்ந்

திருப்பது போன்ற உடலமைப்பும் உடையதாய் விளங்கி, சிற்பியின் திறமையை நன்கு வெளிப்படுத்து கிறது.

உலூரியாவிலுள்ள மண்மேடுகளில் 1904–ஆம் ஆண்டு முதல் 1907–ஆம் ஆண்டு வரை அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது. இம் மண்மேடுகளில் 15 தூபிகள் கண்டெடுக்கப்பட்டன. அவற்றில் 4 தூபி களை அகழாய்வு மூலம் வெளிப்படுத்தினர். மேலும், அடுக்கடுக்காகக் கட்டப்பட்ட தூபி ஒன்றும் கண்டு பிடிக்கப்பட்டது. இவை களிமண் அல்லது சுடப் படாத செங்கற்களினால் கட்டப்பட்ட தூபிகளாகும். எரிக்கப்பட்ட எலும்புகளும் கரித்துண்டுகளும் தங்க இலையில் பொறிக்கப்பட்ட தாய்த் தெய்வ உருவ மொன்றும் அகழாய்வில் கண்டுபிடிக்கப்பட்டன. பிப்பிரவாவிலும் (Piprawah) இங்குக் கிடைத்தது போன்ற தங்க இலையில் பொறிக்கப்பட்ட தாய்த் தெய்வம் ஒன்று கிடைத்தது. இங்கு 1935–37–ஆம் ஆண்டுகளில் மீண்டும் அகழாய்வுகள் மேற்கொள்ளப் பட்டன. இங்கு அரண்களால் சூழப்பட்ட நகரம் ஒன்று இருந்திருக்க வேண்டும். சு.இரா.

**உலூவார்** என்னும் ஊர்ப்பகுதி பிரான்சு நாட்டின் தலைநகரான பாரிசில் அமைந்துள்ளது. இங்குத்தான் உலகிலேயே மிகப் பெரிய அருங்காட்சி யகம் உள்ளது. இதனை மிகத் தொன்மையான அருங்காட்சியகமாகக் கருதுவர். இவ்வருங்காட்சி யகம் கி.பி. 1793–ஆம் ஆண்டிலிருந்து பொதுமக் களுக்குத் திறந்துவிடப்பட்டுள்ளது. உலூவார்க் (Louire) கட்டடங்கள் நீண்ட சதுர வடிவமானவை; அக்கட்டடங்களைச் சுற்றி அழகான தோட்டங்களும் முற்றங்களும் அமைக்கப்பெற்றுள்ளன.

உலூவார் அருங்காட்சியகத்தில் வைக்கப்பெற் றுள்ள கலைச்செல்வங்கள் உலக புகழ்ப் பெற்றவை. பிரெஞ்சு மன்னர்கள் அவற்றை விலை கொடுத்து வாங்கித் திரட்டி வைத்துள்ளார்கள். அரசர்கள் போட்டி போட்டுக்கொண்டு பற்பல கலைப்பொருள் களை அருங்காட்சியகத்தில் சேர்த்தார்கள். அவ்வப் போது இக்கலைப்பொருள்களுள் சிலவற்றைத் தாம் செய்த போர்ச்செலவுகளுக்காக விற்ற அரசர்களும் உண்டு. எனினும் அருங்காட்சியகத்தின் பெரும் பாலான பொருள்களை இன்றும் இங்குக் காணலாம். உலூவார் அருங்காட்சியகம் இப்போது தேசிய அருங் காட்சியகமாக இருப்பதால், நன்கொடைகள் மூல மாகவும் விலை கொடுத்து வாங்கியும் பல கலைப் பொருள்கள் இங்குச் சேர்க்கப்படுகின்றன.

இம்மாபெரும் அருங்காட்சியகத்தைக் கண்டு களிக்க உலகெங்கிலுமிருந்து பயணிகள் வந்தவண்ண முள்ளனர். ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ முப்பது இலட்சம் பயணிகள் பார்க்க வருவதாகக் கணக் கிடப்பட்டுள்ளது. உலூவார் அருங்காட்சியகத்தில் 2,50,000 கலைப்பொருள்கள் சேமிக்கப்பட்டு வைக்கப் பெற்றுள்ளன. அவற்றுள் 3,000 ஓவியங்களும் 1,00,000 படங்களும் இந்த அருங்காட்சியகத்தின் சொந்தத்தில் உள்ளன.

பண்டைக்கால உலகப்பண்பாடுகளைச் சார்ந்த அருங் கலைப்பொருள்கள் இவ்வருங்காட்சியகத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. எகிப்தியப் பண்பாட்டுப் பிரிவு கி.பி.1826–ஆம் ஆண்டு சீன் பிராங்காயிசு கம்பாலியன் என்பவரால் தொடங்கப்பட்டது. அவர்தாம் முதன் முதலாக எகிப்தியரின் ஈரோகிலிபிக்சு (Hierog-lyphics) என்னும் சித்திர எழுத்துகளைப் படிக்கும் முறையைக் கண்டறிந்தவர். அதேபோல் ஆமுராபி என்ற மன்னரின் சட்டத் தொகுப்பும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. அதுதான் உலகின் மிகத் தொன்மை யான சட்டத் தொகுப்பாகும். அச்சட்டத்தொகுப்பு கி.மு. பதினெட்டாம் நூற்றாண்டைச் சார்ந்த தாகும். அதனையும் இங்குக் காணலாம். அவற்றுடன் பண்டைய கிரீசு நாட்டைச் சார்ந்த பளிங்கு உருவச் சிலைகளான 'பறக்கும் வெற்றி' (Winged Victory), 'வீனசு டீ மிலோ' (Venus de Milo) ஆகிய இரண்டும் சிறப்பான சிற்பங்களாகும்.

உலகிலேயே தலைசிறந்த பிரெஞ்சு ஓவியங்களை யும் சிற்பங்களையும் பெருமளவில் கொண்டு திகழ் கிறது இவ்வருங்காட்சியகம். இடைக்காலம் முதல் இக்காலம் வரையிலான ஒவ்வொரு கால கட்டத்தை யும் சேர்ந்த கலைப் பொருள்கள் இங்குச் சேமித்து வைக்கப்பட்டுள்ளன. பிரெஞ்சு ஓவியங்களுக்கு அடுத்தபடியாக இத்தாலிய ஓவியங்கள் வருகின்றன. அவையும் பெருமளவில் உள்ளன. பிளமிய, தச்சிய, இசுபானிய ஓவியங்களும் சீரிய முறையில் சேமித்து வைக்கப்பட்டுள்ளன. கி.பி. 17–ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பிளமிய ஓவியரான பீட்டர் பால் உரூபன்சு (Peter Paul Rubens) என்பவரும் அவருடைய மாண வர்களும் தீட்டிய 23 ஓவியங்கள் ஒரு கூடத்தில் வைக்கப்பட்டுள்ளன. இவ்வோவியங்களனைத்தும் மேரி டி மெடிசி என்னும் பிரான்சு அரசியாரின் (கி.பி. 1573-1642) வாழ்க்கையைச் சித்திரித்துக் காட்டுகின்றன. பூச்சு வேலைப்பாடுகள் மிக்க மெரு கிட்ட ஓவியங்கள், கலையழகுமிக்க மரச்சாமான்கள், தந்தத்தினாலான ஓவியங்கள், அரசர்களின் மணிமுடி களை அழகுபடுத்தும் இரத்தினங்கள் போன்ற அணி செய்கலைப்பொருள்கள் ஆகியவற்றைக் கண்டுகளிக் கலாம்.

இக்கலைப்பொருள்களைக் கொண்டுள்ள கட்டடங்கள் பிரெஞ்சுக் கட்டடக்கலை மற்றும் பண்பாட்டு வரலாற்றில் சீரிய இடத்தைப் பெற்றுள்ளன. இக்கட்டடத்தை எழுப்பத் திறமைக்குப் பெயர்பெற்ற, புகழ்மிகுந்த பிரெஞ்சு ஓவியக் கலைஞர்களும், சிற்பிகளும், கட்டடக் கலை வல்லுநர்களும் உறுதுணையாய் நின்றார்கள். இக் கட்டடத் தொகுப்பில் முதன்முதலாக 1190-ஆம்ஆண்டில் கட்டப்பெற்ற கட்டடம் அரசருக்குச் சொந்தமான கோட்டையாகும். அதையே கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் அரசருடைய அரண்மனையாக மாற்றினார்கள். பிரெஞ்சுக் கலைகளைப் போற்றிக்காத்த புரவலராக முதலாம் பிரான்சிசு மன்னர் (கி.பி. 1494-1547) கருதப்படுகிறார். அவர் அரியணை ஏறியபோது இவ்வரண்மனை நலிந்து சரியத் தொடங்கியது. பிரான்சிசு மன்னர் கி.பி. 1546-ஆம் ஆண்டில் பியரீ இலெசுகாட்டு (Pierre Lescot) என்ற சிற்பியினைப் புதிய அரண்மனைக்கான முன்வரைவினை எழுதும்படி பணித்தார். முதலாம் பிரான்சிசு, இராபெல், இலியோனார்டோ தாவின்சி போன்ற புகழ்மிக்க கலைஞர்களின் சிறப்பான ஓவியங்களை விலைக்கு வாங்கினார். அவற்றுள் தாவின்சி எழுதிய ‘மோனா லிசா’ (Mona Lisa) என்ற ஓவியமும் அடங்கும். அதனை இன்றும் உலூவார் அருங்காட்சியகத்தில் காணலாம். பிரான்சிசு இறப்பதற்கு முன்னர்ப் பல அருங்கலைப் பொருள்களைச் சேமித்து வைத்தார்.

நான்காம் என்றி(கி.பி.1553-1610) என்னும் அரசரின் ஆட்சிக் காலத்தில் மேற்கூறிய அரண்மனையை ஒட்டினாற்போல் பெருங்கலைக் கூடம் (Grand Gallery) என்னும் கட்டட இணைப்பு உலூவார் அரண்மனையுடன் இணைக்கப்பட்டது. இப்பெருங்கலைக்கூடத்தின் கீழ்த் தளவரிசையில் நூற்றுக்கணக்கான கலைஞர்களையும் தொழிலாளர்களையும் தங்க அரசர் அனுமதித்தார். அங்கு மறுமலர்ச்சிக் காலச் சிறப்பினைச் சுட்டும் ஓவியங்கள் தொங்கிக் கொண்டிருப்பதை இன்றும் காணலாம்.

கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆண்ட பதின்மூன்றாம் உலூயி என்னும் அரசரும், சாக்குவிசு இலிமெர்சியர் (Jacques Lemercier) என்னும் அவருடைய சிற்பியும் இடைக்காலக் கோட்டையிலிருந்த பழங்கட்டடப் பகுதிகளை மாற்றிப் புதிய கட்டடங்களைக் கட்டினர். பதினான்காம் உலூயி (கி.பி. 1638-1715) என்ற பெருமன்னர் மேலும் பல புதிய கட்டடங்களை இணைத்தார். அவற்றுள் ஒன்று உலூவார் கட்டடத்தைச் சுமக்கச் சார்புத் தூண்களை இணைத்ததுதான். அதற்கு வரிவடிவம் கொடுத்தவர் கிளாடு பெரால்டு (Claude Perrault) என்பவர். அவர் இத்தூண்களை இணைக்கும் பணியை கி.பி. 1670-ஆம் ஆண்டில் செய்து முடித்தார். முதல் தரமான பிரெஞ்சுக் கட்டடக் கலைக்கு இத்தூண்களைத் தலையாய எடுத்துக்காட்டுகளாகக் கூறலாம்.

முதலாம் பிரான்சிசுக்குப் பின்னர் அருங்கலைப் பொருள்களை மிகுதியாகத் திரட்டியவர் பதினான்காம் உலூயியாவர். ஆனால், அவர் வெர்சேயில் தாம் கட்டிய பெரும் அரண்மனையில் மிகுந்த ஆர்வம் காட்டினார். உலூவாரிலிருந்து கவர்ந்த பொருள்களைக் கொண்டு அதனை அழகுபடுத்தினார். உலூவாரைக் கைவிட்டுவிட்டுப் பேரரசர் வெர்சேயில் வாழ்ந்தபோது, பாரிசு நகர மக்கள் உலூவார் அரண்மனையின் முற்றங்களில் வீடுகளையும் கடைகளையும் கட்டிக் கொண்டனர்.

ஏறத்தாழ 2400 ஓவியங்கள் கி.பி. 1710-ஆம் ஆண்டில் அரசரால் சேர்க்கப்பட்டிருந்தன. பெருங் கலைக்கூடப்பகுதி கி.பி. 1793-ஆம் ஆண்டில் அருங்காட்சியகமாக்கப்பட்டுப் பொது மக்களுக்குத் திறந்து விடப்பட்டது.

முதலாம் நெப்போலியன் (கி.பி. 1769-1821) பேரரசராக முடிசூட்டிக் கொண்டபின்னர், வீடுகளையும் கடைகளையும் முற்றங்களிலிருந்து அகற்றச் செய்தார். உலூவாரில் நிலையாக வாழ்ந்து வந்த கலைஞர்களையும் அவர் அங்கிருந்து வெளியேற்றினார். நெப்போலியனின் சிற்பிகளான சார்லசு பெர்சியரும் பியர்ரி பாண்டேயின் என்பாரும் உலூவார் முற்றத்தில் வெற்றி வளைவு என்னும் பெயர் கொண்ட பெரும் வளைவைக் கட்டினர். அதன் ஒரு மன்றத்தில் குதிரையேற்ற வளைவும் கட்டப்பட்டது.

மூன்றாம் நெப்போலியன் உலூவார் கட்டடங்களை கி.பி. 1852க்கும் 1857க்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் கட்டி முடித்தார். கி.பி. 1871-ஆம் ஆண்டில் மூண்ட பெருந்தீயினால் உலூவார் கட்டடத்துடன் இணைந்திருந்த தூலிரிசு (Tuileries) அரண்மனை அழிந்துபட்டது. எனினும், உலூவாரின் பெரும் பகுதிகள் இன்றும் நிலைத்துள்ளன.

கீழைநாட்டுத் தொல்பொருள்கள் துறை, மெசபொடேமியாவின் கலைப்பொருள்களைக் கொண்டுள்ளது. இது மிகச் சிறப்பானதெனக் கருதப்படுகிறது. கிறித்தவத் தொல்பொருள்கள் துறை 1954-ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. அதில் தொடக்ககாலக் கிறித்தவர், பைசாண்டியர், காப்டிக்குக் கிறித்தவர் போன்றவர்களின் கலைப்பொருள்கள் இணைக்கப் பெற்றுள்ளன.

இரா.அ.

**உலூனேவில்லி உடன்படிக்கை (கி.பி. 1801)** பிரான்சுக்கும் ஆசுத்திரியாவுக்கும் இடையே கி.பி. 1801-ஆம் ஆண்டு பிப்பிரவரித் திங்கள் 9-ஆம் நாள் ஏற்பட்டது. இவ்வுடன்படிக்கை கி.பி.1799-ஆம் ஆண்டில் மேற்கூறிய இரு நாடுகளுக்குமிடையே நிலவிய மோதலை முடிவுக்குக் கொணர்ந்தது. ஆசுத்திரியா இம்மோதலின்போது மரெங்கோ (Marengo), ஓகன்லிண்டன் (Hohenlinden) ஆகிய இடங்களில் படு தோல்வியுற்றது. உலூனேவில்லி உடன்படிக்கை யின்படி (Luneville Treaty) அதன் வட பகுதியில் பிரான்சு பெரும் பகுதிகளைப் பெற்றது. சுவிட்சர் லாந்திலிருந்து தச்சிய எல்லைவரை (இரைன் ஆறு வரை) இப்பகுதிகள் பரவியிருந்தன. பெல்சிய மாநிலங்களும் பிரான்சுக்குக் கொடுக்கப்பட்டன. இத்தாலியிலும் ஆசுத்திரிய ஆதிக்கம் மிலான், வெனீசு மாநிலங்களிலிருந்து விரட்டப்பட்டது. ஆசுத்திரியாவுக்குச் சொந்தமான தசுக்கனி (Tuscany) ஆசுத்திரியாத் தலைமைக் கோமகனிடமிருந்து கைப்பற்றப் பட்டுப் பார்மா மரபினருக்கு வழங்கப்பட்டது. இப்பகுதி எட்ருரியா (Etruria) எனப்பட்டது. இரண்டாம் கூட்டணியிலிருந்த (Second Coalition) நாடுகளான இங்கிலாந்து, ஆசுத்திரியா, உருசியா போன்ற நாடுகள் அக்கூட்டணியைக் கலைத்துவிட ஒப்புக்கொண்டன. ஆசுத்திரியாவுக்கு ஏற்பட்ட தோல்விகளினால் அந்நாடு நலியலாயிற்று. உலூனேவில்லி உடன்படிக்கையின்படி இத்தாலி முழுவதையும் ஆசுத்திரியா இழந்ததெனலாம். பட்டேவியா, சுவீட்சர்லாந்து, சிலால்பைன், இலைடுரியக் குடியரசு ஆகியவை ஏற்றுக் கொள்ளப்பட்டன. இவை பிரான்சுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்தன. இது கி.பி.1797-இல் ஏற்பட்ட காம்போ-போர்மியோ (Campo-Formio) உடன்படிக்கையின் விதிமுறைகளை உறுதி செய்தது.

இரா. அ.

**உலோகச் செலாவணி:** பணம் பொருள்களின் விலையை வரையறுப்பதால் அது மதிப்பு அளவிடும் கருவியாகப் பயன்படுகிறது. அவ்வாறு மதிப்பு அளவிடும் கருவி ஒரு சிறந்த உலோகத்தின் மூலம் இருக்க வேண்டும். பணமாகப் பயன்படும் உலோகம் சில சிறப்புத் தன்மைகளைக் கொண்டிருக்க வேண்டும். முதலில் அது விலையுயர்ந்த உலோகமாகவும், எளிதில் எடுத்துச் செல்லக் கூடியதாகவும், எல்லோரும் தெரிந்துகொள்ளக் கூடியதாகவும், வேண்டியவாறு உருவத்தை எளிதில் பெறக்கூடியதாகவும் இருக்க வேண்டும். இக் குணங்களைக் கொண்டதாக அனைத்துலக அளவில் ஏற்றுக்கொள்ளப்படுபவை தங்கமும் வெள்ளியுமாகும். இவை விலை மதிப்புள்ள உலோகமாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. பணத்திற்கு ஒரு நிலையான மதிப்பு ஏற்படுத்தும் பொருட்டு அது மிகுந்த விலைமதிப்புள்ள உலோகத்துடன் இணைக்கப்படுகிறது. அவ்வாறு உருவான முறைக்கு பணத்திட்டம் (Money Standard) என்று பெயர். இது பலவகைப்படும். உலோகச் செலாவணி முறை (Bullionism) நாட்டின் செலாவணிப் பணத்தை உலோகத்துடன் இணைத்தலாகும். ஓர் உலோகத்தை மட்டும் கொண்ட முறை 'ஒற்றை உலோகச் செலாவணி' (Monometalism) எனவும் இரு உலோகத்தைக் கொண்ட முறை 'இரட்டை உலோகச் செலாவணி' (Bimetalism) எனவும் கூறப்படுகின்றன.

வெள்ளி உலோக முறை: இம்முறையில் வரையறுக்கப்பட்ட நாணயச் செலாவணி (Standard Coin) என்ற முக்கிய நாணயத்தின் மதிப்பு குறிப்பிட்ட எடையுள்ள வெள்ளியுடன் இணைக்கப்படும். இம்முறையில் கட்டுப்பாடின்றி நாணயங்கள் (Free Coinage) வெளியிடப்படும். குறிப்பிட்ட எடையும் சுத்தமான உலோகத் தன்மையும் கொண்ட வெள்ளி நாணயங்களை அரசு நாணய அச்சுக்கூடம் (Mint) என்ற இடத்தில் பெற்றுக் கொள்ளலாம். மக்கள் தங்களிடம் உள்ள நாணயத்தை அல்லது காகிதப் பணத்தைக் கொடுத்து அரசு குறிப்பிட்ட அளவு வெள்ளியைப் பெற்றுக் கொள்ளலாம்.

பல ஐரோப்பிய நாடுகள் வெள்ளி உலோகச் செலாவணி (Silver Standard) முறையை கி.பி. 1873 வரை பின்பற்றி வந்தன. இந்தியா இம்முறையை கி.பி. 1893-இல் கைவிட்டது. இச் செலாவணி முறையில் நாணயத்தின் மதிப்பு வெள்ளியின் அளிப்பைப் பொறுத்தது.இந்திய வெள்ளி ரூபாய் 180 கிராம் எடையுள்ள வெள்ளியில் 11/12 அளவு உலோகச் சுத்தம் உடையதாய் இருந்தது.

தங்க உலோகச் செலாவணி முறை: இது ஒற்றை உலோகச் செலாவணி முறையிலும், இரட்டை உலோகச் செலாவணி முறையிலும் செயற்பட்டது. இம்முறையில் எல்லா நாணயங்களின் மதிப்பும் தங்கத்தின் மூலம் அளக்கப்பட்டன. ஆகவே நாணயங்கள் ஒரு குறிப்பிட்ட எடையுள்ளதாய் 11/12 அளவுள்ள சுத்தத் தங்கத்துடன் இணைக்கப்பட்டன. எடுத்துக்காட்டாக, உலகப் போருக்கு முன் இங்கிலாந்தின் நாணயமான இசுடர்லிங்கு 113.0016 நெல்மணி எடையுள்ள தங்கத்திற்குச் சமம் என்று அறிவிக்கப்பட்டது. தங்க உலோகத் திட்டம் நாணயத்தின் மதிப்பு குறிப்பிட்ட எடையுள்ள தங்கத்திற்குச் சமம் என்றும், அரசு சட்டப்படி நாணயங்களை மக்கள் விரும்பினால் தங்கமாக மாற்றிக் கொள்ள அனுமதிக்க வேண்டும் என்றும், தங்க ஏற்றுமதி, இறக்குமதியில் எந்தவிதக் கட்டுப்பாடும் இல்லை என்றும் அறிவித்தது.

உள்நாட்டில் இத்திட்டம் நாணயத்தின் அளிப்பைக் கட்டுப்படுத்தி மதிப்பை உயர்த்தியது. அரசு தன் விருப்பப்படி நாணயம் வெளியிடுதல் முடியாது. வெளிநாட்டில் நாணயத்தின் மதிப்பு ஒருநிலைப்படுத்தப்பட்டது. தங்க ஏற்றுமதி நாணயத்தின் மதிப்பில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளைத் தானே சரிசெய்து விடும். தங்கச் செலாவணி முறை (Gold Standard) மக்களுக்கு நாணயத்தில் நம்பிக்கை ஏற்படுத்தியதோடு, நாணயத்தில் அயல்நாட்டு நாணய மாற்று வீதத்தையும் நிலைநிறுத்தியது. இம்முறை தானே இயங்கும் நிலையையும் பெற்றிருந்தது.

தங்க உலோகத் திட்டம் தங்க நாணயத் திட்டம் (Gold Currency Standard), தங்கக் கட்டித் திட்டம் (Gold Bullion Standard), தங்க மாற்றுத் திட்டம் (Gold Exchange Standard) என மூன்று வகைப்படும். தங்க நாணயத் திட்டத்தில் (Standard) முக்கிய நாணயங்கள் தங்கத்தினால் செய்யப்பட்டவை. தங்கக் கட்டித்திட்டத்தில் அரசு தங்கக் கட்டிகளைத் (Gold Bars) தன்னிடம் வைத்துக்கொண்டு, அவற்றின் மதிப்புக்கு ஈடான அளவு அடையாள நாணயங்கள் அல்லது காகிதப் பணத்தை மக்களிடம் செலாவணிக்கு வெளியிடுகிறது. தங்க மாற்றுத் திட்டத்தில் வெளிநாட்டு வாணிகத்திற்கு மட்டும் மக்கள் நாணயத்தைத் தங்கமாக மாற்ற அனுமதிக்கப்படுவர்.

முதல் உலகப் போருக்குப் பின்னர்ப் பல நாடுகளில் தங்கக் கட்டித் திட்டம் செயற்பட்டது. முதல் உலகப் போரினால் மிகுதியான செலவுகள் ஏற்பட்டதால் நாடுகள் தங்கக் கட்டித் திட்டத்தின் கட்டுப்பாடுகளில் இருந்து விலகிக் கொண்டு, 'கட்டுப்பாடற்ற நாணயம்' (Free Coinage) என்ற முறையையும் நாணயங்களைத் தங்கமாக மாற்றும் முறையையும் நடைமுறைப்படுத்தின. அயல்நாடுகளுக்குத் தங்கம் ஏற்றுமதி செய்வதும் தடைசெய்யப்பட்டது. ஆகவே, உலகப் போருக்குப் பிறகு செயற்பட்ட தங்கக் கட்டித் திட்டம் முன்பிருந்த முறையிலிருந்து மாறுபட்டது. மதிப்பை அளவிடும் கருவியான நாணயம் குறிப்பிட்ட எடையுள்ள தங்கத்தோடு இணைத்துக் கூறப்பட்டாலும், தங்கம் மக்களின் கையில் நாணயமாகப் பயன்பட்டது முற்றிலும் நிறுத்தப்பட்டது. ஆகவே, தங்கம் உலோகக் 'காப்பு' (Reserve) என்ற அளவில் பயன்பட்டது. தங்கக் கட்டிகளை அரசு மைய வங்கிகளிடம் ஒப்படைத்தது. எடுத்துக்காட்டாக, இங்கிலாந்தின் மைய வங்கியிடம் ஒவ்வொரு தங்கக் கட்டியும் 400 அவுன்சு எடையுள்ளதாக வைக்கப்பட்டிருந்தது. ஒரு தங்கக் கட்டி 1700 பவுண்டு என்ற ஆங்கிலேய நாணயத்திற்குச் சமம் அல்லது 7585 தாலர் என்ற அமெரிக்க நாணயங்களுக்குச் சமம். இதனால், தங்கம் பதுக்கப்படுதல் தடை செய்யப்பட்டது.

இம்முறையில் உலோகச் செலாவணி ஓர் உலோக அளவீட்டுக் கருவியாக மட்டும் பயன்பட்டது. வெளிநாட்டு வாணிகத்திற்கும், நாட்டின் நாணய மதிப்பை நிலைப்படுத்தவும் இம்முறை பயன்பட்டது. இதனால், தங்கத்தின் மூலம் அரசு நாணயத்திற்கு வரையறுக்கும் விலை என்பது ஓர் அவுன்சு 35 என்ற அளவில் வைக்கப்பட்டது. பிற நாணயமல்லாத பயன்களுக்கு வேறு விலை வரையறுக்கப்பட்டது. உலோகச் செலாவணியில் மைய வங்கியில் 'காப்பு' உலோகமாகத் தங்கம் வைக்கப்பட்ட நிலையைக் கீன்சு என்ற பொருளாதார வல்லுநர் கீழ்க்காணுமாறு விவரிக்கிறார். 'சிறிய வீட்டுத் தெய்வமாக மக்கள் பணப்பையிலும் (Purses) இரும்புப்பெட்டிகளிலும் வசித்து வந்த கடவுளை, ஒவ்வொரு நாட்டிலும் ஒரு தங்கச்சிலை (Golden Image) விழுங்கிவிட்டது. ஆயினும், அச்சிலை மக்கள் பார்வையில் இருந்து மறைந்திருக்கிறது. தங்கம் மறுபடியும் மண்ணுக்குள் சென்றுவிட்டது. ஆயினும் மஞ்சள் நிறக் கடவுள் இந்நிலையில் சிக்கனமாகப் பயன்பட்டு வருகிறது.' இந்தக் குறிப்பு உலோகச் செலாவணி முறையைச் சிறந்த வகையில் விளக்குகிறது. நாணயச் செலாவணியின் சிறப்புக் கூறுகள்: (1) குறிப்பிட்ட அளவு தங்க நாணயத்தின் மதிப்பை அளவிடப் பயன்படுகிறது. (2) நாணயங்கள் தங்க உலோகத்தினால் செய்யப்படவில்லையாயினும் தங்கக் கட்டிகளாக மாற்றப்பட முடியும். (3) தங்க ஏற்றுமதி, இறக்குமதிக் கட்டுப்பாடுகள் விலக்கப்பட்டன. (4) தங்கத்தைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் முறை செயற்படுகிறது.

தங்கமாற்றுத் திட்டம் அயல்நாட்டு வாணிகத்திற்கு மட்டும் நாணயத்தைத் தங்கமாக மாற்ற அனுமதித்தது. இம்முறையில் தங்கத்திற்கும் உள்நாட்டு நாணயங்களுக்கும் நேரடியான தொடர்பு இல்லை. வெளிநாட்டுச் செலாவணி மூலம் மறைமுகத் தொடர்பு ஏற்படுகிறது.

உலோகச் செலாவணி மக்களுக்கு நாணயத்தில் மதிப்பையும் நம்பிக்கையையும் உண்டாக்கி, பணவீக்கம் (Inflation), மந்தம் போன்ற சீர்கேடுகளைத் தவிர்க்கிறது. இது அரசு நாணய வெளியீட்டுக் கட்டுப்பாடுகளைச் செயற்படுத்த உதவுகிறது. உலோகச் செலாவணி முறையின் தோற்றம் மிகப் பழைமையானது. உலோகச் செலாவணி முறை செயற்பட்ட காலமாகிய 1900க்கு முன்பு தங்க வெள்ளி நாணயங்கள் புழக்கத்திலிருந்தன. அம்முறை முழுமையான

தங்கச் செலாவணித்திட்டம் எனப்படும். இந்யாவில் 1907 முதல் 1917 வரை முழுத் தங்க நாணயச் செலாவணித் திட்டம் செயற்பட்டது. அத்திட்டத்தில் 1 உருபாய்என்ற இந்திய நாணயம்1 சில்லிங்கு(Shilling) 4 பென்சு என்ற ஆங்கில நாணயத்திற்குச் சமமாக இருந்தது.

முதல் உலகப் போருக்குப் பின்னர் இந்தியா காகிதப் பணத்தை வெளியிடத் தொடங்கியது. தங்க நாணயங்கள் காப்பு உலோகமாக்கப்பட்டன. இம்முறையில் நாணயச் செலாவணி அடையாள நாணயங்களாகவும் காகிதப் பணங்களாகவும் பயன்படுத்தப்பட்டது. ஆயினும், மொத்த நாணயங்களின் அளவும் அரசாங்கத்திடம் இருந்த தங்கக் கட்டிகளின் மதிப்பும் சமமான விகிதத்தில் பயன்படுத்தப்பட்டன.

பல நாடுகள் 1931–ஆம் ஆண்டிற்குப் பின்னர் உலோகச் செலாவணியை மேலும் சிக்கனப்படுத்தின. வெளிநாட்டு வாணிகத்திற்கு மட்டும் தங்கம் பயன்படுத்தப்பட்டது. மக்களுக்குத் தங்க உலோகத்திலிருந்த நம்பிக்கை நீடித்தது. அதன் மாற்று வீத விலை உயர்ந்தது. ஆகவே அயல்நாட்டுச் செலாவணி அங்காடியில் தங்கத்தின் தேவை மிகுந்தது. நாடுகள் அயல்நாட்டுச் செலாவணி நாணயங்களை இருப்பாக வைத்து, வெளிநாட்டு வாணிகத்திற்குத் தங்கத்தை அதிகமாகப் பெற விரும்பின. இதனால், தங்கம் உலோகச் செலாவணி முறையில் இருந்து விலக்கப்பட்டது.

ஜி.வி.

துணை நூல்:

Growther Geoffrey, An Outline of Money, Thomas Nelson and Sons Limited, London, 1958.

**உலோக சாரங்க முனிவர்** திருவரங்கச் செல்வனுக்குத் திருமஞ்சன நீர் கொண்டு வந்து தரும் திருப்பணியில் இருந்தவர்; அந்தணர் இனத்தைச் சார்ந்தவர்; திருப்பாணாழ்வார் காலத்தவர்.

உறையூரைச் சேர்ந்த திருப்பாணர் பொன்னித் துறையில் அமர்ந்து திருவரங்கச் செல்வனைப் பாடிப் பரவினார். தாம் தாழ்ந்த குலத்தவராதலின் கோயிலின் உட்செல்லாமல் புறம்பே இருந்தார். உலோக சாரங்க முனிவர் நீர் கொண்டுவரப் பொற்குடத்தை எடுத்துக் கொண்டு திருக்காவிரியை அடைந்தார். அங்கே படித்துறையில் உறையூரைச் சேர்ந்த பாணர் அமர்ந்திருத்தலைக் கண்டார். அவரை அங்கிருந்து அகலுமாறு வேண்டினார். பாணரோ தம்மை மறந்து இறைவனைப் பற்றிய சிந்தனையில் ஆழ்ந்திருந்தமையால் உலோகசாரங்கர் சொற்களைக் கேளாதவராக இருந்தார். அதனால், சீற்றங் கொண்ட உலோக சாரங்க முனிவர் ஒரு கல்லைப் பாணர்மீது வீசினார். அது பாணர் நெற்றியில் படக் குருதி வழிந்தது. பாணர் தம்மை உணர்ந்து எழுந்து விலகி நின்றார். உலோகசாரங்க முனிவர் நீர் எடுத்துச் சென்று திருவரங்கப் பெருமானுக்குச் செய்ய வேண்டிய திருப்பணிகளைச் செய்து இல்லம் திரும்பினார். இரவு அவரது கனவில் பெருமான் காட்சிதந்தார். அவர் நெற்றியிலிருந்து குருதி வழிந்தது கண்ட உலோகசாரங்க முனிவர் பதறினார். அதன் காரணம் வினவினார். பெருமான், முனிவர் பாணர்மீது எறிந்த கல் அவர் உள்ளே உறையும் தன் நெற்றியின்மீதும் பட்டது என்றும், அதனால்தான் குருதி வழிகிறது என்றும் தெரிவித்தார். முனிவர் துடிதுடித்துத் தம் பிழைக்குக் கழுவாய் வேண்டினார். பெருமான் பொழுது புலர்ந்ததும் காவிரிக்கரைக்குச் சென்று திருப்பாணரைக் கோயிலுக்கு அழைத்துவரப் பணித்தார். பொழுது புலர்ந்ததும் முனிவர் காவிரிநோக்கி ஓடினார். அங்குப் பாணரைக் கண்டார். இறைவன் கருத்தைத் தெரிவித்து அவரைக் கோயிலுக்கு வருமாறு வேண்டினார். திருப்பாணர் தாம் தாழ்ந்த குலத்தவர் என்பதனைத் தெரிவித்துக் கோயிலுக்குள் நுழைதல் தகாது என்று பின்வாங்கினார். முனிவர் அவரை மீண்டும் மீண்டும் வற்புறுத்தப் பாணர் மேலும் மேலும் மறுத்துக் கூறினார். முனிவர் அவரைத் தம் தோளில் தூக்கிக் கொண்டு வந்து கோயில் திருமுற்றத்தில் சேர்த்தார். பெருமானது அலையெறியும் அழகைக் கண்ட திருப்பாணர் அவர் திருமேனியழகை ‘அமலனாதி பிரான்’ என்று தொடங்கிப் பாடி மகிழ்ந்தார். உலோகசாரங்க முனிவர் தோளில் அமர்ந்து சென்றதால் திருப்பாணர் ‘முனிவாகனர்’ என்னும் பெயரைப் பெற்றார். இதனாலேயே அமலனாதி பிரானுக்கு வேதாந்த தேசிகர் எழுதிய விளக்கவுரை ‘முனிவாகன யோகம்’ என்னும் பெயர் பெற்றது.

தெ.ஞா.

**உலோக பாலர்**: இப்பெயர் ‘உலகிற்குத் துன்பம் நேராமல் காக்கின்ற தேவர்கள்’ எனப் பொருள்படும். அங்ஙனம் காப்பவர் நால்வர் என்றும், அவர்கள் இரணிய ரோமன், கேதுமந்தன், சுதன்வா, சங்கபாலன் ஆகியோராவர் என்றும் கூறப்பட்டுள்ளனர். உலகின் கிழக்கு முதலிய பெருந்திசை நான்கும் வடகிழக்கு முதலிய கோணத்திசை நான்கும் ஆகிய எட்டுத் திசைகளையும் எட்டுத்தேவர்கள் காக்கின்றனர் என்பதனையும், அவர்கள் திக்குப் பாலகர் என்றும் அட்டதிக்குப் பாலகர் என்றும் அழைக்கப்படுவர் என்பதனையும், அவ்வெண்மராவார் இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் எனப்படுவர் என்பதனையும் புராணங்கள்கூறுகின்றன.

மன்னராட்சியில் அரசன் உலக பாலர் (உலோக பாலர்) நிலையிலிருந்து நாட்டினைக் காத்து வருத லால், அரசனை இறைவனோடொத்துக் கூறும் மரபும் இறைவனாகவே கருதும் மரபும் உண்டு. இறை மாட்சி என்பதனை விளக்குமிடத்துப் பரிமேலழகர் இக்கருத் தினை, 'உலகபாலர் உருவாய் நின்று உலகங் காத் தலின் இறை என்றார்' என்று(குறள். அதி.39, பரிமே. முன்னுரை) கூறியுள்ளார். அக்கருத்தினைத் தெளிவு படுத்தும் வகையில் அவர், 'திருவுடை மன்னரைக் காணின் திருமாலைக் கண்டேனே' என்னும் (திரு வாய்.4.4.8) நம்மாழ்வார் திருவாக்கினை மேற்கோள் காட்டியுள்ளார். அ.மா.ப.

**உலோகாச்சாரியார்** வைணவ சமய நுண் பொருள்களைத் (இரகசியங்களை) தெரிவிக்கும் நூல் களை முதன்முதலில் எழுதி, அச்சமயத்திற்கு அருந் தொண்டு புரிந்து பெரும்புகழ் ஈட்டியவர். இயற் பெயர் உலகாரியர்.

இவர் திருவரங்கத்தில் கி. பி. 1311-இல் தோன்றி னார். இவர் நம்பிள்ளை ஈட்டுரையினை ஓலைச்சுவடி யில் எழுதிவைத்த வடக்குத் திருவீதிப்பிள்ளைக்கும், சீரங்கநாச்சியாருக்கும் ஓர் ஐப்பசித் திருவோணத் தன்று மைந்தராய்ப் பிறந்தார். இவர் கச்சிப் பேரரு ளாளன் வரதனின் கூறாகத் தோன்றியவர் என்பர். தம் ஆசிரியர் நம்பிள்ளையின் சிறப்புப் பெயரான 'உலகாரியர்' என்பதனையே வடக்குத் திருவீதிப் பிள்ளை தம் மகனுக்கு இயற்பெயராக இட்டார். இவர் தம் தம்பியாரே ஆசாரிய இருதயம் என்னும் பெரு நூலை இயற்றிய அழகியமணவாளப் பெருமாள் நாய னார். இவ்விருவரும் தம் வாழ்நாள் இறுதிவரை திரு மணம் செய்து கொள்ளாமலேயே இருந்தனர். இவர் திருவரங்கத்தையே நிலைத்த இருப்பாகக் கொண்டு, அங்கேயே உறைந்தார்.

இவருக்கு ஆசிரியர் நம்பிள்ளை. இவர் தம் தந்தையாரிடமே திருவாய்மொழி முதலான அருள் நூல்களையும், ஈடு முதலான உரைநூல்களையும், சீபாடியம் முதலான வடமொழி நூல்களையும் கற்று ணர்ந்தார். இவர் செய்தருளிய சமய நுண்பொருள் நூல்களே வைணவ சமயத்தின் தத்துவங்களை அறிய விழுத்துணையாக உள்ளன. இவற்றை 'அட்டாதச இரகசியம்'(சமய நுண்பொருள் நூல்கள் பதினெட்டு) என வழங்குவர். தனிப்பிரணவம், தனித் துவயம், தனிச் சரமம், யாத்ருச்சிகப் படி, பரந்த படி, சிரீயஃ பதி படி, முமுட்சுப் படி, தத்துவத் திரயம், அர்த்த பஞ்சகம், தத்துவ சேகரம், பிரபந்த பரித்ராணம், நவவித சம்பந்தம், நவரத்தின மாலை, சார சங்கிர கம், பிரமேய சாரம், சம்சார சாம்ராச்யம், அர்ச்சி ராதி கதி, சீவசனபூசணம் ஆகியவை அப்பதினெட்டு நூல்களாகும். மணவாள மாமுனிகள் விளக்கவுரையி லிருந்து (வியாக்கியானம்) தனிச்சுலோகம் முதலான சில நூல்களை இவர் எழுதியதாகத் தெரியவந்தா லும், அவை இப்போது கிடைக்கவில்லை. இவர்தம் நூல்கள் சிலேடை, சுவைக்கூற்று (ரசோக்தி) அணி நலம் முதலானவற்றுள் ஏதுமின்றி, ஒவ்வொரு சொல் லும் சமய நுண்பொருள்களை அறுதியிடும் வகையில் அமைந்துள்ளது. இந்நூல்களுள் சீவசனபூசணம் பெருமை வாய்ந்தது. இதனை மணவாள மாமுனிகள் தம் உபதேச ரத்தின மாலையில் ஏழு பாசுரங்களில் மிகவும் பாராட்டியுள்ளார். மணவாள மாமுனிகள் ஆழ்வார் திருநகரியிலிருந்து திருவரங்கம் பெரிய கோயிலுக்கு வந்தபோது, அங்கே பிள்ளையுலகாரியர் உறைந்த இடத்துக்கு அன்றாடம் சென்று, 'இரகசியம் விளைந்த மண்' என்று அவ்விடத்தை நினைந்து உகந்திருந்தார் என்பதே அதன் பெருமையை விளக்கும்.

திருவரங்கம் இசுலாமியர்களால் கைப்பற்றப் பட்டபோது, பெரிய பெருமாள் திருமுன்பே கல் வைத்து அடைத்து, நம்பெருமாளை எடுத்துச் சென்று காத்த பெருமை இவர் சிறப்புகளுள் தலை மையானது. அப்பணியில் ஈடுபட்டு 'சியோதிச (ஜ்யோதிஷ்) குடி' என்னும் சிற்றூரில் தங்கியிருந்த போது, உலகவாழ்வை நீத்துத் தம் உடைமைகள் அனைத்தையும் பெருமாளுக்குத் தந்து தனிப் பெருமையைப் பெற்றார்.

அழகிய மணவாளப் பெருமாள் நாயனார், கூர குலோத்தம தாசர், திருவாய்மொழிப் பிள்ளை, விளாஞ்சோலைப் பிள்ளை, மணற்பாக்கத்து நம்பி யார், திகழக் கிடந்தார் அண்ணன் முதலான பெரு மக்கள் பலரை மாணாக்கராய்ப் பெற்றிருந்த பெரு மையும் இவருக்கு உண்டு. தெ.ஞா.

**உலோகார்னோ** ஐரோப்பாவில் சுவிட்சர் லாந்து நாட்டிலுள்ள ஒரு நகரம். இந்நகரம் நல் வாழ்வு வாழ்வதற்கு ஏற்றதாக அமைந்துள்ள சுற் றுலா மையம். திசினோ என்னும் (காண்டன்) மாவட் டத்தில் மாக்கியார் ஏரியின் வடகோடியில் உள்ளது இந்நகரம். இந்நகரில் 1925-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 16-ஆம் நாள் செருமனி, பிரிட்டன், பிரான்சு, இத்தாலி, பெல்சியம் ஆகிய நாடுகள் 'பாதுகாப்பு ஒப்பந்த' உடன்படிக்கையொன்றினைச் செய்து கொண்டன. இவ்வுடன்படிக்கை ஐரோப்பிய அமை தியை நோக்கமாகக் கொண்டது. செருமனி, பிரான்சு, பெல்சியம் ஆகிய நாடுகளுக்கிடையே உள்ள எல்லைகளை உடன்படிக்கை நாடுகள் மீறக் கூடாதென்றும், ஏதாவது சிக்கல் எழுந்தால் அதனை

இருதரப்பினரும்பேசித்தீர்த்துக்கொள்ள வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது. இத்துடன் கூடப் பெல்சியம், பிரான்சு, போலந்து, செக்கோசுலோவாகியா ஆகிய நாடுகளுடன் செருமனி உடன்படிக்கைகளைச் செய்துகொண்டது. போலந்தும் செக்கோசுலோவாகியாவும் பிரான்சுடன் உடன்படிக்கைகளைச் செய்து கொண்டன. இவ்வுடன்படிக்கைகள் 1925-ஆம் ஆண்டு திசம்பர் மாதம் முதல் நாள் கையெழுத்திடப் பெற்றன.

உலோகார்னோ (Locarno) பாதுகாப்பான இடத்தினையும் குளிர்காலத் தட்பவெப்பநிலையையும் கொண்டது. எனவே, இங்குப் பயிர் பச்சைகள் செழிப்பானவை. இது மத்தியதரைக்கடலின் தட்பவெப்ப நிலையைப் போன்றுள்ளது. இந்நகரத்தின் உயரமான இடத்தில் கி.பி. 1480- ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட மொடானோ தெல் சாசோ (Modanna Del Sasso) என்னும் திருச்சபை உள்ளது. இது ஒரு சுற்றுலா மையம். மாக்கியார் ஏரியின் அருகிலுள்ள ஆர்சிலினாக் குன்று 449 மீட்டர் உயரம் உள்ளது. இதன் மக்கள் தொகை 1980-ஆம் ஆண்டுக் கணக்குப்படி ஏறத்தாழ 12,000 ஆகும். இரா.அ.

**உலோகியா, இராம் மனோகர் (1910-1967)** இந்திய விடுதலைக்குப் பாடுபட்ட தேசபக்தருள் ஒருவர். இராம் மனோகர் உலோகியா (Ram Manohar Lohia) 1910-ஆம் ஆண்டில் பிறந்தார். இவர் இந்தியாவிலும்செருமனியிலும்கல்விகற்றார். இளைஞராக இருந்தபோது இவர் இந்திய தேசிய காங்கிரசுக் கட்சியின் உறுப்பினராக அதன் பல்வேறு போராட்ட இயக்கங்களில் பங்குகொண்டார். ‘வெள்ளையனே வெளியேறு’ (Quit India Movement) என்ற இயக்கத்தில் இவர் தீவிரமாகப் பாடுபட்டார். நாடு விடுதலை பெற்ற பின்னர் மக்கள் சமதருமக் கட்சியில் (Praja Socialist Party) 1953-இல் சேர்ந்தார். ஆனால் அக்கட்சிக் கோட்பாடுகளில் இவருக்கு ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளினால் அக்கட்சியை விட்டு வெளியேறிச் சமதருமக் கட்சியை (Socialist Party) 1956-இல் தொடங்கினார். இவர் இந்திய நாடாளுமன்றத்தின் உறுப்பினராகத் (1963 முதல் 1967 வரை) தேர்ந்தெடுக்கப்பட்டார். இவருக்குச் செய்யப்பட்ட அறுவைச்சிகிச்சையொன்று வெற்றி பெறாமையால், இவர் 1967-ஆம் ஆண்டு அக்டோபர் 12-ஆம் நாள் காலமானார். இரா.அ.

**உலோகும்-சோ-தாரோ** சிந்துவெளி நாகரிக அழிவுச் சின்னங்களைத் தன்னகத்தே கொண்ட தொன்மையான இடம். இதனை 1925-ஆம் ஆண்டு கே.என். தீட்சித்து (K.N.Dikshit) கண்டுபிடித்தார். மொகஞ்-சோ-தாரோவிற்குத் தெற்கே 96 கி.மீ. தொலைவில் பாகிசுத்தானிலுள்ள இலார்க்கானா மாவட்டத்தில் அமைந்துள்ள உலோகும்-சோ-தாரோவில் (Lohum-jo-daro) செங்கற்களால் கட்டப்பட்ட வீடுகளின் அழிவுச் சின்னங்களும் மட்பாண்டங்களும் கிடைத்தன. மட்பாண்டங்கள் சிவப்பு வண்ணம் பூசப்பட்டு, அதன்மீது கறுப்பு வண்ணத்தால் ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. களிமண்ணால் செய்யப்பட்ட எருது, பொம்மைகள், மணிகள், வளையல்கள், முத்திரைகள் போன்ற பொருள்களும் இங்குக் கிடைத்துள்ளன. முத்திரைகளில் உள்ள குறிகள்- மொகஞ்-சோ-தாரோவில் கண்டுபிடிக்கப்பட்ட முத்திரைகளில் உள்ள குறிகளைப் போன்றுள்ளன. மசும்தார் (Majumdar) என்னும் அறிஞர் இங்கு இரண்டு வேறுபட்ட நாகரிகங்கள் இருந்திருக்கக் கூடும் எனக் கருதுகிறார். சு.இரா,

**உலோங்கோவால், அர்சந்து (1932-1985):** இவர் சீக்கியர்களின் தலைவர்களுள் ஒருவர். இவர் 1932-இல் பஞ்சாபு மாநிலத்திலுள்ள உலோங்கோவால் என்னும்சிற்றூரில் பிறந்தார். இவர் பெற்றோர்கள் சீக்கியச் சமயத்தில் ஆழ்ந்த பற்றுக் கொண்டவர்கள். அவர்கள் அர்சந்து உலோங்கோவாலை உலோங்கோவாலிலுள்ள குருத்துவாரத்தின் சமயத் தலைவரான பகவன் சிங்கு (Bhagwan Singh) என்பாரிடம் ஒப்படைத்தனர். இவரைச் சமய போதகராக ஆக்க வேண்டுமென்பது அவர்களின் விருப்பமாகும். இவருக்கு நான்கு தமையன்மார்களும் நான்கு சகோதரிகளும் இருந்தனர்.

அர்சந்து உலோங்கோவால் தம் 16-ஆம் வயதில் அகாலிக் கட்சியில் சேர்ந்தார். கட்சிக்குத் தேவைப்படும்போதெல்லாம் இவர் உதவ முன்வந்தார். தம் 32-ஆம் வயதில் இவர் அகாலிக் கட்சியின் சிறந்த ஊழியராக மதிக்கப்பெற்றார். இவர் 1964-ஆம் ஆண்டில் சாங்குரூர் (Sangrur) அகாலிக் சாதாவின் (Akali Jatha) தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இப்பதவியை இவர் ஒன்பதாண்டுகள் வகித்தார். இந்து-சீக்கிய ஒற்றுமையில் ஆழ்ந்த பற்றும் நம்பிக்கையும் கொண்டவர் இவர்.

இவர் 1950-ஆம் ஆண்டில் அரசியலில் நுழைந்து 1960-ஆம் ஆண்டில் சாங்குரூர் மாவட்ட அகாலிதளக் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் சமய போதகராகப் பயிற்சி பெற்றமையால் இவரைச் சந்து (Sant) என்று அழைத்தனர். சந்து என்றால் புனிதமானவர் என்பது பொருள். இவர் 1962-ஆம் ஆண்டுத் தேர்தலில் இலெகராகாகா (Lehragaga) என்னும் தொகுதியிலிருந்து சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.



உலோங்கோவால், அர்சந்து

அர்சந்து உலோங்கோவால் 1963-இல் தம்தமா சாகேபின் (Damdama Saheb) தலைமைக் குருவாக நியமிக்கப்பட்டார். இவர் 1969-ஆம் ஆண்டிலும் சட்டமன்றத்திற்கு அதே தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் இவர் தேர்தலில் போட்டியிடவில்லை.

நெருக்கடிக்காலத்தில் அணியொன்றிற்குத் தலைமை தாங்கி, 1975-ஆம் ஆண்டில் அகாலிதளத்தில் சிறப்பான முன்னணித் தலைவரானார். நெருக்கடிக் காலத்தில் அகாலித்தளத் தலைவர்கள் சிறைப்படுத்தப்பட்டிருந்த காலத்தில், உலோங்கோவால் முன்னணித் தலைவராக மதிக்கப்பட்டார். நெருக்கடி நிலைக்குப் பின்னர் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட மறுத்துவிட்டார்.

சந்து அர்சந்து உலோங்கோவால் 1980-ஆம் ஆண்டு ஆகசுட்டு 19-ஆம் நாள் அகாலி தளத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். செகதேவ்சிங் தால்வண்டி (Jagdev Singh Talwandi) பதவியிலிருந்து விலக்கப்பட்டபோது இவர் தலைவரானார்.

இவர் அமைதியானவர்; மிதவாதக் கொள்கையைக் கடைப்பிடித்தவர். காட்சிக்கெளியவர்; கடுஞ்சொற்களைப் பேசாதவர்.

அமிர்தசரசு பொற்கோயில் நடவடிக்கை எடுக்கப்பெற்று இராணுவம் கோயிலில் நுழைந்து பயங்கரவாதிகளை அகற்றியபோது, சந்து அர்சந்து உலோங்கோவாலும் சிறையில் அடைக்கப்பட்டார்.

சந்து அர்சந்து உலோங்கோவாலுக்கும் இந்தியாவின் தலைமை அமைச்சரான இராசீவு காந்திக்கும் இடையே முடிவான பஞ்சாபு ஒப்பந்தம் (Punjab Accord) பஞ்சாபுச் சிக்கலுக்குத் தீர்வு காண எடுக்கப்பட்ட நன்முயற்சியாகும். இவ்வொப்பந்தம் 1985-ஆம் ஆண்டு சூலை மாதம் 24-ஆம் நாள் கையெழுத்தாயிற்று. அதன்படி சண்டிகர் (Chandigarh) பஞ்சாபிற்குச் சேரவேண்டுமென்றும், இந்தி பேசும் சிற்றூர்கள் அரியானாவுக்குக் கொடுக்கப்படவேண்டும் என்றும் முடிவாயிற்று.

சந்து அர்சந்து உலோங்கோவால் 1985-ஆகசுட்டு மாதம் 19-ஆம் நாள் சாங்குரூர் மாவட்டத்தைச் சார்ந்த செர்பூர் (Sherpur) என்னும் சிற்றூரிலுள்ள குருத்துவாரத்தில் உரையாடிக் கொண்டிருந்தபோது பயங்கரவாதிகளால் சுடப்பட்டார். அடுத்த நாள் அவர் மருத்துவமனையில் காலமானார். இரா.அ.

**உலோச்சனார்** சங்க காலப் புலவர்களுள் ஒருவர். சில சங்க நூற் பதிப்புகளில் காணப்படும் உலோச்சன் என்னும் பெயரும் இப்புலவரையே குறிப்பதாகக் கருதப்படுகிறது. இவர் அகம், புறம் ஆகிய இரு திணைகளையும் பாடிய புலவர்களுள் ஒருவராக விளங்குகிறார்.

உலோச்சு என்பது சமண சமயச் சடங்குகளுள் ஒன்றினைக் குறிக்கும் பெயராகும். சமண சமயத்தார் துறவு பூணுமுன், தம் தலைமயிரினைத் தாமே பிடுங்கி அகற்றுதல் வேண்டும். கடுமை மிக்க இச்செயல் அச்சமயத் துறவியர் துறவுநிலை அடையு முன்னர் மேற்கொள்ள வேண்டியதொன்றாதலால், அது அச் சமயத்தவர்களிடையே புனிதச் சடங்காகக் கருதப்படுகிறது. உலோச்சு என்பதன் அடிப்படையில் பெயர் அமைந்துள்ளதால், இப்புலவர் சமண சமயத்தை மேற்கொண்டவராதல் வேண்டும் என்பது கருதப்படுகிறது.

நற்றிணையில் 20 பாடல்களும் (11,38,63,64,74, 131,149,191,203,223,249,254,278,287,311,331,354,363 372,378), அகநானூற்றில் 8 பாடல்களும் (20,100, 190,200,210,300,330,400), குறுந்தொகையில் 4 பாடல்களும் (175,177,205,248), புறநானூற்றில் 3 பாடல்களும் (258,274,377) ஆக 35 பாடல்கள் இவருடையனவாகச் சங்க இலக்கியத்தில் அமைந்துள்ளன என்று பின்னத்தூர் நாராயணசாமி அய்யரின் நற்றிணைப் பதிப்பும், பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையின் சங்க

இலக்கியப் பதிப்பும், பாட்டும் தொகையும் என்னும் நூலும் குறிப்பிடுகின்றன. மர்ரே இராசம் வெளியிட்ட குறுந்தொகைப் பதிப்பில் இவர் பாடல்களுட் சில (குறுந். 175,177,205, 248) உலோச்சன் என்னும் பெயரில் இடம்பெற்றுள்ளன. அகநானூற்று இரு நூறாம் பாடலாசிரியர் பெயருக்கு நக்கீரர் என்று பாடபேதம் இருப்பதாகப் பெருமழைப் புலவரின் அகநானூற்று உரைப்பதிப்புக் குறிப்பிடுகிறது.

இவர் பாடிய அகப்பாடல்களுள் ஒன்று தவிர எஞ்சியன வெல்லாம் நெய்தல் திணையில் அமைந்துள்ளன. இதனால் இப்புலவர் நெய்தல் திணையைப் பாடுவதில் சிறப்பு மிக்கவர் என்பது புலனாகிறது. இவர் பெயரில் அமைந்துள்ள நற்றிணை 64-ஆம் பாடல் மட்டும் குறிஞ்சித் திணையில் உள்ளது. பெரும்பாலும் தோழி கூற்றாக அமையும் 'இவர் பாடல்களுக்கு மாறாக, இப்பாடல் தலைவி கூற்றாக அமைந்துள்ளது. இதனால், இப்பாடல் இவர் பாடியதாக எழுதியிருப்பது ஒருகால் ஏடெழுதினோர் தவறாயிருக்கலாம்; அது இவர் பாடியது அன்று' என்று கூறிய பின்னத்தூர் நாராயணசாமி அய்யர் (நற். பாடினோர் வரலாறு), தம் நற்றிணைப் பதிப்பில் இப்பாடலின் ஆசிரியர் உலோச்சனார் என்றே குறிப்பிட்டுள்ளார்.

இப்புலவர் பெயர் சமணச் சார்புடையதாக உள்ளமையாலும், இவர் இரங்கல் என்னும் உரிப்பொருள் கொண்ட நெய்தல் திணையினை மிகுதியாகப் பாடியிருத்தலாலும், இவரைப் பற்றிக் குறிப்பிடும்போது டாக்டர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், 'இவர் பாடல்கள் சமணர்கள் உலகத் துன்பத்தினை வற்புறுத்துவதுபோல, அகவொழுக்கத்தின் துன்ப நிலையாம் நெய்தலையே பாடுவனவாக அமைந்துள்ளன' என்று கூறியுள்ளார் (சமணத் தமிழ் இலக்கிய வரலாறு பக். 30). பெயரால் இவர் சமணராகலாம் என்று கருதப்பட்டாலும், காதல் நலம் போற்றும் அகப்பாடல் மரபு சிறிதும் மாறாது பாடிய சிறப்பு இவருக்குண்டு.

இவர்தம் அகப்பாடல்கள் நெய்தல் திணையில் அமைந்திருந்தாலும், அவற்றுள் களவுப் பொருளே மிகுதியாக இடம்பெற்றுள்ளது. இவர் நெய்தல் திணையில் குறிஞ்சிப் பொருள் பாடியவராவார். நற்றிணை 74-ஆம் பாடலில் பரத்தையர் தொடர்பு பற்றி வாயில் மறுக்கும் மருதப் பொருளும், 149-ஆம் பாடலில் உடன்போக்குப் பற்றிய பாலைப் பொருளும் பாடப்பட்டுள்ளன. புன்னைக் காயில் நெய் எடுத்தல் (நற். 278); மகளிர் உப்புக்குவட்டின்மேல் ஏறி நின்று, கடலில் சென்று திரும்பி வரும் தம் தந்தையரின் மீன் பிடி படகுகளை எண்ணுதல் (நற். 331, அகம். 190); பெண்டிர் தம் மனையிலிருந்து, இரவில் கடலில் வரும் படகின் விளக்குகளை எண்ணுதல் (நற். 372) போன்ற நெய்தல் நிலச் செய்திகள் பலவற்றை இவர் சிறப்புறக் குறிப்பிட்டுள்ளார். மழை நன்கு பெய்யுமாயின் நெல் மிகுதியாக விளைந்தும், அது பெய்யாது வறக்குமாயின் வெள்ளை உப்பு மிகுதியாக விளைந்தும் நெய்தல் நிலம் எக்காலத்தும் வளமிக்குத் திகழும் சிறப்பினை இவர் அழகுறப் பாடியுள்ளார் (நற். 311).

குதிரை பூட்டிய தேரினையுடைய சிறந்த பெரியன் என்னும் வள்ளலை 'நற்றேர்ப் பெரியன்' (நற். 131, அகம். 100) என்றும், அவன் ஊரினைக் 'கட்கமழ் பொறையாறு' (நற். 131), 'புன்னையங்கானற் புறந்தை' (அகம். 100) என்றும் சிறப்பித்துள்ளார். மேலும், காண்டவாயில் என்னும் கடற்கரை ஊரினையும் இவர் சுட்டியுள்ளார் (நற். 38).

இவரது புறநானூற்றுப் பாடல்களுள் ஒன்று வெட்சித்திணை உண்டாட்டுத் துறையிலும் (258), மற்றொன்று தும்பைத்திணை எருமை மறம் என்னும் துறையிலும் (274), பிறிதொன்று பாடாண்திணை வாழ்த்தியலிலும் (377) அமைந்துள்ளன. பாடாண் திணையில் இவர் சோழன் இராச சூயம் வேட்ட பெருநற் கிள்ளியைப் பாடியுள்ளார்; அவன் 'பிறர்க்கு உவமம் தானல்லது, தனக்கு உவமம் பிறர்இல்' எனக் கூறுமாறு சிறப்புடையவன் என்பதனை நயம்பட விளக்கியுள்ளார். இப்புலவர் சோழன் இராசசூயம் வேட்டபெருநற் கிள்ளியைப் பாடியிருப்பதனால், இவர் அம்மன்னனைப் பாடிய பாண்டரங்கண்ணனார், வடமவண்ணக்கன் பெருஞ்சாத்தனார், ஔவையார் ஆகிய புலவர்கள் வாழ்ந்த காலத்தைச் சேர்ந்தவராவார்.

அ.மா.ப.

**உலோச்சு** சமண சமயத்தில் துறவறம் மேற்கொள்ளுவோர் இன்றியமையாது மேற்கொள்ள வேண்டியதொரு சமயக் கடமையாகும். சமண சமயத் தீக்கை பெற்றுத் துறவு மேற்கொள்ளுவோர், தங்கள் தலைமயிரினைத் தாங்களே பறித்து அகற்றிக் கொள்ளும் சமயச் செயல் 'லோச்சை', 'லோச்சு', 'கேசலோச்சி' என்று வழங்கப்படுகிறது. இது தமிழில் 'உலோச்சு' என்று கூறப்படும்.

இது சமண சமயத் துறவு பூணும் ஆண், பெண் இரு பாலாருக்கும் உரியது. இந் நிகழ்ச்சி அச்சமய இல்லறத்தாரும் துறவிகளும் போற்றும் விழாவாக நடைபெறும். மகளிர் இச்செயலை மேற்கொள்ளுங்கால் ஒற்றை வெள்ளுடையினை உடலிற் போர்த்தி

அணிந்திருப்பர். ஆடவரோ பெண்டிரோ முதன்முதலாக உலோச்சினைக் கொண்டபின்னர், இரண்டு திங்கள் முடிந்த ஒவ்வொரு முறையிலும் இம்மயிர் நீக்கும் செயலினைச் செய்து கொள்வர். அவ்வாறு செய்வது தலையாயது என்றும், மூன்று திங்களுக்கு ஒரு முறை செய்வது இடையாயது என்றும், நான்கு திங்களில் அல்லது அதற்குப் பின்னர்ச் செய்து கொள்வது கடையாயது என்றும் கருதப்படும். உலோச்சினை மேற்கொள்வோர் பள்ளி, சோலை போன்ற தூய இடத்தில் கிழக்கு நோக்கி இருந்து, பஞ்ச மந்திரம் முதலிய சமய மந்திரத்தைச் சிந்தித்துத் தங்கள் தலைமயிரைத் தாங்களே பறித்து நீக்கி, அவற்றைத் தரையிற் படாது தட்டில் சேகரிப்பர். தலைமயிரை ஐந்து பகுதிகளாகப் பகுத்து அவற்றைப் பறித்து நீக்குவது மரபாகும். பின்னர், அம்மயிர்த் தொகுதியினை நீர்நிலை முதலியவற்றில் இட்டுவிடுவர்.

சீவக சிந்தாமணியின் ஈற்றிலுள்ள முத்திபிலம் பகத்தில் விசயை, சீவகன் ஆகியோர் பூண்ட துறவினைச் சுட்டும்போது, அவர்கள் மேற்கொண்ட உலோச்சினைத் திருத்தக்க தேவர் குறிப்பிட்டுள்ளார். ‘உற்ற நோய் நோன்றல் உயிர்க்கு உறுகண் செய்யாமை’ என்னும் அடிப்படையில், சமண சமயம் உலோச்சினைத் துறவியர் கடமையாக வலியுறுத்தியுள்ளது. சீவகன் இச்செயலினைச் செய்யுங்கால், ‘திருந்திய கீழ்த்திசை நோக்கி’ இருந்தான் என்றும் (சீவக.3039), அவன் தொகுத்த குஞ்சியைப் பொன்னாலான படலிகையில் எடுத்துக் கொண்டுபோய், ‘நாற்கடல் கடந்தவன் நமோவென்று’ இட்டான் என்றும் (சீவக.3044) திருத்தக்க தேவர் குறிப்பிட்டுள்ளார். இந்நிகழ்ச்சி காண்போரை இரக்கம் கொள்ளச் செய்து, அவர்கொண்ட பற்றிலா மனப்பான்மையினை விளக்குவதாயிருக்கும். அது பேரின்பம் நோக்கியதாகலின் அதனை இன்பமிக்க காட்சியாகக் கண்டு போற்றுவர். சீவகனின் மயிரிலும் மாலையிலும் தேனுண்ட வண்டினங்கள் இப்போது அவை நீக்கப்பட்டமையால், ‘நாங்கள் எங்குச் செல்வோம்’ என்று வருந்தி, ‘நும் கடை நோக்கி வாழும் வாழ்க்கையம் எங்கிடையவர் இனி எங்குச் செல்பவே’ என்று கூறின (சீவக.3042) எனத் திருத்தக்க தேவர் குறிப்பிட்டுள்ளார். இச்செயல் கண்டு அஃறிணையான வண்டினங்களே வருந்த, உயர்திணைமக்கள் இன்புற்றனர் என்பதனைத் திருத்தக்க தேவர் நயம்பட உணர்த்தியுள்ளார். அ.மா.ப.

**உலோடி மரபினர்** வட இந்தியாவை கி.பி. 1451 முதல் 1526 வரை அரசாண்ட முசுலிம்களாவர். வடஇந்தியாவை கி.பி. 1206 முதல் 1526-வரை ஆண்ட ஐந்து மரபினருள் இறுதியில் வந்தவர்கள் உலோடி மரபினரேயாவர். இவர்கள் ஆப்கானிய வழி வந்தவர்கள். இம்மரபின் முதல் அரசர் பலூல்கான் உலோடி (Bahlul Khan Lodi) என்பவர். இவர் கி.பி. 1489 வரை ஆட்சி செய்தார். இவர் காலமானதும் இவர் தம் இரண்டாம் மகன் நிசாம் கான் (Nizam Khan) சுல்தான் சிக்கந்தர் சா (Sultan Sikhandar Shah) என்னும் பட்டப் பெயருடன் முடிசூட்டிக் கொண்டார். இவர் கி.பி. 1517 வரை ஆட்சி செய்தார். ஆக்ரா நகரை அமைத்தவர் இவரேயாவர். இவரையடுத்து அரசுக்கட்டில் ஏறியவர் இவருடைய மூத்த மகன் இப்ராகிம் உலோடியாவார்.

உலோடி மரபினரின் ஆட்சிக் காலத்தில் மூவர் ஆட்சி செய்தனர். அவர்களுள் சிக்கந்தர் சாவே புகழ் மிக்கவர். இந்தியாவின்மீது படையெடுத்த மொகலாய மன்னர் பாபர் கி.பி. 1526-இல் இப்ராகீம் உலோடியை எதிர்த்துப் போரிட்டு வென்றார். இப்போரை இந்திய வரலாற்றில் முதல் பானிப்பட்டுப் போர் என்பர்.

சிக்கந்தர் ஆட்சிக்காலத்தில் பாரசீக மொழி வல்லுநர்கள் அரசவையில் போற்றப்பட்டனர்; அரசு நிருவாகமும் சிறப்பாக நடைபெற்றது. ஆனால், இப்ராகிமின் ஆட்சிக்காலம் நிருவாகச் சீர்கேடுகளுக்குப் பெயர் பெற்றது. தெ.பா.

**உலோத்தால்** சிந்து வெளி நாகரிகத்தைக் கொண்ட தொன்மையான நத்தமேடு. உலோத்தால் (Lothal) குசராத்து மாநிலத்தில் அகமதாபாதிலிருந்து தெற்காக 83 கி.மீ. தொலைவில் சரக்வால் என்னும் சிற்றூரின் பகுதியாக அமைந்துள்ளது. இதன் தொன்மைச் சிறப்பினை உலகிற்கு உணர்த்தியவர் எசு.ஆர். இராவு என்னும் தொல்லியல் அறிஞர் ஆவர். சிந்துவெளி நாகரிகத்தின் கூறுகள் இங்குக் கண்டுபிடிக்கப்பட்டதன் விளைவாக, இந்நாகரிகம் இந்தியாவில் குசராத்து வரை பரவியிருந்தமை வெளிப்பட்டது. உலோத்தால் என்பதற்கு இறந்தவர் மேடு என்பது பொருள். உலோத்தால் அரபிக் கடல் அருகில் சபர்மதி ஆற்றின் துணை ஆறான போகாவோவின் (Bhogavo) கரையிலிருந்து 3.கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இந்நகரம் வாணிக நகரமாக விளங்கியிருத்தல் வேண்டும். இங்கு அகழாய்வுகள் 1955 56 ஆம் ஆண்டுகளில் எசு. ஆர்.இராவு (S.R.Rao) தலைமையில் மேற்கொள்ளப்பட்டன. அவருக்குத் துணையாக முனைவர் சூரசுபான் (Suraj Bhan) என்பவரும் கே.எம்.சிரீவசுத்தவா (K.M. Srivastava) என்பவரும் இருந்தனர். உலோத்தாலில் நடைபெற்ற அகழாய்வின் மூலம் இங்கு மூன்று பண்பாட்டுக் கால மக்கள் வாழ்ந்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.




அகழாய்வில் கண்டுபிடிக்கப்பட்ட கழிவு நீர்ச் சாக்கடையும் கிணறும்

உலோத்தால் நகரத்தை வெள்ளப்பெருக்கு அழித்துள்ளமை அகழாய்வில் கண்டுபிடிக்கப்பட்டது. அரப்பாப்பண்பாட்டுக் கூறுகள் அகழாய்வுக் குழிகளின் கீழ்மட்ட அளவில் கிடைத்தன. அரப்பாவில் கிடைத்தது போன்ற எழுத்துப் பொறிப்புகள் கொண்ட முத்திரைகள் இங்கும் கிடைத்தன. இவை மாக்கல்லால் செய்யப்பட்டவை. சுடுமண் பொம்மைகளும் விலங்கின உருவப் பொம்மைகளும் மணிகளும் கிடைத்தன். வீடுகள் சுட்ட செங்கற்களைக் கொண்டும் களிமண்ணைக் கொண்டும் கட்டடப்பட்டிருந்தன. ஒவ்வொரு வீடும் குளியலறைகளையும் கழிவுநீர்க் குழாய்களையும் கொண்டு விளங்கின. பல வீடுகளில் வட்ட வடிவமும் செவ்வக வடிவமும் கொண்ட வேள்விக் குண்டங்கள் போன்ற அமைப்புகள் காணப்பட்டன. இவை இங்கு வழிபாட்டுப் பகுதிகளைக் கொண்ட வீடுகள் இருந்ததற்கான தடயங்களாகக் கருதப்படுகின்றன. வீடுகள் ஒரே அமைப்பில் கட்டப்பட்டன. பல பொதுச் சாக்கடைகளும் காணப்பட்டன. இவை கழிவு நீரினைத் தேக்கும் இடமாக விளங்கின. அரப்பாவில் கிடைத்த பொருள்களைப் போன்றே உலோத்தாலிலும் பல ஒற்றுமை மிக்க பொருள்கள் கிடைத்தன. முதற் பண்பாட்டுக் கால மக்கள் வேளாண்மை செய்யும் தொழிலில் ஈடுபட்டதாகத் தெரிகிறது. மீன்பிடித்தலும் வாணிகம் செய்தலும் இங்கு நடைபெற்றன. செம்பால் செய்யப்பட்ட தூண்டிலும் பல எடைக்கற்களும் இங்குக் கிடைத்துள்ளன. மட்கலன்கள் வண்ணம் பூசப்பட்டுக் காணப்பட்டன. கிண்ணங்கள்,குவளைகள், சாடிகள், தொட்டிகள் இங்குக் கிடைத்த மட்கலன்களுள் குறிப்பிடத்தக்கவையாகும். கறுப்பு, சிவப்பு மட்கலன்கள் இங்குக் கிடைத்த மட்கலன்களுள் சிறப்பானவை. மாக்கல்லினால் செய்யப்பட்ட மணிகளும், சங்கினாலும் தந்தத்தாலும் செய்யப்பட்ட விளையாட்டுப் பொருள்களும்,செம்புப் பாத்திரங்களும் இங்குப் பெருமளவில் கிடைத்தன.

உலோத்தாலில் கிடைத்த தொன்மைச் சின்னங்களுள் குறிப்பிடத்தக்கது கப்பல் துறையாகும். இத்துறை சுட்ட செங்கற்களால் கட்டப்பட்டது. சரக்குகளை ஏற்றவும் இறக்கவும், கப்பல்கள் தங்கவும் ஏற்ற செயற்கையான துறையாக இத்துறை கட்டப்பட்டது. செங்கற்களை அடைத்து, துறை நீரெழுச்சியிலிருந்து அழிவுறா வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது. இக்கப்பல் துறை 219 மீ. நீளமும் 37 மீ. அகலமும் கொண்ட செவ்வக அமைப்பு உடையது. இத்துறையைச் சுற்றிச் சுவர் ஒன்றும் எழுப்பப்பட்டது. இதன் உயரம் 4.5மீ. காம்பே வளைகுடா வழியாக வரும் கப்பல்கள் பொகாவோ ஆற்றினுள் நுழைந்து, அங்கிருந்து ஒரு கால்வாய் வழியாக இத்துறையை வந்தடைந்தன. உலோத்தால் மிகப் பழங்காலத்திலேயே

வெளிநாடுகளுடன் தொடர்பு கொண்ட நகரமாக விளங்கியிருந்தமையை இக்கப்பல் துறை வெளிப் படுத்துகிறது. இங்குப் பாரசீக வளைகுடா முத்திரை ஒன்று கிடைத்துள்ளமை இதனை மேலும் உறுதி செய்கிறது. ஊர், சூசா ஆகிய தொன்மை நகரங்களு டன் உலோத்தால் வாணிகத் தொடர்பு கொண்டு விளங்கியிருத்தல் வேண்டும். ஊர் நகரத்திலும் உலோத்தாலிலும் கிடைத்த பல பொருள்கள் ஒரே அமைப்பை உடையவை. குறிப்பாக, பொன்னால் செய்யப்பட்ட மணிகளும் வழவழப்பு மிக்க மட்கலன் களும் இவ்விரு இடங்களிலும் கிடைத்துள்ளன.



உலோத்தால் படகுத்துறை

உலோத்தால் நகரத்திற்கு வடமேற்கில் இறந்த வர்களைப் புதைக்கும் இடுகாடுகள் காணப்படுகின் றன. இங்கு வாழ்ந்த மக்கள் இறந்தவர்களைக் குழி களில் இட்டுப் புதைத்து அவர்களைச் சுற்றி ஈமப் பொருள்களை வைத்தனர். இறந்தவரின் தலைப் பகுதி வடக்கில் இருக்கும்படி அவர்கள் புதைத்தனர். ஒரு குழியில் இரண்டு பேர் (ஆண்,பெண்) ஒருவரை யொருவர் நோக்கிய வண்ணம் புதைக்கப்பட்டுள்ள னர். கரிமம் 14 (Carbon 14) முறைப்படி உலோத்தால் கி.மு.2200க்கும் கி.மு. 1700க்கும் இடைப்பட்ட காலத்தில் செழிப்பாகஇருந்தமை கண்டறியப்பட்டது.

கே.இரா.

**உலோதாப் பழங்குடி**: இவர்கள் மேற்கு வங்கப் பழங்குடியினருள் முதன்மையானவர்கள். இவர் கள் மித்நாப்பூர் (Midnapur) மாவட்டத்தின் மேற்குப் பகுதியிலுள்ள காடு சார்ந்த பகுதிகளில் மிகுதியாக வும் இம்மாவட்டத்தைச் சுற்றிய பகுதிகளில் குறை வாகவும் வாழ்கின்றனர். உலோதாப் (Lodha) பழங் குடியினர் ஆந்திரா, ஒரிசா மாநிலங்களில் வாழும் சவராப் (Savara) பழங்குடியினரின் வழிவந்தவர்கள் எனக் கூறப்படுகின்றனர்.

பூரியிலுள்ள சகநாதர் (Jaganath) பற்றிய கதை களில் உலோதாவினரின் வரலாறும் காணப்படுகிறது. விசுவவசு (Vishvavasu) என்னும் சவராப் பழங்குடித் தலைவன் பூரி சகநாதரை நீல மாதவன் (Neela Madhavan) என்ற பெயரில் மகாநதிக் கரையின் நீல கிரிக் (Nilgiri) காட்டுப் பகுதியில் வணங்கி வந்தான். இக்கடவுள் இப்பகுதிப் பழங்குடியினரால் மட்டுமே வணங்கப்பட்டார். பவிசுய புராணத்தில் (Bhavishya Purana) வரும் இக்கதையின்படி, பூரியை ஆண்ட அரசன் இவர்கள் வணங்கிய கடவுளுக்குக் கோயில் கட்ட ஏற்பாடு செய்ய முயன்றபோது சவராத் தலை வனான விசுவவசு அதைத் தடுக்க முனைந்தான். அப்பொழுது அரசன் விசுவவசுவின் மகளை மணப்ப தாகக் கூறி, அவர்களுடைய கடவுளைப் பூரிக்குக் கொண்டு சென்றான். இந்தக் கதை உலோதாவின ரின் மரபுப் பாடல்களிலும் காணப்படுகிறது.

சில மானிடவியலார் ‘உலோதா’ என்பது கள் இறக்குவோர் என்னும் பொருளுடைய ‘உலுப்தாக்கா’

(Lubdhaka) என்னும் சொல்லின் வேறு வடிவமாக இருக்குமெனக்கருதுகின்றனர். இவர்கள் குலவழி(Clan) அமைப்பினைக் கொண்டவர்கள். இவர்கள் கொடி வள்ளி (Wild yam), புலி, மீன், நிலா முதலியவற்றைத் தம் குலமரபுச் சின்னங்களாகக் (Totems) கொண்டுள் ளனர். நிலவைக் குல மரபுச்சின்னமாகக் கொண்டுள்ள வர்கள் ஒவ்வொரு பௌர்ணமியன்றும் வீட்டைச் சுத்தப்படுத்தித் தீட்டுக் கழிப்பர். புலியைக் குலமரபுச் சின்னமாகக் கொண்டவர்கள் தாங்கள் வாழும் பகுதி யில் புலி கத்தும் சத்தம் கேட்கும்போது கையைக் கட்டி வணங்குவர். மீனைக் குலமரபுச் சின்னமாகக் கொண்டவர்கள் மீன் உண்ணுதல் இலர். இவர்கள் அணிகலன்களின் மீன் செதில் உருவமுடைய எந்தப் பொருளையும் காணமுடியாது.

இவர்களின் திருமண முறை ஏனைய இந்தியப் பழங்குடிகளைப் போன்றே தொடர்ச்சியான பல நிகழ்ச்சிகளைக் கொண்டது. திருமணத்திற்கு முன் ஊர்த்தகவலாளி மணமகனது வீட்டிலிருந்து புது மண் குடம், ஐந்து மஞ்சள் கிழங்குகள், சர்க்கரை, மரத் துண்டுகளால் செய்யப்பட்ட சங்கிலி, சிவப்புக் கயிறு, காசுகள் முதலியவற்றை மணமகள் வீட்டிற்கு எடுத்துச் செல்வான். அதனை மணமகளின் தாய் புது முறத்தில் பெற்றுக் கொள்வாள். அந்நாளை மங்களம் பெருகிய நாளென்று கருதுவர். திருமண நாளன்று அறத்தேவதையை வணங்கி ஆற்றில் மணமக்கள்மூழ்கி, மஞ்சள் ஆடை அணிந்து மணமுடிப்பர். மணமுடிந்த சில நாட்களுக்கு மணமகள் தனிக் குடிசையில் அமர்த் தப்படுவாள். கன்னியர் மணமகளுக்கு நாள்தோறும் ஒருமுறை மஞ்சள் சாந்தைத் தடவுவர். மணமகள் முதன்முதலில் மணமகன் வீட்டிற்கு வரும் நாளன்று, 'தான் சாரனா' (Dhan Sarana) என்னும் சிறப்பான விழா நடத்தி வரவேற்பர்.

உலோதாப் பழங்குடியினர் பல வகையான சமய நம்பிக்கைகளைக் கொண்டுள்ளனர். இவர்களின் தெய்வங்களுள் 'பசுமாதா' (Basumatha) என்னும் தெய்வம் முதன்மையானதாகக் கருதப்படுகிறது. சண்டி (Chandi) என்னும் தெய்வத்தையும் வழிபடு கின்றனர். இவர்கள் ஆவி நம்பிக்கை உடையவர்கள்.

வணங்கும் ஆவிகள் பல்வேறு தன்மைஉடையவை எனக்கருதி இவர்கள் அவற்றை வரிசைப்படுத்திக் கூறு வர். 'அகார் வீர்' (Ahar Veer – உணவு வேட்டை யாளன்), 'வார வீர்' (Vara Veer – முதன்மைத் தலை வன்), 'சோட்டா வீர்' (Chotta Veer – கீழ்த் தலை வன்), 'சலொத்தா வீர்' (Chalauta Veer – திரியும் தலைவன்), 'அனசா வீர்' (Hanasa Veer – பாம்புத் தலைவி) ஆகிய ஆவிகள் தம் ஒவ்வொரு செயலை யும் கட்டுப்படுத்துகின்றன அல்லது வளம் பெறச் செய்கின்றன என இவர்கள் நம்புகின்றனர். இவர் கள் மலை ஆவிகள், நீர் ஆவிகள், மரம், மரக்கிளை கள் முதலானவற்றையும் வழிபடுகின்றனர்.

இவர்களது வழிபாடுகளுள் கால்நடை வழிபாடும் சிறப்பிடம் பெறுகிறது. இந்த வழிபாடு கார்த்திகை மாதப்பௌர்ணமியன்று தொடங்கி மூன்று நாட் களுக்கு ஆடல், பாடல், விருந்துகளுடன் நிகழ்கிறது. இவர்கள் செல்வத்தின் தலைவியாகக் கருதிப் பகவதி அம்மனின் உருவத்தை வைத்துப் பல்வேறு வழி பாடுகளை மேற்கொள்வர். மூன்றாம் நாளன்று நட னங்களும் விளையாட்டுகளும் மிக உற்சாகத்துடன் நடத்தப்படும். இவர்களது விளையாட்டுகளுள் காளைச் சண்டை சிறப்பானது சீ.ப.

**உலோதிப் போர் (கி.பி. 1796)** முதலாம் நெப்போலியன் இத்தாலியில் வாகை சூடிய போர் களுள் ஒன்று. அட்டா (Adda) என்னும் ஆற்றின் மேல் கட்டப்பட்டிருந்த உலோதிப் பாலத்தில் நடைபெற்ற போரை உலோதிப்போர் (Lodi war) என்று கூறுவர். நெப்போலியனின் இத்தாலியப் படையெடுப்புகள் கி.பி. 1796 ஏப்பிரல் முதல் 1797 ஏப்பிரல் முடிய நிகழ்ந்தன. முதன்முதலில் நெப்போலியன் சார்டீனி யாவைத் (Sardinia) தோற்கடித்தார். பின்னர், அவர் ஆசுத்திரியர்களை இத்தாலியிலிருந்து விரட்டும் பணி யில் கருத்தைச் செலுத்தினார். இத்தாலியின் பெரும் பகுதிகள் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் ஆசுத்திரியர் களின் கைவசம் இருந்தது. நெப்போலியன் போ (Po) ஆற்றைக் கடந்தபோது ஆசுத்திரியாவின் படைத் தலைவரான போலியூ (Beaulieu), அட்டா ஆற்றிற் கப்பால் தம் படைகளுடன் பின்வாங்கினார். ஆசுத்திரி யப்படைத்தலைவரைத் தோற்கடிக்க வேண்டுமாயின் நெப்போலியன் உலோதிப் பாலத்தைக் கடந்தேயாக வேண்டுமென்னும் நிலையில் இருந்தார்.

இந்தப் பாலம் 120 மீ. நீளமுடையது. பாலத் தைக் கடப்பதும் அவ்வளவு எளிதாகத் தோன்ற வில்லை. ஏனெனில் ஆசுத்திரியர்கள் பீரங்கிப் படை யைக் கொண்டு பாலத்தைக் கடக்க முயன்றவர்களைச் சுட்டு வீழ்த்தும் அச்சம் நிலவியது. நெப்போலியன் தம் துப்பாக்கிப் படை வீரர்களை ஏவி உலோதிப் பாலத்தின் வழியாக முன்னேறும்படி ஆணையிட்டார். துப்பாக்கிப் படையினர் பாதி தொலைவு வரும் முன் னரே ஆசுத்திரியப் பீரங்கிப் படையினர் அவர்களைச் சுடத் தொடங்கினர். நெப்போலியனின் படைவீரர் கள் திருப்பித் தாக்கினர். நெப்போலியனும் ஏனைய படைத்தலைவர்களும் தம் படை அணிகளுக்கு முன் னர் விரைந்து முன்னேறினர். தம் உயிரைப் பொருட்

படுத்தாது அவர் முன்னேறி வந்ததைக் கண்ணுற்ற துப்பாக்கிப் படையினர், தீவிரமாக முன்னேறி ஆசுத்திரியப் பீரங்கிப் படைகளைப் பிடித்தனர். உலோதிப் போர் நெப்போலியனுக்குப் பெரும் புகழைக் கொடுத்தது. இப்போரின் சிறப்பைப் பாராட்டி நெப்போலியனே தம் நாட்டை ஆண்ட இயக்குநர் குழுவுக்குக் (Directory) கடிதம் எழுதினார். இவ் வெற்றிக்குப் பின்னரே நெப்போலியனை அவர்தம் படைவீரர்கள் குள்ளப்படைத் தலைவர் (Little Corporal) என்னும் செல்லப் பெயரால் அழைத்தனர்.
இரா.அ.


**உலோபசு டி கொமரா** (கி.பி. 1510-1560) என்பார் இசுபானிய வரலாற்றாசிரியர். இவர் கி.பி. 1510-இல் பிறந்தார்; பாதிரியார்க்குரிய பயிற்சி பெற்றார். உலோபசு (Lopez de Gomara) இத்தாலியில் கி.பி. 1531-இல் பயணம் செய்தபோது அங்கு மறுமலர்ச்சி இயக்கப் பேரறிஞர் பலரைச் சந்தித்தார். இவர் கி.பி. 1540 வரை இசுபெயின் நாட்டிற்குத் திரும்பிச் செல்லவில்லை.

அல்சியர்சு (Algiers) இசுபெயினால் முற்றுகையிடப்பட்டபோது, கொமரா (Gomara) எர்னன் கார்டசு (Hernan Cortes) என்பாரைச் சந்தித்தார். இதன் பயனாக உலோபசு கார்டசின் குடும்பக் குருவாக அமர்த்தப்பட்டார். இந்தச் சூழலில்தான் இவர் மேற்கு இந்தியத் தீவுக்ளைக் கைப்பற்றிய இசுபெயினின் வெற்றிகள் பற்றிய வரலாற்றை எழுதினார். இந்நூல் கி.பி. 1552-இல் சரகோசா (Zaragoza) என்னுமிடத்தில் முதன்முதலாக வெளியிடப்பட்டது.

இந்நூலைப் படிக்கும்போது இதன் ஆசிரியர் பெற்ற சிறந்த பயிற்சியையும், மறுமலர்ச்சியாளர்களுடன் இவருக்கிருந்த தொடர்பையும் அறியலாம். இந்நூலின் முதற்பகுதி கி.பி. 1552 வரை ஏற்பட்ட நிகழ்ச்சிகளின் பொதுவிவரங்களைத் தெளிவாகவும் உள்ளது உள்ளபடியேயும் கூறுகிறது. இதில் கூறப்பட்டுள்ள விளக்கங்கள் முதல் தரமானவை. இரண்டாம் பகுதி மெக்சிகோவை வென்ற வரலாற்றை விளக்கமாக உரைக்கிறது. இதன் நடை நயமாக உள்ளது. ஆனால், இதில் உள்ள கார்டசு பற்றிய விளக்கங்கள் கற்பனையானவை. இந்நூல் பொது மக்களால் வெகுவாக விரும்பப்பட்டது. இதில் இரண்டாம் பிலிப்பு மன்னர் தரக்குறைவாகச் சித்திரிக்கப்பட்டுள்ளார். இதனால், பிலிப்பு மன்னர் கி.பி. 1553-இல் எல்லாப் பதிப்புகளும் வெளிவர முடியாதபடி தடுத்துவிட்டார். இதன் படிகள் அனைத்தையும் பறிமுதல் செய்யப் பெருமுயற்சி எடுக்கப்பட்டது. இந்த வரலாற்று நூலின்மீது போடப்பட்டிருந்த தடையுத்தரவு கி.பி. 1727 வரை நீக்கப்படவில்லை. கொமரா மேலும் சில வரலாற்று நூல்களை எழுதியுள்ளார். இவர் கி.பி. 1560-இல் காலமானார்.
இரா. அ.

**உலோபாமுத்திரை** அகத்தியரின் மனைவி; விதர்ப்ப தேசத்தரசனின் மகள். அகத்தியரை மணந்து, ஓர் ஆண் குழந்தையினை ஈன்றெடுத்தாள். அக்குழந்தைக்குச் சித்தன் என்பது பெயர். இச்செய்திகள் கந்தபுராணத்தில் கூறப்பட்டுள்ளன. இவள் பெயர் வடமொழியில் அமைந்து இருப்பது கொண்டு, இவளை வடநாட்டுப் பெண்ணாகக் கருதுவாருமுளர். தன்கணவனிடம் இவ்வுலகத்தில் வாழ்வதற்கு இடம், பொருள் முதலியன வேண்டுமென்று கேட்க, அவளுக்காக அகத்தியர் வில்வலன் என்பவனிடம் சென்று பொன் முதலியனவற்றைப் பெற்று வந்து கொடுத்தார். அவற்றைப் பெற்று இவள் தன் கணவனோடு பல காலம் வாழ்ந்தாள்.
வீ.சே.

**உலோமாசு ரிசி** பீகார் மாநிலத்தில் கயாவிலிருந்து 34 கி.மீ. தொலைவில் பராபர் குன்றுகளில் அமைந்துள்ள மிகப்பழமையான குடைவரை. இது மௌரியப் பேரரசர் காலத்தைச் சார்ந்தது. இக்காலத்தைச் சார்ந்த குடைவரை ஏழு பராபர் குன்றுகளில் உள்ளன. இவை ஆசீவகர் என்னும் சமணத் துறவிகள் தங்குவதற்காகக் குடையப்பட்டவை. இக்குகைகளுள் உலோமாசு ரிசிக் குடைவரையும் சுதாமக் குடைவரையும் அருகருகே உள்ளன. இரு குடைவரைகளும் ஒரே அமைப்பை உடையவை.



உலோமாசு ரிசிக் குடைவரை

உலோமாசு ரிசிக் குடைவரை கலையழகும் தோற்றப் பொலிவும் மிக்கதாகும். இதன் வாயில் முன்பக்கம் சரிந்து காணப்படுகிறது. இக்குடைவரையின் உள் அறைகள் வழவழப்பு மிக்கதாகக் கண்ணாடி போன்று மெருகூட்டப்பட்டுள்ளன. குகையின் உள் மண்டபம் 11 மீ. நீளமும் 6.5. மீ. அகலமும் $4\frac{1}{2}$ மீ. உயரமும் கொண்டது. இதனையடுத்து வட்ட வடிவ அறை ஒன்று உள்ளது. இதன் குறுக்களவு 6 மீ. ஆகும். இதன் மேற்கூரை அரைக்கோள வடிவத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இக்குடைவரையின் முன்வாயில் மேற்பகுதி பிறை வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. பிறையின் மேல்முகடு எடுப்பாக வளைந்து கூடு போன்ற வடிவத்தில் அமைக்கப்பட்டுள்ளது. வளைந்த முகட்டில் மரச்சட்டங்கள் போன்ற அமைப்புக் காணப்படுகிறது. இதற்குக் கீழே யானைகளின் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இக்குடைவரை முடிவுறா நிலையிலேயே உள்ளது. கே.இரா.

**உலோயன்** நடுச் சீனாவில் ஓணன் (Honan) பகுதியில் உள்ள நகரம். ஓயாங்கோ ஆற்றிற்குத் (மஞ்சள் ஆறு) தெற்கே யீ (Yi) ஆறும் இலோ (Lo) ஆறும் கலக்கிற இடத்தில் இந்நகரம் அமைந்துள்ளது. சௌ (Chou) மரபினரின் (கி.மு.1122–771) ஆட்சியின் போது இந்நகரம் இலோயி (Loyi) எனக் கூறப்பட்டது. அவர்களின் தலைநகரமாகவும் இது விளங்கியது. உலோயன் (Loyang) ஆன் (Han) மரபினரின் (கி.பி.25–220) ஆட்சியின்போதும் தலைநகராக இருந்தது. சிங் (Ching) (மஞ்சு) மரபினர் ஆட்சி செய்த போது, இது ஓனாபூ (Honafu) எனக் கூறப்பட்டது. இந்நகரில் பல அரசர்களின் கல்லறைகளும் பல புத்த மதக் கோயில்களும் உள்ளன. பாய் மா சி என்னும் வெள்ளைக் குதிரைக் கோயில் இங்குள்ள தலைசிறந்த கோயிலாகும். இக்கோயிலை ஆன் மரபைச் சார்ந்த மிங் டி (Ming Ti) என்னும் அரசர் கட்டினார். இந்தியாவிலிருந்து புத்தசமயத்தைச் சீனாவில் பரப்பச் சென்ற குழுவினர் தங்களுடன் வெள்ளைக் குதிரை ஒன்றினைக் கொண்டு சென்றதாகவும், அக்குதிரை புத்தசமயக் கொள்கைகளைத் தாங்கிச் சென்றதாகவும், அக்குதிரை இறந்தபின் இக்கோயிலின் அருகே புதைக்கப்பட்டதாகவும் சொல்லப்படுகின்றது.

இலங்மென் (Lungmen) என்னும் குகைக்கோயில் இந்நகரிலிருந்து 16 கி.மீ. தொலைவில் உள்ளது. இக்குகைக் கோயிலில் உள்ள 1000 புத்தரின் சிற்பங்கள் சிறியனவாகவும் அழகுமிக்கனவாகவும் உள்ளன. உலகச் சிற்பக்கலை வரலாற்றில் குறிப்பிடத்தக்கதொன்றாக இச்சிற்பங்கள் அமைந்துள்ளன. 1937 முதல் 1945 வரை நடைபெற்ற சீன–சப்பானியப் போரில் இச்சிற்பங்கள் சிலவற்றைச் சப்பானியர் கவர்ந்து சென்றனர். இக்குகையில் உள்ள சிற்பங்கள் வை (Wei), டி யாங் ('T' ang) மரபினரின் காலத்தைச் சார்ந்தவை. வடக்கு வை மரபினரின் ஆட்சியின்போது கட்டப்பட்ட பிறிதொரு கோயில் யங் நிங் சி (Yung Ning Sze) என்பதாகும்.

இலோயன் இக்காலத்தில் ஒரு சிறந்த தொழில் நகரமாக விளங்குகிறது. இந்நகரம் பல்வேறு நகரங்களுடனும் தொடர்பு உடையது. இங்கு ஏறக்குறைய 700 தொழிற்சாலைகள் உள்ளன. கி.பி.1949-இல் இது நகராட்சியின் தகுதிக்கு உயர்த்தப்பட்டது. சு.இரா.

**உலோரென்சோ(கி.பி. 1449–1492)** இத்தாலியைச் சார்ந்த பிளாரன்சு நகரத்தில் வாழ்ந்த டி மெடிசி (De Medici) என்னும் செல்வர் குடும்பத்தில் பிறந்தவர். மெடிசி மரபினர் கி.பி.14–ஆம் நூற்றாண்டு முதல் 18–ஆம் நூற்றாண்டு வரை பிளாரன்சு நகரின் வங்கிச் சொந்தக்காரர்களாய் வாழ்ந்து, பிளாரன்சு (Florence) நகரைக் கட்டுப்படுத்தித் தம் செல்வாக்கில் வைத்திருந்தவர்கள்.

உலோரென்சோ (Lorenzo) கி.பி. 1449–இல் பிறந்தார். இவர் பிளாரன்சு நகரத்தை இத்தாலியிலேயே வலிமைமிக்கதாகவும் உலகிலேயே அழகுமிக்கதாகவும் ஆக்க அரும்பாடுபட்டார். அழகான கட்டடங்களைக் கட்டியதுடன், அந்நகரில் நூலகங்களை உருவாக்கவும் இவர் பணியாற்றினார்.

பிளாரன்சு மக்கள் பகட்டான வாழ்வில் தம் நேரத்தைப் பயன்படுத்திக்கொண்டிருந்தபோது, இவர் அரசாட்சியை மேற்கொண்டார். இவர் மகன் பியட்ரோ டி மெடிசி (Pietro de Medici) திறமை குறைந்தவர். அவர் காலத்தில் முதன்முதலாக மெடிசி மரபினர் அதிகாரத்தை இழந்தனர்.

உலோரென்சோ கி.பி.1492-இல் காலமானார். இவரை வரலாற்றில் 'நேர்த்திமிக்க உலோரென்சோ' (Lorenzo,the Magnificient) என்று கூறுவர்.இரா. அ.

**உலோரென்சோ உலோட்டா (கி.பி.1480-1556)** என்பார் இத்தாலி நாட்டைச் சார்ந்த வெனிசு என்னும் ஊரில் வாழ்ந்த ஓவியர். இவருடைய ஓவியங்கள் இவர் வாழ்ந்த காலத்தில் சிறப்புப் பெறவில்லை. ஆனால், அவை இக்காலத்தில் போற்றப்படுகின்றன. உளநூல் தொடர்பான காட்சிகளையும் உணர்வு அலைகளையும் இவருடைய ஓவியங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

உலோரென்சோ உலோட்டோ (Lorenzo Lotto) கி.பி.1480-இல் வெனிசில் (Venice) பிறந்தார். இவர்

அல்விசி விவரினி (Alvise Vivarini) என்பாரிடம் மாணவராகி ஓவியம் கற்றார். இவருடைய ஓவியங்கள் திசியன் (Titian) பாணியை மிஞ்சி விளங்கின. மனித உணர்வுகளின் நுட்பங்களை மிகுந்த ஈடுபாட்டுடன் ஆய்ந்து, அதனைப் பெருமளவுக்கு ஓவியங்களில் காட்டிய பெருமை இவரையே சாரும்.

உலோரென்சோ கி.பி. 1526 முதல் 1529 வரையிலும், கி.பி. 1540 முதல் 1549 வரையிலும் வெனிசில் வாழ்ந்தாரெனினும், வட இத்தாலியைச் சார்ந்த மாநில நகரங்களிலேயே தம் வாழ்வின் பெரும் பகுதியைச் செலவிட்டார். வயது முதிர்ந்த நிலையில் இவர் உலோரெட்டோ (Loreto) என்பாரின் இல்லத்தில் வாழ்ந்து, கி.பி.1556-இல் அங்கேயே காலமானார். இவருடைய ஓவியங்களை இன்றும் திரசுகோர் (Trescore), பெர்காமோ (Bergamo) என்னும் ஊர்களில் காணலாம். கிறித்துவும் மேரியும் (Christ and Mary) என்னும் ஓவியம் சிறப்பானது. இரா.அ.

**உலோவல் சோசபின் சா (1843-1905):** இவர் நியூயார்க்கு அறக்கொடை நிறுவனத்தை ஏற்படுத்தியவர்களுள் ஒருவர். இந்த அம்மையார் அமெரிக்க ஐக்கிய நாடுகள் தனியார் அறக்கொடையை ஏற்றுக் கொள்வதற்குப் பாடுபட்டவர். இவர் 1843–இல் மசாசுசெட்சிலுள்ள மேற்கு இராக்சுபரி (West Roxbury) என்னுமிடத்தில் பாசுட்டன் (Boston) குடும்பத்தில் பிறந்தார்.

உலோவல் சோசபின் சா (Lowel, Josephine Shaw) ஏழைகள் காப்பு விடுதி, சிறைச்சாலை, மருத்துவமனை ஆகியவற்றில் பல சீர்திருத்தங்களைச் செய்தார். இவர் பிரீடுமேன் நிறுவனத்தினரால் கறுப்பர்களின் குழந்தைகளுக்காகக் கட்டப்பட்ட பள்ளிகளிலும், பல காப்பு மையங்களிலும் சில சீர்திருத்தங்கள் செய்தார். இவர் நியூயார்க்கு மாநில அறக்கொடை நிறுவனத்தின் முதல் பெண் உறுப்பினராக கி.பி.1876-இல் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இவர் சமூகச் சிக்கல்களுக்குச் சமூகக் கூட்டுச் செயல்களின் மூலமே தீர்வுகாண முடியும் என உறுதியாக நம்பினார்;பெண்களின் ஊதியத்தை ஒழுங்கு செய்தல், அவர்கள் வேலை நேரத்தை ஒழுங்கு செய்தல், அவர்கள் உரிமை போன்றவற்றிற்காகவும் நியூயார்க்கு நகரக் கடைகளில் வேலை செய்த பெண்களின் உரிமைகளுக்காகவும் பாடுபட்டார். இவர் 1905–இல் காலமானார். இரா.அ.

**உலோவி, இராபர்ட்டு ஆரி(கி.பி.1883-1957)** அமெரிக்க மானிடவியல் அறிஞர்; வட அமெரிக்கச் சமவெளி இந்தியர்களைப் பற்றி மிக விரிவாக ஆராய்ந்தவர். 'தொன்மைச் சமூகம்' (Primitive Society,-1920), 'சமூக அமைப்பு'(Social Organization -1948) முதலான தம் படைப்புகளின் மூலம் மானிடவியலில் சில கோட்பாடுகளை மேம்படுத்தினார். தம் காலத்தில் மிகுந்த அளவில் இனக்குழுவியல் (Ethnography) ஆய்வுகளை மேற்கொண்ட மானிடவியலார் இவரேயாவர்.

உலோவி (Lowie,Robert Harry) கி.பி. 1883–இல் வடவியன்னாவில் பிறந்தார். இவர் கொலம்பியாப் பல்கலைக் கழகத்தில் படித்துப் பட்டம் பெற்றார்; டாக்டர் பட்டத்தினை 1908-இல் பெற்றார். அதன் பின்னர், 1921–ஆம் ஆண்டுவரை நியூயார்க்கு அமெரிக்க இயற்கை வரலாற்றியல் அருங்காட்சியகத்தில் பணியாற்றினார். அருங்காட்சியகத்தில் பணியாற்றிய காலங்களில் கிளார்க்கு விசுலர் (Clark Wisler) என்பாரின் ஆலோசனையின் பேரில் இவர் பல இனக்குழுவியல் களப்பணிகளை மேற்கொண்டார். இவர் பன்னிரண்டு ஆண்டுகள் இவ்வருங்காட்சியகத்தில் பணியாற்றிய பின்னர், பெர்க்கிலியில் (Berkeley) புதிதாகத் தொடங்கப்பட்ட கலிபோர்னியாப் பல்கலைக் கழகத்தில் மானிடவியல் துறையில்சேர்ந்தார்.வடக்குச் சொசோனி(Shoshone), பிளாக்புட்டு (Blackfoot), குரோ (Crow) முதலான பழங்குடிகளைப் பற்றிய தம் கள ஆய்வுகளை 18 தனி நூல்களாக (Monographs)வெளியிட்டார். இவர் தம் இறுதிக் காலத்தில் தென் அமெரிக்க இனக்குழுவியல் ஆய்விலும் செருமானியப் பண்பாட்டாய்விலும் மிகுந்த ஈடுபாடு காட்டினார்.

மானிடவியலின் கொள்கை சார்ந்த பரப்பிலும் இவர் பங்கு தலையானது. குரோப்பழங்குடியினரைப் பற்றி மிக விரிவான அடிப்படையில் களஆய்வு செய்ததாலும், பிற அமெரிக்க இந்தியப் பழங்குடிகளைப் பற்றி ஆய்வு செய்ததாலும் உறவுமுறை, சமயம், நாட்டுப்புறவியல் முதலான துறைகளில் ஆழ்ந்த அறிவினை இவர் பெற்றார். பிரான்சு போவாசு (Franz Boas) இவர்தம் ஆசிரியராகவும் வழிகாட்டியாகவும் திகழ்ந்தார். உலோவி 1957-ஆம் ஆண்டு பெர்க்கிலி நகரில் காலமானார். சீ.ப.

**உவகைக் கலுழ்ச்சி** என்பது புறத்திணைகளுள் ஒன்றாகிய தும்பைத் திணையில் அமைந்துள்ள துறைகளுள் ஒன்றாகும். மகிழ்ச்சியால் கண்ணீர் விடுதல் என்பது இதன் பொருள். புறப்பொருள் வெண்பாமாலையில் இடம்பெறும் இத்துறை தொல்காப்பியத்தில் காணப்படவில்லை. போர்க்களத்தில் விழுப்புண்பட்டுக் கிடக்கும் வீரனைக் கண்ட அவன் மனைவி

மகிழ்ச்சிக் கண்ணீர் விடுவது என்பது இத்துறையின் கருத்தாகும். இதனை, 'வாள்வாய்த்த வடுவாழ் யாக்கைக், கேள்கண்டு கலுழ்ந்துஉவந்தன்று' என்று புறப்பொருள் வெண்பாமாலை விளக்குகிறது. இரு பெருவேந்தர் மாறுபட்டுப் போர் செய்யுங்கால், வீரர்கள் அஞ்சாது போர் புரிகின்றனர். அவ்வீரர் களுள் ஒருவன், 'இயமனும் தன்பால் இத்தகைய மறம் இல்லையே' என்று எண்ணி நாணமடையும்படி, வீரங்காட்டிப் போர்புரிந்து பகைவீரன் கைவாளால் விழுப்புண்பட்டுக் களத்தே கிடக்கின்றான். அவனைக் காண வேண்டிக் களம் புகுந்த மனைவி தன் கணவன் பகைவன் வாளால் விழுப்புண்பட்டுக் கிடப்பதனைக் கண்டு வருந்தாது மகிழ்ச்சியடைந்து கண்ணீர் வடித்து நிற்கின்றாள். இவ்வாறு மனைவி ஆனந்தக் கண்ணீர் வடித்து நிற்கும் நிலையினைக் கூறுவது 'உவகைக் கலுழ்ச்சி' எனப்படும். அ.மா.ப.

**உவமம்**: ஒரு பொருளை விளக்குங்கால் தெரிந்த மற்றொரு பொருளை ஒப்பிட்டுக் கூறி விளக்குவதை உவமம் செய்தல் என்பர். உவமம் என்பதன் பொருளைப் பேராசிரியர், 'ஒரு பொருளோடு ஒரு பொருளை ஒப்புமை கூறல்' என்று விளக்கியுள்ளார். உள்ளுறை உவமம், ஏனை உமவம் என்று உவமம் இரண்டு வகைப்படும். உள்ளுறை உவமம் செய்யுட்கே உரியதாகவும், ஏனை உவமம் வழக்கு, செய்யுள் ஆகிய இரண்டிற்கும் உரியதாகவும் அமையும். உவமம் செய்தலின் பயனை இளம்பூரணர், 'புலன் அல்லாதன புலனாதலும், அலங்காரமாகிக் கேட்டார்க்கு இன்பம் பயத்தலும்' என இருவகைப்படுத்திக் கூறுகிறார். காட்டுப் பசுவாகிய ஆமாவினை அறியாத ஒருவன் வீட்டுப் பசுவை உவமப்படுத்தி, 'ஆப்போலும் ஆமா'என்று கூறக் கேட்டுக் காட்டினுட் சென்று, ஆமாவினைக் கண்டபோது 'ஆப்போல்வது' எனக் கேட்ட உவமையால், இது ஆமா என்று எளிதில் உணர்ந்து கொள்ளுவான். பெண்களின் முகத்திற்குத் தாமரையினை உவமம் செய்து, 'தாமரை போல் வாள்முகத்துத் தையலீர்' என்று கவிஞன் விளித்துக் கூறுகிறான். முகத்தை வாளா கூறாமல் 'தாமரை போன்ற' என்று உவமம் செய்து கூறியமையால், அம் முகத்தின் அழகு நன்கு புலனாவதோடு கற்போர்க்குப் புலமை இன்பமும் மிகுகிறது. இவ்வாறு இருவகைப் பயன்களைக் கொண்டுள்ளமையாலும், அணிகளுள் முதன்மையாகத் திகழ்வதாலும் உவமம் பற்றிய செய்தியினைத் தொல்காப்பியர் ஒரு தனி இயலாகவே பொருளதிகாரத்தில் விளக்கியுள்ளார். உவமம் உவமை எனவும் வழங்கப்படும்.

இது அணியாகக் கூறப்படும்போது 'உவமை அணி' எனப்படும். உவமை அணி நான்கு உறுப்புகள் கொண்டமையும். 'பவளம் போல் சிவந்தவாய்' என்னும் சொற்றொடரில் அமைந்த 'பவளம்' உவமம் எனவும், 'வாய்' பொருள் எனவும், 'போல' என்பது உவம உருபு எனவும், 'சிவந்த' என்பது உவமைக்கும் பொருளுக்கும் அமைந்த பொதுத் தன்மை எனவும் கூறப்படும். உவமையை உவமானம் என்றும் பொருளை உவமேயம் என்றும் கூறுவர். இத்தொடரைப் 'பவளம் போல் வாய்' எனவும் கூறலாம். அப்போது சிவந்த என்னும் பொதுத்தன்மை உய்த்துணர்ந்து கொள்ளப்படும். உவம உருபும் பொதுத்தன்மையும் தொக்கு, 'பவளவாய்' என இத்தொடர் அமையும் போது, அவற்றை விரித்துப் பொருள் கொள்ளுதல் வேண்டும். அவ்வாறமையுங்கால் இத்தொடர் 'உவமத் தொகை' என்று கூறப்படும். உவமையாகக் கூறப்படும் சொல் சிலவிடங்களில் ஆகுபெயராக அமைந்து, அதனொடு தொடர்புடைய பிறிது பொருளை உணர்த்தலும் உண்டு. 'காளை வந்தான்' என்னும் தொடரில் 'காளை' என்னும் பெயர் காளை போன்றவனாகிய ஒருவனை உணர்த்துகிறது. இங்குக் 'காளை' உவம ஆகுபெயர் என்று கூறப்படும்.

உவமம் வினையுவமம், பயனுவமம், மெய்யுவமம், உருஉவமம் என நான்கு வகையாற் பெயர் கூறப்படும். 'புலியன்ன மறவன்' என்பது வினையுவமம். இங்குப் புலி பாய்வது போலப் பாயும் மறவன் எனத் தொழிலால் உவமை அமைந்தது. 'மேகம் போலும் கை' என்பது பயனுவமம். மேகத்தால் விளையும் பொருளும் கையினால் வழங்கப்பெறும் பொருளும் ஒக்கும் என்று பொருள்படுவதால் இது பயனுவமம் ஆயிற்று. 'துடியிடை' என்பது துடி போன்றவடிவு கொண்ட இடை எனப் பொருள்படுவதால் மெய் (வடிவ) உவமம்ஆகும். 'பொன் மேனி' என்பதுபொன் போலும் நிறம் கொண்ட மேனி எனப் பொருள்படுதலின் உருவுவமம் ஆகும். ஒரு பொருளோடு மற்றொரு பொருளை உவமம் செய்யுங்கால் வினை, பயன், மெய், உரு என்பன தனித்தனியாகவும் விரவியும் வரும் இயல்பினவாகும். வினை, பயன், மெய், உரு ஆகியவற்றால் உவமங் கூறுங்கால் அதற்குச் சிறப்பு, நலன், காதல், வலி, கிழக்கிடு பொருள் ஆகியன நிலைக்களங்களாக அமையும். உவமை கூறுங்கால் உவமையும் பொருளும் ஒத்தன என்று உலகத்தார் மகிழ்ந்துரைக்குமாறு அமைதல் வேண்டும்.

உவம உருபுகள் அன்ன, ஏய்ப்ப, ஓட, புரைய போன்ற முப்பத்தாறும் அவை போல்வன பிறவுமாகும் என்று தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். அன்ன, ஆங்க, மான, இறப்ப, என்ன, உறழ, தகைய, நோக்க ஆகியன வினையுவம உருபுகளாகும். என்ன, விழைய, புல்ல, பொருவ, கள்ள, மதிப்ப, வெல்ல,

வீழ என்பன பயன் உவமத்திற்கு உருபுகளாக வரும். கடுப்ப, ஏய்ப்ப, மருள, புரைய, ஒட்ட, ஒடுங்க, ஓட, நிகர்ப்ப ஆகியன மெய்யுவமத்திற்கு உருபுகளாக அமையும். போல, மறுப்ப, ஒப்ப, காய்த்த, நேர, வியப்ப, நளிய, நந்த என்பன உருவுவம உருபுகளாம். இப்பொருள் இதனை ஒக்கும் என்று கூறாது, இதனை ஒவ்வாது என்று கூறுவதும் உவமத்தின்பாற்பட்ட தேயாகும். 'யாங்ஙனம் ஒத்தியோ வீங்கு செலல் மண்டிலம்' என்னுமிடத்தில் ஒத்தியோ என்பது ஒவ் வாய் என்னும் பொருளில் அமைந்துள்ளது.

உவமஞ் செய்யுங்கால் ஒரு பொருளோடு ஒரு பொருளும், ஒரு பொருளோடு பல பொருளும், பல பொருளோடு பல பொருளும், பல பொருளோடு ஒரு பொருளும் உவமஞ் செய்யப்படும். உவமை அணி விரி உவமை, தொகையுவமை, இதரவிதர உவமை முதலிய னவாக இருபத்து நான்கு வகைப்படும் என்று தண்டி யலங்காரம் கூறுகிறது. உவமை அணி அற்புதம், சிலேடை, அதிசயம் போன்ற பிற அணிகளோடு கூடி வருவதும் உண்டு. உவமம் பிற பல அணிகளுக்கு அடிப் படையானது என்று கூறும் சிறப்புடையது. பொருட் புலப்பாட்டில் உவமத்தின் இன்றியமையாமையினை உணர்ந்த தொல்காப்பியர் உவம இயல் என ஓரியலை இயற்றியுள்ளார். 'உவமை என்னும் ஒரு பெருங் கூத்தி, பல்வகைக் கோலம் பாங்குறப் புனைந்து, காப்பிய அரங்கில் கவினுறத் தோன்றி, யாப்பறி புலவர் இதயம், நீப்பரு மகிழ்ச்சி பூப்ப நடிக்கும்மே' என்று அப்பையதீட்சிதர் உவமத்தினைச் சிறப்பித் துள்ளார் எனப் பரிதிமாற் கலைஞர் குறிப்பிட்டுப் பாராட்டியுள்ளார். அ.மா.ப.

உவமப் போலி என்பதற்கு உவமத்தைப் போல் வது என்பது பொருள்.

உவமமாவது ஒரு பொருளை வினை, பயன், மெய், உரு, கிழக்கிடு பொருள் என்ற ஐந்தன் காரண மாகப் பிறிதொரு பொருளை எடுத்துக்காட்டி விளக்குவது. 'கயல் போலும் கண்' என்ற உவமத் தொடருள் 'கண்' உவமிக்கப்படும் பொருள் (உவமே யம்); 'கயல்' உவமப்பொருள் (உவமானம்). கண்ணி னது வடிவம், அது பிறழ்ந்து ஒளிரும் பண்பு ஆகியவை ஒத்துள்ளமையால் கயல் உவமப் பொருளாயிற்று. உவமம் என்பதும் ஏனை உவமம் என்பதும் ஒன்றே.

உவமப்போலி என்பது ஏனை உவமத்தைப் போன்றது. உவமப் பொருளும் உவமிக்கப்படும் பொருளும் வெவ்வேறாக வெளிப்பட்டு நில்லாமல், இரண்டும் ஒன்றாகி நிற்க வருவது உவமப்போலி. இங்கு உவமப்பொருள் இதுதான் உவமம் என வெளிப்படையாகத் தெரியாமல், யாதேனும் ஒரு பொருளைச் சிறப்பித்து அடைமொழியாக நிற்கும். இங்ஙனம் நிற்கும் அடைமொழியையே உவமமாகக் கருதிக் கொள்ளவேண்டும். உள்ளுறை உவமத்திற்குக் கூறிய தெய்வம் ஒழிந்த பிற கருப்பொருள்களே உவமப்போலி தோன்றுதற்கும் இடமாகும்.

குறிப்புப் பொருள் அமைந்து கிடக்கும் ஒரு செய் யுள் தொடரை உவமத்தை அடிப்படையாகக் கொண்டு கூறுங்கால் உவமப்போலி என்றும், அதன் உள்ளே மறைந்து நிற்கும் பொருளை நோக்கிக் கூறுங்கால் உள்ளுறை உவமம் என்றும் வேறுபடுத்திக் கூறுவர். இவ்வகையில், உவமப் பேரலியும் உள்ளுறை உவம மும் செய்யுள் அமைப்பின்கண் வேறுபடுவதில்லை.

'அமுதம் உண்க' எனத் தொடங்கும் நற்றிணைப் பாடலில் (65) புலியோடு போரிட்டுப் புண்பட்ட யானையின் தந்தங்களை அடைய விரும்பிய வேடர் களின் அம்பு பட்டதால் ஏற்பட்ட யானையின் துன்பப் பேரொலி, இடிமுழக்கம் போல் ஒலிக்கும் மலைநாடன் எனத் தோழி தலைவனைக் குறிப்பிட் டுள்ளாள். இக்குறிப்பில் மலைநாட்டிற்கு அடையாக முற்கூறிய காட்சி கருப்பொருள் நிகழ்ச்சியாக அமைந்துள்ளது.

புண்பட்ட யானை தலைவனைப் பிரிந்து துன்பப் படும் தலைவிக்கும், தந்தங்களை விரும்பிய வேடர் தலைவியை அலர் (பழி) தூற்றி மகிழும் பெண்டிர்க் கும், யானையின் துன்பப் பேரொலி தலைவியின் மிக்க வருத்தத்திற்கும் உவமமாக நிற்கின்றன. மேலும், இடிமுழக்கம் மழைக்கு அறிகுறியாதல் போல அலர் மொழி தலைவன் வருகைக்கு அறி குறியாதலை உணர்த்தும்.

இதன்கண் யானை பற்றிய கருப்பொருள் நிகழ்ச்சி வெளிப்படையான உவமையாக அமையாமல் மலை நாட்டினைச் சிறப்பிக்கும் அடை மொழியாக அமைந்துள்ளது. அதனையே உவமமாகக் கொண்டு, தலைவி நிலைமை அறிந்து தலைவன் வருவான் என்னும் செய்தியினைக் கருதிக் கொள்ளுமாறு அது அமைந்திருப்பது உவமப்போலியாகும். ச.பா.

**உவமான சங்கிரகம் (இரத்தினச் சுருக் கம்)** தலைமுதல் அடிவரை உள்ள உடலுறுப்புகளுக்கு ஏற்ற உவமானங்களைத் திரட்டி முறையாக உரைக் கும் செய்யுள் நூலாகும்; வெண்பா யாப்பில் உள் ளது. இது கி.பி. 1880-இல் வெளிவந்தது. இதன் ஆசிரியர் திருவில்லிபுத்தூர் திருவேங்கடையர் ஆவார். பி.தெ.

**உவமை அளவை:** பொதுவான குணங்களை யுடைய பொருள்களை ஆராய்ந்து அவை ஒன்றிற்

கொன்று தொடர்புடையனவாயிருக்கின்றன என்று கூறுவது உவமை அளவை. எடுத்துக்காட்டாக, காகங்கள் கறுப்பு நிறம் என்றால் எல்லாக் காகங் களும் கறுப்பு நிறமாகவே இருக்கும். ஆகையினால் அவை ஒத்திருக்கின்றன. சில சமயங்களில் சில குணங் கள் ஒத்திருக்கும். இவற்றிலிருந்து அவை எல்லாக் குணங்களிலும் ஒத்திருக்கும் என்று நினைத்துக் கொள் வது சரியன்று. எடுத்துக்காட்டாக, பருமனாக இருக் கும் ஒரு மனிதன் மகிழ்ச்சியுடையவனாக இருக்கி றான். இதிலிருந்து பருமனான மனிதர்கள் எல்லோ ரும் மகிழ்ச்சியுடையவர்களாக இருப்பார்கள் என்று நினைத்துக் கொள்ளுதல் கூடாது. ஒரு சில பொருத் தங்களிலிருந்து எல்லாவற்றுள்ளும் பொருத்தமிருக் கும் என்று நினைத்துக் கொள்ளுதல் தவறான உவமை.

அரிசுடாட்டிலின் (Aristotle) கொள்கைப்படி உவமை (Analogy) மிகவும் குறுகிய நோக்குடையது. இக்கால அளவையியல் வல்லுநர்கள் அவர் கருத்தை ஒத்துக்கொள்ளவில்லை. மில்லின் (Mill) கருத்துப்படி, இரண்டு பொருள்கள் ஒன்று அல்லது இரண்டு கூறு களில் ஒத்திருந்தால், மற்றவற்றிலும் ஒத்திருக்கும் என்று நினைப்பது உவமை ஆகும். வெல்டன் (Welton) என்பவர் இரண்டு பொருள்களின் பகுதிப் பொருத்தத் திலிருந்து, முற்றிலுமாக அவை பொருத்தம் உடையன என அனுமானிப்பதே உவ்மை என்கிறார்.

**உவமையின் வகைகள்:** 1. தெரிந்த-உறுதியான உவமை என்பது பொதுவாக அறிந்த குணங்களின் அடிப்படையில் அமைவது. 2. முழுவதுமான – உறுதி யான உவமை என்பது எல்லாப் பொதுவான குணங் களின் அடிப்படையில் அமைவது. 3. தெரிந்த எதிர் மறையான உவமை என்பது தெரிந்த-பொதுவான குணங்கள் இல்லாததன் அடிப்படையில் அமைவது. 4. முழுவதும் உவமையல்லாத தன்மை மற்றும் முழு வதுமான,பொதுவாயிராத குணங்களின் அடிப்படை யில் அமைவது.

**சிறந்த உவமை:** சிறந்த உவமை (Sound Analogy) என்பதில்இரண்டு பொருள்களையோ மனிதர் களையோ ஒப்பிடும்பொழுது, அப்பொருள்களின் அல்லது மனிதர்களின் பொருத்தங்கள் அல்லது ஒற்று மைகள் அதிகமாகவும் வேற்றுமைகள் குறைவாகவும் இருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, இராமனும் கோவிந்தனும் புத்திக் கூர்மையுடையவர்கள்;இரண்டு பேரும் நல்லவர்கள்; படிப்பில் ஆர்வமுடையவர்கள். எனவே, இராமன் முதல் வகுப்பில் தேர்ச்சியடைந் தான் என்றால் கோவிந்தனும் முதல் வகுப்பில் தேர்ச்சி அடைவான் என்று கூறுவது பொருத்தமாக அமையும். ஆனால், இராமனும் கோவிந்தனும் புத்திக் கூர்மை யுள்ளவர்கள். இராமன் பொறுப்பில்லாதவன்; கட்டாயத்தின் பேரில்தான் படிப்பான். இந்நிலையில், இராமன் தோல்வியடைந்தால் கோவிந்தனும் தோல்வி யடைந்துவிடுவான் என்று கூறிவிட முடியாது. ஏனெனில் இரண்டு பேருக்கும் பொருத்தம் இருந்தா லும் அவர்களிடையே வேற்றுமை அதிகமாக இருக் கிறது.

சிறந்த உவமைக்குக் கீழ்க்காணும் குணங்கள் அமைந்திருக்க வேண்டும். முதலாவதாகப்பொதுவான குணங்கள் – அவை இன்றியமையாத குணங்களாக அமைந்திருத்தல் வேண்டும்.புத்திக்கூர்மை, இயல்பான விருப்பம், ஒழுக்கம், சமயவுணர்வு முதலிய நற்பண்பு கள் சிறப்பான பண்புகளாக அமைந்திருக்க வேண்டும். மேற்சொன்ன குணங்கள் இரு மனிதர்களிடம் அமைந் திருந்தால், மற்றக் குணங்களும் அவர்களிடம் அமைந் திருக்கும் என்று கருதலாம்.

இரண்டாவதாக, இரண்டு மனிதர்கள் கறுப்பு நிறமுடையவர்கள். அவர்களுள் ஒருவர் வேடிக்கை யாகப் பேசுபவர் என்றால் மற்றவரும் வேடிக்கை யாகப் பேசுபவரே என்று கூற முடியாது. இரண்டு மனிதர்களிடையே ஒற்றுமையான குணங்கள் அதிக மாக இருந்தால், எதிர்பார்க்கும் பிற குணங்களும் ஓரளவு சரியாகயிருக்கும்.

மூன்றாவதாக, பொதுவானகுணங்கள் அதிகமாக இரண்டு பேரிடம் இருக்க வேண்டும். அதே சமயத்தில் வேறுபாடுகள் மிகக் குறைவாக இருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, பூமியையும் சந்திரனையும் எடுத்துக் கொண்டால்,இரண்டும் வெளிச்சத்திற்காகச் சூரியனை எதிர்பார்க்கின்றன. ஆகையினால், பூமியைப் போல் சந்திரனிலும் மக்கள் வாழ்கிறார்கள் என்று கூற முடியாது. ஏனென்றால், அங்கே மக்கள் வாழத் தேவையான காற்று, உணவு, தண்ணீர் முதலியன இருக்கும் என்று கூறமுடியாது.

நான்காவதாக, பொதுவான குணங்கள் தேவை யானதாக இருக்க வேண்டும். கறுப்பு மனிதர்களைப் பார்க்கலாம்; சிவப்பு மனிதர்களையும் பார்க் கலாம். நிறத்திற்கும் குணத்திற்கும் புத்திக்கும் தொடர்பிருப்பதாகத் தெரியவில்லை. ஒரு நீக்கிரோ இழி தோற்றமுடையவனாகவும் ஒழுங்கில்லாதவ னாகவும் இருந்தால் எல்லா நீக்கிரோக்களும் அப்படி இருக்க வேண்டும் என்பதில்லை. நன்றாக ஒரு பொருளைஅறியாமல் திடீரென்று முடிவுக்கு வருவது சரியன்று.

உவமையைச் சரிபார்க்க இரண்டு பொருள்களை நன்றாக ஒப்பிட்டுப் பார்த்துச் சரியான முடிவு எடுக்க

வேண்டும். தேவையான, பொருத்தமான மேலெழுந்த வண்ணமாயிராமல், அவற்றின் பொதுவான குணங் களை நன்றாக ஆராய வேண்டும்.

தேவையான குணங்களை ஒத்துப் பார்த்தவுடன், இரண்டு பொருள்களுக்கும் இடையேயுள்ள வேறு பாட்டை நன்றாக அறிதல் வேண்டும். கடைசியாக, இரண்டு மனிதர் அல்லது பொருள்களை ஒப்பிட்டுப் பார்த்துப் பொதுவான கருத்துகளிலும் வேறுபாடு களிலும் முரண்பாடு இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இரா.கோ.

துணை நூல்கள்:

**Ramnath Sharma,** Logic, Kedar Nath Ram Nath & Co., Meerut, 1981.

**Bochenshi, I.M.,** Ancient Formal Logic, Amsterdam, 1951.

**Cohen and Ernest Nagel, M.R.,** An Introduction to Logic and Scientific Method, New York, 1934.

**உவமைகள் 2-ஆம் பங்கு** என்பது கி.பி. 1893-இல் வெளிவந்த நீதிக்கதைத் தொகுப்பு நூல். உவமை வாயிலாக விளக்கும் நீதிக்கதைகள் இந் நூலில் இருப்பதால் இந்நூல் இப்பெயர் பெற்றது. கிறித்தவ வேதமான விவிலியத்திலிருந்தே அத்தனை கதைகளும் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. இந்நூலை எழுதியவர் இலெ.சி.இராசேந்திர செட்டியார். பி.தெ.

**உவமைச் சொல்லகராதி** என்னும் நூல் ந.வ. சுப்பராயலு நாயகர் என்பவரால் தொகுக்கப் பட்டது. இதன் முதல் பதிப்பு கி.பி. 1872-இல் இசு காட்டிசு (Scottish) அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்டுத் தரங்கம்பாடியிலிருந்து வெளியிடப்பட்டது. இந்த நூல் நூற்று அறுபத்தெட்டுப் பக்கங்கள் கொண் டது. பல நூல்களில் காணப்படும் நுணுக்கமான உவமைகளைக் கொண்டு இந்நூல் தொகுக்கப் பெற் றுள்ளது. இதில் பழமொழிகள் அகராதி வரிசையில் தரப்பட்டுள்ளன. பழமொழிகளை உவமையாகச் சொல்லும் வழக்கு உண்டு என்பதை இந்நூல் காட்டுகிறது. இரா.குரு.

**உவர்க்கண்ணூர்ப் புல்லங்கீரனார்** கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவர். கீரன் என்னும் பெயரில் சங்கப் புலவர் பலர் இருந்துள்ளனர். அவ்வாறமைந்த பெயர்களோடு ஊர்ப்பெயர், பெற் றோர் பெயர் போன்றவற்றை முன் அடையாகக் கொண்டு அப்புலவர்களை வேறுபடுத்தி அறிந்தனர். புல்லங்கீரனார் என்னும் பெயரில் புல்லன் என்பது புலவரின் தந்தை பெயராகவும், ஆர் சிறப்புணர்த் தும் விகுதியாகவும் அமைந்துள்ளன. உவர்க்கண் ணூர் புலவரின் சொந்த ஊராகும். இப்புலவரது ஒரே பாடல் அகநானூற்றின் 146-ஆம் பாடலாக அமைந்துள்ளது. மருதத் திணையிலுள்ள அப்பாடல் தலைவனின் பரத்தை ஒழுக்கம் கண்டு ஊடல் கொண்ட தலைவியிடம், அதனை நீக்கும் வாயிலாகச் சென்ற பாணனை வாயில் மறுத்துத் தலைவி கூறியதாக அமைந்துள்ளது. 'தலைவன் தேர் பரத்தை யர் தெருவிற்குச் செல்லவில்லை' எனக் கூறிய பாணன் சொல்லை ஏற்காது, அவனது பரத்தமை ஒழுக்கத்தை உணர்ந்த தலைவி தலைவனை 'மாயப் பரத்தன்' என்றும், அவனது பொய் மொழி யினை வஞ்சப்புகழ்ச்சியாக, 'வாய்மொழி' என்றும் இகழ்ந்து கூறும் பாங்கில் 'மாயப்பரத்தன் வாய் மொழி' என்று கூறுவது நயமாக உள்ளது. அ.மா.ப.

**உவவனம்** என்பது ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான மணிமேகலையில் இடம்பெறும் ஒரு பூஞ் சோலையாகும். இது காவிரிப்பூம்பட்டினத்தில் அமைந்திருந்தது. இதன்கண் புத்தர் கட்டளையால் பலவித மரங்களும் பூத்துக் குலுங்கும் என்பதனை, 'பகவன தாணையிற் பன்மரம் பூக்கு, முவவனம்' (மணி. மலர்வனம். 61, 62) என்று சீத்தலைச்சாத்த னார் கூறியுள்ளார். மேலுமவர், இங்குள்ள பல்வகை மரங்களும் செடிகளும் மலர, அம்மலர்கள் சிந்திக் கிடக்கும் காட்சியினை, 'விரிமலர் பரப்பி, வித்தகர் இயற்றிய விளங்கிய கைவினைச், சித்திரச் செய்கைப் படாம் போர்த்ததுவே, ஒப்பத் தோன்றிய உவ வனம்' (மணி. மலர்வனம். 166-169) என்று கூறியுள் ளார். இவ்வுவவனத்தில் பல்வகை மலர்களும் பரந்து கிடக்கும் தோற்றம், சிறப்புற்ற கலைஞன் ஒருவனால் வேலைப்பாடமையச் செய்யப்பட்ட துகிலை உவ வனம் போர்த்திருப்பது போல் காணப்பட்டது என் பது கருத்தாகும்.

இங்குத் தன்னகத்து உள்ளோருடைய ஒலியை வெளிப்படுத்தாமல் அவர்களுடைய உருவங்களை மட்டும் வெளிக்காட்டும் பளிங்கு மண்டபம் ஒன்றிருந் தது. அப்பளிங்கு மண்டபத்தினுள் மாணிக்கச்சுட ரொளி பரந்த புத்தபாத பீடிகை இடம் பெற்றி ருந்தது. அந்தப் பீடிகையின்மேல் அரும்புகளை இட் டால் அவை மலரும். அம்மலர்கள் எத்தனைக் காலம் ஆனாலும் வாடாமலும் வண்டுகள் மொய்க் காமலும் இருக்கும். மேலும், யாதேனுமொரு தெய் வத்தை எண்ணி அதன் அடிகளைத் தியானித்து, அப்பீடத்தில் மலர்களை வைத்தால் அம்மலர் வணங் கிய தெய்வத்தின் அடியில் சென்று சேரும். யாதொன்றையும் நினையாமல் பீடத்தில் மலர்களிட்

டால் அவை வேறு எங்கும் செல்லாமல் அதன் மேலேயே தங்கி இருக்கும். இவ்வளவு சிறப்புமிக்க புத்த பாத பீடிகையுடைய பளிக்குமண்டபத்தைக் கொண்ட உவவனத்திற்கு மணிமேகலை மலர் பறிக்கச் சென்றாள். அவள் சென்றதை அறிந்த உதயகுமரன் அவளை அடைய விரும்பி இவ்வனத்திற்குச் சென்று முயன்றான். பின்னர், மணிமேகலா தெய்வம் மணிமேகலையை மணிபல்லவத்திற்குக் கொண்டு செல்லுமுன் காட்சியளித்த இடமும் இதுவே. வீ.சே.

**உவாக்சாடுன்** தொன்மையான மாயன் (Mayan) பண்பாட்டு நகரங்களுள் ஒன்று. இன்றைய குவாட்டிமாலாவில் (Guatemala) பீதன் (Peten) பகுதியில் திகள் (Tikal) என்னும் ஊருக்கு வடக்கில் 20 கி.மீ. தொலைவில்உவாக்சாடுன்(Uaxactun) உள்ளது. மாயன் தொல்லியல் வரலாற்றில் இவ்வூர் ஒரு சிறந்த இடத்தைப் பெற்றுத் திகழ்கிறது. கார்னீசு நிறுவனத் தொல்லியலறிஞர்கள் இங்கு அகழாய்வுகள் பல மேற்கொண்டனர். இங்குத் தொன்மையான நாகரிகம் கி.மு. 900 முதல் கி.மு. 300 வரை இருந்தது. இது மாமோம் நிலை (Mamom Phase) எனக் கூறப்படுகிறது. அகழாய்வுகளில் இக்காலத்தைச் சார்ந்த பல வழிபாட்டுத் தலங்கள் இவ்விடத்தில் கண்டுபிடிக்கப்பட்டன. ஒருகோயிலும் கோயிலினுள் காரையால் செய்யப்பட்ட மிகப் பெரிய முகமூடி உருவங்களும் கிடைத்தன. இது ஆல்மெக்கு (Olmec) நாகரிகத்தின் தன்மைகளைக் கொண்டு விளங்குகிறது. சு.இரா.

**உவாச்சீ**. இவர்கள் நடு ஆசியாவில் இந்தோ-ஐரோப்பிய மொழி பேசிவந்த தொன்மையான பழங்குடிகளாவர். இவர்கள் கி.மு. 3–ஆம் நூற்றாண்டிலேயே வரலாற்றில் சிறப்பிடம் பெற்றனர். உவாச்சீப் (Yueh-chih) பழங்குடியினர் வடமேற்கு எல்லையில் சியூங்-நு (Hsiung-nu) மக்களின் நிலப்பகுதிக்கடுத்து வாழ்ந்தனர். பின்னர், இவர்கள் கி.மு. 165–இல் சியூங்-நு மக்களால் தோற்கடிக்கப்பட்டதால், நான் சான் (Nan Shan) மலைப் பகுதியிலிருந்த திபேத்தியப் பழங்குடிகளிடம் அகதிகளாகக் குடியேறினர். பெரும் பாலானோர் சுங்கரியாப் (Dzungaria) பகுதி வழியாகக் கிர்கிசியா (Kirghizia) என்னும் பகுதியிலுள்ள இசைக்-குல் (Issyk-kul) என்னும் ஏரிப்பகுதியிலும், இலி (Ili) ஆற்றுப் படுகையிலும் குடியேறினர். இதன் பின்னரும் சியூங்-நு மக்களின் உடன் கூட்டத்தினரால் சாக்டியானா (Sogdiana), பாக்டிரியா (Bactria – வட ஆப்கானிசுத்தான்)முதலான தென்மேற்குப் பகுதிகளுக்குத் தள்ளப்பட்டனர். பின்னர், பாக்டிரியாப் பகுதியில் அப்போது கிரேக்கச்சிற்றரசன் ஆண்டு வந்த நாட்டில் தங்கினர். இப்பகுதியில் குடியேறியபின், உவாச்சீ மக்கள் தங்கள் நாடோடி வாழ்க்கையை விடுத்து, நிலையான இருப்பிடங்கள் அமைத்து வாழ முற்பட்டனர்.

இதன் பின்னர், கி.பி. முதல் நூற்றாண்டில் குசாண (Kushan) ஆட்சியாளரான முதலாம் கட்பிசசு (Kadphises-1) இவர்களைத் தம் ஆட்சியின்கீழ்க் கொண்டு வந்தார். இப்பகுதிஇப்போதைய வடகிழக்கு ஆப்கானிசுத்தான், வடமேற்கு, மேற்குப்பாக்கிசுத்தான் ஆகிய பகுதிகளைக் கொண்டதாகும். குசாண ஆட்சியின்கீழ் வந்தபிறகு, உவாச்சீ மக்கள் இந்தியாவிற்கும் சீனாவிற்குமிடையே காணப்பட்ட இயற்கை வழிகளைக் கட்டுப்படுத்தி, வாணிகத் தொடர்புகளை மேம்படுத்தினர். குசாண அரசரான கனிசுகர் கி.பி. 2–ஆம் நூற்றாண்டில் புத்தமதத்தை ஏற்றுக் கொண்ட பின்பு, அம் மதம் இந்தியாவிலும் சீனாவிலும் பரவத் தொடங்கியது. குசாணப் பேரரசு நிலைக்கத் தொடங்கிய பின்பு, உவாச்சீ மக்களின் பெயர் வரலாற்றிலிருந்து மறைந்து போயிற்று. இரா. அ.

**உழத்திப்பாட்டு** தமிழிலுள்ள தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களுள் ஒன்று. திணை அடிப்படையில் பாடும் மரபு மாறிய நிலையில், திணைப் பாடல்களின் சில கூறுகள் தனித்தனிச் சிறு பிரபந்தங்களாக உருவாகும் நிலை தோன்றியது. மருதத் திணைக்குரிய மகளிரான உழத்தியர் பாடுவதாக அமைந்தது இப்பிரபந்தம். பிற்காலத்தில் பள்ளு என்னும் ஒரு பிரபந்தம் தோன்றிச் செழிக்கலாயிற்று. அச்சிற்றிலக்கிய வகை உருவாகிச் செழிப்பதற்கு இவ்வுழத்திப்பாட்டு ஒரு முன்னோடியாக அமைந்திருத்தல் கூடும்.

உழத்தியரின் தொழில் திறத்தின் மாட்சியும் பாடப்பெறும் தலைவனின் சிறப்பினோடமையும் வாழ்த்தும் இப்பிரபந்தத்தின் பாடுபொருளாகும். இப்பிரபந்தம் பத்துப் பாடல்கள் கொண்டமையும். இதனை ஒரு பிரபந்தமாகக் குறிப்பிட்டுப் பன்னிரு பாட்டியல் இலக்கணம் வகுத்துள்ளது. 'புரவலர் கூறி அவன் வாழியவென்று, அகல் வயல் தொழிலை ஒருமை உணர்ந்தனள், எனவரும் ஈரைந்து உழத்திப் பாட்டே' (ப.பா.132). இப்பிரபந்தம் இன்ன பாடலால் அமையும் என்று இவ்விலக்கணத்தில் வரையறை செய்யப்படவில்லை. அ.மா.ப.

**உழபுல வஞ்சி** புறத்திணைகளுள் ஒன்றான வஞ்சித் திணையின் துறைகளுள் ஒன்று. வஞ்சி சூடிப் போர்க்குச் செல்லும் வேந்தன், தன் பகைவரின் வளமிக்க நாட்டினைத் தீயிட்டுக் கொளுத்துவது என்பது இதன் பொருளாகும். இதன் இலக்கணத்தினைப்

புறப்பொருள் வெண்பாமாலை, 'நேராதார் வளநாட்டைக், கூரெரி கொளீஇயன்று' என்று விளக்கியுள்ளது. இதனைத் தொல்காப்பியம், 'எரிபரந்து எடுத்தல்' என்று குறிப்பிட்டுள்ளது. இத் துறையினை, 'இருவகைப் படையாளரும் இருவகைப் பகைப் புலத்துப் பரந்து சென்று எரியை எடுத்துச் சுடுதல்' என்று நச்சினார்க்கினியரும், 'வழியில் பகைப் புலத்தில் தம் செலவைத் தகையும் ஊர்களை நெருப்பிட்டழித்தல்' என்று சோமசுந்தர பாரதியாரும் விளக்கியுள்ளனர். புறப்பொருள் வெண்பாமாலை வஞ்சித் திணையில் கூறும் பெருவஞ்சி என்னும் பிறிதொரு துறையும், பகைவர் நாட்டினைத் தீக்கொளுத்துவது பற்றியதாகவே உள்ளது. அதனால், தன்னுடன் வந்து சேராத பகை நாட்டினை மீண்டும் சினந்து தீப்படுத்துவது என்னும் கருத்தில், 'முன்னடையார் வளநாட்டைப், பின்னரும் உடன்று எரிகொளீஇயன்று' என்று அத்துறையினை அந்நூல் விளக்கியுள்ளது. பண்டுதொட்டுப் பகைவர் நாட்டினைத் தீக்கிரையாக்கி அழிக்கும் போர் மரபினை 'உழபுல வஞ்சி' என்னும் துறை உணர்த்துகிறது.

அ.மா.ப.

**உழவர் செயல்முறைக் கல்வி**: இந்தியாவில் குறைந்தது நான்கில் மூன்று பகுதி மக்கள் நாட்டுப் புறங்களில் வாழ்கின்றனர். இவர்கள் பெரும்பாலும் உழவர்களாகவும் வேளாண்மைக் கூலிகளாகவும் உள்ளனர். இவர்களுள் பெரும்பகுதி மக்கள் பொருளாதாரம், பண்பாட்டு நிலைகளில் தாழ்ந்து எழுத்தறிவு இல்லாதவர்களாக உள்ளனர். இவர்களின் வாழ்வில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த, 1965-இல் தெகரான் (Tehran) என்னுமிடத்தில் உலக அளவில் நடைபெற்ற மாநாட்டில், உழவர்களுக்குத் தொழில் அறிவுடன் எழுத்தறிவுக் கல்வியும் கற்றுத் தரவேண்டும் என்ற கருத்தை அறிஞர்கள் வெளியிட்டனர். இக் கருத்திற்குச் செயலுருவம் தர, இந்திய அரசு உலகிலேயே முதன்முதலாக 1968 1969 இல் உழவர் செயல்முறைக் கல்வித் திட்டத்தைத் தொடங்கியது. குறிப்பாகத் தமிழகத்தில் கோவை மாவட்டத்தில் உள்ள உடுமலைப் பேட்டை வட்டத்தில் 60 இடங்களில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

**திட்டத்தின் நோக்கங்கள்**: வேளாண்மைத் தொழிலாளர்களின் தொழில் திறமையினை முன்னேற்றுவதே இதன் தலையாய நோக்கம். மற்ற நோக்கங்களாவன: 1. உயர்தர நெல் விளைச்சல் தரக்கூடிய இடங்களில் வாழும் உழவர்கள் அதற்கேற்ற அறிவைப் பெற வழி செய்தல். 2. அவர்கள் கணிதத்தில் திறன் பெறவும், பல வகை விண்ணப்பங்கள் நிரப்பும் அறிவு பெறவும் கற்றுத் தருதல். 3. அவர்கள் உழவுத் தொழிலுக்கான கருவிகள், உயர்தர விதைகள், பயிர்த் தொழிலில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் ஆகியவை பற்றிக் கூறும் எளிய வெளியீடுகளைப் படித்துப் புரிந்து கொள்வதற்கான செயலை உண்டு பண்ணுதல். 4. வேளாண்மைத் தொடர்பான நல்ல செய்திகளை வானொலி மூலமாக ஒலி பரப்பி, உழவர்களும் அவர்கள் குடும்பத்தாரும் கேட்டுப் பயன் பெறச் செய்தல்.

**திட்டம் செயற்பட்ட முறை**: இந்த உழவர் மையங்களில் ஒரு நாளில் ஒன்றரை மணி வீதம் ஆண்டில் 200 நாட்கள் அல்லது 10 மாதங்கட்கு உள்ளூர் ஆசிரியர்களையோ படித்து வேலையற்ற பட்டதாரிகளையோ கொண்டு வகுப்புகள் நடத்தப்பட்டன. இத்திட்டம் கல்வி, சமூக நலம், வேளாண்மை, செய்தி மக்கள் தொடர்பு ஆகிய துறைகளின் கூட்டு முயற்சியால் உருவாக்கப்பட்டது. அடுத்து வந்த ஆண்டுகளில் இத்திட்டம் மேலும் ஏழு மாவட்டங்களில் விரிவுபடுத்தப்பட்டது. தஞ்சாவூர், வடஆர்க்காடு, திருநெல்வேலி, தென்ஆர்க்காடு, திருச்சி, மதுரை, செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்களில் 630க்கும் மேற்பட்ட மையங்கள் நிறுவப்பட்டன. இத்திட்டம் மேற்கொள்ளப்பட்ட மாவட்டங்களில் ஒரு மாவட்டத் திட்ட அலுவலர் பணியில் அமர்த்தப்பட்டார். இத்திட்டம் நல்ல முறையில் நடைபெறச் செய்வது அவரது பொறுப்பாகும்.

**திட்டத்தின் பெயர் மாற்றம்**: உழவர் செயல் முறைக் கல்வித் திட்டத்தையும் பள்ளி சாராக் கல்வித் திட்டத்தையும் 1979 80 முதல் நடுவண் அரசின் கல்வி அமைச்சகம் இணைத்து, நாட்டுப்புறச் செயல்முறைக் கல்வித் திட்டம் (Rural Functional Literacy Programme) எனப் பெயர் மாற்றி நடத்தி வருகிறது. இது தேசிய வயது வந்தோர் கல்வி திட்டத்தின் ஒரு பகுதியாக நடத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கு நடுவண் அரசு நூறு விழுக்காட்டுப் பண உதவி செய்து வருகிறது. இத்திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பு அந்தந்த மாநிலத்திடமும் நடுவண் அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட மாநிலங்களிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் மாவட்டம் ஒவ்வொன்றும் 300 மையங்களைத் தொடங்கிச் செயற்படுத்தி வருகின்றது.

நாட்டுப்புறச் செயல்முறைக் கல்வி மையம் ஒவ்வொன்றிலும் 30 எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் சேர்க்கப்படுகின்றனர். ஒவ்வொரு மையத்தையும் பயிற்சி பெற்ற ஓர் ஊக்குநர் நடத்தி வருகிறார். 30 மையங்களைத் திறம்பட நடத்துவதற்கு உதவி

செய்யவும் பார்வையிடவும் ஒரு மேற்பார்வையாளரும், 100 மையங்களுக்கு அனைத்துப் பொறுப்புகளையும் கவனிக்க ஒரு திட்ட அலுவலரும் உள்ளனர். இம் மையங்கள் கற்போருக்கு ஓரளவிற்கு வசதியான இடத்தில் வசதியான நேரத்தில் செயற்படுகின்றன. இவை 10 மாத காலம் நடத்தப்படுகின்றன. மையங்களில் கற்க விரும்புபவர்களுக்கு உடனடித் தேவைகளை நிறைவு செய்து உதவக் கூடிய எழுத்தறிவும் எண்ணறிவுக் கல்வியும் கற்றுத் தரப்படுகின்றன. நடுவண் அரசு இத்திட்டத்திற்கு முதலிடம் தந்து செயற்படுத்தி வருகிறது. இரா.செ.

**உழவர் திருநாள்**: காண்க: பொங்கல் திருநாள்.

**உழவன் வென்றி** என்பது புறப்பொருள் வெண்பாமாலை குறிப்பிடும் துறைகளுள் ஒன்று. அந்நூல் ஒழிபியல் என்னும் பகுதியில் பாடாண், வாகை ஆகிய திணைகளுக்கு உரியனவாகச் சில துறைகளை வகுத்துக் காட்டியுள்ளது; வாணிக வென்றி, மல் வென்றி முதலிய பதினெட்டு வகை வென்றிகளைக் குறிப்பிட்டு, அவை வாகைத் திணையினைச் சார்ந்தவை என்று கூறுகிறது. அவற்றுள் ஒன்று உழவன் வென்றி என்பதாகும். நிலத்தின் பதத்தினை உணர்ந்து நன்செய், புன்செய் நிலங்களில் தக்க பருவமறிந்து உழுது நடவுசெய்து, தானியங்களைப் பெருக உண்டாக்கும் உழவன் பல்லுயிர்க்கும் ஆக்கமாவான் என்பதாக, உழவர் மக்களின் திறமையினையும் பெருமையினையும் சிறப்பித்துப் பாடுவது இத்துறையாகும். அ.மா.ப.

**உழிஞை** தமிழ் மொழியின் பொருள் இலக்கணம் கூறும் புறப்பொருள் பற்றிய திணைகளுள் ஒன்று. அகப்பொருளைப் போலவே புறப்பொருளையும் ஏழு திணைகளாகப் பகுத்துத் தொல்காப்பியர் புறத்திணை இயலில் இலக்கணம் கூறியுள்ளார். கைக்கிளை, முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை, பெருந்திணை எனக் கூறிய ஏழு அகத்திணைகளுள் ஒவ்வொன்றுக்கும் புறனாக முறையே பாடாண், வஞ்சி, வெட்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி ஆகிய புறத்திணைகளை இயைத்து விளக்கியுள்ளார்.

உழிஞைத்திணை என்பது படையெடுத்து வந்த அரசன் பகை மன்னனின் அரணைச் சுற்றி வளைத்துச் சூழ்ந்து கொள்ளுவதனையும், அரணுக்குள் இருந்த அரசன் அதனை நெகிழவிடாது பாதுகாப்பதனையும் குறிக்கும். இதனைத் தொல்காப்பியம், ‘உழிஞை தானே மருதத்துப் புறனே’, ‘முழுமுதல் அரணம் முற்றலும் கோடலும், அனைநெறி மரபிற் றாகுமென்ப’ என்று விளக்குகிறது (தொல்.பொருள்.புறம். 9,10). இத்திணை மருதம் என்னும் அகத்திணைக்குப் புறமாக அமைந்ததாகும்.

இரண்டு அரசர்கள் மாறுபாடு கொண்டபோது, எதிர்த்துச்சென்று தாக்கும் ஆற்றலில்லாது மதிலினை அடைத்து உள்ளே இருக்கும் மன்னனின் அரண் பெரும்பாலும் மருதநிலத்தில் அமைந்திருக்கும். அதனை வளைத்திருக்கும் அரசனும் அவ்வரணைச் சூழ்ந்து அந்த நிலத்திலேயே இருப்பான். அகப்பொருளில் தலைவி ஊடல் கொண்ட நிலையில், தலைவன் வாயில் வேண்ட அவள் அதற்கு உடன்படாது மனைக் கதவம் அடைத்து உள்ளே இருக்கும் ஒழுக்கம் மருதம் எனப்படும். மதிலை அடைத்திருக்கும் மன்னன் மதிலின் உள்ளே செல்ல விரும்பியும் உடன்படாது எதிர்த்துக் கதவடைத்து உள்ளே இருக்கும் அரசன் செயலோடு, ஒருவகையில் மருத ஒழுக்கம் ஒத்திருத்தலால், உழிஞை என்னும் புறத்திணை மருதம் என்னும் அகத்திணைக்குப் புறனாக அமைகிறது. மருதத்திற்குப் போலவே உழிஞைக்கும் பெரும்பொழுது வரையப்படவில்லை. மருதப் பொருளாகிய ஊடலுக்கு ஏற்ற சிறுபொழுது விடியற் காலம் ஆதல் போல, உழிஞையாகிய அரண்முற்றுதலுக்கும் உரிய காலம் விடியலேயாகும். புலத்தலும் ஊடலும் ஆகிய காதற்போர் மருதத்துக்குரியது. அவ்வாறே அரணைச் சூழ்ந்தும் பற்றியும் அகப்படையும் புறப்படையும் போர் செய்வது உழிஞைக்குரியதாகும். இவ்வாற்றான் உழிஞை மருதத்திற்குப் புறனாக அமைகிறது.

உழிஞைத் திணைக்குரிய செயல்கள் எட்டு வகைப்படும் என்று தொல்காப்பியம் வகுக்கிறது. அவை பகைவர் நாட்டினைக் கைக்கொள்ளும் முன்னரே தாம் விரும்பியவாறு, அதனை வேண்டியவர்களுக்குக் கொடுக்க நினைத்த வெற்றித்திறன், தான் நினைத்ததை முடிக்கவல்ல அரசனது சிறப்பு, மதில் மேலேறிப் போர் செய்தல், பகை மன்னனின் அம்புகளைத் தடுத்தற்கமைந்த கிடுகுப் படையின் மிகுதி, மதிலின் உள்ளே இருக்கும் அரசனின் செல்வமிகுதி, அதனால் தன்னோடு மாறுபட்ட புறத்தவனைப் பொருது வருத்திய திறம், வலி மிக்குத்தானேயாகி நின்று வெளியே வந்து போர் செய்யும் தன்மை, மதிற்புறத்து அரசனின் படையினைப் பொருட்படுத்தாது உள்ளிருக்கும் அரசன் இகழ்ந்திருப்பதற்குக் காரணமான மதிலின் வன்மை ஆகியனவாகும். இவற்றுள் முதற்கண் கூறப்பட்ட நான்கும் மதிலை வளைத்துக் கொண்டுள்ள மன்னனுக்கும், அடுத்துக் கூறிய நான்கும் மதிலைக் காத்துநிற்கும் மன்னனுக்கும் உரியன. உழிஞைத்திணை குடை நாட்கோள் முதலாகத் தொகை நிலை ஈறா

கக் கூறப்படும் பன்னிரண்டு துறைகளைக் கொண்டது.

தொல்காப்பியத்திற்குப் பிற்பட்டுத் தோன்றிய பன்னிருபடலம், புறப்பொருள் வெண்பாமாலை முதலிய இலக்கண நூல்கள் புறத்திணைகள் பன்னிரண்டு எனக் கொண்டு இலக்கணங் கூறியுள்ளன. அவை தொல்காப்பியம் கூறும் உழிஞைத்திணைச் செய்தியில் எயிலை முற்றுகை இடுவோர் செயலையும், அந்த எயிலினை உள்ளே இருந்து காக்கும் வீரர்களின் செயலையும் தனித் தனியே உழிஞை, நொச்சி என்னும் இரு திணைகளுக்கு உரிமைப்படுத்தி இலக்கணம் வகுத்துள்ளன. மதிலை வளைத்து முற்றுகையிடுவோர் உழிஞை மாலையையும், மதிலுள்ளிருந்து காப்போர் நொச்சி மாலையையும் அணிவர். புறவேந்தனால் முற்றுகை இடப்பெற்ற அரசன் உள்மதிலினுள் இருந்து அதனைக் காக்க விரும்பும் மதிற்காவலை, 'முற்றிய அகத்தோன் வீழ்ந்த நொச்சி'என்னும் பெயரில் ஒரு துறையாகத் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். அதனை விரிவுபடுத்திப்பின் வந்தவர்கள் நொச்சி என ஒரு திணையாக்கி இலக்கணம் வகுத்துள்ளனர்.

புறப்பொருள் வெண்பாமாலை அடிப்படையில் அமைந்த உழிஞைத்திணை பற்றிய செய்திகள் வருமாறு: பகை மன்னரின் அரணைக் கைப்பற்றக் கருதிய வேந்தர் உழிஞை மலர் அல்லது உழிஞை மாலையினை அணிந்து செல்வர். செல்லுமுன்னர், நல்ல நேரத்தில் குடை, வாள் ஆகியவற்றை அனுப்புவர். முரசினுக்குப் பூசை இயற்றி அதனை, முழக்கிப் படையுடன் புறப்படுவர். அப்போது, சிலர் திருமால் சோ அரணை அழித்தமையினையும், சிவன் திரிபுரம் எரித்தமையினையும், முருகன் சூரனை வெல்லக் கருதிக் காந்தள் சூடியமையினையும் சிறப்பித்துக் கூறி, செல்லும் அரசரை ஊக்குவிப்பர்.

அரசர் சென்று பகைவரின் மதிற்புறத்தே தங்க, வீரர் சிலர் மதிலின் இயல்பறிந்து உரைப்பர். சிலர் கிடுகுப் படைச் சிறப்பினை இயம்புவர். யானையை ஏவி மதிற்கதவத்தைப் பிளந்து மதிலைக் கொள்ளுவர். காவற்காட்டினைக் கடந்து செல்வர். கிடுகுப் படையுடையோர் ஆரவாரித்து முற்செல்வர். அகழியின் புறத்தே சென்று, தோணி முதலியவற்றால் அதனைக் கடந்து போரிடுவர். மதிலின்கண் இருந்து தாக்கும் தாக்குதலுக்கு அஞ்சாது, ஏணி சாத்தி மதில்மேல் ஏறி உள்ளே உள்ள காவற்காட்டில் இறங்குவர். மதிலின் உள்ளே உள்ள வீரர்களின் சிறப்பினை அறிந்து சிலர் கூறுவர்.

முற்றுகை இட்டோர் அரணிலுள்ளாரொடு போரிடுவர். விடியற்காலையில் மதிலின் உள்ளே இருக்கும் மன்னரது முரசம் முழங்க, அதுகேட்டு மதிலை முற்றுகையிட்ட அரசரின் வீரர்கள் அகப்பை முதலியன வற்றை மதிலின் உள்ளே வீசி, 'இன்று மாலைக்குள் மதிலின் உள்ளே புகுந்து அதனைக் கைப்பற்றிய பின்னரே சமைத்து உண்போம்' என்று சூள் உரைப்பர். அவ்வாறே மதிலை அழித்து யானைகளைக் கைப்பற்றுவர்.

வேற்றரசன் முற்றுகை இட்டிருப்பதனை அறிந்து, அடைபட்டிருக்கும் அரசனுக்கு நண்பனான மற்றோர் அரசன் அந்த வேற்றரசனோடு சண்டையிட வருவதும் உண்டு. மதிலைக் கைப்பற்றியபின் மதிலை வென்றவர் உள்ளிடத்தைக் கழுதை ஏரால் உழுது, கவடி, குடைவேல் ஆகியவற்றை விதைப்பர். வென்ற அரசரின் வாள் நீராட்டப் பெறும். மதிலுள் இருக்கும் அரசரின் மகளை விரும்பி முற்றுகை இடுதலும் உண்டு. உள்ளிருக்கும் மன்னர் திறைகொடுப்ப முற்றுகை இட்டோர் அதனைப் பெற்று நீங்குவதும், பகை மன்னர் பணிந்த பின்னரும் அங்கிருந்து நீங்காது வென்ற மன்னர் அங்குச் சில காலம் தங்குதலும் உண்டு.

அ.மா.ப.

**உழிஞை மாலை** பிற்காலப் பாட்டியல் நூல்கள் கூறும் பிரபந்த வகைகளுள் ஒன்று. திணை அடிப்படையில் பாடும் மரபு மாறிய பின்னர், அத்திணைகள் தொடர்பான செய்திகள் சிலவற்றைப் பொருளாகக் கொண்டு சில பிரபந்தங்கள் தோன்றலாயின. புறத்திணைகளான வெட்சி, கரந்தை, வஞ்சி,காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை ஆகிய ஒவ்வொன்றினைப் பற்றியும் பிரபந்தங்கள் தோன்றலாயின. மதிலைச் சூழ்ந்து கொள்ளுவது உழிஞையாகும். அதனைப் பொருளாகக் கொண்டு முப்பது பாடல்களால் பாடப்பெறும் பிரபந்தம் உழிஞைமாலை எனப்படும். இப்பிரபந்தம் எவ்வகைப் பாவினாலும் யாக்கப் பெறலாம். இதன் இலக்கணத்தினைப் பிரபந்த மரபியல், '..... சுற்றல் உழிஞை ....... இவை ஒன்பதும், எப்பாட்டாலும் முப்பதியம்பின், அப்பெயர் வர்க்கத்து அவ்வம் மாலை' என இயம்புகிறது (பி. ம. 17) இப்பிரபந்த இலக்கணம் சிதம்பரப் பாட்டியல் (46), முத்துவீரியம் (39), பிரபந்த தீபிகை (40) ஆகிய பாட்டியல் நூல்களில் கூறப்பட்டுள்ளது. அ.மா.ப.

**உழுது வித்திடுதல்** புறப்பொருள் வெண்பாமாலை கூறும் புறத்துறைகளுள் ஒன்று. உழிஞைத் திணையின் இருபத்து ஒன்பது துறைகளுள் உழுது வித்திடுதல் ஒன்றாகும். பகைவரின் பல அரணையும் அழித்து, அங்கே கழுதை பூட்டிய ஏரால் உழுது, கவடி, குடைவேல் ஆகியவற்றை விதைப்பது என இது பொருள்படும். இதனைப் புறப்பொருள் வெண்பாமாலை,'எண்ணார் பல்லெயில் கழுதை ஏர் உழுவித்து,

உண்ணா வரகெொடு கொள்வித்தின்று' என்று இலக் கணப்படுத்தியுள்ளது (பு.பொ.வெ. 120). இத்துறை தொல்காப்பிய உழிஞைத் திணையில் குறிப்பிடப்பட வில்லை. தாம் வென்ற பகைவர் நாட்டினைக் கழுதை ஏர் பூட்டி உழுதலும், அங்கே கவடி, குடை வேல் போல்வனவற்றை விதைத்தலும் ஆகிய காட்சி கள் புறநானூறு, சிலப்பதிகாரம் முதலிய இலக்கியங் களில் இடம்பெற்றுள்ளன. பாண்டியன் பல்யாக சாலை முது குடுமிப் பெருவழுதி தன் பகைவர் நாட் டினைத் தேரைச் செலுத்தி அழித்து, அங்கே கழுதை ஏர் பூட்டி உழுத செய்தியினை நெட்டிமையாரும் (புறம். 15: 1-3), அதியமான் நெடுமான் அஞ்சி மகன் பகைநாட்டில் 'வெள்வாய்க் கழுதைப் புல்லி னம் பூட்டி, வெள்ளை வரகும் கொள்ளும் விதைத்த' செய்தியினை ஒளவையாரும் (புறம். 392: 1,10) புறநானூற்றில் குறிப்பிட்டுள்ளனர். வடநாட்டு மன்னரின் மதில்களை அழித்து, அங்கே செங்குட்டு வன் கவடி வித்தினான் என்பதனை இளங்கோவடி கள், 'வடதிசை மன்னர் மன்எயில் முருக்கிக், கவடி வித்திய கழுதையேர் உழவன்' என்று (சிலப். 27: 225, 226) குறிப்பிட்டுள்ளார். அ.மா.ப.

**உழுந்திணைம் புலவர்**: இவர் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். உழுந்திணைம் புலவன் என்றும், உழுந்திணைம் புல்லன் என்றும் இவர் பெயர் சில ஏடுகளிற் காணப்படுகிறது. இவர்தம் ஒரே பாடல் குறுந்தொகை 333-ஆம் பாடலாக அமைந்துள்ளது. அது குறிஞ்சித் திணையில் தோழி தலைவியிடம் கூறுவதாக உள்ளது. தலைவியின் காதல் நோய் மிகுதியினை அறிந்த தோழி அறத்தொடு நிற்றலை மேற்கொண்டு, அதனால் தலைவன் மணம் பேசி வருதலைப் பெற்றோர் ஏற்றுக்கொள்ளுமாறு செய் வேன் என்று தலைவியிடம் கூறுகிறாள். ஒரு செயலைச் செய்ய முற்பட்டோர் அது நிறைவேறாத நிலையில் அடையும் வருத்தத்தினைப் 'பணிக்குறை வருத்தம்' என்று இப்புலவர் குறிப்பிட்டுள்ளார். மண வினை நிறைவுறாமல் குறைபட்டு நிற்றலால் தலை வன் அடைந்த வருத்தம் நீங்குமாறு, 'நம்முடைய களவொழுக்கத்தை அன்னைக்கு உணர்த்தித் தெளி வித்தால் வரும் குற்றம் யாது' என்று வினவுவதன் வாயிலாகத் தான் அறத்தொடு நின்று தலைவியின் துயர் நீக்குவதாகத் தோழி குறிப்பாக உணர்த்து வது நய மிக்குத் திகழ்கிறது. வீ.சே.

**உழை** ஏழிசைப் பெயர்களுள் ஒன்று. உழை முதற் கைக்கிளை இறுவாய் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. யாழில் இவ்விசைநரம்பின் ஒலி யானை பிளிறும் ஒலியாக ஒலிக்கும். வடமொழி இசையாசிரி யர் யானையின் ஒலியை நிடாதத்தில் (Nishadham) அடக்குவர். சரிகமபதநி என்னும் ஏழுசுரங்களுள் உழை 'நி' என்னும் சுரமாகும். சாமவேத கானம் நிடாத சுரத்தைத் தொடங்கும் இடமாகக் கொண்டது. பி.தெ.

**உழைக்கும் இனம்** என்பது பொதுவாக உழைக்கும் தொழிலாளர்களைக் குறிக்கும். அக்காலத் தில் சமுதாயத்தின் அடித்தளத்தில் இருந்த எளிமை யான வகுப்பினர் மட்டுமே உழைக்கும் இனம் (Proletariat) என்று கருதப்பட்டனர். இராணுவப் பணிக்கும் இவர்கள் சேரத் தகுதியற்றவர்களாக ஒதுக்கப்பட்டனர். இவர்கள்தங்கள் ஒரே சொத்தான குழந்தைகளை (Proles) வருவாய் ஈட்டக்கூடிய எந்த ஆக்கத் தொழில்களிலும் ஈடுபடுத்த முடியாததால், பிறரைச் சார்ந்தே வாழும் நிலையிலிருந்தனர். எனவே, இவர்கள் சமுதாயத்தை அண்டி வாழ்வோ ராகக் கருதப்பட்டனர். உழைக்கும் இனம், உலகத் தொழிலாளர்கள் என்ற சொற்கள் இன்றைய உலகில் அனைத்து நாடுகளிலும் பரவலாகப் பயன்படுத்தப் படுகின்றன.

தீவிரவாத சமதரும நோக்குடைய அறிஞர்கள் உழைக்கும் இனத்தின் முன்னேற்றத்தில் அக்கறை கொண்டுள்ளமையால், இவர்களைப் பற்றிய பொதுக் கருத்துகள் முற்போக்கான முறையில் மாறிவிட்டன. இப்போது உழைக்கும் இனம் என்பது தொழில் உற்பத்தியில் ஈடுபட்டுத் தங்களது உழைப்பின் பயனாக வருவாய் பெறுபவர்களைக் குறிக்கிறது. இந்த இனம் முற்றுரிமை ஆதாயம் (Monopolistic Profit) பெற விரும்பும் முதலாளித்துவச் சமுதாயத் தில் மிகுந்து காணப்படும். அச்சமுதாயத்தில் உழைக் கும் இனம் முதலாளிகளுக்குக் கட்டுப்பட்டு, அவர்கள் கொடுக்கும் பிழைப்பு மட்டக் கூலியைப் பெற்று வாழ வேண்டிய கீழ்நிலையில் உள்ளமையால், அவர்கள் எப் போதும் வறுமையில் உழல்வர் என்பது முற்போக்கு எழுத்தாளர்களின் கருத்து. ஆனால்,இன்றைய பொது வழக்கில் உழைக்கும் இனம் என்பது தொழில் துறை யில் ஈடுபட்டுக் கூலி பெறுபவர்களை மட்டுமன்றி, கூலிபெறும் உடலுழைப்பைச் செலுத்தும் தொழி லாளர், உடலுழைப்பற்ற தொழிலாளர், வேளாண் மைத் தொழிலாளர்,பணித்துறையினர், நிரந்தரமற்ற பணியாளர், வேலை பெறத் தகுதி பெற்றும் வேலையில்லாமல் தவிப்பவர்கள், வறுமையில் உள் ளோர் ஆகியோரை உள்ளடக்கும்.

உழைக்கும் இனம் தோன்றுவதற்குப் பல கார ணங்கள் இருந்தன. அவற்றில் மிகச் சிறப்பாக விளங் கியவை முதலாளித்துவ வளர்ச்சியும் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் தொழிற்புரட்சியும் ஆகும். ஊரகப் பகுதியில் வாழ்ந்த வேளாண்மையினரின் நிலங்களை

முதலாளிகள் வாங்கிக் கொண்டதனால், வேலை வாய்ப்பிற்காக வேளாண்மையினர் நகரத்தை நோக்கி உந்தப்பட்டனர். தொழில் வளர்ச்சியும் நகரியல் வளர்ச்சியும் வேளாண்மையினரை நகருக்கு ஈர்த்தன. அங்கே அவர்கள் தொழிற்சாலைகளில் ஈடுபடும் போது, தங்களுக்கென்று ஒரு நோக்கத்தினை ஏற்படுத்திக் கொண்டனர். எனவே, உழைக்கும் இனம் ஒரு நகர இயல் நிகழ்ச்சியாகக் கருதப்பட்டது.

தொழிற்புரட்சி உழைக்கும் இனம் தொடர்ந்து பெருகி வளர வாய்ப்பளித்தது. இப்புரட்சி தொழிற்சாலைகளின் உற்பத்தியையும் நாட்டின் செல்வத்தையும் பெருக்கிய போதிலும், முதலாளி–தொழிலாளி உறவில் பல சிக்கல்களைஉண்டுபண்ணியது. முதலாளி தொழிலாளியைச் சுரண்டி வாழ முற்பட்டான். எனவே, தொழிலாளர்கள் ஓர் இனமாகவும், முதலாளிகள் ஓர் இனமாகவும் இரு துருவங்களாகச் செயற்பட முற்பட்டனர். இது எவ்வாறு நிகழ்ந்தது என்பதனைக் காரல் மார்க்சு பின்வருமாறு விளக்கினார்: ‘தொழிற்சாலைகளில் தொழிலாளர்கள் தங்கள் உழைப்பின் திறமையால் பொருள்களை உற்பத்தி செய்கின்றனர். எனவே, அவர்கள் உண்டாக்கும் பொருள்களின் மதிப்பு அவர்களையே சார வேண்டும். ஆனால், முதலாளிகள் தொழிலாளிகளுக்குரிய பங்கில் ஒரு பகுதியை மட்டும் அவர்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக அளிக்கின்றனர். எனவே, தொழிலாளிகளின் உழைப்பினால் பெறும் மிகை மதிப்பை முதலாளிகள் பெறுகின்றனர். முதலாளிகளின் நோக்கம் எல்லா வகைகளிலும் இந்த மிகை மதிப்பை உயர்த்த வேண்டும் என்பதே. இதற்காகத் தொழிலாளிகளைச் சுரண்ட முற்படுகின்றனர். எடுத்துகாட்டாக, தொழிலாளர்களின் உழைக்கும் நேரத்தை அதிகரித்தல், அவர்களின் தனிப்பட்ட தேவையை நிறைவு செய்யத் தேவையான நேரத்தைக் குறைத்தல், குழந்தைகளையும் பெண்களையும் மிகுதியான நேரம் உழைக்க வைத்தல், அவர்களுக்குக் குறைந்த கூலியை வழங்கல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவர். இதனால், சுரண்டும் இனமும் சுரண்டப்பட்ட இனமும் நாளடைவில் ஒருவரை ஒருவர் எதிர்த்துப் போராட வேண்டியநிலை ஏற்படுகிறது. சமுதாயத்தில் ஏற்பட்ட பல மாற்றங்களும் உழைக்கும் இனம் ஒன்றுபட ஏதுவாயின.

தொழிலாளிகளின் துன்பங்களும் சிக்கல்களும் கூலி உயர்வுக்காகத் தொடர்ந்து போராட வேண்டிய நிலையையும், தங்களை முதலாளிகளிடமிருந்து தனியாகப் பிரித்துச் செயற்பட வேண்டிய தவிர்க்க இயலா நிலையையும் காலப்போக்கில் ஏற்படுத்தின. இவை முதன் முதலில் தொழிற்சங்க அமைப்பின் மூலம் ஏற்படுத்தப்பட்டன. அடுத்து, பொருள்கள் உற்பத்தி செய்யும் ஒரு சமுதாயத்தில், தொழிலாளிகள் தங்கள் பொருளாதார நிலையை இயல்பாக முன்னேற்றிக் கொள்ள முடியாது என்ற கோட்பாடுகளை ஏற்றுக் கொள்வதன் மூலமாகவும் தொழிலாளி முதலாளி உறவு பிரிந்தே ஆகவேண்டும் என்ற நிலை உணரப்படுகிறது. சமுதாயத்தில் உள்ள மரபியல் இனங்களை அழித்து, சமூக நலனைக் காக்க வேண்டும் என்ற நோக்குள்ள அரசியல் கட்சிகள் தோன்றியமையாலும் இவ்வுணர்வு பரப்பப்பட்டது.

இந்த உணர்வு உலகத்தில் உள்ள எல்லாத் தொழிலாளர்களிடையேயும் தோன்றியது. மேலும், அவர்கள் ஒரே கொள்கைக்காகப் போராடுவதால், பலதரப்பட்ட நாடுகளிடையே காணப்பட்ட மதம், இனம், மொழி ஆகிய வேறுபாடுகள் நீங்கி அனைவரும் கூட்டொருமை (Solidarity) பெற்றனர். இதனால், உழைக்கும் இனத்தை உலகத் தொழிற்சாலைத் தொழிலர் என்று அழைக்கின்றனர்.

முதல் உலகப்போருக்குப் பின்னர், பொதுவுடைமைக் கட்சி ஒவ்வொரு நாட்டிலும் உழைக்கும் இனத்தின் உற்ற தோழனாக ஆதரவளித்து வந்தது. பொதுவுடைமைக் கொள்கையின் முன்னோடிகளான காரல்மார்க்சு, எங்கல்சு, இலெனின், திராட்சுகி போன்றவர்கள், ‘உலகத் தொழிலாளர்களே ஒன்று படுங்கள்’ என்று உழைக்கும் இனத்தின் ஆதிக்கத்தை (Dictatorship of the Proletariat) வலியுறுத்தினர்.

மு.இரா.

துணை நூல்கள்:

**Karl Marx**, Das Capital, Progressive Publishers, Moscow, 1954.

**Deane**, The First Industrial Revolution, Cambridge University Press, London, 1965.

**Vladimir Poletayev**, A Short History of the U.S.S.R, Sterling Publishers, New Delhi, 1976.

**Dbiewanowski, M.K.**, A History of Soviet Russia, Prentice Hall, New Jersey, 1978.

**உழைப்பாளர் குழாம்**: ஒரு நாட்டின் உழைப்பாளர் குழாமை அந்நாட்டின் தொழிலாளர் படை என்றும் குறிக்கலாம். கூலியைப் பெறும் வேலையில் அமர்ந்துள்ள ஆண், பெண், சிறுவர் ஆகியோரின் மொத்தத் தொகையே ஒரு நாட்டின் உழைப்பாளர் குழாமைக் (Labour Force) குறிக்கும். இந்த ஆற்றல்

சொந்தத் தொழில் புரிபவர்களையும், பகுதி நேரப் பணி செய்பவர்களையும் உள்ளடக்கும். அதாவது, உழைப்பு அங்காடியில் (Labour Market) தங்கள் உழைப்பைச் செயற்படுத்துகிற தொழிலாளிகளின் மொத்த எண்ணிக்கை உழைப்பாளர் குழாமாகக் கருதப்படுகிறது.

உழைப்பாளர் குழாமுக்கும் உழைப்பு அளிப்புக் கும் (Labour Supply)வேறுபாடுகள் உண்டு. உழைப்பு அளிப்பு என்பது உழைக்கும் சக்தி அல்லது உழைக்கும் தகுதி படைத்த அனைவரையும் குறிக்கும். ஆனால், தகுதி படைத்த அனைவரும் ஊதியமுள்ள வேலையில் அமர்ந்திருக்க வேண்டும் என்பதில்லை. ஒரு சிலர் வேலை பெற முடியாமல் இருக்கலாம்; ஒரு சிலர் வேலைக்குச் சென்று வருமானம் ஈட்ட வேண்டும் என்ற தேவையின்மையால் வேலைக்குச் செல்லாமல் இருக்கலாம். இவர்கள் எல்லாம் உழைப்பின் அளிப் பில் அடங்குவர். உழைப்பாளர் குழாம் உழைப்பு அளிப்பின் ஓர் உறுப்பு. அது உழைப்பு அளிப்பை விடச் சிறியதாகவே இருக்கும்.

ஒரு நாட்டின் உற்பத்தித் திறனை உயர்த்துவதில் அந்நாட்டின் உழைப்பாளர் குழாமுக்குப் பெரும் பங்கு உண்டு. பிற உற்பத்திக் காரணிகளான நிலம், மூல தனம் ஆகியவற்றின் அளவு மாறாமல் இருக்கும் போது, அந்நாட்டின் உற்பத்தித் திறன் உழைப் பாளர் குழாமின் அளவைப் பொறுத்து மிகுதியா கும். பொருளியலின் தந்தை ஆடம் சுமித்து (Adam Smith) ஒரு நாட்டின் உற்பத்தி மூலம் அந்நாட்டின் உழைப்பாளர் குழாமேயன்றிப் பிற காரணிகள் அன்று எனக் கூறியிருக்கிறார்.

உழைப்பாளர் குழாமின் அளவை முடிவு செய்யும் காரணிகள் பல உள்ளன: 1) மக்கள் தொகையின் அளவும் அதில் ஏற்படும் மாற்றங்களும் உழைப் பாளர் குழாமின் அளவைப் பாதிக்கின்றன. மக்கள் தொகைப் பெருக்கம் தொடர்ந்து நிகழுமேயானால், உழைப்பாளர் குழாமின் அளவும் பெருகும். இருப்பி னும், பெருகும் மக்கள் அனைவரும் உழைப்பாளர் குழா மில் சேர்வார்கள் என்பதில்லை. ஏனெனில் மக்களுள் சிலர் மிகச் சிறியவர்களாகவோ வயதானவர்களா கவோ உடல் ஊனமற்றவர்களாகவோ முழுநேர மாண வர்களாகவோ வீட்டுவேலைகளையும் குழந்தைகளை யும் கவனித்துக் கொள்பவர்களாகவோ இருக்கக் கூடும். 2)ஒரு சமுதாயத்தின் சமூகப் பொருளாதார மனநிலை யும் அதன் உழைப்பாளர் குழாமின் அளவை வரையறுக் கும். எடுத்துக்காட்டாக, பெண்களையும் குழந்தை களையும் பணிக்கு அனுமதிக்கும் மனநிலையும் பண் பாடும் இருக்குமேயானால், அச்சமுதாயத்தின் உழைப் பாளர் குழாம் மிகுதியாகலாம். அதுபோல, வாழ்க் கைத் தரம் (Standard of Living) உயர வேண்டும் என்ற வேட்கை சமுதாயத்தில் பரந்து காணப்படு மாயின், குடும்பத்தில் பெரும்பகுதியினர் உழைக்க முற்படுவர். அது உழைப்பாளர் குழாமை வலுப் படுத்தும். மேலும், சமுதாயத்தின் சமய, பழக்க வழக்கங்களும் உழைப்பாளர் குழாமை வரையறுக்கும். 3) நாட்டின் பொருளாதார வளர்ச்சி நிலை, அதா வது வறுமையான, பின்தங்கிய, வளர்ச்சியற்ற அல்லது வளர்ச்சியுற்ற நிலை ஆகியனவும் உழைப்பாளர் குழாமில் மாறுதலை உண்டுபண்ணும். எடுத்துக்காட் டாக, வறுமை மிக்க நாட்டின் எளிய பிழைப்பு நிலை (Meagre Subsistence) சிறியவர்களையும் பெண்களை யும் வயதானவர்களையும் ஊதியம் பெறும் வேலை செய்யுமாறு கட்டாயப்படுத்தும். இதனால், அந்நாட் டின் உழைப்பாளர் குழாம் மிகுதியாகும். 4) மாணவர் கள் பள்ளியைவிட்டு வெளியேறும் சராசரி வயது, தொழிலாளர் ஓய்வு பெறும் சராசரி வயது, ஆண்டுக் குச் சராசரி வேலை செய்யும் கால அளவு ஆகியனவும் உழைப்பாளர் குழாமை வரையறுக்கும். 5) இறுதியாக, உற்பத்தித் துறையில் ஏற்படும் பருவ மாற்றங்கள், குறுகிய கால வாணிகச் சுழற்சியினால் ஏற்படும் வேலை வாய்ப்பு மாற்றங்கள் போன்றவையும் உழைப்பாளர் குழாமின் அளவில் மாறுதல் உண்டு பண்ணும்.

ஆனால், உழைப்பாளர் குழாமின் பண்பு (Quality of Labour Force) அந்நாட்டின் தட்பவெப்ப நிலை, பரம்பரைக் குணம் (Hereditory Character), கல்வி அறிவு, தொழில் அமைப்பு முறை (Industrial Organi-sation) ஆகியவற்றைச் சார்ந்து அமைகிறது.

மு.இரா.

துணை நூல்கள்:

**Lloyd G. Reynolds**, Labour Economic and Labour Relations, Prentice Hall of India, New Delhi, 1978.

**Chamberlin, N.W.**, Labour, Mc Graw Hill Book Company, New York, 1958.

**Richard Perlmour**, Labour Theory, John Wiley and Sons, Inc, New York, 1969.

**உழைப்பாளர் மேலாண்மை உறவுகள்** என்பது தொழிலாளர்களுக்கும் மேலாண்மையினருக்கு மிடையே நிலவும் உறவைக் (Labour Management Relations) குறிக்கும். தொழில் முனைவோர் (Entrepreneur) நிலம், உழைப்பு, மூலதனம், மூலப்

பொருள்கள் ஆகிய உற்பத்திக் காரணிகளின் துணையோடு பொருள்களை உற்பத்தி செய்கின்றனர். தொழில் உற்பத்தி தரமாகவும் சிறப்பாகவும் செம்மையாகவும் நடைபெற வேண்டுமெனில், தொழில் முனைவோருக்கும் பிற காரணிகளின் உரிமையாளர்களுக்கும் இடையே நல்லுறவும் ஒத்துழைப்பும் நிலவ வேண்டும். உற்பத்திக் காரணிகளுள் உழைப்பாளரின் ஒத்துழைப்பு மிகவும் இன்றியமையாததாகும். தொழில் முனைவோரும் அவர்களின் பேராளர்களாகப் பணியாற்றும் உயர்நிலைக் கண்காணிப்பாளர்களும் மேலாண்மையினர் என்ற பிரிவில் (Managerial Class) அடங்குவர். தொழிலாளர் அல்லது உழைப்பாளர் இனம் என அழைக்கப்படும் வகுப்பினர் உற்பத்திப் பெருக்கத்திற்கு உழைப்பதுடன், மேலாண்மையினரால்சுரண்டப்படாதபடி தங்கள் நலனைப் பாதுகாக்கவும் வேண்டும். இந்த இரு வகுப்பினரும் நல்ல உறவுகளை ஏற்படுத்திக் கொண்டு இணைந்து தொழில் உற்பத்திக்குப் பாடுபட வேண்டியது இன்றியமையாததாகிறது. எனவே, தொழிலாளர் – மேலாண்மை உறவுகள் தொழில் உற்பத்தியின் அடிப்படைக் கூறாகத் திகழ்கின்ற அமைதியான ஒத்துழைப்பு, நல்லெண்ணம், நல்ல நடைமுறைத்தொடர்புகள் ஆகியன உள்ள சூழ்நிலையில்தான் தொழிற்சாலையின் நோக்கங்களைச் சிறந்த முறையில் அடைய முடியும். உழைப்பாளர்-மேலாண்மை உறவுகளைச் சுருக்கமாகத் தொழிலுறவுகள் (Industrial Relations) என்றும் குறிக்கலாம்.

தொழில் உறவுகள் தொழிற்சாலைகள் தோன்ற ஆரம்பித்த காலத்திலேயே தோன்றின. ஆனால், காலம் செல்லச் செல்ல இவ்வுறவுகள் தொடர்பான சிக்கல்கள் எண்ணிக்கையிலும் வடிவங்களிலும் பெருகிவிட்டன. பண்டைக்காலச் சமுதாயத்தில் தொழிற்சாலையின் முதலாளியே மேலாண்மையையும் கவனித்து வந்தார். எனவே, தொழிலாளிக்கும் முதலாளிக்கும் இடையே நேரடித் தொடர்பு இருந்தது. சிக்கல்களும் குறைந்து காணப்பட்டன. எனவே, முதலாளி தொழிலாளர்களின் ஒத்துழைப்பை எளிதில் பெறமுடிந்தது. அவர்களிடையே இனிய உறவு காணப்பட்டது. ஆனால், பேரளவுத் தொழில்களும் கூட்டுறுப்பு நிறுவனங்களும் (Joint Stock Companies) தோன்றியதும் தொழில் உறவுகள் வேறுபட்டன. தொழிற்சாலைகளின் உரிமையும் மேலாண்மையும் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டன. முதலாளிக்கும் தொழிலாளிக்கும்இடையே இருந்த நேரடித்தொடர்பு துண்டிக்கப்பட்டது. அவர்களுக்கிடையே மேலாண்மை என்ற துறை தோன்றித் தொழிலாளர்களிடையே உள்ள சிக்கல்களைத்தீர்க்க முனைந்தது. உழைப்பாளர்களும் மேலாண்மையினரும் தொழிற்சாலையின் பொது நலனில் அக்கறை கொண்டிருந்தாலும், பல சமயங்களில் கருத்து வேறுபாடுகள் காரணமாக வெவ்வேறு கோணங்களில் செயற்பட முயன்றனர். தப்பெண்ணமும் நலன் முரண்பாடுகளும் (Conflict of Interest) தோன்றின. நன்னம்பிக்கையும் (Mutual Trust) நல்லெண்ணமும் மறைந்து, நம்பிக்கையின்மையும் வெறுப்புணர்ச்சியும் பகைமை உணர்ச்சியும் தொழிலாளர்களுக்கும் மேலாண்மைக்கும் (Management) இடையே வளர்ச்சி பெற்றன.

இன்றைய தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளிகள் தொடக்க காலத்தில் இருந்தது போன்ற வலிமையற்ற, உதவியற்ற தனி ஆட்கள் அல்லர். தொழிலாளர்கள் ஒன்றாக இணைந்து, தொழிலாளர் கழகங்களை அமைத்து, அவற்றின் மூலம் தங்களது வாழ்க்கையையும், பணி நிலைகளையும் உயர்த்திக் கொள்வதன் மதிப்பினை உணர்ந்துள்ளனர். தொழிலாளர் கழகங்கள் (Labour Unions) வலிமை மிக்கநிறுவனங்களாக மாறிய பிறகு, உழைப்பாளர்-மேலாண்மை உறவுகளில் முரண்பாடுகள் தீவிரமாகக் காணப்பட்டன. தொழிலாளர் கழகங்கள் உறுப்பினர்களின் நலனுக்காகப் பல வேண்டுகோள்களை மேலாண்மை முன் வைத்து, அவற்றைத் தங்களது பலத்தின் மூலம் பெறுவதற்கும் முற்பட்டன. மேலாண்மை,தொழிலாளர்களின் வேண்டுகோள்களை ஏற்க மறுத்தபோது, தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். வேலைநிறுத்தங்கள் (Strikes) தொழிலாளர்களின் மனித உரிமைகளை நிலைநாட்டும் கருவிகளாகப் பயன்படுத்தப்பட்டன. மேலாண்மையும் தனது வலிமையைத் தொழிலாளர் கழகங்களுக்கு எதிராகக் காட்டத் தொடங்கின. தொழிலாளர்களைத் தன் வயப்படுத்துவதற்கு மேலாண்மை கதவடைப்பு என்னும் கருவியைப் பயன்படுத்தியது. ஆகவே, வேலைநிறுத்தமும் கதவடைப்பும் (Lock out) தொழில் துறையில் நிலையாக நிலவும் தவிர்க்க இயலாப் பண்புகளாகிவிட்டன. இவை இரண்டும் இன்று தொழில் அமைதியின்மையின் அறிகுறிகளாகக் கருதப்படுகின்றன.

தொழிலாளர் மேலாண்மைக்கிடையே ஏற்படும் முரண்பாடுகளால் உண்டாகும் தொழில் அமைதியின்மை நாட்டின் பொருளாதாரத்தையும் சமுதாயத்தையும் பாதிக்கிறது. மனித வேலை நேரம் வீணடிக்கப்படுவதால் உற்பத்தி பாதிக்கப்பட்டு முதலாளியின் ஆதாயம் குறைகிறது. தொழிலாளிகள் தாங்கள் பெறும் ஊதியத்தை இழக்கின்றனர். நாட்டின் வருவாயும் வேலைவாய்ப்புகளும் குறைகின்றன. இவற்றைத் தவிர்க்க வேண்டுமெனில், தொழிலாளர்களும் மேலாண்மையும் இணக்கமான

உறவினை வளர்க்க வேண்டும். இதற்குத் தொழிலாளர் கழகங்கள், மேலாண்மை ஆகியவற்றின் மனப்பான்மையில் பெரும் மாற்றங்கள் ஏற்பட வேண்டும். மேலாண்மையிடம் பெரும்பான்மையாகக் காணப்படும் அதிகார மனப்பான்மை மறைய வேண்டும். தொழிலாளியை ஒரு பண்டமாகவோ உற்பத்திக் காரணியாகவோ மட்டும் கருதித் தங்களது விருப்பம் போல் வாங்கவோ விற்கவோ முடியும் என்ற மனப்போக்கினை மேலாண்மை கைவிடவேண்டும். தொழிற்சாலையில் பணியாற்றும் பெரும்பாலான தொழிலாளர்களின் ஒத்துழைப்பைப் பெறுவதற்கான சிறப்பு நடவடிக்கைகளை எடுக்கும் மனப்பான்மை மேலோங்கி வளரவேண்டும். தொழிலாளிகளும் தங்கள் பொறுப்புகளை உணர்ந்து அமைதியான ஒத்துழைப்பினை நல்கி, மேலாண்மையினரை நம்பும் சூழ்நிலையை உருவாக்க வேண்டும். உற்பத்தி பெருகாமல் ஊதியம் பெருக வேண்டும் என்ற நினைப்பு மாறவேண்டும். நியாயமற்ற வேண்டுகோள்களை முன்வைத்து அவற்றை அடைவதற்குத் தங்களது இணைந்த வலிமையைப் பயன்படுத்தக் கூடாது. வேலை நிறுத்தம் அல்லது கதவடைப்பு நாட்களில் தொழிற்சாலையில் உள்ள இயந்திரங்களையும் மற்றச் சொத்துகளையும் சேதப்படுத்தக் கூடாது. மேலும், தொழிலாளர் கழகங்கள் அரசியல் கட்சிகளின் தூண்டுதல்களுக்கு இணங்குதல் கூடாது.

தொழிலாளர்கள் தங்கள் தொழிலில் மனத்தை ஈடுபடுத்திச் செய்தால்தான் அவர்களது பணியைச் சிறந்த முறையில் செய்ய முடியும். தொழிலாளர்கள் தங்கள் பணி நிறுவனம், அதன் நோக்கம் ஆகியவற்றைப் பற்றி நன்கு அறிந்து, அவற்றில் மனநிறைவு அடைந்துவிட்டால் அற்புதங்களை நிகழ்த்துவர். அந்த மனநிலை அவர்களுக்கு இல்லையெனில், தொழிற்சாலை பிற வளங்களைப் பேரளவில் பெற்றிருப்பினும் முன்னேற்றமடைய முடியாது. எனவே, தொழிலாளிகள் அனைவரும் தங்களிடம் ஒப்படைத்துள்ள வேலையின்மீது ஆர்வம் கொண்டவர்களாக இருக்க வேண்டியது இன்றியமையாததாகும். கீழ்க் காணும் நடவடிக்கைகள் தொழிலாளர்களின் வேலை நிலைகளைச் சீர்செய்ய உதவுவதால், அவை தொழிலாளர்களின் ஊக்கத்தை மேம்படுத்தி நல்ல தொழிலாளர்-மேலாண்மை உறவு வளர வழி வகுக்கும்.

1. சிறந்த கூலி அமைப்பு: தொழில்ாளியின் வாங்கும் சக்தியையும் வாழ்க்கைத் தரத்தையும் வரையறுப்பது அவன் பெறும் கூலியைப் பொறுத்து அமைகிறது. அவன் பெறும் கூலியானது பிழைப்பு மட்டக் கூலியாக (Subsistence Wage) அல்லாது, தன்னையும் தன்குடும்பத்தினரையும் நல்லமுறையில் பேணிக்காக்க உதவ வேண்டும். கூலிவிலைவாசிகளுக்கு ஏற்றவாறு உயர வேண்டும். பணக் கூலியும் (Money Wage) உண்மைக் கூலியும் (Real Wage) ஒரே சீராக உயர வேண்டும். மேலாண்மை அதிக ஆதாயத்தைப் பெற வேண்டும் என்ற நோக்கத்திற்காகத் தொழிலாளிகளைச் சுரண்டி அவர்களுக்குரிய கூலியைக் குறைக்கக் கூடாது. தான் பெறும் கூலி தனக்கு நிறைவு அளிக்குமேயானால் தொழிலாளி மேலாண்மையோடு நல்ல முறையில் ஒத்துழைப்பான்.

2. வேலைப் பாதுகாப்பு: மேலாண்மை தன் தொழிலாளருக்கு நிலையான வேலைப் பாதுகாப்பு அளிக்க வேண்டும். வேலையிலிருந்து எந்த நேரம் வேண்டுமானாலும் நீக்கப்படலாம் என்ற நிலை இருப்பின், தொழிலாளி தனது உள்ளத்தை ஈடுபடுத்தி முனைப்புடன் வேலை செய்யமாட்டான். இதனால், உற்பத்தி பாதிக்கப்படுவதோடு அவன் நம்பிக்கையின்மையோடும் மேலாண்மையின்மீது காழ்ப்புணர்ச்சியோடும் வேலை செய்வான்.

3. நல்ல வேலை உயர்வுக் கொள்கை: மேலாண்மை சிறந்த வேலை உயர்வுக் கொள்கையைப் (Promotion Policy) பின்பற்றுவதன் மூலம் தொழிலாளிகளிடையே திறமையுள்ளவர்கள் மேல் பதவிக்கு உயர்த்தப்படுவர் என்ற நம்பிக்கையை உருவாக்க முடியும். இதனால், தொழிலாளியின் ஊக்கத்தையும் உள நிறைவான ஒத்துழைப்பையும் பெற முடியும்.

4. குறை கேட்கும் முறை: ஒவ்வொரு தொழிற்சாலையிலும் தொழிலாளர்களிடையே ஏற்படும் குறைகளை அவ்வப்போது கேட்டு, அவற்றைத் தீர்க்கும் சிறந்த குறை கேட்கும் முறையை (Grievance Procedure) ஏற்படுத்த வேண்டும். அது மேலாண்மை தொழிலாளர்களின் நலனில் அக்கறை கொண்டுள்ளது; ஏற்றத்தாழ்வற்ற நியாய முறையில் நடந்து கொள்கிறது என்ற உணர்வை ஏற்படுத்தும்.

5. தொழிலாளர்கள் மேலாண்மையில்பங்கு பெறுதல்: வழக்கமாகத்தொழிலாளர்கள் ஒரு குழுவாகவும் மேலாண்மைவேறு குழுவாகவும்ஒருவர் நிலையை மற்றொருவர் புரிந்து கொள்ள இயலாத நிலையில் இருக்கின்றனர். மேலாண்மையில் தொழிலாளர்களுக்கும் பங்கு(Labour Participation in Management) கொடுத்தால் தொழிலாளர்களுக்குத் தாங்களும் தொழிற்சாலையின் உரிமையாளர்கள் என்ற உணர்வு ஏற்படும். தாங்களும் தொழிற்சாலையைச் சேர்ந்தவர்கள் என்ற உணர்வு வளரும். மேலாண்மையின் சிக்கல்களை எளிதில் புரிந்து அவற்றைத் தீர்ப்பதற்குத் தொழிலா

ளரும் உள நிறைவான ஒத்துழைப்பை அளிக்க இய லும். இதனால், நாளடைவில் தொழில்துறையில் மக்க ளாட்சி (Industrial Democracy) மலர வாய்ப்புண்டு.

அவ்வப்போது ஏற்படும் தொழில் தகராறு களைத் தீர்க்க அரசு நடுவராகப் பணியாற்றுகிறது. உழைப்பாளர்-மேலாண்மைத் தொடர்புகள்மேலோங் கத் தொழிலாளியும் மேலாண்மையும் அரசும் அய ராது பாடுபட வேண்டும். அதுவே, ஒரு நாட்டின் வலி வுக்கு அடிப்படையாக அமையும் என்பதில்ஐயமில்லை.

மு. இரா.

துணை நூல்கள்:

**Bhushan**, **Y.K.**, Fundamentals of Business Organisations, Sultan Chovel and Company, New-Delhi, 1973.

**Acharya, B.K.** and **Govekar, P.B.**, Principles of Business Organisation, Kitab Mahal, Allahabad, 1974.

**Saksena**, Business Administration, Sahitya Bhavan, Agra, 1983.

**உழைப்பு**: உற்பத்திக் காரணிகள் என்று கூறப்படும் ஆக்க வளங்களுள் (Productive Resources) உழைப்பு (Labour) என்பதும் ஒன்றாகும். பொதுக் கண்ணோட்டத்தில் உழைப்புஎன்ற சொல் மனிதனின் அறிவுசாரா, இயல்பான உடல் உழைப்பைத்தான் குறிக்கும். ஆனால், இன்றைய தொழில் துறையில் மனி தனின் உடலும் உள்ளமும் ஒன்றாக உழைக்க வேண்டி யது இன்றியமையாதது. எனவே, பொருளியல் வழியில் உழைப்பு என்பது மனிதனின் உடல்சார்ந்த, மனஞ் சார்ந்த, திறம்பெற்ற, திறம்பெறாத உற்பத்தி முயற்சி களைக் குறிக்கும். இம் முயற்சிக்குப் பரிசாக அளிக்கப் படும் ஊதியம் கூலியாகும். அன்பிற்காக, மகிழ்வுக்காக அளிக்கப்படும் கூலி பெறாத உழைப்பு பொருளியல் நோக்கில் உழைப்பு ஆகாது. எடுத்துக்காட்டாக, விளையாடுதல், தோட்டவேலை செய்தல், ஒரு தாய் தன் சேய்க்கு ஆற்றும் பணி ஆகியவை உழைப்பில் அடங்காது.

பொருளியல் பேரறிஞராகிய மார்சல் (Mashall) உழைப்பிற்குப் பின்வரும் இலக்கணம் கூறுகிறார்: 'உழைப்பு என்பது மூளையையோ உடலையோ முழுவதுமாகவோ பகுதியர்கவோ வருத்தி ஏதோ ஒன்றைப் படைப்பதற்காகச் செய்கின்ற செயலைக் குறிக்கும். ஆனால், அந்தச் செயலிலிருந்து கிடைக்கும்

உழைப்பின் வகைகளைக் கீழ்க்காணும் பட்டியல் விளக்குகிறது.

உழைப்பு
- உடல்சார்ந்த உழைப்பு (Physical Labour)
- மனஞ்சார்ந்த உழைப்பு (Mental Labour)

உழைப்பு
- திறம்பெற்ற உழைப்பு (Skilled Labour)
- பகுதித் திறம்பெற்ற உழைப்பு (Semi-skilled Labour)
- திறம்பெறா உழைப்பு (Unskilled Labour)

உழைப்பு
- வேளாண்மை உழைப்பு (Agricultural Labour)
- தொழிற்சாலை உழைப்பு (Industrial Labour)
- பண்ணை உழைப்பு (Plantation Labour)
- பணி உழைப்பு (Services)
- பிற உழைப்பு (Miscellaneous Labour)

உழைப்பு
- ஆக்கவள உழைப்பு (Productive Labour)
- ஆக்கமற்ற உழைப்பு (Unproductive Labour)

மகிழ்ச்சியை உழைப்பு உள்ளடக்காது'. இவ்விலக்கணத்தின்படி உழைப்பு எல்லாவகையான தொழில் திறமைகளையும் உள்ளடக்கும். கல்வி அறிவில்லாத தொழிலாளர்களின் உற்பத்தி முயற்சிகளும் கைத்தொழில் கலைஞர்கள், கல்வியாளர்கள், ஆசிரியர்கள், வழக்கறிஞர்கள், நீதிபதிகள், எழுத்தாளர்கள், வேளாண்மைத் தொழிலாளர்கள், தொழிற்சாலைத் தொழிலாளர்கள், வணிகர்கள், நுண்கலைஞர்கள், இலக்கிய அறிஞர்கள், மருத்துவர்கள், அறிவியல் வல்லுநர்கள், நிருவாகிகள் ஆகியோரின் பணிமுயற்சிகளும் மார்சலின் உழைப்பு இலக்கணத்தினுள் அடங்குகின்றன.

இயற்கைக் கோட்பாட்டினர் (Physiocrats) உழைப்பினை ஆக்க வளமுடைய உழைப்பு (Productive Labour), ஆக்கமற்ற உழைப்பு (Unproductive Labour) என்று இரு வகைப்படுத்தினர். உழைப்பின் பயன்பாடு காரணமாக மூலப்பொருள்களின் மதிப்பு உயர்ந்து பொருள்களின் அளவும் கூடுமேயானால் அவ்வுழைப்பு ஆக்க வளமுடைய உழைப்பு என்றும், அவ்வாறு மூலப்பொருள்களின் மதிப்பை உயர்த்த இயலாத உழைப்பு ஆக்கமற்ற உழைப்பு என்றும் கருதப்பட்டன. இயற்கைக் கோட்பாட்டினரின் கருத்துப்படி, வேளாண்மையில் ஈடுபடும் உழைப்பைத் தவிர பிற உழைப்புகள் யாவும் ஆக்கமற்ற உழைப்பாகும். ஏனெனில், வேளாண்மையில் இயற்கையின் ஒத்துழைப்போடு மனித முயற்சி ஒரு மிகை மதிப்பை (Surplus Value) உருவாக்குகிறது. ஆனால், தொழிற்சாலைகளில் உழைப்பு பொருள்களின் உருவத்தைத்தான் மாற்றுகிறது. வணிகர்கள், கலைஞர்கள், பாடகர்கள், நடிகர்கள் ஆகியோரின் உழைப்பும் ஆக்கமற்றது என்பது இயற்கைக் கோட்பாட்டினரின் கருத்து. ஆனால், இக்கால நடைமுறை வழக்கில் எந்த முயற்சி ஒரு மனிதன் தேவையை நிறைவு செய்கிறதோ, நல்ல பயன்பாட்டினை (Utility) உருவாக்குகிறதோ அது ஆக்கவளமுள்ள உழைப்பு என்று கூறப்படுகிறது. மு.இரா.


**உழைப்புச் செறிந்த தொழில்கள்**: மக்களுக்குத் தேவையான பல பொருள்கள் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படுகின்றன. தொழிற்சாலைகள் இப்பொருள்களை நிலம், உழைப்பு, மூலப்பொருள்கள், மூலதனம் போன்ற உற்பத்திக் காரணிகளின் உதவியோடு உற்பத்தி செய்கின்றன. இவ் உற்பத்திக் காரணிகள் ஒவ்வொரு தொழிலுக்கும் ஏற்றவாறு பல்வேறு விகிதத்தில் தொகுக்கப்படுகின்றன. ஒருசில தொழில்கள் உழைப்பைவிட, மூலப்பொருள்களையும் எந்திரங்களையும் அதிக விகிதத்தில் பயன்படுத்தலாம். சில தொழில்களில் உழைப்பு அதிக விகிதத்தில் பயன்படுத்தப்படலாம். உற்பத்திக் காரணிகள் எந்த விகிதத்தில் தொழில்களில் தொகுக்கப்படுகின்றனவோ அதன் அடிப்படையில் உழைப்புச் செறிந்த தொழில்கள் (Labour Intensive Industries) என்றும், மூலதனம் செறிந்த தொழில்கள் (Capital Intensive Indsutries) என்றும் தொழில்கள் இருவகைப்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட அளவு பொருளை உற்பத்தி செய்யப் பிற காரணிகளை விட உழைப்புக் காரணி அதிக விகிதத்தில் பயன்படுத்தப்படுமேயானால் அத்தகைய தொழில்கள் உழைப்புச் செறிந்த தொழில்கள் எனப்படும்.

வரையறுக்கப்பட்ட 10 ஏக்கர் நிலத்தில் 100 மூட்டை நெல் உற்பத்தி செய்யத் தொழிலாளியும் எந்திரங்களும் தேவைப்படுவதாகக் கொண்டால், இந்த உற்பத்தியைச் செய்யும் தொழிலாளியையும் எந்திரங்களையும் பின்வரும் எந்த ஒரு தொகுப்பின் மூலமாகவும் பெறலாம். இங்கு எந்திரங்களை முதலீடு செய்யப்பட்ட மூலதனமாகக் கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| முதல் தொகுப்பு | ... | ஓர் எந்திரமும் 200 ஆட்களும் |
| இரண்டாம் தொகுப்பு | ... | இரு எந்திரங்களும் 150 ஆட்களும் |
| மூன்றாம் தொகுப்பு | ... | மூன்று எந்திரங்களும் 120 ஆட்களும் |
| நான்காம் தொகுப்பு | ... | நான்கு எந்திரங்களும் 100 ஆட்களும் |

இந்நான்கு தொகுப்புகளில் வேளாண்மைத் தொழிலாளி முதல் தொகுப்பைப் பயன்படுத்துவாரேயானால்,அவர் செய்யும் தொழில் உழைப்புச் செறிந்த தொழில் என்று கூறப்படும். இக் கருத்தினைப் பின்வரும் படத்தின் மூலம் விளக்கலாம்.

படத்தில் X அச்சில் உழைப்பும், Y- அச்சில் மூலதனமும் காட்டப்பட்டுள்ளன. வளைகோடு EP சம உற்பத்திக் கோடு (Equal Product or Iso Product Curve) என்பது. இந்தக் கோடு உழைப்பும் மூலதனமும் எந்த விகிதங்களில் தொகுக்கப்பட்டாலும் உற்பத்தி சமமாக இருக்கும் என்பதனைக் குறிக்கிறது. இந்த வளைகோட்டில் A,B என்ற இரு புள்ளிகள் காட்டப்பட்டுள்ளன. விவசாயி A என்ற புள்ளியின்படி உழைப்பையும் எந்திரத்தையும் பயன்படுத்தினால் அவரது தொழில் உழைப்புச் செறிந்த தொழில் என்று கருதப்படும். ஏனெனில் OL அளவு உழைப்பையும்




OK அளவு மூலதனத்தையும் அவர் பயன்படுத்துறார். உழைப்பின் அளவு எந்திரத்தின் அளவைவிட அதிகமாக உள்ளது. உழைப்பை மிகுதியாகச் சார்ந்த அனைத்துத் தொழில்களும் உழைப்புச் செறிந்த தொழில்களாகக் கருதப்படும்.

குடிசைத் தொழில், சிறுதொழில், ஊரகத் தொழில் முதலியவை உழைப்புச் செறிந்த தொழில் குணமுடையவையாகும். நெசவு, பட்டுத் தொழில், கம்பளி நெசவு, பருத்தி நூற்பு, காதி, கைக்குத்தலரிசித் தொழில், வெல்லம், பனைவெல்லம் செய்தல், தீப்பெட்டி செய்தல், பொம்மை செய்தல், கோழிப் பண்ணை, பால் பண்ணை, பொன்தொழில், கயிறு திரித்தல், தச்சுத் தொழில், கருமார் தொழில், ஆடு வளர்த்தல் போன்றவை உழைப்புச் செறிந்த தொழில்களாக இந்தியாவில் செயற்படுகின்றன. இத் தொழில்களின் வளர்ச்சியினால் ஏழ்மையும் வேலையின்மையும் மலிந்து காணப்படும் இந்தியா போன்ற நாடுகளுக்குப் பல நன்மைகள் விளைகின்றன. இதனால் தான் மகாத்மா காந்தி இத்தொழில்களை ஆதரித்தும், கண்மூடித்தனமாகப் பயன்படுத்தப்படும் எந்திரங்களை எதிர்த்தும் கருத்துத் தெரிவித்தார். அவரது கருத்துப்படி, வேலையைவிட வேலை தேடுகின்றவர் எண்ணிக்கை மிகுதியாக உள்ள நாட்டில் எந்திரங்களைப் பயன்படுத்துவது கொடுமையானதாகும்.

பயன்கள்: (1) இத்தொழில்கள் மிகுதியான வேலைவாய்ப்புகளை உண்டாக்குகின்றன. இதனால் வளர்ந்து வரும் நாடுகளின் உபரி உழைப்பு ஆதாயமுள்ள துறையில் ஈடுபட்டு ஒரு நல்ல வாழ்க்கையை அமைத்துக்கொள்ள ஏதுவாகிறது. (2) இத் தொழில்களில் எந்திரங்களின் பங்கு குறைவாக இருப்பதால் மூலதனத் தேவையும் குறைவாகக் காணப்படுகிறது. மூலதனம் குறைவாக உள்ள இந்தியா போன்ற நாடுகளுக்கு இத்தொழில்களே பொருத்தமானவை. ஏழை எளிய மக்களும் இத் தொழில்களைத் தொடங்கிச் சுயவேலை வாய்ப்பைபெருக்கிக்கொள்ளலாம்.(3) இந்திய நாட்டின் உயிர்நாடியாக விளங்கும் ஊரகங்களின் வளர்ச்சியை மேம்படுத்த இத்தகைய தொழில்களால் தான் இயலும். (4) இத் தொழில்களைத் திறம் பெறாத தொழிலாளிகளின் உதவியாலும் இயக்கமுடியும். இத்தகைய தொழிலாளிகள் மிகுந்து காணப்படும் வளரும் நாடுகளுக்கு இவை மிகவும் பொருத்தமானவை. (5) இவை எளிமையான கருவிகளாலும் எந்திரங்களாலும் இயக்கப்படுவதால், அயல்நாட்டிலிருந்து மிகுந்த அளவில் எதையும் இறக்குமதி செய்ய வேண்டிய தேவை எழாது. இதனால்,பெருமளவில் அயற் செலாவணியைச் சேமிக்கலாம்.(6)இத் தொழில்களின் கட்டுமானக் கால இடைவெளி (Gestation Period) நீண்டதாக இல்லாமலிருப்பதால் குறுகிய காலத்தில் உற்பத்தி வெளிவரலாம். எனவே பொருள்களின் அளிப்புப் பற்றாக்குறைவினால் ஏற்படும் விலைவாசி ஏற்றம் தவிர்க்கப்படலாம். (7) நாட்டின் பல இடங்களில் இத் தொழில்கள் தொடங்கப்படுவதால் வளர்ச்சியின் பலன்கள் ஓரிரு இடங்களில் குவியாமல் நாட்டின் பல பகுதிகளுக்கும் பரவ வாய்ப்புண்டு. (8) இவை வறுமைக் கோட்டின் கீழ் வாழும் பலரின் உண்மை வருவாயை உயர்த்துவதால், நாட்டு வருவாய் சமமாகப் பங்கிடப்பட்டுச் சமதருமச் சமுதாயம் அமைய வழிகோலுகின்றன. (9)உள்ளூரிலே கிடைக்கும் மூலப் பொருள்களை ஆதாயம் பெறும் முறையில் பயன்படுத்த இத்தொழில்கள் வழிவகுக்கின்றன. (10) வெளியே சென்று வேலைசெய்ய இயலாத பெண்டிர், சிறுவர்களுக்கு இவை வேலை வாய்ப்பினை அளிக்கின்றன.

இவ்வளவு நன்மைகள் இருந்தபோதிலும் இத்தகைய தொழில்களில் தொழில் நுணுக்கங்கள் பின்தங்கியவையாகவும் உற்பத்தி முறைகள் பழமையானவையாகவும் உற்பத்திச் செலவு மிகுதியாகவும் பொருள்களின் தரம் குறைவானதாகவும் காணப்படுகின்றன. எனினும், வளர்ந்து வரும் நாட்டில் இந்தக் குறைகள் இலகுவாகத் தீர்க்கப்படலாம். இவை மக்கள்தொகை மிகுந்த நாடுகளுக்குகந்தவையாகும்.

மு.இரா.

துணை நூல்கள்:

**Kindle Berger**, **C.P.**, Economic Development, Mc Graw Hill, New York. 1977

**Thiagan, M.L.,** The Economics of Development and Planning, Vikas Publishing House, New Delhi, 1982.

**Sethi, J,D.,** Gandhi Today, Vikas Publishing House, New Delhi, 1978.

**Ghosh, B.N.,** Economic Development and Planning, National Publishing House, New Delhi, 1977.

**உழைப்பு மதிப்புக் கோட்பாடு** ஒரு பொருளின் மதிப்பையோ அதன் விற்பனை விலையையோ வரையறுக்கும் அடிப்படைக் கூறுகளை விளக்கும் கோட்பாடாகும். ஒரு பொருளை வாங்கும் போது அதற்கு ஒரு விலை கொடுக்கப்படுகிறது. அவ்விலை அப்பொருளின் மாற்று மதிப்பைக் (Exchange Value) குறிக்கிறது. நடைமுறை வழக்கில் சில பொருள்களின் விலை உயர்வாகவும் சில பொருள்களின் விலை குறைவாகவும் உள்ளன. இவற்றிற்கான காரணங்களைப் பொருளியல் வல்லுநர்கள் பழங்காலந்தொட்டே ஆராய்ந்து வந்திருக்கின்றனர்.

உழைப்பு மதிப்புக் கோட்பாடு (Labour Theory of Value) ஆடம் சுமித்து (Adam Smith) என்ற அறிஞரால் முதன் முதலாக விளக்கப்பட்டது. அவர் கருத்துப்படி, ஒரு பொருளுக்கு இரு வகை மதிப்புகள் உள்ளன. அவை பயன்பாட்டு மதிப்பு (Value-in-Use), விற்பனை மதிப்பு (Value-in-Exchange) என்பவையாகும். பொருளின் விற்பனை மதிப்பு அப்பொருளை உற்பத்தி செய்வதற்கு எவ்வளவு உழைப்புத் தேவைப்படுகிறதோ அதைப் பொறுத்து அமையும் என்றார் ஆடம் சுமித்து. தொழிலாளி செலுத்தும் உழைப்பு மிகுதியாக இருப்பின் பொருளின் மதிப்பும் மிகையாயிருக்கும். இரண்டு நாட்கள் உழைப்புத் தேவைப்படும் பொருளின் மதிப்பு,( Value of goods) ஒருநாள் உழைப்புத் தேவைப்படும் பொருளின் மதிப்பைவிட இருமடங்காக இருப்பது இயற்கையே என்று அவர் கூறினார். எடுத்துக் காட்டாக, ஒரு தச்சன் ஒரு மேசையைச் செய்வதற்கு 10 நாட்களும் ஒரு நாற்காலியைச் செய்வதற்கு 5 நாட்களும் எடுத்துக்கொண்டால், இக்கோட்பாட்டின்படி, மேசையின் மதிப்பு நாற்காலின் மதிப்பைவிட இரு மடங்காக இருக்கும். பொருளின் மதிப்பு அனைத்தும் உழைப்பைப் பொறுத்தே அமையும் என்று ஆடம் சுமித்து கருதியதால் இக்கோட்பாடு உழைப்பு மதிப்புக் கோட்பாடு என்று பெயர் பெற்றது.

ஆடம் சுமித்துக்குப் பிறகு இக்கோட்பாட்டினைத் தாவீது இரிக்கார்டோ (David Ricardo) சீர்செய்து அதனை மதிப்பின் உற்பத்திச் செலவுக் (Cost of Production Theory of Value) கோட்பாடு என்று குறிப்பிட்டார். அவரது கருத்துப்படி, ஒரு பொருளின் மதிப்பு இரு காரணிகளைப் பொறுத்து அமைகிறது. ஒன்று அப்பொருளின் பற்றாக்குறை, மற்றொன்று அப்பொருளை உற்பத்தி செய்வதற்குத் தேவைப்படும் உழைப்பின் அளவு. மிக அருமையாகக் கிடைக்கக் கூடிய படங்கள், பழைய நாணயங்கள், நூல்கள் போன்ற மீண்டும் உற்பத்தி செய்ய முடியாத பொருள்களின் மதிப்பு அதன் அளிப்பையும் பற்றாக்குறையையும் பொறுத்து அமையும். ஆனால், அவ்வகையான பொருள்கள் மிகவும் குறைவானவை. ஆனால், மீண்டும் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களின் மதிப்பு அவற்றை உற்பத்தி செய்வதற்குத் தேவையான உழைப்புச் செலவைப் பொறுத்துள்ளது. பொருள்களின் மதிப்பை முடிவு செய்வதில் நிலம், மூலதனம் ஆகிய காரணிகளோ அவற்றிற்குக் கொடுக்கப்படும் வாரம், வட்டி ஆகியவையோ சிறப்பிடம் பெறுதல் இல்லை. ஏனெனில் இரிக்கார்டோவின் கருத்துப்படி, மிக உயர்ந்த தரமுள்ள (Superior) நிலத்திற்கு மட்டும் அளிக்கக்கூடியது வேறுபட்ட உபரியாகும். மூலதனம் சேமித்து வைக்கப்பட்ட முந்தைய உழைப்பின் ஒரு பகுதியாகும். இரிக்கார்டோவுக்குப் பின் வந்த நாசோ சீனியர் (Nassau Senior) என்னும் தொன்மைப் (Classical) பொருளியல் அறிஞர் இக்கோட்பாட்டை வரவேற்றார்.

காரல் மார்க்சும் பிற பொதுவுடைமைப் பொருளியலாரும் இரிக்கார்டோவின் கருத்துகளின் அடிப்படையில் உழைப்பின் மதிப்பை ஆராய்ந்தனர். ஆனால், அவர்கள் அக்கோட்பாட்டைப் பொதுவுடைமைக் கொள்கையை நிலைநாட்டுவதற்காக மட்டுமே பயன்படுத்தினார்கள். இரிக்கார்டோ கூறியது போலக்காரல் மார்க்சும் ஒரு பொருளின் மதிப்பு அதன் உழைப்பின் அளவைப் பொறுத்து அமைவதாகக் கூறினார். பொதுவாக, ஒரு பொருளை உற்பத்தி செய்வதற்குத் தேவைப்படும் சராசரி உழைப்பாளர் திறமை அப்பொருளின் மதிப்பை வரையறுக்கிறது என்பது காரல் மார்க்சின் கருத்து.

உழைப்பு மதிப்புக் கோட்பாட்டின் அடிப்படையில் உருவாக்கப்பட்டதே மார்க்சின் மிகை மதிப்புக் கோட்பாடு (Surplus Theory of Value). அக்கருத்தின்படி, ஒரு தொழிலாளி தாம் உருவாக்கும் பொருளின் மதிப்பைவிடக் குறைவாகவே ஊதியம் பெறுகிறார். இதனால் பெறப்படும் மிகை ஆதாயத்தை முதலாளி பெறுகிறார். இதனைக் காரல் மார்க்சு தொன்மைப்

பொருளியலின் பிழைப்பு மட்டக் கூலிக் கோட்பாட்டின் (Subsistence Theory of Value) மூலம் விளக்குகிறார். ஒரு முதலாளி தம் தொழிலாளிக்கு அவர் பிழைப்பிற்குத் தேவையான உணவு, உடை, இருப்பிடம் ஆகியவற்றைப் பெறுவதற்கான அளவு கூலி கொடுக்கிறார். எடுத்துக்காட்டாக, இக்கூலியைப் பெறுவதற்கு ஒரு தொழிலாளி 6 மணிநேரம் வேலை செய்ய வேண்டும் என வைத்துக்கொண்டால், இது சமுதாயத் தேவை உழைப்பு (Socially Necessary Labour) எனப்படும். ஆனால், தொழிலாளி 10 மணி நேரம் வேலை செய்து பொருள் உற்பத்தி செய்தால் எஞ்சியுள்ள 4 மணி நேரத்திற்குரிய பொருளின் மதிப்பை மிகை மதிப்பாக முதலாளி பெறுகிறார்.

உழைப்பு மதிப்புக் கோட்பாட்டினை அறிஞர்கள் பல கண்ணோட்டத்தில் விளக்கியுள்ளனர். இக் கருத்துகள் உலகில் பொதுவுடைமை, சமத்துவம் ஆகிய கோட்பாட்டுக் கொள்கைகள் வலுப்படவும், பாட்டாளி வருக்கத்தின் சிறப்பை உலகம் அறியவும் பெரிதும் உதவின. இக்கருத்துகளை எதிர்க்கும் அறிஞர்கள் இக்கோட்பாட்டின் பின்வரும் குறைபாடுகளை எடுத்துக் காட்டுகின்றனர்: முதலாவதாக, ஒரு பொருளை உற்பத்தி செய்வதற்கு உற்பத்திக் காரணிகளான நிலம், உழைப்பு, மூலதனம், தொழில் முயல்வோன் ஆகியவற்றின் முழுமையான ஒத்துழைப்பு இன்றியமையாத தேவையாகும். இக் காரணிகளுக்கு ஆகும் செலவு அனைத்தும் பொருளின் மதிப்புடன் இணைக்கப்பட வேண்டும். ஆனால், தொழிலாளியின் உழைப்பு மட்டும்தான் பொருளின் மதிப்பை வரையறுக்கிறது என்று கூறுவது நியாயமற்றது. இரண்டாவதாக, ஒரு பொருளின் மதிப்பு, அந்தப் பொருள் மக்களுக்கு எந்த அளவுக்குப் பயன்பாடு (Utility) அளிக்கிறது என்பதைப் பொறுத்தும் அமையும். பயன்பாடு இல்லையெனில் எந்தப் பொருளுக்கும் மதிப்புக் கிடையாது. எடுத்துக்காட்டாக, ஒரு தையல் தொழிலாளி 4 மணி நேரம் செலவழித்து ஒரு சட்டையைத் தைத்தும் அச்சட்டையின் அளவு சரியில்லாமல் பயன்படுத்த முடியவில்லை எனில், அச்சட்டைக்கு எந்த மதிப்பும் இருக்காது. அச்சட்டையின் மதிப்பு 4 மணி நேரத்திற்குச் சமம் என்று கூறமுடியாது. பொருளின் பயனும் அதன் மதிப்பை வரையறுப்பதில் முக்கிய பங்கேற்கிறது. இறுதியாக, தொழில் உழைப்பில் காணப்படும் தர வேற்றுமைகளும் மதிப்பை வரையறுப்பதில் ஏற்றுக்கொள்ள வேண்டிய கூறாகும். ஒருசில பொருள்களுக்கு நடைமுறையில் மிகுந்த மதிப்பு இருக்கலாம். ஆனால், அதைப் பெறுவதற்கு மேற்கொள்ளப்பட்ட உழைப்பு மிகவும் குறைவானதாக இருக்கலாம். எடுத்துக்காட்டாக, ஒருவர் ஒரு வைரத்தைக் கண்டெடுக்கிறார் என்று கொண்டால் அவர் மேற்கொண்ட உழைப்பு மிகவும் குறைவு; ஆனால், அவ்வைரத்தின் மதிப்போ மிகுதி. இவற்றை அடிப்படையாகக் கொண்டு பிற்காலத்தில் உழைப்பு மதிப்புக்கோட்பாடுகள் தங்கள் தனித் தன்மையை இழந்தன. எனினும் இவை அளித்த பகுப்பாய்வுகள் பிற கோட்பாடுகள் வெளிவர உதவின. மு.இரா.

துணை நூல்கள்:

**Adam Smith**, The Wealth of Nations, J.M. Deut and Sons Limited, London, 1962.

**Eric Roll**, A History of Economic Thought, Faber and Faber Limited, London, 1973.

**Haney, L.H.**, History of Economic Thought, The Macmillan Company, New York, 1970.

**Karl Marx**, Capital, Foreign Languages Publishing House, Moscow, 1961.

**Spiegel, H.W.**, The Growth of Economic Thought, Prentice Hall Inc., New Jersey, 1971.

**Gide, C. and Rist, C.**, A History of Economic Doctrines, Oxford University Press, Calcutta, 1973.

**உள்துறை நடவடிக்கைகள் அமைச்சகம்**: ஒரு நாட்டின் சட்டம், அமைதி, பாதுகாப்பு, நிருவாகம் ஆகியவற்றைக் காக்கும் வகையில் அரசாங்கம் மேற்கொள்ளும் அனைத்து நடவடிக்கைகளும் உள்துறை நடவடிக்கைகள் (Home Affairs) ஆகும். இது அந்நாட்டின் அனைத்து நடவடிக்கைகளையும் தெரிந்து, அனைத்தையும் கண்காணித்து வரவேண்டும்.

குடியுரிமை பெற்றவர்கள் மட்டுமே அந்நாட்டு அரசியல் நடவடிக்கைகளில் பங்கு கொள்ள வேண்டும். குடியுரிமை பெறாதவர்களும், வெளிநாட்டினரும் அந்நாட்டு அரசியல் நடவடிக்கைகளில் பங்கு கொள்ளாதவகையில் உள்துறை தடுத்து நிறுத்தவேண்டும். ஏற்கனவே நாட்டிற்குள் அந்நியர்கள் ஊடுருவி இருந்தால், அவர்களைக் கண்டுபிடித்து வெளியேற்றுவதும் உள்துறை நடவடிக்கையில் அடங்கும்.

நேரத்திற்கு நேரம் மாறுகின்ற சமூகச் சூழ்நிலைகளுக்கேற்பத் தோன்றும் சிக்கல்கள், குழப்பங்கள், நெருக்கடிகள் போன்றவற்றைக் களைவது மற்றும் எல்லைப்புறங்களில் ஊடுருவும் ஆக்கிரமிப்புகளைத்

தடுப்பது ஆகியன உள்துறை நடவடிக்கைகளில் மிகவும் முக்கியமான நடவடிக்கைகளாகும்.

கூட்டாட்சி நாடுகளில் சட்டமும் அமைதியைப் பேணக் கூடிய பொறுப்பும் மாநிலங்களில் விடப்பட்டிருக்கின்றன. ஆகவே, மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கங்களோடு இணைந்து இப்பணியைச் செய்து வருகின்றது. ஆனால், ஒரு மாநிலத்தில் சட்டம், அமைதி காக்க முடியாத நிலையில், அம்மாநிலம் உள்துறையின் உதவியை நாடுகின்றது. மாநிலங்களில் சட்டத்தையும், அமைதியையும் காக்க உள்துறை உதவுகின்றது. மத்திய அரசாங்கத்தில் அதாவது உள்துறையின் கண்காணிப்பில் இருக்கின்ற ஆயுதக்காவற்படை போன்ற படைகள் மாநிலத்திற்கு உதவி செய்கின்றன. மாநிலத்தில் சட்டத்தையும், அமைதியையும் நிலைநாட்டியபின்னர் அப்படைகள் திரும்பிச் சென்றுவிடுகின்றன. எனவே, இப்படிப்பட்ட படைகளை உருவாக்கிப் பராமரிக்க வேண்டிய பொறுப்பு உள்துறையின் பொறுப்பு. உள்துறை இப்பணியில் சீராகக் கவனம் செலுத்தி வருகின்றது.

உள்துறை நடவடிக்கைகளில் நிருவாக நடவடிக்கைகளும் உள்ளடங்குகின்றன. உயர் நிருவாகக் கட்டுப்பாட்டு அமைப்பாக உள்துறை விளங்குகின்றது. உயர்நிருவாகத்திற்குரிய பணியாட்களைத் தேர்வு செய்து, அதனை நிருவகிப்பது இதனுடைய கடமையாகும். நிருவாக நடவடிக்கைகளைப் பொறுத்த வரை, அனைத்துப் பணிகளுக்கும் பொதுவானவற்றை ஒழுங்குபடுத்துவது. பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு, பதவி முதனிலை, நடத்தை, ஒழுங்கு விதிகள் போன்ற பணிக்கட்டுப்பாடுகள் செய்து பணிகளின் தரங்களைப் பராமரிப்பது இதன் பொறுப்பு. நிருவாகத்தை நேரத்திற்கு நேரம் மாறுகின்ற சூழ்நிலைக்கேற்பச் சீர்திருத்தம் செய்யவேண்டியது தேவையென்பதால், நிருவாகச் சீர்திருத்தம் குறித்த நடவடிக்கைகளை இது மேற்கொள்கின்றது. உள்துறை நிருவாகத்திற்கென்று ஒரு தனியான பிரிவை ஏற்படுத்தி, அதன்மூலம் புதிய அறிவியல் கண்டுபிடிப்புகளை நிருவாகத்தில் புகுத்தி, எளிமையான முறையில் நிருவாகம் திறம்பட வழிவகைகள் செய்கின்றது. இதனால், நிருவாகம் மேம்பாடு பெறுவதுடன், நிருவாகத் திறமையும் அதிகரிக்கின்றது. இவையனைத்தும் நிருவாகம் தொடர்பான உள்துறை நடவடிக்கைகளாகும்.

இந்தியாவில் நிருவாகம் இங்கிலாந்து நிருவாகத்தைக் காட்டிலும் கூடுதலாக ஒரு தேச ஒருங்கிணைப்புப் (National Integration) பணியையும் செய்யக் கூடியதாக அமைந்துள்ளது. இந்திய ஒருங்கிணைப்பினை இந்திய ஆட்சித்துறைப் பணி (Indian Administrative Service) செய்கின்றது. இப்பணியைக் கட்டுப்படுத்துவது உள்துறையாகும்.

இந்தியாவில் மாநிலங்கள் அனைத்திலும் உயர் பதவிகள் இந்திய ஆட்சித் துறைப்பணியாளர்களால் நிரப்பப்படுகின்றன. இந்திய ஆட்சித்துறைப் பணியாளர்களைக் கண்காணிப்பு, கட்டுப்பாடு ஆகியவற்றின் மூலம் உள்துறை ஒழுங்குபடுத்துவதால், இப்பணியாளர்கள் ஒருமித்த தன்மையோடு செயற்படுவதுடன், எல்லா மாநில மக்களும் எல்லா மாநிலங்களிலும் பணியாற்ற வாய்ப்பு உள்ளது. தவிர, ஒரு மாநிலப் பணியாளர் அம்மாநிலத்தில் பணியாற்றுவதைக் காட்டிலும் பிற மாநிலங்களில் பணியாற்றினால் அவர்கள் எவ்வித அச்சுறுத்தலுக்கும் இடர்ப்பாடுகளுக்கும் அப்பாற்பட்டுத் திறமையாகவும், நேர்மையாகவும் பணியாற்ற முடியும் என்பது மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. இதனால்தான் ஒரு மாநிலத்தில் அம்மாநிலத்தவர் 50 விழுக்காடுகள்தான் இருக்க வேண்டுமென்ற கருத்தும் வலியுறுத்தப்படுகின்றது. இப்பணியாளர்கள் ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கும், மாநிலங்களிலிருந்து மத்திய அரசாங்கத்திற்கும் செல்ல வாய்ப்பு உள்ளது. இவ்வாய்ப்புகள் மூலம் இவர்கள் இந்தியாவில் எங்கும் பணியாற்றலாம். இதனால், பரந்த அறிவு பெறக்கூடும். இப்பரந்த அறிவு தேசிய ஒற்றுமைக்கு வழி வகுக்கும். எனவே, தேசிய ஒற்றுமை, ஒருமிப்பு ஆகியவற்றை உள்துறை இந்திய ஆட்சித் துறைப் பணியின் மூலம் உருவாக்குகின்றது. தவிர, மத்திய அரசுப் பணிகளையும் உள்துறையே நிருவகிக்கின்றது. ஆகவே, கூட்டாட்சி நாடாக இருந்தாலும் சரி, ஒற்றையாட்சி நாடாக இருந்தாலும் உள்துறையின் கட்டுப்பாட்டிற்குள் இயங்கக் கூடியதாகச் சட்டம், ஒழுங்கு, நிருவாகம் ஆகியன அமைந்துள்ளன என்பது கண்கூடு.

மத்திய அரசாங்கம் செய்கின்ற பணிகளில் மிகமுக்கியமான பணிகளை மட்டுமல்லாது, எண்ணிக்கையிலும் பிற துறைகளைக் காட்டிலும் அதிகமான பணிகளைச் செய்யக் கூடியதாக இந்தியாவின் உள்துறை திகழ்கின்றது. அரசியலமைப்பு முறையில் அவசரச் சட்டங்களை உள்துறை பிறப்பிக்கிறது. உள்நாட்டுக்குழப்பம், நிதி நெருக்கடி ஆகிய சமாளிக்க முடியாத சூழ்நிலை உருவாகின்றபோது, அவசரச் சட்டங்களைப் பிறப்பித்து நாட்டையும் நிருவாகத்தையும் காக்கக் கூடியது இத்துறை. மத்திய-மாநில உறவுகளைச் சீரமைக்கப் பாடுபடக் கூடிய பணியும் இதனிடம் விடப்பட்டுள்ளது. மாநில அரசாங்கங்கள் செயற்பட முடியாதநிலை ஏற்படுகின்ற

போது, மாநில அரசாங்க நிருவாகத்தை மத்திய அரசாங்கம் மேற்கொள்ளும். அப்போது மாநில நிருவாகத்தைக் கண்காணிக்கக் கூடிய பொறுப்பும் இதனிடத்தில் வந்துவிடும். எனவே மாநில நிருவாகத்தை எப்போதும் விழிப்புடன் கண்காணித்து, மத்திய-மாநில உறவுகளைச் சீர்படுத்துதல் இதன் பணியாகும்.

இந்த ஒழுங்குமுறைகள் முறையாகப் பின்பற்றப்பட்டு வருகின்றனவா என்பதை இது உன்னிப்பாகக் கண்காணிக்கின்றது. இவ்வொழுங்குமுறைகள் மீறப்படுகின்ற சமயங்களில் தக்க தண்டனைகளையும்மீறியவர்களுக்கு இது அளிக்கின்றது. எனவே, ஒழுங்குமுறைகளை வரையறுத்து அவற்றைச் செயற்படுத்தும் பணியும் இதனிடம் உள்ளது. இந்திய ஒருங்கிணைப்பிற்காகப் பாடுபடும் துறையும் இதுதான். இது நேரத்திற்கு நேரம் தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்கும் வகையில் கருத்துகளை வெளியிடுவதுடன், சில செயல் நடவடிக்கைகளையும் செய்து வருகின்றது. தேசிய ஒருமைப்பாட்டைப் பேணுகின்ற வகையில் மாநிலங்களிடை மன்றத்தை (Inter State Council) உருவாக்க அரசியலமைப்பு வழி செய்கின்றது. அதனை உருவாக்கினால் அதனைச் செயற்படுத்தும் கடமையைப் பெற்றுள்ளது. வட்டார மண்டலங்களை (Zonal Councils) உருவாக்கி, அவற்றின் மூலம் தேசிய ஒருமைப்பாட்டையும், மாநிலங்களிடை ஒற்றுமையையும் பண்பாட்டு மேம்பாட்டையும் வளர்க்க வேண்டும். எனவே, இந்தியா முழுமைக்கும் ஒட்டு மொத்த வளர்ச்சிக்கு வித்திடக் கூடியதாகவும், அதனை அடையவும் இத்துறை நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

தேர்தல் ஆணையம்,மொழி ஆணையம், சிறுபான்மையோர் நல ஆணையம் போன்ற ஆணையங்களை இது நியமிக்கின்றது. இந்தியாவின் தேசிய விடுமுறை நாள்களைத் தயாரிக்கின்றது. குடியரசுத் தலைவர், தலைமை அமைச்சர் விருதுகளை இதுதான் தீர்மானிக்கின்றது. மக்கள் தொகைக் கணக்கெடுப்பு எடுப்பதும் இத்துறைதான். பத்திரிகைச் சட்டங்கள், பத்திரிகைத் தடைச் சட்டங்கள், அச்சகங்கள், நூல்கள் தொடர்பான சட்டங்களை இயற்றுவது, நூல்கள் மற்றும் பிற பதிப்புகளைக்கடன் தீர்வைச் சட்டப்படி தடை செய்தல், தேசிய மொழி பற்றிய ஒழுங்கு, தேசிய மொழியை ஏற்றுக்கொள்ளும்படி செய்யப் பல்வேறு முயற்சிகள் செய்வது, மாநில சபைக்கு 12 நியமன உறுப்பினர்களை நியமிப்பது ஆகிய பணிகளை உள்துறை செய்கின்றது.

அரசாங்கத்தின் பல்வேறு பணிகளுக்குத் தாழ்த்தப்பட்ட இனத்தவர்களுக்கும் பழங்குடி வகுப்பினர்களுக்கும் பணி இட ஒதுக்கீடு சரியாகச் செய்யப்படுகின்றதா என்பதைக் கவனித்தலும் இதன் பணியாகும்.

இன்றைய நாளில் உள்துறையின் பெரும் நடவடிக்கை உள்நாட்டு அமைதியைக் காப்பதில் கவனம் செலுத்துவதாகும். இதற்காக உள்நாட்டுப் பாதுகாப்பு என்று ஒரு புதிய பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தியாவின் ஒற்றுமை, ஒருமைப்பாடு ஆகியவற்றிற்குப் பங்கம் விளைவிக்கின்ற சக்திகளைக் கண்டுபிடித்து, அவற்றை நசுக்குவதே இப்பிரிவின் தலையாய கடமையாகும். எனவே, இப்பிரிவின் கட்டுப்பாட்டிற்குள் செய்தி திரட்டும் அனைத்துப் பிரிவுகளும் அமைக்கப்பட்டுள்ளன. தவிர, எல்லைக் காவற் படை, மத்திய ஆயுதக் காவற்படை போன்ற பல்வேறு காவற்படைகள், குற்றவியல் சட்ட நிருவாகம், வெளிநாட்டவர்கள் நடமாட்டம், எல்லைப்புறப் பகுதிகளில் உள்ள மக்களைக் குடியேற்றம் செய்தல் போன்றவையும் முக்கியமான சில உள்துறை நடவடிக்கைகள் ஆகும்.

உள்துறை நடவடிக்கைகள் அந்நாட்டின் நிருவாகத்தைச் சாதாரண நிலையிலும் அசாதாரண நிலையிலும் காக்கும் வகையிலும்,மக்கள் மனத்தில் அமைதி நிலவும் வகையில் சட்டம், ஒழுங்கைப் பராமரிக்கக் கூடியவகையிலும் அமைகின்றன. இப்பணிகளைச் செய்வதற்குரிய அனைத்துச் செய்தி திரட்டும் செயலாண்மையையும் பல்விதக் காவற் படைகளையும் அரசாங்கத்தையே நடத்திச் செல்லும் நிருவாக வல்லுநர்களையும் கொண்டதாக உள்துறை அமைக்கப்பட்டுள்ளது.

என்.எஸ்.ச.

**உள்நாட்டு அங்காடி**: உற்பத்தியான பொருள்களை விற்பதும் வாங்குவதுமான செயல்களைக் கொண்ட இடம் அங்காடி (Market). பொருளியல் ஆய்வில் அங்காடி ஒரு குறிப்பிட்ட இடத்தை மட்டும் சார்ந்ததன்று. அங்காடி ஒரு குறிப்பிட்ட பொருளை விற்போரையும் வாங்குவோரையும் இணைக்கிறது. சூழ்நிலைக்கேற்ப உற்பத்தியாளர், நுகர்வோர் நிலைகளுக்கேற்பப் பொருள்களுக்கான தேவையை மாற்றி அமைப்பது அங்காடியாகும். அங்காடிகளின் பரப்பும் செயற்பாடும் அந்தந்த இடங்களின் போக்குவரத்து, வேலைப்பகுப்பு, உற்பத்தித் தேர்ச்சி, தொழில்நுட்பம், அரசியல் அமைப்பு, சட்ட ஒழுங்கு முறைகள், பண்டங்களின் தேவை, அளிப்பு, தன்மை, நிதி உதவி போன்ற பல அடிப்படைக் காரணிகளைச் சார்ந்துள்ளன. அங்காடிகள் காலநிலை, விற்போர் வாங்குவோரின் மனநிலை, அங்காடிக் கட்டுப்பாடுகள், அங்காடிகள் செயற்படும் நேரம் ஆகியவற்றின் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகின்றன. நாளங்காடி (Day Market), அல்லங்காடி (Evening Market) என்னும் இருவகை அங்காடிகள் பற்றிய விளக்கம் சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது. அங்காடிகளை உள்நாட்டு அங்காடி, அயல்நாட்டு அங்காடி

என்றும் வகைப்படுத்துகின்றனர். உற்பத்திப் பொருள் களின் தன்மைக்கேற்பச் சில்லறை அங்காடி, மொத்த அங்காடி என்றும் பல வகைகளில் அங்காடிகள் செயற் படுகின்றன.

எளிதில் அழியக்கூடிய பொருள்களாகிய மீன், முட்டை, காய்கறிகள்,முதலியனவும்,தொழில் நுட்பக் கருவிகள், உதிரி உறுப்புகள் (Spare Parts), நுகர்வோர் பொருள்கள் போன்றவையும்உள்நாட்டு அங்காடியில் விற்பனை செய்யப்படுகின்றன. ஊரக உற்பத்தியில் விவசாயியின் தேவைக்கு மிஞ்சிய பண் டங்கள் நகர அங்காடிகளுக்கு அனுப்பப்படுகின்றன. அவற்றிலிருந்து பெறப்படும் வருவாயைக் கொண்டு ஊரக மக்கள் உற்பத்திப் பண்டங்களைப் பெறுகின்ற னர். சில இடங்களில் உற்பத்தி செய்கின்ற இடங் களிலேயே அங்காடிகள் அமைந்து விடுகின்றன. இவ்வகையான அங்காடிகளில் பண்டமாற்று முறை செயற்படுவதால் இடைத்தரகர்கள் (Intermediaries or Middlemen) பெரும் பங்கேற்று, அவற்றை ஊழல் நிறைந்த ஒன்றாக மாற்றிவிடுகின்றனர்.

ஐரோப்பிய நாடுகள் சிலவற்றிலும் அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் அங்காடிகள் உள்ளாட்சி நிறுவ னங்களால் நிருவகிக்கப்படுகின்றன. இவ்வகை அங் காடிகள் பெரும்பாலும் உணவுப் பண்டங்களைப் பகிர்ந்தளிக்கின்றன. இத்தகைய நகர அங்காடிகளுக் கான செலவின் ஒரு பகுதியை உள்ளாட்சி நிறுவனங் கள் ஏற்றுக் கொள்கின்றன.' தனியார் அங்காடிகளாக இருப்பின், அவற்றிற்குரிய மேல்நிலைச் செலவின் (Overhead charges) ஒரு பகுதியை விற்போரிடம் வாங்குகின்றனர். இவ்வகையாகப் பெறும் பணம் தனி யாரின்சொந்த வாணிகத்தினால் ஆகும் செலவை விடக் குறைவானதாகும்.

மனித உழைப்பிலும் அங்காடி அமைப்பைக் காணலாம். உழைப்பவன் தன்னுடைய உழைப்பைப் பேரம் பேசி ஒரு வேலையில் அமர்கிறான்.உழைப்பைப் பரிமாற்றம் செய்வதற்கு ஆங்காங்கே பொது, தனி யார் வேலை தேடும் நிறுவனங்கள் அங்காடிக்கு ஒத்த நிலையில் செயற்படுகின்றன. தொழிலுக்குத் தேவை யான முதலீட்டை இருப்புஅங்காடிகள்(Stock Markets) வணிக வங்கிகள், காப்பீட்டு நிறுவனங்கள், நிதிநிறுவ னங்கள் ஆகியவற்றிலிருந்து தொழில் முனைவோர் பெறுகின்றனர். இவற்றின் நடவடிக்கைகளும் அங் காடியை ஒத்தனவாகும்.

தொழில் அங்காடிகள் (Industrial Markets) முழுமை நிலையடைந்த தொழிற் பண்டங்கள் (Manu-(factured Industrial Goods), தொழிலுக்குத் தேவை யான மூலப் பொருள்கள், இடைநிலைப் பொருள்கள் (Intermediate Goods), குறைநிலை உற்பத்திப்பொருள் கள் (Semi-finished Goods) ஆகியவற்றின் அடிப்படை யில் பகுக்கப்படுகின்றன. கனரகத் தொழில்களுக்கும் (Heavy Industry) சிறுதொழில்களுக்கும் தேவையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஒவ்வொரு தொழி லும் தனக்குத் தேவையான வேளாண்மைப் பொருள் கள், கனிவளம், போக்குவரத்து, நிதி ஆகியவற்றைச் சிறப்பு அங்காடிகளில் வாங்குகிறது. அங்காடி நிலை, பொருள்களின் அளிப்பு, நுகர்வோரின் தேவை, விலை போன்றவற்றின் அடிப்படையில் சில தொழிற் பண்டங் களின் விற்பனை, அயல்நாட்டு அங்காடிகளின் நிலையைப் பொறுத்து வரையறுக்கப்படுகிறது.

அங்காடிகள் எவ்வகையில் செயற்பட்டாலும் அவை நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் சிறப் பிடம் வகிக்கின்றன. பேராசிரியர் திரக்கர்(Prof. P.F. Drucker)சமயம், கல்வி, அரசியலமைப்பு ஆகியவற்றை விட அங்காடியியல் ஒரு நாட்டின் முன்னேற்றைத் தைப் பாதிப்பதாகக் குறிப்பிடுகிறார். தொழில் முன் னேற்றம் அடைந்த நாடுகளின் வரலாற்றில் அங்காடி அமைப்புகள் முதன்மை இடத்தைப் பெற்றுள்ளன. அமெரிக்க ஐக்கிய நாடு (U. S. A.), சப்பான் ஆகிய நாடுகளின் அங்காடியில் புதிய கண்டுபிடிப்புகள் நாட் டின் பொருளாதார முன்னேற்றத்தை உறுதிப்படுத் தின.

வளரும் நாடுகளில் அங்காடி வளர்ச்சி குழந்தைப் பருவ நிலையிலேயே உள்ளது. இந்நாடுகளில் அங் காடி வளர்ச்சியுறாத நிலையிலிருப்பதற்கு, உற்பத்தி முறையிலும் பெருக்கத்திலும் மாறுதல்கள் பேரளவில் நிகழாமலிருப்பதே காரணமாகும். பின்தங்கிய நாடு களின் அங்காடி அமைப்பிலும் வளச்சியிலும் மாற்றங் கள் ஏற்படுதல் இன்றியமையாததாகும். அங்காடி ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு அச்சாணியாக அமைந்துள் ளது. பொருளாதார முன்னேற்றப் போக்கை மாற்றி நவீன பொருள்களை உற்பத்தி செய்ய உள்நாட்டு அங்காடிகள் பெருக வேண்டும்; அயல்நாட்டு வாணி கம் செழிக்க வேண்டும். வளரும் நாடுகளில் அங்காடி கள் பின்தங்கிய நிலையில் உள்ளன. பெரும்பாலான உற்பத்தி நிறுவனங்கள் உற்பத்தியை ஊக்குவிப்பதில் முனைந்துள்ளனவே அன்றி, அங்காடி அமைப்புகளை மாற்றி முன்னேற்றத்திற்கு ஏற்றவாறு சீர் செய்வ தில் ஆர்வம் கொள்ளவில்லை. ஒரு நாட்டின் பொரு ளாதார ஒருங்கிணைப்புச் சரியாகச் செயற்பட வேண்டின் உற்பத்தியாகும் பொருள்கள் நன்முறையில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். திரக்கர் குறிப்பிடுவது போல் வளரும் நாடுகளில் கவர்ச்சி மிகுந்த துறைகள் ஊக்குவிக்கப்பட்டு, முன்னேற்றத்திற்குத் தேவையான அங்காடிகள் சரியாக வளர்ச்சி பெறவில்லை.

இந்தியாவில் உள்நாட்டு அங்காடி: இந்தியாவில் ஊரக, நகர அங்காடிகள் செயற்படுகின்றன. ஒவ்வோர் அங்காடியிலும் தெளிவான, வேறுபாடான நுகர்வோர் மனநிலைகள் காணப்படுகின்றன. இதனால் பொருள்களின் உற்பத்தித் தேவை, விலை போன்றவற்றில் குறிப்பிடத்தக்க தனித் தன்மை நிலவுகிறது. ஒவ்வொரு மண்டலமும் அவ்விடத்தின் தன்மைக்கேற்ப நிகழும் அங்காடி மாறுதல்களை ஏற்றுக் கொள்கின்றது. இது அங்காடியின் மதிப்பு, நுகர்வோரின் வாங்குந்திறனைப் பொறுத்து அமைகிறது. ஆராய்ச்சிகள் மூலமாக அங்காடிகள் பற்றிப்பல மதிப்பீடுகள் கால இதழ்களில் வெளியிடப்படுகின்றன.

இந்தியாவிலுள்ள 565,000 ஊரகங்களிலுள்ள 20 விழுக்காடு மக்கள் 500 க்கும் குறைவான எண்ணிக்கையுடைய மக்கள்தொகைகொண்ட ஊரகங்களிலும், 50 விழுக்காடு மக்கள்1000 க்கும் 5000 க்கும்இடைப்பட்ட மக்களைக் கொண்ட ஊரகங்களிலும், 10 விழுக்காடு மக்கள் 4000 க்கும் மிகுதியான மக்கள் தொகையுடைய ஊரகங்களிலும் வாழ்கின்றனர். திரு. சே. ஆர். டி.தாட்டா(J. R. D. Tata) என்ற தொழிலதிபர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். ஊரக மக்களுள் 10 விழுக்காட்டினர் நாட்டில் உற்பத்தியாகும் தொழிற் பண்டங்களை நுகருவார்கள் என்றால், 50 மிலியன் புது நுகர்வோர் தொழில் உற்பத்தி அங்காடிகள் உருவாகும். ஊரக மக்கள் தொகை நாட்டின் பலவகைப்பட்ட பொருள்களின் தேவையில் மாற்றங்கள் உருவாக்க வல்லது. வேளாண்மையில் புகுத்தப்படும் அறிவியலும், தொழில்நுட்ப மாற்றங்களும் பல தொடர் நிகழ்ச்சிகளை ஏற்படுத்துகின்றன. எடுத்துக்காட்டாக, கூடுதல் வருமானம், அதிகப்படியான சொத்து, பொருளாதார உற்பத்தி ஆகியவற்றில் மாற்றங்களை உருவாக்கி, அதன் விளைவாக நுகர்வில் பெருக்கமும் கல்வித்தரத்தில் உயர்வும் தோன்ற வழிவகுக்கும்.

இந்தியப் பொருளாதார அமைப்பில் கூட்டுறவு அங்காடி சிறப்புப் பங்கு ஏற்கிறது. அங்காடியில் காணப்படும் பல்வேறு குறைபாடுகளை நிறைவு செய்வதற்காக ஏற்பட்ட அமைப்பே கூட்டுறவு அங்காடியாகும். கூட்டுறவு அங்காடி சீரான முறையில் அமைக்கப்பட்டுச் செயற்பட்டால் இடைத்தரகர்கள் ஒழிக்கப்படுவர். ஊரக அங்காடிகளில் காணப்படுகின்ற விலை ஏற்றத்தாழ்வுகளைச் சீராக்கக் கூட்டுறவு அமைப்புத் தேவையாகும். விளைபொருள்களை விற்பனை செய்வதற்கு மட்டுமன்றி, விவசாயிக்குத் தேவையான நீண்ட, குறுகிய காலக்கடனையும் கூட்டுறவு அங்காடி வழங்குகிறது. இந்தியாவின் ஐந்தாண்டுத் திட்டங்களில் கூட்டுறவு அங்காடிகளுக்குத் தனிச்சிறப்பிடம் கொடுக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு அங்காடி அமைப்புகள் தேசிய, மாநில அளவில் காணப்படுகின்றன. வேளாண்மையைச் சீரான நிலைக்குக் கொண்டு வரவும், விளை பொருள்களுக்கு நியாயமான விலை வரையறை செய்யவும், விளைபொருள்களைத் தரம் பிரிக்கவும், பொருள்களைப் பாதுகாப்பாகச் சேகரித்துப் பத்திரப்படுத்தி விற்பனை செய்யவும் கூட்டுறவு அங்காடி பயன்படுகிறது.

வேளாண்மையைப் போன்றே தொழிற் பண்டங்களுக்கும் அங்காடி உள்ளது. தொழில் அங்காடிகளை உற்பத்தியாளர் அங்காடிகள் என்றும் குறிப்பிடுவதுண்டு. இவ்வகை அங்காடிகளில் தனிப்பட்டவரும் நிறுவனங்களும் தங்களுக்குத் தேவையான பண்டங்களையும் பணிகளையும் வாங்கியும் விற்றும் அங்காடித் தொழிலில் ஈடுபடுகின்றனர். நுகர்வோர் அங்காடிகளைப் போன்றே உற்பத்தியாளர் அங்காடியும் பல வகைப்பட்ட பண்டங்களை விற்பனை செய்கின்றது. நுகர்வுப் பண்டங்களைப் போல் தொழிற் பண்டங்களின் விலையில் மாற்றங்கள் அடிக்கடி நிகழ்வதில்லை. தொழில் அங்காடிகள் உற்பத்தியாளருக்கும் விற்போருக்கும் இடையே ஒரு சிக்கலாக அமைந்துள்ளன. அதிகப் போட்டியினால் தேவையில் மாற்றம் ஏற்படும்போது தொழில் அங்காடியிலும் மாற்றங்கள் நிகழும்.

இந்திய அங்காடி அமைப்பில் ஒழுங்குபடுத்தப்பட்ட அங்காடிகள் செயற்படுகின்றன. இந்திய அரசாங்கச் சட்டப்படி, கி.பி. 1897 ஆம் ஆண்டு ஒழுங்குமுறை அங்காடிகள் உருவாக்கப்பட்டன. முதன் முதலில் அவை பீகார் மாநிலத்தில் தோற்றுவிக்கப்பட்டதால் அவற்றைப் பீகார் ஒழுங்குமுறை அங்காடி எனவும் குறிப்பிடுவர். அவை சிறப்பாக வேளாண்மை அங்காடிகளில் காணப்படுகின்ற சீர்கேடுகளை ஒழிப்பதற்கு என அமைக்கப்பட்டன. அவற்றில் வேளாண்மைக்கெனத் தனிக் குழுக்கள் செயற்படுகின்றன.

இந்தியாவில் உள்நாட்டு அங்காடிகள் முற்போக்கான முறையில் இதுவரையிலும் தகுந்த முன்னேற்றம் அடையவில்லை. நுகர்வோருக்கும் உற்பத்தியாளருக்கும் அங்காடி பற்றிய அறிவு கிடைக்கப் பெறாமை இதற்கு ஒரு முக்கிய காரணமாகும். பெரும்பாலான உற்பத்திப் பொருள்களும் விளைபொருள்களும் அங்காடிகளுக்குக் கொண்டுவரப்படாமல் விற்பனை செய்யப்படுகின்றன. இந்நிலையில் உற்பத்தியாளரும் நுகர்வோரும் அங்காடி நிலைகள்பற்றி அறிய முயல்வதில்லை. இவர்களிடையே காணப்படும் கல்வியறிவின்மையும் இதற்குக் காரணமாகும். விலை மாற்றம், பண்பாட்டுப் புரட்சி, உற்பத்தியாளர்

போட்டி போன்றவை எதிர்பாராத மாறுதல்களை ஏற்படுத்திச் சில வகைப் பண்டங்களில் தேக்க நிலையை உண்டாக்குகின்றன. அங்காடிகளில் இடைத் தரகர்களின் ஆதிக்கம் உற்பத்தியாளர்களின் ஆதாயத்தையும் ஊக்கத்தையும் பேரளவில் பாதிக்கிறது.

உள்நாட்டு அங்காடி நன்முறையில் செயற்பட வேண்டின் உற்பத்தியாளர், நுகர்வோருக்கிடையே நல்லுறவு காணப்படவேண்டும். நாட்டின் முன்னேற்றத்திற்கு அங்காடி அமைப்பு இன்றியமையாததாகையால், அங்காடி நன்முறையில் செயற்படத் தேவையான சூழ்நிலைகளை அரசு உருவாக்க வேண்டும். பன்னாட்டு வாணிகம் செழிக்க உள்நாட்டு அங்காடிகள் ஒழுங்குற்ற உறுதியான முறையில் அமையவேண்டும். ஒரு நாட்டின் வேலையின்மையை ஒழிக்கவும், வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், போக்குவரத்து வசதிகளைப் பெருக்கவும் அங்காடி முன்னேற்றம் அடிப்படைத் தேவையாகக் கருதப்படுகிறது. காண்க: அங்காடி அமைப்பு. க. சொ.

துணை நூல்கள்:

**Clark & Clark,** Principles of Marketing, Macmillan Co., New York, 1962.

**Stanton, William, J.,** Fundamentals of Marketing, McGraw Hill Inc, 1975.

**Schulty, J. N.,** The Economic Organisation of Agriculture, Tata McGraw Hill Publishing Co., Ltd, Bombay, 1960.

**Cundiff, L. W., Still, R. R., Govani, N. A. P.,** Fundamentals of Modern Marketing, Prentice Hall of India Private Ltd, New Delhi, 1982.

**உள்நாட்டுக் கடன்**: மைய மாநில அரசுகள் இந்திய மைய இருப்பு வங்கி(Reserve Bank of India), வணிக வங்கிகள், முதல் அங்காடி, தொழில் நிறுவனங்கள், நிதி நிறுவனங்கள், பொதுமக்கள் ஆகியோரிடமிருந்து பெறும் எல்லா வகைக் கடன்களும் உள்நாட்டுக் கடன்கள் (Internal Debts) எனப்படும். தனி மனிதர் கடன் வாங்கும்போது கடனைத் திருப்பித் தருவதாக வாக்குறுதிக் குறிப்பு (Promissory Note) எழுதிக் கொடுப்பது போன்று, அரசுகள் கடன் வாங்கும்போது குறுகிய காலக் கடன்களுக்குக் கருவூலச் சீட்டுகளையும் (Treasury Bills), நீண்ட காலக் கடன்களுக்குக் கடனுறுதிச் சீட்டுகளையும் (Bonds) அளிக்கின்றன. தனி மனிதரின் வாக்குறுதிக் குறிப்புகள் நேரடியாகப் பணமாக மாற்றும் மதிப்பற்றவை (Illiquid). ஆனால், அரசின் கருவூலச் சீட்டுகளும் கடனுறுதிச் சீட்டுகளும் எளிதில் பணமாக்கக் கூடியவை (Liquidity). எனவே வங்கிகள் தங்கள் கையிருப்பில் எப்போதும் பல்வேறு காலங்களில் முதலைத் திருப்பிப் பெறும் வாய்ப்புள்ள வகையில், அரசின் கருவூலச் சீட்டுகளையும் கடனுறுதிச் சீட்டுகளையும் வைத்திருப்பது அவற்றின் பாதுகாப்புக்கு இன்றியமையாததாக இருக்கிறது. அரசின் பணக் கொள்கையின் (Monetary Policy) ஒரு சிறப்புக் கருவியான 'திறந்த அங்காடி நடவடிக்கை' (Open Market Operation) பொதுக் கடனுறுதிச் சீட்டுகளை விற்றல், வாங்குதல் ஆகியவற்றின் மூலம் நடைபெறுகிறது. இதற்கு வாய்ப்பளிக்கும் வகையில் இந்திய மைய இருப்பு வங்கிக்கு மைய மாநில அரசுகளின் சார்பில் கடன் வாங்குதல், வட்டி கொடுத்தல், உரிய காலத்தில் முதலைத் திருப்பிக் கொடுத்தல் போன்ற கடன் நிருவாகப் பொறுப்புகள் அனைத்தும் அளிக்கப்பட்டுள்ளன.

**பொதுக் கடன்கள்: தொன்மைப் பொருளியலார் மற்றும் கீனிசியப் பொருளியலாரின் எண்ணங்கள்**: தொன்மைப் பொருளியலாரின் கருத்துப்படி, தனி மனிதராயினும் அரசுகளாயினும் வரவுக்கு மேல் செலவு செய்து கடன் வாங்குவது முறைகேடான நடவடிக்கையாகும். நிகழ்காலத்தினரின் ஊதாரித் தனத்தினால் வருங்காலத் தலைமுறையினரின்மேல் பொதுக் கடனின் சுமையேற்றப்படுகிறது. கீனிசியப் பொருளியல் அறிஞர்கள் தொன்மைப் பொருளியலாரின் இக் கொள்கையை ஏற்றுக் கொள்வதில்லை. தனி மனிதரின் முதுகில் ஏற்றப்படும் பாறைகளைப் போன்றதன்று பொதுக்கடன் சுமை. நிகழ்காலத்தினர் வருங்காலத் தலைமுறையினர்மீது சுமை ஏற்றுவதென்பது எதற்காக, எந்த அளவு பொதுக் கடன்கள் வாங்கப்படுகின்றன? அவை எவ்வாறு செலவிடப்படுகின்றன? என்பவற்றைப் பொறுத்தது. தொன்மைப் பொருளியலார் பொதுக்கடன் குறைப்பை ஓர் உயர்ந்த நோக்கமாகக் கருதினர். ஆனால், கீனிசியப் பொருளியலாரோ வணிகச் சுழல் மந்தங்களின்போது பொதுக்கடன் குறைப்பை ஒடா இடையூறான நடவடிக்கையாகக் கருதுகின்றனர். பொதுக்கடனை உயர்த்துவதும் குறைப்பதும் நாட்டின் வேலை வாய்ப்பு, விலைநிலை போன்ற பொருளியற் காரணிகளால் வரையறுக்கப்பட வேண்டும்.

**தனியார் கடனும் பொதுக் கடனும்**: வரவை விடச் செலவு மிகையானால் எழும் இடைவெளியைச் சீராக்கத் தனியார் கடன் உதவுகிறது. தொடர்ந்து தனியார் கடன் வளர்ந்து. அது அவரின் சொத்து

மதிப்பைவிட மிகுதியானால் நொடிப்பு நிலையை அடைவார். ஆனால், தனியார் கடன் வாங்கி, அதனை முதலீடாக மாற்றி ஒரு தொழிலையோ நிறுவனத்தையோ ஆதாயமாக நடத்தினால் அந்த வருவாயைக் கொண்டே கடனுக்கான வட்டியையும் கட்டி, உரிய காலத்தில் முதலையும் பெற்றுவிடும் வாய்ப்புண்டு. பொதுக் கடன்களால் நாடு நொடிப்பு நிலையை யடைவது என்பது நடைமுறைக்கு அப்பாற்பட்டது. ஏனெனில் நாட்டின் சொத்து அதன் இயற்கை வளங்கள், மக்கள் வளம், மூலதன இருப்பு, தொழில்நுட்பம் போன்றவற்றால் வரையறுக்கப்படுகிறது. இவற்றை மதிப்பீடு செய்வது எளிதானதன்று. தனி மனிதர் கடன்களை உற்பத்தித் திறன் மிக்க வழியில் பயன்படுத்தி, அதன் மூலம் வட்டியையும் முதலையும் திரும்பப் பெறுவது போன்றே அரசுகளும் செய்ய இயலும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தாகும்.

**அயல்நாட்டுக் கடன்களும் உள்நாட்டுக் கடன களும்:** மொத்த உண்மைச் சுமை (Aggregate Real Burden) அடிப்படையில் அயல்நாட்டுக் கடன்களுக்கும் உள்நாட்டுக் கடன்களுக்கும் இடையே பேரளவில் வேறுபாடு உண்டு. அயல்நாட்டுக் கடன்களுக்கு வட்டி வழங்கும்போதும், முதலைத் திருப்பிக் கொடுக்கும் போதும், இந்திய மக்கள் உற்பத்தி செய்த பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் ஒரு பகுதி இந்திய மக்களின் நுகர்ச்சிக்குக் கிடைக்காமல் தடுக்கப்பட்டுக் கடன் கொடுத்த அயல்நாட்டினருக்காக வழங்கப்படுகிறது. ஆனால், உள்நாட்டுக் கடன்கள் அரசால் உள்நாட்டு மக்களிடமிருந்தே வாங்கப்படுகின்றன. அதற்கு வட்டி கொடுக்கப்பட்டால் கடன் வழங்கிய மக்களுக்கே செல்கிறது. முதல் திருப்பித் தரப்பட்டாலும் அதுவும் அம் மக்களையே சேருகிறது. மொத்தமாகப் பார்க்கும்போது, உள்நாட்டுக் கடன்களால் இந்திய மக்கள் உற்பத்தி செய்யும் பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் எந்தப் பகுதியும் இந்திய மக்களின் நுகர்ச்சிக்குக் கிடைக்காமல் தியாகம் செய்யப்படுவதில்லை. அயல்நாட்டுக் கடன்களில் உள்நாட்டு உற்பத்தியின் ஒரு பகுதி தியாகம் செய்யப்படுகிறது. ஆனால், உள்நாட்டுக் கடன்களால் அத்தகைய தியாகம் எதுவும் தேவைப்படுவதில்லை.

உள்நாட்டுக் கடன்கள் பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் உற்பத்தியிலும் நுகர்ச்சியிலும் உள்நாட்டிலேயே திசைமாற்றங்களை ஏற்படுத்தும். அதன் விளைவாகச் சமுதாயத்தின் பல்வேறு பகுதியினர் பற்பல வகையில் பாதிக்கப்படுகின்றனர்.

**நிதிக் கொள்கையின் நோக்கங்களை நிறைவேற்றும் கடன்:** பொருளாதார வளர்ச்சி, முழு வேலைவாய்ப்பை அடைதல், விலைகளின் ஏற்ற இறக்கங்களைக் கட்டுப்படுத்துதல் சமுதாய மக்களின் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைச் சமப்படுத்துதல் போன்ற பொருளியல் நோக்கங்களை நிறைவேற்றப் பணக் கொள்கையும் (Monetary Policy) நிதிக் கொள்கையும் (Fiscal Policy) பயன்படுத்தப்படுகின்றன. நிதிக் கொள்கையின் கருவிகளாகப் பொதுக் கடன்கள், வரிகள், வரிசாரா வருவாய்கள் (Non tax Revenue), பற்றாக்குறை நிதியாக்கம் (Deficit Financing) ஆகியன பயன்படுத்தப்படுகின்றன. இவற்றில் எந்தக் கருவியைப் பயன்படுத்துவது என்பது குறிக்கோளையும் சூழ்நிலையையும் அரசின் கொள்கைகளையும் சார்ந்தே அமையும்.

பொதுவாகக் கூறினால், வரிகள் பெருமளவுக்குத் தனியார் நுகர்ச்சிச் செலவிலிருந்து (Consumption Expenditure) பெறப்படுகின்றன என்றும், பொதுக் கடன்கள் சேமிப்பிலிருந்து பெறப்படுகின்றன என்றும் எடுகோளாகக் (Assumption) கொள்ளலாம். நிதிக் கொள்கை நுகர்ச்சிச் செலவைக் கட்டுப்படுத்தும் நோக்கம் கொண்டதானால் வரிகள் மூலம் நிதியாக்கம் (Tax Finance) சிறப்பானது; தனியார் சேமிப்பைக் கட்டுப்படுத்தும் நோக்கம் கொண்டதானால் கடன்கள் மூலம் நிதியாக்கம் (Loan Finance) சிறப்பானது. கடன்கள் மூலம் நிதியாக்கத்தைப் பயன்படுத்துவதற்குப் பொதுக் கடன்நிருவாகம் சிறப்பான முறையில் இயக்கப்பட வேண்டும் என்பது தெளிவு.

**பொதுக் கடன் நிருவாகம்:** பொதுக் கடன் நிருவாகம் (Administration of Public Debt) என்பது ஒரு நுண்ணிய கலை. இதில் பல்வேறு கூறுகள் அடங்கியுள்ளன. அவற்றுள் குறிப்பிடத்தக்கவையாவன: (1) ஒவ்வோர் ஆண்டிலும் அரசின் வரவு-செலவுத் திட்டங்களில் உபரி (Surplus) இருப்பின் மொத்தக் கடன்களைக் குறைத்தும், பற்றாக்குறை (Deficit) இருப்பின் மொத்தக் கடன்களைக் கூட்டியும் நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல். (2) நிதியாண்டில் வரவு-செலவுகள் சமமாக இருப்பினும் கூட (Balanced Budget) வரிகளின் மூலம் வரும் வருவாய்களும், பொதுச் செலவுகளின் அளவுகளும், ஒரே கால கட்டத்தில், ஒரே அளவில் ஒத்து நிகழ வேண்டுமென்று எதிர்பார்க்க இயலாது. இவற்றிடையே எழும் இடைக்கால வேறுபாட்டைச் சீராக்குதல். (3) பொதுக் கடனுறுதிச் சீட்டுகள் நிறைவுத் தேதியை (Dates of Maturity) அடையும்போது, அந்தக் கடன்களுக்கான முதல்களைத் திருப்பிக் கொடுக்கப் புதிய கடனுறுதிச் சீட்டுகளை வெளியிடுவதா, வரி வருவாயில் உபரி காண முயல்வதா, புதிய பணத்தை அச்சடித்து அதன் மூலம் முதல்களைத் திருப்புவதா,

எனக் கொள்கை முடிவை எடுத்தல். (4) பொதுக் கடனுறுதிச் சீட்டுகளின் குறிப்பிட்ட நிறைவு நாட்க ளைத் தெரிவு செய்தல். அங்காடி நிலையின் எதிர் பார்ப்புகளைச் சார்ந்து, குறுகிய, இடைக்கால, நீண்ட காலப் பொதுக் கடன்களின் வட்டிவீதங்கள் அமையும். குறிப்பிட்ட நிறைவு நாளைத் தெரிவு செய்யும்போது, எத்தகைய கடன் கலப்புப் பொது மக்களால் ஏற்றுக்கொள்ளப்படும்? வெளியிடப்படுகிற எல்லாக் கடனுறுதிச் சீட்டுகளும் விற்பனையாகும் வாய்ப்புப் பெற்றிருக்கிறதா? எந்தக் கலப்பைப் பயன் படுத்தினால் மொத்தத்தில் அரசின் வரிப்பளு குறை யும்? ஆகியவற்றைப் பற்றிய முடிவை ஆராய்ந்து எடுத்தல். (5) பண அங்காடியில் எதிர்பார்க்கப்படும் வட்டிவீத மாறுதல்களுக்கு ஏற்றாற்போல் கடன் கலவைகளைத் திருத்தி அமைததல். (6) நாட்டின் நிதிக் கொள்கையின் நோக்கங்களுக்கு ஏற்பப் பொதுக் கடன் நிருவாகத்தை நடத்துதல்.

நாட்டின் பொருளாதாரம் சீரான முறையில் வளர்ச்சியடையப் பொருளாதார மந்தக் காலங்களில் அரசு நடவடிக்கைகளைப் பெருக்குவதும், பணவீக்கக் காலங்களில் அரசு நடவடிக்கைகளைக் குறைப்பதும் நிதிக் கொள்கையின் கூறாகும். புதிய கடன்களின் நிறைவுபெறும் காலம் நீட்டப்பட்டால் (Longer Maturity) அது பொருளாதார நடவடிக்கைகளைக் குறைக்கும். நிறைவுபெறும் காலம் குறைக்கப்பட்டால் (Shorter Maturity) அது பொருளாதார நடவடிக்கை களைப் பெருக்கும். எனவே, பொதுக் கடன் நிருவாகி கள் நிறைவுத் தேதிகளை நீட்டியும் குறைத்தும் நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளைக் கட்டுப் படுத்த முயல்கின்றனர். இவ்வாறு பொதுக் கடன் நிருவாகம் பல்வேறு கூறுகளைக் கொண்டது. சில சூழ்நிலைகளில் நிருவாகத்தின் ஒரு பகுதிக்கும் மற் றொரு பகுதிக்கும் முரண்பாடுகள் ஏற்படுவதுண்டு. சிறந்த பொதுக்கடன் நிருவாகம் இவற்றிடையே ஓர் உகந்த கலவையை ஏற்படுத்திப் பேரியல் பொருளா தாரக் கொள்கைகளின் (Macro Economic Policy) இலக்குகளை எய்த முயற்சி செய்தது.

**பணவீக்கமும் பொதுக்கடன் நிருவாகமும்:** பணவீக்கக் காலங்களில் கடன் வாங்கியவர்களின் உண்மைச் சுமை (Real Burden) குறைகிறது. விலைகள் உயரும் போது கடன் கொடுத்தவர்கள் இழப்படைகின்றனர்; கடன் வாங்கியவர்கள் ஆதாயம் பெறுகின்றனர். இது அரசுகளுக்கும் பொருந்தும். விலைகள் உயர உயர அரசுகளின் பொதுக் கடன் பளுவின் உண்மை மதிப்புக் குறைந்து கொண்டே செல்கிறது.

அரசுகள் புதிய பணத்தை அச்சடித்து அதன் மூலம் நிறைவு பெற்ற கடன்களுக்கான முதல்களைத் திருப்பித் தருவதுண்டு. இம்முறையைக் 'கடன் பண மயமாக்கல்' (Debt Monetization) என்று கூறுகின்ற னர். இதனால், அரசுக்கு இருவகை நன்மைகள் கிடைக் கின்றன. (1) பழைய கடன்கள் அடைபட்டுவிடுகின் றன. (2) அச்சடித்த புதிய பணத்தாள்களுக்கு வட்டி யெதுவும் கொடுக்கப்படுவதில்லை. இம்முறை அரசு களுக்கு நன்மை தருவது போல் தோன்றினாலும், இதனால் ஏற்படும் பணவீக்கம், விலையேற்றம் போன்றவற்றால் சமுதாய விளைவுகள் பல கொடுமை யாக அமைந்து விடுவதுண்டு. இவற்றால் வணிகச் சுழல்கள் உருவாகிப் பொருளாதார இயக்கமே செய லற்றுவிடும் நிலை தோன்றக் கூடுமென்பதால், பொருளாதார அறிஞர்கள் இம்முறைகளை வரவேற்ப தில்லை.

**உள்நாட்டுக் கடன் சுமையும் தலைமுறையினர் களிடையே நீதியும்:** உள்நாட்டுக் கடன்கள் நிகழ் காலத் தலைமுறையினரிடமிருந்து பெறப்படுகின்றன. அதற்கான வட்டியும் முதலும் வருங்காலத் தலை முறையினரைச் சென்றடைகின்றன. நிகழ்காலத்தினர் கடனைப் பெற்று வீணாகச் செலவழித்துவிட்டால் வருங்காலத் தலைமுறையினர் அதற்கான வட்டிக் காகவும், முதலைத் திருப்பி வழங்கவும் பேரளவில் வரிப்பளுவை ஏற்க வேண்டிவரும். இது தலைமுறை யினர்களுக்கிடையே நீதிச் சிக்கலை உருவாக்கு கிறது. இவற்றில் நிகழ்காலத்தில் செய்யப்படும் சேமிப்பும் முதலீடுந்தாம் வருங்காலத் தலைமுறை யினரின் வருவாயைப் பெருக்க உதவுகின்றன என் பதையும் நினைவில் கொள்ள வேண்டியிருக்கிறது.

ஒரு தலைமுறையினர் வருங்காலத் தலைமுறை யினர் மீது சுமையேற்ற இரண்டுவழிகள் சிறப் பாகக்குறிப்பிடத் தக்கன: (1)நாட்டின் இப்போதைய முதல் இருப்பை(Capital Stock) வேகமாகப் பயன் படுத்தி விடுவது; (2) இருக்கும் முதல் இருப்போடு கூட்டப்பட வேண்டிய முதலீட்டைக் (Increment of Investment) கூட்டாமல் விட்டுவிடுவது. இவ்விரண்டு காரணங்களாலும் வருங்கால உற்பத்தி குறைந்து விடும். எனவே, வருங்காலத் தலை முறையினரின் சுமை பெருகும். எடுத்துக்காட்டாகப் போர்க் காலங் களில் நாட்டின் முதல் இருப்பு வேகமாகப் பயன் படுத்தப்பட்டுவிடும். இரயில்வேக்கள், சாலைகள் முதலியவற்றைப்பழுது பார்க்காமலேயே மிகையாகப் பயன்படுத்துவது அப்போதைக்குத் தேவைதான் எனி னும், அது பிற்காலத்தில் பேரளவில் பாதுகாப்புச் செலவுகளை (Maintenance) அதிகரிக்கச் செய்கிறது. அவற்றை வருங்காலத் தலைமுறையினர் ஏற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது.

இப்போதைய தலைமுறையினரும் பொதுக் கடன்கள் மூலம் பெறும் வருவாயை உற்பத்தித் திறன் மிக்க முதலீடாக மாற்றினால், வருங்காலத் தலைமுறையினரின் சுமை குறையலாம். வணிகச் சுழலின் மந்தக் காலங்களில் பொதுக்கடன் மூலம் செய்யப்படும் முதலீடு வருங்காலத்தலைமுறையினரின் சுமையைக் குறைக்கிறது.

தலைமுறையினர்களுக்கிடையே மொத்தச் சுமை பெருகாவிடினும் சமுதாய மக்களின் பல பிரிவினர் களுக்கிடையே ஏற்படுகின்ற வருவாய் மாற்றங்கள் பல்வகைச் சுமைகளை உருவாக்கலாம். எடுத்துக் காட்டாக, பொதுக் கடன்களைக் கொடுப்பவர்கள் நிகழ்காலத்தின் செல்வர்களாக இருக்கலாம். ஆனால், வட்டியும் முதலும் திருப்பி வழங்கப்படுவதற் காக வருங்காலத் தலைமுறையினரான ஏழைகள் மீது வரி விதிக்கப்படலாம். பொதுக் கடன்கள் வருங் காலத்தில் ஏழை மக்களின் மீது அதிக விழுக்காடு சுமையை ஏற்றலாம்.

பொதுக் கடன்களிலிருந்து வட்டியையும் முதலை யும் திரும்பப் பெறும் வாய்ப்பைப் பெற்றுள்ள வருங் காலத் தலைமுறையினர், அவ்வருவாய் எதிர்பார்ப் பின் அடிப்படையில் மிகுந்த நுகர்ச்சி நாட்டம் (High Propensity to Consume) கொள்ளலாம். இதனால், புதிய முதலீட்டின் அளவு குறைந்து அதற்கடுத்த தலைமுறையினரின் வளர்ச்சி பாதிக்கப்படும்.

இக்காலத்தில் அரசின் பொதுக் கடன்கள் பெரு கும் நிலையைக் கண்டு தொழில்முயல்வோரின் உள நிலையும் எதிர்பார்ப்புகளும் பாதகமாக மாறினால், அது முதலீட்டைக் குறைத்து வருங்காலத்தின் வளர்ச் சியைப் பாதிக்கும். தலைமுறையினர்களுக்கிடையே நீதியான பகிர்வு வேண்டுமானால் இக்கால உடனடிச் செலவுகளை (Current Expenditure) வரி விதி யாக்கத்தின் மூலமும், முதலீட்டுச் செலவுகளைக் கடன் நிதியாக்கம் மூலமும் செய்ய வேண்டும்.

**உள்நாட்டுக் கடன்களைத் திருப்பித் தரும் முறை கள்:** உள்நாட்டுக் கடன்களைத் திருப்பித் தர அல்லது குறைக்கப் பின்பற்றப்படும் முறைகளாவன: (1) உபரி வரவு-செலவுத் திட்டம், நாட்டின் வருவாய் செலவை விட மிகுதியாக இருக்கும்போது, எச்சம் கடன்களைத் திருப்பித் தரப் பயன்படுத்தப்படலாம். (2) மூழ்கும் நிதி: நாட்டின் வருவாயில் ஒரு குறிப்பிட்ட விழுக்காடு அல்லது குறிப்பிட்ட ஒரு தொகை ஆண்டுதோறும் 'மூழ்கும் நிதி'க்குச் செலுத்தப்படும். இந்த நிதியும் இதன் வட்டியும் பொதுக் கடன்களைத் திருப்பித் தருவதற்காகச் செலவழிக்கப்படும். 'மூழ் கும் நிதி' யில் பல வகைகள் உள்ளன. இவை யனைத்தும் பொதுக் கடன்களைத் திருப்பித் தர அரசு மேற்கொள்ளும் சேமிப்பு முறைகளைச் சார்ந்தவை. (3) ஆண்டுதோறும் கடனில் ஒரு பகுதி முடிவுறும் முறை (Terminal Annuities); பொதுக் கடன் நிருவாகிகள் பொதுக் கடனில் ஒவ்வோர் ஆண்டும் ஒரு பகுதி நிறைவு பெறும் வகையில் கடன் களை நிருவகித்தல். (4) கடன் மீட்டளிப்பு (Refunding): பொதுக்கடன் நிறைவுபெறும் நாளில், புதிய கடன்களைத் தொடங்கி, புதிய கடன்களின் வரு வாய் மூலம் பழைய கடன்களைத் திருப்பித் தரு தல். (5) மாற்றம் (Conversion): அதிக வட்டியுடைய பழைய கடனுறுதிச் சீட்டுகளுக்குப் பதிலாக, அதன் நிறைவு நாட்களில், குறைந்த வட்டியுடைய புதிய கடனுறுதிச் சீட்டுகளைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பை அளித்தல். (6) கடனைப் பணமயமாக்கல். (7) முதல் மீது தனி வரி (Capital Levy): போர்க் காலங்களில் எல்லாப் பொருள்களிலும் பற்றாக்குறை ஏற்படுவதால், முதலாளிகள் ஏராளமாக எதிர்பாராத ஆதாயம் பெறுகிறார்கள். அவர்களின் முதலின் மதிப்பு, போருக்கு முன்பிருந்ததைவிடப் பன்மடங்கு பெருகியிருக்கும். முதலின் மதிப்பில் ஏற்படும் உயர் வுக்கு முதலாளிகளின் முயற்சி காரணமாக இருப்ப தில்லை. எனவே, இத்தகைய சூழ்நிலைகளில் பெருகி யிருக்கும் முதல் மதிப்பின் மீது வரிவிதித்து, அதை முதலாளிகளிடமிருந்து பெற்று, அதன் மூலம் பொதுக் கடன்களை அடைத்தல். (8) கடன் மறுத்தல் (Repudiation): அரசு தான் வாங்கிய கடனைத் திரும்பத் தர முடியாதென்று அறிவித்தல். இது வெகு அரிதான செயல் முறையாகும்.

**இந்தியாவின் உள்நாட்டுக் கடன்கள்:** இந்திய மைய அரசின் உள்நாட்டுக் கடன்கள்1950-51-இல் உரூ. 2,022 கோடியாகவிருந்து 1979-80-இல் உரூ. 24,800 கோடியாகவும், 1983-84வரவு செலவுத் திட்டத்தில் உரூ.53,049 கோடியாகவும் வளர்ந்திருக்கிறது. அதே கால கட்டத்தில் அயல்நாட்டுக் கடன்கள் உரூ.32 கோடியிலிருந்து (1950-51) உரூ.15,328 கோடியாக (1983-84 வரவு செலவுத் திட்டம்) வளர்ந்திருக் கிறது.

மாநில அரசுகளின் மொத்த உள்நாட்டுக் கடன் 1983-இல் உரூ.30,580 கோடியாக இருந்தது. இதில் உரூ. 21,752 கோடி மைய அரசிடமிருந்து பெறப் பட்ட கடனாகும்; உரூ.5,297 கோடி பொதுமக்களிட மிருந்து நேரடியாக வாங்கிய கடனாகும்; எஞ்சிய உரூ.3,531 கோடி தொழிலாளர் நலநிதி போன்ற அரசு சேமிப்புத் திட்டங்களிலிருந்து பெறப்பட்ட தொகையாகும்.

மைய அரசும் தொழிலாளர் நல நிதி, வருமான வரிக்கான கட்டாய வைப்புத் திட்டம் (Compulsory Deposit Scheme), தபால், இரயில்வேக்கள், பிற பொதுத் துறை நிறுவனங்களின் காப்பு இருப்பு நிதிகள் போன்றவற்றை நிருவகிக்கிறது. இவற்றின் அளவு 1983-இல் உரூ.25,000 கோடி எனினும் அவற்றை 'உள்நாட்டுக் கடன்' என்ற தலைப்பில் காட்டுதல் இல்லை. எஸ்.நீ.

துணை நூல்கள்:


Musgrave and Musarave., Public Finance in Theory and Practice, Mc Graw Hill Koghakusha Limited, Tokyo, 1972.

Musgrave, R.A., The Theory of Public Finance, Mc Graw Hill, New York, 1973.

Rolph, E.R., Principles of Deb Management, American Economic Review, June, 1957.

Tobin, J. (Ed.), Fiscal and Debt Management Policies, Prentice Hall, Engelwood Cliffs, NJ, 1963.


**உள்நாட்டுக் கொள்கை:** உள்நாட்டுக் கொள்கைகளை அந்தந்த நாடுகளின் அரசாங்கம் அமைக்கின்றது. இக்கொள்கைகள் நாடுகளின் உள் விவகார நடவடிக்கைகளைப் பற்றியதாக இருக்கும். ஒரு நாடு தன் நாட்டில் சட்டம், ஒழுங்கைப் பராமரித்து முன்னேற்றுவதற்குரிய நடவடிக்கைகள் உள்நாட்டுக் கொள்கைகளாகும். அந்நாடு பிற நாடுகளோடு எங்ஙனம் தொடர்பு வைத்துக் கொள்ளவேண்டும் என்பதை அந்நாட்டின் வெளிநாட்டுக் கொள்கை விளக்கும். உள்நாட்டுக் கொள்கைகள் ஒரு நாட்டின் எல்லையையும் பாதுகாப்பையும் இறைமையையும் காக்க வல்லதாக இருக்க வேண்டும். நாட்டின் எல்லைப்புற ஆக்கிரமிப்புகளைத் தடுப்பது, அந்நாட்டின் எல்லையைக் கட்டிக் காப்பது, வெளிநாடுகள் அந்நாட்டு உள்விவகாரங்களில் தலையிடாதவாறு பார்த்துக் கொள்வது ஆகியன உள்நாட்டுக் கொள்கையில் இடம் பெறும். அதே நேரத்தில் உள்நாட்டில் சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கவும், பல்வேறு மக்களின்வேறுபட்ட சமூக பண்பாடுகளைக் காக்கவும், மக்களிடையே சமூக ஒற்றுமையை நிலைநாட்டவும், பொருளாதார வளர்ச்சியில் கவனம் செலுத்தி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், விலைவாசிகளைக் கட்டுப்படுத்தவும் மக்கள் அனைவரும் வேற்றுமை பாராட்டாது ஒற்றுமையுடன் வாழ எடுக்கப்படும் முயற்சிகள் அனைத்தும் உள்நாட்டுக் கொள்கைகளாகும்.

உள்நாட்டுக் கொள்கை உருவாக்கும்பணி அந்நாட்டு அரசாங்கத்தைச் சார்ந்தது. எனவே, உள்நாட்டுக் கொள்கை நாட்டுக்கு நாடு வேறுபட்டதாக இருக்கும். இக்கொள்கை நாடுகளின் அரசியல் முறையமைவுகளைச் சார்ந்து இருக்கும். இன்றைய நாளில் உள்நாட்டுக் கொள்கை வகுப்பதில் அரசியல் கட்சிகள் பெரும்பங்கு ஆற்றிவருகின்றன. ஏனெனில் அரசாங்கங்கள் பெரும்பாலும் அரசியல் கட்சிகளால் அமைக்கப்பட்டு வருகின்றன. அரசியல் கட்சிகள் இல்லையெனில் அரசாங்கங்கள் அமைப்பதென்பது இன்று முடியாத செயல். பொதுவுடைமைக் கட்சி சோவியத்து உருசியாவிலும், தொழிலாளர் கட்சி, பழைமை விரும்பிக் கட்சி போல்வன இங்கிலாந்திலும், குடியாட்சிக் கட்சி, குடியரசுக் கட்சி,மற்றும்பல கட்சிகள் என்பன அமெரிக்க ஐக்கிய நாடுநாட்டிலும் இந்தியாவிலும் பிரான்சிலும் உள்ளன. இந்த அரசியல் கட்சிகள் மக்களுடைய ஆதரவைப் பெற்று ஆட்சிக்கு வந்ததும், இக்கட்சிகளின் கொள்கைகள் அரசாங்கத்தின் கொள்கைகளாக மாறிவிடுகின்றன. சில நாடுகளில் அரசியல் கட்சிகளின் ஆதிக்கத்தையும், சில நாடுகளில் அரசியல் கட்சிகளையும் வன்முறையால் அந்நாடுகளின் இராணுவப் படையே கட்டுப்படுத்தி, இராணுவப் பிரிவே ஆட்சியமைத்து உள்நாட்டுக் கொள்கைகளை அறிவிக்கிறது. எனவே, உள்நாட்டுக் கொள்கையை (Domestic Policy) இராணுவத்தினர்களும் உருவாக்குகின்றனர். ஆகவே, அரசாங்கங்களை அமைக்கக் கூடிய சக்திகளைப் பொறுத்து, அந்தந்த நாடுகளின் உள்நாட்டுக் கொள்கைகள் அமைகின்றன.

பாராளுமன்ற முறை, குடியரசுத்தலைவர் முறை அரசாங்கங்களில் அரசியல் கட்சிகளின் கொள்கைகள் சட்டப்படி அரசாங்கங்களின் கொள்கைகளாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. மக்களுடைய பெரும்பான்மையான எண்ணங்களே அரசாங்கத்தின் கொள்கைகள். ஒவ்வோர் அரசியல் கட்சியும் இலட்சிய முறையில் (Ideology) கொள்கைகள் ஏற்படுத்தி இயங்கினாலும், அது அரசாங்கத்தை அமைத்துவிட்டால் படைமுறைக்கு ஒப்பத் தன் கொள்கைகளை மாற்றியமைத்துக் கொள்கின்றது எடுத்துக்காட்டாக, தொழிலாளர்களுக்கு ஆதரவாகத்தான் தொழிற்கட்சி அரசாங்கம் செயற்படும் என்று நம்பிக் கொண்டிருக்கும் போது, தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வது சட்டவிரோதமென ஓர் அரசியல் கட்சி அரசாங்கம் உள்நாட்டுக் கொள்கை உருவாக்குவது உண்டு. மதத்திற்கு எதிராக உள்ளது இக் கட்சி; இது ஆட்சிக்கு வந்தால் மதத்திற்கு எதிராகக் கொள்கைகள் எடுக்குமென்று எண்ணுகின்றபோது, அக்கட்சி அரசாங்கம் மதங்களை வளர்க்கும் நடவடிக்கை எடுப்பதும் உண்டு. ஏனெனில், அரசாங்கத்தின் கொள்கைகள் அனைத்து

மக்களுக்குமாக இருப்பதால், அரசியல் கட்சிகள் தங்கள் கொள்கைகளைப் பொது நன்மைக்காக விட்டு விடுவதுண்டு.

அரசாங்க வகை அமைப்புகளிடையேயும் உள்நாட்டுக் கொள்கைகள் வேறுபடுவதுண்டு. ஒற்றையாட்சி முறை (Unitary) அரசாங்கங்களில் சட்டம்-ஒழுங்கை நிலைநாட்டுவதும், தேசிய ஒற்றுமையை வளர்க்கக் கூடியதுமான உள்நாட்டுக் கொள்கைகளை வகுப்பது எளிது. ஏனெனில், வலுவான மத்திய அரசாங்கம் உள்நாட்டுக் கொள்கைகளை எளிதாக வகுத்து, கண்டிப்புடன் சட்டம் ஒழுங்குப் பிரச்சினையைக் கவனிக்கும். ஆனால், கூட்டாட்சி நாடுகளில் அதிகாரங்கள் பகிர்வுக்குட்படுவதால், அதாவது மத்திய அரசாங்க அதிகாரங்கள், மாநில அரசாங்க அதிகாரங்கள் எனப் பிரிக்கப்படுவதால், சட்டம் ஒழுங்கைக் காப்பது உள்ளிட்ட பிற உள்நாட்டுக் கொள்கைகள் மாநிலங்களோடும் கலந்து எடுக்கப்பட வேண்டியுள்ளன. இதனால் ஏராளமான பிரச்சினைகளைச் சமாளிக்க வேண்டியுள்ளது. உள்நாட்டுக் கொள்கையில் மத்திய-மாநில அரசாங்கங்களுக்கிடையே சுமுகமான உறவு வளர்வதும் ஒரு கொள்கையாக உள்ளது. மாநிலங்களின் இணக்கத்தோடும் ஒத்துழைப்போடும் உள்நாட்டுக் கொள்கைகள் உருவாக்கப்பட வேண்டியுள்ளன.

ஒரு நாடெனில் அது சுதந்திரமாக இயங்க வேண்டும். சுதந்திரமாக இயங்குவதற்கு அந்நாடு இறைமை அதிகாரம் கொண்டதாக இருக்க வேண்டும். இறைமை அதிகாரம் என்பது அந்நாட்டில் அரசாங்கம் அதிக அதிகாரம் கொண்டதாக இருப்பதாகும். அரசாங்கத்திற்கு மேலான அதிகாரம் கொண்ட தனிப்பட்டவர்களோ அமைப்புகளோ இருக்கக்கூடாது. எந்த நாட்டின் தலையீடும் இல்லாது சுதந்திரமாகத் தனது வெளிநாட்டு, உள்நாட்டுக் கொள்கைகளை வகுக்க வேண்டும். இறைமை அதிகாரம் உள்நாட்டுக் கொள்கைகளை வகுக்க இன்றியமையாதது.

நாட்டின் எல்லைப்புறங்களைக் காக்கும் வகையில், வெளி நாட்டுச் சக்திகள் உள்ளே நுழையாதவாறு ஒரு நாடு தனது உள்நாட்டுக் கொள்கையை உருவாக்க வேண்டும். மக்களுக்குக் குடியுரிமை வழங்குவது முதல் வெளிநாட்டினர்களுக்குப் பயணிகள் நுழைவுரிமைச் சீட்டு (Visa) வழங்குவது வரை எல்லாவற்றையும் கண்காணிக்கும் வகையில் உள்நாட்டுக் கொள்கை இருக்க வேண்டும். மக்களை அரசாங்கம் தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்து இருக்கும் வகையில் உள்நாட்டுக் கொள்கை வகுக்கப்பட வேண்டும். மக்களது உரிமைகளைப் பாதிக்காத வகையில் உள்நாட்டுக் கொள்கை ஏற்படுத்தப்பட வேண்டும். இல்லையேல் மக்கள் அந்த அரசாங்கத்தை மாற்றிப் புதிய அரசாங்கத்தை ஏற்படுத்தி விடுவர். எனவே, மக்கள் சுதந்திரமாக முழு உரிமைகளுடன் இருக்கும் வகையில் உள்நாட்டுக் கொள்கைகள் திகழவேண்டும்.


மக்கள் அனைவரும் ஒற்றுமையுடன் செயற்படக் கூடிய வகையில் உள்நாட்டுக் கொள்கைகள் அமைய வேண்டும். மக்களின் ஒற்றுமைக்குப் பங்கம் விளைவிக்கக்கூடிய சமூக, பொருளாதார, அரசியல், சமய மற்றும் பல பிரிவுச் சக்திகளை அடையாளங்கண்டு, அவற்றை முறியடிக்கக்கூடிய நடவடிக்கைகள் உள்நாட்டுக் கொள்கையில் இருக்க வேண்டும். மக்களின் பல்வேறு பண்பாடுகள் ஒருங்கிலணந்து செயற்படும் வண்ணம் உள்நாட்டுக் கொள்கைகள் அமையும். கூட்டாட்சி நாடுகளில் பல்வேறு பகுதிகளையும் ஒன்றாகச் சேர்க்க வல்ல தேசிய ஒருமைப்பாடு மன்றம் (National Integration Council), மண்டல மன்றங்கள் (Zonal Councils) போன்ற அமைப்புகளை ஏற்படுத்தி அனைவரையும் ஒன்றாக்கும் நடவடிக்கைகளும் உள்நாட்டுக் கொள்கையில் இடம்பெறும்.

உள்நாட்டுக் கொள்கையில் திட்டமிட்டுப் பொருளாதாரத்தை வளர்ப்பதுவும் ஒரு கூறு. திட்டமிடல், திட்டங்களைச் செயற்படுத்தல் ஆகியவற்றை வைத்துத்தான் அரசாங்கங்களின் செயல்திறன் கணிக்கப்படுகிறது. அரசாங்கம் எந்த அளவிற்குத் திட்டமிட்டு, பொருளாதார நடவடிக்கைகளில் நேரடியாக அல்லது மறைமுகமாகப் பங்குபெறுகின்றது என்பதை உள்நாட்டுக் கொள்கை தீர்மானிக்கும். நாட்டில் நலிவுற்ற பிரிவினர்கள் யார்? யார்? என்பதை அறிந்து, நலிவுற்ற பிரிவினர்களும் பிற பிரிவினர்களைப் போல் முன்னேறச் சிறப்புத் திட்டங்கள் வகுப்பதுவும் இக்கொள்கையில் அடங்கும். இது நலிவுற்ற பிரிவினர்களை மேலும் நசுக்காது அவர்களுக்குப் பாதுகாப்புத் தரும். நாட்டின் பொருளாதாரம் ஒரு சிலர் கையில் குவியாது, பலருக்கும் பயனளிக்கும் விதத்தில் பொருளாதாரத்தை ஒழுங்குபடுத்துகிற செயல்களையும் உள்நாட்டுக் கொள்கை வரையறுக்கும். பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதற்காக உள்நாட்டுக் கொள்கையை வகுக்கும்போது, மக்கள்தொகைப் பெருக்கத்தினால் ஏற்படக்கூடிய தீய விளைவுகளும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன; ஆகையால், இக்கால உள்நாட்டுக் கொள்கையை உருவாக்கும் காரணிகளுள் மக்கள் தொகைப் பெருக்கத்தின் கேடும் ஒன்று ஆகும். பொருளாதார வளர்ச்சி நாடு முழுவதுவும் ஒரே சீராக அமையும் வகையிலும், மக்களின் வாழ்க்கைத்தரம் மேம்படும் வகையிலும் உள்நாட்டுக் கொள்கைகள் வரையறுக்கப்படும்.

நாடு அறிவியல் முறையில் முன்னேற முயற்சிகள் மேற்கொள்வது உள்நாட்டுக் கொள்கை. உள்நாட்

டின் அறிவாற்றல் வெளிச் செல்லலைத் (**Brain Drain**) தடுப்பதும், அறிவாற்றல் மிக்கோர் வெளிச் செல்லாதவாறு அவர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுத்து, அவர்களது அறிவாற்றலைப் பயன்படுத்தி நாடு அறிவியல் முறையில் வளர நடவடிக்கைகள் எடுப்பதும் உள்நாட்டுக் கொள்கை. வெளிநாட்டிலுள்ள இந்தியர்கள் இந்தியாவில் தொழில் தொடங்கச் சலுகைகள்அளிப்பதும் இந்தியாவிலுள்ள அறிவுமிக்கோர் வெளியே செல்வதைத் தடுத்து,அவர்கள் ஆய்வுகள் மற்றும் தொழில் தொடங்க ஆவன செய்வதும் போன்ற வசதிகள் செய்து கொடுப்பது உள்நாட்டுக் கொள்கை. மொத்தத்தில், உள்நாட்டுக் கொள்கையினால்தான் நாட்டில் அமைதியும் ஒழுங்கும் ஒருமித்த முன்னேற்றமும் எற்படும் என்பது திண்ணம். சி.ஞா.

**உள்நாட்டுச் சேமிப்பு**: வருமானத்தில் நுகர்விற்காகச் செலவிட்ட தொகை போக எஞ்சியுள்ளது சேமிப்பு எனப்படும். சேமிப்பு வருமானத்தின் ஒரு சார்பாக உள்ளது. எனவே, வருமானம் உயர உயர சேமிப்பும் உயர்ந்து செல்லும். இதனை ஒரு வரைபடத்தின் துணையால் விளக்கிக் கூறலாம்.




சேமிப்புச் சார்பு

கிடையச்சில் (OX) வருமானத்தையும், குத்து அச்சில் (OY) சேமிப்பையும் எடுத்துக்கொண்டால், சேமிப்புச் சார்பு 'SS' ஆக இருக்கும். வருமானம் $OY_0$ வை விடக் குறைவாக இருக்குமானால் சேமிப்பு எதிர்மறையாக இருக்கும் (அதாவது மக்கள் கடன்பட்டு இருப்பர்). $OY_0$ என்ற அளவில் சேமிப்பு இன்மையாக (Zero) உள்ளது. வருமானம் $OY_0$ வைவிடக் கூடுதலாக உயரும் பொழுது சேமிப்பு நேர் விகிதத்தில் அதிகரித்துச் செல்லும்.

மொத்தச் சேமிப்பிற்கும் மொத்த வருமானத்திற்கும் உள்ள விகிதத்தைச் சராசரிச் சேமிப்பு நாட்டம் (**Propensity to Save**) என்றும், கூடுதல் வருமானத்தில் சேமிக்கப்படும் தொகையை விகிதப் படுத்தும்பொழுது இறுதிநிலைச் சேமிப்பு நாட்டம் என்றும் கூறலாம். சே.எம். கீன்சின் (J.M. Keynes) கருத்துப்படி, சராசரிச் சேமிப்பு நாட்டத்தைவிட இறுதிநிலைச் சேமிப்பு நாட்டம் (**Marginal Propensity to Save**) அதிகமாக இருக்கும். ஆனால், நீண்டகாலத்திய, ஏறத்தாழ 50 ஆண்டுக்கால அளவிலான சேமிப்பு-வருமான விகிதங்களை ஆராய்ந்த, கீன்சுக்குப் பின்னர் வந்த பொருளாதார அறிஞர்கள் மாறுபட்ட கருத்தை வெளியிட்டுள்ளார்கள். அவர்களின் கருத்துப்படி, நீண்டகால அளவில் சராசரிச் சேமிப்பு நாட்டத்திற்கும் இறுதிநிலைச் சேமிப்பு நாட்டத்திற்கும் இடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் இல்லை. இதனால், கீன்சின் கருத்துகள் குறுகிய கால அளவில் மட்டுமே ஏற்புடையன என்றும், நீண்டகால அளவில் அவற்றை ஏற்பதற்கில்லை என்றும் கூறலாம்.

இந்திய உள்நாட்டுச் சேமிப்பு நான்கு வகைப்படும். அவை: உபரியான வரி வருவாய் (**Revenue Surplus**), பொது நிறுவனங்கள் ஆதாயம், கூடுதல் வரி விதிப்பு, தனியார் சேமிப்பு என்பன ஆகும்.

அட்டவணை – 1

| ஐந்தாம் திட்டங்களுக்கான நிதி வளங்கள் (விழுக்காடுகளில்) | | | | | |
|---|---|---|---|---|---|
| | முதலாம் திட்டம் | இரண்டாம் திட்டம் | மூன்றாம் திட்டம் | நான்காம் திட்டம் | ஐந்தாம் திட்டம் |
| 1. உள்நாட்டு வளங்கள் (சேமிப்பு) | 73 | 56 | 59 | 74 | 84 |
| அவற்றுள் (அ) உபரி வரி வருவாய் | 25 | —1 | —5 | —2 | 13 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) பொது நிறுவனங்களின் ஆதாயம் | — | 3 | 5 | 9 | 12 |
| (இ) கூடுதல் வரி விதிப்பு | 13 | 23 | 34 | 27 | 22 |
| (ஈ) உள்நாட்டுத் தனியார் சேமிப்பு | 35 | 31 | 25 | 40 | 37 |
| 2. அயல்நாட்டு உதவி | 10 | 24 | 28 | 13 | 12 |
| 3. பற்றாக்குறை நிதியாக்கம் | 17 | 20 | 13 | 13 | 4 |
| மொத்த நிதி | 100 | 100 | 100 | 100 | 100 |

அட்டவணை - 2

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | நிகர உள்நாட்டுச் சேமிப்பு | | | | | |
| | உரூ. கோடி (நடப்பு விலை) | | | திட்ட முதலீட்டில் விழுக்காடாக | | | நடப்பு விலையில் நிகர நாட்டு உற்பத்தியில் விழுக்காடாக | | |
| | 81—82 | 82—83 | 83—84 | 81—82 | 82—83 | 83—84 | 81—82 | 82—83 | 83—84 |
| 1. பொதுத் துறை | 4712 | 4929 | 3900 | 19.6 | 19.0 | 12.8 | 3.5 | 3.2 | 2.1 |
| 2. தனியார் நிறுவனங்கள் | 1032 | 1183 | 1265 | 4.3 | 4.6 | 4.1 | 0.7 | 0.8 | 0.7 |
| 3. நுகர்வோர் (குடும்ப) துறை | 18330 | 19763 | 25312 | 76.1 | 76.4 | 83.1 | 13.3 | 13.0 | 13.9 |
| 4. மொத்த உள்நாட்டுச் சேமிப்பு | 24074 | 25875 | 30477 | 100.0 | 100.0 | 100.0 | 17.5 | 17.0 | 16.7 |

திட்ட முதலீட்டில் உள்நாட்டுச் சேமிப்பின் விழுக்காடு உயர்ந்துள்ளது. முதல் திட்டத்தில் 73 விழுக்காடாகவும் ஐந்தாம் திட்டத்தில் 84 விழுக்காடாகவும் உள்ளது. இந்திய மைய இருப்பு வங்கியின் (Reserve Bank of India) கணிப்பின்படி 1983-84-இல் நாட்டு நிகர உள்நாட்டுச் சேமிப்பு (Net Domestic Savings) நடப்பு அங்காடி விலையில் 16.7 விழுக்காடாக இருந்தது. இதற்கு முந்தைய ஆண்டில் 1982-83-இல் இது 17.1 விழுக்காடாக இருந்தது. உள்நாட்டுச் சேமிப்பை நிறுவனங்களின் சேமிப்பு என்றும் நுகர்வோர் அல்லது குடும்பங்களின் சேமிப்பு என்றும் பிரிக்கலாம். இவற்றுள் நிறுவனங்களின் சேமிப்பை அரசுத் துறை நிறுவனங்களின் சேமிப்பு என்றும், தனியார் துறை நிறுவனங்களின் சேமிப்பு என்றும் வேறுபடுத்தலாம். இந்த அடிப்படையில் 1981 முதல் 1984வரையில் உள்ள மொத்த உள்நாட்டுச் சேமிப்பை அட்டவணை -2 விளக்குகிறது.

முற்றிலும் முதலாளித்துவ அடிப்படையில் இயங்கும் பொருளாதார அமைப்பில் தனி ஆட்களின் தொகு அளவு சேமிப்பே நாட்டின் மொத்தச் சேமிப்பாக இருக்கும். மக்களின் சேமிப்புடன் பகிர்ந்து அளிக்கப்படாத ஆதாயத்தைச் சேர்த்தால் நாட்டிலுள்ள மொத்தத் தனியார் துறை சேமிப்புக் கிடைக்கும்; குடும்பச் சேமிப்புத் தலையாயதாயிருக்கும். மக்களின் சேமிப்பும் நிறுவனங்களின் சேமிப்பும் தனியார் துறை சேமிப்பில் அடங்கும். இந்தியாவிலும் இக்கூற்று உண்மையாக உள்ளது என்பதை அட்டவணை 2-இல் கொடுக்கப்பட்டுள்ள புள்ளி விவரங்களிலிருந்து அறியலாம். தொன்றுதொட்டு இந்தியக்

குடும்பங்களின் சேமிப்பு மரபியல் சார்ந்ததாக இருந்து வந்துள்ளது. பொன்னையும் வெள்ளியையும் குடும்பங்களில் சேமித்துப் பாதுகாத்த முறைகள் சேமிப்புப் பண்பாட்டையே வலியுறுத்துகின்றன. காரல் மார்க்சு (Karl Marx) உலகிலேயே மிகையான அளவில் வெள்ளிக் காசுகள் புழக்கத்திலிருந்த நாடு இந்தியா என 18-ஆம் நூற்றாண்டில் குறிப்பிட்டுள்ளார். ம.தி.

துணை நூல்:

**Rangarajan, C. and Dholakia, B.H.,** Principles of Macro Economics, Tata Mc Graw Hill Publishing Co. Ltd., New Delhi, 1979.

**உள்நாட்டுப் போர்:** உள்நாட்டுப் போர் என்பது சாதாரணமாக ஆட்சியாளர்களை எதிர்த்து நடைபெறக் கூடிய ஒரு கிளர்ச்சியாகும். மக்களின் தேவைகளை அரசாங்கம் முறையாகக் கவனிக்காமல் அலட்சியப்படுத்துவதால் இது உண்டாகும். ஆட்சியாளர்களுக்குத்தான் மக்கள் என்ற பாங்கில் ஆட்சியாளர்கள் தங்கள் நலன்களைக் கவனித்து, மக்களை மதியாமல் நடப்பதாலும் இது உண்டாகும். பொதுவாக, சமூகத்தில் எழக்கூடிய ஒரு பெரும் சிக்கல் உள்நாட்டுப் போர் எனலாம். சில சமயங்களில் வெளிப்படையாக அதிகாரத்தைப் பிடிப்பதற்காகவும் இது உருவாகலாம். உள்நாட்டுப்போரில் வன்முறையிலும் பொதுமக்கள் ஈடுபடுவர். இராணுவம் மட்டும் ஆட்சியைப் பிடிப்பது உள்நாட்டுப்போர் என்று கருதப்படாது. பொதுமக்கள் பங்கேற்பும் வன்முறைக் கலவரங்கள், தெருப்போராட்டங்கள் ஆகியனவும் இப்போரில் இடம்பெறும்.

திட்டமிட்ட உள்நாட்டுப்போர், திட்டமிடா உள்நாட்டுப்போர் என இருவகையாக உள்நாட்டுப்போரை வகைப்படுத்தலாம். எந்தவிதமான முன்னேற்பாடும் இல்லாது, தாமாகவே மக்கள் கூட்டம் தங்கள் குறைகளைக் களைய அரசாங்கத்தை எதிர்த்துப் போராட்டம் நடத்தலாம். இவ்விதமாக நடத்தப்படும் போராட்டம் திட்டமிடா உள்நாட்டுப்போர் ஆகும். மக்கள் போராட்டங்கள் நடத்தியதன் வாயிலாக அரசாங்கம் தூக்கியெறியப்படலாம். அங்ஙனம் தூக்கியெறியப்பட்டதும், புது அரசாங்கம் அமைக்கப்படாமல் ஒரு வெற்றிடம் இருக்கும். உள்நாட்டுப் போரின் விளைவாக அரசாங்கம் மாற்றப்படுவது மட்டுமன்றி, மக்களைக் காக்கக் கூடிய மற்றோர் அல்லது அதே அரசாங்கம் அமைய வேண்டும். திட்டமிடாமல் எழக்கூடிய உள்நாட்டுப் போரில் அரசாங்கத்தை மாற்றிய பின்னர், அரசாங்கத்தைக் கைப்பற்றப் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்படும். உள்நாட்டுப்போரின்போது அரசாங்கத்தை எதிர்த்த ஒரே பிரிவே, பல பிரிவுகளாகச் சிதறி அரசாங்க அதிகாரத்தைக் கைப்பற்ற முயற்சி செய்யும். இது எளிதாக நடைபெறக்கூடியது. ஏனெனில் போராட்டங்களின் விளைவாக வலுவுள்ள அரசாங்கம் வலுக் குறைந்து விடும். போராட்டப் பிரிவினர்கள் இதனை உணர்ந்து, அரசாங்கத்தைக் கைப்பற்ற முயற்சி செய்வர். திட்டமிடா உள்நாட்டுப் போர் தானாகவே எழக்கூடியது. அதை நிகழ்த்துவோர் நிலையான அரசாங்கத்தை உடனே அமைப்பர் என்ற நம்பிக்கை மக்களிடம் இருக்காது.

திட்டமிட்ட உள்நாட்டுப் போர் சமூகத்திலுள்ள பெரும்பான்மைப் பிரிவினர்களின் குறைகளைத் தீர்வு காண எடுக்கப்படும் முறையான செயல் ஆகும். இப்போர் ஏற்பட இரண்டு முக்கிய காரணங்கள் தேவை. 1. மக்களின் அரசியல் குறைகளைத் தீர்த்து வைப்பதற்கு முறையான, நடைமுறை அளவிலான தீர்வு காணும் அமைப்புகள் இல்லாமை. 2. மக்கள் அனைவரும் வன்முறை தவிரப் பிற வழிமுறைகளெல்லாம் பயனற்றவை என்று முழுமையாக நம்புவது. எனவே, மக்களின் குறைகளைத் தீர்த்து வைக்க எம்முறையான அமைப்பும் வழிமுறைகளும் இல்லையென்பதை உணர்வதால், இருக்கக்கூடிய அரசாங்கத்தை மாற்றினால்தான் தங்கள் குறைகள் தீர்க்கப்படும் என்று நம்புவதால் திட்டமிட்ட உள்நாட்டுப் போர் ஏற்படுகிறது.

திட்டமிட்ட உள்நாட்டுப் போரில் கையாளக் கூடிய வழிமுறைகள் அனைத்தும் முன்கூட்டியே முடிவு செய்யப்பட்டவை. முதன்முதலாக, முறையான எதிர்ப்பு இயக்க அமைப்புகளை உருவாக்குவர். மறைந்து தாக்கும் கொரில்லா முறைத் தாக்குதல், நாசவேலை புரிதல் ஆகிய இரண்டு வழிமுறைகளையும் கடைப்பிடிப்பர். இவ்விரு வழிமுறைகளால் வன்முறை மேலோங்கும். நாட்டின் அமைதியும் ஒழுங்கும் பாதிப்பிற்குள்ளாகும். எதிர்ப்பு இயக்க அமைப்புகள் முறையாகச் சில இடைவெளிக்கிடையில் வன்முறையைத் தொடர்ந்து வளர்க்கும். அரசாங்கக் கட்டடங்கள் பிற பொருட் சேதங்கள், ஆட்சியாளர்களின் நல்லொழுக்கத்தைக் களங்கப்படுத்துவது ஆகியவற்றை முறையாகச் செய்து, ஆட்சியாளர்களின் ஆதரவைச் சிதைப்பர். கடைசியாக, ஒரே நேரத்தில் எல்லாப்பிரிவு எதிர்ப்பு இயக்கங்களும் நேரடியாக ஆட்சியாளர்களை எதிர்க்கும். இது ஒட்டுமொத்த அளவில் ஏற்படுவதால் ஆட்சி மாற்றத்திற்குள்ளாகும். இந்த ஆட்சி எதிர்ப்பு முதன்முதலாகப் பெரிய நகரங்களில் நடத்தப்படும். இச் செய்தி கிராமப்புறங்களில்

பரவி, மக்களை எதிர்ப்பாளர்களுக்கு ஆதரவு தரத் தூண்டும்.

உள்நாட்டுப்போர் என்பதை வழக்கத்திற்கு எதிரான சண்டை என்று அமெரிக்கர்கள் கருதுகின்றனர். உள்நாட்டுப்போரில் கையாளக்கூடிய வழிமுறைகளும் உத்திகளும் போருக்கு எதிர்மாறானவை என்று அவர்கள் நம்புகின்றார்கள்.

உள்நாட்டுப்போர் பல காரணங்களால் உருவாகக் கூடியது. மக்களின் சமூக, பொருளாதார, பண்பாட்டு, ஆன்மிக, அரசியல் உரிமைகள் பாதிக்கப்படுகிற போது உள்நாட்டுப்போர் எழுகிறது. இது மக்கள் தொகை நெருக்கம், வாழ்கின்ற இடங்கள், வசிக்கும் நாட்டின் இட இயல்பு, மக்கள் தொகை இனச்சார்புத் தன்மை, மக்களின் நம்பிக்கையின்மை, மக்களின் பழக்கங்கள், மரபுகள், வழக்கங்கள், சமூகப் பிடிப்பு ஆகியவற்றால் உருவாகக் கூடியது. சமூக அமைப்பு, சமூகப்பணிகள், சமூகப் பண்புகள் (Social Values), ஆட்சியாளர்களின் அணுகுமுறை ஆகியவற்றாலும் உள்நாட்டுப்போர் உருவாகலாம். மக்களின் கோரிக்கைகளுக்கும் ஆட்சியாளர்களின் செயல்திறனுக்கும் இடையே இடைவெளி அதிகமாகிவிட்டால் உள்நாட்டுப்போர் ஏற்படும்.

உள்நாட்டுப் போரின் விளைவு உள்நாட்டுப் போரை நடத்துகிற தலைவரின் திறமை, தளவாடத் தலைமையகங்கள் அமைகிற இடம், செய்தித் தொடர்புகள், போராளிகளின் பயிற்சி, மனத்திடம் ஆகியவற்றால் தீர்மானிக்கப்படும். உள்நாட்டுப் போரை நடத்துகிற தலைவர்கள் மக்களோடு கொண்டிருக்கக்கூடிய நெருக்கத்தையும், போராடுகிற நோக்கங்களைப் பொறுத்தும் வெற்றி பெறுகின்றனர். சில சமயங்களில் தலைவர்களுக்கிடையே ஒருமித்த கருத்து இல்லாமல், உள்நாட்டுப் போர் வலுவிழந்து, தோல்வியையும் சந்தித்துள்ளது. எனவே தலைவர்களுக்கிடையே ஒத்துழைப்பு அவசியமென்பதால், அனைவருடைய நம்பிக்கையையும் பெறக்கூடிய தன்மை கொண்டவராக அவர்கள் இருத்தல் அவசியம். தலைவர்கள் பேச்சாற்றல், இணங்க வைக்கும் பண்பு, பிறரைச் சார்ந்து செயற்படல், செயல்திறன் ஆகியவற்றுடன், உள்நாட்டுப்போரை நடத்தக்கூடிய தலைவர்களுக்கு வெளிப்படையாக வரும் மிரட்டல்கள், அச்சுறுத்தல்கள், பிற தண்டனைகள் ஆகியவற்றைச் சந்திக்கக்கூடிய பக்குவம் முதலிய சிறப்பியல்புகளைப் பெற்றவர்களாக இருத்தல் வேண்டும். வெளிஉலகையே காணாத அளவிற்கு 20 ஆண்டுக்காலச் சிறைவாசம் இருக்கக்கூடிய தலைவர்களின் வாரிசுகள் உள்நாட்டுப் போரை நடத்தக்கூடிய தகுதியைப் பெற்று, சிறையிலிருக்கிற தலைவரின் பெயரால் போராட்டங்களை அரசுக்கு எதிராகச் செய்து வருகின்றனர். உள்நாட்டுப் போரை நடத்துகிற தலைவர்களின் குடும்பங்களே இல்லாத அளவிற்கு ஆட்சியாளர்கள் அவர்களுக்குத் தாங்கொண்ணாத் துயரங்கள் அளிக்கின்றனர். சில சமயங்களில் தலைவர்களுக்கு அடுத்தபடியாக உள்ள அவரது வாரிசு உள்நாட்டுப்போரில் வெற்றிபெற்றால் ஆட்சியாளராக நியமனம் செய்யப்படுகிறார். இப்போரை நடத்துகிறவர்கள் தளவாடத் தலைமையகங்களை வெளிநாடுகளில் அமைத்துச் செயற்படுகின்றனர். உள்நாட்டில் தளவாடத் தலைமையகம் அமைக்கப்பட்டால், அவற்றை அரசுபிடிப்பதால் உள்நாட்டுப் போர் முடிவாகிவிடும். போதுமான பயிற்சிகளும் போராளிகளுக்கு வழங்கப்படுகின்றன. இப்போர் தகுந்த காரணங்களுக்காக, ஆற்றலுள்ள தலைவர்களால் நடத்தப்பட்டால் வெற்றி பெறுமென்பது உண்மை. எம்.ப.

**துணை நூல்கள்:**

**Barrington Moore**, Social Origin of Dictatorship and Democracy, Penguin, 1967.

**Charles Johnson**, Revolutionary Change, University of London Press, 1968.

**உள்நாட்டு முதலீடு**: ஓராண்டில் தொகு அளவில் முதலாக்கத்திற்காகச் (Capital Formation) செலவிடப்படும் தொகை முதலீடு (Investment) எனப்படுகிறது. மூலதனம் (Capital) என்பது ஒரு குறிப்பிட்ட நேரத்தில் இருப்பாக உள்ளதும், உற்பத்திக்குப் பயன்படுவதுமான கூறுகள் ஆகும். தாள் பணமும், நிதி உரிமைகளும் தனிப்பட்டவர்களுக்கு மூலதனமாக இருப்பினும், பேரினப் பொருளியலில் (Macro Economics) அவற்றை மூலதனமாகக் கருத இயலாது. எனவே, மனிதனால் படைக்கப்பட்டு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் கூறுகள் அனைத்தும் முதல் எனப்படும். இந்த முதல் ஓராண்டுக் காலத்தில் எந்த அளவிற்கு உயர்ந்துள்ளது என்பதைக் குறிப்பிடும் வகையில் முதலீடு என்ற சொல் அமைந்துள்ளது. எனவே, மூலதனம் என்பது இருப்பாக உள்ள கூறுகளின் மதிப்பையும், முதலீடு என்பது குறிப்பிட்ட கால அளவில் உருவாக்கப்பட்ட முதலீட்டையும் குறிக்கும். ஓராண்டில் முதல் இருப்பில் ஏற்பட்ட நிகர மாற்றங்களே முதலீடு ஆகும். நாட்டின் மொத்த முதலீட்டில் அயல்நாட்டு முதலீட்டை நீக்கிவிட்டால், எஞ்சியுள்ளவை மொத்த உள்நாட்டு முதலீடு (Domestic Investment) ஆகும்.

பேரினப் பொருளியலில் முதலீட்டை நான்கு வகையாகப் பிரிக்கலாம். (1) புதிய கட்டடங்கள்

அனைத்தும் புதிய முதலீடாகக் கருதப்படும். இவை குடியிருப்பாகவோ தொழில் மற்றும் அலுவலகங்களின் தேவையை நிறைவு செய்வனவாகவோ இருக்கலாம். புதிய கட்டிடங்களின் மதிப்பு மொத்தக் கட்டிடவகை முதலீடாகும். இதிலிருந்து பழைய கட்டிடங்களின் தேய்மானம், சிதைவு ஆகியவற்றைக் கழிக்க வேண்டும். அப்பொழுது நிகரக் கட்டிடங்களின் முதலீடு கிடைக்கும்.

(2) தொழிற்சாலைகள், ஆலைகள், பொறியியற் கருவிகள், எந்திரக் கருவிகள் ஆகிய முதலீட்டிலிருந்து அவற்றிற்கான தேய்மானத்தைக் கழித்தால் நிகர எந்திர முதலீடு கிடைக்கும்.

(3) தொழிற்றுறையில் இருப்பாக உள்ள மூலப் பொருள்கள் பலவகை உள்ளிடு பொருள்கள், பல நிலைகளில் முடிவுறாமல் உள்ள பண்டங்கள் முதலியன சரக்கு இருப்பு முதலீடாகும். ஆண்டின் தொடக்கத்தில் இருப்பாக உள்ளவையும், ஓராண்டில் கூடுதலாகிய சரக்கு இருப்பின் மதிப்பும், மொத்தச் சரக்கு இருப்பு முதலீடாகக் கொள்ளப்படும். இதிலிருந்து ஆண்டின் இறுதியில் இருப்பாக உள்ள வற்றைக் கழித்தால் நிகரச் சரக்கிருப்பு முதலீட்டைக் கண்டு கொள்ளலாம்.

(4) அயல்நாடுகளுடன் ஏற்படும் பொருளாதாரத் தொடர்பை இருவகைப்படுத்தலாம். ஒன்று நடப்புக் கணக்கில் உள்ளவை. மற்றொன்று மூலதனக் கணக் கில் உள்ளவை. நடப்புக் கணக்கில் பண்டங்கள், பணி களின் கொடுக்கல் வாங்கல் ஆகியவை இடம்பெறு கின்றன. கப்பல் வசதிகள், வங்கிகள், ஈட்டுறுதிக் கழகங்கள், உரிமங்களின் மீதானமரபுரிமைகள், பயணி களின் செலவினங்கள் ஆகியவை பணிகளாக உள்ளன. ஓராண்டில் நடைபெற்ற பேரங்களில் பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் நிகர ஏற்றுமதி அயல்நாட்டு முதலீட்டின் ஒரு கூறாக உள்ளது. அதன் மற்றொரு கூறு மூலதனக் கணக்கில் இடம்பெறுகிறது. மூலதன ஏற்றுமதி என்ற தலைப்பில் இந்தியர்கள் அயல்நாடு களின் வாங்கியுள்ள சொத்துகள், அயல்நாட்டினருக் குக் கொடுத்துள்ள கடன் தொகை, அயல்நாட்டு நிறுவனங்களின் பங்குகளில் செய்யப்பட்ட முதலீடு முதலியன அடங்கும். அயல்நாட்டினர் இந்தியாவில் வாங்கியுள்ள சொத்துகள், கொடுத்துள்ள கடன்கள் செய்துள்ள முதலீடுகள் முதலியன மூலதன இறக்குமதி யாகும். எனவே, நடப்புக் கணக்கில் உள்ள ஏற்றுமதி உபரியும், மூலதனக் கணக்கில் நிகர ஏற்றுமதியும் ஒருங்கே நிகர அயல் நாட்டு முதலீட்டை உறுதி செய்கின்றன. இது நேர்மதிப்பு (+) எண்ணாக இருந் தால் இந்திய நாட்டினர் அயல்நாடுகளில் நிகர அளவில் முதலீடு செய்து இருக்கிறார்கள் என்றும், எதிர்மதிப்பு (-) எண்ணாக இருந்தால் அயல் நாட்டினர் இந்தியாவில் நிகர அளவில் முதலீடு செய்துள்ளனர் என்றும் கருதலாம்.

**நிதி முதலீடு:** ஏற்கனவே உள்ள இருப்பு (Stock), கடன் ஆவணங்கள் (Debentures), பலவகைப் பண உரிமைகள் (Titles of Money) ஆகியவற்றில் மூலவளங்களைப் பயன்படுத்துவதை நிதி முதலீடு (Financial Investment) என்பர்.

**உண்மை முதலீடு:** புதிதாக மூலதனச் சொத்து களையும் பண்டங்களையும் பணிகளையும் உருவாக் கும் வழிகளில் மூலவளங்களைப் பயன்படுத்துவதை உண்மை முதலீடு (Real Investment) என்பர். உண்மை முதலீட்டைத்தான் சான் மேனார்டு கீன்சு (J.M. Keynes) வலியுறுத்தினார். இவ்வுண்மை முதலீட்டுப் பெருக்கம் பொருளாதார முன்னேற்றத் திற்கு இன்றியமையாதது என அவர் வலியுறுத் தினார்.


**தனியார், பொதுத்துறை முதலீடுகள்:** தனியார் முதலீட்டுடன் அரசுத் துறை அல்லது பொதுத்துறை முதலீட்டையும் சேர்த்தால் மொத்த உள்நாட்டு முதலீடு கிடைக்கும். இவ்வகையில் கட்டிட முதலீடு என்ற தலைப்பில் அரசுக் கட்டிடங்கள், அலுவலகங் கள், பொது நூலகங்கள், சாலைகள், இருப்புப் பாதைகள், அணைக்கட்டுகள், மின் உற்பத்தி நிலையங்கள் முதலியன அடங்கும். தொழிற்சாலை, எந்திரங்கள் முதலீட்டின் வகையில் பொதுத்துறை நிறுவனங்கள் நிலையான மூலதன ஆக்கத்திற்காகச் செலவிட்ட தொகை சேரும். சரக்கிருப்பு முதலீட்டில் பொதுத் துறையில் உள்ள தொழில் நிறுவனங்களின் நிகரச்சரக்கிருப்பு மாற்றங்கள் அடங்கும். தவிர, இந்திய உணவுக் கழகத்திடம் (Food Corporation of India) இருப்பாக உள்ள தானியங்களின் நிகர மாற்ற மும் சேரும். இவை மொத்த உள்நாட்டு முதலீட்டின் மதிப்பை வரையறுக்கும்.

தனியார் துறை எப்போதும் ஆதாயம் பெறு வதை அடிப்படை நோக்கமாகக் கொண்டிருக்கும். ஆதாயம் பெறுவதறகான வாய்ப்புகள் குறைவாக இருந்தால் தனியார் துறை முதலீட்டின் அளவும் குறைவாகவே இருக்கும். இதற்கு மாறாகச் சமுதாயம் பெறும் நன்மையின் அடிப்படையில் பொதுத்துறை முதலீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. பொருளா தாரம் மந்த நிலையில் இருக்குமானால் ஆதாயம் பெறும் வாய்ப்பும் குறைவாக இருக்கும். இச் சூழ் நிலையில் தனியார் துறை முதலீட்டை மேற்கொள்ள

முன்வராது. ஆனால், முதலீட்டைப் பெருக்கா விட்டால் பொருளாதார மந்த நிலை மேலும் முனைப்பானதாகிவிடலாம். இத்தகைய நிலை 1930-ஆம் ஆண்டளவில் காணப்பட்டது. விலைக் குறைவு, ஆதாயக் குறைவு, வருமானக் குறைவு, வேலையின்மைப் பெருக்கம் போன்ற விரும்பத் தகாத பல விளைவுகள் பல நாடுகளிலும் தொடர் நிகழ்ச்சிபோலத் தோன்றின. என வேதான் இந்தக் காலத்தை உலகப் பெருமந்தக் காலம் என்றனர். இந்நிலையை மாற்றி அமைக்கக் கீன்சு பொதுத்துறை முதலீட்டை வலியுறுத்தினார். பொதுத் துறை ஆதாயத்தைக் கருதாமல் முதலீட்டை மேற் கொள்ளும்போது, சமுதாயத்தின் வருமானம் பெருகு கிறது. அதன் தொடர் விளைவாகப்பெருக்கி (Multiplier), ஊக்கி (Accelerator) ஆகியன செயற்பட்டு நுகர்வுப் பெருக்கமும் அதனை ஈடுசெய்யத் தனியார் முதலீட்டுப் பெருக்கமும் மிகுதியாகின்றன. இக் கருத்தைக் கீன்சு வலியுறுத்தினார்.

உள்நாட்டு முதலீடும் வெளிநாட்டு முதலீடும்: தனியார் துறையோ பொதுத் துறையோ அவை இரண்டும் சேர்ந்தோ முதலீட்டைப் பெருக்க விரும்பும் போது, அதற்கேற்ப மூலவளங்களைத் திரட்டுதல் அடிப்படையாக அமைகிறது. உள்நாட்டு மூலவளங்களைத் திரட்டி முதலீடு செய்வது உள் நாட்டு முதலீடு ஆகும். பிற நாடுகளிலிருந்து பெறப் படும் மூலவளங்களின் மூலம் முதலீடுகள் மேற் கொள்ளப்பட்டால், அவை வெளிநாட்டு முதலீடு ஆகும்.

கோட்பாடுகள்: பொருளியல் கோட்பாடுகளில் முதலீடு என்ற கருத்துத்தொடர்ந்து சிறப்பிடம் பெற்று விளங்குகிறது. தொன்மைப் பொருளியல் (Classical Economics) கருத்தினரின் கோட்பாடுகளில் எப்பொழு தும் முழுவேலை நிறைவு நிலை (Full Employment) நிலவுகிறது என்ற எடுகோள் (Assumption) உள்ளடங்கி யுள்ளது. இதன் அடிப்படையில் நாட்டின் சேமிப்பும் முதலீடும் வட்டி வீதத்தால் சமன் செய்யப்படுகிறது. வட்டி வீதம் சேமிப்புடன் நேர் விகிதத்திலும், முதலீட் டுடன் எதிர் விகிதத்திலும் தொடர்புடையது. இக் கோட்பாட்டை வரைபடத்தின் உதவியால் விளக்கிக் கூறமுடியும். மூலதனத்தின் உற்பத்தித் திறனை வெளிக் காட்டும் வகையில், 'II' என்ற முதலீட்டுச் சார்பு உள்ளது. இது இடமிருந்து வலமாகக் கீழ்நோக்கிச் சரிந்து செல்கிறது. மூலதனம் மிகுவதால் அதன் உற் பத்தித் திறன் குறைந்துவிடக் கூடும். எனவே, குறைந்த வட்டி வீதத்தில் மட்டுமே கூடுதலாக முத லீடு செய்ய முடியும். SS என்ற சேமிப்புச் சார்பு மூலதனத்தின் அளிப்பாகும்.





வட்டிவீதம் உயருவதால் கூடுதலான அளவில் சேமிக்க இயலும். இவ்விரு சார்புகளும் ஒன்றை யொன்று ஊடுருவிச் செல்லுகையில் சேமிப்பும் முத லீடும்(ONo அளவில்)சமமாக இருக்கும். அப்பொழுது நிலவும் 'Oro' என்ற வட்டிவீதம் சமநிலை வட்டிவீத மாக இருக்கும்.

ஆனால், பொருளியல் கருத்துகளில் இருபதாம் நூற்றாண்டில் பெரியதொரு புரட்சியைத் தோற்று வித்த வல்லுநர் சான் மேனார்டு கீன்சு இதற்குப் புதிய விளக்கம் கூறியுள்ளார். மக்களின் நீர்மை விருப் பத்தை (Liquidity Preference) நிறைவு செய்யும் வகையில் பணம் உள்ளது என்றும், அதைப் பிரிந்து இருப்பதற்கான வெகுமதியாக வட்டிவீதம் அமைந் துள்ளது என்றும் கூறினார். முழு வேலை நிறைவு நிலை என்பது எப்பொழுதும் இயல்பாகச் காணக் கூடிய நிகழ்ச்சி என்பதைக் கீன்சு மறுத்துள்ளார். அவர் நாட்டு வருமானம் நிலையற்றதாகவும் பல காரணிகளால் மாறுபடக் கூடியதாகவும் இருப்பதைச் சுட்டிக்காட்டினார். நாட்டு வருமானத்தை வரை யறுக்கும் இரு காரணிகளாகச் சேமிப்பும் முதலீடும் விளங்குகின்றன. இதில் சேமிப்பு என்பது மக்களின் நுகர்வுப் பழக்க வழக்கங்களைச் சார்ந்துள்ளது. எனவே சேமிப்பு வருமானத்தின் மற்றொரு சார்பாக உள்ளது. இதனை முன் கூட்டியே மதிப்பீடு செய்ய இயலும். சேமிப்புச் சார்பில் திடீர் மாற்றங்கள் தோன்றுவதற்கான வாய்ப்புகள் இல்லை. இது நிலை யானது; நம்பத்தக்கது; ஆனால், முதலீடு அவ்வாறு நிலையாகவோ முன்கூட்டியோ அறுதியிட்டுக் கூறக் கூடியதாகவோ இல்லை. முதலீடு இயல்பாகவே நிலையற்ற தன்மை உடையதாகக் காணப்படுகிறது.

அதற்கான காரணங்களை அறிவதற்குச் சேமிப்பு முதலீட்டுக் கோட்பாட்டின் கருத்துகளை அறிவது இன்றியமையாததாகும்.


முதலீடு தானியங்கும் முதலீடு (Autonomous Investment), தூண்டப்பட்ட முதலீடு (Induced Investment) என இருவகைப்படும். மக்கள் தொகைவளர்ச்சி, அறிவியல் தொழில்நுட்ப முன்னேற்றம் ஆகியவை காரணமாக முதலீடு மிகுதியாகலாம். மூலதனத்தின் உற்பத்தித் திறன் அல்லது ஆதாயம் நல்கும் வாய்ப்புகள் மாறுதல் அடையலாம். இவ்வகையில் நாட்டின் வருமானத்தைச் சாராமல் தனித்து இயங்குவது சார்பிலா முதலீடு எனப்படுகிறது. அவ்வாறன்றிப் பொருளாதார வளர்ச்சி (வருமானப் பெருக்கம்) காரணமாக முதலீட்டின் அளவு விரிவடையுமானால், அது உந்தப்பட்ட அல்லது தூண்டப்பட்ட முதலீடு எனப்படும். இவற்றைப் பின்வரும் வரைபடங்கள் விளக்குகின்றன.





ஓராண்டிற்கும் குறைவான குறுகிய கால ஆய்விற்கு முதலீடு சார்பிலா முதலீடாக இருப்பதாகவும், 5 முதல் 10 வரையிலான நீண்டகால ஆய்விற்கு இது தூண்டப்பட்ட முதலீடாக இருப்பதாகவும் கருதலாம்.

சேமிப்பும் முதலீடும் நாட்டு வருமானத்தை உறுதி செய்கின்றன. (1) ஒரு குறிப்பிட்ட வருமானத்தில் ($OY_1$) முதலீடு கூடுதலாகவும் சேமிப்புச் சற்றுக் குறைவாகவும் இருக்குமானால், அந்நாட்டின் வருமானம் உடனடியாகவோ காலப்போக்கிலோ உயர்ந்து செல்லக்கூடும். (2) குறிப்பிட்ட வருமானத்தில் ($OY_0$) முதலீடும் சேமிப்பும் சம அளவாக இருக்குமானால், அந்நாட்டின் வருமானம் சம நிலையில் தொடர்ந்து மாறாது இருக்கும். (3) குறிப்பிட்ட வருமானத்தில் ($OY_2$) முதலீடு குறைவாகவும் சேமிப்பு அதைவிடச் சற்றுக் கூடுதலாகவும் இருந்தால், அந்நாட்டின் வருமானம் விரைவிலோ காலப்போக்கிலோ குறையக்கூடும்.

**முதலீட்டு வரையறை:** முதலீட்டை இரு காரணிகள் வரையறுக்கின்றன. அவை முதலீட்டின் இறுதி நிலைத் திறன்(Marginal Efficiency of Investment), வட்டிவீதம் என்பவையாகும். அங்காடியில் நிலவும் வட்டிவீதம் நாட்டின் மைய வங்கியால் ஓரளவிற்குக் கட்டுப்படுத்தக்கூடிய காரணியாக உள்ளது. ஆனால், முதலீட்டின் இறுதிநிலைத் திறன், எதிர்காலம் பற்றிய மக்களின் மதிப்பீட்டைச் சார்ந்திருக்கிறது. இதனை எதிர்பார்க்கக்கூடிய ஆதாய வீதம் என்று சுருக்கமாகக் கூறலாம். எதிர்பார்க்கக்கூடிய ஆதாய வீதம் ஒருவருக்கொருவர், நாளுக்கு நாள் மாறுபடக்



கூடும். ஒரே நிறுவனத்தில் பல துறைகளில் இது பல வகையாக இருக்கக்கூடும்.

எதிர்பார்க்கப்படும் ஆதாய வீதத்திற்கும் முதலீட்டு வரையறைக்கும் இடையேயுள்ள தொடர்பை மேலும் துல்லியமாக விளக்கச் சில எடுத்துக்காட்டுகளைத் துணையாகக் கொள்ளலாம். ஒருவரிடம் ஓர் இலட்ச உரூபாய் கையிருப்பு இருந்து, அதை அவர் நிலையான வங்கி வைப்பாக நிதி முதலீடு செய்வாரானால், அவருக்கு இடர் ஏதுமின்றி ஆண்டு ஒன்றுக்கு 10,000 உரூபாய் வட்டியாகக் கிடைக்கும் (வட்டிவீதம் 10 விழுக்காடு). அவர் மெய்யான முதல் ஆக்கத்திற்காக முதலீடு செய்ய வேண்டுமென்றால் ஆண்டு ஒன்றுக்கு 10,000 உரூபாவிற்கும் கூடுதலான ஆதாயம் ஈட்டுவதற்கான வாய்ப்பு இருக்க வேண்டும். எனவே, ஆதாய வீதம் வட்டி வீதத்தைவிட மிகுதியாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் மெய்யான முதலீடு செய்யப்படுகிறது. ஆதாய விழுக்காடு 9-ஆக இருந்தால் யாரும் முதலீடு செய்ய முன்வர மாட்டார்கள்.

நடைமுறையில் நிறுவனத்தின் மூலதனம் தொடர்ந்து பலன் தரக் கூடியதாகவும், உற்பத்தியைப் பெருக்கக் கூடியதாகவும் இருக்கிறது. எனவே, ஆதாயமாக உள்ளதா என்பதை முடிவு செய்வதற்கு ஒரு நுட்பமுறை கையாளப்படுகிறது. அதற்குக் 'கழிவு செய்தல்'(Discounting) முறை என்பது பெயர். இது ஒரு கலைச்சொல்லாகப் பயன்படுத்தப்படுகிறது. ஆண்டு வருவாயைக் குறிப்பிட்ட வீதத்தால் வகுக்கும்போது மூலதனத்தின் இன்றைய மதிப்பைக் கணிக்க முடியும். கழிவு செய்தல் முறையைத் தொடர் வட்டிவீத அடிப்படையில் விளக்கிக் கூறலாம். அசல் ($P_0$) 100 உரூபாயும், வட்டி வீதம் (i) 5 விழுக்காடும் (0.05) என்றால், ஓராண்டிற்குப்பின்,

$$P_1 = P_0\,(1+i) \text{ -ஆக இருக்கும். அதாவது}$$
$$P_1 = 100\,(1 + 0.05) = 105 \text{ ஆகும்.}$$

இரண்டாம் ஆண்டின் இறுதியில்,

$$\begin{aligned} P_2 &= P_1\,(1+i) \text{ அல்லது } P_0\,(1+i)^2 \\ &= 105\,(1 + 0.05) = 100\,(1 + 0.05)^2 \\ &= 110.25 \text{ ஆகும்.} \end{aligned}$$

இந்நாளில் 100 உரூபாய் ஆக உள்ள தொகையின் மதிப்பு ஓராண்டில் 105 உரூபாய் ஆகவும், ஈராண்டில் 110.25 உரூபாயாகவும் உயரும். நிகழ்காலத்திலிருந்து எதிர்காலத்திற்குச் செல்லும்பொழுது ஏற்படும் சொத்துகளின் மதிப்பு ஏற்றத்தை அளவிடத் தொடர் வட்டி வீதமுறை பயன்படுகிறது. அப்படியில்லாமல் எதிர்காலத்தில் ஈட்டக்கூடிய வருமானத்தின் அடிப்படையிலிருந்து, ஒரு சொத்தின் இன்றைய மதிப்பைக் கணக்கிடுவதற்குக் 'கழிவு செய்தல்' முறை பயன்படுகிறது. ஓராண்டில் 105 உரூபாய் மதிப்புடைய சொத்தின் இன்றைய மதிப்பு 5 விழுக்காட்டில் 'கழிவு' செய்யும்பொழுது 100 உரூபாயாக இருக்கும். கழிவு செய்யும் வீதத்தின் உயர்வு மூலதன மதிப்பைக் குறைக்கும்; கழிவு வீதத்தின் வீழ்ச்சி மூலதன மதிப்பை உயர்த்தும்.

$$\frac{105}{(1 + 0.05)} = 100 \text{ ஆகும்.}$$

முதலீட்டின் காரணமாக உருவாக்கப்பட்ட சொத்து முதலாம் ஆண்டு இறுதியில் $R_1$ என்ற மொத்த ஆதாயத்தையும், இரண்டாம் ஆண்டு இறுதியில் $R_2$ என்ற அளவு மொத்த ஆதாயத்தையும் அளிப்பதாகக் கருதப்படுகின்றது. இந்த ஆதாயத் தொகையிலிருந்து முதலீட்டின் இறுதிநிலைத் திறன் எனப்படும் ஆதாய விழுக்காட்டைக் (r) கழிவு செய்ய வேண்டும். ஒவ்வோர் ஆண்டு ஆதாயத் தொகையும் கழிவு செய்து கூட்ட வேண்டும். அதாவது

$C$ = என்பது மூலதன மதிப்பாக இருக்கட்டும்.

$R_1, R_2, R_3$ = என்பவை ஒவ்வோர் ஆண்டின் இறுதியிலும் ஈட்டப்படும் ஆதாயத் தொகையாகும்.

$r$ = முதலீட்டின் இறுதிநிலைத் திறன் எனப்படும் எதிர்பார்க்கப்படும் ஆதாய விழுக்காடு.

$$C = \frac{R_1}{(1+r)} + \frac{R_2}{(1+r)^2} + \frac{R_3}{(1+r)^3} + \frac{R_n}{(1+r)^n}$$

ஒரு நிறுவனத்தின் பல துறைகளில் ஆதாய விழுக்காடு பல வகையாக இருக்கக்கூடும். ஒரு புதிய எந்திரத்தில் முதலீடு செய்வதால் 15 விழுக்காடு ஆதாயம் கிடைக்கலாம் என்றும், சரக்குகளை இடம் பெயர்க்க உதவும் சரக்கு உந்துவில் முதலீடு செய்வதால் 10 விழுக்காடு ஆதாயம் கிடைக்கலாம் என்றும், குளிர்சாதன வசதிகளில் முதலீடு செய்வதால் 5 விழுக்காடு ஆதாயம் கிடைக்கக்கூடும் என்றும் கருதினால், அங்காடியில் நிலவும் வட்டி வீதம் 5 விழுக்காடாக இருக்கும் வரை நிறுவனத்தின் இம்மூன்று முதலீட்டுத்

திட்டங்களையும் நிறைவு செய்வது இயலும். மாறாக, அங்காடி வட்டிவீதம் 10 விழுக்காடாக உயருமானால் குளிர்சாதன வசதிகளுக்கான முதலீடு நிறுத்தி வைக்கப்படும். தொழில் முயல்வோர்கள் முதலீட்டின் இறுதிநிலைத் திறனையும் வட்டி வீதத்தையும் ஒப்பு நோக்கி முதலீட்டு முடிவுகளைச் செய்கிறார்கள்.

இந்தியாவில்:

அட்டவணை – 1

| ஆறாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் (1980-85) சேமிப்பும் முதலீடும் | | | |
|---|---|---|---|
| வ.எண் | | உரூபாய் கோடியில் | விழுக்காடு |
| 1. | மொத்த முதலீடு | 1,58,710 | 100 |
| | அ) பொதுத் துறையில் | 84,000 | 52.9 |
| | ஆ) தனியார் துறையில் | 74,710 | 47.1 |
| 2. | நிகர வெளிநாட்டு மூலதனம் | 9.063 | 5.7 |
| 3. | உள்நாட்டுச் சேமிப்பும் முதலீடும் (1-2) | 1,49,647 | 94.3 |
| ஆதாரம்: ஆறாம் ஐந்தாண்டுத் திட்டம் (1980-85) | | | |

அட்டவணை – 2

| இந்தியாவில் மொத்த உள்நாட்டு முதலாக்கம் (நாட்டு உற்பத்தியின் விழுக்காடாக) | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வ. எண் | | திட்டம் I | திட்டம் II | திட்டம் III | 1966—67 முதல் 1968—69 வரை | 1969—70 முதல் 1973—74 வரை | 1974—75 முதல் 1977—78 வரை | 1978—79 முதல் 1980—81 வரை |
| 1) | மொத்த உள்நாட்டு முதல் ஆக்கம் | 10.0 | 14.2 | 18.8 | 17.7 | 17.3 | 19.8 | 29.9 |
| 2) | தேய்மானம் | 3.6 | 4.6 | 5.5 | 5.4 | 4.9 | 4.6 | 5.1 |
| 3) | நிகர உள்நாட்டு முதல் ஆக்கம் | 6.4 | 9.6 | 13.3 | 12.3 | 12.4 | 15.2 | 18.8 |
| 4) | நிகர வெளிநாட்டு முதல் இறக்குமதி | 0.4 | 2.9 | 2.9 | 2.0 | 0.7 | –0.6 | 0.9 |
| 5) | சேமிப்பு | 6.0 | 6.7 | 10.4 | 10.3 | 11.7 | 15.8 | 17.9 |

ஆறாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் (1980-85) எதிர்பார்க்கப்படுகின்ற இந்தியாவின் மொத்த முதலீட்டுத் தொகை 1,58,710 கோடி உரூபாயாகும். இதில் வெளிநாட்டு மூலதனம் 9 063 கோடி உரூபாய் என்பதால் எஞ்சியுள்ள தொகை உள்நாட்டுச் சேமிப்பும் முதலீடும் (அதாவது, 1,49,647 கோடி உரூபாய்)

ஆகும். மொத்த முதலீட்டில் பொது மற்றும் தனி பார் துறை முதலீட்டின் விழுக்காடு முறையே 52.9, 47.1 ஆகும்.

இந்தியாவில் 1951 முதல் 1981 வரை உள்ள முப்பது ஆண்டுக் காலத்திற்கான மொத்த உள்நாட்டு முதலாக்கம், நிகர முதலாக்கம் முதலிய விவரங்கள் அட்டவணை-2-இல் கொடுக்கப்பட்டுள்ளன. முதல் திட்டக் காலத்தில் 10 விழுக்காடாக இருந்த மொத்த முதலாக்கம் 1978-81-இல் 23.9 விழுக்காடாக உயர்ந்துள்ளது. இதே காலத்தில் நிகர முதலாக்கம் 6.4 விழுக்காட்டிலிருந்து 18.8 விழுக்காடாக உயர்ந்துள்ளது. 1966-67 முதல் 1973-74 வரையுள்ள ஆண்டு நிகர முதலாக்கம் ஓரளவு வீழ்ச்சியடைந்துள்ளதென்றாலும், அதன்பின் குறிப்பிடத்தக்க அளவு உயர்ந்து சென்றுள்ளது.

சிறப்பியல்புகள்: ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு முதலீடுகள் தொடர்ச்சியாக வளர்விகிதத்தில் பெருகிச் செல்ல வேண்டியது இன்றியமையாததாகும். இதனை மேற்கொள்ள மூலவளங்கள் தேவைப்படுகின்றன. இம்மூலவளங்களை இயற்கையில் கிடைக்கும் பருப்பொருள் மூலவளங்கள் (Physical Resources), என்றும் மனித மூலவளங்கள் (Human Resources) என்றும் இருவகைப்படுத்தலாம். வளரும் நாடுகளில் உள்ள பல இடையூறுகளுள் ஒன்று மூலவளங்களின் பற்றாக் குறை. இக்கருத்து உண்மையாகவும் இருக்கலாம்; கற்பனையானதாகவும் இருக்கலாம். மூலவளங்கள் இல்லாததாலோ இருக்கும் மூலவளங்களை அறியாததாலோ கிடைக்கும் மூலவளங்களைப் பயன்படுத்தத் தெரியாததாலோ வேறு ஏதாவது காரணத்தாலோ மூலவளங்களின் பற்றாக் குறையை வளரும் நாடுகள் உணர்ந்துள்ளன. அதே நேரத்தில் வளர்ந்துவிட்ட நாடுகளைப்போல விரைவான வளர்ச்சியைப் பெற வேண்டும் என்ற நோக்கமும் இந்நாடுகளில் வேரூன்றிவிட்டது. எனவே, அயல் நாட்டு மூலவளங்களைப் பயன்படுத்தும் போக்குப் பரவலாகக் காணப்படுகிறது.

அயல்நாட்டு மூலவளங்களைப் பயன்படுத்தியும், உள்நாட்டு மூலவளங்களைப் பயன்படுத்தியும் வளரும் நாடுகள் முதலீட்டின் அளவை மிகுதிப்படுத்த முனைகின்றன. ஆனால், அயல்நாட்டு மூலவளங்களைப் பயன்படுத்துவதில் ஒருசில துணையான விளைவுகள் இருந்தாலும், கேடான விளைவுகள் பல தோன்றும் வாய்ப்புகளும் மிகுதியாக உள்ளன. எனவே, வளரும் நாடுகள் உள்நாட்டு மூலவளங்களையே மிகுதியான அளவில் பயன்படுத்தி, உள்நாட்டு முதலீட்டைப் பெருக்குவது நன்மை தரத் தக்கது என்ற கருத்தைப் பலரும் ஏற்றுள்ளனர். காண்க: அயல்நாட்டு மூலதனம்.

ம.தி.

துணை நூல்கள்:

**Dernburg and Mc Dougall**, Macro Economics, Mc Graw Hill, International Book Company, Tokyo, 1980.

**Edward Shapiro**, Macro Economic Analysis, Harcourt Brace Jovanorich Inc., New York, 1982.

*உள்நாட்டு வாணிகம்*: ஒரு நாட்டிற்குள்ளேயே நடைபெறும் வாணிகம் உள்நாட்டு வாணிகம் எனப்படும். ஒரு மனிதன் தன் தேவை முழுவதையும் தானே நிறைவு செய்து வாழ இயலாது. அதைப் போன்றே எந்த ஒரு நாடோ சமுதாயமோ தானே தன் தேவைகளை நிறைவு செய்வது அரிது. தனித்து வாழும் ஒரு குடும்பம் தனது தேவையைத் தானே தேடிக் கொள்வதாயின், வாழ்க்கை ஏழ்மையானதாகவும் கடின உடலுழைப்புடையதாகவும் இருக்கும். ஆதிகால மக்களிடையே ஓரளவு சிறப்புத் தேர்ச்சியும் (Specialisation) அதன் விளைவாகப் பண்ட மாற்றும் நிகழ்ந்ததாக அறியப்படுகிறது. நெருப்பு, மின்சாரம், மூலவளங்கள், போக்குவரத்து அமைப்புகள், புதிய தொழில் முயற்சிகள், நவீன உற்பத்தி முறைகள் போன்ற புதிய கண்டுபிடிப்புகள் தொழில் முன்னேற்றத்திற்கு வழி வகுத்து, தொழில் உற்பத்தியில் சிறப்புத் தேர்ச்சி வளர்ச்சியுறக் காரணமாயின. மனித விருப்பங்களை நிறைவு செய்யக்கூடிய பொருள்களும் பணிகளும் பெருகிக் கொண்டே போகின்றன. சிறப்புத் தேர்ச்சி பெற்ற உற்பத்தியாளன் தான் உற்பத்தி செய்யும் பண்டத்தைச் சிறிது கூடப் பயன்படுத்தாமலிருக்கலாம். தன் உழைப்பிற்கு ஊதியமாகப் பொருளையோ பணத்தையோ பெற்றுத் தனக்குத் தேவையான பிற பண்டங்களைப் பெறுவான். இதுவே வாணிகத்திற்கு அடிப்படையாகும். வாணிகத்தின் மூலமே சிறப்புத் தேர்ச்சி நடைபெறுகிறது. பொருளாதார நடவடிக்கைகள் அனைத்தும் வாணிகத்தையே அடிப்படையாகக் கொண்டு செயற்படுகின்றன.

உள்நாட்டு வாணிகம் ஒரு நாட்டு அரசின் கட்டுப்பாட்டின்கீழ் இருக்கும் பகுதியில் நடைபெறுவதாகும். இதில் ஈடுபடுகின்ற மக்கள் ஒரே வகைப்பட்ட சட்ட ஒழுங்கு முறைகளுக்குக் கட்டுப்படுகின்றனர். பெரும்பாலும், ஒரே வகையான வாழ்க்கைத் தரத்தைக் கொண்ட உற்பத்தியாளர்கள், தங்களுக்கிடையே பொருள்களை மாற்றிக் கொள்வது உள்நாட்டு வாணிகத்தின் (Internal Trade) சிறப்புக் கூறாகும். பம்பாயில் உற்பத்தியாகும் துணியும், கல்கத்தாவில் உற்பத்தியாகும் சணல் பொருள்களும் இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும் விற்கப்படுகின்றன. அதுபோன்றே

பிற நாடுகளில் உற்பத்தியாகும் பொருள்களும் ஓரளவுக்கு அங்கேயே விற்கப்படுகின்றன.

வாணிகம் மொத்த வாணிகம், சில்லரை வாணிகம் என இருவகைப்படும். சரக்குகளைச் சிறிய அளவில் வாங்கி விற்பது சில்லறை வாணிகம். பேரளவில் முதலிட்டுப் பொருள்களைப் பேரளவில் வாணிகம் செய்வது மொத்த வாணிகமாகும். சில்லறை வாணிகத்திற்குப் பேரளவில் முதலீடு தேவையில்லை. இதனை அடிப்படையாகக் கொண்டு மொத்த வாணிகத்தைப் பெரிய வணிகர்களும், சில்லறை வாணிகத்தைச் சிறிய வணிகர்களும் ஏற்று நடத்துவர். உள்நாட்டு வாணிகத்தில் மொத்த வாணிகத்தை விடச் சில்லறை வாணிகமே பேரளவில் நடைபெறுகிறது. ஆனால், அயல்நாட்டு வாணிகத்தில் சில்லறை வாணிகம் அரிது.

சில்லறை வாணிகத்தின் பெரும்பாலான தொழில்கள் அந்தந்த இடங்களில் அல்லது வட்டாரங்களில் நடைபெறுகின்றன. உலக மக்கள் தொகையில் பத்தில் ஒன்பது பேர் வேளாண்மையை நம்பி வாழ்கின்றனர். வேளாண்மைத் தொழில் முறைகள் மிக எளிமையாகவும் குறைந்த வருவாய் ஈட்டுவனவாகவும் உள்ளன. எனவே, வேளாண்மையில் சில்லறை வாணிகம் செழித்தோங்குகிறது. பெரும்பான்மையான வேளாண்மையினர் தாங்கள் உற்பத்தி செய்யும் விளைபொருள்களை மொத்த விற்பனைக்கு எடுத்துச் செல்லுவதற்குத் தேவையான அகக்கட்டுமான வசதிக் குறைவுகளினால், சில்லறை விற்பனையாக உற்பத்தி செய்த இடத்திலேயே தங்கள் தேவைக்குப் போக எஞ்சியதை விற்றுவிடுகின்றனர். இடைத்தரகர்கள் சில்லறை வாணிகத்தில் தலையிட்டு, விளைபொருள்களைச் சேகரித்து அவற்றை மொத்த வணிகருக்கு அளிக்கின்றனர். வாணிகம் மிகவும் குறைந்த அளவுதான் நடைபெறுகிறது. முன்னேற்றம் அடைந்த இக்காலத்திலும் கூட, மொத்த வாணிக அளவில் மொத்த வாணிகம் 6 விழுக்காடு முதல் 8 விழுக்காடு வரைதான் இருக்கும் எனக் கருதப்படுகிறது. எனினும் இவ் வாணிகத்தின் மதிப்பு ஆண்டொன்றுக்குப் பல மிலியன் தாலர்களுக்கு (Dollars) மேல் அமைகிறது.

அரசியல் துறையில் உலகம் வெவ்வேறு நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருப்பது போலப் பொருளாதாரத் துறையிலும் பல மண்டலங்கள் உள்ளன. ஒரே வகையான பொருளாதாரஇயல்புகளுடைய பகுதி மண்டலம் எனப்படும். அதில் காலநிலை, நிலவளம், மூலப் பொருள் வளம், மக்கள்தொகை முதலிய இயல்புகள் ஒரே வகையாயிருக்கும். இம்மண்டலங்கள் அமைப்பில் வெவ்வேறு வகையாக இருக்கலாம். ஒரு மண்டலம் ஆசுத்திரேலியாவைப் போல் ஒரே நாடாக இருக்கலாம். அமைப்பில் எப்படி இருப்பினும், ஒரு மண்டலத்தில் இருக்கும் நாடுகளுக்கிடையே நடைபெறும் வாணிகம் மண்டல வாணிகம் (Regional Trade) எனப்படும்.

முதலும் உழைப்பும் ஒரு நாட்டை விட்டு வேறொரு நாட்டிற்கு எளிதில் செல்வதில்லை. முதலுடையோர் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு, தங்கள் முதலை அருகிலுள்ள தொழில்களில் முதலீடு செய்ய விரும்புகின்றனர். பண்பாடு, மரபியல், பற்று ஆகியவற்றின் காரணமாக உழைப்பாளர்கள் தங்கள் நாட்டைவிட்டுஇடம்பெயர்தலை பெரும்பாலும் விரும்புவதில்லை. பொருள்கள் ஒரு நாட்டிற்குள்ளேயே விற்பனையானால், அவற்றை அதிக தூரம் கொண்டு செல்ல வேண்டிய தேவை எழாது. எனவே, போக்குவரத்துச்செலவும் குறையும்.

உள்நாட்டு வாணிகத்தில் பொருள்களின் தன்மை, அவை கிடைக்கும் காலம், உற்பத்திச் செலவு, வாணிக நிலை, விலைகளின் தன்மை போன்றவற்றை மக்கள் எளிதில் கணிக்க இயலும். இவ் வாணிகத்தில் பேரளவில் இழப்பு நேரிடுவதில்லை. எடுத்துக்காட்டாக, கடல், தீ, போன்றவற்றின் மூலம் ஏற்படும் பொருள் இழப்பு பெரும்பாலும் தவிர்க்கப்படுகிறது.

உள்நாட்டு வாணிகம் உள்நாட்டு விதிமுறைகளுக்குட்பட்டது. ஆனால், நாட்டின் வாணிகக் கொள்கைகள் பொது நிதிக் கொள்கைகளைப் (Fiscal Policies) பொறுத்து அமைகின்றன. பொருள் உற்பத்தி, விலை, பங்கீடு போன்றவை நாட்டின் நிதிக்கொள்கையை அனுசரித்தே நடைபெறுகின்றன.

உள்நாட்டு வாணிகம் அந்தந்த நாட்டுச் செலாவணிக் கணக்கில் நடைபெறுவதால் நாணய மாற்றுச் சிக்கல்கள் தோன்றுவதில்லை. ஒவ்வொரு நாட்டிலும் ஒரு மைய வங்கி இருப்பதால், நாட்டின் செலாவணித் திட்டத்தை அது ஏற்று நடத்துகிறது.

உள்நாட்டு வாணிகம் தொன்றுதொட்டே நாடுகளின் பொருளாதார அமைப்பில் சிறப்புப் பங்கேற்று வந்துள்ளது என்பதற்கு வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. வணிகக் கோட்பாட்டினர் (Mercantilists) கி. பி. 15-ஆம் நூற்றாண்டில் ஒரு நாட்டின் செல்வம் அந்த நாட்டின் தொழில் முன்னேற்றம், வாணிகம் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டது என்பதனை வலியுறுத்தியுள்ளனர். தொழில்நுட்ப சிறப்புத் தேர்ச்சி உற்பத்தி முறையினால் தொழிற்றுறையில் ஏற்பட்ட எதிர்பாராத மாற்றங்கள், இருபதாம் நூற்றாண்டில் பல நாடுகள் பொருளாதார உச்ச நிலையை அடைய

உதவின. இந்நிலையில் நாடுகள் ஒன்றொடொன்று போட்டியிட்டுக் கொண்டு, பல புதிய தொழில் கண்டு பிடிப்புகளின் மூலம் தொழில் உற்பத்தியைப் பல மடங்காகப் பெருக்கி, உள்நாட்டு அங்காடியையும் விரிவடையச் செய்தன. பேரளவு உற்பத்தியினால் (Mass Production) சிறிது சிறிதாகப் பன்னாட்டு வாணிகமும் வளர்ச்சியுற்றது.

பேரளவு உற்பத்திக் காரணமாக உள்நாட்டு அங்காடிகளில் அப்பொருள்களுக்கு ஏற்ற தேவை ஏற்படவில்லை. பன்னாட்டு வாணிகம் வளர்ச்சியுற்றவுடன் நாட்டின் உழைப்பும் முதலும் படிப்படியாக இடம் பெயரத் தொடங்கின. நாடுகளுக்கிடையே காணப்படுகின்ற உறவு, தேவை ஆகியவற்றின் அடிப்படையில் வாணிகம் நடைபெறலாயிற்று. கனரக இயந்திரங்கள், போகப் பொருள்கள் போன்றவை அயல் நாட்டு வாணிகத்தின் மூலம் ஒப்பீட்டுச் செலவுக் (Comparative Cost) கோட்பாட்டின் அடிப்படையில் எளிதில் கிடைக்கின்றன. தொழிற்புரட்சியினால் ஏற்பட்ட தொழில் உற்பத்தி மாற்றம் பன்னாட்டு வாணிகம் உறுதியாக அமைவதற்கு அடிகோலியது. முன்னேற்றம் அடைந்த நாடுகளும் தங்களுக்குத் தேவையான மூலப் பொருள்கள், உள்நாட்டில் உற்பத்தி செய்ய இயலாத பொருள்கள், பணிகள் (தேவையான உழைப்பு) போன்றவற்றைப் பிற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டிய தேவைக்குள்ளாயின. பல நாடுகளில் காலப்போக்கில் உள்நாட்டு வாணிகம் பெருகிப் பன்னாட்டு வாணிகமாக வளர்ச்சி பெறலாயிற்று. பொருளாதார முன்னேற்றம் தொழில் உற்பத்தியில் மட்டுமன்று; மக்கள் தொகைப் பெருக்கத்திலும் மாற்றங்களை உண்டு பண்ணியது. மக்கள்தொகைப் பெருக்கத்தினால் தேவையும் பெருகியது. தேவைக்கேற்ப உற்பத்திப் பொருள் சிக்கனமற்றதாக (Uneconomic) இருப்பின், உள்நாட்டு உற்பத்தியை நிறுத்தி அயல்நாடுகளில் இருந்து பெற்றுக் கொள்வது வழக்கமாயிற்று. இந்நிலையில் உள்நாட்டு வாணிகம் விரிவடைந்து பன்னாட்டு வாணிகமாக மாறியது. எனினும், உள்நாட்டு வாணிகம் தொடர்ந்து தன் தனித் தன்மையுடன் நடைபெற்று வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில்: உற்பத்திப் பண்டங்களின் தன்மைக்கேற்ப உள்நாட்டு வாணிகம் நடைபெறுகிறது. எளிதில் அழிந்து போகக் கூடிய பொருள்களான மீன், இறைச்சி, முட்டை, பழ வகைகள், காய்கறிகள் போன்றவை அன்றாட உள்நாட்டு வாணிகத்தில் பங்கேற்கின்றன. இப் பொருள்கள் நீண்ட நாட்கள் கிடங்குகளில் சேமித்து வைக்க முடியாதவை. எனவே, இவை நாள்தோறும் உள்நாட்டு அங்காடிகளில் விற்பனை செய்யப்படுகின்றன. குறுகிய கால அங்காடிகளில் பருப்பு, தானிய வகைகள் போன்றவை விற்பனை செய்யப்படுகின்றன. கால்நடைகள், தோல் போன்றவை உள்நாட்டு அங்காடிகளிலேயும் மண்டலங்களுக்கிடையேயும் வாணிகம் செய்யப்படுகின்றன.

உள்நாட்டு வாணிகத் தொழிலுக்குத் தேவையான முதலை இந்திய இருப்பு அங்காடியில் (Stock market) பெற்று வணிகர்கள் தொழில் நடத்துகின்றனர். மண்டலத் தொழில் வங்கிகள், வணிக வங்கிகள் முதலியன உள்நாட்டு வாணிகப் பணியில் சிறப்புப் பங்கு வகிக்கின்றன. இவற்றிலிருந்து தொழில் முனைவோர் தங்களுக்குத் தேவையான முதலை எளிதில் பெற்றுக் கொள்ள வாய்ப்புகள் உள்ளன.

உயர் மதிப்பு நிறைந்த பொன், வெள்ளி, இரத்தினக் கற்கள் போன்ற பொருள்கள் இந்திய உள்நாட்டு வாணிகத்தில் தனிச் சிறப்பிடம் பெறுகின்றன. இவற்றின் மதிப்பு, தேவை, அளிப்பு, வாணிகம் ஆகியன வெளிநாட்டில் நிலவி வரும் மதிப்பு (விலை), அளிப்பு போன்றவற்றைச் சார்ந்து அமைகின்றன.

இந்திய உள்நாட்டு வாணிகத்தில் கூட்டுறவு வாணிக அமைப்புகளும் செயற்படுகின்றன. இவற்றில் பெரும்பான்மையான நுகர்வோர் பொருள்களும் வேளாண்மைப் பொருள்களும் இடம்பெறுகின்றன. கூட்டுறவுப் பண்டகசாலைகளில் பண்டங்கள்பாதுகாப்பாக வைக்கப்படுகின்றன. கூட்டுறவு வாணிகம் விவசாயிகளை இடைத்தரகர்களின் பிடியிலிருந்து விடுவிக்க முயற்சி செய்கிறது.

பொருள்கள் நல்ல தரமுடையனவாக இருக்கவும் அவற்றின் தரத்தை மேம்படுத்தவும் உள்நாட்டில் வாணிகக் கட்டுப்பாடு நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் தரக் கட்டுப்பாடு நிறுவனம் (Indian Standards Institute) பொருள்களின் தரம், அளவு போன்றவற்றைக் கட்டுப்படுத்தி நுகர்வோருக்குப் பணியாற்றுகிறது.

உள்நாட்டு அங்காடிகளில் வாணிகம் சிலகாலத்திலும் இடங்களிலும் பண்டமாற்றுமுறையில் நடைபெறுகிறது. பண்டமாற்று முறை செயற்படுவதில் பல சிக்கல்கள் காணப்படுகின்றன. விற்போர், நுகர்வோருக்கிடையே வேற்றுமைகள் காணப்படுகின்றன. ஒரே பண்டத்து அங்காடிகளின் பன்முகத் தன்மையாலும் விலைகளின் ஏற்றத்தாழ்வுகளினாலும் பல மாற்றங்கள் காணப்படுகின்றன. இதனுடைய உட்கருத்தையும் செயற்பாட்டையும் நுகர்வோர் அறிந்து கொள்வது இன்றியமையாததாகும். நுகர்வோர் பெரும்பாலும் இடைத்தரகர்களால் ஏமாற்றப்படுவதற்கு வாய்ப்புகள் ஏற்படுகின்றன.

வாணிகத்தில் நடைபெறும் ஏமாற்றங்கள், சுரண்டல்கள், இழப்புகள் ஆகியவற்றைத் தவிர்க்க, நுகர்வோர் மனநிலை பக்குவமடைய வேண்டும். பின்தங்கிய நாடுகளில் கல்வியறிவு குறைவாக இருப்பதால், தொழில்நுட்பங்கள், உற்பத்தி, பங்கீடு ஆகியவற்றை நுகர்வோர் எளிதில் அறிந்துகொள்வதில்லை. இந்நிலையைமாற்றி நுகர்வோர்மனநிலையையும்அறிவாற்றலையும் மாற்றியமைப்பதற்கு, அரசு அவ்வப்போது பண்டங்களின் விலை, தன்மை போன்றவற்றைக் குறித்தும் வாணிக நிலை, அங்காடித் தன்மை ஆகியன குறித்தும் வானொலி, கால இதழ்கள் ஆகியவற்றின் மூலம் செய்திகளை விளம்பரப்படுத்துகிறது.

உள்நாட்டு வாணிகம் உறுதியாகச் செயற்படின், அந்நாட்டின் முன்னேற்றம், பன்னாட்டு வாணிகம் போன்றவை நல்ல முறையில் அமைய வாய்ப்புண்டு. தொழில் உற்பத்தியும் பண்பாடும் சீரடைய வாணிகம் பயன்படுகிறது. உள்நாட்டு வாணிகம் நாட்டிற்குள்ளேயும் நாட்டிலுள்ள பிற மண்டலங்களிடையேயும் செயற்படுவதால், நாட்டின் மரபியல் பண்பாடுகளின் பரிமாற்றத்திற்குப்பயன்படுகின்றது. உள்நாட்டு வாணிகம் செழிப்புற்று வளரும் காலத்தில் அதுவே பன்னாட்டு வாணிகமாக மாறுபடுகிறது. இவ்வாணிகம் நாட்டு முன்னேற்றத்திற்கு ஊன்றுகோலாக இருப்பதனால், இதனைச் சீரான ஒழுங்கு முறையில் செயற்படுத்துதல் அங்குள்ள உற்பத்தியாளரையும் நுகர்வோரையும் பொறுத்தது. இவ் வாணிகம் நன்கு செயற்பட நுகர்வோர் அறிவு மிக்கவர்களாக இருப்பது இன்றியமையாததாகும். க.சொ.

துணை நூல்கள்:

**Ellsworth, P.T.,** The International Economy, Mac millan Company, New York, 1969.

**Haterlu, G.,** Theory of International Trade, William Hedge and Company, London, 1959.

**Harrod Roy,** International Economics, James Nistet and Company, London, 1957.

**Viner Jash,** Studies in the Theory of International Trade, George Allen and Unwin, New York, 1955.

**உள்வட்டத் தொடர்:** ஒரு தொடரில் தலைப் பெயர் (Head Noun) அல்லது தலைவினை (Head verb) இடம் பெறும் இடத்தில் அடைகளை ஏற்றுத் தலைச் சொற்கள் வருவதுண்டு. இந்நிலையையே உள்வட்டத் தொடர்(Endocentric Construction) என்று கூறுவர். அதாவது, தலைச் சொல் தனித்து வரும்பொழுது அதன் அண்மை உறுப்பாகிய அடைச் சொல்லை ஏற்று அதே தொடரமைப்பில் வரும் என்பதாகும்.

'இராமன் தன் நகத்தை வெட்டினான்' என்ற தொடரில் தலைப் பெயர் நகம். இது 'கை' என்னும் அடையோடு சேர்ந்து வருதலைக் காணலாம். (எ-டு) 'இராமன் தன் கை நகங்களை வெட்டினான்'. இது உள்வட்டத் தொடர்.

**வெளிவட்டத் தொடர்:** உள்வட்டத் தொடர் அமைப்பு அல்லாதது எல்லாம் வெளி வட்டத் தொடர் (**Exocentric Construction**) ஆகும். உள்வட்டத் தொடரமைப்பு அதில் உள்ள அண்மை உறுப்புகளில் ஒன்றினை ஒத்திருக்கும். ஆனால், வெளிவட்டத் தொடரில் அவ்வாறு அமையாது. எடுத்துக்காட்டாக, 'ஏழை இராமன்' என்பது உள்வட்டத் தொடர் அமைப்பு. இதில் 'ஏழை இராமன்' இடம் பெறும் நிலையும், 'இராமன்' என்ற தலைச் சொல் மட்டும் இடம் பெறும் நிலையும் ஒன்றே. அதாவது, இராமன் என்னும் பெயர் (Noun) ஒரு தொடரில் இடம் பெறுகின்ற அமைப்பும்,'ஏழை இராமன்' என்னும் பெயர்த் தொடர் (Noun-phrase) இடம் பெறுகின்ற அமைப்பும் ஒன்றே. இக்கருத்தைச் சான் லயன்சு (Jhon Lyons) வெளியிட்டுள்ளார். 'ஏழை இராமன்' என்பது உள்வட்டத் தொடர் அமைப்பு ஆகும். ஏனென்றால் அதனுடைய உறுப்பாகிய 'இராமன்' எங்கெல்லாம் வருமோ அதற்கு இணையாக 'ஏழை இராமனும்' வரும்.

புளூம் பீல்டு (Bloom field) கருத்துப்படி இராமன் ஓடினான் என்று சொன்னால், அது இராமனைப் போல் என்ற பெயர்த் தொடராகவுமில்லை, (இராமன்)ஓடியது போல் என்ற வினைத் தொடராகவுமில்லை. எனவே எழுவாய்-பயனிலை, தொடர் வாக்கியங்கள் வெளிவட்டத் தொடர் அமைப்பாகும். இவற்றுக்கு அண்மை உறுப்புகள் (Immediate Constituents) இல்லை. ஆக முதலில் சொல்லப்பட்ட தொடரில் உள்ள இராமனுக்கும், ஏழை இராமனுக்கும் செயல் (Function) ஒன்று தான். இன்னும் தெளிவாகச் சொன்னால், தலைச் சொற்கள் எங்கெல்லாம் வருமோ அங்கெல்லாம் அண்மை உறுப்பாகிய அடைச் சொற்களை ஏற்றும் வரும்.

ஆக்கட்டு (C.F. Hockett) கருத்துப்படி, ஒரு தொடரமைப்பு எப்படி வருமோ அதே போல் அத் தொடரில் உள்ள அண்மை உறுப்பாகிய தலைச் சொல் வரும். 'நல்ல பையன் நிறையப் படித்தான்' என்ற தொடரில் நல்ல பையன் என்பது ஒரு தொடர் அமைப்பு, நிறையப் படித்தான் என்பது

மற்றுமோர் அமைப்பு. இதில் உள்ள உறுப்புக் களிடையே ஒற்றுமை இருப்பதைக் காணலாம். நல்ல பையன் என்பதும் நிறையப் படித்தான் என்பதும் ஒரே அமைப்பினைக் கொண்டுள்ளன. அதாவது, இரண்டிலும் உள்ள அண்மை உறுப்புகள் தலைச் சொல்லை அவாவி நிற்கின்றன. எனவே, நல்ல பையன் என்பதும் நிறையப் படித்தான் என்பதும் உள்வட்டத் தொடரமைப்பாகும்: மேலும், பையன் வருமிடங்களில் எல்லாம் அதன் அடையாகிய நல்ல என்பதும் சேர்ந்து வரும். அதுபோலவே, அந்தப் பையன், புதிய பையன், ஒரு பையன், பெரிய பையன், சிறிய பையன் போன்ற அண்மை உறுப்புத் தொடர்களும் வரும். இவற்றில் அந்த, புதிய, ஒரு, பெரிய,சிறிய, நல்ல போன்றவை அடைகள். இவை பெயர்ச்சொல்லாகிய பையனுக்கு அண்மை உறுப்பாக வந்து பெயரை அவாவி நிற்கின்றன. ஆக, சொற்கள் இணைந்து தொடராகின்றன. தொடராகும்போது உள்வட்டத் தொடரும் வெளிவட்டத் தொடரும் உருவாகும்.

எல்லா மொழிகளுக்கும் பொருந்தும் முறையில் இவ்விரு தொடர்களையும் விளக்குவது கடினம். தமிழைப் பொறுத்த வரையில் சில இயல்புகளைக் கொண்டு இவற்றைப் பிரித்துக் காட்டலாம். எடுத்துக் காட்டாக, கனிந்த பழம் என்னும் தொடரில் பழம் என்பது தலைச் சொல்; கனிந்த பழம் என்பது பெயர்த் தொடர். பழம் எத்தனை அமைப்புகளில் வருமோ அத்தனை இடங்களில் கனிந்த பழம் என் பதும் வரும் எனலாம். பழம் இனித்தது, என்பது கனிந்த பழம் இனித்தது என்றும் வரலாம். இவ்வாறு ஒரு தொடர் வேறுதொடரில் உள்ள சொல் ஒன்றின் சொற்பாகு பாட்டில் அடங்குமாயின் அத்தொடரை உள்வட்டத் தொடர் என்பர். மேலும், சென்ற பொழுது என்னும் தொடரை எடுத்துக் கொண்டால் இத்தொடரில் உறுப்பாக அமைந்துள்ள சொற்களில் சென்ற என்பது பெயரெச்சம்; பொழுது என்பது பெயர். ஆனால், சென்றபொழுது என்பது வினை கொண்டு முடியும். இத்தகைய தொடர்களை வெளி வட்டத் தொடர் (Exocentric Construction) என்பர்.

உள் வட்டத் தொடரை இரண்டாக வகைப் படுத்தலாம். 1. துணைநிலைத் தொடர் (Attributive or Subordinate Construction), 2. இணைநிலைத் தொடர் (Co-ordinate Construction) அதாவது, The old dog lay, in the corner என்ற ஆங்கில வாக்கியத்தில் இரண்டு தொடர்கள் இருக்கின்றன. இதில் உள்ள dog, lay போன்ற சொற்கள் அடை களை ஏற்று வரும். doglay, old dog lay in the corner, the old dog lay there inthe corner. இவ்வாறு அவாவி நிற்கும் அண்மை உறுப்புகளை (பெயரடையையோ, வினையடையையோ) ஏற்று வரும் தொடர் களைத் துணைநிலைத் தொடர் என்று கூறுவர். மேலே சொல்லப்பட்ட வாக்கியத்தில் old என்பதும் lay என்பதும் தலைச் சொற்கள். old, or the old, in the corner, or there in the corner போன்றவை தலைச்சொற்களை விசேடித்து நிற்கும் சொற்களும் தலைச்சொற்களும் சேர்ந்து அண்மை உறுப்புகளாக வருமாயின் அவற்றை இணைநிலைத் தொடர் என்று கூறலாம்.

சொற்றொடர்களில் பெயரையோ வினையையோ அண்மை உறுப்புகள் அவாவி நின்று தொடர் அமையு மானால், அந்தத் தொடரின் அமைப்பு அதன் தலைச்சொற்கள் ஒரு தொடரில் அமையும் முறையை ஒத்திருக்கும். அண்மை உறுப்புகள் அல்லாமல் வரும். பாலும் பழமும் போன்ற தொடரில் உள்ள பால், பழம் போன்ற அண்மை உறுப்புகள ஒரே சூழலில் வரும். இவ்வாறு அமையும் தொடர்களை உள் வட்டத் தொடர் என்றும், எழுவாய், பயனிலையை அண்மையுறுப்பாகக் கொண்ட தொடர்களை வெளி வட்டத் தொடர் என்றும் கூறலாம். கு.அ.

**உள்ளடக்கப் பகுப்பாய்வு**: ஒன்றின் உள் ளடக்கம் எத்தன்மையானவரால், எவ்வகைப் பட்டோருக்கு, எவ்வகையாக, என்னென்ன பயன்கள் விளைவிக்குமாறு கூறப்பட்டது என்று விரித்துரைக் கும் ஆய்வு உட்பகுப்பாய்வு அல்லது உள்ளடக்கப் பகுப்பாய்வு (Content Analysis) எனப்படும்.

ஆய்வு முறை: முறையான, நெறியான, அள வீட்டு விவர வழிகள் மூலமும் கேள்வித்தாள்கள், கேள்வி அட்டவணைகள், மொழி வெளியீடுகள், சொற்பொழிவுகள், எழுதப்பட்ட விவரங்கள் முதலிய அனைத்தின் மூலமும் உட்பொருள் தன்மைகளை ஆய்வதும் உள்ளடக்கப் பகுப்பாய்வாகும் என்று பாலின் யங்கு (Pauline Young) கூறுகிறார். எழுதப் பட்ட ஒரு நூல், ஒரு கட்டுரை போன்றவற்றின் உட் பொருளை உணர்தல் மட்டும் அல்லாமல், அவற்றின் உட்பொருளையும் அதாவது, பேச்சாயினும் எழுத் தாயினும் பொருள் கொள்ள முடிந்த அனைத்து விவரங்களின் உட்பொருளையும் உணர்த்துவது உள் ளடக்கப் பகுப்பாய்வாகும். பென் பெர்ட்சு (1975) என்பார், 'விவரங்களிடையே பொதிந்து வைக்கப் பட்ட உள்விவரங்களை வெளிக் கொணரக்கூடிய ஆய்வு முறை உள்ளடக்கப் பகுப்பு முறையாகும்' என்று கூறுகிறார்.

உள்ளடக்கப் பகுப்பு: பாடநூல்களில் உள் ளடக்கப் பகுப்பாய்வு என்பது பற்றி இரட்டு

(Erautt , 1975) என்பார் விளக்கும்போது, முழு அளவில் பயன் பெறுவதற்காகவும் முழுப் பயன்களையும் புலப்படுத்துவதற்காகவும் வெளிக்கொணர்வதற்காகவும் ஏற்படுத்தப்பட்டதும், ஒழுங்கு முறைக்குட்பட்டதுமான கேள்வி விவரங்கள் அடங்கிய முறையே உள்ளடக்கப் பகுப்பாய்வாகும் என்று கூறுவர். அறிஞர் பெரல்சன் (Berelson) என்பாரும், எந்த அடிப்படையில் என்ன கூறப்பட்டுள்ளது? எல்வாறு கூறப்பட்டுள்ளது? என்ற விவரங்களை வெளிக் கொணர்வதே உள்ளடக்கப் பகுப்பாய்வு என்பர்.

**நிகழிடம்:** பாடநூல்களைப் பயன்படுத்தும் முன்னர், அவற்றின் பயன்பற்றி ஆயும் பொழுதும் பாடத் திட்டப் பொருள்களை மேம்படுத்த விழையும் பொழுதும் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரிகளில் மாணவ ஆசிரியர்கட்கு உட்பொருளை உணரவைப்பதிலும், பலவகைக் கல்வித் திட்டங்களைத் தீட்டுவதிலும் உள்ளடக்கப் பகுப்பாய்வு இடம் பெறுகின்றது. மேலும், கல்விக் கொள்கைகட்கு ஏற்றவகையில் பாடத் திட்டங்கள் செம்மையாக உள்ளனவா , பலவிதச் சூழ்நிலைகட்குஏற்பக் கல்விக் கோட்பாடுகட்குப் பொருத்தமுறப் பாடப் பொருள்களில் நெகிழ்வுத் தன்மை உள்ளதா ,கற்பனை வெளிப்பாடுகட்கு ஏற்ற வகையில் பாட நூல்கள் பயன் தருகின்றனவா என்பன போன்ற வினாக்களுக்கு, உள்ளடக்கப் பகுப்பாய்வு முறையே விடை காண்கின்றது என அறிஞர் பென் பெர்ட்சு (Ben Peretz) கூறுவர்.

சாண்டர்சும் (Sanders) கன்னிங்காமும் (Cunningham) தேவைப்பாடுகளின் கிடைத்தற்கரியதன்மை, கற்றல் செயல்கட்கும் நிகழ்ச்சித்திட்ட இலக்குகட்கும் உள்ள உறவுகள், உள் அமைப்பு, தொடர்ச்சி, தெளிவுடைமை, கடினத் தன்மைகளின் வெவ்வேறு நிலைகள், விடை காணப்பட வேண்டிய புதிர்களின் நிலை, பயன்பாட்டுத் திறன் போன்றவற்றையும் உள்ளடக்கப் பகுப்பாய்வின் மூலம் அறியலாம் என்று கூறுவர். அவ்வாறே புளூம் (Bloom, 1977) என்பாரும் பாட நூல்களின் உள்ளமைப்பை ஆராயும்பொழுது, தொடர்ச்சி, தெளிவுடைமை, பொருள் தருதல், ஆசிரியர்கட்கான ஆர்வ மதிப்புகள், மாணாக்கர் தேவை, நாட்டத்தின் பொருத்தப்பாடுகள் முதலானவற்றை அறியலாகும் என்பார்.

உள்ளடக்கத்தை வெறும் சொல்லாட்சிகளின் எண்ணிக்கை கொண்டு அளவிடக் கூடாது என்று சில திறனாய்வாளர் கருதுவர். ஏனெனில், ஒரு கருத்தைக் கூற வந்த ஆசிரியர், அக்கருத்தை மேம்படுத்தப் பல்வேறு கருத்துகளைப் பின்னணியில் கொண்டு வரும் பொழுது, அப்பின்னணிக்கான விவரங்களை வெளிப்படத் தருவதில்லை: வெறும் சொல்லாட்சி பயின்ற இடங்களை மட்டும் அளவிடும்போது அது மேற்போக்கான ஆராய்ச்சியாய்ப் பின்னணி விளக்கங்கள் இல்லாமற்போகிறது. இக்கருத்தையே வலியுறுத்திக் கார்ல் பியர்சன் (Karl Pearson) என்பாரும், 'எந்தக் கருத்திலும் நிலையிலும் தொடர்ச்சியிலும் ஒரே ஒரு காரணம் மட்டும் வெளிப்படுவதில்லை; முன்பின் தொடர்புகள் அனைத்துமே தொடர்ந்த காரணங்கள் கொண்டவை; காரணிகளை அதிகார அடிப்படையில் ஆயும்பொழுது, ஒருவர் தொடர்ந்த நிகழ்ச்சிகளின் பின்னணியில்தான் கூறுகின்றாரே தவிர, அவ்வப்போது உள்ள கருத்துகளைப் பற்றிக் கூறுவதில்லை. மேலும், அவற்றுள் பொதிந்துள்ள உட்கருத்தை அறிவதுமில்லை' என்பார். இக்குறைகளை நீக்கப் புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. காண்க: உள்ளார்ந்த மதிப்பீடு. எஸ்.மோ.

**உள்ளடக்குநிலை மொழிகள்:** மொழிகளை அவற்றின் அமைப்பு அடிப்படையில் சிலகல், கிரீன்பர்கு, சப்பீர் போன்ற மொழியியல் அறிஞர்கள் பல்வேறு வகையினவாகப் பகுத்துள்ளனர். மொழி அமைப்பு வகைப்பாட்டியல் (Typological Classific-ation) முறைமையில் உலக மொழிகளைத் தனிநிலை மொழிகள் (Isolating Languages), ஒட்டுநிலை மொழிகள் (Agglutinative Languages), இணைப்புநிலை மொழிகள் (Synthetic Languages), உள்ளடக்கு நிலை மொழிகள் (Incorporating Languages) போன்றவகையினவாகப் பாகுபாடு செய்தல் இயலும். இத்தகைய பாகுபாடு ஒவ்வொரு மொழியைப் பொறுத்த மட்டிலும் அது எத்தகைய அமைப்பினைக் கொண்டது என அறிவதற்குப் பெரிதும் பயன்படும்.

ஒரு சொல்வகையினைப் பிறிதோர் சொல்வகையினுள் அடக்கிக் கொள்ளும் சொல்லமைப்புடைய மொழிகள் உள்ளடக்குநிலை மொழிகள் எனப்படும். சில மொழிகளில் வினைச் சொற்களில் பெயர்ச் சொற்கள் உள்ளடக்கிக் காட்டப்படும். இத்தகைய உள்ளடக்குநிலை மொழிகள் எண்ணிக்கையில் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன.

நகுவத்தல் மொழியில் 'naka' என்பது 'இறைச்சி' என்னும் பொருளைக் குறிக்கும் பெயர்ச்சொல் வடிவமாகும். 'நான் இறைச்சி உண்ணுகின்றேன்' என்னும் பொருளைக் குறிக்கும் 'ni-naka-Kawninakakw' என்பது ஒரு சொல்லாகி, 'naka' என்பது வினைச் சொல்லினுள் உள்ளடக்கப்பெற்றிருக்கிறது. ஈண்டுச் செயப்படுபொருளாகச் செயற்படும் பெயர்வடிவம் வினைச்சொல்லினுள் உள்ளடக்கப் பெற்றிருப்பதால்,

இம்மொழி உள்ளடக்குநிலை மொழியாகக் கருதப் படுகிறது.

வட அமெரிக்க மொழிகளில் ஒன்றான தொத்தானக்கில் 'Kin' என்பது 'என்' என்னும் பொருளைக் குறிக்கும் பெயர்ச் சொல்லாகும். 'அவன் என்னைக் குத்தினான்' என்னும் பொருளைக் குறிக்கும்(kin-tuk-s-li)* Kintuks-li என்பது ஒரு சொல்லாகி 'Kin' என்னும் செயப்படுபொருள் வடிவம் வினைவடிவத்துள் அடங்கியிருக்கக் காணலாம். ஈண்டும் செயப்படு பொருளாகச் செயற்படும் பெயர்ச்சொல் வினைச் சொல்லில் உள்ளடக்கிக் காட்டப்பெறுவதால், இம் மொழி உள்ளடக்குநிலை மொழியாகக் கருதப்படுகிறது. ஈண்டுக் கொடுக்கப் பெற்றுள்ள சான்றில் பெயர்ச்சொல் வினைச் சொல்லின் ஒரு பகுதியாக அமையப்பெற்றுள்ளது.

சில உள்ளடக்குநிலை மொழிகளில் செயப்படு பொருளாகச் செயற்படும் பெயர்ச்சொல் வடிவங்கள் வினைச் சொல்லின் முன்னரும் வேறுசில உள்ளடக்கு நிலை மொழிகளில் வினைச் சொல்லின் பின்னரும் ஒட்டுகள் போலப் பிணைந்து வினைச் சொல்லின் உறுப்புகளாக அமையப்பெற்றுள்ளன. ஏ.ஆ.

துணை நூல்கள்:

**Lehmann** ,W.P., Historical Linguistics, Oxford & IBH Publishing Co., New Delhi, 1975.

**Sapir Edward**, Language, New York, 1921.

**உள்ளது நாற்பது.** இது உள்ளது சொல்வோன் ஒருவன் கண்டதும் கேட்டதும் பட்டதும் படித்ததும் ஆன பலசெய்திகளைத் தொகுத்துக் கூறும் சமய ஒழுக்க நூல்.எம் இ. மிசன் கி.பி. 1888-இல் இந் நூலை வெளியிட்டது. பி.தெ.

**உள்ளந்தக்கரணம்**: இந்தியத் தத்துவங்களில் சாங்கியத் தத்துவம் பழமையான ஒன்று. அது இருபத்து மூன்று தத்துவங்களை வகுத்துக் காட்டுகின்றது. அவற்றுள் 'அந்தக் கரணம்' என்பது ஒரு வகை. அவற்றைச் சாங்கியத் தத்துவம் மனம், அகங்காரம், மான் என மூன்றாகக் கூறுகின்றது. மான் என்பது புத்தி ஆகும்.

சைவம் மேற்கூறியவற்றுடன் சித்தம் என்பதைச் சேர்த்து 'அந்தக் கரணம் நான்கு' என்கின்றது. அந்தக் கரணம் - அகக் கருவி. மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன புறக் கருவிகள் ஆதலின், அவற்றால் தரப்படுகின்ற புலன்களை அகத்து நின்று ஆராயும் கருவிகள் 'அந்தக் கரணம்' எனப்படுகின்றன.

மூன்றேயாயினும், நான்கேயாயினும் 'அந்தக் கரணம்' என்பதுவே சாங்கியம் முதலிய பலவற்றில் பேசப்படுகின்றது. ஆயினும், சைவ சித்தாந்தம் அந்த 'அந்தக் கரணங்கட்கும் உள்ளீடாக ஐந்து கருவிகள் மிக நுண்ணியனவாய் உள்ளன' எனக் குறிப்பிட்டு, அவற்றை 'உள்ளந்தக் கரணம்' என வழங்குகின்றது. அவையாவன: காலம், நியதி, கலை, வித்தை, அராகம் என்பனவாம். அந்தக் கரணங்கள் மூலப்பிரகிருதியின் காரியங்கள் ஆகும். ஆனால், உள்ளந்தக்கரணங்கள் அசுத்தமாயையின் காரியங்கள் ஆகும்.

இவற்றுள் 'காலம்' என்பது யாவராலும் அறியப் படுவது. நியதி என்பது கன்மத்தைச் செய்தவரே நுகரும்படி நியமிப்பது. கலை, வித்தை, அராகம் ஆகியன முறையே ஆன்மாவின் கிரியை, ஞானம், இச்சை என்பவற்றை எழுப்புபவை. ஞானமும் இச்சையும் கிரியையும் ஆன்மாவினிடத்தில் இல்லையென்றால், அது அந்தக் கரணங்களைச்சார்ந்து நின்று புலன்களைச் சிந்திக்கவோ நிச்சயிக்கவோ இயலாது. அதனால், அந்தக் கரணங்கட்கும் மேலாக இந்த உள்ளந்தக்கரணங்கள் ஆன்மாவிற்கு இன்றியமையாதன ஆகின்றன என்கின்றது சைவ சித்தாந்தம். சி.அ.

**உள்ளம்**: மனித மனம் அல்லது உள்ளம் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாக எவரும் எளிதில் புரிந்து கொள்ள முடியாத விடுகதையாகவே இருந்திருக்கிறது. அதை ஆராய்வதற்கு முயன்ற பலரை அது மலைக்கச் செய்தும், எதுவும் புரியாத புதிராயும் இருந்து வந்திருக்கிறது. பொதுவாக, சுதந்திர உணர்ச்சி கொண்டுள்ளது மனித மனம். அது எங்கு வேண்டுமானாலும் செல்லும். சுவர்களும் கம்பி வேலிகளும் அதைக் கட்டுப்படுத்த முடியா. தன் இச்சைக் கொப்பத் திரியும் குணமுள்ள மனத்தை அன்றாட வாழ்க்கையில் குரங்குடன் ஒப்பிடுவதுண்டு.

மனத்தை அறிவியல் முறைப்படி ஒழுங்கு முறையாக ஆராய முடியுமென உளவியலார் நம்புகின்றனர். மற்ற அறிவியல்களைக் காட்டிலும் உளவியல் கடினமானது. தாவரவியல், விலங்கியல், வேதியியல் போன்றவற்றிற்கு அவற்றின் செய்திப் பொருள் (Subject matter) அறிபவர் கண் முன்னே இருக்கின்றது. சான்றாக, விலங்கியல் துறை மாணவன் சோதனைக் கூடத்தில் தவளையைக் கொண்டு வந்து, அறுத்துக் கூறுபோட்டு, பல பகுதிகளின் பெயரையும் ஒவ்வொன்றின் பணியையும் தெரிந்து கொள்ளு

கிறான். ஆனால், உளவியல் துறை மாணவனின் நிலையோ அப்படி அன்று. அவன் மனத்தைப் பாகுபாடு செய்து புரிந்து கொள்வது என்பது சிக்கலானதும் மிகவும் கடினமானதும் ஆகும்.

மூளையில்தான் மனம் இருக்கிறது என்பது பொதுவான கருத்து. இந்திய மருத்துவர் சாரகா என்பவர் அது இதயத்தில் இருப்பதாகக் கூறினார். தேக்கார்ட்டே (Descartes) மூளையின் ஒருவகைச் சுரப்பியில் (Pineal Gland) மனத்தின் இருப்பிடம் உள்ளதாகச் சொன்னார். பண்டை எகிப்தியரோ அது வயிற்றில் இருக்கிறது என்று கருதினர்.

மனத்தின் இருப்பிடத்தை உடலுக்குள் தேடிய முயற்சிகளெல்லாம் தோல்வியிலேயே முடிந்தன. காரணம் 'மனம்' என்பது ஒரு பொருள் அன்று; ஒரு செயலாகும். ஒவ்வொருவருடைய செயலிலும் அவரவர் மனம் வெளிப்படுகின்றது. பலர் ஒன்று சேர்ந்து குழுவாகி, பின்னர் ஒருங்கிணைந்த குழுவாகிப் (Organized Group) பயிற்சி பெற்று நீண்ட காலம் செயற்படும்போது, அக்குழுவின் செயலில் குழுவின மனம் (Group Mind) சிறப்பாக வெளிப்படுத்தப்படுகிறது.

மனம் பொருள் தன்மை (Immaterial) அற்றது. அது செயல் தன்மை (Functional) உடையது. மூளையின் உதவியால் சிந்திக்க முடிகிறது. சிந்தனையில் உருவான எண்ணங்கள் ஒன்று சேர்ந்து மனமாகின்றன. எண்ணங்களைத் தவிர, கவனம், உணர்ச்சிகள், மனவெழுச்சிகள், மறதி, நினைவாற்றல், நுண்ணறிவு, கற்பனை போன்ற வேறுவிதமாகவும் மனச் செயல்கள் வெளிப்படுகின்றன.

அன்றாட வாழ்க்கையில் பிறரின் பழக்க வழக்கங்கள், விருப்பு, வெறுப்புகள், செயலின் நோக்கங்கள், சிந்தனைகள், உணர்ச்சிகள், மனவெழுச்சிகள் ஆகியவை பற்றி ஒருசில விவரங்கள் தெரியவருகின்றன. மிகச் சாதாரண நடைமுறைச் செயல்களுக்கு இந்த அறிவு போதுமானது. ஆனால் தெளிவில்லாமலும் ஒழுங்குபடுத்தப்படாமலும் இருக்கும் அறிவை ஒழுங்குபடுத்துவதும் நிறைவுசெய்வதுமே உளவியலின் முக்கிய பணியாகும்.

உளவியல் அறிவியலாகப் பணிபுரியும் போது அது இயற்கை அறிவியலாகத்தான் (Natural Science) இருக்க முடியுமே தவிர, விதிமுறை அறிவியலாக (Normative Science) இருக்காது. விதிமுறை அறிவியல்களுக்கெல்லாம் குறிக்கோள் உண்டு. அவை எல்லாம் செய்திப் பொருளைக் குறிக்கோளுடன் தொடர்புபடுத்தி ஆராய்கின்றன. அளவை நூல் (Logic), அறநூல் (Ethics) ஆகியவை விதிமுறை அறிவியலைச் சார்ந்தனவாகும். விலங்கியல், தாவரவியல், வேதியல், பூமியியல் போன்ற அறிவியல்கள் உளவியலைப் போல இயற்கை அறிவியல் பிரிவைச் சேர்ந்தனவாகும். எவ்விதக் குறிக்கோளையும் குறிப்பிடாமல் இவை தங்கள் செய்திப் பொருளை ஆராய்கின்றன. குறிப்பாக, உளவியலார் நல்லவனிடத்தும் தீயவனிடத்தும் குற்றவாளிகளிடத்தும் சாதாரண மனிதனிடத்தும் (Normal Person) பைத்தியக்காரனிடத்தும் (Abnormal Person) ஒரே அளவு அக்கறை காட்டுகின்றனர். உளவியல் மனப்பாங்கு என்பது திட்டவட்டமாகத் தார்மிக நடுவு நிலையில் இருப்பதாகும். யாருடைய செயலையும் போற்றுவதோ தூற்றுவதோ உளவியலாரின் வேலை அன்று. எல்லாச் செயல்களையும் மனிதனின் மனவெளிப்பாடுகள் என்ற முறையிலேயே உளவியலார் ஆராய்கின்றனர்.

உளவியல் எல்லா உயிரினங்களின் மனச் செயல்களையும் ஆராய்கிறது. ஆகவே, உயிரியலின் ஒரு பகுதிதான் உளவியல் ஆகும். உயிரியல் உடல் வாழ்க்கையின் அறிவியலாகும். ஆனால், உளவியல் அறிஞனுக்கு உயிரினங்களின் செய்கைகள், நோக்கங்கள் மீது கவனம் செல்கிறது.

மனத்தை அறிந்து கொள்ள இரண்டு வழிகளை உளவியலார் கூறுகின்றனர்: 1. நேர்முக வழி (Direct Method), 2. மறைமுக வழி (Indirect Method). நேர்முக வழியை உள்நோக்கு என்று கூறலாம். இது ஒவ்வொருவரும் தம் சொந்த மனநிலைகளை ஆராயும் ஓர் அகவய முறை (Introspection Method) ஆகும். உளவியலார் பயன்படுத்தும் மிகப்பழமையான முறையாகும்.

புறப்பொருள் தன்மை முறையில் தன்னைத் தானே அறிந்துகொள்ள இயலாது. ஆனால், மற்றொருவரின் மனத்தை ஆராயலாம். பிறர் மனத்தில் என்ன இருக்கிறது என்று கண்டுபிடிக்க, ஒருசில மாறுதல்களை அவரிடம் கவனித்துக் கூறலாம். ஏனெனில், மனமும் உடலும் எப்போதும் தனித்து இயங்கா. மறைமுக வழியில் மனத்தைத் தெரிந்துகொள்வதோடு உடலில் ஏற்படும் மனத்தின் விளைவுகளையும் அறிய முடியும்.

உயிரியலின் ஒரு பிரிவான உடலியங்கியலுடன்தான் (Physiology) உளவியல் மிக நெருக்கமான தொடர்பு கொண்டுள்ளது. உயிரினங்களின் மன வாழ்க்கையை உளவியல் ஆராய்வதால், அது ஒரு வகையில் உடலியங்கியலின் ஒரு பகுதி என்று கூறுவது மிகவும் பொருத்தமாகும். ஆனால், பொதுவாக உட

லியங்கியல் அறிஞர்கள் மிகவும் அக்கறை காட்டுவது செரிமானம், இரத்த ஓட்டம் போன்ற உடற்செயல் களில்லேயே என்பது யாவரும் அறிந்ததே. அதேபோல் மனவெழுச்சி, நுண்ணறிவு, மறதி, நினைவு போன்ற மனவேலைகளை உளவியலார் கவனிக்கின்றனர். ஆனால், இந்த வேறுபாட்டைச் சரியானது என்று கூற இயலாது. அதற்கான காரணம் கீழே விவரிக்கப்பட்டுள்ளது.

மனிதனுடைய செயல்கள் அனைத்தும் உடற் செயல்களென்றும் மனச்செயல்களென்றும் தனித்துப் பிரிக்க முடியாதபடி கலந்துள்ளன. ஒவ்வொரு செய்கைக்கும் ஓர் உடற்பகுதியும் ஒரு மனப் பகுதியும் உள்ளன போல், உடலும் உள்ளமும் மிக நெருக்கமாக ஒன்றோடொன்று, கலந்து தொடர்பு கொண்டு உள்ளன. சான்றாக, ஒருவரின் பேச்சுச் செய்கை அவருடைய நாக்கின் அசைவையும், அவர் மூளையில் நிகழும் செயலையும் பொறுத்துள்ளது. அதே சமயம் குழந்தை பேசக் கற்றுக் கொள்ளும் செயல் முறை மனவளர்ச்சியுடன் மிக நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கிறது. செரிமானம் செய்யும் வேலை முதலில் பார்ப்பதற்குத் தனிப்பட்ட உடலின் செய்முறையாகத் தோன்றினாலும், உண்மை வேறு மாதிரி உள்ளது. ஒருவன் வெகுண்ட நிலையில் இருக்கும் போது, செரிமான உறுப்புகளின் வேலை தடைபட்டு நின்று விடுகிறது. மனமகிழ்ச்சி காணப்பட்டால், அந்தச் செய்கை செரிமானச் சக்தியை அதிகப்படுத்துகிறது.

சில செயல்கள் திட்டவட்டமாக உடல் தொடர்பானவை என்பதை மறுக்க முடியாது. செரிமானச் சக்தி, இரத்த ஓட்டம் போன்றவை உடலியங்கியலைச் சார்ந்தனவாகும். நுண்ணறிவு, மறதி, நினைவு போன்ற செயல்கள் மனப்பகுதியைச் சார்ந்தவையாகும். அதாவது, உளவியலின் செய்திப் பொருளாகும். சுருங்கக் கூறின், தனி ஒருவரின் பல உறுப்புகள் தனித்தனியாகச் செய்யும் செயல்களை உடலியங்கியல் ஆராய்கிறது. ஆனால், அவர் தனித்துச் செய்யும் செயல்களை உளவியல் ஆராய்கின்றது.

உளவியல் ஓர் ஒழுங்கு முறையான அறிவுத் தொகுதி அமைப்பு மட்டுமன்றி, பின் வரப்போவதை முன்கூட்டி அறிவிக்கவும் கட்டுப்படுத்தவும் அது முனைகின்றது. நிலஅதிர்ச்சிகள் வரப்போவதை முன் கூட்டியே நிலநூல் வல்லுநர் சொல்லி விடுகிறார். இந்தத் தகுதிகள் எந்த அளவுக்கு உளவியலுக்கு உள்ளன என்பதை அறிய வேண்டும்.

உளவியல் அறிவு சீரான முறையில் முன்னேறி வருகின்றது. அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட புதிய கருவிகள் மூலம், சில மனநிலைகளைத் தொடர்ந்து வரும் உடல் மாற்றங்களை அளப்பது, மதிப்பிடுவது போன்றவை உளவியலாருக்குச் சாத்தியமாகின்றன. பின்னர் நிகழப் போவதை முன்கூட்டியே உளவியலார் அறிவித்தாலும், செயல்களைக் கட்டுப்படுத்தும் திறத்தில் அவர்களுடைய வளர்ச்சி குறைவுதான். இருப்பினும், உளவியலை முழு வளர்ச்சியடையாத அறிவியல் என்று கூறுவது முறையாகாது. வளர்ச்சிக்கான நல்ல போக்குகளைக் கொண்ட அறிவியலாக அது எதிர்காலத்தில் திகழும் என்பதில் எந்த ஐயப்பாடுமில்லை.

மனித உள்ளம் எப்படி வேலை செய்கிறது என்பதைத் தெரிந்து கொள்வது அன்றாட வாழ்க்கைக்கு மிகவும் பயனுள்ளது என்பதில் எவ்விதக் கருத்து வேறுபாடும் இருப்பதற்கில்லை. உளவியல் அறிவு ஒருவருடைய மனவெழுச்சி, விருப்பம் ஆகியவற்றைக் கட்டுப்படுத்த உதவுகிறது. வாழ்க்கையில் ஒழுங்குமுறையைக் கையாளத் தன் மனத்தைப் புரிந்து கொள்ளல் மட்டும்போதாது. மற்றவர்கள் உள்ளத்தில்இருப்பதையும் தெரிந்து கொள்ளுதல் தேவை. இந்த அறிவு பொது வாழ்க்கையில் சமூகத் தொடர்புகள் அமைய உதவும். மேலும், அது ஒரு நண்பனையோ ஒரு தொழிலையோ தேர்ந்தெடுக்க வழி காட்டுகிறது. கவனத்தின் காரணங்கள், களைப்பின் தன்மைகள், விளம்பரத் துறையில் புரட்சியான மாற்றங்கள், நுண்ணறிவைச் சோதித்தல் (Intelligence Testing), குழந்தை வளர்ப்பு (Child Rearing), மனக்கோளாறுகளைக் (Mental Disorders) குணப்படுத்துதல் போன்ற பல வகைகளில் உளவியலின் தொண்டு பரவிக்கிடக்கிறது. சிற்றின்பம், பாலுணர்வில் இசைவின்மையின் (Sexual Disharmony) காரணங்கள் போன்ற மென்மைச் சிக்கல்களைத் தெளிவுபட விளக்கி, உளவியலார் மணவாழ்க்கைக்குப் புதிய திருப்பம் கொடுக்கின்றனர்.

மனித உள்ளம் மிகவும் சிக்கலானது என்று அறியும் போது, அதைப் புரிந்து கொள்வதில் உள்ள முன்னேற்றம் சற்று மெதுவாகத்தான் இருக்கும். ஆகவே, சோர்வு அடையாமல் முழு நம்பிக்கையுடன் பயணத்தைத் தொடர்ந்து முழு அறிவைப் பெறுவதுதான் புத்திசாலித்தனமாகும். உலகத்தை ஆட்டிப் படைக்கும் மனிதச் செயல்களைக் கட்டி ஆளுவன அதே மனிதனுடைய மனத்தில் உருவெடுக்கும் எண்ணங்களும் கருத்துகளுமே. இதை யாவரும் உணரவேண்டும். எம்.சு.

துணை நூல்கள்:

**Adinarayan,S.P.,** The Human Mind, Hutchinsons University Library, London, 1950.

**Swami Chidbhavananda,** Key to Higher Life, Sri Ramakrishna Tapovanam, Tirupparaithurai, 1982.

**உள்ளமுடையான்** என்பது தமிழில் வழங்கும் ஒரு சோதிட நூல். இந்நூலை இயற்றியவர் பாண்டமங்கை என்னும் ஊரைச் சார்ந்த மாதவன் அரியவன் என்பாரின் மகன் திருக்கோட்டி நம்பி. 'உலகுய்யவந்தான், அருளுள்ளமுடையான், மங்கைக் கொற்றவன்' என்று இவ்வாசிரியர் பாராட்டப்பட்டுள்ளார். எனவே, உள்ளமுடையான் என்னும் பெயர் இவ்வாசிரியரின் சிறப்புப் பெயர் என்று கருத வேண்டியுள்ளது. ஆசிரியர் தம் நூலுக்கு இட்டு வழங்கிய பெயர் 'உள்ளமுடை சூளாமணி' என்பது ஒரு செய்யுளால் அறியக் கிடக்கிறது. முனிவர்கள் பண்டைக் காலத்தில் செய்த வடமொழிக் கணித நூலைத் தாம் தீதற்ற தமிழில் ஆக்கியதாக ஆசிரியரே கூறுவதனால், இந்நூல் ஒரு மொழிபெயர்ப்பு நூலென்பது போதருகிறது. உள்ளமுடையான் என்னும் பெயர் இந் நூலைச் செய்வித்தோன் பெயர் என்னும் கருத்தும் உண்டு.

அச்சேற்றப்பட்ட இந்நூலில் 186 செய்யுட்கள் உரையுடன் உள்ளன. இதில் முதற்கண் திதி, வாரம், நட்சத்திரம், கரணம், யோகம் என்பனவும், அடுத்து இராசி, கிரகங்களின் பெயரும், கோசார பலன், சாதக பலன் முதலியனவும் கூறப்பட்டுள்ளன. சில ஏட்டுப் படிகள் இதன் உரையைப் 'பீமேசுவரம்' என்று சுட்டுகின்றன. இந்நூல் இயற்றப்பட்ட காலம் கி.பி. 1178 என்றும், கி.பி. 1278 என்றும் இருவேறு கருத்துகள் உள்ளன.

இப்பெயரோடு வேறு சில சோதிட நூல்களும் காணப்படுகின்றன. அவற்றுட் பல இன்னும் அச்சிடப் பெறாது ஏட்டுச் சுவடிகளாகவும், முழுதும் கிடைக்காத குறைச் சுவடிகளாகவும் உள்ளன. அவற்றின் ஆசிரியர் பெயர் அறியக் கூடவில்லை. உள்ளமுடையான் என்னும் பெயர்ச் செல்வாக்கினால் இத்தகைய சோதிட நூல்கள் பல இப் பெயரையே கொண்டுள்ளன என்று கருதக்கூடும். ஆசிரியர் பெயர் அறியப்படாததும் சிதைவுற்றதுமான பிறிதோர் உள்ளமுடையான் சுவடி கிடைத்துள்ளது. இதில் மூன்று செய்யுட்கள் 27 நட்சத்திரங்களின் பெயர்களையும், அவற்றின் பலன்களையும் கூறுகின்றன. இதன் இறுதியில் மாந்திரிகத் தொடர்பான செய்திகள் உள்ளன.

இதைப் போன்றே சிதைந்த நிலையிலுள்ள மேலுமோர் உள்ளமுடையான் என்னும் நூல் இன்ன செயலைச் செய்வது நன்றோ அன்றோவென அறிய உதவுவதாக அமைந்துள்ளது. முழுமையாகக் கிட்டும் மற்றொரு நூல் கயிறிட்டுப் பலன்களை அறியவுதவும் நூலாகக் காணப்படுகிறது. 'உள்ளமுடையான் பல திரட்டு' என்னும் நூல் முழுமையாகக் கிடைக்கிறது. ஒன்று முதல் ஐந்து வரையுள்ள இந்நூலின் பாடல்களும், இடையிடையே சில செய்யுட்களும் கிடைக்கவில்லை. இவற்றின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

'உள்ளமுடையான் நட்சத்திர மாலை மரண கெண்டிகை' என்றொரு நூலுள்ளது. ஒவ்வொரு நட்சத்திரத்திலும் பிறந்தாரின் பண்புகளை இது நன்கு விளக்குகிறது. ஒரு நட்சத்திரம் இன்னின்ன செயல்கட்கு ஆகும் என்பதனையும் இது கூறுகிறது. மேலும், நோய்களையும் அவற்றுக்குரிய தீர்வுகளையும், ஒரு குறிப்பிட்ட நட்சத்திரத்திற் பிறந்தவன் இறக்கும் நாளையும் வேளையையும் இது கூறுகிறது.

பல சோதிட நூல்கள் 'உள்ளமுடையான்' என்னும் பெயரில் அமைந்துள்ளதன் உண்மையான காரணம் தெரியவில்லை. 'சூடாமணி உள்ளமுடையான்' என்னும் நூலின் ஆசிரியர் தம் நூலுக்கு 'உள்ளமுடை சூளாமணி' என்று பெயரிட்டமை முன்பே கூறப்பட்டது. மேலும், 'அருளுள்ளமுடையான்' என்று அவர்க்குப் பெயர் இருந்தமையும் கூறப்பட்டது. எனவே, சூடாமணி என்னும் சோதிட நூலுக்கு ஆக்கியோன் பெயர் ஆகுபெயராய்ப் பின்னாளில் வழங்கிற்றென்றும், பின்னாளில் சோதிட நூலியற்றினோரும் அப்பெயராலேயே தம் நூல்களையும் குறித்தனர் என்றும் கருத இடமுண்டாகிறது.

அ.த.

**உள்ளமைப்பு**: ஒவ்வொரு வாக்கியத்திற்கும் உள்ளமைப்பு, புறஅமைப்பு என்ற இரண்டு நிலைகள் உண்டு. வாக்கியத்தின் சொற்களுக்கிடையே அமைந்த இலக்கண உறவு (எழுவாய், பயனிலை போன்ற உறவுகள்) உள்ளமைப்பினால் வரையறுக்கப்படுகின்றது. புறஅமைப்பில் காணப்படுகின்ற சில சொற்களும் மறைந்து நின்று பொருளுணர்த்தும். புறஅமைப்பில் காணப்படுகின்ற சில தொடர்களும் (Phrases) வாக்கியங்களும் (Sentences) பொருள் மயக்கத்தை ஏற்படுத்துவதைக் கண்டு கொள்ளலாம். இவ்வாறு பொருள் மயக்கம் உள்ள புறஅமைப்பிற்கு உள்ளமைப்பைப் பயன்படுத்தி விளக்கம் அளிக்கலாம்.


ஒரு புற அமைப்பிற்கு இரு பொருள் கொடுத்தால் அப்புறஅமைப்பை இருவேறுபட்ட உள்ளமைப்புகளுடன் தொடர்புபடுத்தலாம். தமிழ் மரபிலக்கண ஆசிரியர்கள் கூறுகின்ற 1) 'புலி கொல் யானை' என்ற தொடரை எடுத்துக்கொண்டால், இதற்கு இருவிதப் பொருள்கள் ஏற்படுவதைக் காணலாம். அ) புலி யானையைக் கொன்றது என்றும், ஆ) புலியை யானை கொன்றது என்றும் பொருள்

கொள்ளலாம். 2) 'மீன் விழுங்கிக்கண்ணன் இறந்தான்' என்ற வாக்கியத்தை எடுத்துக் கொண்டால், அ) மீன் கண்ணனை விழுங்கியதால் கண்ணன் இறந்தான் என்றும், ஆ) மீனைக் கண்ணன் விழுங்கியதால் கண்ணன் இறந்தான் என்றும் இரு பொருள் வருவதைக் காணலாம்.

புறஅமைப்புகள் 1 க்கும் 2 க்கும் இரு உள்ளமைப்புகள் தோற்றுவிக்கப்படவேண்டும். இவ்விரு உள்ளமைப்புகளின்மீதும் வெவ்வேறான மாற்று விதிகள் செயற்பட்டு, புறஅமைப்புகள் 1 உம் 2 உம் கிடைக்கின்றன.

உள்ளமைப்பிற்கும் புறஅமைப்பிற்கும் உள்ள தொடர்பை,


புறஅமைப்பு




உள்ளமைப்பு

என்று காட்டலாம். இதேபோல், ஓர் உள்ளமைப்பிற்கு ஒன்றுக்கு மேற்பட்ட புறஅமைப்புகளும் காணப்படலாம். இதை,


புறஅமைப்பு




உள்ளமைப்பு

என்று காட்டலாம்.

3) இராமன் பாம்பை அடித்தான், 4) பாம்பு இராமனால் அடிக்கப்பட்டது என்னும் இரு வாக்கியங்களுக்கும் பொருள் ஒன்றே. அதனால், உள்ளமைப்பும் ஒன்றேயாகும். உள்ளமைப்பின் மீது ஒருவித மாற்று விதிகள் செயற்பட்டுப் புறஅமைப்பு 3 -உம், மற்றொருவித மாற்று விதிகள் செயற்பட்டுப் புற அமைப்பு 4 -உம் கிடைக்கின்றன. இதைப் பின்வரும் படம் விளக்கும்.




வே. சா.அ.

**உள்ளாட்சி** நாட்டின் ஒவ்வொரு சிறிய நிலப்பகுதியிலும் நடைபெறும் ஆட்சியாகும். அந்த ஆட்சி செய்யும் நிறுவனமும் அந்த உள்ளூர்ப்பகுதி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு அல்லது நடுவண் அரசாங்கத்தால் அமர்த்தப்பட்டு, அப்பகுதி மக்களுக்கோ நடுவண் அரசாங்கத்துக்கோ பொறுப்பாக இருக்கும் ஆட்சியும் உள்ளாட்சி (Local-Administration) எனப்படும்.

**இங்கிலாந்தில் உள்ளாட்சி நிறுவனங்கள்:** இங்கிலாந்தில் இலண்டன் மாநகர் தவிர, பிற பகுதிகள் எல்லாம் பேரூர் மாவட்டங்கள் (County Boroughs) என்றும், மாவட்டங்கள் (Counties) என்றும் உள்ளாட்சிக்காகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. மாவட்டம் ஒவ்வொன்றும் மாநகர்கள் (Boroughs), நகரிய மாவட்டங்கள் (Urban Districts), ஊரக மாவட்டங்கள் (Rural Districts)என மூவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஊரக மாவட்டம் ஒவ்வொன்றும் வட்டங்கள் (Parishes) எனப்படும் சிறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு உள்ளாட்சிப் பகுதிக்கும் அவ்வப்பகுதி மக்களால் மூன்றாண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மன்றமும் (Council), அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு தலைவரும் (Chairman), மன்றத்தால் அமர்த்தப்பட்டு, அதனிடமிருந்து ஊதியம் பெறுகிற ஓர் எழுத்தரும்

(Clerk), பொருளாளரும், சுகாதார அலுவலரும் உள்ளனர். உறுப்பினர்களுக்கு ஊதியம் இல்லை.

**உள்ளாட்சி மன்றங்களின் வகைகள்:** (1) மாநகர்களே இங்கிலாந்தின்பழங்கால உள்ளாட்சிப் பிரிவுகளாகும். இவை ஒவ்வொன்றிலும் அரசருடைய பட்டயத்தின் மூலம் இணைக்கப்பட்ட நகரியமும் (Township) சேர்ந்துள்ளது. இதன் மன்றத் தலைவர் (Mayor) பதவி மதிப்புமிக்கது. (2) பேரூர் மாவட்டம் என்னும் உட்பிரிவை ஆளும் மன்றத்திற்கு நகராட்சி மன்றத்தின் அதிகாரங்களும், மாவட்ட மன்றங்களின் அதிகாரங்களும் இருக்கின்றன. (3) மாவட்ட மன்றங்கள் கல்வி, காவற் பணிகள், நகர அமைப்புத்திட்டம், வறியோர்க்கு உறையுளும் உணவும் அளித்தல், பெற்றோர் பராமரிப்பு அற்ற குழந்தைகளுக்குப் பாதுகாப்பளித்தல், வீட்டு வசதி, சுகாதார வசதி அளித்தல் முதலிய பணிகளைச் செய்யும் மாவட்டங்கள், வட்டங்கள், மாநகர்கள் முதலியவற்றைக் கண்காணித்தும் வருகின்றன. 4. நகரிய, ஊரக மாவட்ட மன்றங்கள் சுகாதாரச் சட்டங்களால் தோற்றுவிக்கப்பட்டவை. இவை சுகாதார வசதி, குடிநீர் வழங்குதல், சிறிய சாலைகள், பாலங்கள் பராமரிப்பு, வீட்டு வசதி முதலியவற்றைச் செய்கின்றன. 6) வட்ட மன்றங்களின் பணிகள் பொதுவழிகளைப் பேணுதல், பொதுச் சொத்துகளைப் பேணுதல், எல்லைகளை மாற்றி அமைத்தல், நூலகங்களைப் பராமரித்தல் முதலியவை ஆகும்.

உள்ளாட்சி மன்றங்களுக்கு நடைபெறும் தேர்தல்களில் வாக்கு அளிப்பதற்கு ஒருவர் ஆங்கிலேய (British)அல்லது வட அயர்லாந்துப்பகுதியின்குடியாளாகவும்,18 அல்லது அதற்கு மேற்பட்ட வயதினராகவும், சட்டத்தினால் தகுதி அற்றவரென ஒதுக்கப்படாதவராகவும், எந்தப் பகுதிக்குத் தேர்தல் நடைபெறுகிறதோ அப்பகுதி உள்ளாட்சி வாக்காளர் என்று, பதிவு செய்யப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். பிரபுக்கள் மன்ற உறுப்பினரும் வாக்காளராக இருத்தற்கு உரியர். வாக்காளராகப் பதிவு செய்யப்படுவதற்கு ஒருவர் அப்பகுதியில் வாழ்பவராகவோ அப்பகுதியில் ஆண்டுக்கு 10 பவுன் வாடகை மதிப்புள்ள வீட்டில் குடியிருப்பவராகவோ அந்த மதிப்பு உடைய நில உடைமையாளராகவோ இருத்தல் வேண்டும்.

இங்கிலாந்து உள்ளாட்சி மன்றங்களுக்குக் கொள்கை முடிவு செய்தலிலும், திரட்டிய வரிப் பொருளைச் செலவு செய்தலிலும் சில வரம்புகளுக்குட்பட்ட சுதந்திரத்தை நடுவண் அரசாங்கம் வழங்கியுள்ளது. ஆகையால், ஆங்கில உள்ளாட்சி அமைப்புமுறை அதிகாரப் பரவல் என்ற கோட்பாட்டை ஆதாரமாக உடையது.

பாராளுமன்றம் தன் சட்டங்களில் வகுக்கப்பட்ட கொள்கைகளைச் செயற்படுத்துமாறு தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி மன்றங்களுக்கு உடன்பாடு அளிக்கிறது. நடுவண் அரசாங்கத்தின் சுகாதார, உள்நாட்டு, கல்வி, போக்குவரத்து, வணிக அமைச்சகங்களும் வீட்டு வசதி-உள்ளாட்சி அமைச்சகமும் உள்ளாட்சி நிறுவனங்களின்மீது ஆய்வுகளும் (Inspections), விசாரணைகளும் நடத்தியும், ஆலோசனைச் சுற்றறிக்கைகள் விடுத்தும், அவற்றின் கணக்குகளைத் தணிக்கை செய்தும், சில திட்டங்களுக்கு நிதி உதவி செய்தும், அவற்றின் சில பணிகளை உள்நாட்டு நிறுவனங்களோடு ஒத்துழைத்து நிறைவேற்றியும் அவற்றைக் கட்டுப்படுத்துகின்றன. உள்ளாட்சியில் திறமான நிருவாகம் நடைபெறாவிடில், அவ்வுள்ளாட்சி நிறுவனத்தை நடுவண் அரசாங்கம் எச்சரிக்கை விடுத்து அல்லது ஆலோசனை கூறி ஒழுங்கு பெறச் செய்யுமே தவிர, அதைக் கலைக்கவோ தனி அதிகாரியை அமர்த்தவோ செய்யாது. அரசாங்க அதிகாரிகளைப் போலவே உள்ளாட்சி அரசாங்கங்களும் நாட்டின் சாதாரணச் சட்டங்களுக்குக் கட்டுப்பட்டு, நாட்டின் சாதாரண நீதிமன்றங்களுக்குப் பொறுப்புடையவை ஆகும். இவ்வகையாக உள்ளாட்சி அரசாங்க முறையிலும் இங்கிலாந்தில் சட்டத்தின் ஆட்சி அல்லது சட்டத்தின் தலைமை (Rule of Law) என்ற கொள்கை செயற்படுகிறது.

பிரான்சு, ஐக்கிய அமெரிக்க நாடு ஆகியவற்றில் உள்ளாட்சிப் பிரிவுகளுக்கு வெவ்வேறு பெயர்கள் இருக்கின்றன. எல்லா நாடுகளிலும் உள்ளாட்சி மன்றங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகளை உடையவை. எனவே, இக்கால உள்ளாட்சிமுறை குடியாட்சிக் கோட்பாட்டில் இயங்குகிறது என்று தெளிவாகத் தெரிகிறது.

**இந்தியாவில் உள்ளாட்சி முறை வளர்ந்த வரலாறு:** இந்திய அரசு அறிக்கை (1909) ஒன்று ஆங்கிலேயரே இந்தியாவில்உள்ளாட்சிச் சுய அரசாங்கத்தை மேற்கத்திய முறையில் அறிமுகப்படுத்தினர் என்று கூறுகிறது. ஆனால், இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சி ஏற்படுவதற்கு முன்னரே, பண்டைக் காலத்தில் உள்ளூர்ப் பிரிவுகளில் மக்களிடையே தன் முயற்சியையும் ஒற்றுமையையும் மரபுகளைப் பேணும் போக்கையும் வளர்க்கக்கூடிய உள்ளாட்சிச் சுய அரசாங்க முறை இருந்தது என்பது வரலாற்றில் அறியக் கிடக்கின்றது. மௌரியப் பேரரசில் சிற்றூர்களில் பஞ்சாயத்துகளும், தலைநகரமாகிய பாடலிபுத்திரத்தில் ஒரு நகராட்சி மன்றமும் இருந்தன என்று கௌடில்லியர் தம் அருத்த சாத்திரத்தில் குறிப்பிடுகிறார்.

தமிழ்நாட்டில் சங்ககாலத்திலும் சங்கத்துக்குப் பிற்பட்ட காலத்திலும் சிற்றூர்களில் பொதுப்பணிகளைச் செய்வதற்காக வாரியப் பெருமக்களைத் தேர்வு செய்தற்குக் குடவோலை முறையை அல்லது திருவுளச் சீட்டுமுறையை ஊர்மக்கள் கையாண்டனர் என்று அகநானூறு என்னும் சங்கநூலும், கி. பி. பத்தாம் நூற்றாண்டில் உத்திரமேரூரில் சோழ அரசர்களால் வரையப்பட்ட கல்வெட்டுகளும் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. ஊர் மன்றங்கள் நிலவரியை வாங்குவதற்கும் நிலங்களை அளப்பதற்கும் குளங்கள், தோட்டங்கள் முதலியவற்றைக் கண்காணிப்பதற்கும் நீதி முறையை அக்காலச் சட்டங்களுக்கும் வழக்கங்களுக்கும் ஏற்ப வழங்குவதற்கும் அதிகாரங்கள் பெற்றிருந்தன. இதனைக் காணும்போது, பண்டைத் தமிழ் நாட்டிலிருந்த ஊர் (அல்லது கிராம) சுய ஆட்சி அரசாங்கத்தின் சில பணிகளைச் செய்தலில் மக்களுக்குப் பயிற்சி அளிக்கும் களமாக இருந்ததென்பது தெரிகிறது. ஊர்மன்றத்தின் பல வாரியங்களுக்கு மக்கள் வயது, கல்வி, ஒழுக்கம், சொத்து முதலிய தகுதிகளின் அடிப்படையில் குடவோலை முறையின் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இம்மன்றங்கள் நெடுங்காலம் நல்ல முறையில் செயற்பட்டுப் பின்னர்ச் சிதைந்த நிலையில் விசயநகர் அரசர்களுடைய ஆட்சியில் காணப்பட்டன.

ஆங்கில ஆளுநராகச் சென்னையிலிருந்த சர் தாமசு மன்ரோ (கி. பி. 1820-1827) பண்டைய இந்திய ஊராட்சி முறையைப் புகழ்ந்து, அம்முறையை மீண்டும் நாட்டில் கொண்டு வருவது சாலச் சிறந்தது என்று தம் குறிப்பில் கூறியுள்ளார். இந்தியத் தலைமை ஆளுநரின் (Governor General) ஆலோசனைக் குழுவில் ஓர் உறுப்பினராக இருந்த சர் சார்லசு மெட்காபு சுய ஆட்சி பெற்றிருந்த பண்டைய இந்தியச் சிற்றூர் ஒவ்வொன்றையும், 'ஒரு சிறிய குடியரசு' என்று தம் குறிப்பில் சுட்டியுள்ளார். மன்ரோ பரிந்துரை செய்ததுபோல் சென்னை மாகாணத்தில் பழைய முறையில் பஞ்சாயத்துகளை (ஊராட்சிகளை) மீண்டும் நிறுவ இயலவில்லை; ஏனெனில் பழைய ஊர்மன்றங்களுக்கு இருந்த வரி வாங்கும் அதிகாரமும், ஊரில் ஒழுங்கையும் அமைதியையும் நிலைநாட்டும் காவல் அதிகாரமும், நீதி வழங்கும் அதிகாரமும் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் முறையே மாவட்ட ஆட்சியர், மாவட்டக் காவல் துறை அதிகாரி, மாவட்ட நீதிபதி முதலிய அதிகாரிகளிடம் குவிக்கப்பட்டுவிட்டன.

இந்தியாவில் வாணிகம் செய்தற்காக இங்கு வந்து பொருள் திரட்டி, நாடு பிடித்து, ஆட்சியை நிறுவிய ஆங்கிலக் கிழக்கிந்திய வாணிகக் கழகம் இந்தியாவில் தனதாட்சியிலிருந்த நிலத்தில் நெடுங் காலமாக உள்ளூர்ச் சுய ஆட்சி நிறுவனம் எதையும் அமைக்கவில்லை. அவ்வாணிகக் கழகம் நடுவில் மிகவும் அதிகாரக் குவிப்பைக் கொண்ட ஓர் ஆட்சிமுறையை இந்தியாவில் நிறுவிற்று. அதில் பல துறைகள் இருந்தன. ஒவ்வொரு துறையின் தலைமை அதிகாரியும் தன் கட்டுப்பாட்டிலிருந்த நன்கு பயிற்சி பெற்ற அலுவலரின் உதவியைக் கொண்டு, உள்ளாட்சிப் பிரிவுகளில் தங்களுக்குரிய பணிகளைச் செய்தனர். எனவே, இப்பணிகளைச் செய்தலில் அலுவலர்கள் துறைத்தலைவருக்குப் பொறுப்புடனிருந்தனர். அவர்கள் உள்ளாட்சிப் பிரிவு மக்களுக்குப் பொறுப்பாக இல்லை. நடுவண் அரசாங்கத்திலும் இந்தியச் சார்பாளர்கள் கொள்கை வகுப்பதில் பங்கெடுக்கக் கூடியவாறு மன்றம் எதுவும் இல்லை. எனவே 'அதிகாரிகள் ஆட்சி', அதாவது அதிகாரிகளே கொள்கையை வகுத்து, அதை நிறைவேற்றிய ஆட்சி நடைபெற்றது.

சென்னைக்கு ஒரு மாநகராட்சி மன்றம் கி.பி 1689-இல் நிறுவப்பட்டது. இந்தியச்சட்டம் ஒன்றினால் (கி.பி. 1850) பட்டணங்களில் சாலைப்பராமரிப்புக்கும் துப்புரவுக்கும் பட்டண ஆணையாளர்களை அமர்த்துமாறு இந்திய அரசாங்கம் மாகாண அரசாங்கங்களைக் கேட்டுக் கொண்டது. இந்த ஆணையர்கள் அரசாங்க விதிகளின்படி பட்டணங்களில் வரி விதிக்கவும், சாலை அமைக்கவும், துப்புரவுப் பணிகளை நிறைவேற்றவும் அதிகாரங்களைப் பெற்றிருந்தனர். தமிழ்நாட்டில் கி.பி. 1866-ஐ ஒட்டித் திருநெல்வேலி, மதுரை, திருச்சிராப்பள்ளி முதலிய பட்டணங்களில் நகராட்சி மன்றங்கள் நிறுவப்பட்டன. அவை கல்வி, சுகாதாரம், சாலைப் பராமரிப்பு முதலிய பணிகளை நிறைவேற்றும் அதிகாரம் பெற்றிருந்தன. உள்ளாட்சி நிதி (Local Fund) ஒன்று கி.பி 1871-ஆம் ஆண்டில் சென்னை அரசாங்கத்தால் தோற்றுவிக்கப்பட்டது. கல்வி, சாலை அமைப்பு சுகாதாரப் பணி ஆகியவற்றை நிருவாகம் செய்யும் பொருட்டு ஊரகப் பகுதிகளில் உள்ளாட்சி நிதிவட்டங்கள் (Local Fund Circles) ஏற்படுத்தப்பட்டு, வட்டக் கழகங்களும் நிறுவப்பட்டன.

இந்திய அரசப் பேராளராக இருந்த இரிப்பன் பிரபுவின் (கி.பி. 1880-1884) ஆட்சியில் கி.பி. 1882-ஆம் ஆண்டில் மாகாணங்களில் உள்ளாட்சி நிறுவனங்களை அமைக்குமாறு ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன்படி, மாகாண அரசாங்கங்கள் தத்தம் உட்பிரிவுகளில் உள்ளாட்சி நிறுவனங்களை ஏற்படுத்தின. சென்னை மாகாணத்தில் 20,000 உம் அதற்கு மேலும் மக்கள் தொகை உள்ள ஒவ்வொரு பட்டணத்

திலும் ஒரு நகராட்சி மன்றத்தை நிறுவுவதற்கு வழி செய்து, சென்னை மாவட்ட நகராட்சிகள் சட்டமும்; ஊரக உள்ளாட்சிப் பகுதிகளில் மாவட்டக்கழகம், (District Board), வட்டக் கழகம் (Taluk Board), ஒன்றியம் (Union), ஊராட்சி (Panchayat) முதலிய நிறுவனங்களை நிறுவுவதற்கு வழி செய்து, சென்னை உள்ளாட்சிக் கழகங்கள் சட்டமும் கி.பி. 1884-ஆம் ஆண்டில் இயற்றப்பட்டன.

ஒவ்வொரு நகராட்சியிலும் மாவட்ட ஆட்சியர் தலைவராகவும், மன்றத்தலைவர் நிருவாக அதிகாரியாகவும் இருந்தனர். நிருவாக அதிகாரி மன்றத் தீர்மானங்களை நிறைவேற்றவும், நகராட்சிப் பணியாளர்களை அமர்த்தவும் நீக்கவும் அதிகாரம் பெற்றிருந்தார். மன்ற உறுப்பினர்களுள் நான்கில் ஒரு பங்கினர் கல்வித்துறை, மருத்துவத்துறை, பொதுப்பணித்துறை ஆகியவற்றின் அதிகாரிகளால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மன்ற உறுப்பினர் பதவிக்காலம் மூன்றாண்டாகும். மன்ற உறுப்பினர்களாகவும் வாக்காளர்களாகவும் தேர்தல்களில் கலந்து கொள்ளுதற்கு வயது, சொத்து ஆகிய தகுதிகள் விதிக்கப்பட்டன.

நகராட்சிக்குத் தேவையான வருமான ஆதாரங்கள் சொத்து மற்றும், தொழில் வரிப்பொருள்கள், வண்டிகள் மற்றும் விலங்குகள் மீதான தீர்வைகள், நகராட்சிச் சந்தைகள் மற்றும் வண்டிப்பேட்டைகளில் வாங்கப்படும் கட்டணங்கள், மாகாண நிதியிலிருந்து அளிக்கப்படும் மானிய உதவிகள் முதலியனவாம். இந்த நிதிகள் சாலைகள் அமைத்தல், மருத்துவமனைகள் நடத்துதல், துப்புரவுப்பணி, பள்ளிக்கூடங்கள் நடத்துதல், நகராட்சி அலுவலருக்கு ஊதியம் முதலியவற்றுக்காகச் செலவழிக்கப்படுதல் வேண்டும்.

ஆண்டுதோறும் நகரர்ட்சி மன்றம் மாகாண அரசாங்கத்துக்கு ஆண்டு ஆட்சி அறிக்கையையும், தான் நிறைவேற்றிய பணி விவரங்களையும், ஆண்டு வரவு-செலவுக் கணக்கையும் அனுப்புதல் வேண்டும். அவற்றின் கணக்குகளைத் தணிக்கை செய்யவும், கடமைகளைப் புறக்கணித்த மன்றத் தலைவரைப் பதவி நீக்கம் செய்யவும்,அதன் தீர்மானத்தைச் செயற்படுத்துமாறு மாவட்ட ஆட்சியருக்கு அதிகாரம் வழங்கவும், மாகாண அரசாங்கத்துக்கு அதிகாரம் உண்டு. மாவட்டக் கழகங்கள், வட்டக் கழகங்கள், ஒன்றியம், ஊராட்சி ஆகியவற்றின் அமைப்புகளும், அதிகாரங்களும், பணிகளும், வருமான ஆதாரங்களும், செலவினங்களும், அரசாங்கத்தோடு அவற்றுக்கு உள்ள தொடர்புகளும் ஏறக்குறைய நகராட்சி மன்றங்களுக்கு இருப்பதைப் போலவே இருந்தன.

இந்திய அரசாங்கச் சட்டத்தின்படி (1919-ஆம் ஆண்டு) மகாணங்களில் 1920-முதல் 1937 வரை இரட்டையாட்சி நடைபெற்றது. அப்போது உள்ளாட்சிச் சுய அரசாங்கம் (Local Self-Government) என்ற நிருவாகத்துறை கல்வி, சுகாதாரம், பொதுப் பணிமுதலிய துறைகளைப்போலச் சட்டமன்றத்துக்குப் பொறுப்புடைய மாகாண நிருவாகக் குழுவினருக்கு மாற்றப்பட்டது. இந்தச் சட்டத்தின் ஆதாரத்தில் 1920-ஆம் ஆண்டில் சென்னை மாவட்ட நகராட்சிகள் சட்டமும், சென்னை மாவட்டக் கழகங்கள் சட்டமும் செய்யப்பட்டன. இவற்றிலும் கி.பி. 1884-ஆம் ஆண்டுச் சட்டங்களைப் போலவே உள்ளாட்சி முறை பற்றிய விவரங்கள் கூறப்பட்டிருந்தன. மேலும், 1934-ஆம் ஆண்டில் நகராட்சி மன்றத் தலைவருக்குள்ள நிருவாக அதிகாரம் நீக்கப்பட்டு, மாகாண அரசாங்கத்தால்அமர்த்தப்பட்டுக்கட்டுப்படுத்தப்பட்ட முழுநேர நிருவாக அதிகாரியாக ஆணையாளர் (Commissioner) அமர்த்தப்பட்டார்.

இந்திய அரசாங்கச் சட்டத்தின்படி(1935)மாகாணச் சுயஆட்சி (Provincial Autonomy) கொண்டுவரப் பட்டதும்மாகாண நிருவாகத் துறைகள் யாவும் மக்களுக்குப் பொறுப்புள்ள அமைச்சர்களிடம் விடப்பட்டன. இந்தியா 1947-ஆம் ஆண்டில் சுதந்திரம் பெற்றபோது ஆங்கிலேயரால் நிறுவப்பெற்ற உள்ளாட்சி நிறுவனங்கள் செயலாற்றி வந்தன. முதலாம் ஐந்தாண்டுத் திட்டம் 1951-முதல் 1956 வரை நடைமுறையிலிருந்தபோது அது உள்ளாட்சி அரசாங்கமும் மாநில, தேசிய அரசாங்கங்களைப் போலவே குடியாட்சி இயல்போடு அமைக்கப்படுதல்வேண்டுமென்று கூறிற்று. நாட்டின் 55 வளர்ச்சி வட்டாரங்களில் 1952-ஆம் ஆண்டில் சமுதாய வளர்ச்சித் திட்டம் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டது. இத்திட்டத்தில் வேளாண்மை, சிறிய நீர்ப்பாசன வசதி, கால்நடை வளர்ச்சி, சாலைப்பராமரிப்பு, கல்வி சுகாதாரம், வேலைவாய்ப்பு, வீட்டு வசதி முதலிய பணிகள் இடம் பெற்றன.

சமுதாய வளர்ச்சித் திட்டப்பணிகளை (1952) நிறைவேற்றுதற்குப் பழைய உள்ளாட்சி மன்றங்களால் இயலாதென்றும், குடியாட்சி இயல்புடைய அதிகாரப் பரவல் என்ற கோட்பாட்டின்படி சமுதாய வளர்ச்சித் திட்டத்தில் இருந்த வளர்ச்சி வட்டாரத்தை அடித்தளமாகக் கொண்டு, ஊராட்சி ஒன்றியம் (Panchayat Union) என்னும் புதிய உள்ளாட்சி நிறுவனம் நிறுவப்படுதல் வேண்டுமென்றும், சிற்றூரில் ஊராட்சி நிறுவப்பட்டு, அது ஊர் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்றும், மாவட்ட அளவில் பழைய மாவட்டக்

கழகத்துக்குப் பதிலாக, மாவட்ட வளர்ச்சி மன்றம் நிறுவப்படுதல் வேண்டுமென்றும், மூன்று நிறுவனங்களுக்குமிடையே உறுப்பு வகையாக இணைப்பு இருக்கும் பொருட்டு (Organic Link) ஊராட்சித் தலைவர் ஒன்றியத்திலும் ஒன்றியத் தலைவர் வளர்ச்சி மன்றத்திலும் உறுப்பினராக இருத்தல் வேண்டுமென்றும், இப் புதியவகை உள்ளாட்சி மன்றங்கள் வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்றுதலில் ஊர் மக்களுடைய ஒத்துழைப்பைப் பெறுதல் வேண்டுமென்றும் கூறி, 1957-இல் பல்வந்தரே மேத்தா ஆய்வுக்குழுவின் அறிக்கை பல பரிந்துரைகளைச் செய்தது. இந்திய அரசாங்கம் அவற்றை ஏற்றுக் கொண்டு மாநிலங்களுக்கு ஆணைகளை விடுக்க, பெரும்பாலான மாநிலங்கள் மேற்குறிப்பிடப்பட்ட பரிந்துரைகளை ஒருசில மாறுதல்களுடன் செயற்படுத்துதற்கு வேண்டிய சட்டங்களைச் செய்து, மூன்றடுக்கு உள்ளாட்சி நிறுவனங்களை ஏற்படுத்தியுள்ளன.

**தமிழ்நாட்டில் உள்ளாட்சி அரசாங்க முறை:** தமிழ் நாட்டில், ஊராட்சிச் சட்டத்தின் (1958) மூலமாகவும், தமிழ்நாடு மாவட்ட வளர்ச்சி மன்றச் சட்டத்தின் (1958) மூலமாகவும், மூன்றடுக்கு உள்ளாட்சி மன்ற முறை கொண்டுவரப்பட்டது.

1) **ஊராட்சி:** ஊராட்சிகள் சிற்றூராட்சிகள் (Village Panchayats), பேரூராட்சிகள் (Town Panchayats) என இரண்டாக வகைப்படுத்தப்பட்டன. இவற்றின் உறுப்பினர் எண்ணிக்கை 5 முதல் 15 வரையில் இருக்கும். உறுப்பினர்கள் ஊர் மக்களால் நேரடியாகத் தேர்வு செய்யப்படுவர். அவர்களின் பதவிக்காலம் 5 ஆண்டுகள். சிற்றூராட்சியில் மன்றத் தலைவரே நிருவாக அதிகாரி. ஆனால், பேரூராட்சியில் நிருவாக அதிகாரி (Executive Officer) ஒருவர் நியமிக்கப்படுகிறார். 21 வயது நிரம்பியவர் வாக்களிக்கவும் தேர்தலில் போட்டியிடவும் தகுதி பெற்றனர். ஊராட்சித் தலைவர்கள் முன்னர் மன்ற உறுப்பினர்களாலும், 1969 முதல் வாக்காளர்களாலும் தேர்ந்தெடுக்கப்படுவோராயினர். இங்கு 18 வயதுநிரம்பியோர் வாக்களிக்கும் சட்டம் 1986 முதல் செயற்படுத்தப்படுகிறது.

ஊராட்சிச் சாலை அமைப்பு, குடியிருப்பு இடங்களில் விளக்கு வசதி, கழிகால்கள் அமைப்பு, தெருக்களைத் துப்பரவு செய்தல், பொதுக் கழிப்பிடங்கள் அமைத்தலும் துப்புரவு செய்தலும், புதைகுழிகளும் சுடுகாடுகளும் அமைத்தல், குடிநீர் வசதிக்காகக் கிணறுகளை அமைத்துப் பராமரித்தல் ஆகியன ஊராட்சிகளின் பணிகளாகும்.

வீட்டுவரி, தொழில்வரி, நிலத்தீர்வையில் ஒரு பங்கு, அரசாங்கத்தின் இணை மானியங்கள் முதலிய வழிகளில் ஊராட்சிகளுக்கு வருமானம் கிடைக்கிறது. நிருவாக அதிகாரி ஆண்டு ஆட்சி அறிக்கையும் வரவு, செலவுத் திட்டத்தையும் வரைந்து ஊராட்சி ஒன்றியத்துக்கு அனுப்புதல் வேண்டும்.

2) **ஊராட்சி ஒன்றியம்:** ஒன்றியத்திலுள்ள அனைத்து ஊராட்சிகளின் தலைவர்கள், பெண்கள் மற்றும் பழங்குடி வகுப்பினரின் சார்பாளர்கள், ஒன்றியத்திலிருந்து மாநில, தேசிய சட்டமன்றங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் ஆகியோர் இதன் உறுப்பினர்களாவர். இதன் தலைவர் முன்னர் ஊராட்சித்தலைவர்களாலும் 1986 முதல் நேரடியாக மக்களாலும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர், அரசாங்கத்தால் அமர்த்தப்பட்ட நிருவாக அதிகாரி அல்லது ஆணையர், மருத்துவம், கல்வி, பொதுப்பணி, வேளாண்மை, கால்நடை, கூட்டுறவு ஆகிய துறைகளின் அதிகாரிகள் ஆகியோர் ஒன்றியத்தின் அலுவலர்கள் ஆவர்.

ஊராட்சி ஒன்றியச் சாலைகள் பராமரிப்பு, மருத்துவ மனைகள் பராமரிப்பு, தாய் சேய் நல விடுதிகள் தொடக்கப்பள்ளிகள், நோய்தடுப்பு நடவடிக்கைகள், சந்தைகளின் நிருவாகம், கால்நடை நிருவாகம், கட்டிடங்களை ஒழுங்குபடுத்துதல், வறியோர் விடுதிகள், பிறப்பு இறப்புப் புள்ளி விவரங்கள், சத்திரங்கள், வேளாண்மை வளர்ச்சி, குடிசைத் தொழில்கள் வளர்ச்சி ஆகியன ஊராட்சி ஒன்றியங்களின் பணிகளாகும். மாவட்ட ஆட்சியரும் மாநில அரசாங்கமும் ஒன்றியச் செயல் முறைகளைக் கண்காணிக்கின்றனர்.

3) **மாவட்ட வளர்ச்சி மன்றம்:** மாவட்ட ஆட்சியரே இதன் தலைவர். மாவட்டத்திலிருந்து மாநில, தேசிய மன்றங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், பெண்கள் மற்றும் பழங்குடியினரின் சார்பாளர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், மாவட்டக் கூட்டுறவு வங்கித் தலைவர்கள், நகராட்சி மன்றத் தலைவர்கள் ஆகியோர் இதன் உறுப்பினர்கள் ஆவர். உறுப்பினர்கள் தங்களிடையே இருந்து சிலரைத் தேர்ந்தெடுத்து நிலைக்குழுக்களை அமர்த்துகின்றனர். அக்குழுக்கள் உணவு, வேளாண்மை, தொழில், தொழிலாளர் நலன், பொதுப்பணி, கல்வி, சுகாதாரம் முதலிய பணிகளைக் கவனிக்கின்றன.

பெரும்பாலும் கீழடுக்கு நிறுவனங்களைக் கண்காணித்தல், அரசாங்கத்துக்கு அறிக்கைகளும் ஆலோ

சனைகளும் அளித்தல், ஊராட்சி, ஊராட்சி ஒன்றியச் சந்தைகள், சாலைகளை வகைப்படுத்தி அவற்றுக்கு அளிக்கப்படவேண்டிய நிதிவருமான விகிதங்களை வகுத்தல், புள்ளிவிவரங்கள் சேகரித்தல் போல்வன இதன் பணிகளாகும்.

உள்ளாட்சி நிறுவனங்களின் அமைப்பு, அதிகாரம், பணி, தேர்வுமுறை, கணக்கு வைப்புமுறை, ஆட்சி அறிக்கை வரையும் முறை முதலியவற்றை வகுத்துச் சட்டங்களும் விதிகளும் செய்தல்; உள்ளாட்சி நிறுவனங்களின் தீர்மானங்களை மறுபரிசீலனை செய்து, அவற்றை ஏற்கவோ மறுக்கவோ செய்தல்; அவை செய்யும் சில நியமனங்களுக்கு ஒப்புதல் வழங்குதல்; அவற்றுக்குப் பொறியியல், மருத்துவம் போன்றவற்றில் கட்டாயமாகப் பின்பற்றப்படவேண்டிய ஆலோசனை வழங்குதல்; ஆய்வுகள் நடத்துதல்; ஆண்டு ஆட்சி அறிக்கை, வரவு செலவுத்திட்டம், கணக்கு முதலியவை பெறுதல்; கணக்குத் தணிக்கை செய்தல்; உள்ளாட்சி நிறைவேற்றத் தவறிய முக்கிய பணியை மாவட்ட ஆட்சியரைக் கொண்டு நிறைவேற்றச் செய்து, அதற்கான செலவுகளை உள்ளாட்சி நிதியிலிருந்து எடுத்துக்கொள்ளுதல், மானிய உதவி வழங்குதல்; தொடர்ந்து பணி செய்தலைப் புறக்கணிக்கும் உள்ளாட்சியைக் கலைக்கவோ மேலும் அதைச் செயற்படாமல் நிறுத்தி, ஒரு தனி அதிகாரியை அமர்த்தவோ செய்தல். இப்போது உள்ளாட்சி நிறுவனமானது ஆட்சிப்பணியோடு வளர்ச்சிப் பணிகளையும் நிறைவேற்றுமாறு மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. பா.சு.

துணை நூல்:

**Venkatarangiah, M. and Pattabhiram**, Local Government in India, Balwantray Mehta Report, Madras Village Panchayats Act, 1958, Tamil Nadu District Development Councils Act, 1958.

**உள்ளாட்சி நிதி**: உள்ளாட்சி அரசமைப்பைப் பற்றியகருத்துகள் பல நூற்றாண்டுகளாகப்பேசப்பட்டு வந்தாலும், கி.பி. 19-ஆம் நூற்றாண்டில்தான் அவை சட்ட வடிவம் பெற்றன. இவ்வமைப்பு முறை முதன் முதலில் கி.பி. 1835 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் சட்டப்படி செயல்முறைக்கு வந்தது. தொழிற்புரட்சிக்குப் பின்னர் நகர அமைப்புகள் விரிவடையத் தொடங்கியமையால் புதிய நகரமைப்புகளில் குடியேறிய மக்களுக்குத் தேவையான குடியிருப்பு வசதி, குடிநீர் வசதி, நலவழிச் சூழ்நிலை ஆகிய அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யவேண்டிய கட்டாயம் அரசுக்கு ஏற்பட்டு, உள்ளாட்சி அமைப்பு மேன் மேலும் உறுதிபெற்றது. உள்ளாட்சி முறை அமெரிக்க நாட்டிலும் பரவி வலுப்பெறத் தொடங்கியது. ஆங்கிலேய வல்லரசு கி.பி. 19-ஆம் நூற்றாண்டிலும் 20-ஆம் நூற்றாண்டிலும் பல ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளைத் தன் ஆளுகையின்கீழ் உட்படுத்தியதால் இவ்வமைப்பு முறையின் செல்வாக்கு இந்நாடுகளிலும் பரவியது. இந்தியாவில் உறுதியான உள்ளாட்சி அமைப்புக்கான செயல் வடிவம் கி.பி. 1880-ஆம் ஆண்டில் இரிப்பன் என்பவரால் கொண்டுவரப்பட்டது. இதனை இரிப்பன் சீர்திருத்தம்(Ripon Reforms of 1880) என்பர். பின்னர், மாண்டேகு செம்சுபோர்டு (Montague Chelmsford) சீர்திருத்த முறையால் 1920-ஆம் ஆண்டு மேலும் உள்ளாட்சி அமைப்பு முறை புத்துயிர் பெற்றது.

உள்ளாட்சி அமைப்பு முறையின் சில அரசியல் அடிப்படை எண்ணங்கள் பண்டைய தமிழகத்தில் இருந்திருக்கலாம் என்பதற்குச் சான்றுகள் உள்ளன. அகநானூற்றுச் செய்யுள் (77) குட ஓலை அமைப்பின் மூலம் வாக்களிக்கும் முறை பற்றித் தெரிவிக்கிறது. அகநானூற்றுச் செய்யுளும் (77) பிற்காலச் சோழர் காலத்தில் இயங்கிவந்த ஐம்பெருங்குழு, எண்பேராயம் போன்ற அமைப்புகளும் தமிழகத்தில் உள்ளாட்சி அரசு அமைப்பு முறை இருந்தது என்பதைப் பறைசாற்றுகின்றன. ஆனால், இதற்கு முழு அளவிலான ஆதாரங்கள் கிடைக்கவில்லை.

ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில் இவ்வமைப்புச் சட்டவடிவில் நாடு முழுமைக்கும் செயற்படத் தொடங்கியது. உள்ளாட்சி அமைப்பு முறை தோன்றிய காலத்திலிருந்து உள்ளாட்சி நிதி பல்வேறு இடையூறுகளை மேற்கொண்டு வளர்ச்சி பெற்றது. மக்கள்தொகை வளர்ச்சி, நகரப் பெருக்கம், தொழில்மயமாதல் போன்ற காரணங்களால் காலப்போக்கில் உள்ளாட்சி நிதி அமைப்பு மேலும் சிக்கலுக்குரியதாயிற்று. இந்திய மைய அரசு உள்ளாட்சியின் பல்வேறு அதிகாரங்களில் அடிக்கடி குறுக்கிட்டதாலும், கண்காணிப்பைச் செலுத்தியதாலும் உள்ளாட்சி அமைப்பும் நிதிமுறையும் தன்னிச்சையாகச் செயற்பட முடியவில்லை.

உள்ளாட்சி அமைப்பு முறையில் அடங்கிய நகராட்சி அமைப்பு, சென்னையில்தான் முதன் முதலாக கி.பி. 1687-இல் நிறுவப்பட்டது. இந்த நகராட்சி முறை ஆங்கிலேய முறையின் அடிப்படையில் அமைந்திருந்தது. நகராட்சி வேலைகளும் பணிகளும் வணிகர்களின் வரிப்பணத்தில் தொடங்கின. நகராட்சிக் குழுக்கள் (Municipal Councils) கி.பி. 1726-இல் பம்பாயிலும் கல்கத்தாவிலும் உருவாக்கப்பட்டன. கல்கத்தா.

பம்பாய், சென்னை மாநகராட்சிகளுடன் பலபேரூர்களிலும் கி.பி. 1850-இல் உள்ளாட்சி அமைப்பு முறை உருவாகியது. இந்தியாவில் கி.பி. 1870-இல்543 பேரூராட்சிகள் செயற்பட்டன. ஊராட்சி அமைப்புகளுக்குப் பல சட்டங்கள் இயற்றப்பட்டாலும், அவற்றை முழு அளவில் செயற்பட ஆங்கிலேய அரசு அனுமதிக்கவில்லை.

இந்திய ஊர்ப்புறங்களில் உள்ளாட்சி முறையின் மற்றோர் அமைப்பான ஊரகக்குழு (பஞ்சாயத்து முறை) பல நூற்றாண்டுகளாக இயங்கி வந்துள்ளது. இம்முறை முகலாயர் ஆட்சிக் காலத்திலும் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலும் சிதைவுற்றது. இந்தியாவில் உள்ள மாநிலங்கள் கி.பி. 1850 க்குப் பிறகுதான் உள்ளாட்சி அமைப்புகளை ஊக்குவிக்கத் தொடங்கின. பல நகராட்சிகளுக்கு வரிவிதிக்கும் அதிகாரங்கள் கி.பி. 1850-ஆம் ஆண்டின் சட்டப்படி அளிக்கப்பட்டன. ஆளுநர் இலாரன்சு (Lawrence)எடுத்த முடிவின் விளைவாக, கி.பி. 1864-இல் பல்வேறு நிதி அதிகாரங்கள் நகராட்சிகளுக்கு அளிக்கப்பட்டன. இரிப்பன் கி.பி. 1882-இல் பல சலுகைகளை உள்ளாட்சி அரசு அமைப்புகளுக்கு வழங்கினார். 'அரசியல் அறிவு அளிப்பது உள்ளாட்சி அரசமைப்புகளின் அடிப்படை' என்ற தத்துவத்தை இரிப்பன் வலியுறுத்தினார். அவர் இங்கிலாந்துக் கிறித்தவச் சமதருமக் கோட்பாட்டினர் பலருடன் தொடர்பு வைத்திருந்ததாலும், முற்போக்குச் சிந்தனை உடையவராக இருந்ததினாலும்,உள்ளாட்சி அமைப்பு முறையை இந்தியா முழுவதற்கும் கொண்டு வரப் பல முயற்சிகளை மேற்கொண்டார். ஊர்ப்புறங்களில் ஊரக வாரியங்கள் (Rural Boards) அமைக்கும் திட்டங்களையும் அவர் முன்மொழிந்தார்.

இரிப்பனுக்குப் பிறகு பொறுப்பேற்ற ஆளுநர்களும் ஆங்கிலேயே உயர் அதிகாரிகளும் உள்ளாட்சி அமைப்பு முறை வளர்ச்சியில் அக்கறை காட்டவில்லை. அதிகாரங்களைப் பரவலாக்கும் உயர்மட்டக் குழு (Royal Commission on Decentralisation 1909) உள்ளாட்சி அமைப்புக்குப்பல நிதி ஆதாரங்களைத் தரவேண்டுமென்று 1909-இல் பரிந்துரைகளைச் செய்தது. இருப்பினும், உள்ளாட்சி நிதி அமைப்புப் பல்வேறு சிக்கல்களுக்கிடையில் செயற்பட்டது. மாண்டேகு செம்சுபோர்டு சீர்திருத்தத்தில் (1920) உள்ளாட்சி அமைப்பு முறைக்கு ஆதரவாகப் பல கருத்துகள் தெரிவிக்கப்பட்ட போதிலும், காங்கிரசுப் பேரியக்கத் தலைவர்கள் அவற்றை ஆங்கிலேய அரசு இந்திய விடுதலையைத் தள்ளி வைப்பதற்குக் கையாளும் சூழ்ச்சி என்று கருதினர்.

இந்திய விடுதலைக்குப் பிறகு உள்ளாட்சி நிதி அமைப்பு முறை பல மாறுதல்களைப் பெற்றது. உள்ளாட்சி நிதி விசாரணைக் குழு கி.பி. 1551-இல் பல்வேறு பரிந்துரைகளை மைய அரசிடம் கொடுத்தது; உள்ளாட்சி அமைப்புகள் மக்களுக்குத் தேவையான பல அடிப்படைத்தேவைகளை நிறைவு செய்யும் நோக்கத்தைக்கொண்டிருப்பதால், நிதிப்பற்றாக்குறையும்பெருகிக் கொண்டே இருக்கிறது என்பதைக் குறிப்பிட்டது; உள்ளாட்சி நிதியமைப்பை எல்லா மாநிலங்களும் உறுதிப்படுத்த உதவி செய்ய வேண்டும் என்றும் பரிந்துரைத்தது; மைய, மாநில அரசுகள் குறிப்பிட்ட சில வரிகள் மூலம் பெறுகின்ற வருவாயை முழுவதுமாக உள்ளாட்சிக்கு ஒதுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டன; இரயில், கப்பல், விமானம் போன்ற போக்குவரத்துகளின் மூலம் கிடைக்கும் பொருள்களின் மீதான நுழைவு வரியை (Octroi) மைய அரசு முழுவதுமாக உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும் எனப் பரிந்துரைத்தது.

அதுபோன்றே மாநில அரசுகள் கீழ்க்காணும் பட்டியலில் அடங்கிய இனங்களின் மூலம் பெறும் வரியை உள்ளாட்சி நிதிக்கு ஒதுக்கப் பரிந்துரைத்தன. அந்த இனங்கள்: 49. நிலம் மற்றும் கட்டிட வரிகள், 50. மூலப் பொருள்கள் உரிமை வரிகள், 52. நாடாளுமன்றம் அப்போது விதிக்கும் கட்டுப்பாடுகளுக்குட்பட்டு உள்ளாட்சிப் பகுதிக்குள் நுகர்பொருள்களைப் பயன்படுத்துவதனாலும் விற்கப்படுவதனாலும் விதிக்கப்படும் வரிகள், 53. மின்நுகர்வு வரிகள், 55. விளம்பர வரிகள் (செய்தி ஏடுகளின் விளம்பர வரிகளைத் தவிர்த்து), 56. சாலைவழிச்செல்லும் பயணிகள், பொருள்கள் மீதுள்ள வரிகள், உள்நாட்டு நீர்ப் போக்குவரத்து வரிகள், 57. ஊர்தி வரிகள், 58. மிருகங்கள், படகுகள் மீதுள்ளவரிகள், 59. சுங்க வரி, 60. தொழில், வணிகம், பணிகள், வேலைவாய்ப்புப் போன்றவற்றின் வரிகள், 61. கல்வி வரி, 62. கேளிக்கை, பொழுதுபோக்கு வரிகள் ஆகியனவாகும்.

வரிவிதிப்பு விசாரணைக் குழுவின் அறிக்கையும் (Report of the Taxation Enquiry Commission) 1953-54-ஆம் ஆண்டுகளில் உள்ளாட்சி அமைப்பின் நிதிப் பெருக்கத்திற்குப் பரிந்துரைகளை வழங்கியது. இந்தியாவின் பொருளாதார முன்னேற்றமும் தேசிய திட்டங்களின் நடைமுறை வெற்றியும் உள்ளாட்சி அமைப்புகளோடு இணைந்துள்ளன என்றும், எனவே நகர, ஊரக உள்ளாட்சி தன் நிதி வளத்தைப் பெருக்க வேண்டும் என்றும் இவ்வறிக்கை வலியுறுத்தியது. மேலும், இவ்வறிக்கை கட்டிடங்கள் மற்றும் நிலங்கள் மீதுள்ள வரிகள், பொருள்கள் மீதுள்ள நுழைவு வரிகள், மிருகங்கள் மற்றும் படகுகள் மீதான வரிகள்,

வணிகம் மற்றும் தொழில் மீதான வரிகள், விளம்பர வரிகள் (செய்தி ஏடுகளின் விளம்பர வரிகள் நீங்கலாக) போன்ற வரிகளையும் திரைப்படக் காட்சி வரி, சொத்து மாற்றத்தின் மீதான வரிகளையும் உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கொடுக்க வேண்டுமெனக் கூறியது. இவ்வாறு பல குழுக்கள் உள்ளாட்சி அமைப்பின் நிதிப் பெருக்கத்தினை வலியுறுத்தினாலும் மைய, மாநில அரசுகள் முழுமையான அளவில் இவற்றின் பரிந்துரைகளைச் செயற்படுத்தவில்லை.

முதல் ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் (1951-56) உள்ளாட்சி அமைப்பிற்கெனத் தனி நிதி ஒதுக்கவில்லை. இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் (1956-61) முதன் முயற்சியாகக் குடிநீர் வழங்குவதற்கும், குடிசைகளை மாற்றும் திட்டத்திற்கும் கொடைத் தொகை (Grants in Aid) ஒதுக்கப்பட்டது. பல்வந்தரே மேத்தா என்ற மைய அமைச்சரின் தலைமையில் 1957-ஆம் ஆண்டு சமுதாய வளர்ச்சி, தேசிய விரிவாக்கப் பணிகளின் ஆய்வுக்குழு (Study Team on Community Projects and National Extension Service) அமைக்கப்பட்டது. இக்குழு இந்தியாவின் திட்டங்கள் வெற்றிபெற வேண்டுமெனில் ஊர்ப்புறங்களிலிருந்து ஆக்கப்பணிகள் தொடங்கப்பட வேண்டுமென்று வலியுறுத்தியது. தேசிய வளர்ச்சிக் குழு (National Development Council) 1959-ஆம் ஆண்டில் மேத்தாக் குழுவின்பரிந்துரைகளை ஏற்று, ஊராட்சி இயக்கம் தொடங்குவதற்கு அனுமதி அளித்தது.

இராசசுத்தான் மாநிலத்தில் 1959-ஆம் ஆண்டு விடுதலை பெற்ற இந்தியாவின் முதல் ஊராட்சி அரசு அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் பின்னர், பிற மாநிலங்கள் இம்முறையைப் பின்பற்றின. ஆளுநர் கே. சந்தானம் தலைமையில் 1962-ஆம் ஆண்டு ஊராட்சி நிதிப் பெருக்கத்திற்கான ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டது. அக்குழு வீட்டுவரி, தொழில் வரி, வாகன வரி போன்ற வரிகளைக் கட்டாயமாக ஊராட்சி அமைப்புகள் விதிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டது. நிலவரி, முத்திரைவரி, கேளிக்கை வரி ஆகிய வரிகளின் ஒரு பங்கினை மாநில அரசுகள் ஊராட்சிகளுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டுமென இக் குழு வலியுறுத்தியது. முன்னேற்றத் திட்டங்களை ஊராட்சி அமைப்புகள் செயற்படுத்துவதற்கு வளர்ச்சிக் கட்டண வீதங்கள் (Development Rates) விதிக்க வேண்டும் என்பதும் இக்குழுவின் பரிந்துரையாகும். உள்ளாட்சி அரசு நிதிக் கழகம் என்ற அமைப்பை(Panchayat Raj Finance Corporation) ஒவ்வொரு மாநிலமும் உருவாக்க வேண்டும் என்றும் இக்குழு கூறியது; மைய, மாநில அரசுகள், இந்திய மைய வங்கி, கூட்டுறவு வங்கிகள் ஆகிய அமைப்புகள் உரூ. 1 கோடியிலிருந்து உரூ. 5 கோடி வரை இந்நிதிக் கழகத்திற்குச் செலுத்து மூலதனமாகக் (Paid up Capital) கொடுக்க வேண்டுமெனவும் வலியுறுத்தியது; இந்நிதிக் கழகம் உள்ளாட்சி அமைப்புகள் செயற்படுத்தும் ஆக்கத் திட்டங்களுக்குக் கடன் தரும் நிறுவனமாக இயங்க வேண்டுமென்று வலியுறுத்தியது.

தமிழ்நாட்டில் உள்ளாட்சி அரசு அமைப்பு முறை பல நிலைகளில் செயற்பட்டு வருகிறது. சென்னையில் மாநகராட்சி 1919-ஆம் ஆண்டுச் சட்டத்தின் படி உருவாகியது. மாநகராட்சி அமைப்புகள் 1920-ஆம் ஆண்டுச் சட்டத்தின் அடிப்படையில் உருவாயின. ஊராட்சி அமைப்புகள் 1958-ஆம் ஆண்டுச் சட்டத்தின் மூலம் உருவாயின. இச்சட்டங்கள் மக்கள் ஆட்சி முறையில் பேராளர்களைத் தேர்ந்தெடுக்கும்முறைக்கு வழிவகுத்தன. மக்கள்தொகை, நகர வளர்ச்சி அடிப்படையில் விடுதலைக்குப் பின் மாநகராட்சி அமைப்புகளும் ஏற்படுத்தப்பட்டன. தமிழ்நாட்டில் மதுரை, கோவை ஆகிய நகரங்களில் புதிதாக மாநகராட்சி அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டன. ஊராட்சி, பேரூராட்சி, ஊராட்சி ஒன்றியம், நகராட்சி, மாநகராட்சி போன்ற நிலைகள் தமிழ்நாட்டில் உள்ளாட்சி அமைப்பில் உள்ளன. இவ்வமைப்புக்குரிய தலைவரையும் உறுப்பினர்களையும் மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் முறையை 1986-ஆம் ஆண்டு தமிழ்நாடு பின்பற்றியுள்ளது.

அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் உள்ளாட்சி அமைப்புகளின் நிதி வளங்களும் அதிகாரங்களும் அரசியல் சட்டத்தில் வரையறை செய்யப்பட்டுள்ளன. இருப்பினும் வளர்ந்து வரும் மக்கள் தேவைகளால் நிதிச் சிக்கல்கள் வளர்ந்து வருகின்றன. அமெரிக்காவில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வரிவிதிப்பும் கடன் வாங்கும் அதிகாரமும் தனியாகக் கொடுக்கப்பட்டிருந்தாலும், நிதிப்பற்றாக்குறையைப் போக்குவதற்குக் கொடைத் தொகையை அடிக்கடி மைய, மாநில அரசுகள் அளித்து வருகின்றன. இந்தியாவில் உள்ளாட்சி அமைப்புகளுக்கான அதிகாரங்களை வரையறுக்கும் முறை சட்டப்படி இன்னும் வழங்கப்படவில்லை. பெரும்பாலும் நிதி வளங்களுக்கு மாநில அரசின் கொடைத் தொகையையும் கடனையும் உள்ளாட்சி அமைப்புகள் எதிர்பார்த்துத் திட்டங்களைச் செயற்படுத்த வேண்டிய நிலையில் உள்ளன. இந்தியா முழுவதும் உள்ள உள்ளாட்சி அமைப்புகளைப் பற்றிய முழுமையான புள்ளி விவரங்களும் இன்னும் தொகுக்கப்படவில்லை. ஏழாம் நிதிக் குழு அதன் அறிக்கையில் பல்கலைக்கழகங்களும் ஆய்வு மையங்களும் உள்ளாட்சி நிதி பற்றி ஆய்வு செய்து, அந்

நிதி நிலை பற்றிய கூறுகளை விளக்க வேண்டுமெனப் பரிந்துரை செய்தது. மு.நா.

துணை நூல்கள்:

**James Maxwell**, Financing State and Local Governments, The Brooking Insitutions, Washington D.C., 1969.

**Urusla, K. Hicks**, Development Fran Below Local Government and Finance Developing Countries Clarendon Press, Oxford, 1961.

**Venkataraman, K.**, State's Finances in India, George Allen and Unwin Limited, London, 1958.

**உள்ளாட்சி வரிகள்**: உள்ளாட்சி அமைப்புகள் விதிக்கும் வரிகளே உள்ளாட்சி வரிகள் (Local Taxes) எனப்படும். வரிவிதிக்கும் வழக்கம் இந்தியாவில் பல நூற்றாண்டுகளாக இருந்து வருகிறது. திருக்குறள், அருத்தசாத்திரம் போன்ற பழைய நூல்களில் பலவகை வரிவிதிப்புப் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. இந்தியாவில் முகலாயர் ஆட்சியில் வரி விதிப்பு முறையில் பல மாறுதல்கள் செய்யப்பட்டு, வரிவிதிப்பு முறை புதிய வடிவம் பெற்றது. பிற்காலச் சோழர்கள் காலத்திலும் பல்லவர் காலத்திலும் ஊரக அமைப்புச் சமுதாயத்தில் பல வரிகள் விதிக்கப்பட்டன. ஆங்கிலேயக் கிழக்கிந்திய வணிகக்குழு இந்தியாவைக் கைப்பற்றிய பிறகு, இந்தியா முழுமைக்கும் சீரான முறையில் பல வரிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இவ்வரிவிதிப்பு முறைகள் ஐரோப்பாவில் அக்காலத்தில் இருந்த வரிவிதிப்பு முறைகளின் அடிப்படையில் கொண்டு வரப்பட்டன. உள்ளாட்சி வரிகள் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில்தான் சிறப்பிடம் பெற்றன. நகராட்சி அமைப்புகள் முதன் முதலில் தோன்றியதால் நகர்ப்புற வரிகளே முதன்முதலாக விதிக்கப்பட்டன. சொத்துள்ளோர் மீதுதான் இவ்வரிகள் விதிக்கப்பட்டன. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தான் உள்ளாட்சி அமைப்புமுறை சீர்திருத்தி அமைக்கப்பட்டது. அக்காலத்தில் இயற்றப்பட்ட 1919-ஆம் ஆண்டு அரசியல் சீர்திருத்தச் சட்டமும், 1935-ஆம் ஆண்டு அரசியல் சட்டமும் வரி, நிதி பகிர்வுகளைப் பற்றிய விதிகளை அறிமுகப்படுத்தின.

இந்திய விடுதலைக்குப் பின்னர், உள்ளாட்சி அமைப்பு நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி போன்ற பல அமைப்புகளை உள்ளடக்கிப் பல்வேறு ஆக்கப் பணிகளை மேற்கொள்ளத் தொடங்கியது. இப்பணிகளுக்குத் தேவையான வருவாயை உள்ளாட்சி வரிகள் மூலம் பெற்றது. உள்ளாட்சி வரிகள் என்பவை வீட்டு வரி (House Tax), தொழில்வரி (Professional Tax), வாகனவரி (Vehicle Tax) போன்ற வரிகளாகும்.

இவ்வரிகளைத் தவிர உள்ளாட்சி அமைப்புகள் மாநில அரசுகள் விதிக்கின்ற கேளிக்கை மீதான கூடுதல் வரிகள் (Surcharge on Entertainment Tax), நில வரி மீதான கூடுதல் வரிகள் (Surcharge on Land Revenue), முத்திரை வரிகள் மீதான கூடுதல் வரிகள் (Surcharge on Stamp Duties) போன்ற வரிகள் மூலம் வருவாயைப் பெறுகின்றன. இவ்வருவாய் தவிர, கடனாகவும் கொடைகளாகவும்(Grants)மாநில அரசுகள் உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி உதவி அளிக்கின்றன. பல ஆய்வுக் குழுக்கள் உள்ளாட்சி அமைப்புகளுடைய நிதிப் பற்றாக்குறையைக் குறிப்பிட்டு, மேலும் பல வரிகளை உள்ளாட்சி அரசுகளுக்குத் தர வேண்டுமென வலியுறுத்தியுள்ளன. உள்ளாட்சி நிதி ஆய்வுக் குழு (Local Finance Enquiry Committee, 1951) 13 இனங்களிலுள்ள வரிகளை மத்திய, மாநில அரசுகள் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்க வேண்டுமெனப் பரிந்துரை செய்துள்ளது. மேலும், 6 இனங்களின் மூலம் கிடைக்கும் வருவாயை உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்க வேண்டுமென 1953-54-ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட வரிவிதிப்பு ஆய்வுக்குழு (Taxation Enquiry Commission 1953-54) பரிந்துரை செய்துள்ளது.

உள்ளாட்சி வரி அமைப்பை மேலும் வலுப்படுத்த ஆய்வுக்குழுக்கள் பல பரிந்துரைகள் வழங்கியுள்ளன. காண்க: உள்ளாட்சி நிதி. மு. நா.

துணை நூல்கள்:

**Thavaraj, M.J.K.**, Financial Adminstration of India Sultan Chand, New Delhi, 1978.

**Venkataraman, K.**,State Finances in India, George, Allen and Unwin Ltd. London, 1968.


**உள்ளார்ந்த பண்பாடு**: ஒரு சமூகத்திடையே வெளிப்படையாகக் காணமுடியாத பண்பாட்டுக் கூறுகளே உள்ளார்ந்த பண்பாடு (Implicit Culture)ஆகும். எடுத்துக்காட்டாக, மதிப்புகள் (Values), நம்பிக்கைகள், கனவுகள், பயங்கள் போன்றவற்றைக் கூறலாம். உள்ளார்ந்த பண்பாட்டை உணர்வு நிலைப் பண்பாடு என்றும் கூறலாம்.

உள்ளார்ந்த பண்பாட்டிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாக வெளிப்படைப் பண்பாடு(Explicit Culture) உள்ளது. இப்பண்பாடு ஒரு சமூகத்தின் செயற்பாடு

கள், கலைப் பொருட்கள், வீட்டின் அமைப்பு, தொழிற் கருவிகள், வீட்டில் பயன்படுத்தும் சமையற் பொருள்கள், ஆடையணிகள், அலங்காரப் பொருள்கள், சமயச் சடங்குகளில் பயன்படுத்தும் பொருள்கள், சைகைகள், பேச்சுகள் முதலான நேரடியாகக் கண்டுணரக் கூடிய பண்பாட்டுக் கூறுகளைக் குறிக்கும்.

உள்ளார்ந்த பண்பாட்டுக் கூறுகளுள் ஒன்றனைக் கீழ்வரும் எடுத்துக் காட்டின் மூலம் அறியலாம். ஒருவருடன் ஒருவர் பேசிக் கொண்டிருக்கும் போது, எந்த அளவிற்கு இடைவெளிவிட்டு அவர்கள் நிற்க வேண்டும் என்பதைப் பொதுவாகப் பெரும்பாலோர் அறியாதிருப்பர். எனினும், நடைமுறையில் யாரோடும் நின்று பேசிக் கொண்டிருக்கும் போது, ஒரு குறிப்பிட்ட இடைவெளிவிட்டு நின்று பேசுவதற்குத் தங்கள் உணர்வுக்கு அப்பாற்பட்ட ஒரு பண்பாட்டு மதிப்பே (Cultural Value) காரணம் ஆகும். பொதுவாக, வெளிப்படைப் பண்பாட்டைக் குறிப்பில்லா மாதிரி (Random Sampling) முறையில் அறியலாம். எடுத்துக் காட்டாக, ஒரு கால் பந்தாட்ட விளையாட்டுப் போட்டியில் விளையாடுபவர்களின் செயற்பாடு எத்தகையது என்பதைப் பற்றி முடிவுக்கு வர எந்த விதமான தொடர்பற்ற மாதிரிகளும் தேவையில்லை. ஆனால், ஒரு சமூகத்தில் ஒருவருடன் ஒருவர் பேசிக் கொண்டிருக்கும் போது, எந்த அளவுக்கு அவர்கள் இடைவெளிவிட்டு நிற்க வேண்டும் என்பதை அவர்கள் தங்களை அறியாமலேயே உணர்ந்து நிற்கின்றனர். இந்த உள்ளார்ந்த பண்பாட்டினை மானிடவியலாளர் புள்ளியியல் முறைகளின் அடிப்படையில் குறிப்பில்லா மாதிரிகளைக் கொண்டு துல்லியமாகக் கண்டறிகின்றனர். இத்தகைய விதிகள் வேறு பண்பாட்டைச் சேர்ந்த மக்களோடு ஒன்றோடொன்று இணைந்து பழகும்போது வெளிப்படையாகத் தெரிகிறது. ஒருவரோடு இன்னொருவர் மிக நெருக்கமாக (இது மிக நெருங்கிய உறவு நிலையைக் குறிக்கிறது) அல்லது மிகத் தூரத்தில் (இது நட்பின்மையைக் குறிக்கிறது) நின்று பேசுவதை அவர் வசதிக் குறைவாக எண்ணுகிறார். அராபியர் ஒருவருக்கொருவர் மிகவும் நெருக்கமாக ஒருவர் மூச்சுக்காற்று இன்னொருவர் மீது வீசும் அளவிற்கு நிற்பர். அராபியரும் அமெரிக்கரும் ஒன்றிப் பழகும்போது அராபியர் நெருங்கி வர வர, அமெரிக்கர் ஒதுங்கி ஒதுங்கிச் செல்வர்.

உரையாடலின் போது இருவர் நின்று பேசும் இடைவெளித் தூரம் பற்றிய பண்பாட்டு விதியினை (Cultural Rule) அறிய வேண்டுமானால், அவர்களின் சமூக மக்களின் மதிப்பு மாதிரிகளைத் தேர்ந்தெடுத்து ஆய்ந்த பின்னரே, அவர்களின் பண்பாட்டு மதிப்புகளின் செயல்முறைகளையும் பண்பாட்டு முறைமைகளையும் (Norms) கண்டறிய முடியும். ஒரு குறிப்பிட்ட பண்பாட்டில் ஒருவரோடு ஒருவர் கூடி உரையாடும் போது, அவர்கள் நிற்கும் இடைவெளித் தூரத்தின் சராசரி அளவை அறிந்திடச் சில மாதிரிகளைத் தேர்ந்தெடுத்து, அவர்கள் நிற்கும் இடைவெளித் தூரத்தைக் கணக்கிட்டு, பின் அதன் சராசரியைக் கணக்கிட வேண்டும். சிலர் 2 அடிதூரம், சிலர் 2.5 அடி, மற்றும் சிலர் 4 அடிதூரம் நின்று பேசிக் கொண்டிருக்கக் கூடும். இதைப் போன்றே பலரிடம் ஒவ்வொரு முறையும் கணக்கிட்டு நிகழும் எண்ணிக்கையின் பரவல் (Frequency Distribution) அறியப்படுகின்றது. இந்த நிகழும் எண்ணிக்கையின் அளவினைப் படத்தில் காட்டியவாறு ஒரு வளை கோடாக அமைக்கலாம்.




இடைவெளித் தூரம் (அடிகளில்)

படத்தில் பண்பு கிடைக்கோட்டிலும் (அதாவது, இருவர் உரையாடலின் போது இருக்கும் இடைவெளித் தூரம்), அது எத்தனை முறை என்பது செங்குத்துக் கோட்டிலும் குறிக்கப்படுகின்றன. அமெரிக்கரிடையே உரையாடலின் போது இருக்கும் இடைவெளியை ஒரு வரைபடத்தின் மூலம் பார்த்தால், அது சராசரியாக மூன்று அடி தூரம் எனக் கணக்கிடப் பெறும். மேலும், தங்களின் உள்ளார்ந்த பண்பாட்டை ஒரு குறிப்பிட்ட அதே சமூகத்தைச் சேர்ந்தவர்களால் விளக்கி எடுத்துரைக்க முடியாது; அப்படி எடுத்துரைக்கப்படக் கூடியதானால் அவற்றை உள்ளார்ந்த பண்பாடாகக் கொள்ள முடியாது. உள்ளார்ந்த பண்பாட்டினை ஆராயும் மானிடவியலாளர் இவ்வாய்விற்கெனப் பல நெறிமுறைகளைக் கொண்டுள்ளனர்.

ஆ.செ.

துணை நூல்கள்:

Edward, T.H., The Hidden Dimension Garden City, Anchor, New York, 1966.

Ember, C.R. and Ember, M., Anthropology Prentice-Hall, Inc., Englewood Cliffs, N.J., 1981.

Kluckhon, C., Mirror for Man, McGraw-Hill, New York, 1949.

Herskovits, M.J., Cultural Anthropology, Oxford & I B H Publishing Company, New Delhi, 1969.

***உள்ளார்ந்த மதிப்பீடு***: பாடத் தொகுதியமைப்பின் உள்ளியல்புகளை அணுகி ஆராயும் முறையே உள்ளார்ந்த மதிப்பீடு(Intrinsic Evaluation) எனச் சொல்லப்படுகிறது. இசுகிரீவன்(Scriven) என்பவரே இச்சொற்றொடரை முதல் முதலில் 1967-இல் பயன்படுத்தியவர். உள்ளார்ந்த மதிப்பீடு முறையை எவ்வாறு செய்வது என்பதை இசுகிரீவன் முறைப்படுத்திக் கூறவில்லை என்றாலும், உள்ளார்ந்த மதிப்பீடு பாடத் தொகுதியமைப்பின் (Curriculum) குறிக்கோள்களையும் நோக்கங்களையும் அடிப்படையாக ஆராய்கிறது எனக் கூறுகிறார். மேலும், இவ்வகையான மதிப்பீட்டு முறையில் கருத்து முரண்பாடின்மை ஆய்வும் (Consistency Analysis), பொருளடக்கப் பகுப்பாய்வும் (Content Analysis) செய்யப்படுகின்றன. கருத்து முரண்பாடின்மைப் பகுப்பாய்வு பாடத் தொகுதியமைப்பின் குறிக்கோள்கள் எவ்வளவு தூரம் முரண்படுகின்றன அல்லது இயைந்து செல்கின்றன என்பதை ஆராய்கிறது. ஆனால், பொருளடக்கப் பகுப்பாய்வு பாடப் பொருளின் துல்லியம்(Accuracy), உள்ளடக்கம் (Coverage), சிறப்புப் பயன் (Significance) ஆகியவற்றை ஆராய்கிறது. பொருளடக்கப் பகுப்பாய்வினைப் பாடத்துறை வல்லுநர்கள் (Subject Experts) செய்கின்றனர். ஆனால், கருத்து முரண்பாடின்மைப் பகுப்பாய்வினை மதிப்பீட்டாளரே (Evaluator) செய்கிறார்.

பாடத் தொகுதியமைப்பை உருவாக்குவதிலும் அதைச் சீர்தூக்குவதிலும் உள்ளார்ந்த மதிப்பீட்டு முறை மூவழிகளில் பயன்படுகிறது. முதலாவதாக, பாடத் தொகுதியமைப்பின் நகல் தயாரானவுடன் அதைச் செயற்படுத்தி, அந்நிலையில் பாடத் தொகுதியமைப்பில் வேண்டிய மாற்றங்களைச் செய்வதற்கான மதிப்பீடு (Formative Evaluation) செய்யப்படும். இம் மதிப்பீடு மதிப்பீட்டாளரால் அல்லது பாடத் துறை வல்லுநரால் அல்லது இவ்விருவரால் செய்யப்படும். இம் மதிப்பீட்டில் நகல்நிலைப் பாடத் தொகுதியிலுள்ள உள்ளடக்கத்தின் இயலுந்தன்மை (Feasibility), தேவை, பயன், செம்மைப்படுத்துவதற்குரிய பரிந்துரை ஆகியன வரையறுக்கப்படுகின்றன. இரண்டாவதாக, திரள்நிலை மதிப்பீட்டில் (Summative Evaluation) செம்மை செய்யப்பட்ட பாடத் தொகுதியமைப்பு வகுப்பறைச் சூழலுக்கேற்ற வகையில் உள்ளதா என்பது மதிப்பீட்டாளரால் அவரது சொந்த அனுபவத்திலிருந்தோ செயலாராய்ச்சி (Empirical Investigation) மூலமோ முடிவு செய்யப்படுகிறது. மூன்றாவதாக, திரள்நிலை மதிப்பீட்டின் இறுதி நிலையில் முடிவான பாடத் தொகுதியமைப்பின் கருதுகோள்களை விவரித்தல், இலக்குகளை மதிப்பீடு செய்தல், கருத்து முரண்பாட்டின்மைப் பகுப்பாய்வு, உள்ளடக்கப் பகுப்பாய்வு ஆகியவற்றின் முடிவுகளை அறிவித்தல், கொள்கையளவில் முடிவெடுப்பவர்களுக்குப் பாடத் தொகுதியில் சேர்க்கப்பட்ட சில மாற்றுப் பகுதிகளின் ஒற்றுமை வேற்றுமைகளைச் சுருங்கவுரைத்தல் ஆகியன வரையறுக்கப் படுகின்றன.

உள்ளார்ந்த மதிப்பீட்டு முறை, பாடநூல் தேர்ந்தெடுத்தல் (Text Book Selection), கற்றல் வள ஆதாரங்களை மதிப்பீடு செய்தல் (Evaluation of Learning Resources) ஆகியவற்றில் பயன்படுத்தப்படுகிறது. உள்ளார்ந்த மதிப்பீட்டு முறை பெரும்பாலும் பயிற்சி பெறாதவர்களாலேயே செய்யப்பட்டு வருகிறது. உள்ளார்ந்த மதிப்பீட்டு உத்திகள் (Techniques) வளர்ச்சியடையாத நிலையில் இருப்பதே அதற்குக் காரணமாகும்.

உள்ளடக்கப் பகுப்பாய்வு (Content Analysis), பாடத் தொகுதியமைப்புத் திறனாய்வு (Curriculum Criticism) ஆகிய உத்திகளில் உள்ளார்ந்த மதிப்பீட்டு முறையினைச் செய்துபார்க்க வாய்ப்புகள் மிகுதியாக உள்ளன. உள்ளடக்கப் பகுப்பாய்வு ஓர் இயல், ஒரு பாடம், ஒரு பக்கம் (Page), ஒரு தலைப்பு, ஒரு குறிப்பிட்ட பகுதி ஆகியவற்றினை ஆராயும் வகையில் அமையும். பாடத் தொகுதியமைப்புத் திறனாய்வில் சமுதாயத் தேவையின் அடிப்படையில் பாடப் பொருள்கள் தொடர்புபடுத்தப்படுகின்றன. இக் கருத்தினை மேன் (Mann) என்பவர் முதன் முதலில் கூறினார். வெர்னர்(Werner)என்பவர் பாடத் தொகுதியமைப்புத் திறனாய்வுக்குப் பாடத் தொகுதி அமைப்பும் நோக்கமும், அவற்றின் பொருத்தமுடைமை பற்றிய பொது விவாதமும் (Public Dialogue) திறனாய்வாளரின் கருத்துகளும், திறனாய்வின் மூலம் பாடத் தொகுதியமைப்புச் செம்மையானதற்கான சான்றும் ஆகிய மூன்று விதிகளைக்

கூறுகிறார். இம் மூன்று விதிகளும் உள்ளார்ந்த மதிப்பீட்டிற்கும் பொருந்துவன. எஸ்.த.

துணை நூல்கள்:


Mann J.S., Curriculum Criticism, Teachers College Record, 71: 27-40, 1969.

Werner, W., Editorial Criticism in Curricular Analysis, Curriculum Inquiry, 10: 143-54.


**உள்ளார்ந்த மதிப்பு** என்பது ஒரு பொருளில் அடங்கியிருக்கிற உண்மையான மதிப்பாகும். இது அந்தப் பொருளின் பயன்மதிப்பைக் குறிக்கும். ஒரு பொருளில் அடங்கியிருக்கும் பயன்பாட்டை ஒட்டி அதன் உள்ளார்ந்த மதிப்பு (Intrinsic Value) அமைகிறது. பொருளியலில் 'மதிப்பு' பற்றிய கருத்தும் அது தொடர்பான கோட்பாடுகளும் சிறப்பான இடத்தைப் பெறுகின்றன. ஒரு பொருள் அல்லது பணத்தின் மதிப்பை வரையறுப்பதில் பல வகையான சிக்கல்கள் ஏற்படுகின்றன. பொருளின் மதிப்பைச் சீராக அளவிட அதனை உள்ளார்ந்த மதிப்பு அல்லது அக மதிப்பு என்றும், அங்காடி மதிப்பு (Market Value) அல்லது விலை (Price) என்றும் இருவகைப் படுத்தியுள்ளனர்.

மதிப்பு: பொருளியலில் ஒருபொருளின் மதிப்பு என்பது அந்தப் பொருளைக் கொடுத்தால் அதற்கு மாற்றாக என்னபொருள் கிடைக்கும் என்ற 'மாற்று மதிப்பைக்' (Value-in-exchange) குறிக்கிறது. ஒவ்வொரு பொருளிலும் 'பயன் மதிப்பு' (Value-in-use) இருப்பது கவனிக்கத்தக்கது. தண்ணீரில் பயன் மதிப்பு மிகுதியாக இருக்கிறது. தண்ணீர் இல்லாமல் மனிதன் உயிர் வாழ முடியாது. ஆனால், தண்ணீருக்கு மாற்று மதிப்பு மிகவும் குறைவு. பொருளியலில் ஒரு பொருளின் பயன் மதிப்பை மட்டிலும் கணக்கில் கொள்வதில்லை. அதனுடைய மாற்று மதிப்பையும் வைத்துத் தான் பிற காரணிகள் ஆராயப்படுகின்றன.

மாற்று மதிப்பு உள்ள பொருள்கள் மட்டும்தான் 'பொருளாதாரப் பொருள்களாக'க் (Economic Goods) கருதப்படுகின்றன. காற்று, தண்ணீர், மணல் போன்ற விலை கொடுக்காமல் கிடைப்பவை 'இலவசப் பொருள்கள்' (Free Goods) எனப்படுகின்றன.

பயன்பாடு: ஒரு பொருளுக்கு 'மதிப்பு' இருக்க வேண்டுமானால் அதற்குப் பயன்பாடு இருக்க வேண்டும். பயன்பாடு என்பது ஒருபொருளில் இருக்கும் மனிதனின் விருப்பத்தை நிறைவேற்றுகிற ஆற்றலாகும். எழுதும் விருப்பத்தை நிறைவேற்றுவதால் பேனாவில் பயன்பாடு இருக்கிறது. எழுத விரும்புகிறவர் விலை கொடுத்துப் பேனாவை வாங்க முன் வருகிறார். பயன்பாடு ஆளுக்கு ஆள், இடத்திற்கு இடம், காலத்திற்குக் காலம் வேறுபடுகிறது. எடுத்துக்காட்டாக, சைவ உணவுக்காரருக்கு மீன் பயன்பாடற்ற பொருளாக மாறுகிறது. ஆனால், அசைவ உணவாளர் மீனில் மிகுந்த பயன்பாட்டைப் பெறலாம். இதிலிருந்து பொருள்களின் பயன்பாடு ஆளுக்கு ஆள் மாறுவதைக் காணலாம். கம்பளி ஆடை இமயமலையில் மிகுந்த பயன்பாடுடையதாக இருக்கிறது. ஆனால், தமிழகத்தில் அதன் பயன்பாடு குறைவு. இது இடத்திற்கு இடம் பயன்பாடு மாறுவதைக் காட்டுகிறது. வெயில் நேரத்தில் மிகுந்த பயன்பாடுடைய குளிர்பானம் கடுமையான குளிர்காலத்தில் பயன்பாடற்றதாக உள்ளது. காலத்திற்குக் காலம் பயன்பாடு மாறுவதை இது உணர்த்துகிறது.

பற்றாக்குறை: ஒரு பொருளில் பயன்பாடு இருப்பதால் மட்டும் அதற்கு மதிப்பு வருவதில்லை. தேவையோடு ஒப்பிடும்பொழுது அது பற்றாக்குறையுடையதாகவும் (Scarcity) இருக்க வேண்டும். பற்றாக்குறை என்பது ஒரு சார்புச் சொல் (Relative Term) ஆகும். தண்ணீர் மிகுந்த பயன்பாடுடையது. தங்கத்தின் பயன்பாடு மிகவும் குறைவு. தண்ணீருக்குப் பொதுவாகப் பொருளாதார மதிப்பு (விலை) இல்லை. ஆனால், தங்கத்தின் மதிப்பு மிகுதியாக இருக்கிறது. இது புதிர் போலத் தோன்றலாம். இந்தப் புதிருக்கு விடை அதன் 'பற்றாக்குறை' இயல்பில் உள்ளது. தண்ணீர் ஏராளமாகக் கிடைப்பதால் அதன் மதிப்புக் குறைவு; தங்கம் பற்றாக்குறையுடையதாக இருப்பதால் அதன் மதிப்பு மிகையாக உள்ளது.

மாற்றும்வகை: ஒரு பொருள் கைமாறக் கூடியதாக (Transferability) இருக்கிற பொழுதுதான் அதற்குப் பொருளாதார மதிப்புக் கிடைக்கிறது. கைமாற்ற முடியாத ஒருவரின் அகத் திறமைகள் பொருளாதார மதிப்புப் பெறுவதில்லை. எடுத்துக்காட்டாக, ஒருவரிடம் அருமையாகப் படம் வரையும் ஆற்றல் இருப்பதாகக் கொண்டால் அந்தத் திறமைக்குப் பொருளாதார மதிப்பு (விலை) இல்லை. ஆனால், அவர் வரைகிற ஓவியம் கைமாறக் கூடியதாக இருப்பதால் பொருளாதார மதிப்பு இருக்கிறது.

உள்ளார்ந்த மதிப்பைப் பணத்தின் அடிப்படையிலும் விளக்கலாம். ஒருவரிடம் ஓர் உருபாய்த் தாள்

இருக்கிறது என்றால் அந்த உரூபாய்த் தாளின் பெயரளவு மதிப்பு (Nominal value) நூறு காசு. அதற்கு மாற்று மதிப்பும் இருக்கிறது. அதனிடமிருக் கிற வாங்கும் சக்திக்குப் பொருள்களை வாங்க லாம். ஆனால், அந்த உரூபாய்த் தாளில் உள்ளார்ந்த மதிப்பு இல்லை. அதாவது, அந்த உரூபாய்த் தாளுக்கு வேறு பயன்பாட்டு மதிப்பு இல்லை. ஆனால், அதே ஓர் உரூபாய் உலோகத்தால் செய்த உரூபாய் நாண யம் என்றால் அந்த உரூபாயைக் கடையில் கொடுத்துப் பொருள் வாங்காமல் அதனை உருக்கி வெறும் உலோகமாகவும் பயன்படுத்தலாம். இச் செயல் சட்ட விரோதமானது. அந்த உலோகத்தின் மதிப்பு அறுபது காசு என்றால், அதுதான் அந்த ஓர் உரூபாய் நாணயத்தின் உள்ளார்ந்த மதிப்பு. அதனை உண்மை யான மதிப்பு என்றும் கூறலாம். ஆனால், அந்த நாணயத்தின் பெயரளவு மதிப்பு ஓர் உரூபாய் அதாவது, நூறு காசுகள்.

அங்காடி மதிப்பு: ஒரு பொருளின் அங்காடி மதிப்பு அதன் உள்ளார்ந்த மதிப்பிலிருந்து வேறுபடு கிறது. அங்காடி மதிப்பு ஒரு பொருளுக்குரிய அங்காடி யின் தேவையையும் (Demand) அளிப்பையும் (Supply) ஒட்டி வரையறையாகிறது. ஒரு பொருளின் தேவை அதனுடைய பயன்பாட்டை ஒட்டி அமைகிறது. பயன் பாடு மிகுதியான பொருளுக்குச் சமுதாயத்தில்தேவை யும் மிகுதியாக இருக்கும். அந்தப் பொருளின் அளிப்பு அதனை உற்பத்தி செய்யக் கிடைக்கிற உற்பத்திக் காரணிகளை ஒட்டி அமையும். உற்பத்திக் காரணிகள் ஓரளவே கிடைத்தால் பொருளின் அளிப்புப் பற்றாக்குறையாக இருக்கும்.

சமுதாயத்தின் மொத்தத் தேவையும் மொத்த அளிப்பும் சீராக இருந்தரல், அந்தப் பொருளின் அங்காடி விலை ஓரளவு அதனுடைய உள்ளார்ந்த மதிப்புக்கு ஒத்திருக்கும். மொத்த அளிப்பைவிடத் தேவை அதிகமாக இருந்தால், அந்தப் பொருளின் விலை உள்ளார்ந்த மதிப்பை விட மிகுதியாக இருக் கும். மாறாக, அந்தப் பொருளுக்குரிய தேவையை விட அளிப்பு மிகுதியாக இருந்தால், அதன் விலை உள்ளார்ந்த மதிப்பை விடக் குறைவாக இருக்கும். அங்காடி விலை அதனுடைய உள்ளார்ந்த விலையை விடக் குறைவாக இருக்குமா, மிகுதியாக இருக்குமா என்பது அதற்குரிய தேவையையும் அளிப்பையும் சார்ந்ததாகும்.

நுகர்வோர் எச்சம்: ஒரு பொருளின் உள்ளார்ந்த மதிப்பு அதனால் கிடைக்கிற விருப்ப மனநிறை வாகும். இந்த மனநிறைவை எப்படி அளிப்பது? மன நிறைவை அளக்க அளவுகோல் என்ன? மனநிறைவை அளந்து திட்டவட்டமாகக் கூற எந்த அளவுகோலும் இல்லை. ஒரு பொருளில் இருக்கும் பயன்பாடு ஓர் உளவியல் கருத்தாகும். இந்த அளவுச் சிக்கலுக்கு முடிவு காணப்பொருளியலறிஞர்கள் பணத்தை ஓர் அளவு கருவியாகக் கருதுகின்றனர். ஒருவர் ஒரு பொருளுக்கு விலையாகக் கொடுக்க விரும்புகிற பணம், அந்தப் பொருளிலிருந்து அவருக்குக் கிடைக் கிற பயன்பாட்டைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.

எடுத்துக்காட்டாக, ஒருவர் மாம்பழம் வாங்கு வதாகக் கொண்டால் மாம்பழத்தின் அளவு, தன்மை ஆகியவற்றை ஒட்டி அதற்கு அவர் எண்பது காசு வரை உச்ச அளவில் விலை தர விரும்புகிறார். அன் றைய அங்காடி விலை ஐம்பதுகாசு என்றால் மகிழ்ச்சியாக அதனை வாங்குவார். ஏனென்றால், அவருக்கு அந்த மாம்பழத்தின் உள்ளார்ந்த மதிப்பு எண்பதுகாசு. ஆனால், அவர் விலையாகக் கொடுப் பது ஐம்பது காசு. அவருக்கு முப்பது காசு பயன்பாடு கொடுத்த விலையை விட மிகுதியாகக் கிடைக்கிறது. இது பொருளியலில் 'நுகர்வோர் எச்சம்' (Consumer's Surplus) எனப்படுகிறது. நுகர்வோர் எண்பது காசு கொடுக்க விரும்பும் பொழுது மாம்பழத்தின் அங் காடி விலை ஓர் உரூபாய் என்றால் அவர் மாம் பழத்தை விரும்பி வாங்கமாட்டார். வேறு வழியில்லா மல் தேவை கருதி வாங்கினாலும் தாம் ஓரளவு காசை இழந்துவிட்ட மனக்குறைவோடுதான் இருப் பார்.

உள்ளார்ந்த மதிப்புக் கருத்து ஒரு நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை அறியத் துணை செய்கிறது. மக்கள் தாங்கள் கொடுக்கிற பணத்தை விட, வாங்குகிற பொருள்களின் உள்ளார்ந்த மதிப்பு மிகுதியாக இருப்பதாகக் கருதினால், மக்களின் பண வருவாய் கூடும்; உண்மையான வாழ்க்கைத் தரமும் கூடும். நாட்டில் பணவீக்கம் ஏற்படும்பொழுது விலை கள் உயரும். பொருள்களின் உள்ளார்ந்த மதிப்பை விடப் பணவீக்கக் காலத்தில் பொருள்களின் விலை விரைவாக உயரும். இதனால், மக்களின் நலம் பாதிக் கப்படும். நல்ல பொருளாதார அமைப்பு முறையில் பொருள்களின் விலையும் அவற்றின் உள்ளார்ந்த மதிப்பும் ஒரே அளவாக இருக்கும். மா.பா.கு.

துணை நூல்கள்:

**George, P., Stigler**, The Theory of Price, Macmillan Publishing Company, New York, 1966.

**Joshi**, J.M., Theory of Value: Distribution and Welfare Economics, Vikas Publishing House, New Delhi, 1982.

**Maurice, Dobb.,** Theories of Value and Distribution since Adam Smith, Vikas Publishing House, New Delhi, 1979.

**John Hicks, Sir,** Value and Capital, The English Languge Book Society, London, 1975.

**உள்ளிடப் பெயர்வு** என்பது ஒரு நாட்டிற்குள் அரசியல் அல்லது புவியியல் எல்லைகளை மக்கள் கடப்பதால் ஏற்படும் இடமாற்றத்தைக் குறிக்கும். இடப்பெயர்வின் ஆய்வில் இடத்தின் எல்லை சிறப்பிடம் பெறுகிறது. இடப்பெயர்வு உள்ளிடப் பெயர்வு (Inmigration), பன்னாட்டு இடப்பெயர்வு (International Migration) என இருவகைப்படும். உள்ளிடப்பெயர்வு என்பது உள்நாட்டு இடப் பெயர்வைக் குறிக்கிறது. ஒரு நாட்டின் மக்கள் தொகை வேறுபாடு பிறப்பு, இறப்பு, இடப்பெயர்வு ஆகிய மூன்று காரணிகளால் ஏற்படுகின்றன. இவற்றில் இடப்பெயர்வு மற்ற இரண்டைக் காட்டிலும் ஓர் இடத்தின் மக்கள்தொகையைப் பெருக்கவோ குறைக்கவோ கூடிய தனிச் சிறப்பைக் கொண்டு விளங்குகிறது. ஒரு நாட்டின் மொத்த மக்கள்தொகை மாற்றத்திற்குப் பன்னாட்டு இடப்பெயர்வு காரணமாக இருந்தாலும், அந்நாட்டின் உள்ளிடப்பெயர்வு மக்கள் தொகை மாற்றத்திற்குக் காரணமாக அமைவதில்லை. ஒரு மண்டலத்தின் (Region) மக்கள் தொகை மாறிகள் (Demographic Variables) உள்நாட்டு, பன்னாட்டு இடப்பெயர்வினால் பாதிக்கப் படுகின்றன. எனினும், அதில் உள்நாட்டு இடப் பெயர்வின் பங்கு மிகுதியாக இருக்கும்.

உள்ளிடப்பெயர்வு ஒரு நாட்டின் சமூக, பொருளாதார மாற்றத்திற்கு மட்டுமன்றி, ஏற்றத் தாழ்வுகளுக்கும் காரணமாகிறது. ஒரு நாட்டின் சமூக, பொருளாதார முன்னேற்றத்தை ஆராய்பவர் அந்நாட்டின் உள்ளிடப்பெயர்வு, அதன் வீதம், அவ் வீதத்தில் ஏற்படும் மாறுதல்கள், இடப்பெயர்வுத் தன்மை (Migration Pattern) ஆகியவற்றை அறிவது இன்றியமையாததாகும்.

இடப்பெயர்வு அரசியலை அல்லது புவியியலைச் சார்ந்திருக்கும். இடப்பெயர்வுக்கு முன் குடியிருந்த இடம் ஆதியிடம் (Place of Origin) என்றும், இடம் பெயர்ந்து குடியிருக்கும் இடம் குடியிருப்பு என்றும், தொடர்ந்து இடப்பெயர்வு நடைபெற்று முடிவடையும் இடம் இறுதிக் குடியிருப்பு (Place of Destination) என்றும் வழங்கப்படுகின்றன. ஒரு நாட்டில் எந்த ஓர் இடமும் இடம்பெயர்வோருக்கு ஆதியிடமாகவும், இடப்பெயர்வு முடிவடையும் இடமாகவும் இருக்க முடியும்.

உள்ளிடப்பெயர்வில் வெளியிடத்திலிருந்து ஓர் அரசியல் அல்லது புவியியல் எல்லைக்குள் வருகிற இடப்பெயர்வும் அந்த எல்லையைக் கடந்து வெளியிடங்களுக்கு இடம்பெயர்தலும் அடங்கும். எல்லைக்குள் இடம்பெயர்ந்து வருபவரை உள்ளிடம்பெயர்வோர் (In-Migrant) என்றும், எல்லையைவிட்டு இடம்பெயர்ந்து வெளிச் செல்பவரை வெளி இடம் பெயர்வோர் (Out-Migrant) என்றும் கூறுவர்.

இடப்பெயர்வு கால வரையறையின்றி நடைபெறும் ஒரு நிகழ்ச்சியாகும். ஆனால், பகுத்தாய்வுக்காக ஆராய்ச்சியாளர்கள் ஒரு கால இடைவெளியை வரையறை செய்து இடப்பெயர்வை ஆராய்ச்சி செய்கின்றனர். இந்தக் கால இடைவெளி இடப் பெயர்வு இடைவெளி (Migration Interval) எனப்படுகிறது. இவ்விடைவெளி நாட்டுக்கு நாடு வேறுபடும். அடிப்படை மக்கள்தொகைப் புள்ளிவிவரப் பதிவு (Registration of Vital Statistics) நடைமுறையிலுள்ள சப்பான், இந்தோனேசியா, மலேசியா, உருசியா, கொரியா, தைவான் போன்ற நாடுகளில் இந்த இடைவெளி ஓர் ஆண்டாகவும், பிற நாடுகளில் மக்கள்தொகைக் கணக்கெடுப்பு இடைவெளியைப் (Intercensal Period) பொறுத்து, ஐந்து வருடமாகவோ பத்து வருடமாகவோ எடுத்துக் கொள்ளப் படுகிறது.

மொத்த இடப்பெயர்வு: குறிப்பிட்ட ஒரு கால இடைவெளியில் ஒரு பகுதிக்கு மொத்தம் எத்தனை ஆட்கள் வெளியிடத்திலிருந்து இடம்பெயர்ந்து வந்தனர், எத்தனை ஆட்கள் அப்பகுதியைவிட்டு வேறோர் இடத்திற்கு இடம்பெயர்ந்து வெளியேறினர் என்பவற்றைக் கணித்து, இருசாராரையும் மொத்தமாக எடுத்துக் கொள்வது அப்பகுதியின் மொத்த இடப் பெயர்வு (Gross Migration) ஆகும்.

மெய்ந்நிலை இடப்பெயர்வு: ஒரே காலத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதியில் மக்கள் இடம்பெயர்ந்து வெளியேறுவதும், அதே பகுதிக்கு வேறோர் இடத்திலிருந்து மக்கள் குடிபெயர்ந்து வருவதும் நடைபெறும். எனவே, எத்தனை ஆட்கள் அக்குறிப்பிட்ட பகுதியை விட்டு இடம்பெயர்ந்து வெளியேறினர் என்பதற்கும், எத்தனை ஆட்கள் அப்பகுதிக்கு வெளியிலிருந்து இடம் பெயர்ந்து வந்தனர் என்பதற்குமிடையே உள்ள மக்கள் எண்ணிக்கையின் வேறுபாடு மெய்ந்நிலை இடப்பெயர்வு (Net Migration) எனப் படும்.

தொடர் இயக்க இடப்பெயர்வு: மக்கள் ஒரு குழுவாகவோ இனமாகவோ தங்கள் வாழ்விடத்தை அல்லது ஆதியிடத்தை விட்டு வேறொரு புதிய

பொதுவான இடத்திற்கு இடம்பெயர்ந்து செல்லும் செயல், குறிப்பிட்ட ஒரு கால இடைவெளிக்குள் தொடர்ந்து நடைபெறுமேயானால் அது தொடர் இயக்க இடப்பெயர்வு (Migration Stream) எனப் படும்.

நுட்ப வேறுபாட்டு இடப்பெயர்வு: மக்களின் இடப்பெயர்வு வீதத்தில் ஏற்படும் வேறுபாட்டிற்குப் பல காரணிகள் உள்ளன. ஒரு சமூகத்தில் மக்கள் விரும்பியோ விரும்பாமலோ மேற்கொள்ளும் இடப் பெயர்வு அவர்கள் வாழும் பகுதிலுயிள்ள மக்கள் தொகை, மக்கள் தொகை நெருக்கம், பிறப்பு இறப்பு வீதம்அவற்றைச் சார்ந்த பிறகாரணிகள், சமூக பொரு ளாதார் அரசியலின் நிலை ஆகியவற்றால் ஏற்படும் தாக்கங்களால் ஏற்படுகின்றன. இதனை நுட்ப வேறுபாட்டு இடப்பெயர்வுஎனக் குறிப்பிடுகின்றனர். நுட்ப வேறுபாட்டு இடப்பெயர்வு ஆய்வு, மக்கள் குடிபெயர்ந்துசெல்வதன் காரணங்கள், அதனால் ஏற் படும் விளைவுகள், எவ்வகையான சூழ்நிலையில் வாழ விரும்பி அச்செயலில் ஈடுபடுகின்றார்கள் என்பன பற்றிய விளக்கங்களை அளிக்கிறது.

முறைகள்: உள்ளிடப்பெயர்வு நேரிடையாகவும் மறைமுகமாகவும் கணிக்கப்படுகிறது. (1) ஒருவர் (குழு அல்லது இனம்) பிறந்த இடம் (Place of Birth), இப்போது வாழும் இடம் ஆகிய இரண்டிற்கும் உள்ள வேறுபாடு; (2) ஒருவர் (குழு அல்லது இனம்) இறுதி யாக வாழ்ந்த இடம் (Place of Last Residence), இப்போது வாழும் இடம் ஆகியவற்றின் வேறுபாடு; (3) ஒருவர் எவ்வளவு காலமாகக் கணக்கெடுப்புச் செய்யும் இடத்தில் வாழ்கிறார் ஆகிய மூன்று வகைப் புள்ளிவிவரங்களையும் சேகரித்து அறிவது நேரடி முறையாகும். சில நாடுகளில் மக்கள்தொகைக் கணக்கெடுப்பிலிருந்து (Census) இடப் பெயர்வுப் புள்ளிவிவரங்களைப் பகுத்தறிகின்றனர். இம்முறை மறைமுக முறையாகும்.

ஒரு வட்டாரத்தின் பிறப்பு, இறப்புப் பதிவேடுகள் மூலம் மக்கள்தொகையின் இயற்கை வளர்ச்சியைப் பிறப்பு – இறப்பு எனக் கணக்கிட முடியும். இது போலவே இரண்டு தொடர் மக்கள்தொகைக் கணக் கெடுப்பு மூலம் அவ்வட்டாரத்தின் மொத்த மக்கள் தொகை வளர்ச்சியைப்(Intercensal Population Incre-ase-IPI) பிந்தைய மக்கள்தொகை – முந்தைய மக் கள்தொகை எனக் கணக்கிடலாம். இரண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் இடைக்காலத்தில் ஏற் படுகிற வட்டாரமெய்ந் நிலை இடப்பெயர்வு (Net Migration-NI), மக்கள் தொகையின் இயற்கை வளர்ச் சிக்கும் மொத்த மக்கள்தொகை வளர்ச்சிக்கும் உள்ள வேறுபாடு (NI-IPI) ஆகும். குறிப்பிட்ட காலத்தில் ஏற்படும் மெய்ந்நிலை இடப்பெயர்வு = அதே காலத் தின் மொத்த மக்கள் வளர்ச்சி – மக்களின் இயற்கை வளர்ச்சியாகும். பிறப்பு இறப்புப் பதிவுமுறைத் தன்மையைப் பொறுத்தும், மக்கள் தொகைக் கணக் கெடுப்புத் தன்மையைப் பொறுத்தும் உள்மெய்ந் நிலை இடப்பெயர்வைத் துல்லியமாகவும் சிறந்த முறையிலும் கணக்கிடலாம். ஆனால், வளர்ச்சி யடைந்து வரும் நாடுகளில் பிறப்பு இறப்புகள் முழுமையாகவும் சரியான முறையிலும் பதிவு செய்யப்படுவதில்லை. மக்கள்தொகைக் கணக் கெடுப்பும் அந்நாடுகளில் முழுமை பெறாமல் குறைபாடுகளோடு உள்ளன. எனவே, அத்தகைய நாடுகளில் இம்முறையில் உள்மெய்ந்நிலை இடப் பெயர்ச்சியைக் கணக்கிடுவது சீராக இருப்பதில்லை.

மக்கள் பிறப்பு இறப்புப் பதிவேட்டு முறையின் விரிவாக்கப்பட்ட முறையே மக்கள் நீடு நிலவல் விகிதமுறை (Survival Ratio Method) ஆகும். இம் முறையில் ஒரு வட்டாரத்தின் கண்ணுள்ள உள் மெய் இடப்பெயர்வைக் கணக்கிட அந்த வட்டாரத் தின் இரண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் மக்கள் வயது, பால் விகிதங்கள் தேவைப்படுகின்றன. ஒவ்வொரு பால் (Sex) இனத்திற்கும், அவ்வவ் வயது எண்ணிக்கை கொண்ட வாழ்வோர் மக்கள் விகிதங் கள் (Survival Ratios) கணக்கிடப்படும். இந்த விகி தங்களைக் கொண்டு முந்தைய ஒவ்வொரு வயதின் மக்கள்தொகைக் கணக்கெடுப்பு மக்கள் எண்ணிக் கையைப் பெருக்கி வரும் மக்கள் எண்ணிக்கையே, அடுத்த வயதில் அடுத்த மக்கள்தொகைக் கணக் கெடுப்பு ஆண்டில், எதிர்பார்க்கும் மக்கள்தொகை ஆகும். இதனைத் துல்லியமாகப் பின்வரும் எடுத்துக் காட்டு மூலம் விளக்கலாம்.

$\rho^{(1951)\text{ஆ}}_{20-29}$ என்பது 1961–ஆம் ஆண்டு மக்கள் கணக் கெடுப்பில் 20–29 வயதில் உள்ள ஆண்கள், $\rho^{(1951)\text{ஆ}}_{30-39}$ என்பது 1961–ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக் கெடுப்பில் 30-39 வயதில் உள்ள ஆண்கள். இவற்றி லிருந்து பெறும் வாழ்வோர் விகிதம் $= \dfrac{\rho^{(1961)\text{ஆ}}_{30-39}}{\rho^{(1951)\text{ஆ}}_{20-29}}$

இதே விகிதம் தொடர்ந்து மாறாமல் இருக்கு

மேயானால், இதனைப் பயன்படுத்தி 1961-ஆம் ஆண்டு 20-29 வயதிலுள்ள ஆண்கள் எண்ணிக் கையைப் பெருக்கினால், 1971-ஆம் ஆண்டு 30-39 வயதில் எவ்வளவு ஆண்கள் எதிர்பார்க்கப்படுகின்ற வர் என்பதை அறியலாம். இதே வயதில் இந்த எண்ணிக்கைக்கும், 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் ஆண்கள் எண்ணிக்கைக் கும் உள்ள வேறுபாடு இந்த வட்டாரத்தின், இந்த வயதில், உள்மெய்ந்நிலை இடப்பெயர்வு ஆகும். இதேபோன்று எல்லா வயதுகளுக்கும், தனித்தனியே ஒவ்வொரு பால் இனத்திற்கும் உள்மெய்ந்நிலை இடப்பெயர்வு அறிய இயலும்.

இடப்பெயர்வு என்பது தொடர்ந்து நடைபெறும் ஒரு நிகழ்ச்சியாகும். நாட்டின் பல இடங்களிலும் வேறுபட்ட சமூக, பொருளாதார நிலைகள் நிலவு வதனால் இந்த நிகழ்ச்சி தூண்டப்படுறது. ஒவ்வொரு மனிதனும் தான் இருக்குமிடத்தில் தன்னுடைய தேவைகள் நிறைவேற வாய்ப்போ சாதகமான சூழ் நிலையோ இல்லாதிருப்பின் இடம்பெயர எண்ணு கிறான். பொதுவாக, ஒவ்வோர் இடத்திலும் பலவித உந்தும் காரணிகள் (Push Factors) வெளியேற்றும் சக்தியாகவும், ஈர்க்கும் காரணிகள் (Pull Factors) வரவழைக்கும் சக்தியாகவும் செயற்படுகின்றன. அங்குள்ள மக்கள் தங்களுடைய தகுதிக்கும் மற்றச் சூழ்நிலைக்கும் ஏற்ப இவ்விதச் சக்திகளுக்கு இணங்கியோ இணங்காமலோ செயற்படுகின்றனர்.

**உந்தும் காரணிகள்:** (1) ஒரு வட்டாரத்தில் இயற்கை வளம் குறைதல், அங்குள்ள தொழிற் சாலைகளின் பணிகளுக்கோ உற்பத்திப் பொருளுக்கோ தேவை (Demand) குறைதல், (2) மனித உழைப்புக்குத் தேவை குறைதல், வேலைவாய்ப்பு இழப்பு; (3) தனிப் பட்ட அரசியல், மத இனத்தைச் சார்ந்திருப்பதனால் அடிமைத்தனமாகவும் ஒடுக்கப்பட்டும் நடத்தப் படுதல், தன்னிச்சையாகச் செயற்பட இயலாத நிலை, (4) சமுதாயத்தில் நிலவும் மூட நம்பிக்கை களும் பழக்க வழக்கங்களும் மாறுபடுவதனால் குடும்பத் திலிருந்தோ சமுதாயத்திலிருந்தோ ஒதுக்கி வைக்கப் படுதல், (5) தனி ஆளின் முன்னேற்றத்திற்கோ வேலைவாய்ப்புக்கோ திருமணத்திற்கோ வாய்ப்புகள் குறைந்தோ இல்லாமலோ இருத்தல், (6) வெள்ளம், தீ, பஞ்சம், புவியதிர்ச்சி, வறட்சி, கொள்ளை நோய் (Epidemic) போன்ற இயற்கைச் சீற்றங்களிலிருந்து தானே சமுதாயத்திலிருந்து விலகி விடுதல் ஆகியன இடப்பெயர்வுக்கு உந்தும் காரணிகளாகும்.

**ஈர்க்கும் காரணிகள்:** (1) தன்னுடைய தொழிலில் முன்னேற அதிக வாய்ப்புகளும் தான் விரும்பிய தொழிலில் வேலைவாய்ப்புகளும் நிறைந்திருப்பது, (2) மிகை ஊதியத்திற்கான வாய்ப்புகள், (3) உயர்தர அல்லது சிறப்புக் கல்வியும் பயிற்சியும் பெறுவதற் கான வாய்ப்புகள், (4) வாழ்க்கைக்குகந்த கால நிலை, வீட்டு வசதி, மருத்துவக்கல்வி, சமுதாய வசதிகள் நிறைந்த சூழ்நிலை இருத்தல், (5) ஊதியம் பெறும் ஆளைச் சார்ந்துள்ள குடும்ப அங்கத்தினர் களாகவும், புதிதாக மணமாகிய மனைவி கணவன் இருப்பிடம் செல்வதும், (6) பலவகைப் பண்பாட்டுப் பொழுதுபோக்கு வசதிகள் ஆகியன இடப் பெயர்வுக்குக் காரணமாக இருக்கும் ஈர்க்கும் காரணி களாகும்.

எவரெட்டு இசுலீ (Everett Slee) என்னும் அறிஞர் இடப்பெயர்வின் காரணிகளை நான்கு குழுக்களாகத் தொகுத்துத் தமது இடப்பெயர்வுக் கோட்பாட்டை விளக்குகிறார். அவை: (1) ஆதியிடத் தில் நிலவும் சாதகமற்ற எதிர்மறையான காரணிகள், (2) இடப்பெயர்ச்சி முடிவடையும் இடத்தில் நிலவும் சாதகமான காரணிகள், (3) ஆதியிடத்திற்கும் இடப் பெயர்வு முடிவடையும் இடத்திற்கும் இடையிலுள்ள தூரம், பிரயாணச் செலவு போன்ற தலையிடும் தடைகள், (4) ஒருவரின்தனிப்பட்ட அல்லது சொந்தக் காரணிகள் (Personal Factors) என்பன.

இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு இடம் பெயர்வோர் முடிவெடுப்பர் என எவரெட்டு இசுலீ. விளக்குகிறார். இந் நான்கு வகைக் காரணிகளுள் நன்மை பயக்கக்கூடிய ஒன்றேனும் மிகையாக இருப் பின், இடப்பெயர்வு திட்டமாக நடைபெறும் என்பது அவர்தம் கருத்து. இவற்றிற்கு எதிர்மறைக் காரணி கள் மிகையாக இருப்பின் திட்டமாக இடப்பெயர்வு நடைபெறாது.

இ.சி. இரவென்சுட்டின் (E.G. Ravenstein) உள் நாட்டு இடப்பெயர்வு 7 வகையானகட்டுப்பாட்டுக்குள் நடைபெறுவதாகக் கூறுகிறார். அவை: (1) குறைந்த தூரமுள்ள இடப்பெயர்வில் மிகையான ஆட்கள் பங்கு பெறுவர். இடம்பெயரும் தூரம் கூடுதலாகக் கூடுதலாக இடம்பெயர்வோர் எண்ணிக்கை குறையும். (2) இடப்பெயர்வு பல கட்டங்களில் (Stage by Stage) நடைபெறும். தொடக்க கால கட்டத்தில் ஊரகத்திலிருந்து சிறு நகரங்களுக்கும், பின்னர்ச் சிறு நகரத்திலிருந்து பெரு நகரத்திற்கும் எனப் படிப் படியாக ஏறுமுகக் கட்டங்களில் (Progressive Stages) நடைபெறும். (3) ஒவ்வொரு, குறிப்பிட்ட இடப் பெயர்வுச் சுழற்சிக்குள்ளும் (Migration Cycle) எதிர்மறையான இடப்பெயர்வுச் சுழற்சி (Counter Cycle) உண்டாகும். (4) ஊரகத்து மக்களைவிட

நகரத்து மக்கள் இடப்பெயர்வில் அதிக ஈடுபாடு உடையவர்களாக இருப்பர். (5) தொலைதூர இடப் பெயர்வில் ஆண்கள் மிகையாகவும், குறைந்த தூர இடப்பெயர்வில் பெண்கள் மிகையாகவும் இருப்பர். (6) தொழில்நுட்ப முன்னேற்றத்திற்கு (Technical Development) உகந்தாற்போல் இடப்பெயர்வு வீதம் மாறுபடும். (7) இடப்பெயர்வு பெரும்பாலும் பொருளாதார அடிப்படையானவையாக இருக்கும்.

விளைவுகள்: பொதுவாக உள்நாட்டில் நிகழும் இடப்பெயர்வு சமூக, பொருளாதார, பிறப்பு, இறப்பு விகிதங்களில் ஏற்றத்தாழ்வுகளை உண்டாக்குகிறது. குறிப்பாக, நகரங்களை நோக்கி இடம் பெயர்தல் மக்கள் எண்ணிக்கையில் அழுத்தம் (Population Pressure) ஏற்படுத்தி மக்கள் நெருக்கடியையும், பல் வகைச் சமுதாயச் சிக்கல்களையும் பொருளாதாரச் சீர்கேடுகளையும் உண்டாக்குகிறது. இடப்பெயர்வு பொதுவாக, வயது - பால் அடிப்படையில் (Age - Sex Selective Migration) நிகழ்வதால் ஊரகங்களி லும் நகர்ப்புறங்களிலும் பால் வயது விகிதங்கள் வேறுபட்டுக்கொண்டே இருக்கின்றன. சிறப்பாக, உழைப்போர் வயது விகிதங்கள் மிகையான அளவில் பாதிக்கப்படுகின்றன. இதனால் குறிப்பாக, நகர்ப் புறங்களில் உழைக்கும் வயதுள்ள மக்களின் எண் ணிக்கை மிகையாக அதனால் வேலைவாய்ப்பின்மை யும் (Unemployment) திறனற்ற உழைப்போர் (Unskilled Labour) எண்ணிக்கையும் உயர்ந்து, பொரு ளாதாரச் சிக்கல்கள் உண்டாகின்றன. நகர்ப்புறங் களில் குடியிருப்புப் பற்றாக்குறை, சுகாதார, மருத் துவப் பற்றாக்குறை, சுற்றுப்புறச் சீர்கேடுகள், கல்விக் கூடங்களில் இடநெருக்கடி, குடிசைப் பகுதிகள் (Slums) போன்றவை உருவாகி நகரில் சிக்கல்கள் பெருகுகின்றன.

இந்தியாவில்: இந்தியாவில் கி.பி. 1881-ஆம் ஆண்டு முதன் முதலில் நாடு தழுவிய முழுமையான மக்கள் தொகைக் கணக்கெடுப்பு (National Population Census) நடத்தப்பட்டது. அதுமுதல் ஒவ்வொரு 10 ஆண்டிலும் இடப்பெயர்வு பற்றிய புள்ளிவிவரங் களும் மக்கள்தொகைக் கணக்கெடுப்போடு சேகரிக்கப் படுகின்றன.அவற்றுள் குறிப்பிடத்தக்க கூறுகளாவன: (அ) கி.பி. 1872-இல் இனம் (Race), தேசிய இனம், பிறந்த நாடு, (ஆ) கி.பி. 1881-இல் பிறந்த இடம் (Place of Birth), (இ) கி.பி. 1891-இல் பிறந்த மாவட்டம், (ஈ) 1911-இல் பிறந்த மாவட்டம் மாநி லம், (உ) 1951-இல் பிறந்த இடத்தின் பெயர், (ஊ) 1961-இல் (1) பிறந்த ஊரகம், நகரம் (2) கணக் கெடுப்பு இடத்தில் எவ்வளவு காலமாக வாழ்ந்து வருகிறார், (எ) 1971-இல் இதற்கு முன் வசித்த இடம், (ஏ) 1981-இல் மேற்கூறிய அனைத்து வினாக் களும் இடம்பெற்றுள்ளன; இவை தவிர இடப்பெயர் வுக்கான காரணங்களும் கேட்கப்பட்டுள்ளன.

சிக்கல்கள்: (1) குடும்பத்தில் உள்ள ஒருவர் தம்முடைய பிற குடும்ப உறுப்பினர்களின் பிறந்த இடங்களைப் பற்றிக்கூறும் புள்ளிவிவரங்கள் சரியான வையாக நம்பத்தக்கவையாக இல்லை. குறிப்பாக, ஊரக மக்கள் தரும் புள்ளிவிவரங்கள் தவறாக உள்ளன. (2) ஒரு குடும்பத்தின் தலைவர் அல்லது வீட்டில் உள்ளவர்கள் தங்கள் வீட்டில் உள்ளவர் களின் பிறந்த இடத்தைப் பற்றித் தெளிவாக அறிந் திருப்பர் என்று எதிர்பார்க்க முடியாது. குறிப்பாக, மருமகளின் பிறந்த இடத்தைப் பற்றித் தவறான தகவல்கள் அளித்துவிடுகின்றார்கள். (3) இடம் பெயர்ந்தோர் மீண்டும் தம்முடைய பிறந்த இடத் திற்கு இரண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்புக் கால இடைவெளிக்குள் குடிபெயர்ந்திருந்தால், அவர் களுடைய பெயர் இரண்டு இடங்களிலும் குடிபெயர்ந் தோர் பதிவேட்டில் பதிவு பெற்றிராது. (4) பெற் றோர்கள் தங்கள் குழந்தை அவர்கள் வாழும் இடத் தில் பிறவாமல் வேறோர் இடத்தில் பிறந்திருந்தா லும், தாங்கள் வாழும் இடத்தைக் குழந்தையின் பிறந்த இடமாகக் கூறுவர்.

இந்திய மக்கள்தொகைக் கணக்கெடுப்பில் சேக ரித்த புள்ளிவிவரங்கள் 1931-ஆம் ஆண்டு வரை சரி யான அளவில் பயன்படவில்லை. இடப்பெயர்வு குறித்த புள்ளிவிவரங்களைச் சரியான முறையில் கணக்கிடத் தேவையான அட்டவணை (Tables) 1941-ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பில் பயன்படுத்தப்படவில்லை. ஏனெனில், அப்பொழுது இரண்டாம் உலகப்போர் நடந்து கொண்டிருந்தது. ஆனால், 1961-ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக் கெடுப்பில் உள்நாட்டு இடப்பெயர்வு குறித்த புள்ளி விவரங்களை அட்டவணைப்படுத்தினர். ஒவ்வொரு மாவட்டத்திலும் நடைபெற்ற உள்ளிடப்பெயர்வு குறித்த புள்ளி விவரங்களும் அட்டவணைப்படுத்தப் பட்டன. எனினும், 1961-ஆம் ஆண்டு மக்கள் தொகைக்கணக்கெடுப்பின் புள்ளிவிவரங்களே பயனுள் ளவையாக இருந்தன. ஏனெனில் ஒவ்வோர் ஆளின் பிறந்த இடம் ஊரகமா? நகரமா? அப்போது அவர் வாழும் இடத்தில் எவ்வளவு காலமாக வாழ்கிறார்? போன்ற கேள்விகள் கணக்கெடுப்பில் கேட்கப்பட் டன. இதனால், மக்கள்தொகை இயல் அறிஞர்களுக் குத் தேவையான ஊரகநகர இடப்பெயர்வு பற்றிய புள்ளிவிவரங்கள் கிடைத்தன.

இந்திய மக்கள்தொகையில் 1961-ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கின்படி, 31.4 விழுக்காடு

இடம்பெயர்ந்தோர் ஆவர். இதில் ஏறத்தாழ மூன்றில் இரண்டு பங்கு பெண்கள் ஆவர். பின்னர், 1971-ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கின்படி, இடம்பெயர்ந்தோர் வீதம் குறைந்து 29.5 விழுக்காடாக இருந்தது. மக்கள்தொகை வளர்ச்சி பத்தாண்டுகளில் 24.80 விழுக்காடு உயர்ந்துள்ளது. இடம்பெயர்ந்தோர் வளர்ச்சி வீதம் 29.67 விழுக்காடு அளவாக உயர்ந்துள்ளது. கிடைத்துள்ள புள்ளி விவரப்படி, பெண்கள் ஆண்களை விட ஓர் ஊரகத்திலிருந்து அருகிலுள்ள ஊரகத்திற்கு அதிக அளவில் இடம் பெயர்கின்றனர். ஊரகத்திலிருந்து நகரப் பகுதிகளுக்கு மக்கள் மிகையான அளவில் இடம்பெயர்ந்துள்ளனர். அதேபோல் ஒரு நகரத்திலிருந்து மற்றொரு நகரத்திற்கு ஆண்கள் அதிக அளவில் இடம்பெயர்ந்துள்ளனர்.

எல்.பி.வெ.

துணை நூல்கள்:

**Asha A. Bhende and Tara K. Kanitkar,** Principles of Population Studies, Himalaya Publishing House, Bombay, 1978.

Census of India, 1971 India, Migration in India, Government of India Press, Delhi, 1980.

**Donald J. Bogue,** Principles of Demography, Johnwileg and Sons, NewYork, 1969.

United Nations, The Determinants and Consequences of Population Trends, Department of Economic and Social Affairs, New York, 1973.

***உள்ளிவிழா*** பழந்தமிழகத்தில் கொண்டாடப்பெற்ற ஒரு திருவிழா. இவ்விழா பற்றிய குறிப்பு அகநானூற்றுப் பாடல் ஒன்றில் (அகம். 368) இடம்பெற்றுள்ளது. ‘கொங்கர், மணி அரை யாத்து மறுகில் ஆடும், உள்ளி விழாவின் அன்ன அலராகின்றது, என்பது அக்குறிப்பு. தலைவி தலைவன் ஆகியோரிடை நிகழ்ந்த களவொழுக்கம் வெளிப்பட்டு அலராயினமைக்கு உவமையாகக் கொங்கர் எடுக்கும் உள்ளி விழாவின் போது உண்டாகும் ஆரவாரம் கூறப்பட்டுள்ளது. இவ்விழா கொங்கு நாட்டு மக்களால், எடுக்கப்பட்டது என்பதும், விழாவின்போது அவர்கள் தங்கள் இடையில் மணிகளைக் கட்டிக் கொண்டு ஆரவாரம் உண்டாகக் கூத்தாடுவர் என்பதும் இக்குறிப்பினால் புலனாகின்றன. கொங்கு நாட்டுப் பகுதியில், குறிப்பாகக் கருவூரில் இவ்விழா மிகவும் சிறப்பாக எடுக்கப்பட்டது என்னும் செய்தி இறையனார் அகப்பொருள் உரையினாலும் அறியப்படுகிறது. அந்நூல் ஊர்துஞ்சாமை என்னும் இரவுக்குறி இடையீட்டை விளக்குங்கால், ஊர் மக்கள் உறங்காமைக்குக் காரணமான பெருநகர விழாக்களை, ‘மதுரை ஆவணி அவிட்டமே, உறையூர்ப் பங்குனி உத்திரமே, கருவூர் உள்ளி விழாவே என இவை போல்வன’ என்று குறிப்பிடுகிறது (இறை, களவியல், நூ. 16 உரை). இதனால், உள்ளி விழா கொங்குநாட்டைச் சேர்ந்த கருவூரில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது என்பதும், அப்பொழுது ஊர்மக்கள் இரவுமுழுவதும் உறங்காது இவ்விழாவில் கலந்து கொண்டனர் என்பதும், இவ்விழா உள்ளி விழா எனக் கூறப்பட்டது என்பதும் புலனாகின்றன.

அ.மா.ப.

***உள்ளீடு - வெளியீடு ஆய்வு***: தொழில், வேளாண்மை, பணி ஆகிய மூன்று பொருளாதாரத் துறைகளின் ஆக்கப் பணிக்காகச் செலுத்தப்படும் பண்டங்களும் பணிகளும் உள்ளீடுகள் (Input) எனவும், அவற்றின் விளைவாக வெளிப்படும் பயன்கள் அனைத்தும் வெளியீடுகள் (Outputs) எனவும் வழங்கப்படுகின்றன. உள்ளீடு-வெளியீடு ஆகியவற்றிற்கிடையேயுள்ள பொருளியல் உறவு, தொடர்பு, விளைவுகள் போன்றவற்றால் பொருளாதாரத் துறையில் ஏற்படும் தாக்கங்களைப் பகுத்தறியும் ஆய்வு உள்ளீடு-வெளியீடு ஆய்வுக் கோட்பாடு (Input-Output Analysis) ஆகும். பேராசிரியர் வாசிலி இலியோண்டிபு (Wassily Leontief) 1951-ஆம் ஆண்டில் இவ்வாய்வு முறையை ஒரு கோட்பாடாகச் செயல்முறை விளக்கத்துடன் வெளியிட்டார். வளர்ச்சியடைந்த பின்தங்கிய நிலையிலுள்ள இருவகை நாடுகளும் இவ்வாய்வு முறையினால் பெரும் பயனடைந்தன. இக்குறிப்பிட்ட ஆய்வுக்காக இலியோண்டிபு 1973-இல் நோபல் பரிசு பெற்றார்.

உள்ளீடு-வெளியீடு ஆய்வு இலியோண்டிபுவினுடைய அறிவாற்றலால் விளைந்த அரிய கண்டுபிடிப்பாகும். அவருக்கு முன், இரண்டு அறிஞர்கள் இக்கருத்துகளை வேறு முறையில் வெளியிட்டிருந்தனர். பிரான்சு நாட்டின் சிறந்த தொன்மைப் பொருளியலார் கியூசுநேயின் (Quesnay) ‘பொருளாதார ஓவியப் பட்டியல்’ (Tableau Economique) என்ற நூலிலும், காரல் மார்க்சின் (Karl Marx) ‘முதலீட்டின் மறு உற்பத்தித் திட்டம்’ (Scheme of Reproduction of Capital) என்ற நூலிலும் உள்ளீடு-வெளியீடுஆய்வு முறை உலகிற்கு அறிமுகமாயிருந்தது. ஆனால், இவர்கள் இருவரும் பொருளாதாரங்களில் இவ் ஆய்வுமுறை செயற்படுவதைப் பற்றிய விளக்கங்களை ஆய்ந்து அளிக்கக் கவனம் செலுத்தவில்லை. எனவே, நாட்டின் பொருளாதார அடிப்படையிலோ குறிப்பிட்ட ஒரு கால வரையறையிலோ இவ் ஆய்வுமுறை பயன்படவில்லை.

இதன் செயல் முறைக்கு முதலில் வழி வகுத்த பெருமை உருசியநாட்டு அறிஞர் வி.சி. குரோமனைச் (V.C. Groman) சாரும். ஆனால், உள்ளீடு-வெளியீடு ஆய்வுமுறையைத் திறம்பட ஆராய்ந்து, அதன் நுணுக்கங்களைப் பொருளாதாரங்களில் பயன் படக் கூடிய வகையில் வழிவகுத்தவர் இலியோண்டிபு. அவர் இதனைத் தம் பொதுச் சமநிலைக் (General Equilibrium) கோட்பாட்டின் வழி விளக்கினார்.

உற்பத்திக்காக விலை கொடுத்து வாங்கப்படும் பண்டங்களும் பணிகளும் உள்ளீடுகளில் அடங்கும். இவற்றை உள்ளீடு உற்பத்திக் காரணிகள் என்றும் கூறலாம். பேராசிரியர் இக்சு (Prof. Hicks) கருத்துப்படி தொழில் துணிவின் (Industrial Enterprise) பயன்பாட்டிற்காகக் கொள்முதல் செய்யப்படும் பொருள்களும் பணிகளும் உள்ளீடுகளாகவும், உற்பத்தி செய்யப்பட்டுத் தொழில்முனைவோரால் (Entre-preneur) விற்கப்படுபவை வெளியீடுகளாகவும் வகைப் படுத்தப்பட்டன. எனவே, உள்ளீடுகள் நிறுவனத் தாலோ தொழில்முனைவோராலோ கொள்முதல் செய்யப்படுபவை. அவை நிறுவனத்தின் செலவுப் பட்டியலைச் சாரும். வெளியீடு உற்பத்தி செய்யப் படுபவை. அவை நிறுவனத்திற்கு வருவாய் அளிக்கும் பட்டியலைச் சாரும்.

உள்ளீடு-வெளியீடு ஆய்வு, பொதுச் சமநிலைக் கோட்பாட்டைச் சார்ந்தது. இது பட்டறிவு அடிப் படையிலான உற்பத்தி ஆய்வு முறையுமாகும் எனப் பேராசிரியர் போமால் கூறியிருக்கிறார். பொருள் உற்பத்திக்குப் பயன்படுபவை 'உள்ளீடு' எனவும், உற்பத்தி செய்யப்படுபவை 'வெளியீடு' எனவும் சொல்லப் படுகின்றன. உள்ளீடு-வெளியீடு ஆய்வு முறை உள்ளீட் டுக்கும் வெளியீட்டுக்குமிடையே உள்ள நெருங்கிய சார்பைத் தெளிவுபடுத்துவதாகும். இந்த ஆய்வு முறை தொழிலகங்களுக்கிடையே உள்ள சார்பினை விளக்குகிறது. பொருளாதாரம் முழுவதுமே துறைக் குத் துறை, தொழிலுக்குத் தொழில், பகுதிக்குப் பகுதி ஒன்றோடொன்று இணைந்து சார்புள்ளதாயிருக்கின் றது. எடுத்துக்காட்டாக, ஒரு தொழிலின் வெளியீடு மற்றொன்றின் உள்ளீடாக இருக்கும் சார்பமைப்பே இந்த ஆய்வு முறையின் அடிப்படையாகும். பொருளா தாரம் தூய சமநிலைச் (Perfect Equilibrium) சூழ் நிலையில் இருக்கும்போது, பொருளாதாரத்தின் வெளியீடுகளின் பண மதிப்பு, எல்லாத் துறைகளின் உள்ளீடு-வெளியீடுகளின் பண மதிப்பிற்குச் சமமாக (உள்ளீடு = வெளியீடு) இருக்க வேண்டும்.

இவ்வாய்வு முறைக்கு நான்கு சிறப்புக் கூறுகள் உள்ளன; (அ) பொதுச் சமநிலையிலுள்ள பொருளா தாரத்திற்கு மட்டுமே இவ்வாய்வு முறை பயன்படும். பகுதிச் சமநிலையிலுள்ள (Partial Equilibrium) பொருளாதாரங்களுக்கு இது பயன்படாது. (ஆ) இவ் ஆய்வின் நுட்ப முறைக்கும் (Technique) தேவை ஆய்வுக்கும் (Demand Analysis) தொடர்பு இல்லை. இதன் ஒரே நோக்கம் உற்பத்தியையும் அதனைச் சார்ந்த நுட்பச் சிக்கல்களையும் (Technological Problems) ஆய்வதாகும். (இ) இது பட்டறிவு அடிப் படையில் செயற்படும் ஓர் ஆய்வாகும். (ஈ) இதற்கு இரண்டு நிலைகள் உள்ளன: (1) உள்ளீடு-வெளியீடு அட்டவணையை உருவாக்குவது, (2) சீரான முறை யில் அதனைப் பயன்படுத்துவது.

எடுகோள்கள்: பேராசிரியர் இலியோண்டிபு தம் ஆய்வு முறையை விளக்குவதற்குச் சில எடுகோள் களைக் (Assumptions) கையாண்டார். அவை: (அ) பொருளாதாரம் முழுவதுமே தூய சமநிலையில் இருக்க வேண்டும். (ஆ) பொருளாதாரத்தைப் பல துறைகளாகப் (Sectors) பிரிக்கலாம். ஒவ்வொரு துறையினையும் மேலும் பல துணைத் துறைகளாகப் (Sub-sectors) பிரிக்க இயலும். (இ) ஒவ்வொரு தொழிலும் ஒரு பொருளை மட்டுமே உற்பத்தி செய்ய வேண்டும். எந்த இரண்டு உற்பத்திப் பொருள் களும் பல தொழில் நிறுவனங்களால் சேர்ந்து உற் பத்தி செய்யப்படக்கூடாது. (ஈ) ஒரு தொழில் நிறு வனத்தின் மொத்த வெளியீடு மற்றொரு தொழில் நிறுவனத்தின் உள்ளீடாகப் பயன்படுத்தப்படும். அவ் வாறு பயன்படுத்துவது அதே நிறுவனமாகவும் இருக்க லாம் அல்லது இறுதித் தேவைத் (Final Demand) துறையாகவும் இருக்கலாம். (உ) உற்பத்திக்குரிய விதி உற்பத்தி அளவில் மாறா விளைவுகளாக இருக்க வேண்டும்(Constant Returns to Scale). (ஊ) தொழில் நுட்பம் (Technology) மாறா நிலையில் இருக்க வேண்டும். (எ) உற்பத்தியில் புறச் சிக்கனங்களும் (External Economies) புறச் சிக்கனக்கேடுகளும் (Ex-ternal Diseconomies) இருக்கக் கூடாது.

நிலையான வடிவம்: இலியோண்டிபுவின் நிலை யான படிவத்தில் (Static Model) நிலக்கரி, இரும்பு போன்ற பொருள்களின் உற்பத்திக்குக் கூலி, முதல் (Capital) போன்ற உள்ளீடுகள் உற்பத்திக் காரணி களாகத் தேவைப்படுகின்றன. முழுமையான பொருளாதாரத்தில் ஒரு தொழிலின் வெளியீடு மற் றொரு தொழிலின் உள்ளீடாக இருப்பதால், தொழில் களிடையே உருவாகும் இணைப்பு விளைவுகள் (Linkage Effects) வெளிப்படுகின்றன. இந்தச் சார் புத் தொடர்புகளினால் பொருளாதாரத்தின் மொத்தத் தேவைகளை (Total Demand) மொத்த

அளிப்புகள் (Total Supply) நிறைவு செய்ய, நாட்டின் பொருளாதாரம் பொதுச் சமநிலையை அடைகிறது.

இலியோண்டிபுவின் படிவத்தை ஓர் எடுத்துக் காட்டு மூலம் விளக்கலாம். மூன்று துறைகளைக் கொண்ட ஒரு பொருளாதாரத்தை எடுத்துக் கொண்டால், அவற்றில் வேளாண்மை, தொழில் ஆகிய இரண்டும் தொழில்களுக்கிடையே தோன்றும் சார்பை எடுத்துக்காட்டும். இவற்றுடன் குடும்பத் துறையை இறுதித் தேவைத் துறையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது.

மேலிருந்து கீழாகவுள்ள வரிசையில் செலவுகளின் உள்ளமைப்பைக் காணலாம். முதல் பத்தி வரிசையில் வேளாண்மைச் செலவு அல்லது உள்ளீட்டின் மதிப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. வேளாண்மை மூன்று துறைகளிலிருந்தும் (50, 60, 20) 130 கோடி உரூபாய் மதிப்புள்ள உள்ளீடுகளைப் பயன்படுத்தி, 350 கோடி உரூபாய் மதிப்புள்ள வெளியீட்டை உற்பத்தி செய்கிறது. அதாவது, மொத்த முதலீடு 130 கோடி உரூபாய்; உற்பத்தி வெளியீடு 350 கோடி உரூபாயாகும். தொழில் துறை 200 30 80 310 கோடி உரூபாயை மூன்று துறைகளிலும் முதலீடு செய்து

உள்ளீடு-வெளியீடு பட்டியல்

(உரூபாய் கோடியில்)

| வாங்கும் முறை | | | | | |
|---|---|---|---|---|---|
| | துறைகள் | வேளாண்மைக்கான உள்ளீடு | தொழிலுக்கான உள்ளீடு | இறுதித் தேவை | மொத்த வெளியீடு அல்லது வருமானம் |
| விற்கும் துறை | வேளாண்மை | 50 | 200 | 100 | 350 |
| | தொழில் | 60 | 30 | 90 | 180 |
| | குடும்பங்கள் | 20 | 80 | 00 | 100 |
| மொத்த உள்ளீடு அல்லது செலவு | | 130 | 310 | 190 | 630 |

இப் பட்டியலில் மூன்று துறைகளின் மொத்த வெளியீடுகள் நேர் வரிசைகளிலும் (Rows), உள்ளீடுகள் மேலிருந்து கீழான பத்தி வரிசைகளிலும் (Columns) கொடுக்கப்பட்டுள்ளன. வேளாண்மையின் மொத்த வெளியீட்டு மதிப்பு 350 கோடி உரூபாயாகும்; அதில் இறுதி நுகர்வுக்கானது 100 கோடி உரூபாய். எஞ்சியுள்ள வெளியீடுகள் மற்ற இரண்டு துறைகளுக்கும் உள்ளீடுகளாகின்றன. அதாவது, வேளாண்மைக்கு 50 கோடி உரூபாய் உள்ளீடு ஆகவும், தொழில் துறைக்கு 200 கோடி உரூபாய் உள்ளீடாகவும் பயன்படுகின்றன. தொழில் துறையின் மொத்த மதிப்பு 180 கோடி உரூபாய். அதில் 60 கோடி உரூபாய் மதிப்புள்ள பொருள்கள் வேளாண்மைக்கு உள்ளீடாகவும், 30 கோடி உரூபாய்ப் பொருள்கள் தொழில் துறையின் உள்ளீடாகவும், 90 கோடி உரூபாய்ப் பொருள்கள் இறுதி நுகர்வுக்காகவும் (Final Consumption) ஒதுக்கப்படுகின்றன.

180 கோடி உரூபாய் மதிப்புள்ள வெளியீட்டு உற்பத்திக்குக் காரணியாகிறது. குடும்பத் துறைக்குக் கடைசிப் பத்தியில் ஒரு வெளியீடும் ஒதுக்கப்படவில்லை. அதாவது, குடும்பத் துறை செலவிடும் (நுகரும்) பகுதியே தவிர, தனக்கே ஒன்றும் விலைக்கு விற்பதில்லை. அதாவது, கூலி தன்னையே நுகர்வதில்லை என்பதாகும்.

இந்த உள்ளீடு - வெளியீட்டுப் பட்டியலைக் கொண்டு பேர அணிகள் (Transaction Matrixes) உருவாக்கப்பட்டு, தொழில்நுட்பக் கெழு (Technical Coefficient) கணக்கிடப்படுகிறது. அதிலிருந்து அணி (Matrix) கணிதமுறையும், ஒருங்குச் சமன்பாடுகளும் (Simultaneous Equations) பெறப்படுகின்றன. இதுவே இலியோண்டிபுவின் நிலையான படிவமாகும். அவர் இயக்கநிலைப் படிவம் (Dynamic Model) ஒன்றையும் உருவாக்கினார். இந்த உள்ளீடு-வெளி

யீடு ஆய்வு, தொழில்களுக்கிடையே தோன்றும் சார்பு களையும், துறைகளுக்கிடையே தோன்றும் இணைப்பு விளைவுகளையும் விளக்கும் கருவியாகும். எத்துறை யும் பொருளாதாரத்தில் தனித்துச் செயற்படுவ தில்லை; செயற்படவும் முடியாது. இதுவே இக்கோட் பாட்டின் அடிப்படைக் கொள்கையாகும்.

இலியோண்டிபுவின் உள்ளீடு-வெளியீடு ஆய்வு உல கெங்கும் பரவிப் பொருளியலில் ஒரு புரட்சியை ஏற் படுத்தியது. இதன் சிறப்புகள்: (அ) பொருளியலின் ஒப்பற்ற ஆய்வுக் கருவி. (ஆ) அறிஞர் வால்ராசின் பொதுச் சமநிலைக் கோட்பாட்டின் ஒரு சிறந்த எடுத்துக் காட்டு. (இ) நாட்டின் வரவு—செலவுத் திட் டத்தில்தனிச்சிறப்புப் பங்கு வகிக்கிறது. (ஈ) பேரினப் (Macro) பொருளியல் கண்ணோட்டத்தில் பணத்தை யும் உள்ளோட்டத்தையும் (Inflow) வெளியோட் டத்தையும் (Outflow) மதிப்பிட இம்முறை பயன்படு கிறது. (உ) பொருளாதாரத் திட்டத்தில் உச்ச உற் பத்தி நிலையை அடைய உகந்த காரணிச் சேர்க்கை களை (Optimal Factor Combinations) முடிவு செய்ய இம்முறை பயன்படுகிறது. (ஊ) நிறுவனங்களுக் கிடையேயும் தொழில்களுக்கிடையேயும் உள்ள உறவு, தொடர்பு, இணைப்பு விளைவு ஆகியவற்றைக் கண்டு கொள்ள உதவுகிறது. (எ) வணிகச் சுழலின் (Trade Cycle) சிக்கல்களையும், பொருளாதாரத்தில் ஏற் படும் கட்டுப்படாத அலைவு-உலைவுகளையும் (Fluctuation) ஓரளவுக்கு அளவிட உதவும் கருவியாகவும் பயன்படுகிறது.

பொருளாதாரத் திட்டத்தில்: இவ்வாய்வு பொரு ளியலின் பல்வேறு துறைகளில் இன்று பயன்படுத்தப் பட்டு வருகிறது. சிறப்பாக, இன்றைய பொருளா தாரத் திட்டங்களில் இக்கருவி இன்றியமையாத இடம் பெற்றுள்ளது. முதலாளித்துவப் பொருளா தாரங்களுக்கு மட்டுமல்லாமல் பொதுவுடைமைப் பொருளாதாரங்களுக்கும் இம்முறை பயன்படுகிறது. பொதுவுடைமைப் பொருளாதாரச் சூழ்நிலையில் உள்ளீடு-வெளியீடு ஆய்வுமுறையினால் நாட்டின் பொருளாதாரத் திட்டங்களின் உட்பொருத்தத்தைக் கண்டுகொள்கின்றனர் என்று பேராசிரியர் இலான்சு கூறுகிறார். பொதுவுடைமைப் பொருளாதாரத்தில் திட்டக்குழு மையமாக உள்ளது. தொழில் அரசுடை மையாக்கப்பட்டு, தொழிற்றுறை அரசின் ஆணையின் கீழ்த் திட்டக்குழுவின் அதிகாரத்தில் செயற்படுகிறது. திட்டக்குழு நாட்டின் தேவை அனைத்தையும் வரை யறுத்து, உற்பத்தி வளப் பொருள்களின் (Resources) இருப்பையும் (Stock) அளிப்பையும் (Supply), உள்ளீடு -வெளியீடு ஆய்வுக் கோட்பாட்டின் அடிப்படையில் மக்களின் நலன் உச்சநிலை எய்தும் வகையில் அவற் றின் பல்வேறு துறைகளுக்கும் ஒதுக்கீடு செய்கிறது. திட்டங்கள் வெற்றிபெற உள்ளீடு-வெளியீடு ஆய்வு மிகச் சிறந்த கருவியாகும். வெவ்வேறு துறைகளுக் கிடையே உள்ள சார்பு, தொடர்பு இணைப்பு விளைவுகளைக் கண்டு பிடிக்கவும், அத்துறைகளின் உள்ளீடு-வெளியீடுகளை வரையறுக்கவும், தொழில் களுக்கிடையே வளப்பொருள்களின் ஓட்டத்தைக் கணக்கிட்டு, திட்டப்படி உற்பத்தியையும் பங்கீட்டை யும் செயற்படுத்தவும், திட்டக் குழுவுக்குத் தேவை யான வழிமுறைகளை இக்கோட்பாடு அளிக்கிறது.

இக் கணித முறை, முதலாளித்துவப் பொருளா தாரங்களில் தொழில் நிறுவனங்களிடையே ஏற்படும் சார்பு, தொடர்பு, வளப்பொருள்களின் ஓட்டம், உள் ளீடு-வெளியீட்டுத் தேவைகள் ஆகியவற்றை வரை யறுக்கவும் சீர்படுத்தவும் கையாளப்படும் ஒரு கருவி யாகும் மா.செ.

துணை நூல்கள்:

**Wassily W.** Leontief, Input-Output Economics, Oxford University Press, New York, 1966.

**Hollis B. Chenery & Paul G. Clark**, Inter Industry, Economics, John Wiley and Sons, New York, 1959.

**Singh S.P. et al**, Economics and Mathematical Economics, S.Chand and Sons, New Delhi, 1980.

**உள்ளுணர்வு**: மேல்நாட்டுத் தத்துவத்தில் உள்ளுணர்வு பற்றிய சிறப்பான கருத்துகள் இடம் பெற்றுள்ளன. பகுத்தறிவு அடிப்படையில் தத்துவ விளக்கங்கள் அமைந்திருக்கின்றன. ஆனால், உள்ளு ணர்வு (Intuition) பகுத்தறிவுக் கொள்கைக்கு எதிர் மறையாகக் கருதப்படுகிறது. உண்மையைப் பற்றி முழுவதுமாக உள்ளுணர்வு மூலம் அறியலாம்.

பகுத்தறிவை ஏற்கும் தத்துவ அறிஞர்கள்(Rationalists)'எல்லா உண்மைப் பொருள்களும் பகுத்தறிவுத் தொடர்பானவை; ஆகையினால் பகுத்தறிவே உண் மைப் பொருளை அறியப் பயன்படும்; தத்துவம் எப் பொழுதும் உலகு பற்றியும் ஆன்மா பற்றியும் பகுத் தறிவு கொண்டு ஆய்வு செய்கிறது' எனக் கருதுகின் றனர்.

பகுத்தறிவு சார்ந்த தத்துவ அறிஞர்கள் சில நம்பிக்கைகளையும் (Faiths) நினைவாற்றலையும் (Memory) புலனறிவாகக் கொள்கின்றனர். மனத்திற்

கெட்டாத சிலவற்றைத் தெரிந்து கொள்ள நினைவாற்றலும் அனுபவமும் தேவை. மறைமெய் சார்ந்த உண்மையான உணர்வுகளை ஒரு குற்றமாகக் கருத முடியாது. மறைமெய் சார்ந்த கருத்துகள் வாழ்க்கையில் துன்பநிலையைச் சிந்திக்க வைப்பதோடு, துறவு மனப்பான்மையையும் ஏற்படுத்தும். பகுத்தறிவு சார்ந்த தத்துவ அறிஞர்கள் உள்ளுணர்வு மனப்பான்மைக்கு உள்ளத்தில் சிறிது சலுகை அளிக்கின்றனர். எனினும், அவர்கள் உள்ளுணர்வென்பது நம்பிக்கையின் அடிப்படையில் எழுந்த கற்பனை ஆகும் என உதட்டளவில் கூறுகின்றனர்.

உள்ளுணர்வு அறிவியல், தத்துவம் தொடர்பான உண்மைகளைக் கண்டுபிடிக்கப் பெரிதும் உதவுகிறது. பின்னர், அவ்வுணர்வு அளவையாலும் பகுத்தறிவினாலும் உறுதி செய்யப்படுகிறது. இத்தகைய உள்ளுணர்வே பாரடே (Faraday), கிளார்க்கு மேக்சுவெல் (Clark Maxwell) முதலியோரின் கண்டுபிடிப்புகளுக்குப் பெரிதும் துணையாக இருந்தது. ஆனால், இவ்வுணர்வு இந்நாள் வரையிலும் பகுத்தறிவு ஆராய்ச்சிக்கு எட்டவில்லை.

பிராட்லி (Bradley) முதலான பகுத்தறிவுத் தத்துவ அறிஞர்களும், சேம்சு (James) முதலான செயலறிவு சார்ந்த (Empirical) தத்துவ அறிஞர்களும் உள்ளுணர்வை மதித்தார்கள்; அதன் உதவியால் மேலான உண்மை அறிவையும், உண்மைப் பொருளையும் அறிய முடியும் என்றார்கள். எகல் (Hegel) எழுதிய நூல்கள் பெரும்பாலும் பகுத்தறிவில் தொடங்கி, மறைமெய்யின் சார்போடு நிறைவுறும்.

என்றி பெர்க்சான் (Henri Bergson) உள்ளுணர்வு பற்றி விரிவாக விளக்கியுள்ளார். உள்ளுணர்வே உண்மைப் பொருளை நன்றாக அறிந்து கொள்ளப் பயன்படும் ஒரே வழி ஆகும். ஏனென்றால், அது விரைவியக்கம் (Dynamic) சார்ந்தது. ஆனால், அறிவு மேலீடாகச் செல்வது; பிரிந்து ஆய்வு செய்வது. ஆகையினால், பொருள்களின் அசையா நிலை பற்றியே அதனால் கூறமுடியும். உள்ளுணர்வு என்பது ஒருபொருளோடு சேர்ந்து, அதன் தனித்தன்மையை அறிந்து, பிறகு அதைச் சொல்லமுடியாமல் இருப்பதாகும். அறிவாராய்ச்சி என்பது பொருளின் மேலெழுந்தவாறு அறியுமேயொழிய, உள்ளே புகுந்து ஒன்றுபட்டு அறியும் தன்மையுடையதன்று. இயற்பொருள் உலகு (Reality) விரைவு இயக்கம் சார்ந்தது. அது அசையா நிலையைச் சார்ந்ததன்று. மேலும், அது தொடர்ந்து செல்லக் கூடிய தன்மையது. உள்ளுணர்வினால்தான் இதனை நன்றாகப் புரிந்து கொள்ள முடியுமேயொழியப் பகுத்தறிவால் அறிய முடியாது. மனம் ஐம்புலன்களால் உணர்வுகளை வாங்கி, பின்னர் அவற்றை விளக்கிப் பொருள் கூறுகிறது. அது அவ்வாறு கூறும் பொழுது உண்மையான பொருளை அறிந்து கொள்ள இயலவில்லை. அளவையும் (Logic), அறிவு பற்றிய ஆராய்ச்சியும் (Epistemology), நீதிக் கருத்துகளையும், புலனறிவையும் (Perception) அறிய முற்படுவது மிகுந்த பலன் தருவதாக இல்லை. இவை உள்ளுணர்வு பற்றிய பெர்க்சானின் கருத்துகளாகும்.

பிராட்லி என்பவர் வேறொரு வித உள்ளுணர்வு பற்றிப் பேசுகிறார். அதை அவர் மனித அறிவுக் கெட்டாத அனுபவம் (Transcendental Experience) என்று கூறுகிறார். முழுமையான உண்மைப் பொருளை (Absolute Reality) அறிய அறிவாராய்ச்சியால் முடியாது. அதன் வழிப் பகுதி உண்மையை மட்டுமே அறிய முடியும். அத்துவைத வேதாந்தத்தில் கூறப்படும் 'நிர்விகற்பப் பிரத்தியட்சம்' உள்ளுணர்வைப் புரிந்து கொள்ளத் துணை புரிகிறது. இது பெர்க்சான், பிராட்லி ஆகியோரின் கருத்துகளிலிருந்து தன்மையிலும் குறிக்கோளிலும் வேறுபட்டதாகும். அத்துவைத அறிஞர்கள் கூறிய உள்ளுணர்வு அமைதியான, நேர்மையான உணர்வு (Pure Conciousness) ஆகும். ஆனால், பெர்க்சான் கூறிய உள்ளுணர்வு உணர்ச்சி மிக்கது. பிராட்லியின் கருத்துப்படி, இது எண்ணத்திலும் உணர்விலும் செயலிலும் உறை பொருளாகக் (Sublimation) காணப்படும். பெர்க்சான் கூறும் உள்ளுணர்வு விரைவியக்கம் சார்ந்தது. பிராட்லியின் அனுபவத்தில் இது அறிவுக்கெட்டாத இயற்பொருளாக அமைகிறது. அத்துவைதத்தின்படி உள்ளுணர்வால் மாற்றமில்லாத ஓர் ஒற்றுமை ஏற்படுகிறது; வேறுபாடுகளும் இருமையும் மறைந்து விடுகின்றன.

இலாசுகியின் (Lossky) உள்ளுணர்வுக் கொள்கை பெர்க்சானின் உள்ளுணர்வுக் கொள்கை போல் பகுத்தறிவின்மை உடையதன்று; பகுத்தறிவிற்கப்பாற்பட்டதுமன்று. உள்ளுணர்வு புலனுணர்விலிருந்து நினைவு ஆற்றல், கற்பனைத் திறன் முதலியவற்றைத் தன்னகத்தே கொண்டது. அறிவாராய்ச்சியில் வெளியே உள்ள உலகமும் ஆன்மாவும் அறிவைப் பற்றிய செய்தியில் இடம் பெறுகின்றன. செயலறிவு சார்ந்த பகுதியில் (Empiricism) இடம் (Space), காலம் (Time) பற்றிய உண்மைகள் அனுபவத்திற்கப்பாற்பட்டதாக அமைகின்றன. இலாசுகியின் கருத்துப்படி, உள்ளுணர்வு ஆன்மாவைப் பற்றிய உணர்வையும் உலகத்தைப் பற்றிய உணர்வையும் உடனே தருகிறது.

உள்ளுணர்வு என்பது புத்திக்கு அப்பாற்பட்டது. புத்திக் கூர்மையான அறிவுஅளவையின் கருத்துகளை

பயன்படுத்துகிறது. ஆகையினால், குணங்களை மதிப்பதற்கு அது பயன்படுகிறது. புலனறிவும் பகுத்தறிவும் பயன்படுத்தப்படுகிற அறிவு உள்ளறிவை ஆய்வு செய்கிறது. அறிவு ஒரு குறிப்பிட்ட எல்லை வரையே சென்று செய்திகளை உணரும். ஆனால், உள்ளுணர்வு அறிவிற்கும் அப்பாற்சென்று முழுதுணர்ந்த உண்மைப் பொருளையும், மேலான உண்மையையும் அறிய வல்லது. இது பகுத்தறிவிற்கு மாறுபட்டதன்று. ஆனால், பகுத்தறிவிற்கு அப்பாற்பட்டது. இரா.கோ.

**உள்ளுறு புணர்ச்சி**: ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவர் என்று கூறப்படும் தலைவனும் தலைவியும் முதன்முதல் சந்தித்துக் கூடும் கூட்டம் பற்றிய செய்திகள், அகப்பொருள் இலக்கண நூல்களில் அமைந்துள்ள களவியல் என்னும் பகுதியில் விளக்கப்பட்டுள்ளன. இறையனார் களவியல் எனப்படும் இறையனார் அகப்பொருள் என்னும் அகவிலக்கணநூல், களவு கந்தருவ வழக்கத்தோடு ஒக்கும் என்பதனை, 'அன்பின் ஐந்திணைக் களவெனப் படுவது, அந்தணர் அருமறை மன்றல் எட்டனுள், கந்தருவ வழக்கம் என்மனார் புலவர்' (இறை. அகப். 1) எனக்கூறி, அடுத்த நூற்பாவில், 'தானே அவளே தமியர் காணக், காமப் புணர்ச்சி இருவயின் ஒத்தல்' என்று (இறை. அகப். 2) விளக்கம் செய்துள்ளது. இதில் அமைந்துள்ள 'காமப் புணர்ச்சி' என்பதனை அந்நூலின் உரையாசிரியர் நக்கீரர் விரிவாக விளக்குங்கால், உள்ளப் புணர்ச்சி, மெய்யுறு புணர்ச்சி என்று இருவகைப் புணர்ச்சிகளைச் சுட்டிச் கூறியுள்ளார். உள்ளப்புணர்ச்சி, உள்ளுறுபுணர்ச்சி எனவும் குறிப்பிடப்படும். உள்ளத்தால் கூடும் கூட்டம் என்பது இத்தொடர்ப் பொருளாகும். முதன்முதலாகச் சந்தித்தபோதே தலைவனும் தலைவியும் மெய்யுற்றுக் கூடினர் என்றால், அது அவர்களின் பெருமைக்கு ஏலாது எனக் கருதிய ஆசிரியர்கள் காமப் புணர்ச்சி என்பது, மெய்யால் உறும்புணர்ச்சி என்று கூறாமல், இருவரும் தத்தம் உள்ளங்களால் ஒன்றுபட்டுக் கூடும் உள்ளப் புணர்ச்சியாகும் என்று விளக்கியுள்ளார்கள். மேலும், மெய்யுறு புணர்ச்சியினை அடுத்து நிகழ்வன வெல்லாம் உள்ளப் புணர்ச்சிக்கும் உரியவாகும் என்று அவ்வாசிரியர்கள் விளக்கமும் கூறியுள்ளார்கள்.

தலைவன் தலைவியர் மெய்யுற்றுப் புணர்ந்திலர்; இருவர்தம் காமமுமே தம்முட் புணர்ந்தன. இவ்வாறு உள்ளங்களால் புணர்வது புணர்ச்சி; இது பிறரொருவர் உணருமாறு, நெடுங் காலம் புணர்தல் ஆகாது என்று கருதி நீங்கும் நீக்கம் பிரிவாகும். மெய்யுற்றுக் கூடும் கூட்டத்திற்குப் பின்னர்ப் பிரிவு நிகழும்போது கூறப்படுவனவெல்லாம், உள்ளப் புணர்ச்சிக்கும், பின்னர்ப் பிரியும் பிரிவிற்கும் பொருந்தும். பாங்கற் கூட்டம் தோழியிற் கூட்டம் ஆகிய பிறவற்றிலும் உள்ளப் புணர்ச்சி அளவே கொள்ளப்பட வேண்டும். தலைவனும் தலைவியும் திருமணம் செய்து கொண்டபின்னரே மெய்யுறு புணர்ச்சி உண்டாகும். இவ்வாறு இறையனார் களவியலுரையாசிரியர் தம் உரையுள் விளக்கியுள்ளார். இவ்வுரையாசிரியர், ஆசிரியர் பெயர் குறிப்பிடாது சுட்டியுள்ள உள்ளப் புணர்ச்சி, மெய்யுறு புணர்ச்சி ஆகிய கருத்துகளைப் பின்வந்த உரையாசிரியர்களான இளம்பூரணர், நச்சினார்க்கினியர் போன்றோர் தம் தொல்காப்பியப் பொருளதிகார உரைகளில் தாம் விரும்பியவாறு மேற்கொண்டு கூறியுள்ளனர்.

களவில் தலைவன் தலைவியர் கூடும் முதற் கூட்டத்தினைத் தொல்காப்பியர், 'அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கிற் காமக்கூட்டம்' என்று பொதுவாகவே குறிப்பிட்டுள்ளார். அங்கு அவர் உள்ளுறு புணர்ச்சி, மெய்யுறு புணர்ச்சி என்று வெளிப்பட விதந்து கூறவில்லை. உரையாசிரியர்களே அவ்வாறு கொண்டு விளக்கியுள்ளனர். களவில் மெய்யுற்றுப் புணர்வதனைக் கருத்திற்கொண்டு, களவொழுக்கம் மூன்று வகைப்படும் என்று இளம்பூரணர் கூறுவதனைப் பின்வருமாறு குறிப்பிடலாம்(தொல். பொருள். களவு. 1. இளம்-உரை). 1) இயற்கைப் புணர்ச்சி நிகழும் நிலையிலேயே தலைவன் தலைவியை மெய்யுற்றுப் புணர்வதால் அமையும் களவு. 2) இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம் ஆகிய கூட்டங்களில் உள்ளப் புணர்ச்சி அளவிலேயே நின்று, தோழியிற் கூட்டத்தில் தலைவியை மெய்யுற்றுப் புணர்வதால் அமையும் களவு. 3) முற்கூறிய கூட்டங்களிலெல்லாம் உள்ளப் புணர்ச்சி அளவே கூடி நின்று, உலகினர் அறிய மணம் செய்து கொண்டபின் மெய்யுற்றுப் புணரும் களவு.

வரைவிற்கு முற்பட்ட களவில் உள்ளுறு புணர்ச்சியே உண்டு என்பாரும், மெய்யுறுபுணர்ச்சி தலைவன் தலைவியர் ஒருவரை ஒருவர் கண்டபோதே நிகழும் என்பாரும், இருவகைப் புணர்ச்சிகளும் களவு நிலையில் இடம்பெறும் என்பாருமாகத் திறனாய்வாளர் மூவகையினராயினர். களவில் உள்ளுறு புணர்ச்சியே உள்ளது என்பார் அதனை, 'அன்புடையார் இருவர் முற்பிறப்பிற் செய்த நல்வினையின் பயனாகத் தனிமையில் எதிர்ப்பட்டு, ஒருவரை ஒருவர் இன்றியமையாதவராய் அன்பினால் உளம் ஒத்தலாகிய நெஞ்சக் கலப்பே காமப்புணர்ச்சியாகும்' என்றும், 'தமிழியல் வழக்கமாகிய களவொழுக்கம் என்பது ஒருவன் ஒருத்தி என்னும் இருவருள்ளத்தும் உள்நின்று சுரந்த

அன்பின் பெருக்கினால், தான்-அவள் என்னும் வேற்றுமையின்றி இருவரும் ஒருவராய் ஒழுகும் உள்ளப் புணர்ச்சியேயாகும்' என்றும் விளக்கியுள்ளனர். வரைவிற்குமுன் இருவகைப் புணர்ச்சியும் இடம் பெறுதல் கூடும் என்பார், 'காதலர்தம் மனவொற்றுமையே அகத்திணையின் உயிர்ப்பண்பு. இவ்வொற்றுமையை, உள்ளப்புணர்ச்சி என்று அகவிலக்கணம் கூறும்' என்றும், 'களவுக் காலத்து உடற்கூட்டுறவே இல்லையென்றும், அது கூடாது என்றும் கூறுவார் கொள்கை பிழையாம்; இயற்கை உணர்ச்சிக்கு முரணாம்' என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

இறையனார் களவியலுரையாசிரியர் போன்றோரால் விரிவாகப் பேசப்பெற்ற உள்ளுறு, மெய்யுறு புணர்ச்சிகளைப் பின்வந்த அகவிலக்கண ஆசிரியருள் ஒருவராகிய நாற்கவிராசநம்பி, களவில் இவ்விரு புணர்ச்சிகளும் நிகழும் என்பதனை உடன்பட்டு, இருவகைப் புணர்ச்சிகளும் நிகழும் திறம்பற்றியும், நிகழும் காலம் பற்றியும் நூற்பாக்கள் இயற்றியுள்ளார் (நம்பி. 34-36). பெருமை, உரன் ஆகியன தலைமகனுக்கு நிலைபெற்ற குணம் ஆதலானும், அச்சம், நாண், மடன் பயிர்ப்பு ஆகியன தலைமகட்கு நிலை பெற்ற குணமாதலானும், உள்ளப்புணர்ச்சி, மெய்யுறுபுணர்ச்சிக்கு முன்னர் நிகழும் என்பது கூறப்பட்டுள்ளது (நம்பி. 35). அ.மா.ப.

துணை நூல்கள்:

மாணிக்கம், வ.சுப, தமிழ்க்காதல், பாரி நிலையம், சென்னை, 1962.

நாற்கவிராச நம்பி, அகப்பொருள் விளக்கம், திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை, 1943,

வெள்ளைவாரணன், க, தொல்காப்பியம்-பொருளதிகாரம் களவியல் உரைவளம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், 1983.

**உள்ளுறை**: சொல், சொற்றொடர், தொகைமொழி ஆகியவை தமக்குரிய இயற் பொருள் திரியாது வரின் வெளிப்படை என்றும், தமக்குரிய பொருளை விட்டுத் தொடர்பு பற்றியும், தொடர்பு பற்றாமலும் அவ்வவ்விடத்திற்கு வேண்டிய பொருளைப் புலப்படுத்தி வரின் குறிப்பில்தோன்றல் என்றும் கூறுவர் இலக்கண நூலார்.

அகமும் புறமும் பற்றிய ஒழுகலாறுகளைச் செய்யுளில் வடிக்கும் புலவன், அகத்திணை நிகழ்ச்சி புலப்படுவதற்கு ஏற்பத் தான் கருதிய பொருளைக் கருப்பொருள் வாயிலாக அச்செய்யுள் தொடர்களில் உள்ளூற அமைத்துக் கூறுதலே உள்ளுறை ஆகும்.

உள்ளுறையாகிய குறிப்புகள் புறப்பொருள் பற்றி வரின், அவற்றை உவமத்தின் வேறுபாடாகக் கொள்வர் இலக்கண நூலார். இதனை அணிநூலார் பிறிது மொழிதல் அணி என்பர். மறைவாக நிற்குங் குறிப்புப் பொருள் அகப்பொருள் பற்றிச் செய்யுளில் வரின் 'உள்ளுறை' எனப்படும்.

உள்ளுறை அமையப் பேசுவோர் பெரும்பான்மையும் தலைவன், தலைவி, தோழி ஆகியோராவர்; சிறுபான்மை ஏனைய அகப்பொருள் மாந்தருமாவர். இவர் கருப்பொருள்களுள் விலங்கு, பறவை, மரம், செடி, கொடி, கடல், மலை, நிலவு முதலியவற்றோடும், தம் நெஞ்சோடும் , உறுப்புகளோடும் பேசுதல் மரபு. எனவே, குறிப்பாகப் பொருள் விளக்கி வரும் உள்ளுறை, உவமத்தையும் மெய்ப்பாட்டினையும் சிறப்பினையும் அடிப்படையாகக் கொண்டு வரும். இவ்வுள்ளுறை தெய்வம் தவிர்ந்த ஏனைய மா, மரம், புள், ஊர், நீர் முதலிய கருப்பொருள்களை இடமாகக் கொண்டு தோன்றும்.

உள்ளுறை, கூறப்படும் முறைமையால் உடனுறை, உவமம், சுட்டு, நகை, சிறப்பு என ஐந்து வகைப்படும்.

**உடனுறை**: உடனுறை என்பது இறைச்சியிற் பிறக்கும் பொருளாகும். கருப்பொருள்களின் பண்பும் செயலுமாகிய நிகழ்ச்சியோடு பொருந்தி இவ்வுள்ளுறை நிற்றலான் உடனுறை எனப்பட்டது. உடன் = இறைச்சிப் பொருளுடன்; உறை = அமைந்திருத்தல் என்பது பொருள்.

**உவமம்**: இதனை உள்ளுறை உவமம் என இணைத்தே வழங்குவர். உள்ளுறை உவமம் என்பது, ஒருவர் தாம் புலப்படுத்தக் கருதிய பொருளை உவமமாகக் கூறும் பொருளோடு ஒத்து முடியும்படி உவமிக்கும் பொருளில் அடக்கி உரைப்பதாகும். உள்ளுறை உவமத்தின்கண் உவமமாகக் கருதிக் கூறப்படும் கருப்பொருள்களும், அவற்றின் நிகழ்ச்சிகளும், ஏனை உவமம் போல நேரே விளங்கி நில்லாமல், உவமமாகக் குறித்துக் கொள்ளுமாறு நிற்கும். அவற்றுள் பொருள் உள்ளுறையாக அடங்கி நிற்கும். 'கரும்புநடு பாத்தியில் கலித்த தாமரை, சுரும்புபசி களையும் பெரும்புனல் ஊர' என்ற ஐங்குறுநூற்றுப்பாடல் அடிகள் (65) தலைவி புலந்து கூறும் பகுதியாகும். கரும்பு நடுதலைக் கருதியமைத்த பாத்தியுள், கருதாத தாமரையானது செழித்துத் தன்பால் வரும் வண்டினது பசியைப் போக்கும் வளமுடைய ஊர் என்ற

புனைவு, காமக் கிழத்தியர்க்கு என அமைந்த இப் பெரிய வீட்டில் யான் இல்லறம் பூண்டு விருந்தினரைப் பேணுகிறேன் என்னும் கருத்தில் உள்ளுறையாகக் கொண்டு நிற்பதைக் காணலாம். இங்கு, இப் புனைவே உவமமாக நின்று, காமக் கிழத்தியர்க்கு என அமைந்த இல்லத்தில் யான் இருந்து விருந்தினரைப் பேணி இல்லறக் கடமையைப் புரிகிறேன் என்னும் உவமேயத்தைத் தன்னுள் அடக்கி நிற்றலின் உள்ளுறை உவமமாயிற்று.

சுட்டு: சுட்டென்னும் உள்ளுறை இறைச்சியிற் பிறக்கும் உடனுறையையும் உவமப் போலியாகிய உள்ளுறை உவமத்தையும் போலன்றி, அவற்றின் வேறாக வெளிப்படக் கூறும் கூற்றினுள், கூறுவோர் தாம் கருதிய குறிப்புப் பொருளைச் சுட்டுவதாகும். காண்க: சுட்டு

நகை: நகையென்னும் உள்ளுறை நகுதல் குறிப்போடு கூறும் கூற்றினுள் குறிப்பாக அமைந்து விளங்கும் உள்ளுறையாம். 'பொருளொடு புணர்ந்த நகைமொழி' எனச் செய்யுளியலுள் கூறப்படும் 'நகைமொழி' உரைநடையில் அமைவதாகும். இது செய்யுளில் அமையும் குறிப்பு.

எண்வகை மெய்ப்பாடுகளுள் நகைக்குரிய பொருள் நான்கனுள், உரை பற்றியது 'எள்ளல்' ஒன்றேயாதலின், அதன் வாயிலாகவும் உள்ளுறை தோன்றும் என்பதைத் தேர்ந்து தெளிந்த தொல்காப்பியர் இவ்வுள்ளுறையை அமைத்துள்ளார்.

சிறப்பு: சிறப்பாவது, கூற்று நிகழ்த்துவோர் கேட்போரிடம் யாதானும் ஒரு வகையில், சிறப்பினை ஏற்றிக் கூறிக் குறிப்பால் அமைக்கும் உள்ளுறையாகும். அச்சிறப்பு இயற்கையாக அன்றி, வலிந்து கூறப்படுதலால் தோன்றுவதாகும். இது மேற்கூறிய உடனுறை முதலாய நான்கினும் அடங்காது வேறுபட்டு வரும். ச.பா.

**உள்ளுறை நலன்:** ஒரு சொத்தில் உள்ளுறைந்து இருக்கும் நலன் உள்ளுறை நலன் (Latent-Advantage) எனப்படும். சாதாரணமாக, ஒரு சொத்தினை வாங்குபவர், வாங்கவிருக்கும் சொத்தினில் கிடைக்கக் கூடிய உள்ளுறை நலன்களை விற்பவருக்குக் கூறத் தேவையில்லை. ஆனால், உரிமைமூலம் போன்றவற்றில் உண்மையை வெளிப்படுத்த வேண்டுமென்பது உள்ளுறை நலன்களை வெளியிடத் தேவையில்லை என்பதற்கு விதிவிலக்காகும். பல சமயங்களில் விற்பவருக்குத் தம் சொத்தின் தன்மை, தாம் கொண்டிருக்கும் உரிமையின் அளவு தெரியாமலிருக்கலாம். இதனை ஒருவர் தமக்கு அனுகூலமாக எடுத்துக் கொள்ளக் கூடாது. இவற்றில் பொய்யுரைத்தல் அல்லது வெளிப்படுத்தாமல் இருத்தல் மோசடிக்கு ஒப்பாகும்.

சொத்துரிமை மாற்றுச்சட்டத்தின் பிரிவு, 55 (5) (அ), வாங்குபவருக்குச் சொத்தின் மதிப்பைப் பெருமளவு அதிகரிக்கச் செய்யக் கூடிய விவரங்கள் தெரிந்திருந்து, விற்பவருக்கு அதுபற்றித் தெரியாது என்ற விவரத்தினை வாங்குபவர் அறிந்திருக்கும்போது, அது பற்றிய விவரங்களை வெளிப்படுத்த வேண்டும் என்பதாகக் கூறுகிறது. ஆ.ச.

**உள்ளூர்ப்பரமேசுவர அய்யர்** (கி.பி. 1877–1949) புதிய மலையாள இலக்கியத்தின் மும்மூர்த்திகளுள் ஒருவர். குமரன் ஆசான், உள்ளூர்ப் பரமேசுவர அய்யர், வள்ளத்தோள் நாராயண மேனன் ஆகிய மூவரையே மலையாள இலக்கிய உலகில் 'மும்மூர்த்திகள், எனக் குறிப்பிடுவர். இவர் இன்றைய ஆலப்புழை மாவட்டம் செங்கணாச்சேரியில், கி.பி. 1877–ஆம் ஆண்டில் பிறந்தார். இவர் உள்ளூர் என்னும் சிற்றூரில் தம் இளமைக் காலத்தில் வாழ்ந்ததால் அவ்வூர்ப் பெயர் இவரது இயற்பெயரோடு ஒட்டிக் கொண்டது.

மதுவிலக்கு, தீண்டாமை ஒழிப்பு முதலிய முற்போக்குச் சிந்தனைகளால் ஈர்க்கப்பட்ட இவர், தம் வாழ்நாள் முழுவதும் பல சமூக நிறுவனங்களோடு இணைந்தும் தனியாகவும் பொதுத்தொண்டில் ஈடுபட்டார். திருக்கோயில்களுக்குச் சென்று இறைவனை வழிபடும் உரிமை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்படல் வேண்டும் என்பதற்காக இவர் போராடினார். இதனால், இவர் காந்தியடிகளின் பாராட்டையும் பெற்றார். எளிய குடும்பத்தில் பிறந்து, உழைப்பால் உயர்ந்து, பலதரப்பட்ட பதவிகளை ஒரே சமயத்தில் வகித்த பெருமை இவருக்கு உண்டு. அரசுப் பணியில் இருந்துகொண்டே இலக்கிய உலகில் இவர் பல சாதனைகளை நிகழ்த்தினார்.

இவர் எழுதிய மகாகாவியமாகிய 'உமா கேரளம்' 1913–இல் வெளிவந்தது. இந்நூல் 19 காண்டங்களையும் 2022 செய்யுட்களையும் கொண்ட ஒரு மிகப் பெரிய படைப்பாகும். அதைத் தொடர்ந்து 'மங்கள மஞ்சரி' (1918), 'கீர்ணாவளி' (1924), 'கருண பூடணம்' (1929) முதலிய நூல்கள் வெளிவந்தன. இவர்தம் வாழ்நாளின் பிற்பகுதியில் வெளியிட்ட நூல்கள் மிகப் பலவாகும். அவற்றுள் குறிப்பிடத்தக்கன, 'இருதய கௌமுதி' (1935), 'இரத்தினமாலா' (1938), 'அமிர்த தாரா' (1938), 'கல்ப சக்தி' (1943), 'தப்த இருதயம்' (1948) ஆகியன.

உள்ளூர் மிகச் சிறந்த கவிஞர் மட்டுமல்லர்; சிறந்த ஆராய்ச்சியாளருமாவர். இலக்கியம், வரலாறு, சமயம், சட்டம், ஆட்சித்துறை, மொழி பெயர்ப்புப் போன்ற பலதிறப்பட்ட துறைகளிலும் ஈடுபட்டு அவர் எழுதியளித்தவை பல. பல்கலை வித்தகராக விளங்கிய இவர் 'பரிசத் திரிமாசிகம்' என்னும் காலாண்டு இதழையும் பல ஆண்டுகள் தொடர்ந்து நடத்தி வந்தார். பழஞ்சுவடிகளைத் தேடித் தொகுத்துப் பல்கால் ஆராய்ந்து, திருத்தமான பாடங்களோடு இவர் முதன் முதலாக வெளியிட்ட நூல்கள் பல. அவற்றுள் 'சதமுக இராமாயணம்', 'கிரிசா கலியாணம்', 'நாட்டிய சங்கிரகம்' முதலியன குறிப்பிடத்தக்கன.

இவர்தம் வாழ்நாட் பெரும்பணி என்று சொல்லத்தக்க மாபெரும் நூல் 'கேரள சாகித்திய சரித்திரம்' என்பதாகும். அதனை இவர் 1927-இல் எழுதத் தொடங்கி ஏறத்தாழ இருபது ஆண்டுக்காலப் பேருழைப்பிற்குப்பின் 1948-ஆம் ஆண்டுதான் வெளியிட்டார். மலையாள மொழியில் எழுதப்பட்ட மிக விரிவான இலக்கிய வரலாற்று நூல் இது. இவர் 1949-இல் காலமானார். மா.இரா.

**உளச் சிதைவு நோய்**:முற்றிய மனநோயைத் 'தெமன்சியா ப்ரிக்கோ' (Dementia Praecox) என்று சொல்லி வந்தனர். இதனைப் புளூலர் (Bleuler) என்பவர் முதன் முறையாக உளச் சிதைவு நோய் (Schizophrenia) என்று குறிப்பிடுகிறார். பொதுவாக உளநோய் மருத்துவத்தில் செயல்சார் உளநோய்களை (Functional Psychosis) விவரிக்கும் பொழுது இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. பாதிக்கப்பட்ட உளப்போக்கு (Affect), திரிபுணர்வு (Delusion) இல்பொருள் காட்சி (Hallucination), குழப்பம் (Confusion), தற்சிந்தனை (Autism), அடையாளக் குழப்பம் (Disturbance in the Sense of Identity) ஆகியவை இந்நோயின் முக்கிய அறிகுறிகளாகும். இந்நோயாளர்களின் சிந்திக்கின்ற நிலைமைக்கும் செயற்படுகின்ற நிலைமைக்கும் தொடர்பு இராது. உளச் சிதைவுக்கு அடிப்படைக்காரணம் மூளைப் பாதிப்பு என்று புளூலர் குறிப்பிடுவார். எட்டு வகையான உளச் சிதைவு நோய்கள் இருக்கின்றன என்று உளநோய் மருத்துவம் கூறுகிறது.

**அறிகுறிகள் 1. இயைபுக் கோளாறு**:- ஒன்றைப் பற்றித் தொடர்ந்து சிந்திக்க இயலாத நிலையே இயைபுக் கோளாறு எனப்படும். இதுவே உளச் சிதைவு நோய்க்கு அடிப்படை அறிகுறி என்று புளூலர் கூறுவார்.

**2. உளப்போக்குத் தன்மைக் கோளாறு**: பொருள்களிடத்திலும் மனிதர்களிடத்திலும் பற்றுச் செலுத்தாமல் இருப்பது உளப்போக்குத் தன்மைக்கோளாறுக்குரிய அறிகுறியாகும். இவ்வகை அறிகுறி முற்றிய உளச் சிதைவு நோயினரிடம் ஓங்கிக் காணப்படும்.

**3. இருமுகப் போக்கு**: இது மனநிலையுடன் தொடர்புடையது. இதில் ஒருவர் மீது அன்பையும் வெறுப்பையும் மாறி மாறிச் செலுத்தும் போக்கு இருக்கும். மேலும், ஒன்றைச் செய்ய விரும்புவதும் அதனைச் செய்ய விரும்பாமல் இருப்பதும் ஆகிய இரண்டு மனநிலையும் இருக்கும். இந்நோயினால் பாதிக்கப்பட்டவர் ஒன்றைக் கூறி, அவரே அதனை மறுப்பவராகவும் இருப்பார். சுருக்கமாகக் கூறினால் இவ்வகையினர் எதிரும் புதிருமாக இருப்பார்கள், இப்படி இருப்பது அவர்களுக்கே தெரியாது.

**4. சாதாரண இயக்கங்களும் பாதிக்கப்படுகிற நிலைகளும்**: புலனுணர்வு, புலன் காட்சி, நனவுநிலை போன்றவை உளச் சிதைவு நோயினர்க்குப் பெரும்பாலும் பாதிக்கப்படுவதில்லை.

**5. தற்சிந்தனை**: இதற்குக் காரணம் வெளியுலகப் பற்றின்மை ஆகும். உளச்சிதைவு நோயினர் தங்களுடைய ஆசைகளுக்கும் அச்சங்களுக்கும் மிகுதியான மதிப்புச் செலுத்துவதால் இத்தற்சிந்தனை ஏற்படுகிறது.

**6. கவனக் கோளாறு**: குறைவான கவனமே உளச்சிதைவு நோயினர்க்கு இருக்கும். கவனம் செலுத்திச் செய்ய வேண்டிய பணிகளில் அவர்களைப் பிறர் தூண்டிச் செயற்பட வைக்க முடியாது.

**7. மனத்திட்பக் கோளாறு**: கவனக் கோளாறு போலவே இதுவும் உளச்சிதைவு நோயினரிடம் காணப்படும். உளப்போக்குத் தன்மைக் கோளாறும், இயைபு படுத்தல் தன்மைக் கோளாறும், உளச் சிதைவு நோயினரிடம் இருப்பதால் மனத்திட்பக் கோளாறு இவர்களிடம் அதிகமாகவே இருக்கும். இக்கோளாறுடையவர்கள் எச்செயல்களிலும் ஆர்வம் காட்டாதவர்களாகவும்சோம்பேறிகளாகவும் எதனையும் பொருட்படுத்தாதவர்களாகவும் இருப்பர். இவர்களைத் தூண்டி மனத்திட்பம் உடையவர்களாக ஆக்குவது கடினம்.

**8. உளச்சிதைவு(தெமன்சியா)**: உளச்சிதைவு நோயினர், நுண்ணறிவுச் சோதனைகளைச் சிறப்பாகச்

செய்ய மாட்டார்கள். அதற்கு அவர்களிடம் திறமை இல்லை என்பது காரணமாகாது. உளப்போக்குத் தன்மைக் கோளாறும், இயைபுபடுத்தல் தன்மைக் கோளாறும் இவர்களிடம் இருப்பதே இதற்குக் காரணமாகும்.

9. இல்பொருள் காட்சி: இது இல்லாததை இருப்பதாக உணர்வது. மனநோய் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட உளச்சிதைவு நோயினர்க்கு இக் கோளாறு அதிகமாக இருக்கும். செவிப்புலன் இல்பொருள் காட்சிக் கோளாறு பெரும்பாலான உளச் சிதைவு நோயினர்க்கும் இருக்கும். முற்றிய உளச் சிதைவு நோயினர்க்குக் கட்புலன் இல்பொருட்காட்சிக் கோளாறு என்பது அதிகமாகவே இருக்கும். தொடுதலும் சுவையறிதலும் இல்பொருட்காட்சிக் கோளாறு நோயினர்க்கு அரிதாகக் காணப்படும். உடல் மீது பாம்பு போன்றவை நெளிவதாகச் சில சமயங்களில் இவர்கள் உணர்வார்கள்.

10. திரிபுக் காட்சி: தவறான புலன் காட்சியே திரிபுக்காட்சி. சாதாரணமாக ஆரோக்கிய நிலையினர்க்குக் கேட்கும் ஒலிகள், இந்நோயினர்க்கு முற்றிலும் தவறாகக் கேட்கும். எடுத்துக்காட்டாக இனிய பாட்டின் இசை இவர்களுக்கு மிருகத்தின் அச்சுறுத்தல் ஒலி போலக் கேட்கும். இந்நோயினர்க்கு ஏற்படும் சில கட்புலன் திரிபுக் காட்சிகள் ஆபத்து விளைவிப்பவை. எடுத்துக்காட்டாகச் சன்னலைக் கதவு என நினைத்து அதன் வழியே சென்று கீழே விழக்கூடும்.

11. திரிபுணர்வு: இது ஒரு நிகழ்ச்சியை நடந்தவாறு உணர்ந்து கொள்ளாமல் தவறுபட உணர்ந்து கொள்ளுதல் ஆகும். நோயாளிகள் தங்கள் விருப்பு வெறுப்புகளுக்கும் அச்சங்களுக்கும் ஏற்ப அந்நிகழ்ச்சிகளைத் தவறுபட உணர்ந்து கொள்வார்கள். இது பல வகை வடிவங்களில் காணப்படும். எடுத்துக்காட்டாக, ஒரு நோயாளி இருவர் பேசிக் கொண்டிருப்பதைப் பார்க்கிறபோது தன்னை ஏதோ ஒரு சிக்கலில் மாட்டவே அவர்கள் பேசிக் கொண்டிருப்பதாக உணர்வர். இது ஒரு வகைத் திரிபுணர்ச்சி. ஒரு நோயாளி தன்னைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது இந்நாட்டின் அரசன் என்றும், தான்தான் நெப்போலியன் என்றும், இயேசு கிறித்து என்றும் இவ்வாறு கூறிக் கொள்வது மற்றொருவகைத் திரிபுணர்ச்சியாகும்.

உளச்சிதைவு வகைகள்: 1. சாதாரண வகை: வெளியுலகத் தொடர்பின்மையும் வெளியுலகில் நாட்டமின்மையும் இவ்வகையினர்க்கு முக்கிய அறிகுறிகளாகும். உணர்வின்மையும் (Apathy) நாட்டமின்மையும் மிகுந்த அளவில் இருக்கும். திரிபுணர்வும் இல்பொருள்காட்சிக் கோளாறுகளும் இவர்களிடத்துக் குறைந்தே காணப்படுகின்றன. இவ்வகையினர் சமூகத்திலிருந்து ஒதுங்கியே வாழ விரும்புவர்.

2. 'எபிபிரனிக்கு' வகை: இவ்வகையினர் பொருத்தமில்லாத உளப்போக்கு உடையவர்கள். 'எபிபிரனிக்கு' வகையினர் (Hebephrenic Type) சம்பந்தமில்லாமல் சிரிப்பார்கள்; திடீரென்று அழுவார்கள். தன் உடலைப்பற்றிய திரிபுணர்வும் ஒரு குழந்தையைப் போல் நடத்தையும் இவ்வகையினர்க்குப் பொதுவான குணங்களாகும். ஆளுமையின் குறைபாட்டின் காரணத்தால் இவர்கள் தங்களைத் தாங்களே கவனித்துக் கொள்ள மாட்டார்கள். இவர்கள் மனநோய் மருத்துவ மனையில் சேர்க்கப்பட வேண்டியவர்கள்.

3. 'காட்டடோனிக்கு' வகை: இவ்வகையினர் (Catatonic Type) உணர்ச்சி இழந்த நிலையிலே (Stupor) இருப்பர். இவர்கள் பிறரோடு பேச்சுத் தொடர்பு கொள்வதில்லை. பேசினும் சலிப்பான குரலில் பேசுவர். இவர்களுடைய முகங்களில் எவ்விதமான தோற்றங்களும் காணப்படுவதில்லை. உடை அணிதல், உணவு உட்கொள்ளல் போன்றவற்றிற்கு இவ்வகையினரைத் தூண்டித் துணை செய்வது அவசியம். வினோதமான உடல் தோற்றங்களில் நீண்ட நேரம் இருப்பார்கள். ஓர் இராணுவச் சிப்பாயின் விறைப்பான, நேரான உடல் தோற்றம் இவர்களுக்கு மிகப் பிடித்ததாகும். தீவிர வகையினர் படுக்கையிலே இருப்பர். இவர்களோடு தொடர்பு கொள்ள இயலாது. இவர்கள் தம் உடல்நலப் பழக்கங்களில் பொதுவாக அசுத்தமாக இருப்பர்.

4. முற்றிய உளச்சிதைவு வகை: இவ்வகையினர்க்குத் தீவிர உளக்கிளர்ச்சியும் உளச்சோர்வும் இருக்கும். இவை தவிரக் குழப்பம், தடுமாற்றம், அச்சுறுத்தும் கனவுகள், இயைபுத் தொடர்பின்மை போன்ற அறிகுறிகளும் இருக்கும். இவ்வறிகுறிகள் இவ்வகையினருக்குச் சில வாரங்களில் மறைந்து போகும் அல்லது தீவிரமடையும். இவர்களும் மனநோய் மருத்துவமனையில் சேர்க்கப்பட வேண்டியவர்களே.

5. புதை வகை: இவ்வகையினருக்கு மிகச் சாதாரண உளச்சிதைவு நோயினர்க்குரிய அறிகுறிகளே இருக்கும். புதைவகையில் (Latent Type) தொடக்க நிலையிலுள்ள வகை, உளநோய்க்கு முந்தின நிலை, போலி நரம்புப்பிணியினர் நிலைகள் எல்லாம் அடங்கும்.

6. வகைப்பாடுகளில் அடங்காத வகை: உளச் சிதைவு நோயினால் பாதிக்கப்பட்டுக் குணமாகி

ஆனால் முற்றிலும் குணமாகா நிலையில் உள்ளவர்கள் இந்த வகையில் அடங்குவர்.

7. உளச்சிதைவு-உணர்ச்சி சார்ந்த வகை: இது அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு வகை. இவ்வகையினருக்கு உளச்சிதைவு மற்றும் உணர்ச்சி சார்ந்த நோய்களின் அறிகுறிகள் கலந்த ஒரு குணம் இருக்கும்.

8. குழந்தைப் பருவ வகை: பருவம் அடைவதற்கு முன் சிலருக்கு உளச்சிதைவு நோய்க்குண்டான அறிகுறிகள் தென்படும். அவர்கள் இவ்வகையில் அடங்குவர். இந்நோயினால் அவதியுறுபவர்கள் மன வளர்ச்சியில் குறை உள்ளவர்களாக ஆவார்கள்.

மருத்துவ முறைகள்:1. அதிர்ச்சி மருத்துவம்: நீரிழிவு நோயைக் குணப்படுத்த 'இன்சுலின்' என்ற மருந்து முதன்மையாகக் கையாளப்பட்டு வருகிறது. இம்மருந்தினை மன நோய் உள்படச் சில தீவிர நோயாளிகளுக்கும் பசி ஆர்வத்தைத் தூண்டச் சிறிய அளவில் கொடுத்தார்கள்.

உளச்சிதைவு நோயினருக்கு 1940-இலிருந்து 1950 வரை மின்வலிப்புச் சிகிச்சை அளித்து வந்தனர். இச்சிகிச்சை ஒரு வாரத்திற்குப் பலமுறை அளிக்கப்பட்டு வந்தது. இச்சிகிச்சையினால் நினைவாற்றல் குறைவு என்ற பின் விளைவு ஏற்படுகிறது. ஆனால், சில காலம் கழித்து இழந்த நினைவாற்றலை மீண்டும் பெற்று விடுவார்கள். மறதிநோய் என்ற பின்விளைவு தவிர மற்ற எந்தப் பின் விளைவுகளையும் இந்தச் சிகிச்சை முறை ஏற்படுத்துவதில்லை.

2. உள அறுவை மருத்துவம்: போர்ச்சுகீசிய நரம்பியல் வல்லுநர் மோனிசு(கி.பி.1874-1955)என்பவர் இந்த உள அறுவை முறையை முதன் முதலில் பயன்படுத்தினார். மூளையின் முன்பக்க மடலில் நோய்த் தொடர்பான எண்ணங்கள் தேக்கி வைக்கப்பட்டிருக்கும். இந்த எண்ணங்களை மூளையின் மற்றொரு பகுதியாகிய மூளையின் நரம்பு முடிப்பு (Thalamus) என்பது தந்துகொண்டிருக்கிறது.அறுவை மருத்துவர் இந்த இரண்டு பகுதிகளையும் அறுவை மருத்துவ முறையில் துண்டித்து விடுவர். ஆனால், உளச் சிதைவு நோயினர்க்கு இந்த முறையால் மிகுந்த பயன் ஏற்படுவதில்லை.

3. உள மருந்தியல்: பாம்பு வேர்ச்செடி (Snake Root Plant) என்ற ஒரு வகைச் செடி இந்தியாவில் அதிகம் காணப்படுகிறது. பாம்புக் கடிகளுக்கு இச்செடியினை மருந்தாகக் கையாளுவர். இச்செடியிலிருந்து 'செர்பெண்டினா' (Serpentina) என்ற மருந்தைத் தயாரித்து அதை உளச்சிதைவு நோயினருக்குக் கொடுக்கிறார்கள். இம்மருந்து உட்கொண்டவுடன் இந்நோயினர் அமைதியாகக் காணப்படுவர்.

இப்பொழுது உளவியல் வல்லுநர்கள் உளச் சிகிச்சை, உளப்பகுப்பாய்வு ஆகிய முறைகளின் மூலம் உளச் சிதைவு நோயை முழுமையாகக் குணமாக்க முடியும் என்று நம்புகிறார்கள். தி.சீ.

துணை நூல்கள்:

**Barclay Martin**, Abnormal Psychology: Clinical and Scientific Perspectives, Holt, Rinehart and Winston, New York, 1977.

**Colman, C.**, Abnormal Psychology and Modern Life, D.B Taraporevala Sons & Co, Pvt. Ltd, Bombay. 1982.

**Jack Roy Strange**, Abnormal Psychology, Understanding Behaviour Disorders, T.M.H.Publishing Company Ltd., Bombay, 1965.

**Melvin Zax and Emory Cowan**, Abnormal Psychology Changing Conceptions, Holt, Rinehart and Winston, New York, 1976.

**உளச்சோர்வுக் கோளாறுகள்:** மனித வாழ்க்கையை அமைத்துக் கொடுப்பதில் அவனுடைய மனநிலைகளுக்கும் பெரும் பங்கு உண்டு. மனநிலைகள் பாதிக்கப்படும் பொழுது மனிதனது வாழ்க்கையும் பலவகைகளில் பாதிப்புக்கு உள்ளாகின்றது. மனிதனைப் பாதிக்கும் மனக்கோளாறுகளுள் ஒருசில மாற்றக் கூடியவையாயும், ஒருசில மாற்ற முடியாதவையாயும் அமைந்துவிடுகின்றன. இதுபோன்ற மனக் கோளாறுகளுள் உளச்சோர்வுக் கோளாறு (Depressive Disorder) அல்லது மன அழுத்தக் கோளாறு என்பது ஒருவகையாகும்.

காலம் காலமாக மனித வரலாற்றில் உளச்சோர்வும் ஒருவகைக் கோளாறுதான் என ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. உளச்சோர்வு 1970-ஆம்ஆண்டுகளின் கொள்ளைநோயாகக் கூட மாறும் என ஆராய்ச்சியாளர்கள் அனுமானித்து எழுதினார்கள். இத்துணை முக்கியத்துவம் இருந்தும் மனவளப் பணியாளர்களும் (Mental Health Professionals) பொதுமக்களும் கூட, உளச்சோர்வுக் கோளாறுகள் பற்றி அதிகம் அக்கறை கொள்ளாமலே இருக்கின்றார்கள். உளச்சோர்வுக் கோளாறுகள் பற்றி அறிந்து கொள்ளுதல் மனித வாழ்வுக்குப் பயனுள்ள செயலாகும்.

கோட்டசுபெல்டு (Gottesfeled) உளச் சோர்வு என்பதன் நிலைபற்றிப் பின்வருமாறு கூறுகிறார்: உளச்சோர்வு நிலை, பணிக்குறைவு (Lowered Activity), தாழ்வு மனப்பான்மை (Feelings of Inferiority), சோகம் (Sadness), சோர்வு மனப்பான்மை (Pessimism) ஆகிய நிலைகளைக் கொண்டு காணப்படும். இவை அனைத்தும் இணைந்து சிலநேரங்களில் நரம்பு மண்டலக் கோளாறுகளாவும் (Neurotic Form), வேறுசில வேளைகளில் மனத் தொடர்பான கோளாறுகளாகவும் (Psychotic Form) வெளிப்படும்.

**உளச்சோர்வின் குணங்கள்:** உளச்சோர்வின் குணங்கள் (Characteristics) சாதாரண உணர்ச்சிக் குறைவிலிருந்து நம்பிக்கையின்மை அடைதல் வரை பல வகைகளில் வெளிப்படுகின்றன. சாதாரண வகை உணர்ச்சிக் குறைகள் பொதுவாக மனிதனுக்கு எந்தத் தீங்கும் செய்வதில்லை. மாறாக, கடுமையான உளச் சோர்வு நிலையை அடைந்த ஒரு மனிதன் தனது வாழ்வில் மனச் சோர்வு உள்ளவனாகவும், வேகம் குறைந்தவனாகவும், எந்த உதவியுமே பெற்றுக் கொள்ள வழியில்லாத ஒரு நிலையினை அடைவதோடு, தன்னைப் பற்றிய மதிப்பீட்டில் (Self-esteem) குறைவும் தன்னைக் குறித்து மாறுபட்ட கணிப்பும் (Self-Critical) கொண்டவனாகவும், பணிகளில் விருப்புக் குறைந்தவனாகவும் (Limited Interest), குறைவான முனைப்புடையவனாகவும் (Little Initiative) காணப்படுவான்.

உளச்சோர்வுக் கோளாறுகளின் குணங்களைப் பற்றி இலேமன் (Leh Mann, 1971) பின்வரும் பட்டியல் தருகிறார்:

1) உணவுப் பழக்கங்களில் கோளாறு (Eating Disorders).
2) உடல் எடை கூடுதல் அல்லது குறைதல் (Weight Loss or Gain).
3) தூக்கக் கோளாறுகள் (Sleep Disorders).
4) அடிக்கடி அழுதல் (Frequent Crying Spells).
5) குற்ற உணர்வு அல்லது குறைந்த மதிப்பு (Feelings of Guilt or Inadequacy).
6) தற்கொலை எண்ணங்கள் அல்லது நடத்தைகள் (Suicidal Thoughts or Behaviours).
7) சோர்வு அல்லது ஊக்கமின்மை (Fatigue or Listlessness).
8) கவனக்குறைவு (Inability to Concentrate).
9) குறைவான மன ஆற்றல் (Decreased Mental Productivity).
10) குறைவான பால் உணர்வு (Decreased Sexual Libido).
11) சாதாரணமான மகிழ்ச்சிகளையே அனுபவிக்கத் திறமைக் குறைவு (Inability to enjoy usual Pleasure).
12) உடல் குறைகளை அதிகப்படுத்திக் காணுதல் (Aggravation of any existing Physical defects).

மேலும், மிகக் கடுமையான உளச்சோர்வுக் கோளாற்றால் பாதிக்கப்பட்ட ஒருவர் நம்பிக்கை இழந்தவராகவும், அதனோடு பிறரோடு பழகுவதில் திறமை குறைந்தவராகவும், தனது சொல், செயல், நினைவுகளில் குறையுள்ளவராகவும், பொதுவாகவே நடைமுறையைத் தவறாகப் புரிந்து கொண்டவராகவுமே காணப்படுவார். இதனைத்தான் மனம் சார்ந்த உளச்சோர்வு (Psychotic Depression) எனக் குறிப்பிடுகிறார்கள்.

**உளச்சோர்வுக் கோளாற்றின் காரணங்கள்:** கோட்டசு பெல்டு இரண்டு வகையான காரணங்களை விவரிக்கிறார். அவை: 1) எதிர்ச் செயல் உளச்சோர்வு (Reactive Depression), 2) உள்ளார்ந்த உளச்சோர்வு (Endogenous Depression). எதிர்ச்செயல் உளச்சோர்வு ஒரு மனிதனின் புறச் சூழ்நிலை காரணமாக வரும் உளச்சோர்வாகும். இவ்வகை உளச்சோர்வு நெருங்கிய ஒருவரின் இழப்புக் காரணமாக வரும் வாய்ப்புள்ளது. ஏதேனும் ஒரு பிரிவு காரணமாகவும் (மணவிலக்கு, படிப்பில் பிரிதல்), புதிய பொறுப்புகள் (புதியவேலை, வீடு) போன்றவற்றாலும் ஏற்படலாம். உள்ளார்ந்த உளச்சோர்வு மனிதனின் மனத் தொடர்புடைய வகையில் ஒருவரது உள்ளநிலையைப் பொறுத்தும் வெளிப்படலாம்.

பொதுவாக, உளச்சோர்வு பற்றிய காரணங்களைப் பலவகையான உளவியல் கோட்பாடுகளின் மூலம் தெளிவாக அறிந்து கொள்ளலாம். அவற்றுள் சில இங்குத் தரப்படுகின்றன.

**1. இழப்புப் பற்றிய கருத்தாய்வுகள்:** ஆர். ஏ. இசுபிட்சு (R.A. Spitz) என்பவர் தாயிடமிருந்து பிரிந்த குழந்தைகளைப் பற்றிய தம் ஆராய்ச்சியில், இழப்புத்தான் உளச்சோர்வுக் கோளாறுகளுக்கு அடிப்படையான காரணம் என விவரிக்கிறார்.

உளவியலின் முதுபெரும் தந்தை எனக் கருதப்படும் பேராசிரியர் பிராய்டு (Freud) உளச்சோர்வுக்

கோளாறுகள் பற்றிக் கூறும்பொழுது, நெருங்கிய ஒருவரது இழப்பு ஒரு மனிதனை உளச் சோர்வடையச் செய்யும். அப்படிப்பட்டவர்கள் இறந்தவரையே அல்லது இழந்தவரையே பற்றிய தம் விருப்பு, வெறுப்புகளுக்கிடையே வருத்தம் அடைவதோடு தம்மைத் தனிமைப்படுத்திச் சென்றுவிட்டார் என அவர்மீது சினமும் அடைவார்கள் எனக் கூறுகிறார். மேலும், இவர்கள் இறந்தவர் அல்லது இழந்தவர் குணங்களைத் தங்கள் நனவிலி நிலையில் (Unconscious State) இணைத்துக் கொண்டு, வருத்தங்களை வெளிக்காட்டாமல் சிலவேளைகளில் தற்கொலை செய்து கொள்ளும் அளவுக்குத் துணிந்துவிடுவார்கள் எனவும் கூறுகிறார்.

நடத்தையியல் கோட்பாட்டாளர்கள்(Behaviourists) உளச்சோர்வுக் கோளாறுகளைப் பார்த்துப் புரிந்து அறிந்து கொள்ளும் குணங்களின் வழியாகத் தான் மதிப்பிடுகிறார்கள். இவ்வகையில் பெசுட்டர் (C.B. Fester, 1974) என்னும் கோட்பாட்டாளர் உளச்சோர்வுக் கோளாற்றினை மூன்று குணங்களின் வழியாக விளக்குகிறார். 1) சாதாரணமாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் செயல்களில் குறைவாகப் பணிபுரிதல் (Reduced Frequency of Many Normal Activities), 2) உதவிவேண்டல் அல்லது குறை கூறுதல் (Request fŏr Help and Complaints), 3) தப்பித்துக் கொள்ளுதல் மற்றும் தவிர்த்துக்கொள்ளுதல் போன்ற நடத்தைகள்(Behaviour that is Directed toward Avoidance and Escape). பொதுவாகவே, நடத்தையியல் அறிவியலார் இழப்புத்தான் ஒருவரை உளச்சோர்வுக் கோளாருக்கு இட்டுச் செல்கின்றது எனக் கூறுகின்றனர்.

**2. எதுவும் செய்ய இயலாது எனப்புரிந்து கொள்ளுதல்:** செலிக்மேன் (M.E.P. Seligman, 1975) என்னும் அறிவியல்லார் இதைப்பற்றி விரிவாக ஆய்ந்துள்ளார். ஒரு மனிதன் தன் செயல்களின் முடிவைப்பற்றித் தான் எதுவுமே செய்ய இயலாது என எண்ணும்பொழுதுதான் (Learned Helplessness) உளச்சோர்வு ஏற்படுகிறது என இவர் கூறுகிறார். மேலும், தன்னால் தன் முடிவுகளை மாற்ற இயலாது என ஒருவன் உணரும்பொழுது, உளச் சோர்வுக் கோளாறுகளின் குணங்களான நம்பிக்கை இழப்பு, யாரும் தனக்கு உதவமுடியாது என்பது போன்ற நிலையினை ஒருவன் அடைகிறான் எனவும் இவர் தெளிவுபடுத்துகிறார்.

**3. எதிர்மறையான எண்ணங்கள்:** பெக்கு (A.T. Beck, 1974) என்பவர் ஒருவரின் எண்ணங்களின் தன்மையே உளச்சோர்வுக் கோளாறுகளுக்கு அடிப்படைக் காரணம் எனக் கூறுகிறார். அவை ஒருவனது நடத்தையையே மாற்றுகின்றன. உலக வாழ்க்கை பற்றிய எதிர்மறையான கண்ணோட்டமும் எதிர்காலத்தைப் பற்றிய தவறான கண்ணோட்டமும் உளச் சோர்வுக் கோளாறுகளின் காரணங்கள் என இவர் கண்டுபிடித்துள்ளார். இந்நிலையுடைய ஒருவர், 'வாழ்வே வீண்' எனவும், 'மாற்ற முடியாத குறைகள் தம்மிடம் உள்ளன' எனவும் எண்ணிக் கொண்டிருப்பார். சுற்றுப்புறச் சூழலே மிகவும் கடினமானதாயும் பயனற்றதாயும் அவருக்குக் காட்சி தரும். முக்கியமாக, தங்கள் குறைகளுக்குத் தாங்களே காரணம் எனவும், தவறான கருத்துகளோடு உண்மையைவிட்டு மிகத் தொலைவில் தங்கள் அன்றாட வாழ்வை நடத்துவார்கள் எனவும் இவர் கூறுகின்றார்.

**உளச்சோர்வுக் கோளாறுகளைத் தடுக்கும் முறை:** முதலாவதாக, உளச்சோர்வுக் கோளாறு பற்றிப் பொதுமக்களுக்கு எடுத்துக் கூறி, அது மாற்றக் கூடிய ஒன்றே என்பதையும் அது மனச் சூழ்நிலைகளிலேயே ஏற்படுகின்றது என்பதையும் அவர்கள் அறியச் செய்யவேண்டும். வெளியீடுகள், பொதுக் கூட்டங்கள், கருத்தாய்வுகள் போன்றவற்றின் வாயிலாக இதனைப்பற்றி மக்கள் மனத்தில் ஒரு விழிப்புணர்வினை ஏற்படுத்த வேண்டும்.

இரண்டாவதாக, உளச்சோர்வுடன் காணப்படும் மனிதர்களைக் கண்டுணர்ந்து ஆலோசனை வழங்க வேண்டும். கல்லூரிகளிலும் பொது நிலயங்களிலும் அறிவுரை மையங்கள் மனவள நிலையங்கள் போன்றவற்றை அமைத்து, அவற்றின் வழியாக இக்குறை உள்ளவர்களுக்கு ஆலோசனைகளும் உதவிகளும் செய்யவேண்டும்.

மூன்றாவதாக, கடினமாகப் பாதிக்கப்பட்டுள்ள உளச்சோர்வுள்ளவர்களைச் சேர்த்து அவர்கள் தற்கொலை போன்ற முடிவுகளை எடுக்காமல் காப்பாற்ற வேண்டும். அவர்களின் குற்ற உணர்வுகளைக் குறைத்து, நடுநிலை உணர்ச்சி நிலைக்கு அவர்களை வழிநடத்த வேண்டும்.

**உளச்சோர்வுக் கோளாறுகளைக் குணப்படுத்துதல்:** உளச்சோர்வினைக் குறைக்கும் மருந்துகள், மினனதிர்வு மருத்துவம் போன்றவற்றைப் பயன்படுத்தினாலும், சாதாரண உளச்சோர்வுக் கோளாறுடையவர்களுக்கு இவை ஒத்துவாரா எனச் செய்லர் (Scheyler) கூறுகிறார். ஆனால், இவற்றுடன் மன மருத்துவம் (Psycho Therapy), செயல் மருத்துவம் (Behaviour Theraphy) போன்ற மருத்துவ முறை

களையும் துணைக்கொண்டு, உளச் சோர்வுக் கோளாறுடையவர்களைக் குணமாக்கலாம்.

உளச்சோர்வுக் கோளாறுகள் ஒரு மனிதனைப் பல வகைகளில் பாதிக்கின்றன. சாதாரண உளச் சோர்வுடையவர்கள் விரைவில் பழைய நிலைக்கு வந்துவிடுகின்றனர். ஆனால், அதிகம் பாதிக்கப் படுபவர்கள் எனக் கருதப்படும் உடல்நோயாளிகள், வயதானவர்கள், தனிமையில் வாடுவோர், மன நோயாளிகளாய் முதலில் இருந்து நலமடைந்தோர் ஆகியோர் நிலையில் உளச்சோர்வுக் கோளாறுகள் விரைவில் பாதிக்கின்றன. சமுதாய மனவள நிலையங் கள் (Community Mental Health Programmes) மூலம் அவர்கள்பால் சிறப்பான கவனம் செலுத்திக் காப் பாற்றலாம். சீனி. நா.

துணை நூல்கள்:

Beck, A.T., Affective Disorders, American Handbook of Psychiatry, Basic Books, New York, 1974.

Ferster, C.B., Behavioral Approaches in Depression. The Psychology of Depression, Washington, D.C., Winsten & Sons, 1974.

Gottesfeld, H., Abnormal Psychology: A Community Mental Health Perspective, Science Research Associates, Inc., New York, 1979.

Lehmann, H., Epidemiology of Depressive Disorder, In R.R. Fieve (Ed.) Depression in the 70's Excepto Mediea, Princeton, 1971.

Scheyler, D., The Depression Spectrum, Joson Arson, New York, 1974.

Seligman, M.E.P., Helplessness On Depressive Development and Death, Friedman & Co, San Francisco, 1975.

Spitz, R.A., Hospitalism: An Enquity into the Genesis of Psychiatric Conditions in Early Childhood, Psychoanalytic Study of the Child, 1945.

**உளத்திறன் குறைந்தோர் கல்வி**: உளத் திறன் குறைந்தோர், திறமையற்றவர், மனவளர்ச்சி இல்லாதவர், மந்தம் உடையவர் எனப் பொதுவாகச் சொல்லப்படுகின்றனர். இவர்களுக்கு வறுமை அல்லது குறைபாடுள்ள குலமரபு காரணமாக உளத்திறன் குறைவு ஏற்படுகிறது எனப் பலரும் எண்ணுகின்றனர். ஆட்சித்திறன் உடையவரும் உலக வரலாற்றறிஞரும் எழுத்தாளருமான சவகருலால் நேரு கூடக் கணிதத் தில் திறமை குறைந்தவர். சுவைபட எழுதும் அக்சுலி யால் (Huxley) சொற்பொழிவாற்ற இயலாது. கணி தத்திலோ பேச்சிலோ திறன் இல்லாதவரை உளத் திறன் இல்லாதவர் என்று கூறிவிட முடியாது. உளத் திறன் என்பது பலவிதத் திறன்களின் கூட்டு ஆகும். சில திறன்கள் சிறந்து வெளிப்படும்போது, வேறு சில திறன்கள் வெளிப்படாது அடங்கிக் கிடக்கலாம்.

இரண்டாம் உலகப்போரின்போதுதான் சராசரி ஆற்றல் படைத்தோரைவிட ஊனமுற்றோர் பெரும் சாதனைகளைக் கைவினைகளின் வாயிலாகச் சாதித்து மெய்ப்பித்தனர். அன்றிருந்து, உளவியல் ஆராய்ச்சி யாளர்களின் கவனத்தை உளத்திறன் குறைந்தவர்கள் (Mentally Subnormals) ஈர்த்தனர். மாணாக்கர்களின் தோல்வி, தவறான செயல்கள் ஆகியவற்றிற்கு அவர் களின் உளத்திறன் குறை காரணமன்று; நலமறியாத ஆசிரியர்களே என்ற பேருண்மை 1960-1970-ஆம் ஆண்டுகளில் மேற்கொண்ட ஆராய்ச்சிகளின் மூலம் தான் கண்டறியப்பட்டது. மாணாக்கர்களின் வளர்ச் சிக்கோ தளர்ச்சிக்கோ பள்ளிகளும் ஆசிரியர்களும் தாம் அடிப்படைக் காரணமென்பது இன்று ஏற்கப் பட்டுள்ளது.

எனவே, உளத்திறன் குறைகளை நீக்க மருத்து வம் தேவை இல்லை. நல்லாசிரியர்கள் உருவாதலை ஊக்குவிக்கும் புறச் சூழ்நிலைகளை அமைத்துத் தந் தாலே போதுமானது. அவர்களுக்குத் தேவைப்படுவது பக்குவமடைந்த முதியோரின் கண்காணிப்பே அன்றி நூலறிவன்று.

ஒருவருடைய உளத்திறனைப் பொதுவாக, நுண் ணறிவு ஈவு (Intelligence Quotient) (நு.ஈ) என்று கணக்கிடுவதுண்டு. இது ஒருவருடைய உள வயதுக் கும் (ஆற்றல்) கால வயதுக்கும் (பிறப்பிலிருந்து கழிந்த காலம்) உள்ள விகிதமாகும். இதனை நூறால் பெருக்கி ஓர் ஈவைப் பெறுகின்றனர். கால வயதுக் கேற்ற நுண்ணறிவு ஒத்ததாக இருப்பின், அந்த நுண்ணறிவின் ஈவு நூறாக இருக்கும். பத்து வயதுள்ள சிறுவன் எட்டு வயதுக்கான குழந்தைகளின் அறிவைப் பெற்றிருந்தால், அவனுக்கான நுண்ணறிவு ஈவு 80 தான். இது பொதுவாக இருக்க வேண்டிய நுண்ண றிவு ஈவு 100ஐ விடக் குறைந்தது. ஆகவே, இக் குழந் தையை உளத்திறன் குறைந்த குழந்தையாகக் கருத லாம். அது போலவே 10 வயதான ஒருவனுக்குச் சாதாரணமாக 12 வயதுக்கான குழந்தைகளின் ஆற் றல்கள் இருப்பின், அவனது நுண்ணறிவு ஈவை 120 எனலாம். இந்த ஈவானது 140க்கு அதிகமாக இருப்

பவர்களை மீத்திறன் (Gifted) படைத்தோர் என்பர். நுண்ணறிவு ஈவு 100 என்று எதிர்பார்ப்பது சராசரி தான். இதைவிட அதிகமாக 110 என்றிருப்பவனும் நுண்ணறிவு ஈவு 85பெற்றவனும் வகுப்புகளில் ஒரேவித மதிப்பெண்களைப் பெறுவதைப் பார்க்கலாம். திறமை மிகுந்தவன் முயற்சி இன்மையால் குறைந்த மதிப் பெண்கள் பெறுவதும், அது போலவே குறைந்த நுண்ணறிவு ஈவைப் பெற்றவன் மிகுந்த முயற்சியால் மிகுதியான மதிப்பெண்களைப் பெறுவதும் நிகழக் கூடியதே. ஆகவே,இந்த நுண்ணறிவு ஈவின் கணிப்பை வைத்துக் கொண்டே பல முடிவுகளுக்கு வந்து விடக் கூடாது.

பள்ளியின் பாடநூல்களைப் பொறுத்ததுதான் அறிவாற்றல் என்று எண்ணுதல் இயலாது. உளத்திறன் என்பது ஒரு தனித்திறன் அன்று. அது சொல்லாற்றல், கருத்தோட்டம், எண்ணாற்றல், விரிவாக்கம், நினைவாற்றல், தொடர்பு காணல், புதியனவற்றைத் தோற்றுவித்தல், சிக்கல்களைத் தீர்த்தல் போன்ற பல ஆற்றல்களின் கூட்டாகவும் அவற்றுள் ஒரு சில ஆற்றல்களின் கலவையாகவும் இருக்கலாம். உளத்திறன் ஆணுக்கும் பெண்ணுக்கும் வெவ்வேறானதன்று. பொதுவாக, பெண்கள் மொழியாற்றலைப் பெற்றிருப்பதற்கும் ஆண்கள் கணிதத்தில் திறமையாகக் காணப்படுவதற்கும் காரணம் மரபன்று; பண்பாடும் பழக்க வழக்கமுமே. முதுமை பார்த்தலையும் கேட்டலையும் தளர்ச்சி அடையச் செய்யலாமே அன்றி, உளத்திறனைக் கட்டுப்படுத்தாது. முதுமையிலும் புதியன கற்க முடியும். சிறுவயதில் நுண்ணறிவு ஈவு இருப்பது போலவே இளமைப் பருவத்திலும் அதன் பிறகும் இருந்து விடும் என்று எண்ணவுங் கூடாது. ஏனெனில், ஆற்றலுக்கு எல்லை இல்லை; அது வளரக் கூடியது.

**திறன் குறைந்தோர்:** நுண்ணறிவைக் குறைவாகப் (25 முதல் 80 வரை) பெற்றவர்களை உளத்திறனில் குறைபாடுடைய குழந்தைகளாக மக்கள் எண்ணினர். உளவியல் வல்லுநர்கள் கூட அவர்களைத் தவறாகத் தொல்லைதரும் குழந்தைகள், இயக்கக் குறைவுடையோர், மெதுவாகக் கற்போர்,மந்தப் புத்தியுள்ளோர் அறிவிலிகள் என்றெல்லாம் ஏளனமாகவே குறிப்பிட்டனர். பொது மக்களும் அவ்வாறே கொண்டனர். அறிவிலிகளில் கூட நுண்ணறிவு ஈவு 25க்கும் குறைவாக இருப்பின், மடையன் என்றும், 26 முதல் 50 வரை இருப்பின் மக்கு என்றும், இவ்விரு வகையினரை விடச் சற்றுச் சிறந்த அறிவிலியை (51 முதல் 80 வரை நு.ஈ.) மூடன் என்றும் அமைத்தனர். இவர்கள் திறங்குன்றியவர்களே. மீத்திறன் படைத்தோர்கூடத் திறங்குன்றி இயங்குவதுண்டு. உலக நல நிறுவனம் (W.H.O.) இவர்களை இழிவுப்படுத்தும்படி குறிப்பிடாமல், உளத்திறன் குறைந்தோர் என்று குறிப்பிடலாம் என்று பரிந்துரைக்கின்றது. மூடருக்கு ஓரளவிற்குக் கல்வி அளிக்க முடியுமாதலால் அவரைத் திறங்குன்றிக் கற்கக் கூடியவர் (Mentally Subnormal Educable) என்றும், மக்கு எனப்படுவோருக்கும் ஏதேனும் கைத்தொழிலைச் சிறப்பாகக் கற்பிக்க முடியுமாதலால் அவரைத் தொழில் பயிலக் கூடியவர் (Trainable) என்றும், மடையர் (Idiot) தம்மைத்தாமே கவனித்துக் கொள்ளவும் முடியாதவராதலால், அத்தகையோர் மற்றவர்களின் பாதுகாப்பில்தான் இருந்தாக வேண்டுமென்பதனால் அவர்களை உளத்திறங்குன்றிப் பாதுகாப்பிலிருப்போர் (Mentally Subnormal Custodials) என்றும் குறிப்பிடலாம், பாதுகாப்பிலிருக்க வேண்டியவர்கள் மக்கள் தொகையில் சுமார் 2 விழுக்காட்டை விடக் குறைந்தவர்களே. மற்ற இருவகையினரும் (மூடர்கள், மக்குகள்) பயிற்சி பெறவோ கற்கவோ முடியும். இவர்களைத் ‘தாமதித்து மலரும் மொக்குகளாகத்தாம்’ (Late Bloomers) கருத வேண்டும்.

சாதாரண நிலையினின்றும் 2 ஆண்டுகள் தாமதித்த நிலையிலிருக்கும் மாணவர்களைப் பிற்பட்டவர்கள் எனலாம். அவர்களது நுண்ணறிவு ஈவைக் கணக்கிடுவதை விடக் கல்வித்திறன் ஈவைக் (Educational Quotient) கணக்கிடுவதே நல்லது. பிற்பட்டோரின் கல்வி ஈவு பொதுவாக 85க்கும் குறைவாக இருக்கும். கல்வி ஈவு என்பது மாணாக்கனது அடைவு வயதுக்கும் (Attainment Age) கால வயதுக்கும் (Chronological Age) உள்ள விகிதம். $\frac{\text{அடைவு வயது}}{\text{கால வயது}} \times 100$ என்ற வாய்பாட்டைக் கொண்டு கல்வி ஈவு கணக்கிடப்படும். இவை எல்லாவற்றையுமே பழங்கால விளக்கங்களாகக் கொள்ளலாம்.

**புதுத்திருப்பம்:** மீத்திறன் இல்லாத பலர் பெரும் ஆற்றல் படைத்தோர் போல இயங்கி இருப்பதைக் கவனித்த உளவியல் வல்லுநர்கள், தம் பழங்கால முடிவைத் தவறென்று அறிந்தனர். கிராம்வெல் இலிங்கன், நெப்போலியன்,நெல்சன், கோல்டுசுமித்து, எமர்சன் ஆகியோர் மீத்திறன் படைத்தோர் அல்லர். அவர்களுடைய பள்ளிக்காலம் சிறப்பாகவே இருக்கவில்லை. ஆனால், அவர்களுடைய சாதனைகள் அல்லது படைப்புகள் மிகவும் சிறந்தவை. கீட்சு, பெர்னாட்சா ஆகிய இருவரும் ஆங்கில உலகத்திற்கு நன்கு தெரிந்தவர்கள்; எனினும், அவர்கள் இருவரும் நிறைய எழுத்துப்பிழைகளைச் செய்தவர்கள். உலகப் புகழ் பெற்ற பிகாசோ, உளவியல் பேரறிஞர்கள் ஆட்லர், யுங்கு என்ற மூவருக்கும் கணிதம் கொஞ்சங்கூடப் புரியாது. இருபதாம் நூற்றாண்டின் பேரறிஞர் ஐன்

சுட்டீனும் புகழ் பெற்ற கவிஞர் செல்லியும் சரியாகப் படிப்பு வருவதில்லை என்பதனால் பள்ளியிலிருந்து நிறுத்தப்பட்டனர்.ஐன்சுட் டீனுடைய அனைத்து ஆசிரியர்களும் அவரை உளத்திறன் குறைந்த மாணவர் என்றே முடிவு செய்தனர். மின்விளக்கு, சினிமா, ஒலிபெருக்கிப் பெட்டி முதலான இருநூறுக்கும் மேற்பட்ட பயனுள்ள கண்டு பிடிப்புகளைக் கண்டு குவித்த எடிசனைக் கடை மாணாக்கன் என்றனர் அவர்தம் ஆசிரியர்கள். எடிசனின் திறன்களில் குறை இல்லை. அவருக்குக் காது சரியாகக் கேட்காது. அச் சிறு ஊனத்தைப் பெரிது படுத்தினர் ஆசிரியர்கள். எடிசன் தமக்கிருந்த குறைக்குச் செய்த ஈடு உளத் திறனைத் தீவிரமாகப் பயன்படுத்தியதே. ஆசிரியர் களும் உளவியல் கணிப்புகளும் உளத்திறன் குறைந் தோரைக் கண்டறிந்து, அவர்களுக்கு ஏற்ற கல்வியை அளிக்க முடியவில்லை. இது இன்றைய கண்டுபிடிப்பு.

மனித மூளை பற்றிய ஆராய்ச்சிகளும் இம்முடிவையே தருகின்றன. மனித மூளையில் 16 பிலியனுக்கு அதிகமான செல்கள் உள்ளன. சாதாரண மக்கள் சுமார் 15 விழுக்காடு மூளைச் செல்களைப் பயன் படுத்துகின்றனர். வானொலி, விமானம், மின்சாரம் ஆகியவற்றைக் கண்டுபிடித்த அறிஞர்கள், புது மெட்டுகளைப் படைப்போர், கருத்தோவியங்களை ஆக்கியோர் ஆகியோரை ஆராய்ந்ததில், அவர்கள் கூட 20 முதல் 22 விழுக்காடு வரைதான் மூளையின் செல்களைப் பயன்படுத்தியுள்ளனர். அணுவைப் பிளக்க முடியும் என்ற கருத்தைத் தந்து, அதை மெய்ப்பித்த ஆல்பர்ட்டு ஐன்சுட்டீன்கூட23விழுக்காடு உளத்திறனைத்தான் பயன்படுத்தியுள்ளார்.சாதாரண மனிதர்கள் பயன்படுத்தாத மூளையின் அளவு சுமார் 85 விழுக்காட்டிற்கும் அதிகமாகும். ஆகவே, உளத் திறன் குறைந்தோரின் மூளையின் ஆற்றலைச் சரிவரப் பயன்படுத்த முடிந்தால், திறன் குறைந்தோர் என்ற நிலை தெரியாமலே போகும். மூளைக்கு அதிக அளவில் வேலையைத் தந்தால்தான் மூளையிலுள்ள செல்கள் இயங்கும். இதனால்தான் உளத்திறன் குறைந் தோர் அதிக அளவில் உழைத்து மீத்திறன் படைத் தோரைவிட ஆற்றல் பெற்றிருப்பதாகத் தம்மை அறிமுகமாக்கிக் கொள்கின்றனர். உடலிலுள்ள செல்கள் சோர்வடைவதைப்போல மூளையிலிருக்கும் செல்கள் சோர்வடைவதில்லை. அவை அதிக அளவில் செயற்படப்பட மெருகேற்றப்படும்.

நுண்ணறிவு ஈவையும் பெருக்கிக் கொள்ள முடியும் என்பதைப் பல ஆராய்ச்சிகள் மெய்ப்பித்து விட்டன. அதிகமாக வெவ்வேறு காட்சிகளைக் கண்ட, புதிய ஒலிகளைக் கேட்ட குழந்தைகள் மேலும் மேலும் முன்பைவிடச் சிறந்தனவற்றைப் பார்க்கவும் கேட்கவும் வேட்கை கொள்கின்றன. இதற்கு வாய்ப்புக் கிட்டுமானால் உளத்திறன் மிகும். பொருள் களைப் பார்த்தறிவதோடு பொருள்களுக்கான பெயர் களை அறிய முடிந்தால்தான் குழந்தைகள் அப் பொருள்களைத் தெரிந்து கொள்கின்றன. வெறுமனே நோக்குவதால் அவர்கள் மெய்யாக அப்பொருள் களைப் பார்ப்பது கூட இல்லை என உருசிய நாட்டு உளவியல் வல்லுநர்கள் கூறுகின்றனர்.

வள மிகு கல்வித் திட்டம் மிக அதிகமான அளவில் உள ஊனமுற்றோர், இளம்பிள்ளைவாதம் வலிப்புகள், மரபுக்குறை, பிறப்பின்போது ஏற்பட்ட அறுவைக்குறை, மூளையின் பெரும்பகுதி சேதமாதல் ஆகிய காரணங்களினால் ஏற்பட்ட உளத்திறன் குறை களைத் தவிர, மற்றெல்லாவகை உளத்திறன்களையும் சிறந்த கல்வித் திட்டத்தை வகுத்துப் பின்பற்றுவத னால் அறவே நீக்க முடியும். தெற்றுதல்(Stuttering), திக்குதல் (Stammering), மழலைப்பேச்சு, இடக்கைப் பழக்கம் போன்றவை குறைகளே அல்ல; இவை குறை களின் பக்க விளைவுகளாகும். குறைகள் நீக்கப்படும் போது இவை மறைந்து போகும்.

தாமதித்த உளத்திறன் (Mental Retardation) தவறான கற்றல் முறையொன்றினால் ஊன்றிவிடுவ தாகும். இது புதிய கற்றல் முறையைக் கவனியாது இருக்கச் செய்து விடுகின்றது எனக் கோவன் கூறு கிறார். உளத்திறன் குறைந்தோரின் கல்வி வளர்ச்சி சாதாரணக் குழந்தைகளைப் போன்றதே; வளர்ச்சி மெல்ல நிகழ்வதோடு வேகமாக ஓர் எல்லையை எட்டி அங்கு நின்றுவிடும். இந்தத் தேக்கம்தான் அவர்களுக் கான குறை என்பது இன்எல்டர் கருத்து. இளம் வயதில் சிறார்கள், குறிப்பாகப் பிறப்பு முதல் 6 ஆண்டுகள் வரை நன்கு ஊக்குவிக்கப்பட்டு விட்டால், பிற்காலத்தில் உளத்திறன் குறைந்து இருக்க மாட் டார்கள். இவர்களுக்கான ஆடல், பாடல், விளை யாட்டு, பேச்சு ஆகியவை பெரியவர்களுடன் இணைந் திருக்குமானால் உளத்திறன் தட்டுப்படாது என்கி றார் கார்மன்.

எப்பொழுதெல்லாம் உளத்திறன் குறைந்த இளைஞர்களுக்கு முதியோரைப் பார்த்துச் சரிவர முதியோர் இயங்கும் போக்கிலேயே ஒத்திகை தர முடிந்ததோ, அப்பொழுதெல்லாம் இவர்களின் கற்ற லில் வளர்ச்சி தெரிகின்றது. இளமைப் பருவத்திலிருக் கும் உளத்திறன் குறைந்தோர் கற்கும்போது நிறைய ஒய்வு நேரம் இருந்தும்கூட, நினைவிலிருத்துவதற் கான ஒத்திகை தந்து கொள்வதில்லை. அந்த ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தச் சுட்டிக் காட்டியபோது தான் இவர்கள் நன்மை பெற்றனர். இவர்களைச்

சிறுசிறு கட்டங்களில் பயில வைக்கும்போது மேலும் உதவியாக இருந்திருக்கிறது. நல்ல சூழ்நிலையை அளித்து விடுவதனால் மட்டுமே இவர்களுக்குக் கல்வி வளர்ச்சி ஏற்பட்டு விடுவதில்லை. உளத்திறன் வளர்ச்சிக்கான தடை சில வேளைகளில் அமைந்து விடலாம். இவர்களுடன் ஏராளமானோர் வசித்தல், மிகுந்த ஒலியுடன் இயங்கும் வானொலி, ஒளிக்காட்சிப் பெட்டிகள், ஓய்வே இல்லாத பெற்றோர், கூட்டமான சுற்றம் அமைந்து விடுவது போன்றவை தடையாக அமையலாம். இவர்களுக்காகத் தனிப்பள்ளிகளையோ வகுப்புகளையோ நடத்துவது சிறந்ததன்று. தனிக் கவனம் செலுத்துவதுதான் சிறந்தது.

பொதுப்படையான சில பண்புகளுக்கேற்பத்தான் உளத்திறன் குறைந்தோருக்கான கல்வித்திட்டம் (Curriculum) அல்லது பாடத்திட்டத்தை (Syllabus) அமைத்துக் கொள்ள வேண்டும். எல்லோருக்குமான கல்வித்திட்டத்தையே இவர்களுக்குச் சற்றுத் தாமதமாகக் கற்பிக்க வேண்டும். மேலும், ஆசிரியர்களின் அதிகமான நேரமும் கவனிப்பும் தரப்படுதல் வேண்டும். உளத்திறன் குறைந்தோருக்கு அடைய இருக்கும் வருங்காலம் பற்றிய எண்ணமோ கவலையோ இருப்பதில்லை. இப்பொழுது கற்பிக்கப்படுவதைக் கற்றுக் கொண்டால் கல்லூரிப் படிப்பின்போது மிகவும் உதவும் என்று உயர்நிலைப் பள்ளியில் சொன்னால், இதைப்பற்றி இவர்களுக்கு எத்தகைய ஈடுபாடும் ஏற்படாது. அதற்கு மாறாக, இப்பொழுது கற்பிப்பது நாளைக்குத் தரப்படும் வீட்டு வேலையைச் செய்ய உதவும் என்றால் ஆர்வங் காட்டுவார்கள். உடனுக்குடன் தொடர்பு படுத்த முடிந்தால்தான் ஏற்பர். ஆகவே, கற்பிக்கப்பட வேண்டியவை உடனுக்குடன் பயன்படுவதாக இருக்க வேண்டியது மிகவும் இன்றியமையாதது. அது போலவே, இவர்களால் கற்பனை செய்து சிக்கல்களை ஊகிக்க முடிவதில்லை. அதற்கு மாறாக அன்றாடம் நிகழும் வாழ்க்கைச் சிக்கல்களைச் சுட்டிக் காட்டினால் உடனுக்குடன் பற்றிக் கொள்வர். எனவே, விளக்குவதற்காகக் கூறப்படும் எல்லா மாதிரிகளும் மெய்யானதாக இருத்தல் வேண்டும். இவர்களுக்கு அச்சடித்தவற்றைப் படிப்பதென்பது அவ்வளவாகப் பிடிக்காது. எதையேனும் புரியாது என்று இவர்கள் உணரும்போது 'நன்றாகப் பாடத்தைப்படி' என்று கூறுவது உளவியல் அடிப்படையற்ற கூற்றாகும். இத்தவற்றை ஆசிரியர்களும் பெற்றோர்களும் நிறையச் செய்கின்றனர். நூல்களை அதிகமாகப் படிக்க வைக்க முயலக் கூடாது; இவர்களுக்கு வேறு ஆற்றல்கள் உண்டு. அவற்றைப் பயன்படுத்த வேண்டும். இவர்கள் செயல்முறை வழியாகக் கற்கிறார்கள் சுருள்படச் செய்திகள், கல்விப் பயணங்கள் மூலமாகக் காண்பனவற்றையும் கேட்பனவற்றையும் நன்கு கற்கின்றனர். இவர்கள் சராசரி மாணவர்களை மிஞ்சுவது மட்டுமல்லாது, உரையாடலின்போது இவர்களின் கூர்மையான கவனிப்பு சிற்சில வேளைகளில் மீத்திறன் மாணவர்களை விடச் சிறந்திருப்பதுண்டு. அதற்கான முக்கிய காரணம் கல்விப் பயணங்கள் மீத்திறன் மாணவர்களுக்குப் பிடிக்காதவையாகும். உளத்திறன் குறைந்தோருக்குப் பள்ளிக்குச் செல்வதென்பது பிடிக்காததொன்று. ஆனால், வெளி உலகத்தோடு தொடர்பு கொள்வது என்பது அதிகமாகப் பிடிக்கும். கேள்வி, காட்சிகளின் வாயிலாக அதிகமாகப் பட்டறிவை அளிப்பது பயன்தரும். அதோடு பெருமளவிற்கு அன்றாட வாழ்க்கையோடு கல்வி இயைந்திருக்க வேண்டும். மா. பெ.

துணை நூல்கள்:

**Butterfield, E.C.,** On the Theory and Practice of Improving Short-term Memory, American Journal of Mental Deficiency, 654-669, 1973.

**Carmen. N.,** A Better Start in Life, UNICEF News, Issue No. 107, 10-13, 1981.

**Cowan, A.,** Piaget: With Feeling, Holt Rinehart & Winston, New York, 1978.

**Feuustein, R.,** Cognitive Mobility in Retarded Adolescent, Effects of Instrumental Enrichment, American Journal of Mental Deficiency., 83(6), 539-550-979.

**Inhelder B.,** Diagnosis of Reasoning in the Mentally Retarded, John Day, New York, 1968.

**Kauffman, J.M., and Hallahan, D.P.,** Handbook of Special Education, Prentice Hall, Inc., Englewood Cliff., 1981.

**உளநலக் கல்வி:** உள்ளக் கிளர்ச்சிகள் (Emotions) செயல்களைத் தூண்டி விடுகின்றன. உள்ளக் கிளர்ச்சியினால் ஒருவர் பொருத்தக் கேடான செயல்களை வளர்க்கிறார். பொருத்தக்கேடு ஓர் உள நோய். உடல்நலக் கல்வியைப் போலக் குழந்தையின் சரியான பொருத்தப்பாட்டிற்கு உளநலக் கல்வியும் இன்றியமையாதது. உளநலம் பேணுதல் என்றால் பொருத்தக் கேட்டினைச் சீர்செய்தல் என்பது பொருள். மேலும், பொருத்தக் கேட்டின் பிற நிலைகளையும் காரணங்களையும் குணப்படுத்துதலும் அதில் அடங்கும். உளநலக் கல்வியின் நோக்கம் ஒருவரின் உள நலத்தைப் பேணுதலாகும். அக் கல்வி சரி

யான வாழ்க்கை முறைக்கு வேண்டிய உளவியல் உண்மைகளைக் கூறுகிறது.

**உளநலத் தத்துவம்:** உளநலக் குறைவு மனிதனை அழுத்திக் கொண்டிருக்கிற சிக்கல்களுள் தலையாய ஒன்று. உளநலக் குறைவினால் மட்டும் ஓராண்டிற்குப் பத்து இலட்சம் மக்கள் அமெரிக்க மருத்துவமனைகளில் சேர்க்கப்படுவதாக ஒரு குறிப்புக் கூறுகிறது. பெரும்பான்மையோர் மருத்துவ வாய்ப்பு இருப்பதை அறியாமையினாலும் மருத்துவ இன்றியமையாமையை உணராததினாலும் இந்த உதவியை நாடவில்லை. சிலர் மனவெழுச்சிக் குறைபாட்டினால் முழுமகிழ்ச்சியாக வாழ முடியாமல் இருக்கிறார்கள். விரும்பத் தகுந்த குடும்ப, சமூகச் சூழ்நிலையினாலும் பண்பாட்டினாலும் பல மனநோய்களைத் தடுக்கலாம் என்று மனநோய் மருத்துவர்கள் கருதுகிறார்கள். பல மனநோய்கள் குழந்தைப் பருவத்திலும் காளைப்பருவத்திலும் மிகுதியாகக் காணப்படுவதால் இவற்றைத்தடுப்பதில் பள்ளிகள் இன்றியமையாத பங்கு வகிக்கின்றன.

**உளநல முடையோன்:** உள நலமுடையோன் தன்னைப் பற்றிய நல்ல கருத்தினை உடையவன்; தற்பெருமை கொள்ளாதவன்; நல்லதையே எண்ணுபவன். அவனுடைய தன்மைகளை நடுநின்று நோக்கும் பொழுது உண்மையைப் புறக்கணிப்பவன் அல்லன். அவன் தன்குறைகளை மிகைப்படுத்தாமலும் குறைக்காமலும் ஏற்றுக் கொள்பவன்; உளநலமிக்கவன்; வரம்பு மீறிப் போய் பிறரைச் சந்திக்காமலும் தனிமையை விரும்பாமலும் இருப்பவன்; பிறருடன் சண்டையிடுபவனும் அல்லன்; பிறருடைய உரிமைகளையோ உணர்வுகளையோ அவமதிப்பவனும் அல்லன்; கனவு உலகில் வாழ்பவனும் அல்லன்; அவன் இச்சைகளைக் கட்டுப்படுத்தி அறிவு வழி நடப்பவன்.

**பொருத்தக் கேட்டின் காரணங்கள்:** ஒருவனுடைய எண்ணம் அல்லது செயல் குலைவு பொருத்தக் கேட்டினை (Maladjustment) உண்டாக்குகிறது. தேவைகளை நிறைவு செய்ய முடியாமல் போகும் பொழுது, விரும்பிய இலக்கை அடைய முடியாமல் தடைப்படும் பொழுது, பொருத்தக் கேடு அனுபவம் ஒருவனுக்கு ஏற்படுகிறது. பொருத்தக் கேடு தோல்வி, ஏக்கம், அச்சம், தோல்வியினால் ஏற்படக் கூடிய கவலை ஆகியவற்றால் ஏற்படுகின்றது. இந்தப் பொருத்தக் கேட்டிற்கு மூல காரணங்கள் சுற்றுப் புறத் தடைகள், உயிர்த் தேவைக் குறைபாடுகள், உளவியற் குறைபாடுகள் ஆகியவையாம்.

உளப் போராட்டங்களினால் பொருத்தக்கேடு, ஏக்கம், உள நலக் குறைச் சிக்கல்கள் ஆகியவை வளருகின்றன. சூழலில் உள்ள கவர்ச்சியான, எதிரான சில வற்றினால் உளப் போராட்டம் எழுகிறது. சுருங்கக் கூறின், நேரான (Positive), எதிரான உள்ளார்ந்த மதிப்புகளால் (Negative Values) உளப் போராட்டங்கள் நிகழ்கின்றன.

வாழ்க்கை முழுவதிலுமே எல்லா உயிரினங்களும் செயல் நோக்கத்தை அடைய முடிவதில்லை. இந்த எல்லாச் சூழ்நிலைகளுக்கும் இசைவிப்புத் தேவைப் படுகின்றது. இன்னல்கள் இருப்பினும் இடைவிடாத முயற்சியினால் இலக்கை அடைந்தால் இசைவிப்புக் கிடைக்கிறது. ஒருவன் இசைவிப்பில் தோல்வி கண்டால், விறைப்பான மனப்பான்மை (Tense Attitude) தோன்றிப் பொருத்தக் கேடு நிலையில் ஏக்கமும் அதைத் தொடர்ந்து மனமுறிவும் பெறுகிறான்.

பின்வரும் காரணங்கள் பொருத்தக் கேட்டினை உருவாக்குகின்றன. (அ) ஏழ்மைச் சூழ்நிலையாலும் பொருளாதாரத் தாழ்வாலும் இசைவிப்பிற்குத் தேவையான சூழ்நிலை ஏற்படாமற் போகலாம். (ஆ) பெற்றோரின் பாசப் பொழிவில் குறை ஏற்படினும் குழந்தை பொருத்தக் கேட்டினைப் பெறலாம். (இ) ஒரு குழந்தை பெற்றோரால் வெறுத்து ஒதுக்கப் படும் பொழுதும், அக்குழந்தை பாசத்திற்காக ஏங்கிப் பொருத்தக் கேட்டினைப் பெறலாம். (ஈ) குழந்தைகள் அளவுக்கு மிகுதியாகப் பாதுகாப்பைப் பெறும் பொழுது, சார்புக் குழந்தையாகி, உலகத்தோடு ஒத்துப் போக முடியாமல், ஒருநிலையில் சிக்கல்களைத் தீர்க்கமுடியாமல் ஆற்றலற்றதாக ஆகிவிடுகிறது.

(உ) பெற்றோர் அடிக்கடி அவர்களுக்குள் பிணக்குக் கொள்வதுவும் குழந்தையின் மனநிலையைத் தாக்கும். (ஊ) நரம்பு மண்டலம் சீராக இயங்காவிடின் பொருத்தக் கேடு உண்டாகும். (எ) மிக்க போட்டிகள், குழந்தைகளை முறை கேடாக நடத்துதல், பொருந்தாப் பாடத்திட்டம், கடுமையான கட்டுப்பாடு எல்லாமே ஆளுமை வளர்ச்சியைக் கெடுக்கின்றன. சுருங்கக் கூறின் அச்சம், எண்ணிய செயல் நிறைவேறாமை, பின் வாங்குதல் (Withdrawal), கீழ்ப்படியாமை, உற்சாகமின்மை, கவலை, கவனக்குறைவு, பண்பாட்டுக்குறைவு, சமூகப் பழக்க வழக்கங்களின் குறைபாடு ஆகிய யாவுமே பொருத்தக் கேட்டினை விளைவிப்பன.

**உளவியல் சார்ந்த இசைவிப்பு முறைகள்:** ஒருவனுடைய தேவைகள் மறுக்கப்படும் பொழுது,

அவன் விறைப்படைந்து சோர்வடைகிறான். அவன் நிலை இல்லாத் தன்மையை அடைகிறான். இந்த விறைப்பைக் குறைக்க ஏதாவது இசைவிப்பு முறைகளைக் (Adjustment Mechanisms) கையாளுகிறான். குறியிலக்கை அடைய முடியாதவர்கள் நிறைய இசைவிப்பு முறைகளைக் கையாளுகிறார்கள். அவை பின்வருவன: உள்ளடக்கல் (Suppression), சுவையற்ற நிகழ்ச்சியை வலிய மறத்தல், ஒரு கசப்பான நிகழ்ச்சியை நனவு நிலையிலிருந்து (Conscious) ஒதுக்குதல், எரிச்சலூட்டும் சிக்கலைத் தெரிந்தே தள்ளல் ஆகியவை உள்ளடக்கலில் அடங்கும்.

மகிழ்ச்சியல்லாத தொந்தரவு தரக்கூடிய அனுபவங்களை அல்லது ஆசைகளைத் தன்னையறியாமல் மறத்தல், அடக்குமுறையில் (Repression) அடங்கும். தன்னையறியாமல் நிகழ்வதால் ஒருவனுக்கு உள்ளடக்கலை விட அடங்கு முறையே உளநலக் குறைவை ஏற்படுத்துகிறது. உளவியல் முறையில் அடங்குமுறையை யாரும் ஊக்குவிப்பதில்லை. அடங்கிய ஆசைகளே கனவுகளாக வெளிப்படுகின்றன. தூக்கமின்மையாகிய நோய் (Insomnia) அடங்கிய ஆசையின் ஒரு நிலையே எண்ணம் செயல் குலைவுகளுக்கு எதிர்வினையாக வன்முறைப்போக்கு (Aggression) அமையலாம். அடுத்தவர் மேல் அல்லது பொருள்களின் மேல் ஆக்கிரமிப்பு, வெறுப்பு, தாக்குதல், அழித்தல் போன்றவற்றை இதற்கு எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம். இது மூன்று வகைப்படும் அவை: (அ) எண்ணத்தில் வன்முறை, (ஆ) சொல்லில் வன்முறை, (இ) செயலில் வன்முறை.(அ) எண்ணச் செயல் குலைவுகளுக்குக் காரணமானவர்களைத் தாக்குதல், (ஆ) தாக்கப்படும் பொருள் அல்லது ஆள் மிகவும் இடையூறாக இருக்கும் பொழுது அதனொடு சார்புடைய ஒன்றைத் தாக்குதல், (இ) தன்னைத் தானே தாக்கிக் கொள்ளுதல் என்னும் மூன்று வகைகளில் வன்முறை வெளிப்படும்.

ஈடு செய்தல்: குறைவை நிறைவு செய்தலே ஈடு செய்தல் (Compensation) என்று பொருள்படும். அழகற்ற ஒரு மாணவி கடுமையாக உழைத்து மிக்க மதிப்பெண் பெற்று உயர் நிலை பெற முயற்சிப்பதையோ, படிப்பில் கீழான நிலையில் இருக்கும் மாணவன் மிகுந்த பயிற்சி செய்து முதன்மையான விளையாட்டு வீரனாக முயற்சி செய்வதையோ சான்றாகக் கொள்ளலாம்.

ஒன்றில் ஒன்றுதல்: பள்ளியோடு தன்னை இணைத்துக் கொள்ளும் மாணவன், அன்னையோடு தன்னை இணைத்துக் கொள்ளும் சிறுமி, தன் குடும்பத்தோடு தன்னை இணைத்துப் பெருமை கொள்ளும் குழந்தை, தன் இனத்தோடும் நாட்டோடும் இணைத்துப் பெருமை கொள்ளும் குடிமகன், புதினத்தில் வரும் கதாநாயகனோடு தன்னை இனங்கண்டு கொள்ளும் வாசகன் எல்லோருமே ஒன்றில் ஒன்றுவோர் ஆகின்றனர்.

புறத்தெறிதல்: தன் குறைகளைப் பிறரின் மேல் ஏற்றிக் கூறுதல் புறத்தெறிதல்(Projection) எனப்படும். தன் செயல்களில் ஏற்படுகின்ற பின் விளைவுகளின் தோல்விகளினின்று தப்பிக்கத் தன் குற்றங்களையும் குறைகளையும் பிறர்மேல் சுமத்துதல் புறத்தெறிதல் என்று சொல்லப்படும்.

அறிவுக்குப் பொருத்தமாக விளக்குதல்: இது தான் செய்த தவற்றிற்கு அறிவுக்குப் பொருத்தமான காரணங்கள் கண்டுபிடித்துக் கூறல். ஈசாபுக் கதையில் வருகின்ற நரியின் 'சீசீ இந்தப் பழம் புளிக்கும்' என்ற கூற்றினை இதற்குச் சான்றாகக் கூறலாம்.

இசைவிப்பை மேம்படச் செய்தல்: பொருத்தக் கேடுடைய எல்லாக் குழந்தைகளும் ஒழுங்கீனச் சிக்கல்களைக் கிளப்புவதில்லை. சில குழந்தைகள் ஒழுங்காகப் பழகாதவர்களாக, பின்வாங்குபவர்களாக, துயரம் நிரம்பியவர்களாக, நரம்புத் தளர்ச்சியுள்ளவர்களாக இருக்கிறார்கள். இந்தக் குழந்தைகளுக்கு அன்பு தேவைப்படுகின்றது.

உடல் நலத்திற்கு ஒத்துவாராத பள்ளிச் செயல்களாலும், அளவுக்கு மேற்பட்ட பாதுகாப்பாலும், பெற்றோர்கள் வெறுத்து ஒதுக்குவதாலும் தனித்துவப் பற்றாக் குறையாலும் எண்ணச் செயற் குலைவுகள் ஏற்பட்டுச் சிக்கல்கள் தோன்றுகின்றன. அவையே துன்பத்திற்கும் தாழ்வுணர்ச்சிக்கும் வெட்கத்திற்கும் காரணங்களாகி விடுகின்றன. இக்குறைகளைப்போக்குவதற்குக் குழந்தையைக் குழுநிகழ்ச்சிகளில் பங்கு பெறச் செய்து வெற்றி கிட்டுமாறு செய்தால், அக் குழந்தை தன்னம்பிக்கையைப் பெறும்; தன்னைப் பற்றிய நல்ல எண்ணச் சூழலை ஏற்படுத்திக் கொண்டு நல்ல உள நலம் பெறும். பி.என்.மு.

**உளநலமற்றோர் இல்லம்**: உலகில் மற்றவர்களோடு இணக்கமான உறவையும் சமுதாயம் சார்ந்த, இயல்பொருள் சார்ந்த சூழலில் ஏற்படும் மாறுதலுக்கு ஏற்ற விதத்தில் ஆக்க முறையிலான பங்களித்தலையும், பங்கு பெறுதலையும் அளிக்கும் செயலாற்றல் தன்மையே உளநலம் அல்லது மனநலம் ஆகும். மேலும், ஒரு மனிதனின் தனித்தாளுந் தன்மையையும், இயல்புணர்வு தூண்டலையும் அவனுடைய வாழ்க்கையில் முழுமையான உளநிறைவை

யும் உணரும் விதத்தில் பயன்படச் செய்வது அவனது உளநலம் ஆகும். இது சில சமுதாயச் சூழ்நிலைகளாலும் உடலில் உயிர் அணுக்கள் மாற்றங்களாலும் நிலைமாற்றம் அடைகிறது. நிலைமாற்றம் அடையும் போது, மனிதன் சராசரி நிலையினின்றும் இயல்பான நிலையினின்றும் வேறுபட்ட நிலையினை அடைகிறான். பலர் சாதாரண நிலையிலேயே உள்ளனர். அவர்கள் ஒரு குறிப்பிட்ட நடத்தை உடையவராகவும், அந்த நடத்தையுடைய அனைவரும் ஏறக்குறைய ஒரே மாதிரியான இயங்கும் தன்மையுடன் இருப்பதாகவும் கூறப்படுகின்றனர். இந்த நடத்தையினின்று சிறிது மாறுபட்டு நடந்தாலும், வாழ்க்கையில் பல இடையூறுகளும் பொருத்தப்பாடின்மையும் காணப்படுகின்றன. இவ்வாறு இயல்பு நிலையினின்று வேறுபட்டுக் காணப்படுபவர் அதிகமான விலக்கம் உடையவராக இருப்பதால், அவர்களின் செயல்களில் சரியான கவனம் செலுத்தாவிடில் அவர்களின் பொருத்தப்பாடு மிகவும் கடினமாகிறது. இத்தகையோர் மனவளர்ச்சி குன்றியோர் அல்லது உளநலமற்றோர் அல்லது அறிவீனர் எனப்படுவர். காண்க: உளத்திறன் குறைந்தோர்கல்வி.

இக்காலத்தில் இத்தகைய மக்களுக்குத் தரமான சிறந்த பயிற்சிகளும் வசதிகளும் ஆராய்ச்சிகள் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுப் பின்பற்றப்பட்டு வருகின்றன. இவர்களின் தனிப்பட்ட பாதிப்பின் தன்மை, காரணம் ஆகியவை முதலில் கண்டுணரப்பட்டு, அவர்களின் தேவைக்கேற்பத் தகுதியான பயிற்சி அளித்தல் மூலம் அவர்களைத் தனித்தாளும் தன்மைக்கேற்பச் செயல்திறம் உள்ளவர்களாக மாற்றுதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இவர்களுக்குப் பயிற்சி அளித்தல் மூலம் கைவேலை, கல்வி, சமுதாயப் பழக்கங்கள், பொருளாதார ஆக்கத்திறன் ஆகியவற்றைப் பயிற்றுவித்தல் வேண்டும். இத்தகையோரைப் பாதுகாப்பு மையங்களான இல்லங்களில் சேர்த்துப் பயிற்றுவித்தல் நல்லது. உளநலமற்றோர் இல்லங்கள் வறிய நிலையில் உள்ளவர்களுக்கு உணவு, உடை, உறைவிடம், மருத்துவ வசதி முதலியவை வழங்குவது மட்டுமன்றி, எல்லா நிலைமையிலுள்ளவர்களுக்கும் சிறப்புக் கல்வி அளித்தலையும் நோக்கமாகக் கொண்டுள்ளன; சிறந்தபேச்சுப் பயிற்சிகள் மூலம் (Speech Therapy) குழந்தைகளின்சொல்வளத்தையும்பேச்சுத்திறனையும் வளர்க்கின்றன. பயிற்சிகளின் மூலம் அன்றாடவாழ்க்கைக்குரிய தேவைகள், கடமைகளை நிறைவேற்றுதலும் கற்பிக்கப்படுகின்றது. இவர்களிடம் காணப்படும் திறமைகளை மேன்மேலும் ஊக்குவித்து, அதற்கேற்ற கைத்தொழில்களில் பயிற்சி அளித்துத் தனித்தியங்கும் இயல்திறம் மிக்க நம்பிக்கையுள்ள குடிமக்களாக மாற்றுவதே மிக முக்கியமான குறிக்கோளாகும்.

உள நலமற்றோரின் குறைவின் காரணம்,தன்மை ஆகிய இரண்டும் அறியப்பட்டு, அதற்கேற்ப மருத்துவ உதவியும், மனோதத்துவச் சிகிச்சையும் அளிக்கப்படுகின்றன. அவர்களின் உளவயதின் அளவின்படி பயிற்சியும் தனிக் கல்வியும் அளிக்கப்படுகின்றன. தினசரிச் சோதனை மூலம் அவர்களது பழகும்விதம் சோதிக்கப்பட்டு, அவற்றின் முடிவின்படி பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. அவர்களுடைய வாழ்வில், விளையாட்டு மிகமுக்கியமான இடத்தை வகிக்கிறது. ஆனால், 'வலிப்பு' வரும் குழந்தைகள் விளையாட்டு நேரங்களில் கண்காணிக்கப்பட வேண்டும். ஓர் அமெரிக்க மனோதத்துவ நிபுணர் 'நன்றாகப் பயன்படுத்தப்பட்ட ஓய்வுநேரம், மனநலத்திற்கு அரிய மருந்து' என்கிறார். ஆகவே தோட்டவேலை, கைவேலை, நாடகம், படங்கள் வரைதல், தொலைக்காட்சி, படக்காட்சி முதலியன பார்த்தல் ஆகியவை அவர்கள் உணர்வுகளின் முதிர்ச்சிக்கும் (Emotional Maturity) படைக்கும் திறன்மிக்க செயல்களுக்கும் (Creative Activities) பயன்படுகின்றன. தனியாக இவ்வாறு இல்லங்களில் இருப்பதோடு, அவர்கள் பெற்றோர்களுக்கும் இக்குழந்தைகளைப் பற்றிய பொறுப்புணர்ச்சி இருக்கவேண்டும். ஆகவே, 'பெற்றோர்களின் சுயஉதவிக் குழுக்கள்தொடங்கப்பட்டுப் பெற்றோர்கள், இல்லங்களின் ஊழியர்களால் சந்திக்கப்பட்டு ஊக்குவிக்கப்படுகின்றனர்.

சமுதாயத்தில் மருத்துவர்கள் அல்லது சமூக நல ஊழியர்கள் மூலம் மனவளர்ச்சி குன்றுதல் ஏற்படாமலிருக்க உதவுகின்ற எச்சரிக்கை முறைகள், தடுப்பு முறைகள் முதலியன வழங்குதல்; மனவளர்ச்சி குன்றி இருந்தால் செய்யவேண்டிய உதவிகள், பயிற்சிகள் ஆகியவற்றையும் அவ்வாறு பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகளைப் பராமரித்துப் பயிற்றுவித்துக் கல்வி அறிவும் தொழிற்பயிற்சியும் அளித்தல்; அவற்றிற்குரிய முறையான செயல்திட்டங்களையும் பாடத்திட்டங்களையும் கடைப்பிடித்து, இத்தகைய குழந்தைகளைப் பராமரித்தல் ஆகியன இல்லங்களின் முக்கிய சேவையாகும். மேலும், பெற்றோர்களுக்குக் கற்பிப்பது மூலம் சமுதாயத்தில் இத்தகையோர் பற்றியுள்ள தவறான கருத்துகளை மாற்றவும் இது முயலுகிறது.

உலகம் முழுவதும் இத்தகைய உளநலமற்றோரின் நலனுக்கென முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஐக்கிய நாடுகள் 1983–1992 வரை உள்ள பத்தாண்டுக் காலத்தை 'ஊனமுற்றோரின் பத்தாண்டு'(Decade of

the Disabled) என அறிவித்து, ஓர் உலகச் செயல் திட்டத்தை வகுத்துள்ளது. அத்திட்டத்தின்படி, இந்தியாவில் 2-ஆம் மாநாடு (ஊனமுற்றோரின் நலனுக்கான சேவைகள் என்ற பொருளில் அமைந்த- National Society for Equal Opportunities for the Handicapped, India) இந்தியா தேசிய ஊனமுற்றோர் சம வாய்ப்புச் சங்கம் என்னும் நிறுவனத் தாரால் பம்பாயில் 1985, பிப்பிரவரியில் கூட்டப்பட்டது. மேலும், இதன் 7-ஆம் உலக மாநாடு தில்லியில் 1985, மார்ச்சில் உளநலமற்றோர் அறிவியற்கல்விக் கழகம் (International Association for the Scientific Study of Mental Deficiency) என்ற பொருளில் கூட்டப்பட்டது. இம் மாநாடுகளில் உளநலமற்றோர் அல்லது மனவளர்ச்சி குன்றியோரை முன்னேற்றுவிக்கும் திட்டங்கள் உலகம் முழுமையுள்ள தலைவர்களாலும் நிறுவனங்களாலும் கலந்தாலோசிக்கப்பட்டன.

இல்லங்கள் அமைத்து உளநலமற்றோரைப் பராமரிக்கும் முறை கி.பி. 19-ஆம் நூற்றாண்டிலிருந்து பின்பற்றப்பட்டு வருகிறது. இந்தியாவில் 1981-இல் செய்த கணக்கெடுப்பின்போது இருந்த சுமார் 12 கோடி ஊனமுற்றோருள் 9.7 கோடிப் பேர் கிராமப் புறங்களிலும் 2.3 கோடிப் பேர் நகரப் புறங்களிலும் வசித்தனர் என்பது தெரியவந்தது. அவர்களுக்கு உதவிசெய்யும் பொருட்டு நான்கு தேசிய நிறுவனங்கள் நிறுவப்பட்டுள்ளன. இந்நிறுவனங்கள் மூலம் பல இல்லங்களும் சிறப்புக் கல்வி நிலையங்களும் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் தொடங்கப்பட்டன. சிறப்பாக, அரசாங்கத்தாலும் தனிப்பட்ட தன்னார்வம் மிக்க மக்கள் அல்லது மத நிறுவனங்களாலும் இல்லங்களும் பள்ளிகளும் நிறுவப்பட்டுள்ளன. பல நிறுவனங்கள் நகர்ப்புறங்களில் அமைக்கப்பட்டுள்ளமையால், கிராமப் புறங்களில் உள்ள தேவை நிறைந்தோர் பலரால் பயன்பெற முடியவில்லை. சில மாவட்டங்களில் எந்த ஒரு நிறுவனமும் இல்லாத நிலையும் காணப்படுகிறது. தமிழகத்தில் ஏறக்குறைய முப்பதிற்கும் மேற்பட்ட நிறுவனங்கள் உள்ளன.

அரசாங்கம் இத்தகையோருக்கென்று நிதி உதவி அதிகமாக வழங்கவும், நிதிஉதவி பெறுகின்ற மக்களின் எண்ணிக்கையைச் சுமார் 60,000-இலிருந்து 100,000 பேராக அதிகரிக்கவும் 7-ஆம் ஐந்தாண்டுத்திட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. ஆகவே, இத்தகைய திட்டத்தின் மூலம் பல உளவளர்ச்சி குன்றியோர் அல்லது மனநலமற்றோருக்கான தேவைகள், முன்னேற்றத் திட்டங்கள் முதலியவை நிறைவேற்றப்பட்டு, அவர்களின் வாழ்வில் மலர்ச்சி, வளர்ச்சி, பாதுகாப்பு, பராமரிப்பு ஆகியவை ஏற்படும் என்பது எதிர்பார்க்கப்படுகிறது. சா.தி.

துணை நூல்கள்:

Abstracts from the Reports Submitted for the 7th, World Congress of the International Association for the Scientific Study of Mental Deficiency, Held at New Delhi from March 24th 28th. 1985.

Eisenberg, Myron G. etal., Disabled People as Second Class Citizens, Springer Publishing Company, New York, 1982.

**உளநலவியல்**: உள்ளத்தின் நலத்தினைப்பற்றிய விதிமுறைகளைக் கூறும் அறிவியல் உளநலவியல் எனப்படும். உறுதிபெற்ற உள்ளத்தின் அடிப்படை விதிகளை ஆராயும் போது, உளக்கோளாறுகள் (Neuroses), உளநோய்கள் (Psychoses) சட்டத்திட்டத்திற்குப் புறம்பான நிகழ்ச்சிகளான கொலை, களவு, தற்கொலை, பரத்தமை, கற்பழிப்பு முதலியவற்றிற்கான காரணங்கள் ஆகியவை உளநலவியலில் அடங்கும்.

உளநலம் (Mental Hygiene) என்னும் சொல்லினை உளவியலில் புகுத்திய பெருமை, அடால்பு மெயர் (Adolf Meyer) என்னும் உளப்பிணி மருத்துவரைச் சாரும். ஆனால், உளநலவியல் என்னும் பகுதியையும் அமைப்பையும் தோற்றுவிக்கக் காரணமாக இருந்தவர், கிளிப்போர்டு பியர்சு (Clifford Beers) என்னும் உளநோயால் பீடிக்கப்பட்டுப் பின் குணமடைந்த ஒரு பட்டதாரி இளைஞராவர். இவர் வெளியிட்ட நூலான 'தன்னை உணர்ந்த உள்ளம்' (A mind that found itself) கி.பி. 19-ஆம் நூற்றாண்டிலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் உள மருத்துவமனைகள் இருந்த நிலையினை விவரிக்கிறது. அக்காலங்களில் கிளர்ச்சி மிக்க உளநோயர்ளிகள் கட்டுக்கடங்காது நடந்து கொள்வதனைத் தடுக்க உடம்பு, கை கால் ஆகியவற்றை அசைக்கக் கூட இயலாத வண்ணம் அதற்காகச் செய்யப்பட்ட தனிப்பட்ட கருவியில்(Straight jacket) நாள் அல்லது வாரக் கணக்கில் பொருத்தப்படுவார்கள். இவ்வாறு பொருத்தப்படுவதால், நோயாளிகளின் நோய் மிகுதியாயிற்றே ஒழியக் குறையவில்லை. நோயாளிகளுக்கு மருத்துவர்கள்மேல் வெறுப்புண்டாயிற்று. இந்த வெறுப்பு அவர்கள் நோய் நீங்குவதற்குத் தடையாக அமைந்தது. இந்த நிலையினை உள மருத்துவர்கள் அறிந்தாரில்லை. பியர்சு எழுதிய நூலின் வழியாகத்தான் இந்த உண்மை மருத்துவர்களுக்கும் பொதுமக்களுக்கும் தெரியவந்தது.

அடால்பு மெயர் போன்ற தலைசிறந்த உள மருத்துவர்களின் உதவியோடு பியர்சு அமெரிக்க நாட்டிலுள்ள கனக்டிகட்டு (Connecticut) என்னும் இடத்தில், 1908-இல் உளநல இயக்கத்தைத் தொடங்கினார். நாளடைவில் இவ்வியக்கத்தால் பெருவாரியான உளவியலாளர்களும் உளமருத்துவர்களும் சமூகத் தொண்டில் ஆர்வம் கொண்டோரும் பெரிதும் ஒத்துழைத்தனர். விரைவில் இந்த இயக்கம் அமெரிக்காவின் பிற பகுதிகளிலும் ஐரோப்பாவில் பிரான்சு, செருமனி, பெல்சியம், இத்தாலி, இங்கிலாந்து போன்ற நாடுகளிலும் பரவலாயிற்று. இதன் விளைவாக, 1930-ஆம் ஆண்டு அமெரிக்க நாட்டில் வாசிங்டனில் முதன் முதலாக அனைத்து நாடுகளின் மாநாடு கூடியபோது, உலகின் 53 நாடுகளின் பேராளர்களும் ஒன்று கூடும் வாய்ப்புக் கிட்டியது. இந்த மாநாட்டில் அனைத்து நாட்டுக்குழு ஒன்று நிலையாக நிறுவப்பட்டது. இந்த அனைத்து நாட்டு உளநல மாநாடு பல நாடுகளில் ஒவ்வோர் ஆண்டும் கூடி வருகிறது. இன்று உலக உளநலக் கூட்டமைப்பு (World Federation of Mental Health) இலண்டனில் தன் தலைமையகத்தைக் கொண்டு இயங்கி வருகின்றது. இந்நிறுவனம் பல நாட்டுப் பல்துறை வல்லுநர்கள், பல நாட்டு அரசுகள் ஆகியவற்றின் துணையோடு உளநலம் பற்றிய கருத்துகளை மக்களிடையே உருவாக்கவும் பரப்பவும் பெரிதும் பாடுபடுகிறது. உளநல இயக்கம் விரிவாக ஆக உளநலவியலும் விரிவடையத் தொடங்கியது. அதன் காரணமாக உளநலமும் உலகக் குடியுரிமையும், கல்விக் கூடங்களில் உளநலம், தொழிற்கூடம்சார் உளநலம், அயல் நாட்டில் குடிபுகுவோர் உளநலம், அகதிகள் உளநலம் என்பன போன்ற தலைப்புகள் உளநலவியலில் அறிமுகப்படுத்தப்பட்டன.

பொதுவாக, எல்லா நாடுகளிலும் மக்களுள் பலர் அவர்களது கல்வி அறிவு வளர்ச்சிக்காக உள நோயினைப் பற்றித் தவறான கருத்துகளைக் கொண்டிருந்தனர். சான்றாக, உளநோயுடைய ஒருவனைப் 'பேய் பிடிக்கப்பட்டவன்' என்று கருதிவருபவர் இன்றும் பல நாடுகளில் உள்ளனர். இதன் காரணமாக உள நோயினால் பீடிக்கப்பட்டவர்கள் மக்களின் வெறுப்பு, சீற்றம், தண்டனை ஆகியவற்றிற்கு உள்ளாகிறார்கள். உளநல இயலின் பலகுறிக்கோள்களுள் மக்களிடையே நிலவிவரும் உளக்கோளாறுகள், உளநோய்கள் ஆகியவை பற்றிய குருட்டு நம்பிக்கைகளை ஒழிப்பது ஒன்றாக உள்ளது. உளநோயும் உடல்நோய் போன்றதே. ஒருவன் உடல் நோயால் பாதிக்கப்பட்டால் அதனை எவரும் அவமானமாகக் கருதுவதில்லை. அது போன்றே உளநோய் ஏற்படும் நிலையிலும் அதை அவமானமாகக் கருதத் தேவை இல்லை. உளநலவியல் இயக்கத்தின் காரணமாகப் 'பைத்தியம்', 'பைத்தியக்கார மருத்துவமனை' என்பன போன்ற ஏளனச் சொற்கள் நீக்கப்பட்டு,' உளநோய்', 'உளநலமருத்துவமனை' என்பன போன்ற சொற்கள் இப்போது வழக்கில் இருக்கின்றன.

உளநலவியல் இன்றைய நிலையில் மனித வாழ்க்கையின் பல பகுதிகளில் செழுமை காண்பதற்கான வழிமுறைகளை வகுத்தளிக்கின்றது. உறுதியான உள்ளமுடைய மக்களை உருவாக்க வழிகாட்டுவது, குழந்தைகளைச் சிறந்த முறையில் வளர்ப்பதற்கான வகைகளைக் கூறுவது, பெற்றோர், பிள்ளைகள், ஆசிரியர், மாணவர் ஆகியோருக்கிடையே உளநலப் பாங்கான உறவு முறைகளுக்குரிய விதிகளை எடுத்துக் காட்டுவது, குழந்தை தாயின் வயிற்றில் தோன்றியதிலிருந்து, அது பிறந்து குழந்தைப்பருவம், குமரப்பருவ முதிர்ச்சி, முதுமைப் பருவம் ஆகியவற்றில் உண்டாகும் உளநலச் சிக்கல்கள், அதற்கான தீர்வுகள் ஆகியவற்றை விளக்குவது போன்றவை உளநலவியலில் அடங்கி உள்ளன. அவ்வாறே கல்விநிலையங்களிலும் தொழிற்கூடங்களிலும் உள்ளவர்கள் ஒருவரோடொருவர் தொடர்பு கொள்ளுதலின் காரணமாகவும், மற்றச் சூழ்நிலைகளின் காரணமாகவும் ஏற்படும் உளநலச் சிக்கல்களுக்குத் தீர்வு முறைகளையும் விளக்குகிறது. மணவாழ்வில் இருசாராரும் இயைந்து இன்பம் அடைவதற்கான முறைகளை விவரிக்கிறது. மேலும், உளப் போராட்டம், ஏமாற்றங்கள், பிரிவுத்துயரங்கள், மன முறிவுகள் ஆகியவற்றைத் தாங்கி வாழ்வதற்கு உரிய நெறிகளை அறியச் செய்வதும் உளநலவியல் பகுதியே. வறுமை, மக்கள் தொகைப்பெருக்கம், வேலையில்லாத் திண்டாட்டம், திறனுக்குத் தக்க வேலைகிட்டாத நிலை போன்றவையே வளரும் நாடுகளிலுள்ள சிக்கல்கள். இவை மனிதர்களின் உளநலத்தினைக் கெடுப்பவை. இச்சிக்கல்களும் உளநலவியலில் அடங்கும். கடந்த ஐம்பது ஆண்டுகளில் உலக நாடுகளில் அறிவியல் வளர்ச்சியின் காரணமாகப் பல மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. நவீன இயந்திரங்கள், போக்குவரத்துச் சாதனங்கள், பேச்சு மற்றத் தொடர்பு முறை ஆகியவை மனிதனின் வாழ்க்கையில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தி உள்ளன. இந்த மாற்றங்கள் நாகரிக வளர்ச்சிக்கு இன்றியமையாதனவாக அமைந்த போதிலும், அவை சில உளநலச் சிக்கல்களை உண்டாக்கியுள்ளன. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை இளங்குற்றம் (Juvenile Delinquency), போதை மருந்துகளுக்கு அடிமை ஆதல் (Drug addiction) போன்றவையாகும். இச்சிக்கல்கள் வளர்ந்த நாடுகளில் மிகுதியாகக் காணப்படுகின்றன.

**உளநலக் கோட்பாடுகள்:** உள்ளத்தை உறுதியான நிலையில் வைத்து நல வாழ்க்கை வாழப் பல

கோட்பாடுகள் உள்ளன. ஆனால் அவை உளவியலின் பல நோக்குகளுக்குத் தக்கவாறு அமைந்துள்ளன. உளப்பாகுபாட்டுத் துறை, நடத்தை இயல்துறை, முழுமை இயல்துறை, புதிய உளப்பாகுபாட்டுத்துறை, புதிய நடத்தை இயல்துறை, மனிதாபிமான உளவியல் துறை ஆகியவை உள நலம்பேண வழிகாட்டும் முறைகள் இவை அவற்றின் அடிப்படைக் கொள்கைகளுக்குத் தக அமைந்துள்ளன. பொதுவாக உளநலவியல் உள மருத்துவத்தைச் சார்ந்து வளர்ந்த காரணத்தினாலும் உளநலமருத்துவம்தொடக்ககாலத்தில் உளப்பாகுபாட்டைச் சார்ந்து இருந்த காரணத்தினாலும் உளநலக்கோட்பாடுகளின் விதிகளும் நெறிகளும் பெரும்பாலும் உளப்பாகுபாட்டைச் சார்ந்தும், மனிதாபிமான உளவியலை ஓரளவுக்குச் சார்ந்தும் உள்ளன. உளநலக் கோட்பாடுகளுள் சிறந்தவை: 1. சூழ்நிலைத் தூண்டல்கள், வேறுபடுத்தி அதற்குத்தக விளங்கும் எதிர்த் தூண்டல்கள், 2) சமூகத்தில் ஒருவரையொருவர் சார்ந்திருத்தல், 3) செயல்களில்தாமாக விழைந்து செயற்படல், 4) அறிவையும் அனுபவத்தையும் முன்னறிவுடன் பயன்படுத்துதல், 5) கடந்தகால, நிகழ்கால மனஎழுச்சிகளைச் சொல்வழி வெளிப்படுத்துதல், 6. பிறர் தேவை உணர்ந்து உதவுதல், 7. தற்கட்டுப்பாடு, 8. குடும்பம், தொழில் மற்றச் சமூகப் பொறுப்புகளை ஏற்பதற்கான ஆர்வம், 9. ஒழுக்கம், 10. தன்னம்பிக்கை, 11. இயற்கை, சமூக ஆற்றல்களோடு இயைந்து வாழ்தல், 12. மெய்யுணர்வு அடைதல் ஆகியன.

உளநலவியல் உறுதியான உள்ளம் பெற நெறிமுறைகளை வகுத்துள்ளது. அவற்றுள் சிறந்தவற்றுள் சிலபின்வருமாறு: 1. ஓய்வு, பயிற்சி, உணவு, தூய்மை போன்ற பழக்கங்களின் மூலம் உடலை நலத்துடன் வைத்துக் கொள்ளல் வேண்டும். 2. தொல்லைகள், கவலைகள், அச்சங்கள் ஆகியவற்றைச் சந்திக்கத் துணிதல் வேண்டும். முடிந்த வரை முயற்சி செய்த பிறகு மிகவும் மனநிறைவு தரும் செயல்களில் கவனத்தைச் செலுத்த வேண்டும். 3. தன்னை மறக்கச் செய்யும் பொழுதுபோக்குகள், சமூகவிளையாட்டுகள், போட்டி விளையாட்டுகள் ஆகியவற்றில் கலந்து கொள்ளல் வேண்டும். 4. தொல்லைதரும் துடிப்புகளையும் மன எழுச்சிகளையும் விரும்பத்தக்க வழிகளில் வெளியிட முயலவேண்டும். அவற்றை அடக்கி ஒடுக்குதல் கூடாது. 5. சமநிலையுடைய ஆளுமையை அடைய முயல வேண்டும். இதற்குத் தடையாக உள்ளவற்றைப் புரிந்து கொண்டு, அவற்றை நீக்க வழி கோலவேண்டும்.

6. நகைச்சுவையை வளர்த்துக் கொள்ள முயல வேண்டும். தவறுகளை ஒத்துக்கொண்டு, தன்னையே பார்த்து நகைக்க விழையவேண்டும். 7. தனது ஆற்றல்களுக்கு உரிய வகையில் குறிக்கோள்களை அமைத்துக்கொண்டு, அவற்றை அடைவதற்காகப் பாடுபடுவதில் மகிழ்ச்சி பெற வேண்டும். 8. தனது இன்பதுன்பங்களில் பங்கு பெறும் உண்மையான நண்பர்களை உருவாக்கிக் கொள்ளல் வேண்டும். 9. உடல் விறைப்பினைத் தவிர்த்தலும், செய்யும் வேலையில் பங்குபெறாத தசைகள் அனைத்தும் ஓய்வாகத் தளர்ந்து இருக்குமாறு செய்தலும் வேண்டும். 10. தன்னைச் சுற்றியுள்ள அழகானவற்றைக் கண்டு இன்புறுவதன் மூலம் நிகழ்காலத்தை அனுபவிக்கும் பழக்கத்தினை ஏற்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

11. போராட்டங்களின்போது அஞ்சாமல் இருப்பது இன்றியமையாதது. இது உளப் போராட்டங்களுக்கும் பொருந்தும். போராட்டத்திற்கான நல்ல முடிவைத் தீர எண்ணி அடைதல் வேண்டும். 12. வேண்டுவனவற்றைத் தானே உருவாக்கிக் கொள்ள வேண்டும். வெறும் பகற்கனவில் ஈடுபடுவது பயனற்றது. வலிந்து முயல்வது இன்றியமையாதது. இதில் வேடிக்கையும் இன்பமும் உள்ளன. 13. தனது தனித்திறனைப்பற்றி மிகையாக எண்ணிக் கொண்டிருத்தல் கூடாது. சமூகத்தில் உள்ளோருள் பெரும்பாலோர் சாதாரண மக்களே என்பதனை உணர்ந்தறிய வேண்டும். 14. ‘காலம் பலவற்றையும் ஆற்றிவிடும்’ என்பதனை உணர வேண்டும். பொறுமையாகவும் நம்பிக்கையாகவும் இருக்க முயலவேண்டும். 15. காதல், வீரம், பாதுகாப்பு, வெற்றி ஆகியவற்றைத் தேட வேண்டும். இவற்றைப் பெற்று அனுபவிக்க முடியும் என்பதனைத் திடமாக நம்பவேண்டும்.

16. தனக்குரிய தத்துவத்தை உருவாக்கிக் கொள்ளவேண்டும். தனது இருப்பு நிலையைப் புரிந்து கொண்டு தனக்குள்ள பலசிக்கல்களைச் சந்திக்கத் தக்க நிலைகளை உருவாக்க வேண்டும். சிக்கல்களை நீக்கி வெற்றி கொள்வதில் பெருமிதம் அடைய வேண்டும். 17. கடந்தகால வாழ்க்கையின் அனுபவத்தினின்றும் நெருங்கிய நண்பர்களின் அனுபவத்தினின்றும் தலைசிறந்த உலகத்தலைவர்களின் வெவ்வேறான அனுபவங்களினின்றும் தனக்கென ஒரு வாழ்க்கை இயக்கம் ஒன்று வகுத்துக்கொண்டு, அதை அடைவதற்கான வழிமுறையை வகுத்து நடைமுறைப்படுத்த வேண்டும். தா.ஏ.ச.

**உளநோய்ச் சமூகப்பணி** உளநோய் மருத்துவ முறையிலானது என்றாலும், அது அளிக்கும் பிரச்சினை மிகவும் விரிவானது. இதனால் உளநோய் மருத்துவருக்கு இந்தத் தொழிலில் தொடர்புடைய தேர்ந்த ஏனைய ஊழியர்களின் உதவி தேவைப்படுகி

றது. உளநோய் மருத்துவ வரலாறு மிகப் பெரியது; பழமையானது. அது நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே போகிறது. மேலும், உளநோய் மருத்துவம் நலமார்ந்த மனப்போக்கினால் (Healthy Tendency) மருத்துவ மனைச் சிகிச்சையிலிருந்து சமுதாயச் சூழ்நிலையில் சிகிச்சை பெறும் அளவிற்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இதனால், முன்னைவிட இதற்கு எல்லா விதச் சமூகப் பணியாளர்களின், அதாவது தனிவழிச் சமூகப்பணி (Case work), குழு வழிச் சமூகப்பணி (Groupwork), சமுதாயச் சமூகப் பணி (Community Organization) போன்ற எல்லா விதச் சமூகப்பணியாளர்களுடைய உதவியும் இதற்குத் தேவைப்படுகிறது. இவர்களுடைய தொழிலில் (Profession) எங்கெல்லாம் உளநோய்ப் பிரச்சினை ஒரு முக்கிய காரணமாக உள்ளதோ, அந்தச் சூழ்நிலையிலுள்ள ஒவ்வொரு துறையிலும் உள்ள சமூகப் பணியாளர்களை அடிக்கடித் தொடர்பு கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இதற்குச் சமூகப் பணியாளர்கள் உளநோய் பற்றிய போதிய அறிவு நுணுக்கங்களைப் பெற்றிருக்க வேண்டும். அவர்கள் உளவளர்ச்சி நோயை இனம் கண்டு, நோய்க் காரணம் என்ன என்பதைப் புரிந்துகொண்டு, தான் உணர்ந்தவற்றை மற்ற ஊழியர்களுக்கு எடுத்துக் கூறவும் வேண்டும். உளநோயாளிகளின் சமூக அல்லது நோய் நீக்கற்கலை சார்ந்தவற்றில் (Therapeutic) ஈடுபட்டிருக்கும்போது, சமூகப்பணியாளர்கள் அதில் தங்களின் பங்கை உணர வேண்டும்.

நடைமுறை உளநோயின் முந்திய வரலாற்றினைக் கண்ட உளநோய் எல்லா மனிதச் சமுதாயத்திலும் காணப்படுகிற ஒன்றாகத் தெரிகிறது. ஒவ்வொரு காலத்திலும் உளநோயாளிகளை நடத்துவதில் ஒரு விதப் பயமும் வெறுப்பும் நகைப்பும் காட்டுமிராண்டித்தனமான அடக்குமுறையும் கையாளப் பட்டன. ஆனால் இப்பொழுது அந்த அச்சநிலை மாறிவிட்டது. ஆனால் உளநோயால் ஏற்படுத்தப்படும் கெட்டபெயர் (Stigma) மறைய மிக நீண்ட நாட்கள் ஆகிவிட்டன.

கிரேக்கர்கள் உளநோய் ஒருவகை நோயென்பதையும், அதைக் குணப்படுத்த அதற்கான காரணங்கள் போதுமானவை என்பதையும், அதை மூட நம்பிக்கை மூலம் குணப்படுத்த இயலாது என்பதையும் உணர்ந்திருந்தனர். ஆனால் அவர்களுடைய முறை பின்பற்றப் படவில்லை. ஐரோப்பிய நாடுகளில் கிறித்தவ மதம் யூதர்கள் நம்பி வந்த முறையையே, அதாவது பித்தம் பிடித்தல் என்பது தீய ஆவிகளின் பீடிப்பே என்ற மூடநம்பிக்கையையே பின்பற்றியது. பின்னர்; இடைக்காலத்தில் பேய், பிசாசு, பில்லி, சூனியம் முதலியவற்றால்தான் உளநோய் ஏற்படுகிறது என்ற தவறான கருத்து ஏற்பட்டது. சாத்தானின் ஆட்கள் எனக் கருதப்பட்டவர்கள் நாகரிகச் சமூகத்திலிருந்து பிரிக்கப்பட்டுப் பைத்தியக்கார விடுதிகளில் அடைக்கப்பட்டனர். இப்பொழுது மிருகக் காட்சி சாலையில் மிருகங்களைப் பார்ப்பது போன்று, முன்பு உளநோயாளிகளைப் பொழுது போக்கிற்காகவும் வேடிக்கைக்காகவும் கட்டணம் கொடுத்துப் பார்த்த நிலை இருந்தது.

ஆதிகாலத்தில் பேயை வெளியேற்றுவதற்காக மண்டை ஓட்டைக் கூடத் துளையிட்டுள்ளனர். நோயின் அறிகுறி மிக முற்றிய நிலையில்தான், நோயாளிகளின் தொல்லைதாங்கமுடியாமல் உள நோயாளிகள் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டனர். இயற்கையாக அந்த நோயின் ஆற்றல் குறைந்ததாலேயே அவர்கள் குணமடைந்தார்கள். கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிவரை இந்த நிலைமையே நீடித்திருந்தது. கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில்தான் உளநோயாளிகள் இந்தக்கொடிய தளையிலிருந்து விடுவிக்கப்பட்டனர்.

கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் அமெரிக்கா, இங்கிலாந்து, ஐரோப்பா மற்றும் ஏனைய நாடுகளில் பல புதிய உளநோய் மருத்துவமனைகள் கட்டப்பட்டன. மருத்துவமனையில் பல நாட்பட்ட (Chronic) நோயாளிகள் அகமருத்துவமனை (In-Patients) நோயாளிகளாகச் சேர்க்கப்பட்டனர். அவர்களுக்கு இப்பொழுது போலில்லாமல், முன்பெல்லாம் அவர்களை மருத்துவமனையிலிருந்து வெளியேற்றுவதற்கான (Discharge) வாய்ப்புகள் மிக அரிதாக இருந்தன. இதற்குள் அவர்களுடைய உறவினர்களும் நண்பர்களும் இறக்கவோ நோயாளிகளைக் கவனிக்காமல் போகவோ நாளடைவில் மறைந்து போகவோ (Disappear) நேரிட்டு, இந்த நோயாளிகள் சமுதாயத்திலிருந்து முற்றிலுமாகத் தனித்து விடப்பட்டவர்களாக்கப்பட்டனர். இம்மாதிரியான சூழ்நிலையிலும் தீவிரச் சமூகப்பணிக்குச் (Active Social Work) சிறிதளவுகூடக் கவனம் செலுத்தப்படவில்லை. ஆனால், மேலைநாடுகளில் ஆதரவற்ற, நீண்ட நாட்களாக அடைத்துவைக்கப்பட்ட நோயாளிகளின் ஆதரவற்ற உறவினர்களுக்குக் கொடை (Charity) அளிக்கப்பட்டது. சமூகப்பணியாளர்கள் உதவி தேவைப்பட்டவர்களுக்கு உதவி செய்தனர். நோயாளிகளை விட்டுப் பிரிந்து செல்லும் உறவினர்களுக்கு நெறிமுறையில் (Moral) போதனை அளிக்கப்பட்டது. ஆனால் அதனைத் தடுப்பதற்கான வழியோ அந்த நோயாளிக்கு அல்லது அவனுடைய குடும்பத்திற்குத் தீவிரத் தனி மனிதச் சமூக சேவை (Social

Case Work) செய்யவேண்டும் என்ற எண்ணமோ எழவில்லை.

கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டின் அரை இறுதிக் காலத்தில் பல பிரெஞ்சு உளநோய் மருத்துவர்களும், செருமானிய உளநோய் மருத்துவர்களும் உளநோயாளிகளை வகைப்படுத்துவதில் பெரும் பங்காற்றினர். கிரேப்ளினின் (Kraepilin's) முயற்சியால் முதிர்உளநோய் (Psychotic Illness) கண்டுபிடிக்கப் பட்டது. சிக்மண்டு பிராய்டு (Sigmond Freud) மற்றும் அவரைச் சார்ந்தவர்களின் உளநிலை ஆய்வுக் கொள்கை மூலம் (Psycho-analytic Theory) எப்படி முதிர் உளத்தளர்ச்சி (Psycho-neurosis) உருவாகிறது என்பது தெரியவந்தது. உளநிலை ஆய்வு ஒரு தனி மனிதனின் பிரச்சினைகளை ஆழ்ந்து ஆராய்வதன் சிறப்பை வலியுறுத்துகிறது. நோயாளியின் உணர்ச்சிகள், எண்ணங்கள் முதலியவற்றையும் நோயைச் சிகிச்சைப்படுத்தும் முறையையும் இது உணர்த்தியது. இது நோயாளியின் தொழில் மற்றும் குடும்பம் சார்ந்த தொடர்புகள் (Interpersonal Relationships), அன்றாடப் பிரச்சினைகளை எதிர்கொள்ளும் திறன் முதலியவற்றை கருத்தில் கொள்ள வேண்டியதன் தேவையை வலியுறுத்துகிறது.

உளநோய்க்குச் சமூகக் காரணங்கள் உள்ளன என்ற எண்ணம் அதிகரித்ததால் இப்போதைய சமூகப்பணியின் தேவை அதற்கேற்ப வளர்ச்சி அடைந்தது. உளநோயை நீக்குவதில் சமூகத்தின் பங்கு பற்றிய விழிப்புணர்ச்சி மக்களிடையே ஏற்பட்டது. முதன்முதலாக, அமெரிக்காவில் அடால்பு மெயர் மூலமாகச் சமூக உளநலப்பணி உருவாயிற்று. சமூக உளநல நிலையத்தினைத் திரு. கிளிப்போர்டு பியர்சு நிறுவினார். உளத் தளர்ச்சி நோய்க்கு (Depression) மின் அதிர்ச்சி மருத்துவமும் (Electro-convulsive Therapy), உளச்சிதைவு நோய்க்கு (Schizophrenia) இன்சுலின் கோமா மருத்துவமும் கொடுக்கப்பட்டதில் இருந்து, உளநோயினால் ஏற்படும் கெட்டபெயர் (Stigma) சிறிது சிறிதாக மக்கள் மனத்தில் இருந்து குறையத் தொடங்கி, அச்சம்கொள்ளத் தக்க இந்த நோய்களும் குணப்படுத்தப் படலாம் என்று மக்கள் உணரத் தொடங்கினார்கள். உளநோய் மருத்துவமனைகள் பித்தர் மனையாக இருந்தநிலை மாறி சிகிச்சை அளிக்கும் உளநல காப்பகமாக இயங்குகின்றன. உளநோய்ப் பிரச்சினை உடற்கூற்று நோயை அதிமாக்குகிறது; குடும்பப் பிரச்சினையை உண்டாக்குகிறது; தொழில் திறமையைக் குறைக்கிறது. இப்போது ஒருவன் உளநோய் காரணமாக மருத்துவ மனைக்குச் செல்ல நேரிடின், அவனை மருத்துவமனையில் சேர்த்து அகநோயாளியாக (Institutionalised Patient) ஆக்குவதன் மூலம், அவன் அவனுடைய உறவினர்களிடையே இருந்து பிரிந்து வாழும் நிலையைத் தடுப்பதிலும் கவனம் செலுத்தப் படுகிறது.

**உளநோய் மருத்துவத்தில் சமூகப்பணியின் பங்கு:** ஒரு மருத்துவரின் நேரம் நோயை அறிந்து கொள்வதிலும், அதற்கான சிகிச்சையைக் கொடுப்பதிலும் செலவழிக்கப்படுகிறது. சிகிச்சை அளிக்கும்போது அது முற்றிலுமான பயன் அளிக்க நோயாளியை ஒரு முழு மனிதனாக எடுத்துக் கொண்டு, சமூகக் காரணங்களுக்கும் சிறப்பிடம் கொடுத்துச் சிகிச்சை அளிக்க வேண்டும்.

உளநோயாளியின் நம்பிக்கையைப் பெறவும், சிகிச்சை சார்ந்த உறவு வைத்துக்கொள்ளவும் அவனுடைய குடும்பப் பிரச்சினைகளையும் சுற்றுப்புறப் பிரச்சினைகளையும் கவனிப்பதற்கும் உதவியாக ஒருவர் இருத்தல் இன்றியமையாதது. அனுபவம் வாய்ந்த சமூகப்பணியாளர் சமூகத்தொடர்பான பிரச்சினைகளைக் கையாளுவதில் தேர்ச்சி பெற்றவராக இருப்பார்.

உளநோய் மருத்துவம் ஒரு குழு முயற்சியாக (Team Effort) மாறி உள்ளது. உளநல மருத்துவர் (Psychiatrist), உளநல உளவியலாளர் (Clinical Psychologist), தொழில் வழி மருத்துவர் (Occupational Therapist), உளநலச் சமூகப் பணியாளர் (Psychiatric Social Worker), உளநலச் செவிலியர் (Psychiatric Nurse) ஆகியோர் இக்குழுவில் முக்கிய பங்கு வகிக்கின்றனர். சமூகப்பணியாளர்கள் உளநலச் சிகிச்சை முறையின் எல்லா நிலைகளிலும் முக்கிய பணியாற்றுகின்றனர். சான்றாக, நோய்க்குக் காரணம் முதலியவற்றைக் கண்டறிந்து ஆய்வுறுதி செய்யவும் (Diagnosis), நோயாளிக்கும் அவனுடைய உறவினர்களுக்கும் உதவவும், ஆதரவு அளிக்கவும், நோயாளியை மறுவாழ்விற்குத் தயார் செய்யவும், வீட்டிற்குத் திரும்பியபின் அவனைப் பாதிக்குமாறு இருக்கும் சிரமமான சூழ்நிலையின் தன்மையை எளிதாக்க உதவவும், அவன் மருத்துவமனையில் இருந்து விடுபட்டு வீட்டிற்குச் சென்றவுடன் அவனையும் அவனது குடும்பத்தையும் மேற்பார்வையிடச் செல்லவும் சமூகப் பணியாளர்கள் உதவுகின்றனர்.

தனிவழிச் சமூகப்பணியின் முக்கிய பணி மருத்துவ வாயிலான சிகிச்சைக்குச் சரியீடு செய்யும்படியான சமூகப் பணியைச் செய்வதே ஆகும.

**சமுதாயத்தில் காணப்படுகின்ற உள நோய்கள்:** பொதுவாக, சமுதாயத்தில் சமூக நிறுவனங்களும்

(Social Agencies) பலவகைப்பட்ட சமூகப்பணியாளர் களும் நேரடியாகவோ மறைமுகமாகவோ உள நோயையும் அதன் விளைவுகளையும் எதிர்நோக்க உதவும் முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றனர்.

பெரும்பாலும், நோயாளியின் நிலை சீர்கேடுற்ற நிலையில்தான் அவனுடைய உள இயல்பு தொடர் பான வெளித்தோற்றக் குறைகள் அறிந்து கொள்ளப் பட்டன. அதற்கு மாறாக, எவ்வாறு நோயாளியின் உடல்நிலை முழுவதுமாக ஆராயப்படுகிறதோ அவ் வாறே அவன் உளநிலையும் தொடக்க நிலையிலேயே ஆராயப்பட வேண்டும். சிக்கல்கள் குடும்பத்தினாலோ சமூகப் பிரச்சினைகளாலோ வரக் காரணங்கள் உள்ளன. இந்த நிலையில்தான் சமூகப் பணியாளர் அந்த நோயாளியின் சிகிச்சை முறையில் ஈடுபடுத்தப் படுகிறார். சமூகப்பணியாளரின் தொண்டு நோயாளி யின் மனத்திற்கு அமைதியைக் கொடுப்பதோடு, அவ னுடைய நோயின் காலத்தையும் அவன் மருத்துவ மனையில் தங்கும் காலத்தையும் குறைப்பதற்கு ஏதுவாகிறது. இந்தப்பணியைச் செவ்வனே முடிக்கவும் நோய் பற்றிய எண்ணங்களை மற்ற ஊழியர்களுடன் பகிர்ந்து கொள்ளவும் சமூகப்பணியாளர் உளநல உளவியல் தத்துவம் பற்றிய அடிப்படை அறிவு பெறுதல் தேவையாக உள்ளது. உளநோய் பற்றிய அறிவும் சமூகப்பணியாளருக்குத் தேவைப்படுகிறது.

உளநல மருத்துவமும் உளவியலும் மிக விரை வாக முன்னேறிக் கொண்டிருக்கின்றன. சமூகப்பணி யாளர் இம்முன்னேற்றங்களைக் கவனித்தல் மிகவும் இன்றியமையாதது.

**சமூகப்பணியாளரின் பணி:** சமூகப் பணியாளர்கள் மருத்துவத்திற்கான தனி வரலாற்றினை (Case History) நோயாளி பற்றியும் அவனுடைய நோய் பற்றியும் அறியக் குறிப்பெடுக்க வேண்டும். சமூகப் பணியாளர் குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் தேவை யான வரலாற்றினை அளிக்க வேண்டும். ஏற்கெனவே உணர்ச்சி வசப்பட்ட நிலையிலுள்ள நோயாளியின் குடும்பத்தினரிடையே அந்நிலைமை அதிகரிக்காமல் இருக்க, ஒரு சமூகப்பணியாளரிடம் மிகுந்த திறமை யும் புத்தி நுட்பமும் தேவைப்படுகின்றன.

நோயாளியின் தனி வரலாற்றையும் சமூக வர லாற்றையும் (Social History) அறியக் கீழ்க்காணும் விவரங்கள் தேவைப்படுகின்றன. 1) நோயாளியின் குடிமை நிலை (Civil Status): மணமானவரா தனி யாளா, பிறந்த தேதி, முகவரி, எங்கிருந்து அறிமுக மாக்கப்பட்டவர், மீண்டும் இவர் தொடர்பான செய்தி தேவைப்படின் இவரைப் பற்றி அறிந்த உடன் பணியாளரின் பெயர் ஆகியன. 2) தகவல் கொடுப் பவர் பற்றிய தகவல்: பெயர், முகவரி, உறவுமுறை ஆகியன. 3) நோயாளியின் குடும்ப வரலாறு: தந்தை வழி மூத்தோர், தாய்வழி மூத்தோர், ஏதாவது உள நோய் அவர்களுக்கு இருந்திருந்தால் அவை பற்றிய குறிப்புகள், தற்கொலை முயற்சி, தற்கொலை, காக்காய் வலிப்பு, குடி, போதைப் பழக்கம், மற்ற ஏதாவது உளநலக் குறைவால் வரும் உடல் நோய்கள் (Psycho-somatic Disorders), தாய் தந்தை பற்றிய தகவல்கள், அவர்களுடைய தொழில், அவர்கள் இறந்திருந்தால் இறப்பிற்கான காரணங்கள், இறந்த வரின் வயது, அவர்களுடைய பண்பியல் தொகுப்பு, உடல் நலம், கடுமையான நோயோ முக்கியமான உளநோயோ இருப்பின் நோயின் விவரம், நோயாளி அவர்களுக்கு என்ன உறவு, நோயாளியுடன் பிறந்த வர் பற்றிய தகவல்கள் ஆகியன. 4) வீட்டுச் சூழ் நிலை: குடும்ப வருமானம், செலவு, உளநோயாளியின் மனச்சீர்கேட்டிற்குப் பொருளாதார முடக்கம் காரண மாக இருந்திருந்தால் அது பற்றிய தகவல் ஆகியன.

5) அவனைப்பற்றிய வரலாறு (Personal History): பள்ளியில் சேருவதற்கு முன்பருவத்தில் இருந்த நிலைமை, அதாவது குழந்தைப் பருவத்தில் நரம்புத் தளர்ச்சி அறிகுறிகள் பெற்றிருத்தல், பயங்கரக் கனவுகள், தூக்கத்தில் நடத்தல், அடம் பிடித்து ஆர்ப் பாட்டம் செய்தல் (Temper – tantrum), விரல் சூப்புதல், நகம் கடித்தல், உணவு சாப்பிடாமை, திக்குவாய், நடத்தைக் குறைபாடுகள், அச்சம் மிகுந்த பதற்ற நிலை முதலியன. குழந்தைப் பருவத்தில் நோயாளிக்கும் அவனுடைய பெற்றோருக்கும் உடன் பிறந்தவர்களிடையேயும் மற்ற உறவினர் களிடையேயும் இருந்த உறவு நிலை: இந்த உறவு நிலை நிரந்தரமாக, மகிழ்ச்சியாக இருந்ததா அல்லது தொடர்பு துண்டிக்கப்பட்டதா, அல்லது மனநிறை வாக இல்லையெனில் அந்தநிலை; பள்ளியில் அவனது நிலை: விளையாட்டில் எவ்வாறு அவன் மற்றக் குழந்தைகளுடன் நடந்து கொள்ள முடிந்தது போன்ற தகவல்கள்; தொழில் துறையில் அவன் தன் தொழிலை மாற்றிக் கொண்டே இருந்திருந்தால் அதற்கான காரணங்கள்: அவன் நேர்மையான ஊழியனா, வேலை நீக்கம் செய்யப்பட்டவனா, உள நோயின் தன்மையால் வேலையிழந்தவனா, இராணு வத்தில் இருந்தபோது அவனுக்கு ஏதாவது மூளைப் பாதிப்பு ஏற்பட்டதா என்பன போன்ற தகவல்கள்: பாலுணர்வு வளர்ச்சி: பாலுணர்வில் குற்ற உணர்ச்சி; பால்வினை அனுபவங்கள், கற்பனைகள், இப் போதைய நிலை; மணநிலை(Marital–Sexual Status): திருமணமான பின்னர் உடலுறவு கொள்வதன் நிலை பற்றிய விவரங்கள்; உளநோயாளியின் துணைவர்

(Spouse) பற்றிய தகவல்கள்: அவருடைய வயது, பண்பியல் தொகுப்பு, உள-உடல் நலம் பற்றிய தகவல், அவர்கள் இருவரிடையே உள்ள உறவு நிலைமை; குழந்தைகள் பற்றிய தகவல்: குழந்தை களின் எண்ணிக்கை, அவர்களின் வயது, கருச்சிதைவு ஏற்பட்டிருப்பின் அது பற்றிய விவரங்கள் ஆகியன.

6) பொது உடல் நலம்: குழந்தைப் பருவத்தில் அவனுடைய உடல்நலம், விபத்து ஏதாவது நேர்ந் திருந்தால் அது பற்றிய தகவல், குடிப்பழக்கம், போதைப்பொருள்கள் பயன்படுத்துதல் ஆகியன.

7) பண்பியல் தொகுப்பு (Personality Assess-ment): உணர்ச்சி மாறுபாடு இருத்தல் (Disturbance in Mood), அமைதியின்மை, ஐயப்படுதல், மெல் லமைதி வாய்ந்த தன்மை, ஆக்கம் குறைவு, சோம்பி யிருத்தல், உற்சாகமின்மை, மிகுந்த கவனமாக இருத்தல் போன்ற குறிப்புகள் ஆகியன. 8) முன்னர் எப்பொழுதாவது மனநோயால் பாதிக்கப்பட்டவரா யிருப்பின் அது பற்றிய விவரம். 9) இப்பொழுதுள்ள நோய் பற்றிய விவரம். 10) வேறு பிற விவரங்கள் இருப்பின் அவை பற்றிய குறிப்புகளும் தேவை. இத் தகவல்கள் அனைத்தையும் சமூகப்பணியாளர்கள் சேகரிக்க வேண்டும்.

நல்ல தேர்ச்சி பெற்ற உளநோய் சமூகப்பணி யாளர், உளநல நிகழ்ச்சிகளில் முக்கிய பங்கு வகிக் கிறார். குடும்ப மருத்துவரைப் போன்று சமூகப்பணி யாளர் அறிவுரை நாடுபவருக்கும் அவரது குடும்பத் திற்கும் இடையே முக்கிய இணைப்புப் பாலமாக இருக்கிறார். சமூகப்பணியாளர் தமது சிறப்புத் தகுதியால் நோய்வாய்ப்பட்டவரின் குடும்பத்தின ரிடையே சென்று, நுணுக்கமாக ஆராய்ந்து இனங் கண்டு, குடும்பச் சூழ்நிலையில் நிலவி வருகின்ற முக்கிய பிரச்சினையில் உதவிபுரிகிறார்.

உளநோய்ச் சமூகப்பணியாளர்கள் உளநோயாளி யின் சமூக இயக்கத்தில் (Social Functioning) மாறு தலை ஏற்படுத்தும் சமூக உளநிலை சார்ந்த நிகழ்ச்சி களுக்குச் சிறப்பிடம் கொடுக்கின்றனர். நீண்டநாட் களாக மருத்துவமனையில் சிகிச்சை பெறும் உளச் சிதைவு அடைந்த நோயாளி மருத்துவ மனையிலிருந்து மிகுந்த பலனைப் பெறவும், மருத்துவ மனையிலுள்ள ஊழியர்களும் வல்லுநர்களும் நோயாளியின் சமூக நிலை பற்றி நன்கு புரிந்து கொள்ளவும் சமூகப் பணி யாளர் உதவுகிறார். மேலும், அவர் நோயின் தன்மை யினால் நோயாளி மருத்துவமனைச் சூழலில் நடந்து கொள்ளும் முறையை விளக்குவதிலும் மிகுந்த உதவி புரிகிறார். இரா.வி.

துணை நூல்கள்:

சோமசுந்தரம். ஒ., ஜெயராமகிருஷ்ணன்,தி., மன நோயும் இன்றைய மருத்துவமும், நியு செஞ்சுரி புக் ஹவுஸ் லிமிடெட், சென்னை, 1981.

De Souza, A., De Souza, D.A.and Rajesh, C., Psychiatry in India, Medical Book Sellers, Bombay, 1984.

Munro, A. and Mcculloch, W., Psychiatry for Social Workers, Pergamon Press, New York, 1975.

Rose, A.M., Mental Health and Mental Disorder, W. Norton & Co., New york, 1955.

**உளநோய் மருத்துவ இயல்** இன்றைய மருத்துவ இயல் துறையிலும் உளவியல் துறையிலும் மிகவும் செல்வாக்குப் பெற்றுவரும் ஓர் அறிவிய லாகும். இத்துறையின் சிறப்புக் கடந்த நூற்றாண்டு களாக உணரப்பட்டு வருகின்றது. இது மருத்துவ இயலின் ஒரு பிரிவாக இயங்கி, மன நோய்களையும் மனக்கோளாறுகளையும் குணப்படுத்தும் ஓர் அறிவிய லாக வளர்ந்து வருகின்றது. மனநோய்களின் காரணங் களைக் கண்டறிந்து, அவற்றைத் தடுக்கவும் சிகிச்சை யளிக்கவும் சரியான முறைகளை வகுத்துக் கொண்டு, மருத்துவத் துறையில் தனிச் சிறப்பு வாய்ந்த ஒரு பயன்படு அறிவியல் துறையாக இது விளங்குகின்றது.

உளநோய் மருத்துவ இயலைச் சற்று விரிவாகப் பார்க்கும்போது, மனித நடத்தையின் பல்வேறு வகைகளையும் அவற்றை நிருணயிக்கும் கூறுகளையும் அவற்றைப் பாகுபாடு செய்யும் முறைகளையும் நன்கு ஆராய்ந்து, தனிமனிதனுக்கும் சமூகத்திற்கும் ஏற்ற குறிக்கோள்களைத் தன்னகத்தே கொண்டு, நடத்தையை ஒருமுகப்படுத்தும் செயல் நுட்ப முறை களையும் கொண்டதோர் அறிவியலாக இது விளங்கு வதைக் காணலாம். இது உளவியல், உடலியல், சமூகவியல் ஆகிய அறிவியல்கள் கலந்த ஒரு தனிப் பட்ட துறையாகக் கருதப்படுகின்றது. இந்த இயல் மனநோய்களை ஆராய்வதோடு, பல்வேறு படித்தரங் களிலும் வகைகளிலும் காணப்படும் செயல் முறை மனக்கோளாறுகளிலும் கவனம் செலுத்துகின்றது.

பொதுவாக ,உளநோய் மருத்துவ இயல் என்றால் ஆன்மாவை அல்லது உள்ளத்தைக் குணப்படுத்துதல் என்று முன்னர்ப் பொருள் கொள்ளப்பட்டது. ஆனால், இன்று உளக்கோளாறுகளைக் குணப்படுத்துவதற்கு மருத்துவத்துறையில் உருவாக்கப்பட்ட சிறப்புச் சொல்லாக இது விளங்குகிறது. உளநோய் மருத்துவ

இயல் என்பது உளக்கோளாறுகளை ஆராய்ந்து, மதிப்பீடு செய்து, சிகிச்சையளித்து, அவற்றைத் தடுத்து நிறுத்துகின்ற மருத்துவத் துறையின் ஒரு கிளையாகும்.

வரலாறு: உளநோய் மருத்துவ இயலின் வரலாறு மனித வரலாறாகவே இருக்கின்றது. ஏனென்றால் மனிதனை உளநோய்கள் தாக்கத் தொடங்கிய காலத்திலேயே உளநோய்மருத்துவ இயலும் தோன்றியிருக்க வேண்டும். இது இக்காலத்திலிருப்பதைப் போலன்றி அந்தந்தக் காலத்திற்கு ஏற்றவாறு செயற்பட்டிருக்க வேண்டும்.

பண்டைக் காலத்திலேயே உளநோய்களுக்குச் சிகிச்சையளிக்கப் பட்டிருக்கின்றது. அதற்கான தக்க சான்றுகள் ஏராளமாகக் காணக் கிடைக்கின்றன. இயல்பிழந்த நிலையிலிருந்தவர்களுக்கு மூன்று வழிகளில் சிகிச்சை அளிக்கப்பட்டிருக்கின்றது. பெரும்பாலான நோயாளிகள் மிகவும் கொடிய வழிகளில் விலங்குகளைப் போல் நடத்தப்பட்டிருக்கின்றனர். சிலர் மனிதர்களைப் போல் நடத்தப்பட்டாலும் அவர்களுடைய நோய்கள் மருந்து கொடுத்துக் குணப்படுத்தப்படவில்லை; சில நோயாளிகளின் சொற்கள் எதிர்கால நிகழ்ச்சிகளை முன்னறிந்து கூறுகின்ற தெய்விக அகத்தூண்டல்கள் என்று கருதப்பட்டன. மற்றும் சிலர் பல்வேறு வகையான சிகிச்சை முறைகளுக்கு ஆட்படுத்தப்பட்டனர். இன்றைய உளநோய் மருத்துவ இயல் முறையில் பின்பற்றப்படுவது போன்ற முறைகளும் முன்னர்க் கடைபிடிக்கப்பட்டு வந்தன.

அறிவியல் சார்பான உளநோய் மருத்துவ இயலின் பிறப்பு ஒரு நீண்ட காலச் செயல் முறையைக் கொண்டிருக்கின்றது. முதல்கட்டமாக, உளநோயாளிகளை மருத்துவ இயல் சாராத வழிகளில் அணுகும் முறைகள் புறக்கணிக்கப்பட்டன. இரண்டாவதாக, பண்படாத பண்டைக்காலச் சிகிச்சை முறைகள் சரிநுட்ப முறைகளாக மாற்றியமைக்கப்பட்டன. மூன்றாவதாக, முற்றிலும் மருத்துவ இயலைச் சார்ந்தவர்களைக் கொண்டு ஓர் ஒழுங்குமுறையான அறிவியல்முறை அமைக்கப்பட்டது. இந்த மூன்றாவது கட்டத்தில்தான் அறிவுக்கொத்த மருத்துவக்கலை உருவாக்கப்பட்டது. இது, சமயம், குருட்டு நம்பிக்கை, கரடுமுரடானதும் பண்படாததுமான சிகிச்சை முறைகள் ஆகியவற்றின் பிடியிலிருந்து விலகிச் சென்று, அறிவியல் முறைகளைப் பின்பற்றச் செய்தது.

மருத்துவ இயலில் இந்த மாபெரும் புரட்சியை உருவாக்கியவர் இப்போகிரேட்டிசு (Hyppocrates) என்ற கிரேக்க நாட்டு அறிஞராவார். எனினும் கிரேக்க, உரோமானிய அறிஞர்கள் எவ்வளவுதான் முயன்று மருத்துவ இயலைத் தங்கள் காலத்தில் அறிவியலாக்க முயன்ற போதிலும், கி.பி. பதினேழாம் நூற்றாண்டில்தான் மருத்துவத் துறையில் முறையான அறிவியல் முயற்சிகள் வளரத் தொடங்கின. கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில்தான் உளநோயாளிகளின் சிகிச்சை முறைகளில் மாற்றம் காணப்பட்டது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கிரேப்ளின் (Kraepelin) என்பவர் மருத்துவ முறையின் மூலம் உளநோயாளிகளைக் குணப்படுத்த முடியும் என்று கருதினார். அதே சமயத்தில் உளநோய் மருத்துவ இயலில் பாடப்புத்தகங்கள் வெளிவரத் தொடங்கின. மருத்துவத் துறை மாணவர்களுக்கு உடல்சார்ந்த சிகிச்சை முறைகள் பல வழிகளில் கற்பிக்கப்பட்டு வந்தன. கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் உள்நோக்கிப் பார்த்தல், உளச்சிகிச்சை, உளப்பாகுபாடு, அறிதுயில் முறை ஆகியவை உளநோய்ச் சிகிச்சையாளரின் கவனத்தைக் கவர்ந்தன. நடத்தையைவிட ஆழ்மன நிலைகளில் மிகுந்த கவனம் செலுத்தப்பட்டு வந்தது.

இன்றைய நிலைகளில் உளநோய் மருத்துவ இயல் மனிதர்களின் எல்லா நடத்தைகளையும் உள்ளடக்கிய ஓர் ஆராய்ச்சி அறிவியலாக இருக்கின்றது. இது நரம்பு, குருதியோட்டச் சுரப்பி மண்டலங்களையும், உடலுறுப்புச் செயல்முறைகளையும் தன்னுடைய எல்லைக்குள் உள்ளடக்கிக் கொண்டிருக்கின்றது. உயிரியல்களும் சமூக இயல்களும் மனித நடத்தையை ஆராய்வது போன்று, இந்த இயலும் மனித நடத்தையை ஆராய்கின்றது. எனினும் இவ்வியல் உளவியலும் சமூகவியலுமின்றி முன்னேற முடியாது.

உளநோய் மருத்துவ இயல் கோட்பாடு: உளப்பாகுபாட்டுக் கோட்பாடு இன்றைய உளநோய் மருத்துவ முறையின்மீது மிகுந்த செல்வாக்குக் கொண்டிருக்கின்றது. சிக்மண்டு பிராய்டு (Sigmund Freud) கண்டறிந்த இந்த உளப்பாகுபாட்டு முறை உளநோயினைக் குணப்படுத்தும் ஓர் அறிவியலாகக் கருதப்படுகிறது. உளவியல் சார்ந்த செயல் முறைகளெல்லாம் உளவியல் முறைகளாலேயே ஆராயப்படவேண்டும் என்ற கோட்பாட்டை பிராய்டு நிறுவினார். பிராய்டின் உளப்பாகுபாட்டு முறை உளவியல், சமூகவியல் செயல்முறைகளின் மீதும் மிகச்சிறந்த செல்வாக்கைப் பெற்றிருக்கின்றது என்பது மட்டும் உண்மையாகும். அது வாழ்க்கை, இறப்பு என்ற இயல்பூக்கக் (Life Instinct and Death Instinct) கோட்பாட்டின் அடிப்படையில் அமைக்கப்பட்டிருக்கின்றது. உளச்செயல்முறைகளின்

ஓர் ஒழுங்குமுறையை உளப்பாகுபாட்டு முறை கொண்டிருக்கிறது. அது சக்திகளையும் இயக்க முரண்பாடுகளையும் கையாளுகின்றது. சிக்மண்டு பிராய்டின் கருத்தோடு மாறுபாடு கொண்ட ஆல்பிரெடு அட்லர் (Alfred Adler), சூங்கு (C.G. Jung), ஒட்டோ ரேங்கு (Otto Rank) போன்றவர்கள் உளநோய் மருத்துவ இயல், உளவியல், பிற சமூக அறிவியல்கள் ஆகியவற்றின் பொருள்களில் பல மாற்றங்களை உருவாக்கினர்.

சிக்மண்டு பிராய்டைப் பின்பற்றிய அறிஞர்களுள் சுல்லிவன் (H.S. Sullivan), எரிக்புரோம் (Erich From) காரன் ஆர்னி (Karen Horney) முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் பிராய்டின் உளப்பாகுபாட்டுக் கோட்பாட்டோடு கருத்து மாறுபாடு கொண்டு விலகிச் சென்று, முரண்பாடான கருத்துகளைக் கொண்ட தனித்தனிக் குழுக்களை அமைத்துக் கொண்டனர். சுல்லிவனின் இடைவினைச் கொள்கை (Interactional Theory) உளநோயினைக் குணப்படுத்தும் சிகிச்சை முறைக்கான ஒரு கோட்பாட்டுக் கிளையினை உருவாக்கிற்று. பிராங்குக்குப்பின் வந்தவர்கள் உளநோய்களை அன்றாடப் பிரச்சிளைகளின் அடிப்படையிலேயே ஆராய்ந்தனர். பிராய்டின் கோட்பாட்டின்படி, கடந்த நீண்டகாலப் பிரச்சினைகளுக்கு இவர்கள் சிறப்பிடம் கொடுக்க வில்லை. ஆனால், இன்றைய உளநோய் மருத்துவ இயல் உளப்பாகுபாடு அல்லது உள இயக்க வழியை முற்றிலும் ஏற்றுக் கொண்டிருக்கின்றது. உளநோய் மருத்துவ இயலின் அடிப்படையே உள இயக்க அறிவியலாக இருப்பதனால் அதனைப் புறக்கணிக்க முடியவில்லை.

உளநோய் மருத்துவர்களும் அறிவியல் வல்லுநர்களாதலால், அவர்களும் மனிதர்கள் பெறுகின்ற அனுபவங்களின் மீதும், வளர்ச்சி சார்ந்த பிரச்சினைகளின் மீதும், மனிதர்களுக்கு ஏற்புடையதும் ஏற்பில்லாததுமான செயல் முறைகளின் மீதும் கவனம் செலுத்துகின்றனர். அவர்களுடைய ஆராய்ச்சிக்குரிய பண்புக் கூறுகளும் அறுவைக்குரிய கருவிகளும் எவ்வளவுதான் சிறப்புடையதாக இருந்தாலும், மனிதர்கள் மீது நடத்தப்படுகின்ற ஆராய்ச்சிகள் சிக்கல்கள் நிறைந்தவையாகவே இருக்கின்றன. எவ்வளவுதான் சிறப்பான கருவிகளைப் பயன்படுத்தினாலும், இந்தச் சிக்கல்களின் காரணமாக விலங்குகளின் மீது நடத்தப்படுகின்ற பரிசோதனை முடிவுகளை மூலமாக எடுத்துக் கொண்டு, மனிதர்களின் பிரச்சினைகளை மறைமுகமாக அணுகும்படி கட்டாயப்படுத்தப்படுகின்றனர். ஏனெனில் மிருகங்களின்மீது நடத்துகின்ற அறுவைச் சிகிச்சையை உயிரோடிருக்கின்ற மனிதன் மீது நடத்திப் பரிசோதனை செய்து பார்க்க முடியாது. கணிதவியலும் புள்ளிவிவரவியலும் உளநோய் மருத்துவ இயலின் மீது தங்கள் முறைகளை அளவுக்கு மீறி வலியுறுத்துவதால், தீங்கு விளைவிக்கக் கூடியனாக இருக்கின்றன. அதனால் உளநோய் மருத்துவ இயல் அவற்றைப் புறக்கணிக்க வேண்டியிருக்கின்றது. அறிவியல் நடத்தைக் கோட்பாடு (Scientific Behaviour) என்று ஒரு துறை இருக்கின்றது. அதனுடைய முறைகள் உளநோய் மருத்துவ இயலின் பக்கம் திருப்பப்பட்டிருக்கின்றன. உற்றுநோக்கல், விவரித்தல், ஆழ்ந்த பேட்டி முறை, பரிசோதனை முறை, உற்றுக் கவனித்தல் முதலிய உளவியலின் முறைகளின் இணைப்பும் இதற்குத் தேவைப்படுகின்றது.

வகைப்படுத்தல்: மற்ற அறிவியல்களைப் போலவே உளநோய் மருத்துவ இயலும் வகைப்படுத்தப்பட்ட அறிவியலாக விளங்கி வருகின்றது. இத்துறையில் ஏற்பட்ட சிறந்த முன்னேற்றங்களுள் இதுவுமொன்று. இந்த வகைப்படுத்தல் உளநோய்களின் குறிப்பிட்ட காரணங்கள், காலம், இறுதி விளைவுகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருக்கின்றது. இந்த முன்னேற்றம் மிகவும் அவசியமானதாகஇருந்தாலும், உளநோய் மருத்துவ இயல் வளர்ச்சியில் சில குழப்பங்களை எழச் செய்தது. எனவே, நாட்கள் செல்லச் செல்ல உளநோய் மருத்துவ இயலார் நோய்களை வகைப்படுத்தும் செயலை இயக்கச் செயல்முறை தொடர்பாக நுணுகி நோக்காமல், மருத்துவத் துறை சார்புடையதாக்கிக் கொண்டுவிட்டனர். தொடக்க காலத்தில் இருந்ததைவிட இன்று இந்த வகைப்படுத்தல் மிகவும் சிறப்புடையதாக மாறிவிட்டது என்றாலும், மனச் செயல் முறைகளின் சீர்கேடுகள் நோய்க் கூறுகளை மாற்றமின்றி வெளிப்படுத்தி வந்தன. காரல் மென்னிங்கர் (Karl Menninger) என்பவர் இந்த வகைப்படுத்தலை மாற்றியமைப்பதற்கு மிகுந்த முயற்சிகள் எடுத்துக் கொண்டார்.

நோய்க்காரணவியல்: பலமனச் சீர்குலைவுகள், மனநோய்கள் ஆகியவற்றின் அடிப்படைக் காரணங்களைக் கண்டறிய இயக்கம் சார்ந்த அணுகும் முறைகள் (Dynamic Approaches) கடைப்பிடிக்கப்பட்டன அம்முறைகள் அதிர்ச்சிப்புண் (Trauma) கிருமிகளால் ஏற்படும் நோய்கள் முதலியவற்றிற்குப் பயன்படவில்லை. உடல்சார்ந்த நரம்பு மண்டலத்தால் சில அடிமனம் சார்ந்த முரண்பாடுகள் நேரடியாக வெளிப்படுத்தப்படுவதில்லை. அத்தகைய முரண்பாடுகளும் தானியங்கு நரம்பு மண்டலத்தால் தூண்டப்பட்ட உறுப்புகளில் வெளிப்படும் உடல்சார்ந்த தொந்தரவுகளும் இம்முறைகளின் மூலம் அணுகப்பட்டன. அவற்றில் கடுமையாக உலைவு (Tension), குடற்

புண், வாத நோய் சார்ந்த மூட்டுவீக்கம், ஒற்றைத் தலைவலி, குடலழற்சி முதலியவையாகும். இதனினும் மாறுபட்ட ஒரு வெற்றிதரும் முயற்சி 1920-ஆம் ஆண்டிலும் 1930-ஆம் ஆண்டிலும் மேற்கொள்ளப் பட்டது. அப்போது உள-உடல்சார்ந்த நோய்கள் என்று கருதப்பட்ட ஒவ்வொன்றுக்கும் ஒரு குறிப் பிட்ட மனவெழுச்சி சார்ந்த அறிகுறி அடிப்படை யாக இருக்கின்றது என்பது காணப்பட்டது. அது வெளிப்படுத்தப்படாமல் அழுத்திவைக்கப்பட்டது என்று நம்பப்பட்டது.

ஒருவர்க்கு இரைப்பையில் புண் அமைதியின்றிப் பிறரைச் சார்ந்திருக்க நேர்ந்தாலும், மிகுந்த உலைவு ஏற்பட்டாலும், நீண்ட நாட்களாக அழுத்தி வைக்கப் பட்டிருக்கும் சினத்தாலும் ஏற்படுவதாகக் கருதப்பட் டது. இது போன்ற மற்ற உள-உடல் சார்ந்த நோய்களுக்கும் ஒரு மனவெழுச்சி அடிப்படையாகக் காட்டப்பட்டது. ஆனால், தனித்த ஒரு மனவெழுச் சியை எந்த ஓர் உள-உடல் நோயோடும் பொருத் திக் காட்டிப் பரிசோதனைகளில் புலப்படுத்த முடிய வில்லை. இப்படிப்பட்ட ஒரு பரிசோதனை மிகவும் சிக்கலானதாகும். ஏனென்றால் மிக அதிகமான மாறு மியல்புகள் இதில் உள்ளடங்கியிருக்கின்றன. அத னால், அதனுடைய செல்வாக்கில் இந்தக் குறிப்பிட்ட விளைவு ஏற்படுகின்றது என்று முடிவாகக் கூற முடிய வில்லை. சான்றாக, மனவெழுச்சி தொடர்புற்றவை யிலும் மூட்டு, முந்திய அனுபவம், சமூகம், சூழ்நிலை முதலிய கூறுகள் இடைபடுகின்றன. பொதுவாக, உளம்-உடல் பிரச்சினைகள் இரண்டாயிரம் ஆண்டு களுக்கு முன்னர் இருந்தது போலவே சரியாகத் தீர் மானிக்க முடியாமல் ஒரு கருத்துக்கட்டத்திலேயே இருக்கின்றன.

உளம்-உடல்சார்ந்த செயல் முறைகளை இணைப் பதற்கு ஒருகருத்துச் சொல் தேவைப்படுகின்றது. இது தொடர்பான அடிப்படைக் கருத்துகளைப் பரிமாறிக் கொள்ள வேண்டுமானால், உயர் மட்டக் கருத்துச் சொற்கள் உருவாக்கப்படவேண்டும். மற்ற மருத்துவத் துறைகளைப் போலவே உளநோய் மருத்துவத் துறை யும் பரிசோதனை நோக்கங்களைக் கொண்டிருக்கின் றது. அவற்றுள் முதலாவது, நோயைத் தடுத்தல்; அது முடியவில்லை என்றால் நோயைக் குணப்படுத் தல்; குணப்படுத்த முடியவில்லை என்றால் நோயின் கொடுமையைத் தணித்தல். இந்த நோக்கங்களை ஓர் ஒழுங்கு முறையாகவும் பயனுள்ளதாகவும் ஆக்க வேண்டுமானால் நோய்க் காரணவியலின் (Etiology) அறிவு அடிப்படைத் தேவைகளில் நன்றாக இருக்க வேண்டும்.

**உளநோய் மருத்துவத் துறைகள்:** குழந்தை உள நோய் மருத்துவ இயல் (Child Psychiatry), உயிரி யல்சார் உளநோய் மருத்துவ இயல் (Biological Psychiatry), உளமருந்தியல் (Psychopharmacology), சமூக உளநோய் மருத்துவ இயல்(Social Psychiatry), சமூகக்குழு சார்ந்த உள்மருத்துவவியல் (Community Psychiatry) என்பன உளநோய் மருத்துவத் துறை களாகும்.

**குழந்தை உள நோய் மருத்துவ இயல்:** அண்மைக் காலத்தில் இந்த இயல் மருத்துவத்தின் ஒரு கிளை யாகவும் ஒரு சிறப்புத் துறையாகவும் ஏற்றுக் கொள் ளப்பட்டிருக்கின்றது. குழந்தை உளநோய் மருத்து வத்தில் ஒருவர் முறைப்படி புகழ்பெற வேண்டுமா னால், மருந்தியலில் டாக்டர் பட்டம் (M.D.) பெற வேண்டும். பொது மருத்துவமனையில் பயிற்சி பெற் றாக வேண்டும். இரண்டாண்டுகள் முதிர்ந்தோர் உளநோய் மருத்துவ இயலில் பயிற்சி பெற வேண் டும். இவை எல்லாம் குழந்தை உளநோய் மருத்துவ இயலுக்கு அமெரிக்க மருத்துவ இயல் மன்றத்தினர் விதித்த தொடக்ககாலப் பயிற்சிகளாகும். மேலும், குழந்தை உளநோய் மருத்துவ இயலில் ஒருவர் பயிற்சி பெறுகின்ற நிலையத்தில் உளவியலார்களும் (Psychologists) உளநோய் மருத்துவ இயல்சார் சமூ கப் பணியாளர்களும் (Psychiatric Social Workers) குழந்தை உளநோய் மருத்துவர்களுடன் இணைந்து பணிபுரிகின்றவர்களாக இருக்கவேண்டும். இந்த அமைப்பு முறை வரலாறு குழந்தை உளநோய் மருத் துவத் துறையில் அமெரிக்கர்களின் பங்காக இருந்து வருகின்றது. அமெரிக்காவில் இத்துறையினுடைய வளர்ச்சி மனநலவியலுடனும் (Mental Health) குழந்தை வழிகாட்டி (Child Guidance) இயக்கத் தோடும் நெருங்கிய தொடர்பு கொண்டதாக இருக் கின்றது.

கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டு வரையில் உளநோய் மருத்துவ மனைகளில் குழந்தைகளை அனு மதித்து வந்த முறை அவ்வளவாக யாருடைய கவ னத்தையும் கவரவில்லை. பெஞ்சமின்ரசு (Benjamin Rush) என்ற அமெரிக்க உளநோய் மருத்துவரே முதன்முதலில் இத்துறையில், 'உளநோய்களின் மீது மருத்துவ விசாரணைகளும் கூர்ந்து கவனித்தலும்' (Medical Enquiries and Observations upon the Diseases of the Mind) என்றதொரு சிறப்பான நூலை வெளியிட்டார். இவர் குழந்தைகளைப் பற்றி எந்த விதமான குறிப்பும் தரவில்லை; குழந்தைகள் சிலரின் உளநோய்களை விவரித்துக் காட்டி அவை மூளை நோய்கள் என்று கூறினார். பெஞ்சமின்ரசு கி.பி.

1791–ஆம் ஆண்டில் பென்சில்வேனியாப் பல்கலைக் கழகத்தில் மருத்துவ மாணவர்களுக்கு மனக்கோளாறுகள் பற்றி முதன்முதலில் விரிவுரையாற்றினார். ஆனால், கி.பி.1863–ஆம் ஆண்டில்தான் மருத்துவப் பாடத்திட்டத்தில் உளநோய் மருத்துவம் ஒரு பகுதியாக ஆர்வார்டு மருத்துவக் கல்லூரியில் (Harvard-Medical College) ஏற்கப்பட்டது.

பொதுவாக, உளநோய் மருத்துவமனைகள் மிகப் பெரியதாகத்தானிருகின்றன. என்றாலும் உளமருத்துவர்களின் பணி பெரும்பாலான இடங்களில் நிறுவனச் சார்புடையதாகவும் சட்டச் சார்புடையதாகவும் (Institutional and Legal) இருந்து வருகின்றன. குழந்தைகள் உளநோயாளிகளே என்று பகுத்தறிந்தாலொழிய, அவர்கள் உளநோய் மருத்துவ மனைகளில் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை. உலகத்திலுள்ள பல்வேறு உளநோய் மருத்துவ மனைகளில் ஒரு சமயத்தில் சேர்க்கப்பட்டிருந்த இருபத்தோராயிரம் நோயாளிகளுள் ஒரு விழுக்காட்டினர் குழந்தைகளாக இருப்பதை, 1939–ஆம் ஆண்டில் சில்லெசுப்பீ (Gillespie) என்பவர் கண்டறிந்து வெளியிட்டார். அவர்களெல்லாம் பெரும்பாலும் உளநோயாலும் (Schizophrenia) மகிழ்ச்சியும் துன்பமும் மாறி வரும் உளப்பிணியாலும் (Manic-depressive Psychosis) பீடிக்கப்பட்டிருந்தனர். இந்த நிகழ்ச்சிகளே குழந்தை உளநோயியலில் மிகுந்த கவனத்தைத் தூண்டி விட்டன.

குழந்தைப்பருவ உளப்பிணி பற்றிக் கிடைத்த புள்ளி விவரங்களை விட அதிகமாகவே உண்மை நிகழ்ச்சிகள் இருப்பதாகச் சில்லெசுப்பீ கண்டறிந்தார். காரணம் என்னவென்றால், குழந்தைகளின் இயல்பிறழ்ந்த நடத்தையும் மனவெழுச்சியினால் ஏற்படுகின்ற உளப்பிணியும் அவர்களுடைய பெற்றோர்களால் இயல்பான நடத்தை என்றே கருதப்பட்டன. பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின்மீது கொண்டுள்ள அளவுக்கு மீறிய அன்பாலும் பாசத்தாலும் அவர்களின் உளப்பிணி நடத்தையில் சிறிதும் ஐயம் கொள்ளுவதில்லை. அதனால் பெற்றோர்கள் அவர்களுக்குத் தகுந்த காலத்தில் உளச் சிகிச்சையளிக்கத் தவறிவிடுகின்றனர். அதனால் அவர்கள் பெரியவர்களாக வளரும்போது மிகுந்த துன்ப நிலைக்கு ஆளாகின்றனர். அக்குழந்தை உளப்பிணியாளர்களாக இல்லாமல் உளவளர்ச்சி குன்றியவர்களாகவும் இருக்கலாம். உளவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு அவர்களின் பெற்றோர்கள் உரிய காலத்தில் தகுந்த சிகிச்சையளிக்கத் தவறியதோடு மட்டுமன்றி, அக்குழந்தைகள் சிறந்த புத்திசாலிகள் என்று பாராட்டி வளர்த்து வருவதையும் அன்றாட வாழ்க்கையில் காணலாம். பெற்றோர்களின் இத்தகைய மனப்போக்குக் காரணமாக உள வளர்ச்சி குன்றிய குழந்தைகள் சிகிச்சை பெறும் வாய்ப்பையும் இழந்துவிடுகின்றனர். அக்குழந்தைகள் பெரியவர்களாக வளர்ந்த பிறகு, மிகப்பெரிய பிரச்சினைகளை எழுப்புகின்றனர். அவர்கள் எல்லா வழிகளிலும் பின்தங்கியே காணப்படுகின்றனர்; சில சமயங்களில் ஆக்கிரமிப்பு உணர்ச்சிகொண்டு பெற்றோர்களையும் மற்றவர்களையும் மூர்க்கத்தனமாகத் தாக்கவும் தொடங்குகின்றனர்.

பிரான்சு நாட்டு உளநோய் மருத்துவரான எட்வர்டு சீகுன் (Edward Sequin) என்பவர் 'உள வளர்ச்சி குன்றியிருத்தலும் கல்வியும்' பற்றிச் சிறப்பாக ஆராய்ந்து வந்தார். அவருடைய ஆராய்ச்சிகளில் குழந்தை உளநோயியல் மிகவும் செல்வாக்குப் பெற்றிருந்தது. உளநோய் மருத்துவம் வளரவளர, அதன் சிறப்பை உணர்ந்து உளநோய் மருத்துவத் துறையில் குழந்தைகளுக்கான புறநோயாளி (Out-patient) மருத்துவ நிலையங்களும் தோற்றுவிக்கப்பட்டன. அமெரிக்க நாட்டு உளவியல் வல்லுநரான இசுடேன்லி ஆல் (G. Stanley Hall) என்பவர் குழந்த்தை உளவியலுக்கான ஓர் ஆராய்ச்சி இதழைத் (Journal) தொடங்கினார்.

பிற துறைகளைப் போலவே உளநோய் மருத்துவத்துறையிலும் ஐரோப்பிய நாடுகளுக்கும் அமெரிக்க நாடுகளுக்குமிடையில் போட்டிகள் இருந்து வந்தன. அதே சமயத்தில் அமெரிக்காவில் பல குழந்தை வழிகாட்டி நிலையங்கள் தோற்றுவிக்கப்பட்டன. குழந்தை உளநோய் இயல் வளர்ச்சிக்கு இவை உறுதுணை புரிந்தன. வில்லியம் ஈலி (William Healy) என்பவர் சிறுவர் உளநோய் ஆராய்ச்சி நிலையம் ஒன்றை நிறுவினார். சிறுவர்கள் நெறி தவறுவதற்கும் குற்றம் புரிவதற்கும் பிறப்பு மரபுதான் காரணம் என்று காட்டிய இலம்பியர்சோவின் (Lambearso) கோட்பாடுகளை இவர் பொய்யாக்கிக் காட்டினார். ஈலி தம் ஆராய்ச்சியைத் தொடங்கிய காலத்தில் உளநோய் மருத்துவ இயலில் முக்கியமானவர்களாகக் கருதப்பட்டவர்கள் அடால்பு மெயர் (Adolf Meyer), ஆல்பிரெட் பினெட்டு (Alfred Binet), சிக்மண்டு பிராய்டு (Sigmund Freud) ஆகியோராவர். ஈலி தம் ஆராய்ச்சியைச் சிக்காகோப் பல்கலைக் கழகத்தில் தொடங்கியபோது, ஆல்பிரெடு பினெட்டு பாரிசு நகரத்தில் பள்ளிக்கூட மாணவர்களிடம் ஆராய்ச்சி நடத்தி, உளவளர்ச்சி அளவீடு என்ற ஒரு புதிய துறையைத் தொடங்கியிருந்தார்; குழந்தைகளின் நுண்ணறிவை அளவிடுவதில் அளவாய்வு முறைகளைப் பயன்படுத்தினார். இன்று இது ஓர் அறிவிய

லாகவே வளர்ந்து வருகின்றது. பினெட்டு சைமன் நுண்ணறிவுச் சோதனைகள் (Binet-Simon Intelligence Tests) உலகெங்கும் பயன்படுத்தப்படுகின்றன.

உளநோய் மருத்துவத்துறைக்குச் சிக்மண்டு பிராய்டின் பங்கு ஒரு புத்துணர்ச்சியைத் தரும் சக்தியாக இருந்து வருகின்றது. இத்துறைக்கு ஈலியின் பங்கும் மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். ஈலியின் உளவியல் சோதனையான 'ஈலியின் படத்தை நிறைவு செய்தல்' (Healy's Picture Completion Test) மிகவும் முக்கியமானதாகும். 'உறுப்புக்கோணல் உள நோய் மருத்துவம்' 1924-ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டது. இத்துறை உளநோய் நீக்கும் உளவியல் (Clinical Psychology), சமூகவியல் (Sociology), சமூகப்பணி (Social Work) முதலியவற்றோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது.

குழந்தை வழிகாட்டி மருத்துவ நிலையம் 1911-ஆம் ஆண்டில் தொடங்கப்பெற்றது; என்றாலும் 1934-ஆம் ஆண்டில் நூற்றுக்கணக்கான குழந்தை வழிகாட்டி மருத்துவநிலையங்கள் தோன்றிவிட்டன. இதனால் குழந்தை உளநோய் மருத்துவ இயலுக்கும் குழந்தை வழிகாட்டி மருத்துவநிலையங்களுக்குமிடையில் சிறிது குழப்பம் ஏற்பட்டது. எனவே, இவற்றை வேறுபடுத்திக் காட்ட வேண்டிய நிலை ஏற்பட்டது. குழந்தை வழிகாட்டி மருத்துவம் எப்பொழுதும் ஓர் உளநோய் மருத்துவர், ஓர் உளவியலார், ஒரு சமூகப்பணியாளர் ஆகியவர்களைக் கொண்ட ஓர் அமைப்பாகும். குழந்தை வழிகாட்டி மருத்துவ நிலையம் நோயாளிகளை இளம் குற்றவாளி வழக்கு மன்றங்களிலிருந்து பெற்று வந்தது. அவர்கள் மருத்துவ நிலையங்களோடு தொடர்புடையவர்களல்லர்; வழக்கு மன்றங்களோடு தொடர்புடையவர்கள். ஆனால், குழந்தை உளநோய் மருத்துவத் துறை மருத்துவத் துறையின் ஒரு பகுதியாக இருந்து வந்தது. குழந்தை வழிகாட்டி மருத்துவ நிலையங்கள் சமூகப் பணியாளர்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தன.

சமூக உளநோய் மருத்துவ இயல்: அண்மைக் காலத்தில் விரிவடைந்ததொரு துறையாக இருந்தாலும், இது மிகவும் தொன்மையான வரலாறுடையதாக இருக்கின்றது. மனிதன் தன் வாழ்க்கைச் சிக்கல்கள் காரணமாகத் தானே உளச்சீர்குலைவு நிலைக்குச் செல்ல முடியும் என்று நினைத்தான். மனிதர்களிடையே உள்ள தொடர்புகள் அவனுடைய மன வெழுச்சிகளைத் தீங்குடையவனாக ஆக்கிவிடக் கூடும். அது உறுப்புச் சார்ந்த நோய்கள் உள்ளடங்கப் பலநோய்களுக்கு இட்டுச் செல்லும் என்றும் கண்டான். குகை மனிதன் காலம் தொட்டு வழங்கி வருகின்ற சொல் வழக்குகளான 'உனக்குப் பைத்தியம் பிடித்துவிடும் போலிருக்கின்றது', 'நீ என்னைப் பைத்தியமாக்கிவிடுவாய்' போன்ற சொற்கள் மனிதனுக்குத் தன்னுடைய நடத்தையின்மீது எழுந்த ஐயத்தின் காரணமாக எழுந்தவையாகும்.

சமூகம் சார்ந்த உளநோய் மருத்துவம் நான்கு பெரும் பண்புக் கூறுகளை உள்ளடக்கி இருப்பதாகச் சொல்லப்படுகின்றது. அது அதிக எண்ணிக்கையுள்ள மக்களைப் பற்றியதாகவும், சமூகப் பண்பாட்டுக் கோட்பாடுகளைப் பற்றியதாகவும், சமூக அறிவியல் அறிவு மாற்றியமைக்கப்பட்டதைப் பற்றியதாகவும், உளநோய் மருத்துவ இயல் அறிவை சமூக அறிவியலுக்கு ஒப்படைப்பது பற்றியதாகவும் இருக்கின்றது. மக்களிடையே நிலவிவரும் உளக்கோளாறுப் பிரச்சினைகளின்மீதுஇம் மருத்துவ இயல் கவனம் செலுத்துகின்றது. இதனுடைய நோக்கங்கள் தனியாள் உள நோய் மருத்துவ இயலிடமிருந்து ஓரளவு மாறுபட்டு இருக்கின்றன. தனியாள் உளநோய் மருத்துவம் (Clinical Psychiatry) தனி நோயாளியின் மீது கவனம் செலுத்துகின்றது. அவனுடைய பிரச்சினைகள், நோய்க்கூறு கண்டறிதல், சிகிச்சை முதலியவை தனியாள் உளநோய் மருத்துவத்தின் சிறப்பு நோக்கமாகும். தனி மனிதன்தான் அடிப்படையான அலகாகும் என்ற கருத்தைச் சமூக உளநோய் இயல் புறக்கணித்து விடவில்லை. மாறாக, தனிமனிதப் பிரச்சினைகள் அதிக எண்ணிக்கையுள்ள மக்களிடம் காணப்படுவனவாக அது மிகையாகச் சுட்டிக் காட்டுகின்றது. உடன் உளநோயியலில் பணிபுரிகின்றவர்கள் தங்களுடைய அடிப்படைப் பொறுப்புகள் தனி மனித உளநோய் இயல் துறையிலிருந்து வேறுபட்டிருப்பதாகக் கருதுகின்றனர். அதிக எண்ணிக்கையுள்ள மனிதர்களின் உளப்பிரச்சினைகளை மொத்தமாகக் கவனிப்பதால், தனிமனித உளநோய்ப் பிரச்சினைகள் புறக்கணிக்கப்பட்டு விடுவதாகக் கருதுவதற்கு இடமில்லை. சமூக உளநோய் இயல் ஒரு பண்பாட்டை மற்றொரு பண்பாட்டோடு ஒத்திட்டுப் பார்க்கும்போது, என்ன மாறுபாடுகள் இரண்டுக்கும் இருக்கின்றன என்று காண முயலுகின்றது.

சமூகக் குழு உளநோய் இயல்: உளநோய் இயல் துறையில் ஈடுபட்டிருப்பவர்களுக்குப் பயிற்சியளித்து, அவர்களைச் செயல் சார்புள்ளவர்களாக்குவது சமூகக் குழு உளநோய் இயலின் நோக்கமாகும். இத்துறை உளநோய் இயல் துறையில் ஏற்படுகின்ற சில சிக்கல்களைத் தீர்ப்பதற்காகத் தோற்றுவிக்கப்பட்டதாகும். தனிமருத்துவப் பயிற்சி பெற்றவர்களை உள

நலம் சார்ந்த பணிகளிலும் நோய்களைத் தடுக்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபடுத்துவதிலும், சமூக அறிவிய லார்களுக்கும் உளநோய் மருத்துவர்களுக்கும் தனியாள் உளநோய் இலார்களுக்கும் எழுந்துள்ள பிரச்சினையின் இயல்பு, மருத்துவ மனைசார்ந்த அமைப்பு, தனியாள் பயிற்சி, திறமை ஆகியவற்றின் மீது நேரடி ஆராய்ச்சி மேற்கொள்ளுவதிலும் ஏற்படும் முரண்பாடுகளை இத் துறை தீர்த்து வைக்கும் என்றும் நம்பப்படுகின்றது.

நோய்தீர்க்கும் நடவடிக்கைகளுக்கும் ஆராய்ச்சிக்கு மிடையில் இந்த விதமான ஒரு மரபு ஏற்படுவதைத் தீவிரமாகச் சிலர் எதிர்த்தனர். இத்தகைய ஒரு மரபு கேலிக்குரியதென்றும் நடைமுறைக்கொவ்வாதது என்றும் கருதப்பட்டது. சமூகக் குழு உளநோயியல் சமூக உளநோய் மருத்துவர்களின் கவர்ச்சிகரமான பலதுறைகளுள் ஒன்று என்று கருதப்பட்டது. எப்படி யிருப்பினும், செயற்பணி சார்ந்தது என்று மட்டுமன் றிக் கற்பித்தலிலும் ஆராய்ச்சியிலும் ஈடுபடுத்தப்பட் டிருந்தது. சமூகக்குழு உளநோயியல் செயல்திட்டங் களுக்கும், சமூக உளநோய் இயலின் நோய்க்காரண ஆராய்ச்சிக்கும், சமூக ஒப்பீடுகளுக்கும், மற்ற அடிப் படை ஆராய்ச்சிகளுக்கும் பயன்படுகின்றது. இங்கி லாந்து நாட்டில் சமூக உளநோய் மருத்துவம் சமூக மருத்துவம் (Social Medicine) என்ற பொருளில் பயன்படுத்தப்படுகின்றது. பிரான்சில் சமூக நோய் மருத்துவ இயல் மிகவும் கட்டுப்படுத்தப்பட்ட ஒரு குறுகிய பரப்பில் செயற்பட்டு வருகின்றது.

எம்.இரா.

துணை நூல்கள்:

**Aldrich, C.K.**, An Introduction to Dynamic Psychiatry, McGraw Hill Book Company, New York, 1955.

**Gillespie, R.D.**, Psychology in Children: A survey of Child Psychiatry, Oxford University Press, 1939.

**Healy, William**, Mental conflict and Missconduct, Little, Boston, 1917.

**Messerman, J. H.**, Principles of Dynamic Psychiatry, 2nd ed., Saunders, Philadelphia, 1946.

**Rosanoff, A.J.**, Manuel to Psychiatry, 7th Ed., John Wiley and sons, INC., New York, 1949.

**Rush, Benjamin**, Medical Inquiries and Observation upon the Diseases of the Mind, 4th Ed., Grigg, Philadelphia, 1930.

## உளநோய் மருத்துவ மானிடவியல்:

மனிதன் ஈடுபடும் அனைத்துச் செயல்களையும் பற்றி ஆராயும் அறிவியல் மானிடவியலாகும். இச் செயல் கள் உயிரியல் செயலாகவும் பண்பாட்டுச் செயலாக வும் மாறுபடும்போது, மனிதனின் எண்ணங்களிலும் செயல்களிலும் பல பரிமாணங்கள் வெளிப்படு கின்றன. மனிதன் மட்டுமே உளவழியில் உயர்ந்துள் ளான். மனிதனது பொருள்சாராப் பண்பாடாகிய (Non-material Culture) கலை, இலக்கியம், மொழி, உணர்வுகள், அறிதிறன் முதலான அனைத்தும் மனிதனது சிந்தனைச் சக்தியின் வெளிப்பாடாகும். இந்த அனைத்துச் செயல்களில் வெளிப்படும் நடைத்தைமுறைகளும் அவன் தன் சமூகத்தின் பல் வேறு குழுக்களுடன் இணைந்து செயற்படும்போது, அவனது நடத்தைகளும் மாறுபடும் தன்மையன. இந்தத் தன்மைகளையும் ஒவ்வொரு பண்பாட்டிலும் மனித நடத்தை முறைகளையும் அவற்றால் தோன்றும் உளவழிப் பிரச்சினைகள், உளநோய் முதலானவற்றையும் ஆராயும் மானிடவியலின் ஒரு துணைப் பிரிவே உளநோய் மருத்துவ மானிடவியல் (Psychiatric Anthropology) ஆகும்.

ஒரு பண்பாட்டில் தனி ஒருவன் செயல் முறை களுக்கும் நடத்தைக்கும், அவன் தான் சார்ந்துள்ள குழுவுடன் செயற்படும்போது ஏற்படும் நடத்தைக்கும் இடையிலுள்ள தொடர்புறவுகளை ஒழுங்குமுறையாக ஆராய வேண்டியுள்ளது. மனிதர்கள் பல்வேறு செயல்களில் ஈடுபடும்போது, அவர்களிடையே எழுச்சி யும் (Aggression) அதன் பின்விளைவுகளும் மனிதனது நடத்தை, அவனது ஆளுமை (Personality) முதலான வற்றை மாற்றுகின்றன.

ஒவ்வொரு பண்பாட்டிலும் நிறுவனப்படுத்தப் பட்ட (Institutionalized) சமூக வரையறைகளை ஒவ்வோர் உறுப்பினரும் ஏற்க வேண்டியுள்ளது. பண் பாட்டின் நெறிமுறைகள் (Norms) ஒவ்வொரு தனி யாளுக்கும் ஏற்புடையனவாக அமைந்துவிடா. அவனது செயல்களும் எண்ணங்களும் தன் சொந்தச் சமூகத் தின் பன்னெடுங்கால நெறிமுறைகளுக்கும் மரபுகளுக் கும் சற்று விலகியதாக அமைகின்றன. இதன் வெளிப் பாடு ஒருவன் தன் பண்பாட்டு மரபுகளை அச்சமூகத் தின் உறுப்பினராகித் தானே கற்கும்போது காணப் படும். சமூகத்தின் சிறந்ததாகக் கருதப்படும் அல்லது அச்சமூகத்தினரால் ஏற்றுக் கொள்ளப்படும் மரபு களையும் நெறி முறைகளையும் இணக்கமானதாகக் கருதாமல், வேறுபட்ட ஈடுபாடுகளைக் கொண்டவர் கள் அச்சமூகத்தில் இணைந்து செயற்படாமல் தனித்தியங்குவர். இவர்களின் நடத்தை முறைகள்

தம் சமூகத்தின் பண்பாட்டோடு ஒன்றிப்போகா நிலையில், இயல்பிறந்ததும் வரம்புக்குப் புறம்பான தாகவும் (Abnormal) காணப்படும். குடும்பத்தோடும் நண்பர்களோடும் சமூகத்தோடும் முரண்பாடுகள் கொண்ட மனிதர்களைச் சமூகத்தில் உள்ள அனைவரும் ஏற்றுக் கொள்ளும் வகையில், அவர்களின் நடத்தையில் மாற்றங்களை ஏற்படுத்துவது உளநோய் மருத்துவ மானிடவியலாரின் பணியாகிறது.

மனிதர்களிடையே உளப்பிணியும் (Psychosis) உளவழி உடல்நோய்களும் (Psychosomatic Disorders) தோன்றும் அடிப்படைக் காரணங்களை அறிவதும், அதற்கான அறிவுரை கூறுதலும் உளநோய் மருத்துவ மானிடவியலாரின் முதன்மையான நோக்கமாகும். இவர்களின் துறை மிக விரிவானதாகும். உளநோய்களைக் கண்டறிவதிலும் அதைக் குணப்படுத்துவதிலும் உளநோய் மானிடவியலார் பல சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். மக்களின் நடத்தைமுறை என்பது எளிய அமைப்பின்வழி ஏற்படுவதன்று. பண்பாட்டின் மூலம் நடத்தைகளுக்கு விளக்கம் பெற வேண்டும். இதற்குப் பண்பாட்டின் அனைத்து நிறுவனங்களின் அமைப்பையும் செயலையும் அறிய வேண்டும். மனிதர்களின் நடத்தை அவர்களது நிறுவனங்கள் காட்டிய வழியில்தான் அமையும். மக்களின் இனம் (Race), உடற்கூற்றமைப்பு (Anatomy), உடல் தொழிலமைப்பு (Physiology) ஆகியவை நடத்தைகளைப் புரிந்து கொள்வதற்குத் துணைபுரிகின்றன. உயிரியல்மூலம் பெறுகின்ற விளக்கத்துடன் பண்பாட்டின் வரலாற்றை (Cultural History) அறிவதும் பெரிதும் பயனுள்ளது.

ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள் அனைவரும் பண்பாட்டு நடத்தையில் ஒன்றுபடுவதில்லை. ஒவ்வொரு பண்பாட்டிலும் தலை வேட்டை (Head Hunting), குழந்தைக் கொலை (Infanticide), தன்னினத்தை உண்ணும் பழக்கம் (Cannibalism), தற்பாலுணர்ச்சி (Incest) முதலான இன்னும் பல பண்பாட்டுக் கூறுகளுக்குத் (Culture Traits) தனித்தனியான விளக்கம் காட்டுவர். பண்பாட்டின் ஒவ்வொரு கூற்றையும் நன்கு தெரிந்து கொள்ள வேண்டுவது பயன்வழி மானிடவியலாருக்கு (Applied Anthropologist) எவ்வளவு அவசியமானதோ அதைப் போன்றே உளநோய் மானிடவியலாருக்கும் அவசியமானதாகும்.

உளவியலார் இத்துறையில் மிக விரிவாக நுண்நிலையில் செயற்படுகின்றனர். இவர்கள் தனி ஒருவரின் உளப்பிணியை ஆராய்ந்து குணப்படுத்துவதில் பெரும்பாலும் கவனம் செலுத்துகின்றனர். மானிடவியலாரின் அணுகு முறை வேறுபட்டது. தனிஒருவர் நிலையிலும் முழுநிலையிலும் இந்தப் பிரச்சினையை ஆராய்வர். இந்த இரண்டு நிலையிலும் பண்பாட்டின் பாங்கினை அடிக்கருத்தாகக் கொண்டு முறையறிதலும் குணப்படுத்துவதற்கான அறிவுரை கூறுதலும் இன்றியமையாதன.

உளநோய் மருத்துவ மானிடவியல் துறையில் முதன்முதலில் பெருமளவு ஆய்வு செய்த மார்கரட்டு மீடு (Margarett Mead) மக்களின் பண்பாடு, நடத்தைமுறைகள், நெறிமுறைகள், ஒவ்வொரு செயலுக்கும் அந்தந்தப் பண்பாட்டினர் கொண்டுள்ள நம்பிக்கைகள் ஆகியவை முதன்மையானவை எனக் கூறுகிறார்.

குவாக்கியூட்டில் (Kwakiutl), பியூப்லோப் (Pueblo) பழங்குடிகளிடையே சமூக மதிப்பிற்கான பிரச்சினையின் சிக்கல்கள் நன்றாகத் தெரிகின்றன. அமெரிக்க இந்தியப் பழங்குடிகளுள், குறிப்பாக வடமேற்குக் கரைப் பழங்குடியினர் தங்கள் படகோட்டும் துடுப்புகள் உடைந்துபோதல், படகுகள் கவிழ்ந்து போதல், சாவினால் உறவினர்களை இழந்துவிடுதல் போன்ற நிகழ்ச்சிகளைத் தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியெனக் கருதுகின்றனர். இதை இவர்கள் வாழ்வின் ஒரு பகுதியாக ஏற்றுக்கொள்வதில் மனமுடைந்து போகின்றனர்.

சில குடியினர் தம் கால்வழிக் (Lineage) குழுக்களுக்கிடையில் நடைபெறும் இரத்தச் சண்டையில் (Blood Feud) தம் உடைமைகளைக் கொண்டும், போர்க் கருவிகளைக் கொண்டும் தம் பகைக் கால்வழியினருள் யாரேனுமொருவனைக் கொல்ல முயலுகின்றனர். பிறரை அவமானப்படுத்தி, அதன்மூலம் தங்களுக்கு ஏற்பட்ட நிலையைச் சரிசெய்து கொள்ள வேண்டும் என எண்ணுகின்றனர். இவ்வாறு தவறும் போது இவர்களிடையே மனவெழுச்சியும் மனஉந்தலும் தொடர்ந்து நிலவுகின்றன. இவ்வாறான சூழ்நிலையில் தனி ஒருவர் உளநோய் நீக்கம் காண்பதரிது. குரோ இந்தியர்களிடையே (Crow Indians) உலோவி (Lowie) என்பவர் ஆய்வு செய்தபோது ஒருவனின் உளப்பிணியைக் கண்டறிந்தார். அவன் எதிரியின் பாசறையில் கட்டப்பெற்றிருந்த குதிரையைக் கொண்டுவந்து விட்டதாகக் கூறி, பொய்யான கௌரவத்தை உரிமை கொண்டாடி வந்தான். இதன் உண்மை தெரிந்தபின், அவர்களிடையே அவன் தகுதியற்றவனாகவும் இழிந்தவனாகவும் ஒதுக்கப்பட்டான். இவர்கள் சமூகத்தில் பொய்யான கௌரவம் பெருங்குற்றமாகும்.

சில சமுதாயங்களைப் பெருமளவு ஆராயும் சமுதாய மானிடவியலார் சமூக நிலையில் தனி ஒருவ

னின் பல குறைகளை நீக்குதற்குப் பல முறைகளைக் கையாளுகின்றனர். குழந்தை வளர்ப்பு முறையையும் பண்பாட்டின் மரபுகளை ஒருவன் கற்கும் முறையையும் (Enculturation) அடிப்படையாகக் கொண்டு ஆராய்கின்றனர். ஒவ்வொரு குழந்தையும் அந்தந்தக் குடும்பத்தின் உறுப்பினராகவும் தம் சமூகத்தின் உறுப்பினராகவும் உள்ளது. குடும்பத்தில் ஏற்படும் மாற்றங்களும் சமூகத்தில் ஒருசிலரால் தமக்கு இழைக்கப்படும் தீங்குகளும் ஒருவரை மிகவும் பாதிக்கின்றன. பழங்குடிச் சமூகங்களில் சூனியம், மாய வித்தை முதலானவற்றால் தமக்கு எதிரானவரின் உடல் நலனையும் உடைமைகளையும் தீங்குறச் செய்வர்.

இந்தத் துறை பிராய்டு (Freud) தொடங்கிய உளவியல்முறைகளிலிருந்து பெரும்பாலான உளவியல்வழி உளநோய் கண்டறிதல் முறைகளை ஏற்றுக் கொண்டுள்ளது. இனக்குழுவியல் (Ethnography) அணுகுமுறைகளிலேயே பெரும்பான்மையான உளப்பிணிக் கருத்துகள் கண்டறியப்பட வேண்டியது அவசியமாகிறது. சூழ்நிலைகளின் மூலம் விளக்கம் பெறுவது மேலும் வலிமையுள்ளதாகும். தனி ஒருவரின் பண்புக் கூறுகளைக் கண்டறியும் ஆளுமைச் சோதனைகளையும், கற்றல் செயல் முறையின் வகைகளையும், உளப்பகுப்பு முறைகளையும் உளநோய் மருத்துவ மானிடவியலார் கையாளுகின்றனர். சீ.ப.

**துணை நூல்கள்:**

**Benedict,R.,** Patterns of Culture, New American Library, New york, 1934.

**Hoch, P.H. and Joseph zubin (Eds.),** Psychosexual Development in Health and Disease, Grune and Stratton, New york, 1949.

**Kardiner, A. et. al.,** The Psychological Frontiers of Society, Columbia University Press, New york, 1945.

**Mead, M.,** Coming of Age in Samoa, William Morrow & Co., New york, 1935.

**உளப்பகுப்பு மருத்துவம்**: இதன் முக்கிய குறிக்கோளாக இருப்பது உளநோயாளிகள் தாங்கள் பயன்படுத்தும் இணக்கமைவுச் செயல்முறைகளை (Mechanisms of Adjustment) ஆழமாக அறிந்து கொண்டு, அவற்றின் மூலம் தங்களுடைய அடிப்படை உளக்கோளாறுகளைப் போக்கிக் கொள்வதாகும். இம்முறை முதன்முதலில் உளவழி நரம்புக் கோளாறுகளை (Psychoneuroses) மட்டும் தீர்க்கப் பயன்படுத்தப்பட்டது. பின்னர், மற்ற வகையான உளக் கோளாறுகளுக்கும் தீர்வு காண இம்முறை பயன்படுத்தப்பட்டு வருகிறது. உளப்பகுப்புச் சிகிச்சை முறையைப் (Psycho Analytic Therapy) பெரிதும் கையாண்டவர் சிக்மண்டு பிராய்டு (Sigmund Freud) என்ற உளப்பகுப்பு வல்லுநர் ஆவார். அவருக்குப் பின் வந்த உளப்பகுப்பாளர்கள் (Neo-Freudians) தங்களுக்கேற்றவாறு பிராய்டு கையாண்ட உளப்பகுப்பு மருத்துவ முறையில் சிறிதளவு மாற்றங்களைச் செய்து, அம்முறையைப் பின்பற்றினர்.

பிராய்டின் முறைகள்: சிக்மண்டு பிராய்டு உளப் போராட்டங்களிலிருந்து ஒரு மனிதன் தன்னை மீட்டுக் கொள்ளப் பல தற்காப்புச் செயல்முறைகளைக் (Defence Mechanisms) கையாளுகின்றானென்றும், அச்செயல்முறைகளை மிக அதிக அளவிற்குப் பயன்படுத்தினால் அவன் ஓர் உளநோயாளியாக மாறுவானென்றும் கூறுகிறார். பலவிதமான தற்காப்புச் செயல்முறைகளில் 'நசுக்குதல்' (Repression) என்ற செயல்முறை உளநோய் பலவற்றிற்கு முக்கிய காரணமாக அமைகிறது என அவர் கூறுகிறார். மனிதன் உளப்போராட்டத்தின்போது படும் துன்பமிக்கதும் வெறுக்கத் தகுந்ததுமான அனுபவங்களை நனவு நிலையிலிருந்து (Conscious Level) நசுக்கி நனவிலி உள்ளத்திற்குத் (Unconscious Mind) தள்ளிவிடுவதால், நனவிலி உள்ளத்தில் ஒரு கோளாறு ஏற்படுகிறது. இக்கோளாற்றை அகற்ற அக்கோளாற்றின் மையப் பகுதி என்ன என்று கண்டு ஆராய வேண்டும். அவ்வாறு ஆராய்ந்தால் உள்ளம் மறுபடியும் தெளிவடைவது மட்டுமன்றி, உளப்பிணியாளரின் ஆளுமையை ஓரளவிற்கு வலுவாக மாற்றி அமைக்கவும் முடியுமென்று கருதப்படுகின்றது.

பிராய்டு பொதுவாக நான்கு முறைகளைப் பின்பற்றினார் அவையாவன: 1) தடையில் இயைபு முறை (Free Association Method), 2) கனவு விளக்க முறை (Dream Interpretation Method), 3) எதிர்ப்பு நிலைப் பகுப்பாய்வு (Analysis of Resistance), 4) உணர்வு மாற்றங்களின் பகுப்பாய்பு (Analysis of Transference).

தடையில் இயைபு முறை: இம்முறையில் உளநோயாளி தன் உள்ளத்திற்கு வரும் சொற்கள் சரியா-தவறா, பொருத்தமுள்ளவையா-பொருத்தமற்றவையா, நல்லவையா-கெட்டவையா என்று பாராமல், எவ்விதத்தடையுமில்லாமல் சொல்ல வேண்டும். அவ்வாறு சொல்லும்போது சாய்வான சொகுசிருக்கையில் (Couch) இருக்கச் செய்து, உள

நோயாளியுடைய மனத்தை நாலாபக்கமும் அலைய விட்டு, தன்னுள் புதைந்திருக்கும் பழைய அனுபவங்கள் (குறிப்பாகத் தொல்லையும் துன்பமும் கொடுத்த அனுபவங்கள்), ஆசைகள், உணர்வுகள், எண்ணங்கள் அனைத்தையும் வெளியே கொணரச் செய்ய வேண்டும். இந்த முறையைப் பயன்படுத்தும் போது, சொல் இயைபின் வேகத்தைக் குறைக்காமல் இருக்க, உளப் பகுப்பு மருத்துவர் (Psychoanalyst or Therapist) உளநோயாளியின் பின்புறம் இருந்து கொண்டு வெளி வரும் சொற்களைக் கவனித்துக் குறித்துக் கொள்வார்.

இம்முறையால் வெளிவருபவற்றை ஏதோ மனம் போன போக்கில் சொல்லப்பட்ட சொற்கள் என்று பிராய்டு கொள்ளவில்லை. ஆனால் 'சட்டியில் இருப்பவைதாம் அகப்பைக்கு வரும்' என்பது போல, நனவிலி மனத்தில் இருப்பவை தாம் சொல்வடிவில் நனவிற்கு வருகின்றன என்று அவர் உறுதியாக நம்பினார். தடையில் இயைபு முறை மூலம் கிடைக்கப் பெற்ற விவரங்களை உளப்பகுப்பு மருத்துவர் சேகரித்து, பின்னர், அவற்றிற்கு வேண்டிய விளக்கங்களை உளநோயாளிக்குக் கொடுத்து உதவுவார். இதன்மூலம் உளநோயாளிக்குத் தன்னுள் நடக்கும் உளப்போராட்டத்திலிருந்து விடுதலை (Relief) கிடைப்பதுடன், உள்நோக்குத் திறனும் (Insight) நன்கு உருவாகிறது.

**கனவு விளக்க முறை:** இம்முறையைக் கனவுப் பகுப்பாய்வு (Dream Analysis) முறை என்றும் கூறலாம். உளப் பகுப்பாய்வில் ஈடுபட்டிருக்கும்போது, உளநோயாளி சில சமயங்களில் தான் தூக்கத்தில் கண்ட அல்லது அடிக்கடி காணும் கனவுகளைப் பற்றிச் சொல்ல நேரிடும். அக்கனவுகளை உளப்பகுப்பு மருத்துவர் பகுத்தாய்ந்து விளக்கங்களைக் கொடுப்பார். கனவுப் பகுப்பாய்வு முறைக்குப் பிராய்டு மிகவும் சிறப்பிடம் கொடுத்தார். ஏனெனில் நனவிலி உள்ளத்தை ஆராயக் கனவுகள் குறுக்குப் பாதையாக அமைகின்றன என்று அவர் நம்பினார். அவர் கனவுகளை நனவிலி உள்ளத்தை எவ்வித இடர்ப்பாடும் இன்றி அடைய அமையும் இராசபாட்டை (Royal Road to the Unconscious) எனக்குறிப்பிடுகிறார்.

உளநோயாளி தான் முன்பு விரும்பியவற்றையும் ஆனால் நனவுநிலையில் அவ்விருப்பங்களைப் பெற முடியாமையால் அடைந்த ஏமாற்றங்களையும், துன்பங்களையும், வெறுப்புகளையும், அவன் நனவிலி உள்ளத்திற்குத் தள்ளி ஒடுக்கி அல்லது நசுக்கி விடுகிறான். அவன் விழிப்பு நிலையில் இருக்கும்போது ஒடுக்கப்பட்ட விருப்பு, வெறுப்புகள் உளப்பிணி அறிகுறிகளாக (Symptoms of Mental Illness) நனவு உள்ளத்திற்கு வந்து மனிதனைப் பற்றிக் கொள்கின்றன. உளப்பகுப்பு மருத்துவர் கவனமாகவும் சீராகவும் பகுத்துத் தொகுத்து உளநோயாளி கண்ட கனவுகளுக்கு விளக்கங்கள் கொடுப்பார். இவ்விளக்கங்களினால் நோயாளி உள்ளத் தெளிவு அடைவான்.

கனவுகள் யாவும் வெளிப்படையான உட்பொருளையும் (Manifest Content) உள்ளார்ந்த உட்பொருளையும் (Latent Content) கொண்டவை. வெளிப்படையான உட்பொருள் என்பது விழித்தவுடன் கனவில் தோன்றிய காட்சியை அப்படியே சொல்வதைக் குறிக்கின்றது. ஆனால், பிராய்டு வெளிப்படையான உட்பொருள் கனவின் உண்மைநிலையை உரைக்கவில்லை என்று காட்டியுள்ளார். கனவுகளுக்கு ஆழ்ந்த மறைபொருள் உள்ளது; அதுதான் உள்ளார்ந்த உட்பொருள் என்று அவர் கருதுகிறார். இந்த உள்ளார்ந்த உட்பொருளைக் கண்டுபிடிக்கின்ற வகையில்தான் கனவு விளக்கம் அமையவேண்டும் என்று அவர் கூறுகிறார்.

ஒருவர் அலுவலகத்தில் சேர்ந்த சில நாள்களுக்குள், அவருடைய மேலதிகாரி அவரை மிகவும் மோசமாக நடத்தினார். அலுவலகத்தில் தம்மைப் பிறர் முன்னிலையில் அவமதித்ததை நினைத்து அவர் உள்ளம் புழுங்கினார். இதனால் அவருக்குக் கோபம், உதவியின்மை, அவமானம் போன்ற தீவிர உணர்ச்சிகள் உள்ளத்திற்கு வந்தன. அலுவலகத்திலேயே மேலதிகாரியைத் திருப்பி எதிர்க்க விரும்பினார். ஆனால் அவரால் அந்நிலையில் ஒன்றும் செய்ய முடியாததால் அவரது உள்ளத்தில் தீவிரப் போராட்டம் நிகழ்ந்தது. அவரால் ஒன்றும் செய்ய முடியாததால் இந்நிகழ்ச்சி ஒடுக்கப்பட்டு நனவிலி உள்ளத்தை அடைந்தது. சில ஆண்டுகளுக்குப் பின்பு, அவர் ஓர் எலி பூனையுடன் சண்டை போடுவதாகவும், முடிவில் எலி பூனையை வென்று அதைக் கொன்று விடுவதாகவும் ஒரு கனவு கண்டார். ஓர் எலி பூனையைக் கொல்வது என்பது வெளித்தோற்றத்திற்கு முட்டாள்தனமாகத் தோன்றுகிறது. இந்த நிகழ்ச்சியில் எலி பூனையுடன் சண்டையிட்டு வெற்றி பெறுவது வெளிப்படையான உட்பொருளாகும். மூத்தவராகவும் அதிகாரம் மேலோங்கியவராகவும் இருந்த அவரது மேலதிகாரியைப் பழிவாங்க வேண்டும் என்ற ஆசைதான் உள்ளார்ந்த உட்பொருளாகும். கனவில் தோன்றிய எலி அவரையும் பூனை மேலதிகாரியையும் குறிக்கின்றன.

கனவு பகுப்பாய்வு முறை எந்த அளவிற்குப் பயன் தரத்தக்க விளைவைத் தரும் என்பது, உளப்பகுப்பு மருத்துவரிடம் உளநோயாளி தான் கண்ட கனவுகள்

பலவற்றைக் குறிப்பிட்டு, மருத்துவரின் விளக்கத்தைக் கேட்டுத் தெளிவுறுதலைப் பொறுத்ததாகும். கனவுகளில் காணப்பெறும்பொது மூலக்கூறுகளைக் (**Common Elements**) கொண்டு, அவை எவற்றைக் குறிக்கின்றன என்று தெளிவாக உளமருத்துவர் அறிய, உளநோயாளி தான்கண்ட கனவுகளை ஒளிவு மறைவின்றித் தெரிவித்தல் வேண்டும்.

எதிர்ப்புநிலைப் பகுப்பாய்வு: தடையில் இயைபு முறையையோ கனவுப் பகுப்பாய்வு முறையையோ உளப்பகுப்பு மருத்துவர் பயன்படுத்தும்போது, உளநோயாளிக்குத் தடைகள் ஏற்படலாம். அதாவது, உள நோயாளி தன்னுடைய ஆசைகளை அல்லது எண்ணங்களை அல்லது அனுபவங்களை அச்சமயங்களில் சரிவர வெளிக்கொணர முடியாமல் எதிர்த்து நிற்கலாம். எடுத்துக்காட்டாக, உளநோயாளி தன்னுடைய வாழ்க்கையில் ஒரு முக்கியமான பகுதியைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கும்போது, திடீரெனப் பேச்சை மாற்றுதல் அல்லது தான் பேசுவது அவ்வளவு முக்கியமானது அன்று என்று சொல்வது அல்லது கலந்துரையாடுவதற்கு ஏதும் அதில் இல்லை என்று சொல்வது போன்றவை எதிர்ப்பு நிலையின் அறிகுறிகளாகும். எதிர்ப்பு நிலையின் காரணமாகச் சில சமயங்களில் உளநோயாளிகள் உளப்பகுப்புச் சந்திப்புகளுக்குக் (**Psychoanalytical Sessions**) கால தாமதமாக வருவதும் அல்லது நினைவின்மையால் வாராமல் இருப்பதும் உண்டு. இத்தகைய எதிர்ப்பு நிலைக்கு முக்கிய காரணம், நனவிலி உள்ளத்தில் நசுக்கப்பட்ட துயர, அச்சமிக்க அனுபவங்கள் நனவு உள்ளத்திற்கு வரத் தயங்குவதே ஆகும். இவ்வாறு உளநோயாளியிடம் உளத்தடைகள் காணப்பட்டால் உளப்பகுப்பு மருத்துவர் அத்தடைகளை உடைத்து எறிய வேண்டும். பின்னர், அவ் உளத் தடைகளுக்குக் காரணமாக இருந்த அடிப்படை உள இடர்ப்பாடுகளையும் உளப்போராட்டங்களையும் கண்டறிந்து, அவற்றிற்குத் தகுந்த விளக்கங்களை உளநோயாளிக்கு அளிக்க வேண்டும். அவ்விளக்கங்கள் நடைமுறைக்கு ஏற்றனவாக இருக்கவேண்டும்.

உணர்வு மாற்றங்களின் பகுப்பாய்வு: உளநோயாளியும் மருத்துவரும் உளப்பகுப்புச் சந்திப்புகளில் ஈடுபடும்போது, அவ்விருவர்களுக்கிடையே நிலவும் உறவு உணர்ச்சி சிக்கலுடையதாக அமைய நேரிடலாம். அச்சமயங்களில் நோயாளி தனது உளக் கோளாறுக்கு மூல காரணமாக இருக்கிற மனிதர்களிடம் காண்பிக்கும் பலவிதமான உணர்ச்சிகளை (வெறுப்பு, சினம், வருத்தம்போன்றவை) உளப்பகுப்பு மருத்துவர் மீது மாற்றலாம். அதாவது, உளநோயாளிக்குத் தன் தந்தை மீது வருத்தம் அல்லது கோபம் இருந்தால் அவ்வுணர்ச்சியை உளப்பகுப்பு மருத்துவர் மேல் காண்பிப்பான். இதை மருத்துவர் கண்டு கொண்டு, உளநோயாளிக்கு ஒரு நல்ல தந்தையாருடன் பழகிய உணர்ச்சியை அமைத்துக் கொடுக்க வேண்டும். அதனால் நோயாளிக்குத் தன் தந்தைமீது உள்ள வெறுப்புணர்ச்சியையும் பகையுணர்ச்சியையும் அடக்கி ஆள முடியும்.

இத்தகைய உணர்ச்சி மாற்றங்களின்போது உளநோயாளிக்கும் உளப்பகுப்பு மருத்துவருக்கும் இடையே உள்ள உறவு பெரும்பாலும் சிக்கல் நிறைந்து காணப்படுவதால், உளநோயாளியின் மனப் போக்கையும் (**Attitude**) உள்ளத்தையும் மிக எளிதாக உளப்பகுப்பு மருத்துவரால் திசை திருப்ப முடியாது. இவ்விடர்ப்பாடு உளநோயாளிகள் தம்முள் முரணான உணர்ச்சிகளைப் பெற்றிருப்பதால் உண்டாகும். உளப் பகுப்பு மருத்துவர் அதிகாரத் தோரணையில் தம்மை மாற்றுகிறார் என அவர் மீது உளநோயாளிகள் பகையுணர்வு கொண்டு, அவரை நம்பாமல் இருப்பார்கள். அதே சமயம் அவரால்தான் தமக்கு நல்வாழ்வும் உள அமைதியும் கிடைக்கும் என நினைத்து, அவரை உளநோயாளிகள் அன்புடன் ஏற்றுக் கொள்ளவும் விழைவார்கள். இங்ஙனம் உள நோயாளிகளிடம் முரணான உணர்ச்சிகள் காணப்படுமேயானால், உளப்பகுப்பு மருத்துவரும் சில சமயங்களில் நோயாளிகளின்மீது பலவித உணர்ச்சிகளுக்குட்பட்டுச் செயற்படுவார். இதை எதிர் உணர்ச்சி மாற்றம் (**Counter Transference**) எனக் கூறுவர். இத்தகைய எதிர் உணர்ச்சி மாற்றத்தைத் தவிர்க்க, உளப்பகுப்பு மருத்துவர் ஆசைகள், குறைபாடுகள், தம்முள் நடக்கும் உளப்போராட்டங்கள் முதலியவற்றை நன்குணர்ந்து இருத்தல் வேண்டும். எனவே, அவர் முதலில் தம்மைச் செவ்வனே உளப்பகுப்புச் செய்து கொண்டிருத்தல் வேண்டும்.

பிராய்டு பயன்படுத்திய பகுப்பு முறையைச் சுருங்கக் கூறின், தொடக்க நிலைகளில் உளப்பகுப்பு மருத்துவம் உளநோயாளியின் நனவிலி உள்ளத்தில் நசுக்கப்பட்டிருக்கும் வெறுப்பும் துயரமும் மிக்க பழைய அனுபவங்களைக் களைந்து, உளநோயாளியின் உள்ளத்தைத் தூய்மைப்படுத்த வேண்டும். இதை உளக்கழிவு (**Catharsis**) என்று கூறுவார்கள். பின்னர், நனவிலி உள்ளத்தில் புதைந்திருக்கும் ஆசைகளை உளநோயாளி தன்னுடைய ஆளுமையின் நனவுப்பகுதிக்கு எடுத்து வர உதவவேண்டும். இதன் மூலம் வளரும் உள்நோக்குத் திறனைக் கொண்டு, உளப்பகுப்பு மருத்துவம் இனித் தேவை இல்லை

என விட்டு விடாமல் மேலே தொடர வேண்டும். இவ்வாறு உளநோயாளிக்குத் தொடர்ந்து பயிற்சி அளித்தால், வயதிற்கேற்ற முதிர்ச்சியுற்ற உணர்வு நிலையை நாளடைவில் அவன் பெறவான். இப்பயிற்சியினால் தன்னுடைய அன்றாட வாழ்வில் ஏற்படும் இடர்களைத் தானாகவே தீர்த்துக் கொள்ளும் அவிவிற்கு அவனது ஆளுமை வலிமை அடையும்.

பின்வந்தோரின் முறைகள்: சிக்மண்டு பிராய்டு பாலுணர்வுகளுக்கு அதிகச் சிறப்பிடம் கொடுத்ததை அவருக்குப் பின் வந்த உளப்பகுப்பு வல்லுநர்கள் ஒத்துக் கொள்ளவில்லை. எனினும், அவர்கள் பிராய்டின் கொள்கையையும் அவர் பின்பற்றிய மருத்துவ முறைகளையும் முழுமையாகப் புறக்கணிக்கவுமில்லை. ஒவ்வொருவரும் தத்தம் கருத்திற்கேற்வறாறு உளப்பகுப்பு மருத்துவமுறையைப் பின்பற்றவாயினர்.

ஆல்பிரடு ஆட்லர் (Alfred Adler) என்ற உளப்பகுப்பு வல்லுநர் மனிதன் தன்னிடம் உள்ள குறைபாடுகள் காரணமாகத் தாழ்வு உணர்வு (Inferiority Feeling) பெற்று, அதனால் பலவிதஉளக்கோளாறுக்கு ஆளாகிறான். அதை ஈடு செய்யத் தனக்கென்றே ஒரு நடையை வாழ்வில் (Style of Life) அமைத்துக் கொள்கிறான் என்று தம் உளப்பகுப்புக் கொள்கையில் குறிப்பிடுகிறார். இதற்குத் 'தனிஉளவியல்' (Individual Psychology) கொள்கை என்பது பெயர். இக்கொள்கையை ஒட்டி இவருடைய உளப்பகுப்பு மருத்துவ முறையும் அமைந்திருக்கிறது. இதற்குத் தனிஉளவியல் மருத்துவம் (Individual Psychology Therapy) எனப் பெயரிடப்பட்டுள்ளது. இம்மருத்துவத்தில் முதலில் உளநோயாளியின் வாழ்க்கைப் போக்கினைத் (Life style) தெரிந்து கொண்டு, பின்பு அவன் வாழ்வில் படும் அல்லல்களை அறியவேண்டும். தன் அல்லல்களைக் களைவதற்கு ஓரளவிற்குச் சமூக உணர்ச்சியையும் (Social Feeling), மற்றவர்களுடன் கலந்து ஒத்துழைக்கும் திறனையும் உளநோயாளி வளர்த்துக் கொள்ள வழி செய்ய வேண்டும்.

காரல் சுங்கு (Carl G. Jung) என்ற உளப்பகுப்பு வல்லுநர் பகுப்பு உள மருத்துவம் (Analytical Psychotherapy)என்ற முறையைப் பின்பற்றினார். இம்மருத்துவ முறையில் நான்கு நிலைகள் (Stages) உள்ளன. அவையாவன: 1) உளக்கழிவு (Catharsis) நிலை, 2) விளக்கநிலை (Elucidation), 3) பயிற்சி நிலை (Education), 4) புது உருவநிலை (Transformation). இவரும் பிராய்டைப்போலத் தடையில் இயைபு முறையையும், கனவுப் பகுப்பாய்வு முறையையும் தம் மருத்துவத்தில் பயன்படுத்தினார்.

ஆரி இசுடாக்கு சுல்லிவன் (Harry Stack Sullivan) என்ற உளப்பகுப்பாளர் மனிதர்களிடையே ஒருவருக்கொருவர் காட்டிக் கொள்ளவேண்டிய உறவின் இன்றியமையாமையைத் தம் மருத்துவ முறையில் குறிப்பிட்டிருக்கிறார். இம்மருத்துவம் இவருடைய ஆள் இடையுறவுக் கொள்கையின் (Interpersonal Theory) அடிப்படையில் அமைந்துள்ளது.

காரன் ஆர்னி அம்மையார்(Karen Horney) எரிக்கு புரோம்(Eric From), எரிக்கு எரிக்சன் (Eric Erickson), ஆட்டோ ராங்கு (Otto Rank) போன்ற பல உளப்பகுப்பு நிபுணர்கள் தத்தம். மருத்துவ முறையைச் செவ்வனே உளநோயாளிகளுக்குப் பயன்படுத்தி வந்திருக்கின்றனர். பிராய்டு உளப்பகுப்பு மருத்துவத்திற்கு நாட்டிய வலுவான அடிக்கல்லின்மீது, மற்ற உளப்பகுப்புக் சொள்கையினர் அவரவர் எண்ணத்திற்கு ஏற்பக் கட்டடங்கள் கட்டி, உளப்பகுப்பு மருத்துவத்திற்குச் சீரிய தொண்டு ஆற்றியுள்ளனர்.

வ.தே.சா

துணை நூல்கள்:

**Coleman, J. C.**, Abnormal Psychology and Modern life, D.B. Taraporevala Sons & Co. Pvt. Ltd, Bombay, 1976.

**Morgan, C.T. and King, R.A.**, Introduction to Psychology, Tata Mc-Graw Hill & Co., Bombay, 1971.

**Sahakian, W.S. (Ed.)**, Psychotherapy and Counselling, Rand Mc Nally, Chicago, 1976.

**உளப்படுத்தாத்தன்மைப் பன்மை:** பேசுவோன், கேட்போன் ஆகிய இருவரும் இருந்தால் தான் கருத்துப் பரிமாற்றம் முற்றுப்பெறும். கருத்துப் பரிமாற்றத்திற்குப் பேசுவோனும் கேட்போனும் தவிர, பேசப்படுவது என்னும் மூன்றாவது ஒன்றும் வேண்டும். இவை மூன்றும் முறையே தன்மை, முன்னிலை, படர்க்கை எனப்படும். இவற்றை மூவிடப் பெயர்கள் என்று இலக்கண ஆசிரியர்கள் கூறுவர்.

பொதுவாக, மொழிகளில் உள்ள மூவகை இடப்பெயர்களும் ஒருமை, பன்மை என்ற ஈரெண்களைக் கொண்டுள்ளன.

| எ-டு. | ஒருமை | பன்மை |
|---|---|---|
| தன்மை | நான் | நாங்கள், நாம் |
| முன்னிலை | நீ | நீங்கள் |
| படர்க்கை | தான் | தாம் |

தன்மைப் பன்மையில் உள்ள நாங்கள், நாம் என்பனவற்றில் நாங்கள் என்பது உளப்படுத்தாப் பன்மை; அதாவது இச்சொல் கேட்போனை (முன்னிலை யாரை) உளப்படுத்தவில்லை. நாம் என்பது உளப்படுத்தும் பன்மை; அதாவது, இச்சொல் கேட்போனை உளப்படுத்துகிறது. நாங்கள் அல்லது நாம் என்னும்போதே ஒருவருக்கு மேற்பட்டோர் பேசுகின்றனர் என்றாகிறது. இச்சொற்கள், இலக்கண முறையில் தன்மைப் பன்மை எனப்படுகின்றன.

தன்மை ஒருமையோடு படர்க்கையரை மட்டும் கொண்டமையும் இடப் பெயர் உளப்படுத்தாத் தன்மைப் பன்மை எனப்படும். அதாவது, முன்னிலையாக உள்ள கேட்போனை நீக்குவதால் உளப்படுத்தாத் தன்மைப் பன்மை ஆகிறது. நாங்கள் (நானும் இவனும் அல்லது நானும் இவர்களும்) என்பது தன்மை, படர்க்கை ஆகிய இரண்டையும் உள்ளடக்கிப் பன்மையாக அமைகிறது. இதில் முன்னிலை (நீ, நீங்கள்) அடங்குவதில்லை. அ.மா.ப.

**உளப்படுத்தும் தன்மைப் பன்மை**: கருத்துப் பரிமாற்றத்தின்போது, இடம் பெறும்பேசுவோன்-தன்மை, கேட்போன் - முன்னிலை, பேசப்படுவது-படர்க்கை எனப்படும். இம் மூன்றையும் மூவிடப் பெயர்கள்என்று இலக்கண ஆசிரியர்கள் கூறுவர்.

தமிழில் உள்ள தன்மைப் பன்மைப் பெயர்களுள் நாம் என்பது உளப்படுத்தும் தன்மைப் பன்மையாகவும், நாங்கள் என்பது உளப்படுத்தாத்தன்மைப் பன்மையாகவும் செயற்படுகின்றன. முன்னிலையாரையும் உள்ளடக்கி அமையும் தன்மைப் பன்மையே உளப்படுத்தும் தன்மைப் பன்மை எனப்படுகிறது. இவ்வகை இடப் பெயர் மொழியில் மிகவும் அருகியே காணப்படுகின்றது.

இராபர்ட்டு கால்டுவெல் (Robert Caldwell) என்னும் மொழியியல் அறிஞர் இக்கூறு திராவிட மொழிகளில் மட்டுமே உள்ளதாகக் கூறுகிறார். திராவிட மொழிகளுள் பெரும்பான்மையானவை உளப்படுத்தும் தன்மைப் பன்மையைக் கொண்டுள்ளன. ஆனால், கன்னடம், பிராகூயி, ஈழத்தமிழ், கோண்டி மொழியின் சில கிளை மொழிகள் ஆகியவற்றில் இவ்விடப் பெயர் காணப்படவில்லை. க.மு.

**உளப்போராட்டங்கள்**: ஒரே சமயத்தில் ஒன்றுக்கொன்று முரணான தேவைகள் (Needs), ஆசைகள் (Desires), உள்துடிப்புகள் (Impulses) ஆகியன ஒன்றோடொன்று மோதுவதால் உளப்போராட்டங்கள் (Mental Conflicts) உண்டாகின்றன. இவை ஒவ்வொரு மனிதனிடமும் அவனுக்கு உள்ளே நடைபெறும் போராட்டங்களாகும். ஆகையால் இவற்றை உள் போராட்டங்கள் என்றும் பொருள் கூறலாம்.

**உளப்போராட்ட வகைகள்**: உளப்போராட்டங்களைப் பொதுவாக, நான்கு வகைகளாகப் பிரிக்கலாம். அவையாவன:

1) ஈர்ப்பு - ஈர்ப்பு உளப்போராட்டங்கள் (Approach-Approach Conflicts),

2) தவிர்ப்பு-தவிர்ப்பு உளப்போராட்டங்கள் (Avoidance-Avoidance Conflicts),

3) ஈர்ப்பு - தவிர்ப்பு உளப்போராட்டங்கள் (Approach-Avoidance Conflicts),

4) இரட்டை ஈர்ப்பு-தவிர்ப்பு உளப்போராட்டங்கள் (Double Approach-Avoidance Conflicts).

ஈர்ப்பு-ஈர்ப்பு உளப்போராட்டங்கள்: இந்த வகை உளப் போராட்டத்தில் மனிதன் இரண்டு அல்லது இரண்டிற்கும் மேற்பட்ட வெவ்வேறு இலக்குகளினால் ஈர்க்கப்படுவான். இவன் இரண்டோ இரண்டிற்கு மேற்பட்டோ ஆசைகளை அல்லது விருப்பங்களை வைத்திருந்து அவற்றுள் ஒன்றை நிறைவேற்ற முயன்றால், மற்றவற்றை அவன் இழக்க நேரிடும். அதனால் எதை அணுகுவது, எதை விடுப்பது என்ற குழப்பம் ஏற்படும். பணவசதி அதிகம் இல்லாத, ஆனால் படிப்பில் மிகவும் ஆர்வம் மிக்க ஒரு பட்டதாரிக்கு, மேற்கொண்டு முதுநிலைப் பட்டப்படிப்புக்குச் செல்வதா, வேலைக்குச் சென்று பணம் சம்பாதிப்பதா என்ற நிலை ஏற்படுவது இயற்கை. அவனுக்கு இவை இரண்டும் தேவைப்படுவதால் இவை இரண்டும் அவனைத் தத்தம் பக்கம் இழுக்க நேரிடும். இதனால் அவனுக்கு உளப்போராட்டம் ஏற்படும். இதைக் கீழே வரையப்பட்டுள்ள படத்தில் காணலாம்.

மேற்படிப்பு வேலை (+) = விருப்பு
(+) ம (+)
ம = மனிதன்

கர்ட் லெவின் (Kurt Lewin) என்ற கள உளவியல் வல்லுநர் (Field Psychologist) படங்கள் மூலமாக வாழ்க்கை மண்டலத்தில் (Life Space) பலதரப்பட்ட (ஒன்றுக்கொன்று வேறுபட்ட) ஆசைகளின் காரணமாக, மனிதன் எவ்வாறு உளப்போராட்டங்களால் பாதிக்கப்படுகிறான் என்பதனைத் தெளிவாக விளக்குகிறார்.

(2) தவிர்ப்பு-தவிர்ப்பு உளப்போராட்டங்கள்: இப் போராட்ட நிலையில் இருக்கும் மனிதன் இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட வழிகளுள் ஏதேனும் ஒன்றை எதிர்கொண்டே ஆக வேண்டும். ஆனால், அவன் அனைத்து வழிகளையும் வெறுத்துத் தவிர்க்க நினைத்தாலும் ஒன்றை அவன் கட்டாயமாகத் தேர்ந் தெடுத்து ஆகவேண்டும். ஒருவனுக்குப் பல்சொத் தையாக இருப்பதால் அவன் பல் நோயினால் அவதிப் படுகிறான். அதற்கு ஒரே வழி பல் மருத்துவரிடம் சென்று பல்லைப் பிடுங்கி எடுத்து விடுவதாகும். ஆனால், அவனுக்குப் பல் மருத்துவரிடம் சென்று பல் பிடுங்கிக் கொள்வதற்கு அச்சமாக உள்ளது. ஆகவே, அந்தச் சிகிச்சையைத் தவிர்க்க வேண்டும் என்று நினைத்தால், பல் வலியினால் அல்லலுற நேரிடும். பல்மருத்துவரிடம் செல்வதும் பல்வலியினால் அல்லல்படுவதுமான இரண்டையும் அவன் தவிர்க்க முயன்றாலும், ஏதேனும் ஒன்றை அவன் கட்டாய மாக அனுபவித்தே ஆகவேண்டும். எனவே, தவிர்ப்பு-தவிர்ப்பு உளப்போராட்ட நிலை ஈர்ப்பு - ஈர்ப்பு உளப்போராட்ட நிலையை விட அதிகமாக உளத் தளர்ச்சியை உண்டு பண்ணும் என உளவியல் வல்லு னர்கள் கருதுகிறார்கள். மேற்கூறிய நிகழ்ச்சியைக் கீழ்வரும் படம் விளக்குகிறது.

| | | |
|---|---|---|
| சொத்தைப் பல்லினால் பல்வலி ( — ) | ம | பல் பிடுங்கிக் கொள்ள அச்சம் ( — ) |

( — ) = வெறுக்கத் தகுந்தது

( ம ) = மனிதன்

ஈர்ப்பு-தவிர்ப்பு உளப்போராட்டங்கள்: மனி தன் தான் ஒரு குறிக்கோளைக் கொண்டு அதை அடைவதால் தனக்கு நன்மை தீமை இரண்டும் விளையும் என்ற நிலையில் இருந்தால், அவனுள் ஈர்ப்பு-தவிர்ப்பு உளப்போராட்டம் நடக்கும். ஏனெ னில் ஒன்றைப் பெறவிரும்பினால் மற்றொன்றை அத னால் இழக்க நேரிடும். பெரியோர்களைப் பெருமள விற்கு மதிக்கும் ஒரு பெண், வாலிபன் ஒருவனைக் காதல் திருமணம் செய்ய விரும்புகிறாள். ஆனால், அத்திருமணத்தில் பெரியோர்களுக்கு உடன்பாடு இல்லை. அவளுக்கு அத்திருமணம் செய்து கொண் டால், தான் நினைத்த காதலனை மணந்து கொண் டோம் என்ற மகிழ்ச்சி ஏற்படும்; ஆனால், அத்திரு மணத்தினால் தான் மதிக்கும் பெரியோர்களின் மனக் கசப்பைப் பெறுதல் என்ற துன்பமும் ஏற்படு கிறது. இங்ஙனம் அப்பெண் ஒருபுறம் காதலனின் பக்கம் ஈர்க்கப்படுவதாலும், மறுபுறம் பெரியோர் களின் மனக்கசப்பைத் தவிர்க்க வேண்டுமென்பதா லும் ஈர்ப்பு-தவிர்ப்பு உளப்போராட்டத்திற்கு ஆளா கிறாள். இதைக் கீழ்க்காணும் படத்தில் காணலாம்.

| | | |
|---|---|---|
| தான் நினைத்த காதலனை மணப்பது (+) | ம | பெரியோர்களின் மனக்கசப்பைப் பெறுவது (—) |

இரட்டை ஈர்ப்பு-தவிர்ப்பு உளப்போராட்டங் கள்: ஒரு மனிதனுக்குத் தன் இலக்கை அடைய இரு வழிகள் உள்ளன எனக் கொண்டால், அவ்விரு வழி களில் எதைப் பின்பற்றினாலும், அவனுக்குச் சில விரும்பத்தக்கனவாகவும் சில வெறுக்கத்தக்கனவாகவும் அமையும். எந்த வழியை மேற்கொண்டாலும் விருப் பங்கள் அவனை ஒரு பக்கம் இழுக்கும். வெறுப்புகள் அவனை மறுபக்கம் தள்ளும். இரண்டு வழிகளும் இவ்வாறே இருப்பதால் எதைப் பின்பற்றுவது எதை ஒதுக்குவது என்ற உளப்போராட்டம் ஏற்படும்.

ஓர் இருபது வயது நங்கைக்கு அவளுடைய பெற் றோர்கள் திருமணம் செய்ய நினைக்கும்போது இரு வர் கிடைக்கின்றனர். அவர்களுள் ஒருவர் நன்கு படித்தவர், பெரிய பதவியில் இருப்பவர், பண வசதி நிரம்பப் பெற்றவர். ஆனால், அவருக்கு வயதுநாற் பதுக்குமேல்ஆகிறது. இன்னொருவர் அவ்வளவு படிக்க வில்லை, பண வசதி அதிகம் பெறாதவர். ஆனால், இளமையும் அழகும் நிரம்பியவர். இச் சூழலில் பெற் றோர்களுக்கு ஏற்படுவது இரட்டை ஈர்ப்பு-தவிர்ப்புப் போராட்டம் ஆகும். பெற்றோர்களுக்குப் பணமும் படிப்பும் அதிகம் பெற்றவரை மாப்பிள்ளையாகப் பெறலாம் என்றால், அவருடைய வயது குறுக்கே நின்று இரண்டாவதாகக் குறிப்பிட்டுள்ளவரிடம் இழுத்துச் செல்கிறது. ஆனால், இரண்டாம் மனித ரிடம் பணமும் படிப்பும் அதிகமில்லாததால், அவை முதல் மனிதரிடம் தள்ளுகின்றன. இங்ஙனம் பெண் ணின் பெற்றோர்கள் இரு மணமகன்மாரிடமும் நிறை களும் குறைகளும் இருப்பதைக் கண்டு, எவரைத் தம் பெண்ணிற்கு மணம் முடிப்பது என்ற உளப் போராட் டத்திற்கு ஆளாகின்றனர்.

உளப்போராட்டங்களின் விளைவுகள்: உளப் போராட்டங்கள் ஒவ்வொரு மனிதனுக்கும் ஏற்படு வது உண்டு. ஆனால், சிலர் அவற்றை அழகாகத் திறம்படச் சமாளித்து, தம்மை அவற்றினால் உண்

டாகும் மனமுறிவிலிருந்து (Frustration) காப்பாற்றிக் கொள்கின்றனர். ஆனால், சிலர் அவ்வுளப் போராட்டங்களில் நீண்ட நேரம் செலவழித்து, இறுதியில் எவ்வித முடிவுக்கும் வாராமல் மனமுறிவுக்கு ஆளாகிறார்கள். பல சூழ்நிலைகளில் மனமுறிவு உண்மையான வலுத்தாக்குதல் நடத்தையை (Aggressive Behaviour) உண்டாக்காது. ஆனால், இவ்வுளப் போராட்டங்கள் மிகவும் இசைவில்லாத உணர்வு நிலையைக் கொண்டிருந்தாலும் ஓரளவு தீர்வினை அளிக்கின்ற முனைப்பினை உண்டாக்குகின்றன. இவ்வாறு தீர்வு பெறுகின்ற முயற்சியினைப் 'பொருந்தி அமைதல்' (Adjustment) என்று சொல்லலாம். தீவிரமான உளப்போராட்டங்களினால் மனிதன் ஓர் உளநோயாளியாகவும் ஆவதுண்டு. பல்வேறு விதமான உளவழி நரம்புப் பிணிகளும் (Psychoneurotic Reactions), உளவழி உடம்புப் பிணிகளும் (Psychosomatic Reactions) உளப்போராட்டங்களால் ஏற்படுகின்ற மனமுறிவுகளுக்கு அளிக்கப் பெறும் பொருந்தி அமையும் இயக்கமே அன்றி வேறல்ல.

உளப்போராட்டங்களை உண்டாக்கும் நிலைமைகளைச் சந்திப்பதற்குக் கடைப்பிடிக்கும் முறைகளைத் 'தப்பித்துக் கொள்ளும் இயங்கு முறைகள் (Escape Mechanisms) அல்லது 'தற்காப்பு இயங்கு முறைகள்' (Defence Mechanisms) என்று குறிப்பிடலாம்.

உளப் பகுப்பாய்வாளர்கள் (Psychoanalysts) குறிப்பாக, சிக்மண்டு பிராய்டு (Sigmund Freud) தளர்ந்த 'நான்' என்ற செருக்கு (Weak Ego) வலுவான உணர்வுந்து துடிப்புகளுக்கும் (Strong id impulses) கருணையற்ற கொடிய செருக்கின் (Merciless Super Ego) ஆணைகளுக்கும் இடையே சரிவரச் செயற்படாமையால் உளப்போராட்டங்கள் உண்டாகின்றன எனக் கூறுகிறார்கள். இத்தகைய உளப்போராட்டங்களிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ளச் செருக்குத் தற்காப்பு இயங்கு முறைகளைப் பயன்படுத்த வேண்டியதாகிறது. அவற்றுள் சில இயங்கு முறைகள் இங்குச் சுருக்கமாகக் குறிப்பிடப்படுகின்றன.

1) பின்னோக்கம் (Regression) என்பது பின் நோக்கிச் செல்வது என்று பொருள்படும். இதனால் வயதிற்கேற்றவாறு ஒருவரின் நடத்தை அமையாமல் முதிராத மெய்ப்பாடு (Emotional Immaturity) உடையவராகத் தோன்றுவார். பெரும்பாலும், அவ்வகைப் பட்ட மனிதர்கள் குழந்தைத்தனமாக நடந்து தம்முள் இருக்கும் உளப்போராட்டங்களைத் தீர்த்துக் கொள்ள முனைவர்.

2) காரணம் கற்பித்தல் (Rationalization) என்று வழங்கப் பெறுவது மக்கள் தங்களது நடத்தையினை விளக்குவதற்குச் சில தவறான காரணங்களைக் கொடுக்க முயலும் இயங்கு முறையாகும். சில சமயங்களில் தவறான, நாணத் தகுந்த செய்கை எனத் தெரிந்திருந்தும், அச் செய்கைகளைச் செய்ய வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகலாம். அச்செய்கையின் உண்மையான ஊக்கிகளைக் கூறுவதால் தாழ்வை வெளிப்படுத்திவிடக் கூடும் என்பதால், ஏற்றுக் கொள்ளத்தக்க காரணங்களைக் காட்டி உள அமைதி கொள்ளவியலும்.

3) புறத்தேற்றம் (Projection) என்ற இயங்கு முறையில் ஒருவரின் குறைகள், தவறுகள் முதலியவற்றை மற்றவர் காண்பதாகும். இதனால் தம்முள் இருக்கும் குறைபாடுகளை அப்புறப்படுத்தி, அவற்றால் ஏற்பட்ட உளப்போராட்டங்களிலிருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்வர்.

4) ஈடு செய்தல் (Compensation) என்ற இயங்கு முறை மாற்றுத் திருப்தியின் உதவியுடன் ஒரு மனமுறிவுச் சூழ்நிலையிலிருந்து தப்பித்துக் கொள்ளும் போது பயன்படுத்தப்படுகிறது. ஓர் ஆசை குலைக்கப் பெறும் பொழுது, வேறோர் ஆசையினைக் கொள்வதன் மூலம் தம்மைத் திருப்திப் படுத்திக் கொள்ள முயலமுடியும். மாற்றுத் திருப்தி ஓரளவு மகிழ்ச்சியை அளிக்கிறது. யூசின் சாண்டோ (Eugene Sandow) என்ற உடல் உரம் மிகுந்தவர் தமது தொடக்க காலத்தில் இருந்த உடல்நலமின்மையையும் வலிவின்மையையும் அதிகமாக ஈடு செய்ததனால், உடல் வலுவைப் பெற்றார் என்பது சொல்லப்படுகின்றது. எலன் கெல்லர் (Helen Keller) அம்மையார் தமக்கிருந்த உடற்குறைகளையும் பொருட்படுத்தாது வாழ்ந்து காட்டினார். நெப்போலியன் போன்றோர் மிகவும் தீவிரமான பிறழ்வுநிலை என்று கருதத்தக்க பேரவாக்களைக் (Unrealistic Aspirations) கொண்டிருந்ததன் காரணம், அவர்களுடைய குள்ளமான உருவம் அல்லது வேறு ஏதோ ஒரு குறையை ஈடு செய்ய முயன்றதன் விளைவே என்று உளவியல் வல்லுநர்கள் கருதுகின்றனர். இவ்வாறு இன்னும் பல தற்காப்பு இயங்குமுறைகள் உள்ளன. தற்காப்பு இயங்கு முறைகள் யாவும் உளப்போராட்டங்களிலிருந்து மீள அதிக அளவிற்குப் பயன்படுத்தப்பட்டால் அவையே பலவித உளநோய்களுக்குக் காரணமாகின்றன.

**உளப்போராட்ட நிலைகளைச் சமாளிக்கும் வழிகள்:** உளநலத்தைச் சிறந்த முறையில் பேணிக் காக்க, உளப்போராட்டங்களிலிருந்து குறுகிய காலத்தில் எளிதாக விடுபட வேண்டும். அதற்குத் தற்காப்பு

இயங்குமுறைகள் பெரிதும் உதவா. எனவே, வேறு முறைகளைக் கையாள வேண்டும். அத்தகைய சில வழிமுறைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. இவை இயல்பானதாகவும் (Realistic) செயல் வகையில் (Practical) பயன்படுத்தக் கூடியனவாகவும் இருப்ப தால், தற்காப்பு இயங்குமுறைகள் போன்று இவை பிறழ்வு நிலைக்கு அடிகோலா. இவற்றைச் செவ்வனே பின்பற்றினால், ஒருவரின் உளநலம் உளப்போராட் டங்களால் பாதிக்கப்பட மாட்டாது. 1) ஒழுங்காக இலக்குகளையும் மாற்று இலக்குகளையும் வரை யறுத்து அமைத்துக் கொள்ள வேண்டும். 2) அமைத் துக் கொண்ட இலக்குகளைப் பற்றியும் மாற்று இலக்குகளைப் பற்றியும் உள்ள முக்கியமான விவரங் களைத் திரட்டி வைத்துக் கொள்ள வேண்டும். 3) ஒவ்வோர் இலக்கின் நல்விளைவுகளையும் தீய விளைவுகளையும் பட்டியல் போட்டு வைத்துக் கொள்ள வேண்டும். 4) ஒரு தாளில் அவ்வாறு குறித்து வைத்த பிறகு முக்கியமில்லாத நல்ல, தீய விளைவுகளை அப்புறப்படுத்தி விடலாம். 5) வேண்டு மென்றால் தகுந்த ஆலோசனையாளரிடம் அல்லது உளவியல் வல்லுநரிடம் சென்று உளப்போராட்டச் சூழ்நிலை பற்றிக் கலந்துரையாடலாம். 6) ஒரு குறிப்பிட்ட கால வரையறைக்குள் ஓர் ஏற்றத் தீர் வினை அடைய முயல வேண்டும். 7) பின்னர், எடுத்த முடிவு அந்தக் குறிப்பிட்ட சூழ்நிலைக்கும், அதுபற்றிக் கிடைத்த தகவலுக்கும் மிகவும் பொருத்தமானது என்று ஒப்புக் கொள்ள வேண்டும்.

உளப்போராட்டங்களினால் மிகவும் பாதிக்கப் படாமல் வளமான உளநலத்துடன் வாழ்வதற்கு அடிப்படையாக அமைவது வலிமையான ஆளுமை யைப் பெறுவதாகும். 'சித்திரமும் கைப்பழக்கம் செந் தமிழும் நாப் பழக்கம்' என்ற செய்யுளில் ஔவையார் மனப்பழக்கத்தைப் பற்றிக் கூறுகிறார். அவ்வாறே, எல்லாம் பழக்கத்தின் பயனே என்பர் நடத்தைக் கொள்கையினர் (Behaviourists). எனவே, நல்ல பழக்க வழக்கங்கள் மூலம் உறுதியான ஆளுமையை வளர்த்துக் கொள்ளுதல் வேண்டும். வ.தே.சா.

**உளம்சார் உயிரியல்** உளவியலின் ஒரு கிளைத் துறையாக அண்மைக் காலத்தில் உருவாக்கப் பட்ட அறிவியலாகும். மனிதர்களின் நடத்தையை ஆராய்கின்ற பல்வேறு உளவியல் துறைகளில் உளம் சார் உயிரியல் குறிப்பிடத்தக்கதாகும்.

உளம்சார் உயிரியல் (Psychobiology) என்ற சொல்லை முதன்முதலில் உருவாக்கியவர் அடால்பு மெயர்(Adolf Meyer கி.பி. 1866-1950)என்பவராவார். இது பற்றி அவர் கொண்டிருந்த கருத்து, ஒரு மனித னுடைய வாழ்க்கை வரலாற்றை (Biography) அவனுடைய மனச் செயல்முறைகளோடு ஒட்டி ஆராயும் போது, அது ஓர் உடற் கூற்றியலைப் போன்றும் உளம்சார் உயிரியல் போன்றும் இருக்கி றது என்பதாகும். இக்கருத்து இரண்டு புனை கொள்கைகளைத் தோற்றுவிக்கிறது. 1) உயிரோடி ருக்கிற ஒரு மனிதனை அவன் ஒரு முழு மனிதனா கச் செயலில் ஈடுபடும்போதுதான் அறிய முடியும். 2) இந்த முழு மனிதன் படி நிலையாக அமைக்கப் பட்ட செயல்முறைகளின் ஒருமைப்பாட்டின் சார் பாளனாக அல்லது மாதிரியாக இருக்கிறான்.

உளம்சார் உயிரியல் ஓர் ஆளுமை அமைப்புக் கோட்பாட்டையும் கொண்டிருக்கிறது. உளம்சார் உயிரியலின் அடிப்படையான கருத்து, உளம் உயிர் களின் ஒருமைப்பாடாகும். இக்கருத்துப்படி, முழு மனிதன் பிரிக்க முடியாத ஓர் அலகாக இருக்கி றான். இதை அறிவதற்கான அணுகும் முறைகள் பல இருக்கின்றன. அவற்றுள் இயக்க இரசாயன முறை, மறிவினை முறை, உடற்கூற்றியல் முறை ஆகியன சிலவாம். கூறப்பட்ட இந்த முறைகளில் முழு மனிதனின் நடவடிக்கைகள் ஆராயப்படுகின்றன. இவ்வாறு ஆராயப்பட்ட நடவடிக்கை உள இயக்கம் (Psychodynamics) என்று குறிப்பிடப்படுகிறது. இது ஒரு மனிதனின் வாழ்க்கை வரலாற்றின் பட்டிய லாக இருக்கிறது; கடந்த கால, நிகழ்கால, வருங் கால நிகழ்ச்சிகளின் இணைப்பாகவும் அமைகிறது. உள இயக்கச் செயல்முறை மனிதர்களுடைய நட வடிக்கைகளை மட்டுமே குறிப்பிடுகிறது. இது ஓர் உயர்மட்ட நடவடிக்கையாகக் கருதப்பட்டு, ஒருமைப் பாடு (Integration) இதன் வழியாக நடைபெறுகிறது என்று கூறுகின்றனர். ஒருமைப்பாடு கீழ்மட்டத்திலும் ஒருவகையில் நடைபெறலாம். உயர்ந்த மட்டத்தில் நடைபெறுகிற ஒருமைப்பாட்டை, கீழ்மட்டத்தில் நடைபெறுகிற ஒருமைப்பாடுகளின் கூட்டுத் தொகுப்பு என்று கருதிவிடக்கூடாது. கீழ்மட்டத்தில் உள-உடலுறுப்புகளின் ஒருமைப்பாடுகளும் நடை பெறுகின்றன. இவற்றின் தொகுப்பு மேல்மட்டத்தில் நடைபெறுகிற மனச்செயல் முறையாகமாட்டா. ஒவ்வொரு கட்டத்திலும் அல்லது ஒருமைப்பாட்டி லும் மாற்றங்கள் ஏற்படுகின்றன.

உள-உயிரியல் செயல்முறைகள் என்றும் எல்லா விடத்திலும் ஒன்று போலவே இருப்பதில்லை. மற்ற மாற்றங்களினால் நடவடிக்கைகள் மாற்றியமைக்கப் படுகின்றன. ஒரு மனிதனின் மொத்த நடவடிக்கை ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் ஒருவிதமாகவும் மற்றொரு காலகட்டத்தில் வேறொரு விதமாகவும் இருக்கமுடியும். இது அவனுடைய ஆளுமையின்

(Personality) அமைப்பை ஒரு குறுக்கு வெட்டில் பார்த்தால் புலப்படலாம். ஆளுமையை நீண்டகால ஆராய்ச்சியாக எடுத்துக்கொண்டு ஆராயும் போது, ஒவ்வொரு கால கட்டத்திலும் ஏற்பட்ட மாற்றங்களைக் காணலாம்.

உளத்தின் விழிப்புநிலை (Consciousness) என்பது ஒரு பழைய சிக்கலாகக் கருதப்படுகிறது. அது பல படித்தரங்களைக் கொண்ட ஒரு முழுமையின் உயர் ஒருமைப்பாட்டின் உளச் செயல் வகை என்று கூறலாம். மனிதன் அவனுடைய சமூகத்தில் முழுமையின் ஒரு பகுதியாக இருக்கின்றான். எனவே, தனி மனிதனுடைய நடவடிக்கையைச் சமூகத்தின் நடவடிக்கையோடு இணைத்தே காண வேண்டியிருக்கிறது. மேலும், மனித உயிரியலும் சமூக அமைப்பும் குழந்தை-குடும்பம் ஆகியவற்றின் இணைப்பில் உள்ளடங்கியுள்ள தொடர்புறவைப் போன்றவை. அவை ஒருவித இயக்கத்தை ஏற்படுத்துகின்றன. எதையும் முழுமையாக அதனுடைய இயற்கைச் சூழ்நிலையில் அறிய வேண்டும் என்பதுதான் உளம்சார் உயிரியலின் நோக்கம். உளஇயக்கம், ஒருமைப்பாடு ஆகியவற்றின் செயல்முறைகளைக் கொண்டு நோக்கத்தை இது விளக்குகிறது.

உளம்சார் உயிரியல் என்ற சொல் எளிமையானது என்று கருதி, இதனுடைய கருப்பொருளைப் புறக்கணித்து விட்டு விளக்கம் தரமுடியாது. இதன் கருப்பொருள் முழுமையாக நோக்கல் ஆகும். முழுமையாக நோக்கலைச் சார்ந்த கருத்துச் சொற்களை (Holistic Concepts) விளக்குவதுமிகவும் கடினமாகும். அதனால், எந்த விளக்கமும் மனநிறைவை அளிப்பதில்லை. எந்த அறிவுத் துறையிலும் வெற்றிடங்கள் காணப்படுகின்றன. அவற்றை நிறைவு செய்வதென்பது மிகச் சிக்கலான முயற்சியாகும். ஆகையினால்தான், பல அறிவியல் பணியாளர்கள் தங்களை முழுமைக் கொள்கையாளர் (Holists) என்று கூறிக் கொள்ளுகின்றனர். ஆனால், சிந்திப்பதிலும் செயற்படுவதிலும் வேறுபாடு காட்டுகின்றனர்.

உளநோய்க்குச் சிகிச்சையளிப்பதில் உடற்கூற்று சார் சிகிச்சைமுறையும் உளச்சிகிச்சை முறையும் இணைந்து செயற்படுகின்றன. இதில் உளம்சார் உயிரியல் எந்தவிதமான தடைவிடைகளையும் எழுப்பவில்லை. ஆனால், சிகிச்சை நடவடிக்கைகளில் எந்த முறை மிகவும் நுட்பமாக எல்லாவற்றையும் நிருணயம் செய்கிறது என்பதை உளம்சார் உயிரியல் காண விழைகிறது. ஒவ்வொரு சிகிச்சை முறையும் ஓர் இலக்கைக் கொண்டிருக்கிறது. ஆனால், நோயாளி சிகிச்சை முறையை ஏற்பதற்கான விருப்பத்தையும் தெரிவிக்க வேண்டும். எது சிறந்த முறை என்று உணர்ந்து பார்த்து ஏற்கிற நோயாளிகள் சிகிச்சை முறையில் மிகவும் ஒத்துச் செல்லுகின்றனர். சில வாழ்க்கைச் சூழ்நிலைகளில் சிகிச்சை முறைகள் குறைந்த அளவே நோயைத் தீர்க்கின்றன என்று சில நோயாளிகள் சிகிச்சை முறைகளைப் புறக்கணிக்கின்றனர்.

மக்களுடைய நடத்தை எவ்வாறிருக்கிறது என்று தீர்மானித்துச் சிகிச்சையளிப்பது ஒருமுறைதான். உளம்சார் உயிரியல் இந்த முறையைச் சிறந்ததெனக் கருதுகிறது. மனிதர்களுடைய நடத்தையைப் புறநிலையாகத்தான் கண்டறிய முடியும்; நடத்தை புறநிலையாக அறியப்படக்கூடிய ஒரு செய்திப் பொருள்; நோயாளிகளின் நடத்தையையும் புறநிலையாகக் கண்டறிந்து சிகிச்சை அளிக்க வேண்டும் என்பதே இவ்வுயிரியல் பற்றிய மெயரின் கருத்தாகும். உளம்சார் உயிரியல் இதில் மிகுந்த நம்பிக்கை வைத்திருக்கிறது.

நோயாளிகளின் நடத்தையை நாள் முழுவதும் கூர்ந்து நோக்கிக் கண்ட உண்மைகளை அட்டவணைகளில் மருத்துவ உதவியாளர்கள் ஒரேநாளில் பல தடவைகள் குறிக்கின்றனர். இந்தக் குறிப்புகளில் மாற்றங்கள் காணப்பட்டால், அதற்கு ஏற்றாற்போல் சிகிச்சை முறைகளிலும் மாற்றங்கள் செய்கின்றனர். ஒரு குறிப்பிட்ட நேரத்தில் நோயாளியின் நடத்தை எவ்வாறிருக்கிறது? ஏதேனும் மாற்றம் ஏற்பட்டால், அந்த மாற்றம் எவ்வளவு நேரம் தொடர்ந்து நிகழுகிறது? என்பன போன்ற குறிப்புகள் சிகிச்சை முறைகளில் சிறப்பாகக் கருதப்படுகின்றன. எனவே, புறநிலையாகக் காணுகிற நடத்தையில் ஏற்படுகிற மாற்றங்கள் சரியான சிகிச்சை முறையைக் கண்டறியப் பயன்படுகின்றன.

உளம்சார் உயிரியல் என்ற சொல் இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் மிகவும் அதிகமாகப் பேசப்பட்டது. சிறிது காலத்திற்குப் பின்னர், அது வழக்கிழக்கத் தொடங்கியது. ஆனால், மீண்டும் அது புத்துணர்ச்சி பெற்று வழக்கில் இருந்து வருகிறது. அமெரிக்கர்களே இதற்கு மிகவும் சிறப்பிடம் கொடுத்துப் பல துறைகளில் சிக்கல்களை அணுகும் முறைகளுள் ஒன்றாக இதனைக் கொண்டிருக்கின்றனர்.

பல்வேறு உயிரினங்களின் நடத்தையில் காணப்பட்ட மாறுபாடுகள் உயிரியல் வல்லுநர்களின் கவனத்தைப் பெரிதும் கவர்ந்து வந்தன. எனவே, அவர்களின் கவனம் இச்சொல்லின்மீது விழுந்தது. அவர்கள்

இச்சொல்லைப் பெரிதும் பயன்படுத்தி உயிரினங்களின் நடத்தையை ஆராயத் தொடங்கினர். சொல்லாக்க விளக்கப்படி, உளம்சார் உயிரியல் என்ற சொல் உள வியல் சார்ந்த பொருள்களிலும், உயிரியல் சார்ந்த பொருள்களிலும், இவை இரண்டிற்குமுள்ள எல்லாத் தொடர்புகளிலும் மிகச் சிறப்பாகப் பயன்படுத்தப் படுகிறது. உளம்சார் உயிரியல் உடற்கூற்று உளவிய லோடும் தொடர்பு கொண்டிருக்கிறது. பெரும் பாலான அறிவியல்களின் புழக்கத்தில் உயிரினங்களின் நடத்தையில் காணப்படும் வேறுபாட்டை ஆராய் வதற்குத் தான் இச்சொல் பயன்படுத்தப்படுகின்றது. எனவே, இந்த உயிரியல் இயற்கையான சூழ்நிலையில் உயிரினங்களின் நடத்தையை ஆராயும் ஓர் அறிவியல் என்று முடிவாகக் கூறலாம்.

உடலின் உள் செயல்முறைகளை விட, உயிரினங் களின் உயிரியல் சார்ந்தனவும் பிறப்பு மரபு சார்ந் தனவுமான குணப்பண்புகளை இத்துறை ஆராய் கிறது. ஐரோப்பிய விலங்கியல் வல்லுநர்கள் மனிதப் பண்பாக்கவியல்(Ethology)என்று குறிப்பிடுவது உளம் சார் உயிரியலையேயாகும். அமெரிக்கர்கள் ஒப்புமை உளவியல் (Comparative Psychology) என்னும் துறையை இந்த உயிரியலுக்கு மாற்றுத் துறையாக உருவாக்கி இருக்கிறார்கள். ஆனால், அமெரிக்க உள நோய் மருத்துவ இயலார் உளநோய்களைக் குணப் படுத்த உளம்சார் உயிரியல் முறையை ஓர் அணுகும் முறையாகப் பயன்படுத்துகின்றனர். உடற்கூற்று உள வியல் மிகவும் விரிவான எல்லையைக் கொண்டிருப்ப தால், இந்த உயிரியல் அதனுள் அடங்கிய ஒரு துறை யாகக் கருதப்படுகிறது. எப்படியிருப்பினும், உளம் சார் உயிரியலின் நோக்கம் இயற்கைச் சூழ்நிலையில் மனிதர்களின் நடத்தையை முழுமைப் பொருளாகக் கொண்டு ஆராய வேண்டும் என்பதுதான்.

எம்.இரா.

துணை நூல்கள்:

**Hamburg, D. A.** and Others, American Handbook of Psychiatry, Vol 6, NewYork, 1975.

**Hollender, M.H.,** The Psychology of Medical Practice, W.S. Saunders Co., Philadelphia, 1958.

**Morgan, C.T.**, Physiological Psychology, 3rd Ed., Mcgraw-Hill, New York, 1965.

**Meyer, A.**, Collected Papers of Adolf Meyer, 4 Volumes, Johns Hopkins Press, Baltimore, 1950-52.

**உளமுதுமையியல்:** முதுமைக் காலச் சிக்கல்களை ஆய்வது முதுமையியல் எனப்படும். இது முதுமைப் பருவத்து உயிர்மை, மருத்து வம், சமூகம், பொருளாதாரம் போன்ற பல்வேறு கூறுகளை அறிவியல் நோக்கோடு ஆராய்கிறது. முதுமை மகளிர், ஆடவர் இருபாலரின் மருத்துவப் பராமரிப்பு மற்றும் நோய்கள், காயங்கள் போன்ற வற்றின் மருத்துவமும் தடுப்பும் பற்றிய ஆய்வுமுறை முதுமைநோயியல் எனப்படும். முதுமைக்காலச் சிக்கல் களுக்கு உளவியல் அடிப்படை உண்டு. இத்தகைய ஆய்வு முதன்முதலாக கி.பி. 1884-ஆம் ஆண்டில்தான் வெளிவந்தது. வாழ்வின் இந்த இறுதிப் பகுதியைப் பற்றி உளவியலார் அண்மைக்காலத்தில் மிகுதியும் ஆராயத்தலைப்பட்டுள்ளனர்.

**உள இயக்கச் செயல்:** சாதாரண இயக்கச் செயல், சிக்கல் இயக்கச் செயல் இரண்டும் வயது முதிரமுதிர குறையத் தொடங்குகின்றன. கீழே விழுந்து அடிபடுவதும், கருவிகளால் காயமடைவதும் முதுமை வயதினரிடையே மிகுதியும் நிகழ்கிற தென்பது உழவு மற்றும் தொழிற்சாலை விபத்துகள் பற்றிய தகவல்களிலிருந்து தெரியவருகிறது. சம நிலைபேணல் அல்லது கருவிகளால் விளையும் காயங்களைத் தவிர்ப்பது போன்றவை சிக்கல் இயக்கச் செயல்களின் முனைப்பிற்கு உட்பட்டன வாகும்.

**எதிர்வினை-காலம்:** வயது அதிகரிக்க அதிகரிக்க சாதாரண இயக்கச் செயல் மற்றும் சிக்கல் இயக்கச் செயல் இரண்டிற்குமான எதிர்வினைக் காலமும் (Reaction Time) பெருகுகிறது. அதாவது, ஒரு தூண்டல் செயல் துலங்குவதற்கு முதியோருக்கு அதிகக் காலம் ஆகிறது. ஒரு தூண்டலுக்கு எந்தத் துலங்கல் பொருத்தமானதாகும் என்று முடிவு செய் வது அவர்களுக்குக் கடினமாக உள்ளது. இளமுதுமை யினருடன் ஒப்பிடும்போது, முதியோர் 10 முதல் 20 விழுக்காடு வரை எதிர்வினைக்காலத்தில் ஆள்வினைத் தன்மைக் குன்றியே காணப்படுகின்றனர். ஆனால், இந்த வேற்றுமையை அன்றாட வாழ்க்கையில் அவ் வளவு இன்றியமையாததாகக் கருதுவதற்கில்லை.

எதிர்வினைக் காலத்தில் ஏற்படும் உணர்வுக் குறைப்பினை முதுமையினர் சமுதாய நிகழ்வுகளை மனத்திலேயே ஒத்திகை பார்த்துக் கொள்வதின் மூலம் குறைத்திட இயலும். சான்றாக, தீ விபத்து ஏற்படுவதாக மனத்தில் எண்ணிப்பார்த்து, அவ்வேளை யில் எவ்வாறெல்லாம் எதிர்வினையாற்ற வேண்டு மென மனத்தில் ஒத்திகை பார்த்துக் கொண்டால்,

உண்மையில் தீவிபத்து ஏற்படும்போது விரைந்தும் தவறுகள் இன்றியும் எதிர்வினையாற்றிட முதியோரால் முடியும்.

**எச்சரிக்கையுணர்வு:** முதியவர்கள் எப்போதும் எச்சரிக்கையுணர்வு மிக்கவர்களாக இருக்கின்றனர். தீங்கான செயல்களைச்செய்வதைத் தவிர்ப்பதையும், தவறாகச் செயற்படுவதைவிடச் செயற்படாமல் இருப்பதையுமே அவர்கள் விரும்புகின்றனர். இதற்கு இரண்டு காரணங்கள் சொல்லப்படுகின்றன. 1) அவர்கள் மாற்றங்களை விரும்பாத மனப்பான்மையினராகையால், கிடைக்கும் வாய்ப்பினை உடனே பயன்படுத்திக்கொள்ள விரும்புவதில்லை. 2) அவர்களின் எண்ணம் (Self Image) மிகவும் உறுதியாக இருக்கிறது. தங்கள் தன்மதிப்புக் குறைவதற்கான வாய்ப்புள்ள ஒரு தவற்றினைச் செய்ய அவர்கள் விழைவதில்லை. இந்த எச்சரிக்கையுணர்வு (Cautiousness) காரணமாகவே மென்மையான ஒலிகளைக் கேட்க முடிவதாகக் காட்டிக்கொள்வதில்லை. எனவேதான் விலையுயர்ந்த, சக்திவாய்ந்த காதுகேட்பான் கருவிகளை முதுமையில் அவர்கள் அணிந்து கொள்ளத் தலைப்படுகின்றனர்.

**நுண்ணறிவு:** பெரும்பாலோர்க்கு வயது அதிகரிக்க அதிகரிக்க நுண்ணறிவு (Intelligence)குறையத் தொடங்குகிறது. ஆனால், நுண்ணறிவின் சில கூறுகள் தொடர்பாக இத்தகைய விளைவு இருப்பதில்லை. சொற்களை நினைவுகூர்வதில் முதியோர் இளைஞர்களுக்கு ஈடாக இருக்கின்றனர். சொல்வன்மையும் நினைவில் சேர்த்த செய்திகளும் வயது முதிரமுதிரக் குறைகின்றன. இது 'சீரிய முதுமையடை கோலம் (Classic Aging Pattern) எனப்படும்.

**கற்றல்:** ஊக்கத்திறன் இன்மையால் முதுமையில் கற்றல்திறன் குறைவதாக ஓர் எண்ணம் வழக்கில் உண்டு. ஆனால், முதியவர்கள் மிகுந்த ஊக்கத்திறனுடையவர்களாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. கற்றல் முறைகளைக் கற்றறியக் கூடியவர்களாக அவர்கள் இருக்கிறார்கள். எதிர்ப்பான சூழ்நிலையைக் காட்டிலும் உதவிகரமான சூழ்நிலையில் முதியோரின் கற்றல்திறன் பெருகுகிறது. கற்றல் சூழ்நிலையில் ஏற்படும் குறுக்கீடுகள் இவர்களைப் பெரிதும் பாதிக்கின்றன.

**நினைவாற்றல்:** அண்மைக்கால நினைவு (Short term Memory), தொலைக்கால நினைவு (Long term Memory) இரண்டும் வயது கூடும்போது குறைகின்றன.

தொன்மை நிகழ்ச்சிகளை முதுமையினர் நன்கு நினைவு கூர்வதைக் கொண்டு, முதுமை தொலைக் கால நினைவினைக் குன்றச் செய்வதில்லை என்று ஆராய்ச்சியாளர்கள் நம்பினர். முதியோர்கள் பழம் நிகழ்ச்சிகளைத் தம் வாழ்நாள் முழுவதும் அடிக்கடி நினைவு கூர்ந்து, ஒத்திகை பார்த்துக்கொள்வது தான் இதற்குக் காரணம் என்பது கண்டறியப்பட்டது. எனினும், வயது கூடுவதினால் தொலைக்கால நினைவுகள் குன்றத் தொடங்குகின்றன என்பதை அண்மைக்கால ஆய்வுகள் அறுதியிட்டுக் காட்டுகின்றன. செய்திகளை நினைவில் சேர்த்து வைத்துக்கொள்வதில் முதியோர்கள் அவ்வளவு திறமையுடன் இல்லை. செய்திகளை நினைவுகூர்தலிலும் கண்டறிதலிலும் முதியோர்களுக்குப் பல இன்னல்கள் உள்ளன.

**ஆக்கத்திறன்:** முப்பது முதல் முப்பத்தொன்பது வயதிற்கிடைபட்ட பருவத்தில்தான் மிகச்சிறந்த, தரமிக்க ஆக்கத்திறன்(Creativity)படைப்புகள் நிகழ்வனவாக ஆராய்ச்சிகள் காட்டுகின்றன. மேலும், இந்த ஆக்கத்திறனின் தரம் ஆளுக்கு ஆள் வேறுபடுகிறது. இது வயது கூடுவதினால் குன்றுவதும் மெல்லப் படிப்படியாக நிகழ்கிறது. இருப்பினும் ஆக்கத்திறனின் தரமும் அளவும் முதுமை நெருங்குவதினால் குறைகின்றன என்ற பொதுக் கருத்தும் சரியானதே. முதுமையினால் ஆக்கத்திறன் குறைகிறதா இல்லையா என்பது பற்றிச் சரியான முடிவிற்கு வரமுடியாத நிலை இன்றும் இருந்து வருகிறது.

**ஆளுமை:** முதுமையில் ஆளுமை (Personality) மாற்றம் அடைகிறது. இளமைப் பருவத்து ஆளுமையினைக் காட்டிலும் மிகுதியாக ஒருவரது முதுமைப் பருவத்து ஆளுமை மாறுபடுகிறது. சான்றாக, முதுமைப்பருவத்தினர் தங்கள் அகவாழ்வுபற்றி அதிக அக்கறை உள்ளவர்களாக இருக்கின்றனர். பெரிதும் அகமுக நிலையினராகவும், சிக்கலான அல்லது சவாலான பணிகளில் அக்கறையற்றவராகவும், மிக்க தன்னடக்கமுள்ளவராகவும், தன்னிறைவுகளில் ஆர்வமுடையவர்களாகவும், மிக அரவணைப்பாளர்களாகவும் விளங்குகின்றனர்.

**வாழ்க்கை நிறைவும் ஒழுங்குணர்வும்:** நல்ல உடல்நலம் உள்ள முதியவர்கள் வாழ்க்கை நிறைவும் (Life Satisfaction) ஒழுங்குணர்வும் (Morale) மிகுந்து காணப்படுகின்றனர். தம்விருப்பமாக எப்பணியுமின்றி இருக்கும் முதுமையினரின் ஒழுங்குணர்வு எள்ளளவும் பாதிக்கப்படுவதில்லை. ஆனால், நலமின்மை, பணி ஒய்வு, இடம்விட்டு இடம் செல்ல முடியாமை, கைம்மை நிலை, மணமுறிவு ஆகிய காரணங்களால்

ஏற்படும் பணியற்ற நிலை ஒழுங்குணர்வினைத் தடை செய்கிறது. குடும்ப அரவணைப்பும் கட்டுப்பாடற்ற சூழலும் முதுமையினருக்கு வாழ்க்கை நிறைவையும் ஒழுங்குணர்வினையும் தருகின்றன. இறப்புப் பற்றிய அச்சம் வாழ்க்கை நிறைவினைக் குன்றச் செய்திடும் காரணியாக விளங்குகிறது.

உளநோய்: வயது அதிகரிக்க அதிகரிக்க உளக் கோளாறுகளும் அதிகரிக்கின்றன. எவ்வளவு குறைத்துக் கணக்கிட்டாலுங்கூட குறைந்தது 15 விழுக்காடு முதுமையினர் மனக்கோளாறுகளால் இன்னல்படுவது திறனாய்வின்வழித் தெரியவருகிறது. உளநோய் (Psycho Pathology) மருத்துவமனைகளில் உள்ள நோயாளிகளுள் 30 விழுக்காட்டினர் 65 வயதினைக் கடந்தவர்களாக இருக்கின்றனர்.

செயல்வழிக் கோளாறுகள்: சூழ்நிலையில் ஏற்படும் மாற்றங்களுக்குத் தக்கவாறு தம்மை மாற்றிக் கொள்ள முடியாமை செயல்வழிக் கோளாறுக்கான (Functional Disorders) ஓர் இன்றியமையாத ஏதுவாகும். நண்பர் அல்லது துணைவரின் மறைவு, வருமானக் குறைவு, வேலையிழப்பு, உடல்நலிவு, வேண்டியவர்களின் இழப்பு, தன்னுடைமை இழப்புப் போன்றவை செயல்வழிச் கோளாறுகளுக்கான காரணிகளாகும். நரம்புவழிப்பித்து (Neurosis), உளப்பித்து (Psychosis) என்னும் இருவகைச் செயல்வழிக் கோளாறுகளும் முதியோரிடையே காணப்படுகின்றன.

முதியோரிடைக் காணப்படும் நரம்புவழிப்பித்து பலவகைப்படும். இவர்களுக்குப் பெரும்பாலும் ஏற்படும் மனக்கோளாறு உளச்சோர்வு (Depression) ஆகும். உளச்சோர்வைக்குறிக்கும் நோய்க் குறிகளான வாழ்வில் வெறுப்பு (Apathy), பின்வாங்கல் (Withdrawl) ஆகியன முதுமைப் பருவத்தினைக் குறிக்கும் வெளிப்படையான அறிகுறிகளாகும். முதுமைப் பருவத்தில் உளச்சோர்வு ஒரு செயல்வழிக் கோளாறாயினும் அதனை மருத்துவ முறையினால் கட்டுப்படுத்தலாம். மருந்துகளும், உளமருத்துவச் சிகிச்சை முறைகளும் இதற்குப் பெரிதும் பயன்படுகின்றன.

பித்துவெறி எதிர்வினைகள்: இவ்வகை மனக்கோளாறும் முதியோரிடையே காணப்படுகிறது. தன்னம்பிக்கை, பெருமிதம், தங்களின் திறமை பற்றிய மகிழ்வு ஆகியன இந்நோயின் குறிகளாகும். வேகமாகப் பேசுவது, சில நேரங்களில் கோவையில்லாமல் பேசுவது, அதிக சுறுசுறுப்புக் காட்டுவது ஆகிய தன்மைகளும் பித்துவெறி எதிர்வினை (Manic Reaction) நோய்க்கு உண்டு. இக்கோளாறு முதல் ஆறு திங்களுக்குமேல் இருப்பதில்லை. மருந்துகள், மின் அதிர்வுச் சிகிச்சை மூலம் இவற்றை வேகமாகவும் துல்லியமாகவும் கட்டுப்படுத்தலாம். இந்நோய்க்கான காரணத்தினைச் சொல்வது எளிதன்று.

கற்பனை மனவாட்டம்: இந்த நோயையுடைய முதியோர் தமக்கு உடற்செயற்பாட்டில் கோளாறோ நோயோ அல்லது இடையூறோ இருப்பதாகக் கற்பனைச் செய்து கொண்டு வெளிப்படையாகப் பதற்றமடைவர். இக்கற்பனை மனவாட்டம் (Hypochondriasy) உடையவர்கள் வேறொரு நோயினை அல்லது மனக்கோளாறினைக் கேள்விப்படும்போது, தமக்கு அந்நோய்க்கான அறிகுறிகள் இருப்பதாகக் காட்டிக்கொண்டு மருத்துவ ஆலோசனை பெறமுற்படுவர்.

அளவற்ற குடியும் மருந்துகள் கெடுபயனும்: இரண்டு முதல் பத்து விழுக்காடு வரை முதியோர் அளவற்ற குடியினராக இருப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன. அளவற்றகுடி(Alcoholism)முதியோரிடையே நாட்பட்ட நோயாகவோ அண்மையில் தொற்றிக் கொண்டதாகவோ இருப்பதுண்டு. அண்மைக்காலக் குடியினராயின், அதற்குக் காரணம் பெரும்பாலும் உடல் அல்லது சமூக இழப்புகளாக இருக்கும். உடல் ஊனங்களும் உளச்சோர்வும் அவர்களைக் குடிக்கத் தூண்டுகின்றன. முதிய ஆடவர், கைம்மை நிலையினர், மருத்துவக்கோளாறு நிறைந்தோர், மிகவும் கல்லாதவர் ஆகியோரிடையே அளவற்ற குடிப்பழக்கம் காணப்படுகிறது.

உளப் பித்துக் கோளாறுகள் நரம்புப் பித்தைவிட மிகவும் கடுமையான மனக்கோளாறாகும். இத்தகைய கோளாறு ஏற்பட்டோர் செயலற்றுப் போவதும் மருத்துவச்சிகிச்சை பலனளிக்காமல் போவதும் உண்டு.

உளச்சிதைவு: முதியோரிடம் காணப்படும் உளச்சிதைவு (Schizophrenia) முதுமை உளச்சிதைவு என்று சொல்லப்படும். இது உடையவர்களுக்கு எண்ணக் கோளாறும் மனவெழுச்சித் துன்பங்களும் இருக்கும். உலகியலோடு தொடர்பிருக்காது. இவர்களால் கற்பனையையும் இயல்பு நிலையினையும் வேறுபடுத்திப் பார்க்க முடியாது. இதற்குக் காரணம் பெரும்பாலான உளச்சிதைவாளரைத் துன்புறுத்தும்பொய்த்தோற்றமும் (Hallucination), திரிபுஎண்ணமுமே (Delusion) ஆகும். இவை ஐயவுணர்வினையும் மனச்சோர்வினையும் விளைவிக்கும்.

எழுச்சிக்கோளாறுகள்: முதியோருக்கு மனநிலை (Mood) பாதிக்கப்படுகிறது. இவர்களிடையே இக் கோளாறு சூழ்நிலையோடு ஒத்துப்போகாத அளவு அளவற்ற வெறியாகவோ உளச்சோர்வாகவோ வெளிப்படும்.

உறுப்புவழி மூளைக்கோளாறுகள்: இந்நிலையில் மூளை அல்லது மூளையின் செயற்பாடு உறுப்பளவில் பாதிப்பினைப் பெறுகிறது. இதனால், நுண்ணறிவு, நினைவு, சூழ்நிலை உணர்வு, முடிவுசெய்யும் திறன் ஆகியன பாதிக்கப்படுகின்றன. இத்தகைய கோளாறு உள்ள முதியவர்களுக்கு அண்மைக்கால நிகழ்வுகளோ பெயர்களோ நினைவிலிருக்காது. அவர்களுக்கு இடம், காலம் பற்றிய சூழ்நிலை உணர்வும் இருக்காது. ஆனால், பெரும்பாலோர்க்கு இந்தக் கோளாறு மிகவும் இயல்பாக இருப்பதோடு, அவர்கள் ஒருங்கிணைப்பு வழிகளின் மூலம் ஒரு சுதந்திர வாழ்க்கையினையும் வாழ்வர். வயது முதிர்ந்தோர்க்கு ஏற்படும் கடுமையான மனக்கோளாறுகளுள் பாதிக்கு மேற்பட்டவை உறுப்புவழி மூளைக்கோளாறுத் (Organic Brain Disorders) தொகுதியினைச் சார்ந்தனவாக இருக்கக்காணலாம். கி. இரா.

துணை நூல்கள்:

**Birren**, **James**,E., The Psychology of Aging, Englewood Cliffs, Prentice-Hall, 1694.

**Botwinick** ,**Jack**, Aging and Behaviour: A Comprehensive Integration of Research Findings, Springer Publishing Co., New York, 1973.

***உளமொழியியல்***: சிந்தனை, மெய்ப்பாடு வேட்கை, ஆகியவை மனித நடத்தையின் கூறுகளாகக் கொள்ளத்தக்கவை. மனித நடத்தையின் வெளிப்பாடுகளுள் தலையாயதாக விளங்குவது மொழி. மொழியின் பல்வேறு பண்புகளையும் பகுத்தும் பிரித்தும் தொகுத்தும் காணும் முயற்சியை மொழியியல் என்பர். மொழியினை ஒரு நடத்தையின் வெளிப்பாடாகக் கொண்டு ஆராய்கிற ஒன்றாக உளமொழியியல் (Psycholinguistics) விளங்குகிறது. உளமொழியியல் என்னும் தொடர், மொழியை ஒரு நடத்தை என்னும் அளவில் ஆராய்கிற பாங்கினைச் சிறப்பாக எடுத்துக்காட்டுகிறது.

மொழி பற்றிய உளவியல் ஆராய்ச்சியை 'மொழியைப் பற்றிய உளவியல்' என்ற விரிவான தொடரால் எளிதாகச் சுட்டிக்காட்டலாம். எனவே, உளமொழியியல் என்னும் புதியதொரு கலைச்சொல்லிற்கு அவசியமென்ன என்னும் வினா எழுவது இயல்பே. இத்துறை அறிஞர்கள் இவ்வினாவிற்கு விடையளித்துள்ளனர். மொழியினை ஆராய்வதில் உளவியலில் விளைந்துள்ள கொள்கைகளும் மொழியியலில் முளைத்துள்ள கொள்கைகளும் நேரடியாக மோதிக்கொள்வதனைக் குறிப்பிட்டுக் காட்டும் வகையில், உளமொழியியல்என்னும்கலைச் சொல் பயன் தருவதாக அமைகிறது. இருப்பினும், உளமொழியியல் உளவியலின்கீழ் வருகிற ஒரு துணைப்பாடமாகவே கொள்ளப்படுகிறது என்பதை மறுப்பதற்கில்லை.

'உளமொழியியல்' என்னும் கலைச்சொல் முதன்முதலாக 1950-ஆம் ஆண்டு அளவிலேயே வழக்கிற்கு வந்தது. அவ்வளவில் மொழியைப் பயன்படுத்துபவர்களின் வெளியீடுகளை விளக்குகிற மொழியியல் முறைகளைக் கூர்ந்து கவனிப்பதாகவே அது தோன்றியது. குறிப்பாக, தொடக்க காலங்களில் உளமொழியியல் மொழியின் அமைப்பாண்மைத் திறஞ்சார்ந்த பகுப்பாய்வில் அக்கறை காட்டியது. எழுத்து, சொல், சொற்றொடர் ஆகிய உளவியல் ஆராய்ச்சி அலகுகளுக்கு இணையான மொழியியல் அலகுகளான ஒலியம், சொல்லின் இலக்கணக் கூறு, சொற்றொடர் ஆகியவற்றின் நடத்தைக் கூறுகளென்ற வகையில் அது ஆராய முற்பட்டது. இக்காலகட்டத்தில் உளமொழியியல் கொள்கை ஒருபுறமும், செய்திக் கொள்கையும் கற்றல் கொள்கையும் மறுபுறமும் மொழி நடத்தையை ஆராய்வனவாகத் தனித்தனியே ஏற்றுக்கொள்ளப்பட்டன. இந்நிலையில், மொழியியல் கூறுகளுக்கிடையே அல்லது மொழியியல் அலகுகளுக்கு அவை சுட்டுகிற பொருள்களுக்கிடையே ஏற்படும் ஆக்கநிலையிருத்தம் பெற்ற தூண்டல் – துலங்கல் இயைபுகளின் அனுபவம், பொருளுடன் கூடிய துலங்கல் ஒன்று ஏற்படுவதற்கான நிகழ்திறத்தைத் தீர்மானிக்கிறது என்று இக்கொள்கைகள் உய்த்துணர்ந்திருந்தன. தனியாள் பேசும்போது அவனிடம் ஏற்படும் இத்தூண்டல் – துலங்கல் நிகழ்திறமே மொழி வெளியீட்டினைப் பெருமாதிரிகளாகக் கொள்ளும்போது அவற்றில் காணும் மொழியியல் அலகுகளின் மொத்தப் பொறுப்பாக இருக்கிறது என்று இந்நிலையில் கருதப்பட்டது.

நோவம் சோம்சுகி 1960-ஆம் ஆண்டு தம் உருமாற்றஞ்சார்ந்த இலக்கணக் கொள்கையை வெளியிட்டார். இது உளமொழியியலில் ஒரு புரட்சியாகக் கொள்ளப்படுகிறது. செய்திக்கொள்கை, கற்றல் கொள்கை ஆகிய இரண்டு கொள்கைகளைக் கொண்டு மொழியியல் சார்ந்த நடத்தையை முற்றிலும் புரிந்துகொள்ள முடியாது என்பதைச் சோம்சுகியின் கொள்கை அறிவுறுத்தியது. பேச்சாளர் மொழியைப்

பயன்படுத்துவதில் கொண்டுள்ள திறமையைக் கற்றல் கொள்கை மூலம் விளக்க இயலாது என்றும், அப்படியே விளக்க முடிந்தாலும் தூண்டல் – துலங்கல் களின் நிகழ்திறங்களைப் பெறுதல் மூலம் மொழியை ஆராய்வது சிக்கனமானதன்று என்றும் சோம்சுகியும் (Noam Chomsky) அவர்தம் ஆதரவாளர்களும் எடுத்துக்காட்டினர். எண்ணற்ற வகையில் இலக்கணத்திற் குட்பட்ட சொற்றொடர்களை உருவாக்க இயலும் என்ற பேருண்மையைச் சோம்சுகி எடுத்துக்காட்டுகள் மூலம் நிறுவியுள்ளார். இதுவரை பயன்படுத்தியிராத வகையில் சொற்களைப் புதிய புதிய வகைகளில் இணைக்க முடியும் எனச் சோம்சுகி கூறுகிறார். சான்றாக, 'வெளிறிய பசுமை எண்ணங்கள் வெறி கொண்டு துஞ்சுகின்றன' என்ற சொற்றொடர் ஓர் இலக்கணச் சொற்றொடராய் இருப்பினும், இச் சொற்றொடரின் அமைப்பில் அடுத்தடுத்து இடம் பெறும் சொற்கள் இவ்வாறு இணைந்து தோற்றுதற் கான நிகழ்திறம் மிக மிகக் குறைந்ததே.

வளரும் குழந்தை வகைவகையாகச் சொற்களைக் கையாள்கிறது. அதுவரை கேட்டிராத சொற்களையும் தானாகச் சேர்த்துக் கொள்கிறது. இந்நிலையில் அதன் சொல்லியைபுகளின் நிகழ்திறத்தை நிருணயிப்பது எங்ஙனம்? பேசுபவர்களது மொழியமைப்பினை விடுத்து, மொழியியல் விதிகளையே மொழியின் மூல முன்மாதிரியாகக் கொள்ள வேண்டும் என்று கருத்து ஆய்வாளர்களது சிந்தனையைத் தூண்டியதால், பல புதிய புதிய முயற்சிகள் உளமொழியியலில் தோன்றின.

இன்றைய உளமொழியியல் உலகின் வெவ்வேறு மொழிகளுக்கும் பொதுவான மொழிப் பொதுமைகளைக் கண்டறிய முயல்கிறது. ஓவியம் போன்ற அடிப்படை மொழி அலகுகளை எந்த அளவு ஏற்கலாம் என்ற ஆராய்ச்சி தொடர்ந்து நிகழ்கிறது. ஒவ்வொரு சொல்லும் சுட்டி நிற்கும் பொருள் குறித்து உளமொழியியலார் ஆராய்கின்றனர். உளமொழியியல் இலக்கண வரலாற்றில் கவனம் செலுத்துகிறது. குறிப்பாக, பயனுடைய உருமாற்றஞ் சார்ந்த இலக்கணக் கொள்கையை உளவியல் பரிசோதனை மூலம் ஆராய்வதில், உளமொழியியலார் அக்கறை கொண்டுள்ளனர். மொழியமைப்பில் சொற்கள், சொற்றொடர்கள் போன்றவை நிகழ்கிற புள்ளியியல் பாங்குகளை ஆராய்வது உளமொழியியலின் நோக்கங்களுள் ஒன்றே.

மொழியை எவ்வாறு பெறுகிறோம் என்ற உன்னதமான வினாவிற்கு விடைகாண்பதும் உளமொழியாளர்களின் நோக்கங்களுள் ஒன்றாகும். பேச்சு வழக்குகளில் காணப்படும் ஒற்றுமை, வேற்றுமைகள் உளமொழியியலாரது கவனத்தைக் கவருகின்றன. தாய்மொழியைக் கற்பது, பிறமொழிகளைக் கற்பது போன்ற கற்றல் செயல்முறைகளை உளமொழியியல் பரிசோதனைகள் மூலம் ஆராய்கின்றனர்.

திக்குதல், தெற்றுதல் போன்ற பேச்சுக் குறைபாடுகளையும் உளமொழியியலார் பல்வேறு கோணங்களில் ஆராய்கின்றனர். உலகப் பொதுமொழியொன்றை உருவாக்குதல் இயலுமா? மொழிகள் அனைத்தையும் ஒரே வரிவடிவத்தில் எழுத இயலுமா? என்பன போன்ற வினாக்களும் உளமொழியியலில் ஆராயபப்ட்டு வருகின்றன.

மனித நடத்தையின் ஒரு வெளிப்பாடு என்ற நிலையிலும் மனிதத் தத்துவத்தின் ஓர் அடிப்படை என்ற நிலையிலும் உளமொழியியலை, இன்றைய சமூதாயத்திற்கு உளவியல் மொழியியலார் அளித்துள்ள ஒரு கொடையாகக் கொள்ளலாம். உளமொழியியல் நடத்தையினை ஆராய்வதன் மூலம், மொழியையும் மொழியாளனான மனிதனையும் புரிந்து கொள்ள வழிவகுக்கிறது. சீனி. நா.

துணை நூல்கள்:

Cairns H.S and Cairns, C. E, Psycholinguistics - A Cognitive View of Language: Holt, Rinehart and Winston, N.Y., 1876.

Green,J. Psycholinguistics - Chomsky and Psychology, Penguin Books, New York, 1978.

Taylor I., Introduction to Psycholinguistics, Holt, Rinehart and Winston, NewYork, 1976.

**உளவழி ஒற்றுமை** உலகத்தின் பல்வேறு பகுதிகளில் காணப்படும் வெவ்வேறு பண்பாடுகளிலும், பொதுவான ஒற்றுமைக் கூறுகள் காணப்படுவதை விளக்கும் பண்பாட்டுப் படிமலர்ச்சிக் கோட்பாடுகளுள் ஒன்றாகும். மனிதப் பண்பாட்டின் படிமலர்ச்சியை வகுக்கும் பொருட்டு மானிடவியலார் பல பண்பாடுகளின் வளர்ச்சியினையும் அதன் தன்மைகளையும் அறியும்போது, உலகத்தின் அனைத்துப் பண்பாடுகளிலும் பல ஒற்றுமைக் கூறுகளைக் கண்டனர். இந்த உலகளாவிய பொதுத்தன்மை காணப்படுவதை அடால்பு பாசுட்டியன் (Adolf Bastian) என்பவர், கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் தாம் உலகின் பல பகுதிகளிலும் உள்ள மக்களிடையே மேற்கொண்ட ஆய்வுகளின்வழி உணர்ந்தார். இது தவிர்த்து அவர் கி.பி. 1868-இல்

பெர்லின் அருங்காட்சியகத்தில் பணியாற்றியபோது, தம் காலத்தைய ஐரோப்பியரும் காணாத பல்வேறு நிலப்பகுதிகளையும் மக்களையும் பற்றி அறிந்தார். அவர் தாம் அறிந்த அனைத்துப் பண்பாடுகளிலுமே பொதுவான பல பண்பாட்டுக் கூறுகளைக் கண்ணுற்றார். இருப்பினும், அவரவர் உள்ள இடத்திற்கேற்ப மிக நுண்ணிய மாறுதல்களைக் கொண்டிருப்பது நீக்கத் தக்கதாகக் கருதலாம்; மனிதர்கள் அனைவரும் ஒரு குறிப்பிட்ட தூண்டுதலுக்கு ஒத்த உளப்பாங்கினையும் மனச் செயல்களையும் (Mental Processes) கொண்டுள்ளனர் என்று அவர் உணர்ந்தார்.

பாசுட்டியனுக்குப் பின்வந்த எர்பர்ட்டு இசுபென்சர் (Herbert Spencer), தைலர் (Tylor) ஆகியோர் மனிதஇன உளவழி ஒற்றுமைப் (Psychic Unity of Mankind) பண்பினைத் தம் பண்பாட்டுப் படிமலர்ச்சிக் கருத்திற்கு ஏற்றுக் கொண்டு, ஒருவழிப் படிமலர்ச்சிக் கொள்கையை (Unilinear Evolution) உருவாக்க முனைந்தனர். மனிதர்கள் அனைவருமே வெவ்வேறு சூழலில் வாழ்ந்தாலும் அவர்கள் அடிப்படைச் செயலில் ஒன்றுபடுகின்றனர். அதனால் அவர்களின் செயல் வடிவங்கள் ஒருநிலைப்படுத்தப்படுகின்றன என்ற கோட்பாட்டினை வலுவிழைக்கச் செய்யப் பிற்கால மானிடவியலார் முனைந்ததுண்டு. எனினும் பண்பாட்டுப் படிமலர்ச்சி ஆய்வில் புதுக் கருத்துகள் வளர இக்கோட்பாடு அடிகோலியது.

சீ.ப.

**உளவழித் தோற்றப் படிமலர்ச்சிக் கொள்கை:** பண்பாட்டின் தோற்றம் அதன் வளர்ச்சி முதலானவற்றை விளக்கும்பொருட்டு, கி.பி. 19–ஆம் நூற்றாண்டிலும் 20–ஆம் நூற்றாண்டிலும் பல மானிடவியலார் முனைந்தனர். அவர்கள் இந்த இரண்டு நூற்றாண்டிலும் பண்பாட்டின் படிமலர்ச்சியினை (Cultural Evolution) ஒருமித்த கருத்துடன் உருவாக்குவதில் பல மாறுபட்ட கருத்துகளைக் கொண்டிருந்தனர். உலகத்தின் பண்பாடுகள் அனைத்தும் ஒரு வழியிலேயே படிமலர்ச்சியடைந்தன; ஒவ்வொன்றும் அனைத்து நிலைகளையும் ஏற்றே வளர்ந்தன என்னும் கொள்கை உடைய கி.பி. 19–ஆம் நூற்றாண்டு மானிடவியலாரின் பண்பாட்டுப் படிமலர்ச்சியினை ஒருவழிப் படிமலர்ச்சி (Unilinear Evolution) என்றும், உலகத்தின் பண்பாடுகள் அனைத்தும் ஒத்த நிலையினை ஏற்காமல் தனித்தனி நிலையில் படிமலர்ச்சியடைந்தன என்னும் கொள்கை உடைய 20–ஆம் நூற்றாண்டு மானிடவியலாரின் கொள்கை பலவழிப் படிமலர்ச்சி (Multilinear Evolution) என்றும் கூறப்படும்.

இந்த இரண்டு கொள்கைகளும் வகுக்கப்படுவதற்கு முன்னர், மானிடவியலாரால் ஆராயப்பட்டதே உளவழித் தோற்றப் படிமலர்ச்சிக் கொள்கை (Psychogenic Evolution) ஆகும். இக்கொள்கை தத்துவவியலாரின் கி.பி. 18–ஆம் நூற்றாண்டின் தத்துவம் சார் அறிவுமுதற் கொள்கையையும்(Philosophical Rationalism), கி.பி. 19-ஆம் நூற்றாண்டின், அறிவியல் நேர்காட்சிக் கொள்கையையும் (Scientific Positivism) அடிப்படையாகக் கொண்டது. இந்த இரண்டு தத்துவக் கோட்பாடுகளின் தாக்கம் கி.பி. 18, 19 ஆகிய நூற்றாண்டுப் பண்பாட்டு மானிடவியலாரிடையே பெரும் சிந்தனைப் போக்கினைத் தோற்றுவித்தது.

பண்பாட்டின் கூறுகளை கி.பி. 19–ஆம் நூற்றாண்டின் பண்பாட்டுப் படிமலர்ச்சியியலார் ஆராயும்போது, பண்பாட்டின் தனிப்பிரிவுகளை வெவ்வேறு நிலையில் ஆராயாமல், உளவழியில் வளர்ந்த பண்பாட்டைப் பெரிதும் ஆராய்ந்தனர். பண்பாட்டுத் தன்மைகளை முதன்மையானவையாக ஆராய்வதற்கு முன்னர், மனிதர்களின் மனவளர்ச்சிப் படிகளை முதன்மையாக ஆராய்வது முதன்மையானது எனக் கருதினர். ஏனெனில், உலகனைத்தும் உள்ள வெவ்வேறு பண்பாட்டிலும் ஒத்த பல பண்பாட்டுக் கூறுகள் காணப்படினும் வேறுபாடுகள் கொண்ட பல பண்புகளும் காணப்படுகின்றன. இந்த வேறுபாடுகள் மனித வளர்ச்சியின் வழியினை வகுக்க உதவிபுரிவனவாக இருக்கும் என எண்ணினர். பண்பாட்டு வேற்றுமைகளில் மனிதன் இயக்கவியலைச் (Mechanical) சார்ந்தும்; அறிவைச் (Intellectual) சார்ந்தும், ஒழுக்க நெறியைச் (Morality) சார்ந்தும் வளர்ந்து வந்துள்ள நிலைகளை மதிப்பிட்டு, மனிதப் பண்பாட்டிலுள்ள சமூகம், அரசியல், சமயம் முதலான அனைத்து அமைப்புகளிலுமுள்ள நிறுவனங்களை (Institutions) வரிசைப் படுத்தி, ஒரு குறிப்பிட்ட நிறுவன அமைப்பின்மீது பல்வேறு பண்பாட்டினரின் மன வளமையினை வரிசைப்படுத்தி அறுதியிடமுடியும். ஒவ்வொரு நிறுவன அமைப்பின் மீதும் அவர்கள் கொண்டுள்ள மன நிலையினை ஆராய்ந்த பின்னர், பிற நிறுவன அமைப்பின்மீது கொண்டுள்ள மனவளமையினைக் கண்டறிந்து, குறைந்த வளர்ச்சி முதல் வளர்ந்த நிலை வரையுள்ள மனித அறிவின் வளர்ச்சியை வரிசைப் படுத்திப் பட்டியலிட்டு, மண்ணியல் கால உயிரிகளின் (Geological Organisations) வளர்ச்சியினைப்போன்று மதிப்பிடலாம் என்பர் கி.பி. 19–ஆம் நூற்றாண்டுப் படிமலர்ச்சியியலார்.

நாகரிகமற்றவர்களாகவும் காட்டுமிராண்டித் தன்மைக் கொண்டவர்களாகவும் வாழ்ந்து, நாகரிக

மடைந்த மக்களினத்தில் பண்பாட்டின் அனைத்து நிலைகளும் காணப்படுகின்றன. இதன் அனைத்துத் தன்மைகளையும் ஆராய்ந்து பண்பாட்டின் படி மலர்ச்சியினை விவரிக்கும்போது, படிமலர்ச்சியியலார் நான்கு அடிப்படைக் கருத்துகளைப் பின்வருமாறு தம் அணுகுமுறையில் கொண்டனர்: (1) மனிதவினம் என்பது இயற்கையின் ஒரு பகுதியே; மனிதர்கள் இயற்கையின் விதிகளுக்கு உடன்பட்டு இயங்குகின்றனர். (2) உலகின் வளர்ச்சியை ஒழுங்குபடுத்தும் இயற்கை விதிகள் காலத்தினால் மாறாதவை. (3) இயற்கையின் செயல்கள் எளிமையான முழுமை பெறாத அமைப்புகளைச் சிக்கலான முழுமை பெற்ற அமைப்புகளாக மாற்றி வருகின்றன. (4) உலகனைத்தும் மக்கள் சம நிலையான மனவளமையைப் பெற்றிருந்தனர். ஆனால், அவர்களின் செயற்பாடுகளுக்கு ஏற்ப வேறுபாடுற்ற அறிவையும் அனுபவத்தையும் பெற்றுள்ளனர். இது பண்பாடுகளுக்கிடையில் மாறுபடுகிறது.

இக்கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு, பண்டைய மனிதனின் காரணமற்றதும் தொடர்பற்றதுமான வழக்கங்களைத் தொல் பழங்கால நிலை என்றும், தாம் கொண்டுள்ள வழக்கங்களுக்குக் காரணங்களையும் தொடர்புத் தன்மைகளையும் பெருமளவு வளர்த்துக் கொண்ட நிலை பிற்கால வளர்ச்சி நிலை என்றும் கருத்தளவிற் கொண்டனர். இவர்களின் கருத்திற்கு வரலாற்று ஆசிரியர்களால் எழுதப்பட்ட எழுத்துவடிவப் பத்திரமோ தொல்லியலாரால் கண்டெடுக்கப்பட்ட காலக் கணிப்புடைய அகழாய்வுப் பொருள்களோ துணை நிற்கவில்லை. இருப்பினும் உலகனைத்தும் உள்ள பல் வேறுபட்ட பண்பாட்டின் உறுப்பினர்கள் கொண்டுள்ள ஒப்புமையைக் கொண்டு, மனிதனின் வளர்ச்சியில் அவர்களின் உளவழி வரலாற்று அடுக்கினைக் (Psycho-Historic Strata)கணக்கிட்டு, அதன்வழி உளவழிப் பண்பாட்டின் முன்வரலாற்றினை (Psycho-Cultural Prehistory) அறுதியிடலாம். இதன்வழி மனத்தின் இயற்கை வரலாற்றினை அறிவியல் அடிப்படையில் வரலாற்றுக் காலச் சான்றுகளுடனும் பண்பாட்டுச் சான்றுகளுடனும் வெளிப்படுத்தினர்.

இதற்குப் படிமலர்ச்சியியலார் பல தொடர்ச்சியான அமைப்புகளை நுண்நிலையில் ஆராய்ந்தனர். எந்த ஒரு சமுதாயத்திலும் மனிதனது அறிவு வளர்ச்சி என்பது அவன் செய்யும் செயல்களின்வழிப் பெறப்படும் பட்டறிவின் துணையால் வருவதாகும். அவன் மேற்கொள்ளும் செயற்பாடுகளின் பிறப்பிற்கேற்ப அவனது அறிவுப் புலமும் விரிவடையும். மனித மன வளர்ச்சி அவனது படிமலர்ச்சியினூடே நிகழ்ந்ததாகும். நாகரிகமற்ற பண்டைய மனிதன் அறிவுத் திறனில் மிகத் தாழ்ந்த நிலையினைக் கொண்டிருந்தான். காட்டுமிராண்டித் தன்மையிலிருந்து நாகரிகமடைந்த நிலை வரை அவனது மனவளர்ச்சி என்பது, அவன் மேற்கொண்ட செயல்களுக்கப்பால் தடுக்க முடியாத வளர்ச்சியாக மாறியது. அவன் கொண்டிருந்த வாழ்க்கை, தொழில் நுட்பத்திலும் உலகைப் பற்றிய அறிதிறனிலும் தொடர்ந்து, தொல்மனிதனது சிந்தனையின் பல பரிமாணங்களைத் தன்னுள் ஏற்றது. பண்டைய மனிதர்களது பட்டறிவே பண்பாட்டு நிலையாக மாறியது.

தொன்மைச் சமுதாயம் (Ancient Society) என்னும் ஆய்வு நூலை எழுதிய மார்கன் (Morgan), உளவழித் தோற்றப் படிமலர்ச்சியினை விரிவாக விளக்கியுள்ளார். நாகரிகமற்ற நிலையிலிருந்து காட்டுமிராண்டி வாழ்க்கையை ஏற்று, பண்பட்ட நிலையை எட்டிய மனித இனத்தின் மனவளர்ச்சியினை மனிதர்கள் கொண்டிருந்த ஒவ்வொரு நிறுவன அமைப்புகளின் வளர்ச்சியைக் கொண்டும், அவர்கள் மேற்கொண்ட கண்டுபிடிப்புகளைப் பொருள்சார் பண்பாட்டின் (Material Culture) முறைகளைக் கொண்டும் கணிப்பது பண்பாட்டின் அடிப்படையிலான தாகும். இக்கொள்கை மனித இனம் படிமலர்ச்சி அடைந்ததை உளவழித் தோற்ற அளவில் காட்டும் அடிப்படைக் கருத்தாக அமைந்தாலும், இன்றைய படிமலர்ச்சியியலாரும் எதிர்காலப்படிமலர்ச்சியினைக் கணக்கிடுபவரும் உளவழி வளர்ச்சியினைப் பல அடிப்படைக் கருத்துகளில் ஒன்றாகக் கொண்டு ஆராய்ந்து வருகின்றனர். சீ.ப.

**உளவழி நாடகம்**: உளவழி நாடகமுறைகுழுச் சிகிச்சை (Group Therapy) முறைகளுள் ஒன்றாகும். மனநோய் மருத்துவத் துறையில் குழுவழிச் சிகிச்சை என்பது, உளநோய் மருத்துவரின்(Psychiatrist) தலைமையில் மன நோயாளிகளைக் குழுக்களாகப் பிரித்துச் சிகிச்சை அளிப்பதேயாகும். சிகிச்சைக்கான குழுவில் மற்ற மனிதர்களுடன் ஏற்படுத்திக்கொள்ளும் உறவில் ஏற்படும் நெடுநாளைய தடுமாற்றத்தினால் ஏற்படும் உணர்ச்சி இடர்ப்பாடுள்ள(Emotional Distress) சிறு வயதினர், இளம் பருவத்தினர் (Adolescents) வயது வந்தவர்கள் மற்றும் பிறரும் நிலையத்திலிருந்து கொண்டோ வெளியிலிருந்து வந்தோ பங்கு பெறுகின்றனர். இந்தக் குழுவின் குறிக்கோள் இந்தத் துன்பங்களிலிருந்துதீர்படுவதும் இந்தக் குழுவிலுள்ள உறுப்பினரின் தனிப்பட்ட இயக்கங்களிலும், சமூக இயக்கங்களிலும் (Social Functioning) முன்னேற்றம் காண்பதும் ஆகும். இந்தக் குழுவில் ஒருவருக்கொருவரிடத்திலும், தலைவரிடத்தி

லும் உணர்ச்சிப் பரிமாற்றத்தின் (Emotional Interaction) வாயிலாக இந்தக் குறிக்கோளை அடைய முடிகிறது.

உளவழி நாடக (Psycho Drama) முறையிலான குழுவழிச் சிகிச்சையை மனநோய் மருத்துவத்திற்கு, 1920-இல் சே. எல். மொரெனோவும் (J.L. Moreno), திரிகண்டு பர்ரோவும் (Trigant Burrow) அறிமுகப் படுத்தினர். மொரெனோ உளவழி நாடகமுறை மூலம் தன்விருப்பநிலையிலுள்ள (Spontaneity) சிக்கலைத் தீர்ப்பதனை வலியுறுத்தினார். திரிகண்டு பர்ரோ தனிமனிதனுக்குள்ளே அவனைப் பற்றிய இரகசியமாகப் பாதுகாக்கப்பட்ட, தனியாக வளர்க்கப் பட்ட கருத்தை, மற்றவருக்குத் தெரிவிக்கும் முறையில் ஏற்படும் தொல்லைகளே மனச்சீர்கேட்டிற்கு முக்கியமான காரணமாக உள்ளது என்று கருதுகிறார். இந்தக் குழுவழி ஆய்வின் முக்கிய நோக்கம் ஒரு சமுதாய ஊடுருவும் பாங்கினை (Socially Pervasive) வலியுறுத்தும் சமுதாய அமைப்பினை ஏற்படுத்தி, அதில் அந்த மனிதனுக்கு அவனுடைய நிலைமையைப் பற்றி எடுத்துரைக்கும் ஒரு வாய்ப்பினை அளிப்பதேயாகும்.

உளவழி நாடகமுறை, குழுவழிச் சிகிச்சையின் நான்கு முறைகளுள் ஒன்றாகும். இம்முறை மூலம் நோயாளியின் தடைப்பட்ட தன்விருப்ப நிலையை விடுவிக்க, மற்ற நோயாளிகளுடனும் தேர்ந்த பயிற்சியாளருடனும் சேர்ந்து பல வகைகளில் அவர் நடிக்கத் தூண்டப்படுகிறார். இதைத் தொடர்ந்து, பார்வையாளர்களுடன் சேர்ந்து அதைப் பற்றிய கலந்துரையாடலும் நடைபெறும். ஒரு நோயாளி தம் சிக்கல்களில் வரக்கூடிய பலதரப்பட்ட கதைமாந்தர்களாக, தகப்பனாராகவோ மகனாகவோ வடிவேற்று நடிக்கச் செய்யப்படுகிறார். உண்மையாகவே இது ஓர் அரங்கில் நாடகமாக நடத்தப்படுகிறது. சிகிச்சை அளிப்பவர் இந்த உளவழி நாடகத்தின் வழிமுறைகளை இயக்குவதில் முதன்மையான பங்குவகிக்கிறார். இம்மாதிரி நடிக்கும்பொழுது, அந்த நோயாளி தம் எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் மனத்திலுள்ள போராட்டங்களையும் வெளிக்கொணர உளவழி நாடகம் பயன்படுகிறது.

உளவழி நாடக அமைப்பில் மனநோய் மருத்துவர், உளநோய் சமூகப்பணியாளர் அல்லது உளநல மருத்துவர் (Clinical Psychologist) ஆகியோருள் ஒருவர் குழுத்தலைவராகப் பங்கேற்கிறார். நன்கு தேர்ச்சி பெற்ற இருவர் சிகிச்சைக் குழுவின் தலைமைப் பங்கை எடுத்துக் கொள்கின்றனர்; அல்லது மெரோனோவின் உளவழிநாடக முறையிலுள்ளதுபோல், உள நோயாளிகள் இயக்குநரின் உதவியுடன் உளவழிநாடகத்தை நடத்துகின்றனர். இவ்வழிச் சிகிச்சை வெற்றிகரமாக நடைபெற, அந்தச் சிகிச்சைக் குழுவின் தலைவர் தனிமனித உளநலச் சிகிச்சை முறையின் (Individual Psychotherapy) இலட்சியங்களை நன்கு கடைப்பிடிக்க வேண்டும். சிகிச்சையாளர்கள் எச்சரிக்கையுடனும் பதட்டமில்லாமலும் இருந்தால், நோயாளிகளின் சிக்கல் பற்றிய கவலையிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ள எளிதில் இயலும். மேலும், நோயாளிகளிடையே நடைபெறும் நாடகம் அவர்களுடைய சிக்கல்களையே வெளிக்கொணர்வதாக இருப்பதால், அவர்களிடையே ஒருவித உணர்வை வளர்க்கிறது. குழுவில் உள்ள உறுப்பினரிடையே ஏற்படும் செயல் பரிமாற்றத்தை வகைப் படுத்தவும் (Channalize), குழுவழிச் சிகிச்சைமுறையை வளப்படுத்தவும் இந்த நாடக முறை ஒரு சிறந்த நுணுக்க முறையாக உள்ளது. உறுப்பினரிடையே ஏற்படும் செயல்பரிமாற்ற முறை நரம்புத் தளர்ச்சித் தொடர்பான குறைபாடுகளைக் களையவும், உணர்வு மேம்பாடு அடையவும் உதவுகிறது. இரா.வி.

துணை நூல்கள்:

சோமசுந்தரம், ஒ., செயராமகிருட்டிணன், தி., மன நோயும் இன்றைய மருத்துவமும், நியு செஞ்சுரி புக் அவுசு லிமிடெட், சென்னை, 1981.

**Rose, Arnold M.**, Mental Health and Mental Disorder: A Sociological Approach ,W. Norton & Co Inc., New York,1955.

**Shanmugam, T.E.**, Abnormal Psychology, McGraw Hill, New Delhi, 1981.

**உளவாற்றல் குறைவு**: காண்க: உளச் சிதைவு.

**உளவியல்**: வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் உளவியலுக்குள்ள தொடர்பையும், அத்தொடர்பினால் விளையும் பல்வேறு பயன்களையும் அறியலாம். உளவியலின் கண்டுபிடிப்புகளும் கருத்துகளும் வாழ்க்கையைப் பல்வேறு வகைகளில் பாதிக்கின்றன. நுண்ணறிவுச் சோதனைகள, மனநல உளவியல் சிகிச்சை முறைகள் போன்ற உளவியல் கண்டுபிடிப்புகள் சமுதாயத்தில் எழும் சில சிக்கல்களுக்குத் தீர்வு காணத் தோன்றியவையே. இவை போல்வனவன்றி, வாழ்க்கைச் சிக்கல்களோடு தொடர்பில்லாதன என்று முதலிற் கருதப்பட்ட பல உளவியல் உண்மைகளும் பின்னர், மனித வாழ்க்கையைச் சீராக்கி உயர்நிலைப்படுத்த உதவியுள்ளன.

ஆதிகால மனிதன் தன் உடலையன்றி வேறொன்றனையும் அறியான். ஆனால், காலம் செல்லச் செல்ல, உடம்பினுள்ளே உறுபொருள் ஒன்று உண்டு என உணர்ந்தான். அதுவே 'ஆன்மா' அல்லது 'ஆவி' எனப்படும் அருவப் பொருள் எனவும் அறிந்தான். கனாக்களும், நெறி பிறழ்வு அல்லது அசாதாரண நடத்தைகளும் அவனை இவ்வாறு நினைக்கத் தூண்டின. தன் உடல் ஓரிடத்தில் செயலற்றுக் கிடந்த நிலையிலும், தான் வெவ்வேறு இடங்கட்குச் சென்று, பற்பல அனுபவங்களைப் பெறுவது போன்றஉணர்ச்சி கனாக்களில் தோன்றுகிறது. இவ்வனுபவங்கள் உடலுக்குரியவை அல்ல; உடலினுள்ளே உறையும் ஆன்மாவின் செயல் என அவன் நினைக்கத் தொடங்கினான். இவ்வாறே, மனக்கோளாறுநிலைப்பட்டோர் தம் இயல்பான நடத்தை முறைக்கு மாறாக ஒழுகுங்கால், அது அவர்களது உடலைப் பற்றியுள்ள வேறு ஓர் ஆவியின் செயல் எனவும் பழங்கால மனிதன் கருதினான். இத்தகைய 'ஆன்மா' அல்லது 'ஆவி'யின் இயல்புகளை ஆராய்ந்து எடுத்துக்கூற உளவியல் தோன்றி, பல நூற்றாண்டுகள் வரை தத்துவ சாத்திரத்தின் ஒரு பிரிவாக இருந்து வந்தது.

அரிசுடாட்டில் என்ற கிரேக்கத் தத்துவ அறிஞர் எழுதிய 'ஆன்மாவின் இயல்புகள்' என்ற நூலே உளவியல் பற்றி முதன் முதலாக எழுந்த நூலாகும். இதற்குப் பின்னர், வெளிவந்துள்ள பல அறிஞர்களின் நூல்கள் 'ஆன்மா', 'உள்ளம்' ஆகியவை பற்றிய பல கருத்துகளைக்கொண்டிருந்தன.உள்ளத்தின்அமைப்பு, தொழில்கள் போன்றவை பற்றி ஓரளவு அறிவியல் முறைப்படி சிந்தித்து, தம் கருத்துகளை வெளியிட்டவர் தேகார்ட்டே(Descartes) என்னும் பிரெஞ்சுத் தத்துவ அறிஞராவார். அவருக்குப் பின்னர், உளவியலராய்ச்சியிலும் வளர்ச்சியிலும் பல அறிஞர்கள் பங்குகொள்ளத் தொடங்கினர். பண்டைக் காலத்தில் எழுதப்பட்ட உளவியல் நூல்கள் பல்வேறு பெயர்களைத் தாங்கிவெளிவந்தன. இன்று ஆங்கிலத்தில் அறிமுகமாகிப் பழக்கமாகிவிட்ட 'சைக்காலசி' (Psychology)என்ற பெயரை முதன் முறையாகத் தம் நூலுக்கு அமைத்தவர் குளொகல் என்பவராவர். இவர் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்.

உளவியல் (Psychology) வளர்ச்சியடையத் தொடங்கிய பின்னர், அதன் ஆராய்ச்சிப் பொருள் பற்றிக் கருத்து வேற்றுமை ஏழலாயிற்று. உளவியல் ஆராய்ச்சி ஆன்மா பற்றியதாக இருக்கலாகாது எனச் சிலர் கருதினர். 'ஆன்மா' வென்பது தெளிவற்ற, நிச்சயமற்றஓர்எண்ணம்என்பது இவர்கள் கருத்து.ஆன்மா என்னும் ஒன்று இல்லையென அறுதியிட்டுக் கூறுவாரு இருந்தனர். எனவே, உள்ளம் அல்லது மனத்தின் செயல்களை விளக்கும் இயல் உளவியலாகும் எனச் சில அறிஞர்கள் விளக்கம் தந்தனர். இவ்விளக்கமும் சிலருக்குச் சரியெனப்படவில்லை. 'உள்ளம்' என்பதும் 'ஆன்மா' என்பதைப் போன்றே தெளிவற்றதென நினைத்து, உளவியலை 'நனவு நிலை' பற்றிய இயல் என இவர்கள் விவரிக்கலாயினர். நனவு நிலையென்பதை 'அறிவுடை நிலை' எனலாம். உளவியலைப்பற்றிய இவ்விளக்கம் இந்த நூற்றாண்டின் தொடக்கம் வரை பெரும்பாலான உளவியலறிஞர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டு வந்தது. இது ஓரளவுக்குப் பொருந்துமாயினும் இதிலும் ஒரு குறைபாடு உள்ளது

உளவியலில் உளப்பகுப்புக்கோட்பாடு (Psycho-Analytic School) என்னும் பிரிவு ஒன்றுண்டு. இக்கோட்பாட்டினர் நடத்தைக்கு முக்கிய காரணங்களாக அமைபவை, நனவு நிலைக்குக் கீழான நனவிலி உள்ளத்தில் (Unconscious Mind) உறையும் எண்ணங்களே யன்றி நனவு நிலை நோக்கங்களல்ல என்பர். உளவியலை 'நனவு நிலை பற்றிய இயல்' என்று மட்டும் கொண்டால், மனித நடத்தையின் அடிப்படைக் காரணிகள் எனப்படும் நனவிலி நோக்கங்களும், இவற்றால் ஊக்குவிக்கப்படும் செயல்களும் உளவியல் ஆராய்ச்சிக்குப் புறம்பானவையாகிவிடும். மற்றும் தொடர்ந்து செயற்படுவதன் விளைவாக நனவின்றிச்செய்யும் பழக்கங்களாக உருப்பெற்றுள்ள செயல்களைப் பற்றியும் உளவியல் ஆராய்ந்தறிய வேண்டியுள்ளது. எனவே இன்று உளவியலாளர்கள் மனித 'நடத்தை' பற்றிய அறிவியல் உளவியல் என விளக்குகின்றனர்.

மனிதனது நடத்தை பற்றிய சில அடிப்படைக் கருத்துகள் இன்று பொதுவாக, எல்லா உளவியலறிஞர்களாலும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. அவற்றுள் முக்கியமானவை: 1. உடலுக்குள்ளிருந்து எழும் வேட்கைகள், கிளர்ச்சிகள் ஆகிய தூண்டல்கள், வெளியுலகச் சூழலிலிருந்து எழும் தூண்டல்கள், மனிதர்களின் சமூக உறவினின்றும் எழும் தூண்டல்கள் போன்ற பல வகைப்பட்ட தூண்டல்களினால் மனிதனது நடத்தை தோற்றுவிக்கப்பட்டு நெறிப்படுத்தப்படுகிறது. 2. மனித நடத்தை மாறுபாடற்றநிலை உடையதன்று; அது இயங்கும் தன்மையுடையது, 3. குறிப்பிட்ட சில இலக்குகளை அடையவே நடத்தை பயன்படுத்தப்படுகிறது. மனித நடத்தையின் பின்னமைந்த தேவைகளையும் இவற்றுடன் இணைந்த ஊக்கிகளையும் உளவியல் ஆராய்கிறது. சு.சா.

வரலாறு: உளவியலுக்கு மற்ற அறிவியல்களைப் போல நீண்டதொரு வரலாறு உண்டு. இதனுடைய வளர்ச்சிக்கு மற்ற அறிவியல் துறைகள் பெரிதும் உதவி வருகின்றன. இன்று காணும் உளவியல் கிரேக்க

நாட்டுத் தத்துவ அறிஞர் அரிசுடாட்டில் (Aristotle) காலத்திலிருந்து வளர்ந்து வந்திருக்கிறது. பல தத்துவ அறிஞர்கள், உடற்கூற்றியல் அறிஞர்கள், இயற்பியல் வல்லுநர்கள், உள மருத்துவர்கள் ஆகியோரின் உழைப்பின் விளைவுகள் இப்போதைய உளவியல் வளர்ச்சிக்கு வித்தாக அமைந்தன. உளவியல் சிக்கல்களுக்குத் தீர்வுகாணப் பாரத நாட்டுத் தத்துவ அறிஞர் சொற்பொழிவுகளும், கட்டுரைகளும் பயனுள்ள பல கருத்துகளைத் தருகின்றன.

உளவியலின் வளர்ச்சி முதலில் தத்துவத் துறையின் கூண்டுக்குள் அடைபட்டுக் கிடந்தது. தத்துவஅறிஞர்களாக இருந்து கொண்டே தேகார்ட்டேயும்சான் லாக்கும்(JohnLocke) ஐரோப்பியக் கண்டத்தில் உளவியலின் முன்னேற்றத்திற்குக் குறிப்பிடத்தக்க தொண்டு புரிந்துவந்தனர். உளவியல் கி.பி. 91-ஆம் நூற்றாண்டின் இறுதிவரை, தத்துவத் துறையின் ஒரு பகுதியாகவே காணப்பட்டது. அண்மைக் காலம்வரை பாரதப் பல்கலைக்கழகங்கள் உளவியல் கல்வியைத் தத்துவத்துறையின் ஒரு பகுதியாக வைத்தே மாணவர்களுக்குக் கற்பித்து வந்தன. பாரதத்தில் ஏறக்குறைய முப்பது ஆண்டுகளுக்கு முன்புதான் இந்த நிலை மாறியது. இதனால், உளவியல் தத்துவத்துறையிலிருந்து பிரிக்கப்பட்டு, அதற்குத் தனித் துறைக்குள்ள செல்வாக்குக் கொடுக்கப்பட்டது.

நீண்ட காலம் உளவியலுக்குத் தனித்துறை கொடுக்கப்படாததற்குச் சில காரணங்கள் உண்டு அவை: 1. பரிசோதனை உளவியலைப் பயிற்றுவிக்கப் போதிய அனுபவமுள்ள பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இல்லை.2. பரிசோதனைக் கூடத்திற்குத் தேவையான கருவிகள் வாங்குவதில் சில புதுமாதிரியான சிக்கல்கள் நிலவி வந்தன. இருப்பினும் அறிவியல் அடிப்படையில் உளவியல் தொடங்கப்பட்ட காலம் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பின்பகுதி எனக் கூறலாம் சோன்சு முல்லர் (Jones Muller, 1801-1858), வெபர் (Weber, 1795-1878), எம் கோல்டு (Helmholtz, 1821-1894), பெச்சினர் (Fechner, 1801-1887),வில்கெல்ம் உண்டு (Wilhelm Woundt, 1832-1920), பிரான்சிசு கால்ட்டன் (Francis Galton, 1822-1911 போன்றவர்கள் உளவியலை அறிவியல் பாதையில் அழைத்துச் சென்ற முன்னோடிகளாவர்.

சோன்சு முல்லர் புலனுணர்ச்சி உடற்கூற்றுத் (Sensory Physiology) தொடர்புள்ள ஆய்வுகளைத் தொடங்கி வைத்தார். இந்த ஆய்வுகள் உளவியலின் வளர்ச்சிக்கு வழிகாட்டியாக அமைந்தன. மனிதன் பொதுவாகத் தூண்டலுக்கு வசப்படும்போது, அவனுடைய எதிர்வினைச் செயல்கள் (Reaction) எல்லா நேரங்களிலும் ஒத்த மாதிரியாகவே இருப்பதற்கில்லை என்ற உண்மையை இவர் காலத்தில் கண்டனர். முல்லர் கருத்துப்படி, மனிதன் வெளி உலகத்தைப் பற்றி நேரடியான உணர்வைப் பெறுவதில்லை. நரம்பு மண்டலத்தில் ஏற்படும் விளைவுகளைத்தான் ஒவ்வொருவரும் உணருகின்றனர். ஆகவே, மனிதனின் நரம்பு மண்டலம் வெளி உலகைப் பற்றிய விவரங்களை அவனுக்குத் தருகிறது.

நரம்புச் சக்திகளைப் பற்றிச் சரியான விளக்கம் கொடுக்கப்படாத காலத்தில், முல்லர் நடத்திய பரிசோதனைகள் புலனுணர்ச்சிப் பண்புகளைத் தெளிவுபடக் கூறியது. புலனுணர்ச்சிப் பண்புகளைக் குறிப்பிடும் முல்லரின் கொள்கை பல கோட்பாடுகள் தோன்றுவதற்கு அடிப்படையாக அமைந்தது. இதைத் தொடர்ந்து, சில ஆண்டுகள் நடைபெற்று வந்த ஆராய்ச்சிகள், பரிசோதனைகளின் முடிவுகள் எல்லாம் தோலின் செயல்முறைகளைப் பற்றிய கோட்பாடுகளையும் சுவை, மோப்பம் போன்ற புலனுணர்ச்சி மண்டலங்கள் பற்றிய கோட்பாடுகளையும் செம்மைப்படுத்த உதவின.

மனிதனுடைய செயல்களைப் புரிந்து கொள்ள கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் முல்லர் கூறிய விளக்கத்தின் விரிவாக்கத்தைத்தான் அமெரிக்கச் சமூகவியல் வல்லுநர் கூலியின் (Cooley) கருத்தும் 20-ஆம் நூற்றாண்டில் கூறுகிறது. வெளி உலகத் தூண்டலுக்கு மனிதன் முத்திரையைப் (RubberStamp) போல எப்போதும் மாறுபடாமல் செயற்படமாட்டான் என்ற கருத்தைக் கூலி கூறுகிறார் அதாவது, குழுவிலுள்ளவர்களைக் குழுக்களின் கரித்தாள் (Carbon Sheet Copy) . படிகளாக மதிப்பிடுவது சரியன்று என இவர் சொல்கிறார்.

வெபர் பெரிய உடற்கூற்று அறிஞராக இருந்து கொண்டே, உளவியலின் வளர்ச்சிக்கும் உதவி செய்தார். மிகுந்த உற்சாகத்துடன் இவர் பரிசோதனை முறையை உடற்கூற்று அறிவியலில் கையாண்டார். குறிப்பாக, தோல் சார்ந்த புலனுணர்ச்சித்(Cutaneous Sensation) தொடர்புள்ள செயல்களை அறிவதில் அதிக ஆர்வம் காட்டினார். இவர் செய்த பரிசோதனைகளின் விளைவு குறிப்பிடத்தக்கது. பொதுவாக, தோல் சார்ந்த புலனுணர்ச்சியில் தொடு புலன் அல்லது அழுத்தப் புலன் (Sense of Touch or Sense of Pressure) மாத்திரம் இருப்பதாக நினைப்பதுண்டு. ஆனால், அவற்றுக்குக் குளிர் புலன் (Cold Spot), சுடு புலன் (Warmth Spot), அழுத்தப் புலன் (Pressure Sopt), வலிப்புலன் (Pain Spot) ஆகிய நான்கும் இருப்பதாகக் கண்டறிந்த முதல் அறிஞர் வெபரே.

வெபரும் பெச்சினரும் சேர்ந்து பலவகைப் பரிசோதனைகள் செய்து, பரிசோதனை உளவியலின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவினர். புலனுணர்வுகளை மதிப்பிடுவதற்கு இருவரும் பல உத்திகளைக் கையாண்டு வெற்றி பெற்றனர். இருவரும் உருவாக்கிய விதிமுறைகள்தாம் உள-உடல் சார்ந்த முறைகளைச் (Psychophysical Methods) சிறப்படையச் செய்தன. பரிசோதனை உளவியலின் வளர்ச்சியில் ஒரு திருப்பு முனையை உருவாக்கியோரும் இவர்களே யாவர்.

எம் கோல்ட்சு பெச்சினரைப்போல ஓர் இயற்பியல் வல்லுநர் ஆவர். இவருடைய எதிர்வினைகாலப்பரிசோதனைகள் (Reaction-Time Experiments) உளவியலின் வளர்ச்சியில் சிறப்பு நிலையைப் பெற்றுள்ளது. எம் கோல்ட்சு கண்ட முடிவுகள் மனிதனுடைய உடல் உறுப்புகள் அவனுடைய உள்ளத்தில் உருவாகும் கட்டளைகளை, அவன் எண்ணிய வேகத்தில் செயலாக்கிக் கொடுப்பதில்லை எனக் கூறுகின்றன. இவர் பலவித உளவியல் தொடர்புள்ள பரிசோதனைகளைச் செய்தாலும், இவருடைய 'பார்வைப் புலனுணர்வு' (Visual Sensation) ஆராய்ச்சியே புகழ் வாய்ந்தது. இவர் உருவாக்கிய நிறக்காட்சிக் (Colour Vision) கோட்பாடுதான் இன்றைய உளவியல் துறையில் 'எம் கோல்ட்சு விதி'யாக விளங்குகிறது. இவர் செவிப் புலனுணர்வுகளைப் (Auditory Sensation) பற்றியும் பரிசோதனைகள் நடத்தினார். பரிசோதனை உளவியலின் வரலாற்றில் எம் கோல்ட்சு குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளார்.

முதன் முதலில் உளவியல் பரிசோதனைக் கூடம் கி. பி. 1879-இல் செருமனியில் உள்ள இலீப்சிக்கு என்ற நகரத்தில் வில்கெல்ம் உண்டு (Wilhelm Wundt) என்ற உளவியலறிஞரால் தொடங்கப்பட்டது. இவரைப் பரிசோதனை உளவியலின் தந்தை (Father of Experimental Psychology) எனக் கூறுவதுண்டு. அறிவியல் பாதையில் உளவியல் முன்னேற்றம் அடைய இவர் எழுதிய 'உடற்கூற்று உளவியல்' (Physiological Psychology) நூல் குறிப்பிடத்தக்க அளவு உதவியுள்ளது. தவிர, மனித அனுபவத்தைப் பரிசோதனை முறை மூலம் முழுமையாகத் தெரிந்து கொண்டு விடலாமெனக் கருதுவது தவறு என்று கூறிய முதல் அறிஞர் இவரே. மனித அனுபவம் மொழி, கட்டுக்கதை (Myth), கலை, சமயம் போன்ற பல வகைகளில் வெளிப்படுகின்றது. ஆகவே, மனிதனைப் புரிந்து கொள்ளப் பரிசோதனை முறை மட்டும் போதாது என இவர் கருதினார். உண்டின் இந்தக் கருத்துகள், குறிப்பாகச் சமூக உளவியல் துறை உருவாகி, வளர்வதற்கான சூழ்நிலையை உருவாக்கிக் கொடுத்தன.

தொடக்க காலப் பரிசோதனை உளவியலைக் காணும்போது, அதன் பெரும்பகுதி உடற்கூற்று உளவியலைத் தழுவியே இருந்து வந்திருக்கிறது. அதற்கு ஒரு காரணமும் உண்டு. உளவியலின் நிறுவனர்கள் பெரும்பகுதியினர் தொடக்கத்தில் உடற்கூற்று அறிஞர்களாக இருந்தனர். பிரான்சிசு கால்டன், சார்லெசு தார்வின் போன்ற அறிஞர்களின் பங்கு பரிசோதனை உளவியலின் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்கது. தனியாள் வேற்றுமைகளைக் கூறும் உளவியலின்(Psychology of Individual Differences)தந்தை எனப் பிரான்சிசு கால்டன் குறிப்பிடப்படுவதுண்டு. தார்வின் கண்ட பரிணாமக்கோட்பாடுகள் உயிரினங்களின் நடத்தையை அறிந்து கொள்வதற்கு மிகவும் பயன்படுகின்றன.

உளவியலின் வரலாற்றைக் காணும்போது, அது பலவித துறைகளைக் கொண்ட அறிவியல் என்பது புலப்படும். சமூக உளவியல் (Social Psychology), உடற்கூற்று உளவியல் (Physiological Psychology), கல்வி உளவியல் (Educational Psychology), குழந்தை உளவியல் (Child Psychology), குமரப் பருவ உளவியல் (Adolescent Psychology), வாலிபப் பருவ உளவியல் (Adult Psychology), முதியோர் உளவியல் (Psychology of Old Age Gerentology), மனநல உளவியல் (Clinical Psychology/Medical Psychology), உளநோய் உளவியல் (Abnormal Psychology), தொழிற்சாலை உளவியல் (Industrial Psychology/Organizational Psychology), மக்கள் தொகை உளவியல் (Population hsychology), நுகருவோர் உளவியல் (Consumer Psychology), விளம்பர உளவியல்(Advertising Psychology), விலங்கு உளவியல் (Animal Psychology), இராணுவ உளவியல் (Military Psychology), அறிவுரை கூறும் உளவியல்(Counselling Psychology), வணிகத்துறை உளவியல் (Marketing Psychology), வேற்றுமை உளவியல் (Differential Psychology), குற்றவியல் உளவியல் (Criminal Psychology), புறச் சூழ்நிலை உளவியல் (Environmental Psychology), மனித இன உளவியல் (Humanistic Psychology), மனித சக்திசாரா உளவியல் (Para-Psychology) ஆகியவற்றை உளவியல் கொண்டது.

இன்று மேலும் பல உளவியல் துறைகள் வளர்ந்து வருகின்றன. அவையாவன: நரம்பியல் உளவியல் (Neuro-Psychology) உளம்சார் மருந்தியல் (Psycho-Pharmacology) உளம், நரம்பியல் சார் நாளமில்லா சுரப்பியல் (Psycho Neuro Endocrinology), உளம் சார் நோய் தடைக் காப்பியல்(Psycho-Immunology).

சமூக உளவியல் தனி மனிதனுடைய நடத்தையை அவனுடைய சமூகச் சூழ்நிலையினைக்

கொண்டு ஒழுங்கு முறையாக ஆராய்கிறது. தனி மனிதன் மற்றவர்களுடனோ ஒரு முடிவுடனோ தொடர்பு கொள்ளும் போது, அவனுடைய நடத்தையில் பாதிப்பு ஏற்படுகிறது. அதே போல அவனுடைய நடத்தை மற்றவர்களைப் பாதிக்கிறது. அதாவது, தனி மனிதனுடைய நடத்தை, குழுவின்(சமூகம்) நடத்தை ஆகிய இரண்டையும் இணைத்து, அதிலிருந்து வெளிப்படும் விளைவுகளைச் சமூக உளவியல் அறிகிறது.

மனிதன் என்ன படிக்கிறான், என்ன எழுதுகிறான்,எங்குப் போகிறான், யாரிடம் பேசுகிறான், தேர்தலில் யாருக்கு வாக்களிகின்றான், யாரைத் திருமணம் செய்து கொள்ளுகிறான், எதற்காக மணவிலக்குச் செய்கிறான் ஆகிய மனிதனின் வெளிப்படையான நடவடிக்கைகள் இவ்வியலில் ஆராயப்படுகின்றன. அதேபோல, அவனுடைய மறைவான நடவடிக்கைகளான ஒருவன் என்ன நினைக்கிறான், என்ன அறிகிறான், என்ன உணருகிறான் போன்றவையும் இதில் ஆராயப்படுகின்றன.

மனிதன் உயிருள்ள இன வகையைச் சேர்ந்தவன். அவனுடைய நடத்தையை உயிருள்ள இனங்களை அறிகிற முறையிலேயே அறியலாம். ஆனால், சமூக உளவியலார் மனிதனை ஒரு சமூக இனமாகக் காண விரும்புகிறார்கள். மனிதனுடைய நடத்தையில் மற்ற இன வகைகளைத் தொடர்புபடுத்திப் பார்க்கும் போது, பலவித ஒற்றுமை, வேற்றுமைகளைக் காணலாம். தனி மனிதனுடைய நடத்தையில் சமூக உளவியல் கவனம் செலுத்தும்போது உளவியலாகவும் (Psychology) சமூக நிறுவனங்களின் மீது கவனம் செலுத்தும்போது அது சமூகவியலாகவும் (Sociology) சமூகத்தின் பண்பாட்டுச் சிறப்புகளை ஆராய்கின்ற போது மானிடவியலாகவும் (Anthropology) அறியப்படுகிறது. உளவியல், சமூகவியல், மானிடவியல் ஆகியவற்றிற்குச் சமூக உளவியல்(Social Psychology) என்பது ஒரு பொதுப்படையான துறையாகும்.

இரண்டு அறிவியல்கள் ஒரே பொருளை ஆராய்கிறபோது, வெவ்வேறு விதத்தில் அதை நோக்குகின்றன. சான்றாக, குற்றச்செயலை உளவியலும் சமூக இயலும் மாறுபட்ட கோணத்தில் ஆராய்கின்றன. குற்றச் செயலை உளவியல் தனியாளின் நடத்தையாக எடுத்துக்கொண்டு அறிகிறது. இதற்கான விளக்கம் உளவியல் எல்லைக்குள்ளிருந்தவாறே தரப்படுகிறது. தனியாளின் பழக்கங்கள், பண்புக் கூறுகள், நுண்ணறிவு நிலைகள், ஆளுமைக் கூறுகள், எதிர்வினை வடிவங்கள் ஆகியவற்றை அடிப்படையாக வைத்து விளக்கம் தரப்படுகின்றது. ஆனால், சமூகவியல் இதே குற்றச் செயலைப் பரந்த நோக்கத்தில் காணுகிறது. குற்ற நடவடிக்கை ஒருவித சமூக நோய் எனவும் சமூகக்கூட்டுச் சிதைவுறுதலின் அறிகுறி எனவும் கூறப்படுகிறது. குற்றச் செயல்கள் குழுவுக்குக் குழு மாறுபடுகின்றன. மேலும், குற்றம் புரிதல் நிறுவனத்தின் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி என்றும், சமுதாயக் கட்டுக்கோப்பு விதிகளை மீறுவது போன்ற செயல்களைச் சிலர் தங்கள் வாழ்க்கை வழியாகவே அமைத்துக் கொண்டுள்ளதாகவும் சமூகவியல் கருதுகிறது. ஆனால், இரண்டு விளக்கங்களும் தனித்தனியே முழுமை பெறவில்லை எனச் சமூக உளவியலார் கருதுகின்றனர். தனியாளிடம் காணப்படும் பண்புக் கூறுகள், நிறுவனங்களின் செயல் எல்லைக் கட்டுப்பாட்டில் பாதிக்கப்படுவதால், தனியாளின் நடத்தையை இரண்டுடனும் தொடர்புபடுத்தித்தான் காண முடியும். எனவே, சமூக உளவியல் உளவியல், சமூகவியல் என்னும் இரண்டு அறிவியல்களையும் ஒருங்கிணைத்துத் தெளிவுபெற உதவுகிறது.

**உடற்கூற்று உளவியல்** என்பது உடலின் செயல் முறைகளுக்கும் நடத்தைக்கும் இடையில் உண்டாகும் தொடர்புகளையும் விளைவுகளையும் ஒழுங்கு முறையாக ஆராய்வதாகும். உயிரினங்களிடையே நடைபெறும் உளவியல் நடவடிக்கைகளுக்கும் உடற்கூற்று நடவடிக்கைகளுக்குமிடையே உள்ள தொடர்பினைச் சரிவர ஆராய்ந்து கூறுவதும் அதன் பணியாகும். சான்றாக, பார்வைப் புலன் காட்சியைக் கூறலாம். பார்வைப் புலன்காட்சி ஒருவருக்கு ஏற்படும்போது அவருடைய மூளையின் ஒரு பகுதியில் அதற்கு முன்பு மின்வலி நடவடிக்கை ஏற்படுகிறது. மின்வலி ஏற்பட்ட மூளைப்பகுதி விபத்தினால் பாதிக்கப்பட்டாலோ அப்பகுதியை அறுவைச் சிகிச்சை மூலமாக அப்புறப்படுத்திவிட்டாலோ பார்வைப் புலன் காட்சி ஏற்பட முடியாது. மூளைப் பகுதியில் உண்டாகும் மின்னியக்கச் செயலுக்கும் பார்வைப் புலன் காட்சிக்கும் நெருங்கிய தொடர்புள்ளது என்பது உடற்கூற்று உளவியலார் தரும் விளக்கத்தால் தெரிகிறது.

படிப்பில் மிகவும் பிற்போக்காக உள்ள மாணவனை அறிவுரை கூறும் உளவியலாரிடம் (Counselling Psychologist) அனுப்புகின்றனர். அவன் ஒரு சிக்கல் மாணவனாக இருக்கிறான். ஆசிரியர் அவனிடம் காணும் குறை வகுப்பில் அவன் கவனம் செலுத்தாமல் எதையோ எண்ணியவாறு உள்ளான் என்'' தாகும். உளவியல் சொற்களைக் கொண்டு, இந்த மாணவன் செய்கைகளை விவரிக்கலாமென்றாலும், அத்தகைய நடத்தை அவனிடம் காணப்படுவதற்கு வேறுசில காரணங்களும் இருக்கலாம். அவனுடைய கேள்விப்புலன் பழுதடைந்திருக்கலாம்; ஆசிரியர் பேசு

வது மிகத் தாழ்ந்த குரலாக இருப்பதால் அவனுக்குக் கேட்காமலிருக்கலாம்; ஆசிரியர் மட்டுமன்றி மற்றவர் பேசுவதையுமே அம்மாணவனால் புரிந்து கொள்ள முடியாமலிருக்கலாம். எனவே, அம்மாணவனுடைய உடற்கூற்றுப் பிரச்சினையைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல், அவனுடைய நடத்தைக் குறைபாடு களை விளக்குவது இயலாது.

உடற்கூற்றியலாரும் உளவியலாரும் ஓர் உயிரி னத்தை அணுகும் போது, வேறுபட்ட இரண்டு வகை யான குறிப்புகளைச் சேகரிக்கின்றனர். இருப்பினும், இந்த இரண்டு அறிவியல்களும் ஒருங்கிணைந்து உடற் கூற்று உளவியலாகச் செயற்படும்போது, உயிரினத் தின் நடவடிக்கைகள் எல்லாம் ஒரு முழுக் காட்சி யாகக் கிடைக்க வழி வகுக்கிறது. உடற்கூற்றியலுக் கும் உளவியலுக்கும் உண்டான தொடர்பின் விளைவு உளவழி உடல் நோய் (Psychosomatic Disorder) என்ற புதிய நோயை உருவாக்கியுள்ளது. இதன் காரணமாக உளவழி உடல் நோய் மருத்துவம் (Psychosomatic Medicine) என்ற புதிய அறிவியலும் உருவாகிச் சமுதாயத்திற்குப் பயனளிக்கிறது.

கல்வி உளவியல் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணை யாக உள்ள எல்லாவித ஆற்றல்களையும் முறைப்படி ஆராய்கிற அறிவியல் ஆகும். பல துறைகளிலிருந்து கிடைக்கும் அறிவைக் கல்விக்குப் பயன்படுத்தியதன் மூலம் கல்விச் சீர்திருத்த முயற்சிகள் கி.பி. 18, 19-ஆம் நூற்றாண்டுகளிலிருந்தே நடைபெற்று வருகின்றன. அந்த முறையில் உருவானதே கல்வி உளவியலாகும்.

பண்டைய காலம் முதல். உளவியலுக்கும் கல்விக் கும் நெருக்கமான தொடர்பு இருந்து வந்திருக்கி றது. அக்காலத்திலிருந்தே கல்வியாளர்கள் கல்விச் சீர் திருத்த முயற்சியில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளும் போது, உளவியல் விதிகளைத் தாராளமாக அவர் களுடைய ஆலோசனைகளுடன் தொடர்புபடுத்து கிறார்கள். கல்விக் கூடத்தில் பயின்ற மாணவனின் கல்வியறிவு அவனுடைய நடத்தையைச் சமூகம் ஏற்றுக் கொண்டு பாராட்டும்படியாகவும், மேலும் அவனுடைய வாழ்க்கை பயனுள்ளதாகவும் அமைய வேண்டும் என்ற கருத்தினைக் கல்வி உளவியல் வலி யுறுத்தி வருகிறது.

மனித வளர்ச்சி உளவியல்: மனிதன் குழந்தை யாகப் பிறந்து வளர்ந்து, முதிர்ச்சிபெற்றுப் பலதரப் பட்ட திறமைகள் எல்லாம் செயல்களாக வெளிப்படு வதை முறைப்படி ஆராய்கிற அறிவியலாக மனித வளர்ச்சி உளவியல் பணிபுரிகிறது. மனிதனின் ஆளுமையைத் தெரிந்து கொள்ளுவதில் உளவியலார் ஆர்வம் காட்டி வந்தனர். முழுமையாக வளர்ச்சி யடைந்த மனிதனின் ஆளுமையை நன்கு அறிய வேண்டுமானால், அதற்கு முன்பு குழந்தையின் ஆளுமை வளர்ச்சியை நன்கு அறிந்தாக வேண்டு மென்று அவர்கள் கருதினர். குமரப்பருவம், வாலிபப் பருவம், முதியோர் பருவம் போன்ற பல நிலைகளைப் பற்றியும் உளவியலார் நிறைய குறிப்புகள் சேகரித்து வைத்துள்ளனர். மனிதன் வளரும் பருவ நிலைகள் ஒவ்வொன்றுமே தனித்தனி உளவியல் துறைகளாகக் குமரப்பருவ உளவியல், வாலிபப்பருவ உளவியல், முதி யோர் உளவியல் என வளர்ந்துள்ளன.

உளநோய் உளவியல் மனிதனுடைய நடத்தை பிறழ்ந்ததாக இருக்குமானால் அதனை முறையாக ஆராய்கிறது. உடல் நோயைப் பற்றி மக்கள் காட் டும் கவலையைவிட உளநோயைப் பற்றிக் காட்டும் கவலை மிகக் குறைவு. ஒருவர் மனக் கோளாறினால் துன்பப்பட்டால் மனித சமுதாயம் அதை அலட்சியப் படுத்துகிறது; சமூகத்திலிருந்து விலக்கப்பட்டவரைப் போல அவரை நடத்துகிறது. மனக் கோளாறு பற் றிச் சரியான அறிவு விளக்கம் கொடுக்கப்படும்போது இத்தகைய நிலை மாற வாய்ப்புண்டு. உளநோய் களைக் குணப்படுத்துவதில் உளநோய் நீக்கும் உளவிய லார் தீவிரமாகத் தொண்டு புரிகிறார்கள். உள நோய் அறிகுறிகளைக் கண்டு கொள்வது நோயைப் போக்குவது எல்லாம் இவர்கள் பணிகளாகும்.

மனித நடத்தையைப் பற்றிய அறிவு மனித சமு தாயத்தில் காணப்படும் பலவிதப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பெரிதும் உதவுகிறது. ஒவ்வொரு வாழ்க் கைத் துறையிலும் உளவியல் ஏதேனும் ஒருவகையில் உதவி வருவது, உளவியலாருக்கு எதிர்காலத்திலுள்ள பெரும் பொறுப்புகளை உணர்த்துகிறது.

எம்.சுவா.

விதிகள்: இன்றைய வாழ்வின் ஒவ்வொரு கூறி லும், ஒவ்வொரு துறையிலும் உளவியலின் பங்கினைக் காணலாம். உளவியலின் நெறி முறைகள், உளவியல் தந்துள்ள ஆராய்ச்சிகளின் முடிவுகள் எண்ணற்ற வழி களில் பயன்பட்டு வருகின்றன. அணுவைத் துளைத்து ஆற்றல் மிக்க சக்தியைக் கண்ட மனிதன், அச் சக்தி யால் என்று உலகம் அழிக்கப்படுமோ என அஞ்சி அல்லலுறுகிறான். காரணம் மனிதனின் உள்ளம் எங்ஙனம் அழைத்துச் செல்லுமோ என்ற ஐயம். உள வியல் மனிதனின் செயல்கள் பற்றியும் நடத்தை பற்றி யும் மனச்செயல் முறைகள் பற்றியும் அறிய உதவும் ஓர் அறிவியலாகும்.

ஆன்மாவின் இயல்புகளையும் அமைப்புகளையும் ஆய்வதற்கான அறிவியற்பிரிவே உளவியல் என்ற வாதம் மாறத் தொடங்கி நனவுநிலை பற்றிய (Consciousness) இயல் எனக் கருதத் தொடங்கினர். நனவு நிலை என்பதனை 'அறிவுடைநிலை' (Awareness) என்றும் கூறலாயினர். உறக்கநிலைக்குச் செல்லும்போது நனவுநிலை அதிகரித்துச் செல்கிறது. இவ்விளக்கம் இந்த நூற்றாண்டின் தொடக்கம் வரை ஏற்றுக் கொள்ளப்பட்டு வந்தது. சிக்மண்டு பிராய்டு போன்ற உளப்பாகுபாட்டுக் கொள்கையினர் நடத்தைக்குக் காரணம் நனவுநிலைக்குக் கீழான நனவிலிமனம் அல்லது அடிமனம் (Unconscious Mind) என்று வலியுறுத்தத் தொடங்கினர். எனவே, உளவியலை 'நனவு நிலை பற்றிய இயல்' என்று மட்டும் கூறினால் மனித நடத்தையின் அடிப்படைக் காரணிகள் எனப்படும் நனவிலி நோக்கங்களும், ஊக்கிகளும், அதன் விளைவான செயல்களும் உளவியல் எல்லைக்குப் புறம்பானதாகிவிடும்.

கெசுடால்ட்டு (Gestalt) உளவியலாளர்களின் ஆதிக்கம் 1912-இல் தொடங்கிற்று. கெசுடால்ட்டு என்பதன் பொருள் முழுமை என்பதாம். செருமனியில் மாக்சு வெர்திமர் (Max Wertheimer) இயற்பியல் கோட்பாடான களக்கோட்பாட்டினை உளவியலுக்கு ஏற்ற வகையில் அமைத்தார். அமெரிக்க உளவியலாளரான சே.பி. வாட்சன் தம் நடத்தைக் கொள்கையினை 1913-ஆம் ஆண்டு வெளியிட்டார். உளவியலில் நடத்தை என்னும் சொல்லுக்கு விரிவான பொருள் உண்டு. வெளிப்படும் நடத்தை மட்டுமன்றி, சிந்தித்தல், சினம் கொள்ளுதல், துணிதல் போன்ற உள்ளார்ந்த நடத்தைகளும் உளவியலில் அடங்கும். நடத்தையைத் தூண்டல், துலங்கல் (Response) என்றும் குறிப்பிடுவர். நடத்தை என்னும் சொல் சூழ்நிலையினால் உந்தப்பட்டு ஒருவன் செய்யும் செயல்கள் யாவற்றையும் தொடங்கச் செய்கிற சக்தியினைத் தூண்டல் என்பர், அல்லது உள்ளத்தினின்று எழுகின்ற தூண்டலாகவும் அது இருக்கலாம் என்பர்.

வாட்சன் மனிதனை ஓர் இயந்திரமாகக் கருதினார். மனிதனின் அனுபவங்களையும் அவற்றின் விளைவான துலங்கலின் வேறுபாட்டையும் கருத்தில் கொள்ள வேண்டும். எனவேதான் அறிதல் உளவியலாளர்கள் (Cognitive Psychologists) உளவியலை நடத்தையினையும் அனுபவங்களையும் விளக்கும் அறிவியலாகக் கருதுகின்றனர். உள்ளத்தின் செயற்பாடுகளால் அனுபவங்கள் பெறப்படுகின்றன. அனுபவங்கள் தனித்தன்மையும் அகவயப்பட்டதும் ஆகும். உள அனுபவங்களை மூன்றாகப் பிரிக்கலாம். அறிதல் அனுபவம் (Cognitive Experience), எழுச்சி அனுபவம் (Affective), முயற்சி அனுபவம் (Conative) என்பன அவை.

உளவியலில் பல வகையான அறிவியல் முறைகள் பின்பற்றப்படுகின்றன. அகநோக்கு முறை, உற்று நோக்கல் முறை, வாழ்க்கைத்துணுககு முறை, பரிசோதனை முறை, வளர்ச்சி முறை, தனியாள் வரலாற்று முறை, வினாவரிசை முறை, வேற்றுமை முறை, கள ஆராய்ச்சி முறை எனப் பல்வேறு முறைகளைப் பயன்படுத்தி நடத்தை பற்றி உளவியலாளர்கள் அறிகின்றனர். மனிதவியல்புகளும் நடத்தை முறைகளும் பல்வேறு கோணங்களில் ஆராயப்படுவதால், உளவியலில் பல கொள்கைகள் உள்ளன. அவை யாவன:

அமைப்புநிலைக் கொள்கை (Structuralism), செயல்நிலைக் கொள்கை (Functionalism), நடத்தைக் கொள்கை (Behaviourism), நோக்கக் கொள்கை (Purposivism), உளப்பகுப்புக் கொள்கை (Psycho-Analysis), முழுநிலைக் கொள்கை (Gestalt-Psycholgy).

உளவியலில் பல்வேறு பிரிவுகள் உள்ளன. அவை பொது உளவியல், குழந்தை உளவியல், நெறிபிறழ் உளவியல், சமூக உளவியல், நடைமுறை உளவியல், தொழில் உளவியல், கல்வி உளவியல், உடலியங்கு உளவியல், அளவை உளவியல், நுகர்வோர் உளவியல் எனப்படும்.

**உளவியல் முறைகள்:** உளவியல் அறிஞர்கள் தங்கள் அறிவியலின் வளர்ச்சிக்குத் தேவையான புள்ளிவிவரங்களைச் சேகரிப்பதற்குப் பல முறைகளைக் கையாளுகின்றனர். இதில் சில அறிவியல் பாடங்களுக்குப் பொருந்துவதோடு, உளவியலுக்குச் சிறப்பையும் பெருக்குகின்றன. கல்வி உளவியலுக்கும் இவை பயன்படுகின்றன. இவற்றில் சில நன்மைகளும் குறைபாடுகளும் காணப்படுகின்றன. தம் ஆராய்ச்சியில் உளவியல் அறிஞர் எந்த முறையைப் பயன்படுத்துகிறார் என்பது ஆராய்ச்சிப் பொருள்களின் இயல்புகளையும் அவ்வறிஞர்களின் திறமையையும் பொறுத்ததாகும். மாணாக்கரது இயல்பினைக் கண்டறிவதற்கும் அவர்களுக்கு அறிவுரை கூறி, கல்வித் தேர்விலும் தொழில் தேர்விலும் வழிகாட்டுவதற்கும், மாணாக்கரது திறன் பதிவுகளைத் தொகுப்பதற்கும், வகுப்பில் தொல்லை தரும் மாணாக்கரை நல்வழிப்படுத்தற்கும் உளவியல் முறைகளைப் பற்றிய அறிவு ஆசிரியர்க்குப் பயன்படும். இவற்றுள் முக்கியமான சில இங்கு விளக்கப்படுகின்றன.

**அகநோக்கு முறை:** இது உளவியலின் முதன் முறையாகும். இது தற்சோதனை முறை எனவும்

கூறப்படும். தத்துவ இயலின் ஒரு பிரிவாக இருந்த வரை இதுவே உளவியலின் ஆராய்ச்சி முறையாக இருந்து வந்தது. இதில் உளவியலின் மனமே ஆய்வுக் களமாகும். இம்முறை மிகவும் பழமையானது. இதில் சில குறைகள் உள்ளன. இவற்றை விளக்கியவர்கள் வாட்சன் என்பவரும் அவர்தம் கோட்பாட்டினரு மாவர்.

குறைகள்: அகநோக்கு முறையில் (Introspection) எழுந்த முடிவுகள் இதனைப் பயன்படுத்துவோனைப் பொறுத்தனவாகும்.அவை பிறரால் சரிபார்க்க முடியா தவை. 2. பொதுவாக, முன்னர் நிகழ்ந்த அனுவபங் களை நினைவுபடுத்தி அவற்றையே இம்முறையில் ஆராய்கின்றனர். 3. நிகழ்ச்சிகளைப்பற்றி ஆராயத் தொடங்கியவுடன் அந்நிகழ்ச்சிகளின் தன்மையே மாறுபடுகிறது. எடுத்துக்காட்டாக, சினம் கொண்ட ஒருவன் சினத்தைப்பற்றி உடனேசிந்தித்தால், அவனுடைய சினம் நிலையற்றதாக மாறிவிடும். வில்லியம் சேம்சு என்னும் அறிஞர் இத்தகைய வேளைகளில் தற்சோதனை முறையைப் பயன் படுத்துவது சுழற்சி பற்றி அறிய முற்படுபவன் அதற்காகச் சுழலும் பம்பரத்தைத் திடீரென அகற்று வது போலவும், இருளின் தன்மையை அறிய முற் படுபவன் சட்டென விளக்கை ஏற்றுவது போல வும் பயனற்றது என்று கூறினார். 4. நனவு நிலைக்கு அப்பாற்பட்ட நனவிலி நோக்கங்களும் (Unconscious Motives) அனுபவங்களும் நடத்தையைப் பெரிதும் பாதிக்கின்றன என்று இக்கால உள வியலறிஞர்கள் கூறுகின்றனர். 5. இம்முறையினை அறிவு முதிர்ச்சி பெற்ற பெரியவர்களே கையாள முடியும்.

இவற்றுள் குறைபாடுகள் இருப்பினும் இம் முறையை உளவியலிலிருந்து ஒதுக்கித் தள்ளிவிட முடியாது. உளவியல் மற்ற அறிவியல்களினின்றும் ஓரளவு வேறுபட்டதாகும். எடுத்துக்காட்டாக, ஒரு வன் பெறும் புலனுணர்ச்சிகள் (Sensation) அவனுள் தோன்றும் பிம்பங்களை அறியமுடியுமே தவிரப் பிறரால் புறத்தே இருந்து நோக்கி அறிய இயலாது; எனினும், இம்முறையைப் பயன்படுத்தும் கருத்து களைக் கூடியமட்டும் பிற முறைகளைக் கொண்டு சரிபார்த்தல் வேண்டும். இம்முறையினைப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் பயன்படுத்தினால் முடிவுகள் பெருமளவு நம்புதற்கேற்றனவாக அமையும்.

உற்று நோக்கல் முறை: நடத்தையைக் கூர்ந்து கவனித்தலே உற்று நோக்கல் எனப்படும். குழந்தை கள், விலங்குகள் போன்றவற்றின் நடத்தையின் இயல்புகளை அறிய இம்முறை பயன்படும். கல்வி உளவியலில் இது சிறப்பாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அகநோக்கு முறையிலும் ஓரளவு உற்று நோக்கல் உள்ளது. இதில் தன்னுள் நிகழ்வனவற்றை உளவியல் அறிஞர் தாமே உற்று நோக்குகிறார். மாணாக்கர்தம் இயல்புகளை அறியவும் திறன் பதிவிற் கான விவரங்களைத் திரட்டுவதற்கும் ஆசிரியர்கள் உற்றுநோக்கல்முறையைப்(Observation method)பயன் படுத்துகின்றனர். உற்று நோக்கலில் சில முன்னேற் பாடுகளைச் செய்து கொள்ள வேண்டும். அவை: (அ) நோக்குவோர் பலர் ஒரே காலத்தில் ஒருவருடைய நடத்தையை உற்றுநோக்கி, உணர்ந்தவற்றைக் குறித்து வைத்துக் கொள்ள வேண்டும். பின்னர், இப் பல்வேறு குறிப்புகளை ஒப்புநோக்கி ஆராய்தல் வேண்டும். (ஆ) உற்று நோக்கப்படுபவரது நடத்தை யின் ஒரு கூறினை மட்டும் ஒரு சமயத்தில் கவனித் தல் நன்று. (இ) உற்று நோக்கப்படுவோர் தாம் பிற ரால் கவனிக்கப்படுதலை உணர்வாராயின் கூச்சத்தின் காரணமாக அவரது நடத்தை இயற்கையாக அமை யாது. ஆகவே, உற்று நோக்கப்படுவோருக்குத் தெரியாது அவரது நடத்தையை ஆராய வேண்டும்.

வாழ்க்கைத் துணுக்கு முறை: இது உற்று நோக்கல் முறையுடன் தொடர்பு கொண்டதாகும். ஒவ்வொருவர் வாழ்க்கையிலும், முக்கியமாக இளமைப் பருவத்தில் சில குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள் நடை பெறுகின்றன. இந்நிகழ்ச்சிகள் அவர்தம் மன இயல்பு களையும் ஆற்றல்களையும் தெளிவாக எடுத்துக் காட்டுவனவாம். இத்தகைய வாழ்க்கை நிகழ்ச்சி களைத் தொகுத்து வைத்தலே வாழ்க்கைத் துணுக்கு முறை எனப்படும். உலகப் பெரியார் வரலாறுகளி னின்றும், அவர்களுள் சிலர் எழுதி வைத்த வாழ்க் கைக் குறிப்புகள், சுயசரிதைகள் போன்றவற்றி னின்றும் அவர்களின் உள்ள வளர்ச்சிக்கு அடிகோலிய பல காரணிகளைப் பற்றி அறிய முடிகிறது. எடுத்துக் காட்டாக, மெக்காலே, கணித அறிஞர் இராமானுசம் போன்றோரின் இளம் பருவ வாழ்க்கை நிகழ்ச்சிகளினின்று அவர்கள் நுண்ணறிவில் மேம்பட்ட மீத்திறக் குழந்தைகளாக இருந்தனர் என்று ஊகிக்க முடிகிறது. சில பெற்றோர்களும் தங்கள் குழந்தை களைப் பற்றிய வாழ்க்கைத் துணுக்குகளைக் (Anecdotal Method) குறித்து வைத்திருப்பர். ஆனால், இத்தகைய குறிப்புகள் பெரும்பாலும் அகவயப் பட்டனவாகும்; உண்மையைச் சிறிதேனும் திரித்துக் கூறுவனவாக இருக்கக்கூடும். இத்தகைய குறிப்பு களால் ஒரு பயனையும் பெறமுடியாது.

வாழ்க்கை நிகழ்ச்சிகளைக் குறித்து வைக்கும் போது, தேவைப்படுவன தேதி, நிலைமை, நிகழ்ச்சி பற்றிய உண்மை விவரம், அதனுடன் தொடர்புடைய

வேறு நிகழ்ச்சிகள், நிகழ்ச்சிக் குறிப்புகள் ஆகியன வாம். ஆசிரியரும் தம் மாணாக்கரது பள்ளி வாழ்க் கையில் தோன்றும் முக்கிய நிகழ்ச்சிகளைக் குறித்து வைத்திருப்பாராயின், அக்குறிப்பு அம்மாணாக்கர் இயல்புகளை நன்கறியத் துணை செய்யும். இம்முறை யில் காணப்படும் சில குறைபாடுகளாவன: 1. உற்று நோக்கல் திட்பமானதாக அமைந்து, விவரங்கள் சரி யாகக் குறித்து வைக்கப்பட்டிருந்தால்தான் இம்முறை பயனுள்ளதாக அமையும். 2) உற்றுநோக்கிப் பெறப் பட்ட விவரங்களோடு தம் கருத்துகளையும் ஊகங் களையும் பலர் சேர்க்கக்கூடும். 3) விவரிக்கப்படும் நடத்தை, அது நிகழும் சமூகப் பின்னணியினின்றும் தனிப்படுத்தப்பட்டுக் குறிக்கப்பட்டால், அதன் உண்மைத் தன்மை விளங்காது. 4) பெரும்பாலும் அசாதாரண நடத்தை மட்டும் குறிக்கப்பட்டு அதுவே சாதாரண நடத்தையாகக் கருதப்படுவதுண்டு.

**பரிசோதனை முறை:** இது எல்லா அறிவியல் களுக்கும் பொதுவானது. இம்முறையால் பெறப்படும் முடிபுகள் முழுவதும் நம்பகமானவை. இவற்றைப் பிறரும் சரி பார்க்கலாம். பரிசோதனை என்பதும் உற்றுநோக்கலின் ஒரு பிரிவேயாம். இதனைக் கட்டுப் பாட்டுக்குட்பட்ட உற்றுநோக்கல் என்று கூறலாம். இயற்கைக்குத் தொடுக்கப்பட்ட வினாவாகப் பரி சோதனையினைக் குறிப்பிடலாம். ஒரு கோட்பாடு அல்லது கருதுகோளினைச் சரிபார்த்தலுக்காக ஓர் ஆராய்ச்சியாளனால் முயன்று உருவாக்கப்பட்ட நிலைமையே பரிசோதனையாகும். இக்கோட்பாடு அல்லது கருதுகோள் காரண காரியத் தொடர்பினைக் குறிப்பதாகப் பெரும்பாலும் இருக்கும். ஆராய்ச்சிக் குட்பட்ட நிகழ்ச்சியுடன் தொடர்புடைய பல்வேறு காரணிகளை முழுமையாகக் கட்டுப்படுத்த இயலு மானால்தான் அவ்வாராய்ச்சியில் பரிசோதனை முறையினைப் பயன்படுத்த முடியும்.

முதல் உளவியல் ஆய்வுக்களம் கி.பி. 1879-ஆம் ஆண்டில் உண்டு என்பவரால் இலிப்சிகு நகரில் நிறுவப்பட்டது. அக்காலந்தொட்டே 'பரிசோதனை உளவியல்' பெரும் வளர்ச்சி கண்டு வந்துள்ளது. உள வியல் பரிசோதனைக்கு ஓர் எடுத்துக்காட்டாகக் கீழ்வரும் சோதனையைக் குறிப்பிடலாம். ஒருவனது வேலைத் திறன் கவனச் சிதைவைத் தோற்றுவிக்கும் தூண்டல்களினால் எவ்வாறு பாதிக்கப்படுகிறது என் பதனை ஆராய்கின்றனர். வேலை செய்ய நல்ல சூழ் நிலையை உடைய, ஒலி புகாத ஓர் அறையில் சோதிக்கப்படுவோன் இருக்க வேண்டும். அடுத்து, அவனுக்குச் சில எளிய வேலைகள் (தட்டுதல், சதுரங் களுக்குள் புள்ளிகள் இடுதல் போன்றன) அளிக்கப்பட வேண்டும். வேலையின்போது கவனச் சிதைவு இன்றி, அவனது வேலையின் வீதம் கணக்கிடப்படவேண்டும். அடுத்து, கவனச் சிதைவைத் தோற்றுவிக்கக்கூடிய தூண்டல்கள் (ஒலியெழுப்புதல், ஊசியால் குத்துதல் போன்றன) நிமிடத்துக்கு ஒருமுறை தோற்றுவிக்கப் பட வேண்டும். இப்போது வேலையின் வேகம், வீதம் ஆகியவற்றில் எழும் மாறுதல்களை முந்திய வேகம், வீதம் ஆகியவற்றோடு ஒப்பிட்டால், எடுத்துக் கொண்ட பிரச்சினைக்குச் சோதனை வழியே முடிவு காணலாம். இச்சோதனையில் கவனச் சிதைவு தனித்து மாறும் கூறு என்றும், வேலைத்திறன் சார்ந்து மாறும் கூறு என்றும் குறிப்பிடப்படும்.

குழந்தைகளது சாதனையினைப் பாராட்டுதல், குறை கூறுதல் ஆகியன எவ்வாறு பாதிக்கின்றன என்பதனை ஆராய அர்லக்கு (Hurluck) என்பாரது பரிசோதனையினைக் கல்வி உளவியலில் இம் முறைக் கான எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம். இதில் 4 மற்றும் 6-ஆம் வகுப்புக் குழந்தைகள் 4 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, 30 கணிதப்பிரச்சினைகளைஒவ்வொரு நாளும் 15 நிமிடங்களில் தீர்க்க 5 நாட்கள் சோதிக் கப்பட்டனர். ஒரு குழு பாராட்டப்பட்டது; ஒன்று குறை கூறப்பட்டது; ஒன்றுக்கு ஏதும் கூறப்பட வில்லை; நான்காம் குழு மற்றக் குழுக்களைப் பார்த்துக் கொண்டிருந்தது. பாராட்டப்பட்ட குழு வின் உறுப்பினர்கள் சாதனையில் முன்னேறினர்.

பரிசோதனை முறை மிகச் சிறந்ததெனினும் உளவியலின் எல்லாப் பகுதிகளையும் இம் முறை கொண்டே முற்றிலும் ஆராய்வதென்பது அரிது. ஒரு நிகழ்ச்சியின் எல்லா நிலைகளையும் கட்டுப் படுத்த முடிந்தாலன்றி அதைப் பரிசோதனை முறை மூலம் ஆராய முடியாது. ஆனால், மனித நடத்தை யின் பின்னுள்ள காரணிகளை முக்கியமாக உள்ளத் துள்ளிருக்கும் காரணிகளை, முற்றும் கட்டுப்படுத்த முடியாது. இதன் விளைவாக உளவியல் பரிசோத னையில் 'எதேச்சைப் பிழைகள்' பலபோது எழும். அடிக்கடி மாறக்கூடிய அல்லது கண்டுபிடிக்க முடியாத காரணிகளால் எழும் பிழைகள் எதேச்சைப் பிழை களெனப்படும். மற்றும், சிலபோது இவற்றைக் கட்டுப் படுத்தினால் நடத்தையின் வளர்ச்சி தடைப்பட்டோ நெறிபிறழ்ந்தோ போகக்கூடும். பரிசோதனை நிலைமைகள் செயற்கையானவை; இவற்றின் முடிவு கள் பலபோது உண்மையான வாழ்க்கை நிலைமை களுக்குப் பொருந்தமாட்டா. சோதனையாளனின் தனிப்பண்புகள், எதிர்பார்ப்புகள், சார்பெண்ணங்கள் போன்றனவும் சோதனையின் முடிவுகளைப் பாதிக் கும். எனினும், இன்று இம்முறை உளவியல் ஆராய்ச்சியில் எங்கெல்லாம் பயன்படுத்தப்பட முடியு மோ அங்கெல்லாம் பயன்படுத்தப்பட்டு உள்வியல் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியுள்ளது.

வளர்ச்சி முறை: குழந்தைப் பருவம் தொடங்கி, ஒருவன் முதிர்ச்சியடையும் வரையில் அவனுடைய நடத்தைக் கோலங்கள் எப்படி வளர்ச்சியடைகின்றன, எவ்விதங்களில் மாறுபாடடைகின்றன என்பனவற்றை அறிய உதவுவது வளர்ச்சி முறையாகும். இம்முறை இருவகைப்படும். ஒரே வயதுள்ள பல குழந்தைகளைத் தொடர்ந்து பல ஆண்டுகள் உற்று நோக்குவது ஒருவகையாகும். இதற்கு எடுத்துக்காட்டாக, தியர்பார்ன் என்பாரும் இராத்னி என்பாரும் நடத்திய ஆர்வார்டு வளர்ச்சி ஆராய்ச்சியைக் குறிப்பிடலாம். இதில் 3500 குழந்தைகள் 12 ஆண்டுகள் தொடர்ச்சியாகப் பல்வேறு உடல் உளப்பண்புகளில் மதிப்பிடப்பட்டனர். பியசேயின் ஆராய்ச்சியும் இம்முறைப்பட்டதாகும். பல வளர்ச்சி நிலைகளிலுள்ளவர்களின் நடத்தையைக் கவனித்து ஒப்பு நோக்கல் மற்றொரு வகையாகும். இம்முறைக்கு எடுத்துக்காட்டுகளாகச் சர்லி, வான் ஆல்சடைன் போன்றோர் குழந்தைகளின் விளையாட்டுப் பற்றி நடத்தியுள்ள ஆராய்ச்சிகளைக் குறிப்பிடலாம். சிறு குழந்தைகளின் விளையாட்டுகள் அவர்களின் தனித்தன்மையினை வெளிப்படுத்துவனவாக அமைகின்றன என்றும், அவர்களின் வயது அதிகரிக்க அதிகரிக்க விளையாட்டுகளில் சமூகச் செல்வாக்கு அதிகரிக்கின்றது என்றும் இவை குறிப்பிடுகின்றன. 12 முதல் 15 மாதங்கள் வரையிலான சிறு குழந்தைகளின் விளையாட்டுகள் வேறோர் இலக்கினை அடைய உதவுவதாகவே அமைகின்றனவென்றும், 18 முதல் 24 மாதங்கள் வரை நடித்தல் விளையாட்டுகளும் பிறர்தம் செயல்களைப் பின்பற்றிச் செயற்படும் விளையாட்டுகளும் சிறப்பிடம் பெறுகின்றனவென்றும் சிர்லி என்பார் குழந்தை விளையாட்டின் வளர்ச்சியை ஆராய்ந்து குறிப்பிட்டுள்ளார். வளர்ச்சி முறையைப் (Developmental Method) பயன்படுத்தி விளையாட்டுகளை ஆராய்ந்த வான் ஆல்சடைன் என்பார், 2 முதல் 5 வயது வரையுள்ள குழந்தைகள் பிற குழந்தைகளோடு சேர்ந்து விளையாட விரும்புகின்றனரென்றும் குறிப்பிட்டுள்ளார்.

தனியாள் வரலாற்று முறை: மனிதரிடம் காணப்படும் நடத்தைக் கோளாறுகளின் காரணங்களைக் கண்டறிந்து, அவற்றை நீக்க இம்முறை பயன்படும். ஒருவனுடைய இப்போதைய நிலைக்கு அவனுடைய முற்கால வாழ்க்கை எவ்விதத்தில் காரணமாகிறது என்பது தனியாள் வரலாற்று முறையில்(Case-history Method) ஆராயப்படுகிறது. இதை 'மருத்துவ முறை' என்றும் கூறுவர். பள்ளிகளில் மாணாக்கர் சிலரிடம் காணப்படும் நெறி பிறழ்வு, பள்ளிப் பாடங்களில் பிற்பட்ட நிலை போன்றவற்றின் அடிப்படைக் காரணங்களை உணர்ந்து, இத்தகைய நிலைகளைப் போக்க இம்முறை உதவுகிறது. எனினும், இம்முறையினைச் சிறப்பாகக் கையாள்வதற்குத் தேவைப்படும் திறனையும் காலத்தையும் பொதுவாக ஆசிரியர்கள் பெற்றிருக்க மாட்டார்கள். இதற்கு ஈடு செய்வதற்காகவே மேலைநாட்டுப் பள்ளிகளில் குழந்தைகளுக்கு நல்வழி காட்டும் நிலையங்கள் உள்ளன. இந்நிலையத்தினர் நெறிபிறழ் நடத்தையுள்ள குழந்தைகளின் வரலாற்றினைத் தொகுத்து ஆராய்ந்து, அந்நடத்தையை நீக்கும் முறைகளையும் ஆசிரியர்களுக்கு எடுத்துக் கூறுவர்.

பள்ளிகளில் இம்முறையைப் பயன்படுத்தும்போது கீழ்க்காணும் படிகள் காணப்படும். அ) மாணாக்கனுக்கு உதவி தேவைப்படுகிறது என்பதனைக் குறிப்பிடும் தொடக்க நிலை உற்றுநோக்கல். ஆ) மாணாக்கனின் பின் நடத்தைப் பிறழ்வினைப் போக்க அறிவுரை பகர்வோர், உளவியலார், உள மருத்துவர் போன்றோரது உதவியை நாடிப் பெறல். இ) மாணாக்கனின் பிரச்சினைகளை ஆராய்தல். இப் படியில் அதன் இப்போதைய நிலை, முந்திய வரலாறு ஆகிய இரண்டும் இணைந்த வகையில் ஆராயப்படும். ஈ) இவ்வாராய்ச்சியின் பயனாக மாணக்கனது நடத்தைக்குப் பின்னமைந்துள்ள காரணிகள், ஊக்கிகள் போன்றவை பற்றிய முடிவெடுத்தல். உ) இம்முடிவுகளின் அடிப்படையில் மாணாக்கனைச் சீர்திருத்த உதவக்கூடிய சில கோட்பாடுகளை வகுத்தல். ஊ) தொடர் வேலை தேவைப்பட்டால் விளைவுகளை மீண்டும் ஆராய்ந்து புதிய கோட்பாடுகளை வகுத்தல்.

வினா வரிசை முறை இன்று உளவியலிலும் சமூகவியலிலும் பெருமளவில் பயன்படுத்தப்படும் முறையாகும். ஆராய்ச்சிக்குட்பட்ட நிகழ்ச்சி பற்றிய பல சிறு வினாக்கள் வினா வரிசையில் கொடுக்கப்பட்டிருக்கும். இவ்வினாக்களுக்குப் பலர் அளிக்கும் விடைகளை ஆராய்வதன் மூலம் இந்நிகழ்ச்சி பற்றிய விளக்கம் எழும்.

இம் முறையை உளவியல் ஆராய்ச்சிக்கு முதன் முதல் பயன்படுத்தியவர் பிரான்சிசு கால்டன் என்பவராவர். இம்முறையின் வழியே இவர் சாயல் அல்லது பிம்பத்திறனில் காணப்படும் தனியாள் வேற்றுமைகளை விளக்கினார்.

குழந்தைப் பருவத்தினரின் இயல்புகளைக் கண்டறிய கி.பி. 1882-ஆம் ஆண்டிலேயே இசுடான்லி ஆல் என்பாரும் இம்முறையைப் பயன்படுத்தினார். குழந்தைகளின் பொய்கள், அச்சங்கள், கனாக்கள், விளையாட்டுப் பொருள்கள், உடலியக்கங்கள் போன்ற

வற்றைப் பற்றிய விவரங்களை இம்முறை வழியே இவர் பெற்றார்.

வினாவரிசை முறை (Questionnaire Method) ஓர் எளிய முறையாகத் தோன்றினாலும், இதனைப் பயன்தரத் தக்க வகையில் கையாளுதல் ஓரளவு கடினமானதாகும். இம்முறையின் வழியே உண்மை யான முடிவுகளைப் பெற வேண்டுமாயின் இதில் குறிக்கப்பட்டுள்ள வினாக்கள் தெளிவானவையாக இருக்க வேண்டும்; இவற்றிற்கான விடைகளும் 'ஆம்', 'இல்லை', 'நிச்சயமான விடையைச் சொல்ல இய லாது' போன்று சிறியனவாக அமையவேண்டும். பல திறப்பட்ட, பல நிலைப்பட்ட மனிதர்களால் வினா வரிசைக்குத் தரப்படும் விடைகள் ஆராயப்பட வேண்டும். விடையளிப்போரும் நேர்மையாகப் பதிலளிக்க வேண்டும். விளையாட்டுக்காகத் தமக்குத் தோன்றிய விடைகளை எழுதியனுப்பக் கூடாது. சமூகப் பிரச்சினைகள் பற்றிய வினாக்களுக்கு விடை யளிப்போர்தம் சொந்தக் கருத்துகள் எத்தகையன வாயிருப்பினும், சமுதாயத்தினர் நேர்மையென ஒப்புக்கொள்ளும் கருத்துகளையே அவர்கள் விடை களாகக் கூறுவது இயல்பாகும். இத்தகைய விடை களும் பயனற்றவை.

பொதுவாக, வினாவரிசை முறையைப் பின்வரும் சூழல்களில் பயன்படுத்தலாம்: 1. குறுகிய காலத்துக் குள் பல வினாக்களுக்கு விடை பெற வேண்டிய நிலைமை. 2. ஆராய்ச்சிக்கு உதவக்கூடியவர்களை நேரடியாக அணுக இயலாத நிலைமை. 3. உடனடி யாகக் கிடைக்காத அல்லது தேவைக்கேற்பத் தொகுக்கப்படாத விவரங்களைத் தேடிப் பெற வேண்டிய நிலைமை. 4. தனிப்பட்டோரோடு நெருங் கிய தொடர்பற்ற, பொதுப்படையான விவரங்கள் தேவைப்படும் நிலைமை. 5. தனி மனிதர்களை ஒருவரோடொருவர் ஒப்பிடவேண்டிய நிலைமை. 6. குழுக்களை ஒப்பிட்டு முடிவெடுக்க வேண்டிய நிலைமை.

வினா வரிசையில் காணப்படும் வினாக்கள் ஆராய்ச்சியின் நோக்கம் நிறைவேறும் வகையில் அமைக்கப்பட வேண்டும். பள்ளிகளில் ஆசிரியர்கள் பின்வரும் நோக்கங்களை அடைவதற்காக வினா வரிசைகளைப் பயன்படுத்தலாம்: 1. மாணாக்கர்களின் கல்வி வளர்ச்சியில் நேர்முகமாகவோ மறைமுக மாகவோ செயற்படும் பல்வேறு காரணிகள் பற்றிய விவரங்களைத் தேடிப் பெறுதல். 2. கல்வியின் இலக்கு களாகக் கொள்ளப்பட்டவை எந்த அளவுக்கு எட்டப் பட்டுள்ளன என்பதனை மதிப்பிடல். 3. கற்றலின் விளைவாக எழுந்துள்ள திறன்கள், கவர்ச்சிகள், மனப்பான்மைகள் ஆகியவற்றை மதிப்பிடல். 4. ஆசிரியர்கள், மாணாக்கர்கள், பள்ளிச் செயல்கள் போன்றவை பற்றி முறையான விவரங்களைப் பெறு தல். 5. கல்வி ஏற்பாட்டை நன்கமைக்கத் தேவைப் படும் விவரங்களைப் பெறுதல். 6. குறிப்பிட்ட ஒரு பாடப்பகுதியின் கல்விப்பயன் பற்றி மதிப்பிடத் தேவைப்படும் விவரங்களைப் பெறுதல்.

வினா வரிசையில் காணப்படும் வினாக்கள் தெளி வானவையாகவும், ஒவ்வொரு வினாவும் ஒரு மையக் கருத்தை மட்டும் கொண்டதாகவும் அமைய வேண்டும். அதிக எண்ணிக்கையிலான வினாக்கள் விடையளிப்போரது ஆர்வத்தைக் குறைக்கும். வினா வரிசையில் காணப்படும் வினாக்களைத் தேவையான உள்தலைப்புகளில் தொகுத்து அமைக்கவேண்டும். ஒரு பொருள் பற்றிய வினாக்கள் யாவும் ஓர் உள்தலைப் பில் ஒரே பகுதியாக அமைக்கப்பட்டால், அது விடை யளிப்போரிடம் அப்பொருள் பற்றிய நல்ல மனநிலை யைத் தோற்றுவிக்கும். கவர்ச்சியும் தெளிவுமுள்ள வகையில், விடையளிக்கத் தெளிவான குறிப்புகளோடு வினாவரிசை அச்சிடப்பட வேண்டும். ஒவ்வொரு வினா வரிசையிலும் தலைப்பு, விடையளித்தற்கான குறிப்பு, விடையளிப்போர் பற்றிய அடிப்படை விவ ரங்கள், அடுத்து வினாக்கள் என்ற வரிசை முறை காணப்பட வேண்டும். நல்ல புறச் சூழ்நிலையில் வினாவரிசை பயன்படுத்தப்பட வேண்டும். ஆளுமை வினாவரிசை, மனப்பான்மை வினாவரிசை போன்ற பல வினாவரிசைகள் இன்று உளவியல் ஆராய்ச்சிகளில் பயன்படுத்தப்படுகின்றன. வாக்கெடுப்பு என்பதும் வினாவரிசை முறையின் ஒருவகையேயாகும்.

புள்ளி இயல் முறைகளும் உளவியலாராய்ச்சியில் கையாளப்படுகின்றன. இம்முறைகளைப்பற்றிய விளக் கங்கள்அனைத்தும் வேறு இடங்களில் இவை பயன் படுத்தப்படும் உளவியற் பகுதிகளில் ஒரு வகையே யாகும்.

வேற்றுமை முறை: கல்வி உளவியல் ஆராய்ச்சிகளில் பயன்படுத்தப்படும் முறைகளுள் ஒன்று. பரிசோதனை முறையில் ஆராயப்படும் நிலைமையில் குறிப்பிட்ட ஒரு கூறினைப் புதிதாகப் புகுத்தியோ ஏற்கெனவே காணப்படும் ஒன்றினை மாற்றியோ சோதனையாளர் செயற்படுகிறார். இவ்வாறு புகுத்தப்படும் அல்லது மாற்றப்படும் கூறினைத் தனித்து மாறும் கூறு என்பர். ஆனால், இத்தகைய குறுக்கிடுதல் சில ஆராய்ச்சி நிலை மைகளில் இயலாமற் போகக்கூடும். சிலபோது இயலு மெனினும் நடைமுறையில் பல சிக்கல்களைத் தோற்றுவிப்பதாக அமையக்கூடும். எடுத்துக்காட் டாக, வானவியல், புவியியல் போன்றவற்றுடன்

தொடர்புடைய ஆராய்ச்சிகளில், மேற்குறிப்பிடப் பட்டநிலை பலபோது காணப்படும்.ஒரு விண்கோளின் சுற்றல் பாதையில் சிறிது மாற்றம் செய்து இதன் விளைவு யாது எனச் சோதித்தல் இயலாது. பூமியின் வளர்ச்சியின் தொடக்க காலங்களில் ஒன்றான பனிக் காலத்தில் பூமியில் எத்தகைய நிலை காணப்பட்டது என்பதனை அறிய, பனிக்காலச் சூழ்நிலையை இன்று தோற்றுவிக்கவியலாது. உளவியல் ஆராய்ச்சிக்கான பிரச்சினைகள் பலவும் திட்டமான, முறைப்பட்ட பரிசோதனைக்கு உட்படுத்த இயலாத தன்மையினைக் கொண்டிருக்கக்கூடும். இவற்றைப் பரிசோதனை முறை வழியே ஆராய அதிகக் காலம், முயற்சி, பணச் செலவு ஆகியன தேவைப்படலாம்; அல்லது பரி சோதனையின் விளைவாகச் சோதிக்கப்படுவோருக்கு ஏதேனும் தீங்கு நேரிடலாம்.

மனவெழுச்சிச் சமநிலையைப் பெற்றுள்ள குழந் தைகளை இச்சமநிலையைச் சீர்குலைக்க வல்ல குடும்பச் சூழ்நிலையில் வளரச்செய்து, இதன் விளை வாக இத்தகையோரிடம் உளத்தடுமாற்றங்கள் எழு வதற்கான அறிகுறிகள் எழுகின்றனவா எனப் பரிசோ தனை வழியே ஆராய இயலுமெனினும், அது விரும் பத் தக்கதன்று. பரிசோதனையினால் விளையக்கூடிய தீங்கு மிகச் சிறிதென்றாலும், அதில் ஈடுபடுவது தவ றாகும். இத்தகைய நிலைமைகளில் வேற்றுமை முறை யினை ஆராய்ச்சியாளர்கள் பயன்படுத்துவர். ஆரா யப்படும் பிரச்சினையில் குறுக்கீடின்றி இயற்கை யாகவே காணப்படும் இரு மாறுபட்ட அல்லது வேறு பட்ட நிலைகளை ஒப்பிட்டு நோக்கி முடிவெடுத்தல் வேற்றுமை முறை எனப்படும். பிறக்கும்போது உட் கொள்ளப் போதிய அளவு பிராணவாயு இன்றிக் காணப்படும் நிலை குழந்தைகளின் வளர்ச்சிக்கு நிரந்தரமாக ஊறு விளைவிக்கக்கூடியதா என்பது பற்றி முடிவெடுக்க, தவிர்க்கவியலாக் காரணங்களி னால் இந்நிலையில் பிறந்து வளரும் குழந்தைகளைப் பிற குழந்தைகளுடன் ஒப்பு நோக்கி முடிவு செய்தல் வேற்றுமை முறைக்கு எடுத்துக்காட்டாகும்.

பரிசோதனை முறையைப் பயன்படுத்த முடியாத நிலைமைகளில் மட்டுமன்றி, குழந்தைகளின் தொடர் வளர்ச்சியில் அவர்கள் உடற்பண்புகளிலும் உளப் பண்புகளிலும் எவ்வகை மாற்றங்கள் எழுகின்றன என் பதை ஆராய்தலுக்கும் வேற்றுமை முறை பயன்படும். இக்கோணத்திலிருந்து பார்க்கும் போது, வளர்ச்சி முறையின் அடிப்படையாக வேற்றுமை முறை விளங் குகிறது. பரிசோதனையில் சோதனையாளன் தனது ஆராய்ச்சிக்கு விடையளிக்கத் தக்க நிலைமையைத் தானே தோற்றுவிக்கிறான். ஆனால், வேற்றுமைமுறை யில் இயற்கையாகக் காணப்படும் நிலையினைத் தேடிக் கண்டுபிடித்து, அதனை ஆராய்ச்சியாளன் பயன்படுத் திக்கொள்கிறான். மனிதரிடையே இயல்பாகக் காணப்படும் தனியாள் வேற்றுமைகள் வேற்றுமை முறையின் தனித்து மாறும் கூறுகளாகின்றன. புள்ளி யியல் முறைகளின் தொடர்புள்ள இணைப்பு முறை ஆராய்ச்சிகளும் வேற்றுமை முறைக்குள் அடங்கும். நுண்ணறிவு, நாட்டம், ஆளுமை போன்ற பல பிரிவு களிலான ஆராய்ச்சிகள் வேற்றுமை முறையினடிப் படையில் இன்று செய்யப்படுகின்றன. வேற்றுமை முறையிலும் ஆராயப்படும் குழு, ஒப்பிட்டு முடிவெ டுக்க உதவும் கட்டுப்பாட்டுக் குழு ஆகிய இரண்டை யும் பயன்படுத்தினால் பெறப்படும் முடிவு மேலும் நம்பகமானதாக இருக்கும்.

**கள ஆராய்ச்சி முறை:** ஒரு நிகழ்ச்சியை அது நிகழும் இயற்கையான சூழ்நிலையிலேயே ஆராய்தல் கள ஆராய்ச்சி முறை (Field Study Method) ஆகும். பெருமளவு உற்று நோக்குதலுடன் தொடர்பு கொண்டது. சமூக உளவியலிலும், கல்வி உளவியலி லும் இம்முறை பெருமளவு பயன்படுத்தப்படுகிறது. (உ-ம்) ஒரு தொழிற்சாலையில் எழுந்த வேலை நிறுத்தத்தை அங்குச் சென்று உற்றுநோக்கி ஆராய்தல்.

**உளவியல் கோட்பாடுகள்** ஒன்றுக்கொன்று கருத்துகளில் மட்டுமன்றி ஆராய்ச்சி முறைகளிலும் மாறுபடுகின்றன. உளவியல் ஏனைய அறிவியற்கலை களை விடக் காலத்தால் பிந்தியதாக இருப்பது தான் இத்தகைய கோட்பாடுகள் தோன்றக் கார ணம். இளம் அறிவியற்கலையான உளவியலில் இவ் வகை மாறுபட்ட கொள்கைகள் தோன்றக் கார ணம், அவ்வியல் இன்னும் முழு முதிர்ச்சியடையா நிலையிலிருப்பதுதான். உளவியலின் ஆராய்ச்சிப் பொருளான மனிதநடத்தை சிக்கலான தன்மை யுடையது. திட்டமான சோதனைகள் நடத்தி அதன் உண்மை இயல்புகளை வரையறுப்பது அரிது. மனித நடத்தையைப் பல கோணங்களிலிருந்து நோக்க முடி யும். இக் கொள்கைகள் யாவும் மனிதனின் இயல்பு களையும் நடத்தையையும் ஒரு குறிப்பிட்ட கோணத் திலிருந்து ஆராய்ந்தறிய மேற்கொள்ளப்பட்ட முயற் சிகளின் விளைவுகளேயாகும். உளவியல் கோட்பாடு களுள் அமைப்புநிலைக் கொள்கை, செயல்நிலைக் கொள்கை, நடத்தைக் கொள்கை, நோக்கக் கொள்கை, உளப்பகுப்புக் கொள்கை, முழுநிலைக் காட்சிக் கொள்கை போல்வன முக்கியமானவை.

**அமைப்புநிலைக் கொளகை:** உண்டு, திட்ச னர் போன்றோரின் கோட்பாடு அமைப்புநிலைக் கோட்பாடு எனப்படும். இதையே இருத்தல்

கொள்கை என்றும் அகநோக்கு உளவியல் என்றும் கூறுவர். உளவியலில் பழமையான கோட்பாடு இதுவே இக் கொள்கையின்படி உள்ளத்தில் உள்ள நிலைகளும் அவற்றின் அளவுகளுமே உளவியலின் ஆராய்ச்சிப் பொருள்களாகும். உள்ளம் எனப்படுவது நனவு உள்ளத்தையே குறிப்பதாகும். புலனுணர்ச்சிகள், சாயல்கள், மனவுணர்ச்சிகள் போன்ற பல்வேறு கூறுகளைக் கொண்ட அமைப்பே உள்ளமாகும். இவற்றின் இயல்புகளையும் அளவுகளையும் அறிவதே உளவியலின் இறுதிநோக்கமாகும். இக்கோட்பாடு அகநோக்கு முறையே உளவியல் ஆராய்ச்சிகளுக்குச் சிறந்த முறையென்று கருதுகிறது. அமைப்பு நிலைக் கோட்பாடு இக்கால உளவியல் உலகில் மிகச் சிறிய செல்வாக்கையே பெற்றுள்ளது.

**செயல்நிலைக் கொள்கை:** இக் கோட்பாட்டை வில்லியம் சேம்சு, சாண்டுயி போன்ற அறிஞர்கள் வலியுறுத்தினர். உள்ளத்தின் அமைப்புப் பற்றி மட்டும் ஆராயும் உளவியல் பயனற்றது என்று இக் கோட்பாட்டினர் கருதுகின்றனர். உண்மையான உளவியல் உள்ளச் செயல்களினால் விளையும் பயன்களைப் பற்றியும், இச்செயல்கள் மாறுபடும் சூழ்நிலைக்கேற்றவாறு எவ்விதம் மாறுகின்றன என்பது பற்றியும் ஆராய்ந்தறிய முற்பட வேண்டும். இதற்கு அகநோக்கு முறையுடன் புறக்காட்சி முறைகளையும் பயன்படுத்தலாம். இக்கோட்பாட்டின் பயனாகவே இக்கால உளவியலில் ஊக்குவித்தல், ஓர் இலக்கடையச் செயற்படல் போன்ற கருத்துகள் சிறப்பிடம் பெற்றுள்ளன.

**நடத்தைக் கொள்கை:** சான் வாட்சன் என்னும் அமெரிக்க உளவியல் அறிஞர் இப்பிரிவைத் தோற்றுவித்தார். உளவியல் மனிதனின் வெளிப்படையான அல்லது புறத்தே இருந்து நோக்கி ஆராயக்கூடிய நடத்தையை மட்டுமே அறியமுற்படவேண்டும் என்னும் நோக்கமுடையது இது. உளவியலின் ஆராய்ச்சிப் பொருளான இவ்வகை நடத்தை எளிதில் பிறரால் காணக்கூடியதாகவோ உடலுள் நிகழும் நுணுக்கமான நடத்தையாகவோ இருக்கலாம். நடத்தைக் கொள்கையினர் மனித நடத்தைகளை இயக்க நடத்தைகள், குரல் நாண்களின் அசைவுகள், உள்ளுறுப்புகளின் இயக்கத்தினின்றும் எழும் நடத்தைகள் என்று மூவகைப்படுத்துகின்றனர் உள்ளத்தின் செயல்கள் எனப்படுவனவும் உடற்பகுதிகளின் இயக்கங்களின் விளைவுகளே என்கிறார் வாட்சன். எடுத்துக்காட்டாக, குரல் நாண்களின் நுட்பமான துடிப்பே 'சிந்தனை' யின் அடிப்படையாகும் என்பதைக் கூறலாம். நடத்தையின் அடிப்படை, மறிவினைகள் போன்ற இயற்கையாக உள்ள தூண்டல் நிலையுறுத்தலால் மாறுபட்டு, வளர்ச்சியுற்ற மனிதனிடம் காணப்படும் பலதரப்பட்ட நடத்தைக் கோலங்களாகப் பரிணமிக்கின்றன என்று இப்பிரிவினர் கருதுகின்றனர்.

ஆக்கநிலைப்படல் என்னும் கருத்து பாவ்லவு (Pav lov)என்பவரால் முதன்முதலில் வலியுறுத்தப்பட்டது. மனிதனின் நடத்தையை அறிய உள்நோக்குமுறை உதவாது. புறவயமுறைகள், பரிசோதனை ஆகியவற்றின் மூலமே அது பற்றிய உண்மைகளை அறிய இயலும் என்பர் இப்பிரிவினர். சுருங்கக்கூறின், இப்பிரிவினர் மனிதனின் நடத்தையைச் சடக் கொள்கைக் கண் கொண்டு நோக்குகின்றனர். இவர்கள் மனித உடல் ஒன்றே உண்மைப் பொருள் என்று நினைக்கின்றனர்.

**நோக்கக் கொள்கை** நடத்தைக் கொள்கைப் பிரிவுக்கு நேர் எதிரானது. இதை 'ஆர்மிகக் கோட்பாடு' என்றும் கூறுவர். வில்லியம் மக்டூகல் என்பவர் இப்பிரிவைத் தோற்றுவித்தார். உயிரிகள் சடப்பொருள்களாலான இயந்திரங்களைப் போன்றவை அல்ல என்று இவர் கருதுகிறார். இயந்திரங்கள் எந்நிலையிலும் ஒரே மாதிரியாகச் செயற்படுகின்றன. ஆனால், ஓர் எளிய உயிரியின் நடத்தையும் பலவகைப்பட்டதாகக் காணப்படுகிறது. ஒரேவிதமான தூண்டல் பல்வேறு காலங்களில் மாறுபட்ட துலங்கல்களை உயிரிகளிடத்துத் தோற்றுவிக்கின்றது. இதன் காரணம் அவற்றின் உள்ளிருந்து அவற்றின் நடத்தையை ஊக்குவிக்கும் சக்தியேயாகும். நடத்தை என்பது ஒரு நோக்குடைச் செயலாகும். அதன் அடிப்படையில் குறிக்கோள்களும் இலக்குகளும் உள்ளன. இவற்றை அடையவே நடத்தை எழுகிறது. நடத்தையின் காரணம் உயிரிகளுள் காணப்படும் ஓர் உயிர் உந்தல் ஆகும். இதனால் உந்தப்பட்டு, மனிதனும் அவனுக்குக் கீழ்நிலைப்பட்ட எல்லா உயிரினங்களுமே செயற்படுகின்றன. ஆகையால், மனிதனின் நடத்தை பற்றிய உண்மையை அறிய அவனை உள்ளிருந்து ஊக்குவிக்கும் பல இயல்பூக்கங்களின் தன்மையை அறிதல் வேண்டும். நடத்தையின் போக்கை நிருணயிப்பவை இயற்கையின் ஊக்கிகளாக அமைந்துள்ள இவ்வியல்பூக்கங்களே ஆகும். இயல்பூக்கத் தத்துவமே இக்கொள்கையின் அடிப்படையாம்.

**உளப்பகுப்புக் கொள்கை:** சிக்மண்டு பிராய்டு(கி.பி. 1856-1939) என்பவர் இதைத் தோற்றுவித்தார். இப்பிரிவில் தொடக்கத்தில் இவருடன் யூங்கு (1875-1961) என்பாரும், ஆட்லர் (1870-1937) என்பாரும் சேர்ந்து பணியாற்றினர். உளப்பகுப்புக் கொள்கையின் அடிப்

படைக் கருத்துகளாவன: (1) மனித நடத்தையின் இயல்பினையும் போக்கினையும் நிருணயிப்பதில் அவனது நனவிலிஉள்ளம் பெரும்பங்கு கொள்கிறது. (2) நனவிலி உள்ளத்தில்ஒருவரால்நேரடியாக உணர முடியாத பல்வேறு எண்ணங்கள், எழுச்சிகள், நோக்கங்கள், அனுபவங்கள், விருப்பங்கள் ஆகியன மறைந்துள்ளன. இவை பெரும்பாலும் நனவு நிலையிலிருந்து நனவிலி நிலைக்குள் நசுக்கப்பட்டவையாகும். (3) இவை பால் உணர்ச்சியுடன் தொடர்புடையவை. இவ்வுணர்ச்சி சிறு குழந்தைகளிடத்தும் காணப்படுகிறது. (4) ஆண்மை வளர்ச்சியின் போக்கைக் கட்டுப்படுத்துவதில் இளம்பருவ அனுபவங்கள் பெரும்பங்கினை வகிக்கின்றன.

மகிழ்ச்சி பெறுதலையே இலக்காகக் கொண்ட பண்படாச் சக்தியினைப் பெற்றே குழந்தை பிறக்கிறதென்றும், வெளியுலகத் தொடர்புகளின் விளைவாக இதனின்றும் 'தான்' என்ற உணர்வு எழுகிறதென்றும், இதன் ஒரு சிறு பிரிவு மேலும் வளர்ச்சி பெற்று மனச்சாட்சி அல்லது உள்ளுணர்வு எனப்படும் பிரிவாக வளர்ச்சிபெறுகிறது என்றும் பிராய்டு கருதினார். நெறிபிறழ் நடத்தையுள்ள மாணாக்கரைச் சீர்திருத்துவதில் உளப்பகுப்புக் கொள்கையின் கருத்துகள் ஆசிரியருக்கு உதவுகின்றன.

முழுநிலைக்காட்சிக் கொள்கை: இதனைக் 'கெசுடால்டுக் கொள்கை என ஆங்கிலத்தில் கூறுவர். இதைத் தோற்றுவித்து இதன் வளர்ச்சியில் பெரும் பங்கு கொண்டவர்கள் வான் ஏரென் பெல்சு மாக்சு வெர்திமர்(கி.பி. 1880-1943), காப்கா(கி.பி.1886-1941), கோலர் போன்ற உளவியல் அறிஞர்கள் ஆவர். முழுநிலைக் காட்சிப் பிரிவினர் உளவியல் முறையில் ஒரு புதுமையைப் புகுத்தியவர்கள். பிற கொள்கையினர் மனிதநடத்தையின் இயல்புகளைப்பற்றிஅறிய அதைச் சிறுகூறுகளாக்கி ஆராய்ந்து வந்தனர். இம்முறையை 'அணுவாக்கல்முறை' என்பர். முழுமையான நடத்தை சிறுகூறுகளின் தொகுப்பே என்றும், அவற்றுள் ஒரு கூறின் இயல்புகளை அறிந்தால் அவ்வறிவே நடத்தையின் முழு இயல்புகளைப்பற்றி அறியப் போதுமானதாகும் என்றும் இம்முறையைப் பின்பற்றியோர் கருதினர். ஆனால், முழுநிலைக்காட்சிப் பிரிவினரோ இக்கருத்தை ஏற்கவில்லை. முழுமையான ஒரு நிகழ்ச்சியினைப் பகுத்துத் துண்டங்களாகப் பகிர்ந்து, அப்பகுதிகளின் தன்மையை அறிவதன் மூலம் அம் முழுமையின் இயல்பை அறிய இயலும் என்று எண்ணுவது முற்றிலும் தவறான கருத்தாகும் என்பது இவர்களது கொள்கை.

ஒரு முழுப்பொருள் அதன் பகுதிகளின் வெறும் தொகுப்பு அன்று; அதற்கென்றே ஒரு தனி அமைப்பும், தனியான இயல்புகளும், அது செயற்படத் தனிப்பட்ட விதிமுறைகளும் உள்ளன. இவற்றை அதன் பகுதிகள் பற்றிய அறிவின் துணைக்கொண்டு மட்டும் உணர முடியாது. இக் கொள்கையினர் தம் கொள்கையை மனிதநடத்தை ஆராய்ச்சிக்குப் பயன்படுத்துகின்றனர். உளச்செயல்கள் ஒவ்வொன்றும் ஒழுங்காக அமைந்த ஒரு முழுமையாகும். ஆகவே, இவற்றின் உண்மை இயல்புகளை அறிய இவற்றை முழுமையாக நோக்கி ஆராயவேண்டுமே தவிர, புலனுணர்ச்சிகள், மறிவினைகள் என்று துண்டங்களாகப் பகுத்து ஆராய்தல் பயனற்றதாகும். புலன்காட்சி, கற்றல் போன்ற உளவியல் பிரிவுகளுள் 'கெசுடால்டு' முறையைப் பயன்படுத்திப் பல உண்மைகளை இப்பிரிவினர் தெரிந்து வெளிப்படுத்தியுள்ளனர்.

இசுபியர்மேன் (கி.பி. 1863-1940) என்பாரின் அறிதல் வளர்ச்சி பற்றிக் கூறும் உளவியல் பிரிவும் உளவியலின் ஒரு கோட்பாடாகச் சிலரால் கருதப்படுகிறது.

உளவியல் கோட்பாடுகள் எல்லா வகையிலும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவை என்று கூறமுடியாது. பல செய்திகளில் இவற்றுக்குள் கருத்து ஒற்றுமை காணப்படுகிறது. இன்றைய உளவியல் அறிஞர்களுள் பெரும்பான்மையினர் மனித நடத்தையை விளக்க உதவும் கருத்துகளை அவை எக் கோட்பாட்டினரால் கூறப்பட்டிருப்பினும் ஏற்றுக் கொள்கின்றனர். இக்கால உளவியலறிஞர்களை நடத்தைக் கொள்கையினர், நோக்கக் கொள்கையினர் என்று வகைபடுத்திக் கூறுவதைக் காட்டிலும், கல்வி உளவியலார், சமூக உளவியலார், மருத்துவ உளவியலார் என்று வகைப்படுத்தலே பொருத்தமாகும். கல்வியாளர்களும், ஆசிரியர்களும் நடுநிலையில் நின்று, எல்லாப் பிரிவுகளினின்றும் உண்மையைச் சீர்தூக்கி ஏற்ற நிலைகளுக்குப் பொருத்திப் பார்த்து பயனடையலாம். பல்வகைப்பட்ட பிரச்சினைகளின் இயல்புகளைத் தெளிவாக உணர ஒவ்வொரு கோட்பாடுமே ஓரளவு அவர்களுக்கு உதவலாம்.

உளவியல் பிரிவுகள்:

பொது உளவியல்: இது எல்லா உளவியல் பிரிவுகளுக்கும் அடிப்படையானபொதுக் கருத்துகள் பற்றியது. பொது உளவியல் (General Psychology) முதிர்ச்சி அடைந்த சாதாரண மனிதர்களின் நடத்தையை விவரிக்கிறது. இப்பிரிவினுள் புலன்காட்சியும், மன உணர்ச்சிகளும், எழுச்சிகளும், ஊக்குவித்தல், கற்றல், சிந்தித்தல் போன்றவையும் அடங்கும். இப்

பிரிவு தனியாட்களிடையே காணப்படும் வேற்றுமைகளின் தன்மை, அவற்றின் அளவு, அவை தோன்றுதற்கான காரணங்கள் போன்றவற்றையும் ஆராய்கிறது.

குழந்தை உளவியல்: குழந்தையின் வளர்ச்சி, இவ்வளர்ச்சியில் அதன் மரபுநிலை, சூழ்நிலை ஆகியவற்றின் பங்கு, குழந்தையிடம் காணப்படும் திறன்கள் ஆகியவற்றை அளவிடும் முறைகள், குழந்தை தனது சூழ்நிலையுடன் பொருத்தத்தினை அடையும் வகைகள் போல்வனவற்றை ஆராயும் உளவியற் பிரிவு குழந்தை உளவியல் (Child Psychology) எனப்படும்.

நெறிபிறழ் உளவியல்: சமநிலையினின்றும் பிறழ்ந்து நரம்பு நோய்கள், உளத்தடுமாற்றங்கள் போன்ற கோளாறுகளால் பீடிக்கப்பட்ட மனிதர்களின் அசாதாரண நடத்தைகளை விவரிக்கும் பிரிவு நெறிபிறழ் உளவியல் (Abnormal Psychology)ஆகும். இப்பிரிவு உளமருத்துவ இயலுடன் இணைந்ததாகும். இதன் வளர்ச்சிக்குப் பிராய்டின் உளப்பகுப்புக் கோட்பாடு பெரிதும் உதவியுள்ளது.

ஒப்புமுறை உளவியல்: மனிதனின் நடத்தையுடன் பிற விலங்கினங்களின் நடத்தைகளை ஒப்பிட்டு, இவற்றினுள் காணப்படும் தொடர்புகளையும் வேறுபாடுகளையும் ஒப்புமுறை உளவியல் (Comparative Psychology) அறிகிறது.

சமூக உளவியல்: ஒரு குழுவின் உறுப்பினராக உள்ள தனிமனிதனின் நடத்தை பற்றியும், குழுக்களுள் காணப்படும் தொடர்புகள் பற்றியும் இப்பிரிவு விவரிக்கிறது. குழுக்களுக்குள் பரவியுள்ள மனப்பான்மைகள் சார்பெண்ணங்கள் போன்றவையும் சமூக உளவியலில் (Social Psychology) ஆராயப்படுகின்றன. இவ்வுளவியல் பிரிவு ஒரு தனி பிரிவாகத் தோன்றி வளர்ச்சியடைய முக்கிய காரணமாக இருந்தவர் வில்லியம்மக்டுகல் ஆவார்.

நடைமுறை உளவியல்: தொழில் பற்றிய உளவியல் விளம்பரம் தொடர்பான செய்திகளை நடைமுறை உளவியல் (Applied Psychology) ஆராய்கிறது.

எம்.இரா.&சா.சா.

துணை நூல்கள்:

Boaz, G.D., Development of Modern Psychology, Journal of the Annamalai University, Vol. XXIII, Annamalainagar, 1961.

Klienberg, O., Social Psychology, Henry Holt, New York, 1954.

Wenger, M.A. etal., Physiological Psychology, Holt Rinehart and winston, New York, 1956.

**உளவியல்சார் இனக்குழுவியல்:** பண்பாட்டில் ஒவ்வொரு தனிமனிதனும் தன் பண்பாட்டின் வரைமுறைகளையும் நடத்தைமுறைகளையும் தான் அப்பண்பாட்டின் ஓர்உறுப்பினராகும்போது கற்றுக்கொள்ளும் முறைகளை (Enculturation) ஆராய்வது பண்பாட்டு மானிடவியல் ஆகும். இதன் உட்பிரிவே உளவியல்சார் இனக்குழுவியல் (Psychoethnography) எனப்படும்.

தம் பண்பாட்டின் குணநலன்கள் அனைத்தையும் ஒருவன் தன் முற்கால வளர்நிலைப் பருவத்தில் கற்கும்போது, அவன் சிந்தனைகள், மதிப்புகள்(Values), செயல்கள் ஆகியன தன் சமுதாயத்திலுள்ள உடனொத்த உறுப்பினரோடு ஒத்தமையாமல் போவதுண்டு. இத்தன்மையின் போக்கிற்குக் காரணம் அவனது மதிப்பிடும் திறனும் அவன் பண்பாட்டின் கூறுகள் மீது கொள்ளும் அறிதிறனுமாகும். ஒவ்வொரு தலைமுறையினரும் தம் சமுதாயத்தின் பண்பாட்டு மரபுகளை முழுமையாகப் பெற விரும்புவர். ஆனால், முழுமையாகப் பெற இயலாமற் போவதுண்டு. பண்பாட்டின் மரபுகளை ஏற்பதில் சிலர் மற்றவரைக் காட்டிலும் மிகவும் இணக்கமுடையராய்க் காணப்படுவர். சிலர் நேரடியாகவோ மறைமுகமாகவோ ஏதோ சிலவகையில் எதிர்ப்புத் தன்மையைக் காட்டுவர்.

பண்பாட்டையும் தனிமனிதர்களையும் ஒன்றுபடுத்தி ஆய்வுசெய்யும் உளவியல்சார் இனக்குழுவியல் தனி ஒருவன் அவனது பண்பாட்டின் மரபுகளைத் தானே கற்க முற்படும்போது, அவனது ஆளுமையில் எவ்வாறு அது பாதிப்பினையும் தாக்கத்தினையும் ஏற்படுத்துகிறது என அறிகிறது. அவ்வாறு ஒருவன் வளரும்போது அவன் அறியும் பண்பாட்டு மரபுகள் அவனை எந்த அளவு வீரியமுள்ளவனாக மாற்றுகிறது, எதிர்க்குழுவினருடன் அனைத்துச் செயல்களிலும் அவன் காட்டும் ஈட்டுத்தன்மை எவ்வாறு மற்றவரிடமிருந்து மாறுபடுகிறது என்பன அடிப்படையான அலகாகக் கொள்ளப்படுகின்றன.

உளவியல்சார் இனக்குழுவியல் பரப்பில் உளவியற் கருத்துகளும் அணுகுமுறைகளும் அடிப்படையானவை. மானிடவியலார் சமுதாயம், சமூகம், குழு என்பன போன்ற ஒட்டுமொத்த மக்கள் கூட்டத்தினை

ஆய்வு செய்கின்றனர். ஆனால், உளவியலார் தனி மனிதனைப் பற்றிய ஆய்வுகளையும் பெருமளவு கொண்டுள்ளனர். மானிடவியலார் ஒவ்வொரு சமுதாயத்தின் பல நிறுவனங்களையும் (Institutions) ஆராய்ந்து அச்சமுதாயத்தின் பண்பாட்டை அறிகின்றனர். இதில் தனிமனித ஆய்வுகள் அடங்கா. உளவியலார் தனிமனித மனநிலைகளையும் அவன் செயல்களின் நடத்தை முறைகளையும் அவை அவன் சார்ந்துள்ள சமுதாயம், பண்பாடு ஆகியவற்றின் அமைப்புகளோடு கொண்டுள்ள தொடர்புகளையும் காண்பர்.

இத்துறையில் 1920க்கு முன்பு பல்வேறு மானிடவியலார் பண்பாட்டின் அமைப்புகளில் தனி மனித நடத்தை முறைகளைக் கண்டறிந்து, மானிடவியலில் உளவியல் சார்ந்த பரப்பை விரிவுபடுத்தினர். இவர்களுள் ஏ.ஏ. கோல்டன்வீய்சர் (A.A. Golden Weiser) சி.சி. செலிக்மேன் (C.G. Seligman) முதலானோர் குறிப்பிடத்தக்கவர்கள். சிக்மண்டு பிராய்டு (Sigmund Freud), அவர்தம் கொள்கையாளர்கள் ஆகியோரின் சிந்தனைத் தாக்கம் இப்பிறப்பின் வடிவுருவைப் பெருமளவு மாற்றிவிட்டது. முதலில் பிராய்டின் கோட்பாட்டினை ஏற்கத் தயங்கிய மானிடவியலார் பின்னர், மெதுவாக அதன் நேரடியான பயன்பாட்டினை மானிடவியலில் ஈடுபடுத்த முடியும் என உணர்ந்தனர். இதற்குப் பிராய்டு எடுத்துக் கொண்ட ஆய்வுகள் மானிடவியல் பரப்பு என்பது குறிப்பிடத்தக்கது. அவர் நாட்டு மக்களின் கனவுக் குறிப்பு முறையை(Dream Symbolism) மிகுதியாக உளப்பகுப்பாய்வுக்கு எடுத்துக் கொண்டமை மானிடவியலாரிடையே மிகுந்த ஈடுபாட்டை ஏற்படுத்தியது.

பண்பாட்டின் அமைப்பிற்கும் தனிமனிதனுக்கும் இடையே நிகழும் இடைவினைகளை முழுமையாக அறியும் பொருட்டு எழுந்த பல்வேறு அணுகுமுறைகளுள் பண்பாட்டு உருவ அமைப்பு அணுகுமுறை (Cultural Configurational Approach), மாதிரி ஆளுமை அணுகுமுறை(Model Personality Approach), வெளிப்பாட்டு அணுகுமுறை (Projective Approach) ஆகியவை முதன்மையாகும். இந்த அணுகுமுறைகளின் வழி பண்பாட்டின் ஒருமித்த மேலாண்மைப் பண்புகள் ஏற்படுத்தும் ஆளுமை முறைகளையும், எவ்வித ஆளுமைகள் மிகுதியாக ஒவ்வொரு பண்பாட்டிலும் நிலவுகின்றன என்பதனையும், இவற்றிற்கு எவ்விதச் சமூக நிறுவனங்கள் முதன்மைப் பங்களிப்பைக் கொடுக்கின்றன என்பதனையும் அறிஞர் அறிவர்.

ஓ. ப.

**உளவியல் சார் புள்ளியியல்**: ஆராய்ச்சியின் விளைவுகளைப் பொருளுணர்ந்து கொள்வதற்கு அறிவியலாளர்கள் கணிதத்தை ஏதேனும் ஒரு வகையில் பயன்படுத்துவது இன்றியமையாததாகி விட்டது. இதற்கு உளவியல் விதிவிலக்கன்று. தங்கள் ஆய்வின் மூலம் சேகரிக்கும் தகவல்களைப் பொருள் மிக்கதாகச் செய்வதற்காக உளவியலாளர்கள் ஒரு குறிப்பிட்ட வகைக்கணிதத்தைப் பயன்படுத்துகின்றனர். அது புள்ளியியல் என்பதாகும்.

அறிவியலார்க்குப் புள்ளியியல் ஓர் இணக்க மிகு கருவியாகப் பல்வேறு வகைகளில் பயன்படுகின்றது. உளவியலில் புள்ளியியல் நான்கு பெரும் காரணங்களுக்கு உதவுகின்றது. முதலாவதாக சேகரிக்கப்பட்ட பெரும் அளவிலான தகவல்களைச் சுருக்கிக் கூறுவதற்கும்; இரண்டாவதாக, பல்வேறு குழுக்கள் அல்லது தனியாட்களின் நடத்தை அல்லது நடத்தைக் கூறுகளை ஒப்பிடுவதற்கும்; மூன்றாவதாக, ஒரு குறிப்பிட்ட நடத்தை அல்லது நடத்தைக்கூறுகள் ஒன்றுடன் தொடர்புடையதா (அதாவது அவை ஒன்றுடன் ஒன்று ஓர் ஒழுங்கு முறையில் மாறுபடுகின்றதா) என முடிவு கட்டவும்; நான்காவதாக, இக்காலத்தே கிடைக்கும் தகவல்களிலிருந்து எதிர்கால நடத்தையை உறுதிப்படுத்தவும் உதவுகின்றது.

முதன்முதலாகக் குயூட்லெட்டு (கி.பி. 1796–1874) என்னும் செருமானிய அரசவை வானியல் அறிஞரே புள்ளியியலின் சில அடிப்படை முறைகளை உயிரியல் மற்றும் சமூகநிலைத் தகவல்களுக்குப் பயன்படுத்தினார். ஐரோப்பாக் கண்டம் முழுமைக்கும் புள்ளியியல் முறைகளை அறிமுகப்படுத்தி மேம்படுத்திய பெருமை இவரையே சேரும். தட்பவெட்பநிலை மற்றும் சமூகச் செயல்களான பிறப்பு, இறப்பு, திருமணம், நோய்கள், குற்றங்கள் பற்றிய தகவல்களைப் பதிவு செய்து வைக்கும் முறையினை ஊக்குவித்தவரும் இவரேயாவர்.

குயூட்லெட்டின் கொள்கைகளுக்கும் உளவியலுக்கும் பாலமாக அமைந்தவர் சர் பிரான்சிசு கால்டன் (கி.பி.1822–1911)என்பவராவார்.இவர் மனிதப் பாரம்பரியம் பற்றிய சிக்கலினை அவிழ்த்திட ஆர்வம் மிகக்கொண்டு, தனியாட்களின் குணநலன்களைப் பெரும் அளவில் அளவிட முனைந்தார். அதற்காக கி.பி. 1882–இல் தெற்குக்கென்சிங்டன் (South Kensington) என்னுமிடத்தில் மனித உடல் அளவைச் சோதனைக்கூடம் ஒன்றை நிறுவினார். அது சாதாரணப் புலனறி மற்றும் தசைச் சோதனைகள் செய்யும் அளவிற்கு வசதியானதாக இருந்தது. புள்ளியியலின் சாதாரண வரை மற்றும் அதனின் பயன்படு இயல்புகள் போதுமானவையாக இன்மையால், கால்டன் பல்வேறு புள்ளியியல் கருவிகளைக் கண்டுபிடித்

தார். அவற்றுள் இடையுறவு முறை, திட்ட எண்கள், இடைநிலை, தகுதி, தரம், தர அளவீடு அளவுகோல் போன்றன அடங்கும். கால்டனே அன்றி, புள்ளியியல் வல்லுநர்களான காரல் பியர்சன், ஆர். எ.பிசர், பெர் நௌலி, இலாப்ளாசு போன்றோரும் இத்தகைய பணியிலேயே ஈடுபட்டனர். சோதனைகள் உருவாக்கு தல் தொடர்பாக, பீனட்டு, கேட்டல், தெர்மான், ஓடிசு, தாண்டைக்கு, இசுபியர்மன், தர்சுடன் போன் றோரின் பணி குறிப்பிடத்தக்கதாகும்.

உளவியலில் புள்ளியியலின் பயன் இன்று பெருகி வருகின்றது. இதன் விளைவாக உளவியல் எண் அளவை அறிவியலாக வளர்ந்து நிற்கின்றது. குறிப் பாக, உளவியல் ஆய்வுகள் புள்ளியியலின் பல்வேறு அளவைகளுள் எவையேனும் சிலவற்றைக் கட்டாய மாகப் பயன்படுத்தும் நிலையில், உளவியல் ஆய்வு களின் முடிவுகளும் அனுமானங்களும் மிகவும் சிறப் புடையனவாக விளங்குகின்றன.

உளவியலில் பயன்படும் புள்ளியியல் முறைகளும் அளவைகளும் பல தரத்தன. சேகரிக்கப்பட்ட புள்ளி விவரங்கள் ஓர் எண் குவியலாகக் காணப்படும்போது அதிலிருந்து பொருள் விளங்கிக் கொள்ளுதல் மிகக் கடினமாகும். அவற்றை ஏற்றதொரு முறையில் பாகு படுத்தி, வகையானதொரு பட்டியலில் அமைத்துக் காட்டுவது பயன் விளைக்கும். சேகரிக்கப்பட்ட புள்ளி விவரங்களைப் பல்வேறு வகைகளாகப் பிரித்து, ஒவ் வொரு பிரிவிலும் அடங்கும் எண்ணிக்கையினைச் சுட்டிக் காட்டுவது அலைவெண் பரவல் (Frequency Distribution) எனப்படும். எடுத்துக்காட்டாக, சமூக உளவியல் பாடத்தில் 100 மாணவர்கள் பெற்ற மதிப் பெண் விவரங்களை 0–இலிருந்து 9 வரை மதிப்பெண் பெற்றோர் எத்தனை பேர், 10–இலிருந்து 19 வரை எத்தனை பேர் என்ற வரிசையில் 0–9, 10–19, 20–29, 30–39,…… 90–100 என்ற பிரிவுகளாகப் பிரித்து, ஒவ் வொரு பிரிவிலும் எத்தனைபேர் அடங்குவர் எனக் குறிப்பிடலாம்.35 மாணவர்கள் 40–இலிருந்து 49க்குள் மதிப்பெண்கள் பெற்றிருந்தால் 40–49 என்ற பிரி விற்கு எதிராக 35 என்று எழுத வேண்டும். அதா வது, 40–49 என்ற பிரிவின் அலைவெண் அல்லது நிகழ்வெண் 35 ஆகும்.

பாகுபடுத்தப்பட்ட புள்ளிவிவரங்களை விளக்கப் படங்களில் அமைத்துக் காட்டுவதும் புள்ளியல் மர பாகும். விளக்கப்படங்கள் பலவிதமானவை. பட்டை விளக்கப் படங்கள், வட்ட விளக்கப்படங்கள், உருவக விளக்கப்படங்கள், ஏறுயிறங்கு வரிப்படங்கள், நேர் கோட்டுப் படங்கள், பரவல் செவ்வகங்கள், அலை வெண் பலகோணங்கள், அலைவெண் வரைகள், ஓகைவு வரைகள், இலாரன்சு வரைகள், Z வரை படம் என்பன சாதாரணமாகப் பயன்படும் வரை படங்களாகும்.

சேகரிக்கப்பட்ட புள்ளிவிவரக்குழுஎண் சிதறலாக இருக்கும். அவற்றின் தன்மைகளையும் சிறப்பியல்பு களையும் அறியச்சில பண்பளவைகள் தேவை. அத்த கைய ஒவ்வொரு பண்பளவைச் சுட்டுறுப்பும் ஒவ் வொரு தன்மையினை உணர்த்தக் கூடியதாகும். கிடைத்துள்ள புள்ளிவிவரம் எத்தகைய மையத்தினைச் சுற்றிச் சுழன்று நிற்கின்றது என அறிந்தால் அப்புள்ளி விவரத்தின் தன்மையினை அறிவது ஏதுவாகும். ஒரு வகுப்பு மாணவர்களின் கூட்டுச் சராசரி மதிப்பெண் அவ்வகுப்பின் தரத்தினை உணர்த்தும். இத்தகைய மையப் போக்கினை அறியப் பயன்படுகின்ற பண்பள வைகள் சராசரிகள் எனப்படும். ஒரு பரவலில் அடங்கி யுள்ள எல்லாவிதச் சிறப்புகளின் அளவுகளை வெளிப் படுத்துகின்ற ஓர் அளவே அப்பரவலின் சராசரி எனப் படும். இத்தகைய அளவைகளாகிய சராசரிகள் பல உண்டு. வெவ்வேறு நேரங்களில் வெவ்வேறு சராசரி கள் பயன்படுகின்றன. அவை கூட்டுச் சராசரி, இடை நிலை, முகடு, பெருக்குச் சராசரி, இசைச் சராசரி என்பனவாம். இத்தகைய சராசரிகள் ஓர் எண் கூட் டத்திற்கும் ஓர் அலைவுப் பரவலுக்கும் வெவ்வேறு வழிகளில் கணக்கிடப்படும்.

புள்ளி விவரங்கள் எந்த அளவில் பரவிச் சிதறிக் கிடக்கின்றன என அறிந்தால், அப்புள்ளி விவரத்தின் பிற தன்மைகளை அறியவும் மற்றொன்றோடு ஒப் பிட்டு நோக்கவும் ஏதுவாகும். ஒரே கூட்டுச் சராசரி யுடைய இரு புள்ளி விவரக்குழுக்கள் ஒத்ததன்மை யானவையெனக் கூறவியலா. புள்ளிவிவரங்கள் வேறுபட்ட தன்மையில் சிதறிப் பரந்து கிடக்கலாம். புள்ளிவிவரங்களின் அத்தகு நிலையைச் சிதறல் அல் லது பரவுகை (Dispersion) எனக் கூறுவர். ஒப்பிட்டு நோக்கப் பரவுகை அளவைகள்(Measures of Dispersion) பெரிதும் பயன்படுகின்றன. அவ்வகைப் பரவு கைகள் வீச்சு, கால்மான விலக்கம், கூட்டுச் சராசரி விலக்கம், திட்டவிலக்கம் அல்லது தரவிலக்கம் எனப் படும்.

ஏதாவது இரண்டு மாறிகளிடையே உள்ள உற வினையும் அதன் அளவினையும் அறியப் பயன்படும் அளவை இடையுறவு அல்லது ஒட்டுறவு (Correlation) என்பதாகும். இரு மாறிகளிடையேயுள்ள ஒட்டுறவு நேர்மறையாகவும் எதிர்மறையாகவும் இருக்கக்கூடும். சமயத்தில் ஒட்டுறவே இல்லாமலும் (O-Correlation) இருக்கக்கூடும்.ஒட்டுறவு வகைகளில் பியர்சன்பெருக்கு ஒட்டுறவுக் கெழு, இசுபியர்மன் தர ஒட்டுறவு, இரட்டைத் தொடர் ஒட்டுறவு, புள்ளி இரட்டைத்

தொடர் ஒட்டுறவு, பெருக்கு ஒட்டுறவு என்பன முக்கியமானவையாகும்.

ஒன்றிற்கு மேற்பட்ட மாறிகள் அல்லது புள்ளி விவரங்களைக் கொண்ட அனுமானங்களைச் சோதிக்கக் கைவருக்கம்(Chi-square) பயன்படுகின்றது.

ஒரு சோதனைமாறி ஒன்றிற்கு மேற்பட்ட அளவைத் தொகுதிகளை வழங்கும்போது, அவ்வளவைத் தொகுதிகளுக்கிடையே வேறுபாடு உள்ளதா என்று கண்டறியப் பரவற்படி ஆய்வு (Analysis of Variance) இன்றியமையாததாகும்.

ஒரு முழுமைத் தொகுதியின் இயல்புகளை அறிந்திட அதிலிருந்து ஒரு கூறு அல்லது மாதிரியினை ஆய்வது வழக்கில் உள்ளது. இவ்வாறு செய்கையில் கூறுகளின் பண்பளவைகளுக்கும், அவை பிறந்த முழுமைத் தொகுதியின் பண்பளவைகளுக்கும் வேறுபாடு நிகழும். இவை கூறுக்குக் கூறு மாறுபடும். இதனைக் கண்டறியப் பயன்படும் சோதனைக்கு வேறுபாடுமிகைத்தன்மைச் சோதனை (Test of Significance) எனப் பெயராகும். இவ் வகையில் t-சோதனை, F- சோதனை, கூறு பண்புகளின் திட்டவிலக்கம் (Standard Error) ஆகியன அடங்கும்.

கி.இரா.

துணை நூல்கள்:

**Gaviett, H.E.,** Statistics in Psychology and Education, Allied Pacific Pvt. Ltd, Bombay, 1958.

**Guilford, J.P.,** Fundamental Statistics in Psychology and Education, McGraw Hill Book Co., New York, 1965.

**உளவியல்சார் மானிடவியல்:** தனி மனிதன், பண்பாட்டின் உறுப்பினர்கள் அடங்கிய குழு ஆகியோரின் உளவியற் செயல்களுக்கும் பண்பாட்டிற்குமிடையே காணப்படும் உறவுமுறைகளை ஆராயும் மானிடவியலின் ஒரு துணைப் பிரிவே உளவியல்சார் மானிடவியல் (Psychological Anthropology) ஆகும். உளவியலும், மானிடவியல்சார் உளவியலும் மனித நடத்தைகளை அறியும் வெவ்வேறு துறைகளாகும். இரண்டுமே தன் அறிவுப் பரப்பிலும் அணுகுமுறையிலும் வேறுபட்டவை. உளவியல் துறையில் பெரும்பான்மையாகத் தனிமனித மனச் செயல்களும் அதனால் விளையும் நடத்தை முறைகளும் அறியப்படுகின்றன. மானிடவியல்சார் உளவியலோ தனிமனித நடத்தை முறைகளைப் பெரும்பான்மையாக விடுத்து, மனிதக் குழுக்களின் நடத்தை முறைகளின் பண்பாட்டுக் கோலங்களை முதன்மையாக அறிகிறது. தொடக்க காலந்தொட்டே மானிடவியலில் பண்பாடு என்னும் கோட்பாடே மிகுந்த செல்வாக்குப் பெற்று, பல பரிமாணங்களில் விரிவாக ஆராயப்பட்டு வருகிறது. இதனாலேயே பல சமுதாயங்களில் மனித நடத்தை முறைகளில் காணப்படும் வேற்றுமைகள் அந்தந்தப் பண்பாட்டின் வேறுபாட்டுத் தன்மையினைக் கொண்டு விளக்கப்படுகின்றன. இந்த அணுகுமுறை மானிடவியல் துறை ஆய்வுகளின் அடிப்படையானதாகும்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில், குறிப்பாக 1920க்கு முன்பு பிரான்சு போவாசு (Franz Boas), கோல்டன் வீசர் (A.A. Golden Weiser), செலிக்மேன் (C.G. Seligman), இரிவர்சு (W.H.R. Rivers) முதலான மானிடவியலார் மனித நடத்தை முறைகளை விளக்குவதற்கு உளவியற் செயல்முறைகளைக் கையாள வேண்டியதன் அவசியத்தைச் சுட்டிக் காட்டினர். முதல் உலகப் பெரும் போர் நடந்த போது உளவியலின் செல்வாக்கு மானிடவியலில் பெருமளவு ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதன் பின்னர், உளவியல் கருத்துகளைக் கொண்டு மக்களின் நடத்தை முறைகளை ஆராய விரும்பிய மானிடவியலார் பல உளவியலாரின் தாக்கத்தைப் பெற்றனர். எட்வர்டு சப்பீர்(Edward Sapir), மார்கரெட்டு மீடு (Margaret Mead), இரால்பு இலிண்டன் (Ralf Linton), கோரா தூபாயிசு (Coll Dubois) ஆகிய மானிடவியலார் முறையே சுல்லிவன் (H.S. Sullivan), எரிக்சன் (E.H.Erikson), ஆப்பிரகாம் கார்டினர் (Abraham Kardinar) ஆகிய உளவியலாரின் செல்வாக்கையும் தாக்கத்தையும் பெற்று உலகப் போர்க் காலத்தில் உளவியல்சார் மானிடவியல் என்னும் துணைப் பரப்பை உருவாக்கினர். தனிமனிதனுக்கும் அவனது பண்பாட்டிற்கும் இடையில் நிகழும் இடைவினைகளின் பண்பை அறியும் இத்துணைப் பரப்புப் பண்பாட்டு உளவியல் (Cultural Psychology) என்றும் இனக்குழு உளவியல் (Ethno Psychology) அல்லது உளவியல்சார் இனக்குழுவியல் (Psycho-ethnography) என்றும் பலவாறு கூறப்பட்டது. இருப்பினும், இந்தத் துறையின் பரப்பைப் பண்பாடும் ஆளுமையும் (Culture and Personality) பற்றிய ஆய்வுப் பரப்பு என்று சிறப்பாகக் கூறுவர் மானிடவியலார்.

உளவியல்சார் மானிடவியல் பண்பாட்டின் உறுப்பினர்களின் உளவியற் செயல்களை மட்டும் அறிவதோடு நில்லாமல், இனக்குழுவியல் (Ethnography) தரவினைக் கொண்டு உளவியல் முறைகளுடன் அப்பண்பாட்டிலுள்ள தனி மனிதர்களின் பலதரப்பட்ட நடத்தை முறைகளைப் பகுத்தாய்வதிலும் ஈடுபடுத்

திக் கொண்டுள்ளது. இத்துறையின் ஆய்வுமுறைகளுள் ஆழ்நிலை நேர்காணல் (Depth Interview), மனிதர்களின் பங்கேற்பு (Role Playing), உரோசாக்குச்சோதனை (Rorschach Test), விரிவான வாழ்க்கை வரலாறு, குடும்பங்களின் பங்கேற்பு (Family Role), கனவின் பொருள் விளக்கம் (Dream Interpretation) முதலானவை ஒரு சிலவாகும்.

உளவியல்சார் மானிடவியலார் ஒவ்வொரு பண்பாட்டினரின் ஆளுமைப் பண்புகளை அறிவதில் குழந்தை வளர்ப்பு முறையை அடிப்படை ஆய்வுகளுள் ஒன்றாகக் கொண்டுள்ளனர். ஒவ்வொரு பண்பாட்டிலும் குழந்தை வளர்ப்பு முறை அப்பண்பாட்டால் சுட்டிக் காட்டப்படுகிறது எனவும், இதற்கு மாறாகக் குழந்தை வளர்ப்பு முறை ஒவ்வொருவரின் ஆளுமையின் வடிவத்தை அப்பண்பாட்டின் கருத்துகள், மதிப்பு முறைகள் ஆகியவற்றின் தன்மையோடு அமைக்கிறது எனவும் தொடக்ககால உளவியல்சார் மானிடவியலார் ஒரு பொதுக் கருத்தினைக் கொண்டிருந்தனர். இதன்படி குழந்தை வளர்ப்பு முறையில் ஒருவகைச் சுழற்சி உறவுப் பண்பாடு நிலைபேறுடையதாக்குகிறது.

உருத்து பெனிடிக்டும் (Ruth Benedict) மார்கரெட்டு மீடும் உளவியல்சார்ந்த மானிடவியல் ஆய்வுகளைத் தொடக்க காலத்தில் மேற்கொண்டவர்களாவர். பெனிடிக்டு தம் பண்பாட்டுக் கோலங்கள் (Patterns of Culture) என்னும் நூலில் பண்பாட்டு அமைப்புகளை மிகுதியாக விவரித்துள்ளார். ஒவ்வொரு சமுதாயமும் சில பண்புக் கூறுகளைத்(Traits) தன் பண்பாட்டின் சிறந்த பண்புகளாக ஏற்றுக் கொண்டு, அப் பண்புகளிலேயே குழந்தைகளைச் சமூகவயமாதலின்வழி (Sociolization) வளரச் செய்கிறது. இச் செயலின் மூலம் சிந்தனை முறையிலும் நடத்தை முறையிலும் சமுதாயத்தின் உறுப்பினர்களிடையேஒரு படித்தான வளர்ச்சி ஏற்படுகிறது. இந்தச் செயலின் மூலம் ஒரு குழுவில் ஆளுமை அமைப்பு ஏற்படுகிறது என்பார் பெனிடிக்டு பெனிடிக்டுச் சிந்தனை முறையிலேயே மார்கரெட்டு மீடும் சிந்தித்துச் சமுதாயத்தில் பால் சார்ந்த பங்கும்(Sex Roles)இளங்குமரப் பருவத்தினரின் மனப்பாங்கும்(Adolescent Temperament) ஆளுமையின் பிற கூறுகளும் சமுதாயத்திற்குச் சமுதாயம் பண்பாட்டின் அமைப்பிற்கேற்பப் பெரிதும்மாறுபடுவதை விவரித்தார். இந்த இருவரின் ஆய்வுகள் உளவியல் சார்ந்த கூறுகளை மானிடவியல் நோக்கில் அறியும் உளவியல்சார் மானிடவியலின் அடித்தளமாக அமைந்தன.

ஆபிரகாம் கார்டினரும் இரால்பு இலிண்டனும் பிராய்டின் பார்வையில் பல்வேறு இனக் குழுவியற்றவுகளை ஆராய்தற்கு மானிடவியலார், உளவியலார் ஆகிய இரு துறையினரையும் கூட்டிப் பல கருத்தரங்குகளை நடத்தி, ஒருங்கிணைந்த அணுகுமுறையினை உருவாக்கினர். குழந்தை வளர்ப்பு முறையினைப் பெரும்பான்மையாக ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட மானிடவியலார் ஒரு குறிப்பிட்ட பண்பாட்டில் குழந்தைகளின் அடிப்படை ஆளுமை அமைப்புகளை அறிவதற்கு முனைந்தனர். தாய்ப்பால் மறத்தல் (Weaning), மலம் கழிக்கும் முறைகளைக் கற்றல், பிற குழந்தைகளோடு கூடி விளையாடுதல் முதலான அனைத்துச் செயல்களிலும் பெரும்பான்மையான குழந்தைகள் ஒரே முறையான மனவெழுச்சியினைக் (Frustrations) காட்டுகின்றனர். இதன்வழி வளரும் அனைவரும் ஒத்த அடிப்படை ஆளுமை அமைப்பைக் (Basic Personality Structure) கொண்டுள்ளனர்.

அடிப்படை ஆளுமைக் கோட்பாடு என்பது பெனிடிக்டு, மீடு ஆகியோரின் எடுகோளின் திருந்தி வளர்ந்த வடிவம் ஆகும். இக்கோட்பாட்டைக் கோரா தூபாயிசு என்பவர் அலோர்சுப் (Alorse) பழங்குடி மக்களின் குழந்தை வளர்ப்பு முறை, வாழ்க்கை வரலாறு, கனவு பற்றிய சிந்தனைகள் முதலானவற்றில் ஈடுபடுத்திப் பகுத்தாய்ந்தார். அலோர்சு மக்கள் குறைந்த மனவெழுச்சியையும் அசட்டுத் தன்மையையும் எவரையும் ஐயங் கொண்டு பார்க்கும் தன்மையையும் உடைய ஆளுமையினைப் பெற்றிருப்பதற்கு, அவர்களின் குழந்தை வளர்ப்பு முறையே காரணம் எனத் தூபாயிசு கண்டறிந்தார்.இவரின் ஆய்வினைக்கண்ணுற்று ஊக்கம் பெற்ற சில மானிடவியலார்இதே முறையில் கலப்புச் சமுதாயத்தினை (Complex Society) ஆய்வு செய்ய முற்பட்டனர். கலப்புச் சமுதாயத்தினை ஆராயும் இப்போக்கு தேசிய பண்புகளை (National Characters) ஆராயும் ஆய்வியல் எனப் பெயர் பெற்றது. இருப்பினும் இவ்வகையான ஆய்வுகள் ஊகத் தன்மைகளையும் நுண்விளக்கத் தன்மைகளின்றி வெளிப்படையாக ஏற்றுக் கொள்ளும் தன்மைகளையும் உடையதால், இந்த ஆய்வுகளின் முறைகளையும் இதன் பொதுவான ஏற்புத் தன்மையையும் பல மானிடவியலார் ஆராய்ந்து, புள்ளியியல் கூறுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் 'மாதிரி ஆளுமைக்' (Model Personality) கோட்பாட்டின்வழி ஆராய்வதின் தேவையை வலியுறுத்தினர்.

உளவியல்சார் மானிடவியலில் பயன்படுத்தப்படும் குழு ஆளுமை (Group Personality), ஆளுமை அமைப்பு (Personality Structure), மாதிரி ஆளுமை (Model Personality) ஆகிய அனைத்துக் கோட்பாடுகளுமே மக்களிடையே காணப்படும் வேறுபாடற்ற ஆளுமைக் கூறுகளைத் தவிர்த்து, ஒருபடித்தான

ஆளுமைக் கூறுகளைக் கண்டெடுத்து அறிவதை முதன்மையாகக் கொள்கின்றன.

இக்கால உளவியல்சார் மானிடவியலார் சமுதாயத்தில் தனிமனிதர்களிடம் காணப்படும் விரிந்து மாறுபட்ட ஆளுமைப் பண்புகளை அறிவதில் ஆர்வம் கொண்டுள்ளனர். ஒவ்வொரு தனி மனிதனும் பண்பாட்டைத் தன் நிலையில் அகவயப்படுத்துகின்றான். இதனால் வேறுபாடுகளுற்ற பண்பாட்டு ஆளுமைகள் காணப்படுகின்றன. இக்கால உளவியல்சார் மானிடவியல் சிறிய அளவிலான ஆய்வுப் பொருள்களை ஆராயும் போக்கை வலுப்படுத்தியுள்ளது. இதில் மக்கள் உணரும் தன்மையையும், அறிதிறனையும் (Cognition), அவர்கள் உணர்ந்த பொருளை விவரிக்கும் தன்மையினையும், புறச் சூழ்நிலை மக்களின் சிந்தனைத் திறத்திலும் நடத்தை முறையிலும் ஏற்படுத்தும் மாற்றத்தையும் அறிவது முதலானவை குறிப்பிடத்தக்க சில. டி.வி.இரா.

துணை நூல்கள்:

**Benedict**, R., Patterns of Culture, New American Library, New York, 1934.

**Dubois**,C., People of Alore: A Social Psychological Study of an East Indian Island, University of Minnesota Press,Minneapolis, 1944.

**Hsu**, F. (Ed.), Psychological Anthropology, Dorsey Homewood, 1961.

**Kardiner**, A. (Ed.), The Individual and His Society, Columbia University Press, New York, 1939.

**Mead**, **Margaret**, Coming of Age in Samoa, William Morrow, New York, 1928.

**உளவியல்வழிக் கற்பித்தல்**: கற்றல் பற்றிய உளவியல் கோட்பாடுகளைக் கற்பித்தலுக்கு அடிப்படையாகக் கொள்ளுதலே உளவியல்வழிக் கற்பித்தல் எனப்படும். விலங்குகள் எவ்வாறு கற்றுக் கொள்கின்றன என்பதை ஆராய்ந்தறிந்த உளவியலார் மனிதர்கள் கற்றுக் கொள்ளும் முறைகளும் அவ்வாறே அமையும் என நம்பினர். எனவே, அவர்கள் கற்பித்தலை அம்முறைகளை யொட்டி அமைக்க விரும்பினர். பின்வந்த ஆய்வுகள் மனிதக் கற்றலுக்கும் விலங்கினக் கற்றலுக்கும் வேறுபாடுகள் இருப்பதைக் காட்டின. அறிவு சார்ந்த கற்றல், இலங்கு நூல் பல கற்றல் ஆகியன விலங்கினங்களுக்கு இயலாதவை. எண்ணிச் செயற்பட வேண்டாச் சில பழக்கங்களைக் கற்றுக் கொள்ளுவதில் விலங்கினை ஒத்தவர் மக்கள். அறிவுப் புலம் விளங்கப் பெற்ற மக்களின் கல்வி இப்புலத்தின் வளத்திற்கு ஆவது; கற்றோரை நுண்மாண் நுழைபுலம் மிக்கோராய் ஆக்குவது.

மனிதக் கல்வி விலங்கினக் கல்வியின் வேறுபட்டது; மிகுதியும் அறிவு சார்ந்தது; உணர்வு, செயல் ஆகியவற்றையும் உட்கொண்டது; பெரும்பாலும் மொழிவழிஆகுவது; சமூகச் சூழலை ஒட்டி அமைவது; பிரச்சினைகளுக்குத் தீர்வு காண உதவுவது. அறிவுத் துலக்கம் கற்போரின் (குழந்தையின்) வளர்ச்சி, உரிய வளர்ச்சிப் பருவங்களில் அமையும் அறிவுச் செயற்பாட்டினுக்கு ஏற்ற வாய்ப்புகள் ஆகியவற்றையொட்டி அமையும். கருத்துகளைக் கற்றல், அமைத்துக் கொள்ளுதல், பொருத்தமுற அமைத்துப் புதுக் கருத்துகள், கோட்பாடுகள், விதிகள் ஆகியவற்றை அமைத்தல் ஆகியன மனிதக் கல்வியின் சிறப்பியல்புகள்.

கற்றலுக்கு வேண்டிய பொருள்களைக் கருத்துகளைக் காணும் முறை, அவற்றை உளங்கொள்ளும் முறை, உளங்கொண்டவற்றைப் பகுத்தும் தொகுத்தும் முன்னறிந்தவற்றோடு தொடர்புபடுத்தி விளங்கிக் கொள்ளும் விதம், விளங்கித் தெளிந்தவற்றை நினைவிலிருத்திக் கொள்ள மேற்கொள்ளும் வழிகள் ஆகியவற்றில் கற்போர் வேறுபடுகின்றனர். இவ்வாறாகும் தனியாள் வேற்றுமைகள் மனிதக் கற்றலில் பரவிக் கிடப்பன. ஒருவரிடத்துக் கூட எல்லா வேலையிலும் எல்லாக் கற்கும் பொருள்களை (கருத்துகளை, செய்திகளை) ஒட்டியும் கற்கும் முறைகள் ஒரே தன்மையாக அமைவதில்லை.

கற்பித்தலும் கற்றலும் விரைவாகவும் எளிதாகவும் அமைய உதவ வேண்டும். கற்பிப்போர் கற்றலில் இடையிட்டு எளிமையையும் விரைவினையும் ஆக்கித் தரல் வேண்டும். கற்போர் கற்கும் முறைகளுக்கு இயைய இவ்விடையீடு அமையுமாயின் கற்றல் சிறக்கும். கற்போர் கற்கும் பொருள் பற்றிக் கொண்டுள்ள முன்னறிவு, அவர் திறன், ஊக்கம், அவர் வளர்த்துக் கொண்டுள்ள கற்கும் முறைகள் ஆகியவற்றின் அடிப்படையில் கற்பித்தலை அமைத்து, அவர்களின் குறை கண்டு களைதற்கான வழிமுறைகளை மேற்கொண்டு, அவர்கள் கற்ற அளவினை அளந்து மதிப்பிட்டு, முடிவுகளை அவர்க்குத் தெளியக் காட்டிக் கற்பித்தல் இன்றைய உளவியல் காட்டும் கற்பித்தல் முறையாகும். காண்க: கல்வி உளவியல். பி.எஸ்.பா.

**உளவியலார் ஆலோசனை**: உளவியலறிஞர், கல்வியாளர் ஆகியோரின் பணித் தொடர்

பான சிக்கல் குறித்துக் கருத்துரைகள் வழங்குவது உளவியல் ஆலோசனை (Psychological Consultation) எனச் சொல்லப்படும். கல்வியாளர் என்பவர் ஒரு வகுப்பறை ஆசிரியராகவோ பள்ளித் தலைமையாசிரியராகவோ பள்ளி நிருவாகியாகவோ இருக்கலாம். ஒரு குறிப்பிட்ட கல்விச் சிக்கலைத் தீர்த்து வைப்பதற்கான அறிவும் அனுபவமும் திறனும் கொண்ட உளவியலறிஞரிடம் கல்வியாளர் தாமே அணுகுவது உளவியலார் ஆலோசனையில் முதற்படியாகும்.

உளவியல் ஆலோசனை என்னும் கருத்து முதன் முதலில் கிளைடுவெல் (Glidewell), சுவாலோ (Swallow) ஆகியோரால் 1969-ஆம் ஆண்டு பயன்படுத்தப்பட்டது. இவர்கள் இருவரும் தனிக்கவனம் செலுத்தப்பட வேண்டிய அளவுக்குச் சிக்கல்களைக் கொண்ட சில மாணவர்களுக்கு உளவியலார் ஆலோசனையின் அடிப்படையில் கல்வி புகட்டி வெற்றி கண்டனர். இயல்பான திறன்களைப் பெற்றிருக்கும் ஆசிரியர்கள் உளவியலாரின் கருத்துரைகளை ஏற்பதன் மூலம் கல்விச் சிக்கல்களைத் தீர்ப்பதில் மேலும் உயரிய திறன்களைப் பெறுகின்றனர் என்பது கோவன் (Cowen, 1971) என்பவரது கருத்தாகும்.

உளவியல் ஆலோசனையானது ஒரு நோயாளி மருத்துவரை நாடிக்கருத்துரை கேட்பது போன்றதன்று. மாறாக, சமநிலையிலுள்ள இருதுறை வல்லுநர்கள் கூடிக் கருத்துத் தெளிவு பெறும் செயலாகும். குறிப்பிட்ட கல்விச் சிக்கலைத் தீர்ப்பதிலுள்ள முழுப் பொறுப்பும் கல்வியாளருக்கே உரியதாகும். இதில் உளவியலறிஞருக்கு ஆலோசனை கூறுவது தவிரப் பொறுப்போ அதிகாரமோ கடமையோ எதுவும் கிடையாது எனக் கேப்ளான் (Caplan, 1970) கூறுகிறார். உளவியல் ஆலோசனை என்பது கல்வியாளரும் உளவியலாரும் இணைந்து பொறுப்பேற்கும் செயல் அன்று. உளவியலார் நேரடியாக மாணவருக்கே அறிவுரை வழங்காது அம்மாணவரின் ஆசிரியருக்கு அறிவுரை வழங்குவதால், உளவியல் ஆலோசனையை அறிவுரை கூறுதல் (Counselling) என்றும் சொல்லிவிட இயலாது. ஆலோசனைகள் பெற்ற ஆசிரியரை உளவியலறிஞர் மேற்பார்வை ஏதும் செய்து மதிப்பீடு செய்வது இல்லையாதலால், உளவியல் ஆலோசனையை மேற்பார்வை செய்தல் (Supervision) என்றும் கூறிவிட முடியாது.

உளவியல் ஆலோசனையினை ஓர் ஆசிரியர் நான்கு வழிகளில் பெற இயலும் எனக் கேப்ளான் கூறுகிறார் அவையாவன: 1. மாணவரது சிக்கலைத் தீர்ப்பதை அடிப்படையாகக் கொண்ட மாணவர் மைய ஆலோசனை (Client-centered consultation), 2. குறிப்பிட்ட பாடத்திட்ட உருவாக்கத்தை மையமாகக் கொண்ட ஆலோசனை (Programme-centered consultation), 3. ஆசிரியரது சிக்கலைத் தீர்ப்பதை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் மைய ஆலோசனை (Consultee-centered consultation), 4. நிருவாகச் சிக்கலைத் தீர்ப்பதை அடிப்படையாகக் கொண்ட ஆலோசனை (Consultee-centered administrative consultation).

உளவியல் ஆலோசனையின் வழியாக ஒரு கல்வியாளர் நான்கு வகைகளில் தம் திறன்களை உயர்த்திக் கொள்ளக் கூடும். அவை 1. கல்வியியலையொட்டிய உளவியல் அளவு (Knowledge), 2. கல்வியியலில் பயன்படுத்தக்கூடிய உளவியல் திறன்கள் (Skills), 3. கல்வியியல் தொடர்பான சிக்கலைத் தீர்ப்பதற்கான தன்னம்பிக்கை (Self-Confidence), 4. கல்வியியல் சிக்கலைத் தீர்க்க உதவும் விருப்பு வெறுப்பற்ற நேரிய மனப்பாங்கு (Objectivity) ஆகியன. இத்திறன்களை ஓர் ஆசிரியர் பயிற்சி பெற்ற உளவியலாளரிடமிருந்து ஆலோசனையைப் பெறுவதன் மூலம் வளர்த்துக் கொள்ளவும், அவற்றைப் பயன்படுத்தி வகுப்பறைச் சிக்கல்களுக்குத் தீர்வு காணவும் இயலும். இருப்பினும், உளவியல் ஆலோசனையின் தன்மை, பயன்கள் குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எஸ்.த.

துணை நூல்:

**Caplan, G.**, The Theory and Practice of Mental Health Consultation, Basic Books, New York, 1970.

***உளவியலார் நெறிமுறைகள்:*** உளவியலார் சில தொழில் சார்ந்த நெறிமுறைகளைப் பின்பற்றி நடத்தல் வேண்டும் என்பது உளவியலாளர்களால் வலியுறுத்தப்படுகிறது. இந்நெறி முறைகள் உளவியலாளரின் கல்வி, ஆராய்ச்சி, தொழில் சார்ந்த நடத்தைகள் ஆகியவற்றிற்குத் தகுந்த தரத்தை நிருணயிக்கின்றன. இந்நெறிமுறைகளை மீறுவோரை உளவியலாளர்கள் பல வழிகளில் கண்டித்துத் திருத்த முயலுகிறார்கள். இந்நெறிமுறைகளுள் முக்கியமான சில இங்கு விளக்கப்படுகின்றன.

**ஒழுக்கமும் சட்டத்தரமும்:** உளவியலாளர் தம் தொழிலில் சமூக நியதிகள், நெறிமுறைகள், சட்டத்திட்டங்கள் ஆகிவற்றிற்குக் கட்டுப்பட்டுச் செயலாற்ற வேண்டும். இவற்றை மீறுதல் தமக்கும், தம்மைச் சார்ந்துள்ள மாணவர், உதவி நாடி வருவோர் (Clients), உடன் பணியாற்றுவோர் ஆகியோருக்கும் கெட்டபெயரை உண்டாக்க ஏதுவாகும்.

உளவியலாளர்-உதவிபெறுவோர் தொடர்பு: உளவியலாளர் உதவி பெறுபவருடனோ உதவி பெறுபவர் உளவியலாளருடனோ உணர்ச்சி முறையான உறவுகளை (காதல், கோபம்) ஏற்படுத்த முயலுவதைத் தவிர்த்தல் வேண்டும்.

பொதுமக்களிடம் கூறும் கருத்துகள்: நேரடியாகவோ மறைமுகமாகவோ பொதுமக்களிடம் கூறும் தம் கருத்துகளைக் கட்டுப்பாட்டுடனும் அறிவியற் கோட்பாடுகளைக் கவனத்தில் கொண்டும் இப்போதுள்ள உளவியல் அறிவிற்கு அப்பாற்பட்டுச் செல்லாமலும் கூறுதல் வேண்டும்.

இரகசியம் காத்தல்: பாடம் பயிற்றுவிக்கும் போதும் உதவியளிக்கும் போதும் ஆராய்ச்சி நடத்தும் போதும் வெளியிடப்படும் ஒரு தனி மனிதனின் கருத்துகளையும் அவனைச் சார்ந்த விவரங்களையும் இரகசியமாகப் பாதுகாத்தல் உளவியலாளரின் தலையாய கடமையாகும்.

உதவி பெறுவோரின் நலன் காத்தல்: உதவி பெறுவோரின் நலனையே முதன்மையாகக் கொள்ளுதல் வேண்டும். தம்மிடம் அனுப்பப்பட்ட ஓர் உதவி பெறுபவரின் நலனுக்கு முழுப் பொறுப்பேற்று, அவர் பூரண நலனடையும் வரையோ அவரை வேறொரு சிறப்பு உளவியலாளரிடம் அனுப்பும் வரையோ நன்கு கவனித்தல் வேண்டும். ஒருவர் தம்மிடம் பெறும் உதவியால் பயன் பெறாவிட்டால் உடனே அவரை அனுப்பிவிடுதல் வேண்டும். வல்லுநர்களின் தொழில் சார்ந்த சிக்கல்களினால் உதவிபெறுவோர் பாதிக்கப் படாமல் பார்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

சேவைகளை அறிவித்தல்: உளவியலாளர் தம் தொழில் சார்ந்த சேவைத் திறனை மற்றோர்க்கு அறிவிக்க வாணிகமுறையிலான முறைகளைத் தவிர்த்து, தொழில் சார்ந்த முறைகளைப் பின்பற்றுதல் வேண்டும். அதாவது, விளம்பரப்படுத்துதல், உதவி வேண்டுவோரை வருந்தி வேண்டி அழைத்தல், நற்சான்றிதழ்களைப் பயன்படுத்திக் கவர முயலுதல், அளவுக்கதிகமான உறுதி மொழிகளைத் தருதல் ஆகியவற்றை அவர் தவிர்த்தல் வேண்டும்.

சோதனை மதிப்பெண்களை வெளியிடுதல்: உளவியல் சோதனைகளில் ஒருவர் பெற்ற மதிப்பெண்களை, அவற்றை நன்கு அறிந்து, உரிய முறையில் பயன்படுத்துவோரிடமே தெரிவித்தல் வேண்டும்.


ஆராய்ச்சி முன்னெச்சரிக்கைகள்: ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்படும் மனிதர்கள் மற்றும் மிருகங்களின் நலனுக்கு முழுப் பொறுப்பேற்றல் வேண்டும். உளவியலாளர்களின் தொழில் சார்ந்த இந்நெறி முறைகளின் அடிப்படைத் தத்துவத்தைப் பின்வருமாறு காட்டலாம். உளவியலாளர் தனிமனிதனின் கௌரவத்திலும் மதிப்பிலும் முற்றிலும் நம்பிக்கையுடையவராவார். அவர் மனிதன் தன்னைப் பற்றியும் மற்றோரைப் பற்றியும் புரிந்து கொள்ளுவதை அதிகப் படுத்துவதில் கவனம் கொண்டுள்ளார். அவர் தம் பதவியையோ தொழில் முறையிலான உறவையோ தம் நன்மைக்காகப் பயன்படுத்துவதையோ மற்றோர் அவருடைய தொழில் திறனை உதவி பெறுவோரின் நலனுக்கெதிராகப் பயன்படுத்துவதையோ அறிந்து அனுமதிப்பதில்லை. வே.க.

**உளவியற் சோதனைகள்**: மனித மனத்தின் இயல்புகளைக் கண்டறிய உளவியலாளர்கள் உளவியற் சோதனைகள் பலவற்றைப் பயன்படுத்துகின்றனர். ஒரு மனிதன் மற்றொருவனிடமிருந்து எவ்விதங்களில் உள்ளத்தளவில் மாறுபடுகிறான் என்பதை அவனுடைய அறிவுத் திறன் (Intelligence), ஆக்கத்திறன் (Creativity), தொழிலைக் கற்கும் திறன் (Aptitude), ஆர்வம் (Interest), ஆளுமைக் குணங்கள் (Personality Traits) ஆகியவற்றை உரிய உளவியற் சோதனைகளைப் பயன்படுத்திக் கண்டறிய இயலும். கல்வியிலும் தொழில் நிறுவனங்களிலும் ஒவ்வொருவருடைய திறன், ஆர்வம் ஆகியவற்றைக் கண்டறிந்து தகுந்த தொகுதியில் சேர்க்கவும் உயர்த்தவும் உளவியற் சோதனைகள் உதவுகின்றன. உளம் சார்ந்த சிக்கல்கள், உளநோய்களின் தன்மைகள் ஆகியவற்றைக் கண்டறிந்து வகைப்படுத்தவும், குணமடைந்ததும் ஏற்படும் முன்னேற்றத்தைக் கண்டறியவும் உளவியற் சோதனைகள் (Pychological Tests) பயன்படுத்தப்படுகின்றன.

இந்தியாவில் பல அரசுத் துறைகள் (பாதுகாப்புத் துறை, அரசு ஊழியர் சேர்ப்பு மற்றும் நிறுவன மேம்பாட்டுத்துறை, வேலை வாய்ப்பு மற்றும் தொழில்துறை), தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள், தனியார் துறையைச் சேர்ந்த பெருந் தொழில்கள், வணிக நிறுவனங்கள் ஆகியவை உளவியற் சோதனைகளைப் பயன்படுத்திப் பெரும் பயனுற்று வருகின்றன.

அறிவுத்திறன் சோதனைகள்: அறிவுத்திறனை மூன்று விதமாக விவரிக்கலாம். (அ) மனிதன் தன் சூழலுடன் ஒத்துப் போகும் திறன், (ஆ) கற்கும் திறன், (இ) சிந்திக்கும் திறன். அதாவது, அறிவுத் திறன் என்பது பகுத்தறிவால் சிந்தித்து, ஒரு நோக்கத்தோடு செயலாற்றி, தன் சூழலுடன் சிறந்த முறையில்


### உருவஅமைப்புச் சோதனை




படம் 1

இடது மேல் கட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள இரு பகுதிகளைச்-சேர்த்தால் உருவாகும் உருவம் எது? (விடை : உ)


### பெண்டரின் முழுமையாகக் காணல் மற்றும் வரை சோதனை




படம் 2

உருவங்களைக் காண்பதிலும், கண்டதை வரைவதின் மூலம் வெளிப்படுத்துவதிலும் ஏற்படும் மாறுபாடுகளைக்கொண்டு அறிவு திறன் கணக்கிடப்படுகிறது. எ-டு 'அ' படத்தில் உருவங்கள் இலேசாக நடுப்பகுதியில் தொட்டுக் கொண்டிருப்பது உணரப்பட வேண்டும். 'ஆ' படத்தில் புள்ளிகள் நேர்க்கோட்டில் அமைந்து இரண்டிரண்டு தொகுதிகளாக அமைதல் வேண்டும்.


### இடத்தொடர்பு கற்குந்திறன் சோதனை




இடது புறமுள்ள அட்டை, யை மடக்குவதன் மூலம் எந்தெந்தப் பெட்டிகளை உருவாக்கலாம்?

[விடை : அ, இ, உ]

படம் 3




**இயந்திர இயக்கம் கற்குந்திறன் சோதனைகள் படம் : 4**






அ ஆ




எந்த விமானம் வலப்புறம் திரும்புகிறது ?

எந்தச்சாலை செங்குத்தாக ஏறுகிறது ?

எந்தப் பற்சக்கரம் ஒரு நிமிடத்தில் அதிகமாகச் சுழலும்

**படம் 5. எழுத்தர்பணி கற்குந் திறன் சோதனை**

1. 581—581 ( )
2. உசிள—உளசி ( )
3. பூக்கடை—பூக்கடை ( )
4.  ( )

57. 7413509021 7415390235 ( )


58. ரிகஓபஇசதஆ ரிகஓபஇச தஆ ( )


59. திரு கு வேதகிரி—திருகு.வேதகிரி ( )


60.  ( )

இரண்டுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமையை √, X குறியிட்டுக் காட்ட வேண்டும்.

**படம் : 6 ஓவியக்கலை கற்குந் திறன் சோதனைகள்**







மேற்கண்ட படங்களில் எது விருப்பமானது என்பதைக் குறிப்பிட வேண்டும்.




இவற்றுள் ஒன்று புகழ்பெற்ற ஒரு கலைப் பொருளைக் குறிக்கிறது. மற்றொன்று அதை ஓரளவு ஒத்துள்ளது, ஆனால் கலையமிசத்தில் குறைந்துள்ளது. இவற்றின உருவஅமைப்பை வைத்து சிறந்ததைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

**படம் : 7 வழக்குரைக் கல்வி கற்குந் திறன் அளவை**




மேற்கண்ட படத்தில் கொடுக்கப்பட்டுள்ள முதல் பிரிவிலுள்ள உருவங்களின் உருவ அமைப்பு ஒன்று இரண்டாம் பிரிவில்உள்ள உருவங்களிடையே இல்லை. அதைக் கண்டறிந்து தகுந்த விடையைக் (அ, ஆ, இ, ஈ, உ) குறிப்பிட வேண்டும். எ-டு 8, 9 10 ஆகியவற்றின் சரியானவிடைகள் முறையே ஆ, ஈ, அ.



பாட்டியாவின் கட்டை அமைப்புச் சோதனை



விரல் நுணுக்கம் கற்கும் திறன்



இயந்திர இயக்கம் கற்கும் திறன்



மை ஒற்றுச் சோதனை



கதை காண் சோதனை

ஒரு மனிதன் இயைந்து நடப்பதாகும் என்று கூறலாம். இவ்வறிவுத் திறன் மூன்று வகைப்படும்: (அ) சமூக அறிவு (Social Intelligence), (ஆ) பொருள் சார்ந்த அறிவு (Concrete Intelligence) – பொருள்களைப் புரிந்து பயன்படுத்தும் திறன், (இ) உட்பொருள் சார்ந்த அறிவு (Abstract Intelligence) – மொழி மற்றும் கணித உட்பொருள் அறிவு.

அறிவுத்திறன் மொழித்திறன் மற்றும் கணிதத் திறன் என இருவகையாக அளவிடப்பட்டு 'வருகிறது. ஆல்பிரடு பினே (Alfred Binet, 1905–1960) என்ற பிரான்சு நாட்டறிஞர் முதன் முதலில் அறிவுத்திறன் சோதனைகளை (Intelligence Tests) உருவாக்கினார். இச்சோதனைகள் பொதுவாக மொழித்திறனையே சோதிப்பதாகும். இச்சோதனைகளால் வேற்றுமொழி மாந்தரின் அறிவுத்திறனைச் சோதிப்பது கடினமாயிருந்தது. அதனால் மொழிச் சார்பற்ற (Non-Verbal), செயல் கொண்டு கணிக்கக்கூடிய அறிவுத்திறன் சோதனைகள் (Performance Tests) பல உருவாக்கப்பட்டன. இவற்றில் வெசுலர் (Wechsler) என்ற அறிஞரால் உருவாக்கப்பட்ட சோதனைகள் முதன்மையானவையாகும். இவற்றால் ஆங்கிலம் அறியாதோர், (எம்மொழியினரும்) ஒலிகேளாதோர், பார்வையற்றோர், கல்வி கற்காதோர் ஆகியோரைச் சோதிக்க முடிந்தது. வெசுலரின் இருவகையான சோதனைகளைக் கொண்டு சிறுவர், பெரியவர் ஆகியோரின் அறிவுத்திறனைக் கணிக்க முடியும். இச்சோதனைகள் மொழிசார்ந்ததையும் செயலையும் கொண்டு கணிக்கக்கூடிய பல திறன்களைச் சோதிக்க உதவும்.

செயல் கொண்டு மட்டுமே கணிக்கக்கூடிய அறிவுத்திறன் சோதனைகள் பலவாகும். படம் உருவாக்கல் என்பது ஓர் உருவ அட்டையைப் பல பாகங்களாகச் சிதைத்து, அச்சிதைந்த துண்டுகளை மீண்டும் உரிய விதத்தில் அமைத்துப் படஉருவத்தை உருவாக்கல் (Picture Construction) ஆகும். உருவ அமைப்பு அறிதல் (Form Board) என்பது சில உருவ அட்டைகளால் அமைக்கப்படும் உருவம் எவ்வாறு இருக்கும் என்று பல உருவங்களிலிருந்து இனங்காணுதல் (காண்க: படம்). கட்டை நகர்த்தல் என்பது சில வண்ணக் கட்டைகளை நகர்த்திக் குறிப்பிட்டபடி அமைப்பதாகும்.

கட்டை அமைப்பு என்பது சில வண்ணக் கன சதுரக் கட்டைகளைக் கொண்டு, வெவ்வேறு உருவ அமைப்புகளை உருவாக்குவதாகும். இந்தியாவில் பாட்டியா(Bhatia) என்ற அறிஞர் ஐவகைச் சோதனைகள் (Battery of Intelligence Tests) கொண்ட ஒரு தொகுப்பை உருவாக்கியுள்ளார். இச்சோதனை பெரும்பான்மையாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இச்சோதனை கீழ்க்காணும் சோதனைகளைக் கொண்டது. அவை (அ) சிதைந்த உருவத்தை அமைத்தல், (ஆ) கட்டை நகர்த்தல் (Pass-along Test), (இ) கட்டை அமைப்பு (Block Design Test), (ஈ) ஒரே கோட்டினால் (கையை எடுக்காமலும் கோட்டின் மேல் கோடு போடாமலும்) குறிப்பிட்ட படங்களை வரைவது, (உ) எழுத்துகளையும் எண்களையும் கேட்டு நினைவில் இருத்தித் திரும்பச் சொல்வது ஆகியனவாம்.

அறிவுத்திறன் கணிப்புச் சோதனைகளுள் சில மூளை வளர்ச்சி, மூளைப் பாதிப்பு மற்றும் உளநோய்களைக் கண்டறிய உதவுகின்றன. இவற்றுள் முக்கியமானவை 'பெண்டரின் முழுமையாகக் காணல் மற்றும் வரைதல் சோதனை' (Bender Visual-Motor Gestalt Test) ஆகும் (காண்க: படம்).

பேப்காக்கின் சோதனையும் (Babcock Test) இவ்வாறே மூளை மற்றும் உளப் பாதிப்பைக் கண்டு கொள்ள உதவுகிறது. இச்சோதனை மொழியறிவில் ஏற்படும் மாற்றங்களைக் கணிக்கிறது.

அறிவுத்திறனைப் பெரியோரிடமும் சிறுவரிடமும் மட்டும் சோதிக்காமல், சிறு குழந்தைகளிடமும், அதாவது பள்ளி செல்லும் பருவத்திற்கு முன்பும் (Pre-School Level) சோதிக்க இயலும்.

ஆக்கத்திறன் சோதனைகள் 'குறிப்புச்சிந்தனைத் திறனை' (Convergent Thinking) மட்டுமே அளவிடுவதாகவும், அதனால் உளவியலாளர்கள் 'விரிவுச்சிந்தனைத் திறனை' (Divergent Thinking) அளவிடுதல் இன்றியமையாதது என்றும் வலியுறுத்தினர். இவ் விரிவுச்சிந்தனைத்திறனே ஆக்கத் திறனுக்கு (Creativity) அடிப்படையானதாகும். குறிப்புச் சிந்தனையால் கொடுக்கப்பட்டுள்ள பல வரையறைகளுக்கு உட்பட்டு, ஒரு குறிப்பிட்ட சரியான விடையைக் கண்டுபிடிக்க இயலும். இத்தகைய சிந்தனை முறையால் அடையப்படும் முடிவுக்கு ஒரேயொரு சரியான விடைதான் இருக்க முடியும். ஆனால் விரிவுச் சிந்தனையால் கொடுக்கப்பட்டுள்ள ஒரு வரையறைக்குட்பட்டுப் பலவிதமான சரியான விடைகளைக் கூற இயலும்.

எ-டு.

| | | |
|---|---|---|
| இரவில் பறக்கின்ற குட்டிபோட்டுப் பால் கொடுக்கும் உயிரினம் | குறிப்புச் சிந்தனை | வௌவால் |
| பறப்பன | விரிவுச் சிந்தனை | பறவைகள், விமானம், பட்டம், கொடி, இன்னும் பல. |

விரிவுச் சிந்தனைத்திறனால் பல விடைகளைக் காணும் ஒருவர் அதிக ஆக்கத்திறன் படைத்தவராகக் கருதப்படுவார். இந்தியாவிலும் ஏனைய எல்லா நாடுகளிலும் உள்ள இக்காலக் கல்வி முறை பெரும்பாலும் அறிவுத்திறனை மட்டுமே வளர்க்கவும் அளவிடவும் உதவுகிறது. மனிதனின் வாழ்வுக்கும் வளத்துக்கும் புதுக் கண்டுபிடிப்புகளுக்கும் விஞ்ஞான முன்னேற்றத்துக்கும் இன்றியமையாததான ஆக்கத்திறன் இன்னும் முழுமையாகக் கண்டறியப்பட்டு, ஊக்கப்படுத்தப்பட்டு வளர்க்கப்படவில்லை. இதற்கு உதவும் வகையில் ஆக்கத்திறன் சோதனைகளைப் பயன்படுத்தலாம்.

அண்மைக் காலத்தில்தான் உளவியலாளர்களின் கவனம் ஆக்கத்திறன் மீது திருப்பப்பட்டுள்ளது. எனினும், ஆக்கத்திறனை அளவிட உருவாக்கப்பட்ட பல சோதனைகள் அறிவுத்திறனை அளவிடுவனவாகவே அமைந்தன. அவை ஆக்கத்திறனை அளவிட உதவவில்லை. இந்த வரிசையில் பல அயல்நாட்டுச் சோதனைகளும் அவற்றைப் பின்பற்றி அமைக்கப்பட்ட இந்தியச் சோதனைகளும் அடங்கும். கெட்சல்சு (Getzels), சாக்சன் (Jackson), மெக்கின்னான் (Mckinnon), தாரன்சு (Torrance), மெட்னிக்கு (Mednick) ஆகியோர் உருவாக்கிய ஆக்கத்திறன் சோதனைகளைப் பிற்காலத்தில் வாலக்கு (Wallach), கோகன் (Kogan) ஆகியோர் பல குறைகளைச் சுட்டிக்காட்டித் தம் புதிய ஆக்கத்திறன் சோதனைகளை அறிமுகப்படுத்தினர். இச்சோதனைகள் ஆக்கத்திறனைச் சிறந்த முறையில் அளக்க உதவுகின்றன. இவை அறிவுத்திறனை அளக்காமல் ஆக்கத் திறனை மட்டுமே அளக்க உதவுகின்றன. இச்சோதனையால் அளக்கப்படும் ஆக்கத்திறன் அதிகம் படைத்தோர் ஆக்கப்படைப்புகளை அதிகம் படைத்தவர்களாகக் கண்டறியப்பட்டுள்ளனர். இச்சோதனை முறையை த்திருக்கும் தனிமனிதர் சிந்தனைச் சூறாவளி முறையும் (Individual Brain Storming Technique) சிறந்த முறையில் ஆக்கத்திறனைக் கணிக்க உதவுவதாக இந்தியாவில் கணேசன் என்பவரால் கண்டறியப்பட்டுள்ளது.

**தொழில் கற்கும் திறன் சோதனைகள்:** ஒரு குறிப்பிட்ட தொழிலுக்கான பயிற்சியளித்தால் அதனால் ஒருவர் பயன் பெற இயலுமா என்பதைத் தொழில் கற்கும் திறன் சோதனைகளால் (Aptitude Tests) கண்டறியலாம். சான்றாக, இயந்திர இயக்குநர், சங்கீதப் புலவர், எழுத்தர் ஆகியோராகப் பயிற்சியினால் பயன்பெற முடியுமா எனச் சோதித்தறியலாம். இச்சோதனைகள் பிற சோதனைகளில் (அறிவுத்திறன், கல்வி முன்னேற்றம், தொழில்திறன்) இருந்து வேறுபடுத்திப் பார்க்கப்படவேண்டும். இவை ஒரு குறிப்பிட்ட தொழிற் பயிற்சியால் ஒரு வரையறுக்கப்பட்ட காலத்திற்குள் அத்தொழிலைக் கற்றுப் பயனடைய இயலுமா என்பதையே கண்டறிய உதவும். தொழில்திறன் என்பது ஒரு வேலையைத் துல்லியமாகவும் எளிதாகவும் ஒருவரால் செய்ய இயலுவதைக் குறிக்கும்.

தொழில் கற்கும் திறன் சோதனைகள் கணிக்கும் சில இயல்புகள் வருமாறு: (அ) துல்லியமாகக் காணும் திறன்(Visual Acuity), (ஆ) வண்ணம் காணும் திறன் (Colour Vision), (இ) துல்லியமாகக் கேட்கும் திறன் – கேட்டல் அளப்பான் கொண்டு அளப்பது (Audio-meter),(ஈ) கைவிரல்களால் இறுகப் பிடிக்கும் திறன்– கை விரல் இறுக்க அளப்பான் (Hand-Dynamometer) மூலம் அளப்பது, (உ) மறுசெயல் கால அளவு (Reaction Time), (ஊ) கைத்திறன் கற்கும் திறன் (Manual Dexterity), (எ) விரல் நுணுக்கம் கற்கும் திறன் (Finger Dexterity), (ஏ) கருவி கொண்டு நுண்பொருள் பிடிப்புக் கற்கும் திறன் (Tweezer/Plier Dexterity), (ஐ) பாகுபாட்டு மறுசெயல் கால அளவு (Discriminatory Reaction Time), (ஒ) இரு கர ஒன்றியக்கம் கற்கும் திறன் (Two-Hand Coordination), (ஓ) இடத் தொடர்பு கற்கும் திறன் (Spatial Relations). (காண்க: படம்).

மேற்கண்ட பல குறிப்பிட்ட திறன்கள் மட்டுமன்றி, சில குறிப்பிட்ட வேலைகளுக்கான பயிற்சி பெற ஏற்ற தகுதியையும் கணிக்கலாம். அவை (அ) இயந்திர இயக்கம் கற்கும் திறன் (Mechanical Aptitude) (காண்க: படம்), (ஆ) எழுத்தர் பணி கற்கும் திறன்(Clerical Aptitude) (காண்க: படம்), (இ) சங்கீதம் கற்கும் திறன் (Musical Aptitude),

(ஈ) ஓவியக் கலை கற்கும் திறன் (Graphic Arts Aptitude) (காண்க: படம்), (உ) மருத்துவம் கற்கும் திறன் (Aptitude in Medicine), (ஊ) வழக்குரைக் கல்வி கற்கும் திறன் (Aptitude in Law) (காண்க: படம்), (எ) கற்பிக்கும் கல்வி கற்கும் திறன் (Aptitude in Teaching), (ஏ) அறிவியல் மற்றும் பொறியியல் கல்வி கற்கும் திறன் (Aptitude in Science and Technology).

**ஆளுமைச் சோதனைகள்:** ஆளுமை என்பது மனிதனின் பல குணநலன்களைத் தன்னுள் கொண்டதாகும். மதிப்பீட்டு அளப்பான்கள் (Rating Scales) மூலமாகப் பிறர் ஒருவருடைய செயலை மதிப்பிடுமாறு செய்து, அவருடைய ஆளுமையை அளவிடுதல் செய்யலாம். அளவிடப்படும் குணத்தைத் தெளிவாக்கிப் பின்னர் அளத்தல் வேண்டும். மதிப்பிடுவோர் தங்கள் பாகுபாட்டுணர்வுகள் மதிப்பீட்டைப் பாதிக்காதவாறு கவனமாகச் செயற்பட வேண்டும்.

வரிசைப்படுத்தும் முறை (Ranking Technique) மூலமாக ஒரு குறிப்பிட்ட குண நலனில் அல்லது குண நலன்களில் சிறந்தவர்களை வரிசைப்படுத்தச் செய்து சிறந்தவரைக் கண்டறியலாம்.

நிகழ்ச்சிச் சோதனைகள் (Situational Tests) மூலம் ஒருவர் ஒரு நிகழ்ச்சியில் ஈடுபட்டிருக்கும் போதோ ஒரு நிகழ்ச்சியை உருவாக்கி, அதில் அவரை ஈடுபடவைத்தோ, அப்போது அவருடைய நடத்தையைக் கொண்டு ஆளுமையை அளவிடலாம்.

சமூக அளவை முறை(Sociometric Method)மூலம் ஒரு குழுவில் உள்ளவர்கள் மற்ற ஒவ்வொருவருடனும் எவ்வாறு பழகுகின்றனர் என்பதை அவர்களிடம் கேட்டறிந்து, அதிலிருந்து ஒவ்வொருவருடைய ஆளுமையையும் அறியலாம். இவர்களுள் சிலர் 'நட்சத்திரங்களாகவும்' (Stars) பலரால் விரும்பப்படுபவராகவும், சிலர் 'பரிமாற்ற விருப்புள்ளவர்களாகவும்' (Mutuals) ஒருவருக்கொருவர் விரும்புகிறவர்களாகவும் தனியார்களாகவும் (Isolates) மற்றோரை விரும்பாதவராகவும் மற்றோரால் விரும்பப்படாதவராகவும் இருக்கலாம்.

உள்மன நாடக முறை (Psychodrama) என்பது உளவியல் நோய் நீக்கத்திற்குப் (Psychotherapy)பெரிதும் உதவுகிறது. ஒருவருக்கு ஒரு நாடகப் பாத்திரத்தைக் கொடுத்து நாடகத்தில் பங்கேற்க வைப்பதன் மூலம், அவருடைய ஆளுமைக் குணங்களின் வெளிப்பாடுகளைக் கண்டறிந்து அவருக்கு உதவ முடியும்.

**உளப் பிரதிப்லிப்புக் கணிப்புச் சோதனைகள்:** மனிதனின் ஆழ்மனத்திலுள்ள எண்ணங்கள், நாட்டங்கள், உணர்ச்சிகள், தேவைகள் ஆகியவை அவன் காணும் மற்றவர்களிடமோ மற்றப் பொருள்களிடமோ இருப்பதாகத் தோன்றிப் பிரதிபலிக்கின்றன. சான்றாக, பணத்தாசை கொண்ட ஒருவன் இந்த உலகத்திலுள்ளோர் அனைவரும் பணத்தாசை கொண்டலைவதாக எண்ணுகிறான்; கூறுகிறான். தன் மன நிலையின் வெளிப் பிரதிபலிப்பால் நிகழும் அனுபவமே அது என்பதை அவன் உணர்வதில்லை.

உளப் பிரதிபலிப்புக் கணிப்புச் சோதனைகளில் (Projective Techniques) உளப் பிரதிபலிப்புக்குத் தூண்டி உதவும் வகையில் படங்கள், திரைப்படங்கள், மை ஒற்றுகள் (Inkblots), நிறைவுறா வாக்கியங்கள், சொல் தொடர்புகள், ஒருவருடைய அல்லது மற்றொருவருடைய எழுத்துகள் (முடிவு பெறாக் கதைகளை முடித்தல்), சித்திரங்கள் ஆகியன பயன்படுத்தப்படுகின்றன.

படங்களைப் பார்த்துக் கடந்த, நிகழ், வருங் காலங்களைக் குறித்துக் கதைகளை உருவாக்கும் 'கதை காண் சோதனை' (Thematic Apperception Test) மூலம் ஆழ்மனத்தைப் படம் பிடித்துப் பார்க்க இயலும் (காண்க: படம்). இதுபோன்றே, மை ஒற்றுகளும் ஆழ்மனத்தை ஆராய உதவுகின்றன (காண்க: படம்). ஆனால், இம்முறைகளைப் பயன்படுத்தச் சிறப்புத் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். பொதுவாக, ஆளுமையைச் சோதிக்க உதவுவதற்கு மட்டுமன்றி, உளப் பிரதிபலிப்புக் கணிப்புச் சோதனைகள் உளவியல் சிகிச்சையின்போதும் பெரிதும் உதவுகின்றன. சொல் தொடர்புகளை ஆராய்வதன் மூலம் மனத்தின் மறை பொருள்களை அறியலாம். இம்முறையைக் குற்றவியலில் துப்பறியப் பயன்படுத்துகின்றனர்.

**ஆளுமைக் கணிப்பான்கள்:** இப்போது நூற்றுக் கணக்கான ஆளுமைக் கணிப்பான்கள் (Personality Inventories) பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவை மதிப்பீட்டு அளப்பான்களைப் போல் பிறரால் மதிப்பிடப்படாமல், ஒருவரால் அவருடைய ஆளுமைக் குணங்களையே மதிப்பிடச்செய்து, அதிலிருந்து கணிக்கப்படுகின்றன. இவை தன் மதிப்பீட்டிற்கு (Self-Rating) உதவுகின்றன; தன்னைப் பற்றித்தான் நினைப்பது, மற்றோரைப் பற்றியோ சூழலைப்பற்றியோ நினைப்பது, உணர்ச்சிகளை வெளிப்படுத்தல், விருப்பம், உள் உணர்வுகள் (உள்நோக்கினால் அறிவது) ஆகியவற்றை மதிப்பிடுவதன் மூலம் ஆளுமையைக்

கணிக்க உதவுகின்றன. இவற்றால் மற்றோர் ஒருவரைப் பற்றி அறிந்திருப்பதைவிட அதிகமாக அறிந்து கொள்ள முடியும்.

ஆளுமைக் கணிப்பான்களால் கணிக்கப்படும் குணங்களாவன: (அ) சூழலுடன் இசைந்து வாழும் திறன் (Personal Social Adjustment), (ஆ) உளநோய்க் குறிகள் (Neurotic/Psychotic Tendencies), (இ) தனித்திருத்தல் – கலந்திருத்தல் (Introversion–Extroversion), (ஈ) பாதுகாப்புணர்வு–பய உணர்வு (Security–Insecurity), (உ) பரபரப்புணர்வு அல்லது பதற்றம் (Anxiety). இவைதவிரப் பலப்பல குணங்களை ஆளுமைக் கணிப்பான்கள் கணிக்க உதவுகின்றன.

ஆர்வம், நாட்டம், மதிப்புச் சோதனைகள் (Interest, Attitude and Values): ஒருவருடைய தொழில் கற்கும் திறனோ தொழில்திறனோ ஒருவரை ஒரு தொழிலுக்குத் தேர்வு செய்ய மிக முக்கியமானது அன்று. ஒருவருடைய ஊக்கமும் (Motivation) ஆர்வமும் (Interest) மேற்கண்டவற்றுடன் இணைந்திருத்தல் வேண்டும். பொதுவாக, ஒருவர் ஒரு தொழிலைத் தேர்ந்தெடுக்கத் தம் சொந்த விருப்பத்தை ஆழ்ந்து கவனிக்காமல் சந்தர்ப்பச் சூழ்நிலைகளால் உந்தப்பட்டு முடிவெடுப்பது அதிகமாக உள்ளது. இவ்வாறன்றி, ஆர்வத்தையும் ஊக்கத்தையும் அறிந்து நடத்தலும் வேண்டும். ஒருவருக்கான தகுந்த கல்வியையும் வேலையையும் தேர்வு செய்ய ஆர்வச் சோதனைகள் உதவி செய்யும்.

பொருள்கள், மனிதர்கள், சூழல்கள் குறித்துள்ள நாட்டத்தையும் ஒருவர் மதிக்கும் அளவையையும் சோதனைகள் மூலம் அறியலாம். பொருளால் பாகுபடுத்தும் சோதனைமுறையால் (Semantic Differential Technique) மிகத் துல்லியமாக ஒருவருடைய மன ஆழத்திலுள்ள நாட்டத்தையும் மதிப்பையும் அறியலாம்.

ஒருவரின் விருப்பு வெறுப்புகளை நேரடியாகக் கணித்தறியும் முறை (Direct Assessment Method) ஒன்று அண்மைக் காலத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. விழிவிரிவுக் கணிப்புமுறை (Pupilary Dialation Assessment) என்னும் இம்முறையால் கருவிகளின் துணைக்கொண்டு விழிவிரிவு கண்காணிக்கப்படுகிறது. ஒருவர் ஒருவரையோ ஒரு பொருளையோ விருப்பமுடன் நோக்கினால் கருவிழி விரிவடைகிறது (சான்றாக, விருப்பமான நண்பர், விருப்பமான உணவு). ஆனால்,அவர் வெறுப்புடன் நோக்கும்போது கருவிழி சுருங்குகிறது. இவ்விழி விரிவையும் சுருக்கத்தையும் தன்விருப்பம் போல் கட்டுப்படுத்த இயலாது. இவ்விழி விரிவின் அளவைக் கொண்டு ஒருவரின் விருப்பத்தின் அளவை அறியலாம். அதிக விருப்பமென்றால் அதிக விரிவிருக்கும். அதிக வெறுப்பிருந்தால் அதிகச் சுருக்கம் இருக்கும். மக்களால் விரும்பப்படும் விளம்பரப்படங்களைத் தேர்வு செய்வது, ஆண்–பெண் இருபாலாரிடையே உள்ள ஈடுபாட்டை அறிவது போன்று பற்பல தேவைகளுக்கு இம்முறை பயன்படுத்தப்படுகிறது.

கருத்து ஓட்டெடுப்பு (Opinion Polling) முறையால் ஒரு சமூகத்தின் நாட்டத்தையும் மதிப்பையும் அறியலாம். சமூக, பொருளாதார, அரசியல், மதம் சார்ந்த பன்னாட்டுப் பிரச்சினைகள் குறித்த மக்களின் கருத்துகளைக் கணித்திட இம்முறை உதவும்.

உளவியல் சோதனை முறைகளைப் பயன்படுத்தவும், அவற்றின் மூலம் கிடைக்கும் மதிப்பீடுகளை உணர்ந்து விளக்கவும் முறையாகப் பயிற்சி பெற்ற உளவியலாளர்களாலேயே இயலும். ஏனையோர் பயன்படுத்தினால் ஊறுகள் விளையக் கூடும். வே.க.

**உற்சவ விளக்கம்** என்னும் நூல் அறுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தங்கள் 23 கொண்டது. முதற் பாடல் நூல் நுவலும் பொருளைப் பற்றியும் மற்றைய 22 பாடல்களும் திருவிழாவினைப் பற்றியும் விளக்கிக் கூறுகின்றன. இந் நூலாசிரியர் பெயர் தெரியவில்லை.

'சிறப்பொடுபூசனை செல்லாது' என்னும் திருக்குறளுக்கு உரை கூறப்போந்த பரிமேலழகர், 'நித்தியத்தின் தாழ்வுதீரச் செய்வது நைமித்திகமாகலின் சிறப்பொடு பூசனை என்றார்' என்று விளக்கியுள்ளார். அச்சிறப்பு வழிபாடே திருவிழா ஆகும். இந்நைமித்திகத்திற்கு உற்சவம், திருவிழா, சாறு எனப் பல பெயர்கள் உள்ளன.

இந்நூல் விழாக்களின் நடைமுறைகளையும் அவற்றினுட்கருத்துகளையும் பயன்களையும் தெரிவிக்கிறது; விழாவிதிகள், மண் எடுத்தல், கொடியேற்றம் முதலிய பல செயல்களையும் விளக்கிக் கூறுகிறது. இதனால் அந்தக்கரண சுத்தி, பாசநீக்கம், மலபரிபாகம், சிவப்பேறு முதலிய பயன்கள் கிட்டும் எனவும் இந்நூல் கூறுகிறது.

பாமர மக்களும் இறையருள் பெற்றுய்ய வேண்டும் என்னும் குறிக்கோளுடன் பெருமானே விழாக்காலங்களில் வெளியே உலா வருகிறார். உயிர்கள் இன்புற வேண்டும் என்னும் குறிக்கோளைக் கொண்டே கொடி ஏற்றப்படுகிறது. ஓரறிவுயிர்

முதல் பகுத்தறிவு வாய்ந்த மனிதன் வரை எல்லா உயிர்களும் வேற்றுமையின்றிப் பெருமானைக் கண்டு இன்புறுகின்றன.

மேலும், யாகசாலை வழிபாடு, எண்திசைகளிலும் தேவதைகளை வணங்கல், முளைகட்டுதல், மங்கலப் பொருள்கள் தோரணம் முதலியன அமைத்தல் ஆகிய நிகழ்ச்சிகள் ஊரைத் தூய்மைப்படுத்துவதோடு, மக்களின் அகத்தூய்மை, புறத்தூய்மைகளுக்கும் வழி கோலுகின்றன. நகரும் சிறந்த அழகுடன் திருவிழாக் காலங்களில் விளங்குகிறது. முதல்நாள் விழா இறையுணர்வு, உலக ஆசையைக் கட்டுப்படுத்தத் தூண்டுகிறது. இரண்டாம் நாள் விழா நல்வினையையும் தீவினையையும் நீக்கி அவனருள் நாடத் தூண்டுகிறது. மூன்றாம் நாள் விழா சத்துவம் முதலிய முக்குணவயத்தால் உயிர்கள் அல்லலுழவாது திருந்த வழி கோலுகிறது. நான்காம் நாள் விழா மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் அந்தக்கரணங்கள் நான்கையும் தூய்மைப்படுத்தி வாழ்க்கையினை ஒழுங்குபெற நிறுத்த உதவுகிறது. ஐந்தாம் நாள் விழா ஐம்பொறிச் சேட்டையிலிருந்து உயிர் உய்தி பெற வழி செய்கிறது. ஆறாம் நாள் விழா எல்லா மக்களையும் வேற்றுமையற்ற நிலையில் பத்தி வெள்ளத்தில் ஈடுபடச் செய்கிறது. ஏழாம் நாள் விழா ஆணவமலச் சேட்டை ஒழியப் பிரணவமாகிய வில்லில் சத்தியாகிய அம்பினை ஏற்றி மற்றும் பல ஆயுதங்களையும் தாங்கி வேட்டையாடி, அம்மல ஆற்றலைக் கெடுத்து, அருளுக்குப் பாத்திரமாகும் நிலையில் உயிரைப் பக்குவப்படுத்துகிறது.

இறைவன் மக்களின் அஞ்ஞான இருளை நீக்கி, அவர்கள் ஞானம் பெற வாய்ப்பூட்டும் நிலையில் நடனம் ஆடி உலாப் போந்து உயிர்களை ஆனந்தத் தழுத்துகிறான். யாவரும் ஞான நடனம் கண்டு களிக்கவும் பாசநீக்கம் பெறவும் திருச்சாந்தணிதல் என்னும் நிகழ்ச்சி கொண்டாடப்படுகிறது. பாசநீக்கம் பெற்ற ஆன்மாக்கள் சிவப்பேற்றுக்குரியவர்களாதலின், இறைவனின் அபயம் பெற்றுத் தூக்கிய திருவடியில் சிவ ஞானம் எய்தி இன்புறவே நடராசப்பெருமான் திரு வீதியுலா வருகிறார். அதனால் உயிர்களுக்கு ஏற்பட்டுள்ள மல மாசு நீங்கப்பெற்று அவை ஆனந்தத் தழுந்துகின்றன.

மேலும், பல ஆற்றலைக் கொடுக்கவே தீர்த்தமாடல் என்ற செயலையும் விழாவை ஒட்டி வைத்துள்ளனர். இறுதியில் மௌன உற்சவம் என்பது நாதம் விந்துவில் ஒடுங்க இறை உருவற்றுள்ள ஒரு பெருநிலையைக் குறிப்பிடுகிறது. வீதி உலாவில் அம்மை முன்னாகவும் அப்பன் பின்னாகவும் காட்சி தருகின்றனர். ஞானத்தைத் தாய் வழங்குகிறாள். அருளை அப்பன் பாலிக்கிறான் என்பதையே அந் நிலை காட்டுகிறது.

விழாக்கள் 26 நாள்கள், 18 நாள்கள், 10 நாள்கள், 3 நாள்கள் கொண்டாடும் மரபும் உண்டு. மேலும் கார்த்திகை, சட்டி முதலிய நோன்புகளையும் கொண்டாடுகின்றனர். யாவரும் பயன் பெற வேண்டும் என்பது குறிக்கோள். ஒரு நாள் இயலாவிடினும் பிறநாளிலாவது வந்து இறையருள் பெற வாய்ப்பேற்படுத்த வேண்டும் என்பதற்காகவே பல நாள்கள் விழா எடுக்கின்றனர். காப்புக்கட்டல்-சரியை; திருச்சாந்தணிதல்-கிரியை; திருவுலாப்போதல் – யோகம்; தீர்த்தமாடல், பெருமானை நினைத்துத் தியானித்தல்-ஞானம் ஆக நால்வகை நெறிகளிலும் மக்கள் திருவிழாவில் இறையருள்பெற்று உய்தி பெற வாய்ப்புண்டு. ஆதலின் விழாவின் உண்மைப் பயனைத் தாம் உணர்வதோடு பிறருக்கும் அறிவுறுத்திச் சிரத்தையோடு அதனைக் கொண்டாடுவராயின் உயிர்கள் அனைத்தும் பேரின்பம் எய்தும். ‘விதியினால் தெய்வ நாள் விழா உவந்தான் என்று உண்மை மதிவல்லோர் உணர்த்தக் கேட்டோர் மறு பிறப்பறுப்பர் அன்றே’ என்று உற்சவப் பயன் கூறி இந்நூல் முடிகிறது. இரா.ச.

**உற்பத்தி**: பண்டங்களும் பணிகளும் மனித விருப்பத்தை நிறைவேற்றும் ஆற்றலைப் பெற்றிருப்பின், அவ்வாற்றல் பயன்பாடு (Utility) எனப்படும். இவ்வாற்றல் இல்லாதவற்றிற்கு இவ்வாற்றலைப் படைத்தல் உற்பத்தி (Production) எனப்படுகிறது. இவ்வாற்றல் குறைவாக இருப்பின், இதனை மிகுதிப் படுத்துதலும் உற்பத்தியே. எனவே, பயன்பாட்டைப் படைத்தல் உற்பத்தியே.

மனிதனால் குறிப்பிட்ட இடத்திலும் காலத்திலும் எதையும் ஆக்கவும் அழிக்கவும் இயலாது. ஆனால், அறிவியல் வளர்ந்திருக்கும் இக்காலத்தில் இயற்கையில் கிடைப்பவற்றின் வடிவத்தை, இடத்தை, மாற்றுவதன் மூலமும் அவை கிடைக்கும் காலத்தை மாற்றியமைப்பதன் மூலமும் பயன்பாட்டைப் படைக்க இயலும். இச்செயலே உற்பத்தியின் கருப் பொருளாகும்.

இயற்கையில் கிடைக்கும் களிமண் பயனுள்ளது. ஆனால், தண்ணீரை ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்ற மனித விருப்பத்தை நிறைவேற்றும் ஆற்றல் அதற்கு இல்லை. அதே களிமண்ணை ஒரு பானையாக மாற்றிவிட்டால், மனித விருப்பத்தை நிறைவேற்றும் ஆற்றலை

அது பெற்றுவிடுகிறது. இவ்வாறு பண்டத்தின் வடிவத்தை மாற்றுவதன் மூலம் படைக்கப்படும் பயன்பாடு வடிவப் பயன்பாடாகும். பூந்தோட்டங்களில் மணம் மிக்க அழகிய மலர்கள் பூத்துக் குலுங்கினும், சூட்டிக்கொள்ள வேண்டும் என்ற மங்கையரின் விருப்பத்தை நிறைவேற்றும் ஆற்றல் அவற்றிற்கு இல்லை. அதே மலர்களை மங்கையர் விரும்புமாறு தொகுத்து, அவர்கள் இருக்குமிடத்தில் கொடுத்தால் அம்மலர்களுக்குப் பயன்பாடு உண்டு. இடத்தை மாற்றித் தருவதன் மூலம் படைக்கப்படுவது இடப் பயன்பாடு. இதைப் போன்று பண்டங்களும் பணிகளும் கிடைக்கும் காலத்தை மாற்றித் தருவதன் மூலம் அவற்றிற்குப் பயன்பாட்டைப் படைக்கலாம் அல்லது அவற்றின் பயன்பாட்டை மிகுதிப் படுத்தலாம். இது காலப் பயன்பாட்டைப் படைத்தலாகும். பண்டங்களுக்கும் பணிகளுக்கும் மதிப்பு (value) உண்டென்பதால் மதிப்பைப் படைத்தலும் உற்பத்தியாகும்.

உற்பத்தியாகும் பண்டங்களும் பணிகளும் எல்லோருக்கும் எப்போதும் நற்பயனைத்தான் தர வேண்டும் என்பதில்லை. சாராயம், கஞ்சா போன்ற போதைப் பண்டங்களின் உற்பத்தியும், மக்களின் பசிப்பிணியைப் போக்கவல்ல நெல், கோதுமை போன்ற பண்டங்களின் உற்பத்தியும், அறிஞர் பெருமக்களின் பணிகளும் பொருளாதாரத்தில் உற்பத்தி என்றே குறிப்பிடப்படுகின்றன. உற்பத்தியில் நற்பயன், தீய பயன் என்ற வேறுபாடுகள் இல்லை. தனி மனிதர்கள் தத்தம் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள விரும்புவதைப் போன்று, ஒவ்வொரு நாடும் தனது நாட்டுவருமானத்தைப் பெருக்கிக் கொள்ளும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது. நாட்டின் பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் உற்பத்தியைப் பெருக்கி, அதன் வழியாக நாட்டு வருமானத்தையும் மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்தப் பாடுபடுகின்றது.

ஒரு நாட்டின் மொத்த உற்பத்தியை அந்த நாட்டின் கால நிலை, பருவ மழை, இயற்கை வளம், அறிவியல் முன்னேற்றம், பொறி நுட்பஅறிவு வளர்ச்சியின் தன்மை, மூலதனத்தின் அளவு, வங்கிகளின் வளர்ச்சி, செய்திப் போக்குவரத்துத் துறைகளின் வளர்ச்சி, அரசியல் அமைப்பு, திட்டமிடுதலின் போக்கு, மக்களின் இயல்பு போன்ற காரணிகள் வரையறுக்கின்றன.

உற்பத்திப் பொருள் பல்வகைமை: மனிதத் தேவைகளை நிறைவுறச் செய்யப் படைக்கப்படும் உற்பத்திப் பொருள்களை விருப்பங்களின் அடிப்படையில் இன்றியமையாதவை, வசதிக்குத் தேவையானவை, ஆடம்பரமானவை எனப் பல்வகைப்படுத்தலாம். உணவு, நீர், உடை, காற்று போன்றவை மானிட வாழ்க்கைக்கு இன்றியமையாதவை என்றும், சத்துள்ள உணவு, காற்றோட்டமுள்ள இருப்பிடம் போன்றவை திறமைக்கு இன்றியமையாதவை என்றும், திருமணம், பண்டிகை போன்ற சிறப்பு நாட்களிலும் விழாக் காலங்களிலும் தேவைப்படும் பட்டாடைகள், விருந்து அளித்தல் போன்றவற்றை வழக்கத்தால் இன்றியமையாதவை என்றும் இன்றியமையாப் பொருள்களை மேலும் பல்வகைப்படுத்தலாம். மனிதனின் திறமையை உயர்த்தும் வகையிலான மின்விசிறி, கைக் கடிகாரம், சிறிய கருவிகள், வசதியாக அமர்ந்து படிக்கத்தக்க மேசை, நாற்காலி போன்ற உற்பத்திப் பொருள்கள் வசதிப் பொருள்களாகும். தம் செல்வச் செழிப்பு நிலையைப் பிறர் அறியும் வண்ணம் சூழ்நிலைகளை உருவாக்கத்தக்க பட்டாடைகள், வைர அணிகலன்கள், பகட்டான மாளிகைகள், பளபளக்கும் விலைமிக்க ஊர்திகள் போன்றவை ஆடம்பரப் பொருள்களாகும்.

இவ்வாறு உற்பத்திப் பொருள்களைப் பல்வகைப் படுத்துதல் (Product Diversity) இடத்திற்கு இடம், ஆளுக்கு ஆள், காலத்திற்குக் காலம் மாறுபடக் கூடியது. மகிழ்வுந்து (Pleasure Car) மருத்துவருக்கு இன்றியமையாததாகவும், வணிகர் அல்லது ஆசிரியருக்கு வசதியானதாகவும், ஏழைக் குடியானவருக்கு ஆடம்பரப் பொருளாகவும் இருக்கலாம். குளிர்நிலப் பகுதியில் இன்றியமையாத பொருளாக இருக்கும் கம்பளி ஆடைகள் வெப்பநிலப் பகுதிகளில் எவ்வகைப் பயனும் அளிப்பதில்லை.

இன்றியமையாதவை, வசதிக்கானவை, ஆடம்பரப் பொருள்கள் என உற்பத்திப் பொருள்களை வகைப்படுத்துதல் ஒரு நாட்டின் வாழ்க்கைத்தரத்தை (Standard of Living) அறிந்துகொள்ள மிகவும் பயன்படுகிறது. ஒரு நாட்டிலுள்ள பெரும்பான்மை மக்கள் இன்றியமையாத பண்டங்களை மட்டும் நுகரும் நிலையில் இருந்தால், அந்த நாட்டின் வாழ்க்கைத் தரம் மிகவும் குறைவான நிலையிலிருப்பதாகப் பொருள்படும். இன்றியமையாத பொருள்களோடு வசதிப் பொருள்களையும் ஆடம்பரப் பொருள்களையும் நுகரும் நிலையிலுள்ள மக்களைக் கொண்டுள்ள நாடு உயர்நிலை வாழ்க்கைத் தரத்தைப் பெற்றிருக்கிறது என்பது பொருள். ஆடம்பரப் பொருள்களை மிகுதியாகப் பயன்படுத்தும் மக்களைக் கொண்ட நாடு மிக உயர்ந்த வாழ்க்கைத் தரத்தைக் கொண்ட நாடாகும்.

ஆடம்பர நுகர்வுகள் எல்லாம் வீண் என்று குறிப்பிட இயலாது. ஆடம்பரப் பொருள்களின்

நுகர்வு மகிழ்ச்சியான வாழ்க்கைக்கும் மக்களின் நல் முயற்சிகளுக்கும் அடிப்படையாக அமைகிறது. இத்தகைய ஆடம்பர நுகர்வு இல்லாவிட்டால் கலையும் அரிய பொருள்களும் தோன்றா. மனைவிக்கு ஒரு சிறிய கல்லறையே போதுமென்றாலும் ஆடம்பர விருப்பம் பேரரசன் சாசகானுக்கு இருந்ததால்தான், உலகப் புதுமைகளுள் ஒன்றாகத் தாசுமகால் உருவாகியது. இப்பொருள்களின் நுகர்வால் வேலைவாய்ப்புகள் பெருகவும், பொருளாதாரம் உயர்நிலை பெறவும் வாய்ப்புகள் உண்டு.

உற்பத்திப் பொருள்கள் பல்வகைப்படல் என்பதை உற்பத்திப் பொருள்களைப் பல அடிப்படைகளில் வகைப்படுத்துதல் என்ற பொருளிலும் விளக்குதல் மரபு. காற்று, நீர், சூரிய ஒளி போன்று இயற்கையின் கொடையாகக் கிடைப்பவை இலவசப் பொருள்கள். தேவையோடு ஒப்பிடும்போது கிடைத்தற்கரியனவாகவும், பயன்பாடு உடையனவாகவும், பரிமாற்றஞ் செய்யத்தக்கனவாகவும் உள்ள பொருள்கள் பொருளாதாரப் பொருள்கள். உற்பத்திப் பொருள்களின் இவ்வகைப்பாடு காலம், இடம், ஆள், தேவையின் அளவு, நேரம் ஆகியவற்றைப் பொறுத்து மாறுபடுந் தன்மையுடையது.

புலன்களுக்குப் புலப்படும் வீடு, நிலம் போன்ற உற்பத்திப் பொருள்கள் சடப்பொருள்கள் அல்லது பருப் பொருள்கள். புலன்களுக்குப் புலப்படாத நன்மதிப்பு, இசை போன்றவை நுண்பொருள்கள். நிலம், வீடு, தொழிலின் நன்மதிப்பு போன்று உரிமையைப் பிறருக்கு மாற்றத்தக்க தன்மையுடையவை மாற்றத்தக்க பொருள்கள். அறிவுக் கூர்மை, செய்திறன் போன்று பிறருக்கு மாற்ற இயலாதவை மாற்றத்தகாத பொருள்கள். மன நிறைவைப் பெறுவதற்காக நேரடியாகப் பொருள்களைப் பயன்படுத்தும்போது அவை நுகர்வுப் பொருள்கள். மேன்மேலும் பண்டங்களையும் பணிகளையும் உற்பத்தி செய்வதற்காகப் பயன்படுத்தப் படுபவை உற்பத்தியாளர் பொருள்கள். மலர்கள், காய் கனிகள், மீன், பால், இறைச்சி போன்று விரைவில் கெட்டுப் போகத் தக்கவை அழியும் பொருள்கள். வீடு, கட்டிடம், தொலைக்காட்சிப் பெட்டி போன்று நீண்ட கால அளவில் பயன் தருபவை நீண்ட காலத்திற்கு உழைக்கத்தக்க பொருள்கள். தனி ஆளினின்று பிரிக்க இயலாத அறிவுக் கூர்மை போன்றவை தனி ஆளுக்குரிய பொருள்கள். வீடுகள், கட்டிடங்கள், துணி போன்றவை தனி ஆளுக்குப் புறம்பான பொருள்கள்.

உற்பத்திப் பொருள்கள் பல்வகைப்படுதல் பொருளியல் விலைக் கோட்பாட்டில் பயன்படுத்தப் படுகிறது. உற்பத்திப் பொருளின் அலகுகள் யாவும் ஓரியல்பானவை என்ற எடுகோள் நிறைவுப் போட்டி அங்காடியிலும், முழுமையான பதிலிகளாக (Substitutes) இல்லாமல் வேறுபடுத்தப்பட்ட அலகுகளாக இருப்பவை என்ற எடுகோள் முற்றுரிமைப் போட்டி அங்காடியிலும் பயன்படுகின்றன.

உற்பத்திப் பொருள் வேறுபடல்: ஒரு பொருள் நிறுவனத்தால் அல்லது பல நிறுவனங்களால் உற்பத்தி செய்யப்படும்போது அப்பொருளின் அலகுகளை அவற்றின் தன்மை, நுகர்வோர் அறியாமை, விளம்பரம் போன்றவை மூலம் விற்பனை முயற்சி என்ற அடிப்படையில் வேறுபடுத்திக் காட்ட முனைவர். இவ்வாறு உற்பத்திப் பொருள் வேறுபடல் (Product Differentiation) உயர்ந்த ஆதாயத்தைப் பெற வேண்டும் என்ற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டதே.

உற்பத்திப் பொருள்களின் அலகுகள் ஓரியல்பானவையாகவோ ஓரியல்பற்றவையாகவோ இருக்கலாம். ஒரு பொருளின் பல்வேறு அலகுகள் யாவும் ஓரியல்புடையனவாக இருந்தால், அவை நிறைவான பதிலிகளாகப் (Substitutes) பயன்படத்தக்கவையாகவும் வேறுபாடுகளுள்ளவையாக இருந்தால், பதிலிகளாகப் பயன்படத் தகாதவையாகவும் இருக்கும். உற்பத்திப் பொருளின் அலகுகள் யாவும் ஓரியல்பானவை என்ற கருத்தைத் தொன்மைப் பொருளியல் அறிஞர்கள் கருதினர். அதனால் அவர்கள் அமைத்த விலைக் கோட்பாட்டில் ஓரியல்பான பண்ட அலகுகள் என்ற கருத்து உள்ளடங்கியிருந்தது. ஆனால், சராபா என்பவர் முதன்முதலாக இக்கருத்தை மறுத்துப் 'பண்ட வேற்றுமை' (Product Differentiation) என்ற கருத்தைக் கையாண்டார். பேராசிரியர் சேம்பர்லின் (Chamberlain),திருமதி சான் இராபின்சன் (John Robinson) போன்றோர் இதனை விரித்து விளக்கினர்.

நுகர்வோரின் உளநிலை (Psychology) அடிக்கடி மாறத் தகுந்தது; கவர்ச்சியான விளம்பரங்களால் ஈர்க்கப்படத் தக்கது; இடம், காலம் ஆகியவற்றிற்கேற்ப மாறத் தகுந்தது. இவை போன்ற உண்மை நிலையைப் பயன்படுத்திப் பொருள்களை வேறுபடுத்திக் காட்டி உயர் அளவு மன நிறைவை நுகர்வோரும், உயர் அளவு ஆதாயத்தைத் தொழில் முனைவோரும் பெறும் வண்ணம் உற்பத்தியாளர் செயற்படுவர். இதனடிப்படையில் நிறைவுப் போட்டி அங்காடி அமைப்பைக் காட்டிலும் முற்றுரிமைப் போட்டி அங்காடி அமைப்பே உண்மை நிலைக்குப் பொருத்தமானது என்பதைப் பேராசிரியர் சேம்பர்லின் உலகறியச் செய்தார்.

ஓரியல்பான பண்ட அலகுகளைக் கொண்ட அங்காடி அமைப்பை நிறைவுப் போட்டி (Perfect Competition) என்றும், அதில் நிறுவனங்களின் ஒருங்கிணைப்பைத் தொழில் என்றும் குறிப்பிடுவது மரபு. வேறுபடுத்தப் பட்டவையாகவும் ஒன்றுக்கொன்று நெருக்கமான பதிலிகளாகவும் உள்ள பண்ட அலகுகளுடைய அங்காடி அமைப்பை நிறைகுறைப் போட்டி (Imperfect Competition) அங்காடி என்றும், அதில் நிறுவனங்களின் ஒருங்கிணைப்பைத் தொகுப்பு என்றும் குறிப்பிடுவது மரபு. முற்றுரிமைப் போட்டி அங்காடியில் உள்ள பொருள்களின் அலகுகளுக்கு எடுத்துக்காட்டாக, கால்கேட்டு, கோலினாசு, பினாக்கா போன்ற பற்பசைகளைக் குறிப்பிடலாம்.

வேறுபடுதற்கான அடிப்படைகள்: 1. தனி வாணிகக் குறியீடுகள், பிற குறியீடுகள், அமைப்பு, நிறம் போன்றவற்றின் அடிப்படையில் பொருளின் அலகுகள் வேறுபடுத்தப்படலாம். 2. செலவில்லாமல் நேரடியாக வீட்டு வாசலில் பொருள்களைக் கொடுத்தல், வாடிக்கையாளரிடம் மிகுந்த மரியாதையுடனும் அன்புடனும் நேர்மையுடனும் பணிவுடனும் நடந்து கொள்ளுதல், நிறுவனத்தின் நன்மதிப்பு ஆகிய பல வகையான விற்பனை நிலைகளின் அடிப்படையிலும் பொருளின் அலகுகளை வேறுபடுத்தலாம். 3. கவர்ச்சியான விளம்பரம், சமூகத்தில் உயர்நிலையில் இருப்பவர்களின் மதிப்புச் சான்றிதழ்களைப் பெறுதல், திரைப்பட நடிகர்களைப் பயன்படுத்தித் திரைப்படங்களிலும் கால இதழ்களிலும் விளம்பரங்கள் செய்தல் போன்ற முறைகளால் கற்பனை வேறுபாடுகளை ஏற்படுத்தலாம். ஒரு சில விளம்பரச் சொற்றொடர்களைத் திரும்பத் திரும்பப் பல முறை பயன்படுத்துவதாலும் குறிப்பிட்ட பண்டத்திற்கான நல்ல அங்காடியை உருவாக்கலாம். பேரம் பேசுதலைத் தவிர்த்துக் கறார் விலை' (Fixed price) என்று விளம்பரப் பலகைகள் வைப்பதன் மூலமும் அமைப்புகள் மூலமும் விலையை வரையறை செய்து விலைகளை உறுதி செய்வதன் மூலமும் உயர் நிலையைப் பெறுதல் இயலும். 4. நிறுவனங்களுக்கிடையே உள்ள தொலைவும் பொருள் வேறுபாட்டிற்கு அடிகோலும். தொலைவு காரணமாகச் செலவு மிகுமாதலால் வேறுபாடு எளிதாகிறது.

பொருள் வேறுபாடு உண்மையானதாகவோ கற்பனையானதாகவோ இருக்கலாம். ஆனால் வேறுபாடு இருக்கிறது என்ற மக்களின் நம்பிக்கைதான் பொருள் வேறுபாட்டிற்கான அடிப்படைக் காரணம்.

இத்தகைய பொருள் வேறுபாடு நடைமுறை வாழ்க்கையில் பெருமளவில் இருப்பதால்தான், உற்பத்தி நிறுவனங்களின் தேவைக்கோடு மேலிருந்து கீழாக, இடமிருந்து வலமாகச் சரிந்து செல்கிறது. இதன் விளைவாக நிறுவனம் தனது முழுத் திறனையும் பயன்படுத்தாமலேயே சம நிலையை அடைந்து விடுகிறது. குறுங்காலமாக இருந்தாலும் நீண்ட காலமாக இருந்தாலும் நிறுவனம் இவ்வாறு சமநிலையைப் பெறுவதால், உபரி ஆற்றல் அல்லது எச்சத் திறன் (Excess Capacity) இருந்து கொண்டே இருக்கும். இதனைக் கீழ்வரும் வரை படங்கள் தெளிவாக விளக்குகின்றன.

படம்-1-இல் SAC-குறுங்காலச் சராசரிச் செலவுக் கோடு; SMC-குறுங்கால இறுதிநிலைச்செலவுக் கோடு; AR(D)- தேவைக்கோடு சராசரி வருவாய்க் கோடு; MR-இறுதிநிலை வருவாய்க் கோடு. நிறுவனத்தின் சமநிலை E என்னும் புள்ளியில் அமைவதால், மொத்த உற்பத்தி OR, ஓர் உற்பத்திப் பொருளின் சராசரிச் செலவு RS, ஓர் உற்பத்திப் பொருளின் விலை RT. மொத்த உற்பத்தி OM ஆக இருந்தால் நன்று. ஆனால், மொத்த உற்பத்தி OR அளவிலும் எச்சத்திறன் RM க்குச் சமமாகவும் இருக்கும். படம் –2–இல் LAC – நீண்டகாலச் சராசரிச் செலவுக் கோடு; LMC – நீண்டகால இறுதிநிலைச் செலவுக் கோடு; AR – சராசரி வருவாய்க் கோடு; MR – இறுதிநிலை வருவாய்க் கோடு. சமநிலை E என்னும் புள்ளியில் அமைவதால் உற்பத்தி அளவு OR ஆகவே இருக்கும். OM உற்பத்தி அளவில் சமுதாயம் உயர் நிலை நன்மையைப் பெறும். ஆனால் நிறுவனம் அதன் உற்பத்தியை OR அளவில் நிறுத்தி விடும்.

நிறுவனங்கள் தத்தம் உயர் அளவு உற்பத்தி ஆற்றலைப் பயன்படுத்தாமல் இருப்பதால், சமுதாயத்தின் மொத்த உற்பத்தி குறைந்து, விலைகள் மிகுந்து நுகர்வோர் சுரண்டப்படும் நிலையும் இருந்து கொண்டே இருக்கும்.

உற்பத்திக் காரணிகள்: உற்பத்தியை உறுதிப் படுத்தும் காரணிகள் பல. அவற்றைத் தொகுத்து உற்பத்திக் காரணிகள்(Factors of Production) என்று கூறுதல் மரபு. உற்பத்திக் காரணிகளை நிலம், உழைப்பு, மூலதனம், அமைப்பு என்ற நான்கு பிரிவுகளாகப் பகுத்தல் மரபு. நிலத்தின் உரிமையாளர் நிலக்கிழார்; உழைப்பை நல்குபவர் உழைப்பாளர் அல்லது தொழிலாளர்; மூலதன உரிமையாளர் மூலதனக்காரர்; அமைப்பு என்னும் பணியை நல்குபவர் அமைப்பாளர். இவர்கள் ஆற்றும் பணிகளுக்கு முறையே வாரம், கூலி, வட்டி, ஆதாயம் ஆகிய ஊதியங்களைப் பெறுவர்.

சில பொருளியல் அறிஞர்கள் நிலம், உழைப்பு, மூலதனம், அமைப்பு ஆகிய நான்கு வகையை ஏற்க மறுத்து நிலம், உழைப்பு, மூலதனம் என மூவகை யாகப் பிரித்தலே முறை என்பர். அவர்தம் கருத்துப் படி, உழைப்பும் அமைப்பும் மனிதனால் தரப்படும் பணியாதலால் அவற்றை ஒன்றாகவே கருதலாம் என்பதாகும். இன்னும் சிலர் நிலம், உழைப்பு என்ற இரு வகையாகக் குறிப்பிடுவர். மூலதனம் செயற்கை யாகத் தோற்றுவிக்கப்படுவது; நிலமும் உழைப்புமே இயற்கையில் தோன்றுவன என்பது அவர்தம் கருத்து. காரல் மார்க்சு (Karl Marx) போன்ற பேரறிஞர்கள் உழைப்பு என்ற ஒரேயோர் உற்பத்திக் காரணிதான் உண்டு என்று குறிப்பிட்டுள்ளனர். நிலம் அதுவாகவே செயற்பட இயலாது என்றும், மூலதனம் மனிதனால் அமைக்கப்பட்டது என்றும், அமைப்பு என்பது உழைப் பின் ஓர் உறுப்பு என்றும் அவர்கள் வலியுறுத்து கிறார்கள். இத்தகைய பல கருத்துகள் இருப்பினும், பெரும்பாலான பொருளியல் வல்லுநர்கள் நிலம், உழைப்பு, மூலதனம், அமைப்பு என்ற நான்கு வகை உற்பத்திக் காரணிகளை ஏற்றுக் கொண்டிருப்பதால் பொருளியல் நூல்களிலும் ஆய்வுகளிலும் இவை பெரும்பாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

**நிலம்:** தரைப் பரப்பை மட்டுமே பொதுவாக நிலம் என்று குறிப்பிடுவது வழக்கம். ஆனால், பொருளியலில் உயிருள்ள அல்லது உயிரற்ற இயற்கைச் செல்வங்கள் எல்லாவற்றையும்நிலம் என்றே கருதுவர். தரைப் பரப்பு, நீர், காற்று, வெளிச்சம், வெப்பம் போன்ற பொருள்களாகவும் ஆற்றல்களாகவும் மனி தனின் உதவிக்குக் கொடையாக உள்ளனவெல்லாம் நிலமே என்று பேராசிரியர் மார்சல் (Marshell) நிலம் என்ற சொல்லுக்கு இலக்கணம் கூறிருக் கிறார். இத்தகைய பொருள்களிலும் ஆற் றல்களிலும் பரிமாற்ற மதிப்பு இருக்குமானால், அவையாவும் பொருளியலில் நிலமென்று கருதப்படு கின்றன.

மனிதனின் பொருளாதார வாழ்க்கைக்கு நிலம் மிகவும் இன்றியமையாதது. பிற காரணிகளை நிலத் தோடு இணைத்துத்தான் பொருள்களையும் பணி களையும் உற்பத்தி செய்ய இயலும். மார்சல் குறிப் பிட்டுள்ளது போல, மனிதன் செய்யக்கூடிய எல்லா வற்றிற்கும் அடிப்படையாக விளங்குவது நிலமே. பிற காரணிகளோடு ஒப்பிடுகையில் நிலம் பல சிறப் பியல்புகளைப் பெற்றிருக்கிறது. (அ) நிலம் இயற்கை யின் கொடை. நிலத்தின் அமைப்பும் வளமும் தட்ப வெப்ப நிலைகளும் இயற்கையின்பாற் பட்டவை. ஓரளவுக்கு மனிதன் நிலத்தின் செழிப்பைப் பெருக் கலாம். எனினும், இயற்கையின் ஆற்றலோடு மனித னால் போட்டியிடுதல் இயலாது இதைத்தான் நிலத் தின் 'ஆதியும் அழிக்க முடியாததுமான ஆற்றல்' என தாவீது இரிக்கார்டோ(David Ricardo)குறிப்பிட்டார். (ஆ) நிலத்தின் அளவு நிலையானது. விலை உயர் வால் நிலத்தில் அளிப்பு (Supply) உயர்வதோ விலைக்குறைப்பால் நிலத்தில் அளிப்பு குறைவதோ இல்லை. (இ) நிலம் அழியத்தக்கதன்று. மூலதனமும் உழைப்பும் அழிந்து போகும் தன்மையுடையன.

(ஈ) நிலத்திற்கு உற்பத்திச் செலவு கிடையாது. (உ) நிலம் இடம்பெயரத்தக்கதன்று. கூலி உயருமா னால் உழைப்பு அவ்விடம் நோக்கி நகரும்; வட்டியும் உயரும். மூலதனம் மிகுதியாகப் பயன்படும். ஆனால், விலை எவ்வளவு மாறினும் நிலம் இடம்பெயரும் வாய்ப்பு இல்லை என்பது கருத்து. இக்கருத்தை மறுப் போர் நிலத்திற்குப் பயன் பெயர்ச்சி உண்டென்பதை யும், நிலத்தின் உரிமையை மாற்றிக் கொள்ளும் இயல் பையும் சுட்டிக்காட்டுகின்றனர். (ஊ) நிலத்தின் உற் பத்தித் திறன் பூகோள அமைப்பிற்கேற்றவாறும் பயன்படுத்தும் உள்ளீடுகளைப் (Input) பொறுத்தும் மாறும் தன்மையுடையது. (எ) நிலத்தின் பண்ட மாற்று (Barter Exchange) மதிப்பு நிலவியல் அமைப்பைப் பொறுத்து மாறுபடுகிறது. மக்கள் மிகுந்து வாழுமிடங்களிலும் நிலம் கிடைப்பதற்கருமை யாக உள்ள இடங்களிலும் நிலத்தின் பரிமாற்ற மதிப்பு மிகுதியாகவும் பிற இடங்களில் குறைகளாகவும் இருக்கிறது. (ஏ) நிலம் ஒரு செயலற்ற காரணியாக இருப்பதால் பிற காரணிகளின் துணைக்கொண்டே செயற்படுத்தப்படுகிறது.

**உழைப்பு:** வேலையினால் ஏற்படும் இன்பத்தைக் கருதாமல், முழு அளவிலோ பகுதி அளவிலோ உடலால் அல்லது சிந்தனையால் பயன் கருதி (பணத்திற்காக அல்லது பண்டத்திற்காக) மேற் கொள்ளும் முயற்சியே உழைப்பு. உழைப்பு என்பது முயற்சி. இம்முயற்சியை உடலாலும் மேற்கொள்ள லாம்; மனத்தாலும் மேற்கொள்ளலாம். மூட்டை சுமப்பவரது முயற்சி உடல் உழைப்பு. அலுவலகத்தில் அமர்ந்து கொண்டு எந்தெந்தச் செயல்களை எவ்வெப் போது எப்படியெல்லாம் செய்ய வேண்டும் என்று திட்டமிடுபவரது முயற்சி மன உழைப்பு அல்லது சிந்தனை உழைப்பு. பலன் கருதி இம்முயற்சியை மேற்கொள்ளல் வேண்டும். எனவே, உழைப்பு என் பது திறமைமிக்க பயிற்சி பெற்ற உழைப்பாளர் களிலிருந்து கல்வி அறிவற்ற ஏழைத் தொழிலாளி வரை பலன் கருதி மேற்கொள்ளும் முயற்சியாகும்.

உழைப்பை அளிப்பவர்கள் அதோடு நில்லாமல், அந்த உழைப்பினாலும் பிற காரணிகளாலும்

உண்டாக்கப்படும் பொருள்களையும் பணிகளையும் நுகர்கிறார்கள். மனித விருப்பங்களையும் தேவைகளையும் நிறைவேற்ற வேண்டுமென்பதுதான் பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் உற்பத்திக்கு மூலகாரணம். மனித சமுதாயத்தின் உயிர்நாடியாக விளங்குபவர்கள் உழைப்பாளர்கள். எனவே, உழைப்பு பிற காரணிகளைக் காட்டிலும் இன்றியமையாதது.

உழைப்பு என்ற உற்பத்திக் காரணியைப் பிற காரணிகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அதற்கென ஒருசில தனிச் சிறப்பியல்புகள் இருப்பதைக் காணலாம். (அ) உழைப்பையும் உழைப்பாளரையும் பிரிக்க முடியாது. உழைப்பை அளிப்பவன் தானே நேரில் வந்துதான் அதனை அளிக்க வேண்டும். எனவே, உழைப்பாளர்கள் வாழும் சூழ்நிலையும் வாழ்க்கைத் தரமும் உழைப்பைத் தரும் இடத்தின் சூழ்நிலையும் மிகவும் இன்றியமையாதனவாகும். அளவான வேலை நேரம், தக்க ஓய்வு, தக்க ஊதியம், சுகாதார வசதி ஆகியவற்றுடன் வாழும் உழைப்பாளர்கள் நல்ல முறையில் தங்கள் பணிகளை ஆற்றுதல் இயலும். (ஆ) உழைப்பைச் சேமித்து வைக்க முடியாது. குறிப்பிட்ட காலத்தில் வேலையில்லாமல் உழைப்பாளர்கள் இருந்து விடுவார்களானால் அப்பொழுது இழக்கப்பட்ட நேரத்தைத் திரும்பப் பெறுவது இயலாது. எனவே, பேரம் பேசுதலில் உழைப்புக்குக் கேடான நிலையே இருக்கிறது. இதனால்தான் வேலையை இழப்பதைக் காட்டிலும் குறைந்த ஊதியத்தைத் தொழிலாளர்கள் ஏற்றுக் கொள்கின்றனர்.

(இ) உழைப்பின் அளிப்பு மிக மெதுவாகவே மாறுபடும் தன்மையுடையது. (ஈ) கூலி உயரும்போது ஒருசில நேரங்களில் உழைப்பின் அளவு குறையலாம். பொதுவாக, விலை உயரும்போது பொருள்களின் அளிப்பு மிகையாவது வழக்கம். ஆனால், கூலி ஒரு நிலைக்கு அதிகமாக உயரும்பொழுது, ஒருசில நேரங்களில் (உழைப்பாளர்கள் ஓய்வு நிறைந்த வாழ்வை மேற்கொள்ள விரும்புவதால்) உழைப்பின் அளிப்புக்குறையலாம். அதேபோன்று கூலி குறையும் போது (வருமானக் குறைவை ஈடுகட்டும் பொருட்டு குடும்பத்திலுள்ள மற்றவர்களும் உழைக்க முன் வரலாமாதலால்) உழைப்பின் அளிப்புப் பெருகும்.

உழைப்பை உடல் உழைப்பு, மன உழைப்பு என வகைப்படுத்தலாம். இவற்றில் மன உழைப்பு மிகவும் சிறப்பானது. திறன்மிக்க உழைப்பாளர்களாக இருப்பின் உழைப்பின் அளவு குறைவாக இருந்தாலும் அதன் உற்பத்தி சிறந்திருக்கும். அத்தகைய திறமையும் நாட்டுப் பற்றும் மிகுந்திருந்தமையால்தான், எதிர்பார்க்க முடியாத அளவிற்கு உலகப் போரினால் அழிவும் இழப்பும் ஏற்பட்ட போதிலும் சப்பான் மிக வேகமாக முன்னேற்றப்பாதையில் இன்றுபீடுநடைபோடுகிறது. உழைப்பின் திறனைப் பல காரணிகள் வரையறுக்கின்றன. அவற்றுள் இனம், மரபியல், காலநிலை, தட்பவெப்பநிலை, உணவின் அளவு, தரம், சுற்றுப்புறச் சூழ்நிலைகள், சுகாதார வசதிகள், அடிப்படை, பொதுநிலை, தொழிற்கல்வி நிலை, சமுதாய அரசியலமைப்புகளின் பண்புகள், வேலைச் சூழ்நிலைகளின் இயல்புகள், வேலை பார்க்கும் காலத்தின் அளவு, ஓய்வின் அளவு, ஓய்வின் தன்மை, வருமானம், வாழ்க்கைத் தரம், தனி மனிதனின் இயல்புகள், தொழிலாளர் கூட்டமைப்பின் செய்திறன், கூலி அளிக்கப்படும் முறை, தொழிலாளர்கள் வாழும் வீடுகளின் சுற்றுப்புற வசதியின் தன்மைகள், தொழிலை நடத்தும் நிருவாகியின் திறன் ஆகியவை குறிப்பிடத்தக்கவையாகும்.

**மூலதனம்:** நிலமும் மனித உழைப்பும் உற்பத்தியில் ஆளப்பெறும் மூலக் காரணிகளாகும். இம் மூலக் காரணிகளால் ஆக்கப் பெற்று, உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் பொருள்களையும் மூலப் பொருள்களையும் மூலதனம் எனலாம். ஆனால், சாதாரணமாக நடைமுறையில் மூலதனம் என்னும் சொல் வணிகர் அல்லது தொழில் முனைவோர் பயன்படுத்தும் பணத்தைக் குறிக்கிறது.

தொன்மைப் பொருளியல் கருத்தினரான தாவீது இரிக்கார்டோ, தாமசு இராபர்ட்டு மால்தசு (Thomas Robert Malthus), சான் இசுடுவர்ட்டு மில் (John Stuart Mill), நாசோ சீனியர் (Nassau Senior) போன்றோர் மூலதனம் என்ற சொல்லுக்குப் பல வகை விளக்கங்களைத் தந்திருக்கின்றனர். அவர்களது விளக்கங்களிலிருந்து மூலதனம் என்பது 'பொருள்களை உற்பத்தி செய்ய உழைப்பாளர்கள் பயன்படுத்தக் கூடியதும் செல்வத்தின் ஒரு பகுதியுமாகும் என்பது தெளிவாகிறது.

ஒருசில பொருளியல் சிந்தனையாளர்கள், 'வருமானம் ஈட்டத்தக்க நிலம் தவிரப்பிற செல்வம் மூலதனம்' என்றும் விளக்கம் தருகிறார்கள். ஆனால் இவ்விளக்கம் சரியானதன்று. பணம் கடனாகக் கொடுக்கப்படுமானால் அது வட்டியைத் தரத்தக்க செல்வமாகிறது. சொத்துகளாகவும் பங்குகளாகவும் பொருள்களாகவும் பணத்தை வைத்திருந்தாலும் அவை யாவும் வருமானம் தரத்தக்கவையாக இருக்காலம். ஆனால், அவையெல்லாம் மூலதனமாகா. மூலதனமென்பது உற்பத்திப் பணியில் ஈடுபடுத்தப்

பட்டவற்றையே குறிக்கும். பணத்தை நேரடியாகவோ பொருள்களாகவோ உற்பத்திப் பணியில் ஈடுபடுத்தி னால், அதனை மூலதனம், உற்பத்தி மூலங்கள், உற்பத்தி செய்யப்பட்ட உற்பத்திக் கருவிகள் என்று கூறுவர். இக் கருத்துகளைத் தொகுத்துச் சாப்மென் என்பவர் மூலதனம் என்பது வருமானம் தரும் அல்லது வருவாயை உற்பத்தி செய்வதில் உதவி செய்யும் அல்லது செய்யத்தக்க செல்வம் என்று விளக்கம் தருகிறார். மூலதனத்தைத் தனியார் மூல தனம், சமுதாய மூலதனம், நாட்டு மூலதனம் என வகைப்படுத்தலாம். பயன்படுத்தும் நோக்கத்தின் அடிப்படையில் மூலதனத்தை ஊதியமளிக்கும் மூல தனம், துணை மூலதனம், மீளா மூலதனம், மிதக்கும் மூலதனம், நிலை மூலதனம், சுழல் மூலதனம், நுகர்வு மூலதனம், உற்பத்தி மூலதனம் எனப் பலவகைப் படுத்தலாம்.

மூலதனம் மனிதனால் ஆக்கப்படுவது; அழியத் தக்கது; இடப்பெயர்ச்சி உடையது; மாறும் அளவு டையது; ஏறத்தாழ ஒரே மாதிரியான வருவாய் (வட்டி) தரத்தக்கது. செல்வம் எல்லாம் மூலதனம் அன்று. ஆனால், மூலதனம் எல்லாம் செல்வமே. செல்வம் உற்பத்திப் பணியில் ஈடுபடுத்தப்படும்போது மட்டும் மூலதனமாகிறது.

மூலதனத்தின் இயல்புகள் பல. அவற்றுள் மூல தனப் பொருள்களை உழைப்பாளர்கள் பயன்படுத் தும்போது உற்பத்தியின் அளவு பெருக வாய்ப்புகள் தோன்றுகின்றன என்பதும், மூலதனம் உற்பத்தித் திறனுடையது என்பதும், எதிர்கால நோக்குடையது என்பதும், உழைப்பினாலும் சேமிப்பினாலும் தோன்றுகிறது என்பதும் சிறப்பானவையாகும்.

மூலதனம் உற்பத்தித் திறனை உயர்த்துகிறது; உற்பத்தி தொடர்ந்து நிகழ உதவுகிறது; சுற்றுவழி உற்பத்தி முறையைக் கையாளப் பயன்படுகிறது. உலக நாடுகளில் கடந்த இரண்டு நூற்றாண்டுக் காலத்தில் ஏற்பட்டிருக்கும் வியத்தகு முன்னேற்றங் களுக்கு அடிப்படையாக விளங்கி வருவது மூலதனம் என்பது பேராசிரியர் தாசிக்கின் (Taussiq) கருத்து. ஐக்கிய அமெரிக்க நாட்டிலும் வளர்ச்சி பெற்ற பிற நாடுகளிலும் உழைப்பாளர்களின் திறன் மிகையாக இருப்பதற்கும் இதுவே அடிப்படைக் காரணம் ஆகும். இன்று அமெரிக்காவில் அல்லது சப்பானில் உள்ள சாதாரணத் தொழிலாளி பின்தங்கிய நாடுகளில் உள்ள தொழிலாளர்களைக் காட்டிலும் மிகையான அளவில் உற்பத்தி செய்வதற்குக் காரணம் அவர்கள் மிகுந்த அளவு மூலதனத்தின்துணைக்கொண்டு (Capital Intensive) உற்பத்தி செய்வதேயாகும்.

**அமைப்பு:** நிறம், உழைப்பு, மூலதனம் என்ற மூன்று சிறப்பான உற்பத்திக் காரணிகளையும் குறிப் பிட்ட விதத்தில் அமைப்பவரின் பணிகளே அமைப்பு. அமைப்பு என்பதும் ஒருவித உழைப்பேயாகும். ஆனால், சாதாரண உழைப்புக்கும் அமைப்புக்கும் பல அடிப்படை வேறுபாடுகள் இருப்பதை அமைப் பாளர் மேற்கொள்ளும் பணிகளிலிருந்து தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம். இத்தகைய பணிகளைப் புரிபவர்கள் அமைப்பாளர் என்றும், தொழில் முயல் வோர் என்றும் சொல்லப்படுகின்றனர். தகுதியும், பொறுமையும், சிந்தித்துச் செயலாற்றும் திறமையும், எதையும் விரைவில் புரிந்துகொள்ளும் தன்மையும், மனித இயல்புகளை அறிந்து தலைவனாகத் திகழ்வ தற் கேற்ற பண்பும் இருக்கும் ஒரு சிலரே வெற்றிகர மான தொழில் முயல்வோராக இருப்பதை நடை முறையில் காணலாம்.

உற்பத்திக் காரணிகள் நான்கும் மிகவும் இன்றி யமையாதன என்றாலும் நிலம், மூலதனம், உழைப்பு என்ற மூன்று உற்பத்திக் காரணிகளையும் ஒருங்கே திரட்டி, உற்பத்திப் பணியில் ஈடுபடுத்துவதால் அமைப்பு என்ற காரணி மிகவும் சிறப்பு வாய்ந்தது. அப்பணியை ஏற்று நடத்தும் அமைப்பாளரின் பணிகள் பல. அவற்றுள் (அ) எப்பண்டத்தை, எங்கு, எப்படி, உற்பத்தி செய்யவேண்டுமென்று தீர்மானித் தல்; தொழிலை நிருவகித்தல்; வருமானப் பங்கீட் டைச் செய்தல்; புதிய கண்டுபிடிப்புகளையும் புதிய பண்டங்களையும் உற்பத்தித் துறையில் பயன்படுத் துதல்; பேரிடர்களையும் உறுதியின்மையையும் (Uncertainty), இடர்தாங்கல்களையும் (Risk bearing) ஏற்றல் ஆகியவை சிறப்பானவை.


அடிக்கடி தோன்றும் தேவை மாற்றம் இக்கால உற்பத்தியின் அடிப்படை இயல்புகளுள் ஒன்றாகும். சுற்றுவழி உற்பத்தி முறையைக் கையாள வேண்டி இருப்பதால் அங்காடியில் தேவையின் அளவையும், அங்காடியில் நிலவும் அளிப்பின் அளவையும் மிகக் கவனமாக ஆராய்ந்து தெளிந்த பின்னரே உற்பத்தி யில் ஈடுபடவேண்டும். நாகரிக நிலையும் புதிய இயந் திர முறைகளும் மிக வேகமாக மாறிவரும் இக்கா லத்தில், தாம் செய்யும் ஒவ்வொரு செயலையும் திட்டமிட்டுச் செய்வதில் தொழில் முயல்வோர் வல் லுநராக இருத்தல் வேண்டும்: எந்த அளவுக்கு மூலப் பொருள்களைக் கொள்முதல் செய்ய வேண்டும்: எப் போது கொள்முதல் செய்ய வேண்டும் என்பவற்றைத் தெரிந்து செயற்பட வேண்டும். மேலும், அங்காடியில் ஊக வாணிக நிலை எவ்வாறு இருக்கும் என்பதை யும், எதிர்காலத்தில் விலை மாற்றங்கள் எந்த அள வில் தோன்றலாம் என்பதையும் ஓரளவுக்குக் கணிக்கக்

கூடிய எதிர்கால நோக்குடையவராகவும் அவர்கள் இருத்தல் வேண்டும்.

உற்பத்திக் காரணிச் செலவுகள்: உற்பத்தி நிகழத் தேவைப்படும் காரணிகளான நிலம், உழைப்பு, மூலதனம், அமைப்பு ஆகியவைஆற்றும்பணி களுக்காக முறையே வாரம், கூலி, வட்டி, ஆதாயம் என்னும் ஊதியங்களைப் பெறுகின்றன. இச் செலவு களே உற்பத்திக் காரணிச் செலவுகள் (Factor Costs) ஆகும்.

பொருள்களின் விலைகளை அவற்றின் தேவையும் அளிப்பும் வரையறுப்பதைப் போன்று, உற்பத்திக் காரணிகளின் விலைகளும் வரையறுக்கப்படுகின்றன. ஆனால் பொருள்களுக்கும் காரணிகளுக்கும் அடிப் படை வேறுபாடுகள் உண்டு. எடுத்துக்காட்டாக, உழைப்பின் அளிப்பு மிகுதியாயிருக்கும் போது தேவை குறைவு என்பதால் கூலியைக் குறைத்தல் நேர்மையாகாது. பொதுக் கோட்பாடு: இறுதிநிலை உற்பத்தித் திறன் கோட்பாட்டின் (Marginal Productivity Theory) அடிப்படையில், உற்பத்திக் காரணிகளின் விலையை வரையறுக்க வேண்டுமென வலியுறுத்தியவர்கள் கி.பி. 19-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சே.பி. கிளார்க்கு (J.B. Clark), விக்சுட்டீடு (Wicksteed) போன்றவராவர். காரணியின் இறுதி நிலை உற்பத்தித் திறனுக்கேற்ப அதன் ஊதியம் அமையும்; திறன் மிகுந்திருந்தால் ஊதியம் உயர்ந் தும், திறன் குறைந்திருந்தால் ஊதியம் குறைந்தும் இருக்கும். இதனைப் பகிர்வின் பொதுக் கோட்பாடு (General Theory of Distribution) என்றும், நாட்டு வருமானக் கோட்பாடு (Distribution of National Income) என்றும் குறிப்பிடுவர். இக்கோட்பாட்டின் உள்ளார்ந்த எடுகோள்கள் (Assumptions) ஆவன: பொருள் அங்காடியில் நிறைவுப் போட்டியும் (Perfect Competition) முழு வேலையும் (Full Employment) நிலவுதல், காரணிகளின் அலகுகள் ஓரியல்பா னவையாய்ப் பாகுபடுந் தன்மையுடையனவாய்த் தடையற்ற இடப்பெயர்ச்சி உடையனவாதல், காரணிகளின் விளைவுகளைக் கணக்கிட இயலுதல், உற் பத்தியாளர் உயர்நிலை ஆதாயத்தைப் பெற முயலு தல் முதலியன பிற காரணிகளின் அளவுகள் மாறா திருக்கும்போது, ஒரேயொரு காரணியின் அலகுகளை மட்டும் மாற்றியமைப்பதனால் அக்காரணியின் இறுதி நிலை விளைவைக் காணுதல் இயலும். இவ்விளைவு தொடக்கத்தில் அதிகரித்தும் பிறகு மாறாமலும் பின்னர்க் குறைந்தும் செல்லும். இறுதிநிலை உற்பத் திப் பண்டத்தின் பண மதிப்பே இறுதிநிலைப் பண மதிப்பு. இவ் இறுதிநிலைப் பணமதிப்பும் காரணியின் விலையும் சமமாகும் வரை காரணியின் அலகுகள் பயன்படுத்தப்படும். இந்நிலையில் உற்பத்தியாளர் உயர்நிலை ஆதாயத்தைப் பெறுவர்.

காரணி அங்காடியில் நிறைவுப் போட்டி நிலவு மானால் காரணியின் அளவு எவ்வளவு மாறினாலும் விலை மாறாதிருக்கும். படம்-1-இல்





படம் 1

சராசரி, இறுதிநிலைச் செலவுகள் சமமாக (Average Fixed Cost = Marginal Fixed Costs) இருப்பதை pd என்ற படுகிடைக் கோடு காட்டுகிறது. சராசரி நிகர வருவாய் விளைவை A N R P (Average Net Revenue Product) கோடும், இறுதிநிலை வருவாய் விளைவை M R P (Marginal Revenue Product) கோடும் காட்டுகின்றன. M F C -யும் MRP -யும் சமமாக இருக்கும் N என்னும் புள்ளியின் வழியாக வரையப்படும் செங்குத்துக் கோடு M-இல் தொடுவ தால், NM காரணியின் விலை, OM காரணியின் தேவை = அளிப்பின் அளவு.

காரணி அங்காடியில் நிறைகுறைப் போட்டி (Imperfect Competition) நிலவுமானால் காரணியின் விலை தேவைக்கேற்ப மாறும் தன்மையையுடையது. இந்நிலையில் இறுதிநிலை வருவாய் உற்பத்தியும் இறுதிநிலைக் காரணிச் செலவும் சமமாக இருக்கும். N வழியாக வரையப்படும் செங்குத்துக் கோடு M-ஐத் தொடுவதால் NM காரணியின் விலை, OM காரணியின் தேவை = அளிப்பு ஆகும். படம் -2

பதிலீடு: உயர் அளவு ஆதாயத்தைப்பெற விலை மிகுந்த காரணிகளுக்குப் பதிலாக விலை குறைந்த காரணிகளைப் பயன்படுத்துவது பதிலீடு (Substitution) எனப்படும். தொழில் முனைவோர்




படம் 2


வகையில் காரணி அலகுகளின் விலை உயர்ந்தால் அளிப்புப் பெருகும்; விலை குறைந்தால் அளிப்பும் குறையும் என்பது சமநிலை விலை (Equilibrium Price) ஆகும்.

வாரம்: நிலத்தின் வாரம். 'இயற்கையில் அமைந்ததும், அழிக்க முடியாததுமான நிலத்தின் திறனைப் பயன்படுத்துவதற்காக நில உரிமையாளருக்குச் செலுத்தப்படும் உற்பத்திப் பொருளின் ஒரு பகுதியே வாரம் என்பது தாவீது இரிக்கார்டோவின் (David Ricardo) கருத்து. இது நில வளத்தின் வேறுபாட்டாலும், அமைப்பின் வேறுபாட்டாலும் தோன்றுகிறது; விலை அதிகமானால் அதிகமாகவும், விலை குறைந்தால் குறைவாகவும் இருக்கும் என்பன இரிக்கார்டோவின் கருத்துகள்.

$$\frac{\text{'அ' காரணியின் இறுதிநிலை உற்பத்தித் திறன்}}{\text{'அ' காரணியின் விலை}} = \frac{\text{'ஆ' காரணியின் இறுதிநிலை உற்பத்தித் திறன்}}{\text{'ஆ' காரணியின் விலை}} = \frac{\text{'n' காரணியின் இறுதிநிலை உற்பத்தித் திறன்}}{\text{'n' காரணியின் விலை}}$$

என்ற நிலையில் பதிலீட்டைப் பயன்படுத்தும்போது உயர்நிலை ஆதாயத்தைப் பெறுவர்.

இக்கோட்பாட்டில் குறைகள் பல உள. இவற்றைச் சுட்டிக்காட்டித் தேவையும் அளிப்பும் காரணியின் விலையை வரையறுப்பதாகப் பல அறிஞர்கள் விளக்கம் தருகின்றனர். காரணி அலகுகளின் விலை உயர்ந்தால் தேவை குறைவாகவும், குறைந்தால் தேவை மிகையாகவும் இருக்கும். படம்-3 விளக்குகிற




படம்-3

இரிக்கார்டோவின் கோட்பாடு ஓரளவுக்கு உண்மை உடையதாய் இருப்பினும் முற்றிலும் நிறைவானதன்று என்பதை விளக்கும் இக்கால அறிஞர்கள், வாரத்தின் புதுமைக் கோட்பாட்டை உருவாக்கியுள்ளனர். நிலம் உள்பட எல்லாக் காரணிகளிலும் வாரம் தோன்றலாம்; மாற்றுச் செலவு (Transfer Price) அல்லது பிற வாய்ப்புச் செலவுக்கு (Alternative Uses) மேல் உள்ளது உபரி வாரம் (Surplus Rent). மாற்று வருவாய் கிடைக்கும் இடங்களிலெல்லாம் காரணியின் குறிப்பிடத்தக்க தன்மைக்காகக் கிடைப்பது வாரம். பேராசிரியர்கள் பென்காம் (Benham), மார்சல் (Marshall) போன்றோர் அரைநிலை வாரம் (Quasi Rent) என்னும் கருத்தையும் விளக்கியுள்ளனர்.

கூலி: உழைப்பின் ஊதியம் கூலி. இது உண்மைக் கூலி, பணக் கூலி, வேலைக் கூலி, காலக் கூலி என்று பலவகைப்படும். தொழிலாளிக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் பிழைப்பு மட்டக் கூலி (Subsistence Wages) அமையும் என்று பிரெஞ்சுப் பொருளியல் அறிஞர்களான இயற்கைக் கோட்பாட்டினர் (Physiocrats) குறிப்பிட்டனர். காரல் மார்க்சு (Karl Marx) தமது சுரண்டல் விதியை அமைக்க இக் கருத்து அடித்தளமாய் அமைந்தது. இதன் குறைகளைச் சுட்டிக்காட்டி 'கூலியின் இரும்பு விதி' (Iron Law of Wages), 'உறுதிநிலைக் கூலிக் கோட்பாடு' (Brazen Law of Wages) என இலாசேல் (Lassalle)

போன்ற அறிஞர்கள் விளக்கினர். உழைப்பின் அளிப்புக்கு மட்டுமே இக்கோட்பாடு சிறப்பளித்தது. இக்கோட்பாட்டை மேம்படுத்தித் தொழிலாளியின் கூலி பொதுவாக அவ்வகைத் தொழிலாளரிடையே நிலவும் வாழ்க்கைத் தர நிலைக்கேற்ப அமையும் என்று வாழ்க்கைத் தரக் (Living Wages) கோட்பாட்டை கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த அறிஞர்கள் குறிப்பிட்டனர். இக்கருத்தும் ஒருபறச் சார்புடையதே. மூலதனத்தின் (Capital) குறிப்பிட்டதொரு பகுதியைக் கூலி கொடுப்பதற்காக ஒதுக்குவர் உற்பத்தியாளர். இக் கூலி நிதி சேமிப்பால் எழுகிறது; குறுகிய காலத்தில் மாறாதிருக்கும். இக்கூலி நிதி மாறாதிருக்கும்போது உழைப்பாளர் எண்ணிக்கை அதிகரித்தால் கூலி குறையும்; குறைந்தால் கூலி அதிகரிக்கும். இக்கூலி நிதிக் கோட்பாட்டை (Wage Fund Theory) விளக்கியவர் சே. எசு. மில் (J.S. Mill). இக் கருத்திலும் பல குறைகள் உள.

வாரம், வட்டி, ஆதாயம் செலுத்தியது போக மிஞ்சி இருப்பதே தொழிலாளிகளுக்கு உரிய கூலி என்று அமெரிக்கப் பொருளியல் வல்லுநர் வாக்கர் (Walker) தமது மிக்க உரிமையர் கோட்பாட்டை (Residual Claiment Theory) விளக்கினார். ஆனால் நடைமுறையில் மிச்சமனைத்தையும் தொழில் முயல்வோருக்கேயன்றித் தொழிலாளர்க்கு அளிப்பதில்லை.

இறுதிநிலை உற்பத்தித் திறன் கோட்பாட்டை சே.பி. கிளார்க்கு (J.B. Clark) என்பாரும், அதில் ஓரளவுக்கு மேம்படுத்தப்பட்ட கழிவு நீக்கிய உற்பத்தித் திறன்கோட்பாட்டைப்(Discounted Marginal Productivity Theory) பேராசிரியர் தாசிக்கு (Taussiq) என்பாரும் விளக்கியுள்ளனர். கோட்பாடுகள் பல இருப்பினும் அரசின் கொள்கைகளும் தொழிலாளர் நிறுவனங்களின் திறனும் கூட்டாகச் சேர்ந்து (Collective Bargaining), இக்காலத்தில் கூலியை வரையறுக்கின்றன. கூலியின் வேறுபாடுகளைக் களையவும் குறைக்கவும் அரசுகள் முயன்று வருகின்றன.

வட்டி: மூலதனத்தின் பயனுக்காகச் செலுத்தப்படுவது வட்டி (Interest). மூலதனம் உற்பத்தித் திறன் உடையதால் அதனைப் பயன்படுத்த வட்டி மிகுதி செலுத்தப்பட வேண்டும். உற்பத்தித் திறன் மிகுதியானால் வட்டியும் மிகுதியாக இருக்கும்; குறைவானால் வட்டியும் குறைவாக இருக்கும் என்பது உற்பத்தித் திறன் கோட்பாடு. இதனைக் குறிப்பிட்டவர்கள் இயற்கைக் கோட்பாட்டுப் பொருளியல் அறிஞர்கள். குறிப்பாகத் தர்கோ லாடர்டேல் என்பவரைக் குறிப்பிடலாம்.

சேமிப்பிலிருந்து மூலதனம் தோன்றுகிறது. சேமிக்க நுகர்வைத் தவிர்க்க வேண்டும். இது துன்பமிக்கது. இத் துன்பத்தை மேற்கொள்ளுபவர்களுக்கு வட்டி செலுத்தப்படுதல் வேண்டும்என்றுநாசோ சீனியர் (Nassau Senior) என்னும் அறிஞர் துய்ப்புத் தவிர்ப்புக் (Abstinence)கோட்பாட்டை விளக்கினார். கடன் கொடுத்தவர்கள் துய்ப்பைத் தவிர்க்கிறார்களோ இல்லையோ கொடுத்த கடனைத் திரும்பப் பெறக் காத்திருக்க வேண்டியுள்ளது. இதற்கென வட்டியைக் கொடுக்க வேண்டுமென்று காத்திருத்தற் (Waiting) கோட்பாட்டை மார்சல் விளக்கினார்.


இன்றைக்குக் கிடைக்கும் பொருள்களுக்கு நாளைக்குக் கிடைக்கும் பொருள்களைவிட மதிப்பு அதிகம். எதிர்காலம் உறுதியற்றது. எனவே, இன்றைக்குப் பணத்தைக் கொடுத்துவிட்டு எதிர்காலத்தில் அப்பணத்தைத் திரும்பப் பெற வேண்டுமானால் அதிக அளவில் அப்பணம் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும். அவ்வதிக அளவே வட்டி என்று காலக் கழிவுக் கோட்பாட்டை (Agio Theory) விளக்கியவர் பாம் பாவர்க்கு (Bohm-Bawerk) என்னும் அறிஞர். பொதுவாக மக்கள் எதிர்காலத்திற்காகப் பொறுமையுடன் காத்திருக்க வேண்டுமானால் அதற்கென ஊதியம் தரப்படுதல் வேண்டும் என்று கால விருப்பக் (Time Preference)கோட்பாட்டை இர்விங்கு பிசர் (Irving Fisher) விளக்கினார். விக்செல் (Wicksell), குன்னார் மிர்டால்,இலிந்தால் (Lindahl), இராபர்ட்சன் (Robertson), பெர்ட்டில் ஒலின் (Berti-lohlin)போன்றோர் கடன் நிதிக்கான தேவை, அளிப்பு ஆகிய இரண்டும் வட்டியை நிருணயிக்கின்றன என்ற தம் கடன் நிதிக் கோட்பாட்டை (Loanable Fund Theory) வலியுறுத்தினர்.

முந்தைய கோட்பாடுகளின் அடிப்படைகளில் உள்ள தவறுகளைச் சுட்டிக்காட்டிய பேராசிரியர் கீன்சு தமது நீர்மை விருப்பக் கோட்பாட்டை (Liquidity Preference Theory) விளக்கியுள்ளார். கடன் கொடுக்கும்போது, பணத்தின் நீர்மைத் தன்மையை விட்டுக் கொடுப்பதால் அதற்கெனக் கொடுப்பது வட்டி என்பதும், பணத்திற்கான (நீர்மை விருப்பத்திற்கான) தேவையும் பண அளிப்பும் வட்டியை நிருணயிக்கின்றன என்பதும் அவருடைய கருத்துகள். சிக்கனத்தால் வரையறுக்கப்படும் சேமிப்புச் சார்பு (Saving Function), உற்பத்தித் திறனால் வரையறுக்கப்படும் முதலீட்டுச் சார்பு, நீர்மை விருப்பச் சார்பு, பணத்தின் அளிப்பு ஆகிய நான்கு காரணிகளும் வட்டியை நிருணயிக்கின்றன என்பது இக்காலக் கிக்சு-ஏன்சன் கோட்பாடு (Hicks-Hanson Synthesis) ஆகும்.

**உற்பத்திச் செலவு:** உற்பத்திக் காரணிகளின் பொருட்டுச் செய்யப்படும் செலவு உற்பத்திச் செலவு (Cost of Production) ஆகும்.

**வாய்ப்புச் செலவு:** மாற்று வருமானங்கள் (Alternative Income), மாற்றுச் செலவுகள் எனப் பலவாறாகச் சொல்லப்படும் வாய்ப்புச் செலவை (Opportunity Cost) இக்கால அறிஞர்கள் வலியுறுத்துகின்றனர். உற்பத்திக் காரணிகளைப் பல வழிகளில் பயன்படுத்தலாம். எடுத்துக்காட்டாக, நிலத்தை நெல் அல்லது கரும்பு உற்பத்தியில் பயன்படுத்தலாம். உழவர் ஒருவர் தம் நிலத்தைக் கரும்பு உற்பத்தியினால் பலன் மிகையாகக் கிடைக்காதென நெல் உற்பத்திக்குப் பயன்படுத்தினால், நெல்லின் வாய்ப்புச் செலவு உற்பத்தி செய்யாமல் விட்டுப் போன கரும்பின் மதிப்பிற்குச் சமம். உற்பத்தி செய்யப்படும் நெல்லின் பணச் செலவு உற்பத்தி செய்யப்படாமல் விட்டுப்போன கரும்பின் மதிப்பிற்குச் சமம். எனவே, இப் பணச் செலவை மாற்றுச் செலவு என்பர். நெல்லை உற்பத்தி செய்வதற்காகும் செலவு கரும்பை உற்பத்தி செய்யும் வாய்ப்பை இழப்பதற்கான செலவுக்குச் சமாதலால், இச் செலவை வாய்ப்புச் செலவு என்பர்.

மூலவளங்கள் குறிப்பிட்ட அளவில் மட்டும் உள்ளன; முழு வேலை நிலையில் உள்ளன. அங்காடியில் நிறைவுப் போட்டி நிலவுகிறது என்ற எடுகோள்களின் அடிப்படையில் வாய்ப்புச் செலவு என்ற கருத்தை மாற்றல்வளைகோட்டுப்படத்தின் மூலம் விளக்கலாம்.




குறிப்பிட்ட அளவு மூலவளங்களைக் கொண்டு Y பண்டத்தை மட்டும் உற்பத்தி செய்தால் OA அளவுக்கும், X பண்டத்தை மட்டும் உற்பத்தி செய்தால் OD அளவுக்கும் உற்பத்தி செய்ய முடியுமென்பதும்; Y,X என்ற இரு பண்டங்களையும் உற்பத்தி செய்தால், அவ் உற்பத்தி அளவுகளைக் குறிக்கும் புள்ளிகளை இணைத்தால் AD என்ற உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டைப் பெறலாம் என்பதும் கருத்து. எடுத்துக்காட்டாக, குறிப்பிட்ட அளவு மூலவளங்களைக் கொண்டு Y,X பண்டங்களை உற்பத்தி செய்தால், $OY_2+OX_2$ அல்லது $OY_1OX_1$ பண்டங்களைப் பெறலாம். $X_2 X_1$ அளவுக்கு X பண்டத்தை மிகுதியாகப் பெற வேண்டுமானால், $Y_2Y_1$ அளவுக்கு Y பண்டத்தின் உற்பத்தியை விட்டுக் கொடுக்க வேண்டியுள்ளது. இக்கருத்தை, 'முழு வேலை நிலையில் உள்ள பொருளாதாரத்தின் பதிலீடு என்னும் வாழ்க்கை விதியாகும்' என்று பேராசிரியர் சாமுவேல்சன் குறிப்பிடுகிறார்.

உற்பத்தி செய்யப்பட்டிருக்கத்தக்க மாற்றுப் பண்டத்தின் மதிப்பு என மதிப்புக் கோட்பாட்டில் இக்கருத்து பயன்படுகிறது. உற்பத்திக் காரணிகளின் செலவுகள் அவை வேறு வழிகளில் பயன்படுத்தப்பட்டிருந்தால் ஆகும் செலவுகளுக்குச் சமம் என்ற கருத்து, பகிர்வுப் (Distribution) பகுதியில் பயன்படுகிறது. தேயிலை ஏற்றுமதிக்குப் பதில் வேறு எதையாவது ஏற்றுமதி செய்திருந்தால் கிடைத்திருக்கத்தக்க வருமானம், தேயிலை ஏற்றுமதிக்கான வாய்ப்புச் செலவு என்ற கருத்து பன்னாட்டு வாணிகத்தில் பயன்படுகிறது.

கூட்டு அளிப்புப் பண்டங்களின் வாய்ப்புச் செலவைக் கணக்கிடுதல் எளிதன்று; பணம் தவிர மற்ற உள்ளார்ந்திருக்கும் பண்டங்களைப் பொறுத்த மட்டிலும் இக்கருத்து பயனற்றது; ஒரு சில காரணிகளுக்கு வாய்ப்புப் பணி இல்லாதிருக்கலாம்; உண்மை நிலைக்குப் புறம்பான பல எடுகோள்களில் இக்கருத்து அமைந்திருக்கிறது. காண்க: உற்பத்திக் காரணிச் செலவுகள்.


**உற்பத்திச் செலவுக் கோட்பாடு:** காண்க: அடக்கவிலை.

**உற்பத்திச் செலவும் வரிநிலைப்பாடும்:** அரசின் செலவுகளை ஈடுசெய்வதற்கு நேரடி நன்மைகளை எதிர்பாராமல், மக்கள் அரசுக்குக் கட்டாயமாகச் செலுத்துவது வரி. வரி யார்மீது விதிக்கப்படுகிறதோ அவர் வரிச்சுமையைத் தாங்கிக் கொள்ள வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. வரி விதிக்கப்படும்போது, முதன் முதலில் வரி விதிக்கப்படுபவர்


மீது அமைவது வரித்தாக்குதல் (Impact of Tax ). வரித் தாக்குதலுக்கு உட்படுவர் வரிச்சுமையைத் தாமே தாங்கிக் கொள்வதுண்டு. அவர் முன்னோக்கிப் புரட்டி (Forward Shifting) விடுவதும் பின்னோக்கிப் புரட்டி விடுவதும் உண்டு. இவ் வரிப்பளு இறுதியில் யார் மீதாவது நிலைபேறு கொள்ளும். இந்நிலையே வரிநிலைப்பாடு (Incidence of Taxation) எனப்படும். இக்கருத்தின் அடிப்படையில் சமுதாயத்தின் செல்வம், வருமானம் ஆகியவற்றின் பங்கீட்டில் தோன்றத்தக்க மாற்றங்களைச் சுட்டிக் காட்டுவதாக வரிநிலைப்பாடு அமைகிறது என்பது சுவீடன் நாட்டுப் பொருளியல் வல்லுநர் விக்செலின் (Wicksell) கருத்து. அதாவது, வரிகளின் எண்ணிக்கையையும் வரிகளின் விகிதங்களையும் மாற்றுகின்றபோது அது பொது வருவாய், பொதுச் செலவு போன்றவற்றில் மாற்றங்களைத் தோற்றுவிக்கின்றன. இம்மாற்றங்கள் வரிநிலைப்பாட்டின் அடிப்படையில் அமைகின்றன.

உற்பத்திச் செலவு நிலைகள்: ஒரு நிறுவனம் அதன் அமைப்பு, அளவு ஆகியவற்றை மாற்றாமல் ஒருசில உற்பத்திக் காரணிகளை நிலையாக வைத்துக் கொண்டு, ஏதாவது ஓர் அல்லது ஒருசில காரணிகளின் அளவுகளை மட்டும் மாற்றிக் கொண்டு செல்லத்தக்க காலம் குறுங்காலம்; எல்லாக் காரணிகளின் அளவுகளையும் மாற்றத்தக்க காலம் நீண்டகாலம். மற்றவை மாறாதிருக்கும்போது குறுங்காலத்தில் காரணிகளின் அலகுகளின் அளவுகளை மாற்றும் போது இறுதிநிலை விளைவு (Marginal Revenue) அதிகரிக்கலாம்; மாறாதிருக்கலாம்; குறைந்து செல்லலாம். இறுதிநிலை விளைவு அதிகரித்துச் சென்றால் வளர்ந்து செல் விளைவு அல்லது குறைந்து செல் செலவு விதி செயற்படுவதாகவும், இறுதிநிலை விளைவு மாறாதிருந்தால் மாறா விளைவு அல்லது மாறாச் செலவு விதி செயற்படுவதாகவும்,இறுதிநிலை விளைவு குறைந்து சென்றால் குறைந்து செல் விளைவு அல்லது வளர்ந்து செல் செலவு விதி செயற்படுவதாகவும் கொள்ளலாம். உற்பத்தி காரணி அலகுகளைத் தொடர்ந்து அதிகரித்துச் சென்றால், குறிப்பிட்ட நிலைக்குப் பின் குறைந்து செல் விளைவு விதி செயற்படுவதைத் தவிர்க்க இயலாது.


இவ்வாறு குறுகிய காலத்தில் மூவகை உற்பத்திச் செலவு நிலைகள் இருப்பதைப் போன்று நீண்டகாலத்திலும் மூவகைச்செலவு நிலைகள் இருக்கலாம்.காரணி




படம்-1




படம்-2




படம்-3

களின் அளவுகளை இரட்டித்து அமைப்பின் அளவை மாற்றும்போது உற்பத்தி அளவும் இரட்டித்தால், மாறா விளைவு நிலை அல்லது மாறாச் செலவு நிலை நிலவும். உற்பத்தி அளவு இரண்டு மடங்கிற்கு அதிக மாக அதிகரித்தால், வளர்ந்து செல் விளைவு நிலை அல்லது குறைந்து செல் செலவு நிலை நிலவும். உற் பத்தி அளவு இரண்டு மடங்கிற்குக் குறைவாக அதி கரித்தால் குறைந்து செல் விளைவு நிலை அல்லது வளர்ந்து செல் செலவு நிலை நிலவும்.

நிறுவனங்களின் இறுதிநிலைச் செலவுக்கோடு களே அவற்றின் அளிப்புக் கோடுகளாகும். நிறுவனங் களின் அளிப்புகளின் மொத்தம், தொழிலின் அல்லது தொகுப்பின் அளிப்பு, தொழில் அல்லது தொகுப்பின் அளிப்புக் கோடுகளுள் ஒன்று ஆகியவற்றின் நிலைக ளைப் படம்-1, படம்-2, படம்-3 ஆகியன காட்டு கின்றன. படம்-1 குறைந்து செல் செலவு நிலையை யும், படம்-2 மாறாச் செலவு நிலையையும், படம்-3 குறைந்து செல் செலவு நிலையையும் காட்டுகின்றன.


பலநிலைகளில் வரிநிலைப்பாடு: மற்றவை மாறா திருக்கும்போது, வாங்குபவர்கள் மீதான வரிநிலைப் பாடு வளர்ந்து செல் செலவு நிலைகளில் குறைந்த அளவில் இருப்பதைப் படம்-4-உம், குறைந்து செல் செலவு நிலைகளில் அதிக அளவில் இருப்பதைப் படம் -5-உம், மாறாச் செலவு நிலைகளில் வரித்தொகைக் குச் சமமாக இருப்பதைப் படம்-6-உம் காட்டுகின் றன.

வளர்ந்து செல் செலவு நிலையில் வரி விதிக்கப் படும்போது விலை ER-இலிருந்து $E_1R_1$ ஆக அதிகரிக் கிறது என்பதையும், விலை அதிகரிப்பில் $LE_1$ அளவை வாங்குபவரும் ML அளவை விற்பவரும் தாங்கிக் கொள்கின்றனர் என்பதையும் படம்-4 காட்டுகிறது. மாறாச் செலவு நிலையில் விலை அதிகரிப்பு முழுவ தையும் ($EM_2$) வாங்குபவரே தாங்கிக் கொள்கிறார் என்பதைப் படம்-5 காட்டுகிறது. குறைந்து செல் செலவு நிலையில் வரி அளவைக் காட்டிலும் அதிக மான சுமையை வாங்குபவர் தாங்குகிறார்என்பதைப் படம்-6 காட்டுகிறது. வரியின் நேரடிப் பணச் சுமையை விளக்கும்போது வரிநிலைப்பாடு வரி விதிக் கப்படும் பண்டத்தின் தேவை அளிப்பு நெகிழ்ச்சி களைப் பொறுத்தமையும் என டாக்டர் தால்டன் (Dr. Daltan) குறிப்பிடுகிறார்.

அளிப்பு நெகிழ்ச்சியும் (Elasticity of Supply) தேவை நெகிழ்ச்சியும் சமமானவையாக இருந்தால் ($ls = ld$) விற்பவர் வாங்குபவரிடையே வரிநிலைப் பாடு சம அளவில் அமையும்.


அளிப்பு நெகழ்ச்சி தேவை நெகிழ்ச்சியை விட அதிகமாக ($ls > ld$) இருந்தால், வாங்குபவர் மீது அமையும் வரிநிலைப்பாடு விற்பவர் மீது அமையும் வரிநிலைப்பாட்டைக் காட்டிலும் அதிகமாக அமை யும்.

அளிப்பு நெகிழ்ச்சி தேவை நெகிழ்ச்சியைவிடக் குறைவாக ($ls < ld$) இருந்தால், விற்பனையாளர் மீது





தேவையும் அளிப்பும்

படம்-4




தேவையும் அளிப்பும்

படம்-5




தேவையும் அளிப்பும்

படம்-6

அமையும் வரிநிலைப்பாடு வாங்குபவர் மீது அமையும் வரிநிலைப்பாட்டைக் காட்டிலும் அதிகமாக அமையும்.

பண்டத்தின் தேவை நெகிழ்ச்சி முற்றிலும் நெகிழ்வுள்ளதாகவும் அளிப்பு நெகிழ்ச்சி ஒன்றுக்குக் குறைவானதாகவும் இருந்தால், வரிநிலைப்பாடு முழுவதும் விற்பனையாளர் மீதே அமையும்.

பண்டத்திற்கான தேவை நெகிழ்ச்சி முற்றிலும் நெகிழ்வற்றதாகவும் அளிப்பு நெகிழ்ச்சி ஒன்றுக்கு அதிகமாகவும் இருந்தால், வரிநிலைப்பாடு முழுவதும் வாங்குபவர் மீதே அமையும்.

அளிப்பு நெகிழ்ச்சி முற்றிலும் நெகிழ்வுள்ளதாகவும் தேவை நெகிழ்ச்சி ஒன்றுக்குக் குறைவாகவும் இருந்தால், வரிநிலைப்பாடு முழுவதும் வாங்குபவர் மீது அமையும்.

அளிப்பு நெகிழ்ச்சி முற்றிலும் நெகிழ்வற்றதாகவும் தேவை நெகிழ்ச்சி ஒன்றுக்கு அதிகமானதாகவும் இருந்தால், வரிநிலைப்பாடு முழு அளவில் விற்பவர் மீது அமையும்.

உற்பத்திச் சிக்கனங்கள்: உற்பத்தியைப் பேரளவு உற்பத்தி, சிற்றளவு உற்பத்தி என அளவின் அடிப்படையில் வகைப்படுத்துவர். இருவகை உற்பத்தி முறைகளிலும் நிறைகுறைகள் பல உள. நன்மைகளை உற்பத்திச் சிக்கனங்கள் (Economies of Scale) என்பர். பேரளவு உற்பத்தியில் விரைவாக விளையும் பேரளவு நன்மைகளைப் புறச்சிக்கனங்கள், அகச் சிக்கனங்கள் என இருவகைப்படுத்தலாம். ஒரு தொழிலைச் சேர்ந்த எல்லா நிறுவனங்களும் பொதுவாகப் பெறும் நன்மைகள் புறச் சிக்கனங்கள் (External Economies of Scale). சில நிறுவனங்கள் திறன்படச் செயற்படுவதால் அவை மட்டும் பெறும் நன்மைகள் அகச் சிக்கனங்கள் (Internal Economies of Scale).

புறச் சிக்கனங்கள்: தொழிற் செறிவினால் எல்லா நிறுவனங்களும் போக்குவரத்துச் செய்தித் தொடர்பு வசதிகளிலும் திறன்மிக்க தொழிலாளர்களைப் பெறுவதிலும் பல துணையான நிலைகளைப் பெறுகின்றன. பேரளவு நிறுவனங்கள் கூட்டாகச் சேர்ந்து நடத்தும் கள ஆய்வுகளின் மூலம் புதிய கண்டுபிடிப்புகளைத் தொழில்களில் புகுத்த வாய்ப்புகள் உண்டு. அறிவியல் ஆய்வு ஏடுகளை வெளியிடுவதன் மூலம் தொழிலில் அவ்வப்போது தோன்றும் புதுமைகள், மாற்றங்கள், அரசியற் கோட்பாடுகள், பிற இன்றியமையாத செய்திகள் ஆகியவற்றை எல்லா நிறுவனங்களும் விரைந்து எளிதில் பெற வாய்ப்புகள் உண்டு. பேரளவில் நிதி செலவாகும் தொடர் ஆய்வுகளை இவ்வகைக் கூட்டு அமைப்புகளால்தான் மேற்கொள்ள இயலும். தொழில் வளர்ச்சி பெறும்போது, ஒவ்வொரு பகுதியும் வளர்ச்சி பெற்றுத் தனித் தொழிலாக(Specialised Industry) மலர வாய்ப்புகள் தோன்றுகின்றன. துணித் தொழில் வளர்ந்து வேட்டித் தொழில், ஆயத்த உடைகள் (Ready made garments), சேலைத் தொழில், பனியன் தொழில் எனப் பல தொழில்களாகப் பெருகுகின்றன.

பேரளவு உற்பத்தியில்: உற்பத்திச் சிக்கனங்களால் நன்மைகள் பல இருந்தாலும் நிறுவனங்களின் வளர்ச்சி குறிப்பிட்ட அளவுக்குமேல் மிகையாவதில்லை. பேரளவு உற்பத்தியின் இடர்களே இதற்குக் காரணம். நிருவாகத்தில் உள்ளவர்கள் விரைந்து முடிவெடுக்கவும் செயற்படவும் இயலாமற் போகலாம். குறிப்பிட்ட நிலைக்கும் கூடுதலாக வளரும்போது நிருவாகம் செம்மையாகச் செயற்பட முடியாமற் போகலாம். திறன்மிக்க தொழில் முனைவோர் இறந்துபடின் அவருக்குப்பின் தோன்றுபவர்கள் திறனற்றவர்களாக இருக்கலாம். இவ்விடர்களை நிருவாக இடர்கள் என்பர். செங்கல், மரம் அறுக்கும் பணி போன்றவற்றை ஒரே இடத்தில் பேரளவில் செய்து மிகுந்த செலவில் பிற இடங்களுக்கு மாற்றுவதைக் காட்டிலும், அந்தந்த இடங்களிலேயே செய்தால் பயன் மிகுந்திருக்கும். இவை நில வழித் தடைகள். நுகர்வோரின் விருப்பு வெறுப்பு மாறுவதால் பொருள்களைத் தொடர்ந்து தடையின்றிப் பேரளவில் உற்பத்தி செய்தல் இயலாது. இவை உளவழித் தடைகள். இவ்விரு தடைகளையும் இணைத்து அங்காடித் தடைகள் என்பர். உற்பத்திக் காரணிகளின் அளவு தடையின்றிப் பேரளவில் கிடைப்பதருமையாதலால் (Scarcity) நிறுவனங்களும் குறிப்பிட்ட அளவுக்கும் மேல் விரிவடைதல் இயலாமற் போகலாம். நிதி கிடைப்பதிலும் பல இடர்கள் தோன்றலாம். நிருவாகத்தினருக்குச் சரியான எதிர்கால நோக்கு இல்லாதிருப்பின், உற்பத்தி பெருகிப் பொருளாதார மந்தநிலை ஏற்பட்டுவிடலாம். பேரளவு உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் உறுதியற்ற பன்னாட்டு அங்காடியை நம்பியிருப்பதோடு கடும் போட்டியினால் மிகக் குறைவான ஆதாயத்தை மட்டுமே பெற்றுக் கொண்டிருக்கலாம். இடர்கள் பல இருப்பினும் உற்பத்திச் சிக்கனங்கள் மிகுந்து பேரளவுத் தொழில்கள் விரைந்து வளரும் போக்கைப் பெற்றிருக்கின்றன.

சிற்றளவு உற்பத்தியில்: பேரளவு உற்பத்தியில் தோன்றத்தக்க பல இடர்களைத் தவிர்ப்பதோடு பல்வேறு சிக்கனங்கள் சிற்றளவு உற்பத்தியில் (Small

Scale Production) பெறுவதால், இன்று சிற்றளவு உற்பத்தியும் சிறப்பிடம் பெற்றுள்ளது. விரைந்து முடிவுகளை மேற்கொள்ளுதல், தொழில் முனைவோர் தாமே எல்லா நிலைகளிலும் முன்னின்று செயற்படுவதால் திறம்பட நிருவகித்தல், நுட்பமான தொழில்களை மேற்கொள்ளுதல், தொழில் முனைவோரின் அயராத உழைப்பினாலும் அவர் மேற் பார்வையின் சிக்கனத்தாலும் வெற்றி வாய்ப்புகளைப் பெறுதல், வாடிக்கையாளர்களின் விருப்பு வெறுப்பிற்கேற்பப் பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் உற்பத்தியை அமைத்து நல்ல புகழையும் செல்வத்தையும் ஈட்டுதல், தொழிலாளரின் நோக்கமறிந்து பணியைப் பெற்றுப் பயனடைதல், பால், தயிர், முட்டை, இறைச்சி, காய்கறிகள் போன்ற விரைவில் கெட்டுவிடும் பண்டங்களின் உற்பத்தி, விற்பனை ஆகியவற்றில் ஈடுபடுதல், பல்வேறு நிலப் பகுதிகளில் வாழும் மக்களின் விருப்பு வெறுப்புக்கேற்ற பண்டங்களை உற்பத்தி செய்தல் போன்ற பல நன்மைகளைச் சிற்றளவு உற்பத்தியின் மூலம் பெறுதல் இயலும்.

**குறைகள்:** சிற்றளவு உற்பத்தியில் பேரளவு உற்பத்தியின் நன்மைகளைப் பெற இயலாது. இயந்திரங்களையும் தொழிற் பகுப்பு முறையையும் பயன்படுத்தும் வாய்ப்புகள் குறைதல், எதிர்பாராமல் தோன்றும் இடர்களைக் களைதல், ஆய்வுக் கூடங்கள் அமைத்துச் செலவுமிக்க தொடர் ஆய்வுகளை நடத்துதல், எளிதான தவணைகளில் நீண்டகாலக் கடன்களைப் பெறுதல், கழிவுப் பண்டங்களைக் கொண்டு துணைப் பண்டங்களை ஆக்குதல் போன்றவை சிற்றளவு உற்பத்தியில் இயலாதிருக்கும். மூலப்பொருள்களை வாங்குவதிலும் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை விற்பதிலும் துணையான சூழ்நிலைகள் சிற்றளவில் உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்கு இல்லாதிருக்கலாம். நிதியைப் பெறுவதிலும் பயன்படுத்துவதிலும் கூடத் துணையான சூழல்கள் இல்லாமற் போகும்.

குறைகள் பல இருப்பினும் சிற்றளவு முறையின் நன்மைகளின் காரணமாகச் சிற்றளவு உற்பத்தி முறையும் தொடர்ந்து இருந்து வருகிறது. நுகர்வோர் எண்ணற்றவர்கள். அவர்தம் விருப்பு, வெறுப்புகள் பலதரப்பட்டவை. எனவே உயர் அளவு பயன்பாட்டைப் பெற அயராது பாடுபடும் நுகர்வோர் ஒரு புறமும், உயர் அளவு ஆதாயம் பெறுவதை அடிப்படைக் குறிக்கோளாகக் கொண்டு செயற்படும் உற்பத்தியாளர் மறுபுறமும் செயற்படுவதால், எல்லா நாடுகளிலும் இருவகை உற்பத்தி முறைகளும் சிறப்பாகச் செயற்படுகின்றன. காண்க: அகச்சிக்கனம்.

**உற்பத்திக் கட்டுப்பாடு:** பண்டங்கள், பணிகள் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் போது, அவை எவ்வாறு உற்பத்தி செய்யப்பட வேண்டும் என்று திட்டமிடப்படுகின்றனவோ அவ்வாறு அவற்றை உற்பத்தி செய்யவேண்டும். எவ்வகை நோக்கத்தை நிறைவேற்ற வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றனவோ, அந்த நோக்கங்களை நிறைவேற்ற அவை பயன்பட வேண்டும். அவை எத்தகைய தரமுடையவையாக இருக்க வேண்டும் என்று திட்டமிடப்படுகின்றனவோ, அந்த அளவு தரமுடையவையாகக் குறைந்த செலவில் உற்பத்தி செய்யப்பட வேண்டும். இவை யாவும் முறையாகச் செயற்படுவதைக் கண்காணிப்பதே உற்பத்திக் கட்டுப்பாடு (Production Control) எனப்படும். உற்பத்திக் கட்டுப்பாடு என்பதைப் பல நாடுகள் பொருள்களின் மேலாண்மை என்று குறிப்பிடுகின்றன.

**தோற்றம்:** உற்பத்திக்குத் தேவையான பண்டங்களை வாங்குதல், தொழிலாளர்களைத் தேர்ந்தெடுத்துப் பணிகளைப் பகிர்ந்தளித்தல், உற்பத்தியின் அளவை வரையறுத்தல் போன்ற பணிகளைத் தொழிற்சாலையின் கண்காணிப்பாளர் என்று குறிப்பிடப்படும் தொழிலாளர்களின் மேலாண்மையினர் செய்து வந்தனர். நாளாவட்டத்தில் அவர்களால் மட்டும் இப்பணிகளைச் சீராகச் செய்ய முடியாமல் போனதால் அவர்களுக்கு உதவியாளர்களை அமர்த்தினர். அவர்களை உற்பத்தியை விரைவுபடுத்துபவர்கள் (Expeditor) என்று குறிப்பிட்டனர். இங்கிலாந்தின் தொழிலகங்களில் கி.பி. 1890-இல் விரைவு செய்துறை (Hurry-up Department) தோற்றுவிக்கப்பட்டு அது இப்பணியை ஆற்றியது. பின்னர், இவ்வுதவியாளர்கள் விரைவுபடுத்துபவர்கள் என்றும், இவர்களின் பணிகள் விரைவுபடுத்தும் பணிகள் என்றும் குறிப்பிடப்பட்டனர்.

உற்பத்திக் கட்டுப்பாட்டில் பல நிலைகள் உள்ளன. அவை: திட்டமிடல், நெறிப்படுத்துதல், அட்டவணைப்படுத்துதல், விரைந்து முடித்தல், தொடரும் பணிகள், ஆய்வு முன்னேற்றம் என்பவையாம். நுகர்வோரின் தேவை அங்காடியில் எவ்வாறு உள்ளது, அதன் இயல்புகள் யாவை, அங்காடித் தேவையை நிறைவேற்ற உற்பத்திக்காரணிகளை எந்த அளவில் இணைப்பது, எப்பண்டத்தை, எப்பொழுது, எங்கே, எவ்வாறு உற்பத்தி செய்வது, உற்பத்தியின் பல்வேறு நிலைகளை எவ்வகையில் தொழிலாளர்கள் பொறுப்பில் விடுவது, குறிப்பிட்ட கால அளவில், குறிப்பிட்ட உற்பத்திச் செலவில், குறிப்பிட்ட தரத்தில் பண்டங்களையும் பணிகளையும் எவ்வாறு செய்து முடிப்பது

என்பன போன்ற செயல்கள் பற்றிய ஆதாரங்களை ஆய்ந்து பெறும் புள்ளிவிவரங்களை அடிப்படையாகக் கொண்டு, உற்பத்தி செய்யத் தொடங்கு முன்பே இவற்றை எழுத்து வடிவிலும் திட்டவட்டமாகக் குறித்துச்செயற்படத் துணிவதே திட்டமிடுதலாகும்.

மூலப்பொருள் முழுமை பெற்ற பண்டமாக உருப் பெறப் பல நிலைகளைக் கடக்க வேண்டி இருக்க லாம். எம்முறையில் இந்நிலைகளை அடைதல் வேண்டும் என்பதைத் திட்டமிடும் பணி முக் கியமானதாகும். எந்தெந்த முறைகளில் மூலப் பொருள்கள் பதப்படுத்தப்பட்டால், பண்டத்தின் தரம் உயர்வானதாகவும் உற்பத்திச் செலவு குறைவான தாகவும் இருக்கும் என்பதைக் கருத்தில் கொண்டு மூலப்பொருள்களைப் பல நிலைகளைக் கடக்க வைக்கும் பணியே நெறிப்படுத்துதலாகும். பண்டங் கள், பணிகள் ஆகியன பற்றிய முழு அளவிலான தெளிவு, உற்பத்தி முறை, உற்பத்தியில் பயன்படும் இயந்திரங்கள், கருவிகள் பற்றிய நுட்ப அறிவு ஆகி யன நெறிப்படுத்துபவருக்கு இருத்தல் இன்றியமை யாததாகும். இயந்திரங்களும் கருவிகளும் நிறை வான நிலையில் பயன்படுத்தப்படுதலும், உற்பத்திப் பண்டம் ஒவ்வொரு நிலையையும் குறித்தபடி கடந்து செல்லும் நிலையும், சுற்றுவழி முறையைத் தவிர்த்து மிகச் சுருக்கமான முறையைக் கையாளுவதும் உற் பத்திச் செலவு குறைந்து, தரம் உயர்ந்து சீரான முறையில் நெறிப்படுத்தப்பட்டுப் பின்பற்றப் பட்டால் உற்பத்திக் கட்டுப்பாடு சிறந்த முறையில் செயற்படும்.

உற்பத்தியின் பல நிலைகளுக்கான கால வரை யறைகளைக் குறிப்பிடும் அட்டவணையை ஏற்படுத்திக் கொள்ளுதல் மிகவும் இன்றியமையாதது. அங்காடி யில் பண்டங்கள் எப்பொழுது தேவைப்படுகின்ற னவோ, அப்பொழுது உற்பத்தியை முடித்து அங் காடிக்கு அனுப்பினால்தான் பண்டங்கள் விற்பனை யாகும்; ஆதாயமும் கிடைக்கும். காலம் தாழ்த்திப் பண்டங்கள் அங்காடிக்குச் சென்றால் தேக்க நிலை தோன்றும். எனவே உற்பத்தியை எப்பொழுது தொடங்க வேண்டும்? ஒவ்வொரு நிலையிலும் தேவைப்படும் காலவரையறை எவ்வாறு இருக்க வேண்டும்? உற்பத்தி எப்பொழுது முடிவடைய வேண்டும்? என்பனவற்றில் உற்பத்தியாளர் மிகுந்த விழிப்புணர்ச்சியுடன் செயற்படுதல் அவசியம். இதுவே அட்டவணையிடுதல் எனப்படும்.

பொதுவாக, நிறுவனம் பெறும் உற்பத்தி ஆணை களை விரைவு ஆணைகள், இயல்பான ஆணைகள், சரி செய்யும் ஆணைகள் என மூவகைப்படுத்த லாம். பண்டங்களின் உற்பத்தியை விரைவுபடுத்த வேண்டுமானால், தொழிலாளர்களுக்குச் சிறப்பு ஊதியம் கொடுத்து மிகைநேரம் (Over Time) பணி செய்யச் செய்து, உற்பத்தியைக் குறித்த காலத்தில் முடித்தல் வேண்டும். இயல்பான ஆணைகளுக்கான பண்டங்களை உற்பத்தி செய்து கொண்டிருக்கும் போது சரிசெய்யும் ஆணைகளும் வரலாம். இவற்றிற் கான காலவரையறையை உள்ளடக்கிய அட்டவணை யையும்,பண்டத்தின் ஒரு நிலையைச் செய்து முடிக்கத் தேவைப்படும் காலவரையறையைக் கொண்ட செயல் அட்டவணையையும்,அன்றாடச் செயல் அட்டவணை யையும் நிறுவனம் அமைத்துச் செயற்படுதல் வேண் டும்.

விரைந்து முடித்தல்: பணியைத் தடையின்றிச் செய்து முடிக்கத் தேவையான கருவிகளைப் பெற்று, பணியின் ஒவ்வொரு நிலையிலும் தொடக்க, முடிவுக் காலங்களைக் குறிக்கும் பதிவேடுகளை அமைத்து, திட்டமிட்டபடி விரைவாக உற்பத்தி செய்து முடித் தல் உற்பத்திக் கட்டுப்பாட்டின் அடுத்த நிலை . உற் பத்தியின் ஒவ்வொரு நிலையிலும் தொழிலாளர் ஒவ் வொருவரும் தத்தம் நிலை அறிந்து செயற்பட ஓர் ஆணைப் பெட்டியை (Order Box) வைத்துக் கொள் வர்.

ஒவ்வொரு நிலையிலும் சிறப்பான கருவிகளைப் பெறுவதற்குத் தொடர் பணியும் ஆய்வுகளின் வாயி லாகப் புதிய முன்னேற்றங்களைப் பெறுதலும் இன் றியமையாதன.குறித்த நேரத்திலும் குறைவான செல விலும் உற்பத்தி செய்தல் எவ்வளவு இன்றியமையா ததோ, அவ்வளவுக்குப் பண்டத்தின் தரத்தை உறுதிப் படுத்துவதும் இன்றியமையாதது. ஒவ்வொரு நிலை யிலும் மட்டுமல்லாமல் உற்பத்தி முழுமை பெற்ற பின்னரும், அவற்றில் ஒரு சிலவற்றை ஆய்வுக்கு உட் படுத்தித் தரத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

உற்பத்திக் கட்டுப்பாடு சிறப்புற இருப்பின் திறன் மிக்க பணியைப் பெறுதல் இயலும்; அவசர ஆணை களைத் தவிர்க்கலாம்; வேலையில் தோன்றத்தக்க தேக்கத்தைத் தவிர்க்க இயலும்; சரக்குத் தொகுதி களையும் கருவிகளையும் சிறப்பாகவும் சிக்கனமாக வும் பயன்படுத்த முடியும்; குறைந்த நேரத்தில் மிகுந்த உற்பத்தியை நல்ல தரமுடன் உற்பத்தி செய்தல் இயலும்.

உற்பத்திக் கடனும் உற்பத்தியற்ற கடனும்: தனி ஆட்கள், நிறுவனங்கள், அரசுகள் ஆகியன பெறும் கடன்களைப் பண்டங்கள், பணிகள் ஆகிய வற்றின் உற்பத்திப் பெருக்கத்திற்குத் துணை செய்

யும் வகையில் பயன்படுத்தினால், அவை உற்பத்திக் கடன்கள் (Productive Debts) ஆகின்றன. பண்டங்களையும் பணிகளையும் உற்பத்தி செய்யத்தக்க சொத்துகளை உருவாக்காமல் அல்லது உற்பத்தித் திறனை உடனடியாகவோ நெடுங்காலத்திலோ மிகுதிப்படுத்தப் பயன்படாத பிற பணிகளில் பயன்படுத்தினால், அவை உற்பத்தியற்ற கடன்கள் (Unproductive Debts) ஆகின்றன. தனியார்களும் நிறுவனங்களும் அவை பெறும் கடன்களில் பெரும் பகுதியை உற்பத்திப் பணிகளிலேயே பயன்படுத்துவது இயல்பு. ஆனால் அரசுகள் உற்பத்தியற்ற பணிகளில் செலவிடவும் கடன்களைப் பெறலாம்.

உற்பத்திக் கடன்: வருவாய் ஈட்டத்தக்க வழிகளில் செலவிடுவதற்காகப் பெறும் கடன் உற்பத்திக் கடன். இருப்புப் பாதைகள் அமைத்தல், நீர்ப்பாசனத் திட்டங்கள், மின்சாரத் திட்டங்கள் போன்றவற்றை நிறைவேற்றுதல், இரும்பு, உருக்கு, சர்க்கரை, சிமெண்டு போன்ற பலவிதமான மூலதன, நுகர் பொருள்களை உற்பத்தி செய்யத்தக்க ஆலைகளை அமைத்துப் பயன்படுத்துதல் போன்ற உற்பத்திப் பணிகளுக்கெனக் கடன்களைப் பெறும் போது, அவை உற்பத்திக் கடன்களாகின்றன. இவற்றிலிருந்து கிடைக்கும் வருவாயைப் பயன்படுத்தி, முதலையும் வட்டியையும் மொத்தமாக அல்லது பகுதி பகுதியாகத் திருப்பிச் செலுத்திவிட வாய்ப்புண்டு. கடன்களைத் திருப்பிச் செலுத்துவதுடன் தொடர்ச்சியாக உற்பத்திப் பொருள்களையும் நுகர்வுப் பொருட்களையும் பெற இவை துணை செய்கின்றன.

கல்வி, பொது நலம், மருத்துவம் போன்ற பணிகளுக்காக மேற்கொள்ளும் செலவினங்கள் நீண்டகால அளவில் பலன்களைத் தரத்தக்கவை; மக்களின் உற்பத்தி ஆற்றலை மிகுதிப்படுத்த வல்லவை. எனவே, இவ்வகைச் செலவினங்களுக்காகப் பெறும் கடன்களும் உற்பத்திக் கடன்களே.

(அ) உடனடி விளை உற்பத்திக்கடன்: நேரடியாகப் பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் உற்பத்தியை மிகுதிப்படுத்தும் நோக்கங்களுக்காகப் பெறப்படும் கடன்கள் உடனடி விளை உற்பத்திக் கடன்கள் (Active Productive Debts) எனப்படும்.

(ஆ) உடனடி விளையா உற்பத்திக் கடன்கள்: மனித மூலதனம், சமுதாய மூலதனம் ஆகியவற்றின் வளர்ச்சிக்காகப் பயன்படுத்தும் நோக்கங்களுக்காகப் பெறப்படும் கடன்கள் உடனடி விளையா உற்பத்திக் கடன்கள் (Passive Productive Debts) எனப்படும்.

உற்பத்தியற்ற கடன்: போர், துயர் துடைப்புப் பணிகள், வெள்ள இடர் காப்புப் பணிகள் போன்ற பணிகளில் செலவிடுவதற்காகப் பெறும் கடன்கள் உற்பத்தியற்ற கடன்கள் ஆகும். இக்கடன்களைப் பயன்படுத்தும் போது பண்டங்களை, பணிகளை உற்பத்தி செய்யத்தக்க சொத்துகள் உருவாவதில்லையாதலால், இக்கடன்களின் முதலையும் வட்டியையும் அரசு அதன் பொது வருமானத்திலிருந்து செலுத்த வேண்டும். இவை பளுமிக்கவை. போர்ச் செலவுகளுக்கும், பொருளாதார மந்த நிலைகளால் (Economic Depressions) உந்தப்பட்ட பற்றாக்குறைகளைச் சமப்படுத்துவதற்கும் பொதுக் கடன்களைப் (Public Debts) பயன்படுத்தியபோது, அதற்கு இங்கிலாந்தில் 'மிகுபளுக் கடன்' (Dead Weight Debt) என்ற சொல் பயன்படுத்தப்பட்டது.

வகைப்படுத்தலின் குறை: போருக்காகவும் உள்நாட்டில் அமைதியை நிலைநாட்டுவதற்காகவும் துயர் துடைப்புப் பணி, வெள்ள இடர் காப்புப் பணி போன்றவற்றிற்காகவும் மேற்கொள்ளும் செலவினங்கள் யாவும் முழுமையாகப் பயனற்றவை என்று குறிப்பிட இயலாது; இவற்றால் மக்களின் உற்பத்தி ஆற்றல் மிகுதியாவதற்கும் வாய்ப்புகள் உண்டு. எனவே, இவ்வகைச் செலவினங்களுக்காகப் பெறும் கடன்களை முழுமையாக உற்பத்தியற்ற கடன்கள் என்று குறிப்பிட இயலாது.

அரசு அதன் நிதித் தேவையை உறுதி செய்து, வருவாய், வரி, சேமிப்புக் கலைப்புப் போன்ற பல வழிகளில் பெறத்தக்க வருவாய் போக மீதியுள்ள நிதித் தேவையை ஈடுசெய்யப் பொதுக் கடனைப் பெறுகிறது. போர்ச் செலவுகளுக்கு மட்டும் என்றோ வளர்ச்சிச் செலவுகளுக்கு மட்டும் என்றோ கடன் பெறுதல் இல்லை. இந்த அடிப்படையில் கடன்களை உற்பத்திக் கடன்கள், உற்பத்தியற்ற கடன்கள் என வகைப்படுத்துதல் சரியானதன்று என்ற கருத்தும் உண்டு.

என்.எஸ்.பா.


துணை நூல்கள்:

**Philip E. Taylor**, Economics of Public Finance, Oxford & I B H Publishing Company, Delhi, 1968.

**Tyagi, B.P.**, Public Finance, Jai Prakash Nath Publications, Meerut, 1984-85.

**Nagar and others**, Public Finance, Goel Publishing House, Meerut, 1985-86.

**உற்பத்திச் சம விளைவு வளைகோடு:** இது இரு உற்பத்திக் காரணிகளைக் கொண்டு உற்பத்தி நிகழும் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்ட கருத்துருவாகும். x,y என்ற இரு உற்பத்திக் காரணி அலகுகளால் உற்பத்தி நிகழ்வதாவும், x,y காரணி அலகுகளின் பல கலவைகளிலும் சம அளவு உற்பத்தி நிகழ்வதாகவும் கருதிக் கொண்டால், x,y காரணிக் கலவைகளுக்கு உற்பத்தி அளவுகளைக் குறிக்கும் புள்ளிகளின் இணைப்பு உற்பத்திச் சம விளைவு வளைகோடு (Equal Product Curve) ஆகும். இதனைப் படம்-1 விளக்குகிறது.





படம்-1

$AA_1$ அளவு மூலதனக் காரணியும் $OA_1$ அளவு உழைப்புக் காரணியும் 100 அலகுகளை உற்பத்தி செய்வதாகவும், $BB_1$ அளவு மூலதன அலகுகளும் $OB_1$ அளவு உழைப்பு அலகுகளும் அதே 100 அலகுகளை உற்பத்தி செய்வதாகவும் கொண்டால், A,B புள்ளிகளை இணைக்கும் IQ வளைகோடு, உற்பத்திச் சம விளைவு வளைகோடு (Equal Product Curve/Iso Product Curve/Iso-Quant) ஆகும். இதில் உற்பத்தி முறைகள் மாறாதிருக்கின்றன. உற்பத்திக் காரணிகள் பேரளவில் பயன்தரும் வகையில் இணைக்கப் பெற்றிருக்கின்றன என்பது உள்ளார்ந்திருக்கும் அடிப்படை எடுகோள் (Assumption) ஆகும்.


**உற்பத்திச் சம விளைவு வளைகோடும் சம நோக்கு வளைகோடும்:** உற்பத்திச் சமவிளைவு வளைகோடு சம நோக்கு வளைகோடு (Indifference Curve) போலத் தென்படினும் இரண்டிற்கும் அடிப்படையான வேறுபாடுகள் சில உள்ளன. அவையாவன:

1) சமநோக்கு வளைகோட்டில் குறிப்பிடப்படும் பயன்பாட்டை அளவிடுதல் இயலாது; உற்பத்திச் சம விளைவு வளைகோட்டில் குறிப்பிடப்படும் பண்ட அளவை அளந்தறிதல் இயலும். (2) சம நோக்கு வளை கோட்டுப் படத்தில் இரண்டு கோடுகளுக்கிடையே குறிக்கப்படும் பயன்பாட்டு வேறுபாட்டை அளந்தறிதல் இயலாது; உற்பத்திச் சம விளைவு வளை கோட்டுப் படத்தில் இதனை அளவிடலாம். படம்-2 இதனை விளக்குகிறது.




படம்-2


(3) துல்லியமாக அளவிடுதல் இயலாத காரணத்தால் படம்-3-இல் காட்டியுள்ள வகையில் சமநோக்கு




படம்-3


வளைகோட்டுப் படத்தில் சமநோக்கு வளைகோடு கள் 1,2,3 . . . . என்று குறிப்பிடப்பட்டுள்ளன. துல்லியமாக அளந்து அறிய இயலுமாதலால் படம்-2-இல் காட்டிய வண்ணம் உற்பத்தி அளவுகளைக் குறிக்க உற்பத்திச் சம விளைவு வளைகோட்டுப் படத்தில் வாய்ப்பு உண்டு.

இயல்புகள்: (1) இறுதிநிலைப் பதிலீட்டுத் தொழில்நுட்ப வீதம் எதிர்மறையில் இல்லாதிருக்கும் வரை, உற்பத்திச் சம விளைவு வளைகோடு மேலிருந்து கீழாக இடமிருந்து வலமாகச் சரிந்து செல்லத் தக்கது. சமவிளைவு தோன்ற வேண்டுமானால் X,Y காரணிகளுள் ஒன்றின் எண்ணிக்கையைக் குறைக்கும் போது மற்றதன் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும். அதில்லாமல் X-இன் அளவை மாற்றாமல் Y-இன் அளவை மட்டும் மாற்றினால் அல்லது Y-இன் அளவை மாற்றாமல் X-இன் அளவை மட்டும் மாற்றினால் உற்பத்தி சம விளைவினதாக இருக்க வாய்ப்பில்லை.





உழைப்பு அலகுகள். படம்-4

படம்-4-இல் OA உழைப்பும், OB மூலதனமும் 100 அலகுகள் உற்பத்தியைத் தோற்றுவித்தால், அதே OA உழைப்பும் அதிகரித்துள்ள OC மூலதனமும் 100 க்கும் அதிகமான உற்பத்தியைத் தரும். எனவே உற்பத்திச் சம விளைவு வளைகோடு செங்குத்துக் கோடாக இருக்க வாய்ப்பில்லை. உற்பத்திச் சமவிளைவுக் கோடு படம்-5-இல் காட்டியுள்ள வண்ணம் படுகிடைக்கோடாக இருப்பதற்கான வாய்ப்புமில்லை.




உழைப்பு அலகுகள் படம்

OA உழைப்பும் OB மூலதனமும் 100 உற்பத்தி அலகுகளைத் தோற்றுவித்தால், $OA_1$ என்னும் அதிகரித்த உழைப்பும், முன்பிருந்த OB அளவு மூலதனமும் 100க்கும் மிகையான அளவு உற்பத்தியைத் தரும். எனவே, உற்பத்திச் சம விளைவுக்கோடு படுகிடைக் கோடாக இருக்க இயலாது.




உழைப்பு அலகுகள் படம்-6


படம்-6-இல் காட்டியுள்ள வண்ணம் உற்பத்திச் சம விளைவுக்கோடு மேல்நோக்கிச் செல்லும் கோடாகவும் இருக்க இயலாது. காரணிக் கலவையினால் பெறப்படும் உற்பத்தி அளவைக் காட்டிலும் $OA_1$, $OB_1$ காரணிக் கலவையினால் பெறப்படும் உற்

பத்தி அளவு மிகையாகவே இருக்கும். இக் காரணங்களால் உற்பத்திச் சமவிளைவுக்கோடு எதிர்மறைக் கோடாக மேலிருந்து கீழாக, இடமிருந்து வலமாகச் செல்லும் கோடாக அமையும்.

2) தொடக்க நிலை உற்பத்திச் சம விளைவுக் கோட்டிற்கு வலப்புறமாக மேலாக அமையும் வளை கோடுகள் மிகு விளைவைக் குறிப்பன (படம்-2-ஐக் காண்க). உற்பத்திச் சமவிளைவுக் கோடுகள் நிறைந்த படம் உற்பத்திச் சமவிளைவு வளைகோட்டுப் படம் எனப்படும்.

3) இரு உற்பத்திச் சம விளைவுக் கோடுகள் ஒன்றையொன்று வெட்டிக் கொள்ளா. படம்-7-இல் காட்டியுள்ள வண்ணம் இரண்டு உற்பத்திச் சம


படம்-7




விளைவுக் கோடுகள் ஒன்றை யொன்று வெட்டிக் கொள்ள வாய்ப்பு இல்லை. படத்தில் $IQ_1$, $IQ_2$ ஆகிய இரு உற்பத்திச் சம விளைவுக் கோடுகள் ஒன்றை யொன்று வெட்டிக் கொள்ளுமாயின் $OB_1$ அளவு மூலதனமும், $B_1B$ அளவு உழைப்பும் உற்பத்தியும், $OB_1$ அளவு மூலதன அலகுகள், $B_1C$ அளவு உழைப்பு அலகுகள் உற்பத்தியும் சமமாக அமைதல் வேண்டும். ஆனால், அவை சமமாக அமையப் பெறவாய்ப் பில்லை. எனவே, இரு உற்பத்திச் சம விளைவுக் கோடுகள் ஒன்றையொன்று வெட்டிக் கொள்ளா.

4) உற்பத்திச் சம விளைவுக் கோடு பொதுவாக தோற்றுவாய்க்குக் குவிகோடாக (Convex)அமையும். ஓர் உற்பத்திக் காரணி குறிப்பிட்ட அளவைப் பெற மற்றதோர் உற்பத்திக் காரணி அவ்வளவை விட்டுக் கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் காரணி அலகுகளில் இறுதிநிலைத் தொழில்நுட்பப் பதிலீட்டு வீதம் அமைகிறது.

படம்-8





படம்-8-இல் a என்ற சமநிலைப் புள்ளியில் $OQ_1$ மூலதனமும் $Oa_2$ உழைப்பும் பயன்படுகின்றன. இந்நிலையில் cd அளவுள்ள x காரணியின் (உழைப்பின்) ஓர் அலகைப் பெற ac அளவு y காரணியின் (மூலதனத்தின்) அலகுகள் தவிர்க்கப்படுகின்றன. a என்ற புள்ளியில் மூலதனம் மிகுந்தும் உழைப்புக் குறைந்தும் இருப்பதே இதற்கான அடிப்படைக் காரணம். இதற்கு மாறாக b என்ற சமநிலைப் புள்ளியில் உழைப்பு மிகுந்தும் $(Ob_2)$ மூலதனம் குறைந்தும் $(Ob_1)$ இருப்பதால் $C_1d_1$ $(=cd)$ அளவுள்ள x காரணியின் (உழைப்பின்) ஓர் அலகைப் பெற $c_1b$ என்ற குறைந்த அளவிலான y காரணியின் (மூலதனத்தின்) அலகுகளே தவிர்க்கப்படுகின்றன. இது குறைந்துசெல் இறுதிநிலைத் தொழில்நுட்பப் பதிலீட்டு விதியின் (Law of Diminishing Marginal Rate of Technical Substitution) பாற்படும். இதன் காரணமாக உற்பத்திச் சம விளைவு வளைகோடு தோற்றுவாய்க்குக் குவிகோடாக அமைகிறது. இது பொதுவான இயல்பு. இதற்கு மாறாக, காரணிப் பதிலீட்டு வீதத்தின் அடிப்படையில் மூன்று வகையான உற்பத்திச் சம விளைவுக் கோடுகளும் இருக்க

வாய்ப்புண்டு. அவை நேர்கோட்டு உற்பத்திச் சம விளைவுக் கோடு (Linear-Iso Quant), உள்ளீடு வெளியீடு உற்பத்திச் சம விளைவுக் கோடு (Input Output Iso Quant), உடைந்த உற்பத்திச் சம விளைவுக் கோடு (Kinked Iso Quant) ஆகியவை யாகும்.


நேர்கோட்டு உற்பத்திச் சம விளைவுக் கோடு: மூலதனமும் உழைப்பும் ஒன்றுக்கொன்று நிறைவான பதிலிகளாகவும் உற்பத்திச் சம விளைவுக் கோட்டின் எல்லாப் புள்ளிகளிலும் இவற்றின் இறுதிநிலைத் தொழில்நுட்பப் பதிலீட்டு வீதம் மாறாமல் இருப்பதாகவும் உள்ள நிலையில், உற்பத்திச் சமவிளைவுக் கோடு படம்-9-இல் காட்டியுள்ள வண்ணம் நேர் கோடாக (AB) அமையலாம். இது உண்மை நிலைக்குப் பொருந்தாத ஒன்று; ஓர் எல்லை நிலை.

படம்-9




உள்ளீடு வெளியீடு உற்பத்திச் சம விளைவுக் கோடு: மூலதனமும் உழைப்பும் ஒன்றுக்கொன்று பதிலிகளாக இல்லாமலும், படம் 10-இல் உள்ள உற்பத்திச் சம விளைவுக் கோட்டின் செங்குத்துப் பகுதியில் (AC) மூலதனத்திற்கான உழைப்பின் இறுதி நிலைத் தொழில்நுட்பப் பதிலீட்டு வீதம் வெறுமை (Zero)யாகவும், உற்பத்திச் சம விளைவுக் கோட்டின் படுகிடைப் பகுதியில் (CB) இவ்வீதம் எல்லையற்றதாகவும் இருக்கும் சூழ்நிலையில், உற்பத்திச் சம விளைவுக்கோடு ஆங்கில 'எல்' (L) எழுத்து வடிவத்தில் (படம்-10) அமையும், குறிப்பிட்ட உற்பத்தியைப் (c) பெற $OC_1$ மூலதனமும் $OC_2$ உழைப்பும் பயன்படுத்தப்படுகின்றன. உழைப்பை மட்டுமோ மூலதனத்தை மட்டுமோ அதிகரித்து உற்பத்தியை அதிகரித்தல் இயலாது. இத்தகைய 'எல்' வடிவ உற்பத்திச் சம விளைவுக் கோட்டை உள்ளீடு


படம்-10




வெளியீடு பகுப்பாய்வைப் பயன்படுத்திய அறிஞர் இலியோண்டிபு(Leontief) பெயரால் இலியோண்டிபு உற்பத்திச் சம விளைவுக் கோடு எனக் கூறுவர்.

உடைந்த உற்பத்திச் சம விளைவுக் கோடு: உழைப்பு, மூலதனம் ஆகிய காரணிகளுக்கிடையே குறைந்த அளவிலான (குறிப்பிட்ட அளவிலான) பதிலீடு (Limited Substitutability) இருக்கலாம். ஒரு பண்டத்தை உற்பத்தி செய்வதில் ஒருசில உற்பத்தி முறைகள் மட்டுமே இருக்கலாம். காரணிகளின் பதிலீடுகள் படம் 11-இல் காட்டியுள்ளபடி நேர்

படம் 11



கோடு உடையும் இடத்தில்தான் (B,C என்ற புள்ளிகளில்) இயலத்தக்கதாக இருக்கலாம். இந்நிலையிலான உற்பத்திச் சம விளைவுக் கோட்டைச் செயற்பாடு-பகுப்பாய்வு உற்பத்திச் சம விளைவுக் கோடு (Activity Analysis Iso Quant) என்றும், நேர்கோட்டு உற்பத்திச் சம விளைவுக் கோடு (Linear Programming) என்றும் குறிப்பிடுவது இயல்பு.


இவ்வகை உற்பத்திச் சம விளைவுக் கோடுகள் நடைமுறைக்கு ஏற்றவை. உற்பத்திப் போக்குத் தொடர்ந்ததாக இல்லாமல் தனித் தனியாக இருப்பதாக இக்காலத்தில் பொறியாளர்களும் மேலாளர்களும் உற்பத்தி நிருவாகிகளும் கருதுகின்றனர். இருப்பினும், எளிமையைக் கருதி உற்பத்திச் சம விளைவுக் கோடுகள் மென்மைப்படுத்தப்பட்ட வளைகோடுகளாகவே பொருளாதாரக் கோட்பாடுகளில் பயன்படுத்தப்படுகின்றன.

5) உற்பத்திச் சம விளைவுக் கோடுகள் இணைகோடுகளாக இருக்க வேண்டியதில்லை.இரு உற்பத்திக் காரணிகளுக்கிடையேயான பதிலீட்டு வீதங்கள் எப்போதுமே ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் என்ற நியதி இல்லையாதலால், உற்பத்திச் சம விளைவுக் கோடுகளும் இணைகோடுகளாக இருக்க வேண்டும் என்ற நியதி இல்லை. வரைபடத்தில் காட்டப்படும் இரு உற்பத்திச் சம விளைவுக் கோடுகளுக்கிடையே பல்வேறு விளைவு அளவுகளைக் காட்டத்தக்க எண்ணற்ற உற்பத்திச் சம விளைவுக் கோடுகள் அமையப் பெறலாம்.

6) ஒவ்வோர் உற்பத்திச் சம விளைவுக் கோடும் முட்டை வடிவமானது. உற்பத்திக் காரணி ஒன்றின் அளவை மாற்றாமல் வைத்துக் கொண்டு மற்றதன் அளவை அதிகரித்துக் கொண்டே சென்றால், குறிப்பிட்டதொரு நிலைக்குப் பின் மொத்த உற்பத்தி குறைந்து விடுவதே இதற்கான காரணமாகும். உற்பத்திச் சம விளைவுக் கோடுகளின் ஒரு பகுதியில்தான் உற்பத்தி நிகழ்கிறது. அதாவது, இக்கோடுகளின் முன், பின் பகுதிகள் மறைந்திருக்கின்றன. இவற்றைப் புள்ளிக் கோடுகளால் இணைத்தால் படம்-12-இல் காட்டப்பட்டுள்ளதுபோல உற்பத்திச் சம விளைவுக் கோடுகள் அமைகின்றன.

உற்பத்திச் சம விளைவுக் கோடுகளின் ஒரு பகுதி தோற்றுவாய்க்குக் குவிகோடுகளாக அமையும். இப்பகுதியில்தான் காரணியின்இறுதிநிலைப் பதிலீட்டு வீதம் நேர் விகிதத்தில் அமையும். இப்பகுதிகளை இணைக்கும் கோடுகள் (படம்-12-இல் OA,OB கோடுகளை) வரம்புக் கோடுகள் அல்லது எல்லைக்

படம்-12





கோடுகள் (Ridge line) எனப்படும். OA மேல் வரம்புக் கோடு OB கீழ்வரம்புக் கோடு. இவ் எல்லைக்கோடுகளுக்குள் அமையும் உற்பத்திச் சம விளைவுக் கோட்டின் ஏதாவதொரு புள்ளியில் உற்பத்திக் காரணிக் கலவை அமைந்தால்தான் உற்பத்தியாளர் பேரளவில் பயன்பெறுவர். எடுத்துக்காட்டாக, 50 அலகுகள் உற்பத்தி செய்வதற்குகந்த உற்பத்திச் சம விளைவுக் கோடு $IQ_1$ – இதில் P என்னும் நிலையில் OM உழைப்பு மற்றும் MP மூலதன அளவுகளைப் பயன்படுத்துவதைக் காட்டிலும், N என்னும் நிலையில் OM உழைப்பு மற்றும் MN மூலதன அளவுகளைப் பயன்படுத்துவது பேரளவில் பயன்தரத்தக்கது.

**உற்பத்திச் சம விளைவு வளைகோடுகளும் மாறும் இறுதிநிலை விளைவு விதியும்:** தேவை மாற்றத்திற்கேற்ப அளிப்பின் அளவை முழுமையாகமாற்ற இயலாத கால அளவைக் குறுங்காலம் அல்லது குறுகிய காலம் எனப்பொருளாதாரப் பகுப்பாய்வில் குறிப்பிடுவர்.அதாவது, எல்லா உற்பத்திக் காரணிகளின் அளவுகளையும் மாற்றியமைக்க இயலாத நிலை குறுங்காலம். மற்றவை மாறாதிருக்கும்போது, ஏதாவது ஓர் அல்லது ஒருசில காரணிகளை மாறா அளவில் வைத்துக் கொண்டு, மற்றக் காரணி அல்லது காரணிகளை மாற்றி, உற்பத்தி செய்யும்போது மாறும் காரணியின் இறுதிநிலை விளைவு முதலில் அதிகரித்துச் செல்லும்; குறிப்பிட்ட நிலைக்குப் பின் மாறாதிருக்கும். குறிப்பிட்ட நிலைக்குப் பின்

குறைந்து செல்லும் என்பது மாறும் இறுதிநிலை விளைவு விதி. உற்பத்திச் சம விளைவுக் கோடுகளின் (Law of Variable Marginal Returns) அடிப்படையில் இவ்விதியை விளக்கலாம்.


படம்-13




படம்-13-இல் உள்ளபடி 100 அலகுகள் உற்பத்தியைப் பெற OC அளவு மூலதனமும் CD அளவு உழைப்பும் பயன்படுகின்றன. D என்ற புள்ளி OA என்ற மேல்வரம்புக் கோட்டிற்கு மேலாக இருப்பதால், உற்பத்தியாளர் இதனை விரும்பாமல் $IQ_1$-இல் OA, OB கோடுகளுக்கு இடைப்பட்ட ஒரு புள்ளியை விரும்புவார். மூலதனம் நிலையாக இருப்பதாகக் கற்பனை செய்து கொண்டால், உழைப்பு, CDக்கும் குறைவான DE அளவில் அதிகரிக்கும்போது உற்பத்தி 100-இலிருந்து 200-ஆக அதிகரிக்கிறது; DE அளவைக்காட்டிலும் குறைவான EF அளவில் அதிகரிக்கும்போது உற்பத்தி 300-ஆக அதிகரிக்கிறது. அதாவது, உழைப்பின் இறுதிநிலை விளைவு அதிகரித்துச் செல்கிறது என்பது கருத்து. வளர்ந்து செல் விளைவு விதி (Law of Increasing Returns) செயற்படுகிறது. உழைப்பு EF, FG என்ற சம அளவுகளில் அதிகரிக்கும்போது இறுதிநிலை விளைவு மாறாமல் இருப்பதால் E, F, G புள்ளிகளுக்கிடையே மாறா விளைவு விதி (Law of Constant Returns) செயற்படுவதாகக் கருதலாம். உழைப்பு FG-இலிருந்து அதற்கு அதிகமான GH அளவிலும் GH-க்கு அதிகமான HI அளவிலும் அதிகரிக்கும்போதுதான் இறுதிநிலை விளைவு 100-ஆக இருப்பதைப் படம்-13 காட்டுகிறது. எனவே F, G, H, I புள்ளிகளுக்கிடையே குறைந்து செல் இறுதிநிலை விளைவு விதி செயற்படுவதாகக் கொள்ளலாம். இவ்வரைபடத்திலிருந்து மூலதன அலகுகளை மாறாமல் வைத்துக்கொண்டு உழைப்பை அதிகரித்துக் கொண்டே செல்லும்போது, குறிப்பிட்ட நிலை வரை இறுதிநிலை விளைவு அதிகரித்துச் செல்வதையும், குறிப்பிட்ட நிலைக்குப் பின் மாறாதிருப்பதையும், குறிப்பிட்ட நிலைக்குப் பின் குறைந்து கொண்டே செல்வதையும் அறியலாம்.

**உற்பத்திச் சம விளைவுக் கோடுகளும் உற்பத்தி அளவுக்கான விளைவு விதிகளும்:** தேவை மாற்றத் திற்கேற்ப அளிப்பை மாற்றும் பொருட்டு உற்பத்திக் காரணிகள் எல்லாவற்றையும் மாற்றத்தக்க காலம் நீண்டகாலம். உற்பத்திக் காரணிகளைக் குறிப்பிட்ட அளவில் அதிகரித்துக் செல்லும்போது இறுதிநிலை விளைவு அதிகரித்துக் கொண்டே சென்றால், அந்நிலையில் உற்பத்தி அளவுக்கான வளர்ந்து செல் இறுதிநிலை விளைவு விதி செயற்படுவதாகவும், இறுதிநிலை விளைவு ஒரே அளவில் அதிகரித்துக் கொண்டு சென்றால் அந்நிலையில் உற்பத்தி அளவுக் கான மாறா இறுதிநிலை விளைவு விதி செயற்படுவதாகவும் குறிப்பிடலாம். உற்பத்தி அளவுக்கான இறுதிநிலை விளைவு விதியை உற்பத்திச் சம விளைவுக் கோடுகள் மூலம் விளக்கப் படம்-14 பயன்படுகிறது. OA, OB முறையே மேல் வரம்புக் கோடு, கீழ்வரம்புக் கோடு. $CC_1$, $OC_1$ காரணி அலகுகளின் விளைவு 100 அலகுகள். காரணிக் கலவையை $DD_1$, $OD_1$ என மாற்றி அமைக்கும்போது உற்பத்தி 200 அலகுகளாகின்றன. இந்நிலையில் உற்பத்தி அளவுக் கான வளர்ந்து செல் இறுதிநிலை விளைவு விதி செயற்படுகிறது.

படம்-14



காரணி அலகுகளை மேன்மேலும் அதிகரிக்கும் போது தோன்றும் உற்பத்தி அலகுகளின் அடிப்படையில் C, D, E சமநிலைப் புள்ளிகளுக்கிடையே உற்பத்தி அளவுக்கான வளர்ந்து செல் இறுதிநிலை விளைவு விதி செயற்படுவதையும், D,E,F சமநிலைப் புள்ளிகளிடையே உற்பத்தி அளவுக்கான மாறா இறுதிநிலை விளைவு விதி செயற்படுவதையும் E, F, G, H சமநிலைப் புள்ளிகளுக்கிடையே உற்பத்தி அளவுக்கான குறைந்து செல் இறுதிநிலை விளைவு விதி செயற்படுவதையும் படம்-14-விளக்குகிறது.

என்.எஸ். பா.

துணை நூல்கள்:


**Alfred**, W., **Stonier Doughla** C. **Hague**, A Text Book of Economic Theory, Longman Group Limited, London, 1982.

**Koutsoyiannis**, Modern Micro Economics, The Macmillan Press Limited, London, 1983.

**Jhingan**, M.L., Advanced Economic Theory, Vikas Publishing House Limited, New Delhi, 1975.


**உற்பத்திச் சார்பு நிலை** மனித விருப்பத்தை நிறைவேற்றும் ஆற்றல் பயன்பாடு. இப் பயன்பாட்டைப் படைத்தல் அல்லது மிகுதிப்படுத்துதல் உற்பத்திச் சார்பு நிலை (Production Function) எனப்படும்.

உற்பத்திச் கோட்பாடு: பயன்பாட்டைப் படைக்கும், பெருக்கும் பணியில் பயன்படும் காரணிகளுள் நிலம், உழைப்பு,மூலதனம், அமைப்பு என்ற நான்கு உற்பத்திக் காரணிகள் முக்கியமானவையாகும். இவ்வுற்பத்திக் காரணிகளே உற்பத்தி உள்ளீடுகள். பலவகை உள்ளீடுகளைக் குறிப்பிட்ட விகிதத்தில் இணைக்கும்போது பயன்பாடு உண்டாகிறது அல்லது மிகுதியாகிறது. தொழில்நுட்பத் திறன் மாறாதிருக்கும் நிலையில் குறிப்பிட்ட அளவு உற்பத்தியைப் பெறுவதற்கு உள்ளீடுகளை இணைத்தலில் தோன்றும் சிக்கல்களைப் பற்றியது உற்பத்திச் சார்பு நிலைக் கோட்பாடு.

உற்பத்திச் சார்பு: சார்ந்திராத மாறிக்கும் சார்ந்திருக்கும் மாறிக்கும்(Independent and Dependent Variables) உள்ள தொடர்பைக் கணிதத்தில் சார்பு, சார்பலன், சார்பு நிலை என்ற சொற்களால் குறிப்பிடுவது இயல்பு.காரணி உள்ளீடுகளுக்கும் விளைவுக்கும் உள்ள தொடர்பை உற்பத்திச் சார்பு, உற்பத்திச் சார்பலன், உற்பத்திச் சார்பு நிலை (Production Function) என்னும் சொற்றொடர்கள் குறிக்கின்றன.

x என்ற பண்டத்தை உற்பத்தி செய்ய a, b ......n என்ற இடுமான அலகுகள் பயன்படும்போது உற்பத்திச் சார்புப் பணி

$$x = f(a, b \,\ldots\ldots\, n)$$

அதாவது, x அளவு பண்ட அலகுகள் உற்பத்தி செய்ய A, B .........N உள்ளீடுகளில் முறையே a,b .........n அலகுகள் பயன்படுத்தப்படுகின்றன என்பது பொருள்.

ஒரு நிறுவனத்தில், தொழிலில் அல்லது பொருளாதாரத்தில் குறிப்பிட்ட காலத்தில் இருக்கும் உற்பத்தித் தொழில்நுட்பத் திறனை உற்பத்திச் சார்பு நிலை குறிக்கிறது. இதனை உற்பத்திச் சார்பு நிலைச் சமன்பாடு என்றும் குறிப்பிடலாம். இவ்வுற்பத்திச் சார்பு நிலையை அட்டவணையில் கணிதச் சமன்பாடுகளாகவும், மொத்த, சராசரி, இறுதிநிலை விளைவுக் கோடுகளாகவும், சம உற்பத்தி வளை கோடுகளாகவும் குறிப்பிடுவது இயல்பு.

ஒவ்வோர் உற்பத்தி நிறுவனமும் பலவகைத் தொழில் நுட்ப நிலைகளிலும் அமைப்பு முறைகளிலும் செயற்பட வாய்ப்புகள் உண்டு. நிறுவனங்கள் குறிப்பிட்ட காலத்தில் ஏதாவதொரு தொழில் நுட்ப நிலையிலும் அமைப்பு முறையிலும் செயற்பட்டுக் கொண்டிருக்கும். அந்நிலையில் பயன்படுத்தப்படும் பலவகை உள்ளீட்டுக் கலவைகளையும் அதனால் தோன்றக்கூடிய உற்பத்தி அளவுகளையும் கணித்துக் குறிப்பிடுவது தொழில் நுட்ப வல்லுநரின் அல்லது உற்பத்திப் பொறியாளரின் பணியாகும். காரணிகளின் விலைகளையும் (செலவுகளையும்) உற்பத்திப் பண்டத்தின் விலைகளையும் (வருமானங்களையும்) கருத்தில் கொண்டு, எவ்வகை உற்பத்திச் சார்பு நிலை உயர் நிலை ஆதாயத்தைத் தரத்தக்கது என்பதைக் கணித்து, அதைப் பயன்படுத்துவது தொழில் முனைவோரின் (Entrepreneur) பணியாகும். உற்பத்திச் சார்பு நிலையைக் கணித்துத் தருவது பொறியாளர் அல்லது தொழில்நுட்ப வல்லுநரின் பணியே என்ற கருத்தைப் பேராசிரியர் இசுடிக்லர் (Prof. Stigler) ஏற்றுக்கொள்ளவில்லை. உற்பத்திச் சார்புப் பணியானது ‘பொருளாதார வல்லுநரின் தொழில் நுட்ப அறிவின் கருத்துச் சுருக்கம்’ என்பது அவருடைய கருத்து.

பாதுகாப்பு நாட்டம், உச்ச விற்பனை அளவு நாட்டம், முழுச் செலவுக் கோட்பாடு, மன நிறைவு

நாட்டம் என்ற பல நாட்டங்கள் (Motives) தொழில் முயல்வோருக்கு இருப்பினும், உயர் அளவு ஆதாயம் பெறும் நாட்டமே பெரும்பாலான தொழில் முனைவோரின் அடிப்படை நாட்டமாக இருக்கிறது. இதைப் பெற, மிகையான விலையில் பொருள்களை விற்று வருவாயைப் பெறவும், மிகமிகக் குறைவான செலவில் உற்பத்தி செய்யத்தக்க உள்ளீடுக் கலவையைப் பயன்படுத்தவும் விரும்புவர்.

குறிப்பிட்ட உற்பத்திச் சார்பு நிலையில் தொழில் நுட்பத்திறன் மாறாதிருக்கிறது என்ற எடுகோள் அமைந்துள்ளது. தொழில் நுட்பத் திறன் மாறினால் உற்பத்திச் சார்பு நிலையும் மாறலாம். தொழில் நுட்பத் திறன் உயர்ந்தால் முன்குறித்த அளவுகளில் உள்ளீடுகளைப் பயன்படுத்தும்போது ஏற்படும் விளைவின் அளவு முன்பிருந்ததைக் காட்டிலும் மிகையாக இருக்கலாம் அல்லது முன்பிருந்த உற்பத்தி அளவைப் பெற இப்போது குறைந்த அளவு உள்ளீடுகளைப் பயன்படுத்தினால் போதுமானதாக இருக்கலாம். உற்பத்திச் சார்பு நிலை நிறுவனத்திற்கு நிறுவனமும், தொழிலுக்குத் தொழிலும் மாறுபட்டிருக்கலாம்.

வகைகள்: உற்பத்திச் சார்பு நிலையில் இணக்கமற்ற அல்லது நிலையான உற்பத்திச் சார்பு நிலை, மாறத்தக்க உற்பத்திச் சார்பு நிலை என இருவகை உண்டு. உற்பத்திக்கான சூழ்நிலைகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நிகழாதிருக்கும் காலம் குறுங்காலம். இந்நிலையில் குறிப்பிட்ட அளவு 'விளைவைப் பெற உள்ளீடுகளை ஒரே விகிதத்தில் இணைக்க வேண்டியிருக்கும். கோட்பாடு அளவில்தான் இத்தகைய நிலையை விளக்க இயலும். நடைமுறையில் நிலையான உற்பத்திச் சார்பு நிலை இருப்பதில்லை. குறுங்கால அளவிலும் ஒருசில உள்ளீடுகளை நிலையாகவும் பிற உள்ளீடுகளை மாற்றியமைப்பதாகவும் வைத்துப் பயன்படுத்தினால் விளைவுகள் மாறியமையும். இது உற்பத்திச் சார்பு நிலையில் மாறும் விகித விளைவு விதி (Law of variable Returns) எனப்படுகிறது. குறிப்பிட்ட உள்ளீடு அளவை மட்டும் குறிப்பிட்ட அளவுகளில் மிகுதிப்படுத்திப் பயன்படுத்தும்போது இறுதிநிலை (எல்லை நிலை) விளைவு (Marginal Returns) அதிகரித்துக் கொண்டு சென்றால், அந்நிலையில் வளர்ந்து செல் இறுதிநிலை விளைவு விதி (Law of Increasing Marginal Returns) செயற்படுவதாகவும், இறுதிநிலை விளைவு மாறாதிருந்தால் மாறா இறுதிநிலை விளைவு விதி (Law of constant Marginal Returns) செயற்படுவதாகவும், இறுதிநிலை விளைவு குறைந்து கொண்டே சென்றால் குறைந்து செல் விளைவு விதி (Law of Diminishing Returns) செயற்படுவதாகவும் கருதலாம்.

உற்பத்திப் பணியில் எல்லா உள்ளீடுகளின் விகித அளவுகளையும் மாற்ற இயலுமானால் அந்நிலை நீண்டகாலமாகும். இக் கால அளவில் உள்ள உற்பத்திச் சார்பு நிலையை உற்பத்தி அளவுக்கான விளைவு விதிகளாகக் குறிப்பிடலாம். உள்ளீடுகளின் அளவுகளை இரட்டித்துக் கொண்டே செல்வதாகக் கொண்டால், இறுதி நிலை விளைவும் இரட்டித்தால் உற்பத்தி அளவுக்கான மாறா விளைவு விதி செயற்படுவதாகவும், இரண்டு மடங்கிற்கு அதிகமாக அதிகரித்தால் உற்பத்தி அளவுக்கான வளர்ந்து செல் விளைவு விதி செயற்படுவதாகவும், இரண்டு மடங்கிற்குக் குறைந்து அதிகரித்தால் உற்பத்தி அளவுக்கான குறைந்து செல் விளைவு விதி செயற்படுவதாகவும் குறிப்பிடலாம்.

நேர்கோட்டு ஓரியல்பு: உற்பத்தி உள்ளீடு அலகுகளின் அளவை குறிப்பிட்ட மடங்கு அதிகரிக்கும் போது உற்பத்தியும் அதே மடங்கு அளவில் அதிகரித்தால் அத்தகைய உற்பத்திச் சார்பு நிலையை நேர்கோட்டு (Linear Homogeneous) உற்பத்திச் சார்பு நிலை எனலாம். எடுத்துக்காட்டாக, P என்ற பண்டத்தின் உற்பத்திக்கு x,y என்ற இரு காரணிகள் தேவைப்பட்டால் இதனை $p = f(x, y)$ என்று குறிப்பிடுவது இயல்பு. x, y காரணிகளை 'n' மடங்கிற்கு அதிகரிக்கும்போது, 'p' யும் 'n' மடங்கிற்கு அதிகரித்தால் $nP = fn(x, y)$. இதனை முதல்படி நேர்கோட்டு ஓரியல்பான உற்பத்திச் சார்பு நிலை என்று கீழ்வருமாறு குறிப்பிடலாம்.

$$P\,n^k = f\,n^k\,(x, y)$$

இங்கு 'n' ஓர் உண்மை எண்ணையும், 'k' படியையும் (Degree) குறிப்பிடுகிறது. 'k' யின் மதிப்பு ஒன்று என்று இருக்குமானால், அது முதல் படி ஓரியல்பான உற்பத்திச் சார்பு நிலை. 'k' யின் மதிப்பு இரண்டாக இருக்குமானால், அது இரண்டாம் படி ஓரியல்பான உற்பத்திச் சார்பு நிலை. 'k' யின் மதிப்பு ஒன்றுக்கு அதிகமாக இருந்தால் உற்பத்தி அளவுக்கான வளர்ந்து செல் விளைவையும், ஒன்றுக்குக் குறைவாக இருந்தால் உற்பத்தி அளவுக்கான குறைந்து செல் விளைவையும் பெறும் நிலையிருக்கும்.

முதல் படி நேர்கோட்டு ஓரியல்பான உற்பத்திச் சார்பு நிலையை வரைபடத்தின் மூலம் காட்டினால் பெறும் நேர்கோடு, வரைபடத்தின் தோற்றுவாய் வழியாகச் செல்லத்தக்க நேர்கோடாக அமையும்.


கீழேயுள்ள படத்தில் உற்பத்தி அளவுக்கான மாறாவிளைவு விதி (Law of Constant Returns to Scale of Production) செயற்படுவதாகக் காட்டப்

பட்டுள்ளது. முதல்படி நேர்கோட்டு உற்பத்திச் சார்பு நிலைக்குரிய இவ் உற்பத்திச் சம விளைவுப் படத்தில் அளவுக் கோடுகள் (Scale Lines) வரைபடத்தின் தோற்றுவாய் வழியாகச் செல்வதைக் காண்க.

$$OA = AB = BC = CD$$

$$OA_1 = A_1B_1 = B_1C_1 = C_1D_1$$


$$OA_2 = A_2B_2 = B_2C_2 = C_2D_2$$




நேர்கோட்டு ஓரியல்பான உற்பத்திச் சார்பு நிலை பொருளியல் அறிஞர்களிடையே 'நன்கு செயற்படும் உற்பத்திச் சார்பு நிலை' எனக் கருதப்படுகிறது. இதன் எளிமையைக் கருதிக் கணிப்பொறியால் (Computer) கணிக்கப்படும் கணக்குகளிலும் நேர்கோட்டு முறைகளிலும் (Linear Programme) உள்ளீடு விளைவுப் பகுப்பாய்விலும் இவ் உற்பத்திச் சார்பு நிலை பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. இவ் உற்பத்திச் சார்பு நிலையை வரைபடம்-1 மூலம் விளக்கலாம்.

உள்ளீடுகளின் அலகுகளின் அளவை இரட்டித்தால் விளைவும் இரட்டிக்கும்; பாதியாகக் குறைத்தால் விளைவும் பாதியாகக் குறையும்.

வரைபடத்தில் OL, $OL_1$ ஆகியவை இருவகை மூலதன, உழைப்புக் காரணி அலகுகளின் உற்பத்திச் சார்பு நிலையைக் காட்டும் அளவுக் கோடுகள். Q1, Q2, Q3, Q4 ஆகியவை சம உற்பத்தி விளைவுக் கோடுகள். மூலதன உள்ளீட்டை Oax இலிருந்து O2a என இரு மடங்காகவும், உழைப்பு உள்ளீட்டை Ob




-இலிருந்து O2b என இருமடங்காகவும் அதிகரிக்கும் போது, உற்பத்தி அளவு 150 அலகுகளிலிருந்து 300 அலகுகளாக இரட்டித்திருக்கிறது என்பதை $OL_1$ அளவுக்கோடு காட்டுகிறது. மூலதன உள்ளீட்டை Od அளவிலிருந்து O4a என இரு மடங்காகவும் உழைப்பு உள்ளீட்டு அலகுகளை Oc-இலிருந்து O2c ஆக இரு மடங்காகவும் அதிகரித்தால், உற்பத்தி அளவு 150 அலகுகளிலிருந்து 300 அலகுகளாக இரட்டித்திருக்கிறது என்பதை OL அளவுக்கோடு காட்டுகிறது.

டாக்டர் ஏ.எம். குசுரோ (A.M. Khusro) இந்தியப் பண்ணை நிருவாக ஆய்வுகளை மேற்கொண்டு அதன் அடிப்படையில் 1964-இல் வெளியிட்ட கட்டுரையில், இந்திய வேளாண்மைத் துறையில் உற்பத்தி அளவுக்கான மாறா விளைவு விதி செயற்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

**காப்பு தக்லசு ஆய்வு:** அறிஞர் பால் எச். தக்லசும் (Senator Paul H. Douglas) சி. டபிள்யூ காப்பும் (C.W. Cobb) நடத்திய அமெரிக்காவின் பொறிசெய் தொழில்களைப் பற்றிய ஆய்வின் அடிப்படையில் உருவான உற்பத்திச் சார்பு நிலை காப்பு-தாக்லசு உற்பத்திச் சார்பு நிலை எனப்படுகிறது. பொறிசெய் தொழில்களின் மொத்த உற்பத்திக்கு உழைப்பு, மூலதனம் ஆகிய இரண்டு காரணிகள் மட்டுமே பயன்படுவதாகக் கருத்தில் கொண்ட இவ்வுற்பத்திச் சார்பு நிலையைக் கீழ்வருமாறு பகுத்தறியலாம்.

$$P = K\ L^{a} \quad C^{1-a}$$

P — விளைவு L — உழைப்பு

C — மூலதனம் 'k' யும் 'a' யும் நேர்மாறிலிகள்

'a'-இன் அளவு 1 க்குக் குறைவானது. (a < )

அதாவது, பொறிசெய் தொழில்களில் ஏற்பட்ட மிகுதியான உற்பத்திக்கு 4-இல் 3 பங்கு அளவுக்கு உழைப்பும், 4-இல் 1 பங்கு அளவுக்கு மூலதனமும் காரணமாக இருந்ததென்பதைத் தக்லசும் காப்பும் உறுதிசெய்தனர். இவ்வுற்பத்திச் சார்பு நிலை

$$P = K\ L^{\frac{3}{4}} \quad C^{\frac{1}{4}}$$

என அமைந்தது; உற்பத்தி அளவுக்கான மாறா விளைவு விதி (Law of Constant Returns) செயற்படுவதாகவும் அமைந்தது. 'g' அளவுக்கு மூலதன உள்ளீடு அலகுகளையும், உழைப்பு உள்ளீடு அலகுகளையும் அதிகரிப்பதாகக் கொண்டால்,

$$\begin{aligned} p &= k\ (gL)^{a} \quad (gC)^{1-a} \\ &= k\ (g^{a}L^{a}) \quad (g^{1-a}\ \ C^{1-a}) \\ &= k\ g^{a} \times g^{1-a} \quad (L^{a}) \ \ (C^{1-a}) \\ &= kg\ (L^{a}) \ \ (C^{1-a}) \ \ (\because g = g^{a} \times g^{1-a}) \\ &= gk \times L^{a} \times C^{1-a}\ (\because P = kL^{a} \times C^{1-a}) \\ &= g^{P} \end{aligned}$$

அதாவது உள்ளீடு அலகுகளை g அளவுக்கு அதிகரிக்கும்போது விளைவு $g^{P}$ அளவுக்கு அதிகரிக்கிறது. இதுவே காப்பு-தக்லசின் நேர்கோட்டு உற்பத்திச் சார்பு நிலைக் கோட்பாட்டின் கருப்பொருளாகும்.

என்.எஸ்.பா.

துணை நூல்கள்:

**Koutsoyianrics,** Modern Micro Economics, The Macmillan Press Limited, London, 1983.

**Mehta**, **B.C.**, and **Mandani, G.M.K.,** Mathematics for Economists, Sultan Chand and Sons, Delhi, 1983.

**Jhingan**, M.L., Advanced Economic Theory, Vikas Publishing House, New Delhi, 1979.



**உற்பத்தித் திறனுக்கான கல்வி:** எல்லா நாடுகளும் பொருளாதார முன்னேற்றம் காண விழைகின்றன. இதனால், பொருளாதார வளத்திற்கும் கல்விக்கும் நெருங்கிய தொடர்புள்ளது என்பதைப் பௌமன் (Bowman), ஆண்டர்சன் (Anderson), காசர் (Kaser), பென்னட்டு (Bennett) போன்றோர்தம் ஆய்வுகள் நிறுவியுள்ளன. இற்றைய படிப்பினை என்னவென்றால் பொருள் மூலதனத்தைக் கொண்டு மட்டும் பொருளாதார வளம் காண இயலாது என்பதாகும்.

**கல்வியால் உற்பத்தித் திறன் மிகுதல்:** ஆடம் சுமித்து என்ற பொருளியல் வல்லுநர் காலத்திலிருந்து பொருளாதார வல்லுநர்கள் நாடுகளின் உற்பத்தித் திறன் மிகுதியாவதற்குக் கல்வி இன்றியமையாதது என்று உணர்ந்து வந்துள்ளனர். கல்விக்கும் உற்பத்தித் திறனுக்கும் உள்ள உறவைப் பல்வேறு முறைகளின் மூலம் விளக்கலாம். நுட்பமாகப் பார்க்கும்போது கல்வியானது, தனிமனிதனின் வாழ்வை வளமாக்கும் கருவியாகவும், அவனது வாழ்நாள் முழுவதற்கும் கல்வி பெறாதாரைவிட அல்லது குறைவாகக் கல்வி பெற்றவரை விட மிகுதியாகப் பொருள் ஈட்டத் துணை செய்யும் ஒரு மூலதனமாகவும் விளங்குகிறது. இவ்வாறே ஒரு நாட்டளவில் நோக்கும்போது கல்வி அந்நாட்டின் தேசிய வருமானம் உயர்வதற்கு வழி செய்கின்றது.

உருசிய நாட்டைச் சேர்ந்த இசுடுருமிலின் (Strumilin) என்பவர், 1924-ஆம் ஆண்டு கல்லாத தொழிலாளர்கட்கு அடிப்படைக் கல்வி அளித்ததன் மூலமாக உற்பத்தித் திறன் 44·/. மிகுந்தது எனக்கண்டார். மேலும், சே.எல். ஆன்சன் (J.L.Hanson)என்பவர் தொழிலாளர்களின் உற்பத்தித் திறனைக் கல்வியின் மூலம், மிகுதிப்படச் செய்ய முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும், சிறந்த கல்வி, பயிற்சி ஆகியவற்றின் மூலம் மனித வளத்தைப் (மூலதனத்தை) பெருக்க முயற்சிகள் பெருகி வருகின்றன எனவும் கூறுகின்றார்.

**கோத்தாரி கல்விக் குழுவின் பரிந்துரைகள்:** இந்திய அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட கோத்தாரி கல்விக்குழு (1964-66), தமது அறிக்கையில் உற்பத்தித் திறனுக்கும் கல்விக்கும் உள்ள உறவை விளக்கியுள்ளது. கல்வியும் உற்பத்தித் திறனும் இணைந்து பெருக வேண்டுமானால், கீழ்க்காணும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் கோத்தாரி கல்விக் குழு எடுத்துரைக்கிறது.

1. அறிவியலைக் கல்வி, பண்பாடு ஆகியவற்றின் அடிப்படை உறுப்பாக மாற்றுதல்.

2. வேலை அனுபவங்களைப் பொதுக் கல்வியின் இணைந்த உறுப்பாக மாற்றுதல்.

3. வேளாண்மை, வணிகம் ஏனைய தொழில்கள் ஆகியவற்றிற்கு ஏற்ற வகைகளில் உயர்நிலைப் பள்ளிக் கல்வியைத் தொழில் முறைப்படுத்தல்.

4. அறிவியல், தொழில் நுணுக்கக் கல்வி ஆகிய வற்றின் முன்னேற்றம்.

5. வேளாண்மையிலும் மற்றத் தொடர்புடைய அறிவியல் துறைகளிலும் (Allied Sciences) ஆராய்ச்சி மேற்கொள்ளுதல்.

கல்வி ஒருவரது உற்பத்தித் திறனை வளர்க்கும். இது அவருக்கும் நாட்டிற்கும் பொருளாதார மேம் பாட்டைத் தரும். கல்விக் கூடங்களில் மாணவர்கட் குக் கைத்தொழிலுடன் கூடிய கல்வி தருதல் அவர் களை உற்பத்தி வழிகளில் நாட்டங் கொள்ளச் செய் யும். தொழிலாளர்கட்குப் பணியிடையே தரும் கல்வி அவர்களின் உற்பத்தித் திறன் உயர உதவும். அவர வர் தொழிலை மேலும் திறமையோடும் பயன் விளையுமாறும் செய்வதற்கேற்ற கல்வி, உற்பத்தித் திறனுக்கான கல்வியின் ஒரு பிரிவாகும். உழவர் செயல் முறைக் கல்வி, தொழிலாளர் கல்வி, பணியி டைப் பயிற்சிக் கல்வி போன்றன உற்பத்தித் திறனை வளர்ப்பதற்கான கல்வியாய்க் கருதப்படும்.

கல்வி, திறனை வளர்க்கும்; மேலும் உற்பத்தித் திறனை வளர்ப்பதற்கும் துணை செய்யும். கல்வியின் மூலம் பெற்ற திறன்கள் உற்பத்தித் திறனைப் பெருக் கிப் பொருளாதார முன்னேற்றம் அடைய உறுதுணை யாக நிற்கும். ஆர்.சீ.

**உற்பத்திமிகை:** காண்க: மிகை உற்பத்தி.

**உற்பத்தி மேலாண்மை:** ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் உற்பத்தி இன்றியமையாப் பங்கு வகிக்கிறது. தொழிற்றுறை உற்பத்தியை மேலாண்மை செய்வது உற்பத்தியின் தலையாய பணியாகக் கருதப் படுகிறது. உற்பத்தி மேலாண்மையை ஓர் அறிவிய லாக மாற்றிய பெருமை பிரடரிக்கு தெய்லர் (Frederic W. Taylor) என்னும் அறிஞரைச் சாரும். உற்பத்தித் தொழிலில் பொருளியல் அடிப்படையில் இயக்க ஆய்வு (Motion Study), கால ஆய்வு (Time Study) என்ற உயரிய கொள்கைகளைப் புகுத்தினார். அவருடைய காலத்தில்தான் தொழிலாளர்கள் உற் பத்தியைப் பெருக்குமாறு ஊக்குவிப்புத் திட்டம் (Incentive Plan) நடைமுறைப்படுத்தப்பட்டது. எல் டோன் மாயா (Elton Mayo) என்பவரால் 1930-இல் நடத்தப்பட்ட 'ஊதான் ஆய்வு' (Hawthorn Experiment) மூலம் பணியாளர்களின் சிறப்பிடம் அறியப் பட்டது. இன்று உலகம் முழுவதும் உற்பத்தித் துறை யில் அரிய பல கண்டுபிடிப்புகளைச் செய்து வரு கிறார்கள். தொழிற்கூடங்கள் அனைத்தும் இயந்திர மயமாக்கப்பட்டு வருகின்றன. தானியங்கிக் கணக்கு எந்திரம், கணிப்பொறி (Computer) ஆகியன உற்பத் தித் தொழிலின் மேலாண்மையில் சிறப்பிடம் வகிக் கின்றன.

**உற்பத்தி அமைப்பு:** உற்பத்தி ஓர் ஒழுங்கமைப் பின் முக்கிய பணியாகும். உற்பத்தி என்ற சொல்லிற் குப் பல இலக்கணங்கள் உள்ளன. குறிப்பிட்ட காரணி களைக் கொண்டு, ஒரு காலவரையில் குறிப்பிட்ட அளவு பொருள்களை உருவாக்குவது உற்பத்தியாகும். உற்பத்தி செய்தல் என்பது ஓர் ஒழுங்கமைப்பின் முக் கிய உள்ளமைப்பாகும். இவ் உற்பத்தி அமைப்பு (Production System) மூன்று வகையைக் கொண்டதா கும். அவையாவன: (1) உள்ளீடு(Input), (2)வெளியீடு (Output), (3) உற்பத்தித் தொழில் (Production Process).

உள்ளீடு: ஒரு பண்டத்தை உருவாக்கத் தேவைப் படும் மூலப்பொருள், மனித உழைப்பு, இயந்திரம், கட்டடம் ஆகிய முக்கிய காரணிகளும், மின்சக்தி, கருவிகள் போன்ற பிற வளங்களும் உள்ளீடு எனப் படும்.

வெளியீடு: உற்பத்தித் தொழிலினால் வெளிக் கொண்டுவரப்படும் முடிவுற்ற பண்டங்கள் வெளியீடு எனப்படும். பொதுவாக வெளியீடும் உள்ளீடும் ஒரே அளவாக இரா. உற்பத்தித் தொழிலினால் ஏற்படும் சில தவிர்க்க முடியாத இழப்புகளே இதற்குக் காரண மாகும். இருப்பினும், உற்பத்தி மேலாண்மையின் மூலம் வெளியீட்டுப் பொருளின் மதிப்பைக் கூட்ட இயலும். உள்ளீட்டுப் பொருளுக்கும் வெளியீட்டுப் பொருளுக்கும் உள்ள விகிதத்தை உற்பத்தித் திறன் (Productivity) என்பார்கள். உற்பத்தித்திறன் என்பது உற்பத்தியிலிருந்து மாறுபட்டதாகும்.


உற்பத்தித் தொழில்: உள்ளீடுகளைக் கொண்டு மனித ஆற்றல் வளம்(Man Power Resources), இயந் திரம், சக்தி ஆகிய வளங்களைச் சரியான முறையில் பயன்படுத்தி வெளியீடாக மாற்றும் செயல் உற்பத் தித் தொழில் (Production Process) எனப்படும்.

உள்ளீடு, வெளியீடு, உற்பத்தித் தொழில் ஆகிய வற்றின் கூட்டு அமைப்பு உற்பத்தி அமைப்பாகும். இந்த அமைப்பை மையமாகக் கொண்டு நிதி, விற்

பனை, பணியாண்மை போன்ற அமைப்புகள் இயங்கு கின்றன. இதனைக் கீழ்க்காணும் வரைபடம் விளக்கும்.

உற்பத்தி மேலாண்மையின் சிறப்பு நோக்கம் குறிப்பிட்ட அளவு தரமான பண்டங்களை எளிய, சிறந்த முறையைப் பின்பற்றிக் குறைந்த அடக்க

உற்பத்தி அமைப்பு




விலையில் உற்பத்தி செய்து, குறித்த காலத்தில் நுகர்வோரை அடையச் செய்வதே ஆகும். இந்தத் தலையாய நோக்கத்தை அடைய, வேறு சில நோக்கங்களும் நிறைவேற்றப்பட வேண்டும். அவையாவன: (1) உற்பத்தித் திறனைப் பெருக்குதல், (2) உற்பத்தியில் நெகிழ்வுத் தன்மையை ஏற்படுத்துதல், (3) ஒருங்கிணைந்த உற்பத்திப் பட்டியலை உருவாக்குதல், (4) உற்பத்திப் பட்டியலின்படி உற்பத்தி செய்யப்படுகிறதா என்பதை உறுதி செய்தல், (5) போதிய அளவு பொருள்களை இருப்பில் வைத்தல், (6) நுகர்வோரின் தேவைக்கு ஏற்பப் பண்டங்களை உற்பத்தி செய்தல்.

உற்பத்தி மேலாண்மை என்பது பொதுவாக மேலாண்மையின் ஒரு பிரிவாகவே கருதப்பட்டு வந்தமையால், இதைத் தனியே பிரித்து இலக்கணம் காண்பது கடினமாகிறது. ஆகவே, மேலாண்மையின் இலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டு, உற்பத்தி மேலாண்மை விளக்கப்படுகிறது. மேலாண்மை என்பது ஒரு நிறுவனத்தின் பணியாளர்களையும் பிற வளங்களையும் கொண்டு தருந்த திட்டங்கள், ஒழுங்கமைப்பு, கட்டுப்பாடு, ஊக்குவிப்பு ஆகியவற்றின் மூலம் அந்நிறுவனத்தின் குறிக்கோள்களை அடைய விழையும் ஒரு தனிப்பட்ட செயல்முறையாகும். நிறுவனங்களின் குறிக்கோள் தரமான பண்டங்களைக் குறைந்த அடக்கவிலையில் உற்பத்தி செய்வதை நோக்கமாகக் கொண்டதாயிருக்கும்.

உற்பத்தி மேலாண்மை, உற்பத்தித் திட்டம் (**Production Planning**), உற்பத்திக் கட்டுப்பாடு

(Production Control), பொருள்களின் கட்டுப்பாடு (Material Control) ஆகிய மூன்று சிறப்புக் கூறுகளைத் தன்னகத்தே கொண்டது.

உற்பத்தித் திட்டம்: இது உற்பத்தியைப் பற்றியவற்றை முன்கூட்டியே அறிந்து திட்டமிடுதலாகும். இதனை உற்பத்தியின் இன்றியமையாப் பணி எனலாம். உற்பத்தித் திட்டம் உற்பத்தி பற்றி முன் ஊகம் (Speculate) செய்யவும் உற்பத்தி அட்டவணையை உருவாக்கவும் பொருள்களை வாங்கும் பட்டியலை உருவாக்கவும் பணியாளரின் பட்டியலை உருவாக்கவும் பொருள்களின் இருப்புப் பட்டியலை உருவாக்கவும் உதவுகிறது. உற்பத்தித் திட்டம் நீண்டகாலத் திட்டம் (Long Range Planning), குறுகிய காலத் திட்டம் (Short Range Planning) என இருவகைப்படும். நீண்ட காலத் திட்டம் 5 ஆண்டுத் திட்டங்களும் அதற்கும் மேற்பட்ட ஆண்டுக் காலத் திட்டங்களுமாகும். குறுகிய காலத் திட்டம் 3 ஆண்டுகளுக்குள்ளாகவே அமையும். எடுத்துக்காட்டாக, உற்பத்திப் பகுதியை இயந்திரமாக்குதல் என்பது நீண்டகாலத் திட்டத்தில் அடங்கும். பொருள்களின் வடிவமைப்பில் மாற்றம் செய்தல் பற்றி முடிவு எடுத்தல், பொருள்களின் இருப்பு நிலை பற்றி முடிவு செய்தல் ஆகியவை குறுகியகாலத் திட்டத்தினுள் அடங்கும்.

உற்பத்தித் திட்டமிடுதலில் கண்ட்டு வரைபடம் (Gantt Chart), தூண் வரைபடம் (Bar Chart), திட்டங்களைச் சீர்தூக்கி ஆராயும் பெர்ட்டு (Programme Evaluation & Review Technique - Pert) வரைபடம், நுண்ணாய்வுப் பாதை முறை (Critical path Method) எனப்படும் வரைபடம், ஒருங்கிணைந்த திட்டக் கட்டுப்பாட்டு மேலாண்மை முறை (Impact) எனப்படும் வரைபடம் ஆகிய வரைபடங்கள் கருவிகளாகப் பயன்படுத்தப்படுகின்றன.


உற்பத்திக் கட்டுப்பாடு: திட்டமிட்டபடி உற்பத்தி செய்யப்படுகிறதா என்பதை ஆராய்ந்து, குறைகள் இருப்பின் தகுந்த நடவடிக்கைகள் எடுப்பது இதன் பணியாகும். உற்பத்திக் கட்டுப்பாட்டின் மூலம் மூன்று நடவடிக்கைகள் செய்து முடிக்கப்படுகின்றன. அவையாவன: (1) திட்டமிட்டப்படி உற்பத்தி நடைபெறுகிறதா என்பதை ஆராய்தல், (2) திட்ட நிலைக்கும் உண்மை நிலைக்கும் வேறுபாடு இருக்கிறதா என்பதைக் கண்டறிதல், (3) வேறுபாடு இருப்பின் அதனைச் சீராக்க நடவடிக்கைகள் எடுத்தல் (Corrective Action), அட்டவணை உருவாக்கவும் அதனைப் பல உற்பத்தித் துறைகளுக்கு அனுப்பவும் பிற கட்டுப்பாட்டுப் பணிகளைச் செவ்வனே செய்து முடிக்கவும் கண்ட்டு வரைபடம், தூண் வரைபடம், விழுவரைபடம் (Flow Chart), சமநிலைக் கோடு (Line Balancing),மைல்கல் வரைபடம் (Milestone Chart) ஆகியற்றைப் பயன்படுத்துதல்.

பொருள் கட்டுப்பாடு: பொருள் கட்டுப்பாடு என்பதை ஒரு தனிச் செயலாகக் கருத முடியாது. இதனை உற்பத்திக் கட்டுப்பாடு என்பதன் ஒரு பங்கு எனலாம். இது பொருளை வாங்குவது முதல், அதனை உருமாற்றி ஒரு முழுப் பண்டமாக மாற்றுவது வரை ஏற்படும் நடவடிக்கைகளனைத்தையும் கட்டுப்படுத்துவதாகும். சிக்கனத்தைக் கடைப்பிடித்து, பொருளின் அடக்க விலையைக் கட்டுக்குள் வைத்திருப்பதே உற்பத்தி மேலாண்மையின் தலையாய நோக்கமாகும்.

உற்பத்தித் திட்டம், உற்பத்திக் கட்டுப்பாடு, பொருள் கட்டுப்பாடு ஆகியவை தனித்தனியே ஆராய்வுக்குட்பட்டாலும் அவை மூன்றும் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடையவையாகும். சுருக்கமாகச் சொன்னால் மூன்றும் சேர்ந்ததே ஓர் அமைப்பாகும். இம்மூன்றும் சிறந்த முறையில் செயலாற்றப் புதிய அணுகுமுறையைச் சாபிக்கு சமாளி (Shafique Jamali) என்னும் அறிஞர் அளித்துள்ளார். இதனைச் செயல் திட்டம் (Action Plan) எனக் கூறுகின்றனர். இத்திட்டத்தில் 6 படிகள் உள்ளன. அவை யாவன: (1) உற்பத்தியில் ஈடுபட்டவர்கள் உற்பத்தியைப் பற்றி அறியும்படி செய்தல் (Creating awareness among the persons involved in Production), (2) உற்பத்தித் திறனை அளத்தல் (Productivity measured), (3) உற்பத்தித் திறனைச் சீர்தூக்கல் (Productivity Evaluation), (4) உற்பத்தித் திறனைப் பற்றித் திட்டமிடுதல் (Productivity Planning), (5) உற்பத்தித் திறனைப் பெருக்குதல் (Productivity Improvement), (6) கட்டுப்பாடு பற்றி அறிக்கை அளித்தல்(Control Reporting). இதனைப் பக்கம் 503 -இல் வரைபடம் விளக்குகிறது.

சிக்கல்கள்: உற்பத்தி மேலாண்மையில் பல சிக்கல்கள் உள்ளன.

மரபியல் முறைகள்: இன்று உலகெங்கிலும் கணக்கு இயந்திரம் மூலம் உற்பத்தியைப் (Computer Aided Manufacturing) பெருக்கி வருகிறார்கள். ஆனால், இந்தியா போன்ற வளரும் நாடுகளில் இன்னமும் பழைய மரபியல் முறைகள் (Traditional Methods) வழக்கில் உள்ளன. பருத்தி, சிமிண்டு, சர்க்கரை, சணல் ஆகிய ஆலைகளில் இச்சிக்கல்கள்




மிகுந்த அளவில் காணப்படுவதாகக் கே. மோத்தா (K.Motha) என்பவரின் தலைமையில் நடத்திய 'இந்தியத் தொழிற்சாலைகளைப் புதுமைப்படுத்துதல்' (Modernisation of Indian Iudustry) என்ற ஆய்வு மூலம் தெரிய வந்துள்ளது.

இயந்திரங்களை நவீனப்படுத்துவதில் கால தாமதம்: மேலே கூறிய ஆய்வு அறிக்கையின்படி பருத்தி ஆலைகளில் உள்ள சுமார் 75 விழுக்காடு இயந்திரங்கள் 20 ஆண்டுகளுக்கு முற்பட்டவையாகும். சணல் ஆலைகளில் 50 விழுக்காடு இயந்திரங்கள்

70 ஆண்டுகளுக்கு முற்பட்டவையாகவுள்ளன. காகித ஆலைகளில் உள்ள இயந்திரங்கள் 40-இலிருந்து 50 ஆண்டுகள் வரை மாற்றப்படாமல் உள்ளன. இந் நிலையில் உற்பத்தியை மேலாண்மை செய்வது கடின மான பணியாகும்.

நிதிப் பற்றாக்குறை: இந்தியாவில் உள்ள தொழிற்சாலைகள் அனைத்திற்கும் நிதிப் பற்றாக் குறை (Deficit Finance) ஒரு பொதுச் சிக்கலாகும். இந்திய வாணிகக் கழகத்தார் (Indian Chamber of Commerce) 1982-இல் நடத்திய ஆய்வின்படி, பருத்தி, சணல், காகிதம், சர்க்கரை ஆகிய நான்கு ஆலை களையும் நவீனப்படுத்த உருபாய் 3682 கோடி தேவைப்படுவதாகக் கணக்கிட்டுள்ளார்கள். இந்நிதி முதலீட்டைப் பெறுவது இவ்வாலைகளின் நிருவாகத் தினருக்கு ஒரு பெரிய இடர்ப்பாடாக அமைந்துள் ளது.

இச்சிக்கல்களைத் தவிர, உரிமம் வழங்குவது, விலைக் கட்டுப்பாடு, வரி, தேய்மானம், கணக்கிடு வது ஆகியவற்றில் அரசின் கொள்கைகள் தொழிற் சாலைகளை நவீனப்படுத்துவதற்குப் பாதகமாக அமைந்துள்ளதாகக் கே. மோத்தாவின் ஆய்வு கூறுகிறது. இவை எல்லாவற்றிற்கும் மேலாகத் தொழிலாளர்களின் அமைதியின்மை உற்பத்திவளர்ச் சிக்குப் பெரும் முட்டுக்கட்டையாக இருக்கிறது. தொழிலாளர்களின் பல சிக்கல்களில் உற்பத்தியை மிகவும் பாதிக்கச் செய்வன வேலைநிறுத்தம், வேலைக்கு வாராமை ஆகியனவாகும்.

சிறந்த உற்பத்தி மேலாண்மைக்குப் புதிய செயல்முறைகளைக் கையாளுதல், இயந்திரங்களைப் புதுமைப்படுத்துதல், அறிவியல் நுட்பங்களைப் பொருளாதார அடிப்படையில் நடைமுறைப்படுத்து தல், சாதகமான ஏற்றுமதி, இறக்குமதி, வரி, உரி மம் வழங்குதல் ஆகிய கொள்கைகளின் மூலம் அரசு ஊக்குவித்தல் ஆகியன இன்றியமையாதனவாகும்.

தொழிலாளரிடையே அமைதியை உருவாக்க உற் பத்தியுடன் கூடிய ஊக்குவிப்புத் திட்டம், சாதக மான தொழிற்கூட வசதிகள், திறந்த செய்தித் தொடர்பு முறை, கூட்டு முயற்சியினை ஊக்குவித் தல், கலந்துரையாடல், நிருவாகத்தில் தொழிலாளர் களுக்குப் பங்கு அளித்தல், தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல், தொழிலாளர் களுக்குக் கல்வி புகட்டல் ஆகியன அடிப்படைத் தேவைகளாகக் கருதப்படுகின்றன. கா.ஜெ.

துணை நூல்கள்:

**Buffa, E.S.,** Production Management, John Wille and Sons, Inc., London, 1969.

**StarrMartin Kennith** Production Management Systems and Synthesis, Prentice Hall, NewYork, 1972.

**Samuel Eilon,** Elements of Production: Planning and Control, Universal Book Corporations Bombay, 1981.

**உற்பத்தியாளர்:** பயன்பாட்டைப் படைத்த லும் மிகுதிப்படுத்துதலும் உற்பத்தியாகும். இப்பணியை ஆற்றுவதில் இயற்கைக் காரணியாகிய நிலம், இயற் கையின்பாற்பட்ட உழைப்பு, அமைப்பு, செயற்கைக் காரணியான மூலதனம் ஆகிய நான்கு காரணிகள் சிறப்பான இடம் பெறுகின்றன. உடலாலும்சிந்தனை யாலும் பயன் கருதி மேற்கொள்ளப்படும் முயற்சியே உழைப்பு. ஒருவர்தம் சொந்த நிலம், உழைப்பு, மூல தனம் ஆகியவற்றை மட்டும் பயன்படுத்தி உற்பத்திப் பணியில் ஈடுபடலாம். இம்முறையில் உற்பத்தி அளவு குறைவாக இருக்கும். உழைப்பாளர் எல்லோரிடமும் நிலமும் மூலதனமும் இருக்குமென்பதில்லை. வாரத் திற்கு நிலத்தையும் கூலிக்கு உழைப்பையும் வட்டிக்கு மூலதனத்தையும் அளித்துத் தம் சிறப்பு உழைப்பைப் பயன்படுத்தி, பேரளவு உற்பத்தியில் ஈடுபடுபவரை உற்பத்தியாளர் (Producer), தொழில் முனைவோர் (Entrepreneur), தொழில் துணிவோர், அமைப்பாளர் எனப் பல பெயர்களில் குறிப்பிடுவது மரபு.

உழைப்பாளரும் உற்பத்தியாளரும் மனிதர்களே. இருவரும் பயன் கருதி உள்ளத்தாலும் சிந்தனை யாலும் முயற்சியை மேற்கொள்கின்றனர். ஆனால், இருவரும் ஆற்றும் பணிகளுக்கிடையே முனைப்பான வேறுபாடுகள் உண்டு. குறிப்பிட்ட அல்லது ஆணை யிட்ட பணியை மட்டும் ஆற்றுபவர் உழைப்பாளர். தாம் ஆற்றும் பணிக்கெனக் காலக் கூலி அல்லது வேலைக் கூலியைப் பெறுவதுடன் அவர் பணி நிறை வுறுகிறது. ஆனால், உற்பத்தியாளர் ஆற்றும் பணி களின் தன்மை முற்றிலும் மாறுபட்டது. காலம் கரு தாமல் கடினமாக உழைப்பவர் உற்பத்தியாளர். அவர் பணிகள் தனிச்சிறப்புடையவை; நுட்பமானவை; இடர்தாங்கலுக்கு (Risk bearing) உட்பட்டவை.

பணிகள் அ) எப்பொருளை, எங்கு, எப்படி, உற்பத்தி செய்ய வேண்டுமென முடிவு செய்தலும் அம் முடிவிற் கேற்ப உற்பத்திக் காரணிகளை இணைத்தலுமாகும். (ஆ) உற்பத்தி அமைப்பை நிருவகித்தல்: கூட்டுப்பங்கு

நிறுவனங்கள் பெருமளவில் செயற்படும் இக்காலத்தில் மேலாளர்களிடம் அதிகாரிகளும் இப்பணியைப் பேரளவில் செய்தாலும், இறுதி நிலையிலுள்ள மிகவும் இன்றியமையாத கூட்டு நிருவாகப் பொறுப்பு உற்பத்தியாளருடையதே. அவரே பல்வேறு நிருவாகச் சிக்கல்களில் முடிவுகளை மேற்கொள்கிறார். (இ) வருமானப் பங்கீட்டைச் செய்தல்: நிலம், உழைப்பு, மூலதனம் ஆகிய காரணிகளின் ஊதியத்தை உற்பத்தியாளரே முடிவு செய்கிறார். (ஈ) இடர்களை ஏற்றல்: இக்காலச் சுற்றுவழியிலான உற்பத்தி முறையில் பல இடர்கள் ஏற்பட வாய்ப்புண்டு. அவ்விடர்களையெல்லாம் தாங்குவதற்குத் தயக்கம் காட்டாமல் உற்பத்தியாளர் உற்பத்திப் பணியில் ஈடுபடுவார். (உ) உறுதியின்மையைத் (Uncertainty) தாங்குதல்: அங்காடியில் பண்டம் அல்லது பணிக்கான தேவை மாற்றங்கள் தோன்றிக்கொண்டே இருக்கும். இதனால் அங்காடியில் தோன்றத் தக்க உறுதியின்மையைத் தாங்கிக் கொள்ள உற்பத்தியாளர் முன்வருகிறார். அவர் ஆற்றும் பல பணிகளில் இது மிகவும் சிறப்பானதாகும். (ஊ) புதிய கண்டுபிடிப்புகளையும் புதிய பொருள்களையும் உற்பத்தித் துறையில் பயன்படுத்துதல்: காரணிகளைப் புதிய முறையில் கையாளுதல், பொருள்களுக்குப் புதிய பயன்பாடுகளைப் படைத்தல், மூலப் பொருள்களை அளிப்பவர்களிடமும் பொருள்களை நுகருபவர்களிடமும் புதிய முறையில் அணுகி ஆதரவைப் பெறுதல், உற்பத்தியாளர்களிடையே ஒற்றுமையை உருவாக்கி, அளிப்பைக் கட்டுப்படுத்தி, அதன் வழியாக உயர் அளவு ஆதாயத்தைப் பெறுதல் போன்ற பல செயல்களில் முன்னோடியாகத் திகழ்பவர் உற்பத்தியாளர். எனவேதான் இவரைத் ‘தொழில் தலைவர்’ என்றும் குறிப்பிடுகின்றனர்.

உற்பத்திக் காரணிகள் நான்கும் இன்றியமையாதன என்பதில் ஐயமில்லை. தகுதியும் பொறுமையும் சிந்தித்துச் செயலாற்றும் வினை நுட்பமும் உடைய உற்பத்தியாளரின் பணி அவற்றுள் சாலச் சிறந்தது. உற்பத்தியாளர் எதையும் விரைவில் புரிந்து தமக்குத் துணையான வகையில் அதனைப் பயன்படுத்தி, மனித இனத்தின் இயல்புகள் எல்லாவற்றையும்தெள்ளத் தெளிவாக உணர்ந்து செயற்பட்டுத் தமக்கும் நாட்டிற்கும் நன்மை செய்கிறார்.

**ஊதியம்:** உற்பத்திப்பணியை ஆற்றுவதற்காக உற்பத்தியாளர் பெறும் ஊதியம் ஆதாயம் (Profit). ஆதாயத்தைக் ‘கொள்ளையடித்தல்’ என்றும், ‘சட்டப்படி திருடுதல்’ என்றும் சமத்துவக் கொள்கையினர் கூறுவர். ஆனால், உற்பத்தியாளரின் சிறப்புப் பணிகள், உற்பத்திப் பணியில் அவர் தொடர்ந்து ஈடுபடத் தூண்டுதல் என்னும் அடிப்படைகளில் ஆதாயம் பெறுதல் முறையே என்னும் கருத்து உலகெங்கிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

ஆதாயம் தோன்றுவதற்கு அறிஞர்கள் பல விளக்கங்களைத் தந்துள்ளனர். உற்பத்தித் திறன் வேறுபாட்டால் ஆதாயம் தோன்றுகிறது என வாக்கர் (Walker) கூறியிருக்கிறார். உற்பத்தியாளர் ஆற்றும் சிறப்புப் பணிகளுக்காகக் கொடுக்கப்படும் கூலி போன்றதே ஆதாயம் எனத் தாசிக்கு (Taussiq) கூறியிருக்கிறார். இயங்குநிலைத் தன்மையுடைய சமுதாயத்தில் இவ்வியக்கத்தின் விளைவுகளுக்கேற்ப மாற்றங்களைப் புகுத்திச் செயற்படுவதால் ஆதாயம் தோன்றுகிறது என்பது கிளார்க்கின் (Clark) கருத்து. புத்தாக்கத்தால் தோன்றுவது ஆதாயம் எனச் சும்பீட்டர் சுட்டிக் காட்டியிருக்கிறார். அங்காடியில் தோன்றத்தக்க பலவகை உறுதியின்மைகளையும் தாங்கிக்கொள்ளும் தன்மைக்காகக் கொடுக்கப்படுவது ஆதாயம் என நைட்டு (Knight) கூறியிருக்கிறார். ஆதாயத்தின் தன்மை உழைப்பாளர் தாமே உற்பத்தியாளராகவும் செயற்படலாம். உற்பத்திப் பணியில் தொடர்ந்திருப்பதற்குத் தேவைப்படும் குறைந்த அளவு ஆதாயம் இயல்பு ஆதாயம் (Natural Profit). இயல்பு ஆதாயத்திற்கும் அதிகமாகப் பெறுவது உபரி ஆதாயம் (Surplus Profit). நிறைவுப் போட்டி, நிறைகுறைப் போட்டி அங்காடிகளில் குறுங்காலத்தில் தேவை மாற்றத்திற்கேற்ப அளிப்பை மாற்ற இயலாதென்பதால், ஒருசில உற்பத்தியாளர் உபரி ஆதாயத்தையும், மற்றும் ஒரு சிலர் இயல்பு ஆதாயத்தையும், எஞ்சியோர் இழப்பையும் பெற வாய்ப்புண்டு. ஆனால், நீண்டகாலத்தில் உற்பத்தியாளர் எல்லோரும் இயல்பு ஆதாயத்தை மட்டுமே பெறுவர். முற்றுரிமை அங்காடியில் குறுங்கால, நீண்டகால வேறுபாடுகள் இல்லாததாலும், முற்றுரிமை ஆற்றலை உற்பத்தியாளர் பெற்றிருப்பார் என்பதாலும், எல்லா நிலைகளிலும் முற்றுரிமை உற்பத்தியாளர் உபரி ஆதாயத்தைப் பெறுவர்.

உற்பத்திப் பணிகளை முதலாளித்துவப் பொருளாதாரத்தில் தனியாரும், சமத்துவப் பொருளாதாரத்தில் அரசும், கலப்புப் பொருளாதாரத்தில் இரு சாராரும் மேற்கொள்வர்.

உற்பத்தியாளர் பண்டம்: பண்டங்களை அல்லது பணிகளை உற்பத்தி செய்வதற்காக உற்பத்தியாளர்கள் பயன்படுத்துபவை உற்பத்தியாளர் பண்டங்கள் (Producer Goods) ஆகும். துணியை உற்பத்தி செய்ய முயலுபவருக்கு எந்திரங்களும் நூலும் பிற கருவிகளும் உற்பத்தியாளர் பண்டங்களாகும். இவற்றைப் பயன்படுத்தும்போது நேரடியான மன நிறைவை

இவற்றினின்று பெறுதல் இயலாது. நாட்டின் மொத்த உற்பத்தியைப்பெருமளவில் பெருக்கி, பொருளாதார வளம் காண விழையும் நாடுகள் எல்லாம் உற்பத்திப் பண்டங்களைப் பெருமளவில் உற்பத்தி செய்ய எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றன. ஒரு நாட்டின் முன்னேற்றமும் வளர்ச்சியும் அந்நாட்டின் உற்பத்திப் பெருக்கத்திற்குத் தேவையான உற்பத்தியாளர் பண்ட அளிப்பைச் சார்ந்துள்ளன. இதனையே முதலீட்டுப் பொருள் (Capital Goods) எனவும் கூறுவர். பண்டம் அல்லது பணி இலவசமாகக் கிடைப்பின் அது இலவசப் பண்டம்; பணத்தையோ பண்டத்தையோ பணியையோ கொடுத்துப் பெறத்தக்கதாயின் அது பொருளாதாரப் பண்டம்.

பண்டத்தை பல அடிப்படைகளில் வகைப்படுத்தலாம். அவை (1) கண்ணுக்குப் புலனாகும் பண்டம் பருப்பொருள் (Material Goods) (எ-டு.வீடு) என்றும், கண்ணுக்குப் புலனாகாத நுண் பண்டங்கள் (Invisible Goods) (எ-டு. நன்மதிப்பு) என்றும், பயன்படும் கால அடிப்படையில் விரைவில் கெட்டுப்போகத்தக்க பண்டம் அழிபொருள் (Perishable Goods) (எ-கா. பால்) என்றும், நீண்டகால அளவுக்குப் பயன்படத்தக்கவை நிலையான பண்டம் (Durable Goods) (எ-டு. எந்திரம்) என்றும் பலவகைப்படும். மாற்றத்தக்க தன்மையின் அடிப்படையில் உரிமைகளைப் பிறருக்கு மாற்றத்தக்க பொருள் (Transferable Goods) நிலம் போன்றவை. மாற்ற இயலாத பொருள் இசை,அறிவு போன்றவை. தனி ஆளிடமிருந்து பிரிக்கத்தக்க தன்மையின் அடிப்படையில் தனி ஆளுக்கு உள்ளிருக்கும் பண்டம் (Personal Goods) திறமை; புறத்தே உள்ளபண்டம் (Impersonal Goods) வானொலிப் பெட்டி போன்றவையாகும். இவ்வாறு பல அடிப்படைகளில் நுகர்வோர் பண்டம் (Consumer Goods) என்றும், உற்பத்தியாளர் பண்டம் (Producer Goods) என்றும் வகைப்படுத்தலாம.

மனநிறைவைப் பெறுவதற்காக நுகர்வோர் நேரடியாகப் பயன்படுத்துபவை நுகர்வோர் பண்டங்கள் அல்லது துய்ப்போர் பண்டங்கள். உணவு, நீர் போன்றவை ஒரே நேரத்தில் பயன்படத் தக்கவையாகவும் வீடு, தொலைக்காட்சிப் பெட்டி போன்றவை பல காலம் பயன்படத் தக்கவையாகவும் உள்ளன.

சமத்துவப் பொருளாதார அமைப்புடைய நாடுகளில் எத்தகைய நுகர்வுப் பண்டங்களை எந்த அளவில் உற்பத்தி செய்தல் வேண்டும் என்பனவற்றைத் திட்டமிட்டுச் செயலாற்றுவதால் அவற்றிற்கேற்ப உற்பத்திப் பொருள்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆனால், தன்னியல்புடைய பொருளாதார அமைப்புடைய நாடுகளில் நுகர்வுப் பண்டங்களின் அமைப்பு, அளவு, தன்மை போன்றவற்றை அந்த நாட்டின் அங்காடித் தேவை, அந்த நாட்டோடு வாணிகத் தொடர்புடைய நாடுகளிலுள்ள அங்காடிகளின் பட்டறிவிலிருந்து பெறும் ஊகம் ஆகியவற்றின் அடிப்படையில் உற்பத்தியாளர்கள் திட்டமிட வாய்ப்புகள் உண்டு. இம்முயற்சியில் உற்பத்திப் பொருள்களின் உற்பத்தி அளவு தேவைக்குக் கூடுதலாகவோ சமமாகவோ குறைவாகவோ அமையலாம். உற்பத்திப் பொருள்களின் அளிப்பு அடிப்படையில் நுகர்வுப் பண்டங்களின் அளவும் அமைந்து விடுகிறது. இதனால் வருமானம், வேலை, பொருளாதார நிலை ஆகியவற்றில் முனைப்பான ஏற்றத்தாழ்வுகள் தோன்றி வாணிகச் சூழல்கள் தோன்றி விடுகின்றன.

உற்பத்தியாளர் சமநிலை: காலம், இடம், வடிவம் ஆகியவற்றுள் ஒன்றை அல்லது சிலவற்றை மாற்றுவதன் மூலம் மனித விருப்பத்தை நிறைவேற்றும் ஆற்றலான பயன்பாட்டைப் படைப்பவர் உற்பத்தியாளர் எனவும் படைப்பது நிறுவனம் எனவும் சொல்லப்படும். உற்பத்தியாளரின் அடிப்படை நோக்கம் உயர்நிலை ஆதாயத்தைப் பெறுவதாகும். எந்த ஓர் உற்பத்தி அளவில் அவர் உயர்நிலை ஆதாயத்தைப் பெறுவதாக எண்ணுகின்றாரோ அந்நிலையே உற்பத்தியாளர் சமநிலை (Producer's Equilibrium) எனப்படும். அந்நிலையில் அவர் உயர்நிலை ஆதாயத்தைப் பெற்றுக் கொண்டிருப்பதால் உற்பத்தி அளவை மிகுதிப்படுத்தவோ குறைக்கவோ விரும்ப மாட்டார். உற்பத்தியாளர் சமநிலையைப் பொருளாதாரக்கோட்பாடுகள் இரு அடிப்படையில் விளக்குகின்றன. அவை இறுதிநிலை உற்பத்தித் திறன் பகுப்பாய்வு (Margina Productivity Analysis), உற்பத்திச் சமஅளவு வளைகோட்டுப் பகுப்பாய்வு (Isoquant Analysis) என்பவையாகும்.

இறுதிநிலை உற்பத்தித்திறன் பகுப்பாய்வு: தொன்மைப் பொருளியலாரும், புதுமைத் தொன்மைப் பொருளியலாரும் பல எடுகோள்களின் அடிப்படையில் இக்கருத்தை விளக்கியுள்ளனர். அவையாவன: (1) உற்பத்திக் காரணி அலகுகளை மிகச்சிறிய அளவுகளில் பகுத்தல் இயலும். (2) அவ்வலகுகளின் இறுதிநிலை உற்பத்தித் திறனைக் கணக்கிடுதல் இயலும். (3) உற்பத்தி உள்ளீடு (Input) அலகுகளைத் தனித்துப் பயன்படுத்துதல் இயலும். (4) உள்ளீடு அலகுகளின் அளவுகளை மாற்றி அமைத்தல் மூலமாகப் பல்வேறு அளவுகளிலான உற்பத்தியைப் பெறுதல் இயலும். (5) உற்பத்திக் காரணி அலகுகளின் விலை மாறாதிருக்கும். (6) தொழில் நுட்ப நிலை மாறாதிருக்கும். இவற்றின் அடிப்படையில் உற்பத்தியாளர் சமநிலையை எவ்வாறு பெறுகிறார் என்பதைப்பொருளியல் அறிஞர்கள்


விளக்குகின்றனர். அவர்கள் கருத்துப்படி மேலே குறிப்பிட்ட எடுகோள்களின் அடிப்படையில் உற்பத்தியாளர் கீழ்க்காணும் நிலையில் மிகக் குறைவான உற்பத்திச் செலவிலும் உயர்நிலை ஆதாயத்தைப் பெறுவர்.

$$\frac{\text{'அ' காரணியின் இறுதி நிலை உற்பத்திப் பொருள்}}{\text{'அ' காரணியின் விலை}} = \frac{\text{'ஆ' காரணியின் இறுதி நிலை உற்பத்திப் பொருள்}}{\text{'ஆ' காரணியின் விலை}} = \dots\dots = \frac{\text{'n' காரணியின் இறுதி நிலை உற்பத்திப் பொருள்}}{\text{'n' காரணியின் விலை}}$$

மிகக் குறைந்த செலவில் உற்பத்தியாளர் உற்பத்தி செய்யும்போது உயர்நிலை ஆதாயத்தைப் பெற்று உற்பத்தியாளர் சமநிலையில் இருப்பார் என்பதற்கான மேற்கண்ட விளக்கத்தைப் பல அறிஞர்கள் ஏற்றுக் கொண்டாலும், இவ்வணுகு முறையில் குறைகள் பல இருப்பதையும் சுட்டிக்காட்டியுள்ளனர். காரணி அலகுகளின் இறுதிநிலை உற்பத்தித்திறனைக் கணக்கிடுதல் எளிதன்று. ஒவ்வொரு வகைக் காரணி அலகுகளின் இறுதிநிலை உற்பத்தித் திறன்களை ஒப்பிட்டுப் பார்ப்பதும் எளிதன்று. ஒவ்வொரு காரணியும் பிற காரணிகளுடன் இணைந்து செயற்பட்டு உற்பத்திப் பணியை ஆற்றுகிறதே தவிரத் தனித்துச் செயற்படுவதில்லை; உற்பத்தி அளவு மாறுவதற்கும் உகந்த அளவு உற்பத்தி அளவைப் பெறுவதற்கு உற்பத்தியாளர் முயல்வதற்கும் வாய்பாடுகள் உண்டு என்பன போன்ற கருத்துகளை இக்கோட்பாடு உள்ளடக்கவில்லை. இக்கோட்பாட்டை விட உற்பத்திச் சம அளவு வளைகோடு சிறந்தது எனக் கருதப்படுகிறது.

**உற்பத்திச் சமஅளவு வளைகோட்டுப் பகுப்பாய்வு:** உற்பத்திச் சமநோக்கு வளைகோட்டுப் பகுப்பாய்வு **(Production indifference curve analysis)** என்றும் இதனைக் குறிப்பிடலாம். x, y என்ற இரு உற்பத்திக் காரணிகளால் உற்பத்தி நிகழ்வதாகும். x, y என்ற இக்காரணிகளின் பல கலவைகளிலும் சமஅளவு உற்பத்தி நிகழ்வதாகவும் கருதிக்கொண்டால், காரணிகளின் பல்வேறு கலவைகளுக்கு உகந்த உற்பத்தி அளவைக் குறிக்கும் புள்ளிகளின் இணைப்பு உற்பத்திச் சமஅளவு வளைகோடாகும் (காண்க: உற்பத்திச்சம விளைவு வளைகோடு). இதனைப் படம்-1 விளக்குகிறது.

oc அளவு y காரணி அலகுகளையும் OR அளவு x காரணி அலகுகளையும் பயன்படுத்தும்போது தோன்றும் உற்பத்தியும், $OC_1$ அளவு y காரணி அலகுகளையும் OR அளவு x காரணி அலகுகளையும் பயன்படுத்தும்போது தோன்றும் உற்பத்தியும் ஒரே அளவினதாக இருக்கும் என்பதால், A, B புள்ளிகளை இணைத்து வரையப்பட்டுள்ள 1Q என்பது உற்பத்திச் சம அளவு வளைகோடு. உற்பத்தி முறைகள் மாறா





திருக்கின்றன; உற்பத்திக் காரணி அலகுகள் பயன் தரும் வகையில் இணைக்கப்பெற்றிருக்கின்றன என்பன இவண் உள்ளார்ந்திருக்கும் எடு கோள்களாகும்.

**சமச் செலவுக் கோடுகள்:** உற்பத்திக் காரணிகளுக்காக நிறுவனம் செலவிட விரும்பும் செலவைக் குறிப்பது சமச் செலவுக் கோடு (Iso cost lines). x, y காரணி அலகுகளின் விலைகளின் அடிப்படையில் இக்கோட்டின் அமைப்பு மாறுபடும். இக்கோட்டை வரவு செலவுக் கோடு, விலைக்கோடு, செலவுக் கோடு, உற்பத்திக் காரணிச் செலவுக் கோடு, உற்பத்திக் காரணி விலைக் கோடு, செலவு எல்லைக் கோடு என்று பல பெயர்களால் குறிப்பிடுவது மரபு. இதனைப் படம்-2 விளக்குகிறது. உற்பத்தியாளர் தம்மிடம் உள்ள மூலவளத்தைக் கொண்டு Y காரணி அலகுகளை மட்

டும் பயன்படுத்த விரும்பினால், OA அளவு Y காரணி அலகுகளைப் பயன்படுத்துவார். X காரணி அலகுகளை மட்டும் பயன்படுத்த விரும்பினால், OB அளவு Y காரணி அலகுகளைப் பயன்படுத்துவார். மூலவளங்களின் இருப்பும், காரணி அலகுகளின் விலைகளும் மாறாதிருக்கும்போது மூலவளங்கள் முழுவதையும் பயன்படுத்தி, X, Y என்ற இருகாரணி அலகுகளையும் பயன்படுத்த விரும்பினால், AB என்ற கோட்டில் ஏதாவது ஒரு புள்ளியில் உற்பத்தியாளர் இருப்பார் என்பதைப் படம் காட்டுகிறது. AB = சமச் செலவுக் கோடு.


படம்-2





X, Y காரணிகளின் விலைகள் மாறும்போது அதற்கேற்ப X, Y காரணிகளைப் பெறும் அளவுகளும் மாறும். இக்கருத்தைப் படம்-3 காட்டுகிறது. தொடக்கநிலைச் சமச் செலவுக் கோடு AB என்றும், காரணி அலகுகளின் விலைகள் ஒரே சீராக அதிகரிக்கின்றன என்றும் கருதிக் கொண்டால் (குறைவான அளவில் X, Y காரணிகளைப் பெற முடியும் என்பதால்) சமச் செலவுக் கோடு $A_1B_1$ ஆக மாறுகிறது. காரணிகளின் விலைகள் ஒரே சீராகக் குறைகின்றன என்று கருதிக் கொண்டால், (மிகையான அளவில் X, Y காரணிகளைப் பெற முடியும் என்பதால்) சமச் செலவுக் கோடு $A_2 B_2$ ஆக மாறுகிறது.

படம் 4-இல் AB தொடக்க நிலைச் சமச். செலவுக் கோடு. Y காரணி அலகின் விலை மாறாதிருந்து, X காரணி அலகின் விலை மட்டும் குறைந்தால், X காரணி அலகுகளை மிகுதியாகப் பெற முடியும் என்பதால் $AB_2$ எனச் சமச் செலவுக் கோடு மாறும். X காரணி விலை மட்டும் அதிகரித்தால், X காரணி அலகுகளைக் குறைவாகப் பெற முடியும் என்பதால் $AB_1$ எனச் சமச் செலவுக் கோடு மாறும். இதைப் போன்று X காரணி விலை மாறாதிருந்து Y காரணி விலை மட்டும் அதிகரித்தால் $A_1$ B என்றும், Y காரணி விலை மட்டும் குறைந்தால் $A_2$ B என்றும் சமச் செலவுக் கோடு மாறும். இவற்றைப் படம் – 4 தெளிவாகக் காட்டுகிறது.

படம் 3





படம் 4




உற்பத்தியாளர் விரும்பத் தக்க பல உற்பத்திச் சம விளைவுக் கோடுகளும், உற்பத்தியாளரால் இயலத்தக்க பல சமச் செலவுக் கோடுகளும் படம்-5-இல் உள்ளன. $1Q_1$ இல் உற்பத்தி அளவு குறைவாகவும் $1Q_2$-இல் உற்பத்தி அளவு அதிகமாகவும், $1Q_3$-இல் உற்பத்தி அளவு மிக அதிகமாகவும் இருக்கும். உற்பத்தியாளர் இம் மூன்றில் $1Q_3$ ஐ விரும்புவார். இவை போன்ற எண்ணற்ற உற்பத்திச் சம விளைவுக் கோடு

களுள் உயர்நிலையில் உள்ள உற்பத்திச் சமவிளைவுக் கோட்டில் இருப்பதை உற்பத்தியாளர் விரும்புவார். ஆனால், அவரிடம் உள்ள மூலவளங்கள் குறிப்பிட்ட அளவில் இருக்குமாதலால், அதற்கேற்ற ஒரு சமச் செலவுக் கோட்டில்தான் அவர் இருக்க இயலும். அவரது மூலவள இருப்பின் அடிப்படையிலுள்ள AB என்ற சமச் செலவுக் கோட்டின் $1Q_1$-இல் L என்னும் புள்ளியில் சமநிலையை அடைவார். எனவே, $LL_1$ அளவு Y காரணி அலகுகளையும், $OL_1$ X காரணி அலகுகளையும் பயன்படுத்தி உயர்நிலை ஆதாயத்தைப் பெறுவார். இதற்கு மாறாக அவரால் $A_1 B_1$ என்ற சமச் செலவுக் கோட்டில் இருக்க முடிந்தால், M என்ற புள்ளியில் சம நிலையை அடைகிறார். இச்சமநிலைகளை இணைத்துக் காட்டும் புள்ளிக் கோட்டை (EP) 'வளர்ச்சிப்பாதை' அல்லது 'பெருக்கப்பாதை' (Expansion path) என்று குறிப்பிடுகின்றனர்.

படம் 5





சமநிலையில் உற்பத்திச் சம விளைவு வளைகோடும் சமச்செலவுக் கோடும் தொடு கோடுகளாக அமைகின்றன.

Y காரணிக்கான X-இன் இறுதிநிலைத் தொழில்நுட்பப் பதிலீட்டு வீதம் = X காரணியின் விலை / காரணியின் விலை

உற்பத்திக் காரணி அலகுகளின் விலைகள் மாறுபடுகின்றபோது சமநிலையும் அதற்கேற்ப மாறுபடும் என்பதைப் படம்-6 விளக்குகிறது.

படம்-6




X, Y காரணி விலைகள் குறிப்பிட்ட அளவிலிருக்கும்போது AB என்ற சமச் செலவுக்கோடு $1Q_1$க்குத் தொடுகோடாக அமையும். $E_1$ சமநிலை. இந்நிலையில் X காரணியின் விலை மட்டும் குறைவதாகக் கருதிக் கொண்டால், சமச் செலவுக்கோடு $AB_1$ ஆக அமைந்து சம நிலையும் $E_2$ என்ற புள்ளியில் அமையும். அதாவது, முன்பு OR அளவு X காரணியையும் $E_1R$ அளவு Y காரணியையும் பயன்படுத்தி உயர்நிலை ஆதாயத்தை அடைந்து கொண்டிருந்த உற்பத்தியாளர், இப்போது OT அளவு X காரணி அலகுகளையும் $E_2T$ அளவு Y காரணி அலகுகளையும் பயன்படுத்தி, உயர் அளவு ஆதாயத்தைப் பெறுவார். வளர்ச்சிப்பாதை $E_1 P^2$ என்ற புள்ளிக் கோட்டால் காட்டப்பட்டுள்ளது. இதற்கு மாறாக X காரணி நிலை மாறாதிருந்து Y காரணி நிலை மட்டும் குறைந்தால், $E_1$-இல் சமநிலையிலிருந்த உற்பத்தியாளர் இப்போது $E_3$-இல் சமநிலையை அடைவார். அதாவது, $E_1$ R அளவு Y காரணி அலகுகளையும் OB அளவு X காரணி அலகுகளையும் பயன்படுத்தி உயர் அளவு ஆதாயத்தைப் பெற்ற உற்பத்தியாளர், இப்போது $E_3$ S அளவு Y காரணி அலகுகளையும், OS அளவு X காரணி அலகுகளையும் பயன்படுத்தி உயர் அளவு ஆதாயத்தைப் பெறுவார். வளர்ச்சிப் பாதை $E_1 P_1$ என்ற புள்ளிக் கோட்டால் காட்டப்பட்டுள்ளது.

உற்பத்தியாளர் சமநிலையை இவ்வணுகு முறையில் விளக்குவதிலும் சில குறைகள் உள்ளன. இம்முறையில் உற்பத்திச் சம விளைவுப் படத்தைப் பெறும் வகையில் உற்பத்தி, தொடர்ச்சியாக நிகழ்ந்து

கொண்டிருக்கிறது. காரணிகளின் கலவைகளைப் பல வகையில் மாற்றியமைத்துப் பயன்படுத்தலாம். உற்பத்தியில் எவ்விதத் தடங்கல்களும் இல்லை என்பது எடுகோளாகும். இவ்வெடுகோள் உண்மை நிலைக்குப் புறம்பானதாகும். இவை தவிர உயர் அளவு ஆதாயத்தைப் பெறுவதுதான் உற்பத்தியாளரின் அடிப்படை நோக்கம் என்ற கருத்தையும் ஏற்றுக் கொள்ள இயலாது. உயர் அளவு உற்பத்தி, மனநிறைவான ஆதாயம் போன்ற பல்வேறு நோக்கங்களுடன் உற்பத்தியாளர் செயற்படுவதும் உண்டு. இவ்வணுகு முறையில் இரு உற்பத்திக் காரணிகளைக் கொண்டு உற்பத்தி நிகழ்வதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இரு உற்பத்திக் காரணிகளை மட்டுங் கொண்டு உற்பத்தி நிகழ்வதில்லை.

இக் காலத்தில் நேர்கோட்டு (Linear Programming Approach) அணுகுமுறை சிறப்பாக இருக்கும் என்ற கருத்தும் நிலவுகிறது. உற்பத்தியில் பயன்படத்தக்க பல்வேறு உள்ளீடுகள், உற்பத்தியில் தோன்றத்தக்க பல இடையூறுகள் ஆகியவற்றையும் கருத்திற் கொண்டு குறிப்பிட்ட காரணி உள்ளீடு நிலையில் மிகக் குறைந்த செலவில், உயர்நிலை உற்பத்தியைக் காண இவ்வணுகுமுறையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. என்.எஸ்.பா.

துணை நூல்கள்:

**Chopra**, Advanced Economic Theory, Kalyani Publishers, Delhi, 1975.

**Hicks, J.R.**, Value and Capital, London, 1946.

**Stigler**, G.J., The Theory of Price, Macmillan, NewYork, 1955.


**உற்பத்தியும் அளிப்பும்**: நிலம், உழைப்பு, மூலதனம், அமைப்பு ஆகிய காரணிகள் இணைந்து செயற்பட்டு வடிவம், காலம், இடம் போன்றவற்றை மாற்றுவதன் மூலம் பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. நுகர்வு, முதலீட்டுத் தேவைகளின் அளவு ஆகியவற்றிற்கேற்ப உற்பத்திப் பொருள்களின் அளவுகளைக் கூட்ட அல்லது குறைக்கத் தொழில் முனைவோர் முயல்வர்.

அளிப்பு: குறிப்பிட்ட அங்காடி அமைப்பில், குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட விலையில் விற்பதற்கேற்ற நிலையில் பொருள்கள் வைக்கப்படுவது அளிப்பு (Supply) எனப்படும். உயர்ந்த விலையில் பேரளவில் பொருள்களை விற்று மிகை ஆதாயம் பெறும் எண்ணம் தொழில் முயல்வோருக்கு இருக்குமாதலால், விலைகள் உயர உயர அளிப்பின் அளவும் பெருகும்; விலைகள் குறையக் குறைய அளிப்பின் அளவும் குறையும். அங்காடியில் அளிப்பின் அளவில் ஏற்படும் மாற்றத்தை, உற்பத்திக் காரணிகளுக்காகும் உற்பத்திச் செலவு (Factor Cost), உற்பத்தி முறையில் ஏற்படும் மாற்றங்கள், போக்குவரத்து, செய்தித் தொடர்பு வசதிப் பெருக்கம், அரசியல் சூழ்நிலைகள், உற்பத்தியாளரிடையேயுள்ள ஒற்றுமை, ஒப்பந்தங்களின் தன்மை, உற்பத்தி நிறுவனங்களின் நோக்கம், உற்பத்தியாளர்களின் எண்ணிக்கை, விலையின் போக்குப் பற்றிய விற்பனையாளர்களின் கணிப்பு, வரி விதித்தலின் தன்மை, அளவு, பருவகால நிலை, மாற்றுப் பொருள்களின் விலை போன்ற பல காரணிகள் வரையறை செய்தாலும், பொருளின் விலை மாற்றத்தால் தோன்றும் அளிப்பு மாற்றத்தை மட்டும் அளிப்பு விதி குறிப்பிடுகிறது. மற்றவை மாறாதிருக்கும் போது விலை உயர்ந்தால் அளிப்புப் பெருகும்; விலை குறைந்தால் அளிப்புக் குறையும் என்பது அளிப்பு விதி.


உற்பத்தியும் அளிப்பும்: பொருளின் தன்மையைப் பொறுத்து உற்பத்தியின் ஒரு பகுதியோ உற்பத்தி முழுவதுமோ அளிப்பாக அமையலாம். பால், பழம், காய்கறிகள், மலர், இறைச்சி போன்ற விரைவில் கெட்டுவிடும் பொருள்களின் உற்பத்தியும் அளிப்பும் பெரும்பாலும் ஒரே அளவினதாக இருக்கும். இவ்வகைப் பொருள்களின் உற்பத்தி மிகுதியாக இருந்தால் அவை முழுவதற்கும் அங்காடியில் அளிக்கப்பெற்ற விலை குறைந்துவிடும்; உற்பத்தி குறைவாக இருந்தால் அங்காடி அளிப்பும் குறைந்து விலை உயர்ந்துவிடும். நீண்டகால அளவிற்குப் பயன்படத்தக்க பொருள்களின் விலை நிலைக்கேற்ப அவற்றின் அளிப்பு அமையும். இக்கருத்துகளை படம் 1-உம், படம்-2 உம் தெளிவாக்குகின்றன.

படம் 1-இல் விரைவில் கெட்டுப் போகத்தக்க தன்மையுடைய பொருள்களின் உற்பத்தி, அளிப்பு, தேவை அளவுகளும் படம் 2-இல் நீண்டகால அளவில் பயன்படத்தக்க பொருளின் உற்பத்தி, அளிப்பு, தேவை அளவுகளும் காட்டப்பட்டிருக்கின்றன. படம் 1-இல் உற்பத்தி OR ஆக இருந்தால் அளிப்பும் ORஆக இருக்கும். தேவையும் (DD) அளிப்பும் (R MSSC1) L என்னும் புள்ளியில் சந்திப்பதால், விலை RL என அமையும். தேவை மாறாதிருந்து உற்பத்தி, அளிப்பின் அளவு OS ஆகவும் OT ஆகவும் இருப்பின் விலை முறையே SMஆகவும்NT ஆகவும் அமையும். படம்-2-இல் அங்காடிக் கால உற்பத்தி OT என்றும், தேவையின் அளவு $D_1D_1$ என்றும் கருதிக் கொண்

 உற்பத்தியும் அளிப்பும்




உற்பத்தி , அளிப்பு , தேவை




உற்பத்தி , அளிப்பு , தேவை

டால், விலை LR ஆகவும் அளிப்பு OR ஆகவும் பின் விற்பனைக்கென ஒதுக்கப்படும் அளவு RT ஆகவும் இருக்கும். அதாவது, உற்பத்திப் பொருள் நீண்ட கால அளவிற்கு உழைக்கத்தக்கதாக இருந்தால் உற்பத்தியும் அளிப்பும் சமமாக இருக்க வேண்டுமென்பதில்லை. அங்காடி நிலை உற்பத்தியாளர்களுக்கு ஏற்புடைய விலைக்குக் குறைவாக இருக்கும்வரை உற்பத்தியைவிட அளிப்புக் குறைவாக இருக்கும். வரைபடத்தில் விலை MS ஆக உயரும்போது அளிப்பு OS ஆகவும், பின் விற்பனைக்கென ஒதுக்கப்படுவது ST ஆகவும், விலை NT ஆக உயரும் போது அளிப்பும் உற்பத்தியும் OT ஆகவும் இருக்கும். தேவை $D_4D_4$ என மிகுந்து விலையும் ET என உயரும்போது, உற்பத்தி பெருகாமல் OT அளவிலேயே இருந்து வருகிறது.

பொருளின் தேவை மாற்றத்திற்கேற்ப அதன் உற்பத்தியையும் அளிப்பையும் பெருக்க இயலாத காலம் அங்காடிக் காலம் அல்லது மிகக் குறுகிய காலம். தேவை மாற்றத்திற்கேற்ப முழுமையாக இல்லாவிட்டாலும் ஒரு சில உற்பத்திக் காரணிகளைத் தீவிரமாகப் பயன்படுத்துவதன் மூலம் ஓரளவுக்காவது உற்பத்தியையும் அளிப்பையும் பெருக்கத்தக்க காலம் குறுகிய காலம். தேவை மாறும்போது, உற்பத்திக் காரணிகள் அனைத்தையும் மாற்றி உற்பத்தி, அளிப்பு அளவுகளையும் அதற்கேற்ப மாற்றும் கால அளவு நீண்ட காலம் அல்லது மிகநீண்ட காலம் எனப்படும்.

ஒரியல்பான அலகுகளை உற்பத்தி செய்யும் நிறுவனங்களின் மொத்தப் பெயர் தொழில். ஒரியல்பற்ற தாகவும், நெருக்கமான பதிலிகளாகவும் உள் பொருள் அலகுகளை உற்பத்தி செய்யும் நிறுவனா களின் மொத்தப் பெயர் தொகுப்பு (Aggregate). உ பத்திநிறுவனங்கள் யாவும் அவற்றின் இறுதிநிலை உ பத்திச் செலவு, இறுதிநிலை வருவாய் ஆகியவற்றின் அடிப்படையில் உற்பத்தி அளவை வரையறுக்கின்றன ஒவ்வொரு நிறுவனமும் அதன் இறுதிநிலை உற்பத்திச் செலவும் இறுதிநிலை உற்பத்தி வருவா யும் ஒன்றுக்கொன்று சமமாக இருக்கும் நிலையில் உற்பத்தி செய்யும்போது உயர் அளவு ஆதாயத் தைப் பெறும் வாய்ப்பு உண்டு. இந்நிறுவனங்களின் உற்பத்திகளின் மொத்தம் மொத்த உற்பத்தி. மொத்த உற்பத்தி முழுவதும் விற்பனைக்கென அங் காடிக்கு வந்தால் அதுவே அங்காடியின் அளிப்பாகும் காண்க: அளிப்பு

உற்பத்தியும் நுகர்வும்: பயன்பாட்டைப் படைத்தல் அல்லது மிகுதிப்படுத்துதல் உற்பத்தி. பண்டங்களையும் பணிகளையும் நேரடியாகப் பயன்படுத்தி மனநிறைவைப் பெறுதல் நுகர்வு(Consumption). பண்டங்களையோ பணிகளையோ நுகர்வுப் பண்டங்களின் உற்பத்திக்காகப் பயன்படுத்துவது முதலீடு. உற்பத்திக்கு நுகர்வு விருப்பமும் முதலிடும் விருப்பமும் மூல காரணங்களாக அமைகின்றன.

நுகர்வு இல்லாவிடில் உற்பத்தி செய்ய வேண்டிய தேவை இல்லை; உற்பத்தியால் பயனும் இல்லை. உற்பத்தி இல்லாவிட்டால் நுகர்தல் இயலாது. உற்பத்தியும் நுகர்வும்(Production and Consumption) ஒன்றை

யொன்று சார்ந்திருப்பவை; ஒன்றுக்கொன்று அடிப்படையாக இருப்பவை. நுகர்வு ஒரே முறையிலும் நிகழலாம்; தொடர்ந்து பல முறையிலும் நிகழலாம். நுகர்வு முழுப் பண்டங்களாகவும் இருக்கலாம்; பகுதிப் பண்டங்களாகவும் இருக்கலாம். நுகர்வு பண்டமாகவும் இருக்கலாம்; பணியாகவும் இருக்கலாம். நுகர்வை நிகழ்த்தும் மனிதர்களின் விருப்பு வெறுப்புகள் நிலையானவை அல்ல. இவை எல்லாவற்றிற்கும் இசைவான அமைப்புகளிலும் அளவுகளிலும் பண்டங்களும் பணிகளும் உற்பத்தி செய்யப்படுதல் வேண்டும்.

உயர் அளவு மனநிறைவைப் பெற வேண்டும் என்று எண்ணுவது நுகர்வோர் இயல்பு. உயர் அளவு ஆதாயத்தைப் பெற வேண்டும் என்று எண்ணுவது உற்பத்தியாளர் இயல்பு.

**நுகர்வோர் சமநிலை:** ஒரு பொருளை எந்த அளவில் நுகரும்போது உயர் அளவு மனநிறைவைப் பெறுவதாக நுகர்வோர் எண்ணுகின்றனரோ அந்நிலையை நுகர்வோர் சமநிலை எனலாம். பணத்தின் இறுதி நிலைப் பயன்பாடு மாறாமலிருக்கும்; பண்டத்தின் இறுதிநிலைப் பயன்பாடு நுகர்வு பெருகப் பெருகக் குறைந்து கொண்டே செல்லும் என்ற எடுகோள்களின் அடிப்படையில் நுகர்வோர் சமநிலையைக் கீழ் வருமாறு குறிப்பிடுதல் மரபு. $MU_A = P_A$ பண்டத்தின் இறுதிநிலைப் பயன்பாடும், பணத்தின் இறுதிநிலைப் பயன்பாடும் ஒன்றுக்கொன்று சமமாக இருக்கும் நிலை வரை நுகர்வு நிகழும்போது நுகர்வோர் உயர் அளவு மனநிறைவைப் பெற்றுச் சமநிலையை அடைகிறார் எனலாம். ஒன்றுக்குக் கூடுதலான பண்டங்களை நுகரும்போது, பண்டத்தின் இறுதிநிலைப் பயன்பாடு அதன் விலை ஆகிய இரண்டுக்கும் உள்ள விகிதம் எல்லாப் பண்டங்களிலும் சமமாக இருக்கும் வண்ணம் நுகர்ந்து உயர் அளவு பயன்பாட்டைப் பெறுவர். இச் சமநிலையை

$$\frac{MU_A}{P_A} = \frac{MU_B}{P_B} = k$$ என்று குறிப்பிடுவர்.

**உற்பத்தியாளர் சமநிலை:** பயன்பாட்டைப் படைக்கும் அல்லது மிகுதிப்படுத்தும் பணியே உற்பத்தியாளரின் பணிகளுள் மிகச் சிறப்பானது. இப் பயன்பாட்டைப் படைக்க அல்லது மிகுதிப்படுத்த நிலம், உழைப்பு, மூலதனம் என்ற உற்பத்திக் காரணிகளை உற்பத்தியாளர்கள் பயன்படுத்துவர். ஏதாவது ஓர் உற்பத்திக் காரணியின் அலகை மிகுதிப்படுத்த விரும்பும்போது அவ்வுற்பத்திக் காரணி அலகின் இறுதி நிலை உற்பத்தித் திறனும் அதன் விலையும் ஒன்றுக்கொன்று சமமாக இருக்கும் வரை பயன்படுத்தினால் தான் அவர் பெறும் ஆதாயம் உயர் அளவில் இருக்கும்.

ஒன்றுக்குக் கூடுதலான காரணி அலகுகளைப் பயன்படுத்தும்போது காரணியின் இறுதிநிலை உற்பத்தித் திறன், அக்காரணி அலகின் விலை ஆகிய இரண்டுக்கும் உள்ள விகிதம் எல்லாக் காரணிகளிலும் சமமாக இருக்கும் வண்ணம் பயன்படுத்தி, உயர் அளவு ஆதாயத்தைப் பெற விரும்புவர்.

**அங்காடிப் பொருளாதாரமும் சமத்துவப் பொருளாதாரமும்:** அங்காடிப் பொருளாதாரத்தில் நுகர்வோரின் எண்ணங்களும் விருப்பங்களும் உற்பத்தி அளவை வரையறுக்கின்றன. எவ்வெப்பொருளை நுகர்வோர் நுகர விரும்புகின்றனரோ அவ்வப் பொருள்கள் மட்டும் உற்பத்தி செய்யப்பட்டு அங்காடிக்குக் கொண்டுவரப்பட்டு நுகரப்படுகின்றன. ஆனால், நுகர்வோரின் மனநிலையை முழு அளவில் மதிப்பிடல் இயலாது. உற்பத்தியாளர்களின் மதிப்பீடுகளும் அங்காடி நுகர்வும் சமமானவையாக இருக்கும் வரை எவ்வித இடர்ப்பாடுமின்றிப் பொருளாதாரம் இயங்கும். ஆனால் எதிர்காலத்தைப் பற்றிய மதிப்பீடுகள் மிகுதியாகவும் நுகர்வு அளவு குறைவாகவும் இருப்பின், தேக்க நிலை ஏற்பட்டு வருமானக் குறைவு, வேலையின்மை போன்ற விரும்பத்தகாத விளைவுகள் தோன்றும். இக்கருத்தின் அடிப்படையில் பேராசிரியர் ஆப்சன் (Hobson) அமிதச் சேமிப்பு அல்லது போதா நுகர்வுக் கோட்பாடென்னும் வாணிகச் சுழல் (Trade Cycle) கோட்பாட்டைப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

வளர்ச்சிக் காலத்தில் செல்வர்களின் வருமானம் பெருகியும் வறியவர்களின் வருமானம் பெருக்கம் குறைந்தும் இருக்கும். செல்வர்கள் தம் அமிதச் சேமிப்பை முதலீடு செய்து உற்பத்தியைப் பெருக்குவர். ஆனால் பெரும்பான்மையாக உள்ள வறியோர் தம் வருமானக் குறைவினால் போதா நுகர்வு நிலையில் இருப்பர். எனவே ஆதாயமும் நம்பிக்கையும் குறைந்து பொருளாதாரப் பின்னிறக்கமும்(Recession) மந்தநிலையும் (Depression) தோன்றும்.

சமத்துவப் பொருளாதாரத்தில் உற்பத்திக்கேற்ற நுகர்வு, நுகர்வுக்கேற்ற உற்பத்தி என்ற நிலைகளை அரசு முடிவு செய்வதால், மிகை உற்பத்தி அல்லது போதா உற்பத்தி என்பனவற்றிற்கான வாய்ப்புகள் குறைவு.

**தொன்மை, இக்கால அறிஞர்களின் கருத்துகள்:** பிரெஞ்சுப் பொருளாதார அறிஞர்களுள் ஒருவரான

சே.பி.சே (J.B.Say கி.பி. 1767-1832) பொருளாதார அரசியல் (Traited Economique Politique) என்ற தம் நூலில், 'ஒவ்வோர் உற்பத்தியும் அதன்தேவையை உருவாக்கும்' என்ற அங்காடி விதியைக் குறிப்பிட்டார். அதாவது, ஒரு பொருள் உற்பத்தியாகும்போது, அவ் உற்பத்தியில் பயன்படும் நிலம், உழைப்பு, மூலதனம், அமைப்பு என்னும் உற்பத்திக் காரணிகளின் உரிமையாளர்கள் முறையே வாரம், கூலி, வட்டி, ஆதாயம் என்ற வடிவங்களில் ஊதியங்களைப் பெறுகின்றனர். இவ்வருமானம் முழுவதையும் நுகர்வுக்காக அவர்கள் பயன்படுத்துவர். எனவே, உற்பத்தியான பொருள் நுகரப்பட்டு விடும்; தேக்கம் இருக்காது; வேலையின்மையோ பிற சிக்கல்களோ இருக்காது என்ற கருத்துடன் அவருடைய விதி அமைந்தது. பின்னர் வந்த அறிஞர் ஏ.சி.பிகு (A.C. Pigou) என்பவர், 'இறுதிநிலை உற்பத்தித் திறனுக்கேற்ப உற்பத்திக் காரணிகள் ஊதியத்தைப் பெற்றுக்கொள்ளும் நிலை' இருக்கும் வரை, சிக்கல்கள் எவையும் தோன்றா என்றார். ஆனால் 1930-ஆம் ஆண்டளவில் தோன்றிய உலகப் பெரு மந்தத்தின்போது இக் கருத்துத் தவறானது எனக் கண்ட பேராசிரியர் கீன்சு (Keynes) நுகர்வு பற்றிய தம் உளவியல் நுகர்வு விதியை அமைத்து விளக்கினார். வருமானம் பெருகும்போது, முன்பிருந்த அளவை விட நுகர்வு பெருகும் என்பது உண்மையே; ஆனால் வருமானம் பெருகிய அளவுக்கும் குறைவான அளவிலேயே பொதுவாக நுகர்வின் பெருக்கம் அமையும் என்ற உண்மையைப் பயன்படுத்தி வேலையின்மை, பெருமந்தம் போன்ற நிலைகளை மாற்றப் பல உத்திகளை விளக்கினார். வருமானம் பெருகும்போது அதில் ஒரு பகுதி நுகர்வுக்காகப் பயன்படுத்தாமல் முடக்கப்படுவதால் உற்பத்தி முழுவதும் விற்பனையாகாமல், உற்பத்தியின் ஒரு பகுதி முடக்கப்பட்டுத் தேக்க நிலை (Stagnation), வருமானக் குறைவு, வேலையின்மை போன்றவை தோன்றுமாதலால், நுகர்வுச் செலவை அரசுத் துறையில் அதிகப்படுத்தி நிலையைச் சீராக்கலாம் என்பது கீன்சின் கருத்து.

வருமானத்தில் நுகர்வைக் குறைத்துச் சேமிப்பைப் பெருக்கினால் முதலீடு பெருகி மொத்த உற்பத்தி பெருகும் என்பது தொன்மைப் பொருளியலார் கருத்து. முதலீடு செய்ய மூலதனம் தேவைப்படுவதால் அம் மூலதனத்தின் தோற்றுவாயான சேமிப்பைப் பெருக்க வேண்டும் என்பது அவர்தம் கருத்து. ஆனால் பேரறிஞர் கீன்சு இதற்கு மாறுபட்ட கருத்தை வலியுறுத்தினார். நுகர்வைக் குறைத்தால் மொத்தச் செலவு குறையும்; மொத்த வருமானம் குறையும்; மொத்த வாங்குந் திறன் குறையும்; பொருள்களுக்கான தேவை குறையும்; ஆதாயமும் வருமானமும் குறையும். இவற்றின் பின்னிய விளைவாகப் பொருளாதார மந்தமும், வேலையின்மையும் தோன்றும். எனவே, பொருளாதார மந்தக் காலங்களில் நுகர்வை அரசு முதலீட்டைப் பெருக்குவதன் மூலம் பெருக்கினால், பெருக்கி (Multiplier), ஊக்கி (Accelerator) விளைவுகளால் வருமானமும் உற்பத்தியும் பெருகும் என்று கீன்சு வலியுறுத்தினார்.

என்.எஸ்.பா.

***உற்பத்தி வாய்ப்பு வளைகோடு***: நிறுவனங்கள் பொதுவாக ஒரேயொரு பொருளை மட்டும் உற்பத்தி செய்யாமல் கூட்டுப் பொருள்களாகவோ தனிப் பொருள்களாகவோ ஒன்றுக்கும் மிகையான பொருள்களை உற்பத்தி செய்கின்றன. அவற்றை நிறுவனத்திற்கு உகந்த வகையில் வரையறுப்பது ஓர் அடிப்படை வினாவாகும். முழுவேலை நிலையில் (Full Employment) நிறுவனம் இரு பொருள்களை உற்பத்தி செய்வதாகக் கருதிக் கொண்டால், அவற்றை எந்தெந்த அளவுகளில் உற்பத்தி செய்தால் நன்று என்பதை அறிந்துகொள்ள உற்பத்தி வாய்ப்பு வளைகோடுகள் (Production Possibility Curves) பயன்படுகின்றன. இவ்வளைகோடுகளை மாற்று உருவக்கோடுகள் (Transformation Curves) என்றும், எல்லைக்கோடுகள் (Frontier Curves) என்றும் குறிப்பிடுதல் மரபு. இக்கருத்தைப் பேராசிரியர் சாமுவேல்சன் (Prof. Samuelson) விளக்கிக் குறிப்பிட்டுள்ளார்.

உள்ளீடு (Input) அலகுகளின் அளவுகள் குறிப்பிட்ட அளவில் இருக்கின்றன என்ற எடுகோளின் அடிப்படையில் இவ் உள்ளீடு அலகுகளைக் கொண்டு, இரண்டு பொருள்களை ஒரு நிறுவனம் உற்பத்தி செய்கிறது என்று கொண்டால், x,y என்ற இவ்விரு பண்டங்களைப் பல கலவைகளில் நிறுவனம் உற்பத்தி செய்யும். ஒரு பொருளை மிகையாக உற்பத்தி செய்ய விரும்பினால் மற்றொரு பொருளின் உற்பத்தியைக் குறைக்கும். உற்பத்தி முறையில் மாற்றம் எதுவும் நிகழாது. உற்பத்தியின் அளவை மாற்ற இயலாத தன்மையுடைய குறுங்கால அளவில் உற்பத்தி நிகழ்ந்து கொண்டிருக்கிறது என்பன போன்ற பல எடுகோள்களின் அடிப்படையில் உற்பத்தி வாய்ப்பு வளைகோடுகளை அமைத்து உற்பத்தியாளர் உயர் நிலை ஆதாயத்தைப் பெற முயல்வர்.

உள்ளீடுகளைப் பயன்படுத்தி உற்பத்தி செய்ய இயலும் பொருள்களின் அளவுகளை விளக்கும் அட்டவணை உற்பத்தி வாய்ப்பு அட்டவணை எனப்படும்.


உற்பத்தி வாய்ப்பு வளைகோடு: உற்பத்தி வாய்ப்பு அட்டவணைக் குறிப்புகளை வரைபடத்தில்

உற்பத்தி வாய்ப்பு அட்டவணை

| வ.எண் | வாய்ப்பு | x-இன் உற்பத்தியளவு | Y-இன் உற்பத்தியளவு |
|---|---|---|---|
| 1 | A | 0 | 25 |
| 2 | B | 10 | 23 |
| 3 | C | 15 | 20 |
| 4 | D | 20 | 15 |
| 5 | E | 25 | 0 |

காட்டப்பெறின் அவை இடமிருந்து வலமாக, மேலிருந்து கீழாகத் தோற்றுவாய்க்குக் குவிகோடாகப் (Convex) படம் 1-இல் காட்டியுள்ள வண்ணம் அமையும். இரு பண்டங்களையும் உற்பத்தி செய்வதால் A,E என்னும் புள்ளிகளில் ஏதேனும் ஒன்றில் உற்பத்தியாளர் இருக்க இயலாது. தம் மூலவளங்கள் அனைத்தையும் x,y பண்டங்களின் உற்பத்தியில் ஈடுபடுத்திவிடுவார் என்பது ஓர் எடுகோளாக இருத்தலால், ABCDE என்ற வளைகோட்டிற்கு உட்புறத்தில் (எடுத்துக்காட்டாக F என்ற புள்ளியில்) உற்பத்தியாளர் இருக்க இயலாது. உற்பத்தியாளரிடம் உள்ள மூலவளங்கள் குறிப்பிட்ட அளவிலேயே இருப்பதால், ABCDE வளை கோட்டிற்கு வெளிப்பகுதியில் உள்ள எந்தப் புள்ளியிலும் (எடுத்துக்காட்டாக G என்னும் புள்ளியில்) உற்பத்தியாளர் இருக்க முடியாது.

படம்-1





X இன் உற்பத்தி அளவு

மாற்று உருவாக்கும் இறுதிநிலை விகிதம்: உள்ளீடுகளின் அளவுகள் மாறாதிருக்கும் நிலையில் ஒரு பண்டத்தை மாற்றி உருவாக்கும் வீதத்தை மாற்று உருவாக்கும் வீதம் எனலாம். இறுதிநிலையில் இது மாற்று உருவாக்கும் இறுதிநிலை வீதம் (Marginal rate of Transformation) ஆகிறது. இடமிருந்து வலமாகச் செல்லும்பொழுது இவ்வீதம் அதிகரித்துச் செல்லும். y பண்டத்தின் அலகுகளை x பண்ட அலகுகளாக மாற்று உருவாக்கும் இறுதிநிலை வீதம் வரைபடம்-2-இல் அதிகரித்துச் செல்வதைக் காணலாம். y பண்ட அலகுகளின் எண்ணிக்கை $BB_2$ ஆகவும் x பண்ட அலகுகளின் எண்ணிக்கை $OB_2$ ஆகவும் இருக்கும் நிலையில், 1 அலகு x பண்டத்தை அதிகமாக உற்பத்தி செய்ய, $BB_1$ அளவு y பண்ட உற்பத்தியை இழக்க வேண்டியுள்ளது. $DD_2$ அளவு y பண்ட அலகுகளும் $OD_2$ அளவு x பண்ட அலகுகளும் இருக்கும் நிலையில், 1 அலகு x பண்டத்தை அதிகமாக உற்பத்தி செய்ய, $DD_1$ அளவு y பண்டத்தை ($BB_1$ -ஐக் காட்டிலும் அதிகமானது) இழக்க வேண்டியுள்ளது. $FF_2$ அளவு y பண்ட அலகுகளும் $OF_2$ அளவு x பண்ட அலகுகளும் இருக்கும் நிலையில், 1 அலகு x பண்டத்தை அதிகமாக உற்பத்தி செய்ய, $FF_1$ அளவு y பண்ட அலகுகளை இழக்க வேண்டியுள்ளது. இவ்வாறு 1 அலகு x பண்ட அலகை அதிகமாகப் பெறுவதற்காக இழக்கும் y பண்ட அலகின் அளவு அதிகரிக்கச் செல்வதை அதிகரித்துச் செல்லும் மாற்று உருவாக்கும் இறுதிநிலை விகிதம் என்று குறிப்பிடலாம். இக் காரணத்தால்தான் உற்பத்தி வாய்ப்பு வளைகோடு தோற்றுவாய்க்குக் குவிகோடாக அமைகிறது.


பொருளாதாரம் வளர்ச்சி பெறுகின்ற போதும், உற்பத்தி முறைகளில் முன்னேற்றம் தோன்றும் போதும் உற்பத்தி வாய்ப்பு வளைகோடுகள் மாறி

படம்-2





அமைகின்றன. படம்-3-இல் காட்டியுள்ளபடி குறிப்பிட்டதோர் உற்பத்தி முறையில் A,B உற்பத்தி வாய்ப்பு வளைகோடாக இருந்தால், அதனைக் காட்டிலும் பொருளாதார முன்னேற்றம் அடைந்திருக்கும் நிலையில் அல்லது உற்பத்தி முறை முன்னேற்றமடைந்திருக்கும் நிலையில் உற்பத்தி வாய்ப்பு வளைகோடு $A_1B_1$ ஆக உயர்நிலையில் அமையலாம். பொருளாதார வளர்ச்சி இன்னும் உயர்நிலையை அடைந்தால் அல்லது உற்பத்தி முறை இன்னும் உயர்நிலையை அடைந்தால், உற்பத்தி வாய்ப்பு வளைகோடு $A_2B_2$ ஆக உயர்நிலையில் அமையலாம். இக்கருத்துகளைப் படம்-3 விளக்குகிறது.

படம்-3




**விதி விலக்குகள்**: பொதுவாக உற்பத்தி வாய்ப்பு வளைகோடுகள் தோற்றுவாய்க்குக் குவிகோடுகளாக அமைந்தாலும், அவை இரு நிலைகளில் அமைப்பு மாறுபட வாய்ப்பு உண்டு. உற்பத்தி செய்யப்படும் பண்டங்கள் கூட்டுப் பண்டங்களாக (Joint Products) இருக்கும்போது, படம்-4-இல் உள்ளவாறும் நிறைவான பதிலிகளாக (Perfect Substitutes) இருக்கும்போது படம்-5-இல் உள்ளவாறும், உற்பத்தி வாய்ப்பு வளைகோடுகளின் அமைப்பு மாறுபட்டு அமையலாம்.


படம்-4




படம்-4-இல் காட்டியுள்ளபடி x,y பண்டங்கள் கூட்டுப் பண்டங்களாக இருக்கும்போது ஒன்றின் உற்பத்தி அதிகரிக்கும்போது மற்றதன் உற்பத்தியும் அதிகரிக்குமாதலால், உற்பத்தி வாய்ப்பு வளைகோடு ACB என்ற வடிவத்தில் அமைகிறது. உள்ளீடுகளின் அளவை அதிகரிக்கும் போது உற்பத்தி அளவும் அதிகரித்து, $A_1C_1B_1$ என்ற வடிவத்தில் உற்பத்தி வாய்ப்புக் கோடு அமைகிறது. உள்ளீடுகளின் அளவு மேலும் அதிகரிக்கப்படும்போது, $A_2C_2B_2$ என்ற வடிவத்தில் உற்பத்தி வாய்ப்புக்கோடு அமைகிறது.

x,y பண்டங்கள் ஒன்றுக்கொன்று நிறைவான பதிலிகளாக இருந்தால், பல்வேறு இடுமான அளவுகளிலான உற்பத்தி வாய்ப்பு வளைகோடுகள் படம்-5-இல் காட்டியுள்ள வண்ணம், AB, $A_1B_1$, $A_2B_2$ என்ற கோடுகளின் வடிவத்தில் அமையும். இவ்விரு அமைப்புகளும் பொதுவான தன்மையிலிருந்து வேறுபட்டுக் காணப்படும் விதி விலக்குகளாகும்.

படம்-5





**சமவருவாய்க் கோடுகள்:** உற்பத்தியாளர் உயர் ஆதாயம் பெற எவ்வளவு உற்பத்தி செய்ய வேண்டும் என்பதைக் காண மொத்த வருவாய்க் கோடுகள் (Total Revenue Curves) பயன்படுகின்றன. இவற்றைச் சமவருவாய்க் கோடுகள் (Iso Revenue Curves) என்றும் குறிப்பிடுவது மரபு. படம்-6-இல் விளக்குகிறபடி x,y பண்டங்களின் விலைகள் மாறாதிருக்கும் நிலையில் y பண்டங்களை மட்டும் உற்பத்தி செய்தால் OT அளவு மொத்த வருவாயும், x பண்டங்களை மட்டும் உற்பத்தி செய்தால், OR அளவு மொத்த வருவாயும் கிடைப்பதாகக் கொண்டால் TR கோடு மொத்த வருவாய்க் கோடு எனப்படும். y,x பண்டங்களின் விலைகளைப் பொறுத்து TR கோட்டின் அமைப்பும் நிலையும் அமைகின்றன. விலைகள் குறைவாக இருப்பின் TR கோடும், விலை சற்று உயர்ந்து இருப்பின் $T_1R_1$ கோடும், விலை இன்னும் அதிகமாக இருப்பின் $T_2R_2$ கோடும் அமைகின்றன. TR கோட்டின் சரிவு $\frac{P_x}{P_y}$ என்பதைப் பொறுத்தமையும்.

($P_x$ என்பது x பண்டத்தின் விலை, $P_y$ என்பது y பண்டத்தின் விலை). மேலும், இக்கோட்டின் எல்லாப் புள்ளிகளிலும் உற்பத்தியாளர் பெறும் மொத்த வருவாய் சம அளவினதாக இருக்குமாதலால், இக் கோட்டைச் சம வருவாய்க் கோடு என்று குறிப்பிடுகின்றனர்.


தோற்றுவாயிலிருந்து மேன்மேலும் வலப்புறமாக அமையும் சம வருவாய்க் கோடுகள் உயர்நிலை

படம்-6




மொத்த வருவாயைக் குறிப்பிட்டுக் காட்டுகின்றன. படம்-6-இல் உள்ளபடி TR-இல் பெறும் மொத்த வருவாயைக் காட்டிலும் $T_1R_1$ - இல் பெறும் மொத்த வருவாய் அதிகமாகவும், இவ்வருவாயைக் காட்டிலும் $T_2R_2$ - இல் பெறும் மொத்த வருவாய் மேலும் அதிகமாகவும் இருக்கும்.

**உயர்நிலை உற்பத்தி அளவுகள்:** உற்பத்தி வாய்ப்பு வளைகோடுகள் உற்பத்தியாளருக்கான பல வாய்ப்புகளைக் காட்டுகின்றன. சமவருவாய்க் கோடுகள் உற்பத்தியாளர் பல விலைநிலைகளில் பெறத்தக்க உயர்நிலை வருவாய்களைக் காட்டுகின்றன. உற்பத்தியாளர்களுக்குப் பலவகை அடிப்படை நோக்கங்கள் இருப்பதற்கான வாய்ப்புகள் இருந்தாலும், உயர்நிலை ஆதாயத்தைப் பெற வேண்டும் என்பதே பெரும்பாலான உற்பத்தியாளர்களின் அடிப்படை நோக்கமாக இருப்பதை நடைமுறையிற் காணலாம். x,y என்ற இருபண்டங்களை உற்பத்தி செய்யும்போது எந்தெந்த அளவுகளில் x,y பண்டங்களை உற்பத்தி செய்தால் உயர்நிலை வருவாயைப் பெறுதல் இயலும் என்பதை உற்பத்தியாளர் தெரிந்து செயற்படும் முறையைப் படம்-7 காட்டுகிறது. $T_1R_1$ என்ற மொத்த வருவாய்க் கோட்டில் C என்ற புள்ளியில் மொத்த வருவாய்க் கோடும் உற்பத்தி வாய்ப்பு வளைகோடும் சமமாகின்றன. எனவே, CQ அளவு y பண்டங்களையும் OQ அளவு y பண்டங்களையும் உற்பத்தியாளர் உற்பத்தி செய்து, உயர்நிலை மொத்த வருவாயைப் பெறுவார். B,D என்ற புள்ளிகளும் அதே உற்பத்தி வாய்ப்பு வளை கோட்டில் இருந்தாலும், அவை TR என்ற குறைந்த மொத்த




வருவாய்க் கோட்டிற்குச் சமமாவதால் உற்பத்தியாளர் அவற்றை விரும்பார்.

இந்நிலையில் உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டிற்கு மொத்த வருவாய்க் கோடு தொடுகோடாக அமையும் ($T_1 R_1$ கோடு ABCDE என்ற உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டிற்குத் தொடுகோடாக C என்ற புள்ளியில் அமைந்திருப்பதைக் காண்க). மேலும், இந்நிலையில் இரு பண்டங்களின் விலைவீதமும் அவைகளுக்கிடையேயான மாற்று உருவ இறுதிநிலைவீதமும் சமமாக இருக்கும். அதாவது, $MRT = xy = \frac{P_x}{P_y}$ என்றிருக்கும். (C என்ற புள்ளியில் $T_1R_1$ கோட்டின் சரிவும், ABCDE என்ற வளை கோட்டின் சரிவும் ஒன்றுக்கொன்று சமமாக இருக்கின்றன).

பயன்கள்: இரு பண்டங்களை ஒரு நிறுவனம் உற்பத்தி செய்யும்போது ஒவ்வொன்றிலும் எவ்வளவு பண்டங்களை எவ்வாறு உற்பத்தி செய்தல் நன்று என்பதை அறிய இவ்விளக்கம் பயன்படுகிறது. திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருக்கும் ஒரு நாடு இன்றியமையாத பண்டங்கள், வசதிப்பண்டங்கள், ஆடம்பரப் பண்டங்கள் போன்ற பலவகையான பண்டங்களை உற்பத்தி செய்ய வேண்டிய நிலையில் இருக்கும். இந்நிலையில் எவ்வகைப் பண்டங்களின் உற்பத்திக்குச் சிறப்பிடம் கொடுக்க வேண்டும், அவற்றின் அளவை எவ்வாறு வரையறுக்க வேண்டும் என்பன போன்றவற்றை முடிவு செய்யவும் இக்கருத்துப் பயன்படுகிறது. மேலும், தனியார் துறை, பொதுத் துறை என்ற இரு துறைகளிலும் உற்பத்தி நிகழ்ந்து கொண்டிருக்கும் பொருளாதாரங்களில், எத்துறையில் எவ்வளவு உற்பத்தி நிகழும் வண்ணம் உற்பத்தி மூலவளங்களைப் பகிர்ந்து பயன்படுத்தினால் பொளாதாரம் உயர்நிலைப் பயனைப் பெறும் என்பதை அறிந்து செயற்படவும் இக்கருத்துப் பயன்படுகிறது. உடனடியாகப் பயன்படத்தக்க நுகர்வோர் பண்டங்கள், நுகர்வோர் பண்டங்களை எதிர்காலத்தில் பெருமளவில் பெற, இப்போது உடனடியாக உற்பத்தி செய்யப்பட வேண்டிய மூலதனப் பண்டங்கள் ஆகியவற்றில், பண்டங்களை உற்பத்தி செய்வதற்கு மூலவளங்களை எவ்வகையில் பங்கீடு செய்ய வேண்டும் என்பதில் முடிவுகளை மேற்கொள்ளவும் இக்கருத்துப் பயன்படுகிறது. என்.எஸ்.பா.

துணை நூல்கள்:

**Koutsoyiannics, A.**, Modern Micro Economics, The Macmillan Press Limited, London, 1983.

**Seth, M.L.**, Micro Economics, Lakshmi Narayan Agarwal, Agra, 1978.

***உற்பலாங்கி***: இவள் கௌரி நோன்பு மேற்கொள்வோர் அடையும் நன்மையை விளக்கும் கதை ஒன்றில் இடம்பெறும் ஒரு பார்ப்பனப் பெண். இவள் தந்தை கோபால மறையவன் என்னும் அந்தணன் ஆவான். அவன் தன் மகளை உரிய காலத்தில் அந்தண இளைஞன் ஒருவனுக்குக் கன்னிகாதானம் செய்ய முற்பட்டான். திருமணத்தில் கரம் பற்றுதல் என்னும் பாணிக் கிரகணம் நிகழுமுன்னர் மணமகன் இறந்துபட்டான். அடுத்து ஒரு மணமகனுக்குத் திருமணம் செய்ய முற்பட அவனும் இறந்தான். இவ்வாறே 20 முறை பாணிக் கிரகணம் தடைபட்டு, மணமகன் 20 பேரும் இறந்தமை அறிந்து, [illegible] வருத்தம் மிகவுற்று இருந்த நிலையில் அவனும் இறந்துபட்டான். தந்தையை இழந்த உற்பலாங்கி வருந்தி திருப்பூவணம் என்னும் தலத்தினை அடைந்து, அங்குள்ள மணிகர்ணிகை என்னும் தீர்த்தத்தில் நீராடி, காலமுனிவர் என்பவரைக் கண்டு வணங்கி வேண்டினாள். அவள் வரலாறுணர்ந்த அம்முனிவர், கௌரி நோன்பினை மேற்கொண்டு நிறைவு செய்யாததால் பாணிக் கிரகணம் நடக்கு முன்னர் மணமகன் இறந்துபடும் நிலையினை அவள் அடைந்தாள் என்று கூறினார். மேலுமவர், திருப்பூவணத்திலுள்ள மணிகர்ணிகையில் நீராடியதால் அவளது தீவினை நீங்கிய தென்றும், இனிக் கௌரி நோன்பு மேற்கொண்டு

பூசித்து அதனை நிறைவு செய்தால் அவள் நித்திய சுமங்கலி ஆவாள் என்றும் கூறினார். அவ்வாறே நோன்பு மேற்கொண்டு நிறைவு செய்த பின்னர்க் கணவனொடு கூடிச் சுமங்கலியாக விளங்கினாள் என்று கூறப்படுகிறது. இவளைப் பற்றிய கதை கௌரி நோன்பின் மாட்சியையும், திருப்பூவண மணிகர்ணிகைத் தீர்த்தச் சிறப்பையும் உணர்த்துவதாக உள்ளது. அ.மா.ப.

**உற்பவ மாலை:** இது தமிழில் பிற்காலத்தே தோன்றிய சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று. 'பிறப்புப் பற்றிப் பாடப்பட்ட செய்யுள் தொகை' என்பது இதன் சொற்பொருளாகும். பன்னிரு பாட்டியல் இச் சிற்றிலக்கியத்தினை 'ஆழியோன் பிறப்பு' என்று குறிப்பிடுகிறது. வெண்பாப்பாட்டியல், நவநீதப் பாட்டியல், பிரபந்தமரபியல், சிதம்பரப்பாட்டியல் ஆகிய பாட்டியல் நூல்களில் இச்சிற்றிலக்கியம் 'தசப்பிராதுற்பவம்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இலக்கண விளக்கம், முத்துவீரியம், பிரபந்த தீபிகை ஆகியன இதனை உற்பவமாலை என்று கூறுகின்றன. திருமாலின் பத்துப் பிறப்புகளை (அவதாரங்கள்) பத்து அகவல் விருத்தங்களில் பாடிப் பரவி, தாம் போற்றும் பாட்டுடைத் தலைவனைக் காக்கும் படியாகப் புலவர் வேண்டி அமைக்கும் இலக்கியம் உற்பவமாலையாகும். திருமாலின் பத்துப் பிறப்புகளையும் சேலே ஆமை ஏனம் சிங்கம், கோல வாமனன் மூவகை இராமர், கரியவன் கற்கி என்று சுட்டி, அந்த அவதாரக் கடவுளர்களைப் பரவிப் பாட்டுடைத் தலைவனைக் காக்குமாறு வேண்டிப் பத்து ஆசிரிய விருத்தத்தால் இப்பிரபந்தம் பாடப்பெறும் என்று பன்னிருபாட்டியல் இதன் இலக்கணத்தை விளக்கமாகக் கூறியுள்ளது. பிற பாட்டியல் நூல்கள் திருமாலின் பத்து அவதாரங்களையும், 'பத்தான அரிபிறப்பு', 'அரிபிறப்பு ஒருபது', 'அரிபிறப்பு ஈரைந்து' என்னும் தொடர்களால் குறிப்பிட்டுள்ளன. அ.மா.ப.

**உற்றுநோக்கல்:** அறிவியல் ஆராய்ச்சியில் பொருள்களிடையே காரண காரியத் தொடர்பைத் தெரிந்துகொள்ள முயற்சி செய்கின்றனர். இதற்காக உண்மை நிகழ்ச்சிகளைக் கவனமாக ஆராய்ந்து அவற்றின் அடிப்படையான விதிகளைக் காண முயல்கின்றனர். இதற்குப் பல சோதனைகள் செய்யப்படுகின்றன. இவற்றைத் தொகுப்பு விதிகள் என்பர்.

உற்றுநோக்கலும் (Observation), சோதனை (Experiment) முறைகளும் தொடர்புடையனவாக அமைகின்றன. மிகவும் முக்கியமான அறிவியல் முறைகள் உற்றுநோக்கலும் சோதனை முறைகளுமாகும்.

**உற்றுநோக்கல்:** உற்றுநோக்கல் என்பது கவனமாகவும் குறிக்கோளுடனும் ஒருபொருளை அல்லது நிலைமையை ஆய்வது. சோதனை முறை என்பதைக் கட்டுப்படுத்தப்பட்ட உற்றுநோக்கல் முறை என்று கூறலாம். தொகுப்பு முறை என்பது பொதுவாக அமைத்துச் சொல்வது என்பதாகும். நேர்மையான உற்றுநோக்கலும், சரியான சோதனை முறையும் பொது விதி அமைப்பதற்கு அடித்தளமாக அமைகின்றன.

**உற்றுநோக்கல் என்றால் என்ன?** உற்றுநோக்கல் என்பது தற்செயலாக ஒன்று அல்லது இரண்டு முறை பார்ப்பது மட்டுமன்று. பார்க்கும்பொழுது ஒழுங்காகவும் தொடர்பாகவும் பிரித்துணர்ந்து புரிந்துகொள்ளக் கூடியதாகவும் உண்மையாகவும் அமைந்திருக்க வேண்டும். எப்பொழுதும் ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிக்கு முன் நிகழ்ச்சியாகப் பல அமைந்திருக்கும். அவற்றுள் சில தேவையுள்ளனவாகவும் சில தேவையற்றனவாகவுமிருக்கும். நல்ல அனுபவமுடையவர் நன்றாகத் தேர்ந்தெடுத்துத் தேவையில்லாதனவற்றை நீக்கிவிடுவார். உற்றுநோக்கல் என்பது பார்ப்பது மட்டுமல்லாமல், கவனமாகவும்ஒரு நோக்கத்துடனும் செயற்படும் நிகழ்ச்சியாகும்.

**உற்றுநோக்கலின் சிறப்புக் கூறுகள் யாவை?** (1) ஒழுங்கான புலனறிவு: ஒரு வரையறை செய்யப்பட்ட நோக்கத்துடனும் முறையுடனும் உற்றுநோக்கல் செய்யவேண்டும். (2) உற்று நோக்கல் என்பது தேர்ந்தெடுப்பது. உற்றுநோக்கல் செய்யும்பொழுது தேவையான உண்மை நிகழ்ச்சிகளையே கவனிக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, உரோசாப்பூவின் கணங்களை ஆராய்பவர் ஒரு தோட்டத்திலுள்ள உரோசாப்பூக்களை மட்டும் பார்க்கிறார்; மற்றவற்றைப் பார்ப்பதில்லை. (3) பொருளின் தன்மையுள்ள அல்லது அறியப்படும் பொருள்சார்ந்த (Objectivity) இது அறநிலை சார்ந்தது. உற்றுநோக்கல் செய்யும் பொழுது, பாச உணர்வுகளுக்கு இடந்தரக் கூடாது. (4) உற்றுநோக்கல் செய்யும்பொழுது சில நிகழ்ச்சிகளிலிருந்து முடிவைத் தெரிந்துகொள்ளும் முயற்சி ஏற்படும். செவான்சு (Javons) கூறியது போல ஒருவருடைய புலனறிவிலிருந்து ஏற்படுகிற உணர்விலிருந்து கண்ட உண்மைகளைக் கூறும்பொழுது பிழையில்லை.

**யாதும் ஊகிக்கக் கூடாது:** சில சமயங்களில் சில நிகழ்ச்சிகளிலிருந்து சில முடிவுகளை எடுக்க நேரிடலாம். உற்றுநோக்கலில் இத்தகையஊகத்திற்கு இடம் தரலாகாது. ஒருவர் புலன் அறிவுகொண்டு கண்ட உண்மைகள் பிழைகளல்ல. ஆனால் மனத்தில்

ஒன்றைக் கருதிக்கொண்டு ஊகித்தால் தவறு ஏற்படும்.

கருவியின் துணை கொண்டு செய்கின்ற உற்று நோக்கல் நல்ல பலனைக் கொடுக்கும். ஒரு மனிதனுடைய தட்பவெப்பநிலை (Temperature) அவனுடைய முகம் சிவந்திருத்தலிலிருந்தும் நாடித் துடிப்பிலிருந்தும் உடம்பின் சூட்டிலிருந்தும் தெரியவரும். சரியாகத் தெரிந்துகொள்ளத் தட்பவெப்ப அளவைக் கருவி (வெப்பமானி) பயன்படுத்தப்படுகிறது. இதே போல், ஒரு மருத்துவர் ஒரு மனிதனின் குறைவான இரத்த அழுத்தத்தைக் காணத் தட்பவெப்பக் கருவியைப் பயன்படுத்துகிறார்.

**உற்றுநோக்கலின் பொதுவான வரையறைகள்:** சாயிசு (Joyce) கருத்துப்படி உற்றுநோக்கல்களுக்கு இன்றியமையாது வேண்டப்படுவன: (1) அறிவாற்றலுள்ள கட்டுப்பாடு (Intellectual Restriction): தெரிந்துகொள்ள வேண்டும் என்ற தூண்டுதல் இல்லாவிட்டால் சரியான உற்றுநோக்கல் நிகழாது. ஓர் அறிவியல்வாதி தற்பெருமை உணர்ச்சியடைந்தால் உற்றுநோக்கும் தன்மையை இழந்துவிடுகிறான். (2) ஓர் அறிவியல்வாதியின் புலன்கள் சரியாக அமைந்திருத்தல்: குறையுள்ள கண்ணாடி அணிந்திருப்பவனும் மஞ்சட்காமாலை நோயினால் தாக்குண்டவனும் உற்றுநோக்கல் முறையைக் கையாள முடியாது. (3) ஒழுக்க வரையறை: அறிவியல்வாதிக்குத் தன்மானமும் நேர்மையும் (Honesty) அமைந்திருக்க வேண்டும். செவான்சு கூறியதுபோல் நேர்மையான மனிதனைக் காணுவது எளிதன்று.

உற்றுநோக்கல் அறிவியலில் புதிய உண்மைகளைக் கண்டுபிடிப்பதற்கும் ஆராய்ச்சி செய்வதற்கும் பெரிதும் துணைசெய்கிறது. குழந்தைகள் தங்கள் இளமைப் பருவத்தில் தங்களைச் சூழ்ந்த பகுதிகளையும் மனிதர்களையும் கவனிக்கிறார்கள். குழந்தையின் அறிவை உற்றுநோக்கல் வளர்க்கிறது. அறிவு வளர்ந்தால் எத்தகைய சூழ்நிலையிலும் நல்ல முறையில் நடந்துகொள்ளக் குழந்தைக்குப் பழக்கம் ஏற்படுகிறது.

**உற்று நோக்கலின் வரையறை:** யுங்கு அம்மையார் (Mrs. P.V. Yung) கூறியபடி உற்று நோக்கல் கண்கள் வழியாகச் செயற்படுகிறது. உற்று நோக்கல் என்பது வெறும் பார்வையன்று; நன்றாகப் பார்த்து ஆராய்வதன் மூலம் உண்மைகளைத் தெரிந்து கொள்வதாகும். உற்று நோக்கல் இருவகைப்படும். ஒன்று பார்க்கிறவர் பார்க்கும் நிகழ்ச்சிகளில் ஒன்றுபட்டிருக்கிறார் (Participant Observation). மற்றொன்று தான் வேறாக நின்று நிகழ்ச்சிகளைக் கவனிக்கிறார் (Non-Participant Observation). உற்று நோக்கலில் காரண காரியத் தொடர்பு ஆராயப்படுகிறது.

**உற்று நோக்கலுக்குத் தேவைப்படுவன:** 1. உற்று நோக்கல் கண்கள் மூலமாக நடைபெறுகிறது. சி.ஏ. மேசெர் (C.A. Meser) கூறியபடி உற்றுநோக்கல் காது, வாய் முதலியவற்றை விடக் கண்கள் வழியாக நடைபெறுகிறது. உண்மையான உற்று நோக்கல் செய்பவர் காதால் கேட்டனவற்றை நம்ப மாட்டார். சாதாரணமாகச் சொல்வதென்னவெனில் கண்ணால் காண்பதைப் பகுதியாக நம்பு. ஆனால், காதால் கேட்டனவற்றை முழுவதும் நம்பாதே. எல்லாவகைச் சான்றுகளையும்விடக் கண்களால் ஏற்படுகின்ற சான்றானது மிகவும் முக்கியம் என்பதாகும்.

2. திட்டமான குறிக்கோள்: ஒவ்வோர் அறிவியல் சம்பந்தமான உற்று நோக்கலுக்கும் ஒரு குறிக்கோள் உண்டு. தற்காலிகக் கோட்பாடு (Hypothesis) என்பது சரிதானா என்று பார்ப்பது. அதன்படி உற்று நோக்கல் எப்பொழுதும் நோக்கமுள்ளதா என்று அறிய வேண்டும். அதன் நோக்கம் என்னவெனில் பொருள்களிலுள்ள காரண காரியத் தொடர்பை அறிய முற்படுவதாகும். உற்று நோக்கலுக்குத் திட்டம் தேவை. இதற்குத் தேவையாக துணைக் கலன்களும் கருவிகளும் தேவை.

3. குறிப்பு: ஞாபகசக்திக்கு அறிவியல் திட்டத்தில் அதிக முக்கியத்துவம் கொடுப்பதில்லை. ஏனென்றால் படித்தவற்றில் பெரும்பாலன மறக்கப்படுகின்றன. பொதுவாக எழுத்து மூலமாகப் பதிந்து கொள்வது நல்லது. இந்தக் காலத்தில் ஒலிப்பதிவு நாடாவில் (Tape – Record) பதிவு செய்யப்படும்.

**உற்று நோக்கலின் வகைகள்:** உற்று நோக்கல் பங்கு பெறுகிற அல்லது முயற்சியுள்ள உற்று நோக்கல் என்றும், பங்கு பெறாத அல்லது செயலற்ற உற்று நோக்கல் என்றும் இருவகைப்படும். உற்று நோக்கல் செய்பவர் பங்கு பெறுகின்ற நிகழ்ச்சியில் கலந்து கொள்கிறார்; பங்கு பெறாமல் சில நிகழ்ச்சிகளைத் தூரத்தே நின்று கவனிக்கிறார். சமூக உளவியலில் கட்டுப்படுத்தப்பட்ட உற்று நோக்கல் நடைபெறுகிறது.

**கட்டுப்படுத்தப்படாத உற்று நோக்கல்:** கட்டுப்படுத்தப்படாத உற்று நோக்கலில் இயற்கையாக நிகழ்ச்சிகள் நடைபெறும். பார்க்கிறவர் தடை செய்

வது இல்லை. கட்டுப்படுத்த முடியாத உற்று நோக்க லில் பார்க்கிறவர்க்கு எவ்வகைப் பொறுப்பும் இல்லை. ஆனால், கட்டுப்படுத்தப்பட்ட உற்று நோக்கலில் பொருள்களிடத்தும் பார்க்கிறவரிடத்தும் ஒரு கட்டுப்பாடு இருக்கும்.

உற்று நோக்கலின் வரம்புகள்: 1. சில நிகழ்ச்சி கள் உற்று நோக்கலுக்கு அப்பாற்பட்டன. மிகவும் சிறியனவாக இருக்கின்ற பொருள்களும் மிகவும் பரந்து கிடக்கின்ற பொருள்களும் உற்று நோக்கலுக்கு அப்பாற்பட்டன. 2. உற்று நோக்கலும் நோக்கப் படுவனவும் ஒரே பரப்பு அல்லது காலத்திலுள்ளன வல்ல. எ-டு. நாம் மனிதர்களின் நடந்து கொள்கிற முறையைக் கவனிக்கச் சண்டையைத் தூண்டிவிடமுடி யாது. 3. சில பொருள்கள் உற்று நோக்க முடியா தன. எ-டு. விருப்பங்கள் வெறுப்புகள் முதலியன. 4. முடிவுகள் நம்ப முடியாதனவாயிருக்கின்றன. கூடே (Goode) சொல்வதுபோல் தன்னம்பிக்கை வளர வளர ஆராய்ச்சியாளரின் கருத்துகள் வளம் பெறுவதோடு அவர் உற்று நோக்கலில் நம்பிக்கை இழக்கிறார். 5. பொய்த் தோற்றம் (Illusory Observation): உற்று நோக்கலில் ஒருவர் கண்களை நம்புகிறார், கண்ணால் பார்ப்பதில் நிறைய பிழை கள் இருக்கின்றன. எ-டு. கானல் நீர். 6. பார்க்கும் பொருள்களில் அல்லது மனிதர்களில் ஒரு தனி உணர்வு ஏற்படுகிறது. அதாவது உண்மையான குணங்களைச் சில சமயத்தில் பார்க்க முடியாது. ஒரு மாணவன் பக்கத்தில் வந்து மேற்பார்வையிடுகிறவர் கவனித்தால் எழுதுவதை நிறுத்திவிட்டு, எழுதிய தைப் படிப்பதைக் காணலாம். 7. உற்று நோக்கு கிறவர்கள் உண்மையில்லாத தன்மையில் சில சமயங் களில் கவனத்தைச் செலுத்திவிடுகிறார்கள். ஒரு மனிதன் மதுக் கடையிலிருந்து குடித்து விட்டு வெளியே வந்து மக்களைச் சுடத் தொடங்கினால் குடித்ததனால் அவ்வாறு செய்கிறான் என்று சொல்லு கிறார்கள். ஆனால், அது உண்மையன்று. 8. மெது வாக உற்று நோக்கலில் ஈடுபட்டால் நோக்குகின்ற வருக்கும் நோக்குகின்ற பொருளிற்குமிடையேயுள்ள அக்கறை கெட்டுவிடும். கூட்டுச் சேரும்பொழுது உற்று நோக்கலில் பணம் அதிகம் செலவாகிறது.

உற்று நோக்கலில் எல்லாம் தெரிந்து கொள்ள முடியாது.

உற்று நோக்கலின் நன்மைகள்: 1. எல்லா வகைச் சமூக அறிவியல்களுக்கும் இந்த முறை பொது வானது. 2. இது மற்ற முறைகளை விட எளிதா னது. உற்று நோக்கலில் வல்லுநராகப் பயிற்சி அதிகம் தேவையில்லை. 3. இதில் கிடைக்கிற தீர்வுகள் நேரடியானவை; உண்மையானவை. 4. எல்லா வகைச் சமூக அறிவியல்களிலும் உற்று நோக்கல் முறை தற்காலிகக் கோட்பாடு (Hypothesis) அமைப் பதற்கு அடித்தளமாக அமைகிறது. 5. கருது கோள்கள் சரியானவையா என்று பார்ப்பதற்கு உற்று நோக்கல் தேவைப்படுகிறது. 6. உற்று நோக்கலில் கிடைக்கப் பெறுகின்ற முடிவுகள் நம்பத் தக்கனவாக அமைகின்றன. இரா. கோ.

துணை நூல்கள்:

**Donald. C. William**, The Ground of Induction, Cambridge, Mass, 1947.

**Roy F. Harrod**, Foundations of Inductive Logic, London, 1956.

**Ram Nath Sharma**, Logic, Kedar Nath Ram Nath & Co., Meerut, 1981.

**உறங்காப்புளி** வைணவப் பெரியார் நம்மாழ் வார் அவதரித்த ஆழ்வார்திருநகரி என்னும் ஊரில் உள்ள பழைமை வாய்ந்த புளியமரம். ஆழ்வார்திரு நகரியிலுள்ள அருள்மிகு ஆதிநாதர் ஆழ்வார் திருக் கோயிலில் இது இன்றும் உள்ளது. நம்மாழ்வார் கலி யுகம் தோன்றி 48 ஆம் நாள் அவதரித்ததாகக் கூறு வர். அவர் இப்புளிய மரத்தின் கீழ்தான் யோக நிலையில் அமர்ந்தார் என்பர். ஏழுகிளைகளை யுடைய இம்மரத்தின் கிளைகள் தரைமீது படர்ந்த நிலையில் உள்ளன. இம்மரத்தின் இலைகள் இரவி லும் பகலிலும் விரிந்த நிலையில் காணப்படுவதால் இதனை உறங்காப்புளி என்று சொல்கின்றனர். இதன் பூக்கள் காய்களாக மாறினாலும் அவை முற்று வதுமில்லை; பழுப்பதுமில்லை. இம்மரம் புராணத் துடன் தொடர்புபடுத்தப் பெற்று வழிபாட்டிற்குரிய தாக விளங்குகிறது. திருமாலின் அவதாரத்தில் அவரை விட்டுப் பிரியாதிருக்க ஆதிசேடன் விரும்பிய தால் மரமாகிய வேற்றுருவுடன் இங்குக் காட்சி தருகிறார். திருக்குறுங்குடி நம்பியே நம்மாழ்வாராக அவதரித்தமையால் முன்பு ஒரு மரமாக இருந்த இப் புளிய மரம் நம்மாழ்வாரின் யோகநிலை இருப்புக்குப் பின் உறங்காப்புளியாக மாறிவிட்டது என்று கூறு கிறார்கள். பி.தெ.

**உறங்கா வில்லிதாசர்** எம்பெருமானார் என்றும் உடையவர் என்றும் போற்றப் பெற்ற இராமானுசர் காலத்தில் வாழ்ந்த வைணவப் பெரியார்களுள் ஒருவர். அதனால் இவர் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராவர். இவர்

உறையூர்ச் சோழ மன்னன் அரண்மனையில் மல்லர் பிரிவுத் தலைவராக இருந்தார். இவர் இயற்பெயர் மறைந்து சிறப்புப் பெயராலேயே வழங்கப் பெற்றார். இவர் துணைவியார் பெயர் பொன்னாச்சியார். அந்த அம்மையார் கண்ணழகு நிரம்பப் பெற்றவர்.

வில்லியார் ஒரு நாள் உறையூரிலிருந்து தம் மூராகிய திரு வெள்ளறைக்கு நடுப்பகல் வெயிலில் காவிரியாற்றுச் சுடுமணலில் பொன்னாச்சியாருடன் நடந்து வரவேண்டியதாயிற்று. சுடுமணல் கொடுமைக் காற்றாத பொன்னாச்சியார் நிலை கண்டு, இவர் தம் மேலாடையை விரித்துப் போட்டுக் கொண்டே அதன்மீது நடந்துவரச் செய்தார். அப்போது அங்கிருந்த எம்பெருமானார் இதனைப் பார்த்து 'இவ்வளவு ஈடுபாடு ஏன்' என்று வினவ, 'பொன் னாச்சியார் கண்ணழகுக்குத் தோற்று இவ்வாறு ஈடு பட்டுள்ளேன்' என்றார்.

'அப்படியா! இதனைவிடச் சிறந்த கண்ணழ குண்டு; காட்டுகிறேன் வாரும்' என்று அழைத்துச் சென்று திருவரங்கம் பெரிய கோவில் பெருமானைக் காணச் செய்தார் எம்பெருமானார். அந்தச் செந்தாமரைக் கண்களின் அருட்பேரழகினை ஆராவமுதாகப் பருகிப் பேரீடுபாடுகொண்டார் வில்லியார். இராமாநுசருக்கும் தாசராயினார். அன்று முதல் இவர் பகலில் அரசர் பணியிலும், இரவில் இராமாநுசர் பணியிலும் உறக்கமின்றி ஈடுபட்டு உறங்காவில்லிதாசர் ஆயினார். ஈட்டிய பெரும் செல்வத்தைப் பக்தர் கூட்டத்துக்குப் பயன்படுத்தி னார். இராமாநுசர் மடத்துப் பொறுப்பு இவர் மேலதாயிற்று. இவர் பக்தியும் பணியும் இராமா நுசருக்கு நிறைவளித்தன.

இராமாநுசர் காவிரியில் நீராடுதற்குச் செல்லுங் கால் அந்தணர்குலத் தலைவர் முதலியாண்டான் கையைப் பிடித்துக் கொண்டு சென்று, நீராடித் திரும்புங்கால் இவர் கையைப் பிடித்துக் கொண்டு வருவது வழக்கம். அந்தணர் குலத்தேம் என்னும் அகங்கார மாசு, நான்காம் வருணத்தில் தோன்றிய உறங்காவில்லிதாசர் கைப்பட்டவுடன் நீங்கித்' தூய்மை அடைவதாக இராமானுசர் கருதினார். இச்செய்தி 'ஆச்சார்ய இருதயம்' என்னும் நூலில் இடம் பெற்றுள்ளது.

இவர்க்களித்த இந்தச் சிறப்பினைச் சிலர் தாழ்வு படுத்திப் பேசினர். இதனையறிந்த இராமாநுசர் வில்லியாரின் உயர்வை அவர்களுக்குத் தெரிவிக்க எண்ணினார். ஒருநாள் அவர்கள் ஆடைகளை அவர் கள் அறியாவண்ணம் சிறிதளவு கிழித்துவிடுமாறு செய்தார். கிழிசலைக் கண்ட அவர்கள் பொறுமை யிழந்து சினங்கொண்டு கிழித்தவர்களைப் பலவாறு இழித்துப் பேசினர். அன்றிரவே இராமாநுசர் அடியார் சிலரை ஏவி உறங்காவில்லியார் இல்லத்தில் பொன் னாச்சியார் உறங்கும்போது நகைகளைக் கழற்றி எடுத் துவரச் செய்தார். சென்றவர்கள் நகைகளைக் கழற்றும் போது அதனை உணர்ந்து கொண்ட நாச்சி யார், இராமாநுசர் அடியார்களே இவர்கள் என்று நிச்சயித்து, ஒரு பக்கத்து நகைளை எடுத்தவுடன் அடுத்த பக்கத்து நகைகளைக் கழற்றிக் கொள்வதற் காகப் புரண்டுபடுத்தார். நாச்சியார் விழித்துக் கொண்டார் என எண்ணி அவர்கள் ஓடிச் சென்று எடுத்த நகைகளை உடையவர் முன் வைத்தனர்.

அரசுப் பணியிலிருந்து திரும்பிய வில்லியார் நடந்தவற்றை அறிந்தார். வந்தவர்களே உன்னைப் புரட்டி நகைகளைக் கழற்றிக் கொள்வதற்கேற்றபடி உணர்வற்றுக் கிடக்காமல் நீ புரண்டு படுத்ததனால் அன்றோ அவர்கள் சென்றுவிட்டனர் என்று கடிந்து கொண்டார். இச்செயலுக்கேற்ற தண்டனை தர வேண்டும் என எம்பெருமானாரை வேண்டி நின்றார். இதனை, இவர் மீது பொறாமை கொண்டவர்கள் அறிந்து வியந்து வெட்கித் தலைகுனிந்தனர். அப் போது இராமாநுசர், 'இவர்களைத் திருத்துவதற்காகத் தாம் மேற்கொண்ட நாடகமே இது', என்று தெளிவு படுத்தி நகைகளையும் திருப்பிக் கொடுத்தார்.

இராமாநுசருக்குச் செய்யும் தொண்டில் உறங்கா வில்லிதாசர்க்கு அவர் மருமக்கள் வண்டர், சுண்டர் என்ற இருவரும் இரண்டு கைகள் போல் துணையாக இருந்தனர். நம்பெருமாள் புறப்பாட்டின் போது யாதாவது குறை நேர்ந்தால் தம்மை முடித்துக் கொள் வதற்காக ஒரு கையில் வில்லும் ஒரு கையில் கத்தியு மாகச் சென்று கொண்டிருப்பார் வில்லியார். இவ் வாறு எம்பெருமானார் அணியிலும் நம்பெருமாள் பணியிலும் சிறந்து, ஆழ்வார்கள் போல் ஆழ்ந்த பக்தி யுடன் வாழ்ந்த வைணவச் செல்வர் இவ்வுறங்கா வில்லிதாசர். கொ.இல.

**உறவிலிக் குழுக்கள்** : சமுதாயத்தில் மக்கள் சமூகம், பொருளாதாரம், அரசியல், சமயம் முதலான அமைப்புகளில் தாம் எண்ணும் பல நலன்களை அடையத் தம் வாழ்க்கை அமைப்பின் ஒவ்வொரு நிலையிலும் பல்வேறு பிரிவினருடனும் குழுக்களுடனும் தொடர்புற்றுச் செயற்படுகின்றனர். இத்தொடர்பு குடும்பம், திருமணம், உறவுமுறை (Kinship) முதலான சமுதாய நிறுவனங்களோடு (Social Institutions) தொடர்புற்றும் தொடர்புறாமலும் காணப்

படும். இருப்பினும், பெரும்பான்மையாகச் சமுதாயத்தில் மக்கள் தம் கூட்டத்தினரோடு தொடர்புற்றுப் பெரும் சமூகக் குழுக்களாகவே (Social groups) காணப்படுவர். சமூகக் குழுக்கள் உறவின் அடிப்படையிலும் தொடர்பின் அடிப்படையிலும் மக்கள் கொண்டுள்ள சமூக வலையமைவு (Social Network) கொண்டு பல குழுக்களாகப் பாகுபடுகின்றன. உறவின் அடிப்படையில் உள்ள குழுக்களை 'உறவுக் குழுக்கள்' (Kin Groups) எனவும், உறவின் அடிப்படையில் அமையாத குழுக்களை 'உறவிலிக் குழுக்கள்' (Non-Kin Groups) எனவும் வகைப்படுத்துவர்.

பழங்குடிச் சமுதாயம், ஊரகச் சமுதாயம், நகரச் சமுதாயம் ஆகிய முப்பெரும் படிநிலையில் காணப்படும் சமுதாயங்களில், சமூகக் குழுக்களின் அமைப்புகளும் செயல்முறைகளும் மாறுபட்டுக் காணப்படுகின்றன. எனினும் மூன்று நிலைகளிலும் காணப்படும் அடிப்படை அமைப்புகளைக் கொண்டு சமுதாயவியலாரும் மானிடவியலாரும் இக்குழுக்களைப் பலவாறாகப் பாகுபடுத்துவர். பழங்குடிச் சமுதாய அமைப்பில் காணப்படும் உறவிலிக் குழுக்களை மானிடவியலார், சடங்குமுறை உறவு (Ritual Kinship), வயது அடிப்படைக் குழு (Age Grade), இரகசியச் சமூகங்கள் (Secret Society), பொதுநலக்குழுக்கள் (Voluntary Associations) என வகைப்படுத்துவர். சடங்குமுறை உறவுக் குழு, ஒத்த வயதுக் குழு, இரகசியச் சமூகங்கள் முதலானவை பெரும்பான்மையாகத் தொன்மைச் சமுதாயங்களிலும், பழங்குடிச் சமுதாயங்கவிலும், சிறிய அளவிலான மரபுச் சமுதாயங்களிலும் காணப்படுபவையாகும். பொதுநலக் குழுக்கள் பெரும்பான்மையாக ஊரகச் சமுதாயங்களிலும் நகரச் சமுதாயங்களிலும் காணப்படுகின்றன.

சடங்குமுறை உறவு விரிந்த சமுதாயத்தினரையும் உறவுக் குழுவினரையும் இணைக்கும் அமைப்பாகத் திகழ்கிறது. இம்முறையில் தனி ஒருவரையும் சமுதாயத்தின் வெவ்வேறு அமைப்பின் தனிக் குழுக்களையும் சடங்குமுறை உறவு பலநிலைகளில் உறவினராகச் செய்யும்.இது முறைசார்ந்த (Formalized) உறவாகவும் முறைசாரா (Non Formalized) உறவாகவும் இருக்கும். கிறித்தவச் சமுதாயங்களில் ஞானப் பெற்றோர்கள் (God Parenthood) தம் சமூகத்தில் தமக்கு விருப்பமுற்ற வேறொருவருக்குப் பிறந்த குழந்தையைத் திருமுழுக்குச் (Baptize) செய்து அக்குழந்தைக்குப் பெற்றோர்கள் நிலையை ஏற்பர். இதன்வழித் திருமுழுக்கடைந்த ஞானக் குழந்தைக்குக் குழந்தையின் உண்மைப் பெற்றோருடனும் ஞானப் பெற்றோர்களுடனும் தொடர்ச்சியான உறவு அமைந்துவிடுகிறது. இதைப் போன்றே சில சமூகங்களில் உடன் பிறந்தார் நிலை (Brotherhood) சடங்குமுறை உறவால் ஏற்படுத்திக் கொள்ளப்படுகிறது. உடன்பிறந்தார் நிலையைப் பெறும் சடங்கில் இரத்தம், உமிழ்நீர், விந்து, உணவு, மதுவகைகள் முதலானவற்றைப் பகிர்ந்து உண்பர்; பரிமாற்றம் செய்து கொள்வர்.

பழங்குடிச் சமுதாயங்களில்தகாப்புணர்ச்சியைத் (Incest) தவிர்ப்பதற்கும் தம் தகுதியை உயர்த்துவதற்கும் கையாளப்படும் அமைப்பாகச் சடங்குமுறை உறவு காணப்படுகிறது. சடங்குமுறை உறவினால் உண்மையான உறவினருடன் உறவு நலிவடையாது. ஒரு பெற்றோரின் குழந்தையை ஏற்கும் ஞானப் பெற்றோர்கள் குழந்தையின்பால் சில பொறுப்புகளை ஏற்றுக் கொள்வதால் குழந்தையின் சொந்தப் பெற்றோர்களுக்குப் பளு குறைகிறது. தம் அன்றாடச் செயற்பாடுகளில் உறவினரின் உதவிகள் மட்டுமன்றிச் சடங்கு முறையால் ஏற்படும் நண்பர்களின் ஒத்துழைப்பும் கிடைக்கும்.

வயது அடிப்படைக் குழுக்கள்: அனைத்துச் சமுதாயங்களிலுமே வயதின் அடிப்படையில் உறுப்பினர்களைக் குழவிப் பருவம் (Infant), குழந்தைப் பருவம் (Child), இளைய பருவம் (Youth), குமரப் பருவம் (Teen-ager), வயதுவந்த பருவம் (Adult), முதிர்ச்சிப் பருவம் (Elder) எனப் பலவாறாகப் பாகுபடுத்துவர். ஒவ்வொரு பருவமும் தனித்தனிச் செயல்களைக் கொண்டதாகும். வயது அடிப்படைக் குழுக்கள் பழங்குடிச் சமுதாயங்களில் மிகுந்து காணப்படுகின்றன. இவர்களிடையே இந்த அமைப்பு இருவகையானதாகும். குழந்தைகள், இளையவர்கள், குமரப் பருவத்தினர், முதியோர் என அமையும் பால் வேறுபடாத குழுக்களை 'வயது அடிப்படைக் குழுக்கள்' (Age Grades) எனவும், ஒத்த பாலினையும் ஒத்த வயதினையும் உடைய குழுக்களை 'ஒத்த வயதுப் பிரிவினர்' (Age sets) எனவும் இருவகைப்படுத்துவர். பழங்குடிகளிடையே பல்வேறு செயற்பாடுகளுக்குக் குழந்தைகளுக்கு ஏற்புச் சடங்குகளைச் (Initiation Ceremonies) செய்கின்றனர். பெரும்பான்மையாக அனைத்துப் பழங்குடிகளிலுமே வயது அடைந்த அல்லது பூப்பெய்திய நிகழ்வினைச் சடங்கு நடத்தி ஏற்றுக் கொள்வது காணப்படுகிறது. இது தவிர்த்துப் படைப்பிரிவில் சேர்த்தல், சமயச் செயல்களைச் செய்தல், மருத்துவம் புரிதல் முதலான பல உலகச் செயல்களில் ஈடுபடும் முன் ஏற்புச் சடங்கிற்கு உட்படுத்தப்படுவர். வயது அடிப்படையில் நடத்தப்படும் அனைத்து ஏற்புச் சடங்குகளும் உயிரியல் சார்ந்த

தாகவோ (Biological) வளர்நிலை சார்ந்ததாகவோ (Developmental) மட்டுமே அமைந்துள்ளன என மானிடவியலார் கூறுவர். ஏற்புச் சடங்கினை ஏற்ற ஒவ்வொரு குழுவினரும் தமக்கென்று தனிச் செயல்களைக் கொண்டிருப்பர். உலகின் பல்வேறு பகுதிகளிலும் பழங்குடிகளிடையே காணப்படும் இவ்வகையான வயது அடிப்படைக் குழுவினர் தம் செயற்பாடுகளைக் கவனிக்கும் பொருட்டுப் பொதுக் கூடங்களை (Dormitories)அமைப்பர். அவை பொழுது போக்கிடங்களாகவும், துயிற் கூடங்களாகவும், தம் பண்பாட்டின் குணநலன்களைக் கற்கும் கூடங்களாகவும் பயன்படுத்தப்படுகின்றன. காண்க: ஆதிக்குடிகளின் இளையவர் கூடங்கள்.

**இரகசியச் சமூகங்கள்:** உறவிலிக் குழுக்களுள் இரகசியச் சமூகம் (Secret Society) முதன்மையான ஒன்றாகும். பலகாரணிகளின் அடிப்படையில் இரகசியச் சமூகத்தில் உறுப்பினர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். அவர்கள் தங்கள் சமுதாய நலனிற்காகச் செயற்படுவதுடன் போர் வீரர்களாகவும் செயற்படுகின்றனர். காண்க: இரகசியச் சங்கங்கள்.

சி.ப.

**உறவின்முறை மாற்றம்:** ஒரு மொழியின் அமைப்பில் காலப்போக்கில் ஏற்படும் மாற்றங்கள் மொழிக்கூறு மாற்றங்கள் (Phylogenetic Changes) எனப்படும். இம்மொழிக்கூறு மாற்றங்கள் பெருங்காரணிகள் (Major mechanisms), சிறு காரணிகள் (Minor mechanisms) என்னும் இருவகைக் காரணிகளின் தூண்டுதலால் மொழியில் நடைபெறும்.

சிறுகாரணிகளுள் உறவின்முறை மாற்றம் ஒரு வகை ஆகும். ஒரு சொல் பிறிதோர் சொல்லுடன் பெரும்பான்மைச் சூழல்களில் இணைந்துவரும் நிலையில், இணைந்துவரும் சொல்லின் தாக்கத்தால் அச்சொல்லின் வடிவத்தில் மாற்றம் ஏற்படுமாயின் அதனை உறவின்முறை மாற்றம் (Contamination) என்பர் அறிஞர்.

தமிழ் மொழியில் பெரும்பாலும் 'நன்மை' என்னும் சொல்லுடன் 'தீமை' என்னும் சொல் இணைந்து வரும் உறவு காரணமாகத் 'தீமை' என்னும் சொல் 'தின்மை' எனப் பேச்சுவழக்கில் வடிவமாற்றம் பெறுகிறது. இதனைப் போன்றே 'வெப்பம்' என்னும் சொல் 'தட்பம்' என்பதன் தாக்கத்தால் 'வெட்பம்' (தட்பவெட்பம்) என வடிவமாற்றம் பெறுகிறது.

உறவின்முறை மாற்றத்தால் சொற்களில் வடிவ மாற்றம், மாற்று வடிவ மாற்றம்(Alteration Change) ஆகியன நிகழப்பெறும். குறிப்பிட்ட சில மொழிக்கூறு மாற்றங்கள் மட்டுமே உறவின்முறை மாற்றம் காரணமாக நிகழப் பெறுவதால் இது சிறுகாரணிகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. ஏ.ஆ.

துணை நூல்கள்:

**Hocket**, C.F., A Course in Modern Linguistics, Oxford & IBH Publishing Co., New Delhi, 1958.

**Lehmann, P.W.**, Historical Linguistics-An Introduction, Oxford & IBH Publishing Co., New Delhi, 1973.

**உறவு முறை:** மனிதன் தனித்து வாழ்வதில்லை. மற்றவர்களைச் சார்ந்து அவர்களோடு பிணைந்து வாழ்கிறான். பிறருடன் அவனுக்கு ஏற்படுகிற பிணைப்புகள் ஒரே வகையினதாகவோ ஒரே நிலையினதாகவோ ஒரே வாயிலாகவோ அமைவதில்லை. பல்வேறு வகையினங்களாகப் பல்வேறு நிலைகளில் பல்வேறு வழிகளில் அப்பிணைப்புகள் அமைகின்றன.

அத்தகைய பிணைப்புகளில் சில உயிரியல் அடிப்படையில் பிறப்பின் வாயிலாக அமைவதுண்டு. அப்படிப் பிறப்பின் வாயிலாக அமையும் பிணைப்புகள் இரத்தத் தொடர்பு கொண்ட பிணைப்புகளாக அமைகின்றன. ஒருவனுக்கும் அவனுடைய பெற்றோருக்கும் அல்லது அவனுடைய மக்களுக்கும் ஏற்படுகிற பிணைப்புகள் பிறப்பின் அடிப்படையில் நிருணயிக்கப்பட்டு, இரத்தத் தொடர்பு கொண்டு அமைகின்றன. இவ்வாறு பிறப்பின் அடிப்படையில் நிருணயிக்கப்பட்டு, இரத்தத் தொடர்பினால் அமைகிற பிணைப்புகளைக் குருதி உறவு (Consanguinity) என்பர்.

வேறு சில பிணைப்புகள் திருமண வாயிலாக அமைவதுண்டு. அவ்வாறு திருமணத் தொடர்பு மூலமாக அமைகிற பிணைப்புகளை மண உறவு (Affinity) என்பர். ஒருவனுக்கும் அவனுடைய மனைவிக்கும் ஏற்படுகிற பிணைப்பு மண உறவு ஆகும். இந்த உறவு அவர்களிடையே ஏற்பட்ட திருமணத் தொடர்பின் வாயிலாக அமைகிறது.

உயிரியல் அளவில், பிறப்பின் அடிப்படையில் நிருணயிக்கப்பட்டு, இரத்தத் தொடர்பு கொண்டு அமைகிற குருதி உறவையும், திருமணத் தொடர்பின் வாயிலாக அமைகிற மண உறவையும் உறவு (Kinship)

என்பர். மனிதப் பிணைப்புகளில் சிறப்பான, தலையான இடம் உறவுக்குத்தான் இருக்கிறது. மனிதனுடைய வாழ்க்கையில் அனைத்து நிலைகளிலும் பிறப்பு முதலாக இறப்பு வரையிலான எல்லா நிலைகளிலும் உறவுதான் முதன்மையான இடத்தைப் பெறுகிறது.

**குருதி உறவு:** ஒருவன் பிறக்கும் பொழுதே அமைகிற உறவு குருதி உறவு. பிறப்பையொட்டி இரத்தத் தொடர்பால் அமைகிற இந்த உறவு மனிதன் சாகும் வரை நீங்காமல் நிலையாக நிற்கும். எந்தக் காலத்திலும் எந்த நிலையிலும் இந்த உறவுப் பிணைப்பை மறுக்கவோ நீக்கவோ இயலாது. இரத்தத் தொடர்பு நீக்க முடியாத, விலக்க முடியாத தளை என்பதால், அதனோடு அமைந்த குருதி உறவை வெட்டி விட இயலாது.

குருதி உறவு முதலில் குடும்பத்தில்தான் தொடங்குகிறது. பிறந்ததும் ஒருவனுக்கு அவனுடைய பிறந்த குடும்பத்தில் உள்ளவர்களுடன்தான் முதல் பிணைப்பு ஏற்படுகிறது. பெற்றோருடனும் உடன் பிறந்தோருடனும்தான் முதலில் அவனுக்குப் பிணைப்பு ஏற்படுகிறது. பிறகு அவர்கள் மூலம் அந்தப் பிணைப்பின் எல்லை விரிந்து, பல்வேறு நிலைகளில் குருதி உறவு வளருகிறது. பெரியப்பா, சிற்றப்பா, பெரியம்மா, சின்னம்மா, அத்தை, மாமன் என்று உறவுகள் கிளைவிட்டுப் பெருகுகின்றன.

**மண உறவு:** வாழ்க்கைச் சூழலில் திருமணக் கட்டம் ஏற்படுகிறபொழுது அந்தத் திருமணத் தொடர்பினால் மண உறவு எழுகிறது. குருதி உறவைப போல மண உறவு நிலையான தன்மை கொண்டதன்று. திருமணச் சம்பந்தம் முறிகிறபொழுது அதன் அடிப்படையில் அமைந்த மண உறவும் முறியும்.

ஒருவனுக்கு ஒரே நேரத்தில் குருதி உறவினரும் மண உறவினரும் அமைவதுண்டு. ஒரு நாணயத்திற்கு இரு பக்கங்கள் அமைவதைப் போல, ஒருவனுடைய வாழ்க்கையில் ஒரே நேரத்தில் குருதி உறவினரும் மண உறவினரும் அமைவதுண்டு. ஒருவன் ஒரே நேரத்தில் இரு வேறு கருக்குடும்பங்களில் இடம் பெறுகிறபொழுது, அவனுக்குக் குருதி உறவினரும் மண உறவினரும் சேர்ந்து அமைவர். இத்தகைய நிலைமை திருமணத்தின் வாயிலாகத்தான் அமையும். இரு கருக் குடும்பங்கள் அந்தத் திருமணத் தொடர்பின் வாயிலாகப் பிணைக்கப்படும்பொழுது, ஒருவனுக்கு அவனுடைய பிறந்த குடும்பத்திலும், புகுந்த குடும்பத்திலும் ஆக இரு குடும்பங்களிலும் இடம் பெறும் வாய்ப்புக்கிட்டுகிறது. இதன் வாயிலாகப் பிறந்த குடும்பத்தின் உறுப்பினர்களுடைய உறவும் – குருதி உறவும், புகுந்த குடும்பத்தின் உறுபபினர்களுடைய உறவும் – மண உறவும் ஒரே நேரத்தில் அவனுக்குக் கிட்டுகின்றன.

இவ்வாறு இரு வகையான உறவினரும் அவனுக்கு அமையும்போது, அவர்களுடைய உறவு அவனுக்கு நேரடியாகவோ பிறர் மூலமாகவோ அமையும். அதாவது அவர்கள் அவனுக்கு நேரடியான முறையிலோ பிறர் மூலமாகவோ உறவினராக அமைவர்.

**உறவு நிலைகள்:** பிறர் வாயிலாக அல்லாமல் நேரடியாக ஓர் உறவினர் குருதி–உறவினராகவோ மண உறவினராகவோ ஒருவனுக்கு அமையும்போது, அவர் முதல் நிலை உறவினர் என்று சொல்லப்படுவார். அவனிடம் அவர் கொண்டுள்ள உறவை விளக்க எந்த மூலமும் வாயிலும் தேவையில்லை. ஒருவனுக்கு அவனுடைய பிறந்த (கருக்) குடும்பத்து உறுப்பினர்கள் அனைவரும் முதல் நிலை உறவினர் ஆவர். அவ்வாறே அவன் துணைவியும் அவனுக்கு முதல் நிலை உறவினர் ஆவார். இந்த அடிப்படையில் ஒருவனுக்கு ஏழு முதல் நிலை உறவினர் தாம் அமைவர் என்று முர்டாக்கு (Murdock) என்ற அறிஞர் கூறுகிறார். தந்தை, தாய், சகோதரன், சகோதரி, மகன், மகள் மனைவி (ஒருத்திக்கு: கணவன்) என்று ஏழு முதல் நிலை உறவினர் தாம் ஒருவனுக்கு அமைவர் என்று கூறுகிறார். இவர்களிடம் ஒருவனுக்கு உள்ள உறவு நேரடியான உறவாகும்.

இந்த ஏழு உறவினரைத் தவிர, வருகின்ற பிற உறவினர் அனைவரும் பிறர் வாயிலான உறவினராகவே அமைவர். யாராவது பாலமாக அமைந்து இருவருக்கிடையே உறவுப் பிணைப்பு எழக் காரணமாக இருப்பர். இந்த வகையில் இருவருக்கிடையே உறவுப் பிணைப்பு ஏற்பட, ஒருவரோ பலரோ வாயிலாக இருக்கக் கூடும். அத்தகைய வாயிலோரின் எண்ணிக்கை அடிப்படையில் அவர் மூலமாக அமைகிற உறவினர்கள், அந்த எண்ணிக்கைக்கேற்ப 'இத்தனையாவது நிலை' உறவினர்கள் என்று சொல்லப்படுவர்.

இடையே ஒருவர் வாயிலாக நின்று அவர் மூலமாக அமையும் உறவினர் இரண்டாம் நிலை உறவினர் என்று சொல்லப்படுவர். பாட்டன், பாட்டி, தாய்மாமன், அத்தை, பெரியப்பா, சிற்றப்பா, பெரியம்மா, சின்னம்மா என்று வருகிற உறவினர்கள் இரண்டாம் நிலை உறவினராவர். இவர்கள் தந்தையின் மூலமாகவோ தாயின் மூலமாகவோ (அதாவது ஓர் உறவினர் வாயிலாக) உறவினராவதால், இவர்கள் இரண்டாம் நிலை உறவினர் என்று சொல்லப்

படுகின்றனர். இந்த வகையில் ஒருவனுக்கு 33 இரண்டாம் நிலை உறவினர்கள் அமைவர் என்று முர்டாக்கு கூறுகிறார். தந்தையின் தந்தை, தந்தையின் தாய், தந்தையின் சகோதரர், தந்தையின் சகோதரி, தாயின் தந்தை, தாயின் தாய், தாயின் சகோதரர், தாயின் சகோதரி, சகோதரனின் மனைவி, சகோதரனின் மகன், சகோதரனின் மகள், சகோதரியின் கணவன், சகோதரியின் மகன், சகோதரியின் மகள், மகனின் மனைவி, மகனின் மகன், மகனின் மகள், மகளின் கணவன், மகளின் மகன், மகளின் மகள், மனைவியின் தந்தை, கணவனின் தந்தை, மனைவியின் தாய், கணவனின் தாய், மனைவியின் சகோதரன்/கணவனின் சகோதரன், மனைவியின் சகோதரி/கணவனின் சகோதரி, மனைவியின் கணவன்/கணவனின் மனைவி (சக்களத்தி), மனைவியின் மகன்/கணவனின் மகன் (Step son), மனைவியின் மகள்/கணவனின் மகள் (Step daughter), தந்தையின் மனைவி (மாற்றாந் தாய்), தந்தையின் மகன் (Consanguine brother), தந்தையின் மகள் (Consanguine sister), தாயின் கணவன், தாயின் மகன் (Uterine brother) தாயின் மகள் (Uterine sister)என்று இவ்வாறாக ஒருவனுக்கு 33 வகையான இரண்டாம் நிலை உறவினர் அமைவர் என்றுமுர்டாக்கு கூறுகிறார்.

உண்மையில் இரண்டாம் நிலை உறவினர் என்பவர், முதல் நிலை உறவினரின் முதல் நிலை உறவினர் ஆவர். ஏழு முதல் நிலை உறவினருக்கு அமைகின்ற முதல் நிலை உறவினரே இரண்டாம் நிலை உறவினராக அமைவர்.

இடையே இருவர் வாயில்களாக நின்று அவர்கள் மூலமாக அமையும் உறவினர் மூன்றாம் நிலை உறவினர் என்று சொல்லப்படுவர். இரண்டாம் நிலை உறவினரின் முதல் நிலை உறவினரே மூன்றாம் நிலை உறவினர் ஆவர். பூட்டன், பூட்டி, கொள்ளுப் பேரன், கொள்ளுப் பேத்தி என்று வருகின்ற உறவினர்கள் மூன்றாம் நிலை உறவினர் ஆவர். இவர்கள் தந்தையின் தந்தை/தாயின் தந்தை (பாட்டன்) வாயிலாகவோ மகனின் மகன்/மகளின் மகன் (பேரன்)அல்லது மகனின் மகள்/மகளின் மகள் (பேத்தி) வாயிலாகவோ உறவினர் ஆவர். இவர்களன்றி, தந்தையின் சகோதரரின் (பெரியப்பா/சிற்றப்பா) மனைவி, தந்தையின் சகோதரியின் (அத்தை) கணவன், தாயின் சகோதரரின் (மாமன்) மனைவி, தாயின் சகோதரியின் (பெரியம்மா/சின்னம்மா) கணவன், சகோதரனின் மனைவியின் தந்தை, சகோதரியின் கணவனின் தந்தை, மனைவியின்/கணவனின் சகோதரனின் மனைவி, மனைவியின்/கணவனின் சகோதரியின் கணவன், மகனின் மனைவியின் தந்தை, மகளின் கணவனின் தந்தை என்று அமைகிற உறவினரும் மூன்றாம் நிலை உறவினரே. முர்டாக்கு 'பொதுவாக ஒருவனுக்கு 151 வகையான மூன்றாம் நிலை உறவினர் அமைவர்' என்று கூறுகிறார்.

இவ்வாறு வாயில்களின் எண்ணிக்கை மூன்று, நான்கு என்று பெருகிக் கொண்டே போகும்போது. நான்காம் நிலை உறவினர், ஐந்தாம் நிலை உறவினர் என்று உறவினர் பட்டியல் வளர்ந்து கொண்டே போகும். மூன்றாம் நிலை உறவினரின் முதல் நிலை உறவினர் நான்காம் நிலை உறவினராகவும், நான்காம் நிலை உறவினரின் முதல் நிலை உறவினர் ஐந்தாம் நிலை உறவினராகவும் அமைவர். பொதுவாக இப்படி நான்காம் நிலை, ஐந்தாம் நிலை என்று தொலைவான நிலைகளில்அமைகிற உறவினர்களைத் தூரத்து உறவினர் என்று குறிப்பிடுவதுண்டு.

உறவு முறைச் சொற்கள்: ஓர் உறவினர் எந்த நிலையினராயினும் சரி, அவரிடம் ஒருவன் தொடர்பு கொண்டு பழக நேரிடுகிறது. அப்படிப் பழக நேரிடும் போது அந்தப் பழகுதலில் இரண்டு அம்சங்கள் அமைகின்றன. ஒன்று சொற் பயன்பாடு. மற்றொன்று சொற் பிரயோகம் அமையாத நடத்தை நிலை.

ஒருவன் தன்னுடைய உறவினரோடு பழக நேரிடுகிற பொழுது, அவர் தொடர்பாகப் பிறரிடம் அல்லது அவரிடம் நேரிடையாகச் சொற் பயன்பாடு செய்ய வேண்டியிருக்கிறது. உறவு முறைச் சொற்களைப் பயன்படுத்துவதே அந்தச் சொற் பயன்பாடாகும். உறவினரின் உறவுத்தன்மையை – அவர் யார், எத்தன்மையான உறவினர் என்பதை அடையாளங்காட்டப் பயன்படுகிற சாதனங்களே உறவு முறைச் சொற்களாகும்.

உறவு முறைச் சொற்கள் முறைப்படி மூன்று வழிகளில் வகைப்படுத்தப்படுகின்றன. அவை பயன்படுத்தப்படுகிற விதம், அவற்றின் மொழிக் கட்டமைப்பு, அவற்றின் பயன்பாட்டு அளவெல்லை ஆகியவற்றின் அடிப்படைகளில் அவை வகைப்படுத்தப் படுகின்றன.

பயன்பாட்டு அளவில் உறவு முறைச் சொற்கள் ஓர் உறவினரை நேரடியாக விளிக்கவோ அவரைச் சுற்று முகமாகக் குறிப்பிடவோ பயன்படுத்தப்படுகின்றன. ஓர் உறவினரை நேரடியாக விளிக்க ஓர் உறவுமுறைச் சொல் பயன்படுத்தப்படும்பொழுது, அது விளிப்புச் சொல் (Term of address) என்று சொல்லப்படுகிறது. அந்த உறவினரைப் பற்றிப் பிறரிடம் அவர் யார், எத்தன்மையான உறவினர் என்பதைக் குறிப்பிட ஓர் உறவுமுறைச் சொல் பயன்

படுத்தப்படும்போது, அது குறிப்புச்சொல் (Term of Reference)என்று சொல்லப்படுகிறது.

பொதுவாக, பல வேளைகளில் ஓர் உறவினரைக் குறிப்பதற்கும் விளிப்பதற்கும் ஓர் உறவுமுறைச் சொல்லே பயன்படுத்தப்படுவதுண்டு. குறிப்புச் சொல்லாக அமைந்திருக்கும் சொல்லே விளிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டு விளிப்புச் சொல்லாக அமையும். எடுத்துக்காட்டாக, தந்தையின் சகோதரியைக் குறிக்க 'அத்தை' என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. அதே சொல்லே அவரை விளிக்கவும் பயன்படுத்தப்படுகிறது. இத்தகைய நிலையில் 'அத்தை' குறிப்புச் சொல்லாகவும், விளிப்புச் சொல்லாகவும் அமைகிறது. இவ்வாறே, 'சியான்/தாத்தா','அப்பத்தா', 'அம்மத்தா', 'அப்பா', 'அம்மா', 'பெரியம்மா', 'சின்னம்மா', 'பெரியப்பா', 'சிற்றப்பா', 'மாமா', 'அண்ணன்', 'அக்கா', 'மதனி' என்ற சொற்களும் குறிப்புச் சொற்களாகவும், விளிப்புச் சொற்களாகவும் அமைகின்றன.

சில வேளைகளில் குறிக்க ஒரு சொல்லும், விளக்க மற்றொரு சொல்லும் பயன்படுத்தப்படும். ஆயினும் அவ்விரு சொற்களும் உறவுமுறைச் சொற்களாகவே இருக்கும். அப்படி விளிப்புச் சொல்லாக அமையும் உறவு முறைச் சொல்லும் உறவுமுறைச் சொல்லமைப்பில் பிறிதோர் இடத்தில் குறிப்புச் சொல்லாக இருக்கும். எடுத்துக்காட்டாக, மனைவியின் தந்தையைக் குறிப்பிடுவதற்கு 'மாமனார்' என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. ஆனால், அவரை விளிப்பதற்கு 'மாமா' என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. இந்த இடத்தில் விளிப்புச் சொல்லாக அமைகிற இந்த 'மாமா' பிறிதோர் இடத்தில் குறிப்புச் சொல்லாக அமைந்து தாயின் சகோதரரை அல்லது தந்தையின் சகோதரி கணவரைக் குறிக்கிறது.

மொழிக் கட்டமைப்பைப் பொறுத்து உறவு முறைச் சொற்கள் தனிமச் சொற்கள் (Elementary Terms), உருவாக்கச் சொற்கள் (Derivative terms), விளக்கவியற் சொற்கள் (Descriptive terms) என்று மூன்று வகைகளாக அமைகின்றன. ஓர் உறவினரைக் குறிக்கும் உறவு முறைச் சொல் பிரிக்க முடியாத அளவில் தனிச் சொல்லாக விளங்கினால் அது தனிமச் சொல் எனப்படும். 'அப்பா', 'அம்மா', 'கணவன்', 'மனைவி', 'மகன்', 'மகள்' முதலிய சொற்கள் தனிமச் சொற்களாகும். அவை பிரிக்க முடியாத பகாப் பதங்கள். ஒரு தனிமச் சொல்லோடு உறவு முறைப் பொருளை ஏந்தி நிற்காத ஒரு சாதாரணச் சொல்லை இணைத்து உருவாக்குகிற சொல் உருவாக்கச் சொல் எனப்படும். 'பெரியப்பா','சின்னம்மா', 'கொள்ளுப்பாட்டன்', 'எள்ளுப்பேரன்' ஆகிய உறவு முறைச் சொற்கள் உருவாக்கச் சொற்களே. இவை உறவு முறைச் சொற்களான 'அப்பா', 'அம்மா', 'பாட்டன்', 'பேரன்' என்பவற்றுடன்முறையே உறவு முறைப் பொருளை ஏந்தி நிற்காத 'பெரிய', 'சின்ன', 'கொள்ளு', 'எள்ளு' என்ற சாதாரணச் சொற்களோடு இணைந்து உருவானவை. இரண்டு அல்லது ஒரே தனிமச் சொல்லை இரண்டு (அல்லது அதற்கு மேற்பட்ட) முறை இரட்டித்து உருவாக்குகிற சொல் விளக்கவியற் சொல் எனப்படும். சுவீடன் (Sweedish) மொழியில் தந்தையின் சகோதரரை 'Farbror' என்பர். இச்சொல் 'Father', 'Brother' என்ற இரு தனிமச் சொற்களை இணைத்து அதன் மூலம் உருவாக்கப்பட்ட சொல். இவ்வாறே தமிழில் தந்தை வழிப் பாட்டனையும், தாய் வழிப் பாட்டியையும் குறிக்கப் பயன்படும் 'அப்பப்பா', 'அம்மம்மா, ஆகிய சொற்கள் முறையே 'அப்பா அப்பா' என்றும், 'அம்மா அம்மா' என்றும் புணர்ச்சி வழியில் உருவான விளக்கவியற் சொற்கள் ஆகும்.

பயன்பாட்டு அளவெல்லையைப் பொறுத்து, அதாவது எந்த அளவெல்லை வரை பயன்படுத்தப் படுகின்றன என்பதைப் பொறுத்து, உறவுமுறைச் சொற்கள் தனிப்படக் குறிப்பிடும் சொற்கள் (Particularizing Terms) என்றும், வகைப்பாட்டுச் சொற்கள் (Classificatory Terms) என்றும் இரு வகைகளாகப் பிரிக்கப்படுவதுண்டு. ஓர் உறவு முறைச் சொல் ஒரேயொரு உறவினரை மட்டுமே குறித்தால், அது தனிப்படக் குறிப்பிடும் சொல் எனப்படும். 'அப்பா' என்ற சொல் தந்தையை மட்டுமே குறிக்கும். அவ்வாறே 'அம்மா', 'மனைவி' 'கணவன்' ஆகிய சொற்களும் முறையே தாயையும், வாழ்க்கைத் துணைவியையும், வாழ்க்கைத் துணைவரையும் மட்டுமே குறிக்கும். பிற உறவினரைக் குறிப்பதில்லை.

ஓர் உறவு முறைச் சொல் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட உறவினர்களைக் குறித்தால் அது வகைப்பாட்டுச் சொல் எனப்படும். 'பாட்டன்' என்பது தந்தையின் தந்தையையும், தாயின் தந்தையையும் குறிக்கும். 'பாட்டி' என்பது தந்தையின் தாயையும் தாயின் தாயையும் குறிக்கும். அவ்வாறே 'மாமன்' என்பது தாயின் சகோதரரை மட்டுமன்றி, தந்தையின் சகோதரியின் கணவரையும்; 'அத்தை' என்பது தந்தையின் சகோதரியை மட்டுமன்றி, தாயின் சகோதரர் மனைவியையும் குறிக்கும். 'அண்ணன்', 'தம்பி',அக்கா', 'தங்கை'முதலான சொற்களும்உடன்

பிறந்த சகோதர சகோதரிகளை மட்டுமன்றி ஒன்றுவிட்ட சகோதர சகோதரிகளையும் குறிக்கும்

உறவினர்களிடையே பல்வேறு அளவுகளில் வேறுபாடுகள் அமையும். ஏ.எல்.குரோபர் (A.L. Kroeber) என்பாரும், ஆர்.எச்.உலோவி (R.H.Lowie) என்பாரும் உறவினர்களிடையே முக்கியமாகக் கீழ்க் காணும் ஆறு அளவுகளில் வேறுபாடுகள் அமையும் என்கின்றனர். முதலாவதாக, தலைமுறை அளவில் உறவினர்களிடையே வேறுபாடுகள் அமையக் கூடும். இரண்டாவதாக, பாலின அளவில் அவர்களிடையே வேறுபாடுகள் அமையக் கூடும். மூன்றாவதாக, திருமணத் தொடர்பின் அடிப்படையில் அவர்களிடையே வேறுபாடுகள் அமையக்கூடும். அதாவது இரத்தத் தொடர்பு கொண்ட குருதி உறவினர், திருமணத் தொடர்பு கொண்ட மண உறவினர் என்ற அளவில் உறவினர்கள் வெவ்வேறு வகையினராக இருக்கக் கூடும். நான்காவதாக, இருவேறு கிளையினர் என்ற அளவில் அவர்களுக்கிடையே வேறுபாடுகள் அமையக் கூடும். இருவேறு உறவினர்கள் ஒரே மரபு மூலத்தில் தோன்றியவர்களாக இரத்தத் தொடர்பு கொண்டிருந்தபோதிலும், அவர்கள் வெவ்வேறு வமிசாவழிக் கிளைகளைச் சேர்ந்தவராய் இருப்பர். எடுத்துக்காட்டாக, ஒருவனுக்கு அவனுடைய உடன்பிறந்த சகோதரரும், பெரியப்பா சிற்றப்பா மகன்களும் இரத்தத் தொடர்பு கொண்ட உறவினரே. அந்த இரு உறவினர்களும் ஒரே மரபு மூலத்தில் தோன்றியவர்களே. ஆயினும், அவர்கள் இருவேறு வமிசாவளிக்கிளைகளைச் சேர்ந்தவர்கள். அக்கிளைகள் ஒரே மரபு மூலத்துக்குரியவையாயினும், அவை வெவ்வேறாக இணைகோடுகளில் நிற்பதால் இரு வேறு கிளைகளாக அமைகின்றன. அந்த நிலையில் அவர்களிடையே வேறுபாடுகள் அமைகின்றன. ஐந்தாவதாக, பிரிவுறுதல் (Bifurcation) அடிப்படையில் உறவினர்களிடையே வேறுபாடுகள் அமையக்கூடும். இருவேறு உறவினர்கள் ஒரே தலைமுறையினராக, ஒரே பாலினத்தவராக, குருதி உறவு வகையைச் சேர்ந்தவராக இருக்கக்கூடும். ஆயினும் அவர்களை ஒருவனோடு இணைக்கும் வாயில்கள் வேறுபட்டு நிற்கும்போது அவர்கள் வெவ்வேறு உறவு வகைகளைச் சேர்ந்தவராய் விடுவர். தந்தையின் தந்தையும் தாயின் தந்தையும் பாட்டன் என்ற தகுநிலையில் இருந்தாலும், அவர்களை ஒருவனுடன் இணைக்கும் வாயில்கள் வெவ்வேறானபடியால் (ஒருவர் தந்தைவழிப் பாட்டன், மற்றொருவர் தாய்வழிப் பாட்டன்), அந்த அடிப்படையில் அவர்கள் வெவ்வேறு வகையினங்களைச் சேர்ந்தவராய் அமைவர். ஆறாவதாக, உறவினர்கள் நேர் எதிரெதிர் முனைகளில் நிற்கும் போது (Polarity), அவர்கள் வெவ்வேறு வகையினங்களைச் சேர்ந்தவர்களாகின்றனர். ஓர் உறவுத் தொடர்பு ஏற்பட இருவர் தேவை. அந்த நிலையில் அவர்கள் நேர் எதிரெதிர் முனைகளில் நிற்க நேரிடுகிறது. அப்பொழுது அவர்கள் இருவேறு உறவு வகைகளைச் சேர்ந்தவர்களாகின்றனர். எடுத்துக்காட்டாக, ஒருவன் மற்றொருவனை அத்தான் என்று அழைக்கும் போது, அழைக்கப்படுகிறவன் சகோதரியின் கணவனாக ஒரு முனையிலும், அப்படி அழைக்கிறவன் அழைக்கப்படுகிறவனுக்கு மைத்துனனாக(மனைவியின் சகோதரனாக) எதிர் முனையிலும் நிற்பார்கள்.அந்த நிலையில் அவர்கள் வெவ்வேறு வகையினங்களைச் சேர்ந்தவர்களாகின்றனர்.

இந்த வேறுபாடுகளை அல்லது இவற்றில் ஏதேனும் ஒன்றைப் புறக்கணிக்கும்போது, அந்த நிலையில் வகைப்பாட்டுச் சொற்கள் அமைகின்றன. வேறுபாடுகள் புறக்கணிக்கப்படும்பொழுது, உறவினர்கள் ஒரே வகையினராகக் கருதப்பட்டு ஒரு சொல் வகுப்பில் உள்ளடக்கப்படுகின்றனர். அவர்களைக் குறிக்க ஒரே சொல்-வகைப்பாட்டுச் சொல் அமைகிறது. குரோபரும் உலோவியும் இவையன்றி இன்னும் சில முறைகளிலும் வகைப்பாட்டுச் சொற்கள் அமைவதுண்டு என்கின்றனர்; உறவு முறைச் சொற்கள் உறவினர்களிடையே நிலவும் வயது வேறுபாட்டைக் குறிக்காமல் போனாலும், உறவாடுபவர் (உறவு முறைச் சொற்களைப் பயன்படுத்துபவர்) ஆணா பெண்ணா என்பதைப் புலப்படுத்தாமல் போனாலும், உறவினரை இணைக்கும் வாயில்கள் உயிரோடு உள்ளனரா இறந்து விட்டனரா என்பதை எடுத்துக் காட்டாமல் போனாலும், அந்த நிலைகளில் அவை வகைப்பாட்டுச் சொற்களாக அமையும் என்கின்றனர்.

**உறவு முறை நடத்தைக் கோலங்கள்:** பல உறவினர்கள் ஒரே சொல் வகுப்பில் உள்ளடக்கப்படும் பொழுது, அவர்களிடம் ஒருவன் ஒரே தன்மையாக நடந்து கொள்ளுவான். அவர்களிடையே தலைமுறை வேறுபாடுகள் இருந்தாலும், அல்லது அவர்களில் சிலர் குருதி உறவினராகவும் மற்றவர்கள் மண உறவினராகவும் இருந்தாலும், அல்லது அவர்களில் சிலர் இரண்டாம் நிலை உறவினராகவும் மற்றவர்கள் மூன்றாம் நிலை உறவினராகவும் இருந்தாலும், எல்லோரிடமும் அவன் பழகுகிற விதம், நடந்து கொள்ளுகிற பாங்கு அனைத்தும் ஒரே தன்மையாகவே இருக்கும்.

ஓர் உறவினரிடம் (அல்லது ஓர் உறவு வகுப்பினரிடம்) ஒருவன் நடந்து கொள்ளும் பாங்கு நான்கு

கோலங்களில் அமையும். அவரிடம் அவன் மரியாதையாக அல்லது அவரிடமிருந்து விலகி நின்று, அல்லது அவரிடம் நையாண்டி செய்து கொண்டு அல்லது அவரிடம் சாதாரணமாக நடந்து கொண்டிருப்பான்.

தன்னிலும் மூத்தவர்களிடம்-வயதிலும், தலைமுறை அளவிலும் மூத்தவர்களிடம்-ஒருவன் மரியாதையாகவும் பணிவுடனும் நடந்து கொள்ளுவான். ஆனால், இத்தகைய மரியாதை நடத்தை ஒருவழிப் போக்காகவே இருக்கும். மரியாதை காட்டப்படுகிறவர்கள் மரியாதை செலுத்துகிறவனிடம் அதைத் திருப்பிக் காட்டுவதில்லை.

ஒரு சில உறவினர்களிடம் ஒருவன் அதிகமான மரியாதை காட்டுவான். அதை அவர்களிடமிருந்து விலகி நிற்பதன் மூலம் காட்டுவான். ஒருவரிடம் மரியாதை வைக்கும்போது ஒருவனுக்குக் கொஞ்சம் நெருக்கம் அமையும். ஆனால் அவன் ஒருவரிடமிருந்து விலகி நின்று அதன் மூலம் அவருக்கு அதிகமரியாதை காட்டும்போது, அவரிடம் அவனுக்கு நெருக்கம் அமைவதில்லை. சொல்லப் போனால் நெருக்கம் ஏற்பட்டு விடக் கூடாது என்ற அளவிலேதான் அத்தகைய பெரு மரியாதை கடைப்பிடிக்கப்படுகிறது. இத்தகைய விலக்கல் கலந்த மரியாதை நடத்தை பெரும்பாலும் வயதிலும் தலைமுறை அளவிலும் மூத்த, பால் வேறுபட்ட மண உறவினரிடம் காட்டப்படும். மருமகன் தன் மாமியாரிடமும், தம்பி மனைவி தன் மைத்துனரிடமும் (கணவனின் அண்ணனிடம்) விலக்கல் கலந்த மரியாதையுடன்தான் நடந்து கொள்ளுவர். அவர்களிடம் நேருக்கு நேர் பேசுவதோ எதிரெதிராக அமர்வதோ நெருங்கி நிற்பதோ கிடையாது. எட்டத் தள்ளி நின்றே பேசுவர். சுற்று முகமாகவே உரையாடுவர். அந்த உரையாடலும் சுருக்கமாகவும் கண்ணியமாகவுமே இருக்கும். இத்தகைய விலக்கல் உறவு இருதரப்பினரிடமும் அமைந்து இருவழிப் போக்காக இருக்கும்.

தன் தலைமுறை அளவை ஒத்த மாமன் அத்தை மக்களிடம் ஒருவன் மிகவும் நெருக்கமாக நடந்து கொள்ளுவான். அது நையாண்டி உறவாக இருக்கும். மாமன் அத்தை மக்களை (இரு பாலாரையும்) நையாண்டி செய்தும், கேலி பேசியும், அவர்களுடைய உடைமைப் பொருள்களை எடுத்து வைத்துக் கொண்டு விளையாடியும் உறவாடுவான். அவ்வாறே தன்னிலும் தலைமுறை அளவிலும் வயதிலும் இளைய மண உறவினரிடமும் எடுத்துக்காட்டாக, மைத்துனனிடமும் கொழுந்தியாளிடமும் நையாண்டி உறவு வைத்துக் கொள்ளுவான். விலக்கலைப் போலவே நையாண்டி உறவும் இருவழிப் போக்காகவே இருக்கும். ஆயினும் விலக்கலில் உறவினரிடையே ஒரு சேய்மை நிலவும். ஆனால், நையாண்டி உறவில் உறவினரிடையே ஒரு நெருக்கம் நிலவும்.

தன்னிலும் இளையவர்களிடம்-வயதிலும் தலைமுறை அளவிலும் இளையவர்களிடம் ஒருவன் சாதாரணமாக நடந்து கொள்ளுவான். அவர்களிடம் மரியாதை கொடுத்துப் பேசவோ அழைக்கவோ செய்வதில்லை. உறவு முறைச் சொற்களைப் பயன்படுத்தாமல் அவர்களுடைய பெயர்களாலேயே அழைப்பான். இத்தகைய உறவு நடத்தை ஒருவழிப் போக்காவே இருக்கும்.

இவ்வாறு ஒருவன் தன் உறவினரிடம் நடந்து கொள்ளும்போது சொற்பயன்பாட்டையும், சொற்பயன்பாடு அல்லாத நடத்தைப்பாங்கையும் கடைப்பிடிக்கிறான். அவனுடைய நடத்தை உறவு முறை அமைப்பில் நிலவி வரும் மரபுகளையும் நெறிகளையும் ஒட்டி, அவை நிருணயித்த வழியில் அமையும்.

சி.என்.ரு.

**உறவுக் குழுக்கள்:** மனித சமுதாயம் என்பது மக்கள் குழுக்களின் ஒரு தொகுப்பாகும். அதன் இயக்க முறைகள் ஓர் உயிரியின் செயல்களைப் போன்றது. உயிரியின் செயல் முறைகளுக்குப் பல உறுப்புகள் உள்ளன போன்றே மனித சமுதாயத்திலும் அதன் அமைப்புகளுக்கும் செயல் முறைகளுக்கும் பல கட்டமைந்த நிறுவனங்கள், அமைப்புகள் முதலானவை உள்ளன. இந்த அமைப்புகளை உண்டாக்குவதில் சமுதாயத்தின் உறுப்பினர்களும் அவர்களின் பிணைப்புகளும், அப்பிணைப்பின் செயல்களும், அவர்களின் நடத்தை முறைகளும் முதன்மையான பங்கினைப் பெறுகின்றன.

மனித சமுதாயத்தையும் மனித உறவுகளையும் செயற்படுத்தும் அடிப்படை உறுப்பினர்களான மனிதர்கள் பல குழுக்களாகக் காணப்படுகின்றனர். மனித சமுதாயத்தின் அமைப்பைப் பொறுத்தும் அதன் சமூக பொருளாதார, சமய, அரசியல் முறைகளைப் பொறுத்தும் மனிதக் குழுக்களின் அமைப்பு வேறுபடுகிறது. தொழிற்சார்பற்ற எளிய பழங்குடிச் சமுதாயம், ஊரகச் சமுதாயம், நகரச் சமுதாயம் ஆகிய பல வகைப்பட்ட சமுதாயங்களில் குழுக்களின் அமைப்பு வேறுபடுகிறது. அனைத்துச் சமுதாயத்திலும் மக்கள் குழுக்களைப் பொதுவாக உறவுக் குழுக்கள் (Kin Groups) என்றும், உறவிலிக் குழுக்கள் (Non-Kin Groups) என்றும் பாகுபடுத்தலாம்.

உறவுக் குழுக்கள் திருமணம், மரபு (Descent) முதலானவற்றின் வழி அமையப் பெறுவதாகும். சில புனை உறவுகளும் (Fictive Relations) உறவுக் குழுக்களில் அடங்கும். சமுதாயத்தில் தனிப்பட்டவர் களுக்கிடையே உள்ள தொடர்புகள், பிணைப்புகள், உறவுகள் அனைத்தும் பெரும்பான்மையாகப் பண் பாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்ட விதிமுறைகளுக்கு ஏற்ப அமைகின்றன. ஆனால், அனைத்துப் பண்பாடு களுமே ஒன்றைப் போல் ஏற்புமுறைகள், பாங்குகள், நடைமுறைகள் முதலானவற்றைக் கொண்டவையல்ல. பல பண்பாடுகளை ஒப்புநோக்கிப் பண்பாட்டிடை ஆய்வு (Cross-Cultural Study) செய்து பொதுப்படை யான உறவு முறைகளைக் கண்டறியலாம்.

உறவு முறை என்னும் பெரும்பரப்பு உறவின் அனைத்துத் தன்மைகளையும் விளக்குகிறது. ஒவ் வொரு குழுவிற்குள்ளும் குழுக்களுக்கிடையேயும் வரையறை செய்யப்பட்ட உறவின் தன்மையை இதன் வழிக் காணலாம். பொதுவாக உறவின் தன்மையைக் குருதி உறவு (Consanguineal Relationship), என்றும் மண உறவு (Affinal Relationship) என்றும் இருவகைப் படுத்தலாம். குருதி வழி உறவு உயிரியல் அடிப்படையில் அமைவதாகும். நேரடியாகவோ மறைமுகமாகவோ தன் கால்வழி இரத்தத்துடன் தொடர்புற்ற அனை வரும் குருதிவழி உறவில் அடங்குவர். எடுத்துக்காட் டாக முப்பாட்டன், பாட்டன், தந்தை, தாய், மகன், மகள், உடன்பிறந்தார், பேரன், பேத்தி அனைவரும் இரத்தவழி உறவினராவர்.

மணவழியால் சேரும் உறவினர் அனைவரும் மணவழி உறவினராவர். எடுத்துக்காட்டாக, கணவன், மனைவி, மாமனார், மாமியார் முதலான அனைவரும் மணவழி உறவினராவர். இவர்களன்றிப் புனை உறவி னர்கள் (Fictive Relatives) என்ற உறவு வகை யினமும் உண்டு. புனை உறவினர்கள் சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சில மரபுகளின் அடிப்படை யில் உறவுக் குழுக்களாக அமைவர். ஒருவர் ஒருவனைத் தத்தெடுத்து வளர்ப்பு மகனாக ஏற்றுக் கொண்டபின் அவன் அவர்தம் மகனாகிறான். பழங்குடியினருள் பல கால்வழியினர் அனைவரும் ஒரே குலக்குறியினைக் (Totem) கொண்டுள்ளனர். இக்குலக்குறியிலிருந்து தம் இனம் தோன்றியது என்றும் இச்சின்னத்தைக் கொண்ட அனைவரும் உடன்பிறந்தார் என்றும் கூறிக்கொள்வர். இதைப்போன்றே சில குடிகள் பொதுவான ஒரு மூதாதையரிலிருந்து தோன் றியவர்கள் என்பர். இந்த முதாதையர் புனைந்துரை மூதாதையராக (Mythical Ancestor) அமையும் போது, இவர்வழி வந்த அனைவரும் புனை நிலையாலேயே ஒரே கால்வழியைச் சேர்ந்தவர்கள் என்ற தகுதியைப் பெறுகின்றனர். இவர்கள் தம் குடிவழிப் பட்டியலை உண்மை மூதாதையருடன் கொண்டு செல்ல இயலா நிலையிலுள்ளனர்.

மரபு வழியில் அமையும் உறவுக் குழுக்கள் பல வாகும். தந்தைவழி மரபுடைய (Patrilineal Descent) குடிகளில் ஆண் அல்லது பெண் ஒவ்வொருவரும் தம் தந்தைவழி வந்த அனைத்து உறவினர்களையும் ஒரே மரபினர் எனக் கருதுவர். தந்தை, தந்தையின் தந்தை, அவரின் தந்தை எனப்பட்டியல் நீளும். மேலும், ஒருவ னுடைய உடன்பிறந்தவர்கள், உடன்பிறந்தானின் மக்கள், தன் மக்கள் ஆகியோரும் இந்த மரபுக் குழு வில் அடங்குவர். ஆனால், உடன்பிறந்தாளின் மக்கள் தந்தைவழிக் குழுவில் சேரார். இதைப் போன்றே தாய்வழி மரபுடைய (Matrilineal Descent) குடிகளில் உறவினர்குழு பெண்வழித் தொடர்புடைய அனைவரையும் கொண்டதாகும். ஒருவனுடைய தாய், தாயின் தாய், தாயின் உடன்பிறந்தார்கள், அவர் களின் மக்கள் எனப் பெண்வழித் தொடர்புடையவர் களின் பட்டியல் நீளும். ஆனால், உடன்பிறந்தானின் மக்கள் தாய்வழிக் குழுவில் சேரார். தந்தைவழி அல் லது தாய்வழி மரபினுள் எதையேனும் ஒன்றைப் பெற் றுள்ள குழுக்கள் ஒருவழி மரபுக் குழுவினர் (Unilineal Descent Group) என்று கூறப்படுவர். இதைப் போன்றே குலக் (Clan) குழுவினரும் ஒருவழிக் குழு வினராவர். இவர்கள் அனைவரும் ஒரே மூதாதையர் வழிவந்தவர்களாவர். சில குடிகளில் மரபுவழி தந்தை வழியையும் தாய்வழியையும் கொண்ட இரு மரபினைக் (Bilateral Descent) கொண்டதாக இருக்கும். பிறப்பின் அடிப்படையிலும் மரபுவழி அடிப்படையிலும் மண வழி அடிப்படையிலும் புனை உறவுஅடிப்படையிலும் அல்லாது, உறவுக் குழுக்கள் மேலும் பல முறைகளில் தம் செயல் முறைக்கேற்ப அமைகின்றன. ஒருவன் தன் வாழ்க்கையின் ஒவ்வொரு செயற்பாட்டையும், அதன் பயன்களையும் தன் குடும்பத்தில் உள்ளவர்களுடன் தனித்து அல்லது இணைந்து மேற்கொள்கிறான். ஒருவன், அவன்தன் மனைவி, மக்கள் ஆகியோரை மட்டும் கொண்ட கருக்குடும்ப (Nuclear Family) உறுப்பினர்கள் அனைவரும் ஒருவருக்கு ஒருவர் முதல் நிலை உறவினர் (Primary Relatives) ஆகின்றனர். இந்த முதல் நிலை உறவினரின் முதல்நிலை உறவினர் இரண்டாம் நிலை உறவினர் (Secondary Relatives) எனப்படுவர். இரண்டாம் நிலை உறவினரின் முதல் நிலை உறவினர்கள் மூன்றாம் நிலை உறவினர் எனப்படுவர். இவ்வாறு உறவினரின் நிலைகள் பெருகிக் கொண்டே போகும்.

சமூகத்தில் உள்ள அனைவரும் கேலி உறவு முறை யைக் கொண்டவர்களாவர். சில சமுதாயங்களில் கேலி செய்யும் உறவு (Joking Relationship) விரிந்த

அமைப்புற்ற முறையாகவும் காணப்படுகிறது. இது அவரவர் ஏற்றுள்ள சமூகம், குடும்பம் ஆகியவற்றில் கொண்டுள்ள தொடர்பின் அடிப்படையிலானது. ஒருவன் தன் மனைவியின் உடன்பிறந்தாளையும் உடன்பிறந்தானையும், தாயின் உடன்பிறந்தானையும் மிகுந்த அளவில் கேலி செய்வான். சில சமுதாயங்களில் மனைவியின் தாயும் கேலி செய்யும் உறவுக் குழுக்களில் சேர்க்கப்படுவாள். இது ஒவ்வொரு பண்பாட்டிற்கும் ஏற்ற முறையில் மாறுபட்டுக் காணப்படுவதாகும்.

பண்பாட்டின் சில வரையறைகளை ஏற்றுக் கொண்டு செயற்படும்போது சிலவகை உறவினர்கள் தவிர்த்தற்குரிய நிலையினைப் பெற்றுள்ளனர். இவர்கள் அனைவரும் தவிர்ப்பு உறவினர் (Avoidance Relatives) குழுவில் சேருவர். தவிர்த்தல் உறவுமுறை பெரும்பான்மையாக அனைத்துப் பண்பாடுகளிலுமே காணப்படுகிறது.

உறவுமுறை அமைப்பில் பாலுறவு முதன்மையிடத்தைப் பெறுகிறது. தம் சமூகத்தால் வரையறுக்கப்பட்ட அமைப்பின் வழியே தன் வாழ்க்கைத் துணையைக் கொள்ளமுடியும். அவ்வாறு துணையைக் கொள்ளும்போது சில உறவுகள் தவிர்க்கப்பட வேண்டியதாகிறது. தவிர்த்தல் உறவுக் குழுக்களில் பெற்றோர் – மக்கள், மருமகன்–மாமியார், மருமகள்–மாமனார், பாட்டன் – பேத்தி, உடன்பிறந்தான் – உடன்பிறந்தாள் ஆகியோர் அடங்குவர். இவர்களிடையே ஏற்படும் தகாப்புணர்ச்சியைத் தவிர்த்தல் அவசியமாகிறது. வயதுவந்தோர் வாழ்க்கையில் பாலுறவு நடத்தைக்குரிய விதிமுறைகளைக் கடைப்பிடிக்கும் நெறிமுறையும் இதிலடங்கும். தவிர்த்தல் உறவுமுறை பல்வேறு பண்பாடுகளில் பல்வேறு நிலையில் உள்ளது. ஆனால், இவற்றின் பண்புகளைப் பொதுமைப்படுத்திக் கூறும்போது, சமுதாயம், பண்பாடு ஆகியவற்றின் நெறிமுறைகள் முதலானவற்றிற்கு மதிப்பளிப்பதற்கும் தகாப்புணர்ச்சி (Incest) உறவுகளைக் கட்டுப்படுத்துவதற்கு ஏற்பட்டதே இந்த உறவுமுறை என உலோவீ (Lowie) கூறுவார். மு.அ.க.

**உறவுமுறையும் தகாப்புணர்ச்சியும்:** அனைத்துச் சமுதாயங்களிலும் மக்கள் பல்வகைப்பட்ட உறவுகளால் பிணைக்கப்பட்டுள்ளனர். இப்பிணைப்பின் அமைப்பே உறவுமுறை எனக் கூறப்படுகிறது. உறவுமுறையின் அமைப்பு குடிவழி அமைப்பைச் சார்ந்தது எனலாம். குடிவழி அமைப்பிலேயே யார் யாரை மணம் புரிந்துகொள்ளலாம் என்பதும், பெற்றோருக்கும் அவர்தம் சேய்களுக்கும் நிருணயிக்கப்பட்டுள்ள உரிமைகள், கடமைகள் முதலானவையும் வரையறுக்கப்படுகின்றன.

உறவுமுறை அமைப்பில் பாலுறவால் அமையும் உறவு சிறப்பிடம் பெற்றுள்ளது. பெரும்பான்மையாக அனைத்துப் பண்பாடுகளிலுமே தம் சமூகத்தால் வரையறுக்கப்பட்ட துணையுடன் மட்டுமே பாலுறவு கொள்வது என்பது இயலாததாகக் காணப்படுகிறது. சில சமுதாயங்களில் பிறன்மனை விழைதல் தண்டிக்கப்படாமலும் தடுக்கப்படாமலும் காணப்படினும், பல சமுதாயத்தில் இத்தகைய பாலுறவுகளுக்குப் பல தடைகளும் விலக்குகளும் விதிக்கப்பட்டுள்ளன. இவற்றின் அடிப்படையில் அமைந்ததே தவிர்ப்பு உறவு முறை ஆகும்.

**தவிர்ப்பு உறவுமுறை:** வயதுவந்தோர் வாழ்க்கையில் பாலுறவு நடத்தைக்குரிய விதிமுறைகள் கடைப்பிடிக்கப்படும் நெறிமுறையே பாலுறவுத் தவிர்ப்பெனலாம். மருமகள் மாமியார் மாமனாரிடையேயும், மருமகன் மாமியார் இடையேயும் நிலவும் உறவுமுறைகளிலேயும் சிலவகைக் கட்டுப்பாடுகள் நிலவுகின்றன. இதனால், எழுந்ததே உலகளாவிய தவிர்த்தல் உறவுமுறையாகும். மருமகன் மாமியாரிடை நிலவும் தவிர்ப்பு, தாயிடந்தங்கல் முறையால் விளைவதே என்கிறார் தைலர் (Tylor). மனித வரலாற்றின் முந்தைய நிலைகளில் மருமகன்கள் தங்கள் மனைவியரோடு வாழச் செல்லும்போது, தங்கள் மாமியாருடன் கட்டுப்பாடான உறவு முறையினைக் கொண்டிருந்தனர். இதற்குக் காரணம் தாய்த் தலைமைக் குடும்பத்தைச் சார்ந்திருக்கும் அவர்கள் (மருமகன்கள்) முற்றிலும் அயலார்களாகக் கருதப்பட்டதாக இருக்கலாம்.

பிராய்டின் கோட்பாடு மாமியார் மருமகன் தவிர்ப்பினைப் பின்வருமாறு விளக்குகிறது. இதன்படி ஒருதாய் தன் பெண்ணை அயலான் ஒருவனுக்கு மணம் முடித்துத் தரத் தயங்குகிறாள். மேலும் மகள் தன் மீதுகாட்டும் அன்பும் நம்பிக்கையும் மற்றொருவனுக்கு உரித்தாவதாக உணர்கிறாள். இதன் மறுபக்கத்தில் மருமகனை மாமியார்பால் ஈர்க்கும் சில கருத்துகளுமுள்ளன. மாமியாரின் வெளிப்புறச் சாயல் அவள் மகளை ஒத்திருப்பதாலும், அவளின் பால் உணர்வுகள் தணியாத நிலையில் இருப்பதாலும், மாமியார்–மருமகனிடையே தவறான எண்ணங்கள் ஏற்படுவதற்கு வாய்ப்புண்டாகிறது. மேலும், மனத்தளவிலாவது தன் மகள் இடத்தில் தன்னை நினைத்துப் பார்க்கவும் மாமியார் எண்ணலாம். எனவே இத்தகைய தகாப்புணர்ச்சி சார்ந்த நினைவுகளை அடக்கியாள்வதற்காக உண்டானதே மாமியார்–மருமகன் தவிர்ப்பு என்பது பிராய்டின் கோட்பாடு.

சமுதாயம்,பண்பாட்டுநெறிமுறைகள் முதலான வற்றிற்கு மதிப்பளிப்பதே மருமகன்-மாமியார் தவிர்ப் புக்குக் காரணம் என உலோவி (Lowie) கூறுவார்.

குடும்பத்தில் அமைதி நிலவுவதற்காக ஏற்படுத்தப் பட்ட ஒரு வழி முறையே தவிர்ப்பு என்பார் தார்னி அய் (Torney High). அதாவது கணவன் அல்லது மனைவியின் கை மேலோங்க வேண்டும் என்னும் உள்ளுறை எண்ணமே இதற்குக் காரணமெனலாம். இருந்தபோதிலும் குடும்ப அமைப்பில் கணவன் அல் லது மனைவியின் பெற்றோர்களே முதன்மையாகத் திகழ்வதால், நிலைமையினைச் சமாளிப்பதற்கு மாம னார்-மருமகள் இடையேயும், மாமியார்-மருமகனி டையேயும் தவிர்ப்பு நிலை தேவையாகிறது என்றும் தார்னி அய் கூறுவார். இராட்கிளிப்பு பிரௌன் (Radcliffe-Brown) கூற்றின்படி, சிலவகை உறவுமுறை களுள் பகையுணர்வு சமுதாய விதிகளுக்குப் புறம்பா கக் கருதப்படுகிறது. எனவே, இத்தகைய பகையுணர்வு வெளிப்படையாகக் காண்பிக்கப்படாமல் இருப்பதற் குச் சிறந்த வழியாக உறவுமுறையினரிடையே அதிக நெருக்கம் வளராமல் பார்த்துக் கொள்ளப்படுகிறது. இதனால், விளைவதே உறவுமுறைகளிடையே எழும் தவிர்ப்பு முறையாகும்.

தவிர்ப்பு உறவுமுறையினைப்பற்றிக் கூறும்போது பிரேசர் (Frazer), பிராய்டு ஆகியோர் விலக்கப்பட்ட பாலின உறவினை அனைத்துச் சமுதாயத்தினரும் வெறுக்கின்றனர் என்பதன் அடிப்படையில் விளக்கி யுள்ளனர்.

இலங்கையின் முதுகுடியினரான வெத்தர்களிடை யேயும் திரோபிரியாண்டுத் தீவினரிடையேயும்'தவிர்ப்பு உறவுமுறை காணப்படுகிறது. பின்னவரிடையே ஒரு வன் தன் தங்கை வேற்று மனிதனிடம் காதல் கொள்வதையோ வேற்று மனிதன் தன் தங்கையிடம் புணர்ச்சி செய்வதையோ கண்டு விட்டால், மூவரும் தற்கொலை செய்து கொள்ள வேண்டும் என்னும் முறையுள்ளது. அண்ணன் தங்கையர் ஒரேயிடத்தில் தங்குதல், உணவு கொள்ளல் போன்றவை வெத்தர் களிடையே அறவே தவிர்க்கப்படுகின்றன. அவர்களி டையே எவ்வித நெருக்கமோ அறிமுகமோ ஏற்படு வது கிடையாது. பிசித் (Fiji) தீவின் பழங்குடியினரி டையே பொது மரபின்படியும் சமய மரபின்படியும் சகோதர சகோதரியர் ஒருவரோடொருவர் உரை யாடுவதும் தவிர்க்கப்படுகிறது. தகாப்புணர்ச்சியினை விளைவிக்கக்கூடிய பாலின நெருக்கத்தை விலக்குவதே இத்தகைத் தவிர்ப்பின் நோக்கம் என்பார் பிரேசர்.

தகாப் புணர்ச்சி: இரத்த உறவுடைய உறுப்பின ரிடையேயும் அதற்கு அப்பாற்பட்ட குடும்ப உறுப்பின ரிடையேயும் காணப்படும் கலப்புப் பாலின உறவு முறையே (Hetero-Sexual Relation) தகாப்புணர்ச்சி எனப்படும். பண்பாட்டு மானிடவியலார் இச்சொல் லிற்கு விரிவான விளக்கத்தைக் காட்டுவர்.

'விலக்கு' என்னும் சொல் தடை செய்யப்பட்ட அல்லது விலக்கப்பட்ட ஒரு செயலை அல்லது ஒரு பொருளைக் குறிப்பதாகும். இரத்த உறவுடைக் குடும்ப உறுப்பினர்களிடையே தடை செய்யப்பட் டுள்ள பாலின உறவு முறையான 'தகாப்புணர்ச்சி விலக்கு'ப் பற்றிய ஆய்வினை மானிடவியலாளர்கள் பெருமளவில் மேற்கொண்டனர்.

தகாப்புணர்ச்சி விலக்கைக் கடைப்பிடித்தல்வழி 'புறமண விதி'யை மானிடவியலார் கண்ட போது தான் தகாப்புணர்ச்சியினைப் பற்றிய ஆய்வினை மேற்கொள்ளும் எண்ணம் மேலோங்கியது. 'தகாப் புணர்ச்சி',' விலக்கு'ஆகியன முதன்மையாகப் புறமண வழித் தொடர்புடையன. 'தகாப்புணர்ச்சி விலக்கு' (Incest Taboo) செயற்படும் குழுவிற்கு வரையறுக்கப் பட்டுள்ள எல்லையே புறமணக் குழுவினர் (Exogam-ous Group) எல்லையாகவும் அமைந்துள்ளது.

பொதுவாக, பண்பாட்டளவில் ஒரே உறவுமுறைக் குழுவினைச் சார்ந்தவர்களென வரையறுக்கப்பட்ட எவரிடையேயும் உடலுறவு தடை செய்யப்படுகிறது. தகாப்புணர்ச்சி வெறுத்தற்குரிய செயலாகக் கருதப் படுவதால், நாகரிகமடையாப் பழங்குடி மக்கள் முதல் நன்கு முன்னேற்றமடைந்த அனைத்து மக்கள் வரை தகாப்புணர்ச்சி விலக்கப்படுகிறது. தகாப்புணர்ச்சி தடை செய்யப்படுதல் இயல்பூக்கமன்று. கூறப்போ னால் உயிரியல் அடிப்படையில் அல்லாது சமுதாய அடிப்படையிலேயே இது வேரூன்றிக் காணப்படுகிறது.

சகோதர-சகோதரிகளின் உடலுறவு எங்ஙனம் விலக்கப்படுகின்றதோ அதனைப் போன்றே பெற் றோர்-குழந்தைகள் உடலுறவும் விலக்கப்படுகிறது. அரச குடும்பத்தைச் சார்ந்த எகிப்தியர், அவாய் (Hawai), இன்கா (Inca) முதலானோரிடையேயும்பழங் குடியினரிடையேயும் சகோதர-சகோதரி உடலுறவு விலக்கு, விதிவிலக்களிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டுள் ளது. அரச பாரம்பரியம் தெய்வீகத் தன்மை வாய்ந்த தாகக் கருதப்பட்டதாலும், இறக்கக்கூடிய சாதாரண மனிதர்களோடு திருமண உறவு கொள்வது நேர்மை யற்ற செயலாக எண்ணப்பட்டதாலும், இச்சமூகங்க ளில் அரச குடும்பத்தைச் சார்ந்த சகோதர சகோதரி யிடையே திருமணம் புரிதல் இன்றியமையாது வேண் டப்படுவது எனக் கருதப்படுகிறது.

சகோதர-சகோதரியர் உடலுறவுக்குப் பாலினீசிய மக்களிடையே கடுமையான தண்டனை அளிக்கப்பட்ட போதிலும், இரட்டைக் குழந்தைகளிடையே இத்தகு புணர்ச்சிக்கு விதிவிலக்களிக்கப்பட்டுள்ளது. தாயின் கருப்பையில் வளரும்போதே இரட்டைக் குழந்தைகளிடையே நெருக்கமான உறவு வளர்ந்து விடுவதாக இம்மக்கள் கருதுவதால், அக்குழந்தைகளையும் அவற்றின் பெற்றோரையும் தற்காலிகமாகக் குடியிருப்பை விட்டு வெளியேற்றுகின்றனர். பின்னர் அவர்களுக்குத் தூய்மைச் சடங்குவழிச் சாந்தி செய்து, அவர்கள் பாவத்தைப் போக்குகின்றனர். பிற்காலத்தில் இரட்டையரிடையே உண்மைத் திருமணத்தினை நடத்திக் கருப்பையில் ஏற்பட்டதாகக் கருதும் உடலுறவினை முழுமையாக்குகின்றனர். சமுதாய அளவில் ஒரே குடும்பத்தைச் சாராத இருவேறு குடும்பங்களில் வளரும் சகோதர சகோதரிகளுக்கிடையே நடைபெறும் திருமணம் ஆதரிக்கப்படுவதைச் சில பழங்குடியினரிடையே காணலாம். இத்தகைய திருமணமுறை தென்கிழக்கு ஆசியாவைச் சேர்ந்த இலாமெட்டுப் (Lemet) பழங்குடியினரிடையே நிலவுகிறது.

கம்போடியாவில் வாழும் சில மலைவாழ் பழங்குடியினரிடையே சகோதர-சகோதரியர் மணம் அனுமதிக்கப்படுகிறது. சைபீரியாவின் காம்சடால்சுப் (Kamchadals) பழங்குடிகளிடையே உள்ள ஓர் அரச குடும்பத்தின் குடிவழிகளைப் பற்றி இரால்புஇலிண்டன் (Ralph Linton) ஆராயும்போது, சகோதரன்-சகோதரி திருமண முறையில் தனிச் சிறப்புரிமை அக்குடும்பத்தின் மூத்த சகோதரிக்கே உரித்தாகிறது என்னும் கருத்தைத் தெளிவாக எடுத்தியம்பியுள்ளார்.

வடஇந்தியக் குக்கிப் (Kuki) பழங்குடியினரிடையே தாய்-மகன் தகாப்புணர்ச்சி தவிர்க்கப்படுகிறது. சாவாவிலுள்ள (Java) காலாங்சுப்( Kalangs) பழங்குடியினரிடையே தாய்-மகன் திருமணம் நன்மைகளைக் கொண்டு வருவதாகக் கருதப்படுகிறது. கிழக்கு ஆப்பிரிக்காவிலுள்ள பண்டு (Bantu) பழங்குடியினர் தங்கள் தாய்மாரையும் சகோதரிகளையுமே மணம் புரிந்து கொள்கின்றனர். பிற பெண்களை விலைக்குப் பெற இயலாமற் போவதே இவர்களிடையே இத்தகைய திருமணம் நிகழ்வதற்கு முதன்மையான காரணமாகத் திகழ்கிறது. அலாசுகா முந்நீரகத்தின் (Alaska Peninsula) தென்புறத்திலுள்ள கோடியக்குத் (Kodiak) தீவில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து வந்த எசுக்கிமோக்கள் அனைத்து வகைத் தகாப்புணர்ச்சிகளையும் எவ்வித வரன் முறையுமின்றிக் கொண்டிருந்தனர். சாலமன் தீவினரிடையே தந்தை மகள் திருமணம் அனுமதிக்கப்படுகிறது.

மடகாசுகரிலுள்ள சகாலனிசுப் (Sakalanis) பழங்குடியினரிடையே தலைவனுக்கு அவனுக்கேற்ற சமத் தகுதியுடைய பெண் வேறு குழுவிலிருந்து கிடைக்கப் பெறாவிடில், அவன் தன் சொந்த சகோதரியைத் திருமணம் செய்து கொள்ளலாம் என்னும் நியதி காணப்படுகிறது. ஆப்பிரிக்காவின் அசாந்திப் (Ashanti) பழங்குடித் தலைவன் தன் சொந்த மகளுடன் உடலுறவு கொள்ளும் உரிமை பெற்றிருக்கிறான். இதற்கு மாறாக வடஅமெரிக்க மொசெவு இந்தியர்கள் (Mojave Indians) தகாப்புணர்ச்சி விலக்கினை மிகக் கவனமாகக் கடைப்பிடிக்கின்றனர். இவர்கள் இரண்டாம் நிலைச் சகோதரர்களின் (Second Cousin) பிள்ளைகளுடன் கூடத்திருமண உறவு வைத்துக் கொள்வதைத் தவிர்க்கின்றனர்.

தாய்வழி உரிமை கொண்ட குடும்பத்தினருள் தகாப்புணர்ச்சியினைத் தடைப்படுத்துதலென்பது, ஒரே கால்வழிப் பிரிவினைச் சார்ந்தோரிடையே ஏற்படும் உடலுறவு தடை செய்யப்படுதலை மட்டுமே விளக்குகின்றது. எனவே, தாய்வழிச் சமுதாயத்தினரிடையே உள்ள அனைத்துப் பெண்டிரைப் பற்றியும் பொதுவாகக் காணப்படும் பாலின நோக்கு தொடர்ச்சியான, இணக்கமான, எளிய முறையாக உள்ளது.

கோட்டமி (Nkotami) ஆற்றினருகே வசிக்கும் தென் ஆப்பிரிக்கப் பழங்குடியினரிடையே மற்றுமொரு மாறுபட்ட நம்பிக்கை நிலவி வருகிறது. கோட்டமி ஆற்றினருகேயுள்ள கிராமங்களில் வசிக்கும் பழங்குடியினர் நீர்யானை வேட்டையில் சிறந்து விளங்குகின்றனர். இவர்கள் இந்த விலங்கினை வேட்டையாட அதன் ஒவ்வொரு அசைவினையும் உன்னிப்பாகக் கவனித்து வருகின்றனர். நீர்யானையினை வேட்டையாடத் தக்க நேரம் வரும்போது, வேட்டையாடச் செல்பவன் ஒரு மாத காலம் நீடிக்கும் அவ் வேட்டைக்குச் செல்வதற்கு முன், தன் சொந்த மகளுடனேயே உடலுறவு கொள்கிறான். பொதுவாக இத்தகைய தகாப்புணர்ச்சி இவர்களிடையே விலக்காகக் கருதப்படுகிறது. எனினும், இவ்விலக்கினை மீறுவதன் வழி அவன் தன் உணர்ச்சிகளைக் கொன்று, அதன் வாயிலாக நீர் விலங்கினைக் கொல்லப் போதுமான அளவு தைரியம் அடைகிறான் எனக் கருதப்படுகிறது.

பல சமுதாயங்களில் தகாப்புணர்ச்சியின் விதிமுறைகளை மீறுவோருக்குத் தண்டனைகள் மிகக் கடுமையாக அளிக்கப்பட்டன. நவசோ இந்தியர்கள் (Navojo Indians) தகாப்புணர்ச்சியின் வழி உண்டாகும் கருவினைச் சிதைத்தலை மிக முக்கிய தேவையாகக் கருதுகின்றனர். தகாப்புணர்ச்சிவழிப் பிறக்கும்

குழந்தைகள் முதலில் சாதாரணமாக இருந்து, பின்னர் முன்னோர்களின் ஆவிகளால் விகாரமான உருவமுடையவர்களாக மாறிவிடுவர் என்னும் கருத்துத் தென் ஆப்பிரிக்கச் சூலுப் (Zulu) பழங்குடியினரிடையே நிலவுகிறது.

**உறவுமுறைச் சொல்வழக்கும் தகாப்புணர்ச்சியும்:** ஒவ்வொரு சமூகத்தினரிடையேயும் அவர்களின் உறவு முறைச் சொற்களின் பொருள், அந்தந்தச் சொற்களின் கருத்துப்படியே எடுத்துக் கொள்ளப்படுகிறது. எடுத்துக்காட்டாக, ஒரு பெண் சகோதரியென அழைக்கப்பட்டால் அவள் அனைத்து வகைகளிலும் சகோதரியாகவே கருதப்பட வேண்டும். எனவே 'சகோதரியர்' என அழைக்கப்படும் எந்தப் பெண்டிரோடும் உடலுறவும் மண உறவும் கொள்ளுதல் பொதுவாக விலக்கப்படுவதெனக் கருதப்படுகிறது.

பல பழங்குடியினரிடையே வகைப்படுத்தப்பட்ட உறவுமுறை (Classificatory Kinship) காணப்படுவதால் தகாப்புணர்ச்சித் தடையின்கீழ்ப் பல தனிப்பட்டவர்கள் உட்படுத்தப்படுகின்றனர். இவ்வகைப்பாட்டு முறையில் தந்தை, தாய், சகோதரன், சகோதரியென ஒவ்வொருவரும் வகைப்படுத்தப்படுகின்றமையால் அந்த உறவுமுறைக்கேற்றவாறு அவரவர் நடந்து கொள்ளக் கடமைப்பட்டவராகின்றனர். இத்தகைய உறவுமுறை வேறுபாடுகள் உயிரியல்சார் அமைப்பாகக் காணப்படாதபோதிலும் சமுதாய அமைப்பாகக் காணப்படுகின்றன.

பெற்றோரின் உடன்பிறந்தாருடைய சேய்களில் ஒரு சிலர் சகோதரர் அல்லது சகோதரியென வகைப்படுத்தப்பட்டுள்ளனர். இவர்களிடையேயும் ஒருசிலர் இரத்தத் தொடர்புடைய உறவினராகக் கருதப்படுவதில்லை. இவர்களுள் முதல் வகையினர் பெற்றோரின் நேர் உடன் பிறந்தோரின் மக்கள் (Parallel Cousins) எனவும் இரண்டாம் வகையினர் மாமன் அல்லது அத்தை பிள்ளைகள் (Cross-Cousins) எனவும் அழைக்கப்படுகின்றனர். பொதுவாகப் பெற்றோரின் நேர் உடன்பிறந்தாரின் மகன் அல்லது மகளைத் திருமணம் புரிதல் தவிர்க்கப்படுகிறது. ஆனால், மாமன் அல்லது அத்தையின் மகனைஅல்லது மகளை மணம் புரிந்து கொள்ளுதல் நலமெனக் கருதப்படுகிறது. மரபியல் உறவின்படி நோக்கும்போது பெற்றோரின் நேர் உடன் பிறந்தார் மக்கள், அத்தை மாமன் மக்கள் ஆகிய இரு உறவு முறைகளுமே நெருக்கமாக உள்ளன. இருந்த போதிலும் பண்பாட்டு முறைப்படி வரையறுக்கப்பட்டுள்ள அத்தை மாமன் மக்கள் உறவு தவறாகக் கருதப்படுவதில்லை.

பண்டைக்கால மனிதன் நெருங்கிய உட்குழு மணவுறவால் (Close Inbreeding) விளையும் மரபுச் சீர்கேட்டினை நன்கறிந்திருந்தான். அதனால்தான், தகாப்புணர்ச்சியினைத் தடை செய்தான் என வெசுட்டர்மார்க்கு (Westermarck), மார்கன் (Morgan) முதலியோர் கூறுவர்.

தகாப்புணர்ச்சி விலக்கின் கடுமை பல்வேறு சமுதாயங்களில் வேறுபட்டுக் காணப்படுகிறது. சில சமூகத்தினரிடையே அரச உரிமை, மந்திரம், துணிவுடைமை போன்ற காரணங்களுக்காகத் தகாப்புணர்ச்சி பல்வேறு உறவினரிடையே அனுமதிக்கப்படுகிறது. தகாப்புணர்ச்சி விலக்கிற்கும் பண்பாடு, சமயம், மந்திரம் போன்றவற்றிற்கும் இடையேயுள்ள நெருங்கிய தொடர்பினைத் தர்க்கைம் (Durkheim), பிரேசர், பிராய்டு முதலானோர் ஆராய்ந்துள்ளனர்.

தகாப்புணர்ச்சி விலக்கிற்கு யாரெல்லாம் உட்படுத்தப்படுகிறார்கள் என்பதை முடிவு செய்வது ஒரு குறிப்பிட்ட சமுதாயத்திலுள்ள உறவுமுறை அமைப்பாகும். பெற்றோரின் உடன் பிறந்தாரின் சேய்களுடன் மண உறவு கொள்ளும் முறையினை விலக்காகக் கருதுவது சமுதாயத்திற்குச் சமுதாயம் மாறுபடுகிறது. ஒவ்வொரு சமுதாயத்திலும் அமைப்பினையொட்டியே ஒரு குறிப்பிட்ட உறவினர் விலக்காகக் கருதப்படுகின்றாரா இல்லையா என்பது தெளிவாகிறது.

ம.ந.பு.

துணை நூல்கள்:

**Bohannan, P.** and **Middleton, J.** (Eds), Kinship and Social Organisation, The Natural History Press, New York, 1968.

**Fox, Robin**, Kinship and Marriage, Penquin Books, New York, 1967.

**Murdock, G.P.**, Social Structure, Free Press, New York, 1965.

**Schneider, D.M.**, American Kinship: A Cultural Account, Prentice Hall, New Jersey, 1968.

**Schusky, E.L.**, Manual for Kinship Analysis, Holt, Rinehart and Winston, New York, 1965.

**Westermarck, F**, The History of Human Marriage, Macmillan, London, 1921.

***உறழ் கலிப்பா***: வெண்சீரொடு நிரை வந்தொன்றும் இலக்கணமுடைய கலித்தளையால் அமைந்து, தரவு, தாழிசை, அராகம், அம்போதரங்கம்,

தனிச்சொல், போக்கு (சுரிதகம்) என்னும் ஆறு உறுப்புக்களுள் ஏற்பன பெற்று, நாற்சீருடைய அளவடியால் துள்ளல் ஓசையோடு இயலும் இலக்கணமுடைய கலிப்பா, நான்கு வகையுடையது. அதனை விரித்து, 'ஒத்தாழிசைக்கலி, கலி வெண்பாட்டே, கொச்சகம் உறழொடு கலி நால்வகைத்தே' (தொல். செய்யுள். 126) என்பர் தொல்காப்பியர். தமிழ் யாப்பிலக்கண ஆசிரியர்கள் பலருள்ளும் தொல்காப்பியர் ஒருவரே கலிப்பாவை நான்கு வகைப்படுத்தி உறழ் கலியினை ஒருவகையாகக் குறிப்பிட்டுள்ளார்.

'கூற்றும் மாற்றமும் இடையிடை மிடைந்தும், போக்கின் றாகல் உறழ் கலிக்கு இயல்பே' (தொல். செய்யுள். 156) எனத் தொல்காப்பியம் உறழ் கலிப் பாவுக்கு இலக்கணம் வகுத்துள்ளது. 'ஒருவர் ஒன்று கூறுதற்கு மறு மாற்றம் மற்றொருவர் கூறிச் சென்று பின்னர் அவற்றை அடக்குவதொரு சுரிதகம் இன்றி முடிவது உறழ் கலி என்றவாறு' என நச்சினார்க்கினியர் இத்தொல்காப்பிய நூற்பாவிற்கு உரை வகுத்துள்ளார். இதனைத் தரவு பெறுதலும், பாட்டிடை மிடைதலும், வேறு சீர் சேர ஐஞ்சீர் ஆதலும், அவ்வாறே அறுசீர் பெறுதலும், ஒழிந்த சொற்சீர் பெறுதலும், பா மயங்கி வருதலும், அம்போதரங்கத்திற்குச் சொல்லப்பட்ட அளவை பெறுதலும் ஆகியவெல்லாம் இவ்வுறழ் கலிக்கு இலக்கணமாம் என்னும் பொருள்படப் பேராசிரியர் விளக்குவார். சிலபோது சுரிதகம் எனப்படும் போக்கு இடம் பெறலாம் என்பதும், இச்சுரிதகம் ஆசிரியச் சுரிதகமாகவே இருத்தல் வேண்டும் என்பதும் பேராசிரியர் கருத்து.

பின்னர் இலக்கண ஆசிரியர்கள் இவ்வுறழ் கலியினைக் கொச்சகக் கலியுள் அடக்கி இருக்கலாம். ஆனால், தொல்காப்பிய உரையாசிரியர்களான பேராசிரியரும் நச்சினார்க்கினியரும், 'நாடகச் செய்யுள் போல வேறுவேறு துணி பொருளாகியும் பல தொடர்ந்தமையின் பெரிதும் வேறுபாடுடைமை நோக்கியும் இது பொருளதிகாரம் ஆதலாற் பொருள் வேறுபாடு பற்றியும் வரலாற்று முறைமை பற்றியும் வேறு செய்யுள் என்றார் தொல்காப்பியர்' என வாதிட்டுள்ளனர். இருப்பினும் இவ்வுறழ் கலி, கலி வெண்பாட்டின் இயல்புகள் பலவற்றைப் பெற்றுள்ளது. 'வெண்பா வியலான் வெளிப்படத் தோன்றும்' (தொல். செய்யுள். 154) எனத் தொல்காப்பியரே இதனைச் சுட்டுகிறார். அகப் பொருளில் தலைவன் தலைவியருடைய கூற்றும் மாற்றமுமாக வருவதே இக்கலி வகையின் சிறப்பியல்பு எனலாம்.

இவ்வுறழ் கலிக்கு எடுத்துக்காட்டாகக் கலித்தொகை 60, 87, 91, 113, 114 ஆகியவற்றை உரையாசிரியர்கள் தருகின்றனர். தி.மு.

**உறழ்நிலை இலக்கணம்**: மொழிகளுக்கிடையே காணப்பெறும் ஒற்றுமை வேற்றுமைகளைக் கண்டறிய அவற்றை ஒப்பிட்டு ஆய்தல் இன்றியமையாதது. இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட இனவழித் தொடர்பு (Genealogical Relationship) உடைய மொழிகளை ஒப்பிட்டு ஆய்வு செய்யும் பகுதி ஒப்புமை இலக்கணம் (Comparative Grammar) எனப் பெறும்.

இனவழித் தொடர்பு இல்லாத இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட மொழிகளை ஒப்பிட்டு ஆய்வு செய்யப்பெறும் மொழியியற் பகுதி உறழ்நிலை இலக்கணம் (Contrastive Grammar) எனப்படும். திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்த தமிழ், மலையாளம், தெலுங்கு போன்ற மொழிகளை ஒப்பிட்டு ஆய்வது ஒப்புமை இலக்கணத்தின் பாற்பட்டதாகும். திராவிட மொழிக் குடும்பத்தினைச் சார்ந்த தமிழ் மொழியையும் இந்தோ ஐரோப்பிய மொழிக் குடும்பத்தினைச் சார்ந்த ஆங்கில மொழியையும் ஒப்பிட்டு ஆய்வது உறழ்நிலை இலக்கணத்தின் பாற்பட்டதாகும்.

தமிழும் ஆங்கிலமும் இனவழித் தொடர்பு இல்லாத மொழிகளாக அமைந்துள்ளமையால், அவற்றிடையே மிக்க வேறுபாடுகள் காணப்படுகின்றன. உறழ்நிலை இலக்கணம் இரு வேறு மொழியமைப்பினை ஒப்பிட்டு நோக்கி அவற்றிடையே காணப்பெறும் வேறுபாடுகளுக்கே முதலிடம் கொடுக்கிறது. கோட்பாட்டு நிலையிலும் பயன்பாட்டு நிலையிலும் இனவழித் தொடர்பு இல்லாத மொழிகளுக்கிடையே காணப்பெறும் ஒற்றுமை, வேற்றுமைகளைக் கண்டறிய இது பெரிதும் பயன்படுகிறது.

உறழ்நிலை இலக்கணம் பிறமொழியைக் கற்பித்தலில் பெரும் பங்கு வகிக்கின்றது. இரு மொழிகளுக்கிடையே காணப்படும் ஒப்புமையுடைய பகுதிகளைக் கற்பித்தல் தேவையற்ற முயற்சியாதலின் மொழிப் பாடத் திட்டத்தில் மொழி வேறுபாடுகளுக்கே முதன்மையான இடம் கொடுக்கப்படுகின்றது.

அடிப்படை மொழிக்கும் (Source Language) பயில் மொழிக்கும் (Target Language) இடையே ஒலியன் நிலை, உருபன் நிலை, தொடரியல் நிலை, பொருண்மை நிலை ஆகிய நிலைகளில் காணப்பெறும் வேறுபாடுகளை உறழ்நிலை இலக்கணம் சுட்டுகின்றமையால், பிறமொழியைக் கற்பித்தலில் இதற்குச் சிறப்பிடம் கொடுக்கப்பட்டுள்ளது. ஏ.ஆ.

துணை நூல்கள்:

Jacek, Fisiak (Edr.), Trends in Linguistics, Mouton Publishers, New York, 1984.

Gage, W.W., Contrastive Studies in Linguistics, New York, 1961.

Theivananthan Pillai, K., Contrastive Linguistics and Language Teaching, Annamalainagar, 1973.

**உறித்தாபசன் கதை** சமண சமய நீதி போதனைக் கதையாகும்; சமண நீதிகளில் மூன்று இரத்தினங்களான நல்லறிவு, நன்னடத்தை, நன்னம்பிக்கை ஆகியவற்றைக் கடைப்பிடித்தவன் கதையாகும். சமண முனிவர்களுள் ஒரு பிரிவினர் உறிச்சமணர் ஆவர். தாபசன் என்னும் உறிச்சமண தவசி போலி வேடதாரியாகத் திரிந்து ஒரு தாசியுடன் தகாத உறவு கொண்டிருந்தான். தாசிக்குப் பொருள் கொடுப்பதற்காகத் திருடத் தொடங்கினான். பொய்த் தவ ஒழுக்கத்தால் திருடிப் பொருள் சேர்த்துக் கணிகை வீடே கதி என்று கிடந்தான். இறுதியில் குற்றம் வெளிப்பட்டுத் தண்டனை அடைந்தான்.

பி.தெ.

**உறியடித் திருநாள்** என்பது திருமால் சமயத்தவரான வைணவர் கொண்டாடும் திருநாளாகும். திருமால் கண்ணனாக அவதாரம் செய்த போது இளமையில் நிகழ்ந்த நிகழ்ச்சியினை நினைவூட்டும் வகையில் இவ்விழா வைணவர்களால், பெருமாள் கோயிலுக்குமுன் அல்லது ஒருபகுதியில் ஆண்டுதோறும் கொண்டாடப்படும்.

ஆண்டுதோறும் ஆவணி மாதம் சுக்கிலபட்ச காலத்தில் தொடங்கும் கண்ணன் பிறப்பு விழாவின் பத்தாவது நாளில் இவ்விழா நடத்தப்பெறும்.

முற்காலத்தில் மூங்கிலால் கூடு போலச் செய்து அதன் உள்ளே முறுக்கு, சீடை, பழங்கள் முதலிய தின்பண்டங்கள் போன்றவை கட்டப்பட்டிருக்கும். ஓரப்பகுதியில் பானை கட்டப்பட்டிருக்கும். மூங்கில் அல்லது அதனைப் போன்ற நெடிய கம்பம் ஒன்றினைப் பூமியில் நட்டு அதன் உச்சியில் தின்பண்டங்கள் நிறைந்த மூங்கில் கூடு கட்டப்பட்டிருக்கும். எளிதில் கம்பத்தின்மீது ஏறமுடியாதபடி அதில் உளுந்துமா, சோற்றுக் கற்றாழை, விளக்கெண்ணெய் போன்ற வழுக்குந் தன்மை மிக்க பொருள்களைப் பூசி வைப்பார்கள். அப்பசை காய்ந்து விடாமலிருக்க அதன் மீது தண்ணீரைத் தெளித்துக் கொண்டே இருப்பார்கள். புளியம்பசையும் பூசுவதுண்டு. உறியடித் திருவிழாவின்போது வழுக்கு மரமாகிய கம்பத்தின் முன்னே கண்ணன் படம் வைக்கப்பட்டிருக்கும். பீச்சாங் குழல் கொண்டு பலரும் தண்ணீரைப் பீச்சியடிப்பர். கம்பத்தில் பூசப்பட்ட பசை, நீரால் நனைந்து வழுக்கல் மிகுந்ததாக அமைந்து ஏறுபவர்களை ஏற விடாதபடி வழுக்கித் தடுத்திருக்கும். யார் வேண்டுமானாலும் கம்பத்தின் உச்சியில் ஏறித் தின்பண்டங்களை எடுக்கலாம். ஒருமுறை முயற்சி செய்து மூங்கிலில் ஏறமுடியாதவர்கள் அதில் தோல்வியுற்றவராகக் கருதப்படுவர். அந்நிலையில் மற்றவர்கள் பெற முயலும் வாய்ப்பினைப் பெறுவர். சில இடங்களில் ஏறுவோர் பலரும் எத்துணை முறை வேண்டுமானாலும் முயன்று ஏற அனுமதிக்கப்படுவர். எளிதில் யாரும் ஏறிவிடாதபடி பக்கத்திலிருப்போர் ஏறுவோர் மீது தண்ணீரை வீசிக் கொண்டிருப்பர். அரிதின் முயன்று மேலேறியவர்கள் அங்குள்ள தின்பண்டங்களை எடுத்துத் தாமும் உண்டு மற்றவர்களுக்கும் மேலிருந்தே போடுவார்கள். சில இடங்களில் உறி மரத்தின்மீது தின்பண்டங்களேயன்றி, துண்டு கட்டி வைப்பதும் உண்டு. அதில் பணம் முடித்தும் வைப்பர். அவற்றை ஏறுவோர் எடுத்துக் கொள்வர். கண்ணன் சிறுவயதில் உறிமீது ஏறி வெண்ணெய் உண்டதை நினைவூட்டும் வகையில் இவ்விழா அமைகிறது.

வழுக்கு மரம் ஏறுவதோடு கம்பத்தின் மேல் உறி போல் அமைந்து ஏற்று, இறக்குமாக அமைக்கப்பட்ட பானையைக் கீழிருந்து போர் கோலால் அடித்து உடைக்கும் செயலும் நடைபெறும். அப்பானை நிறைய மோர் நிரப்பப்பெற்று மஞ்சள் துணியால் மூடப்பட்டிருக்கும். உயரமான மூங்கிலில் கயிற்றால் கட்டி, ஏற்றி இறக்கும் வகையில் உறி அமைத்து அதில் பானை வைக்கப்பட்டிருக்கும். பானையின் தலைப்பகுதியில் கட்டிய கயிற்றை ஒருவர் பிடித்திருப்பார். வேடிக்கைப் பார்ப்பவர் சிறுகோலால் பானையை அடிக்க முயலுவர். அடிப்பவர்களுக்கு எட்டாத உயரத்தில் பானை உயர்த்தப்படும். பானையை ஏற்றி இறக்குபவர் தளர்ந்த நேரத்தில் பானை அடித்து உடைக்கப்படும். கண்ணனைப் போல வேடமிட்டவர்மீது வண்ணம் கலந்த தண்ணீரை ஊற்றுவர். மற்றவர்கள் மீதும் தண்ணீரை ஊற்றும் வழக்கமும் உண்டு.

தஞ்சை மாவட்ட மன்னார்குடி இராசகோபால சாமி கோவில், வரகூர் வேங்கடேச பெருமாள் கோவில் முதலிய வைணவப் பெருங் கோவில்களில் இக்காலத்தும் சிறப்பாக நடைபெறுகிறது. இரா.குரு.

**உறுத்துக் கட்டளை**: வழக்கின் இருதரப் பாரில் ஒரு தரப்பினரை ஒன்றைச் செய்யுமாறு அல்லது செய்யாதிருக்குமாறு நீதிமன்றம் வலி யுறுத்திப் பிறப்பிக்கும் கட்டளை அல்லது தீர்ப்பு உறுத்துக் கட்டளை (Injunction) எனப்படும்.

உறுத்துக் கட்டளைகள் பற்றிய விவரங்கள் குறித்த வகை மாற்றீட்டுச் சட்டம் 1963 (The Specific Relief Act, 1963, No.47 of 1963), உரிமை யியல் நடைமுறைச் சட்டம் 1908 (Civil Procedure Code, 1908) ஆகியவற்றில் நிறையக் காணக் கிடக் கின்றன. உறுத்துக் கட்டளைகள் (1) இடைக்கால உறுத்துக் கட்டளை (Interim Injunction) அல்லது தற்காலிக உறுத்துக் கட்டளை (Temporary Injunction), (2) செயலுறுத்துக் கட்டளை (Mandatory Injunction), (3) நிலையான உறுத்துக் கட்டளை (Perpetual Injunction), (4) தடையுறுத்துக் கட்டளை (Prohibitory Injunction) எனப் பலவகைப்படும்.

தற்காலிக உறுத்துக் கட்டளை வாதியின் உறுதி மொழி ஆவண (Affidavit) மெய்ப்பிப்பின்மீது குறிப் பிட்ட கால அளவுக்கு அல்லது மறு உத்தரவு பிறப் பிக்கப்படும் வரை பிறப்பிக்கப்படுகிறது. இதனை நீதி மன்றம் வழக்கின் எச்சூழ்நிலையிலும் பிறப்பிக்கலாம். இவ்வுறுத்துக்கட்டளை (அ) வழக்குத் தொடர்பான சொத்துப் பாழாக்கப்படுதல் அல்லது சிதைக்கப்படுதல் அல்லது மாற்றப்படுதல் அல்லது விற்கப்படுதல் போன்ற சூழ்நிலையிலும், (ஆ) கடன் கொடுத்தவர் களை எதிர்வாதி மோசடி செய்யும் நிலையிலும் அல்லது சொத்தை மாற்றஞ் செய்யும் நிலையிலும் அல்லது அவ்வாறு செய்வதற்கு எண்ணங்கொண்டி ருக்கும் நிலையிலும், (இ) வாதியின் சொத்தை எதிர் வாதி கைப்பற்றப் போவதாக அல்லது வேறு வகையில் ஊறுவிளைக்கப் போவதாக மிரட்டும் சூழ்நிலையிலும் பிறப்பிக்கப்படுகிறது. சில வேளைகளில் ஒப்பந்த மீற லுக்காகவும் இக்கட்டளை பிறப்பிக்கப்படுவதுண்டு.

பிறப்பிக்கப்படும் உறுத்துக் கட்டளை அல்லது பிற கட்டளைகளை ஒருவர் மீறும்போது, நீதிமன்றம் அவர்தம் சொத்துகளைக் கைப்பற்றவும் அவரை மூன்று திங்களுக்கு மேற்படாத விதத்தில் உரிமைச் சிறையில் அடைக்கவும் செய்யும்.

செயலுறுத்தும் கட்டளை ஒருவர் ஒன்றைச் செய்வதற்கு இடும் கட்டளை. எ-டு. உரிமையில்லாத வகையில் ஒருவர் ஒரு கட்டடத்தைக் கட்டியிருக்கும் போது அதை இடிக்கச் சொல்லி ஆணை பிறப்பிப்பது.

நிலையான உறுத்துக் கட்டளை வழக்கு விசாரணையில் தகுதி அடிப்படையில் கால வரையறையின்றித் தீர்ப்பாணையின் மூலம் வழங் கப்படும் ஆணை. இது (அ) எதிர்வாதி வாதி யின் சொத்துக்குப் பொறுப்புரிமையராக இருக்கும் போதும், (ஆ) உண்மையான இழப்பு உறுதி செய்ய முடியாதிருக்கும்போதும், (இ) பணவழியிலான இழப் பீடு தகுந்த தீர்வழியாக இல்லாதிருக்கும் போதும், (ஈ)பல்வகை நடவடிக்கைகளைத் தடுப்பதன் பொருட் டும் பிறப்பிக்கப்படுகிறது.

தடையுறுத்துக் கட்டளை ஒருவர் ஒரு செய லைச் செய்யாதிருக்கும் பொருட்டு வழங்கப்படும் கட்டளை. பு.வே.

**உறுதி**: நன்னம்பிக்கையை உண்டாக்கத்தக்க ஒரு வாக்குறுதியை அல்லது பொறுப்பை ஏற்படுத்து கிற ஓர் அறிக்கையே உறுதி (Assurance) எனப்படும். இது இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட நாடு களிடையே ஏதேனுமொரு நோக்கத்தின் பொருட்டுச் செய்யப்படும் ஒப்பந்தமாகும்.

இரு நாடுகளுக்கிடையே பாதுகாப்புக்காகவோ ஒன்றுக்கொன்று வாணிகத் தொடர்புகளை ஏற்படுத் திக் கொள்ளும்பொருட்டோ மூன்றாவது நாட்டி னால் தாக்கப்படும்போது அதற்குப் பாதுகாப்பு உதவி செய்வதற்காக மற்ற நாடு வாக்குறுதி கூறு வதற்கோ செய்யப்படும் ஒப்பந்தம் உறுதி எனப்படும்.

பன்னாட்டு உறவுகளில் உறுதிமுறை: பன் னாட்டு உறவுகளில் இரண்டு வல்லரசுகளுக்கெதிராக அண்டையிலுள்ள பல சிறிய நாடுகள் தத்தம் பாது காப்புக்காக ஒன்றுக்கொன்று உதவி செய்யும் பொருட்டு உறுதிகூறும் ஒப்பந்தங்கள் செய்வது வழக்கம். ஐரோப்பாவில் இறைமை நாடுகள் (Sovereign States) தோன்றிய கி.பி.16-ஆம் நூற்றாண்டு முதல் இத்தகைய ஒப்பந்தங்கள் பல செய்யப்பட்டு வந்துள்ளன. ஒவ்வோர் ஒப்பந்தத்திலும் ஒன்றுக் கொன்று உதவி செய்வதற்கான உறுதிமொழி காணப்பட்டது. எடுத்துக்காட்டாக, பிரான்சுக்கெதி ராக இங்கிலாந்து, ஆலந்து (Holland), ஆசுத்திரியா (Austria) முதலிய நாடுகள் கி.பி. 17-ஆம் நூற்றாண் டினிறுதியிலும், கி.பி. 18-ஆம் நூற்றாண்டிலும் பல ஒப்பந்தங்களைச் செய்து கொண்டன. இவ்வொப்பந் தங்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு நாட்டுக்கும் பொதுப்பகையான நாட்டுக்கு எதிராக ஒப்பந்தத்தின் மற்ற நாடுகள் பாதுகாப்புத் தருவதாகக் கூறும் உறுதிமொழி அடங்கி இருந்தது. இந்த உறுதி மொழியை நிறைவேற்றுவதற்கு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட ஒவ்வொரு நாட்டிற்கும் கடமை உண்டு. பிரெஞ்சு மாமன்னர் பதினான்காம் உலூயி

என்பாருக்கு எதிராக இங்கிலாந்து, ஆலந்து, ஆசுத்திரியா முதலிய நாடுகள் செய்த ஒப்பந்தங்களின் நோக்கம் சக்திச் சமநிலையை (Balance of Power) நிலை நிறுத்துவது மட்டுமல்லாமல், ஒவ்வொன்றின் சுதந்திரத்தையும் பிரான்சுக் கெதிராகக் காப்பாற்றுவதுமாகும். ஒப்பந்தத்தின் வாயிலாக உறுதி கூறும் இந்தமுறை நெப்போலியப் போர்கள் நடைபெற்ற காலத்திலும் (கி.பி.1799–1815), முதல் உலகப்போர் நடைபெற்ற காலத்திலும் (1914–1918), இரண்டாம் உலகப்போர் நடைபெற்ற காலத்திலும் (1939–1945) பின்பற்றப்பட்டது. இந்தத் தற்காப்பு உடன்படிக்கை முறை போர்க்காலங்களில் மட்டுமல்லாமல், போர் நடைபெறாத காலத்திலும் ஒவ்வொரு நாடும் தனது அரசியல் சுதந்திர அமைப்பையும், சமூக, பொருளாதார அமைப்பையும், வல்லரசுகளின் ஊடுருவலினின்றும் காத்துக் கொள்ளுவதற்கும் கையாளப்படுகிறது. இப்போது மேற்கத்திய நாடுகளும் ஐக்கிய அமெரிக்க நாடும் செய்து கொண்டுள்ள வடஅட்லாண்டிக்கு ஒப்பந்த உடன்படிக்கையும், இதேபோல் சோவியத்து உருசியாவும் அதன் கூட்டாளிகளும் செய்துள்ள வார்சா ஒப்பந்தமும், தத்தம் அரசியல், சமூக, பொருளாதார அமைப்பை மற்ற வல்லரசோ அதன் கூட்டாளிகளோ ஊடுருவித் தாக்காதவாறு காத்துக் கொள்ளும் பொருட்டே ஆகும்.

**உறுதிப்பாட்டின் அரசியல் முக்கியத்துவம்:** தனியார் உறவுகளில் ஒருவர் மற்றவருடைய உரிமைகளுக்குப் பாதுகாப்புத்தரும் பொருட்டு அளிக்கும் உறுதி மொழி எவ்வாறு முக்கியமானதோ, அவ்வாறே இறைமையுடைய நாடுகளின் பாதுகாப்புக்கு வழிசெய்கிற உறுதியும் அல்லது ஒப்பந்தமும் முக்கியமானதேயாகும். இவ்வுறுதிமொழியைக் காப்பாற்றும் நாடுகளின் முயற்சியையே உலக அமைதியும், நாடுகளின் பாதுகாப்பும், நல்லுறவும் சார்ந்திருக்கின்றன. இவ்வுறுதியை நிறைவேற்றக் கூடிய அளவுக்கு அதனை அளிக்கும் நாடு இராணுவ வலிமையும் பொருளாதார வலிமையும் பெற்றிருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் அது தான் கொடுத்த உறுதி மொழியை நிறைவேற்ற இயலும். அதனுடைய மதிப்பும் பன்னாட்டளவில் உயரும். பா.சு.

**உறுதித் தேவைக் கோட்பாடு:** பொருளியலில் தேவை என்பது ஒரு பொருளையோ பணியையோ மக்கள் விரும்புவதை மட்டுமன்றி, அதனை நுகர்வோரின் வாங்கும் திறனையும் குறிக்கிறது. தேவையை நிறைவேற்ற வாங்கும் திறனைப் பயன்படுத்தும் மனப்பான்மை (Willingness) இன்றியமையாததாகும். ஒரு மகிழ் உந்து (Fiat car) வாங்க வேண்டும் என ஓர் எளியவன் விரும்பினால் அது தேவையாகாது. அவ்விருப்பம் மட்டும் அப்பண்டத்தை உற்பத்தி செய்ய ஊக்கமளிக்காது. தேவை என்பது விருப்பத்தை விட அழுத்தமானது. எனவே, விருப்பத்திலிருந்து தேவையை வேறுபடுத்திக் காட்ட 'உறுதித் தேவை' என்ற கருத்து உருவானது. இதனைப் பொருளியல் அறிஞர் ஆல்பிரடு மார்சல் (Alfred Marshall) 'திறமை வாய்ந்த தேவை' என்று கூறினார். அளவு (Amount of Quantity), விலை, காலம் (Time) ஆகியவை தேவையின் சிறப்பான கூறுகளாகும். அறிஞர் பென்காம் (Benham) 'கொடுக்கப்பட்ட விலையில் ஒரு பொருளுக்கான தேவை என்பது அதனை ஒரு குறிப்பிட்ட நேரத்தில் அதே விலையில் வாங்கும் அளவு' என்று விளக்கமாகக் கூறுகிறார். உறுதித் தேவைக் கோட்பாட்டை (Principles of Effective Demand) முதன் முதலாக சே. எம். கீன்சு (J.M. Keynes) வரையறுத்தார்.

**கீன்சின் கருத்து:** கீன்சு எழுதிய 'வேலையின் பொதுக் கோட்பாடு' என்ற நூலில் இடம்பெறும் சிறப்புமிக்க பல கருத்துருபுகளுள் (Concepts) உறுதித் தேவைக் கோட்பாடு தனிப்பொருள் நுட்பமுடையதாக விளங்குகிறது. இக்கருத்தின் விளக்கம் அந்நூலின் முதற்பகுதியில் இடம்பெற்று, தொடர்ந்து எழுதப்பட்டிருக்கும் கோட்பாடுகளுக்கு அடிப்படையாக விளங்குகிறது. ஒரு பொருளாதார அமைப்பின் மொத்த வேலை (Total Employment), அப்பொருளாதாரத்தில் செலவு செய்யப்படும் வருவாயின் (Spending Income) மூலம் வெளிப்படும் மொத்த உறுதித் தேவையின் வினைச்செயலாகும். மொத்த உறுதித் தேவையில் பற்றாக்குறை காணப்படும் போது வேலையின்மை நிலவுகிறது.


ஒரு சமுதாயத்தில் உண்மை வருவாய் உயரும் போது நுகர்வும் பெருகுகிறது. ஆனால், பெருகிய நுகர்வின் மொத்த அளவு பெருகிய மொத்த வருவாயை விடக் குறைந்த அளவில் இருக்கும். எனவே, தொடர்ந்து உயரும் வருவாயையுடைய சமுதாயத்தின் நுகர்வு, அதன் மொத்த உண்மை வருவாயை விடப் பின்தங்கிய நிலையில் காணப்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. சமுதாயத்தின் வேலை வாய்ப்புகளில் எப்பொழுதும் வளர்ச்சி நிலை காணப்பட, வருவாய்க்கும் நுகர்வுத் தேவைக்கும் (Consumption Demand) இடையே நிலவும் இடைவெளியை நிரப்பும் அளவுக்கு முதலீட்டில் வளர்ச்சி இருக்க வேண்டும். செழிப்புமிக்க பொருளாதார வளத்தையுடைய சமுதாயத்தில் உண்மை முதலீட்டில் (Real Investment) வளர்ச்சியின்றி வேலைவாய்ப்புகளில் முன்னேற்றம் இருக்காது. இதுவே கீன்சின்

உறுதித் தேவைக் கோட்பாட்டின் உட்பொருளாகும்.

சே.எம். கீன்சு தான் உருவாக்கிய பிற கருத்துருபுகளுக்குப் பயன்படுத்திய 'தொகு' (Aggregate) என்ற கலைச்சொல்லை ஒரு பொருளாதாரத்தின் மொத்தத் தேவை, அளிப்பு ஆகியவற்றை விளக்குவதற்கும் பயன்படுத்தியுள்ளார். கீன்சின் தொகு தேவை என்பது, தனிப்பட்ட பொருள்கள் அல்லது தொழிற்றுறையின் மொத்தத் தேவையையும் அளிப்பையும் அவற்றின் வளைகோடுகளையும் (Curves) குறிப்பதன்று. ஒரு பொருளாதாரத்தின் மொத்தத் தேவையையும் அளிப்பையும் கிலோ அலகிலோ லிட்டர் அலகிலோ அளவிட இயலாது. எனவே பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளின் மொத்த உற்பத்திக்கும் பயன்படுத்தப்படும் மொத்த உழைப்பை (Labour) அளவிடும் அலகாகக் கீன்சு பயன்படுத்தினார்.

கீன்சின் தொகு தேவையின் விலை என்பது ஒரு குறிப்பிட்ட அளவு வெளியீட்டை (Output) உற்பத்தி செய்யப் பயன்படுத்தப்பட்ட உழைப்பிற்கு வழங்கப்பட்ட மொத்தச்செலவுப் பணமாகும்; அல்லது குறிப்பிட்ட அளவு உழைப்பாளரால் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் மொத்த மதிப்பாகும்.

படம்-1




படம்-1-இல் உள்ள தொகு தேவை வளைகோடு (DD) குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள பல உழைப்பாளர்களால் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் மதிப்பைக் காட்டுகிறது. உழைப்பாளர்களின் எண்ணிக்கை பெருகும் பொழுது மொத்த உற்பத்தியிலும் பெருக்கம் காணப்படுகிறது. அதாவது தொகு தேவை விலையின் உயர்வு உழைப்பாளர்களின் எண்ணிக்கையைக் குறைக்கிறது. அதனால், பொருளாதாரத்தில் வேலையின்மை நிலை பெருகும்.

தொகு தேவை வளைகோடு DD-இன் வலப்பக்கச் சரிவு, வேலைவாய்ப்புகள் பெருகும்போது தொகு தேவையும் பெருகுகிறது என்பதை உறுதி செய்கிறது. தொகு அளிப்பு வளைகோடு SS-இன் வலப்பக்கச் சரிவு, மொத்த உற்பத்திப் பெருக்கம் வேலைவாய்ப்புகளைப் பெருக்குகிறது என்பதைக் காட்டுகிறது. அவற்றைக் குறுக்கிடும் E என்ற புள்ளி உறுதித் தேவையை வரையறுக்கிறது. அதுவே பொருளாதாரத்தின் முழு வேலை நிலையின் (Full Employment Level) மொத்த அளிப்புக்கும் தேவைக்கும் இடையேயுள்ள சமநிலை (Equilibrium) எனக் கீன்சு விளக்கியுள்ளார். அவர் கருத்துப்படி அறிஞர் சே.பி. சேயின் (J.P. Say) 'அளிப்பு அதற்கான தேவையை உண்டாக்குகிறது' (Supply creates its own demand) என்ற கோட்பாட்டின் உண்மை படத்தில் காட்டப்பட்டுள்ள 'E' புள்ளியில் அமைகிறது.

கீன்சின் பேரினப் பொருளியல் அணுகுமுறை வேலையின்மை, தேவை, அளிப்பு, நுகர்வு, முதலீடு போன்றவற்றின் உறவுகளை ஆராய்ந்து, பொருளாதாரத்தின் உண்மைச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கான வழி வகைகளைக் காண முற்படுகிறது. நடைமுறைக் கொவ்வாத கோட்பாட்டளவில் மட்டுமே நிலை கொண்டிருந்த தொன்மைப் பொருளியல் ஆய்வுகளிலிருந்து கீன்சின் படைப்புகள் திருப்பு மையத்தை உண்டாக்கின எனப் பிற்கால அறிஞர்கள் கூறுகின்றனர்.

ஆ.க.

**உறுதிப்படுத்தல்**: ஒரு நம்பிக்கையில் மக்கள் தங்களை ஆட்படுத்திக்கொண்டு, அந்நம்பிக்கையில் நிலையாக இருந்து தங்களையும் நம்பிக்கையையும் மேம்படுத்துவது உறுதிப்படுத்தல் என்பதாகும். உறுதிப்படுத்தல் என்னும் கோட்பாடு மதத்திலிருந்து வந்த கோட்பாடாகும். இது மதங்களில் பின்பற்றப்பட்டு வருகின்றது.

இக்கோட்பாடு மதத்திலிருந்து வந்ததென்றாலும், இது நிருவாகத்தில் சட்டபூர்வமாக்கப்பட்டுள்ளது. நிருவாக அமைப்புகள் அனைத்திலும்பணியாளர் குழாம் நிருவாகம் (Personnel Administration) உள்ளது. இதில் பணியாளர்களைத் தேர்ந்தெடுப்பது முதல் பதவி ஓய்வு பெறுவதுவரை உள்ள எல்லாச் செயல்களும் முறைப்படுத்தப்பட்டுள்ளன. பணியாளர்

குழாம் தங்களை உறுதிப்படுத்துதல் நிருவாகம் இயங்க அவசியமாகிறது. பணியாளர்களைத் தேர்ந்தெடுக்கத் தேர்வு முறைகள் (Selection Methods) முறையாக எல்லா நிருவாக அமைப்புகளிலும் வரையறுக்கப்பட்டுள்ளன. இத்தேர்வு முறைகளில் வெற்றி பெற்றோர் பணிகளில் நியமிக்கப்படுகின்றனர். பணியில் பணியாளர்கள் நியமிக்கப்படுகின்றபோது வரையறுக்கப்பட்ட சில கட்டுப்பாடுகளின் அடிப்படையிலேயே நியமிக்கப்படுகின்றனர்.

பணியாளர்கள் திருப்திகரமாகப் பணிகளைச் செய்கின்றார்களா? தொடர்ந்து செய்வார்களா என்பதை அறியும் பொருட்டுத் தெரிந்தாயும் நிலையில் (Probation Period) நியமிக்கப்படுகின்றனர். இத்தெரிந்தாயும் நிலை பணிகளுக்குப் பணி மாறுபட்ட கால அளவு கொண்டதாக இருக்கும். ஒரு சில பணிகளுக்குத் தெரிந்தாயும் நிலை ஓராண்டாகவும், ஒரு சில பணிகளுக்கு இரண்டு ஆண்டுகளாகவும் மற்றும் பிற பணிகளுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகவும் வரையறை செய்யப்பட்டுள்ளது. தெரிந்தாயும் நிலைக் காலத்தில் பணியாளர்களின் திறமை, நடத்தை, செயல்திறன், சட்டதிட்டங்களைப் புரிந்து கொண்டு செயற்படல், தமக்கு மேல் பணியாற்றுகின்றவர்களுடனும் தம்முடன் பணியாற்றுகின்றவர்களுடனும் பின்னர்த் தமக்குக் கீழ் நின்று பணிபுரியக் கூடியவர்களிடமும் ஏற்படுத்துகின்ற தொடர்புகள் ஆகியவையும், பணியில் அவருக்குள்ள ஈடுபாடு, ஒழுங்குணர்வு (Morale) ஆகியவையும் உன்னிப்பாகக் கவனிக்கப்படுகின்றன. பணியாளர்கள் திறமையாகவும் திருப்திகரமாகவும் செயற்பட்டால், அவர்களது பணியை உறுதிப்படுத்தி நிலையாக அதிலிருக்க வழி செய்வர். திறமை குறைந்தவர்களும், ஒழுங்குணர்வைப் பாதுகாக்கத் தவறுகின்றவர்களும், திருப்திகரமாகப் பணி செய்யாதவர்களும் பணியிலிருந்து நீக்கப்படுவர் அல்லது அவர்களது தெரிந்தாயும் நிலைக் கால அளவு நீட்டிக்கப்படும். இத்தெரிந்தாயும் நிலையை முடிவு செய்யக்கூடியவர்கள் நிருவாகத்தின் தலைமையில் அங்கம் வகிப்பவர்கள். நிருவாகத்தைப் பொறுத்தவரை பணியாளர்களைப் பயமுறுத்தக்கூடிய கருவியாக இது பயன்படுத்தப்படுவதும் உண்டு. திறமை குறைந்த தலைவர் ஒரு துறைக்குத் தலைவராக வந்துவிட்டால், அவருக்குக் கீழாகப் பணிபுரியக் கூடியவர் திறமையாகப் பணியாற்றுகிறார், வல்லுநர் என்று சொல்வதைக் கேட்டுவிட்டால், துறைத்தலைவர் தெரிந்தாயும் நிலையை நீட்டித்து விடுவார். எனவே, இது கவனமாக ஆராயப்பட்டு, அதன்பின்னர்த்தான் முடிவெடுக்கப்படவேண்டும். தெரிந்தாயும் நிலையை அறிந்து முடிவெடுக்கத் தனிப்பட்டவரிடம் முழுப் பொறுப்பு வழங்காது, ஒரு குழுவிடம் இப்பணி விடப்படல் வேண்டும்.

உறுதிப்படுத்தல் மூலம்தான் ஒருவர் செய்கின்ற பணியை முடிவு செய்யவேண்டும். பணியாளர்கள் செய்கின்ற பணியை உறுதிப்படுத்தினால்தான் அவர்கள் பணியில் தொடர்ந்து இருக்க முடியும். பணியில் தொடர்ந்து இருப்போமென்ற நம்பிக்கையூட்டினால்தான் பணியாளர்கள் பணிகளை முழுக் கவனத்துடன் செய்ய இயலும். உறுதிப்படுத்தலால் பணியாளர்கள் தங்கள் திறமைகளை வளர்த்துக்கொண்டு, அவர்கள் அப்பணிகளைத் தங்களது வாழ்வுப்பணியாக அமைத்துக்கொள்ளவும் முடியும். பணியாளர்கள் ஒரு பணியில் தொடர்ந்து இருப்பது சந்தேகத்திற்குரியதாக இருந்தால், அப்பணியாளர்கள் பிற பணிகளுக்குச் செல்ல வேண்டுமென்பதில் அதிகக்கவனம் செலுத்துவார்களே தவிர, தங்களது பணியில் முழுமையாகக் கவனம் செலுத்த மாட்டார்கள். மேலும், உறுதிப்படுத்தலைப் பணியாளர்களுக்குச் செய்வதன் மூலம், அவர்கள் அப்பணியையும் தம்மையும் வளர்த்துக் கொள்ளவேண்டுமென்ற ஆர்வமும் அக்கறையும் ஏற்படும். இதன் மூலம் பணி மேம்பாடடைவதுடன் பணியாளர்களும் மேம்பாடு அடைய முடியும். எனவே, பணியாளர்கள் முழுக் கவனத்துடன் பணிபுரிய, தங்களை அப்பணிகளுக்குள் ஆட்படுத்திக்கொண்டு செயற்பட உறுதிப்படுத்தல் அவசியம்.

உறுதிப்படுத்தலால்தான் நிருவாக அமைப்புகள் இயங்குகிறதெனலாம். உறுதிப்படுத்தல் நிருவாக அமைப்புகளில் இல்லையெனில், நிருவாக அமைப்பின் எல்லாப் பதவித்தரங்களும் (Positions) நிரப்பப்படமாட்டா. இருக்கக் கூடிய பணியாளர்களும் எப்போது வெளியேறிவிடலாமென வெளியில் வாய்ப்புகளுக்குக் காத்துக் கொண்டிருப்பர். சந்தர்ப்பம் கிடைத்ததும் அப்பணியாளர்கள் பிற நிருவாக அமைப்புகளுக்குச் சென்று விடுவர். உறுதிப்படுத்தல் இல்லையென்பதால் நிருவாக அமைப்புகளுக்குப் பணியாளர்கள் கிடைப்பதும் அரிது. ஆகவே, நிருவாக அமைப்புகள் சீராக இயங்கவேண்டுமெனில் உறுதிப்படுத்தல் அவசியம். பணியாளர்கள் கிடைக்கவில்லையென்ற குறைபாடு ஏற்படாது. பல பதவித்தரங்கள் நிரப்பப்படாமல் உள்ளதென்ற நிலையும் வாராது. திறமையான பணியாளர்கள் வெளியே செல்லாதவாறு தடுத்துநிறுத்தக் கூடியதுவும் இவ்வுறுதிப்படுத்துதலே. நிருவாக அமைப்புகளின் திறமை பணியாளர்களைச் சார்ந்தே இருக்கும். பணியாளர்கள் முழுமூச்சுடன் அமைப்புகளின் முன்னேற்றத்திற்குப் பாடுபட்டால் எந்த அமைப்பும் வெற்றி பெறும்.

எனவே, பணியாளர்களுக்கு மட்டுமன்றி நிருவாக அமைப்பின் மேம்பாட்டிற்கும் வழிவகுக்கக் கூடியது இவ்வுறுதிப்படுத்துதலே. நிருவாக அமைப்பின் மேம்பாட்டால் அதே மாதிரியான பிற நிருவாக அமைப்புகளுக்கு முன்னோடியாக (Model) அமை வதால் நிருவாக அமைப்பின் புகழ் வளரும். ஆகவே, நிருவாக அமைப்பிற்கு உறுதிப்படுத்தல் அவசிய மானது. சி.ஞா.

**உறுதிப் பொருள் நான்கு:** பிறவிப் பயனாக ஒவ்வொருவரும் அடைய வேண்டிய பொருள்களை நான்காகச் சான்றோர் வகைப் படுத்திக் கூறியுள்ளனர். அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பனவாகும். இவற்றை நாற்பொருள் என்றும் கூறுவர். இவை இம்மை மறுமை வாழ்விற்கு உறுதி அளிப்பனவாக உள்ளமையால் உறுதிப் பொருள் என்று கூறப்பட்டன. கல்விப் பயன் இந் நான்கு பெருள்களையும் அடைவிப்பதாக இருத்தல் வேண்டும் என்பதனால், பெருங்காப்பிய இலக்கணம் கூறவந்த தண்டியலங்கார ஆசிரியர் 'நாற்பொருள் பயக்கும் நடை' உடையதாகக் காப்பியம் அமைதல் வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். இதனை நன் னூலார், 'அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற் பயனே' என்னும் நூற்பாவில் விளக்கியுள்ளார்.

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான் கினையும் வடமொழியாளர் முறையே 'தர்மம்', 'அர்த்தம்', 'காமம்', 'மோட்சம்' என்னும் பெயர் களால் குறிப்பிட்டு, அவற்றைப் 'புருடார்த்தம்' எனச் சுட்டினர். இதனைத் தாயுமானவர் தம் மௌன குரு வணக்கப் பாடலில் 'புருடர் வடிவானதே யல்லாது கனவிலும் புருடார்த்தம் ஏதுமில்லேன்' (தாயு.மௌன குரு. 6) என்று பயன்படுத்தியுள்ளார்.

உலகப் பொது அறநூலாகத் திகழும் திருக் குறளுக்கு உரை வரைந்த பரிமேலழகர் தம் உரைப் பாயிரத்தில், இந்த உறுதிப் பொருள் பற்றியும், இவற்றுள் மூன்றினை மட்டுமே விதந்து கூறித் திருக்குறள் அமைக்கப்பட்டிருப்பது பற்றியும் கூறி யிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். அது வருமாறு: 'இந்திரர் முதலிய இறையவர் பதங்களும், அந்தமில் இன்பத்து அழிவில் வீடும் நெறியறிந்து எய்துதற்குரிய மாந்தர்க்கு உறுதியென உயர்ந்தோரால் எடுக்கப் பட்ட பொருள் நான்கு: அவை அறம், பொருள், இன்பம், வீடென்பன. அவற்றுள், வீடென்பது சிந்தை யும் மொழியும் செல்லா நிலைமைத்து ஆகலின், துறவறமாகிய காரணவகையால் கூறப்படுவதல்லது இலக்கண வகையால் கூறப்படாமையின், நூல்களால் கூறப்படுவன ஏனை மூன்றுமேயாம்'.

இதனால், திருவள்ளுவர் தம் அறநூலுள் நாற் பொருளையும் கூற விரும்பிய போதிலும், வீட்டினைப் பற்றி நேரே கூறாது விடுத்து, ஏனையவற்றை அறத்துப் பால், பொருட்பால், காமத்துப் பால் என மூன்று பால் களால் விளக்கியுள்ளார். வீடுபேற்றினை அறத்துப் பாலினுள் அமைந்த துறவற இயலுள் காரண வகை யால் குறிப்பாகக் கூறியுள்ளார். இதனால், மாமூல னார் திருவள்ளுவரை, 'அறம் பொருள் இன்பம் வீடென்னும் அந் நான்கின், திறம் தெரிந்து செப்பிய தேவு' என்றும், கீரந்தையார், 'முப்பாலில் நாற்பால் மொழிந்தவர்' என்றும் பாராட்டியுள்ளனர் (திருவள்ளுவ. 8,19).

தொல்காப்பியம் வாழ்விலக்கணம் கூறுங்கால் அதனை அகம், புறம் என்று இரண்டாகப் பகுத்து இலக்கணம் கூறியுள்ளது. இப்பாகுபாடு நான்கு உறுதிப் பொருளையும் உள்ளடக்கியதாகும். அகம் என்பதில் இன்பமும், புறம் என்பதில் அறம், பொருள், வீடு ஆகியனவும் அடங்கும். தமிழ் இலக்கண இலக் கியங்கள் உறுதிப் பொருள் நான்கனுள் முதற்கண் அமைந்த மூன்றினையே வெளிப்படையாக விரித் துரைக்கும் பாங்கினை, 'இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு' என்றும், 'நடுவணது எய்த இரு தலையும் எய்தும்' என்றும் அமைந்த தொடர்களால் உணரலாம். அ.மா.ப.

**உறுதிமொழி:** பொது அலுவலர் முன்னிலை யில் அல்லது நீதிமன்றத்தில் அல்லது வேறு சூழ்நிலை யில் ஒன்றை மெய்யெனக் காட்டும் வகையில், சட்டப்படி எடுக்க வேண்டிய மெய்யுறுதி உறுதி மொழி (Oath) எனப்படும்.

உறுதிமொழி பண்டை நாட்களில் சமய வழக் கங்களிலும் பேரரசர்களின் முடிசூட்டு நிகழ்ச்சியிலும் மட்டுமே பயன்பட்டு வந்தது. புனித உரோமானியப் பேரரசர் உரோம் நகரத்துக்கு வந்து போப்பிட மிருந்து தமது முடியைப் பெற்றபோது, அவர் முடி சூட்டு உறுதிமொழியை (Coronation Oath) எடுத்துக் கொண்டார் என்பது வரலாறு.

பண்டு உறுதிமொழிகள் கடவுளுக்கு அளிக்கும் வாக்குறுதிகளாகக் கருதப்பட்டன. அவற்றை மீறுதல் தெய்வத் தண்டனையை வருவிக்குமென்று நம்பப் பட்டது. உறுதிமொழிகள் பெரும்பாலும் சமயக் குருமார்கள் முன்னிலையிலே எடுக்கப்பட்டன. இந்த உறுதிமொழி எடுக்கும் வழக்கமும், அதை மீறினால் தெய்வத் தண்டனைக்கு உட்படுதல் வேண்டுமென்ற அச்சமும், அரசரை ஆட்சி அதிகாரங்களை எதேச் சாதிகார முறையில் கையாளாதபடி தடுத்தன.

**இக்கால விசாரணையில் உறுதிமொழி:** இன்று உரிமையியல் வழக்குகளிலும் குற்றவியல் வழக்குகளிலும் நீதிமன்றங்கள் சான்றாளர்களை விசாரிக்குமுன், 'நான் இப்போது கூற இருக்கும் சான்றுரையானது முழு உண்மை என்றும், உண்மையைத் தவிர வேறில்லை என்றும் முழுப்பற்றுணர்ச்சியுடன் உறுதி கூறுகிறேன்' என்று உறுதிமொழியைப் பெற்ற பின்னரே, அவர்களது சான்றுரையை ஏற்கின்றன. இந்த முறை உலகில் பெருவாரியான நாடுகளால் பின்பற்றப்படுகிறது என்று சொன்னால் அது மிகையாகாது. பு.வே.

**உறுப்பறை:** வெகுளி என்னும் மெய்ப்பாடு தோன்றுதற்கான அடிப்படைகளுள் ஒன்று உறுப்பறை. அகவாழ்வு, புறவாழ்வு ஆகிய உலகியல் வழக்கில் புலப்பட்டுத் தோன்றும் மெய்ப்பாடுகளைப் புனைந்துரை வழக்காகிய நாடகவழக்கிற்கும், புலனெறி வழக்கமாகிய செய்யுள் வழக்கிற்கும் அங்கமாகக் கொள்ளுவது தொன்றுதொட்டு வரும் தமிழ் இலக்கண மரபாகும். இவ்வகையில், மெய்ப்பாடுகளைச் செய்யுள் உறுப்புகளுள் ஒன்றாகத் தொல்காப்பியர் கூறியுள்ளார். எண்வகை மெய்ப்பாடுகளுள் ஏழாவதாக எண்ணப்பட்டுள்ள வெகுளி என்னும் மெய்ப்பாடு உறுப்பறை, குடிகோள், அலை, கொலை என்னும் நான்கின் அடிப்படையில் தோன்றும். உறுப்பறை என்பது உறுப்பினைக் குறைத்தல் என்று பொருள்படும். உறுப்பினைக் குறைத்தலாலும் வெகுளி என்னும் மெய்ப்பாடு தோன்றும். இதனை விளக்கும் பேராசிரியர், 'முறஞ்செவி மறைப்பாய்பு முரண் செய்த புலிசெற்று' என்னும் கலித்தொகைச் செய்யுளடியினை மேற்கோள் காட்டியுள்ளார் (கலி. 52). தன்னை மறைந்து தாக்கித் தன் உறுப்பிற்குச் சேதம் விளைவித்த புலியினைச் செற்றும், அமைதி கொள்ளாமல் சினம் மிக்க யானை, அப்புலியினைத் தன் கொம்பினால் குத்திப் பின்னர்ச் சினந் தணியும் காட்சியினை இக்கலிப் பாடல் தொடக்கத்தில் சித்திரிக்கிறது. புலி செய்த உறுப்பறை காரணமாக யானையின்பால் வெகுளி என்னும் மெய்ப்பாடு உண்டாகியது. இவ்வகையில், உறுப்பறை காரணமாகத் தோன்றும் வெகுளி என்னும் மெய்ப்பாட்டிற்கு 'முறஞ்செவி மறைப்பாய்பு முரண்செய்த புலி செற்று, என்னும் கலிச் செய்யுட்பகுதி இலக்கியமாக அமைகிறது. அ.மா.ப.

**உறுப்பி**: ஒரு குறிப்பிட்ட அமைப்பு முறைமையில் அண்மை உறுப்புகளால் அமையப் பெற்ற கூட்டு வடிவமே உறுப்பி எனப்படும். உறுப்பிகளுக்கு அடிப்படையாக அமையும் வடிவங்கள் உறுப்புகள் (Constituents) எனப்படும்.

'அழகிய', 'மலர்' என்னும் இரண்டு வடிவங்கள் இணைந்து 'அழகிய மலர்' என்னும் பெயர்த்தொடர் அமையப் பெற்றுள்ளது. இப் பெயர்த்தொடராகிய உறுப்பிக்கு 'அழகிய', 'மலர்' என்பன உறுப்புகளாக அமைந்துள்ளன. இவ்விரு உறுப்புகளும் பொருள் தரும் முறைமையில் அமையப் பெற்றுள்ளதால் அண்மை உறுப்புகளாகக் கருதப்படுகின்றன. அண்மை உறுப்புகளைக் கருதுமிடத்து ஒரு தொடருக்குப் பதில் அந்த இடத்தில் ஒரு சொல் வரவியலுமாயின், அந்தத் தொடரை ஓர் உறுப்பி எனலாம்.

உறுப்பியின் உறுப்புகள் எப்போதும் ஒரு குறிப்பிட்ட அமைப்பு முறைமையிலே அமையப்பெறும். 'அழகிய மலர்' என்னும் பெயர்த் தொடராகிய் உறுப்பியின் உறுப்புகள் பெயரடை (Adjective), தலைமைப் பெயர் (Head Noun) என்ற அமைப்பு முறைமையில் அமையப் பெற்றுள்ளன.

ஓர் உறுப்பி வேறோர் உறுப்பியோடு சேர்ந்து தொடராகவோ வாக்கியமாகவோ அமையும். அவ்வாறமையும் போது அந்த உறுப்பி வாக்கியமாகிய உறுப்பிக்கு உறுப்பாகக் கருதப்படும். அழகியமலர் மலர்ந்து உதிர்ந்தது என்னும் வாக்கியமாகிய உறுப்பியில் அழகிய மலர், மலர்ந்து உதிர்ந்தது என்னும் இரண்டும் உறுப்புகளாகும்.


அழகிய மலர் மலர்ந்து உதிர்ந்தது.



**உறுப்பு:** சொற்கள் இணைந்து சொற்றொடராக அமையும்; சொற்றொடர்கள் இணைந்து வாக்கியமாக அமையும். சொற்கள் சொற்றொடருக்கும் வாக்கியத்திற்கும் உறுப்பாக (Constituents) அமைதலுண்டு. சொற்றொடரும் வாக்கியமும் உறுப்புகள் (Constitutes) ஆகும். அடிப்படையாக அமையும் வடிவங்கள் உறுப்புகள் எனப்படும்.

இரண்டு உறுப்புகள் பொருள்தரும் முறையில் இணைந்து நிற்கும் பொழுது அவ்வுறுப்புகள் அண்மை உறுப்புகளாகக் (Immediate Constituents) கருதப்படும். 'வந்த', 'இராமன்' என்னும் இரு வடிவங்களும் இணைந்து 'வந்த இராமன்' என்னும் பெயர்த் தொடர் அமையப் பெற்றுள்ளது. இது ஓர் உறுப்பி ஆகும். இப் பெயர்த் தொடராகிய உறுப்பிக்கு 'வந்த', 'இராமன்' என்பன உறுப்புகள். இவ்விரு உறுப்புகளும் பொருள் தரும் முறைமையில் பெயரெச்சம் – தலைமைப்பெயர் என்ற வகையில் இணைந்து நிற்பதால் அண்மை உறுப்புகளாகக் கருதப்படுகின்றன.

'வந்த இராமன்' என்னும் பெயர்த்தொடராகிய உறுப்பி அதன்மேல் அமையும் உறுப்பிக்கு அண்மை உறுப்பாக அமையலாம். இவ்வாறு இணைத்துச் சென்றால் வாக்கியம் பல்வேறு அண்மை உறுப்பு களால் அமைந்த உறுப்பியாக அமையும். 'வந்த இராமன் சோறு சாப்பிட்டான்' என்னும் வாக்கியத் தில் 'வந்த இராமன்' என்பதும் 'சோறு சாப்பிட் டான்' என்பதும் அண்மை உறுப்பாக அமைந் துள்ளன.




வாக்கியம் எப்போதும் உறுப்பியாகவே இருக்கும். சொல் எப்போதும் உறுப்பாகவே செயற்படும். உறுப்புகளை இணைத்து அடிப்படை எடுத்துக் காட்டமைப்புகளின் வாயிலாக வாக்கியத்தை விளக்குவது விரிவு எனப்படும். ஏ.ஆ.

துணை நூல்கள்:

Hockett, C.F., A Course in Modern Linguistics, Oxford & IBH Publishing Co., New Delhi, 1976.

Nida, E. A., Morphology; The Descriptive Analysis of Words, University of Michigan Press, 1949.

**உறுப்பு வழிபாடு**: உலகிலுள்ள அனைத்துச் சமயங்களும் வழிபாட்டு முறைகளையும் சடங்குகளை யும் மிகுதியாகக் கொண்டவையாகும். இவை அந் தந்தச் சமய நம்பிக்கைகளுக்கும் மரபுகளுக்குமேற்ப ஏற்பட்டனவாகும் இதனால், வழிபாட்டு முறைகள் பலவாறாகக் காணப்படுகின்றன.

தனி ஒருவர் தாம் சார்ந்துள்ள குழுவினருடனோ தம் சமூகத்தினர் அனைவருடனோ சேர்ந்து பல முறைகளில் வழிபாட்டை மேற்கொள்வர். ஒவ்வொரு வழிபாட்டு முறையிலும் மக்கள்தம் நம்பிக்கைகளுக் கும் செயலின் நோக்கத்திற்கும் ஏற்ப வழிபாட்டுப் பொருள்கள் வேறுபடுகின்றன. மிகுதியாக ஆவியுலக நம்பிக்கையுடைய (Animism) பழங்குடிச் சமுதாயம் முதல் வளர்ச்சியடைந்த சமுதாயத்தினர் வரை மக் கள் ஆவியையும் முன்னோர்களையும் இயற்கையை யும் உயிரினங்களையும் பொருள்களையும் உருவங் களையும் வழிபட்டு வருகின்றனர். இதுதவிர்த்துச் சில சமுதாயங்களில் மனித உறுப்புகளை வழிபடும் (Organolatry) முறையும் காணப்படுகிறது. இவ்வகை யான வழிபாடு பழங்குடிகளிடையே கருவளச் சடங்கி லும் (Fertility Rites), நடனச் சடங்கிலும் பெரும் பான்மையாகக் காணப்படுகிறது.

பியூப்லோப்(Pueblo) பழங்குடிகளின் சமய நம்பிக் கைகளில் கருவள முறை குறிப்பிடத்தக்கது. இவர் கள் தையோனியசு (Dionius) என்னும் கருவளத் தேவன் வளமையைத் தருவதாக நம்புகின்றனர். இவர்கள் இனப்பெருக்கத்தின் சக்திக்காகச் செய்யப் படும் சடங்குகளில் தையோனியசை வணங்குவர். இவர்களைக் காட்டிலும் இவர்களின் அண்டைய பகுதிகளில் வாழும் ஒப்பிப் (Hopi) பழங்குடிகள் இனக்குறிகளைப் (Sex symbols) பயன்படுத்துகின்ற னர். இவர்கள் மேற்கொள்ளும் கருவளச் சடங்கு களிலும் இதர சாதாரணச் சடங்குகளிலும் சிறிய கருப்பு உருளைகளையும் நாணலிலான வட்டமான சக்கரங்களையும் இனக்குறிகளாகப் பயன்படுத்து கின்றனர். உருளைகள் ஆண் இனக் குறியாகவும் சக்கரங்கள் பெண் குறியாகவும் கொள்ளப்படுகின் றன. மழை வேண்டி நடத்தும் சடங்கிலும் பெண் களின் நடனங்களிலும் இனக்குறிகளைத் தொழுகைப் பீடத்திலும் நடனக் கோயிலுக்கு அருகிலும் வைத்துச் சடங்கினை மேற்கொள்வர். தங்கள் வளத்திற்குக் காரணமான தேவனை வணங்குவதற்குத் தங்கள் குறிகள் முதன்மையானவை என இவர்கள் நம்புகின்ற னர். இனப்பெருக்க வளத்திற்கும் தம் குடியின் பிற செயற்பாடுகளில் வளம்பெறுவதற்கும் மேற்கொள்ளப் படும் கருவளச் சடங்கில் ஆண் பெண் உறுப்புகள் ஈடுபடுத்தப்படுவது உலகச் சமுதாயங்களில் குறை வாகக் காணப்படுகிறது.

உறுப்பு வழிபாட்டில் இலிங்கத்தின் வழிபாட்டை யும் (Phallic Worship) இணைத்துக் கூறப்படுவ துண்டு. இந்த வழிபாடு கருவளச் சடங்கோடு தொடர்புபடுத்தி வணங்கும்முறை எனவும் கருதுவர். இருக்கு வேத காலத்தில் 'சிசனதேவா' எனவரும் குறிப்புக்குப் பிறவிக்குக் காரணமானது ஆண் உறுப்பு என விளக்கங்கூறி, அதன்மூலம் இலிங்க வழிபாடு என்பது ஆண் உறுப்பு வழிபாடு என்று கூறுவார் பேராசிரியர் மெக்டோனல். இலிங்கம் ஆரியர்களல்லா தவரான தசயூக்களுடையது (Dasyus) என்றும், அவர்கள் தாங்கள் பிறப்பதற்குக் காரணமான தங்கள் தாய் தந்தையர்களை வழிபட வேண்டும் என்ற எண்ணத்தில் தந்தையின் உறுப்பையும் தாயின் உறுப்பையும் இணைத்து வழிபாடு செய்தார்கள் என்றும் கூறுவர். இலிங்கம் என்பது இவ்விரு உறுப்பு களின் இணைப்பே என்ற ஒருவகைக் கருத்துமுண்டு.

இலிங்கத்தை ஆண்குறியாகக் கருதுவது பொருத்த மாகாது எனச் சைவசித்தாந்திகள் கூறுவர். பால்

உணர்ச்சியை இல்லறத்தோடு இணைத்து அதனைத் தூய்மைப்படுத்தும் திருமேனியாகச் சிவனது சில திருமேனிகள் உள்ளன என அவர்கள் விளக்குவர். இலிங்கம் என்னும் சொல் ஆண்குறியை மட்டும் குறிப்பதென்பது தவறானது. இதற்குப் பல பொருள்கள் உண்டு. இலிங்கத்தின் பொதுத் தன்மையைக் கூறும்போது உருவமுடையது என்றும், உருவம் அற்றது என்றும், உருவமும் அருவமும் சேர்ந்தது என்றும் சைவ சித்தாந்திகள் கூறுவர். சீ.ப.

**உறுமி** உறுமி என்னும் இந்தத் தோற்கருவி இரண்டு முகங்களையுடையது; இடை சுருங்கி இருக்கும்; இரு முனைகளும் அகன்றிருக்கும். பம்பை என்னும் கருவியை விட இது சிறிது நீளமானது. சுமார் ஒன்றரை அடி நீளமுள்ள வளைந்த குச்சியை இடக் கையில் கொண்டு இதனை வாசிப்பர். இக் கருவியின் முகத்தை அடித்துத் தாக்குவதில்லை. இடப்பக்கமுகத்தின் தோலில் கீழும் மேலும் குச்சி உராய்ந்து ஒலியை எழுப்புகிறது. இது விலங்கு உறுமுவதைப் போன்று ஒலியை உண்டாக்குகிறது. உறுமியுடன் நாதசுரமும் சிறுபம்பையும் சேர்ந்து வாசிக்கப்படுகின்றன. அப்பொழுதுஇது உறுமி மேளம் என்னும் பெயர் பெறுகிறது. முக்கியமாக உறுமி மேளம் சவ ஊர்வலத்தின் போதே பயன்படுத்தப்படுகிறது. மங்கலச்சடங்குகளில் இது இடம் பெறுவதில்லை. சில சமயங்களில் இக்கருவியை வாசித்துக் கொண்டே கால்களில் சதங்கைகளைக் கட்டிக்கொண்டு ஆடுகின்றனர்.

உறுமி காட்சிப்பொருளாக வைக்கப்பட்டுள்ளது. இத் தோற்கருவி தொட்டியர் என்னும் ஒரு சாதியார் குறுந்தடியால் தேய்த்து உறுமல் ஒலியை உண்டாக்கும் ஒரு வகை முழவு. ஆட்டங்காட்டப் பழக்கிய பெருமாள் மாட்டுடன் செல்லும் பிச்சைக்காரர்களும் இதையடிப்பர். சு.சா.

**உறுவை** ஆதி என்னும் தாழ்ந்த குடிப் பெண்ணிற்கும் பகவன் என்னும் உயர்குடி ஆணுக்கும் பிறந்தவர்களாகக் கருதப்படும் எழுவருள் ஒரு பெண். ஔவை, உப்பை, அதியமான், கபிலர், வள்ளியம்மை, திருவள்ளுவர் ஆகிய அறுவரும் ஏனைய உடன் பிறந்தோர் எனக் கூறுவர். ஆதியும் பகவனும் மணந்தபோது தங்களுக்குப் பிறக்கும் குழந்தைகளைப் பிறந்த அப்போதே அவ்விடத்தில் விட்டுப் பிரிந்து செல்லவேண்டும் என்று ஒப்பந்தஞ் செய்து கொண்டனர். அவர்கள் காவிரிப் பூம்பட்டினத்தில் ஒரு மண்டபத்திலிருந்தபோது உறுவை என்னும் இப் பெண் குழந்தை பிறந்தது. இதனை விட்டுச் செல்லுதற்குத் தாய் தயங்கியபோது, இக்குழந்தை, 'சண்டப் பைக்குள் உயிர்' எனத் தொடங்கும் வெண்பாவைப் பாடியது. அதனைக் கேட்ட தாய் ஆறுதல் எய்திக் குழந்தையை அவ்விடத்தே விட்டுச் சென்றாள். மண்டபத்திற் கிடந்த குழந்தையை அருகிலிருந்த கள் விற்போர் கண்டெடுத்து வளர்த்ததாகவும், அதுவே பின்னர்க் காளியாக விளங்கியதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. திருவள்ளுவர் வரலாறு கூறும்போது கூறப்பெற்ற உப்பை முதலியவர்களின் தோற்றம் பற்றிய கதைகளை ஆராய்ச்சியாளர் இக் காலத்தில் ஏற்றுக் கொள்வதில்லை. ஆதியும் பகவனும் மணந்தமை, ஏழு மகப்பேறு எய்தியமை பற்றிய குறிப்பு ஞானாமிர்தம் என்னும் சைவ நூலிலும் இடம் பெற்றுள்ளது. அ.மா.ப.

**உறைபனி தேசம்**: இந் நூல் கிரீன்லாந்தின் வரலாறாகும். கிறித்துவ இலக்கியச்சங்கத்தார் கி.பி. 1900–இல் இந்நூலை வெளியிட்டனர். நிலவருணனை, மக்களின் இயல்பு, கிரீன்லாந்தில் கிறித்தவச் சமய வளர்ச்சி பற்றிய ஆய்வு ஆகியவை இந்நூலின் உள்ளடக்கங்கள். பி.தெ.

**உறையனார்** சங்க காலப் புலவர்களுள் ஒருவர். இவர் பெயர் உறையன் என்றும் காணப்படுகிறது. இவரது பாடல் ஒன்று குறுந்தொகை 207–ஆம் பாடலாக உள்ளது. பாலைத்திணையிலமைந்துள்ள அப்பாடல், தலைவன் பிரிந்து செல்வான் எனக் கூறிய தோழியிடம் தலைவி கூறியதாக அமைந்துள்ளது. 'பாலை நிலத்தில் ஓமை மரத்தின் கவட்டிலிருந்து, தன் இனத்தின் நீங்கிய பருந்தின் வருத்தமிக்க தனித்த ஒலி, அவ்வழிச் செல்வார்க்குத் துணையாக அமையும் மலைப்பக்கத்தருகே உள்ள சிறிய வழி' என்று பாலைநில வழியின் இயல்பினையும் அதன் கொடுமையினையும் இவர் விளக்கியுள்ளார். அ.மா.ப.

**உறையூர்** சங்க காலச் சோழர்களின் தலைநகரம். இது திருச்சிராப்பள்ளிக்கு மேற்கே 1.6 கி.மீ. தொலைவில் காவிரியின் தென் கரையில் அமைந்துள்ளது. இது உறந்தை, கோழி, கோழியூர், வாரணம், உரகபுரம் முதலான பெயர்களாலும் வழங்கப்பட்டு வந்தது. உறையூர் உரோமானியர்களுடன் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தது.

**பெயர்க்காரணம்**: எல்லா வகையான சிறப்புகளும் வளங்களும் செல்வச் சிறப்பும் உறையும் நகரமாதலின் இது உறையூர் என வழங்கப்பட்டதாகப் பெரியபுராண ஆசிரியர் கூறுவர். கோழியொன்று

யானையைப் போரில் வென்றதால், வீரமிக்க இந்த இடம் கோழி அல்லது கோழியூர் என வழங்கப்பட்ட தாகவும் கூறப்படுகிறது. உறையூர்ப் பஞ்சவர்ணசாமி கோயிலில் கோழியும் யானையும் போரிடும் காட்சி சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளமை, இந்நிகழ்ச்சியை நினைவு படுத்துவதாக உள்ளது. பரிபாடலும் சிலப் பதிகாரமும் சங்க காலத்திற்குப் பிற்பட்ட நூல்களும் இவ்வூரைக் கோழியூர் என்றே குறிப்பிடுகின்றன.

சங்க கால நூல்கள் உறையூரையும், அங்கு வாழ்ந்த மக்களின் வாழ்க்கையையும் படம் பிடித்துக் காட்டுகின்றன. அகநானூறு, குறுந்தொகை, நற் றிணை, புறநானூறு, சிறுபாணாற்றுப்படை, பட்டி னப்பாலை, நீலகேசி முதலான நூல்கள் உறையூரின் பெருமையைப் பேசுகின்றன. 'அறந்துஞ்சு உறந்தை', 'கறங்கு இசை விழாவின் உறந்தை', 'பல நல்ல புலனணியும் உறந்தை' என்றெல்லாம் புலவர் பெரு ப ்ர் இந்நகரைப் போற்றினர்.

ாழ நாட்டின் மேற்பகுதியில் அமைந்திருந்த இப்மபருநகரில், கரிகாற்சோழன், கோப்பெருஞ் சோழன், நலங்கிள்ளி, கிள்ளிவளவன் முதலான சோழ வேந்தர்கள் ஆட்சிபுரிந்துள்ளனர். இளம் பொன் வாணிகனார், ஏணிச்சேரி முட மோசியார், மருத்துவன் தாமோதரனார் முதலிய புலவர்கள் வாழ்ந்ததும் இந்நகரே. புகழ்ச் சோழர், கோப்பெருஞ் சோழன் ஆகியோர் பிறந்ததும் இப்பெருநகரில் தான். முத்துவீரியம் என்னும் இலக்கண நூலைச் செய்த முத்துவீர உபாத்தியாயருக்கு உரிய ஊரும் உறையூரே.

உறையூர் சோழரது தலைநகரென்றும், காவிரி ஆறு சோழ நாட்டின் முக்கிய ஆறு என்றும் தாலமி குறிப்பிட்டுள்ளார். பெரிப்ளுசு (Periplus) குறிப்பிடும் அரகாறு என்ற ஊர் உறையூரே என்று அறிஞர்கள் கருதுகின்றனர். இந்நகரம் சிறந்த முத்திற்கும், மசு லின் துணிகளுக்கும் பெயர் பெற்று விளங்கியது என் றும் பெரிப்ளுசு குறிப்பிடுகிறது. உறையூரில் அகழாய்வு கள் மேற்கொள்ளப்பட்டன; அகழாய்வில் சாயத் தொட்டி (சாயத்தைப் பிரித்தெடுக்கும் தொட்டி) கிடைத்துள்ளதைக் கொண்டு இவ்வூர் நெசவுத் தொழிலில் சிறந்து விளங்கியதாகக் கொள்ளப்படு கிறது.

வரலாற்றுப் புகழ்மிக்க உறையூர் முன்பு தலை சிறந்த நகரமாக மட்டுமன்றி, உறையூர்க் கூற்றம் என்ற ஒரு தனிக் கூற்றத்தின் தலைநகராகவும் சிறந்து விளங்கியது. இக்கூற்றம் வடக்கே காவிரி ஆற்றையும் தெற்கே உய்யக்கொண்டான் ஆற்றுடன் கற்குடி மலையையும் (உய்யக் கொண்டான் திருமலை) கிழக்கே சிராப்பள்ளிக் குன்றையும் மேற்கே குளித் தண்டலையையும் (குளித்தலை) தனது எல்லைகளா கக் கொண்டிருந்தது என்பதனைக் கல்வெட்டுகளால் அறியலாம்.

**வெளியன் தித்தன்:** உறையூரின் தொடக்க கால வரலாற்றில் வெளியன் தித்தன் என்னும் தலைவ னுக்கு ஒரு சிறந்த இடம் உண்டு. கடற்கரைப் பட்டி னத்தின் தலைவனான இவன் உறையூரைக் கைப்பற் றிப் பிறர் எளிதில் தாக்கா வண்ணம் உறையூரில் அரண்களை அமைத்து, வலுவுள்ளதாக மாற்றி னான். இதனைப் பரணர், முதுகூத்தனார் ஆகியோ ரின் கீழ்க்காணும் பாடல்களால் அறியலாம்.

'நொச்சி வேலித் தித்தன் உறந்தை
கல்முதிர் புறங் காட்டன்ன' (அகம். 122)

'வென்றெறி முரசின் விறற்போர்ச் சோழர்
இன்கடுங் கள்ளின் உறந்தை ஆங்கண்' (அகம். 137)

கரிகாற் சோழன் தனது தலைநகரை உறையூரி லிருந்து காவிரிப்பூம்பட்டினத்திற்கு மாற்றினான் என்பதனைப் பட்டினப்பாலையால் அறியலாம். இதன் பிறகு ஏறத்தாழ கி.பி. ஆறாம் நூற்றாண்டு முடிய உறையூரைப் பற்றிய செய்திகள் விரிவாகக் கிடைத் தில. திருச்சிராப்பள்ளிக் கல்வெட்டும், திருச்சிராப் பள்ளி மலைக்கோட்டையில் உள்ள இரு குடைவரை களும், இப்பகுதியில் ஏற்பட்ட பல்லவர், பாண்டியர் ஆதிக்கத்தைக் காட்டுகின்றன.

காவிரி பாயும் சோழநாடு பல்லவ அரசன் சிம்ம விட்டுணுவால் (கி.பி. 550) கைக்கொள்ளப்பட்டது. உறையூர்ப் பகுதி ஏறத்தாழ கி.பி. 600 முதல் 875 முடிய பல்லவரின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. பல்லவரை யடுத்து, பாண்டியர் உறையூர்ப் பகுதியில் மேலாண்மை செலுத்தினர் என்பதனை, நெடுஞ்ச டைய பாண்டியனின் (கி.பி. 768–815) வேள்விக்குடிச் செப்பேடு சுட்டிக்காட்டுகிறது. தேர்மாறன் என்னும் பாண்டியன் 'கூடல், வஞ்சி, கோழி' என்னும் தலை நகரங்களிலுள்ள அரண்மனைகளையும் அரண்களை யும் புதுப்பித்த செய்தி, இச்செப்பேட்டால் அறியப் படுகிறது. விசயாலய சோழன் தஞ்சையைக் கைப் பற்றிய பின் உறையூரையும் கைப்பற்றியுள்ளான். உதயேந்திரச் செப்பேடு பராந்தக சோழனின் தலை நகரம் உறையூர் என்று செப்புகிறது. இதனால், உறை யூர் பாண்டியரிடமிருந்து மீண்டும் சோழர் வசம் வந் தமை புலனாகிறது.

**உறையூர்ப் புலவர்கள்:** அரசியல் வரலாற்றிலும், தொழில் வரலாற்றிலும் சிறப்பிடம் பெறும் உறையூர், தமிழிலக்கிய வரலாற்றிலும் தனக்கெனத் தனித்ததோர் இடத்தினைப் பெற்றுள்ளது. சங்க இலக்கியப் பாக்களை யாத்த பின்வரும் புலவர்கள் உறையூரைச் சேர்ந்தவர்கள்: 1. உறையூர் இளம்பொன் வாணிகனார் (புறம். 264), 2. உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் (புறம். 13, 127–135, 241, 374, 375), 3. உறையூர்க் கதுவாய்ச் சாத்தனார் (நற்றிணை 370), 4. உறையூர்ச் சல்லியங் குமாரனார் (குறுந்தொகை 309), 5. உறையூர்ச் சிறுகந்தனார் (குறுந்தொகை 257), 6. உறையூர்ப் பல்காயனார் (குறுந்தொகை 374), 7. உறையூர் மருத்துவன் தாமோதரனார் (புறம். 60, 170, 321; அகம். 133, 257), 8. உறையூர் முதுகண்ணன் சாத்தனார் (புறம். 27–30, 325; குறுந். 133), 9. உறையூர் முதுகூத்தனார் (அகம். 137, 329; புறம். 331 ; குறுந்தொகை 353, 371; திருவள்ளுவமாலை 39), 10. உறையூர் முதுகொற்றனார் (குறுந்தொகை 221, 390).

உறையூர்ப் பல்காயனார் யாப்பிலக்கணம் செய்திருந்தார் என்பதனை யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை என்னும் நூல்களின் உரையால் அறியலாம்.

**உறையூரின் அழிவு:** பிற்காலப் பாண்டியர் வலுவடைந்தபொழுது, மீண்டும் உறையூர் பாண்டியர் கைக்கு மாறியது. முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் (கி.பி. 1216 – 1235) உறையூரையும் தஞ்சையையும் தீக்கிரையாக்கினான் என்று திருக்கோயிலூர்க் கல்வெட்டுக் கூறுகின்றது.

பாண்டிய நாட்டின்மீது கி.பி. 1310–இல் படையெடுத்த அலாவுதீன் கில்சியின் படைத்தலைவனான மாலிக்காபூர் உறையூரையும் அழித்தான். இவ்வாறு பகைவர்களால் உறையூர் அவ்வப்போது அழிக்கப்பட்டது. இதற்கு முன்பே கி.பி. பத்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் காவிரியின் வெள்ளப் பெருக்கால் அல்லூரும் உறையூரும் அழிந்தன என்பதனை அல்லூர்க் கல்வெட்டு அறிவிக்கிறது. இதனை உறையூரில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வும் உறுதி செய்கிறது.

விசயநகர வேந்தனான இரண்டாம் அரிஅரனின் ஆட்சிக்காலத்தில் (கி.பி. 1377–1404) உறையூர் விசயநகரத்தார் ஆட்சியையும் கண்டது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலே உறையூரின் பெருமை மங்கியது.

ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுக்கால வரலாறு கொண்ட உறையூர் இன்று பழைய சிறப்பினை இழந்து நிற்கிறது. முன்பு உறையூரைச் சுட்டியே சிராப்பள்ளிக் குன்றினை அறிந்தனர். இன்றோ திருச்சியைச் சுட்டியே உறையூரை அறிய முடிகிறது. உறையூரில் இன்று நாச்சியார் கோயில், பஞ்சவர்ணசாமி கோயில், வெக்காலியம்மன் கோயில் ஆகியவை உள்ளன. உறையூர்க் கோட்டை, அரண்மனை ஆகியவற்றின் சிதைவுகள் இன்றும் காணப்படுகின்றன.

மா.இரா.த.

## உறையூர் இளம்பொன் வாணிகன் சாத்தன் கொற்றன்

சங்க காலப் புலவர்களுள் ஒருவர். இவர் உறையூரைச் சேர்ந்தவர் என்பதும், இவர் தந்தை பெயர் சாத்தன் என்பதும், தொழிலால் பொன் வாணிகர் என்பதும் பெயர் கொண்டு அறியக் கூடிய செய்திகளாகும். அகநானூற்றின் 177–ஆம் பாடலில் காணப்படும் பாட பேதத்தால் இப்பெயர் கொண்ட புலவர் அப்பாடலைப் பாடியுள்ளார் என்பது கூறப்படுகிறது. இச்செய்தி 'சங்கநூற் புலவர்கள் பெயரகராதி' என்னும் நூலிற் காணப்படுகிறது. ஆனால், பேராசிரியர் எசு.வையாபுரிப் பிள்ளை, மர்ரே எசு. இராசம், சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகத்தினர் ஆகியோர் பதிப்பித்த அகநானூற்றில் அதன் 177–ஆம் பாடலின் ஆசிரியர் பெயர் செயலூர் இளம்பொன் சாத்தன் கொற்றனார் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. காண்க: செயலூர் இளம்பொன் சாத்தன் கொற்றனார். அ.மா.ப.

## உறையூர் இளம்பொன் வாணிகனார்

ஒரே ஒரு பாட்டினைப் பாடிச் சங்க காலத்துத் தொகை நூல்களில் இடம்பெற்றுள்ள சங்கப் புலவருள் ஒருவர். இவரது பாடல் புறநானூற்றில் கரந்தைத் திணைக் கையறுநிலையில் அமைந்துள்ளது (புறம்.264). இவருடைய பெயர் இளம்பொன் வாணிகனார் எனக் குறிக்கப்பெற்றுள்ளது. இவர் பொன் வாணிகம் செய்த சிறப்பால் 'சான்றோர் கூட்டத்துள் இவர் இயற்பெயரே வழங்காது இளம்பொன் வாணிகனார் என்ற பெயரே பெயராக வழங்கினமையின் புறநானூற்றைத் தொகுத்த ஆசிரியர் இவரை உறையூர் இளம்பொன் வாணிகனார் என்றே குறித்தொழிந்தார்' என்பர் பேராசிரியர் ஔவை. துரைசாமி. ஆயினும், டாக்டர். உ.வே. சாமிநாதையர் பாடபேதமாகச் 'சாத்தன் கொற்றனார்' என்ற பெயரையும் தந்திருத்தலால், 'சாத்தன் கொற்றனார்' என்பதனை இவர் இயற்பெயராகக் கொள்ளலாம். மேலும், 'இளம்பொன் என்பது ஓடுதலுடைய மாற்றுக் குறைந்த பொன்னாகும். இதனை வாணிகம் செய்தது பற்றி இவர் இளம்பொன் வாணிகர் ஆயினார். இத்தகைய வாணிகர் காவிரிப் பூம்பட்டினத்திலும் மதுரையிலும் வஞ்சியிலும் காஞ்சியிலும் பிற நகரங்களிலும் இருந்தனர். பொன் வகையுள் சாதரூப

மும், கிளிச்சிறையும் இளம்பொன் ஆதலால், உரைத்து உரையால் அறுதியிட்டு வாணிகம் செய்வோர் இளம் பொன் வாணிகனார் ஆயினர்' என்பர் பேராசிரியர் ஒளவை. துரைசாமி.

'பதுக்கை சேர்த்திச் செம்பூங் கண்ணியொடு, மயிற்பீலி சூட்டிப் பெயர் பொறித்துக் கல்நட்டனர்; கன்றோடு கறவைப் பசுக்களைக் கவர்ந்து வந்து பகைவரை ஓட்டிய நெடுந்தகை இறந்தபோது, அவன் இறந்ததறியாது பாணர் கூட்டம் வரும்' என ஒரு வீரனைப் புகழ்ந்து பாடுகிறது இப்பாடல். தி.மு.

**உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்** சங்கப் புலவர்களுள் ஒருவர். இவர் பாடிய சங்கப் பாடல்கள் பதின்மூன்று ஆகும். அவை அனைத்தும் புறநானூற்றுப் பாடல்களே (புறம். 13, 127, 128, 129, 130, 131, 132, 133. 134, 135, 241, 374, 375).

இவர் ஏணிச்சேரி என்னும் ஊரினர். உறையூரிடத்தே தங்கியிருந்தமையால் உறையூர் ஏணிச் சேரி முடமோசியார் எனப்பட்டார். உறையூரைச் சார்ந்த சிற்றூராய் 'ஏணிச்சேரி' இருந்திருக்கலாம். முடவராய் இருந்தமை பற்றி 'முடமோசி' என்றழைப் கப்பட்டுள்ளார் போலும். 'மோசிகீரன்', 'மோசி சாத் தன்', 'மோசி கண்ணத்தன்' முதலிய பெயர்களோடு முடமோசியாரையும் சேர்த்து ஏழு புலவர்கள் மோசி என்னும் பெயர்த் தொடர்புடையவர்களாக உள்ள னர்.

இவருடைய புறநானூற்றுப் பாடல்கள் பழந் தமிழரின் பண்பாடுகளை உணர்த்தும் குறிப்புகளைக் கொண்டுள்ளன. 'ஈகை அரிய இழையணி மகளிரொடு சாயின் றென்ப ஆஅய் கோயில்' (புறம். 127) என் னும் இவருடைய புறப்பாடற்பகுதி தமிழர் திரு மணத்தில் தாலி அணிவிப்பதுண்டு என்னும் குறிப் புடையதாய் உள்ளது. சங்கத் தமிழ்க் கவிதைகளில் இந்திய எல்லைகள் புலப்படுமாறு பாடியுள்ள புலவர் சிலருள் முடமோசியும் ஒருவர். 'வடதிசையதுவே வான்தோய் இமயம்' (புறம். 132) என்ற பாடற் பகுதியில் இதனைக் காணலாம். தமிழ்ப் புலவர்க்குரிய பீடும் செம்மாப்பும் இவர் பாடல்களில் வெளிப்படு கின்றன.

இவரால் பாடப்பெற்றவர்கள் சேரமான் அந்து வஞ்சேரல் இரும்பொறை, சோழன் முடித்தலைக் கோப்பெருநற்கிள்ளி, கொங்கர், ஆய் அண்டிரன் ஆகியோராவர். இவரால் மிகுதியும் பாடப்பெற்ற சிறப்பு ஆய் அண்டிரனுக்கு உண்டு. பாடப்பெற்றோர் குறித்து ஆய்ந்தவர்கள் 'ஆய் பற்றியன', 'அண்டிரன் பற்றியன' என்று பிரித்துக் குறித்துள்ளனர். எனினும் முடமோசியார் 'ஆஅய் அண்டிரன்' (புறம். 129) என்று கூறி இருபெயரும் ஒருவனையே குறிப்பதாகப் பாடியுள்ளார். ஆய் அண்டிரனை இவர் பாடிய சிறப்புக் கருதியே 'மோசி பாடிய ஆயும்' என்று இவர் சிறப்பிக்கப்பட்டுள்ளார். பாரிக்குக் கபிலர் ஆய் அண்டிரனுக்கு முடமோசி என்று சிறப்பாகக் கூறும் அளவிற்கு ஆய் அண்டிரனைப் பற்றி மிகுதி யாகப் பாடியவர் முடமோசி ஆவார். த.அ.

**உறையூர்க் கதுவாய்ச் சாத்தனார்** உறை யூரைச் சொந்த ஊராகக் கொண்ட சங்க காலப் புல வர்களுள் ஒருவர். உறையூரைச் சார்ந்த முதுகண்ணன் சாத்தனார் என்றொரு சங்கப் புலவரும் வாழ்ந்திருப் பதால் இவர்களை வேறுபடுத்திக் காட்டுவதற்காக, உறையூர்க் கதுவாய்ச் சாத்தனார், உறையூர் முது கண்ணன் சாத்தனார் என்று ஊரடையும் பெயரடை யும் சார்ந்துவர வேறுபடுத்தி அமைத்துள்ளனர். 'சாத்தன்' என்னும் தெய்வப் பெயரால் அழைக்கப் பட்ட சங்கப் புலவர் பத்தொன்பதின்மருள் உறை யூர்க் கதுவாய்ச் சாத்தனாரும் ஒருவர். இவர் பாடிய நற்றிணை மருதப்பாடல் (நற். 370) ஒன்று மட்டுமே சங்க இலக்கியத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளது. இவரைப் பற்றிய வரலாற்றுச் செய்திகளை அறிய முடியவில்லை. மருதத் திணைக்குரிய ஊடல் பற்றிய சொல்லோவியம் இவருடைய பாட்டில் அழகுற அமைந்துள்ளது. த.அ.

**உறையூர்க்காந்திமதி பிள்ளைத்தமிழ்:** உறையூர் சோழமன்னர்களின் தலைநகரங்களுள் ஒன்றாக விளங்கிய சிறப்புடையது. இது 'உறந்தை' யென்றும், 'கோழி' யென்றும் வழங்கப்பட்டது; 'ஊர் எனப்படுவது உறையூர்' எனப் புலவராற் பாராட்டப் பட்டுள்ளது. இன்று இது திருச்சியைச் சார்ந்த ஒரு பகுதியாக உள்ளது. இங்குள்ள சிவன் கோயிலின் இறைவன் பெயர் பஞ்சவர்ணேசுவரர்; இறைவி பெயர் காந்திமதியம்மை. 'திருமுக்கீச்சரம்' என்று ஞானசம்பந்தர் தம் பதிகத்தில் குறிப்பிட்ட பதி இது. இங்குக் கோயில் கொண்டுள்ள காந்திமதி யம்மை மீது அன்பர்களின் வேண்டுகோளுக்கிணங்கத் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் 'உறையூர்க் காந்திமதி பிள்ளைத் தமிழ்' பாடி அரங்கேற்றினார். இந்நூல் விரோதி கிருது ஆண்டு (கி.பி. 1852) வைகாசித் திங்கள், டாக்டர் உ.வே. சாமிநாதையரால் பதிப்பிக்கப் பெற்றது. இப்பிள்ளைத்தமிழ் சிரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் பிரபந்தத் திரட்டு என்ற நூலில் அமைந்துள்ளது. தனி நூலாக இதுவரை பதிப்பிக்கப் பெறவில்லை.

இந்நூல் பாயிரம் நீங்கலாக, காப்புப் பருவம் முதல் பொன்னூசற் பருவம் ஈறாக நூற்றொரு (101) பாடல்களைக் கொண்டுள்ளது. செங்கீரை, சப்பாணிப் பருவப் பாடல்கள் சந்தநயத்துடன் அமைந்து செவிக்கினிமை பயக்கின்றன. வாரானை, நீராடற் பருவங்களில் காந்திமதியன்னையின் பெருமையும் அன்னை அடியார்க்கு அருள்புரியும் தன்மையும் பிற புராணச் செய்திகளும் இடம்பெற்றுள்ளன. அம்புலிப் பருவம் நூலாசிரியரின் கற்பனைத் திறத்திற்குச் சான்று பகர்கிறது. பெண்பாற் பிள்ளைத் தமிழுக்கே உரிய அம்மானை, நீராடல், பொன்னூசற் பருவப் பாடல்கள் சொல்லழகும் கருத்தாழமும் கொண்டு மிளிர்கின்றன. உறந்தைப் பெண்ணரசியாம் காந்திமதியன்னையின் தலைமைப் பண்புகளும், தருமம் பொலி திருவுறையூரின் சிறப்புகளும் பாடல்களில் அமைந்து இந்நூலை அணிசெய்கின்றன. ஆர்.ம.

**உறையூர்ச் சல்லியங் குமரனார்** உறையூரைச் சேர்ந்த சங்க காலப் புலவர்களுள் ஒருவர். இவர் பாடியதாகக் கிடைக்கப் பெற்றுள்ளது குறுந்தொகைப் பாட்டு ஒன்று (309) மட்டுமே. மகாபாரதம் 'சல்லியன்'என்னும் பெயருடைய ஒரு மன்னனைக் குறிப்பிடுகிறது. சல்லியன் என்னும் பெயர் சங்க காலத்தில் தமிழகத்திலும் இருந்துள்ளதால் பாரதக் கதை தமிழகத்தில் சங்க காலத்திலேயே பரவி இருந்தமையினை அறிய முடிகிறது. இவரைப் பற்றிய பிற செய்திகளை அறிய முடியவில்லை. 'குமரனார்' என்ற பெயருடைய புலவர்கள் எண்மர் காணப்படுகின்றனர். இவர்களுள் 'சல்லியங்குமரன்' என்ற பெயரில், 'உறையூர்' என்னும் ஊர்ப் பெயரடை இல்லாமல் வேறு ஒரு புலவர் பெயரும் சங்க இலக்கியப் புலவர் பட்டியலில் காணப்படுகிறது. சல்லியங்குமரனாரின் குறுந்தொகைப்பாடல் மருதத்திணையில் பரத்தையிற் பிரிந்து வந்த தலைவனுக்குத் தோழி வாயில் நேரும் பாங்கில் அமைந்துள்ளது. த.அ.

**உறையூர்ச் சிறுகந்தனார்** சங்க காலப் புலவர்களுள் ஒருவர்; தாம் பாடிய ஒரே அகப்பாடலால் சங்கப் புலவரென்னும் சிறப்புற்று விளங்குபவர். குறிஞ்சித் திணைக்குரியதாய் வரைவுணர்த்திய தோழிக்குக் கிழத்தி கூறியதாக அமைந்துள்ள அவ்வகப்பாடல் குறுந்தொகை 257–ஆம் பாடலாகத் தொகுக்கப்பட்டுள்ளது. அப்பாடலில், 'வெற்பன் வருதொறும் அகலினும் அகலா தாகிக் காமம் என்னும் பகை பூசல் இடும்' எனத் தலைவி தோழிக்குக் கூறுகிறாள். தலைவன் மணம் புரிய வருகிறான் என்ற செய்தியினை அறிந்த தோழி, தன் மகிழ்ச்சியினை இதன் வாயிலாக வெளிப்படுத்துகிறாள். வேரிலும் அடிமரத்திலும் கிளையிலும் அடுக்கி வைத்தது போன்று தொங்கும் பலாமரங்கள் உள்ள இடத்தவன் எனத் தலைவனைச் சுட்டும் குறிப்பால் தலைவி தன் மகிழ்ச்சியினைப் புலப்படுத்தும் நுட்பம் இவர் பாடலில் அமைந்துள்ளது.

கந்தன் என்னும் பெயர் சங்க காலத்திலும் அதனையடுத்த காலத்திலும் தமிழகத்தில் பலர் பூண்டிருந்த பெயராகும். இப்பெயர் வடமொழியில் வழங்கப்படும் இசுகந்த (முருகன்), நிர்கந்த (அருகன்) என்னும் பெயர்களின் திரிபாகவோ கந்து (சிவலிங்கம்) என்ற சொல்லிலிருந்து அமைக்கப்பட்டதாகவோ இருக்கலாம். அவ்வாறாயின் இப்பெயர் சமய உறவு உடையதாகத் தோன்றுகிறது. ஆனால் சிறுகந்தனாருடைய சமயம் இன்னது என்று தெரியவில்லை. சிறுகந்தன் என்பது இளங்கந்தன் என்ற பொருளில் வழங்கியிருத்தல்கூடும். இப்புலவர் சோழநாட்டின் தலைநகரான உறையூரில் வாழ்ந்தார் என்பதனை இவர் பெயரால் அறிய முடிகிறது. தி.மு.

**உறையூர்ப் பல்காயனார்** சங்க காலப்புலவர்களுள் ஒருவர்; உறையூரில் வாழ்ந்தவர். குறுந்தொகையின் 374–ஆம் பாடல் இவர் பாடியதாகும். கூடல் பற்றிய குறிஞ்சித் திணையில் அமைந்தது அப்பாடல். அது தோழி பேசுவதாகப் பாடப்பட்டுள்ளது. தான் விரும்பிய தலைவனுடன் தனக்கு மணம்பேசப் படுவது உணர்ந்த தலைவி, தன் கனவு நனவாவதற்கு மகிழ்வதுடன், அது எவ்வாறு கைகூடிற்று என வியக்கவும் செய்கிறாள். அவ்வியப்பைப் போக்கும் வகையில் தோழி நடந்தவற்றை விளக்குகிறாள். 'தலைவியே, நமக்குள் நாம் மறைத்து வைத்துப் போற்றிய களவொழுக்கத்தை உரிய காலத்தில் உரிய முறையில் நான் நின் பெற்றோர்க்கு உணர்த்தினேன். உடனே தலைவனும் வந்து நின்னை மணம் பேசினான். எனவே பெற்றோரும் உடன்பட்டனர். இதுகாறும், பலபொருளாலும் அமைந்த தூக்கணாங் குருவிக்கூடு போலப் பலவிதமாகப் பேசிவந்த ஊராரும் மயக்கம் ஒழிந்து நம்மொடு ஒன்றாயினர்' என்பது தோழியின் விளக்கம்.

இப்பாடலில், 'அறத்தொடு நிற்றல்' என்னும் பண்டைத் தமிழர் பண்பாடு விளக்கம் பெறுகிறது. தோழி தான் அறத்தொடு நின்றதைத் தலைவிக்குக் கூறுகிறாள். தலைவியின் உறவெல்லாம் தன் உறவாக, தலைவியின் உயிரைத் தன்னுயிராகக் கருதும் தோழியின் நட்புத்திறம் வெளியாகும் வகையில் 'எந்தையும் தாயும்' எனத் தலைவி

யின் பெற்றோரைத் தன் பெற்றோராகவே சுட்டுகிறாள். கூடுவிட்டுக் கூடுபாய்ந்தாற்போல் தோழியின் நெஞ்சாக நின்று பேசும் பல்காயனாரின் பாடல்திறம் பெரிதும் போற்றற்குரியது. மீ.மு.

**உறையூர்ப் புராணம்** மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களால் இயற்றப்பட்ட புராணங்களுள் ஒன்று. வடமொழியிலுள்ள கந்தபுராணக் கருத்துகளைத் தழுவி இப்புராணம் பாடப்பட்டுள்ளது. பாயிரம் உட்படப் பதினாறு படலங்களையும் 1417 விருத்தங்களையும் கொண்டமைந்துள்ள இப்புராணம் காப்பிய உறுப்புகள் அனைத்தும் கொண்டதாகும். உறையூர் முக்கீச்சுரம், வில்வாரணியம், கோழிநகர் எனப் பலவாறு வழங்கப்படுகிறது. இத்தலத்துறையும் இறைவன் ஐவண்ணநாதரையும் (பஞ்சவர்ணேசர்) உடனுறை நாயகி காந்திமதியம்மையையும் வணங்கிப் பேறு பெற்றோர் பலர். உதங்கமுனிவரும்,காசிபன் மனைவி கத்துருவும், கார்க்கோடகனும், தீத்தொழில் புரிந்த வேட்டுவனும், சிவநிந்தனை புரிந்த வணிகனொருவனும், சிவாலயத்தில் பொருள் திருடிய வணிகக் குல மங்கையொருத்தியும் உறையூர் அடைந்து அங்குள்ள திருக்குளத்தில் மூழ்கிப் பெருமானைப் பணிந்து நற்கதி பெற்றமையை இப்புராணத்தில் காணலாம்.

சூரவாதித்த படலத்துள் தலவரலாறும், தலத்துறை இறைவன் பற்றிய செய்தியும் விரிவாகக் காணப்படுகின்றன. உறையூரையாண்ட சோழன் வீரவாதித்தனுக்குச் சிவபெருமான் வில்வாரணியப் பெருமையினை உணர்த்த எண்ணி அங்கிருந்த கோழியினை நோக்கினார். அதனால் மிக்கவலிமை பெற்ற கோழி யானையைத் தாக்கி ஓடச்செய்தது. வியந்த சோழன் அவ்விடத்தடைந்து இறைவனை வழிபட்டான். பின்னர் அவன் மகன் சூரவாதித்தன் பட்டமேற்று வேட்ட மேற்கொண்டு திரிசிர மலைவரை சென்றான்; மலையருகே நாடோறும் ஐந்து நாகலோகக் கன்னிகள் அருகிருக்கும் குளத்துள் மூழ்கி, நற்கணவனை வேண்டி இலிங்க வழிபாடு செய்வதைக் கண்ணுற்றான். சுமுகி அரதன லிங்கத்தையும், தேசராசி வெண்படிக லிங்கத்தையும், கமலமாமுகி சுவர்ண லிங்கத்தையும், சுலக்கணை வயிரலிங்கத்தையும், காந்திமதி நீலவண்ண லிங்கத்தையும் தனித்தனி வழிபட்டனர். இதனைக் கண்ட மன்னன் காந்திமதி மீது காதல் கொண்டு நெருங்கி உரையாடினான். அரவரசன் உடன்பட, அவளை மணந்து சோழன் நாகலோகத்தில் உள்ள இலிங்கம் பற்றியறிந்து அதனையடைந்தான்.அரவரசன் மனைவி வழிபட்ட காந்திமதியம்மை திருவுருவத்தினையும் உறையூருக்குக் கொண்டு வந்தான்.

காந்திமதியும் அவள் உடன்பிறந்தோரும் வழிபட்ட ஐந்து வண்ண இலிங்கங்களும் நாகலோகத்தரசன் தந்தலிங்கமும் ஒன்றாகிக் காந்திமதியம்மையோடு வில்வாரணியத்தே காட்சி தந்தது. சோழ மன்னன் குளந்தொட்டுக் கோயில் எழுப்பி இலிங்கத்தையும் அம்மையையும் நன்னாளில் பிரதிட்டை செய்து விழாச் செய்தான். மன்னன் வேண்டியபடி, இறைவனும் புலரியில் அரதனமாகவும், பகலில் வெண்படிகமாகவும், மாலையில் கனகமாகவும் முதல்யாமத்தில் வயிரமாகவும்,நடுயாமத்தில்எல்லா வண்ணந்தாங்கியும் காட்சி தந்து அருள்செய்தார். காந்திமதியம்மை கோயிலருகே உள்ள திருக்குளத்தில் ஒருவர் மூழ்கினால் பழம்பிறப்புணர்ந்து, பழவினை தொலையப் பெற்று நற்பேறு பெறலாம் என இப்புராணம் கூறுகிறது. பத்து நாட்கள் திருவிழாப் பொலிவோடு உறையும் இவ்வுறையூரீசன் ஐந்து வண்ணங்காட்டியமையால் ஐந்து பெருந்தேர்களில் உலா வருதலையும் புராணம் கூறுகிறது.

திருநீற்றுப் படலத்துள் திருநீற்றின் பெருமையும் செய்முறையும் மிக விரிவாகக் கூறப்பட்டுள்ளன. சொற்சுவையும் பொருட்சுவையும் மிகுந்த இப்புராணம் உறையூரின் பெருமையினையும், ஆண்டுக் கோயில் கொண்டுள்ள இறைவன் வரலாற்றினையும், சைவத்தின் மேன்மையினையும் விளக்கிக் காட்டுகிறது. இப்புராணம் பாடி முடித்த பின்னர்ப் பிள்ளையவர்கள் கற்றோரால் வித்துவான் எனப் பாராட்டிச் சிறப்பிக்கப் பெற்றார்கள்.

இந்நூல் பிள்ளையவர்களின் மாணாக்கரான சி. தியாகராசச் செட்டியாரால் சென்னையில், தஞ்சைச் சதாவதானம் சுப்பிரமணிய ஐயரின் வித்தியாவர்த்தனி அச்சுக்கூடத்தில் விசு ஆண்டு (கி. பி. 1881) பதிப்பிக்கப்பட்டது. குரு. கோ.

**உறையூர் மருத்துவன் தாமோதரனார்** சங்க காலப் புலவர்களுள் ஒருவர்; சோழ நாட்டிலுள்ள உறையூரைச் சேர்ந்தவர். தாமோதரன் என்பது இவர் இயற்பெயர். இதனால் இவர் திருமால் நெறியினராக இருக்கலாம் எனத் தெரிகிறது. இவர் பெயரிலுள்ள மருத்துவன் என்னும் அடைமொழியால் இவர் மருத்துவத் தொழிலை மேற்கொண்டிருந்தார் என்பது தெளிவாகிறது. இவர் பெயரில் அமைந்துள்ள, ‘சிந்தி நீர்க்கண்டம்’ எனத் தொடங்கும் திருவள்ளுவ மாலைச் செய்யுள் ஒரு மருத்துவக் குறிப்பினைக் கொண்டுள்ளது. இவர்தம் பாடல்களாக அகநானூற்றில் (133, 257) இரு பாடல்களும், புறநானூற்றில் (60, 170, 321) மூன்று பாடல்களும் காணப்படுகின்றன. பாலைத் திணையிலமைந்த (அகம். 257) ஓர்

அகப்பாடல் பாலை வழியில் தன்னுடன் வருகின்ற தலைவியைப் பாராட்டித் தலைவன் கூறுவதாக அமைந்துள்ளது. சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவனையும் (60), சேரமான் கோதை யின் படைத் துணைவனான பிட்டங்கொற்றனையும் (170) இவர் பாராட்டிப் பாடியுள்ள பாடல்கள் புறநா னூற்றில் இடம்பெற்றுள்ளன. வீ.சே.

**உறையூர் முதுகண்ணன் சாத்தனார்** சங்க காலப் புலவர்களுள் ஒருவர்; உறையூரில் வாழ்ந்தார். முதுகண்ணன் என்பவருடைய மகனாரா தலின் இவர் உறையூர் முதுகண்ணன் சாத்தனார் என அழைக்கப்பட்டார்.

அரசர் முதலானோர் வயதாலும் அறிவாலும் முதிர்ந்த பெரியோரைத் தமக்கு அறிவுரை கூறி நல்வழிப்படுத்தற்கு அருந்துணையாக அமைத்துக் கொள்வர். கி.பி.12-ஆம் நூற்றாண்டிலெழுந்த கல் வெட்டு ஒன்று, 'வாச்சியன் இரவி கூத்தனை முது கண்ணாகவுடைய இவன் பிராமணி தேவன் நீலியும் இவன் மகன் கூத்தன் இரவியும்' எனக் கூறு கிறது. அறிவுறுத்துவார் ஒருவரை முதுகண் என் றழைப்பது அக்கால வழக்கு. அப்பெற்றியில் உறையூர் முதுகண்ணன் சாத்தனார் என இப்புலவர் பெயர் அமைந்திருக்கலாம் எனக் கூறுவர். இளங்கண்ணன், முதுகண்ணன் என்பவை பண்டைக்காலத்தோர் மக் கட்கு இட்டுவழங்கிய பெயர்கள். அவ்வழி உறையூரில் வாழ்ந்த முதுகண்ணன் என்பாரின் மகன் சாத்தனார் எனச் சொற்கிடக்கை கொண்டறிதலே பொருத்த முடையதாகும்.

இவர் பாடியனவாகப் புறநானூற்றில் ஐந்து பாடல்களும், குறுந்தொகையில் ஒரு பாடலுமாக ஆறுபாடல்கள் சங்க நூல்களில் இடம் பெற்றுள்ளன. இவர் சோழன் நலங்கிள்ளியைப் பாடியுள்ளார்.

புலவர் பாடும் புகழுடையோர் வலவனேவா வான வூர்தி ஏறித் துறக்கஞ் சேர்வர் எனவும்; உலகில் பிறத்தலும் இறத்தலும் வளர்தலும் தேய்தலும் உயிர் களுக்கு உண்டுஎன்பதனைத் திங்கள் தேய்ந்தும் பெருகி யும் மறைந்தும் தோன்றியும் அறிவுறுத்துகின்றது எனவும்; குருடு, ஊன்பிண்டம், கூன், குறள், ஊமை, செவிடு, மா, மருள் எனப் பிறத்தல் பிறப்பின் எண் வகைக் குற்றங்களாகும் எனவும்; அவையின்றிப் பிறத் தல் நற்பிறப்பாகும் எனவும், கூத்தரது கோலம் தோன்றி, நின்று, இயங்கி மறைவது போல உலகம் தோன்றி, நின்று, இயங்கி மறையும் தன்மையுடையது எனவும் கருத்துரைக்கிறார். வி.ப.

**உறையூர் முதுகூத்தனார்**: சங்க காலப் புலவர்களுள் ஒருவர்; சோழ நாட்டிலுள்ள உறையூ ரைச் சேர்ந்தவர். இவர் பெயர் முதுகூற்றனார் என் றும் காணப்படுகிறது. இவர் பெயரிலமைந்துள்ள திருவள்ளுவமாலைச் செய்யுளில் (39) முப்பாலையும் ஓதாதவரது வாழ்வு சிறக்காது என்றும் மனத்திற்குச் சொற்களின் சுவையை அறிதல் இயலாது என்றும் உடலுக்கு நல்ல செயல் உண்டாகாது என்றும் நினைத்துத் திருமகள் அவர்களிடத்துச் சேரமாட்டாள் என்றும் கூறிக் குறளின் மேன்மையைப் புலப்படுத்தி யுள்ளார். இவர் பெயரில் அகநானூற்றில் (137, 329) இரு பாடல்களும், புறநானூற்றில் (331) ஒரு பாடலும், குறுந்தொகையில் (353, 371) இரு பாடல் களும் அமைந்துள்ளன. இவர் பாடிய அகநானூற்றுப் பாட்டொன்றில் (137) உறையூர் மக்கள் உத்திர விழாக் கொண்டாடியதைக் குறிப்பிட்டுள்ளார். அவ் விழாவன்று மக்கள் ஆற்றிடையமைந்துள்ள அரங்கச் சோலையிடத்தே அடுப்பில் தீ மூட்டிச் சோறு சமைப் பர். அந்தக் காட்சி காண்பதற்கினியது. மறுநாள் அவ்விடத்தினின்று மக்கள் நீங்க, அடுப்பு தீ மூட்டுதலின்றி வறிதே கிடக்கும். தலைவியின் நெற்றி பொலிவிழந்து காணப்படுவதற்கு இக்காட்சியினை உவமையாக்கிக் காட்டியுள்ளார். வீ.சே.

**உறையூர் முதுகொற்றன்** சங்ககாலப் புலவர்களுள் ஒருவர். உறையூரில் வாழ்ந்த கொற் றன் சிறப்புக் கருதி உறையூர் முதுகொற்றன் என அழைக்கப் பெற்றாரெனக் கருதலாம். இவருடைய பாடல்களாகக் குறுந்தொகையில் இரு பாடல்கள் காணப்படுகின்றன.

தலைவன் கூறிச் சென்ற கார்காலம் வந்தும் அவன் வாராமை கண்டு வருந்தித் தலைவி கூறுவதாக ஒரு பாடலும், உடன் போக்கில் ஈடுபட்ட தலைவன், தலைவி இருவரை வழியிடைக் கண்டோர் கூறுவ தாக மற்றொரு பாடலும் அமைந்துள்ளன. வி.ப.

**உறைவிட அமைப்புகள்**: குடும்ப அமைப் பில் திருமணம் பல மாற்றங்களை ஏற்படுத்துகிறது. அனைத்துச் சமுதாயங்களிலுமே பெரும்பாலோர் மணத் துணையைத் தம் கால்வழிக் குழுக்களுக்கு அப்பால் உள்ள வேற்றுக் குழுவினரிடமிருந்தே பெறு கின்றனர். இரண்டு தனித்த குடும்பங்களிலிருந்து ஆணையும் பெண்ணையும் இணைத்து நடத்தும் திரு மணத்திற்குப்பின், ஒருவர் தம் இருப்பிடத்தை விட்டுத் தம் துணையுடன் வாழ வேண்டியுள்ளது. இவ்வாறு மணமானோர் இருவரும் திருமணத்திற்குப் பின் தங்கி வாழுமிடமே உறைவிடம் என்று கூறப்

படும். இது ஒரு சமுதாயம் அமைந்துள்ள இடத்தின் புவியியல் இருப்பிடத்தையோ அதன் ஒரு பகுதியினையோ சுட்டிக் காட்டுவதில்லை. மாறாக, ஒருவரின் இடத்தையும் திருமண அமைப்பு, உறவுமுறைத் தன்மை முதலானவற்றைச் சுட்டிக் காட்டும் பொருளையும் கொண்டது. ஏனெனில் இச்சொல் திருமணத்திற்குப் பிந்திய உறைவிடம் என்னும் விரிவுப் பொருளைக் கொண்டதானதால் தன் இரத்தவழி உறவினையும் மணவழி உறவினையும் ஏற்று அமையப்பெற்ற ஒரு நிறுவனமாகிறது; சமூக அமைப்பின் உறுப்பாகிறது.

உறைவிட அமைப்பு ஏற்படுவதில் திருமணப் பிணைப்பினை முதன்மைக் காரணமாகக் கூறலாம். திருமணத்தால் புதுஉறவுகள் தோன்றுகின்றன. செல்வங்கள் பரிமாற்றம் செய்து கொள்ளப்படுகின்றன அல்லது செல்வம் ஒருவருக்குக் கொடுக்கப்படுகிறது. பிறந்தகத்தில் (Family of Orientation) இருந்த ஒவ்வொருவரும் திருமணத்திற்குப்பின் தம் வாழ்க்கையை மேற்கொள்ளவும் தம் இனச் சந்ததியினரைப் பெற்றெடுக்கவும் தனிக் குடும்பம் (Family of Procreation) அமைத்துக் கொள்கின்றனர். இதனால் அனைத்துச் சமுதாயத்திலும் திருமணத்திற்குப் பின் எழும் முதல் கேள்வி, எங்கு வாழ்வதென்பதே. வாழும் இடத்தை அமைப்பதில் ஒவ்வொரு சமுதாயமும் மாறுபடுகிறது. இதற்குக் காரணங்கள் பல. திருமண அமைப்பு இதில் தலையாயது. ஒருதுணை மணம், பலதுணை மணம், பல்கணவர் மணம் (Polyandry), பல்மனைவி மணம் (Polygyny), பல்சகோதரர் கணவர் முறை (Fraternal Polyandry), பல்சகோதரியர் மனைவி முறை (Sororal Polygyny), குழு மணம் முதலான இன்னும் பல வகையான மணங்களும் உறைவிட அமைப்பை நிருணயிக்கின்றன. இதைப் போன்றே மரபு வழியும் முதன்மையான காரணமாகும். தந்தைவழி மரபு (Patrilineal Descent), தாய்வழி மரபு (Matrilineal Descent), இருவழி மரபு (Bilateral Descent) முதலான பிற மரபு வழி அமைப்புகள் உறைவிடப் பாங்கினை நிருணயிக்கின்றன. பொதுவாக ஒரு குறிப்பிட்ட வகையின் ஒருவழி மரபு (Unilineal Descent) முறை முதன்மையான உறைவிட அமைப்புகளுடன் தொடர்புற்றுள்ளது. அதாவது, தந்தைவழி மரபினர் தந்தையக உறைவிடத்தையும் தாய்வழி மரபினர் தாயக உறைவிடத்தையும் இருவழி மரபினர் ஈரக உறைவிடத்தையும் கொண்டுள்ளனர். இது தவிர்த்துக் குடும்பத்தின் தலைமை அமைப்பு உறைவிட அமைப்பிற்குப் பிற காரணிகளாக உடன் நிற்கின்றன. தந்தைத் தலைமை (Partiarchal), தாய்த் தலைமை (Matriarchal), மாமன் தலைமை (Avuncupotestal) முதலானவை இவற்றுள் சில. இது மரபு அமைப்போடு மிகவும் தொடர்புற்று இயங்குவதாகும்.

மணப் பெண் பணம் கொடுப்பதும் உறைவிட அமைப்புகளில் பங்கு பெற்றுள்ளது என்பது இனக்குழுவியல் (Ethnography) ஆய்வுகளிலிருந்து கிடைக்கப் பெற்ற வெளிப்படை உண்மை. பெரும்பான்மைச் சமுதாயங்களில் திருமணத்திற்குப் பின் மணமகள் தன் பிறந்தகத்திலிருந்து சென்று விடுகிறாள். இதை ஈடுகட்டும் பொருட்டு மணப்பணம்மண ஒப்பந்தத்தின் போது முடிவு செய்யப்படுகிறது அல்லது நேர்மாறாகவும் நடக்கிறது. இது பொருளாதார, திருமண உறவுகளில் மிகுந்த தொடர்பினை ஏற்படுத்துகிறது. இத்தன்மைகள் ஒவ்வோர் உறைவிட அமைப்பின் தன்மையைக் கூறும்போது சுட்டிக்காட்டப்பெறும்.

உறைவிட அமைப்புகள் பற்றிய மானிடவியல் ஆய்வுகள் ஆதிக்குடிகள் சமுதாயம் முதல் நகரச் சமுதாயம் வரை உள்ள அனைவரும் பின்பற்றும் பல்வேறு வகையான முறைகளைக் கண்டறிந்துள்ளன. இதன் அமைப்புகளை வெவ்வேறு மானிடவியலாரும் சமுதாயவியலாரும் வகைப்படுத்தியுள்ளனர். எனினும் முர்டாக்கு (Murdock) வகுத்துள்ள ஐம்படி வகைப்பாடே பெரும்பான்மையாகக் கையாளப்படுகிறது. முர்டாக்கு உறைவிட அமைப்புகளை தந்தையக உறைவிடம், தாயக உறைவிடம், ஈரக உறைவிடம், புது உறைவிடம், மாமனக உறைவிடம் என்னும் வகைகளில் பிரித்துள்ளார். ஒவ்வோர் அமைப்பினைப் பற்றியும் கீழ்க்காணும் பட்டியல் விளக்கந்தரும்.

முர்டாக்கின் உறைவிட வகைப்பாடு

| | உறைவிட வகை | தங்கும் இடத்தின் விவரம் |
|---|---|---|
| 1. | தந்தையக உறைவிடம் | மணமானோர் கணவனின் தந்தையின் வீட்டில் அல்லது அவருக்கு அருகில் தங்குவர். |
| 2. | தாயக உறைவிடம் | மணமானோர் மனைவியின் தாயின் வீட்டில் அல்லது தாயின் அருகில் தங்குவர். |

| | | |
|---|---|---|
| 3. | ஈரக உறைவிடம் | மணமானோர் கணவன் அல்லது மனைவி ஆகியோருள் யாரேனுமொருவரின்பெற்றோருடன் அல்லது அவர்களுக்கு அருகில் தங்குவர். |
| 4. | புது உறைவிடம் | மணமானோர் இருவரும் தத்தம் பெற்றோருடனோ அருகிலோ தங்காமல் தனியிடம் அமைத்து வாழ்வர். |
| 5. | மாமனக உறைவிடம் | மணமானோர் கணவனின் அம்மாவின் உடன்பிறந்தானுடன் அல்லது அவருக்கு அருகில் தங்குவர். |

முர்தாக்கின் வகைப்பாடு உலகின் அனைத்துச் சமுதாயங்களிலும் காணப்படும் வெவ்வேறு வகையான உறைவிட அமைப்புகளைக் காட்டவில்லை யாதலாலும், இவரது வகைப்பாடு சில மயக்கக் கருத்தினை ஏற்றுள்ளதாலும் இவை ஏற்புடையனவல்ல என்பது சில மானிடவியலாரது கருத்தாகும். குறிப்பாக முர்தாக்கு காட்டியுள்ள மாமனக உறைவிடம் என்பது கணவனின் மாமனா அல்லது மனைவியின் மாமனா என்பதை விளக்கவில்லை. கணவனின் அம்மாவின் உடன்பிறந்தாரா அல்லது தந்தையின் உடன்பிறந்தாரா என்பதையும் சுட்டிக் காட்டவில்லை. இது தவிர்த்து முர்தாக்கின் வகைப்பாட்டில் கூறியுள்ள தந்தையக உறைவிடம், தாயக உறைவிடம் ஆகிய இரண்டு அமைப்பைத் தவிர்த்து வேறொரு வகையும் ஏற்பட வாய்ப்புள்ளது. அது தாயக-தந்தையக உறைவிடம் (Matri-patrilocal Residence) ஆகும். மணமானோர் முதல் குழந்தை பெறும் வரையிலோ சிலகாலம் வரையிலோ மனைவியின் தாயகத்தில் தங்கியிருந்து, பின்னர் நிலையாகக் கணவனின் தந்தையகத்தில் தங்குவர். இதுபோன்ற அமைப்பு சில சமூகங்களில் உள்ளது. இது தவிர்த்து இன்னும் சில முறைகளையும் சுட்டிக் காட்டுவர்.

பிசர் (Fischer) என்பார் மூவகை உறைவிட அமைப்புகளை பரு நிலையில் வகுத்துள்ளார். அவை புது உறைவிடம், இரத்த உறவினருடன் தங்கும் உறைவிடம் (Consanguineolocal Residence), மணவழி உறவினரது உறைவிடம் (Affinolocal Residence) ஆகும். இரத்த உறவினருடன் தங்கும் உறைவிடத்தை நுண் நிலையில் 10 வகைகளாகவும் மணவழி உறவினரது உறைவிடத்தை இருவகையாகவும் பகுத்துள்ளார். பிசரின் வகைப்பாடு பின்வருமாறு:

பிசரின் உறைவிட வகைப்பாடு

| | வகை | இடம் கொடுக்கும் உறவினர் |
|---|---|---|
| I. | புது உறைவிடம் (Neolocal Residence) | தம்பதியினர். |
| II. | இரத்த உறவினரக உறைவிடம் (Consanguineolocal Residence) | இரத்த உறவினர் யாராயினும். |
| அ. | தந்தையக உறைவிடம் (Patrilocal Residence) | தந்தை அல்லது தந்தைவழிக் கீழிறங்கு தலைமுறை (Ascending Generation) ஆண் உற்வினர். |
| ஆ. | தாயக உறைவிடம் (Matrilocal Residence) | தாய் அல்லது தாய்வழிக்கீழிறங்கு தலை முறையின் பெண் உறவினர். |
| இ. | மாமனக உறைவிடம் (Avunculocal Residence) | தாயின் உடன்பிறந்தான் அல்லது கீழிறங்கு தலைமுறையின் தாய்வழிப் பெண் உறவினர். |
| ஈ. | அத்தையக உறைவிடம் (Amitalocal Residence) | தந்தையின் உடன்பிறந்தாள் அல்லது கீழிறங்கு தலைமுறையின் தந்தைவழிப் பெண் உறவினர். |

| | | |
|---|---|---|
| உ. | உடன் பிறந்தானக உறைவிடம் (Fratrilocal Residence) | உடன்பிறந்தான் அல்லது தன் தந்தையின் உடன் பிறந்தாரின் ஆண்மக்கள். |
| ஊ. | உடன் பிறந்தாளக உறைவிடம் (Sororilocal Residence) | உடன்பிறந்தாள் அல்லது தன் தந்தையின் உடன் பிறந்தாரின் பெண்மக்கள். |
| எ. | மகனக உறைவிடம் (Filiolocal Residence) | மகன் அல்லது மகனின் மகன். |
| ஏ. | மகளக உறைவிடம் (Filialocal Residence) | மகள் அல்லது மகளின் மகள். |
| ஐ. | உடன்பிறந்தாள் மகனக உறைவிடம் (Nepotilocal Residence) | உடன்பிறந்தாள் மகன் அல்லது கீழிறங்கு தலை முறையின் தாய்வழி ஆண் உறவினர். |
| ஒ. | கலப்பு உறைவிடம் (Heterolocal Residence) | இரத்த உறவினர் யாராயினும். |
| III. | மணவழி உறவினரது உறைவிடம் (Affinolocal Residence) | |
| அ. | கணவனக உறைவிடம் (Virilocal Residence) | கணவன் |
| ஆ. | மனைவியக உறைவிடம் (Uxorilocal Residence) | மனைவி |

மணமானோர் யாரேனுமோர் உறவினருடன் சென்று வாழும் உறைவிட அடிப்படையிலிருந்து மாறுபட்டு, இட அடிப்படையிலும் தூரத்தின் அடிப்படையிலும் உறைவிட அமைப்புகளைக் கராசுகோ (Carrasco) வகைப்படுத்துவார்.

கராசுகோ உறைவிட அமைப்பு

| இடம் சார்ந்த உறைவிடம் (Spatial Referent of Residence) | வகை (Form) | எடுத்துக்காட்டு |
|---|---|---|
| குடும்பம் சார்ந்த (House hold) | குடும்பத்துடன் (Domestic) | தந்தை குடும்பத்துடன் (Patridomestic): மணமானோர் மணமகனின் தந்தை (அ) தந்தைவழி உறவினருடன் உறைதல். |
| புவிப் பகுதி (Territorial Division) எ-கா. தெருத் தொகுதி (Ward) அல்லது கிராமம் | அருகில் (Vicinal) | தந்தை அருகில் (Patrivicinal): |

| | | |
|---|---|---|
| | | மணமானோர் தந்தை (அ) தந்தைவழி உறவினருக்கு அருகில் உறைதல். |
| உற்வினர் குடும்பத்துடன்-தூரம் **(Distance, relationships to households)** | நெருக்கம் **(Propinquous)** | தந்தை நெருக்கம் **(Patripropinquous)**: மணமானோர் தந்தை (அ) தந்தைவழி உறவினரின் நெருக்கத்தில் உறைதல் |
| | தொலைவு **(Longinquous)** | தந்தை தொலைவு **(Patrilonginquous)**: மணமானோர் தந்தை (அ) தந்தைவழி உறவினருக்குத் தொலைவில் உறைதல் |

கராசுகோ உறைவிட வகை இடம் சார்ந்த சொற்களோடு தொடர்புபடுத்தி விளக்கப்படும் ஒரு முழுமையான முறையாகும் எனலாம். திரோபிரியாண்டுத் **(Trobriand)** தீவினரின் உறைவிட அமைப்பைக் காட்ட இருவகைச் சொற்களைப் பயன்படுத்தி அவர்களின் உறைவிட முழுமையைச் சுட்டுவர். அதாவது அவர்கள் புதுக்குடும்பத்துடன் **(Neodomestic)** உள்ளனர் என்றும், மாமனகத்துக்கு அருகில் **(Avuncuvicinal)** உள்ளனர் என்றும் கூறப்படுவர். இதன்வழி, அவர்களது அமைப்பின் முழுமைக் கருத்தைக் காணலாம். மணமானோர் தந்தைவழி உறவினருக்கு அருகில் புத்திடம் அமைத்து வாழ்வது தந்தையுடன் நெருக்கமாகவும் **(Patripropinquous)** தந்தை அருகிலும் **(Patrivicinal)** வாழ்கின்றனர் எனச் சுட்டிக் காட்டப்பெறும். தந்தையகத்திற்குத் தொலைவில் வாழ்ந்தால் அது தந்தைத் தொலைவு இருப்பிடம் **(Patrilonginquous)** எனக் கூறப்படும்.

**தந்தையக உறைவிடம்:** திருமணத்திற்குப்பின் மணப்பெண் கணவனது தந்தையுடன் அல்லது அவரது உறைவிடத்தின் அருகில் அல்லது கணவனது தந்தைவழி ஆண் உறவினரது அருகில் தங்கும் உறைவிடமே தந்தையக உறைவிடம் என்று கூறப்படும். மனைவி கணவனுடன் சென்று வசித்தலே தந்தையக உறைவிடம் ஆகும் என்பது இரிவர்சின் **(W.H.R. Rivers)** கருத்தாகும். இக்குடும்பம்கணவனின்தந்தை குடும்பத்தினைக் குறிப்பதாகும். இம்முறை புது உறைவிட முறையைக் காட்டிலும் மிகுதியான சமுதாயங்களில் காணப்படுகிறது. முர்தாக்கு தம் 'உலக இனக் குழுவியல் மாதிரி' **(World Ethnographic Sample)** ஆய்வில் 314 சமுதாயங்களில் தந்தையக உறைவிட முறை காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார். தந்தையக உறைவிட முறையானது தாயக உறைவிட முறையைக் காட்டிலும் பரவலாகவும் மிகுதியாகவும் காணப்படுவதாகும்.

**தாயக உறைவிடம்:** மணமகன் திருமணத்திற்குப் பின் தன் மனைவியின் தாயுடன் அல்லது அவளது உறைவிடத்தின் அருகில் அல்லது மனைவியின் தாய்வழி உறவினர்களுடன் அல்லது அருகில் தங்கும் உறைவிடம் தாயக உறைவிடம் என்று கூறப்படும். இவைபோன்ற உறைவிட அமைப்புகள் பெரும்பாலும் தாய்வழிக் குடும்பங்களிலும் தாய்த் தலைமைக் குடும்பங்களிலும் காணப்படும்.

**மாமனக உறைவிடம்:** திருமணத்திற்குப் பின் மணமானோர் கணவனது தாய்வழி ஆண் உறவினரது வீட்டிலோ அருகிலோ தங்கும் உறைவிட முறையே மாமனக உறைவிடம் ஆகும். மாமன் என்பது தாயின் உடன் பிறந்தானைக் குறிக்கும். மெலனீசியாத் தீவில் வாழும் திரோபிரியாண்டுப் பழங்குடியினர் இவ்வகை முறையைக் கொண்டுள்ளனர். இவர்கள் ஒருதுணை மணத்தைக் கொண்டவர்கள்; தாய்வழிக் குடும்ப அமைப்புடையவர்கள்.

**புது உறைவிடம்:** நகரச் சமுதாயங்களிலும தொழிற் சமுதாயங்களிலும் பரவலாக உள்ள அமைப்பு புது உறைவிட முறையாகும். புதிதாக மணமானோர் இருவரும் தத்தம் பெற்றோர்

களுள் யாருடனும் வாழாது தனியிடம் அமைத்து வாழும் முறையே புது உறைவிடமாகும். இதுபோன்ற உறைவிட அமைப்பே இன்றைய அமெரிக்கச் சமூகத்தில் மிகப்பெரும்பான்மையானதாகக் காணப்படுவதாகும். இந்தியாவின் தொழில் நகரங்களிலும் புது உறைவிட அமைப்பே பரவலாகக் காணப்படுகிறது. இந்த அமைப்புக்குப் பொருளாதார அமைப்பே முதன்மைக் காரணமாகும். இருப்பினும் உலகச் சமுதாயங்களுள் இம்முறை மிகக் குறைவான சமுதாயங்களில் மட்டுமே காணப்படுவது குறிப்பிடத் தக்கது.

**தந்தையக உறைவிடம்:** சிறு அளவில் வேட்டையாடி உணவு சேகரிக்கும் சமுதாயத்தினரிடையேயும், நாடோடிக் குழுவினரிடையேயும் இத்தகு உறைவிடம் காணப்படுகிறது. இந்த உறைவிடத்தில் புறமணச் (Exogamy) சமுதாய அமைப்பு உள்ளது. பிறந்து வளர்ந்ததிலிருந்து ஒரேயிடத்தில் இருந்து வேட்டையாடி, கொன்ற விலங்குகளைப் பங்கிட்டுக் கொள்ளும் ஆண்களை ஒன்றாக இருக்கச் செய்து, அவர்கள் ஆதிக்கத்தைப் பலப்படுத்துவதே இவ்வுறைவிடத்தின் ஏற்றுக் கொள்ளத் தக்க செயற்பாடாகத் திகழ்கிறது. இதற்குத் தக்க எடுத்துக்காட்டாக மாயன் (Mayan) மொழி பேசும் சினகண்டான் இந்தியரையும் (Zinacanton Indians) செர்பியனைச் (Serbian) சார்ந்த சத்ருகாவினரையும் (Zadruga) கூறலாம்.

கிரேக்கர்கள், சுவாசியினர் (Swazi), விவசாயத்தைத் தொழிலாகக் கொண்டுள்ள வசிலிகா (Vasilika), ஐக்கிய நாடுகளைச் சேர்ந்த பிளாக்குபூட்டினர் (Black Foot) ஆகியோர் இந்த உறைவிட அமைப்பினைக் கொண்டுள்ளனர். இந்த உறைவிடம் கொண்ட குடும்பம் சமுதாய அமைப்பு ஆகியவற்றின் முக்கிய பண்பாகத் திகழ்வன புறக்குடிமணமும், தந்தையிடம் தங்கும் உறைவிடமுமேயாகும்.

அதிகமான மக்கள்தொகை, ஓர் அளவிற்குட்பட்ட நிலப்பரப்பு, அடிக்கடி நிகழும் போர், வளம் தரக்கூடிய ஒருமுகப்படுத்தப்பட்ட நிலையான பயிர்கள், தோட்ட நிலங்கள், கால்நடைப் பண்ணைகள், நெற்களஞ்சியங்கள் போன்றவையே தந்தையிடம் தங்கும் உறைவிடத்திற்குக் காரணமாக அமைகின்றன. தோட்டக்கலை சிறந்தோங்கும் சமுதாயத்தினரிடையே தந்தையிடம் தங்கும் உறைவிடமே ஆதிக்கம் செலுத்துவதாகக் காணப்படுகிறது. இவர்களிடையே அடிக்கடி நிகழும் உள்நாட்டுப் போருக்கு இவ்வுறைவிட அமைப்பினை ஒரு காரணமாகக் கூறலாம். கரோல் (Carol), மெர்வின், எம்பர் (Ember) போன்ற மானிடவியலாளர்கள் பல சமுதாயத்தினரிடையே நடத்தியுள்ள ஆய்வு இதனைத் தெளிவுபடுத்துகிறது. இதற்குத் தக்கதொரு சான்றாக நியூகினியில் மேட்டுப்பாங்கான நிலங்களில் வசிக்கும் மக்களைக் கூறலாம். இவர்களிடையே தந்தை வழித் தலைமைக் குடும்பமும் தந்தையிடம் தங்கும் உறைவிட முறைமையும் காணப்படுகின்றன. இவர்களிடையே அடிக்கடி நடைபெறும் சண்டை நிலையானதொரு பண்பாகத் திகழ்கிறது.

குடும்பத்தில் ஆண்களின் வலிமையை இத்தகு உறைவிடம் அதிகப்படுத்துகிறது. தோட்டக்கலையும் நிலையான கிராம வாழ்க்கையும் தொடங்கியதிலிருந்து தந்தையிடம் தங்கும் உறைவிடமே பொதுவான குடும்ப அமைப்பாகத் திகழ்கிறது.

**தாயக உறைவிடம்:** உணவுப் பொருள்கள் உண்டாக்குதலில் பெண்கள் ஆதிக்கம் அதிகமாக உள்ள சமுதாயத்தினரிடையே, அதிலும்பொதுவாகத் தோட்டக்கலை அதிகமாக உள்ள சமுதாயத்தினரிடையே தாயிடம் தங்கும் உறைவிட முறைமை காணப்படுகிறது. அமெரிக்காவைச் சார்ந்த இராகுவிசு (Iroquois), தென்மேற்குப்பகுதியைச் சார்ந்த, பியூப்லோ (Pueblo), ஆப்பிரிக்கக் கண்டத்தின் தெற்குப் பகுதியிலுள்ள ஆப்பிரிக்க இனக்குழுவினர், மலபார் கடற்கரைப் பகுதியினைச் சார்ந்த நாயர், ஐக்கிய நாட்டின் தென்மேற்குப் பகுதியில் உள்ள ஒப்பி (Hopi) ஆகிய பழங்குடியினரிடையேயும் தாயிடம் தங்கும் உறைவிட முறைமை காணப்படுகிறது.

இவர்களைத் தவிர, ஐக்கிய நாடுகளின் தென்மேற்குப் பகுதியிலுள்ள நவசோ இந்தியரிடையேயும் (Navajo Indians), நைசீரியாவைச் சார்ந்த தீவு மக்களிடையேயும், அராபியத் தீபகற்பத்தைச் சார்ந்த பெடோவின்சு (Bedovins), அமேசானைச் சார்ந்த முண்டுருகுவினர் (Mundurucu) ஆகியோரிடையேயும் இந்த உறைவிட முறைமை காணப்படுகிறது.

இத்தகைய உறைவிடங்களில் ஆண்கள் பெரும்பாலும் வாழ்க்கைக்குத் தேவையான பொருளீட்டத் தங்கள் இல்லத்தை விட்டு வெளியிடங்களில் வேலை செய்து காலத்தைக் கழிக்கின்றனர். இங்ஙனம் இவர்கள் நீண்டகாலம் வெளியே செல்லும்போது தங்கள் உறவினரையும் சொத்துகளையும் தங்கள் மனைவியர் பொறுப்பில் விட்டுச் செல்கின்றனர். இருப்பினும், இவ்வகை உறைவிடத்தில் மனைவியர் தங்கள் கணவரைச் சார்ந்த உறவினரைவிட, தங்களின் தந்தையக உறவினரிடத்தே மிகுந்த பற்றுடன் உள்ள

னர். இந்த உறைவிடம் அமைவதற்கு இது ஒரு காரணமாக உள்ளது.

தாயிடம் தங்கும் உறைவிட முறைமை பெண்களை அவர்தம் கணவர்களின் ஆதிக்கத்திலிருந்து விடுவிக்கிறது. இருந்த போதிலும் இவ்வகை உறைவிடத்தில் ஆண்களின் ஆதிக்கமே கிடையாது என்று கூற இயலாது. ஏனெனில் இந்த உறைவிடத்தின் குடும்பப் பொறுப்பில், அக்குடும்பத்தின் சகோதரர்கள் முழுப் பங்கேற்கின்றனர். மேலும், ஒரு பெண்ணின் சகோதரரே தம் சகோதரியரின் குழந்தைகளைப் பொறுத்த அனைத்துச் செயல்களிலும் பொறுப்பேற்கின்றனர்.

கிராம அகமணத் திருமணங்கள் (Village Endogamy) தாயிடம் தங்கும் உறைவிட முறைமைக்கு மற்றுமொரு காரணம் எனலாம். வயிற்றுப் பிழைப்பிற்காக ஆண்கள் நெடுந்தூரம் பயணம் மேற்கொள்ளுதலே இந்த உறைவிடம் ஏற்படுவதற்கு முக்கிய காரணமாக உள்ளது. இதற்குத் தக்க சான்றாக நவாசோவினரைக் (Navajo) கூறலாம். இங்கு ஆண், பெண் ஆகிய இருபாலருமே கால்நடைகள் வைத்திருந்த போதிலும் பெண்களே அவற்றைப் பெரும்பாலும் பராமரிக்கின்றனர். ஆண்கள் குதிரைகளை வளர்த்தல், வெளியிடங்களில் கூலிக்குத் தொழில் புரிதல் ஆகிய செயல்களை மேற்கொள்கின்றனர். பெண்கள் தங்கள் இல்லத்திற்கருகிலேயே கால்நடைகளைப் பராமரிப்பதால், அவர்தம் வீட்டு வேலைகள் அதிகமாகப் பாதிக்கப்படுவதில்லை. இதுவே அவர்களிடையே தாயிடம் தங்கும் உறைவிடம் நிலவக் காரணமாகிறது. வடமேற்கு எல்லையில் காணப்படும் எய்டா (Haida) மக்களிடையேயும், இத்தகு உறைவிடத்திற்கு மேற்கூறிய காரணமே பொருத்தமாக அமைகிறது.

இந்த உறைவிடத்தில் ஆண்கள் நீண்ட பயணம் மேற்கொள்வதற்கு மற்றுமொரு காரணமாகத் திகழ்வது போராகும். எனினும் போர் மட்டுமே தாயிடம் தங்கும் உறைவிட முறைமையினைத் தெளிவாக விளக்கவியலாது. ஏனெனில் இது தந்தையிடம் தங்கும் தந்தைவழித் தலைமைக் குடும்பத்திற்கும் (Patrilocal-Patrilineal Complex) அடிப்படையாகத் திகழ்கிறது. 'தாயிடம் தங்கும் தாய்வழித் தலைமைக் குடும்பம்' நிலவும் இராகுவிசு சமுதாயத்தினரிடையே போரற்ற அமைதியான வாழ்க்கை காணப்படுகிறது. இதற்கு மாறாகச் செம்பகா மேரிங்கு (Tsembaga Mering) எனப்படும் எனமாமோவினரிடையே (Yanomamo) எப்போதும் இரத்தம் சிந்தும் சண்டைகளும் கொள்ளையிடல் போன்ற செயல்களும் காணப்படுகின்றன. மலையாள அரசர்கள் அவையில் நாயர் இனத்தவர் போர் வீரர்களாகத் திகழ்ந்தனர். அமேசானைச் சார்ந்த முண்டுருகுவினர் தங்கள் பிரிவினருக்குள் ஒற்றுமையாக இருந்தபோதிலும், வெளியுலகத்தினருடன் தீராத வெறுப்புணர்ச்சியும் வன்முறையும் உடையவராயுள்ளனர்.

தாயிடந் தங்கும் உறைவிடம் கொண்ட சமுதாயத்தினரிடையே போர்புரியும் குணமுள்ளவர்கள் ஒருசிலரே உள்ளனர். அவர்களிடம் பகைமையுணர்ச்சி அடக்கப்பட்டுக் காணப்படுவதற்கான காரணம் பல் மனைவிக் குடும்பம் என்ற உறவுமுறையேயாகும். தாய்வழித் தலைமைக் குடும்பத்தின் சொத்துகளைப் பராமரிக்கும் ஆடவர் பல மனைவியரை மணந்து கொள்வதில் ஆதாயம் ஏதும் இல்லையாதலால் அதில் நாட்டமின்றி உள்ளனர். போருக்கு முக்கிய காரணமாகத் திகழும் பெண்களிடம் இவர்கள்அதிகமாக ஆர்வம் காட்டாததே இவர்களிடையே போரின்மைக்குக் காரணமாகத் திகழ்கிறது எனலாம்.

**மாமனக உறைவிடம்:** மாமனகத்து உறைவிடம் என்பது தாயின் சகோதரர் வீட்டிற்கு மனைவியுடன் சென்று இருவரும் வசித்தலாகும். வடமேற்கு பசிபிக்குப் பகுதியைச் சார்ந்த திலிங்கித்து (Tlingit) மக்களிடையே பெண்கள் தங்கள் தாய் வீட்டிலேயே தம் கணவருடன் வாழ்க்கையைத் தொடங்குகின்றனர். இவர்களுக்குப் பிறக்கும் ஆண் மக்களும் தத்தம் தாய்மாமன் வீட்டிலேயே வாழத் தொடங்குகின்றனர். தாய்வழித் தலைமைக் குடும்பச் செயல்களில் பெண்களின் ஆதிக்கம் தொடர்ந்து மேலோங்கி நிற்பதே மாமனிடம் தங்கும் உறைவிட முறைமைக்குக் காரணமெனலாம்.

**ஈரக உறைவிடம்:** வேட்டையாடுதல், உணவு சேகரித்தல் ஆகியவற்றில் ஈடுபடும் சமுதாயத்தினரிடையே இத்தகைய உறைவிடம் காணப்படுகிறது. இதற்குத் தக்க சான்றாகத் திகழும் மக்கள் 'புசுமன்' (Bushmen) பழங்குடியினர்.

வேட்டையாடுதல், உணவு சேகரித்தலைத் தொழிலாகக் கொண்ட பழங்குடியினர் தங்கள் தொழிற்கான அடிப்படைச்சுற்றுச் சூழலுக்குத் தக்கவாறு தங்களை அமைத்துக் கொள்வதற்கு ஏதுவாக இவ்வகை உறைவிடங்களைத் தேர்ந்தெடுக்கின்றனர். இப்பழங்குடியினரிடையே இருபக்க உறவினரும் ஒருபுறத்திலிருந்து மறுபுறத்திற்கு அடிக்கடி இருப்பிடத்தை மாற்றிக் கொள்கின்றனர். பிழைப்புப் பொருளாதாரம் முதல் சமயச் சடங்கு வரையிலான வாழ்க்கையின் அனைத்து நிலைகளிலும் இவர்கள் உலகம் உறவின

ரைச் சுற்றியே அமைந்துள்ளது. நடுவண் குடும்பம் (Nuclear Family), விரிந்த குடும்பத்தின் புறக்குடி மணம், இருவழி மரபு வந்தோரின் உறவுமுறை ஆகியன வாழ்க்கையின் அவசியத் தேவைகளனைத்திலும் இடைபட்டுச் செயலாற்றுகின்றன. வேட்டையாடி உணவு சேகரிக்கும் மக்களிடையே சுற்றுச் சூழலுக்கேற்றவாறு உள்ள சமுதாய அமைப்புத் தடங்கலின்றிச்செல்ல இருபுறக் கால்வழி வந்த உறவினர்கள் வழிவகுக்கின்றனர். சூழலுக்கேற்றவாறு தங்களை எளிதில் மாற்றிக் கொள்வதைக் கடைப்பிடிப்பதே இவர்களிடையேயிருக்கும் நிலையான அமைப்பிற்குக் காரணமாக உள்ளது.

புசுமன் பழங்குடியினரிடையே ஒவ்வோராண்டும் சுமார் 15 விழுக்காட்டினர் இடம் மாறிக் கொண்டிருக்கின்றனர். மேலும், 35 விழுக்காட்டினர் இரண்டல்லது மூன்று உறைவிடங்களில் வாழ்கின்றனர். இவர்கள் கணவன் அல்லது மனைவி குடும்பத்தினருடன் அல்லது இரு குடும்பத்தினருடனும் தங்கள் தேவைக்கேற்றவாறு உறைவிடம் அமைத்துக் கொள்கின்றனர்.

**புது உறைவிடம்:** பொருளியலில் பெரும் ஆர்வமுடைமையே புதுஇடம் தங்கும் உறைவிட முறைமைக்கு அடிப்படையாக அமைகிறது. இவ்வுறை விடத்தில் காணப்படும் குடும்ப அமைப்பு எளிதில் மாறுந் தன்மையது. இதுவே மணமக்கள் எவரையும் சாராமல் தனி உறைவிடம் அமைத்துக் கொள்வதற்குக் காரணமாகிறது. இதற்குத் தக்க எடுத்துக்காட்டாக ஐரோப்பிய அமெரிக்கர்களின் குடும்பம் திகழ்கிறது. இவர்களின் நடுவண் குடும்பம் சுலபமாக மாறுந் தன்மையுடையது. இவர்களின் ஊடுருவிப் பரவும் தனித்தன்மையும் (Pervasive individualizing) தனிப்பட்ட ஊதியப் பணி, தொழில் உற்பத்தி, வாணிக அங்காடி போன்றவையும் இந்த உறைவிடம் அமைவதற்கொரு காரணம். இதனால் இம்மக்கள் அனைத்து உறவினரிடமிருந்தும் வெளிப்படையாகவும் சமுதாய முறையிலும் விலகித் தனிப்பட்ட உறைவிடத்தினை அமைத்துக் கொள்கின்றனர்.

மேலும், மாமியார்-மருமகள் இருவரும் ஒரேயிடத்தில் வாழ்வதால் விளையும் சண்டைகள், மாமியார் வீட்டில் கணவனோ மனைவியோ வசித்தலால் ஏற்படும் சிக்கல்கள், தம் குழந்தைகளை வளர்ப்பதில் அளிக்கும் முக்கியத்துவம் ஆகியவற்றையே புது இடம் தங்கும் உறைவிட முறைமையைப் பின்பற்றுவதற்குக் காரணமாகக் காட்டுகின்றனர் அமெரிக்கர்கள்.

**அத்தையக உறைவிடம்:** இவ்வுறைவிடம் மாமனிடம் தங்கும் உறைவிட முறைமைக்கு நேர் எதிரானது. அத்தையிடம் தங்கும் உறைவிட முறைமை என்பது, மணமகன் தன் மனைவியுடன் தந்தையின் சகோதரியின (அத்தையின்) வீட்டில் வசித்தலாகும்.

**உறைவிடங்களால் உண்டாகும் பல்வேறு வகைக் குடும்பங்கள்:** ஒரு மனைவிக் குடும்பமும் புது இடந் தங்கும் உறைவிடமும் கொண்ட திருமணங்களால் மணமகன், மணமகள் ஆகியோரின் பெற்றோர், அவர் தம் குழந்தைகள் ஆகியோரைக் கொண்ட நடுவண் குடும்பம் உண்டாகிறது. பொருளாதாரக் காரணங்களுக்காகப் பெற்றோர் இறப்பிற்குப் பின் பல்வகைத் திருமணங்கள் நடக்கும் குடும்பங்களுடன் நடுவண் குடும்பம் இணைந்தாலோ, உறைவிட நியதியின்படி மணமக்கள் தங்கள் பெற்றோருடன் வாழ நேரிட்டாலோ கூட்டுக் குடும்பம் ஏற்படுகிறது. திருமணம் முடிந்த மகன் அல்லது மகள், பேரன் அல்லதுபேர்த்தி ஆகிய அனைவரும் பெற்றோர்களுடன் ஒன்றாக வாழும் போது நீண்ட விரிந்த குடும்பம் உண்டாகிறது. சில நேரங்களில் உறைவிட நியதிப்படி இல்லாமல் இயல்பாகவும் குடும்பக் குழுக்கள் அமைகின்றன. இதற்குத் தக்க முன்சான்றாகக் கனடா நாட்டைச் சார்ந்த ஆல்கோன்கியன் மொழி பேசும் அமெரிக்க மக்களின் குடும்பங்களைக் கூறலாம். வளர்ச்சியடைதலல்லாத பிளவுபட்ட படிமுறைவளர்ச்சியின் நிலையால் ஏற்படுவதே இவ்வகைக் குடும்பங்கள் எனலாம். மக்கள்தொகை குறைவாக உள்ளதும் இவை தோன்றுவதற்கான மிக முக்கிய காரணமெனலாம்.

பல்வேறு வகைப்பட்ட குடும்பங்கள் தோன்றப் பலவிதமான உறைவிட நியதிகள் அடிப்படையாக அமைந்துள்ளன. தந்தையிடம்தங்கும் உறைவிடத்தில் ஆண்கள் தங்களுக்குப் பழக்கமான இடத்திலேயே நிலையாக இருக்க, பெண்கள் தங்கள் பிறந்தகத்தைத் துறந்து, கணவனின் இல்லத்தில் புதிய உறவினர்களாக வாழ்க்கையைத் தொடங்குகின்றனர்.

தாயிடம் தங்கும் உறைவிடத்தில் கணவன் மனைவியின் இல்லத்தில் முற்றிலும் புதியனவாக வாழ்க்கையைத் தொடங்குகிறான். இவ்வுறைவிடத்தில் வசிக்கும் பெண்களும் அவர்தம் குழந்தைகளும் பழக்கப்பட்ட இடத்திலேயே இருப்பதால் மிகுந்த நன்மையை அடைகின்றனர். இவ்வுறைவிடத்தைப் பொறுத்தமட்டில் ஆண்கள் அவரவர் இல்லத்தில் அதிகாரம் செலுத்தும் நிலையிருக்கும் போதிலும், பெண்களின் ஆதிக்கமே மேலோங்கியிருக்கிறது. இதுவே

சில சமயங்களில் இவர்களிடையே சண்டை உண்டாக ஒரு காரணமாக அமைகிறது.

பிற உறைவிடங்களின் உறுதியான காரணங்களும், வலுவற்ற காரணங்களும், ஈரக உறைவிடத்தில் கலந்தே காணப்படுகின்றன. எனவே தங்களை நன்கு கவனிக்கக் கூடியதும், பொருளாதார ஆதாயம் தரக் கூடியதுமாகிய உறைவிடத்தை மனிதர்கள் தேர்ந்தெடுத்துக் கொள்ள இவ்வுறைவிட முறைமை வழி வகுக்கிறது.

புது உறைவிடம் மணமக்களைப் பிறர் தலையீட்டிலிருந்து விலக்கித் தன்னிச்சையாகச் செயற்படச் செய்கிறது. எனினும் இவ்வமைப்பில் தம்பதியர் தங்கள் குழந்தைகளை வளர்ப்பதிலோ குடும்பச் சிக்கல்களைத் தீர்ப்பதிலோ தங்கள் பெற்றோரின் உதவியைப் பெற இயலுவதில்லை. சீ.ப. & ம.ந.பு.

துணை நூல்கள்:

**Bohannan, P. and Middleton, J.** (eds ), Marriage, Family and Residence, The Natural History Press, New York, 1968.

**Fox, Robin**, Kinship and Marriage, Penguin Books, New York, 1967.

**Leibowitz, L.**, Females, Males, Families: A Biosocial Approach, Duxbury Press, North Scituate, Mass, 1978.

**உன்கியர் இசுகேலெசி உடன்படிக்கை (கி.பி. 1833)** உருசியாவிற்கும் துருக்கிக்கும் இடையே கி.பி. 1833–ஆம் ஆண்டில் செய்துகொள்ளப்பட்டது. இது ஒரு பாதுகாப்பு ஒப்பந்தமாகும். இது எட்டாண்டுகள் நீடிக்க வேண்டுமென முடிவு செய்தனர். துருக்கியின்மீது அச்சம் விளைவிக்கும் படையெடுப்புகள் நேரும்போது உருசியா உதவி செய்ய இதன்மூலம் ஒப்புக்கொண்டது. மேலும், உருசியாமீது எந்தவொரு ஐரோப்பிய நாடாவது படையெடுக்குமானால், துருக்கி தார்டனல்சு (Dardanelles) நீர்ப்பிரிவை மூடிவிட்டுக் கருங்கடல் பக்கத்தில் உருசியாவைக் கைப்பற்ற முடியாதபடி செய்துவிடவும் இவ்வுடன்படிக்கை உறுதி கூறியது. உருசியாவின் கப்பல்கள் தார்டனல்சு நீர்ப்பிரிவு வழியாக மத்திய தரைக் கடலுக்குள் எவ்விதக் கட்டுப்பாடுமின்றி நுழையலாம் என்றும், பாதுகாப்பான இடத்திற்கு அதன் இச்சைப்படி செல்லலாம் என்றும் இவ்வுடன்படிக்கை கூறியது. இவ்வுடன்படிக்கை துருக்கியின் வெளியுறவுக் கொள்கையை உருசியாவிடம் ஒப்படைத்துவிட்டதைக் குறிக்கும். இவ்வுடன்படிக்கையால் துருக்கி உருசியாவின் பாதுகாப்புப் பகுதிபோல் ஆக்கப்பட்டது. உருசியாவின் சார் மன்னர் முதலாம் நிக்கோலசு (Nicholas I) போர் புரியாமலேயே துருக்கியைக் கட்டுப்படுத்தும் உரிமையைப் பெற்றார். உன்கியர் இசுகேலெசி உடன்படிக்கையை இங்கிலாந்தும் பிரான்சும் ஏற்றுக்கொள்ள வில்லை. இவ்வுடன்படிக்கை ஐரோப்பாவின் அமைதியைக் குலைத்தது என்று கருதப்பட்டது. இரா.அ.

**உன்சூரி அபுல் காசிம் ஆசன்** கி.பி. 11–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு பாரசீகக் கவிஞர். இவர் ஆப்கானிசுத்தானிலுள்ள பால்க்கு (Balkh) என்னும் நகரில் கி.பி. 10–ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிறந்தார். இவர் இயற்பெயர் அபுல் காசிம் ஆசன் இப்னு அகமது என்பதாகும். இப்பெயர் ஆன்சோரி ஆசன் (Onsori Hasan) எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இவர் ஒரு வணிகரின் மகன். உன்சூரி அபுல் காசிம் ஆசன் (Unsuri Abul Kasim Hasan) பாரசீகம், அரபு முதலிய பல மொழிகளில் புலமை நிறைந்தவர்; சிறந்த அறிவியல் அறிஞரும் தத்துவ ஞானியும் கலைச் செல்வருமாவார். இவர் காலத்தில் கசினியைச் (Gazni) சுல்தான் மகமுது (கசினி மகம்மது) என்பவர் ஆண்டுவந்தார். இந்தச் சுல்தானின் உடன்பிறந்தவரான அமீர் நாசர் (Amir Nasar) என்பவரால் உன்சூரி, சுல்தானொடு தொடர்பு கொண்டார். இவர் ஒரு சமயம் வணிகத்தின் பொருட்டு வெளியூர் சென்றபோது, கொள்ளைக்காரர்களால் பிடிக்கப்பட்டார். சுல்தானின் உடன்பிறந்தார் இவரை விலை கொடுத்து வாங்கிக் கசினிக்குக் கொண்டு வந்து தம் தமையனாருக்கு அறிமுகம் செய்து வைத்தார். இவரது கவித்திறம் உணர்ந்த மன்னர் இவரைத் தம் அவைக்களப் புலவராக நியமித்தார். இவர் நானூறு கவிஞர்களைக் கொண்ட புலவரவையில் முதன்மைக் கவிஞராக விளங்கினார். மேலும், இவர் மன்னருடைய அரசியற் கருத்துகளை எடுத்து விளக்கும் அறிஞராகவும் திகழ்ந்தார். இவர் அனைவராலும் அக்கீம் (Hakim – அறிஞர்) என்று அழைக்கப் பெறும் சிறப்பினைப் பெற்றார். இவர் சுல்தானைப் புகழ்ந்து பாடிவரும் கவிஞர்தம் பாடல்களின் தரத்தினை ஆராய்ந்து, அவற்றை ஏற்றுக் கொள்ளப் பரிந்துரைக்கும் அதிகாரம் பெற்றிருந்தார். அக்காலத்தில் இருந்த 'கசிதா' (Qasida) என்னும் யாப்பில் இவர் சிறந்த தரத்தினை உருவாக்கினார். அறிமுகப்பகுதி, புகழ்ப்பகுதி ஆகியன கொண்ட அராபிய 'கசிதா' யாப்பினை இவர் போற்றினார். இவர்தம் பாடற்பொருளில் அராபியச் செல்வாக்கு மிக்கிருந்தது. அணி நலம்படக் கூறுதல், அராபியச் சொல்வடிவாக்கம் ஆகியன இவர்பாடல்களில் சிறப்

பிடம் பெற்று வளர்ந்தன. இவர் 'வாமிக்வா ஆசுரா' (Vameq o Azra), 'வெண்சிலையும்' செஞ்சிலையும்' (Khing bot O Sorkh bot), 'வாழ்க்கை ஊற்று' (Naha-I Aymul Hayat) முதலிய காவியங்கள் எழுதியுள்ளார். ஆனால், இவற்றில் சில பாடல்களே இப்பொழுது உள்ளன. இவர் எழுதிய திவான் (Diwan) என்பதன் பெரும்பகுதி அழிந்து போயிற்று. இவர் பாடிய 30000 ஈரடிப்பாக்களுள் சில கசிதாக்கள், கசல்கள் அடங்கிய 2500 பாக்களே இப்போது கிடைத்துள்ளன. கவிஞர் பர்தௌசி (Fer dousi), கவிஞர் நெசாமி (Nezami) ஆகியோர் எழுதிய நிலமானிய வீரகாவியத்தையும் (Feudal Chivalrous epic), மிகு கற்பனைக் காவியத்தையும் (Romantic epic) தம்முடைய காப்பியத்தால் இணைக்கும் இலக்கியப் பாலமாக இவர் திகழ்ந்தார். தனிச்செய்யுள் அமைப்பு, இயற்கைப் புனைவு ஆகியவற்றில் இவர் சிறந்து விளங்கினார். கலைகளின் நாயகராக விளங்கும் உன்சூரி இறை நம்பிக்கை நிரம்பியவர் என்றும், மாசற்ற பேரறிஞர் என்றும், தூய உள்ளத்தினர் என்றும் இவரைப் பற்றிக் கவிஞர் சிகுரி என்பவர் தம் கசிதா ஒன்றில் புகழ்ந்து பாராட்டியுள்ளார். இவர் கசினி மகமூது மன்னரின் மைந்தன் சுல்தான் மசுவீதின் காலத்தில் கி.பி. 1040-ஆம் ஆண்டில் இறந்தார்.

அ.மா.ப.

**உன்னகுரவயபாளையச் செப்பேடு** முதலாம் பரமேசுவர வர்மன் என்னும் பல்லவ மன்னன் வெளியிட்ட செப்பேடு. ஆந்திரப் பிரதேசம், நெல்லூர் மாவட்டம், பொதிலி வட்டம், உன்னகுரவயபாளையம் என்னும் ஊரில் கிடைத்ததால் இது இப்பெயர் பெற்றது. இச்செப்பேடு 'இந்தியக் கல்வெட்டியல் (Epigraphica Indica) 32-ஆம் தொகுதி 91-92 பக்கங்களில் வெளியிடப்பட்டுள்ளது.

மூன்று ஏடுகளைக் கொண்ட இச்செப்பேட்டைக் கோத்திருந்த வளையத்தின் இருமுனைகளும் ஒரு முத்திரையின் தலையிலே பொருத்தப்பட்டுள்ளன, வட்டமான முத்திரையின் முகப்பில் படுத்திருக்கும் காளையின் உருவம் புடைப்புச் சித்திரமாக உள்ளது.

முதலாம் பரமேசுவரவர்மன் தனது பத்தொன்பதாம் ஆட்சி ஆண்டில், தேசவர்மன் என்னும் பிராமணனுக்குக் குபுணூறு என்னும் கிராமத்தைத் தானமளித்த செய்தி இச்செப்பேட்டில் கூறப்பட்டுள்ளது. கி.பி. 668-669-இல் அரியணையேறிய இவ்வேந்தன் கி.பி. 687-ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 22-ஆம் தேதி இத்தானத்தை அளித்துள்ளான்.

இச்செப்பேடு பல்லவர் வரலாற்றில் சிறப்புடையதென்றும், கி.பி. ஏழாம் நூற்றாண்டில் ஆண்டுவந்த பல்லவ அரசர்களைப் பற்றிய சில புதிய செய்திகளைத் தந்துள்ளதென்றும் கருதப்படுகிறது. இச்செப்பேட்டினின்றும் முதலாம் பரமேசுவரவர்மன், நரசிம்மவர்மனின் பெயரன் என்றும், இரண்டாம் மகேந்திரவர்மனின் மகன் என்றும், முதலாம் மகேந்திரவர்மனின் கொள்ளுப்பெயரன் என்றும் அறியப்படுகின்றான்.

இச்செப்பேடு தமிழ்நாட்டில் கிடைத்துள்ள மற்றச் செப்பேடுகளினின்றும் அமைப்பில் வேறுபட்டுள்ளது. இச்செப்பேட்டில் தமிழ்ப்பகுதி இன்றி, வடமொழிப் பகுதி மட்டுமே உள்ளது.

பரமேசுவர வர்மன் குடிமக்கள் மகிழும் வகையில் ஆட்சி செய்தான் என்றும், சிவன் பக்தியில் சிறந்தவன் என்றும், பிரமத்தை அறிந்தவர்களுள் சிறந்தவன் என்றும், பப்ப - பட்டாரகர் திருவடிகளில் பக்தி கொண்டவன் என்றும் இச்செப்பேடு பகர்கின்றது. இவன் தந்தையான மகேந்திரவர்மன் தேவர், பிராமணர், குரு, முதியோர் ஆகியோரை உபசரித்தவன் என்றும், அதிக அளவில் பசு, பொன், பூமி முதலியவற்றைத்தானம் செய்தவன் என்றும் இச்செப்பேடு குறிப்பிடுகிறது.

ம.இரா.த.

**உன்னநிலை** புறப்பொருள் இலக்கணங்கூறும் துறைகளுள் ஒன்று. இதனைத் தொல்காப்பியம் வெட்சித் திணைத் துறைகளுள் ஒன்றாக்கி, 'ஓடா, உடல் வேந்து அடுக்கிய உன்னநிலை' என்று குறிப்பிட்டுள்ளது. ஆனால் புறப்பொருள் வெண்பாமாலை இதனைப் பொதுவியல் திணையின் துறைகளுள் ஒன்றாக அமைத்துள்ளது. உன்னம் என்பதனை இளம்பூரணர், 'உன்னம் என்பது மரம். அது தன் நாட்டகத்துக் கேடுவருங்கால் உலறியும், வாராத காலம் குழைந்தும் நிற்கும்' என்று விளக்கியுள்ளார். அரசன் கருத்தன்றி, வீரன் தானே, 'அரசனுக்கு வெற்றி கொடுத்தால் யான் உனக்கு இன்னது செய்வேன்' என்று வேண்டுவதும், தன் வேந்தனுக்கு ஆக்கம் உண்டாகுமெனின் அதன் கிளைகள் தளிர்ப்பனவாக என்றும் பகைவர்களுக்குக் கேடு உண்டாகுமானால் அதன் கிளைகள் படுவனவாக என்றும் நிமித்தம் கொள்ளுவதும் உன்னநிலை எனப்படும் என்று நச்சினார்க்கினியர் கூறியுள்ளார். உன்னம் என்பது சிறிய இலையும் பொற்பூவும் உள்ளதோர் மரவகை என்றும், பண்டைத் தமிழ் மறவர் போர்க்கு எழுமுன் உன்ன மரக் கோட்டில் மாலைகளை அடுக்கி நிமித்தம் கொள்ளுவது வழக்காறு என்றும் பேராசிரியர் ச. சோமசுந்தரபாரதியார் விளக்கியுள்ளார். மேலுமவர், குறிபார்ப்பவர் தம் மன்னற்கு ஆக்கம் உண்டாகுமெனின், உன்னமரத்தின் கோடு

தழைப்பதும், கேடு உண்டாகுமெனின் அழிவதும் ஆகிய ஒரு கடவுள் தன்மை உண்டு என்றும், அதனால் வீரர் போர்க்குச் செல்லுமுன் உன்னமரத்தைப் பரவிக் குறிகேட்கும் மரபுண்டு என்றும் பிறிதொரு கருத்தையும் தெரிவித்துள்ளார். உன்னம் நிமித்தம் அறிவதற்காம் வாயிலாக அமைவதனால், 'நிமித்தமாகி வருவன எல்லாவற்றிற்கும் இதுவே துறையாகக் கொள்க' என்று இதனை நிமித்தப் பொதுவாக்கியும் இளம்பூரணர் கூறியுள்ளார்.

இத்துறையினை விளக்கும் புறப்பொருள் வெண்பா மாலை இதன் இலக்கணத்தைத், 'துன்னருஞ் சிறப்பின் தொடுகழல் மன்னனை, உன்னஞ் சேர்த்தி உறுபுகழ் மலிந்தன்று' எனக் குறிப்பிட்டுள்ளது.

கபிலர் தம் புரவலனாகிய செல்வக்கடுங்கோ வாழியாதனைப் பதிற்றுப்பத்தின் ஏழாம்பத்தில் சிறப்பிக்குங்கால், 'உன்னத்துப் பகைவன்' (62–6) எனக் கூறியுள்ளார். உன்னமரம் தீயகுறியினைக் காட்டினாலும் அதனைப் பொருட்படுத்தாது பகைமேற் சென்று வெல்லும் ஆற்றலுடையவன் என்பதனால், செல்வக் கடுங்கோவாழியாதனைக் கபிலர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அ.மா.ப.

**'உனசுகோ' கல்வி நிறுவனம்**: இது 'உனசுகோ'வின் (UNESCO) பொறுப்பில் இயங்கி வரும் கல்வியியல் தொடர்பான மூன்று உயர்தரப் பன்னாட்டு நிறுவனங்களுள் ஒன்றான 'உனசுகோ' கல்வி நிறுவனத்தைக் (UNESCO Institute for Education) குறிக்கும். மற்றவை உலகக் கல்வி நிறுவனமும் உலகக் கல்வித்திட்டமிடும் நிறுவனமும் ஆம். செருமன் கூட்டாட்சிக் குடியரசின் ஆம்பர்கு (Hamburg) நகரில் இந்நிறுவனம் 1951–ஆம் ஆண்டு தொடங்கப் பெற்றது. இக்கல்வி நிறுவனத்தின் செயற்குழுவில் பல்வேறு நாடுகளிலிருந்து மொத்தம் 11 உறுப்பினர்கள் இடம் பெறுகின்றனர். இவர்களை 'உனசுகோ'வின் தலைமை நெறியாளரே (Director-General) தேர்ந்தெடுத்து உறுப்பினராக்குகிறார். எடுத்துக்காட்டாக, 1983–ஆம் ஆண்டிற்குப் பெனின்(Benin), பிரேசில், பல்கேரியா, பிரான்சு, செருமன் கூட்டாட்சிக் குடியரசு; இந்தியா, குவைத்து, நைசீரியா, பிலிப்பைன்சு, அமெரிக்க ஐக்கியக் குடியரசு, சோவியத்து ஒன்றியம் ஆகிய 11 நாடுகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் செயற்குழுவில் இடம் பெற்றிருந்தனர். 'உனசுகோ' கல்வி நிறுவனச் செயற்குழுவே இந்நிறுவனத்தின் கொள்கைத் திட்டங்களை உருவாக்குதல், வரவு செலவுத் திட்டத்திற்கு ஒப்புதலளித்தல், செயல்களைச் சீர் தூக்குதல் ஆகிய பணிகளைச் செய்யப் பொறுப்பேற்றுள்ளது.

'உனசுகோ' கல்வி நிறுவனத்தின் தலையாய பணிகளாக ஆராய்ச்சி, ஆராய்ச்சி முடிவுகளையொட்டிய பயிற்சி (Research Based Training), ஆய்வுச் செய்திகளைப் பரப்புதல், நூல்கள் வெளியிடுதல், செய்திகளைத் திரட்டிப் பதிவு செய்தல் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். பொதுவாக, இந்நிறுவனம் 'உனசுகோ' வின் உறுப்பு நாடுகளில், குறிப்பாக வளரும் நாடுகளில் ஆராய்ச்சிப் பணிகளுக்கு முதலிடம் தருகிறது. சாந்துணையுமாகும் கல்வி (Life long Education), பாடத்திட்டச் சீரமைப்பு (Curriculum Reform), முயற்சியால் கற்றல் (Self-directed Learning), ஆசிரியர் கல்வி, ஆசிரியர் தொடர் கல்வி ஆகியவற்றின் தொடர்புடைய பகுதியில் 'உனசுகோ' கல்வி நிறுவனம் ஆய்வுகளைச் செய்து வருகிறது. பொதுவாக, இவ்வாய்வுகளை வளரும் நாடுகளின்தேசிய உயராய்வு நிறுவன ஒத்துழைப்புடன் 'உனசுகோ' கல்விநிறுவனம் மேற்கொண்டு வருகிறது. ஆராய்ச்சித் திட்டங்களில் பன்னாட்டு அறிஞர்கள், வல்லுநர்கள் (மொத்தம் 6–இலிருந்து 10 பேர் வரை) ஆகியோரும் பங்கேற்கின்றனர். தேவையான ஆராய்ச்சித் திட்டங்களை இந்தக் கல்வி நிறுவன அறிஞர்களோ இந்நிறுவனம் தேர்ந்தெடுக்கும் சில பிற நாட்டு அறிஞர்களோ உருவாக்கித் தருகின்றனர்.

'உனசுகோ' கல்வி நிறுவனம் சிறுநூல் வரிசைகளை (Monographs Series) வெளியிடுவதோடு, குறிப்பிட்ட நாடுகளில் நடத்தப்பட்ட ஆய்வு முடிவுகள், வாழ்க்கைக் கல்வி குறித்த செய்திகள், மேனிலை எழுத்தறிவு (Postliteracy) ஆகியன குறித்த செய்திகளையும் நூல்களாக வெளியிட்டு வருகிறது. இக்கல்வி நிறுவனம் 1955–ஆம் ஆண்டிலிருந்து 'உலகக் கல்வி ஆய்வு' (International Review of Education) என்னும் காலாண்டிதழை வெளியிட்டு வருகிறது. உலகளவில் புதிதாகக் கண்டறிந்த கல்வியியல் ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புகள், ஆராய்ச்சித்திட்ட மாதிரிகள், கல்வி வளர்ச்சி நிலைகள் ஆகியன இவ்விதழில் இடம் பெறுகின்றன. இவ்விதழில் வரும் கட்டுரைகள் ஆங்கிலம், பிரெஞ்சு, செருமன் ஆகிய மூன்று மொழிகளிலும் வெளியிடப்பெறுகின்றன. மேலும், இந் நிறுவனம் சாந்துணையுமாகும் கல்வி பற்றிய அறிதல் பட்டியல்' (Awareness list on Lifelong Education) என்னும் நூற்பட்டியலை ஒவ்வோராண்டும் தயாரித்து உலகின் 150 நாடுகளுக்கும் சுற்றுக்கு விடுகிறது.

'உனசுகோ' கல்வி நிறுவனம் மிகப் பெரிய நூலகம் ஒன்றையும் நடத்தி வருகிறது. ஏறத்தாழ 35,000 நூல்களும், 300 ஆய்விதழ்களும் இங்குள்ளன. எஸ்.த.

**ஊ** என்பது தமிழ் நெடுங்கணக்கில் உகரத்தின் ஒலியை நீட்டித்தலால் தோன்றும் ஒலியைக் குறிக்கும் எழுத்து.

வடிவம்: உகரத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ள குறிப்பு இதற்கும் பொருந்தும். வளர்ச்சி கீழ்வருமாறு: 

ஊகார வரிவடிவ வளர்ச்சியைப் பொறுத்தவரையில் உகரம்போல இதுவும் நான்கு நிலைகளை உடையது.

சொல்லின் இடையே மெய்யோடு கலந்துவரும் ஊகாரத்தின் வரிவடிவங்கள் மூன்று வகைப்படுகின்றன. அவை பின்வருமாறு:

உகர வடிவத்திற்கு மாறாக வலப்புறம் கோடு இழுப்பது ... ... , (கூ)

சிறுகோடு உகரக் குறியாக அமைந்தவற்றில் அதைத் தொடர்ந்து ஒரு வளைவுக் குறி எழுத்தை அணைத்துச் செல்வது ... } ... சூ, பூ, யூ, வூ

உகரக் குறியைத் தொடர்ந்து ஆ என்னும் எழுத்துக்குரிய குறி இடப்படுவது ... } ... ணூ, தூ, நூ, லூ, றூ, னூ

வளைவான உகரக்குறி ஒரு சுழியோடு முடிவது ... ... டூ, மூ, ரூ, மூ, ளூ

இவை பெரும்பாலும் கி.பி. 7-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 13-ஆம் நூற்றாண்டளவில் முற்றிய வடிவம் பெற்றுவிட்டன.

கே.ஜி.கி.

**ஊ-2 தகராறு:** இரண்டாம் உலகப் போருக்குப் பிற்பட்ட காலத்தில் வளர்ந்துள்ள இரு பெரும் வல்லரசுகளாகிய ஐக்கிய அமெரிக்க நாட்டிற்கும், சோவியத்து உருசியாவுக்குமிடையே ஊ-2 என்ற ஓர் அமெரிக்க உளவு விமானத்தின் செயல்களால் தோன்றிய ஒரு தகராறுதான் ஊ-2 தகராறு (U-2 Affair) ஆகும். ஊ-2 என்பது நீண்ட, கூம்பிய வடிவமுடைய ஒருவர் மட்டுமே இருக்கக்கூடிய, மிகவும் உயர்வானில் பறக்கக்கூடிய, அமெரிக்க வேவு, ஆராய்ச்சி விமானம் (Reconnaissance and Research Aircraft) ஆகும். இதன் வேகம் மணிக்கு 795 கிலோ மீட்டர் ஆகும். மிக உயரத்தில், மிக விரைவாகப் பறப்பதற்குத் தக்கவாறு, நீண்ட கூம்பு வடிவத்தில் இது அமைக்கப்பட்டிருந்ததால், இது பகை நாடுகளில் வேவு பார்த்தற்கும் செய்திகளை அறிதற்கும் பயன்படுத்தப்பட்டது.

**ஊ-2 அமெரிக்க வேவு விமானத்தின் செயல்கள்:** இத்தகைய வேவு விமானத்தை ஐக்கிய அமெரிக்கநாடு 1960 மே மாதம் முதல் நாளன்று சோவியத்து உருசியா மீது செலுத்திச் செய்தி சேகரிக்க முயன்றது. இது பற்றிய செய்தியைச் சோவியத்துப் பாராளுமன்றத்துக்கு 1960 மே 5-ஆம் நாள் சோவியத்துத் தலைமை அமைச்சர் குருச்சேவு அறிவிக்கும் போது, ஓர் அமெரிக்க உளவு விமானம் மே முதலாம் நாள் சுவர்டுலாவுசுக்கு (Sverdlovsk) என்னும் சோவியத்து நகரத்தின்மீது பறந்து சென்று கொண்டிருந்த போது, அது சோவியத்து அதிகாரிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது. இவ்விமானத்தின் செயல் ஐக்கிய அமெரிக்க நாட்டின் வலுத்தாக்குதல் ஆகும் என்று கூறினார். பின்னர் அவர் மே 7-ஆம் நாள், ஊ-2 அமெரிக்க உளவு விமானத்தை ஓட்டி வந்த அமெரிக்க விமானி பிரான்சிசு காரி பவர்சு (Francis Gary Powers) விமானம் சுடப்பட்டவுடன் ஒரு குதி குடையின் (Parachute)வழியாக இறங்கிப் பாதுகாப்பாகவும் உயிருடனும் நலமாகவும் மாசுக்கோவில் இருப்பதாகவும், அவர் விசாரணையின்போது, தாம் சோவியத்து உருசியா நாட்டின் குறுக்கே பறந்து செல்லும் நோக்கத்துடன், ஆரல்கடல் (Aral Sea), சுவர்டுலாவுசுக்கு, கிரோவு(Khirov), ஆர்க்கேஞ்சல்சுகு(Arkhangelsk), மர்மான்சுகு (Murmansk) முதலியவற்றின் மீதாகச் சென்று, வழியில் உளவுச் செய்திகளைத் திரட்டிக் கொண்டு, கடைசியில் நார்வே நாட்டிலுள்ள போடோ (Bodo) இராணுவ விமானத் தளத்தை அடைய முயன்றதாகக் கூறினார் என்றும் அறிவித்தார்; மேலும், விசாரணையில் அவர்தாம் ஐக்கிய அமெரிக்க நாட்டு நடுவண் செய்தித் துறைக்காகவே இவ்வாறு செயற்பட்டதாகக் கூறினாரென்றும் குருச்சேவு கூறினார்.

**ஊ-2 தகராறின் அரசியல் விளைவுகள்:** நெடுங்காலமாகவே சோவியத்து உருசியாவுக்கும், ஐக்கிய அமெரிக்க நாட்டிற்குமிடையே கோட்பாடு காரணமாக நல்லுறவு ஏற்படாமலிருந்தது. ஊ-2 தகராறினால் இரு நாடுகளுக்கிடையே இருந்த பிளவு மேலும் வலுவாயிற்று. உருசியத் தலைமை அமைச்சர் ஐக்கிய அமெரிக்க நாடு வலுத்தாக்குதல் செய்த நாடு என்று குற்றம் சாட்ட, மே 7-இல் ஐக்கிய அமெரிக்க அரசாங்கம் ஓர் அறிக்கை விடுத்து, அதில் குருச்சேவுகூறியதுபோல் உருசியா மீது பறந்து செல்லுதற்குத் தாங்கள் ஆணை எதுவும் கொடுக்கவில்லையென்றும், ஓர் ஊ-2 விமானம் சோவியத்து நாட்டின் மீது பறந்து சென்றிருத்தல் கூடுமென்றும் கூறிற்று. ஐக்கிய அமெரிக்க நாடு ஊ-2 விமானம் பறந்ததை பற்றித் தனக்கு ஒன்றும் தெரியாதென்று கூறியதைச் சோவியத்து உருசியா ஏற்க மறுத்து, மே 13-இல் துருக்கி, பாக்கிசுத்தான், நார்வே முதலிய நாடுகள் மேற்படி உளவுவிமானம் தங்கள் மீது பறந்து செல்லுதற்கு இசைவு அளித்ததற்காக அவற்றுக்கு எதிர்ப்புக்குறிப்புகளை (Protest Notes) அனுப்பிற்று. பின்னர் உருசியா ஐக்கிய அமெரிக்கநாட்டுக்கு எதிர்ப்புக் குறிப்புகளை அனுப்பி, எந்த ஐக்கிய அமெரிக்க நாட்டு விமானமும் தங்கள் மீது தங்களுடைய ஒப்புதலில்லாமல் பறந்து செல்லாது என்ற உறுதி கூறும் படியுமகேட்டது. சோவியத்துநாட்டின் மீது தன் விமானங்கள் பறந்து செல்லுதலை ஐக்கிய அமெரிக்கநாடு அரசாங்கம் உடனடியாக நிறுத்தாவிட்டால், பாரிசில் ஐக்கிய அமெரிக்க நாடு, சோவியத்து உருசியா, பிரிட்டன், பிரான்சு முதலிய நாடுகள் கலந்து கொள்ளுவதாக இருந்த உச்சக் கட்ட மாநாட்டில் சோவியத்து உருசியா கலந்து கொள்ளப் போவதில்லையென்று மே 16-இல் பாரிசில் குருச்சேவு உறுதியாகக் கூறினார். மேலும்,ஐக்கிய அமெரிக்கநாடு தன் செயல்களுக்கு சோவியத்து உருசியாவிடம் மன்னிப்புக் கேட்டல் வேண்டுமென்றும், அதற்குத் காரணமானவர்களைத் தண்டித்தல் வேண்டுமென்றும் குருச்சேவு கூறினார். ஐக்கிய அமெரிக்கத் குடியரசுத் தலைவர் துவைட்டு ஐசனோவர் தம் பதவிக்காலத்தில் அத்தகைய விமானங்கள் உருசியாவின் மீது செல்லுதலை நிறுத்தி விடுவதாகக் கூறியபோதிலும், சோவியத்து உருசியா இவ்வுறுதியை ஏற்றுக் கொள்ளாமல் உச்சக் கட்ட மாநாட்டில் கலந்து கொள்ள மறுக்கவே, மே 17-இல் மாநாடு ஒத்தி வைக்கப்பட்டது.

சோவியத்து உருசியா அமெரிக்க விமானி காரி பவர்சுக்கு 1960-ஆகசுட்டு 17-19-இல் நடத்திய விசாரணையின் மூலமாக 10 ஆண்டுகளுக்குச் சிறைத் தண்டணை விதித்தது. ஆனால் ஐக்கிய அமெரிக்க நாட்டில் சோவியத்து உளவாளி உருடால்பு ஏபெல் (Rudolf Abel) என்பவருக்காகப் பவர்சு மாற்றிக் கொள்ளப்பட்டார். ஐக்கிய அமெரிக்க நாடு ஊ-2 விமானத்தை 1962-இல் கியூபா தீவின் மீது செலுத்திப் புகைப்படம் எடுத்து, அங்குச் சோவியத்து உருசியா ஏவுகணைகளை (Missiles) வைத்திருப்பதைக் காட்டிற்று. பா.சு.

**ஊக்கத்தொகை** என்பது தொழிற்சாலை நிறுவனம் ஆகியவற்றில் வேலை செய்யும் பணியாளர்கள், தங்கள் தொழிற்சாலை அல்லது நிறுவனம் பெறும் ஆதாயம், உற்பத்தி அளவு,உற்பத்தித் திறன் (Productivity) ஆகியவற்றின் அடிப்படையில் அவற்றிலிருந்து தங்களுக்குக் கிடைக்க வேண்டிய பங்குத் தொகையாக ஊதியத்திற்கு மேல் ஆண்டு தோறும் பெறும் ஒரு தொகையாகும். இதுவே, இக் காலத்தில் இந்தியாவில் நிலவும் ஊககத்தொகையைப்

(Bonus) பற்றிய கருத்தாகும். முந்தைய காலங்களில் ஊக்கத்தொகை என்பது வேலையளிப்போர் தமது விருப்பத்தின் அடிப்படையில் வேலை செய்வோருக்கு வழங்கும் ஒரு கருணைத் தொகையாகவே (Ex-gratia Payment) கருதப்பட்டது. இந்தியாவில் ஊக்கத் தொகை வழங்கப்படுவது முதன் முதலில் உலகப் போரினால் ஏற்பட்ட பண வீக்கத்தினால் துணிநூல் தொழிற்றுறையில் பம்பாயிலும் அகமதாபாதிலும் 1917-18-ஆம் ஆண்டளவில் தொடங்கியது. பின்னர் இவ்வழக்கம் தொடர்ந்து, பிற தொழிற்றுறைகளி லும் பரவியது.

அமெரிக்கா போன்ற மேற்றிசை நாடுகளில் ஊக்கத்தொகை என்பது பணியாளர்கள் நிறுவனத் தின் ஆதாயத்தில் பங்கு பெறும் (Profit-Sharing) ஒரு தொகையாகவே கருதப்பட்டு வருகிறது. இவ் வாறு ஆதாயத்தில் பணியாளர்கள் பங்கு பெறுதல் பணியாளர்களை அவர்தம் பணியில் தீவிரமாக ஈடு படச் செய்து, உற்பத்தியைப் பெருக்கி, நிறுவனத்தின் ஆதாயத் தொகையினைப் பெருக்கச் செய்யும் என் றும், வேலையளிப்போர் பணியாளர் ஆகியவர்க ளிடையே நிலவும் உறவுகளை வலுப்படுத்தித் தகராறு களைத் தவிர்த்து வேலைநிறுத்தங்கள் ஏற்படாமல் அமைதி காக்க உதவும் என்றும் அமெரிக்க நாட்டில் பெரிதும் நம்பப்படுகிறது. அமெரிக்கத் தொழிற்றுறை வரலாறும் இதனை உறுதிப்படுத்துகிறது. ஆதாயத் தில் பங்கு பெறும் திட்டமாக ஊக்கத்தொகை அளிக் கப்படுவது முதன்முதலில் பிரெஞ்சு நாட்டில் கி.பி.1820 -இல் தொடங்கியதாகக் கருதப்படுகிறது. இங்கி லாந்து நாட்டில் இத்தகைய திட்டம் முதன்முதலில் கூட்டுறவுத் துறையில் நடைமுறைப்படுத்த முயற்சி செய்யப்பட்டது. அந்நாட்டின் எரிவாயுத் தொழிற் றுறையில் (Gas Industry) 1920-இல் இத்திட்டம் சட்ட முறையாக்கப்பட்டது. இத்திட்டம் எரிவாயுத் தொழிற்றுறை 1948-இல் நாட்டுடைமையாக்கப் படும் வரை தொடர்ந்தது. ஊக்கத்தொகை ஒவ் வோர் ஆண்டும் வழங்கப்படலாம். பணியாளர்களின் பெயரில் உயர்ந்த வட்டி பெறும் வகையில் சேமித்து வைக்கப்பட்டு, அவர்கள் ஓய்வு பெறும்பொழுது ஒரு கூடுதல் ஓய்வுக்கால நலத் திட்டமாகவும் வழங் கப்படலாம். இத்தகைய திட்டமே அமெரிக்காவில் பேரளவில் பின்பற்றப்படுகிறது. ஆனால், இந்தியாவில் பணியாளர்கள் ஆண்டுதோறும் ஊக்கத் தொகையைப் பணமாகப் பெறுதலையே பெரிதும் விரும்புகின்றனர்.

ஊக்கத்தொகை கருணையின் அடிப்படையில் அளிக்கப்படும் ஓர் அன்பளிப்பு என்றும், பணியாளர் கள் அதனைக் கேட்பதற்கு உரிமையில்லை என்றும், வேலையளிப்போரின் விருப்பத்தையொட்டியே அது வழங்கப்படும் என்றும் வேலையளிப்போர் கருதினர். பம்பாய் உயர்நீதி மன்றம் 1942-இல் அளித்த ஒரு புகழ்பெற்ற தீர்ப்பின் மூலம் இந்நிலை மாறுதலுறத் தொடங்கியது. ஒரு நிறுவனத்தின் ஆதாயம் அந்நிறு வனத்தின் உரிமையாளர், பணியாளர் ஆகியோரின் கூட்டு முயற்சியால்தான் பெறப்படுகிறது என்பதால், அவ் ஆதாயத்தில் பங்குபெறப் பணியாளர்களுக்கும் உரிமை உண்டென்றும், ஒரு குறிப்பிட்ட ஆண்டில் பெறப்படும் கூடுதல் ஆதாயத்தினை ஊக்கத் தொகை யாக வழங்குவதே நீதி என்றும் அத் தீர்ப்புத் தெளிவு படுத்தியது.

பணியாளர்கள் ஊக்கத்தொகை கேட்பதற்கான உரிமை இரு கோட்பாடுகளின் அடிப்படையில் அமை கிறது. அவையாவன:(1) ஒரு நிறுவனத்தின் ஆதாயம் அதன் உரிமையாளர், பணியாளர்கள் ஆகியோரின் ஒருமித்த கூட்டுறவால்தான் பெறப்படுவதால் பணி யாளர்களுக்கும் அந்த ஆதாயத்தில் பங்கு உண்டு. (2) பணியாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் பொது வாக அவர்தம் அடிப்படைத் தேவைக்கும் குறை வானதாகவே இருப்பதால், அக்குறைவினை ஈடு செய்ய ஊக்கத்தொகை வழங்கப்படுதல் நியாயமான தாகிறது. ஊக்கத்தொகை வழங்கும் நிறுவனம் பெறும் ஆதாயத்திற்குத் தொடர்புடையதாக ஊக்கத் தொகை அமைதலும் நியாயமாகும். ஊக்கத்தொகை யின் மூலம் நிறுவனத்தின் ஆதாயத்தில் பணியாளர் கள் பங்கு பெறுவதால், அவர்கள் தம் பணியில் தீவிர அக்கறை செலுத்தித் திறமையாகச் செயற்பட்டு உற்பத்தியைக் குறிப்பிடத்தக்க அளவிற்குப் பெருக்கி, நிறுவனத்தின் ஆதாயத் தொகை உயரப் பாடுபடு வார்கள்.

இத்தகைய கோட்பாடுகளின் அடிப்படையில் 1950-இல் இந்திய நாட்டுத் தொழிலாளர் முறை யீட்டு ஆணையம் (Labour Appellate Tribunal of India) அளித்த முழு நடுவர் ஆயத்தின் (Full Bench) வரையறையினைக் கருத்திற் கொண்டு ஊக்கத் தொகை அளிக்கப்படவேண்டிய முறை வரையறுக்கப் பட்டது. எனினும், ஊக்கத்தொகைபற்றிய பூசல்கள் பல எழுந்தன. இந்தியத் தலைமை நீதிமன்றம் ஊக்கத் தொகை பற்றிய ஒரு வழக்கில் தீர்ப்பு வழங்கும் போது, ஊக்கத்தொகை பற்றிய எல்லாக் கூறுகளை யும் ஆய்வு செய்து, அரசுக்குப் பரிந்துரைகள் செய்ய ஓர் உயர் நிலைக் குழுவினை அரசு அமைத்தல் வேண்டுமென்று ஆலோசனை நல்கியது. அரசுத் துறையினர், வேலையளிப்போர், பணியாளர் ஆகிய முத்தரப்பினரின் பேராளர்களைக் கொண்ட நிலை யான தொழிலாளர் நலக் குழுவும் (Standing Labour Committee) இதனை அரசுக்கு வலியுறுத்தியது.

இந்திய அரசு ஊக்கத்தொகை ஆணையத்தை (Bonus Commission) 1961-ஆம் ஆண்டு அமைத்தது. வேலையளிப்போர், பணியாளர்களின் பேராளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர், ஒரு பொருளாதார வல்லுநர் ஆகியோரைக் கொண்ட இவ்வாணையத்திற்கு நீதிபதி ஒருவர் தலைவராக இருந்தார். இவ்வாணையம் 1964-ஆம் ஆண்டு அளித்த அறிக்கையின் மூலம் ஊக்கத் தொகை பற்றிய தெளிவான கோட்பாடுகளையும் அது வழங்கப்படுவதற்கான வழிமுறைகளையும் அரசுக்குப் பரிந்துரைத்தது. ஊக்கத் தொகை என்பது ஒரு நிறுவனத்தின் ஆதாயத்தில் பணியாளர்கள் நியாயமாகப் பெறவேண்டிய பங்குதான். குறைந்த அளவே ஊதியம் பெறும் பணியாளர்களுக்கு அவர்கள் பெறும் ஊக்கத்தொகை தாங்கள் பெறும் குறைந்த அளவு ஊதியத்திற்கும் தங்கள் வாழ்க்கைத் தேவைக்கு வேண்டப்படும் அடிப்படை ஊதியத்திற்கும் இடையேயுள்ள இடைவெளியைக் குறைக்க உதவும் ஊதியமாக அமையும். நல்லமுறையில் ஊக்கத் தொகைத் திட்டம் செயற்படுத்தப்பட்டால் பணியாளர்களின் ஊதிய விகிதங்களை அடிக்கடி மாற்ற வேண்டிய தேவை இராது. ஊக்கத் தொகை கணக்கிடப்படுவது தனித்தனியே ஒவ்வொரு நிறுவனத்திற்கும் என்ற அடிப்படையில் கணக்கிடப்பட வேண்டும். அது பொதுவாக ஒரு தொழிற்கென்றோ வட்டாரத்திற்கென்றோ கணக்கிடப்படுதல் கூடாது. ஒரு நிறுவனம் குறிப்பிட்ட ஓர் ஆண்டில் பெறும் ஆதாயத்தின் அடிப்படையில் ஊக்கத் தொகை கணக்கிடப்படுதல் வேண்டும். ஊக்கத் தொகையினைக்கணக்கிட ஒரு நிறுவனம் தன் மொத்த ஓராண்டு ஆதாயத் தொகையிலிருந்து முன்னுரிமை தரப்பட வேண்டிய செலவினங்கள் என்று வகைப்படுத்தப்பட்டவற்றைக் கழித்தல் வேண்டும். எஞ்சிய தொகையில் அறுபது விழுக்காட்டிற்கு மிகாத தொகை ஊக்கத் தொகையாக வழங்கப்படலாம்.

ஊக்கத்தொகை வழங்கப்படுதலில் சில வரையறைகள் உண்டு. பணியாளர் ஒவ்வொருவருக்கும் அவர்தம் ஆண்டு மொத்த ஊதியத்தில் (அடிப்படை ஊதியம் - அகவிலைப்படி) ஒரு குறிப்பிட்ட விழுக்காட்டு அளவிற்கு மிகாமலும் ஊக்கத்தொகை வழங்கப்படுதல் வேண்டும். நிறுவனத்திற்கு இழப்பு ஏற்படும் வகையில் தவறான நடவடிக்கைகளில் ஈடுபட்ட பணியாளர்களும், வேலை நீக்கம் செய்யப்பட்ட பணியாளர்களும் ஊக்கத்தொகை பெறத் தகுதியற்றவர்களாவர். ஊக்கத்தொகை ஆணையத்தின் அறிக்கையின் அடிப்படையில் இந்திய அரசு 1964-இல் ஒரு கொள்கை முடிவை அறிவித்தது. முன்பே மிகுதியான ஊக்கத்தொகையினை வழங்கி வரும் நிறுவனங்களில், அரசின் கொள்கை பணியாளர்களுக்குப் பாதகமாக அமையாது என்பதை அரசு தெளிவுபடுத்தியது. இந்திய நாடு முழுமைக்கும் செல்லுபடியாகும் ஊக்கத்தொகை அளிப்புச் சட்டம் (The Payment of Bonus Act,1965) 1965-இல் உருவாக்கப்பட்டது.

ஊக்கத்தொகை அளிப்புச் சட்டம் 1965 க்குப் பின்னர்ப் பல திருத்தங்களுக்குட்பட்டது;அவற்றிற்குரிய திருத்தச் சட்டங்கள் (Amendment Acts) நிறைவேற்றப்பட்டன. அவற்றுள் 1976-ஆம் ஆண்டைய ஊக்கத்தொகை அளிப்புத் திருத்தச் சட்டம் முக்கியமானதாகும். ஊக்கத்தொகை என்பது ஒரு நிறுவனத்தின் ஆதாயம், உற்பத்தி, உற்பத்தித் திறன் ஆகிய கூறுகளின்அடிப்படையில் வழங்கப்படவேண்டும் என்று இச்சட்டம் வகை செய்கிறது. ஒரு நிறுவனம் மிக மிகக் குறைந்த அளவு ஆதாயம் ஈட்டியிருந்தாலும், குறிப்பிட்ட குறைந்த அளவு விழுக்காட்டு ஊக்கத்தொகையினைத் தவறாமல் வழங்குதல் வேண்டுமென்றும் இச்சட்டம் உறுதிப்படுத்தியது.

ஒரு நிறுவனத்தின் பணியாளர்களின் ஆண்டு அடிப்படை ஊதியம் (Basic Wage), அகவிலைப்படி (Dearness Allowance) ஆகியவை உட்பட்ட மொத்த ஊதியத்தில் குறைந்த அளவு நான்கு விழுக்காடு ஊக்கத்தொகையாகவும் உயர்நிலை அளவு இருபது விழுக்காடு ஊக்கத்தொகையாகவும் வழங்கப்படுதல் வேண்டும் என 1965-ஆம் ஆண்டைய சட்டம் வரையறுத்தது. ஆனால், உற்பத்தித் திறனுடன் இணைந்த ஊக்கத்தொகைக்கு உச்சவரம்பு கிடையாது. பின்னர் 1971-இல் குறைந்த அளவு 8 விழுக்காடு என உயர்த்தப்பட்டது. பின்னர் 1975-இல் அது 4விழுக்காடாகக் குறைக்கப்பட்டது. ஆனால், மீண்டும் 1977-இல் அது 8.33 விழுக்காடாக உயர்த்தப்பட்டது. அவ்வாண்டு முதல் தொடர்ந்து இக்காலம் வரை குறைந்த அளவு ஊக்கத்தொகை 8.33 விழுக்காடாக நீடிக்கிறது.

இந்திய ஐந்தாண்டுப் பொருளாதாரத் திட்டங்களிலும் ஊக்கத்தொகை பற்றிய கருத்துகள் இடம் பெற்றுள்ளன. முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மையத் திட்டக்குழு (Central Planning Commission) ஊக்கத்தொகையானது ஒத்திவைக்கப்பட்டுத் தரப்படும் ஊதியமாகவே(Deferred Wage)கருதப்படுதல் வேண்டும் என்றும், அது தொடர்ந்து வழங்கப்படுதல் வேண்டுமென்றும் கருத்துத் தெரிவித்தது. ஆனால், ஊக்கத்தொகையைப் பணமாக (Cash)வழங்குவது விலைவாசி ஏற்றத்தை உண்டாக்கலாம் என்பதால், பணியாளர்களின் வைப்புத் தொகைகளில் அதனைச் சேர்த்தல் போன்ற முறைகளில் வழங்கப்படலாம் என்று பரிந்துரைத்தது. ஊக்கத்தொகையினை வரையறுக்கத் தகுதியான சிறந்த அடிப்படை உரு

வாக்கப்படுதல் வேண்டுமென்றும் திட்டக்குழு குறிப்பிட்டது. இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் ஊக்கத்தொகை வரையறுக்கப்படுதல் பற்றிய ஆய்வு நடைபெறச் செய்து, அனைத்து இனத்தவரும் ஏற்கக்கூடிய ஒரு திட்டம் உருவாக்கப்படல் வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது. பின்னர் வந்த ஐந்தாண்டுத் திட்டங்களில் ஊக்கத்தொகை பற்றிச் சிறப்பாக ஏதும் கூறப்படவில்லை.

இந்தியாவில் பணியாளர்கள் பெறும் ஊக்கத்தொகையின் அளவினை அவர்கள் பெறும் ஊதியத்தொகையின் அளவோடு ஒப்பிட்டுப் பார்த்தால், ஊக்கத்தொகையின் வீதப்படி அளவு உயர்ந்துகொண்டே வருகிறது. இந்தியச் சராசரி தொழிற்றுறை ஊதியம் (The Average Indian Industrial Pay) மூன்று முக்கிய கூறுகளைக் கொண்டதாகும். முதல் கூறு அடிப்படை ஊதியம்; இரண்டாம் கூறு அகவிலைப்படி; மூன்றாம் கூறு ஊக்கத் தொகை. இவ்வாறு ஊக்கத்தொகை இக்கால ஊதிய அமைப்பில் (Pay Structure) ஒரு தனித்தன்மையான சிறப்பிடத்தைப் பெற்றுள்ளது.

தே.ந.

**துணை நூல்கள்:**

**Chopra, D.S.**, The Payment of Bonus Act 1965, Labour Law Agency, Bombay, 1984.

Government of India, Report of the Bonus Commission, Manager of Publications, Delhi, 1964.

**Kenneth, M. Thompson**, Profit-Sharing, Harper and Row Publishers Incorporated, New York, 1949.

**ஊக்கரின் கோட்பாடு**: கி.பி. பதினாறாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் மறுப்புரைச் சமயச்(Protestant) சீர்திருத்த இயக்கம் நடைபெற்ற காலத்தில் தோன்றிய பல்வேறு வகைக் கிறித்தவத் திருச்சபைகளும் அவை பற்றிய கோட்பாடுகளும் பல்வேறு வாத எதிர்வாதங்களைத் (Controversy) தோற்றுவித்தன. அப்போது தேசிய திருச்சபை என்ற கோட்பாட்டை (Theory of National Church) வகுத்து அக்கோட்பாடு இன்றளவும் நிலைபெறுமாறு செய்தவர் இரிச்சர்டு ஊக்கர் (Richard Hooker) என்ற இறையியலாளராவர். இவர் கி.பி.1544-ஆம் ஆண்டு முதல் கி.பி. 1600-ஆம் ஆண்டுவரை வாழ்ந்தார். இவர் ஆங்கில மறுப்புரைச் சமயக் கிறித்தவ நெறியிற் பிறந்து வளர்ந்து, ஆக்சுபோர்டில் கல்வி பயின்றார்; பின்னர்க் காண்டர்பரிப்பேராயருடைய (Archbishop of Canterbury) உதவியினால் பல பதவிகளைப் பெற்றார். இவர் திரேட்டன் பியூசாம்பின் (Drayton Beauchamp) தலைமைக் கல்வி மேற்பார்வையாளராக (Rector) இருந்து, ஆங்கில அரசியார் முதலாம் எலிசபெத்து கொண்டுவந்த நடுநிலைத் திருச்சபை ஏற்பாட்டை (Via Media Church Settlement of Elizabeth I) முழுவதும் ஆதரித்து, அதன் கோட்பாடுகளும் சடங்குகளும் சரியே என்று காட்டி, கால்வினியக் கிறித்தவக் கோட்பாடுகளைப் பின்பற்றிய ஆங்கில மறுப்புரைச் சமயக் கடுந்தூய்மைக் கட்சியினர் (Puritans) கொள்கையை மறுத்தார். இவர் ஆங்கிலச் சட்டக்கல்லூரியின் (Temple) தலைவராகச் சில காலம் இருந்த போது, இவருக்கும் அங்கு ஆங்கிலத் திருச்சபையை மேலும் சீர்திருத்தக் கால்வினிய, பிரசுபிட்டீரிய முறைகளில் அமைத்தல் வேண்டுமென்ற கொள்கையாளரான வால்ட்டர் திராவர்சு (Walter Travers) என்ற சட்ட விரிவுரையாளருக்கும் கருத்து வேறுபாடு தோன்ற, திராவர்சு நீக்கப்பட்டார். ஊக்கர் விவிலியம் (Bible) முதலிய சமய நூல்களைக் கற்று வல்லவரானார். இவர் ஆங்கிலேய மறுப்புரைச் சமயத் திருச்சபையானது விவிலியம், மனிதப் பகுத்தறிவுணர்வு, மரபு அல்லது வழக்கம் ஆகிய மூன்றினடிப்படையிலமைந்து, சமயக் கருத்துக்கும் நெறிமுறைக்கும் ஒத்தது என்று காட்டினார். இவர் திருச்சபை ஆட்சிமுறையின் சட்டங்கள் (The Laws of Ecclesiastical Polity) என்ற நூலை வெளியிட்டார். அது 1594-இல் சில பகுதிகளாக வெளியிடப்பட்டது.

**ஊக்கரின் கருத்துகள் தோன்றிய சூழ்நிலைகள்:** இடைக்காலத்தில் தோன்றிய ஒரு சிக்கல் என்னவென்றால், திருச்சபைக்கும் உலகியலரசாங்கத்துக்குமிடையேயுள்ள தொடர்பை வரையறை செய்தலே ஆகும். ஆங்கிலத் திருச்சபையானது உரோமானியக் கத்தோலிக்கத் திருச்சபையினின்றும் விலகிப் பிரிந்து சென்றதுடன் இச்சிக்கல் தீர்ந்துவிடவில்லை. திருச்சபையின் நிலை பற்றிய இச்சிக்கல் ஆங்கில அரசாங்கத்துக்கும், மறுப்புரைச் சமயத் திருச்சபைகளான ஆங்கிலத் திருச்சபை (English Church), பிரசுபிட்டீரிய திருச்சபை (Presbyterian Church), கடுந்தூய்மைக் கட்சியினர் திருச்சபை (Puritan Church) ஆகியவற்றுக்குமுள்ள தொடர்புகள் பற்றிய சிக்கலாக மாறிற்று. இந்தப் பல்வேறு திருச்சபைப் பிரிவுகளுக்கிடையே அமைப்பிலும் இறையியல் கொள்கைகளிலும் அரசியல் கொள்கைகளிலும் வேறுபாடுகள் இருந்தன. எல்லா அரசாங்க அதிகாரங்களும் அரசரிடத்தில் குவிக்கப்பட்டு, அவருடைய கட்டுப்பாடு நீதிமன்றங்களின்மீதும் பாராளுமன்றத்தின்மீதும் இருந்தது. ஆங்கில அரசர் ஆங்கிலத் திருச்சபையின் உலகியல் சார் தலைவர் (Temporal Head) ஆனார். திருச்சபையின் உறுப்பினர்கள் எந்தெந்தக் கோட்பாடு

களை நம்பி ஏற்றுக் கொள்ளுதல் வேண்டுமென்று தீர்மானித்தற்குத் திருச்சபையின் தலைவருக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும். ஆயினும், எது உண்மையான சமயக்கோட்பாடு என்று ஆங்கில அரசரால் கூற இயலுமென்று எவரும் கருதவில்லை. ஒரு பொதுவான கிறித்தவச் சமயநெறியே சாதாரண சூழ்நிலைகளுக்கு ஏற்றது என்று யாவரும் எண்ணினர். கிறித்தவத் திருச்சபையானது அரசாங்கத்தைச் சார்ந்திராமல் முழுச்சுதந்திரமாக இருத்தல்வேண்டுமென்று சான் கால்வின் (John Calvin) என்பவர் கருதினார்.

திருச்சபை அரசாங்கத்தைப் பற்றிய ஊக்கரின் கருத்துகள் : இந்தக் கருத்துகளை விளக்குகையில் ஊக்கர் சட்டம், அரசாங்கம் ஆகியவற்றின் தத்துவத்தை ஆய்வு செய்தார். குடியியல் சமூகத்தின் (Civil Society) ஒரு பாகமே திருச்சபை அரசாங்கமாகும். எலிசபெத்தால் நிறுவப்பட்ட ஆங்கில மறுப்புரைச்சமயக் கிறித்தவத் திருச்சபைக்குக் (Established Church) கீழ்ப்படியக் கடுந்தூய்மைக் கட்சியினர் மறுத்தனர். அவர்கள் அவ்வாறு செய்தல் எல்லா அரசியற்கடமைகளையும் மறுப்பதே ஆகுமென்றும், ஆங்கிலேயர் யாவரும் திருச்சபைச் சட்டத்துக்குக் கீழ்ப்படிதல் வேண்டுமென்றும், கடுந்தூய்மைக்கட்சியினர் கீழ்ப்படியாமலிருத்தற்குக் காரணமில்லையென்றும் ஊக்கர் கூறி, சட்டம் என்பதன் தத்துவத்தையும் அரசியற் கடமையின் ஆதாரத்தையும் விளக்கினார். இடைக்காலத்தில் திருச்சபையின் அரசியற் சிந்தனையாளரான புனித தாமசு அக்குவினாசு (Saint Thomas Aquinas) கூறிய சட்டம் பற்றிய கருத்துகளை ஊக்கர் ஏற்றார்.

(1) எக்காலத்துக்குமுரிய சட்டம் (Eternal Law)- இது கடவுளின் இயல்பைக் காட்டுகிறது. (2) இயற்கையின் சட்டம் (Natural Law)- இது உலகின் பொருள்களை இயக்குதற்காகக் கடவுளால் விதிக்கப்பட்ட ஆணைகளைக் கொண்டது. (3) அறிவின் சட்டம் (Law of Reason) என்னும் சட்டமும் உள்ளது. இதைக் கடைப்பிடிக்க வேண்டிய கடமை பகுத்தறிவுடைய ஒவ்வொருவருக்கும் உண்டு. பகுத்தறிவின் காரணமாக மனிதன் நன்மையை உணர்ந்து, தனது மன உறுதியின் காரணமாக அந்நன்மையை அடைய முயலுகிறான். எனவே, மனிதர்கள் செய்ய வேண்டிய நன்மைகளைச் சுட்டிக்காட்டுவதே அறிவின் சட்டமாகும். அறிவின் விதிகளை ஒருவர் தெரிந்து கொள்ளுகிறாரென்பதற்கு அடையாளம் அவர் அவற்றை ஒத்துக்கொள்ளுகிறாரென்பதே ஆகும்.

சமூகம், அரசாங்கம், மனித சட்டம்: அறிவின் சட்டமே, சமூகமும் அரசாங்கமும் இல்லாத நிலையிலும்கூட எல்லோரையும் முழுவதும் கட்டுப்படுத்துகிறது. மனிதர்கள் தனித்த வாழ்வில் நிறைவு பெறுவதில்லை; அவர்கள் கூடி வாழும் சமூக இயல்பு உடையவர்களாகையால் (Sociability) சமூகங்களை அமைக்கின்றனர். அரசாங்கமென்ற ஓரமைப்பு இல்லாமல் சமூகமென்ற அமைப்பு இருத்தல் இயலாது; அது போலவே மனிதசட்டம் (Human or Positive Law) இல்லாமல் அரசாங்கம் என்ற ஓர் அமைப்பும் இருத்தல் இயலாது. ஓர் ஒப்பந்தத்தின் வழியாக மனிதர்கள் ஒன்றாகக் கூடிவாழுதல் வேண்டுமென்று ஒரு விதியை வகுக்க, அவ்விதி யாவராலும் வெளிப்படையாக அல்லது குறிப்பாக ஒப்புக்கொள்ளப்படுறது. அவ்விதியே அரசின் சட்டமாகிறது. ஆகையால் அரசாங்கச் சட்டத்துக்குக் கீழ்ப்படிதல் என்ற கடமைக்கு ஆதாரம் எது என்றால், யாராவது ஒருவரால் தாங்கள் ஆளப்படுதலுக்கு யாவரும் அளிக்கும் ஒப்புதலே (Consent) ஆகும். அரசு என்ற ஓரமைப்பு வந்துவிட்டால், அதனுடைய சட்டங்கள் அவ்வமைப்பின் உறுப்பினர் யாவரையும் எக்காலத்தும் கட்டுப்படுத்தும். சமூகமானது தான் அமர்த்தியுள்ள ஓரதிகாரிக்குத் தானளித்த ஒப்புதலைத் திரும்ப எடுத்துக் கொள்ளுதல் இயலாது. மக்களுடைய ஒப்புதலைப் பெறாமல் ஆட்சி செய்தல் கொடுங்கோன்மை ஆகும்; ஆனால், அதிகாரிக்கு எதிராகக் கலகம் செய்தற்கு ஒருவருக்கும் உரிமை இல்லை.

திருச்சபையும் அரசும்: ஆங்கிலத் திருச்சபைச் சட்டமானது அறிவுக்கோ கிறித்தவ நெறிக்கோ மாறானது அன்று; ஆகையால் அது எல்லா ஆங்கில மக்களையும் மற்ற ஆங்கிலச் சட்டங்களைப் போலவே கட்டுப்படுத்தக் கூடியது. சமய நெறியை வளர்த்தல் அரசின் கடமைகளுள் ஒன்று ஆகும். ஓர் உண்மையான சமயநெறியையுடைய எந்தச் சமூகமும் ஒரே சமயத்தில் திருச்சபையாகவும் அரசாகவும் இருக்கிறது. ஆங்கிலத் திருச்சபையும் ஆங்கில அரசும் ஒன்றே ஆகும். ஒவ்வோர் ஆங்கிலேயரும் கிறித்தவராகவும், இங்கிலாந்தில் ஒவ்வொரு கிறித்தவரும் ஆங்கிலேயராகவும் இருக்கிறார். ஆகையால் திருச்சபையின் சட்டம் மற்றெந்தச் சட்டத்தையும் போல யாவரையும் கட்டுப்படுத்தும் அதிகாரம் உடையது. அதற்குக் கீழ்ப்படிய மறுத்தலென்பது சமூக அமைப்பைத் தகர்த்தலே ஆகும்.

மதிப்பீடு: ஆங்கிலத் திருச்சபைக்கு ஆங்கில அரசர் தலைமை ஏற்றபோது (கி.பி.1558-இல்)தோன்றிய வாத-எதிர்வாதச் சூழ்நிலையில் (Period of Controversy) ஊக்கர் எழுதிய 'திருச்சபை ஆட்சி முறையின் சட்டங்கள்'என்ற நூல்வெளிவந்தது. அவர்

ஆங்கிலேய மறுப்புரைச் சமயக் கிறித்தவத் திருச் சபைக்கு அரசர் தலைமை ஏற்றதையும், அதன் விளைவாகத் திருச்சபை அரசாங்கத்தையும் உலகியல் அரசாங்கத்தையும் அவர் நடத்தியதையும், சரியே என்று காட்டினார். இவ்வாறு காட்டுதற்கு அவர் இடைக்காலத் திருச்சபை அரசியற் சிந்தனை யாளராகிய புனித தாமசு அக்குவினாசின் திருச்சபை, அரசாங்கம், சட்டம் பற்றிய கருத்துகளைக் கையாண் டார். அவர் கூறிய சட்டம் பற்றிய பல கருத்துகளும் இடைக்கால அரசியல் சிந்தனையை ஆதாரமாக உடையனவே ஆகும். ஆங்கிலத் திருச்சபைச் சட்டத் துக்குப் பகுத்தறிவை (Reason)ஆதாரமாகக் காட்டிய ஊக்கர், அவ்வாறு கூறியதன் வாயிலாகத் திருச்சபை யையும் தேசிய அரசையும் (National State) ஒன்றாக இணைத்தார். அரசருடைய அதிகாரத்தை ஊக்கர் இவ்வாறு சமயத் துறையிலும் வரம்பற்றதாக ஆக்கி னார். இவ்வாறு அவர் அரசருடைய எதேச்சாதிகா ரத்துக்கு வடிவம் கொடுத்தாலும், கொடுங்கோன் மையை (Tyranny) ஆதரிக்கவில்லை. இதற்கு அவர் மனிதருடைய தன்விருப்ப ஒப்பந்தத்தின் பேரிலேயே அரசு தோன்றிற்று என்ற நியாயத்தைக் காட்டினார். ஆங்கிலத் தேசியம் ஓர் அரசியற் சமூகம் அல்லது அரசு என்றும், அதன் சட்டங்கள் அதனுடைய உறுப்பினர் களையெல்லாம் தனியாகவும் சமூக உறுப்பின ரென்ற நிலையிலும் கட்டுப்படுத்துகின்றன என்றும் அவர் கூறினார். அரசர்களும் குருமார்களும் செய்ய வேண்டிய கடமைகளையும், அவர்களுடைய பதவி களுக்குரிய அதிகாரங்களையும் சட்டங்கள் விதிக்கின் றன. முழு வளர்ச்சி பெற்ற சமூகமானது திருச்சபை யாகவும் அரசாகவும் இருத்தல் வேண்டும். ஆகை யால் ஒருநாட்டிற்கு ஒரு சமய நெறிச் சட்டமும் அரசியலமைப்புச் சட்டமும் இருத்தல் வேண்டும் என்பது ஊக்கரின் கோட்பாடாகும். பா. சூ.

துணை நூல்கள்:

**Munz, Patle.**, The Place of Hooker in the History of Thought, London, 1952.

**Sabine**, G.H., A History of Political Theory, Oxford & IBH Publishing Co., Calcutta, 1961.

**Gough**, J.W., Fundamental Law in English Constitutional History, Oxford, 1955.

***ஊக்குவித்தல்***: செய்யும் செயலைச் செப்ப முறச் செய்ய வேண்டும் என்ற ஊக்கத்தின் அடிப் படையில் மனிதனின் செயல்கள் பெரும்பாலும் அமைகின்றன. இந்த ஊக்கத்தை 'அடைவு ஊக்கி' என்று கூறுவர். போட்டிக்கும் முயன்று வெற்றி காணும் இயல்புக்கும் அடைவு ஊக்கி வழிகோலு கிறது.

தனிமனிதனின் வாழ்க்கை அனுபவங்களின் கார ணமாக அடைவு ஊக்கியில் வேறுபாடுகள் தோன்று கின்றன.

அடைவு ஊக்கியைப்பற்றி விரிவாகக் கூறிய என்றி முர்ரே (Henry Murray) என்பார் உளம்சார் தேவை கள் (Psychogenic Needs) இருபது என்றும், அவற்றில் ஒன்று அடைவு ஊக்கி என்றும் கூறினார். அவரே பொருள் இணைத்தறி சோதனை(Thematic Apperception Test) என்ற முறையை ஏற்படுத்தி, அதன் மூலம் அடைவு ஊக்கியை விளக்கலாம் என்றும் கூறி னார். பின்னர், மெக்கிலிலாண்டு (Mc Cleeland), அட்கின்சன் (Atkinson) என்பவர்கள் அடைவு ஊக்கி யைப் பற்றி ஆய்வுகளை நிகழ்த்தியுள்ளனர்.

அடைவு ஊக்கியின் முன்னோடி: மனிதர்களிடம் ஏன் அடைவு ஊக்கியில் வேறுபாடுகள் இருக்கின்றன என்பதை ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ந்துள்ளனர். மெக்கிலிலாண்டு ஊக்கிகள் குறிப்பிட்ட நடத்தையின் உணர்ச்சி சார்ந்த கற்றல் ஆகும் என்று குறிப்பிடு கிறார். போட்டியையும் முதன்மை நிலையையும் வலி யுறுத்துவதாக அடைவு ஊக்கி அமைகிறது. குழந் தைகளிடம் அடைவு ஊக்கியை உண்டாக்குவதற்குப் போட்டி மனப்பான்மையை வளர்ப்பதோடு, எந்தச் செயலையும் மிகச் சிறப்பாகவும் விரைவாகவும் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை வளர்க்கவும் வேண்டும்.

சிறந்த சாதனைகளைப் பாராட்டியும் திறனி லாப் பணி ஆற்றும்பொழுது கண்டித்தும் வந்தால் அடைவு ஊக்கி வளர முடியும். அடைவு ஊக்கி அதிக மாக இருப்பவர்கள் தங்கள் சிக்கல்களைச் சவா லாக ஏற்று, தேர்ச்சி பெற்று விரைவில் தீர்வு காண் பார்கள் என்று மெக்கிலிலாண்டு கூறுகிறார். அவர் இதனை('NAch' Need forAchievement)என்ற சொல் லால் குறிப்பிட்டார்.

பெற்றோர்களின் குழந்தை வளர்ப்பு முறை: பல பெற்றோரின் குழந்தை வளர்ப்பு முறையினை ஆராய்ந்ததில் கீழ்க்காணும் உண்மை வெளிப்பட்டது.

**ஆதிக்கஉணர்வு**: தன் விருப்பம்போல் செயற்படு கிற குழந்தையைப் பாராட்டாமல், அச்செயலைஏற்க மறுக்கின்ற, பாதுகாப்புஅளிக்காத,அக்கறை இல்லாத, அலட்சியம் செய்கின்ற கண்டிப்பு மிக்க பெற்றோர்

களின் குழந்தைகளுக்கு 'அடைவு ஊக்கி' குறைவாக இருக்கிறது என்று கண்டார்கள். தகப்பனாரின் ஒதுக்கி வைக்கின்ற மனப்பான்மைக்கும், அடைவு ஊக்கிக்கும் தொடர்பு மிக அதிகம் உள்ளது. குழந்தைகளுக்கு என்று பொறுப்பினைத் தந்து அவர்கள் எவர் உதவியும் இன்றி நன்றாக காரியங்களைச் செய்யும்போது பாராட்டுவது அடைவு ஊக்கி வளர உதவுகிறது.

**தனித்துச் செயற்படும் முறை:** ஒவ்வொரு சமூகத்திலும், குழந்தைகள் செய்ய வேண்டிய செயல்கள் யாவை என்றும், அவற்றைக் குழந்தைகள் செய்ய வேண்டிய வயது என்ன என்றும் வரையறைகள் இருக்கின்றன. அவை சமூகத்திற்குச் சமூகம் வேறுபடுகின்றன. சிறுவயதிலேயே நடக்க, பேச, உண்ண, உடுக்க, இன்னும் மற்றத் திறமைகளில் தனித்துச் செயற்படும் மனப்பாங்கினை வளர்க்கும்போது அடைவு ஊக்கி அதிகமாகிறது.

நன்னடத்தையைப் பாராட்டுதலும் அந்நடத்தையைக் கண்டும் காணாது இருத்தலும் அடைவு ஊக்கி வளருவதற்கு ஏற்றதாகும் என்று கண்டுள்ளார்கள். ஆனால், நன்னடத்தையைக் கண்டும் காணாது இருந்தும் தவறான நடத்தையைச் செய்யும்போது கண்டித்தும் வந்தால், சிறுவர்களுக்குத் தோல்வியில் அச்சம் தோன்றி, அடைவு ஊக்கி வளராது என்றும் கண்டார்கள்.

**அடைவு ஊக்கியும் பொருளாதார வளர்ச்சியும்:** மெக்கிலிலாண்டு ஒரு நாட்டின் அடைவு ஊக்கியை அறிய, அந்நாட்டின் சிறு குழந்தைகளுக்காக எழுதப்பட்டுள்ள கதைகளை ஆராய்ந்தார். அக்கதைகள் சிறுவர்களுக்காகப் பெரியவர்களால் எழுதப்பட்டவையாதலால், அவற்றில் அடைவு ஊக்கிகள் அதிகமாக இருந்தன என்றால் நாட்டின் பொருளாதார வளர்ச்சியும் அதிகரித்து இருக்கும் என்று கருதி, அதை உண்மை என்றும் நிருபித்தார்.

**அடைவு ஊக்கிக் கோட்பாடு:** அட்கின்சன் என்ற அறிஞர் அடைவு ஊக்கியில் வெற்றி நம்பிக்கை, தோல்வி யச்சம் என்ற இரண்டு உள்ளன என்றும் இவ்விரண்டிற்கும் இடையில் ஏற்படும் முரண்பாட்டின் முடிவில்தான் அடைவு ஊக்கி நடத்தை ஏற்படுகிறது என்றும் கூறினார். வெற்றி நம்பிக்கை × வெற்றிக்கான வாய்ப்பு × வெற்றியின் பயன் + தோல்வி யச்சம் × தோல்விக்கான வாய்ப்பு × தோல்வியின் பயன் ஆகியவற்றின் பயனாக அடைவு ஊக்கி நடத்தை ஏற்படுகிறது என்ற கோட்பாட்டை அவர் கூறி இருக்கிறார். கடினமான செயல் ஒன்றை வெற்றிகரமாகச் செய்து முடித்தபின், பெருமையும் மனநிறைவும் மகிழ்ச்சியும் கொள்வதையும், எளிய செயல் ஒன்றில் தோல்வி கண்டால் அவமானமாக நினைப்பதையும் அவர் குறிப்பிடுகிறார். வெற்றியின் பயன் செயலின் கடினத் தன்மையைப் பொறுத்தது.

வெற்றி நம்பிக்கையை அளக்கப் பொருள் இணைத்தற் சோதனைப் படங்களையும், தோல்வி அச்சத்தை அளக்க மாண்டலர்-சாரசன் (Mandler-Sarason) தேர்வு நேரத்தவிப்பு நிலை வினாத்தாளையும், தெய்லரின் (Teylor) தவிப்பு நிலை வினாத்தாளையும் பயன்படுத்துகின்றனர்.

அட்கின்சன் கூறிய அடைவு ஊக்கிக் கோட்பாடு இப்பொழுது பலவித மாற்றங்களை ஏற்று இருக்கிறது. அவை காரணங்கற்பித்துக் கூறல்(Causal Attribution), வருங்கால உள்நோக்கம் (Future Goal-Orientation) ஆகியன. ஆர்னர் (Horner) என்பவர் பெண்களுக்கு வெற்றியில் அச்சம் (Fear of Success) உண்டு என்ற கருத்தை வெளியிட்டுள்ளார்.

**கோட்பாடுகள்:** 'ஊக்கமது கைவிடேல்' என்பது தமிழ் மூதாட்டி ஔவையாரின் பொன்மொழி. முயற்சி திருவினை பயக்கும்', 'முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்' என்னும் முதுமொழிகளில் உள்ள முயற்சியின் அடிப்படை ஊக்கம் ஆகும்.

மனிதன் செய்யும் செயல்களுக்கெல்லாம் அடிப்படையான ஓர் உந்துதல் இருக்கிறது என்பது தெளிவு. உந்துதல் இன்றி ஒரு செயலும் நிகழாது. இந்த உந்துதல் சில கோட்பாடுகளின் அடிப்படையில் அமைந்துள்ளது. இதனையே ஊக்குவித்தல் கோட்பாடு எனலாம்.

இவ்வுலகில் வாழும் மாந்தர்களுக்கெல்லாம் அடிப்படையான பல தேவைகள் உள்ளன. நிறைவு செய்யப்படாத தேவைகளே மனிதனின் செயல்களுக்குப் பெரும்பாலும் வலுவான உந்துதல்களாக அமைகின்றன. அடிப்படையான தேவைகளான உணவு, உடை, இடம் போன்றவற்றிற்காக மனிதன் பாடுபட்டு உழைக்கிறான். ஆயினும் இவ்விதமான அடிப்படைத் தேவைகள் நிறைவுறுதலால் மட்டுமே மனிதன் திருப்தி அடைவதில்லை. அவனுக்கென்று ஒரு மனம் உண்டு. அந்த மனம் சுற்றுப்புறச்சூழல், அனுபவம்,வாழ்க்கைமுறை, தொன்றுதொட்டு வரும் பண்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் சில மதிப்புகளை நிருணயித்துக் கொண்டு அவை நிறைவுபெறும் வகையில் செயல் புரிகிறது. மனிதன் திறமையுடனும், வெற்றியுடனும் செயலாற்றவேண்டும் என்றால் அவனுக்கு அப்படிச் செயலாற்றும்பொழுது ஒரு மன

நிறைவு ஏற்பட்டாலன்றி, அது சாத்தியமற்றதாக ஆகி விடுகிறது. மனிதன் ஊக்கமற்ற நிலையில் பணி புரிய நேரிட்டால் அவனுடைய செயல்திறன் முழு ஈடுபாடின்றி வீணாகி விடுகிறது.

வளரும் நாட்டில் உற்பத்தித் திறனும் உற்பத்திப் பெருக்கமும் நல்லமுறையில் பெருக வேண்டு மாயின் ஒவ்வொரு மனிதனும் அவன் செய்யும் அனைத்துக் காரியங்களிலும் முழு ஈடுபாட்டுடனும் ஊக்கத்துடனும் செயற்பட வேண்டுவது இன்றியமை யாததாகிறது. மனிதனைச் செயலில் ஊக்குவிப்பது அவன்தன் நிறைவு பெறாத தேவைகளே. நிறைவு பெற்றுவிட்ட தேவைகள் எந்த ஒரு மனிதனையும் ஊக்குவிப்பதில்லை. எடுத்துக்காட்டாகப் பசியுடனி ருப்பவனுக்கு உணவு போதிய ஊக்குவிக்கும் சாதன மாகப் பயன்படலாம். வயிறு நிரம்ப உண்டவனுக்கு உணவு ஊக்குவிக்கும் சாதனமாகப் பயன்படாது. ஆகவே, நிறைவு பெற்றுவிட்ட தேவைகளை மீண்டும் மீண்டும் அளிப்பதால் மட்டுமே ஒரு மனிதனைத் திறம்பட உழைக்கும்படி ஊக்குவிக்க முடியாது. எனினும் இவ்வுலகில் மனிதன் ஒரு வேறுபட்ட பிராணி. அவனுக்கு ஒரு தேவை நிறைவு பெற்றதுமே மற்றொரு தேவை கிளர்ந்து எழுகிறது. இந்தப் புதுத் தேவையை நிறைவு செய்து கொள்வதற்காக அவன் பாடுபடுகின்றான். அதனால், மக்களின் தேவைகளை நன்குணர்ந்து கொண்டு, அவற்றின் நிறைவுக்கு வழி கோல முற்படுபவன் உண்மையான தலைவனாகி விடுகிறான். அவனுடைய ஆணைக்கு அனைவரும் அடங்கிச் செயற்படத் தொடங்கி விடுகிறார்கள்.


உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் என்பன ஒவ்வொரு மனிதனின் அடிப்படைத் தேவை களாக இருந்த போதிலும், இவை மட்டுமே மனிதனைத் திறம்படச் செயலாற்றத் தூண்டு வதற்குப் போதுமானதாக இருப்பதில்லை. இதற்கும் மேலே மனிதனுக்கு உள்ளம் என்று ஒன்று உண்டு. இந்த உள்ளத்தில் நிறைவேற்றப்படாத தேவைகள் உள்ளன. அவற்றுள் தலையாயது தனிமனிதனுக்குச் சமூக ஒப்புதலும் அங்கீகாரமும் ஆகும். எந்த ஒரு மனிதனும் தான் இந்த மனிதக் கூட்டத்தில் ஒருவன் என்று கணிக்கப்படும் பொழுது மிகவும் அதிருப்தி அடைகிறான். இந்த மனிதக் கூட்டத்தில் தன்னை வேறாகப் பிரித்து இனம் கண்டு கொள்ளும் ஆற்றலை நாடி அலைகிறான். ஆகவே, அதற்கேற்ற ஓர் ஆளு மையைப் பெறத் துடிக்கிறான். ஆதலின், தனிமனித அங்கீகாரம் பயக்கும் பணிகளில் அவன் முழுமூச்சுடன் திறம்பட உழைக்கிறான். மேலும், ஒவ்வொரு மனி தனும் தன்னுடைய வாழ்க்கை முறைகளாலும் தனக் கென்று ஏற்பட்ட அனுபவங்களினாலும் சில நெறிகளைத்தன் உள்ளத்தில் ஆழமாகப்பதியவைத்துக் கொண்டுள்ளான். இந்த நெறிகளுக்கேற்ப உள்ள பணிகளில் முழு மூச்சுடன் திறம்பட உழைக்க அவன் தவறுவதில்லை. மாறாக அவனுடைய உள்ளத்தில் வேரூன்றி இருக்கும் நெறிகளுக்கு முரண்பட்ட செயல் களில் அவன் ஊக்கமற்று, ஈடுபாடின்றிப் பணியாற்று வான். தான் ஏற்படுத்திக்கொண்ட நெறிகளுக்கு ஏற்ற பணியில் ஊண் உறக்கமின்றி, உடலை வருத்திக் கொண்டு செயற்படுவான். இந்தியநாட்டு விடுதலைப் போரில் தன்னலம் கருதாது உழைத்த வீரர்கள்கூட இதற்கு எடுத்துக்காட்டு.

தொழிற்கூடங்களில் ஊதியம் ஊக்குவித்தல் சாதனங்களில் வலுவான சாதனம் என்பது மறுக்கப் படாத உண்மை. ஆயினும் எல்லா நிலைகளிலும் இது ஓர் அளவுக்குமேல் பயன்படுவதில்லை என்பதும் கண்கூடு. ஊதியமும் உழைப்பும் நேர் விகிதத்தில் அமைவதில்லை. ஊதிய உயர்வின் மூலம் மட்டுமே அதிகமான உழைப்பைப் பெற முடிவதில்லை. உற்பத்தி பெருகவேண்டுமாயின் உற்பத்தித் திறன் பெருக வேண்டும். உற்பத்தித்திறன் பெருகவேண்டுமேயாயின் ஒவ்வொரு தொழிலாளியும் தன் உடலையும் உள்ளத்தையும் ஒருங்கே செயலாற் றலில் ஈடுபடுத்துவது இன்றியமையாதது. ஒரு தொழிலாளி முழு மனத்துடன் செயலாற்ற வேண்டு மானால், அவன் தான் செய்யும் பணிக்கும் அந்த நிறுவனத்தின் குறிக்கோளுக்கும் உள்ள உறவையும், அந்த நிறுவனத்தின் உற்பத்திப் பெருக்கத்திற்கும் நாட்டின் நலனுக்கும் உண்டான உறவையும் நன்கு அறிதல் வேண்டும். இந்த அறிவை ஒவ்வொரு தொழிலாளிக்கும் அறிவுறுத்த வேண்டுவது நிறுவனத் தின் முக்கியமான கடமையாகும். இது போன்ற அறிவுறுத்தல் ஒவ்வொரு தொழிலாளிக்கும் இந்த நாட்டின் நலத்தில் தன் பங்கு என்ன என்பதைத் தெளிவாக உணர்த்திவிடுகிறது. இந்த உணர்வே அவன் உழைப்புக்கு அடிப்படையாக அமைந்து விடு கிறது.

அறிவியல்சார் மேலாண்மையில் உற்பத்தியை யும் உற்பத்தித் திறனையும் அதிகரிக்கும் வகையில் ஊழியர்களைச் செயலாற்ற ஊக்குவிக்கும் வழி கள் யாவை என்ற கேள்வி அடிக்கடி எழுப்பப்படுகிறது. இந்தக் கேள்வி எளிதாக இருந்தாலும் இதற்குத்தக்க பதில் கூறுவது பல நேரங்களில் மிகவும் கடினமாக உள்ளது. இதற்கு மனிதன் ஏன் செயலாற்றுகிறான் என்பதை ஆராய்ச்சி செய்ய வேண்டிய தேவை ஏற்படு கிறது. அடிப்படையான தேவைகளை நிறைவு செய்து கொள்ளும் நோக்கில்தான் மனிதன் செயலாற்று கிறான். தேவைகள் செயலாற்றத் தூண்டுகின்றன.

செயலாற்றல் குறிக்கோளை நிறைவு செய்து கொள்ளக்கூடிய வாய்ப்பை நல்குகிறது.


தேவை——> செயல்——> குறிக்கோள். இவற்றில் செயல் மட்டுமே வெளிப்படையாகத் தெரிகிறது. ஆகவே, இந்தப் போக்கினைப் பின்வருமாறு விளக்கலாம்.




ஆகவே ஊக்குவிக்கும் செயல் முறையில் முதல் அமிசம் தேவைகள்.


அறிவியல்சார் மேலாண்மை வல்லுநர் ஆபிரகாம் மாசுலோவின் கூற்றுப்படி ஒவ்வொரு மனிதனுக்கும் ஐந்து விதமான தேவைகள் ஏற்படுகின்றன. அவை

1. உடற்கூறு தொடர்புடைய தேவைகள்
2. பாதுகாப்புத் தேவைகள்
3. சமூகத்தின் சார்புடைய தேவைகள்
4. சுயகண்ணியமும் சுயமதிப்புத் தேவைகளும்
5. சுய சாதனை




மாசுலோவின் கூற்றுப்படி நிறைவு செய்யப்பட்ட தேவைகள் உந்துதல்களாக அமைவதில்லை. உடற்கூற்றுத்தேவைகளான உணவு, உடை, இடம் ஆகியவற்றுக்காகப் பணியாற்றும் மனிதன் இந்தத் தேவைகளை அடையும் அளவிற்கு மட்டுமே உழைக்கிறான். தேவை நிறைவுற்றதும்உழைப்பை அவனிடமிருந்துஎதிர்பார்க்க முடியாது. எனினும், இதற்கு அடுத்த நிலையான பாதுகாப்புத் தேவைகளும் நிறைவுற்ற நிலையில், அவன் தான் வாழும் சமூக ஒப்புதலுக்காக உழைக்க முற்படுகிறான். இந்த மூன்று நிலைகளையும் கடந்து தன்னுடைய சுயமதிப்பீட்டிற்காக, உழைப்பை நல்குவதற்கு அவன் தயங்குவதில்லை. இந்த நான்கு நிலைகளுக்கும் அப்பாற்பட்ட சுயசாதனை என்கிற உந்துதல் மிகவும் மேலானதாக உள்ளது. உலகில் சாதனையாளர்கள், அறிவியலாளர்கள், அரசியல் வல்லுநர்கள் ஆகிய யாவருமே இந்த மேலான சுயசாதனைத் தேவையால் மட்டுமே அயராது செயற்படுகிறார்கள்.

மேற்கூறியவாறு தேவைகளை ஐந்து வகையாகப் பிரித்தாலும், எந்த ஒரு கால கட்டத்திலும் ஒரே ஒரு தேவை மட்டுமே தனித்துச் செயற்படக்காரணமாக இருப்பதில்லை. எல்லாக் காலகட்டத்திலும் இந்த ஐந்து வகைத் தேவைகளும் ஏற்றத்தாழ்வான விகிதத்தில் தோன்றுகின்றன. பெரும்பாலும் வளரும் நாடுகளில் வறுமைக்கோட்டிற்கு மேலே வாழும் மக்கள் செயலாற்றும் வகை அடியிற்காணும் வரைபடம் மூலம் விளக்கப்படுகிறது.




மனிதன் ஏன் செயலாற்றுகிறான் என்கிற ஆராய்ச்சி ஒரு தத்துவ அடிப்படையில் அமைந்துள்ளது. மனிதன் செயல்புரியத் தேவைகளின் அடிப்படையில் தோன்றும் உந்துதல்களே காரணமாக நிற்கின்றன. எந்த ஒரு நிறுவனத்திலும் ஊழியர்களின் உழைப்பு நிறுவனத்தின் குறிக்கோளை அடையும் பொருட்டாக அமைய வேண்டிய அவசியம் உள்ளது. ஊழியர்களின் சுயதேவையும் நிறுவனத்தின் குறிக்கோளும் இணைந்தாலன்றி, உற்பத்திப் பெருக்கம் ஏற்பட வாய்ப்பில்லை. இந்த முறையில் ஊழியர்

களை ஊக்குவிக்கும் பணியில் மேலாளர்களின் பங்கு முதன்மையானது.

நிறுவனம் விரும்பும் வகையில் ஊழியர்கள் செயல் புரிய வேண்டியதற்குத் தேவையானவை ஊழியர்கள் நிறுவனத்தின் பால் கொண்டுள்ள ஈர்ப்பும் ஈடு பாடுமே. இந்நிலைக்கு முதல்நிலை மேலாளர்கள் பொறுப்பாகிறார்கள். முதல்நிலை மேலாளர் தொழி லாளிகளுடன் நேரடியாக நாடோறும் தொடர்பு கொள்கிறார்கள். ஒரு தொழிலாளிக்கு அவனுடைய உடனடி மேலாளர்தாம் நிறுவனத்தின் முழு முதற் பேராளர். ஆதலால் ஒரு தொழிலாளியை ஊக்குவிப்பதில் முதல்நிலை மேலாளருக்குப் பெரும் பங்கு உள்ளது. முதல்நிலை மேலாளரின் அறிவு, அனு பவம், அணுகுமுறை, வேலைத்திறன், மனிதாபிமானப் போக்கு ஆகியனவே அவர் கீழ்ப் பணிபுரியும் தொழி லாளியின் ஊக்கத்திற்கும் உற்சாகத்திற்கும் அடிப் படைக் காரணங்களாக அமைகின்றன. முதல்நிலை மேலாளர் கண்டிப்புத் தேவைப்படும் அதே நேரத்தில் விட்டுக் கொடுக்காமல் அரவணைத்துக்கொண்டு செல்லுதலும், மனிதாபிமானக் கண்ணோட்டத்தில் செயற்படுதலும் வேண்டும்.

ஊக்கத்திற்கு மற்றுமொரு தூண்டுகோல் முறை யான பயிற்சி. தொழிலின் தன்மைக்கேற்ப முறை யாகக் கணிக்கப்பட்டு நடத்தப்படும் பயிற்சித் திட்டங் கள் தொழிலாளியின் வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைந்து விடுகின்றன. நடத்தப்படும் பயிற்சி தன்னு டைய சுய வளர்ச்சிகளுக்கும் மேம்பாட்டிற்குமாகும் என்கிற உணர்வு தொழிலாளியின் முழு ஒத்துழைப் பையும் உற்சாகத்தையும் பெற்றுவிடுகிறது. பயிற்சி அளிக்கப்படாத நிலையில் தொழிலாளி தன் தவறு கள் மூலமே தொழில் அறிவைப் பெறுகிறான். தவறு கள் தோல்விக்கு அடிகோலுகின்றன. தோல்வி மனத் தளர்ச்சிகளுக்கும் ஊக்கமின்மைக்கும் காரணமாகி விடுகிறது. மாறாக முறையான பயிற்சி தன்னம்பிக் கையை வளர்த்து, வெற்றிக்கு வழிகோலி, மனநிறை வையும் உற்சாகத்தையும் அளிக்கிறது.

ஒரு மனிதனின்வெற்றிக்கும் வளமான வாழ்க்கைக், கும் திறமையாகச் செயலாற்ற ஊக்கம் இன்றியமை யாதது. ஊக்கமாக உழைப்பவன் மனநிறைவு எய்து கிறான். மனநிறைவின் காரணமாக மகிழ்ச்சியும் உடல்நலமும் நிறைந்த வாழ்க்கையை அனுபவிக்கி றான். இரா.சு.

ஊக்குவித்தல் கல்வி: மனித இயக்கம் ஊக்கு வித்தலினால்தான் நடைபெறுகிறது. ஒருவரைச் செயலுக்கு உந்துவிக்கும் ஆற்றலைச் செயல் நோக்கம் (Motive) என உளவியலார் கூறுவர். செயல் நோக்க மின்றி ஒருவர் எதையும் கற்பது இயலாது. இச் செயல் நோக்கமே ஒரு செயலுக்குக் காரணமாக வும், அச்செயல் தொடரவும், ஓர் இலக்கை நோக்கி நகரவும் உதவுகிறது.

செயல் நோக்கம் உடல்சார்ந்ததாகவோ உளஞ் சார்ந்ததாகவோ அமையும். உடல்சார்ந்த செயல் நோக்கங்களாகத் தாகம், பசி, வலி, பாலுணர்வு ஆகியவற்றைக் கூறலாம். இவை முதன்மை (Primary) நோக்கங்கள் ஆகும். உளஞ்சார்ந்த செயல் நோக்கங் களாகத் தகுநிலை ஆசைகள், ஒப்புறுதி ஆசைகள், தன்மானம், அறியும் ஆர்வமுள்ள இயல்பான ஆசை ஆகியவற்றைச் சுட்டலாம். இவை இரண்டாந்தர (Secondary) நோக்கங்கள் ஆகும்.

மக்டூகல் (McDougall)என்பார் 1908-ஆம் ஆண்டு இயல்பூக்கக் கோட்பாட்டைத் (Instinct Theory) தெரி வித்தார். அவர் மனித இனம் உள்ளார்ந்த மனத் தைக் கொண்டது; அதிலிருந்து எண்ணங்களும் செயல்களும் ஊற்றெடுக்கின்றன; அதிலிருந்துதான் நடத்தையும் உள்ள உரமும் (Will) நுண்ணறிவிற் கேற்பப் படிப்படியாக உருப்பெறுகின்றன என்று கூறி னார். மக்டூகல் பதினான்கு இயல்பூக்கங்களை வரிசைப்படுத்தியுள்ளார். அவை ஆக்கிரமிப்பு, சண்டை, கோபம், அறியும் ஆர்வமுள்ள இயல்பு, இணங்கிப் போதல், பசி, தப்பித்தல், பெற்றோர் - தன்மை (Parental), கூடி வாழ்கின்ற தன்மை, தன்னு ரிமையை வலியுறுத்தல், பாலுணர்வு, ஆக்க உணர்வு, மகிழ்வு, ஈட்டல் என்பன. இக்கருத்து இக்கால உள வியல் அறிஞர்களால் ஏற்கப்படவில்லை.

எந்த ஓர் உயிரினமும் உயிர்வாழ்வதற்கு இன்றி யமையாத் தேவைகள் குறையும் பொழுது ஒரு செய லுக்கு உந்தப்படுகிறது.மனிதனிடத்தில் உடல்சார்ந்த, உள்ளஞ் சார்ந்த தேவைகள் இருக்கின்றன. இவை யிரண்டுமே செயலுக்கு உந்துகின்றன.

மனிதத் தேவைகளையும் அதன் தொடர்பான செயல்களையும் இனங்கண்டு கொள்வது கடினம். எனினும் முர்ரே (Murray), மாசுலோ (Maslow) போன்றோர் மனிதத் தேவைகளை வரிசைப்படுத்தி யுள்ளனர். மாசுலோ கூறிய வரிசையில் 1. உடல் சார்ந்த தேவைகள், 2. பாதுகாப்புறுதித் தேவைகள், 3. அன்பு, பாசஞ்சார்ந்த தேவைகள், 4. தன் மதிப்புத் தேவைகள், 5. தன்னியல்பறிந்து முன்னேறுகிற தேவைகள் (Self Actualisation Needs) ஆகியன அமையும்.

மனிதத் தேவைகளின் வரிசையில் உடல்சார்ந்த தேவைகள் அடிப்படையானவை. ஒருவனுக்குப் பசி

போன்ற தேவை நிறைவுற்றவுடன், அவன் தன் பாது காப்புறுதித் தேவையை உணர்கிறான்; அது நிறை வேறியவுடன் பாசம்,காதல்,அன்பு,தோழமைபோன்ற தேவைகளைப் பெறுகிறான்; அவை கிடைக்கப் பெற்றவுடன் அங்கீகாரம், ஏற்பு, தன்மதிப்பு போன்ற தேவைகள் அவனிடம் தோன்றுகின்றன. ஆகவே, ஓர் அடிப்படைத் தேவை நிறைவுற்றவுடனே மற் றொரு தேவையை நிறைவு செய்வதற்கு மனிதன் உந்தப்படுகின்றான் என்பதனை மாசுலோ கொள்கை விளக்கமாகக் கூறுகிறது.

மனிதனுக்கு உணவு, ஓய்வு போன்றவை உலகப் பொதுவான அடிப்படைத் தேவைகளாகும். சில தேவைகளை மனிதன் அவன் வாழும் பண்பாட்டின் அடிப்படையில் பெறுகிறான். மேலும், ஒரு மனித னின் தேவைகள் அவனுடைய வளர்ச்சி நிலையையும் பொறுத்தவை. சுருங்கக் கூறின், எல்லாச் செயல் களும் தேவை, விருப்பம் ஆகியவற்றின் அடிப்படை யில் அமைந்தவை. அந்தத் தேவைகளைத் தருகிற அல்லது குறைக்கிற எதிர்ச் செயல்கள் எளிதிலேயே கற்கப்படுகின்றன.

ஊக்குவித்தல் உள்ளார்ந்த ஊக்குவித்தல்(Intrinsic Motivation), புறத்தேயான ஊக்குவித்தல் (Extrinsic Motivation) என இருவகைப்படும். உள்ளார்ந்த ஊக்குவித்தலில் ஊக்குவித்தல் செய்யும் செயலிலேயே உள்ளது. அறிவியல் அறிஞர் ஆய்வகத்தில் தம்மை மறந்து ஆராய்ச்சியில் ஈடுபடுதல், விளையாட்டு ஆர் வலர் தாம் ஆடும் விளையாட்டுகளில் ஒன்றி விடுதல் ஆகியன உள்ளார்ந்த ஊக்குவித்தலுக்கு எடுத்துக் காட்டுகளாகும். ஒரு செய்லைச் செய்யத் தூண்டும் புறக்காரணிகளே புறத்தேயான ஊக்குவித்தல் எனப் படும். புறத்தேயான ஊக்குவித்தல் உடன்பாடான தாகவோ எதிர்மறையானதாகவோ இருக்கலாம். ஒரு செயலைத் திறம்படச் செய்யத் தூண்டும் ஆசிரி யரின் புகழ்மொழியும் பரிசும் உடன்பாடான புற ஊக்குவித்தலுக்குச் சான்றுகளாகும். அதே செய லைத் திறம்படச் செய்வதற்குத் தூண்டுகோலாக அமையும் ஆசிரியர் வழங்கும் தண்டனையும் கடிந்து ரையும் எதிர்மறையான புறஊக்குவித்தலுக்குச் சான்றுகளாகும்.

**கற்றலில் இயக்குந் திறமுடைய ஆற்றலின் பங்கு:** இயக்குந் திறனுடைய ஆற்றலின்றிக் கற்றலில்லை. ஓர் ஆசிரியரின் வெற்றி குழந்தைகளை ஊக்குவித்த லில்தான் இருக்கிறது. 1. செயல் நோக்கங்கள் ஒரு வன் இயங்கும் முறையை ஊக்குவிக்கின்றன. 2. செயல் நோக்கங்கள் ஒருவனை ஒரு குறிப்பிட்ட இலக்கை நோக்கி அழைத்துச் செல்கின்றன. வகுப் பறைகளில் பின்வருமாறு ஊக்குவித்தல் நடைபெறு கிறது.

**புகழ்தலும் இகழ்தலும்:** ஒருவனை ஊக்குவிக்கப் புகழ்ச்சி வகுப்பறையில் பயன்படுத்தப்படுகிறது. ஆய்வு முடிவுகள் கூட, இகழ்ச்சியை விடப் புகழ்ச்சியே ஒரு வனை இயங்கச் செய்யும் வல்லமையுடையதாக இருக் கிறது என்று தெரிவிக்கின்றன எனினும், மிகச் சிறிய குழந்தைகளிடத்தில் புகழ்ச்சியை விட இகழ்ச்சியே பலன் அளிப்பதாக மற்றோர் ஆய்வு முடிவு கூறு கிறது. புகழ்ச்சி மிகுதியான நுண்ணறிவுள்ள குழந்தை களைவிடச் சராசரி நுண்ணறிவுள்ள குழந்தைகளிடத் தில் நல்ல பலனளிப்பதாகவும், மொத்தத்தில் சிறுவர் களைவிடச் சிறுமிகளிடத்திலேயே சிறந்த பலனளிப்ப தாகவும் ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன.

**பரிசும் தண்டனையும்:** பரிசும் தண்டனையும் புகழ்ச்சி இகழ்ச்சியின் மறு உருதான் என்றாலும் அவை குறிப்பானவை; தீர்க்கமானவை. கற்பவர் தவற்றினை நீக்கும் பொருட்டு அவருக்கு வலி ஏற்படுத்துவதே தண்டனை; தன் தகுதி இழப்பு பற்றிய அச்சத்தைத் தண்டனை ஏற்படுத்துகிறது. பதக்கம் போன்ற பரிசு கள் மாணவர்களைக் கல்வியில் ஊக்கம் கொள்ளச் செய்கின்றன. தண்டனை கற்பவரின் உளநிலையைப் பாதிப்பதால் அவற்றைப் புறக்கணிக்க வேண்டும் என்றும், பரிசுகள் கொடுத்து ஊக்குவிக்க வேண்டும் என்றும் உளவியலார் கருதுகின்றனர்.

**போட்டி:** வகுப்பறைக்கு உள்ளேயும் வெளியே யும் போட்டி தூண்டு விசையாக அல்லது உந்துவிசை யாக (Incentive) அமைகிறது. கற்றலில் போட்டி ஒரு சிறந்த தூண்டு விசையெனவும், பொதுவாக அது கற்றலில் நல்ல முன்னேற்றத்தை ஏற்படுத்துகிறது எனவும் பல சோதனைகள் மெய்ப்பித்துள்ளன. அதி லும், குழுப் போட்டிகளைவிடத் தனிப்போட்டிகளே கற்றலுக்குச் சிறந்த தூண்டுகோலாக அமைகின்றன. எனினும், கற்றல் சூழ்நிலைகள் போட்டியை மிகவும் வலியுறுத்தினால், அப்போட்டி பொறாமை, காழ்ப் புணர்ச்சி, வெறுப்பு போன்ற வேண்டாத்தகாத உணர்வுகள் தோன்றக் காரணமாகின்றன. மேலும், சமூக ஒத்துணர்வு வளர்ச்சியையும் பாதிக்கிறது.

**செயல்விளைவு பற்றிய அறிவு:** இது கற்றலில் ஒரு நல்ல தூண்டுவிசையாகக் கருதப்படுகிறது. தன்னு டைய செயல்விரைவு பற்றி (Knowledge of Result) அறிகின்ற குழந்தை ஊக்கம் பெறுகிறது. இக்கருத் தினை வலியுறுத்தியே இசுகின்னர் (Skinner) என்பார் கற்பிக்கும் இயந்திரத்தை (Teaching Machine) உரு வாக்கியுள்ளார். செயல்விரைவு பற்றிய அறிவு கற்

பவன் இலக்கிலிருந்து எவ்வளவு தூரத்தில் அல்லது அருகில் இருக்கிறான் என்று தெரிவிக்கிறது. இது தெரியாதபோது செயலைமேம்படச் செய்வதற்கு வழி தெரியாமல் போய் விடுகிறது.

வகுப்பறையில் மாணவர்களை ஊக்குவிக்கப் பின் வரும் பரிந்துரைகள் வழங்கப்படுகின்றன. 1. படிக்கும் பாடத்தில் மாணவர்கள் பயனைப் பார்க்க வேண்டும். கற்றல் உண்மை வாழ்க்கை நிகழ்ச்சியுடன் தொடர்பிருந்தால் இது முடியும். 2. ஏற்கனவே கற்ற கல்வியின் அடிப்படையில் புதுக் கல்வி அமைய வேண்டும். புதுப்பாடம் முந்தைய பாடத்திலிருந்து வளர வேண்டும். 3. கற்கும் பொருள் சீராக வரிசை ஒழுங்கில் அமைய வேண்டும். 4. குழந்தை தவறு செய்யுமாயின் கண்டு கொள்ளாது இருக்க வேண்டும். எப்பொழுதாவது ஒருமுறைதான் தண்டனை கொடுக்கவேண்டும். பொதுவாகத் தீய பழக்கத்தை அகற்றத்தான் தண்டனையைப் பயன்படுத்த வேண்டும். 5. செயல்விரைவு பற்றிய அறிவினைக் குழந்தை பெறுவதற்கு வழிவகைகளை ஆசிரியர் அவ்வப்பொழுது செய்ய வேண்டும்.

பி.என்.மு.

துணை நூல்கள்:

**Atkinson, J.W.**, An Introduction to Motivation, Van Nostrand, Princeton, New Jersey, 1964.

**Deci, E.L.**, Intrinsic Motivation, Plenum, New York, 1975.

**Weiner, B.**, Human Motivation, Holt, Rinehart and Winston, New York, 1980.

**ஊக்ளி** என்பது ஓர் ஆறு. இது மேற்கு வங்காள மாநிலத்தில் ஓடும் கங்கையாற்றின் கிளையாறுகளுள் ஒன்று. இதன் நீளம் ஏறத்தாழ 200 கி.மீ. ஆகும். இந்த ஆறு கப்பற் போக்குவரத்திற்குப் பெரிதும் பயன்படுகிறது. ஊக்ளி (Hooghly) ஆறு கல்கத்தாவைக் கடலுடன் இணைக்கும் கால்வாய்போல் அமைந்துள்ளது. பரந்த கழிமுகத்தைக் கொண்ட இதன் கரையில்தான் கல்கத்தா நகரம் அமைக்கப்பட்டுள்ளது. கல்கத்தா நகரம் கடலிலிருந்து ஏறத்தாழ 140 கி. மீ. தொலைவில் ஊக்ளி ஆற்றங்கரையில் அமைக்கப்பெற்றுள்ளது.

ஊக்ளி என்னும் பெயரில் மேற்கு வங்காள மாநிலத்தில் ஓர் ஊரும் உண்டு. இந்நகரம் போர்ச்சுகீசியரால் கி.பி. 1537-ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. ஆங்கிலேயக் கிழக்கிந்திய வணிகக் குழுவினரும் கி.பி. 1651-இல் பண்ட சாலையொன்றை இங்கு அமைத்தனர். மராத்தியர் இந்நகரை கி.பி. 1742-ஆம் ஆண்டில் சூறையாடினர். இக்காலத்தில் இது தொழிற்சாலை நகரமாக உருவாகியுள்ளமையால், இங்கு எண்ணற்ற தொழிசாலைகள் அமைக்கப்பெற்றுள்ளன. மக்கள்தொகை 1,29,338 (1981).

ஊக்ளி என்னும் பெயரில் மாவட்டம் ஒன்றும் மேற்கு வங்காள மாநிலத்தில் உள்ளது. இம்மாவட்டத்தின் மொத்தப் பரப்பு 3146 ச.கி.மீ. ஆகும்; மக்கள் தொகை 35,57,306 (1981). ஊக்ளி மாவட்டத்தின் தலைநகர் சின்சுரா (Chinsurah) ஆகும். இரா. அ.

**ஊக வாணிகம்**: நிதி அங்காடியில் தனிப்பட்டவர்களும் நிறுவனங்களும் இடர்தாங்கல்களை (Risks) ஏற்று நிதிச் சொத்துகளை வாங்குவதிலும் விற்பதிலும் ஊகத்தை அடிப்படையாகக் கொண்டு, மிகுந்த வருவாயை நாடிப் பெறும் நடவடிக்கை ஊக வாணிகம் (Speculation) எனப்படும். பொருள் அங்காடிகளிலும் இவ்வாணிகம் நடைபெறுவதுண்டு. இவ்வாணிகத்தில் ஈடுபடும் ஊக வணிகர்கள் முதலீடு செய்பவர்களாகவும், சொத்துகளை வாங்கி விற்பவர்களாகவும் இருப்பர். முதலீடு செய்யும் ஊக வணிகர்களின் சிறப்பான குறிக்கோள் நிலையான வருவாய் பெறுவதாகும். இவ்வருவாய் பணமாகவும் ஆதாயப் பங்குவீதமாகவும் வட்டியாகவும் இருக்கலாம். சொத்துகளை வாங்கி விற்கும் ஊக வணிகர்கள் எந்நேரத்திலும் அங்காடி விலை நிலவரத்திற்கேற்ப நிதிச் சொத்துகளை வாங்கவும் விற்கவும் ஆயத்தமான நிலையில் உன்னிப்பாக இருந்து செயற்படுவார்கள். இருப்பு மாற்றகங்களில் (Stock Exchange) ஊக வாணிகம் சிறப்பாகக் காணப்படுகிறது. ஊக வாணிக நடவடிக்கைகளிலேயே இம் மாற்றகங்கள் தொடர்ந்து செயலாற்றி வருகின்றன. முதலீடுகளின் நிலைமைகளை நன்கு ஆராய்ந்து அவற்றின் மதிப்பு எவ்வாறு மாறுபடும் என்பதை எதிர்பார்த்து, ஊகித்தறிந்து செய்யும் துணிச்சல் வாணிகமும் ஊக வாணிகமாகும். இருப்பு மாற்றங்களில் நடைபெறும் வணிகத்தின் பெரும்பகுதி ஊகவாணிகமாகும். பொதுவுடைமை நாடுகளில் ஊகவாணிகம் அறவே தவிர்க்கப்படுகிறது.

ஊக வணிகர்கள் தம் முன்னறிவால் முடிவு செய்தவை சரியாயிருந்தால் மிகுந்த ஆதாயம் பெறுவர். அதனைச் சிலர் எளிதில் பெரிய செல்வராவதற்குரிய வழி என்று தவறாக எண்ணுகின்றனர். பண வசதியும் தக்க பயிற்சியும் தக்க அறிவும் இல்லாதவர்கள் ஊக வாணிகத்தில் இறங்கி அழிவைத் தேடிக் கொள்கின்றனர். ஊக வாணிகம் என்பது வாய்ப்பு என்னும் கரடு முருடான வலிமையை எதிர்த்து,ஆழ்ந்து பரவிய

மெல்லறிவு செய்யும் போராட்டமாகும் என எமிரி (Emery) என்னும் அறிஞர் கூறுகிறார். பம்பாய் இருப்பு மாற்றகங்களில் நடைபெறும் வணிகத்தில் 80 முதல் 90 விழுக்காடு ஊக வாணிகம் எனக் கருதப் படுகிறது. இருப்பு மாற்றகங்கள் ஊக வணிகர்களைக் கவர்கின்றன. பலர் அதனால் அழிந்து போகின்றனர். இருப்பு மாற்றக அங்காடி தொடர்ச்சியான அங்காடியாக விளங்குவதற்கு ஊகவாணிகமே காரணமாகும். வெறும் முதலீட்டுக் கொள்முதல் அல்லது விற்பனை அடிப்படையில் மட்டும் இருப்பு மாற்றகம் செயற்பட இயலாது. அறிவைச் செலுத்தி ஊகித்துப் பிணையங்களை (Securities) மிகுந்த அளவில் வாங்குதலும் விற்றலுமே தொடர்ச்சியான அங்காடி நிலவ வழிகோலும். ஆதாயம் ஈட்டும் ஊக வாணிகம் சேமிப்புகளை மிகுந்த ஆர்வத்துடன் உற்பத்தித் துறைகளில் செலுத்த உதவுவதுடன், குறிப்பிட்ட பிணையங்களில் புதிய சேமிப்புகள் முதலீடாவதற்கும் உதவுகிறது.

இருப்பு மாற்றகங்களின் தூண்டுதலால் ஊக வாணிகம் சூதாட்டமாக மாறி, அதனால் கேடுகள் ஏற்படலாம். இது பொருளாதாரக் குறிக்கோள்களுக்கும் அறநெறிக் குறிக்கோள்களுக்குமுள்ள போராட்டமாகும். இதன் நன்மை தீமைகளை ஒரே அளவுகோலால் அளக்க முடியாது. ஊக வாணிகம் சுறுசுறுப்பாக நடைபெறும் ஒருங்கமையப் பெற்ற (Organised) அங்காடியில், எக்கட்டத்தில் ஊக வாணிகத்தின் தீமைகள் அதன் நன்மைகளை விட மிகும் என்பதைச் சமூகம் முடிவு செய்துகொள்ள வேண்டும். அதனைத் தவிர்க்க இருப்பு மாற்றகம் சீரான முறையில் செயற்பட வேண்டும். இருப்பு மாற்றக அங்காடியின் பொருளாதாரப் பணிகள் பல. முதலீட்டாளர்கள் தம் பிணையங்களை வைத்துப் பணம் வேண்டும்போது அவற்றை விற்பதற்குத் தேவையான வசதிகளை, ஒருங்கமையப்பட்ட பங்கு அங்காடியால் மட்டுமே அளிக்க இயலும். இவ்வங்காடிகளே பிணையங்களை நேர்மையாக வாங்கவும் விற்கவும் வசதியளிக்க முடியும். எவரும் ஏமாற்றப்படாமலிருக்கத்தக்க பாதுகாப்பும் அளிக்க முடியும். மேலும், ஒருங்கமையப்பட்ட அங்காடியில் அளிப்பும் கேட்பு விசைகளும் (Demand Liabilities) தங்குதடையின்றி இயங்கி, பிணையங்களின் உண்மையான மதிப்பிற்கேற்ப அவற்றின் விலைகள் சீராக முடிவு செய்யப் படும். இத்தகைய மதிப்பீட்டின் மூலம் சேமிப்பு முதலீடுகள் முறையாகப் பரவுதற்கு இருப்பு மாற்றகம் உதவுகிறது.

இருப்பு மாற்றகங்களில் ஊகவாணிகத்திற்கு ஏற்ற வாய்ப்புகள் இன்றியமையாதனவாக அமைந்துள்ளன. பிணையங்களின் மதிப்புகள் அடிக்கடி மாறும் என்று எதிர்பார்த்து, அவ் ஏற்றத்தாழ்வுகளின் வேறுபாட்டால் ஆதாயம் பெறலாம் என ஊகித்து, ஊக வாணிகர்கள் பிணையங்களை வாங்கி விற்கின்றனர். பிணையங்களின் மதிப்பைத் தாக்கக் கூடிய பல்வேறு காரணிகளையும் நன்கு அலசி ஆராய்ந்து தம் முன்னறிவால் மதிப்புகள் ஏறுமா இறங்குமா என்பதை முடிவு செய்து செயற்படுகின்றனர். அதனால், மதிப்புகள் திடீரென ஏறியிறங்காமல் படிப்படியாக ஏறியிறங்குகின்றன. விற்றலும் வாங்கலும் நிகழ்வதால் மதிப்புகள் திடீரென மிக உயர்ந்து செல்வதும் அடிமட்டத்திற்குத் தாழ்வதும் தடுக்கப்படுகின்றன. தாசிக்கு என்ற பொருளியல் வல்லுநரின் கருத்துப்படி 'துணிச்சல் வாணிகத்தின் விளைவாக விலையேற்றத் தாழ்வு குறையும்; நுகர்வும் ஒழுங்காக நடைபெற முடியும்'. சே.சி. சுமித்து (J. G. Smith) என்பார் விலை மாறுதல்களைக் கண்டறிந்து அறிவிப்பதற்காக வாணிகச் சாரணர் குழுவினரை முன்னால் அனுப்பிவைத்து, வாணிகத்தை எந்த முறையில் செலுத்தினால் வாணிகம் சிறக்குமோ அம்முறைகளைக் கடைப்பிடிப்பது போன்றவை திறமையுள்ள ஊகவாணிகரின் செயல்கள் எனக் குறிப்பிடுகிறார்.

தனியொருவர் அல்லது சிலர் பொருளின் மதிப்பை இயல்புக்கு மாறாகப் பொருத்தமற்ற முறையில் ஏறும்படியாகவோ இறங்கும்படியாகவோ திட்டமிட்டுச் செயலாற்றி, அங்காடியின் இயல்பான தன்மையைக் கெடுத்துவிடுகின்றனர். இதனால் பலர் இன்னல்களுக்குள்ளாக நேரிடுகிறது. அங்காடியில் சிலர் வதந்திகளைப் பரப்பிவிட்டுத் தம் குறுகிய நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்கின்றனர். இத்தகைய சூழ்ச்சித் திறச் செயல்கள் முடக்கு (Corner), கண்துடைப்பு விற்பனை (Wash Sale), எதிரெதிராணைகள் (Matched Orders) எனப் பலவகைப்படும்.

முடக்கு: ஒருவருக்கு அல்லது ஒரு குழுவினருக்கு ஊகவாணிகர் பொருளைக் கொடுக்க ஒப்பந்தம் செய்து கொள்ளுகிறார். அவ்வாறே ஒப்பந்தஞ் செய்து கொண்டவரிடம் பொருளைக் கொடுப்பதால் அப் பொருளின் இருப்பு முழுவதும் முடங்கி விடுகிறது. அந்நிலை முடக்கு எனப்படும். இத்தகைய நிலை ஏற்பட்டால் ஊக வாணிகர் தம் ஒப்பந்தப்படி வேறு ஒருவருக்கு பொருளைக் கொடுக்க முடியாமற் போகும். யாருக்கு அதைக் கொடுக்க வேண்டுமோ அவருடைய விருப்பங்களுக்கு இசைந்து கட்டாய கட்டுப்பாடுகளுக்குட்பட்டாக வேண்டும். இதனால் ஊக வாணிகர் அங்காடியை முடக்கியவரிடம் சிக்குண்டு தம் தொழிலில் தோல்வியையடைவார். அவர் அங்காடியிலிருந்து முற்றிலுமாய் வெளியேற வேண்டிய நிலை ஏற்படும்.

கண்துடைப்பு விற்பனை: இது ஒரு போலி நடவடிக்கையாகும். ஊக வணிகர் தம்மிடம் இருக்கும் இருப்பை விற்க விற்பனை செய்யத் திட்டமிட்ட பின்னர், அப்பொருளின் விலையை ஏறும்படி செய்வதற்காகக் கண்துடைப்பு விற்பனையென்னும் நடவடிக்கையை மேற்கொள்வார். அவர் அப்பொருளை விற்பதாகக் காட்டி, ஒரு தரகர் மூலம் தாமே அதை உயர்ந்த விலைக்கு வாங்கிக் கொள்வார்.அங்காடியில் இதை அறியாதவர்கள் அப்பொருளுக்கு விலை ஏறுகிறது என்று தவறாக எண்ணி அதை வாங்க முற்படுவர். இவ்வாறு விலையுயர்ந்ததும் ஊகவணிகர் அப்பொருளை உயர்ந்த விலைக்கு விற்றுத் தம் இருப்பைக் குறைத்துக் கொள்வர். இருப்பு மாற்றகங்கள் இத்தகைய சூழ்ச்சிக்காரர்களைக் கடுமையாகத் தண்டிக்கின்றன.

எதிரெதிராணை: இது ஒருவகை ஏமாற்றும் வஞ்சகத் திறச் செயலாகும். அங்காடியில் குறிப்பிட்ட பொருளைப் பலரும் வாங்குகின்றார்கள் என்ற சூழ்நிலைத் தேவையை உருவாக்க இது கையாளப்படுகிறது. ஊக வணிகர் இரண்டு குழுக்களை அமைத்து இதை நிறைவேற்றுவர். அவர் குறிப்பிட்டு அறிவிக்கும் விலையில் ஒரு குழுவினர் வாங்குவர்; மற்றொரு குழுவினர் அவர் முடிவு செய்த விலையின்படி விற்பர். இவ்வாறு அப்பொருளை ஒரு குழு விற்பதையும் மற்றொரு குழு வாங்குவதையும் காணும் மற்றவர்கள் தூண்டப்பட்டு வாங்கவும் விற்கவும் முன்வருவர்.

நிறுவனங்களின் இயக்குநர், தோற்றுவிப்பாளர் (Promoter), பிற அலுவலர்கள் ஆகியோர் இருப்பு மாற்றக உறுப்பினர் துணைக்கொண்டு, தம் நிறுவனங்களின் விலையை ஏறும்படி அல்லது இறங்கும்படி திட்டமிட்டுப் பொதுமக்களை ஏமாற்றி மிகுந்த ஆதாயம் அடைவதும் உண்டு. நிறுவனத் தோற்றுவிப்பாளர்கள் ‘மான்’ நடவடிக்கைகள் மூலம் இத்தகைய செயல்களில் ஈடுபடுகின்றனர். நிறுவனங்களின் நிருவாகப் பொறுப்புகள் வகிக்கின்றவர்களும் இயக்குநர்களும் நிறுவனத்தைப் பற்றிய உண்மைகளைப் பயன்படுத்தித் தம் நிறுவனப் பங்குகளிலேயே ஊக வாணிகம் செய்து ஆதாயம் பெறுகின்றனர்.

ஒருங்கமைந்த இருப்பு மாற்றக அங்காடிகளில் ஊக வணிகர்கள் திட்டமிட்டுச் செயல்களில் ஈடுபடுவதால், அங்காடியின் இயல்பு கெட்டு உண்மையான ஊகவாணிகத்தால் கிடைக்கக்கூடிய நன்மைகள் கிடைக்காமல் போகின்றன. அங்காடியை நன்கு அமைத்து நன்றாக நடத்தவில்லை என்றால் அதனால் சமூகத்திற்குப் பயன் கிடைக்காது. பல அங்காடிகளின் அமைப்பும் விதிகளும் ஒழுங்குமுறைகளும் ஊகவாணிகம் நல்ல முறையில் நடைபெறுவதற்கு ஏற்றவையல்ல. எனவே, அங்காடியைச் சீரமைத்து ஊக வாணிகத்தை ஒழுங்கு செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

இருப்பு மாற்றக அங்காடிச் செயல்களுக்கும் நாட்டின் வங்கி, நாணய முறை, வாணிகம், தொழில் ஆகியவற்றிற்குமிடையே தொடர்பு உண்டு. இவ் அங்காடிச் செயல்கள் நாட்டின் வாணிகம், பொருளாதாரம், நாணய முறை, வங்கி முறை இவற்றில் எதிரொலிக்கும். அமெரிக்காவில் 1930-இல் கடனுறுதிச் சீட்டுகளின் ஆவண (Documents) விலைகள் சீர்குலைந்ததினால் வங்கிகள் சீர்குலைந்தன. மொத்த வங்கிகளுள் பாதி வங்கிகள் மூடப்பட்டன. இந்தியாவிலும் 1946-ஆம் ஆண்டின் பிற்பகுதியில் கல்கத்தாவில் இருப்புமாற்றக அங்காடியில் விலைகள் சீர்குலைந்ததின் காரணமாக நூறு வங்கிகளுக்கு மேல் துன்பத்திற்கு ஆளாயின. இவ் அங்காடிகளைக் கட்டுப்பாடின்றிச் செயற்பட விடுவது நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்கு உகந்ததன்று. அவற்றின் மேல் அரசின் கட்டுப்பாடும் மேற்பார்வையும் இருக்க வேண்டும். அரசின் கட்டுப்பாடு வேண்டும் என்றால் இருப்பு மாற்றக அங்காடிகள் அரசாங்கத்தைச் சார்ந்த அமைப்புகளாக விளங்கவேண்டும் என்பது பொருளன்று. இவ் அங்காடிகள் தம் செயல்களின் விளைவுகளுக்கான பொறுப்புகளை ஏற்றுக் கொள்வதாக அமையவேண்டும். தேவை ஏற்பட்டாலொழிய அரசு நேரடியாகத் தலையிடக்கூடாது. அரசு இவ் அங்காடி நடவடிக்கைகள் சட்டமுறைப்படி ஒழுங்காக நடக்கின்றனவா என்று கண்காணித்துக் கொள்ள வேண்டும். ஊக வாணிகம் முழுவதும் இவ் அங்காடி மூலமே நடைபெறும்படி செய்து, அனைத்திந்திய அடிப்படையில் ஊக வாணிகத்தைக் கட்டுப்படுத்த வேண்டும். இக்கட்டுப்பாடுகள் செயற்பட இருப்பு மாற்றகங்களின் விதிகளையும் வாணிக முறைகளையும் திருத்துவதற்குரிய அதிகாரத்தை அரசு பெற்றிருக்க வேண்டும். இருப்புமாற்றகங்களுக்கும் ஓரளவுக்கான தன்னாட்சியுரிமை இருக்கவேண்டும்.

ஊக வாணிகத்தைச் சட்டமுறைப்படி தடுப்பது நடைமுறையில் செயற்படக் கூடியதன்று. சட்டம் ஊக வாணிகத்தின் முறையற்ற செயல்களைத் தடுக்கும் நோக்கம் கொள்ளவேண்டும். இந்திய அரசு 1956-ஆம் ஆண்டு அதற்கான பிணைய ஒப்பந்த ஒழுங்குச் சட்டத்தை (Securities Contracts Regulation Act) அமுலாக்கியது. இச்சட்டத்தைச் செயற்படுத்துவதற்கு இருப்பு மாற்று ஆணையம் (Stock Exchange Commission) ஒன்று நிறுவப்பட்டது. இவ் ஆணையத்தால் இருப்பு மாற்றகங்களின் தன்னாட்சி

யுரிமை மறைந்து கட்டுப்பாட்டின் நோக்கம் நிறைவேறாமல் போகும் என மாற்றகங்களும், வாணிகப் பொதுக் குழுக்களும் தங்கள் எதிர்ப்பை வலியுறுத்தின. இருப்பு மாற்றகங்களை ஒழித்துவிட்டால் ஊக வாணிகம் மறைந்துவிடும் என்பதற்கில்லை. மாற்றகங்களில்லையென்றால் ஊக வாணிகம் தெருவில் நடைபெறும். இன்றைய பொருளாதார உலகில் ஊக வாணிகத்தைத் தவிர்க்க முடியாது. முடிவாகவும் முறையாகவும் முன்கூட்டியும் கூற முடியாதவை பல இருக்கின்றன. அவற்றின் விளைவே ஊக வாணிகம். பேராசிரியர் எமிரி கூறியபடி, 'ஊக வாணிகத்தை வேரோடு களைந்தெறிவதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. தனிச்சொத்துரிமை முறையை நீக்கி விட்டுச் சமத்துவ ஆட்சி முறையை அமைப்பதே அவ் வழியாகும்'. மேலும், ஊக வாணிகம் இல்லையென்றால் முதலீட்டாளர் விரும்பும்பொழுது தம் முதலீட்டை எளிதில் பணமாக மாற்ற முடியாது. அவ்வாறு பணமாக மாற்றும் வசதி இல்லையென்றால் நாட்டின் முன்னேற்ற முயற்சிகளுக்கு நீர்மைப்பணம் (Liquid Cash) கிடைப்பது அரிதாகும்.

ஒருங்கமைந்த இருப்பு மாற்றக அங்காடியில் ஊக வாணிகம் இடம் பெறுவது முறையாகும். ஆனால், அதற்கு அறநெறிகளும் கட்டுப்பாடுகளும் இருக்க வேண்டும்; தகுதியுடையவர்களே அதில் ஈடுபடலாம். அவர்கள் வரம்பை மீறாமல் தடுப்பதற்கேற்ற திறமையுடன் செயலாற்றும் ஆணையம் இருக்கவேண்டும். தகுதியுடையவர்கள் தக்க அளவோடு எல்லாவற்றையும் நன்கு அறிந்து ஆராய்ந்து செயற்படவேண்டும். ஊக வாணிகத்தின் கேடுகளைச் சட்டத்தின் மூலம் ஒழிக்கப் பல்வேறு நாடுகள் முயன்றுள்ளன. அமெரிக்க அரசு மேற்கொண்ட கட்டுப்பாட்டு முயற்சிகள் கணக்கிலடங்காதவை. 'ஊக வாணிகத்தைச் சாதாரணச் சட்டங்களால் கட்டுப்படுத்த மேற்கொள்ளும் அவசர முயற்சிகள் பெரும்பாலும் பயன்தாரா; மாறாக அவற்றால் தீங்கும் நேரலாம்' எனப் பேராசிரியர் ஆல்பிரடு மார்சல் (Alfred Marshall) கூறுகிறார். இலண்டன் இருப்பு மாற்றகம் அரசின் கட்டுப்பாடேதுமின்றியே மிகச் சிறந்த முறையில் நடைபெற்றுவருகிறது.

இருப்பு மாற்றகங்களை வெறும் சட்டத்தால் மட்டும் சீரமைக்க முடியாது. அவை நன்கு நடைபெறுவதற்கேற்ற சூழ்நிலையை உருவாக்க வேண்டும். வணிகர்களிடையே கல்வியறிவு பரவவேண்டும். கற்றறிந்து தெளிந்த வணிகர்கள் பெருகவேண்டும். தொழில் முனைவோர்(Entrepreneurs) உயர்ந்த அறநெறிகளின்படி தொழில்களை நடத்த வேண்டும். முதலீட்டாளர்கள் வதந்திகளையும் நம்பிக்கைகளையும் மட்டும் அடிப்படையாகக் கொண்டு பிணையங்களை வாங்கவோ விற்கவோ முற்படாமல், அவற்றின் உண்மையான மதிப்புகளைக் கண்டறிந்து செயலில் ஈடுபட முன்வர வேண்டும். இத்தகைய சூழலை உருவாக்குவதே ஊக வாணிகத்தின் தீமைகளை ஒழிப்பதற்குரிய உண்மையான வழியாகும். முடக்கு, கண்துடைப்பு விற்பனை, எதிரெதிராணை போன்ற ஏமாற்றும் திட்டச் செயல்கள் சட்டத்திற்கு முரணானவை (Illegal) என்று அறிவித்து, முறைப்படி அவற்றை ஒழிக்க வேண்டும். அமெரிக்காவில் 1934-ஆம் ஆண்டு பிணைமாற்றுச் சட்டம், இத்தகைய ஏமாற்றும் திட்டச் செயல்கள் சட்டத்திற்கு முரணானவை என்று அறிவித்துள்ளது. நெருக்கடியான காலத்தில் சில விதிகளின் நடப்பை நிறுத்தி வைக்கவோ அங்காடி நடவடிக்கைகளை நிறுத்திவைக்கவோ இருப்பு மாற்றகங்களுக்கு அதிகாரம் உண்டு. ஆனால், இத்தகைய அதிகாரத்தைத் தவறான வழியில் பயன்படுத்தக் கூடாது. பொறுப்பற்ற ஊக வாணிகர் சிலரைக் காப்பாற்றுவதற்காக அங்காடியை மூடக் கூடாது. இத்தகைய சூழ்நிலையில் மாற்றக நிருவாகிகள் தலையிடுவதை மாற்றக விதிகள் தடுக்க வேண்டும்.

வாணிக நடவடிக்கைகளில் ஏற்படும் கால இடைவெளி பல தாக்கங்களை உண்டாக்குகிறது. கணக்கு வகையில் வாணிகம் செய்தால் நடவடிக்கை நடந்த நாளுக்கும்அதைக் கணக்குத் தீர்க்கும் நாளுக்குமிடையில் நீண்டகால இடைவெளியிருக்கும். மேலும், அடுத்த கணக்குத் தீர்வு நாளுக்கு நடவடிக்கையை ஒத்திப் போடவும் வசதியிருக்கிறது. இக்கால இடைவெளியும் வசதிகளும் ஊகவாணிகத்திற்குத் தூண்டு கோலாகும் எனக் கருதப்படுகின்றன. நியூயார்க்கில் உரொக்க நடவடிக்கை முறையேயுண்டு. இலண்டன் அங்காடியில் முன்னோக்கிய வணிகமுறை (Forward Trading) கையாளப்படுகிறது. இதனால் இலண்டன் அங்காடியில் நிகழும் தோல்விகள் நியூயார்க்கு அங்காடியில் நிகழும் தோல்விகளைப்போல் பத்து மடங்காகும். முன்னோக்கிய வணிகமுறை துணிச்சல் வாணிகத்திற்கு மிகுந்த வாய்ப்பளிப்பதால் அதைக் கடுமையாகக் கட்டுப்படுத்தி வருகின்றனர். பெரும்பாலான உலக நாடுகளில் பிணையங்கள் ஒப்பந்த ஒழுங்குமுறைச் சட்டம் இத்தகைய கட்டுப்பாட்டைச் செய்ய முற்படுகிறது. ஊக வாணிகம் யாவும் இருப்பு மாற்றகங்கள் மூலமே நடைபெற வேண்டும் என மாற்றகங்களுக்கு வெளியே இவ்வாணிகம் நடைபெறுவதைச் சட்டம் தடுக்கிறது.

ஊக வாணிகத்தைப் பெயர் குறியா மாற்றங்களைத் (Blank Transfer) தவிர்ப்பதன் மூலமும் கட்டுப்

படுத்தலாம். பெயர் குறியா மாற்றம் என்பது மாற்றம் பெறுபவரின் பெயர் குறிப்பிடப்பெறாமல் மாற்றுபவரின் பெயர் மட்டும் குறிக்கப்பட்டிருக்கும் இருப்புப் பங்கு மாற்ற ஆவணமாகும். மாற்றுபவர் கையெழுத்திட்ட நாளும் குறிக்கப்பட்டிராது. இம் மாற்று ஆவணத்தின் நோக்கம் பங்குகளை எளிதில் கைவிட்டுக் கைமாறும்படி செய்வதாகும். கைமாறும் ஒவ்வொரு முறையும் முத்திரைச் சீட்டுப் பதிக்கப் படுவதில்லை. பிணையங்கள் விரைவாகப் பலரிடம் மாறுவதற்கும், அவற்றை வைத்திருப்பவர் நிறுவனத் தில் தம் பெயரைப் பதிவு செய்யாமலேயே விற்பதற் கும் பெயர் குறியா மாற்றம் உதவுகிறது. இவ் ஆவணம் கை மாறக் கூடியதாகையால், இதைப் பிணையமாகக் காட்டி எளிதில் கடன் பெறலாம். இவை ஊக வாணிகத்திற்கு ஆதரவாக விளங்கு கின்றன . இவ் ஆவணங்களின் காரணமாக நிறுவனங் களின் பதிவு ஏடுகளை எழுதி முடிக்க முடிவதில்லை. பங்குகள் உண்மையில் யாரிடம் இருக்கின்றன என்ப தையும் தெரிந்துகொள்ள முடியாது. இவ் ஆவணங் கள் வருவாய் வரியைச் செலுத்தாமல் ஏமாற்று வதற்கும் உதவுகின்றன. அ. கு. சா.

**ஊகனட்டுகளின் கோட்பாடுகள்**: ஊக னட்டுகள் எனப்படுவோர் பிரான்சு நாட்டில் தெற்கு, மேற்கு மாவட்டங்களில் கி.பி. பதினாறாம் நூற் றாண்டில் மிக்க அரசியல், பொருளாதாரச் செல் வாக்குடன் வாழ்ந்திருந்த மறுப்புரைச் சமயத்தவர் (Protestant) அல்லது கால்வினியக் கிறித்தவ நெறி யைச் (Calvinism) சேர்ந்தவர் ஆவர். பிரான்சில் மறுப்புரைக் கிறித்தவச்சமய இயக்கம் பெரும்பாலும் பரவவில்லை. அந்நாட்டவர் இப்போதிருப்பதைப் போல, மறுப்புரைச்சமய இயக்கம் தோன்றிய கி.பி. பதினாறாம் நூற்றாண்டிலும் பெரும்பாலும் போப்பைத் தலைமையாகக் கொண்ட கத்தோலிக்கக் கிறித்தவ நெறியையே சார்ந்திருந்தனர். அதனால் அரசர்களும் அந்நெறியினராக இருந்தனர். சான் கால்வின் (John Calvin) என்ற பிரஞ்சுத் தலைவரால் தோற்றுவிக்கப்பட்ட கடுமையான வாழ்க்கை முறையை விதித்த மறுப்புரைச் சமயக் கிறித்தவ் நெறிக்குப் பிரஞ்சுப் பிரபுக்களிடம் ஆதரவு இருந்தது. இந்த மறுப்புரைச்சமய நெறிசார்ந்த பிரஞ்சுப் பிரபுக்களே ஊகனட்டுகள் எனப்பட்டனர். இவர்கள் சிறுபான்மையாளராகவும், பெரும்பாலரான கத்தோ லிக்கருடைய சமய, அரசியல் கருத்துகளில் மாறு பட்டும் இருந்த காரணங்களினால், தங்களுடைய சமய, சமூக, பொருளாதார உரிமைகளைக் காப் பாற்றிக் கொள்ளும்பொருட்டு, நாட்டின் திருச்சபை, அரசாங்கம் ஆகியவை பற்றித் தனித்த சில கொள்கை களை உருவாக்கினர்; இவ்வாறு உருவாக்குவதற்கு அக்காலத்தில் சமயஉரிமைக் கோட்பாடு (Principle of Religious Freedom) என்பது பொதுவாக உரு வாகாமலிருந்ததும் ஒரு காரணமாகும்.

**ஊகனட்டுகளின் அரசியற் கோட்பாடுகள் தோன்றிய சூழ்நிலைகள்**: ஐரோப்பாவில் கி.பி. பதி னாறாம் நூற்றாண்டில் கத்தோலிக்க, மறுப்புரைச் சமயக் கிறித்தவ நெறியாளர்களுக்கிடையே சமய வேறுபாடு காரணமாகப் பல உள்நாட்டுப் போர்கள், கொலைகள் முதலியவை நடந்தன. இவை அக்காலத் தில் சமயச் சுதந்திரம் என்ற கோட்பாடு உருவாகாம லிருந்தது என்பதையே காட்டுகின்றன. இப் போராட் டக் காலங்களில் இங்கிலாந்தில் அரசாங்கத்தை எதிர்க்கும் உரிமை மக்களுக்கு உண்டு என்று கூறி ஒரு சாரார் அரசாங்கத்தை எதிர்த்தபோது, நாட்டின் ஒற்றுமைக்குப் பாதுகாப்பாக அரசர்களின் தெய்விக உரிமையை மற்றொரு சாரார் ஆதரித்தனர். பிரான்சிலும் புதிய முடியாட்சி தோன்றி, அது தேசிய ஒற்றுமையை உருவாக்கி, இக்கால அதிகாரக் குவிப் புடைய அரசாங்க முறையைத் தோற்றுவித்தது. ஆனால் இங்கிலாந்திலிருந்தது போல் பிரான்சில் பாராளுமன்ற ஆட்சி மரபு ஏதும் வளரவில்லை. மாறாகப் பிரான்சில் மாகாண உரிமைகள் வளர்ந்த தனால், அங்கு நாடு முழுவதற்குமான ஒரு பாராளு மன்ற அரசியலமைப்பு உருவாதல் இயலாததாயிற்று. பிரான்சில் சமயநெறி வேறுபாடுகளும் அதற்கேற்ப அரசியல் பொருளாதார வேறுபாடுகளும் இணைந்தே காணப்பட்டன. அங்கு மாகாண உரிமைகள், பிரபுக் கள் உரிமைகள், தன்னாட்சி நகரங்களின் உரிமைகள் முதலியவை நடுவண் அரசாங்கத்தை வலுவற்றதாக ஆக்கின. ஊகனட்டுகள் உள்ளூர்ப்பிரிவுகளின் உரிமை களை ஆதரித்தும், அரசரை எதிர்த்தும் நின்றனர். கால்வினின் மறுப்புரைச் சமயக் கிறித்தவ நெறிக்குப் பிரஞ்சுப் பிரபுக்களாகிய ஊகனட்டுகள் ஆதரவு காட்டியதற்கு அந்நெறியின் சமயவிதிகளில் அவர் களுக்கிருந்த ஈடுபாடு மட்டும் காரணமன்று; அவர் கள் அந்நெறியிலிருத்தல் அரசருடைய அதிகாரத்தை எதிர்ப்பதற்கு வசதியாக இருக்குமென்றும், அதிலிருந் தால் கத்தோலிக்கத் திருச்சபையின் நிலங்களைக் கைப்பற்றலாமென்றும் அவர்கள் கருதியதும் காரண மாகும். கத்தோலிக்கக் கட்சியினருக்கும், ஊகனட்டு களுக்கும் தத்தம் அரசியலாதிக்கத்தை நிறுவுவதே உள்நோக்கமாக இருந்தது. நாட்டின் நிலைமையைச் சீர்படுத்துவதோ யாவருக்கும் சமய உரிமை கிடைக்கு மாறு செய்வதோ அவர்கள் நோக்கமாக இல்லை. பிரான்சில் கி.பி. 1562 முதல் 1598 முடிய இரு சாரா ருக்கும் இடையே பல உள்நாட்டுப் போர்கள் நிகழ்ந்

தன. ஊகனட்டுகளே மிக்க துன்பமடைந்தனர். அவர்களுடைய சிறந்த தலைவர் கோலிஞ்ஞி (Coligny) கொல்லப்பட்டார். புனித பார்த்தலோமியோ நாளன்று (கி.பி. 1572) ஏறக்குறைய 8000 ஊகனட்டுகள் பிரஞ்சுக் கத்தோலிக்க அரசர் மூன்றாம் என்றியின் உதவியோடு கொல்லப்பட்டனர். இடையிடையே அவர்களுக்குச் சமய, வழிபாட்டு உரிமைகளை வழங்கியும், பல்கலைக்கழகங்களிலும் அரசாங்கப் பணிகளிலும் சேர்தற்கு உரிமை வழங்கியும் உடன்படிக்கைகளும் செய்யப்பட்டன. பல போர்களுக்குப் பிறகு ஊகனட்டுகளின் தலைவராகிய நவாரின் என்றி என்பவர் (Henry of Navarre) கத்தோலிக்கராகச் சமய மாற்றம் செய்து கொண்டு, கி.பி. 1593-இல் நான்காம் என்றி என்ற பெயருடன் அரசராகிப் போர்களை நிறுத்தி மறுப்புரைச் சமயத்தினராகிய ஊகனட்டுகளின் உரிமைகளைக் காப்பதற்காக கி.பி. 1598-ஆம் ஆண்டில் நாண்டிசு ஆணையை (Edict of Nantes) விடுத்தார்.

அதன்படி, குறிப்பிட்ட பட்டணங்களிலும் பிரபுக்களின் வீடுகளிலும் ஊகனட்டுகள் தொழுகை நடத்தவும், பல்கலைக்கழகங்களிலும் அரசாங்கப் பதவிகளிலும் அவர்கள் இடம் பெறவும், பாரிசிலும் மற்ற முக்கிய இடங்களிலும் மறுப்புரைச் சமயத்தவர் சம்பந்தப்பட்ட வழக்குகளை ஆய்ந்து தீர்ப்பளித்தற்கு மறுப்புரைச் சமயஞ் சார்ந்த நீதிபதிகளையுடைய சிறப்பு நீதி மன்றங்களை அமைக்கவும், சில பட்டணங்களும் கோட்டைகளும் மறுப்புரைச் சமயத்தவரின் கட்டுப்பாட்டில் வைக்கப்படவும், அவற்றின் இராணுவத் தலைவர்களை மறுப்புரைச் சமயத்தினர் கட்சியே அமர்த்தவும் அக்கோட்டைகளின் வீரர்களுக்கு அரசரே ஊதியம் அளிக்கவும் உரிமைகள் வழங்கப்பட்டன. கடைசியில் கூறப்பட்ட உரிமை முக்கியமானது. ஊகனட்டுகளுடைய உரிமைகளை அழிக்கக் கூடியவாறு பிரஞ்சு அரசாங்கத்தின் கோட்பாடு இருக்குமானால், ஊகனட்டுகள் இப்பட்டணங்களில் அடைக்கலம் புகுந்து, அரசாங்கக் கோட்பாட்டை எதிர்த்தல் இயலும். மேலும் இவ்வுரிமைகளெல்லாம் எப்போதும் நிலையாகவும் மாறாமலும் இருப்பன என்றும் அரசர் நான்காம் என்றி கூறினார். கத்தோலிக்கக் கட்சியின் ஆற்றலும், மறுப்புரைச் சமயத்தினரிடம் அவர்கள் காட்டிய எதிர்ப்பும் மறுப்புரைச் சமயத்தினர் தங்கள் அரசு பற்றியும், திருச்சபை பற்றியும் எதிர்ப்புக் கொள்கைகளை உருவாக்க உதவின. இந்த நாண்டிசு ஆணைகளின் வாயிலாகப் பிரஞ்சு மறுப்புரைச் சமய ஊகனட்டுகளுக்குச் சமய, அரசியல் உரிமைகள் வழங்கப்பட்டபின்னர், மாமன்னர் பதினான்காம் உலூயியின் இளமைக் காலத்தில் அவர்களுடைய கோட்டைகளெல்லாம் அவர்களிடமிருந்து கண்காணிப்பாளராகிய இரிச்சலுவின் ஆணையால் பறிக்கப்பட்டன; ஊகனட்டுகளுள் பலர் கையூட்டுகளின் வாயிலாகக் கத்தோலிக்கக் கிறித்தவர்களாக ஆக்கப்பட்டனர். சில ஊகனட்டுகளின் தொழுகை இல்லங்கள் தகர்க்கப்பட்டன. சில ஊகனட்டுகளின் உடைமைகள் அரசாங்கத்தால் எடுத்துக் கொள்ளப்பட்டன. பின்னர்ப் பதினான்காம் உலூயி அரசர் எல்லா ஊகனட்டுகளும் கத்தோலிக்கர்களாக மாறி விட்டதாகவும், அதனால் நாண்டிசு ஆணை அரசரைக் கட்டுப்படுத்தாது என்றும் கூறி, கி.பி. 1685-ஆம் ஆண்டில் அதனைத் தள்ளுபடி செய்து, பிரான்சில் எஞ்சியுள்ள ஊகனட்டுகளெல்லாம் கத்தோலிக்கராக மாறுதல் வேண்டுமென்று ஆணை விடுத்து, பிரான்சை விட்டு அவர்கள் வெளியேறிச் செல்லுவதையும் தடுத்தார்.

ஏற்கனவே அரசாங்க நடவடிக்கைகளினால் மிகவும் எண்ணிக்கையில் குறைந்திருந்த ஊகனட்டுகள் சமய மாறுதலை ஏற்றுக் கொள்ளாதவராய்ச் சுவிட்சர்லாந்து, பிரசியா, ஆலந்து, இங்கிலாந்து முதலிய நாடுகளுக்குத் தப்பிச் சென்று தம் தொழில், வாணிகத் திறமைகளினால் அந்நாடுகளை வளமுறச் செய்தனர். பிரஞ்சு அரசாங்கம் அவர்களுடைய உழைப்பிலிருந்து தனக்குக் கிடைத்து வந்த வருமானத்தை இழந்தது. பிரஞ்சு அரசர் நாண்டிசு ஆணையைத் தள்ளுபடி செய்து சமயச் சுதந்திர உரிமையைத் தம் குடிகளுள் சிறுபான்மையினருக்கு (ஊகனட்டுகளுக்கு) மறுத்தது, எந்த ஒரு சீர்திருத்தக் கோட்பாட்டிலும், சமயப் பொறை அல்லது சமயச் சுதந்திரம் (Religious Toleration) என்பது முக்கிய இடம் பெற்றாக வேண்டுமென்ற தேவையைச் சுட்டிக் காட்டிற்று. பிரஞ்சுச் சிந்தனையாளர் வால்ட்டேர் தமது காலத்திய ஆங்கில நாட்டில் ஆய்வுச் சுதந்திரமும் கருத்துகளை வெளியிடும் சுதந்திரமும் மதிக்கப்படுவதைப் புகழ்ந்தார். பிரான்சின் அரசர் பதினான்காம் உலூயி நாண்டிசு ஆணையைத் தள்ளுபடி செய்து, ஊகனட்டுகளுக்குச் சமய உரிமையை மறுத்த காலத்திலேயே, ஆங்கில அரசியற் சிந்தனையாளர் சான் இலாக்கு (John Locke) சமய உரிமை பற்றிய கடிதங்கள் (Letters on Toleration), அரசாங்கம் பற்றிய கட்டுரைகள் (Treatises on Government) முதலியவற்றை வெளியிட்டு, அவற்றில் அரசியலமைப்புக்குட்பட்ட, வரம்புக்குட்பட்ட அரசாங்கம் என்ற கோட்பாட்டை (Theory of Constitutional or Limited Government) வலியுறுத்தினார்; பிரஞ்சு அரசாங்கமும் நாண்டிசு ஆணையை மதித்துச் செயற்பட்ட வரையில் அது ஓர் அரசியலமைப்புக்கு உட்பட்ட அரசாங்கமாக இருந்தது; நாண்டிசு ஆணை கி.பி. 1685-இல் தள்ளுபடி செய்யப்பட்ட

போது பிரஞ்சு அரசாங்கம் எதேச்சாதிகார அரசாங்கமாக ஆயிற்று.

**அரசு, அரசாங்கம் ஆகியவை பற்றிய கோட்பாடு:** பிரஞ்சு மறுப்புரைச் சமயஊகனட்டுகள் கி.பி. 1572-ஆம் ஆண்டில் அரசியல், சமயக்காரணங்களுக்காகப் பெருமளவில் கொல்லப்பட்ட சூழ்நிலையிலே, ஊகனட்டுகளின் எழுத்தாளரான பிரான்சிசு ஆட்மன் (Francis Hotman) பிராங்கோ-கால்லியா (Franco-Gallia) என்ற தமது நூலில் அரசருடைய எதேச்சாதிகாரக் கோட்பாடு(Theory of Royal Absolutism) வரலாற்றினடிப்படையில் ஒப்புக் கொள்ளப்படக்கூடியதன்று என்று காட்டினார். இக் கருத்தையே தத்துவ அடிப்படையில் தியோடோர் பேசா (Theodore Besa) என்பவர் தமது விண்டிசியே (Vindiciae Contra Tyrannos) என்ற நூலில் (கி.பி. 1579-ஆம் ஆண்டில்) எடுத்துக்காட்டி, அரசியலதிகாரங்களுக்குத் தத்துவக் கொள்கைகளே ஆதாரமாக இருக்கின்றன என்றும், எதேச்சாதிகார முடியாட்சி என்பது (Absolute Monarchy) எல்லா அரசாங்கங்களுக்கும் ஆதாரமாக அமைந்திருக்கின்ற உலகளாவிய உரிமை விதிகளுக்கு (Theory of Universal Rules of Right) முரணானது என்றும், அரசர்கள் மனித சமூகத்தின் நலன்கள் என்ற நோக்கத்தை அடையும் பொருட்டே மனித சமூகத்தால் அமர்த்தப்பட்டவர்களென்றும், ஆகையால் அவர்களுடைய அதிகாரம் வரம்புக்கு உட்பட்டதே என்றும் எடுத்து விளக்கினார். மேலும், கொடுங்கோலராக மாறும் அரசர் ஆளும் உரிமையை இழந்து விடுகிறாரென்றும், ஒவ்வோர் ஆட்சியாளரும் தமது ஆட்சிச் செயல் நியாயமானது, சட்டத்துக்கு ஒத்தது என்று தமது மக்களுக்குக் காட்ட வேண்டிய பொறுப்பில் உள்ளார் என்றும் தியோடோர் என்ற ஊகனட்டுச் சிந்தனையாளர் தெளிவாகக் கூறினார். ஆயினும் இவர்கள் கூறிய உரிமைகளெல்லாம் தனி மனிதருக்கு உரியவை அல்ல; அவையெல்லாம் மறுப்புரைச் சமயத்தினர் வாழ்ந்த பட்டணங்கள், மாகாணங்கள், வகுப்புகள் முதலிய கூட்டுக் கழகங்களுக்கே ஆகும். ஆகவே, ஊகனட்டுகளின் கோட்பாட்டின்படி, ஓர் அரசு என்பது ஒன்றுக்கொன்று எதிராகச் சமநிலையில் வைக்கப்பட்ட பல பாகங்கள் அல்லது வகுப்புகளடங்கியதாக இருத்தல் வேண்டும். அவை ஒன்றோடொன்று செய்து கொண்ட ஒப்பந்தத்தின் வாயிலாக ஆளப்படுதல் வேண்டுமே தவிர, ஒரே அரசியல் தலைமை அதிகாரியால் அல்லது இறைமை அதிகாரியால் ஆளப்படுதல் கூடாது. சுருங்கக் கூறின், அவர்களுடைய அரசு பற்றிய கோட்பாட்டின்படி, அரசு என்பது சிறிய கழகங்களடங்கிய ஒரு கூட்டரசு (The State as a Federation of Lesser Corporate Bodies) ஆகும்.

இத்தகைய கூட்டாட்சிக் கோட்பாட்டை நெதர்லாந்து நாட்டின் அல்தூசியசு என்பவர் (Althusius in the Netherlands) வகுத்துக் கொடுத்தார். ஊகனட்டுகளின் அரசு பற்றிய கோட்பாடு பிற்காலத்திய ஒப்பந்தக் கோட்பாட்டிலும் இடம் பெற்றது. இதனால் அரசாங்கத்தை எதிர்க்கும் உரிமை மக்களுக்கு உண்டென்றும் அது உணர்த்திற்று. ஆனால் அரசாங்கத்தை எதிர்க்கக்கூடிய உரிமை மக்களுக்கு இருத்தல் வேண்டுமென்பதால், மக்களுக்குப் பங்கு இருக்கக்கூடிய அரசாங்கம் அமைதல் வேண்டுமென்றோ மக்கள் உரிமை (Rights of Man) வேண்டுமென்றோ அது கூறவில்லை. மாறாக ஊகனட்டுகளின் அரசு பற்றிய கோட்பாடு பிரபுக்கள் அல்லது உயர் குடியினராட்சியையே (Aristocracy) ஆதரித்தது. ஆகையால் அது பிற்காலத்தில் ஒப்பந்தக் கோட்பாட்டோடு இணைக்கப்பட்ட சுதந்திர, சமத்துவக் கொள்கைகளுக்கு முரண்பட்டிருந்தது.

**ஊகனட்டுகளின் திருச்சபை பற்றிய கருத்து:** சுவாரசு (Suarez) என்னும் ஏசுசபை எழுத்தாளர் ஒருவர் சமய, அரசியல் கோட்பாடுகளை இறையியல் அல்லது தெய்விக இயல் (Theology) கோட்பாடுகளினின்றும் தனியே பிரித்து, அரசாங்கம் என்பது உலகியல் சார்ந்த சூழ்நிலைகளினாலும் மனிதருடைய முயற்சியினாலும் தோன்றிற்று என்ற ஒரு கொள்கையை வகுத்தார். கால்வினிய, மறுப்புரைச் சமய ஊகனட்டுகளும் இவ்வகையாகவே எண்ணிக் கொள்கையை வகுத்தனர். இறைஇயலில் கடவுளின் முன் விதிக் கோட்பாடு (Doctrine of Predestination)என்று ஒரு கோட்பாடு உண்டு. இறைவனே எது நடைபெறுதல் வேண்டுமோ அது நடைபெறுவதற்கு முன்னதாகவே, அநாதி காலத்திலேயே அதை எவரும் மாற்ற இயலாதவாறு நடைபெறுதல் வேண்டுமென்று தீர்மானித்துள்ளானென்றும், முக்கியமாக மனிதர் எந்நாளும் அனுபவிக்க வேண்டிய இன்பத்தை அல்லது துன்பத்தை இறைவன் முன்னரேயே விதித்துள்ளானென்றும் இக்கோட்பாடு கூறுகிறது. இக்கோட்பாட்டிற்குக் கால்வினியக் கிறித்தவர்கள் விளக்கம் அளிக்கும்போது, எல்லா ஒழுக்க இயலான கேள்விகளும் சமூக இயலான கேள்விகளும் இறைவனுடைய தன்விருப்பமான அருளாலேயே தோன்றுகின்றன என்றும், உலகில் மனித அரசாங்கத்தில் காணப்படும் ஒவ்வோர் இயற்கைக் காட்சியும் (Natural Phenomenon) ஒரு நிகழ்ச்சி (Incident) என்றும் கூறினர். ஒழுக்க இயலான நிகழ்ச்சிகளுக்குக் கால்வினியர்கள் விளக்கம் கூறும்போது, அவற்றுக்கு அறிவியலான விளக்கம் அளிக்காமல், இயற்கையின் சட்டத்தைக் கையாண்டு விளக்கம் அளித்தனர். ஆயினும் கால்வினியக் கிறித்தவ எழுத்தாளரான சோகன்னசு

அல்தூசியசு (Johannes Althusius) என்பார் இயற்கையின் சட்டத்தைச் சாராமல், பிரஞ்சுக் கால்வினியர்களாகிய ஊகனட்டுகளுடைய முடியாட்சிக்கு எதிரான கோட்பாட்டை விளக்கினார். மேலும், அவர் இயற்கையின் சட்டத்தைக் கிறித்து அருளிய பத்துக் கட்டளைகளோடு (Ten Commandments of Decalogue) இணைத்து அவற்றை ஒன்றாகவே கருதினார். அவர் கூறிய கருத்தின்படி காணும்போது, அவருடைய சமூகக் கோட்பாடு இறைவனருளிய ஆணை என்ற சமயக் கொள்கையைச் சார்ந்தே இருப்பது தெரிய வருகிறது. இந்த அணுகு முறையில் அவர் வகுத்த அரசியற் கோட்பாட்டில் ஒப்பந்தம் பற்றிய கருத்து இயற்கைக் கோட்பாடாகக் (Naturalistic Theory) கூறப்பட்டுள்ளது. பா. சூ.

துணை நூல்கள்:

**Allen, J.W.**, A History of Political Thought in the Sixteenth Century, London, 1951.

**Barker, Ernest**, Church, State and Education: A Huguenot Theory of Politics, London, 1930.

**Dodge, Guy Howard**, The Political Theory of the Hugudenots, New York, 1947.

**Sabine, G.H.**, A History of Political Theory, Oxford & IBH Publishing Co., Calcutta, 1961.

**ஊகான்** சீனநாட்டைச் சார்ந்த உப்பே மாநிலத்தின் தலைநகரம். இது ஒரு நகராட்சியாகும். இவ்வூர் யாங்கிட்சி (Yangtze) ஆற்றங்கரையில் ஆன் (Han) ஆறு கடலில் கலக்குமிடத்தில் அமைந்துள்ளது. ஊசாங்கு (Wuchang), ஆங்கௌ (Hankow), ஆன்யாங்கு (Hanyang) என்னும் மூன்று சிறப்பு நகரங்களை இணைத்து உருவாக்கப்பட்ட ஊகான் மத்திய சீனாவிலுள்ள மக்கள்தொகை மிகுந்த நகராட்சியாகும். யாங்கிட்சி ஆற்றுப்பள்ளத்தாக்கு மக்களின் பொருளாதார, அரசியல் நடவடிக்கைகளின் மையமாக இந்நகர் அமைகிறது. ஊகான் போக்குவரத்து நெரிசல் மிக்க நகரமும் தொழில்-நிருவாக மையமுமாகும். இதன் அருகில் யாங்கிட்சி ஆற்றுப் பாலமும் ஆன் ஆற்றுப் பாலமும் கட்டப்பட்டிருப்பதுடன், இரு பெரும் இருப்புப்பாதைப் பாலங்களாகவும் அவை பயன்படுகின்றன. நீண் காலந்தொட்டே ஊகான் உருக்குத் தொழிற்சா களுக்குப் பெயர் பெற்ற நகரமாயிருந்து வருகிறது. இக்காலத்தில் உலோகத் தொழிற்சாலைகள் தொடர்பான தொழில்களின் மையமாகவும் இந்நகரம் திகழ்கிறது. மத்திய சீனாவின் துணிமணிகள் நெய்வதில் முதன்மை பெற்றுள்ள ஊகான், மென்மையான செய்பொருள்களின் தொழிற்சாலைகளையும் இரண்டு இருப்புப்பாதை ஆலைகளையும் கொண்டுள்ளதுடன், வெடிகுண்டுகள் உற்பத்தி செய்யப்படும் முக்கிய நகரமாகவும் திகழ்கிறது.

வரலாற்றின் அடிப்படையில் நோக்கினால், இந்நகரம் பல்வேறு புரட்சி இயக்கங்களின் விளைநிலமாக இருந்து வந்துள்ளது. சீனக்குடியரசு உருவாகக் காரணமான 1911-ஆம் ஆண்டின் சீனப்புரட்சி இங்கிருந்த உருக்குத் தொழிற்சாலைப் பணியாளர்கள் மூலமாகவே தோன்றியது. மீண்டும் 1920-இல் பொதுவுடைமைக் கட்சிக்காரர்களுக்கும், தேசியவாதிகளுக்கும் இடையே அரசியல் மோதல் ஏற்பட்டதும் இங்குத்தான். இக்காலத்தில் ஊகான் இணையகம் புனரமைப்புத்திட்டத்தைச் செயற்படுத்திப் பொதுமக்களுக்குப் பயன்படும் பூங்காக்கள், பண்பாட்டு மாளிகைகள் போன்றவற்றை உருவாக்கிய இடமாகும். ஊகானின் ஒருபகுதியான ஆங்கௌ செய்பொருள் உற்பத்திக் கடும் வாணிகத்திற்கும், ஊசாங்கு கல்வி நிருவாகத்திற்கும், ஆன்யாங்கு பெருந்தொழில்களின் உற்பத்திக்கும் மையமாகத் திகழ்கின்றன.

ஊகானின் மக்கள் தொகை 46,32,000 ஆகும் (1980). இரா. அ.

**ஊகி**: தமிழில் கொங்குவேள் என்னும் புலவர் 'உதயணன் கதை' என்னும் பெயரில் காப்பிய இலக்கணம் நிரம்பிய சிறந்ததொரு நூலைச் செய்துள்ளார். பெருங்கதை எனவும் வழங்கப் பெறும் அந்நூல், வத்தவ நாட்டு மன்னனாகிய உதயணன் வரலாற்றினைக் கூறுகிறது. உதயணன் அமைச்சர்களுள் முதன்மையானவர் நால்வர். அவருள்ளும் சிறப்புமிக்க அமைச்சனாக விளங்கியவன் ஊகி என்பவன் ஆவான். இவன் அந்தண மரபில் தோன்றியவன். இவன் தாய் பரமசுந்தரி; தந்தை பிரமசுந்தரமுனிவர். இவர் உதயணனுக்குக் கலைகள் பல பயிற்றிய ஆசிரியர் ஆவார். ஊகி அறிவாற்றலும் சூழ்ச்சித் திறனும் செயல் மேம்பாடும் மிக்கவன். இவன் தன் மன்னனாகிய உதயணனோடு இளமையில் ஒருங்கே கற்கும் வாய்ப்பினைப் பெற்றான். அதனால், வில்வித்தை முதலிய மன்னர்க்குரிய கலைகள் பலவற்றையும்கற்று, அவற்றில் தேர்ச்சி மிக்கவனாகத் திகழ்ந்தான். இவன் பொருள்களையும் செயல்களையும் பகுத்துணர்ந்தறியும் ஆற்றல் மிக்கிருந்தமையால் 'பாகியல் உள்ளம்' பெற்றவன் என்றும், தவ ஆற்றல்உடையவன் என்பதனால் 'படிமம் தாங்கியவன்' என்றும் பாராட்டப் பெற்றுள்ளான். மேலும், இவன் நிகழ்வது உணரும் திறன் பெற்றிருந்தமையால், 'ஆகிய அறியும் அரும்

பெறல் சூழ்ச்சி'யன் என்றும், இவனது சூழ்ச்சி ஊறுபடுவது இல்லாமையால், 'ஊறில் சூழ்ச்சி யூகந்தராயன்' என்றும், சிறந்த ஒழுக்கமுடையவனாதலால், 'ஒழுக்கியல்வாதி யூகி' என்றும் சிறப்பித்துக் கூறப் பெற்றுள்ளான். இவன் உதயணனுக்கு உயிர்த் தோழனாக விளங்கிப் பலவகையிலும் துணையாக அமைந்தான். உதயணனுக்கும் ஊகிக்குமிடையிலமைந்த நட்பினை, 'உரையினும் உடம்பின் வேறெனின் அல்லது, உயிர் வேறில்லாச் செயிர்தீர் சிறப்பு' (பெருங். இலாவாண. தேவியை. 164,165) உடையது என்று பெருங்கதை சிறப்பித்துக் கூறுகிறது.

தன் மன்னன் பிரச்சோதனன் என்னும் அரசனால் வஞ்சமாகச் சிறைப்படுத்தப்பட்டபோது, அவன் அச்சிறையினின்று மீள்வதற்கும், இழந்த நாட்டினைத் திரும்பப் பெறுவதற்கும் இவனது முயற்சியே பெருங் காரணமாக அமைந்தது. 'என் மன்னனை வஞ்சமாகப் பிடித்து வரச் செய்த அரசன் மகளை, அவள் தந்தை அறியாதவாறு கொண்டுவரும்படி செய்வேன்' என்பது போன்ற சூளுரைகளைக் கூறித் தன் அறிவுத் திறத்தால் அவற்றை நிறைவேற்றி உதயணனுக்கு நன்மை புரிந்தான். இவனுடைய திறமைகளை உணர்ந்த பிரச்சோதன மன்னன் இவன்பால் கொண்ட மாறுபாடுகளை மறந்து, இறுதியில் நட்பாகிச் சிறப்புச் செய்தான். பிரச்சோதன மன்னனின் பதினாறு அமைச்சர்களுள் ஒருவனாக விளங்கிய சாலங்காயனொடு ஊகி வாதிட்டு வென்றான்.

தான் முதன்முதலாகப் பெற்ற சேதி நாட்டினை உதயணன் தன் உயிர்த்தோழனாக விளங்கிய ஊகிக்கிச் சீவிதமாக வழங்கினான். ஊகந்தராயன், ஊகந்தராயணன், ஊகி என்னும் பெயர்களால் இவன் வழங்கப்பெற்றான். பிரச்சோதனன் இவனுடைய சிறப்பினை விளக்கும் போது, 'நட்பின் மாட்சியும் கல்வியது அகலமும், பண்பின் தொழிலும் படைத் தொழில் மாண்பும், காயுமாந்தராயினும் யாதும், தீயவை கூறப்படாத திண்மையும் இவற்கு அலது இல்லை' (பெருங். நரவாண.) என்று கூறிப் பாராட்டியுள்ளான்.

பிரச்சோதன மன்னன் ஊகியை உதயணனின் நாட்டிற்கு அனுப்பியபோது, மலையினின்றும் புறப்பட்டுச் செல்லும் பேரியாறு போல ஊகி சென்றான் என்பதனைக் கொங்குவேளிர், 'வேந்துறை முதுநகர் வியன்துறையாகப், போந்து கடல் மண்டும் புண்ணிய நீர்த்துறைப் பேரியாறு என்ன… ……புக்கனன்' என்று சிறப்பித்துக் கூறியுள்ளார்.

ஊகியின் சிறப்புணர்ந்த சாத்தனார் தமது மணிமேகலையில் இவனைப் பற்றிய செய்தி ஒன்றினை உவமையாக்கியுள்ளார். அமுதசுரபியினைப் பெற்ற மணிமேகலை, அதன் சிறப்பினை அறவண அடிகள் கூறக்கேட்டறிந்தனள். பின்னர் அவள் துறந்து பிக்குணிக்கோலம் பூண்டு அப்பாத்திரத்தோடு தெருவினை அடைந்தாள். அதனைக் கண்ட ஊர்க்குறுமாக்களும், விடர், தூர்த்தர் ஆகியோரும் துன்பமுற்றுச் சூழ்ந்தனர். இத்துன்பத்திற்கு உவமை கூறவந்த சாத்தனார் ஊகி வேற்றுருக்கொண்டபோது மக்கள் அடைந்த துன்பத்தினைக் கூறியுள்ளார். அது வருமாறு: கோசாம்பி நகரத்தரசனான உதயணனைப் பிரச்சோதனன் என்னும் அரசன் சாலங்காயனன் என்னும் தன் அமைச்சனின் சூழ்ச்சியால் வஞ்சகமாகப் பிடித்துச் சிறைப் படுத்தினான். தன் அரசனைச் சிறை நீக்குவதற்காகத் தலைநகரமாகிய உச்சயினி நகரத்தில் ஊகி வேற்றுருவம் கொண்டு வீதியை அடைந்தபோது அதனைக் கண்ட அந்நகர மக்கள் பலரும் துன்புற்றுச் சூழ்ந்து கொண்டனர் (மணிமேகலை. ஆதிரை. பிச்சை. 55–66). அ.மா.ப.

**ஊகி இந்தியர்** வட அமெரிக்காவில் வாழும் தனித்தன்மை பெற்ற பழங்குடிகளுள் ஓரினத்தவர். இவர்கள் ஈல் ஆற்றின் (Eel River) வடக்குப் பகுதியிலிருந்து தென் பகுதி வரை பரவியுள்ள கலிபோர்னியப் பகுதியில் வாழ்கின்றனர். ஊகி இந்தியர் (Yuki Indians) நீண்ட தலையை உடையவர்கள்; குள்ளமானவர்கள்; புடைத்த உடலமைப்பைக் கொண்டவர்கள்.

இவர்களின் பெயரான 'ஊகி' என்பதற்குப் 'புதுமையானவர்கள்' என்பது பொருள். குறைந்த எண்ணிக்கையிலே வாழும் இவர்கள் ஊகி மொழிக் குடும்பத்தை சார்ந்த மொழியைப் பேசுகின்றனர். இம்மொழி சில முதுகுடிகளால் மட்டுமே பேசப்படுகிறது. ஊகி இந்தியப் பகுதியில் வாழும் கரையோர ஊகி (Coast Yuki), ஊச்னொம் (Huchnom), வாப்போ (Wappo) முதலான மண்ணின் மைந்தர்கள் (Autochthon) இம்மொழியைப் பேசும் மற்றப் பழங்குடிகளாவர். இவர்கள் குறைந்த அளவில் ஆடை அணிபவர்கள்; உடலின் பெரும் பகுதியைப் பச்சை குத்தி அலங்கரிப்பர்.

ஊகி இந்தியர்கள் வேட்டையாடியும் காட்டுப் பொருள்களைச் சேகரித்தும் மீன் பிடித்தும் சிறு அளவில் தோட்டப்பயிர்களை விளைவித்தும் வாழ்ந்து வருகின்றனர்.

ஊகியினரின் திணைநிலப்பகுதியில் வெள்ளையர்களின் ஆதிக்கம் மேலோங்கத் தொடங்கியது முதலில் இருவரிடையேயும் அவ்வப்போது சண்டைகள் மூண்டன. இவர்களது சமயச் சடங்குகளில் தலையை வைத்துப் படைத்தல் முதன்மையானதால் போரில்

எதிரிகளின் தலையை வெட்டிக் கொண்டு வருவர். 'தாய்க்கோமல்' (Taikomol) என்னும் மனித உருவத்தையே தங்களின் இன வழிபாட்டு மரபாகக் கொண்டுள்ளனர். இறந்தவர்களைக் கூடையிலிட்டு புதைக்கும் வழக்கத்தினைக் கொண்டவர்கள். ஊகி இந்தியர்களின் வாழ்வில் விழாக்களும் சடங்குகளும் மிகுதியாக இடம் பெறுகின்றன. இவர்களிடையே ஆண்டு தோறும் நடைபெறும் விரயச் சடங்கு(Potlatch) குறிப்பிடத் தக்கது. இச்சடங்கில் ஒவ்வொருவரும் இந்த விழா நாளன்று தங்களினத்தவர்களை அழைத்து விருந்து கொடுத்து அன்பளிப்புகளைத் தருவர். இது ஒவ்வொருவரின் தகுதியைக் காட்டுவதற்காக நடத்தப்படுவதாகும்.

இவர்களிடையே காணப்படும் எண்மடிப் பகுப்புடைய (Octonary) எண்ணும் முறை புதுமையானது. எண்ணிக்கையின் போது இவர்கள் விரலையும் விரலிற்கு இடையேயுள்ள இடத்தையும் கணக்கிட்டு 100 வரையிலான எண்ணிக்கையை 64க்குள் அடக்குவர்.

சி.ப.

**ஊகித்தல்** ஒன்று அல்லது இரண்டு உரைகளிலிருந்து ஒரு முடிவை ஊகித்தறிதல். இந்த முடிவு உரையிலிருந்து வேறுபட்டு இருக்க வேண்டும். இத்தகைய ஊகித்தலை (Inference) எழுத்து வடிவில் அமைக்கும் பொழுது இது வாதமாக அமைகிறது.

**ஊகித்தலின் வகைகள்:** ஊகித்தல் விதி தரு ஊகித்தல், தொகுப்பாய்வு முடிவு ஊகித்தல் என இரு வகைப்படும். ஊகித்தலின் முடிவு முன் உரையைவிடக் குறுகியதாகவோ அதற்குச் சமமாகவோ அமைந்திருக்கும். விதிதரு ஊகித்தலில் (Deductive Inference) பொது உரையிலிருந்து ஒரு தனி அல்லது தனிப்பட்ட கருத்துத் தெரிய வரும். விதிதரு ஊகித்தல் நேரடி அல்லது உடனடி ஊகித்தல் (Immediate Inference), இடைப்பட்ட ஊகித்தல் என இருவகைப்படும். உடனடி ஊகித்தல் என்பது பொதுவான ஒரு முன் உரையிலிருந்து குறிப்பிடும் செய்தி தெரிய வருவதாகும். சான்றாக, எல்லா ஆசிரியர்களும் கற்பதில் விருப்பமுள்ளவர்கள் என்ற உரையிலிருந்து, சில ஆசிரியர்கள் கற்பதில் விருப்பமுடையவர்கள் என்பதை ஊகித்தறியலாம்.

இடைப்பட்ட (Mediate) ஊகித்தல் என்பது இரண்டு முன் உரைகளிலிருந்து ஒன்றை ஊகித்தறிதல். சான்றாக, எல்லாவித அழகுள்ள பொருள்களும் மகிழக் கூடியன; தாமரை அழகுள்ள பூ; ஆகையினால் தாமரையும் மகிழ்தற்குரியது.

தொகுப்பாய்வு முடிவு ஊகித்தல் என்னும் வகை உய்த்துணர்வு ஊகித்தலுக்கு நேர்மாறானது. இதன்முடிவு முன் உரையை விடப் பெரிதாக இருக்கும். இராமன், கோவிந்தன், நடராசன் ஆகிய எல்லோரும் இறக்குந் தன்மையுடையவர்கள். இராமன், கோவிந்தன், நடராசன் எல்லோரும் மனிதர்கள். ஆகையினால் எல்லா மனிதர்களும் இறக்கும் தன்மையுடையவர்கள். மில் (Mill) என்பாரும் பெயின் (Bain) என்பாரும் நேரடியான ஊகித்தல் சட்டப்படி செல்லாதது என்கிறார்கள். இத்தகைய ஊகித்தலின் முடிவில் எவ்வகைப் புதிய உண்மையான கருத்துமில்லை. மேலும், ஏற்கனவே கூறியதே திரும்பவும் கூறப்படுகிறது. கூறிய அதே கருத்து அல்லது அந்தக் கருத்தின் பகுதி மீண்டும் கூறப்படுகிறது. இவ்வாறு மில் கூறுகிறார். இந்த முடிவும் சரியன்று. ஏனென்றால் முழுவதும் புதிதான முடிவு பெறுதல் ஊகித்தலின் நோக்கமன்று. மறைந்து கிடக்கின்ற உண்மையை முன் உரையிலிருந்து முடிவுரையில் வெளிப்படுத்துதலே போதுமானது. எடுத்துக்காட்டாக, எல்லாப் பொருள்களும் அழியக் கூடியவை என்பதிலிருந்து ஆப்பிள், ஆரஞ்சு ஆகியவையும் அழியக் கூடியன; ஒரு பொருளும் நிலையுள்ளதன்று என்பது தெரிகின்றது.

**வெளிக் கொணர்தல்:** வெளிக் கொணர்தல் (Education) மூலம் முன் உரையிலிருந்து பல்வேறு எழுவாய் பயனிலைகளையுடைய முடிவுகளை ஊகித்துக் கொள்ளலாம். அவையாவன: 1) நிலைமாற்றம் (Conversion), 2) ஒன்றை நோக்கி மற்றொன்றைத் திருப்புதல் (Obversion), 3) எதிர்மறை நிலை (Contraposition),4) தலைகீழ்த் திருப்புதல் (Inversion)

**நிலை மாற்றம்:** ஓர் உரையிலிருந்து மற்றோர் உரைக்கு (அதாவது, அதே உண்மையும் விலை மதிப்புமுள்ள) மாற்றம் செய்வது. இங்கே எழுவாய் பயனிலை தம்முள் மாறி அமையும். இதற்குச் சில விதிகள் உண்டு. முன் உரையிலுள்ள எழுவாய், பயனிலை ஆகிய இரண்டும் நிலைமாற்றத்தால் பயனிலை எழுவாயாகவும் எழுவாய் பயனிலையாகவும் மாறும். எ-டு. சில இந்தியர்கள் படித்தவர்கள்; படித்தவர்கள் சிலர் இந்தியர்கள்.

முன் உரையிலுள்ள தன்னியல்பு மாறக் கூடாது. முன் உரை இனத்தில் முழுமையையும் பற்றிக் குறியாமல் சிலவற்றைப் பற்றி மட்டுங் குறிக்கிறதாக இருந்தால், நிலைமாற்றம் செய்யும் பொழுது அதே போல் சிலவற்றைப் பற்றி மட்டும் குறிக்க வேண்டும். மேலும், முன் உரை எதிர்மறையாக இருந்தால் நிலைமாற்றம் செய்யும் பொழுதும் அப்படியே இருக்க வேண்டும். முன் உரையில் எழுவாயோ பயனி

லையோ வழங்கப்படாவிட்டால், நிலைமாற்றத்தி லும் அது வழங்கப்படக்கூடாது.

நிலைமாற்றம் எளிமையான நிலைமாற்றம் (Simple Conversion) என்றும், வரையறை செய்யப் பட்ட நிலைமாற்றம் (Conversion by Limitation) என்றும் இருவகைப்படும்.

ஒன்றை நோக்கி மற்றொன்றைத் திருப்புதல்: 1. ஒன்றைநோக்கி மற்றொன்றைத் திருப்பும்பொழுது எழுவாய் அப்படியே இருக்கும்; ஆனால் பயனிலை முன் உரைக்கு நேர்மாறானதாக அமையும். 2. உரை எதிர்மறையாக அமையும்; ஆனால் மாறாது. எ-டு. எல்லா ஆசிரியர்களும் கடினமாக உழைப்பவர்கள். ஆசிரியர்கள் யாருமே சோம்பேறியல்லர்.

எதிர்மறை நிலை: இதில் எழுவாய் முன் உரை யிலுள்ள பயனிலைக்கு எதிர்மாறானது. அதே போல் பயனிலை முன் உரையின் எழுவாய்க்கு எதிர்மாறா னது. எ-டு. எல்லா உயிரினங்களும் அழிவு உடையன; அழிவில்லாதவை எவையும் உயிரினங்கள் அல்ல. எதிர்மறை நிலை என்பது இரட்டை முறை உடை யது. அதாவது, ஒன்றை நோக்கி மற்றொன்றைத் திருப்புதலும் நிலை மாற்றமும் சேர்ந்தது. ஆகை யினால் எதிர்மறை நிலை வேண்டுமென்றால் முதலில் ஒன்றை நோக்கி மற்றொன்றைத் திருப்ப வேண்டும். பின்னர், நிலை மாற்றம் செய்ய வேண்டும். எ-டு. எல்லா மனிதர்களும் இறந்து விடுவார்கள். ஒருவரும் இறக்காமலில்லை. ஆகையினால் இறவாமல் இருப்ப வர் மனிதர் அல்லர்.

தலைகீழ்த் திருப்புதல்: இது பகுதி மாற்றம், முழுதும் மாற்றம் என இருவகைப்படும். பகுதி மாற்றத்தில் எழுவாய் முன் உரையில் இருப்பதைவிட எதிர்மாறானது; பயனிலையில் மாற்றமில்லை. ஆனால், முழு மாற்றத்தில் எழுவாயும் பயனிலையும் முன் உரையில் இருப்பதை விட எதிர்மாறாக அமைந் திருக்கும். எ-டு. எல்லாப் பௌதிக வல்லுநர்களும் கணித மேதைகள் ஆவர்; சில பௌதிக வல்லுநரல் லாதவர் கணித மேதைகள் ஆவர்; எல்லாப் பௌதிக வல்லுநரல்லாதவரும் கணித மேதைகளல்லர்.

இடைப்பட்ட ஊகம்: நேரடி ஊகம் ஓர் உரையிலி ருந்து கிடைக்கும். ஆனால் இடைப்பட்ட ஊகம் இரண்டு உரைகளிலிருந்து கிடைக்கப் பெறுகிறது. இதனை முக்கூற்று முடிவு என்றும் கூறலாம். முக் கூற்று முடிவு (Sylogism) என்பது மூன்று உரைகள் கொண்டது. மூன்று சொற்களுள் (Terms) ஒவ்வொரு சொல்லும் இரண்டு தடவைகள் வரும். அவை முறையே பெரிய சொல் (Major term), சிறிய சொல் (Minor term), நடுச்சொல் (Middle term) என்று வழங்கப்படும். எ-டு. எல்லா மனிதர்களும் இறந்து விடுவார்கள்; இராமன் ஒரு மனிதன்; இராமனும் இறந்து விடுவான். மனிதர்கள் - நடுச் சொல், இராமன் - சிறிய சொல், இறந்து விடுவான்-பெரிய சொல்.

ஓர் உரை தனிப்பட்டதாக இருந்தால் முடிவும் அவ்வாறே அமைந்திருக்கும். எ-டு. சில மனிதர்கள் ஞானிகள்; எல்லா மனிதர்களும் பகுத்தறிவுவாதிகள்; சில பகுத்தறிவுவாதிகள் ஞானிகள். இரா.கோ.

துணை நூல்கள்:

**Prior, A. N.**, Formal Logic, Oxford, 1962.

**Ram Nath Sharma**, Logic, Kedar Nath Ram Nath & Co., Meerut, 1981.

**ஊகோசுலேவியா**: ஐரோப்பாவின் தென் நடுப் பகுதியில் நடுத்தரைக் கடலை ஒட்டி அமைந்துள்ள 255, 804 ச. கி. மீ. பரப்பளவுள்ள ஒரு நாடு. இது அதன் அரசியலமைப்பில் சமநிலைக் கூட்டாட்சிக் குடி யரசாகிய ஊகோசுலேவியா (Socialist Federal Republic of Yugoslavia) என்று சொல்லப்படுகிறது.




ஊகோசுலேவியா

இதில் பண்டைய கிரேக்க, உரோமானிய, பைசாண் டிய, மேற்கத்திய, நடுவண் ஐரோப்பியப் பண்பாட்டு மரபுகள் கலந்து காணப்படுகின்றன; இதன் மக்கள் இசுலாவிய (Slavic), கிழக்கத்திய, மேற்கத்திய இனமக் கள் கலந்த ஒரு கலப்புச் சமூகமாக இருக்கின்றனர். இக்கால ஊகோசுலேவிய நாடு முதல் உலகப் போர்

முடிவுற்றபோது 1918-ஆம் ஆண்டில், பழைய ஆசுத்திரியா - அங்கேரிப் பேரரசின் சில பகுதிகளும், அதன் எல்லைகளிலிருந்த சில நாடுகளின் பகுதிகளும் ஒன்றாக இணைக்கப்பட்டபோது தோன்றிய புதிய நாடாகும். இந்நாட்டில் 1921-ஆம் ஆண்டில் பிரிட்டனில் இருப்பதுபோன்று அரசியலமைப்புக்குட்பட்ட முடியாட்சி (Constitutional Monarchy) அமைக்கப்பட்டது. இரண்டாம் உலகப் போரில் (1939 - 45) இந்நாடு செருமானிய நாசிப்படைகளால் தாக்கப்பட்டு மிகவும் அல்லலுற்றது. அப்போது இந்நாட்டின் 15 மிலியன் மக்களுள் ஏறக்குறைய இரண்டு மிலியன் மக்கள் உயிரிழந்தனர்; பல்வேறு கட்சிகளுக்கிடையே நடந்த உள்நாட்டுப் போரினாலும் பெருமளவு மக்கள் கொல்லப்பட்டனர். இறுதியில் ஊகோசுலேவியப் பொதுவுடைமைக் கட்சித் தலைவராகிய திட்டோ (Tito) தமது படைகளினுதவியால் நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றினார். இந்நாடு 1945-ஆம் ஆண்டில் ஒரு கூட்டாட்சி மக்கள் குடியரசாக (A Federal People's Republic) அறிவிக்கப்பட்டது. இரண்டாம் உலகப் போருக்குப் பின் இது சோவியத்து உருசியாவின் தலைமையிலான பொதுவுடைமை நாடுகளின் அணியில் (Soviet Bloc) இருந்தது; ஆனால், 1948-ஆம் ஆண்டில் ஊகோசுலேவியா பொதுவுடைமைக் கட்சியானது சோவியத்து அணியிலிருந்து விலக்கப்படவே, இந்நாடு சோவியத்து ஆதிக்கத்தினின்றும் விடுபட்டுச் சுதந்திரமான கொள்கைகளை உள்நாட்டு, வெளிநாட்டுத் துறைகளில் உருவாக்கிக் கடைப்பிடித்து வருகிறது. திட்டோவின் ஆட்சிக்குப் பிறகு அந்நாட்டில் தலைமை அதிகாரம் கூட்டுத் தலைமை முறையினால் (Collective Presidency) கையாளப்படுகிறது. இதன் தலைநகரம் பெல்கிரேடு (Belgrade) ஆகும்.

உறுப்பு மாநிலங்கள்: ஊகோசுலேவியக் கூட்டாட்சியில் செர்பியா (Serbia), குரோசியா (Croatia), பாசுனியா - எர்சுகோவினா (Bosnia-Hercegovina), சுலோவேனியா (Slovenia), மாசிடோனியா (Macedonia), மாண்டி நிகிரோ (Montenegro) முதலிய ஆறு குடியரசுகளும், கொசோவோ (Kosovo), வோசுவோடினா (Vojvodina) என்னும் இரு தன்னாட்சி மாகாணங்களும் உறுப்பு மாநிலங்களாக அமைந்துள்ளன; இரு தன்னாட்சி மாகாணங்களும் செர்பியாவின் கட்டுப்பாட்டில் உள்ளன. இந்நாட்டின் மேற்கெல்லையாக இருப்பது நடுத்தரைக் கடலின் ஒரு பகுதியாகிய ஏட்ரியாட்டிக்குக் கடல் (Adriatic Sea) ஆகும்.

போருக்குப் பிற்பட்ட காலத்திய 3 அரசியலமைப்புகள்: போர் முடிந்தவுடன் வரையப்பட்டு, 1946-ஆம் ஆண்டில் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட முதலாம் அரசியலமைப்பு, 1936-ஆம் ஆண்டின் உருசிய அரசியலமைப்பைப் பெரும்பாலும் முன்மாதிரியாகக் கொண்டு வரையப்பட்டது. இதன்படி ஊகோசுலேவியா ஒரு நடுவண் அரசாங்கத்தால் ஆளப்படுகின்ற ஒரு பொதுவுடைமை அரசு என அறிவிக்கப்பட்டது. தொழிற்சாலைகளின் நிருவாக விதி



பெல்கிரேடிலுள்ள துறைமுகம்

களில் சில மாறுதல்கள் செய்யப்பட்டன. தளபதி திட்டோ குடியரசின் தலைவரானார். கூட்டாட்சியின் சட்டமன்றமானது தேசிய இனங்களின் மன்றம் (Council of Nationalities) எனவும், உற்பத்தியாளர் மன்றம் (Council of Producers) எனவும் ஈரவைகளை உடையது. தேசிய இனங்களின் மன்றம் கூட்டாட்சியிலுள்ள உறுப்புக் குடியரசுகளின் பிரதிநிதியாக இருந்தது; மற்ற மன்றத்தின் உறுப்பினர்கள் பல்வேறு பொருளாதாரக் குழுக்களினால் மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இந்த அரசியலமைப்பில் தொழிலாளரின் சுய நிருவாகம் என்ற கருத்துக் கையாளப்பட்டது.

இரண்டாம் அரசியலமைப்பு, 1963: இதில் தொழிலாளரின் சுயநிருவாகம் என்ற கருத்துக் கைவிடப்பட்டு, அதற்கு மாறாகச் சமூகச் சுயநிருவாகம் (Social Self-Management)என்ற கருத்துக் கையாளப்பட்டது. நாட்டின் பெயரிலும் கூட்டாட்சி மக்கள் குடியரசாகிய ஊகோசுலேவியா என்பது நீக்கப்பட்டு, சமநிலைக் கூட்டாட்சிக் குடியரசாகிய ஊகோசுலேவியா என்ற பெயர் ஏற்றுக் கொள்ளப்பட்டது. மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட ஐந்து மன்றங்களுள்ள ஒரு புதிய சட்டமன்றம் அமைக்கப்பட்டது. இதில் முந்தைய அரசியலமைப்பிலுள்ள தேசிய இனங்களின் மன்றமும் அடங்கும். மற்ற மன்றங்கள் பொருளாதார, சமூக, பண்பாட்டுக் குழுக்களின் பிரதிநிதிகளாகும். நாட்டின் பொதுவுடைமைக் கட்சியானது ஆட்சித்துறையினின்றும் பிரிக்கப்பட்டது. தளபதி திட்டோவைத் தவிர வேறு எவரும் ஒரே சமயத்தில் அரசாங்கத்திலும் கட்சியிலும் உயர் பதவிகளை ஏற்றிருத்தல் கூடாது என்ற விதி பின்பற்றப்பட்டது. 'சமநிலைக் கோட்பாடு சார்ந்த சட்டமுறையை'ப் (Socialist Legality) பாதுகாக்கும் பொருட்டு ஓர் அரசியலமைப்பு நீதிமன்றம் நிறுவப்பட்டது. இவ்வரசியலமைப்புக்கு 1967-இலும் 1971-இலும் செய்யப்பட்ட திருத்தங்களின் விளைவாகத் தேசிய இனங்களின் மன்றத்துக்குச் சில கூடுதல் உரிமைகளும், உறுப்புக் குடியரசுகளுக்குக் கூடுதலான அதிகாரங்களும் கிடைத்தன. தலைவராகிய திட்டோ பதவி விலகினால் அல்லது மறைந்து விட்டால், ஒவ்வொரு கூட்டாட்சி உறுப்பிலிருந்தும் சம எண்ணிக்கையில் அமைக்கப்பட்ட ஒரு கூட்டுத் தலைமை முறை (Collective Presidency) நிறுவப்படுதல் வேண்டும்.

மூன்றாம் அரசியலமைப்பு, 1974: இதுவே இப்போது நடைமுறையிலிருக்கிறது. இது நடுத்தர வகுப்பாருடைய நலனைப் பாதுகாக்கிற பிரதிநிதித்துவக் குடியாட்சி முறைக்கு மாறானது என்று கூறப்பட்டது. இது பழைய கூட்டாட்சி அமைப்பைத் தொடர்ந்து இருக்குமாறு செய்தது; இதில் ஆறு குடியரசுகளும் இரு தன்னாட்சி மாகாணங்களும் இருக்கின்றன. இவை ஒவ்வொன்றின் அரசியலமைப்பும் கூட்டாட்சி அரசியலமைப்பை ஒத்து இருக்கிறது.

தேர்தல் முறை: ஊகோசுலேவியாவில் கூட்டாட்சிச் சட்டமன்றத்திலிருந்து கீழே உள்ளாட்சி மன்றம் வரைக்கும் அரசியலுரிமைக் குழுக்களின் வாயிலாகத் (Delegations) தேர்தல் நடைபெறுகிறது. பல்வேறு வகையான தொழிலாளர்களிடையே இருந்து வரும் அரசியலுரிமைக் குழுக்கள் ஒவ்வொன்றும் ஓர் உறுப்பினரைச் சட்டமன்றத்துக்குப் பிரதிநிதியாக அனுப்புகிறது. இவ்வாறு தன்னால் அனுப்பப்பட்ட பிரதிநிதியை அரசியலுரிமைக்குழு திரும்ப அழைத்துக் கொள்ளவும் (Recall) உரிமை பெற்றுள்ளது. உள்ளாட்சி நிறுவனங்கள், உறுப்புக் குடியரசுகள், மாகாணங்கள் ஆகியவற்றின் சட்டமன்றங்கள் ஒவ்வொன்றும் மும்மூன்று அவைகளையுடையது. 1. சமூக நலத் துறையின் பணியாளர்கள், 2. குடியானவரும் பண்ணைத் தொளிலாளிகளும், 3. (ஆசிரியர், வழக்கறிஞர் போன்ற) தாராளத் தொழில் துறையிலுள்ளோர், 4. படை வீரர், பொதுவுடைமை அதிகாரிகள் சங்கம், குடிமைப் பணியாளர்கள் (Civil Servants) முதலிய நான்கு முக்கிய தொழிலாளர் குழுக்களின் உறுப்பினர் அடங்கிய இணைக்கப்பட்ட தொழிலாளர் மன்றம் (Chamber of Associated Labourers) என்ற ஓர் அமைப்பு அமைக்கப்பட்டுள்ளது. உள்ளூர்ச் சமுதாயங்களின் மன்றம் என்பது (Chamber of Local Communities) வெவ்வேறு நிலத் தொகுதிகளிலிருந்து உள்ளூர்க் குடிமக்களால் அமைக்கப்பட்டுள்ளது. பொதுவுடைமையாளர்கள் (Communists), சமநிலையாளர் கூட்டணி(Socialist Alliance), தொழிற்சங்கங்கள், போர்வீரர், இளைஞர், பெண்கள் முதலியோரின் அமைப்புகளினின்றும் சமூக - அரசியல் மன்றம் (Socio-Political Chamber) என்ற ஓர் அமைப்பு உருவாக்கப்பட்டது.

சட்டமன்றம்: ஊகோசுலேவியக் கூட்டாட்சிச் சட்டமன்றம் பெல்கிரேடில் கூடுகிறது. இதில் குடியரசுகள், மாகாணங்கள் ஆகியவற்றின் மன்றம் (Chamber of Republics and Provinces), கூட்டாட்சி மன்றம் (Federal Chamber) என்னும் இரு மன்றங்கள் உள்ளன. குடியரசு - மாகாண மன்றத்தில் 88 உறுப்பினர்கள் உள்ளனர். ஆறு குடியரசுகளின் மன்றங்கள் ஒவ்வொன்றும் 12 உறுப்பினர்களையும், இரு மாகாண மன்றங்கள் ஒவ்வொன்றும் 8 உறுப்பினர்களையும் தேர்ந்தெடுக்கின்றன. கூட்டாட்சி மன்றத்தின் 220

உறுப்பினரும் உள்ளாட்சி மன்றங்களால் (மறைமுகத் தேர்தல் மூலம்) தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

**நிருவாக அரசாங்கம்:** ஒரு கூட்டாட்சி நிருவாகக் குழு (Federal Executive Council) நிருவாகப் பணிகளைச் செய்கிறது. இதன் பதவிக்காலம் 4 ஆண்டுகளாகும். இதில் உறுப்பினர்களாக இருப்பவர்கள் அந்தச் சமயத்திலேயே சட்ட மன்றத்தில் உறுப்பினராக இருத்தல் இயலாது. நிருவாகக் குழுவின்தலைவரே தலைமை அமைச்சராவார். கூட்டாட்சி நிருவாகக் குழுவே கூட்டாட்சிச் சட்டமன்றத்தில் சட்டங்களைத் தாக்கல் செய்து, கூட்டாட்சிச் செயலர்களை (அமைச்சர்களை) அமர்த்துகிறது.

**கூட்டுத் தலைமை** என்ற அமைப்பில் 6 உறுப்புக் குடியரசுகளாலும், 2 மாகாணங்களாலும் ஒவ்வோர் உறுப்புக்கும் ஒரே பேராளர் 5 ஆண்டுகட்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்; இதில் ஊகோசுலேவியப் பொதுவுடைமைக் கழகத்தின் தலைவர் அலுவல் காரணமாக (Ex-Officio) உறுப்பினராவர்; எந்த உறுப்பினரும் இரு தொடர்ச்சியான பதவிக் காலங்களுக்கு மேல் தேர்ந்தெடுக்கப்படுதல் கூடாது. ஊகோசுலேவியக் குடியரசுக்கு ஒரு தலைவரும் தேர்தெடுக்கப்படுகிறார். அரசியலமைப்புச் சட்டம் தளபதி திட்டோவை வரையறை இல்லாத கால அளவுக்குத் தலைவராகத் தேர்ந்தெடுப்பதற்கு (பிரிவு 333-இல்) அதிகாரம் வழங்கியது. அதன்படி திட்டோ 1974-இல் தேர்ந்தெடுக்கப்பட்டார். குடியரசுத் தலைவருடைய சிறப்பு அதிகாரங்களுள் (Prerogatives) ஒன்று, அவர் நாட்டின் படைகளுக்குத் தளபதியாக இருத்தலாகும்.

**சமூக - அரசியல் அமைப்புகள்:** ஊகோசுலேவிய உழைக்கும் மக்களின் சமநிலைக் கூட்டணி (Socialist Alliance of the Working People of Yugoslavia) என்ற அமைப்பு, நிலப்பிரிவுகளின் அடிப்படையில் அமைக்கப்பட்ட நாடு முழுவதற்குமான ஓர் அரசியல் நிறுவனமாக அதிகார அடிப்படையில் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.இவ்வமைப்பின் தலைமைக்குழு (Congress) 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை கூடுகிறது. இதனுடைய துணை நிறுவனமாகவும், கொள்கை உறுப்பாகவும் இருப்பது ஊகோசுலேவியப் பொதுவுடைமையர் கழகம் (League of Communists of Yugoslavia).இது 1919-இல் ஊகோசுலேவியச்சமநிலைத் தொழிலாளர் கட்சியாக (Socialist Workers' of Party Yugoslavia) நிறுவப்பட்டு,1920 முதல்1952 வரை ஊகோசுலேவியப் பொதுவுடைமைக் கட்சி என்று குறிக்கப்பட்டது. இதன் தலைமை உறுப்பு 'பிரசீடியம்' (Presidium) எனப்படும். இதன் உறுப்பினர்கள்உறுப்புமாநிலங்களிலிருந்து சம எண்ணிக்கையில் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். 'பிரிசீடியம்' ஒரு நிருவாகக் குழுவைத் தேர்ந்தெடுக்கிறது. இந்த அமைப்பு ஆறு குடியரசுக் கழகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதில் இரண்டு மிலியன் உறுப்பினர்களுக்கு மேல் இருக்கின்றனர். மற்றொரு முக்கியமான மக்கள் நிறுவனம் ஊகோசுலேவியத் தொழிற்சங்கங்களின் இணைப்பு (Confederation of Trade Unions of Yngoslavia) என்பதாகும். இது 1948-இல் நிறுவப்பட்டது. ஊகோசுலேவியச் சமநிலை இளைஞர் கழகம் என்பது (League of Socialist Youth of Yugoslavia) 4 முதல் 27 வரை வயதுடையவர்களை உறுப்பினர்களாகக் கொண்ட ஒரு நிறுவனம் ஆகும். இவை தவிரத் தேர்ச்சி மிக்க படைவீரர் கழகம், செஞ்சிலுவைக் கழகம் முதலிய அமைப்புகளும் இருக்கின்றன.

**நீதிமுறை:** கூட்டாட்சிச் சட்டமன்றத்தினால் 8 ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட 14 உறுப்பினர்களையுடைய ஓர் அரசியலமைப்பு நீதிமன்றம்(A Constitutional Court) அரசியலமைப்புச் சட்டத்துக்கு விளக்கம் அளிக்கக்கூடிய உயர்தர, சட்டவகையான அதிகாரத்தைப் பெற்றுள்ளது. இதன் உறுப்பினர்கள் மறு தேர்தலுக்கு உரியவரல்லர். இவர்கள் 8 உறுப்பு மாநிலங்களிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அமைப்பிலும் தேர்வு முறையிலும் இந்நீதிமன்றத்தை ஒத்த ஒரு கூட்டாட்சி நீதிமன்றம் (Federal Court) இருக்கிறது. இந்நீதிமன்றம் தன்னாட்சியுடைய பொருளாதார நிறுவனங்களுக்கிடையே எழும் வழக்குகளை ஆய்வு செய்து தீர்ப்பளிக்கிறது. இது பெரும் குற்ற வழக்குகளில் அளிக்கப்படும் தீர்ப்புகளை மறுஆய்வு செய்கிறது. இராணுவத்திற்குத் தனியான நீதிமன்றங்களிருக்கின்றன.

ஊகோசுலேவியப் படையானது இரண்டாம் போர்க் காலத்தில் பல படை அமைப்புகள் சேர்ந்த ஓர் அமைப்பு ஆகும். படையில் செய்ய வேண்டிய பணியின் காலம் கப்பல் படையில் 15 மாதங்களும், வானப்படையில் 18 மாதங்களும் என வரையறை செய்யப்பட்டது. படைகளுக்குச் சோவியத்து, அமெரிக்க நாடுகளில் செய்யப்பட்ட இக்காலக் கருவிகளும் ஊகோசுலேவியாவிலேயே செய்யப்பட்ட இக்காலக் கருவிகளும் அளிக்கப்பட்டுள்ளன. தேசியப் பாதுகாப்புப்படையில் வயது வந்த யாவரும் பணி செய்தல் வேண்டும். இரா . அ .

**கல்வி:** ஊகோசுலேவிய நாட்டில் உள்ள அனைத்துச் சிறுபான்மைக் குடியினரும் தத்தம் தாய் மொழியிலேயே கல்வி கற்கின்றனர். எடுத்துக்காட்டாக, வோசுவோடினா (Vojvodina) மாநிலத்தில் மட்டும் வெவ்வேறு சிறுபான்மை இனக் குழந்தைகளுக்கு 26 மொழிகளில் கல்வி வழங்கப்படுகிறது.

ஊகோசுலேவிய நாட்டுக் கல்வியின் குறிக்கோள்கள்: 1. குழந்தைகளிடத்தே அறிவுத் திறன்களையும் உடலால் உழைக்கும் ஆற்றலையும், சமுதாயப் பண்பாட்டு நெறிகளையும் வளர்த்தல், 2. கல்வியை ஆக்கப் பணிகளுடன் இணைத்துத் தனியொருவர் தேவையினையும் சமுதாயத் தேவைகளையும் நிறைவேற்றுதல், 3. சமுதாய வேலைகளில் தானே தனித்துச் செயற்படும் திறனை வளர்த்தல், 4. உடலுழைப்பை மதிக்கும் பண்பினை வளர்த்தல், 5. அனைவருக்கும் கல்வியில் சமவாய்ப்பு வழங்குதல், 6. வாழ்நாள் முழுதும் கல்வி கற்கும் வசதியினையும் ஒவ்வொரு தொழிலிலும் மேம்பாடு அடைவதற்கான வாய்ப்பினையும் அமைத்துத் தருதல் ஆகியன.

முன் தொடக்கப் பள்ளிகளில்(Pre Schools) குழந்தைகள் 3 அல்லது 4 வயதினில் சேருகின்றனர். இவ்வயதினருள் ஏறத்தாழ 25 விழுக்காட்டுக் குழந்தைகள் 1981-ஆம் ஆண்டில் பள்ளியில் சேர்ந்து பயின்றனர். நகர்ப்புறங்களில் 40 விழுக்காட்டுக்குழந்தைகள் முன் தொடக்கப்பள்ளிகளில் சேர்ந்துள்ளனர். முன் தொடக்கப் பள்ளிகளில் தரமான குழந்தைக் கல்வியானது பயிற்சி பெற்ற ஆசிரியர்களால் அளிக்கப்படுகிறது. முன்தொடக்கப் பள்ளிக் கல்வியின் ஒரு பகுதியாகக் 'குழந்தைப் பள்ளி' (Little School) உள்ளது. இப்பள்ளியானது முன் தொடக்கப் பள்ளிக் கல்விக்கும் தொடக்கப் பள்ளிக் கல்விக்கும் பாலமாக உள்ளது. குழந்தைப் பள்ளியில் அனைத்துக் குழந்தைகளும் கட்டாயமாகக் குறைந்தது 6 மாதங்கள் சேர்ந்து பயிலுதல் வேண்டும்.

ஊகோசுலேவியாவில் தொடக்கப் பள்ளிக் கல்வியானது (Primary School Education) கட்டாயமாக்கப்பட்டுள்ளது. தொடக்கப் பள்ளிகளில் குழந்தைகள் ஆறு வயதில் சேருகின்றனர். தொடக்கப் பள்ளிக் கல்வியின் கால அளவு மொத்தம் எட்டு ஆண்டுகள். ஏழில் ஐந்து பங்கு குழந்தைகள் தொடக்கப் பள்ளிக் கல்வியை இடையிலேயே கைவிடுவோர் (Drop - outs) ஆகின்றனர். படிப்பைப் பாதியிலேயே நிறுத்திவிடுவோரின் எண்ணிக்கையைக் குறைக்கச் சில சிறப்புக் கல்வித் திட்டங்களும் தொடக்கப் பள்ளிகளில் நடைமுறையில் உள்ளன. தொடக்கப்பள்ளிக் கல்வி முழுமையாகப் பெறாதவர்களுக்கு வயதுவந்தோர் தொடக்கக் கல்விமுறை (Adult Primary Education) உள்ளது. ஊனமுற்ற குழந்தைகளுக்குத் (Handicapped) தனிச் சிறப்புக் கல்வி வசதிகள் உள்ளன. ஏறத்தாழ, 1,600 தொடக்கப் பள்ளிகள் ஊகோசுலேவியாவில் உள்ளன. இப்பள்ளிகளில் இருமொழி வழிக் கல்வி (Bilingual Education) கற்பிக்கப்படுகிறது. தொடக்கப் பள்ளிகளில் ஆசிரியர் மாணவர் விகிதம் 1:30 ஆகும்.

இடைநிலைப் பள்ளிக் கல்வியானது (Secondary Education) மொத்தம் நான்கு ஆண்டுகள் வழங்கப்படுகிறது. இக்கல்வியானது முதல் இரண்டாண்டுகள் பொதுக் கல்வியாகவும், அடுத்த ஈராண்டுகள் ஏதாவதொரு தொழில் அடிப்படைக்கல்வியாகவும் அமைந்துள்ளது. பட்டப் படிப்புக் (Under Graduate) கல்வியானது கல்லூரிகளில் மொத்தம் நான்காண்டுகள் வழங்கப்படுகிறது. ஊகோசுலேவியாவில் இன்று 19 பல்கலைக் கழகங்கள் உள்ளன. இவற்றில் ஏழத்தாழ 300 ஆயிரம் மாணவர்கள் பயிலுகின்றனர். இவர்களுள் 40 விழுக்காட்டினர் பெண்களாவர். பல்கலைக் கழக அளவில் தொழில் நுட்பக் கல்வியில்தான் உயர்ந்த அளவு மாணவர்கள் பயிலுகின்றனர். ஏறத்தாழ 24 விழுக்காட்டினர் தொழில் நுட்பக் கல்வியில் சேர்ந்துள்ளனர். பொருளியலில் 20 விழுக்காட்டினரும், சட்டவியலில் 17 விழுக்காட்டினரும், மருத்துவக் கல்வியில் 7.5 விழுக்காட்டினரும், சமூக, தத்துவவியலில் 7 விழுக்காட்டினரும், உயிரியல், கணிதவியல் ஆகியவற்றில் 5.5 விழுக்காட்டினரும், வேளாண்மை, வனவியல் ஆகியவற்றில் 5 விழுக்காட்டினரும் சேர்ந்து பயிலுகின்றனர்.

முறைசாராக் கல்வியானது (Nonformal Education) 400 க்கும் மேற்பட்ட வயதுவந்தோர் கல்வி நிறுவனங்களில் வழங்கப்படுகிறது. இந்நிறுவனங்கள் 'தொழிலாளர்கள் பல்கலைக் கழகங்கள்' (Workers' Universities) எனச் சொல்லப்படுகின்றன. மேலும், முறைசாராக் கல்வியினை 200க்கும் மேற்பட்ட 'கல்வி மையங்கள்' (Educational Centres) வழங்குகின்றன. இம் மையங்கள் அனைத்தும் தொழிற்சாலைகளில் அமைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. தொழிலாளர் பல்கலைக் கழகங்கள் தொழில் தொடர்புடைய பல பயிற்சிகளைக் கற்பித்து வருகின்றன. இப்பல்கலைக் கழகங்கள் உயர்கல்வி நிறுவனங்களின் உதவியுடன் பயிற்சியில் தகுதி அடைந்தோருக்குச் சான்றிதழ்கள் வழங்குகின்றன. இச்சான்றிதழ்கள் பல்கலைக் கழகப் பட்டங்களைப் போல் மதிக்கப்பெறுகின்றன. தொழிற்சாலைகளில் அமைந்துள்ள கல்வி மையங்கள் வழங்கும் சான்றிதழ்கள் அதாவது, அந்தந்தத் தொழிற்சாலைகளில் அமைந்துள்ள கல்வி மையங்கள் வழங்கும் கல்விச் சான்றிதழ்கள் அந்தந்தத் தொழிற்சாலைகளில் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. முறைசாராக் கல்வி நிறுவனங்களும் மையங்களும் தன்னாட்சி முறைக் கல்வியினையும் (Self Management Education) வழங்குகின்றன. இக் கல்வியில் பணியாளர்களின் கடமைகள், உரிமைகள் ஆகியன பற்றி விரிவாக விளக்கப்படுகின்றன.

முன் தொடக்கப் பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர்கள் 5 ஆண்டுகள் இடைநிலைக் கல்வித் தகுதி

பெற்றவர்களாயுள்ளனர். இப்போது இத்தகுதியுடன் மேலும் ஈராண்டுகள் உயர்கல்வி பெற்றவர்களே முன் தொடக்கப் பள்ளிகளில் கற்பித்தல் வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகிறது. தொடக்கப் பள்ளிகளில் பணி யாற்றும் ஆசிரியர்கள் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி களில் ஈராண்டுகள் பயிற்சி பெற்றவர்களாயுள்ளனர். பெரும்பாலான ஆசிரியர்கள் பட்ட மேற்படிப்புப் பட்டத்துடன், முனைவர் (Ph.D.) பட்டமும் பெற்ற வர்களாயுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. கல்வி யியல், உளவியல் ஆகியவற்றில் சிறப்புப் பயிற்சி பெற்றவர்களும் தொடக்கப் பள்ளிகளில் பணிபுரி கின்றனர்.

பல்கலைக் கழகங்களில் விரிவுரையாளர்கள் மூன் றாண்டுகளுக்கே முதலில் பணியமர்த்தப்படுகின்றனர். பேராசிரியர்கள் ஐந்து ஆண்டுகளுக்கே முதலில் பணி யமர்த்தப்படுகின்றனர். இந்தக் காலத்திற்குப் பிறகு இதே பணிகளுக்கான விளம்பரம் செய்தித்தாள்களில் தரப்படுகிறது. அச்சமயம் பணியாற்றும் விரிவுரை யாளர் அல்லது பேராசிரியர் ஆகியோரின் அப் போதைய தகுதிகளை விட உயர்தகுதி பெற்றவர்கள் அப்பணிகளுக்குக்கிடைக்கவில்லையென்றால் மட்டுமே முன்னர்ப் பணிபுரிந்த விரிவுரையாளர் அல்லது பேராசிரியர் மீண்டும் அதே பணியில் அமர்த்துப்படு கிறார்.

பள்ளிப் பாடநூல்களைப் பல்கலைக் கழக ஆசிரி யர்களே பெரும்பாலும் எழுதுகின்றனர். மேனிலைப் பள்ளி ஆசிரியர்கள் சிலரும், தொழிற்சாலைகளில் பணியாற்றும் வல்லுநர்கள் சிலரும் கூடப் பாடநூல் கள் எழுதுவதில் ஆர்வம் காட்டுகின்றனர். பாட நூல்களை எழுதும் ஆசிரியர்கள் விளம்பரம் மூலம் தேர்வு செய்யப்படுகின்றனர். கல்வியியல் ஆய்வு பல் கலைக் கழகங்களிலும், சிறப்புக் கல்வியாய்வு நிறு வனங்களிலும் மேற்கொள்ளப்படுகிறது. ஆசிரியர் பயிற்சி, பணியிடைப் பயிற்சி ஆகியவற்றில் ஆய்வு நோக்குப் புகுத்தப்பட்டுள்ளது. எஸ்.த.

துணை நூல்கள்:

**Bezdanov, S.**, Associated Labour and Education, Mladost, Belgrade, 1978.

**Izvestaj, S.**, Report on the Structure, Problems and Politics of Education in Yugoslavia, Center Komunist, Belgrade, 1980.

***ஊச்சி இந்தியர்*** வட அமெரிக்கப் பழங்குடி களுள் ஒருகுடியினர். ஊட்சி (Yutci) என்னுஞ்சொல் தொலைவில் அமைந்த வாழிடம் என்னும் பொரு ளைக் குறிப்பதாகும், ஊச்சி இந்தியர்கள் (Yuchi Indians) தென்னசிப் (Tennessee) பகுதியையும் கார்கியப் (Georgia) பகுதியையும் தங்கள் பழைய வாழிடப் பகுதிகளாகக் கொண்டவர்கள்.

இவர்களின்ஊச்சி மொழியானது ஊச்சியன் (Uchean) என்னும் தனி வகையானதாகும். இருப்பினும் இது முசுகோகியன் (Muskhogean) மொழியுடன் உறவு உடையது என்றும் கூறுவர். ஊச்சி இந்தியர்கள் வாழ்ந்த பகுதிக்கு கி.மு. 1540-இல் வந்த எர்னண்டோ டி சோட்டோ (Hernando De Soto) என்பவர் இவர்களைச் சிசுகா (Chisca) என்று அழைத்தார். இவாசீ (Hiwassee) ஆற்றுமலைப் பகுதிகளில் மிகவும் தனித்து வாழ்ந்த இவர்கள் கிளர்ச்சி செய்யும் போர்வீரர்கள் போன்று காணப் பட்டனர். குடியேற்ற வெள்ளை இனத்தவர்களால் கட்டாயப்படுத்தப்பட்டு வெளியேற்றப்பட்ட ஊச்சி இந்தியர்கள், கி.பி. 1729-இல் சட்டகூச்சி (Chattahoo chee) ஆற்றுப் பகுதியில் குடியமர்த்தப்பட்டனர். இப் பகுதியில் ஏறத்தாழ நூறு ஆண்டுகள் ஒன்றி வாழ்ந்த இவர்கள் கி.பி. 1829-இல் ஆக்லகாமா (Oklahoma) பழங்குடிப் பகுதியில் குடியேறி வாழ்ந்தனர். இவர்கள் பல இந்தியப் பழங்குடிகளினிடையே வாழ்ந்து வந்த போதிலும் மொழியில் கலப்பு ஏற்படாமலும் தம் பழங்குடித் தன்மையில் மாற்றம் பெறாமலும் காணப் படுகின்றனர். ஆயிரத்திற்கும் சற்று மேலான எண்ணிக் கையில் வாழும் இவர்கள் ஆக்லகாமா நிலப் பகுதிகளில் தனித் தன்மையுடன் வாழ்ந்து வருகின்றனர். சீ.ப.

***ஊசல்*** என்பது ஊஞ்சலாடுவது பற்றி அமைந்த ஒரு சிற்றிலக்கியத்தைக் குறிக்கும். இச்சொல்லுக்கு 'அசைவு' என்பது பொருள். இதுவே அசைந்தாடு வதற்குப் பயன்படும் ஊஞ்சலைக் குறித்துப்பின், அது பற்றி வந்த இலக்கியத்தைக் குறித்து வழங்குகிறது, 'பூங்குழை யூசற் பொறைசால் காதின்' (பொருந.30), 'ஊசலூர்ந் தாட' (கலி.37), 'ஊச லாடு ஙபைங்கமுகு (சீவக. 68) என வரும் தொடர்கள் இங்கு நோக்கத் தக்கன. சிலப்பதிகார வஞ்சிக் காண்டத்துள் வரும் வாழ்த்துக் காதையில் 'ஊசல் வரிப்' பாடல்கள் 3 உள்ளன. கலம்பக உறுப்புகளுள் 'ஊசல்' என்ப தும் ஒன்று. பெண்பாற் பிள்ளைத் தமிழ்ப் பருவங் களில் 'ஊசற்பருவம்' உண்டு. தொல்காப்பியர் கருத்துப்படி இதனை 'விருந்து' என்னும் வனப்பில் அடக்குதல் சாலும். பிற்காலத்தே ஊசல் பற்றி எழுந்த இலக்கியம் தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களுள் (சிறு பிரபந்தங்கள்) ஒன்றாகக் கொள்ளப்பட்டது. ஊசல் (ஊஞ்சல்) விளையாட்டு மகளிர்க்கு உரியது. அவர்கள் ஊசல் ஆடுங்கால் தலைவனின் புகழ்பாடுவர். ஆசிரிய விருத்தம் அல்லது கலித்தாழிசையால் பாடல் அமைதல் வேண்டும்;

'சுற்றத்தாருடன் தலைவன் வாழ்க' என வாழ்த்து மாறு ஊசற்பொருள் அமையவேண்டும். பாடலின் இறுதி,'ஆடீர் ஊசல், ஆடாமோ ஊசல், ஆடுக ஊசல்' என முடியும். இதுவே 'ஊசலின்' பொதுவிலக்கணம். 'ஆசிரிய விருத்தம் கலித்தா ழிசையில், ஒன்றா ஒன் பான் தாழிசைப்போக்கிற்,சுற்றத் தளவில் சொல்வது ஊசல்' என்று பிரபந்த மரபியல் (10) இதன் இலக் கணம் கூறுகிறது. இதனை வெண்பாப்பாட்டியல் (செய்.23), நவநீதப் பாட்டியல் (செய்.25), சிதம்பரப் பாட்டியல் (மரபி. 6), இலக்கண விளக்கம் (845), தொன்னூல் விளக்கம் (276), முத்துவீரியம் (ஒழி. 161) ஆகிய இலக்கண நூல்களும் இயம்புகின்றன. நவநீதப்பாட்டியல் மட்டும் இதனைப் 'பொன்னூசல்' என்று குறிப்பிடுகிறது. சிலப்பதிகார 'ஊசல்வரி' நான் கடியின் மிக்குவந்த தாழிசைகளாலானது. திருவாச கத்தில் மணிவாசகப் பெருமான் பாடிய 'திருப் பொன்னூசல்', 'பொன்னூசல் ஆடாமோ' எனப் பாடல் தோறும் முடிவதாய் அமைந்துள்ளது. இதன் கண் ஆறடித் தரவு கொச்சகக் கலிப்பா ஒன்பது உள்ளன. 'ஊசல்' என்பதற்கேற்பச் சிறப்பு மிகுந்த பவளத் தூண்டங்கள் தூண்களாகவும், முத்துவடங் கள் கயிறாகவும், பொன் ஊஞ்சற் பலகையாகவும் உருவகம் செய்யப் பெற்றுள்ள நயம் அறிந்து இன் புறத்தக்கது. 'உத்தரகோச மங்கை ஆரா அமுதின் அருந்தாள் இணை பாடிப் பொன்னூசல் ஆடாமோ' என மகளிர் ஒருங்கிணைந்து, சிவபெருமானின் புகழ் பாடுவதாக அமைந்துள்ளது 'திருப் பொன்னூசல்'. இவ்வாறே பிள்ளைப் பெருமாளையங்கார் பாடிய சீரங்கநாயகி ஊசலும், அவர் பேரனார் கோனேரியப் பர் பாடிய சீரங்கநாயகி ஊசலும் ஆசிரிய விருத்தங் களால் ஆனவை. உயிர் ஊசலாடுவதுபோல் அலைகிற பிறவித் தடுமாற்றத்திலிருந்து நீங்கித் தொண்டர்கள் உய்யுமாறு இவ்விரண்டு பிரபந்தங்களும் செய்யப் பட்டன. 'ஊசல் நீங்க ஊசல் பாடினர்' என்பர். பிறவித் தடுமாற்றத்தை ஊசலாக உருவகம் செய்த தற்கு ஏற்ப, அண்டத்தைப் பந்தலாகவும், பற்றைக் கால்களாகவும், அறிவை விட்டமாகவும், கரணங் களைச் சங்கிலிகளாகவும், பிறப்பைப் பலகையாகவும், வினைகளை ஆட்டுபவராகவும், நரக சொர்க்க பூமி களிற் செல்லுதலை இறக்கம் ஏற்றம் தங்குதலாகவும், உருவகம் செய்துள்ளமை எண்ணி இன்புறுதற்குரியது.

இனி, இச் 'சீரங்கநாயகர் ஊசல்' பாடிய பிள்ளைப் பெருமாள் என்பவர், 'திவ்விய கவி' எனப்படும் அழகிய மணவாள தாசராகிய பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் காலத்திற்கும் பிற்பட்டவர் என்றும், இவருக்கும் 'மணவாளர்' என்று பெயர் உண்டு என் றும், இவரது காலம் கி.பி. 13-ஆம் நூற்றாண்டு என் றும் கூறப்படுகிறது.

தத்துவராயர் தம் பாடுதுறையுள் ஒரு 'பொன்னூ சல்' பாடியுள்ளார். இவை தவிரக் 'கொங்கணர் ஊசல்', 'சிவகாமி அம்மை ஊசல்' என்பனவும் உண்டு. சென்னை உ.வே. சாமிநாதய்யர் நூலகத்தில் இவற்றைப் பற்றிய சுவடிகள் உள்ளன.

பாட்டுடைத் தலைவன் அல்லது தலைவி, இறை வன் அல்லது இறைவி ஆகியோர்களின் பெருமையைச் சிறப்பித்துப் பாடுவதாக அமையும் 'ஊசல்' என்னும் இவ்விலக்கிய வகை, நாட்டுப்புற இலக்கியத்துடன் பெரிதும் தொடர்புடையது. மணமக்களை ஊஞ்சலில் அமர்த்தி 'ஊஞ்சற் பாட்டுப்' பாடுகிற மரபும் உண்டு. இப்பாடல்கள் நீலாம்பரி இராகத்திற் கேற்பப் பாடப்படுதலும் உண்டு பெரும்பாலும் 10 அல்லது 20 பாக்களே பாடப் பெறுகின்றமையால், 'ஊசற் பதிகம்' என்றும் சொல்லப்படும். 'ஊசல்' முதற்கவி யில் 'வண்ணகமு'ம் கொள்ளப்படும். இது 'ஊசல், ஊசல்வரி, ஊசற் சீர், ஊஞ்சற்பாட்டு' எனப் பல வகையாகப் பேசப்படும். பாட்டுக்குப் பொருள் கொள்ளும் முறைகளில் 'தாப்பிசைப் பொருள்கோள்' என்பதும் ஒன்று. தாப்பு-தாம்பு=ஊசல். இசை= சொல். 'தாப்பிசை' என்பது 'ஊசல் போல் இடை நின்று இருமருங்கும் செல்லும் சொல்' எனப் பொருள் படும். ச.சா.

**ஊசற் பருவம்** என்பது தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்கள் என்று மரபாகக் கூறப்பட்டு வரும் சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றான பிள்ளைத் தமிழில் அமையும் பத்துப் பருவங்களில் ஒன்றினைக் குறிக்கும். பிள்ளைத் தமிழின் முற்பகுதியிலமையும் 7 பருவங்கள் ஆண் பெண் இருபாலாருக்கும் பொது வாக அமைய, இறுதி மூன்று பருவங்களும் ஆணிற்கும் பெண்ணிற்கும் தனித்தனியாக வேறுபட்டு அமையும். ஊசற்பருவம் பெண்பாலிற்கு உரியதாய், அவ்வகை யில் அமையும் பிள்ளைத் தமிழ்களிலேயே இடம் பெறும். இலக்கிய நிலையில் பிள்ளைத் தமிழின் பருவங்களுக்கு ஏற்ற காலம் இதுவென வரையறுப் பதில் வேறுபாடுகள் உளவேனும், பொதுவாக ஊசற் பருவம் என்பது பெண்கள் பருவமுற்ற நிலையினைச் சுட்டுவதாக அமைந்து அக்காலத்தே அவர்கள் மேற் கொள்ளும் ஊசல் விளையாட்டுப் பற்றிய செய்தி களைக் குறிப்பிடுவதாகும்.

ஊசல் என்னுஞ் சொல் முன்பின் அசைந்தாடு வதனைக் குறிக்கும். மரக்கிளை போன்றவற்றில் கயிற்றினைக் கட்டி, அதில் ஒரு பலகையினைப் பொருத்தி அதன்கண் அமர்ந்து முன்னும் பின்னுமாக அசைந்தாடுவது ஊசலாடல் ஆகும். சங்க நூல்களில் இது மகளிர் விளையாட்டாகவே அமைந்துள்ளது

நிலத்திற்கு ஏற்ப அசோகு, வேங்கை முதலிய மரங் களின் கிளைகளில் தாழை முதலியவற்றின் விழுது களைக் கயிறுகளாகக் கட்டி ஊசல் ஆடப்பெற்றது. பின்னரே வீட்டினுள் கயிற்றாலும் சங்கிலியாலும் பலகையினைக் கட்டித் தொங்க விட்டாடும் நிலை ஏற்பட்டதாகலாம். ஊசல் பிற்காலத்தில் ஊஞ்சல் எனப்பட்டது.

பெண் பிள்ளைகளின் இளம் பருவ நிகழ்ச்சி களைப் பாடுங்கால் அவற்றுள் ஒன்றாக ஊசலாடல் அமைக்கப்படும். அவ்வகையில், பெண்பாற் பிள்ளைத்தமிழ் இலக்கியம் ஊசற் பருவத்தினைப் பெரும்பாலும் தவறாது கொண்டமைகிறது. அத்தகு பிள்ளைத்தமிழில் ஊசற்பருவம் இறுதிப் பருவமாக அமையக் காணலாம். அதனால் ‘ஊசலாட்டு’ பிள்ளைப் பருவங்களில் மிக்கவயதுடைய பருவத்தின ரின், பருவமுற்ற பெண்களின் விளையாட்டாக அமை கிறது. பெண்கள் தம் தோழியரொடு ஊசலாடுங்கால் தம்விருப்பத்திற்குரிய தலைவனையோ அரசனையோ வாழ்த்திப்பாடி ஆடும் மரபுண்டு.

தமிழில் அமைந்துள்ள பெண்பாற் பிள்ளைத் தமிழிலக்கியங்கள் மீனாட்சியம்மை பின்ளைத்தமிழ், திரிபுர சுந்தரி பிள்ளைத்தமிழ், சிவகாமி பிள்ளைத் தமிழ் என்று பெண் தெய்வங்களைப் பாடுவனவாக அமைவதனால், அப்பிரபந்தங்களில் ஊசற்பருவம் பாடுங்கால் ஊசல் நிகழ்ச்சிகள் தத்துவ அடிப்படை யில் அமையப்பாடுவதும் உண்டு. அவ்வகையிலமையும் ஊசற் பருவப் பாடல்கள் தமிழ்ச் சுவையும் தத்துவ மாட்சியும் கலந்தவையாய்க் கற்றாரை மகிழ்விக்கும் பாங்கின. ஒளிமிக்க பவளக் கால் நிறுத்து, வயிர விட்டம் அமைத்து, நிலாவின் கதிர்கள் விழுந்தாற் போல முத்துக் கயிறு நாற்றி, செஞ்ஞாயிற்றொளி போல் ஒளிவிடும் இரத்தினப் பலகை அமைத்துச் செய்த ஊசலிலிருந்து மீனாட்சி அம்மை ஆடுகிறாள் என்னும் கருத்தமைந்த பாடல் கற்பனை வளமிக்கு இன்பஞ் செய்கிறது. வேதாந்தம், சித்தாந்தம் என் னும் இரு பொற்றூண் நாட்டி, நாதாந்தம் என்னும் ஒளிமிக்க வயிர விட்டம் அமைத்து, மெய்ஞ்ஞானம் என்னும் நிலவுக் கதிர் வீசும் முத்து வடம் கட்டி, அடியவர்களின் இதயம் என்னும் தாமரை வடிவிலான பதுமராகப் பலகை பொருத்திய ஊஞ்சலில் இருந்து அம்மை, தன் தோழியாகிய கலைமகள் இசைபாடி ஆட்ட ஆடுகின்றாள் என்று கூறும் புதுவைத் திரிபுர சுந்தரி பிள்ளைத் தமிழின் ஊசற் பருவப் பாடலைப் படிக்குங்கால், அது கற்பனைத் தேனில் ஊறிய தமி ழும் தத்துவமும் கலந்து இன்பஞ் செய்வதனை உணர முடிகிறது. ஊசற் பருவம் சில பிள்ளைத் தமிழில் பொன்னூசற் பருவம் எனவும் குறிக்கப்பட்டுள்ளது.

அ.மா.ப.

***ஊசிமுறி*** இடைக்காடனாரால் பாடப் பெற்ற ஓர் இலக்கிய நூல்; இது வெண்பாவால் ஆகியது.

யாப்பருங்கல விருத்தி என்னும் செய்யுள் இலக் கண நூல் வெண்பா ஒன்றை மேற்கோளாகக் காட்டி, ‘எனவும் ஒழிந்தனவும் இடைக்காடனார் பாடிய ஊசிமுறியுட் கண்டு அலகிட்டுக்கொள்க’ (95:3 மேற்.) என்கிறது. இதனால் யாப்பருங்கல விருத்தியின் காலமாகிய கி.பி.பத்தாம் நூற்றாண்டில் இந்நூல் வழக்கிலிருந்துள்ளது என்பது புலனாகிறது. இப்போது சில வெண்பாக்களே கிடைத்துள்ளன.

பனையோலையில் எழுத்தை உருவாக்கும் எழுது கருவி ‘எழுத்தாணி’ எனப்படும். எழுத்தாணியைக் குறிக்கக் ‘கண்டம், ஊசி, ஆணி’ (பிங்.1595) என்னும் சொற்கள் உள்ளன. ‘பொன்னோலை செம்பொன் ஊசியால் எழுதி’ (369:3) எனச் சீவக சிந்தாமணி ஆசிரியர் ‘ஊசி’ என்னும் சொல்லைக் கையாண்டுள் ளார்.

‘முறிதல்’ என்னும் சொல் இறுதல், ஒடிதல் முதலிய பல பொருள்களைக் கொண்டது. ‘முரிதல் இறுதல் முறிதற் பெயரே’ (பிங்.1911) என்றபடி, காலப்போக்கில் நேரும் றகர, ரகர மயக்கத்தால் முறிதல், முரிதல் எனவும் வழங்கலாயிற்று.

‘முரி’ என்னும் பெயரில் இசைப்பாடல்கள் உள்ளன. தேவபாணியில் ஓர் உறுப்பு ‘முரிநிலை’ எனப்படும். ‘சார்த்து வரி’யில் ‘முரிச்சார்த்து’ என்பது ஒன்று. ‘முரிவரி’ என்னும் வரிப்பாடல், ‘எடுத்த இயலும் இசையுந் தம்மில் முரித்துப் பாடுதல் முரி யெனப்படுமே’ (சிலப். 7:14-அரும்பத.மேற்.) என் னும் இலக்கணங் கொண்டது.

‘மன்றலங் கொன்றை மலர்மிலைந் துஃகுவஃ கென்று ……… பயிரும் இடைமகனே’ என்பது யாப்பருங்கல விருத்தி காட்டியுள்ள ஊசிமுறிப் பாடல். மற்றோர் ஊசிமுறிப் பாடல், ‘காக்கை இருந்துகஃஃ கஃஃகெனக் - காக்கைதனை எய்யக் கோல் இல்லாமை த்த்த்த்த் என எய்தான்’ என்பது. இவற்றில் உள்ள ‘உஃகுவஃ’, ‘கஃஃகஃஃ கென’ ‘த்த்த்த்த்’ என்பவை ‘எழுத்தல் இசை’ எனப்படும் ஒலிக்குறிப்புச் சீர்கள். இவை பனை யோலையில் எழுதப்படும்போது எழுத்தாணியின் - ஊசியின் ஒட்டத்தை முறிக்கும். இதனால் இப் பாடல் களைக் கொண்ட நூல் ‘ஊசி முறி’ எனப்பெயர் பெற்றது. இதுபோன்று யாழை முரிக்கும் இசையில்

திருஞானசம்பந்தரால் பாடப்பெற்ற பதிகம் 'யாழ்முரி' எனப்பட்டதும் இங்குக் குறிக்கத்தக்கது.

சங்க இலக்கியங்களில் உள்ள இடைக்காடனார் பாடல்களில் இடையர் பற்றிய குறிப்பு வருகிறது. ஊசிமுறிப் பாடல்களிலும் இடையர் பற்றி வருவதால் இந்நூல் சங்க கால இடைக்காடனாரால் பாடப்பட்ட நூலாகும் என்று சிலர் கருதுகின்றனர்.

கடைச்சங்கத்தார் அகந்தையை அடக்க இவ்வாறு ஊசி முறியுமாறு இடைக்காடனார் பாடினார் என்பதொரு வழக்குண்டு. எம்.எசு. பூர்ணலிங்கம் பிள்ளை இந்நூல் 'ஊசிமுறி, ஒன்பத்தாறு என்னும் மறுபெயருடையது; 54 பாடல்களைக் கொண்டது' என்பர். கோ.இ.

**ஊசியென்** சீனாநாட்டின் மாநகரங்களுள் ஒன்று. ஊசியென் (Wuh-sien) நகரத்தைச் சூசௌ (Hsu-chou)என்றும், சுசௌ (Su-chow) என்றும் கூறுவர். இது மத்திய சீனாவின் கிழக்கில் அமைந்துள்ள வடகியாங்கு மாநிலத்திலுள்ள மாநகரம். இதன் அண்மையில் இரும்பு, நிலக்கரிச் சுரங்கங்கள் உள்ளன. மேலும், இந்நகரத்தில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ள சிறு உருக்கு வளாகம் ஒன்றும் செயற்பட்டு வருகிறது. இங்கு உணவுப் பொருள்கள் பதப்படுத்தப்படுகின்றன. இயந்திரச்சாதனங்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதன் மக்கள் தொகை 15,00,000(1970).
இரா. அ.

**ஊஞ்சல் வனமென்னும் மொண்டிப் பாளையத்துத்தலமகத்துவம்**: இது கி.பி.1886-இல் நாராப்பநாயக்கரால் எழுதி வெளியிடப்பட்ட பக்தி இலக்கியம். இது தலவரலாறும் தோத்திரமுமாக அமைந்த நூல். பி.தெ.

**ஊட்ட உணவுச் சூழலமைப்பு**: மனித சமுதாயம் உலகின் பல்வேறு புவிப்பரப்பில் வெவ்வேறு வாழ்க்கைச் சூழலுடனும் காலநிலைகளுடனும் வாழ்ந்து வருகிறது. ஒவ்வொரு சமுதாயத்தினரும் தத்தம் வாழ்க்கையமைப்பில் தனித்தனியான அமைப்புகளைப் பெற்றிருப்பது அவரவரது பண்பாட்டினை ஒத்து அமைவதாகும். பண்பாடு அச்சமூகத்தின் தொழில்நுட்பம், சமூக அமைப்பு உற்பத்தி முறை, பங்கீட்டு முறை, அரசியல் முறை, சமயம், கலை முதலானவற்றிலிருந்து பெறப்படுவதாகும். உலகச் சமூகங்களுக்கிடையே உணவு ஈட்டு முறையிலும் உண்ணும் முறையிலும் பன்மடங்கு வேறுபாடுகள் காணக்கிடப்பது கண்கூடு. இந்த அமைப்பு முறைகளை ஆராயும் ஒரு மானிடவியல் பிரிவே ஊட்ட உணவியல்சார் மானிடவியல் (Nutritional Anthropology) எனப்படும். இப்பிரிவு ஊட்ட உணவுச் சூழலியல் (Nutritional Ecology) என்றும் கூறப்படுவதுண்டு.

ஊட்ட உணவுச் சூழலியற் பிரிவு ஒவ்வொரு சமூகமும் தன் உணவுமுறையை எவ்வாறு அமைத்துக் கொள்கிறது என்பதையும், சுற்றுச் சூழலிலிருந்து உணவுப் பொருள்கள், பிழைப்புப் பொருளாதாரம் ஆகியவற்றை ஈட்டும் முறைகளையும், இம்முறையில் காணப்படும் தொழிற்பகுப்புகளையும் ஆராய்கிறது. இதனாலேயே உணவுச் சூழலியலை உயிர்சார் பண்பாடு (Bioculture) என்னும் பரந்த பொருளுடையதாகக் கூறுவர்.

ஊட்ட உணவியல்சார் மானிடவியலார் ஒரு சமூகத்தின் உணவு முறைகளை ஆராயும்போது அச்சமூகத்தின் பண்பாட்டினை அடிப்படையாகக் கொள்வர். உணவு முறை பண்பாட்டுச் செயல்களினாலும் பண்பாட்டு அமைப்புகளாலும் கட்டுப்படுத்தப்படுகிறதா, உணவுமுறை பண்பாட்டை அமைக்கிறதா என்பன போன்ற பல பரிமாணங்களில் ஆராய்வர்; உணவுமுறைக்கும் பண்பாட்டிற்கும் உள்ள தொடர்புகளையும் இரண்டிற்கும் உள்ள செயல்முறைகளையும் பற்றியும் ஆராய்வர். உணவு அமைப்பு உடல் ஊட்டத்திற்காக மட்டுமே அமையப் பெற்றுள்ளதா என்பதும், அவ்வாறன்றித் தகுதி நிலைக்காக அமையப் பெற்றுள்ளதா என்பதும் முதன்மையாக ஆராயப்படும்.

முறைப்படியான வளர்ச்சிக்கும் உடலை நன்கு பேணிக்காக்கவும் அதன் செயல்கள் வலுவிழக்காமல் செய்யவும் ஊட்ட உணவு அவசியமாகிறது. உயிரினங்களுக்குத் தேவையான ஊட்டச் சத்துகளைப் பெற உண்ணும் உணவு வேதிசார் பொருள்களாகும். இப்பொருள்கள் உடலினுள் பல வளர்சிதை மாற்றங்களுக்கு உட்படுகின்றன. அதனின்று பெறப்படும் ஊட்டச்சக்தி இரத்தத்தில் கலக்கிறது. இதனாலேயே உணவு முறைச் செயல்களை உயிரியல்சார் அடிப்படையில் வரையறுக்க விரும்புவர் ஊட்ட உணவியல்சார் மானிடவியலார். ஆனால் மனிதர்கள் தம் உணவு முறையைப் பண்பாடு என்னும் வடிதாளைக் கொண்டு வடிகட்டி அமைத்துக் கொண்டுள்ளனர். நாம் உணவு உட்கொள்ளும்போது பெரும்பான்மையாக ஊட்டச் சத்துகளைப் பற்றி எண்ணுவதில்லை. சில சமூகங்களில் உணவு உட்கொள்ளப்படுகிறதேயன்றி ஊட்ட உணவு உட்கொள்ளப்படுவதில்லை. எந்த ஒரு சமுதாயமும் சுற்றுச் சூழலில் உள்ள அனைத்து ஊட்டப் பொருள்களையும் தம் உணவில்

சேர்த்துக் கொள்வதில்லை. இது பண்பாடு என்னும் எல்லையால் வரையறுக்கப்படுகிறது. ஒவ்வொரு குழுவும் சில பொருள்களையே உணவு என வரையறுத்துள்ளது. ஒரு சிலவற்றை உணவாக ஏற்றுக் கொள்வதில்லை. அமேசான் நதிப் படுகையில் வாழும் காசிநாகுவா இந்தியர்கள் (Cashinahua Indians) குரங்கு, மீன், முதலை முதலானவற்றை உணவாக உட்கொள்கின்றனர். ஆனால் பாம்பு வகைகள், பறவை வகைகள் முதலானவற்றை உட்கொள்வதில்லை. இதைப் போன்றே இந்தியச் சாதிக் குழுக்களுள் பிராமணர்கள் பெரும்பாலோர் இறைச்சி உண்பதில்லை; மது வகைகளை அருந்துவதில்லை; ஆனால் பிற சாதினருள் பெரும்பாலோர் இறைச்சி உண்பதோடு மதுவகைகளையும் அருந்துகின்றனர். ஒவ்வொரு பண்பாட்டிலும் விருப்பமான உணவுமுறை காணப்படுவதையும் உணவு விலக்கை (Food Taboo) வரையறைப்படுத்தியுள்ளதையும் காணலாம்.

எவ்வாறு இருப்பினும் உணவுச் சூழலியல் மக்கள் பயன்படுத்தும் உணவை இருவகைப்படுத்துகிறது. உயிரியல் அடிப்படையில் பயன்படுத்தப்படும் உணவை ஊட்டச் சத்துப் பொருளாகவும், பண்பாட்டு அடிப்படையில் பயன்படுத்தப்படும் உணவை வெறும் உணவாகவும் அது கொள்கிறது. ஊட்ட உணவுச் சூழலமைப்பில் பல கூறுகள் உள்ளன. இது சிக்கலான கூட்டிணைப்புக் (Network) கொண்ட செயல் தொகுதியாகும். இது பல பகுதிகளைக் (Parts) கொண்டது. இதன் கூறுகளை வகைகளாக (Categories) அல்லது தொகுதிகளாகக் (Sets) கொள்ளலாம். மனித ஊட்ட உணவுச் சூழலமைப்பில் மூன்று வகைகள் உள்ளன. அவை சமுதாயப் பண்பாட்டைச் (Socio-cultural) சார்ந்தது, உயிரியல் சார்புடையது (Biological), சூழ்நிலைச் சார்புடையது (Environmental) என்பனவாம்.

**சமுதாயப் பண்பாட்டுக் கூறுகள்:** ஒவ்வொரு பண்பாட்டினரும் உணவமைப்பில் பலநிலைகளில் தாக்குதலுக்கு உள்ளாகின்றனர். இவர்கள் தாம் வாழ்வதற்குத் தேவையான உணவை ஈட்டுவதற்குரிய தொழில் முறையையும் தொழில் நுட்பத்தையும் கொண்டுள்ளனர். இவர்கள் கொண்டுள்ள வாழ்க்கைத் தொழில்நுட்பத்திற் கேற்றபடி தமக்கு வேண்டியவற்றைப் பெறுகின்றனர். மனிதன் முதன் முதலில் கண்ட உணவு தேடும் முறையானது, வேட்டையாடி உணவு சேகரிக்கும் முறையேயாகும். இதற்குப் பல தொழில்நுட்பங்கள்தேவைப்படுகின்றன. மனிதப் படிமலர்ச்சியில் (Evolution) இதன் விரிவினை நன்கு அறியலாம். மனிதன் வேட்டையாடி உணவு சேகரித்து வாழ்ந்த பொருளாதார அமைப்பிலிருந்து விடுபட்டுப் பயிர்களை விளைவித்தலில் ஈடுபட்டான். இதுவே மனிதனின் வாழ்க்கைத் தொழிலில் புரட்சியை உண்டாக்கியது.

தன் சூழ்நிலையில் கிடைக்கும் பொருள்களைப் பயன்படுத்த முற்பட்ட வேட்டையாளர்கள் முதல்இன்றுள்ளவர்கள்வரை இவர்கள் கையாளும் திறன் உற்று நோக்கத்தக்கது. சிலவற்றை ஊட்டம் மிகுந்த உணவென்றும் சிலவற்றை நச்சுப் பொருள் என்றும் வளரும் அறிவியலால் கருதினர். இது உடலியங்கியல் சார் மானிடவியலாரிடையேயும் (Physiological Anthropologist) சிறப்பான பிரிவாகக் கருதப் படுகிறது. குறிப்பாக, ஒருசில பொருள் சில பண்பாட்டில் ஒதுக்கப்படுவதும் அப்பொருளே வேறு சில பண்பாட்டில் ஏற்றுக் கொள்ளப்படுவதும் கண்கூடு. இது பண்பாட்டுத் தகவமைப்பு ஆய்வுகளுக்கும், அம்மக்களின் அறிதல்திறன் (Cognition) பற்றிய ஆய்வுகளுக்கும் வழிவகுக்கிறது. பல மிலியன் ஆண்டுகளுக்கு முன்பிருந்து பின்பற்றப்படும் உணவுமுறைகளைப் படிமலர்ச்சி நிகழ்வோடு தொடர்புபடுத்தி அறிவது இதன்வழி அமையும் பிறிதொரு பிரிவாகும்.

**உணவும் சமூக உறவுகளும்:** உறவினைக் காட்டுவதற்கும் பிணைப்புகளை ஏற்படுத்துவதற்கும் குறியீடாக அமைவதில் உணவு முதலிடம் பெறும். உலகின் அனைத்துப் பண்பாட்டிலுமே உணவைச் சிலருடன் பகிர்ந்து உண்ணும் மரபு தொடர்ந்து வந்துள்ளது. சில முதன்மையான நிகழ்ச்சிகளின்போது உறவினருடனும் நண்பர்களுடனும் சிறப்பாகவும் சில நிகழ்ச்சிகளில் எளிமையாகவும் பகிர்ந்து கொள்ளப்படும் தன்மை உறவின் அமைப்பையும் விளக்குவதாக அமையும்.

ஒவ்வொரு பண்பாட்டிலும் காணப்படும் உணவின் மீதான நம்பிக்கைகள் அச்சமூக மக்களின் உடலமைப்பையும் நடத்தை முறைகளையும் ஒழுங்குபடுத்துகின்றன. செம்பகாப்(Tsembega)பழங்குடியினர் போர்க் காலங்களில் பன்றி இறைச்சியை மிகுதியாக உண்பர். இது இவர்களுக்கு மிகுந்த ஆற்றலையும் படைவீரருக்குத்தகுந்த ஆளுமையையும் தருகிறது என நம்புவதால் பிற உணவுகளைக் குறைவாக உண்கின்றனர்.

**உயிரியல்சார் கூறுகள்:** ஒவ்வொருவருக்கும் தேவைப்படும் ஊட்ட உணவுப் பொருள்களே மனித ஊட்டஉணவுச்சூழலமைப்பின் உயிரியல் கூறுகளாகும். மனிதனுக்குத் தேவைப்படும் உணவு இரு உடலியங்கு செயல் முறைகளை எடுத்துக்காட்டுவதாகும். ஒன்று வளர்ச்சி; மற்றொன்று பராமரிப்பாகும்.

வளர்ச்சி என்பது உடல் தொகுதியில் கூடும் புதிய உயிரணுக்களும் (Cells) இப்போதுள்ள உடலின் அளவில் ஏற்படும் மாற்றமுமாகும். வளர்ச்சி என்னும் நிகழ்விற்கு ஊட்ட உணவுப் பொருள்களே அடிப் படையாக அமைகின்றன. இதன்வழித் தேவையான ஆற்றலைப் பெருக்கிப் புதிய உயிரணுக்களைத் தொகுத்திணைக்க (Synthesis) முடிகிறது.

உணவுப் பொருள்கள் உயிர்வாழும் உயிரணுத் தொகுதியை இயக்கவும் பராமரிக்கவும் தேவைப்படு கின்றன. இது உடலின் அளவைப் பொறுத்து அமை வதாகும். உடலின் உயிரணுத் தொகுதி மிகுதியாக இருப்பின் தேவைகளும் மிகுதியாகின்றன. சில காலம் உடலியக்கத்தில் பங்குபெற்ற உயிரணுக்கள் இறக்கும்போதோ வளர்சிதை மாற்றம் பெறும் போதோ அவற்றிற்கு ஈடாக மாற்றப்பட வேண்டி யுள்ளன. உடல் வளர்ச்சிக்கும் பராமரிப்பிற்கும் மட்டுமன்றி உடலின் உயிரியல் தன்மைகளுக்கு ஏற்ப உணவுத் தேவைகள் மாறுபடுவதுண்டு. குறிப்பாக உடலினுள் புகும் நோய்க் கிருமிகளை எதிர்க்கவும் அயற் பொருள்களின் உட்புகுதலால் உடற் செயலில் ஏற்படும் மாறுபாடுகளைக் கட்டுப்படுத்தி இயல் நிலைக்கு மீட்கவும் ஆற்றல் தேவைப்படுகிறது. காய்ச் சல் ஏற்படும்போது உடலின் வெப்பநிலையில் ஒவ் வோர் அளவு (Degree) கூடும்போது 12 முதல் 13 விழுக் காடுகள்வரை வளர்சிதை மாற்றம் கூடுதலாகிறது. இது உடலின் வெப்பத் தேவைக்கு ஈடுகட்டும் ஆற்ற லைக் கொடுப்பதற்காக மாறுபடுவதாகும். இதைப் போன்றே வெவ்வேறான காலங்களில் உணவுத் தேவை மாறுபடுகிறது. வயிற்றுப் போக்குக் காலங் களில் உண்ணும் உணவுப் பொருள்கள் சீரணமாகா மல் அப்படியே வெளிப்படக்கூடும். இதனால் உட லின் தண்ணீர் அளவு குறைந்து (Dehydration) உடற்செயலைச் சிக்கலாக்கி விடும்.

கருக்கொண்ட காலத்திலும் குழந்தைக்குப் பால் கொடுக்கும் காலங்களிலும் ஊட்ட உணவில் உள்ள கலோரியின் தேவை மிகுதியாகிறது. கரு வளரும் காலங்களில் சாதாரண அளவைக் காட்டிலும் 15 விழுக்காடு மிகுதியாகவும் தேவைப்படுகிறது. குறிப்பாக, புரதச் சத்து 65 விழுக்காடும் வைட்ட மின்கள் 15 விழுக்காடும் சுண்ணாம்புச் சத்து 50 விழுக்காடும் மிகுதியான அளவில் தேவைப்படு கின்றன.

**சூழ்நிலைக் காரணிகள்:** ஒரு வாழிடம் பல் வகைப்பட்ட உணவு வளங்களைக் கொண்டிருப்பி னும் ஒவ்வொரு சமூகத்தின் தொழில்நுட்பமே அதன் உணவுத் தன்மையைக் கணிப்பதாகும். பண்பாட்டின் படிமலர்ச்சியில் (Cultural Evolution) வேட்டுவச் சமுதாயம், உணவு சேகரிக்கும் சமுதாயம், ஆயர் வாழ்க்கைச் சமுதாயம், நடோடிச் சமுதாயம், வேளாண் சமுதாயம் எனப் பலவாறாகக் காணப்படு கின்றன. அவர்கள் வாழும் நிலப்பரப்புகளில் பல வகையான உணவு வளங்கள் உள்ளன. இருப்பினும் அவர்கள் பண்பாட்டின் தொழில் நுட்பமே அவர் களைக் குறிப்பிட்ட வாழ்க்கை அமைப்பிற் கொண்டு செல்கிறது. ஒருசில சூழ்நிலையில் பண்பாட்டின் மீதும் மக்களின் வாழ்க்கை நிரல்களின் மீதும் சூழ் நிலையின் நேரடியான தாக்கமும் ஏற்படுவதுண்டு. பனித்துருவங்களில் சூழ்நிலையின் நேரடியான தாக்கு தலுக்கு ஏற்பவே மக்களின் பொருள்சார்ந்த பண் பாடும் பொருள்சாராப் பண்பாடும் அமைகின்றன.

சில சூழ்நிலைகள் இயற்கையிலேயே பெருமள வில் வளத்தினைப் பெற்றுள்ளதால் அச்சூழ்நிலையில் உள்ள மக்களும் விலங்குகளும் பலவகையான உணவு களைப் பெறும் வாய்ப்பினைப் பெறுகின்றனர். வேறுசில இயற்கைப் பிரிவுகளில் வளமற்ற வாழிடப் பகுதிகள் காணப்படுவதால், அங்குள்ள மக்களும் விலங்குகளும் தமக்கு வேண்டிய ஆற்றலையும் உண வையும் பெறப் புதிய விதிகளைக் கையாண்டு மிகுதி யான காலத்தையும் ஆற்றலையும் செலவிட வேண்டி யுள்ளன. வட துருவப் பகுதியில் உள்ள மரங் களற்ற நிலப்பகுதி, கோடையில் சதுப்பு நிலமாகவும் மழைக்காலங்களில் பனிஉறைந்த நிலமாகவும் காணப்படுகிறது. உணவிற்குப் பயன்படும் தாவரங்கள் மிகக் குறைவு. உருவில் பெரிய பாலூட்டிகளே பெரு மளவு உணவாகப் பயன்படுகின்றன. குளிர் சூழலுக் கேற்ப இங்கு வாழும் பாலூட்டிகளின் உடல் மேல் தோல் கொழுப்பு நிறைந்ததாகும். உணவாக உட் கொள்ளப்படும் இந்த விலங்குகளின் கொழுப்புச் சத்து மிகுந்த ஆற்றலைக் கொடுக்கக் கூடியது. இன் றைய 20-ஆம் நூற்றாண்டு எசுக்கிமோக்கள் (Eskimos) உண்ணும் உணவில் மேற்கத்திய உணவு வகைகளும் இடம் பெற்றுள்ளன. இவர்களது இன் றைய உணவு கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் எசுக்கி மோக்கள் உண்ட உணவில் உள்ள மொத்தப் புரதச் சத்தை விட 500 விழுக்காடு குறைவானது எனக் குறிப்பிட்டுள்ளனர்.

**கூறுகளின் இடை வினைகள்:** மேற்கூறிய அனைத்துக் கூறுகளும் தனித்தனிப் பண்புகளைப் பெற்றிருப்பினும் அவை தனித்து இயங்க வல்லன அல்ல. அவை அனைத்தின் தொகுப்புச் செயல்களும் ஒட்டுமொத்தமாகக் கவனிக்கப்பட வேண்டியதாகும்.

ஊட்ட உணவுச் சூழலமைப்பு சீராக இருக்க வேண்டுமாயின், சூழ்நிலை தரும் ஊட்ட உணவுப்

பொருள்களும் அதை ஏற்றுக் கொள்ளும் குழுவின் தேவைக்குச் சரியானவையாக இருக்க வேண்டும். உணவுப் பொருளை உண்பாருக்கும் உணவுப் பொருள்களைக் கொண்டுள்ள சூழ்நிலைக்கு முள்ள தொடர்புகளில் பண்பாட்டுக் குறுக்கீடுகள் மிகுதியாகும். மனிதர்கள் தம் சூழ்நிலையைப் பண் பாடு என்னும் கண்கொண்டே பார்க்கின்றனர். சூழ் நிலையானது தம்மைச் சார்ந்துள்ள மக்களுக்கும் விலங்குகளுக்கும் போதுமான அளவு உணவுகளைத் தர இயலா நிலையில் மக்கள் புதிய வழியில் உணவு ஈட்ட முற்படுகின்றனர். இதனால் தோன்றியதே புதுக்கற்காலத்தின் வேளாண்மையாகும். மக்கள் தொகையின் வளர்ச்சி மிகுந்தபோது தாம் மேற் கொண்டு வந்த வேட்டையாடி உணவு சேகரிக்கும் தொழில் போதிய உணவினை ஈட்டித் தரவில்லை. மக்களுக்கு உணவுத் தேவை மிகுந்ததாலேயே வேளாண்மை முறை, கால்நடை வளர்ப்பு, காய்கறி உணவுகள் முதலானவற்றில் பரவலாக வளர்ச்சி உண்டாயிற்று. ஒரு குறிப்பிட்ட பகுதியில் குறிப்பிட்ட உணவுப் பொருளையும் உணவு முறையையும் கொண் டுள்ளனர். தென்கிழக்கு ஆசிய நாடுகளில் அரிசியை யும், நடு நிலக் கடல் சார்ந்த நாடுகளில் கோதுமை யையும், ஆப்பிரிக்கக் கண்டத்தின் காடு சார்ந்த பகுதி களில் கிழங்கு வகைகளையும் அடிப்படை உணவாகக் கொண்டுள்ளனர்.

உணவு முறைகளும் சூழல் நிலைகளும் பண்பாட் டின் பரிமாணங்களை இயக்கவல்லன. ஒரு பண்பாட் டைச் சார்ந்த குழுவினர் சூழ்நிலையை மாற்றுவர். இதே நிலையில் சூழ்நிலையும் பண்பாட்டின் மாற்றத் தைக் கொண்டு செல்லும். கே.நி.

துணை நூல்கள்:

**Jelliffe, D.B.,** The Assessment of the Nutritional Status of the Community, WHO Monograph Series No.53, 1966.

**May, J.M. and Mclellan, D.L.,** The Ecology of Malnutrition in the Caribbean, Harper & Row, New York, 1973.

**ஊட்டச்சத்துக் குறைவும் பஞ்சமும்:** வலுவான உடல் நோயற்ற வாழ்வைக் கொடுக்கும். உடல்நலம் குறைவற்ற செல்வத்தைக் கொடுக்கும் என்பது தொன்றுதொட்டுக் கூறப்படும் உண்மை யாகும். செல்வம் குவிந்திருந்தாலும் உடல் நலம் குன்றியவர்கள் வாழ்வில் இன்பத்தை இழந்தவர்கள் ஆவார்கள். மனித சமுதாயத்தில் முற்போக்கான மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டேயிருக்கின்றன. எனினும் மருத்துவமனைகள், மருத்துவர்களின் எண் ணிக்கை ஆகியவற்றின் தேவை வளர்ந்து பெருகி விட்டது. இவற்றிற்கு அடிப்படைக் காரணம் நடை முறையில் தவறான உணவு முறைகளும் மூட நம்பிக்கைகளும் தவறான வாழ்க்கை வழிகளும் செயற் பட்டு வருவதேயாகும்.

ஏறக்குறைய 30 ஆண்டுகளுக்கு முன் வாந்திபேதி **(Cholera)**, கொள்ளைநோய் **(Plague)**, அம்மை **(Small pox)** போன்ற நோய்கள் இந்தியாவில் பெருமளவில் பரவி மக்களைப் பலி கொண்டன. நாடு விடுதலை அடைந்த பின் மாநில, மைய அரசுகள், மருத்துவ உடல்நலத் துறைகள், அறக்கட்டளைகள், அனைத் துலக நிறுவனங்கள் அனைத்தும் மக்கள் நலத்திற் கெனப் பல திட்டங்களைத் தீட்டித் தொற்றுநோய் களை அறவே ஒழிக்கப் பாடுபட்டு வருகின்றன. இப் பொழுது என்றும் திரும்பாதபடி **(Point of no return)** தொற்றுநோய்கள் பெருமளவில் ஒழிக்கப்பட்டுள்ளன. ஆயினும் தொற்று நோய்களுக்குப் பதிலாகப் பல வகைப் பஞ்சங்கள் உலகின் பல பகுதிகளில் தோன்றிக் கொண்டே இருக்கின்றன.

பஞ்சங்கள் பல காரணங்களால் தோன்று கின்றன. உள்நாட்டுக் கலவரங்கள், அயல்நாட்டுப் போர்கள், உணவுப் பொருள்களைப் பல இடங்களுக் கும் கொண்டு செல்லத் தேவையான போக்கு வரத்துத் தடை, மக்கள்தொகைப் பெருக்கம், குழப் பங்கள் நிறைந்த ஆட்சி, வீட்டு மிருகங்களையும் மனிதர்களையும் துன்பத்திற்காளாக்கும் தொற்று நோய்கள், புயல், வெள்ளம், பூகம்பம், பருவமழை தவறுதல், வறட்சி போன்ற இயற்கையின் சீற்றங்கள், அயல்நாட்டுக் குழப்பங்களால் நாடு கடந்து வந்து சேரும் அகதிகளின் பெருக்கம், மத்திய பிரதேசப் போபாலில் நச்சு வாயுவினால் ஏற்பட்ட அவல நிலை போன்ற எதிர்பாராத அபாயங்கள் போன்றவை உணவுப் பற்றாக்குறையை நாட்டில் ஏற்படுத்து கின்றன. மிகுதியான அளவு உணவுப் பற்றாக்குறை நிலை பஞ்சம் எனப்படுகிறது. உணவு இன்மையால் உண்டாகும் பசியும் அதன் விளைவான பட்டினியும் பஞ்ச நிலையை ஏற்படுத்துகின்றன. ஆகவே, பஞ்ச மும் பட்டினியும் ஏறக்குறைய ஒரே நிலையைக் குறிப்பிடுகின்றன.

உயிரிழப்பு உணவுப் பற்றாக்குறையால் மட்டும் தோன்றுவதில்லை. குறிப்பிட்ட சத்துகள் உணவில் இன்மையாலும் இந்நிலை தோன்றலாம். ஏறக்குறைய 100 ஆண்டுகளுக்கு முன்பு, ஆயிரக்கணக்கான மனி தர்கள் வைட்டமின் ‘சி’ குறைவால் ஏற்படும்

நோயாலும், வைட்டமின் 'பி' (B) குறைவால் ஏற்படும் வீக்க நோயாலும் (Beri-beri) உலகின் பல பாகங்களில் உயிரிழந்தனர்.

பஞ்சம் அல்லது பட்டினி தோன்றும்போது உடலில் பல மாற்றங்கள் தோன்றும். உடல் இளைப்பதால் அதிலுள்ள திசுக்கள் குறைகின்றன. உடலில் எப்பொழுதும் நடைபெற்று வரும் இன்றியமையாத வேலைகள் குறைந்த வேகத்தில் நடைபெறுகின்றன. பட்டினியால் வாடுபவர்களின் மனநிலையிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. சோர்ந்து காணப்படுதல், துயரமாக இருத்தல், எளிதில் தூண்டப்படுதல், தற்கொலை செய்து கொள்ளத் துணிதல், கொலை, கொள்ளை போன்ற குற்றங்கள் புரிதல் ஆகியவை சமூகத்தில் பஞ்சக்காலங்களில் மிகுதியாகின்றன.

பஞ்சம் தோன்றும்போது பலவகையான தொற்று நோய்கள் நாட்டில் பரவுகின்றன. எடுத்துக்காட்டாக ஏறக்குறைய 20 ஆண்டுகளுக்கு முன் ஆப்பிரிக்காவில் நைசீரியா (Nigeria) நாட்டில் பஞ்சம் ஏற்பட்டபொழுது ஏராளமான மக்கள் தட்டம்மை நோயால் உயிரிழந்தனர். எலும்புருக்கி நோய், வயிற்றுப்போக்கு போன்ற நோய்களும் பஞ்சக்காலங்களில் மிகுதியாகப் பரவின. ஆகவே பஞ்சம் ஏற்படும் காலங்களில் உள்நாட்டுத் தூய்மை, உடல்நலம் ஆகியவற்றைப் பாதுகாக்கத் தேவையான ஏற்பாடுகளை முதலிலேயே செய்தால் நோய்கள் பரவாமல் தடுக்க முடியும்.

பீகார் மாநிலத்தில் 1965, 1966-ஆம் ஆண்டுகளில் தொடர்ந்து பருவமழை தவறியதால் மிகப்பெரும் பஞ்சம் தோன்றியது. விலைவாசிகள் நஞ்சு போல் ஏறின. அருகிலுள்ள மாநிலங்களுக்கும் ஊர்களுக்கும் செல்ல முடிந்தவர்கள் வயதானவர்களையும் நோய்வாய்ப்பட்டவர்களையும் விட்டுவிட்டு மற்ற இடங்களுக்குச் சென்று விட்டனர். ஒரு பசுவைப் பத்து உருபாய்க்கும் குறைந்த விலையில் விற்றனர். குடிதண்ணீர்ப் பற்றாக்குறை எல்லா இடங்களிலும் ஏற்பட்டது. இதைப்போன்ற பஞ்சங்கள் அடிக்கடி உலகில் பல பாகங்களிலும் தோன்றிக் கொண்டே இருக்கின்றன.

பஞ்சநிலை ஏற்படும்போது குறைந்த காலத்திற்கோ நீடித்த நாட்களுக்கோ மக்களுக்கு உதவி தேவைப்படுகிறது. சில நாட்களுக்கே உதவி தேவைப்படும் பஞ்சக்காலத்தில் மிக விரைந்து செயற்பட்டு உதவிகளைச் செய்தல் மிகமிகத் தேவையாகும். சில வாரங்களுக்கு நீடிக்கும் பஞ்சத்தில் தேவைக்கும் வயதிற்கும் ஏற்ற உணவு தந்துதவுதல் மிகத் தேவை. பல வாரங்கள் நீடிக்கும் பஞ்சக்காலத்தில் நோய் நிலைகளைக் குணப்படுத்துதல், ஒவ்வொருவரின் தேவைக்கும் ஏற்ற உணவுப் பொருள்களைத் தந்துதவுதல் ஆகியவை மிகவும் இன்றியமையாதனவாகும்.

உணவுப் பற்றாக்குறையினால் ஏற்படும் விளைவுகள் மற்றப் பஞ்சங்களால் ஏற்படும் அழிவுகளைவிட மிகுதியாக இருக்கின்றன. உணவுச் சத்துக் குறைவினால் உடலில் வன்மை குறைகிறது. பலவகையான நோய்களால் உடல் பீடிக்கப்படுவதால் வேலை செய்யும் திறன் குறைந்து, அதனால் நாட்டின் ஆக்கத் திறனும் குறைகிறது. மக்கள் குறைந்த வருவாயும் குறைந்த வாழ்க்கைத் தரமும் கொண்டு பஞ்சத்தில் வாடுவர். ஆகவே உணவுப் பற்றாக்குறையால் பஞ்சமும், பஞ்சத்தால் உணவுப் பற்றாக்குறையும் தோன்றிய வண்ணம் இருக்கும். இது சத்துணவுக் குறைநிலை என்ற ஒரு நச்சுச் சக்கரம் (Vicious Circle of Malnutrition) ஆகும்.

சத்துணவுக் குறைவால் ஏற்படும் தீமைகள் பல. இன்று ஐம்பது விழுக்காட்டிற்கும் மேற்பட்ட குழந்தைகள் குறைந்த உடல் எடையோடு காணப்படுகிறார்கள். ஐந்து விழுக்காட்டுப் பள்ளி முன்பருவக் குழந்தைகளும், பத்து விழுக்காட்டுப் பள்ளிப்பருவக் குழந்தைகளும் வைட்டமின் 'ஏ' குறை நோயால் தாக்கப்பட்டிருக்கிறார்கள். பள்ளிகளில் 29 விழுக்காட்டுக் குழந்தைகள் இரும்புச் சத்துக் குறைவால் இரத்தச் சோகை நோயுடன் காணப்படுகிறார்கள். இத்தகைய நோய்களால் உடல் வளர்ச்சி குறைவதுடன் மூளை வளர்ச்சியும் குன்றுகிறது.

உணவில் மாவுச்சத்து, புரதச்சத்து, கொழுப்புச் சத்து, வைட்டமின்கள், தாது உப்புகள், நீர், நாறு என்ற பலவகைச் சத்துகள் உள்ளன. மாவுச்சத்தும் கொழுப்புச் சத்தும் உடல் வேலை செய்யத் தேவையான ஆற்றலைக் கொடுக்கின்றன. புரதச் சத்து உடல் வளர்ச்சிக்கு மிகவும் தேவைப்படுகிறது. தாது உப்புகளும் வைட்டமின்களும் உடல் வளர்ச்சிக்கும் உடலைப் பாதுகாப்பதற்கும் உதவுவன; உடலில் பல தொழில்களைக் கண்காணிப்பதற்கும் தேவைப்படுகின்றன. இந்தச் சத்துகள் ஒவ்வொன்றும் குறையும்போது, சில நோய்களால் உடல் தாக்கப்படுகிறது.

இச் சத்துகளோடு தண்ணீரும் நார்ப்பொருளும் உடல் நலத்திற்கு மிகவும் தேவைப்படுகின்றன. உணவு சீரணமடையவும், உணவுச் சத்துகள் உட்சென்று கலக்கவும், கழிவுப் பொருள்களை உடலிலிருந்து வெளியேற்றவும் தண்ணீர் தேவையாகிறது. நார்ப்பொருள் மலச்சிக்கலைத் தடுக்கவும், நீரிழிவு நோய், குடலில் புற்றுநோய், இரத்தக்குழாய் தொடர்புடைய நோய்கள் ஆகியவற்றிலிருந்து உடலைப் பாதுகாக்கவும் உதவுகிறது.

கடுமையான புரதச் சத்துக்குறை நோய்களுள் சவலை நோய் என்று ஒன்று உள்ளது. இந்நோயினால் அவதியுறும் குழந்தைகளுக்குக் கை கால் உட்பட உடல் முழுவதும் வீங்கிக் காணப்படும். உடலில் தசை குறைந்து சுறுசுறுப்பின்றிக் குழந்தைகள் எப்பொழுதும் சிணுங்கிக் கொண்டே இருப்பார்கள். சில குழந்தைகளுக்குத் தலைமுடி செம்பட்டையாக வெளுத்துக் காணப்படும். தோலிலும் சில மாற்றங்கள் காணப்படும். காய்ந்த நெல்வயல் போல் தோல் வெடித்துக் கறுத்துப் புண்ணாகி நீர் ஒழுகும். உடலில் நோய் எதிர்க்கும் திறன் குறைந்து, குழந்தைகள் அடிக்கடிக் கக்கல், கழிச்சல், கபவாதம் (Pneumonia) முதலியவற்றால் எளிதில் தாக்கப்படுவார்கள்.

புரதமும் ஆற்றலும் உணவில் குறையும்போது நோஞ்சான் நிலையால் குழந்தைகள் தாக்கப்படுகிறார்கள். நோஞ்சான் குழந்தைகள் மிகவும் மெலிந்து உடலிலுள்ள தசையெல்லாம் குறைந்து எலும்பும் தோலுமாகப் பரிதாபமாகக் காணப்படுவார்கள். இவர்கள் கன்னமெல்லாம் வற்றிக் குழிவிழுந்தும் கண்கள் குழி விழுந்தும் வாடிய கிழவர்கள் முகம் போன்ற முகமும், குரங்குத் தலைபோன்ற தலையும் உடையவர்களாகக் காணப்படுவர்.

புரதம், மாவு, கொழுப்புச் சத்துகளோடு வைட்டமின்களும் தாது உப்புகளும் உடல்நலனுக்குத் தேவையாக இருக்கின்றன. இவற்றின் குறைகளும் உடலில் நோய்களை உண்டாக்குகின்றன. வைட்டமின்கள் ஏ, பி, சி, டி, இ, கே என்று பலவகைப்படும். இவை ஒவ்வொன்றும் உடலின் பல இன்றியமையாத தொழில்களைக் கண்காணிக்கிறது.

உணவில் வைட்டமின் ஏ குறையும்போது கண் பார்வை மங்கி, பார்வையை இழக்கும் நிலை ஏற்படுகிறது. வைட்டமின் 'ஏ' உடலில் நல்ல வண்ணம் இயங்கப் புரதச் சத்து மிகவும் தேவை. குழந்தைகளுக்கு வைட்டமின் 'ஏ' குறைவு உண்டாகும்போது கண்களில் கருவிழி தாக்கப்பட்டுப் புண்ணாகிப் பார்வை இழக்க நேரிடுகிறது. உயிர்ச்சத்து 'ஏ' குறைவு நோயின் தொடக்கத்தில் இரவில் பார்வை குன்றி, மாலைக்கண் நோய் ஏற்படுகிறது. கண்கள் வறண்டு நிறமிழந்து காணப்படுகின்றன. நாளாக ஆக விழிவெண்படலத்தில் புள்ளிகள் தோன்றும். நோய் மேலும் மிகுதியாகும்போது, கருவிழியைப் பாதித்துக் 'கெரோடா மலேசியா' என்ற கருவிழிப் புண் உண்டாகிப் பார்வையை நிலையாக இழக்க நேரிடுகிறது. புரதச்சத்துக் குறை நோயுள்ள குழந்தைகள் கக்குவான், தட்டம்மை, ஈளை, எலும்புருக்கி நோய், கக்கற் கழிச்சல், கபவாதம் போன்ற தொற்றுநோய்களால் எளிதில் தாக்கப்படுகிறார்கள். அவர்களுக்குக் 'கெரோடா மலேசியா'வும் விரைவில் தோன்றும்.

சுண்ணாம்பு என்ற உப்பும், வைட்டமின் 'டி' யும் உணவில் குறைவதால் குழந்தைகள் கணைச்சூடு (Rickets) என்னும் எலும்புநோயால் தாக்கப்படுகிறார்கள். இந்நோய் குறைப்பிரசவமான குழந்தைகளை மிக எளிதில் தாக்குகிறது. குழந்தைகளைக் கதிரவனின் வெளிச்சம் படாமல் வீட்டிற்குள்ளேயே வைத்திருப்பதாலும், இந்நோய் குறைப்பிரசவமான குழந்தைகளை மிக எளிதில் பீடிக்கிறது. கணைச்சூடு நோயில் சுண்ணாம்பு, எரியம் உப்புகள் நன்கு உட்சென்று கலக்காமையால் குழந்தைகளின் எலும்பு, பல் வளர்ச்சி தடைப்படுகிறது. தசைகள் தளர்ச்சியடையும்; வயிறு பெருத்திருக்கும். சிறுகுழந்தைகளின் தலை எலும்புகள் முதிர்ச்சியடையாமல் தலை அடிப்பாகம் மென்மையானதாக நீண்ட நாட்கள் இருக்கும். புறாமார்பு, தொட்டிக்கால், முட்டிக்கால் போன்ற நிலைகள் வளரும் குழந்தைகளுக்கு உடல் ஊனங்களை ஏற்படுத்தும்.

குறைநோய்களில் 'பி' இன வைட்டமின் (B Complex) குறைவினால் குழந்தைகளிடையே நோய்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. 'பி' இன வைட்டமின்களில் மிக முக்கியமான 'ரிப்போப்லேவின்' (Riboflavin) குறைவால் ஊமனாவாய் எனப்படும் வாய்ப்புண் ஏற்படும். இந்நிலையில் வாயின் இரு ஓரங்களிலும் புண் ஏற்பட்டு வடுக்கள் ஏற்படுகின்றன. நாக்கு சிவந்தும் உலர்ந்தும் பிளவுபட்டும் கார உணவுகள் பட்டால் தீப்போல் எரியும் தன்மையை அடைகிறது. உதடுகள் வெடித்தும் உலர்ந்தும் காணப்படும். 'தயாமின்' என்ற 'பி' இன வைட்டமின் குறையும் போது கைகள், கழுத்து, கால்கள் போன்ற சூரிய வெளிச்சம் படும் இடங்களில் தோல் மெலிதாகிச் சிவந்து, வறண்டு வெண்மையான கோடுகளுடன் வெடித்துக் காணப்படும். தலைச்சுற்றல், வாந்தி, கடுமையான வயிற்றுப்போக்கு ஆகியவையும் தோன்றும்.

'தயாமின்' (Thiamine)என்னும் 'பி' இன வைட்டமின் குறைவால் வீக்க நோய் ஏற்படுகிறது. இதனால் பசியின்மையும், கால், கை அரிப்பு, பாதங்களில் முள் குத்துவது போன்ற உணர்வும் ஏற்படும். நோய் முற்றிவிட்டால் இருதயம் வலிமை குறைவதால் இருதய நோய் ஏற்பட வழியுண்டாகிறது.

உடல் நலத்திற்குத் தாது உப்புகளும் வைட்டமின்களோடு தேவைப்படுகின்றன. இவை உடலின் பல பாகங்களில் இரத்தத்தின் பகுதிகளாக அமைந்து பல சிறந்த தொழில்களை ஒழுங்குபடுத்துகின்றன.

தாது உப்புகளில் ஒன்றான இரும்புச்சத்துக் குறைவு தாய்மார், குழந்தைகளிடையே மிகுதியாகக் காணப் படுகிறது. உடலிலுள்ள இரும்பில் 70 விழுக்காடு, இரத்தத்தில் சிவப்பு நிறத்தைத் தரும் 'ஈமோகுளோ பின்' என்ற பகுதியில் இருக்கிறது. 'ஈமோகுளோபின்' உற்பத்திக்கு இரும்பு தேவை; இரும்புச்சத்துக் குறை வதால் உடலில்இரத்தச்சோகைநோய் ஏற்படுகிறது. இரத்தச்சோகை உள்ள குழந்தைகள் உடல் வளர்ச்சி குன்றி, மயக்கம், தலைவலி, தூக்கமின்மை,பசியின்மை, தொண்டை அடைப்பு, சீரணக்குறைவு, வாய்ப்புண், நாக்கில் புண் ஆகியவற்றால் துன்பப்படுகிறார்கள். நகங்கள் எளிதில் உடையக் கூடியதாகவும் வளைந் தும் காணப்படும். இதைக் கரண்டி போல் பள்ளம் விழுந்த நகம் (Spoon Shaped Nails) என்று கூறுவார் கள்.

சுண்ணாம்பும் 'பாசுபரசு' உப்புகளும் எலும்பு, பல் வளர்ச்சி, தசைகள் விரிந்து சுருங்குவது ஆகியவற் றிற்குத் தேவைப்படுகின்றன. இவற்றின் குறைகளால் குழந்தைகள் உடல் வளர்ச்சி குறைகிறார்கள். அயோ டின் என்ற தாது உப்புக் குறைவு இந்தியாவில் பஞ் சாபு, இமாசலப் பிரதேசம், கன்னியாகுமரி ஆகிய இடங்களில் பரவலாக உள்ளது. அயோடின் சத்து உடலுக்குத் தேவையான அளவு கிடைக்கப் பெறாத வர்கள், உடல் வளர்ச்சி குன்றித் தொண்டையிலுள்ள நாளமற்ற சுரப்பி வீங்கி, முன்கழுத்துக்கழலை (Goitre) என்ற நோய் தோன்றப் பெறுகின்றனர்.

இத்தகைய பலதரப்பட்ட நோய்களினின்று மக்களைக் காப்பாற்ற அரசு பலவகை முயற்சிகளைச் செய்து வருகிறது. பஞ்சம், நோய், உணவுப் பற்றாக் குறை ஆகியவை தோன்றும்பொழுது பலவகைப் பட்ட உதவி தேவைப்படுகிறது. நோய்களைக் குண மாக்க மருத்துவ உதவியும், இருக்க இடவசதி அளித் தலும் துணிமணிகள் அளித்தலும் ஒருவகை உதவி. மற்றொரு வகை உதவி உணவுப் பொருள்களை அளித்தலாகும். மோசமான நிலைமை குறைந்து ஓரளவு சாதாரண நிலைமை எட்டும் வரை உணவுப் பொருள்களைக் கொடுத்தல் நடைபெறும். பிறகு ஒவ்வொருவரும் தத்தம் குடும்ப நலனைக் கவனிக்க வேண்டும்.

மக்களிடையே ஏழ்மையிலும் வலிமையோடு வாழலாம் என்ற எண்ணம் ஆணித்தரமாகப் பதிய வேண்டும். குறைந்த செலவில் சத்துணவு பெறும் முறையையும், உணவுச் சத்துகள் வீணாகாமல் சமைக்கும் முறைகளையும், சத்துகள் வீணாகாமல் உணவைப்பாதுகாக்கும் முறைகளையும், வயிற்றிற்கும் வேலைக்கும் உடல் நிலைக்கும் ஏற்ற உணவை உண் ணும் முறைகளையும் அறிந்து செயற்பட வேண்டும். இவ்வாறு அறிந்து செயற்பட்டால் ஊட்டக் குறைவு உண்டாகாது.

இரா. பி .தே.

**ஊட்டச் சத்துணவுக் கல்வி**: உணவின் அறிவியற் பண்புகள், உடலுரத்திற்கேற்ற உணவு வகைகள் ஆகியன பற்றிய செய்திகளைப் பரப்புதலே ஊட்டச் சத்துணவுக் கல்வி (Nutrition Education) எனப்படும். ஊட்டச் சத்துணவுக் கல்வியின் மூலம் எப்படி உணவுப் பொருள்களை வாங்குவது? அதை எம்முறையில் சமைப்பது? சமைத்த உணவை எவ் வாறு உண்ணுவது? இதன் மூலம் உணவுச் சத்துக் குறைவை (Malnutrition) எவ்வாறு தவிர்ப்பது? உடல் நலத்துடன் நீண்ட வாழ்வை எவ்வாறு மகிழ் வோடு வாழ்வது? என்பன போன்ற அறிவினை ஒருவர் பெற இயலும். ஊட்டச் சத்துணவுக் கல்வி யினைக் குடும்பம், முதியோர் கல்வி வகுப்புகள், சமூக அமைப்புகள், மருத்துவமனைகள், மகளிர் மன்றங்கள், விரிவாக்கப் பணி மையங்கள், முன் தொடக்கப் பள்ளிகள் போன்ற சூழல்களில் வழங்க லாம். மேலும், வானொலி, தொலைக்காட்சி, செய்தித்தாள்கள், அறிவிப்புப் பலகைகள், தாளிகை கள் (Magazines), சுவரொட்டிகள், தாள் நறுக்குகள் (Labels) வழியாகவும் ஊட்டச் சத்துணவுக் கல்வி யினை வழங்க இயலும்.

ஊட்டச் சத்துணவுக் கல்வியும் பயிற்சியும் வேதி யியல், உடலியல் சார்ந்த அறிவியல் வளர்ச்சியடைந்த காலமாகிய கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வேகமாகப் பள்ளிகளில் தொடங்கப் பெற்றன. அப்பொழுதுதான் ஊட்டச் சத்துகள் (Nutrients), கொழுப்புகள் (Fats), புரதங்கள் (Proteins), மாவுப் பொருள்கள் (Carbohydrates), கனிமச் சத்துகள் (Minerals), வைட்டமின்கள் போன்றவை பற்றிய அறிவும், உடலில் உணவு செரித் தல் பற்றிய அறிவியலறிவும் வளரத் தொடங்கின எனக் கூறலாம்.

உடல், உள்ளம் ஆகியவற்றின் வளர்ச்சிக்கும் நலத்திற்கும் வேண்டிய சத்துப் பொருள்களைத் தரத்திலும் அளவிலும் போதுமானபடி கொண்டுள்ள உணவு 'சத்துணவு' அல்லது 'சீருணவு' எனப்படும். உடலின் வெவ்வேறு பகுதிகள் தத்தம் தொழில் களைச் சீரான முறையில் செய்வதற்குத் தேவையான சக்தியைத் தருவதற்கும், உடலை வளர்த்து நோய் வாராமல் உடல் நலத்தைப் பேணிப் பாதுகாப்பதற் கும், அவ்வப்போது நலிந்துபோகும் உடலின் பகுதி களைப் புதுப்பிப்பதற்கும் சத்துணவு மிகமிக அவசியம்.

சத்துணவுக் குறைவால் வளரும் பருவத்திலுள்ள இளங்குழந்தைகளும், கருக்கொண்டுள்ள பெண்களும், பாலூட்டும் தாய்மார்களும் மிகுதியாகப் பாதிக்கப் படுகின்றனர். சத்துணவுப் பற்றாக்குறையால் ஆயிர மாயிரம் குழந்தைகள் நாளும் அல்லலுறுகின்றன. இந் நிலைக்குக் காரணங்கள் பற்பல. அவற்றுள் மக்களி டையே உள்ள அறியாமை தலையாய காரணமாக விளங்குகிறது. பல குடும்பங்களில் அன்றாடம் செல்வம் கொழித்துக் கொண்டிருப்பினும், குழந்தை கள் மெலிந்து நலிந்து நோயுற்று வாழ்வதும் உண்டு. அதற்குக் காரணம் சரியான உணவுகளை அவர்கள் சரியான அளவுகளில், குறித்த வேளையில் உண்ப தில்லை. கீரை வகைகள், கேழ்வரகு போன்ற வற்றை ஏழைகள் உண்ணும் உணவுகள் என்று ஒதுக்கிவிடுகின்றனர். சமையல் செய்யும் போது சோடா உப்பு சேர்த்தல், கஞ்சி வடித்தல், காய்கறி களைப் பொடிப்பொடியாக நறுக்குதல், காய்கறி களை நறுக்கியபின் கழுவுதல் போன்ற தவறான சமையல் முறைகளால் உணவில் உள்ள சத்துகளை வீணாக்குகிறார்கள். விலை உயர்ந்த உணவுப் பொருள்களைக் கொண்டுதான் சத்துணவைப் பெற முடியும் என்று தவறாகக் கருதுகிறார்கள். இந் நிலையில் சத்துணவின் அறிவியலடிப்படைகளை அனைவரும் தெரிந்து கொள்ளச் செய்வது மிகமிக இன்றியமையாததாகிறது.

சத்துணவுக் கல்வியினைச் சிறு குழந்தைப் பருவத் திலிருந்தே போதிக்க வேண்டும். குழந்தைப் பள்ளி களிலேயே சத்துணவைப் பற்றிய அறிவைப் புகட்ட வேண்டும். குழந்தைகள் எந்தக் கருத்தையும் எளிதில் ஏற்கும் மனப்போக்கு உள்ளவர்கள். அந்தப் பருவத்தில் அவர்களுக்கு நல்ல உணவுப் பழக்கங் களைக் கற்பித்தல் எளிது. கற்ற கல்வியை மனத்தில் ஆழமாகப் பதித்துக் கொள்வதுடன், அவர்கள் தாம் பெற்ற கல்வியை வீட்டிற்குச் சென்று பெற்றோர் களுக்கும் கூறி, வீட்டுப் பழக்கங்களை மாற்றவும் முற்படுகிறார்கள்.

குழந்தைப் பள்ளிகளிலும், தொடக்கப் பள்ளி களிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும், தமிழக முதலமைச்சரின் கல்விச் சத்துணவுத் திட்டம் நடைமுறையில் உள்ளது. இத்திட்டத்தின் மூலம் குழந்தைகள் வயிறு நிறைய ஒரு வேளை நண் பகல் உணவைக் காய்கறி, கீரைகள், பருப்புடன் சேர்த்துக் கலப்புணவாக நாள்தோறும் பள்ளியில் உண்கிறார்கள். தொடக்கப் பள்ளிக் குழந்தை களுக்குச் சத்துணவுக் கல்வியைப் போதிப்பதன் தேவையினை உணர்ந்து அகில உலகக் குழந்தைகள் நல நிறுவனமும், அகில இந்தியக் கல்வி ஆராய்ச்சிப் பயிற்சிக் கழகமும், தமிழக அரசின் பள்ளிக் கல்வித் துறையும் இணைந்து தொடக்கப் பள்ளி ஆசிரியர் களுக்கு உணவியற் கல்வியைக் குறுகிய காலப் பயிற்சி யின் மூலம் வழங்கவும், பள்ளிப் பாடங்களான அறிவியல், கணிதம், வரலாறு, நிலவியல் ஆகிய பாடங்களில் சத்துணவுக் கல்வியை இணைத்து நூல் கள் வெளியிடவும் ஏற்பாடுகள் நடந்துள்ளன.

கருவுற்ற பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள், மற்றப் பெரியவர்கள் ஆகியோருக்குச் சத்துணவுக் கல்வியைப் புகட்ட ஏற்ற இடங்கள் மருத்துவ நிலை யங்கள், தாய் சேய் நல நிலையங்கள், சத்துணவு மையங்கள் ஆகியவை ஆகும். தாய்மார்கள் இவ் விடங்களுக்கு மருத்துவ உதவிக்காக வரும்போது சத்துணவுக் கல்வியையும் சேர்த்துப் புகட்டினால் அக்கல்வி அவர்கள் மனத்தில் நன்கு பதிய முடியும்.

### சத்துணவுக் கல்வியை எப்படிப் போதிப்பது?

சத்துணவுக் கல்வியைச் சிறுவர்களுக்கும் பெரியவர் களுக்கும், குறிப்பாக ஊர்ப்புற மக்களுக்கும் அளிக்கப் பல வித முறைகளைக் கையாளலாம். வெறும் சொற்களால் மட்டும் அல்லாமல் ஆடல்கள், பாடல் கள், நாடகங்கள், வில்லுப்பாட்டு, கும்மிப்பாட்டு, பொருட்காட்சி, போட்டிகள், பொதுக்கூட்டங்கள், வரைபடங்கள், வண்ண எழுத்தட்டைகள் ஆகிய வற்றின் மூலம் எளிதில் பரப்பலாம்.

தொடக்கப் பள்ளிகளில் நாடகம், கதை, பாட்டுப் போன்ற செயல்முறைகள் மூலம் சத்துணவுக் கருத்து களைப் போதிக்க முடியும். சிறுவர்கள் நாடகத்தில் நடிக்கவும் பாட்டுக் கேட்கவும் பாடவும் கதை கேட் கவும் ஆர்வம் மிக்கவர்கள். ஆசிரியர் தாம் போதிக்க இருக்கும் உணவியல் கருத்துகளை மைய மாகக் கொண்ட நாடகங்களையும் பாட்டுகளையும் கதைகளையும் முன்னரே திட்டமிட்டு எழுதி வைத்துக் கொண்டு, நேரம் கிடைக்கும் பொழுது குறித்த இடத்தில் சரியான முறையில் பயன்படுத்தினால், இக்கருத்துகள் மாணவர்களின் உள்ளங்களில் ஆழ மாகப் பதியும்.

காகிதக் கூழால் செயப்பட்ட பொம்மைகளைக் கொண்டும் உணவியல் கருத்துகளைச் சுவையாகப் போதிக்க முடியும். இது மாணவர்களின் ஆவலையும் ஊகத்தினையும் தூண்ட மிகவும் சக்தி நிறைந்த சாத னம் ஆகும். ஆசிரியர் நேரடியாகச் சொல்லுவதை விடப் பொம்மைகள் கூறுவதாக இருந்தால் மாண வர்கள் மிகவும் உன்னிப்பாகக் கூர்ந்து பார்த்து அதனை மனத்தில் பதித்துக் கொள்வார்கள். வானொலி, தொலைக்காட்சி வழியாக உணவியற்

கருத்துகளை மக்கள் உணரச்செய்யலாம். உணவியல் தொடர்பான திரைப்படங்கள் அதிகமாக உள்ளன. அவைகளைப் பொது மக்களுக்குத் திரையிட்டுக் கருத்துகளை உணர வைக்கலாம்.

சத்துணவுக் கல்வியில் எதைப்பற்றிச் சொல்லித் தருவது? சத்துணவுக் கல்வியின் மூலம் இன்றியமையாத உணவைப் பற்றிய செய்திகளைக் கற்பிக்க வேண்டும். சத்துணவின் இன்றியமையாமை, உணவுச் சத்துகளின் தேவைகளும் குறைநோய்களும், பிறந்தது முதல் எல்லா வயதினருக்கும் ஏற்ற உணவு, உணவுத் திட்டம் அமைத்தல், நோய்க் காலங்களில் உணவின் மாற்றம், பலதரப்பட்ட உணவு வகைகளும் அவற்றின் தேவைகளும், உணவைச் சமைக்கும் முறைகள், இணை உணவுகள், உணவுப் பாதுகாப்பு, வீட்டுத் தோட்டம் அமைத்தல், சத்துணவுத் திட்டங்களும் அவற்றில் பொதுமக்களின் பங்கும் ஆகியன பற்றிக் கற்பிக்கலாம்.

ஊட்டச் சத்துணவுக் கல்வியாளர்கள் (Nutrition Educators) ஊட்டச் சத்துக் கல்விக்காகப் பள்ளியின் நேரத்தைக் கூட்டுவதற்கோ புதிய பாடத்திட்டத்தைச் சேர்ப்பதற்கோ உடன்பாடான கருத்துக் கொண்டிருக்கவில்லை. அதற்குப் பதிலாக இப்பொழுதுள்ள பள்ளிப் பாடத்திட்டத்திலேயே தகுந்த இடங்களில் ஊட்டச் சத்துணவு பற்றிய பகுதிகளை இணைக்க வேண்டும் எனக் கருதுகின்றனர். எடுத்துக்காட்டாக, ஊட்டச் சத்துணவு பற்றிய பாடங்களை இலக்கியம், உயிரியல், உடல் நலவியல், உடலியற் கல்வி, குடும்பப் பொருளாதாரம் ஆகியவற்றில் பொருத்தமான இடங்களில் சேர்க்கலாம் என்பது ஊட்டச் சத்துணவுக் கல்வியாளர்களின் கருத்தாகும்.

கல்வி கற்பித்தலின் முறைகள்: கற்பிப்பதற்குக் கருவிகள் தயாரிக்கப்படும் பொழுதும், சத்துணவுக் கல்வியைப் பரப்பும் பொழுதும் கீழ்க்காணும் குறிப்புகளைக் கவனத்தில் கொள்ள வேண்டும்: 1. கற்பிக்கப்படும் கருத்துத் தெளிவாகவும் துல்லியமாகவும் அமைய வேண்டும். 2. கற்றுக் கொள்பவர்களின் வயது, அறிவு நிலைக்கேற்ற பாடங்களாக இருக்க வேண்டும். 3. குழப்பம் இல்லாமல் மையக்கருத்தினை எளிய முறையில் போதிக்கும் வண்ணம் இருக்க வேண்டும். 4. கற்றுத் தரும் கருத்து எளிதில் கடைப்பிடிக்கக்கூடியதாகவும், அவர்கள்தம் அன்றாடப் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள் ஆகியவற்றை ஒட்டியும் இருக்க வேண்டும். 5. ஒரே கருத்தைப் பல கல்வி உத்திகளைக் கையாண்டுகற்றுத் தர வேண்டும். அப்பொழுதுதான் கருத்துகள் நன்றாகப் பதியும். 6. துணைக் கருவிகள் குறைந்த செலவில் தயாரிக்கப்பட வேண்டும். வண்ணக் கலவைகள் முடிந்த இடங்களில் பயன்படுத்தப்பட வேண்டும். 7. கற்றுத் தருபவர்கள்நடைமுறையில் அதே கருத்துகளைப் பின்பற்றுபவர்களாக இருக்க வேண்டும்.

இரா.பி.தே.

துணை நூல்:

**Worthington, Roberts, B.S.**, Contemporary Developments in Nutrition Mosby, St. Louis, Missouri, 1981.

**ஊட்டன், எர்னசுடு ஆல்பர்ட்டு (கி.பி. 1887-1954)** அமெரிக்க நாட்டு உடல்சார் மானிடவியலாராவர். இவர் மனிதப் படிமலர்ச்சியையும் மனித இனங்களுக்கிடையே காணப்படும் வேறுபாடுகளையும் பற்றி ஆராய்ந்த தலையாய வல்லுநர்களுள் ஒருவராவர். எர்னசுடு ஆல்பர்ட்டு ஊட்டன் (Earnest Albert Hooton) அமெரிக்க ஐக்கிய நாட்டின் விசுகான்சின் மாநிலத்தில் கிளமன்சுவில்லி (Clemansville) என்னுமிடத்தில் கி.பி. 1887-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 20-ஆம் நாள் பிறந்தார்.

விசுகான்சின் பல்கலைக்கழத்தில் 1911-ஆம் ஆண்டு டாக்டர் பட்டம் பெற்ற பிறகு, உரோட்சு உதவித் தொகையைப் (Rhodes Sholarship) பெற்று விக்சுபோர்டு பல்கலைக்கழகத்தில் ஆய்வு நடத்தினார். இங்குப்பணி புரிந்த போது பிரிட்டிசு படிமலர்ச்சியியலாரின் (British Evolutionists) ஆய்வுகளின் தாக்கம் பெற்று, மனிதப் படிமலர்ச்சியின்பால் மிகுந்த ஆர்வம் கொண்டார். அதன் பின்னர் 1913-இல் ஆர்வர்டுப் (Harvard) பல்கலைக்கழகத்தில் ஆசிரியப் பணியில் சேர்ந்தார். அந்தப் பல்லைக்கழகத்தில் இவர் ஏற்படுத்திய உடல்சார் மானிடவியல் சோதனைக் கூடமானது மனித இன வேறுபாடுகளை அறியவும், மனிதப் படிமலர்ச்சியினை அறியவும் மிகவும் துணை புரிந்தது. இவரது அயரா உழைப்பினால் அமெரிக்காவின் பிற பல்கலைக்கழகங்களிலும் உடல்சார் மானிடவியல் துறைகள் புதிதாகத் தொடங்கப்பட்டன; வலுப்பெற்றன.

இவர்தம் ஆய்வுகளுள் முதன்மையானவை மனித இனங்களை வகைப்படுத்தி அவற்றிற்குரிய விளக்கங்களை எழுதியமையும் மனித ஆளுமைக்கும் மனித வகைகளுக்கும் உள்ள தொடர்பினை அறிந்தமையும் ஆகும். ஊட்டன் 1946-ஆம் ஆண்டு வெளியிட்ட மனித வகைப்பாடு ஏனையோர் முறையைக் காட்டிலும் மாறுபட்டது. இவர் மனித இனங்களை முதன்மை இனம்(Primary Race), முதன்மை உள்ளினம் (Primary Subrace), கூட்டினம்(Composite Race), கூட்டு உள்ளினம் (Composite Subrace), எஞ்சிய


கலப்பு வகைகள் (Residual Mixed Types) முதலான வகைகளாகப் பிரித்தார்.

இவரது முதல் ஆய்வு 'கேனரித் தீவின் தொன்மை மக்கள்' (The Ancient Inhabitants of the Canary Islands-1925) பற்றியதாகும். இங்குக் கிடைத்த வரலாற்றுக் காலத்திற்கும் முற்பட்ட மனிதர்களின் எலும்புகளைக் கொண்டு அத்தீவின் வரலாற்றை எழுதினார். அதன்பின்னர், அற்றுப்போன பெக்கோசு பியூப்லோ (Pecos Pueblo) மக்களைப் பற்றிய ஆய்வு செய்ததனால் இன வகைகளைக் கண்டறிவதில் ஓர் அணுகு முறையை ஏற்படுத்தினார். அற்றுப்போன மக்களை மீட்டுருவாக்கம் செய்வதில் மனித உடலில் எஞ்சிய எலும்புகளையும் மண்டையோடு, உடற்கூறு ஆகியவற்றின் அளவுகளையும் ஒப்பிட்டுப் புள்ளியியல் (Statistical) முறையில் ஆராய்வதை இத்துறையில் அறிமுகப்படுத்தினார். ஊட்டன் 1930களில் அமெரிக்கக் குற்றவாளி மக்களை ஆய்வு செய்து இப்பண்புகள் உடற்கூறுகளுடனும் இனக் கூறுகளுடனும் தொடர்புள்ளவையா என்பதைக் கண்டறிந்தார். இந்த ஆய்வுகளைப் பற்றி இவர் வெளியிட்ட 'அமெரிக்கக் குற்றவாளிகள்' (The American Criminals,1939), 'குற்றமும் மனிதனும்' (Crime and the Man,1939),ஆகிய நூல்கள் இத்துறையில் புதிய விளக்கங்களுக்கு வழி கோலின.

ஊட்டன் எழுதிய நூல்களுள் முதன்மையானவை 'வாலில்லாக் குரங்குகள் முதல் இது வரை' (Up from the Ape, 1931), 'வாலில்லாக் குரங்குகள், மனிதன், மோரன்கள்' (Apes, Men, and Morons, 1937). 'வாலில்லாக் குரங்குகளைப் போலவும் அதற்கு எதிர் மாறாகவும் ஏன் மனிதன் நடந்து கொள்கிறான்' (Why Men Behave Like Apes and ViceVersa-1940) என்பவையாகும்.

அமெரிக்காவில் தனக்குப் பிந்திய ஒரு தலைமுறையில் அனைத்து உடல்சார் மானிடவியலாரையும் உருவாக்கிய பெருமையையும், அமெரிக்காவில் ஆர்வர்டுப் பல்கலைக் கழகத்தில் உடல்சார் மானிடவியலை முதன்மையான துறையாக உருவாக்கிய பெருமையையும் பெற்ற இவர், மசாசுசெட்சு (Massachusetts) என்னுமிடத்தில் 1954-ஆம் ஆண்டு மே திங்கள் 3-ஆம் நாள் இறந்தார். ஓ.ப.

**ஊட்டா**: ஐக்கிய அமெரிக்க நாட்டின் நடுப்பகுதியில் இராக்கி மலைச் சரிவில் அமைந்துள்ள நிலப் பகுதியே அக்கூட்டாட்சியின் 45-ஆம் உறுப்பு மாநிலமாகிய ஊட்டா ஆகும். இதுகி.பி. 1896-ஆம் ஆண்டில் ஐக்கிய அமெரிக்கக் கூட்டரசில் ஓர் உறுப்பு மாநில




ஊட்டா

மாக ஒப்புக் கொள்ளப்பட்டது. ஊட்டாவின் (Utah) பரப்பளவு 219,931 ச.கி.மீ. வேளாண்மையும் சுரங்கத் தொழிலும் முக்கிய தொழில்கள் மார்மோன்கள் (Mormons) எனப்படும் இயேசு கிறித்துவின் திருச்சபையைச் சேர்ந்தோரே இதில் பெருமளவு உள்ளனர். இதன் தலைநகரம் சால்ட்டு லேக்கு நகரம் (Salt Lake City).

**அரசாங்க அமைப்பு**: இம்மாநிலத்துக்கு கி.பி. 1896-ஆம் ஆண்டிலேயே ஐக்கிய அமெரிக்கக் கூட்டாட்சி நாட்டின் அரசியலமைப்பைப் போன்றதொரு அரசியலமைப்பு வரையப்பட்டது. கூட்டாட்சியின் உரிமைகள் மசோதா (Federal Bill of Rights) வழங்கும் ஆள் உரிமைகளை (Personal Freedoms) ஒத்த ஆள் உரிமைகளை ஊட்டா மாநிலத்தின் மக்களுக்கு அதன் அரசியலமைப்பு வழங்குகிறது. குறிப்பிட்ட ஏதேனுமொரு சமய நிறுவனத்தார் அரசாங்கக் கல்விக் கூடங்களைக் கட்டுப்படுத்துதலையும் பலதார மண முறைகளையும் (Polygamy) அரசியலமைப்புச் சட்டம் தடை செய்கிறது. அது எல்லாக் குடிமக்களுக்கும் சமமான குடியியல் (Civil), அரசியல், சமய உரிமைகளையும் வாக்குரிமைகளையும் வழங்குகிறது. தேசிய வாக்குரிமை விதிகளை ஒத்த விதிமுறைகள் ஊட்டா மாநிலத்திலும் இருக்கின்றன. வரிவிதிப்பு அதிகாரங்களைப் பாதிக்கக்கூடிய வாக்குரிமைகளைக் கையாளுபவர் முந்தைய ஆண்டிற்கான தமது சொத்து வரியைக் கட்டியிருத்தல் வேண்டும்.



ஊட்டா மாநிலச் சட்டமன்றம்

நிருவாகம்: நான்காண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிற ஓர் ஆளுநரே (Governor) மாநிலத்தின் உயர்தர நிருவாக அதிகாரி ஆவார். அவரைப் போன்ற பதவிக் காலத்தையுடைய மாநிலச் செயலர் (Secretary of State), தணிக்கை அதிகாரி, கருவூல அதிகாரி (Treasurer), அரசு வழக்கறிஞர் (Attorney General) முதலிய அலுவலர் ஆளுநருக்கு உதவி செய்கின்றனர். வழக்கமான மாநில அரசுச் செயல்களையெல்லாம் வேறு 50 நிறுவனங்கள் செய்கின்றன. மாநில ஆளுநருடைய அதிகாரங்கள் அமெரிக்கக் குடியரசுத் தலைவருடைய அதிகாரங்களை ஒத்திருக்கின்றன. மாநிலச் சட்டமன்றம் நிறைவேற்றும் எந்தச் சட்டத்தையும் தள்ளுபடி செய்தற்கு ஆளுநருக்கு மறுப்பாணை அதிகாரம் (Veto Power) உண்டு. ஆனால் அவ்வாறு தள்ளுபடி செய்யப்பட்ட மசோதாவை மாநிலச் சட்டமன்றத்தின் ஒவ்வொரு மன்றமும் மூன்றில் இரண்டுபங்கு உறுப்பினருடைய ஆதரவின் பேரில் மீண்டும் நிறைவேற்றுமாயின், மேற்படி மசோதா ஆளுநருடைய ஒப்புதல் இல்லாமலே சட்டமாகி விடும். மேலும், சட்டமன்றம் எந்த ஒரு மசோதாவையும் நிறைவேற்றி, அதன்பின்னர் அச்சட்டமன்றம் தொடர்ந்து கூடியிருக்க, அப்பொழுது சட்டமன்றத்தில் மசோதா நிறைவேறிய 5 நாட்களுக்குள் ஆளுநர் அதன் மீது யாதொரு நடவடிக்கையும் எடுக்காமலிருந்தால், அப்பொழுதும் அந்த மசோதா ஆளுநருடைய ஒப்புதல் இல்லாமலே சட்டமாகிவிடும். மாநில அரசின் எல்லா அலுவல்களையும் ஆளுநர், அரசுச் செயலர், அரசு வழக்கறிஞர் ஆகியோர் அடங்கிய ஓர் அரசாங்கத் தேர்வாளர் குழு (State Board of Examiners) மறுஆய்வு செய்கிறது.

சட்டமன்றம்: மாநிலச் சட்டமன்றம் பிரதிநிதிகள் மன்றம் (House of Representatives), ஆளவை மன்றம் (Senate) ஆகிய இருமன்றங்களை உடையது. இவற்றிற்கும் மக்கள் தொடக்கம் (Initiative), குடிஒப்பம் (Referendum) முதலியவற்றின் வாயிலாகப் பொதுமக்களுக்கும் சட்டம் இயற்றும் அதிகாரம் இருக்கிறது. ஒவ்வொரு மன்றத்திலும் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களால் நிறைவேற்றப்படாத சட்டங்களின் மீது வாக்காளர்கள் குடிஒப்பம் நடத்தலாம். பிரதிநிதிகள் மன்றத்துக்கு 75 உறுப்பினர்கள் இரண்டு ஆண்டுக் காலத்திற்கும், ஆளவை மன்றத்திற்கு 29 உறுப்பினர்கள் 4 ஆண்டுக் காலத்திற்கும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். சட்டமன்றம் 60 நாட்களுக்கு ஆண்டுக் கூட்டமும், 20 நாட்களுக்கு வரவு செலவுத் திட்டக் கூட்டமும் நடத்துகிறது. ஆளுநருடைய அழைப்பின் பேரில் சிறப்புக் கூட்டங்களும் நடத்தப்படலாம். கூட்டம் நடைபெறாத காலங்களில் சட்ட அலுவல்களையும் அரசின் சிக்கல்களையும் கவனித்து ஆராயவும், வரவுசெலவுத் திட்டம் பற்றி ஆலோசனை கூறவும், செலவுக்கான கோரிக்கைகளை ஆராயவும், சட்டவரைவுகள் (Bills) சரியாக அமைந்துள்ளனவா என்று ஆராயவும் நான்கு முழுநேரக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

நீதித்துறை: மாநிலத்திற்குத் தலைமையாக உள்ள நீதிமன்றமே அதன் உயரிய நீதிமன்றம் (Supreme Court) ஆகும். அதில் 10 ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட 5 நீதிபதிகளிருக்கின்றனர்; ஒரு நீதிபதி இரண்டாண்டுக்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்படுகிறார். ஏழு மாவட்ட நீதிமன்றங்களின் நீதிபதிகள் 6 ஆண்டுப் பதவிக் காலத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். சுற்றிவரும் நீதிமன்றங்களும் (Circuit Courts), அமைதி நீதிபதிகளும் (Justices of the Peace) உண்டு. சோவியத்து உருசியாவில் மாநில நீதிபதிகள் தேர்ந்தெடுக்கப்படுதலைப்போல ஐக்கிய அமெரிக்க நாட்டிலும் நீதிபதிகள் சில மாநிலங்களில் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

உள்ளாட்சி அரசாங்கமுறை: மாநிலம் உள்ளாட்சி அரசாங்கத்துக்காகப் பலகோட்டங்களாகப் (Counties) பிரிக்கப்பட்டு, ஒவ்வொன்றுக்கும் ஒரு கோட்ட

ஆணைய வடிவத்தில் உள்ளாட்சி அரசாங்கம் (A Commission Form of Government) அமைக்கப்பட்டிருக்கிறது. அதில் ஆணையர்களும் தேர்ந்தெடுக்கப்பட்ட அலுவலர்களும் இருந்து, அவர்கள் ஆட்சிப் பணிகள், நீதிப்பணிகள், நிருவாகப் பணிகள், நிதி, சுகாதாரம், கல்வி வளர்ச்சி ஆகியவை பற்றிய பணிகளைச் செய்கின்றனர். சால்ட்டு லேக் நகரத்துக்கு ஒரு தலைவரும் 4 ஆணையர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்; மற்ற நகரங்களில் அவற்றின் மக்கள் தொகைக்கு ஏற்ப ஆணையர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

மாநில அரசியலில் குடியரசுக் கட்சியினரும் (Republicans), குடியாட்சிக் கட்சியினரும் (Democrats) பங்கு கொள்ளுகின்றனர். இருகட்சியாரும் ஒத்துழைத்து நாட்டின் முன்னேற்றத்துக்கு வேலை செய்கின்றனர். இரா. அ

**ஊட்டியார்** சங்க காலப் புலவர்களுள் ஒருவர். இவருடைய இயற்பெயர் தெரியவில்லை. இவர் பாடிய இரண்டு பாடல்கள் (68,388) அகநானூற்றில் இடம்பெற்றுள்ளன. குறிஞ்சித் திணையிலமைந்த இவரது பாடல் (68) தலைவன் இரவுக்குறி வந்தமையறிந்த தோழி அதனைத் தலைவிக்குக் கூறுவதாக அமைந்துள்ளது. தலைவி தலைவனைக் காண ஏதுவாய் அவள் தாயிடம் நம் தோட்டத்தின்கண் உள்ள குளத்தின் அருகிலுள்ள கூதளத்தின் இலை குழையுமாறு விழும் அருவி நீர் ஓசை கேட்கிறது என்றும், மேலும் கிளையில் கட்டப்பட்ட ஊஞ்சற்கயிற்றினைப் பாம்பெனக் கருதி, இடி அடிமரம் சிதையுமாறு இடித்தல் செய்தது என்றும் கூறி, அவற்றால் எழாமை கண்டு தாய் நன்கு உறங்குவதைத் தோழி அறிந்து கூறுகிறாள். இதனை 'ஊட்டி அன்ன ஒண்தளிர்ச் செயலை, ஓங்குசினைத் தொடுத்த ஊசல் பாம்பென, முழு முதல் துமிய உருமெறிந் தன்றே' என்று கற்பனை நயம்படக் கூறியுள்ளார். ஊட்டி அன்ன ஒண்தளிர்ச் செயலை (68) என்றும், ஊட்டியன்ன ஊன்புரள் அம்பு என்றும் (388) இவர்தம் பாடலில் நிறம் ஊட்டப்பெறாது இயற்கையாக அமைந்த செயலை, அம்பு ஆகியவற்றின் நிறத்தைச் செய்தது போலப் பாடியிருக்கும் பாங்கினால் இவர் இப்பெயர் பெற்றார் என்று சிலர் கருதுகின்றனர். வீ.சே.

**ஊடல்**: களவு நிலையிலும் கற்பு நிலையிலும காதலர்களிடையே ஓரோவழி மாறுபாடு தோன்றுதல் உண்டு. அம்மாறுபாடு பிணக்கம் என்றும், ஊடல் என்றும் கூறப்படும். உடலுதல் என்பதற்கு மாறுபடுதல் என்பது பொருள். அச் சொல்லின் அடிப்படையில் தோன்றியது ஊடல் ஆகும். மாறுபாடாகிய ஊடலை நீக்கிக் கூடுங்கால், அக் கூட்டம் தலைவன் தலைவியருக்கு மிக்க இன்பத்தினைச் செய்யும். அதனால் காதலர் வாழ்வில் ஊடல் இன்றியமையாத சிறப்புடையதாக அமைந்துள்ளது. தலைவன் தலைவியர்க்கிடையே தோன்றும் மாறுபாடு அதன் இயல்பு நோக்கி, புலவி, ஊடல், துனி என்னும் பெயர்களால் வழங்கப்படுகிறது. "புலவி அண்மைக் காலத்தது; ஊடல் அதனின்மிக்கது" என்று இளம்பூரணர் விளக்கியுள்ளார் (தொல். பொருள். கற்பு. 15 உரை). எளிதாக நீக்கத்தக்க மாறுபாட்டினைப் புலவி என்றும், நெடிதாக நிற்கக் கூடிய மாறுபாட்டினை ஊடல் என்றும் கூறுவர். தெளிவித்தாலும் எளிதில் தெளியாத ஊடலை 'உணர்த்த உணரா ஊடல்' என்றும், எளிதில் தெளிவிக்கப்படும் ஊடலை 'உணர்த்த உணரும் ஊடல்' என்றும் இலக்கண நூல்கள் குறிப்பிடுகின்றன.

காதலின்பத்தினை மிகுத்தற்கு உதவியாகும் ஊடலை இலக்கண நூலாசிரியர்கள் ஐந்திணைக்குரிய உரிப்பொருள்களுள் ஒன்றாகக் குறிப்பிட்டுள்ளார்கள். ஊடலும் ஊடல் நிமித்தமும் மருதத்திணைக்குரிய உரிப்பொருளாகத் தொல்காப்பியமும், பின்னர்த் தோன்றிய அக இலக்கண நூல்களும் வரையறுத்துள்ளன.

தலைவன் தலைவியொடு ஊடல் கொள்ளுமாற்றினைத் தொல்காப்பியர், 'உணர்ப்பு வரை இறப்பினும், செய்குறி பிழைப்பினும் புலத்தலும் ஊடலும் கிழவோற்குரிய' என்று கூறியுள்ளார் (தொல். பொருள். கற்பு. 15). தலைவன் ஊடுதற்குரிய காரணங்களுள் உணர்ப்பு வரை இறத்தலைக் கற்புக் காலத்திற்குரியதாகவும், செய்குறி பிழைத்தலைக் களவுக் காலத்துக்குரியதாகவும் நச்சினார்க்கினியர் கருதியுள்ளார். மேலுமவர், புலவியும் ஊடலும் பெரும்பான்மை கற்பிக்கும், சிறுபான்மை களவிற்கும் உரியனவென்றும் விளக்கியுள்ளார். உணர்ப்பு வயின் வாரா ஊடற் காலத்தில் தலைவனுக்கும் புலவி உரித்தாதலை இறையனார் அகப்பொருள், 'உணர்ப்பு வயின் வாரா ஊடல் தோன்றின் புலத்தல்தானே கிழவற்கும் வரையார்' என்று கூறியுள்ளது (இறையனார் அகப்பொருள் 50). ஊடலையும் அதனைத் தவிர்க்கு மாற்றையும் பற்றி நம்பியகப் பொருள் விரிவாக இலக்கணம் கூறியுள்ளது. உணர்த்த உணரும் ஊடற்குரிய கிளவிகளையும், உணர்த்த உணரா ஊடற்குரிய கிளவிகளையும் இந்நூல் மிகவும் விரிவாகக் குறிப்பிட்டுள்ளது.

தலைவியிடம் ஊடல் தோன்றுவதனை விளக்குமிடத்து, இறையனார் அகப்பொருளின் உரையாசிரியர் அது மூன்று வகையில் தோன்றும் என்கிறார்.

தலைவன் பரத்தையர்பால் ஒழுகுதலைச் செய்தான் கொல்லோ என்றும், செய்யாநின்றான் கொல்லோ என்றும், செய்வான் கொல்லோ என்றும் கருதும் மூவகையால் ஊடல் தோன்றக் கூடும். 'தலைவன் பரத்தையர் ஒழுக்கம் பற்றி அயல்மனைப்பிரிவு, அயற்சேரிப் பிரிவு, நகர்ப்புறம் போதல் ஆகியன மேற் கொள்ளுங்கால் தலைவி ஊடல் கொள்ளுவாள்'என்று நம்பியகப் பொருள் குறிப்பிடுகிறது (நம்பி. 63-67). தலைவி அவ்வாறு ஊடல் கொள்ளுங்கால் பாணன், பாடினி, கூத்தர்,இளையர், கண்டோர், பாங்கர், பாகன், பாங்கி, செவிலி, அறிவர், காமக்கிழத்தி, காதற் புதல்வன், விருந்து,ஆற்றாமை ஆகியவர்களுள் ஒருவர் ஊடல் தணிக்கும் வாயிலாகச் செயற்படக் கூடும். பாணன், விறலி, கூத்தர் இளையோர் போன்ற வாயில்களின் செயல்களைத் தனித்தனித் தொகுத்துக் கூறும் நூற்பாக்களில், ஊடல் தணித்தல் அவர்களுக் குரிய செயல்களுள் ஒன்றாகச் சிறப்பித்துக் கூறப் பட்டுள்ளது.

சங்கத் தொகை நூல்களில் இடம்பெற்றுள்ள மருதத்திணைப் பாடல்கள் ஊடல் அல்லது ஊடல் நிமித்தத்தினை உரிப்பொருளாகக் கொண்டமைந் துள்ளன. ஊடலை உரிப்பொருளாகக் கொண்ட மருதத்திணைப் பாடல்களைக் கலித் தொகையில் மரு தன் இளநாகனாரும், ஐங்குறுநூற்றில் ஓரம்போகி யாரும் பாடி அவற்றால் சிறப்புற்றுள்ளனர். பூம்பு கார்க் கானற்சோலையில் கோவலன் மாதவியொடு கொண்ட ஊடல் உணர்த்த உணராததாக அமைந்து, 'மாதவி கானற்பாணி, கனகவிசையர்தம் முடித்தலை நெரித்தது' என்று வியக்குமாறு செயற்பட்டுச் சிலப் பதிகாரம் என்றோர் காப்பியந் தோன்றுவதற்கு வித் தாக அமைந்தது.

தலைவன் தலைவியரிடையே தோன்றும் மாறு பாட்டின் வெவ்வேறு நிலைகளைக் குறித்தமைந்த புலவி, ஊடல், துனி, ஆகியவற்றின் தன்மைகளை நன்குணர்ந்த திருவள்ளுவர் அவற்றின் இயல்பு நலங் களையும், இன்றியமையாமையினையும் தமது திருக் குறளில் நன்கு குறிப்பிட்டுள்ளார். அவற்றைப் புலவி, புலவிநுணுக்கம், ஊடலுவகை ஆகிய மூன்று அதிகா ரங்களில் அமைத்து அவற்றைத் திருக்குறளின் இறுதி மூன்றதிகாரங்களாக்கி நிறைவு செய்துள்ளமை குறிப் பிடத்தக்கது.உணவின்பம் பெருகுதற்கு அளவான உப் பினைப் போலக் கல்வி இன்பம்பெருகுதற்குஅளவான புலவி இன்றியமையாதது என்கின்றார் (குறள். 1302). முதிர்ந்த பிணக்காகிய துனியும், இளம்பிணக்காகிய புலவியும் இல்லாவிட்டால் காமம் முதிர்ந்த பழமும் கருக்காயும் போன்றது (குறள். 1306). காரணமின்றி யும், அது உளதாகக் கொண்டு தோன்றும் புலவியின் இயல்புகளைப் 'புலவி நுணுக்கம்' என்னும் அதிகாரத் தில் வள்ளுவர் நயம்படக் காட்டியுள்ளார். முன் அமையும் ஊடல் பின் அமையும் கூடலுக்கு அடிப் படையாய்த் தலைமகனும் தலைமகளும் உவப்புறுத லுக்கு ஏதுவாய் அமைந்து இன்பஞ் செய்தலை, 'ஊடலுவகை' என்னும் அதிகாரம் விளக்குகிறது. ஊடல் நீங்கித் தலைவன் தலைவியர் கூடும் கூடலின் சிறப்பினை 'ஊடுதல் காமத்திற் கின்பம் அதற்கின்பம், கூடி முயங்கப் பெறின்'எனத் திருவள்ளுவர் விளக்கித் தம் நூலினை முடித்துள்ளார். அ.மா.ப.

**ஊண்பித்தையார்** சங்க காலப் பெண்பாற் புலவர்களுள் ஒருவர். இவருடைய பெயர் ஊண் பித்தையென்றும் சில பிரதிகளில் காணப்படுகிறது. இவர் பாடிய பாடலொன்று குறுந்தொகையில் (232) இடம் பெற்றுள்ளது. பாலைத்திணையிலமைந்த இவ ரது பாடல் வினை கருதிப் பிரிந்து சென்ற தலைவன் வாராமையால் வருந்தும் தலைவியைத் தோழிதேற்று வதாக அமைந்துள்ளது. தோழி தலைவியிடம் நம்மைவிட்டுப் பிரிந்து சென்றவர் நம்மை நினைத்தே இருப்பார் என்றும், தம்வினை முற்றுப்பெறாமையால் வரவில்லை போலும் என்றும் கூறி, விரைவில் வந்து விடுவார் என உணர்த்தித் தேற்றுகின்றாள். தலைவன் சென்ற மலைவழி யானை முறித்துக் உண்டு எஞ் சிய யாமரத்தின் நிழலில் ஆண்மான் துயிலும் பெரிய சோலையையுடையது என்பதனை 'மாவெருத்திரலை, உரற்கால் யானை யொடித்துண் டெஞ்சிய,யாஅவரி நிழல் துஞ்சும், மாயிருஞ் சோலை மலையிறந் தோரே' என அழகுறக் காட்டியுள்ளார். வீ.சே.

**ஊணர்கள்**: ஊணர்கள் எனப்படுவோர் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் தோன்றிய வீரமிக்க ஒரு நாக ரிகமற்ற கூட்டத்தார். இவர்களே மேற்கே உரோ மானியப் பேரரசையும், கிழக்கே இந்தியாவில் குப்தர் களுடைய பேரரசையும் அழித்த கூட்டத்தார் ஆவர். ஊணர்கள் (Huns) மத்திய ஆசியாவைச் சேர்ந்தவர் கள்.

மேற்கத்திய ஊணர்கள்: ஊணர்களுடைய முந் தைய இடம் நடு ஆசியா (Central Asia) ஆகும்; இவர்களிலே ஒரு கூட்டத்தார் மேற்கு நோக்கிப் பரவியதனால், ஆசுட்ரோகாத்துகள் (Ostrogoths) எனப்படும் நாகரிகமற்ற மற்றொரு கூட்டத்தாரைத் தாக்கினர். செருமானியக் காட்டுமிராண்டிக் கூட்டங் களை இவர்கள் வென்றனர். இவர்களுடைய படை யெடுப்புகள் மிகவும் அழிவைத் தந்தன. அவையெல் லாம் கொள்ளைச் செயல்களே தவிர நாடு பிடிக்கும் செயல்களல்ல. இதனால் மிகவும் அச்சத்துக்குள்ளான

காத்துகள் (Goths) எனப்படுவோர் செருமனி நாட்டைவிட்டுத் தெற்கு நோக்கித் தான்யூப(Danube) ஆற்றின் எல்லையைக் கடந்து, உரோமானியப் பேரரசினுள் நுழைந்து, உரோமானியப் படைகளை ஏட்ரியாநோப்பிளில் (Adrianople) கி.பி. 378-இல் தோற்கடித்தனர். வலியிழந்திருந்த உரோமானியப் பேரரசு இவர்களைத் தன் நாட்டிலிருந்து அகற்ற முடியாமல், தன் நண்பர்களாகத் (Aliies) தன் நாட்டில் தங்க இசைவளித்தது. இவர்கள் அதனிடமிருந்து பண உதவி பெற்று, உரோமானியப் படைகளுக்கு வீரர்களைத் திரட்டிக் கொடுத்தனர். செருமனியிலிருந்த விசிகாத்துகள், வாண்டல்கள், அலானி, சுபிபர்கண்டியர் முதலிய செருமானியக் கூட்டத்தார் கி.பி. 406, 407-ஆம் ஆண்டுகளில் ஊணர்களால் இரைன் ஆற்றுக்குத் தெற்கே தள்ளப்பட்டனர். விசிகாத்துகள் இசுபெயின் நாட்டிலும், வாண்டல்கள் வட ஆப்பிரிக்காவிலும் குடியேறினர். ஊணர் தலைவனான அட்டில்லாவை(Attila)கி.பி. 451-இல்கடலூானியவெளியில் உரோமானியத் தளபதி எடியசு (Aetius) செருமானியர்உதவியுடன் தோற்கடித்தார். இதைக்கண்ட அட்டில்லா மேற்கு நோக்கிப் பரவியபோது, ஊணர்களை மற்றச் செருமானியரோடு இணைத்தார்.

அட்டில்லாவின் வெற்றிகள்: ஊணர்களுடைய சிறந்த பெருவீரரான இவர் அட்டில்லா எனப்படுவார். இவர் கி.பி. 406 முதல் கி.பி. 453 வரை வாழ்ந்தார். இவரை 'இறைவரால் விடுக்கப்பட்ட தண்டம்' ('Scourge of God') என்று வரலாற்றாசிரியர் குறிப்பிடுவர். இவர் கி.பி. 433-இல் அரசரானார். இவர் காலத்தில் ஊணர்கள் ஆசியாவிலிருந்து புற்றீசல் போல் மேற்கு நோக்கிப் படையெடுத்துச் சென்று, தான்யூப் புல்வெளியில் இப்போது அங்கேரி எனப்படும் பகுதியில் குடியேறினர்.

இவர்களுடைய ஆட்சியிலிருந்து தப்பிச் செல்லுவதற்காகச் செருமனியிலிருந்து சாக்சன் இன மக்களும், அவர்களுடைய உறவினரும் பிரிட்டனின் மீது படைஎடுத்துச் சென்று, அங்கிருந்து கி.பி 410-இல் உரோமானியப் படைகள் விலக்கிக் கொள்ளப்பட்ட நிலையில் அங்குக் குடியேறினர். அட்டில்லா நடு ஐரோப்பா முழுவதையும், இரைன் ஆறு முதல் காகசசு மலைவரை (Caucasus) எந்த எதிரியுமின்றி ஆட்சி செய்தார். பைசாண்டிய உரோமானியப் பேரரசர் அட்டில்லாவை எதிர்க்கும் வலுவின்றி, இவருக்குத் திறை செலுத்தினார். அட்டில்லா செருமனி முழுவதையும் வென்று பிரான்சினுள் நுழைந்தார். ஊணர்கள் சிறந்த குதிரைவீரர்கள். கூடாரங்களில் தூங்கும் பொழுதைத் தவிர மற்றப் பொழுதைக் குதிரைமீது கழித்தனர். செல்வச் செழிப்புடனிருந்த உரோமானிய நகரங்களை அவர்கள் அஞ்சி வெறுத்தாலும், அவை தங்களால் கொள்ளையடிப்பதற்குரியனவாகக் கருதி, அவற்றைத் தாக்கிக் கொள்ளை அடித்தனர். அட்டில்லாவின் படை எழுச்சிகளெல்லாம் கொள்ளை அடிக்கும் தாக்குதல்களே ஆகும். அட்டில்லா கி.பி. 451-இல் பிரான்சில் ஆர்லியன்சை (Orleans) முற்றுகையிட்டார்; திராயிசில் (Troyes) கடும்போர் நடந்தது; இருபுறமும் பெரும் உயிர் இழப்பு ஏற்பட்டது. அட்டில்லா அங்கேரிக்குத் திரும்பிப்போய் மறு ஆண்டில் கி.பி. 452-இல் பெரும் படையுடன் உரோம் நகரை நோக்கி வந்தார். அப்போது உரோம் நகரத்தின் போப்பு முதலாம் இலியோ (Leo I) என்பவர் உரோமைத் தாக்குதல் வேண்டாமென்று அட்டில்லாவை வேண்டிக் கொண்டார். படையில் உணவுத் தட்டுப்பாடும் நோயும் பரவின. அட்டில்லா திரும்பிச் சென்றுவிட்டார். இவர் கி.பி. 453-இல் இறந்தார். இவர்தம் மக்கள் இவருடைய பரந்த பேரரசைப் பங்கிட்டுக் கொண்டனர். நாளாவட்டத்தில் மேற்கத்திய ஊணப் பேரரசு சிதறுண்டு போயிற்று.

கீழை ஊணக்கூட்டத்தார் அல்லது வெள்ளை ஊணர்கள்: இந்தியாவின்மீது கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் வடமேற்குப் பகுதி வழியாகப் படையெடுத்து வந்து, அப்போது செழிப்புடனிருந்த குப்தப் பேரரசைத் தாக்கி அழித்த ஊணர்கள் எப்தாலைட்டுகள் (Ephthalities) அல்லது வெள்ளை ஊணர்கள் என்றழைக்கப்பட்டனர். இவர்களுள் ஒரு பிரிவினர் வால்கா வெளியை(Volga Valley)நோக்கிச் சென்றனர்; மற்றொரு பிரிவினர் ஆக்சசு (Oxus) வெளியை நோக்கிச் சென்று, பாரசீகம், ஆப்கானிசுத்தானம் முதலியவற்றுள் நுழைந்தனர். இவருள் ஒரு பிரிவினர் வட இந்தியாவில் புகுந்து குடியேறினர். அப்போது இருந்த குப்தப் பேரரசர் குமார குப்தரும் (கி.பி. 415-455), அவர் மகன் சுகாந்த குப்தரும் (கி.பி. 455-467) ஆவர். குமார குப்தருடைய ஆட்சிக் காலத்திலேயே ஊணர்களுடைய வருகை தொடங்கிற்று. சுகாந்த குப்தரும் அவருடைய பின்வந்தோரும் ஊணர்களுடைய படை எழுச்சியை எதிர் நோக்க வேண்டியவராயினர். சுகாந்த குப்தருக்குப் பின்னால் குப்தப் பேரரசு சீரழிந்தது. அரச குடும்பத்தாரிடையே ஏற்பட்ட பூசல்களும், அவற்றை விட அழிவைத்தந்த ஊணர்களின் படையெழுச்சிகளுமே குப்தப்பேரரசின் வீழ்ச்சிக்குக் காரணங்களாகும். வட இந்தியாவும் நடு இந்தியாவின் பகுதிகளும் வெள்ளை ஊணர்களினாட்சிக் குட்பட்டன. வடஇந்தியாவில் ஆட்சி செய்த முதல் ஊண அரசர் கி.பி. ஆறாம் நூற்றாண்டிலிருந்த

தோரமானர் (Toramana) என்பவர். இவருடைய கல்வெட்டுகள் தெற்கே மத்திய பிரதேசத்தில் எரான் (Eran) என்ற நகரம் வரையில் காணப்படுகின்றன. இவருக்குப்பின் இவர் மகன் மிகிரகுலர் (Mihirakula) அரசராயினார். இவர் வெளியிட்ட நாணயங்கள் இவரைச் சைவநெறி ஆதரவாளர் என்று காட்டுகின்றன. இவருடைய நாணயங்களில் பொறிக்கப்பட்டுள்ள இவருடைய உருவம் கொடூரமாகக் காணப்படுகிறது. இவரை ஒரு வெறுக்கத்தக்க தோற்றமுடையவரென்று பௌத்தர்கள் தமது நூல்களில் எழுதி வைத்துள்ளனர். இவர் இரக்கமற்ற நெஞ்சினரென்றும், இவருக்கு மிக்க மகிழ்ச்சியைத் தந்த ஒரு பொழுதுபோக்கு யானைகளைக் காசுமீர நாட்டு மலையுச்சிகளுக்கு அழைத்துச் சென்று, அவற்றைக் கீழ் நோக்கி உருட்டிவிடுதலே என்றும் கூறப்படுகிறது. கொடிய ஊணர்களின் ஆட்சிக்கு இந்திய அரசர்கள் சிலர் எதிராகத் திரண்டு வந்தனர். பிற்காலக் குப்தப் பேரரசு அளவில் மிகவும் சுருங்கி விட்டாலும், அதன் ஆற்றல் மிக்க அரசர்கள், மாளவ நாட்டை அப்போது ஆண்டுவந்த புகழ்மிக்க ஆற்றல் மிக்க அரசர் யசோதருமன் என்பவரோடு சேர்ந்து (Yasodharman of Malwa), தெற்கு நோக்கிப் படையெடுத்துவந்த ஊண அரசர் மிகிரகுலரைத் தடுத்து, வடக்கு நோக்கித் திரும்பிப் போகும்படி செய்துவிட்டனர். ஆகையால் நடு இந்தியாவும், மற்றப் பகுதிகளும் ஊணர்களுடைய கொடிய படையெடுப்பினின்றும் தப்பிப் பிழைத்தன. எனவே மிகிரகுலரின் ஆட்சியில் பஞ்சாபும் காசுமீரமுமே இருந்தன; சகாலா (Sakala) எனப்படும் சியால்கோட்டு (Sialkot) என்பது ஊண அரசின் தலைநகரமாகும். இவருக்குப்பின் ஊணர் ஆட்சியும் மறைந்தது.

ஊணர்களுடைய வருகையால் ஏற்பட்ட விளைவுகள்: ஊணர்களுடைய படையெடுப்பால் ஏற்பட்ட முக்கிய அரசியல் விளைவு குப்தப் பேரரசின் வீழ்ச்சியேயாகும். மேலும் இதனால் குப்தப் பேரரசின் வாயிலாக இந்தியாவுக்கும் நடு ஆசியாவுக்குமிடையே நடைபெற்றுவந்த வாணிகமும், அதிலிருந்து வட இந்தியாவுக்குக் கிடைத்து வந்த வருமானமும் நின்றுவிட்டன. பழைய பெரிய குப்தப் பேரரசில் இப்பொழுது புதிய பல அரசுகள்-வல்லபி, கூர்சரா, நந்திபுரி, மௌகரி முதலியவை சுதந்திர அரசுகளாகத் தோன்றின. ஊணர்களைத் தொடர்ந்து நடு ஆசியாவிலிருந்து பல குலத்தினர் (Tribes) இந்தியாவிற்கு வந்து குடியேறினர். இவ்வாறு குடியேறிய நடு ஆசிய மக்களுள் ஒரு கூட்டத்தாரே கூர்சரர் (Gurjaras) எனப்பட்டனர்; இவர்கள் சிறிது சிறிதாகக் காசுமீரம், பஞ்சாபு, இராசபுத்தான், குசராத்து, வட மகாராட்டிரம் முதலிய மாநிலங்களில் குடியேறினர். வட இந்தியாவிலிருந்த பல கூட்டத்தார் பல்வேறு பகுதிகளுக்கு இடம் பெயர்ந்தனர். இதனால் குப்தர்களுடைய காலத்துக்குப் பின்னர் வட இந்தியச்சமூக அமைப்பில் பல மாறுதல்கள் ஏற்பட்டன. ஊணர் தலைவர்கள் பல இந்திய அரச குடும்பங்களுடன் கலந்து விட்டனர். எனவே, சத்திரிய அரச குடும்பங்களின் வரிசையில் அயலவரான ஊணர்களும் சேர்த்து எண்ணப்பட்டனர். இப்போதைய இராசபுத்திர சமூகத்தில் ஊணர்கள் கலந்துவிட்டனர். பா. சூ.

துணை நூல்:

Sathianatha Aiyar, R., A political and Cultural History of India, S. Viswanathan & Co., Madras. 1971.

**ஊத்துக்குழி** தமிழ்நாட்டில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் பொள்ளாச்சிக்கு மேற்கே சிறிது தொலைவில் உள்ள சிறுநகரமாகும். இதன் பரப்பளவு ஏறத்தாழ 13 ச.கி.மீ. ஆகும்; இதன் மக்கள்தொகை 10,540 ஆகும் (1981). இங்குள்ள தட்ப வெப்ப நிலை பழத்தோட்டங்களுக்குப் பயன்படுகிறது. இங்கு மாதுளம் பழங்கள் மிகுதியாகக் கிடைக்கின்றன. இவ்வூரில் நெய், தயிர் போன்ற பால்பண்ணைப் பொருள்கள் சேமித்து வைக்கப்பட்டு, இந்தியாவின் பல பாகங்களுக்கு ஏற்றுமதியாகின்றன.

பத்துச் சிறிய கிராமங்களைக் கொண்ட ஊத்துக்குழி ஒரு பாளையப்பட்டு ஆகும். பிற்காலச் சோழர் காலத்திலிருந்தே இந்தப் பாளையத்தை நிருவகித்து வருவதாக ஊத்துக்குழிப் பாளையக்காரர்கள் பெருமையுடன் கூறிக் கொள்கின்றனர். சோழர் கொங்குநாட்டைக் கைப்பற்றியதுமே, வெள்ளோட்டைத் தலைநகரமாகக் கொண்ட பெருந்துறை நாட்டிற்கு ஊத்துக்குழி பாளையக்காரர்களின் முன்னோரான காலிங்கரைத் தலைவராக நியமித்ததாகக் கூறப்படுகிறது. ஈரோடு வட்டத்தில் உள்ள காலிங்கராயன் கால்வாயை அவர்தான் வெட்டினார்எனவும், மற்றக் குறுநிலத் தலைவர்களின் பொறாமையைக் கண்டு மனம்வருந்தியதால், தம் குடும்பத்தை வெள்ளோட்டிலிருந்து ஊத்துக்குழிக்கு அவர் கொண்டுவந்தார் எனவும் கூறப்படுகிறது.

விசயநகரப் பேரரசனாக விளங்கிய தேவராயர் காலிங்கர் குடும்ப வாரிசுகளுக்கு ஊத்துக்குழியை நிருவகிக்கும் உரிமையையும், இராயர் என்ற பட்டத்தையும் வழங்கினார். மதுரையில் விசுவநாத நாயக்கர் ஆட்சி செய்து கொண்டிருந்த காலத்தில் காலிங்கராயரை ஊத்துக்குழிக்குப்பாளையக்காரராக

நியமித்ததுடன்,மதுரைக் கோட்டைக் கொத்தளத்தில் ஒரு பகுதியின் காவலையும் அவரிடம் ஒப்படைத்தார்.

ஊத்துக்குழிப் பாளையக்காரரின் படையில் 5,000 காலாட்படை வீரர்களும், 5,000 குதிரைப்படை வீரர்களும் இருந்தனர். யானைப்படை ஒன்றும் அவரிடம் இருந்தது. மைசூர் மன்னரின் படைக்குத் தேவையான போர் யானைகளையும் அவர் அவ்வப்போது வழங்கி வந்தார். காலிங்கர் பரம்பரையில் வந்த 23-ஆம் பாளையக்காரர் மைசூர் உடையார் மன்னரின் சார்பில் கூர்க்குப் (Coorg) பகுதியை வென்று அடக்கியதால், அதைப் பாராட்டும் வகையில் மைசூர் மன்னர் அவருக்குத் தங்கப் பல்லக்கு ஒன்று வழங்கியதாகக் கூறப்படுகிறது.

கள்ளிக்கோட்டைச் சாமரினால் ஊத்துக்குழிப் பாளையக்காரர் ஒருவர் எடப்பள்ளி என்ற இடத்தில் கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் தோற்கடிக்கப்பட்டார். 29-ஆம் பாளையக்காரரான குமாரசாமி காலிங்கராயர் திப்பு சுல்தானுடைய படை வீரர்களால் கடுமையாகத் தாக்கப்பட்டார். ஆயினும் அவர் ஆங்கிலேயரிடம் நட்புக்கொண்டு அவர்களுக்கு அடிபணிந்து நடந்து கொண்டதால் ஊத்துக்குழிக்கு அவரே தொடர்ந்து பாளையக்காரராக இருந்து வர ஆங்கிலேயர் அனுமதித்தனர். எனினும், கி.பி. 1871-இல் அந்தப் பாளையக்காரருக்கான நிலையான உரிமை வழங்கப்பட்டது. இப்போது இங்கு ஒரு பழைய கோட்டை உள்ளது. அ.இரா.

**ஊதாண்டு** என்பவர் பர்மா நாட்டைச் சேர்ந்த அரசியல் மேதையாவார். 'ஊ' (U) என்பது பர்மாவில் எல்லோரும் மரியாதையுடனும் மதிப்புடனும் ஒருவரை அழைப்பதற்குப் பயன்படுத்தும் சொல்லாகும். இதன் பொருள் 'மாமா' (Uncle) என்பதாகும். நேருவை 'நேரு மாமா' என்று குழந்தைகள் அழைப்பதைப் போல 'ஊதாண்டு' என்பவரைத் 'தாண்டு மாமா' என்று அழைத்துவருகின்றனர். இவர் தாக் அமர்சோல்டு (Dag Hammarsklold) ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளராக இருந்து காலமான பின் அப்பதவியினை ஏற்றுத் திறம்பட நடத்தியவராவார்.

ஊதாண்டு (Uthant) பர்மாவிலுள்ள பாண்டனாவு (Pantanaw) என்ற இடத்தில் 1909-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 22-ஆம் நாள் பிறந்தார். இவர் பாண்டனாவில் இளமையில் கல்வி பயின்றபின் பர்மாவின் தலைநகரமான இரங்கூனில் உள்ள பல்கலைக் கழகக் கல்லூரியில் உயர் கல்வி கற்றார். அதன்பின் பாண்டனாவிலுளள தேசிய உயர்நிலைப் பள்ளியில் 1931-ஆம் ஆண்டில் தலைமை ஆசிரியராகப் பொறுப்பேற்றார். இரண்டாம் உலகப் போர் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது, சப்பான் போரில் இறங்கியது. அப்போது அந்நாட்டுக் கல்வி பாதிக்கப்படாமலிருக்க இவர் பெரிதும் பாடுபட்டார். இவர் 1947-ஆம் ஆண்டில் அரசாங்கப் பணியில் சேர்ந்தார். இவர் பின்னர் ஒலிபரப்பு இயக்குநராகப் பணி புரிந்துவந்தார். யூனூ (Unu) தலைமை அமைச்சராக இருந்தபோது செய்தித்துறை அமைச்சகத்தில் சிறிதுகாலம் இவர் பணிபுரிந்துவந்தார்.

ஊதாண்டு அரசியல் அறிஞராக இருந்ததோடு மட்டுமல்லாமல் சிறந்த எழுத்தாளராகவும் விளங்கினார். இவர் சர்வதேச சங்கம் (League of Nations), பர்மாவின் வரலாறு, கல்வி சார்பான நூல்கள் ஆகியவற்றை எழுதியுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் பொது அவையில் இவர் பர்மாவின் குழுவின் சார்பில் 1952-ஆம் ஆண்டு இடம் பெற்றார். இவர்தம் அரிய ஆற்றலாலும், பெரும் சாதனைகளாலும் 1957-ஆம் ஆண்டில் இவர் நிலையான பேராளராக்கப்பட்டார். தாக் அமர் சோல்டு 1961-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்களில் வானவூர்தி நொறுங்கி வீழ்ந்ததனால் மாண்டார். எனவே, ஊதாண்டு 1962-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 30 ஆம் நாளில் ஐ.நா.வின் பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்றார். இவர் அதற்கு முன்பு சிறிதுகாலம் அப்பதவியில் தற்காலிகமாகப் பணிபுரிந்துவந்தார்.

ஊதாண்டு பொதுச் செயலாளராகப் பதவியேற்றபின் பல அரும்பணிகளைப் புரிந்துள்ளார். இவர் தமக்கு முன் அப்பதவியிலிருந்த திரிக்விஇலி, தாக் ஆமர்சோல்டு ஆகியோரைப் போன்று ஐ.நா.வின் விதிமுறைகளுக்கு ஏற்ப எல்லோரும் வியக்கும்வண்ணம் பணிபுரிந்து வந்தார். அவையில் பொதுவுடைமை நாடுகளும் பொதுவுடைமை சாரா நாடுகளும் நடுநிலைமை வகிக்கும் நாடுகளும் நலம் பெறும் வகையிலும், பலம்பெறும் வகையிலும், பாதுகாப்புப் பெறும் வகையிலும் இவர் பணிபுரிந்து வந்தார். இவரது நடுநிலைமைக் கொள்கை நாடும் ஏடும் போற்றும் வகையில் அமைந்திருந்தது. எனினும் சில நாடுகள் அதையும் குறை கூறின.

ஊதாண்டின் கியூபாக் கொள்கை அவரது திறமைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். இந்தியாவுக்கும் பாக்கிசுத்தானுக்கும் இடையே 1965-ஆம் ஆண்டு போர் மூண்டபோது, அதை அமைதியான வழியில் தீர்க்க வேண்டி ஐ.நா. வின் சார்பில் இந்தியா-பாக்கிசுத்தான் அமைதி காண் குழு ஒன்றை அங்கு ஏற்படுத்தி அமைதியினை இவர் நிலைநாட்டினார். அது மட்டுமல்லாமல்1967-ஆம் ஆண்டில் இவர் தம்முடைய

சொந்தப் பொறுப்பில் அராபிய நாடுகளில் ஏற்பட்ட சிக்கல்களுக்கும் தீர்வு கண்டார். ஐ.நா. படைகளை அப்பகுதியிலிருந்து விலக்கிக் கொண்டார். அராபிய இசுரேல் போர் ஏற்பட்டபோது இவர் கடுமையான எச்சரிக்கை விடுத்தார். இவர் பணிகள் பாரிலுள்ளோர் போற்றும் வகையில் அமைந்திருந்தன. எனவே 1966-ஆம் ஆண்டில் இவருக்கு 'நேரு அமைதிப் பரிசு' அளிக்கப்பட்டது. இவர் ஒரு சிறந்த ஆழ்ந்த புத்த சமயவாதியாவார். இவருக்குப்பின் ஐ.நா.வின் பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்றவர் குர்ட்டு வால்டைம் (Kurt Waldhiem) என்பவராவார்.

ஊதாண்டு மீண்டும் 1967-இல் எகிப்தின் வேண்டுகோளுக்கிணங்கிக் காசாப் பகுதியிலும் (Gaza Strip), சினாய்ப் (Sinai) பகுதியிலும் நிறுத்திவைக்கப்பட்டிருந்த ஐ.நா. படைகளை விலக்கிக் கொள்ள இசைந்தார். அதே ஆண்டு சூன் திங்களில் அராபிய-இசுரேல் நாடுகளுக்கிடையே போர் மூண்டது. இவர் 1972-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 1-ஆம் நாள் ஐ.நா. அவைப் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றார். பின்னர் அமெரிக்காவில் நியூயார்க்கு மாநிலத்திலுள்ள ஆரிசன் (Harrison) என்னும் ஊரில் குடியேறி வாழ்ந்தார் ஊதாண்டு நியூயார்க்கு மாநகரில் 1974-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 25-ஆம் நாள் காலமானார்.

நா.ஜெ.

**ஊதியம் வழங்கு சட்டம்** 1936-ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது. ஊதியம்-பொருள் விளக்கம்: 'ஊதியம்' என்பது வேலையில் அமர்த்திக் கொள்ளப்பட்ட ஒருவருக்கு அவரது வேலை அல்லது ஊழியத் தொடர்பாகக் கொடுக்கப்படும் அனைத்து ஊதியத்தையும் குறிக்கும். ஊதியம் என்பதில் பணம், பணமாக மாற்றக்கூடியது எதுவும், அடிப்படை ஊதியம், படிகள், பணிக்காக வழங்க ஒப்புக் கொண்ட அனைத்துத் தொகைகளும், தீர்ப்பு, ஒப்பந்தம் ஆகியவற்றின் அடிப்படையில் வழங்கப்பட வேண்டிய தொகை, மிகை நேரப்படி, விடுமுறை நாள் ஊதியம், ஓய்வுநாள் ஊதியம், உற்பத்தி அடிப்படையில் கொடுக்கப்படும் ஊக்க ஊதியம், வேலை நீக்கத்தின் போது சட்டப்படி கொடுக்க வேண்டிய தொகை முதலியவைகளும் அடங்கும். ஆனால் வசதி, சலுகைக்கான தொகைகள் அடங்கா.

ஒவ்வொரு பணியாளரும் பணியமர்த்திக் கொண்டிருக்கின்ற பணியாள்களுக்கு இச்சட்டப்படி ஊதியம் வழங்கக் கடப்பாடு உடையவராவார்.

பிடித்தங்கள்: தண்டத்தொகை, வேலைக்கு வாராமை, பொருள் சேதம், பண நட்டம், வீடு, மின்சார வசதிகள், முன்பணம், கடன், வட்டி, கூட்டுறவு நிறுவனத்திற்குத் திருப்பிச் செலுத்த வேண்டிய தொகை முதலியன இச்சட்டப்படி அனுமதிக்கப்பட்ட பிடித்தங்களாகும்.

**தண்டம் விதிப்பு:** தொழிலாளி ஒருவருடைய தவறுதல்களுக்குத் தண்டம் விதிக்க வேண்டுமாயின் சம்பந்தப்பட்ட மாநில அரசின் அல்லது நிருணயிக்கப்பட்ட அதிகாரியின் முன் அனுமதியுடன், முன்னறிவிப்புக் கொடுக்கப்பட்ட குற்றங்களுக்கு மட்டுமே தண்டம் விதிக்கலாம். தண்டம் விதிக்குமுன் தொழிலாளியிடமிருந்து விளக்கம் கேட்கப்பட்டிருத்தல் வேண்டும். தண்டத் தொகையினை 60 நாள் கழித்தோ தவணைகளிலோ வசூலித்தல் கூடாது. இச்சட்டப்படி தொழிலாளி ஒருவர் வேலைக்கு வாராதபோது, வாராத நாட்களுக்கான ஊதியத்தைப் பிடித்துக் கொள்ளலாம். ஆனால், பத்து அல்லது மேற்பட்ட தொழிலாளிகள் கூட்டாகச் சேர்ந்து வேலைக்கு வாராதிருந்தால் எந்தவித முன்னறிவிப்புமின்றி அவர்களிடமிருந்து தொகை எதையும் பிடித்தம் செய்திடுதல் கூடாது. தொழிலாளி ஒருவர் வேலைக்கு வந்து வேலை செய்யாமல் இருக்கும்போது 8 நாள் கூலிவரை பிடித்தம் செய்யலாம்.

தொழிலாளியின் கவனக் குறைவினால் ஏற்படுகின்ற இழப்பிற்கு ஈடான தொகையை உரிய விளக்கம் கேட்ட பின்னர், அவருடைய ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்து கொள்ளலாம். மேலும், வேலைக்குச் சேருவதற்குமுன் கொடுக்கப்பட்ட முன்பணத்தை ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்து கொள்ளலாம். கூட்டுறவு, காப்பு நிதி ஆகியவற்றிற்காக விதிகளின்படி பிடித்தம் செய்யலாம். தொழிலாளிக்கு வழங்கப்பட்ட முன்பணத்தினை ஊதியத் தொகையிலிருந்து தவணைமுறையில் பிடித்தம் செய்து கொள்ளலாம்.

இச்சட்டப்படி, தொழிற்சாலைகள் சட்ட விதிமுறைகளைப் பின்பற்றி நடக்கின்றனவா என்பதைக் கண்டறிவதற்கு ஆய்வாளர் ஒருவரை நியமிக்கலாம். அந்த ஆய்வாளர் ஓர் அரசு ஊழியராயிருப்பார்.

ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்து கொள்ளப்படுகிற தொகை காரணமாகவும் ஊதியம் கொடுப்பதில் ஏற்படுகின்ற தாமதங் காரணமாகவும் ஏற்படுகிற வழக்குகள், கெட்ட எண்ணத்துடன் அல்லது அலைக்கழிக்கும் எண்ணத்துடன் ஏற்படுகிற வழக்குகள், தண்டனைகள் ஆகியவை குறித்தும் இச்சட்டம் தெளிவாகக் கூறுகிறது.

ஊதியம் வழங்கப்படாத நிலையில் தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்தும் தனித்தனியாகவும் மனுச்

செய்யலாம். ஆனால் வழக்குகள் அனைத்தும் ஒரு சேரவே விசாரிக்கப்படும். எனினும் இழப்பீடு, ஆணை போன்றவைகள் தனித்தனியே முடிவு செய்யப்படும்.

இச்சட்டத்தினால் பாதிக்கப்பட்ட ஒருவர் கட்டளை பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் ஒரு நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்து கொள்ளலாம்.

இச்சட்டப்படி முதலாளி ஒருவர் மேல்முறை யீட்டைக் காலம் தாழ்த்திச் செய்யும்போது அல்லது ஊதியம் வழங்குவதில் வேண்டுமென்றே காலந் தாழ்த்தும்போது, அவர்தம் சொத்துகளைப் பறிமுதல் செய்ய நீதிமன்றத்திற்கு அதிகாரமுண்டு.

இச்சட்டப் பிரிவு 26, நீதிமன்றங்களும் அலுவலர் களும் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகளை ஒழுங்குபடுத்துவதற்கு உரிய விதிகளை மாநில அரசாங்கம் இயற்றுவதற்கான அதிகாரத்தை வழங்கு கிறது.

**ஊ-தோணி**: இது செருமானிய நீர்மூழ்கிக் கப் பல் எனப் பொருள்படும். முதன் முதலாக நீர்மூழ்கிக் கப்பல்களைப் பயன்படுத்தி முதல் உலகப் போரில் பகைவருடைய கப்பல்களை அழித்தது செருமனி தான். முதல் உலகப்போரைச் செருமனி தொடங்கிய போது அதனிடம் 30க்கும் குறைவான நீர்மூழ்கிக் கப்பல்களே இருந்தன; அவைகளுள் எதுவும் 1000 கண் டிக்குக் (Tonnes) கூடுதலான எடை உடையது அன்று; அந்நீர்மூழ்கிக் கப்பல்கள் எளிதில் அழியத்தக்கனவாக வும் உறுதியற்றும் இருந்தன. அவைகளைக் கொண்டு முதல் உலகப்போரில் செருமனி பெருமளவு ஆங்கில வணிகக் கப்பல்களை மட்டுமல்லாமல், நடுவு நிலைமை நாடாகிய அமெரிக்க ஐக்கிய நாட்டின் வணிகக் கப் பல்களையும் அழித்தொழித்தது. இச்செயல்கள் அமெ ரிக்க மக்களின் சீற்றத்தைக் கிளப்பி விட்டன. செரு மனியின் ஊ-தோணியின் அழிவுச் செயல்களே அமெ ரிக்கா செருமனிக்கெதிராக முதல் உலகப் போரில் சேருவதற்கு முக்கிய காரணமாகும். இரண்டாம் உல கப் போரில் செருமனியிடம் 57 நீர்மூழ்கிகள் இருந் தன; இவை இக்கால மின்சாரக் கருவிகளுடையவை; இவை நீர்மட்டத்துக்குமேல் வாராமலே மின்கலங் களைப் புதுப்பித்துக் கொள்ளவும், நீரினுள் மிக விரை வாகச் செல்லவும் கூடும். செருமனி இத்தகைய ஊ-தோணிகளின் எண்ணிக்கையை விரைவில் 1162 -ஆக உயர்த்தி, நேச நாட்டுக் கப்பல்களைத் தாக்கி மூழ்கடித்தது. இவ்வாறு செருமனி இரண்டாம் உல கப் போரிலும் ஐக்கிய அமெரிக்க நாட்டைத் தனக் கெதிராக நேசநாடுகள் (Allied Powers) பக்கம் சேருமாறு செய்தது.

**ஊ-தோணியின் செயல்களால் தோன்றிய அரசி யல் மாற்றங்கள்**: இரண்டு உலகப் போர்களிலும் ஐக் கிய அமெரிக்க நாடு செருமனிக்கெதிராகப் பிரிட்டன் முதலிய நேசநாடுகளின் பக்கம் சேருவதற்கு முக்கிய காரணமாக இருந்தவைசெருமானிய ஊ-தோணியின் அழிவுச் செயல்களாகும். இத்தோணிகள் 1917-ஏப்பி ரலில் மட்டும் 852, 000 கொள்ளளவுள்ள 430 நேச நாட்டுக் கப்பல்களையும், நடுவுநிலைக்கப்பல்களையும் தாக்கி மூழ்கடித்தன. ஊ-தோணிகளுக்கெதிராகக் கடற்கண்ணிகளை அமைத்தல், வணிகக் கப்பல்களின் காவலுக்குக் கூட்டமாகச் (Convoy) செல்லுதல் முத லிய நடவடிக்கைகளை மேற்கொண்டு, நேச நாடுகள் 785 செருமானிய ஊ-தோணிகளை அழித்து விட்டன.

இரா .அ.

***ஊப்ளி*** இந்தியாவின் கருநாடக மாநிலத்தில் உள்ளதொரு நகரம். இந்நகரம் பெங்களூர்-புனே இருப்புப் பாதையின் நடுவில் வட கருநாடகத்தில் அமைந்துள்ளது. இந்நகரம் முக்கிய இருப்புப்பாதைச் சந்திப்புகளுள் ஒன்று. தென்-மத்திய இருப்புப்பாதை யில் அமைந்துள்ள இச்சந்திப்பிற்குத் தென்னக இருப் புப் பாதைத் தொடர்புண்டு. குண்டக்கல் வழியாக மேற்கில் செல்லும் இருப்புப்பாதையும், தென்னக இருப்புப்பாதையும் இங்குச் சந்திப்பதால் இது சிறப் புற்றுள்ளது. இவ்வூர் பருத்தி வாணிக மையமாகும். இங்குள்ள இருப்புப்பாதைப் பணிமனைகளும், பருத்தி அரைக்கும் ஆலைகளும், கைத்தறி நெசவாலைகளும் குறிப்பிடத் தக்கவை. இதன் அண்மையில் உள்ள தார்வார் (Dharwar) என்னும் ஊரில் கருநாடகப் பல்கலைக் கழகம் அமைந்துள்ளது. இது தார்வார் பல்கலைக்கழகம் எனப்படும். ஊப்ளி-தார்வார்(Hubli) இரட்டை நகரங்களாகக் கருதப்பட்ட நிலைமாறி அண்மையில் இவ்விரண்டும் ஒரே மாநகரமாகக் கரு தப்படுகின்றன.

ஊப்ளி நகரில் உள்ள கோயில் கி.பி.11-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. விசயநகரப் பேரரசர் களின் ஆட்சிக் காலமான கி.பி.14 முதல்16-ஆம் நூற் றாண்டு வரை இந்நகரமும் கோயிலும் புகழ்பெற்றி ருந்ததாகக் கூறுவர். இந்நகரம் கி.பி. 1818-ஆம் ஆண்டில் ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டின்கீழ் வந்தது. பெங்களூரிலிருந்து ஊப்ளி வடகிழக்கில் 471 கி.மீ தொலைவிலுள்ளது. ஊப்ளிக்கும் தார்வாருக்கும் இடையிலுள்ள தூரம் 20 கி.மீ. ஆனால் இக்காலத் தில் இவ்விரு நகரங்களும் பெருகி வளர்ந்துள்ளமை யால் இடைவெளியே இல்லையென்றும் கூறலாம்.

ஊப்ளி தார்வாரின் மக்கள்தொகை 5,26,493 (1981).

இரா.அ.

**ஊபாங்கி ஆறு**: மத்திய ஆப்பிரிக்காவில் ஓடும் மிகப் பெரிய ஆறு காங்கோ ஆறு. இவ்வாற்றின் துணையாறுகளுள் முதன்மையானது ஊபாங்கி (Ubangi) ஆறு. இது ஓடும் பகுதி மிக்க வளமுடையது. ஊபாங்கி ஆற்றில் உயலே, போமு என்ற இரண்டு ஆறுகள் வந்து கலக்கின்றன. இரா. அ.

**ஊமா இந்தியர்** அமெரிக்காவில் அரிசோனா மாநிலத்தில் வாழும் வட அமெரிக்க இந்தியர்களுள் பழமையானவர்கள். ஊமன் (Yuman) மொழியைப் பேசும் பழங்குடிகளுள் முதன்மையானவர்கள். ஊமா இந்தியர்கள் (Yuma Indians) அரிசோனா மாநிலத்திலுள்ள ஊமா (Yuma) நகரத்திலும் அதைச் சுற்றிலும் மிகுதியாக வாழ்கின்றனர். இவர்களின் எண்ணிக்கை ஆயிரத்திற்கும் சற்றுக் கூடுதலாகும். கொலராடோ ஆற்றின் இருகரைகளிலும் அமைந்துள்ள இவர்கள் பகுதி வளமிக்கது.

ஊமா இந்தியர்கள் தம்மைக் குச்சியானா (Kuchiana) என்றே கூறிக்கொள்கின்றனர். குவச்சான் (Quechan) என்ற புதுப்பெயரிலும் இப்பழங்குடியினரை இக்காலத்தில் குறிப்பிடுகின்றனர். 'ஊமா' என்ற சொல்லுக்குப் பொருள் காணப்படவில்லையாயினும், 'தலைவனின் மகன்' என்னும் பொருளுடைய எமயோ (Yamayo) என்ற சொல்லிலிருந்து இது வந்திருக்கலாம் என எண்ணுகின்றனர். இப்பழங்குடிகளை கி.பி. 1540-இல் எர்னாண்டோ டி அலார்கான் (Hernando de Alarcon) முதன் முதலில் அணுகி இவர்களைப் பற்றிய செய்திகளைத் தந்தார்.

இவர்கள் அண்டைய பழங்குடிகளிடமிருந்து தனித்துக் காணப்படுகின்றனர். இப்பொழுது பிறரோடு கலப்புற்று வருகின்றனர். ஆண்கள் திறந்த மேனியுடனும் மரப்பட்டைகளிலான ஆடைகளுடனும் முற்காலத்தில் வாழ்ந்திருந்தாலும், இப்போது சிறிய துணி ஆடைகளை உடுத்துகின்றனர். உடலை வண்ணப் பூச்சுகளால் அலங்கரித்துக் கொள்வர். இவர்கள் கலைத் தொழிலில் ஆர்வமுள்ளவர்கள். நன்கு வளர்ச்சியுறாத் தொழில் நுணுக்கமுடைய மட்பாண்டங்கள் செய்கின்றனர். குவிக்குமத்து (Kwikumat) என்பவரே அனைத்துப் பொருள்களையும் படைத்துள்ளார் என நம்புகின்றனர். இவர்கள்தம் சமய நம்பிக்கைகளில் கனவின் உணர்வுகள் பெரிதும் மதிக்கப்படுகின்றன; கனவு பலனளிக்கும் என நம்புகின்றனர். ஆண்டுதோறும் மறைந்தவர்களுக்கான நினைவு நாளன்று கொண்டாடப்படும் விழாக்கள் பெரிய அளவில் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. சீ.ப.

**ஊமைத்துரை**: தமிழக வரலாற்றில் கி.பி. 18-ஆம் நூற்றாண்டிலேயே ஆங்கிலேய எதிர்ப்பு உணர்வு ஏற்பட்டது. தமிழகத்தில் பெருகிய தேசிய உணர்வினை மூன்று நிலைகளாக வரலாற்று ஆசிரியர்கள் பகுத்துரைக்கின்றனர். முதலாம் நிலை பாளையக்காரர்கள் ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்து நின்றதாகும். இரண்டாம் நிலை வேலூர்ப் புரட்சியாகும். மூன்றாம்நிலை காங்கிரசு இயக்கம் தோன்றி வளர்ந்த நிலையாகும்.

பாளையக்காரர்கள் ஆங்கிலேய எதிர்ப்பில் முன்னணியில் இருந்தபோது பாஞ்சாலங்குறிச்சிப் பாளையக்காரரான வீரபாண்டியக் கட்டிபொம்மு எனப் பெற்ற வீரபாண்டியக் கட்டபொம்மன் ஆங்கிலேயருக்கு எதிராகப் போர் செய்து தூக்குமேடையேறினார். இக் கட்டபொம்மனின் தம்பியான ஊமைத்துரை (Oomaithurai) சிறந்த வீரராகத் திகழ்ந்தார். கட்டபொம்மன் (Kattabomman) ஆங்கிலேயரை எதிர்த்து நின்றபோது இவர் அவருக்கு உறுதுணையாக விளங்கியதுடன், கட்டபொம்மனின் மறைவிற்குப் பின்னரும் தொடர்ந்து ஆங்கிலேய ஆதிக்கத்தினை எதிர்த்து நின்றார்.

முதலில் கட்டபொம்மனுடன் இணைந்து பணியாற்றியபோது, கட்டபொம்மன் இராமநாதபுரத்தில் சாக்சன் (Jackson) என்ற ஆங்கிலேய அதிகாரியைச் சந்திக்கச் சென்றபோது ஏற்பட்ட மோதலில் ஊமைத்துரை தொலைவிலிருந்து நடப்பதைக் கவனித்துத் தக்க சமயத்தில் ஆங்கிலேயருடன் மோதினார். கட்டபொம்மனைக் காப்பதில் இவர்தம் பங்கு குறிப்பிடத் தக்கதாய் விளங்கியது.

பானர்மேன் (Bannermen) என்பவர் தலைமையில் கி.பி. 1799 செப்டம்பர் 5-இல் வந்த படையினர், பாஞ்சாலக்குறிச்சிக் கோட்டைக்குள் நுழைய முயன்ற முதல் முயற்சியினை ஊமைத்துரை முறியடித்தார். ஆயினும், சென்னையிலிருந்து பானர்மேனுக்கு உதவிட மேலும் படை வரவே தாக்குப் பிடிக்கவியலாத நிலையில் கோட்டையை விட்டு வெளியேறினார். கட்டபொம்மன் தூக்கிலிடப்பெற்றபின் ஆங்கிலேயரிடம் பிடிபட்ட கட்டபொம்மனின் தம்பி ஊமைத்துரையும் பிற உறவினர்களும் பாளையங்கோட்டைச் சிறையில் அடைக்கப் பெற்றனர்.

பாஞ்சாலங்குறிச்சி, மைசூர் முதலிய இடங்களில் வெற்றிபெற்ற பின்னர்க் கிழக்கிந்திய வணிகக் குழுவினர் அடக்குமுறை நடவடிக்கையில் இறங்கிய போது, திண்டுக்கல் கோபாலநாயக்கர், மணப்பாறை இலக்குமி நாயக்கர் முதனானவர்கள் ஆங்கிலேயரை

எதிர்க்கப் புதிய அணி திரட்டினர். அப்போது மருது உடன் பிறப்புகள் இவ்வணிக்குத் தலைமை வகித்தனர்.

பாளையங்கோட்டைச் சிறையிலிருந்து ஊமைத்துரை உள்ளிட்ட 15 பேர் தப்பித்தனர். வீரம் மிக்கவர்கள் ஒன்று சேர்ந்தனர். ஆங்கிலேயர்களால் தரைமட்டமாக்கப்பெற்ற பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை மீண்டும் எழுந்தது. எட்டையபுரம், ஊற்றுமலைப் பாளையக்காரர்கள் தவிர்த்த ஏனைய பாளையக்காரர்கள் மீண்டும் ஒன்றுதிரண்டனர்.

எட்வர்டு கிளைவு (Edward Clive) படைகளைத் திரட்டிப் பாஞ்சாலங்குறிச்சிக்கு அக்னியூ (Agnew) என்பவரின் தலைமையில் அனுப்பினார். ஆனால், கி.பி. 1801 மே 23-இல் கடுமையான புயல், மழை ஆகியவற்றுக்கிடையில் நிகழ்த்தப் பெற்ற தாக்குதலில் கோட்டை சிதைவுற்றது. படையெடுத்த ஆங்கிலேயர் கோட்டையினுள் புகுந்ததும் பாஞ்சாலங்குறிச்சிப் படை வடக்கிலும் கிழக்கிலும் வெளியேறிச் சிவகங்கையை அடைந்தது. பாஞ்சாலங்குறிச்சி வீழ்ந்தது. ஊமைத்துரை உடலெல்லாம் போர்க் காயங்களுடன் கமுதியை அடைந்தார். ஊமைத்துரை காளையார் கோவில் காடுகளில் ஒளிந்திருந்த புரட்சிப் படையினைத் திரட்டி மதுரையைச் சுற்றி வளைத்தார். ஆங்கிலேயர் கதிகலங்கி ஓடினர். எட்வர்டு கிளைவு ஐரோப்பியப் படைகளை வரவழைத்தார். அக்னியூ, இன்சு (Inns), பிளாக்பர்ன் (Blackburn) ஆகிய மூன்று ஆங்கிலத் தளபதிகள் மும்முனைகளில் தாக்குதல் நிகழ்த்தினர். ஊமைத்துரை, செவத்தையா, முத்து வெள்ளை முதலிய கிளர்ச்சியாளர்கள் வடக்கு நோக்கி ஓடினர்.

ஊமைத்துரையின் தலைமையில் 600 வீரர்கள் விருபாட்சி மீது படையெடுத்து அதனைக் கைப்பற்றினர். ஆனால், திண்டுக்கல்லில் நடைபெற்ற சண்டையில் தோற்கடிக்கப்பெற்றனர். வத்தலக்குண்டு என்னுமிடத்தில் ஊமைத்துரை பிடிபட்டார். ஆங்கிலேய எதிர்ப்பணியின் முன்னணியில் நின்ற வீரர் ஊமைத்துரையின் உயிர் கி.பி. 1801-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16-ஆம் நாள் பறிக்கப்பட்டது.

ஊமைத்துரையின் வரலாறு வீரவரலாறு என்றே கூறல் வேண்டும். வாழ்வின்இறுதி வரை ஆங்கிலேயரை எதிர்த்து நிற்றலையே, அந்நிய ஆதிக்க எதிர்ப்பையே குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்த இவர் வாய் பேசாத ஊமை. வாய் பேசாத இவர் போர்க்களத்தில் ஆணை பிறப்பித்ததே புதுமையானதாகும். கையில் வைக்கோல் துண்டுகளை நறுக்கி வைத்துக் கொண்டு தாக்குதல் நிகழ்த்த வேண்டும்போது ஒவ்வொன்றாகக் கையிலிருந்து எறிந்து அதனை ஆணையாக ஆக்குவாராம். ஊமைத்துரை சிறந்த வீரராகவும் ஆங்கிலேய எதிர்ப்புச் சக்திகளை ஒன்று திரட்டுவோராகவும், கட்டபொம்மன் வாழ்ந்த காலத்திலும் மறைந்த பின்னரும் செயற்பட்டமை வரலாற்றில் இடம் பெற்றுள்ளது. ந.க.ம.

**ஊயித்து** வட கிழக்கு ஆசியாவின் கோடியில் வாழும் எசுக்கிமோக்களாவர். இவர்கள் இப்பகுதியின் கிழக்கு முனையான தெசுநெவுப் (Dezhnev) பகுதியிலிருந்து அலாசுகா (Alaska) முதல் பெரிங்கு கால்வாயை (Bering Strait) உள்ளடக்கியுள்ள உருசிய நாட்டின் சுக்கோட்சுகி முனை (Chukotski Cape) வரையுள்ள பகுதிகளில் வாழ்கின்றனர். இவர்கள் பெரிங்கு கடலிலுள்ள புனித இலாரன்சு தீவிலும் (St. Lawrance Island)வாழ்கின்றனர். ஊயித்து (Yuit) மக்கள் வட அமெரிக்காவிலிருந்து இக்காலத்தில் குடியேறியவர்களாவர்.

இவர்களின் வழக்கங்களும் மரபுகளும் அலாசுகா எசுக்கிமோக்களை ஒத்துள்ளன. ஊயித்துகளுள் சிலர் தம் உதடுகளில் துளையிட்டுச் செதுக்கிய சிறிய மரத் துண்டுகளையோ கற்களையோ அணிந்து கொள்கின்றனர். இவர்கள் பேசும் மொழியின் அடிப்படையில் இவர்கள் நான்கு குழுக்களாக வேறுபடுகின்றனர். தெசுநெவு முனையிலுள்ளவர்கள் நூக்காலித்து (Nookalit) என்றும், சாப்லின் முனையில் (Chaplin Cape) உள்ளவர்கள் அய்வனாத்து (Aiwa-nat)என்றும், உலாக்பென் (Ulakhpen) முனையில் உள்ளவர்கள் ஊத்தீலித்து (Wauteelit) என்றும், புனித இலாரன்சு தீவில் உள்ளவர்கள் ஈய்வுலித்து (Eiwhulit) என்றும் அழைக்கப்படுகின்றனர். சீ.ப.

**ஊர்** தெற்கு மெசபடோமியாவிலுள்ள தொன்மையான நகரம். இது சுமேரியாவின் தலைநகரமாக விளங்கியது. ஊர் (Ur) பாபிலோனிலிருந்து 225 கி.மீ. தொலைவிலும் யூப்ரட்டிசு ஆற்றங்கரையிலிருந்து மேற்காக 16 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது. முற்காலத்தில் சிறந்த வாணிகத் தலமாக விளங்கிய ஊரின் அருகில் யூப்ரட்டிசு ஆறு பாய்ந்து அதன் வளத்தைப் பெருக்கியது. யூப்ரட்டிசு ஆறு இங்குப் பாய்வதால் பிற நாடுகளுடன் வாணிகம் செய்ய ஏற்ற துறைமுகப் பட்டினமாகவும் இது விளங்கியது. பிற்காலத்தில் யூப்ரட்டிசு ஆறு அதன் போக்கை மாற்றிக் கொண்டது. இங்கு நடத்தப்பட்ட அகழாய்வுகளின் மூலம் தலைநகரமாக விளங்கிய ஊர் பெரு வெள்ளத்தால் அழிந்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டது.




எருது வடிவ யாழ் இசைக் கருவி



ஊரில் அகழாய்வுச் செய்த

உல்லி, சர் (சார்லசு) இலியோனார்டு





ஊர் அமைவிடம்

இன்று பாலைநிலமாகக் காட்சியளிக்கும் ஊர் ஏறக்குறைய கி.மு. 4000-ஆம் ஆண்டில் சிறந்ததொரு நாகரிகத்தைப் பெற்றுத் திகழ்ந்தது. முதலாம் உலகப் போருக்குப்பின் இங்குப் பல அகழாய்வுகள் மேற் கொள்ளப்பட்டன. இவ்வகழாய்வுகளில் குறிப்பிடத் தக்கன பிரிட்டிசு அருங்காட்சியகமும், பென்சில் வேனியாப் பல்கலைக்கழகமும் இணைந்து நடத்திய அகழாய்வுகளாகும். பிரிட்டிசு அருங்காட்சியகத்தைச் சார்ந்த எச்.ஆர். ஆல் (H.R. Hall) என்பவரும் உல்லி (Woolley) என்பவரும் இவ்வகழாய்வுகளைச் செய்த வல்லுநர்கள் ஆவர். இவ்வகழாய்வுகள் 1922-ஆம் ஆண்டு முதல் 1934 வரை நடைபெற்றன. அக ழாய்வுகளில் கிடைத்த தொல் பொருள்களும் சின்னங் களும் மெசபடோமியாவிலிருந்த சிறந்ததொரு நாகரிகத்தை விளக்கிக்காட்டுகின்றன.

ஊரில் கி.மு. 2900 முதல் 2400 வரை முதல் மர பினர் ஆட்சி செய்தனர். இவர்கள் காலத்தில் ஊர் தென் மெசபடோமியாவின் தலைநகரமாக விளங் கியது. ஊரில் பல அரசர்களின் கல்லறைகள் அகழாய்வு களின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டன. இக் கல்லறை களின் உள்ளே பெருமளவில் விலை உயர்ந்த பொன், வெள்ளி, செம்பு ஆகியவற்றாலான பொருள்கள் கிடைத்தன. மணிக்கற்களால் செய்யப்பட்ட பொருள் களும் கிடைத்தன. இங்கு அரசாட்சி செய்த அரசர் இறந்தவுடன் அவருடனிருந்த அலுவலர்கள், பணி யாளர்கள், பெண்கள் ஆகியோர் அரசருடனேயே புதைக்கப்படும் பழக்கம் நிலவி வந்தது. அக்கல்லறை களிலே அரசர் பயன்படுத்திய பொருள்களும் புதைக்கப்பட்டன. அரசருக்கு வேறு உலகத்திலும் இப்பொருள்கள் பயன்பட வேண்டும் என்றும், அவர் தம் ஊழியர்கள் அங்கும் அவருக்குப் பணிபுரிய வேண் டும் என்றும் கருதி இவ்வழக்கம் மேற்கொள்ளப்பட் டது. இங்குக் கிடைத்த பொருள்களைக் கொண்டு மக்களின் செல்வ வளத்தை மட்டுமல்லாது, அவர்களின் அறிவியல் கலை நுணுக்க அறிவையும் நன்கு அறிய முடிகிறது. மக்களின் நாகரிகம் உச்ச நிலையை அடைந்திருந்ததை இப் பொருள்களின் மூலம் அறிய லாம். அகழாய்வுகளில் கிடைத்த பொருள்களில் இசைக்கருவிகளும் பொன்னால் செய்யப்பட்ட பொருள்களும் பெயர் பொறிக்கப்பட்ட சங்குப் பொருள்களும் உருளைவடிவாகக் குடையப்பட்ட முத்திரைகளும் குறிப்பிடத்தக்கன. யாழ் போன்ற இசைக்கருவி எருதினுடைய தலைவடிவைக் கொண்டு, மணிக்கற்கள் அழகாகப் பதிக்கப்பட்டு விளங்குகிறது. மரத்தால் செய்யப்பட்ட இந்த இசைக்கருவியின் மேல் பொன் தகடு வேயப்பட்டுள்ளது. சுபாது (Shubad) என்னும் அரசியின் கல்லறையில் செம்பால் செய்யப் பட்ட எருது ஒன்றின் சிறுபடிமம் ஒன்றும், வெள்ளி யால் செய்யப்பட்ட பசுவின் தலை ஒன்றும் கிடைத் தன. இவை அழகு மிகுந்து காணப்படுகின்றன. அகழாய்வுகளில் குடியா (Gudia) என்பவரின் உருவச் சிலைகளும் நரம்-சின் (Naram-sin) என்பவரின் கல் லறைச் சிலையும் குறிப்பிடத்தக்கவையாகும்.

ஊர் நகரத்தை கி.மு.2200 முதல் கி.மு.2100 வரை மூன்றாம் மரபினர் ஆட்சி செய்தனர். இக்காலத்தில் ஊர் கட்டடக் கலையில் தலைசிறந்த நகரமாக விளங்கியது. இக் காலத்தைச் சார்ந்த கட்டடங்களுள் சிகுராத்து (Ziggurat) என்னும் கோயில் புகழ்பெற் றது. இது மூன்று தளங்களைக் கொண்டது. களிமண் கட்டிகளாலும் செங்கற்களாலும் பிரமிடு போன்ற அமைப்பில் கட்டப்பட்ட சிகுராத்து, 'நன்னா' (Nanna) எனப்படும் நிலவுத் தெய்வத்தின் உறைவிட



ஊர்- அகழாய்வு

மாக விளங்கியது. இத் தெய்வமே ஊர் நகரத்தின் தெய்விக அரசராகவும் கருதப்பட்டது. சிகுராத்தின் அடிமட்டப் பரப்பளவு 64 × 46 மீட்டராகும்; இதன் உயரம் 13 மீட்டர் ஆகும். இக் கட்டடத்தின் மூன்று பக்கங்களிலும் சரிவான தாங்கு சுவர்கள் காணப்படுகின்றன. இவை மேல்நோக்கிச் சாய்ந்த நிலையில் கட்டப்பட்டுள்ளன. கோயிலின் வடகிழக்கு முகப்பில் மிகப்பெரிய படிக்கட்டுகளுடன் கூடிய மூன்று வாயில்களும் நடுவாயிலின் இருபக்கத்திலும் பக்கத்திற்கு ஒன்றாக இரண்டுவாயில்களும் உள்ளன. ஒவ்வொரு வாயிலும் மேலே உயர்ந்து சரிவாகச் செல்கிறது. ஒவ்வொரு வாயிலிலும் 100 படிக்கட்டுகள் உள்ளன. பக்க வாயில்கள் இரண்டும் நடுவாயிலுடன் சிகுராத்தின் இரண்டாம் தளத்தில் ஒன்றாகச் சந்திக்கின்றன. இரண்டாம் தளத்திலிருந்து மூன்றாம் தளத்தின் மேல் அமைந்துள்ள சிறு கோயிலுக்கு ஒரே ஒரு வாயில் மட்டும் செல்கிறது. இவ்வழியும் படிக்கட்டுகளைக் கொண்டது. சிகுராத்தின் கீழ்ப்பகுதியை 'ஊர்-நம்மு' (Ur-Nammu) என்னும் அரசர் கட்டினார். இவரே ஊர் மரபு ஆட்சியை அமைத்தவர். இவர்தம் காலத்தில் சிகுராத்து சிறப்பான முறையில் பாதுகாக்கப்பட்டது. கட்டடக் கலையில் சிகுராத்து ஒரு சிறந்த இடத்தைப் பெறுகிறது. சுமேரியர்களின் கட்டடக் கலைத்திறன் நன்கு பயன்படுத்தப்பட்டு, பொறியியல் வல்லுநர்களின் கருத்துகளின்படி இக்கட்டடம் கட்டப்பட்டிருக்க வேண்டும். வளைவுகளும் வண்டிக்கூடு அமைப்புகளும் ஒவ்வொரு மூலையும் கட்டடத்தின் சரிவான பகுதியில் சந்திக்கின்ற அமைப்பும் காண்பவரை வியக்கச் செய்கின்றன. இக்கட்டடத்தில் செங்குத்தான சுவர்களையே காணமுடியாது. சரிந்த நிலையிலும் சுவரின் அடிமுதல் முடிவரை கிடைநிலையிலும் உட்குவிந்தவாறே சுவர்கள் அமைக்கப்பட்டுள்ளன. குறைவான அளவே வளைந்த வளைவு அமைப்புகளிலும் மையப் புடைப்பு முறை (Entasis) அமைப்பிலும் இக்கட்டடம் கட்டப்பட்டுள்ளது. சுமேரியர்களின் கட்டடக் கலைத்திறன் நன்கு வளர்ச்சி அடைந்திருந்தமை இவ்வகழாய்வுகள் மூலம் நன்கு வெளிப்படுகிறது.

சிந்துவெளி நாகரிகத்தையொத்த நாகரிகத்தை இம்மக்கள் பெற்றிருந்தனர். சிந்துவெளியில் கண்டுபிடிக்கப்பட்ட பெரியகுளங்களையும், தானியக் கிடங்குகளையும் போன்று ஊரிலும் குளங்களும் தானியக் கிடங்குகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இம்மக்கள் இந்தியாவுடன் தொடர்பு கொண்டிருந்திருக்க வேண்டும். சிந்துநதிச் சமவெளியில் கிடைத்ததைப் போன்ற முத்திரைகளும் இங்குக் கிடைத்தன. மூன்றாம் மரபைச் சார்ந்த அரசர்கள் பல கோயில்களை இங்குக் கட்டினர். இதனை ஈலாமியர் (Elamites) படையெடுத்து அழித்தனர். ஆனால், இக்கோயில்கள் மீண்டும் பிற்காலத்தில் புதுப்பிக்கப்பட்டன. ஊர் பல்வேறு நாடுகளுடன் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தது. வாணிகம் பண்டமாற்று முறையில் நடைபெற்றது. பல களிமண் வரைபடப் பலகைகள் அகழாய்வுகளில் கிடைத்துள்ளன. இவற்றை வாணிக முறைக்குப் பயன்படுத்தி இருக்க வேண்டும். விவிலிய நூலில் கூறப்பட்டுள்ள ஆபிரகாம் என்னும் யூதத் தலைவர் ஊர் நகரில் பிறந்ததாகக் கூறப்படுகிறது.

ஆமுராபி (Hammurabi) என்னும் அரசர் காலத்திலும் ஊரின் பெருமை மேலும் வளர்ச்சியடைந்தது. ஊரிலிருந்த நத்தப்பகுதியில் இருந்த வீடுகள் இரண்டு அடுக்குகளைக் கொண்டு விளங்கின. கீழடுக்குச் சுட்ட செங்கற்களாலும், மேலடுக்குக் களிமண் சுவர்களாலும் கட்டப்பட்டன. குடும்பத்தினர் வசிப்பதற்குப் போதுமான வசதிகளைக் கொண்டு வீடுகள் விளங்கின. மேற்பகுதியில் வீட்டின் சொந்தக்காரர்களும் கீழ்ப்பகுதியில் பணியாட்களும் விருந்தினர்களும் தங்கினர். வீடுகள் சாக்கடைகளைக் கொண்டு விளங்கின. சில வீடுகளில் தனியாக வழிபாட்டிடம் ஒன்றும் இருந்தது. இவ்வழிபாட்டு அறையில் குடும்பத் தெய்வங்களைத் தொழுதனர். குடும்பங்களுக்கு வழிபாட்டுத் தெய்வங்கள் இருந்தன. இத் தெய்வங்கள் பெயர்கள் தெரியவில்லை. குடும்பத்தில் இறந்தவர்களை வழிபாட்டு அறையின் கீழே புதைக்கும் வழக்கம் இம்மக்களிடம் நிலவியது.

பொதுமக்களே பல சிறு கோயில்களைக் கட்டினர். புதிய பாபிலோனியப் பண்பாடு இரண்டாம் நெபுகாதுநேசர் (Nebuchadnezzar) காலத்தில் இங்கு ஏற்கப்பட்டது. இவர் காலத்திலும் நபோனிதாசு (Nabonidas) காலத்திலும் ஊர் புதுப்பிக்கப்பட்டது. நபோனிதாசே சிகுராத்துக் கோயிலை அதன் பழைய அமைப்பிலிருந்து மாற்றி ஏழு மடங்காக உயர்த்திக் கட்டினார்.

மகா சைரசு (Cyrus, the Great) என்னும் பாரசீக நாட்டு அரசர் ஊரை இறுதியாகப் புதுப்பித்தார். இவர்தம் கல்வெட்டுகள் பல இங்குக் கிடைத்துள்ளன. எருசலேம் கோயிலைக் கட்டிய கட்டடக் கலைஞரான எசுரா (Ezra) என்பவரைப் பற்றி இக்கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. யூப்ரட்டிசு ஆறு கி.மு. 300-ஆம் ஆண்டளவில் தனது போக்கை மாற்றிக் கொண்டதால் ஊர் நகரின் வளமும் செழுமையும் அழிந்தன; பிற நாடுகளுடன் கொண்டிருந்த தொடர்பும் துண்டிக்கப்பட்டது. ஊர் அகழாய்வுகளில் கண்டு

பிடிக்கப்பட்ட அரும்பொருள்கள் பிரிட்டிசு அருங்காட்சியகத்தில் இன்றும் உள்ளன. காண்க: உல்லி, சர் இலியானர்டு. சு.இரா.

துணை நூல்கள்:


**Tull, G.K.**, Early Civilizations, Blandford Press, London, 1968.

**Upadhyaya, B.S.**, The Ancient World, S. Chand & Co. Pvt, Ltd, New Delhi, 1976.

**ஊர் கொலை:** என்பது புறத்துறைகளுள் ஒன்று. தொல்காப்பியமும் புறப்பொருள் வெண்பா மாலையும் வெட்சித் திணையின் ஒரு துறையாக இதனைக் குறிப்பிட்டுள்ளன. நிரை கவரச் செல்லும் வெட்சி வீரர்கள் குதிரையினை விரைவாகச் செலுத்திச் சென்று, பகைவர் அரணை எரிதவழ அழிப்பது என்று புறப்பொருள் வெண்பாமாலை இத்துறைப் பொருளை விளக்குகிறது (பு.பொ.வெ. 8). தொல்காப்பியம் இதனை, 'முற்றிய ஊர்கொலை' எனக் குறிப்பிட்டுள்ளது. இதனை, 'நிரை கோடற்கு எழுந்தோர் அவர் புறஞ்சேரியை வளைத்துக் கொண்டு ஆண்டு நின்ற நிரை காவலரைக் கொன்று பகை யறுத்தலும், நிரைமீட்டற்கு எழுந்தோர் அவ்வூரை விட்டுச் சிற்றூரைக் காத்துக் கோடலும்' ஆகும் என்று உரையாசிரியர் நச்சினார்க்கினியர் விளக்கியுள்ளார் (தொல். புறத். 3). அவர் வெட்சித் திணைக் குரியனவாகக் கூறப்பட்ட பதினான்கு துறைகளையும் நிரை கவர்தல், நிரை மீட்டல் ஆகிய இரு தொழில்களுக்கும் பொருந்துமாறு பொருள் கொண்டமையால், இத்துறையினை இவ்வாறு விளக்கியுள்ளார். அ.மா.ப.

**ஊர்ச்செரு** புறப்பொருள் வெண்பாமாலை கூறும் புறத்துறைகளுள் ஒன்று. மதில் காக்கும் வீரர்களின் மறத்தினை விளக்கும் நொச்சித் திணையின் ஒன்பது துறைகளுள் ஊர்ச்செரு ஒன்றாகும். பகைவர்களால் புகுவதற்கரிய காவற்காடும் அகழியும் சிதையாதவாறு அப்பகைவர்களை எதிர்த்து, நொச்சி வீரர்கள் அவற்றைக் காத்து நிற்பது ஊர்ச்செரு எனப்படும். இதனைப் புறப்பொருள் வெண்பாமாலை, 'அருமிளையொடு கிடங்கு அழியாமைச், செருமலைந்த சிறப்புரைத்தன்று' என்று இலக்கணப் படுத்தியுள்ளது (பு.பொ.வெ.மா.88). இத்துறை தொல்காப்பியத்தில் கூறப்படவில்லை. அதில் உழிஞைத்திணையில், 'ஊர்ச்செரு வீழ்ந்த மற்றதன் மறன்' என்று ஒரு துறை கூறப்பட்டுள்ளது. 'மதிற் புறத்தன்றி ஊரகத்துப் போரை விரும்பிய பாசி மறன்' என்று இதனை நச்சினார்க்கினியர் விளக்கியுள்ளார். இரண்டு துறைகளும் நுண்ணிய பொருள் வேறுபாடுடையனவாகும். அ.மா.ப.

**ஊர்த்துவ தாண்டவம்** நடராசர் ஆடிய தாண்டவங்களுள் ஒன்று. சிவபெருமான் உவந்து ஆடிய அம்பலங்கள் ஐந்தனுள் பாண்டரங்க நடனம் என்று சொல்லப்படும் ஊர்த்துவ தாண்டவமே, உலகம் உய்யத்திருவாலங்காட்டில் ஆடிய முதன்மையான தாண்டவம் ஆகும். இறைவனின் ஐஞ்செயல்களுள் அருளல் என்னும் செயலை இத்தாண்டவம் குறிக்கிறது. இதற்குக் 'காளிதாண்டவம்' என்றும் பெயர் உண்டு. காளியின் செருக்கைப் போக்குவதற்காக ஆடிய திருநடனம் இது. மிக வேகமாகச் சுழன்று ஆடுவதாகையால் 'சண்ட தாண்டவம்' என்றும்' வீடுபேற்றினைத் தருவதாகிய அனுக்கிரகத்தின் பொருட்டுச் செய்வதாகையால் 'அருள் நட்டம்' அல்லது 'அனுக்கிரகத்தாண்டவம்' என்றும் இதற்கு வேறு பெயர்கள் உள்ளன. 'ஆடினார் பெருங்கூத்து காளி காண' எனத் திருநாவுக்கரசர் பெருமான் குறிப்பிடுவதால் இதனைப் 'பெருங்கூத்து' எனவும் குறிப்பிடலாம். மேலும், திருநாவுக்கரசர் பெருமான் இதனைச் 'செயற்கரிய திருநடனம்' எனக் கூறுகிறார்.



ஊர்த்துவ தாண்டவம்

காரைக்காலம்மையார் திருவாலங்காட்டு நடராசமூர்த்தியிடம் ஈடுபாடு கொண்டவர். திருவாலங்காட்டில் இறைவன் ஆடும் கூத்தின் இயல்பினை அம்மையாரின் மூத்த திருப்பதிகங்கள் விரிவாக எடுத்

துரைக்கின்றன. இத்தாண்டவத்தைப் பற்றித் திருவாலங்காட்டுப் புராணமும் விரிவாகக் கூறுகிறது. இந்நடனத்தில் காளி இறைவனுடன் போட்டியிட்டு ஆட இயலாமல் இறைவனின் காலடியிலேயே ஒடுங்கி விடுகிறாள். இந்த இயல்பினைப் பல கோயில்களில் உள்ள ஆடவல்லானின் சிற்பங்களில் ஆடவல்லானின் காலடியில், காளி நடனமாடும் கோலத்தில் சிற்ப வடிவங்களைக் காணலாம். இதனை நக்கீரதேவ நாயனாரும் தம் பாடல்களில் குறிப்பிடுகிறார்.

ஊர்த்துவ தாண்டவத்தினைப் பல்லவர் காலம் முதல் நாயக்கர் காலம் வரை உள்ள சிற்பங்களில் காணலாம். காஞ்சிக்கைலாசநாதர் கோயிலில்தெற்குப் புறச் சுவரில் ஊர்த்துவ தாண்டவச் சிற்பம் உள்ளது. நந்தி தேவனும் உடன் ஆடுகின்ற நிலையில் இச்சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. அருகிலே தேவி இந்நடனத்தைக் கண்டு மகிழ்வதாக உள்ளது. இது போலவே காஞ்சியில் உள்ள முக்தேசுவரத்தில் இறைவன் தம் 10 கைகளுடன் ஆடுகின்ற சிற்பத்தைக் காணலாம். காளி சாமுண்டி வடிவிலே 6 கைகளுடன் ஆடுங்கோலம் காணப்படுகிறது. சோழர் காலத்தைச் சார்ந்த கோயில்களில் திருச்செங்காட்டங்குடி, திருப்பனந்தாள், சிதம்பரம் முதலிய கோயில்களில் உள்ள சிற்பங்களைச் சிறந்த எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம். சிதம்பரத்தில் கருவறைக்கு எதிரில் உள்ள நிருத்தசபையில் ஊர்த்துவதாண்டவ மூர்த்தியாககாட்சி தருகிறார் ஆடவல்லான். சிதம்பரம் கிழக்குக் கோபுரத்தில் ஒரு காலை உயரத் தூக்கி ஆடும் கோலத்திலும், இரு கைகளால் மற்றொரு காலின் கீழே உடுக்கையை அடிக்கும் நிலையிலும் சிற்பம் காணப்படுகிறது. மேலும் பேரூர், தென்காசி, தாரமங்கலம், மதுரைப் புதுமண்டபம் போன்ற இடங்களில் உள்ள ஊர்த்துவ தாண்டவச் சிற்பங்கள் பிற்காலக் கலைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. மதுரைப்புதுமண்டபத்தில் சிவபெருமான் 10 கைகளுடன் தாண்டவம் செய்கிறார். ஊர்த்துவ தாண்டவ மூர்த்தி வலக் கைகளில் தமருகம், பரசு, கத்தி, சூலம், அபய முத்திரை தாங்கியும், இடக்கைகளில் நெருப்பு, மான், கேடயம், கொடி, துதிக்கை ஆகியவற்றைத் தாங்கியும் காணப்படுகிறார். காலின் கீழே முயலகன் பாம்பைப் பிடித்திருக்கிறான். காரைக்காலம்மையார் இறைவனின் பாதத்தின் வலப்புறத்திலே தொழுது நிற்கிறார். ஒருவர் குடமுழா வாசிக்கிறார். நந்தி மத்தளம் வாசிக்கச்சிவ கணங்கள் சங்கு ஊதுகின்றன. திருமால் உடுக்கை வாசித்துநிற்கத் தும்புருவும் நாரதரும் வீணை ஏந்தியிருக்கின்றனர். பிரமன் தாளம் போட அற்புத நடனக் காட்சியை விளக்கும் சிற்பமாக இது விளங்குகிறது. இச்சிற்பத்தின் எதிரில் காளி எட்டுக்கைகளுடன் சூலம், அம்பு, சக்கரம், கத்தி, வில், பாசம், கேடயம், கபாலம் ஏந்தி நடனமாடுகிறாள்.

இத்தாண்டவத்தில் சிலசமயத்தில் சிவபெருமான் கீழே முயலகன் உருவம் இருப்பதும் உண்டு. சில சிற்பங்களில் முயலகன் இருப்பதில்லை. சிவபெருமான் வலக்கையில் உடுக்கையும் அபய முத்திரையும் காணப்படும். இடக்கைகளுள் ஒருகை தீச்சுடர்கொண்டும் மற்றொருகை தலைக்கு மேலே உயர்ந்தும் காணப்படும். இடக் காலை ஊன்றி நின்று வலக் காலை உயர்த்தி ஆடுவது போல இவ்வுருவம் அமைக்கப்படுவது வழக்கம். இதற்கு மாறாக வலக் காலை ஊன்றி இடக் காலை உயர்த்தி ஆடுவதாக இத்தாண்டவம் அமைவதும் உண்டு. திருவாலங்காட்டுக் கோயிலில் காலை உயர்த்தி ஊர்த்துவ தாண்டவம் ஆடும் நடராசப் பெருமானின் அழகான செப்புத் திருமேனியும், ஆடுங் கோலத்தில் காளியின் செப்புத் திருமேனியும் காணப்படுகின்றன. கி.ஸ்ரீ.

**ஊர்த்துவ மாயை** என்பது சுத்தமாயை ஆகும். மகா மாயை, குடிலை, குண்டலினி, விந்து என்பன ஊர்த்துவ மாயையின் வேறு பெயர்கள். சைவ சித்தாந்தம் கூறும் மூன்று உள்பொருள்களான பதி (இறை), பசு (உயிர்), பாசம் அல்லது மலம் (தளை) என்பதில் மலங்களுள் ஒன்றான மாயையின் ஒரு பிரிவே ஊர்த்துவ மாயையாகும். மாயை உலகின் பொருள் முதற் காரணமாகும். மாயையிலிருந்தே உலகம் தோன்றி அதிலேயே ஒடுங்கும். ஊர்த்துவம் என்ற சொல் 'மேல்' என்று பொருள்படும். எனவே ஊர்த்துவ மாயையிலிருந்து மேலான, உயர்ந்த, தூய உலகத் தத்துவங்கள் (கருவிகள்) தோன்றுகின்றன. ஊர்த்துவ மாயை நிலையானது; எங்கும் பரவியிருப்பது; உருவமற்றது. மாயையின் இயல்பான மயக்கும் தன்மை இதற்குக் கிடையாது.

ஊர்த்துவ மாயையின் செயல்கள் சப்தம் (சொல்) எனவும் 'அர்த்தம்' (பொருள்) எனவும் இருவகைப்படும். பொருள் நிலையில் ஊர்த்துவ மாயையின் செயல்கள் கலையும் தத்துவமும் (கருவி) ஆகும். கலைகள் சாந்தி அதீத கலை, சாந்தி கலை, வித்தியா கலை, பிரதிட்டாகலை, நிவிர்த்தி கலை என்னும் ஐந்தாகும். இவை சொல், பொருள் அனைத்தையும் ஊடுருவி நிற்பன. தத்துவம் நாதம், விந்து, சாதாக்கியம், ஈசுவரம், சுத்த வித்தை என்னும் ஐந்தாகும். இவ்வைந்தும் சுத்த தத்துவங்கள் என்று சொல்லப்படும். இவற்றைச் செயற்படுத்துபவர்கள் முறையே

சிவம், சக்தி, சதாசிவன், மகேசுவரன், உருத்திரன் ஆவர். சுத்ததத்துவங்கள் ஏனைய முப்பத்தொரு தத்துவங்களைச் செலுத்துவதால் பிரேரக் காண்டம் எனப்படுகிறது. இறைவனின் ஞானமே (அறிவு) ஆன நிலை சிவம்; கிரியையே (செயல்) ஆன நிலை சக்தி; ஞானமும் கிரியையும் ஒத்த நிலை சாதாக்கியம்; கிரியை மிகுந்து ஞானம் குறைந்தது ஈசுவரம்; ஞானம் மிகுந்து கிரியை குறைந்தது சுத்த வித்தை. இறைவனின் இச்சை (விழைவு) ஒரு படித்தாய் இருக்க, ஞானமும் கிரியையும் தனித் தனியாகவும், இணைந்தும் மிக்கும் குறைந்தும் நின்று தொழிற்படுவதால் சுத்த தத்துவங்கள் சிவதத்துவம் எனப் பெறும்.இவை சிவனின் தன்னியல்பு வடிவமாகும், நாதமும் விந்தும் இறைவனின் இலய நிலைக்கும், சாதாக்கியம் போக நிலைக்கும், ஈசுவரமும் சுத்த வித்தையும் அதிகார நிலைக்கும் உரியன. சிவதத்துவங்கள் கால தத்துவத்துக்கு முன் தோன்றுவதால் இவற்றிற்கு ஞானம், கிரியை சக்திகளின் தொழிற்பாடு பற்றி முன்பின் உண்டே தவிர வேறில்லை.

சுத்த தத்துவங்களான நாதம் உயிர்களின் அறிவிற்கும், விந்து செயற் சக்திக்கும், சாதாக்கியம் விழைவிற்கும், ஈசுவரம் மறைப்பிற்கும், சுத்த வித்தை இறையருளுக்கும் வழிகோலுகின்றன.

செ. ல் நிலையில் ஊர்த்துவ மாயை உயிரின் அறிவில் நின்று தனக்குரிய பொருளின் கருத்தைத் தோற்றுவிக்கிறது. கருத்தைத் தோற்றுவிக்கும் ஆற்றலே நாதத் தத்துவம். இதிலிருந்து சூக்குமை (நுண்மை), பசுயந்தி (பைசந்தி, பொதுமை),மத்திமை (உன்னல்), வைகரி (செப்பல்) என்னும் நால்வகை வாக்குகளும், அவற்றிலிருந்து ஐம்பத்தோர் எழுத்துக்களும், எண்பத்தொரு பதமும், சப்த கோடி மகா மந்திரங்களைத் தெரிவிக்கும் ஆகம வேத சாத்திரங்களும் தோன்றுகின்றன.

சூக்குமை வாக்கு 'பரை', 'நாதம்' என வழங்கப்படும். இது பர உடலில் ஓர் ஒளியாகப் பிற வாக்குகளைப் போலத் தோன்றி ஒடுங்காமல் மிகவும் நுட்பமான திட்டமற்ற உணர்விற்கு ஏதுவாயிருப்பது. பைசந்தி என்பதற்கு 'விளங்குவது' என்று பொருள். இவ்வாக்கு மயில் முட்டையிலுள்ள நீர் மயிலின் நிறங்களைத் தனியாகக்காட்டாமல் தன்னுள் அடக்கியுள்ளதைப் போல் எழுத்துகளைத் தனித் தனியாக்காமல் தன்னுள்ளே அடக்கி நிற்பது. சூக்குமை, பைசந்தி வாக்குகளில் மொழி வேறுபாடு இல்லை. மத்திமை வாக்குப்புறத்தே பிறர் செவியில் கேட்கப்படாது தன் உள் உணர்விற்கு மட்டும் ஓசையாயிருப்பது. வைகரி வாக்கானது தன் செவிக்கும் பிறர் செவிக்கும் கேட்பதாய்ச் சொல்பவருக்கும் கேட்பவருக்கும் நினைத்த பொருளைத் தெரிவிப்பதற்கும் திட்டமான உணர்வு தோன்றுவதற்கும் ஏதுவாக இருப்பது. இவ்வாக்குகள் புடவை கூடாரமாவது போன்று விருத்தியாகும்; பரிணாமம் அன்று.

இந்நால்வகை வாக்குகளில் எதுவுமின்றி, பொருளைப் பற்றிய திட்டமான உணர்வு எத்தகையோர்க்கும் உண்டாதல் இல்லை. வாக்குகளின்றி நேரடியாகப் பொருள்களை உணரும் ஆற்றல் யார்க்கேனும் என்றாவது உளதாகுமாயின், அவர் அன்றே பாசம் நீங்கிய முத்தராவார். பி.ஆர்.ந.

துணை நூல்:

தேவசேனாபதி. வ.ஆ. சித்தாந்தத்தின் அடிப்படைகள், சென்னைப்பல்கலைக்கழகம், 1981.

**ஊர்த்தெய்வம்**: கிராமங்களில் சிவன், திருமால், முருகன் ஆகிய கடவுளர்களுக்குக் கோவில்கள் அமைந்திருப்பதோடு வீரன், ஐயனார் முதலிய ஆண் சிறு தெய்வங்களுக்கும், காளி, பிடாரி முதலிய பெண் சிறு தெய்வங்களுக்கும் கோயில்கள் அமைந்திருப்பதுண்டு. ஊரைக் காக்கும் தெய்வம் என்னும் கருத்தில் சிறு தெய்வங்களுக்குக் கோவிலமைத்து ஊர் மக்கள் வழிபட்டு வருவர். சிற்றூர்தோறும் பொதுவாக ஏதேனுமோர் ஆண் அல்லது பெண் சிறு தெய்வம் ஊர்த் தெய்வமாகக் கொண்டு போற்றப்படும்.

ஊர்த் தெய்வமாகக் கருதப்படும் தெய்வக் கோயில் ஊரின் எல்லையிலும், ஊர் நடுவே அமைந்துள்ள மன்றங்களிலும், ஆறு, குளம் ஆகியவற்றின் கரைகளிலும் வயல் நடுவேயும், இடுகாட்டுப் பகுதியிலும் அமைக்கப்பட்டிருக்கும்.

கோவிலில் சுதை வடிவமாகவோ சிலையாகவோ வெறும் கல்லாகவோ ஒன்றுமில்லாமல் வெற்றிடமாகவோ தெய்வம் அமைக்கப்பட்டிருக்கும். பொதுவாக உருவ அமைப்போடு அத்தெய்வம் அமையும். கோவில் வாயில்களில் அஞ்சத்தக்க உருவில் வாயிற்காவலர் உருவம் அமைக்கப்பட்டிருக்கும். தெய்வம் ஆணாயின் வாயிற்காவலர் ஆணாகவும், பெண்ணாயின் வாயிற்காவலர் பெண்ணாகவும் அமைக்கப்படும்.

மண்ணால் செய்த யானை, குதிரை, இரும்பால் செய்த சூலம், ஈட்டி, சங்கிலி மாலைகள் போன்றவை கோவிலின்முன் அமைந்திருக்கும்.

குறிப்பிட்ட எண்ணிக்கையுடைய குடும்பங்கள் வாழும் சிற்றூரில், ஊர்ப் பகுதியில் இச்சிறுதெய்வ இயைபு காணப்படும். அம்மக்கள் அதனைத் தங்கள் ஊர்த் தெய்வமாகப் போற்றி வழிபடுவர். குறிப்பிட்ட சில குடும்பங்களுக்குக் குலதெய்வமாகவும் அமைவ துண்டு. அக்குடும்பங்களைச் சார்ந்தோர் அக்குறிப் பிட்ட கிராமத்தில் வேறு இடம்பெயர்ந்தாலும் ஆண்டிற்கு ஒருமுறைவிழா நடக்குங்கால் வழிபட்டுச் செல்வர். வெளியூரில் தங்கிய குடும்பங்கள் தங்கள் வீட்டில் நடைபெறும்மங்கல காரியத்தின் பொருட்டுத் தங்கள் குலதெய்வம் இருக்கும் இடத்திற்கு வந்து வழிபடுவது மரபாகும்.

ஊர் மககளைக் காக்கவும், குலத்தைக் காக்க வும் ஊர்த் தெய்வம் அமைக்கப்பெற்றது. இயற்கை யின் தீயசக்தியிலிருந்து ஊர்மக்கள் தங்களைக் காத் துக்கொள்ளவும், கருவுற்ற பெண்டிர் நோய்வாய்ப் படாது காக்கவும், தொன்றுதொட்டு ஊர்த் தெய்வ வழிபாடு மேற்கொள்ளப் பெற்றுவருகிறது.

திருட்டு, தொற்றுநோய் போன்றன ஊர்த்தெய் வத்தின் சினத்தால் ஏற்படுவதாக மக்கள் நம்பினர். ஊர்த் தெய்வங்களின் சினம் அகற்றி அருள் பெறு வதற்கென்று விழா எடுத்து அதில் ஆடு, கோழி மாடு போன்ற உயிர்களைப் பலியிட்டு வந்தனர்.

ஊர்த் தெய்வத்தின் பெயரை மக்கள் தம் குடும் பத்தில் பிறக்கும் பிள்ளைகளுக்கு வைப்பது மரபாகும்.

ஐயனார், சுடலை மாடசாமி, வீரன் முதலிய ஆண் சிறு தெய்வங்களும், பச்சையம்மன், செல்லியம்மன், காளியம்மன் முதலிய பெண் சிறு தெய்வங்களும் ஊர்த் தெய்வங்களாக அமைந் துள்ளன. அவற்றை உள்ளூர்த் தெய்வங்கள் என்றும் கூறுவர். இத்தகைய ஊர்ச் சிறு தெய்வ வழி பாட்டில் மக்கள் பொதுவாக, மதுவும் மாமிசமும் வைத்துப் படைப்பதுண்டு. சில பெண் தெய்வங் களுக்கு அவற்றை நீக்கிப் பழம் முதலியவற்றையே வைத்துப் படைப்பதுண்டு. அதனைச் சுத்தபூசை என்பர். இரா. கு.

**ஊர்தி ஓட்டுநர் கல்வி**: நம் நாட்டில் சாலை விபத்துகளால் ஆண்டுதோறும் ஏறத்தாழ 25,000 பேர் உயிர் துறக்கின்றனர். ஒவ்வொரு நாளும் 65 பேர்கள் அதாவது ஒவ்வொரு மணி நேரத்திற்கும் 5 பேர்கள் என்ற வீதத்தில் உயிர் இழக்கின்றனர்.

விபத்துகளால் மிகுதியாக அல்லல் உறுபவர்கள் பள்ளி செல்லும் வயதினரே என்றும், ஊர்தி ஓட்டு நர்களுள் விபத்துக்குட்படும் ஓட்டுநர்கள் 20-24 வயது வரம்புடையவரே என்றும் அனைத்துலக அள வில் நடத்தப்பட்ட ஆய்வு முடிவுகள் அறிவிக்கின்றன.

ஊர்தி ஓட்டுநர் கல்வியை மாணவர்களுக்கு அளிக்க வேண்டும் என்று 1920-ஆம் ஆண்டு ஆல்பர்ட் ஒயிட்னே (Albert Whitney) என்னும் கல்வி வல்லுநர் கூறினார். பள்ளிச் சூழ்நிலைதான் ஊர்தி ஓட்டுநர் கல்விக்கும் பொருத்தம் என்றும், பள்ளிகள் அதற் கென்று தனிப் பாடத்திட்டம் வகுக்காமல், பாடத் திட்டத்தோடு ஒருங்கிணைந்த (Integrated) பாடத் திட்டத்தைக் கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத் தினார்.

**ஊர்தி ஓட்டுநர் கல்வி நோக்கம்:** இக்கல்வியின் நோக்கமானது மாணாக்கர்கட்கு உரிய வயது வந்த வுடன், சாலைகளை நல்ல முறையில் பயன்படுத்த, 8 முதல் 14 வயதுக்குட்பட்ட மாணவர்கட்கும் 20-24 வயதுக்குட்பட்ட ஊர்தி ஓட்டுநர்கட்கும் சாலை விதி கள் குறித்துக் கற்பிப்பதும், அவற்றைக் கடைப் பிடிக்கத் தூண்டலும், சாலை விதிகளை மீறுவதால் அவர்கட்கு மட்டுமன்றிச் சார்ந்தோருக்கும் ஏற்படும் இடர்ப்பாடுகளை உணரச் செய்தலும் ஆகும்.

விபத்துகள் பற்றிய விழிப்புணர்வுகளை ஏற் படுத்தப் பாடத் திட்ட முறைகளை ஏற்படுத்தல், இவ்வகைச் செய்திகளை ஆர்வமூட்டும் வகையில் எளிய நூல் வடிவில் தருதல், விபத்துகள் ஏற்படும் இடங்களில் மீட்புப் பணிகளில் ஈடுபடல், காயம் அடைந்தோரை மருத்துவ மனைகளில் சென்று பார்த்தல், பணிவிடை செய்தல், உயிரிழந்தோர் இல்லங்கட்குச் சென்று ஆறுதல் கூறுதல் போன்ற செயற்பாடுகளை மாணவர் மேற்கொள்ளல், பள்ளிக் கல்விப் பாடத் திட்டத்தில் மீட்புப் பணி, சாலை விதிகள், சாலைப் போக்குவரத்தினை ஒழுங்குபடுத்து தல், முதலுதவிப்பணி, மாணவர், ஊர்தி ஓட்டுநர் ஆகிய இரு பகுதியினரும் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொண்டு, ஒருவர் நலனில் மற்றவர் அக்கறை காட்டும் பண்பினராக அமையும் அளவிற்கு நல் லுறவை ஏற்படுத்துதல் போன்றன ஊர்தி ஓட்டுநர் கல்வியின் பாடப் பொருளாகலாம்.

ஊர்தி ஓட்டுநர்க்குக் குடி, புகைபிடிக்கும் பழக்கங் களால் உண்டாகும் கேடுகள், அவற்றால் ஏற்படும் விபத்துகள், அவ்விபத்துகளால் துன்பம் உற்றோர் குடும்பங்களின் இக்கால நிலைகள் ஆகியவற்றை எளிய நூல் வடிவில் தரலாம். ஊர்தி செலுத்து வதற்கு முன் நல்ல ஓய்வு பெற வேண்டிய இன்றியமை

யாமை, சிறந்த மனநலன் உடையவராயிருத்தல், எளிதில் உணர்ச்சி வயப்படாமல் இருத்தல், பயணம் செய்வோர், சாலைகளில் செல்வோர், குழந்தைகள் போன்றோரின் மன உணர்வுகளை அறிதல் போன்ற இயல்புகளின் தேவை பற்றியும் ஊர்தி ஓட்டுநர் கல்வி கற்றுத்தரல் வேண்டும். எஸ்.மோ.

**ஊர்-நம்மு** ஊர் (Ur) என்னும் நகரை அரசாட்சி செய்த அரசர். இவரே ஊரின் மூன்றாம் மரபாட்சியை ஏற்படுத்தியவர். ஊர் நம்மு (Ur-nammu) உது – லிகல் (Utu-Legal) என்னும் அரசரின் கீழ் ஆளுநராக இருந்தார். இவர் பின்னர் அவரைத் தோற்கடித்து அரசரானார். இவர் தம்மை ஊர் நகரத்தின் அரசராக மட்டுமன்றிச் சுமர், அக்காடு நகரங்கள் ஆகியவற்றின் அரசர் எனவும் அறிவித்துக் கொண்டார். இவர் நிறுவிய மூன்றாம் மரபினர் ஆட்சி ஏறக்குறைய கி.மு. 2113 முதல் கி.மு. 2000 வரை இருந்தது. இக்காலமே மெசபடோமிய வரலாற்றில் சுமேரிய மறுமலர்ச்சிக்கும் பொற்காலத்திற்கும் உரியகாலமாகும். ஊர் – நம்மு பல கோயில்களைக் கட்டினார். இவர் நிலவுக்கடவுளான நன்னா (Nanna) விற்குக் கோயில்கள் கட்டுவித்தார். சிகுராத்து (Ziggurat) என்னும் புகழ்பெற்ற கோயிலும் இவர் காலத்தைச் சார்ந்தது. மூன்றாம் மரபினர் காலத்தில் சுமேரிய இலக்கியம் உச்ச நிலையை அடைந்தது. சு.இரா.

**ஊர்பி முகம்மது சமாலுத்தீன்**: இவர் மொகலாயப் பேரரசர் அக்பரின் அரசவைப் புலவராக விளங்கிய பாரசீகக் கவிஞர்களுள் ஒருவர். இவர் கி.பி. 1559–ஆம் ஆண்டில் பாரசீக நாட்டிலுள்ள சீராசு (Shiraj) என்னும் ஊரில் பிறந்தார். பிறந்த ஊரில் கல்வி பயின்ற ஊர்பி முகம்மது சமாலுத்தீன் (Urfi Mobammad Jamal–ud din) அறிவியல், தருக்கம், தத்துவம், இலக்கியம் ஆகிய துறைகளில் புலமை பெற்று விளங்கினார். மேலும், கவிதை இயற்றுதல், ஓவியம் வரைதல் ஆகிய கலைகளிலும் வல்லவராகத் திகழ்ந்தார். ஊர்பு (Urf) என்னும் பாரசீகச் சொல் அரசாங்கத்தில் உள்ள உயர்தர அரசாங்க அதிகாரிகளைக் குறிக்கும். ஊர்பியின் தந்தையும் பாட்டனாரும் அந்தப் பதவியில் பணியாற்றியுள்ளார்கள். அதனால், இவர் அப்பதவிப் பெயரின் அடிப்படையில் அமைந்த 'ஊர்பி' என்னும் பெயரைத் தம் பெயருடன் இணைத்துக் கொண்டார். சபாவித்து மன்னர்களின் அரசவையில் பெரும் புலவராகத் திகழ்ந்த முகுதசம் காசி (Mohtasham Kashi) என்பவரின் தகுதிச் சிறப்போடு ஒத்த சிறப்பினை இவர் தம் சிறு வயதிலேயே பெற்று விளங்கினார். அக்பர் அவையில் மிக்க புகழுடன் விளங்கிய புலவர் அபுல் – பைசி (Abul Faizi) என்பாரும், சிறந்த அரசவை மருத்துவராகத் திகழ்ந்த அக்கீம் அபுல் பத்து (Hakim Abul Fath ) என்பாரும் இவரை வரவேற்றுப் போற்றி ஊக்கமளித்தார்கள். இந்திய நாட்டு அரசவைகளில் விளங்கிய சொல்லுரிமையில் விருப்புற்ற ஊர்பி இந்தியாவிலேயே தங்கிவிட்டார். இவரை மாமன்னர் அக்பர், இளவரசர் சலீம், அப்துர் ரகீம் கானிகான் முதலியோர் பல பரிசில்கள் வழங்கிப் போற்றினர். தற்பெருமை, மற்றப் புலவர்களை இழித்துப் பேசுதல் போன்றவற்றால் அப்புலவர்கள் வெறுக்கும் நிலைக்கு இவர் ஆளானார். இவரை வரவேற்ற பைசி போன்றவர்களே வெறுக்கலாயினர். இவர்தம் கவிதைகள் – குறிப்பாகக் 'குவாசிதாக்கள்' (Quasidahs) புகழ் பெற்றனவாகும். அவை ஆழமும் ஒளியும் கொண்டனவாக, வாசகர்கள் திறனாய்வாளர் ஆகியோரின் உள்ளத்தைக் கவர்வனவாக அமைந்துள்ளன. இவர்தம் பாடல்களின் ஒரு தொகுதியே இன்று கிடைத்துள்ளது. அதன்கண் பல கசல்கள், புகழ்ப்பாடல்கள், நான்கடிப் பாடல்கள் போன்றன சிறப்புடன் விளங்குகின்றன. சிறந்த கவிஞராகத் திகழ்ந்த இவர், கி.பி. 1590–ஆம் ஆண்டில், தம் 31–ஆம் வயதில், இலாகூர் என்னுமிடத்தில் காலமானார். அ.மா.ப

**ஊர் மகமை**: ஊர்ப் பொதுநலங்கருதிப் பெறப்படும் வரிப்பொருள் அல்லது கொடைப்பொருள் மகமை எனப்படும். அது மகிமை எனவும் வழங்கப்படுகிறது. ஒரு கோயில் அல்லது அறச்சாலை–தரும சத்திரம் போன்ற சமுதாயப் பொது அமைப்புகளின் பராமரிப்பிற்காக அக்கோயில் அல்லது அறச்சாலை உள்ள ஊர்மக்களிடமிருந்து தானியமாக அல்லது பணமாக வாங்கப்படுவது மகமையாகும். கிராமங்கள் பொதுவாகப் பயிர்த்தொழில் புரியும் மக்களைக் கொண்டிருந்தமையால், இம்மகமை அவர்கள் உற்பத்தி செய்யும் தானிய வகையில் பெறப்பட்டது. ஒவ்வொரு குடும்பமும் இவ்வளவு பொருள் அல்லது பணம் மகமையாகக் கொடுக்க வேண்டும் என்ற நிலை மாறிக் காலப்போக்கில், அவர்கள் தாமாக விரும்பி அளிக்கும் நிலையும் உருவாயிற்று. அவ்வாறு அளிக்கப்படுவனவும் மகமை என்றே கூறப்பட்டன. கோயில், அறச்சாலை போல்வனவற்றுள் எவற்றிற்காக மகமை பெறப்பட்டதோ, அவற்றின் நலனுக்காகவே அப்பொருள் அவற்றைச் சார்ந்த தக்கவர்களால் பயன்படுத்தப்பட்டன. அவ்வாறு ஆண்டுதோறும் பெறப்படும் பொருள்களில் செலவிடப்பட்டன போக எஞ்சியன உரிய பெருமக்களால் அவ்வமைப்பிற்கான நிலைத்த நிதியாகப் போற்றிக் காக்கப்படும்.

சில ஊர்களில் குறிப்பிட்ட ஓரினத்தவர் மிகுதியாக வாழும் நிலை இருத்தல் கூடும். அத்தகைய இடங்களில் அவ்வினத்தவர் தம் இன நலங்கருதி அந்த இன மக்களிடம் ஒரு குடிக்கு இவ்வளவு பணம் என்று நன்கொடையாகப் பெறுவதும் மகமை எனப்படும். இங்கு ஒரு கணவனும் மனைவியுமாக விளங்கும் குடும்பம் ஒரு குடி என்று கருதப்படும். ஒரு பெருங்குடும்பத்தில் தந்தையும் தாயும், மணம் புரிந்து மனைவியொடு வாழும் ஒரு மகனும் இருந்தால் அக்குடும்பத்தை இரண்டு குடியாகக் கணக்கிட்டு மகமை பெறுவதுண்டு. குடி என்பதனைத் 'தலைக்கட்டு' என்றும் குறிப்பிடுவர். அந்த இன மக்களில் வணிகம் முதலிய தொழில்புரிவோர் தம் வருவாயில் இவ்வளவு தொகையினை மகமையாகச் சமுதாயத்திற்குச் செலுத்தவேண்டும் என்ற கட்டுப்பாடு செய்துகொள்வதும் உண்டு. அத்தொகை அவ்வூரிலுள்ள மக்கள் பொதுநலனுக்காகச் செலவு செய்யப்படும். விழா வெடுத்தல், குளம், கோயில் முதலியன செப்பனிடல், பள்ளி அமைத்தல், மாணவர்களுக்கு உதவுதல் போன்ற பொதுநலஞ் சான்ற செயல்களுக்குச் செலவிட்டது போக எஞ்சியவற்றை நல்ல முதலீடு செய்து பொருளீட்டிக் காப்பர். பல ஊர்களில் வாழும் ஒரு குறிப்பிட்ட மக்களின் பொதுநலனுக்காக அம் மகமைப் பொருளைப் பயன்படுத்தவும் கூடும். அத்தகைய மகமை நிதியால் உதவி பெறும் மாணவர்கள், தொழில் துறை மக்கள் ஆகியோர் பின்னர்த் தாம் பொருளீட்டுங் காலத்தில், முன்னர்ப்பெற்ற தொகைக்கு ஏற்ற தொகையினைத் தம் வருவாயிலிருந்து அவ்வப்போது செலுத்தி நிறைவு செய்வர். இவ்வகையில் அமையும் ஊர் மகமைப் பொருள் அதற்குரியவர்களின் பொதுநலத்திற்குப் பயன்பட்டு; மேலும் மேலும் பெருக்கமடைந்து, மீண்டும் அவர்களுக்குப் பயன்பட வாய்ப்பாக அமையும்.

அலுவலகத்தில் பணிபுரிவோர், வணிகர்கள் போன்றோர் குறிப்பிட்ட பொதுநலங்கருதித் தம் வருவாயில் ஒரு குறிப்பிட்ட தொகையினை அவ்வப்போது அளித்து வருவதனையும் மகமை எனலாம். அவ்வாறு தொகுக்கப்பெற்ற பொருள், எதற்காகத் தொகுக்கப்பெற்றதோ அதற்காகத் தக்கவர்களால் உரிய முறையில் பயன்படுத்தப்பெறும்.

இவ்வாறு பல வகையில் பொதுத் தொண்டிற்காகத் திரட்டப்பெறும் மகமைப் பணம், அந்தந்த ஊர், இனம் அல்லது நிறுவனம் ஆகியன நன்கு செயற்பட்டு அவற்றைச் சார்ந்தோர்க்குத் தொடர்ந்து நன்மை அளிப்பதோடு, அம்மக்கள் திட்டமிட்டுச் செலவிடுதலுக்கும் சேமிப்பதற்கும் உதவியாகவும் அமைகிறது. சிறுதுளி பெருவெள்ளமாகும் என்னும் அடிப்படையில் அமையும் ஊர் மகமை என்ற திட்டம் நாடும் வீடும் நலம் பெறுவதற்குப் பேருதவியாக அமைகிறது. முற்காலத்தில் சிற்றூர் பேரூர் பலவற்றிலும் சிறப்புறச் செயற்பட்ட மகமை அமைப்பு, இக்காலத்தில் அவ்வளவாகச் செயற்படவில்லை என்றே கூறும் நிலை உள்ளது. எனினும், சில இடங்களிலும் சமுதாயங்களிலும் இது மிகச் சிறப்பாகச் செயற்பட்டு அந்த இடங்களுக்கும் சமுதாயத்திற்கும் சிறந்த பயனை நல்கி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. பழங்காலத்தில் ஒருவகை நிலவரியும் ஊர் மகமை என்னும் பெயரால் வழங்கியது என்பதனைக் கல்வெட்டுகள் காட்டுகின்றன. அ.மா.ப.

**ஊர்மிளை** இராமாயணக் கதைமாந்தருள் ஒருத்தி; இலக்குவனுக்கு மனைவி. அவள் சனக மன்னனின் வளர்ப்பு மகள் என்று கூறப்படுகிறாள். சீதையை மகளாகப் பெற்ற பின்னர்ச் சனக மன்னனுக்கு 'ஊர்மிளை' என்னும் பெண் பிறந்தாள் என்றும் கூறப்பட்டுள்ளது. சனகன் தம்பி குசத்துவனுக்கு மாண்டவி, சுருதகீர்த்தி என்று இரண்டு பெண்கள் இருந்தனர். இம்மூன்று பெண்களையும் இராமன்–சீதை திருமணம் நிகழ்ந்த பின்னர் இலக்குவன் முதலிய மூவரும் திருமணம் செய்துகொண்டனர். கம்பர் தம் இராமாயணத்தில் இராமன் தம்பியர் மூவர் பெயரையும் குறிப்பிட்டுள்ளார். ஆனால் ஊர்மிளை முதலிய அவர்தம் மனைவியர் பெயர்களைக் குறிப்பிடவில்லை. இராமன் திருமணத்தினை அடுத்துத் தம்பியர் மூவரின் திருமணம் நிகழ்ந்தது என்று பெயர் சுட்டாது பொதுப்படவே கூறியுள்ளார். இராமனுடன் சென்ற இலக்குவன் அயோத்தி மீளும் வரை கண்துயிலாது விழித்திருந்தான் என்றும், அக்காலமெல்லாம் ஊர்மிளை எச்செயலிலும் ஈடுபடாது உறங்கி இருந்தாள் என்றும் கூறப்படுகிறது. அ.மா.ப.

**ஊர்வசி**: இவர் ஒரு புராணப் பாத்திரமல்லர்; தமிழ்ப் புலவர் ஆவார். இவர் கி.பி. 1899–இல் பஞ்சரத்தினம் என்னும் நூலின் முதற்காண்டமும் இரண்டாம் காண்டமும் எழுதியுள்ளார். யோகம், ஞானம் என்பனவே இந்நூலின் உள்ளடக்கங்கள். இதில் உள்ள பாடல்கள் அனைத்தும் அந்தாதிப் போக்கில் உள. செய்யுட்களில் ஈற்றுச் சீரையோ ஈற்றயல் சீரையோ ஆதியாகக் கொண்டு பாடல்கள் இயற்றப்பட்டுள்ளன. பி.தெ.

**ஊர் விருத்தம்** தமிழிலுள்ள சிறு பிரபந்த வகைகளுள் ஒன்று. இது அரசர்க்குரிய அங்கங்களான குடை, வாள், வேல், செங்கோல், வில், பரி, யானை, ஊர், நாடு ஆகிய இவை ஒவ்வொன்றினைப் பற்றியும் பத்து ஆசிரிய விருத்தங்களாகத் தொண்ணூறு ஆசிரிய

விருத்தப் பாடல்களால் பாடப் பெறும் பிரபந்தம். இவ்வாறன்றி, இவ்வங்கங்களுள் யாதேனும் ஒன்று பற்றிப் பத்து ஆசிரிய விருத்தங்கள் பாடிச் சிற்றிலக்கியம் அமைப்பதும் உண்டு. அவ்வாறமையும் பிரபந்தம் குடை விருத்தம், வேல் விருத்தம், யானை விருத்தம், ஊர் விருத்தம் எனத் தனித்தனியே பெயர் பெறும். இவ்வகையில் ஊர்விருத்தம் என்பது பாட்டுடைத் தலைவனின் ஊரினைப் பத்து ஆசிரிய விருத்தங்களால் சிறப்பித்துப் பாடப் பெறும் பிரபந்தமாகும். 'எழிற் குடை செங்கோல் நாடு ஊர் சிலை வாள், அணிவேல் பரிதந்தி இவற்றைத் தனியே, அகவல் விருத்தம் ஈரைந்தின்மேவ, உரைக்கில் அவ்வவ் விருத்தமாகும்' என்பது இப்பிரபந்தத்தின் இலக்கணமாகும் (பிரபந்த மரபியல்-9). அ.மா.ப.

**ஊர்வெண்பா** பிற்காலத்தில் தோன்றிய சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று. இவ்விலக்கியம் பத்து வெண்பாக்களினால் ஒரூரினைச் சிறப்பித்துப் பாடப் பெறுவதாகும். வெண்பாக்கள் பத்தும் நேரிசையாகவோ இன்னிசையாகவோ அமையலாம். வெண்பாப் பாட்டியல், நவநீதப் பாட்டியல், முத்து வீரியம், பிரபந்த தீபம் ஆகிய பாட்டியல் நூல்கள் இதன் இலக்கணத்தைக் கூறுகின்றன. 'அறிந்திடில் ஊர் வெண்பா ஐயிரண்டாம்' என்று வெண்பாப் பாட்டியலும், 'ஊனம்இல் வெள்ளை பத்து, ஊர் வெண்பாவாக உரைப்பார்களே' என்று நவநீதப் பாட்டியலும் இதன் இலக்கணத்தினை இயம்புகின்றன. ஊர் நேரிசை, ஊர் இன்னிசை என்னும் இருவேறு சிற்றிலக்கியங்களும் உள்ளன. அவையும் பத்து நேரிசை அல்லது பத்து இன்னிசை வெண்பாக்களால் அமைவனவே. இவ்விருவகைச் சிற்றிலக்கியங்களும் பத்து வெண்பாக்களால் பாட்டுடைத் தலைவன் ஒருவனைச் சிறப்பித்துப் பாடப்படுவனவாகும். ஆனால், ஊர் வெண்பா என்னும் பிரபந்தம் பாட்டுடைத் தலைவனைக் குறிப்பிடாமல், ஊரின் சிறப்பினை மட்டும் பத்து வெண்பாக்களால் கூறுவதாகும். அ.மா.ப.

**ஊரக்காரே இந்தியர்** தென் அமெரிக்க நாடான பொலிவியா (Bolivia) நாட்டின் மமோரே ஆற்றின் மேற்குக் கிளைநதிகளின் கரையில் வாழும் மக்களாவர். இவர்கள் அமெரிக்க இந்தியர்களின் வழிவந்தவர்களாவர். இவர்களின் எண்ணிக்கை 1000 க்கும் சற்றுக் கூடுதலாகும்.

ஊரக்காரே இந்தியர்கள் (Yuracare Indians)இரு பெரும் சிற்றினக் குழுக்களாகப் (Band) பாகுபடுவர். ஒவ்வொரு குழுவும் பல சிறிய தனித்த குடும்பங்களாகப் பிரிக்கப்பட்டு அனைத்துச் செயல்களிலும் குடும்பமே முழு உறுப்பாகச் செயற்படுகிறது. பழங்குடிச்சமூகத்தில் அனைத்து நிலையிலும் தனித்த குடும்பங்களைக் காண்பது அரிது. ஆண்களும் பெண்களும் அலங்கரிக்கப்பட்ட மரப்பட்டைகளால் செய்த தளர்ந்த மெல்லிய ஆடைகளை விரும்பி அணிகின்றனர். இவர்களது திருமணமுறை பெரும்பான்மையாக ஒரு துணை மண (Monogamy) முறையைக் கொண்டதாகும். தங்கள் வட்டாரக் குழுக்களில் மட்டுமே மணப்பெண் தேர்ந்தெடுக்கும் மரபுடையவர்கள். இவர்களது பொருளாதாரம் எளிமையானது; துணைத் தொழில்கள் கொண்டது. மீன்பிடித்தலும் வேட்டையாடுதலும் இவர்கள்தம் துணைத்தொழில்கள். வெப்ப மண்டலக் காட்டுப் பகுதிகளில் வாழும் இவர்கள் தோட்டப் பயிர்களையும் சோள வகைகளையும் விளைவிக்கின்றனர். இவர்களிடையே எழும் சச்சரவுகள் சிறு சண்டைகளுக்குப் பின்னர்க் கட்டுப்படுத்தப்படுகிறது. இவர்கள் பேசும் கிளை மொழியானது பிற மொழிகளுடன் தொடர்பற்றது. சீ.ப.

**ஊரகக் கடன்**: இந்தியப் பொருளாதார வளர்ச்சி ஊரகப் பொருளாதார முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டது. நாட்டின் உழைப்பாளர்களுள் 70 விழுக்காட்டினர் வேளாண்மையை வாழ்க்கைத் தொழிலாகக் கொண்டுள்ளனர். எத்தொழிலும் சிறப்புற்று விளங்க நிதி இன்றியமையா மூல வளமாகும். வேளாண்மைக்கும் நிதி பெருமளவில் தேவைப்படுகிறது. இந்திய வேளாண்மையினர் நிதிப் பற்றாக்குறையினால் பேரளவில் இழப்புக்குள்ளாகின்றனர். அவர்களின் நிதித் தேவை பன்முகப்பட்டது. அவர்கள் தம் தொழிலின் முதலீட்டுக்கு மட்டுமன்றி, அன்றாடக் குடும்பத் தேவைகள், சமய சமூகப் பொறுப்புகள், ஆடம்பரச் செலவுகள் ஆகியவற்றிற்காகவும் கடன்பட்டு நிதிபெறுகின்றனர். இவற்றுள் பெரும்பாலானவை உற்பத்தியைப் பெருக்குவதற்கான நோக்கமுடையனவல்ல. அதனால், பெறும் கடன்களைக் குறித்த காலத்தில் வட்டியுடன் திரும்ப அளித்தல் இயலாததாகிறது. எனவே, மேலும் மேலும் கடன் பட்டுக் கடனிலேயே வாழ்நாள் முழுவதையும் கழிக்கின்றனர். கடனைத் தீர்க்க முடியாமலேயே இறந்துவிடுகின்றனர். இதனை விளக்க 'இந்திய விவசாயி தூக்குக் கயிற்றில் தொங்குகிறான்; கடனோடு பிறந்து, கடனில் வாழ்ந்து, கடனுடனே இறக்கின்றான்; கடனையே வாரிசுக்கும் விட்டுச் செல்கின்றான்' எனக் கூறுகின்றனர். இது ஊரகக் கடன் சுமையைத் தெளிவாக விளக்குகிறது.

இந்திய வேளாண்மையினரின் வாழ்க்கைத் தரம் உயரவில்லை. குறைந்த கூலி, காலம் சார்ந்த

தொழில், பாதுகாப்பற்ற வேலை, கடன் சுமை போன்ற காரணங்களால் உயிர் பிழைக்கும் நிலையிலேயே வாழ்கின்றனர். இந்திய ஊரகங்களின் பின் தங்கிய நிலைமைக்கு வேளாண்மையினரின் ஏழ்மையே காரண காரியமாகக் கருதப்படுகிறது. வறுமை உற்பத்தி அளவினையும் உற்பத்தித் திறனையும் பாதிக்கிறது. அதனால்,மரபியல் தன்மை வாய்ந்த வேளாண்மையில் தலைமுறை தலைமுறையாக ஏழ்மை, கடன், பெருகும் வட்டி வீதங்கள் ஆகியவற்றால் ஏற்படும் சுழலும் வறுமை (Vicious Circle) வேரூன்றி விட்டது. இவ்வறுமையை ஒழிக்க ஊரக அமைப்பைச் சீராக்கி மாற்றி அமைப்பது முக்கியமானதாகும். அதற்கான இன்றியமையாத் திட்டங்கள் பலவற்றுள் ஊரகக் கடன் (Rural Indebtedness) பளுவை ஒழிப்பது தலையாய இடம்பெறுகிறது.

கடன் பெருக்கம்: ஊரகக் கடன் தொன்று தொட்டு இருந்து வருகிறது. குறிப்பாக, ஆங்கிலேயர் ஆட்சியினால் வேளாண்மை மூலப் பொருள்களின் உற்பத்தியில் தேவைமிகுந்தபோதும்,கி.பி. 1850-ஆம்ஆண்டளவில்இந்திய வேளாண்மை வணிகமயமாக்கப்பட்ட போதும், வேளாண்மையினர் கடன்பட்டாயினும் உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் கடன்பட்டு நிதி உதவி பெற்றனர். அதனால் உற்பத்தி பெருகியது எனினும், வேளாண்மையினர் நிலக்கிழாருக்கும் அரசுக்கும் பெருந்தொகையைப் பணமாகவோ உற்பத்திப் பொருளாகவோ செலுத்தக் கடமைப்பட்டனர். ஊரகங்களில் பாதுகாப்பு வசதியும் அங்காடி வசதிகளும் இல்லாததால் விளை பொருள்களை விற்பனை செய்வதிலும், மொத்த அங்காடிகளுக்கு எடுத்துச் செல்வதிலும் இடைத்தரகர்கள் ஈடுபட்டனர். அவர்கள் வேளாண்மையினரிடமிருந்து குறைந்த விலைக்கு விளைபொருள்களைப் பெற்றதால், ஊரக வேளாண்மைத் தொழிலில் பணியாற்றிய மக்களுக்கு ஆதாயம் கிடைக்கவில்லை. அரசும் நிலக்கிழாரும் இடைத்தரகர்களும் வணிகருமே பெருஞ் செல்வம் ஈட்டினர். இவற்றால் வேளாண்மையினர் தாங்கள் பெற்ற கடன்களைத் தீர்க்க முடியாமல் அல்லலுற்றனர். ஆண்டுக்கு ஆண்டு கடனும் வட்டியும் பெருகிக் கொண்டே சென்றன.

வட்டித் தொழிலர்: பெறும் கடனை அவ்வப்போது தீர்க்க இயலாத நிலையில் வேளாண்மையினர் ஊரக வட்டித் தொழிலரிடம் (Money lender) சிக்கிக் கொண்டனர். ஊரகங்களில் வட்டிக்குக் கடன் வழங்கும் வட்டித் தொழிலர் மட்டுமே வேளாண்மையினருக்குக் கடன் வழங்க முன்வந்தனர். ஊரக நிலங்களுள் பெரும்பாலானவை வேளாண்மையினரிடமிருந்து வட்டித்தொழிலரின் உரிமைக்கு கி.பி. 1875-ஆம்ஆண்டுக் காலத்தில் மாற்றப்பட்டன காலப் போக்கில் வட்டித் தொழிலர் வேளாண்மையினரைத் தனியாகவும் குடும்பமாகவும் தங்களுக்குக் கீழ்க் கூலியாக அடிமைப்படுத்தி ஆண்டனர். வட்டித் தொழிலர் அளிக்கும் கடனால் பெறும் நன்மையை விடத் தீமையே மிகையாயிற்று. வட்டிக்கு வட்டி கணக்கிட்ட வட்டித் தொழிலர் நிலத்தில் பாடுபடும் உழவர்களின் நலனைக்கருத்திற் கொள்வதில்லை. உழவர்கள் கடின உழைப்பினால் நலிந்து அடிமைகளைப் போல் உணவின்றியும் ஊக்கமின்றியும் உற்பத்தித் திறனிழந்து, கல்வியறிவில்லாமல் அறியாமையில் மூழ்கித் தவிக்கும் நிலை உருவாயிற்று.

நிதி நிறுவனங்கள், வங்கிகள் போன்றவை வழங்கும் கடன்கள் பல கட்டுப்பாடுகளுடன் குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட நோக்கங்களுக்கு மட்டும் வழங்கப்படுவதால், ஊரக மக்கள் வட்டித் தொழிலர் வழங்கும் கடனையே சார்ந்திருக்கின்றனர். நிறுவனக் கடன்களைப் (Institutional Credit) பெறும் முறைகளை வேளாண்மையினர் அறிய வாய்ப்பின்றி இருக்கின்றனர். அவற்றைச் சார்ந்த சட்ட ஒழுங்குகள், பிணைய ஒப்பந்த முறைகள் ஆகியவற்றைப் புரிந்து கொள்ளத்தக்க கல்வியறிவில்லாமையும் வேளாண்மையினரை வட்டித் தொழிலரிடம் சிக்க வைக்கிறது. இவ்வட்டித் தொழிலர் கால வரையறையின்றி எக்காலத்திலும் உற்பத்தியற்ற நோக்கத்திற்கும், பிணையம் இன்றிச் சொத்து இல்லாதவருக்கும் கடன் கொடுக்கின்றனர். வட்டித்தொழிலரின் நோக்கம் வட்டி மூலம் ஆதாயம் ஈட்ட வேண்டும் என்பதே. வேளாண்மையினர் எதற்காகக் கடன் கேட்கின்றனர் என்று கவலைப் படுவதில்லை. கடன் வழங்குவதில் எவ்வகையான கடினமான ஒப்பந்தக் கட்டுப்பாடுகளையோ சட்ட ஒழுங்குகளையோ சிக்கலான முறைகளையோ பின்பற்றுவதில்லை. எனவே, வட்டித் தொழிலர் ஊரகக் கடனின் வளர்ச்சியில் தலையாய இடம் பெறுகின்றனர்

வட்டித்தொழிலர் ஊரக மக்களின் அறியாமையையும் சமுதாயச் சூழலையும் பயன்படுத்திப் பல தீய நடவடிக்கைகளை மேற்கொண்டு, ஏழை வேளாண்மையினரை ஏமாற்றவும் சுரண்டவும் (Exploitation) செய்கின்றனர். அரசு வரையறுத்துள்ள வட்டிவீதத்திற்கு மிகையான வட்டி பெறுகின்றனர். கடன் வழங்கும் தொகைக்கு மிகையான தொகைக்கு வாக்குறுதிச் சீட்டுகளை (Promissory Note) எழுதுகின்றனர்.

சிறிய தொகைக் கடனைக் கொடுத்துவிட்டு வெற்றுக் காகிதத்தில் கையெழுத்து வாங்கிக் கொள்கின்றனர். கடனைக் கொடுக்கும்போது ஒரு மாத வட்டியை முதலில் எடுத்துக்கொண்டு மீதியைக் கொடுக்கின்றனர். கடனைத் தவணை முறை மூலம் பெறும் போதும் வட்டியைப் பெறும் போதும் அவற்றிற்கான பற்றுச் சீட்டை (Receipt) வழங்குவதில்லை. வழங்கும் கடனுக்குப் பிணையமாக வேளாண்மையினரிடமிருந்து சொத்துகளைத் தங்கள் பேரில் மாற்றிக் கொள்கின்றனர். மாற்றும் செலவுகளை வேளாண்மையினரே செலுத்த வேண்டும். கடன் தீர்ந்த பின்னரும் மாற்றிய சொத்துகள் வேளாண்மையினருக்குத் திரும்ப முழுமையாகக் கிடைப்பதில்லை. குறிப்பாகக் கடன் பெற்றவர் இறந்து விட்டால் சொத்துரிமை நிலையாக வட்டித் தொழிலருடையதாகி விடுகிறது. சொத்துரிமை மாற்றங்களினால் செலவும் தகராறுகளும் பெருகிவிடுகின்றன.

கடன் ஒழிப்புத் திட்டங்கள்: ஊரகக் கடன் பளுவை ஒழிக்க மைய அரசும் மாநில அரசுகளும் பல திட்டங்களைச் செயற்படுத்துகின்றன. தொடக்க காலத் திட்டங்கள் வட்டித் தொழிலரின் நியாயமற்ற நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் நோக்கம் கொண்டவையாகும். தக்காண வேளாண்மை இடர் தவிர்ப்புச் சட்டம் (The Deccan Agricultural Relief Act) கி.பி. 1879-இல் இயற்றப்பட்டு உரிமையியல் நீதிமன்றங்களுக்கு(Civil Courts) வட்டியைக் குறைக்க அதிகாரம் வழங்கப்பட்டது. நில முன்னேற்றக் கடன் சட்டம் (The Land Improvement Loans Act) கி.பி. 1883-இலும், வேளாண்மையினரின் கடன் சட்டம் (The Agriculturists Loans Act) கி.பி. 1884-இலும் இயற்றப் பட்டு, வேளாண்மையினரின் கடன் பளுவைக் குறைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. நில முன்னேற்றக் கடன் சட்டம் நிலையான திட்டங்களைச் செயற்படுத்தும் நோக்கத்துடன் நீண்டகாலக் கடன்களை வழங்க வழிமுறைகளை வகுத்து உதவியது. வேளாண்மைக் கடன் சட்டம் வேளாண்மையினரின் அன்றாடத் தேவைகளை நிறைவு செய்வதற்கான குறுகிய காலக் கடன்களை வழங்க உதவியது. இவை பிற்காலத்தில் தக்காவிக் கடன்கள் (Daccavi Loans) என வழங்கப்பட்டன. பஞ்சாபு நில உரிமை மாற்றுச் சட்டம் (The Punjab Land Alienation Act) 1901-இல் இயற்றப்பட்டது. அது பிணையமாக நில உரிமை மாற்றம் செய்யப்பட்டுக் கடன் வழங்கப் படுவதைச் சீராக்க முனைந்தது.

பஞ்சாபில் வரவு செலவுக் கணக்கு ஒழுங்குபடுத்தும் சட்டம் (The Regulation of Accounts Act) 1930-இல் இயற்றப்பட்டது. இதனைப் பின்பற்றிப் பிற மாநிலங்களும் சட்டங்களை இயற்றி, வட்டித் தொழிலர் தங்கள் வரவு செலவுக் கணக்குகளைக் குறிப்பிட்ட அரசுப் படிவங்களில் (Format) பதிவு செய்து தொழில் செய்ய வேண்டும் என்றும், அவை தணிக்கைக்குட்பட்டவை என்றும் அறிவித்தன. அவற்றில் முதல், வட்டி ஆகியவை தனித்தனிப் பகுதிகளில் தெளிவாகக் காட்டப்பட வேண்டும். இத்தகைய நடவடிக்கைகளால் குறிப்பிடத்தக்க அளவில் ஊரகக் கடன் பளு குறையவில்லை. உலகப் பெருமந்தம் (World Depression) 1930-இல் இந்திய வேளாண்மையையும் பாதித்தது. நீண்டகாலக் கடன்களை நீக்கவும் குறைக்கவும் கடன் தவணை உரிமை (Moratorium) வழங்கவும் வட்டித்தொழிலைச் சீராக்கவும் மாநிலங்கள் நடவடிக்கைகள் எடுத்தன. கடன்களை நீக்கவும் குறைக்கவும் இணைக்கவும் 'கடன் இணக்க மன்றங்கள்' (Debt Reconciliation Councils) நிறுவப்பட்டன.

தமிழ்நாட்டில் வேளாண்மையினரின் துயர் தவிர்ப்புச் சட்டம் 1938-இல் இயற்றப்பட்டு, 1937-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் வரை கொடுக்கப் படாமலிருந்த வட்டி எச்சங்கள் தள்ளுபடி செய்யப் பட்டன. பல மாநிலங்கள் குறிப்பிட்ட சில கட்டுப் பாட்டினுள் அடங்கும் கடன்களை மீட்கப் பெற இயலாத கடன்கள், நொடித்துப் போனவர்கள் (Insolvents) என வகைப்படுத்திச் சட்டமுறையில் வேளாண்மையினர் பலரைக் கடன் பளுவிலிருந்து விடுவித்தன. நில அடைமான மீட்புச் சட்டம் (Restoration of Mortgage Land Act) தலைமுறை தலைமுறையாகக் கடனுக்காகச் சொத்துகள் அடைமானம் செய்யப்படுவது, அறுவடை செய்யப்பட வேண்டிய பயிர்களைக் கைப்பற்றுவது போன்றவற்றைத் தடை செய்தது. பஞ்சாபு மாநிலம் 1938-இல் வட்டித் தொழிலர் அரசாங்கத்தில் பதிவு செய்து அனுமதி பெற்ற பின்னர் மட்டுமே, தங்கள் தொழிலைத் தொடர்ந்து நடத்தலாம் என ஒரு சட்டத்தை இயற்றியது. அவ்வகையான சட்டங்களை வங்காளம், உத்தரப் பிரதேசம், பீகார், பம்பாய் ஆகிய மாநிலங்களும் இயற்றின.

கடன் பளு: மாநிலங்கள் சட்டங்களின் மூலம் எடுத்த ஒழுங்கு நடவடிக்கைகளினால் குறிப்பிடத்தக்க வகையில் ஊரகக் கடன் நிலையில் மாற்றங்கள் ஏற்படவில்லை. அனைத்திந்திய ஊரகக் கடன் ஆய்வு (All India Rural Credit Survey) 1951-இல் இந்திய மைய இருப்பு வங்கியால் (Reserve Bank of India) நடத்தப்பட்டது. அதன் அறிக்கையின்படி, மொத்தம்

ஊரகக் கடனில் 90 விழுக்காடு தனியாரால் வழங்கப்படுகிறது. அவற்றுள் 70 விழுக்காட்டுக் கடன் வட்டித் தொழிலர் மூலம் வழங்கப்படுகிறது. மொத்த ஊரகக் கடன் 1951-52-இல் உரு. 913 கோடியாகும். பத்து ஆண்டுகளுக்குப் பின்னர் 1961-62-இல் மைய இருப்பு வங்கி நடத்திய அனைத்திந்திய ஊரகக் கடன்-மூலதன ஆய்வின்படி (All India Rural Debt and Investment Survey) அப்போதைய ஊரகக் கடன் உரு.2380 கோடியாகும். ஓராண்டுக் கடன் மட்டும் (1962-ஆம் ஆண்டையது) உரு. 1330 கோடி எனக் கணக்கிடப் பட்டது. வேளாண்மையில் ஈடுபட்டிருக்கும் மொத்தக் குடும்பங்களுள் 67 முதல் 69 விழுக்காட்டுக் குடும்பங்கள் கடன் பட்டிருந்தன. ஒரு குடும்பத்தின் சராசரிக் கடன் உரு. 647. அதுவே 1973-74-இல் உரு. 719 ஆகப் பெருகிக் காணப்பட்டது. மொத்த ஊரகக் கடனும் 1973-74-இல் உரு. 4000 கோடியாகப் பெருகியது.

அனைத்திந்திய ஊரகக் கடன் மூலதன ஆய்வு, ஊரகக் கடன் பளு, வேளாண்மையினர் எவ்வழிகளில் கடன் பெறுகின்றனர் என்பனவற்றை நன்கு ஆராய்ந்து ஊரகக் கடன் தொடர்பான சிக்கல்கள் யாவற்றையும் அதன் அறிக்கையின் மூலம் வெளியிட்டது. அவ்வறிக்கை கூட்டுறவு இயக்க நிறுவனங்கள் எதிர்பார்த்த அளவுக்கு வேளாண்மையினரின் கடன் தேவைகளைக் குறைந்த அளவுக்குக் கூட நிறைவு செய்யவில்லை என்பதைச் சுட்டிக்காட்டியது. கூட்டுறவு நிறுவனங்கள் சொத்துகளின் அடிப்படையில் மட்டும் கடன்களை வழங்கியமையால் உற்பத்திக்கான தேவைகளையும், நிலமற்றோரின் தேவைகளையும் புறக்கணித்துவிட்டன. பெரு நிலக்கிழாரும் செல்வர்களுமே கூட்டுறவு நிறுவனங்களால் பயனடைந்தனர். இந்நிறுவனங்களின் மேலாண்மை திறமையற்றதாகச் செயற்பட்டதால், அரசின் உதவியையும் வங்கித் துறை உதவிகளையும் பெற இயலாத வகையில், உயர்நிலை அமைப்பு நலிவடைந்திருந்தது. 'ஊரகக் கடன் பொறுப்பில் கூட்டுறவு இயக்கம் தோல்வியடைந்திருக்கிறது. எனினும், அது வெற்றி பெற வேண்டும்' என ஆய்வுக் கருத்து வெளியிட்டது.

சிவராம் ஆய்வுக் குழு (Sivaram Committee) 1976-ஆம் ஆண்டில் ஊரகக் கடன் பளுவைக் குறைக்க ஊரக நலத் திட்டங்கள், வேளாண்மை முன்னேற்றத் திட்டங்கள் ஆகியன ஒருங்கிணைந்து செயற்பட வேண்டுமென்றும், நிறுவனக் கடன்கள் (Institutional Finance) கூட்டுறவு நிறுவனம், மாநில வங்கிகள், வணிக வங்கிகள் ஆகியவற்றின் மூலம் பேரளவில் வழங்கப்பட வேண்டுமென்றும், பொருள் உற்பத்திக்கும் அவற்றைப் பாதுகாத்தற்கும் சேமித்து வைத்தற்கும் விற்பனை செய்தற்கும் கடன்கள் வழங்கப்பட வேண்டுமென்றும், மூதாதையர் கடன்கள், இயற்கையினால் ஏற்படும் அழிவுகள் காரணமாக உண்டான கடன்கள் போன்றவற்றைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் பரிந்துரைத்தது. இவ்வகையான கருத்துகளை இந்திய மைய இருப்பு வங்கியின் ஆய்வும், தேசிய ஆய்வு அறிக்கையும் (National Sample Survey) வெளியிட்டன. அரசு அவ்வப்போது பல திட்டங்களின் கீழ் அவற்றைச் செயற்படுத்தி வருகிறது.

நீண்டகாலத் திட்டமாக, இந்திய மைய இருப்பு வங்கியின் கீழ் நாட்டு வேளாண்மைக் கடன் நிதி 1956-இல் முதன்முதலாகஏற்படுத்தப்பட்டது. நாட்டு வேளாண்மைக் கடன் நிலைப்படுத்து நிதியும் ஏற்படுத்தப்பட்டது. இந் நிதிகளிலிருந்து மாநில, மையக் கூட்டுறவு வங்கிகள் கடன் பெறுகின்றன. நாடெங்கிலும் சேமிப்புக் கிடங்குகள், மையச்சேமிப்புக் கிடங்குக் கழகம் (Central Warehousing Corporation) ஆகியவை அமைக்கப்பட்டன. கூட்டுறவுப் பயிற்சி மையங்கள் மூலம் கூட்டுறவுப் பணியாளர்கள் பயிற்சி பெறுகின்றனர். நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளும் வேளாண்மைக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் கடன் வழங்குகின்றன.

கூட்டுறவு வங்கிகளுக்கு நிதி வசதி அளிப்பது, நிலவள வங்கிகளின் கடனுறுதிச் சீட்டுகளை (Bonds) வாங்குவது, மறுகழிவு (Rediscount) செய்வது ஆகியவற்றின் மூலம் இந்திய மைய இருப்பு வங்கி, மாநில வங்கி, நாட்டுடைமையாக்கப்பட்ட வணிக வங்கிகள் ஆகியவை ளோண்மை நிறுவனக் கடன்கள் கூடுதலாகக் கிடைக்க வழி செய்கின்றன. வேளாண்மை மறுநிதி முன்னேற்றக் கழகம் (Agricultural Refinance and Development Corporation-ARDC) நீண்டகால நிதி உதவிகளை அளிப்பதற்காக 1963-ஆம் ஆண்டு சூலைத் திங்களில் அமைக்கப்பட்டது. இது ஊரக வேளாண்மைத் திட்டங்களில் 41 திட்டங்களுக்கு உரு. 1500 மிலியன் நிதி உதவிகளை 1982-ஆம் ஆண்டு வரை வழங்கியுள்ளது. தேசிய ஊரக வேளாண்மைக்கான முன்னேற்ற வங்கி (National Bank for Agriculture and Rural Development - NABARD) 1982-இல் அமைக்கப்பட்டவுடன், அது வேளாண்மை மறுநிதி முன்னேற்றக் கழகத்தின் பணியைத் தன்னிடம் ஏற்றது. அது தன் முதலாக்கத்திற்கு (Capital Formation) இந்திய மைய வங்கியைச் சார்ந்திருந்தாலும், உலக வங்கி (World Bank), பன்னாட்டு முன்னேற்ற அமைப்பு (International Development Association) போன்ற பன்னாட்டு நிதி நிறு

வனங்கள் குறிப்பிட்ட பல திட்டங்களுக்கென வழங்கும் நிதி உதவிகளையும் பெறுகிறது. அது மேற்குச் செருமனி, ஐக்கிய அமெரிக்கக் குடியரசு (United States of America), நெதர்லாந்து, சுவிட்சர்லாந்து, பிரிட்டன் ஆகிய நாடுகளிலிருந்து உரூ. 133 கோடியைப் பெற்றுள்ளது. இதன்மூலம் ஊரக நிதி வசதிகள் ஒருங்கிணைக்கப்பட்டுச் செயற்படுத்தப்படுகின்றன. நாடெங்கிலும் வட்டார ஊரக வங்கிகள் (Regional Rural Banks-RRB) 1976-ஆம் ஆண்டு வட்டார ஊரக வங்கிச் சட்டப்படி நிறுவப்பட்டு, நிதி உதவிகளை வழங்கி வருகின்றன. இவை சிறு வேளாண்மையினருக்கும் இறுதிநிலை உழவர்களுக்கும் (Marginal Farmers) ஊரகக் கைவினைஞர்களுக்கும், கூலித் தொழிலாளர்களுக்கும், பிற ஊரகத் தொழிலாளர்களுக்கும் உற்பத்தி நோக்கமுடைய கடன்களை வழங்குகின்றன.

நிறுவனக் கடன் வழங்கல் யாவற்றையும் இந்திய மைய இருப்பு வங்கி ஒருங்கிணைத்துத் தன் தலையாய பொறுப்பின் கீழ்க் கண்காணித்து வருகிறது. ஊரகப் பொருளாதார நடவடிக்கைகள் ஒருங்கமைந்த துறையாக (Organised Sector) இந்திய மைய வங்கியின் கட்டுப்பாட்டிற்குள் செயற்பட எடுக்கப்பட்டுள்ள திட்டங்கள் முழுமையில் நிறைவேறும் அளவில், ஊரகக் கடன் நிலையும் சீரடையும் எனக் கருதப்படுகிறது. நிறுவனக் கடன் வசதிகளின் பெருக்கம் 1980-ஆம் ஆண்டிற்குப் பின்னர்ப் புரட்சிகரமான வகையிலும் அளவிலும் ஊரக வேளாண்மைக்குக் கிடைக்கிறது. எனினும் தேவையோடு ஒப்பிடும்போது மேலும் இவ்வசதி பெருக வேண்டும் என்பது தெளிவாகிறது.

அ.கு.சா.

**ஊரகக் கல்வி**: இந்தியாவின் உயிர்நாடியாகச் சிற்றூர்கள் கருதப்படுகின்றன. அங்கு வாழ்கின்ற மக்கள் அனைவரும் சமூகப் பொருளாதார, அரசியல் மாற்றங்களுக்கு ஏற்பத் தங்களை மாற்றிக் கொண்டு, வாழ்க்கையில் முன்னேற்றம் அடையவேண்டும். அதற்கு அடிப்படையாக அமைவது கல்வி. எழுத்தறிவின்மை, அறியாமை, மூடநம்பிக்கை ஆகியவற்றிலிருந்து மக்களை விடுவித்து முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்வது கல்வியேயாம்

சிற்றூர்கள் சிறந்த முன்னேற்றமடைய வேண்டுமானால், அங்குள்ள மக்கள் அனைவரும் ஒருங்கிணைந்து ஒற்றுமையுடன் வாழ்ந்து வளர்ச்சித் திட்டத்தில் பங்கு கொண்டு சமூக, பொருளாதார, அரசியல், பண்பாட்டில் அவ்வூர்கள் மேலோங்கி நிற்கப் பாடுபடவேண்டும். இவ்வகையில் சிற்றூர்களில் உள்ள குழந்தைகளிலிருந்து வயது வந்தோர் வரையிலான அனைவருக்கும் அவர்களுடைய தனித்திறன்களை வளர்க்கும் முறையில் அமைந்த கல்வியே ஊரகக் கல்வி(Rural Education) ஆகும்.

**ஆதாரக் கல்வி**: காந்தியடிகளின் கல்விநோக்கின் படி ஆதாரக்கல்வி முறையானது மனிதனின் உடல், உள்ளம், அறிவு, ஆன்மா ஆகியவை முழுவளர்ச்சியடைய வழிவகுக்கக் கூடியதாகும். இக் கல்வி முறையால் அறிவும் ஆற்றலும் சீரிய மனப்பான்மையும் உயரிய குறிக்கோள் கொண்ட வாழ்க்கைக்கு ஏற்ற நல்ல பழக்க வழக்கங்களும் மனிதனிடம் படிகின்றன. அதனால், சமுதாய நோக்குள்ள, தன்காலில் நிற்கக் கூடிய, சமநீதியுடன் உடலுழைப்பை நம்பிவாழும் ஒரு மனிதனைப் படைக்கும் வல்லமை இக் கல்விக்கு உண்டு என்று காந்தியடிகள் கருதினார்.

**பால்வாடிகள்**: சிற்றூர்கள்தோறும் வறுமைக் கோட்டிற்குக் கீழ்ப் பலகோடி மக்கள் வாழ்கிறார்கள். அவர்கள் தங்கள் குழந்தைகளை நல்ல உடல்நலம் உடையவர்களாகவும் அறிவாற்றல் மிக்கவர்களாகவும் வளர்க்க இயலாத நிலையை நீக்கவே அரசும் தனியார் தொண்டு நிறுவனங்களும் சிற்றூர்களில் பால்வாடிகள் அமைத்து நடத்தி வருகின்றன. இங்கு 3½ வயது முதல் 5 வயது வரையில் உள்ள குழந்தைகளுக்குச் சத்துணவு அளிக்கப்படுகிறது.

சத்துணவுடன் இக்குழந்தைகளுக்கு ஆடல், பாடல், பேச்சு ஆகியவற்றில் பயிற்சி, சித்திரம் வரைதல், கதைசொல்லுதல், கூடிவிளையாடுதல், நடித்தல் போன்ற விளையாட்டுகள் ஆகியவை சொல்லித் தரப்படுகின்றன. அருகில் உள்ள இயற்கைக் காட்சிகள், தொழிலாளிகள் வேலை செய்யுமிடங்கள் ஆகியவற்றிற்குக் குழந்தைகளைக் கூட்டிச் சென்று அவர்களின் பொதுஅறிவுப் பெருக்கத்திற்குத் துணை செய்யலாம். சிற்றூர்களே குழந்தைகளின் முழு வளர்ச்சிக்குப் பொறுப்பேற்க வேண்டும்.

**தொடக்கக் கல்வி**:இந்திய நாட்டில் 6 வயது முதல் 14 வயது வரையிலுள்ள அனைத்துக் குழந்தைகளும் கட்டாய இலவசக் கல்வி பெறவேண்டும். இப்போது தொடக்கக் கல்வி பெற்றுவரும் ஏழுகோடிக் குழந்தைகளுக்காக 4,85,00 தொடக்கப் பள்ளிகள் உள்ளன. தொடக்கப்பள்ளியிலேயே வாழ்க்கையில் தன்னிறைவு பெறுவதற்காகச் செயல்கள் நடைபெற வேண்டும். பள்ளியையும் அதன் சுற்றுப்புறத்தையும் துப்புரவாக வைத்தல், கழிவுகளை உரமாக்குதல், நாடோறும் தோட்டவேலை, நெசவுபோன்ற ஆக்கப் பணிகளில் திட்டமுடன் வேலைசெய்தல், மதிய உணவைக் கூட்டாக உண்ணச் செய்தல், தலைவர்களைத்

தேர்ந்தெடுத்துப்‘பள்ளி நாடாளுமன்றம்’ நடத்துதல், பள்ளி நீதிமன்றம் நிறுவுதல், கொடி வணக்கம், கூட்டுவழிபாடு செய்தல்,கல்விப் பயணம் செல்லுதல், கையெழுத்து மலர்கள் தயாரித்தல், தேசிய விழாக் களைக் கொண்டாடுதல், அறிக்கை தருதல், இயைபு முறையில் பாடல்களைக்கற்றல் போன்ற தொடக்கக் கல்வி மூலமாக மாணவன் அறிவோடும் பல்வகைச் செயல் திறமைகள் நிரம்பிய சமுதாய நோக்கத் தோடும் விளங்கும் குடிமகனாக உருவாகுவான்.

உயர்நிலைக் கல்வி: எட்டாண்டுகள் நடுநிலைப் பள்ளியில் படித்தவன் உயர்நிலைப் பள்ளியில் சேரு கிறான். இந்த ஊரக உயர்நிலைப் பள்ளியின் மூலம் சுயதேவை அடிப்படையில் பாடங்களைக் கற்க வேண்டும். பள்ளி நிலங்களில் தோட்டம் போட்டுக் காய்கறிகள் பயிரிடுதல், நாடோறும்செய்தித்தாளைப் படித்து அலசி ஆராய்தல், வானொலியைப் பயன் படுத்துதல், நூலகத்தை நாடித் தனக்குப் பிடித்த மான நூல்களைத் தேர்ந்தெடுத்தல், வகுப்பறையில் ஆசிரியரோடு கலந்துரையாடுதல், வகுப்பில் மேற் கொள்ளும் செயல்களைக் குறித்துவைத்து மாத அறிக்கைகள் தயாரித்தல் ஆகிய செயல்களில் மாண வர் ஈடுபடவேண்டும். இவ்வாறு மாணவர் பள்ளி வாழ்க்கையிலேயே தன்னிறைவுடன் வாழும் முறை யைக் கற்றுக் கொள்ளல்வேண்டும்.

சமூகக் கல்வி: சமுதாயக் கல்வியானது வயது வந்தோருக்குப் பொதுவான கல்வியளிப்பதை அடிப் படைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. சுதந்திர இந்தியாவின் முதல் கல்வி அமைச்சராக இருந்த மௌலானா அப்துல்கலாம் ஆசாத்து சமூகக் கல்வி யின் குறிக்கோள்களாக 1. எழுதப் படிக்கத் தெரி யாமையை நீக்குதல், 2. உடல்நலக் கல்வி, 3. குடி யுரிமைக் கல்வி, 4. பொருளாதார முன்னேற்றம் ஆகியவற்றைக் குறிப்பிடுகின்றார். இதற்காக முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் (1951-56) ஐந்து கோடி உருபாய் ஒதுக்கப்பட்டது. இதன்மூலம் 63,000 எழுத் தறிவு மையங்களும், 453 பள்ளியோடு சேர்ந்த சமூக நல மையங்களும் (School-cum-Community Centres) 100 நூலகங்களும் தொடங்கப்பட்டன. இதில் மட்டும் 55 இலட்சம் எழுத்தறிவில்லாத வயதுவந் தோர் சேர்க்கப்பட்டனர். இதில் 35 இலட்சம் வயது வந்தோர்கள் எழுத்தறிவு பெற்றனர் என்று மதிப் பிடப்படுகின்றது.

உழவர் செயல்முறை எழுத்தறிவுத் திட்டம்: உழவர்களுக்கு எழுத்தறிவையும் வேளாண்மைத் தொடர்பான அறிவையும் கொடுப்பதன்மூலம் அவர் களிடையே நல்ல முன்னேற்றத்தைக் காணமுடியும் என்பது கருதப்பட்டது. இதனால் உழவர் செயல் முறை எழுத்தறிவுத் திட்டங்கள் 1977-78 இல் 144 மாவட்டங்களில் மட்டும் செயற்படுத்தப்பட்டன. இதில் 9,000 உழவர் செயல்முறை எழுத்தறிவு மையங் கள் திறக்கப்பட்டன. ஒவ்வொரு மையமும் 10 மாதங்கள் செயற்பட்டு வந்தன. இதன்மூலம் உழ வர்களுக்கு உரங்களைப் பற்றியும், வீரிய வித்துகள் பற்றியும் மற்றும் அறிவியலடிப்படையிலமைந்த சாகு படிகள் பற்றியும் வகுப்புகள் நடத்தப்பட்டன. இதன் மூலம் 2.5 இலட்சம் எழுத்தறிவில்லா உழவர்கள் பயனடைந்தனர்.

பல்நோக்கு வயதுவந்தோர் கல்வி மையங்கள் (Polyvalent Adult Education Centres) என்னும் இத் திட்டம்1967-இல் பம்பாயில்தொடங்கப்பட்டது.இதில் மக்களின் பல்வேறு தேவையின் அடிப்படையில் பல் நோக்கு வயதுவந்தோர் கல்வி மையங்கள் செயற் படுத்தப்பட்டன. எழுத்தறிவில்லாதவர்களுடைய தொழில் தேவைகளின் இன்றியமையாமையை மூலக் கருத்தாகக் கொண்டு இத்திட்டம் விளங்கியது.

பள்ளிசாராக் கல்வி: ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பள்ளிசாராக் கல்விக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது. இதன்மூலம் 1975-இல் 15 முதல் 35 வயது வரையிலான வயது வந்தோர்களுக்குப் பள்ளிசாராக் கல்வி வகுப்புகள் நடத்தப்பட்டன. இக் கல்வியானது முறையான பள்ளிகளில் நடத்தப்படும் எழுத்தறிவுப் படிப்பை ஒட்டியே அமைந்திருந்தது.

தேசிய வயதுவந்தோர் கல்வித்திட்டம்: வயது வந்தோர் கல்வியானது 1978-ஆம் ஆண்டு அக்டோபர் 2-இல் தொடங்கப்பெற்றது. இத்திட்டத்தில் 15 முதல் 35 வயது வரையில் உள்ள 200 மிலியன் மக் களுள் 100 மிலியன் ஆண், பெண் இருபாலோருக்கும் சாதி மத வேறுபாடின்றிக் கல்வியறிவு புகட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. குறிப்பாக, மலை வாழ் மக்களுக்கும் அட்டவணை வகுப்பினருக்கும் பெண்களுக்கும் முதலிடம் அளிக்கப்பட்டிருக்கிறது. வயது வந்தோர் கல்வித்திட்டமானது படிப்ப வரின் தேவைக்கும் வாழ்க்கைச் சூழ்நிலைக்கும் ஏற்ற வாறு கல்வியளித்தல்; எழுத்தறிவு, எண்ணறிவு, விழிப்புணர்ச்சி, செயல்திறன் மேம்பாட்டினை வளர்த் தல்; பாடத்திட்டமானது கற்றுக் கொடுப்பதற்கும், கற்றுக் கொள்வதற்கும் எளிதாக இருக்கக் கூடியதாக இருத்தல் ஆகியவற்றை வலியுறுத்துகிறது. குழுப் பணியில் ஈடுபடுதல், பொருளாதார முன்னேற்றத்திற் கான தொழில் திறன்களை வளர்த்துக் கொள்ள

வழிவகுத்தல் ஆகியனவும் இத்திட்டத்தில் வலியுறுத் தப்படுகின்றன.

**வாழ்க்கைக் கல்வி:** தமிழகத்தில் 'வாழ்க்கைக் கல்வி' (Life-long Education) என்னும் புதிய கல்வித் திட்டம் 1984-86-ஆம் ஆண்டிலிருந்து அறிமுகப்படுத் தப்பட்டுள்ளது. எதிர்கால வேலைவாய்ப்பினை நோக்கமாகக் கொண்டது இக்கல்வித்திட்டம். இதன் மூலம் 10-ஆம் வகுப்பு வரையிலுள்ள மாணவர் களுக்குத் தொழில்திறன் அளிக்கப்படுகிறது. பயன் தரும் சில தொழில்களில் மாணவர்க்குப் பயிற்சி அளிப் பதன்மூலம் இத்திறன் ஏற்படுத்தப்படுகிறது. மேலும், 11, 12-ஆம் வகுப்புகளில் மாணவர்களுக்கு ஏதேனும் ஒரு தொழில் கற்றுக் கொடுக்கப்படுகிறது. மாணவர் கள் படிப்பினிடையே பள்ளியை விட்டுச் சென்றாலும், தாம் பெற்ற தொழிற் பயிற்சிமூலம் அவர்கள் வேலை வாய்ப்பினைப் பெற இயலும். இத்திட்டத்தினால் விளையும் முக்கிய பயன்களுள் இதுவும் ஒன்று. வேலைவாய்ப்பினை மையமாகக் கொண்ட கல்வித் திட்டம் இது.

**ஊரக உயர்கல்வி:** இந்தியா சுதந்திரம் அடைந்தபோது உயர்கல்வி நகரப் பகுதிகளுக்கு மட்டும் அளிக்கப்பட்டது. பாடப்பொருளும் அதன் இயல்பும் நகர்ப்புற மக்களின் தேவையை நிறை வேற்றும் வகையில் இருந்தன. ஏறக்குறைய 80 விழுக் காட்டிற்கும் மேற்பட்ட சிற்றூர்ச் சமுதாயத்தினரைக் கருத்திற் கொள்ளாமல் நகர மக்களின் மேம்பாட் டுக்கு உயர்கல்வித் திட்டம் உருவாக்கப்பட்டிருந்தது. சிற்றூரார்ச் சமுதாயத்திற்கே உரிய சமூக, பொருளா தாரச் சிக்கல்களையும், தேவைகளையும், பழக்க வழக் கங்களையும், பண்பாட்டு மதிப்புகளையும், பல்கலைக் கழகங்கள் புறக்கணித்துவிட்டு அவற்றின் வளர்ச்சி யில் ஈடுபடாமலிருந்தன.

இச்சூழ்நிலையில் டாக்டர் இராதாகிருட் டிணனைத் தலைவராகக் கொண்டு பல்கலைக்கழகக் கல்விக்குழு (1948) அமைக்கப்பட்டது. இக்கல்விக் குழு இந்தியாவின் சிற்றூர்ச் சமூக, பொருளாதாரச் சிக்கல்கள், தேவைகள் ஆகியவற்றோடு தொடர் புடைய புதிய ஊரகக் கல்வித் திட்டத்தைப் பரிந் துரை செய்தது. சிற்றூர்களின் அன்றாட வாழ்க்கை முறை, சமூக அமைப்பு, பண்பாடு, மதிப்புகள் ஆகிய வற்றை உள்ளீடாகக் கொண்ட ஊரக உயர்கல்வி நிறுவனங்களை இந்தியாவின் ஒவ்வொரு மாநிலத்தி லும் தொடங்குவது முதற்படியாக இருக்க வேண்டும் என்று இராதாகிருட்டிணன் கல்வி அறிக்கை சுட்டிக் காட்டியது. இக் கல்வி அறிக்கையை நடைமுறைப் படுத்தும்பொருட்டு நடுவண் அரசு டாக்டர் கே. எல். சிரீமாலி (Srimali) என்பவரைத் தலைவ ராகக் கொண்ட ஒரு குழுவை (1954) அமைத்தது. இந்தக் குழுவின் அறிக்கையில் தரப்பட்டுள்ள பரிந் துரைகளின்படி (1954-55), இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் 14 ஊரக உயர்கல்வி நிறுவனங்கள் நிறுவப்பட்டன.

தமிழ்நாட்டில் இரண்டு ஊரக உயர்கல்வி நிறு வனங்கள் ஒன்று காந்தி கிராமத்திலும், மற்றொன்று பெரிய நாயக்கன் பாளையத்திலும் ஏற்படுத்தப் பட்டன. நடுவண் அரசின் கல்வி அமைச்சகம் தனக்குக் கீழுள்ள 'ஊரக உயர் கல்விப் பேரவை'யின் மூலம் 14 நிறுவனங்களை நடத்தி வந்தது. இவற் றிற்கு முழுநிதி உதவியும் செய்தது. இந்நிறுவனங் கள் உயர் கல்வியின் நோக்கங்களையும் பயன்களை யும் சிற்றூர் மக்களுக்கு அறிவித்தன. இந்நிறுவனங் கள் ஊரக வளர்ச்சி, ஆராய்ச்சி ஆகியவற்றை உள்ள டக்கிய ஒரு பொருத்தமான பாடத்திட்டத்தை உரு வாக்கி, ஊரக வளர்ச்சி, செயலாக்க ஆராய்ச்சி ஆகிய வற்றால் மற்றப் பல்கலைக் கழகப் பாடத்திட்டங் களிலிருந்து வேறுபட்டு நின்றன.

நிறுவனங்களைச் சுற்றியுள்ள சிற்றூர்களே ஆய்வுக் கூடங்களாகவும் வளர்ச்சி மையங்களாகவும் செயற்பட்டன. கல்வி சிற்றூர்த் தேவைகளோடும் சிக்கல்களோடும் தொடர்புபடுத்தப்பட்டது. விரி வாக்கப் பணியின் மூலம் வளர்ச்சிக்கான செய்திகள் அளிக்கப்பட்டு விழிப்புணர்வுடன் சிற்றூர் மக்கள் திகழ்தற்கு வேண்டிய உதவிகள் செய்யப்பட்டன. சிற்றூர் மக்களிடமிருந்து புதிய தலைவர்கள் தோன் றும்படி உந்துதல் அளிக்கப்பட்டது. இந்தப் புதிய கல்வி முறையில் சிற்றூர் மக்களும், வட்டார வளர்ச்சி நிறுவனங்களும், தொண்டு நிறுவனங்களும், வல்லு நர்களும் ஈடுபடுத்தப்பட்டார்கள். இந்நிறுவனங்களில் கற்பித்தல், ஆராய்ச்சி, விரிவாக்கம் ஆகிய மூன்றுக்கு மிடையே உயிருள்ள தொடர்பு ஏற்படுத்தப்பட்டது. சிற்றூர் வளர்ச்சியிலும், சமுதாய மறுமலர்ச்சியிலும் பயன்படும் வகையில் உயர்கல்வியில் புதிய சோதனை முயற்சிகளை ஊரக உயர்கல்வி நிறுவனங்கள் மேற் கொண்டு செயற்பட்டன.

இந்நிலையில், இந்தியாவின் ஒவ்வொரு மாநிலத் திலும் கற்பித்தல், ஆராய்ச்சி, விரிவாக்கம் ஆகிய முக்கூறுகளையும் உள்ளடக்கிய வேளாண்மைப் பல் கலைக்கழகங்கள் நிறுவப்பட்டன. வேளாண்மைப் பல்கலைக்கழகங்கள் ஊரக வளர்ச்சித் திட்டங்களை மேற்கொண்டதால், இந்தியாவெங்குமிருந்த 14 ஊரக உயர்கல்வி நிறுவனங்களுள் 13 நிறுவனங்கள் அருகி லுள்ள பல்கலைக்கழகங்களோடு இணைக்கப்பட்டன.

காந்திகிராம ஊரக உயர்கல்வி நிறுவனம் (Gandhigram Rural Institute) 1976-ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு 3-ஆம் நாள் பல்கலைக்கழகத் தகுதியினைப் (Deemed University) பெற்று, ஊரகக் கல்வி வளர்ச்சியில் பெரும் பங்கினையாற்றி வருகிறது. இப்பல்கலைக்கழகம் அண்ணா மாவட்டத்தில் மூன்று ஊராட்சி ஒன்றியங்களில் 32 சிற்றூர்களில் சிறு உழவர்கள் திட்டம், சிற்றூர்ப்புற வீட்டுவசதித் திட்டம், பாலர் பள்ளி மற்றும் வயதுவந்தோர் கல்வித்திட்டம், சாண எரிவாயுத் திட்டம், அறிவியல் மன்றங்கள், தரமான சத்துணவு போன்ற வளர்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்தி ஆராய்ந்து வருகின்றது. ஆர்.சு.

**ஊரகச் சமுதாயம்**: மக்களிடையே காணப்படும் சில சிறப்புக் கூறுகள் அவர்களை ஒருங்கிணைத்து வாழ வழி செய்வதாலே சமுதாயம் உருவாகிறது எனலாம். நான்கு முக்கிய கூறுகளை அடிப்படையாகக் கொண்டு மனித சமுதாயங்களைப் பகுக்கலாமென்று கிங்சுலே தேவிசு (Kingsley Davis) குறிப்பிடுகிறார். அவை (1) மக்கள் தொகையின் அளவு, (ii) மக்கள் நிறைந்து வாழும் இடத்தின் பின்னணி, நீட்சி, செழுமை, (iii) மக்களின் தொழில், (iv) அவர்களிடையே நிலவும் சமூக நிறுவனங்கள் என்பனவாகும். இவற்றின் அடிப்படையில் மனித சமுதாயத்தை ஆதிகாலச் சமுதாயம் என்றும், நாகரிகமடைந்த சமுதாயம் என்றும் பகுக்க இயலும்.

நாகரிகமடைந்த சமுதாயத்தை ஊரகச் சமுதாயம், நகரச் சமுதாயம் என்று இருபெரும் பிரிவுகளாக்கி ஆராயலாம். சமூகவியலறிஞர்கள் இந்நாளில் இவ்விரு சமுதாயங்களைத்தான் பெரிதும் ஆராய முற்படுகிறார்கள். பண்டைக் காலத்தில் நாடோடிகளாக வாழ்ந்து கொண்டிருந்த மக்கள் கலப்பையின் பயனறிந்து பயிர்த்தொழில் செய்யத் தொடங்கிய காலந்தொட்டு, அத்தொழிலுக்கு ஏற்ற இடங்களைத் தேர்ந்து, நிலையாக வாழத் தொடங்கினர். குறிப்பிட்ட நிலப்பரப்புக்குள் அவர்கள் வாழ்ந்து கொண்டு பயிர்த்தொழில் செய்து வந்தனர். நாளடைவில் அவர்கள் வாழ்விடம் ஊராக மாறியது. அடுத்து, தொழிற்புரட்சிக்குப் பின்னர் உலகில் பல இடங்களில் தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டன. அவ்விடங்களில் மக்கள்தொகை பெருகியதால் தொழில் வளம் பெற்றது. பின்னர் அவைகளே நகரங்களாக மாறின. இவ்விரு சமுதாயங்களை வேறுபடுத்திக் காட்டுதற்கான சில சிறப்பமிசங்களைத் தேசாய் (Desai), சிதம்பர் (Chitambar) ஆகியோர் விளக்குவதிலிருந்து ஊரகச் சமுதாயத்தினைப் பற்றிய பல செய்திகளை பலரும் அறிந்து கொள்ள முடிகிறது.

ஊரகச் சமுதாயம் இயற்கைப் பின்னணியில் அமையப் பெற்றிருப்பதால் அங்கு மக்களின் வாழ்க்கை இயற்கையோடு இணைந்திருக்கும். ஆகவே அவர்கள் இயற்கையில் பெரு நம்பிக்கைக் கொண்டவர்களாக இருப்பர். அவர்கள் மழை, வெயில், வறட்சி, பனி போன்றவற்றை எல்லாம் தாங்கிக் கொள்ளக் கூடியவர்களாகவே இருப்பர். ஆனால் அவற்றைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் அவர்களுக்கில்லை. அவை யாவும் உழவர்களுக்குத் தேவையானவையே. ஒவ்வொரு காலத்திற்கு ஏற்ற வகையில் அவை விவசாயத்திற்குத் துணை செய்கின்றன. சில நேரங்களில் இயற்கையின் கூறுகள் பொய்ப்பதால் விவசாயம் மட்டுமன்றி, வேறு தொழில்களும் பாதிக்கப்படுகின்றன. இதனால் மக்கள் வாழ்வில் பொருளாதார, சமூகச் சிக்கல்கள் ஏற்படுகின்றன.

ஊரகங்களில் பெரும்பான்மையோர் பயிர்த்தொழில் செய்பவர்களாக இருப்பர். அவர்கள் பயிர்த்தொழில் அல்லாத வேறு தொழில்களில் ஈடுபட்டிருந்தாலும் பொருளாதாரத்தைப் பொறுத்தவரையில் அவை அவர்களால் இரண்டாவதாகவே கருதப்படும். கைவினைஞர் எனப்படுவோர் தச்சு, நகை, இரும்பு, மட்பாண்டம் செய்தல் போன்ற வெவ்வேறு தொழில்களைச் செய்து வந்தாலும் ஒருவகையில் அவர்கள் வாழ்க்கை விவசாயிகளையே நம்பி இருக்கிறதெனலாம். குறிப்பாக, தச்சு, இரும்பு போன்ற தொழில்கள் விவசாயத்துடன் நேரடித் தொடர்புடையனவாக இருக்கின்றன. விவசாயிகள் தங்கள் தொழிலில் பல வகை நுணுக்கங்களை அறிந்து செயற்படக்கூடியவர்களாக இருப்பர். அவர்கள் தங்கள் தொழிலுக்குப் பல வழிகளில் பயன்படும் கால்நடைகளைப் பாதுகாத்து வருவர்.

ஊரகச் சமுதாயம் அளவில் சிறியதாக இருக்கும். குறைந்த எண்ணிக்கையுடைய மக்கள் பெரிய நிலப்பரப்பில் வாழ்வர். பயிர் செய்தற்கு மிகுந்த நிலப்பரப்புத் தேவைப்படுவதே இதற்குக் காரணமாகும். அவரவர் தங்கள் நில எல்லைக்குள் வீடு கட்டி வாழும் வழக்கம் இன்றும் கேரள மாநிலத்தில் இருந்து வருகிறது. ஆனால் எல்லோரும் ஒரே இடத்தில் சேர்ந்து வாழும் வழக்கந்தான் எங்கும் காணப்படுகிறது. அங்கு இடத்தாலோ மக்களாலோ நெரிசல் ஏற்படுதற்கு வழியில்லை. மக்கள் தொகை ஊருக்கு ஊர் வேறுபட்டிருக்கும். இருப்பினும் மக்கள் தொகையின் அளவு நகரத்தைக் காட்டிலும் ஊரகங்களில் குறைந்திருக்கும்.

அங்கு மக்களின் சமூக, பொருளாதார வாழ்விலும், அவர்களின் பழக்க வழக்கங்களிலும் ஒற்றுமை

இருப்பதை அறியலாம். எடுத்துக் காட்டாக, அவர்களின் மொழி, தொழில், உணவு, உடை, நம்பிக்கைகள், நடவடிக்கைகள் போன்றவற்றில் ஒற்றுமை இருக்கும். அவர்கள் ஒரு சிறிய சமுதாயத்தினராக இருப்பதால் ஒருவரையொருவர் நேருக்கு நேர் பார்த்துப் பழகிக் கொள்ள முடிகிறது. ஆகவே அவர்களுக்கிடையே நிகழும் சமூக உறவு இயல்பானதாகவும், தனிப்பட்டதாகவும் இருக்கும். இதனால் அவர்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளும் இயல்புடையவர்களாக இருப்பர். இக் காரணங்களினால் தான் அவர்களுக்கிடையில் சமூக வேறுபாடுகள் குறைந்து காணப்படுகின்றன.

ஊர் மக்களிடையே சமூக வேறுபாடுகள் குறைந்திருந்தாலும் சமூக அடுக்கமைவினை அவர்களிடம் காணலாம். இவ்வடுக்கமைவு குறைந்த பிரிவுகளைக் கொண்டதாக இருக்கும். எடுத்துக்காட்டாக ஊரக மக்களை நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள், சிறு விவசாயிகள், நடுத்தர விவசாயிகள், பெருவிவசாயிகள், கைவினைஞர்கள் என்று பகுக்கலாம். இந்தப் பகுப்பு தொழில், பொருளாதார அடிப்படையில் அமைந்ததாகவே இருக்கும். பொதுவாக ஏழை, செல்வர் என்னும் பெரும் பிரிவுகள் இருப்பினும் அவற்றிற்கிடையே அதிக இடைவெளி இருக்காது. ஊரகங்களில் பெரும்பாலும் நடுத்தர வகுப்பினரே மிகுதியாக இருப்பர். இந்தியாவைப் பொறுத்த மட்டில் பன்னெடுங் காலமாகச் சாதி அடிப்படையில் தான் மக்கள் பகுக்கப்படுகின்றனர். ஒவ்வொரு சாதியினரும் சாதி உணர்வுடன் பழகுபவர்களாகவே இருப்பர். குறிப்பாக ஊரக மக்களிடையே சாதி உணர்வு மிகுதியாக இராது எனலாம்.

ஊரகத்தில் சமூகக் கட்டுப்பாடு பலவழிகளில் வலியுறுத்தப்படுகிறது. மக்கள் சமூக வழக்கங்களை, நெறிமுறைகளைச் சீரிய முறையில் கடைப்பிடித்து வருவதால் சமூகக் கட்டுப்பாடு அவர்களிடம் மிகுந்துள்ளதை அறியலாம். இவற்றால் பல குற்றங்களிலிருந்து அவர்கள் தடுக்கப்படுகின்றனர். அவர்களிடையே சில அடிப்படை மாற்றங்கள் ஏற்படுவதையும் இவை தடை செய்கின்றன. பழமையில் ஊறிய அவர்கள் பொதுவாக இத்தகைய மாற்றங்களை ஏற்றுக் கொள்ள விரும்ப மாட்டார்கள். எடுத்துக்காட்டாக, அவர்கள் தங்கள் பழைய தொழிலை விட்டு வேறு தொழிலில் ஈடுபடுவதையோ ஒருசமூகக் குழுவிலிருந்து வேறொன்றிற்கு மாறுவதையோ விரும்பமாட்டார்கள். அதுபோலவே ஊரை விட்டு வெளி இடங்களுக்குச் சென்று குடியேறுவதையும் அவர்கள் விரும்ப மாட்டார்கள். ஆனால் சூழ்நிலை காரணமாக வேறு இடங்களுக்குக் குடியேறுவர்.

இன்றைய நாளில் ஊரகச் சமூகத்தினர் நகரங்களுக்குக் குடியேறுவது குறிப்பிடத் தக்கதாகும். இவ்வாறு குடியேறுபவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் மிகுந்து வருகிறது. இங்குச் செல்வர்கள், ஏழை என்னும் பிரிவினர்களே மிகுதியாகக் குடியேறுகின்றனர். ஊரிலிருந்து கொண்டு தங்களின் விருப்பங்களையும் தேவைகளையும் நிறைவு செய்து கொள்ள முடியாத நிலையில் செல்வர்கள் நகரங்களுக்குக் குடியேறுகின்றனர். ஆனால், ஏழைகளுள் பெரும்பாலோர் நிலமற்ற விவசாயக் கூலிகளாக இருப்பதாலும், பலர் மிகச் சிறிய நிலங்களிலிருந்து போதிய வருவாய் பெற முடியாமையாலும் வேலைக்காக ஊரை விட்டு நகரங்களுக்குக் குடியேறுகிறார்கள். இந்தியாவைப் பொறுத்தமட்டில் இவ்வகைக் குடியேற்றத்தால் ஊர்களில் கூட்டுக் குடும்பங்கள் சிதைவதுடன், குடியேறுபவர்கள் பல சிக்கல்களையும் எதிர்நோக்க வேண்டியவர்களாயுள்ளனர்.

ஊரகச் சமூகத்தினர் சமூக உயர்பண்புகளைப் போற்றிப் பாதுகாத்து வருவர். அவர்களிடையே கடவுள் வழிபாடு ஒரு சமூக உயர்பண்பாகப் போற்றப்படுகிறது. மத விழாக்கள் கொண்டாடுதலும், வழிபாட்டின் போது சடங்குகள் செய்தலும், அவர்களிடம் இருந்து வருகின்றன. அவர்களிடம் சமூக உயர்பண்புகளும் நெறிகளும் நெருங்கிய தொடர்புடையவையாகவே இருக்கும். பொதுவாக இயற்கைக்கும் மேலான ஒரு சக்தியில் அவர்கள் நம்பிக்கை கொண்டிருப்பர். மேலும், மந்திரம், பலகடவுள் வழிபாடு, புராணங்கள், ஆவி போன்றவற்றிலும் அவர்கள் நம்பிக்கை வைத்திருப்பர்.

ஊரகச் சமுதாயத்தில் மதம் பக்குவமுறாத நிலையில் இருந்தாலும் அதன் அமைப்பு திண்மையானதாக இருக்கும். இங்கு மக்கள்வழிபடும் பல ஆண்-பெண் கடவுளர் அவர்களின் ஆவியுலகக் கோட்பாட்டிலிருந்து உருவாக்கப்பட்டவர்கள் எனலாம். அவர்களின் மத நம்பிக்கையும் வழிபாடும் மாற்றத்திற்குள்ளாகமாட்டா. இயற்கையிலும் அதற்கு மேலுள்ளவற்றிலும் அவர்கள் கொண்ட அச்சத்தாலும் அறியாமையாலும் வழிபாட்டு முறைகள் அமைந்திருக்கின்றன. அவை ஒவ்வொரு மக்கள் குழுவுக்கும் வேறுபட்டிருக்கும். அதுபோலவே அவர்கள் குடும்பங்களுக்கென்று தெய்வங்கள் இருக்கும். தெய்வங்களுக்கு நேர்த்திக்கடன் செய்வதும் அவர்கள் வழக்கில் இருக்கிறது. வழிபாட்டின்போது உயிர்ப் பலியிடுதலும் குறிப்பிடத்தக்கதாகும். சடங்குகளை அடிப்படையாக வைத்தே வழிபாடு செய்யப்படுகிறது. தவறுகளை நீக்கித் தூய்மை பெறுவதற்கும், வாழ்வு நிறைவு பெறுவதற்கும் அவர்கள் சடங்குகளை ஒரு

கருவியாகக் கருதி அவற்றை முறையாகச் செய்கின்றனர். அவர்கள் எந்தச் செயலிலும் ஈடுபடும் முன்னரோ செயற்பாட்டின் போதோ சடங்குகளைத் தவறாமல் செய்வர். பொதுவாக அவர்கள்வாழ்க்கை சடங்குகளை அடிப்படையாக வைத்தே அமைந்திருக்கிறது என்று சொல்லலாம். எனவே மதம்அவர்களின் ஒழுகலாறுகளை வரையறுக்கிறது என்பது மிகையாகாது. சமூகக் கட்டுப்பாட்டினை வளர்ப்பதிலும் மதம் பெரும் பங்கு வகிக்கிறது.

ஊரக மக்களுள் பெரும்பாலோர் படிப்பறிவில்லாதவர்களாகவே இருப்பர். இதனால் அவர்களிடம் அறியாமையும் மூடநம்பிக்கைகளும் இருப்பதில் வியப்பில்லை. இருந்தாலும் அவர்களிடம் அரசியல் விழிப்புணர்வு இல்லையென்று சொல்வது பொருத்தமற்றதாகும். எடுத்துக்காட்டாகச் சோவியத்து ஒன்றியம் சீனா ஆகிய நாடுகளில் ஏற்பட்ட புரட்சிகளில் விவசாயிகளே பெரும் பங்கேற்றனர். அது போலவே இந்தோனேசியா, பர்மா போன்ற நாடுகளில் ஏற்பட்ட புரட்சிகளிலும் மிகுதியாகப் பங்கேற்றவர்கள் விவசாயிகளே. இசுபெயின் (Spain), இத்தாலி, இலத்தீன் அமெரிக்கா ஆகிய நாடுகளில் விவசாயிகள் அரசியல் விழிப்புணர்வு உடையவர்களாக மட்டுமல்லாமல் சில நேரங்களில் அரசியல் கட்சிகளையும் அமைத்துக் கொண்டு பல அரசியல் போராட்டங்களையும் நடத்தியுள்ளனர். இந்தியாவிலும் விவசாயிகள் இயக்கம் இன்றும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. எனவே அவர்களின் அரசியல் ஈடுபாடு குறிப்பிடத்தக்கதாக இருக்கிறது.

ஊரக மக்களிடையே படிப்பறிவின்மையால் அவர்கள் குடும்பங்கள் திட்டமிட்ட குடும்பங்களாக இருப்பதில்லை. பொதுவாகக் குழந்தைகள் கல்வி பெறுவதில் அவர்களுக்கு விருப்பம் இருக்காது. குழந்தைகளைப் படிக்கவைப்பதைக் காட்டிலும் அவர்களைப் பொருள் சேர்ப்பதில் ஈடுபடுத்துவதே அவர்கள் விருப்பமாக இருக்கும். அதனால் நெடுங்காலமாகவே படிப்பின்மை அவர்களிடம் ஒரு பெரும் சிக்கலாகவே இருந்து வருகிறது. அதனால் சுகாதாரமாக வாழ்வதெப்படி என்பதையும் அவர்கள் அறிந்து கொள்ள முடியாதவர்களாக இருக்கின்றனர்.

ஊரக மக்களின் பொழுது போக்கு அமிசங்களாக நாட்டுப்புறப்பாடல், விளையாட்டுகள், கதைகூறுதல் விடுகதை, பழமொழி சொல்லுதல், நாடகங்கள், பல்வகை ஆட்டங்கள் நிகழ்த்துதல் போன்றவைகள் இருந்து வருகின்றன. இவையாவும் அவர்களின் வாழ்வுடன் இணைந்து அவர்கள் பண்பாட்டின்கூறுகளாக விளங்குகின்றன. இவை தலைமுறை தலைமுறையாக அவர்களிடம் இருந்து வருகின்றன. ஊரகத்தில் விழா எடுக்கும்போதும், சமயச் சடங்குகள் செய்யும்போதும் பலர் பாடல், நாடகம், தெருக்கூத்து, விளையாட்டுப் போன்ற நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு மக்களை மகிழ்விப்பர். இவை போன்ற கலைகளே அவர்களின் பண்பாட்டினை உலகுக்கு அறிவிக்கும் கருவிகளாக விளங்குகின்றன. இக்கலைகளை இன்றும் அவர்கள் போற்றிப் பாதுகாத்து வருகின்றனர்.

ஊரில் பெரியோர்களை மதிக்கும் பண்பு இளந்தலை முறையினரிடம் இருப்பதை அறியலாம். பெரியோர்களே இளைஞர்களுக்குப் பல வழிகளில் வழிகாட்டிகளாக இருப்பர். குடும்பத்தில் மூத்தோர்களின் செல்வாக்கையும் புகழையும் காக்கும் பொறுப்பினை இளந்தலை முறையினர் ஏற்பர். இவ்வகைக் கட்டுப்பாடு அவர்களிடம் இருந்தாலும் ஒருவரின் தனிப்பட்ட தகுதிகளைத் தெளிவாக அறிந்த பின்னரே அவரை ஊர்த் தலைவராக ஏற்றுக் கொள்வர். குறிப்பாக, அவர் நல்லொழுக்கம் உடையராகவும், எவருக்கும் உதவும் மனத்தினராகவும் இருப்பதையே அவர்கள் விரும்புவர். இத்தகுதிகள் உடையவரைத் தலைவராக ஏற்றபின் எல்லோரும் அவர் சொல்லுக்குக் கட்டுப்பட்டு நடப்பவர்களாகவே இருப்பர். அவர்களுக்கிடையே நடக்கும் சண்டைகளைத் தீர்த்து வைப்பதுடன், குற்றம் செய்ததற்கு ஏற்ற தண்டனை அளிப்பதும் அவர் பொறுப்பாகும். மேலும் எல்லோரையும் நல்வழியில் நடத்திச் செல்லுதல், ஊர் நடவடிக்கைகளில் நல்ல முடிவெடுத்தல் போன்றவையும் அவர்தம் முக்கிய பொறுப்புகளாகும்.

இன்றைய நாளில் குறிப்பாக, நகர வாழ்வின் தாக்கத்தால் ஊரகச் சமுதாயம் பல மாற்றங்களைக் கண்டு வருகிறது. சில குறிப்பிடத்தக்க மாற்றங்கள் மக்களின் குடும்ப, பொருளாதார, சமய, அரசியல் வாழ்க்கையில் ஏற்பட்டுள்ளன. அதன் விளைவாக அவர்களின் நடவடிக்கைகளில் பல மாறுதல்களை அறியமுடிகிறது. அதனால் அவர்கள் பழமையிலிருந்து முழுவதும் விலகிவிட்டனர் என்பது பொருத்தமற்றதாகும்.

கோ.க.

துணை நூல்கள்:

**Chitambar, J.B.**, Introductory Rural Sociology: A Synopsis of Concepts and Principles, Wiley Eastern Ltd, New Delhi, 1973.

**Desai, A.R.**, Rural Sociology in India, Popular Prakashan, Bombay, 1978.

**Davis, Kingsley**, Human Society, Surjeet Publications, Delhi. 1981.

***ஊரகச் சமூகவியல்:*** முதன்முதலில் வரலாற்றை ஆராய்ந்தான் மனிதன். அவன் அதனின்றும் பல பாடங்களைக் கற்றுக்கொண்டான்; அடுத்தாற்போல் புவியில் வாழும் மற்ற உயிரினங்களை ஆராய்ந்தான்; இயற்கையின் மாற்றங்களையும் சீற்றங்களையும் புரிந்து கொண்டான். தனது சுற்றுப்புறத்தின் தன்மை அறிந்து அவன் அதைத் தனக்குத் துணையாக அடக்கி ஆளக் கற்றுக் கொண்டான். கணிதம், வானவியல், புவியியல், உயிரியல் எனப் பல்வேறு பாடத்திட்டங்களை அவன் வகுத்தான். பிறகு மனிதன் தன்னைத்தானே ஆராய முற்பட்டான். மனிதனின் தனிநடத்தை, சமூக நடத்தை, ஒருவருக்கும் மற்றொருவருக்கும் இடையே உள்ள உறவு மற்றும் ஊடாட்டம் முதலியவற்றைக் கூர்ந்து கவனித்து ஆழ்ந்து சிந்தித்தான். அதன் விளைவுதான் சமூகவியலின் தோற்றம். சமூக அறிவியல்களுள் (அரசியல், பொருளாதாரம், உளவியல்) மிகவும் இளமையானது சமூகவியல்.

கல்லூரிப் பாடத்திட்டங்களிலே மிகக்குறைந்த மதிப்புக் கொண்டுள்ளது சமூகவியல்தான். இதற்கான காரணங்கள் இரண்டு. முதற் காரணம் 'குறைந்த வயதுள்ள' சமூகவியல் மிக அண்மையிலேதான் கணித முறையிலானதாகவும் (Mathamatical), அளவு சார்ந்ததாகவும் (Quantitative) ஆன ஒரு சமூக அறிவியலாக ஒப்புக் கொள்ளப்பட்டது. தரம் சார்ந்த (Qualitative) படிப்புக்கு அவ்வளவாக முக்கியத்துவம் கொடுப்பதில்லை என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

இரண்டாம் காரணம் மிக முக்கியமானது. ஒவ்வொருவரும் தம் அன்றாடச் சமூக வாழ்வில் ஏற்படும் அனுபவங்களினால் தம்முடைய நடத்தையையும் பிறருடைய நடத்தையையும் சமூக நடத்தையையும் புரிந்து கொண்டு செயற்பட முடிகிறது. அவ்வாறிருக்க எதற்காகச் சமூகவியல் என்றதொரு பாடத்திட்டத்தை ஏற்படுத்தித் தெரிந்தவற்றையே கற்றுக்கொடுக்க வேண்டும் என்று எண்ணுகிறார்கள்.

சமூகச் சிக்கல்கள் பற்றிய கண்ணோட்டத்திலும் அணுகுமுறையிலும் சாதாரண மனிதரிலிருந்து சமூகவியல் வல்லுநர்கள் வரை மாறுபடுகிறார்கள். எவ்வாறு மாறுபடுகிறார்கள் என்பதை அறியப் படிக்கத் தெரிந்த அனைவரும் சமூகவியல் பற்றித் தெரிந்து கொள்வது மிகவும் இன்றியமையாதது.

உயிரினங்களிலேயே மனிதன்தான் குழுவிலே பிறந்து குழுவிலேயே தனது வாழ்நாளைக் கழிக்கிறான். குழுவில் இருப்பதால்தான் மனிதத்தன்மை உடையவனாக ஆகிறான். கிரேக்க அறிஞர் அரிசுடாட்டில் (Aristotle) மனிதனைச் 'சமூக விலங்கு' என்றார். பிறரோடு சேர்ந்து சமூக வாழ்க்கை வாழ முடியாதவனை மனிதத்தன்மைக்கு அப்பாற்பட்டவன் அதாவது விலங்கு அல்லது தெய்வம் ஆகிறான் என்கிறார்.

பிறப்பு முதல் இறப்பு வரை தனது தேவைகளை நிறைவு செய்து கொள்ள மனிதன் பிறர் உதவியை எதிர்நோக்குகிறான். அவன் தனது பாதுகாப்பு, கல்வி, சொத்து, சுகம் யாவற்றிற்கும் சமூகத்தைச் சார்ந்திருக்கிறான். அவன் சிந்தனை, செயல் யாவுமே சமூகத்தின் ஓர் உறுப்பினன் என்கிற முறையிலேயே ஏற்படுகின்றன. சமூகம் என்கிற அமைப்பு மனிதனைக் கட்டுப்படுத்தி வழிநடத்துகிறது. காலத்திற்கும் தேவைக்கும் ஏற்பச் சமூகத்தின் சட்டதிட்டங்கள் மாறலாம். ஆனால், சமூகத்திற்கும் மனிதனுக்குமிடையே நிலவும் உறவு மாறாததும் இன்றியமையாததும் ஆகும்.

மனிதர்கள் எப்படிக் குழுக்களாக ஆகிறார்கள், அந்தக் குழுக்களில் நிலவும் உறவு முறைகள், சமூக ஊடாட்டம் ஆகியவற்றைப் பற்றி ஆராய்வதே சமூகவியல் ஆகும். மனிதனைத் தனியனாக ஆராய்வது அதன் நோக்கமன்று. குழுவின் ஓர் உறுப்பினனாகக்கொண்டு அவன்தன் சமூக நடத்தையையும் சமூக ஊடாட்டத்தையும் ஆய்வதே அதன் நோக்கமாகும். சமூகவியல் கற்றறிவதன் மூலம் பல்வேறு சமூகச் சிக்கல்களுக்கு ஆக்க முறையிலமைந்த தீர்வு காணமுடியும்.

சமூகவியல் இன்னும் வளர்ந்து கொண்டிருக்கும் ஓர் அறிவியல் ஆகும். பௌதிகம், வேதியியல் போலச் சமூகவியலில் ஆய்வு செய்வது எளிதன்று. அடிக்கடி மாறுபடும் மனங்களையுடைய மனிதர்களின் நடத்தையை ஆய்வுக்கு உட்படுத்துவது எளிதன்று. ஆதலின் ஒரு சமூகவியல் வல்லுநரின் வேலை எத்தகையது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

இப்போதிருக்கும் சமூகவியல் அறிவைக் கொண்டு சமூகத்தில் நிலவும் கணக்கற்ற சிக்கல்கள் யாவற்றையுமே ஆய்வுக்கு உட்படுத்தித் தீர்வு காண இயலாது. முக்கியமானவற்றிற்கே முதலிடம் தருகிறார்கள் வல்லுநர்கள். அவற்றைத் தேர்வு செய்வதை எளிதாக்குவதற்கே சமூகவியல் பல்வேறு பிரிவுகளாக்கப் பட்டுள்ளது. அவற்றுள் ஒன்றுதான் ஊரகச் சமூகவியல்.

ஊரகச் சமுதாயம், அச்சமுதாயத்தில் நிலவும் வாழ்க்கை முறை ஆகியவற்றைச் சமூகவியல் முறை

யில் படிப்பதே ஊரகச் சமூகவியல் ஆகும். பொது வான நியமங்களை உருவாக்கியும் அந்த நியமங் களைப் பயன்படுத்தியும் ஊரகச் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதே அதன் நோக்கமாகும்.

அமெரிக்கா போன்ற நாடுகளில் ஊரகச்சமூக வியல் கட்டாய பாடமாகக் கற்பிக்கப்படுவதில்லை. காரணம் அங்கு அதைப் படிக்கவேண்டிய தேவை இல்லாததேயாகும். அமெரிக்கா மிக வேகமாக நகர் மயமாகி வருகிற ஒரு நாடு நகர்ப்புற வளர்ச்சியி னாலும் வாணிக முறையான விவசாயத்தாலும் அங் குக் கிராமங்களும் செழிப்புற்று வருகின்றன. ஆகவே விரும்பிய மாணவர்கள் மட்டுமே ஊரகச் சமூகவிய லைக் கற்றுக் கொள்கிறார்கள். ஆனால் இந்தியா விலும் வளர்ந்து வரும் இன்னும் சில நாடுகளிலும் வேளாண்மைப் பட்டப்படிப்பும் சமூகவியல் முது நிலைப் பட்டப்படிப்பும் ஊரகச் சமூகவியலும் மாண வர்களுக்குக் கட்டாய பாடமாகப் போதிக்கப்படு கின்றன. ஏனென்றால் அவை மிகவும் தேவை யுடையனவாகக் கருதப்படுகின்றன.

இந்திய நாட்டு மக்களுள் 80% பேர் கிராமங் களில் வசிக்கிறார்கள். கிராம மக்களின் வாழ்க்கை முறை நகர மக்களின் வாழ்க்கை முறையிலிருந்து மாறுபடுகிறது. அவர்களின் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், நடத்தை, பார்க்கும் வேலையின் தன்மை யாவும் சுற்றுப்புறச் சூழலைச் சார்ந்திருக் கின்றன.

இந்திய நாட்டிலுள்ள பல கிராமங்கள் மிகப் பழமையானவை. ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாகத் தலைமுறை தலைமுறையாகக் குடும்பங்கள் வாழும் இடங்கள், அங்கேயே பிறந்து வளர்ந்து வாழ்ந்து மடியும் மக்கள், காலங்காலமாக நிலவி வரும் வாழ்க் கைமுறை, நடையுடை பாவனைகள், சடங்குகள் ஆகிய யாவும் ஒன்று சேர்ந்ததே ஊரகம் எனப்படு வதாகும்.

ஏறக்குறைய கி.பி.19-ஆம் நூற்றாண்டின் நடுப் பகுதிவரை இந்தியக் கிராமங்கள் வெளியுலகத் தொடர்பிலிருந்து தனிமைப்பட்டும், தன்னிறைவு பெற்றும் விளங்கி வந்தன. காலப்போக்கில் புதுப்புது அரசுகள் தோன்றி வளர்ந்து செழித்துப் பின்பு மறைந்து போன போதிலும், கிராமங்கள் மட்டும் மாறாமல் அப்படியே இருந்தன.

ஆங்கிலேய ஆதிக்கத்தின் போதும், அதன் பிற கும் இந்திய அரசியலும் பொருளாதாரமும் வேகமாக மாறுதல் அடையத் தொடங்கின. போக்குவரத்து, செய்தித் தொடர்பு இரண்டும் பெருகியபோது கிராமங்கள் வெளியுலகத் தொடர்பினால் பாதிக்கப் பட்டன. ஊரகப் பொருளாதாரம் நாட்டுப் பொருளா தாரத்தோடு கலந்து விட்டது. அதன் விளைவாகத் தன்னிறைவு பெற்று வாழ்ந்த கிராமங்கள் சுற்றுப்புற நகரங்களையும் சில சமயம் மிகத் தொலைவிலுள்ள ஊர்களையும் சார்ந்து வாழ வேண்டிய நிலைக்கு ஆளாயின. உற்பத்தியைப் பெருக்குவதற்கான சாத னங்களைப் பெறவும், உற்பத்தியான பொருள்களை விற்கவும் அவை பிறர் உதவியை நாடின.

இந்தக் கட்டத்திலே ஊரகச் சமூகவியல் வல்லுநா களின் சேவை மிகத் தேவையுடையதாயிற்று. பெரும் பான்மையான கிராம மக்கள் உழவுத் தொழிலையே நம்பியிருக்கிறார்கள். ஒரு கிராமவாசியின் தகுதிநிலத் தைப் பொறுத்தே நிருணயிக்கப்படுகிறது. தோட்ட உரிமையாளர்கள், பண்ணையார்கள், சொந்தப்பயிர் வைக்கும் சிறுநில உரிமையாளர்கள், குத்தகை முறையில் சாகுபடி செய்பவர்கள், சொந்தத்தில் நில மில்லாத கூலியாட்கள் எனக் கிராம மக்களைத் தரப் பிரிவு செய்யலாம். ஒருவருடைய நிலத்தின் அளவு மிகும்போது அவரது தகுதியும் உயருகிறது.

நிலத்தினால் தகுதி மட்டும் பாதிக்கப்படுவ தில்லை. பெரும்பான்மையான தகராறுகளும் சச்சரவு களும் கூட ஏற்படுகின்றன. கிராமிய மக்களின் நிலப் பற்று தனிப்பட்டது. அதை மற்றவர்களால் எளிதில் புரிந்து கொள்ள முடியாது. அவர்களது வாழ்க்கையின் ஆதாரமே நிலந்தான்.

கூட்டுக்குடும்பமாக வாழும்போது நிலம் பிளவு படாமல் பொதுச் சொத்தாக இருக்கிறது. பயிர்த் தொழில் செய்வதற்கும் சிரமமிருக்காது; வருமானமும் போதியதாக இருக்கும். ஆனால் கல்வி வசதி, வேலை வாய்ப்பு, குடும்பப்பூசல் காரணமாகச் சிலர் பிரிய நேரிட்டால், பொதுச் சொத்து பிரிக்கப்பட்டோ விற் கப்பட்டோ பல தொல்லைகள் ஏற்படுகின்றன.

விவசாயத்தை மட்டுமே நம்பி வாழ்பவர்களுக்குப் போதிய பாதுகாப்பு இல்லையென்றே சொல்லலாம். விவசாயிகளைப் பற்றி வள்ளுவர் போன்றோர் மேன் மையாகப் பாடியிருந்தாலும் இன்றைய நடைமுறை யில் அவர்கள் வாழ்க்கை மேன்மையாக இல்லை. அரசு சட்டங்கள் பல இயற்றிக் கூட்டுறவு அமைப்பு களை ஏற்படுத்திக் கடன் வசதிகள், தொழில்நுட்ப வசதிகள் பல அளித்தாலும் இன்றும் கணக்கிலடங்கா விவசாயிகள் வறுமை, கடன்தொல்லை, நோய், அறி யாமை ஆகியவற்றால் துன்புறுகிறார்கள். இவர் களைப் பற்றி ஆராய்ந்து இவர்களின் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதுதான் ஊரகச் சமூகவியலின் முக்கிய நோக்கமாகும்.

ஊரகச் சமூகவியல் மாணவர் / சமூகசேவகர் கிராமத்திலே பிறந்து வளர்ந்தவராயின் கிராமியச் சூழ்நிலையையும் வாழ்க்கை முறையையும் நன்கு அறிந்தவராக இருப்பார். ஒரு வகையில் இது நன்மை பயக்கக்கூடியதாக இருந்தாலும் அவரது ஈடுபாடே அவரைக் குறுகிய நோக்குடையவராக ஆக்கவுங்கூடும். ஆகவே அவர் தம் பார்வையையும் நோக்கங்களையும் விரிவாக்குதல் தேவை. அப்போதுதான் அவர் தம் பணியினைச் சிறப்பாக ஆற்ற முடியும். அவர் நகர்ப் புறத்தவராயின் கிராம மக்களையும் அவர்தம் வாழ்க்கை முறைகள், சிக்கல்கள் ஆகியவற்றையும் நன்கு அறிந்து கொள்ளுதல் இன்றியமையாதது.

மற்ற அறிவியல் கல்வித்திட்டங்களுக்குத் தனிப் பட்ட ஆய்வுக்கூடங்கள் உண்டு. ஆனால், சமூகவியல் மாணவர்களுக்குச் சமூகமே ஆய்வுக்கூடமாக விளங்கு கிறது. இந்த ஆய்வுக் கூடத்தில் ஊரகச் சமூகவியல் மாணவர் பார்வையாளராக மட்டுமன்றி நேரடிப் பங்கு பெறுபவராகவும் இருப்பதால், அவரது வேலை ஆர்வம் மிகுந்ததாக உள்ளது. ஏனென்றால் ஊரகச் சமூகவியலின் முக்கிய நோக்கம் கிராமத்தில் நிலவும் சமூக அமைப்புகள், அதன் செயற்பாடுகள், அதன் வளர்ச்சி, முன்னேற்றம் ஆகியவை பற்றிப் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் படிப்பதாகும்.

ஊரகச் சமூகம் ஒரே தன்மையானதும் (Homogeneous) ஒற்றுமையானதும் ஆகும். நகரச் சமூகத் தோடு ஒப்பிடும்போது இது அளவில் சிறியதாகவும் தனிமையானதாகவும் (Isolated) உள்ளது. அதனா லேயே ஊரகச்சமூக உறுப்பினர்கள் ஒருவருக்கொரு வர் நன்கு அறிமுகமானவர்களாக இருக்கிறார்கள். வேற்று மனிதர்கள் என்ற பாகுபாடு கிடையாது. அவர்களிடையே நிலவும் சமூக உறவு முதல்நிலைத் தொடர்புகள் (Primary Group relationships) ஆகும். அது நெருக்கமானதும் நிலையானதும் ஆகும்.

ஊரகச் சமூகத்தில் குடும்ப அமைப்பைத் தவிர வேறு குழுக்கள் இல்லை. குடும்பமும் அதைச் சார்ந்த உறவுமுறைத் தொடர்புகளும் முக்கியமானவை. இத் தகைய தொடர்புகள் பாசம், பற்று, தியாகம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டவை.

முறையான சட்டங்களுக்கு ஊரகச் சமூகத்தில் மிகுந்த தேவை ஏற்படுவதில்லை. பழக்க வழக்கங்கள், வழக்கப்பாடுகள், சமூகநெறிகள் (Customs, moves and norms) ஆகியவையே சமூகக்கட்டுப்பாடு நிலவப் போதுமானவையாக விளங்குகின்றன.

வேலைப்பங்கீடு (Division of Labour) மிகவும் எளிமையானது. ஒருவரின் வயது மற்றும் பாலினத் தைப் பொறுத்தே சமூகத்தில் அவருடைய பங்கும் (Role) தகுதியும் (Status) அமையப் பெறுகின்றன. எல்லோரும் ஒரே வகையான வேலையில் ஈடுபடுவ தால் ஊரகச் சமூகத்தில் ஏற்றத்தாழ்வுகள மிகக் குறைவாகவே உள்ளன. அந்தக் குறைந்த தரப்பிரிவு களும் நிலவுடைமையைச் சார்ந்தே ஏற்படுகின்றன.

பொதுவாக நகர்ப்புறத்தைவிடக் கிராமங்களிலே ஒற்றுமையும் கட்டுப்பாடும் மிகுதியாக இருப்பதைக் காணலாம். இதன் காரணமாகவே சமூக மாற்றங்கள் கிராமங்களில் மிக மெதுவாக ஏற்படுகின்றன. புதிய அனுபவங்கள், வாய்ப்புகள் ஆகியவற்றில் கிராம மக்க ளுக்கு அதிக நாட்டமில்லை. இந்தத் தடைகளை எதிரேற்றுச் செயற்படுவதற்கு ஊரக மேம்பாட்டுத் திட்ட அமைப்பாளர்களும் ஆலோசகர்களும் ஊரகச் சமூகவியலை முறையாகக் கற்பது மிகத் தேவையா கிறது.

ஊரக மக்களைப் பாதிக்கும் மற்றொரு முக்கிய செய்தி சாதிமத வேறுபாடுகள். சாதி என்பது அவர் களது வாழ்க்கையில் பின்னிப் பிணைந்த ஒன்று. நக ரங்களை விடக் கிராமங்களில் இந்தப்பாதிப்பு மிகுதி யாகக் காணப்படுகிறது. மதம் என்பது கிராம மக்களி டையே ஒற்றுமையை வளர்க்க உதவுகிறது என்பது உண்மை. ஆனால், இப்போது மத வேறுபாடுகள் மிகுந்து விட்டன. ஒருவருக்கொருவர் நம்பாமையும் சகிப்புத் தன்மை இல்லாமையும் மலிந்து விட்டன. ஒற்றுமையின்மையும் மூட நம்பிக்கைகளும் மேம்பாட் டுக்குத் தடையாக உள்ளன.

மேலும், ஊரக அரசியல் சாதியின் அடிப்படை யிலேயே செயற்படுகிறது. அது பல பூசல்களுக்கும் மோதல்களுக்கும் வழி வகுக்கிறது. பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைவிடச் சாதி அடிப்படையில் நிலவும் ஏற்றத் தாழ்வுகளே பெரும்பான்மையான இடங்களில் அதிகமாக நிலவுகின்றன. இதற்கு உட னடித் தீர்வு காண்பது மிகவும் இன்றியமையாதது.

அடுத்தாற்போல், நகரமக்களுக்குக் கிடைக்கும் அளவு கல்விவசதிகள் கிராம மக்களுக்குக் கிடைப்ப தில்லை. அது மட்டுமன்று, அந்தக் கல்வியின் தரமும் மெச்சும் அளவில் இல்லை. அவர்களுக்குப் பயன்படும் வகையில் கல்வித் திட்டங்கள் அமைக்கப்பெறாததால் அவர்கள் கல்வியில் அதிக நாட்டம் காட்டுவதில்லை. பெரும்பான்மையான நாட்டுப்புற மக்கள் தமது அடிப்படை உரிமைகளும் நாட்டு நடப்புகளும் தெரி யாத நிலையிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

இத்தகைய கீழ் நிலையிலே உள்ள மக்களின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுத்தவும், பொதுவாகக்

கிராமங்களில் மிகுந்த வசதிகளை ஏற்படுத்தவும் பல்வேறு திட்டங்கள் செயலாக்கப்படுகின்றன. ஆயினும் இந்தியக் கிராமங்கள் யாவற்றிலும் ஒரே தன்மையான மாறுதல்களோ முன்னேற்றங்களோ ஏற்படவில்லை. இன்றும் கூட அதிகமான வெளியுலகத் தொடர்புகள் இல்லாத ஆதிவாசிகளின் கிராமங்கள் பல உள்ளன. இவர்கள் உணவு சேகரிக்கும் பொருளாதார நிலையிலேயே உள்ளனர். உற்பத்தி, சேமிப்பு ஆகியவை பற்றி அறியாதவர்களாக வாழ்கின்றனர். சிலர் உணவு உற்பத்தி செய்வதில் மிகப் பழமையான உத்திகளைக் கையாளுகின்றனர்.

இதற்கு நேர் மாறான கிராமங்களும் உள்ளன. எடுத்துக்காட்டாகப் பஞ்சாபு,' மேற்கு வங்காளம் ஆகியவற்றின் கிராமங்களில் புதிய முறையில் வேளாண்மைத் தொழில் நடைபெறுகிறது. பெரும்பான்மையான ஊரக மக்கள் நல்ல வசதியுடன் வாழ்கிறார்கள்.

கிராமங்கள்தோறும் ஒரே சீரான முன்னேற்றம் ஏற்படுத்துவதற்கு அரசு முனைந்து செயற்படுகிறது. அதற்கான திட்டங்கள் தீட்டுவதற்கும் செயலாக்குவதற்கும் வல்லுநர்கள் தேவை. ஊரகத் தொடர்புடைய எதுவாயினும் சரி, ஊரகச் சமூகவியல் வல்லுநர்களுக்கு (Rural Sociologists) நல்ல வரவேற்புள்ளது. வேளாண்மைக் கல்வியாளர்கள், ஆலோசகர்கள், வேளாண்மைக் கருவிகளின் விற்பனையாளர்கள், ஊரக மேம்பாட்டுத் திட்ட அமைப்பாளர்கள், கிராமியத் தொழில் சம்பந்தப்பட்டவர்கள் ஆகிய யாவரும் ஊரகச் சமூகவியல் பட்டதாரிகளாக இருப்பதே நலம். உலகெங்கிலும் நடைமுறையில் அவ்வாறே உள்ளது. முன்னேறிவரும் நாடுகளில் அவர்களுடைய முக்கியத்துவம் உணரப்பட்டு அவர்களுக்கு நல்ல ஆதரவு அளிக்கப்படுகிறது.

ஊரக மக்களின் வாழ்க்கை முறைகளையும் சிக்கல்களையும் பற்றி நன்கு கற்றுத் தேர்ந்த பிறகு அவர்களிடையே பணிபுரிய வருவதால் அவர்களுடைய பணி எளிதாகவும் சிறப்பாகவும் அமைகிறது. வி. கோ.

**ஊரகத் திருவிழாக்கள்**: மனித சமுதாயத்தை ஊரகம் என்றும் நகர்ப்புறம் என்றும் பொதுவாக இருவகைப்படுத்துவர். ஊரகம் என்பது பல்வேறு காரணிகளைக் கொண்டு இலக்கணப்படுத்தப் பட்டுள்ளது. தொழில், சூழல், சமூகத்தின் அளவு, மக்கள்தொகை நெருக்கம், ஒருமைப்பாட்டுத்தன்மை, சமூகப்படிநிலை, இடம்பெயர்தல், சமூக அடுக்கமைப்பு, சமூக உறவுமுறையில் வேறுபாடுகள் ஆகியவற்றின் அடிப்படையில் நகர்ப்புறத்திலிருந்து ஊரகச் சமூகம் வேறுபடுத்திக் காட்டப்படுகிறது.

ஊரகத்தில் பெரும்பான்மையினர் வேளாண்மையை முக்கிய தொழிலாகக் கொண்டவர்கள். பிற தொழில் செய்வோர் எண்ணிக்கை அரிதாகத்தான் காணப்படும். ஊரகச் சூழல் இயற்கைச் சூழல் நிறைந்து காணப்படுவதனால், மக்களுக்கு நேரடித் தொடர்பு ஏற்படும். ஊரகத் திருவிழாக்களும் இயற்கையோடு இணைந்து காணப்படுவதற்கு இதுவே காரணமாகும். ஊரக மக்களுக்கு நகர்ப்புற மக்களுக்கு இருக்கும் சமய நம்பிக்கையை விடவும் மிகுந்த சமய நம்பிக்கை இருக்கும். சமயத் தன்மைகள் ஊடுருவாத நடவடிக்கையே அவர்களிடம் இல்லை எனலாம். அவர்களின் திருவிழாக்களும் சமயச் சார்புடையனவாகவே இருக்கும்.

திருவிழா என்பது மக்கள் மகிழ்ச்சியால் கொண்டாடும் எல்லா நிகழ்ச்சிகளையும் குறிக்காது. ஆலயங்களில் சிறப்புப் பூசை நடத்தி, அங்குள்ள மூர்த்திகளின் திருவுருவங்களை வாகனங்களில் எழுந்தருளச் செய்து, கோயிற் சுற்றுப்புறங்களிலும் வீதிகளிலும் நடத்தும் திருவிழாவை மட்டுமே அதுகுறிக்கும் என்றும் கூறமுடியாது. ஆண்டுதோறும் மக்கள் மேற்கொள்ளும் எல்லாக் கொண்டாட்டங்களையும் திருவிழாக்கள் என்று குறிப்பிடவேண்டும் என்ற இலக்கணத்துடன் ஊரகத் திருவிழாக்களை ஆராயவேண்டும்.

திருவிழாக்கள் எல்லாருக்கும் மகிழ்வூட்டுவன. பல்வேறு மக்களும் ஒன்று சேர்ந்து திருவிழாக் காலங்களில் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்வர். ஒரு நாட்டைப்பற்றி அதன் திருவிழாக்கள் மூலம் மிகுதியாக அறிந்துகொள்ளலாம். மக்களின் தோழமையும் இணக்க உணர்வும் திருவிழாக்கள் மூலம் வெளிப்படுதலைக் காணலாம். குடும்பம், சமுதாயம், அரசியல், இலக்கியம் ஆகியவற்றின் அடிப்படையிலும் திருவிழாக்கள் ஏற்பட்டபோதிலும் சமயத்தின் அடிப்படையில் திருக்கோயிலைச்சுற்றி நடைபெறும் திருவிழாக்களே மிகுதியாகும்.

இவ்விழாக்கள் புராண, இதிகாசங்களிலுள்ள பல நிகழ்ச்சிகளை அடிநிலையாக உடையன. இவை நாடகம், நடனம், பாடல்கள்,விளையாட்டுகள் என்று கொண்டாடப்பெறும். இவை சமயக் கொள்கைகளை இறவாமல் பாதுகாக்கும்.

திருவிழா நடத்தும் முறைகள் பற்றியும் ஆகமங்கள் கூறுகின்றன. அவை மண்ணெடுத்தல், முளையிடுதல், வாகனங்களில் இறைவன் திருவுருவை எழுந்தருளச் செய்தல், யாகஞ் செய்தல், திருக்கல்யாணம் செய்தல், தீர்த்தம் கொடுத்தல், கொடியேற்றம், கொடியிறக்கம், திருவூடல் முதலியனவாம்.

வேளாண்மைத் தொடர்புடைய திருவிழாக்களும் உள்ளன. இவை பருவகாலத்தை அடிப்படையாகக் கொண்டவையாகும். நாற்றுநடுதல், அறுவடை செய்தல் போன்ற பல நிகழ்ச்சிகளுக்குத் தக்க பல விழாக்களும் உள்ளன. பருவமழையைத் தொடர்ந்து ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்படும் காலங்களில் ஆற்றுத் தெய்வங்களை வழிபட்டு விழாக்கள் நடத்துவர். அறுவடைவிழாவாகப் பொங்கல் விழாவைக் கொண்டாடுவர். இவைபோன்ற விழாக்கள் எல்லாம் நாகரிகத்தை இறவாமல் பாதுகாக்கும் நிகழ்ச்சிகளாகும்.

கதிரவன் இயக்கத்தை அடிப்படையாகக் கொண்டு ஓர் ஆண்டுக்காலத்தை உத்தராயணம் என்றும் தட்சிணாயனம் என்றும் இருவகைப்படுத்துவர். உத்தராயணத்தில் பகற்பொழுது நீண்டும் இராப்பொழுது குறைந்தும், தட்சிணாயனத்தில் பகற்பொழுது குறைந்தும் இராப்பொழுது நீண்டும் காணப்படும். முதற்பகுதியில்தான் திருவிழாக்களை நடத்துவது மரபு.

பழங்காலத்தில் மக்கள் இறைவனைத் தேடிச் சென்றபோதிலும் இறைவனும் மக்களைத் தேடிச் சென்றதற்குத் திருவிழாக்களே சான்றாக உள்ளன. ஊரகங்களில் திருவிழாவைப் பார்ப்பதற்கு வசதியாக வீடுகளில் திண்ணைகள் அமைக்கப்பட்டிருந்தன. இறையுருவங்கள் தேர், வாகனம் போன்ற உயர்ந்த இடங்களில் அமர்த்தப்பட்டு,திருவுலாவாகக் கொண்டு வரப்பட்டன. அப்போது வீடுதோறும் விளக்கு ஏற்றிப் பூசை செய்தும், காணிக்கையாகப் பட்டாடைகள் வழங்கியும் இறைவனை வழிபடுவர்.

ஊரகத் திருவிழாக்கள் சிற்றூர்வாழ் மக்களின் உறவுக்கு முக்கியமானவையாகும். திருவிழாக்களில் பெண் மாப்பிள்ளையைத் தேர்ந்தெடுத்துத் திருமணங்கள் உறுதிசெய்யப்படுதலுமுண்டு. உறவினர்களைஅழைத்து விருந்து செய்தலும் உண்டு. உறவினர்களிடையே நிலவும் மனத்தாங்கல்கள் மறைந்து உறவு புதுப்பிக்கப்படத் திருவிழாக்கள் உதவுகின்றன.

ஊரகத் திருவிழாக் காலங்களில் மக்கள் கட்டுச்சோறு கட்டிக் கொண்டு மாட்டுவண்டிகளில் கூட்டம் கூட்டமாக நெடுந்தொலைக் கிராமங்களுக்குச் செல்வதுண்டு. நாட்டுப்புறப் பாடல்களைப் பாடிக்கொண்டு உற்சாகமாகச் செல்வது கண்கொள்ளாக் காட்சியாகும்.

திருவிழாக்கள் இறைவழிபாட்டுக்கு உரியவையாக இருக்கின்றமையால் ஆண்டவன் அருள் கிட்டும் என்று மக்கள் நம்புகின்றனர். சில முக்கியமான ஊரகத் திருவிழாக்களின்போது மழைபெய்யும் அல்லது மழைக்குணமாவது இருக்கும் என்று சிற்றூர் மக்கள் நம்புகின்றனர்.

திருவிழாக்களில் உள்ளத்தூய்மையும் புறத்தூய்மையும் வலியுறுத்தப்படுகின்றன. மாதவிடாய், பிள்ளைப்பேறு போன்றவை தீட்டாகக் கருதப்படுகின்றமையால் பெண்கள் இக்காலங்களில் திருவிழாக்களில் கலந்து கொள்வதில்லை.

ஊரகத் திருவிழாக்கள் சிற்றூர் மக்களின் உற்சாகத்தை வெளிப்படுத்தும்; அவர்களின் உள்ளமும் உடலும் பொலிவுபெற வாய்ப்பளிக்கும். உ.சு.

**பொழுதுபோக்கு:** இந்தியாவில் எழுபத்தைந்து விழுக்காட்டுக்குமேல் ஊரகங்களே உள்ளன. இவ்வூரகங்களே இந்தியாவின் அச்சாணியாகும். ஊரகப்புற மக்களின் பெரும்பான்மையான தொழில் வேளாண்மையாகும். பண்டு தொட்டே வழிவழியாக வேளாண்மையில் ஈடுபட்ட அம்மக்கள் தங்கள் முழுநேரத்தையும் வேளாண்மையில் செலவிடவில்லை. ஆறு மாத அளவு வேளாண்மையும் ஆறு மாத அளவு ஓய்வும் அவர்களுக்கு இருந்தன. இன்றைய நிலையில் அவ்வோய்வுக் காலத்தைத் தோட்டக்கலை, வெண்மைப் புரட்சியாகிய பால்வளம், முட்டை, இறைச்சி ஆகியவற்றைப் பெருக்குவதில் செலவிடுகின்றனர். அவ்ஓய்வினை இனிய பொழுதுபோக்குகளிலும் செலவிடுகின்றனர்.

பழங்காலத்தில் ஆடவர் வேட்டையாடியும், கடற்கரையில் நண்டு பிடித்து விளையாடியும், கள்ளுண்டு களித்தும் திரிந்தனர்; பொழுது போக்காக நீராடியும், மற்போர் புரிந்தும், விற்போர் நடத்தியும் மகிழ்ந்தனர். செய்யும் தொழிலினூடே பாடிய பாடல்கள் அவர்களுக்கு இனிமையைத் தந்ததுடன், உழைப்பின் களைப்பை அறியாமல் தொழிலில் ஈடுபடுத்துவனவாகவும் இன்பப் பொழுதுபோக்காகவும் இருந்தன. முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்திணைகட்கேற்ப யாழ் இனங்களையும் முரசு அல்லது பறை ஆகிய கருவிகளையும் அந்தந்த நிலத்திற்கேற்ற பண்களையும் அவர்கள் இயக்கவும் இசைக்கவும் அறிந்திருந்தனர்.

ஆடவர்கள் பொழுது போக்கியதனைப்போன்றே பெண்டிரும் சிறிய டுகளை மணலிற் கட்டி, பொம்மை வைத்து வி ளயாடினர். வண்டல் பாவை செய்து மகளிர் விளையாடுவர் என அகநானூறு(330) கூறும். செல்வமிக்க மனைகளில் இருந்த பெண்கள் கால்களில் பொற்சிலம்பு ஒலிக்க ஓடி, உயர்ந்த நிலா மாடத்தில் பந்து விளையாடினர் என்பதனைப் பெரும்பாணாற்றுப்படை (வரி.332) விளக்குகிறது. மகளிரின்

புனல் விளையாடலையும், அருவி நீராடுதலையும் பண்டைய தமிழ் இலக்கியங்கள் பரக்கப் பேசுகின்றன. கழங்காடல் என்பதும் பொழுது போக்கிற்காக மகளிர் ஆடிய விளையாட்டுகளுள் ஒன்று. இதனை நாட்டின் வடகிழக்குப் பகுதிகளில் 'கொக்கான்' என வழங்கினர் என்று டாக்டர் சு. வித்தியானந்தன் 'தமிழர் சால்பு' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

கழங்காடல் போன்றே மகளிர் நீராடல், ஊசலாடல், தெள்ளேணம், சாழல் போன்ற ஆடல் பாடல்களில் ஈடுபட்ட செய்தியினைத் திருவாசகம் போன்ற பக்தி இலக்கியங்களில் காணலாம். பொதுவாகப் பெண்டிர் பொழுதுபோக்கிற்காக எளிய மென்மையான விளையாட்டுகளில் ஈடுபட்டனர். ஆடவர் வீர விளையாட்டுகளைப் பெரிதும் விரும்பினர்; பெண்கள் வளர்த்த காளைகளைத் தழுவி அடக்கினர். அவர்களைக் 'காளையர்' எனக் கலித்தொகை கூறுகிறது. ஆழமான நீர்நிலைகளில் மூச்சடக்கி மூழ்கிச் சென்று அடிமண்ணைத் தொட்டு, அம்மண்ணைக் கையில் எடுத்து வந்து காட்டுவது, வீரம் மிக்க இளைஞர்க்குப் பண்டைய நாளில் ஒரு பொழுதுபோக்காகும்.

ஆடிப்பெருக்கின்போது மக்கள் காவிரி போன்ற ஆறுகளில் நீராடி வழிபட்டனர்; ஆவணி மாதத்தில் கண்ணன் பிறப்பன்று உறியடித் திருவிழாவும் வழுக்கு மரம் ஏறுதலும் ஆகிய விளையாட்டுகள் ஆடவரிடையே நிகழ்ந்தன. இவை சமயச் சார்புற்றவை. கண்ணைக் கட்டிக்கொண்டு உறியில் கட்டிய பானையை உடைப்பது, கண்ணைக் கட்டாமலே பிறர் உறியை மேலே இழுக்க அதனைத் தாவி உடைக்க முற்படுவது ஆகியனவும் நடைபெற்றன. இயல்பாகவே வழவழப்புத் தன்மை கொண்ட மரத்தில் விளக்கெண்ணெய் போன்றவற்றை நன்கு பூசி அதன்மீது ஆடவர் ஏற, அவர்கள் மீதும் மரத்தின் மீதும் நீரைச் சிதறுவர். அப்படியும் உச்சி மரத்திற்கு செல்வோர் அங்குக் கட்டியுள்ள பரிசுப் பொருளைப் பெறுவர். இத்தகைய வீர விளையாட்டுகளைக் கண்டு களிப்பது ஓர் இடைக்காலப் பொழுதுபோக்காக விளங்கியது.

கார்த்திகைத் திங்களில் மகளிர் தீப அலங்காரம் செய்ய, ஆடவர் சொக்கப்பனை கொளுத்துவதும் 'சூந்து' என்ற பந்தம் எரித்துச் சுற்றுவதுமான பொழுது போக்கினில் ஈடுபடுவர். மார்கழி மாதத்தில் ஊரக மகளிர் விடியற் காலத்தே எழுந்து வீட்டின் முற்புறத்தைச் சாணமிட்டு மெழுகிக் கோலமிடுவர். ஊரகப்புறங்களில் அரிசி மாக்கோலத்தையும் நகரங்களில் அதற்காக விற்கும் வண்ணப் பொடிக் லவைகளை இடுவதும் உண்டு. ஊரகப் புறங்களில் மகளிர் சாணத்தைச் சிறு உருண்டையாக உருட்டி அதன்மீது பறங்கிப் பூப் போன்ற பூக்களை வைப்பர். இதனைச் சமயச் சடங்கு என்பதுடன் சமுதாயப் பொழுதுபோக்கினுள் ஒன்றாகவும் கொள்ளலாம். போட்டியிட்டு மகளிர் கோலமிட்டு இந்தச் சாண உருண்டைகளைப் பூ வைத்து அலங்கரிப்பர். கேரளப் பகுதியில திருவோண நாளன்று போட்டியிட்டு அமைக்கும் 'பூக்களத்தை' ஒத்தது இது. கொங்கு நாட்டுப் பகுதியினில் சாண உருண்டையைக் கதிரவன் உதயமானதும் மலரோடு வரட்டி போன்று தட்டியெடுத்துக் காய வைப்பர். தைப்பொங்கலின் போது பொங்கல் அடுப்பிற்கு இதனையே வரட்டியாகப் பயன்படுத்துவர். 'தைந்நீராடல்' பண்டு வழக்கில் இருந்தது போன்று இன்றும் இவ்வழக்கம் பழக்கத்தில் உள்ளது. நகரப் பழக்கவழக்கங்கள் ஊரகங்களில் பரவுதல் மூலமாக இப்பழக்கமும் படிப்படியாகக் குறைந்து வருகின்றதெனலாம்.

தைப் பொங்கலின் மறு நாள் மாட்டுப் பொங்கலன்று ஆடவர் காளையை அடக்கும் 'மஞ்சு விரட்டு' என்னும் வீர விளையாட்டு நடைபெறுகிறது. காளை மாடுகளின் கொம்பைக் கூராகச் சீவி, அவற்றின் நுனியில் புதுத்துணிகளையும் காசு பணத்தினையும் முடிந்து அவற்றைத் திறந்த வெளியில் விரட்டி விடுவர். வீர வாலிபர் அதனை எடுப்பதில் உயிரையும் பணயம் வைப்பர். மதுரை அருகில் அலங்காநல்லூரில் இப்போதும் இவ்வீர விளையாட்டு நடைபெற்று வருகிறது.

மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி, ஆடி மாதங்களில் அம்மனுக்குப் பொங்கலிட்டும், மாவிளக்கெடுத்தும், காவடி, கரகம், ஒயிலாட்டம், மயிலாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம் ஆகியவற்றை ஆடியும் பொழுது போக்குதல் சமயச் சடங்கோடு தக்கதோர் உடற் பயிற்சியாகவும் திகழ்கிறது. கோவைப் பகுதியில் மேற்குறித்த மாதங்களில் ஆடி தவிரப் பிற கோடை மாதங்கள் ஆதலின், மழை வேண்டி மாரியம்மனுக்குத் திருவிழா எடுத்துப் பூச் சொரிந்தும், பொங்கல் படையலிட்டும், தீச்சட்டி ஏந்தியும், சாட்டையால் உடம்பில் அடித்துக் கொண்டும் வருதலைக் காணலாம். சில பகுதிகளில் எருமை, ஆடு, மாடு, கோழி போன்றவற்றைப் பலிகொடுத்துப் பொங்கலிட்டு வந்தனர். இக்காலத்தில் பெரும்பாலான இடங்களில் உயிர்வதை கூடாது என்கிற காரணத்தால் பொங்கலிடுவதும் மாவிளக்கெடுத்தலுமே நடைபெறுகிறது. எனினும், திருச்சி குளுமாயி அம்மன் திருவிழாப் போன்ற இடங்களில் 'குட்டி குடித்தல்' என்ற உயிர்ப்பலி நடைபெற்று வருகிறது. இதனைச் சமயச் சடங்கோடு தொடர்புடைய

பொழுதுபோக்கென்று கொள்ளலாம். இக்காட்சிகளைப் பொழுதுபோக்காகக் காண அண்டை அயல் ஊர்மக்கள் ஒன்றுகூடித் திரளுவர். அங்கு அங்காடி அமைக்கப்பட்டுப் பல்வகையான பொருள்களின் விற்பனையும் நடைபெறும். பெண்கள் இத்தகைய விழாக்களில் தீச்சட்டி ஏந்தி வருகின்றனர். 'தீமிதி விழா' அல்லது 'கண்டம் விழா' என்பது ஆண்களும் பெண்களும் கைக்குழந்தைகளைக் கையில் ஏந்தி வெற்றுக் காலுடன் தீ மிதித்து வருவதாகும். இத்தகைய அம்மன் திருவிழாக்களில் மயிலாட்டம், ஒயிலாட்டம், காவடியாட்டம், கரக ஆட்டம் ஆகியன நடைபெறும். மயிலைப் போன்ற ஒப்பனையில் ஆடும் இக்காட்சி காண்பதற்கு ஓர் இன்பப் பொழுதுபோக்காகும். குதிரை, காளை ஆகியன தெய்வ வடிவமிட்டு வருவதும் உண்டு. இந்த ஆட்டத்திற்கேற்பப் பம்பை, உருமி, நையாண்டி மேளம் இசைக்கப்படும். உச்சக்கட்டத்தில் சீழ்க்கை ஒலியை எழுப்புவர்.

இவ்வகைப் பொழுதுபோக்குக் கலைகளினூடே ஆட்டக்காரர் பல்வகை நுட்ப வேலைகளையும் செய்வர். கரக ஆட்டக்காரர் நின்று ஆடியும், கிடந்து ஆடியும், ஊசி போன்ற நுட்பமான பொருள்களைக் கண் இமையால் எடுப்பதும் உண்டு. ஒற்றைக் காலால் ஆடுவது, மேலிருக்கும் கரகம் விழாமல் ஆடுவது போன்ற பல்வேறு திறனைக் காட்டுவர். பொதுமக்கள் இப்பொழுதுபோக்குக் காட்சிகளில் மகிழ்ந்து புதுத்துணி, காசு ஆகியவற்றை ஆட்டக்காரருக்கு அளிப்பர். கரக ஆட்டத்தின்போது தெம்மாங்கு போன்ற இசைப்பாடல்களைப் பாடுவது மற்றுமோர் சிறப்பாகும். காலில் சதங்கையையும் உடம்பில் பல்வேறு வண்ண ஆடைகளையும் பாசிமணிகளையும் அணிந்து இவ்வாட்டக்காரர் காட்சி தருவார். முகத்தில் திட்டுத்திட்டாக வண்ணச் சுண்ணம் பூசிக்கொண்டு, காந்த விளக்கொளியில் விடிய விடிய இவ்வாட்டம் நடைபெறும். வட இந்தியப் பகுதிகளில் ஆடப்படும் 'பாங்கரா' நடனம் போன்று தென்னாட்டில் இக்கரக ஆட்டம் சிறப்புடைய ஒன்றாகும். கோடைக்காலத்தில் இத்தகைய மாரியம்மன் திருவிழாக் காட்சியில் ஈடுபட்டு ஊரக மக்கள் பொழுதைப் போக்குகின்றனர்.

சற்று வளர்ச்சியடைந்த ஊரகங்களில் நகரத்தின் செல்வாக்கால் மேற்குறிப்பிட்டவையுடன் இசைக் கச்சேரி, பொம்மலாட்டம், பட்டிமன்றம் போன்ற பொழுதுபோக்குகளும் நடைபெறுகின்றன. இன்றைய நாளில் பட்டிமன்றம் கேட்க ஊர்ப்புற மக்கள் கூடுவது குறிப்பிடத்தக்க வளர்ச்சியாகும். பண்டைய தெருக்கூத்திற்குப் பதிலாக இன்று பொம்மலாட்டம் அந்த இடத்தைப் பிடித்துள்ளது. பண்டை நாள்களில் நடந்த நல்லதங்காள், பவளக்கொடி, அல்லிராணி, அரிச்சந்திரன் போன்ற தெருக்கூத்துகள் இப்போதும் விடிய விடிய நடைபெறுகின்றன. ஆடல்-பாடல், அலங்காரம் கூடிய இந்தக் கதைக்கூத்துகளைக் காண மக்கள் திரளாகக் கூடுவர். கேரள மக்களின் 'கதகளி', 'ஓட்டன் துள்ளல்' என்பன போன்றும் கருநாடக மாநிலத்தின் 'யட்சகானம்' போன்றும், ஆந்திர மக்களின் 'கூச்சுப்புடி' போன்றும் இதன் காட்சிகள் நன்கு அமையும். 'கதகளி' போன்ற அபிநய பாவம் இக்கூத்தில் மிகுந்து தோன்றும். இனிய இசைக்கூறு மிகுந்து காணப்படும். வடநாட்டுத் தசரா, இராம் லீலா, ஒலி (Holi) போன்ற பண்டிகைகளைப் போன்று தமிழக ஊரகப் பொதுத் திருவிழாக்கள் ஊரகங்களில் நடைபெறுகின்றன.

விடியும்வரை உடுக்கடித்துக் 'கதைப்பாட்டு' பாடும் முறை இன்றும் பல ஊரகங்களில் காணப்படும் ஓர் இனிய பொழுதுபோக்காகும். இதுவே இன்றைய 'கதா காலட்சேபம்' என்னும் 'இசைச் சொற்பொழிவிற்கு' வித்தாகியது. ஊர் விழாக்களில் அங்காடி மூலமாகவும் 'ரங்கராட்டினம்', குடைராட்டினம், உணவுப் பண்ட விற்பனை, விளையாட்டுச் சாமான் விற்பனை போன்றவை மூலமாகவும் வருவாய் கிடைக்கிறது. ஆடவர் சிலம்பம், கபடி போன்ற வீர விளையாட்டுகளை நிகழ்த்துகின்றனர். சேவற்கோழிப் போர், ஆட்டுக்கடாப் போர் ஆகியனவும் நடத்துகின்றனர். சேவற் கோழிகளின் கால்களில் கூர்ங்கத்தியைக் கட்டிப் போரிட விடுவது ஒரு வகையில் வீர விளையாட்டு என்றாலும், இது உயிர்வதை செய்யும் வகையில் அமைந்துவிடுகிறது. இவை யாவும் ஊரக மக்களின் சமுதாய, சமய வாழ்வோடு தொடர்புடைய இன்பப் பொழுதுபோக்குகளாகும்.

ஊரகமக்கள் தங்கள் தனிப்பட்ட மகிழ்ச்சிக்காகப் புகைத்தல், வெற்றிலை போடுதல் ஆகியன நாள்தோறும் பலர் கூடிப் பேசும்போது (Gossip) ஏற்படுத்திக்கொண்ட பொழுதுபோக்காகும். இவை அளவு மீறிப் போகையில் பெருந்துன்பம் விளைவிக்கின்றன. புகையிலையைப் பல்வேறு வடிவங்களில் ஊரக மக்கள் பயன்படுத்துவது புற்றுநோய் போன்ற பல்வேறு நோய்கள் வர மூலகாரணமாகிறது. மது பருகுதலும் இன்பப் பொழுதுபோக்கென்றே தொடங்கியது. ஆனால் இன்று அது உயிரைக் குடிக்குமளவிற்குச் சென்றுவிட்டது. இதன் விளைவாக வீடு வாசல் இழந்த ஊரக மக்கள் பலர். திருமணம் என்ற தனிமனிதனின் வீட்டு விழா ஊர்ப் பொது விழாவாக மாறிவிடுகிறது.

இன்றைய ஊரகங்களில் நகரங்களின் செல்வாக்குப் பரவுவதாலும் பொருளாதார முன்னேற்றத்தினா

லும் வானொலி, திரைப்படம் போன்ற பொழுது போக்குகள் மிகுந்து காணப்படுகின்றன. அண்மையில் தொலைக் காட்சிப் பெட்டிகள், தனி இல்லங்களிலும் பொது இடங்களிலும் பரவலாக அமைக்கப்பட்டுள் ளன. இவை பல்வகை அறிவூட்டும் செய்திகளையும் இன்பப் பொழுதுபோக்குகளையும் அளிக்கின்றன. எனினும், இவற்றால் பழமைப் பண்பாடுகளும், இனிமையான பிற பொழுதுபோக்குகளும் மங்காமல் பார்த்துக்கொள்வது ஊரக மக்களின் கடமையாகும். அ.கோ.

துணை நூல்கள்:

பரமசிவானந்தம், அ.மு., தமிழ்நாட்டு விழாக்கள், தமிழ்க்கலைப் பதிப்பகம், சென்னை, 1967.

சோமலெ, தமிழ்நாட்டுமக்களின் மரபும் பண்பாடும், நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா, 1974.

**ஊரகம்** ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய் தருளியுள்ள நூற்றெட்டுத் திருப்பதிகளுள் ஒன்று. இவ்வூர் தொண்டை மண்டலத்திலுள்ள காஞ்சிபுரத்தி லிருந்து ¾ கல் தொலைவிலுள்ளது. இவ்வூரினைக் குறிக்கும்போது, 'கச்சி ஊரகம்' என்றும், 'காமரு பூங்கச்சி ஊரகம்' என்றும் திருமழிசை ஆழ்வார் குறிப்பிட்டுள்ளார். இங்குள்ள பெருமாள் கோயில் 'உலகளந்த பெருமாள் கோயில்' எனச் சொல்லப்படு கிறது. பெருமாள் பெயர் உலகளந்த பெருமாள்; தாயார் பெயர் அமுதவல்லி நாச்சியார். இத்திருக் கோயில் விமானம் 'சீகர' விமானம் எனப்படும்.மேற்கு நோக்கிய சந்நிதியில் பெருமாள் நின்ற கோலத்தில் விளங்குகிறார். இத்தலத்தில் பெருமாள் உரக ரூபி யாக (பாம்பு உருவம்) உள்ளார் என்றும், இதனால் இத்தலம் 'ஊரகம்' எனப் பெயர் பெற்றது என்றும் கூறப்படுகிறது. இங்கு நாகதீர்த்தம் (உரகதீர்த்தம்) உள்ளது. பெருமாள் இத்தலத்தில் ஆதிசேடனுக்குக் காட்சியளித்தருளினார். இன்று ஊரகத்தில் திருக் காரகம், திருக்கார்வானம், திருநீரகம் என்னும் மூன்று மங்களாசாசனத் தலங்கள் அடங்கித் திகழ் கின்றன. இத்தலத்தினைத் திருமழிசையாழ்வாரும் திருமங்கையாழ்வாரும் பாடியுள்ளனர். அ.மா.ப.

**ஊரக வளர்ச்சித் திட்டம்**: இந்தியா 5,76,000 ஊரகங்கள் அடங்கிய ஒரு வேளாண்மை நாடாகும். காந்தியடிகள் 'இந்தியா ஊரகங்களில் வாழ்கிறது' என்று கூறினார். இந்திய மக்கள் தொகையில் 80 விழுக்காடு இவ்வூரகங்களிலேயே வாழ்ந்து வருகின்ற னர். இவர்களுள் 70 விழுக்காடு வேளாண்மையை வாழ்க்கைத் தொழிலாக நம்பி வாழ்கின்றனர். எனவே இந்தியாவின் முதுகெலும்பாக ஊரகங்கள் விளங்குகின்றன. ஊரக வளர்ச்சியிலேயே இந்தியா வின் சமூகப் பொருளாதார வளர்ச்சி அமைந் துள்ளது.

ஊரக வளர்ச்சிக்கெனப் பல்வேறு திட்டங்கள் காலந்தோறும் மைய, மாநில அரசுகளால் அமைக் கப்பட்டுச் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. ஊரகத் தொழில் திட்டம்(Rural Industrialization Programme -RIP) 1962 - 63-ஆம் ஆண்டிலும், வேளாண்மை செறிந்த மாவட்டத் திட்டம் (Intensive Agricul-tural District Programme-IADP) 1966-67-இலும், வேளாண்மை செறிந்த பகுதித் திட்டம் (Intensive Agricultural Area Programme-IAAP) 1869-70 -இலும், வறட்சி நிவாரணத் திட்டங்கள் 1969-70 -இலும், மலைப் பகுதி முன்னேற்றத்திட்டங்கள் (Hill Area Development Programme-HADP) 1973 -74-இலும், உயர்விளைச்சல் விதைத் திட்டம் (High Yielding Varieties Programme-HYVP) பாலைநில முன்னேற்றத் திட்டங்கள், தேசிய ஊரக வளர்ச்சித் திட்டங்கள் போன்ற பல்வேறு திட்டங்கள் ஊரக வளர்ச்சிக்கெனச் செயற்பட்டு வருகின்றன. இத்திட் டங்கள் 1978-79-ஆம் ஆண்டுகளில் 2300 தனித் திட்டங்களாக வகைப்படுத்தப்பட்டு, 1980-இல் மேலும் விரிவுபடுத்தப்பட்டு, 20 அமிசத் திட்டங்களுள் ஒன்றாக அமைந்தன. வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள வேளாண்மையினரின் முன்னேற்றம் ஊரக வளர்ச்சியின் தலையாய நோக்கமாகப் பெரும்பங்கு வகிக்கிறது. வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் மக்கள் ஆண்டுக்கு உரூ. 3500/ க்கும் குறைவாக வரு வாய் பெறுகின்ற குடும்பத்தினராவர். இவர்கள் தவிர நிலமற்ற தொழிலாளர், ஊரகக் கலைஞர்கள், தாழ்த் தப்பட்ட மக்கள் ஆகியோரின் முன்னேற்றமும் ஊரக வளர்ச்சித் திட்டங்களின் முக்கிய குறிக்கோள்க ளாகும்.

வறுமை, அறியாமை, நோய் ஆகியவற்றிலிருந்து விடுபட்ட ஊரக மக்களே உண்மையான வளர்ச்சி பெற்றவர்கள் ஆவர். வேலையின்மை என்பது ஊரக வளர்ச்சியைத் தடை செய்யும் முட்டுக்கட்டையா கும். ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்திலும் ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத்திலும் ஊரக வளர்ச்சிக்கு மேலும் சிறப்பிடம் தரப்பெற்றுள்ளது. ஊரக வேளாண்மை வளர்ச்சிக்கான தரமான விதைகள் வழங்குதல், நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தி அதிக வளர்ச்சிக்கும் மிகுந்த அறுவடைக்கும் பயன்படுத்தல், தேவையான தரமான உரங்கள் இடுதல், நிலமற்ற, நிலமுள்ள ஊரக மக்களுக்கு மீனின வளர்ச்சி, காடு வளர்ச்சி, கோழிப் பண்ணை வளர்ச்சி ஆகியவற்றைப்

பற்றிய அறிவூட்டுதல் ஆகியன இத்திட்டத்தில் அடங்கும். நிலம், நீர், சூரிய ஒளி ஆகியவற்றைத் தக்க முறையில் பயன்படுத்த வேண்டிய முறைகளையும் இன்றியமையாமையையும் இத்திட்டம் விளக்கும்.

ஊரக மக்களின் வளர்ச்சிக்குக் கல்வியறிவு மிகவும் இன்றியமையாதது. அக்கல்வியைப் பெறாத முதியோர்களுக்காக முதியோர் கல்வித் திட்டமும், ஏழை மாணவர்களுக்காக இலவசக் கல்வித் திட்டமும் செயற்படுத்தப்பட்டுள்ளன. வானொலி வழியாகவும், தொலைக்காட்சி, படக்காட்சிகள் மூலமாகவும் கேட்டும் நேரடியாகக் கண்டும் முதியோரும் இளைஞரும் வேளாண்மை, ஊரக வளர்ச்சித் திட்டங்கள் பற்றி விரிவாக அறிய முடிகிறது. பொருளற்ற ஏழை மக்களின் வாழ்வு வளம் பெறக் கோழிப்பண்ணை, தேனீ வளர்த்தல், முயல்வளர்த்தல் போன்றவற்றிலும் ஊரக மக்கள் ஈடுபடமுடிகிறது. இத்திட்டங்களுக்கு வங்கிகள் கடன்வழங்கியும் அரசு கொடைகள் வழங்கியும் உதவுகின்றன. பல தவணைகளில் குறைந்த வட்டியுடன் ஊரக மக்கள் கடனைத் திரும்பச் செலுத்த வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. வேளாண் மக்களுக்கு வேண்டிய மின் கட்டணம் குறைந்த கட்டணத்தில் கிடைக்கத் தமிழக அரசு உதவி செய்கிறது.

இந்திய ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தினால் (Integrated Rural Development Programme IRDP) மூன்று ஆண்டுகளில் நாடு முழுவதிலுமிருந்து ஒன்பது மிலியன் குடும்பங்கள் உதவிகள் பெற்றுள்ளன. அதில் நாற்பது விழுக்காட்டு மக்கள் தாழ்த்தப்பட்டவர்களும் பழங்குடியினருமாவர். இந்திய ஊரக வளர்ச்சித் திட்டம் வறுமையை எதிர்த்துப் போராட அமைக்கப்பட்ட மாபெருந் திட்டமாகும். தனி ஒருவர் வங்கிக் கடனாக உரூ.3000க்கு மேல் உரூ. 5000 வரைபெற்றுக்கொள்ள இத்திட்டம் வழி செய்கிறது. ஊரக வளர்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைக்க மாவட்டம்தோறும் மாவட்ட ஊரக வளர்ச்சி அலுவலகங்களை ஏற்படுத்தியுள்ளது.

ஊரக வளர்ச்சித் திட்டங்கள் மூலம் பெறக்கூடிய பயன்களை மக்கள் நன்கு அறிவதற்காக அரசு பல விளம்பரங்களைச் செய்கிறது. எனினும் அப்பயனை ஓரளவு கல்வி அறிவும் வசதியும் பெற்றவர்களே அடைய முடிகிறது. எனவே, முதியோர் கல்வி வாயிலாகவும் வானொலி, நாடகங்கள்,வில்லிசை,தொலைக்காட்சி போன்ற பல்வேறு பொதுமக்கள் தொடர்புக் கருவிகளைக் கையாண்டும் ஊரக வளர்ச்சித் திட்டங்களை அரசு மக்களுக்கு விளக்குகிறது. மக்கள் தொகைக் கட்டுப்பாடும் இன்றைய நிலையில் ஊரக வளர்ச்சித் திட்டங்களின் பயன்பாட்டை மக்கள் பெற உதவும் கருவியாகும். இந்தியாவில் வினாடிக்கு ஒரு குழந்தை பிறக்கிறது என்பது தவிர்க்க வேண்டிய தொன்றாகும். எனவே, குடும்பக் கட்டுப்பாட்டின் தேவையை ஊரக மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டிய தொன்றாகும். சமுதாயக் கல்வி மூலமாகச் (Social Education Programme) சுகாதார உணர்வு, விழிப்புணர்வு, கூட்டுறவு முறை, வாழ்க்கைக் கல்வி ஆகியவற்றை ஊரகங்களில் பரப்புவதும் ஊரக வளர்ச்சித் திட்டங்களில் அடங்குகிறது. பயிற்சிக் கல்வித் திட்டங்கள் மூலமாக ஊரகக் கைத் தொழில் வளர்ச்சியைப் பெருக்கலாம். விரிவாக்கத் திட்டங்கள் மூலமாக வேளாண்மைக் கல்வி ஏழை உழவர்களுக்கும் எட்டும் வகையில் நன்கு செயற்படுத்தப்படுகின்றது. தரமான விதை தேர்ந்தெடுத்தல், மண் ஆய்வு, பூச்சிக் கொல்லித் தெளிப்பான், உரவகைகள், மண்ணிற்கேற்ற பயிர் போன்ற பல்வேறு செய்திகளை இன்றைய உழவர்கள் அறிய விரிவாக்கத் திட்டங்கள் பயன்படுகின்றன.

பொருளாதார முன்னேற்றம் ஊரக வளர்ச்சித் திட்டங்கள் மூலமாக நன்கு அறியப்படுகிறது. வெண்மைப் புரட்சியாகிய பால்வளம், முட்டை, இறைச்சி ஆகியவற்றின் உற்பத்திப் பெருக்கம், பசுமைப் புரட்சி, அங்காடிகள், பண்ணைகள், சிறுதொழிற் சாலைகள், குடிசைத் தொழில் வளர்ச்சி, கூட்டுறவுத் துறையின் வளர்ச்சி ஆகியவை ஊரக வளர்ச்சித் திட்டங்களினால் ஏற்பட்ட விளைவுகளாகும். கல்வி வாயிலாகப் பயிர்க்காலம் போக எஞ்சிய அறுவடைக் காலத்திற்கேற்பச் சிறுதொழில்களை மேற்கொள்ள இத்திட்டங்கள் மிகவும் உதவுகின்றன. வேளாண்மையின் மூலமாக விளைந்த மூலப் பொருள்கள் தொழிற்சாலையை அடைகின்றன. கரும்பு, பருத்தி, சோளம், சணல் போன்ற விளைபொருள்கள் தொழிற்சாலையில் பக்குவஞ் செய்யப்படுவதால் பலருக்கு வேலை கிடைக்கிறது. நச்சுக் கொல்லி, உரங்கள், நுகர்வோர் பண்டங்கள் முதலியன தொழிலகங்களில் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்தியாவில் 60 மிலியன் வேளாண்மைத் தொழிலாளர்கள் உள்ளனர்.

இந்திரா காந்தி 1982-ஆம் ஆண்டில் கொண்டு வந்த 20 அமிசத் திட்டத்திலும் ஊரக வளர்ச்சிக்குச் சிறப்பிடம் அளிக்கப்பட்டுள்ளது. அவையாவன: (1) நீர்ப்பாசன வசதியைப் பெருக்குதல், வறண்ட நிலங்களுக்கும் பாசனம் அளித்தல், (2) பயறு, எண்ணெய் வித்துகள் ஆகியவற்றின் உற்பத்தியைப் பெருக்குதல் (3) ஊரக வளர்ச்சிக்கான வேலை வாய்ப்புத் திட்டங்களைச் செயற்படுத்தல், (4) நில உச்ச வரம்பு-நிலச்

சீர்திருத்தச் சட்டம் போன்ற சிக்கல்களிலிருந்து விடுதலை, (5) வேளாண்மைத் தொழிலாளருக்கு உயர்ந்த கூலி வழங்கல், (6) கொத்தடிமைகளை மீட்டல், (7) தாழ்த்தப்பட்டவர், பழங்குடியினர் போன்றோருக்கு மறுவாழ்வுத் திட்டம் அளித்தல், (8) ஊரக மக்களின் குடிநீர்ப் பற்றாக்குறையைத் தீர்த்தல், (9) வீடற்ற ஊரக மக்களுக்கு நிலமும் வீடு கட்ட நிதி வசதியும் அளித்தல், (10) சேரிவாழ் மக்களின் மறுமலர்ச்சிக்கு உதவுதல், (11) ஊரகங்களுக்கு மின்சாரம் வழங்கல், (12) எரிபொருள் வசதி அளித்தல் ஆகியவையாம். இந்தியத் தலைமை அமைச்சர் இராசீவ்காந்தி (Raijv Gandhi) புதிய மாற்றியமைக்கப்பட்ட 20 அமிசத் திட்டத்தை 1986-ஆம் ஆண்டு சூலைத் திங்களில் அறிவித்தார்.

தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டக் குடும்பக் கணக்கெடுப்புப் புள்ளியியல் துறையினர் ஊரக வளர்ச்சியைச் சீர்தூக்கத் தனிப் பட்டியலிட்டுப் புள்ளிவிவரங்களைத் தொகுக்கின்றனர். அவை (1) ஊராட்சி ஒன்றியங்களின் பெயர்கள் (2) தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பழங்குடியினர் பட்டியல், (3) கிராமத் தொழில்களின் பெயர்கள், (4) சாதி வகை, தனி ஆள் (Percapita) ஆண்டு சராசரி வருவாய் ஆகியவற்றின் அடிப்படையில் ஊரகங்களின் முழுமையான புள்ளிவிவரங்களைக் கணக்கெடுத்தல் ஆகியவையாம்.

குடும்பப் பட்டியலை உருவாக்கும் போது (1) சிறு விவசாயிகள், (2) மிகச்சிறு விவசாயிகள், (3) வேளாண்மைத் தொழிலாளர்கள், (4) வேளாண்மை அல்லாத பிற தொழிலாளர்கள், (5) ஊரகக் கைவினைஞர்கள், (6) சொந்தமாகத் தொழில் செய்பவர்கள் (தனிஆள் ஆண்டு வருமானம் உரு.700க்குள்), (7) மற்றவர்கள், நிலக்கிழார்கள், உயர்குடிமக்கள் என்ற அடிப்படையில் கணக்கெடுப்புச் செய்து, அவரவர் வளர்ச்சிக்கு வேண்டியனவற்றைச் செய்கின்றனர்.

இந்திய ஊரகங்களில் வேளாண்மையே பெரும்பாலும் மேற்கொள்ளப்படினும் அவை நன்செய் நிலத்தில் 200 முதல் 220 நாள்களிலும், புன்செய் நிலத்தில் ஆறு மாத அளவிலுமே நடைபெறுகின்றன. சப்பான், இத்தாலி, பிரான்சு ஆகிய நாடுகளில் பிற கைத் தொழில்கள் வேளாண்மை செய்யாத சில காலங்களில் செய்யப்படுகின்றன. இந்திய ஊரக வளர்ச்சித் திட்டத்தில் கதர் ஆடை நெய்தல் (பருத்தி, கம்பளி, பட்டு), தானியங்கள், பருப்பு வகைகள் ஆகியவற்றைப் பாகுபடுத்தல், செக்கு எண்ணெய் உற்பத்தி செய்தல், கரும்பு வெல்லம், பழுப்புச்சர்க்கரை உற்பத்தி செய்தல், பதநீர், பனை வெல்லம், பனை மரத் தொடர்பான பிற பொருள்களை உறபத்தி செய்தல், தேனீ வளர்த்தல், மட்பாண்டம் செய்தல், தோல் பதனிடுதல், நார், கோந்து, சுண்ணாம்பு முதலியன உற்பத்தி செய்தல், மருந்துக்குரிய காட்டு மூலிகைகளைச் சேகரித்தல், கருமார் தொழில், தச்சுத்தொழில், எரிவாயு (சாணம் கழிவுப் பொருள்கள் மூலம் கோபர் வாயு) உற்பத்தி செய்தல், அரக்கு, மூங்கில், பிரம்பு வேலைகள் போன்றவை ஊரக வளர்ச்சிக்குகந்த இன்றியமையாத் தொழில்களாகக் காணப்படுகின்றன.

இருபது அமிசத் திட்டத்தில் கொத்தடிமைகளை அடிமைத் தளையினின்றும் ஒழிக்கும் பணி சிறப்பாகச் செயற்படுகிறது. ஆந்திரப் பிரதேசம், பீகார், குசராத்து, கருநாடகம், கேரளம், மத்திய பிரதேசம், மகாராட்டிரம், ஒரிசா, இராசசுத்தான், தமிழ்நாடு, உத்தரப்பிரதேசம் ஆகிய பதினொரு மாநிலங்களிலுள்ள கொத்தடிமைகளை மீட்கும் பணி நடைபெற்றுள்ளது. புள்ளிவிவரப்படி 1983-ஆம் ஆண்டு 1,58,946 கொத்தடிமைகள் இருந்தனர். அவர்களுள் பெரும்பாலோர் மீட்கப்பட்டுள்ளனர். முழுமையாகக் கொத்தடிமை ஒழிக்கப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

ஊரக வளர்ச்சித் திட்டங்களுள் கல்வி, துப்புரவு, சுகாதாரம் ஆகியன தலையானவை. கல்வியறிவு பெற்ற ஊரகங்கள் நாட்டின் கண்களாகத் திகழும். பல ஊரகங்களில் குழந்தைகளின் படிப்பு மூன்று அல்லது நான்காம் வகுப்புடன் நிறுத்தப்படுகிறது. பின்னர், பரம்பரைத் தொழிலில் அவர்களை ஈடுபடச் செய்கின்றனர். கல்விக் குழுவின் திட்டப்படி 1964-66-ஆம் ஆண்டுகளில் 15 முதல் 20 ஆண்டுகளுக்குள் அனைவருக்கும் கல்வி அளிக்க வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருந்தது. முதியோர் கல்வித்திட்டமும் தீவிரமாக விரிவுபடுத்தப்பட்டது. ஆயினும் முதியோர் கல்வித் திட்டத்தில் அதிக மகளிர் பங்கு பெற ஊக்குவிக்கப்படவில்லை. ஊரகங்களில் இன்னும் பல சுகாதார மையங்கள் திறக்கப்பட வேண்டும். இருக்கின்ற சுகாதார மையங்கள் திறமையாகச் செயற்பட வேண்டும். மருத்துவக் கல்வி கற்ற மருத்துவர்கள் பலர் ஊரக வளர்ச்சியில் பங்கு பெற அவர்களுக்குத் தேவையான வசதிகள் ஊரகங்களில் நிறுவப்பட வேண்டும்.

ஊரக வளர்ச்சியில் சுற்றுப்புறச் சூழல், தூய்மைப் பாதுகாப்பு, கழிப்பிட வசதி முதலிய அடிப்படைச் சுகாதாரங்களை வலுக்கட்டாயமாகவாவது புகுத்தல் வேண்டும். புறக்கணிப்பவர் தண்டிக்கப்படுவது தொடக்ககாலத்தில் தவிர்க்க முடியாததாயிருக்க

லாம். நகர்ப்புறக் கல்லூரி மாணவர் மாணவியர் பலர் தங்கள் தொண்டர் படை மூலமாக ஊரக வளர்ச்சிக்கு உறுதுணையாகின்றனர். இப்பணி பாராட்டத் தக்கதாகும். ஊரகங்களை அவர்கள் தத்தெடுத்து அவற்றின் வளர்ச்சிப் பணியில் பெரிதும் ஆர்வம் காட்டுவது குறிப்பிடத்தக்கதாகும். அரசு பல்வேறு திட்டங்களைத் தீட்டி ஊரக வளர்ச்சிக்கு ஒத்துழைப்புத் தருகின்றது. அரசுடன் மக்களும் இணைந்து செயற்பட்டால் ஊரகங்களுக்குச் சிறந்த தோர் எதிர்காலம் அமையும். ஒவ்வொருவரும் தம் மால் இயன்ற பணியைத் தம் பங்காகச் செய்தலால் ஊரகம் நலம் பெறுகின்றது. ஊரக வளர்ச்சியால் நாடும், நாட்டு நலத்தால் உலகமும் நலம் பெறும்.

அ.கோ.

**ஊரம்பலம்:** மக்கள் பலரும் தங்கள் வீடு களை அமைத்துக்கொண்டு வாழும் இடம் ஊர் எனப் பட்டது. பழங்காலத்தில் தமிழகத்தே சிறு நகரங் களுக்கும் ஊர் என்று பெயர் வழங்கியதுண்டு. ஒவ் வோர் ஊரிலும் அதன் உள்ளாட்சியைக் கவனிக்கும் பொருட்டு ஊராட்சி மன்றம் இருந்தது. அதற்குப் பொதியில், அம்பலம், அவை என்னும் பெயர்கள் பழங்காலத்தில் வழங்கி வந்தன. ஊராட்சியைக் கவனிக்க அமைந்தது ஊரம்பலமாகும். பலரும் கூடு வதற்கு வாய்ப்பாக ஊரில் வளர்ந்திருந்த பெரிய ஆலமர நிழலில் ஊர் அம்பலம் நடைபெற்றது. ஊரார் அனைவரும் அங்குக் கூடிப் பொதுப்பணிகள் குறித்துத் திட்டமிட்டனர். ஆடலும், பாடலும், விளை யாட்டுகளும் அங்கு நடைபெறுவதுண்டு. ஊர்த் தெய்வ வழிபாடு நடத்தும் இடமாகவும் அது விளங் கியது. இங்ஙனம் ஊரார்க்கு உயிர்நாடியாக இருந்த ஊரம்பலம் பகையரசரால் கைப்பற்றப்பட்டுக் கழுதை ஏர்கொண்டு உழப்படுமாயின், அவ்வூர் பகைவர் கைப்பட்டது என்பது பொருளாகும்.

ஊரம்பலம் ஊர் மக்களின் சமுதாய வாழ்விலும், சமய வாழ்விலும் பிணைந்திருந்த எல்லாச் செய்தி களையும் பற்றி ஆராய்ந்தது. ஊரார் வழக்குகளைத் தீர்த்தல், தண்டனை விதித்தல், ஊர் நிலங்களை வாங்கல் அல்லது விற்றல், ஊர்ப் பொதுவான விழாக் களையும் கொண்டாட்டங்களையும் நடத்துதல் முதலிய செயல்களை இவ்வம்பலம் மேற்கொண்டி ருந்தது.

ஊரம்பலத்தின் உறுப்பினர்கள் ஊர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். வாக்காளர் ஊரின் தன் பகுதிக்குரிய சார்பாளர்களின் பெயர்களை எழுதிக் குடத்தில் போடுவர். பின்னர் அக்குடத்தினைமூடி அதன்மேல் அரசாங்க இலச்சினை வைப்பர். அதி காரிகள் அம்முத்திரையை நீக்கி ஒவ்வொரு ஓலை யாகப் படிப்பர். இங்ஙனம் தேர்ந்தெடுக்கப்பட்ட வர்கள் கல்வி கேள்விகளில் சிறந்திருந்தனர். அவர் களுள் அறிவிலும் வயதிலும் மூத்தவர் அவைத் தலைவராக வீற்றிருந்தார்.

பண்டைத் தமிழகத்தில் தன்னாட்சி நிலவி வந்தமைக்கு ஊரம்பலம் சான்றாக விளங்குகிறது. இந்த வித்திலிருந்து முளைத்து வளர்ந்ததுதான் சோழர் காலத்திய 'கிராம ஆட்சி முறை'யாகும்.

ஆர்.ம.

**ஊரல் மலைத்தொடர்** ஐக்கிய சோவியத்துச் சமதருமக் குடியரசில் (உருசியா) வடக்கே காராக் கடலிலிருந்து தெற்கே மத்திய ஆசியாவில் உள்ள ஏரல் கடலின் அருகு வரையிலும் பரவியுள்ளது. ஐரோப்பாக் கண்டத்திற்கும் ஆசியாக் கண்டத்திற் கும் இடையே எல்லையாக இம்மலைத் தொடர் அமைந்துள்ளது. இதன் நீளம் ஏறத்தாழ 2000 கி.மீ. ஆகும்.

ஊரல் மலைத் தொடரின் (Ural Mountains) வடகோடிப் பகுதி உயரம் குறைவாகவும், எளிதில் கடப்பதற்கு வசதியாகவும் உள்ளது. இப்பகுதியில் தூந்திரப் பகுதி தட்பவெப்பநிலை நிலவுவதால் இங்கு மோசசு, இலிச்சன்சு போன்ற பயிர்பச்சைகள் மட்டுமே வளர்கின்றன.

இம்மலைத் தொடரின் வடக்குப் பகுதி அகலம் குறைவாகவும் உயரம் மிகுதியாகவும் உள்ளது. இங்குள்ள நரோத்நயா என்ற இடம்தான் ஊரல் மலைத்தொடரிலேயே மிகவும் உயரமான இடமாகும். இதன் உயரம் 1894 மீட்டர்களாகும். இப் பகுதியில் ஊசியிலைக்காடுகள் உள்ளன.

ஊரல் மலைத்தொடரின் மத்தியபகுதி உயரம் குறைவாகவும் அகலமாகவும் எளிதில் கடந்து செல்லக் கூடியதாகவும் உள்ளது. இங்குப் பல வகை மரங்கள் நிறைந்த காடுகள் உள்ளன. பிரிச்சு (Birch) மரங்கள் நிறையக் காணப்படுகின்றன.

இம்மலைத் தொடரின் தெற்குப் பகுதி மிக அகலமாகவும், உயரமான மலைகளுக்கு இடையே ஆழ்ந்து அகன்ற பள்ளத்தாக்குகள் உடையதாகவும் உள்ளது. ஊரல் ஆறு இங்கு உற்பத்தியாகித் தென் மேற்கே பாய்ந்து சென்று, காசுபியன் கடலில் (Caspian Sea) கலக்கிறது. இப்பகுதியில் அகன்ற இலையுதிர்க் காடுகள் உள்ளன. ஓக்கு, பிரிச்சு ஆகிய மரங்கள் மிகுதியாக வளர்கின்றன. இக்காடுகளுக்குத் தெற்கே வன் பாலைப் புல்வெளி உள்ளது. இப்புல்வெளிப் பகுதியின் மண் ஓரளவு வளமானது. இங்கு ஓட்சு,

பார்லி, கோதுமை, 'ரை' (Rye) போன்ற பல்வேறு பயிர்கள் விளைவிக்கப்படுகின்றன. ஆடு, மாடு, குதிரைகள் முதலியன வளர்க்கப்படுகின்றன. பால் பண்ணைகளும் பழத்தோட்டங்களும் மிகுதியாக உள்ளன.

காட்டுவளம் மிகுந்த ஊரல் மலைத்தொடர் கனிவளமும் நிறைந்ததாகும். உலகில் மிகுதியாகத் தாதுப் பொருள்கள் கிடைக்கும் இடங்களில் இம் மலைத் தொடரும் ஒன்று. இங்கு ஆயிரத்துக்கும் மேற்பட்ட தாதுப் பொருள்கள் கிடைக்கின்றன. ஒண்கனிமக்கல் (Uranite) வகை முதன்முறையாக இங்குத்தான் கண்டுபிடிக்கப்பட்டது. தங்கம், வெள்ளி, தாமிரம், இரும்பு, நிலக்கரி, உப்புப் போன்ற பல் வகைப் பொருள்களும் கிடைக்கின்றன. இதன் அருகில் உள்ள எண்ணெய் வயலில் எண்ணெயும் எரிவாயுவும் கிடைக்கின்றன. மொத்தத்தில், 'கனிவளங்களின் காட்சிக்கூடம்' என்று கூறத்தக்க அளவிற்கு ஊரல் மலைத்தொடர் கனிவளம் நிறைந்ததாகும்.

தாதுப் பொருள்கள் கிடைக்கும் இடங்களைச் சுற்றித் தொழிற்சாலைகள் தோன்றியுள்ளன. இங்கு 1917-ஆம் ஆண்டுப் புரட்சிக்குப் பின்னர்த் தொழில் வளம் பன்மடங்கு பெருகியுள்ளது. ஊரல் பகுதியில் உள்ள ஓர்சுக்கு (Orsk), மேக்னிடோகோர்சுக்கு (Magnitogorsk) ஆகியன உருசியாவில் இரும்புத்தாது உற்பத்தியில் சிறப்பான நகரங்களாகும். உருசியாவின் ஆண்டு உற்பத்தியில் இவை மூன்றில் ஒரு பாகம் உற்பத்தி செய்கின்றன. உருக்கு உற்பத்தியில் மேக்னிடோகார்சுக்கு, நிசினிடாசில் (Nisinidaschil) ஆகிய நகரங்கள் புகழ் பெற்றவையாகும். அ.இரா.

**ஊராட்சி ஒன்றியங்கள்**: இந்தியாவில் 1958-ஆம் ஆண்டுக்குப் பின்னர்ப் பல மாநிலங்களிலும் அமைக்கப்பட்டுள்ள புதியவகை மூன்றடுக்கு உள்ளாட்சி நிறுவனங்களின் (Three tier System) நடுவில் அல்லது இரண்டாம் அடுக்கில் உள்ள உள்ளாட்சி நிறுவனம் ஊராட்சி ஒன்றியம் அல்லது பஞ்சாயத்து ஒன்றியம் (Panchayat Union) எனப்படும். உள்ளாட்சிச் சுய அரசாங்கம் என்பது (Local self-Government) மக்களுடைய பேராளர்களடங்கிய ஒரு மன்றமாகவும், வாக்காளர்களின் தொகுதிக்குப் பொறுப்பாகவும் இருந்து, வரிவிதிப்பிலும் நிருவாகத்திலும் விரிவான அதிகாரங்களைப் பெற்று, ஆட்சிப் பொறுப்பில் மக்களுக்கு ஒரு பயிற்சிக்களமாகவும், நாட்டின் அரசாங்கத்தை உருவாக்கும் பல அமைப்புகளுக்கு முக்கிய இணைப்பாகவும் இருக்கிறது. இந்தப் பொருளில் இந்தியாவில் ஓரளவு சுய அரசாங்கத்தை ஆங்கில அரசாங்கம் கி.பி. 1882-ஆம் ஆண்டிலிருந்து படிப்படியாக ஏற்படுத்திற்று.

இந்தியா 1947-ஆம் ஆண்டில் முழுத் தன்னுரிமை பெற்றபின், பொருளாதார வளர்ச்சிக்காக ஐந்தாண்டுத் திட்டங்கள் வரையப்பட்டு நிறைவேற்றப்பட்டன. வளர்ச்சித் திட்டங்கள் தம் குறிக்கோள்களுக்கிணங்க நிறைவேற்றப்படுதல் வேண்டுமானால், அவற்றை நிறைவேற்றுதலில் நாட்டு மக்களுக்குப் பங்கு இருத்தல் வேண்டுமென்ற காரணத்தினாலும், மக்களுள் 75 விழுக்காட்டினர் ஊரகப்பிரிவுகளில் (Rural Areas) வாழுதலினாலும், அவர்களுடைய ஊரக ஆட்சிமன்றங்களில் அவர்களுக்குப் பங்கு இருக்கும்படியாக, அவை குடியாட்சி முறையை ஒட்டி (அதாவது தேர்தல் முறையின் வாயிலாக) அமைக்கப்படுதல் வேண்டுமென்று ஒரு புதிய அணுகுமுறை தோன்றிற்று. குடியாட்சி இயல்புடைய அதிகாரப் பரவல் (Democratic Decentralisation) என்ற கொள்கையின் அடிப்படையில், உள்ளாட்சி மன்றங்களுக்கு அதிகாரங்களும் பொறுப்புகளும் பரவலாக இருக்குமாறு பிரித்தளிக்கப்படுதல் வேண்டுமென்ற கொள்கையை, இந்திய அரசாங்கத்தின் திட்ட இலக்குகளின் குழுவினால் (Committee on Plan Projects) பல்வந்திரேமேத்தா தலைமையில் அமர்த்தப்பட்ட ஓர் ஆய்வுக்குழு (Study Team) கூறிற்று.

நாட்டின் பல்வேறு வளர்ச்சி வட்டாரங்களில் 1956-ஆம் ஆண்டில் செயற்பட்டு வந்த சமுதாய வளர்ச்சித் திட்டங்களைப் பற்றி இந்தக்குழு ஆய்வு செய்து வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுதலில் மக்களுக்கு முழுப்பங்கும் இருத்தல் வேண்டுமானால், பழைய காலத்தில் ஆங்கிலேயரால் நிறுவப்பட்ட மாவட்டக்கழகங்கள் (District Boards) நீக்கப்பட்டு ஊரில் (Village) ஊராட்சிமன்றமும், பல ஊராட்சி மன்றங்களுக்கு இணைப்பாக ஊராட்சி ஒன்றியங்களும் (அல்லது பஞ்சாயத்து ஒன்றியங்களும்), எல்லா ஊராட்சி ஒன்றியங்களுக்கும் இணைப்பாக மாவட்ட அளவில் மாவட்ட வளர்ச்சிக் கழகமும் (District Development Councils) ஆகிய புதியவகை உள்ளாட்சி நிறுவனங்கள் அமைக்கப்படுதல் வேண்டுமென்றும் கூறிற்று. மேலும், இக்குழு புதிய உள்ளாட்சி நிறுவனங்களின் அமைப்பு, அதிகாரங்கள், பணிகள், நிதி ஆதாரங்கள், அவற்றுக்கிடையே உள்ள இணைப்பு, அரசாங்கத்தோடுள்ள தொடர்பு ஆகியவை பற்றியும் பரிந்துரைகள் செய்தது. இக் குழுவின் அறிக்கையை ஏற்றுக் கொண்ட இந்திய அரசாங்கம், அதனை ஒட்டிப் புதியவகை உள்ளாட்சி நிறுவனங்களை நிறுவுமாறு மாநிலங்களுக்கு ஆணை வழங்கியது. இவ்வறிக்கையைப் பெரும்பாலும் பின்பற்றி எல்லா மாநிலங்களும் மூன்றடுக்கு உள்ளாட்சி அரசாங்கத்தை ஏற்

படுத்தியுள்ளன. தமிழ் நாட்டில் 1958-ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட பஞ்சாயத்துகள் சட்டமும் (Panchayats Act), மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் சட்டமும், இவற்றுக்குத் திருத்தங்களாக 1985-ஆம் ஆண்டில் செய்யப்பட்ட சட்டமும் (Act No. XXIV of 1985) இப்போது தமிழ் நாட்டிலுள்ள மூன்றடுக்கு உள் ஆட்சி மன்றங்களுக்கு அரசியலமைப்புச் சட்டங்களாக இருக்கின்றன.

**ஊராட்சி ஒன்றியங்களை அமைக்கும் வழி:** தமிழ் நாடு பஞ்சாயத்துகள் சட்டம், 1958-ஆம் ஆண்டின் படி, பழைய மாவட்டக் கழகங்கள் (District Boards) நீக்கப்பட்டு, அவற்றுக்குப் பதிலாக மாவட்ட அளவில் மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் (District Development Councils) நிறுவப்பட்டு, ஊர்மட்டத்தில் ஊராட்சி மன்றங்களும் (Village Panchayats), இரண்டுக்கும் நடுவிலுள்ள மட்டத்தில் ஊராட்சி ஒன்றியங்களும் (Panchayat Union Councils) நிறுவப்பட்டன. இச்சட்டத்தின்படி, அரசாங்கத்தாலமர்த்தப்பட்ட ஆய்வாளர் ஒருவர் (Inspector) 500 க்குக் குறையாத ஆட்களுள்ள ஒரு நிலவரி ஊரையோ (Revenue Village) அதற்கு நிலத்தொடர்பான இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நிலவரி ஊர்களின் பகுதிகளையோ இணைத்து ஓர் ஊராட்சியாக அறிவிப்புச் செய்கிறார். இதேபோல, சமூக வளர்ச்சியின் தேசிய விரிவுப் பணித் திட்டத்துக்காக ஒரு வளர்ச்சி வட்டாரமாக (A Development Block for the purposes of the National Extention Service Scheme of the Community Development) அமைந்துள்ள உள்ளூர்ப் பிரிவை (Local Area) வளர்ச்சி வட்டாரமாகவும் (Development Block) வளர்ச்சி வட்டாரத்தைப் பஞ்சாயத்து அல்லது ஊராட்சி ஒன்றியமாகவும் (Panchayat Union) அரசாங்கம் அறிவிக்கிறது. ஊராட்சி ஒன்றியமே வளர்ச்சி வட்டாரத்தை ஆட்சி செய்யும் அதிகாரத்தைப் பெற்றுள்ளது. அது ஒரு கழகமாகவே ஒன்றியத்தின் பெயரில் அமைந்து ஆளும் அதிகாரத்தைக் கையாளுகிறது; அதற்குத் தொடர்ச்சியான வழித்தோன்றல்முறை (Perpetual Succession) உண்டு; பொதுவான முத்திரை உண்டு; சட்டத்தின் விதிகளுக்கு உட்பட்டு அதன் மீது வழக்குத் தொடரப்படுதற்கும், அது வழக்குத் தொடருதற்கும் உரியது. அது சொத்துகளை வாங்கவும் பயன்படுத்தவும் மாற்றவும் ஒப்பந்தங்கள் செய்யவும் தன் பணிகளை நிறைவேற்றுதற்கு வேண்டிய செயல்களைச் செய்யவும் உரிமை பெற்றுள்ளது.

**உறுப்பினர்கள் வகைகள்:** முன்பு (1958-இல்) செய்யப்பட்ட சட்டத்தின்படி, ஊராட்சி ஒன்றியத்தில் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள எல்லா ஊராட்சி மன்றங்களின் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஒவ்வொரு நகரியக் குழுவின் ஓர் அலுவலகத் தொடர்பில்லாத உறுப்பினர், 3 பெண்கள், 3 தாழ்த்தப்பட்ட/பழங்குடி வகுப்பைச் சேர்ந்த, ஊராட்சி ஒன்றியத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட இணை உறுப்பினர்கள் (Co-opted Members) ஆகியோர் உறுப்பினராயிருந்தனர். அச்சட்டத்தின்படி உறுப்பினரின் பதவிக் காலம் 5 ஆண்டுகளாக இருந்தது. ஆனால், மேற்படி சட்டத்துக்கு 1985-ஆம் ஆண்டில் செய்யப்பட்ட ஒரு திருத்தத்தின்படி (Act No. XXIV of 1985), உறுப்பினர்களின் பதவிக்காலம் 3 ஆண்டாகக் குறைக்கப்பட்டு, உறுப்பினர் வகைகளிலும் சில மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளன. அதன்படி ஊராட்சி ஒன்றியத்தில் 6 வகை உறுப்பினர்கள் இருக்கின்றனர்:

1. ஒன்றியக் குழுத் தலைவர் (Chairman of the Panchayat Union Council): இவர் முன்பு ஒன்றியக் குழுவின் உறுப்பினர்களான ஊராட்சி மன்றத் தலைவர்களால் அவர்களிடையே இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால், இப்போதைய திருத்தச் சட்டத்தின்படி, இவர் ஊராட்சி வாக்காளர்களாலேயே நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.
2. ஊராட்சி ஒன்றியத்தின் எல்லையிலுள்ள எல்லா ஊராட்சி மன்றத் தலைவர்கள் (பேரூராட்சித் தலைவர்கள் உள்பட).
3. ஒன்றியத்திலுள்ள நகரியக் குழுவினால் (Township Committee) முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட அலுவலகச் சம்பந்தப்படாத ஓர் உறுப்பினர் (Non-official Member).
4. ஊராட்சி ஒன்றிய எல்லையின் வரம்புடைய (Jurisdiction) சட்டப்பேரவை மற்றும் சட்ட மேலவை உறுப்பினர்கள் (இவர்களுக்கு வாக்குரிமை இல்லை).
5. விகிதாச்சார எண்ணிக்கைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட இணை உறுப்பினர்கள் (Co-opted Members).
6. விகிதாச்சார எண்ணிக்கைப்படி மாவட்ட ஆட்சித் தலைவரால் நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்கள்.

**இணை உறுப்பினர்களின் விகிதாச்சாரம்:** நியமிக்கப்படும் உறுப்பினர்கள் அல்லது தேர்ந்தெடுக்கப்படும் இணை உறுப்பினர்களுடைய விகிதாச்சாரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஊராட்சி மன்றங்களின் எண்ணிக்கைக்குத் தக்கவாறு விதிக்கப்பட்டுள்

ளது. (1) 12 ஊராட்சிகளுக்கு மேற்படாத எண்ணிக்கை உடைய ஊராட்சி ஒன்றியம் என்றும், (2) 12க்கும் 20க்கும் இடைப்பட்ட ஊராட்சிகளுள்ள ஒன்றியம் என்றும், (3) 20க்கும் மேற்பட்ட ஊராட்சிகளுள்ள ஒன்றியம் என்றும் மூவகையாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

களில் கூட்டம் நடத்தக் கூடாது. அடுத்தடுத்த இரு கூட்டங்களுக்கு இடைப்பட்ட காலம் 60 நாட்களுக்கு மேல் இருத்தல் கூடாது. கூட்டம் நடைபெறும்போது அமைதியையும் ஒழுங்கையும் மன்றத் தலைவர் பாது காப்பார்; எந்த ஒரு சிக்கலிலும் மன்றத் தலைவர் முடிவே இறுதியானது. ஒன்றியக் குழு நான்கு வகை

| ஒன்றியக் குழுவால் தேர்ந்டுெக்கப்பட வேண்டிய | | மாவட்ட ஆட்சித் தலைவரால் நியமிக்கப் பட வேண்டிய | |
|---|---|---|---|
| தாழ்த்தப்பட்ட வகுப்பு உறுப்பினர் | பெண் உறுப்பினர் | தாழ்த்தப்பட்ட வகுப்பு உறுப்பினர் | பெண் உறுப்பினர் |
| வகை (1) 1 | 1 | 1 | 1 |
| வகை (2) 3 | 3 | 1 | 1 |
| வகை (3) 5 | 5 | 2 | 2 |

(மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுள் தாழ்த்தப்பட்ட வகுப்பினரும் பெண்களும் இருந்தால் அவர்கள் எண்ணிக்கையைக் குறைத்துக் கொள்ள வேண்டும்).

ஒன்றியக்குழு உறுப்பினர்களின் மனைவி அல்லது கணவர் ஆகியோரை இலண உறுப்பினராகத் தேர்ந் தெடுக்கவோ நியமிக்கவோ கூடாது. மேலும், 21 வயது நிறையாதவரையும் நியமிக்கவும் தேர்ந் தெடுக்கவும் கூடாது. ஒன்றியக்குழு உறுப்பினர்களி டம் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த பெண்கள் இருந்தால் அவர்களைத் தாழ்த்தப்பட்ட உறுப்பினர் எண்ணிக்கையில் கணக்கிடக்கூடாது. ஒன்றியக் குழு வின் இணை உறுப்பினர்கள் தேர்வில் சமமான வாக்குப் பெற்றுள்ள ஒவ்வொரு நிலையிலும் ஒன்றி யக் குழுத் தலைவர் முடிவுவாக்கு (Casting Vote) வழங்கித் தீர்மானிக்கலாம். ஒன்றியக்குழு தேர்ந் தெடுக்கும் இணை உறுப்பினர் பற்றிய தீர்மானத்தை ஊரக வளர்ச்சி இயக்குநர் தள்ளுபடி செய்தல் கூடும்.

**ஒன்றியக் குழுவின் நிகழ்ச்சி நிரல் தயாரித்தல்:** தலைவருடன் கலந்து ஆலோசித்து ஆணையாளர் நிகழ்ச்சி நிரலை வரைதல் வேண்டும். மன்றத்தின் ஆலோசனைக்குரியதென்று ஆணையாளர் கருதும் பொருளை அவர் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கலாம். நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்ட எப்பொருளைப் பற்றியேனும் தம் கருத்துகளை ஒரு குறிப்பில் எழுதத் தலைவருக்கும் ஆணையாளருக்கும் உரிமை உண்டு.

மன்றக் கூட்டம் மன்ற அலுவலகக் கட்டிடத்தில் நடத்தப்படுதல் வேண்டும். அரசு விடுமுறை நாட் யான கூட்டங்களை நடத்தலாம். (1) சாதாரணக் கூட்டம்: கூட்ட நடவடிக்கை அறிக்கை, கூட்டம் நடக்கும் இடம், காலம், நாள், பொருள் முதலிய நிரலுடன் கூட்டம் நடைபெறுவதற்கு 5 முழு நாட் களுக்கு முன் கொடுக்கப்படுதல் வேண்டும். (2) அவ சரக் கூட்டம்: அவசரச் சூழ்நிலைகளில் தலைவர் 24 மணிநேரத்துக்குக் குறையாமல் முன் அறிக்கை கொடுத்து ஒரு கூட்டத்தை நடத்தலாம். (3) விசேடக் கூட்டம்: மன்றம் நிறைவேற்றிய ஒரு தீர்மானத்தை அடுத்த 3 மாதங்களுக்குள் அதை மாற்றவும் தள்ளு படி செய்யவும் கூடாது. ஆனால், அதன் பொருட்டு விசேடமாகக் கூட்டப்பட்டுள்ள ஒரு கூட்டத்தில் ஒப்பு அளிக்கப்பட்டுள்ள மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் (Prescribed or Fixed Number of Members) பாதிக்குக் குறையாதவர்களால் ஆதரிக்கப் பட்ட தீர்மான மூலம் அவ்வாறு செய்யலாம். ஒன்றி யத் துணைத்தலைவர் தேர்தலை மன்றத்தின் சிறப் புக் கூட்டத்தில் நடத்த வேண்டும். கூட்டம் நடக் கும் இடம், காலம் முதலியவை 15 நாட்களுக்கு முன் உறுப்பினர்களுக்குக் கொடுத்தல் வேண்டும். (4) வேண்டுகோள் கூட்டம்: நடைமுறைக் காலத்தில் மன்ற உறுப்பினர்கள் 1/3 பங்குக்குக் குறையாதவர் கள் எழுத்து மூலம் வேண்டிக் கொள்ளும்போது, தலைவர் மன்றத்தைக் கூட்ட வேண்டும். வேண்டு கோளில் கூட்டம் நடத்த வேண்டிய காலமும் நோக் கமும் குறிப்பிட்டிருத்தல் வேண்டும். அந்த வேண்டு

கோளைக் கூட்டநாளுக்குக் குறைந்தது 10 முழுநாட்களுக்கு முன்னதாகக் கொடுத்திருத்தல் வேண்டும். வேண்டுகோளில் குறிப்பிட்டுள்ள நாளில் அல்லது அதற்குப் பிறகு 3 நாட்களுக்குள் தலைவர் கூட்டம் கூட்டத் தவறினால், வேண்டுகோளில் கையெழுத்திட்டிருக்கிற உறுப்பினர்கள் மேற்படி அறிக்கையை மன்றத்தில் மற்ற உறுப்பினர்களுக்குக் கொடுத்த பிறகு அக்கூட்டத்தைக் கூட்டலாம்.

**கூட்டத்தலைவர், உறுப்பினர் அதிகாரங்கள்:** ஊராட்சி ஒன்றியத்தின் ஒவ்வொரு கூட்டமும் ஒன்றியத் தலைவரால் தலைமை ஏற்று நடத்தப்படுதல் வேண்டும். ஒன்றியக் குழுத் தலைவர் வாராத சமயங்களில் ஒன்றியக் குழுவின் துணைத் தலைவரும், மேற்படி இருவரும் வாராத சமயத்தில் வருகை தந்துள்ள உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஓர் உறுப்பினராலும் கூட்டம் நடத்தப்படலாம். கூட்டம் நடத்தத் தேவையான குறைவு வரம்பு எண் (Quorum) மன்ற உறுப்பினர்களுள் குறைந்தது 1/3 பகுதியாகும். கூட்டத்துக்கு நிச்சயிக்கப்பட்ட காலத்துக்குப் பிறகு அரை மணிநேரத்துக்குள் குறைவு வரம்பு எண் உறுப்பினர்கள் வந்திராவிட்டால், வந்துள்ள எல்லா உறுப்பினர்களும் இன்னும் காத்திருப்பதற்கு ஒப்புக் கொண்டாலன்றி அக்கூட்டத்தை ஒத்தி வைத்தல் வேண்டும். மன்றத் தீர்மானங்கள் நிறைவேற்றப்படுவதற்குக் கூட்டத்துக்கு வந்துள்ள பெரும்பான்மை உறுப்பினர்களுடைய ஆதரவு வேண்டும். வாக்குகள் சமமாக இருப்பின் கூட்டத்தின் தலைவர் தமது இரண்டாம் அல்லது முடிவு வாக்கு அளித்துத் தீர்மானத்தை முடிவு செய்யலாம். ஒன்றியக் குழுவின் உறுப்பினர்களுக்குள்ள எல்லா உரிமைகளும் ஒன்றியத் தலைவருக்கு இருப்பதால், ஒன்றியத் துணைத் தலைவர் தேர்தலில் அவரும் வாக்கு அளிக்க உரிமை உடையவர். தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்குள்ள உரிமைகளெல்லாம் இணை உறுப்பினருக்கும் உண்டு. சட்டப்பேரவை, மேலவை ஆகியவற்றின் உறுப்பினர்களும் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய மன்றக் கூட்டத்தில் கலந்து கொண்டு விவாதிக்கலாம். ஆனால், வாக்களிக்க உரிமை கிடையாது; ஊராட்சி ஒன்றிய மன்றக் கூட்டத்தில் தீர்மானங்கள் கொண்டு வரலாம்.

**மன்றக் குழுக்கள்:** ஊராட்சி ஒன்றியத்தில் அதனுடைய மன்ற உறுப்பினர்களிடையே இருந்து நான்கு வகைப்பட்ட தனிக்குழுக்கள் அமர்த்தப்படலாம். (1) நியமனக்குழுவின் (Appointment Committee) உறுப்பினர்: 1. ஒன்றியக் குழுவின் தலைவர், 2. ஆணையாளர், 3. ஆண்டுதோறும் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர். இவர்கள் அடுத்த உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்படும் வரை ஓராண்டிற்கு மேலாகவும் நீடித்து இருப்பர். (2) வேளாண்மை உற்பத்திக் குழுவின் உறுப்பினர்: 1. ஒன்றியக் குழுவின் தலைவர், 2. ஆணையாளர், 3. ஊராட்சி ஒன்றியக் குழுவால் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று பேர்: இவர்கள் ஊராட்சி ஒன்றியக் குழுவில் உறுப்பினர்களாக இருத்தல் கூடாது. (3) கல்விக்குழு: (4) பொது வாரியக் குழுவின் (General Purposes Committee) அமைப்பு: 1. தலைவர், 2. உறுப்பினர். உறுப்பினர் எண்ணிக்கை ஒன்றியக் குழுவால் தீர்மானிக்கப்பட்டுத் தேர்வு செய்யப்படுதல் வேண்டும்.

**ஊராட்சி ஒன்றியத்தின் பணிகள்:** ஊராட்சி ஒன்றியத்தின் அமைப்பைப் போலவே அதன் பணிகளும் முக்கியமானவை. தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டத்தின்படி அதற்குக் கொடுக்கப்பட்டிருந்த பணிகள் பலவாகும். அவையாவன: 1. சாலைகள், பாலங்கள் அமைத்தல், பாதுகாத்தல், 2. தாய் சேய் நல விடுதிகள் ஏற்படுத்திப் பாதுகாத்தல், 3. பொதுச் சுகாதாரமும், தொற்றுநோய்த்தடுப்பு நடவடிக்கை எடுத்தலும், 4. கிராம மருந்தகங்கள் அமைத்தல், 5.சந்தைகள் ஏற்படுத்தி நடத்துதல், 6. வேளாண்மைத் தொழிலை மேம்படுத்தல், 7. கால்நடைப் பாதுகாப்பு, 8. ஏரிகள், நீர்ப்பிடிப்பு, குளங்கள் அமைப்பும் பாதுகாப்பும், 9. குடிசைத் தொழில் வளர்ச்சி, 10. கிராமக் குடிநீர்த் திட்டம், 11. பள்ளிக் கட்டிடம் கட்டுதல், 12. இணைப்புச் சாலைகள் அமைத்தலும் பாதுகாத்தலும்.

இப்பணிகள் எல்லாவற்றையும் அவ்வவற்றுக்குரிய அரசாங்க ஆட்சித் துறைகளே இப்பொழுது ஏற்று நடத்துகின்றன. எடுத்துக்காட்டாக வேளாண்மைத் தொழிலை மேம்படுத்துதல் வேளாண்மைத் துறையிடமும், சாலைகள் அமைப்புப் பணிகள் நெடுஞ்சாலைத் துறையிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளன. ஆயினும், நடுவண் அரசாங்கத்தின் நிதி உதவியோடு ஊராட்சி ஒன்றியத்தின் வாயிலாக முகமைப் பணிகள் (Agency Schemes) நிறைவேற்றப்படுகின்றன. அவையாவன: 1. குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம், 2. சிறுசேமிப்புத் திட்டம், 3. தேசிய கரிம வாயுத் (Biogas) திட்டம், 4. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், 5. தீவிர வேளாண்மை உற்பத்திப் பெருக்குத் திட்டம், 6. தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம், 7. நிலமற்றோர் வேலை உறுதியளிப்புத் திட்டம், 8. முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத்திட்டம், 9. கண்ணொளி வழங்குந் திட்டம், 10. வறட்சி நிவாரணப் பணித் திட்டம்,

11. ஆதிதிராவிடர்களுக்கு வீடுகட்டும் திட்டம், 12. ஏனைய திட்டங்கள்.

**தலைவர், உறுப்பினர், ஆணையர், அதிகாரங்கள், பணிகள்:** ஒன்றியத் தலைவர் ஒன்றிய மன்றக் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்தல், ஒன்றியப் பதிவேடுகளைப் பாதுகாத்தல், ஒன்றியத்துக்கும் அரசாங்கத்துக்குமிடையே கடிதப் போக்குவரத்து நடத்துதல் முதலிய பணிகளைச் செய்கிறார். ஒன்றியப் பணி ஏதேனும் புறக்கணிக்கப் பட்டிருப்பின் அதை ஆணையாளரின் பார்வைக்குக் கொண்டுவர உறுப்பினர்களுக்கு அதிகாரம் உண்டு. ஆணையாளர் (Commissioner) ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்துக்கும் நிருவாக அதிகாரியாக (Executive Authority) அமர்த்தப்படுகிறார். அவருக்கு அளிக்கப்படும் ஊதியம், படிகள் முதலியவையெல்லாம் ஒன்றிய நிதியிலிருந்து அளிக்கப்படமாட்டாது. ஒன்றிய மன்றம் நிறைவேற்றும் எந்தத் தீர்மானத்தையும் அரசாங்கத்தின் இறுதித் தீர்ப்புக்கு அனுப்பவும், ஒன்றியத்தின் பணியாளர்களையெல்லாம் கட்டுப்படுத்தவும், சட்டத்தின்படி பணிகளை நிறைவேற்றவும் ஆணையாளருக்கு அதிகாரங்கள் உண்டு. ஒன்றிய மன்றத்தின் கூட்டங்களிலும், அதன் குழுக்களின் கூட்டத்திலும் கலந்து கொள்ளவும், விவாதங்களில் கலந்து கொள்ளவும், ஆணையாளருக்கு அதிகாரம் உண்டு. ஆனால் தீர்மானங்கள் கொண்டுவரவோ வாக்களிக்கவோ அவருக்கு உரிமை இல்லை. ஒன்றியத் தீர்மானங்களை நிறைவேற்றுதலில் உள்ள முன்னேற்றத்தைப் பற்றிய அறிக்கையை ஒன்றியம் கேட்கும்போது அவர் அளித்தல் வேண்டும். சட்டத்தின்படி ஆணையர் செய்யவேண்டிய பணிகளைப் பற்றி வேண்டும்போது அவருக்கு ஆணைகளை விடுத்தற்கு ஒன்றிய மன்றத்துக்கு உரிமை உண்டு. சாதாரணச் சூழ்நிலைகளில் ஒன்றிய மன்றத்தின் ஒப்புதலோடு செய்யப்பட வேண்டிய பணிகளை, நெருக்கடி நிலைகளில் பொது மக்களின் நலனையும் பாதுகாப்பையும் கருதி, ஆணையாளர் நிறைவேற்றுதற்கு ஆவன செய்து, அவ்வாறு எடுத்த நடவடிக்கைகளை மன்றத்துக்கு அறிவித்தல் வேண்டும். மன்றத்தால் தடைவிதிக்கப்பட்டுள்ள எந்தப் பணியையும் ஆணையாளர் செய்தல் கூடாது. ஒவ்வோர் ஒன்றியத்திலுள்ள அனைத்து ஊராட்சி மன்றங்களிலிருந்து வரும் ஆண்டு ஆட்சி அறிக்கைகளைத் தொகுத்து அதையும், ஒன்றியத்தின் ஆண்டு ஆட்சி அறிக்கையை எழுதி ஒன்றிய மன்றத்தின் ஒப்புதலுடன் அதையும் மாவட்ட ஆட்சியருக்கு அனுப்புதல் வேண்டும்.

**ஊராட்சி ஒன்றிய நிதி (Panchayat Union Fund):** (1) ஊராட்சி ஒன்றியப் பொது நிதி (Panchayat Union General Fund) என்றும், (2) ஊராட்சி ஒன்றியக் கல்வி நிதி (Panchayat Union Education Fund) என்றும் இருவகை ஆதாரங்கள் இருக்கின்றன. ஊராட்சி ஒன்றியப் பொது நிதியில் 22 வருமான ஆதாரங்கள் (த.ப. சட்டத்தின் படி) குறிப்பிடப்பட்டுள்ளன. உள்ளூர்க் கட்டணத்தில் ஒரு பகுதி (Local Cess), உள்ளூர்க் கட்டணக் கூடுதல் வரி (Local Cess Charge), இதற்கு இணையாக அரசாங்கம் அளிக்கும் மானியம் (Matching Grant), உள்ளூர்ச் சாலை மானியம், உரிமைக் கட்டணங்கள் (Fees on Licences), சந்தைக் கட்டணங்கள், ஊராட்சிகளின் சந்தைகளுக்கான கட்டணங்களின் ஒரு பகுதி, ஒன்றிய மருத்துவ சாலைக் கட்டணங்கள், கேளிக்கை வரிகளின் பகுதி, கடன்கள் மீதான வட்டிகள் முதலியவை பொது நிதி வருமான ஆதாரங்களுள் சிலவாகும். ஊராட்சி ஒன்றியக் கல்வி நிதியில் உள்ளூர்க் கட்டணத்தில் 4/5 பங்கு, நிலவரி வருமானத்துக்கு இணையாக அரசாங்கம் தரும் மானியம் முதலியவை வருமான ஆதாரங்களுள் சிலவாகும். ஆணையாளர் ஒவ்வோராண்டிற்கும் உள்ள உத்தேச வருமானங்களையும், செலவினங்களையும் குறிப்பிட்டு, ஒன்றிய ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை அரசாங்க விதிப்படி வரைந்து, குறிப்பிட்ட நாளில் ஓர் அரசாங்க அதிகாரியின் பரிசீலனைக்கு அனுப்புகிறார். அரசாங்க அதிகாரி சட்டப்படி செலவினங்களுக்கு வழிசெய்யப்பட்டுள்ளதா என்று திட்டத்தை ஆய்வு செய்து, தக்கவாறு செலவினங்களுக்கு நிதி ஒதுக்கப்படவில்லை என்று கருதினால், அதைக் குறிப்பிட்டு ஒன்றியத்துக்குத் திட்டத்தைத் திருப்பி அனுப்பலாம். ஊராட்சி ஒன்றியக் கல்வி நிதிக்காக ஒரு தனி வரவு செலவுத்திட்டத்தை ஆணையாளர் எழுதி அனுப்புதல் வேண்டும். ஊராட்சி ஒன்றியத்தின் பொது நிதிக்கான கணக்குகளையும் கல்வி நிதிக்கான கணக்குகளையும் அரசாங்கத் தணிக்கையாளர் தணிக்கை (Audit) செய்து, அறிக்கையை ஒன்றியத்துக்கும் அரசாங்கத்துக்கும் அனுப்புகிறார். தணிக்கை அறிக்கையில் (Audit Report) சுட்டிக் காட்டப்பட்டுள்ள தவறுகளை ஒன்றியம் நீக்கி, அதனை அரசாங்கத்துக்கு அறிவித்தல் வேண்டும்.

**அரசாங்கத்துக்கு ஊராட்சி ஒன்றியத்தின் மீதான கட்டுப்பாடுகள்:** ஊராட்சி ஒன்றியமும் மற்றெல்லா உள்ளாட்சி நிறுவனங்களைப் போன்று சட்டப்படியாக மாநில அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டதாகும். மாநில அரசாங்கம் உள்ளாட்சியைவிட அறிவிலும் அனுபவத்திலும் உயர்ந்ததாகையால், அதனுடைய வழி நடத்தும் முறை உள்ளாட்சிக்குப் பயன்தருவதாகும். மேலும், உள்ளாட்சிகளின் திறமையை வளர்க்கவும், உள்ளாட்சி

களுக்கிடையே தோன்றும் பூசல்களை நீக்கவும், சமூகச் சீரமைப்புக்கான நிதிகளை வரியாகத் திரட்டு மாறு உள்ளாட்சிகளைத் தூண்டவும் அவற்றின்மீது கட்டுப்பாடு தேவைப்படுகிறது. மாநிலச் சட்ட மன்ற மானது உள்ளாட்சிகளை நிறுவுதற்கான சட்டங் களைச் செய்தும், அவற்றின் வாயிலாக ஒன்றியங் களின் அதிகாரங்களையும் பணிகளையும் தேர்வு முறைகளையும் பதவிக்காலத்தையும் வரையறை செய்தும் ஒன்றியத்தைக் கட்டுப்படுத்துகிறது. நிரு வாக அல்லது ஆட்சித் துறையானது சட்டமன்றம் இயற்றிய சட்டங்களுக்கு உதவியாகத் துணை விதி களை வகுத்து, அவற்றின் வாயிலாக ஒன்றியங்களைக் கட்டுப்படுத்துகிறது. ஒன்றிய மன்றங்களின் தீர்மானங் களைப் பரிசீலனை செய்தும், அவற்றையும் வரவு செலவுத் திட்டங்களையும் நியமனங்களையும் தள்ளு படி செய்தும், உள்ளாட்சிகளுக்கு அறிவுரை வழங்கி யும், ஆய்வாளர்களைக் (Inspectors) கொண்டு ஆய்வு கள் நடத்தியும், உள்ளாட்சி தனது பணியைச் செய்யத் தவறும்போது அதனை அரசாங்க அதிகாரி களைக் கொண்டு நிறைவேற்றியும், உள்ளாட்சி களுக்கு உதவி மானியங்கள் வழங்கியும், உள்ளாட்சி களிடமிருந்து ஆண்டு ஆட்சி அறிக்கையை வரவழைத் தும், உள்ளாட்சியின் எந்த ஒரு தீர்மானத்தையும் நிறைவேறாதபடி தடுத்தும், ஒன்றிய மன்றத்தைக் கலைத்துவிட்டுப் புதிய தேர்தலுக்கு ஏற்பாடு செய் தும், ஒன்றிய மன்றத்தைச் செயற்படாமல் நிறுத்தி வைத்தும் (Supercede) அரசாங்க ஆட்சித்துறை ஒன்றியத்தைக் கட்டுப்படுத்துவதற்குச் சட்டத்தின் படி அதிகாரம் பெற்றுள்ளது. பா.சூ.

**ஊராளி** தமிழ் நாட்டிலும் கேரளாவிலும் வாழும் பழங்குடியினர். தமிழ் நாட்டில் இவர்கள் மதுரை, திருச்சி மாவட்டங்களிலும் அதனைச் சுற்றிய அண்டைய மாவட்டங்களிலும் காணப்படுகின்றனர். இவர்கள் 1,800 அடி வரை உயரமுள்ள திம்பூம் மலைப் பகுதிகளில் மிகுதியான எண்ணிக்கையில் வாழ்கின்றனர்.

ஊராளியினர் (Urali) ஏழு குலங்களாகப் பாகு படுவர். இவர்கள் பில்லையா (Billaya) என்னும் மூதாதையரின் வழிவந்தவர்கள் எனக் கூறுவர். இவர் களுள் சிலர் தங்களை இருளர் என்றும் கூறிக் கொள் வர். இவர்கள் தோன்றிய மரபுக் கதைப்படி இவர் கள் சோளகாவினருடன் (Sholagas) மிகுந்த தொடர் புடையவர்களாதலால் சோளகாவினரும் ஊராளியின ரும் காரையன் (Karayan) என்னும் மூதாதையரிட மிருந்து தோன்றியவர்கள் எனக் கூறப்படுவர். இவர் கள் மலையாளமும் தமிழும் கலந்த கிளைமொழியைப் பேசுகின்றனர்.



ஊராளி ஆடவன்

இவர்களது வாழ்க்கைப் பொருளாதாரம் வேட்டையாடி உணவு சேகரிக்கும் பொருளாதார அமைப்பைச் சார்ந்தது. மெழுகு, தேன், சாயப் பொருள்களுக்குத் தேவையான மரப்பட்டைகள், மருந்துத் தாவரங்கள், கிழங்குகள், மரக்கொட்டைகள் முதலானவற்றைச் சேகரித்து ஒரு பகுதியைச் சந்தை யில் விற்கின்றனர். காட்டுத் துறையினரால் வழங்கப் பட்ட நிலங்களில் இவர்கள் சாமை, தினை, சோள வகைகள் முதலானவற்றைப் பயிரிடுகின்றனர். நிலத்தைப் பெற்றுக் கொண்ட இவர்கள் காட்டுத் துறையினருக்கு வேலை செய்கின்றனர்.

'சம்பீ' (Sambe) எனப்படும் புறமணக் குழுத் தலை வன் இவர்களிடையே எழும் சிக்கல்களைத் தீர்த்து வைக்கிறான். இவன் 'எசமான்' எனவும் கூறப்படு கிறான். இந்தத் தலைமையுரிமை மரபுவழி வருவ தாகும். இவனுக்குத் துணைபுரியக் கல்கட்டி (Kal-katti), கோல்காரா (Kolkara), குரிநங்கா (Kurinanga) ஆகிய குழுக்களிலிருந்து சிலர் நியமிக்கப்படுவர். கோல்காரா குழுவின் பேராளருக்கு மேலும் சில பொறுப்புகள் உள்ளன. இவர் சமூக நடைமுறை களைக் கவனிக்கும் பொருட்டுத் தேவைப்படும் போது பஞ்சாயத்தினரை அழைப்பார். ஊராளிப் பழங்குடியினரின்அனைத்துத் திருமணங்களிலும் இவர்

முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார். இவர்களிடையே காணப்படும் தண்டனை முறைகள் உற்றுநோக்கத்தக்கவையாகும். மணமான பெண் ஒருத்தி தன் கணவனுடன் வாழ மறுத்தால் அவளை மரத்தில் கட்டி அவளது காலடியில் குளவிகளைப் போட்டுக் 'கோல்காரா' பேராளர் விவாதிப்பார். அவள் கணவனுடன் வாழ ஒப்புக் கொண்டால் அந்த இணக்கத்தைக் குறிக்கும் வகையில் கோழியின் மலத்தைக் கொண்டு கோல்காரா பேராளர் அவளது முதுகில் 'நீ தான் என்னுடைய கணவன், எதிர் காலத்தில் உன்னுடன் சண்டையிடமாட்டேன், நான் உனக்குப் பணிந்து நடந்து கொள்கிறேன்' என எழுது வார். அவ்வாறு ஒப்புக் கொள்ளாத பெண் ஈட்டுத் தொகை கொடுத்து வேறொருவரை மணக்கலாம்.

இவர்களின் திருமணமுறை எளிமையானது. பூப்பெய்தியவுடன் பெண் நீராட்டப்பட்டு நகை களால் அலங்கரிக்கப்படுவாள். ஏழு நாட்களுக்குத் தனிக்குடிசையில் அவள் இருக்குமாறு செய்யப்படு வாள். இந்நாட்களில் அவளுடன் துணையாகத் தோழிகள் உடனிருப்பர். எட்டாம் நாள் தோழி களுடன் நீராடி வீட்டின் எதிரிலுள்ள மணையில் அமர்வாள். அனைவருக்கும் வாழையிலையிட்டுச் சுவைமிக்க உணவிடுவர். பூப்பெய்திய பெண் தன் மடியில் ஒரு குழந்தையை வைத்து அதற்கு உணவிட்ட பின் அனைவரும் உண்பர். விருந்தினர் அனைவரும் கைகழுவிய நீரைப் பூப்படைந்த பெண் வெளியே ஊற்ற வேண்டும். இவர்கள் உண்ட இடத்தை அவளே சாணமிட்டு மெழுகிச் சுத்தம்செய்ய வேண் டும்.



மர உச்சிக் குடில்

இவர்களின் திருமணம் குழந்தைத் திருமணம் அல்லது வயது வந்தோர் திருமணம் ஆகும். மண மகனின் தந்தைவீட்டார் இருமுறை மணமகள் வீட் டிற்குச் செல்வர். ஒருமுறை மணமகனுடனும் மற் றொருமுறை மணமகன் இன்றியும் செல்வர். முதல் முறை செல்லும்போது கேழ்வரகினையும் இரண்டாம் முறை செல்லும்போது தினைவகைகளால் செய்யப் பட்ட தின்பண்டங்களையும் எடுத்துச் செல்வர். இவர்களின் குடியிருப்புப் பகுதிகளில் நீரோடைகள் பொதுவாகக் காணப்படும். மணஒப்பந்த விழாவிற்குச் செல்லும்போது இவர்கள் ஆற்றைக் கடக்குங்கால் ஆற்றில் நீர் ஓடினாலும் ஓடா விடினும் மணமகனைத் தாய்மாமன் தூக்கிச் செல்வது இவர்களிடையே உள்ள மரபு. மணமகள் வீட்டை அடையும்போது கோல்காராவும் பஞ்சாயத்து மன்ற உறுப்பினர்களும் பெரியவர்களின் கைத்தடியைப் பெற்றுக்கொண்டு வர வேற்பர். இவ்வாறு செய்யாவிடின் நன்முறையில் வரவேற்பதாகாது என்பது இவர்களின் மரபு. இம் முறையில் வரவேற்பு அளிக்கப்படாமல் போனால் தண்டனை முறையும் உண்டு. திருமண வீட்டின் நுழை வாயிலை அடையும் மணவீட்டாரை நீண்ட கழியால் இடைமறிப்பர். பின் இருசாராரும் மஞ்சள் நீரைத் தெளித்துக் கொண்டபின் அனுமதிக்கப்படுவர். இவர் களிடையே மணவிலக்கும் விதவை மணமும் உண்டு.

ஆவியுலகச் சமய நம்பிக்கை கொண்ட இவர்கள் பல்வேறு ஆவிகளையும் இயற்கைப் பொருள்களையும் வழிபடுகின்றனர். இவர்களது சமயச் செயற்பாடுகளில் சூனியம், மந்திரம், குறிகூறல் முதலானவை முதன்மை யாகக் காணப்படுகின்றன. சீ.ப.

**ஊரிப்பிடிசின் அரசியற் கொள்கைகள்:**
**வாழ்க்கை:** ஏறக்குறைய கி.மு. 484 முதல் கி.மு. 407 -ஆம் ஆண்டு வரை வாழ்ந்த புகழ்பெற்ற கிரேக்கத் துன்பியல் நாடக ஆசிரியர் (Tragedian) ஊரிப்பிடிசு ஏதென்சின் அருகே உள்ள பைலாவில் (Phyla) பிறந் தார். உடற்பயிற்சி, ஓவியம் முதலியவற்றில் இளமை யிலேயே திறமையை வெளிப்படுத்திய ஊரிப்பிடிசு புரோட்டகோரசு (Protagoras), அனக்சகோரசு (Anaxagoras), சாக்கிரட்டிசு (Socrates) முதலிய சிந்தனையாளர்களுடன் தொடர்பு கொண்டிருந்தார். ஊரிப்பிடிசு தாம் எழுதிய நாடகங்களில் தத்துவக்

கருத்துகளையும், ஏதென்சில் தோன்றிய புதிய ஒழுக்கஇயல், சமூக இயல் கருத்துகளையும் சேர்த்து எழுதினார். இவர் எழுதிய நாடகங்களுக்குப் பரிசுகளும் கிடைத்தன. ஆகையால், எசுக்கைலசு (Aeschylus), சோபோக்ளிசு (Sophocles) ஆகிய புகழ்பெற்ற நாடகாசிரியர்களுடைய சிறந்த படைப்புகளை விட இவருடைய நாடகங்கள் மிக உயர்ந்தவை என்று இவர் காலத்தவரால் பாராட்டப்பட்டன. இவர் 'பகுத்தறிவு வாதத்தின் முன்னோடி' (Forerunner of Rationalism) எனப்பட்டார். இவர் காலத்தில் ஏதென்சில் செல்வாக்குப் பெற்றிருந்த போர்க்கட்சியின் கொள்கைகளை இவர் மறுத்ததனால், பலருடைய ஆதரவையும் இழந்து கி.மு. 408-ஆம் ஆண்டில் நாட்டைவிட்டு நீங்கி, மாசிடோனிய நாட்டு அரசருடைய அவையில் தங்கி, அடுத்த ஆண்டில் இறந்தார். இவர் மனிதரின் அன்றாட வாழ்வின் உணர்ச்சிகளைத் தம் நாடகக் காட்சிகளில்பொருத்தமாக இணைப்பதில் வல்லவராக இருந்தார்.

இவர் நாடக ஆசிரியராகப் புகழ்பெற்றிருந்தாலும், பிளேட்டோவுக்கும் அரிசுடாட்டிலுக்கும் முற்பட்ட காலத்திலேயே அதீனிய நகரரசுக் குடிமக்களால் மிகவும் பாராட்டப்பட்டுப் பாதுகாக்கப்பட்ட அரசியற் பண்பாடுகள் சிலவற்றை எழுதி விளக்கியுள்ளார். குடிமகனின் சுதந்திரம் (Freedom of the Citizen), சமத்துவம் (Equality), இயற்கையின் சட்டம் (Law of Nature), நல்ல அரசில் உள்ள நடுத்தர வகுப்பு (The Middle Class in the Best State) முதலியவற்றைப் பற்றிச் சில கருத்துகளை இவர் அளித்துள்ளார். இவை ஊரிப்பிடிசின் அரசியற் கொள்கைகள் (Euripides's Political Ideals) ஆகும். இவர் கிரேக்க மொழியில் எழுதிய நூல்கள் 'வேண்டுகோள்கள்' (The Suppliants) என்றும், 'பொனீசிய நங்கையர்' (Phoenician Maidens) என்றும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

**குடிமகனின் சுதந்திரம்:** ஒரு குடிமகன் தன்னை ஒத்த மற்றக் குடிமகனுடன் கலந்துபேசித் தான் அறிந்த கருத்துகளைக் கூறி, மற்றவர் அதனை ஏற்றுக் கொள்ளுமாறு செய்தலும், மற்றவர் கண்ட உண்மைகளைத் தாம் ஏற்றுக் கொள்ளுவதற்குத் தக்கவாறு தாம் அவருடன் கட்டுப்பாடின்றி முழுமையாகக் கலந்து உரையாடுதலும் பற்றிய சுதந்திரமே குடிமகனின் சுதந்திரமாகும். இத்தகைய சுதந்திரம் குடிமகனுக்குக் கிரேக்க நகரரசின் அரசாங்கத்தால் தான் ஏற்பட இயலும்; எல்லா மனிதருள்ளும் கிரேக்கருக்குத்தான் இத்தகைய அறிவாற்றல் இருக்கிறதென்று, நகரரசின் குடிமகன் நம்பினார். ஒருவர் மற்றொருவருடைய எதேச்சாதிகார விருப்பத்துக்குக் கட்டுப்படுதலென்பதும், ஒவ்வொரு சட்டத்திலுமுள்ள விதிக்கு ஒருவர் தாமே கட்டுப்படுதலென்பதும் வெவ்வேறானவை என்றும் கிரேக்க நகரரசின் குடிமகன் நம்பினார். ஒவ்வொருவரும் தம் தகுதிக்கும் சிறப்புக்கும் ஏற்ப ஆராய்ந்தறியவும், தம் கருத்துகளைக் கூறவும் சுதந்திரம் பெற்றுள்ளார். இதிலிருந்து ஊரிப்பிடிசு மனிதருடைய எதேச்சாதிகார ஆட்சியை வெறுத்தார் என்பது புலனாகும். அதற்குக் காரணம் எதேச்சாதிகாரியானவர் சட்டத்தின் அடிப்படையிலல்லாமல், தம் விருப்பத்தின் அடிப்படையில் வல்லந்தத்தைக் கையாளுகிறார் எனக்கருதியதேயாகும்.எதேச்சாதிகார ஆட்சி நோக்கங்களையும் விளைவுகளையும் பொறுத்தவரையில் நன்மையுடையதாக இருந்தாலும், தன்னாட்சி முறையை அழித்துவிடுகின்ற காரணத்தால், அது வெறுக்கத்தக்கதே ஆகும். ஊரிப்பிடிசு எழுதிய ஒரு பாடலின் பின்வரும் கருத்து இதனை வலியுறுத்துகிறது: 'எதேச்சாதிகாரியைவிடக் கொடிய பகைவன் ஓர் அரசுக்கு இருத்தல் இயலாது. ஏனெனில், அவனுக்குக் கீழ்ப்பட்டயாவருக்கும் பொதுவான சட்டங்கள் இல்லை. அங்கு அவனொருவனே ஆண்டு தனது சொந்தக்கட்டுப்பாட்டில் சட்டத்தை வைத்திருக்கிறான்.' சுதந்திர அரசில் சட்டமே இறைமை உடையது; ஆளுவோர் இறைமை அதிகாரி ஆகமாட்டார். குடிமகனுடைய மதிப்புக்கு உரியதாகச் சட்டம் இருக்கிறது.

**சமத்துவம்:** கிரேக்கர்கள் வாழ்வின் எத்துறையிலும் தீவிரமான நிலையைப் பின்பற்றாமல், எல்லா மக்களும் பங்கு கொள்ளுகின்ற, முரண்பாடில்லாத ஒருமைப்பாடான வாழ்வையே குறிக்கோளாகக் கொண்டிருந்தார்கள். ஆகையால், இவ்வொருமைப்பாட்டிற்கு இன்றியமையாத தராதர உணர்வை (Sense of Proportion), அல்லது 'நீதி' (Justice) என்ற கருத்தை அவர்கள் வலியுறுத்தினர். எவ்வாறு இயற்கைப் பொருளான சூரியன் தனது போக்கினின்று தவறாமல் சென்று உலகத்துக்குப் பெரும் பயன் தருகிறதோ அதுபோலவே இசை, மருத்துவம், இயற்பியல் (Physics), அரசியல் (Politics) முதலியவற்றிலும் நீதி அல்லது தராதரம் என்பது காணப்படுகிறது. எவரும் அளவுக்கு மீறி எதிலும் ஈடுபடுதலாகாது. நடுத்தரமான, குறைவான ஈடுபாட்டுடன் இருத்தலே நன்மை தரும். ஏனென்றால், இயற்கையும் சமூகமும் ஓர் ஒழுங்குக்கு அல்லது சட்டத்துக்குக் கட்டுப்பட்டே இயங்குகின்றன. மனிதனுடைய இயற்கையின் சட்டம் சமத்துவமே ஆகும்.

**இயற்கையின் சட்டம்:** இயற்கையின் சட்டம் கடவுளின் சட்டத்துடன் இணைந்தது; இயற்கையின்

சட்டத்துக்கு மாறான வழக்கம் எதுவும் நேரிது அன்று; இயற்கையின் சட்டமே நேர்மையானது; உண்மையானது. ஆகையால், இயற்கையின் சட்டத்தை ஆதாரமாக வைத்துப் பிறப்பினடிப் படையில் தோன்றிய அடிமை நிலை போன்ற சமூக வேறுபாடுகளைத் தவறு எனக் காணலாம். அடிமை களுக்கு இழிவைத் தருவது அடிமை என்ற பெயரே ஆகும். இப்பெயரைத் தவிர அடிமை என்பவன் சுதந்திரனைவிட எவ்வகையிலும் தாழ்வுற்றுப் போய் விடவில்லை; அவன் உண்மையான ஆன்மாவை உடையவனே.

நடுத்தர வகுப்பின் இன்றியமையாமை: இதனை ஊரிப்பிடிசு எடுத்துக்காட்டுகிறார். அரசின் குடிகளுக் கிடையே பொருளாதார அடிப்படையில் வேறுபாடு இருத்தல் தீமை விளைவிக்கும். எவ்வாறெனில், பொருளாதார நோக்கங்களே அரசியல் செயல்களை உருவாக்கி, அரசியல் குழுக்களை உண்டாக்குகின்றன. ஊரிப்பிடிசு குடிமக்களை மூன்று வகுப்புகளாகப் பிரிக்கிறார். அவையாவன: மேன்மேலும் பொருள் சேர்க்க விரும்பும் பேராசை மிக்க, பயனற்ற செல்வர் வகுப்பு; பொறாமை உணர்விலாழ்ந்து, பொருளேது மின்றி இருக்கும் வறியர் வகுப்பு; அரசைக் காப் பாற்ற வல்ல தன் முயற்சியும் வீரமுமுள்ள நடுத்தர வகுப்பு. இதைப் பின்பற்றியே அரிசுடாட்டிலும் பிற் காலத்தில் தாம் வகுத்த நடைமுறைக்கேற்ற சிறந்த அரசில் செல்வச் சிறுகுடியாட்சியினியல்பும் (Olig- archy) குடியாட்சியினியல்பும் கலந்த ஒரு கலவை அரசியலமைப்பு (Polity) இருத்தல் வேண்டுமென்றும், அதனுடைய சமூக ஆதாரமாக இருப்பது அளவிற் பெரிய நடுத்தர வகுப்பே என்றும் கூறுகிறார். இந்த நடுத்தர வகுப்பே அரசை நிலை குலையச் செய்யாமல் காக்க வல்லது என்றும் கூறுகிறார்.

மதிப்பீடு: சுதந்திரமும் (Freedom) சட்டத்தின் மேலான ஆட்சியும் (Rule of Law) பண்டைய கிரேக் கர்களால் பாராட்டப்பட்ட உயர்ந்த குறிக்கோள் களாகும். நாகரிகமுள்ள இக்காலத்திய சமூகங்களி லும் இக்கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டபடியால், இதனைப் பின்னணியாகக் கொண்டு ஊரிப்பிடிசு கூறும் குடிமகனின் சுதந்திரக் கருத்து மிகவும் நயமான கருத்து ஆகும். சுதந்திரக் குடிமகனுரிமை (Free Citi- zenship or Civic Freedom) என்பதை முதன்முதலில் எடுத்துக்காட்டிய அரசியற் சிந்தனையாளர் ஊரிப் பிடிசு ஆவர். ஊரிப்பிடிசு கூறும் சமத்துவக் கருத்தும் இயற்கையின் சட்டக் கருத்தும் அடிமை நிலை போன்ற சமூக வழக்கங்களைத் தவறு எனக் காட்டு கின்றன. அவற்றை அளவுகோலாக வைத்தே சமூக வழக்கங்களனைத்தையும் மதிப்பீடு செய்யும் முறை அரசியல் சிந்தனையில் தோன்றிற்று. ஊரிப்பிடிசு கூறும் நடுத்தர வகுப்பின் சிறப்பைப் பிற்காலத்தில் வந்த அரிசுடாட்டிலோ அல்லது வேறு எந்த அரசி யல் சிந்தனையாளரோ மறுக்கவில்லை. பா.சு

துணை நூல்கள்:


Sabine, G.H., A History of Political Theory, Oxford & IBH Publishing Co., Calcutta, 1961.

Barker, Ernest, Greek Political Theory, Plato and his Predecessors, London, 1951.

Joseph, H.W.B., Essays in Ancient and Modern Philosophy, Oxford, 1935.


**ஊரின்னிசை** தமிழிலுள்ள தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களுள் ஒன்று. இது பாட்டுடைத் தலைவன் ஊரினை 90, 70 அல்லது 50 இன்னிசை வெண்பாக்களால் சிறப்பித்துப் பாடப்படுவதாகும். பாடப்படும் பாவின் பெயரால் அமைந்தது இப்பிர பந்தப் பெயர். இவ்வாறே பாட்டுடைத் தலைவனின் பெயரினைச் சிறப்பித்துப் பாடப்படும் பிரபந்தம் பேரின்னிசை என்று பெயர் பெறும். இப்பிரபந்தத்தின் இலக்கணம் வெண்பாப் பாட்டியல், இலக்கண விளக் கம், முத்துவீரியம், பிரபந்த தீபிகை ஆகிய இலக்கண நூல்களில் கூறப்பட்டுள்ளது. இவ்விரு பிரபந்தங் களின் இலக்கணத்தையும் ஒரே நூற்பாவில் இவ்விலக் கண நூல்கள் கூறுகின்றன. 'இறைவன் பெயர் ஊரினை இன்னிசையான், முறையில் தொண்ணூறு எழுபான் ஐம்பான், அறையின் அப்பெயராகும் என்ப' என்பது இலக்கண விளக்கம் (நூ.825). அ மா.ப.

**ஊரும் பேரும்:** ஒரு நாட்டின் பழைய வர லாற்றினை உணர்ந்துகொள்ள உதவும் வாயில் களாக அமைந்துள்ளனவற்றுள் அங்குள்ள ஊர்ப்பெயர் களின் ஆராய்ச்சியியலும் (Toponymy) ஒன்றாகும். ஊர்ப்பெயர்களும் (Toponyms) அவற்றைப் பற்றிய ஆராய்ச்சியும் அங்கு வாழ்ந்த மக்கள் அவற்றை எவ் வாறு உணர்ந்து பயன் கொண்டனர் என்பதனை உணர்த்துவனவாக உள்ளன. மேலும், அவ்வாராய்ச்சி அப்பகுதியின் தொன்மையான வரலாற்றுப் புவியி யலை (Historical Geography) அறிந்துகொள்வதற் கும் உதவியாக அமைகிறது. முன்னோர் வாழ்ந்த சிற்றூர் பேரூர்களின் பெயர்களைப் பின்வரும் மக்கள் அப்படியே போற்றிப் பேணுவது பொதுவான மர பாகும். தங்கள் காலத்தில் புதிதாகத் தோன்றும் குடியிருப்புகள் ஊர்கள் போன்றவற்றிற்கும், முன்

னோர்கள் பெயர் வைக்காது விடுத்த பகுதிகளுக்கும் புதிய பெயர்களை அமைத்துக் கொள்வர். ஒரு மாவட்டத்தில் இவ்வாறு அமைந்த ஊர்ப்பெயர் களை விரிவாக ஆராய்ந்தால், அப்பகுதியில் அடுத் தடுத்து வாழ்ந்து வந்த மக்கட்குழுவினர் அப்பகுதிக்கு ஆற்றிய செயல்களையும் அவர்கள் வாழ்ந்த வாழ்க் கையினையும் உணர்ந்து கொள்ளலாம். அம்மக்களின் நாகரிகம், பண்பாடு ஆகியவற்றை உணர்ந்து கொள் வதற்கும் ஊர்ப்பெயர் ஆராய்ச்சி பேருதவியாகும்.

தொன்மைச் சிறப்பும் பண்பாட்டு உயர்வும் கொண்டு விளங்கும் தமிழ் மக்களின் தாயகமாகத் திகழும் தமிழகத்தின் ஊரும் பேரும் பற்றிய ஆராய்ச்சி, அம்மக்களுடைய தொன்மையான வர லாறு, நாகரிகம், பண்பாடு ஆகியவற்றை உணர்த்து வதோடு, அவர்கள் தம் பழம்பெருமையினை உணர்ந்து முன்னேறுவதற்கான வழிகாட்டியாகவும் அமையும்.

பழந்தமிழர் நிலத்தினைக் குறிஞ்சி, முல்லை மருதம், நெய்தல் என்று நான்கு வகையாகப் பகுத் தனர். இதனால் உலகம் ‘நானிலம்’ என்னும் பெயர் பெற்றது. மலையும் மலைசார்ந்த பகுதியும் குறிஞ்சி எனவும், காடும் காடு சார்ந்த பகுதியும் முல்லை எனவும், வயலும் வயல்சார்ந்த பகுதியும் மருதம் எனவும், கடலும் கடல் சார்ந்த பகுதியும் நெய்தல் எனவும் வழங்கப்பட்டன. தமிழகத்தில் நிலையான பாலைநிலம் என்றும் இருந்ததில்லை. குறிஞ்சி, முல்லை ஆகியவற்றின் பகுதிகள் வேனிற் கொடுமை யால் பாலையாகத் திரியும். மழை பெய்து செழிப் புற்றபோது அவை பாலைத் தன்மை மாறிக் குறிஞ்சி யும் முல்லையுமாக ஆகிவிடும். திணை வகையில் இலக்கியஞ்செய்யுங்கால் பாலையையும் சேர்த்து ஐந்து திணைகளாகப் பழந்தமிழர் கொண்டுள்ளனர். ஐந்து திணைகளுக்குமுரிய கருப்பொருள்களைக் கூறு மிடத்துத் தொல்காப்பியர் ஊர்பற்றிக் குறிப்பிட வில்லை. ஆனால், பின்னர்த் தோன்றிய ‘நம்பியகப் பொருள்’ கருப்பொருள் பற்றிய நிரலில் ஊர்ப்பெய ரையும் சேர்த்து நூற்பா அமைத்துள்ளது. அது ஐந்து திணைகளுக்குமுரிய கருப்பொருள்களைத் தனித்தனி நூற்பாக்களில் தொகுத்துக் கூறுமிடத்துக் குறிஞ் சிக்குச் சிறுகுடி என்பதனையும், பாலைக்குக் குறும்பு என்பதனையும், மருதத்திற்குப் பேரூர், மூதூர் ஆகிய வற்றையும், நெய்தலுக்குப் பாக்கம், பட்டினம் ஆகிய வற்றையும் ஊர்ப்பெயர்களாகக் குறிப்பிட்டுள்ளது. இப்பெயர்களில் அமைந்துள்ள தமிழக ஊர்ப்பெயர் கள் தம் நிலத் தன்மையைப் பொதுவாக உணர்த்தி நிற்பதனை இன்றும் காணலாம். தொல்காப்பியர் கூறும் கருப்பொருள் நிரலில் இடம்பெறாத ஊர்ப் பெயர்கள் நம்பியகப்பொருளில் இடம் பெற்றிருப் பது காலப்போக்கில் அவை பெற்றுள்ள சிறப்பினை உணர்த்துவதாக உள்ளது. நம்பியகப்பொருள் சில ஊர்ப்பெயர்களையே குறிப்பிட்டுள்ள போதிலும், திணைகளுக்குரிய இயல்பில் அமையும் பிற ஊர்ப் பெயர்களையும் கொள்ளுதல் வேண்டும்.

மலை, கோடு, குன்று, பாறை, அறை, கல், கிரி, அசலம், சைலம், அத்திரி முதலியன குறிஞ்சி நிலத் தோடு தொடர்புடைய பெயர்களாகும். திருக்கழுக் குன்றம், மணப்பாறை, திருவெள்ளறை, திண்டுக்கல், சிவகிரி, விருத்தாசலம், சிவசைலம், தோத்தாத்திரி ஆகிய பெயர்கள் குறிஞ்சி நில அடிப்படையில் அமைந்த பெயர்களாகும். வனம், காடு, கா, பொழில், தண்டலை, சோலை, தோப்பு, பாடி, பட்டி மந்தை முதலியன முல்லை நிலச் சார்புடைய பெயர்கள். இவற்றின் அடிப்படையில் தில்லைவனம், ஆர்க்காடு, திருத்தண்கா, திருவாலம் பொழில், குழித் தண்டலை, தலைச்சோலை, நெல்லித்தோப்பு, வேலப்பாடி, கோயிற்பட்டி, வெண்மந்தை முத லிய ஊர்ப்பெயர்கள் அமைந்தனவாகும். ஊர், ஆறு, துறை, அரங்கம், துருத்தி, கடல், அணை, கால், ஓடை, மடை, ஏரி, பேரேரி, குளம், சமுத்திரம், இலஞ்சி, ஊற்று, பற்று, பழனம், வயல் முதலியன மருதநிலத் தொடர்புடைய பெயர்களாகும். ஐயாறு, சிந்துபூந்துறை, திருவரங்கம், திருப்பூந்துருத்தி, முக் கூடல், வெள்ளியணை, வெள்ளக்கால், மயிலோடை, பத்தமடை, பொன்னேரி, சீவலப்பேரி, தனிக்குளம், நமன சமுத்திரம், பொன்னிலஞ்சி, அத்தியூற்று, தெள்ளாற்றுப் பற்று, திருப்பழனம், புதுவயல் முதலியன அந்த அடிப்படையில் அமைந்த ஊர்ப் பெயர்களாம். கரை, பட்டினம், பாக்கம், குளம், குப்பம் முதலிய பெயர்கள் நெய்தல் நிலத் தொடர் பினவாகும். கீழக்கரை, காவிரிப்பூம்பட்டினம், மீனம் பாக்கம், பேரளம், நொச்சிக்குப்பம் முதலிய ஊர்ப் பெயர்கள் நெய்தல் நில அடிப்படையில் தோன்றியன. திருக்கழிப்பாலை, பாலையூர் போன்ற ஊர்கள் பாலைநில அடிப்படையிலானவை. பறவைகள், விலங்குகள், மரஞ்செடிகள் ஆகிய கருப்பொருள் களைப் போலவே, ஊர்க்குரிய பெயர்களும் அவ்வத் திணைக்குரியனவாக வழங்கப்படுதலேயன்றி மயங்கி வழங்கப்படுவதும் உண்டு.

விலங்குகள் மரங்கள் முதலியவற்றின் பெயர் அடிப்படையிலும் ஊர்ப்பெயர்கள் அமைவதும், அவை வடமொழிச் சொற்களால் ஆகியனவாக இருப்பதும் உண்டு. திருப்பைஞ்ஞலி என்னும் பெயர் வாழை மரத்தின் பெயரை ஒட்டி அமைந்தது. கரவீரம் என்பது ஒருவகை மரப்பெயர். அதன் அடிப்படையில்

கரவீரம் என்னும் ஊர்ப்பெயர் அமைந்தது. காஞ்சி, திருநாவல், முல்லைவாயில் முதலியன தாவரங்களின் பெயராலும், புலியூர், எருமைப்பட்டி, மயிலாப்பூர் முதலியன விலங்கு பறவைகளின் பெயராலும் அமைந்த ஊர்ப் பெயர்களாகும்.

மூவேந்தர் ஆட்சிக்குப் பின்னர்த் தமிழகம் மொழியாலும் சமயத்தாலும் வேறுபட்ட பல அரசு களால் ஆளப்பட்டு வந்துள்ளது. ஒவ்வோரரசும் ஆண்டபோது அவ்வரசுகளின் மொழி, சமயம் முதலிய வற்றின் அடிப்படையில் ஊர்ப் பெயர்கள் உண்டாகி யுள்ளன. சில சமயங்களில் ஒரு மன்னன் பெற்ற வெற்றி முதலியவற்றால் முன்னர் வழங்கிய ஊர்ப் பெயர் மாற்றப் பட்டு வேறுபெயர் வழங்கப்பட்டதும் உண்டு. சேர சோழ பாண்டியர் ஆட்சிக்காலத்தில் அவ்வரசர்களின் இயற்பெயராலும், விருதுப் பெயர் களாலும் ஊர்கள் தோன்றலாயின. செம்பிய மங் கலம், வளவனூர், தென்னவன்குடி, செழியனல்லூர், அழகிய பாண்டியபுரம் போன்ற ஊர்கள் அரசர் பெயரால் அமைந்தன. கங்கைகொண்ட சோழபுரம் இராசேந்திர சோழன் விருதுப் பெயரால் அமைக்கப் பட்ட புதிய நகரம். சேர மாதேவி என்னும் பெயர் சேர வேந்தன் மனைவி பெயரால் அமைந்ததாகும்.

மூவேந்தரை அடுத்துத் தமிழகத்தில் பல்லவ ராட்சி சில நூற்றாண்டுகள் நிலவியது. அதன் பய னாகச் சீயமங்கலம், மகேந்திரவாடி, மாமல்லபுரம், பல்லாவரம், வயிரமேக நகரம் முதலிய ஊர்ப்பெயர் கள் தோன்றின. அவர்கள் வடமொழி ஆர்வலர் களாக இருந்தமையால், அவர்கள் வடமொழியை ஊர்ப்பெயராக்கங்களிலும் பயன்படுத்தினர். தமிழ கத்தில் விசயநகர ஆட்சிச் செல்வாக்கு ஏற்பட்ட போது, அவ்வரசர்களின் சார்பில் தெலுங்கினைத் தாய் மொழியாகக் கொண்ட நாயக்க மன்னராட்சி நடைபெறலாயிற்று. அவ்வகையில் கிருட்டிணப்ப நாயக்கர் பேரால் கிருட்டிணாபுரம் என்னும் ஊர்ப் பெயர் தோன்றியது. திருமலைசமுத்திரம், திருமலை நாயக்கன் படுகை, எட்டையபுரம், போடிநாயக் கனூர், அம்மைநாயக்கனூர் போன்ற பெயர்களும் இவ்வகையில் அமைந்தனவே. நாயக்க மன்னர் தம் ஆட்சி நலங்கருதி அமைக்கப்பட்ட பாளையங்களின் அடிப்படையில் இராசபாளையம், கல்பாளையம் போன்ற பெயர்கள் தோன்றலாயின. தமிழகத்தில் இசுலாமிய ஆட்சி நடைபெற்றபோது வாலாசா பாத்து, வாலாசா பேட்டை, கான்சாபுரம், அன்வாருதீன் பேட்டை, மன்சரபாத்து, மரக் காயர்பட்டினம், ஊசூர் முதலிய ஊர்ப்பெயர் கள் தோன்றின. தஞ்சையிலிருந்து மராட்டியர் ஆண்டபோது எக்கோசிமகாராசபுரம், துளசா புரம், மானோசியப்பச்சாவடி முதலிய ஊர்ப்பெயர் கள் தோன்றின. அடுத்து, ஐரோப்பியர் ஆட்சிக் காலத்தில் மகுடஞ்சாவடி (MacDonald's Choultry), காசிமேசபுரம் (காசாமேசர்புரம்) முதலிய பெயர்கள் உண்டாயின. இவ்வாறமைந்த ஊர்களிற்சில மக்கள் வழக்கில் தமிழ் ஒலிக்கு ஏற்பத் திரிந்து வழங்கலாயின.

தமிழகத்தில் விளங்கும் பல்வேறு சமயங்களின் அடிப்படையில் தெய்வங்கள், சான்றோர் பெயர் களால் ஊர்கள் அமைக்கப்பட்டுள்ளன. சங்கர நயினார்கோயில், பசுபதீச்சுரம், பிள்ளையார்ப்பட்டி, பரிதிநியமம், சூரியனார்கோயில், திங்களூர், திரு முருகன் பூண்டி போன்ற பெயர்கள் இந்து சமய அடிப்படையில் அமைந்தவை. திருநின்றவூர், தலச யனம், கண்ணபுரம் முதலியன வைணவச் சார்பாகவும் கணபதீச்சுரம், சோழீச்சுரம் போன்றன சைவச் சார் பாகவும் அமைந்த பெயர்களாகும். நாசரேத்து, சுவிசேடபுரம், மெய்ஞ்ஞானபுரம் போன்ற கிறித்தவ சமய அடிப்படையிலும், புனித தாமசு மலை (St. Thomas Mount), சாயர்புரம், தோனாவூர் முதலியன அச்சமயச் சான்றோர் பெயர் அடிப்படையிலும் அமைந்தன. சீதக்காதி நகர் போல்வன இசுலாமிய சமய அடிப்படையில் தோன்றியன. சிராப்பள்ளி, திருவோத்தூர், திருநாதர்குன்றம், சைன காஞ்சி, சனகாபுரம், அருகன்குளம், அமண்பாக்கம், பேர மணூர் போன்றன சமண சமய அடிப்படையிலும், போதிமங்கை, புத்தனாம்பட்டி, அறப்பணஞ்சேரி முதலியன புத்த சமய அடிப்படையிலும் தோன்றிய ஊர்களாகும்.

அரசர் குறுநில மன்னர் போன்றோர் அந்தணர் புலவர் போன்றோர்க்கு நிலக்கொடையாக அளிக்கப் பட்ட இடங்கள் புதிய பெயர்களில் வழங்கப்பட்டன. நான்கு வேதங்களையும் தெளிவுறக் கற்ற வேதியர் களுக்கு அரசரும் அவர் தேவிமாரும் அளித்த ஊர் சதுர்வேதி மங்கலம் எனப்படும். வீரநாராயண சதுர் வேதி மங்கலம், உலக மாதேவி சதுர்வேதி மங்கலம் என்பன இவ்வகையில் அமைந்தன. கற்றுவல்ல பார்ப்பனர்க்கு இறையிலியாக அளிக்கப்பட்ட நிலம் பட்ட விருத்தி எனப்படும். திருமால் கோயில்களுக்கு இறையிலியாக அளிக்கப்பட்ட இடம் திருவிடை யாட்டம் என்றும், சிவன் கோவில்களுக்கு அவ்வாறு அளிக்கப்பட்டது தேவதானம் என்றும் வழங்கப்பட் டன. சமண புத்த ஆலயங்களுக்கு இறையிலியாக வழங்கப்பட்ட நிலத்திற்குப் பள்ளிச் சந்தம் என்பது பெயராகும். இப்பெயரிலும் பல ஊர்கள் வழங்கப் படுகின்றன.

ஈச்சுரம் என்பது சிவன் கோயிலுக்குப் பெயர். பெரும்பாலும் இப்பெயர் ஆலயம் அமைத்தவர் பெயரோடு சேர்த்து, இராசராசேச்சுரம் என்பதுபோல வழங்கப்படும். ஈச்சுரம் என்னும் பெயரால் முடியும் திருக்கோயிற் பெயர் இராமேச்சுரம் என்பதுபோல, அக்கோயில் விளங்கும் ஊரினைக் குறிக்கும் பெயராக வழங்கப்படுதலும் உண்டு. அவ்வாறே திருமால் கோயில் எனப் பொருள்படும் விண்ணகரம் என்னும் பெயர் வைகுந்த விண்ணகரம் என்பது போல ஊர்ப் பெயராகவும் வழங்கப்படுகிறது.

இடைக்காலத்தில் வடமொழியும் வைதிக நெறியும் தமிழகத்தில் செல்வாக்குப் பெற்றநிலையில் வடமொழிப் பெயரால் ஊர்கள் அமைக்கப்பட்டதோடு, முன்னரே இருந்த தமிழ்ப் பெயர்களை வடமொழிப் பெயராக மாற்றி வழங்கும் நிலையும் பெருகலாயிற்று. அவ்வாறே இறைவன் இறைவி பெயர்களும் வடமொழியில் பெயர்த்து வழங்கப்பட்டன. தமிழ்ப் பெயரை வடமொழிப்படுத்துங்கால், அதன் பொருள் அறியாமையால் மாறுபட்ட பொருளுடைய பெயர்களும் இடம்பெறலாயின. பின்னர் அந்த மாறுபட்ட பெயருக்கே புராண வழக்கும், இலக்கிய வழக்கும் ஏற்படுத்துவாராயினர். மறைக்காடு, பழமலை, ஐயாறு முதலான தூய தமிழிலமைந்த ஊர்ப்பெயர்கள் முறையே வேதாரணியம், விருத்தாசலம், பஞ்சநதம் என்னும் வடமொழிப் பெயர்களாக ஆக்கப்பட்டன. திருப்புல்லாணி என வழங்கப்படும் திருப்புல்லணை 'தர்ப்பசயனம்' என்றாகியது. ஆத்தி மரம் நிறைந்த காடு எனப் பொருள்படும் ஆர்க்காட்டினை ஆறுகாடு எனக் கொண்டு, சடாரணியம் என்று வடமொழிப்படுத்தினர். மயிலாடுதுறை என்னும் பெயரை மாயூரம் என மாற்ற, அது வழக்கில் மாயவரம் என்றாகியது. அண்மைக்காலத்தில் இவ்வூர்ப்பெயரை அதன் பழைய வடிவில் அமைக்க வேண்டுமென்று மக்கள் வேண்ட, மயிலாடுதுறை என்று மீண்டும் பெயர் மாற்றஞ்செய்யப்பட்டது.

ஊர்களின் பெயர் பொதுமக்களின் பேச்சுவழக்கில் பலவாறாக மருவி வழங்குவதுண்டு. கும்பகோணம் குடந்தை என்றும், கருந்தட்டாங்குடி கரந்தை என்றும் வழங்கப்படுகின்றன. சமயச் சிறப்பால் உயர்வுற்று விளங்கும் ஊர்ப்பெயர்கள், தங்கள் பகுதியிலும் இருத்தல் வேண்டும் என்று எண்ணி அவ்வகையில் ஊர்ப் பெயர்களை அமைத்துக்கொண்டதும் உண்டு. வட நாட்டில் காசி இந்துக்களின் மிகச்சிறந்த புனிததலங்களுள் ஒன்றாகத் திகழ்வதனை அறிந்து, தமிழகத்திலும் அப்பெயரால் நகரம் அமைக்கப்பட்டது. அது நாட்டின் தெற்கில் அமைந்தமையால் தென்காசி எனப்பட்டது. மதுரையை நோக்கி வடமதுரை என்னும் பெயர் கொள்ளப்பட்டது. திருப்பாதிரிப்புலியூர் பண்டு பாடலிபுத்திரம் என வழங்கப்பட்டது. அப்பெயர் வட இந்தியாவில் மௌரியர் காலத்தில் சிறப்புற்றுத் திகழ்ந்த பாடலிபுர நினைவில் அமைந்ததாகும்.

பலரும் சேர்ந்து வாழுமிடம் சேரி என்பதாகும். அவ்வகையில் பார்ப்பனர்சேரி, மேலைச்சேரி என்பன போலச் சாதி வேறுபாடு கருதாமல் அது பண்டு, ஊர்ப் பெயராக அமைக்கப்பட்டது. காலப்போக்கில் சேரி என்பது சமுதாயத்தில் தாழ்த்தப்பட்ட பிரிவினர் வாழுமிடத்தைக்குறிப்பதாக அமைந்துவிட்டது. ஆனால், பழைய பொருளில் அமைந்த ஊர்ப்பெயர்கள் இன்றும் வேறுபாடு கருதாது அவ்வாறே வழங்கப்பட்டு வருகின்றன. புதுச்சேரி என இன்று வழங்கும் பாண்டிச்சேரி சாதிவேறுபாடு கருதாமல், புதியவர்களாக வந்தவர்கள் அமைத்து வாழ்ந்த நகரத்தைக் குறிக்க அமைந்து, இன்றும் அவ்வாறே வழங்குவது குறிப்பிடத்தக்கது.

தமிழகத்தில் பக்தி இயக்கம் உருவாகிச் சமய மறுமலர்ச்சி செழித்த காலத்தில் திருக்கோயில் அமைந்திருக்கும் ஊர்களும் சமயநோக்கில் புனிதமாகக் கருதப்பட்டன. ஊர்களும் வழிபடத்தக்க சிறப்பினவாகக் கொள்ளப்பட்டன. தலப்பயணம் மேற்கொண்டு அத்தலங்களிலுள்ள இறைவனை வழிபடுவதனைச் சமய ஒழுக்கமாகக் கொண்டனர். வெவ்வேறு வகைப் பெயர்களில் விளங்கும் பல்வேறு தலங்களுக்கும் சென்று பதிகம்பாடிப் பரவிய திருநாவுக்கரசர் பல தலங்களையும் தம் பதிகப் பாடல்களில் வகைப்படுத்தி அமைத்துச் சேத்திரக்கோவைத்திருப்பதிகம் பாடியுள்ளார்.

மக்கட் பெருக்கம் மிகுந்து வரும் இக்காலத்தில் நகரங்களும் பெருநகரங்களும் விரைவாக வளர்ச்சியடைந்துவருகின்றன. சிற்றூர்ப் பகுதிகளிலும் பேரூர்ப் பகுதிகளிலும் புதிய குடியிருப்புகள் தோன்றிய வண்ணம் உள்ளன. அவற்றிற்குப் பெயர்வைப்பதில் அரசியல் செல்வாக்குக் குறிப்பிடத்தக்கதாக உள்ளது. அதனால், காந்தி, நேரு, காமராசர், பெரியார், அண்ணா போன்ற அரசியற் பெருமக்களின் பெயர்களில் ஊர்கள் பெயரிடப்படுகின்றன. பெருவள்ளல்களின் நினைவாக அழகப்பாபுரம், அண்ணாமலை நகர் போன்ற ஊர்களும் அமைந்துள்ளன.

தமிழகத்திலுள்ள ஊர்களின் பெயர்களைப் பற்றி மிகுதியாக ஆய்வு மேற்கொள்ளப்படவில்லை. தனிப்பட்டோர் சிலர் இம் முயற்சி மேற்கொண்டனர். தமிழகத்திலுள்ள வட்டம், மாவட்டம், மாநிலம்

ஆகிய அளவில் ஊரும்பேரும் பற்றிய ஆராய்ச்சி மேற் கொள்ளப்படுமானால், அதன் விளைவாகத் தமிழ் மக்களின் நாகரிகம், பண்பாடு, வரலாறு பற்றிய பற் பல உண்மைகளை உணரும் வாய்ப்பு உண்டாகும். இற்றைக்கு 40 ஆண்டுகளுக்கு முன்னர், டாக்டர் இரா.பி. சேதுப்பிள்ளையவர்கள் இத்துறையில் மிக வும் முயன்று, 'தமிழகம் ஊரும்பேரும்' என்னும் பெய ரில் ஓர் அரிய நூலை உருவாக்கியுள்ளார். இத்துறை யில்உழைப்பார்க்கு அந்த நூல் ஒரு சிறந்த முன்னோடி யாக அமைந்து வழி காட்டுவதாக உள்ளது. அ.மா.ப.

**ஊல்யா நாவசுகு:** இந்நகரம் சோவியத்துக் குடியரசிலுள்ள பெரிய நகரங்களுள் ஒன்று. இது வர லாற்றுப் புகழ் மிக்கது. சோவியத்து ஆறுகளுள் பெருஞ் சிறப்புக்குரிய வால்கா ஆற்றின் வலப்பக்கம் அமைந்துள்ளது இந்நகரம். முடியாட்சியை ஒழித்துத் தொழிலாளர் ஆட்சியைப் புரட்சியின் மூலம் ஏற் படுத்தியதில் பெரும்பங்கு வகித்து வரலாறு படைத்த இலெனின் பெருமகன் தோன்றிய நகரம் ஊல்யா நாவசுகு. இரா. அ.

**ஊலான் ஊடே** சோவியத்து ஒன்றியத்தைச் சார்ந்த பரியத்துத் தன்னாட்சிச் சோவியத்துச்சமதரு மக் குடியரசின் (Buryat Autonomous Soviet Socialist Republic) தலைநகரம். இது சோவியத்து ஒன்றியத் தின் தென்கிழக்குச் சைபீரியாவில் செலங்கா (Selenga) ஆற்றங்கரையில் அமைந்துள்ளது. இது போக்குவரத்துச் சாதனங்களின்உற்பத்திமையமாகும். இருப்புப் பாதைப் பாதுகாப்பு (Railroad Maintenance), படகுகள் கட்டுதல், கப்பல்கள் பழுது பார்த்தல், மரமறுக்கும் ஆலைகள், உணவு-மரம் போன்றவற் றைப் பதப்படுத்துதல், இறைச்சியைத் தகரப் பெட்டி களில் அடைத்தல் (Canning) போன்ற தொழில்கள் இந்நகரத்தில் நடைபெற்றன. இயந்திரங்கள், இருப் புப் பாதை, நீராவி இயந்திரங்கள் போன்றவையும் ஊலான் ஊடே நகரில் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந் நகரம் கி.பி. 1649-ஆம் ஆண்டில் கொசாக் குகளில் (Cossack) குளிர்காலப் பாசறையாக நிலை நாட்டப் பெற்று, கி.பி. 1689-இல் கோட்டையாக உருமாறி, கி.பி. 1775-இல் ஒரு மாநகரமாக மாறியது. இந்நகரம் பரியத்துக் குடியரசின் தலைநகரமாக 1920-ஆம் ஆண்டில் ஆக்கப்பெற்றது. பின்னர்ப் பரி யத்-மங்கோல் தன்னாட்சிச் சோவியத்து ஒன்றியக் குடியரசின் தலைநகரமாயிற்று. இதன் மக்கள் தொகை 3,10,000 (1981). இரா.அ.

**ஊலான் பாட்டர்** என்பது ஒரு நகரம். இது மங்கோலிய மக்கள் குடியரசின் (Mongolian People's Republic) தலைநகரம். ஊலான் பாட்டர் (Ulan Bator) மங்கோல்யாவின் கிழக்குப் பாகத்தின் நடுவின் தோலா (Tola) ஆற்றங்கரையில் அமைந்துள் ளது. இந் நகரத்தில் கம்பள ஆடைகள், அதன் தொடர்பான பிற பொருள்கள், தோல் பொருள்கள், மிதியடிகள், படிக்காரம், காகிதம், வார்ப்பட இரும் புப் பொருள்கள், தீக்குச்சி, கண்ணாடிப் பொருள்கள், பீர், சாராய வகைகள், பதப்படுத்தப்பட்ட உண வுப் பொருள்கள் போன்ற செய்பொருள்கள் உற் பத்தியாகின்றன. இந்நகருக்கு அண்மையில் உள்ள சுரங்கங்களிலிருந்து வெட்டியெடுக்கப்படும் நிலக்கரி அனல் மின்சக்தி உற்பத்தி செய்யப் பயன்படுகிறது. மங்கோலியாவின் ஒரே பல்கலைக்கழகம் இவ்வூரில் 1942-இலிருந்து செயற்படுகிறது. இங்குள்ள நூல கத்தில் தொன்மையான மங்கோலிய மொழி, சீன மொழி, திபேத்திய மொழி போன்ற மொழிக் கையெழுத்துப் படிகள் சேமித்து வைக்கப்பெற்றுள் ளன.

ஊலான் பாட்டர் கி.பி. 1649-ஆம் ஆண்டில் மடாலய நகராக உருவாக்கப்பட்டது. இன்றும் அம் மடாலயப் பகுதியை இங்குக் காணலாம். அப் பகுதி முன்னர் இந்நகரின் மையமாகவும், மங் கோலியப் புத்தசமயத் தலைவரின் வாழுமிடமாகவும் இருந்தது.

ஊலான் பாட்டரின் மக்கள் தொகை 4,00,000 (1978). இரா. அ.

**ஊவர் குழுக்கள்:** ஐக்கிய அமெரிக்க நாட்டு அரசாங்கத்தின் நிருவாகப் பிரிவில் உள்ள ஆட்சித் துறைகளின் எண்ணிக்கையைக் குறைத்தற்கும், அவற் றின் செயல்திறத்தைப் பெருக்குவதற்கும், முன்னைய குடியரசுத் தலைவர் எர்பர்ட்டு ஊவரின் (Herbert Hoover) தலைமையில் 1947-49-ஆம் ஆண்டிலும், 1953-55 -ஆம் ஆண்டிலும் நிறுவப்பட்ட இடைக்கால ஆலோச னைக் குழுக்களே ஊவர் குழுக்கள் (Hoover Commissions) எனப்படும்.

ஊவரின் வரலாறு: மனிதப் பற்று இயல்புடையவ ரென்று பாராட்டப்பட்ட எர்பர்ட்டு ஊவர் ஐக்கிய அமெரிக்க நாட்டில் அயோவா மாநிலத்தில் கி.பி. 1874 -ஆம் ஆண்டில் பிறந்தார்; சிறுவயதில் பெற்றோரை இழந்த இவர் தம் உறவினரொருவருடைய உதவியி னால் சுரங்கப் பொறியாளர் பணிக்குப் படித்துப் பட்டம் பெற்று, பல ஐரோப்பிய நாடுகளில் தொழில் திட்டங் களில் நிருவாகப் பொறியாளராகப் பணிசெய்தார். சீனாவில் 1900-ஆம் ஆண்டில் குத்துச் சண்டை வீரர் கலகம் நடந்தபோது, அங்கிருந்த இவர் அங்கு வாழ்ந்த அயல்நாட்டு மக்களுக்குப் பாதுகாப்பும், மற்ற உதவி

களும் கிடைக்குமாறு உழைத்தார். முதல் உலகப் போர் 1914-ஆம் ஆண்டில் தொடங்கியபோது, இலண்டனில் இருந்த இவர் நேசநாட்டுப் படையினருக்கு உதவி அளிக்கும் குழுத் தலைவராகவும், பின்னர்ப் பெல்சிய நாட்டின் துயர்நீக்கும் குழுவின் தலைவராகவும் அமர்த்தப்பட்டார். ஐக்கிய அமெரிக்க நாடு போரிலிறங்கியதும், இவர் உணவுப் பொருள் உற்பத்தி, பாதுகாப்பு முதலியவற்றைக் கவனிக்கும் உணவு ஆட்சியாளராகவும் அமர்த்தப்பட்டார். ஓராண்டுக்காலத்தில் (1918-19) இவருடைய திறமான ஆட்சியின் பயனாக நேசநாடுகளுக்கும், ஐரோப்பாவில் பஞ்சத்திலாழ்ந்த இடங்களுக்கும் 18 மிலியன் கண்டி (Tonnes) உணவுப் பொருள் கிடைத்தது. இவர் 30க்கும் மேற்பட்ட ஐரோப்பிய நாடுகளில் செயலாற்றி, 100 மிலியன் தாலர் பெறுமானபொருள் உதவிகளைச் செய்தார். பின்னர் 1927-இல் இவர் மிசிசிப்பி ஆற்று வெள்ளத் துயர் துடைப்புப் பணி செய்து, இரண்டாம் உலகப் போரில் ஐரோப்பாவில் பஞ்சம் நீக்கும் பணிகளைச் செய்தார்.

**ஆட்சியில் ஊவர் செய்த பணிகள்:** ஊவர் தமது நாட்டு அரசாங்கத்தில் 1921-இல் வாணிகச் செயலாளராக அமர்த்தப்பட்டார். இவர் இந்தத் துறையின் அமைப்பை மாற்றி அமைத்து, அதில் வானொலிப்பிரிவு, வாணிக வான்பயணப் பிரிவு, சீரான வீட்டுவசதிப்பிரிவு, பாதுகாப்பான பெருவழிப் பிரிவு முதலிய பல புதிய ஆட்சிப் பிரிவுகளையும் உருவாக்கினார். இவர் கொலராடோ ஆற்றுக் குழுவின் (Colorado River Commission) தலைவராகவும், புனித இலாரன்சு நீர்வழிக்குழுவின் தலைவராகவும் பணிபுரிந்தபோது எடுத்த முயற்சிகளின் பயனாக ஊவர் அணையும் (Hoover Dam),புனித இலாரன்சு கடல்வழியும் கட்டிமுடிக்கப்பட்டன. இவை இன்றும் பெரும் பயன் அளிப்பனவாக உள்ளன. இவர் 1928-ஆம் ஆண்டு அமெரிக்கக் குடியரசுத் தலைவர் பதவிக்கு நடைபெற்ற தேர்தலில் குடியரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு, அமெரிக்க நாட்டின் 31-ஆம் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு நான்கு ஆண்டுகள் ஆட்சி செய்தார். ஆனால்,அமெரிக்காவின் அறிவியல் திறமையைப் பயன்படுத்திப் புதியதோர் காலத்தை உண்டாக்க எண்ணிய இவருக்கு, 1929-ஆம் ஆண்டு அக்டோபரில் ஏற்பட்ட மூலதனப் பங்கின் விலைக் குறைவு ஏமாற்றத்தை அளித்தது. நாடு பொருளாதார முடக்கத்தில் சிக்குண்டது. பொருளாதார முடக்கம் ஏற்படுத்திய வேலையில்லாச் சிக்கலை நீக்குவதற்குத் தனியார் உரிமைக் கோட்பாட்டை உறுதியாகப் பற்றிய இவர், தனியாருடைய அறச் செயல்களையே சார்ந்திருந்தார், ஆனால், அமெரிக்க வணிகருடைய முயற்சியைத் தூண்டுதற்கு இவரால் இயலாமற் போகவே ஒருகூட்டாட்சிப் பண்ணைக் கழகத்தின் வாயிலாகவும், நிதிச் சீரமைப்புக் கழகத்தின் வாயிலாகவும் நலிவுற்ற குடியானவர்களுக்கு நிதி உதவி கிடைக்கச் செய்தார். ஆனால், நகரங்களில் உள்ள வேலை இல்லாதோருக்குக் கூட்டாட்சி உதவி வழங்குதலை இவர் மறுத்து, அவ்வாறு செய்தல் ஊழலையும் பொருள் வீணாதலையும் உண்டாக்குமென்று கூறினார். ஒரு கூட்டாட்சி வேலையில்லாதார் நிறுவனத்தை ஏற்படுத்தி, அதன் வாயிலாக அத்தகையோருக்கு உதவியும் பொதுப்பணிகளும் நிறைவேற்றப்படுதல் வேண்டுமென்று அமெரிக்கச் சட்டமன்றம் (Congress) ஒரு மசோதாவை நிறைவேற்றியபோது, இவர் அந்த மசோதாவைத் தள்ளுபடி செய்தார். இதனால், இவர் 1932-ஆம் ஆண்டுக் குடியரசுத்தலைவர் தேர்தலில் தோல்வியுற்றார்.

**ஊவர் ஆலோசனைக் குழுக்கள்:** ஊவரைத் தலைவராகக் கொண்டு 1947-49-இல் நிறுவப்பட்ட நிருவாக ஆலோசனைக் குழு ஆட்சித்துறைகளின் எண்ணிக்கையைக் குறைத்தற்கும், பொருள் வீணாதலைத் தடுத்தற்கும் ஆலோசனை கூறுதற்காக அமர்த்தப்பட்டது. அதுபோலவே 1953-55-இல் நிறுவப்பட்ட கூட்டாட்சி ஆலோசனைக் குழு இரண்டாம் உலகப் போருக்கும், கொரியப் போருக்கும் பிற்பட்ட காலத்தில் கூட்டாட்சி அரசாங்கத் துறைகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்காகவும், அவற்றின் திறனைப் பெருக்குதற்காகவும் அமைக்கப்பட்டது. இந்த இரு குழுக்களிலும் குடியரசு, குடியாட்சிக் கட்சிகளின் உறுப்பினர்கள் சம எண்ணிக்கையில் உறுப்பினர்களாக அமர்த்தப்பட்டனர். இவ்விரு குழுக்களின் பரிந்துரைகளுள் 70 சதவிகிதத்துக்கும் மேற்பட்டவை நிருவாக, சட்டமன்றச் செயல்களின் வாயிலாகச் செயற்படுத்தப்பட்டன; சில ஆட்சித் துறைகள் நீக்கப்பட்டு மற்றவற்றோடு இணைக்கப்பட்டன. சுகாதாரத் துறை, கல்வித் துறை, பொது நலத்துறை, பொது ஆட்சித் துறை முதலிய புதிய ஆட்சித் துறைகளும் நிறுவப்பட்டன. கூட்டாட்சி அரசாங்கத்தில் இவ்வாறு சீரமைப்புச் செய்யப்பட்டதை ஒட்டிச் சில மாநிலங்களும் இந்த நோக்கத்துக்காகவே சிறிய ஊவர் குழுக்களை அமைத்தன. பா.சூ.

**ஊழ்வலிக் கோட்பாடு** என்பது அனைத்தும் பழ வினைகளால் முதலிலேயே தீர்மானிக்கப்படுகின்றன என்பதை விளக்குவதாகும். சைவம், வைணவம், சமணம், பௌத்தம், சாங்கியம், யோகம், மீமாம்சம், வேதாந்தம் ஆகியவை மறுபிறப்புண்மையை ஒப்புக்கொள்கின்றன. இசுலாமிய கிறித்தவ சமயத்தினர் மறுபிறப்புண்மையை மறுக்கின்றனர்.

கடவுள் உண்டு என்னும் கொள்கையுடையவருள் பலர் மறுபிறப்புண்மையை ஒத்துக் கொள்வர். கடவுள் அருள்மிக்கவர். உலகில் உயிர்கள் பல வகையாகப் பிறப்பதற்கும், இன்ப துன்ப நுகர்ச்சிகளைப் பெறுவதற்கும், வினையேதான் அடிப்படையாக இருக்க வேண்டும். வினை இல்லாவிட்டால் கடவுளை நடுநிலையற்றவர் என்று கூறவேண்டிவரும். வினையை ஏற்றுக் கொள்ளாவிட்டால், நல்லவர் துன்பமடைவதற்கும் தீயவர் மகிழ்ச்சியாக இருப்பதற்கும் காரணம் என்ன என்பதற்கு விடையில்லாமல் போகும். முன்னை வினைப்பயனால் இந்தப் பிறவியில் நல்லவர் துயருறுதலையும், தீயவர் ஆக்கமுறுதலையும் காணலாம். முற்பிறப்பிருந்தால் பிற்பிறப்பும் இருக்கும் என்று ஒப்புக் கொள்ள வேண்டும். ஒரே தாய் வயிற்றில் பிறந்த உடன்பிறந்தவர்களுக்குள் நிறைய வேற்றுமைகள் காணப்படுகின்றன. தாயும் தந்தையும் நல்லவர்களாக இருந்தும் மகன் முரடனாய் இருப்பதற்குக் காரணம் என்ன? சுற்றுச்சார்பு, சூழ்நிலை, பிறங்கடை, பரம்பரை எல்லாம் நல்லவையாகவே இருந்தும் மகன் முரடனாக இருப்பதற்குத் தாய் தந்தையின் உடல் நிலையோ மனநிலையோ காரணமாக இருக்க முடியாது. ஆகவே, மகனின் முற்பிறப்பு நுகர்வே அவனை முரடனாக இருக்கும்படி செய்திருக்கிறது. சுவை வேறுபாடு, குணவேறுபாடு முதலியவற்றை முற்பிறப்பின் நுகர்வெனக் கொள்ளல் வேண்டும். இதனால், முற்பிறப்பும் பிற்பிறப்பும் உண்டென்றும் கொள்ள வேண்டும்.

வாழ்க்கையில் சிலர் எவ்வளவோ முயற்சி செய்தும் வெற்றி பெறாமல் துன்புறுகின்றனர். சிலர் பெருமுயற்சி செய்யாமலே பெரும்பயன் எய்துகின்றனர். இதற்கு முன்னை வினைப் பயன்தான் காரணம் என்று கூற வேண்டியிருக்கிறது. ஆகையினால் இதுவும் ஊழ்வலிக் கோட்பாட்டை மெய்ப்பிக்கிறது. நம் சமயக் கொள்கையின்படி நமக்கு முன்னரே நெறி முறைப்படுத்தப் பெற்ற ஊழ்வினையின்படியே நுகர் பொருள்களாகிய உணவு, உடை, உறையுள் முதலியவை வாய்க்கின்றன.

வினைக் கோட்பாட்டின்படி 'ஏறு வினை' (ஆகாமியம்) என்பதில் மட்டுமே நமக்கு உரிமை உண்டு. ஏனைய இருப்பு வினை (சஞ்சிதம்), பயனளிக்கத் தொடங்கிய வினை (பிராரப்தம்) பொறுத்தமட்டில் நமக்கு உரிமை இல்லை. அவற்றைத் துய்த்துத் தான் தீர்க்க வேண்டும்.

நுகர்வினை எனப்படும் பிராரப்தம் மிகக் கடுமையானது. அதனை வெல்வது அரிது. ஆனால், என்ன வழிபாடு செய்தாலும் அதனைத் துய்த்தே தீரவேண்டும் எனச் சொல்வது தவறாகும். ஒருமைப்பட்ட வழிபாட்டால் நுகர்வினை எனப்படும் ஊழ்வினையை (பிராரப்தம்) உடற்குத் தொடர்பின்றி உயிர் நுகர்வதாகச் செய்து கொள்ள முடியும்.

'ஒருவனார் அடியாரை ஊழ்வினை நலியவொட்டார்' என்பது சுந்தரர் தேவாரம். ஞானசம்பந்தர் தேவாரத்தில் அவர் பதிகத்தை ஓதுவார்க்கு 'இம்மைக்கும் மறுமைக்கும் வருத்தம் வந்தடையாவே' எனக் கூறியிருக்கிறார். இரா.கோ.

துணை நூல்கள்:

இரத்தினஞ் செட்டியார், முரு. பழ., தடைகளும் விடைகளும், இரண்டாம் பகுதி, மறைமலையடிகள் மன்ற வெளியீடு, கோவை, 1975.

Comfcrd, F. M., From Religion to Philosophy, Chapter 2, London, 1912.

***ஊழல் அரசியல்:*** ஊழல் என்பது ஒழுக்கங் கெட்ட, தூய்மையற்ற ஒரு செயலாகும். நாட்டில் பதவியையும் பொறுப்புகளையும் வகிப்போர் ஆற்ற வேண்டிய பணிகளை ஆற்றாமலும், ஆற்றக்கூடாத பணிகளை ஆற்றியும், அதற்குக் கைமாறாகச் சில நன்மைகளைப் பெற்றும் வருவது ஊழல் அரசியல். நலன் பெறுவது என்பது பணம் பெறுவது மட்டுமன்று; பலவகைச் சலுகைகளைப் பெறுவதையும் குறிக்கும்.

இங்கிலாந்தின் பொதுவாழ்வில் கி. பி. 19–ஆம் நூற்றாண்டின் இறுதிக்கட்டம் வரையில் ஊழல் மலிந்திருந்தது. இது இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் வரையில் நிலைபெற்றிருந்தது. உலகின் எந்தவொரு நாடும் இத்தீமையினின்றும் விடுபட்டதன்று. இந்தியாவும் இதற்கு விதிவிலக்கன்று. முகலாயரின் ஆட்சிக் காலத்தினின்றே இந்தியப் பொதுவாழ்வில் மிகப் பெருமளவு ஊழல் நிலவிற்று. ஆங்கிலேயர் காலத்தில் ஊழல் ஓரளவிற்கு நிலவியது. இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு இது குறைவதற்குப் பதிலாக உயர்ந்துள்ளது.

இன்று மக்களாட்சி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பல பதவிகள் வகிக்கும் பெருமக்களும் அரசு அதிகாரிகளும் பொதுத்துறையில் நேர்மையைக் கடைப்பிடிப்பதை விடுத்து, இலஞ்சம் பெறுவதிலும், உறவினருக்குச் சலுகை அளிப்பதிலும், சிறப்புச் சலுகை பெறுவதிலும் மிக அதிக ஈடுபாடு கொண்டுள்ளனர். ஓர் அரசியல் கட்சிக்கு அதிகாரத்தின் ஏகபோக உரிமை

கிடைக்கும்பொழுது கொள்கையற்ற அரசியல் வாதிகளும், அரசு அதிகாரிகளும் நிருவாகத்தின் மீது தமக்கிருக்கும் அதிகாரத்தைத் தம் குடும்பங்களுக்கும் நண்பர்களுக்கும் கட்சித் தோழர்களுக்கும் பயனளிக்கும் வகையில் பயன்படுத்துகின்றனர். ஆளும் கட்சியைச் சார்ந்த அரசியல் வாதிகள் தங்களுக்குச் சாதகமாக உள்ள அதிகாரிகள் மீது காட்டப்படும் ஆதரவு நிருவாக ஒழுக்கச் சிதைவிற்கு வழி வகுத்துள்ளது. இதுவே ஊழல் அரசியலின் (Political Corruption) போக்காகும்.

காலம் தாழ்த்தாமல் ஊழல் அரசியலை ஒழிப்பதற்கு முயற்சி எடுத்தல் வேண்டும். இன்றேல் நாட்டையும் மக்களையும் நாடிவரும் கேட்டினின்று காப்பது கடினம். இந்திய அரசியல் வாழ்வில் இருந்து ஊழல் அகற்றப்படாவிடில், சமதருமம் பற்றி நாம் பேசும் அத்தனையும் வீணாகிவிடும் என்று பிரதமர் நேரு கூறினார். இதே உணர்வுகளை முன்னாள் உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி கசேந்திர கட்கர் தம் இரண்டாம் இலசபதிராய் நினைவு விரிவுரையில் எடுத்தியம்பினார். நந்தா ஊழல் அரசியலைப் போக்க இரு உரைகளை அகில இந்திய வானொலியில் நிகழ்த்தியதோடு, அரசியல் கட்சிகளும் அரசு அதிகாரிகளும் அடங்கிய மாநாடுகளையும் கூட்டினார். மேலும், ஊழல் ஒழிப்புச் சிக்கல்களை உள்துறை அமைச்சர்களின் மாநாட்டிலும், முதலமைச்சர்களின் மாநாட்டிலும் விவாதித்து, பல நிலைகளில் விழிப்புக் குழுக்களை (Vigilance Committees) உருவாக்கினார்.

இந்தியாவில் ஊழல் அரசியலை ஒழிக்கப் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தில்லிச் சிறப்புக் காவல்துறை அமைப்புச் சட்டம் 1946-ஆம் ஆண்டில் நிலையானதாக்கப்பட்டது. ஊழல் ஒழிப்புச் சட்டம் பாராளுமன்றச் சட்டப் புத்தகத்தில் 1947-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 11-ஆம் நாள் இடம் பெற்றது. 1947-ஆம் ஆண்டைய ஊழல் ஒழிப்புச் சட்டத்தின் செயலாக்கத்தை ஆய்வுசெய்ய 1949-ஆம் ஆண்டு 'பக்சிடெக் சந்து குழு' (Buxideck Chand Committee) அமைக்கப்பட்டது. இரயில்வேயில் நிலவும் ஊழலை விசாரிக்க ஆச்சாரியா கிருபளானியின் தலைமையில் இரயில்வே ஊழல் விசாரணைக் குழு 1953-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. 1956-ஆம் ஆண்டு திசம்பர்த் திங்களில் விவியன் போசு ஆணையம் நிறுவப்பட்டது. சந்தானம் அவர்களின் தலைமையின் கீழ் 1962-ஆம் ஆண்டு ஊழல் தடுப்புக் குழு ஒன்று தோற்றுவிக்கப்பட்டது.

ஊழலை ஒழிக்க இன்னும் சில நீண்டகால நடவடிக்கைகள் தேவை. முதலாவதாக, சொத்துகள் சம்பந்தமாகச் சீரான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். தனியார் சொத்தென்பது தகுதிக்கும் அதிகாரத்திற்கும் அடையாளச் சின்னமாகக் கருதப்பட்டு வந்ததால் அளவிற்கு மேல் பொருளீட்டுவதே மக்களது முக்கிய குறிக்கோளாகி விட்டது. அரசு சொத்துரிமையைக் கட்டுப்படுத்தல் வேண்டும். இரண்டாவதாக, சமூக, பண்பாட்டு, அற வழிகளில் பெருத்த மாற்றங்கள் ஏற்பட வேண்டும். மூன்றாவதாக, விழிப்புள்ள, நேர்மையான ஒரு பொதுமக்கட் கருத்து உருவாக்கப்படுதல் வேண்டும். நான்காவதாக, வலுவுள்ள ஓர் எதிர்க்கட்சி உருவாவதற்குத் தேவையான சூழ்நிலைகளை உருவாக்க வேண்டும்.

இதைத் தவிர்த்து ஊழல் களைய குறுகிய கால முறைகளையும் பின்பற்றலாம். முதலாவதாக, எளிதான, வலுவுள்ள பணிமுறைகள் உருவாக்கப்படல் வேண்டும். இரண்டாவதாக, அரசு ஊழியர்களது நடத்தை குறித்து ஒரு நியதி வகுக்கப்பட்டுப் பின்பற்றப்படுதல் வேண்டும். சந்தானம் குழு பரிந்துரை செய்ததுபோல் விரைவில் தண்டனைகள் அளிக்கும் முறைகள் வகுக்கப்படுதல் வேண்டும். மேலும் ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபடுபவருக்குத் தக்க தண்டனை அளிக்கப்படல் வேண்டும். மூன்றாவதாக, பொது வாழ்வில் நேர்மையை நிலை நாட்டுவதற்கு அமைச்சர்களின் நடவடிக்கை குறித்த சில கட்டுப்பாடுகள் உருவாக்கப்படல் வேண்டும். அமைச்சர்கள் பொருளீட்டுதல், வெகுமதிகள் பெறுதல், தமது சொத்துகளைக் குறித்த விவரங்களை அளித்தல் போன்றவை சம்பந்தப்பட்ட விதிகள் வகுக்கப்பட்டுச் செயலாற்றப்படுதல் வேண்டும். இறுதியாக, இலஞ்சத்தைக் களைபவர் (Ombudsman) என்ற ஒரு பதவியை உருவாக்கி அரசு அதிகாரிகளின் ஊழல்களுக்குப் பலியான மக்களுக்கு நீதி வழங்க முயற்சி எடுக்க வேண்டும். நிருவாகச் சீர்திருத்த ஆணையத்தின் ஆலோசனைக்கேற்ப அமைச்சர்கள், செயலாளர்கள் போன்றோர் தம் நடவடிக்கைகளைக் கண்காணிக்க 'லோக்பால்', 'லோக் அயுக்தா' போன்ற பதவிகள் உருவாக்கப்படுதல் வேண்டும்.

இவற்றைத்தவிர, அரசியல் துறையில் செயலாற்றும் பெருமக்கள் குழாம் (Elite) அரசியல் ஊழலைக் களைதற்குத் தக்க பண்பு வளர்ச்சி (Character Building) மக்களிடையே ஏற்படுமாறு ஆர்வத்தையும் நல்லெண்ணத்தையும் தூண்டுதல் வேண்டும். இவ்வகையான பண்புவளர்ச்சி ஏற்படுவது என்பது கருத்தளவில்தான் இருக்குமே தவிர, நடைமுறையில் ஏற்படுதல் கடினமாயினும், ஊழலைத் தடுப்பதற்குரிய மனஉறுதிப்பாடு வளர்ந்தால்தான் ஊழலை நீக்குதல் இயலுமென்பது தெளிவு. சா. ச.செ.

**ஊழல் தடுப்புச் சட்டம்** 1947-ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. இலஞ்சத்தையும் ஊழலையும் தடுக்கும் பொருட்டு இச்சட்டம் இயற்றப்பட்டது.

இச்சட்டம் மொத்தம் எட்டுப் பிரிவுகளைக் கொண்டது. இது சம்மு-காசுமீர் மாநிலம் நீங்கலாக இந்தியா முழுமைக்கும் பொருந்துவதாகும்.

இச்சட்டத்தின் முதல் பிரிவு குறுந்தலைப்பு மற்றும் சட்ட அளாவுகையையும்; இரண்டாம் பிரிவு பொருள் விளக்கங்கள் குறித்தும்; மூன்றாம் பிரிவு இந்தியத் தண்டனைச் சட்டம், பிரிவு 165அ-இன் கீழான குற்றங்களும் கைதுசெய்வதற்குரிய குற்றமே என்பது குறித்தும்; நான்காம் பிரிவு சட்டப்படியான ஊதியமல்லாத பிற கைக்கூலியைப் பொது ஊழியர் ஏற்றுக் கொள்ளுமிடத்து அது குறித்தும்; ஐந்தாம் பிரிவு அலுவல்முறைக் கடமையை ஆற்றுகையில் குற்றமுறு கெட்ட நடத்தை யாது என்பது குறித்தும், பிரிவு 5 (அ), இச்சட்டத்தின் படியான வழக்குகளில் புலனாய்வு குறித்தும்; ஆறாம் பிரிவு குற்ற வழக்குத் தொடர்வதற்கு முன்னொப்பளிப்பு அவசியம் என்பது குறித்தும்; ஏழாம் பிரிவு குற்றஞ்சாட்டப்பட்டவர் சான்றளிக்க உள்ள தகுதி குறித்தும்; எட்டாம் பிரிவு இலஞ்சம் கொடுத்தவரின் வாக்குமூலம் அவரைக் குற்றவழக்கிற்கு ஆளாக்காமை குறித்தும் உரைக்கின்றன.

கைக்கூலி: பொருள் விளக்கம்: 'கைக்கூலி' என்பது பண சம்பந்தமான அல்லது பணத்தால் மதிப்பிடக்கூடிய கைக்கூலி ஒன்றை மட்டுமல்லாது, தாம் செய்ய உட்கருத்துக் கொண்டிராத ஒன்றைத் தாம் செய்வதற்குத் தூண்டுகோலாக அல்லது தாம் செய்திராத ஒன்றைச் செய்வதற்கு ஈடாகப் பெறுவதையுங் குறிக்கும்.

பொது ஊழியர் ஒருவர் சட்டப்படியான ஊதியம் அல்லாத கைக்கூலி எதையாகிலும் எவரிடமிருந்தேனும் ஏற்றல் அல்லது கேட்டுப் பெறல் அல்லது ஏற்க உடன்படல் அல்லது கேட்டுப்பெற முயலல் இச்சட்டப்படி குற்றமாகும். இதன்பொருட்டு ஒருவர் மூன்று ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய கால அளவிற்குச் சிறைத் தண்டனையோ தண்டமோ அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படுவார். மேலும், இக்குற்றத்தை வழக்கமாகச் செய்கிற எவரொருவரும் ஓராண்டுக்குக் குறையாத, ஏழாண்டுகள் வரை நீடிக்கலாகும் கால அளவிற்குச் சிறைத் தண்டனை விதித்துத் தண்டிக்கப்படத் தக்கவராவார். மேலும், அவர் தண்டத்திற்கும் ஆளாதல் வேண்டும். ஆனால், நீதிமன்றம் எழுத்து மூலம் பதிவு செய்யப்படுகிற சிறப்புக் காரணம் எதன் பொருட்டும் ஓராண்டுக்குக் குறைந்த சிறைத் தண்டனை விதிக்கலாம். புலமை.

**ஊழி**: மண்ணியல் காலத்தைக் குறிக்கும் ஓர் அலகே ஊழி (Epoch) ஆகும். உலகத்தின் புவியமைப்பில் அளவிற்கடங்கா அளவில் பெரும் மாற்றங்கள் வரலாற்றுக் காலத்தினூடே நிகழ்ந்து வந்துள்ளன. இது 5,000 மிலியன் ஆண்டுகளுக்கு முன் ஞாயிற்றில் ஏற்பட்ட மாற்றங்களினால் வெடித்துச் சிதறித் தனிக்கோளமாக உருவெடுத்த காலம் முதல் நிகழ்ந்து வருவதாகும். புவிக்கோளம் முதலில் வெப்பக் குழம்பாக இருந்த நிலையிலிருந்து படிப்படியாக வெப்பம் குறைந்து குளிர்ச்சி நிலை அடைந்தவரையில் பல கால எல்லையைக் கடந்து வந்துள்ளது. இக் காலத்தைக் குறிப்பிட அமைந்தனவே பேரூழி (Era), ஊழி என்னும் சொற்களாகும்.

பல கால கட்டங்களில் உலகத்தின் புவிப்பரப்பு வெவ்வேறு வகையில் உருமாறி வந்துள்ளதால், மண்ணியலார் (Geologists) புவியமைப்பு வரலாற்றை ஐந்து பேரூழிகளாகவும், ஒவ்வொரு பேரூழியையும் பல ஊழிக் காலங்களாகவும் பகுத்துள்ளனர். ஒவ்வோர் ஊழிக் காலத்திலும் பாறைகள் பல நிலைகளில் நசிந்து உருமாறி வந்துள்ளன. இதைப்போன்றே ஒவ்வோர் ஊழிக் காலத்திலும் கடல் நிலத்தை உட்கொள்வதும் பின்னர்க் கடல் நிலப்பரப்பை விடுத்துப் பின்வாங்குவதும் நிகழ்ந்து வந்தன. இதனால், அக் காலத் தன்மைக்கேற்பத் தாவர இனங்களும் உயிரினங்களும் வளர்ச்சியடைந்துள்ளன.

மண்ணியல் கால அட்டவணைப்படி மூன்றாங்காற் பருவத்தில் (Tertiary period) 'பேலியோசீன்' (Palaeocene), இயோசீன் (Eocene), 'ஒலிகோசீன்' (Oligocene), 'மையோசீன்' (Miocene), 'பிலையோசீன்' (Pliocene) ஆகிய ஊழிகளும் நாலாங்காற் பருவத்தில் (Quarternary) 'பிலைசுடோசீன்' (Pleistocene) 'ஆலோசீன்' (Holocene) ஆகிய ஊழிகளும் அடங்கும். ஊழி என்னும் சொல் நடைமுறை வழக்கில் அந்தந்த ஊழியின் பெயருடன் (எ.கா. ஒலிகோசீன் ஊழி) இணைத்தும் அக்காலத்தையே கடை (Late), இடை (Middle) முதல் (Early) எனப் பாகுபடுத்தியும் கூறப்படுகிறது. ஊழி என்னும் சொல் பொதுவாகக் கடைப்பருவம் அல்லது மூன்றாங்காற்பருவம், நாலாங்காற் பருவம் முதலியவற்றில் அடங்கிய காலப் பகுப்புகளைக் குறிப்பிடவே பயன்படுத்தப்படுகிறது. சி.ப.

**ஊழித்தீ**: இந்த உலகம் அழியுங்காலத்துக் கடலின் வடக்குப் பக்கம் உருவாகிப் பொங்கி எரிந்து உலகை அழிக்கத் துணைநிற்கும் நீர், நெருப்பு,

காற்று ஆகியவற்றால் உலகம் அழிவதை விளக்க ஊழித்தீ பற்றிய கதை எழுந்தது. இயற்கையின் சீற்றத்தால் ஏற்படும் விளைவுகளுக்குக் காரணம் கற்பிக்கவே இவ்வகைக் கதைகள் கூறப்பட்டன. பகன் என்பவன் தன் தவவலிமையால் நெருப்புப் பிழம்பை உருவாக்கினான். அவனுடைய மூதாதையரின் கட்டளைப்படி அத்தீயைக் கடலுக்குள் ஏவினான். அத்தீ கடலைச் சென்றடைந்ததும் பெட்டைக் குதிரையின் வடிவத்தைப் பெற்றது. இத்தீயைப் பற்றி மற்றொரு கதையுமுண்டு. சூரிய மண்டலத்தைத் தேவர்கள் சாணை பிடித்தனர். அப்போது சூரியனிடமிருந்து தீப்பொறிகள் சிதறின. இதனைக் கண்ட விசுவகருமன் கடல் நீரை அடக்குவதற்கு இதுவே தக்க தருணம் என நினைத்துத் தீப்பொறிகளை ஒன்று சேர்த்துக் கடலில் விட்டான். ஊழித் தீ கடலில் தோன்றுதற்குரிய காரணத்தை இக்கதை விளக்குகிறது. பி.தெ.

## ஊற்றுமலைத் தனிப்பாடல் திரட்டு:

ஊற்றுமலை என்பது ஒரு குறுநிலத்தலைவரின் தலைநகர். அங்கு கி.பி. 19-ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் அரசு செலுத்தியவர் இருதயாலய மருதப்பப் பாண்டியன். அவர் நாள்தோறும் நல்லிசைப் புலவர்களோடு கலந்திருந்து அருந்தமிழ் விருந்து அருந்தி மகிழும் பண்புடையவர். அவர் மீது புலவர்கள் இயற்றிய பாடல்களின் தொகுப்பே ஊற்றுமலைத் தனிப்பாடல் திரட்டு' எனப்படும்.

திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த ஊற்றுமலையில் அரசு புரிந்த மன்னர்கள் சிற்றாறு பாயும் வீரகேரளம்புதூரைப் பிற்காலத்தில் வாழ்விடமாக அமைத்துக் கொண்டனர். அதனால், ஊற்றுமலை என்றதும் வீரகேரளம்புதூரில் இருந்த குறுநிலத் தலைவரின் நினைவே நெஞ்சில் தோன்றும்.

தொன்று தொட்டு வீரத்தோடு விளங்கிய குறுநிலத்தலைவரின் பரம்பரையினர் விசுவநாத நாயக்கர் காலத்தில் பாளையக்காரர் எனவும், ஆங்கிலேயர் ஆட்சியில் 'சமீன்தார்' எனவும் பெயர் பெற்றுத் தங்கள் நிலப் பகுதிகளை ஆட்சி புரிந்தனர். அம்பாசமுத்திரம் வட்டத்தைச் சேர்ந்த திருப்புடை மருதூரிலுள்ள இறைவர் பெயராகிய மருதப்பர் என்பது இந்தக் குறுநிலத்தலைவர் யாவருக்கும் குடிப்பெயர்.

மறவர் குலத்தைச் சேர்ந்த ஊற்றுமலை மன்னர்களுள் இருதயாலய மருதப்பப் பாண்டியன் புலமை நலம் மிக்க கவிவாணர்களைத் தம் பக்கத் துணையாகக் கொண்டிருந்தார். அவரது அரசவையிலிருந்த புலவர்களுள் சென்னிகுளம் அண்ணாமலை இரெட்டியார் தலைமையானவர். 'தென்பொதிகைத்தமிழ்முழுதும் புகுந்து நின்ற செவியுடையார்' என்று இவரை அண்ணாமலையார் தம் சீட்டுக்கவியில் சிறப்பித்தார். மன்னர் கழுகுமலை முருகன் கோவிலுக்குக் காவடி எடுத்துச் சென்றபோதுவழிநடை வருத்தம் தோன்றாமல் இருப்பதற்காக அண்ணாமலையார் பாடியதே காவடிச்சிந்து என்னும் இசைத்தமிழ்நூல்.

ஊற்றுமலைத் தனிப்பாடல் திரட்டில் 454 பாக்கள் உள்ளன. அவற்றுள் அண்ணாமலை இயற்றியவை 334. சமீனுக்கு அண்ணாமலை இரெட்டியார் எழுதியனுப்பிய கடிதக் கவிகள் 270 முதல் 326 வரை உள்ளன. அண்ணாமலை இரெட்டியார் பாடல்கள் அனைத்தும் சொல்லணி வாய்ந்தவை.

இவர் பாடியவற்றுள், 1-127 அறுசீராசிரிய விருத்தம், 128-170 கட்டளைக்கலித்துறை, 171 நீரோட்டக யமகம்,172-231 வெண்பா, 232-259 சந்தக் கழிநெடில் விருத்தம், 260-266 கட்டளை விருத்தம், 267-269 எண்சீர் விருத்தம் கடைமடக்கு, திரிபு மடக்குமாக இவர் இயற்றிய பாடல்கள் யாவும் கவிதைகளின் சாயல் நிரம்பியவை. இவர் தம் 26-ஆம் வயதில் மறைந்தது தமிழுக்குப் பேரிழப்பே.

புளியங்குடி முத்துவீரக்கவிராயர், செவ்வற்குளம் கந்தசாமிக் கவிராயர், வெள்ளக்கால் வெ.ப. சுப்பிரமணிய முதலியார், முகவூர் மீனாட்சி சுந்தரக் கவிராயர், வண்டானம் முத்துசுவாமி ஐயர், சொக்கம்பட்டிச் சீனித்தேவர் ஆகியோர் ஊற்றுமலைத் தனிப்பாடல்களைப் பாடியவர்களுள் குறிப்பிடத்தக்க சிறப்புடையவர்கள். கலித்துறை, யமகம், இரதபந்த வெண்பா, நடுவெழுத்தலங்காரம், கலிவெண்பா ஆகிய பலவகைப் பாடல்கள் இத்தொகுப்பில் உள்ளன. தமிழ் மொழியில் உட்பிணைப்பு நிலைத் தொடர்கள் மிகுந்திருப்பதால், இத்தகைய சொல் விளையாடல்களில் புலவர்கள் ஈடுபட்டு இன்புறுவது அக்காலத்தில் இயல்பாயிற்று.

'சுருள் களங்கண் பிரமரம்சங் குதிரைநடை
பிரமரம்சங் கொண்ட மின்னாள்'

இத்தொடர் செவ்வற்குளம் கந்தசாமிக் கவிராயர் வாக்கு. சுருள்-கொண்டை; பிரமரம்-வண்டு; களம்-சங்கு ; திரை- கண் ; நடை (பிரமர் அம்சம்) நான்முகன் ஊர்தியான அன்னம். இவ்வாறு நிரல்நிறையாக வைத்து இத்தொடர் நயமாகப் பொருள் கொள்ளப்படுகிறது.

கைக்கிளை என்ற சொல் ஒரே செய்யுளில் எட்டு முறை இடம் பெற்று, முன்பின் உள்ள சொற்களின்

தொடர்பினால், எட்டுவகையாகப் பதப்பிரிவு செய்யப்பெற்று, எட்டுவகையில் பொருள்படும்படியாக வெள்ளக்கால் வெ.ப. சுப்பிரமணிய முதலியார் புனைந்த சொல் அலங்காரம் பயிலும் பாடல், கற்பவர்களுக்குக் களிப்பை அளிப்பதாகும்.

கவித்திறனும் கலைத்திறனும் மேன்மேல் ஒங்குவதற்குத் தண்ணீரும் உரமுமாகப் பாராட்டும் பரிசுமே அமைகின்றன.

கவிசாரம் பெறநினைந்துஎன் வருத்தமெலாம்
பாராது கனிவினோடுன்
செவிசார வேண்டுமென்ற பேராசை
யால் இவணம் செய்தேன்,

என்ற அண்ணாமலையார் பாடல் வரிகளில் சொல் நயமும் பொருட் சிறப்பும் பொருந்துவதற்குப் புலவர் எய்தும் வருத்தமும், அதனைப் புரவலர் உணர்ந்து பாராட்டிப் பரிசு வழங்கும்போது பகலவனைக் கண்ட பனித்துளிபோல் கவிபுனையும் துயரம் முழுதும் தொலைவதும் குறிக்கப்பெற்றன. பாம்பின் கால் பாம்பறியும் என்ற பழமொழிப்படி இருதயாலய மருதப்பப்பாண்டியன் புலமை நலமுடைய புரவலராக இருந்ததால்தான், கவிவாணர்களிடம் கனிவு காட்டி அவர்களை ஆதரித்துப் போற்றினார். அத்தகைய சிறப்பை நேரில் அறிந்த டாக்டர் உ.வே.சா. ஐயர் 'என் சரிதம்' என்ற தமது சுயசரிதையில் அது குறித்து (பக். 952–957) விரிவாக எழுதியுள்ளார்.

எனவே, ஊற்றுமலைத் தனிப்பாடல் திரட்டு ஆய்வு மேற்கொள்ளும் அறிஞர்க்கு இலக்கியச் சுரங்கம்; வரலாற்றுக் கருவூலம்; இலக்கணப்பேழை. க.சு

**ஊற்றுமலை மருதப்பன்** பாண்டிய மன்னர் பரம்பரையைச் சேர்ந்த குறுநில மன்னர். வீரகேரளம்புதூர் என்கிற ஊற்றுமலையைத் தலைநகராகக் கொண்டு கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் செந்தமிழ் மறவர் பாளையத்தை வலுப்படுத்தி அமைதியான முறையில் நல்லாட்சி செய்தவர். திருநெல்வேலிச் சீமையில் தென்காசி வட்டத்தில் தன்னாட்சி பெற்ற சமீன்களில் ஊற்றுமலை ஒன்றாகும். தென்பாண்டி நாட்டின் பாதுகாவலுக்காக அதன் பல பகுதிகளில் வகுக்கப்பட்டிருந்த 32 கோட்டைகளுள் ஊற்றுமலைக் கோட்டையும் ஒன்று. பாண்டிய மன்னர் பரம்பரையினர் என்பதை நினைவுபடுத்தும் வகையில் இதற்கு மாறவர்மன் கோட்டை எனப் பெயரிட்டனர். மறவரினம் ஆண்ட பழைமையான ஊர்களுள் ஊற்றுமலை வளமையான வயல்களும் பசுமையான சோலைகளும் சூழ்ந்த ஊராகும். மருதநில வளம் மிகுந்த ஊற்றுமலை அரசர்க்கு மருதப்பர் என்ற பெயர் பொருத்தமே. அவ்வரசர்களின் குல தெய்வம் மருதப்ப சுவாமியாதலால் அப்பரம்பரை அரசர் அனைவரும் மருதப்பர் என்ற பொதுப் பெயரைத் தத்தம் இயற்பெயரோடு இணைத்துக் கொள்வதை மரபாகக் கொண்டனர். ஆன்ற தமிழ்ப்புலமையாளராகவும் புலவர்களை ஆதரிக்கும் வள்ளலாகவும் விளங்கிய குறுநிலத்தலைவரின் பெயர் இருதயாலய மருதப்பப் பாண்டியன் என்பதாகும். 20-ஆம் நூற்றாண்டு இறுதியில் வாழ்ந்த நவநீத கிருட்டிண மருதப்பப் பாண்டியன் இவருடைய பரம்பரையைச் சேர்ந்தவரே.

கி.பி. 17-ஆம் நூற்றாண்டு மருதப்பப் பாண்டியரே தமிழ் வளர்த்த பெருமகனாகத் திகழ்ந்தார். இவர் நெல்லையம்பதி சைவசிகாமணி சங்கரநமசிவாயப்புலவரைத் தம் அவைக்களப் புலவராக்கினார்; நன்னூலுக்கு விருத்தியுரை எழுதச் செய்தார். மருதப்பர் தமிழ் இலக்கிய இலக்கணங்களை நன்கு கற்றுத் தேர்ந்தவர். ஆதலால், இவரை 'முத்தமிழ்ப் புலமையும் முறையரசுண்மையும் இத்தலம் ஈய்திய இறைமகன்' என்றழைத்தனர். சங்கர நமசிவாயர் உரை இயற்றும்போது மாதம் ஒன்றுக்கு நாலு கோட்டை நெல்லும் தினசரி ஒரு படிப் பாலும் கொடுக்கும்படி அரண்மனை அதிகாரிக்கு ஆணை பிறப்பித்தார். சங்கர நமசிவாயரின் விருத்தியுரையை அரங்கேற்றம் செய்து பரிசுகளும் வழங்கினார். 'நன்னூல் உட்கருத்து உலகோர் அறிய உரை செய்க' என்று நரேந்திர சிங்கம் ஊற்றுமலை மருதப்பர் பணித்த செய்தியைச் சங்கர நமசிவாயர் தமது உரைப்பாயிரத்தில் கூறியுள்ளார். தாம் பெற்ற இலக்கண அறிவை இவ்வையகம் எளிதில் பெற வேண்டும் என்று எண்ணியவர் ஊற்றுமலை மருதப்பர். 'நன்னூற்கு விரித்துரை செய்தான் திகந்தத்தளவும் நடத்தும் கீர்த்தித் தென்னூற்றுமலை மருதப்பன் சொலச் சங்கர நமச்சிவாயன் தானே' என்று உரைப்பாயிரம் கூறுகிறது. மருதப்பர்களுள் இருதயாலய மருதப்ப தேவரே நன்னூலுக்கு விருத்தியுரை எழுதச் செய்தார். அவ்வுரையில் எடுத்தாளப்பட்டிருக்கும் இலக்கிய மேற்கோள்களை நோக்கினால் உரை அரங்கேற்ற ஏற்பாடு செய்த மருதப்பரின் இலக்கியப் புலமையைக் காணலாம். தமிழ் மறவர் பாளையங்களில்–தமிழ் மொழித் தொண்டு புரிந்த பாளையங்களில் ஊற்றுமலையும் ஒன்று. ஊற்றுமலையில் அரசு வீற்றிருந்து வீரம் விளைவித்த மருதப்பாண்டியன் தமிழ்ப் புலவர் சங்கர நமச்சிவாயரை அவைக்களப் புலவருள் முதன்மையாளராக்கினார். அவரை உரையாசிரியராக்கியதுடன் தாமும் தமிழ்ப் புலவராகவும் விளங்கினார். பி.தெ.

துணை நூல்கள்:

குருகுதாசப் பிள்ளை, எஸ்., திருநெல்வேலிச் சீமைச் சரித்திரம், சாது அச்சுக்கூடம், சென்னை, 1931.

இராமசாமிப்புலவர், அ.அ., தமிழ்ப்புலவர் வரிசை, ஆறாம் புத்தகம், சை.சி. கழகம், சென்னை, 1955.

**Bishop Caldwell**, R., A History of Tinnevelly, Aisan Education Service, New Delhi. 1982.

***ஊறல்*** தொண்டை நாட்டிலுள்ள தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று; இக்காலத்தில் தக்கோலம் என வழங்கப் பெறுகிறது. திருவாலங்காட்டிலிருந்தும் சென்னையிலிருந்தும் பேருந்திற் சென்று இத்தலத்தினை அடையலாம். இவ்வூரில் புகைவண்டி நிலையம் உள்ளது. நந்தி தீர்த்தம் இங்குள்ளது. அருகே கல்லாறு ஓடுகிறது. திருக்கோயிலின் மேற்புற மலைச் சரிவில் ஓர் இயற்கை ஊற்று இருந்தது. அதிலிருந்து நீர் கோயிலின் உள் சுற்றில் தரை மட்டத்திலுள்ள ஒரு நந்தியின் வாய் வழி வந்து, பரவி ஓடிக் கோயிலுக்கு எதிரில் உள்ள மற்றொரு நந்தியின் வாய்வழிப் போந்து, அருகிலுள்ள சிறு குளத்தினை நிரப்பி வழிந்து சென்றது. நந்தி வாயிலிருந்து நீர் விழுவது இக்காலத்தில் நின்று விட்டது. இறைவன் பெயர் உமாபதீசுவரர்; இறைவி பெயர் உமையம்மை. இத்தலத்திற்குத் திருஞானசம்பந்தரின் தேவாரப் பதிகம் உள்ளது. இத் திருக்கோயில் சுவரில் பல கல்வெட்டுகள் உள்ளன. சோழ மன்னன் ஒருவனுக்கும் சாளுக்கிய மன்னன்ஒருவனுக்கும் போர் நிகழ்ந்த இடம் இங்குப் பெருமணல் வெளியாக உள்ளது. அ.மா.ப.

***ஊறு செய்யாமை***: ஊறு செய்யாமை என்னும் கோட்பாடு நெடுங்காலமாக நிலவி வந்துள்ள கோட்பாடாயினும், இதனை உலகத்தில் பரப்பியவர் மகாத்மா காந்தி அடிகளேயாவர். இது 'அகிம்சை'யின் அடிப்படையில் அமைந்துள்ளது. எனவே, துன்புறுத்தல் இல்லா நடவடிக்கைகளே ஊறு செய்யாமை எனப்படும். ஒருவர் மனத்தாலும், சொல்லாலும், செயலாலும் பிறர்க்குத் தீங்கு எண்ணாமலும், செய்யாமலும் இருத்தல் ஊறு செய்யாமையாகும். மனிதன் வன்முறையில்லாச் செயல்களில் ஈடுபட முயற்சி செய்ய வேண்டும்; கோபம் கொள்ளாமல், கொடுமையான நடத்தையின்றி, எல்லோரிடமும் நட்பும், நல்லெண்ணமும் கொண்டு நடக்க முயற்சி செய்ய வேண்டும். இவையெல்லாம் ஊறு செய்யாமையின் அடிப்படைக் கூறுகள் எனலாம். ஒருவன் தன்னுடைய எதிரிக்குக் கூட நன்மை செய்ய வேண்டும், தீமை செய்ய எண்ணுவதே ஊறு செய்யாமைக்கு முரண்பாடானதாகும்.

**நோக்கம்**: ஊறு செய்யாமையின் நோக்கம் இவ்வுலக ஈடுபாட்டிலிருந்து, அதாவது பொருள், வெளியழகு போன்றவற்றிலிருந்து விடுபட்டு, நிலையான ஆன்மிகத்திற்கு வழிவகுக்கக்கூடியதாகும்.

மனம், மொழி, மெய் என்னும் மூன்றினாலும் பிற உயிரினங்களுக்குத் தீங்கு செய்யாமை ஊறு செய்யாமை எனக் கொள்ளப்படுகிறது. மன உறுதியில்லாதவர்கள் தமக்குத் தீங்கு இழைக்கப்படும்போது அத்தீங்கினைப் பொறுத்துக்கொள்ளும் ஆற்றலை இழந்து, பழி உணர்வு மேலிட்டுப் பதிலுக்குத் தீங்கு புரிய முனைவார்கள். இத்தகைய பழி உணர்வு ஊறு செய்யாமைக்கு எதிரான செயலாகும். எனவே, இந்நெறியினைப் பிறழாது கடைப்பிடித்தற்கு மனவுறுதி மிகவும் இன்றியமையாதது என்பது வலியுறுத்தப்படுகிறது. மனவலிமை கொண்டோர் உடல் வலிமை குறைந்திருந்தாலும் சத்தியாக்கிரகத்தைக் கடைப்பிடிக்கலாம். ஏனெனில், ஊறு செய்யாமை என்பது ஒரு தீவினைக்கு எதிராகப் பயன்படுத்தக்கூடியது. ஒரு தீவினையை மற்றொரு தீவினையின் மூலம் கட்டுப்படுத்தினால் அது ஊறு செய்யாமை அன்று. ஒரு தீவினையை அகற்றப் பயன்படுத்தும் நல்வினையே ஊறு செய்யாமை. தீமையை அழித்து நன்மையை மேலோங்கச் செய்வது ஊறு செய்யாமை.

மகாத்மா காந்தி அடிகள் ஊறு செய்யாமைக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கியவர். ஊறு செய்யாமைக்கு உண்மை மிகவும் இன்றியமையாதது. கடவுள் தான் உண்மையென்று சொல்வதைக் காட்டிலும் உண்மைதான் கடவுள் என்று மகாத்மா காந்தி உண்மையை வலியுறுத்துகின்றார். ஏனெனில், ஊறு செய்யாமை என்பது உண்மையைக் கண்டறிய நடத்தும் போராட்டமே தவிர, வேறு அன்று என்கிறார். உண்மையைக் கண்டறிய நடத்தும் போராட்டத்தைச் சரிவர நடத்தினால், போராடக்கூடிய இரண்டு பிரிவினரும் உண்மையைக் காண்பதற்காக நடத்தும் போராட்டம் என்பதை உணர்வர். இப்போராட்டத்தில் ஒரு பிரிவினர் வெற்றி பெற்றவர்கள்; மற்றொரு பிரிவினர் தோல்வியுற்றவர்கள் என்று கருத முடியாது. ஒரு முடிவை எப்படியாவது எட்டிவிட வேண்டுமென்று நடத்துகின்ற போராட்டமன்று ஊறு செய்யாமை. இப்போராட்டம் உண்மைக்காகவே நடத்தப்படக்கூடியதாகும். இப்போராட்டம் உண்மையை விட்டு விலகிச் சென்றால் அதற்காக வருத்தமுறுவதுடன், அதனால் கிடைத்த ஆதாயங்களையும் விட்டு விட வேண்டும். ஆகவே, ஊறு செய்யாமை உண்மையைக் கண்டறிவதாகும். உண்மையைக் கண்டறியும் போராட்டத்தில் தன்னையே வருத்தி, தன் எதிரியும் உண்மையை உணருமாறு செய்ய வேண்டும்.

உண்மை ஊறு செய்யாமையாயின், உண்மையை உணரச் செய்யும் வழிமுறை அன்பு ஆகும், நல்மனத்

தையும் கனிந்துருகச் செய்யும் வலிமை படைத்தது ஊறு செய்யாமையெனக் காந்தி அடிகள் கூறுகின்றார். மக்களை அன்பால் ஈர்க்க வேண்டுமே தவிரக் கட்டாயத்தினால் ஈர்க்க முடியாது என்கிறார். மக்களுடைய நம்பிக்கைகளை அன்பு, இணங்க வைத்தல் மூலம்தான் பெற வேண்டுமே தவிர, ஆதிக்கத்தால் மக்களுடைய நம்பிக்கைகளைப் பெறக் கூடாது.

ஒவ்வொரு மனிதனும் உண்மையை அறியும் போராட்டத்தில், தீமையை வெறுக்க வேண்டும். ஆனால், கூடியவரை தீமை செய்கின்ற மனிதர்களை வெறுக்காமல், அவர்கள் செய்கின்ற தீமைகளை மட்டுமே வெறுக்க வேண்டும். மகாத்மா காந்தி அடிகள் ஆங்கிலேய ஆதிக்க அரசாங்கத்தை வெறுத்தாரே தவிர ஆங்கிலேயர்களை வெறுக்கவில்லை. இதுபற்றி அவர் குறிப்பிடுவதாவது, ஆங்கிலேயர்கள்மீது தமக்கு அவநம்பிக்கை இருந்தாலும் ஆங்கிலேயர்கள் மீது அன்பு செலுத்தினால்தான் தம்முடைய அன்பு உண்மையானதாகும் என்கிறார். ஏனெனில் அன்பு பாரபட்சம் காட்டுவதில்லை; வருந்துவதில்லை; பழியுணர்ச்சி கொள்வதில்லை; அழிவதில்லை என்று அன்பிற்கும் ஊறு செய்யாமைக்குமுள்ள தொடர்பைக் காந்தியடிகள் விளக்குகிறார்.

ஊறு செய்யாமையில் இறங்கும் சத்தியாக்கிரகிக்கு அன்பு மட்டும் இருந்தால் போதுமானதன்று; அவனிடம் மனத்தூய்மையும் இருக்க வேண்டும். ஒழுங்கு, சுயகட்டுப்பாடு ஆகியனவும் இருக்க வேண்டும். ஒரு சத்தியாக்கிரகி ஒழுங்கு தவறிவிட்டால், அவனுடைய நோக்கமே அழிந்துவிடும். ஆகவே, மனத்தூய்மை தனக்கென வாழாமை, அஞ்சாமை, உண்மை ஆகியவற்றைச் சத்தியாக்கிரகி கடைப்பிடிக்க வேண்டும். உண்ணாவிரதம் ஊறு செய்யாமையை நடைமுறைப் படுத்தும் ஓர் அமிசம். உடல், மனம், ஆவி ஆகிய மூன்றும் ஓர் உண்மையான உண்ணாவிரதத்தினால் தூய்மையடைகின்றன என்கிறார் மகாத்மா காந்தியடிகள். உண்ணாவிரதம் என்பது உலக ஆசாரங்களை விடுத்து, இறைவனை அடைய முயற்சி செய்யும் ஆன்மிகப் பிரார்த்தனைதான். இது யாருக்காகவோ நடத்தப்படுவதன்று. இது ஒவ்வொரு மனிதனும் தனக்காக, தன்னைச் சார்ந்தவர்களுக்காகச் செய்ய வேண்டிய ஒன்று. இதன் மூலம் தன்னையும் தன்னைச் சார்ந்தவர்களையும் தூய்மைப்படுத்தி, விழிப்படையச் செய்யக்கூடியதாகும். ஊறு செய்யாமை வெற்றியுடன் நடைபெறக் சத்தியாக்கிரகியிடம் அஞ்சாமை இருக்க வேண்டும். தனக்கென வாழாமல் இருந்தாலே, ஒவ்வொரு மனிதனிடமும் அஞ்சாமை தானாக வந்து விடும். உண்மையைக் கடைப்பிடிக்க வேண்டுமாயின், அஞ்சாமைஇன்றியமையாதது. அஞ்சாமைக்கு முதலில் தேவைப்படுவது ஆன்மிகம் அல்லது அறநெறி. பயந்தவர்கள் அறநெறி கொண்டவர்களாக இருக்க முடியாது என்று காந்தியடிகள் கூறுகிறார். அவர் அறநெறி என்பது மதத்திற்குச் சமமானது என்கிறார். மதத்திலுள்ள சடங்குகள், தொன்முறைகள் ஆகியவை முக்கியமானவை யல்ல. அறநெறிதான்முக்கியம். ஏனெனில் அறநெறியின் சாராம்சம் உண்மை ஆகும். இவ்வாறு அறநெறியே மதமென்கிறார். கடவுள் நம்பிக்கை ஊறு செய்யாமையின் மகுடம் என்கிறார். ஆகவே ஊறு செய்யாமைக்குக் கடவுள் நம்பிக்கை தேவை. கடவுள் நம்பிக்கையுடையவர்கள் தீவினைக்கு, வன்முறைக்குச் செல்லமாட்டார்கள் என ஊறு செய்யாமையினை விளக்குகிறார். எம்.ப.

**ஊன்பொதி பசுங்குடையார்** சங்க காலப் புலவர்களுள் ஒருவர். சங்கப்புலவர்களுள் சிலர் தம் இயற்பெயரால் வழங்கப்படாமல், தாம் பாடிய பாடற்கண்ணமைந்துள்ள அரிய தொடரினால் வழங்கப்படுகின்றனர். இப்புலவர் பெயரிலுள்ள 'ஊன் பொதி பசுங்குடை' என்னும் தொடர் இவர் பாடிய பாடல் ஒன்றில் அமைந்த தொடராகக் கருதப்படுகிறது. ஆனால், இத்தொடர் சங்கத் தொகை நூல்களில் இவர்தம் பாடல்களாகக் கிடைப்பனவற்றில் காணப்படவில்லை. இதனால், சங்கத் தொகை நூல்களின் பாடல்களும் அவற்றின் ஆசிரியர் பெயர்களும் வரையறை செய்யப்பெற்ற பின்னர், அத்தொகைப் பாடலில் சில மறைந்திருத்தல் கூடும் என்னும் கருத்துப் புலனாகிறது. இப்புலவரின் நான்கு பாடல்கள் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் மூன்று பாடல்கள் (10, 203, 378) பாடாண்டிணையிலும், ஒருபாடல் வாகைத் திணையிலும் (370) அமைந்துள்ளன. இப்பாடல்கள் இயன்மொழி (10,378), பரிசில்துறை (203), மறக்களவழி (370) என்னும் துறைகளில் உள்ளன. இவற்றுள் ஒன்று (10) பூவைநிலைக்கும், பிறிதொன்று (370) ஏர்க்கள உருவகத்திற்கும் பொருத்தமாக உள்ளன. இந்நான்கு பாடல்களின் தலைவர் பெயர் சோழன் நெய்தலங் கானல் இளஞ்சேட்சென்னி, சேரமான் பாமுளூர் எறிந்த நெய்தலங் கானல் இளஞ்சேட்சென்னி, சோழன் செருப்பாழி எறிந்த இளஞ்சேட்சென்னி எனக் காணப்படுகிறது. இந்நான்கு பெயர்களும் இளஞ்சேட்சென்னி என்னும் ஒரே மன்னனைக் குறிக்கின்றன என்று சிலர் கருதுகின்றனர். இவர்கள் இம்மன்னன் செருப்பாழி எறிந்தமையும், சேரமானின் பாமுளூரை எறிந்தமையும் வெவ்வேறு காலத்தில் நிகழ்த்திய செயல்களாகும் என்பர். சங்க காலப் புலவர், மன்னர் ஆகியோர் பெயர்களில் அமையும் அடைமொழிகள் அவர்களை அப்பெயருடைய மற்ற

வர்களினின்றும் வேறுபடுத்துவதற்கு அமைந்தன வாகும் என்ற கருத்தில், இந்நான்கு மன்னர்களும் வேறுவேறானவர் என்று சிலர் கருதுகின்றனர்.

இல்லறத்தில் ஈடுபட்டுள்ள மகளிர் வாழ்க்கை யினை, 'அமிழ்து அட்டு ஆனாக் கமழ்குய் அடிசில், வருநர்க்கு வரையா வசையில் வாழ்க்கை' என்று இப் புலவர் சிறப்பித்துள்ளார். வள்ளல்களை நாடிச் செல்லும் பரிசிலர்க்குப் 'பழுமரம் உள்ளிய பறவை' யினை உவமை காட்டியிருப்பது நயமிக்கதாக உள்ளது. இளஞ்சேட்சென்னி வழங்கிய பல்வேறு அணிகலன்களை வறுமையால் வாடிய சுற்றத்தவர் அணியத் தெரியாமல் முறைமாறி அணிந்தமைக்கு, இராவணனால் கவர்ந்து செல்லப் பெற்ற சீதை பொதிந்து வீழ்த்திய அணிகலன்களைப் பெற்ற குரங்குகள் அவற்றை முறைமாறி அணிந்து கொண்டமையினை உவமையாக்கிக் கூறியுள்ளது மிக்க சிறப்பினதாகும். இராமாயணக் கதை சங்க கால மக்களால் உணரப் பெற்றிருந்தமைக்கு இவர் தம் பாடல் (புறம். 378) அரியதோர் எடுத்துக் காட்டாகத் திகழ்கிறது. அ.மா.ப.

**ஊனக்கண்** ஊனக்கண் என்பது முகத்தில் அமைந்துள்ள புலனுறுப்பைக் குறிக்கும். இது புறக் கண் எனவும் சொல்லப்படும். வடிவத்தையும் வண்ணத்தையும் பார்ப்பதற்குரிய புலனுறுப்பே கண்ணாகும். கண்கள் பார்ப்பதற்கே உண்டாக்கப் பட்டிருப்பினும், கட்புலன் பார்ப்பதற்குரிய ஆற்றல் பெற்றிராவிட்டால் அதனைக் குருட்டுத் தன்மை யுடையது என்பர். எனவே கட்புலன் பார்ப்பதற் குரிய ஆற்றல் உடையது என்பது புலனாகும்.

இந்திய மெய்ப்பொருளியலில் அறிவைப் பெறு வதற்குரிய வழிகளில் ஒன்றான காட்சியளவையின் கருத்துப்படி ஆன்ற அல்லது உயிர் உணர்வு ஆற்றலே கட்புலனாக அமைகின்றது. அதில் கண் என்னும் உறுப்பு அதற்கு உதவுவதாகும். இவ்வாறு புறக்கண் உயிர் உணர்வாற்றலின் துணைக் கொண்டு பொருள் களின் வடிவத்தையும் வண்ணத்தையும் பார்க்குங் கால் அது முழுமையாகக் காண்பதில்லை. ஏதாவது ஒரு பகுதி பிற பொருள்களின் பிடிப்பால் முழுமை யாகக் காணக் கிடைப்பதில்லை. எனவே, புறக்கண் பொருள்களின் வடிவத்தையும் வண்ணத்தையும் முழுமையற்றதாகக் காண்பதால் அதனைக் குறை யுணர்வு என்பர். இவ்வாறு குறையுடன் காணப்பட்ட வடிவத்தின் புலன் குறிப்புகளை மனம் பெற்றுத் தனது பழைய நுகர்வுகளின் துணைக் கொண்டு அப் பொருள் இன்னது என்று தீர்மானித்த பின்னரே, புறப்பொருளைப் பற்றிய உணர்வு உயிர்க்கு உண்டா கும். இவ்வகையில் புறக்கண் பொருள்களைப் பற்றிய புலன் குறிப்புகளை மட்டும் புலனாகிய உயிர் உணர்வு ஆற்றலின் துணைக் கொண்டு பார்ப்பதா லும் அதனைக் குறையுணர்வு எனலாம். ஆனால் உயிர், உணர்வு, புலன் மற்றும் புலனுறுப்புகளின் துணையின்றிப் பொருள்களை நேரடியாகக் காணும். இதனை உயிரின் நிறையுணர்வு அல்லது அகவுணர்வு என்பர். உயிர் உணர்வைச் சங்கரர், மத்து வர் போன்றோர் சாட்சி என்று குறிக்கின்றனர். சைவசித்தாந்த மெய்ப்பொருளியலில் உயிர் உணர்வு வித்தியாதத்துவத்துடன் இணைந்து பொருள்களை அறிகின்ற பொழுது, அதனைச் சிவசித் சக்தியின் துணையுடன் கூடப் புறக்கண் இறை,உயிர், தளைகளின் இயல்பை முழுமையாக அறிய முடியாத நிலையில் உள்ளதால் அதனை ஊனக்கண் என்கின்ற னர். மேலும், சிவசித் சக்தியாகிய உயிர் உணர்வு இறை, உயிர், தளைகளின் உண்மை இயல்பை இறை வனின் சித்சத்தியாகிய சிவசித் சக்தி உணர்த்தும் பொழுது உணர்வதால், சிவசித்சக்தி மட்டுமே சைவ சித்தாந்திகளின் கருத்துப்படி நிறையுணர்வுடைய ஒன்றாகும்.

புறக்கண் பருவுடம்பில் ஒரு பகுதியாதலால் அது வும் ஐவகைப் பருப்பொருள்களான (பஞ்சபூதம்) ஆகாயம், நீர், நெருப்பு, காற்று, பூமி ஆகியவற்றால் ஆனதே. இருப்பினும் கண் ஐவகை நுண்பொருள் களான பரிசம், இரசம், உருவம், சப்தம், கந்தம் (தன்மாத்திரை) ஆகியவற்றில் உருவத் தன்மாத்திரை மேலோங்கிய நிலையில் அமைந்ததாகும். பருப் பொருள்கள் தன்மாத்திரைகளின் கலப்பினால் உண்டானவை என்பதில் சாங்கியர்கள், விசிட்டாத்து வைதிகள், சைவசித்தாந்திகள் ஆகியோர் ஒன்றுபடு கின்றனர். மேலும், உலகின் மூலப்பொருளாகிய பிர கிருதி பரிணமிக்கின்றபொழுது, அகங்காரத் தத்துவத் தில் சத்துவகுணம் மேலோங்கிய நிலையில் மனமும் புலன்களும் உண்டாகின்றன என்றும், அகங்காரத் தில் தாமதகுணம் மேலோங்கிய நிலையில் தன் மாத்திரைகள் உண்டாகின்றன என்றும் உடன் பட்டுள்ளனர். இப்புலன்கள் தன்மாத்திரைகளின் கலப்பினால் உண்டான பஞ்சபூதங்களினால் உண்டா கும் புலனுறுப்புகளில் தங்கி, அவற்றைச் செயற்பட வைக்கின்றன என்றும் கூறுவர்.

ஆனால் சங்கரரின் அத்துவைதப்படி புலன்கள் உண்டான பின்பே பருப்பொருள்கள் உண்டாகின்றன என்ற கருத்துக் காணப்படுகிறது. உலகம் மாயையின் தோற்றமெனப்படுவதால், புறக்கண்ணும் கூட விவகாரநிலை அற்றுப் பரமாத்திக நிலையில் மறை கின்ற ஒன்றாகும். இது மேற்கூறிய உண்மையியல் கருத்துகளுக்கு மாறானதாகும்.

நியாய வைசேடிக மெய்ப்பொருளியலார் அணுக்கள் தம்முள் இணைந்தே உலகமாகப் பரிணமிக்கின்றன என்று கூறுகின்றனர். எனவே புறக்கண்ணும் அணுக்களால் உண்டானதாகும். மேலும், உயிரின் உணர்வு அது பொருள்களுடன் இணைவதாலேயே உண்டாகின்றது என்கின்றனர்.

உலகாயதர்கள் ஐவகை பருப் பொருள்களில் வெளி புறக்கண்ணுக்குப் புலப்படாததால் நீர், நெருப்பு, காற்று, பூமி ஆகியவற்றை மட்டுமே ஏற்பர். அவர்கள் கருத்துப்படி இந்நால்வகைப் பருப்பொருள்களினால் ஆனதே புறக்கண். இதன் பார்க்குந் திறன் கூட நான்கு பருப்பொருள்களின் ஒருவகை இணைப்பினால் ஏற்பட்டதே தவிர, உயிரின் உணர்வாற்றலால் அன்று. புலன் என்பது உண்மையற்றது. புறக்கண்ணே பார்க்கும் திறன் கொண்டது என்பது அவர்கள் கருத்தாகும்.

சமணர்கள் கருத்துப்படி புறக்கண் புட்கலம் என்னும் உலகமூலப் பொருளால் ஆனது. சமணர்களும் புறக்கண் உயிர் உணர்வு ஆற்றலால் புறக்கண் பார்க்கும் திறன் பெறுகின்றது என்கின்றனர். பௌத்தர்கள் புறக்கண் ஐவகை சமசுகாரங்கள் என்பவற்றால் ஆனது என்பர். பி.ஆர். ந.

**ஊனமுற்றோர் கல்வி**: பேச்சு, கேள்வி, பார்வை, உடலுறுப்பு, மூளை வளர்ச்சி ஆகியவை குறைபாடுள்ள குழந்தைகளுக்கு வழங்கப்படும் சிறப்பு வகையான கல்வி முறை ஊனமுற்றோர் கல்வி (Education for the Handicapped) எனச் சொல்லப்படும்.

ஊனம் என்ற சொல் உண்மைகளை உள்ளபடியே காட்டாத ஒரு சொல். அது தனிமனிதனின் சமூகத்தின் மனப்பான்மையைக் காட்டுகிறதே ஒழிய வேறொன்றையும் காட்டுவதன்று. ஊனமுற்றோர் மனித இனத்திற்குக் கீழ்நிலைப்பட்டவர்களாகக் கருதப்பட்டார்கள்; அவர்களுக்குப் பல உரிமைகள் மறுக்கப்பட்டன. அகில உலக ஊனமுற்றோர் ஆண்டில்தான் ஊனமுற்றோருக்குச் 'சமஉரிமை, முழுப்பங்கு'(Full Participation with Equality) என்ற கருத்து உலக அளவில் ஏற்கப்பட்டது.

எல்லா வகையான ஊனமுற்ற குழந்தைகளின் கல்விக்கும் உற்பத்தித் திறனுக்கும் தனித்துவம் வாய்ந்த கருவிகளும் சாதனங்களும் உள்ளமைப்புகளும் தேவைப்படுகின்றன. ஊனமுற்ற குழந்தைகளுக்குத் தேவைப்படும் கருவிகளின் உள்ளமைப்புகள் ஊனத்திற்குத் தகுந்தவாறு வேறுபடுகின்றன. சான்றாக, வேறுபட்ட ஊனங்களுக்குப் பல்வேறு வகையான கருவிகளும் துணைப் பொருள்களும் தேவைப்படுகின்றன. பார்வையற்றோர், பார்வைக் குறையுள்ளவர் ஆகியோர்க்கு பிரெய்லி அச்சு(Braille Printing), பேசும் நூல்கள் (Talking Books), பிரெய்லி துணைப் பொருள்கள் (Braille Appliances), பேசும் கணக்குக் கருவிகள் (Speaking Calculators), குறைப் பார்வைத் துணைப் பொருள்கள் (Low-Vision Aids), பெரிய எழுத்து நூல்கள் (Large Print Books) ஆகியனவும்; காது கேளாக் குறைபாடு உள்ளவர்களுக்குக் கேட்கும் திறக் குறைவினை அளக்கும் கருவி, காது கேட்கும் கருவி, சிறப்பு நூல்கள், இறுத்தல் கேட்கும் கருவிகள் (Filter-Hearing Aids) ஆகியனவும்; கை, கால் ஊனமுற்றோருக்கு இயங்குவதற்கான கருவிகள் (Equipment for Mobility), தனித்தன்மை வாய்ந்த கட்டட அமைப்பு (Architectural Modification), அகல வாசல் அமைப்புகள், சக்கர நாற்காலியில் அமரும் குழந்தைகளுக்குத் தனியான மேசை நாற்காலிகள், தனிமையான கழிவறைகள் போன்றவையும்; மூளைவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்குச், சுற்றுப்புறச் சூழ்நிலைக்குத் தகுந்தவாறு செய்யப்பட்ட கல்வித்துணைப் பொருள்களும்; பல்முனைப்பட்ட மூளை சார்ந்த ஊனமுற்றோருக்கு (Cerebral Palsied Children) காந்தப்பலகைகள் (Magnetic Boards), இரப்பர்ப் பலகைகள்(Rubber Slates), அலகுமுறைக் கற்றலுக்கான மின் இயந்திரம் (Electronic Teaching Machine for Programmed Instructions), அன்றாட வாழ்வுக்கு வேண்டிய துணைப் பொருள்கள், தொடு தனிக்குரவர் (Touch Tutor) போன்ற தொடர்பு கொள்ள வேண்டிய துணைப் பொருள்களும் உள்ளன.

பொதுவாகப் பொறுமையும் அன்பும் காட்டும் ஆசிரியர்களிடமும் குறையை ஒப்புக் கொள்ள வாய்ப்பினை ஏற்படுத்தித் தருகிற ஆசிரியர்களிடமும் ஊனமுற்ற குழந்தைகள் சிறப்பாகக் கற்றுக் கொள்ளுகின்றன. இக்குழந்தைகள் தனியாகக் கற்பதை விடக் குழுவில் கற்பதில் மிக்க பலன் கிடைக்கிறது.

மனப் போராட்டம் இக்குழந்தைகளிடத்தில் ஒருவகைக் குற்ற உணர்வினை ஏற்படுத்துகிறது. இயற்கையிலேயே சக்தி உள்ளவர்களாயிருப்பினும், அவர்கள் ஒதுக்கப்பட்டவர்களாக, பாதுகாப்பற்றவர்களாக, ஆற்றல் குறைந்தவர்களாக உணருகிறார்கள். ஆகவே அவர்களுக்குத் தனியான பற்றும் அன்பும் ஆசிரியர்களிடத்திலிருந்து தேவைப்படுகின்றன.

**கற்பிக்கும் முறைகள்**: ஊனமுற்றோருக்குக் கற்பித்தலை மேம்படச் செய்ய முன்கணிப்பு (Prog-

nosis) அடித்தளமாக அமைகிறது. இதன் அடிப்படையில் இசுடீபன்சு (Stephens, 1976) ஓர் எடுத்துக்காட்டான கற்பிக்கும் கோட்பாட்டினை (Directive Teaching Model) உருவாக்கியுள்ளார்.

1. உள்ளநிலையளந்தறிதல்: ஓர் ஆசிரியர் கற்பிக்கத் தொடங்கும் முன்னர் மாணவர்களின் திறன்களையும் அவர்களுக்குத் தேவைப்படுகின்ற இடுபணியினையும் (Task) பற்றிச் செய்திகளைச் சேகரிக்க வேண்டும். ஆசிரியர் வகுப்புச் சூழ்நிலையையும் செயல் திறத்தையும் ஏற்புத்திறன் முறைகளையும் மதிப்பீடு செய்ய வேண்டும். 2. திட்டமிடுதல் (Planning): அளந்தறிந்த குறிப்புகளின் அடிப்படையில் கற்பிக்கும் திட்டங்கள் அமைய வேண்டும். இக்கட்டத்தில் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டிய கற்பிக்கும் கருவிகளையும் வகுத்தமைக்கப்பட்ட திட்டப் பாடப் பகுதியினையும் அடைய வேண்டிய கற்றல் இலக்கையும் வரையறை செய்ய வேண்டும். 3. கற்பித்தல் (செயல் முற்றுவித்தல்) (Instruction Implementation): முன் தீர்மானித்த திட்டங்களைச் செயற்படுத்தலே கற்பித்தலாகிறது. 4. மதிப்பீடு (Evaluating): ஆசிரியர்கள் கல்வித்திறன் முன்னேற்றத்தை அளவிடுகிறார்கள். மாணவர்கள் முன்னேற்றம் நன்கு காணப்படின், வேறு ஓர் இடுபணியை அல்லது வகுத்தமைக்கப்பட்ட திட்டப் பாடப் பகுதியைத் தெரிந்தெடுக்கிறார்கள்.

சிறப்புக் குறிக்கோள்கள்: பொதுவான நுண்ணறிவு வளர்ச்சி எல்லாக் குழந்தைகளுக்கும் தேவைப்பட்டாலும் குழந்தைகளின் ஊனத்திற்கு ஏற்பச் சிறப்பான குறிக்கோள்கள் தேவைப்படுகின்றன. ஊனமுற்ற குழந்தைகளுக்கு மிக இன்றியமையாத தேவை தற்காப்புத்தான் (Self-care). அந்தக் குழந்தைகள் தாமே உடை உடுத்தி உண்பதில் ஒருவகைச் சுதந்திர உணர்வினைப் பெறுகின்றன. ஆனால் பார்வையற்ற குழந்தைகளுக்கும் காது கேளாத குழந்தைகளுக்கும் அந்தச் சுதந்திரம் மட்டும் போதாது. அவர்கள் தன்மான (Self-Respect) உணர்வினைப் பெறுவதற்கு இன்னும் மேலே கற்க வேண்டி இருக்கிறது. துணைப் பணிகள் (Ancillary Services) பல ஊனமுற்றோர் கல்வியில் பயன்படுத்தப்படுகின்றன. அவையாவன:

நிருவாகம்: கற்றல்-கற்பித்தல் சூழ்நிலையில் எந்த மாற்றமும் ஏற்படுத்த வேண்டின் நிறுவனத் தலைவரின் ஒப்புதல் பெற வேண்டியுள்ளது. குழந்தையின் தன்னைப்பற்றிய கருத்துப்படிவ (Self Concept) மாற்றத்தில் நிருவாகியின் ஊக்கத்துடன் அவருடைய துணை குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

ஆலோசனையாளர்: பேச்சுக் குறை நீக்குபவர் (Speech Therapist), மருத்துவர், உளவியலாளர் ஆகியோர் வரையறுக்கப்பட்ட கல்வித் திட்டத்தின் ஒருங்கிணைந்த ஒரு பகுதியினராவர். அறிவுரையாளரும் (Counsellor) கூட ஆசிரியரையும் பெற்றோரையும் குழந்தைகளையும் வழிப்படுத்துவதிலும் குறையினங் காணுவதிலும் (Diagnosis) உறுதுணையாக இருக்கிறார்.

உரிய இடத்திருத்தல்: ஊனமுற்ற குழந்தை அதனுடைய திறனை உறுதிப்படுத்தும் வகையில் எவ்வகை உறவுச் சூழ்நிலையுடன் செயற்படுகிறதோ அதைக் கொண்டு அக்குழந்தையை உரிய இடத்திலே இருத்தலாம்.

பாடப் பொருள்: ஊனக் குழந்தையின் தனித் தேவைகளுக்கு ஏற்பப் பாடத்திட்டம் அமைக்கப்பட வேண்டும். எடுத்துக்காட்டாகக் காது கேளாக் குறையுள்ள குழந்தை பேச்சுப் பயிற்சியும், கேட்கும் திறனை வளர்க்கும் பயிற்சியும் (Speech Training) பெறலாம். அதைப் போலக் குருட்டுக் குழந்தைகளின் பாடத் திட்டத்தில் பேச்சு, தொடுதிறன் (Tactile Skills), பிரெய்ல் ஆகியவற்றிற்குச் சிறப்பிடம் கொடுக்கலாம்.

கற்பிக்கும் பொருள்கள்: இவை ஊனமுற்ற குழந்தைகளின் கற்கும் செயற்கருவி (Media) ஆகின்றன. இக் குழந்தைகள் பார்க்க, உணர, செய்யப் பருப்பொருள்கள் (Concerts) தேவைப்படுகின்றன. எடுத்துக்காட்டாகக் காதுகேளாக் குழந்தைகள் பார்வை மூலமாக நிறையக் கற்க வேண்டியிருப்பதால், அதற்குத் தகுந்தாற்போல் கற்கும் பொருள்கள் தேவைப்படுகின்றன.

தனிக் கருவிகள்: ஊனமுற்ற குழந்தைகளுக்குத் தனியான கருவிகள் தேவைப்படுகின்றன. எடுத்துக்காட்டாகப் பேச்சைத் தொடங்குவதற்குக் காது கேளாக் குழந்தைகளுக்குக் கண்ணாடி, வரைபடம், ஒலி நாடா (Tape Recorder), இசைத்தட்டுக் கருவி (Record Player) போன்றவை தேவைப்படுகின்றன.

தமிழகத்தில் ஊனமுற்றோருக்கான கல்விக் கூடங்கள்: தமிழகத்தில் பதினோர் அரசுபார்வையற்றோர் பள்ளிகளும், ஒன்பது தனியார் பார்வையற்றோர் பள்ளிகளும் ஆக இருபது பள்ளிகள் உள்ளன. காது கேளாக் குழந்தைகளுக்கு ஒன்பது அரசுப் பள்ளிகளும் பதினொரு தனியார் பள்ளிகளும் இரண்டு நகராட்சிப் பள்ளிகளும் ஆக இருபத்திரண்டு பள்ளிகள் உள்ளன. கை கால் ஊனமுற்றோருக்கு

ஓர் அரசுப் பள்ளியும் ஒரு தனியார் பள்ளியும் ஆக இரண்டு பள்ளிகள் உள்ளன. மூளை வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு ஓர் அரசுப் பள்ளியும் இரண்டு தனியார் பள்ளியும் ஆக மூன்று பள்ளிகள் உள்ளன. ஆக ஊனமுற்றோருக்கெனத் தமிழகத்தில் நாற்பத்தேழு பள்ளிகள் இயங்கி வருகின்றன.

ஒருங்கிணைந்த கல்வித் திட்டம்: தன்னோடு ஒத்த குழுவினரோடு இசைந்து ஒன்றுபடுவதே (Harmonious Assimilation) ஒருங்கிணைப்பு என்று மருத்துவக் களஞ்சியம் கூறும். மேலும், தோர்ட்டி (Doherty) என்பார் ஒருங்கிணைப்பின் நான்கு கூறுகளைக் கூறியுள்ளார். (அ) ஏற்றுக் கொள்ளல் (Recognition): ஊனமுற்ற குழந்தை முதலில் ஒரு மனிதனாக, உதவிகள் தேவைப்படும் மனிதனாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். (ஆ) ஏற்பு (Acceptance): பயமோ பரபரப்போ வெறுப்போ இல்லாமல் அக்குழந்தை ஏற்கப்பட வேண்டும். (இ) உறவு (Relationship): ஊனமுற்ற குழந்தைகள் சமூகத்தோடு மனநிறைவான உறவுகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு வாய்ப்புகளைப் பெற வேண்டும். (ஈ) அனுபவம் (Experience): ஊனமுற்ற குழந்தைகள் கூடுமான வரையில் ஒத்த வயதினர் பெறும் அனுபவங்களை அவர்கள் ஊனத்திற்கு ஏற்பப் பெறவேண்டும்.

ஓர் ஊனமுற்ற குழந்தையை உடல் நலமுள்ள குழந்தையாக வளர்ப்பதற்கு அக்குழந்தையைத் தனியாகப் பிரித்தல் நல்ல முறையன்று. அது ஊனத்தை அக்குழந்தை மிகுதியாக உணருவதற்கு வழிகோலுகிறது. ஊனமுற்ற குழந்தைகள் ஒருங்கிணைந்த கல்வி மூலம் மேலும் கற்பது மட்டுமன்றி, பிற மாணவர்கள் அவர்களை நண்பர்களாகவும் அவர்களுள் ஒருவராகவும் ஏற்கக் கற்றுக் கொள்கிறார்கள். இதனால் ஊனமுற்ற குழந்தைகளின் தாழ்வ மனப்பான்மை காலப்போக்கில் நீங்கிவிடுகிறது.

ஒருங்கிணைப்புக் கல்வி முறையில் கடைப்பிடிக்க வேண்டிய முறைகள்: (அ) முறையான வகுப்பறைக் கற்பித்தல், பார்க்கும், கேட்கும் (Audio Visual) கருவிகள் மூலமாகவும் விளையாட்டு நீக்கியின்(Play Therapy) மூலமாகவும் கை கால் ஒத்திசைத்தலையும் (Co-ordination) பேச்சு மொழி கருத்து உருவாக்கலையும் கற்பித்தல்; (ஆ) ஒத்த குழுவினரோடு (Peers) மன நிறைவான உறவினை ஏற்படுத்திக் கொள்ளல், ஊனமுற்ற குழந்தையைப் புது வகுப்பை ஏற்கச் செய்தல்; (இ) மேலும், ஓர் ஊனக் குழந்தை ஊனமற்ற குழந்தையுடன் ஒருங்கிணைக்கப்படும்பொழுது அதன் விகிதம் 1:10 என்றமைய வேண்டும். அதாவது, 30 உடற் குறைபாடற்ற குழந்தைகள் கொண்ட வகுப்பிற்கு ஊனமுற்ற குழந்தைகள் 3 என்னும் விகிதத்தில் அமையச் செய்தல்; (ஈ) ஓர் ஊனமுற்ற குழந்தை கூடுமான வரை மற்ற உடற்குறைபாடற்ற குழந்தையின் நிலைக்கு வர நுண்ணிய, திறம் வாய்ந்த (Resource Teaching) கற்பித்தல் இன்றியமையாதது.

ஓர் ஊனமுற்ற குழந்தை ஒருங்கிணைக்கப்பட்ட பிறகு, அது பள்ளியில் அனுமதிக்கப்பட்ட நாளிலிருந்து வெற்றிகரமான மேம்பாடு பெறும் வரை தனிப்பட்ட ஆசிரியர்களால் மேற்பார்வையும் தனிக் கவனமும் செலுத்தப்பட வேண்டும். மேலும், நுண்ணிய திறம்வாய்ந்த ஆசிரியர்களுக்கும் சாதாரண ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் ஓர் ஒத்திசைவு (Co-ordination) வேண்டும். முறையான ஆளுமை வளர்ச்சிக்கும் வீட்டிலே கற்பிக்க வழிகோலுவதற்கும் பெற்றோரின் ஈடுபாடு இம்முறைக் கல்வியில் மிக இன்றியமையாததாகிறது.

ஊனமுற்ற குழந்தையின் மனப்பான்மை: ஊனமுற்றோர் சிலர் தம் ஊனத்தைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். சிலர் ஊனத்தை உண்மை என்று ஏற்றுக் கொள்கிறார்கள். இன்னும் சிலர் பிறரின் பாசத்தைப் பெற, பிறரின் கவனத்தை நிலைநிறுத்த ஊனத்தை மிகைப்படுத்தியும் காட்டுகிறார்கள். பாலப் பருவமே போராட்டமும் வெறுப்பும் நிறைந்ததாகிவிடுகிறது. அவர்களுடைய பாலப்பருவத்தின் உரிமைகள் கைக்கெட்டாத கனவுகளாகி விடுகின்றன.

ஊனமுற்ற குழந்தையைப் பற்றி மக்களின் மனப்பான்மை: ஊனமுற்ற குழந்தைகளுக்குத் தருமம் கேட்டலே மக்களிடத்தில் வேண்டப்படாத மனப்பான்மையை வளர்ப்பதாகக் கருதப்படுகிறது. பாதிக்கப்பட்ட இக் குழந்தைகளின் மேல் பொதுவாக இரக்க மனப்பான்மையே காட்டப்படுகின்றது. பொருந்தாத காரணங்களினால் சாதாரண அனுபவங்கள் கூட ஊனமுற்ற குழந்தைகளுக்குக் கிடைக்காமல் இழக்கச் செய்யும் மனிதரின் மனப்பான்மை ஒரு சிக்கலாகும். இந்த மக்களின் மனப்பான்மை ஊனமுற்றோரைப் பற்றிப் பொதுக் கல்விக் குறைவைக் காட்டுகிறது. இப்பொழுது இதை எப்படிக் கடப்பது என்ற வினா எழுகிறது. ஒருங்கிணைந்த கல்வியே ஒரு சிறந்த விடையாகத் தெரிகிறது. முன்னர்க் கூறியபடி, ஒருங்கிணைப்புத் திட்டம் ஊனமற்ற குழந்தைகள் ஊனமுற்ற குழந்தையை அவர்களுள் ஒருவராக ஏற்க வழி கோலுகிறது. ஆகவே, ஓர் ஊனமுற்ற குழந்தை மனவளர்ச்சி, உடல்

வளர்ச்சி, பண்பாடு, சமூக உணர்வு ஆகியவை வளர்ச்சி பெற - நிறைந்த அனுபவம் பெற-சாதாரண ஒத்த குழுக்களோடு ஒருங்கிணைக்கப்பட வேண்டும்.

பி.என்.மு.

துணை நூல்கள்:


**Bess**, **F.H.** (Ed), Childhood Deafness: Causation, Assessment and Management, Grune and Stratton, New York, 1977.

**Davis, H. and Silverman**, **S.R.** (Eds), Hearing and Deafness, Holt, Rinehart and Winston, New York, 1978.

**Nix**, **G.W.**, Mainstream Education for Hearing Impaired Children and Youth, Grune and Stratton, New York, 1976.

**Nolan, M. and Tucker**, **I.G.**, The Hearing Impaired Child and the Family, Souvenir, London, 1981.


***ஊனிடைட்சுப் பண்பாடு*** தான்யூபு நதிப்பகுதியில் கி.மு. 2000-இன் தொடக்ககாலத்தில் நிலவிய முதல் வெண்கலக்காலப் பண்பாடு (Early Bronze Age culture). இன்றைய செக்கோசுலோவாகியாவிலுள்ள ஊனிடைட்சு என்ற ஊரில் முதலில் இப்பண்பாட்டுச் சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டதால் இவ்வாறு கூறப்படுகிறது. ஆசுத்திரிய தான்யூபுப் பகுதியிலும் சைலீசியா (Silesia), சாக்சனி(Saxony)போன்ற பகுதிகளிலும் முதலில் நிலவிய ஊனிடைட்சுப் பண்பாடு (Unetitz Culture) பின்னர் எல்பு, சாலி, ஓதர் நதிக்கரைப் பகுதிகளில் வளர்ச்சி பெற்றது. இப்பண்பாடு வடக்குப் பகுதிகளில் பரவியபொழுது அங்கிருந்த வேளாண் மக்களால் பின்பற்றப்பட்டது. இவர்கள் செல்வவளம் பொருந்திய மக்களாய் வாழ்ந்தனர். இம்மக்கள் இப்பகுதியில் இருந்த வெண்கலத் தாதுவை வெட்டி எடுத்து வெண்கலப் பொருள்கள் செய்து, உலோக வேலையில் கலைத்திறன் மிக்கவர்களாய் விளங்கினர். வெண்கலப் போர்க் கருவிகளை நுணுக்கங்களுடன் செய்து கையாளச் செய்தனர். பல அணிகலன்களும் வெண்கலத்தால் செய்யப்பட்டன. இப்பண்பாட்டு மக்கள் இங்கிலாந்திலிருந்து பொன்னை இறக்குமதி செய்தனர். இச் செப்புப் பொருள்களின் வாணிகத்தை நடு ஐரோப்பா வரை இம்மக்கள் நடத்தினர். இங்குப் பல புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டன. இம்மக்கள் இறந்தவர்களைக் குனிய வைத்த நிலையில் புதைத்தனர். சில புதைகுழிகளில் இரண்டு சடலங்கள் குனிந்த நிலையில் ஒருங்கே புதைக்கப்பட்டுள்ளன.

சு.இரா.

எ என்பது தமிழ் நெடுங்கணக்கில் அடிப்படையாக உள்ள உயிரெழுத்துக்களுள் ஒன்று. வடமொழியில் இவ்வெழுத்து இல்லை.

**எகர ஒலி:** இவ்வொலி இ என்று இளித்த வாயிலிருந்து நாக்கு தாழ்நிலையில் வெளிவரும் ஒலி ஆகும். இதனை ஒலியியலார் இடை உயிர் (Mid Vowel) என்று கூறுவர். மிகவும் எடுப்போடு ஒலிக்கப்பெறும் பொழுது அவ்வொலி இதன் நெடில் ஆக ஒலிக்கும்.

**வடிவம்:** முதலில் இது ஒரு முக்கோண வடிவமாக எழுதப்பட்டது. அடுத்து முக்கோணத்தின் நேர் கோடுகள் வளைந்து படிப்படியாக ஒரு வட்டமாக உருவெடுத்தது. பின்னர், வட்டத்தின் கீழ்ப்பகுதி திறந்து சுழியாக மாறி அந்த வடிவத்தின் தொடக்கமாக அமைந்தது. மறுபடியும் வலப்பக்கம் திரும்பிய இறுதிப்பகுதி நேர்கோடாக ஆயிற்று. கீழ்க்காணும் படத்தில் காலவரையையும் கல்வெட்டுகளின் குறிப்பையும் காணலாம்:

தமிழ்நாட்டுக் குகைகளில் கி.மு. 3–ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 2–ஆம் நூற்றாண்டின் தொடக்கம் வரை மதுரை மாவட்டம் திருமங்கலம் வட்டம் விக்கிர மங்கலத்து உண்டான் கல்லு, புதுக்கோட்டையில் சித்தன்னவாசல் முதலிய இடங்களில் உள்ள கல்வெட்டில் காணப்படும் வடிவம் ... ... 

பெரியார் மாவட்டம் அரச்சலூர் குகைப்படுக்கைக் கற்களில் கி.பி. 2–ஆம் நூற்றாண்டின் முடிவில் காணப்படும் வடிவம் ... ... 

இந்த வடிவம் வட்டெழுத்தில் கி.பி. 7–ஆம் நூற்றாண்டிலிருந்து கீழ்ப்பகுதியில் உடைந்து  என்ற உருவத்தில் பெரும்பாலும் வட்டெழுத்து வழக்கொழியும் வரை எழுதப்பட்டு வந்தது.

பல்லவ பரமேச்சுவரனின் கூரம் செப்பேடு, கி.பி. 680 ... ... 

மேல்படத்தில் முதலாவதாகக் காணப்படும் உருவத்தையே ஏ எனவும் படித்தல் இயலும். வடவெழுத்துகளில் இது ஏகாரத்தையே குறிக்கும். இரண்டாவதாகக் காணப்படும் உருவத்தில் உள்ள புள்ளி தொல்காப்பியத்தில் மெய்யெழுத்துகளுக்கு இடப்படுவது போல் எகர ஒகரங்களுக்கும் புள்ளி இடப்பெறும் என்று கூறப்பட்டதை ஒட்டியது. அதையே பின்பற்றி உயிர்மெய்யில் செய், கெடுத்து, பெருக்கி என்ற சொற்களில் இடையில் வரும் எகரக் குறிலுக்கும் புள்ளி இடப்பட்டதை, மதுரை சேந்தனின் 7–ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டிலும் செந்தலை முத்தரையரின் 8–ஆம் நூற்றாண்டுத் தமிழ் எழுத்துக் கல்வெட்டிலும் காணலாம். சுவடிகளில் எழுத்தாணியால் குத்தினால் ஏடு கெடும் என்ற காரணத்தினால் புள்ளியே இடுவதில்லை. அவ்வாறே பெரும்பாலும் செம்மைப்படுத்தப்படாத கற்களில் பொறிக்கப்பட்ட கல்வெட்டில்

புள்ளியிட்டிருந்தாலும் கண்டு கொள்ள இயலாது. கி.பி. 8–ஆம் நூற்றாண்டில் திருச்சி மாவட்டம் ஆலம் பாக்கத்தில் மாற்பிடுகு சுவத்திக வடிவுள்ள ஏரியில் பல்லவ தந்திவர்மன் கல்வெட்டில், புள்ளியை மெய்யெழுத்தின் மேல் ஒரு வளைந்த கோடாகக் காணலாம்.

இப்புள்ளியை அடிப்படையாகக் கொண்டு வடக்கிருந்து வந்த பிராமி எழுத்தை நோக்கி, அதில் இல்லாத எகரத்தைக் குறிக்கப் புள்ளியை அமைத்துக் கொண்டனர் என்றும் கூறுவர். தொல்காப்பியர் கருத்துப்படி மாத்திரைச் சுருக்கத்திற்கு வந்த புள்ளி மெய், குற்றியலுகரம், எகர ஒகரக் குறில், மகரக் குறுக்கம் இவற்றிற்கு விதிக்கப்பட்டது என்பதே உண்மை.


சொற்களின் இடையே வரும் எகரத்தை அதற்கு உரிய மெய்யெழுத்தின் தலைக்கட்டு இடப்புறம் சிறிதளவு இழுக்கப்பட்டது. இது பிற்காலத்தில் வளைந்து வட்டமாகிச் சுழியொடு தொடங்கிற்று.



க் க கெ கே கே கெ கெ

இவ்வாறே மற்ற எகரம் கலந்த உயிர்மெய்களும் இம்முறையிலேயே உருவாயின.

வட்டெழுத்தில் எகரத்தின் இடப்புறத்தில் நீட்டப்பட்ட சிறுகோடு பள்ளம் பதிந்த கோடாகக் காணப்படுகிறது.



கெ செ பெ

பொருள்: எகரம் வினாப் பொருளில் வழங்கப் பெறும். எடுத்துக்காட்டாக, எவன், என்று? முதலியவை.

எகரம் தமிழ் எண்மானத்தில் இன்று ஏழு என்ற எண்ணைக் குறிக்கும். ஆயினும் பண்டைக் கல்வெட்டுகளில் முதல் முக்கோண வடிவத்துடன் தொடர்பில்லாத வகையில் அது உருவாகியிருக்கிறது.

**எக்காலக்கண்ணி** பட்டினத்தடிகளின் சீடரான பத்திரகிரியாரால் பாடப்பெற்றது, 'எக்காலம்' என்னும் முடிவினைக் கண்ணிதொறும் கொண்டுள்ளது. இவர் கி.பி. 10–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்; அரசராக விளங்கிப் பின்னர்ப் பட்டினத்தடிகளால் துறவு பூண்டவர். 'பத்திரகிரியார் புலம்பல்' என்னும் தலைப்பில் பல பழைய நூல்களிலும் இப்பகுதி காணப்பெறுகிறது. இந்த நூல் சித்தர் நூல்களின் வரிசையில் ஒன்றாகக் கருதத்தக்கது. இருநூற்று முப்பத்திரண்டு கண்ணிகளைக் கொண்டுள்ளது.

இறைவன் அருள்பெற விரும்பிய பத்திரகிரியார், 'வெட்ட வெளிக்குள்ளே விளங்கும் சதாசிவத்தைக், கிட்டவரத் தேடக் கிருபை செய்வ தெக்காலம்' என்பது போன்ற எளிய நடையாலமைந்த பாடல்களைச் சோகச்சுவை ததும்பப் பாடியுள்ளார். இறைவனை நினைந்து இரங்கி ஏங்கிப் பாடிய இதனைப் 'பத்திரகிரியார் புலம்பல்' என்று பொதுமக்கள் குறிப்பிட்டுப் போற்றுவாராயினர்; அவ்வாறே அச்சிட்டுமுள்ளனர்.

மனிதனை ஐம்புலன்கள் இழுத்துச் சென்று பல்வேறு ஆசைகளில் அழுத்தி இறைவனை நினைக்கவொட்டாமல் தடுக்கின்றன. அவற்றின் குறும்புகளை அடக்கி இறைவனை எப்பொழுதும் நினைத்து, 'தூங்காமல் தூங்கிச் சுகம்பெறுவது எக்காலம்' என்று வினாவியுள்ளார். மண், பெண், பொன் என்னும் மூவித ஆசைகளுள் முதன்மையானது பெண்ணாசை. அதனை மறந்து இறையருளை நாடவேண்டும் என்பதனை, 'மால்காட்டும் மங்கையரை மறந்திருப்பது எக்காலம்' என்னும் வினாவின் மூலம் பெறவைக்கிறார்.

யோக நெறி பற்றிய பல உண்மைகள் இந்நூலில் காணப்படுகின்றன. மூலாதாரத்தை மூலநெருப்பு என்றும், நெற்றிப் பகுதியை நிலாமண்டபம் என்றும், புருவநடுவிலூறும் அமுதத் துளியைப் பால் என்றும், உலகியலை மறந்து அவன் நினைவாகவே இருக்கும் ஒப்பற்ற நிலையைப் பசியொழிவது என்றும் அவர் குறிப்பால் உணர்த்துகிறார்.

அண்டத்திலுள்ளவற்றை யெல்லாம் பிண்டத்திலேயே காணலாம் என்றும், ஆதலின் எண்ணாத

வரகுணபராந்தகனின் சீவர மங்கலச் செப்பேடு, 8–ஆம் நூற்றாண்டு ... 

சின்னமனூர் இராசசிம்மனின் செப்பேடு, 10–ஆம் நூற்றாண்டு ... 

உத்தரமேரூர் பார்த்திவேந்திரவர்மனின் கல்வெட்டு, 10–ஆம் நூற்றாண்டு ... 

கே.ஜி.கி.

தூரம் எல்லாம் எண்ணி எண்ணிப் போகவேண்டாம் என்றும், அவனை அகநோக்கில், 'கண்ணாடிக்குள் ஒளிபோல்' தமக்குள்ளேயே காணலாம் என்றும் அறிவுறுத்தியுள்ளார்.

பதி, பசு, பாசம் என்னும் மூன்றும் என்றும் உள்ள பொருள்கள் என்பது சைவசித்தாந்தக் கொள்கை. பாசம் உயிரை உலக முகப்படுத்தும். இறையருளால் அதன் ஆற்றலைக் குறைததால் பின் அதுவே இறையருளைப் பெறத் துணையாக அமைந்துவிடும். அவ்வமயம் ஆன்மா பதியை எளிதாக அடைய முடியும். இவ்வுண்மையை, 'பாசத்தை நீக்கிப் பசுவைப் பதியில் விட்டு, நேசத்தினுள்ளே நினைந்திருப்பது எக்காலம்' என்னும் கண்ணி உணர்த்துகிறது.

இவ்வாறு பலவகையாக வேண்டியவர் இறுதியாக 'நீயும் நானுமாய் ஏகபோகமாய்' என்று அருணகிரியார் கூறியது போன்று, 'நானவனாய்க் காண்பதெல்லாம் ஞானவிழியாலறிந்து, தானவனாய் நின்று சரண் அடைவது எக்காலம்' என்னும் கண்ணியில் ஆண்டவன் ஆருயிர்க் கலப்பினைத் தெளிவுபடுத்திக் காட்டியுள்ளார்.

மக்கள் ஆசையை வளர்த்துத் தேவையைப் பெருக்கித் துன்புறக் கூடாது என்றும், அவ்வாறு துன்புறுதலைத் தடுக்க இறைவனை மறக்காமலிருக்க வேண்டும் என்றும், மனஒருமைப்பாடும் அடக்கமும் கொண்டு மனத்தை நல்வழியில் செலுத்தி இறைவனை நினைத்து இறையருள் பெற்று வாழ வேண்டும் என்றும், இவ்வாறு வாழ்வதே வாழ்வாங்கு வாழும் நெறியாகும் என்றும் பத்திரகிரியார் எக்காலக்கண்ணி வாயிலாக அறிவுறுத்தியுள்ளார். இரா.ச.

**எக்குவானா** தென் அமெரிக்காவின் வடமேற்குப் பகுதியில் வாழும் பழங்குடியினராவர். வெனிசுலாவின் **(Venezuela)** தென்பகுதியில் வாழும் இவர்கள் படகு கட்டுவதிலும் மீன் பிடிப்பதிலும் வல்லவர்கள். இத்திறமையினால் இவர்கள் வெனிசுலா, பிரேசில் ஆகிய பகுதிகளிலுள்ள அனைத்து இந்தியர்களாலும் மதிக்கப்படுகின்றனர். எக்குவானா **(Yequana)** மக்கள் 'மக்கிரிட்டாரி' **(Makiritare)** என்றும், ஆற்று மக்கள் என்னும் பொருளுடைய 'மனோன்காங்கு' **(Manongong)** என்றும் பெரும்பான்மையாகக் கூறப்படுவர்.

எக்குவானாப் பழங்குடியினர் தம் வாழ்க்கைத் தொழிலை முழுவதும் ஆற்றோடு தொடர்புபடுத்திக் கொண்டவர்கள். வள்ளம், படகு முதலானவற்றை இயக்கும் துடுப்புகளைத் தம் காட்டுப் பகுதிகளில் கிடைக்கும் 'மட்டாட்டோ' **(Matoto)** என்னும் மரத்திலிருந்து செய்து விற்பதையும் மீன் பிடித்தல், வேட்டையாடுதல் முதலானவற்றையும் தங்களது முதன்மைத் தொழில்களாகக் கொண்டுள்ளனர். மரத் துடுப்புகளைச் செய்து விற்கும் இவர்களது வாழ்க்கை முறை குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு குடும்பத்தாரும் மிகுந்த எண்ணிக்கையிலான துடுப்புக்களைச் செய்த பின்னர், அவற்றைக் கொடுத்துத் தமக்கு வேண்டிய பொருள்களைப் பண்டமாற்றம் செய்வதற்கு மிக நீண்ட பயணம் மேற்கொள்கின்றனர். இவர்கள் தம் துடுப்புகளுக்கு ஈடாகப் பெறும் பரிமாற்றப் பொருள்களுள் குறிப்பிடத்தக்கவை அரளி போன்ற தென் அமெரிக்கச் செடியின் வேர் வகையிலிருந்து எடுக்கப்படும் ஊக்க அழிவு நஞ்சுப்பொருளும் **(Curare)** கித்தான் அல்லது வலையிலான தூங்கும் மஞ்சமும் ஆகும்.



எக்குவானாப் பெண்கள்

இவர்கள் குடியிருப்புகளின் மக்கள் தொகை இடத்திற்கு இடம் மாறுபட்டது. ஆற்றங்கரைக்கு அருகில் அமைந்திருக்கும் இவர்களது குடியிருப்புகளில் வீடுகள் பொதுவாகக் கூம்பு வடிவிலானவை. மிகப்பெரும் அளவில் அமையும் வீடுகளைக் கட்டி முடிக்கத் தம் அண்டைக் குடியிருப்புகளிலுள்ளவர்களை அழைத்து உணவிட்டுக் கட்டி முடிப்பர். சில வீடுகள் பல நாட்கள் வரை கட்ட வேண்டியதாக அமையும். இவ்வாறான காலங்களில், பொதுவாக இரவுக் காலங்களில் விருந்துண்டு, மது அருந்தி நடனமாடி மகிழ்வர். இவர்கள் தம் பகுதியிலுள்ள பெரிய மலை இந்த உலகம் முழுமைக்கும் மையம் என நம்புவதால், இவர்களின் வீட்டில் நடப்படும் மையத்

தூணையே மலை எனக் கருதுகின்றனர். இந்த மையத் தூணிற்கு இரவில் வண்ணம் பூசி அலங்கரிப்பதால் நன்மை பயக்கும் எனவும் நம்புகின்றனர்.

எக்குவானாப் பழங்குடியினரின் திருமண முறை எளிமையானது. மணம் செய்துகொள்ள விரும்பும் ஆண் தாம் செய்யும் படகுத் துடுப்புகளை ஏற்றிக் கொண்டு, பண்டமாற்றம் செய்து கொண்டு திரும்பும் நீண்ட பயணத்தை முதலில் மேற்கொண்டு தம் திறமையைக் காட்ட வேண்டும். பின்னர், காட்டில் வேட்டையாடிய விலங்கினை மணமகள் வீட்டிற்குக் கொடுத்துத் தாம் திருமணத்திற்குப்பின் மனைவியை வாழ்நாள் முழுதும் காப்பாற்ற முடியும் என்பதைக் காட்டியபின்னர் மணங்கொள்கின்றனர். இவர்களிடையே குழந்தை வளர்ப்பு முறையும் உற்றுநோக்கத்தக்கது. பிறந்த குழந்தை தூங்கும் போதும் விழித்திருக்கும் போதும் பெரும்பான்மையாகத் தாயோ மற்றவர்களோ தரையில் விடாமல் தூக்கி வைத்தே வளர்க்கின்றனர். குடும்ப உறுப்பினர்களிடையே மிகுந்த அன்பும் பிணைப்பும் காணப்படினும், பெற்றோர்கள் குழந்தைகளிடத்தில் மிகுதியாகப் பேசுவதில்லை.

எக்குவானா மக்கள் தங்கள் அண்டைய மக்களான எனமாமோ (Yanamamo) மக்களிடமிருந்து மிகவும் வேறுபட்டவர்கள். எனமாமோப் பழங்குடியினர் நீரைக் கண்டு அஞ்சுபவர்கள். எக்குவானாப் பழங்குடியினர் இதற்கு நேர்மாறானவர்கள். எக்குவானா மக்கள் படகு கட்டுதல், துடுப்புகள் செய்தல், மீன் பிடித்தல், நீர்வழிப் பயணம் செய்தல் முதலான செயல்களைத் தம் வாழ்க்கைத் தொழிலோடு ஏற்றுக் கொண்டுள்ளதால், தம் குடியிருப்புகளையே ஆற்றங் கரைக்கருகில் அமைத்துக் கொள்கின்றனர். எனமாமோப் பழங்குடியினரும் எக்குவானாப் பழங்குடியினரும் சமூகத் தகுதியில் போட்டி மனப்பான்மை கொண்டவர்கள். சீ.ப.

**எக்கூய் இந்தியர்** மெக்சிகோ நாட்டின் கடற்கரைப் பகுதிகளில் வாழும் பழங்குடிகளாவர். இவர்களின் சிற்றூர்கள் எக்கூய் ஆற்றிற்கும் கலிபோர்னியா வளைகுடாவிற்கும் இடைப்பட்ட வண்டல் மண் நிறைந்த சமவெளிப் பகுதியில் அமைந்துள்ளன. எக்கூய் இந்தியர்கள் (Yaqui Indians) வாழும் இப்பகுதி வேளாண்மைக்கு மிகவும் ஏற்ற சூழ்நிலையைப் பெற்றுள்ளது. குறிப்பாக, வட மெக்சிகோவில் ஆண்டிற்கு இருமுறை மழைப் பருவமும் உறைபனியற்ற காலநிலையும் இப்பழங்குடியினருக்கு ஏற்றதாக உள்ளன.

எக்கூய் இந்தியர்கள் உயரமானவர்கள்; கட்டான உடலமைப்பைப் பெற்றவர்கள்; செம்பழுப்பு முதல் மஞ்சள் நிறம் வரையிலான தோல் நிறம் கொண்டவர்கள்; முகத்திலும் உடலிலும் மயிர் குறைவாகக் கொண்டவர்கள். இப்பழங்குடிகளின் சமூக, அரசியல் வாழ்க்கை மெக்சிகோ நாட்டின் வரலாற்றில் குறிப்பிடத்தக்கது. வெள்ளிக் கனிமம் இப்பகுதிகளில் மிகுந்திருந்ததை அறிந்த இசுபானியர்கள் (Spanish) கி.பி. 1519-இல் இங்குக் குடியேறினர். அதன் பின்னர், படிப்படியாக எக்கூய் இந்தியர்களின் பகுதிகளை இசுபானியர்கள் தம் வசப்படுத்தினர். இதனால் மூண்ட மூன்று போர்களிலும் எக்கூய் இந்தியர்கள் தோற்றனர். இசுபானியர்களுக்கும் எக்கூய் இந்தியர்களுக்கும் கி.பி.1610-இல் உடன்பாடு ஏற்பட்டது. இசுபானியர்களின் வருகைக்குமுன் எண்பது சிற்றூர்களில் வாழ்ந்த இவர்கள் படிப்படியாகக் குறைந்து எட்டுச் சிற்றூர்களில் வாழ்வாராயினர்.



எக்கூய் இந்தியர்கள்

தாவரங்கள், விலங்குகள், இயற்கைப் பொருள்கள் முதலானவற்றை வழிபடும் மரபினைக் கொண்

டிருந்த இவர்கள் கிறித்தவச் சமயத்தை ஏற்று வருகின்றனர். ஈசுட்டர் (Easter) பண்டிகையின் போதும் புனித சனிக்கிழமையின் போதும் இவர்கள் நடத்தும் அடையாளச் சண்டை (Symbolic Battle) குறிப்பிடத்தக்கது. எக்கூய் இந்தியர்களுள் இரு பிரிவினர் நடத்தும் இச்சண்டையில் ஒரு பிரிவினர் முகமூடியையும் மற்றொரு பிரிவினர் முகமூடி இல்லாமலும் போரிடுவர். முகமூடி அணிபவர்கள் கிறித்தவப் பேராளிகளாகவும் மற்றவர் உரோம் நகரப் பேராளிகளாகவும் பங்கேற்கின்றனர். எக்கூய் இந்தியச் சமுதாயத்தினர் பல வழிபாட்டு மரபுகளைப் பின்பற்றுவதற்கு ஏற்பப் பல்வேறு வகையான சடங்குகளை நடத்துகின்றனர். ஒவ்வொரு வழிபாட்டு மரபினரும் ஒரு குறிப்பிட்ட சமுதாயச் செயல்களுக்குப் பொறுப்பானவர்களாகப் பகுக்கப்பட்டுள்ளனர். இவர்கள் பல வண்ணங்களில்அழகுபடுத்திக் கொண்டு குழு நடனமாடுவர். ஒவ்வொரு குழுவினரும் தாம் வணங்கும் வழிபாட்டு மரபிற்குத் தொடர்புற்ற விலங்குகள், தாவரங்கள் ஆகியவற்றின் ஆற்றலைப் பெற்றுள்ளனர் என நம்புகின்றனர். ‘பசுகோலர் (Pascolas) என்னும் குழுவினர் விலங்குகளைப் போன்று போலி உருவத்துடன் அணிகலன் செய்து கொண்டு, சில குறிப்பிட்ட சடங்குகளைச் செய்கின்றனர். குழந்தைகள், திருமணமாகாதவர்கள் ஆகியோரின் ஈமச் சடங்குகளை நடத்தி வைப்பதில் இவர்கள் தலைமை ஏற்கின்றனர். ‘மாய்சுதிரோசு’ (Maestros) என்னும் குழுவினர் திருமணங்கள், ஈமச் சடங்குகள், பிற சமூகச் செயல்கள் ஆகியவற்றை நடத்துவதில் தலைமை ஏற்கின்றனர்.

இக்கால எக்கூய் இந்தியர்கள் மெக்சிகோ நாட்டு நிருவாகத்தினரால் பல மாற்றங்களை ஏற்றுவிட்டனர். மெக்சிகோ, அமெரிக்கா ஆகிய நாடுகளைச் சார்ந்த தொழில் நிறுவனங்கள் இவர்களின் செழிப்பான பகுதியில் பெருமளவு நிலங்களில் அமைந்துள்ளன. நகரப் பண்பாட்டுத் தாக்கத்திற்கு உட்பட்ட இவர்கள் தாம் பேசும் உத்தோ-அசுதெக்கு (Uto Aztec) மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த ககித்தா (Cahita) என்னும் கிளைமொழியைச் சிதைவின்றிப் பேசி வருகின்றனர். சீ.ப.

**எக்சீட்டர்** இங்கிலாந்தின் புகழ் பெற்ற நகர்; வரலாற்றுப் பெருமை வாய்ந்தது. ஆங்கிலக் கால்வாயில் எக்சி (Exce) ஆறு கலக்குமிடத்துக்கு அண்மையில் உள்ள இப்பகுதி 45 சதுர மைல்கள் பரப்பைக் கொண்டது. இதன் நில அமைப்பு இப்பகுதியினருக்குத் தொடக்க காலத்திலிருந்தே சிறப்பை அளித்து வந்தது. உரோமானியரும் இதன் சிறப்பை உணர்ந்து, உள்நாட்டினரிடமிருந்து இதைக் கைப்பற்றினர். பின்னர்ப் பல முற்றுகைகள் இங்கு ஒன்றன் பின் ஒன்றாக நிகழ்ந்தன. ஆல்பிரடு (Alfred )மன்னர் அரும்பாடுபட்டு இப்பகுதியைத் தேனியரிடமிருந்து (Danesh) காப்பாற்றினார். ஆனால் கி.பி.1068-இல் நார்மானிய மன்னர் வில்லியம் அதை வென்றார். இங்கிலாந்தின் உள்நாட்டுப் போர்க்காலத்தில் இந்நகர் பாராளுமன்றத்திற்கு உதவியாக மன்னனை எதிர்த்தது. இது கி.பி. 1643 முதல் 1646 வரை மன்னர் கட்சியினரிடம் சிக்கிக் கொண்டு துயருற்றது. பின்னர், அமைதி ஏற்பட்டவுடன் இப்பகுதி விரைவான வளர்ச்சி பெற்றுப் பல்வேறு துறைகளிலும் சிறப்புற்றோங்கியது.

பழம் பெருமை பெற்ற இப்பட்டினம் கலைத் துறையிலும் கவனத்தை ஈர்க்கின்றது. கி.பி.1133-இல் கட்டப்பெற்ற அழகிய மாதா கோயில் பீட்டர் துறவியின் நினைவுச் சின்னமாக அமையப் பெற்று, புதிய முறையில் கட்டடக்கலைச் சிறப்பைப் பெற்றது.இதன் அழகிய மாட மாளிகைகளும் கூட கோபுரங்களும் 1942-ஆம் ஆண்டில் போரின் விளைவாக அழிவுற்ற போதிலும், அவற்றின் சிறப்பைக் காட்டுகின்ற பல சின்னங்களை அங்கு இன்றும் காணலாம். 1922-ஆம் ஆண்டு அங்கு ஏற்பட்ட கல்லூரி விரிவடைந்து 1955 முதல் எக்சீட்டர்ப் (Exceter) பல்கலைக் கழகமாக விளங்குகிறது. கால்வாயினால் இணைக்கப்படும் இத்துறை முகத்தில் உலோகத் தொழில், தோல் பதனிடுதல், காகிதம் செய்தல், உழவுக் கருவிகள் உற்பத்தி முதலிய பல முக்கிய தொழில்கள் வளம் பெற்றுள்ளன. ஓர் இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள்தொகை கொண்ட எக்சீட்டர் அரசியல் பணித்துறைகளில் சிறப்பான ஓர் இடத்தைப் பெற்று விளங்குகிறது. பண்டைக் காலத்திலும் இக்காலத்திலும் புகழ் குறையாமல் விளங்கும் வரலாற்று நகரங்களுக்கு ஓர் அடையாளமாக எக்சீட்டர் அமைந்துள்ளது. இது தெவான்சயர் (Devonshire) மாவட்டத்தின் தலை நகராகவும் சிறந்த சுற்றுலா மையமாகவும் இன்று விளங்குகிறது. அமெரிக்காவிலும் இதே பெயரை உடைய ஒரு நகர் உண்டு தெ.பா.

**எகல் (கி.பி. 1770-1831):** மேனாட்டு அரசியல் தத்துவ வரலாற்றில் எகல் ஒரு சிறந்த, முக்கிய இடத்தில் உள்ளவர். அவரது அரசியல் கோட்பாடுகளின் அடிப்படையில்தான் பாசிச, நாசிசக் கொள்கைகள் அமையப்பெற்றன என்பது பல அரசியல் அறிவியலாளரின் கருத்து. செருமானியத் தத்துவ மேதையான எகல் (Hegel) தமக்குப் பின் வந்த காரல் மார்க்சு போன்ற தலைசிறந்த அரசியல் சமூக தத்துவ ஞானிகளுடைய சிந்தனைகள் உருப்பெற உதவியவர் எனலாம்.எகலின் தத்துவத்தை ஏற்காவிட்டாலும், காரல்



எகல்

மார்க்சு தமது ஆய்வு வாத முறையை எகலினிட மிருந்து பெற்றார் என்று சொல்லக்கூடும். செருமனி யில் இசுடட்கார்டு நகரில் கி.பி. 1770-இல் பிறந்த எகல் ஒரு தாழ்ந்த அலுவலரின் மகன். உள்ளூர் இலத் தீன் பள்ளியில் தமது கல்வியைத் தொடங்கி, இறைமை யியல் கற்கத் தூபின்சன் (Dubinsen) பல்கலைக் கழகத் திற்குச் சென்றார். அங்குக் கிரேக்க இலக்கியம், கிறித் தவ மதக் கல்வி ஆகியவற்றில் ஈடுபாடு கொண்டார். பயிற்சிகள் முடிந்தபின் சிலகாலம் கீழ்நிலை ஆசிரிய ராக இருந்து (Tutor), சேனாப் (Jena) பல்கலைக் கழ கத்தில் தத்துவ விரிவுரையாளராகிப் பின்னர் ஐடெல் பர்குப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியரானார். பின் இவர் பெர்லின் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய தோடு பல நூல்களும் இயற்றியுள்ளார். எகல் பொது வாகச் சருவாதிகார அரசின் நண்பர்; ஆதரவாளர். எகலின் கருத்து எல்லா வல்லமையும் வாய்ந்த அரசே உயரிய இலட்சிய அமைப்பு ஆகும் என்பதும், அதற்குப் பணி செய்வதே தனிமனிதனின் கடமையும் குறிக் கோளுமாகும் என்பதும், தனிமனித சுதந்திரம் என்று எதுவும் கிடையாது என்பதும் ஆம். இவர்தம் அரசியல் கொள்கையில் மக்களாட்சிக்கு இடம் கிடையாது. சட்டம் என்பது அரசின் ஆணை. ஆணையை ஏற்று அதன்படி நடப்பதே ஒவ்வொரு தனிமனிதனின் பண் புக்கு எடுத்துக்காட்டு. பிரெஞ்சு மன்னர் நெப்போலி யன் எகலின் அன்புக்குரிய, எடுத்துக்காட்டான அர சுத் தலைவர். பிரசிய நாட்டைப் பிரெஞ்சுப் படைகள் வெற்றி கொண்டபின், நெப்போலியன் அந்நாட்டில் குதிரைமேல் சவாரிபோனதைக் கண்ட எகல், அவரை உலகின் உயிர் (World Soul) எனப் பெரிதும் புகழ்ந்து பாராட்டினார். இவர் மேரி தக்கர் என்பவரை மணந் தார். இவர் யாத்த 'உரிமை, சட்டம் ஆகியவற்றின் தத்துவம்' என்ற நூலில் இவர்தம் அரசியல் தத்துவக் கருத்துகள் பல அடங்கியுள்ளன.

**எகலின் தத்துவக் கருத்துகள்:** எகல் இக்காலத் தத்துவக் கருத்துகளுக்கு முற்றிலும் புதியதொரு வடி வம் கொடுத்தார். ஐரோப்பாவில் அறிவு வளர்ச்சிக் காலத்திலே அறிவியலாய்வுக்காக இயற்கைவிதியையும் (Order of Nature), கிறித்தவச் சமய, ஒழுக்கமரபுகளில் காணப்படும் இயற்கை விதியையும், அவை இரண் டிற்குமுள்ள முரண்பாட்டையும் விளக்கித் தாவீது இயூம் (David Hume), உரூசோ (Rousseau), காண்டு (Kant) முதலிய தத்துவச் சிந்தனையாளர்கள் பல கருத்துகளைக் கூறியிருந்தனர். இயூம் அதுவரை கூறப் பட்டு வந்த அறிவு அல்லது காரணம் (Reason) என்ற கருத்தில் காணப்படும் முரண்பாடுகளை விளக்கி, இயற்கையின் சட்டம் (Natural Law) என்பதன் அடிப் படைக் கொள்கையை மறுத்தார். உரூசோ அறிவின் காரணங்களுக்கெதிராக உணர்ச்சியின் காரணங்களே (Reasons of the heart) உயர்ந்தவை என்று கூறி, சமயமும் ஒழுக்கமும் உணர்ச்சியின் துறையைச் சேர்ந்தவை என்று கூறினார். காண்டு அறிவியலும் சமயமும் இருவேறு துறைகளைச் சேர்ந்தவை என்று கூறி, நடைமுறை அறிவுக்கும் (Practical Reason) கொள்கை அறிவுக்கும் (Theoretical Reason) இடையே உள்ள வேறுபாட்டைத் தெளிவாகச் சுட்டிக்காட்டி னார். இம்மூவருடைய கருத்துகளையும் ஆய்ந்த எகல், இயற்கை விதியையும் சமய, ஒழுக்க முறையை யும் வேறுபாடில்லாதவை எனக் கூறி, அவற்றை இணைக்கக்கூடிய ஓர் இணைப்பு விதியைத் (Principle of Synthesis) துணிந்து வகுத்தார். ஒழுக்க, சமய விதிகளை அறிவியலுக்குக் கையாளப்படுகிற பகுப் பாய்வுத் தருக்க வகையாக ஆய்வு செய்யாமல், அவற்றிற்குத் தருக்க வகையாக ஒரு நியாயம் அல் லது காரணம் இருப்பதைக் காட்டுதல் இயலுமென் றும், அதன் பொருட்டு ஒரு புதிய வலுவான இணைப் புத் தருக்க முறையை (A newer and more powerful logic of synthesis) உருவாக்குதல் கூடுமென்றும் இவர் கூறினார். இவர் இவ்வாறு அறிவு அல்லது காரணம் (Reason) என்பதைப் பற்றி ஒரு பரந்த கருத்தை வகுத்து, தருக்க இயல் (Dialectic) எனத் தம்மாலேயே சொல்லப்பட்ட ஒரு புதிய அறிவியல் முறையையும் (Intellectual Method) வகுத்தார். இவர் வகுத்த தருக்கஇயல் ஒரு புதியவாத முறை ஆகும். உலகத்தில் உண்மை (Fact) எனக் கருதப்படுவனவற்றுக்கும் மதிப்பு (Value) உடையவை

என்று கருதப்படுவனவற்றுக்கும் இடையே தவிர்க்க இயலாத, ஒரு தருக்க இயலான (காரண-காரிய இயலான) தொடர்பு இருக்கவே செய்கிறது என்று காட்டுவதுதான் எகலின் புதிய தருக்கஇயல் முறையின் சிறப்பாகும். இப்புதிய தருக்கமுறையின் வாயிலாக யாவரும் சமூக, சமய, ஒழுக்க இயலான கேள்விகளை நன்றாக விளங்கிக் கொள்ளுதற்கும், எதனையும் அறிவியல் தருக்கமுறையை அளவுகோலாகக் கொண்டு மதிப்பீடு செய்தற்கும் வழி தோன்றிற்று. எனவே இவர் தத்துவத் துறைக்கு அளித்த முதல் அரசியல் கருத்து இவருடைய புதிய தருக்க முறை ஆகும்.

இவர் அளித்த இரண்டாம் முக்கிய அரசியல் கருத்து, அரசியலதிகாரத்தின் ஒரு வடிவமாகத் தேசிய அரசைக் கருதும் கொள்கையாகும். வரலாற்றுக்கும் எகல் அளித்த ஒரு விளக்கத்தின்படி, தேசியமென்னும் மக்கள் தொகுப்புத்தான் முக்கியமான கூறாக அமைந்துள்ளதே தவிர, தனியாளோ தனியாட்கள் சேர்ந்த குழுக்களோ முக்கியமான கூறுகளல்ல. புதிய தருக்க இயலின் வாயிலாக, ஒவ்வொரு தேசிய இனத்தின் சாதனைகளும் வளர்ந்து வரும் உலகளாவிய நாகரிகத்தின் ஒரு கூறாக அமைந்துள்ளன என்று காட்டுதலே இவருடைய வரலாற்றுத் தத்துவம் ஆகும். ஒரு தேசிய இனத்தின் தனிச்சிறப்பு (Genius) அதிலுள்ள ஒவ்வொருவருடைய செயலின் வாயிலாக வெளிப்பட்டு, கலைகளையும் சட்டத்தையும் ஒழுக்க விதிகளையும் சமய நெறியையும் உண்டாக்குகிறது. ஆகையால் அரசு ஒரு தேசிய இனத்தின் வளர்ச்சியை இயக்குவதாகவும் அவ் வளர்ச்சியின் முடிபாகவும் இருக்கிறது. சுருங்கச் சொல்லின், இவர்தம் தத்துவக் கருத்து அரசு பற்றிய தாராள இயல்பற்ற ஒரு கோட்பாட்டையும் (Anti-liberal theory of the State), அதைச் சரியானதென நிறுவிய ஒரு தருக்க இயலையும் தோற்றுவித்தது.

**எகலின் வரலாறு பற்றிய கருத்து:** எகல் ஒரு புதிய வரலாற்று முறையை வகுத்தார். அது நாகரிக வளர்ச்சியின் போக்கைப் பற்றிக் கூறும் ஒரு சட்டமாகும். இவ்வரலாற்றுச் சட்டமுறையைக் கையாளுதலின் வாயிலாக, முன்னேற்றமடைந்துள்ள மக்களினத்தையும் பின்தங்கிய மக்களினத்தையும், வளர்ச்சி பெற்ற நாகரிகத்தையும் பழங்கால நாகரிகத்தையும் பிரித்தல் கூடும்; இயற்கையில் வளர்ச்சியைப் பற்றிய ஒரு பொதுவானவிதி (A single pattern or law) இயங்குகிறது. சட்டம், பொருளாதார நிறுவனங்கள், அறிவியலான கருத்துகள், அரசாங்கம் முதுலியவை எல்லாம் ஒழுங்கான இந்தப் பரிணாம விதியை ஒட்டியே படிப்படியாக வளர்ந்துள்ளன. பல படிநிலைகளில் மனித அறிவு வளர்ந்து, முழு வளர்ச்சி பெற்ற அறிவு நிலையை ஒத்ததொரு நிலையை அடைகிறது. அதுபோலவே முழு வளர்ச்சி பெற்ற அறிவு நிலையும் (Absolute Reason) நாகரிகத்தின் பல்வேறு கருத்துகளின் வாயிலாகவும், நிறுவனங்களின் வாயிலாகவும் தன்னை வெளிப்படுத்துகிறது. ஆகையால் வரலாற்றை முறையாக ஆராய்ந்து கற்பவர், வரலாற்று நிகழ்ச்சிகளை உணர்தலில் விருப்பு வெறுப்பற்ற திறனாய்வு விதிகளை உருவாக்குதல் இயலும். நாகரிகத்தின் வளர்ச்சியைக் கூர்ந்து நோக்கினால், உண்மையான கூறுகளைப் பொய்யான கூறுகளினின்றும் பிரித்தறிதல் இயலும். அது போலவே சிறப்பான கூறுகளைச் சாரமில்லாதனவற்றிலிருந்தும், நிலையானவற்றை நிலையற்ற கூறுகளிலிருந்தும் பிரித்தறிந்து கொள்ளலாம். சுருங்கச் சொல்லின், உண்மையானவற்றைப் பொய்யானவற்றிலிருந்துபிரித்தறிதல் வேண்டும். இம்முறையில் வரலாற்றை ஆராய்தற்கு ஒரு புதிய கருவியாகக் கையாளுதற்குத்தான் எகல் ஒரு புதிய தருக்க முறையை வகுத்தார். அறிவுக்குப் பொருத்தமாக இருப்பதுதான் ஒழுக்க வகையிலும் நியாயமாக இருத்தல் வேண்டும். இவ்வாறு எகல் அறிவையும் ஒழுக்கத்தையும் ஒன்றாக இணைத்த காரணத்தால் வல்லந்தமே சரியானது (Might is Right) என்ற ஒரு கருத்தைத் தம் அரசியல் கருத்தில் கூறுகிறார். இவர் வரலாறு பற்றிக் கூறிய கருத்தை வெறும் கற்பனையானதும், பேரிடர்ப்பாட்டை விளைவிப்பதும் ஆகுமென்று பேராசிரியர் சபைன் கூறுகிறார்.

**எகலின் தருக்கவாதம் பற்றிய கருத்து:** எகலின் கருத்துப்படி, நாகரிகத்தின் எல்லாக் கூறுகளும் ஒன்றாகத் திரண்டு, அதில் சமயம், தத்துவம், கலைகள், ஒழுக்க விதிகள் முதலியவை ஒன்றை ஒன்று பாதித்து, ஒன்றாகி, அவற்றைத் தோற்றுவித்த மக்களுடைய ஆன்ம ஆற்றலை எடுத்துக் காட்டுகின்றன. ஓர் இனமக்களின் வரலாறு அவர்கள் மனித நாகரிகத்துக்கு அளித்துள்ள தனிச் சிறப்பான கொடையைக் காட்டுகிறது. அவர்களுடைய செயல்களில் மூன்று நிலைகள் காணப்படுகின்றன. முதல் நிலையில் அவர்கள் மகிழ்ச்சியாக இளமையோடு தன்னியல்பிலே செயல் ஆற்றுகின்றனர். இரண்டாம் நிலையில் அவர்கள் நம்பிக்கையற்றுத் தன்னாய்வு இயல்பிலமைந்து, ஆக்க இயலான செயலின்றி இருக்கின்றனர். மூன்றாம் நிலையில் அவர்கள் தம் நிலையை உணர்ந்து, சுதந்திரத்தையும் அதிகாரத்தையும் தம் கட்டுப்பாட்டோடு இணைக்கின்றனர். இம் மூன்று நிலைகளே அவருடைய தருக்க இயலில் முதற்கோள் (Thesis), முரண்கோள் (Antithesis), முற்றுக் கோள் அல்லது இணைப்பு (Synthesis) என்று சொல்லப்படுகின்றன. இந்தத்

தருக்க இயலின் மூன்று நிலைகளை அவர்தம் வரலாற்றுத் தத்துவத்தில் கையாண்டு, மேலை நாகரிகத்தின் வரலாற்றை மூன்றாகப் பிரித்து, ஆக்கப் பணிகளைச் செய்த கிரேக்க நகரரசை முதற் கோள்நிலை என்றும், சாக்கிரட்டீசையும் கிறித்தவ நெறி தோன்றி வளர்ந்த காலத்தையும் இரண்டாம் நிலையாகிய முரண்கோள் என்றும், மறுப்புக் கிறித்தவ நெறியும் (Protestantism) சமயச் சீர்திருத்த இயக்கத்திலிருந்து தோன்றிய செருமானியத் தேசிய இனங்களும் தோன்றிய காலத்தை மூன்றாம் நிலை யாகிய முற்றுக்கோள் என்றும் சுட்டிக் காட்டினார்.

எகல் கூறிய வேறு சில கருத்துகள்: சுதந்திரம்: சுதந்திரம் என்பது கட்டுப்பாடோ அதிகாரமோ இல்லாத நிலை அன்று. உண்மையான சுதந்திரம் என்பது ஒரு தேசிய அரசின் அதிகார வரம்புகளுக்கு உட்பட்டுத்தான் இருக்கிறது. ஆகையால் ஒரு தேசிய இனத்தவர் நிலமானிய முறையினின்றும் தோன்றுகிற குழப்பங்களினின்றும் தங்களை விடுவித்துக் கொண்டு, ஒரு தேசிய அரசாங்கத்தை நிறுவும்போதுதான் உண்மையான சுதந்திரத்தை அடைகின்றனர். எகலின் கருத்துப்படி, சுதந்திரம் என்பது ஆங்கில, பிரெஞ்சு அரசியற் கருத்திற் காணப் படுகின்ற தனியார் உரிமைக் கொள்கையன்று. சுதந்திரம் என்பது ஒரு தேசிய இனத்தாருக்கு இருக் கின்ற தங்களுடைய (சுதந்திரமான) அரசியல் நிலையைத் தாங்களே தீர்மானித்துக்கொள்ளக்கூடிய அதிகாரத்தின் காரணமாகத் தனி ஆளுக்கு வந்து சேரும் ஒரு பண்புதான் ('a quality reflected upon the individual by the national power of self determination'). மேலும் நாடு முழுவதற்கும் ஒரே சீரான சட்டம் இருத்தல் வேண்டுமென்றோ சம மான குடிமை உரிமைகள் இருத்தல் வேண்டு மென்றோ விதி இல்லை.தனியாருக்கு முழுச்சுதந்திரம் இருத்தல் வேண்டும். அது உலகளாவிய சுதந்திர நிலையோடு இணைக்கப்பட்டது. இந்நிலையைக் காட்டுவதுதான் இக்கால அரசின் சாரம் ஆகும். சுதந்திரம் என்பது ஒரு சமூக நிகழ்ச்சியாகக் கருதப் படுதல் வேண்டும். அதனைச் சமுதாயத்தின் ஒழுக்க இயலான வளர்ச்சியினின்றும் தோன்றுகின்ற சமூக அமைப்பின் ஓரியல்பு என்றும் கருத வேண்டும். ஆகையால் சுதந்திரம் என்பது ஒருவருடைய இயல்பையோ சொந்த விருப்பங்களையோ காட்டுவது ஆகாது. ஒருவர் தம் விருப்பத்தையும் திறமையையும் சமூக முக்கியத்துவமுடைய பணிகளைச் செய்தலோடு முரணின்றி இணைத்தலே சுதந்திரம் ஆகும். எகலின் கருத்தில் அரசுதான் உயர்தர மதிப்பீடுகளனைத்தை யும் எடுத்துக் காட்டுவதாக இருப்பதால், அரசி லுள்ள எல்லாச் சுதந்திரமான மக்களும் தம் அரசுக்குப் பணி செய்வதன் வாயிலாகவே உயர்தர நிலையில் தங்களை உணருதல் இயலும். ஒருவர் தம் முடைய விருப்பத்தை வெளிப்படுத்துவது எதிர் மறை வகையான சுதந்திரம் ஆகும்; அரசுக்குப் பணி செய்யும் குடிமை உரிமை நிலையே 'உண்மையான சுதந்திரம்' ஆகும். எகலின் இத்தகைய சுதந்திரக் கருத்துகளை மதிப்பிட்டுப் பேராசிரியர் சபைன் (Sabine) கூறும்போது, இவர்தம் சுதந்திரம் பற்றிய கொள்கையானது குடிமை உரிமைகளைப் பற்றியோ அரசியலுரிமைகளைப் பற்றியோ யாதொன்றும் தெளி வாகக் கூறவில்லையென்றும், பொதுவாக இவர் அரசை ஓர் இலட்சியவடிவமாக உயர்த்தியபோக்கும் குடிமைச் சமூகத்தை மிகவும் தாழ்வாக மதிப்பிட்ட இயல்பும் அரசியல் சருவாதிகாரக் கோட்பாடு (Political Authoritarianism) தோன்றுதலைத் தடுக்காதபடி செய்துவிட்டன என்றும் கூறுகிறார்.

குடிமைச் சமூகம்: எகல் தம் காலத்திலிருந்த செருமானியச் சமூக அமைப்பைக் கண்ணுற்றுக் குடிமைச் சமூகத்தைப் பற்றிச் சில கருத்துகளைக் கூறினார். தொழிற் கழகங்களும் வாணிகக் கழகங் களும் இணையங்களும் வகுப்புகளும் கழகங்களும் உள்ளூர்ச் சமுதாயங்களும் (Local Communities) சேர்ந்த ஓர் அமைப்புத்தான் குடிமைச் சமூகமாகும். குடிமைச் சமூகமானது (Civil Society) தனியாட் களின் பொருள்தேடும் தன்னல நோக்கங்கள் ஒன்றுக் கொன்று மோதுதலின் விளைவாகத் தோன்றுகின்ற இயந்திர இயல்பான விதிகளை (Mechanical laws) ஒட்டி இயங்குகிறது. பொதுப்பணிகளை நிறைவேற்று தல், சட்டங்களைச் செயற்படுத்துதல், காவற் பணி களை நிறைவேற்றுதல், தொழில்சார்ந்த, பொருளா தாரத்துறை சார்ந்த நிறுவனங்களை முரண்படாமல் இணைத்தல் முதலியவற்றைக் குடிமைச் சமூகமே செய்தல் வேண்டும்; அவற்றை அரசு செய்தல் கூடாது. குடிமைச் சமூகத்தின் செயல்களை அறிவுக் கூர்மையோடு மேற்பார்வை செய்து, ஓர் உயரிய ஒழுக்க இயலான குறிக்கோளுக்கு ஏற்ப அதனைச் செலுத்த வேண்டியது அரசின் கடமையாகும். அரசும் அதன் ஒழுக்க இயலான நோக்கமும் சமூகத்தின் பொருளாதாரப் பணிகளைச் சார்ந்துள்ளனவாகை யால், அப்பணிகள் மிக முக்கியமானவை ஆகும். எகல் கூறும் குடிமைச் சமூகம் பற்றிய கருத்தானது, தாராள அரசாங்கமுறைக்கு இன்றியமையாததான யாவருக்கும் சம உரிமைகளை வழங்கும் குடிமை நிலைக்குச் சிறிதும் முக்கியத்துவம் அளிக்கவில்லை. இக்கருத்தின்படி தனியாளானவர் ஒரு குடியாள் என்று மட்டுமே கருதப்படுவதனால், அரசே கழகங்களெல் லாவற்றின் ஒரு வடிவமாகக் காட்சி அளிக்கிறது.

இதனால் சுதந்திரம் மறைய, சருவாதிகாரம் தோன்று கிறது.

**எகலின் அரசு பற்றிய கருத்து:** எகல் கூறும் அரசு பற்றிய இலட்சியக் கோட்பாடு என்னும் கருத்து (The Idealistic Theory of State) சருவாதிகாரக் கருத்துகளுக்கும் மார்க்சு வகுத்த பொதுவுடைமைக் கோட்பாட்டிற்கும் வழிகாட்டியாக இருந்ததால், இது மிகவும் முக்கியமான கருத்தாகும். இவருடைய கருத்தின்படி அரசின் உயரிய வடிவமானது மறுப்புக் கிறித்தவ நெறியைச் சேர்ந்ததாகவும், செருமானிய இனமக்களை உடையதாகவும் இருக்கும். அரசு என்பது ஒரு குறிக்கோளை அடைதற்குரிய ஒரு வழி அல்லது நெறி (Means) அன்று; மாறாக அதுவே குறிக்கோளாகவும் (End)இருக்கிறது. அரசு தெய்விக விருப்பமாக இருக்கிறது; உலக அமைப்பையும் நடைமுறை வடிவத்தையும் அது தன்னுள்ளே அடக்கிக் காட்டுவதால், பூமியில் அதுவே இறைவனின் மனத்தைக் காட்டுகிறது. அரசு வரம்பற்ற அறிவாற்றலுடையது; தன்னையே நன்கு அறியவும் தனக்குத் தேவையான விருப்பத்தைத் தானே வெளிப்படுத்தக் கூடியதாகவும், ஆன்மாவின் அழியாத் தன்மையையும் இன்றியமையாமையையும் வெளிப்படுத்தி, உலகில் நடமாடும் இறைவனாகவும் காட்சி அளிக்கிறது. ஆகையால் அரசின் அதிகாரம் வரம்பற்றது. அரசின் கடமை மிகச் சிறந்த, திறமையான ஆட்சி முறையை நிறுவி, நல்லதொரு நீதித்துறையின் வாயிலாக மக்களுக்கும் சொத்துரிமைகளுக்கும் பாதுகாப்பளித்தல் ஆகும். தனி ஆள் சிறிது காலத்துக்கு மட்டிலுமே இருப்பவர். அரசோ எப்போதும் இருப்பது. மரத்திலுள்ள இலைகள் காய்ந்து சருகாகி உதிர்ந்து விடுகின்றன; மரமோ நீடித்து நிற்கிறது. தனியாளின் குறிக்கோள்களைவிட அரசின் குறிக்கோள்கள் உயர்ந்தவை. தனியாளின் நோக்கம் தன்னலம் கொண்டது. ஆனால், அரசின் நோக்கம் சமூக நலனைக்கொண்ட உண்மை நோக்கம் ஆகும். ஆகையால் அரசின் நோக்கமாகத் தனி ஆளைக் கருதுதல் தவறு. தனியாள் தன் குறிக்கோளைச் சமூகக் (அல்லது அரசின்) குறிக்கோளுக்கு மாறாகப் போகாமல், அதற்கு இணங்கியும் அடங்கியும் இருக்குமாறு பார்த்துக் கொள்ளுதல் வேண்டும். இந்தக் கருத்துகளெல்லாம் அரசின் அதிகாரத்தை வரம்பற்றதாக ஆக்கி, ஆளுவோரின் சருவாதிகாரத்துக்கு ஆளப்படுபவரைப் பலியிடுகின்ற ஒரு வல்லாட்சிக் கோட்பாட்டையே நிறுவுகின்றன. இம்மானுவல் காண்டு (Immanuel Kant) தனியாளே குறிக்கோள் ஆவர் என்றும், அரசு என்பது ஒரு வழி அல்லது கருவியே தவிர அதுவே ஒரு குறிக்கோள் ஆக மாட்டாது என்றும் கூறிய கருத்தே சரியானதாகும்.

**எகலும் கிரீனும்:** எகலைப் போலவே ஆங்கில அரசியற் சிந்தனையாளரான டி.எச். கிரீனும் இலட்சியக் கோட்பாட்டை ஆதரித்தவரே. எனினும் எகல் கூறிய அரசின் இன்றியமையாமையை மட்டும் கிரீன் (T.H. Green) ஒப்புக் கொண்டாரே தவிர, அவர் கூறிய அரசே குறிக்கோளாகும்; தனியாள் ஒரு கருவிதான் என்ற கருத்தைக்கிரீன் மறுத்தார். அரசு என்பது தனியாளின் நல்வாழ்வுப் பண்புகளை வளர்க்க உதவும் ஒரு கருவிதான் என்றும், தனியாளின் வளர்ச்சியும் நல்வாழ்வுமே குறிக்கோள்களாகும் என்றும் கிரீன் கூறினார். இவ்வகையில் ஆங்கிலத் தாராளக் கோட்பாட்டை நல்லதொரு வகையில் எகலின் கோட்பாடு சீர்திருத்தி அமைத்தது. ஆனால், எகலின் சருவாதிகாரக் கருத்தை ஆங்கில இலட்சியக்கோட்பாட்டாளர் ஏற்றுக் கொள்ளவில்லை.

**எகலும் மார்க்சும்:** எகலின் தருக்க இயல்கோட்பாட்டை ஆதாரமாக வைத்தே காரல் மார்க்சு தம் தருக்க இயலான பொருளியல் வாதக் கொள்கையை (Principle of Dialectical Materialism) வரைந்து, அதன் வழியே சென்று, புதியதொரு அறிவியலான பொதுவுடைமைக் கோட்பாட்டை வகுத்தார். தருக்க இயல் கொள்கையை மார்க்சு விரித்துரைத்து, அதை வரலாற்றுக்குப் பொருளியலான விளக்கத்தைத் தருவதற்குக் கையாண்டார். சமூகத்தின் பரிணாம வளர்ச்சியை இவ்வாறு விளக்குதல்தான் அறிவியலான வழி என்று மார்க்சு கருதினார். எகல் எவ்வாறு குடிமைச் சமூகத்தைப் பொருளாதார இயல்பான அமைப்பை உடையதென்று கருதினாரோ அவ்வாறே மார்க்சும் கருதினார்.

**எகலும் இத்தாலிய, செருமானியச் சருவாதிகாரக் கோட்பாடுகளும்:** இரு உலகப்போர்களுக்கும் இடைப்பட்ட காலத்தில் இத்தாலியில் தம் பாசிசச் சருவாதிகார ஆட்சியை நிறுவிய முசோலினிக்கும், செருமனியில் தம் நாசிசச் சருவாதிகார ஆட்சியை நிறுவிய இட்லருக்கும் சருவாதிகாரக் கோட்பாடுகளை வழங்கியது எகலின் அரசுக் கோட்பாடுதான். இச்சருவாதிகாரிகள் தத்தம் நாடுகளைச் சீரழித்த பொருளாதாரச் சிக்கல்களை விரைவில் நீக்குதற்கு மிக எளிய, வலுவான, விரைவில் பயனளிக்கக்கூடிய வழியை எகலின் அரசுக் கருத்து காட்டிற்று. அவர்கள் நாட்டின் நலனுக்காக என்று கூறித் தமக்குத் தடையாயிருந்த குடியாட்சி மரபுகளையும் முறைகளையும் உடைத்தெறிந்துவிட்டு, செயல்திற இயலான இயக்கத்தை நடத்தி, ஆட்சியைக் கைப்பற்றிப் பொருளாதாரச் சிக்கலை அகற்றினர். எனவே, எகலின் அரசுக் கோட்பாடு இத்தாலிய, செருமானியச் சருவாதிகார ஆட்சிகளுக்கு ஆதாரமாக

அமைந்தது. அதுவே ஆங்கில நாட்டில் வரம்பு மீறிய நிலையிலிருந்த தாராளக் கருத்தைச் சீர்திருத்தி அமைக்கவும் உதவிற்று. தி.க. & பா.சூ.

துணை நூல்கள்:

**Foster, M.B.**, The Political Philosophies of Plato and Hegel, Oxford, 1935.


**Friedrich Carl**,J., The Philosophy of Hegal, New York. 1954.

**Hobhouse,L.T.**, The Metaphysical Theory of the State, London, 1918.

**Marcuse, Herbert**, Reason and Revolution: Hegal and the Rise of Social Theory, New York, 1954.

**எகிப்து**: இக்காலத்தில் எகிப்திய அராபியக் குடியரசு என்று சொல்லப்படும் எகிப்து நாடு மேற்கே இலிபியாவும், தெற்கே சூடானும், வடக்கே மத்தியதரைக் கடலும், வடகிழக்கே இசுரேலும் (Israel), கிழக்கே செங்கடலும் எல்லைகளாக அமைந்திருக்க, வடகிழக்கு ஆப்பிரிக்க மூலையிலுள்ள 997, 670 ச.கி.மீ. பரப்பளவுடைய ஒரு நாடாகும். இப்போது அதன் தலைநகரம் கெய்ரோ (Cairo). பண்டைய கீழை நாட்டு நாகரிகம் தோன்றிவளர்ந்த நாடு எகிப்தாகும். அதன் நாகரிகத்தின் பிடியில் பண்டைய இசுரேலும் கிரீசும் வந்தன; அவற்றின் வழியாக இக்கால மேலைநாட்டு நாகரிகம் உருவாயிற்று. எகிப்திய நாகரிகமே மற்ற ஆப்பிரிக்க நாகரிகங்கள் வளருதற்கும் உதவி செய்தது. கிறித்தவ மறையாகிய விவிலியத்திலும், பண்டைய கிரேக்க வரலாற்றாசிரியராகிய எரடோட்டசு (Herodotus) எழுதிய வரலாற்று நூலிலும் எகிப்து குறிப்பிடப் படுகிறது. நில அகழ்வாராய்ச்சி இந்நாட்டில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் மேற்கொள்ளப்பட்டது.

**நில அமைப்பு, மக்கட் சமூகம் முதலியவை:** எகிப்தின் நில அமைப்பு அதில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கிப் பாய்ந்து மத்திய தரைக் கடலைச் சென்றடையும் நீண்ட நைல் ஆற்றினால் உண்டாக்கப்பட்டுள்ளது. உலகிலுள்ள மிக நீண்ட ஆறுகளுள் ஒன்றாகிய இது, நடு ஆப்பிரிக்காவில் தோன்றி, குன்றுகளிடையே வளைந்து சென்று, குன்றுகளே இல்லாத வடக்குப் பகுதியிலுள்ள பாலைநிலச் சமவெளியில் பாய்ந்து, கடலருகில் விசிறிபோல் பல கிளைகளாகப் பிரிந்து கடலிற் சேர்கிறது. கழிமுகப் பகுதியில் கால்வாய்கள் பல குறுக்கும் நெடுக்குமாகச் செல்லுகின்றன. இதனால் நாட்டின் நிலம் மேலைப் பாலைநிலம் (Western Desert) என்றும், கீழைப் பாலைநிலம் என்றும் பிரிக்கப்படுகிறது. கடலோரப்பகுதிகள் பெரும்பாலும் விளைச்சலுக்குத் தகுதியற்ற பாலைநிலங்களே. நாட்டின் தென்மேற்குப் பகுதியிலும் சினாய் (Sinai) முந்நீரகத்திலும் உயரமான குன்றுகள் உள்ளன. நைல் ஆறு வெள்ளக் காலங்களில் கொண்டு வந்து சேர்த்துள்ள வண்டல் நிலமே எகிப்தில் பயிர் விளைச்சலுக்கு ஏற்ற நிலமாகும். எத்தியோப்பிய மலைப்பகுதியிலிருந்து நைல் கொண்டுவரும் வண்டல் மண் கழிமுகப் பகுதியில் 30 அடிவரை சேர்ந்துள்ளது. பண்டைய எகிப்திய மக்களுடைய வாழ்வில் ஒரு தொடர்ச்சியும், பழைமையைப் பின்பற்றும் போக்கும் (Conservatism) உருவானமைக்குக் காரணம் நைல் ஆற்றில் பருவம் தவறாமல் வெள்ளம் வருதலும், வெள்ளம் வடிதலும், நீர் குறைதலும் ஆகும்; இக்காலங்களைக் கவனித்து அவற்றை மக்கள் முறையே வெள்ளக் காலம், வெள்ளம் குறைந்து நிலம் தோன்றும் காலம், நீர் குறைந்த காலமென்று பிரித்தனர். நீரோடும் நிலத்தில் உழைத்தலே அவர்களுக்கு ஆயிரமாயிரமாண்டுகளாகத் தெரிந்த ஒன்றாகும். இந்நாட்டில் ஆண்டு மழை மொத்த அளவு குறைவே. தூசியை வீசும்




எகிப்து

புயல் ஏற்படுவதுண்டு. மழைக்காலம் மிகவும் குளிர்ந்திருக்கும். கோடை வெப்பமும் கடுமையானது. நைல் பள்ளத்தாக்கில்தான் பசிய பயிர்கள் காணப்படுகின்றன. பேரீச்ச மரங்கள், வேலமரம், தைலந்தரும் மரவகை, முந்திரி முதலியவை காணப்படுகின்றன. எருமை, ஒட்டகம், கழுதை, செம்மறியாடு, வெள்ளாடு முதலியவை மக்களுடைய வளர்ப்பு விலங்குகள். ஊர்வனவும் பறப்பனவும் பல்வேறு வகையாக இந்நாட்டில் காணப்படுகின்றன. கழிமுகப் பகுதியில் பாசனவசதிகள் பெருகி இருப்பதாலும், இங்கு (ஏறக்குறைய 9659 சதுர மைல் பரப்பில்) ஆண்டில் முப்போகம் விளைவதாலும் இப்பகுதியே பெருகிய மக்கள் தொகை உடையதாகும். இங்குள்ள மக்களுள் பெரும்பாலோர் குடியானவர்களே. நிலத் தொழிலாளர்கள் பெருகியுள்ளனர். கெய்ரோவுக்கும் அசுவானுக்குமிடையே உள்ள குறுகலான நைல் பள்ளத்தாக்கில் பயிர்த்தொழில் நடைபெறுகிறது.

நைல் பள்ளத்தாக்கு மக்கள் கெய்ரோ அல்லது கழிமுகப் பகுதி மக்களைப்போன்று மற்ற நாடுகளோடும் ஐரோப்பாவோடும் தொடர்பு இன்றிப் பழைமை விரும்பிகளாக உள்ளனர். அசுவானில் நைல் ஆற்றின் குறுக்கே 1970-இல் பேரணை கட்டப்பட்டபின்னர், ஏறக்குறைய 2.5 மிலியன் ஏக்கர் புதிய நிலம் பாசன வசதிபெற, அதனால் சூடான் எல்லையை ஒட்டிய நூபியாப் பள்ளத்தாக்கு(Nubia Valley) மக்கள் குடியிருப்புக்கு ஏற்றதாயிற்று. கீழைப் பாலைநிலத்தில் சில நாடோடி மக்களைத் தவிர நிலையான மக்கட் குடியிருப்பு இல்லை. இங்குப் புல்வெளிகளும் நீர்நிலைகளும் இருப்பதால் ஆடு, மாடு வளர்த்தலே முக்கிய தொழிலாகும். மேலைப் பாலைநிலத்தில் கூடுதலான எண்ணிக்கையில் மக்கள் வாழ்கின்றனர். சினாய் முந்நீரகத்தின் தென்பகுதியில் சிறுகுன்றுகள் உள்ளன. இதில் வாழும் பெரும்பான்மையான அராபிய மக்கள் வடக்குக் கரையிலுள்ளனர். சிற்றூர்களெல்லாம் விளைநிலங்களுக்கு நடுவே அமைந்துள்ளன.

மக்கள் பேசும் மொழி இக்கால இயல்புகளுடன் கூடிய அராபிய மொழியாகும். அமிட்டிக்கு பெசா (Hamitic Baja), கிரீக்கு, இத்தாலி, அர்மீனியன் முதலியவை ஏனைய மொழிகளாகும். மக்கள் அமிட்டிக்கு அர்மினாய்டு கலப்பு இனத்தைச் சேர்ந்தவர்கள். கழிமுகப் பகுதி மக்களிடம் கிரேக்க, உரோமானிய, பாரசீக, துருக்கிய மக்களுடைய சாயல்கள் கலந்துள்ளன. பெரும்பாலோர் அராபிய இனத்தவர். மக்களுள் 93 விழுக்காட்டினர் வைதிக இசுலாம் பிரிவைச்



கெய்ரோ

சேர்ந்த முசுலிம்கள்; ஏறக்குறைய 2 மிலியன் கோப்டிக்குக் (Coptic) கிறித்தவர்களும் இருக்கின்றனர்.

நாட்டின் நிலப்பகுதியில் 96 விழுக்காடு பாலை நிலமாகையினால், அதன் 7 மிலியன் ஏக்கர் விளை நிலத்தின் உணவுப் பொருளையே மக்கள் சார்ந்திருக்க வேண்டியிருக்கிறது. ஆயினும் இதில் பெருமளவு நிலம் இருபோக விளைச்சலுடையதாகையால், நிலமில்லாதோர் வேளாண் தொழிலாளராக உழைத்து வாழ்கின்றனர். வளர்ந்து வரும் தொழிலாளர் எண்ணிக்கைக்கு ஏற்ற முழுவேலை வாய்ப்பு இல்லை. அண்மையில் இந்நாட்டில் மண்ணெண்ணெய் கண்டுபிடிக்கப்பட, இந்நாடு அப்பொருள் ஏற்றுமதியினால் முன்னேறி வருகிறது. மங்கனம், இரும்பு, நிலக்கரி முதலிய உலோகங்களும் சுரங்கங்களிலிருந்து எடுக்கப்படுகின்றன. மின்சார உற்பத்தியும் நைல் ஆற்றிலிருந்து கிடைக்கிறது. நாட்டின் மொத்தப் பொருள் உற்பத்தியில் காற்பங்கு வேளாண்மையிலிருந்தே கிடைக்கிறது. கோடையில் பயிர் செய்யப்படும் பொருள் நீள இழைப்பஞ்சு அல்லது பருத்தி ஆகும். உலகில் விளையும் நீள இழைப் பருத்தியில் 40 விழுக்காட்டினை எகிப்து பயிர் செய்து ஏற்றுமதி செய்கிறது. சோளம், நெல், கோதுமை முதலியவை ஏனைய விளைபொருள்கள் ஆகும். அசுவான் அணை கட்டப்பட்டபின் நாசர் ஏரி மீன்பிடிக்கும் தொழிலுக்கு ஏற்றதாக உள்ளது. நெசவு ஆலைத்தொழில், உணவு பதப்படுத்துதல், இரும்பு, எஃகுத் தொழில் முதலியவை நடைபெறுகின்றன. நாட்டின் இறக்குமதியில் மூன்றில் இரண்டு பங்கு இரசாயனப் பொருள்கள், இயந்திரங்கள் முதலிய மூலதனப் பொருள்களாகவும் மீன் உணவுப் பொருள்களாகவும் நுகர் பொருள்களாகவும் இருக்கின்றன. பருத்தி, நூல், ஆடை, சுத்திகரிக்கப்படாத எண்ணெய், சிமிண்டு, மண்ணெண்ணெய்ப் பொருள் முதலியவை ஏற்றுமதியாகும் பொருள்கள். சமநிலைக் கோட்பாடே (Socialism) பொருளாதாரத்தில் கையாளப் படுகிறது. பெருமளவு தொழில், செய்தித் தொடர்பு, வங்கி, நிதி முதலியவற்றை அரசாங்கமே நடத்துகிறது. அண்மையில் பொருளாதாரத்தின் பல நிலைகளிலும் தனியாருக்குச் சிறிது உரிமை வழங்கப்பட்டுள்ளது. ஐந்தாண்டுப் பொருளாதாரத் திட்டத்தை அரசாங்கம் 1960–65–ஆம் ஆண்டுகளில் வெற்றியாக நிறைவேற்றிற்று.

நாட்டின் போக்குவரவுச் சாதனங்களெல்லாம் அரசாங்கத்தின் உடைமைகளே ஆகும். போக்குவரவு வழிகள் நைல் ஆற்றின் போக்கில் தென்–வடலாகப் பெரும்பாலும் அமைந்து, கழிமுகப் பகுதியில் பல வகையாக விசிறி மடிப்புப் போல் பரந்துள்ளன. வடக்கே அலக்சாண்டிரியா முதல் கெய்ரோ வழியாகத் தெற்கே அசுவான்வரை இருப்புப்பாதைத் தொடர்பிருக்கிறது. சூயசுக் கால்வாயும் நைல் ஆறும் அதன் இணைக் கால்வாய்களும் பொருள்களைப் படகுகள் வழியாக ஏற்றிச் செல்ல உதவுகின்றன. அலக்சாண்டிரியா, போர்ட் சையது (Port Said), சூயசு முதலியவை முக்கிய துறை முகங்கள். கெய்ரோ உலக வான்வழிப் பாதைகள் கூடுமிடமாகையால் அங்கிருந்து ஐரோப்பாவுக்கும், மத்திய கிழக்கு நாடுகளுக்கும், தூரக் கிழக்கு நாடுகளுக்கும், எகிப்தின் தென்பாலுள்ள பட்டணங்களுக்கும் வானவூர்திகள் செல்ல இணைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

முதலில் கல்வி வளர்ச்சியில் மிகவும் பின்தங்கியிருந்த எகிப்தில் 1923–ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு குழந்தைக்கும் 7 முதல் 12 வயது வரை இலவசக் கட்டாயக் கல்வி முறை கொண்டுவரப்பட்டது. கல்வியில் 1952–ஆம் ஆண்டிற்குப் பின்னர் எகிப்திய அராபிய முறைகள் மிகுதியும் புகுத்தப்பட்டுள்ளன. அரசாங்கக் கல்விப் பயிற்சி முறை முதல் ஆறாண்டுகள் தொடக்கக் கல்வியாகவும், அடுத்த மூன்றாண்டுகள் ஆயத்தக் காலக் கல்வியாகவும் (Preparatory), அடுத்த மூன்றாண்டுகள் இரண்டாம் நிலைக் கல்வியாகவும் பகுக்கப்பட்டிருக்கின்றது. தொழில்கள், வேளாண்மை, வாணிகம் முதலியவற்றில் பயிற்சியளிக்கும் தொழிற்பள்ளிகளிருக்கின்றன. ஐந்து பெரிய பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன. அவற்றுள் ஒன்று அல் அசார் (Al–Azhar) பல்கலைக்கழகம் ஆகும். இது ஏறக்குறைய ஓராயிரமாண்டுகளாக முசுலிம்களுக்குக் கல்வி புகட்டும் மையமாகப் பணி செய்து வருகிறது. இதில் ஏறக்குறைய 43,000 மாணவர்கள் பயிலுகின்றனர். இவ் அரசாங்கக் கல்வி நிறுவனங்களைத் தவிர அமெரிக்கப் பல்கலைக்கழகமென்னும் ஒரு தனியார் பல்கலைக்கழகமும் கெய்ரோவில் இருக்கிறது. பொது உடல்நலம் பேணுதற்காக 1960–ஆம் ஆண்டிற்குப் பின்னர் 4000 க்கும் கூடுதலாக அரசாங்க மருத்துவமனைகள் ஏற்படுத்தப்பட்டு, பெருமளவு மருத்துவர்களும் அமர்த்தப்பட்டுள்ளனர். ஆயினும் பொதுமக்கள் உடல்நலம் மிகவும் தாழ்வான தரத்தில் இருக்கிறது. எழுத்தறியாமையும் முற்றிலும் நீக்கப்படவில்லை. முன்பெல்லாம் மிகவும் ஒதுக்கப்பட்ட நிலையிலிருந்த பெண்கள் இப்போது கல்வித் துறையில் முன்னேறவும், அரசாங்கத்திலும் கல்வி, மருத்துவ, தொழில் நிலையங்களிலும் பணி செய்யவும், பொதுவாக எல்லாத் துறைகளிலும் வேலை வாய்ப்புகளை அடையவும், அரசியலில் ஈடுபடவும் உரிமை பெற்றுள்ளனர். கல்விப்பயிற்சி பரவியதன் விளைவாக, அறிவுத்துறையில் வல்லுநர்குழாம் ஒன்றும் (Elite), தொழிலாளரும் அரசாங்க அதிகாரி

களும் வணிகருமடங்கிய நடுத்தரவகுப்பு ஒன்றும் தோன்றியுள்ளன.

அரசாங்க அமைப்பு: எகிப்தின் அரசியல் வரலாற்றில் 1952-ஆம் ஆண்டின் இராணுவப் புரட்சி மிகவும் முக்கியமானதாகும். அவ்வாண்டு வரையில் அரசியலமைப்புக்கு உட்பட்ட ஒரு முடியாட்சியாக இருந்த எகிப்து புரட்சியின் விளைவாக ஒரு குடியரசாக ஆயிற்று. இந்நாட்டிற்கு 1923-ஆம் ஆண்டில் வரையப்பட்ட ஓர் அரசியலமைப்புச் சட்டம், எகிப்தை அராபிய மொழியைக் கொண்ட சுதந்திர இறைமையுடைய இசுலாமிய நாடு என்று கூறி, அதற்குப் பிரதிநிதித்துவமுடைய ஒரு பாராளு மன்றத்தையும் நிறுவிற்று. இவ்வரசியலமைப்பு 1922-ஆம் ஆண்டுவரை எகிப்தின் மீது நிறுவப்பட்டிருந்த பிரிட்டிசுக் காப்புநிலை (British Protectorate) நீக்கப்பட்ட பின்னரே வரையப்பட்டது. பின்னர் 1953-ஆம் ஆண்டில் எகிப்து ஐக்கிய அராபியக் குடியரசு (United Arab Republic) என அறிவிக்கப்பட்டு, 1923-ஆம் ஆண்டின் அரசியலமைப்பு நீக்கப்பட்டு, புதிய புரட்சி அரசாங்கத்தினால் ஓர் இடைக் கால அரசியலமைப்பு நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. அரசியற் கட்சிகளெல்லாம் கலைக்கப் பட்டு, அவற்றுக்குப் பதிலாகத்தோன்றிய விடுதலை அணி (Liberation Rally) என்னும் அமைப்பு அராபியச் சமநிலை ஐக்கியம் (Arab Socialist Union, ASU) என்பதாக ஆயிற்று. எகிப்து, இலிபியா, சிரியா ஆகிய மூன்று நாடுகளும் 1971-ஆம் ஆண்டில் அராபியக் குடியரசுகளின் இணைப்பு (Confederation of Arab Republics) என்ற அமைப்பை நிறுவின. ஓர் அரசியலமைப்பு வரையப்பட்டு, அது ஒவ்வொன்றின் தலைவராலும் ஒப்புக் கொள்ளப்பட்டது. அது குடியொப்பத்தின் வழியாக மூன்று நாடுகளாலும் ஒப்புக் கொள்ளப்பட்டது; இவ்விணைப்பின் தலைநகரம் கெய்ரோ. பின்னர் எகிப்துக்கும் மற்ற அராபிய நாடுகளுக்குமிடையே நல்லுறவுகள் நீடிக்கவில்லை; ஆகையால் இணைப்பரசு 1979-இல் மறைந்தது. எகிப்துக்கும் இசுரேலுக்குமிடையே அமைதி உடன்படிக்கை கையெழுத்தாயிற்று; அதன்பின்னர் எகிப்துக்கு மற்றப் பல அராபிய நாடுகளோடு உள்ள பொருளாதாரத் தொடர்புகள் நிறுத்தி வைக்கப்பட்டன. எகிப்துக்கு ஒரு புதிய அரசியலமைப்பு வரையப்பட்டு, அது 1971 செப்டம்பரில் குடியொப்பத்திலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அது இந்நாட்டை இசுலாமை அரசாங்கச் சமய நெறியாகவும், அரபு மொழியைத் தேசிய மொழியாகவும் கொண்ட குடியாட்சி இயல்புடைய, சமநிலைக் கோட்பாட்டைக் கொண்ட அராபியக் குடியரசான எகிப்து (Arab Republic of Egypt) என விளம்பரம் செய்தது.

புதிய அரசியலமைப்பு மூன்று வகையான உடைமை உரிமைகளை ஒப்புக் கொள்ளுகிறது. அவை அரசாங்க உடைமை உரிமை (Public Ownership), கூட்டுறவு உடைமை உரிமை (Co-Operative), தனியார் உடைமை உரிமை ஆகியவையாம். அது எல்லா எகிப்தியர்களையும் சட்டத்தின் முன் சம உரிமை உடையவர்களாக மதித்துச் சட்டமுறை செயற்படுதலில் எதேச்சாதிகாரமான தலையீட்டினின்றும் எல்லோரையும் பாதுகாக்கிறது. மேலும், அது அமைதியாகக் கூடும் உரிமை, கல்வி பெறும் உரிமை, சுகாதார உரிமை, சமூகப் பாதுகாப்புப் பெறும் உரிமை, கழகங்கள் அமைக்கவும் வாக்கு அளிக்கவும் கூடிய உரிமை ஆகியவற்றிற்கு உறுதி அளிக்கிறது. குடியரசின் தலைவரே நாட்டின் தலைவராவார்; அவர் அமைச்சர் குழுவோடு சேர்ந்து நாட்டின் நிருவாக அதிகாரியாகச் செயலாற்றுகிறார். குடியரசுத் தலைவர் எகிப்தியப் பெற்றோருக்குப் பிறந்த, 40 வயதுக்குக் குறையாத எகிப்தியராக இருத்தல் வேண்டும். மக்கள் மன்றம் (People's Assembly) மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் குடியரசுத் தலைவர் பதவிக்குரிய வேட்பாளரைப் பெயர் குறிப்பிடுகிறது. அதனால் குறிக்கப்படும் வேட்பாளர் தேசிய குடியொப்பத்தின் வாயிலாக உறுதி செய்யப் படுகிறார். குடியரசுத் தலைவருடைய பதவிக் காலம் ஆறாண்டுகளாகும். அது கூடுதல் காலத்துக்கு நீடிக்கப்படுதல் கூடும். குடியரசுத் தலைவர் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட துணைத் தலைவர்களையும் தலைமை அமைச்சரையும் அமைச்சர்களையும் துணை அமைச்சர்களையும் அமர்த்தவும், நீக்கவும் அதிகாரம் உடையவர். நாட்டின் படைகளுக்குக் குடியரசுத் தலைவரே தளபதி ஆவர். மன்னிப்பு வழங்கவும், தண்டனையைக் குறைக்கவும், சட்டப்படியாகக் குடிமை இயல், இராணுவ அதிகாரிகளை அமர்த்தவும் நீக்கவும், முக்கியமான கேள்விகளில் மக்களுடைய குடியொப்பத்துக்கு ஏற்பாடு செய்யவும் இவர் உரிமை உடையவர் ஆவர். சில குறிப்பிட்ட சூழ்நிலைகளிலும் மக்கள் மன்றத்தின் ஆணை பெற்றுச் சில காலத்துக்குச் சட்டமாக இருக்கக்கூடிய ஆணைகளை விடுக்க இயலும்.

நாட்டின் உயர்தரச் சட்ட அதிகாரத்தை யுடைய மக்கள் மன்றத்தில் 392 உறுப்பினர்கள் இருக்கின்றனர். நாட்டின் 176 தொகுதிகளும் தொகுதிக்கு இரு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கின்றன. இருவருள் ஒருவர் தொழிலாளியாகவோ குடியானவராகவோ இருத்தல் வேண்டும். இவற்றுள் 30 தொகுதிகளுள் ஒவ்வொன்றும் மூன்றாம் உறுப்பினராக ஒரு பெண்ணைத் தேர்ந்தெடுக்கின்றது. மீதி 10 உறுப்பினரைத் தலைவர் அமர்த்துகிறார்.

உறுப்பினராவதற்கு ஒருவர் 30 வயதினராயும், அராபியச் சமநிலை ஐக்கியத்தின் (A.S.U.) உறுப்பின ராயும் இருத்தல் வேண்டும். பதினெட்டு அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடைய எல்லா ஆண், பெண் எகிப்தியருக்கும் வாக்குரிமை உண்டு. இம்மன்றம் எல்லாச் சட்டங்களையும் வரவு செலவுத் திட்டத் தையும் நிறைவேற்றுகிறது. அதனுடைய ஆதரவைப் பெற்றே அமைச்சரவை பதவியிலிருக்கிறது.

நாட்டின் பாதுகாப்புக்குப் பொறுப்பாகவுள்ள குடியரசுத் தலைவரைத் தலைமையாகக் கொண்ட தேசியப் பாதுகாப்பு மன்றம் (Council of National Defence) ஒன்று இருக்கிறது. இந்நாட்டில் எல்லா அதிகாரங்களும் நடுவண் அரசாங்கத்திடமே நெடுங் காலமாகக் குவிக்கப்பட்டிருந்தமையால், 1960-ஆம் ஆண்டுவரை அதிகாரப் பரவல் (Decentralisation) இல்லை; பின்னர் உள்ளாட்சி முறையில் பங்கு இருத் தற்காக அதிகாரப் பரவல் முறை செயற்படுத்தப் பட்டு, மாநிலங்கள் (Muhafazat or Governorates), மாவட்டங்கள் (Districts or Counties), சிற்றூர்கள் (Villages) என்ற மூன்று அடுக்குகளாக நாடு பிரிக்கப் பட்டது. எகிப்தில் உள்ளாட்சி நிறுவனங்களில் தேசிய அல்லது நடுவண் அரசாங்கத்தால் அமர்த்தப்பட்ட உறுப்பினர்களையும், பதவி வழி உறுப்பினர்களையுங் கொண்ட உள்ளாட்சி மன்றங்களும் இருக்கின்ற காரணத்தால், இந்நாட்டில் உள்ளாட்சி நிருவாகமும் (Local Administration), உள்சுய ஆட்சி அரசாங்கமும் (Local Self Government) கலந்தே காணப்படு கின்றன. உள்ளூர் மன்றங்களால் சட்டமியற்றுதல் இயலுமாயினும், அவற்றை நடு அரசாங்கம் கட்டுப் படுத்துகின்றது.

மாநில ஆளுநரை அமர்த்தவும் நீக்கவும் குடியரசுத் தலைவரால் இயலும். நீதிபதிகளைத் தவிர மற்றெல்லா மாநில அதிகாரிகளையும் அவர் கட்டுப்படுத்தி, அரசாங்கக் கொள்கையை நிறை வேற்றி, நடுவண் ஆட்சித்துறைகளின் உள்ளூர்க் கிளைகளைக் கண்காணிக்கிறார். அவர் பாதுகாப்புப் பற்றிய செயல்களை உள் நாட்டமைச்சருக்கு அறி விக்கிறார்.

மாநில மன்ற உறுப்பினருள் சிலர் மாவட்டத் துக்கு இருவரென்ற கணக்கில் தேர்ந்தெடுக்கப்பட்டும், சிலர் உள்நாட்டமைச்சரால் அமர்த்தப்பட்டும், சிலர் கல்வி, சுகாதாரம், வேளாண்மை முதலிய அமைச்ச கங்களின் பிரதிநிதிகளாகப் பதவி வழி உறுப்பினர் களாகவும் இருக்கின்றனர். நகர அல்லது மாவட்ட மன்றங்களும் சிற்றூர் மன்றங்களும் மாநில மன்றங் களின் முறையிலேயே அமைக்கப்பட்டுள்ளன. நடு அரசாங்கக் கட்டுப்பாடு, வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு ஆகியவற்றின் வரம்புகளுக்குட்பட்டு உள் ளாட்சி மன்றங்களுக்கு அதிகாரங்களிருக்கின்றன. அவற்றின் பணிகள் கல்வி, மருத்துவம், பொது நிறு வனங்கள், வீட்டு வசதி, வேளாண்மை, போக்குவரவு முதலிய துறைகளோடு தொடர்பு உடையவை. அவை கூட்டுறவு இயக்கம், தேசிய திட்டம் ஆகியவை தொடர்பாகவும் பணி செய்கின்றன. அவற்றுக்கு நிதி தரும் ஆதாரங்கள் தேசிய வரிகள், கட்டட வரி, உள்ளூர் வரிகள், சட்டணங்கள், மானி யங்கள், கடன்கள் முதலியவை.

மக்களுக்கு ஆட்சியில் பங்கு கொள்ளுதற்கு 1976 வரை அராபியச் சமநிலை ஐக்கியமென்ற அமைப்பு (ASU) ஒன்றுதான் வழியாக இருந்தது. அந்த ஆண்டில் அவ்வமைப்பு தனது நிலையை இழக்கவே பல அரசியற் கட்சிகள் தோன்றின; அவ்வமைப்பும் 1980-இல் நீக்கப்பட்டது. தேசியக் குடியாட்சிக் கட்சி (NDP), சமநிலைத் தொழிற்கட்சி (SLP), தாராளச் சமநிலைக் கட்சி (LSP), தேசிய முன்னேற்ற ஐக்கிய கட்சி (NPUP) முதலியவை நான்கு முக்கிய மான அரசியற் கட்சிகளாகும்.

**நீதித்துறை :** அரசியலமைப்புச் சட்டம் மற்ற அதிகாரிகளினின்றும் தனித்த சுதந்திரமுடைய நீதித் துறையை ஏற்படுத்துகிறது. நீதி செயற்படும் முறை யில் எந்த ஒரு புற அதிகாரியின் தலையீடும் இருத்தல் கூடாது. நீதிபதிகள் சட்டத்துக்குத்தான் கட்டுப்பட்ட வர்கள். அவர்களை நீக்குதலியலாது. அவர்களுடைய ஒழுங்கும் சட்டத்தினால் நிறுவப்படுகிறது. குடியரசுத் தலைவரைத் தலைமையாக உடைய தலைமை நீதிக் குழுவின் ஒப்புதலுடன் நீதிபதிகள் அரசாங்கத்தால் அமர்த்தப்படுகின்றனர். உரிமை இயல் நீதிமன்ற வகையில் உடனடித் தீர்ப்பு மன்றங்கள் (Summary Courts), தொடக்க நீதிமன்றங்கள் (Primary Courts), மேல் முறையீட்டு நீதிமன்றங்கள் (Courts of Appeal), வழக்கியல்பு நீதிமன்றம் (Court of Cassation) முதலியனவும், குற்றவியல் நீதிமன்ற வகையில் சிறிய குற்ற நீதிமன்றங்களும் (Petty Sessional Courts), மேல் முறையீட்டு நீதிமன்றங்களும், வழக்கியல்பு நீதிமன்றங்களும் அடங்கும். இவைதவிர, இராணுவ நீதிமன்றங்களும், நாட்டிற்கெதிரான குற்றங்களை விசாரிக்கும் பொதுப்பாதுகாப்பு நீதிமன்றங்களும், ஆட்சித்துறைத் தகராறுகளைத் தீர்க்கும் அரசு மன்றமும் (Council of State) உள. மேலும், சட்டமன்ற மியற்றும் சட்டங்களும் நிருவாக விதிகளும் அரசிய லமைப்புக்கு மாறுபடாது ஒத்திருக்கின்றனவா என்று ஆய்ந்து தீர்ப்புக் கூறவும் நீதிமன்றங்களுக்கிடையே அதிகார எல்லைபற்றி எழும் தகராறுகளைத்

தீர்த்து வைக்கவும் கெய்ரோவில் தலைமையான அரசியலமைப்பு நீதிமன்றமும் (Supreme Constitutional Court) இருக்கின்றது.

நாகரிகம்: இந்நிலவுலகில் தொன்மையான நாகரிகங்களுள் எகிப்திய நாகரிகமும் ஒன்றாகும். சுமேரிய நாகரிகத்தைத் தவிர, ஏனைய பண்டைய நாகரிகங்கள் யாவும் காலத்தில் எகிப்திய நாகரிகத்துக்குப் பிற்பட்ட வையேயாகும். கிறித்து பிறப்பதற்கு 4000 ஆண்டுகளுக்கு முன்பே நாகரிகப் பாதையில் நடைபோடத் தொடங்கியவர்கள் எகிப்தியர்கள். அரசியல், சமுதாயம், பொருளாதாரம், கலை ஆகிய பல துறைகளிலும் அவர்கள் அப்போதே மெச்சத்தக்க முன்னேற்றம் கண்டிருந்தனர். எகிப்தில் கி.மு. 5-ஆம் நூற்றாண்டில் பயணம் செய்த எரோடேட்டசு (Herodotus) என்னும் கிரேக்க வரலாற்று ஆசிரியர் 'நான் இங்குக் கண்டதுபோல் வேறெந்த நாட்டிலும் இத்தனை அதிசயங்களைக் கண்டதில்லை. அவற்றை வருணிக்க வார்த்தைகள் போதா' என வியந்து பாராட்டியுள்ளார்.

நெப்போலியன் கி.பி. 1798-இல் எகிப்துமேல் படையெடுத்த போதுதான், அவருடன் சென்ற சில தொல்பொருள் அறிஞர்கள் உரோசெட்டா (Rosetta) என்னுமிடத்தில் தற்செயலாக ஒரு கல்வெட்டைக் கண்டுபிடித்தனர். அதில் ஒரே பொருள் பற்றி எகிப்திய பண்டைய எழுத்துகளிலும், பிற்காலச் சாதாரண எழுத்துகளிலும், இறுதியில் கிரேக்க எழுத்திலும் ஒரு வாசகம் எழுதப்பட்டிருந்தது. அதைச் சம்போலியன் (Champollion) என்னும் பிரெஞ்சு மொழிநூல் வல்லார் ஆய்ந்து, தெரிந்த கிரேக்க எழுத்துகளைக் கொண்டு தெரியாத எகிப்திய எழுத்துகள் பதினான்கைப் படித்து, கி.பி. 1822-இல் அவற்றை வெளியிட்டார். மீதி எழுத்துகளைப் பிற்காலத்து அறிஞர்கள் படித்துவிட்டனர். இதனால் எகிப்தியக் கல்வெட்டுகள் யாவும் படிக்கப்பட்டு எகிப்திய வரலாறு வெளிப்படுத்தப்பட்டது. இவ்வாறு உரோசெட்டாக் கல்வெட்டு எகிப்திய வரலாற்றுக்கு ஒரு திறவுகோலாய் அமைந்தது.

ஓவர்டு கார்ட்டர் (Howard Carter) என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட துதன்காமன் (Tutenkhaman) என்ற எகிப்திய மன்னரின் கல்லறையும் எகிப்திய வரலாற்றுக்கு ஒரு கருவூலமாய்த் திகழ்கிறது. மன்னர் பயன்படுத்திய மயிர் மழிக்கும் கத்தி, அழகு சாதனப் பெட்டி, உணவுப் பெட்டிகள், தங்கத்தாலான மிதியடிகள், முகமூடி, அரியணை, நாற்காலி, மேசை போன்ற எண்ணற்ற பொருள்கள் அங்குக் கிடைக்கப்பெற்றன. மன்னர்கள் வாழ்ந்த உல்லாச வாழ்க்கையை உள்ளபடியே அறிய அவை பெரிதும் பயன்படுகின்றன. மேலும், கல்லறை, ஆலயங்கள் ஆகியவற்றின் சுவர்களில் காணப்படும் ஓவியங்களும் சிற்பங்களும் பேப்பைரசு (Papyrus) என்ற தாள்களில் எழுதிவைக்கப்பட்டுள்ள கதைகள், கவிதைகள், நாடகங்கள், நீதிநூல்கள், கடிதங்கள், பத்திரங்கள் போன்ற ஏராளமான சான்றுகளும் எகிப்தின் வரலாற்றை வரையப் பெரிதும் துணைசெய்கின்றன.

வரலாறு: எகிப்தின் வரலாற்றை 5 பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவையாவன: 1. வரலாற்றுக்கு முற்பட்ட காலம் (கி.மு.3400 வரை), 2. பிரமிடுகள் காலம் (கி.மு.3400 - கி.மு. 2500), 3. நிலமானியப் பிரபுக்கள் காலம் (கி.மு.2500 - கி.மு.1580), 4. பேரரசுக் காலம் (கி.மு.1580 - கி.மு.1150), 5. வீழ்ச்சிக் காலம் (கி.மு.1150 - கி.மு.30).

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தை (Prehistoric age) பற்றி அதிகமாக ஒன்றும் அறியக்கூடவில்லை. அப்போது மக்கள் பலப்பல நாகரிகமற்ற குழுக்களாக அமைந்திருந்தார்கள். ஒவ்வொரு குழுவுக்கும் ஒரு தலைவன் இருந்தான். அத்தலைவனின்கீழ் மக்கள் நைல் நதியின் நீரைப் பயன்படுத்தி, விவசாயத்திலும் வாணிகத்திலும் சிறந்து விளங்கினர். நாகரிகத்தின் இன்றியமையாத பண்புகள் பல அவர்களிடையே காணப்பட்டன. நாளடைவில் குழுக்கள் (Tribes) பல இணைந்து நகர அரசுகளாகவும்(City States), பல நகர அரசுகள் சேர்ந்து ஓர் இராச்சியமாகவும் (Kingdom) வடிவெடுத்தன. நைல் நதியின் கழிமுகப் (Delta) பகுதியில் ஒன்றும் தெற்கே ஒன்றுமாக இரு அரசுகள் தோன்றின. வடக்கே ஆண்ட மீனசு (Menes)என்னும் மன்னர் தெற்கிலுள்ள நாட்டையும் வென்று இரு அரசுகளையும் கி.மு.3400-ஆம் ஆண்டளவில் ஒன்றுபடுத்தினார். அவர் காலத்திலிருந்து பிரமிடுகள் காலம் (Age of the Pyramids) தொடங்குகிறது.

மானெதோ(Manetho) என்ற மதகுரு ஒருவர் கி.மு. 3-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தார். அவர்தம் எகிப்திய வரலாற்றில் மீனசு காலத்திலிருந்து கி.மு. நான்காம் நூற்றாண்டுவரை ஆட்சிபுரிந்த 30 அரச வமிசங்களைப் பற்றி விவரித்துள்ளார். இக்கால மன்னர்கள் தாம் இறந்தபின் தம் சடலங்களைப் புதைப்பதற்கெனப் பிரமிடுகள் என்னும் மிகப் பெருங்கல்லறைகளைக் கட்டினர். நீர்ப்பாசன வசதியைப் பெருக்கி விவசாயத்தை வளர்த்தனர். ஆட்சியின் பெரும்பகுதியைப் பிரமிடுகள்கட்டுவதிலேயே செலவழித்ததால், இவர்களது காலம் 'பிரமிடுகள் காலம்' எனப்பட்டது.

நாளடைவில் மாநில ஆளுநர்களான நிலப் பிரபுக்கள் வலிமையடைந்து, தமக்கெனச் சேனைகளை

அமைத்துக்கொண்டனர். மத்திய அரசினை மதியாது அவர்கள் தம்முள் ஓயாது போரிட்டுக் கொண்டனர். குழப்பம் நிறைந்த இக்காலம் நிலமானியப் பிரபுக்கள் காலம் (Age of the Feudal Nobles) எனப்பட்டது. இந்நிலை கி.மு.1800 வரை நீடித்தது. இக்காலக் குழப்ப நிலையைப் பயன்படுத்திக் கொண்டு சிரியா, பாலசுத்தீன நாடுகளிலிருந்து வந்த ஐக்சோசு(Hyksos) என்ற முரட்டு வகுப்பினர் எகிப்தைத் தாக்கிப் பல இடங்களைக் கைப்பற்றிக் கொண்டனர். போர்க் களத்தில் குதிரைகளையும் இரும்பையும் அவர்கள் பயன்படுத்தினர். கிணற்றுத் தவளைகளான எகிப்திய ருக்கு அவை பற்றித் தெரியவில்லை, எனவே, எளிதில் தோற்றுப்போயினர். ஆனால், நாளடைவில் குதிரைப் படையை எகிப்திய மன்னரும் பிரபுக்களும் அமைத் துக் கொண்டு, ஐக்சோசு வகுப்பினரை எதிர்த்து நாட்டை விட்டே துரத்தி விட்டனர். பிரபுக்கள் மன் னருக்குப் பக்கபலமாயிருக்கத் தொடங்கினர். எனவே நாட்டின் பலம் ஓங்கியது.

எகிப்திய மன்னர்கள் கி.மு.1580-இலிருந்து தங்க ளது அதிகாரத்தைச் சுற்றியுள்ள நாடுகளிலும் பரப் பத் தொடங்கினர். பாலசுத்தீனம், பினீசியா, சிரியா, மெசபொடேமியா, சைப்ரசு போன்ற நாடுகளை எல்லாம் வென்று, ஒரு பேரரசை அமைத்தனர். அக் காலத்தில் நாட்டின் செல்வமும் கலைவளமும் ஓங்கின. பிரபுக்கள் அடக்கப்பட்டனர். ஆனால், மத குருமார் களின் கைகள் ஓங்கின. வரி விலக்கம் பெற்ற நிலங் கள் ஏராளமாக அவர்களிடம் குவிந்தன. அதனால், மன்னரின் வருமானம் குறைந்தது; செல்வாக்கும் குன்றியது.

மன்னரின் பலவீனத்தைப் பயன்படுத்திக் கொண்டு, வேற்று நாட்டினர் எகிப்தின்மீது படையெடுத்தனர். கி.மு.525-இல் பாரசீகர்களுக்கும் கி.மு.332-இல் கிரேக் கர்களுக்கும் கி.மு.39-இல் உரோமானியர்களுக்கும் எகிப்து அடிமையாயிற்று. எகிப்திய அரசி கட்டழகி கிளியோபாட்ரா தன்னை வெல்ல வந்த சீசர், அந் தோணி போன்ற தளகர்த்தர்களை மயக்கித் தன் வலையில் போட்டுக் கொண்டாள். ஆனால், அகசு டசு சீசரிடம் அவளது சாகசம் பலிக்கவில்லை. எனவே, அவள் நஞ்சுண்டு மாண்டாள். எகிப்தின் சுதந்திரமும் மாண்டது. எகிப்து 1936-ஆம் ஆண்டில்தான் தன் சுதந்திரத்தை மீண்டும் பெற்றது.

அரசியல்: மீனசு என்ற மன்னரால் ஏற்படுத்தப் பட்ட பழைய பேரரசில் பாரோவே (Paroah) தனிப் பெருந்தலைவராய்த் திகழ்ந்தார். இரு நாடுகளை இணைத்தவர் என்பதைக் காட்ட அவர் இரு மகுடங் களை அணிந்துகொண்டார். அவர் எல்லாம் வல்ல கதிரவக் கடவுளான 'இரா' (Ra) என்பாரின் தனிப் புதல்வன் என்று தம்மைக் கூறிக்கொண்டார். குடிமக் களும் அதை ஏற்றுக்கொண்டார்கள். அவர்தம்பாதங் களை முத்தமிடுதல் பெறற்கரும் பேறாகக் கருதப்பட் டது. ஒரு சிலரே அச்சிறப்புரிமையைப் பெற்றிருந்த னர். ஏனைய சாதாரண மக்கள் மன்னரின் கால் தூசியை மட்டுமே முத்தமிட அனுமதிக்கப்பட்டனர். பாரோ தம் தெய்வீகத் தூய்மை கெடாமலிருப்பதற் காகத்தம் சொந்தக் குடும்பத்திலேயே மணமகளைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார். பல சமயங்களில் தம் சகோதரிகளையே அவர்கள் மணக்க நேர்ந்ததுண்டு. மேலும், நூற்றுக்கணக்கான வைப்பாட்டிகளையும் அரசர் தம் அந்தப்புரத்தில் வைத்திருந்தார். பண் டைய எகிப்திய அரசு சமயச் சார்புற்ற ஓர் அரசாக (Theocracy) விளங்கியது. ஆனால், அதை ஒரு தனி வல்லரசு (Autocracy) என்று கூற முடியாது. ஏனெ னில், இறைவனின் முகவராக (Agent) இருந்து, அவ ரது சார்பாக நீதியையும் சமுதாய ஒழுங்கையும் நாட்டில் நிலைநாட்டுவதே தம் கடமை என்று மன்னர்கள் நம்பிச் செயற்பட்டனர். பண்டைய சட் டங்களை மதித்து அவ்வழியே அவர்கள் அரசாண்ட னர்.

எகிப்தில் அரசியல் நிறுவனமும் திருச்சபையும் (Church) ஒன்றாகவே விளங்கியது. மன்னரே நாட்டின் தலைமைக் குருவாக விளங்கினார். அவர்தம் உடன் கூட்டத்து அதிகாரிகளாக முதல் அமைச்சர் ஒருவரும் நிதிக் காப்பாளரும் தலைமைக் கட்டிடக் கலைஞரும் பொதுப் பணிக் கண்காணிப்பாளரும் தலைமை நீதி பதியும் விளங்கினர். நோம் (Nome) என்ற 42 மாநி லங்களாக நாடு பிரிக்கப்பட்டு, ஒவ்வொன்றையும் ஆள ஓர் ஆளுநர் நியமிக்கப்பட்டார். மன்னரால் நிய மிக்கப்பட்ட அவர்கள் தொடக்கத்தில் அவரது ஆணையை மேற்கொண்டொழுகினர். ஆனால், நாள டைவில் அவர்கள் சுயேச்சையுள்ள பரம்பரைப் பிரபுக் களாக மாறினர். மத்திய அரசாங்கத்தை மதியாமல் செயற்பட அவர்கள் முனைந்தனர்.

மன்னருக்கு ஆலோசனை கூற 'சாரு' (Saru) என்ற சான்றோர் மன்றம் இருந்தது. ஆனால், அதற்குக் கீழ்ப்படிய வேண்டும் என்ற கட்டாயம் அவருக்கில்லை.

அரச பதவி பரம்பரை பரம்பரையாக வந்த ஒரு சிறப்புரிமையாகும். அரசனின் மூத்த புதல்வரே அவ ரது மரணத்துக்குப்பின் அரியணை எய்தினார். ஆனால், அதற்கு முன்பே அரசாங்கத்தின் நிருவாகத் துறைகளிலும் பொதுப் பராமரிப்புத் துறையிலும் அவருக்கு நல்ல பயிற்சி கொடுப்பது வழக்கமாயிருந் தது. சுரங்கத் தொழில், நீர்ப்பாசனத் திட்டங்கள்,

பொதுக் கட்டிடங்களை எழுப்புதல் போன்ற துறைகளில் இளவரசர் ஈடுபடுத்தப்பட்டார்.

நீதி வழங்குவதற்கென்று தனிப்பட்ட நீதிபதிகளை மன்னர்கள் நியமிக்கவில்லை. எனினும், நிருவாக அதிகாரிகளுக்கே நீதிவழங்கும் பணியையும் மன்னர் அளித்திருந்தார். ஆறு வகையான நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டு, அவற்றில் எந்தெந்த நிருவாக அதிகாரி எவ்வாறு நீதி வழங்கவேண்டுமென்பதை அரசர் தீர்மானித்தார். நாட்டின் முதன் மந்திரியே தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டார். சில சமயங்களில் மக்கள் பாரோவிடம் மேல்முறையீடு (Appeal) செய்து கொள்ள அனுமதிக்கப்பட்டனர். அச்சமயங்களில் தலைமை நீதிபதியின் உதவியைக் கொண்டு மன்னர் தீர்ப்பு வழங்கினார். நடுநிலைமை அவரிடம் எதிர்பார்க்கப்பட்டது. சட்டத்தின் முன் யாவரும் சமமாக நடத்தப்பட்டனர். குற்றவியல், உரிமையியல் ஆகிய எல்லா வழக்குகளும் நீதிமன்றங்களில் விசாரிக்கப்பட்டன. குற்றவாளிகளிடமிருந்து உண்மையைக் கறக்கச் சித்திரவதை கையாளப்பட்டது.

பழைய பேரரசில் அரசனுக்கென்று தனி நிலைப் படை (Standing Army) எதுவும் இருக்கவில்லை. உள்நாட்டுக் கலவரத்தை அடக்க ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறுசிறு சேனைகள் இருந்தன. வெளிநாட்டினர் படையெடுப்பின்போது இம்மாவட்டச் சேனைகளை ஒன்றுகூட்டியே மன்னர் தம் சேனையைத் தயாரித்தார். நீண்ட நெடுங்காலமாக எந்தப் பிற நாடும் எகிப்தைத் தாக்காததால் எகிப்திய மன்னர்கள் தற்காப்புப் பற்றிப் பெரிதும் அக்கறை எடுத்துக்கொள்ளவில்லை. பிற நாடுகளை வெல்லும் எண்ணமும் அவர்களுக்கு வரவில்லை. எனவேதான் தேசியப் படையொன்றை அமைக்க மன்னர் தவறிவிட்டார். குதிரைப் படையையும் அவர் ஏற்படுத்தவில்லை. இவற்றால் தான் ஐக்சோசு என்னும் நாடோடிகளிடம் எகிப்திய மன்னர் தோல்வியடைய நேர்ந்தது. ஆனால், நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்தல், பாதைகளை அமைத்தல், கோயில் கட்டுதல், மக்கள் நலம் பேணுதல் போன்ற அமைதிக்காலப் பணிகளில் பாரோக்கள் பெரிதும் அக்கறை காட்டினார்கள்.

அரசனுடைய வருமானம் பெரும்பாலும் நிலவரியிலிருந்தே கிடைத்தது. வரிகள் பெரும்பாலும் தானியமாகவே அளிக்கப்பட்டதால் தலைநகரில் தானியக் கிடங்குகள் பல இருந்தன. குடியானவர்களிடம் வரி வசூல் செய்யும் பொறுப்பு மாநில ஆளுநர்களைச் சார்ந்தது. வசூலித்த தானியத்தில் ஒரு பகுதியை அவர்கள் மன்னருக்கு அளித்துவிட்டு மீதியைத் தாங்களே எடுத்துக்கொண்டனர். எகிப்திய நிலங்கள் யாவும் அரசருக்கே சொந்தம். உழுது பயிரிட மட்டுமே உழவர்க்கு உரிமை இருந்தது. இவ்வாறு ஒருவகையான அரசு சமஉடைமைக் கொள்கை (State Socialism) அங்கு நிலவியது. மக்கள் செலுத்தவேண்டிய வரியைக் கணக்கிட வேண்டி, ஆண்டுதோறும் மக்களின் கைவசமிருந்த நிலங்கள், ஆடுமாடுகள் ஆகியன கணக்கிடப்பட்டன. பிறப்பிறப்புக் கணக்கும் ஆண்டுதோறும் எடுக்கப்பட்டது.

புதிய பேரரசு பின்னால் ஏற்பட்டபோது பழைய ஆட்சி முறையே பெரிதும் கையாளப்பட்டது. ஆனால் மாநில ஆளுநர்களின் அதிகாரங்கள் பிடுங்கப்பட்டன. அவர்கள் அரசனின் வெறும் கைப்பாவைகளாக மாறினர். மன்னர் தமக்கென ஒரு படையை அமைத்துக் கொண்டார். குதிரைப் படையும் அதில் இடம்பெற்றது. அரசாங்க அதிகாரங்கள் மத்தியில் குவிக்கப் பெற்றன. பேரரசர் ஒரு வல்லரசராக மாறிவிட்டார்.

**சமுதாயம்:** எகிப்தியச் சமுதாயத்தில் சாதிமுறை இல்லை. பொருளாதார அடிப்படையில் மக்கள் பல வகுப்புகளாகப் பிரிந்திருந்தனர். ஐம்பெரும் வகுப்புகள் அங்குக் காணப்பட்டன. அவர்கள் முறையே அரசக் குடும்பத்தினர், சமய குருமார்கள், பிரபுக்கள், நடுத்தர வகுப்பினர் (எழுத்தர்கள், வணிகர், கைவினைஞர், உழவர்கள்), பண்ணை அடிமைகள் (Serfs) என்போராவர். புதிய பேரரசுக் காலத்தில் போர்வீரர்கள் என்ற புதிய வகுப்புத் தோன்றிற்று. போரில் கைது செய்யப்பட்ட அடிமைகளும் ஒரு புதிய வகுப்பாக மாறினர். சூழ்நிலைக்கேற்ப இவ்வகுப்பினரின் செல்வாக்கு வளரவும் தேயவும் தொடங்கியது. பழைய பேரரசுக் காலத்தில் பிரபுக்களும், மதகுருமார்களும், நிலமானிய முறைக் காலத்துச் சாதாரண மக்களும், வணிகர்களும், தொழிலதிபர்களும், புதிய பேரரசுக் காலத்து அரசாங்க அதிகாரிகளும், குருமார்களும் செல்வாக்குடன் விளங்கினர். ஆனால், பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்குமிடையே பெருத்த இடைவெளி காணப்பட்டது. செல்வர்கள் மச்சு வீட்டில் எல்லாச் சுக போகங்களுடனும் வாழ, வறிஞர்கள் குச்சு வீட்டில் வறுமையில் வாழ்ந்தனர்.

எகிப்தியக் குடும்பத்தில் ஒருதார மணம் பெரிதும் வற்புறுத்தப்பட்டது. அரசர் கூட சட்டப்படி ஓர் அரசியையே மணக்கலாம். ஏனையோர் வைப்பாட்டிகளாகவே கருதப்பட்டனர். ஆனால், பொதுவாக மகளிர்க்கு மிக உயர்ந்த இடம் சமுதாயத்தில் வழங்கப்பட்டது. சொத்துரிமை பெண்களுக்கு மட்டுமே இருந்தது. தாய் மூலமாகவே சொத்து சந்ததிகளுக்குச் சென்றது. இது தாய்வழிமுறை (Matriarchal System) எனப்படும். ஒரு குடும்பத்தில் தாய்வழித் தாத்தாவுக்

கிருந்த அதிகாரம் ஒரு தந்தைக்குக் கூட இல்லை. சொத்தை வெளியே போகாமல் காக்கச் சொந்தக் குடும்பத்துப் பெண்களையே மணந்து கொள்ளும் கெட்ட வழக்கமும் எகிப்தியரிடையே காணப்பட்டது. அண்ணன் தங்கை முறையைக் கூட அவர்கள் கவனிப்பதில்லை. இதனால் எகிப்தியர்களின் உள்ளம், உடல் இரண்டும் வளர்ச்சி குன்றியது. பெண்கள் நாட்டையாளும் உரிமையை இயல்பாகவே பெற்றனர். விரும்பியவரை வலிந்து காதலிக்கவும் வேண்டாதவர்களை மணவிலக்குச் செய்யவும் பெண்கள் உரிமைபெற்றிருந்தனர். திருமணத்துக்குமுன் உடலுறவு கொள்வது தவறாக நினைக்கப்படவில்லை. நடன மாதர்களும் கணிகையர்களும் நகரங்களில் நிறைந்திருந்தனர் ஒவ்வொரு வீட்டிலுமிருந்து மிக அழகான ஒரு பெண் கோயிலுக்கென்று தத்தம் செய்யப்பட்டாள். அவள் கடவுளுக்கு ஆட்பட்டவள். எனினும், நாளடைவில் அவள் பரத்தையாக மாறினாள்.

நாட்டின் கல்வியை மன்னர் வளர்த்தார். பொதுப் பள்ளிகளை ஏற்படுத்தி அவற்றில் இலவசமாகப் பாடம் கற்பிக்க ஆசிரியர்கள் அமர்த்தப்பட்டனர். அரசாங்கத்துக்கும் வணிகர்களுக்கும் எழுத்தர்கள் (Scribes) ஏராளமாகத் தேவைப்பட்டதால், எந்த வகுப்பைச் சேர்ந்த இளைஞனானாலும் அவனுக்கு அரசாங்கப் பள்ளிகளில் இடம் கிடைத்தது. ஏழைக் குடும்பத்தில் பிறந்த பல மாணவர்கள் தம் படிப்புத் திறனால் உயர்ந்த அதிகாரிகளின் நிலையை எய்த இம்முறை பெரிதும் துணைபுரிந்தது.

**பொருளாதாரம்**: விவசாயமே மக்களின் முக்கிய தொழிலாக இருந்தது. நிலங்கள் கொள்கையளவில் அரசருக்கே சொந்தமாயிருந்தாலும், நடைமுறையில் அவை உழுபவர்களுக்கே சொந்தமாயிருந்தன. விளைச்சலில் பத்து முதல் இருபது விழுக்காட்டை வரியாகச் செலுத்த முன்வந்தோர்க்கே நிலங்களை மன்னர் பகிர்ந்தளித்தார். அதிக வரி செலுத்துவதாக ஒப்புக்கொண்ட பல பிரபுக்கள் மன்னனிடம் நிலத்தைப் பெற்று, அடிமைகளைக் கொண்டு வேளாண்மை செய்து அவர்களுக்குச் சிறிது, தானியத்தைக் கொடுத்துவிட்டு, மீதியைத் தாங்களே அனுபவித்துக் கொண்டனர். நில அடிமைகள் மிகக் கேவலமாக நடத்தப்பட்டனர். நிலங்கள் கைமாறியபோது நிலஅடிமைகளும் நிலங்களோடு சேர்த்தே விற்கப்பட்டனர். எருதுகள் பூட்டிய கலப்பையால் நிலங்கள் உழப்பெற்று, பார்லி, கோதுமை, சோளம், காய்கறிகள், பழங்கள், நார் போன்றவை பயிரிடப்பட்டன. பன்றிகளைக் கொண்டு மண்ணைக் கிளறி விதை விதைக்கும் பழக்கம் கழிமுகப் பிரதேசத்தில் பெரிதும் கடைப்பிடிக்கப்பட்டது.

உழவுக்கு அடுத்தபடியாக வாணிகம் எகிப்தியர்களின் முக்கிய தொழிலாகும். கோதுமை, துணிமணிகள், மட்பாண்டங்கள் ஆகியவற்றை அவர்கள் சிரியா, பாலசுத்தீனம் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தனர். தங்கம், வெள்ளி, தந்தம், மரம், இரும்பு, செம்பு, அரிசி, சந்தன மரம், மயில்தோகை ஆகியவற்றை அவர்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்தனர். இந்தியாவோடு கூட அவர்கள் வாணிகம் செய்ததாய்த் தெரிகிறது. படகு, கப்பல், ஒட்டகம், கழுதை, வண்டி ஆகியவற்றைப் போக்குவரவுக் கருவிகளாகப் பயன்படுத்தினர்.

வெளிநாட்டுச் சுரங்கங்களைக் கைப்பற்றி அவற்றிலிருந்து கிடைத்த செம்பையும் தகரத்தையும் கொண்டு அவர்கள் கத்தி, வேல், வாள், கேடயம், கப்பிகள், நெம்புகோல்கள், சக்கரங்கள், வண்டிகள் முதலியனவற்றைச் செய்தனர். சுரங்கத்தொழில், கப்பல் கட்டல், கண்ணாடி செய்தல், துணிநெய்தல், கட்டடம் கட்டல், மரம், தோல், பேப்பரைசு ஆகியவற்றைக் கொண்டு கட்டில், மேசை, கூடை, தேர், சவப்பெட்டி முதலியவற்றைச் செய்தல் போன்ற பல்வேறு கைத் தொழில்களை அவர்கள் மேற்கொண்டனர்.

எகிப்தியர்கள் கணிதக் கலையில் வல்லவர்கள். கொடுக்கல், வாங்கல் நன்கு கணக்கில் பதிக்கப்பெற்றன. சொத்துரிமைப் பத்திரம், ஒப்பந்தப் பத்திரம், உயில் ஆகியவற்றின் பயனை அவர்கள் நன்கு உணர்ந்திருந்தனர். பெரும்பாலும் பண்டமாற்று முறையில் வியாபாரம் நடைபெற்றாலும், தங்கம் அல்லது செம்பு மோதிரங்களை நாணயமாக அவர்கள் ஒரோவழிப் பயன்படுத்தினர். பொருள்களைத் தராசில் நிறுத்து வாங்கும் பழக்கம் எகிப்திய வணிகர்களிடையே காணப்பட்டது.

எகிப்தியப் பொருளாதாரத்தில் பெரும்பாலான தொழில்கள் அரசாங்கத்தின் கைகளிலேயே இருந்தன. தொழிலாளிகள் பெரும்பாலும் அரசின் ஊழியர்களாகவே கருதப்பட்டனர். தொழில் வளம் பெருகத் தேவையான உற்சாகம் தொழிலாளர்களிடையே காணப்படவில்லை.

**சமயம்**: சமயம் எகிப்தியர்களின் வாழ்வில் எல்லாத் துறைகளிலும் ஊடுருவி நின்றது. சமயத்துக்காகவே அவர்கள் வாழ்ந்தார்கள் என்றால் மிகையாகாது. அவர்களது நம்பிக்கையின்படி, மனிதன் இந்நிலவுலகில் வாழும் நாட்கள் சில. மரணத்துக்குப் பின்னும் மனிதன் வாழ்கிறான்; எல்லா இன்பங்களையும் அனுபவிக்கிறான் என்ற கருத்து எகிப்தியரின் அடிமனத்தில் ஆழப் பதிந்து கிடந்தது. எனவே, அவர்கள்

இம்மையில் வாழ்கின்ற வாழ்க்கையைவிட, மறுமையில் வாழப்போகும் வாழ்க்கைக்காகவே பெரிதும் உழைத்தனர். சாவுக்குப்பின் வாழக்கூடிய பேறு மன்னர்களுக்கே உரியதென்பது முதலில் எண்ணப்பட்டது. எனவே, அவர்கள் பிரமிடுகள் என்னும் பெருங் கல்லறைகளைக் கட்டுவதிலும், தாங்கள் அனுபவிக்க வேண்டிய உணவு, உடை முதலியவற்றை அங்கு நிறைப்பதிலுமே பெரும் பொழுதைக்கழித்தனர். பிற் காலத்தில் பிரபுக்களுக்கும் இவ்வுரிமை இருப்பதாக எண்ணப்பட்டது. எனவே, அவர்களும் தமக்கெனச் சிறிய அளவில் கல்லறைகளைக் கட்டிக்கொண்டனர்.

எகிப்தியச் சமயக் கொள்கைப்படி, மனிதனிடம் 'பா' (Ba) என்ற ஆன்மாவும் 'கா' (Ka) என்ற உடற்சத்தும் இருக்கின்றன. மனிதன் இறந்தபின் 'பா' என்னும் உயிர்ச்சத்து பறவை வடிவில் பறந்துபோய் மேலுலகை அடையும். 'கா' என்ற உடற்சத்தும் உலகில் அலைந்துகொண்டு திரியும். வழியில் அவற்றுக்குப் பல துன்பங்கள் நேரும். அவற்றிலிருந்து தப்பிக்க 'மரித்தோர் நூல்' (Book of the Death) என்ற மந்திர நூலும் தாயத்துகளும் மந்திரங்களும் பிணத்தோடு புதைக்கப்படும்.

வினைகளின் பயனைத் துய்த்தபின் ஆன்மா மீண்டும் உடலுக்கே வருமென்று எகிப்தியர் நம்பினர். எனவே, உடலைக் கெடாமல் பார்த்துக்கொள்வது ஒவ்வொருவரின் கடமையாகும். தார், அமிலம் போன்ற பல்வேறு பொருள்களில் ஊறவைத்துப் பிணங்கள் பதப்படுத்தப்படுகின்றன. அவை 'மம்மிகள்' (Mummy) எனப்படும். பாரோக்களின் மம்மிகள் இன்றும் கெடாமல் உள்ளன. உடலுக்குத் திரும்பி வந்தபின் உயிர்கள் அனுபவிக்க அவர்கள் உண்ட உணவுகளும் குடித்த பானங்களும் அனுபவித்த இன்பப் பொருள்களும் பிணத்தோடு புதைக்கப்பட்டன. சிலசமயம், பாரோக்கள் விரும்பி உண்ட பறவைகளும் மிருகங்களும் அவர்களுக்குச் சேவை செய்த சேவகர்களும் கூடக் கொல்லப்பட்டு, பிணங்கள் மம்மிகளாக்கப்பட்டு மன்னரின் பிணத்தோடு புதைக்கப்பட்டன.

எகிப்தியர்கள் ஏராளமான தெய்வங்களை வணங்கினர். முதலில் அவர்கள் பசு, ஆடு, பூனை, நாய், பாம்பு, முதலை போன்ற பிராணிகளை வணங்கினர். பின்னர், அவர்கள் 'இரா' (Ra) என்னும் கதிரவக் கடவுளை வணங்கினர். எகிப்தின் வடபகுதியில் அக்கடவுள் 'இரா' என்றும், தென் பகுதியில் 'ஆமன்' (Amon) என்றும் கூறப்பட்டார். வட தென் பகுதிகள் இணைந்த பின்னர், இரு கடவுளரும் சேர்ந்தவர் 'ஆமன்ரா' (Amon-Ra) எனக் கூறப்பட்டார். எகிப்தியர் அனைவர்க்கும் அவர் பொதுவான தெய்வமாய் விளங்கினார். ஆரியர்களைப் போன்றே எகிப்தியர்கள் சக்திக்கெல்லாம் உறைவிடமான சூரியனைத் தெய்வமாக வணங்கினர். அடுத்தாற்போல் நைல் நதியை அவர்கள் ஆசிரிசு என்ற தேவதை வடிவில் வழிபட்டனர். ஆசிரிசின் மனைவி அவன் சகோதரியான இசிசு (Isis) என்பவள். இசிசு நாட்டின் தாவரங்களை எல்லாம் காப்பாற்றுபவள். அவர்களின் மகன் ஓரசு (Horus) நல்லோரைக் காத்து அல்லோரை அழிப்பவன். ஆசிரிசின் சகோதரன் செட்டு (Set) என்பான் ஒரு கயவன். அவன் ஆசிரிசைக் கொன்று விட்டான். ஆனால், இசிசு அவரை உயிர்ப்பித்து விட்டாள். ஓரசுசெட்டைக் கொன்று நீதியை நிலைநாட்டினார். உலகில் அறம் வெல்லும்; மறம் தோற்கும் என்பதை வலியுறுத்துவதே இப்புராணக் கதையின் நோக்கமாகும்.

கோயில் வழிபாட்டால் பூசாரிகள் பெரிதும் பயனடைந்தனர். வரிவிலக்கம் பெற்ற கோயில் சொத்துகளுக்கு அவர்கள் உரிமையாளராயினர். அவர்களது ஆதிக்கம் வலுத்தது. மன்னனை மதிக்காமல் அவர்கள் வாழத் தொடங்கினர்; அல்லது மன்னனைக் கட்டுப்படுத்தி மூட நம்பிக்கைகளை வளர்த்து, அவர்களை வலியற்ற அரசர்களாக மாற்றினர். அரசனுக்குச் சேரவேண்டிய வரிப்பணத்தின் பெரும்பகுதி அவர்களிடம் சேர்ந்தது. அதன் விளைவே ஐக்சோசு போன்ற முரட்டு வகுப்பினரின் தாக்குதல்கள். இதை உணர்ந்த அமென்ஓடப்பு (Amonhotep) என்னும் பாரோ புரட்சிகரமான ஒரு சீர்திருத்தத்தைக் கொண்டுவந்தார். 'ஒருவனே தேவன்; அவன் பெயர் ஆடன்' என அவர் அறிவித்ததோடு குடிமக்களை அவ்வாறே வழிபடும்படி வற்புறுத்தினார். பழைய தெய்வக் கோயில்களை மூடிவிட்டு, ஆடனுக்குத் தீப்சு நகரில் ஒரு பெருங்கோயில் எடுத்தார். 'ஆமென் ஓய்வெடுக்கிறார்' எனப் பொருள்படும் 'ஆமென் ஓடப்பு' என்ற பெயரை மாற்றி, 'ஆடன் திருப்தி அடைந்தார்' எனப் பொருள்படும் இக்நாடன் (Ikhnaton) என்ற பெயரைச் சூட்டிக்கொண்டார். மத குருமார்களின் சொத்துகளைப் பறிமுதல் செய்து, அவர்தம் கொட்டத்தை அடக்கினார். ஆனால், அவர் இறந்த சில நாட்களுக்குள்ளேயே மத குருமார்கள் மீண்டும் தலைதூக்கினர். பழைய பல தெய்வ வணக்கமும் பொருளற்ற சடங்குகளும் மீண்டும் உயிர்பெற்றன.

**கலைகள்:** எகிப்தியர்களின் சாதனைகளில் எல்லாம் மிகச் சிறந்ததாகக் கருதப்படுவது அவர்கள் கண்டுபிடித்த எழுத்துக் கலையாகும். ஒருவகையான ஓவிய எழுத்துகளை (Pictographics) அவர்கள் பயன்படுத்தினர். அவற்றைப் 'புனித எழுத்துகள்' எனப் பொருள்படும் எய்ரோகிளிபிக்கு (Heiroglyphic) எனக்

கிரேக்கர்கள் அழைத்தனர். ஒவ்வோர் ஓவியமும் ஒரு கருத்தைக் குறித்தது. சான்றாக, சிங்கத்தின் உருவம் தலைமையையும் புல்லாங்குழல் நன்மையையும் குறித்தன. இத்தகைய கருத்துப்படங்கள் 600 இருந்தன. நாளடைவில் அவை சாதாரண மக்களும் பயன்படுத்தக்கூடிய வகையில் எளிமையாக்கப்பட்டன. இங்ஙனம் எளிமையாக்கப்பட்ட எழுத்து தெமொடிக்கு (Demotic) எனப்பட்டது. நாளடைவில் ஒவ்வோர் ஓவியமும் ஓர் எழுத்தைக் குறித்தது. ஈயின் படம் 'ஈ' என்ற எழுத்தையும் கையின் படம் 'கை' என்னும் எழுத்தையும் குறித்தன. இரண்டும் சேர்ந்து 'ஈகை' என்ற சொல் பிறந்தது. இவ்வாறு 24 ஒலி எழுத்துகள் (Alphabets) ஆக்கப்பட்டன. இவற்றைக் கொண்டு பல இலக்கியங்கள் எழுந்தன. அவை பேப்பைரசு என்ற நாணற்புல்லிலிருந்து ஆக்கப்பட்ட காகிதங்களின்மீது தாவரக் கோந்து, கரி ஆகியவற்றைக் கொண்டு தயாரிக்கப்பட்ட மையினால் எழுதப்பட்டன.

எகிப்தியர்கள் சிறுகதைகளை விரும்பிப் படித்தார்கள். பேய்க்கதைகள், துப்பறியும் கதைகள், பிராணிகள் பற்றிய கதைகள் போன்ற பல்வேறு கதைகள் எழுதப்பட்டன. பல நாடகங்கள் புனையப்பட்டன. ஆசிரிசு தெய்வத்தைப் பற்றி எழுந்த நாடகங்கள் பல. கி.மு. 3000-இல் தோன்றிய மெம்பைட்டு (Memphite) நாடகம் ஒரு தலைசிறந்த இலக்கியமாகும். அழகிய பல செய்யுள்களை எகிப்தியப் புலவர்கள் இயற்றினர். ஆடன் என்ற தெய்வத்தைப் பற்றி அக்குனாடன் (Akhnaton) என்ற அரசர் புனைந்த காவியம் உலகப் பிரசித்தி பெற்றது. பிதா ஓடப்பு (Ptah Hotep), இபுவர் (Ipuwer) போன்ற மெய்யறிஞர்கள் எழுதிய அறநூல்கள் பல. மரித்தோர் நூல் என்பது இறந்தவர்களைக் காப்பாற்றும் மந்திர நூலாகும். இத்தகைய சமய நூல்களேயன்றி, சட்ட நூல்கள், வரலாறு, துணிகரப் புதினங்கள் போன்ற பல உலகியல் நூல்களையும் எகிப்திய அறிஞர்கள் இயற்றினர். சினிகுவின் கதை என்பது ஓர் ஒப்பற்ற எகிப்திய இலக்கியமாகும்.

இறந்தோர் சடலங்களைக் கெடாமல் பதப்படுத்தும் கலையை எகிப்தியர்கள் அறிந்திருந்தனர். மருத்துவம், வேதியியல் (Chemistry) ஆகியவற்றின் துணையின்றி, அவர்கள் அத்தகைய முயற்சியில் வெற்றி பெற்றிருக்க முடியாது.

வானியலில் (Astrology) எகிப்தியர்கள் ஓரளவு வல்லமை பெற்றிருந்தனர். கோயிற் குருக்கள் வானத்தில் இயங்கும் கோள்களைக் கூர்ந்து நோக்கி, அரசர்களுக்கு நல்ல நேரம், கெட்ட நேரங்களைக் கணித்துக் கூறினர். இயங்கும் கோள்களுக்கும் நிலையாக இருக்கும் விண்மீன்களுக்கும் உள்ள வேறுபாட்டை அவர்கள் நன்கு உணர்ந்திருந்தனர். சந்திரனின் இயக்கத்தைப் பார்த்து, 30 நாட்கள் கொண்ட மாதத்தை அவர்கள் கணக்கிட்டனர். 12 மாதங்கள் ஓர் ஆண்டைக் குறித்தன. ஆனால், சிரியசு(Sirius) என்ற விண்மீன் 365 நாட்களுக்கு ஒருமுறை கதிரவனுக்கருகில் தோன்றுவதைக் கூர்ந்து கவனித்த அவர்கள், ஆண்டுக்கு 365 நாட்களெனக் கணக்கிட்டனர். அறுவடைக் காலத்தில் 5 நாட்கள் விடுமுறையாக விடப்பட்டன. நைல் நதியில் வெள்ளம் வருதல், நில அதிர்ச்சி ஏற்படல் போன்ற அரிய நிகழ்ச்சிகளிலிருந்து ஆண்டு தொடங்கப்பட்டது. ஒரு பகலை 12 மணிகளாக அவர்கள் பிரித்தனர். மணியைக் கண்டுபிடிக்க ஒரு கம்பத்தை வெயிலில் நிற்கவைத்து, அதன் நிழலை அளந்து அவர்கள் கணக்கிட்டனர். இரவில் நீர்க் கடியாரத்தை அவர்கள் பயன்படுத்தினர்.

நிலங்களை அவர்கள் துல்லியமாக அளந்து குறித்து வைத்துள்ளனர். முக்கோணம், நாற்கரம் ஆகியவற்றின் பரப்பை அளக்க அவர்கள் அறிந்திருந்தனர். கூட்டல், கழித்தல், வகுத்தல் ஆகியவற்றை அறிந்திருந்த அவர்களுக்குப் பெருக்கல் மட்டும் தெரியாது. உருளை, முப்பட்டை, அரைவட்டம் ஆகியவற்றின் கன அளவுகளைக் கணித்தனர். வட்டத்தின் ஆரத்துக்கும் சுற்றளவுக்குமுள்ள விகிதத்தை 3.16 என்று அவர்கள் கணக்கிட்டனர். தசாமிச முறையை அறிந்திருந்த அவர்களுக்குப் பூச்சியத்தின் பயன் தெரியாது. பொதுவாக, கணக்கில் எகிப்தியர்கள் வல்லுநர்களாய் விளங்கினர். மருத்துவத்தில் எகிப்தியர்கள் அவ்வளவாகத் தேர்ச்சியடையவில்லை. கெட்ட ஆவிகளால் மக்களுக்கு நோய் ஏற்படுவதாகக் கருதி அவற்றை வெளியேற்றப் பேதி மருந்து, வாந்தி மருந்து கொடுத்தனர். மந்திரம், எந்திரம் ஆகியவற்றாலும் நோயைப் போக்க முயன்றனர். எனினும் உடற் கூறு சாத்திரம்(Anatomy), அறுவைச் சிகிச்சை, நோயின் அறிகுறிகள் (Symptoms), நோயைக் குணப்படுத்துவதற்கான மருந்துகள் ஆகியவை பற்றி எகிப்தியர்கள் நன்கு அறிந்திருந்தனர். வயிற்றுவலி, கண்ணோய் ஆகியவற்றை மிக எளிதில் அவர்கள் குணப்படுத்தினர். அறுவைச் சிகிச்சை, மருந்து, நோய் நீக்க மருந்துகள் பற்றிய மூன்று பெருங்கையெழுத்துப் படிகள் எகிப்தில் கிடைத்துள்ளன.

எகிப்தியர்கள் வளர்த்த கலைகளிலெல்லாம் மிக முக்கியமானது கட்டடக் கலையாகும். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, எகிப்தியப் பேரரசர்கள் கல்லாலாய கோயில்களைக் கட்டினர். கண்டோர் வியக்கும் இக்கோயில்கள் கர்னாக்கு (Karnac), இலக்சார்

(Luxor) போன்ற இடங்களில் இன்றும் காணப்படு கின்றன. கர்னாக்கிலுள்ள கோயில் 1300 அடி நீள முள்ளது. பரப்பளவில் அதை மிஞ்சக்கூடிய கோயில் தமிழ்நாட்டில் ஒன்றுகூட இல்லை எனலாம். அதன் தூண்கள் மிகமிகப் பெரியவை. அவற்றுள் ஒன்று 70 அடி உயரமும் 20 அடி சுற்றளவும் கொண்டது. கண் கவர் சிற்பங்கள் ஒவ்வொரு தூணையும் அலங்கரிக் கின்றன. தூண்களின் உச்சிகள் (Capitals) பல்வேறு அலங்காரங்களுடன் அமைந்துள்ளன. வேண்டுமென்றே எகிப்தியர்கள் கோயிலின் அளவையும் தூண்களின் பருமனையும் சிற்பங்களின் உயரத்தையும் பெரிது படுத்தியதாகத் தெரிகிறது. பேரரசின் பெருமையை நிலைநாட்டவே அவர்கள் அங்ஙனம் செய்தனர்.

பாரோக்கள் கட்டிய பிரமிடுகளிலும் இதே உணர்ச்சியைக் காணலாம். கிசே (Gizeh) என்னுமி டத்திலுள்ள கூபுவின் (Khufu) கல்லறை இதற்கொரு சான்றாகும். அதில் பயன்படுத்தப்பட்டுள்ள ஒவ் வொரு கல்லும் 242 கண்டி (Tonnes) எடைகொண் டது. பிரமிடின் உயரம் 481 அடியாகும். நீளம் 755 அடியாகும். ஏறத்தாழ 2 மிலியன் கற்கள் அக்கல் லறையில் ஒன்றன்மீது ஒன்றாக அடுக்கப்பட்டுள்ளன. அவ்வளவு கனமான கற்களை 481 அடி உயரம் வரை அவர்கள் எவ்வாறு எடுத்துச் சென்றிருப்பர் என் பது பொறியியல் வல்லுநர்க்கே புரியாத புதிராக உள்ளது. சாய்வுத் தளங்களை அமைத்து, அவற் றின் மீது வழுக்கெண்ணெய் தடவப் பெற்ற மர உரு ளைகளைப் போட்டு, அவற்றின் மீதுகற்களை அடிமை கள் உருட்டிச் சென்றிருக்க வேண்டுமென அறிஞர்கள் கருதுகின்றனர். சுமார் ஓர் இலட்சம் அடிமைகள் 20 ஆண்டுகள் ஓயாமல் உழைத்ததன் விளைவே கிசு பிரமிடு என்று எரடோட்டசு கூறுகிறார். பாரோ வின் பெருமைக்கேற்பக் கல்லறையும் பெரிதாகஇருக்க வேண்டுமென்ற எண்ணமே இதற்குக் காரணமாகும். சிறியனவும் பெரியனவுமாகச் சுமார் 200 பிரமிடுகள் வட எகிப்தில் உள்ளன.

எதுவும் பெரிய அளவில் இருக்கவேண்டுமென்ற விருப்பம் எகிப்திய சிற்பங்களிலும் காணப்படுகின்றது. கோயில்களில் உள்ள சிலைகள் 60 அடி முதல் 70 அடி உயரமுடையவை. இசுபிங்சு (Sphinx) என்ற காவல் தெய்வத்தின் நீளம் 160 அடி, உயரம் 70 அடி. சிங்கத்தின் உடலையும் மனித முகத்தையும் கொண்டு அது விளங்குகிறது. அதன் தலை மட்டும் 33 அடி நீளமும் 13 அடி அகலமும் கொண்டது. காபரே (Khafre) என்ற மன்னரின் சிலை ஒன்று இன்று கெய்ரோ அருங்காட்சியகத்தில் உள்ளது. அதைப் போன்ற அழகிய சிற்பம் உலகில் எங்குமே இல்லை என்று கருதப்படுகிறது. மரத்தால் செய்யப்பட்ட ஓர் எழுத்தரின் சிலை மிக எழிலானது. அதன் வழுக்கைத் தலையும் தளர்ந்த உடையும் தடித்த கால்களும் உண்மையில் அச்சிலை ஓர் ஆளை நேரில் பார்ப்பது போலவே காணப்படுகிறது. பியோப்சு (Phiops)என்ற மன்னர், அவர்தம் மகன் ஆகியோரின் செப்புச் சிலைகள் கண்கவர் வனப்பின. தங்கத்தா லான இராசாளிப் பறவையின் தலை சிறந்த வேலைப் பாடு கொண்டது. குள்ளன், பீர் தயாரிப்பாளர் ஆகியோரின் சிலைகள் பார்ப்போருக்குச் சிரிப்பை உண்டாக்குபவையாகும். பெரும்பாலான சிலை களில் அழகுணர்ச்சியையே காண இயலாது. கைகள் நேராக நெஞ்சின் குறுக்கே கட்டப்பட்டிருக்கும். இல்லையெனில், நேரே கம்புபோல் விறைப்பாக உட லோடு ஒட்டி நிற்கும். உடலில் தமிழ் நாட்டுச் சிற் பங்களில் இருப்பது போன்று ஒரு நெளிவோ சுளிவோ ஒயிலோ ஒய்யாரமோ இருக்காது. கால்கள் தூண் கள் போல் விறைத்து நிற்கும். முகத்தில் எந்த உணர்ச்சியும் காணப்படாது. கண்கள் நெட்டுக் குத்தாகப் பார்க்கும். உடலுறுப்புகள் சீராக இரா. தொடைகள் மிக நீளமாக இருக்கும். கழுத்து சிறுத் திருக்கும். கை விரல்கள் எல்லாம் ஒரே நீளமாக இருக்கும்.

எகிப்திய ஓவியங்கள் மிகப் புகழ்பெற்றவை. ஆனால், அவற்றிலும் உள்ள உணர்ச்சியையும் அழ குணர்ச்சியையும் காண இயலாது. ஆனால் ஓட்டம், வேகம் ஆகியவை நன்கு காட்டப்பட்டுள்ளன. இலக் சார் (Luxor) கோயிலிலுள்ள ஓவியங்களில் இதைக் காணலாம். மிரண்டகாளை ஒன்று சதுப்பு நிலத்தில் தலை தெறிக்க ஓடுவது, வாத்துகள் குளத்தில் நீந்து வது ஆகியவை உணர்ச்சி மேலிட வரையப்பட் டுள்ளன. கல்லறைச்சுவர்களில் மக்கள் பேரம் செய்து பொருள் வாங்கல், பெண்கள் தலைமுடி பிடித்துச் சண்டையிட்டுக் கொள்ளுதல், வருமான அதிகாரி சவுக்கடி கொடுத்து வரிவசூலித்தல், அடிமைகள் அடித்து வேலை வாங்கப்படுதல் போன்ற பல்வேறு அன்றாடக் காட்சிகள் நன்கு காட்டப்பட்டுள்ளன. எகிப்தியரின் சமுதாய வாழ்க்கையை அறிய அவை பெரிதும் துணைபுரிகின்றன.

**எகிப்தின் நன்கொடை:** ஒரு நாகரிகம் அழிந் தாலும் அது விட்டுச் சென்றுள்ள சின்னங்கள் அதன் பெருமையைப் பறைசாற்றுகின்றன. பண்டைய எகிப்திய நாகரிகம் மாண்டுபோயிற்று. ஆனால், அது விட்டுச் சென்ற நாகரிகச் சின்னங்கள் உலகுக்குப் பய னளிப்பவையாக இருந்தன. எண்ணையும் (கணி தத்தையும்) எழுத்தையும் மிகப் பழங்காலத்திலேயே வளர்த்த பெருமை எகிப்தியருக்குண்டு. கல்வி, கேள்விகளின் பெருமையை நன்குணர்ந்தவர்கள்

அவர்கள். 'எழுதப் படிக்கத் தெரிந்தவன்தான் உண்மையில் சுதந்திரமாக வாழமுடியும்' என்று அவர்கள் நம்பினர். பெருக்கலைத் தவிரக் கூட்டல், கழித்தல், வகுத்தல், பின்னங்களைக் கணக்கிடல், பரப்பளவைக் கணக்கிடல் போன்ற பல்வேறு கணித முறைகளையும் அவர்கள் பயன்படுத்தினர். நிலங்களை அளவை செய்வதில் அவர்கள் வல்லுநராக விளங்கினர். அவர்கள் கட்டியுள்ள மாபெரும் பிரமிடுகளும் கோயில்களும் நீர்ப்பாசன வசதிகளும் அவர்களது கணித உணர்வின் மேன்மையைத் தெள்ளிதின் புலப்படுத்துகின்றன. அவர்கள் விட்டுச் சென்றுள்ள சிறுகதைகள், நாடகங்கள், கவிதைகள் முதலியன இலக்கியத்தில் அவர்கள் அடைந்திருந்த மேம்பாட்டை விளக்குகின்றன.

ஓர் ஆண்டுக்கு 365 நாட்கள்; மாதத்துக்கு 30 நாட்கள்; நாளுக்கு 24 மணிகள் என்ற கருத்து எகிப்தியர்களிடமிருந்தே பிறந்தது. நாட்காட்டி(Calender), கடிகாரம் ஆகியவற்றை அக்காலத்திலேயே அவர்கள் பயன்படுத்தினர்.

இக்காலத்தில் பயன்படுத்தப்படும் நெம்புகோல் (Lever), கப்பிகள் (Pulleys), காற்றினால் நீர் இறைக்கும் பொறிகள் (Windmills), சாய்வுதளத்தில் கிடைக்கும் எந்திர இலாபம் ஆகிய யாவும் எகிப்தியர்களுக்குத் தெரிந்திருந்தன.

இந்திய விவசாயிகள் பயன்படுத்தும் ஆள் ஏற்றம், எருதுகளைக் கொண்டு ஏர் உழுதல், மிருகங்களைக் கொண்டு பரம்படித்தல், அரிவாள்களைக் கொண்டு அறுவடைசெய்தல், கால்வாய்கள், ஏரி, அணை மூலம் நீரை விவசாயத்துக்குப் பயன்படுத்தல் ஆகியவற்றையும் எகிப்தியர்கள் நன்கு உணர்ந்திருந்தனர். வாணிகத்துக்காக வண்டிகள், கப்பல்கள், படகுகள், விலங்கு ஆகியவற்றை முதன்முதலில் பயன்படுத்தியவர்கள் அவர்களே. கடன் கொடுத்தல், வட்டி வாங்கல், ஒப்பந்தம், உயில் முதலிய பல வாணிகச் செயல் முறைகளையும் அவர்கள் பயன்படுத்தினர். உலகிலேயே முதன்முதலில் தராசில் நிறுத்துப் பொருள்களை வாங்கும் முறையைக் கையாண்டவர்களும், தங்கத்தை நாணயமாகப் பயன்படுத்தியவர்களும் அவர்களே. அழகிய மண்பாண்டங்களை வனைதல், அவற்றை மெருகேற்றுதல், மேசை, நாற்காலி போன்ற வீட்டுச் சாமான்களைச் செய்தல், கண்ணாடி செய்தல், காகிதம் செய்தல், நகைகள் செய்தல், கப்பல் கட்டல் போன்ற பல்வேறு தொழில்களுக்கு எகிப்தியர்கள் முன்னோடிகளாக விளங்கினர்.

கற்களைக் கொண்டு கட்டடம் எழுப்புதல், விட்டம், தூண், தூண்வரிசைகள், வளைவுகளை ஏற்படுத்தல், சுவர்களில் பலகணிகள் அமைத்தல், பெரிய தாழ்வாரம், மண்டபம் முதலியவற்றை அமைத்தல் போன்ற உத்திகளை எகிப்தியரிடமிருந்தே பிற நாட்டினர் கற்றுக்கொண்டனர். ஆன்மிகம், அரசியல், சமூக அமைப்புப் போன்றவற்றிலும் சிற்பம், ஓவியம் முதலிய கலைகளிலும் அவர்கள் பலருக்கு முன்னோடிகளாக விளங்கினர். — கி.ர.அ.

தொல்லியல்: எகிப்தில் பண்டைய சின்னங்களின் சிதைவுகள் பெருமளவில் காணப்படுகின்றன. இச் சின்னங்களை அழிவுறா வண்ணம் காக்கும் இயற்கையமைப்பினையும், தட்பவெப்ப நிலையினையும் இந் நாடு கொண்டுள்ளது. பண்டைய எகிப்தியர்களைப் பற்றிப் பின்னர் வந்த கிரேக்க, உரோமானிய அரசுகள் அதிக அக்கறை காட்டவில்லை. எனினும் வரலாற்றறிஞர்களான எரடோட்டசு, மெனிதோ (Manetho) போன்றோர் எகிப்திய வரலாற்றை எழுதினர். ஆயினும், எகிப்தின் தொன்மையை அறிவதில் பிற்காலத்தில் யாரும் விருப்பம் செலுத்தவில்லை.

நெப்போலியன் எகிப்தின் மீது படையெடுத்த காலத்திலிருந்து எகிப்தியத் தொல்லியலில் ஆர்வம் வளர்ந்தது. படைவீரர்களுடன் ஆய்வாளர்கள் பலரை எகிப்திற்கு நெப்போலியன் அழைத்துச் சென்றார். இவ்வாய்வாளர்கள் எகிப்திலிருந்த கட்டடங்கள் தொன்மையான மரவகைகள், விலங்குகள் பற்றி ஆய்வு செய்தனர். நெப்போலியனின் படையெடுப்பால், தொன்மைமிக்க உரோசெட்டாக் கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டது. இக்கல்வெட்டு மூன்றுவகை எழுத்துகளால் எழுதப்பட்டது. இக்கல்வெட்டே பண்டைய எகிப்தின் மொழி, எழுத்துகள் பற்றி அறிய ஒரு திறவுகோலாக விளங்கியது. இங்கிலாந்து நாட்டைச் சார்ந்த தாமசு யங்கு என்ற அறிஞர் இக் கல்வெட்டினைப் படித்தறியும் முயற்சியில் இறங்கினார். இவரை அடுத்துச் சம்போலியன் என்பவர் இவ்வாராய்ச்சியில் ஈடுபட்டு வெற்றி கண்டார். இவ்வாறு எகிப்தியத் தொல்லியல் ஆய்வு தோற்றம் பெற்றது.

எகிப்தில் தொல்லியல் ஆய்வுகள் மேற்கொள்வதில் சில இடர்ப்பாடுகளும் இருந்தன. ஐரோப்பா, அமெரிக்கா போன்ற நாடுகளில் இருந்த அரும்பொருள் சேகரிக்கும் பழக்கமுள்ள செல்வர்கள் எகிப்திலிருந்த தொன்மைச் சின்னங்களில் சிறப்பான அரும்பொருள்களை எடுத்துச் சென்றுவிட்டனர். எகிப்திலிருந்த இவர்கள்தம் முகவர்கள் அரும்பொருட்களைச் சேகரிப்பதற்காகக் கோட்டைகளையும் கட்டடங்களையும் இடித்துத் தள்ளினர். இதனால், பல தொன்



உரோசெட்டாக் கல்வெட்டு

மைச் சின்னங்கள் அழிவுறும் நிலையில் இருந்தன. சம்போலியனும் அவருடன் பணிபுரிந்த இத்தாலியைச் சார்ந்த ஐப்போலிடோ உரோசிலினி (Ippolito Roselline) என்பவரும் பல அரும்பொருள்களையும் கல்வெட்டுகளையும் கண்டுபிடித்துக் குறிப்புகள் எழுதி வைத்தனர். அக்காலத்திலிருந்த ஆய்வாளர்கள் தொல்லியலில் குறைந்த அறிவும் அனுபவமே பெற்றிருந்தனர். பாரசீகத்திலிருந்து காரல் இரிச்சர்டு இலெப்சியசு (KarlRichard Lepsius) என்பவரின் தலைமையில் வந்த குழு கி.பி. 1842 க்கும் கி.பி. 1845க்கும் இடைப்பட்ட காலத்தில் எகிப்தின் தொன்மையை ஆய்வு செய்து 12 தொகுதிகள் வெளியிட்டது.

எகிப்து நாட்டின் அரும்பொருள்களையும் கட்டடங்களையும் பாதுகாக்க கி.பி. 1858-ஆம் ஆண்டுஆகசுட்டு மரீதீ (Auguste Mariette) என்பவர் நியமிக்கப் பட்டார். இக்காலத்திலிருந்து தான் எகிப்திய அரசு தொல்லியல் ஆய்வில் ஆர்வம் காட்டத் தொடங்கியது. முறையற்ற செயல்களில் அகழாய்வுகள் மேற்கொண்டோரை அரசு தடுத்து நிறுத்தியது. எகிப்திலிருந்து அரும்பொருள்களை எடுத்துச்செல்லத் தடையும் விதித்தது. மரீதீ எகிப்துத் தொல்லியல் ஆய்வுக்கு ஓரளவு வழி வகுத்தார். அவர் தொன்மைப் பொருள்களைச் சேகரிப்பதிலும் பாதுகாப்பதிலும் ஆய்விலும் ஆர்வம் மிகக் காட்டினார். அவர் எகிப்திய அருங்காட்சியகத்தையும் அமைத்தார். அவரை அடுத்துவந்த காசுடன் மாசுபெரோ (GastonMospero) என்பவர் எகிப்தியத் தொல்லியல் அறிஞர்களுள்குறிப்பிடத்தக்கவராவார். எகிப்தியத் தொல்லியலில் மிக்க ஆர்வம் காட்டியவர்களுள் சிறந்தவராக விளங்குபவர் வில்லியம் பிளிண்டர்சு பெட்ரி (William Plinders Petrie) என்ற இங்கிலாந்து நாட்டுத் தொல்லியலறிஞர் ஆவார். இவர் எகிப்திற்கு கி.பி. 1880-ஆம் ஆண்டு சென்றார். பின்னர்ப் பல தொன்மையான இடங்களில் அகழாய்வுகள் மேற்கொண்டார். இவ்வகழாய்வுகள் அறிவியல் சாராத ஒழுங்கற்ற அகழாய்வுகள் எனினும், இன்றளவும் இவரது அகழாய்வுமுறை அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு வருகிறது. இவரே முதன் முதலில் அகழாய்வுகளில் கிடைக்கும் மிகச் சாதாரண பொருள்களான மட்கலத் துண்டுகளுக்கு முதலிடம் கொடுத்துக் குறிப்புகள் எழுதினார். இவரிடம் பயிற்சி பெற்றவர்கள் பலர் மிகச்சிறந்த தொல்லியலறிஞர்களாக மாறினர். பெட்ரி எகிப்தில் மட்டுமன்றிப் பாலசுத்தீனத்திலும் அகழாய்வுகளை மேற்கொண்டார். இவரது புகழுக்குக் காரணம் இவர் அகழாய்வுகள் செய்தவுடன் அதைப்பற்றி உடனுக்குடன் ஆய்வுக் குறிப்புகளை வெளியிட்டமையே யாகும்.

இருபதாம் நூற்றாண்டில் எகிப்தியத் தொல்லியல் பெரிதும் வளர்ச்சியடைந்தது. எகிப்திய அரசு அகழாய்வுகள் மேற்கொள்பவர் ஆய்வுகளில் கிடைக்கும் அரும்பொருள்களில் பாதியை எடுத்துக் கொள்ள அனுமதித்தது. இதனால், பல்வேறு நாடுகளிலிருந்த அருங்காட்சியகங்களும் தனிப்பட்ட முறையில் அரும்பொருள்களைச் சேகரிப்பதில் நாட்டம் கொண்ட செல்வர்களும் எகிப்து நாட்டில் பணத்தைச் செலவழித்து அகழாய்வுகள் செய்ய முன்வந்தனர். தியோடர் தேவிசு (Theodore Davis) என்ற அமெரிக்கச் செல்வர் தீபசிலிருந்த (Thebes) பல கல்லறைகளை அகழாய்வு செய்தார். கலை ஆர்வமிக்க மற்றொரு செல்வரான கார்னர்வோன் பிரபு (Lord Carnarvon) ஓவர்டு கார்ட்டர்(Howard Carter) என்ற ஆய்வாளரை நியமித்து எகிப்தில் பல அகழாய்வுகள் மேற்கொண்டார். இவரே மிகச் சிறப்பான துதங்கமன் (Tutankhamen) கல்லறையைக் கண்டுபிடித்தார். அமெரிக்க நாட்டைச்சார்ந்த சார்சுஇரைசுனர்(George Reisner), ஆசுத்திரிய நாட்டு எர்மன் சுங்கர்(Hermann Junker) போன்றோர் கீசா (Giza) என்ற இடத்திலும், இங்கிலாந்தைச் சார்ந்த சேம்சு ஈ குய்பெல் (James, E. Quibell), வால்டர் எமிரி (Walter Emery) ஆகியோர் சக்குரா (Saqqura) என்ற இடத்திலும் அகழாய்வுகள் மேற்கொண்டனர். அக்னதான் (Akhen aton) என்ற மன்னரின் தலைநகரமாக விளங்கிய தெல்-எல்-அமர்னாவை (Tell el Amarna) தச்சு ஓரியண்டு கீசில்சாப்ட்டு (Deutsche Orient Gesellschaft) என்பவரும் அவரை அடுத்து எகிப்தியக் கள ஆய்வுக் கழகத்தினரும் அகழாய்வு செய்தனர். தீபசுக்கு அருகிலுள்ள தெல்-எல்-பகாரி (Deir el Bahari) என்னும் இடத்தை எர்பர்ட்டுவின்லாக்கு(Herbert Winlock)என்

னும் அமெரிக்கர் அகழாய்வு செய்தார். 'சிகாகோப் பல்கலைக்கழகக் கீழ்த் திசை நிறுவனம்' (The Oriental Institute of the University of Chicago) உலுக்சர் (Luxor) என்ற இடத்திலும் தீபன் (Theban) பகுதியிலும் பல ஆண்டுகள் அகழாய்வுகள் மேற்கொண்டது.

எகிப்தில் தொல்லியல் அகழாய்வுகள் மேற்கொள்ள ஆர்வம் காட்டியது போல் அந்நாட்டின் தொன்மை எழுத்து முறையை ஆய்வு செய்வதிலும் அறிஞர்கள் முனைந்தனர். தொன்மைக் கல்வெட்டுகள் பல கண்டுபிடிக்கப்பட்டன. அக்கல்வெட்டுகளின் எழுத்துகளைப் படிக்கும் முயற்சியில் அறிஞர்கள் பெரிதும் ஈடுபட்டனர். எகிப்திய மொழி நூல் ஆய்வில் அடால்பு எர்மன் (Adolf Erman) என்பவர் பெரிதும் ஆர்வம் காட்டினார். அவர் பல ஆய்வாளர்களுக்குப் பயிற்சி அளித்து எகிப்திய மொழி நூல் ஆய்வில் ஈடுபடச் செய்தார். அவர்தம் மாணவரே சேம்சு எச். பிரசுடெட்டு (James, H. Breasted) என்ற அமெரிக்க மொழிநூல் வல்லுநர். எர்மன் தலைமையில் பெர்லின் எகிப்தியப் பழமை ஆய்வுநூல் பள்ளி (The Berlin School of Egyptology) எகிப்திய அகராதியை 5 பெரிய தொகுதிகளாக வெளியிட்டது. இத்தொகுதிகள் இன்றளவும் எகிப்துமொழி பயிலும் மாணவருக்கு அடிப்படை நூல்களாக அமைந்துள்ளன. செருமானிய அறிஞர் குர்ட் சீத்தி (Kurt Sethe) என்பவரும் ஆலன் எச். கார்டினர் (Alan. H. Gardiner) என்பவரும் எகிப்திய இலக்கணத்தை ஆய்வு செய்தனர்.

எகிப்தில் வெளிநாட்டினர் பலர் அகழாய்வுகள் மேற்கொள்வதை அரசு விரும்பவில்லை. அகழாய்வு மேற்கொள்வோர் கிடைக்கும் அரும்பொருள்களுள் பாதியை எடுத்துக் கொள்ளலாம் என்று அரசு வகுத்திருந்த கொள்கையை நாளடைவில் கைவிடத் தொடங்கியது. அதனால், வெளிநாட்டினரும் அகழாய்வுகள் மேற்கொள்வதில் மிகுந்த கவனம் செலுத்தவில்லை. இந்தக் காலகட்டத்தில் 1930-ஆம் ஆண்டில் உலக அளவில் பணவாட்டம் நிலவியது. மேலும், உலக நாடுகள் இரண்டாம் உலகப் போரில் தங்கள் கவனத்தைச் செலுத்தியதனால் எகிப்தின் தொல்லியல் மந்த நிலையை அடையத் தொடங்கியது. இரண்டாம் உலகப் போருக்குப் பின் மீண்டும் எகிப்தில் தொல்லியல் புத்துணர்வு பெற்றது. பல எகிப்திய அறிஞர்களே தங்களது நாட்டில் தொல்லியல் ஆய்வுகளும் அகழாய்வுகளும் மேற்கொண்டனர். வெளிநாட்டினரும் மீண்டும் எகிப்தில் அகழாய்வுகள் செய்ய முன் வந்தனர். இக்காலத்தில் தொல்லியலில் அறிவியல் நுட்பங்கள் பல புதிதாகக் கையாளப்பட்டன. கரிமம் 14 காலக் கணிப்பு முறை (Carbon 14 Method) இக்காலத்திலேதான் தோன்றியது.

அபுசிம்பல் என்ற இடத்திலிருந்து இரண்டாம் இராமாசெசு என்னும் மன்னர் கட்டிய கோயில்களும் மற்றும் பல தொன்மைச் சின்னங்களும் அசுவான் உயர் அணைகட்டும் பணியினால் பெருவெள்ளத்தில் மூழ்கும் நிலை 1960-ஆம் ஆண்டில் ஏற்பட்டது. எகிப்தும் சூடானும் இவ்வரும்பெரும் தொன்மைச் சின்னங்களைப் பாதுகாக்க உலகநாடுகளின் உதவியை நாடின. உலக நாடுகளிலிருந்து தொல்லியல் அறிஞர்கள் பலர் இப்பகுதியில் உடனுக்குடன் ஆய்வுகள் மேற்கொண்டு இப்பகுதியின் தொன்மையை உலகிற்கு அறிவித்ததுடன் இரண்டாம் இராமாசெசு கட்டிய அபுசிம்பல் கோயில்களை அதன் பழமையும் அமைப்பும் மாறா வண்ணம் வெள்ளப் பகுதியிலிருந்து வெட்டி எடுத்து வேறு இடத்தில் மாற்றி அமைத்து வெற்றி கண்டனர். இப்பணிக்கு உலக நாடுகள் முழு ஆதரவும் பண உதவியும் அளித்ததுடன், ஐக்கிய நாடுகள் சபையின் அங்கமான உலக நாடுகள் கல்வி அறிவியல் பண்பாட்டுக் குழுவும் முதன் முதலில் தொல்லியல் பணிக்குத் தனது ஆதரவைத் தந்து எகிப்தின் தொன்மைக்கு நற்சான்று அளித்தது. எகிப்திய அரசு 1968-ஆம் ஆண்டு புதிதாக அமைக்கப்பட்ட அபுசிம்பல் கோயில்களைத் திறந்துவைத்தது. இக்காலத்தில் 12க்கும் மேற்பட்ட தொன்மைப் புதைவெளிகளிலும், சிற்றூர்களிலும் அகழாய்வுகள் செய்யப்பட்டன. பல கல்லறைகளிலும் கோட்டைகளிலும் ஆய்வுகள் செய்யப்பட்டன. காண்க: அபுசிம்பல், உரோசெட்டா கல்வெட்டு, சு.இரா.


கலை: தொல்லியல் அகழாய்வுகள் பல பெருமளவில் இக்காலத்தில் மேற்கொள்ளப்பட்டதன் விளைவாக எகிப்தின் தொன்மையை அறியமுடிந்தது. நைல் நதிப் பகுதிகளில் வரலாற்றுக்கு முற்பட்ட கால மக்களின் கலைப் படைப்புகளைச் சரியாக அறியத் தடயங்கள் கிடைக்கவில்லை. ஆயினும், எகிப்தியப் பிரபுக்களின் கல்லறைகளில் வேளாண்மை, கால்நடை வளர்ப்புச் சார்ந்த பல சிற்ப உருவங்கள் காணப்படுகின்றன. அறுவடை செய்தல், அறுத்த தானியங்களை எடுத்துச் செல்லல், வட்ட வடிவக் கிடங்குகளில் சேமித்தல் போன்ற சிற்பங்களும் குறிப்பிடத்தக்கவையாகும்.

**எகிப்து குல அரசு காலத்திற்கு முற்பட்ட கலை** இங்கு நடத்தப்பட்ட அகழாய்வுகளின் மூலமே அறியப்படுகிறது. அல்-பாதரீ (Al-Badari), அல்-அமிரா (Al-Amirah), எல்-கெர்சா (El-Gerza), நாகாதா (Nagadah) ஆகிய இடங்களில் அகழாய்வுகள் மேற்

கொள்ளப்பட்டன. இவற்றுள் நாகாதாவில் செய்யப் பட்ட அகழாய்வு குறிப்பிடத்தக்கதாகும். இவ்வக ழாய்வுகளில் கிடைத்த தொன்மைப் பொருள்களைக் கொண்டு இக்காலக் கலையை இரண்டு பிரிவுகளாகப் பிரித்துள்ளனர். அவை (1) நாகாதாவின் முதற்காலம் அல்லது குல அரசு காலத்திற்கு முற்பட்ட தொடக்க காலம் (கி.மு. 4000 முதல் கி.மு. 3300 வரை). (2) நாகாதாவின் இரண்டாம் காலம் அல்லது குல அரசு காலத்திற்கு முற்பட்ட இரண்டாம் காலம் (கி.மு. 3300 முதல் கி.மு. 3100 வரை) ஆகும்.

நாகாதாவின் முதற் காலத்திலிருந்தே கீழை எகிப்திலும் மேலை எகிப்திலும் மாறுபட்ட பண்பாடு களும் பழக்கவழக்கங்களும் நிலவின. இம்மாறுபாடு கள் மக்கள் பயன்படுத்திய பொருள்களிலும் காணப் படுகின்றன. மேலை எகிப்தில் அல்-அமிரா அகழாய் வில் கிடைத்த மட்கலன்களில் விலங்குகள், வடிவங் கள், கோடுகள் போன்றவை வண்ணங்களால் தீட்டப் பட்டுள்ளன. சிவப்பு நிறக் களிமண் மட்கலங்களின் மீது வெள்ளை நிறமோ இளமஞ்சள் நிறமோ தீட்டப் பட்டு அழகு செய்யப்பட்டுள்ளன. நாகாதா இரண் டாம் காலத்தைச் சார்ந்த படங்கள் உள்ள மட்கலன் கள் அல்-கொர்சாவில் கிடைத்துள்ளன. இவற்றில் உள்ள படகுகள், செந்நிறப் பறவை வகைகள், நெருப் புக் கோழிகளின் உருவங்கள் ஆகியவை குறிப்பிடத் தக்கன.

மட்கலன்களைத் தவிரக் கல்லால் செய்யப்பட்ட பல கலன்களும் அகழாய்வுகளில் கிடைத்தன. இக் கலன்கள் உருளை அல்லது கோளவடிவம் பெற்றுத் திகழ்ந்தன. கல்லைக் குடைந்து இவை செய்யப்பட் டன. சில பாண்டங்கள் 200 கி.கி. எடை அளவுடைய ஒரு பெருங் கல்லிலிருந்தும் செய்யப்பட்டன. இக்கல் பாண்டங்கள் குறைந்த எடை உள்ளதாகவும் மிக நல்ல முறையிலும் செய்யப்பட்டுள்ளன. சில பாண் டங்களில் சிற்ப உருவங்களும் அலங்கார அமைப்பு



எகிப்தியப் பிரமிடு

...ம் செதுக்கப்பட்டுள்ளன. சில கற்கலன்கள் பறவை, ...ளை, நீர்யானை போன்ற விலங்குகளின் உருவ ...மைப்புகளில் செய்யப்பட்டன. இக்காலத்திலிருந்த ...ாருள்களுள் குறிப்பிடத்தக்கவை கற்பலகையிலான ...பனை செய்யப்பட்ட, ஓவியர்கள் பயன்படுத்தும் ...ண்ணத்தட்டுகள் ஆகும். இவை கோயில்களிலும் ...லறைகளிலும் படைக்கும் பொருளாகவும் பயன் ...்த்தப்பட்டன. இத்தட்டுகளுள் மிகத் தொன்மை ...்கவை; ஓப்பனைகள் அற்றுக் காணப்பட்டன. ...ன்னர் இவை விலங்கு உருவ அமைப்பில் செய்யப் ...டன.

எலும்பினால் செய்யப்பட்ட பொருள்கள் பல ...ழாய்வுகளில் கிடைத்தன. இவை எகிப்திய மக்க ...ன் கலைத்திறனைப் பறைசாற்றுகின்றன. எலும்பி ...ல் செய்யப்பட்ட தலை ஊசிகள் சிலவற்றில் ...வை அல்லது காளை மாட்டின் தலை உருவம் ...ணப்படுகிறது. எலும்பினால் தலைஊசிகள் தவிரச் ...புகளும் செய்யப்பட்டன.

எகிப்தின் வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட ...யங்கள் மிகுதியாக இப்போது புலப்படவில்லை. ...டைத்த ஓவியங்களுள் குறிப்பிடத்தக்கவை ஐரா ...ன் போலிசு (Hiera Kon Polis) என்ற இடத்தி ...ள்ள கல்லறைச் சுவர்களில் உள்ள ஓவியங்களே ...கும். இவ்வோவியங்கள் பின்னர் வளர்ச்சி அடைந்த ...ப்திய ஓவியக் கலைக்கு முன்னோடியாக விளங்கி ...ு எனலாம்.

குல அரசு காலத்திற்கு முற்பட்ட காலச் சிற்பங் ...ள் பெருமளவு சுடுமண் உருவங்களேயாகும். ...வற்றுள் பெண் சுடுமண் உருவங்கள் சிறப்பு வாய்ந் ...வை. இப்பெண் சுடுமண் உருவங்கள் மிக நேர்த்தி ...ன உருவ அமைப்பில் காணப்படுகின்றன. சுடுமண் ...ுவங்களுள் குறிப்பிடத்தக்கது கி.மு. 4000-ஆம் ...ண்டைச் சார்ந்த மமர்யா (Mamarya) கல்லறை ...ல் கிடைத்த சுடுமண் உருவமாகும். இது எகிப்தியப் ...பெண் தெய்வம் எனக் கருதப்படுகிறது. சிற்பக் கலை ...ளர்ச்சி எகிப்தில் சிறிது சிறிதாகவே வளரத் ...தொடங்கியது. குல அரசு காலத்திற்கு முற்பட்ட ...லத்தின் இறுதிக் கட்டத்தில்தான் சிற்பங்கள் கல் ...ல் செதுக்கப்பட்டன.

பழைய அரசு: பழைய அரசுக் காலத்தில் மேலை ...ப்தும் கீழை எகிப்தும் ஒருங்கிணைக்கப்பட்டன. ...லைகளும் இரு பகுதிகளிலும் பகிர்ந்து கொள்ளப்பட் ...ன. பழைய அரசு (Old Kingdom) காலத்திலிருந்த ...லைகள் எகிப்து மக்களின் சமூக பொருளாதார ...சியல் வரலாற்றை எடுத்தியம்பும் மூலங்களாக விளங்குகின்றன. பழைய அரசு காலத்துக் கலைகள் நூபியாவில் (Nubia) தளர்ச்சி அடைந்தன. குல அரசு காலத்திற்கு முற்பட்ட காலக் கற்பலகை ஒப்பனை ஓவியத் தட்டுகள் இன்று பிரிட்டிசு அருங்காட்சியகம், ஆசுமோலியன் அருங்காட்சியகம் ஆகிய அருங்காட்சியகங்களில் காணப்படுகின்றன. பழைய அரசுக் காலத்தைச் சார்ந்த கற்பலகைத் தட்டுகளுள் குறிப்பிடத்தக்கவை முதல் மரபு அரசர் நார்மரின் உருவ வண்ணத் தட்டாகும் (Palette of Narmer). இத்தட்டில் செதுக்கப்பட்ட உருவங்கள் பெரும்பாலும் வீர உருவங்களாகக் காணப்படுகின்றன. நார்மரின் தட்டு இன்று எகிப்திய அருங்காட்சியகத்திலுள்ளது. இத்தட்டிலுள்ள உருவ அமைப்பு அரசை ஐக்கியப்படுத்துவதாகக் காணப்படுகிறது. எகிப்தியக் கலை பழைய அரசுக்காலத்தில் பெரிதும் வளர்ச்சி அடைந்தது.

பிரமிடுகள்: மூன்றாம் குல மரபைச் சார்ந்த அரசர் சோசர் (Djoser) காலத்தில் அரசவைக்கு வேந்தராகவும், கட்டடக் கலைஞராகவும் விளங்கிய இம்கோடேப்பு (Imhotep) என்பவரே எகிப்தியக் கட்டடக் கலை வளர்ச்சிக்குப் பெரிதும் அடிகோலினார். அடுக்குப் பிரமிடுகள் இவரால் கட்டப்பட்டவை ஆகும். செங்கற்களைக் கொண்டு அழகாகக் கட்டப்படும் கட்டடங்கள் போன்று கருங்கற்களை வைத்து அழகும் வனப்பும் மிக்க கட்டடங்களை உருவாக்குவதில் இவர் வல்லவராகத் திகழ்ந்தார். கருங்கற்களைப் பயன்படுத்திக் கட்டடங்கள் பல 4-ஆம் மரபினர் காலத்தில் கட்டப்பட்டன. இம்மரபுக் காலத்தில் கீசாவில் (Giza) மூன்று பிரமிடுகள் கட்டப்பட்டன. இவை எகிப்தியப் பிரமிடுகளுள் குறிப்பிடத்தக்கவை. முதலாம் பாரோவான செனிப்ருவின் (Snefru) பிரமிடுவைக் கட்டிய கட்டட வல்லுநர்கள் இம்கோடெப்பின் கட்டட அமைப்பைப் பயன்படுத்தியே கட்டினர். இப்பிரமிடு முடிவுறா நிலையில் காணப்படுகிறது. குபுவின் (Khufu) பிரமிடு மிகப் பெரியதாகும். கிரேக்கர்கள் இப்பிரமிடுவை உலகின் ஏழு அதிசயங்களுள் ஒன்றாகக் கருதினர். இது 146.59 மீ. உயரமுடையது; ஒவ்வொரு பக்கமும் 230.38 மீ. நீளத்தை உடையதாக இது விளங்கியது. இப்பிரமிடு ஏறக்குறைய 54,000 சதுர மீட்டர் (அல்லது 13 ஏக்கர்) அடிப்பரப்புடையதாக விளங்கியது. குபுவிற்குப் பின்வந்த மன்னர்களான காப்ரீ (Khafre) மென்கூரி (Menkaure) ஆகியோர் இப்பிரமிடுக்கு அருகிலேயே மிகப்பெரிய பிரமிடுகளைக் கட்டினர். இருப்பினும், குபுவின் பிரமிடே மிகப்பெரியதாகும்.

எகிப்தின் கட்டடக் கலைக்குப் பிரமிடுகள் மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. பிரமிடு

களைச் சுற்றிப் பல கட்டடங்கள் கட்டப்பட்டன. பிரமிடுகளுக்கு அருகில் சடங்குகள் செய்யும் கட்டடங்களும் பிணமனைக் கோயிலும் கட்டப்பட்டன. மேலும், இப்பிரமிடுகளுக்கு அருகில் பல பிரபுக்களின் கல்லறைகள் காணப்படுகின்றன. இவை விரிவான பக்கங்களையும் தட்டையான மேற்பகுதிகளையும் கொண்டு திகழ்கின்றன. ஒவ்வொரு கல்லறையின் அமைப்பும் அக்கல்லறைக்கு உரிமையாளரான பிரபுவின் செல்வ நிலையைப் பொறுத்து அமைக்கப்பட்டது. சில கல்லறைகளில் சடங்குகள் செய்யும் பகுதிகளும் பெரிய கூடங்களும் காணப்படுகின்றன.

கீசாவிலுள்ள காப்ரீ கோயிலின் கீழ்க் கோயில் பகுதியிலிருந்து மேற் கோயில் பகுதிக்குச் செல்ல ஒரு சாய்தளப்பகுதி உள்ளது. இது இசுபிங்சு (The Sphinx) எனப்படுகிறது. இது ஒருக்கணித்துச் சாய்ந்து படுத்திருக்கும் ஒரு சிங்கத்தின் அமைப்பைப் போன்று கட்டப்பட்டுள்ளது. இது 57 மீ. நீளமும், 20 மீ. அகலமும் உடையது. சிங்கத்தின் தலை எகிப்திய அரசர் காப்ரீ தலை போன்று மாற்றப்பட்டுச் செதுக்கப்பட்டுள்ளது இதன் தனிப் சிறப்பாகும். தலையில் எகிப்திய மன்னர்கள் வழி வழி அணியும் நீமிசு (Nemes) என்னும் தலையில் அணியும் முடி காணப்படுகிறது.

கோயில்கள்: பழையஅரசுக்காலத்தில் இருவகைக் கோயில்கள் காணப்பட்டன. ஒன்று பிரமிடுகளுக்கு அருகில் கட்டப்பட்ட கோயில்கள். மற்றொன்று பல கடவுளர்களுக்குக் கட்டப்பட்ட கோயில்கள். பிரமிடுகளுக்கு அருகிலிருந்த கோயில்கள் இறந்தபிறகு செய்யும் சடங்குகளுக்காகவும் இறந்த அரசர்களை வழிபடுதற்காகவும் கட்டப்பட்டன. இவற்றுள் காப்ரீ கீழ்க்கோயில் (Lower Khafre Temple) குறிப்பிடத்தக்க கோயிலாகும். இக்கோயில் செங்கற்களால் கட்டப்பட்டது. தரையில் மிகப்பெரும் எகிப்தியக் கற்பலகைகள் பாவப்பட்டுள்ளன. கடவுளர்களுக்கான கோயில்களுள் குறிப்பிடத்தக்கவை சூரியக்கடவுளான இரேயின் (Re) கோயில்களாகும். அபுசிர் (Abusir)



இசுபிங்சு

என்ற இடத்திலுள்ள சூரியன்கோயில் மிகச்சிறந்த கோயிலாகும்.

பழைய அரசுக்காலத்தில் பல்வேறுபட்ட கலைத் திறன்மிக்க தூண்கள் கட்டடங்களில் இடம்பெற்றன. இவற்றைத் தவிரக் கல்லறைகளில் பலவகையான கலை வேலைப்பாடு மிக்க பொருள்களும் கிடைத்தன. கீசாவிலுள்ள அரசி எடிபரிசு (Hetepheres) கல்லறையில் உள்ள நாற்காலி மிக்க அழகுடையது. இவ்வரசி குபு (Khufu) பாரோவின் தாய் ஆவார். இந்நாற்காலி கருங்காலி மரத்தை நன்கு குடைந்து செய்யப்பட்டது. இது கையுடையதாகவும் அடிப் பகுதிகளில் விலங்குகளின் காலடிகள் போன்ற வேலைப்பாடு மிக்கதாகவும் காணப்படுகிறது. மர வேலைப்பாடுகள் அக்காலத்தில் சிறந்து விளங்கின. கட்டில்கள், முக்காலிகள் போன்றவை மரத்தால் செய்யப்பட்டு அவற்றின் மேல் பொன் தகடுகள் வேயப்பட்டன.

எகிப்தியப் பெண்கள் பல அணிகலன்களையும் தலையணிகலன்களையும் அணிந்தனர். இவற்றிலிருந்து அம்மக்களின் கைவேலைத்திறனையும் கலைத் திறனையும் நன்கு அறிய முடிகிறது. வளையல்கள், கழுத்தணிகள், காப்புகள், மகுடங்கள் போன்றவை பொன்னாலும் வெள்ளியாலும் செய்யப்பட்டன. இவை பல்வகை வண்ண மணிகளால் அலங்கரிக்கப் பட்டன. பழைய அரசுக் காலத்தில் மிக நீளமான கழுத்தணியை மக்கள் அணிந்தனர். இது உசிக்கு (Usekh) எனப்படுகிறது. இக்கழுத்தணி பல புரியிழைகளை உடையது. இப்புரியிழைகளை ஒரு தொங்கணி இணைத்துள்ளது. இவ்வணிகலன்கள் அணிவதற்கு மட்டுமன்றிக் கடவுளுக்குப் படையற் பொருள்களாகவும் பயன்பட்டன. ஆறாம் மரபினர் காலத்தைச் சார்ந்த வான்கடவுளான ஓரசுவின் (Horus) உருவத் தலை மரத்தாலும் செம்பாலும் செய்யப்பட்டது. இது கிரகோன்போலிசுவில் (Hierakonpolis) கிடைத்தது. இதன் கண்கள் கரும் பளிங்குக் கல்லால் செய்யப்பட்டுப் பொருத்தப்பட்டுள்ளன. இதன் தலை முழுவதும் பொன்னால் மூடப்பட்டுள்ளது.

பழைய அரசுக்காலத்தைச் சார்ந்த சிற்ப ஏட்டுத் தொகுதிகள் பலவற்றில் சிற்பங்கள் காணப்படுகின்றன. கற்பலகைகளிலும் கோரைப்புல்லால் செய்யப்பட்ட தாள்களிலும் நிற்கும் உருவங்கள் பல காணப்படுகின்றன. இவை எகிப்திய மக்களின் கலை அறிவைக் காட்டும் சிறந்த சான்றுகளாக உள்ளன. நிற்கும் உருவங்கள் கற்பலகை ஒவ்வொன்றிலும் வரிசையாக 18 சதுரங்களில் காணப்படுகின்றன. அமர்ந்த நிலையில் உள்ள உருவங்கள் 14 வரிசையாகக் காணப்படும். சிற்ப ஏட்டுத் தொகுதிகள் ஒவ்வொன்றும் அரசரின் சட்டங்களாகவும் விளங்கின. எகிப்திய மக்கள் அரசரைத் தெய்வமாகக் கருதினர். அவரை நேரில் பார்ப்பதே கடினமாக இருந்தது. எனவே, அரசரின் உருவச்சிலைகள் எகிப்திலிருந்த கோயில்கள் ஒவ்வொன்றிலும் இருந்தன. இச்சிலைகளை அரசே வைத்தது. பல அரசர்களின் சிற்பங்கள் எகிப்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அரசருடைய சிலைகள் தவிர ஆளுநர்கள், அரசு எழுத்தர்கள், பணியாளர்கள் ஆகியோரின் சிலைகளும் எகிப்தின் சமூக நிலையை அறியப் பெரிதும் உதவிபுரிகின்றன. பல்வேறு அருங்காட்சியகங்களில் இச்சிலைகள் இன்று வைக்கப் பட்டுள்ளன. பணியாளர்களுள் வேளாண்மை செய்பவர், நடனம் ஆடுபவர், மீன் பிடிப்பவர், அறுவடை செய்பவர், இசைக்கலைஞர் ஆகியோரின் சிற்பங்கள் குறிப்பிடத்தக்கவையாகும்.

**இடை அரசு:** பழைய அரசின் இறுதிக் காலத்தில் சமூகப் புரட்சி எகிப்தில் தொடங்கியமையாலும் அரசர்களிடையே சச்சரவுகள் ஏற்பட்டமையாலும் நடுவண் அரசு தனது செல்வாக்கை இழக்கத் தொடங்கியது. இதனால், நாட்டின் பொருளாதாரமும் சீர்குலையத் தொடங்கியது. சிறு மாவட்டங்களின் ஆளுநர்கள் இக்காலத்தில் குறிப்பிடத்தக்க பெரிய கல்லறைகளைக் கட்டவில்லை. இறந்தவர்களைக் கல் சவப்பெட்டியில் இட்டும், மரத்தால் ஆன சவப்பெட்டியில் இட்டும் புதைத்தனர். இக்காலத்தில் பல சிறு உருவச் சிற்பங்கள் மரத்தால் செய்யப்பட்டு வண்ணம் பூசப்பட்டன. கெய்ரோ எகிப்திய அருங்காட்சியகத்திலுள்ள படைக்கலந் தாங்கிய வீரர்களின் சிற்பங்கள் குறிப்பிடத்தக்க சிற்பங்களாகும்.

தீப்சில் (Thebes) நிறுவப்பட்ட 11-ஆம் 12-ஆம் மரபு ஆட்சிக்காலத்தில் கலை சிறிதளவு வளர்ச்சியடைந்தது. இக்காலத்தில் நகரங்களைச் சுற்றிப் பாதுகாப்புச் சுவர்கள் கட்டப்பட்டன. இக்காலத்தில் எகிப்தின் மூன்றாம் தரக் குடிமக்களாக விளங்கிய மக்கள் எகிப்து தங்களைச் சுரண்டி வாழ்வதை எதிர்த்துப் புதிதாக நூபியாப் பகுதியில் சென்று வாழத் தலைப்பட்டனர். இவர்கள் கெர்மா (Kerma) என்னும் பகுதி முழுமையும் பரவிக் கெர்மா நாகரிகத்தை ஏற்படுத்தினர். இவர்கள் வனைந்த மட்கலன்கள் இவர்களின் கலைத்திறனுக்குச் சிறப்பான எடுத்துக் காட்டாக விளங்குகின்றன.

**கட்டடக்கலை:** இடை அரசுக் காலத்திலும் பழைய அரசு பின்பற்றிய கட்டட நுட்பங்களே பின்பற்றப்பட்டன. இக்காலத்தில் நாட்டின் பொருளா

தாரம் மந்த நிலையில் இருந்ததால், பழைய அரசு கட்டிய மிகப்பெரிய கல்லறைகள் போன்று இக் காலத்தில் கல்லறைகள் கட்டப்படவில்லை. பதி னோராம் மரபைச் சார்ந்த அரசர் இரண்டாம் மெண்டுகோடெப்பு (Mentuhotep II) தம் தலை நகருக்கு அருகில் ஒரு சடங்குக் கோயிலைக் கட்டி னார். 12-ஆம் மரபு அரசர்களும் பல சடங்குக் கோயில்களையும் சிறு பிரமிடுகளையும் அக்காலத்தில் கட்டினர். அக்காலத்தில் பிரபுக்கள் குடைவரைக் கல்லறைகள் பல அமைத்தனர். இவை பெனி ஆசன் (Beni Hasan), அல் பர்சா (Al-Barsha), அசுயூத்து (Asyut), மீர் (Meir) போன்ற இடங்களிலும் அசு வானிற்குத் தெற்கிலும் குடையப்பட்டன.

இடை அரசுக் காலத்தில் இருவகைக் கலைப்பாணி கள் சிற்பத்தில் தோன்றின.எகிப்தின் வடக்கே மெம் பிசுப் பகுதியில் பழைய சிற்பக் கலையே நிலவியது. வடக்கிலிருந்த சிற்பக்கலைத் திறன் தெற்கின் சிற்பக் கலைத்திறனைவிடச் சிறந்து காணப்பட்டது. தெற்கில் சிறிதளவே சிற்பக்கலை வளர்ந்தது. இவை பெரும்பாலும் உள்ளூர் நுட்பத்தைப் பின்பற்ற வில்லை. இச்சிற்பங்கள் காண்பதற்குக் கரடுமுரடாக வும் கவர்ச்சியிழந்தும் அமைந்திருந்தன. ஆனால், 12-ஆம் மரபினர் ஆட்சிக் காலத்தில் நாடு முழுவதும் ஒரே தன்மையான சிற்பக்கலை வளரத் தொடங்கியது. 12-ஆம் மரபு அரசர்களான இரண்டாம் ஆமூன்கோடெப்பு, மூன்றாம் சிசோ சுட்ரிசு (Sesostris III) ஆகியோரின் உருவச் சிலைகள் இடை அரசுக் கால மனித உருவச் சிற்பங்களுள் குறிப்பிடத்தக்கவை. ஆனால், இச்சிற் பங்களின் முகத்தில் தெளிவு காணப்படவில்லை. இவை கலைச் சிறப்பற்ற சிற்பங்கள் போல் காட்சியளிக்கின்றன. இடைக்கால அரசு இக்சாசு (Hyksos) குடிகளின் படையெடுப்பைச் சந்திக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இதனால் இடை அரசின் ஆதிக்கமும் அழியத் தொடங்கியது.

புதிய அரசு: எகிப்து புதிய அரசுக் காலத்தில் தான் புகழேணியின் உச்சியில் திகழ்ந்தது. இக்காலத் தில் இந்நாடு பொருளாதாரம் சமூகம் ஆட்சி, இராணுவம் ஆகியவற்றில் சிறந்து விளங்கியது. புதிய அரசு ஏறக்குறைய 500 ஆண்டுகள் 3 மரபின ரின் ஆட்சியின் கீழ்ச் சிறந்தோங்கி எகிப்தியக் கலை யையும் கட்டடக் கலையையும் வளர்த்தது. அக் காலத்தில் பல குறிப்பிடத்தக்க கட்டடங்கள் கட்டப் பட்டன. அக்காலத்தில் நைல் ஆற்றின் சமவெளிப் பகுதி முழுமையும் கோயில்களும் துணைத் திருக் கோயில்களும் குடைவரைகளும் அமைக்கப்பட்டன.

அக்காலத்தைச் சார்ந்த மனித உருவச் சிற்பங்கள் காண்பதற்கு நேர்த்தியான முறையில் செதுக்கப் பட்டன. ஓவியங்கள் தீபன் (Theban) பிரபுக்களின் கல்லறைகளில் காணப்படுகின்றன. இவை குர்னா (Gurnah) என்ற இடத்திலும் தர் அல்-மதீனா (Dayr al-madinah) என்ற இடத்திலும் உள்ளன. மூன்றாம் ஆமூன்கோடெப்பு (Amenhotep III) காலத் தில்தான் எகிப்தின புதிய அரசுக்காலக் கலை உச்ச நிலையை அடைந்தது. அரசர் அக்னதான் காலத்தில் அமர்னா அமைப்புக் கலை (Amarna Art) வளர்ச்சி யடைந்தது. இவர் வீட்டில் பல கலை வேலைப் பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இவ்வீடு அக்னதான் என்று கூறப்பட்டது. இவர் இருந்த வீடு இன்று தெல்-எல்-அமர்னா என்ற இடத்தில் உள்ளதால் இப் பெயர் பெற்றது. இவர் காலத்தில் தீப்சுக்கு அருகில் கார்னாக்கு (Karnak) என்ற இடத்தில் பல புதிய கோயில்கள் கட்டப்பட்டன. அரசர் அக்னதான் சிற் பங்களை வடித்த சிற்பிகளுக்கு, அழகுபடுத்திச் சிற் பங்கள் செதுக்குவதைவிட உள்ளதை உள்ளவாறே செதுக்குமாறு கட்டளையிட்டார். பல மனித உருவச் சிலைகள் உண்மையான மனிதர்களைப் போலவே காட்சியளிக்கும் வண்ணம் இவர் காலத்தில் செதுக் கப்பட்டன. இவரது காலச் சிற்பங்களில் குறிப்பிடத் தக்கது அரசி நெபிர்தித்தியின் (Nefertiti) சிற்ப மாகும்.

புதிய அரசுக் காலத்தில் கோயில் சுவர்களின் ஓவி யங்கள் குறிப்பிடத்தக்கவை. இரண்டாம் இராமா செசுவின் கல்லறையிலும் அவர் மனைவி நெபிர்தரி யின் (Nefertari) கல்லறையிலும் ஓவியங்கள் பல உள்ளன. இவை சிறந்த ஓவியங்களாகும். இராமா செசு என்ற பெயருடைய எகிப்திய அரசர்களின் காலத்தில் பல கோயில்கள் கட்டப்பட்டன. குறிப்பாக இரண்டாம் இராமாசெசுவின் காலத்திலும் மூன் றாம் இராமாசெசுவின் காலத்திலும் கோயில்கள் மிகுதியாகக் கட்டப்பட்டன. இவர்களின் காலத்தைச் சார்ந்த மிகுதியான சிற்பங்களும் ஓவியங்களும் இப்போதுகிடைத்துள்ளன. கார்னாக்கு, அபிதாசு, அபுசிம்பல் கோயில்களில் போரைச் சித்திரிக்கும் சிற்பங்களும் ஓவியங்களும் காணப்படுகின்றன.

புதிய அரசுக் காலத்தில் இலக்சர் (Luxor), கார் னாக்கு ஆகிய இடங்களில் கோயில்கள் கட்டப் பட்டன. இக்கோயில்களில் மிகப் பெரிய தூண்கள் இடம்பெற்றன. அமோன் (Amon), முத்து (Mut) கோன்சு (Khons) ஆகிய கடவுளர்களுக்குக் கோயில் கள் எழுப்பப்பட்டன. முதலாம் செதி (Seti I) அபி தாசில் கட்டிய பெரிய கோயில் குறிப்பிடத்தக்க

ஒன்றாகும். சூரியக் கடவுளுக்காகத் தெல்-எல்-அமர்னாவில் ஒரு கோயில் இக்காலத்தில் கட்டப்பட்டது.

இரண்டாம் இராமாசெசு கட்டிய அபுசிம்பல் கோயில் நூபியர் பாறைப் பகுதியில் குடையப்பட்ட கோயிலாகும். இது மணற்கல் பாறையைக் குடைந்து அமைக்கப்பட்ட கோயில். கோயிலின் முகப்பின் இரு பக்கங்களிலும் மிகப்பெரிய சிற்பங்கள் இரண்டிரண்டு அமர்ந்த நிலையில் காணப்படுகின்றன. ஒவ்வொரு சிலையின் உயரமும் 20மீ. ஆகும். இச்சிற்பங்கள் இரண்டாம் இராமாசெசு அரசரின் சிற்பங்களாகும். இச்சிற்பங்களின் காலடியின் கீழ்ப் பல சிறு சிற்பங்கள் காணப்படுகின்றன. இச் சிற்பங்கள் இவர்தம் குடும்ப உறுப்பினர் பற்றியன. இச்சிற்பங்களுள் குறிப்பிடத்தக்கவை இரண்டாம் இராமாசெசு அரசரின் மனைவியான நெபிர்தரியின் (Nefertari) அழகு வாய்ந்த சிற்பமாகும். புதிய அரசினை அடுத்து வந்த பிற்காலத்தில் மன்னர்களின் செல்வாக்குக் குறையலாயிற்று. இக்காலத்தில் எகிப்து பல்வேறு படையெடுப்புகளைச் சந்திக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது. இதனால், கலைப் பாணியில் தொய்வு ஏற்பட்டது. காண்க: அபுசிம்பல், அபிதாசு கட்டடக்கலை, கார்னாக்கு, தீப்சு. சு.இரா.

மொழி: ஆப்பிரிக்காவில் வழங்கும் பல்வேறு மொழிக் குடும்பங்களுள் எமிட்டோ-செமிட்டிக்கு (Hamito-Semitic) மொழிக்குடும்பமும் ஒன்றாகும். இம்மொழிகள் மத்தியதரைக் கடலின் கிழக்குப் பகுதிகளிலும் ஆப்பிரிக்க நாட்டின் வட பகுதியிலும் பேசப்படுகின்றன. இதனால், இவற்றைச் சிலர் ஆப்பிரிக்க-ஆசிய மொழிகள் (Afro-Asiatic Languages) எனவும் குறிப்பிடுவர். எமிட்டோ-செமிட்டிக்கு என்னும் பெயர் வேதாகமத்தில் வருகிற ஆம்-சாம் என்னும் இரு பெயர்களிலிருந்து உருவான சொல்லாகும். இவ்விருவர்தம் பரம்பரையினரே இம்மொழிகளைப் பேசுகிறார்கள் என்ற எண்ணத்தில் எழுந்ததே இப்பெயர். இதனை எமிட்டிக்கு மொழிகள் என்றும், செமிட்டிக்கு மொழிகள் என்றும் இரு பிரிவுகளாகப் பிரிப்பர்.

எமிட்டிக்கு மொழிகளைப் பொதுவாக, எகிப்திய மொழி, பெர்பெர் மொழிகள், குசிதிக்கு மொழிகள் (Cushitic Languages) சாடு மொழிகள் என நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம். இவற்றுள் பெர்பெர் மொழிகள் ஆப்பிரிக்காவின் வடபகுதியிலும், குசிதிக்கு மொழிகள் எத்தியோப்பியா, கென்யா போன்ற நாடுகளிலும், சாடு மொழிகள் (Chad Languages) நைசீரியா, கமரூன் போன்ற நாடுகளிலும் வழங்குகின்றன.

எகிப்திய மொழியோ இன்று வழக்கிலில்லை. இம்மொழி நைல்நதி தீரத்தில் கி.மு. 3000 ஆண்டுகட்கு முன்னரே வழக்கில் இருந்து கி.பி. 16-ஆம் நூற்றாண்டையொட்டிப் பேச்சுவழக்கற்று இறந்துவிட்ட மொழியாகும். இது மிகப் பழமையான நாகரிகமாகக் கருதப்படும் எகிப்திய நாகரிகத்தின் மொழியாக நின்று நிலவிய பெருமையை உடையது. ஏறத்தாழ நான்காயிரம் ஆண்டுகள் வாழ்வாங்கு வாழ்ந்து வீழ்ந்து விட்ட மொழி இது. சிறந்த இலக்கியங்கள் பலவற்றை ஈன்றெடுத்த மொழி.

இம்மொழியின்கண் காணப்படும் மொழிநிலையை அடிப்படையாக வைத்து இதன் வரலாற்றுக் காலத்தைத் தலைக்காலம், இடைக்காலம், பிற்காலம் என மூன்று பிரிவுகளாகப் பிரிப்பர். தொடக்க காலத்திலிருந்து கி.மு. 2250-ஆம் ஆண்டு வரையுள்ள பகுதியைத் தலைக்காலம் என்றும், அது முதல் கி.மு. 1400 வரையுள்ள பகுதியை இடைக்காலம் என்றும், அது முதல் கி.பி. 16-ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலப் பகுதியைப் பிற்காலம் என்றும் குறிக்கலாம். இம்மொழிகளை ஆராய்ந்த பல அறிஞர்கள் தலைக்காலத்திற்கும், இடைக்காலத்திற்கும் இடையே அதிக வேற்றுமை இல்லை எனவும் கருதுவர்.

பண்டைக்காலத்தில் எகிப்து இரு பிரிவுகளாக இருந்தது என்றும், கி.மு. 2850-ஆம் ஆண்டினை ஒட்டி மெனசு (Menes) என்ற மன்னனால் அவை இரண்டும் இணைந்தன என்றும், இவ்விணைப்பே எகிப்திய ஆட்சியின் தொடக்கமாக அமைந்து நல்ல ஒரு நாகரிகத்தைத் தோற்றுவித்தது என்றும் கருதலாம். அவன் காலத்தில்தான் மெம்பிசு (Memphis) எகிப்திய நாட்டின் தலைநகராக விளங்கியது. அது இன்றைய கெய்ரோ நகரின் அண்மையில் அமைந்திருந்ததாகும்.

தலைக்காலத்தில் வாழ்ந்த அரசர்களுள் சியாப்சு (Cheops), செப்ரன் (Chefren), மைசிரினசு (Mycerinus) போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களே எகிப்தில் காணப்படும் பிரமிடுக் கோபுரங்களைக் (Pyramids) கட்டியவர்கள். இவர்கள் இக்கோபுரங்களில் எழுதி வைத்த செய்திகளும், வேறு பல கல்லறைக் கோபுரங்களில் எழுதி வைத்தவைகளும் இக்கால எகிப்திய மொழியின் சின்னங்களாக விளங்குகின்றன. இன்வ தவிர வேறு பல கல்வெட்டுகளும் இம்மொழி பற்றி அறிய உதவுகின்றன. இம்மொழியின்கண் காணப்படும் பழைமையான எழுத்துச்சான்று கி.மு. 2650-ஆம் ஆண்டினை ஒட்டி எழுதப்பட்ட ஒரு கல்வெட்டாகும். இதை ஒட்டிப் பின்னர் எழுதப்பட்ட பல்வேறு கல்வெட்டுகள்

கிடைத்துள்ளன. இவையும் பிரமிடு எழுத்துகளும் இம்மொழியை அறிந்துகொள்ள உதவுகின்றன.

எகிப்திய மொழி 'ஈரோகிளிபிக்கு' (Hieroglyphic) என்னும் எழுத்துமுறையால் எழுதப்பட்டதாகும். கிரேக்கர்களால் கொடுக்கப்பட்ட இப்பெயர் புனிதமாக வெட்டப்பட்ட எழுத்து அல்லது கல்வெட்டு எனப் பொருள்படும். கிரேக்கர்கள் முதன் முதலாகப் படையெடுத்து வந்தபோது இக்கல்வெட்டுகளைக் கண்டு இவை ஏதோ ஒரு மந்திர சக்தியைக் கொண்டவை என எண்ணியதால்தான் இப்பெயரை இவற்றிற்கு ஈந்தனர் என அறிஞர்கள் எண்ணுவர். பெரும்பான்மையாகக் கோயில்களிலும், பிரமிடுக் கோபுரங்களிலும், கல்லறைகளிலும் இவ்வெழுத்து முறை காணப்படுவதாலேயே இவ்வெழுத்துமுறை இப்பெயர் பெற்றது. எகிப்திய மக்களும் கூட இதனைத் தெய்வீக எழுத்து எனவே கருதினர். இவை பொதுவாக வலமிருந்து இடமாகவே எழுதப்படும். எனினும் வசதியின் பொருட்டு, சில நேரங்களில் இடமிருந்து வலமாகவும், மேலிருந்து கீழாகவும் கீழிருந்து மேலாகவும் எழுதப்பட்டிருப்பதைக் காணலாம். இன்றைய அச்சில் இடமிருந்து வலமாகவே எழுதப்படுகிறது. பழைய பிரமிடுக் கோபுரங்கள் போன்றவற்றில் எழுதி வைத்திருப்பவற்றிலிருந்தும் பாப்பிரசு ஏடுகளிலிருந்தும் இம்மொழியைப் பற்றி நன்கு அறிய முடிகிறது.

இம்மொழியின்கண் இலக்கணக் கூறுகள் பெரும்பாலும் உயிர்மாற்றத்தினால்தான் காட்டப்படுகின்றன என்பர். எனினும், முன்னொட்டுகளும் பின்னொட்டுகளும் இல்லாமலில்லை.

| | | |
|---|---|---|
| செதெம் | (Sedem) | கேட்க |
| செதெமெப் | (Sedem-ef) | கேட்கிறான் |
| ரெக்கு | (Rekh) | தெரிய |
| செரெக்கு | (Se-rekh) | தெரிவிக்க |

இம்மொழிகளில் ஆண்-பெண்பால் பாகுபாடு உண்டு. பொதுவாக, இப்பாகுபாடு விகுதிகளால் காட்டப்படினும் விகுதியைக் கொண்டிராத எத்தனையோ சொற்களும் இப்பாகுபாட்டினைக் காட்டிநிற்கும். எடுத்துக்காட்டாக, 'நெப்' (Neb-செல்வன்) என்ற சொல் எந்த விதமான பின்னொட்டும் இன்றி ஆண்பால் காட்டி நிற்கும். ஆனால்,

| | | |
|---|---|---|
| ஊரு | (Huru) | ஏழை (ஆண்) |
| எம்த் | (Hemt) | பெண் |
| நெசுத் | (Nest) | முடி (Crown) |

ஆகிய சொற்களில் ஆண்பால் விகுதியாக -உ என்பதும், பெண்பால் விகுதியாக -த் என்பதும் பயன்படுதல் காணலாம். பெண்பாற் சொற்கள் அனைத்துமே இத்தகைய விகுதியைப் பெற்று நிற்கும் எனக் கூறுவர்.

வடமொழியைப் போல இம்மொழிச் சொற்களிலும் ஒருமை, இருமை, பன்மை என்ற எண் பாகுபாடு உண்டு. இருமைப் பாகுபாடு மிக அருகியே உள்ளது. ஒருமையைக் காட்டுதற்கெனத் தனி ஒட்டு கிடையாது. எல்லாப் பெயர்ச் சொற்களும் ஒருமையைக் காட்டி நிற்பவையே. ஆனால், இருமையையும் (-இ) பன்மையையும் (-உ) காட்டுவதற்கெனத் தனித் தனி ஒட்டுகள் உள்ளன.

| | | |
|---|---|---|
| நெப் | (Neb) | செல்வன் |
| மெர்தி | (Merti) | இரு கண்கள் |
| ஆதி | (Ati) | இரு கைகள் |
| பெரு | (Peru) | வீடுகள் |
| செரு | (Seru) | இளவரசர்கள் |

ஆனால், இவற்றை எழுதும் முறை சிறிது வேடிக்கையானது. இருமையைக் குறிக்க ஒரே சொல்லை இருமுறையும், பன்மையைக் குறிக்க மும்முறையும் எழுதுவர். இன்னும் சில நேரங்களில் பன்மையைக் குறிப்பதற்குச் சொல்லுக்குப் பின்னே அன்றிக் கீழே மூன்று வரைகளை (- - - ; ⋮ ) அல்லது மூன்று சிறிய வட்டங்களை (... ; ⋮ ) இடுவர்.

தமிழில் பெண்பாலைக் காட்டும் விகுதிகளுக்குப் பின்னாலேயே பன்மை ஒட்டுகள் வரும் (அரசி-அரசியர்). ஆனால், இம்மொழியில் பன்மை காட்டும் ஒட்டுக்குப் பின்னாலேயே பால் காட்டும் ஒட்டுகள் வருகின்றன. பெயர் அடி + எண் + பால் என்ற முறையில் ஒட்டுகள் அமையும். ஆனால் தமிழிலோ, பெயர் அடி + பால் + எண் என்ற முறையில் உள்ளது.

| | |
|---|---|
| ரென்ப் + உ + த் | ஆண்டுகள் |
| எ + உ + த் | பெண்கள் |

என்பவை இதற்கு எடுத்துக்காட்டுகளாகும்.

இம்மொழியில் பல்வேறு உலக மொழிகளைப் போலவே தன்மை, முன்னிலை, படர்க்கை என்ற மூன்று பதிலிடு பெயர்களைக் காணலாம். இவற்றுள்ளும் ஒருமை, பன்மை உண்டு. ஆனால், இருமை இல்லை. தமிழைப் போலல்லாமல் முன்னிலை

ஒருமை ஆண், பெண் வேற்றுமையைக் கொண்டுள்ளது.

| | | |
|---|---|---|
| என்தெக் | (Entek) | நீ (ஆண்) |
| என்தெத் | (Entet) | நீ (பெண்) |

ஆனால், இத்தகைய ஆண், பெண் வேற்றுமை தன்மை, முன்னிலை, படர்க்கைப் பன்மையில் இல்லை.

| | | |
|---|---|---|
| என்தெப் | (Entef) | அவன் |
| என்தெசு | (Entes) | அவள் |
| எய்னென் | (Ynen) | நாம் |
| என்த்தென் | (Entten) | நீங்கள் |
| என்த்சென் | (Entsen) | அவர்கள் |

இம்மொழியில் தமிழ்மொழியைப் போன்று வேற்றுமைகள் காணப்படுவதில்லை. வேற்றுமைப் பொருள்கள் அனைத்தும் பல்வேறு முன்னுருபுகளால் காட்டப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, ஆறாம் வேற்றுமைப் பொருள் 'இஎன்' என்ற முன்னுருபால் காட்டப்படும். மேலும், சொற்கள் வரும் இடத்தினாலும் வேற்றுமைப் பொருள்கள் உணர்த்தப்படும்.

இம்மொழியின்கண் முன்னொட்டுகளும், பின்னொட்டுகளும் காணப்படும். இந்நிலையில் இது தமிழிலிருந்து வேறுபட்டுள்ளது. வாக்கியத்தில் வரும் சொற்களின் வரிசை முறையிலும் இது தமிழிலிருந்து வேறுபட்டுள்ளது. தமிழில் பெயர்ச்சொற்களுக்கு முன்னால் பலவேறு அடைகள் வர, இம்மொழியில் பெயர்ச்சொற்களுக்குப் பின்னால் அடைச்சொற்கள் வருதல் காணலாம்.

| | |
|---|---|
| எம்த் நிசுத் | (Hemt Nisut) |
| (மனைவி) (அரசனின்) | அரசனின் மனைவி |
| எக்த் நெசம்த் | (Hekt Nesemt) |
| (பீர்) (இனிப்பான) | இனிப்பான பீர் |
| த்சும் நிப்ர் | (Tsm Nfr) |
| (நாய்) (நல்ல) | நல்ல நாய் |

மேலும் பெயரடைகளுக்கும் பெயர்களுக்கும் இடையிலும் தொடர் இயைபு ஒற்றுமையைக் காணலாம். அதாவது பெயர்ச்சொல்லின் பாலுக்கும், எண்ணுக்கும் ஏற்ப எண், பால் காட்டும் ஒட்டுகளை ஏற்று நிற்கும். எடுத்துக்காட்டாக, 'எம்த் நிசுத்' என்பதில் இரு சொற்களுமே பெண்பால் காட்டும் தகர ஒற்றினை ஏற்று வருதல் காணத்தக்கது.

இம்மொழி வினைச்சொற்கள் இரண்டு அல்லது மூன்று மெய்யெழுத்துகளைக் கொண்டது. இவற்றின் இலக்கணக் கூறுகளைக் காட்டப் பல்வேறு உயிரெழுத்துகளை இதன் இடையே இட்டுச் சொற்களை உருவாக்குவர். பொதுவாக, இந்த நிலை எல்லா எமிட்டிக்கு மொழிகளிலும் காணப்படும்.
ச.அ.

எகிப்திய அருங்காட்சியகம், கெய்ரோவிலுள்ள மிகப்பெரிய அருங்காட்சியகம். இவ்வருங்காட்சியகம் கி.பி. 1835–ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. ஆகசுட்டு மாரிட்டு (Auguste Mariette) என்னும் பிரான்சு நாட்டுத் தொல்லியல் அறிஞர், எகிப்தில் விளங்கிய கீதிவ்சையது பாசாவை (Khedive Said Pasha) அணுகி இவ்வருங்காட்சியகத்தைச் சீரிய முறையில் அமைக்க வேண்டினார். மாரிட்டு கி.பி. 1858–ஆம் ஆண்டு இவ்வருங்காட்சியகத்தின் இயக்குநராக நியமிக்கப்பட்டார். இவ்வறிஞரால் இவ்வருங்காட்சியகம் பெரிதும் வளர்ந்தது. அருங்காட்சியகம் இரண்டு பகுதிகளைக் கொண்டது. வரலாற்றுக்கு முற்பட்ட கால அரும்பொருள்கள் காட்சியகத்தின் ஒரு பகுதியிலும், மற்றச் சிறிய கலைப் பொருள்கள் மற்றொரு பகுதியிலும், கால வரிசைப்படி வைக்கப்பட்டுள்ளன. வரலாற்றுக்கு முற்பட்ட கால அரும்பொருள்களில் கல்லறைகளும் கல்பொருள்களும் குறிப்பிடத்தக்கன.
சு. இரா.

கல்வி: எகிப்து நாட்டுக் கல்வியில், 1. மக்களாட்சியினை வலுப்படுத்துதல், எல்லோர்க்கும் சமவாய்ப்பு அளித்தல், குடிமகன் ஒவ்வொருவரிடமும் மக்களாட்சிப் பண்புகளை வளர்த்தல் ஆகியவற்றுக்காகக் கல்வியினை அமைத்தல்; 2. எகிப்தின் முழுமையான வளர்ச்சிக்குக் கல்வியைப் பயன்படுத்துதல், கல்விக்கும் பணிக்கும் பயனுறு வகையில் தொடர்பு ஏற்படுத்தல்; 3. குடிமகன் ஒவ்வொருவனிடமும் அவனது நாட்டின் மீதுள்ள பற்றினை ஓங்கச் செய்தல், அரேபியப் பண்பாட்டைக் கட்டிக் காத்தல்; 4. வாழ்க்கை முழுதும் தொடர்ந்து ஒருவர் கற்கும் வகையில் கல்வியைப் பயன்படுத்துதல் ஆகியன தலையாய குறிக்கோள்களாகும். இக்குறிக்கோள்களை 1980–ஆம் ஆண்டு எகிப்து நாட்டுக் கல்வி அமைச்சகம் (Ministry of Education) வெளியிட்டுள்ளது.

இன்று எகிப்திலிருக்கும் கல்விமுறை 1957–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டதாகும். ஈங்கு இருவகைத் தொடக்கப் பள்ளிக் கல்வி முறைகள் உள்ளன;

கல்வி அமைச்சகத்தின் பொறுப்பில் இயங்கும் தொடக்கப் பள்ளிகள்-இங்குப் பொதுக்கல்வி வழங்கப் படுகிறது. 2. இசுலாமிய விவகார அமைச்சகத்தின் கீழ் (Ministry of Islamic Affairs) இயங்கும் தொடக்கப் பள்ளிகள்-இப்பள்ளிகளில் இசுலாமியச் சமயக் கல்வி வழங்கப்படுகின்றது. இசுலாமியச் சமயக் கல்விக்காகப் பொதுக் கல்வி வழங்கும் நிறுவனங்களைப் போன்றே உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகம் ஆகியன உள்ளன. இசுலாமியச் சமயத்துக்காக அல்-ஆசர்ப் (Al-Azhar University) பல்கலைக்கழகம் உள்ளது.

தொடக்கப் பள்ளிகளில் 1981-82-ஆம் ஆண்டில் மாணவர்கள் சேர்க்கை விகிதம் 72 விழுக்காடாக இருந்தது. ஆனால், முதல் வகுப்பில் மட்டும் இச் சேர்க்கை விகிதம் 85 விழுக்காடாக இருந்தது. தொடக்கக்கல்வி மொத்தம் ஆறு ஆண்டுகள். ஆறு வயதிலிருந்து பதினோரு வயது வரையுள்ள குழந்தை கள் தொடக்கப் பள்ளிகளில் சேர்ந்து பயிலுகின்ற னர்.

தொடக்கக் கலவி முடித்த மாணவர்கள் மூன்றாண்டு (வயது 12-14) ஆயத்தப் பள்ளிகளில் (Preparatary Stage) சேர்ந்து பயிலுகின்றனர். ஆயத்தப்பள்ளிகளில் மாணவர் சேர்க்கை விகிதம் 1981-82-ஆம் கல்வியாண்டில் 47.3 விழுக்காடாக இருந்தது. ஆயத்தப் பள்ளிக் கல்விக்குப் பின்னர், மாணவர்கள் நான்காண்டு (வயது 15-18) இடை நிலைப் பள்ளிகளில் (Secondary Schools) சேர்ந்து பயிலுகின்றனர். அதே கல்வியாண்டில் மாணவர் சேர்க்கை விகிதம் இடைநிலைப் பள்ளிகளில் 44.5 விழுக்காடாக இருந்தது.

இடைநிலைக்கல்வி பயின்ற பின்னர், உயர் கல்வியினை 19 வயதுமுதல் மாணவர்கள் பல்கலைக் கழகத்திலிருந்து பெறுகின்றனர். உயர்கல்வி மூன்று ஆண்டுகளிலிருந்து நான்காண்டுகள் வரை நீடிக் கின்றது.

முறைசாராக் கல்வி (Non-formal Education) வசதியும் எகிப்தில் செய்து தரப்படுகிறது. அரசு நிறுவனங்களும் தனியார் கழகங்களும் (Private Associations) பல்வகையான தொழில்களில் மாண வர்க்குப் பயிற்சியளித்து வருகின்றன.

எகிப்து 1981-ஆம் ஆண்டில் கல்விக்காகத் தேசிய மொத்த உற்பத்தியில் (Gross National Product) 6 விழுக்காடும், பொதுச் செலவில் 18.5 விழுக்காடும் ஒதுக்கியிருந்தது. உயர்கல்விக்கு நாட்டின் கல்விக்கான மொத்தச் செலவில் 20.4 விழுக்காடும் தொடக்கக் கல்விக்கு 44 விழுக்காடும் ஒதுக்கப் பட்டன.

அரேபிய மொழி, சமயம் ஆகியவற்றைக் கற்பிப்ப தற்கு எகிப்தில் ஆசிரியர் பற்றாக்குறை மிகுதியாக உள்ளது. இதற்குக் காரணம், ஆசிரியர் தொழில் இந் நாட்டில் பலராலும் இன்னும் விரும்பப்படாததாக இருப்பதேயாகும்.

பள்ளிகளுக்கான பாடத் தொகுதியமைப்பினை (Curriculum) ஒரு குழு தயாரித்து அளிக்கிறது. இக் குழுவில் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்கள், கல்வியியல் பேராசிரியர்கள், வல்லுநர்கள் ஆகியோர் இடம் பெறு கின்றனர். பாடத் தொகுதியமைப்பு வட்டாரத் தேவைகளை யொட்டிச் சிற்சில மாறுதலுக்கேற்ப நடைமுறைப்படுத்தப்படுகின்றது. தேசியக் கல்வி யாராய்ச்சி மையமே (National Centre for Educa-tional Research) பாடத் தொகுதியமைப்பை உரு வாக்கித் தருவதற்கான பொறுப்பை ஏற்றுள்ளது. பல் கலைக்கழகக் கல்வி அளவில் இன்னும் ஒரே பாட நூலை நம்பியிருக்கும் நிலையும், விரிவுரைவழிக் கற்பித்தல் முறையும் வழக்கத்திலுள்ளன.

எகிப்துக் கல்வி நிலையங்களில் தேர்வு தலையாய ஒன்றாகக் கருதப்படுகிறது. பள்ளி மாணவர்கள் 2,4,6, ஆகிய வகுப்புகளில் ஆண்டுத் தேர்வு எழுதுகிறார்கள். தேர்வு மதிப்பெண் அடிப் படையிலேயே மாணவர்கள் அடுத்த வகுப்புக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர். ஒன்பதாம் வகுப்பு இறுதியிலேயே முதல் பொதுத்தேர்வு (Public Examination) நடைபெறுகிறது. இத்தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு அடிப்படைக் கல்விச் சான்றிதழ் (Basic Education Certificate) வழங்கப் படுகின்றது. இதேபோல், இடைநிலைப் பள்ளிக் கல்வியிறுதியிலும் பொதுத்தேர்வு நடத்தப்படுகிறது.

கல்வியாராய்ச்சி கல்வி கற்பித்தலியல் நிறுவனம் (Institute of Teaching Education) 1929-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டதிலிருந்தே எகிப்தில் நடைபெற்று வருகிறது. இந்நிறுவனம் 1951-ஆம் ஆண்டில் அய்ன் சாம்சுப் பல்கலைக்கழகத்துடன் (Ain Shams University) இணைக்கப்பட்டு விட்டதால், கல்வி, ஆராய்ச்சிக்காகத் தேசிய கல்வியாராய்ச்சி மையம் (National Centre for Educational Research-NCER) 1972-ஆம் ஆண்டிலிருந்து தொடங்கிச் செயற்பட்டு வருகிறது.

எகிப்து நாட்டுக் கல்வியமைப்பில் இன்னும் தீர்க்கப்படாத சிக்கல்களாக எழுத்தறிவின்மையும் ஆசிரியர் பற்றாக்குறையும் இருந்து வருகின்றன.

எஸ்.த.

துணை நூல்கள்:

**Harby, M. K. and Ibrahim, M.,** A Description and Evaluation of Education in Egypt, Institute of National Planning, Cairo, 1981.

**Jackson, S.H.,** Looking, Ahead in Egyptian Education, Institute of Education, Cairo, 1973.

***எங்கல்சு***: பொதுவுடைமைக் கோட்பாட்டை உருவாக்கிய காரல் மார்க்சு (Karl Marx) என்னும் செருமானியச் சிந்தனையாளருடன் மிக நெருக்கமாக ஒத்துழைத்தவரும், கி.பி. 1848-ஆம் ஆண்டில் பொது வுடைமை அறிக்கை என்ற நூலை (The Communist manifesto) மார்க்சுடன் சேர்ந்து எழுதியவருமான பிரடரிக்கு எங்கல்சு (Friedrich Engels) என்னும் செரு மானியச் சமநிலைத் தத்துவ ஆசிரியர் பிரசியா நாட் டில் ரைன் மாகாணத்தில் பார்மன் (Barmen) என்ற நகரத்தில் பொருள் வசதியுள்ள ஒரு தொழிலதிபரின் மகனாக கி.பி. 1820-இல் பிறந்தார். இவர் தகப்ப னார் பார்மனில் ஒரு நெசவாலையின் உரிமையாள ராவர். அவருக்கு இங்கிலாந்தில் மாஞ்செசுட்டரிலும் ஒரு பஞ்சாலையில் பங்கு இருந்தது. இவர்கள் குடும் பம் ஓரளவு தாராள அரசியற்கருத்துகளைக் கொண்டு, பிரசியா நாட்டிடத்தும் மறுப்புரைச் சமய நெறியிடத் தும் (Protestant) பற்றுக் கொண்டிருந்தது. பிற்காலத் தில் இவர்தம் புரட்சி இயல்புடைய போக்கு இவருக் கும், இவர்தம் தந்தைக்குமிடையே பிளவை ஏற்படுத்தி னாலும், இவர்தாய் காட்டிய பரிவு யாவரையும் இணைத்து, இவருக்கு வீட்டிலிருந்து நிதி உதவி கிடைக்குமாறு செய்தது. தந்தையின் கட்டாயத்தின் பேரில் ஒரு பள்ளியில் சேர்ந்த எங்கல்சு படிப்புமுடியு முன்னரே அதை விட்டு விலகி, ஓர் ஏற்றுமதி நிறு வனத்தில் பணி செய்து, மூன்றாண்டுகள் வாணிகத் தில் செயலறிவு பெற்றார். வாணிகத்தில் பயிற்சி பெற்ற காலத்திலேயே இவர் மறைவாகப் புரட்சிச் செயல்களைத் தூண்டும் நூல்களைக் கற்று, எகல் (Hegel) என்ற செருமானிய மெய்யறிவாளருடைய கருத்துகளையும் கற்றார். மற்ற எகலியர்களைப் போல வரலாறும் முன்னேற்றமும் ஒன்றுக்கொன்று முரணான கோட்பாடுகளின் போராட்டத்தினால் தான் ஏற்படுகின்றன என்று கருதி, சமய நெறியும் கிறித்தவ நெறியும் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை கள் என்ற முடிபுடையவராய், அவற்றை எதிர்த்து இறைமறுப்பாளர் (Atheist) ஆயினார். தம் கருத்து களைச் சிறு கட்டுரைகளின் வாயிலாக வெளியிட்டுப் பலரோடுந் தொடர்பு கொண்டார். சிறிது காலம் இவர் பெர்லினில் பீரங்கிப் படையில் பயிற்சியாள ராக இருந்தார்.

பின்னர் கி.பி. 1842-இல் இவர் மோசசு எசு (Moses Hess) என்னும் யூதருடைய கருத்து களைக் கேட்டு, எகலின் தத்துவமும் அளவை யும் பொதுவுடைமைக் கோட்பாட்டிற்கே வழிகாட்டு தலை உணர்ந்து, ஒரு பொதுவுடைமையாளரானார். இங்கிலாந்துக்கு இவர் சென்று, அங்குத் தம் தந்தை யின் தொழிலையும் பார்த்துக் கொண்டு, பொது வுடைமை பற்றிக் கட்டுரைகள் எழுதியும், பாராளு மன்ற நடவடிக்கைகள் பற்றிய அறிக்கைகளைப் படித் தும், ஆலைத் தொழிலாளர் கூட்டங்களில் பேசியும், இங்கிலாந்தின் தொழில் வளர்ச்சியையும், தொழி லாளர் வகுப்பின் வருந்தத்தக்க நிலையையும் எடுத் துக்காட்டக் கூடிய ஒரு வரலாற்றை எழுதுவதற்கு வேண்டிய செய்திகளைத் திரட்டியும் வந்தார். இவர் கி.பி. 1844-ஆம் ஆண்டில் எழுதிய தம் கட்டுரையில், இங்கிலாந்து பின்பற்றிய தாராளப் பொருளாதாரக் கொள்கை முரண்பாடுகள் நிறைந்ததென்றும், ஆங்கி லச் சமூக அமைப்பானது தனியார் சொத்து உரிமையை ஆதாரமாகக் கொண்டிருப்பதால், அதில் மிகப் பெரிய செல்வரும், பொருளற்றவரும் நிறைந் துள்ளனரென்றும் காட்டினார். மார்க்சு இக்கட்டுரை யைப் பாராட்டி வெளியிட்டார். எங்கல்சு முன்னரே ஒரு தடவை மார்க்சைக் கொலோன் நகரத்தில் சந் தித்திருந்தார்.

இவர் கி.பி. 1844-இல் பாரிசுக்குச் சென்று மார்க்சைக் கண்டதால், இருவருக்குமிடையே உள்ள நட்பு வளர்ந்து, இருவரும் சமநிலை இயக் கத்தை வளர்ப்பதற்கு வழி உண்டாயிற்று. இவர் கி.பி. 1844-இல் இங்கிலாந்தில் தொழிலாளர் நிலை என்ற நூலை எழுதினார். அதுவே மார்க்சின் பொது வுடைமைக் கொள்கைக்கு ஆதாரமாயிற்று. எங்கல்சு கி.பி. 1845-இல் வரலாற்றுக்குப் பொருளாதார இயல் பான விளக்கம்(Economic Interpretation of History) என்னும் கோட்பாட்டை வகுத்தார். அப்போது இவர் மார்க்சுடன் பிரசல்சு நகரத்திலிருந்தார். மார்க்சுடன் இங்கிலாந்திலும் பாரிசிலும் இவர் தங்கி, செருமானிய உழைப்பாளர் கட்சி இலண்டனில் கி.பி. 1847-இல் கூடியபோது மார்க்சின் கொள்கைகளை அது ஏற்றுக் கொள்ளுமாறு செய்து, அதை ஒரு பொதுவுடைமைக் கழகமாக (Communist League) ஆக்கினார். பிரான்சிலும், பல செருமானிய நாடுகளி

லும் இருந்த பண்டைய நிலமானிய, எதேச்சாதிகார அரசாங்கங்களை ஒழித்துவிட்டு, அரசியலமைப்புக்குட்பட்ட பிரதிநிதித்துவ அரசாங்கங்களை நிறுவுதல் வேண்டுமென்ற நோக்கத்தோடு கி.பி. 1848-ஆம் ஆண்டில் புரட்சிகள் நடைபெற்ற போது, பொதுவுடைமைக் கொள்கைகளுக்கு ஏற்றவாறு அப்புரட்சிகளை நடத்தும்படி இருவரும் தூண்டினர். ஆனால், கி.பி. 1848-ஆம் ஆண்டின் புரட்சிகள் வெற்றியடையாமற் போகவே, மீண்டும் ஒரு புரட்சி வருதல் கூடுமென்று இருவரும் எதிர்பார்த்து, புதிய கட்டளைகளை(Directives) உருவாக்கி இலண்டனில் பொதுவுடைமைக் கழகத்தைச் சீராக்கினார். எங்கல்சு தங்களிருவருக்கும் தேவையான பொருளைத்தேடும் முயற்சியிலீடுபட்டிருந்த போதும், பொதுவுடைமைக் கொள்கைகளை ஆதரித்தும் முதலாளித்துவ முறையை எதிர்த்தும் வந்தார். மார்க்சு எவராலும் ஆதரிக்கப்படாமல் தனியாக விடப்பட்ட நிலையில், எங்கல்சு உழைத்துப் பொருள் தேடி அவருக்கு உதவி செய்துவந்தார். இவர் மாஞ்செ



எங்கல்சு

சுட்டரிலிருந்து இலண்டனிலுள்ள மார்க்சுடன் கடிதப் போக்குவரத்து நடத்திவந்தார். இவரெழுதிய கட்டுரைகள் மார்க்சின் பெயரில் 'நியூயார்க்கு டிரிபியூன்' என்னும் செய்தித் தாளில் (கி.பி. 1851-52) வெளிவந்தன. இவையே பின்னர்ச் 'செருமனியில் கி.பி. 1848-ஆம் ஆண்டுப்புரட்சியும் எதிர்புரட்சியும்', (Revolution and Counter-Revolution in Germany in 1848) என்ற தலைப்பில் எங்கல்சின் பெயரிலேயே வெளிவந்தன. இவர் மார்க்சு கி.பி. 1883-இல் மறையும் வரையிலும் ஆண்டு தோறும் அவருக்குத் தம் வருவாயிலிருந்து 350 பவுண்டுகள் மானிய உதவி அளித்துவந்தார். எங்கல்சு தேசியம் பற்றிய கருத்துகளையும், இராணுவம் பற்றிய செய்திகளையும், பன்னாட்டு உறவுகளையும் அறிவியல் பற்றிய செய்திகளையும் உருவாக்கி மார்க்சுக்கு அளித்தார்.

மார்க்சு எழுதிய 'மூலதனம்' (Das Kapital) என்ற முக்கிய நூலில் இருவரின் சமநிலைக் கருத்துகளும் காணப்படுகின்றன. மார்க்சினுடைய மறைவுக்குப் பின்னர் மார்க்சிய சமநிலைக் கோட்பாட்டுக்குச் சரியான விளக்கம் கூறக்கூடிய வல்லுநர் என்று எங்கல்சு மதிக்கப்பட்டார். இவர் மார்க்சினுடைய நூல்களையெல்லாம் திருந்திய பதிப்புகளாக வெளியிட்டார். மார்க்சின் 'மூலதனம்' என்ற நூலின் இரண்டாவது, மூன்றாவது பாகங்களுக்கு மார்க்சு எழுதிவைத்திருந்த கையெழுத்து ஏடுகளிலிருந்தும், சிறு குறிப்புகளிலிருந்தும் செய்திகளை எங்கல்சு திரட்டி, விளக்கி, முழுமையாக எழுதி கி.பி. 1885, 1894-ஆம் ஆண்டுகளில் வெளியிட்டார். இவருடைய நூல்களையும், மார்க்சின் நூல்களையும் நன்கு ஆராய்ந்த அறிஞர்கள் இருவருடைய கருத்துகளுக்கு மிடையே வேறுபாடு இருப்பதாகக் கூறுகின்றனர். இருவருக்குமிடையேயுள்ள கடிதப் போக்குவரத்து இருவரும் ஒத்துழைத்தனரென்றும், இருவருக்குமிடையேயுள்ள கருத்து வேறுபாட்டை மார்க்சே அறியாரென்றும் காட்டுகிறது. மார்க்சைப் போல் எங்கல்சும் தம் கடைசிக் காலத்தை இங்கிலாந்தில் கழித்தார்; இவர் புற்றுநோயால் தாக்கப்பட்டு இலண்டனில் கி.பி. 1895-ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதத்தில் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

மார்க்சும் எங்கல்சும்: (அ) மார்க்சினுடைய அறிவியல் சமநிலைக் கோட்பாட்டின் ஒரு கூறாகிய (Scientific Socialism), தருக்கப் பொருள் முதல் வாதம் (Dialectical Materialism) என்ற கருத்து மார்க்சு, எங்கல்சு ஆகிய இருவராலும் எடுத்தாளப் பட்டது. தருக்க முறையிலே பொருள்களின் இயல்புகள் ஒன்றுக்கொன்று முரண்பாடுடையனவாக இருப்பதை எகல் (Hegel) என்னும் செருமானியத் தத்துவ ஆசிரியர் சுட்டிக்காட்டியதை இருவரும் ஏற்று, அதனைச் சமூக, பொருளாதாரச் செயல்முறைகளுக்குப் பொருந்தக் கையாண்டனர். இவர்கள் வகுத்த தருக்கப் பொருள் முதல்வாதக் கொள்கையின்படி, மனிதனுடைய புலன்களால் உணரப்படுகின்ற உலகமும், அதிலுள்ள பொருள்களும் மனித அறிவையோ ஆன்மாவையோ சார்ந்திராமல் தனித்து இருக்கின்றன. ஆகையால், பொருள்களின் சூழ்நிலைகளை வைத்தே கருத்துகள் தோன்றுகின்றன. பொருள் முதல் வாதமும்(Materialism) கருத்தியலும் (Idealism) ஒன்றுக்

கொன்று முரணானவை; அவற்றை இணைக்க முயலு தல் குழப்பத்தை உண்டாக்கும். எல்லா அறிவும் புலன் களிலிருந்தே (Senses) பெறப்படுகின்றன. கருத்தியற் கோட்பாட்டுக்கு (Idealism) இவர்கள் கூறும் பொருள் முதல்வாதம் முற்றிலும் மாறானது. கருத்தியற் கோட்பாட்டின்படி, ஒரு பொருளைப் பற்றிய அறிவு அப்பொருளினின்றும் தனித்து, அதனைப் பற்றிப் புலன்கள் தரும் காட்சியினின்றும் பெறப்படுகிறது; மேலும், ஒரு பொருளைப் பற்றிய உள்ளுணர்வினின் றும் (Intuition) அதனைப்பற்றிய அறிவு கிடைக்கிறது. மார்க்சும் எங்கல்சும் இந்தத் தருக்கப் பொருளியல் வாதக் கோட்பாட்டை முதலாளித்துவச் சமூகம் பொதுவுடைமைச் சமூகமாக வலிய புரட்சியின் வழி யாக மாற்றப்படுவது உறுதி என்று நிறுவும் பொருட் டுக் கையாண்டனர். மார்க்சின் கருத்துகளை மறுத்த செருமானியச் சமநிலையாளர் யூசின்தூரிங்கு (Eugen Duhring) என்பவருடைய கருத்தை மறுத்து, எங்கல்சு தாம் எழுதிய தூரிங்குக்கு மறுப்பு (Anti-Duhring) என்ற நூலில் தத்துவம், அரசியல், பொருளா தாரம், சமநிலைக் கோட்பாடு ஆகியவற்றைப் பற்றிய தம் கருத்துகளைக் கூறுகிறார். கணிதம் உட்பட எல்லா இயற்கை அறிவியல்களும் அளவை இயல்பு (Dialectical) உடையவையே. புலனாலறியப்படும் உண்மைப் பொருள்களெல்லாம் அளவை இயலுக்கு உட்பட்டனவே ஆகும். மனிதர்களால் கையாளப் படும் பொருள்களெல்லாம் அவற்றை அளவை முறையால் ஆராயுமாறும், அவற்றைப்பற்றி எண்ணு மாறும் அவர்களைத் தூண்டுகின்றன. அளவை முறையே வரலாற்றையும் மனித சமூகத்தையும் ஆராய்தலில் கையாளப்படுகிறது.

**ஐரோப்பியச் சமநிலைக் கோட்பாடு:** ஐரோப் பியச் சமநிலைக் கோட்பாடு கி.பி. 1850-ஆம் ஆண்டிற்குப் பின்னர்ப் பிரஞ்சுப் புரட்சியின் குடி யாட்சிக் கருத்துகளினாலும், தொழிற்புரட்சியின் தீயவிளைவுகளினாலும் தோன்றிற்று. முதலில் தொழிலாளரை முதலாளிகளின் சுரண்டலினின்றும் காப்பாற்றுவதற்காக எழுந்த தொழிலாளர் இயக்கம் புரட்சிகரமான சமநிலை இயக்கமாகவும் சில இடங் களில் மாறிற்று. பிரிட்டனில் இராபர்ட்டு ஓவனின் முயற்சியால் நடுத்தரமான போக்குடைய தொழி லாளர் இயக்கமும், கூட்டுறவு இயக்கமும் வெற்றி பெற்றன; ஏனென்றால் அவை புரட்சி இயல்பு உடை யனவல்ல; அரசியல் நோக்குடையனவுமல்ல. மார்க் சும் எங்கல்சும் கி.பி.1848-இல் வெளியிட்ட பொது வுடைமைக் கொள்கை அறிக்கை (Communist Manifesto) என்ற நூலில் கூறியவை வருமாறு: முந்தைய சமநிலை இயக்கங்களெல்லாம் கற்பனை இயல்பு டையனவே தவிர, நடைமுறைக்கு ஏற்றவை அல்ல. ஒரு புரட்சித் திட்டமானது முதலாளித்துவச் சமூகத் தின் உள்ளார்ந்த தன்மைகளை ஆராய்ந்து வகுக்கப் படுதல் வேண்டும். உற்பத்திக் காரணிகளெல்லாம் தனியார் உடைமையாக இருக்கும் வரை உற்பத்திக் காரணிகளை உடைமையாகப் பெற்றிருக்கும் நடுத் தர வகுப்பாருக்கும் (Bourgeois), தமது உழைப்பைத் தவிர விற்பதற்குத் தம்மிடத்து வேறொன்றையும் பெற்றிராத தொழிலாளருக்கும் இடையே வருக்கப் போர் தோன்றுவது தவிர்க்க இயலாது. ஆலைத் தொழிலாளரும் நிலமில்லாத உழவர்களுமே எதிர் காலத்தில் உண்மையான புரட்சி வகுப்பாக இருப் பார்கள். இந்த வகுப்பு எப்பொழுது அரசியலதிகாரத் தைக் கைப்பற்றி, முதலாளி வகுப்பை ஒழித்து, தொழிலாளரின் சருவாதிகாரத்தை நிறுவுகிறதோ, அப்பொழுதுதான் இக்காலச் சமூகம் முற்றிலும் வருக்க வேறுபாடற்ற பொதுவுடைமைச் சமூகத்தை நோக்கி இயங்கும்.

எங்கல்சு கி.பி.1884-இல் ஆடம் சுமித்து (Adam Smith), இரிக்கார்டோ(Ricardo), மில் (Mill), சே.பி. சே (J.B.Say) ஆகியோரின் பொருளாதாரக் கருத்துக் களை மறுத்து,அரசியல் பொருளாதாரத்தைப் பற்றிய ஒரு வரைவு (Outline of Political Economy) என்ற ஓர் ஆய்வு நூலை எழுதினார். இவ்வாய்வுநூல் மார்க்சு எழுதிய மூலதனம் (Capital) என்ற நூலின் சில கருத்துகளுக்குத் தோற்றுவாயாக ஆயிற்று. இவர் எழுதிய இங்கிலாந்தில் உழைப்பாளர் வகுப்பின் நிலை (The Condition of the Working Class in England) என்ற நூலில் தொழில் முறையிலான முதலாளித்துவமும், அதன் சமுதாய விளைவுகளும் வளர்ந்த வகையை ஆராய்கிறார்.

**வருக்கங்கள்:** பழங்காலத்தில் சுதந்திரர்- அடிமை, பட்ரிசியர்-பிளபியர், பிரபு-பண்ணை யாள், தொழிற்கழகத் தலைவர் (Guild man)- தொழில் பயிலுவோன் (Journeyman) முதலியோ ரெல்லாம் வருக்கப் போராட்டத்திலீடுபட்டிருந்தனர். இக்காலத்தில் வருக்கப் போர் (Class conflict) எளி தாக்கப்பட்டமையால், சமூகமானது தொழிலாளி, முதலாளி என இரண்டு முரண்பட்ட வகுப்புகளாகப் பிரிந்து நிற்கிறது. வருக்கம் என்பது பொருளுற்பத்தி முறையில் ஒரு பொதுவான நிலையையும், தத்தம் நலனை அடைவதற்கான ஒரு பொதுவான நோக்கத் தையும் உடைய மக்கள் சேர்ந்த கூட்டம் ஆகும்.

**ஈ) வருக்கப்போர்:** எகலிடமிருந்து மார்க்சும் எங்கல்சும் வரலாறு என்பது முதற்கோள் (Thesis),

முரண்கோள் (Antithesis), முற்றுக்கோள் (Synthesis) என்னும் மூன்று முரண்பாடான இயக்கக்காரணி களால் ஆக்கப்பட்டுள்ளது என்ற கருத்தை ஏற்று, வரலாறு என்பது பொருளாதாரக் காரணிகளால் தீர்மானிக்கப்பட்ட வருக்கப் போராட்டத்தால் உருவாக்கப்படுகிறது என்று கூறினர். சமூகம் என்பது ஒன்றுக்கொன்று முரண்பாடான சக்திகளை நிலையாக அமைப்பதற்கான ஒரு தொகுப்பு ஆகும்.

உ) வரலாற்றுக்குப் பொருளியல் விளக்கம்: அரசியல் காரணிகளே மற்றெல்லாவற்றையும்விட வரலாற்றை உருவாக்குவதில் செயற்படுகின்றன என்ற யூசின் தூரிங்கின் கருத்து தவறானது. மாறாக, பொருளாதாரக் காரணிகளே (Economic Factors) வரலாற்றை உருவாக்குகின்ற முக்கிய ஆற்றல்களாகும். போராட்டமே வரலாறு உருவாவதற்கான தோற்றுவாய்.

ஊ) சமநிலைக் கோட்பாடும் சமூகமும்: எங்கல்சின் கருத்தின்படி சமநிலை (Socialism) என்பது முழு மதிப்பீடுகளை (Absolute Values) உடைய ஒரு கோட்பாடு அன்று. அது ஓரளவுதான் அல்லது ஒன்றோடொன்று தொடர்பு உடைய மதிப்பீடுகளையே (Relative Values) உடையது. மேலும், சமநிலைக் கோட்பாடு ஒழுக்க இயல் கொள்கைகளை ஆதாரமாகக் கொண்டிருத்தலும் இயலாது. சமநிலைச் சமூகத்தில் எல்லா உழைப்பும் நேராகச் சமூக உழைப்பே ஆகும். எந்தப் பொருளும் சமூகத்தின் உழைப்பையே தன்னிடத்துக் கொண்டுள்ளது. ஆகையால் அதனை மதிப்பு (Value) என்று ஒரு புதிய, புரியாத வகையில் கூறுதல் வேண்டியதில்லை. ஓர் உற்பத்தித் திட்டம் வரையப்பட்டுச் செயற்படுத்தப்படும். இவ்வாறு பொருளாதாரச் செயல்கள் முரண்பாடின்றி இணைக்கப்படும் (Co ordinate[illegible]) [illegible]ழிற் பாகுபாடு (Division of Labour) என்[illegible] நகர, ஊரகப் (Urban and Rural)பிரிவினைகளும் மறைந்துவிடும். இக்காலத் தொழில் முறையிலுள்ள முதலாளித்துவ இயல்பு ஒழிக்கப்படும். ஒரு திட்டத்தின் படி எல்லோருடைய நலத்தின் பொருட்டும் தொழில்கள் நாடு முழுவதிலும் நிறுவப்படும். இறுதியில், முதலாளித்துவ உற்பத்தி முறையினால் அடிமைப்பட்டிருந்த மனிதன் விடுதலை பெற்றவுடன், அரசு என்ற சமூக அமைப்பும் சமயநெறி என்ற முறையும் தேவையற்றனவாக ஆகிவிட, அவை மறைந்துவிடும்.

பண்டைக்காலச் சமூக நிலையையும் நாகரிகங்களையும் பற்றி எங்கல்சு ஆராய்ந்து, மிகவும் பழமையான காலத்திலிருந்த சமூக, பொருளாதார அமைப்பானது பொதுவுடைமை வடிவத்திலிருந்த (Form of Communism) அமைப்பே ஆகுமென்கிறார். ஆனால் இந்தக் கருத்தானது அரசியல் நோக்கில் செய்த ஆய்வே தவிர, அறிவியல் நோக்கில் ஆய்ந்து கூறிய கருத்து அன்று என்று எங்கல்சின் கருத்துகளை மதிப்பீடு செய்பவர்கள் கூறுகின்றனர். மேலும், எந்த ஒரு பொருளையும் உற்பத்தி செய்வதற்குத் தம் உடல், அறிவு உழைப்புகளை எவரொருவர் செலவழிக்கிறாரோ, அவருடைய உழைப்பைத்தான் அப்பொருள் தன்னகத்துக் கொண்டுள்ளது என்று கூறலாமே தவிர, சமூக முழுவதன் உழைப்பையும் அப்பொருள் தன்னகத்துக் கொண்டிருக்கிறது என்று கூறுதல் சரியன்று. அதுபோலவே எங்கல்சு கூறிய உற்பத்தி, பங்கீடு, அரசு, குடும்பம், கல்வி முதலியவை பற்றிய கருத்துகளும் சீர்தூக்கி ஆராயப்பட்டு, அவை ஒவ்வொன்றிலும் ஓரளவுதான் உண்மை இருக்கிறது என்று அறிஞர்களால் கூறப்படுகிறது. பா.சூ.

துணை நூல்கள்:


**Mayer, Gustav,** Friedrich Engels: A Biography, 1936.

**Oscar, J. Hammen,** Karl Marx and Friedrich Engels, 1969.

**Coates, Z.K.,** The Life and Work of Friedrich Engels, 1900.

**Henderson, W.O.** (Ed.), Engels' Selected Writings, 1967.


**எங்கலின் விதி**: நுகர்வுப் பொருளியலின் அடிப்படைக் கருத்துகளை ஆராய்ந்த செருமானியப் பொருளியல் அறிஞர் எர்னசுட்டு எங்கல் (Ernest Engel) குடும்பச் செலவின் நுகர்வை இவ்விதி மூலம் விளக்கினார். செருமனியில் கி.பி. 1821 முதல் 1896 வரை வாழ்ந்த இவர் சிறந்த புள்ளியியல் வல்லுநராகவும் விளங்கினார். சேக்சனி (Saxony) என்ற செருமானிய நகரத்தில் வாழ்ந்த குடும்பங்களின் வரவு-செலவுப் புள்ளிவிவரங்களைத் தம் நேர்முக ஆய்வு (Survey) மூலம் தொகுத்து, அவற்றிலிருந்து எங்கலின் விதி (Engel's Law)என்று சொல்லப்படும் நுகர்வு பற்றிய விதியை வகுத்தார். குடும்ப வருமானம் பெருகப் பெருக, உணவிற்கும் பிற பிழைப்பு மட்டத் தேவைகளுக்கும் (Food and Subsistence) செலவிடப்படும் வருவாய் வீதம் குறைந்துகொண்டே செல்லும் என்பதே எங்கல் விதியின் கருப்பொருளாகும்.

குறைந்த வருமானமுடைய மக்கள் தங்கள் வருமானத்தின் பெரும்பகுதியை இன்றியமையாத் தேவை

களுக்குப் பங்கீடு செய்வர். குடும்பத்தின் மொத்தச் செலவில் உணவுப் பொருள்களின் செலவு வீதம் அக் குடும்பத்தின் வறுமை நிலையுடன் நேர்முகத் தொடர்பு கொண்டதாயிருக்கும் என்பதை எங்கலின் விதி வலியுறுத்துகிறது. பிற காரணிகள் மாறாதிருக்கும் நிலையான சூழ்நிலையில் உணவுப் பொருள்களுக்கு மட்டும் செலவிடப்படும் செலவு, மக்களின் வாழ்க்கைத் தரத்தை அளவிடும் அளவு கோலாகப் பயன்படும். எங்கல் உருவாக்கிய சேக்சனில் வாழ்ந்த குடும்பங்களின் செலவுப் பகுப்பாய்வுப்பட்டியல் இவ் விதியைத் தெளிவாக விளக்குகிறது.

குட்படாமலுள்ளது. (3) ஒளி, எரிபொருள், உறைவிடம் ஆகியவற்றிற்கான செலவு விகிதமும் ஓரளவு நிலையாக உள்ளது. (4) கல்வி, மருத்துவம், சட்டப் பாதுகாப்புப் போன்ற வசதிச் செலவுகளும்,ஆடம்பரச் செலவுகளும் உயர்ந்த விகிதத்தில் பெருகுகின்றன.

இவ்விதி செயற்படுவதை இந்தியாவில் நடத்தப் பட்ட பல பொருளியல் ஆய்வுகளின் முடிவுகள் உறுதிப்படுத்துகின்றன. குறிப்பாக, பம்பாய் நகரின் தொழிலாளர் குடும்பங்களை ஆய்வு செய்த பம்பாய்த் தொழிலாளர் நல அலுவலகம் வெளியிட்டுள்ள ஆய்வறிக்கை

அட்டவணை 1

எங்கலின் குடும்பச் செலவுப் பட்டியல்

| வ. எண். | பொருள் | குடும்பங்களின் செலவு விகிதம் (வருமான அடிப்படையில்) | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஏழை வகுப்பினர் | | நடுத்தர வகுப்பினர் | | செல்வர் | |
| 1 | உணவு | 62 | | 55 | | 50 | |
| 2 | உடை | 16 | 95% | 18 | 90% | 18 | 85% |
| 3. | உறைவிடம்/வாடகை | 12 | | 12 | | 12 | |
| 4. | ஒளி, எரிசக்தி | 5 | | 5 | | 5 | |
| 5. | கல்வி | 2 | | 3.5 | | 5.5 | |
| 6. | சட்டப் பாதுகாப்பு/வரி உடல்நலம் பேணல் | 1 | 5% | 2 | 10% | 3 | 15% |
| 7. | மருத்துவம் | 1 | | 2 | | 3 | |
| 8. | வசதிகள்/கேளிக்கை | 1 | | 2.5 | | 3.5 | |
| | கூடுதல் | | 100 | | 100 | | 100 |

அட்டவணை 1-இல் கொடுக்கப்பட்டுள்ள குடும்பச் செலவுப் புள்ளிவிவரங்களிலிருந்து அறியப்படுபவையாவன: வருமானம் பெருகப் பெருக, (1) உணவுப் பொருள்களின் செலவு விகிதம் (Proportion) குறைகிறது. (2) உடைகளுக்காகும் செலவு விகிதம் ஓரளவிற்கு (Fairly) நிலையாகப் பேரளவு மாறுதலுக்

யின் படி, குறைந்த வருமானமுடைய தொழிலாளர் குடும்பங்கள் தங்கள் வருவாயில் 60.5 விழுக்காட்டினை உணவுப் பொருள்களுக்காக மட்டும் செலவு செய்கின்றன. எஞ்சியதை உடை, உறைவிடம், இன்றியமையா வசதி ஆகியவற்றிற்குப் பங்கிடுகின்றனர். இத்தகைய நிலையே அனைத்திந்திய அளவிலும்,

பின்தங்கிய நாடுகளிலும் காணப்படுகிறது. வளர்ச்சியடைந்த அமெரிக்க ஐக்கிய நாடு (USA), ஆசுத்திரேலியா (Australia) போன்ற நாடுகளில், பொதுவாக மக்கள் தங்கள் வருமானத்தில் சிறு பகுதியையே உணவுப் பொருள்களுக்கும் எஞ்சும் பெரும்பகுதியைக் கல்வி, மருத்துவம் போன்ற வசதிப் பொருள்களுக்கும் பந்தயக் கார் (Race Car), பாத்திரம் கழுவும் எந்திரம் (Dish Washer), குளிரூட்டும் பெட்டி (Air-Conditioner) போன்ற ஆடம்பரச் செலவுகளுக்கும் செலவிடுகின்றனர்.

எங்கலின் குடும்பச் செலவு விதி நாட்டின் மொத்த நுகர்வுச் செலவிலும் செயற்படுவதைக் காணலாம். முன்னேற்றமடையாப் பின்தங்கிய நாடுகளின் (Under Developed Countries) பொருளாதாரங்களில் உணவுப் பொருள்களுக்கான நுகர்வுச் செலவு தலையாய இடம்பெறுகிறது. நாட்டின் தேவையைக் கணிக்கவும் அதற்குகந்த வகையில் உற்பத்தி, பங்கீடு ஆகியவற்றைத் திட்டமிடவும், வாழ்க்கைத் தரத்தை அளவிடவும் பொருளியல் வல்லுநர்களுக்கு அடிப்படை வரையறையாக எங்கலின் கருத்துகள் உதவுகின்றன. எனினும், பொருளாதார முன்னேற்றத்தின் தொடக்க நிலையிலிருக்கும் வளர்ச்சியடையும் நாடுகளில் (Developing Countries) எங்கலின் விதி செயற்படாது. அந்நாடுகளில் பேரளவில் காணப்படும் வறுமை, உணவுப் பற்றாக்குறை, வேலையின்மை போன்ற பொருளாதாரச் சிக்கல்களை மேற்கொள்ளவும் உணவுப் பற்றாக்குறைப் பொருள்களுக்குச் சத்தான பதிலீடு செய்யவும் உற்பத்தித் திறனை உயர்த்தவும் நாட்டின் வருவாய்ப் பங்கீட்டினைச் சீராக்கவும் திட்டமிடப்பட்ட தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்படுமாகையால், நாட்டின் சராசரி நுகர்வு நாட்டம் (Average Propensity to Consume) உயரும். எனவே, முதல் கட்ட பொருளாதார முன்னேற்ற நிலையிலுள்ள நாடுகளின் உணவுச் செலவுகள் வருமானத்தை விட மிகையாகப் பெருகிப் பின்னர், அடுத்த கட்டத்தில் கீழிறங்கும்; அதற்குப் பின்னரே எங்கல் விதி செயற்படும் எனக் கருதப்படுகிறது. அ.கு.சா.

**எங்கன் வான் போம் பாவெர்க்கு** ஆசுத்திரிய (Austria) நாட்டுப் பொருளியல் வல்லுநர்களுள் மாபெரும் செல்வாக்கைப் பெற்றிருந்தவர். வியன்னாவில் (Vienna) உள்ள சட்டக் கல்லூரியில் எங்கன் வான் போம் பாவெர்க்கு(Engen Von Bohm Bawerk) இளங்கலைக் கல்வியை முடித்துவிட்டு, அக்கால ஆசுத்திரிய-அங்கேரிப் பேரரசின் (Austria-Hungary Empire) அரசுப் பணியில் வேலையில் அமர்ந்தார். இன்சுபுரக்குப் பல்கலைக்கழகத்தில் (Innsbruck University) பொருளியல் பேராசிரியராகப் பணியாற்ற கி.பி.1881-இல் அழைப்பாணை பெற்றுப் பணியாற்றினார். ஆனால், அரசாங்கம் கி.பி.1889-இல் மீண்டும் இவரை அரசின் நிதித் துறைப் பணிக்கு அழைத்துக் கொண்டது. ஆசுத்திரிய நாட்டின் புகழ்பெற்ற கி.பி. 1896-ஆம் ஆண்டைய வரிச் சீர்திருத்தங்களுக்கு (Taxation Reforms) இவரே காரணமாயிருந்தார். அதனைத் தொடர்ந்து, பல நிதித் துறைச் சீர்திருத்தங்கள் ஏற்பட்டன. அரசுப் பணியிலிருந்து 1904-இல் தாமாகவே விலகி, வியன்னாப் பல்கலைக்கழகத்தில் தம் இறுதிக் காலம் (1914) வரை பொருளியல் பேராசிரியராகப் பணியாற்றினார்.

பாவெர்க்கின் பொருளியல் கோட்பாடுகள் பலவற்றுள் தலையாய இடம்பெறுவது முதலும் வட்டியும் (Capital and Interest) பற்றியதாகும். இதன் முற்பகுதி 'வட்டிக் கோட்பாடுகளின் வரலாறும் சீர்தூக்கலும்' (History and Critique of Theories of Interest) என்ற தலைப்பில் முதல் தொகுதியாக (I Volume) கி.பி.1884-இல் வெளிவந்தது. இந்நூல் ஐரோப்பிய நாடுகளனைத்திலும் விரும்பிப் படிக்கப்பட்டதால் பல பதிப்புகள் வெளியிடப்பட்டன. பல்வேறு மொழிகளிலும் மொழியாக்கம் செய்யப்பட்டது. இரண்டாம் தொகுதி 'முதல் கோட்பாட்டின் அடிப்படை' (The Positive Theory of Capital)என்னும் பெயரில் கி.பி.1889-இல் வெளியாயிற்று. முதல் தொகுதியைப் போன்றே இதுவும் பல பதிப்புகள் வெளியிடப்பட்டு மொழியாக்கம் செய்யப்பட்டது. ஆங்கில மொழியாக்கத்தின் முதல் பதிப்பு கி.பி.1891-இல் வில்லியம் எ. சுமார்ட்டு (William A. Smart) என்பவரால் வெளியிடப்பட்டது.

காரல் மென்கரின் (Karl Menger) பொருளியல் கருத்துகளின் சிறப்புத் தன்மையை உணர்ந்து, அவற்றைப் பொருளியலில் வேரூன்றச் செய்த பெருமை பாவெர்க்கையே சாரும். மதிப்புக் கோட்பாட்டை (Value Theory) அகவய (Subjectivism) அணுகுமுறையில் ஆராய்ந்து, அதன் மூலம் புறவய (Objectivism) மதிப்புக் கோட்பாடுகளை விளக்க முயன்றார். உற்பத்திக் காரணிகளின் மதிப்புப் பகுப்பாய்வில் (Analysis of Factors of Production)சிறந்த பங்கீட்டு முறைக்கு இறுதிநிலையியல் (Marginalism) பற்றிய இவர்தம் கோட்பாடுகள் மிகச்சிறந்தனவாகும். இவர் செவான்சின் இறுதிநிலையியல் கோட்பாட்டைத் தெளிவுபடுத்தினார். விலை வரையறைக்கு இறுதி நிலை இணைகள் (Marginal Pairs) என்ற கோட்பாட்டை வெளியிட்டார்.

பாவெர்க்கு முதலாளித்துவ நாடுகளின் சுற்றுமுக உற்பத்தி முறைகளுக்கான(Round about Production) தெளிவான விளக்கங்களை அளித்தார். இவர் தமக்கு

முன் தோன்றிய ஆசுத்திரியப் பொருளியல் கருத்துகளை (Austrian School of Economics) நன்கு ஆராய்ந்து அவற்றைத் தெளிவுபடுத்தினார்; கருத்தியல் (Abstract) ஆய்வு அணுகுமுறையைப் பின்பற்றினார். அ கு.சா.

**எச்சதாரர்கள்**: இந்திய இசுலாமியர் சட்டப்படி இறந்துவிட்ட இசுலாமியர் ஒருவரது சொத்தினின்று பங்குதாரர்களாகவும் (Shares) தூரத்து உறவினர்களாகவும் (Distant Kindred) வாரிசுகளாய் இருந்து பங்கு பெறுபவர்களில் எச்சதாரர்களும் ஒரு வகையினராவர்.

எச்சதாரர்கள் (Residuaries) முதற்கண் இறந்தவர் சொத்தில் பங்குதாரர்களுக்குரிய பங்கு போக எஞ்சியுள்ளதையே பங்காகப் பெறுவர். இவர்கள் பங்குதாரர்கள் எவரும் இல்லாதபோது சொத்தைத் தம்மிடையே பாகம் பிரித்துக் கொள்வர்.

எச்சதாரர்கள் பட்டியலில் 1. இறந்தவரின் ஆண் வழித் தோன்றல்கள், 2. ஆண்வழித் தோன்றலோடு உடன்வாழும் பெண்வழித் தோன்றல்கள், 3. இறந்தவரின் ஏறுமுறை ஆண் மூதாதையர், 4. இறந்தவர் தந்தையின் வழித்தோன்றல், கிளைவழியினர் ஆகியோர் , 5. சில வேளைகளில் இறந்தவர் தந்தையின் வழித் தோன்றல்களோடு உடன் வாழும் உடன் பிறந்த பெண்கள், தந்தைவழி உடன்பிறந்தபெண்கள், பாட்டனின் வழித்தோன்றல்களான தந்தையின் கிளை வழியினர், தந்தை, தந்தையின் தந்தை, மகள், மகனின் மகள், உடன்பிறந்தாள், தந்தையின் உடன் பிறந்தாள் ஆகியோர் அடங்குவர்.

**எச்சதாரர்களும் சொத்துரிமை இறக்கமும்**: இந்திய இசுலாமியர் சட்டப்படி சொத்துரிமையானது முதன் முதலில் முதல் வகுப்பினர்களான இறந்தவரின் நேர்வழித் தோன்றல்களையே சென்றடையும். அவர்களில் எவரும் இல்லாதபோது சொத்துரிமையானது இரண்டாம் வகுப்பினர்களான இறந்தவரின் மூதாதையர்களையும், அவர்களிலும் எவரும் இல்லாதபோது இறந்தவரின் மூன்றாம் வகுப்பினர்களான தந்தையின் கிளை வழித்தோன்றல் கிளைவழியினர்களையும் (Descendants of the Father), மேற்குறிப்பிட்ட மூன்று வகுப்பினர்களும் இல்லாதபோது நான்காம் வகுப்பினர்களான தந்தையின் தந்தைவழித் தோன்றல்களான பாட்டனின் கிளைவழியினரையும் சென்றடையும்.

நேர்வழித் தோன்றல்கள், மூதாதையர், தந்தை வழித் தோன்றல்கள், பாட்டனின் வழித் தோன்றல்களான தந்தையின் கிளைவழியினர் பட்டியல்: ஈண்டு நேர்வழித் தோன்றல்கள் பட்டியலில் 1. மகன், 2.மகள், 3. மகனின் மகன், 4. மகனின் மகள் ஆகியோரும்; மூதாதையர் பட்டியலில் 1. தந்தை, 2. பாட்டன் ஆகியோரும் அடங்குவர். தந்தை வழித் தோன்றல்களான கிளைவழியினர் பட்டியலில் 1 உடன் பிறந்தான், 2. உடன்பிறந்தாள், 3. தந்தையின் உடன் பிறந்தான், 4. தந்தையின் உடன்பிறந்தாள், 5. உடன் பிறந்தானின் மகன் (Full Brother's Son), 6. தந்தையின் உடன் பிறந்தானின் மகன் (Consanguine Brother's Son), 7. உடன் பிறந்தானின் மகனுக்கு மகன் (Full Brother's Son's Son), 8. தந்தையின் உடன் பிறந்தானின் மகனுக்குமகன் (Consanguine Brother's Son's Son) ஆகியோரும் அடங்குவர். பாட்டனின் வழித் தோன்றல்களான பாட்டனின் கிளை வழித் தோன்றல்கள் பட்டியலில் 1. தந்தையின் உடன் பிறந்தான் (FullPaternal Uncle), 2. தந்தைக்குத் தந்தையின் உடன் பிறந்தான் (Consanguine Paternal Uncle), 3. தந்தையின் உடன் பிறந்தானின் மகன் (Full Paternal Uncle's Son) 4. தந்தைக்குத் தந்தையின் உடன்பிறந்தானின் மகன் (Full Paternal Uncle's Son's Son), 5. தந்தையின் உடன்பிறந்தானின் மகனுக்கு மகன், 6. தந்தைக்குத் தந்தையின் உடன் பிறந்தானின் மகனுக்கு மகன் (Consanguine Paternal Uncle's Son's Son) ஆகியோரும் அடங்குவர். புலமை.

**எச்சவினை**: வினைச்சொல்லிற்குரிய அடிப்படை இலக்கணமாகிய காலத்தை வெளிப்படையாகவோ குறிப்பாகவோ கொண்டு திணை, பால், இடம் ஆகிய பொருட் குறிப்புகளைத் தரும் உறுப்பாகிய இடைச்சொற்கள் எஞ்சிநிற்கும் வினைநிலைக் கிளவியைத் தமிழ்நூலார் எச்சவினை என்பர். வினையெச்சம், வினைக்குறை, குறைவினை என்பவை ஒரு பொருட் சொற்கள்.

தெரிநிலை வினைமுற்று குறைந்து நிற்பதனைத் தெரிநிலை வினையெச்சம் என்றும் குறிப்பு வினைமுற்றுக் குறைந்து நிற்பதனைக் குறிப்பு வினையெச்சம் என்றும் எச்சவினையை இருவகைப்படுத்திக் கூறுவர். நட, வா, செல், கொள் என்னும் முதனிலைத் தொழிற் சொற்கள் அடிப்படையாக இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும் காலத்துள் யாதானும் ஒன்றை வெளிப்படையாகக் காட்டி நிற்பது தெரிநிலையாகும். பண்பு முதலிய பெயர்ச்சொற்கள் அடிப்படையாகக் காலங்காட்டும் இடைநிலைகளின்றிக் காலத்தைக குறிப்பாக உணர்த்தி நிற்பது குறிப்பு நிலையாகும்.

எச்சவினைச் சொற்கள் விளக்கும் பொருள் நிலைகட்கு ஏற்ப அவை பல்வேறு வடிவினவாக வருதலான்,

அவற்றை இலக்கண நூலார் வாய்பாடுகளாலும் (தொகுதிக் குறியீடு) இறுதியில் நிற்கும் (விகுதி)இடைச் சொல் நிலைகளாலும் வகைப்படுத்திக் கூறுவர்.

செய்து, செய்யூ, செய்யா, செய்பு, செய்தென, செய்யியர், செய்யிய, செயின், செய, செயற்கு என்பவை வாய்ப்பாடுகள் (உண்டு வந்தான், காணூஉ வந்தான்). பின், முன், கால், கடை, வழி, இடத்து என்பவை இறுதிநிலைகளாகும் (கற்றபின் நிற்க அதற்குத் தக, மருந்து உண்ணாமுன் நோய் தீர்ந்தது). மேலும் வான், பான், பாக்கு, இன், ஆன். ஏன், ஏல் என்பவற்றையும் வினையெச்ச விகுதிகளாகக் கொள்வர் ஒரு சாரார். வான், பான் முதலியவை மேற்கூறிய வாய்பாடுகள் திரிந்து வேறுபட்ட நிலையினவே என்பது ஆழ்ந்து நோக்கின் புலனாகும். பொருள் வேறுபாடின்றி வடிவ வேறுபாடு கருதி வகைப்படுத்துதல் தொல்காப்பிய இலக்கண நெறியன்று. தருவான் வந்தேன், உண்பான் வந்தேன், தருபாக்கு வந்தேன் என்பவை காரணப் பொருளில் எதிர்காலம் பற்றி வரும் 'செயற்கு' என்னும் வாய்பாட்டின் திரிந்த குறியீடுகளேயாம்.

உண்டாற் பசிதீரும்; காணிற் குவளை கவிழ்ந்து நிலனோக்கும்; அவாவுண்டேல் உண்டாம் சிறிது என்பவை 'செயின்' என்னும் வாய்பாட்டுத் திரிபுகளாகும். இனிக் காண்டலும் இலமே என்றாற்போல் வனவற்றில் உள்ள 'உம்' இறுதிநிலையும் வினையெச்ச விகுதி எனக் கூறுவர். அது வினைகொண்டு முடிவனவெல்லாம் வினையெச்சமாகும் என்னும் கருத்தால் நேர்ந்த திரிபுணர்ச்சியாகும்.

உண்ணாமே நின்றான், உண்ணாமைச் சென்றான், உண்ணாமைக்கு வந்தான் என மே, மை, மைக்கு என்பவை எதிர்மறைக்கண் வினையெச்ச விகுதிகளாக வரும் என்பது சிலர் கருத்து. அவை 'செய்து' என்னும் வாய்பாடு எதிர்மறைக்கண் திரிந்த வடிவங்களேயாம்.

கண்டனன் வந்தான், உண்டனன் வந்தான் என்றாற்போல ஒரு தொடரின்கண் ஓரெழுவாய்க்குரிய பயனிலைகளாகப் பல வினைமுற்றுகள்வரின், இறுதியை உணர்த்தும்ஒருமுற்றைத் தவிர ஏனையவற்றை எச்சமாகக் கருதிக்கொள்ளுதல் இலக்கண நெறியாகும். இவற்றை முற்றெச்சம் என்பர். மற்றும் கோழி கூவப்பொழுது புலர்ந்தது என்பது கோழி கூவிப் பொழுது புலர்ந்தது என வாய்பாடு திரிந்து வருதலும் உண்டு. இவ்வாறு எச்சவினைச் சொற்கள் வடிவுதிரிந்து வேறுபட்டு வருதலான், பொருளை நோக்கி அவற்றிற்குரிய வாய்பாடுகளுள் அடக்கிக் கொள்ளல் வேண்டும். வினையெச்சச் சொற்கள் குறியீடு வேறுபட்டும் வருமென்பதற்கு இலக்கணவிதி 'வினையெஞ்சு கிளவியும் வேறுபல் குறிய'(தொல்-சொல் – எச்சவியல் சூ – 61) என்பதாகும்.

செய்து என்னும் வாய்பாட்டு வினையெச்சம் உண்டு வந்தான், ஓடிவந்தான், போய் நின்றான், விராய்ச்செய்தான், தழீஇக் கொண்டான் எனப் பல் வேறு குறியினதாக வரும். குறிப்பு வினையெச்சம் அன்றி, இன்றி, அல்லால், அல்லாமல் எனப் பல வடிவில் வரும். அன்றி, இன்றி என்பவை அன்று, இன்று என உகர ஈறாகத் திரிந்தும் வரும்.

எச்ச வினைகளுள் செய்து, செய்யா என்பவை இறந்தகாலம் பற்றிவரும். செய்யூ, செய்தென என்பவை பெரும்பான்மையும் இறந்த காலம் பற்றிவரும். செய்பு என்பது நிகழ்காலங் குறித்து நிற்கும். செய்யியா, செய்யிய, செயின், செயற்கு என்பவை எதிர்காலம் பற்றிவரும். செய என்பது காரணப்பொருளில் இறந்த காலம் பற்றியும் காரியப்பொருளில் எதிர்காலம் பற்றியும் சிறுபான்மை நிகழ்காலம் பற்றியும் வரும். பின், முன், கால், வழி, கடை, இடத்து என்பவையும் இவ்வாறு ஏற்புடைய காலத்தைச் சுட்டிவரும். அவற்றுள் செய்து, செய்பு, செய்யூ என்பவை தன் வினை முதல் வினையான் முடியும். ஏனைய தன் வினைமுதல் வினையானும் பிற வினை முதல் வினையானும் முடியும்.

இனிச் செய்த, செய்கின்ற செய்யும் என்னும் வாய்பாடுகள் பற்றி வரும் பெயரெச்சங்களை வினைச் சொல்லின் வகையாகக் கொண்டு இடைக் கால , பிற்கால இலக்கண நூல்கள் பெயரெச்சவினைகள் எனக் கூறும். பெயரெச்சம் வினையாலணையும் பெயர்களின் குறைந்த வடிவங்களேயன்றி வினை முற்றுச் சொல்லின் குறைவடிவங்கள் அல்ல என்பதை அவற்றைத் தொடர் மொழியாக்கின் அறிந்து கொள்ளலாம். ச.பா.

***எசன்*** மேற்குச் செருமனியின் மேற்குப் புறத்தில் உரூர் ஆற்றுக்கு அண்மையில் கி. பி. 852–இல் தோற்றுவிக்கப்பட்ட நகரம்; சமயத்துறையில் நீண்ட காலம் சிறப்பு வாய்ந்த ஒரு புனித இடம். இங்குப் பெரிய திருச்சபை ஒன்று கி.பி. 15–ஆம் நூற்றாண்டில் முடிக்கப் பெற்றது. உரோமன் கத்தோலிக்கரின் செல்வாக்கு அப்பகுதிக்குச் சிறப்பளித்து வந்தது. மேற்குச் செருமனிக்கே உயர்வு தந்த ஒரு பெரிய கன்னிமாடம் இங்குக் கவின்பெற விளங்கியது; கத்தோலிக்க மேற்றிராணியாரின் (Bishop) தலைமை இடமாகவும் பேரரசு போன்றும் விளங்கியது.

நெப்போலியனின் போர்ச் செயல்கள் காரணமாக கி. பி.1802-இல் எசன் (Essen) தன் சிறப்பை இழந்து, பிரசியா நாட்டுடன் இணைக்கப்பெற்றது.

சமயச் சிறப்பை இழந்த எசன் பிரசிய ஆட்சியின் கீழ்ப் பொருளாதாரத் துறையில் மேன்மை பெறலாயிற்று. கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டில் இரும்புத் தொழிலும் எஃகுத் தொழிலும் பெருகி, நிலக்கரிச் சுரங்கம் காரணமாக இந்நகர் மேன்மையுற்றது. இன்று உரூர் நிலக்கரிப் பகுதியில் மிக அதிக முன்னேற்றம் வாய்ந்த தொழில் நகரம் எசன்தான். இந்நகரம் இன்று ஏழு இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கட்டொகையுடன், தொழில் வளத்துடன் இயற்கைச் சிறப்பையும் பெற்றுத் திகழ்கிறது. 1923 முதல் 1925 வரை இப்பகுதியைப் பிரெஞ்சு மக்கள் கைப்பற்றியிருந்தனர். இரண்டாம் உலகப்போர் நடந்தபொழுது இது பாழடைந்தது. ஆனால், அதற்குப் பின்னர்ப் புதிய வேகத்துடன் முன்னேற்றமடைந்து, இப்பொழுது வியத்தகு முறையில் பல ஆராய்ச்சிக் கூடங்கள், கவின்கலைக் கூடங்கள் பொலிய புதிய நிருமாணத்தைப் பெற்றுள்ளது. பண்பாட்டுத் தொடர்பான நிகழ்ச்சிகளும் அரசியல் தொடர்பான பெருங்கூட்டங்களும் எசனின் சிறப்பை மிகுதிப்படுத்துகின்றன. வாணிகச் சிறப்பும் எழில் மிக்க பூங்காக்களும் இங்கு உண்டு. இங்குள்ள குருப்பு (Krupp) கைத் தொழிற்சாலைகள் சிறப்பு வாய்ந்தவை. தெ.பா.

**எசிடியசு கொலன்னா**: ஐரோப்பிய அரசியல் சிந்தனை வரலாற்றின் இடைக்காலத்தில் (அதாவது கி.பி. 500 முதல் கி.பி. 1500 வரை),காணப்பட்ட ஒரு முக்கிய நிகழ்ச்சி கிறித்தவத் திருச்சபைத் தலைவரான போப்புக்கும் புனித உரோமானியப் பேரரசருக்கும் இடையே தத்தம் உரிமை பற்றி எழுந்த தகராறாகும். இச்சச்சரவில் போப்பு பிரெஞ்சு அரசர்களுடைய துணையோடு புனித உரோமானியப் பேரரசர்களை வென்று அடக்கினார். ஆயினும், போப்புக்குத் துணையாக உதவி செய்த பிரெஞ்சு அரசர்களே போப்பை எதிர்க்கலாயினர். ஆன்மிகத்துறையில் முழு அதிகாரமுடைய போப்புக்கு உலகியல் துறையிலும் யாவரையும் தமது ஆணைகளின் வாயிலாகக் கட்டுப்படுத்தும் அதிகாரம் உண்டு என்று போப்புக்கு ஆதரவாக இருந்த சிந்தனையாளர்கள் கூறினர். அரசருக்கு உலகியல் துறைகளில் தலைமை அதிகாரம் உண்டு என்றும், அது போப்புக்கு உட்பட்டோ அவரைச் சார்ந்தோ இருக்கவில்லை என்றும் அரசரின் ஆதரவாளர்கள் கூறினர். இந்தத் தகராறு போப்பு 8-ஆம் போனிபேசு (Pope Boniface VIII) என்பவருக்கும் அவருடைய காலத்துப் பிரெஞ்சு அரசர் நீதிமானான பிலிப்பு (Philip, the Fair) என்பவருக்குமிடையே சில செயல்களின் மீது எழுந்தது. இவர்களுடைய காலத்தில் வாழ்ந்த எசிடியசு கொலன்னா (Egidius Colonna) என்பவர் தாம் எழுதிய 'திருச்சபையின் அதிகாரம்' (Power of the Church,or De Ecclesiastica Potestate) என்ற நூலில் போப்பினுடைய தலைமை அதிகாரமும், திருச்சபையினுடைய அதிகாரங்களும் உயர்ந்தவை என்று காட்டுகிறார்.

**கொலன்னா தம் கருத்துகளை உருவாக்கிய சூழ்நிலை**: கி.பி. 13, 14 ஆகிய இரு நூற்றாண்டுகளிலும் திருச்சபைச் சட்டம் (Canon Law) என்ற ஒருவகைச் சட்டமும், சமூக அல்லது குடிமை இயல் சட்டம் (Civil Law) என்ற ஒரு வகைச் சட்டமும் தெளிவாக உருவாயின. போப்பின் தலைமை அதிகாரத்தை வலியுறுத்திய திருச்சபைச் சட்ட அறிஞர்கள் (Canon Lawyers) திருச்சபைத் தலைவரான போப்பு தாம் கையாண்ட ஆன்மிகக் கட்டுப்பாட்டதிகாரத்தின் வாயிலாக வாழ்வின் எல்லாத் துறைகளையும் மேற்பார்வை செய்யக்கூடிய அதிகாரம் உடையவரென்று கூறினர். கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் சட்ட வகையான ஆய்வுகள் மிகுதியாகச் சட்ட அறிஞர்களால் மேற்கொள்ளப்பட்டன. ஒரே அரசியல் சமுதாயமென்னும் கருத்துக்கு அடையாளமாக இருந்த புனித உரோமானியப் பேரரசு வலுவிழந்துவிட்டதனால், தேசிய உணர்வு (Nationalism) வளர்ந்து, ஒவ்வோர் அரசும் தனதரசரின்கீழ்ச் சுதந்திரமாக இருக்கும் இயல்பில் அமைந்தது. கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் திருச்சபைச் சட்டத்தின் செல்லுபடியாகும் தன்மையைச் சமயச் சீர்திருத்தத் தலைவர்கள் மறுத்தனர். ஆனால் கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் திருச்சபைச் சட்டத்தின் கட்டுப்படுத்தும் ஆற்றலை எவரும் மறுக்கவில்லை. போப்புக்கும் பிரெஞ்சு அரசருக்குமிடையே கி.பி. 1296-ஆம் ஆண்டிற்கும் 1303-ஆம் ஆண்டிற்கும் இடையே அதிகாரத் தலைமைபற்றி எழுந்த தகராறில், ஏற்கனவே திருச்சபைச் சட்டத்தில் உறுதியாகச் சேர்க்கப்பட்டிருந்த போப்பின் பேரரசு அதிகாரக் கோட்பாடு (The Doctrine of Papal Imperialism) இப்போது முழுவடிவத்தில் ஆக்கப்பட்டது. அந்தச் சமயத்திலேயே இந்தக் கோட்பாட்டிற்கு எழுந்த எதிர்ப்பு அல்லது மறுப்பு பிரெஞ்சு தேசிய அரசு (French National State) உணர்வின் வடிவத்தில் தோன்றி, 'அரசுகள் சுதந்திரமுடையவை' என்ற கோட்பாடும் வலுவாயிற்று. பிரெஞ்சுத் திருச்சபைக் குருமார்மீது வரிவிதித்துப் பிரெஞ்சு அரசர் பிலிப்பு ஓராணையை விடுத்ததும், அரசருடைய இந்த முயற்சியைப் போப்பு 8-ஆம்

போனிபேசு கி.பி. 1296–ஆம் ஆண்டில் தாம் விடுத்த கிளெரிசிசு இலெய்க்கோசு (Clericis Laicos) என்னும் ஆணையின் வாயிலாகத் தடுத்து, அரசருடைய செயல் சட்டத்துக்கு முரணானதென்றும், தமது உடன் பாடில்லாமல் பிரெஞ்சுக் குருமார் அரசருக்கு வரி செலுத்தலாகாது என்றும் கூறினார். ஆனால், பிரெஞ்சுக் குருமார் பொதுவாக உலகியல் துறைகளில் பிரெஞ்சு அரசருடைய அதிகாரங்களை ஆதரிக்கவே, அதிர்ச்சி அடைந்த போப்பும் அரச ஆதரவாளரும் தத்தம் அதிகாரங்களை எடுத்துக் கூறவேண்டியதா யிற்று. கிறித்தவத் திருச்சபைக்கு இறுதியான, தலைமையான மேலாண்மை ,அதிகாரமும், இயக்கும் அதிகாரமும் (Ultimate Powers of Supervision and Direction) இருக்கின்றன என்றும், அவற்றைக் கையாளுகின்ற திருச்சபையும் அதனுடைய நீதி மன்றங்களும் உலகியல் நீதிமன்றங்களைத் தடுத்து நிறுத்தாமல், தகராறுக்கு உரிய எந்தக் கேள்வியை யும் தீர்ப்பதற்குரிய தலைமை அதிகாரிகளாக ஆகின்றன என்றும் போப்பின் தலைமை அதிகாரக் கோட்பாடு (Papal Theory) கூறிற்று. இதற்கு மாறாக, அரசருடைய தலைமை அதிகாரக் கோட் பாடு (Royalist Theory), ஆன்மிக அதிகாரத் துக்கு எவ்வளவு வரம்புகளிடுதல் வேண்டுமோ அவ்வளவு வரம்புகளை விதித்து, சமயத் துறை பற்றிய கேள்விகளுக்கு மட்டுமே ஆன்மிக அதிகாரம் கட்டுப்படுமாறு அதனைக் கட்டுப்படுத்தி, அது பிறரைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தைக் கையாளும்போது, அது உலகியலரசாங்கத்தைச் சார்ந் திருத்தல் வேண்டுமென்று கூறிற்று. போப்புகள் 3–ஆம் இன்னசெண்டும், 4–ஆம் இன்னசெண்டும் வகுத்த போப்பின் தலைமை அதிகாரக் கோட் பாட்டை ஆதாரமாக வைத்து 8–ஆம் போனிபேசு கி.பி. 1302–ஆம் ஆண்டில் புனித ஆணை (Unam Sanctum) என்ற பெயருடைய ஓர் ஆணையை விடுத்துப் போப்புத்தான் திருச்சபையில் தலைமை யான அதிகாரமுடையவராகையால், அவருக்கு ஒவ் வொருவரும் கட்டுப்பட்டு நடந்தால்தான் அவருக்கு உய்தி (Salvation) கிடைக்குமென்று கூறினார். காண்க: போப்பின் புனிதப் பேராணை. இந்த ஆணையினையே ஆதாரமாக வைத்து, எசிடியசு கொலன்னா கி.பி. 1302–ஆம் ஆண்டிலேயே 'திருச்சபையின் அதிகாரங்கள்' என்னும் ஒரு சிறந்த நூலை எழுதினார்.

கொலன்னா கூறிய திருச்சபை அதிகாரங்கள் பற்றிய கருத்துகள்: (அ) திருச்சபைத் தலைவரான போப்பே தலைமையான அதிகாரம் உடையவர் (Sovereignty or Plenitudo Potestatis). இந்தத் தலைமை அதிகாரமானது போப்பு என்ற பதவியி லேயே இருக்கிறது. அது அப்பதவியைக் கையாளுபவ ரின் பண்புகளைச் சார்ந்திருக்கவில்லை. ஆன்மிக அதிகாரியாகிய போப்புக்கு உலகியலதிகாரியாகிய அரசரை அமர்த்தவும், அவர் தவறு செய்யாமல் ஆளுகிறாரா என்று தீர்ப்புச் செய்யவும் அதிகாரம் இருக்கிறது. இதற்கு ஆதாரங்களாகக் கிறித்தவ மறைகளும், வரலாற்று முற்சான்றுகளும், கான் சுடண்டைன் கொடையும் (Donation of Constantine) (காண்க: கான்சுடண்டைன் கொடை) இருக் கின்றன. ஆன்மிக அதிகாரமே உலகியலதிகாரத்தை விட உயர்ந்தது. எப்போதும் உயரிய நிலையிலுள்ள ஒன்று தன்னிலும் தாழ்ந்ததைக் கட்டுப்படுத்தி ஆளு தல் வேண்டுமென்பதுதான் இயற்கையின் சட்ட மாகும். உலகத்தில் பருப்பொருள் எல்லாம் ஆன் மிகப் பொருளால் கட்டுப்படுத்தப்படுதல் போலவே, கிறித்தவச் சமூகத்தில் எல்லா உலகியல் பிரபுக்களும் ஆட்சியாளரும் திருச்சபைக்கும் ஆன்மிக அதிகாரிகளுக் கும் தலைவராகவுள்ள போப்பினால் ஆளப்படுதல் வேண்டும்.

(ஆ) ஒருவர் சொத்துகளையும் அரசியலதிகாரத் தையும் பெற்றிருக்கும் உரிமையானது ஒரு வழி அல்லது முறையே தவிர அதுவே வாழ்வின் நோக்க மாக மாட்டாது. மேலாட்சி(Dominium) எனப் படும் இவ்வுரிமைகள் எந்த நோக்கங்களுக்காகக் கையாளப்படுகின்றனவோ, அந்த நோக்கங்களுக்கு ஏற்பவே அவற்றுக்கு மதிப்பு இருக்கும். பொருள் களும் அரசியலதிகாரமும் மனித வாழ்வின் நோக்கங் களுக்காகப் பயன்படும்போதுதான் அவை நல்லவை ஆகின்றன. மனித வாழ்வின் நோக்கங்கள் ஆன்மிகத் துறை நலன்களேயாகையால், ஒருவர் தமது உடை மையையும் அரசியலதிகாரத்தையும் ஆன்மிக நலன் களுக்குப் பயன்படுத்தாவிட்டால், அவற்றால் அவ ருக்குப் பயனுமில்லை; உய்தியுமில்லை; அழிவுதான் ஏற்படும். ஆகையால், எல்லா உடைமைகளும் அர சியலுரிமைகளும் நியாயமானவையாகவும், சட்டத் துக்கு முரண்பாடற்றவையாகவும் இருத்தல் வேண்டு மாயின், அவை திருச்சபையினால் புனிதத் தன்மை பெறுதல் வேண்டும். இவ்விரு உரிமைகளும் ஒருவருக் குத் தமக்குத் தசை (Flesh) வழியாகப் பிறப்பு அளித் தவரிடமிருந்து வருகிறது என்று கூறுதல் தவறு ஆகும். சொத்தைப் பெற்றுப் பயன்படுத்துபவரும் அரசியலதிகாரத்தைக் கையாளுபவரும் கடவுளுக்கு, அதாவது திருச்சபைக்குக் கட்டுப்பட்டிராவிட்டால், அவருக்கு அவை இரண்டும் சட்டப்படி உரிமையாக மாட்டா. ஒருவர் கிறித்தவராக ஞானம் பெறுதலும் தீவினைக்கு வருந்துதலும் வேண்டும்; அப்போதுதான் அவர் பொருளும் அதிகாரமும் பெறுதற்கு உரியர். கிறித்தவரல்லாதவர் இவற்றைப் பெறுதல் என்பது

சட்டப்படி உரியதல்லாததைக் கைப்பற்றுதலாகும். ஒருவர் சமயத்துக்குப் புறம்பாக்கப்படும்போது, அவருக்குப் பாதுகாப்பான சட்டமும் ஒப்பந்தங்களும் உடைமை உரிமைகளும் திருமண உறவும் நீங்கிவிடுகின்றன.

(இ) போப்பினுடைய தலைமை அதிகாரத்துக்கு எதிரான வாதங்கள் மறுப்புக்குரியவை. ஆன்மிக அதிகாரம் இருப்பதனால், உலகியலதிகாரம் மறுக்கப்படுகிறதென்றோ அழிக்கப்படுகிறதென்றோ கூறுதல் இயலாது. தேவைப்படும்போது ஆன்மிக நலன்களைப் பாதுகாப்பதற்காகவே போப்பின் ஆன்மிக அதிகாரம் கையாளப்படுதல் வேண்டும் என்பதே பொருள். அரசர்களுக்கிடையே அமைதியை நிலைநிறுத்தவும், உடன்படிக்கைகள் பின்பற்றப்படுமாறு செய்யவும் திருச்சபை தன் அதிகாரத்தைக் கையாள உரிமையுண்டு. போப்பின் தலைமை அதிகாரம் எவரையும் சாராமல், தன்னைத்தானே இயக்கிக் கொள்ளும் தன்மை உடையது. கடவுளும் போப்பும் மட்டுமே அதிகாரிகளாவர். போப்பை எவரும் நீக்க இயலாது. அவர் கடவுளுக்குத் தவிர வேறெவருக்கும் பொறுப்புடையவரல்லர்.

மதிப்பீடு: போப்பினுடைய தலைமை அதிகாரத்தை எசிடியசு நியாயமானதென்று காட்டும்போது, அவர் திருச்சபைத் தலைவர்களுள் ஒருவராகிய புனித அகசுட்டினுடைய (Saint Augustine) திருச்சபைத் தலைமைக் கோட்பாட்டைப் பண்டைய கிரேக்கச் சிந்தனையாளர் அரிசுட்டாட்டிலின் சிந்தனையோடு, அதாவது பொருளின் வடிவமும் தன்மையும் என்ற கோட்பாட்டோடு (Doctrine of Form and Matter) இணைக்கிறாரென்று ஆசிரியர் சபைன் கூறுகிறார். பருப்பொருளாக இருப்பது ஆன்மிக அதிகாரியின் கட்டுப்பாட்டில்தானிருத்தல் வேண்டுமென்பது அரிசுடாட்டிலின் கோட்பாடு ஆகும். மேலும், பொருளும் அரசியலதிகாரமும் கருவிகள் அல்லது வழிகளே தவிர முடிவுகளாகமாட்டா என்பதும் அரிசுடாட்டிலின் கருத்தேயாகும். இவ்வாறிருப்பினும், எசிடியசு ஓர் அரசு நியாயமான அரசாக இருக்குமானால், அது ஒரு கிறித்தவ அரசாகத்தான் இருத்தல் வேண்டும் (A Just State Must Necessarily be Christian) என்ற முடிவுக்கு வந்துவிடுகிறார். நடைமுறையில் கிறித்தவரல்லாத அரசுகளுமிருக்கின்றன. கிறித்தவரல்லாதவரும் அரசியலதிகாரத்தைக் கையாளுதல் தவறில்லை என்று கூறிய புனித தாமசு அக்குவினாசின் கருத்தைவிட எசிடியசின் கருத்துத் தாழ்ந்ததே ஆகும். புனித தாமசு உலகியலரசாங்கத்தின் ஒழுக்க இயல் உரிமைகளை ஆதரிக்க, எசிடியசு அவ்வாறு செய்யவில்லை. எசிடியசு கூறும் போப்பின் இறைவனருளிய உரிமை என்ற கோட்பாடு (Divine Right of the Pope) பிற்காலத்தில் அரசர்களுக்கும் அவர்களுடைய குடிகளுக்குமிடையே எழுந்த போராட்டத்தில் அரச ஆதரவாளருக்கு மிகவும் பயனுள்ள ஒரு கருவியாக ஆயிற்று.

பா.சு.

துணை நூல்கள்:

Hearnshaw, F.J.C. (Ed.), Social and Political Ideas of Some Great Mediaeval Thinkers, London, 1923.

Sabine, G.H., A History of Political Theory, Oxford & I B H Publishing Co., Calcutta, 1971.

**எசுக்கிமோக்கள்** வடதுருவப் பகுதிகளில் வாழும் மக்கள். இவர்கள் உருசியாவின் வடகிழக்கு முனையிலிருந்து அலாசுகா, வட கனடா, கிரீன்லாந்து வரை காணப்படுகின்றனர். இவர்கள் வாழும் பகுதிகளுள் குறிப்பிடத்தக்கவை சைபீரியாவின் வடகிழக்கு முனை, பெரிங்குக் கடலில் (Bering Sea) உள்ள தீவுகள், அலாசுகாவின் கடற்கரைப் பகுதிகள், கனடாவின் வட கடற்கரைப் பகுதிகள், கனடாவின் வடக்கிலுள்ள தீவுகள், இலாப்ரடார்ப் பகுதிகள் (Labrador Regions), கிரீன்லாந்தின் மேற்குக் கடற்கரையின் பெரும்பாலான பகுதியும் கிழக்குக் கடற்கரைப்பகுதியில் சிறிதளவும் ஆகும்.

எசுக்கிமோக்கள் வாழும் இப்பகுதிகள் உலகின் மிகக் கடுமையான குளிர் காற்று வீசும் கால நிலையை உடைய பகுதிகள் ஆகும். குளிர் மாதங்களில் இங்கு வெப்பநிலை 20°F(–29°C) முதல் 30°F (–34°C) வரை உள்ளது. குளிர்காலங்களில் வீசும் பனிக்காற்றும் இடம் பெயரும் பனிக்கட்டிகளும் எசுக்கிமோக்களைப் பல நாட்கள் வரை வீடுகளிலேயே அடைத்துவிடுகின்றன. எசுக்கிமோக்கள்(Eskimos)பகுதிகளிலுள்ள ஏரிகளிலும் ஆறுகளிலும் ஆண்டில் ஒன்பது மாதங்கள் உறைபனியாகக் காணப்படுகிறது. இவர்கள் வாழும் பகுதிகள் மரங்களற்ற மிகப் பெரும் சமவெளிப் பகுதிகளாகக் காட்சியளிக்கின்றன. இச்சமவெளிகள் துந்திரச் சமவெளிகள் (Tundra Plains) எனக் கூறப்படுகின்றன. ஆண்டில் பெரும்பான்மைக் காலங்களில் உறைபனியாகக் காணப்படும் இச்சமவெளிகள் கோடைக்காலங்களில் 1 அடி முதல் 2 அடி வரை உருகிக் குளங்களையும் ஆறுகளையும் சதுப்புப் பகுதிகளையும் ஏற்படுத்துகிறது. இதனால், இப்பகுதிகளில் அடர்ந்து வளரும் காளான் வகைகளும் (Lichens) பாசி வகைகளும் (Mosses) சிறு செடி கொடிகளும்

பல வண்ணங்களில் காட்சியளிக்கும் காட்டு வகைப் பூக்களும் கோடையில் காணப்படுகின்றன. இக்காலங்களில் சில பகுதிகளில் பரவலாகச் சிறு மரங்களும் வளருகின்றன.



எசுக்கிமோக்கள

எசுக்கிமோப் பகுதிகளில் வளரும் விலங்கினங்களுள் குறிப்பிடத்தக்கவை ஆர்க்டிக்கு நரிகள் (Arctic Foxes), ஆர்க்டிக்கு முயல்கள் (Arctic Hares),ஆர்க்டிக்கு ஓநாய்கள் (Arctic Wolves), கலைமான்கள் (Caribou), கத்தூரி எருதுகள் (Musk Oxes), வடதுருவக் கரடிகள் (Polar Bears), கடல்நாய்கள் (Seals), திமிங்கலங்கள் (Whales) முதலானவையாகும். வாத்து, சிலவகைப் பறவைகள் முதலானவை சில பருவங்களில் மட்டும் காணப்படுகின்றன.

பச்சை இறைச்சியை உண்பவர்கள் என்னும் பொருள்பட அப்னாக்கி இந்தியர்கள்(Abnaki Indians) இவர்களை எசுக்கிமாண்ட்ரிக்கு(Esquimantric) எனக் குறிப்பிட்டனர். இச்சொல்லில் இருந்தே எசுக்கிமோ என்னும் பெயர் பிறந்தது. எசுக்கிமோக்கள் தங்களை உண்மையான மக்கள் என்னும் பொருளில் இனுயித்து (Inuit) அல்லது ஊயித்து (Yuit) என்று கூறிக் கொள்கின்றனர். இவர்கள் எசுக்கிமோ என்னும் தனி மொழியைப் பேசுகின்றனர்.

எசுக்கிமோக்கள் 10,000 ஆண்டுகளுக்கு முன்னர்ச் சைபீரியாவை இணைத்த நிலப்பகுதியில் தோன்றினர் என இனவியலார் குறிப்பிடுவர். பின்னர், இவர்கள் வடகிழக்குச் சைபீரியாவிற்குப் பரவி, அங்கிருந்து பெரும் பான்மையோா அலாசுகாவிற்குப் பரவினர். இங்கிருந்தே எசுக்கிமோக்கள் இன்று வாழும் அனைத்துப் பகுதிகளுக்கும் இடம் பெயர்ந்தனர். இவர்களது இடப்பெயர்வை ஆழ்ந்து ஆராய்ந்த இனவியலார் இவர்கள் இரண்டு நிலைகளில் இடம்பெயர்ந்தனர் என்பர்; 5,000 ஆண்டுகளுக்கு முன்னர் அலாசுகாவிலிருந்து கிரீன்லாந்துப் பகுதிக்குச் சென்றதை முதல் நிலை என்றும், 1200 ஆண்டுகளுக்கு முன்னர் இப்பகுதியிலிருந்து பெருமளவு பரவியதை இரண்டாம் நிலை என்றும் கூறுவர். இருப்பினும், இவர்களால் ஒவ்வோர் இடப்பெயர்வும் எவ்வளவு காலம் நீடித்தது என்பதை அறுதியிட்டுக் கூற முடியவில்லை. கிரீன்லாந்து, கனடா,வடகிழக்கு அலாசுகா ஆகிய பகுதிகளிலுள்ள எசுக்கிமோக்களின் முன்னோர்கள் 1200 ஆண்டுகளுக்கு முன்னர் இடம் பெயர்ந்தவர்களே ஆவர்.

எசுக்கிமோக்கள் குள்ளமானவர்கள்; உடலுக்கேற்றவாறு கால்கள் குட்டையானவை. இளம் பழுப்பு நிறத் தோலையும், நேரான கருப்பு மயிரினையும், கருமையான கண்களையும், எடுப்பான கன்ன எலும்புகளைக் கொண்ட அகன்ற முகத்தையும் கொண்டுள்ளனர். இவர்களின் மூதாதையர்களும் அமெரிக்க இந்தியர்களின் (American Indians) மூதாதையர்களும் 10,000 ஆண்டுகளுக்கு முன்னர்ச் சைபீரியாவில் ஒன்றாக வாழ்ந்திருந்தனர் என்றாலும், இவர்களை வடக்கு ஆசிய மக்களோடு சேர்ப்பர். இவர்கள் மங்கோலிய இனத்தைச் சேர்ந்தவர்கள்.


இவர்கள் தாம் வாழும் இடத்திற்கேற்பப் பல பெயர்களில் குறிக்கப்படுகின்றனர். சைபீரிய எசுக்கிமோக்கள் பெரிங்குக் கடற்கால் எசுக்கிமோக்கள் (Bering Strait E.), வட அலாசுகா எசுக்கிமோக்கள், தென்மேற்கு அலாசுகா எசுக்கிமோக்கள், பசிபிக்கு எசுக்கிமோக்கள், மெக்கன்சி எசுக்கிமோக்கள்(Meckenzie E.), காப்பர் எசுக்கிமோக்கள் (Copper E.), நெட்சிலிக்கு எசுக்கிமோக்கள் (Netsilik E.), கரிபவு எசுக்கிமோக்கள் (Caribov E.),இக்லூலிக்குஎசுக்கிமோக்கள்(Igloolik E.), சாட்லிர்மூய்ட்டு எசுக்கிமோக்கள்(Sadlirmuit E.),பபின்லாந்து எசுக்கிமோக்கள் (Baffinland E.),இலாப்ரடார் எசுக்கிமோக்கள் (Labrador E.), இலாப்ரடார்க் கடற்கரை எசுக்கிமோக்கள், துருவப் பகுதி எசுக்கிமோக்கள் (PolarE.), கிழக்குக் கிரீன்லாந்து எசுக்கிமோக்கள், மேற்குக் கிரீன்லாந்து எசுக்கிமோக்கள் முதலானோர் குறிப்பிடத்தக்கவர்கள். எசுக்கிமோக்கள் மக்கள் தொகை 92,000-க்கும் மேற்பட்டதாகும்.. உருசியப்

பகுதியில் 1,300க்கு மேற்பட்டும், அலாசுகாப் பகுதிகளில் 35,000 க்கு மேற்பட்டும், கனடாப்பகுதிகளில் 17,000க்கு மேற்பட்டும், கிரீன்லாந்துப் பகுதிகளில் 39,000க்கு மேற்பட்டும் இவர்கள் வாழ்கின்றனர்.


ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தனிப்பட்ட வாழ்க்கை முறையினைக் கொண்டவர்களாதலால், இவர்களைப் பற்றிய இனக்குழுவியல் தரவுகள் (Ethnographic Data ) மிகுதியாக மானிடவியலாரால் சேகரிக்கப்பட்டுள்ளன. எசுக்கிமோக்களின் குடியிருப்புகள் இரண்டு வகையானவை. குளிர்காலக் குடியிருப்புகள் பனிக்கட்டிகளால் கட்டப்படும் இக்லூ (Igloo) எனப்படும் வீடுகளைக் கொண்டவை. இக்லூ வீடுகள் அவர்களின் பயன்பாட்டிற்கு ஏற்றவாறு கட்டப்படுகின்றன. மிகப் பெரும் குளிர்கால வீடுகள் 15 அடி அகலமும் 12 அடி உயரமுமுடையனவாகும். மிகப் பெரும் பனிப் பலகையிலிருந்து 3 அடி நீளம், 112 அடி அகலம், 4–6 அங்குலக்கனம் கொண்ட பனிக் கட்டிகளைக் கொண்ட தாழ்வான நுழைவாயிலும், சற்று வளைந்து உயரமான சரக்கு வைப்பறையும், அதற்கடுத்து வட்டவடிவில் வாழும் அறையும் இவர்கள் கட்டுகின்றனர். வாழும் அறையின் முகப்பில் சன்னல் ஒன்றையும் அமைக்கின்றனர். இந்தச் சன்னல்கள் கடல் நாய்க்குடலினால் செய்யப்பட்டு, ஒளி ஊடுருவிச் செல்லும் தன்மையைக் கொண்டவை. இவ்வித அமைப்புகளினால் காற்றின் வேகத்தால் பாதிக்கப்படாமலும் கதகதப்பை வெளியேற்றாமல் காக்கவும் முடிகிறது. நிரந்தரமற்ற இடைக்கால வீடுகள் பொது



கூடார வீடு




குளிர்காலக் குடியிருப்புகள்




மேல் ஆடை உள் ஆடை



பனிக்கட்டி வீட்டின் உட்புற அமைப்பு


வாக 7 அடி அகலமும் 5 அடி உயரத்துடனும் கட்டப் படுகின்றன. கோடைக்காலங்களில் விலங்குத் தோலி னால் மூடப்பட்ட கூடார வீடுகளில் வாழ்கின்றனர். இவர்களின் குடியிருப்புகள் ஒன்று முதல் நானூற்றுக்கும் மேற்பட்ட வீடுகளைக் கொண்டுள்ளது. காண்க: இக் லூ.

இவர்கள் விலங்குகளின் தோலினால் செய்யப் பட்ட ஆடைகளையே பெரும்பாலும் அணிகின்றனர். ஒவ்வொரு பகுதிக்குமிடையே ஆடையின் வேலைப் பாட்டில் வேறுபாடுகள் காணப்படினும் ஆண்கள் பெண்கள். குழந்தைகள் அனைவருமே முக்காடுடன் கூடிய மேற்சட்டை (Hooded Jacket), பர்க்கா (Parka) எனப்படும் இறுக்கமான கீழ்க் காற்சட்டை, காலுறை கள், கையுறைகள், ஓரக் கையுறைகள் (Mittens), கால் புதையரணங்கள் (Boots) முதலான அனைத்தையும் அணிகின்றனர். பனிக்கட்டிகள் சூரிய ஒளியினை வெகு வாக எதிரொளிப்பதால், மரம் அல்லது எலும்புகளால் செய்யப்பட்ட மூக்குக் கண்ணாடி போன்ற அமைப்பை எப்போதாவது பயன்படுத்துகின்றனர். இதில் கண்களின் பார்வைக்கு மட்டும் இரண்டு துளை கள் இருக்கும் முக்காட்டுடன் கூடியமேற்சட்டை தலை, கை, வயிறு முதலானவற்றை மறைத்து இடுப்பு வரை யிலோ முட்டிக்குக்கீழ் வரையிலோ இருக்கும். உள் ளுடைகளின் உரோமங்கள் உட்புறமாக உள்ளதால் உடலைக் கதகதப்பாக வைக்கிறது. அதன் மேல் அணி யும் ஆடையில் உரோமங்கள் வெளிப்புறமாக இருப்ப தால் குளிர் காற்றுப் பெரிதும் பாதிப்பதில்லை. பெண் கள் தங்கள் பர்க்காவின் பின்புறத்தில் பை போன்ற அமைப்பு வைத்துத் தைப்பதால் மிகுந்த தூரம் செல் லும்போதுகுழந்தைகளைப் பின்புறம் உட்காரவைத் துச் செல்கின்றனர்.


கலைமான்களின் தோல் மென்மையாகவும் இலேசாகவும் இருப்பதால், இத்தோலையே பெரும் பாலும் ஆடைகள் செய்ய விரும்புகின்றனர். கலை மான் தோல் கிடைக்காதபோது கடல்நாய், துருவக் கரடி, ஆர்க்டிக்கு நாய்கள் முதலானவற்றின் தோலைப் பயன்படுத்துகின்றனர்.

கடல்நாய், கலைமான் முதலானவற்றின் இறைச் சியே இவர்களின் முதன்மையான உணவாகிறது. இது தவிர்த்து மீன்கள், பறவைகள், கத்தூரி எருது, துருவக் கரடி, திமிங்கலம் முதலானவற்றின் இறைச்சியையும் இவர்கள் உண்கின்றனர். சூடான நீரையும் கடல் நாயின் இரத்தத்தையும் கலந்து செய்யும் பானத்தை யும், வெள்ளைத் திமிங்கலத்தின் தோலையும் மிகவும் விரும்புகின்றனர். கோடைக் காலங்களில் சிலவகைக் கனிகளையும் கிழங்குகளையும் செடிகளின் தண்டை யும் உண்கின்றனர். பெரும்பான்மைக் காலங்களில் இறைச்சியைச் சமைக்காமல் பச்சையாக உண்கின்ற னர். மெழுகுக் கல்லினால் (Soapstone) செய்யப்பட்ட விளக்குகளைக் கொண்டு சில காலங்களில் சமைத்து உண்பதுமுண்டு. தட்டுகளை மரத்திலிருந்தும், இறைச்சியைக் கிழித்துச் சாப்பிடும் குச்சிகளை எலும்புகளிலிருந்தும், நீர் குடிக்கும் குவளைகளைக் கத்தூரி எருதின் கொம்புகளிலிருந்தும் செய்து கொள் கின்றனர்.

மீன் பிடித்தலும் வேட்டையாடுதலும் இவர்களது முதன்மைத் தொழில்கள். வேட்டைத் தொழிலின் மூலம் உணவைப் பெறுதலன்றி, உடைகள், கூடார வீட்டிற்கான தோல், வீட்டுச் சாமான்கள், வேட்டைக் கருவிகள் முதலானவற்றையும் பெறுகின்றனர். கடல் நாய்களையும் கலைமான்களையும் பெரும்பான்மை யாக வேட்டையாடுகின்றனர். கத்தூரி எருது, துருவக் கரடி, திமிங்கலம், பறவைகள் முதலானவற்றை எப் போதாவது வேட்டையாடுகின்றனர். எரிசுட்டிகளை யும் (Harpoons) திருகு சுருள் வில்லையும் (Spring Bait) வேட்டைக்குப் பெரிதும் பயன்படுத்துகின்றனர். அலாசுகா, சைபீரியப் பகுதி எசுக்கிமோக்கள் மீன் களைப் பிடிக்க வலைகளைப் பயன்படுத்துகின்றனர். பெரும்பான்மைக் காலங்களில் பனிப்படுகையில் காணப்படும் துளைகளின் வழியே மீன்பிடித்தல் நிகழ் கிறது. இதைப் போன்றே கடல் நாய்கள் சுவாசிக்கும் பொருட்டுப் பனிக்கட்டியில் ஏற்படும் துளையின் உதவியைக் கொண்டு, கடல்நாய்களைப் பிடிப்பதும் இவர்களது வேட்டைத் திறனுக்குச் சான்றுகளாகும்.



காயக்குப் படகு



உமியக்குப் படகு

எசுக்கிமோ படகு

எசுக்கிமோக்கள் பனிக்கட்டி, கடல் முதலானவற் றோடு வாழவேண்டியுள்ளதால் இவர்களின் போக்கு

வரத்துச் சாதனங்கள் பல்வேறு வகையானவை. பனிக் கட்டியில் செல்வதற்குக் கட்டுக் கோப்புப் பனிச்சறுக்கு வண்டிகள் (Frame Sleds), பலகைப் பனிச் சறுக்கு வண்டிகள் (Plank Sleds) ஆகிய இரண்டு வகையான வண்டிகளைச் செய்கின்றனர். கட்டுக் கோப்புப் பனிச் சறுக்கு வண்டிகள் மிகுதியான எண்ணிக்கையிலான மரச்சட்டங்களைக் கொண்டு வேலைப்பாடுகளுடன் செய்யப்படுவனவாகும். இவ்வகையினை அலாசுகா, சைபீரிய எசுக்கிமோக்கள் பயன்படுத்துகின்றனர். பல கைப் பனிச்சறுக்கு வண்டிகள் நீண்ட இரண்டு பல கையின் மேல் குறுக்காக அருகருகே சிறிய மரச்சட் டங்கள் பொருத்தப்பட்டனவாகும். இவ்வகையினைக் கனடா, கிரீன்லாந்து எசுக்கிமோக்கள் பயன்படுத்து கின்றனர். ஆற்றிலும் கடலிலும் நெடுந்தூரம் பயணம் செய்து வேட்டையாடப் படகுகளைப் பயன்படுத்து கின்றனர். இவற்றிலும் இருவகையுண்டு. ஒருவகை, காயக்குப் படகுகள் (Kayak Boats), மற்றொரு வகை உமியக்குப் படகுகள்(Umiyak Boats) ஆகும். காயக்குப் படகுகளின் நடுவில் குறுகிய இடம் மட்டுமே உள்ள தால் ஒருவர் மட்டும் பயணம் செய்யலாம். இவ்வகைப் படகுகளைக் கடல்நாய்களின் தோலாலோ கலை மான்களின் தோலாலோ செய்கின்றனர். உமியக்குப் படகு ஒன்றில் பலர் பயணம் செய்யலாம். இப்படகு கள் கடல்நாய் தோலால் மட்டுமே செய்யப்படுகின் றன. கிரீன்லாந்து, கனடாவின் சில பகுதிகள் தவிர்த்து, ஏனைய பகுதியினர் உமியக்குப் படகு களையே பயன்படுத்துகின்றனர்.

எசுக்கிமோக்களின் சமூக வாழ்க்கை பல குழுக் களின் அடிப்படையில் அமைந்ததாகும். இவர்கள் ஒவ் வொரு பகுதியிலும் பல குழுக்களாகப் பிரிந்து, தனித் தனி குடியிருப்புகளை அமைத்து வாழ்கின்றனர். ஒவ் வொரு குழுவிலுமுள்ளோரின் எண்ணிக்கை பருவத்திற் கும் வேட்டை முறைக்கும் ஏற்ப மாறுபடுகிறது. வட கனடா எசுக்கிமோக்கள் குளிர்காலங்களில் கடல்நாய் களை வேட்டையாடப் பெருங்குழுவாகத் திரண்டு வேட்டையை மேற்கொள்கின்றனர். பிற காலங்களில் சிறு குழுக்களாகப் பிளவுற்று வாழ்கின்றனர். பொது வாக, இவர்கள் குடும்பம் பெற்றோர்கள், அவர்களது மணமாகா மக்கள், மணமான மகன், அவன் மனைவி, மக்கள் ஆகியோரைக் கொண்டதாகும். பொதுவாக, இவர்களின் எண்ணிக்கை 20 வரை இருக்கும். இவர்கள் அனைவரும் ஒரே வீட்டிலோ குழுமமான சில குடிசைகளிலோ வாழ்வர். இவர்கள் குழந்தைகளைச் செல்வங்களுக்கு நிகராகக் கருதுகின் றனர். உணவுப் பற்றாக்குறை காணப்படும் பகுதிகளி லுள்ள எசுக்கிமோக்கள் தமக்குப் பிறக்கும் குழந்தை களுள் சிலவற்றைப் பிறந்தவுடன் கொன்றுவிடுகின்ற னர். தம் குழந்தைகளின் வாழ்க்கைத் துணையை இளம் வயதிலேயே முடிவு செய்து விடுகின்றனர். பெரும்பான்மையோர் இளங் குமரப் பருவத்திலேயே மணம் செய்து கொள்கின்றனர். திருமணத்தன்று பொதுவாக சடங்குகள் நிகழ்த்தப்படுவதில்லை. இரு வரும் ஒன்றாகச் சேர்ந்து வாழ முற்படுவதையே திரு மணம் எனக் கொள்கின்றனர்.

இவர்கள் இயற்கை கடந்த ஆவிகளைப் பெரிதும் நம்புகின்றனர். மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் ஆவி உண்டென நம்புகின்றனர். உயிர்கள் பிரிந்த வுடன் அவை பிற உலகங்களில் வாழ முற்படுகின்றன என்பர். காற்று, காலநிலை, சூரியன், சந்திரன் முத லானவற்றின் ஆவிகளைப் பலவாறு வழிபடுகின்றனர். கடலின் அடியில் வாழ்வதாக நம்பும் 'செட்னா' (Sedna) என்னும் கடல் தேவதையே கடல் விலங்கு களை இயக்குகின்றது என்பர். இறந்தவர்களை விலங்குகளின் தோலால் மூடிப் பனிக்கட்டிகளால் மூடிவிடுவர்.

ஐரோப்பியரின் தாக்கத்தால் இன்றைய எசுக்கி மோக்கள் மிகுந்த வளர்ச்சி பெற்றுள்ளனர். உருசியா, அலாசுகா, கனடா, கிரீன்லாந்து ஆகிய பகுதிகளில் பலவாறு வளர்ச்சியுற்றுள்ளனர். மேற்கூறிய ஒவ்வொரு நாட்டு அரசும் எசுக்கிமோக்களைப் பல துறைகளில் வளர்ச்சிபெறச் செய்துள்ளது. குறிப்பாக, கலைமான் கள் வளர்ப்பதிலும் கடல் பொருள்கள் உற்பத்தி செய்து வாணிகம் செய்வதிலும் இவர்கள் முன்னேறி யுள்ளனர். மருத்துவ வசதிகள், குடியிருப்புகள், பள்ளி கள், அரசுத் துறைத் தொழில்கள் முதலான நலன்களை அமெரிக்கா, கனடா, உருசியா முதலான அரசுகள் இவர்களுக்கு வழங்கியுள்ளன. சீ.ப.சீம.ந.பு.

**எசுக்கிமோ மொழி:** எசுக்கிமோ மக்களால் பேசப்படும் மொழிகளே எசுக்கிமோ மொழிகள் எனக் கூறப்படுகின்றன. இவர்கள் கிரீன்லாந்து முதல் பேரிங்குக் கடல் வரையிலும் உள்ள நீண்ட பெரிய கடலோரப் பகுதிகளில் ( 5,600 கி. மீ ) வாழ்கின்ற னர். கிரீன்லாந்து, வட அமெரிக்காவில் அலாசுகா, உருசிய நாட்டில் சைபீரியா போன்றவை இவர்கள் வாழும் இடங்கள் ஆகும். கிரீன்லாந்தில் ஏறத்தாழ 30,000 மக்களும், கனடாவில் 12,000 மக்களும், அலாசுகாவில் 18,000 மக்களும், சைபீரியாவில் 1,500 மக்களும் என ஏறத்தாழ 60 ஆயிரத்துக்கும் அதிக மான மக்கள் வாழ்கின்றனர்.

எசுக்கிமோ என்ற சொல் வட அமெரிக்காவில் இவர்கள் அருகில் வாழும் அமெரிக்க இந்திய மக்க ளால் கொடுக்கப்பட்ட பெயராகும். இது 'பச்சை

மாமிசம் சாப்பிடுபவர்' என்னும் பொருள் தரும் ஒரு சொல்லிலிருந்து உருவானதாகும். ஆனால், இவர்கள் தங்களை இனுயித்து (Inuit) என வழங்குவர். அதன் பொருள் 'உண்மை மக்கள்' என்பதாகும். இம்மொழிகள் எசுக்கிமோ-அல்யுத்து என்ற மொழிக் குழுவின் ஒரு பிரிவாகும்.

எசுக்கிமோ மொழி சைபீரியா, அலாசுகா, கனடா, கிரீன்லாந்து முதலிய இடங்களில் வாழும் எசுக்கிமோ மக்களால் பேசப்படுகிறது. கிரீன்லாந்தில் பேசப்படும் எசுக்கிமோ மொழிக்கும் அலாசுகாவில் பேசப்படும் எசுக்கிமோ மொழிக்கும் இடையே வேற்றுமைகள் பல உண்டு. ஒருவர் இன்னொருவரின் பேச்சைப் புரிந்துகொள்ளுதலரிது. இன்னும் குறிப்பிட்டுச் சொன்னால் ஒவ்வோர் இடத்திலுமே ஒரு சில கிளைமொழிகள் இருக்கக் காணலாம்.

மேலும், இவை எழுத்திலும் தம்மிடையே வேற்றுமை உடைய. கிரீன்லாந்து, இலாப்ரடார் போன்ற இடங்களில் உரோமன் எழுத்துகளும், சைபீரியா போன்ற இடங்களில் சிரில்லிக்கு எழுத்துகளும் வழக்கத்தில் உள்ளன. இம்மொழிகளில் வேதாகமங்கள் போன்ற நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

இம்மொழியில் அ, இ, உ ஆகிய மூன்று உயிர்களே காணப்படுகின்றன. எனினும், இவை பக்கத்தில் வரும் ஒலிகளுக்கேற்ப மாறும் தன்மையன. கிளைமொழிகளைப் பொறுத்து இதன்கண் பதின்மூன்றிலிருந்து இருபது வரை மெய்யெழுத்துகளைக் காண முடியும். சில கிளைமொழிகளில் காணப்படும் எல்லாச் சொற்களுமே உயிரில் தொடங்குவது மட்டுமன்றி, உயிரிலேயே முடியவும் செய்கின்றன.

இம்மொழிகளில் காணப்படும் பெயர்ச்சொற்களும் வினைச்சொற்களும் ஒருமை, இருமை, பன்மை எண் பகுப்பினைக் காட்டுவனவாகும். இத்தகைய வேறுபாடு பலவேறு ஒட்டுகளால் காட்டப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| இக்லு | (Iglu) | வீடு |
| இக்லுக் | (Igluk) | இரு வீடுகள் |
| இக்லுத் | (Iglut) | வீடுகள் |

இம்மொழியின்கண் பல்வேறு சுட்டுச் சொற்களும் காணப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| உன | — | உவன்/உவள்/உது |
| மன்ன | — | இவன்/இவள்/இது |
| இங்ங | — | அவன்/அவள்/அது |
| தாவ்ன | — | அவன்/அவள்/அது (சேய்மை) |

பெயர், பெயரடை போன்றவற்றினின்றும் வினைச் சொற்களை உருவாக்குதல் இம்மொழியின்கண் காணப்படும் ஒரு சிறப்பான பண்பாகும். 'லவ்க' (வீடு) என்பதனின்றும் 'லவ்கலிலோ' (வீடு கட்டுகிறேன்) என்ற வினை உருவாகிறது. இது போன்றே

| | | |
|---|---|---|
| நுஜிக் | — | கத்தி |
| நுஜிக்துக் | — | கத்தியால் வெட்டுகிறான் |

என்பன போன்ற பல வினைகள் இம்மொழியில் உள்ளன.

இம்மொழியில் வினைகள், எழுவாய், செயப்படு பொருள் போன்ற பல இலக்கணக் கூறுகள் காணப்படுகின்றன. மேலும், பிற மொழிகளில் வெவ்வேறு சொற்களால் காட்டப்படும் இலக்கணக் கூறுகள் இம்மொழியில் ஒரே வினைச் சொல்லில் பல பின்னொட்டுகளால் காட்டப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, தமிழ் மொழியில், 'வீட்டுக்குப் போகிறான்' என இரு சொற்களால் கூறுவதை இம்மொழியில் வீட்டுக்கு என்ற சொல்லை வினையுடன் இணைத்து, 'இக்ளுமௌக்தொத்' என ஒரே சொல்லினால் உணர்த்துவதைக் காணலாம். பிற மொழியினர் ஒரு வாக்கியத்தில் கூறும் கருத்தினை ஒரு சொல்லிலேயே கூறும் பண்பு உள்ளமையால்தான் இம்மொழியினைப் பல்லிணைப்பு மொழி (Polysynthetic Language) எனக் குறிப்பிடுவர். இம்மொழியில் ஒரு சொல்லுடன் பல சொற்களையும் ஒட்டுகளையும் இணைத்துக் கூறுவர். எனவே, ஒரு வேர்ச்சொல்லை ஒட்டிப் பல ஒட்டுகளும் பிற வேர்ச்சொற்களும் வருதல் காணலாம். 'Qasuersarfigssarsingitdulinarnarpoq' என்ற ஒரே சொல் 'ஒருவன் தங்குவதற்கேற்ற இடம் எதையும் கண்டுபிடிக்கவில்லை' எனப் பொருள்பட்டு நிற்கக் காணலாம். இச்சொல்லில் உள்ள பல சொற்கூறுகளில் Quasu என்பதே வேர்ச்சொல். பிற அனைத்தும் ஒட்டுகளே. பொதுவாக, இம்மொழிகள் ஒரு சொல்லோடு பலவேறு முன்னொட்டுகள், பின்னொட்டுகள், இடைஒட்டுகள் ஆகியவற்றை இணைத்துக் கருத்துகளை வெளிப்படுத்தும் தன்மை வாய்ந்தவை.

இம்மொழி தம் சூழ்நிலைக்கேற்பப் பலவேறு சொற்களை உடையதாக உள்ளது. இவர்கள் பயன்படுத்தும் வண்டி, இவர்களின் சுற்றுச்சூழல், கடல் நாய்கள் (Seals) போன்றவற்றை யெல்லாம் குறிக்கும் சொற்கள் இம்மொழியில் ஏராளமாக உள்ளன. எடுத்துக்காட்டாகத் தமிழ்மொழியில் பனி என்ற ஒரே சொல்லால் குறிப்பதை, அதன் பலவேறு நிலைகளை வேற்றுமைப்படுத்தி வெவ்வேறு சொற்களால் இம்மொழியில் குறிப்பர். இதுபோன்றே

கடல்நாயின் வெவ்வேறு பருவங்களுக்கு வெவ்வேறு சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. மக்களின் உள்ள உணர்வுகளைக் குறிக்கும் பல்வேறு சொற்களும் இம்மொழியில் உள்ளன. ச.அ.

**எசுகுவாலின்** உரோமிலுள்ள ஏழு குன்றுகளுள் ஒன்று. எசுகுவாலின் (Esquiline) உரோமானியப் பேரங்காடிக்கு வடகிழக்கில் உள்ள விமினல் (Viminal) குன்றுக்கும் கெயிலியன் (Gaelian) குன்றுக்கும் இடையில் உள்ளது. இக்குன்றில் அகழாய்வுகள் செய்யப்பட்டதில், கி.மு. 800-ஆம் ஆண்டுக்கு முன்பிருந்தே இது இடுகாடாகப் பயன்பட்டிருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. இக்குன்றின் மீது கி.மு. 6-ஆம் நூற்றாண்டில் மக்கள் தங்களின் வாழ்விடங்களை அமைத்துக் கொண்டனர். இங்குச் சபைன்சு (Sabines) என்னும் மக்கள் குடியேறினர். பின்னர் உரோமிலேயே மிக நெருக்கமாக மக்கள் தொகை கொண்ட பகுதியாக எசுகுவாலின் மாறியது. பேரரசர் அகசுடசு சீசரின் நண்பர் கைசு மாசினாசு (Gaius Maecenas) இக்குன்றின் மீதே தம் மாளிகையை அமைத்துக் கொண்டார். உரோம் நகரம் கி.பி. 64-ஆம் ஆண்டு எரிந்து விட்டபிறகு, பேரரசர் நீரோ தம் பொன் மாளிகையை இக்குன்றின் மீதே கட்டினார். இம் மாளிகையைப் பின்னர்க் குளிக்கும் இடமாகப் பேரரசர் திரோசன் (Trojan) அமைத்துக் கொண்டார். இக்குன்றில் நீள் சதுர மண்டபமும் அகசுடசு சீசர் கட்டிய பேரங்காடியும் கல்லினசு (Gallienus) பேரரசரின் வளைவும் உள்ளது. இவ்வளைவு கி.பி. 262-இல் கட்டப்பட்டது. இக்குன்றின்மீது இப்பொழுது உள்ள சிறப்பு மிக்க கட்டடம் சாந்த-மரியா மாகியோர் தேவாலயம் (Church of Santa Maria Maggiore) ஆகும். சு.இரா.

**எசுத்தோனிய மொழி**: சோவியத்துக் குடியரசு அமைப்பு நாடுகளுள் ஒன்றான எசுத்தோனியாவில் வாழும் $12\frac{1}{2}$ இலட்சம் மக்களால் பேசப்படும் ஒரு மொழி. இது பின்னோ-உக்கிரிய மொழிக் குடும்பத்தைச் (Finno-Ugrian Language Family) சேர்ந்த பால்டிக்-பின்னிக்கு (Baltic-Finnic) மொழிகளுள் ஒன்று.

எசுத்தோனிய மொழி (Estonia Language) வட எசுத்தோனியக் கிளைமொழி, தென் எசுத்தோனியக் கிளைமொழி என்னும் இரு பெரும் கிளைமொழி அமைப்புகளைக் கொண்டுள்ளது. இரு கிளைமொழி வடிவங்களுக்குமிடையே மிகுந்த வேற்றுமைகள் உண்டு. தாலின் (Talinn) எனப்படும் வட எசுத்தோனியக் கிளைமொழியே மிகுதியான மக்களால் பேசப்படுவது. இக்கால இலக்கியங்கள் யாவும் இக்கிளைமொழியை ஒட்டி எழுந்தவையேயாகும். தார்த்து (Tartu) எனப்படும் தென் எசுதோனியக் கிளைமொழி பழைமையான இலக்கியச் சிறப்பினை உடையது.

இம்மொழியில் ஒன்பது உயிர்களும், பதினெட்டு மெய்களும் உள்ளன. இதன்கண் குறில்-நெடில் வேற்றுமை உண்டு. குறில்-நெடில் வேற்றுமையைக் காட்ட மொழி நூலார் இம்மொழியை அடிக்கடி எடுத்தாளுவர். சிலர் குறில், அரை நெடில், நெடில், கழிநெடில் என நான்கு வகையான வேற்றுமை உள்ளன என்றும், சிலர் குறில், நெடில், கழிநெடில் என்ற மூன்று வேற்றுமைகளே உள்ளன என்றும், இன்னும் சிலர் குறில், நெடில் என்ற இரு வேற்றுமைகளே உள்ளன என்றும் கூறுவர். இதே நிலையைச் சில மெய்யெழுத்துகளிலும் காணலாம். இம்மொழியில் ப, த, க, ற ஆகிய எழுத்துகள் மூன்று முறை இரட்டிக்கும் தன்மை வாய்ந்தவை. இருமெய் மயக்கம், மும்மெய் மயக்கம், நான்கு மெய் மயக்கம் ஆகியன இம்மொழியில் காணப்படுகின்றன. ஆனால், சொற்களின் இறுதியில் இரு மெய்களும் மூன்று மெய்களும் வரக் காணலாம்.

எசுத்தோனிய மொழி ஓர் ஒட்டுமொழியாகும். எல்லா இலக்கணக் கூறுகளும் பின்னொட்டுகளினால் தான் உணர்த்தப்படுகின்றன. இம்மொழியில் சொற்களைப் பெயர், வினை, இடை எனப் பிரித்து வேற்றுமை உருபுகளை ஏற்பவை பெயர் என்றும், கால இடைநிலைகளை ஏற்பவை வினை என்றும், இவ்விரண்டையும் ஏற்காத பிற சொற்கள் அனைத்தும் இடைச்சொற்கள் என்றும் கொண்டுள்ளனர். இம்மொழியில் 14 வேற்றுமைகள் உள்ளன. இவற்றுள் எழுவாய் வேற்றுமை, அது வேற்றுமை, பகுதி வேற்றுமை (Partitive) ஆகியவற்றின் உருபுகள் ஒருமை-பன்மையும் காட்டுவனவாக உள்ளன.

பெயரடைகள் பெயர்கட்கேற்பவோ வேற்றுமைகட்கு ஏற்பவோ மாறுவது இம்மொழியின் ஒரு பண்பாகும். (எ-டு) ஓதவ் ராமத்த – மலிவான புத்தகம்; ஓதவத் ராமத்த – மலிவான புத்தகங்கள்; ஓதவ் ராமது – மலிவான புத்தகத்தின்; ஓதவத்தை ராமத்துவத்தை – மலிவான புத்தகங்களின். எனினும் பேச்சுமொழியில் இப்பண்பு அத்துணை முக்கியமன்று என்பர்.

இம்மொழியில் இருவகையான பதிலிடு பெயர்கள் (Pronouns) உள்ளன. பதிலிடு பெயர்களுக்கு முதன்மை கொடுத்துப் பேசும்போது ஒன்றையும், பொதுவாகப் பேசும்போது மற்றொன்றையும் பயன்படுத்துவர்.

தமிழ் வினைகளைப் போன்று இம்மொழியிலும் வினைகள் காலம், இடம், எண், எழுவாய் போன்ற பல இலக்கணக் கூறுகளைக் காட்டும். ம பலுன் – நான் கேட்கிறேன்; த பலூப் – அவன் கேட்கிறான்; ம பலுசின் – நான் கேட்டேன்; த பலுசு – அவன் கேட்டான்.

செயவென் எச்சம் தமிழ்மொழியைப் போன்றே– அ, – த, – த்த என்ற ஒட்டுகளால் காட்டப்படு கிறது. ஒல்ல – இருக்க; பலுத – கேட்க; அக்கத்த – ஆரம்பிக்க.

எசுத்தோனியாவின் அண்டைநாடுகளில் பேசப்படும் பால்டிக்கு, செர்மானிக்கு, இசுலாவானிக்கு மொழி களிலிருந்து கடன் வாங்கிய சொற்கள் இம்மொழியில் மிகுதியாகக் காணப்படுகின்றன.

இம்மொழியில் எழுத்துச் சான்றுகள் கி.பி.16–ஆம் நூற்றாண்டிலிருந்தே கிடைத்துள்ளன. எம்.சு.

**எசுபராண்டோ**: பன்னாட்டு இரண்டாம் மொழியாகப் பயன்படுமாறு கி.பி. 1887–ஆம் ஆண்டில் போலந்து நாட்டைச் சேர்ந்த கண் மருத்துவராகிய உலுட்விகு சாமனாவு (Ludwig Zamenhof) என்பவ ரால் அமைக்கப்பட்ட ஒரு செயற்கை மொழியே எசுபராண்டோ என்பதாகும்.

இவர் 1905–இல் எழுதி வெளியிட்ட 'எசுபராண் டோவின் ஆதாரங்கள்' என்னும் நூலில், இந்தப் பன்னாட்டு மொழியின் ஆக்கம், வடிவம் ஆகிய வற்றின் ஆதாரக் கொள்கைகள் கூறப்பட்டுள்ளன.

இந்த மொழியிலுள்ள பெரும்பாலான சொற் கள், இலத்தீனிலிருந்துதோன்றிய ஐரோப்பிய மொழி களிலுள்ள சொற்களின் வேரிலிருந்து வருவிக்கப்படு கின்றன. ஆகையால் எசுபராண்டோ (Esperanto) மொழியைக் கற்றுக் கொள்ளுதல் ஐரோப்பியருக்கு எளிது. இதன் சொற்கூட்டமைப்பு (Spelling or Orthography) ஒலியமைப்பையே (Phonetic) ஆதாரமாக உடையது. எல்லாச் சொற்களும் எவ்வாறு சொல்லப் படுகின்றனவோ அவ்வாறே எழுத்துக்கூட்டி எழுதப் படுகின்றன. இதனுடைய இலக்கணம் எளிமையாகவும் ஒழுங்காகவும் இருக்கிறது. இதில் பெயர்ச் சொற்கள், பெயர் அடைகள் (Adjectives), வினைச் சொற்கள் முதலியவற்றைக் காட்டும் சொல் முடிபுகள் இருக் கின்றன. இம் மொழியில் பெயர்ச் சொற்கள் பால் வேறுபாடு (Gender) காட்டமாட்டா. அவற்றினிறு தியில் 'ஓ' (O)என்ற முடிபே உண்டு. பன்மைப் பெயர் 'ஓசே' (oj) என்ற முடிபு உடையது. அது 'ஓய்' (oy) என்று சொல்லப்படுகிறது. செயப்படு பொருளைத் தரும் இரண்டாம் வேற்றுமை உருபு 'on' என்று முடியும்; இதில் பன்மை 'ojn' என்று முடியும். சில சொற்களும் அமைப்பும் எடுத்துக்காட்டுகளாகக் கீழே தரப்படுகின்றன.

Amiko = Friend, நண்பர்
Amikoj = Friends, நண்பர்கள்
Amikon = Friend, நண்பரை
Amikojn = Friends, நண்பர்களை

இம்மொழியில் 'லா' (la) என்ற ஒரே சுட்டுப் பெயர்தான் (Definite Article) உண்டு. எடுத்துக் காட்டு: la amiko= the friend= அந்த (இந்த) நண்பர். பெயர் அடைகள் 'a' என்ற எழுத்தில் முடிகின்றன.

எடுத்துக்காட்டு: bona amiko = good friend = நல்ல நண்பர். இச்சொற்கள் பெயர்ச் சொற்களுக்கு ஏற்பப் பன்மை முடிபுகளோடும் இரண்டாம் வேற் றுமை முடிபுகளோடும் சேர்ந்து வரும்.

எடுத்துக்காட்டு: la bonaj amikoj estas tie= the good friends are there= அந்த நல்ல நண்பர்கள் அங்கே இருக்கின்றனர்.

mi havas bonagn amikojn = I have good friends = எனக்கு நல்ல நண்பர்கள் இருக்கின்றனர். வினைச் சொற்களெல்லாம் ஒழுங்காக அமைந்துள் ளன. ஒவ்வொரு காலத்துக்கும் ஒரு வடிவமே உண்டு; இடம், எண் ஆகியவற்றுக்கு ஏற்ப அது மாறுதலைடைவதில்லை. எடுத்துக்காட்டு:

mi havas = I have = நான்பெற்றுள்ளேன்.
Vi havas = You have = நீங்கள் பெற்றுள்ளீர்கள்.
si havas = She has = அவள் பெற்றிருக்கிறாள்.
ili havas = they have = அவர்கள்பெற்றுள்ளனர்.

இம்மொழியில் நிறைய பின்னொட்டுச் சொற்கள் (Suffixes) இருக்கின்றன. இவற்றைப் பல்வேறு வகை யான பொருள்களை உணர்த்துவதற்காகவும், புதி தாக வருவிக்கப்படும் சொல்வடிவங்களை உணர்த்து வதற்காகவும் மற்றச் சொற்களோடு சேர்த்தலும் உண்டு. கூட்டுச் சொற்களும் (Compound Words) கையாளப்படுகின்றன.

செயற்கையான பன்னாட்டு மொழிகளுள் எசு பராண்டோ மிகவும் வெற்றியாகச் செயற்படுத்தப்படு கிற மொழியாகும். இப்போது இம்மொழியைப் பேசு

வோர் 100,000க்கும் கூடுதலானவர் என்று மதிப்பிடப் படுகிறது. உலகளாவிய எசுபராண்டோ கழகம் என்ற ஓர் அமைப்பு (Universal Esperanto Asocio-UEA) 1980-இல் நிறுவப்பட்டது. அதில் உலகின் 83 நாடுகளிலிருந்து உறுப்பினர்கள் இருக்கின்றனர். எசுபராண்டோ மொழியைப் பயன்படுத்துகின்ற 50 தேசிய எசுபராண்டோ கழகங்களும் 22 பன்னாட்டுத் தொழில்சார் கழகங்களும் இருக்கின்றன. ஆண்டு தோறும் உலக எசுபராண்டோ மாநாடு ஒன்று (Annual World Esperanto Congress) நடைபெறுகிறது. இந்த மொழியில் 100க்கும் மேற்பட்ட கால வெளியீடுகள் (Periodicals) வெளியிடப்படுகின்றன. மேலும், இம்மொழியில் 30,000 நூல்களுக்குமேல் வெளியிடப்பட்டுள்ளன. பா.சு.

**எசெக்சு:** பண்டைய இங்கிலாந்தில் ஆட்சியை நிறுவிய ஆங்கிலோசாக்சானியர் அந்நாட்டை ஏழு பிரிவுகளாக்கி, ஒவ்வொன்றிலும் தனித்தனி ஆட்சியை அமைத்திருந்தனர். கிழக்குப் பகுதிச் சாக்சானியர் அமைத்திருந்த ஆட்சிப் பிரிவு எசெக்சு (Essex). இலண்டன் மாநகரம் இங்கேதான் உள்ளது. எசெக்சின் தனி ஆட்சி கி.பி. 825 முதல் மறைந்து, அப்பகுதி வெசக்சின் (Wessex) மேலைச் சாக்சானியரின் ஆதிக்கத்திற்குட்பட்டது. சிறிது சிறிதாக இப்பகுதியில் கிறித்தவச் சமயம் பரவியது. ஏழு பிரிவுகளும் ஒன்றாக இணையப் பெற்று, வெசக்சின் ஆட்சி வேரூன்றியபின், எசெக்சு என்ற பெயர் தென் கிழக்கு இங்கிலாந்தின் ஒரு பெரு மாவட்டத்திற்கு அமைந்தது. வட கடல் ஓரமாகத் தேம்சு ஆற்றை ஒட்டி விளங்கும் இப்பகுதியில் பல சிறிய மாவட்டங்களைக் காணலாம். ஒவ்வொன்றும் ஆட்சிமுறையின் அவசியத்தின் பொருட்டுப் பிரிக்கப்பட்டதாகும். 3672 ச. கி. மீ. பரப்புள்ள இப்பகுதியில் நான்கு ஆறுகள் பாய்வதால் செழிப்பு நிலவுகிறது. இங்குக் கோதுமை மிகுதியாகப் பயிரிடப்படுகிறது. காடுகள் நிறைந்த பகுதியானபடியால் மரத்தினாலமைந்த வீடுகள் அதிகமாகப் காணப்படுகின்றன. நாகரிக வளர்ச்சி மிக்க நகரங்களைத் தவிர, இயற்கை மிளிரும் கிராமங்களையும் எசெக்சில் காணமுடியும். கோல்செசுட்டரில் (Golcestor) உள்ள எசெக்சுப் பல்கலைக் கழகம் புகழ் வாய்ந்த ஒன்றாகும். தெ.பா.

**எஞ்சிய அதிகாரங்கள்:** எஞ்சிய அதிகாரங்கள் என்பது இக்காலத்தில் கூட்டாட்சி நாடுகளில் காணப்படும் ஓர் இயல்பு ஆகும். இக்கால அரசுகள் ஒற்றையாட்சி (Unitary State) எனவும், கூட்டாட்சி (Federation) எனவும் வகைப்படுத்தப்படுகின்றன. பிரிட்டன், பிரான்சு, இத்தாலி, இசுபெயின், போர்ச்சுகல், அயர்லாந்து முதலியவை ஒற்றை அரசுக்கு எடுத்துக்காட்டுகளாகும். இதற்கு மாறாக ஐக்கிய அமெரிக்க நாடு, சுவிட்சர்லாந்து, இந்தியா, ஆசுத்திரேலியா, கனடா முதலியவை கூட்டாட்சி நாடுகளாகும். கூட்டாட்சி என்ற அமைப்பில் நாடு முழுவதன் சார்பாகச் சில பொருள்களில் தனது அதிகாரத்தைச் செலுத்தவல்ல ஒரு நடுவண் அரசாங்கமும், அரசியலமைப்புச் சட்டத்தின்படி தங்களுக்கு ஒதுக்கப்பட்ட சட்டமியற்றும் அதிகாரங்களையும் ஆட்சி அதிகாரங்களையும் கையாளுகின்ற மாகாண அல்லது மாநில அரசாங்கங்களும் இருக்கின்றன. ஆகையால் கூட்டாட்சி நாட்டில் (அ) அதிகாரங்கள் உறுப்பு மாநிலங்களுக்கும் அவையெல்லாம் சேர்ந்த முழுமையான பெரிய அரசுக்கும் (அல்லது அரசாங்கத்துக்கும்) இடையே பங்கீடு செய்யப்படுகின்றன. (ஆ) நடுவண் அரசாங்கமும், உறுப்பு மாநில அரசாங்கங்களும் எழுதப்பட்ட ஓர் அரசியலமைப்பின் விதிகளுக்கு உட்பட்டே அதிகாரங்களைக் கையாளுதல் வேண்டும்; ஆகையால் கூட்டாட்சி நாட்டில் எழுதப்பட்ட ஓர் அரசியலமைப்பே தலைமையான அதிகாரமுடையதாகும். (இ) எழுதப்பட்ட அரசியலமைப்புச் சட்ட விதிகளுக்கு முரணானவை என்று நடுவண் அல்லது கூட்டாட்சிச் சட்டங்களையும், மாநிலச் சட்டங்களையும் தள்ளுபடி செய்வதற்குக் கூட்டாட்சித் தலைமை நீதிமன்றத்துக்கு அதிகாரம் இருக்கிறது. ஆகையால் கூட்டாட்சி அரசியலமைப்பை விளக்கம் செய்து, அதன் பாதுகாவலனாக விளங்கும் அதிகாரத்தைக் கூட்டாட்சி நீதிமன்றம் பெற்றிருத்தல், கூட்டாட்சி அரசியலமைப்பின் மூன்றாம் இயல்பு ஆகும். (ஈ) கூட்டாட்சி அரசியலமைப்பைத் திருத்துதல் (Amendment) என்பது சாதாரணச் சட்டங்களை நிறைவேற்றுதல் போலச் சாதாரணப் பெரும்பான்மை வாக்குகளினால் நிறைவேற்றுதல் இயலாது; அதற்கென்று விதிக்கப்பட்ட கூடுதலளவு பெரும்பான்மை வாக்குடன் ஆதரவு இருத்தல் வேண்டும். இவ்வாறு கூட்டாட்சி அரசியலமைப்பு சாதாரணச் சட்டத்தை நிறைவேற்றும் முறையில் அன்றிச் சிறிது வேறுபட்ட கடினமான முறையில் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளதால், கூட்டாட்சி அரசியலமைப்பு நெகிழ்ச்சியற்றதென்று (Regid Constitution) கூறப்படும். இதுவே நான்காம் இயல்பு ஆகும். இவற்றுள் முதலாம் இயல்பாகிய அதிகாரப் பிரிவினையில் அடங்குவதுதான் எஞ்சிய அதிகாரங்கள் (Residuary Powers) ஆகும்.

கூட்டாட்சி அரசியலமைப்பின்படி, நடுவண் அரசாங்கத்துக்கோ உறுப்பு அரசாங்கங்களுக்கோ ஒதுக்கப்படுகின்ற அதிகாரங்கள் தவிர, மிச்சமுள்ள அதிகாரங்களே எஞ்சிய அதிகாரங்கள் என்று சொல்லப்படும்,

உறுப்பு மாநிலங்களில் எஞ்சிய அதிகாரங்கள்: கூட்டாட்சி அரசியலமைப்பின் எஞ்சிய அதிகாரங்கள் உறுப்பு மாநிலங்களிடத்தில் விடப்பட்டிருத்தற்கு எடுத்துக்காட்டுக்களாக ஐக்கிய அமெரிக்க நாடு, ஆசுத்திரேலியா, சுவிட்சர்லாந்து, வைமார் செருமனி, சோவியத்து உருசியா முதலிய கூட்டாட்சி அரசியலமைப்புகளைக் கூறலாம். இந்நாடுகளின் அரசியலமைப்புகளிலே அந்தந்த நடுவண் அல்லது கூட்டாட்சி அரசாங்கங்களின் அதிகாரங்கள் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளன. எஞ்சிய அதிகாரங்களெல்லாம் கூட்டாட்சியின் உறுப்பு மாநிலங்களிடம் (Units) விடப்பட்டுள்ளன. அதிகாரங்களைப் பிரிக்கும்போது, கூட்டாட்சியில் வேறுபாடுகளின் முறையான வளர்ச்சிக்குத் தடை இல்லாமலும், அதே சமயத்தில் திறமையான நடுவண் அரசாங்கம் ஏற்படுவதற்குத் தடை இல்லாமலும் இருக்கும்படியாக அதிகாரங்கள் பங்கீடு செய்யப்படுதல் வேண்டும். கூட்டாட்சியில் உறுப்பு மாநிலங்கள் பிரிந்து செல்லக்கூடிய போக்கினையும் நடுவண் அரசாங்கத்தின் ஒருங்கிணைந்த போக்கையும் தடுத்து, அவற்றைச் சமநிலையில் வைக்கக் கூடியவாறு அதிகாரங்கள் பங்கீடு செய்யப்படுதல் வேண்டுமென்று பிரைசு பிரபு கூறுகிறார். நாடு முழுவதற்கும் தொடர்புள்ள அதிகாரங்களெல்லாம், அதாவது அயல்நாட்டு உறவுகள், பாதுகாப்பு, படைகளைக் கட்டுப்படுத்துதல், அயல்நாட்டு வாணிகம், கடல் வழிக் கப்பல் போக்குவரத்து, நாணயமுறை முதலியவையெல்லாம் கூட்டாட்சி அதிகாரங்களாகவே எங்கும் கருதப்படுகின்றன; ஆகையால் இவற்றைக் கூட்டாட்சி அல்லது நடுவண் அரசாங்கத்திடம் இருக்குமாறு அதிகாரங்களைப் பங்கீடு செய்வதுதான் வழக்கம். பொது முக்கியத்துவம் இல்லாமல் உட்பிரிவுகளில் பெரும்பாலும் செல்லுபடியாகக் கூடிய அதிகாரங்களெல்லாம் அதாவது உள்ளாட்சி நிறுவனங்கள், மருத்துவநிலையங்கள், உள்ளூர்ப் பொது மராமத்துப் பணிகள், சொத்துரிமையும் குடிமை உரிமைகளும், மாநிலத்தில் நீதி வழங்குதல் முதலியவையெல்லாம் உள்ளூர் முக்கியத்துவமுடையவையாகையால், அவை எல்லாக் கூட்டாட்சிகளிலும் உறுப்புமாநிலங்களுக்கே ஒதுக்கப் படுகின்றன. ஆனால், எந்தெந்த அதிகாரங்கள் பொதுநல முக்கியத்துவமுடையவை, எவை உள்ளூர் நலமுக்கியத்துவமுடையவை என்று தெளிவாக வரையறை செய்ய இயலாது; ஆகையால் அதிகாரப் பங்கீட்டு முறை மூன்று வகையாகக் கையாளப்படுகிறது. (1) ஐக்கிய அமெரிக்க நாட்டில் கூட்டாட்சி அரசாங்கத்துக்கு மட்டுமே ஒதுக்கப்பட்ட அதிகாரங்களைத் தவிர, நடுவண் அரசாங்கமும் மாநில அரசாங்கங்களும் கையாளாதபடி சில அதிகாரங்கள் தடுக்கப்படுகின்றன. (2) ஆசுத்திரேலியா, சுவிட்சர்லாந்து, இந்தியா முதலிய கூட்டாட்சி நாடுகளிலே கூட்டாட்சி அரசாங்கத்துக்கு மட்டுமே ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள அதிகாரங்களைத் தவிர, நடுவண் அரசாங்கமும் உறுப்பு அரசாங்கங்களும் கையாளத் தக்க கலப்பு அதிகாரங்களும் (Concurrent Powers) கூறப்படுகின்றன. இக்கலப்பு அதிகாரங்களை நடுவண், உறுப்பு மாநில அரசாங்கங்கள் ஆகிய இரண்டும் கையாளலாம். ஆனால், கலப்புப் பட்டியலில் ஒரே பொருளைப் பற்றிய நடுவண் சட்டமும் மாநிலச் சட்டமும் ஒன்றுக்கொன்று மாறுபடுமேயானால், அப்போது நடுவண் சட்டமே செல்லுபடியாகும். (3) மூன்றாம் வகை அதிகாரப் பங்கீட்டில் நடுவண் அரசாங்கத்துக்கு மட்டிலுமே உரிய அதிகாரங்கள் கூறப்பட்டுள்ளன; இதில் வேறெதுவும் கூறப்படுவதில்லை; இவ்வகையான அதிகாரப் பங்கீட்டு முறை சோவியத்து உருசியாவில் கையாளப்படுகிறது.

நடுவண் அரசாங்கத்தில் எஞ்சிய அதிகாரங்கள்: கூட்டாட்சி அரசியலமைப்பில் எஞ்சிய அதிகாரங்கள் நடுவண் அரசாங்கத்தில் விடப்பட்டிருத்தற்கு எடுத்துக்காட்டுகளாக கி.பி. 1867-ஆம் ஆண்டின் கனடா அரசியலமைப்பும், 1949-ஆம் ஆண்டின் இந்திய அரசியலமைப்புச் சட்டமும் இருக்கின்றன. இந்திய அரசியலமைப்பின் பிரிவு 248-இன்படி மைய, மாநிலங்களுக்குக் கொடுக்கப்படாத எஞ்சிய அதிகாரங்கள் மைய அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன.

அதிகாரங்கள் குறிப்பிடப்படுவதன் நோக்கம்: கூட்டாட்சி அரசிலே நடுவண் அரசாங்கத்துக்கோ மாநில அரசாங்கத்துக்கோ அதிகாரங்களை ஒதுக்கீடு செய்து, அவை இன்னின்னவை என்று எண்ணிக்கை செய்து குறிப்பிடுவதன் நோக்கம் (Enumerated) அவை எந்த அரசாங்கத்துக்குக் கொடுக்கப்படுகின்றனவோ அந்த அரசாங்கத்தின் அதிகாரத்தை வரம்பு செய்து வரையறை செய்தலேயாகும். இவ்வாறு பார்க்கும்போது, ஐக்கிய அமெரிக்கநாட்டில் நடுவண் அரசாங்கத்தின் அதிகாரங்கள் குறிப்பிடப்பட்டிருத்தலால், அங்கு உறுப்பு மாநிலங்களுக்கெதிராக நடுவண் அரசாங்கத்தின் அதிகாரங்களுக்கு ஒரு வரம்பை ஏற்படுத்துவதும், அதன்வாயிலாக உறுப்பு மாநிலங்களின் அதிகாரங்களில் நடுவண் அரசாங்கம் தலையிடாமல் தடுப்பதுமே நோக்கங்களாகும் என்று கூறலாம். இது போன்றே கனடாவில் மாகாணங்களின் அதிகாரங்கள் குறிப்பிடப்பட்டிருப்பதன் நோக்கம், அங்கு நடுவண் அரசாங்கத்துக்கெதிராக மாகாண அதிகாரங்களை வரம்புபடுத்துவதே ஆகுமென்று கூறலாம். ஆகையால் எங்கு அல்லது எந்தக் கூட்டாட்சியில் வரம்பு குறிப்பிடப்படாத 'எஞ்சிய அதிகாரங்கள்' உறுப்பு மாநிலங்

களிடம் விடப்பட்டுள்ளனவோ, அந்தக் கூட்டாட்சி தான் கூடுதலான கூட்டாட்சி இயல்புகளைப் பெற்றுள்ளது என்று பொதுவாகக் கூறுவர். ஆனால் இந்த விதிக்கும் ஒரு விலக்கு உண்டு. எஞ்சிய அதிகாரங்கள் மாநிலங்களிடத்து இருந்தால் மட்டிலும் போதாது; எஞ்சிய அதிகாரங்கள் கணிசமாகவும் பொருளுள்ளவையாகவும் இருத்தல் வேண்டும். இக்காலப் பொருளாதார, சமூகச் சூழ்நிலைகளில் பல சிக்கல்களை நடுவண் அரசாங்கமே திறமையாகத் தீர்க்கமுடியும்; ஆகையால் எஞ்சிய அதிகாரங்கள் உறுப்பு மாநிலங்களை விட நடுவண் அரசாங்கத்திடம் இருத்தலே சிறந்தது என்று எண்ணுகின்றனர். பா.சு.

துணை நூல்கள்:

**Dicey, A.V.**, An Introduction to the Study of the Law of the Constitution, Macmillan, 1939.

**Newton, A.P.**, Federal and Unified Constitutions, Longmans, 1923.

**Wheare, K.G.**, Federal Government, Oxford, 1953.

**எஞ்சுநர் உரிமை**: ஒரு சொத்தின் உரிமையாளர்கள் பலருள் ஒருவர் இறந்தபின், அச்சொத்தை உயிருடன் இருக்கும் மற்றவர் அடைவது எஞ்சுநர் உரிமை (Survivorship) எனப்படும். இது சமஉரிமையுடன் நிலச் சொத்தைக் கூட்டாக அனுபவிக்கும் கூட்டுநிலச் சொத்துரிமையிலும் (Joint Tenancy), இந்துப் பங்குரிமை அமைப்பிலும் (Hindu Coparcenary) காணப்படுகிறது.

இந்து மிதாட்சரச் சட்டத்தின் இந்துக் கூட்டுக் குடும்ப அமைப்பு தனிச்சிறப்பியல்பு கொண்டது. அதைவிடக் குறுகிய அமைப்புக் கொண்டது பங்குரிமை அமைப்பு. இது சட்டத்தின் வழி ஏற்படுவது. பிறப்பின் மூலம் கூட்டுக்குடும்பச் சொத்தில் ஓர் உரிமையைப் பெறும் உரிமை பங்குரிமையருக்கு உண்டு. பொது ஆண் மூதாதையர் வாயிலாக இறங்கும் அடுத்த மூன்று ஆண் தலை முறையினரும் (மகன், மகனின் மகன், மகனின் மகனின் மகன்) பங்குரிமையர் (Coparcener) ஆவர். ஒரு பங்குரிமையமைப்பு பொது ஆண் மூதாதையர் நீங்கலாக (அப்போதைக்கு) மூன்று தலைமுறையினரை மட்டும் கொண்டிருக்கும். இவர்கள் யாவரும் ஆண்வழியினர் (Agnates); பிறப்பின்மூலம் சொத்தில் உரிமைகோரும் பாத்தியம் உள்ளவர்கள்.

பங்குரிமையருக்கு உரிமைகள் பல உண்டு. பிறப்பின் மூலம் சொத்தில் உரிமை பெறும் உரிமை, எஞ்சுநர் உரிமை, பாகப் பிரிவினை கோரும் உரிமை, பொது சுவாதீனத்திற்கும் கூட்டாக அனுபவிப்பதற்குமான உரிமை, முறையற்ற உரிமை மாற்றத்தை தடுக்கும் உரிமை, கணக்குக் கேட்கும் உரிமை, தன் பங்கினை மாற்றும் உரிமை, சொத்திலுள்ள உரிமையைத் துறக்கும் உரிமை என்பன அவை. இதில் எஞ்சுநர் உரிமையும் ஒன்று.

எஞ்சுநர் உரிமை இந்து மிதாட்சரச் சட்டத்தில் தனிச்சிறப்பியல்பு கொண்டது. இது பங்குரிமைச் சொத்துக்கு மட்டுமே பொருந்தும். தனிச் சொத்துக்குப்பொருந்தாது. எடுத்துக்காட்டாக, ஒரு மிதாட்சரப் பங்குரிமையர்களாக அ, ஆ, இ, ஈ என்பவர்கள் இருக்கிறார்கள். அ என்பவர் இறந்தால், அ—வின் $\frac{1}{4}$ பங்கு சொத்து அ, இ, ஈ என்னும் உயிரோடிருப்பவருக்குப் போய்ச் சேரும். அவர்களது பங்கு $\frac{1}{3}$ என அதிகமாகும். அதைப்போலவே ஆ,இ,ஈ—யில் ஆ இறந்தால் ஆ—வின் $\frac{1}{3}$ பங்கு, இ-க்கும் ஈ-க்கும் சென்றடையும். ஒவ்வொருவரது பங்கும் $\frac{1}{2}$ என ஆகும். இவ்வுரிமை உயிரோடு இருப்பவர் உடனிருந்தவர் இறந்த பின் பெறும் உரிமையாகும்.

பங்குரிமையருக்குப் பாகப்பிரிவினை ஏற்படும் வரை சொத்தினைப் பொதுவாக அனுபவிக்கும் உரிமையுண்டு. அவர்களின்(சொத்தில்)பங்கு எவ்வளவு என்று உறுதியாகக் கூற முடியாது. இறப்பின் மூலமும் பிறப்பின் மூலமும் அவர்களது பங்கின் அளவு அதிகமாகலாம்; அல்லது குறையலாம். பாகப்பிரிவினை ஏற்பட்ட பின்னர்த்தான் அது எவ்வளவு என்று உறுதியாகக் கூறமுடியும். பாகப்பிரிவினைக்கு முன்னர்ப் பங்குரிமையரில் எவரேனும் இறப்பின், இறந்தவரின் பங்கு உயிரோடு இருக்கும் மற்றப் பங்குரிமையருக்குப் போய்ச்சேரும்.

எஞ்சுநர் உரிமை பலவழிகளில் முறியடிக்கப்படலாம். 1) இறந்த பங்குரிமையரின் (பங்கு) உரிமையானது அவர் நொடிப்பு நிலை அடைந்த காரணத்தால் சொத்தாட்சி அதிகாரியிடம் (Official Assignee) சேர்ந்தடைந்திருக்கும்போதும், 2) இறந்த பங்குரிமையரின் உரிமையானது அவர் உயிருடன் இருந்த காலத்திலேயே ஒரு தீர்ப்பாணையைத் தொடர்ந்து பற்றுகைச் செய்யப்பட்டிருக்கும்போதும், 3) சென்னை, பம்பாய்ப் பங்குரிமையர் தம் பங்கினை மறுபயனுடன் உரிமைமாற்றம்செய்திருக்கும்போதும், 4) இந்து மதத்திலிருந்து நீங்கி மற்ற மதத்தில் சேர்ந்திருக்கும் போதும், 5) 1954-ஆம் ஆண்டு சிறப்புத் திருமணச் சட்டத்தின்கீழ்த் திருமணம் செய்து கொண்டிருக்கும் போதும் எஞ்சுநர் உரிமை முறியடிக்கப்படும்.

ஒன்றுக்கு மேற்பட்ட பெண்மக்கள், விதவைகள் (பழைய இந்துச் சட்டத்தின் கீழ்) சொத்தில் உரிமை

பெறும்போது, எஞ்சுநர் உரிமை பெறுவர். அதைப் போலவே மகளின் புதல்வர்களுக்கும் இவ்வுரிமை உண்டு. முறைமணப்பிறப்பு மகனும் முறையிலா மணப் பிறப்பு மகனும் தங்களின் தந்தையின் சொத்தினைப் பெறும் உரிமையுடையர். அவர்கள் எஞ்சுநர் உரிமை பெற (பழைய சட்டத்தின்படி) உரிமையுண்டு.

மிதாட்சரச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளவாறு எஞ்சுநர் உரிமை தாயபாகச் சட்டமுறையில் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. ஆ.ச.

**எட்கர் ஆலன் போ** (கி.பி. 1809-1849): நடிப்புத் தொழிலில் ஈடுபட்ட பெற்றோர்களுக்கு மக னாகப் பாசுட்டன் நகரில் இவர் பிறந்தார். இளம் வயதிலேயே பெற்றோரை இழந்து அநாதையானார். சான் ஆலன் என்பவர் இவரை வளர்த்துக் காப் பாற்றினார். இவர் கி.பி. 1820–ஆம் ஆண்டு முடிய இங்கிலாந்திலுள்ள இசுபோக்கு நியூயிங்டன் பள்ளி யில் பயின்றார். இக்குறுகிய காலம்தான் இவர் இங்கிலாந்தில் இருந்த காலமாகும். பின்னர் அமெரிக் காவிற்குச் சென்றார்.

அமெரிக்க எழுத்தாளராகவே எட்கர் ஆலன் போ (Edgar Allan Poe) கருதப்பட்டு வருகிறார். இவர் கி.பி. 1827–இல் 'தாமெர்லேன்' முதலிய தம் கவிதை கள் அடங்கிய தொகுதியினை முதன் முறையாக வெளியிட்டார். அமெரிக்க இராணுவத்தில் கி.பி. 1828–இல் சேர்ந்து விலக்கப்பெற்ற இவர் வெசுட்டு பாயிண்டு (West Point) என்னுமிடத்தில் உள்ள இராணுவக் கல்வி நிலையத்தில் சேர்க்கப்பட்டார்; கி.பி. 1831–இல் அங்கிருந்து வெளியேற்றப்பட்டார்.

'குப்பியில் காணப்பட்ட கையெழுத்துப்படி' (A Manuscript Found in a Bottle) என்ற இவர்தம் முதல் சிறுகதை கி.பி. 1833–ஆம் ஆண்டு வெளிவந்து பால்டிமோர் பரிசான 100 தாலரைப் பெற்று, அவ ருக்குப் பெருமை தேடித்தந்தது. பின்னர், போ பத் திரிகையாளராக மாறிப் பல இதழ்களுக்கு ஆசிரியரா கப் பணியாற்றினார். துப்பறியும் கதைகள் பல எழுதி யுள்ளார். அண்டங்காக்கை (The Revon) என்னும் பெயரில் இவர் இயற்றிய கவிதை இவருக்குப் பெரும் புகழ் தந்தது. தொடர்ந்து இவர்'மணிகள்'(The Bells) போன்ற கவிதைகளையும் திறனாய்வுக் கட்டுரைகளை யும் வெளியிட்டார். இவர்தம் கதைகளும் கவிதை களும் பயில்வோர் உளங்கவரும் பாங்கில் அமைந்துள் ளன. தேர்ந்த கவிஞராகவும் தெளிந்த திறனாய் வாளராகவும் அமெரிக்கச் சிறு கதையின் தந்தையாக வும் இவர் மதிக்கப்படுகிறார்.

போவின் கருத்துப்படி, உண்மையைக் காட்டிலும் அழகே கலையின் முடிவாகும். அறங்களைப் பற்றி இவர் படைப்புகள் கவலைப்படவில்லை. ஆங்கில இலக்கியப் பாதிப்பினின்றும் விலக்கி, அமெரிக்க இலக் கியத் தனிப் பண்பாட்டுச் சுதந்திரத்தை உருவாக்கு வதற்குத் துணை நின்றவர் போ. எனினும், வாழ்க்கை முழுவதும் தம் படைப்புகளுக்கு உரிய ஊதியம் பெறாமல்,ஒருவகையில் புறக்கணிக்கப்பட்டவராகவே வாழ்ந்தார். இதழ் ஒன்றைத் தாமே நடத்தவேண் டும் என்னும் இவர்தம் குறிக்கோள் இறுதிவரை நிறைவேறவில்லை.

போவின் பாதிப்பு பத்தொன்பதாம் நூற்றாண்டு இலக்கியங்களில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும். பிரெஞ்சு இலக்கியப் படைப்பாளிகள் குறிப்பாகப் படிமவாதிகள் (Symbolists) இவர்தம் நூல்களின் பாதிப்பையும் தாக்கத்தையும் பெரிதும் பெற்றனர். பிரெஞ்சுப் படிம இலக்கியவாதியான பொதேலேர் (Boudelaire) இவரை வழிபடு தெய்வமாகக் கருதி னார். அவர் போவின் திறனாய்வுக் கட்டுரைகள் பலவற்றைப் பிரெஞ்சில் மொழிபெயர்த்துள்ளார்.

கவிதையின் ஒருமைப்பாடு என்பது உணர்வு அல் லது மனநிலையைப் பொறுத்தது என்ற போவின் கோட்பாடு கவிஞர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும்.

உருசிய மொழியிலும் இவர் படைப்புகள் மொழி பெயர்க்கப்பட்டன. அவற்றின் நடப்பியல் தன்மை அங்கு அனைவரின் பாராட்டுதலையும் பெற்றது. படிமக் கவிதைகள் உருவாவதற்கான வழியினை வகுத்த முதல் அமெரிக்கக் கவிஞராகப் போ பாராட்டப்பெற்றார். இவர் திடுக்கிடும் நிகழ்வு களைக் கொண்ட துப்பறியும் புதினங்களைப் படைத் தார். பிராய்டு கோட்பாடுகளுக்கு முன்னோடியாய் அமைந்தவர் இவராவார். பகுப்பாய்வுத் திறனையும் நுண்ணிய கற்பனை நலன்களையும் காட்டுவனவாக இவர்தம் படைப்புகள் அமைந்துள்ளன.

போவின் கவிதைகளில் மருமத் தன்மையும் கற்பனையும் உண்டு. இவர் வாழ்க்கை முழுவதும் ஏமாற்றங்களும் விரக்தியும் நிறைந்திருந்தமையால், உண்மை சார்ந்த எதார்த்த உலகினை இவரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அதிலிருந்து தப் பித்துத் தம் எழுத்துகளில் அடைக்கலம் புகுந்தார். உலகியலுக்கு அப்பாற்பட்ட கற்பனைப் படைப்பு களாகவே இவர் தம் படைப்புகளை உருவாக்கினார். இவர் படைப்புகளில் எல்லாம் இறப்புப் பற்றிய சிந்தனைகள் மிக ஆழமாகப் பதிந்திருந்தன. இவரை

அழித்துக்கொண்டிருந்த மன முரண்பாடுகளும் குழப்பங்களும் இவர்தம் படைப்புகளில் எதிரொலித்தன. இவர்தம் துன்பங்களிலிருந்து இவருடைய படைப்புக் கனவின் மூலங்கள் உருவாயின. உலகினைப் பிறப்பு, இறப்பின் விளக்கமாகவே இவர் தெளிவுபடுத்தினார். 'எப்போதும் எங்கும் எட்கர் ஆலன் போ ஒரு சிறந்த தன்னுணர்ச்சிக் கவிஞர் என்ற பாராட்டுக்குரியவர்' என ஏட்சு (W.B. Yeats) போவினைப் புகழ்ந்து மகிழ்வார்.
பி.எஸ்.வே.

**எட்டக்கரம்:** இது எட்டெழுத்தாலாகிய மந்திரத்தினைக் குறிக்கும். சைவ சமயத்தில் பஞ்சாக்கரம்போல், வைணவ சமயத்தில் திரு அட்டாக்கரம் என்ற நாராயண மந்திரம் உயர் நிலையான மந்திரமாகும். இவ்விரண்டு மந்திரங்களையும் மறையே ஓதியதாகையால், இவை அதிகாரம் பெற்ற முத்திரைத் தங்கக் கட்டிகள் போன்ற மாட்சி யுடையனவாம். சிரீவைணவ சமயத்தில் நாராயண மந்திரத்திற்குத் திருமந்திரம், திரு அட்டாட்சரம், மூலமந்திரம், கரணமந்திரம், மந்திர ராசா என்றெல்லாம் திருப்பெயர்கள் உள்ளன. இனிய கனி தரும் மரத்திற்கு ஆணிவேர்போல் வைணவ சமயத்துக்கு அட்டாக்கரம் இன்பமுத்தியை உடனே தருமானதால், இதற்கு மூலமந்திரம், கரணமந்திரம் என்ற பெயர்கள் ஏற்பட்டன. 'துஞ்சும் பொழுது அழைமின்,துயர்வரில் நினைமின் துயரிலீர் சொல்லிலும் நன்றாம்' எனக் கலியன் அருளியபடி, திருநாவுக்கும் திருச்செவிக்கும் இனியதாய இன்ப முத்தியையும் தரும் மந்திரம் இது. 'நாராயணா' என்ற வெற்றுத் திருநாமமே 'எங்ஙனே பேசினும் இன்பம் பயக்குமே' என்றபடி, இன்பத்தையும் பேரின்பத்தையும் தரவல்லது. நாராயணா என்று அழைப்பவனைப் பசு கன்றைத் தொடருவதுபோல், நாராயணன் விடாமல் பின்தொடருகிறான் என்பது மரபு. நாராயண அனுவாகம் – மகாநாராயண உபநிடத நாரதீயம், பாத்மோத்தர புராணங்கள் முதலியவற்றில் நாராயண மந்திரத்தைப் பற்றி விரிவாகவும் விளக்கமாகவும் கூறப்பட்டுள்ளது. தமிழ்ப் பெருங்காப்பியமான சிலம்பும் 'நாராயணா என்னா நாவென்ன நாவே' என்கிறது. இன்றைய விஞ்ஞானமும், 'நாராயணா என்ற மந்திரத்தில் வரும் சொற்கள் செபம் செய்யப்படும் பொழுது மனிதன் இதயத்தில் உள்ள 101 நாடிகளுள் சீவனாடியும் சுழிமுனை நாடியும் அசைகின்றன. அதனால், சீவனாடி உடலையும் உள்ளத்தையும், சுழிமுனைநாடி ஆன்மாவையும், அசடகற்றித் தூய்மைப்படுத்தும் என்று கருதுகிறது. திருமங்கை ஆழ்வாரும் முடிவில் நாராயண மந்திரத்தின் சிறப்பை உணர்ந்து, 'கண்டு கொண்டேன் நாராயணா என்னும் நாமம்' எனத் தேரினார். அசாமிளன் என்ற கொடியவனும் இறக்கும் நிலையில் நாராயணன் என்ற தன் பிள்ளையை அழைத்த காரணத்தால், முத்திப்பேறு பெற்றான் எனப் புராணம் கூறும். நம்மாழ்வாரும் 'திண்ணம்' என்ற உறுதிப்பாட்டுடன், 'எண்ணும் நாமம் திண்ணம் நாரணமே' என அருளினார்.

வைணவ சமயத்தின் முக்கிய தத்துவங்கள் மூன்று. அவை தத்துவத் திரயம், இரகசியத் திரயம், சரணாகதி என்பன. அவற்றுள் இரகசியத் திரயம் சிறப்புள்ளது. தகப்பனை ஒக்கும் அட்டாக்கரமும், தாயை ஒக்கும் 'மந்திர ரத்தினம்' என்ற துவயமும், கீதையில் கூறப்பட்ட சரமசுலோகமும் இரகசியத் திரயமாகும். இவற்றின் சிறப்பினைத் தேசிகன் அமிருத ரஞ்சனீ என்ற நூலில், 'மூன்றில் ஒருமூன்று மூவிரண்டு முந்நான்கும், தோன்றத் தொலையும் துயர்' என்ற குறட்பாவில் அருளினார்.

ஓம் என்ற பிரணவத்தையும் 'நம' என்பதையும் நாராயணாய என்பதையும் கூட்டி அதற்குற்ற வேத சுரத்துடன் ஓதுவதே திருவட்டாக்கரமாகும். 'ஓம்' என்ற பிரணவ பதத்தில் அ+உ+ம் என்ற ஓரெழுத்துச் சொற்கள் உள்ளன. 'அ' என்பது திருவுடன் கூடிய நாராயணனையும், அந்த 'அ' வில் மறை இலக்கணப்படி தொக்கி நிற்கும் நான்காம் வேற்றுமை உருபு கட்டை போன்ற பாரதந்திரியம் என்ற நிலையையும், 'உ' என்பது அவனுக்கே என்ற தோற்றத்தையும், 'ம்' என்பது இருபத்தைந்தாவது தத்துவமானசீவனையும் குறித்து,இந்தச் சீவன் திருமாலுக்கே ஆட்பட்டவனாய் இருக்க வேண்டும் என்ற பொருளை உணர்த்துகிறது.

அடுத்து 'நம' என்ற சொல் ந+ம என்று பிரிக்கப்படும். அச்சொல் முன்புள்ள பிரணவத்தையும் பின்புள்ள நாராயண மந்திரத்தையும் பொருள் நோக்குடன் நோக்கப் பின்வரும் கருத்தினை விளக்கி நிற்கிறது. நான் எனக்குரியவனே அல்லன்; என்றும் அவனுக்கே உரியன்; எத்தகைய சுதந்திரமும் அற்றவன். நான் என்ற நிலை மாறி, அடியேன் என்ற நிலை ஏற்பட, நானோ நான் செய்யும் செயலோ அதற்குற்ற பலனோ எனதன்று. உடலைவிட்டுத் தனியான ஆன்மா என்றும் அவனுக்கே குற்றேவல் புரியும் சேடன் ஆகும்.

மூன்றாம் பதமான 'நாராயணாய' என்பதன் விளக்கத்தை நாரதர் மூலம் திருமால் புண்டரீகனுக்கு அருளினார் எனவும், இமயத்திலுள்ள பதரிகாசிரமத்தில் தானேயாகிய நரனுக்கு நாராயணன் அருளினார் எனவும் கூறுவர். நார+அயனம்+ நான்கன் உருபு என அமைந்ததே, 'நாராயணாய' என்ற சொல்

லாகும். வைணவம், 'காணும் உலகம் அழிவற்றது' என்ற கொள்கை உடையது. அதனால், 'நாரம் என்ற இந்த நித்திய உலகத்தின் உள்ளும் புறமும் பாலில் நெய்யே போல் பிசிறி, அந்தர்யாமி என்ற நிலை பூண்டு, உலகனைத்தையும் படைத்தும் காத்தும் தம் வயிற்றுக்குள் மறைத்தும் செயல்புரிகிறவன் நாராயணன்என்று அச்சொல்லுக்கு வேற்றுமைத் தொகை கொண்டும்அன்மொழித்தொகை கொண்டும் இருவகைப் பொருள் கொள்ளப்படும். அச்சொல் 'ஒப் பற்ற தலைவனாய் ஆன்மகுணமும் வடிவழகும் கூடியவனுமான நாராயணனுக்கே பணிவிடை செய்து பேரின்பம் பெறவே அடியேன் உள்ளேன்' என்ற கருத்தை உணர்த்தும். மற்றும் வராகபுராணம், மநுசுமிருதி முதலிய நூலில் கூறியபடி 'நாராயணன்' என்ற சொல் 'நாரம்' என்ற நீரைப் படைத்து, அதற்குள் திருமால் எழுந்தருளி இருக்கிறான் எனவும் பொருள்படும். ஆக, ஓம் நமோ நாராயணாய என்னும் எட்டெழுத்து மூன்று பதமாய், அதர்வ வேதத்தின் மந்திரமாய் அமைகிறது. அதன் திரண்ட பொருள், எல்லா உலகத்துக்கும் ஒப்பற்ற பரம் பொருளாய் நீரில் எழுந்தருளி உள்ளும் புறமும் எங்கும் கலந்து, ஏவல் புரிந்து, மக்களை நல்வழிப் படுத்தி நலம் செய்பவனாயும் குறியும் நெறியும் தானேயாகி, உள்ளவனாயுமுள்ள திருமகளோடு உடன் அமர்ந்த நாராயணனையே சரண் புகுந்து நிற்பேன் என்பதாகும். என்.எஸ்.தா.

**எட்டயபுரம்**: தமிழ் நாட்டில் சிதம்பரனார் மாவட்டத்தில் ஒட்டப்பிடாரம் வட்டத்தில் உள்ள இவ்வூரில் மகாகவி சுப்பிரமணிய பாரதியாரும், சோமசுந்தர பாரதியாரும் பிறந்தனர். இவ்வூர் கி.பி. 1567–ஆம் ஆண்டு முதல் மக்களின் கவனத்தைக் கவர்ந்துள்ளது. பாஞ்சாலக்குறிச்சிப் பாளையத்தை கி.பி. 1765 முதல் கி.பி. 1799 வரை ஆண்டு வந்த கட்டபொம்மன் ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்டுத் தோல்வியுற்றுத் தப்பியோடினான். அவனைப்பிடித்துத் தரவேண்டிய கடமை எட்டயபுரத்தை ஆண்ட குறுநில மன்னனுக்கு அமைந்தது. எட்டயபுரப் படைவீரர்கள் மிகத் தீவிரமாக முயற்சி செய்தும், தப்பியோடிய கட்டபொம்மனைப் பிடிக்க இயலவில்லை. இங்குப் பருத்தி விளையும். இங்கு மகாகவி பாரதியாரின் நினைவாக எழுப்பப்பட்ட பாரதி மண்டபம் உள்ளது. தெ. பா.

**எட்டாம் திருமுறை**: சைவ சமயத்தின் திருவருள் விளக்கமாய் அமைந்து சிவபரம்பொருளைப் பரவிப் போற்றும் பக்திநிலையில் விளங்கி நிற்பன திருமுறைகள். அவை பன்னிரண்டென்பர். அப் பன்னிரண்டினுள் திருவாசகமும் திருக்கோவையாரும் எட்டாம் திருமுறையாக இருப்பன. அந்நூல்கள் சைவ சமய குரவர் நால்வருள் ஒருவராய மணிவாசகப் பெருமான் திருவாய் மலர்ந்தருளியன. மணிவாசகருக்கு வாதவூரர் என்ற பெயரும் உண்டு. கோவையார் கோவைத் திருவாசகம் எனவும் பெயர் பெறும். சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கனுள் இறைவற்கு ஞானத்தால் செய்யும் திருத்தொண்டினை விளக்குவது திருவாசகம். ஆண்டான் அடிமைநெறி முதலாய நான்கு நெறிகளில் காதல் நெறியை விளக்கி நிற்பது. இரு பெரு நூலும் ஞானத்திற்கும் காதன்மைக்கும் உரிமைபூண்டன; 'ஐம்புல வேடரின்..........' என்னும் சிவஞானபோத எட்டாம் நூற்பாவிற்கு இலக்கியமாயமையும் பெருமையுடையன. 'திருவாசகத்திற் குருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்' என்பது பழமொழி. அது அழகிய சிற்றம்பலமுடையான் அந்தணனாய் வந்து விரும்பிக் கேட்டுத் தன் கையால் எழுதி அம்பலத்தில் வைத்த சிறப்புடையது. திரு என்பது தெய்வத்தன்மையினையும் கண்டாரால் விரும்பப்படும் அழகினையும் சுட்டும்.

செம்மை மனத்தால் திருப்பணிகள் செய்த மணிவாசகர், இத் திருமுறையின்கண் அன்பு, அருள்களின் நீர்மைகளைத் தனித்த நிலையில் சிறப்புற விளக்கியுள்ளார். அவர் சிவ அனுபவம் பெற்றவர். அவர் அனுபவம் ஆசகன்றது; அன்புருவம் பெற்றுப்பின் அருளுருவம் அடைந்து பின்னர் இன்புருவான அனுபவம்; அவன் அருளால் அவன் தாள்வணங்கிய அருள் அனுபவம். பாட்டின் பொருள் உணர்ந்து சொன்ன மெய்யனுபவம்; 'கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்ட' அன்பு அனுபவம்; பரமன் பாடுவிக்கப் பாடிய அனுபவம்; மனம் கரைத்து மலம் கெடுக்கும் மாண்புறு அனுபவம்; 'இதற்குப் பொருள் யாது' என்ற தில்லைவாழ் அந்தணர்க்கு, 'இதற்கு இதுவே பொருள்' என அம்பலவனைக் காட்டி அருள் வெளியிற் கலக்கும் அனுபவம். மெய்ப்பொருள் நிரம்பிய வார்த்தை – மெய்ப்பொருளைத் தரும் வார்த்தை எனத் திருவாசகத் தொடருக்கு அனுபவப் பொருள் கண்டார் இராமலிங்க அடிகள். திருவாசகத் தொடருக்குக் கருவி ஆகுபெயர், காரிய ஆகுபெயர், அன்மொழித் தொகை என இலக்கணம் கூறுவர்.

திருவாசகம், 'நமச்சிவாய வாஅ அழ்க' என்று சிவத்திற்குரிய ஐந்தெழுத்து மறைமொழியினை முன் வைத்துத் தொடங்கி, 'அம்மை எனக்கருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே' என அச்சோப்பதிகத்தில் அம்மைநினைவோடு நிரம்புகிறது. ஐம்பத்தொரு பகுதிகளையும் அறுநூற்றைம்பத்தாறு பாடல்களையும்

உடையது. சில பதிப்புகளில் இருபாடல் கூடியும் உள்ளன. பாக்கள் யாவும் பாவும் பாவினமுமாம்.

முதல் நான்கும் நெடிய பாடல்கள். முதற் பாட்டுக் கலிவெண்பா. மற்றை மூன்றும் அகவல்கள். இந்நான்கும் திருவாசகப் பொருள் முழுதும் தம்மகத் தடக்கி நூற்பாயிரம் போன்றுள்ளன. பதிகந் தோறும் பாடியதலமும் பதிகத்தின் பெயரும் பெயர்ப் பொருளின் விளக்கமும் அமைந்துள்ளன. யாரோ ஓர் அருட்பெருஞ்செல்வர் அப்பெயர்ப் பொருளின் கருத்துக் குறித்துள்ளார். பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுதற்கு அக்குறிப்புப் பயன்படுகிறது. பதிகங்கள் பல மகளிர் விளை யாட்டுகளின் பெயரால் அமைந்துள்ளன. எளிய, இனிய நல்ல உருக்கம் தரும் இசைப்பாடல்கள் கிளியொடு பேசலும் குயிலொடு கூவலும், கோத்தும்பி யினைத் தூது போக்கலும் எவ்வளவு உருக்கம் தரு கின்றன! அதிசயப்பத்து அற்புதப்பத்தின்வேறுபாடுகள் அனுபவத்திற்கே புலனாவன. அடிகள் இறைவன் தனக்கெனச் செய்த விளையாட்டுகளையெல்லாம் நூலின்கண் பல இடங்களில் உருகி நின்று உரைக் கிறார். தம் பணிவு தோன்றத் தம்மை நாய் எனப் பலகாலும் கூறி அடிமைத்திறத்தை வெளிப்படுப்பது கற்பார் நெஞ்சைக் கரைவிக்கும். மதிநுட்பம் நூலோடுடைய அமைச்சராய் இருந்து ஒழுக்கத்தில் நின்று முற்றத் துறந்த முனிவர் மணிவாசகர் ஆதலின் மக்கள் தேவர் தம் வாழ்வின் தந்நல இயல்பினை, ‘வாழ்த்துவதும் வானவர்கள் தாம் வாழ்வான் மனம் நின்பால் தாழ்த்துவதும் தாமுயர்ந்து தம்மை எல்லாம் தொழ வேண்டி’ என ஆராத ஆசைப் பெருக்கினதாக வைத்து விளக்குவர். இரைதேர் கொக்கொத்து இரவு பகல் ஏங்கியிருந்து சிவத்தின் அருளையே நாடினர் ஆதலின், அவ்வருள் ஈனும் அன்பினையும் விரும்பி நின்று, ‘இடையறா அன்புனக்கென் ஊட கத்தே நின்றுருகத் தந்தருள்’ எனவும், ‘கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே’ எனவும் பாடு வாராயினர். இறைவனை நேரே அழைத்து அவரிடம் முறையிட்டும் குறையிரந்தும் பாடும் பரிசு திருவாசகம் முழுதும் அதன் தனிச்சிறப்பாய் அமைகிறது. மறை மொழியில் தொடங்கிய மணிவாசகர், ‘சிவாயநம எனப் பெற்றேன்,’ ‘ஓங்காரத்துட் பொருளை ஐயன் எனக்கு அருளியவாறு’ எனப் பெற்ற பேற்றினை விளக்குகிறார். ‘யாவரும் பெற்றறியா, இன்பத்துள் வைத்தாய்’ எனப் போற்றுகிறார். இத்திருமுறை யினை ஓதுவாரும் கேட்பாரும் ஓயாதேநினைப்பாரும் அடையும் பயன்களைச் சிவப்பிரகாசர், இராமலிங்க வள்ளலார் போன்ற பிற்காலச் சான்றோர் தெளி வாகக் கூறியுள்ளனர். இந்நூற்கு அனுபூதி உரை முதலாகப் பல உரைகளும் உரைக்குறிப்புகளும் உள.

எட்டாம் திருமுறைக்கண் அமைந்த மற்றொரு நூலாகிய திருக்கோவையார் திருக்கோவை என்ற பெயரும் பெறும்.‘பாவை பாடியவாயால் ஒரு கோவை பாடுக’ என இறைவன் வேண்டப்பாடியது என்பர்.இந் நூல் இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு, அன் பொடு புணர்ந்த ஐந்திணை ஒழுகலாற்றினைத் தெய்வ ஒண்டீந் தமிழிற் பாடியது;நானூறு கட்டளைக் கலித் துறைப்பாக்களால் அமைந்தது.முதன்முதலாக எழுந்த கோவைநூல். இது பொருள் தொடர்நிலைச் செய்யுள். சிவபரம்பொருளைப் பாட்டுடைத் தலை வனாக வைத்துப் பாடப்பட்டது. வீட்டின்பம் பயக்க வல்லது. அகனைந்திணை ஒழுகலாற்றினைப் பண்டை மரபின்படி விளக்குவது. இதற்குப் பேராசிரியர் உரையும் பழைய உரையும் உண்டு. அவை ஒன்றனை ஒன்று தழுவி நிற்கும். பாட்டின் கருத்தினைப் புலப் படுத்தும் கொளுக்களும் உள. பேரின்பத்திற்குரிய கொளுக்களும் உள. இக்கொளுக்கள் சீர்காழித் தாண்டவராயர் கூறும் திருவாசக அநுபூதி உரையில் உள்ளன. திருக்கேவையார் உண்மை, திருக்கோவை யார் உண்மைக் கருத்துகள் என்ற நூலிலும் உள.

பேராசிரியரின் உரைப்பாயிரம் இந்நூல் அகப் பொருளையும் யோகப் பொருளையும் தரும் என்று சுட்டிச் செல்கிறது. பேரின்பத்திற்குரிய கொளுக்கள் பேரின்பப் பொருளைத் தந்து நிற்கின்றன. குமர குருபரர் இதனை, ‘ஐந்திணை உறுப்பால் நாற் பொருள் பயக்கும் காமஞ்சான்ற ஞானப்பனுவல்’ என்பர். இந்நூல் இயற்கைப் புணர்ச்சி முதலாகப் பரத்தையிற் பிரிவு முடிய இருபத்தைந்து கிளவிக் கொத்தெனப்படும் அதிகாரங்களை உடையது.

முதற்பாட்டில் பெண்மையின் இயல்பும் நிறைவும் இறுதிப் பாட்டில் ஆண்மையின் இயல்பும் நிறைவும் காணலாம். உடன்போக்கில் அன்பால் சிவமாய தலைமக்களை எதிரிற்கண்டார் சிவனும் சக்தி யுமாகவே கருதிக் கைகூப்பி வணங்குகின்றனர்.

மணிவாசகர் தம் சொல் சிவன் அருளால் வருவன என்றே சுட்டுகிறார். இறைவன் கூடலின் ஆய்ந்த ஒண்தீந்தமிழின் நீர்மையினைக் கல்விநலம் கூறல் என்ற துறையின் மேல் வைத்து மணிவாசகர் உரைக் கும் திறன் போற்றத்தக்கது. ‘சீரளவில்லாத் திகழ் தரு கல்வி’ என்னும் முதற்றொடக்கத்தையுடைய அச்செய்யுள், கற்றதனால் ஆய பயன் கடவுள் கழல் வணங்கல் என்ற உண்மையைக் காட்டுகிறது.

பெண்மையின் பெருமை கூறும்‘திருவளர்தாமரை’ என்னும் பாட்டின் பொருளைப் பேராசிரியர் விளக்கியுள்ளார். கோவை நூல் முழுவதும், ‘கடிமலர் மாலையாக உருவகித்த பெண்ணின் வரலாறே

உரைக்கப்படுகிறது எனத் தெளிவு படுத்துகிறார். ஆண்மையின் நிறைவினைக் 'காரணி கற்பகம்' என்னும் முதற்குறிப்புடைய பாடலைக் கொண்டும் அதன் உரையைக் கொண்டும் அறியலாம்.

திருவெம்பாவையில் கற்புடைக் கன்னிப்பெண்டிர் பாவை நோன்பு கொண்டமை காணலாம். விரும்பிய காதலரைப் பெறவும் நாடு திருந்திய வளம் பெறவும் அன்றே பாவை நோன்பு நோற்றனர். திருவாசகம் அவர் நோன்பு நோற்ற அளவே பாடிற்று. நோற்று நின்றார் கருதியவாறே காதலரை எய்தினரோ? எய்தி இன்புற்று வாழ்ந்தனரோ என்னும் வினாவிற்கு விடையாகத் திருக்கோவை அமைந்தது எனலாம்.

தனித்த அன்பின் பெருக்கை ஞானத்தில் வைத்து அளவிட்டுக் காட்டி அருளை விளக்கியது திருவாசகம். ஆண்மையும் பெண்மையும் கூடிய அன்பின் பெருக்கை ஞானத்தில் வைத்துக் காட்டி அருள் ஊதியம் விளக்கிற்று திருச்சிற்றம்பலக் கோவையார். திருக்கோவையர் மேல் உரைப்பொருள் முற்றியது திருவாசகம் என்று கூறலாம். ப.சு.ம.

**எட்டிகுடிப் பிரபந்தங்கள்** : தஞ்சை மாவட்டத்தில் முருகப் பெருமான் கோயில் கொண்டுள்ள தலங்களுள் ஒன்று எட்டிகுடி என்பதாகும். இதனை எட்டுக்குடி என்றும் மக்கள் வழங்குவர். இத்தலத்தில் கோயில் கொண்டிலங்கும் முருகப் பெருமானைப் பற்றிப் பாடப் பெற்ற பிரபந்தங்கள் எட்டிகுடிப் பிரபந்தங்கள் எனப்படும்.

முருகப் பெருமானுக்குச் செட்டி என்பதும் ஒரு பெயராகும். 'கடற்சூர் தடிந்திட்ட செட்டியப்பனை' என்பது சுந்தரமூர்த்தி நாயனாரின் திருவாக்காகும். பண்டைக்காலத்துச் செட்டிமார்களில் சிறந்து விளங்கியவர்க்கு எட்டி என்னும் பட்டம் வழங்கப்பட்டது. சிறந்த எட்டி என்னும் சிறப்புடைய செட்டியாராய் விளங்கும் முருகன் எழுந்தருளியுள்ள தலமாதலின் இத்தலத்திற்கு எட்டிகுடி என்பது பெயராயிற்று.

ஊருக்குரிய தலமரம் எட்டிமரமாதலின் இவ்வூருக்கு எட்டிகுடி என்று பெயர் வந்ததென்றும் ஒரு சாரார் கூறுவர். இதனால் காஞ்சிரங்குடி என்றும் இவ்வூருக்குப் பெயரேற்பட்டுள்ளது. காஞ்சிரம் என்பது எட்டிமரத்தினைக் குறிக்கும். இக்காலத்தில் இவ்வூரின் தலவிருட்சமாகக் காணப்பெறுவது மிக்க சிறப்புடைய வன்னிமரமாதலின் எட்டி தலவிருட்சம் என்பது பொருந்தாக் கூற்றாகும். எட்டி என்பதன் உண்மைப் பொருளை அறியாத நிலையில் எட்டி மரத்தை இவ்வூர்த் தலமரம் எனக் கொண்டனர் போலும். அவ்வடிப்படையில் அமைந்த காஞ்சிரங்குடி என்னும் பெயர் இலக்கிய ஆட்சியும் பெற்றுள்ளது. இவ்வூரிலுள்ள வான்மீகி முனிவர் சமாதியும் வன்னி மரத்தடியில் அமைந்து விளங்குவது இக்கோயிலின் சிறப்பினைப் பெருக்குவதாக உள்ளது.

இவ்வூர்க்குச் செல்ல நாகைப்பட்டினம், திருவாரூர், திருத்துறைப்பூண்டி ஆகிய நகரங்களிலிருந்து பேருந்து வசதியுண்டு. மூலவராக மயில்மீது முருகப் பெருமான் வள்ளி தெய்வயானையுடன் காட்சி தருகிறார். அழகிய ஒருமயில் தாங்க அமர்ந்த திருக்கோலத்தில் விளங்கும் மூர்த்தியின் கற்படிவம் மிருந்த் வேலைப்பாடுடன் திகழ்கிறது. இங்கு மூல லிங்கமாகச் சௌந்தரேசுவரரும் அம்மை ஆனந்த வல்லியும் கோயில் கொண்டுள்ளனர். மக்கள் குறை நீக்க வல்ல சிறந்த தலமாக இப்பதி விளங்கிக் கொண்டிருக்கிறது, ஒரு சிற்பி மூன்று ஆறுமுகப் பெருமான் திருப்படிமங்களைக் கலை நுட்பச் சிறப்புடன் செய்து அவற்றைச் சிக்கலிலும் எண்கணிலும் எட்டிகுடியிலும் நிறுவச் செய்தான் என ஒரு செவி வழி வரலாறு வழங்குகிறது. இத்தலச் சிறப்புப்பற்றி ஞானிகளும் அடியார்களும் பல நூல்கள் பாடிப் போற்றியுள்ளனர்.

அருணகிரிநாதர் இத்தலத்திறைவனை நான்கு திருப்புகழ்ப்பாக்களால் பாடிப் பரவியுள்ளார். அவற்றுள் 'பழனத்தொளிர் முத்தணி எட்டிகுடி', 'செழுநத்து உமிழும் முத்து வயலுக்குள் நிறைபெற்ற திகழ் எட்டிகுடி', 'எட்டி குடிப்பதிவேலா', 'காஞ்சிரங்குடி ஆறுமுகத்தெம் பெருமாள்' எனப் பலவாறாக இத்தலத்தையும் இங்குள்ள முருகப்பெருமானையும் போற்றியுள்ளார்.

காஞ்சிபுரம் சிதம்பரமுனிவர் முருகப்பெருமான் உறையும் தலங்கள் பற்றிச் சேத்திரக் கோவைப் பிள்ளைத்தமிழ் என ஒரு நூல் பாடியுள்ளார். அதில் எட்டிகுடி முருகனைப் பற்றிப் பாடியுள்ளது மிகவும் சிறப்பாக உள்ளது 'மட்டுவிரி செந்தாமரைத்தடம் சூழ்கழனி வளர் செந்நெல்கன்னல் நிகராம், வளர் கன்னல் பூகம்நிகராம் கமுகு தெங்கொக்கும் வளர் தெங்குவான் அளக்கும் எட்டிகுடி' என்று எட்டிகுடியின் இயற்கை வளத்தினைச் சிறப்பித்துக் கூறியுள்ளார்.

சென்னையைச் சார்ந்த சு.கு. கோவிந்தசாமிப் பிள்ளை அவர்கள் எட்டிகுடி சிவசுப்பிரமணியர் தோத்திர மஞ்சரி என்னும் ஒரு நூல் இயற்றியுள்ளார். கல்லல் மணிவாசக சரணாலய அடிகள் எட்டிகுடிப் பதிகம் இயற்றியுள்ளார். யாழ்ப்பாணம் சிவசம்புப்புலவர் எட்டிகுடிப் பிரபந்தம் என்று ஒரு

பிரபந்தம் படைத்துள்ளார். நாகைப்பட்டினம் கிருட்டிணசாமி உபாத்தியாயர் எட்டிகுடி முருகன் பல்சந்தமாலை என்னும் ஒரு மாலை புனைந்து முருகனுக்குச் சூட்டியுள்ளார். அவர் திருமகனார் குமரகுருபர உபாத்தியாயர் எட்டிகுடி வேலவர் மாதப்பத்து, எட்டிகுடி வேலவர் வாரப்பத்து என்னும் நூல்களை இயற்றியருளினார். தஞ்சை மாவட்டம் கமலாபுரம் சி. இராமசாமிப் பிள்ளை அவர்கள் எட்டிகுடி வேலவர்மாலை என்னும் நூல் ஒன்றை ஆக்கியுள்ளார்.

கோவைக் கவியரசு வித்துவான் கு. நடேசக் கவுண்டர் அவர்கள் எட்டிகுடி முருகன் பிள்ளைத் தமிழ் என்னும் நூலைப் பத்திச்சுவை ததும்பப் பாடியுள்ளார். எட்டிகுடி முருகன் அந்தாதி, எட்டிகுடி ஏசல் போன்ற பல பிரபந்தங்களும் இத்தலத் திறைவன் மீது பாடப்பட்டுள்ளன. இவ்வாறு அமைந்த பிரபந்தங்கள் பலவும் எட்டிகுடிப் பிரபந்தங்கள் எனப்படும். ஒரு செயலின் அருமைப்பாட்டைக் குறிக்க மக்கள் தமக்குள் பேசும்போது, 'எட்டுக்குடிக் குக் காவடி எடுத்தாலும் அது நடக்காது' என்னும் பழமொழியைக் குறிப்பிடுகின்றனர். இவ்வூர் இன்று எட்டுக்குடி என்ற பெயராலே வழங்கப்படுவதனை இப் பழமொழி உணர்த்துகிறது. மேலும், இப்பழமொழியிலிருந்தே பக்தர்கள் இவ்வூரில் காவடி எடுக்கும் சிறப்பும் இங்குள்ள முருகன் அடியார்களுக்கு அருள் பாலிக்கும் பாங்கும் தெற்றெனப் புலனாகின்றன.

இரா.ச.

**எட்டுத் தொகை:** தமிழில் எழுந்துள்ள இலக்கிய நூல்களில் சங்க இலக்கியம் என வழங்கப் பெறும் 'பாட்டும் தொகையும்' மிகப் பழமையான நூல்களாகும். 'மூத்தோர்கள் பாடியருள் பத்துப் பாட்டும் தொகையும்' என்பது தமிழ்விடு தூது. பாட்டு என்பது பத்துப்பாட்டு; தொகை என்பது எட்டுத்தொகை. எட்டுத்தொகை நூல்கள் இவை இவை என்பதை 'நற்றிணை நல்ல குறுந்தொகை' எனத்தொடங்கும் ஒரு பழம்பாடல் குறிப்பிடுகிறது. எட்டுத்தொகையில் அமைந்துள்ள நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு ஆகிய நூல்களில் காணப்படும் பாடல்கள் புலவர்கள் பலரால் இயற்றப்பட்டுத் தொழில், அளவு, பாட்டு, பொருள் என்பவற்றுள் ஏதேனும் ஒன்றின் அடிப்படையில் தொகுக்கப் பெற்றமையின் அவை தொகை எனப் பெயர் பெற்றன. இவற்றுள் அகப்பொருளை அடிப்படையாகக் கொண்டு விளங்குவன நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு என்னும் ஐந்து நூல்களாகும். பதிற்றுப் பத்து, புறநானூறு ஆகிய இரண்டு நூல்களும் புறப் பொருள் பற்றியன. பரிபாடல் அகமும் புறமும் கலந்தமைந்த பாடல்களைக் கொண்ட தொகுதி நூலாகும். அகப்பொருளைக் கூறும் ஐந்து நூல்களும் சிறிதும் சிதைவின்றி முழுமையாகக் காணப்படுகின்றன. புறப் பொருளைக் கூறும் இரு நூல்களும் முழுமையாகக் கிடைக்கவில்லை. பரிபாடலும் அவ்வாறே முழுமையாகக் கிடைக்கவில்லை. புறப் பொருள் பற்றிய பாடல்கள் பாடபேதங்கள் மிகுந்து காணப்படுவதும் ஈண்டுக் குறிக்கத்தக்கதாகும். அகப் பொருள் பற்றிய பாடல்கள் காதல் வாழ்க்கையினைக் கவினுற எடுத்தியம்ப, புறப்பொருள் பற்றிய பாடல்கள் வீரம், கொடை, புகழ் முதலிய பண்புகளை எடுத்துக் காட்டுவதாய் அமைந்துள்ளன. சுருங்கச் சொன்னால், அகப்பாடல்கள் வீட்டு வாழ்வினையும் புறப்பாடல்கள் நாட்டு வாழ்வினையும் நலமுற நவில்கின்றன எனலாம்.

**நற்றிணை:** இது ஒன்பது அடி முதல் பன்னிரண்டு அடி வரையிலும் அமைந்துள்ள பாடல்களைக் கொண்ட தொகுதி ஆகும். இந்நூலினைத் தொகுத்தவர் இன்னார் எனத் தெரியவில்லை. ஆயினும் நூலினைத் தொகுப்பித்தவர் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதியார் என்பது தெரியவருகிறது. 'திணை' என்ற சொல் அகத்திணையில் ஒழுக்கம் என்னும் பொருளை உணர்த்தும். அதனோடு 'நல்' என்ற அடையும் சேர்ந்து, இந்நூல் 'நற்றிணை' என வழங்குகிறது. முதன்முதலில் நூலினைத் தொகுத்தவரே 'நற்றிணை' என்ற பெயரைத் தந்திருக்க வேண்டும் எனத் தெளியலாம். நற்றிணையைப் பாடிய புலவர்கள் இருநூற்றெழுபத்தைவராவர். அவர்களுள் தாங்கள் பாடிய பாடல்களில் அமைந்துள்ள பாவடித் தொடர்களாலே பெயர் பெற்ற புலவர்கள் தனிமகனார், தும்பிசேர் கீரனார், தேய்புரிப் பழங்கயிற்றினார், மடல்பாடிய மாதங்கீரனார், மலையனார், வண்ணப்புறக் கந்தரத்தனார், விழிக்கட் பேதைப் பெருங்கண்ணனார் என்பவராவர். நற்றிணையில் அமைந்துள்ள பாடல்களில் பண்டைத் தமிழ் மக்களின் காதல் வாழ்வு, அறவுணர்வு, அரசர் தம் கொடைச் சிறப்பு, மக்களின் பழக்க வழக்கங்கள், மன்னர்தம் ஆட்சி மேம்பாடு, உவமை நலம், உள்ளுறை, இறைச்சிச் சிறப்பு முதலியவற்றினைக் காணலாம். கபிலர் என்னும் சங்ககாலச் சான்றோர் நற்றிணையின் முதற்பாடலிலேயே நீரிற்கும் உலகிற்கும் இடையேயுள்ள இயைபைக் காட்டிக் காதலி காதலனின் காதற்சிறப்பினைக் கவினுறக் கிளத்துகின்றார்.

'முந்தை யிருந்து நட்டோர் கொடுப்பின், நஞ்சும் உண்பர் நனிநா கரிகர்' என்னும் நற்றிணைப் பாடலடிகள், 'பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க, நாகரிகம் வேண்டு பவர்' என்னும் திருக்குறளின் எதிரொலியாக அமைந்திருக்கக் காணலாம். நள்ளிரவில் விருந்தினர் வீட்டிற்கு வந்தாலும், அவர்களை நகைமுகத்துடன் வரவேற்று விருந்து போற்றி மகிழும் மனைவியின் மாண்பு, 'அல்லி லாயினும் விருந்துவரின் உவக்கும், முல்லை சான்ற கற்பின் மெல்லியல்' என்னும் பகுதியால் விளங்கும். தலைவன் பொருள் வயிற் பிரிந்திருக்கிறான்; தலைவி துயருறுகிறாள். பிரிவால் பேதைமையுற்று உயிர் ஒருகாற் பிரிந்து விடுமோ என்று ஐயப்படும் தலைவி, தான் உயிர் துறத்தற்கு அஞ்சவில்லையென்றும், உயிர் துறந்தால் எங்கே மறுபிறப்பில் தலைவனை மறந்துவிட நேரிட்டு விடுமோ என்று வருந்துவதாகவும் குறிப்பிடுகிறாள். புன்னை மரத்தைத் தன் தமக்கையாகக் கருதி, அப் புன்னை மரத்தினடியில் தன் காதலனின் புகழ்ச்சி மொழியைக் கேட்க நாணிய தலைவியை நற்றிணைப் பாடல் ஒன்று சித்திரிக்கிறது. தலைவன் பிரிந்து சென்ற நாள்களைச் சுவரிற் கோடிட்டுத் தலைவி எண்ணி வருவதும், தலைவன் வரவைப் பல்லி சொல்வதால் நம்புவதுமான செய்திகள் நற்றிணைப் பாடல்களில் இடம் பெற்றுள்ளன.

**குறுந்தொகை:** எட்டுத்தொகை நூல்களிலேயே முதன்முதலாகத் தொகுக்கப்பட்ட நூலாகக் கருதப் பெறுவது இந்நூலாகும். இந்நூல் 'நல்ல குறுந் தொகை' என்றும் பாராட்டப் பெறுகிறது. நான்கடி முதல் எட்டடி வரை அமைந்த அகவற் பாட்டுகள் நானூறு கொண்ட இந்நூலினைப் பூரிக்கோ என்பவர் தொகுத்துள்ளார். பாடிய புலவர்கள் இருநூற்றைவர். பிற்கால உரையாசிரியர்களாலும் சான்றோர்களாலும் பெரிதும் எடுத்தாளப்பெற்ற பாடல்கள் குறுந் தொகையில் அமைந்துள்ளன. முதல் முந்நூற்றெண்பது பாடல்களுக்குப் பேராசிரியரும், இறுதி இருபது பாடல்களுக்கு நச்சினார்க்கினியரும் உரையெழுதினர் என்பர். ஆனால், அவ்வுரைப் பகுதிகள் கிடைக்க வில்லை. குறுந்தொகைப் பாடல்களில் நற்றிணை, அகநானூறு போன்ற நூல்களில் அமைந்துள்ளது போன்ற நீண்ட இயற்கை வருணனை இடம்பெற வில்லை. ஆனால், ஐங்குறுநூறு என்னும் நூலில் ஒரு சிறிதே காணப்படும் இயற்கை வருணனை போன் றில்லாமல் அளவான இயற்கை வருணனையினைக் காணலாம். குறுந்தொகைப் பாடல்களில் தம் இயற் பெயரும் சிறப்புப் பெயரும் ஒருங்கே அமைந்த புலவர்களாக ஐந்து புலவர்களும், தங்கள் பாடலிற் காணலாகும் உவமையமைந்த பாவடித் தொடராற் பெயர் பெற்றிலங்கும் பதினெண் புலவர்களும் காணப்பெறுகின்றனர். எங்கோ வெவ்வே றிடத்திற் பிறந்து, ஓரிடத்தே கண்டு, காதல் கொண்டு, நெஞ்சங்கள் ஒன்றான தலைவனும் தலைவியும் அவர்தம் தாய்தந்தையர் முன்னர் ஒருவர்க் கொருவர் உறவில்லையென்றாலும் இப்போது செம் மண் நிலத்தில் வீழ்ந்த மழைநீர், அச்செம்மண் நிறத் தோடு ஒன்றி விட்டதைப் போல, இரு நெஞ்சங் களும் ஒன்று கலந்து விட்டன என்பதனை ஒரு பாடல் கிளத்துகிறது. 'வினையே ஆடவர்க் குயிரே வாணுதல், மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்' என்ற அடிகள் அக்கால ஆண் பெண் வாழ்வு நிலையைப் பேசும். பலா மரத்தின் சிறிய கொம்பில் பெரியபலாப் பழம் தொங்குவது போலத் தலைவியின் சிற்றுயிரில் பெருங்காம வேட்கை நிறைந்து கிடக்கிறது என்னும் உவமை உளங் கொளத்தக்கது.

மேலும், இந்தப் பிறவியிலன்றி இனித் தொடரும் மறு பிறவியிலும் தலைவனின் நெஞ்சில் இடம் பெற நினைக்கும் தலைவியின் காதல் நெஞ்சம்,

'இம்மை மாறி மறுமை யாயினும்
நீயா கியரென் கணவனை
யானா கியர்நின் நெஞ்சுநேர் பவளே'

என்னும் அடிகளில் புலப்படும்.

**ஐங்குறுநூறு:** பாரதம் பாடிய பெருந்தேவனாரின் சிவபெருமானைப் பற்றிய கடவுள் வாழ்த்துச் செய்யுளையடுத்து ஐந்நூறு பாடல்கள் கொண்ட தொகுதியாகும் இது. பாடல்கள் மூன்றடிச் சிற்றெல்லையும் ஆறடிப் பேரெல்லையும் கொண்டு விளங்குகின்றன. ஒரு திணைக்கு நூறு பாடல்களாக ஐந்து திணைகளுக்கும் ஐந்நூறு பாடல்கள் கொண்டது.மருதத் திணையைப் பாடியவர் ஓரம் போகியார்; நெய்தல் திணையைப் பாடியவர் அம்மூவன்; குறிஞ்சித் திணையைப் பாடியவர் கபிலர்; பாலைத் திணையைப் பாடியவர் ஓதலாந்தையார்; முல்லைத் திணையைப் பாடியவர் பேயனார். ஐங்குறுநூற்றைத் தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர்க் கிழார்; தொகுப்பித்தவர் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும் பொறை. வாழ்வியல் கலந்த வாழ்த்தியல் ஐங்குறுநூற்றுப் பாடல்களின் சிறப்பாகும்.

**பதிற்றுப்பத்து:** சேர அரசர்பதின்மரைப் பற்றிப் புலவர்கள் பதின்மர் பாடிய பத்துப்பத்துப் பாடல்களின் தொகுதியே பதிற்றுப்பத்தாகும். இதில் இன்று முதற்பத்தும் இறுதிப்பத்தும் கிடைக்கவில்லை. அக் காலச் சேர அரசர்களின் வரலாற்றினை அறியப்

பெருந்துணை புரியும் இந்நூலில் அமைந்துள்ள ஒவ்வொரு பாட்டின் முடிவிலும் துறை, வண்ணம், தூக்கு (இசை), பெயர் என்பவற்றைப் புலப்படுத்தும் குறிப்புகள் காணப்படுகின்றன. ஒவ்வொரு பாட்டும் அப்பாட்டில் அமைந்துள்ள சிறப்புடைத் தொடர் ஒன்றாற் பெயர் பெற்றுள்ளது. ஒவ்வொரு பத்தின் இறுதியிலும் அப்பத்தினைக் கூறும் வரலாற்றைக் கொண்ட பதிகம் காணப்படுகிறது. அப்பதிகம் பாடினோர் பெயர், பத்துப்பாடல்களின் பெயர், பாடினோர் பெற்ற பரிசிலின் அளவு, அவ்வரசர் ஆண்ட கால அளவு முதலியனவற்றைப் புலப்படுத்துகின்றன. இரண்டாம்பத்து இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைக் குமட்டூர்க் கண்ணனார் பாடியது. மூன்றாம் பத்து பல்யானைச் செல்கெழு குட்டுவனைப் பாலைக் கௌதமனார் பாடியது. நான்காம் பத்து களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரலைக் காப்பியாற்றுக் காப்பியனார் பாடியது. ஐந்தாம் பத்து கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவனைப் பரணர் பாடியது. ,ஆறாம்பத்து ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைக் காக்கை பாடினியார் பாடியது. ஏழாம்பத்து செல்வக் கடுங்கோ வாழியாதனைக் கபிலர் பாடியது. எட்டாம்பத்து தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும்பொறையை அரிசில்கிழார் பாடியது. ஒன்பதாம் பத்து இளஞ்சேரலிரும்பொறையைப் பெருங்குன்றூர் கிழார் பாடியது.

இயற்கை வருணனை, நிலவளம், நீர்வளம், வீரச்சிறப்பு, வென்றி மேம்பாடு, கொடைவளம் முதலியன பதிற்றுப்பத்துப் பாடல்களால் விளக்கமுறுகின்றன. 'காலம் அன்றியும் கரும்பறுத் தொழியாது', 'பாடல் சான்ற பயங்கெழு வைப்பு', 'விழவறு பறியா முழவிமிழ் மூதூர்', 'ஆறிய கற்பின் அடங்கிய சாயல், ஊடினும் இனிய கூறும் இன்னகை', 'மண்புனை இஞ்சி மதில் கடந்தல்லது, உண்குவ மல்லேம் புகா வெனக் கூறி', 'வாராராயினும் இரவலர் வேண்டித் தேரின் தந்தவர்க்கு ஆர்பதன் நல்கும்' முதலான உயிர்த்தொடர்கள் இந்நூலின்கண் நிறைந்துள்ளன.

பரிபாடல்: 'பரிபாடல்' என்னும் ஒருவகைப் பாவான் இயன்றதாதலின் இந்நூல் இப்பெயர் பெற்றது. பொருட்சிறப்பான் அமைந்தமையின் இந்நூல் 'ஓங்கு பரிபாடல்' எனப் பாராட்டப் பெற்றது. எழுபது பரிபாடல்களில் இன்று கிடைப்பவை இருபத்திரண்டேயாகும். அவற்றுள் திருமாலுக்குரியவை ஆறு; முருகனுக்குரியவை எட்டு; வையைக்கு உரியவை எட்டு. இயற்கை வருணனை, தெய்வ வழிபாட்டு முறைகள், மக்களின் பழக்க வழக்கங்கள், அறம், பொருள், இன்ப, வீடு பேற்றுக் கூறுபாடுகள், ஆடல் பாடல்கள் முதலியன இந்நூலால் நன்கு விளக்கமுறுகின்றன. சொற்சுவை, பொருட்சுவை மிகுந்த பாடல்கள் பலவுள. 'யாம் இரப்பவை, பொருளும் பொன்னும் போகமும் அல்ல நின்பால், அருளும் அன்பும் அறனும் மூன்றும், உருளிணர்க் கடம்பின் ஒலிதாரோயே' என்னும் பாடலடிகள் திருமுருகனைப் பரவும் அடியார்தம் அகமனப் பெற்றியை எடுத்தியம்புகின்றன.

கலித்தொகை: ஐந்து திணைகளாகப் பகுக்கப் பெற்றுள்ள இந்நூல் மொத்தம் நூற்றைம்பது பாடல்களைக் கொண்டுள்ளது. இன்பப் பொருளைச் சொல்வதற்கு இயைந்த கலிப்பாவால் அமைந்து துள்ளல் ஓசை மிகுந்து வரும் இந்நூல், 'கற்றறிந்தார் ஏத்தும் கலி', 'கல்வி வலார் கண்ட கலி' என்று பாராட்டப் படுகின்றது. முப்பத்தைந்து பாடல்களைக் கொண்ட பாலைக்கலியினைப் பாடியவர் பாலை பாடிய பெருங்கடுங்கோ. குறிஞ்சித் திணை கொண்ட இருபத்தொன்பது பாடல்களைப் பாடியவர் கபிலர். மருதத்திணை பற்றிய முப்பத்தைந்து பாடல்களைப் பாடியவர் மருதனிள நாகனார். முல்லைத்திணை பற்றிய பதினேழு பாடல்களைப் பாடியவர் சோழன் நல்லுருத்திரன். கடவுள் வாழ்த்துடன் நெய்தல் திணைக்குரிய முப்பத்து மூன்று பாடல்களைப் பாடியவர் நல்லந்துவனார் ஆவர். இந்நூலுக்கு நச்சினார்க்கினியர் உரை கண்டுள்ளார். சங்கம் நிலவிய செய்தியினை ஒரு கலிப்பாடல் புலப்படுத்துகிறது. இராமாயண பாரத இதிகாச நிகழ்ச்சிகளைச் சில பாடல்கள் தெரிவிக்கின்றன. நல்ல உவமைகளும் அறக்கருத்துகளும் நிறைந்து இந்நூல் துலங்குகிறது.

அகநானூறு: 'அகம்' என்ற பெயரான் அமைந்த இந்நூல் 'நெடுந்தொகை' என்றும் நவிலப்படும். கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார் ஆவார். மதுரை உப்பூரிகுடிகிழார் மகனார் உருத்திர சன்மனார் இந்நூலைத் தொகுத்துள்ளார். முதல் நூற்றிருபது பாடல்களைக் கொண்ட பகுதி 'களிற்றியானைநிரை' என்றும், அடுத்த நூற்றெண்பது பாடல்களைக் கொண்ட பகுதி 'மணிமிடை பவளம்' என்றும், இறுதி நூறு பாடல்களைக் கொண்ட பகுதி 'நித்திலக்கோவை' என்றும் பெயர் பெறும். பதின்மூன்றடிச் சிற்றெல்லையும் முப்பத்தோரடிப் பேரெல்லையும் கொண்ட அகவற்பாவாலான அகநானூறு என்னும் இந்நூலைத் தொகுப்பித்தவன் பாண்டியன் உக்கிரப் பெருவழுதி ஆவான். இந் நூலுள் 1,3,5,7,9 முதலான ஒற்றை எண் பெற்ற பாடல்கள் பாலைத் திணையாகவும், 2,8,12 ஆக இரண்டும் எட்டுமான எண் பெற்றவை குறிஞ்சித் திணையாகவும், 4,14 என நான்கை ஒட்டிய எண் பெற்றவை முல்லைத் திணையாகவும், 6,16 முதலான

ஆறை ஒட்டிய எண் பெற்றவை மருதத்திணையாக வும், 10,20 எனப் பத்துகளாலாகிய எண் பெற்றவை நெய்தல் திணையாகவும் அமைந்துள்ளன. இருதலைப் புள்ளின் ஓருயிர் அன்ன' என்ற தொடர் காதலின் நெருக்கத்தினைப் புலப்படுத்தும். 'செந்தார்ப் பைங் கிளி முன்கை ஏந்தி' என்ற அகப்பாடற் பகுதி உள வியல் நுட்பத்தினை உரைக்கும். பேரரசர்கள் சிலர், சிற்றரசர்கள் பலர் வாழ்க்கை வரலாற்றினை இந் நூல் கொண்டு தெளியலாம். திருமணம் பண்டு எவ் வாறு நிகழ்ந்தது என்பதனை நல்லாவூர் கிழார் பாடல் புலப்படுத்துகிறது. அழகிய நில வருணனை அகப்பாடல்களின் தனிச் சிறப்பாகும். உள்ளுறை, இறைச்சிப் பொருள்கள் இந்நூலில் நன்கு துலக்கமுறு கின்றன.

புறநானூறு: இந்நூல் பல்வேறு தொழில், சாதி, ஊர்களைச் சேர்ந்த பல புலவர்களால் அகவற்பாவாற் பாடப் பெற்ற நூலாகும். முரஞ்சியூர் முடிநாக ராயர் தொடங்கிக் கோவூர் கிழார் ஈறாகப் பல புல வர்கள் பாடிய இத்தொகை நூல் 'புறம்' என்ற பெய ராலும் வழங்கும். பாரதம் பாடிய பெருந்தேவனாரின் சிவனைப் பற்றிய கடவுள் வாழ்த்துப் பாடல் அமைந் துள்ள இந்நூலைத் தொகுத்தவர், தொகுப்பித்தவர் இன்னார் எனத் தெரியவில்லை. 'புறப்பாட்டு' என்ற பெயரானும் இந்நூல் வழங்கப்படுகிறது. முடியுடை வேந்தர்கள், சிற்றரசர்கள், வேளிர்கள், கடையெழு வள்ளல்கள், புலவர்கள், வீரர்கள், மக்கள் முதலிய அனைவர் பற்றிய குறிப்புகளும் இந்நூலால் துலக்க முறுவன போலவே, புலவர்தம் பெருமிதவுள்ளமும் பகையைக் களைந்து ஒற்றுமையூட்டும் உந்து முயற்சி யும் ஒருங்கே புலனாகக் காணலாம். மக்களின் உணவு, உடை, அணிகலன்கள், நடை, பாவனைகள், நம்பிக் கைகள் முதலியன அனைத்தும் இந்நூலால் விளக்கம் பெறுகின்றன.'மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகு', 'எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே', 'யாதும் ஊரே யாவரும் கேளிர்', 'மன்னாவுலகத்து மன்னுதல் குறித்தோர் தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே' முதலான உயிர்த்தொடர்கள் பல நிறைந்தொளிர் வது புறநானூற்றின் பெருமைக்கு மெருகூட்டுகின் றது. இவ்வாறு எட்டுத்தொகை நூல்கள் பழந்தமிழர் தம் அகமும் புறமுமான ஒழுகலாறுகளை விளக்கி நிற்கின்றன. சி.பா.

**எட்டுமூர்த்தி**: காண்க: அட்டமூர்த்தம்.

**எட்டெட்டந்தாதி**: இது அந்தாதித் தொடையில் அமைந்த ஒரு தமிழ்ப்பிரபந்தம். பொது வாக அந்தாதி இலக்கியம் ஒரே யாப்பிலமைந்த 100 பாடல்களைக் கொண்டமையும். ஒவ்வொரு பத்தும் ஒவ்வொரு வகை யாப்பில் அமையுமாறு பத்துப் பத்துகளாக அந்தாதி பாடப்படுவதும் உண்டு. அது பதிற்றுப்பத்தந்தாதி எனப் பெயர்பெறும் எட்டெட்டு அந்தாதி என்னும் இந்நூல் ஒவ்வோர் எட்டுப் பாட லும் ஒவ்வொரு வகை யாப்பில் அமைந்த எட்டுப் பகுதி கொண்டது. அந்தாதித் தொடையில் அறு பத்து நான்கு பாடல் கொண்ட இந்நூல் அமைப்பு அறுபத்து நான்கு கலைகள், அறுபத்து நான்கு திரு விளையாடல்கள் என்று தமிழில் கூறப்படும் 64 என் னும் எண்ணிக்கைச் செல்வாக்கால் உருவாக்கப்பட்ட தாகலாம். இவற்றிலுள்ள செய்யுட்களில் சில பாக் களும் சில பாவினங்களுமாக உள்ளன.

இத்தோத்திர நூல் காஞ்சிபுரத்திலுள்ள காமாட்சி அம்மையின் புகழ் பாடுவதாக அமைக்கப்பட்டுள்ளது. நூலின் புறத்தே தொடக்கத்தில் அமைந்த இரு செய் யுட்களில் ஒன்று விநாயகக் கடவுள் வாழ்த்தாகவும், மற்றொன்று, அம்மையின் தோத்திரமாகவும் அமைந் துள்ளன. அவ்வாறே நூலின் இறுதியில் அமைந்துள்ள இருபாடல்கள் நூலினைக் கற்போர் எய்தும் பயன் கூறுவனவாக உள்ளன. இப்பாடல்கள் அந்தாதியாக அமைவில்லை. பயன் கூறும் பாடலில் அம்மை உள் ளொடு புறமுமாகி உறுதவப் பயனுமாகி எள்ளும் எண்ணெயும்போல் நீங்காதிருக்கும் காமாட்சித் தாய் என்று கூறப்படுகிறாள். இந்நூற் பெயர் எட்டெட் டந்தாதி என்பதனை ஆசிரியர், 'மட்டெட்டும் பூங் குழற் காமாட்சி அம்மைக்கு வண்டமிழால் எட்டெட் டந்தாதி இயம்புதற்கே' என்னும் தொடரால் குறிப் பிட்டுள்ளார். இந்நூல் சென்னை அரசாங்க நூல் நிலையத்தில், கையெழுத்துப் பிரதியாக உள்ளது. இந்நூலாசிரியர் பற்றிய விவரம் அறியக் கூடவில்லை. அ.மா.ப.

**எட்ணா** எரிமலை சிசிலித்தீவின் கீழைக் கரை யில் உள்ளது. 'நான் எரிகிறேன்' என்ற பொருளை யுடைய கிரேக்கச் சொல்லிலிருந்து 'எட்ணா' (Etna) என்னும் ஆங்கிலச் சொல் தோன்றியுள்ளது. இது ஐரோப்பாவிலேயே மிகப்பெரிய எரிமலை. இது 10,000 அடிகளுக்கு மேற்பட்ட உயரத்தை உடையது. ஆனால் இதன் உயரம் அடிக்கடி மாறும். கி.பி. 1865-இல் இருந்ததை விட இதன் உயரம் 170 அடி குறைவாக இப்பொழுது உள்ளது. 150 கி.மீ. சுற்றளவு உள்ள அடிப்பாகத்தைக் கொண்ட இம்மலை 1600 ச.கி.மீ. பரப்பில் பரந்துள்ளது. 2,500,000 ஆண்டு களுக்கு முன்னரே, இம்மலை தோன்றியிருக்கக்கூடு மென்று நிலநூல் வல்லுநர்கள் கருதுகின்றனர்.

கிரேக்கக் கதைகளில் இதன் சிறப்புப் பலவாறாகக் கூறப்படுகிறது. இசியோடு (Isiod) என்ற பண்டைய கவி மலை எரிந்ததைப் பற்றிக் கூறியுள்ளார். கி.மு.

475-இல் ஏற்பட்ட பெருந் தீத் தோற்றத்தைப் பற்றி, பிண்டார் (Pindar), ஆசிலசு (Aschillas) முதலிய கிரேக்கக் கவிகள் கூறியமையும் குறிப்பிடத்தக்கது. கி.மு. 1500 முதல் கி.பி. 1669 வரை 71 தீ வெடிப்புகள் நிகழ்ந்தன. அவற்றுள் 14 கிறித்து ஆண்டிற்கு முற்பட்டவை. எல்லாவற்றையும் விஞ்சும் அளவுக்கு மிகப்பெரிய தீ வெடிப்பு ஏற்பட்ட காலம் கி.பி. 1699-ஆம் ஆண்டு மார்ச்சு முதல் சூலை வரை என்று தெரிகிறது. அப்பொழுது 830,000,000 க.ச.மீ. அளவுக்கு எரிமலைக் குழம்பு வெளிப்பட்டதாம். அதன் விளைவாக ஏற்பட்ட இயற்கை நிலை மாறுதல்களை இன்றும் காணலாம். பன்னிரண்டு கிராமங்களை அழித்ததுடன், அந்தத் தீ வெடிப்பு புகழ் பெற்ற கட்டானியாப் பட்டினத்தின் மேற்குப் பகுதியையும் உட்கொண்டது. கிழக்குப் பகுதியைக் காப்பாற்றுவதற்காக, மக்கள் மிகப் பெரிய அகழியை வெட்டித் தீக்குழம்பைத் திசை திரும்பச் செய்த அருஞ்செயல் போற்றத்தக்கது. வரலாற்றிலேயே முதன் முதலாக அப்பொழுதுதான் எரிமலைக் குழம்பை வேறு பக்கத்தில் திருப்பும் முயற்சி தோன்றியது. கி.பி.1669 க்கும் 1900 க்குமிடைப் பட்ட காலத்தில் மேலும் 26 எரிமலை வெடிப்புகள் ஏற்பட்டன. இருபதாம் நூற்றாண்டில் 1908, 1910, 1911, 1918, 1923, 1928, 1942, 1947, 1949, 1950, 1955, 1971, 1983 ஆகிய ஆண்டுகளிலும் அவை ஏற்பட்டுள்ளன. 1983-இல் சுரங்க வெடி வைத்துப் புது வழி உண்டாக்கி, எரிக்குழம்பை அப்புறப்படுத்திய நிகழ்ச்சி குறிப்பிடத்தக்கது.

எரிமலை வெடிப்பு வரலாற்றின் போக்கை ஓரளவு மாற்றியுள்ளதை நோக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, கி.மு. 396-இல் கட்டானியாவை நோக்கிப் படையெடுத்து வந்த கார்த்தசீனியரை அப்பொழுது ஏற்பட்ட வெடிப்புத் தடுத்து நிறுத்தியது. கி.பி. 1381-ஆம் ஆண்டுத் தீ வெடிப்பு தீக் குழம்பைக் கடல் வரை வாரி வீசி, இடைப்பட்டிருந்த இடங்கள் பலவற்றை அழித்து விட்டது. 1928-ஆம் ஆண்டு வெடிப்பு மலை அடிவாரத்திலிருந்த புகை வண்டித் தொடர் அமைப்பை நாசமாக்கியதுடன் மசுகாலி என்ற ஊரை மண்ணோடு மண்ணாக்கியது.

அறிவியல் முன்னேற்றத்தின் விளைவாக ஆய்வுக் கூடங்கள் அமைத்து, எட்னா எரிமலையைப் பற்றி ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. மலைச் சரிவிலேயே மலை ஆய்வுக்கூடங்கள் மூன்று கட்டானியா, காசா எட்ணியா, கண்டோநீரா என்ற இடங்களில் அமையப் பெற்று இயங்கி வருகின்றன.

தெ.பா.

**எட்மண்டன்**: கனடாவின் சிறப்பு வாய்ந்த நகரங்களுள் ஒன்றான எட்மண்டன் (Edmonton) ஆல்பெர்ட்டா மாகாணத்தின் தலைநகர். வடக்குச் சசுகெட்சுவான் ஆற்றோரத்தில் இது விளங்குவதால் இதன் சிறப்பு மிகுதியுற்றது. எட்மண்டன் வாணிகக் கழகம் கி.பி. 1795-இல் ஒரு கோட்டையை இங்கே கட்டியதால் இவ்விடத்திற்கு இப்பெயர் அமைந்தது. அந்நாளிலிருந்து இங்கு வாணிகம் மிகவும் ஓங்கி வளரலாயிற்று. இருப்புப் பாதைத் தொடர் ஏற்பட்ட பின்னர், பல்வேறு இடங்களிலிருந்து வந்த விவசாயப் பண்டங்கள் இங்கிருந்து ஏற்றுமதி செய்யப்படலாயின. மரக்கட்டைத் தொழில், மாவு அறைத்தல், இறைச்சித் தொழில், தோல் பதனிடுல், பால் பண்ணைத் தொழில், எண்ணெய் சுத்தம் செய்தல், எரி வளித்தொழில் (Gas Industry) முதலியன இந்நகரின் குறிப்பிடத் தக்க தொழில்களாகும். பாறை எண்ணெய் (Petrolium) 1947-இல் இந்நகரின் அண்மைப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட பின், எட்மண்டனின் தொழில்வளர்ச்சி வியக்கத்தக்க வகையில் முன்னேறியுள்ளது. இதன் வளர்ச்சியைப் பறைசாற்றுவதற்கும் உலக மக்கள் இதனால் பயனுறுவதற்கும் அடிக்கடி இங்கே கண்காட்சிகள் அமைக்கப்படுகின்றன. இங்குள்ள பல பல்கலைக் கழகங்களுள் 1972-ஆம் ஆண்டு நிறுவப்பெற்ற திறந்தவெளிப் பல்கலைக் கழகம் குறிப்பிடத்தக்கது. இங்கே ஆறு இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் வாழ்கின்றனர்.

தெ.பா.

**எட்மண்டு இசுபென்சர்**; இவர் கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் சிறந்த ஆங்கிலக் கவிஞராவார். இலண்டன் நகரத்தில் கி.பி. 1552-இல் பிறந்த இவர் இளமையில் தம் தாய்மொழியாம் ஆங்கிலத்துடன் கிரேக்கம், எபிரேயம், இலத்தீன், பிரெஞ்சு ஆகிய பிற மொழிகளையும் நன்கு கற்றார். இவருக்கு இசையிலும் மிகுந்த ஈடுபாடு உண்டு. இவர் கேம்பிரிட்சுப் (Cambridge) பல்கலைக் கழகத்தில் பயின்ற காலத்து பிளேட்டோ (Plato), அரிசுடாட்டில் (Aristotle), வர்சில் (Vergil), சாசர் (Chaucer), அரியோசுட்டோ (Ariosto) ஆகிய மாமேதைகளின் நூல்களைக் கற்றுத் தம் அறிவைப் பெருக்கிக் கொண்டார். இசுபென்சருக்குச் (Edmund Spencer) சமயக் கருத்துகளிலும் ஈடுபாடு ஏற்பட்டது. கிறித்தவச் சமயத்தின் ஒரு பிரிவினர் தீவிரமான ஒழுக்க நெறிகளை வலியுறுத்தி வந்தனர். தூய்மைக் கட்சியினர் பால் (Puritans) இசுபென்சர் பெரிதும் நாட்டம் செலுத்தினார்.

இசுபென்சர் தம் 15-ஆம் வயதிலேயே தமது முதல் கவிதையை வெளியிட்டார். பின்னர், கி.பி. 1579-இல் ஆயரின் நாட்குறிப்பு (The Shepherds

Calendar) என்னும் கவிதை அவரது பெயரின்றி (Ananymous) வெளியாயிற்று. சர் பிலிப்பு சிட்னி (Sir Philip Sydeny) என்னும் பெருங்கவிஞருக்குப் படைக்கப்பட்ட அந்நூல் இராசலிண்டு (Rosalind) என்னும் ஓர் இடைச்சியின் வாழ்க்கையைச் சித்திரிக்கிறது; அப் பாத்திரப் பின்னணியில் கவிஞர் யாரைச் சுட்டுகிறார் என்பது அறிஞரிடையே பெரும் வினா வினைத் தொடுத்துப் பல்வகை விடைகளை வருவித்தது. இராசலிண்டு கவிஞரின் காதலியென்று சிலரும், அவள் கவிஞரை ஆதரித்த ஒரு சீமாட்டி என்று வேறு சிலரும், அவள் ஒரு கற்பனைப் பாத்திரம் என்று மற்றும் சிலரும் கூறுவர். அது எங்ஙனமாயினும், உள்ளுறைப் பொருள் (Allegory) வைத்துப் பாடுவதில் இசுபென்சர் வல்லவர் என்பது புலனாயிற்று. அந்நூல் இவரது நாட்டுப் பற்றையும், மானிட உணர்வையும் புலப்படுத்துகிறது.

அவ்வாண்டில் இசுபென்சருக்கு இலீசெசுட்டர் பிரபுவின் (Earl of Leicester) ஆதரவு கிட்டியதை அடுத்து அரசுப் பணியொன்றைப் பெற்றார். அயர்லாந்து நாட்டின் துணை ஆளுநருக்குச் (Lord Deputy) செயலராகப் பொறுப்பேற்றார். தம் ஆட்சித் தலைவரின் அரசியற் கொள்கைகளையும் செயல்களையும் ஆதரித்தும் விளக்கியும் உரைநடையில் பற்பல நூல்களை வெளியிட்டார். அவை முற்றிலும் அரசியற் சார்புடையவையாதலின் இலக்கியமாகக் கருதப்படவில்லை.

பத்தாண்டுகளுக்குப் பிறகு ‘வனதேவதை அரசி’ (Faerie Queen) என்னும் சிறந்த காப்பியம் வெளிவந்தது. அதன் முதன் மூன்று பிரிவுகள் கி.பி. 1590-ஆம் ஆண்டிலும் ஏனைய மூன்று பிரிவுகள் அடுத்த ஆறு ஆண்டுகளிலும் வெளியாயின. கவிஞர் அக்காப்பியத்தில் பன்னிரண்டு பிரிவுகளைச் சேர்க்கத் திட்டமிட்டிருந்தார். ஆனால், ஆறு பிரிவுகள் மட்டுமே முழுவடிவில் வெளிவந்தன. ஏழாம் பிரிவு முழுமையற்ற நிலையில் அவரது இறப்புக்குப் பின் வெளியிடப்பட்டது. ‘வனதேவதை அரசி’ இசுபென்சருக்குப் பெரும் புகழ் தந்தது. சிறந்த அறவுணர்வும் சீரிய உள்ளுறைப் பொருளும் அடங்கிய இந்நூலின் நோக்கம் மனித சமுதாயத்தின் பின்பற்றுதலுக்காக ஒரு விழுமிய பண்பாடுமிக்க வீரனைப் படைத்துக் காட்டுவதாகும். ஒரு கற்பனைக் கதையின் உள்ளுறையில் வரலாற்று நிகழ்ச்சிகளை ஒரு படியாகவும், அறக் கருத்துகளை மற்றொரு படியாகவும் வைத்து யாக்கப்பட்டுள்ள இந்நூல் சொல்லழகும் பொருளழகும் நடையழகும் சிறந்து, ஆங்கிலக் கவிதைப் பூங்காவில் மலர்ந்த ஒரு மணமலராகத் திகழ்கிறது. எடுத்துக்காட்டாக, இச்கதையில் வரும் ஆர்தர் மன்னன் (Prince Arthur) வரலாற்றில் ஆங்கில நாட்டு மன்னனையும், அறக் கருத்தில் உயர்ந்த பண்பாட்டையும் நினைவுபடுத்துகிறான். அங்ஙனமே குளோரியானா (Gloriana) இங்கிலாந்து நாட்டு அரசி எலிசபெத்தையும் செஞ்சிலுவை வீரன் புனித உணர்வையும் ஆர்ட்டிகால் (Artegall)நீதியையும் பிரிட்டோமார்ட்டு (Brito-mart) கற்பையும் ஊனா (Una) சமய உணர்வையும் உள்ளுறையாகச் சுட்டி நிற்கிறார்கள். இந்நூலின்கண் இசுபென்சர் ஒன்பது அடிகளைக் கொண்ட செய்யுள் வடிவத்தைப் புகுத்திப் புதுமை செய்தார். இச் செய்யுள் வகை ‘இசுபென்சர் செய்யுள்’ (Spenserian Stanza) என்று அவர் பெயராலேயே வழங்குகிறது.

இசுபென்சர் கி.பி. 1594-இல் எலிசபெத்து பாயில் (Elizebeth Boyle) என்னும் பெண்ணை மணந்தார். அதனை அடுத்து எபிதலாமியன் (Epithalamian), புரோதலாமியன் (Prothalamian) என்னும் இருநூல்கள் வெளிவந்தன. இவையிரண்டும் திருமணக் கவிதைகள் (Marriage Hymns) என்று சொல்லப்படுகின்றன. இவற்றில் மணப்பெண்களின் ஊர்வலமும், மணச் சடங்குகளும், மணமக்கள் காதல் வாழ்வைத் தொடங்குதலும் எழிற்பட எடுத்துரைக்கப்படுகின்றன.கி.பி. 1598-ஆம் ஆண்டில் அயர்லாந்தில் கலகம் மூண்டதனையடுத்து இசுபென்சர் இங்கிலாந்து திரும்பினார். தம்மீது பொறாமை கொண்டவர்கள் தொடுத்த பொய்வழக்குகளால் மனம் நொந்து ஓராண்டுக்குள் (கி.பி. 1598) உயிர்நீத்தார். இவரது உடல் வெசுட்டுமினிசுட்டர் கல்லறையில் (West Minster Abbey) கவிஞர்கள் மூலையில் (Poets' Corner) அடக்கம் செய்யப்பட்டது. வி.ஆர்.அ.

**எட்மண்டு காசு** (கி.பி. 1849-1928): எட்மண்டு காசு பத்திரிகையாளராக ஆவதற்குமுன் சிறந்த இலக்கியவாதியாகத் திகழ்ந்தார். பிரான்சு – செருமானிய நாடுகளுக்கிடையில் போர் மூண்ட காலங்களில் கவிஞராக இலக்கிய உலகிற்கு அறிமுகமான இவர், ஆங்கில மக்களுக்கு முதன்முறையாக இப்சனை (Ibson) அறிமுகப்படுத்தினார்.

பலநாட்டு இலக்கியங்களிலும் தேர்ந்த அறிவு பெற்ற காசு (Edmund Gosse), பல்வேறு நாளிதழ்களில் எழுதிய திறனாய்வுக் கட்டுரைகள், நினைவுக் குறிப்புகள் எல்லாம் அவர் தம் நடுநிலைமை, நினைவாற்றல், படைப்புத்திறன் ஆகியவற்றைக் காட்டும் சான்றுகளாகும்.

தன் வரலாற்று இலக்கிய வடிவில் இவர் எழுதிய ‘தந்தையும் மகனும்’ என்ற நூல் மிகவும் சிறப்புடை

யது. மிகக் கடுமையான கட்டுப்பாடுகளுக்கிடையில் வளர்க்கப்பட்ட தம் சொந்த வாழ்க்கைக் குறிப்பு களை அந்நூலில் எடுத்துக் காட்டியுள்ளார். இவர்தம் சிறப்புப்படைப்பான அந்நூல் ஆண் பெண்ணின் நுண்ணிய மனவுணர்வுகளையும், மூத்த தலைமுறைக் கும் இளைய தலைமுறைக்கும் இடையில் உள்ள முரண்பாட்டு இடைவெளிகளையும், நம்பிக்கைக்கும் சந்தேகத்திற்கும் இடையிலுள்ள மோதல்களையும், ஒரு தலைமுறையின் பூசல்களையும் மிகச் சிறப்பாக எடுத்துக் காட்டுகிறது. விக்டோரியா காலத்தில் சமு தாய மாற்றங்களைக் காட்டும் அறிவு ஏடாக அந் நூல் திகழ்கிறது. வரலாற்றுக் குறிப்பேடு என்றும் அதனைச் சுட்டலாம். இளைஞன் ஒருவனின் ஆன் மிகப் போராட்டத்தைச் சித்திரிக்கும் அந்நூல் சிறந்த இலக்கியத் தரம் கொண்டது என்பதும் குறிப்பிடத் தக்கது. விளக்கங்களும் நிகழ்வுச் சான்றுகளும் பண்பு நலச் சித்திரிப்புகளும் கொண்ட இப்படைப்பு ஆங்கில இலக்கிய உலகில், தன்வரலாற்று இலக்கிய வடிவில் ஒரு புதுப் போக்கை உருவாக்கியது.

இவர் திறனாய்வாளர் என்ற நிலையில் பரிவுடன் நூல்களை அணுகும் நெகிழ்ச்சிப் போக்குக் கொண்ட வர்; உளவியல் அணுகுமுறையில் படைப்பாக்கம் செய்யும் திறன் வாய்ந்தவர்; இசுகாண்டிநேவிய இலக்கியங்களை இங்கிலாந்தில் பரவச் செய்தவர். இசுகாண்டிநேவியப் பண்பாட்டினையும் இவர் ஆங்கில மக்களுக்குத் தெளிவுபடுத்தினார்; சாண்டன் என்ற கவிஞர் பற்றிய திறனாய்வுகளைத் தொடங்கி வைத் தார்; அவர்தம் வாழ்க்கை வரலாறு, கடிதங்கள் ஆகியவற்றையெல்லாம் வெளியிட்டார். இவர் எழுத்துகளில் மற்றவர்களின் தவறுகளையும் வெறுப் பினையும் ஒருவகையாகச் சுட்டிக்காட்டும் திற னாய்வுப் போக்குகளைக் காணலாம். பி.எஸ்.வே.

**எட்மண்டு பர்க்கு:** இங்கிலாந்து அரசிய லில் கொள்கையளவிலும் செயலளவிலும் பெரும் தாக்கத்தை உண்டாக்கியவர் எட்மண்டு பர்க்கு (Edmund Burke) ஆவார். இவரது அரசியல் கோட் பாடுகள் (Political Philosophies) கடந்த இரண்டு நூற்றாண்டுகளாக உலக அரசியலில் செல்வாக்கைச் செலுத்தி வருகின்றன. இவர் எக்கட்சிக்கும் தலைமை யேற்கவில்லையாயினும் ஒவ்வோர் அரசியற் குழுவும் இவரைத் தம் தலைவர் என்று கருதிப் பெருமைப்படு கிறது.

மறுப்புரையாளர் (Protestant) குடும்பம் ஒன்றில் கி.பி. 1729-ஆம் ஆண்டு பிறந்த பர்க்கு பால்டிமோர் குவேக்கர் பள்ளியிலும் (Baltimore Quaker School) தப்ளின் திரினிட்டிக் கல்லூரியிலும் (Trinity College, Dublin) பயின்றார். இவர் கி.பி. 1759-முதல் 1794 வரை இங்கிலாந்துப் பாராளுமன்ற உறுப்பினராகப் பெரும்பணியாற்றினார். இராக்கிங்காம் (Roching-ham) பிரபுவின் ஆட்சிக்காலத்தில் நிதித்துறையில் சிறிதுகாலம் பணிபுரிந்தார்.

எட்மண்டு பர்க்கு ஒரு சிறந்த பேச்சாளர்; பெரும் எழுத்தாளர். மேலும், இவர் ஓர் உயர்ந்த அரசியல்வாதியாகவும் (Politician), உயர்ந்த அரசியல் மேதையாகவும் (Statesman)விளங்கினார். இயற்கைச் சமுதாயத்தை நிறுவுதல் (Vindication of Natural Society), உயர்ந்ததும் அழகியதும் (The Sublime and the Beautiful), பிரெஞ்சுப் புரட்சியைப் பற்றிய சிந்தனைகள் (Reflections on the French Revolu-tion) ஆகிய நூல்கள் பர்க்கின் எழுத்தாற்றலுக்கு எடுத்துக்காட்டுகளாகும். இயற்கைச் சமுதாயத்தை வரவேற்ற இவர் அரசியல், சமயம், சமூகம் ஆகிய மானிட அமைப்புகளைப் பகுத்தறிவோடு (Reason) மட்டுமே அணுகாமல் நம்பிக்கையோடு (Faith) நெருங்க வேண்டும் என்கிறார். பிரெஞ்சுப் புரட்சி யின்பால் இவர் கொண்ட கண்ணோட்டம் சிலருக்குத் தவறான எண்ணத்தை உண்டாக்கியது. அப் புரட் சியை இவர் குறைகூறி எழுதியதால் பழமைவாதி (Conservative) என்று அழைக்கப்பட்டார். குருதி சிந்திய பெரும் புரட்சியைச் செய்து முடியாட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்காமல், அமைதியாகச் சீர்திருத் தங்களைச் செய்து கொண்டு அரசியல் மாற்றங்களை உண்டாக்கிக் கொள்ளலாம் என்பது இவரது கருத் தாகும். பழமை முற்றிலும் அழிக்கப்படக் கூடாது; பழமை பாதுகாக்கப்பட்டுக் காலத்திற்கேற்ற புதிய மாற்றங்கள் அதன்கண் செய்யப்பட வேண்டும் என் பது இவரது எண்ணம். எந்தச் சிக்கலைத் தீர்ப்ப திலும் கருத்தளவிலான அணுகுமுறையைத் தவிர்த்து வரலாற்றுப் பின்னணியிலும் அனுபவத்தின் அடிப் படையிலும் அறநோக்கோடு அணுகவேண்டும் என் பார் இவர்.

பர்க்கு ஒரு ஈடிணையற்ற பேச்சாளர் என்கிற நிலையில் மக்கள் மனத்தில் நிலைத்திருக்கிறார். அவ ரது பேச்சில் வரலாற்றுக் குறிப்புகள் வரிசையாய் அணிவகுத்து நிற்கும்; தத்துவக் கருத்துகள் தவழும்; ஒரு கவிஞனின் கற்பனை காட்டாறாகப் பாய்ந் தோடும். இவரது ஒவ்வொரு பேச்சும் சொற்சிற்பமாய் கருத்துக் கருவூலமாய், அறிவுப் பெட்டகமாய் விளங்கி யது; உணர்ச்சிப் பெருக்கும், உயர்ந்த வாதத்திற னும், சற்றே அளவுக்கு அதிகமான அங்க அசைவுகளும் கேட்போரைப் பிணித்துக் கேளாதோரையும் கேட்கச் செய்யும் ஆற்றல் பெற்று விளங்கின. அழகிய சொற் களும் உருவகங்களும் இவர்தம் ஆழ்ந்த கருத்துகளுக்கு அணி செய்தன; வரலாற்றுப் பின்னணியும் வாதத் திறமையும் அவற்றுக்கு அரண் சேர்த்தன எனலாம்,

இவர் ஆங்கிலப் பாராளுமன்றத்தில் அமெரிக்கக் குடியேற்ற நாடுகளின் மீது வரி விதிப்பை எதிர்த்துப் பேசிய உரையும், அந்நாடுகளின்மீது போர் தொடுக்காமல் அமைதி உடன்பாடு செய்து கொள்ளவேண்டும் என்று வலியுறுத்தியாற்றிய உரையும், இந்தியாவில் கிழக்கிந்திய வணிகக் குழுவின் ஆட்சியில் நடைபெற்ற ஊழல்களையும் வன்முறைகளையும் கண்டித்து முன்னாள் அரசப் பேராளர் வாரன் ஏசுடிங்சு மீது (Warren Hastings) பழிசுமத்திப் பேசிய பேச்சும் பேச்சுக்கலைக்கு இலக்கணமாக விளங்குகின்றன. இவர் சிறந்த உரையாடல் வல்லாராகவும் (Conversationalist) விளங்கினார். இவர்தம் உரையாடல்களில் கலந்துகொண்ட டாக்டர் சான்சன் (Doctor Johnson) போன்ற அறிஞர்கள் வரலாற்றிலும் வீரகாவியங்களிலும் விவிலிய நூலிலும் (Bible) இவருக்கிருந்த புலமை கண்டு வியந்தனர். இவர் பேச்சுகளில் நகைக்சுவை குறைந்திருந்தாலும் மக்கள் சலிப்புத்தட்டாமல் மணிக் கணக்கில் கேட்டு மகிழ்ந்தனர். அநீதியைச் சாடிய போதும் அநியாயத்தைக் கண்டித்த போதும் பர்க்கு பலமுறை வெகுண்டெழுந்து கனலாக நின்று கருத்துப் பிழம்புகளைக் கக்கியதைப் பாராளுமன்றம் கண்டது.

பர்க்கு தமது அரசியல் வாழ்வில் ஐந்து பெரும் குறிக்கோள்களுக்காகப் போராடினார். அவை 1. பாராளுமன்றத்தில் மக்களவையை (House of Commons) அரசரின் செல்வாக்கிலிருந்து விடுவித்தல், 2. அமெரிக்கக் குடியேற்ற நாடுகளை இங்கிலாந்தின் கொடுமையான ஆட்சியிலிருந்து விடுவித்தல், 3. அயர்லாந்து நாட்டுப் பாராளுமன்றத்தையும் வாணிகத்தையும் இங்கிலாந்தின் பிடியிலிருந்து விடுவித்தல், 4. இந்தியாவைக் கிழக்கிந்திய வணிகக் குழுவின் ஆட்சியிலிருந்து விடுவித்தல், 5. அறத்தின் நீங்கிய வன்முறைப்பட்ட பிரெஞ்சுப் புரட்சியை எதிர்த்தல் ஆகியனவாம்.

பர்க்கின் அரசியற் கொள்கைகளுள் இன்றியமையாதவை வருமாறு: 1. ஓர் அரசின் நோக்கம் குடிமக்களை மகிழ்ச்சியுடன் வாழச் செய்வது. 2. எந்த நாடும் வன்முறையில் ஈடுபடவோ ஆதிக்க உணர்வு கொள்ளவோ கூடாது. 3. ஒரு நாட்டின் அரசியற் கோட்பாடு அந்நாட்டின் வரலாற்று அடிப்படையிலும் புவியியற் பின்னணியிலும் அமைக்கப்பட வேண்டும். 4. சிக்கல்கள் சட்டத்தின் மூலமாக அல்லாமல் அறவுணர்வின் அடிப்படையில் தீர்க்கப்பட வேண்டும். 5. ஒரு நாட்டுக்கு அதன் வரலாறே சிறந்த வழிகாட்டியாகும். அமெரிக்கக் குடியேற்ற நாடுகளை அணுகிய போது புரட்சி நோக்காளராக (Radical) இருந்த இவர் பிரெஞ்சுப் புரட்சியைப் பற்றி எழுதிய போது ஒரு பழமைவாதியாக (Conservative) மாறினார். திடீர்ப்புரட்சிகளை இவர் ஏற்கவில்லை; படிப்படியான முன்னேற்றங்களை வலியுறுத்தியதே அதற்குக் காரணமாகும். இவர் மக்களாட்சியை வலியுறுத்தவில்லை; கட்டுப்படுத்தப்பட்ட முடியாட்சியை (Limited Monarchy) ஆதரித்தார். இவர்தம் பேச்சுகள் உடனடியான, நேரடியான விளைவுகளை ஏற்படுத்தாவிடினும் மக்கள் மனத்திலும் அரசியலார் உள்ளத்திலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின என்பதை மறுக்கமுடியாது. 1794-இல் அரசியலிலிருந்து விலகியிருந்த இவர் 1797-இல் உடல்நலம் குன்றி மறைந்தார். வி.ஆர்.அ.

**எட்மண்டு பிளண்டன்** (கி.பி. 1896-கி.பி. 1974): இங்கிலாந்தில் கெண்டு (Kent) என்னும் இடத்தில் பிறந்த ஆங்கிலக் கவிஞராகிய எட்மண்டு சார்லசு பிளண்டன் (Edmund Charles Blunden) மாணவராக இருக்கும்போதே இலே அண்டு (Leigh Hunt), சார்லசு இலாம்பு (Charles Lamb), கோலரிட்சு (Coleridge) ஆகியோரைப்பற்றித் திறனாய்வுக் கட்டுரைகள் எழுதி ஆங்கில இலக்கியத்தில் தமக்குள்ள ஈடுபாட்டையும் புலமையையும் வெளிப்படுத்தினார். கெண்டுப் பகுதியைச் சார்ந்த கிராமப்புறச் சூழல் பிளண்டனை மிகவும் கவர்ந்தது. தாமசு ஆர்டியைப் (Thomas Hardy) பற்றிய உரைக் குறிப்புகள் இவருடைய முல்லை நில ஈடுபாட்டைக் காட்டும். முதல் உலகப் போரில் பங்கு கொண்டு நேரடிப் போர் அனுபவங்களைப் பெற்ற இக்கவிஞர், ஆச்சுபோர்டு (Oxford), சப்பான் (Japan) ஆங்காங்கு (Hong Kong) ஆகிய இடங்களில் ஆங்கிலப் பேராசிரியராகப் பணியாற்றினார்; அங்கெல்லாம் ஆங்கிலப் புனைவியல் கோட்பாட்டினைத் தெளிவுபடுத்தினார்.

ஒருவகையில் இயற்கைப் புனைவுக் கவிஞராகத் தம்மை வெளிப்படுத்திக் கொண்ட எட்மண்டு பிளண்டன், இயற்கையின் வெளித் தோற்றங்களைச் சொல்லோவியங்களாகத் தீட்டுவதோடு நிறைவு பெறவில்லை. மாறாக, இயற்கையை ஆன்மக் குறியீடாகச் சித்திரிக்க முற்பட்டார். அதனால் தம் மனத்து எண்ணங்களையெல்லாம் முழுமையாக வெளியிட வழியில்லாமல் இடர்ப்பட்டார். ‘எண்ணத்தை முழுமையாக வெளியிடும் வழி அறிய நான் மிக முயன்று தடுமாறுகின்றேன்’ என்று இவர் கூறுவார். இவர் கவிதைகள் முயற்சியின் விளைவுகளாகவே அமைந்தன.

இவர்தம் கவிதைத் தொகுதிகளுள் 1928-இல் வெளிவந்த ‘போரின் அடிநாதம்’ (Undertones of War) என்ற கவிதைத் தொகை மிகச் சிறப்பானது. ஆனால், 1925-இல் வெளிவந்த ஆங்கிலக் கவிதைத் தொகுப்பு (English Poems) வெளியீட்டு முறையில்

எளிமை, இதமான இசைத்தன்மை ஆகியவை இன்றிக் காணப்பட்டது குறிக்கத்தக்கது.

உலகப்போரின் முடிவில் இவர் இயற்றிய முல்லை நிலப் பாடல்கள் மூன்று தொகுதிகளாக வெளிவந்தன. இவர் 1920-இல் 'அத்தீனியம்' என்ற இதழின் துணை ஆசிரியராகப் பணியாற்றினார்.

இவர்தம் போர்க் கவிதைகளிலும் முல்லை நிலப் பாடல்களின் சாயலைக் காணமுடியும். இவர் பூசல்களுக்கிடையில் அமைதி காண முற்பட்டார்.

இவர் தம்போர்க் கவிதைகளில் போருக்குப் பின் மிஞ்சுபவை பற்றிப் பாடினார். பழைய வீட்டில் உள்ள சாளரங்களின் உடையாத கண்ணாடிப் பாகங்கள், தோட்டங்களிலுள்ள மலர்கள், குண்டுக்குத் தப்பிய சிதிலமான மாதாகோயில்கள் என்று போரின் தாக்குதல்களுக்குத் தப்பிப் பிழைத்த எச்சங்களைப் பாடுபொருளாக்கினார். இவற்றைச் சித்திரிக்கையில் போராட்டங்களுக்கு இடையிலான அமைதிக் கணங்கள் பற்றிய எண்ணத்தைத் தூண்டினார். கால, இட மாற்றங்களைக் கொண்ட பின்னணியில் தம் அனுபவங்களை வெளிப்படுத்தினார். துன்ப நினைவுகளை நீட்டித்தலோ இன்ப அனுபவங்களை மிகைப்படுத்தலோ இவரிடம் காண முடியாது. இரண்டிற்கும் இடையிலான சமன்மைப் போக்கே இவரின் கவிதைப் பாணியாகும்.

'அனுபவம் பற்றிய அறிக்கை' என்னும் கவிதையில் வேகமாகக் கிளர்ந்த தம் உணர்ச்சிகளை வெளிப்படுத்தியிருந்தாலும், வெறுப்போ அங்கதக் குறிப்போ அதில் காணப்படவில்லை.

இயற்கை உலகின் விந்தைகளையும், விலங்குகளின் இயல்புகளையும் தம் கவிதைகளில் படம் பிடித்துக் காட்டினார். இவருடைய அமைதியான அழகிய கவிதைகளிலும் போர்க் குரல் ஒலிக்கக் கேட்கலாம். போரின் கொடுமைகளையும் இதமாகவே சுட்டிக் காட்டுவார். தனி மனிதப் பேச்சினையும் மதிப்பீடுகளையும் இயல்புகளையும் போர் மாற்றினாலும், அதனால் சமுதாயத்தை மாற்ற முடியாது என்பார். உலகினை மகிழ்ச்சியாகப் பார்த்த இவரைப் போர் அனுபவங்கள் சோகக் கவிஞராக மாற்றிக் கையறு நிலை பாட வைத்தன. கொடிய கசப்பு அனுபவங்கள், சொல்லொணா அவலங்கள், அச்சங்கள் ஆகிய கொடுமைகள் வாழ்வின் நம்பிக்கைகளைத் தளர்த்தின. பசுமையான வயல்களுக்கிடையில் அனுபவிக்கிற எளிய இன்பங்களைத் துறந்து, தம் மனம் குருட்டுத்தனமாக, வெறுமையை நோக்கி, வாழ்வின் நிலையாமைகளைப் பற்றிப் புலம்பும் நிலை வந்ததற்காக வருந்தினார்.

சார்சுக் கவிதைப் (Georgian Poetry) போக்கில் மாற்றம் கண்டு, அதனை உயர்த்தியவர் என இவரைப் போற்றுவர். இவரை மெய்ஞ்ஞானந்தேடல் கொண்டகையறுநிலைப்பாவலராய்க்காட்டுவர். இவர் இங்கிலாந்தின் கிராமிய இயற்கைச் சூழல்களைத் தம் கவிதைகளில் உருவாக்கிக் காட்டுவதில் வெற்றி கண்டார். மாசுபடாத வளமான கற்பனை இங்கிலாந்து நாட்டினை உருவாக்கி, அதன் மீது கொண்ட பாசத்தைத் தம் கவிதைகளில் பெறவைத்தார். பின்னர் இயற்றிய கவிதைகளில் மானுடம் பற்றிய இவர்தம் பரிவான நோக்கினைக் காணலாம். 'ஆயர்பாடல்' (Pastoral) என்ற கவிதை புது இலக்கிய வடிவத்தில் உருவாக்கப் பெற்ற இவரின் சிறந்த படைப்பாகும்.

பிளண்டன் உலகினைக் கண்டு வெறுக்கும் தத்துவ ஞானியாய்த் தம்மை ஒருபோதும் எண்ணியதில்லை. புரட்சியாளராகவும் இல்லை. மாறாக இனிய பண்புகளைக் கொண்டு, இயற்கை உலகின் வண்ணங்களையும் நயங்களையும் கண்டு மகிழும் இயற்கை நலக் கவிஞராய்த் திகழ்ந்தார். பி.எஸ்.வே.

**எட்ரசுக்கர்** என்பது பண்டைக்காலத்தில் இத்தாலியில் வாழ்ந்து வந்த இராசன்னா (Rasenna) என்று அழைக்கப்பட்ட ஒருவகை இனத்தவர்களுக்கு உரோமானியர்கள் சூட்டிய பெயர். இவர்களைக் கிரேக்கர்கள் திரென்னியர் (Tyrhennians) அல்லது திர்செனியர் (Tyrsenians) என்று அழைத்தனர். இதையொட்டியே இத்தாலியின் மேலைப்பகுதியில் அமைந்துள்ள கடல் திரெனியன் கடல் என்று சொல்லப்பட்டு வருகிறது. இவர்கள் கி.மு. 8-ஆம் நூற்றாண்டில் எட்ரூரியா (Etruria) என்ற பகுதியில் வாழ்ந்து வந்தனர். இன்று அது தசுக்கனி (Tuscany) என்று சொல்லப்படுகிறது. வடக்கில் ஆர்னோ ஆறும் கிழக்கில் அப்பினைன் மலைத் தொடரும் (Apennines) தெற்கில் தைபர் (Tiber) ஆறும் மேற்கில் திரெனியன் கடலும் சிறந்த அரண்களாக அதற்கு அமைந்திருந்தன. தெற்குத் தசுக்கனியிலுள்ள சிமினியசு மலைகள் பிற்காலத்தில் உரோமாபுரியின் ஆதிக்க வெறியிலிருந்து இவர்களைக் காப்பாற்றத் துணையாயிருந்தன. புது வகையான நாகரிகம் ஒன்றை வளர்த்து இவர்கள் பெருமை பெற்றனர்.

**தோற்றம்:** எட்ரசுக்கர் (Etruscans) வளர்த்த நாகரிகத்தின் மூலத்தைப் பற்றி வரலாற்று ஆசிரியர்களுக்கிடையே கருத்து வேறுபாடு தோன்றியுள்ளது.

இக்கருத்து வேறுபாடு எட்ரசுக்கர்கள் வரலாற்றில் அறிமுகமான காலம் முதற்கொண்டே இருந்து வருகிறது. எட்ரசுக்கர்களுடைய பொறிப்புகள் இவர்கள் அயல் நாட்டவர்கள் என்ற கருத்தை உறுதிசெய்யும் வகையில் அமைந்துள்ளன. கிரேக்க வரலாற்றாசிரியரான எரடோட்டசு (Herodotus) என்பார் இவர்கள் சிறிய ஆசியாவின் (Asia Minor) மேற்குப் பகுதியில் வாழ்ந்து வந்த இலிடியர்களின் (Lydians) ஒரு கிளையினர் என்று கூறுகிறார். அதாவது இவர்கள் கிழக்கு மத்திய தரைக் கடற்பகுதியைச் சார்ந்தவர்கள் என்று சொல்லப்படுகிறார்கள். இக்கருத்தை உரோமானிய வரலாற்றாசிரியர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். இதனை வலியுறுத்தும் வகையில் பல சான்றுகள் கூறப்படுகின்றன.

இலிடியர்களைப் போன்றே எட்ரசுக்கர்களும் அகலமான மண்டையோடும் சதைப்பற்றும் உடையவர்களாகவும் கட்டான உடலமைப்புக் கொண்டவர்களாகவும் இருந்தனர். இவ்விரு இன மக்களுடைய நகர் அமைப்புத் திட்டங்கள் ஒரே வகையாகக் காணப்படுகின்றன. சமயப் பழக்க வழக்கங்களும் ஒத்திருக்கின்றன. எட்ரசுக்கர் தசுக்கனியில் விட்டுச் சென்றுள்ள கல்லைக் குடைந்து அமைக்கப்பட்ட கல்லறைகளுடைய உருவமைப்பும், சிறிய ஆசியாவின் மேலைப் பகுதியில் காணப்பெறும் கல்லால் ஆன கல்லறைகளின் உருவமைப்பும் ஒரே வகையாக இருக்கின்றன. இலிடியா (Lydia) மற்றும் பிற ஆசிய மொழிகளுக்கும் எட்ரசுக்கர் மொழிக்கும் சில ஒற்றுமைகள் காணப்படுகின்றன. ஒரே வகையான தனி மனிதர் பெயர்களை இவர்கள் அனைவருடைய மொழிகளிலும் காணலாம். எகிப்தியர்கள் பசிபிக்குக்கடற்பகுதியில் வாழ்ந்து வந்த மக்களை 'டி.ஆர். எசு. (T.R.S.) என்று குறிப்பிட்டுள்ளனர். இதற்கும் எட்ரசுக்கர்களுக்குக் கிரேக்கர்கள் அளித்த பெயருக்கும் இடையே ஒற்றுமை காணப்படுகிறது. சிலர் இவர்கள் வடக்கு ஆல்ப்சுப் பகுதியிலிருந்து வந்தவர்கள் என்று கூறுகின்றனர். இன்னும் சிலர் இவர்கள் தான்யூபு (Tanyub) ஆற்றுப் பகுதியிலிருந்து வந்ததாகக் கூறுகின்றனர். வேறுசிலர் பழங்குடிகளுக்கும் வேற்றினத்தவர்களுக்கும் பிறந்தவர்கள் என்று கருதுகின்றனர். எனவே, இவர்கள் அயல் நாட்டைச் சார்ந்தவர்கள் என்பது ஒருசில வரலாற்றாசிரியர்களுடைய கருத்தாகும்.

சிலர் இவர்கள் இத்தாலியப் பழங்குடிகளின் வழித்தோன்றல்கள் என்றும் இவர்களுடைய நாகரிகம் தெரிமாரன் (Terremaran), வில்லனோவு (Villanoeau) நாகரிகங்களின் தொடர்ச்சியே என்றும் கூறுகின்றனர். இவர்களுள் முதன்மையானவர் கி.மு. முதலாம் நூற்றாண்டில் வாழ்ந்த தயனேசியசு ஆவர். இலிடிய மொழிக்கும் எட்ரசுக்க மொழிக்கும் உள்ள வேறுபாடுகளை அவர் கோடிட்டுக் காட்டியுள்ளார். எட்ரசுக்கர்களுடைய உடலமைப்பு வில்லனோவு மக்களுடைய உடலமைப்பிலிருந்து மாறுபட்டது என்பதைத் திட்டவட்டமாகக் கூறமுடியவில்லை. அவர்களுடைய நகர் அமைப்புத் திட்டத்திற்கும் இத்தாலியப் பழங்குடிகளுள் ஒன்றான தெரிமாரன் கையாண்ட அமைப்புத் திட்டத்திற்கும் ஒற்றுமை காணப்படுகிறது. சமயப் பழக்கங்களில் ஏற்பட்ட மாறுதல்கள் வளர்ந்து வரும் நாகரிகங்களில் எளிதாகத் தோன்றும் மாறுதல்களேயன்றி, அயல் நாட்டிலிருந்து கொண்டு வந்தனவல்ல.

கிரேக்கப் பண்பாட்டின் கூறுகள் பல எட்ரசுக்கர்களுடைய நாகரிகத்தில் காணப்படுகின்றன என்பது உண்மையே என்றாலும், கிழக்கு மத்திய தரைக்கடற் பகுதியிலிருந்து வந்தனர் என்று கூறத்தக்க அளவிற்கு அவற்றைக் காண இயலவில்லை. மேலும், பண்பாட்டுக் கூறுகளை அயலார்களிடமிருந்து கடன் வாங்குவதில் எட்ரசுக்கர்கள் திறமை வாய்ந்தவர்களாகத் திகழ்ந்தனர். வாணிகக் காரணங்களுக்காக எட்ரூரியாவிற்கு வந்த கிரேக்கர்களிடம் நெருங்கிய தொடர்பு இவர்களுக்கு ஏற்பட்டிருந்தது. அதன் காரணமாகத்தான் கிரேக்கப் பண்புகள் இவர்களிடம் காணப்படுகின்றன. கிரேக்க எழுத்து முறையை இவர்கள் கையாண்ட போதிலும், இவர்களுடைய மொழி இந்தோ ஐரோப்பிய மொழி அன்று என்ற கருத்துப் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், இவர்கள் சிறிய ஆசியாவிலிருந்து வந்திருப்பின், அங்குச் செல்வாக்குப் பெற்றிருந்த ஆப்பெழுத்து முறையை (Cuneiform) இவர்கள் அறிந்திருக்க வேண்டும். அதற்கான சான்றுகள் கிடைக்கவில்லை.

இவர்களுடைய கல்வெட்டுகளைப் படித்து அறிந்துகொள்ளக் கூடிய நிலை ஏற்படும் வரையில் அல்லது மேலும் பல பண்டைய சின்னங்களைப் பெறுகின்ற வரையில் இவர்களுடைய பிறப்பிடம் புரிந்துகொள்ளமுடியாத வரலாற்றுப் புதிராகத்தான் இருக்கமுடியும். ஆயினும் கிடைத்துள்ள சான்றுகளைக் கொண்டு, இவர்கள் இத்தாலியின் பண்டைக் குடிகளான தெரிமாரர் அல்லது வில்லனோவு மக்களின் வழிவந்தவர்கள் என்றும், தசுகனிக்கு வில்லனோவு மக்கள் வந்தபின்னர் அந்நாட்டின் கனிவளத்தால் கவரப்பட்ட மக்கள் மேற்குச் சிறிய ஆசியாவிலிருந்து சிறிது சிறிதாக வந்து தங்கிவிட்டனர் என்றும், அதன்பின்னர் அங்குக் கிரேக்கர்கள் கி.மு. 800க்கு முன்னர் வந்தனர் என்றும், புதிதாகத் தசுகனிக்கு வந்தவர்கள் தங்களை ஆளும் வகுப்பினர்களாக மாற்றிக் கொண்டனர் என்

றும் ஒருவாறு உய்த்துணரலாம். இக் கருத்தை ஏற்றுக்கொள்ள நேரின், பண்டைய இத்தாலியப் பண்பாட்டுக் கூறுகள் கலந்துவிட்டமையால் ஏற்பட்ட ஒருவகைக் கலப்புப் பண்பாடே எட்ரசுகப் பண்பாடாகும் என்பது விளங்கும்.

ஆதிக்க வளர்ச்சி: தசுக்கனியில் கி.மு. 8,7-ஆம் நூற்றாண்டுகளில் பல நகர அரசுகள் அடங்கிய கூட்டமைப்புகள் தோன்றியிருந்தன. அவை பெருமளவு செல்வச் செழிப்புப் பெற்றிருந்தன. வலிமை வாய்ந்த படைகளை நிறுவியிருந்தன. கட்டுக்கோப்பான அரசியல் அமைப்பையும் அவை கொண்டிருந்தன. அவை யாவும் எட்ரூரியாவின் ஆதிக்கப் பெருக்கத்திற்குத் துணையாக அமைந்திருந்தன. அவற்றைப் பயன்படுத்தி எட்ரசுக்கர்கள் பெரும் வெற்றிகளைக் கண்டனர். இவர்கள் தைபர் ஆற்றைக் கடந்து இலேசியத்தை (Latium) வென்றனர். காம்பேனியாவின் (Compania) ஒரு பகுதியைக் கைப்பற்றி, அங்குக் காபுவா (Capua) என்ற முக்கியமான நகரத்தையும் வேறு பல சிறிய நகரங்களையும் அமைத்தனர். பின்னர், அப்பினைன் மலைகளைக் கிழக்கு நோக்கிக் கடந்து சென்று, பெல்சினாவில் (Felsina) தங்களுடைய படைத்தளத்தை அமைத்தனர். அங்கிருந்து கொண்டு மேலும் பல இடங்களைக் கைப்பற்ற முற்பட்டனர். ஏட்ரியாடிக்குக் கடற்கரையோரத்தில் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டினர். அங்கு அமைக்கப்பட்ட இராவன்னா (Ravanna) என்னும் நகரம் எட்ரசுக்கர்களுடைய அரசியல் ஆதிக்க வளர்ச்சியின் சின்னமாக விளங்குகிறது. மேற்கில் போ (Po) ஆற்றைக் கடந்து மாண்டுவா (Mantua) வரை அவர்களுடைய ஆதிக்கத்தை விரிவுபடுத்தினார்கள். மேற்கூறிய வெற்றிகளின் பயனாக இத்தாலியின் வளமிக்க பகுதிகள் அவர்களுடைய ஆட்சிக்கு உட்படுத்தப்பட்டன. இத்தாலியின் இரு பக்கங்களில் இருந்த கடல்களிலும் அவர்கள் ஆதிக்கம் நிலைநாட்டப்பட்டது. அவர்களுடைய கப்பல்கள் திரென்னியன் கடலில் பிற நாட்டவர்களுக்குத் துன்பம் விளைவிக்கும் வகையில் செயற்பட்டன.

இத்தாலியின் அரசியல் தலைவிதியை கி.மு. 500 க்குப் பின்னர் நிருணயிக்கும் பொறுப்பு எட்ரசுக்கர்கள் கைகளிலிருந்து நழுவிவிட்டது. கிரேக்கர்கள் இவர்களுடைய கப்பற்படையின் வலிமையை அழித்தனர். ஈரோன் (Hieron) கி.மு. 474-இல் கப்பற்போர் ஒன்றில் இவர்களைத் தோற்கடித்தார். காலியர் (Gauls) இவர்களுடைய நாட்டின் மீது படையெடுத்து அதனை அழித்தனர். சாம்னைட்டுகள் (Samnites) காம்பேனியாவை வென்றனர். சிமினியன் மலைக்குத் தெற்கேயுள்ள பகுதிகளில் உரோமானியருடைய ஆதிக்கம் ஏற்படுத்தப்பட்டது. அவர்களுடைய அழிவிற்குப் பல காரணங்கள் உண்டு. எட்ரசுக்க நகரங்களிடையே ஒற்றுமை குலைந்தது. பகட்டான வாழ்க்கை இவர்களுடைய திறனை அழித்தது. எட்ரசுக்கர்கள் இத்தாலிமீது படையெடுத்து அழித்தனரேயன்றி, அதனைத் தங்கள் ஆட்சியின்கீழ் நிலையாகக் கொண்டு வருவதற்கான ஏற்பாட்டை மேற்கொள்ளவில்லை. தங்கள் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்த மக்களை அச்சுறுத்தி ஆண்டு வந்தனரேயன்றி, அவர்களுடன் நட்புறவு கொண்டு அவர்களைத் தம் வயப்படுத்த முற்பட்டாரில்லை. ஆகவே, அம்மக்கள் இவர்களுக்கு எதிராக ஆயுதம் தாங்கிக் கிளர்ச்சி செய்வதை நகரங்களை ஆண்டுவந்த உயர்குடி ஆட்சியாளர்களால் தடுத்து நிறுத்த முடியவில்லை. மேலும், இவர்கள் அமைத்த நகரங்களின் கூட்டமைப்புகள் சமயத் துறைகளில் ஒன்றுபட்டு இயங்கினவேயன்றிப் பொதுவான அரசியல் நடவடிக்கை மேற்கொள்ளப் பயன்படுத்தப் பெறவில்லை.

பண்பாடு: எட்ரசுக்கர்கள் நாகரிகம் நகர நாகரிகமாகும். இவர்களுடைய நகரங்கள் செங்குத்தான தனிமையான குன்றுகளில் அமைக்கப்பட்டன. சுற்றியுள்ள பகுதியைத் தங்களுடைய பிடியில் வைத்திருக்கவே இவ்வகையான இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. அவற்றைச் சுற்றிலும் சுவர்கள் எழுப்பப்பட்டன. ஒழுங்கு செய்யப்பட்ட கற்களைக் கொண்டு அவை கட்டப்பட்டன. வளைவான வாயில்கள் அமைக்கப்பட்டன. நீர் தேங்காதிருக்கும் பொருட்டு வடிகால்கள் அமைக்கப்பட்டன. நகரங்களின் உட்பகுதிகள் ஒழுங்கமைப்போடு கூடிய திட்டத்தின்படி அமைக்கப்பட்டன. இரண்டு பெரிய தெருக்கள் ஒன்றின் குறுக்காக மற்றொன்று மையத்தில் வெட்டும்படியாக அமைக்கப்பட்டன. வடிகால்களும் சாக்கடைகளும் அமைக்கப்பட்டன.

செல்வர்கள் மரத்தாலான வீடுகளில் வாழ்ந்தனர். மையத்தில் திறந்த முற்றம் அமைக்கப்பட்டு, அதைச் சுற்றித் தூண்கள் வரிசையாக நிறுத்தப்பட்டன. எல்லா அறைகளுக்கும் முற்றத்தின் வழியாகச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டது. மாடி வீடுகளையும் இவர்கள் கட்டினார்கள்.

இவர்களுடைய கோயில்கள் கிரேக்கக் கோயில்களின் அமைப்பை முன்மாதிரியாகக் கொண்டு கட்டப்பட்டனபோல் காணப்படுகின்றன. எட்ரசுக்கர் கோயில்களில் நீண்ட மண்டபம் ஒன்று முன்னால் கட்டப்பட்டிருக்கிறது. ஆனால், கிரேக்கக் கோயில்களில் வரிசையாகத் தூண்கள் நிறுத்தப்பட்ட தாழ்வாரம் சுற்றிலும் அமைக்கப்பட்டிருந்தது. எட்ரசுக்கர்களுடைய கோயில்களின் சுவர்கள் மரத்தால்

கட்டப்பட்டன. தடுப்புச் சுவர்கள் சுட்டமண்ணால் கட்டப்பட்டன.

பலவகையான கல்லறைகளை இவர்கள் கட்டுவித்தனர். இறந்தோரைத் தொடக்கத்தில் மிக எளிமையான குழிகளில் புதைத்தனர். பின்னர், வளைவான கூரைகளையும் ஓவியம் தீட்டப்பட்ட சுவர்களையும் கொண்ட கல்லைக் குடைந்து, பெரிய கல்லறைகளைப் பெருஞ்செலவில் அமைத்தனர்.

எட்ரசுக்கர்கள் கலை ஆர்வமிக்கவர்கள்; நேர்த்தியான மட்பாண்டங்களையும் பலவகை உருவங்களைக் கொண்ட மண் மலர்க்குவளைகளையும் செய்வதில் வல்லவர்கள். வெண்கலம், பொன் ஆகிய உலோகங்களைக் கொண்டு இவர்கள் பல பொருள்களைச் செய்தனர். அழகு சாதனங்களைப் பாதுகாக்கும் பெட்டிகளும் கண்ணாடிகளும் இங்குக் குறிப்பிடப்படத் தக்கன. இவற்றில் செதுக்கு வேலைப்பாடு மிகுந்து காணப்படுகிறது. இவர்களுடைய சுவர் ஓவியங்கள் மிகவும் நேர்த்தியானவை. கல்லில் சிற்பங்களை வடிக்கும் கலையில் இவர்கள் பெற்றிருந்த வளர்ச்சியை எடுத்துக் காட்டுதற்குரிய சான்றுகள் கிடைக்கவில்லை. ஆனால், சுட்டமண்ணாலான உருவச் சிலைகள் கிடைத்துள்ளன. அழகுள்ள தட்டுமுட்டுச் சாமான்களைச் செய்வதிலும், குறிப்பாகத் தந்தத்தால் நாற்காலிகள் செய்வதிலும் இவர்கள் வல்லவர்களாகத் திகழ்ந்தனர். எட்ரசுக்கர்களுடைய மட்பாண்டங்கள், சுட்ட மண்ணாலான உருவச் சிலைகள், மலர்க் குவளைகள், உலோகப் பொருள்களில் காணப்படும் செதுக்கு வேலைகள், சுவர் ஓவியங்கள் யாவும் கிரேக்கப் பாணியினைக் கொண்டுள்ளன.

பயிர்த் தொழிலும் செம்பு மற்றும் இரும்புக் கனிகளை வெட்டி எடுத்தலும் இவர்களுடைய முக்கியமான தொழில்கள். தசுக்கனியின் தென்புறத்தில் வளமான மண் இருக்கின்ற காரணத்தால் அங்குப் பயிர்த்தொழில் மேம்பாடுற்றது. தரிசு நிலங்களை உழு நிலமாக்கும் திட்டத்தை இவர்கள் நடைமுறைப் படுத்தி வேளாண்மையைப் பெருக்கினார்கள். பயிர்த் தொழிலை நடத்த அடிமைகளைப் பயன்படுத்தினார்கள். அயல்நாடுகளுடன் இவர்கள் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். எட்ரசுக்கர்களுடைய வெண்கலப் பொருள்கள் இரைன் பள்ளத்தாக்கில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அம்பர் எனப்படும் மரப் பிசின் தசுக்கனியிலுள்ள கல்லறைகளில் காணப்படுகிறது. எட்ரசுக்கர்களுடைய வெண்கலப் பொருள்கள் கிரேக்க அங்காடிகளில் விற்கப்பட்டன. மேற்கூறியவற்றிலிருந்து இவர்கள் பிறகண்டங்களிலும் வாணிகம் செய்துவந்தனர் என்பது விளங்கும்.

இவர்கள் திட்டமிட்டு அமைக்கப்பட்ட சமயத்தைப் பின்பற்றி வந்தனர். தொழிலுக்குரிய கடவுளும் நகரங்களின் காவல் தெய்வங்களும் இவர்களுடைய வழிபாட்டுத் தெய்வங்களுள் முக்கியமானவர்கள். சிக்கலான சடங்குகளை இவர்கள் ஏற்று இருந்தனர். அவற்றைத் தக்க முறையில் பேணுதற்கும் விளக்குவதற்கும் தனிப்பட்ட வல்லுநர்களின் தொண்டு இவர்களுக்குத் தேவைப்பட்டது. நகரங்களைப் பாதுகாக்கும் பொருட்டு அவற்றைச் சுற்றியிருந்த கற்சுவர்களைச் சுற்றி வெளிப்புறத்தில் கலப்பையைக் கொண்டு வரிபோலப் பள்ளத்தைச் செய்தனர். இது தீய சக்திகளை நகருக்கப்பால் தடுத்து நிறுத்துவதற்காகச் செய்யப்பட்ட ஆன்மிக நம்பிக்கையாகும். சில முக்கியமான நேரங்களில் கடவுள் விருப்பத்தை அறிய முற்பட்டனர். இடி, விலங்குகளின் குடல், உள் உறுப்புகள் ஆகியவற்றைக் கூர்ந்து கவனித்து, தெய்வ விருப்பத்தைத் தெரிந்துகொள்ளும் முறையை உருவாக்கியிருந்தனர். அதற்காகப் பயிற்சிபெற்ற விளக்குநர்கள் பயன்படுத்தப்பெற்றனர்.

இவர்களுடைய சமயத்தில் நரபலி கொடுக்கும் கொடுமை நிலவியது. இறந்த பின்னர்க் கீழ் உலகத்திலுள்ள பூதங்கள் இறந்தவர்களைச் சித்திரவதை செய்வதாக நம்பி, அத்தகைய துன்புறுத்தலிலிருந்து அவர்களைக் காப்பாற்ற அப்பூதங்களுடைய சினத்தைத் தணிக்கவே நரபலிகள்கொடுக்கப்பட்டன. நரபலிக்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை ஒருவரோடு ஒருவரைச் சண்டையிடச் செய்து, அவர்களைக் கொன்றுவிட ஏற்பாடு செய்தனர். இறந்தபின்னர் வாழ்க்கை உண்டு என்பதில் இவர்களுக்கு நம்பிக்கை இருந்தது. ஆகவே பெரியகல்லறைகளை அமைத்து,பூமிக்கடியில் அவற்றில் அறைகளைக் கட்டி இறந்தவர்களை எகிப்தியர்கள் செய்ததுபோலப் படுக்கையில் கிடத்தினார்கள். அப்படுக்கையைச் சுற்றி அழகான தட்டுமுட்டுப் பொருள்களை வைத்தனர். நேர்த்தியான மட்பாண்டங்களையும் மலர்க் குவளைகளையும் வைத்தனர். கல்லறைச் சுவர்களில் அருமையான வண்ண ஓவியங்களைத் தீட்டினர். அவற்றின் மீது செய்திகளையும் செதுக்கிவைத்தனர்.

எட்ரசுக்கர்களுடைய சமுதாய முறையும் அரசியல் முறையும் உயர்குடி மக்களின் ஆதிக்கத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்டிருந்தன.ஒருசில உயர்குடியானவர்கள் கைகளில் நாட்டின் சிறந்த வேளாண்மை நிலங்கள் இருந்தன.அவர்களிடம்தான் ஆட்சியும்இருந்தது.ஆட்சி அதிகாரம்முதலில்அரசரிடமிருந்தது. உயர்குடிக் குடும்பங்கள் சில அரசனைத் தேர்ந்தெடுக்கும் உரிமையைப் பெற்றிருந்தன. அரசர்கள் கி.மு.6,5-ஆம் நூற்றாண்டுகளில் ஒழிக்கப்பட்டு அவர்களுக்குப் பதி

லாகச் சில ஆட்சித் தலைவர்கள் அமர்த்தப்பட்டனர். அவர்கள் ஆண்டுதோறும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அரசர்களும் ஆட்சித் தலைவர்களும் பகட்டான வாழ்க்கையை மேற்கொண்டனர்; தந்தத்தால் ஆன நாற்காலியில் அமர்ந்தனர்; தந்தத்தால் ஆன தேர்களில் சென்றனர். அவர்கள் போகும்போது அவர்களுடன் சில பணியாட்கள் சென்றனர். அவர்கள் கோடரியைச் சுற்றி இரும்புக் கம்பிகளைக் கட்டித் தூக்கிச் சென்றனர். அவை தண்டிக்கும் உரிமையையும் உயிரை எடுக்கக்கூடிய உரிமையையும் அவர்கள் பெற்றிருப்பதை உணர்த்துவதாகக் கருதப்பட்டன. அவர்கள் பெரும் படைகளை வைத்திருந்தனர். உயர் குடி மக்களும் அவர்களுடைய பணியாளர்களும் குறிப்பிடத் தக்கவர்கள். அவர்களுடைய பாதுகாப்புக் கவசம் கிரேக்கக் கவசத்தைப் போன்றிருந்தது. குதிரைமீது இருந்து அவர்கள் போர் புரிவது வழக்கம். 'பாலங்சு' (Phalanx) என்று அழைக்கப்பட்ட கிரேக்க அணிவகுப்பு முறையைக் கையாண்டார்கள்; கூலிப்பட்டாளத்தையும் தம்மால் அடக்கப்பட்ட மக்களையும் போர்க்காலங்களில் பயன்படுத்தினார்கள்.

எட்ரசுக்கர்களிடமிருந்து உரோமானியர்கள் பலவற்றைக் கற்றுப் பயன்படுத்தினார்கள். வீடுகளுக்கு நடுவே திறந்த முற்றம் அமைக்கும் முறை, குறி சொல்லும் வழக்கம், இடி, விலங்குகளின் குடல் உறுப்புகளில் காணப்படும் குறி ஆகியவற்றைக் கொண்டு தெய்வ விருப்பத்தை அறியும் முறை இரும்புக் கம்பிகளுடன் கோடரியைச் சேர்த்துக் கட்டி உயர் அதிகாரிகள் செல்லும்போது அவர்களுக்கு முன்னால் அவற்றை எடுத்துச் செல்லும் முறை, வேளாண்மை அடிமை முறை, மக்களை உற்சாகப் படுத்துவதற்காகக் கொடுமை நிறைந்த விளையாட்டுகளை அரங்கத்தில் நடத்தும் முறை (Gladiatorial shows) ஆகியவை அவற்றுள் குறிப்பிடத்தக்கனவாகும். தி.அர.இரா.

துணை நூல்:

Leon, M. Joseph, World Civilization, Vol. I, Inc., Lincoln, Nebraska, 1970.

**எட்வர்ட்சு சோனாதன் (கி.பி. 1703–1758)** சமய சீர்திருத்தவாதி; தத்துவ அறிஞர். இவர் அமெரிக்காவில் (U.S.A.) விண்சர் (Windsor) என்னுமிடத்தில் பிறந்தார். இவர் தந்தையார் திமோதி எட்வர்ட்சு பாதிரியார். இவர் இளமையிலேயே இயற்பியல் ஆய்வுக் கட்டுரைகள் எழுதும் ஆற்றல் பெற்றிருந்தார். இவர் ஏல் (Yale) பல்கலைக்கழகத்தில் படித்தபோது இவருக்குச் சமய அனுபவம் உண்டானது. எட்வர்ட்சு சோனாதன் Edwards, Jonathan) கி.பி. 1722-ஆம் ஆண்டு இசுகாட்சு (Scotch) திருச்சபைப்பொது ஆட்சி முறைக் (Presbyterian) குழுவின் பாதிரியாக அமர்ந்தார். பின்னர், இவர் ஏல் பல்கலைக்கழகத்தில் ஆசிரியராகப் பணியாற்றினார். இருபது ஆண்டுக் காலமாக இவர் சமயச் சொற்பொழிவு செய்தார். இவர் 1360 கட்டுரைகள் எழுதினார்; கிறித்தவச் சமயக் கருத்துகளைக் கடைப்பிடித்தார். கடவுளின் அருளால்தான் மனிதன் நற்கதியடைய முடியும் என்று இவர் நம்பினார்; பெரிய எழுச்சி (Great Awakening) என்ற இயக்கத்தில் சேர்ந்து சிறந்த பணியாற்றினார்.

எட்வர்ட்சை கி.பி. 1748-ஆம் ஆண்டு மதகுருப் பதவியிலிருந்து நீக்கிவிட்டார்கள். அதன்பின்னர், இவர் ஒரு சிறிய குழுவினரிடம் மதக் கருத்துகளைப் பரப்பி வந்தார். இவர் எழுதிய நூல்களுள் சிறந்தது 'விருப்பின் சுதந்திரம்' (Freedom of the Will) என்பதாகும். 'உண்மையான நற்பண்பின் இயல்பு' (Nature of True Virtue) என்பதும் இவர்தம் நூலே. இவருடைய மதக் கட்டுரைகளில் தத்துவக் கருத்துகள் நிறைந்திருந்தன. மதத் தொடர்பில்லாவிட்டால் கலை, அறிவியல், தத்துவம் முதலானவற்றுக்கு மதிப்பு இல்லை என்று இவர் கருதினார்.

எட்வர்ட்சின் தத்துவக் கருத்துகள் இவர் கல்லூரி வாழ்வை நினைவுபடுத்துகின்றன. கடுந்தூய்மை உடையதான பிளேட்டோ (Platonism) கொள்கையை இவர் கடைப்பிடித்தார். மனித அறிவுப் புலன்கள் ஓர் அடிப்படையில் அமைந்தவை என்னும் இலாக்குவின் (Locke) கொள்கையை இவர் ஒத்துக் கொண்டார். இவர் நியூட்டனிடமிருந்து இடம் பற்றிய கருத்துகளை அறிந்தார். அறிவுடைய பொருள் என்பது நிலையானது; அது எங்கும் நிறைந்தது; அது இறை இயல்பானது; இன்றியமையாத தன்மை, நிலையான தன்மை, எங்கும் நிறைந்த தன்மை, அளவிலாத தன்மை முதலியன பொருந்தியது. ஆகையினால் அறிவுடைய பொருள் கடவுளேயாகும். கடவுளைத் தவிர்த்து வேறு பொருள் இல்லை. அது இடத்தோடு ஒன்றுபட்டிருக்கிறது. எண்ணங்களிலிருந்து இடத்தைத் தவிர மற்றெல்லாப் பொருளையும் மறக்க முடியும். ஆகையினால், இடம் தெய்விகமானது. கடவுளின் மனத்தை எல்லாப் பொருள்களும் உறைவிடமாகக் கொள்ளும். இவ்வாறு எட்வர்ட்சு கூறுகிறார்.

மனத்தின் இரண்டு செயல்களுள் ஒன்று தெரிந்து கொள்ளுதல், மற்றொன்று விருப்பம். தெரிந்து கொள்ளுதல் என்பது புலன் காட்சி, எண்ணுதல், தீர்

மானித்தல் முதலியன. புலனுணர்வு ஏற்படாவிட்டால் மனம் வேலை செய்யாது. நிறம் என்பது பொருள்களில் இல்லை. அதே போல் வலி என்பது ஊசியில் இல்லை. எல்லாவிதமான தொடக்கத்திலுமுள்ள குணங்கள் எதிர்ப்புச் சக்தியாக மாற்றப்படுகின்றன. கெட்டியான தன்மை எதிர்ப்புச் சக்தியாகும். அசைவு என்பது எதிர்ப்ப ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குத் தெரிவிப்பதாகும். தெரிகின்ற ஒரு பொருள் குணங்கள் மட்டுமன்றி, எண்ணங்களும் எதிர்ப்புச் சக்திகளும் உடையனவாயிருக்கும். இது தான் கடவுளின் தன்மையாகும். காண்கின்ற இந்த உலகம் ஒரு தோற்றமே. அது. கடவுளின் மனத்தில் அமைந்திருக்கிறது. மனத்தில் இறைவனால் அந்த எண்ணங்கள் தெரியப்படுத்தப்படுகின்றன. எட்வர்ட்சின் கருத்துப்படி, மனம் உண்மையானது; உடல் அதன் நிழல்; நல்லனவெல்லாம் அறிவுடைய பொருளின் வலுவிற்குத் தகுந்தபடி அமைந்திருக்கும் என்பதாகும்.

உலகம் நிலைத்திருப்பதற்கும் பாதுகாவலோடிருப்பதற்கும் கடவுளே காரணம். கடவுள் உலகைப் படைத்துக் காக்கிறார். கதிரவனிடமிருந்து ஒளி வருவதுபோன்று, கடவுளிடமிருந்து உலகம் தோற்றுவிக்கப்படுகிறது. எட்வர்ட்சு 'இறைப்பொருள்களின் நிழல்கள்' (Shadows of Divine Things) என்னும் தம் நூலில் இயற்கையைக் கடவுளின் அறிகுறியாகக் கருதுகிறார். கடவுள் தம் உருவத்தைப் போல மனிதனைப் படைக்கிறார். இயற்கையில் கடவுளைக் காணவேண்டும். இதைத் தவிர இன்பம் தரும் செயல் வேறில்லை என்பன இவர்தம் கருத்துகள்.

மனத்தின் செயல்திறன் விருப்பமாகும். மனம் உணர்ச்சியின் இருப்பிடம். எல்லா உணர்வுகளும் அன்பிலிருந்துதான் எழுகின்றன. அன்பு தான் மனத்தின் அழகு. எல்லாவித மனிதச் செயல்களும், குறிப்பாக மதத் தொடர்புடன் உள்ளன. எல்லாம் அன்பின் அடிப்படையில் எழுந்தவையாகும் என எட்வர்ட்சு கூறுகிறார்.

மதத் தொடர்பான அனுபவம் இறைவனின் அருளால் ஏற்படும். இந்தப் புது அறிவு புலன்களால் அறியப்படுவதை விடச் சிறந்தது; மீண்டும் இறைவனருளால் பிறக்கச் செய்கிறது. இறைவனை அடையும் வழி இதயமே யன்றி, அறிவு அன்று.

விருப்பம் அறிவைப் போல வெளியிலிருக்கும் சக்திகளினால் தூண்டப்படுகிறது. அறிவு இறைவனால் செயற்படுவது போல விருப்பாற்றலும் சில பொருள்களால் கவரப்படுகிறது; சில பொருள்களால் வெறுக்கப்படுகிறது. விருப்புக்குக் காரணங்கள் உண்டு.

எட்வர்ட்சு ஆர்மினியர்களை (Arminians)எதிர்த்தார். அவர்கள் மனிதனின் விருப்பம் தானே முடிவெடுக்கும் இயல்புடையது என்றார்கள். மனிதனுடைய எண்ணங்கள் யாவும் இறைவனால் தூண்டப்படுகின்றன. இறைவனின் சக்திக்குள் அவை அடங்கியிருக்கின்றன. எட்வர்ட்சு இதனை ஒத்துக்கொள்ளாவிட்டாலும், மனிதன் தன்னுரிமையுடையவன் என்பதனை மறுக்கவில்லை. தன்னலமில்லாத இரக்கக் குணம் நன்னெறியாகும். வேறு நோக்கங்கள் கொண்ட செயல்கள் எப்பொழுதும் தன்னலம் கொண்டனவாக இருக்கும். மனிதனுக்குத் தன்னலமில்லாத உறவு எந்தப் பொருளிலும் இருக்க முடியாது. இறைவன் அருளால் மனிதன் நல்ல செயல்கள் செய்ய முடியும். இக்கருத்துகள் எட்வர்ட்சின் நூல்களில் பெரிதும் வலியுறுத்தப்பட்டுள்ளன. இவர் கி.பி.1758-ஆம் ஆண்டு காலமானார். இரா.கோ.

**எட்வர்டு இலவத்து** ஆக்சுபோர்டிலுள்ள ஆசுமோலியன் அருங்காட்சியகக் காப்பாளராக இருந்தவர்; தொன்மைமிக்க அரும் பொருள்களைச் சேகரிப்பதில் மிக்க ஆர்வம் கொண்டவர். எட்வர்டு இலவத்து (Edward Lhwyd) கி.பி. 1660-ஆம் ஆண்டு பிறந்தார். ஆசுமோலியன் அருங்காட்சியகத்தின் முதல் காப்பாளரான முனைவர் இராபர்ட்டு பிளாட்டு (Dr. Robert Plot) இவர்தம் ஆசிரியராவார். பிளாட்டு ஆக்சுபோர்டை விட்டு இலண்டனுக்குச் சென்றபொழுது ஆசுமோலியன் அருங்காட்சியகத்தின் பொறுப்பை எட்வர்டு இலவத்து ஏற்றார். இவர் தம் 48-ஆம் வயதில், கி.பி. 1708-ஆம் ஆண்டு அருங்காட்சியகத்திலேயே உயிர்நீத்தார். இவர் பல துறைகளிலும் சிறந்த புலமை பெற்று விளங்கினார். மொழி, இயற்கை வரலாறு, வழக்காறுகள்(Customs), அரும்பொருள்கள் ஆகியன பற்றி இவர் ஆய்வு செய்தார். தொல்லியல்சார் பிரிட்டானிகா (Archaeologia Britannica) என்னும் நூலை கி.பி. 1707-ஆம் ஆண்டு வெளியிட்டார். இந்நூலில் இவர் ஆய்வு செய்தன பற்றியும் புதைபடிவ ஆய்வுகள் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

எட்வர்டு இலவத்து கி.பி. 1699--ஆம் ஆண்டு அயர்லாந்திற்குப் பயணம் மேற்கொண்டு கெல்ட்டுகள் வாழ்ந்த பகுதியில் தொல்லியல் ஆய்வை மேற்கொண்டு இயற்கை வரலாற்றை (Natural History) ஆய்வு செய்தார். தப்ளினுக்கு வடக்கில் நியூ கிராஞ்சு (New Grange) என்னுமிடத்திலுள்ள வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட கல்லறையை (Tomb) இவர் பார்வையிட்டார். இதைப்பற்றி ஓர் ஆய்வுக் கட்டுரையை இவர் எழுதினார். தொல்லியல் அறிஞர் சான் ஆல்பரியின் நண்பராக இவர் விளங்கினார்.

சு.இரா.

**எட்வர்டு இலியர்** (கி.பி. 1812-1888) ஆங்கில எழுத்தாளரும் ஓவியருமாவார். இலண்டன் இராயல் கழகத்தில் (London Royal Academy) ஓவியம் பயின்ற எட்வர்டு இலியர் (Edwar Lear), விக்டோரியா பேரரசியார்க்கு ஓவியப் பாடங் கற்றுத் தந்தவராவார். தம்மைச் சுற்றியுள்ள நிலத்தின் இயற்கை அழகுகளை ஓவியங்களாகத் தீட்டுவதில் ஆர்வம் கொண்ட இவர், அதற்காக அயர்லாந்து, பிரான்சு, இத்தாலி, அலபாமா, கிரீசு, இந்தியா, கீழ்த்திசை நாடுகள் முதலிய பல நாடுகளையும் சுற்றி வந்தார். இந்தப் பயண அனுபவங்கள் இவர் சிறந்த பயண இலக்கியங்களை எழுதுவதற்குத் தூண்டுகோலாயின. இவருடைய ஓவியங்கள், வரைபடங்கள், நீர் வண்ண ஓவியங்கள் ஆகியன பெரிய பாராட்டினைப் பெற்றதைப் போல, மிக நுணுக்கமான செய்திகளை வழங்கிய இவர்தம் பயண இலக்கியங்களும் பெரிதும் வரவேற்கப்பட்டன. ஓவியர், இலக்கியப் படைப்பாளி என்ற நிலைகளுக்கு அப்பால் இன்றும் இவர் ஆங்கில இலக்கிய உலகில் பெரிதும் பாராட்டப் பெறுவது இவருடைய பொருளிலிப் பாடல்களுக்காகத்தான் (Nonsence Rhymes). பொருளிலிப் பாடல்கள், நையாண்டிப் பாடல்கள் எனப் பலவகைகளில் நகைச்சுவை ததும்பப் பாடல்களை இயற்றித் தமக்கெனத் தனி இடத்தைப் பெற்றார். சிறந்த ஓவியராகையால் இப்பாடல்களுக்கு எள்ளற்சுவைபடப் படங்களும் தீட்டிப் படிப்பவர் பார்வைக்கும் விருந்தளித்தார். இவருடைய படைப்புகளைப் பார்த்தவர்கள் இவர் விருப்பின்மையும் சோகமும் கொண்ட மகிழ்ச்சியற்ற மனிதர் என்பதை நம்ப மாட்டார்கள். ஆனால், இவருடன் பழகுகின்றவர்களுக்குத் தம் அடிமனச் சோகங்களை வெளிப்படுத்தாத மகிழ்ச்சியான, மென்மையான, விளையாட்டுத்தனமான, நகைச்சுவை நயம் நிறைந்த நண்பராகத் திகழ்ந்தார். அதனால், எல்லோரும் பாராட்டி மகிழ்ந்து போற்றும் கலைஞராய் விளங்கினார்.

இவர்தம் பொருளிலிப் பாடல்களுள் மிகவும் சிறந்தது ஆந்தையும் பூனையும் (The Owl and the Pussy Cat) என்ற தொகுதியாகும். முதியவரும் இளையோரும் ஒருசேரப் பாராட்டும் நூல் இதுவாகும். நான்கு தொகுதிகளாக இவர் வெளியிட்ட பொருளிலிப் பாடல்களே இவருக்கு மிகுந்த புகழ் தந்தன. ஓவியர் என்பதால் பெற்ற சிறப்பைக் காட்டிலும்பொருளிலிப்பாடல்கள்எழுதுவதில்வல்லலர் என்பதாலேயே இவருக்கு மிக்க புகழ் உண்டாயிற்று.

இலியர் தம்முடைய நையாண்டிப் பாடல்களில் நடைமுறை உலகிற்குப் பொருந்தாத மாறுபட்ட உலகம் ஒன்றைப் படைத்துக் காட்டுகிறார். மெலிதான பொருள் கொண்டவற்றிற்கு நகைச்சுவை உணர்வூட்டிப் புதுமையான நிலையில் எள்ளல் சுவைபடப் பாடுவது இவருடைய முதன்மைத் திறத்திற்கு எடுத்துக்காட்டாகும். 'ஆந்தையும் பூனையும்' என்ற பொருளிலிப் பாடல் கதை தழுவியதாகும். பொருளற்ற தருக்கங்களும் நடையும் இதற்குப் பெருஞ் சுவை சேர்த்தன.

நையாண்டிப் பாடல்களை முதன்முதல் உருவாக்கியவர் என்று இவரைக் கூற முடியாது. ஆனால், இவ் இலக்கிய வகையினைச் செல்வாக்குடையதாகப் பரவச் செய்ததில் இவருக்கு முதலிடம் உண்டு. இவர் தம் பொருளிலிப் பாடல்களும், நையாண்டிப் பாடல்களுமே இன்றுவரை கவிஞர்களுக்கு இவ் இலக்கிய வகையினை உருவாக்கத் தூண்டுகோலாய் அமைந்தன என்பதில் ஐயமில்லை. பி.எஸ்.வே.

**எட்வர்டு ஏரி** ஆப்பிரிக்காக் கண்டத்தில் பாயும் நைல் ஆற்றின் மூலம் என்று கருதப்படுவது. நடு ஆப்பிரிக்காவில் உகாண்டாவிற்கும் செய்ரே (Zaire) என்னும் நாட்டிற்கும் இடையிலுள்ள பிளவுப் பள்ளத்தாக்கில் இந்த ஏரி அமைந்துள்ளது. இவ்வேரியின் பெரும்பகுதி செய்ரே நாட்டிலுள்ளது.

எட்வர்டு ஏரி (Lake Edward) 64 கி.மீ. நீளமும் 51 கி.மீ. அகலமும் கொண்டது. இந்த ஏரியில் மீன் வளம் மிகுதியாக உள்ளது. செம்லிகி (Semliki) ஆறு எட்வர்டு ஏரியிலிருந்து வடக்காகப் பாய்ந்து, ஆல்பர்ட்டு ஏரியில் சேருகிறது. ஆல்பர்ட்டு ஏரி உருவன்சோரி மலைத்தொடருக்கு மேற்கிலுள்ளது. தெ.பா.

**எட்வர்டு கிப்பன் வேக்பீல்டு**: ஆங்கிலக் குடியேற்ற அரசியல் அறிஞரும், ஆசுத்திரேலியாவிலும் கனடாவிலும் நியூசிலாந்திலும் புதிய ஆங்கிலக் குடியேற்ற நாட்டுக் கொள்கை உருவாவதற்குக் காரணமாக இருந்தவருமான எட்வர்டு கிப்பன் வேக்பீல்டு இலண்டனில் கி.பி. 1796-இல் பிறந்தார். இவர் சிறிது காலம் இத்தாலியில் ஆங்கிலத் தூதரகத்தில் பணியாற்றினார். இங்கிலாந்தில் ஒரு குற்றத்துக்காக இவர் மூன்றாண்டுச் சிறைத்தண்டனை பெற்றுப்பின், மரண தண்டனையைப் பற்றிய சில உண்மைகள், இங்கிலாந்தும் அமெரிக்காவும், குடியேற்றக் கலையைப் பற்றிய ஒரு கருத்து முதலிய நூல்களை எழுதி வெளியிட்டார். இவர் குடியேற்ற நாடுகளுக்கு மக்கள் மிகுதியும் செல்வதை அரசாங்கம் கட்டுப்படுத்துதல் வேண்டுமென்றும், மேய்ச்சல் நிலங்களைத் தவிர விளைச்சல் நிலங்களை இலவசமாக வழங்குதல் நிறுத்தப்படுதல் வேண்டுமென்றும் கூறிய கருத்து

களைச் செயற்படுத்தும் பொருட்டு கி.பி. 1830-இல் தேசிய குடியேற்றக் கழகம் (National Colonization Society)நிறுவப்பட்டது. புதிய நிலங்களைத் தொழிலாளர்களே 4 அல்லது 5 ஆண்டுகளில் வாங்கிக் கொள்ளுதற்கு உதவியாகக் குறைந்த விலையில் அவர்களுக்குக் கொடுத்தல் வேண்டுமென்றும் இவர் ஒரு கருத்தை உருவாக்கினார். ஆசுத்திரேலியாவில் நியூசவுத்து வேல்சிலும் தென் ஆசுத்திரேலியாவிலும் இவர் கருத்துகள் செயற்படுத்தப்பட்டன. இவர் கி.பி. 1837-இல் நியூசிலாந்து கழகத்தை நிறுவி, கி.பி. 1839-இல் ஒரு கப்பலில் நிறைய குடியேற்றக்காரர்களை (Colonists) நியூசிலாந்துக்கு விடுக்கவே, அவர்களைக் காப்பாற்றும் பொருட்டும், அதைப் பிரெஞ்சுக்காரர் கைப்பற்றாதபடி தடுக்கும் பொருட்டும் ஆங்கில அரசாங்கம் கி.பி. 1840-இல் நியூசிலாந்தைத் தன தாட்சிக்குட்பட்ட குடியேற்ற நாடாகக் கொண்டுவந்தது. எட்வர்டுகிப்பன்வேக்பீல்டு(Edward Gibbon Wake field) கி.பி. 1838-இல் தர்காம் (Durkam) பிரபுவுடன் கனடாவுக்குச் சென்று, அங்குத் தலைமை ஆளுநரின் ஆலோசகராகப் பணிசெய்து, கி.பி. 1839-இல் தர்காம் பிரபு ஆங்கிலேய வட அமெரிக்க நிலைபற்றிய அறிக்கையை எழுதுவதற்குப் பேருதவி செய்தார். இவர் நியூசிலாந்தின் தலைநகரமான வெலிங்டனில் நோயுற்று, கி.பி. 1862-இல் மறைந்தார்.

தாராள அரசியற் கோட்பாடு: எட்வர்டு கிப்பன் வேக்பீல்டு பின்பற்றிய அரசியற் கோட்பாடு கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், 19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் ஆங்கில அரசியல் சிந்தனை வரலாற்றில் சிறப்பான இடம் பெற்றிருந்த தாராள அரசியற் கோட்பாடு (Liberalism) ஆகும். இங்கிலாந்தில் அரசியல் தாராளக் கோட்பாடு (Political Liberalism) செரிமி பெந்தம், தாவீது ரிக்கார்டோ (David Ricardo), சேம்சு இசுடுவர்ட்டு மில் (James Stuart Mill), அவர்தம் மகன் சான் இசுடூவர்ட்டு மில் (John Stuart Mill) ஆகியோருடைய முயற்சியால் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வளர்ச்சி அடைந்தது. அதனோடு கிப்பன் வேக்பீல்டு தொடர்பு கொண்டார். அரசியல் தாராளக் கோட்பாடு தத்துவ இயலான அதி தீவிரவாதம் (Philosophical Radicalism) அல்லது இன்பநிலைக் கோட்பாடு (The Greatest Happiness Principle) என்றும் குறிப்பிடப்படுகிறது. இதைப் பொருளாதாரத் துறையில் தடையற்ற வாணிகக் கோட்பாடாகத் தாவீது ரிக்கார்டோ வகுத்தார். இதன்படி உணவுப் பொருள்கள் மீது விதிக்கப்பட்டிருந்த உயர்ந்த காப்பு வரிகள் நீக்கப்பட்டன. அரசாங்கத்துக்கு ஆதாரமாக இருப்பது மனிதனுடைய தேவைகள்தாம். ஆகையால் இன்பத்தை நாடித் துன்பத்தை நீக்கிச் செயற்படும் மனித நடத்தையைச் சட்டம் இயற்றுவோர் கட்டுப்படுத்தவும் இயக்கவும் வேண்டும். சட்டமானது வெறும் வடிவத்துக்கு உட்பட்டும் தெளிவில்லாமலும் இருந்தால், அதனால் வழக்காளிகளுக்குக் காலமும் பொருளும் வீணாகும். சட்டமானது மிக நுட்பங்களிலிருந்து விடுவிக்கப்பட்டு எளிமையாக்கப்படுதல் வேண்டும். நீதித்துறை அமைப்புச் சீர்திருத்தி அமைக்கப்படுதல் வேண்டும். வயது வந்தோருக்கு வாக்குரிமை வழங்கப்படுதல் வேண்டும். பெந்தம் கூறிய இக்கருத்துகள் ஏற்றுக் கொள்ளப்பட்டுச் சீர்திருத்தங்கள் நிறைவேற்றப்பட்டன. பிரிட்டனின் கடல் கடந்த குடியேற்ற நாடுகளை ஆளுதலிலும் தத்துவ இயலான அதிதீவிரவாதக் கொள்கை கையாளப்பட்டது. பிரிட்டிசு பேரரசுக் கொள்கையாளர் (Imperialists) அதி தீவிர வாதக் கொள்கையைக் கையாளலாயினர். மனிதப் பற்றுக் கோட்பாட்டின் காரணமாக (Humanitarianism), மனித சமத்துவக் கோட்பாடு நிலை பெறற்பொருட்டு யாவருக்கும் சமய நெறி புகட்ட முயற்சிசெய்யப்பட்டது. சிறைகளில் சீர்திருத்தம் செய்யப்பட்டது. குற்றஇயல் சட்டம் திருத்தி அமைக்கப்பட்டது. அடிமைநிலை ஒழிக்கப்பட்டது. தொழிற்சாலைச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. கட்டாயத் தொடக்கக் கல்விப் பயிற்சி கொண்டுவரப்பட்டது. இந்த மனிதப் பற்றின் காரணமாகவே முதலாவதாக ஆங்கிலக் குடியேற்ற நாடுகளிலுள்ள பழங்குடி இனமக்களுக்குக் குடியேறும் வெள்ளை இனத்தவர் எவ்வித இடையூறும் செய்தலாகாது என்ற கட்டுப்பாடு மிகவும் உறுதியாகக் கடைப்பிடிக்கப்பட்டது. இரண்டாவதாக, பிரிட்டனிலுள்ள குடியாட்சியைப் பற்றி மக்களுக்குப் பெருமையான உணர்வு இருந்ததனால், ஆங்கில அரசாங்கம் குடியேற்ற நாடுகளுக்கும் தன்னாட்சி உரிமை வழங்குதல் வேண்டுமென்ற எண்ணம் தோன்றிற்று. இவ்விரண்டு எண்ணங்களும் தத்துவ இயலான அதிதீவிரக் கோட்பாட்டின் விளைவுகளாகும். இவற்றைச் செயற்படுத்தியவர் எட்வர்டு கிப்பன் வேக்பீல்டு ஆவர். இவர் வகுத்த திட்டத்தை ஆங்கில அரசாங்கம் நிறைவேற்றியது. தென் ஆசுத்திரேலியாவுக்கும் நியூசவுத்து வேல்சுக்கும் நியூசிலாந்துக்கும் இங்கிலாந்திலிருந்து பெருமளவில் வெள்ளை இனமக்கள் குடியேறவே, கி.பி. 1850-இல் முன்கூறப்பட்ட இரண்டுக்கும் விக்டோரியா மாநிலத்துக்கும் தத்தமக்குரிய அரசியலமைப்புகளை வரைந்து செயற்படுத்திக் கொள்ள உரிமைகள் வழங்கப்பட்டன. நியூசிலாந்துக்கு ஓர் அரசியலமைப்பை அதில் குடியேறியோர் கி.பி. 1852-இல் வரைந்தனர்.

எட்வர்டு கிப்பன் வேக்பில்டு தாராளக் கொள்கையைக் கனடாவில் செயற்படுத்துதல்: அதிதீவிரப் பேரரசுக் கொள்கையினருள் ஒருவரான தர்காம்

பிரபு (கி.பி.1792-1840) கி.பி.1838-இல் கனடா நாட்டிற்குத் தலைமை ஆளுநராகவும், உயர் ஆணைய பிரபுவாகவும் (Lord High Commissioner) அமர்த்தப்பட்டார். அவருக்கு ஆலோசகர்களாக உதவி செய்வதற்குச் செயலாளர் சார்லசு புல்லரும் (Charles Buller) எட்வர்டு கிப்பன் வேக்பீல்டும் உடன் சென்றனர். கனடாவில் பிரஞ்சியர் மிகுதியாக இருந்த குவிபெக்கு மாநிலத்துக்கும், ஆங்கிலேயர் மிகுதியாக இருந்த ஒண்டாரியோவுக்குமிடையே நல்லிணக்க மில்லாமலிருந்தது. தர்காம்பிரபு நிலைமையை நன்குகவனித்துக் கலகம் செய்த தலைவர்களைக் கடுமையாகத் தண்டித்து, மற்றவர்களை மன்னித்து, விடுதலை வழங்கி, அரசாங்கத்தைச் சீர்திருத்தம் செய்தற்கு ஓர் அறிக்கையையும் வரைந்தார். ஆனால், அதை முடித்து ஆங்கில அரசாங்கத்திடம் அளிக்கும் முன்பே, அவருடைய நல்ல ஆணைகள் எல்லாவற்றையும் ஆங்கில அரசாங்கம் தள்ளுபடி செய்தது. அதனால் மிகவும் வருத்தமடைந்த தர்காம்பிரபு வேலையைத்துறந்து, தாமே தனியாகக் கனடாவைப் பற்றி ஓர் அறிக்கையை வரைந்து கி.பி. 1839-இல் அதைக் குடியேற்ற நாட்டலுவலகத்தில் கொடுத்தார். இந்த அறிக்கையைப் பெரும்பாலும் வரைந்தவர்கள் அவருடைய செயலரான சார்லசு புல்லரும் எட்வர்டு கிப்பன் வேக்பீல்டுமே ஆவர். பழைய பிரிட்டிசுப் பேரரசுக் கொள்கையினையுடைய குடியேற்ற நாடுகள் தாய் நாட்டின் நலனுக்காக ஆளப்படுதல் வேண்டும் என்ற கருத்தை மாற்றியமைக்கக் கிப்பனின் அதிதீவிரக் கொள்கை காரணமாக இருந்தது. கிப்பனின் கொள்கையின் விளைவாகக் கனடாவில் பிரிட்டனிலிருப்பது போன்ற ஒரு தாராள அரசியலமைப்புக் கொண்டுவரப்பட்டது; அதுவே கி.பி. 1867-இல் செய்யப்பட்ட ஆங்கிலேய வட அமெரிக்கச் சட்டமாகும். கனடிய மாகாணங்களை ஒன்றாக இணைத்து அவற்றுக்குத் தன்னாட்சி உரிமை வழங்குவதுதான் அவற்றைப் பிரிட்டனுக்குப் பற்றுறுதியோடிருக்கச் செய்வதற்குரிய ஒரே வழி என்றும், வழங்காவிடில் அவை ஐக்கிய அமெரிக்க நாட்டோடு சேர்ந்து விடுமென்றும் தர்காம் பிரபு எண்ணி, கிப்பனும் புல்லரும் கூறியதன்னாட்சிக் கருத்துகளைத் தமதறிக்கையில் இணைத்து எழுதினார்.

அவர் செய்த பரிந்துரைகள் வருமாறு: (அ) மேல் கனடாவும் கீழ்க் கனடாவும் ஒன்றாக இணைக்கப்பட்டு அதற்கு ஓர் ஈரவைப் பாராளுமன்றம் நிறுவப்படுதல் வேண்டும். (பிரிட்டிசுப் பாராளுமன்றம் கி.பி. 1840-இல் செய்த ஒரு சட்டத்தின்படி இரு கனடிய மாநிலங்களும் ஒன்றாகக் கூட்டாட்சியாக இணைக்கப்பட்டு, ஒரு பாராளுமன்றம் நிறுவப்பட்டது).

(ஆ) இப்பாராளுமன்றத்தின் வாயிலாகப் பொறுப்புள்ள தன்னாட்சி அரசாங்கம் நிறுவப்படுதல் வேண்டும். பாராளுமன்றத்தின் பெரும்பான்மை உறுப்பினர்களுடைய ஆதரவைப் பெற்ற ஓர் அமைச்சர் குழுவால் அரசாங்கம் நடைபெறுதலே பொறுப்புள்ள தன்னாட்சி ஆகும்.

இப்பரிந்துரைகளினடிப்படையில் நிறைவேற்றப் பட்ட பிரிட்டிசு வட அமெரிக்கச் சட்டம்தான் (1867) பிரிட்டிசுக் குடியேற்ற நாட்டுக்கு வழக்கப்பட்ட, புதிய மாற்றியமைக்கப்பட்ட குடியேற்ற நாட்டுக் கொள்கையினடிப்படையிலமைந்த தாராள அரசியலமைப்பாகும். குடியேற்ற நாடுகளுக்குத் தன்னாட்சி உரிமை வழங்கி அதன் வாயிலாக அவற்றைப் பிரிட்டனோடு இணைத்தலே பிரிட்டிசுப் பொது அரசுக் கொள்கை (British Commonwealth of Nations) ஆகும். கிப்பன் வேக்பீல்டுதான் புதிய தாராளக் குடியேற்ற நாட்டுக் கொள்கை உருவாவதற்கு அடிப்படை அமைத்தவராகையால், இவரே அதன்படி தோன்றிய ஆங்கிலப்பொது அரசு நாடுகளை உருவாக்கியவராகக் கருதப்படுகிறார். பா.சூ.

துணை நூல்கள்:

**Elie Halevy**, The Growth of Philosophic Radicalism (Eng. Trans. by Mary Morris), New York, 1949.

**Hearnshaw, F.J.C.**, The Social and Political Ideas of Some Representative Thinkers of the Revolutionary Era, London, 1931.

**எட்வர்டு கோக்கு, சர்**: புகழ்மிக்க ஆங்கிலச் சட்ட அறிஞரும், அரசியல் வாதியும், இசுடுவர்ட்டு அரசர்களுடைய எதேச்சாதிகார உரிமைகளுக்கெதிராக நாட்டின் பொதுச் சட்டமே தலைமையானது, உயர்ந்ததென்று துணிவுடன் எடுத்துக் காட்டியவரும், அதன் காரணமாக ஆங்கிலச் சட்டமும் அரசியலமைப்பும் குடியாட்சி இயல்பில் வளருவதற்குப் பெரிதும் உதவியவருமான சர் எட்வர்டு கோக்கு (Sir Edward Coke), இங்கிலாந்து நார்பக்கில் மைல்காமில் (Mileham)கி.பி. 1552-இல் பிறந்தார். இளமையில் நார்விச்சு இலக்கணப் பள்ளிக் கூடத்திலும், கேம்பிரிட்சு திரினிட்டி கல்லூரியிலும் பயின்ற பின்னர், இவர் சட்டக் கல்விபெறும் பொருட்டு ஒரு சட்டக் கல்லூரியில் (Inner Temple) சேர்ந்தார். இவர் அந்தக் கல்லூரியில் நன்கு சட்டம் பயின்று கி.பி. 1578-ஆம் ஆண்டில் வழக்கறிஞராகப் பணி செய்யத் தொடங்கினார். இவர் தொழிலில் சட்ட நுணுக்கங்களெல்லாம் அறிந்தவராக மதிக்கப்பட்

டார். சில முக்கியமான அவதூறு வழக்குகளில் இவர் பணி செய்தார். முதலாம் எலிசபெத்து அரசியாரின் முதலமைச்சர் வில்லியம் செசில் (பர்லே பிரபு) என்பவருடைய ஆதரவைப் பெற்று அரசாங்கப் பணியில் சேர்ந்தார். இவர் கி.பி. 1589-இல் ஆல்டிபர்க்குத் தொகுதியிலிருந்துபாராளுமன்றத்திற்குத்தேர்ந்தெடுக்கப்பட்டுச் சிறிய அரசாங்க வழக்குரைஞராகவும் ஆயினார். இலண்டனின் ஒரு சிறிய நீதி மன்றத்தின் நீதிபதியாகச் சிலகாலம் பணியாற்றியபின் பாராளுமன்றத்தின் கீழவையான பொதுமக்கள் மன்றத்தின் அவைத்தலைவராக கி.பி. 1593-இல் தேர்ந்தெடுக்கப் பட்டார். மன்றம் சில சமய நிலையக் கொள்கைகளை விவாதிக்க முயன்றபோது, அரசியாருடைய விருப்பப்படி, கோக்கு மன்றம் அவ்வாறு விவாதிக்காதபடி திறமையாகத் தடுத்தார். அரசாங்கப் பெரிய வழக்கறிஞர் பதவி (Advocate General) வெறுமையானபோது, அதற்குத் தகுதியானவரென்று பிரான்சிசு பேக்கனை (Francis Bacon) எசக்சு பிரபு ஆதரித்தபோதிலும், கி.பி. 1594-இல் அப்பதவியில் கோக்கே அமர்த்தப்பட்டார். கோக்கு தம் முதல் மனைவி பிரிட்சட் பாசுட்டன் இறந்தபோது, எலிசபெத் ஆட்டன் என்னும் பெண்ணை மணம் செய்து கொண்டார். அரசாங்க வழக்கறிஞராக இருக்கும் போது இவர் அரசரின் உரிமைகளையும், சிறப்பதிகாரங்களையும் பாதுகாத்துச் சட்டங்களை விளக்கினார். எசக்சு பிரபு, சௌதாம்ப்டன் பிரபு, சர் வால்ட்டர் ராலே முதலியோர் தொடர்புள்ள பல அவதூறு வழக்குகளையும், சதி வழக்குகளையும், வெடிமருந்துச் சூழ்ச்சியாளர் வழக்கையும் (Gun Powder Plot) அரசாங்கத்தின் சார்பாக இவர் நடத்தினார். இவர் இராலே மீதமைந்த வழக்கில் அவரை நடத்திய விதம் மிகவும் கொடியதாகும்.

**தலைமை நீதிபதியாகக் கோக்கு பணி செய்தலும், பதவியிலிருந்து விலக்கப்படுதலும்:** கோக்கு கி.பி. 1606-ஆம் ஆண்டில் பொது வழக்குகளின் நீதி மன்றத்தில் (Court of the Common Pleas) தலைமை நீதிபதியாக அமர்த்தப்பட்டார். இதிலிருந்து பல மோதல்கள் தோன்றி, இவருடைய நீதிபதி வாழ்க்கையை முடிவுக்குக் கொண்டு வந்தன. அரசர் முதலாம் சேம்சோடு கோக்குக்கு ஏற்பட்ட முதல் மோதலுக்குக் காரணம் கி.பி. 1607-08-ஆம் ஆண்டுகளில் தோன்றிய புல்லர் வழக்கு(Fuller's Case)ஆகும்.பேராயர்இரிச்சர்டுபான்கிராப்டு(Archbishop Richard Bancroft) என்பவர் அரசருடைய பொதுச் சட்ட நீதிமன்றங்களின் கட்டுப்பாட்டிலிருந்து, திருச்சபை நீதிமன்றங்களை விடுவிக்க முயன்ற போது புல்லரின் வழக்குத் தோன்றிற்று. இதில் ஏதேனும் ஒரு வழக்கு நீதி மன்றத்தின்முன் விசாரணையிலிருக்கும்போது அவ்வழக்கை அரசர் நீதி மன்றங்களிலிருந்து விலக்கித் திரும்பப் பெற்றுக் கொள்ளலாமா என்ற வாதத்துக்குரிய கேள்வி எழுந்தது. இதில் கோக்கு நாட்டின் பொதுச் சட்டமே தலைமையானதென்றும், எந்த வழக்கையும் அரசர் தாமே விசாரித்துத் தீர்ப்புக் கூறுதல் இயலாது என்றும் உறுதியாக உரைத்ததனால், அவர் அரசர் முதலாம் சேம்சின் பெருஞ் சீற்றத்துக்கு ஆளானார்.

முதலாம் சேம்சு அரசர் தமது ஆலோசனைக் குழுவின் முன்னர் ஆணைகளை விடுத்து அவற்றின் வழியாக வரி விதித்தல் முதலிய செயல்களைச் செய்தார். இவ்வாறு செய்தல் முறையன்று என்று கி.பி. 1610-இல் கூறிய கோக்கு, பொதுச் சட்டத்தின் எந்தப் பகுதியையும் மாற்றுதற்கு அரசரால் இயலாதென்றும், ஆணை விடுப்பதற்கு முன்னர்க் குற்றமாக இல்லாத எந்த ஒரு செயலையும் ஆணை விதித்துக் குற்றமாக ஆக்குதல் கூடாதென்றும் கருத்துத் தெரிவித்தார். இது இரண்டாம் மோதலைத் தோற்றுவித்தது.

அந்த ஆண்டிலேயே அரசருடைய விசேட நீதிமன்றமான (Prerogative Court) உயர் ஆணை நீதி மன்றமானது ஒழுக்கக் கேட்டிற்காக ஒருவரைச் சிறைபிடிக்க முயன்றபோது, அதனுடைய அந்த அதிகாரத்தைக் கோக்கு எதிர்த்தார். அரசர் இந்த நீதிமன்றத்தின் பதவியைக் கோக்கிற்கு வழங்க, கோக்கு அதை மறுத்தார்.

கோக்கு ஊழற் குற்றச் சாட்டு எதுவும் இல்லாதவராகையால் நன்கு மதிக்கப்பட்டார். இவருடைய நிலையும் உறுதியாக இருந்தது. அரசர் இவருக்குப் பதவி கொடுத்துத் தம் பக்கத்தில் சேர்த்துக் கொள்ளவும், அதன் வாயிலாகத் தம் அதிகாரங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும் முயன்றார். அரசர் பேக்கனின் ஆலோசனையின் பேரில் அரச நீதிமன்றத்தில் தலைமை நீதிபதிப் பதவியை கி.பி. 1613-இல் கோக்கிற்கு அளித்து, அவரை உயர் மன்ற (Privy Council) உறுப்பினராக ஆக்கினார்; அதனால், கோக்கு இங்கிலாந்தின் தலைமை நீதிபதிப் பிரபு (Lord Chief Justice of England) என அழைக்கப்பட்டார். அரச நீதிமன்றத்தில் இவர் தமது தலைமை நிலையைக் காத்து, பாராளுமன்றத்தைத் தவிர மற்றெல்லா நிறுவனங்களின் மீதும் ஆட்சிகளின் மீதும் பொதுச் சட்டமானது தலைமையான அதிகாரமுடையது என்று தொடர்ந்து அஞ்சாமல் கூறிவந்தார். பீச்சாம் வழக்கில் (Peacham's Case) அதனைப் பற்றிய கருத்துகளைத் தாம் அறிந்து கொள்ளும் பொருட்டுச் சேம்சு அரசர், அவ்வழக்கை விசாரித்த கோக்கு உள்ளிட்ட

எல்லா அரச நீதிமன்ற நீதிபதிகளையும் மொத்தமாக அழைத்துக் கருத்துக் கேட்க விரும்பினார். அவ்வாறு கேட்டால் கோக்கின் கருத்தையே மற்ற நீதிபதிகளும் சொல்லுவாராகையால், பேக்கனின் ஆலோசனையின் பேரில் நீதிப்திகளை ஒவ்வொருவராகவும், தனித்தனியாகவும் அரசர் அழைத்துக் கருத்துக் கேட்டார். அரசர் இவ்வாறு வழக்கை விசாரிக்கும் நீதிபதிகளை அழைத்துக் கருத்துக் கேட்டல் முறையன்று என்று கோக்கு எதிர்த்தார்.

கோக்கு சட்டத்துக்குப் புறம்பான செயல்களை எதிர்த்ததில் காட்டிய பேரார்வம் சில சமயங்களில் அவருக்கு இடர்ப்பாட்டைத் தோற்றுவித்தது. பொதுச் சட்ட நீதிமன்றத்தின் தீர்ப்பு ஒன்றை மாற்றிச் சான்சரி நீதிமன்ற நீதிபதி தீர்ப்பு வழங்கிய போது, கி.பி. 1615-இல் கோக்கின் அரச நீதிமன்றம் சான்சரி மன்ற நீதிபதியின் மீது குற்றம் சாட்டிற்று. ஆனால் அது வெற்றிபெறவில்லை. இதேபோல ஒரு வழக்கில் அரச நீதிமன்றத்தின்தீர்ப்புக்கெதிராக வழக்காளிகள் 'சான்சரி' நீதிமன்றத்தின் உதவியை நாடிய போது, அவர்களை அரசாங்கத்தையும் அரசரையும் எதிர்த்தோரைக் குற்றவாளிகளாக்கும் சட்டத்தின்படி தண்டிப்பதற்கு ஒரு முயற்சி சிலரால் செய்யப்பட்டது. இம்முயற்சி வெற்றி பெறவில்லை எனினும் இம்முயற்சியில் கோக்கிற்கும் தொடர்பு உண்டென்று பலர் எண்ணினர். சில செல்வாக்குள்ள பெரிய மனிதர்கள்தொடர்புடைய ஓவர்பரிக்கொலை வழக்கில், கோக்கு தாம் ஒரு நீதிபதி என்ற நிலையிலிருந்த போதும், அந்த வழக்கோடு தொடர்புடைய என்றி என்ற குழந்தை என்ன ஆயிற்று என்று தமக்குத் தெரியுமென்று வழக்கைப் பற்றிய சில செய்திகளைக் குறிப்பாகக் கொடுத்தார். இது நீதிபதி என்ற அவருடைய நிலையைப் பாதிப்பதாகும்.

அரசர் முதலாம் சேம்சுடன் அவருக்கு ஏற்பட்ட பெரிய மோதலே அவருடைய பதவி இழப்புக்குக் காரணமாயிற்று. ஒருவர் ஒரே சமயத்தில் பல திருச்சபைப் பதவிகளை ஏற்றிருக்கும் உரிமையை அரசர் முதலாம் சேம்சு வழங்கிய போது, இவ்வாறு வழங்கும் உரிமையை எதிர்த்து ஒரு வழக்கு கோக்கின் நீதிமன்றத்துக்கு வந்தது. இந்த வழக்கை விசாரணை செய்தல் பற்றி அரசருடைய கருத்தினை அறியும் வரை, நீதிமன்றத்தின் நீதிபதிகள் இவ்வழக்கை விசாரித்தல் கூடாதென்று நீதிபதிகளுக்கு ஓராணையை அரசர் விடுத்தார். கோக்கும் மற்ற நீதிபதிகளும் இந்த அரச ஆணையைப் புறக்கணித்தனர். எல்லா நீதிபதிகளும் அரசர் முன்பும் அவருடைய ஆலோசனை மன்றத்தின் முன்பும் வரவழைக்கப்பட்டு அரசாணைக்குக் கீழ்ப்படியுமாறு ஆணையிடப்பட்டனர்; மற்றெல்லா நீதிபதிகளும் கீழ்ப்படிய, கோக்கு உண்மையான, நியாயமான நீதிபதி என்ன செய்தல் வேண்டுமோ அதையே தாம் செய்வதாகக் கூறினார். ஆகையால், கி.பி. 1616-இல் உயர் ஆலோசனை மன்றம் கோக்கினுடைய பழைய எதிரியாகிய பேக்கனின் தூண்டுதலின் பேரில் கோக்கின் மீது மூன்று குற்றச்சாட்டுகளைக் கூறிற்று. முதலாம் குற்றச்சாட்டு இவருடைய பார்வைக்கு வந்த ஓர் ஒப்பந்தப்பத்திரத்தைப் பற்றியதாகும்; இந்தக் குற்றச்சாட்டு ஆதாரமற்றது. இது மெய்ப்பிக்கப்படவும் இல்லை. இரண்டாம் குற்றச்சாட்டு, இவர் சான்சரி நீதிமன்றத்தின் அதிகாரத்தில் தலையிட்டார் என்பதாகும்; மூன்றாம் குற்றச்சாட்டு, பல திருச்சபைப் பதவி என்ற கேள்வியில் இவர் அரசருக்குக் கீழ்ப்படியாமல் அவரை அவமதித்தார் என்பதாகும். இதனால் கோக்கு பல இடங்களுக்கும் போய் வழக்கு விசாரிக்கும் பணி செய்வதினின்றும் தடுக்கப்பட்டார். இந்தத் தவறுகளைத் திருத்துமாறு அவருக்கு ஆணை விடுக்கப்பட்டது. பின்னர் கி.பி. 1616-இல் இவர் பதவியிலிருந்து விலக்கப்பட்டார். ஆயினும், இவர் மீண்டும் உயர் மன்றத்திலும், விசேட அரச நீதிமன்றத்திலும் (Star Chamber Court) கி.பி. 1617-இல் பதவி ஏற்றார்.

இவர் கி.பி. 1620-இல் ஒரு கார்னிசுத் தொகுதியிலிருந்து பாராளுமன்றத்துக்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அரசருடைய எதேச்சாதிகாரச் செயல்களை எதிர்த்த கட்சியில் கோக்கு இருந்தார். இளவரசர் சார்லசுக்கு இசுபானிய இளவரசியைத் திருமணம் செய்ய அரசர் முன்வந்தபோது, கோக்கு இம் முயற்சியை எதிர்த்தார். பேக்கன் மீது கையூட்டுக் குற்றம் வந்தபோது இவர் அக்குற்றச்சாட்டை வரைந்தார். பாராளுமன்றத்தில் அரசருடைய எதேச்சாதிகாரத்துக்கும் பாராளுமன்றத்தின் உரிமைகளுக்குமிடையே முரண்பாடு எழுந்த போது, இவர் கி.பி. 1621-இல் பாராளுமன்ற உரிமைகளை ஆதரித்துப் பேசினார். அதனால், இவர் அரசருடைய சீற்றத்துக்காளாகி ஒன்பது மாதங்கள் சிறையிலடைக்கப்பட்டார். இவர் மீது குற்றம் சுமத்தப்படுவதற்கான சான்று எதுவும் இல்லை. எனவே, விடுதலை அடைந்தார். இவர் கி.பி. 1628-இல் உரிமைகள் விண்ணப்பம் (Bill of Rights) என்ற ஒன்றை வரைந்தார். அதைப் பாராளுமன்ற உறுப்பினர் பெரும்பாலானவரும் ஏற்றுக் கொண்டனர். இதுவே கி.பி. 1629-ஆம் ஆண்டின் உரிமை மனு (Petition of Right) என்ற பெயருடன் முதலாம் சார்லசு அரசரிடம் பாராளுமன்றத்தால் அளிக்கப்பட்டு, அரசரால் ஒப்புக் கொள்ளப்பட்டது. இங்கிலாந்தின் தாராளக் குடியாட்சி அரசியலமைப்

பின் வளர்ச்சிக்குகந்த நல்ல பல பணிகளை இவர் செய்த பின்னர், பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகி, தம் 82-ஆம் வயதில் காலமானார்.

**கோக்கின் பணிகளின் அரசியல் முக்கியத்துவம்:** கோக்கு கி.பி. 1610-இல் பொதுவழக்குகளின் நீதிமன்றத்தின் (Court of Common Pleas) தலைமை நீதிபதியாக இருந்தபோது போன்காம் வழக்கை விசாரித்தார். அப்போது இவர் இங்கிலாந்தில் பொதுச் சட்டமே தலைமை உடையது (Supremacy of the Common Law in England) என்ற கொள்கையை நிறுவினார். இவர் வழங்கிய தீர்ப்பில் ஆங்கிலப் பாராளுமன்றத்தின் விசேட அதிகாரங்களெல்லாம் (Prerogatives) முற்சான்றுகள் அல்லது முன் நிகழ்வுகளிலிருந்தே (Precedents) பெறப்படுகின்றன என்றும், அம்முதற்சான்றுகளே பாராளுமன்ற விசேட அதிகாரங்களுக்கெல்லாம் எல்லையாக அல்லது வரம்பாக அமைந்துள்ளன என்றும், ஆகையால் பாராளுமன்றம் தலைமையான அதிகாரமுடையது அன்று என்றும் சுட்டிக்காட்டினார். இவர் தம் தீர்ப்பில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

'பாராளுமன்றத்தின் ஒரு சட்டமானது பொது உரிமைக்கோ (Common Right), பகுத்தறிவுக்கோ (Reason) மாறாக இருக்குமானால், அல்லது செயற்படுத்தப்பட இயலாமல் இருக்குமானால் பொதுச் சட்டமானது, அந்தப் பாராளுமன்றச் சட்டத்தைக் கட்டுப்படுத்தி, அதனைச் செல்லுபடியாகாதது (Void) எனத் தீர்மானிக்கும்'.

இந்த வழக்கில் இவர் அளித்த தீர்ப்பின் அரசியல் முக்கியத்துவம் பொதுச் சட்டத்தின் தலைமை அதிகாரம் என்று இவர் வகுத்த கோட்பாட்டில் காணப்படுகிறது. பொதுச் சட்டத்தின் தலைமை என்ற இந்தக் கோட்பாட்டை, இவர் அரசர்செய்த சில செயல்களை விசாரிக்கும்போதும் கையாண்டார். இதனால், இவர் அரசருடைய எதேச்சாதிகார வளர்ச்சியைத் தடுத்தற்கும், குடியாட்சி இயல்போடு அரசியலமைப்பு வளருவதற்கும் பேருதவி புரிந்தவராக வரலாற்றாசிரியர்களால் மதிக்கப்படுகிறார்.

அரசர் தமது எதேச்சாதிகார முறையின் வாயிலாகச் சில வழக்குகளை நீதிமன்றங்களின் விசாரணையிலிருந்து நீக்குதற்கு முயன்ற போதும், அரசருடைய நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட வேண்டிய வழக்குகளை அது விசாரிக்க முற்பட்ட போதும், பாராளுமன்றத்தின் ஒப்புதலைப் பெறாமல் அரசர் தமது எதேச்சாதிகார விளம்பர ஆணைகளின் வாயிலாக வரிவிதிக்கவும், ஆட்சி செய்யவும் கி.பி. 1610-இல் முயன்ற போதும், அரசர் பீச்சாம் வழக்கில் நீதிபதிகளை ஒவ்வொருவராகவும் தனித்தனியாகவும் கண்டு ஆலோசனை செய்ய முயன்றபோதும், தாம் அரசரால் அமர்த்தப்பட்டு ஊதியம் வழங்கப்பட்டிருந்தாலும், அவருடைய சீற்றத்திற்கோ அவரால் பதவியிலிருந்து நீக்கப்படும் இடர்ப்பாட்டுக்கோ சிறிதும் அஞ்சாமல் ஒரு நீதிபதி சட்டத்துக்கே மதிப்புக் கொடுத்து, எவருடைய தூண்டுதலுக்கும் உட்படாமல், சிறிதும் காலந்தாழ்த்தாமல் தன் முன்வரும் வழக்கை விசாரித்தல் வேண்டும் என்ற கொள்கையை உறுதியாகக் கடைப்பிடித்து நிலைநாட்டினார். கோக்கு இவ்வாறு செய்ததனால்தான் 'நீதித்துறையின் சுதந்திரம்'(Independence of the Judiciary – அதாவது நிருவாகத்தின் தூண்டுதலுக்கு உட்படாமல் நீதி வழங்குவதற்கு நீதிமன்றத்துக்கு இருக்கும் சுதந்திரம்) என்ற கோட்பாடு இப்போது எல்லாத் தாராளக் குடியாட்சி நாடுகளிலும் (இங்கிலாந்து, அமெரிக்கா, இந்தியா) அரசியலமைப்புச் சட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளது; இங்கிலாந்தில் நீதிபதிகளை அமர்த்துவதற்குத்தான் நிருவாகத்துக்கு அதிகாரம் உண்டு. அவர்களைத் தன் விருப்பம்போல் பதவி நீக்கம் செய்ய நிருவாகத்துக்கு அதிகாரம் இல்லை. நீதிபதிக்குரிய ஊதிய விடுப்பு, பதவி உயர்வு முதலியன அவருடைய பதவிக் காலத்தில் மாறுதல் செய்யப்படுதலும் கூடாது. இவ்வாறு கி.பி. 1701-ஆம் ஆண்டின் ஆங்கில 'வாரிசு நிருணயச் சட்டம்' (Act of Settlement) கூறியது. இது கோக்கு வகுத்த கோட்பாட்டின் விளைவாகும்.

இசுடுவேர்ட்டு அரசர்களுக்கும் அவர்களுடைய பாராளுமன்றத்துக்கும் இடையே எவருடைய அதிகாரம் உயர்ந்தது? என்ற பொருளின்மீது தகராறு எழுந்தபோது, இவர் பாராளுமன்ற உரிமைகள் அரச அதிகாரத்தைவிட உயர்ந்தவை என்று பேசியும் எழுதியும் பணியாற்றினார். இதை நிலைநாட்டுதற்காக இவர் கி.பி. 1215-ஆம் ஆண்டின் மாபெரும் பட்டயத்தில் (Magna Carta) கூறப்பட்ட உரிமைகளையெல்லாம் முற்சான்றுகளாக (Precedents) எடுத்துக்காட்டி, (அ) பாராளுமன்றத்தின் ஒப்புதல் இல்லாமல் அரசர் வரி விதிப்பதோ எவரும் வரி செலுத்துவதோ சட்டத்துக்கு மாறானது என்றும், (ஆ) விசாரணையில்லாமல் எவரும் சிறைபிடிக்கப்படுதலும் அடைக்கப்படுதலும் சட்டத்துக்கு மாறானது என்றும், (இ) அமைதிக் காலத்தில் இராணுவச் சட்டத்தைச் செயற்படுத்துதல் சட்டத்துக்கு மாறானது என்றும், (ஈ) பாராளுமன்றத்தின் ஒப்புதலில்லாமல் நாட்டின் திருச்சபை அமைப்பு முறைகளில மாறுதல் ஏதேனும் செய்தல் சட்டத்துக்கு மாறானது என்றும் கூறி, உரிமை மனுவை கி.பி.1628-இல் வரைந்து பாராளுமன்றத்திடம் அளித்தார்.

இவ்வுரிமைகளெல்லாம் கி.பி. 1688–ஆம் ஆண்டில் அரசருக்கும் பாராளுமன்றத்துக்குமிடையேயிருந்த போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்த கி.பி. 1689–ஆம் ஆண்டின் உரிமைகள் மசோதாவில் (Bill of Rights) இடம் பெற்றன. மேலும், இவற்றை முன்னோடியாக வைத்தே அமெரிக்க, இந்திய மற்றும் பல நாடுகளின் அரசியலமைப்புச் சட்டங்கள் வரையப்பட்டன. இதனால், ஆங்கிலக் குடியாட்சி அரசியலமைப்பு முறை உருவாவதற்கு உதவிய அரசியற் சிந்தனையாளர்களுள் லோக்கும் சிறந்ததோர் இடத்தைப் பெறுகிறார். பா.சு.

துணை நூல்:

Sabine, G.H., A History of Political Theory, Oxford & I B H Publishing Co., Calcutta, 1961.

**எட்வர்டு சபீர்** மொழியியல் அறிஞர்களுள் தலைசிறந்தவர். மொழியியல், மானிடவியல், உளவியல் போன்றவற்றில் எட்வர்டு சபீருக்கு அறிவும் ஈடுபாடும் உண்டு. எனினும், இவர் மொழியியலில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். ஒருமொழி பேசுகிற தாய்மொழியாளர்களின் உச்சரிப்பினைப் பயன்படுத்தி எழுத்தில்லாத பழங்குடிமக்கள் மொழிகளுக்கு இலக்கணம் எழுதுகிற முறையில் இவர் பல சிறந்த வழிகளைக் கையாண்டார்.

சபீர் கி.பி. 1884–ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 26–ஆம் நாள் செருமனியில் இலயன்பர்கு (Lauenburg) என்னும் இடத்தில் பிறந்தார். இவர் தந்தையார் தொழிலின் பொருட்டுத் தம் ஐந்து வயதுக் குழந்தையுடன் அமெரிக்கா வந்து நியூயார்க்கு அடைந்தார். இவர் கொலம்பியாப் பல்கலைக் கழகத்தில் 'புலிட்சர்' உபகாரச் சம்பளம் பெற்று 1904–இல் இளங்கலைப் பட்டமும், பின்னர்ச் செருமன் மொழியில் முதுகலைப் பட்டமும் பெற்றார். அப்போதுதான் அமெரிக்க மொழியியலின் தோற்றத்துக்கும், அது அறிவியல் அடிப்படையில் அமைவதற்கும் மூலகாரணமாக இருந்த போயசு (Boas) என்னும் அறிஞரோடு தொடர்பு ஏற்பட்டது. சபீர் தாமும் மொழியியல் துறையில் ஈடுபட முடிவு செய்தார்.

சபீர் அமெரிக்க இந்தியர்களின் மொழி பற்றி ஆய்வுகள் செய்தார். சினூக்கு (Chinook), யானா (Yana), திலின்கிட்டு (Tlingit), நோட்கா (Nootka), சார்சே (Sarcee), இங்காலிக்கு (Ingalik), குட்சின் (Kutchin), கூபா (Hupa), நவாகு (Navahu), தென் பையூட்டு(Southern Paiute) போன்ற மொழிகளுக்குச் சிறந்த இலக்கணமும் அமைத்துள்ளார்.

இவர் 1907–இல் கலிபோர்னியாப் பல்கலைக் கழகத்தில் மானிடவியல் பேராசிரியராகப் பதவியேற்ற குரோபரோடு (A.L.Krober) தொடர்பு கொண்டார்.

மொழிக்கூற்றின் மாற்றம் பற்றியும், மொழிகளுக்குள் காணப்படுகிற இனத் தொடர்பு பற்றியும் ஆராய்ந்த சபீர் அமெரிக்க இந்திய மொழிகளை இன அடிப்படையில் வகைப்படுத்தினார். இது பற்றிய இவருடைய 'மத்திய மற்றும் வட அமெரிக்க மொழிகள்' (Central and North American Languages) என்ற கட்டுரை மிகச் சிறப்பானது.

ஒவ்வொரு மொழியிலும் சில ஒலி ஒழுங்கு அமைப்பு அமைந்து கிடக்கிறது என்பது இவர் கருத்தாகும். அக்காலம் ஒலியன் (Phoneme) தத்துவம் தெளிவாக இல்லாத காலம். அத் தத்துவத்தின் கரு இவருடைய ஒலி அமைப்பு (Sound Pattern) என்ற கட்டுரையிலும், மொழி (Language) என்ற நூலிலும் காணக் கிடக்கிறது.

ஒவ்வொரு மொழிக்கும் குறிப்பிட்ட ஓர் உரு உள்ளது என்பதும், அந்த உள்ளுருவில் அடங்கியிருக்கும் ஒழுங்குநிலையைக் காண்பதே மொழியியல் அறிஞனின் பணி என்பதும் இவர் கருத்து. அமைப்பு (Structure) அடிப்படையில் இவர் உலக மொழிகளை நான்கு இன்றியமையாப் பிரிவுகளாகப் பிரித்து, அவற்றையும் பல பிரிவுகளாகப் பிரித்தார். மொழிகளில் காணப்படும் பொதுத் தன்மைகளை வைத்துக்கொண்டு மொழிகளை வகைப்படுத்தும் வகையியல் (Typology) முறைக்கு இது துணை புரிந்தது.

இவர் 1925–இல் சிக்காகோப் பல்கலைக் கழகத்தில் மானிடவியல்-மொழியியல் பேராசிரியராகப் பணியேற்றார். இக்காலத்தில் இவர் சொற்பொருளியல் (Semantics), பண்பாடு (Culture), தனித்துவம் (Individuality) போன்ற பல துறைகளில் ஆய்வு செய்து பல கட்டுரைகள் எழுதினார். இவர் 1931–இல் ஏல் (Yale) பல்கலைக் கழகத்தில் இசுடர்லிங்குப் பேராசிரியர் (Sterling Professor) பதவியை ஏற்றார். அங்கும் இவர் மொழியியலுக்கும் பிற சமூக அறிவியல்களுக்குமிடையே உள்ள தொடர்பு பற்றி ஆராய்ந்தார்.

இருதய நோயால் பாதிக்கப்பட்ட இவர், 1939–ஆம் ஆண்டு பிப்பிரவரித் திங்கள் 4–ஆம் நாள் தம் 56–ஆம் வயதில் இயற்கை எய்தினார்.

மொழியியல் துறையில் சபீர் எழுதாத துறையே இல்லை எனலாம். விளக்கமுறை இலக்கணம் (Descriptive Grammar) மட்டுமன்றி வரலாற்று மொழியியல்

(Historical Linguistics) துறையிலும் பல சிறந்த கட்டுரைகள் எழுதியுள்ளார். மொழிக்கூற்று மாற்றம், அம் மாற்றம் என்னென்ன ஒழுங்குகளுடன் ஏற்படுகிறது, பிறமொழிகளுடன் கலந்து உறவாடும்போது மொழிகள் எவ்வாறு பிற மொழிகளின் செல்வாக்குக்கு உட்படுகின்றன, மொழிகள் பலவாறாகப் பிரிந்து கிளை, இனமொழிகளாக உருவாகும்போது ஏற்படும் மாற்றங்கள், அதன்பின் ஒவ்வொரு கிளை இன மொழியிலும் புதிதாகத் தோன்றுகிற மாற்றங்கள் போன்ற பல கூறுகள் பற்றியும் இவர் எழுதியுள்ளார். மேலும், இவருடைய 'மொழியியல் ஓர் அறிவியல்' என்ற கட்டுரையும், மொழியியலுக்கும் பிற அறிவியல்களுக்குமிடையே உள்ள தொடர்பு பற்றி எழுதிய கட்டுரைகளும் சிறப்பானவை. இவருடைய அறிவு பரந்துபட்டது. அமெரிக்க மொழியியலில் இவருடைய செல்வாக்கு மிக அதிகம். எம்.சு.

**எட்வர்டு பிட்செரால்டு (கி.பி.1809-1887):** அயர்லாந்தைச் சேர்ந்த இவர், மொழி பெயர்ப்பு நூல்களால் மிகுந்த செல்வாக்குப் பெற்ற கவிஞர் ஆவார். இவர் பரி (Bury), புனித எட்மண்சு (St. Edmunds) ஆகிய இடங்களிலும், திரித்துவக் கல்லூரியிலும் (Trinity College) பயின்றார். இவர் கார்லைல் தாக்கரே, தென்னிசன் ஆகிய ஆங்கிலப் படைப்பாளர்கட்கு நெருங்கிய நண்பராவார்.

பிட்செரால்டின் (Edward Fitzgerald) தலைசிறந்த படைப்பு, பாரசீக மொழியில் உமர்கயாம் இயற்றிய உருபாயத்து(Rubaiyat of Omar Khayyam) என்ற நூலை ஆங்கில மொழியில் பெயர்த்து வெளியிட்டதாகும். அது கி.பி. 1859-இல் வெளிவந்தது. 'உருபாயத்தின்' வாழ்வியற் கோட்பாடுகள் மக்களைக் கவரவல்லன; தேர்ந்த தொடர்கள், இனிய ஓசைநயம், ஒலிநயம் கொண்ட இந்நூல் ஆங்கிலப் பேரிலக்கிய வரிசையில் வைத்துப் புகழப்படுவதாகும். மனித இன்பநலக் கோட்பாட்டை வெளிப்படுத்துவது இந்நூல்.

இவர் கி.பி. 1851-இல் கல்வி முறைகள் பற்றிய உரையாடல் நூல் ஒன்றை வெளியிட்டார். பொலோனியசு (Polonius) என்ற தலைப்பில் பொன்மொழிகள் கொண்ட தொகுப்பு ஒன்றினை கி.பி. 1852-இல் வெளிட்டார்.

எசுகிலசு எழுதிய அகமெம்னன் (Agamemnon of Aeschylus), சோபாக்கிலீசு எழுதிய ஓடிபசு (Odipus of Sophocles) ஆகிய கிரேக்கிய அவல நாடகங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். கவிஞர் பார்னாடு பார்ட்டன் (Barnard Barton) பற்றிய வாழ்க்கை வரலாற்று நூல் ஒன்றும் எழுதியுள்ளார். இவர் சுவை மிக்க கடிதங்கள் எழுதுவதில் வல்லவர். இவர் சிறந்த கட்டுரையாளர்; உயர்தர மொழிபெயர்ப்பாளர்; தேர்ந்த கலைஞர். மூலநூல்களின் வேகமும் வீச்சும் கொண்டவை இவர்தம் மொழிபெயர்ப்புப் படைப்புகள் ஆம். பி.எஸ்.வே.

**எட்வர்டு புல்வர் லிட்டன் பிரபு (கி.பி. 1803 - 1873):** இவர் ஆங்கில எழுத்தாளராயும், சிறந்த அரசியல் அறிஞராயும் விளங்கியவர். கேம்பிரிட்சில் தங்கப் பதக்கம் பெற்றுத் தம் புலமையை நிலைநாட்டியவர். பல்துறைப்பட்ட எழுத்தாற்றல் மிகுந்தவராய் விளங்கிய இவர் புதினங்கள், நாடகங்கள், கவிதைகள், அங்கதக் கவிதைகள், கட்டுரைகள், ஏதென்சு நகர வரலாறு எனப் பல படைப்புகளை உருவாக்கினார். இவர் சிறந்த மேடைப் பேச்சாளராயும் விளங்கினார்.

எட்வர்டு புல்வர் லிட்டன் பிரபு (Lord Edword Bulwar Lytton) படைப்புகளில் பைரனின் பாதிப்பினையும் செல்வாக்கினையும் மிகுதியாகக் காணலாம். இவர் கி.பி. 1827-இல் கவிதைப் புதினமொன்றைப் பைரனின் நடையழகு தோன்ற எழுதி வெளியிட்டார். இவர்தம் புதினங்கள் புனைவியற் போக்குக் கொண்டவை. அவற்றில் வால்டர் இசுக்காட்டின் பாதிப்பினைப் பார்க்கலாம். இவர் வரலாற்றுப் பின்னணியில் புதினங்கள் பல படைத்தார். எல்லாப் படைப்புகளிலும் ஒருவகையான நாடகத் தன்மையைக் காணமுடிகிறது. பின்னாளில், இவர் மருமம் மிகுந்த, மீஇயற்கைப் புனைவுகளில் மிகுதியும் நாட்டம் செலுத்தினார். இவர்தம் ஆற்றலும், பல்துறைப் புலமையும் எழுத்துலகில் பெரிதும் பாராட்டற்குரியதாய் அமைந்தன. சிறந்த அறிவாளியாக இவர் பாராட்டப் பெற்றார். மக்கள் விரும்புவதைத் தரவல்ல நுண்ணிய பார்வை இவருக்கு இருந்தது.

இவர் எழுத்துத் தொழிலின் தொடக்க காலத்தில் கவிதைகளையே பெரும்பாலும் எழுதினார். இவர் நாடகங்களில் சிறந்த பாத்திரப் படைப்புகளை உருவாக்கினார் என்று சொல்ல முடியாது...

இவர் படைப்புகளுள் குறிப்பிடத்தக்கவை 'எதிர்கால இனம்' என்ற நூலும், 'பாம்பேயின் கடைசி நாட்கள்' என்ற புதினமும் ஆகும். 'எதிர்கால இனம்' என்ற நூலில் எதிர்காலச் சமூக மாற்றங்களையும்,திட்டமிட்ட அரசாங்கத்தையும் கற்பனை செய்து கண்டார்.

'பாம்பேயின் கடைசி நாட்கள்' என்ற புதினம் உரோமானியப் பேரரசின் சிறந்த மன்னனைப் பற்

றியதாகும். திட்டமிட்டுச் செய்திகளைத் திரட்டிக் கவனமாகப் படைக்கப்பெற்ற புதினம் இது. இவரின் அறிவாற்றலின் வெளிப்பாடு இப்புதினம். 'கடைசிப் பிரபுக்கள்' என்ற புதினம் இங்கிலாந்து நாட்டின் வரலாற்றுப் பின்புலத்தைக் கொண்டது. பி.எஸ்.வே.

**எட்வர்டு மன்னர்கள்**: எட்வர்டு, மூத்த: இவர் ஆங்கில அரசர் ஆல்பிரடின் (Alfred) மகன்; கி.பி. 901 முதல் 925 வரை இங்கிலாந்தில் ஆட்சி செலுத்தினார்; சிறந்த போர் வீரர். 'மேற்குச் சாக்சானிய மன்னர்' என்று தம்மை அழைத்துக் கொள்வதற்குப் பதிலாக, 'ஆங்கில மன்னர்' என்று கூறிக் கொண்டார். இத்தகைய பெயர் மாற்றம் இவரது சாதனையின் மேன்மையை விளக்குகிறது. இவர்தம் தந்தையின் காலத்தில் தேனியர்களுக்கு (Danesh) ஆங்கிலேயர் விட்டுக் கொடுத்திருந்த நிலப் பகுதிகளை மீண்டும் தம் வசப்படுத்த முயற்சி மேற்கொண்டார். மூத்த எட்வர்டைப் (Edward, the Elder) போன்றே இவர்தம் சகோதரியும் போர்ச்செயல்களில் மிக்க ஈடுபாடு கொண்டிருந்தார். 'மெர்சியர்களுடைய தலைவி' (Lady of the Mercians) என்ற பெயரில் எட்வர்டின் பதிலாளாக மெர்சியாவை ஆண்டு வந்தார். இவருடைய உதவி எட்வர்டின் வெற்றிக்குத் துணையாக இருந்தது. மேலும், ஆல்பிரடு காலத்தில் தொடங்கப்பட்ட எல்லைக்கோட்டைகளைக் கட்டும் பணியினை எட்வர்டு நிறைவு செய்து வைத்தார். அதன்பின்னர், ஊசு (Ouse) ஆற்றங்கரையில் இருந்த தேனிய நகரங்களைத் தாக்கி, அவற்றை ஒன்றன்பின் ஒன்றாகக் கைப்பற்றினார். அதே நேரத்தில் அவர் சகோதரி திரெண்டுப் (Trent) பள்ளத்தாக்கில் இருந்த ஐந்து தேனிய உட்பகுதிகளை நோக்கிப் படைநடத்தி, தார்பி (Tarbi), இலீசுட்டர் (Lester) ஆகிய நகரங்களைக் கைப்பற்றினார். இவர் கி.பி. 925-இல் வட பகுதியில் தம் இறுதிப் படையெடுப்பை நடத்தினார். அப்போது வடக்குப் பகுதியில் ஆண்டுவந்த நார்த்தம்பிரியாவைத் தேனியர்கள், சுடராத்துக் கிளைடில் (Stroth Clyde) ஆட்சி செய்து வந்த பிரித்தானியர் (Britons), பெர்னிசியாவை (Bernicia) ஆண்டு வந்த ஆங்கிலேயர்கள் (Angles) ஆகியோருடைய தூதுவர்கள் இவரைச் சந்தித்து இவருடைய மேலாண்மையைத் தம் ஆட்சியாளர்கள் ஏற்றுக்கொண்டதை அறிவித்தனர். இசுகாட்லாந்து அரசரான கான்சுடண்டைனும் (Constantine) இவருடன் உடன்படிக்கையொன்றைச் செய்து கொண்டார்.

**எட்வர்டு, தியாகி**: இவர் இங்கிலாந்தில் கி.பி. 975 முதல் 978 வரை அரசாண்டார்; எட்கார் மன்னர்தம் மகன். ஒருநாள் தம் சிற்றன்னையின் கோட்டைவழியாகப் போகும்போது, கோட்டைவாயிலில் நின்று ஒரு கோப்பை மதுவைக் கேட்டார். தம் மகன் எதெல்ரெடு (Ethelread) அரசுரிமையைப் பெற வேண்டும் என்ற எண்ணத்தினால் எட்வர்டுக்கு அவள் தாமே மதுவைக் கொண்டு வந்து கொடுத்து விட்டு, மது அருந்தும் நேரம் பார்த்துத் தம் ஆட்களைக் கொண்டு அவரைக் கொல்லுவித்தாள். இச்செயல் சாக்சானிய அரசக்குலத்தின் வீழ்ச்சிக்கு அடிகோலியது.

**எட்வர்டு, பக்தசீலர்**: இவர் கி.பி. 1042 முதல் 1066 வரை இங்கிலாந்தை ஆண்ட மன்னர். இவர் தம் தந்தை இங்கிலாந்தின் மன்னரான இரண்டாம் எதெல்ரெடு ஆவார். இவர் தாயார் எம்மா (Emma) நார்மண்டியைச் சார்ந்தவர். இவர் தம் 35-ஆம் வயதில் அரசப்பொறுப்பை ஏற்றார். இவரை ஆங்கிலேயர் என்பதை விட நார்மானியர் என்று கூறுவதே பொருத்தமாகும். தம் வாழ்நாளில் 25 ஆண்டுகள் நார்மண்டியில் தொடர்ந்து வாழ்ந்தார். நார்மானியப் பழக்கவழக்கங்களை இவர் கடைப்பிடித்து வந்தார். நார்மானிய மொழியில் நன்கு பேச வல்லவர். இவர்தம் நண்பர்கள் அனைவரும் நார்மானியர்களே. இங்கிலாந்திற்கு இவரைப் பற்றித் தெரியாது. இவர் இங்கிலாந்தின் அரசியல் வல்லுநர்களைப் பற்றியோ ஆங்கிலேயரின் பழக்க வழக்கங்கள் பற்றியோ அறியாதவர். சமயக்குருமார்களுக்குப் பல சலுகைகளை அளித்தார்.

இவர் அரசப் பொறுப்பேற்றதும் தம் நார்மானிய நண்பர்களுக்கு உயர்பதவிகளை அளித்தார். இராபர்ட்டு என்பவரை இலண்டன் சமய வட்டத் தலைவராகவும், பின்னர்க்காண்டர்பரித் தலைமைச்சமய குருவாகவும் (Archbishop of Canterbury), மற்றொருவரை எரிபோர்டுப் (Haryboard) பிரபுவாகவும் நியமித்தார். இத்தகைய செயல்கள் ஆங்கிலேயர்களிடையே மனக்கசப்பை வளர்த்தன. அதன் விளைவாக, நாட்டில் இரண்டு கட்சிகள் தோன்றின. அவற்றுள் ஒன்று மன்னரின் நண்பர்கள் கட்சி. நார்மானியர்களும் அவர்கள்தம் ஆதரவாளர்களும் அதில் சேர்ந்திருந்தனர். மற்றொன்று சாக்சானியக் கட்சி. அதன் தலைவர் காட்வின் (Godwin) என்பவர். காட்வின்மீது பழைய பகைமை எட்வர்டுக்கு உண்டு. இவர் பட்டம் எய்துவதற்குமுன், எட்வர்டின் அண்ணன் ஆல்பிரடு இங்கிலாந்திற்கு வந்து ஏர்புட்டு (Harefoot) என்பவரிடமிருந்து அரசுரிமையைக் கைப்பற்ற முனைந்தார். அப்போது அவரை எதிர்க்கக் காட்வின் அனுப்பப்பட்டார். ஏர்புட்டின் அதிகாரி என்ற முறையில் அவருடைய கட்டளையின்படி ஆல்பிரடைக் காட்வின் கைதுசெய்தார். அவர் ஆல்பிரடைச் சந்தித்து அவர்

பக்கம் சேருவது போல் நடித்து, ஆல்பிரடும் அவர் தம் ஆதரவாளர்களும் தூங்கும்போது அவர்களைக் கைது செய்தார். கைது செய்யப்பட்ட ஆல்பிரடு கொடூரமாகக் கொல்லப்படடார். இத்தகைய கொடிய செயலுக்கு உடந்தையாக இருந்த காட்வினை மன்னிக்க எட்வர்டு விரும்பவில்லை.

முதலில் காட்வினுடைய நிலை மிகவும் வலிமை பெற்றதாகக் காணப்பட்டது. அவர் வெசக்சுக்குப் (Wessex) பிரபுவாக இருந்தார். அவர்தம் மூத்த மகன் விக்காசின் (Hwiccas) பிரபுவாக இருந்தார். இரண்டாம் மகன் கிழக்கு ஆங்கிலியாவின் பிரபுவாக இருந்தார். அவர்தம் மகள் எடித்து (Edith) எட்வர்டின் மனைவியாவார். வேறெவரும் அவருடைய குடும்பத்தின் வலிமைக்கு நிகராக இல்லை. ஆனால், நாளடைவில் அவருடைய பலம் குறையலாயிற்று. காட்வினின் மூத்தமகன் கன்னி மாடத் தலைவியிடம் காதல் கொண்டதற்காகத் தம் பதவியை இழந்தார். அவரிடம் பொறாமை கொண்ட ஏனைய ஆங்கிலப் பிரபுக்கள் அரசருக்கு ஆதரவளித்தார்கள். காட்வினும் அவர்தம் பிள்ளைகளும் நாட்டை விட்டு ஓடினர். அதன்பின்னர், நார்மானியச் செல்வாக்கு மேலும் பெருகியது. அதன் விளைவாக மீண்டும் மன்னருக்கு எதிர்ப்பு ஏற்பட்டது. காட்வின் பிள்ளைகள் இதனைப் பயன்படுத்திக்கொண்டு இங்கிலாந்து திரும்பினார்கள். சில பிரபுக்கள் இவர்களுக்கு ஆதரவளித்தனர். மீண்டும் நாட்டில் கட்சிப் பூசல் தோன்றியது. நிலைமை மோசமாகவே காட்வினை எட்வர்டு மன்னித்து விட நேர்ந்தது. காட்வினுடைய மறைவிற்குப் பின்னர் எரால்டு எதிர்ப்பியக்கத் தலைவரானார். காட்வின் பெற்றிருந்த திறமை இவரிடமில்லை. எனவே இவருக்குப் பகைவர்கள் அதிகமானார்கள். அரசர் கை ஓங்க அது ஒரு காரணமாகும். எட்வர்டு கி.பி. 1066-ஆம் ஆண்டு சனவரி மாதம் 5-ஆம் நாள் காலமானார். இவர் மென்மையான உள்ளம் படைத்தவர்; சமயப்பற்று மிக்கவர். இங்கிலாந்துத் திருச்சபையைத் திருத்தி அமைக்க விரும்பினார். ஆங்கில மக்களின் முக்கிய வழிபாட்டு இல்லமாகக் கருதப்படும் வெசுட்டு மினிசுட்டர்க்(West minister) கோயிலைக் கட்டியவர் இவரேயாவாரர்.

எட்வர்டு, முதலாம்: இவர் கி.பி. 1272 முதல் கி.பி. 1307 வரை இங்கிலாந்தை ஆண்டார். இவர் தந்தையின் பெயர் மூன்றாம் என்றி (Henry III). இவர் தம் 33-ஆம் வயதில் மன்னரானார். இவர் கலப்பற்ற ஓர் ஆங்கிலேயர்; சிறந்த போர்வீரர்; சில சமயங்களில் கடுமையாகவும். கொடுமையாகவும் நடந்து கொண்டார்; ஆயினும், தாம் கொடுத்த வாக்கை இறுதி வரை காக்கும் தன்மை பெற்றவர்; தம் உரிமைகளை விட்டுக் கொடுக்காதவர்; நாட்டில் அமைதியைக் காக்கவும் ஒழுங்கை நிலைநாட்டவும் முற்பட்டவர். வழக்கறிஞர் மனங் கொண்டவர்; இங்கிலாந்தின் சட்டமுறையின் தன்மையை நிருணயித்தவர். இவர் நாட்டு மக்களைத் தம்மோடு அணைத்துக் கொண்டு ஆட்சி நடத்த வேண்டும் என்ற எண்ணம் கொண்டிருந்தார்.

இங்கிலாந்தில் பாராளுமன்றத்தை அமைத்தது இவருடைய சாதனைகளுள் ஒன்றாகும். நாட்டின் அனைத்து மக்களின் கருத்துகளையும் அறியும் பொருட்டு, இவர் கி.பி. 1276-இல் சமய வட்டத் தலைவர்கள், மடாதிபதிகள், பிரபுக்கள், பெருந்தகைகள் (Knights) அடங்கிய ஒரு முழுமையான பாராளுமன்றத்தைக் கூட்டினார். அதற்குப் பின்னர்ச் சில நேரங்களில் பிரபுக்களையோ பெருந்தகைகளையோ மட்டும் அழைத்தார். இவர் கி.பி. 1295-ஆம் ஆண்டில் கூட்டியதே புகழ்மிக்க மாதிரிப் பாராளுமன்றம் ஆகும். நாட்டிலிருந்து பிரபுக்கள், சமய வட்டத் தலைவர்கள் உள்ளிட்ட எல்லாவகை மக்களும் ஒரே நேரத்தில் கூடினார்கள். பாரளுமன்றத்தில் பேராளர் அமைவு எவ்வாறு இருக்கவேண்டும் என்பதற்கு இப் பாராளுமன்றம் தனிப்பட்ட ஒரு முன் மாதிரியாகத் திகழ்ந்தது. பாராளுமன்றம் வகுப்புகளின் சபையாக அன்றித்தேசிய சபையாகச் செயற்படுவதற்கு இது வழிகாட்டியது.

பாராளுமன்றத்தைக் கொண்டு பணம் பெறுவதே இவர் நோக்கமாகும். யார்யாரிடமிருந்து பணம் பெற நினைத்தாரோ அவர்களை மட்டுமே பாராளுமன்றத்திற்கு அழைத்தார். இவருக்கு கி.பி. 1295-இல் நிறையப் பணம் தேவைப்பட்டது. ஆகவே, அதை எல்லா வகுப்பினரிடமிருந்தும் பெற வேண்டிய நிலை ஏற்பட்டது. எனவே, நாட்டிலிருந்த எல்லா வகை வகுப்பினர்களின் பேராளர்களையும் பாராளுமன்றத்திற்கு அழைத்தார். இவர் கி.பி. 1295க்குப் பின்னர்க் கூட்டிய பாராளுமன்றங்கள் அனைத்திலும் எல்லா வகுப்புப் பேராளர்களும் இடம் பெறவில்லை என்பதை அறியும்போது மேற்கூறிய கருத்தின் உண்மை புலப்படும். இப்பாராளுமன்றத்துக்குச் சட்டமியற்றும் அதிகாரம் வழங்கப்படவில்லை. அதைக் கூட்டும் அதிகாரம் அரசருக்கே உண்டு. ஒரு குறிப்பிட்ட கால வரையறைக்குள் அதைக் கூட்டவேண்டும் என்பதும் இல்லை. எல்லா உறுப்பினர்களும் ஒரே இடத்தில் கூடினார்கள். மேல் சபை, கீழ்ச்சபை என்ற பாகுபாடு அப்போது தோன்றவில்லை.

பொதுமக்கள் பேராளத்தன்மையை விரும்பவில்லை. அதில் கலந்து கொள்ள இலண்டனுக்குச்

செல்லும் செலவுச் சுமை உறுப்பினர் பதவியைச் சாதாரண மக்கள் வெறுக்கும்படி செய்தது. எனவே, இவர் காலத்தில் பாராளுமன்றம் ஒரு கருவியாக இருந்ததேயொழியத் தானே செயற்படக்கூடிய ஒரு சக்தியாக விளங்கவில்லை. எனினும், இவர் காலத்தில்தான் அது தேசிய சபையாக உருமாறத் தொடங்கியது. அதற்கிருந்த பணம் வழங்கும் அதிகாரம் மேலும் வலுப்படுத்தப்பெற்றது. அதனுடைய வற்புறுத்தலின்பேரில் மகாசாசனத்தை கி.பி. 1297-இல் அரசர் மீண்டும் புதுப்பித்தார். அப்போது நாட்டு மக்களின் ஒப்புதலின்றிக் கட்டணங்களை வசூலிப்பதில்லை என்றும், ஆட்டு மயிர் மீது விதிக்கப்பட்ட நியாயமற்ற வரியை வசூலிப்பதில்லை என்றும் வாக்குறுதி வழங்கினார். இத்தகையதொரு நிதி பற்றிய அதிகாரம் பெற்ற காரணத்தால் வேறு அதிகாரங்களையும் பெறுதற்கு வாய்ப்பு ஏற்பட்டது.

ஆங்கிலப் பாராளுமன்றத்தை உருவாக்கிய எட்வர்டு ஆங்கிலச் சட்டத்தையும் உருவாக்கினார். எனவே, இவரை ஆங்கில 'சசுதினியன்'(Justinian) என்று அழைக்கிறார்கள். இவர் காலத்தில் இயற்றப்பட்ட சட்டங்கள் இன்றும் நல்ல சட்டங்களாகக் கருதப்படுகின்றன. அவை இவருடைய ஆலோசனைச் சபையின் வாயிலாக வெளிப்படுத்தப்பட்டவையே அன்றி, உண்மையான பாரளுமன்றச் சட்டங்கள் அல்ல. அச்சட்டங்களை இயற்றியதன் நோக்கம் பிரபுக்கள், திருச்சபை ஆகியவற்றின் அதிகாரங்களைக் குறைத்து, அரசருடைய அதிகாரத்தைப் பெருக்குவதேயாகும்.

இவருடைய சட்டங்களுள் சிலவற்றை இங்குக் குறிப்பிடுதல் இன்றியமையாதது. கி.பி. 1285-ஆம் ஆண்டு வின்செஸ்டர் சட்டம் நாட்டின் காவல் முறையை ஒழுங்குபடுத்தியது; காவல் துறையினரின் பணிகளை வரையறுத்தது; ஒவ்வொரு வட்டத்திலும் அமைதிப் பாதுகாவலர்களை (Conservators of Peace) நியமிக்க வழி வகுத்தது. நில உடைமை முறையைப் பல சட்டங்கள் வரையறுத்தன. இரண்டாவது வெசுட்டு மினிசுட்டர் சட்டத்தின் வாயிலாக எட்வர்டின் மூத்த மகனுக்கு நில உடைமை உரிமை அளிக்கும் முறை எளிதாக்கப்பட்டது. அதன்விளைவாக, இளைய புதல்வர்கள் வேறு வகுப்புகளில் கலந்துவிட்டனர். அதன் பயனாக, வளைந்து கொடுக்காத சமுதாய வகுப்புகள் தோன்றுவது தடை செய்யப்பட்டது. ஆங்கிலச் சமுதாயத்தின் நலமிக்க இச்சிறப்புக்கூறு வளருதற்கு இச்சட்டம் உதவியது. மூன்றாவது வெசுட்டு மினிசுட்டர் சட்டம் நில விற்பனையை ஒழுங்குபடுத்தியது. கிளசெசுட்டர் (Gloucestor) சட்டத்தின் வாயிலாகப்பிரபுக்கள் அனுபவித்து வந்த நீதி வழங்கும் உரிமை குறைக்கப்பட்டது. அரச நீதிமன்றங்களின் அதிகார எல்லை விரிவாக்கப்பட்டது. மூன்று அரச நீதி மன்றங்கள் அப்போது செயற்பட்டு வந்தன. அவை அரசருடைய மன்றம், கருவூல நீதிமன்றம், பொதுவழக்கு நீதிமன்றம். அவற்றில் பயிற்சி பெற்ற வழக்கறிஞர்கள் பணியாற்றி வந்தனர். கி.பி. 1307-ஆம் ஆண்டிற்குப் பின்னர், திருச்சபைப் பணியில் சேராதவர்களாக வழக்கறிஞர்கள் இருந்தனர். ஏனெனில், உரிமையியல் சட்டத்தைக் கையாளக் கூடாதெனத் திருச்சபை ஊழியர்களுக்கு ஆணையிடப்பட்டிருந்தது. இப்புது வகைத் தொழிலுக்குப் பயிற்சி அளிக்க எட்வர்டு மாணவ விடுதிகளைத் (Inns of Court) தொடங்கினார். மார்ட்மெயின் (Mortmain) சட்டத்தின்படி, அரசர் அனுமதியின்றி நிலங்களைத் திருச்சபைக்குத் தானமாக அளிப்பது தடைசெய்யப்பட்டது. நான்கில் ஒரு பங்கு நிலம் திருச்சபையிடம் இருந்தது. திருச்சபை சாவா வரம் பெற்றிருந்தமையால், நிலஉரிமை கைமாறும்போது செலுத்தப்படவேண்டிய கட்டணங்கள் அரசருக்குக் கிடைக்கவில்லை. இக்கட்டணங்களைத் தவிர்க்கச் சிலர் தம் நிலத்தைத் திருச்சபைக்குக் கொடுத்து விட்டுப் பின்னர், அதன் கைகளிலிருந்து அதை மானியமாகப் பெறுவர். மார்ட்மெயின் சட்டம் இந்தக் கைமாற்றுதலைத் தடுத்தது. மிகுந்த வட்டிக்குக் கடன் வழங்கி வந்த யூதர்கள் வெளியேற்றப்பட்டனர். இங்கிலாந்தின் வாணிகப் பெருக்கத்திற்கும் இவர் அரும்பணி ஆற்றி உள்ளார்.

எல்லா ஆங்கில இனத்தவர்களையும் ஒன்று சேர்த்து ஒரு தேசிய ஆங்கில அரசை ஏற்படுத்துவதற்கு எட்வர்டுதான் முதல் முயற்சி மேற்கொண்டார். முதலில் வெல்சு (Welsh) மக்களுடன் போரிட்டு அதை வென்றார். தம் மூத்த மகனுக்கு வேல்சு இளவரசர் என்ற பட்டத்தைச் சூட்டினார். இன்றும் இங்கிலாந்து பட்டத்திற்குரியர் வேல்சு இளவரசர் என்று அழைக்கப்பட்டு வருவதிலிருந்து, இவருடைய பணியின் சிறப்பை அறியலாம். வேல்சு கி.பி. 1284-இல் இங்கிலாந்துடன் சட்ட முறையில் இணைக்கப்பட்டது. மற்றொரு பிரிவான இசுகாட்லாந்து (Scotland) தனி அரசாக அப்போது இருந்து வந்தது. அதுவும் இங்கிலாந்திடம் சட்ட முறையில் இணைக்கப்பட்டது.

**இரண்டாம் எட்வர்டு:** இவர் முதலாம் எட்வர்டின் மகன். இவர் கி.பி. 1307-இல் இங்கிலாந்து அரசரானார். பியர்சு காவெசுட்டன் (Piers Gaveston) என்பவர் இவரிடம் மிக்க செல்வாக்குப் பெற்றிருந்தார். நாட்டுப் பணிகளில் சிறிதளவுகூட எட்வர்டு அக்கறை காட்டவில்லை. இசுகாட்லாந்தில் நடை

பெற்ற போரில் இங்கிலாந்து தோல்வி கண்டது. இவை யாவும் சேர்ந்து இவருக்கு எதிராக ஒரு கிளர்ச்சியைத் தோற்றுவித்தன. கிளர்ச்சியில் ஈடு பட்டிருந்த பிரபுக்கள் பாராளுமன்றத்தைக் கூட்டி ஆக்சுபோர்டு ஏற்பாடுகளைத் (Provisions of Oxford) தயாரித்தனர். அதன்படி, ஆட்சிப் பொறுப்பு 21 பிரபுக்கள் கொண்ட குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது. காவசுட்டன் கொல்லப்பட்ட பின்னர், பிரபுக் களிடையே பிளவு ஏற்பட்டது. அதைப் பயன்படுத்திக் கொண்டு, இவரும் இவரை ஆதரித்த பிரபுக்களும் செல்வாக்கு எய்தினர். முழு அளவிலான பாராளு மன்றம் கி.பி. 1322-இல் கூட்டப்பட்டது. பிரபுக்கள் குழு கொண்டு வந்த அவசரச் சட்டங்கள் முழு அளவிலான பாராளுமன்றத்தில் நிறைவேற்றப் படாமையால், அவை சட்ட முறையற்றவை என்று இப்பாராளுமன்றம் கூறியது. ஆங்கில அரசியலைப்பு வரலாற்றில் இம்முடிவு சிறப்பானதோர் இடத்தைப் பெற்றுள்ளது. சட்டங்கள் முழு அளவிலான பாராளு மன்றத்தில் நிறைவேற்றப்பட்டாலன்றி அவை செல்லுபடியாகா என்ற கொள்கை நிலைநாட்டப் பட்டது. பாராளுமன்றத்தின் அதிகாரத்தை உறுதிப் படுத்தும் ஒரு முக்கியமான நிகழ்ச்சியாக இது அமைந்துவிட்டது. பிரபுக்களுடைய ஆட்சி அமைய இது பெருந்தடையாக விளங்கியது. கி.பி. 1326-இல் எட்வர்டின் மனைவியும் நாடுகடத்தப்பட்ட மார்டிமர் பிரபுவும் இணைந்து அரசருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தனர். பல பிரபுக்கள் அவர்களுடன் சேர்ந்து கொண்டனர். பாராளுமன்றம் அரசுரிமையை எட் வர்டின் மகனுக்கு அளித்தது. எட்வர்டு சிறைப்பட் டார்; பின்னர் கி.பி. 1327-இல் கொலையுண்டார்.

**மூன்றாம் எட்வர்டு:** இவர் இங்கிலாந்து நாட்டை கி.பி. 1327 முதல் கி.பி. 1377 வரை ஆண் டார். இவர் தம் 15-ஆம் வயதில் பட்டம் எய்தினார். இவர் போர்புரிவதில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந் தார். ஆகவே, இவருக்கு அதிகமான பணம் தேவைப் பட்டது. அப்பணத்தைப் பெறப் பாராளுமன்றத்தை அடிக்கடி கூட்டினார். அந்த வாய்ப்பைப் பயன்படுத் திக் கொண்டு, பாராளுமன்றம் பல சலுகைகளைப் பெற்றது. வாணிக மூலமாக அதிகப் பணம் கிடைக் கும் என்பதால், இவர் கடல்கடந்த வாணிகத்தைப் பெருக்குவதில் அதிக அக்கறை காட்டினார். பாராளு மன்றத்தின் நிலை உயர்தல், வாணிகப் பெருக்கம் ஆகிய இரண்டும் இவரது ஆட்சியின் சிறப்புகளாகும். அச் சிறப்புகளுக்குக் காரணம் இவருடைய குண நலன்களோ பணியோ அன்று. இவருடைய பணத் தேவையேயாகும்.

இவருடைய காலத்தில்தான் பாராளுமன்றம் பிரபுக்கள் சபை, பொதுமக்கள் சபை என இரு பிரிவுகளாகப் பிரிந்து செயற்படத் தொடங்கியது. பாராளுமன்றத்தின் அதிகாரங்கள் மேலும் பெருகின. அதன் அனுமதியின்றி வரி விதிக்கக் கூடாது என்ற கருத்து நிலைநாட்டப்பட்டது. அது வழங்கும் வரிப் பணத்தைக் குறிப்பிட்ட செயல்களுக்கு ஒதுக்கி வைக் கவும் பொதுக் கணக்குகளைத் தணிக்கை செய்யவும் பொதுமக்கள் சபை அதிகாரம் பெற்றது. இருசபை களின் அனுமதி பெற்றுச் சட்டமியற்றவேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது. பாராளுமன்றம் கூடும் போது அரசர்முன் அது வைத்த விண்ணப்பங்களின் அடிப்படையில் சட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. அதுவே பிற்காலத்தில் பொதுமக்கள் சபைதான் சட்டங்களை இயற்றும் அதிகாரம் பெற்றது என்ற கருத்து வளரக் காரணமாயிற்று. நிருவாகத்தில் காணக் கிடக்கும் குறைபாடுகளைப் பற்றி ஆராய்ந்து, அவற்றை நீக்கப் பாராளுமன்றம் அதிகாரம் பெறத் தொடங்கியது. தவறு செய்யும் அமைச்சர்களைப் பொதுமக்கள் சபை விசாரணைக்குக்கொண்டு வர வாய்ப்பு ஏற்பட்டது.

மூன்றாம் எட்வர்டு காலத்தில் பிரான்சுடன் இங்கிலாந்து போரிட்டது. இதனை நூற்றாண்டுப் போர் என்பர். இதற்கு முக்கிய காரணம் பிரெஞ்சு அரசுரிமையை எட்வர்டு கொண்டாடியதே. முதலில் பெரும் வெற்றி அடைந்தனர். எட்வர்டின் மகனான 'கறுப்பு இளவரசர், வீரத்துடன் போர் புரிந்தார். இங்கிலாந்து கி.பி. 1360-இல் ஏற்பட்ட உடன்படிக் கையின்படி அக்விடைன், கலே ஆகிய இடங்களைப் பெற்றது. போர் கி.பி. 1369-இல் மீண்டும் தொடங்கி யது. கறுப்பு இளவரசர் இலிமோசசைக் கைப் பற்றி அங்கிருந்த மக்களைக் கொன்று குவித்தார். ஆனால், இலா இரேசேல் (La Rochaulle) போரில் ஆங்கிலேயப் படை தோற்றது; கி.பி. 1375-இல் சமா தானம் செய்து கொள்ளப்பட்டது. கலே, போர்டோ, பேயோன் ஆகியவை நீங்கலாக ஏனைய இடங்கள் அனைத்தையும் இங்கிலாந்து இழந்தது.

இவர் காலத்தில் சான்விக்லிபு (John Wycliffe) என்பவர் ஏழைப்பாதிரி (Low Lord) இயக்கத்தைத் தோற்றுவித்தார். இதன் நோக்கம் திருச்சபையில் மலிந்திருந்த ஊழலை நீக்குவதாகும். அவர் தம் கருத்துகளை ஆங்கிலமொழியில் வெளியிட்டார். வேத நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். ஆகவே, விக்லிப்பைச் சமய சீர்திருத்த இயக்கத்தின் விடிவெள்ளி என்பர்.

இவர் காலத்தில் கருங்கொள்ளை நோய் (Black Death) பரவி, மூன்றில் ஒரு பங்கு மக்கள் உயிர்

இழந்தனர். எனவே வேலைக்கு ஆள் கிடைப்பது கடினமாயிற்று; உணவுப் பஞ்சம் ஏற்பட்டது; தானிய விலையும் கூலியும் ஏறின. நிலக்கிழார்கள் பெருத்த இழப்புக்குள்ளாயினர். அவர்களுடைய தூண்டுதலால் பாராளுமன்றம் தொழிலாளர் சட்டங்களை இயற்றியது. ஆனால் அவை எதிர்பார்த்த பலனை அளிக்கவில்லை. ஆகவே அச்சட்டங்களுக்குக் கீழ்ப்படிய மறுத்த பண்ணையாட்கள் விலங்குகள் போன்று நடத்தப்பட்டனர்.

இவருடைய ஆட்சி மற்றொரு வகையில் சிறப்புற்றது. அப்போது கம்பளி நெசவுத் தொழில் சிறப்படைந்தது. அதுவரை இங்கிலாந்து ஆட்டு மயிரை வெளிநாடுகளுக்கு அனுப்பிவந்தது. எட்வர்டு நெசவாளிகளை இங்கிலாந்தில் குடிபெயரச் செய்து துணி உற்பத்தியை மீண்டும் தொடங்கினார். இத்தொழில் நாளடைவில் பெருகி இங்கிலாந்தின் செல்வத்திற்கு முக்கிய வாய்ப்பு வளமாக மாறியது.

நான்காம் எட்வர்டு: இவர் கி.பி. 1461-இல் இங்கிலாந்து அரசராகப் பொறுப்பேற்றார். இவர் யார்க்கிசுடுப் (Yorkist) பிரிவைச் சார்ந்தவர்; திறமைமிக்கவர்; ஆனால் இரக்கமற்றவர்; பட்டமெய்தியவுடன் தம் பகைவரை ஆதரித்த 14 பிரபுக்களையும் மற்றும் 100 பேர்களையும் சட்டவாயிலாகக் கொல்லுவித்தவர். இவர் மன்னர் ஆறாம் என்றியைச் சிறையிலடைத்து, மிகச் சாதாரணத் தேவைகளைக் கூட அவருக்களிக்க மறுத்துவிட்டார். என்றியின் மனைவியும் மகனும் உணவுக்கும் வழியின்றி நாட்டைவிட்டு ஓடினர். பகைவர்களின் சொத்துகளைப் பறிமுதல் செய்து பெரும் பொருள் ஈட்டினார். இவர் காலத்தில் பாராளுமன்ற ஆதிக்கம் குன்றியது. மன்னருடைய வல்லாட்சி நடைமுறைக்கு வந்தது.

எட்வர்டு உல்லாச வாழ்க்கையில் ஈடுபட்டார். இவர் பட்டம் எய்துவதற்கு உறுதுணையாக இருந்த வார்விக்கு பிரபுவே அரச அதிகாரம் செலுத்தி வந்தார். விரைவில் எட்வர்டுக்கும் வார்விக்கு பிரபுவிற்கும் இடையே பூசல் ஏற்பட்டது. பிரஞ்சு இளவரசியை எட்வர்டு மணக்க வேண்டும் என்பது வார்விக்கின் திட்டம். ஆனால் எட்வர்டு வேறு பெண்ணை மணந்து, மனைவியின் உறவினர்களுக்கு நிலங்களையும் பட்டங்களையும் வாரி வழங்கினார். அதனால் வார்விக்கு சினமுற்றார். அதன் விளைவாக ஓர் உள்நாட்டுப்போர் ஏற்பட்டது. எட்வர்டினுடைய சகோதரனுடன் வார்விக்கு சேர்ந்து கொண்டார். ஒரு சமயம் எட்வர்டு வார்விக்கிடம் சிறைப்பட்டார். அடுத்த ஆண்டு எட்வர்டு கை ஓங்கியது. வார்விக்கு நாட்டை விட்டு ஓடினார். பிரஞ்சு மன்னர் உதவியுடன் வார்விக்கு இங்கிலாந்துக்கு வந்து இலங்காசுட்டிரியர்களுக்குச் (Lankastrian) சாதகமாகப் போர் தொடங்கினார். இம்முறை எட்வர்டு நாட்டைவிட்டு ஓட வேண்டியதாயிற்று. சிறையில் வாடி வந்த ஆறாம் என்றி மன்னராக மீண்டும் முடி சூட்டப்பட்டார். 7 மாதங்களுக்குப் பின்னர் எட்வர்டு நாடு திரும்பி வார்விக்கைத் தோற்கடித்தார். போரில் வார்விக்கு உயிரிழந்தார். இலங்காசுட்டிரியப் படைகளைத் துயூகெசுபரியில் (Tugesbury) எட்வர்டு தோற்கடித்தார். என்றியின் மகன் எட்வர்டு இளவரசர் கொல்லப்பட்டார். என்றி சிறையில் கொல்லப்பட்டார். தம்மை எதிர்த்த சகோதரனையும் வீழ்த்தி விட்டு, எஞ்சிய நாட்களைத் தம் விருப்பம் போல் கேளிக்கைகளில் செலவிட்டு கி.பி. 1483-இல் இறந்தார்.

ஐந்தாம் எட்வர்டு: இவர் நான்காம் எட்வர்டின் மகன்; கி.பி. 1483-இல் இங்கிலாந்து மன்னரானார். இவர் சிற்றப்பன் இரிச்சர்டு (Richard) இவரைச் சிறையிலிட்டு, பின்னர் இரகசியமாகக் கொன்றுவிட்டார். இவருடைய கல்லறையை கி.பி. 1674-ஆம் ஆண்டுவரை எவருமே அறியவில்லை.

ஆறாம் எட்வர்டு: இவர் கி.பி. 1547 முதல் கி.பி. 1553 வரை இங்கிலாந்தை ஆண்ட அரசர். இவர் தந்தை எட்டாம் என்றி. பட்டம் எய்திய போது இவருக்கு வயது 9. ஆகவே ஆட்சிப் பொறுப்பு சாமர் செட்டு பிரபுவிடம் ஒப்படைக்கப்பட்டது. இங்கிலாந்தையும் இசுகாட்லாந்தையும் ஒரு குடைக் கீழ்க் கொண்டு வர விரும்பி, எட்வர்டுக்கும் இசுகாட்டு இளவரசிக்கும் திருமணம் முடிக்க முயற்சி செய்தார். அம்முயற்சியின் ஒரு கட்டமாக இசுகாட்லாந்து மீது படையெடுத்தார். அப்படையெடுப்பு அவருடைய திட்டத்தினை அழித்துவிட்டது. சமயத்துறையில் மறுப்புரை (Protestant) இயக்கம் மேலும் வலுவடைவதற்கான முயற்சியை மேற்கொண்டார். மறுப்புரையாளர்களுக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட சட்டங்கள் நீக்கப்பட்டன. இலத்தீன் மொழியில் வழிபாடு செய்யப்படுவதை நீக்க, ஆங்கிலமொழியில் வழிபாட்டு நூல் ஒன்றைத் தயாரித்து அதை எல்லாக் கோயில்களிலும் பயன்படுத்த வேண்டும் என்பதற்காகச் சட்டமியற்றினார். குருமார்கள் பயன்படுத்துவதற்காகப் புதிய கோட்பாடுகள் அடங்கிய நூல் ஒன்றை வெளியிட்டார். கோயில்களில் இருந்த சிலைகளையும் படங்களையும் அப்புறப்படுத்தினார். இறந்தவர்களுக்கு வழிபாடு செய்வதற்காக உண்டாக்கப்பட்ட நூற்றுக்கணக்கான அறநிலையங்களை

மூடநம்பிக்கையின் சின்னங்கள் எனக் கூறி அழித்தார். இவருடைய தீவிரச் சமய நடவடிக்கைகள் மக்களிடையே மனநிறைவின்மையை வளர்த்தன.



ஆறாம் எட்வர்டு

இவர் காலத்தில் நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருந்தது. நாணயங்களின் மதிப்புக் குறைந்ததாலும் விளைநிலங்கள் மேய்ச்சல் நிலங்களாகமாற்றப்பட்டமையாலும் மக்கள் பெருந்துன்பத்திற்குள்ளானார்கள். எல்லாவகையிலும் சாமர்செட்டு பிரபு மக்களுடைய வெறுப்பைத் தேடிக்கொண்டார். நாட்டில் கலகங்கள் ஏற்பட்டன. அவற்றைச் சமாளிக்க இயலாது அவர் பதவியைத் துறந்தார். அடுத்து அப்பொறுப்பை ஏற்றவர் நார்த்தம்பர்லாந்து பிரபு. அவர் மறுப்புரைச் சமயத்தைச் சார்ந்த மன்னரை மகிழ்விக்கச் சமயத்துறையில் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டார். தீவிர மறுப்புரையாளர்கள் சமயக் குருமார்களாக நியமிக்கப்பட்டனர். இரண்டாம் வழிபாட்டு நூல் வெளியிடப்பட்டது. சுருங்கக் கூறின், எட்டாம் என்றியின் காலத்தில் இங்கிலாந்தில் சமயச் சீர்திருத்த இயக்கம் தோன்றிய போதிலும், ஆறாம் எட்வர்டு காலத்தில்தான் சமயக் கோட்பாடுகளும் வழிபாட்டு முறையும் மறுப்புரைச் சமயக் கருத்துகளுக்கேற்பத் திருத்தி அமைக்கப்பட்டன.

ஏழாம் எட்வர்டு: இவர் 1901 முதல் 1910 வரை இங்கிலாந்தை ஆண்டு வந்தார். இவர் தாயார் விக்டோரியா பேரரசி. இவர் ஆட்சிக்காலத்தில் வறுமை ஒழிப்புப் பிரச்சினை முக்கியமடைந்தது. முதியோர் ஓய்வு ஊதியச் சட்டம் 1908-இல் நிறைவேற்றப்பட்டது. எழுபது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு வாரந்தோறும் ஓய்வு ஊதியம் அளிக்க அது ஏற்பாடு செய்தது. வேலையின்மைப் பிரச்சினைக்குத் தீர்வு காணக் காப்பீட்டுத் திட்டம் கொண்டு வரப்பட்டது. நோய்க்காரணமாக வேலை நீக்கம் செய்யப்பட்டவர்களுக்கு உதவத் தேசிய நல்வாழ்வுக் காப்பீட்டுச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. எல்லா வகைத் தொழிலாளர்களுக்கும் பணி செய்யும்போது ஏற்படும் விபத்துக்கு நட்ட ஈடு வழங்கத் தொழிலாளர் நட்ட ஈட்டுச் சட்டம் கொண்டுவரப்பட்டது. சுரங்கத் தொழிலாளர்கள் மற்றும் கடைகளில் வேலை செய்பவர்களுடைய பணிநேரங்கள் வரையறுக்கப்பட்டன. தொழில் வாரியங்கள் அமைக்கப்பட்டு, அவற்றின் வாயிலாகக் கூலி நிருணயிக்கப்பட்டது. வேலை வாய்ப்பு நிறுவனங்கள் (Labour Exchanges) ஆங்காங்கே ஏற்படுத்தப்பட்டன. தொழிற் பூசல்கள் சட்டத்தின் (Trade Disputes Act) வாயிலாகத் தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தத்தினால் ஏற்படக் கூடிய இழப்பை ஈடு செய்வதிலிருந்து விலக்குப் பெற்றன. தொழிற்சங்கங்கள் பெரும் சக்தியாக மாற இது உதவியது.



ஏழாம் எட்வர்டு

பசியோடு பள்ளிக்கு வரும் குழந்தைகளுக்கு 1906-ஆம் ஆண்டு சட்டத்தின் வாயிலாக உணவளிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. தேசிய பள்ளிகளில் பயிலும் மாணவர்களை 1907-ஆம் ஆண்டுச் சட்டம் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தியது. குழந்தைகளுக்கு 1908-ஆம் ஆண்டில் பலவகைப் பாதுகாப்புகள் வழங்கப்பட்டன. குழந்தைக் குற்றவாளிகளைத் தனி வகையான விசாரணைக்கும் தண்டனைக்கும் உட்படுத்த வழி வகுக்கப்பட்டது. வீடு மற்றும் நகரங்களுடைய வளர்ச்சிக்கு 1909-ஆம் ஆண்டில் ஒரு திட்டம் கொண்டு வரப்பட்டது. சுகாதார வசதியற்ற வீடுகள் இடித்துத் தள்ளப்பட்டன. அவை இருந்த

இடத்தில் சுகாதார வசதிகள் நிறைந்த வீடுகள் கட்டப்பட்டன. வேளாண்மையைப் பெருக்கச் சிறு நிலச் சொத்துகள் சட்டம் இயற்றப்பட்டது. நிலங்களைக் கட்டாயப்படுத்தி வாங்கி, அவற்றைச் சிறு துண்டுகளாகப் பிரித்து மக்களுக்குப் பகிர்ந்தளிக்க நகரசபைகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டது.

இவர் காலத்தில்தான் பணக்காரர்களிடம் பணத்தை வரியாக வாங்கி, ஏழைகளின் துயர் துடைக்கவல்ல மக்களுடைய வரவு செலவுத் திட்டம் (People's Budget) கொண்டு வரப்பட்டது. அதைப் பிரபுக்கள் சபை மறுத்தபோது அமைச்சரவை அப் பிரச்சினையை மக்களுடைய முடிவுக்குப் பொதுத் தேர்தல் வாயிலாகக் கொண்டு சென்றது. அதன் விளைவாக அத்திட்டம் நிறைவேற்றப்பட்டது. பிரபுக்கள் சபை பண மசோதா பற்றிய செய்திகளில் பொதுமக்கள் சபையை மீறி நடக்க இயலாது என்ற கருத்து நிலைநாட்டப்பட்டது. அதைத் தொடர்ந்து பிரபுக்கள் சபையின் அதிகாரத்தைக் குறைக்கப் பாராளுமன்றச் சட்ட முன்வரைவு (Parliament Bill) தாக்கல் செய்யப்பட்டது. அப்போதுதான் எட்வர்டு காலமானார்.

எட்வர்டு ஒரு சமாதான விரும்பி. இவர் காலத்தில்தான் பல ஆண்டுகளாக இங்கிலாந்துடன் பகைமை கொண்டிருந்த பிரான்சுக்கும் இங்கிலாந்துக்கும் நட்புறவு ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து உருசியாவிற்கும் இங்கிலாந்துக்கும் இடையே இருந்த வேற்றுமைகள் களையப்பட்டன. அதற்கு முன்பாகச் சப்பானுடன் இங்கிலாந்து ஓர் இராணுவ ஒப்பந்தம் செய்து கொண்டது. இவ்வாறாகப் பிறநாடுகளிலிருந்து ஒதுங்கி வாழ்ந்திருந்த இங்கிலாந்து தன் தனிமை நிலையை நீக்கிப் பிறநாடுகளுடன் நட்பு உடன்பாட்டை மேற்கொண்டது.

எட்டாம் எட்வர்டு: இவர் வின்சர் கோமகன் (Duke of Windsor) எனவும் கூறுப்படுகிறார். இவர் கி.பி. 1894-இல் பிறந்தார். இங்கிலாந்து மன்னர் ஐந்தாம் சார்சின் மகன். இவர் 1936-இல் பட்டம் எய்தினார். பட்டமெய்தியவுடன் தாம் காதலித்த அமெரிக்கப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளப் போவதாக அறிவித்தார். இவரது காதலி இருமுறை மணவிலக்குப் பெற்றவர். அதனால் மன்னர் அப்பெண்ணை மணக்க அமைச்சரவை ஒப்புக் கொள்ளவில்லை. அமைச்சரவையின் விருப்பத்திற்கு மாறாக நடக்க விரும்பாமையால் தம் அரசப் பதவியைத் துறந்தார். இந்நிகழ்ச்சி மன்னர் தம் திருமணச் செய்தியில் கூட மக்களுடைய ஒப்புதலைப் பெற வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தியது. மேலும், அரசரைவிட அரியணையே உயர்ந்தது என்ற உண்மையும் விளக்கப்பட்டுவிட்டது. எட்வர்டு 1936-ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 12-ஆம் நாள் நாட்டை விட்டு ஆசுத்திரியாவிற்குச் சென்று அங்குக் குடியேறினார். இவருடைய செய்கையின் விளைவாக இவருடைய வாரிசுகளும் இங்கிலாந்து அரசுரிமையிலிருந்து விலக்கப்பட்டனர். அர.இரா.



எட்டாம் எட்வர்டு

**எட்வின் ஆர்னால்டு, சர்** (கி.பி. 1832-1904) இங்கிலாந்தில் கிரேவ்செண்டு கெண்டில் பிறந்தவர்; மன்னர் கல்லூரி, இலண்டன் பல்கலைக் கழகக் கல்லூரி, ஆக்சுபோர்டு (Oxford) ஆகிய இடங்களில் பயின்றவர். இவர் சிறந்த கவிஞரும் அறிஞருமாகப் பாராட்டப்பெற்றவர். இவர் இந்தியாவில் புனே அரசுக் கல்லூரி முதல்வராகப் பணியாற்றினார். பின்னர் இங்கிலாந்தில் 'இலண்டன் மாநகரத் தினத்தந்தி' (The London Daily Telegraph) என்னும் இதழில் ஆசிரியரானார். இவருடைய இந்திய வாழ்க்கை அனுபவங்கள் கி.பி. 1879-இல் 'ஆசிய சோதி' (The Light of Asia) என்ற காவியமாக மலர்ந்தது. அது புத்தரின் வாழ்வும் வாக்கும் பற்றிய மாபெரும் படைப்பாகும்.

எட்வின் ஆர்னால்டு (Sir Edwin Arnold) கவிதைகள் பல புனைந்துள்ளார்; வடமொழியிலிருந்து பாடல்களை மொழிபெயர்த்துள்ளார். உலகின் ஒளி (Light of the World) எனப் பெயரிய இவர்தம் நூல் கி.பி.1891-இல் வெளிவந்தது. அது கிறித்தவச் சமயம் பற்றியது. ஆனால், அது ஆசிய சோதியினைப் போல வெற்றிபெறவில்லை. 'ஆசிய சோதி' செந்தொடையால் அமைந்தது; புத்த தத்துவத்தை உலகெங்கும்

உணருமாறு செய்தது. இவர் கீழ்த்திசை மொழிகள் பல கற்றவர்; இதோபதேசத்தை (Hithopadesa) ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். இவர் 1904-இல் இயற்கை எய்தினார். 'ஆசிய சோதி' என்னும் நூலே இவருக்குப் பெயரும் புகழும் பெற்றுத் தந்தது.

பி.எஸ்.வே.

**எட்வின் சாட்விக்கு** ஆங்கில அரசியல மைப்புக் கோட்பாட்டின் வரலாற்றிலே கி.பி. 18, 19-ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த சிந்தனை யாளருள் குறிப்பிடத் தக்கவரான செரிமி பெந்தம்( Jeremy Bentham) என்ற தத்துவ இயல் புடைய தீவிரக் கோட்பாட்டாளர் வகுத்த அரசியல் தாராளச் சிந்தனை (Political Liberalism) வழிநின்று, இங்கிலாந்தில் சாதாரணமக்களுடைய சுகாதாரச் சீர்திருத்தத்திற்காக உழைத்தவராவர். இவர் கி.பி. 1800-ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் இலங்காசயரில் (Lancashire) உள்ள தொழிற்பட்டணமாகிய மாஞ் செசுட்டருக்கு அருகில் இலாங்சைட்டு (Longsight) என்னும் ஊரில் பிறந்தார். கல்விப் பயிற்சிக்குப் பின்னர், இவர் பயன்வழிக் கோட்பாட்டாளராகிய (Utilitarian) செரிமி பெந்தத்தின் உறுதுணைவ ரானார். அப்போது பெந்தத்தின் தாராள அரசியற் கோட்பாட்டிற்கு மிக்க வரவேற்பு இருந்தது. அவரு டைய கோட்பாட்டின் செல்வாக்குப் பரவியதால், நாட்டின் சட்டத்துறையிலும், பாராளுமன்ற அமைப் பிலும், வாணிகத்துறையிலும், நீதித்துறையிலும், கல்வித்துறையிலும், தொழிலாளர் வாழ்க்கைத்துறை யிலும், சுகாதாரத் துறையிலும் நல்ல பல சீர்திருத் தங்கள் செய்யப்பட்டன. அதன் பயனாக நாட்டின் சாதாரண மக்கள் வகுப்பிலுள்ளோர் மிகவும் பயன் பெற்றனர். வாழ்வின் எல்லாத் துறைகளிலும் நிலவிய சூழ்நிலைகளைக் கவனித்த சர் எட்வின் சாட்விக்கு (Sir Edwin Chadwick) பிரிட்டனில் சுகாதாரச் சீர் திருத்தம் கொண்டு வருவதையே தமது வாழ்நாள் முழுப்பணியாகக் கொண்டு அதை நிறைவேற்றினார். இவர் கி.பி. 1890-ஆம் ஆண்டில் சர்ரேயில் (Surray) ஈசுட்டுசீன் (East Sheen) என்னுமிடத்தில் கால மானார்.

சாட்விக்கு அரசாங்கத்தால் நன்கு மதிக்கப்பட்ட செரிமி பெந்தத்தோடு தொடர்பு கொண்டதனால், ஆங்கிலேய அரசாங்கமும் இவரை நன்கு மதித்தது. வறியோர் சட்டச் சீர்திருத்த ஆணையம் (Commission on Reform of Poor Laws) என்னும் ஓர் ஆணை யத்தை அரசாங்கம் கி.பி. 1832-ஆம் ஆண்டில் அமர்த்தியபோது, அவ்வாணையம் இவரை ஓர் ஆய் வாளராகவும் கி.பி. 1834 முதல் 1846-ஆம் ஆண்டு வரை அதன் செயலாளராகவும் அமர்த்திற்று. இவர் நாசவு தபிள்யு. சீனியர் (Nassau W. Senior) என்ற அரசியல் பொருளாதார வல்லுநருடைய உதவியுடன் மக்களுக்கு உடனடியாகத் தேவைப்படுகிற சுகாதார, பாதுகாப்பு வசதிகளை விளக்கி ஓர் அறிக்கையை கி.பி. 1834-ஆம் ஆண்டில் வரைந்து அரசாங்கத்திடம் அளித்தார். அவ்வறிக்கையில் சமூகக் கேள்விகளெல் லாம் விளக்கப்பட்டிருந்தன. ஆகையால் அரசாங்கம் இவருடைய கருத்துகளை ஏற்றுக் கொண்டு, இவர் பரிந்துரைகளின்படி விரிவான சட்டம் இயற்றி, அதன் வாயிலாக மக்களுடைய சுகாதாரத்தையும் பாதுகாப் பையும் ஏற்படுத்துதற்கும், பொதுவாகச் சமூகத்தவ ருடைய கேள்விகளெல்லாவற்றையும் ஆய்வு செய்து திருத்தங்களைக் கொண்டு வருதற்கும், சுகாதாரப் பணிகளைக் கண்காணிப்பதற்கும் ஏற்பாடு செய்தது. மேலும், இவர் பரிந்துரை செய்தவாறே, அரசாங்கம் நாட்டை மருத்துவ வசதிப் பெருக்கத்துக்காகப் பல வட்டங்களாகப் பிரித்து ஒவ்வொன்றிலும் தேர்ந் தெடுக்கப்பட்ட காப்பாளர் மன்றங்களை நிறுவிற்று. ஒவ்வொரு மன்றத்திற்கும் ஒரு மருத்துவ அதிகாரி அமர்த்தப்பட்டார். பின்னர், இவர் கி.பி. 1848-ஆம் ஆண்டிற்கும் 1854-ஆம் ஆண்டிற்கும் இடையே சுகா தார ஆணையாளராகப் பணி செய்த போது, இவர் பொதுச் சுகாதாரச் சீர்திருத்த இயக்கம் நடத்திய தன் விளைவாக கி.பி. 1848-ஆம் ஆண்டின் பொதுச் சுகாதாரச் சட்டத்தைப் (Public Health Act, 1948) பாராளுமன்றம் நிறைவேற்றிற்று. உள்ளூர்ப் பகுதி மக்கள் தங்களுடைய உடல் நலப் பாதுகாப்புப் பணி யில் தாங்களே ஈடுபாடு கொள்ளுவதற்கு ஒரு வழி யாக இருக்கும்பொருட்டுப் பொதுச் சுகாதாரப் பணி யானது உள்ளூர் மக்களாலேயே ஆட்சி செய்யப் படுதல் வேண்டுமென்பது இவர் கருத்தாகும். இந்தக் கருத்தை ஆதாரமாக வைத்தே கி.பி. 1848-ஆம் ஆண்டுச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இவர் 1842-ஆம் ஆண்டில் வரைந்த 'பிரிட்டனின் தொழி லாளர் மக்களுடைய துப்புரவு நிலைபற்றிய விசாரணை அறிக்கை' (Report on an Enquiry into the Sanitary Condition of the Labouring Population of Great Britain, 1848) என்ற அறிக்கை மிக முக்கியமான ஒன்று ஆகும்.

வறியோர் சட்டச் சீர்திருத்தங்களை நிறை வேற்றுதற்குச் சாட்விக்கும் சார்சு குரோட்டு (George Grote) என்பவரும் அதிகாரக் குவிப்புடைய ஆட்சித்துறை (Centralized Administration) இருத்தல் வேண்டுமென்று கூறினர். இக்கருத்து ஏற்றுக் கொள் ளப்பட்டுச் செயலுக்குக்கொண்டுவரப்பட்டது.மேலும், இவர் பொதுச் சுகாதாரம் பாதுகாக்கப்படுவதற்காக மருத்துவ நிறுவனங்கள் அமைக்கப்படுதல் வேண்டு மென்றும், உள்ளூர்ப் பகுதிக் காவல் துறையினரைக்

கட்டுப்படுத்துவதற்கு அதிகாரக் குவிப்புடைய துறை அமைப்புத் தேவை என்றும், தொழிற்சாலைகளில் அரசாங்கச் சட்டங்களுக்கு ஏற்பத் தொழிலாளர்கள் வேலை செய்வதற்குரிய சூழ்நிலைகள் இருக்கின்றனவா என்று அவற்றைக் கண்காணித்தல் வேண்டுமென்றும் கூறியகருத்துகளை அரசாங்கம் ஏற்றுச் செயற் படுத்திற்று.

**சாட்விக்கு செயற்படுத்திய சீர்திருத்தங்களுக்கு ஆதாரமாக இருந்த தாராளக் கோட்பாடு:** சாட்விக் கின் வழிகாட்டியான செரிமிபெந்தம் கூறிய 'பெரும் பாலானவரின் பெருமளவு இன்பம்' (The Greatest happiness of the greatest number Principle) என்ற தாராள அரசியற் கோட்பாடுதான் இவர் மிக்க பயனுள்ள சமூகச் சீர்திருத்தங்களைக் கொண்டு வரு வதற்குத் தூண்டுகோலாய் அமைந்தது. மக்களுக்குப் பெருமளவு இன்பத்தை ஏற்படுத்துவதற்குரிய சட்டங்கள் செய்யப்படுதற்குப் பாராளுமன்றத்தில் நாட்டிலுள்ள வயது வந்தவரனைவராலும் தேர்ந் தெடுக்கப்பட்ட உறுப்பினர்களிருத்தல வேண்டும். சட்டங்களிலுள்ள குறைபாடுகளும், தவறான கருத்து களும் களையப்பட்டுச் சீர்திருத்தம் செய்யப்படுதல் வேண்டும். உணவுப் பொருள்களின்மீது உள்ள சுங்கக் காப்பு வரிகளும், கப்பற்சட்டங்களும் நீக்கப்பட்டுத் தடையற்ற வாணிகம் நடைறுபெறுதல் வேண்டும். அரசாங்கத்துக்கு ஆதாரமாக இருப்பது மனித னுடைய தேவையே தவிர ஒப்பந்தம் அன்று. ஆகை யால் அது இருப்பதற்கு உரிய ஒரே நியாயம் மனித தேவை நிறைவேற்றப்படுதலே ஆகும். சட்டப்படி யான அதிகாரமென்பது சட்டப்படி வரம்புபடுத்தப் பட இயலாதது. ஒவ்வோர் அரசிலும் எல்லாரையும் கட்டுப்படுத்தவல்ல அதிகாரத்தையுடைய ஒருவர் எங்கேனும் இருந்தே ஆக வேண்டும். ஒரு தாராள அரசாங்கமென்பது ஒரு வலுவற்ற அரசாங்கமாக ஆகிவிடாது. முழு இறைமையுடையதாகத்தான் ஆங்கிலப் பாராளுமன்றம் தொடர்ந்து இருந்து வருதல் வேண்டும். அந்தச் சமயத்திலேயே அது மக்களுக்குப் பொறுப்புடையதாக இருத்தற்கு வசதி யாக அதில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப் பினர்களே இருத்தல் வேண்டும். அறிவில்தான் நம் பிக்கை இருத்தல் வேண்டும். அறிவும் தொழில் திறமையும் இணைந்தால்தான் சீர்திருத்தங்கள் செய்யப்படுதல் இயலும். இவற்றுக்கு மதிப்புக் கொடுத்துச் சீர்திருத்தங்களைச் செய்யும் அரசாங்கம் மிகவும் தாராள இயல்பும் திறமையுமுடையதாக இருக்கும்.

**மதிப்பீடு:** இந்தச் சீர்திருத்தங்களுக்கு ஆதார மான தத்துவ இயல்புடைய தீவிரவாதிகளுடைய தாராளக் கோட்பாடானது கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் அரசியல் மிக்க நடைமுறை முக்கியத்துவம் உடையதாக இருந்தது. இச்சிந்தனை யாளர்கள் தங்களை ஓர் அரசியற்கட்சியாக அமைத்துக் கொள்ளாமல், இவர்கள் தங்களுடைய புதிய கருத்துகளைப் பரப்பிப் பழையனவற்றைப் போக்கி, அரசாங்கத்தின் சட்டமன்றம், ஆட்சித்துறை, நீதித்துறை முதலியவற்றைத் திறமையுடையனவாக வும் குடியாட்சி இயல்புடனிருக்கவும் வழி செய்தார் கள். இதனால் அமைதியான வழியில் வன்செயல், புரட்சி வாயிலாக அல்லாமல் இங்கிலாந்தில் அரசியல், சமூக, பொருளாதாரத் துறைகளில் சீர் திருத்தங்களும் நல்ல மாறுதல்களும் ஏற்பட்டன.

பா.கு.

துணை நூல்:

**Cowherd, R.G.,** The Politics of English Dissent: The Religious Aspects of Liberal and Humani tarian Reform Movements from 1815 to 1848, New York, 1956.

**எடின்பரோ:** தென்கிழக்கு இசுகாட்லாந்தில் வடகடலின் அண்மையில் உள்ள எடின்பரோ (Edinburgh) பழங்கால நகரங்களுள் ஒன்று. சாக் சானிய மன்னன் எட்வின் தான் அடைந்த வெற்றி யின் அடையாளமாக இதற்கு இப்பெயர் வைத்தான். எட்வின்பரோ எடின்பரோவாக அமைந்துள்ளது. இது இசுகாட்லந்தின் தலைநகராக மட்டுமல்லாமல், அந்நாட்டுப் பண்பாடு, கல்வி, தேசிய உணர்வு முதலியவற்றைப் பிரதிபலிக்கும் ஒரு மையமாகவும் திகழ்கிறது. உணவுப் பொருள்கள் தயாரித்தல், குடிவகைகள் உற்பத்தி, புகையிலை உற்பத்தி, மது வடித்தல், பொறிஇயல்தொழில், மின்சாரத் தொழில், காகிதம் செய்தல், அச்சுத் தொழில், மருத்துவம் முதலியன எடின்பரோவின் சிறப்பான தொழில் களாம். இங்கே, பழமையின் நினைவாகப் பழைய எடின்பரோவும் புதுமையின் சார்பாகப் புதிய எடின்பரோவும் விளங்குகின்ற காட்சி குறிப்பிடத் தக்கது. சிறந்த புதின ஆசிரியரான சர் வால்ட்டர் இசுகாட்டு இங்கேதான் பிறந்தார்.

எடின்பரோப் பல்கலைக் கழகம் கி.பி. 1583-இல் தோற்றுவிக்கப்பட்டது.

பிரித்தானியக் கலைக் களஞ்சியம் (Encyclo paedia Britannica) கி.பி. 1768-ஆம் ஆண்டு எடின்ப ரோவில்தான் முதலில் வெளிவந்தது. கலைகளை வளர்க்கும் முகத்தான் அனைத்துலகக் கலைத் திரு

விழாக்கள் ஆண்டுதோறும் இங்கே நடைபெறுகின்றன. இசை, நாடகம், நடனம் முதலிய கலைகளின் வளர்ச்சிக்கு எடின்பரோவின் சேவைகளைப் பாராட்டாமல் இருக்க இயலாது. 262 ச.கி.மீ பரப்புள்ள இந்நகரில் சுமார் 5 லட்சம் மக்கள் வாழ்கின்றனர்.

தெ.பா.

**எடின்பரோப் பல்கலைக்கழகம்** இசுகாட்லாந்து நாட்டின் மிகப் புகழ் வாய்ந்த பல்கலைக் கழகம்; ஆங்கிலப் பேரரசின் (Great Britain) மிகப் பழமையான பல்கலைக் கழகங்களுள் ஒன்று; கி.பி. 1583–இல் இசுகாட்லாந்து (Scotland) நாட்டிலுள்ள எடின்பரோ (Edinburgh) நகரில் தோற்றுவிக்கப் பட்டது. ஆணும் பெண்ணும் சேர்ந்து பயிலும் இப் பல்கலைக்கழகம் தனியாரால் நிருவகிக்கப்படுகிறது. இப் பல்கலைக் கழகத்தில் கலைகள், இறையியல் (Divinity), சட்டவியல், மருத்துவம், இசை, அறிவியல், சமூக அறிவியல், கால்நடை மருத்துவம் ஆகிய துறைகள் உள்ளன. இப்பல்கலைக் கழகத்தின் இறையியல் துறையும் மருத்துவத் துறையும் பெருமை மிக்கவை. இங்குப் பயின்ற உலகப் புகழ் வாய்ந்த அறிஞர்கள் பலர். அவர்களுள் உயிரியல் அறிஞர் சார்லசு தார்வின் (Charles Darwin), வரலாற்றுப் புதின ஆசிரியர் சர் வால்டர் இசுகாட்டு (Sir Walter Scott), தத்துவ அறிஞரும் வரலாற்று ஆசிரியருமான சேம்சு மில் (James Mill), கட்டுரையாசிரியரும் வரலாற்றாசிரியருமான தாமசு கார்லைல் (Thomas Carlyle), புதின ஆசிரியர் இராபெர்ட்டு உலூயி இசுடீவன்சன் (Roberts Louis Stevenson), அறிவியல் மேதை அலெக்சாண்டர் கிரகாம் பெல் (Alexander Graham Bell)ஆகியோர் குறிப்பிடத்தக்கவர். எஸ்.த.

**எடுகோள் அமைத்தல்:** ஆராய்ச்சி என்பது உண்மையைக் காண மேற்கொள்ளும் முயற்சியே. உண்மை இதுவாகலாம் என ஒரு முடிவினைத் தற்காலிகமாக மேற்கொண்டு, அம்முடிவு சரியானது தானா எனச் சோதித்தறிவதே ஆராய்ச்சியின் பொதுமுறை. உண்மை இதுவாகலாம் என ஆராய்ச்சியாளர் மேலெழுந்தவாரியாக எடுத்துக் கொள்ளும் முடிவே எடுகோள் எனப்படும். இது இறுதி முடிவன்று. சோதனைக்குட்படும் ஒரு முன்னிலை முடிவு. சோதனையில் இம்முடிவு சரியானதென மெய்ப்பிக்கப்படுமாயின் இதுவே இறுதி முடிவாகக் கொள்ளப்படும். இன்றேல் இது தவறானதெனத் தள்ளப்படும்.

எடுகோள் அமைத்தல் ஆராய்ச்சியின் போக்கினை நெறிப்படுத்தும். உண்மையைத் தேடி அலையும் ஆராய்ச்சியாளரைப் பெரும் அலைவுக்குட்படுத்தாமல், உண்மை தட்டுப்படுதற்கான வாய்ப்புகள் மிகவுள்ள இடத்தைக் காட்டி, அவ்விடத்தே தேடி உண்மையைக் கண்டுகொள்ள ஆராய்ச்சியாளர்க்கு எடுகோள்கள் உதவுகின்றன. தேடிச் செல்லும் உண்மை ஓர் இயல்பு நிலை (Phenomenon) ஆகலாம். இருபொருள்களுக்கு (மாறிகட்கு) இடையேயுள்ள தொடர்பாகவோ இதனால் இது விளையும் எனக் காரண–காரியத் தொடர்பினைக் காணுவதாகவோ இருக்கலாம். எவ்வகையான ஆராய்ச்சியாயினும் எடுகோள்கள் உண்மை உறைதற்கான வாய்ப்புகள் மிகவுள்ள இடத்தினைச் சுட்டிக்காட்ட உதவுகின்றன. இதனால் ஆராய்ச்சியாளருக்கு அலைச்சல் குறையும்; எதனை எவ்வாறு எங்குத் 'தேட' வேண்டும் என்ற தெளிவு பிறக்கும். தெளிந்தார்க்கு உண்மை விரைவில் சரியாய்ப் புலப்படும். எடுகோள்கள் ஆராய்ச்சியை எளிதாக்க, விரைவாக்க, சரியாக்க, நேரியதாக்க உதவுகின்றன.

எடுகோள்களை மனங்கொண்டவாறு அமைத்துக் கொள்வது அவை உண்மையானவையாய், பொருத்தமுறுவனவாய். சரியானவையாய் அமைவதற்கான வாய்ப்புகளைக் குறைத்துவிடும், உண்மையாய் இருத்தற்கான வாய்ப்புகள் மிகக் குறைந்த எடுகோள்களை ஒட்டிச் செல்லும். ஆராய்ச்சிப் போக்கு கானல் நீரை நம்பி நீர் தேடும் முயற்சியை ஒக்கும். ஆராயப்படும் பொருள் எத்தன்மைத்து எனத் தெரிந்து, அத்தன்மைகளின் அடிப்படையில் அமைக்கப்படும் எடுகோள்களே உண்மையாதற்கான வாய்ப்புகள் மிகக் கொண்டிருக்கும். பொருளைப் பற்றிய ஆராய்ச்சியாளரின் அறிவு எவ்வளவிற்கு அதிகமோ அவ்வளவிற்கு இவ்வாய்ப்புகளும் மிகும். எனவே ஆராய்ச்சியாளர் தாம் ஆராயப் புகும் பொருள் (மாறி) பற்றி இதுவரை ஆராய்ச்சியாளர்கள் கண்டு சொன்ன முடிவுகளைக் கற்றுத் தெளிந்து, அத்தெளிவினோடும் அறிவார்ந்த கோட்பாடுகளைக் கூட்டி, அதனடிப்படையில் எடுகோள்களை அமைப்பராயின், அவ்வெடுகோள்கள் உண்மையாய் நிலைகொள்ளுதற்கான வாய்ப்புகள் மிகக் கொண்டிருக்கும். முன்னோர் கண்ட முடிபுகளை ஆய்ந்து அவற்றின் உண்மை தெளிந்து, அவ்வுண்மையின் அடிப்படையில் அறிவியற் கோட்பாடுகளை அரண் செய்து ஆக்கப்படும் எடுகோள்களே ஆராய்ச்சியாளருக்கு உண்மை காண உதவுவன.

எடுகோள்களின் எழுச்சியில் மூன்று நிலைகளைக் காணலாம் என்பர் கோர்டிகு (Kordig). தொடக்கச் சிந்தனை முதல் நிலை. இதில் உண்மை பற்றிய தெளிவில்லாத ஓர் எண்ணம் தோன்றும். இவ்வெண்ணம் எவ்வளவிற்கு உண்மையாதற்கான

வாய்ப்புகள் கொண்டுள்ளதென ஆய்ந்தறிதல் இரண்டாம் நிலை. ஏற்புடைமை உள்ளதெனத் தெரிந்தால் அதனை ஏற்றுச் சோதித்தறிதற்கான வகையில் ஓர் எடுகோள் வடிவில் அவ்வெண்ணத்தை மாற்றியமைத்துக் கொள்ளுதல் மூன்றாம் நிலை.

உண்மையாதற்கான வாய்ப்புகள் மிக்க, ஏற்றுக் கொள்ளத்தக்க நல்ல முடிவுகளை உய்த்தறியத்தக்க திறன் ஆராய்ச்சியாளருக்கு வேண்டும். நல்ல முடிவுகள் அதிக அளவில் உண்மையாதற்கான முன் வாய்ப்புகளைப் பெற்றிருக்கும். முன்வாய்ப்புகள் (Antecedent Probability) என்பன சோதனை செய்யாமலேயே இம்முடிவுகள் உண்மையாதல் கூடும் எனத் தீர்மானித்தற்கான தன்மைகளைக் கொண்டிருத்தலாகும். முன்வாய்ப்புகள் மிக்குள்ள எடுகோள்களே 'நல்ல' எடுகோள்களாகும்.

எடுகோள்கள் நேரிடையானவையாயும் சுருக்கமானவையாயும்அமைதல் வேண்டும். ஆராய்ச்சிகளின் மூலம் முன்னரே நிறுவப்பட்ட உண்மைகளுக்கு மாறான எடுகோள்களை அமைத்தலாகாது என்ற தவறான எண்ணம் கூடாது. ஆராய்ச்சியின் முடிவுகள் ஆராய்ச்சி நிகழுகின்ற கால அளவில் அப்போதுள்ள மொத்த அறிவுக்குப் பொருத்தமுற அமைகின்ற சார்புடைய உண்மைகளே; என்றும் மாறாத் தனித்த உண்மைகள் அல்ல அவை. எனவே நடைமுறைச் சான்றுகளோ அறிவுக்குப் பொருத்தமான காரணங்களோ அமையும்போது, நிறுவப்பட்ட உண்மைகளுக்கு முரண்படும் எடுகோள்களை அமைக்கவும் தயங்கக் கூடாது. இவ்வாறான தயக்கம் புதியன காணும் ஆக்கத்திறன் வளர்ச்சிக்குத் தடையாகும். இத்தயக்கம் மாயத் தோற்றத்தாலும் பொய்யான கருத்துகளாலும் (Phantoms and False Conceptions) உண்டாவது என்பர் பிரான்சிசு பேக்கன்(Francis Bacon). அறிவியல் பேரறிஞர் ஆல்பர்ட்டு ஐன்சுட்டீனும் (Albert Einstein) இத்தயக்கத்திற்கு ஆளாயிருந்தார். மைக்கேல் பொலான்யி (Michael Polanyi) திடப்பொருளின்மீது வாயுப் பொருள்கள் ஒட்டுவது பற்றிய கோட்பாட்டினை வெளியிட்டபோது,ஐன்சுட்டீன் அவ்வரைப் பொருள்களின் அமைப்புப் பற்றி அப்போது நிறுவப்பட்டிருந்த உண்மைகளைச் சற்றும் மதியாது, அவற்றிற்கு முரணாக எடுகோள் அமைத்தமைக்காகக் கடிந்து கொண்டார். பொலான்யியின் கோட்பாடு சரியானதெனப் பின்னர் நடைமுறைச் சான்றுகள் கொண்டு நிறுவப்பட்டது. எடுகோள்கள் அமைக்கும்போது தாம் முன்னர்க் கற்றறிந்தன, கேட்டறிந்தன, செயல்முறை பற்றியனவற்றைக் காய்தல், உவத்தல் போன்றவற்றின்கண் உட்படாது, திறந்த மனத்தோடு அவை உண்மையென நிறுவப்படுவதற்கான முன்வாய்ப்புகளின் அடிப்படையிலேயே அமைத்தல் வேண்டும்.

ஆராய்ச்சிகளின் வகைகளுக்கேற்ப, ஆராயும் பொருள்களின் தன்மை பற்றியோ பொருள்களுக்கிடையேயான வேறுபாடுகள் பற்றியோ தொடர்பு பற்றியோ காரணங்கள் பற்றியோ எடுத்துக் கொள்ளப்படும் இடைக்கால முடிவுகளே எடுகோள்கள். இவை கற்றறிந்த உய்த்துணர்வுகள் (Educated Guesses). ஆராய்ச்சியில் மேற்கொள்ளப்படும் எடுகோள்கள் நடைமுறைச் சான்றுகளின் அடிப்படையில் சோதனை செய்யப்படல் வேண்டும். ஆராய்ச்சியில் அமையும் எடுகோள்களான ஆராய்ச்சி எடுகோள்கள், அறிவியல் எடுகோள்கள், உள்ளார்ந்த பொருளுடை (Substantive) எடுகோள்கள் என முப்பெயர் பெறுகின்றன. இவ்வகை எடுகோள்களை நேரடியாய்ச் சோதித்தறிய முடியாது. சோதனைக்குட்படும் எடுகோள்கள் புள்ளியியல் எடுகோள்கள் எனப்படும். புள்ளியியல் எடுகோள்களுக்குத்தன்மையோ தொடர்போகாரணமோ இல்லை எனக் கொள்வதால் இவற்றுக்கு வெற்று அல்லது இன்மை எடுகோள்கள் (Null Hypothesis) என்ற பெயரும் உண்டு. ஆராய்ச்சி (அறிவியல் உள்ளார்ந்த பொருளுடைய) எடுகோள்கள், புள்ளியியல் (வெற்று) எடுகோள்கள் என எடுகோள்கள் இரு வகைப்படும்.

உள்ளது கிளக்கும், உண்மை காணும் விளக்க (Descriptive) ஆய்வுகளில் எடுகோள்கள் ஆய்வுட்படும் மாறியின் (Variable) தன்மையை விவரிப்பதாய் அமையும். 'தமிழ்நாட்டில் தொடக்கப் பள்ளிகளில் முதல் வகுப்பில் 60 விழுக்காடு கழிவு ஏற்படுகின்றது' என்பது ஒரு விளக்க ஆய்வின் எடுகோளாகலாம். தொடர்பு காணும் (Relationals) ஆய்வுகளில் எடுகோள்கள் மாறிகட்கிடையேயுள்ள தொடர்பினை விளக்குவதாக அமையும். தொடர்பு எடுகோள் வேறுபாட்டினைக் குறிப்பதாகவும் அமையலாம். முதலாம் வகுப்பில் ஏற்படும் கழிவினுக்கும் மாணவரின் பெற்றோரின் பொருளாதார நிலைக்கும் எதிரிடைத் தொடர்பு உள்ளது என்பது தொடர்பு எடுகோள். இதனையே 'கழிவின் அளவில் பொருளாதார நிலையில் தாழ்ந்த குடும்பத்து மாணவர்களும், உயர்ந்த குடும்பத்துமாணவர்களும் வேறுபடுகின்றனர் என்றோ 'பொருளாதார நிலையில் தாழ்ந்த குடும்பத்து மாணவரிடையே உயர்ந்த குடும்பத்து மாணவரிடையே காணுவதைக் காட்டிலும் அதிகக் கழிவு உள்ளது, என்றோ வேறுபாட்டு எடுகோளாகக் கூறலாம்.

வேறுபாட்டு எடுகோள்கள் வேறுபடும் தன்மை எப்பிரிவுள் (குழுவுள்) அதிகம் அல்லது குறைவு எனச் சுட்டிக்காட்டும் -திசைகாட்டும்(Directional)எடுகோள் களாகவும், குழுக்கள் இத்தன்மையில் வேறுபடுகின் றன என்று மட்டும் கூறி எக்குழுவில் ஆராயும் தன்மை மற்றக் குழுவைக் காட்டிலும் அதிகமாக அல்லது குறை வாக உள்ளது எனச் சுட்டா – திசைகாட்டா (Non-Directional) எடுகோள்களாகவும் அமையலாம். உடல் முதிர்ச்சியில் சம வயதுடைய ஆண்களும் பெண்களும் வேறுபடுகின்றனர் என்பது திசைகாட்டா எடுகோள். பெண்கள் சம வயதுடைய ஆண்களைக் காட்டிலும் அதிக உடல் முதிர்ச்சி பெற்றுள்ளனர் என்பது திசை காட்டும் எடுகோள். ஆராயப்படும் தன்மை ஒரு பிரி வினரிடம் மற்றப் பிரிவினரைக் காட்டிலும் அதிக மாகவோ குறைவாகவோ இருத்தற்கான 'முன்வாய்ப் புகள்' அதிகமெனக் கண்டால் திசைகாட்டும் எடு கோள்களையும், எப்பிரிவினரிடம் மிகை அல்லது குறை என்பது தெளிவுபடா நிலையில் திசை காட்டா எடுகோள்களையும் அமைத்தல் வேண்டும்.

பரிசோதனை ஆய்வுகளில் எடுகோள்கள் இது காரணம், இது காரியம், இதனால் இது விளையும் என விளக்கும். பொன்னைச் சூடாக்கினால் இள கும்; எருவிட்டால் பயிர் செழிக்கும்; பாராட்டு ஒரு செயலை மீண்டும் அடிக்கடி செய்யத் தூண்டும் என் பன பரிசோதனை எடுகோள்கள்.

எடுகோள்களுள் உண்மையாதற்கான முன்வாய்ப்பு கள் மிக்குள்ளன இடைக்கால முடிவுகளே. இவற்றைச் சோதனைக்குட்படுத்திச் சரிபார்த்தல் வேண்டும். எனவே எடுகோள்கள் சோதித்தற்கேற்ற அளவில் அமைய வேண்டும். சோதனை நடைமுறைச் சான்று களை ஒட்டி அமையும். எடுகோள்களும் நடைமுறைச் சான்றுகளைத் திரட்டுதற்கேற்றவாறு அமையு மாயின் சோதனை சரியானதாகும்; எளிதுமாகும். ஆராய்ச்சி எடுகோள்களாகப் பொதுப்பட அமையும் எடுகோள்களைச் சோதனைக்கேற்ற செயற்படும் எடு கோள்களாக மாற்ற வேண்டும். பாராட்டு அச் செயலை மீண்டும் அடிக்கடி செய்யத் தூண்டும் என்பது ஆராய்ச்சி எடுகோள். வீட்டிற்கு வரும் விருந்தினருக்கு வணக்கம் சொல்லும்போது பாராட்டு பெறும் சிறுவனிடத்து, வணக்கம் சொல்லும் செயல் பாராட்டுப் பெறுவதற்கு முன்பிருந்ததைவிட, அடிக் கடி (எண்ணிக்கையில் அதிக அளவு) நிகழும் என்பது செயற்படும் எடுகோள். செயற்படும் எடுகோளை ஒட் டியே நடைமுறைச் சான்றுகள் தேடப்பெறும்.

செயற்படும் எடுகோள்களை நேரடியாய்ச் சோதித்தறிய முடியாது. எனவேஇதனைப் புள்ளியியல் எடுகோளாய் மாற்றி அப்புள்ளியியல் எடுகோளைச் சரிபார்த்தல் வேண்டும். புள்ளியியல் எடுகோள் செயற்படும் எடுகோளுக்கு எதிரானதாய் இருக்கும். ஆராயப்படும் தன்மை இல்லை என்றோ தொடர்பு இல்லை என்றோ வேறுபாடு இல்லை என்றோ அது கொள்ளும். இவ்வாறான வெற்று எடுகோள் பொய்யாகுமானால் அதற்கு எதிரான செயற்படும் எடுகோள் மெய்யெனக் கொள்ளப்படும். அதன் வழி ஆராய்ச்சி எடுகோளின் உண்மையும் பெறப்படும். வேற்றுமை இல்லை என்பது நடைமுறைச் சான்று களால் மெய்ப்பிக்கப்படுமாயின் வேற்றுமை உண்டு என்பதுதானே முடிவாகும். உண்மையில் முடிவு செய் யப்படுவது வேற்றுமை இல்லை, தொடர்பு இல்லை, இத்தன்மை இல்லை என்ற வெற்றுக் (புள்ளியியல்) கோட்பாடுகளே. சோதனைக்குட்படுத்துவதும் புள்ளி யியல் எடுகோள்களையே. நடைமுறைச் சான்று களால் புள்ளியியல் எடுகோள்கள் மெய்ப்பிக்கப்படு மாயின், அவைகட்கெதிரான செயற்படும் எடுகோள் களுள் அவைகட்காதாரமான ஆராய்ச்சி எடுகோள் களும் உண்மையல்ல எனக் கொள்ளப்படும். ஆராய்ச்சி எடுகோள்கள் நன்கு அமையுமாயின் புள்ளியியல் எடு கோள்கள் பொய்யாகும். புள்ளியியல் எடுகோள் களைப் பொய்யெனக்காட்டி, ஆராய்ச்சி எடுகோள் களை மெய்யென ஆராய்ச்சிகளில் நிறுவுவர். புள்ளி யியல் அல்லது வெற்று எடுகோள்களை அவற்றை மறுப்பதற்கென்றே அமைத்துக் கொள்வர். அவை உண்மையென நம்புவதில்லை. அவை மறுக்கப்படின், அவைக்கெதிரான ஆராய்ச்சி எடுகோள்கள் மறுக்கப் படுவதில்லை.

ஆய்வில் ஆராய்ச்சி எடுகோள்கள் உண்மை யானவை என உறுதிப்பட நிரூபிக்கப்படுவதில்லை. அவை மறுத்தற்குரியனவல்ல என்றே முடிவு செய்கின் றனர். மறுத்தற்குரியன அல்ல என்ற அளவில் அவை முழுதும் உண்மையென ஏற்றுக் கொள்ளத்தக்கன என்றாய்விடாது. உண்மையில் ஆய்வின் முடிவில் எடு கோள்களை உண்மையானவை என ஏற்றுக் கொள் வதில்லை. அவை உண்மையல்லஎன்று மறுத்தற்குரியன அல்ல என்றே முடிவு செய்கின்றனர். அவ்வாறு முடிவு செய்யும்போது அவை உண்மையாதற்கான வாய்ப்பு கள் மிகக் கொண்டுள்ளன. ஆய்வின் முடிவாய்ப் பெறும் அறிவியல் உண்மைகள் என்பன பின்னா ளில் அவை சரியானவை அல்ல என நிரூபிப்பதற்கான வாய்ப்புகளை மிக அரிதாகக் கொண்டுள்ள விவரங் களே. ஆராய்ச்சியாளர் அமைக்கும் எடுகோள்களும் அத்தகையனவாதல் வேண்டும்.

எடுகோள்கள் உண்மையாதற்கான வாய்ப்புகள் மிகப் பெற்றுள்ள இடைக்கால முடிவுகள் ஆராய்ச்சி

எடுகோள்கள் செயற்படும் எடுகோள்கள், புள்ளியியல் எடுகோள்கள் என விரித்து, நடைமுறைச் சான்றுகளைத் திரட்டி, அவற்றின் அடிப்படையில் சோதித்தறியப்படுகின்றன. ஆராய்ச்சி முடிவில் புள்ளியியல் எடுகோள்கள் மறுத்தற்குரியன என்றாகும்போது, அவற்றிற்கெதிரான செயற்படும் எடுகோள்களும் அவற்றிற்காதாரமான ஆராய்ச்சி எடுகோள்களும் மறுத்தற்குரியன அல்ல என்றாகின்றன. இவ்வாறு ஆராய்ச்சியில் எடுகோள்களைத் தக்க காரணங்களின் அடிப்படையில் அமைத்து, புள்ளியியல் எடுகோள்களின் மூலம் அவற்றைச் சோதித்து, ஆராய்ச்சியாளர் அமைத்த எடுகோள்கள் சரியானவையாதற்கான வாய்ப்புகள் மிகக் கொண்டுள்ளன என்பது மறைமுகமாக (நேரடியாயில்லாது) முடிவு செய்யப்படுகின்றது.

பி.எஸ்.பா.

துணை நூல்கள்:

**Best, John, W.,** Research in Education, Prentice Hall of India, New Delhi, 1983.

**Travers, Rebert ,M.W.,** An Introduction to Educational Research, Macmillan, New York, 1978.

**எடுத்துக்காட்டாய்வு முறை:** ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாதிரிகள் (Cases) பற்றிய செய்திகளைச் சேகரித்து, அம்மாதிரிகள் பற்றி அறிக்கை (Report) தயார் செய்தல் எடுத்துக்காட்டாய்வு முறை எனப்படும். ஒரு மாதிரி என்பது ஒரு பள்ளியாகவோ கல்லூரியாகவோ நிறுவனமாகவோ ஒரு குறிப்பிட்ட குழுவாகவோ ஒரு குடும்பமாகவோ ஒரு சமுதாயமாகவோ இருக்கலாம். இவ்வாறு, மாதிரியாக எடுத்துக்கொண்ட ஒன்று அதைப் போன்ற பல மாதிரிகளுக்கு எடுத்துகாட்டாக அமைதல் இன்றியமையாததாகும்.

எடுத்துக்காட்டாய்வு முறை பொதுவாக நடைமுறையிலுள்ள சமூக உண்மைகளை அறிந்து கொள்வதற்காக மேற்கொள்ளப்படும். ஒரு மாதிரியைச் சுற்றியுள்ள காரணிகளை ஆழமாக அலசி ஆராய்ந்து, அம்மாதிரியின் இக்கால நிலை, வளர்ச்சி, மாற்றம் ஆகியவற்றுக்கான காரணங்கள் எடுத்தியம்பப்படுகின்றன. எடுத்துக்காட்டாய்வு முறையில் பொதுவாக நீள்கால அணுகுமுறையில் (Longitudinal Approach) ஒரு குறிப்பிட்ட கால அளவில் ஒரு மாதிரியின் வளர்ச்சி விளக்கப்படுகிறது. பொதுவாக, மாதிரியின் சிறப்புக் கூறுகள் (Element of Uniqueness) என்னென்ன என்பது எடுத்துக்காட்டாய்வு முறையில் ஆராயப்படுவதில்லை; மாறாக அம்மாதிரியின் வகைத்தன்மை (Element of Typicalness) ஆராயப்படும்.

ஒரு மாதிரி பற்றிய செய்திகளை உற்றுநோக்கல் (Observation), நேர்காணல் (Interview), வினாநிரல் (Questionnaire), கருத்து நிரல் (Opinionnaire) போன்ற உத்திகளைப் பயன்படுத்தியும் செய்தித்தாள்கள், ஆவணங்கள் (Records) போன்றவற்றிலிருந்தும் சேகரிக்கலாம். ஒரே ஒரு மாதிரியை மட்டும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும்போது அம்மாதிரியின் சிறப்புக்கூறு மட்டுமே வெளிப்படும் என்பதால் பொதுமைக் கருத்து (Generalisation) உருவாகுவதற்கு இடமில்லை. எனவே எடுகோள் (Hypothesis) அமைத்துப் பொர்துமைக் கருத்து உருவாக்குதல் இயலாது போகலாம். எடுத்துக்காட்டாய்வு முறையில் பொதுமைக் கருத்து உருவாக்க ஆராய்ச்சியாளர் எண்ணினால் ஒரே மாதிரியான பல மாதிரிகளை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டு, எடுகோள்கள் அமைத்துச் சரிபார்த்த பின்னர்ப் பொதுமைக் கருத்துகளை உருவாக்கலாம்.

எடுத்துக்காட்டாய்வு முறையைப் பயன்படுத்தி முதன் முதலில் உளநோய் மருத்துவத்தில் (Psychiatry) மனநோயாளிகளின் நடத்தைகளை (Neuratic Behaviours) ஆராய்ந்தவர் சிக்மண்டு பிராய்டு (Sigmund Freud). மதுவருந்துவோர் (Alcoholics), போதை மருந்துக்கு உட்படுவோர் (Drug Addicts), இளம் நடத்தைப் பிறழ்வுக் குற்றவாளிகள் (Juvenile Delinquents), இடம்பெயரும் தொழிலாளர்கள் (Migratory Workers), நிருவாகச் செயல் அலுவலர் (Executives), நீக்கிரோ இனத்தவர் (Negroes), அமெரிக்க இந்தியர் (American Indians) என ஒவ்வொரு மாதிரியின் நடத்தைப் பண்புகளை வகைப்படுத்துவதற்கு எடுத்துக் காட்டாய்வு முறையே பெரிதும் பயன்படுத்தப்பட்டது.

எடுத்துக்காட்டாய்வு முறை நான்கு நிலைகளில் சிறந்த ஆராய்ச்சி முறையாகப் பயன்படுத்தப்படுகிறது. 1. இனக் குழுவியல் எடுத்துக்காட்டாய்வு முறையில் (Ethnographic Case Study) ஒரே ஒரு மாதிரி மட்டும் பங்கு கொள் உற்று நோக்கல் (Participant Observation) உத்தியைப் பயன்படுத்தி அந்த மாதிரியின் பண்பாட்டு, சமுதாய முறைகள் ஆழமாக ஆராயப்படுகின்றன. 2. மதிப்பீட்டு எடுத்துக் காட்டாய்வு முறையில் (Evaluative Case Study) ஒரு மாதிரி அல்லது பல மாதிரிகளின் நிறை, குறைகள் மதிப்பீடு செய்யப்பட்டு, அம்மாதிரிகளின் வளர்ச்சிக்கு முடிவு எடுத்தல் (Decision-Making) நடத்தப்படுகிறது. 3. கல்வி எடுத்துக்காட்டாய்வு முறையில்

(Educational Case Study) சமுதாய முறைகளை ஆராய்வதோ மதிப்பீடு செய்வதோ இல்லை.மாறாக, கல்வித் தொடர்பான செயல்களை முழுமையாக அறிந்து கொள்ள இம்முறை பயன்படுத்தப்படுகிறது. 4, செயலறிவு எடுத்துக்காட்டாய்வு முறை (Case Study in Action Research) மாணவர்களின் கற்றலை அதிகரிக்கச் செயல்பற்றிய அறிவு (Feed back) வழங்கப்படுவதற்காகப் பயன்படுத்தப்படுகிறது.

எஸ்.த.

துணை நூல்கள்:

**Ball**, S.J., Beactiside Comprehensive: A Case Study of Secondary Schooling, Cambridge University Press, Cambridge, 1981.

**Best**, J,W., Research in Education, Prentice-Hall of India, New Delhi, 1983.

***எடைகள், அளவைசார் குற்றங்கள்***: இந்தியத் தண்டனைச் சட்டத்தில் 264 முதல் 267 வரையிலுள்ள பிரிவுகள் எடைகள், அளவைகள் தொடர்புடைய குற்றங்கள் பற்றியும் (Offences Relating to Weights and Measures) அவற்றிற்குரிய தண்டனைகள் பற்றியும் உரைக்கின்றன.

இப் பிரிவுகளின்படி, ஒருவர் போலியான எடை அல்லது நீட்டல் அளவை அல்லது கொள் அளவை எதையும் பயன்படுத்துவது, தம்வசம் வைத்திருப்பது, உருவாக்குவது, விற்பது அல்லது விற்பதற்கான ஏற்பாட்டைச் செய்வது குற்றமாகும்.

இவை ஒவ்வொன்றிற்கும் ஓர் ஆண்டுக் காலம் வரை நீடிக்கக் கூடிய அளவில் சிறை அல்லது ஒறுப்புக்கட்டணம் அல்லது அவை இரண்டும் தண்டனைகளாகும்.

**காவல் துறையினரின் தடுப்பு நடவடிக்கை:** ஓர் இடத்தில் போலி எடைகள், நீட்டல் அளவைகள், கொள் அளவைகள் இருப்பது அல்லது பயன்படுத்துவது தெரியவரும் போதெல்லாம், அவ்விடத்திற்குச் சென்று அதிகாரவரம்புடைய காவல் நிலையப் பொறுப்பு அலுவலர் சோதனையிடவும், அப்போலி எடைகள், நீட்டல் அளவைகள், கொள் அளவைகள் ஆகியவற்றைக் கைப்பற்றவும் செய்யலாம். புலமை.

***எண்குணங்கள்*** பரம்பொருள் எனப்படும் இறைவன் அல்லது அவனுக்கு ஒத்த நிலையில் வைத்துப் போற்றப்படும் சமய முதற் குரவர் போன்றோர்க்கு அமைந்துள்ளனவாகக் கருதப்படும் பண்புகள் எட்டினையும் குறிக்கும். பரம்பொருள் குணங்களற்றது (நிர்க்குணமானது) என்று கூறும் கொள்கையினரும் உள்ளனர். அப்பரம்பொருளை அருவ நிலையில் உணர்ந்து போற்றுவது மக்கள் எல்லோருக்கும் எளிதாகாது. மக்கள் அனைவரும் உணர்ந்து போற்றிப் பயன்கொள்வதற்கு வாய்ப்பாகச் சைவம், வைணவம் போன்ற பண்பட்ட சமயங்கள் அருவ வழிபாட்டோடு, உருவ வழிபாட்டினையும் சிறப்பாக அமைத்துள்ளன. பரம்பொருளை உருவ நிலையில் காணும்போது, அதற்குரிய பண்புகளை (குணங்கள்) ஏற்றிக் காட்டுவதும், அப்பண்புகளால் அப்பரம் பொருளைப் போற்றுவதும் இன்றியமையாதனவாயின. எல்லாக் குணங்களும் குறைவறப் பொருந்தியுள்ள இறைவனின்—பரம்பொருளின் குணங்களை எட்டு வகையாகப் பகுத்துக் குறிப்பிட்டுள்ளனர் சான்றோர். பின்வந்தவர்களும் தங்கள் சமயம் கூறும் பரம்பொருளையோ தங்கள் சமய முழு முதற் குரவரையோ குறிப்பிடுங்கால், அந்த எட்டு வகைக் குணங்களையும் ஏற்று, அவற்றைத் தங்கள் சமயங்களுக்கு ஏற்றவாறு விளக்கியுள்ளனர். அதனால் இறைவனின் எட்டுக் குணங்களும் வெவ்வேறு சமயங்களில் வெவ்வேறு பெயர்களால் குறிப்பிடப்பட்டுள்ளன.

எண்வகைக் குணங்களைப் பொருந்தும் காரணத்தால் இறைவன் எண்குணத்தான், எண்குணன் என்று கூறப்பெற்றான். தம் காலத்தில் நிலவிய சமயங்களின் மெய்ம்மைகளை உணர்ந்து, அவை அனைத்திற்கும் பொதுவாக அமையுமாறு கடவுள் வாழ்த்து அமைக்க முற்பட்ட திருவள்ளுவர், இறைவனைக் குறிக்க 'எண்குணத்தான்' (குறள்-9) என்னும் பெயரைப் பயன்படுத்தினார். பின்னர்த் தோன்றிய சிலப்பதிகாரம் போன்ற சமய அடிப்படையிலான நூல்களும் இறைவனை 'எண்குணப் பெயரால்' குறிப்பிடலாயின. முழு முதற் கடவுளை உடன்படாத சமணம், புத்தம் ஆகிய சமயங்களும் தம் சமய முழு முதற் குரவாகிய அருகர், புத்தர் ஆகியோரை எண்குணத்தவர்களாகக் காட்டியுள்ளன. 'எண்குணத்தான்' என்னும் திருக்குறள் தொடரினை விளக்கும் பரிமேலழகர், 'எண் குணங்களாவன: தன்வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கை உணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை என இவை. இவ்வாறு சைவாகமத்துக் கூறப்பட்டது' என்று குறிப்பிட்டுள்ளார். அருகதேவருடைய எட்டுக் குணங்களாக அனந்த ஞானம்,அனந்த தரிசனம், அனந்த வீரியம், அனந்த சுகம், அனந்த நாமம், நிட்களம், நிராயுசியம், சற்பாவனை ஆகியவற்றை அச்சமயச் சான்றோர் கூறுவர். அவற்றைச் சிலப்பதிகார உரையாளர்களாகிய அரும்பத உரையாசிரியரும் அடியார்க்குநல்லாரும் குறிப்பிட்டுள்ள

னர். இத்தகைய எண்குணங்கள் புத்தபிரானுக்கும் கூறப்படுகின்றன. 'நற்காட்சி, நல்லூற்றம், நல் வாய்மை, நற்செய்கை, நல்வாழ்க்கை, நன்முயற்சி, நற்கடைப்பிடி, நல்லார் இணக்கம் என்ற எண்வகை நெறிகளையும் மக்களுக்கு வழங்கிய வள்ளலை எண் குணத்தான் எனக் கூறுதல் ஏற்புடையதே' என்று புத்தரை இப்பெயரால் குறிப்பிட்டதற்கு விளக்கம் கூறுவாருமுளர். யோக நிலையில் கூறப்படும் அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் ஆகிய எட்டினையும் எண் குணங்களாகக் குறிப்பிடுவாருமுளர். சிவபெருமான் எண்குணத்தவராக விளங்கும் தன்மையினைத் திரு நாவுக்கரசர், 'எட்டுக் கொலாமவர் ஈறில் பெருங் குணம்' (திருநாவுக். 4-18-8) எனக் கூறியுள்ளார்.

அ.மா.ப.

**எண்டபீ** உகாண்டாவின் முன்னாள் தலை நகர். இந்நகரம் விக்டோரியா ஏரியில் அமைந்துள்ள முந்நீரகப் பகுதியில் அமைந்துள்ளது; தாவர இனப் பூங்காக்களுக்குப் புகழ்பெற்றது. உகாண்டாவிலுள்ள வான்வழி நிலையங்களுள் மிகப்பெரிய வான்வழி நிலையம் எண்டபீயில் (Entebbe) உள்ளதாகும். இங் கிருந்து பல்வேறு நாடுகளுக்கும் விமானங்கள் செல் கின்றன. இந்நகரத்தை கி.பி. 1893-ஆம் ஆண்டு ஆங்கிலேயர் நிறுவினர். இது கி.பி. 1894 முதல் 1962 வரை உகாண்டாவின் தலைநகரமாக விளங்கியது. உகாண்டா சுதந்திரம் பெற்ற பொழுது தலைநகரம் கம்பாலாவிற்கு (Kambala)மாற்றப்பட்டது. தெ.பா.

**எண்டிமியன்**: கிரேக்கப் புராணங்கள் குறிப் பிடும் எண்டிமியன் (Endymion) என்னும் ஆட்டிடை யன்; திங்கட் பெண் தேவதையால் காதலிக்கப் பெற்ற ஓர் இளைஞன். இருவருக்கும் 50 பெண்கள் பிறந்தனராம். அந்த அழகனுக்கு அழியாத இளமை யும் இடையறா உறக்கமும் வரமாகக்கிடைத்த பேறு களாகும். கவிஞர் கீட்சு எண்டிமியனைப் பற்றி கி.பி. 1818-ஆம் ஆண்டில் எழுதிய நீண்ட கவிதையின் தொடக்கம் 'அழகான பொருள் எப்பொழுதுமே இன் பம்' (A Thing of Beauty is joy for ever) என்னும் வரியாகும். என்டிமியனைப்பற்றிப் பல கட்டுக்கதை களும் பல ஓவியங்களும் உள. உரோமானியரின் சவப் பெட்டிப் புறங்களில் அவனைச் சித்திரிக்கும் ஓவியங் கள் காணப்படுகின்றன. இக்காலத்திய வாட்சு முத லிய ஓவியர்களும் இவன் கதையை ஓவிய வடிவில் தீட்டியுள்ளனர். தெ.பா.

**எண்ணறிவுச் சிந்தனை**: மனிதனின் உயர் நிலைச் சிந்தனைக்கு அடிகோலுவன மொழியறிவும் எண்ணறிவும். பொருளைப் பற்றி எழும் சிந்தனை பருப்பொருளை விட்டுக் குறியீடுகளை ஒட்டி எழுந்து, பின் நுண்கருத்துகளின் அடிப்படையில் படிப்படியாய்ப் பரந்து விரிந்து செல்லும்.

பொருள் புலப்படாப்போதும் பொருளைப் பிரிந்து எழும்போதும் சிந்தனை பிறக்கின்றது. பொருளைக் கற்பித்துக் கொண்டு சிந்தனை வளரும். எண்கள் பொருளோடு ஒட்டிய கருத்துகள் அல்ல; பொருள்களைப் பிரிந்து தனித்து நிற்கும் குறியீடு பெற்ற கருத்துகள் அவை. இக்கருத்துகள் பற்றிய சிந்தனையும் இக்கருத்துகளை நிலைக்களனாகக் கொண்டெழும் மேல்நிலைச் சிந்தனைகளும் எண் ணறிவுச் சிந்தனை எனப்பெயர் பெறும்.

எண் என்பது தொடர்ந்து நீண்டு செல்லும் ஒரு கருத்து. காலம், தொலைவு, வேகம், அளவு போன்ற பல கருத்துகள் எண் கருத்தை ஒட்டியே அமைவன. எண்ணறிவுச் சிந்தனை எவ்வாறு உருப்பெற்று வளரு கின்றது என்பது பற்றிப் பினே (Binet), பியாசே (Piaget) போன்ற உளவியலறிஞர்கள் விளக்கியுள் ளனர். இருதொகுப்புகளுள் அல்லது குவியல்களுள் எதில் அதிக எண்ணிக்கை அல்லது குறைவான எண்ணிக்கையுடைய பொருள்கள் உள்ளன எனக் கண்டுகொள்வதில் எண்ணறிவுச் சிந்தனை தொடங்கு கின்றது. எண் பற்றிய சிந்தனை இவ்வாறு சார் புடைய ஒன்றாகவே, ஒரு தொகுப்பில் உள்ள எண்ணிக்கையை மிகை, குறை என்ற அளவிலேயே தொடக்கத்தில் அமைகின்றது.

பத்துமாதக் குழந்தையால் கூடத் தன் புலக் காட்சிக்குட்பட்ட பொருள்களின் எண்ணிக்கை ஒன்று குறையும்போது, அக்குறைவை உணர முடிகின்றது எனப் பினே குறிப்பிடுகின்றார். எண் பற்றிய கருத்து இயல்பூக்கமாகவே (Instinctive) உள்ளதா என்பது பற்றி விரிவாக ஆராய்தல் வேண்டும் என அவர் விரும் பினார். பின்வந்த ஆய்வுகள் எண் சிந்தனை தொடக் கத்தில் சார்புடைய (Relative) ஒன்றாகவே அமை கின்றதெனவும், ஆயினும் இச் சிந்தனை சரியானதன் றெனவும், தவறான முடிவுகட்கு இட்டுச் செல்வ தாய் அமைவதெனவும், எண்கள் பற்றிய தனித்த (Absolute) சார்புபடாக் கருத்து எண்ணத் தெரிந்த பின்னரே அமைகின்றதெனவும் காட்டின.

வேறு வேறு எண்ணிக்கையுள்ள பொருள்களை யுடைய இரு தொகுப்புகளைக் காணும்போது, இரண் டாண்டுக் குழந்தைக்கு எண் பற்றிய சிந்தனை எவ் வாறமைகின்றது? எண்ணிக்கை வேறுபாட்டைக் குழந்தை சார்புடைக் குறியீடு (Relative Code)

கொண்டே அதிகம் அல்லது குறை என முடிவு செய்கின்றது. ஒவ்வொரு தொகுப்பிலும் எத்தனைப் பொருள்கள் உள்ளன என்ற அறிவு பெறா நிலையிலும், எண்ணத் தெரியாத போதும் சார்புடைக் குறியீடு மூலம் எண்ணிக்கை பற்றிய சிந்தனையைக் குழந்தை பெறுகின்றது. அதிகம், குறைவு என்ற முடிவைச் சில குறிப்புகளின் அடிப்படையில் எடுக்கின்றது. இக்குறிப்புகள் தவறாகும்போது முடிவுகளும் தவறாகின்றன. பெரும்பாலும் நீளக்குறிப்பை (Length) வைத்து எடுக்கப்படும் முடிவுகள் தவறாகி விடுகின்றன. சம எண்ணிக்கையுள்ள பொருள்களை இரு வரிசைகளில் பின்வருமாறு அமைத்து எவ்வரிசையில் எண்ணிக்கை அதிகம் எனக் கேட்டால், இரண்டு அல்லது மூன்று வயதுக் குழந்தை நீளம் அதிகமுள்ள வரிசையில் எண்ணிக்கை அதிகம் எனக் கூறுகின்றது.

0 0 0 0 0 0 0 0

0 0 0 0 0 0 0 0

நீளக் குறிப்பில்லாத போது ஒன்றுடன் ஒன்றைப் பொருத்திப் பார்க்கும் குறிப்பைக் கொண்டு முடிவெடுக்கின்றது குழந்தை. இக் குறிப்புப் பெரும்பாலும் சரியான சார்புடைக் குறியீடு பெற உதவும்.

0 0 0 0 0 0 0 0 0 0 (அ)

0 0 0 0 0 0 0 0 0 (ஆ)

ஒன்றுடன் ஒன்றைப் பொருத்திப் பார்த்து ‘அ’ தொகுப்பில் ‘ஆ’ தொகுப்பைக் காட்டிலும் அதிக எண்ணிக்கை என்ற சரியான சார்புடைக் குறியீட்டுச் சிந்தனையைக் குழந்தை பெறுகின்றது. நீளக் குறிப்போ பொருத்திப் பார்க்கும் குறிப்போ இல்லாத போது, தனக்குத் தோன்றியவாறு ‘ஒற்றையா இரட்டையா’ என்ற முறையில் அதிகமா குறைவா என முடிவெடுக்கின்றது.

0000000 0000000 000000

00000 0000000 00000000

மேலே காணப்படுவது போன்ற அமைப்பில் குறிப்பேதும் காணாது தடுமாறி, மனம்போனவாறு குழந்தை முடிவெடுக்கின்றது.

எண்ணறிவுச் சிந்தனைச் சார்புடைய ஒன்றாய்த் தொடங்கித் தவறான முடிவுகளையும் கொண்டு, அதன் பின்னரே சரியான முடிவுகள் பெறவும், சார்புபடா எண்ணறிவு பெறவும் படிப்படியாய் வளருகின்றது. எண்களைப் பற்றிய சார்புபடாச் சிந்தனை எண்ணத் தெரிந்த பின்னரே வளருகின்றது. ஆயினும் எண்ணத் தெரியுமுன்னரே. ஐந்து வரையான எண்களைச் சார்புபடாவாறே சிந்தித்துணரும் ஆற்றலைக் குழந்தைகள் இயல்பாய்ப் பெற்றுள்ளனர் என பெக்மன் (Beckman, 1924) என்பாரின் ஆய்வுகள் கண்டன. ஐந்து வரையான எண்ணறிவு சிறு குழந்தைகளிடமும் சார்புபடாச் சிந்தனை வழியே உண்டாகின்றது. எனவே சிறு எண்களுக்குச் சரியான சார்புபடாச் சிந்தனையையும் பெரும் எண்களுக்குப் பெரும்பாலும் தவறுபடும் சார்புடைச் சிந்தனையையும் குழந்தைகள் மேற்கொள்ளுகின்றன. தவறுபடும் சார்புடைச் சிந்தனை நீளக்குறிப்பின் அடிப்படையில் எழுவதாகும். சார்புடைச் சிந்தனையில் எண்களுக்குக் குழந்தைகள் நீளக் குறிப்பை ஏன் தேர்ந்து கொள்ளுகின்றன என்பது ஆராய்ச்சியாளர்களுக்கு இன்னும் விளங்காப் புதிராகவே உள்ளது.

எண்ணக் கற்றுக் கொண்டபின், எண்கள் பற்றிய சார்புபடாச் சிந்தனை வளருகின்றது. ஒரு தொகுப்பில் உள்ள பொருள்களின் எண்ணிக்கையைப் பிறிதொன்றொடு சார்புபடுத்தி மிகுதி, குறைவு என முடிவெடுக்காது, பொருள்களின் எண்ணிக்கை இத்தனை எனச் சார்புபடாச் சிந்தனைவழி முடிவு செய்யக் கற்றுக் கொள்ளும்போது, எண்ணறிவுச் சிந்தனை சரியான வழியில் செல்லுகின்றது. எண் என்பது ஒரு தொடர் கருத்து; குறிப்பிடும் ஒவ்வோர் எண்ணும் இத்தொடரில் (வரிசையில்) அதற்கென அமைந்த ஒரு தனி இடத்தைப் பெறுகின்றது. ஒவ்வோர் எண்ணையும் அதற்கென அமைந்த தனி இடத்தோடு சரியாய்ப் பொருத்திக் காணுவதே எண்ணறிவு; இப் பொருத்தத்தை அமைத்துக் கொள்ளுவதே எண்ணறிவுச் சிந்தனை. இச் சிந்தனையில் ஒவ்வோர் எண்ணும் தனித்து நின்று தன்னிடத்தை, தன் மதிப்பைப் பெறுகின்றது. எனவே இது சார்புபடாக் குறியீடு (Absolute Code) ஆகும். இச்சார்புபடாக் குறியீடுகள் மூலம் எண்களை அறியும்போது எண்ணறிவு தவறுபடாது சரியாக அமையும்.

எண்ணறிவுச் சிந்தனை சார்புபட எழுந்து, பின் சார்புபடாது தனித்திருக்கும் குறியீடுகளை ஒட்டி அமையும். சார்புபட எழும்போது சிந்தனைக்குத் தூண்டுகோல்களாக நீளக்குறிப்பும், பொருத்திப் பார்க்கும் குறிப்பும் பயன்படுகின்றன. நீளக்குறிப்புப் பெரும்பாலும் தவறான முடிவுகளையே காட்டும். எண்ணத் தெரிந்த பின் சிந்தனை சார்புபடாக் குறியீடுகளைக் கொண்டே சரியாக விரியும்.

எண்களை அவ்வவற்றிற்கான தனிநிலையில் சிந்தித்துணரும் ஆற்றல் கைவந்தபின், எண்ணறிவுச் சிந்

தனை பெரும் எண்களைப் பற்றி உயர்ந்து செல்லும். பத்து, நூறு, ஆயிரம் என எண்களைச் சிந்தித்துணர்வது எளிதாகலாம். ஆனால் 'பல நூறாயிரம் கோடி' எனச் சரியாய்ச் சிந்தித்தறிதல் எல்லார்க்கும் எளிதன்று. 'மிகப் பெரிய எண்' என்ற எண்ணம் கொள்ளலாமேயல்லாது, எவ்வளவு பெரியது, எண் தொடரில் அதன் தனி இடம் எது எனச் சரியாய்ச் சிந்தனைக்குட்படுத்துவது, சிந்தனைத் தெளிவுபெறுவது, சிந்தனையை உயரெல்லைக்குக் கொண்டு செல்வார்க்கே முடியும். எண்ணறிவுச் சிந்தனை தனித்து நிற்கும் எண் குறியீடுகளை விட்டு, இக்குறிடுறிகளுக்குப் பொதுவான எழுத்துக் குறியீடுகள் கொண்டமையும்போது இன்னும் விரிந்து உயரும். பி.எஸ்.பா.

துணை நூல்கள்:


**Brainerd**, C.J., The Origins of the Concept of Number, Praeger, New York, 1979.

**Freudenthal, H.,** Mathematics as an Educational Task, Reidel, Dordrecht, 1973.

**Gelman, R. and Gallistel,** C.R., The Child's Undsrstanding of Number, Harvard University Press, Cambridge, Massachusets, 1978.


**எண்ணாயிரம்** தென் ஆர்க்காடு மாவட்டம் விழுப்புரம் வட்டத்தில் செஞ்சி-திண்டிவனம் சாலையில் அமைந்துள்ள தொன்மையான சிற்றூர். சோழர் காலத்தில் இவ்வூர் பிரமதேயமாகப் புகழ் பெற்று விளங்கியதுடன், தனியூர் என்ற தகுதியையும் பெற்றுத் திகழ்ந்தது. இவ்வூரில் அழகிய நரசிம்ம பெருமாள் என்ற வைணவத் திருக்கோயில் உள்ளது. இது இராசராச விண்ணகர் என்று குறிக்கப்பட்டது. முதலாம் இராசராசன் காலத்திலிருந்து இவ்வூர் சிறப்புப் பெற்றது. அழகிய நரசிம்மப் பெருமாள் கோயிலில் உள்ள சோழர் கல்வெட்டுகள் பல வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த செய்திகளைக் கூறுகின்றன. இவ்வூரில் வேதங்களைக் கற்பிக்கும் கல்லூரி ஒன்று முதலாம் இராசேந்திரன் காலத்தில் இருந்தது. இக்கல்லூரி கோயிலுக்கு உட்பட்ட பகுதியில் நடத்தப்பட்டது. பதினான்கு பேராசிரியர்கள் இக்கல்லூரியில் ஆசிரியர்களாகப்பணியாற்றினர்.வேதங்களில் இருக்கு, யசுர் ஆகியவற்றையும், சூத்திரங்களில் சந்தோகம் (Chandoga), தலவகாரசாமசு (Talavakarasamas), வசசனேயம் (Vajasaneya), யாக்ஞவல்கியம் (Yagnavalkya), பௌத்தயானியா கிரிகம்(Bauohayaniya grigha), கல்பம் (Kalpa), கதகம் (Kathaka) ஆகியவற்றையும் ஆசிரியர்கள் பயிற்றுவித்தனர். ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டது. இருநூற்று எழுபது முதுநிலை மாணவர்களும் 70 இளநிலை மாணவர்களும் இங்குப் பயின்றனர். இவர்கள் தங்கிப் படிக்க விடுதியும் இருந்தது. இவ்விடுதியில் இவர்களுக்கு அரசே உண்ண உணவும் அளித்தது. மாணவர்கள், ஆசிரியர்கள் தவிர கற்றறிந்த அறிஞர்களுக்கும் இவ்விடுதியில் தங்க வசதிகளும் உண்ண உணவும் அளிக்கப்பட்டன.

சு.இரா.

**எண்ணுப்பெயர்**: எண் என்பது எடுத்தல், முகத்தல், நீட்டல், சார்த்தல், எண்ணல் முதலிய அளவைகளான் எண்ணப்படும் பருப்பொருளும் நுண்பொருளுமாகிய வடிவங்களையும் உருவங்களையும் தனியாகவும் குழுவாகவும் நிரலாகவும் உணரவும் உணர்த்தவும் அமைந்து வழங்கும் கணிதக் குறியீடாகும். அவற்றைச் சுட்டி உணர்த்தும் சொற்கள் எண்ணுப்பெயராகும்.

எண் என்பது எண்ணுதலான் அமைந்த காரணப் பெயராகும். எண்ணுப்பெயர்கள் பொருள்களின் இயற்பெயராகா. பொருளை அளவிட்டுணர்த்தும் குறிப்புப் பெயர்களேயாகும். எண்ணுதல்-கருதுதல். கருதுதலைக் கண்ணுதல் என்பார். அதனால் எண்ணினைக் கணக்கு எனல் நூல் வழக்காகும். நியமித்ததொரு எண்ணினும் மிக்கு வருதலை மேற் கணக்கு என்றும் வழங்குதல் பண்டைத் தமிழ் வழக்கு. ஒன்றனது பகுதிகளைக் கணித நூலார் பின்னம் என்பர். 'அம்சம்' என்பது வடமொழி; கூறு என்பது தமிழ் வழக்கு.

பொருள்களை வரிசைப்பட எண்ணுதலை வரிசை எண் (Cardinals) எனவும் இடங்கருதி எண்ணுதலை முறைமை எண் (Ordinals) எனவும் கூறுவர்.

தமிழ்மொழியில் எண்ணுப்பெயர்கள் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது, பத்து, நூறு, ஆயிரம், கோடி, தாமரை, வெள்ளம், ஆம்பல் என்பனவாகும். பழந்தமிழ் நூல்களிற் கோடி என்பது அருகிக் காணப்படுகின்றது. தாமரை, வெள்ளம், ஆம்பல் என்பவை வழக்கில் இல்லை. ஆயிரத்தின் மேல் எல்லை பதினாயிரம், நூறாயிரம் என அடையடுத்து வழங்கும். நூறாயிரம் என்பது இக்காலத்து இலட்சம் என்னும் வடமொழிப் பெயரான் வழங்கப்படுகிறது. கணித நூல்களில் கோடிக்கு மேற்பட்ட எண்ணுப்பெயர்கள் அற்புதம், நிற்புதம், கர்வம், மகாகர்வம், பதுமம், மகாபதுமம், கேடாணி, மகாகேடாணி, சங்கம், மகாசங்கம், கிதி, மகாகிதி, சேயம், மகாசேயம், சாகரம், மகாசாகரம், அரி, மகாவரி, சங்கை, மகாசங்கை, பணி, மகாபணி, கிருது,மகாகிருது என வழங்கப்பட்டுள்ளன.

பழந்தமிழுள் ஒன்றன் கூறாக முக்கால், அரை, கால், அரைக்கால், மாகாணி (வீசம்), மா, முந்திரி என்பன வழங்கிவந்துள்ளன. இவற்றுள் சில பெயர்கள் கல்வெட்டுகளில் பயின்றுள்ளன.

எண்ணுப்பெயர்கள் பொருட்பெயர்களுக்கு அடையாக வந்து அவற்றின் அளவையை உணர்த்தும். ஒரூர், ஒருநூல், இருசுடர், முத்தமிழ், நான்மறை, ஐம்பூதம், அறுகால், எழுபிறப்பு, எண்டிசை, ஒன்பான்சுவை, பதின்கலம் என வரும். இவற்றை நோக்கின் எண்ணுப்பெயர்கள் பெரும்பாலும் ஓரசைச் சொற்களாக உள்ளமை அறியலாம்.

பேரெண்ணில் தொடங்கி முறையே குறைந்து வரும் எண்கள் தொகுதியை உணர்த்தி வரும் (நூற்றுப் பதினொன்று, பதினொன்று); ஒன்றற்கொன்று அடையாக வரும் நிலையில் அவை உறழ்ச்சி (பெருக்கல்) குறித்து நிற்கும் (இருநான்கு, மூவைந்து, ஆறேழ்). எண்கள் உம்மையொடு கூடிவரினும் உம்மைத் தொகையாக வரினும் கூட்டலையும், செவ்வெண்ணாகவரின் கூட்டற்கும் பெருக்கற்கும் பொதுவாயும் உணர்த்தி நிற்கும் (நான்கும் இரண்டும் பத்தும் எட்டும் எனவும் நாலிரண்டு பத்தெட்டு எனவும் வரும்). தொகுதியைச் சுட்டிவரும்பொழுது மும்மூன்று, நன்னான்கு எனவரும். திணை பால் விகுதியொடு கூடி இருவர், நால்வர், எண்மர், பதின்மர், முப்பத்துமூவர், நூற்றுவர் எனப் பொருளின் தொகுதிப் பெயராகவும் வரும். இவற்றை எண்ணான் வரு பெயர் என்ப.

எண்ணோடு பொருளின் தன்மைகளையும் ஒருங்கு குறிக்க உடைமைப் பொருள்தரும் ஐகார விகுதியொடு வருவன ஒற்றை, இரட்டை என்பனவாகும். இவ் இரண்டற்குமேல் ஐகார ஈற்று எண்ணுப்பெயர் வருதலில்லை. ஒருமை, இருமை, மும்மை, நான்மை என்பவை பண்புநிலை குறித்துவரும் எண்ணுப்பெயர்களாகும்.

எண்களுக்கமைந்துள்ள பெயர்க்காரணம் விழிப்பத் தோன்றவில்லை. ஒன்று முதலாயவற்றிற்கு முதல் நிலையாக அமைந்துள்ள ஒன், ஈர், மூ, நால், ஐ, அறு, ஏழ், எண், பல் (பத்து) என்பவற்றை நோக்கின், ஒன்று என்பது தொன்று என்பதில் உள்ள தகர ஒற்றை நீக்கி அமைத்துக் கொண்ட குறியீடாகக் கருதலாம். தொன்று என்பது தொன்மை, பழமை என்னும் பொருளுடையது. ஒன்று என்பதன் மாற்றுப் பெயராகிய முதல் என்பது முந்தையது, மூத்தது என்னும் பொருளுடையதாதலைக் காணலாம். ஈர்தல், பிளவு, கவை என்னும் பொருளுடையதாதலின் (ஈர்-இரு) இரண்டு என்னும் பெயர் அமைந்ததாகலாம். இருபகுதியினின்றும் குவிதலே முனையாகலின், அதனடிப்படையில் முனை-முன்-மூன்-மூன்று என்னும் சொல் தோன்றியதாகலாம். நான்கு முதல் எட்டு வரையுள்ளவை கைவிரல்களின் அடிப்படையில் தோன்றியதாகலாம். பல், பல, பன் என்பனவே பத்து எனலாம். பத்து தொன்மையானது என்னும் பொருள்படும். தொன்பது என்பது ஒன்பது என அமைந்துள்ளது. தொல்நூறு, தொல்ஆயிரம் என்பவையும் அவ்வடிப்படையில் அமைந்துள்ளமை காணலாம். நூறு என்பது துகள். அயிர் என்பது நுண்மணற்றொகுதியாகலின் அவ்வடிப்படையில் ஆயிரம் என்னும் பெயர் அமைந்திருக்கலாம். இதன் திரிபே வடமொழியில் உள்ள சகசுரம் என்பது பலர் கருத்து. சகசுரமே ஆயிரம் எனத்திரிந்தது என்பாரும் உளர். குவடு, கோடு, கோடி என வருதல் மொழிமரபே. தாமரை, வெள்ளம், ஆம்பல் என்பவற்றின் பெயர்க்காரணம் ஆய்தற்குரியது. கால், அரை, முக்கால் முதலியவை காரணப்பெயர்கள் என்பது விளங்கும்.

ச.பா.

**எண்ணுவண்ணம்**: இது தொல்காப்பியம் கூறும் செய்யுள் உறுப்புகள் முப்பத்து நான்கனுள் ஒன்றாகும். வண்ணம் என்னும் பெயர் செய்யுளின்கண் நிகழும் ஓசைவேறுபாட்டினைக் குறிக்கிறது. ஓசை வேறுபாடு சிறப்பதனால் அமைந்த சந்தப்பாட்டும் அவ்வகையிலமையும் இசைப்பாட்டும் வண்ணம் என்னும் பெயரால் குறிக்கப்படுவனவாயின. தொல்காப்பியர் கூறும் வண்ணங்கள் 20 வகைப்படும். அதனை 'வண்ணந்தாமே நாலைந்தென்ப' (தொல்.செய்.204) என்னும் நூற்பாவால் குறிப்பிடுகிறார். அவற்றுள் எண்ணுவண்ணம் என்பது ஒன்றாகும். இதற்குத் தொல்காப்பியர் 'எண்ணு வண்ணம் எண்ணுப் பயிலும்' என்று (தொல். செய்.220) இலக்கணம் செய்யப் பேராசிரியர், 'எண்ணுப் பயில்வது எண்ணு வண்ணம்' என்று விளக்கி அதற்கு, 'நன்னன் ஏற்றை நறும்பூண் அத்தி துன்னருங் கடுந்திறல் கங்கன் கட்டி' (அகம் 44) என்றும், 'நுதலும் தோளும் திதலை அல்குலும்' (அகம்.119) என்றும் வரும் அகநானூற்றுப் பாடற் பகுதிகளை எடுத்துக்காட்டாகத் தந்துள்ளார். யாப்பருங்கல உரையாசிரியர் இதனைச், 'செவ்வெண்ணினாலும், உம்மை எண்ணினாலும், என எண்ணினாலும், என்றா எண்ணினாலும் பிறவும் யாதானும் ஓர் எண்ணினாலும் வரும்' என்று விளக்கியுள்ளார்.

அ.மா.ப.

**எண்ணெடுப்புத் தொகுப்பளவை**: 'எண்ணெடுப்பு' என்பது தொகுப்பளவை முறைகளுள் ஒன்று. சில பொருள்கள் ஒரே மாதிரியான பண்பு

கொண்டிருப்பதைக் காணலாம். அதனைக் கொண்டு அவ்வினத்தைச் சேர்ந்த எல்லாப் பொருள்களும் அதே பண்பு கொண்டனவாக இருக்கும் என்று அனுமானிக்கலாம். இவ்வனுமானத்தை எண்ணெடுப்புத் தொகுப்பளவை (Enumerative Induction) என்பர். இங்கும் அங்குமாக அறிஞர்கள் சிலர் வழுக்கைத் தலையராக இருப்பதைக் கண்ட ஒருவன், 'அறிஞர்கள் அனைவரும் வழுக்கைத் தலையர்கள்' எனப் பொது உரை ஏற்படுத்துகின்றான். பழமொழிகள் யாவும் இத்தகு எண்ணெடுப்பு முறையால் உருவான பொது உரைகளே.

எண்ணெடுப்பு முறை நிறைவு எண்ணெடுப்பு, குறைவு எண்ணெடுப்பு என இரு வகைப்படும். ஓர் இனத்தின் உறுப்பினர்கள் அனைவரையும் கண்டு, அவ்வினம் முழுமைக்கும் ஒரு பொது உரை கூறும் முறைக்கு நிறைவு எண்ணெடுப்பு என்று பெயர். சான்றாக, ஒரு குறிப்பிட்ட அல்மாரியில் உள்ள எல்லா நூல்களையும் பார்த்து, 'இவ்வலமாரியில் உள்ள நூல்கள் அனைத்தும் தமிழ் இலக்கண நூல்கள்' என்று பொது உரை கூறுவது நிறைவு எண்ணெடுப்பு ஆகும். நிறைவு எண்ணெடுப்பால் உருவாகும் பொது உரை அசைக்க முடியாத உண்மையாய் இருக்கும். இதனை உறுதித் தொகுப்பளவை என்பர்.

ஓர் இனத்தின் சில உறுப்பினர்களை மட்டும் பார்த்து அவ்வினம் முழுமைக்கும் பொது உரை கூறும் முறைக்குக் குறைவு எண்ணெடுப்பு என்று பெயர். சான்றாக, மாணவர்கள் சிலர் அரசியல் ஈடுபாடு மிக்கவர்களாக இருப்பதைக் கொண்டு, 'மாணவர்கள் அனைவரும் அரசியல் ஈடுபாடு மிக்கவர்கள்' எனப் பொது உரை கூறுவது குறைவு எண்ணெடுப்பு எனப்படும். இவ்வெண்ணெடுப்பால் உருவாகும் பொதுவுரை உறுதியற்றதாக இருக்கும்; பொய்த்திட வாய்ப்புகள் அதிகம். எனவே, இதனை உறுதியற்ற தொகுப்பளவை என்பர். பொதுவாக, மக்கள் பலரும் தம் அன்றாட வாழ்வில் இவ்வெண்ணெடுப்பைக் கொண்டு பொது உரைகள் ஏற்படுத்துகின்றனர். எனவே, இதனைப் 'பொதுமக்கள் தொகுப்பளவை' என்றும் கூறுவர்.

எண்ணெடுப்பு முறையில் வரும் பொது உரை அறிவியல் பொது உரையாக இருப்பதில்லை; அனுபவத்தின் தொகுப்புரையாகவே அமைகிறது. என்றாலும் அறிவியல் ஆய்வுக்கு வழி செய்யும் கருதுகோள் உருவாக்க எண்ணெடுப்பு முறை பெரிதும் துணை செய்கிறது. க.நா.

**எண்ணெய் ஏற்றுமதி நாடுகள் நிறுவனம்**: ஈராக்கு நாட்டின் தலைநகரான பாக்தாதில் (Baghdad) கூடிய பெட்ரோலிய எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளின் மாநாடு, 1960-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 14-ஆம் நாள் இந்நிறுவனத்தைத் தோற்றுவித்தது. ஈரான், ஈராக்கு, குவைத்து (Kuwait), இலிபியா, சவுதி அரேபியா, வெனிசூலா ஆகிய உறுப்பு நாடுகளுடன் தொடங்கப்பட்ட எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் நிறுவனத்தில் (Organisation of Petroleum Exporting Countries - OPEC) தொடர்ச்சியாகக் கதார் (Qatar) 1961-இலும், இந்தோனேசியா 1962-இலும், அல்சீரியா 1969-இலும், ஐக்கிய அரபு நாடுகள் (United Arab Emirates) 1967-இலும், நைசீரியா 1971-இலும், ஈக்குவடார் (Ecuador) 1970-இலும், காபான் (Gabon) 1973-இலும் உறுப்பு நாடுகளாயின. மிகையான அளவில் எண்ணெய் ஏற்றுமதி செய்யும் மெக்சிகோ (Mexico), சோவியத்து உருசியா (USSR), ஓரளவிற்கு எண்ணெய் ஏற்றுமதி செய்யும் இங்கிலாந்து போன்ற நாடுகள் இந்நிறுவத்தில் பங்குபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. எண்ணெய் உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யும் நாடுகள் (Oil Producing and Exporting Countries -OPEC) எனவும் இந்நிறுவனத்தைக் குறிப்பிடுவர்.

பின்னணி: அனைத்துலக எண்ணெய் வாணிகம் ஐரோப்பிய அமெரிக்க நாடுகளின் 7 எண்ணெய் நிறுவனங்களின் முழுக் கட்டுப்பாட்டிற்குள் 1950-ஆம் ஆண்டு வரை இருந்தது. நிருவாகத்திலும் உற்பத்தியிலும் வாணிகத்திலும் புகழ் பெற்ற இந்நிறுவனங்களை 7 சகோதரிகள் (Seven Sisters) எனக் குறிப்பிடுவர். அவை கால்டெக்சு (Caltex), எசோ (ESSO), பர்மா செல் (Burmah Shell) முதலியனவாகும். எண்ணெய் வளத்தை ஆய்வுகளின் மூலம் கண்டுபிடிப்பது, தோண்டி எடுப்பது, மூலப்பொருள் வடிவிலிருந்து தூய்மை செய்வது, பல்வேறு துணைப் பொருள்களை (Bi-Products) உற்பத்தி செய்வது, விற்பனை செய்வது போன்ற எல்லா நடவடிக்கைகளையும் இந்நிறுவனங்களே செய்தன. இவை தங்களுக்குள் கலந்தாலோசித்து எண்ணெய்த் துறையில் முற்றுரிமை (Monopoly) வாணிகம் நடைபெறக் காரணமாயிருந்தன. உலகெங்கிலும் சிதறப்பட்ட ஆனால் தேவையான பகுதிகளுக்குத் தட்டுப்பாடின்றிப் பெட்ரோலியம் கிடைக்க இவை வகை செய்தன. பெட்ரோலியத் தேவை மிகுந்த நாடுகளான முன்னேற்றமடைந்த தொழில் வள நாடுகளின் பொருளாதாரம் சீர்குலையா வண்ணம், அவற்றின் நலன்களைக் கருத்திற்கொண்டு எண்ணெய் நிறுவனங்கள் செயற்பட்டன. அடக்க விலையை (Cost Price) விடப் பன்மடங்குமிகையான விலைக்குப் பெட்ரோலியப் பொருள்

களை விற்று மிகை ஆதாயம் பெற்றன. எனினும், விலைவரையறையில் மாற்றங்கள் அடிக்கடி நிகழா மலும், உலக நாடுகளின் பொருளாதாரம் இதனால் பெரும் பாதிப்புக்குட்படாமலும் தங்கள் கொள்கை களை அவை வகுத்துக் கொண்டன.

ஏழு எண்ணெய் நிறுவனங்களின் கூட்டு முயற்சி யாலும், முற்றுரிமை நடவடிக்கைகளினாலும், இந் நிறுவனங்களின் தாய்நாடுகள் எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளல்லாதவையாதலாலும், எண்ணெய் வாணிகம், தொழில் வளர்ச்சி ஆகியவற்றால் எண் ணெய் உற்பத்தி செய்யும் நாடுகள் பெற்ற பலன் மிகக் குறைவாயிருந்தன. ஐரோப்பிய, அமெரிக்க நாட்டு எண்ணெய் நிறுவனங்கள் எண்ணெய் மூலப் பொருளாகவே (Mineral Oil) தங்கள் நாடுகளுக்கு இறக்குமதி செய்து, தூய்மைப்படுத்தும் தொழிற் சாலைகளையும் (Oil Refineries) துணைப் பண்டங் களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளையும் தங்கள் நாடுகளில் நிறுவி, தொழிற்றுறை வளர்ச்சி, வேலைவாய்ப்பு ஆகியவற்றைப் பெருக்கிக் கொண் டன. எண்ணெய் நிறுவனங்கள் எண்ணெய் மூலப் பொருளுக்கு வழங்கப்பட்ட விலையும், மன்னுரிமைக் கட்டணமும் (Royalty) குறைந்து கொண்டே சென் றன. இவற்றால் பின்தங்கிய எண்ணெய் வள நாடு கள் ஐரோப்பிய நாடுகளால் சுரண்டப்படுவதை 1950 –ஆம் ஆண்டு அளவில் உணர்ந்தன.

உலகப் போர்கள், தொழிற்றுறை வளர்ச்சி ஆகியவற்றால் பெட்ரோலியப் பொருள்களின் தேவை பெருகியது. எனினும், அவற்றால் எண்ணெய் வள நாடுகளின் வருமானம் உயரவில்லை. குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னர், எண்ணெய் ஊற்றுகள் வற்றும் என எண்ணெய் வள நாடுகள் கவலை கொண்டன. எண்ணெய் நிறுவனங்கள் புதிய தொழில் நுட்ப முறையின் மூலம் எண்ணெய் உற்பத்தியைப் பேரள வில் பெருக்கி (Mass Production) விலையைக் குறைத் தன. மன்னுரிமைக் கட்டணம் விலையை அடிப்படை யாகக் கொண்டிருந்ததனால் எண்ணெய் வள நாடு கள் பெரும் பாதிப்புக்குள்ளாயின. எண்ணெய் மூலப் பொருளின் விலை 1960–ஆம் ஆண்டு அளவில் பீப் பாய் (Barrel) எண்ணெய்க்கு $ 1.8–ஆகக் கீழிறங்கி யது. ஒரு பீப்பாய் என்பது 42 காலன் (Gallon) அல் லது 159 இலிட்டர் ஆகும். இச் சூழ்நிலையில் விலை இறக்கத்தைத் தடுப்பதற்காகவும், தங்கள் நாட்டு நலனைப் பாதுகாத்துப் பொருளாதார முன்னேற் றத்தை அடைவதற்காகவும், எண்ணெய் வளநாடுகள் ஒருங்கிணைந்து கூட்டு நடவடிக்கைகள் எடுக்க முனைந்தன. இந்நாடுகள் திட்டமிட்டுச் செயற்பட வும் தங்களிடையே ஒத்துழைப்பை நிலைநாட்டவும் இந்நிறுவனம் உறுதுணையாயிருந்தது.

**எண்ணெய் நெருக்கடி:** தொழில் வளர்ச்சி காரணமாக எரிசக்தி ஆற்றலின் தேவை உலக நாடு களில் 1960–ஆம் ஆண்டிற்குப்பின் பேரளவில் பெருகி யது. அதனைப் பயன்படுத்தி எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் நிறுவனம் கூட்டாகப் பெட் ரோலிய எண்ணெயின் விலையை 1970–ஆம் ஆண்டு வரை படிப்படியாகத் தொடர்ந்து உயர்த்தியது. இடைக்காலத்தில் உலக எண்ணெய் அங்காடியில் தேக்கம் ஏற்பட்டது. எனினும் அது மிகச் சிறிய அளவில் குறுகிய காலத்திற்கே நீடித்தது. இந் நிறு வனம் வரையறுத்த சராசரி எண்ணெய் விலை 1970 –இல் பீப்பாய்க்கு $ 12.88 ஆகும். அதுவே 1977–இல் $ 12.93 என இருந்தது. ஈரான் நாட்டில் 1978–இல் ஏற்பட்ட அரசியல் பொருளாதார அமைதியின்மை யால் எண்ணெய் உற்பத்தி பாதிக்கப்பட்டது. அதனை மேற்கொள்ள இந்நிறுவனம் 1978–இல் எண் ணெய் விலையைப் பீப்பாய்க்கு 14.5 விழுக்காடு வீதத் தில் உயர்த்த முடிவு எடுத்தது. அதன்படி, 1979–இல் எண்ணெய் விலை பீப்பாய் $ 14.54 –ஆக இருக்க வேண்டும். ஆனால் நடைமுறையில் அங்காடித் தேவை அளிப்பில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக விலை 50 விழுக்காடு உயர்ந்து, 1979–இல் ஒரு பீப்பாயின் விலை $ 18.67 –ஆக உயர்ந்தது. மேலும் மேலும் விலை உயர்வின் போக்கு நீடித்து, 1980–இல் ஒரு பீப்பாயின் விலை $ 30.88–ஆக உச்சக் கட்டத்தை எட்டி, எண்ணெய் நெருக்கடி நிலை (Oil Crisis) உருவாகியது. அடுத்த ஆண்டு பீப்பாய் $ 35–ஆக உயர்ந்தது.

உலக நாடுகள் அனைத்தும் எண்ணெய் நெருக் கடி நிலையினால் அல்லலுற்றன. நாடுகளின் பொரு ளாதாரச் சீர்குலைவும் பணவீக்கமும் பன்னாட்டு வாணிகத்திலும் செலுத்துநிலையிலும் (Balance of) Payments) சிக்கல்களை உண்டாக்கின. எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகள் மட்டும் செழிப்படைந் தன. எண்ணெயைப் பேரளவில் இறக்குமதி செய்யும் இந்தியா போன்ற வளரும் நாடுகள் பேரிழப்புகளுக் குள்ளாயின. வளர்ச்சியடைந்த தொழில் வள நாடு களும் தங்கள் பொருளாதாரச் செழிப்பு நிலையி லிருந்து பின்னோக்கிச் சென்றன. பல்வேறுபட்ட தொடர் இணைப்பு விளைவுகள் ஏற்பட்டு வேலை யின்மை, அமைதியின்மை போன்றவை பெருகின. எண்ணெயை இறக்குமதி செய்யும் உலக நாடுகள் எண்ணெயைச் சிக்கனமாகப் பயன்படுத்தவும், தேவை யைக் கட்டுப்படுத்தவும், தத்தம் நாட்டில் எண்ணெய்

வளங்களைக் கண்டுபிடிக்கவும், பதிலீட்டு ஆற்றல் சக்தியைப் பயன்படுத்தவும் தொடங்கின.

எண்ணெய் விலை மேலும் மேலும் உயர்ந்ததால் வளர்ச்சியடைந்த நாடுகள் பேரளவில் எண்ணெயை முடக்கி இருப்பாக (Stock Piling) வைத்தன. அமெரிக்க ஐக்கிய நாடு 1970–ஆம் ஆண்டு இறுதியில் 100 நாட்களுக்குத் தேவையான 50 கோடி பீப்பாய் எண்ணெயை இருப்பாக வைத்திருந்தது. ஆனால் 1980 க்குப் பின்னர், 120 நாட்களுக்குத் தேவையானதை முடக்கி வைத்தது. இங்கிலாந்து வட அட்லாண்டிக்குக் கடலின் படுகையிலிருந்து எண்ணெய் (North Sea Oil) உற்பத்தி செய்தது. நார்வே, இந்தியா, சூடான், ஐவரி கோசுட்டு (Ivory Coast), மலேசியா போன்ற நாடுகள் புதிய எண்ணெய் வளங்களைக் கண்டுபிடித்து, அத் தொழிலில் ஈடுபட்டன. எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் நிறுவனத்தில் சேராத அங்கோலா, மெக்சிகோ, வெனிசூலா, ஓமன், எகிப்து போன்ற எண்ணெய் வள நாடுகள் எண்ணெய் உற்பத்தியின் அளவைப் பெருக்கின.

எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் நிறுவனம் ஒரு முற்றுரிமை வணிகக் குழு அல்லது விலை ஏற்றும் வணிகக் கூட்டணி (Cartel) போன்று எண்ணெய் உற்பத்தியிலும் விலை வரையறையிலும் தன் கட்டுப்பாட்டை நிலைநாட்டி, உலக எண்ணெய் அங்காடியில் அதிகாரம் செலுத்தியது. அதனால், பன்னாட்டு எண்ணெய் நிறுவனங்கள் வலுவிழந்தன. வளைகுடா நாடுகள் (Gulf Countries), சவுதி அரேபியா போன்ற நாடுகளின் பொருளாதாரம் முன்னேற்றம் அடைந்தது. எனினும்,எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் நிறுவனத்தின் உறுப்பு நாடுகளிடையே ஒற்றுமை தொடர்ந்து நிலவவில்லை. ஈராக்கும் ஈரானும் தொடர்ந்து போரில் ஈடுபட்டுள்ளன.

இச்சூழ்நிலையில் உலக அங்காடியில் 1982 க்குப் பின்னர் எண்ணெயின் அளிப்பு மிகுந்து தேவை குறைந்துவிட்டது. எனவே, 1983–இல் ஒரு பீப்பாய் எண்ணெய் $ 30–ஆகக் கீழிறங்கியது. தொடர்ந்து, விலை வீழ்ச்சியுற்று 1986 சனவரியில் $ 26-ஆகவும் சூலையில் $ 11. 8–ஆகவும் இறங்கிற்று. உற்பத்தியைக் கட்டுப்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்ட பின்னர், அதற்கு இணங்கப் பொருளாதார வளர்ச்சியின் முதல் கட்டத்திலிருக்கும் நைசீரியா போன்ற வளரும் நாடுகள் தயங்குகின்றன. சவுதி அரேபியாவும் உற்பத்தியளவைக் குறைக்க விரும்பவில்லை. ஈரான், இலிபியா, அல்சீரியா ஆகிய நாடுகள் உற்பத்தியைப் பேரளவில் குறைக்க இந்நிறுவனத்தின் உறுப்பு நாடுகளை வற்புறுத்துகின்றன. உறுப்பு நாடுகளிடையே கருத்து வேற்றுமைகளும் பூசல்களும் காணப்படுவதால் இந் நிறுவனம் தன் ஆதிக்கத்தை இழந்துவிட்டது.

எண்ணெய் விலை வீழ்ச்சியினால் எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகள்தம் நிறுவனத்தின் உறுப்பு நாடுகளின் பொருளாதார முன்னேற்றம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. ஓமன் தன் ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்ற இயலா நிலையிலுள்ளது. தன் நாட்டுச் செலாவணி மதிப்பையும் குறைத்துவிட்டது. வளைகுடா நாடுகள், ஈராக்கு, ஓமன், சவுதி அரேபியா போன்ற நாடுகள் அயல்நாட்டுத் தொழிலாளர்களைப் பேரளவில் குறைத்து வருகின்றன. தங்கள் நாட்டுச் செலவுகளையும் குறைத்துள்ளன. நாட்டு அரசியலமைப்புகளிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. குவைத்து 1986 சூலைத் திங்களில் தன் மக்களவையைக் (Parliament) கலைத்துவிட்டது.

எண்ணெய் வளம் செறிந்த மேற்காசிய நாடுகள் பன்னாட்டு வாணிகத்தில் 1980–85–ஆம் ஆண்டுகளில் $ 7000 கோடி ஆதாயமாகப் (Favourable Balance of Trade) பெற்றன. அடுத்த ஆண்டில் $ 2000 கோடி பற்றாக்குறை வாணிகம் (Deficit Trade) நடைபெற்றுள்ளது. இந்நாடுகளின் எண்ணெய் ஏற்றுமதி வருவாய் 1980–இல் $ 23,700 கோடியாக இருந்து, 1985–இல் $ 11,000 கோடியாகக் கீழிறங்கியுள்ளது. இந் நிறுவனத்தின் உறுப்பு நாடுகளுக்கு 1986–இல் மட்டும் $ 6,000 கோடி முதல் $ 8,000 கோடி வரை வருமான இழப்பு ஏற்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தியா எண்ணெய் விலைக் குறைவினால் 1984–85–இல் 2,000 கோடி உரூபாய் அயற் செலாவணியில் ஆதாயம் பெற்றது. இந்தியாவில் உற்பத்தியாகும் எண்ணெய் உற்பத்தியும் புதிய எண்ணெய் வளக் கண்டுபிடிப்புகளும் குறிப்பிடத்தக்க அளவு பெருகியுள்ளன; எண்ணெய் வளப் பெருக்கத்திற்கென ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் உரூ. 18,000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் நிறுவனத்தின் உறுப்பு நாடுகள் பின்தங்கிய மூன்றாம் உலக நாடுகள் எனினும், எண்ணெய் விலை உயர்வால் தங்கள் செல்வாக்குப் பெருகி உச்சச் செல்வப் பெருக்கத்தை அடைந்த நிலையில், பிற மூன்றாம் உலக நாடுகளுக்குக் குறிப்பிடத்தக்க அளவில் உதவி அளிக்க முன்வரவில்லை. எண்ணெய் விற்பனையில் வளரும் நாடுகளுக்கு விலைச் சலுகைகள் அளிக்கவில்லை. ஈட்டிய பெருஞ் செல்வத்தை அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளிலேயே பெரும்பாலும் முதலீடு செய்தன; முடக்கியும் வைத்தன; பின்தங்கிய, வளரும் நாடுகளுக்கு இந்நிறுவனம் வழங்கிய உதவிக்

தொகை மிகக் குறைவு எனக் கருதப்படுகிறது. இந் நிறுவனத்தின் கடுமையான போக்கினால் உலகப் பணவீக்கம் உச்ச நிலையை அடைந்தது. உலகத் தொழிற்றுறையும் வாணிகமும் தம் அமைப்பில் பெரும் மாற்றங்களுக்குட்பட்டன. பெரும்பாலான நாடுகள் தங்கள் ஆற்றல் தேவைக்குப் பெட்ரோலிய இறக்குமதியைச் சார்ந்திருந்தமையால், எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகள் பெட்ரோலியத்தை ஓர் அரசியல் பொருளாதாரக் கருவியாகப் பயன்படுத்தின; பல கட்டுப்பாடுகளை விதித்தன. இவை பல நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்தைப் பேரளவில் பாதித்தன. அ.கு.சா.

**எண்ணெய் வளங்கள்**: உலகின் விலை மதிக்க இயலா இயற்கைச் செல்வங்களுள் பொருளாதாரச் சிறப்பு மிக்கது பெட்ரோலிய எண்ணெய் வளம் (Oil Resources) ஆகும். இதனை ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கான 'வாழ்க்கை இரத்தம்' எனவும் 'கருப்புத் தங்கம்' (Black Gold) எனவும் கூறுகின்றனர். பெட்ரோலியம் என்பது இலத்தீன் சொற்களான பெட்ரா (Petra), ஓலியம் Oleum) என்பவற்றிலிருந்து தோன்றியதாகும். பெட்ரா என்றால் பாறை என்றும், ஓலியம் என்றால் எண்ணெய் என்றும் பொருள்படும். பெட்ரோலியம் பூமிக்குமேல் காணப்பட்ட பாறைகளின் பிளவுகளின் வழியே கசிந்து வெளியேறிய எண்ணெயிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டதால் பாறை எண்ணெய் எனக் கூறப்பட்டது. பிற்காலத்தில் எண்ணெய் என்பதாகவே குறிப்பிடப்படுகிறது. சுத்தம் செய்யப்பட்ட உயர்தர எண்ணெய் வகைகள் 'பெட்ரோலியம்', 'பெட்ரோமின்' (Petromin), 'காசலின்' (Gasoline) எனப் பலவகைப்படுகின்றன. பண்டைய காலங்களிலேயே மக்கள் இந்த எண்ணெய் வளத்தைப் பயன்படுத்தினர். எனினும் கி.பி. 1800க்குப் பின்னரே, இக்கால முறையில் அதனைத் தூய்மைப்படுத்திப் பல தொழிற்றுறை வளர்ச்சியின் ஆற்றலுக்குப் பயன்படுத்தும் முறை தோன்றிற்று. 'பெட்ரோமின்', 'காசலின்' போன்ற உயர் வகைகளின் தேவை கி.பி. 1900க்குப் பின்னர் உலகெங்கிலும் மிகுதியாயிற்று.

இயற்கையில் எண்ணெய் பூமியின் அடிப்பகுதியிலும், சில பாறைகளிலும், மணல்களிலும், பாறைகளுக்கிடையிலும், கடலின் அடியிலும் திடப் பொருளாய் இருக்கிறது. பூமிக்குமேல் வெளிப்படும்போது திரவப் பொருளாய்க் காணப்படுகிறது. எண்ணெய் மூலப்பொருளின் (Mineral Oil) தரத்தில் பல வேறுபாடுகளுண்டு. அவை அடர்த்தி, நிறம் ஆகியவற்றைச் சார்ந்தவையாகும். சில இடங்களில் மென்மையான தெளிந்த எண்ணெயாகவும், கெட்டியான தார் போன்ற பொருளாகவும் வேறுபட்டுக் காணப்படுகின்றன. உலகின் எல்லாக் கண்டத்திலும் ஏதாவது ஒரு வகையில் அல்லது பல வகைகளில் எண்ணெய் வளங்கள் காணப்படுகின்றன. தேங்கிக் கிடக்கும் மொத்த உலக எண்ணெயின் மதிப்பீடு 640 பிலியன் (Billion) பீப்பாய்கள் (Barrels) என்பது வல்லுநர்களின் கருத்தாகும். இவற்றில் 56 விழுக்காடு மையக் கிழக்கு நாடுகளில் (Middle Eastern Countries) உள்ளன. குவைத்து (Kuwait) நாட்டில் 65 பிலியன் பீப்பாய்களும், ஈரானில் 58 பிலியன் பீப்பாய்களும் இருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. பெர்சியன்வளைகுடாப் (Persian Gulf) பகுதியில் மிகையான எண்ணெய்ப் படுகைகள் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. உலக எண்ணெய் உற்பத்தியில் 15 விழுக்காடு சோவியத்து உருசியா (Soviet Russia) உற்பத்தி செய்கிறது. உருசியாவின் ஊரல் மலைப்பகுதிகளில் (Ural Mountains) 67 பிலியன் பீப்பாய்கள் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இங்கிலாந்து, நார்வே ஆகிய நாடுகளின் வடகடலில் 22 பிலியன் பீப்பாய்கள் எண்ணெய் இருக்கிறது.

உலக எண்ணெய்ப் படுகையில் (Reserves) 9 விழுக்காடு இலத்தீன் அமெரிக்காவில் (Latin America) உள்ளது. மெக்சிகோவில் 31 பிலியன் பீப்பாய்கள் எண்ணெய் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. கியாபாசு (Cheapas), தபாசுக்கோ (Tabasco), வெராகுரசு (Veracruz) ஆகிய இடங்களில் எண்ணெய் வயல்கள் உள்ளன. வெனிசூலா (Venezuela), அர்செண்டினா (Argentina), ஈக்குவடார் (Ecuador), பிரேசில் (Brazil) ஆகிய நாடுகளில் பேரளவிலான எண்ணெய்ப் படுகைகள் உள்ளன. உலக எண்ணெய்ப் படுகைகளில் 5 விழுக்காடு ஆப்பிரிக்காவில் உள்ளது. அல்சீரியா, இலிபியா ஆகிய நாடுகளில் பேரளவில் எண்ணெய்ப் படுகைகள் உள்ளன. இலியாவில் 23 பிலியன் பீப்பாய்களுக்கும் மிகுதியான எண்ணெய்ப் படுகைகள் உள்ளன. நைசீரியாவில் 18 பிலியன் பீப்பாய்கள் எண்ணெய் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

சோவியத்து உருசியா, மையக் கிழக்கு நாடுகள் நீங்கலாக உள்ள எஞ்சிய ஆசிய நாடுகளில் உலக எண்ணெய் அளவில் 6 விழுக்காடு உள்ளது. இவற்றில் 50 விழுக்காடு சீனாவில் (China) உள்ளது. அங்குத் தாச்சு (Da-ch) என்னும் இடத்தில் பேரளவிலான எண்ணெய் வயல் இருக்கிறது. சாண்டுங்குத் (Shantung) தீபகற்பத்திலும் சிங்கியாங்கிலும் (Sinkiang) எண்ணெய் வளங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. தூரக் கிழக்கு நாடுகளில் 15 மிலியன் பீப்பாய்கள் அளவிற்கான எண்ணெய்ப் படுகைகள் உள்ளன.

ஐக்கிய அமெரிக்க நாட்டில் (USA) 26 பிலியன் பீப்பாய்கள் எண்ணெய் இருக்கிறது. இது பேரளவுப் படுகையாகத் தெக்சாசு (Texas), உலூசியானா (Lousiana), கலிபோர்னியா (Californea), ஒக்லகோமா (Oklahoma), அலாசுகா (Alaska) ஆகிய பகுதிகளில் காணப்படுகின்றது. கனடாவில் ஆல்பர்ட்டா, பிரிட்டி சுக்கொலம்பியா, மனிடோபா ஆகிய மாநிலங்களில் 7 பிலியன் பீப்பாய்கள் அளவு எண்ணெய் வயல்கள் உள்ளன. ஆல்பர்ட்டாவில் உள்ள அத்தபாசுகா (Athabasca) ஆற்றின் மணலில் எண்ணெய் கலந்து காணப்படுவதாகக் கண்டுபிடிக்கப்பட்டு, அதிலிருந்து 300 பிலியன் பீப்பாய்கள் எண்ணெய் கிடைக்கலாம் என்பது மதிப்பிடப்பட்டுள்ளது. மணலிலிருந்து எண்ணெய் எடுக்கும் ஆய்வு உலகில் முதன் முதலாக இங்குத்தான் 1967-இல் தொடங்கிற்று.

இந்தியாவில் 2300 பிலியன் சுண்டி (Tonne) எண்ணெய் வளம் இருப்பது, 1985 வரை கண்டுபிடிக்கப்பட்ட ஆய்வுகளிலிருந்து வெளிப்படுவதாக இந்திய எண்ணெய் இயற்கை வாயு ஆணையகம் (Oil & Natural Gas Commission) அறிவித்துள்ளது. தமிழ் நாட்டின் காவேரிப் படுகையிலுள்ள நரிமணம் என்ற இடத்திலும், ஆந்திர மாநிலத்தில் கிருட்டிணா-கோதாவரிப் படுகையிலும் எண்ணெய் வளம் உள்ளதாக 1986-இல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பால்க்கு விரிகுடா (Palk Bay), கச்சு வளைகுடா (Gulf of Kutch), அந்தமான் நிக்கோபார்க் கடலோரப் பகுதிகள், சௌராட்டிரக் கடலோரம் (Off Shore Saurashtra), இமாலய மலைத்தொடரின் அடிவாரங்கள், இராசசுத்தான், ஒரிசாக் கடலோரம், கங்கைப் படுகை, மேற்கு வங்காளம், அசாம்-அராகன் வடிநிலம் (Assam-Arakan Basin) ஆகிய இடங்களில் எண்ணெய்ப் படுகைகள் இருப்பதாக அறிந்து, அவற்றைக் கண்டுபிடிப்பதற்கான தீவிர ஆய்வுகளை எண்ணெய் இயற்கை வாயு ஆணையகம் மேற்கொண்டுள்ளது.

தூய்மைப்படுத்திய எண்ணெய் உற்பத்தியில் இந்தியாவின் முன்னேற்றத்தை அட்டவணை மூலம் அறியலாம்.

| ஆண்டுகள் | உற்பத்தி (மிலியன் கண்டிகளில்) |
|---|---|
| 1950 | 0.25 |
| 1960 | 6.2 |
| 1970 | 10.2 |
| 1980 | 27.5 |
| 1985 | 34.00 |



தேவையுடன் ஒப்பிடும்போது இந்தியாவில் எண்ணெய்ப் பற்றாக்குறை நீடித்து வருகிறது. பேரளவில் இறக்குமதி செய்யப்படுவதால் பன்னாட்டுச் செலுத்து நிலையில் (International Balance of Payments) பாதகமேற்படுகிறது. எனவே, பதிலீட்டு ஆற்றல் உற்பத்தியிலும் இந்தியா மிகையான கவனம் செலுத்தி நிலக்கரி, அனல் மின்சாரம் (Thermal Power), நீர் மின்சாரம் (Hydel Power), அணு மின் சாரம் (Nuclear Power) போன்றவற்றின் உற்பத்தியைப் பெருக்கி வருகிறது.

பெரும்பாலான உலக எண்ணெய் வளங்கள் கண்டுபிடிக்கப்பட்டு விட்டதாகச் சில வல்லுநர்கள் கருதுகின்றனர். எனினும் இந்தியா, சீனா, கனடாவின் தீவுகள், ஆர்க்டிக்குக்கடற் பகுதிகள் ஆகியவற்றில் இது வரை கண்டுபிடிக்கப்படாத எண்ணெய்ப் படுகைகள் உள்ளன எனச் சில நிலப் பொறியியல் அறிஞர்கள் (Geologists) கருதுகின்றனர்.

காண்க: எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நிறுவனம். அ.கு.சா.

**எண்பேராயம்**: சங்கம் மருவிய காலந் தொட்டு நாட்டு நலங்குறித்து அரசாட்சிப் பொறுப்பில் அரசர்க்குரிய மந்திராலோசனை கூறும் உரிமையுள்ளவர்களாக விளங்கியவர்களே எண்பேராயத்தினர். சங்க காலத்தில் இவ்வாறான அமைப்புகள் பல இருந்திருக்கலாம்; ஆனால் சங்க இலக்கியங்களில் குறிப்புகள் இல்லை. எண்பேராயத்தினரை எண்பெருந்துணைவர்கள் என்றுங் கூறுவர். சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை முதலிய நூல்களில் இவர்களைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. எண்பேராயத்தில் கரணத்தியலவர், கரும விதிகள், கனகச் சுற்றம், கடைகாப்பாளர், நகர மாந்தர், படைத்தலைவர், யானைவீரர், குதிரைவீரர் ஆகியோர் இருந்தமை, 'கரணத் தியலவர் கரும விதிகள், கனகச் சுற்றங்கடைகாப்பாளர், நகர மாந்தர் நளிபடைத் தலைவர், யானை வீரர், இவுளி மறவர், இனையர் எண்பே ராயமென்ப' என்னுந்திவாகரக் குறிப்பினால் அறியலாம்.

கரணத்தியலவர் என்பவர் நாட்டு நலங்குறித்து அரசர்க்குதவியாகத் திட்டமிட்டு அரசாங்கக் கணக்குகளைப் பார்ப்பவர்; கணக்கர் என்றும் கணக்கியல் வினைஞர் என்றும் இவர்கள் வழங்கப்பெற்றனர். 'கரும வினைஞரும் கணக்கியல் வினைஞரும்' எனக் கூறும் சிலப்பதிகாரம் (26:40).

கரும விதிகள் என்பவர் அரசரின் பொறுப்பில் இராச்சிய காரியம் நடத்தும் தலைவர்கள். ஒரு

நாட்டு ஆட்சியில் வருவாய், நீர்ப்பாசனம், நீதி, பாதுகாப்பு முதலிய பல்வேறு துறைகள் அமைந்திருக்கும். அவற்றில் தனித்தனியே துறைத்தலைவராகப் பொறுப்பேற்று ஆட்சியைக் கொண்டு செலுத்துபவர்களாக இவர்கள் பணியாற்றினர். கனகச் சுற்றம் என்பது 'கருவூல அதிகாரி'களைக் குறிக்கும். அரசிற்குரிய கருவூலப் பொறுப்பினையேற்று நடத்துபவர்கள் அரசனிடம் மிகவும் நம்பிக்கையைப் பெற்றவர்களாகச்செயற்பட்டனர். இவர்கள் இடைக்காலத்தில் பண்டாரகர், பண்டாரத்தார் என்றெல்லாம் கிளைத்தற்கு முன்னோடிகளாய் விளங்கியவர்கள்.

கடைகாப்பாளர் என்போர் வாயில் காப்போர்; கடைகாவலர் என்றும் அழைக்கப்பட்டனர். பாதுகாப்புப் பொறுப்பில் பல்வகையினராக இருப்பினும் வாயில் காவலரே அரண்மனைக் காப்பிற்குப் பொறுப்பேற்று, வாயிலில் புதியவர்கள் வரின் அவர்களைப் பற்றி அரசனிடம் எடுத்துரைத்து அவனது மாற்றங் கேட்டுச் செயற்பட்டவர்கள். கண்ணகி தன் வழக்கினையுரைக்கப் பாண்டியனைச் சந்திக்குமுன் அவனது இசைவிற்காக வாயில்காப்பாளனிடம் சென்று, 'வாயிலோயே!' என்று அழைத்துத் தன் கருத்தினைக் கூறியது நினைக்கத்தகும். 'கண்டு கடைகாவலர்கள் கழற' எனச் சீவக சிந்தாமணி (2012) கூறும். நகரமாந்தர் என்போர் நாட்டு ஆட்சிப் பொறுப்பில் தலைமைப் பொறுப்புடன் பங்கேற்கும் நகரவாழ் மக்கள். மன்னராட்சியிலும் குடியரசிற்குரிய கூறுகள் அமைய இவர்கள் முன்னோடிகளாய்ச் செயற்பட்டவர்கள். படைத்தலைவர் என்போர் காலாட் படைத்தலைவராவார். நால்வகைப் படைகளுள் இவர்களுக்குத் தனிச் சிறப்புடைய தலைமைப் பொறுப்பு உண்டு. இவர்களுள் சேனாபதியர் தேர்ந்தெடுக்கப்பட்டு மன்னரின் ஐம்பெருங்குழுவில் இடம் பெற்றனர். போர்முறை உத்திகளில் இவர்கள் நன்கு தேர்ந்த பயிற்சி பெற்றவர்கள். யானைவீரர் என்போர் களிற்றியானையைத் தம் குறிப்பிற்கேற்பப் பழக்கிச் செலுத்தும் மறவர்கள்; பகைவரின் கோட்டைக்கொத்தளங்களைத் தகர்க்கவும் மாற்றாரின் படைவீரர்களைச் சிதைக்கவும் யானைகளை ஏவுந்திறத்தவர்கள். குதிரைவீரர் என்போர் நல்லிலக்கணங்கள் பொருந்திய தரமான குதிரைகளை விரைந்து செலுத்தி வீரம் விளைவிப்பவர்கள். பிறர்க்குச் செய்திகளைக் கொண்டு சேர்க்கவும் போர்க்களத்தில் தம் ஆற்றல் தோற்றவும் முனைந்து நின்ற இவர்களை இவுளிவீரர் என்றுங் குறிப்பது உண்டு. மணிவாசகர் பொருட்டு இறைவனே குதிரைச் சேவகனாக வந்தமை கொண்டு குதிரை வீரரின் மதிப்பு உணரலாம்.

படைத்தலைவர், யானைவீரர், குதிரைமறவர் ஆகியோரின் போர்த்திறனைக் கம்பராமாயண யுத்தகாண்டம், பாரதப் போர்ச் சருக்கங்கள், கந்த புராண யுத்தகாண்டம் போன்றவற்றிலும் கலிங்கத்துப்பரணி போன்ற பரணி நூல்களிலும் காணலாம்.

செ.வை.

**எண்வகை மணம்**: அகவாழ்வில் ஓர் ஆடவனும் ஒரு பெண்ணும் வழக்கத்திலுள்ள சமுதாய விதிகளுக்குக் கட்டுப்பட்டு இல்லற வாழ்க்கையைத் தொடங்குஞ் சடங்கையே மணமெனக் கொண்டனர். ஆரிய திராவிடர் கலப்பு நாகரிகத்தில் பல்வகைச் சடங்குகளுடன் கூடிய திருமணம் பழந்தமிழர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது; அதாவது, 'நாளடைவில் பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர் ஐயர் யாத்தனர்கரணம்' என்பது ஏற்புடையதாயிற்று. மறையோரிடத்து ஓதப்பட்ட மணம் எட்டும் தமிழ் நாட்டிலும் ஓரளவு தெரிய வந்தமையின் தொல்காப்பியம் களவியல் முதல் நூற்பாவில் 'மறையோர் தேஎத்து மன்றலெட்டு' என்பதனைக் குறித்துச் செல்கிறார் தொல்காப்பியர்; அவற்றுள் அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கிற் காணலாகும் காமக்கூட்டம் என்பது துறையமை நல்யாழினையுடையவராகிய துணைமையோர் (கந்தருவர்) நெறியாகும்; மாலை சூட்டலும் அதன்பாற்படும்.

பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தருவம், அசுரம், இராக்கதம், பைசாசம் என்பவை எண்வகை மணமாகும். தொல்காப்பிய வுரை, இறையனாரகப் பொருளுரை முதலியவற்றால் எண்வகை மணம் பற்றிய கருத்துகள் புலப்படும். பிரமம் என்பது நாற்பத்தெட்டியாண்டு பிரமசரியம் காத்தவனாகவும் வேதம் பயின்றவனாகவும் நற்குண நல்லொழுக்க முடையவனாகவும் விளங்குகின்ற பிரமசாரியைத் தானாகவே அழைப்பித்து, அவனைப் புத்தாடையால் அலங்கரித்துப், பன்னீராட்டைப் பிராயத்தளாய கன்னியைப் புத்தாடையாலும் புத்தணியாலும் அலங்கரித்து அவனுக்கு அவளைத் தானம் புரிவதாகும். பிரசாபத்தியமாவது மகட்கோடற்குரிய கோத்திரத்தார் மகள் வேண்டியவழி இருமுதுகுரவரும் இயைந்து தானம் பண்ணுகையில், 'நீங்கள் இருவிருமாய்த் தருமங்களைச் செய்யுங்கள்' என்று கொடுப்பதாகும். ஆரிடம் (ஆருஷம்) என்பது தான் செய்ய வேண்டிய வேள்விவினைக்காக வரனிடமிருந்து ஒரு பசுவும் ஒரு காளையும் அல்லது இரு பசுக்களும் இருகாளைகளும் வாங்கிக் கொண்டு கன்னியை மணஞ்செய்து கொடுப்பதாகும்; இதனையே ஆவும் ஆனேறும் பொற்கோட்டுப் பொற்

குளம்பினவாகச் செய்து அவற்றிடை நீரிற் கொடுப்பது எனச் சிறப்பித்துக் கூறும் இறையனார் களவியலுரை. தெய்வமாவது தனக்குப் புரோகிதனாக இருப்பவனுக்கு வேள்வித் தீ முன் வைத்துக் கன்னியை மணம்புரிவித்தலாகும். காந்தருவமாவது ஒத்த குலனும் குணனும் அழகும் அறிவும் பருவமும் உடைய மனமொத்த ஆடவனும் பெண்ணும் தாமே கூடுங் கூட்டமாகும். அசுரம் என்பது கொல்லேறு கொண்டான் இவளை எய்தும், வில்லேற்றினான் இவளை எய்தும், திரிபன்றி எய்தான் இவளை எய்தும், மாலை சூட்டப்பட்டான் இவளை எய்தும் என இவ்வாறு சொல்லிக் கொடுப்பதாகும்; இளம்பூரணர் மாலையிடலைக் காந்தருவம் என்பர். இராக்கதம் என்பது பெண்ணின் விருப்பத்தாலும் அவள் சுற்றத்தாராலும் பெறாமல் அவளை ஒருவன் வலிதிற் கொள்வதாகும். பைசாசம் என்பது தன்னினும் மூத்தவளிடத்தும், தூங்கிக்கொண்டிருப்பவளிடத்தும், கள்ளுண்ட வெறியுடையாளிடத்தும் பித்தேறியவளிடத்தும் சார்வதாகும்.

இந்த எண்வகை மணத்துள் பிரமம் என்பதனை அறநிலை என்றும், பிரசாபத்தியம் என்பதனை ஒப்பு என்றும், ஆரிடம் என்பதனைப் பொருள்கோள் என்றும், காந்தருவம் என்பதனை யாழோர் கூட்டம் என்றும், அசுரம் என்பதனை அரும்பொருள் வினை நிலை என்றும், பைசாசம் என்பதனைப் பேய்நிலை என்றும் இறையனராகப்பொருள் குறிப்பிட்டுச் செல்லும். மேலும், 'கந்தருவ வழக்கம் என்பது – கந்தருவர் என்பார் ஈண்டுச் செய்த நல்வினைப் பயத்தால் ஒருவர் கொடுப்பாரும் அடுப்பாரும் இன்றி இருவரும் ஒரு பொழிலகத்து எதிர்ப்பட்டுப் புணர்வது; இது காந்தர்ப்ப மணம். இதனை ஒப்பதனைக் களவு என்று வேண்டும் ஆசிரியன்' என்றும் கூறி ஆய்வு செய்கிறது. அசுரத்தில் குறிப்பிடப்பெறும் 'மாலை சூட்டப்பட்டான் இவளை எய்தும்' என்பது சுயம்வரத்தைக் குறிக்கும்.

எண்வகை மணங்களுள் முதல் நான்கையும் பொருந்தாக் காமமாகிய பெருந்திணை யென்றும், காந்தருவத்தைக் களவு என்றும் பின் மூன்றையும் கைக்கிளையென்றும் தமிழ் நூல்கள் கூறும். செ.வை.


**எண்வகை மாலை:** இது போர்க்காலத்து அணியும் எட்டுவகை மலர்மாலையினைக் குறிக்கும். அவையாவன: வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, உழிஞை, நொச்சி, தும்பை, வாகை என்பன. இந்த மலர்மாலைகள் அந்தந்தப் போரில் பெறும் வெற்றியைக் கூட்டுவதாகும். போர்ச் செய்திகள் பகை நிரை கவர்தல், பகைவர் கவர்ந்த தன்னிரை மீட்டல், பகைமேற் செல்லல், வரும் பகை முன் எதிரூன்றல், தன்னரண் காத்தல், பகை அரண் வளைத்தல், பொருதல், போர் வெல்லல் என எட்டு வகைப் படும். அவற்றை,

'வெற்றி மாலை யெட்டவை வெட்சி, கரந்தை வஞ்சி காஞ்சி நொச்சி, உழிஞை தும்பை வகையென் றோதுப' என வரும் பொருட்டொகை நிகண்டு நூற்பாவால் (730) அறியலாம். வீரர் அணியும் வெற்றி மாலைகளே வெட்சி முதலிய எட்டுமாம். இந்த எட்டுப் போர் வெற்றிகளையும் சிறப்பித்துப் பாடும் பாடல்கள் 'எண்வகை மாலை' என்னும் இலக்கியமாம்.

இப்போர்ச் செய்திகள் ஒவ்வொன்றையும் தனித் தனிச் சிறப்பித்துப் பாடும் சிறுபிரபந்தங்கள். எட்டினைத் தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களுள் சேர்த்துக் கூறுவர். அவையாவன: வீர வெட்சிமாலை, உழிஞைமாலை, நொச்சி மாலை, தும்பை மாலை, வாகைமாலை முதலியன. இவை போலாது, வெற்றிமாலையாம் வெட்சி முதல் எட்டினையும் ஒருசேரச் சிறப்பித்துப் பாடும் நூல் எண்வகை மாலையாதல் வேண்டும். மு.ச.

**எத்தியோப்பியா** ஒரு கிழக்கு ஆப்பிரிக்க நாடு. இது சூடான் நாட்டை வடக்கிலும் மேற்கிலும், அபார் (Afars) நாட்டை வடகிழக்கிலும், சோமாலியா நாட்டைக் கிழக்கிலும், கெனியா நாட்டைத் தெற்கிலும் எல்லைகளாக உடையது. இது முன்பு இத்தாலியக் குடியேற்ற நாடாக இருந்த எரிட்டிரியாவையும் தன்னோடு இணைத்து, இப்போது 471,800 ச.கி.மீ. பரப்புடைய ஒரு சுதந்திர நாடாக இருக்கிறது; இதன் மக்கள்தொகை இப்போது ஏறத்தாழ 28 மிலியன். இதன் தலைநகரம் அடிசு அபாபா (Addis Ababa). இதன் மேற்கிலும் கிழக்கிலும் உயரமான நிலப்பகுதியும் நடுவில் ஆழ்ந்த பள்ளத்தாக்கும் இருக்கின்றன. பள்ளத்தாக்குப் பகுதியில் பல ஏரிகள் உள்ளன. சில எரிமலைகளும் வெந்நீர் ஊற்றுகளும் இருக்கின்றன. நீல நைல், தெகெசே, பாரோ முதலியவை முக்கிய ஆறுகள். அவாசு, ஓமோ, சாகன் முதலிய சிற்றாறுகள் உள்நாட்டு ஏரிகளில் கலக்கின்றன. இந்நாட்டிற்கு 1010 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரை செங்கடலில் உள்ளது.

இது நிலநடுக்கோட்டிற்கு அருகில் உயர்நிலமுள்ளதாக இருப்பதால், வெப்ப மண்டலமும் குளிர் மண்டலமும் பொருந்திய கால நிலையை உடையது. மேற்குப் பகுதியில் தென்மேற்குப் பருவக்காற்றினால் மழை கிடைக்கிறது. காட்டு விலங்குகள் தென் மேற்குப் பகுதிகளில் காணப்படுகின்றன. இங்கு




எத்தியோப்பியா

வாழும் மக்கள் காகேசிய இனத்தவரும், நீக்கிரோ இனத்தவரும் சேர்ந்த கலப்பினத்தவராவர். ஏறக் குறைய 100 மொழிகள் பேசப்படுகின்றன. அமாரிக்கு **(Amharic)** என்பது தேசிய மொழி ஆகும். ஏனைய மொழிகள் மாகாண மொழிகளாகப் பேசப்படுகின் றன. ஆங்கிலம் எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் கற் பிக்கப்படுகிறது. மக்களில் பாதிப்பேர் கிறித்தவச் சமயத்தையும், 35 விழுக்காட்டினர் இசுலாம் சமயத்தையும், சிலர் யூத சமயத்தையும் பின்பற்று கின்றனர். கிறித்தவம் கி.பி. 4-ஆம் நூற்றாண்டி லும் இசுலாம் 7-ஆம் நூற்றாண்டிலும் இங்கு நுழைந் தன.

பொருளாதார நிலை: எத்தியோப்பியா பொருளாதார வளர்ச்சியில் உலகத்தில் மிகவும் தாழ்ந்த நிலையிலுள்ள நாடுகளுள் ஒன்று. முதலீட்டு வசதிக் குறைவு, ஏற்றுமதிக் குறைவு, தொழில்கள் இன்மை முதலிய காரணங்களால் ஆப்பிரிக்காவின் மொத்த உற்பத்தியில் இந்நாட்டின் பங்கு மிகக் குறைவு ஆகும். இங்கு உலோகங்களின் வளமும் குறைவு. சில இடங்களில் மண்ணெண்ணெய் கண்டுபிடிக்கப்பட்டாலும், அது ஏற்றுமதி செய்யத் தக்க அளவுக்குக் கிடைக்கவில்லை. நாட்டின் பரப்பள வில் 7 விழுக்காடு காடுவளம் உடையது; நீர்மின்சார வளர்ச்சிக்கு வேண்டிய ஆறுகள் இருக்கின்றன.



அடிசு அபாபா நகரம்

நாட்டு மக்களுள் 87 விழுக்காட்டினர் பழைய முறைகளைக் கையாண்டு வேளாண்மையையே சார்ந் துள்ளனர். வேளாண்மைக்குத் தக்க நிலங்களில் ஒரு பகுதியிலேயே பயிர்த்தொழில் நடக்கிறது. காப்பி பயிரிடப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுகிறது. கரும்பு, எண்ணெய் விதைகள், காய்கறிகள், பழங்கள் முதலி யவையும் பயிரிடப்படுகின்றன. பருத்தி அண்மைக் காலத்தில் மிகுதியாகப் பயிரிடப்படுகிறது. ஆடுமாடு வளர்ப்பு, மீன்பிடித்தல் முதலிய தொழில்களும் நடைபெறுகின்றன. போக்குவரத்து வசதிகள் முழு மையாக ஏற்படுத்தப்படாததால் காட்டுவளம் பயன் படுத்தப்படாமல் இருக்கிறது.

நாட்டின் மொத்த வருமானத்தில் 10 விழுக்காடே தொழிலிலிருந்து கிடைக்கிறது. அடிசு அபாபா, அசு மேரா, நாசரெட்டு, தயர் தாவா முதலிய நகரங்களில் மட்டுமே தொழிற்சாலைகளிருக்கின்றன. காட்டு விலங்குகளையும் வரலாற்றுப் புகழ்மிக்க அக்சம், இலலிபேலா, கோண்டர் முதலிய இடங்களையும் காணவும் பள்ளத்தாக்கிலும் செங்கடற்கரை ஓரத்தி லும் பொழுதுபோக்கவும் வெளிநாட்டுப் பயணிகள் இங்கு வருகின்றனர். வாணிகத்துறையில் சிறிதுசிறி தாக எத்தியோப்பியர் முன்னேற்றமடைந்து வருகின்ற னர். காப்பி, எண்ணெய் விதைகள், தோல்கள், பயறு வகைகளை எத்தியோப்பியாவிடமிருந்து அமெரிக்கா, மேற்குச் செருமனி, இத்தாலி, சப்பான், சவூதி அரே பியா முதலியவை வாங்குகின்றன. இந்நாடு வெளி நாடுகளிடமிருந்து தொழிலுக்கு வேண்டிய இயந்திரங் கள், போக்குவரத்துச் சாதனங்கள் முதலியவற்றை இறக்குமதி செய்கிறது. பெருந்தொழில்களையும் இருப்புப்பாதை, வான்போக்குவரத்து, நீர்வழிச் சாத னங்களையும் அரசாங்கமே நடத்துகிறது. திட்டமிட்ட பொருளாதாரக் கொள்கை கடைப்பிடிக்கப் படுகிறது.

போக்குவரத்து வசதிகள் போதுமான அளவு இங்கு இல்லை. வான்வழிப் போக்குவரத்து வசதி சீராக அமைக்கப்பட்டுள்ளது; ஏறக்குறைய 40 வான் நிலையங்கள் உள்ளன. போக்குவரத்து வசதிகளைப் பெருக்குதலும், வேளாண்மைத் தொழிலைப் பிழைப்பு நிலைக்குமட்டுமுரியதாக இல்லாமல் வாணிகத்தின் வாயிலாகப் பணப்பொருளாதாரத்தின் அளவுக்கு அத னைச் சீராக்குதலும் இந்நாட்டினர் கவனத்தில் கொள்ள வேண்டியவை ஆகும். உற்பத்திப் பொருள் களை விற்பதற்குக் கிழக்காப்பிரிக்க ஒன்றியம் (East African Union) என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டி ருத்தல் இதன் முன்னேற்றத்தில் நம்பிக்கையை வளர்ப்பதாக உள்ளது.

மரபு முறையான கல்வித்திட்டம் கிறித்தவத் திருச்சபையாலும் குரான் பள்ளிக்கூடங்களாலும் அளிக்கப்பட்டது. இக்காலப் பள்ளிக்கூடக் கல்வி முறையை கி.பி.19-ஆம்நூற்றாண்டினிறுதியில் பேரர சர்கள் இரண்டாம் மெனலிக்கு, எயிலிசெலாசி முதலி யோர் புகுத்தினர். ஆயினும், நாட்டில் 90 விழுக்காட் டினர் கல்வி அறிவின்றி இருந்தனர். நான்கு நிலை களாகப் பள்ளிக்கூடப் பயிற்சி கொடுக்கப்படுகிறது. அடிசு அபாபாவில் உள்ள தேசியப் பல்கலைக்கழகம் கலைகள், அறிவியல், கல்வி, தொழில், வணிகம், சமூகப் பணி, சட்டம், மருத்துவம் முதலியவற்றில் பயிற்சி அளிக்கிறது. மருத்துவ வசதியில் இந்நாடு மிகவும் பின்தங்கியுள்ளது. மிகவும் குறைவான எண் ணிக்கையுள்ளவர்களுக்கே மருத்துவ வசதி கிடைக் கிறது. பல வகையான நோய்களை ஒழிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

வரலாறு: எத்தியோப்பியாவுக்கு எகிப்தைப் போன்றதொரு நீண்டபழமையான வரலாறு உண்டு. எகிப்து அடுத்தடுத்துப் பல அயல்நாட்டவர் படை யெடுப்புகளின் காரணமாகத் தன் பண்டைய நாகரி கத்தினின்றும் பிரிக்கப்பட்டுவிட, எத்தியோப்பியாவின் உயர்ந்த, வளமான நிலப்பகுதியில் வாழ்ந்த மக்களை எவரும் தாக்க இயலாதபடி பாலைநிலங்கள் சூழ்ந்தி ருந்தமையால், இந்நாடு ஏறக்குறைய 2000 ஆண்டு களாகக் குசைட்டு இனமக்களாலும் (Cushites), அரே பியாவிலிருந்து குடியேறிய செமிட்டிக்கு இனமக்களா லும் (Semitic Tribes) உருவாக்கப்பட்ட ஒரு தனிப் பட்ட நாகரிகத்தை மற்றவர்களோடு கலக்காமல் தொடர்ச்சியாகக் காத்து வந்துள்ளது; இதனுடைய வரலாறும் இடைவெளியின்றித் தொடர்ச்சியாக உள்ளது.

பண்டைய எகிப்தியர் எத்தியோப்பியாவைத் தங்கள் கடவுளருடைய பூர்விக நாடு அல்லது பண்டு (Pant) என்று அழைத்தனர். இந்நாட்டிலிருந்துதான் கோதுமையும் ஒலிவ மரமும் வந்தன என்று கிரேக் கர் கருதினர். இந்நாட்டின் ஓமோப் பள்ளத்தாக்கில் கண்டெடுக்கப்பட்ட சில சின்னங்கள் பண்டைய மனி தன் இங்குத் தோன்றியிருத்தல் கூடுமென உய்த்துணர இடந்தருகின்றன. எகிப்திய அரசர்கள் கி.மு. 2000 -இல் இப்பகுதியிலிருந்து மணப்பொருள்களை வாங்கிச் சென்றனர். அபாசாட்டு என அழைக்கப்பட்ட எத்தி யோப்பியர் மணப்பொருள்களை எகிப்தில் விளைவித் தனர். கி.மு. 8, 7-ஆம் நூற்றாண்டுகளில் எகிப்திய அரசக் குடும்பம் எத்தியோப்பியாவின் பகுதியை ஆண்டது. பின்னர், கி.மு. 6-ஆம் நூற்றாண்டில் தென்அரேபியாவிலிருந்து வந்த மினேயன் (Minaean), சபேயன் (Sabaean) நாகரிகம் எத்தியோப்பியாவில் பர விற்று. இந்தச் சபேயன் நாகரிகத்தின் வரவின்

காரணமாகக் கிறித்தவ விவிலிய மறைநூலில் சாலமனின் அரசவைக்கு அரசி சீபா (Sheba) சென்ற நிகழ்ச்சியை எத்தியோப்பியர் இணைத்தனர். சபேய நாகரிகத்தினால் இங்கு வானப் பொருள் வழிபாடு, அரசரின் இறைத்தன்மை, சில சமூக நிறுவனங்கள், வேளாண்மையிலீடுபாடு, கட்டடக்கலை, ஏனைய கலைகள் முதலியவும் அரேபியச் சபேயருடைய எழுத்து வடிவமும் ஏற்றுக் கொள்ளப்பட்டன. இந்நாட்டின் கடற்கரைகளில் எகிப்தியர் வணிக நிறுவனங்களை நிறுவினர். ஓரளவு கிரேக்க மொழியும் கலையும் புகுந்தன.

சபேயரும் எத்தியோப்பியரும் இணைந்து அக்சும் (Aksum) என்ற சுதந்திர நாட்டை நிறுவினர். இது கி.பி. 2–ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 9–ஆம் நூற்றாண்டுவரை வலுவாக எத்தியோப்பியாவின்வடபகுதியிலிருந்தது. இதன் செல்வ வளமுள்ள துறைமுகங்கள் இந்நாட்டின் படைவலிமையையும் கப்பற்படையையும் பெருக்கின. தென் அரேபியாவிலுள்ள சபேய அரசும் மினேய நாடும் இதனாட்சியில் கி.பி. 3 முதல் கி.பி. 6–ஆம் நூற்றாண்டுவரை இருந்தன. செங்கடலின் இருபக்கங்களிலும் எத்தியோப்பியர் பரவினர். வாணிகம் பெருகிற்று. எத்தியோப்பியப்பேரரசர்களுடைய உருவம் பொறித்த நாணயங்கள் வெளியிடப்பட்டன. செங்கடல் பகுதி, தென் எகிப்து, வடகிழக்கு ஆப்பிரிக்கா முதலியவை எத்தியோப்பியருடைய செயல்களால் வளம் பெற்றன. இக்காலத்தில் புகழ்மிக்க அக்சும் அரசர்கள் சாசுகலேசு (Zoscales), கடரட்டு (Gadarat), முதலாம் வாசபு (Wazeb I) முதலியோர் தென் எகிப்திலிருந்து தென்மேற்கு எத்தியோப்பியா, ஏடன் வளைகுடா வரையிலும் அக்சும் அரசர்களுடைய அதிகாரம் பரவியிருந்தது. அரசர் எசானா (கி.பி.325) இம்யர் (Himyar), சபா (Saba), மெரோ (Meroe), பெசா (Beja) முதலிய நாடுகளை வென்று, கிறித்தவ நெறியை ஆதரித்தார்.

எத்தியோப்பியக் கிறித்தவத் திருச்சபை கோப்டிக்குத் திருச்சபை (Coptic Church) எனச் சொல்லப்பட்டது. எல்லா – அசுபெகா (Ella-Asbeha) என்ற அக்சும் அரசர் காலத்தில் கிறித்தவர்களுக்குப் பாதுகாப்பளிக்கப்பட்டுத் துறவிகளுக்கான மடங்களும் நிறுவப்பட்டன. கி.பி.6–ஆம் நூற்றாண்டில் பாரசீகரும் அரேபியரும் அரேபியாவிலிருந்த எத்தியோப்பியக் குடியேற்றங்களைக் கைப்பற்றவே, அக்சும் பேரரசு மறையலாயிற்று. எத்தியோப்பியக் கிறித்தவத் திருச்சபையும் இசுலாம் சமயமும் கொள்கையளவில் பெரும் வேறுபாடின்றி ஒத்திருந்தன; பிற்காலத்தில்தான் இருசாராருக்குமிடையே பிளவுகள் ஏற்பட்டன. அக்சும் நகரம் வளம் குறைய, அதன் பேரரசின் எல்லையில் புதிய சுதந்திர அரசுகள் தோன்றின. சாரின் (Jarin), கட்டா (Qata) முதலிய எத்தியோப்பியச் சிற்றரசுகள் சுதந்திர எரிட்டிரியாவில் தோன்றின. நடு எத்தியோப்பியாவிலிருந்து சேக்கு (Zaque) என்னும் ஒரு கூட்டத்தார் சுதந்திர அரசை அமைத்துக் கொண்டனர்.

**சாலமன் வழியினர் ஆட்சி:** கி.பி. 13–ஆம் நூற்றாண்டினிறுதியில் எய்க்கு ஏரிப்பகுதியிலிருந்த ஒரு புதிய கூட்டத்தாரின் தலைவர் அங்காரா (Amhara) சேகு அரசை நீக்கிவிட்டு, சேவா (Shewa) என்ற புதிய நகரத்தைத் தென் எத்தியோப்பியாவில் நிறுவினார். இவர் வழிவந்தோர் சாலமன் வழிவந்தோரெனக் கூறப்படுகின்றனர். கிறித்தவ மடங்கள் இப்புதிய அரசக் குடும்பத்துக்கு ஆதரவளித்துப் பல நல்லுதவிகள் பெற்றன. இவர்கள் பண்டைய அக்சும் குடும்பத்தாரின் வழித்தோன்றல்களாகப் பெருமதிப்புடன் கருதப்பட்டனர். கி.பி.14–ஆம் நூற்றாண்டில் பெரும் புகழுடனிருந்த இவ்வரசர்கள் கிறித்தவச் சமயத்துக்கு ஆதரவளித்து, முசுலிம் சிற்றரசர்களை அடக்கினர்; அவ்வரசர்களுள் அம்டா சியோன், செய்பா அரடு, தாவீது (David), எசாக்கு (Yeshaq) முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள். கி.பி.16-ஆம் நூற்றாண்டில் இலெப்னா தெங்கல் என்னும் அரசர் தம் நாட்டிற்கு வந்த ஒரு போர்ச்சுகீசியத் தூதரை அன்புடன் வரவேற்றார்.

**துருக்கியரோடும் போர்ச்சுகீசியரோடும் தொடர்பு:** துருக்கியர் கி.பி. 1517–இல் எகிப்தை வென்று, அரேபியாவில் குடியேறினர். துருக்கியர் எத்தியோப்பியரையும் தாக்கினர். இலெப்னா தெங்கலின் பேரரசில் முசுலிம் படையெடுப்புகள் நடந்தன. தென்கிழக்குப் பகுதியில் தோன்றிய கலகத்தை அரேபியாவிலிருந்த துருக்கியர் ஆதரித்தனர். போர்ச்சுகீசியர் உதவியினால் துருக்கியர் தோற்கடிக்கப்பட்டாலும், நாட்டின் வளம் குறைந்தது. அரசர் சுசேனியா என்பவருடைய காலத்தில் துருக்கியர் இந்நாட்டிலிருந்து முற்றிலும் நீக்கப்பட்டனர். ஆனால் சமயப் பூசல்கள் அமைதியின்மையைத் தோற்றுவித்தன. கி.பி.17–ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து 19–ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை எத்தியோப்பியாவில் இந்திய, போர்ச்சுகீசிய கட்டடக் கலைகளைப் பின்பற்றிப் புதிய கோயில்கள், மடங்கள், கோட்டைகள் முதலியவை கட்டப்பட்டன. முகலாயப் புடைப்போவியக்கலையும் பின்பற்றப்பட்டது. போர்ச்சுகீசியரிடமிருந்து இக்காலப் போர்முறைகள் கற்றறியப்பட்டன. கிறித்தவ

குருமார்கள் (இயேசு சங்கத்தார்) ஆதிக்கம் பரவவே, எத்தியோப்பிய அரசர்கள் அவர்களை நீக்கினர்.

பசிலிடசு (கி.பி. 1632–1667) மன்னர் எத்தியோப் பியாவுக்குக் கோண்டர் (Gonder) என்னுமொரு புதிய தலைநகரத்தை நிறுவினார். முதலாம் அயாசு (கி.பி. 1682–1706) மன்னர் கிறித்தவத் திருச்சபையால்



கோண்டர் நகரம்

புனிதமானவர் (Saint) என அழைக்கப்பட்டார். அவர் தலைநகரை அழகுபடுத்தினார்; சமயப் பூசல் களைக் களைந்தார்; மனிதப் பற்றினடிப்படையில் ஆட்சியில் சீர்திருத்தங்களைச் செய்தார்; தென் மாகாணங்களில் தமதாணையை மீண்டும் நிறுவி னார். பின்னர் வந்த பகாபா என்பவர் இளமையில் இறந்துவிட, அவர்தம் மனைவியான மெண்டேவாபு (Mentewab) தம் குழந்தைகளுக்கும் பேரக்குழந்தை களுக்கும் கண்காணிப்பாளராக இருந்து 40 ஆண்டு களுக்கு நாட்டைத் திறமையுடன் மேற்பார்வை செய் தார். இரண்டாம் அயாசுவின் ஆட்சியில் எத்தியோப் பியப் படைகளைச் சென்னார்ப் போர்க்களத்தில் நுபியாவிலுள்ள முசுலிம்கள் தோற்கடித்தனர்.

சிறிது காலம் வெளியார் நுழைவினால் நாடு அமைதி இழந்திருந்தது. நிலமானிய முறையில் சமூக மும் ஆட்சியும் உருவாகத் தொடங்கின. சாலமனின் வழிவந்த இக்கால அரசர்கள் படைவலி இன்றி அதி காரமும் இழந்திருந்தனர். தலைநகரமான கோண் டரும் சேவா(Shewa)மாநிலமும்தான் அரசர்களுடைய கட்டுப்பாட்டில் அமைதியாக இருந்தன. எத்தியோப் பியர் நிலமானியப் பிரபுக்களினாட்சியை வெறுக்கவே அவர்களைக் காசா (Kassa) என்னும் தலைவர் தோற்கடித்து, தம்மை இரண்டாம் தெவொடிராசு (Tewodros II) என்ற பெயரில் பேரரசராக ஆக்கிக் கொண்டு, தம் இருப்பிடத்தை நடுப்பகுதியில் மலை களுக்கிடையில் அமைத்துக் கொண்டார். இவர் காலத்தில் ஒரு முரண்பாட்டின் காரணமாக இவரை ஆங்கிலப் படைகள் தாக்க, கி.பி. 1868–இல் இவர் மகதேலாவில் (Magdela) தற்கொலை செய்து கொண்டார்.

மன்னர் நான்காம் யோகன்னசு சான் (Yohannes IV, John) என்பவர் தம் ஆட்சியில் (கி.பி. 1872–1889) எதிப்தியருடைய ஆதிக்கத்தைத் தடுத்து, பல முசுலிம்களைக் கிறித்தவச் சமயத்தை ஏற்குமாறு செய்தார். ஆங்கிலேயருடைய உதவியுடன் இத்தாலி யர் பலர் எத்தியோப்பியாவின் வடபாலுள்ள மிட்சிவா நகரத்தில் குடியேறினர். இவருக்குப் பின்னர், கி.பி. 1864–இலிருந்து சேவாவின் அரசராக இருந்த இரண் டாம் மெனலிக்கு (Menelik II) என்பவர் கி.பி. 1889 முதல்1913 வரை எத்தியோப்பியப் பேரரசராக ஆட்சி செய்தார். தென்மாநிலங்களில் இவர் தமதாட்சியை உறுதியாக நிறுவி, வடமாநிலங்களில் அயலவர் குடி யேறுதலைத் தடுத்து, ஆரர் (Harer) மாநிலத்தை கி.பி. 1887–இல் வென்று, அதே ஆண்டில் எத்தியோப் பியாவுக்குப் புதிய தலைநகரமான அடிசு அபா பாவை (Adis Ababa) நிறுவினார். ஆங்கிலோ– பிரஞ்சுக் காப்பை எத்தியோப்பியநாடு ஏற்குமாறு ஓர் ஒப்பந்தம் கி.பி. 1888–இல் செய்யப்பட்டது; ஆயி னும் இத்தாலியர் ஆரரில் நுழைவதற்குச் சோமாலி லாந்திலிருந்த ஆங்கிலேயர் உதவி செய்யவே, ஆங்கிலேயருக்கும் மெனலிக்குக்கும் முரண்பாடுதோன் றிற்று. எரிட்டிரியாவினுள் இத்தாலியர் ஊடுருவு தலை ஓரளவு மெனலிக்கு ஏற்றுக் கொண்டாலும், பின்னர் இத்தாலியர் எத்தியோப்பிய மாநிலமாகிய தைகிரேயின்மீது (Tigre) படையெடுத்துவர, அவர் களை மெனலிக்கு கி.பி.1896-இல் அடோவாப்(Adowa) போரில் தோற்கடித்தார். உடனே பிரான்சு, இங்கி லாந்து, இத்தாலி முதலியவை எத்தியோப்பிய அரச ருடைய உரிமைகளை ஒத்துக் கொண்டு ஒப்பந்தங்கள் செய்தன. பிரான்சு உதவியினால் மெனலிக்கு எத்தி யோப்பியாவைத் தென் சூடானோடு இருப்புப்பாதை வாயிலாக இணைப்பை ஏற்படுத்த விரும்பினார். ஆங்கிலேயர் தென் சூடானை வென்று பிரஞ்சியரைத் தடுக்கவே, அடிசு அபாபா வரையே இருப்புப்பாதை இணைப்பை ஏற்படுத்த முடிந்தது. இவர் 1906–இல் இத்தாலியரும் பிரஞ்சியரும் ஆங்கிலேயரும் சில உரிமைகளைப் பெறுமாறு ஒரு முக்கூட்டு ஒப்பந்தம்

செய்தார்; இத்தாலியருக்குச் சோமாலிலாந்தில் சில உரிமைகளை 1908-இல் வழங்கினார்.

மெனலிக்கு 1913-இல் இறக்கு முன்னர் அவருடைய வழித்தோன்றல் இராசு மகோனென் இறந்ததனால், அவருடைய பேரர் இலி இயாசு (Li Iyasu) 15-ஆம் வயதில் ஆட்சிக்கு வந்தார். திறமையற்ற இவருடைய ஆட்சியின்போது முதல் உலகப்போர் நடைபெற்றது. செருமானியரும் துருக்கியரும் எத்தியோப்பியாவைக் கைப்பற்ற முயலவே, இலி இயாசுவைக் கிறித்தவத் திருச்சபையும் பிரபுக்களும் நீக்கிவிட்டு, மெனலிக்கின் மகள் சடிட்டுவைப் (Zauditu) பேரரசியாகவும், இராசு மகோனெனின் மகன் இராசு தபரி (Ras Tafari) என்பவரைக் கண்காணிப்பாளராகவும் பின் உரிமையாளராகவும் ஆக்கினர். இதனால் எத்தியோப்பியாவின் சுதந்திரம் காப்பாற்றப்பட்டது. கண்காணிப்பாளர் இராசு தபரி அரசியல் திறமிக்கவர்; இவருடைய முயற்சியால் 1923-இல் எத்தியோப்பியா சருவதேச சங்கத்தில் சேர்ந்து, தன்மீது மேற்கத்திய ஆதிக்கத்தை ஏற்படுத்துகிற இங்கிலாந்தின் திட்டத்தை எதிர்த்தது. கண்காணிப்பாளர் நிலமானியப் பிரபுக்களின் ஆதிக்கத்தை நீக்கி, இங்கிலாந்து, இத்தாலி, பிரான்சு ஆகிய நாட்டவரிடமிருந்து எத்தியோப்பியச் செங்கடற்கரையிலும் ஏடன் வளைகுடாவிலுமிருந்த கடலிணைப்புப் பகுதிகளைத் திரும்பப் பெற்றார்; இங்கிலாந்து பெர்பெராவையும், இத்தாலி அசபுத் (Aseb) துறைமுகத்தையும் அளித்தன. சடிட்டு 1930-இல் மறையவும், இராசு தபரி அரசராகவும் முதலாம் எயிலி செலாசி என்ற பெயருடன் (Haile Selassie I) பேரரசராகவும் முடிசூட்டப்பட்டார்.



எயிலி செலாசி

பேரரசர் எயிலி செலாசியின் ஆட்சியில் (1930) எத்தியோப்பியாவுக்குப் பல இடர்ப்பாடுகள் ஏற்பட்டன. எயிலி செலாசி 1931-இல் தம் நாட்டிற்கு ஒரு பாராளுமன்றத்தை நிறுவி, அதை நாகரிக நாடாக்க முயன்றார். ஆனால், பன்னாட்டுப் பொருளாதார முடக்கம் எத்தியோப்பியாவைப் பாதித்தது. எத்தியோப்பியா ஒரு கிறித்தவ நாடாகவும் நாகரிகமுடையதாகவும் பல நூற்றாண்டுகளாக இருந்தது. அது சருவதேச சங்கத்தின் உறுப்பு நாடாகவும் இருந்தபோதிலும், இத்தாலியப் பாசிச சருவாதிகாரியான முசோலினி அடோவாவில் இத்தாலியருக்கு ஏற்பட்ட தோல்விக்காக அதன்மீது பழிவாங்கவும் அதைக் கைப்பற்றவும் திட்டமிட்டார். எத்தியோப்பியாவுக்கும் இத்தாலியச் சோமாலியாவுக்குமிடையே எல்லை வரையறுக்கப்படாததால், இத்தாலி ஒகாடன் (Ogaden) பகுதியைத் தன் எல்லையாகக் கேட்டது. சருவதேச சங்கத்தில் இரு நாடுகளுக்கு மிடையே தகராறு தீர்க்கப்படவில்லை.

பிரான்சும் இங்கிலாந்தும் இத்தாலியக் காப்பாட்சி எத்தியோப்பியாவின் மீது நிறுவப்படுதற்கு உடன்பட, எயிலி செலாசி இத்தாலியோடு உடன்படிக்கை செய்ய முன்வந்த போதிலும், இத்தாலியப் படைகள் குவிக்கப்பட்டு எரிட்டிரியா வழியாகவும் சோமாலியா வழியாகவும் எத்தியோப்பியாவுக்குள் போர் ஆணை எதுவுமின்றிப் படையெடுத்துச் சென்று, 1935, 1936-இல் எத்தியோப்பியாவை இத்தாலியோடு இணைத்தன. சருவதேச சங்கம் விதித்த பொருளாதாரத் தடைகள் பயனளிக்கவில்லை. பேரரசர் சருவதேச சங்கத்தின் முன் தம் நாட்டினுரிமைக்குப் பாதுகாப்பு வேண்டினார். இத்தாலியர்கள் எத்தியோப்பியத் திருச்சபை குருமாரை ஒழித்தனர். எத்தியோப்பியாவின் உட்பகுதிகளை இத்தாலியரால் கைப்பற்ற இயலவில்லை. இரண்டாம் உலகப் போரில் இத்தாலி செருமனியோடு சேர்ந்தது. இத்தாலி ஆங்கிலேயரின் சோமாலிலாந்தின் மீது படைஎடுக்க, இங்கிலாந்தும் சுதந்திரப் பிரஞ்சுப் படையினரும் எத்தியோப்பியருக்கு உதவி செய்து, இத்தாலியரிடமிருந்துஎத்தியோப்பியாவை மீட்டுக் கொள்ள வழி செய்தனர். சுதந்திரமடைந்த எத்தியோப்பியாவுக்கு 1941-இல் பேரரசர் எயிலி செலாசி திரும்பினார் இங்கிலாந்துடன் செய்யப்பட்ட இரு ஒப்பந்தங்களின் வாயிலாக (1942, 1944) எத்தியோப்பியா அதன்

பேரரசருக்கு அளிக்கப்பட்டது; ஒகாடன் 1952 –இலும் எரிட்டிரியா 1962–இலும் எத்தியோப்பியா வோடு இணைந்தன.

போருக்குப் பிந்தைய காலத்தில் பேரரசர் எயிலி செலாசி ஐக்கிய நாடுகள் சபையின் பட்டயத்தை ஏற்றும், பாதுகாப்பு ஒப்பந்தத்தை ஐக்கிய அமெரிக்க நாட்டோடு செய்தும், அதனுதவியால் எத்தியோப்பியாவை வான்பயண வழிகளோடு இணைத்தும், நாட்டைப் பன்னாட்டு வாழ்க்கையில் பங்கு கொள்ளச் செய்தார். இவர் 1931–இல் தாம் வரைந்த அரசியலமைப்புச் சட்டத்தை நாடு முழுவதற்கும் விரிவாகக் கொண்டு வந்து, 1957–இல் பாராளுமன்றத் தேர்தலை நடத்தினார். தொழில் வளர்ச்சியும் மின்சார உற்பத்தியும் பெருகின. கல்விப் பயிற்சி வளர்ந்தது. அசுமேராவில் 1958–இலும் அடிசு அபாபாவில் 1961 –இலும் பல்கலைக் கழகங்கள் தோன்றின. சமயத் துறையில் சீர்திருத்தங்களும் சமய உரிமையும் கொண்டுவரப்பட்டன. ஆப்பிரிக்க ஒற்றுமை நிறுவனத்தின் பட்டயமும் (O.A.U.) ஏற்றுக் கொள்ளப்பட்டது. சோமாலியாவுக்கும் எத்தியோப்பியாவுக்குமிடையே எல்லை வரையறை செய்வதில் இன்னும் முரண்பாடு இருந்தாலும் போர் தவிர்க்கப்படுகிறது. இதே போல எரிட்டிரியாவுடனும் தகராறு இருந்து வருகிறது. பேரரசருடைய ஆட்சியில் ஊழல் மிகுந்தது; மக்களுடைய நிறைவற்ற போக்கைப் பயன்படுத்தி மாணவர், தொழிலாளர், படை வீரர் முதலியோர் தலைநகரில் வேலை நிறுத்தம் செய்ய, 1974 செப்டம்பரில் பேரரசர் எயிலி செலாசி நீக்கப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார்.

இடைக்கால இராணுவ ஆட்சிக்குழு (Military Administrative Council, 120 உறுப்பினருடையது) ஆட்சியை இளவரசர் அசுபா ஓசனுக்கு (Asfa Wossen) அளித்தது. இக்குழுவின் ஆணைப்படி இளவரசர் நாட்டின் தலைவரே தவிர, ஆட்சி அதிகாரம் ஏதும் அவருக்கு இல்லை. ஊழல் குற்றத்துக்காளான பிரபுக்களும் அலுவலரும் இராணுவ ஆட்சிக் குழுவினால் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். இராணுவ ஆட்சிக் குழு 1974–இல் விடுத்த ஒரு கொள்கை அறிக்கையில், எத்தியோப்பியாவை ஒரு கட்சி முறையை உடைய சமநிலை நாடாக (Socialist Country) ஆக்கி, கூட்டுப் பண்ணைகளையும் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்ப எல்லா உடைமைகளின்மீதும் நேர்முக அரசாங்கக் கட்டுப்பாட்டையும் ஏற்படுத்துவதாகவும் கூறிற்று. இராணுவ ஆட்சிக் குழு முடியாட்சியை 1975 மார்ச்சில் நீக்கி விட்டு, எத்தியோப்பியர் தாங்கள் விரும்பும் அரசாங்க முறையைத் தாங்களே தீர்மானித்துக் கொள்ளுமாறு கூறிற்று. இந்நாட்டில் 1973, 1975, 1985 ஆகிய ஆண்டுகளில் கடும் வறட்சிகளினால் பெருமளவு மக்கள் இறந்தனர்.

இராணுவக் குழுவின் அரசாங்கம்: எத்தியோப்பியஇராணுவ ஆட்சிக் குழுவில் 120 உறுப்பினர் உள்ளனர்; தங்களுடைய விருப்பத்துக்கேற்ற நிலையான அரசாங்கத்தை எத்தியோப்பியர்கள் நிறுவும்வரை, இராணுவ ஆட்சிக்குழு பதவியிலிருக்கும். இதற்கு உதவியாக இராணுவத்தாரல்லாத 50 உறுப்பினரடங்கிய தொழில் நுட்ப ஆலோசனை மன்றமும் இருக்கிறது. நாடு நாகரிக, மொழி அடிப்படையில் 14 மாநிலங்களாகவும் மாவட்டங்களாகவும் வட்டங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. மாவட்ட, வட்ட, சிற்றூர் நிலைகளில் அவ்வப் பகுதி மக்களே கொள்கையை வகுத்து நிறைவேற்றுதற்கு உரிமைகள் இருக்க, நடுவண் அரசாங்கம் தேசிய, ஆதார அரசுப் பணிகளை நிறைவேற்றிக் கீழ்மட்ட அரசாங்கங்களுக்கு ஆதரவளிக்கிறது. நீதித்துறைப் பணி பல்வேறு இனங்களின் வழக்கச் சட்டங்களை ஒட்டி வழங்கப்படுகிறது. 'சசுட்டினியன்' சட்டத் தொகுப்பை ஒட்டி எழுந்த சட்டத் தொகுப்பும் இக்காலப் பன்னாட்டுச் சட்ட வல்லுநரால் தொகுக்கப்பட்ட சட்டமும் பின்பற்றப் படுகின்றன. உயர் நீதிமன்றமும் மாவட்ட, வட்டநீதிமன்றங்களும் இருக்கின்றன. முசுலிம் குடும்ப, தாயமுறைச்சட்டங்கள் சாரியா நீதிமன்றங்களால் (Shariah Courts) கையாளப்படுகின்றன. எத்தியோப்பிய வீரர்களடங்கிய படையே ஆப்பிரிக்கப் படைகளுள் மிகச் சிறந்ததாகும். உடல் தகுதி உடைய ஒவ்வோர் எத்தியோப்பியரும் ஒரு படைவீரரே. நிலைப்படை ஒன்று உள்ளது; 45,000 நன்கு பயிற்சி பெற்ற வீரர்களிருக்கின்றனர். ஒரு சிறு வான்படையும் கப்பற்படையும் இருக்கின்றன. பா. சு.

மொழிகள்: எத்தியோப்பியாவில் பேசப்படும் மொழிகளையே எத்தியோப்பிய மொழிகள் எனக் கூறுகின்றனர். இன்று எத்தியோப்பியாவில் செமிட்டிக்கு, குசுட்டிக்கு, நைலாட்டிக்கு ஆகிய மூன்று இன மொழிகள் பேசப்படினும், செமிட்டிக்கு இனத்தைச் சார்ந்த எத்தியோப்பிய மொழிகளே அதிகமாக வழங்குகின்றன. இங்கு வழங்கும் எத்தியோப்பிய மொழிகளை வடக்கு எத்தியோப்பிய மொழி என்றும் தெற்கு எத்தியோப்பிய மொழி என்றும் இரு பிரிவுகளாகப் பிரிப்பர். வடக்கு எத்தியோப்பிய மொழிகளுள் கீசு (Gees), திக்ரே (Tigre), திக்ரின்யா (Tigrinya) என்னும் மூன்று மொழிகளும், தென் எத்தியோப்பிய மொழிகளுள் அம்காரிக்கு (Amharic), அர்கோபா (Argopha), அராரி (Harari), குராசு (Gurage), கபத்து (Gapat) ஆகிய மொழிகளும் அடங்கும்.

செமிட்டிக்கு மக்கள் தென் அரேபியாவிலிருந்து இங்கு வந்து குடியேறினர் என்றும், அப்போது இங்கு குசுட்டிக்கு மொழிகளே வழக்கிலிருந்தன என்றும், அதனால்தான் எத்தியோப்பியாவில் வழங்கும் செமிட்டிக்கு மொழிக்கும் தென் அராபிக்கு மொழிக்கும் இடையே நெருங்கிய தொடர்பு காணப்படுகிறது என்றும், குசுட்டிக்கு மொழியின் செல்வாக்கு இவற்றில் அதிகமாக உள்ளது என்றும் கருதலாம். இம்மக்கள் கி.பி. 4-ஆம் நூற்றாண்டை ஒட்டிய காலப்பகுதியில் கிறித்தவ மதத்தைச் சார்ந்ததனால் கிரேக்க, காப்டிக்கு மொழிகளின் செல்வாக்கும் இங்குப் பரவலாயிற்று.

இன்று எத்தியோப்பிய நாட்டின் அரசியல் மொழியாக வழங்குவது அம்காரிக்கு என்னும் மொழியாகும். இம்மொழியின் எழுத்துச் சான்றுகளை கிபி. 14-ஆம் நூற்றாண்டுக்குப் பின்னரே காண முடிகிறது. இவற்றுள்ளும் பல கீசுமொழியிலிருந்து பல்வேறு நூல்களை மொழி பெயர்த்ததனால் உண்டாகியவையாகவே உள்ளன. இவை தவிர வேறு பல மொழி பெயர்ப்பு நூல்களும் இம்மொழியின்கண் உள்ளன. இந்நாடு 1940-ஐ ஒட்டி விடுதலை அடைந்த பின்னர் இம்மொழிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. இந்நிலையில் இன்று இது வளரும் நிலையில் உள்ளது.

இம்மொழி இந்நாட்டின்கண் உள்ள அம்காராப் பகுதியில் வாழும் 30,00,000க்கும் அதிகமான மக்களால் பேசப்படுவது. இது கி.பி.12-ஆம் நூற்றாண்டிலிருந்தே சிறிது சிறிதாக முக்கியத்துவம் அடைந்தது. இயேசுவின் சங்கப் பாதிரிகள் கி.பி.16, 17-ஆம் நூற்றாண்டிலிருந்தே இம்மொழியைப் பயன்படுத்தி வந்துள்ளனர்.

இந்நாட்டு மக்களுள் ஐந்தில் ஒரு பகுதியினரே இம்மொழியைத் தாய் மொழியாகக் கொண்டிருந்த போதிலும், இன்று பாதிக்கும் மேற்பட்ட மக்கள் இதனை அறிந்தவர்களாக உள்ளனர்.

இம்மொழியும் கீசு மொழியோடு மிகுந்த தொடர்புடையது. சில அறிஞர்கள் கீசு மொழியிலிருந்தே இது பிறந்தது எனவும் கருதுவர். கீசு மொழியே இந்நாட்டின் பழமையான மொழியாகக் கருதப்படுகிறது. இம் மொழிக்கெனப் பழைமையான இலக்கியங்களும் எழுத்துச்சான்றுகளும் உள்ளன. இம்மொழி இலக்கியங்களும் கிரேக்கமொழி, அராபிய மொழிகளிலிருந்து மொழி பெயர்ப்பின் வாயிலாக மிகப் பழங்காலத்திலிருந்தே உருவானவையாகக் கருதலாம். வேதாகமம் போன்ற கிறித்தவ நூல்களின் மொழி பெயர்ப்புகளும் பிறவும் மிக அதிகமாக உள்ளன.

முன்னர்க் குறிப்பிட்டபடி இம்மொழி இன்று வழக்கில் இல்லை. வட எத்தியோப்பியாவிலும் மத்திய எத்தியோப்பியாவிலும் கி.பி.18-ஆம் நூற்றாண்டு வரை இம்மொழி வழக்கிலிருந்தது. அம்காரிக்கு கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தால் அரசியல் மொழியாக மாறிய போதிலும், கீசுமொழி கி.பி. 19-ஆம் நூற்றாண்டு வரை படித்தோர் மொழியாகவும் இலக்கிய மொழியாகவும் இருந்து வழக்கொழிந்துபோயிற்று.எனினும், அது இன்னும் சில கிறித்தவக் கோயில்களில் வழங்குகிறது என்று கூறுவர்.

இது தென் அராபிக்கு மொழிகளுடன் மிக்க தொடர்புகொண்டது. இதன் சொல் அமைப்பு, இலக்கணக் கூறுகள், வாக்கிய அமைப்புப் போன்றவை தென் அராபிக்கைப் போன்றே உள்ளன. பெரும்பாலான செமிட்டிக்கு மொழிகள் வலமிருந்து இடமாகவே எழுதப்பட, இது ஆங்கில மொழியைப் போன்று இடமிருந்து வலமாக எழுதப்படுவதும் கவனிக்கத்தக்கது. இவ்வெழுத்துகள் தென் அராபிக்கு எழுத்துகளுடன் மிகுந்த தொடர்பு கொண்டது என்பதும், பிற செமிட்டிக்கு மொழிகளைப் போலவே இதன் கண்ணும் முதலில் உயிரெழுத்துகள் எழுதப்படவில்லை என்பதும், பின்னர் உயிரெழுத்துகளையும் மெய்யெழுத்துகளையும் இணைத்துத் தமிழ் மொழியைப் போல எழுதப்பட்டது என்பதும் கவனிக்கத்தக்கன.

தமிழில் காணப்படும் உயர்திணை, அஃறிணைப் பகுப்பு இம்மொழியில் கிடையாது. ஆனால் ஆண்பால், பெண்பால் வேற்றுமை உண்டு. பெயர்ச் சொற்களைப் போலவே அடைச்சொற்களும் பால் காட்டும் தன்மையன.

பிற செமிட்டிக்கு மொழிகளில் எண்ணைப் பொறுத்த மட்டில் ஒருமை, இருமை, பன்மை என வேறுபாடுகள் காணப்படினும், இம்மொழியில் ஒருமை பன்மைப் பகுப்பு மட்டுமே காணப்படுகிறது. இப்பன்மையும் சில பின்னொட்டுகளினாலோ சொல்லிலுள்ள உயிரெழுத்துக்களின் மாற்றங்களினாலோ உணர்த்தப்படுகிறது.

திக்ரெ மொழி எத்தியோப்பியாவின் வடபாகத்தில் 2,20,000 மக்களால் பேசப்படுவதாகும். இம்மொழி கீசுமொழியுடன் மிகுந்த தொடர்புடையது. இம்மொழியில் சில மதநூல்கள் மட்டுமே எழுதப்பட்டுள்ளன. வேறு இலக்கியப் பெருமை ஏதும் இம்மொழிக்கு இல்லை. இம்மொழியின்கண்ஆண் பெண்பால் பகுப்பு மட்டுமன்றி, உயிர்ப்பெயர் (**Animate**),

உயிரற்ற பொருட்பெயர் (Inanimate) பகுப்பும் காணப்படுகிறது.

ஒருமை பன்மை எண் பாகுபாட்டுடன் மிகக் கூடுதலான எண்களைக் குறிக்கும் பண்பும் இம் மொழியில் உண்டு. அதனைக் காட்டப் பன்மையை இரட்டித்துக் கூறுதல் (Reduplication) இம்மொழியில் உள்ள ஒரு சிறப்பான பண்பாகும்.

| | | |
|---|---|---|
| நலத் | nälät | (ஒருவகை) மான் |
| நலத் | nãlat | மான்கள் |
| நலதத் | nãlatat | (அதிக) மான்கள் |

திக்ரின்யா எட்ரியாவில் திக்ரெ மொழி வழங்கும் பகுதிகளுக்குத் தெற்கே பேசப்படும் மொழியாகும். இது திக்கெரா என்றும், திக்ரை என்றும் திக்ரிக்னா என்றும் சொல்லப்படுகிறது. 5,00,000க்கும் அதிகமான மக்களால் பேசப்படுவது இம்மொழி. எத்தியோப்பிய மாநிலத்தைக் குறிக்கும் திக்ரெ என்னும் பெயரிலிருந்து இம்மொழிக்கு இப்பெயர் வந்தது. இதுவும் எத்தியோப்பிய மொழியுடன் மிக நெருங்கிய தொடர்பு கொண்டது.

தென் எத்தியோப்பிய மொழிகளுள் ஒன்றான அராரி, அராரி நகரத்தில் வழங்கும் மொழியாகும். ஏறக்குறைய 30,000 மக்கள் இம்மொழி பேசுகின்றனர்.

அர்கோபா மொழி சோன் மேட்டுநிலப் பகுதிகளில் வாழும் சுமார் 10,000 மக்களால் பேசப்படுகிறது. அம்காரிக்கு மொழியின் செல்வாக்கினால் இம் மொழி அழிந்து கொண்டிருக்கிறது. குராசு மொழி சோவிற்குத் தெற்கே உள்ள பகுதியில் வழங்கும் மொழியாகும். இம்மொழி பேசும் மக்கள் சுமார் 40,000 பேர் உள்ளனர். கபத்து கி.பி. 19–ஆம்நூற்றாண்டுவரை நைல்நதிக் கரையோரப் பகுதியில் வழக்கிலிருந்த மொழியாகும். ச.அ.

**எத்தியோப்பியாவில் கல்வி:** முன் தொடக்கப் பள்ளிக் கல்வி மூன்றாண்டுகள் ஆகும். நான்கு வயதிலிருந்து முன்தொடக்கப் பள்ளிகளில் (Pre-Schools) குழந்தைகள் சேர்ந்து பயிலுகின்றனர். தொடக்கப் பள்ளிக் கல்வி மொத்தம் ஆறாண்டுகள். ஏழு வயதிலிருந்து தொடக்கப் பள்ளிகளில் மாணவர்கள் சேர்ந்து பயிலுகின்றனர். ஏழாம், எட்டாம் வகுப்புகள்-ஈராண்டுகள் இளையோர் இடைநிலைப் பள்ளிகளில் (Junior - Secondary School) உள்ளன. மூத்தோர் இடைநிலைப் பள்ளிகளில்(Senior - Secondary School) வகுப்புகள் 9-இலிருந்து 12 வரை மொத்தம் நான்காண்டுகள் உள்ளன. பள்ளி செல்லும் வயதில் மொத்தம் 10 மிலியன் மாணவர்கள் எத்தியோப்பியாவில் உள்ளனர். தொடக்கப்பள்ளி, இடைநிலைப்பள்ளி, உயர்கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றில் மாணவர்கள் சேர்க்கை விகிதம் (Enrolment Ratio) முறையே 50, 10, 2 விழுக்காடு ஆகும்.

அடிசு அபாபாப் பல்கலைக் கழகம்(Addis Ababa University), ஆசுமராப் பல்கலைக் கழகம் (Asmara University), பல கல்லூரிகள் ஆகியன எத்தியோப்பியாவில் உயர்கல்வி வழங்கி வருகின்றன. பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழகம் ஆகியவற்றில் விரிவுரைவழிக் கற்பித்தல் (Lecture Method) மிகுதியும் பயன்படுத்தப்படுகிறது. பல்கலைக் கழகத்தில் மாணவர்கள் சேர்க்கை அம்மாணவர்கள் பள்ளியிறுதி வகுப்பில் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையிலேயே முடிவு செய்யப்படுகின்றது. எத்தியோப்பியாவில் அரசுப் பள்ளிகளில் அனைத்து மாணவர்களுக்கும் கல்வி இலவசமாகவே வழங்கப்படுகிறது.

எத்தியோப்பியாவில் 1979–ஆம் ஆண்டிலிருந்து முறைசாராக் கல்வி (Nonformal Education)நாடெங்கும் அளிக்கப்படுகிறது. ஊர்ப்புறங்களிலுள்ள மக்கள் பொது வாழ்வு மற்றும் அரசியல் வாழ்க்கையில் மிகுந்த ஆர்வத்தோடு ஈடுபடுதற்குரிய திறன்களை அளிக்கும் வகையில் அடிப்படை வயதுவந்தோர் கல்வி (Basic Adult Education) அமைக்கப்பட்டுள்ளது.

எத்தியோப்பிய நாட்டுக் கல்வி முறையைக் கல்வி அமைச்சகமே பொறுப்பேற்று நடத்தி வருகிறது. அரசு நிறுவனங்களும் தனியார் நிறுவனங்களும் சேர்ந்து தேசிய மொத்த ஆண்டுச் செலவில் 20விழுக்காடு கல்விக்காகச் செலவு செய்து வருகின்றன. மொத்தத் தேசிய உற்பத்தியில் (Gross Domestic Product GDP) இது 2 விழுக்காடே. மற்ற வளரும் நாடுகளின்கல்விச் செலவோடு ஒப்பிடுகையில் எத்தியோப்பியா மிகக் குறைவான பணத்தையே செலவழித்து வருகிறது.

எத்தியோப்பியா 1970–ஆம் ஆண்டுக் கணக்கின் படி, முறைசாராக் கல்விக்கு 12 விழுக்காடும், தொடக்கக் கல்விக்கு 41 விழுக்காடும், இடைநிலைக் கல்விக்கு 23 விழுக்காடும், உயர்கல்விக்கு 24 விழுக்காடும் கல்விக்காக ஒதுக்கியுள்ளது. உலக வங்கி, ஐக்கிய நாடுகளின் நிறுவனங்கள், வட அமெரிக்கா, ஐரோப்பா ஆகியவற்றிலுள்ள வளர்ந்த நாடுகள் பலவும் எத்தியோப்பியாவின் கல்வி வளர்ச்சிக்கு உதவி வருகின்றன.

தொடக்கப்பள்ளி ஆசிரியர் பயிற்சி பெறுவதற்கு ஒருவர் 12-ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். ஆசிரியர் பயிற்சியின் கால அளவு ஓராண்டு. இடைநிலைப் பள்ளி ஆசிரியர் பயிற்சி பெறுவதற்கு ஒருவர் பல்கலைக் கழகப் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும். இடைநிலைப் பள்ளி ஆசிரியர் பயிற்சியினை அடீசு அபாபாப் பல்கலைக் கழகத்துடன் இணைந்துள்ள கற்பித்தல் அறிவியல் பள்ளி (School of Pedagogical Science) தருகின்றது. ஏறத்தாழ 75 விழுக்காட்டுப் பல்கலைக் கழக ஆசிரியர்கள் உயர் கல்வித் தகுதியுடன் பல்கலைக் கழகங்களில் பணியாற்றி வருகின்றனர்.

பள்ளிகளுக்கான பாடத் திட்டத் தொகுதியினை (Curriculum) கல்வி அமைச்சகம் தயாரித்து வழங்குகிறது. பாடத் தொகுதியை உருவாக்குவதில் ஒவ்வொரு பாடத்துறை வல்லுநரும் சிறப்புத்திறன் கொண்ட கல்வியியல் வல்லுநரும் இடம் பெறுகின்றனர். பாடநூல் ஆசிரியர் கையேடு, மாணவர் பயிற்சி ஏடு முதலியவற்றை வகுப்பு 1 முதல் 12 வரை கல்வி அமைச்சகமே தயாரித்து அளித்து வருகிறது. பாட நூல்களைப் பெரும்பாலான மக்கள் பேசும் அம்காரிக்கு (Amharic) மொழியில் மட்டுமன்றி, சிறுபான்மையினத்தார் பேசும் ஏனைய நான்கு மொழிகளிலும் அமைச்சகம் தயாரித்து வழங்குகிறது.

ஒரு வகுப்பிலிருந்து அடுத்த வகுப்பிற்கு மாணவர்களை அனுப்புதல் ஆண்டுக்கு இருமுறை நடத்தப்படும். வகுப்பறைத் தேர்வுகளில் மாணவர் பெறும் மதிப்பெண்களை வைத்தே பொதுவாக முடிவு செய்யப்படுகிறது. எனினும், மாணவர்கள் 6,8 ஆகிய வகுப்புகளில் அரசு நடத்தும் தேசிய அளவுத் தேர்வுகளை எழுதித் தேர்ச்சி பெறுதல் வேண்டும். மேலும், 12-ஆம் வகுப்பு முடிவில் தேசிய அளவில் பள்ளியிறுதி வகுப்புத் தேர்வு (Ethiopian School Learning Certificate Examination - ESLCE) ஒன்றும் நடைபெறுகிறது.

கல்வியியலாராய்ச்சி எத்தியோப்பியாவில் குறைந்த அளவே நடைபெற்றுள்ளது. கல்வி அமைச்சகம் 1970-இலிருந்து கல்வியியல் ஆராய்ச்சியினை ஊக்குவித்து வருகிறது. கல்வியியல் ஆராய்ச்சி வெளியீடுகளைக் கற்பித்தலறிவியல் பள்ளியின் ஆராய்ச்சி மையம் (Research Centre of the School of Pedagogical Science) வெளியிட்டு வருகிறது.

எத்தியோப்பிய நாட்டுக் கல்வியமைப்பில் தீர்க்கப்படவேண்டிய சிக்கல்களுள் பணப் பற்றாக்குறை, பயிற்சி பெற்ற, அனுபவமிக்க ஆசிரியர் பற்றாக்குறை, பல்கலைக் கழகத்தில் உயர்கல்விக்கும் ஆராய்ச்சிக்கும் போதுமான வசதியின்மை ஆகியன குறிப்பிடத் தக்கன. எஸ்.த.

துணை நூல்கள்:

Ethiopian Ministry of Education, Notes on the Education System in Ethiopia Ministry of Education, Addis Ababa, 1981.

Nagaw, T.G., Education in Ethiopia: Prospect and Retrospect, University of Michigan Press, Michigan, 1979.

**எதிர்க்கும் உரிமை**: அரசில் வாழும் குடியாளுக்குத் தம் அரசாங்கத்தின் சட்டங்களுக்கும் ஆணைகளுக்கும் கீழ்ப்படியாமல் அதனை எதிர்த்து, எதிர்ப்பிற்குரிய சட்டங்களையும் ஆணைகளையும் கைவிடுமாறு செய்தற்கு உரிமை உண்டு என்னும் கொள்கையே எதிர்க்கும் உரிமை (Right of Resistance) எனப்படும். அரசாங்கமானது தனிவாழ்வுத் துறைகளைப்பற்றிச் சட்டமோ ஆணையோ செய்து, அதை யாவர் மீதும் கட்டுப்பாடாக விதிக்குமானால் அது அரசாங்கம் தனி வாழ்வுரிமைகளில் தலையிடும் தவறான செயல் ஆகுமென்றும், அப்போது சமூகத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் தமது தனி வாழ்வு உரிமைகளைக் காப்பாற்றிக் கொள்ளும்பொருட்டு அரசாங்கத்தை எதிர்ப்பதற்கும், இயக்கம் நடத்திப் பாதிக்கக்கூடிய சட்டங்களைக் கைவிடுமாறு அரசாங்கத்தைத் தூண்டுவதற்கும் உரிமை உண்டு என்பதும் எதிர்க்கும் உரிமை என்பதன் பொருள் ஆகும்.

தாம் நீதி அற்றது அல்லது முறை அற்றது என்று கருதும் அரசாங்க ஆணையைக் குடியாட்கள் எதிர்ப்பதற்கு உரிமை உண்டா இல்லையா என்ற கேள்வி, தொன்று தொட்டுச் சுதந்திர இயல்பும் ஓர் அமைப்பின் கீழ் கூட்டமாக வாழும் இயல்புமுடைய மனிதர், ஓர் அரசியற் சமுதாயமாக வாழத் தொடங்கிய காலமுதலே இருந்து வருகிறது. இந்தக் கேள்வியும் அரசாங்க அதிகாரமும் தனியாள் சுதந்திரமும் எங்கு முடிவடைகிறது என்ற கேள்வியோடு, தொடர்புடையது. இந்தக் கேள்விக்குப் பல்வேறு காலங்களில் அவ்வக் காலச் சூழ்நிலைக்கேற்பப் பல அரசியற் சிந்தனையாளர்கள் விடை அளித்துள்ளனர்

1). நிலமானிய முறையில் காணப்பட்ட கருத்து: ஐரோப்பாவில் கி.பி. பத்தாம் நூற்றாண்டு முதல் கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டு வரை நிலவிய நிலமானிய முறையில் சில கருத்துகள் கூறப்பட்டன.

நிலமானிய முறை என்பது, நிலத்தைச் சில பணிகளுக் கீடாகப் பெற்று, அதன் வாயிலாகச் சமூகமும் அர சாங்கமும் அமைக்கப்படும் முறையாகும். நிலமானிய அமைப்பிலே யாவரும் ஓர் ஒப்பந்தத்தின் வாயிலாகப் பிணைக்கப்பட்டிருந்தனர். அவ்வொப்பந்தத்தின்படி, சில குறிப்பிட்ட பணிகளுக்கீடாக நிலத்தை வேறொரு வருக்கு வழங்குபவர் பிரபு எனவும், நிலத்தைப் பெறு பவர் கீழாள் (Vassal) எனவும் அழைக்கப்பட்டனர். பிரபுக்குக் கீழாள் பற்றுறுதியுடன் இருந்து, அவருக் கெதிராகக் கலகம் செய்யாமல், தனக்கு மானியமாக அளிக்கப்பட்டுள்ள நிலத்திலுள்ளோருக்கு நீதிவழங்கி யும், பிரபுக்கு ஆண்டுதோறும் குறிப்பிட்ட நாட் களுக்கு இராணுவப் பணி செய்தும், குறிப்பிட்ட சில காலங்களில் சிலவகை நிதி உதவிகளையும் வேறு சில பணிகளையும் அளித்தும் வருதல் வேண்டும். குறிப் பிட்ட சில காரணங்களுக்காக மானியத்தைப் பிரபு கீழாளிடமிருந்து திரும்ப எடுத்துக் கொள்ளலாம். அரசர் முதல் சாதாரணக் குடியாள்வரை சமூகம் இவ்வாறு நிலத்தின் வாயிலாக அமைக்கப்பட்டிருந்தும், அரசருக்கெதிராகப் பல நிலமானியப் பிரபுக்கள் கலகம் செய்தல், நிலமானியப் பிரபுக்களிடையே உள் நாட்டுப் போர், நில அடிமைகளின் துயரம், கீழாட் களின் கலகம் முதலிய பெரும் குறைபாடுகள் இருந் தன. நிலமானிய அமைப்பிலே சமத்துவமுடைய பிரபுக்களுக்கிடையே அரசருக்குத் தலைமையான நிலை இருந்தது. அரசரும் பிரபுக்களடங்கிய அரசவை யினரும் இக்கால அரசின் மூன்று அரசாங்கப் பணி களாகிய சட்டம் இயற்றுதல், நிருவாகம் செய்தல், நீதி வழங்குதல் முதலிய பணிகளைச் செய்தனர். அச் சமயத்திலேயே அரசர் உள்ளிட்ட அவைக்களப் பிரபுக் கள் அனைவருக்குமிடையேயுள்ள உறவுகள் ஓர் ஒப்பந் தத்தின் வாயிலாக ஏற்படுத்தப்பட்டிருந்த காரணத் தால்இவர்களுள் எவரிடத்திலும் அதிகாரக்குவிப்பு ஏற் படுதற்கே வழிஇல்லை. ஆகையால், இவருள் எவரே னும் அல்லது பலரேனும் தம் அதிகாரத்தைத்தவறா கக் கையாளுவதாக மற்றவர்களுக்குத்தோன்றினால், தவறியவர்களைத் தண்டித்தற்காக, மற்றவர்கள் திரண்டு கலகம் செய்தற்கு நிலமானிய முறையின் சட்டம் இடம் தருகிறது என்ற கருத்துத் தோன் றிற்று. நிலமானிய முறையில் தோன்றிய இந்தக் கருத்தே சட்டமாக்கப்பட்ட கலகமுறை (Legalised Rebellion) என்பதாகும். அரசர் என்பவர் கடவுளால் அமர்த்தப்பட்டவர் என்பதையும் வழக்கத்துக்கு மாறான சில சூழ்நிலைகளில் அன்றி ஏனையநிலைகளில் அரசரை எதிர்த்தல் சட்டத்துக்கு முரணானது என்ப தையும் யாவரும் ஏற்றுக் கொண்டனர். ஆகையால் நிலமானியச் சட்ட அறிஞர்கள் அல்லது வழக்கறிஞர் கள் (Feudal Lawyers), 'அரசர் சட்டத்தினால் தோற்றுவிக்கப்பட்டவர்' என்றும், 'அரசருடைய சட் டத்துக்குக் கட்டுப்படுதல்வேண்டும்' என்றும், 'ஆனால் எந்த நீதிமன்ற ஆணையும் அரசருக்கு எதிராக விடுக் கப்படக்கூடியது அன்று' என்றும், 'அரசர் நீதிமன்றங் களின் செயல்முறைகளின் வாயிலாகக் கட்டுப்படுத் தப்பட இயலாத நிலையிலுள்ளவர்' என்றும் கொள் கைகளை வகுத்தனர். இதனால், நிலமானிய முறை யின் காலத்தில் அரசரையோ அரசாங்கத்தையோ எதிர்க்கும் உரிமை சட்டப்படி குடிகளுக்கு இல்லை என்பதும், நடைமுறையில் தவறு செய்யும் அரசாங் கத்தைத் திருத்துதற்குச் சட்டமாக்கப்பட்ட கலக முறை இருந்ததென்பதும் தெரிய வருகின்றன.

2) **புனித தாமசு அக்குவினாசு கூறும் கருத்து**: கி. பி. 13-ஆம் நூற்றாண்டில் கத்தோலிக்கக் கிறித்தவத் திருச்சபையின் முக்கிய ஆதரவாளராக இருந்தவரும், அரிசுடாட்டிலின் அரசியல் நூல்களை நன்கு அறிந்தவரும், 'தாமினிக்கன்' துறவியுமாகிய புனித தாமசு அக்குவினாசு (Saint Thomas Aquinas) ஆய்வு முறையில் சில கருத்துகளைக் கூறினார். அரி சுடாட்டில் அறிவாராய்ச்சி முறையில் (காரண காரிய வகையில்) கூறிய நல்ல அரசியற் கருத்துகளை அக்குவினாசு அறிந்து ஒப்புக்கொண்டு, அவற்றைக் கிறித்தவத் திருச்சபை நம்பிக்கையினடிப்படையில் கூறிய கருத்துகளோடு இணைக்க முயன்றார். அவரு டைய கருத்தின்படி எல்லா உலக அறிவியல் நூல் களிலும் பொதிந்து காணப்படுகின்ற அறிவுக் கோட் பாட்டுக்கு (Reason) மேம்பட்டதாக இறைவனுடைய வெளிப்பாடு (Divine Revelation) காணப்படுகிறது என்று கிறித்தவ இறையியலானது காட்டுகிறது. எனவே, அறிவுக்கும் நம்பிக்கைக்கும் முரண்பாடு இல்லை. ஆகையால் அறிவின் முற்றிய நிலையே நம் பிக்கை ஆகும். உலகம் முழுவதும் பல தரங்களி லமைந்து, ஒன்றின்மேல் ஒன்றாக ஓர் அடுக்கு முறை யில் காணப்படுகிறது; இந்த அடுக்கு முறையில் (Hier archy)கடவுள்தான் எல்லாவற்றுக்கும் உயர்ந்த தரத் திலும், மிகத் தாழ்ந்த அடி மட்டத்திலும் உள்ளார். ஒவ்வோர் உயிரும் தனது உள்ளார்ந்த இயல்பின் தூண்டுதலால் செயற்பட்டு, தனது இயல்புக்கு ஏற்ற முழுமை நிலையை அடைகிறது. அது தனது முழுமை நிலைக்குத் தக்கவாறு மேல்நோக்கிய வரிசையில் தனக்குரிய இடத்தைப் பெறுகிறது. எல்லாச் சூழ் நிலைகளிலும் உயர்தரத்திலுள்ளது. கீழ்த்தரத்திலுள் ளதை அடக்கியாளவும் பயன்படுத்தவும் செய்கிறது. இது கடவுள் உலகத்தை ஆளுதலையும், ஆன்மா உடம்பை ஆளுதலையும் ஒத்தது. ஒவ்வொரு பொரு ளுக்கும் அது எந்தத் தாழ்ந்த நிலையிலிருந்தாலும் மதிப்பு இருக்கிறது. அதற்கும் உரிமைகளும் கடமை களும் உண்டு. ஒவ்வொரு பொருளும் உலகத்தின் முழு வளர்ச்சிக்குத் தன் பங்கை அளிக்கிறது. இத்திட்டத்

தின் முக்கியத்துவமானது, ஒரு நோக்கத்துக்குக் கட்டுப்படுதல் ஆகும். படைக்கப்பட்ட பொருள்களுள் மனிதனுக்கு ஒரு தனிப்பட்ட நிலை இருக்கிறது. எவ்வாறெனில் மனிதன் ஓர் உடம்பை மட்டுமன்றி, அவனைக் கடவுளின் சாயலாக ஆக்குகின்ற அறிவுள்ள ஆன்மாவையும் (உயிரையும்) பெற்றிருக்கிறான். உடம்பும் ஆன்மாவுமுடைய பொருள் அவனொருவனே ஆதலின், இந்த நிலையினடிப்படையில்தான் அவனுடைய வாழ்க்கையை இயக்குகின்ற அரசாங்க நிறுவனங்களும் சட்டங்களும் அமைந்துள்ளன.

இயற்கையைப் போலவே மனித சமூகமும் சில நோக்கங்களையுடைய ஓர் அமைப்பு ஆகும். இந்த அமைப்பில் தாழ்ந்த நிலையிலுள்ளது உயர்நிலையிலுள்ளதற்குப் பணி செய்ய, உயர்நிலையிலுள்ளது தாழ்விலுள்ளதை இயக்கி வழிநடத்துகிறது. ஒரு நல்வாழ்வுக்கு இன்றியமையாத பங்குகளைப் பல்வேறு தொழில்களும் அளிக்கின்றன. இத்தகைய நல்வாழ்வுக்கு வேண்டிய பணிகளை ஒருவருக்கொருவர் செய்தல்தான் சமூகம் ஆகும். பொதுநன்மையை அடையும் பொருட்டுச் சமூக அமைப்புக்கு ஆன்மா உடம்பையும், உயர்ந்தது தாழ்ந்ததையும் ஆளுதல் போல ஓர் ஆட்சி அதிகாரம் தேவைப்படுகிறது. இறைவன் உலகத்தைப் படைத்தலைப் போலவே, அரசுகளையும் நிறுவி, ஆளுதல், நகரங்களை அமைத்தல், கோட்டைகளை அமைத்தல், சந்தைகளை நிறுவுதல், கல்விப் பயிற்சி அளித்தல் முதலியவை நடைபெறச் செய்தார். ஆகையால், சமூக முழுவதன் நன்மையின் பொருட்டுத் தோன்றிய ஒரு பொறுப்பு அல்லது பதவிதான் ஆட்சி என்பது ஆகும். சமூகத்திலுள்ள மிகத் தாழ்ந்த குடியாளைப் போலவே, ஆட்சியாளரும் பொது நலனுக்காகத் தமது பங்கை அளிக்கிறாராகையால், அதன் பொருட்டு அவர் செய்யும் செயலெல்லாம் நியாயமானதுதான். அவருடைய அதிகாரமானது, மனிதனின் இன்ப வாழ்வை ஒழுங்காக அமைக்கும் பொருட்டுக் கடவுளால் அளிக்கப்பட்டதாகையால், அது அவரைத் தலைமையாகக் கொண்ட சமூகத்துக்குச் செய்ய வேண்டிய ஒரு பணியேயாகும். ஆகையால் ஆட்சியாளர் பொது நோக்கத்துக்கு எந்த அளவு தேவையோ அந்த அளவை மீறி, வரி விதிப்பின் வாயிலாகக் குடியாளின் சொத்தை எடுத்துக் கொள்ளுதலோ அதிகாரத்தைக் கையாளுதலோ நேரிதன்று. ஆகையால் அரசாங்கத்துக்கு இருக்கும் ஒழுக்கச் சார்பான நோக்கமே தலையாய நோக்கமாகும். சமூகத்திலுள்ள மனிதரின் உண்மையான குறிக்கோள் இன்பமான பண்புடைய வாழ்க்கையை வாழ்தலாகையால், இவ்வாறு வாழ்தற்கேற்ப அரசில் ஒவ்வொரு வகுப்பாரின் செயலையும் இயக்குவதே ஆட்சியாளரின் கடமையாகும். ஒழுங்கான அரசியல் வாழ்வு நல்ல இவ்வுலக வாழ்வை அமைப்பதன் வாயிலாக இன்பமான துறக்க வாழ்வுக்கு வழிவகுக்கிறது. ஆகையால், இவ்வுலக ஆட்சியாளர் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டி, அதன் பொருட்டு நிருவாகத்துறை, நீதித்துறை, படைத்துறை முதலியவை தத்தம் பணிகளைச் செய்யுமாறு அவற்றைக் கட்டுப்படுத்தி, தவறுகளை நீக்கி, நல்வாழ்வுக்கு ஏற்படக் கூடிய இடையூறுகள் நேரும் போதெல்லாம் அவற்றைப் போக்குதல் வேண்டும். ஓர் ஒழுக்க இயலான நோக்கத்தின் பொருட்டே அரசியல் ஆட்சி அல்லது அதிகாரம் இருக்கிறதாகையால், அவ்வரசியலதிகாரமானது வரம்புக்கு உட்பட்டது என்பதும், அது சட்டத்தை ஒட்டியே கையாளப்படுதல் வேண்டுமென்பதும் பெறப்படுகின்றன.

கொடுங்கோலாட்சியை அக்குவினாசு சாலிசுபரியின் சானைப் போல (John of Salisbury) வெறுக்கிறார்; ஆனால், கொடுங்கோலனை மக்கள் கொல்லுதல் சரி என்ற சானின் கருத்தைத் தாமசு ஏற்றுக் கொள்ளவில்லை. ஆட்சியாளருக்கு எதிரான நியாயமான எதிர்ப்பு மக்கள் யாவரும் செய்யும் ஒரு பொதுச் செயலே ஆகும் என்பது புனித தாமசின் கருத்து. இந்த நியாயமான எதிர்ப்புக்கு ஒழுக்க இயலான கட்டுப்பாடு உண்டு என்று கூறி, அதனையும் தாமசு சுட்டிக் காட்டுகிறார். எதிர்ப்பாளர்கள் தமது எதிர்ப்புச் செயலானது, தாம் அகற்ற முயலுகின்ற கொடுங்கோலாட்சி என்னும் துன்பத்தைவிடப் பொது நலனுக்கு மிகக் குறைவான இடையூறாக இருக்கும்படி பார்த்துக் கொள்ளுதல் வேண்டும்; இந்தப் பொறுப்புணர்ச்சியோடுதான் அவர்கள் எதிர்ப்புச் செயலிலீடுபடுதல் வேண்டும். நாட்டுத் துரோகம் (Sedition) என்பதைப் பெருங்குற்றமாகப் புனித தாமசு கருதுகிறார். ஆனால், கொடுங்கோலாட்சிக்குக் காட்டப்படும் நியாயமான எதிர்ப்பை நாட்டிற்கெதிரான குற்றமாக அவர் கருதவில்லை. கொடுங்கோலாட்சி என்பது சட்டத்துக்கு மாறாகக் கையாளப்படும் ஆற்றலாகையால் அதை அவர் வெறுத்தார்; ஆட்சியாளரின் அதிகாரத்துக்கு ஒழுக்க இயலான வரையறைகள் உண்டு என்பதை அவர் வலியுறுத்தினார்.

கொடுங்கோலாட்சியாளர்களுக்கு எதிராக இருவகைக் காப்புகள் (Remedies) உள்ளன என்று புனித தாமசு கூறினார். ஆட்சியாளருடைய அதிகாரமானது மக்களிடமிருந்து பெறப்படுமானால், அவ்வாட்சியாளர் கொடுங்கோலராக மாறும்போது எந்தக் கட்டுப்பாடுகளின் மீது அவருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டதோ, அக்கட்டுப்பாடுகளை ஆளுவோர் மீது கையாளுதற்குக் குடிகளுக்குச் சட்டப்படி உரிமை

உண்டு. இரண்டாம் காப்பு, ஆட்சியாளருக்கு மேலாக ஓர் அரசியல் தலைவர் இருக்கின்ற நிலை ஆகும். இந்த நிலையில் ஆட்சியாளர் கொடுங்கோலராகித் தவறு செய்தால், அவருக்கெதிராக அரசியல் தலைவருக்கு மேல்முறையீடு செய்தலே இரண்டாம் காப்பு ஆகும்.

புனித தாமசு சட்டத்தை (1) என்றுமுள சட்டம், (2) இயற்கைச் சட்டம், (3) தெய்விகச் சட்டம், (4) மனிதச் சட்டம் என நான்கு வகையாகப் பிரித்துக் கூறும்போதும், இயற்கையின் சட்டத்துக்கும் மனிதச் சட்டத்துக்கும் பொதுவாக ஒழுக்க இயலான கருத்துத் தொடர்புகள் உள்ளன என்றும், ஆளுவோரின் அதிகாரமானது பொதுநலனைப் பேணிக்காக்கும் அவருடைய பொறுப்பினளவே அமைந்தது என்றும் கூறுகிறார். எல்லாவகையிலும் ஒருவர் ஆட்சியாளருக்குக் கீழ்ப்படிதல் வேண்டுமென்பது இல்லை; மேலும் ஓர் அடிமையின் ஆன்மாவும் சுதந்திரமுடையதுதான். இதே காரணத்தினால் கொடுங்கோலாட்சியாளரை எதிர்த்தலென்பது ஓர் உரிமை மட்டுமன்று; ஒரு கடமையும் ஆகும். இவை புனித தாமசின் கருத்துகளாகும்.

3) **கி.பி. பதினாறாம் நூற்றாண்டில் கூறப்பட்ட கருத்து:** கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் கிறித்தவத் திருச்சபையில் போப்புக்கு இருந்த தலைமையை மறுத்து மார்ட்டின் லூதர், சான் கால்வின் முதலியோர் மறுப்புரைக் (Protestant) கிறித்தவத் திருச்சபைகளை நிறுவினர். பல கிறித்தவப் பிரிவுகளைச் சேர்ந்த குடிகள் வாழ்ந்த நாடுகளில் அரசனது அரசாங்கத்தின் வாயிலாகத்தான் தேசிய ஒற்றுமை ஏற்படுதல் இயலுமென்ற நிலை ஏற்பட்டது. அப்போது முரண்பட்ட கோட்பாடுடைய அரசரை எதிர்த்தற்கு உரிமை உண்டா என்ற கேள்வியும் தோன்றிற்று. இந்தக் கேள்வி சமயத்துறை பற்றிய ஒன்றாயினும், அது அரசியற் கேள்வியும் ஆகும். இந்தக் கேள்வி 'உண்மையான கிறித்தவக் கோட்பாடுகளை நிலை நிறுத்திக் காத்தல் என்ற ஒரு சரியான காரணத்துக்காகக் குடிகளுக்குத் தங்களுடைய ஆட்சியாளர்களை எதிர்த்தற்கு உரிமை உண்டா?' என்று பொருள்படும். இதனோடு கூடவே, குடிகள் எதிர்ப்பு ஏதுமின்றித் தங்களுடைய ஆட்சியாளர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்ற கருத்தும் எழுந்தது. பின்னாற் கூறப்பட்ட கருத்தே அரசரின் தெய்விக உரிமைக் கோட்பாடாக ஆயிற்று. அரசரை எதிர்க்கும் உரிமையும் சரியே என்பதற்குக் காரணமாக, அரசர்கள் தங்களுடைய அதிகாரங்களை மக்களிடமிருந்தே பெறுவதால், அதனைச் சரிவரக் கையாளுதற்கு மக்களுக்குப் பொறுப்புடையவர் ஆவர் என்ற கருத்தும் கூறப்பட்டது. இவ்வாறு அரசரின் இறை உரிமைக் கோட்பாடும், அதற்கு நேர் மாறாக மக்கள் உரிமைக் கோட்பாடும் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் நிலவின. எல்லா அதிகாரமும் கடவுளுடையது என்ற கருத்து, அதிகாரம் மக்களிடத்திலிருந்து வருகிறதென்ற கருத்தை மறுக்கவில்லை. அரசாங்கத்துக்குக் கீழ்ப்படிதல் என்ற கிறித்தவப் பண்பைப் புனித பால் வலியுறுத்தியதை எல்லாக்கிறித்தவரும் ஏற்றுக் கொண்டனர். அரசியலதிகாரம் மக்களிடமிருந்தே வருகிறதென்ற கோட்பாடும் அரசாங்கத்தை எதிர்க்கும் உரிமைக்கு ஒரு நியாயம் ஆகாது. (காண்க: 'எதிர்ப்பின்றிக் கீழ்ப்படிதற் கோட்பாடு').

4) **கால்வினிய நெறி கூறும் கருத்து:** கால்வினும் உலூதரைப் போலவே, குடிகளெல்லோரும் எதிர்ப்பின்றி ஆட்சியாளருக்குக் கீழ்ப்படியக் கடமைப் பட்டவர்களென்றும். ஆட்சிப் பதவிக்குத்தான் கீழ்ப்படிதல் செய்கிறோமே தவிர, பதவியிலிருக்கிற ஆளுக்குக் கீழ்ப்படிகிறோமென்று பொருளன்று என்றும், ஆட்சியாளர் கடவுளுக்கு உட்பட்ட குரு ஆகையால், அவரை எதிர்த்தல் கடவுளை எதிர்ப்பதாகுமென்றும், கடவுள் வகுத்த சட்டத்தின்படி அரசர்கள் மக்களுக்கு நன்மை செய்யக் கடமைப்பட்டவர்களென்றும் கூறினார். இவருடைய கருத்தின்படி தவறு செய்யும் ஆட்சியாளரைத் தண்டித்தல் கடவுளுடைய கடமையே தவிர, மக்களுடைய கடமை அன்று. மேலும், தவறு செய்யும் மேல்நிலை அதிகாரியை எதிர்த்தற்குக் கீழ்நிலை அதிகாரிக்குக் கடமை இருக்கிறதென்றும், இவ்வாறு எதிர்க்கும் கடமையும் அல்லது உரிமையும் கடவுளிடமிருந்தே வருகிறதென்றும் கால்வின் கருதினார். இவ்வாறு கால்வினியக் கோட்பாடு நிறுவப்பட்ட அரசாங்க அதிகாரியை மக்கள் எதிர்த்தல் பெருங்குற்றம் என்று ஒரு புறம் கருதியது. மற்றொரு புறம், சரியான கிறித்தவக் கோட்பாட்டை எடுத்துக் கூறவும், உலகியலதிகாரியின் ஆதரவோடு யாவர் மீதும் ஒழுக்கக் கட்டுப்பாடுகளைச் செயற்படுத்தவும் திருச்சபைக்கு அதிகாரம் உண்டு என்றும் அக்கோட்பாடு கருதிற்று; ஆகையால், கால்வினியக் கிறித்தவ நெறியைப் பின்பற்றாமல், அதனுடைய ஒழுக்கக் கட்டுப்பாடுகளைச் செயற்படுத்த மறுக்கின்ற ஆட்சியாளர்களைக்கொண்ட நாட்டில் இருக்கும் கால்வினியக் கிறித்தவத் திருச்சபையானது, ஆட்சியாளர்களுக்குக் கீழ்ப்படிதல் என்னும் கடமையைத் துறந்துவிட்டு, ஆட்சியாளரை எதிர்க்கும் உரிமையை உறுதியாகக் கையாளலாயிற்று. கால்வின் இவ்வாறு குறிப்பாக உணர்த்திய எதிர்க்கும் உரிமையை விரிவாகவும் விளக்கமாகவும் இசுகாட்லாந்தின் பிரசுபிட்டீரிய மறுப்புரைக் கிறித்தவர்களின் தலைவராகிய சான் நாக்சு

(John Knox) எடுத்துக் கூறினார். அவர் நாடு கடத்தப்பட்டு மரணதண்டனை விதிக்கப் பெற்ற சூழ்நிலையில், உண்மையான சமய நெறியைப் பரப்பவும் காக்கவும் திருச்சபையின் ஒழுக்கக் கட்டுப்பாட்டைச் செயற்படுத்தவும் வேண்டுமாயின், தம் உரிமைகளை மறுக்கின்ற கத்தோலிக்க முடியாட்சி அரசாங்கத்தைத் தாம் எதிர்த்தே ஆகவேண்டுமென்று கூறினார். இந்தச் சூழ்நிலையில் குடிகள் அரசருக்கு எதிர்ப்பின்றிக் கீழ்ப்படிதல் வேண்டுமென்று கால்வின் கூறிய கோட்பாட்டைச் சான் நாக்சு ஒதுக்கித் தள்ளிவிட்டார்; மேலும், அரசாங்கத்தை எதிர்த்தல் என்னும் செயல் சமயச் சீர்திருத்தத்தைப் பாதுகாக்க உதவும் ஒரு கடமையாகவும் ஆகுமென்று கூறினார். ஆகையால், அரசரை எதிர்க்கும் ஓர் அலகாக (Wing) கால்வினியத் திருச்சபை அமைந்து, கலகம் செய்தலையும், அது சரியானதென்று கூறிற்று. காண்க: எதிர்ப்பின்றிக் கீழ்ப்படிதற் கோட்பாடு.

5) ஊகனட்டுகளின் கோட்பாட்டிற் கூறப்பட்ட கருத்து: கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் பிரான்சில் பழைய கத்தோலிக்கக் கிறித்தவத் திருச்சபையைப் பின்பற்றிய அரச குடும்பத்தவரும் மக்களுள் பெரும்பாலோரும் இருந்தமையாலும், மறுப்புரைக் கிறித்தவர் அல்லது ஊகனட்டுக் கிறித்தவர்களும் இருந்தமையாலும் உள்நாட்டுப் போர்கள் நடைபெற்றன. இந்தச் சூழ்நிலையில் அரசரை எதிர்க்கும் உரிமைக்குப் பாதுகாப்பாக மக்கள் உரிமைக் கோட்பாடும் (Theory of the People's Rights), தேசிய ஒற்றுமைக்கு ஆதரவாக அரசர்களின் இறை உரிமைக் கோட்பாடும் (Theory of the Divine Right of Kings) பிரான்சில் எடுத்துக் கூறப்பட்டன. பிரான்சில் சமய உள்நாட்டுப் போரில் நடைபெற்ற ஒரு துன்ப நிகழ்ச்சி கி.பி. 1572-ஆம் ஆண்டில் நடந்த புனித பார்த்தலோமியோ நாள் படுகொலை ஆகும். சமய வெறி காரணமாக நடந்த இந்த நிகழ்ச்சியே பிரஞ்சு அரசரின் எதேச்சாதிகாரத்தை மறுத்து, வரம்புக்கு உட்பட்ட முடியாட்சியை ஆதரித்து, கி.பி. 1573-இல் பிராங்கோ கால்லியா (Franco - Gallia) என்ற நூலை எழுதுமாறு பிரான்சிசு ஆட்மன் (Francis Hotman) என்ற ஊகனட்டு ஆசிரியரைத் தூண்டிற்று. இவர் பிரஞ்சு முடியாட்சியானது மக்களுடைய குறிப்பான ஒப்புதலையே (Tacit Consent) ஆதாரமாக உடையது என்றும், அரசருடைய அதிகாரம் பிரஞ்சுப் பாராளுமன்றத்தின் அதிகாரத்தால் வரம்பு படுத்தப்பட்டிருக்கிறதென்றும் கூறினார்.

பிரஞ்சுப் பாராளுமன்றத்துக்கு அரசு அதிகாரத்தை வரையறுக்கும் அதிகாரம் இருந்ததென்னும் ஆட்மனின் கருத்து வரலாற்று வகையில் உண்மையன்று. ஆனால் அவருடைய கருத்து, 'சமுதாயத்தினுள் அடங்கியிருக்கும் செயல்முறைகளிலிருந்துதான் அரசியல் நிறுவனங்கள் தங்களுடைய உரிமைகளைப் பெறுகின்றன' என்ற இடைக் காலத்திய அரசியலமைப்புக் கோட்பாடே ஆகும். அவரைத் தவிரப் பல ஊகனட்டு ஆசிரியர்களும், 'அரசர்கள் மனித சமூகத்தின் நல்ல நோக்கங்களை நிறைவேற்றுதற்காக அச்சமூகத்தால் அமர்த்தப்பட்டவர்க'ளென்றும், 'அதனால் அவர்களுடைய அதிகாரமானது வரையறைக்கு உட்பட்டது' என்றும் எழுதினர். இவ்வாறு எழுதியவர்களுள் கால்வினின் நண்பராகிய தியோடர் பெசா (Theodore Besa) என்பவரும் ஒருவர். அவர் கால்வினைப் பின்பற்றியவராக இருந்தாலும், கால்வினின் கருத்துகளை மட்டுமன்றி, அவர் கூறிய எதிர்ப்பின்றிக் கீழ்ப்படிதல் என்னும் கோட்பாட்டையும் மறுத்தார். மேல்நிலையில் இருக்கும் கொடுங்கோலதிகாரியை எதிர்ப்பதற்கு உள்ள உரிமையைக் கீழ்நிலை அதிகாரிகள் கையாண்டு, உண்மைச் சமய நெறியைக் காத்தல் வேண்டுமென்று அவர் வற்புறுத்தினார். அவர் எழுதிய நூல் 'கொடுங்கோலருக்கு எதிராகச் சுதந்திரப் பாதுகாப்பு' (A Defence of Liberty Against Tyrants-1579) என்பதாகும்.

அந்நூல் மக்கள் உரிமைகளைப் பற்றிய கோட்பாட்டைத் தோற்றுவித்த கருத்துகளைக் கூறுகிறது. ஆசிரியர் தம் காலத்தெழுந்த பல கேள்விகளையும் ஆராய்ந்து, அரசாங்கத்துக்கும் சமய நிறுவனத்துக்குமுள்ள (திருச்சபைக்குமுள்ள) தொடர்பைப் பற்றிச் சில கோட்பாடுகளைக் கூறுகிறார். இந்நூலில் அவர் இருவித ஒப்பந்தங்களைக் கூறி, சமயக் கடமை என்ற முக்கிய காரணத்துக்காக மக்கள் அரசரை எதிர்த்துக் கலகம் செய்ய உரிமை பெற்றவர்களென்ற கொள்கையை நிறுவுகிறார். முதலாம் ஒப்பந்தத்தில் கடவுள் ஒரு கட்சியாகவும், அரசரும் மக்களும் கூட்டாக மற்றொரு கட்சியாகவும் உள்ளனர். இவ்வொப்பந்தத்தின்படி, மக்கட் சமுதாயமே ஒரு திருச்சபையாக அமைந்து, அம்மக்கள் கடவுளால் தேர்வு செய்யப்பட்டவர்களாக ஆகி, அவர்களே உண்மையான, யாவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய வழிபாட்டு முறையைக் கைக்கொள்ளுதல் வேண்டும். இரண்டாம் ஒப்பந்தத்தில் குடிமக்கள் ஒரு கட்சியாகவும், அரசர் மற்றக் கட்சியாகவும் உள்ளனர். இந்த அரசியல் ஒப்பந்தத்தின் வாயிலாக மக்கள் ஓர் அரசாக அமைந்து இருக்க, அவர்களை நல்ல முறையிலும் நியாயமாகவும் அரசர் ஆளுதலும், அவர் அவ்வாறு செய்யும் வரை மக்கள் அவருக்குக் கீழ்ப்படிதலும் வேண்டும். சமயக் கொள்கையை மறுக்கும்

அரசரை வலுக்கட்டாயம் செய்தற்குக் குடிகளுக்கு உரிமை உண்டு என்பதை நிலைநாட்டவே இருவித ஒப்பந்தங்கள் கூறப்படுகின்றன.

அரசாங்கம் என்பது சமூக நலனுக்காகவே இருக்கிறது. ஆகையால், அரசுக்குக் கீழ்ப்படிதலென்பதும் வரையறைக்கு உட்பட்டதாகவும் கட்டுப்பட்டதாகவும் இருக்கிறது. அரசருடைய அதிகாரம் கடவுளிடமிருந்து பெறப்படுகிறதென்றாலும், மக்கள் எதிர்ப்பின்றி அரசருக்குக் கீழ்ப்படிதல் வேண்டுமென்ற கருத்து அதிலிருந்து பெறப்படவில்லை. அரசர் கடவுளின் சட்டத்துக்கு மாறாக ஆணை ஏதேனும் விடுத்தால், அப்பொழுது அரசருக்குக் கீழ்ப்படிதலை விட, இறைவனுக்குக் கீழ்ப்படிதலே தம் கடமை என்று ஒவ்வொரு கிறித்தவரும் எண்ணுதல் வேண்டும். மேலும், உண்மையான வழிபாட்டு முறையை அரசர் ஆதரித்துக் காப்பாற்றுதல் வேண்டுமென்ற ஓர் ஒப்பந்தத்திலிருந்துதான் அரசருடைய அதிகாரம் தோன்றுகிற காரணத்தால், அரசர் இறைவனுடைய சட்டத்தை மீறும்போதோ திருச்சபையைக் கொள்ளையிடும்போதோ அரசரை மக்கள் எதிர்த்து நிற்கும் செயல் சட்டப்படி சரியானதே என்பது தெளிவாகிறது. சமயத்துறையில் மட்டுமன்றி, உலகியலரசாங்கத்திலும் கொடுங்கோலாட்சியை எதிர்த்தலென்பது நியாயமானதென்பதை இரண்டாம் ஒப்பந்தம் காட்டுகிறது. அரசர்கள் கடவுளால் அமர்த்தப்பட்டாலும், இவ்வெதிர்ப்புச் செயலில் மக்கள் வழியாகவே செயற்படுகிறார்கள். மக்களுடைய ஒப்புதலைச் சார்ந்தே அரசரின் அதிகாரம் தொடர்ந்து செயற்படுகிறது. அரசாங்கம் மக்களுடைய உயிரையும் உடைமைகளையும் காக்கின்ற வரை அதற்கு மக்கள் கீழ்ப்படிகின்றனர். தனக்குச் சட்டப்படி உரியதல்லாத ஆட்சிப்பதவியைக் கைப்பற்றிய கொடுங்கோலரசனை எதிர்க்கவோ கொன்றுவிடவோ எந்தத் தனிக் குடியாளுக்கும் உரிமை உண்டு. சட்டப்படியாக ஆட்சி உரிமை பெற்ற அரசர் கொடுங்கோலராக மாறினால், அவரை எதிர்ப்பதற்கு உள்ள உரிமை தனிப்பட்ட ஆளுக்கேயன்றி, மக்கள் அடங்கிய தொகுதி அல்லது கூட்டத்துக்கே (Corporate Body) உண்டு. இவ்வாறு எதிர்க்கும் உரிமை மக்கள் கூட்டத்துக்கே (அதாவது பட்டணங்கள், மாகாணங்கள், வகுப்புகள் ஆகியவற்றுக்கே) உண்டு என்று தியோடர் பெசா கூறுகிறார். அரசாங்கத்தை எதிர்க்கும் உரிமைக்கு ஆதரவாக இவ்வாசிரியர் ஒப்பந்தக்கோட்பாட்டைக் கையாளுகிறார்.

ஆட்சியாளருக்கும் குடிகளுக்குமிடையே சமய நெறியில் வேறுபாடுகள் இருந்தாலும் பாதிப்பு ஒன்றும் ஏற்படாது என்ற இக்காலத்திய கருத்தும், சமய உண்மைகளுக்கும் தூய வழிபாட்டு முறைக்கும் சிறிதும் பொறுப்பு ஏற்றுக் கொள்ளாமல் அரசு இருத்தலும் இயங்குதலும் கூடும் என்ற இக்காலத்திய கருத்தும் இவ்வாசிரியருக்குப் புலப்பட்டதாகத் தெரியவில்லை. மேலும், இவர் கூறும் எதிர்க்கும் உரிமையானது மக்களரசாங்கமுறையையும் (Popular Government), மனித உரிமைகளையும் ஆதரிக்கின்ற வாதமாகக் கொள்ளுதற்கும் இல்லை.

(6) இசுகாட்லாந்திலும், ஆலந்து நாட்டிலும் கூறப்பட்ட கருத்து: இசுகாட்லாந்து நாட்டில் சார்சு புக்கானன் (George Buchanan) என்ற அறிஞரும் கவிஞருமாகிய ஒரு சிந்தனையாளர் உலகியலரசாங்கத்தைப் பற்றிய ஒரு கொள்கையை வகுத்தார். அரசியலதிகாரமானது மக்கள் சமூகத்தினிடமிருந்தே பெறப்படுகிறது. ஆகையால், அது சமூகச் சட்டத்திற்கேற்பவே கையாளப்படுதல் வேண்டும்; அரசர் தமது பதவிக்குரிய கடமைகளைச் செவ்வனே செய்தலைப் பொறுத்தே, அவருடைய ஆணைகளுக்குக் குடிகள் கீழ்ப்படிதலும் அமையும். அரசாங்கம் என்பது மனிதர் சமூகமாக வாழும் இயல்பிலேயே தோன்றுவதாகையால், அது இயல்பான ஓர் அமைப்பாகும். கொடுங்கோலரசனை எதிர்த்தலும் கொல்லுதலும் நியாயமான உரிமை ஆகும்.

ஆலந்து (Holland) அல்லது நெதர்லாந்து நாட்டில் கொடுங்கோலாட்சியை எதிர்த்தற்கும் மேற்கூறிய வகையில் ஓர் அரசியற் கோட்பாடு தோன்றிற்று. அந்நாட்டின் பாராளுமன்றந்தான் அரசர் இரண்டாம் பிலிப்புக்குப் பற்றுறுதியோடிருக்கும் கடமையை மறுத்து, கி.பி. 1581-ஆம் ஆண்டில் பற்றுறுதிக் கொள்கை மறுப்புச் சட்டத்தை (Act of Abjuration) நிறைவேற்றி அதில் பின்வருமாறு கூறிற்று:

'ஆடுமேய்ப்போன் தன் ஆடுகளைக் காப்பாற்றுதலைப்போலத் தம் குடிகளைக் காப்பாற்றுதற்காகவே எந்த ஓர் அரசரும் கடவுளாலமர்த்தப்பட்டுள்ளாரென்பதை மனித இனம் முழுவதும் நன்கறியும். ஆகையால், அரசர் ஒரு காப்பாளருடைய பணிகளைச் செய்யத் தவறும் போதும், அவர் தம் குடிகளை ஒடுக்கி, அவர்களுடைய பண்டைய உரிமைகளை அழித்து, அவர்களை அடிமைகளாக நடத்தும்போதும் அவர் ஓர் அரசராகக் கருதப்படாமல், கொடுங்கோலராகவே கருதப்படுதல் வேண்டும். இந்நிலையில் நாட்டின் பல்வேறு வகுப்பாரும் அவ்வரசரைப் பதவிநீக்கம் செய்து, அவருக்குப் பதிலாக வேறொருவரைத் தேர்ந்தெடுத்தல் சட்டப்படியாகவும் நியாயமாகவும் அமைந்த செயலே ஆகும்.

**(7) எதிர்க்கும் உரிமையைப் பற்றி இயேசு சங்கத்தார் கூறிய கருத்து:** மறுப்புரைச் சமயப் பிரிவைச் சேர்ந்த ஆசிரியர்கள் அரசருடைய அதிகாரம் மக்களுடைய ஒப்புதலினின்றும் தோன்றுகிறது என்றும், அதனால், அரசரை எதிர்த்தற்குக் குடிகளுக்கு உரிமை உண்டு என்றும் கூறி, அரசருக்கு எதிரான கொள்கையை வகுத்தனர்; இதைப் போலவே அரசருடைய ஆணையை எதிர்த்தற்கும், பண்டைய கோட்பாடான போப்பின் தலைமை அதிகாரம் என்னும் கோட்பாட்டை மாற்றிப் புதிய வடிவத்தில் அமைத்தற்கும் கத்தோலிக்க ஆசிரியர்களும் இயேசு சங்கத்தின் ஆசிரியர்களும் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் பல அரசியற் கருத்துகளைக் கூறினர். இயேசு சங்கம் கி.பி. 1534-ஆம் ஆண்டில் உரோமன் கத்தோலிக்கத் திருச்சபையிலுள்ள பல குறைபாடுகளை நீக்குதற்கும், கோட்பாடுகளுக்குத் தெளிவான விளக்கங்களை அளித்தற்கும், ஒழுக்கக் கட்டுப்பாடுகளையுடைய போப்புகள் அமர்த்தப்படுதற்கும், சமய குருமார்மீது கடுமையான ஒழுங்குகளை விதித்தற்கும் பாடுபடக்கூடிய கிறித்தவத்துறவிகளை உறுப்பினர்களாகக் கொண்டு அமைக்கப்பட்டது. இயேசு சங்கம் கத்தோலிக்கத் திருச்சபையிலிருந்து விலகிச் சென்ற மறுப்புரைச் சமயஞ் சார்ந்த நாடுகளை மீண்டும் அச் சபைக்குக் கொண்டுவர முயன்றது. இத்தகைய முயற்சி எதிர்ச் சீர்திருத்தம் (Counter-reformation Movement of the Roman Catholic Church) எனப்படும். இயேசு சங்கத்தவரால் நடத்தப்பட்ட கல்வி நிறுவனங்களும், இயேசு சங்கத்தைச் சேர்ந்த புலவர்களும் ஐரோப்பாவில் நன்கு மதிக்கப்பட்டனர். இச்சங்கத்தவர் திறமை மிக்கோராகையால், இவர்தம் எதிரிகள் இவர்களை அச்சத்துடன் நோக்கினர். இவர்கள் பரப்பிய அரச அதிகாரத்துக்கெதிரான கோட்பாட்டில் சமய மாற்றம் என்ற நோக்கமும் பொதிந்திருந்தது. இவர்களின் நோக்கம் புனித தாமசு கூறிய வகையில் போப்பின் தலைமையதிகாரத்தைப் பற்றி ஒரு மிதமான கோட்பாட்டை வகுப்பதே ஆகும். கிறித்தவ நாடுகளுக்கெல்லாம் உலகியல் தலைவராக இருப்பவர் பேரரசர் (Emperor) என்ற கருத்து கி.பி. 14-ஆம் நூற்றாண்டிலேயே மறைந்து, ஐரோப்பாவில் தேசிய அரசுகளின் கூட்டமே காணப்பட்டது. அவை உலகியல் துறைகளில் தன்னாட்சியோடும், சமயத்துறையில் ஒரே திருச்சபையைப் பின்பற்றாமல், பல திருச்சபைகளைப் பின்பற்றியும் வந்தன. இச்சூழ்நிலையில் உலகியல் துறையில் அரசுகளுக்கு உள்ள சுதந்திர நிலையை ஒப்புக் கொண்டு, கிறித்தவ அரசுகளின் சமூகத்தின்மீது போப்புக்கு ஆன்மிகத் தலைமை நிலையைத் திரும்பவும் ஏற்படுத்தும் நோக்கத்தோடு இயேசு சங்கத்தார் செயற்படலாயினர். ஆகையால், போப்பின் அதிகாரத்தைப் பற்றி இயேசு சங்கத்தாருடைய கோட்பாட்டைத் துல்லியமான வடிவத்தில் இராபர்ட்டு பெல்லார்மின்(Robert Bellarmine) என்ற கத்தோலிக்க ஆசிரியர் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் (1581-இல்),'வாதங்கள்' (Disputations) என்ற நூலில் கூறுகிறார். அவர் கூறிய கருத்தின் சாரம் பின்வருமாறு:

போப்புக்கு உலகியல்சார் பொருளில் எந்த அதிகாரமும் இல்லை. ஆயினும், அவர் திருச்சபையின் ஆன்மிகத் தலைவராக இருப்பதால், ஆன்மிக நோக்கங்களுக்காக மட்டும் போப்புக்கு உலகியல் துறைகளின்மீது மறைமுகமான அதிகாரம் இருக்கிறது. மேலும், உலகியலாட்சியாளர்களின் அதிகாரமானது அவர்களுக்கு நேரடியாகக் கடவுளிடமிருந்தே வரவில்லை. அதுபோலவே அவ்வதிகாரம் போப்பிடமிருந்தும் வரவில்லை. ஆட்சியாளருடைய அதிகாரம் மனித சமூகத்தின் உலகியல் நோக்கங்களுக்காக அச் சமூகத்திடமிருந்தே தோன்றுகிறது. ஆகையால் அரசருடைய அதிகாரமானது சமய இயல்புடையதாக இல்லாமல், இவ்வுலகச் சார்பு (Secular) உடையதாக இருக்கிறது. மனித ஆட்சியாளர்களுள் போப்பு ஒருவரிடத்தில்தான் கடவுளிடமிருந்து நேராகப் பெறப்பட்ட அதிகாரம் இருக்கிறது. ஆகையால் உலகியல் அரசாங்கமானது தன் ஆணைகளுக்கு வரம்பற்ற கீழ்ப்படிதலை அளிக்குமாறு தன் குடிகளை வற்புறுத்திக் கேட்டுப்பெற இயலாது. மேலும், ஆன்மிக அதிகாரியானவர் ஆன்மிக நோக்கங்களுக்காக உலகியலதிகாரியை இயக்கவும் கட்டுப்படுத்தவும் உரிமை பெற்றவராவர். ஆகையால், நிறுவப்பட்ட சமயக் கொள்கைகளை மறுக்கின்ற ஓர் ஆட்சியாளரைப் பதவியிலிருந்து நீக்கி, அவருக்குக் கீழ்ப்படியும் கடமையிலிருந்து அவருடைய குடிகளை விடுவிப்பதற்குப் போப்புக்கு நியாயமான உரிமை உண்டு என்பதைக் காட்டும் சூழ்நிலைகளும் இருக்கின்றன.

இவ்வாறு புதிய கொள்கை வடிவிலமைக்கப்பட்ட கத்தோலிக்கத் திருச்சபை பற்றிய கோட்பாடும் போப்பின் அதிகாரம் பற்றிய கோட்பாடும் உண்மையானவை என்றும், இவற்றை யாவரும் ஏற்றுக் கொள்ளுதல் வேண்டுமென்றும் எண்ணி, இயேசு சங்கத்தார் செய்த எதிர்ச்சீர்திருத்த இயக்கம் வெற்றி பெறவில்லை. ஏனெனில் எந்த ஒரு குறிப்பிட்ட சமய நெறியையும் யாவராலும் ஏற்றுக் கொள்ளப்படத்தக்கதாகச் செய்தல் இயலாது என்பதும், எந்த ஒரு முக்கியமான சமயப் பிரிவினரையும் இடர்ப்பாடின்றி அரசியல் விளைவுகளை எதிர் நோக்காமல், ஒடுக்க இயலாது என்பதும் முக்கிய கொள்கைகளாக வேரூன்றி விட்டன. மேலும் ஒரு

நாட்டிலுள்ள மக்கட் சமூகம் முழுவதுமே அதன் தேசிய திருச்சபையைச் சேர்ந்ததாக இருந்தாலும், சமய உண்மைகளைத் தீர்மானித்தற்கு அரசியலதிகாரிக்கு உரிமையோ அதிகாரமோ உண்டு என்ற கொள்கையும் நிலைபெறாமல் மாறிவிட்டது. ஆகையால், இயேசு சங்கத்தவர் எதிர்பார்த்ததற்கு மாறாக, அரசும் திருச்சபையும் ஒன்றை ஒன்று சாராத தனித்த நிறுவனங்கள் என்ற கருத்தும், அரசு என்பது ஒரு தேசிய சமூகமயதலின் அது தோற்றத்திலும் நோக்கத்திலும் உலகியல் சார்புடையது என்ற கருத்தும், திருச்சபை உலகளாவிய நிறுவனமாகவும் தோற்றத்தில் தெய்விக இயல்புடையதாகவும் இருக்கிறது என்ற கருத்தும், இவற்றுள் ஒன்றில் உறுப்பினராயிருத்தலென்பது மற்றொன்றில் உறுப்பினராயிருத்தலைப் பொறுத்திருக்கவில்லை என்ற கருத்தும் நிலைபெறலாயின. இக்கருத்துகளெல்லாம் இயேசு சங்கத்தவரும் கால்வினியரும் தத்தம் நெறியே உண்மையானதென்று கருதி வகுத்த கொள்கைகளுக்கு நேர்மாறான கருத்துகளாகும். இரண்டு நெறியாளரும் அரசியலதிகாரம் ஒப்பந்தத்தின் வாயிலாக மக்களிடமிருந்து பெறப்படுகிறதென்றும் அரசர் கொடுங்கோலராகும்போது, மக்களால் அவ்வாளும் உரிமை திரும்ப எடுத்துக் கொள்ளப்படுகிறதென்றும் கூறினர்.

இராபர்ட்டு பெல்லார்மினைத்தவிர, இசுபானிய நாட்டினராகிய சுவாண்டி மேரியானா (Juan de Mariana) என்ற இயேசு சங்க ஆசிரியரும், பிரான்சிசுகோ சுவாரசு(Francisco-Suaraz)என்ற இயேசு சங்க ஆசிரியரும் ஆட்சியாளரை எதிர்த்தற்குக் குடிகளுக்கு உரிமை உண்டென்ற கொள்கையை வற்புறுத்தி எழுதினர். மேரியானா இக்கொள்கையை இசுபானிய தேசிய கோணத்தில் ஆய்ந்து (கி.பி. 1599-இல்) எழுதினார். இசுபெயின் நாட்டில் அரசன் பிரிவிலுள்ள வகுப்பு நிறுவனங்களே நாட்டின் சட்டத்தின் பாதுகாவலர்களாக இருந்தன. இந்த நாட்டின் சட்டத்துக்கு அரசர் முழுவதும் கட்டுப்பட்டவராவர். அரசரின் அதிகாரம் அவர் மக்களோடு செய்து கொண்ட ஒப்பந்தத்தின் வாயிலாகவே வருகிறது. அவர்களுக்குப் பேராளர்களாக வகுப்பு நிறுவனங்கள் (Estates) இருக்கின்றன; ஆகையால், சட்டத்தை மாற்றுதற்குரிய அதிகாரம் வகுப்பு நிறுவனங்களுக்கு ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. ஆதலின், அடிப்படைச் சட்டத்தை மீறுகிற அரசர் நீக்கப்படுதல் கூடும். அரசாங்கம் தோன்றுவதற்கு முன் இருந்த இயற்கை நிலையிலிருந்து குடிமை இயல் சமூகம் (Civil Society) அல்லது அரசு தோன்றிற்று; தனியார் சொத்துரிமை தோன்றியவுடன் சட்டமும் அரசாங்கமும் தோன்றக்கூடிய சூழ்நிலை உண்டாயிற்று. அரசாங்கத்தின் தோற்றமும் வளர்ச்சியும் மனிதத் தேவைகளின் காரணமாகத் தோன்றியவையாகையால், அத்தேவைகளின் காரணமாக அமர்த்தப்பட்ட ஆட்சியாளர்களைக் கட்டுப்படுத்தவும், பதவி நீக்கம் செய்யவும் சமூகத்துக்கு எப்போதும் அதிகாரம் இருத்தல் வேண்டும். ஆட்சியாளர் கொடுங்கோலராக மாறுவாரேயானால் அவரைக் கொல்லுதற்குக் குடிகளுக்கு உரிமை உண்டு (இப்போக்கில் மேரியானா, பிரஞ்சு அரசர் மூன்றாம் என்றி கொல்லப்பட்டது நியாயமானதே என்று தம் நூலில் கூறியதனால், அந்நூலைப் பாரிசு நீதிமன்றம் (Parlement of Paris) எரித்துவிட்டது).

பிரான்சிசுகோ சுவாரசு என்னும் இயேசு சங்க ஆசிரியர் ஒரு சட்ட நூலாசிரியருமாவர். அவர் கி.பி. 1612-ஆம் ஆண்டிலெழுதிய ஒரு சட்ட இயல்நூலில் (Jurisprudence) சில அரசியற் கருத்துகள் காணப்படுகின்றன. அவர் கூறிய கருத்துகளாவன:

கிறித்தவ நாடுகளெல்லாம் ஒரு குடும்பமாக இருக்கின்றன. அவற்றின் ஆன்மிகத் தலைவராகப் போப்பு இருக்கிறார். இவ்வகையில் அவர் மனித இனத்தின் ஒழுக்க இயலான ஒற்றுமையைப் பற்றி உரைப்பவராகவும் இருக்கிறார். அரசு என்பது தேசிய இயல்புடையதாகவும், ஒரு குறிப்பிட்ட சமூகத்தைக் காட்டுவதாகவும் இருக்கிறது. ஆகையால், உலகியலாட்சியாளர்களை ஆன்மிக நோக்கங்களுக்காக ஒழுங்குபடுத்துவதற்குப் போப்புக்கு மறைமுகமான அதிகாரம் இருக்கிறது. அரசு என்பது குடும்பங்களின் தலைவர்கள் தம் விருப்பத்தின் மேல் இணைய, மனித தேவைகளை நிறைவு செய்வதற்காகத்தோன்றிய ஒரு மனித நிறுவனமாகும். இவ்வாறு தோன்றிய குடிமை இயல் சமூகமானது பொதுநலத்தின் பொருட்டுத் தம் உறுப்பினர்களைக் கட்டுப்படுத்தவும், வாழ்க்கைக்குத் தேவையானவற்றைச் செய்யவும் இயற்கையான அதிகாரமுடையது. ஆகையால், சமூகத்தாரை ஆளுதற்குச் சமூகத்துக்கு இருக்கும் அதிகாரம், சமூகத்தின் உள்ளார்ந்த இயல்பே ஆகும். சமூகத்தின் இந்த அதிகாரம், உலகத்திலுள்ள ஒவ்வொன்றும் கடவுளின் விருப்பத்தைச் சார்ந்துள்ளதென்பதைப் போன்று இது ஓர் இயற்கை நிகழ்ச்சியே ஆகும். இது இவ்வுலகத் தொடர்புடையதாகவும், மனிதனின் சமூகத் தேவைகளோடு தொடர்புடையதாகவும் இருக்கிறது. அரசியலதிகாரமென்பது சமூகத்தின் உள்ளார்ந்த இயல்பு ஆகையால், அதை ஆளும் அரசாங்க அதிகாரமும் வரம்பற்றதாக இருத்தல் இயலாது. சமூக நலனுக்காகக் கொடுக்கப்பட்ட அரசியலதிகாரம் அந்நோக்கத்துக்காகச் செயற்படாவிட்டால், அப்போது அதை

மாற்றுதல் வேண்டும். இவ்வகையில் பார்க்கும்போது உலகியல் சார்ந்த அரசரின் அதிகாரத்தைவிடப் போப்பின் தெய்விக அதிகாரம் உயர்ந்தது.

இடைக்காலத்தில் கூறப்பட்ட சட்ட இயல் கருத்துகளை ஒரு முறைப்படுத்தி, பண்டைக் காலத்தில் இன்ப துன்பச் சமநோக்காளர்களால் விளக்கப்பட்ட இயற்கையின் சட்டத்துக்கு இக்காலத்துக்கு ஒத்த அமைப்பைக் கொடுத்து ஒரு பெருந் தொண்டு செய்த இசுபானிய ஆசிரியர்களுள் சுவாரசு ஒருவர். அவர் வகுத்த புதிய வடிவத்திலான இயற்கைச் சட்டத்தை அடிப்படையாக வைத்துத்தான் குரோசியசு என்ற தச்சுச் சட்ட அறிஞர் பன்னாட்டுச் சட்டம் என்ற அரசியற் கொள்கையை வகுத்தார். சுவாரசு கூறிய இயற்கைச் சட்டத்தினின்று பெறப்படும் கருத்துகளாவன:

இயற்கையிலும் மனித இயல்பிலும் சில பண்புகள் காணப்படுகின்றன. இந்தப் பண்புகளே சில வகை நடக்கைகளைச் சரியானவை என்றும், சிலவகை நடக்கைகளைத் தவறானவை என்றும் ஆக்குகின்றன. இவ்வகையிற் பார்த்தால் சரியானதற்கும் (நல்லனவற்றிற்கும் , தவறானதற்கும் (தீயனவற்றிற்கும்) இடையேயுள்ள வேறுபாடானது கடவுளின் தன்விருப்பத்தின் காரணமாகவோ மனிதனின் தன் விருப்பத்தின் காரணமாகவோ தோன்றாமல் அறிவினடிப்படையில் (காரண, காரிய அடிப்படையில்) தோன்றிய சிறப்பான வேறுபாடாகும். ஆகையால், அரசாங்கச் சட்டத்தின் விதிகளும் செயல்முறைகளும் சரியானவையா என்று சோதித்துப் பார்ப்பதற்கு அவற்றால் உண்டாக்கப்பட்ட மனித உறவுகளின் இயல்பும், அவற்றின் விளைவுகளுமே உதவுகின்றன. இயற்கையின் சட்டத்தின்படி, அதாவது காரண காரிய அறிவினடிப்படையில், தவறாக இருப்பதை எந்த மனிதச் சட்டமியற்றும் அதிகாரியும், கடவுளும் கூட, தவறில்லாததாகச் செய்தலியலாது. இவ்வாறு சுவாரசைப் பின்பற்றிக் குரோசியசு பின்னர்க் கூறினார்.

போப்பினால் கூட இயற்கையின் சட்டத்தை மாற்றுதல் இயலாது என்று சுவாரசு கூறினார்; நாட்டின் தனிப்பட்ட சட்ட விதிகளுக்கப்பால் பொதுவாக, யாவராலும் ஒப்புக் கொள்ளப்படத்தக்க காரண காரிய அளவியல் விதிகள் இருக்கின்றன. ஆகையால் அரசுகளும், தனியாட்களைப் போலவே இயற்கையின் சட்டத்துக்குக் கட்டுப்பட்டே இருக்கின்றன; இந்த விதி அரசுக்குள்ளேயே சட்டத்தின் ஆட்சி அல்லது தலைமை இருக்கிறதென்பதையும், அரசுகளுக்கிடையேயும் சட்ட இயல்பான உறவுகள் இருக்கின்றன என்பதையும் உணர்த்துகிறது. இவ்வகையாகச் சுவாரசு கூறும் கருத்தின்படி பார்த்தால், இயற்கையின் சட்டமானது அரசியலமைப்புச் சட்டத்துக்கும் பன்னாட்டுச் சட்டத்துக்கும் ஓர் ஆதாரமாக இருப்பது தெரிய வருகிறது.

(8) அல்தூசியசும் குரோசியசும் கூறிய கருத்து: அரசருக்கெதிரான அதிகாரக்கோட்பாட்டைப் பிரஞ்சுக் கால்வினியர்களைப் போல கி.பி. பதினேழாம் நூற்றாண்டில் எழுதியவர் தச்சு (Dutch) நாட்டைச் சேர்ந்த சோகன்னசு அல்தூசியசு ஆவர். இவர் இயற்கையின் சட்டத்தை இறையியலை விடுத்து ஆய்வு செய்து சில கருத்துகளைக் கூறினர். மனிதர்கள் சிறுகுழுக்களாகக்கூடுவது இயற்கையில் உள்ள ஓர் உண்மை; இவ்வாறு கூட்டமாக அமைந்து வாழ்தல் அவர்களுடைய இயல்பு. இதனால் அவர்கள் எந்தச் சமய அதிகாரியின் தூண்டுதலுக்கும் உட்படாமல் தாமாகவே ஒப்பந்தம் செய்து கொள்ளும் இயல்புடையவர்களாகிறார்கள். இவர் கூறும் இரு ஒப்பந்தங்களுள் ஒன்று அரசாங்க ஒப்பந்தம்; மற்றொன்று சமூக ஒப்பந்தம். சமூக ஒப்பந்தத்தின் வாயிலாக மக்கள் கூடி வாழ்பவராகவும் சமூகத்தவர் உற்பத்தி செய்யும் பொருள்கள், பணிகள், சட்டங்கள் முதலியவற்றில் பங்கு கொள்ளுபவராகவும் ஆகின்றனர். ஆகையால், எவ்வகைக் கழகத்துக்கும் அல்லது அமைப்புக்கும் இருவகைச் சட்டம் இருக்கிறது. ஒன்று, அக்கழகத்தின் உறுப்பினர்களுக்கிடையே உள்ள தொடர்புகளை வரையறை செய்கிறது; மற்றொன்று அக்கழகத்தின் அல்லது கூட்டத்தின் பொதுவான நலன்களை நிருவாகம் செய்தற்குரிய அதிகாரியை நிறுவி, அவர் அதிகாரத்திற்கு வரம்புகளையும் ஏற்படுத்துகிறது. ஐந்து வகையான கூட்டங்கள் இருக்கின்றன. முதலில் தோன்றுவது குடும்பம் என்ற எளிய கூட்டம். பல குடும்பங்கள் தம் விருப்பத்தில் இணைந்து இணையமாகவும் (Corporation), பல இணையங்கள் சேர்ந்து உள்ளூர்ச் சமுதாயமாகவும் (Local Community), பல சமுதாயங்கள் சேர்ந்து ஒரு மாகாணமாகவும் (Province),பல மாகாணங்கள் சேர்ந்து ஓர் அரசாகவும் (State) ஆகின்றன. மக்கள் யாவரும் சேர்ந்த இணையத்தில்தான் இறைமை அதிகாரம் இருக்கிறது. ஆகையால், இவ்வுயரிய அதிகாரத்தை மக்கள் வேறொருவருக்கு மாற்ற இயலாது; இதனை ஆளும் வகுப்போ குடும்பமோ உடைமையாகக் கொள்ளுதல் இயலாது. ஆகையால் அதிகாரம் என்பது அரசின் சட்டப்படி, அரசின் ஆட்சியை நடத்தும் அதிகாரிகளுக்கு வழங்கப்படுகிறது. ஆட்சி அதிகாரிகள் கையாளும் அதிகாரம் அவர்களுக்குச் சட்டத்தின் வாயிலாக மக்கள் கூட்டத்தினால் வழங்கப்பட்டுள்ள காரணத்தால்,

மக்கள் சமூகத்தின் நலனைப் பாதுகாவாமல் ஆளுவோர் அவ்வதிகாரத்தை இழந்து விடுவார்களேயானால், அவ்வதிகாரம் மக்களையே திரும்பவும் சென்று அடையும். இதுவே அல்தூசியசு கூறும் மக்கள் இறைமைக் கோட்பாடு (Theory of Popular Sovereignty) ஆகும். ஆட்சியாளர் கொடுங்கோலராக மாறினால் அவரை எதிர்ப்பதற்கு மக்களுக்கு உரிமை உண்டு. ஆட்சியாளரை எதிர்க்கும் உரிமை தனிப்பட்ட ஆட்களுக்கு இல்லை. அவ்வுரிமை மக்கள் இணைந்த கூட்டத்திடமோ மக்கள் சமூகத்தின் உரிமைகளின் காவலர்களாக இருக்கும் அதிகாரிகளிடமோ இருக்கிறது. அல்தூசியசு கூறும் கோட்பாடு குடியியல் சமூகத்துக்கு ஆதாரமாக ஒப்பந்தத்தையும் அதிகாரத்துக்கு ஆதாரமாகச் சமூகத்தையும் அல்லது மக்கள் தொகுதியையும் கூறுவதால், அது இக்கால அறிவியல் நோக்கில் அரசனையும் அதிகாரத்தையும் பற்றி ஆய்வு செய்யும் கோட்பாடாகும். மேலும், அது நிருவாகத் துறைக்கு இருக்கக்கூடிய சட்ட வரம்புகளின் ஆதாரத்தை யாவரும் ஒப்புக் கொள்ளத்தக்க வகையில் கூறுகிறது. மேலும், அவருடைய கோட்பாடு நிருவாக அதிகாரத்தைக் கொடிய வகையில் கையாளுதலை எதிர்க்கும் உரிமைக்கு யாவராலும் ஒப்புக் கொள்ளப்படக்கூடிய காரணத்தையும் காட்டுகிறது. அவர் சமூகம், ஒப்பந்தம், அதிகாரம், அதற்குரிய வரம்பு, அரசாங்கத்தை எதிர்க்கும் உரிமை ஆகிய கருத்துகளையெல்லாம் சமய நெறிக் கொள்கைகளை ஒட்டியே ஆய்வு செய்யாமல் இயற்கையின் சட்டத்தை ஒட்டியே ஆய்வு செய்வதால், அவை அறிவியல் வாயிலாக ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய தன்மையைப் பெறுகின்றன.

உயூகோ குரோசியசு என்ற தச்சுச் சட்ட அறிஞர் அல்தூசியசைப் போல இயற்கையின் சட்டத்தை ஆதாரமாக வைத்து, குடிமை அரசு அல்லது அரசாங்கம் தோன்றுவதற்கு ஒப்பந்தம் காரணமாக இருக்கிறதென்று கூறி, மேலும், இவ்வொப்பந்தத்தோடு தொடர்பின்றி இயற்கை நிலை இருக்கிறதென்றும் விளக்கினார். இயற்கை நிலை தனியாட்கள் ஒருவரோடொருவர் கொண்டுள்ள தொடர்புகளையும், இறைமை அரசுகளுக்கிடையேயுள்ள தொடர்புகளையும் பற்றியதாகும். தனியாட்களுக்கிடையே ஏற்படும் உடன்படிக்கை அல்லது ஒப்பந்தத்தின் விளைவாக உள்நாட்டுச் சட்டங்களும் (Municipal Laws), இறைமை அரசுகளுக்கிடையே ஏற்படும் உடன்படிக்கையின் விளைவாகப் பன்னாட்டுச் சட்டங்களும் தோன்றுகின்றன. இரு சட்டங்களும் இயற்கையின் சட்டத்திலுள்ள பொதுவான விதிகளுக்கு உட்பட்டே அமைகின்றன. உள்நாட்டுச் சட்டமும் பன்னாட்டுச் சட்டமும் மக்களும் அரசுகளும் தாமாகவே தங்களுக்காக ஒப்பந்தத்தின் வாயிலாக ஏற்படுத்திக் கொள்ளுவனவாகையால், அவை ஒப்பந்தம் செய்தவர்களைக் கட்டுப்படுத்துவனவாகும். இயற்கையின் சட்டம் இக்காலவடிவில் அமைக்கப்படுதற்கு முன்னரே, அரசாங்கம் என்பது ஆளுவோருக்கும் மக்களுக்கும் இடையேயுள்ள ஓர் ஒப்பந்தத்தைச் சார்ந்துள்ளதென்ற கருத்து இருந்தது. இயற்கையின் சட்டம் என்ற கோட்பாடு விரிவாக இக்காலத்தில் ஆக்கப்பட்ட பின்னர், குடிமைச் சமூகத்தைத் தோற்றுவித்து, அதன் வாயிலாக, அதன் உறுப்பினர்களை இணைக்கும் ஓர் ஒப்பந்தமும் குடிமைச் சமூகத்துக்கும் அதனை ஆளும் அதிகாரிகளுக்குமிடையே ஓர் ஒப்பந்தமும் ஏற்பட்டன என்று ஊகம் செய்யப்பட்டது. இயற்கையின் சட்டத்தைப் பற்றிய இந்த ஊகத்தின் அடிப்படையில் எல்லா வடிவத்திலுமுள்ள சமூகக் கூட்டங்களுக்கும், எல்லா வகையான கடமைகளுக்கும் ஆதாரமாக ஒப்பந்தமென்னும் பொதுக் கொள்கை இருப்பதாக அல்தூசியசும் பியூபண்டார்பு (Pufendorf) என்னும் அரசியல் சிந்தனையாளரும் எழுதினர். ஆளுவோருக்கும் குடிகளுக்கும் ஒப்பந்தம் இருப்பதனால், ஆளுவோரின் அதிகாரத்துக்கு வரம்பு இருக்கிறதென்று அல்தூசியசும் இலாக்கும் (Locke) கருதினர். கொடுங்கோலருக்கெதிராக வெற்றியான புரட்சி நடத்துதற்கும் உரிமை உண்டு என்று இலாக்கு எழுதினார். ஆனால், குரோசியசும் பியூபண்டார்பும் எதிர்த்தலை நியாயமான உரிமையாகக் கருதாமல், ஆட்சியாளர்களுடைய அதிகாரங்களுக்கு ஒழுக்க இயல் வரம்புகள் இருத்தல் வேண்டுமென்று வற்புறுத்தினர். சட்டமும் அரசாங்கமும் ஒழுக்க இயலான துறையைச் சேர்ந்தவை. அவை ஆற்றலை வெளிப்படுத்தும் கருவிகளாக மட்டும் அமையவில்லை. ஆகையால், அவை நன்மை செய்கின்றனவா என்று ஆராயப்படுவதற்கும், அவ்வகையில் குற்றம் கூறப்படுதற்கும் உரியவை.

(9) சான் மில்ட்டன் (John Milton) கூறிய கருத்து: சான் மில்ட்டன் (கி.பி. 1608–1674) இங்கிலாந்தின் கால்வினிய மறுப்புரைச் சமயப் பிரிவைச் சேர்ந்த ஒரு புகழ் பெற்ற கவிஞர் ஆவார். அவர் வாழ்ந்த காலம் குடியரசுக் கட்சியினரான (Republican) கிராம் வெல்லும் அவருடைய தூய்மையாளர் கட்சிப் (Puritans) படை வீரர்களும் அரசர் முதலாம் சார்லசை உள்நாட்டுப் போரில் கொன்றுவிட்டுக் குடியரசாக இங்கிலாந்தை ஆண்ட காலமாகும். மில்ட்டன் தூய்மையாளர்கட்சி ஆதரவாளராகையால், அவர் கி.பி. 1649-ஆம் ஆண்டில், அயல்நாட்டு மொழிகளின் செயலாளராகக் கிராம்வெல்லின் கட்டுப்பாட்டிற்குள்ளிருந்த அரசாங்க ஆட்சி மன்றத்

தில் (Council of State) அமர்த்தப்பட்டார். மில்ட்டன் இயற்கை உரிமை, இயற்கை நீதி ஆகியவற்றின் அடிப் படையில் குடியரசுக் கோட்பாட்டை ஆதரித்தார். அவர் கருத்துகளை வெளியிடும் உரிமையை வலி யுறுத்தி கி.பி. 1664–ஆம் ஆண்டில் அரியோபசிட்டிக்கா (Areopagitica) என்ற நூலை எழுதினார். அதில் அவர் பேச்சுரிமையின் சிறப்பை எடுத்துக் கூறியுள் ளார். அறிவியல் துறையில் சுதந்திரம் அல்லது உரிமை இருந்தால்தான் உண்மை எது என்றும், தவறு எது என்றும் விளங்கும். இரண்டையும் சுதந்திரமாக ஆராய்ந்து, விவாதித்தால்தான் உண்மை வெற்றி அடையும். பல்வேறு வகைப்பட்ட சமயக் குழுக்களும் சமயக் கட்சிகளும் இருத்தல் உண்மை நெறியைக் கண்டு கொள்ளவும், புது சுதந்திரத்தைப் பெறவும் உதவி செய்யும். இவ்வகையாக மில்ட்டன் சமயப் பொறை அல்லது சமய உரிமை (Religious Toleration) என்ற கருத்தை ஆதரித்தார். ஆனால், இச்சமய உரிமைக் கோட்பாடு உரோமானியக் கத்தோலிக்கருக் குப் பொருந்துமென்று அவர் கருதவில்லை. மில்ட்டன் 'அரசர்களின், நீதிபதிகளின் பதவி' (Tenure of Kings and Magistrates) என்ற தம் நூலில் முதலாம் சார்லசு அரசனைக் கொன்ற செயல் நியாயமானதே என்று கூறினார். மேலும், அவர் கி.பி. 1649–இலும் 1651 –இலும் எழுதிய வேறு இரு நூல்களிலும் இயற்கை யின் சட்டம், கிறித்தவ மறை நூல், இங்கிலாந்தின் சட்டம் ஆகியவற்றிலிருந்து ஆதாரங்கள் காட்டி, கொடுங்கோலரசருக்குக் கொலைத்தண்டனை வழங்கு தல் நியாயமானதாகும் என்று கூறினார். அரசு என்பது மக்களுடைய உரிமையின் மீது நிறுவப்பட்டுள் ளது. ஆகையால், அதனைக் கொடுங்கோலாட்சிக்கு உட்படுத்துபவரை எதிர்த்தல் ஓர் இயற்கை உரிமை (Natural Right) என்று அவர் கூறினார்.

அவர் கூறிய கருத்துகளுள் சில வருமாறு: 'மக்கள் சுதந்திரமாகப் பிறந்து, தங்களுடைய பாதுகாப்புக்காக அரசாங்கங்களை நிறுவுகிறார்கள். ஒவ்வொருவரும் தம்மைக் காத்துக் கொள்ளும் உரிமை யின் நிலையில் பொது அதிகாரி இருப்பவராவர். சட் டம் என்பது பொது அதிகாரியைக் கட்டுப்படுத்த வும் வரம்புபடுத்தவும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதி காரிக்கு இருக்கும் அதிகாரமானது பொது நலனுக்காக மக்களிடமிருந்து பெறப்படுகிறது. ஆகையால், கொடுங் கோலனுக்கெதிராகப் பொது நலத்தைக் காக்கும் உரிமை எப்பொழுதும் மக்களிடத்தில்தான் இருத்தல் வேண்டும்'.

அரசருக்கு எவராலும் மீறப்படாத அதிகாரம் என்பதாக ஒன்றும் கிடையாது. மக்கள் எப்பொழுதெல் லாம் அரசரை நீக்குதல் சரியென்று கருதுகிறார்களோ, அப்பொழுதெல்லாம் அவரை நீக்குதல் வேண்டும். தகாதமுறையில் ஆட்சியாளராக ஒருவர் வந்தாலும், அல்லது சட்டப்படியாக வந்தாலும், அவர் கொடுங் கோலராக மாறுவாராயின் அவரைக் கொல்லுதல் சட்டப் படியான செயலே ஆகும்.

(10) சான் இலாக்கு கூறிய கருத்து: இங்கிலாந் தில் கி.பி. 17–ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி யிலும் 18–ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்த தாராள ஆங்கில அரசியற் சிந்தனையாளர் சான் இலாக்கு (John Locke) ஆவர். இவர் காலத் தில் ஆங்கில இசுடுவர்ட்டு அரசர்களுக்கும் ஆங்கிலப் பாராளுமன்றத்துக்குமிடையே நெடுங்காலமாக, 'எவர் உயர்தர அதிகாரி?' என்ற கேள்வியின்மீது நடந்து வந்த சச்சரவு, கி.பி. 1688–ஆம் ஆண்டின் மாண்புறு புரட்சியின் (Glorious Revolution) விளை வாகப் பாராளுமன்றமே உயர்தர அதிகாரி என்ற தீர்ப்புடன் முடிவடைந்தது. மக்கள் இறைமைக் கோட் பாடே (Theory of Popular Sovereignty) வெற்றியாக நிலைபெற்றது. அரசரின் தெய்விக உரிமைக் கோட் பாடு கைவிடப்பட்டது. இலாக்கு மாண்புறு புரட்சி யைச் சரியென்று நிறுவும் பொருட்டுக் 'குடிமை அரசாங்கத்தைப் பற்றிய இரண்டாம் கட்டுரை' (Second Treatise on Civil Government) என்ற நூலை எழுதி, அதில் குடிமைச் சமூகத்தின் தோற்றம், அரசாங்கத்தின் இயல்பு, குடிகளுக்கு அரசாங்கத்தை எதிர்த்துக் கலகம் செய்யும் உரிமை முதலிய வற்றைப் பற்றித் தெளிவுபடுத்தினார். அவை பின் வருவன:

மக்கள் செய்யும் இரு ஒப்பந்தங்களுள், அவர்கள் தங்களுக்குள் செய்து கொள்ளும் ஒப்பந்தமே மிக முக்கியமானது. ஏனெனில், இதன் விளைவாகத்தான் இயற்கை நிலையிலிருந்து விடுபட்டு மக்கள் குடிமைச் சமூகம் அல்லது அரசு (Civil Society or State) என்ற நிலை தோன்றுகிறது. பின்னர், அவர்கள் தங்களு டைய அதிகாரத்தைச் சட்டமன்றத்திடம் அளிக்கின் றனர். அரசாங்கத்தில் சட்டமன்றத்தின் அதிகாரமே தலைமையானது. சட்டமியற்றும் அதிகாரமும் நிரு வாக அதிகாரமும் வரையறைக்குட்பட்டவை. சட்ட மியற்றும் அதிகாரம் தன்விருப்பப்படி கையாளப்படத் தக்கதன்று; மக்களுக்கே அத்தகைய அதிகாரம் இல்லை. பெரும்பாலான உறுப்பினருடைய ஆதரவு அல்லது ஒப்புதலில்லாமல் சட்டமன்றம் எவருடைய உடைமையையும் எடுத்துக் கொள்ளுதலியலாது. மக் களால் சட்டமன்றத்தின் மீது வைக்கப்பட்ட நம்பிக் கைக்கு மாறாக அம்மன்றம் செயற்படுமானால், அம் மன்றத்தை மாற்றுதற்கு மக்களுக்கு உயர்தர அதி காரம் இருக்கிற காரணத்தால், சட்டமன்ற அதிகாரம்

ஒரு நம்பிக்கைப் பொருள் (Fiduciary) ஆகும். நிருவாக உறுப்பும் சட்டமன்றத்தைச் சார்ந்தே இருக்கிறது; அதன் சிறப்பு அதிகாரங்களும் சட்டத்தினால் வரம்புபடுத்தப்பட்டுள்ளன. சட்ட, நிருவாக அதிகாரங்கள் தனித்தனி ஆட்களிடம் இருத்தல் சிறந்தது. மக்களுடைய சட்ட அதிகாரமென்பது அவர்கள் உயர்தரச் சட்டமன்றத்தை நிறுவுதலென்ற ஒரே செயலில்தான் காணப்படுகிறது. அரசாங்கம் ஒழுங்காகத் தனது கடமைகளைச் செய்யும் வரை மக்களுக்கு ஓர் அதிகாரமும் இல்லை. தவறிய அரசாங்கம் கலைக்கப்பட்டபின்னரே, சமூகம் தனது அதிகாரத்தைத் திரும்பப் பெறுதல் வேண்டும். கொடுங்கோன்மையை எதிர்த்தற்கு மக்களுக்கு ஒழுக்க இயலான உரிமை (Moral Right of Revolution) உண்டு. ஆங்கிலச் சமூகத்தின் நலனின் பொருட்டே ஆங்கில அரசாங்கம் இருக்கிறது. சமூக நலன்களைப் புறக்கணிக்கின்ற ஓர் அரசாங்கம் மாற்றப்படுதல் சரியே. போர் வெற்றியின் வாயிலாக ஆட்சிக்கு வந்த ஓர் அரசாங்கமும் மக்கள் உள்ளார்ந்த ஒழுக்க இயலான உரிமைகளை ஒப்புக் கொண்டு ஆதரிப்பதன் வாயிலாகத்தான், நியாயமான அரசாங்கமாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. கொடுங்கோலரசாங்கத்துக்கெதிராக மக்கள் கலகம் செய்தல், சட்டத்துக்கு அப்பாற்பட்ட ஆனால் ஒழுக்க இயலின்படி சரியான காப்புச் செயலே (An extra-legal but morally defensible remedy) ஆகும்.

சுருங்கச் சொல்லின், ஆட்சுதந்திரம் (Personal Liberty), ஒப்புதல் (Consent), உடைமையைப் பெறவும் துய்க்கவும் கூடிய உரிமை முதலிய மக்களுடைய பிரிக்க முடியாத உரிமைகளை அழிவினின்றும் காப்பாற்றும் பொருட்டு, மக்கள் அரசாங்கத்தை எதிர்த்தல் நியாயமானதே என்பது இலாக்கின் கருத்து ஆகும்.

அரசாங்கத்தை எதிர்க்கும் உரிமை என்பது ஒவ்வொருவரும் விரும்புகின்ற சமய உரிமையோடு நெருங்கிய தொடர்புடையதாகும். அரசாங்கத்தை எதிர்க்கும் உரிமையைப் பற்றி ஆங்கில அரசியற் சிந்தனையாளர் கிரீன் (T.H. Green) என்பவர் சில கருத்துகளைக் கூறுகிறார். ஒரு தனியாள் ஒரு சட்டத்தை எதிர்ப்பதற்கு முன்னதாக, குறிப்பிட்ட அச்சட்டம் பொதுநலனுக்கு உகந்ததா இல்லையா என்று எண்ணிப் பார்த்தபின், அது பொதுநலனுக்கு உகந்ததாக இல்லாவிடினும், அவருடைய நாட்டில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கமும் மாறுதலை ஏற்படுத்துதற்குச் சட்டத்துக்கும் அரசியலமைப்புக்கும் உட்பட்ட வழிகளும் இருக்குமாயின், அவர் அச்சட்டத்துக்குங் கீழ்ப்படிதல் சமூகக் கடமை ஆகும். தீய சட்டங்களை நீக்குவதற்குச் சட்டப்படியான வழிகளில்லாதபோதும், அல்லது அரசாங்கம் அவற்றை நீக்க இயலாத அளவுக்கு ஊழல் நிறைந்ததாக இருக்கும் போதும் தனியாள் தீய சட்டத்தை எதிர்க்க வேண்டும். அது அவருடைய துன்பமிக்க கடமை ஆகும். அவ்வாறு அவர் எதாக்கும் முன்னர், தாம் அரசியலமைப்புக்கு உட்பட்ட வழிகளையெல்லாம் கையாண்டுவிட்டோமோ என்றும், தமக்கு உதவி செய்யுமாறு அழைக்கப்படுகிற மக்கள் தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை உணர்ந்திருக்கிறார்களா என்றும், எதிர்ப்பின் விளைவுகள் எவை என்றும் முழுவதும் நன்றாக ஆராய்ந்து பார்த்தல் வேண்டும். புரட்சியின் விளைவுகளே புரட்சி நலனுக்குகந்ததா இல்லையா என்பதைக் காட்டும். பல முயற்சிகளும் பல தோல்விகளும் ஏற்பட்ட பின்னரே நல்ல நோக்கம் நிறைவேறுதலும் கூடும். பெரும்பான்மையோர் தம் நிலை ஒன்றின் காரணமாகவே எதிர்க்கும் உரிமை உடையவராக மாட்டார். சில சமயங்களில் ஆதரவற்ற நிலையில் சிறுபான்மையோருக்கு எதிர்ப்பதைத் தவிர வேறு வழி இல்லாமற் போகலாம். தனியாள் எந்த முடிவுக்கு வந்தாலும் அவர் பண்புடையவராக, பொதுநல உணர்வுடையவராக இருக்கும்வரை, அவருடைய செயலும் நலன் பயப்பதாகவே இருக்கும். பா.சு.

துணை நூல்கள்:

**Geshandy, P.S.**, National and International Stabiliy: Althusius, Grotius, Vollenhoven, London, 1944.

**Sir Fredirick Pollock**, Essays in the Law: The History of Law of Nature, London, 1922.

**Chin, Y.L.**, The Political Theory of Thomas, Hill Green, New York, 1920.

**Isaiah Berlin**, Two Concepts of Liberty, Oxford, 1958.

***எதிர்காலச் சொத்துகள்***: நிலத்திலிருந்து எழக்கூடிய உரிமைகளை அல்லது நலன்களைச் சுவாதீனத்தை அடிப்படையாகக் கொண்டு இருபிரிவுகளாகப் பிரிக்கலாம். சொத்தானது நிகழ் காலத்தில் அனுபவிக்கக்கூடிய ஒன்றாக இருப்பின் பருப்பொருள் சொத்து(Corporeal Property)என்றும், உடனடியான சுவாதீனம் இல்லாத சொத்தாக இருப்பின் நுண்பொருள் சொத்து (Incorporeal Property) என்றும் வழங்கப்பெறும். எதிர்காலத்தில் சுவாதீனம் கிடைக்கக் கூடியவாறு அமைந்த நுண்பொருள் நலன்கள்

எதிர்கால நலன்கள் ஆகும். நுண்பொருள் சொத்துகள் எதிர்காலச் சொத்துகள் (Future Estates) என்றும், வசதியுரிமை போன்று மற்றவர் நிலத்தின் பேரில் அனுபவிக்கக்கூடிய மெய்யான நுண்பொருள் நலன்கள் என்றும் பிரிக்கப்படுகின்றன. எதிர்காலச் சொத்துகளைப் பின்னடையுரிமை(Reversion), எஞ்சுரிமை (Remainder), நிறைவேற்ற வேண்டிய உரிமை (Executory interest) என்று மூவகையாகப் பிரிக்கலாம்.

எதிர்காலச் சொத்து என்பது ஓர் ஆவணம் ஒன்றின் வாயிலாகக் குறிப்பிடப்பட்டிருப்பின், ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நலன்களுக்குப்பின் செயலுக்கு வந்து சுவாதீனம் கிடைக்கப் பெறுவதாகும். உயில் வழியாக ஏற்பட்டிருந்தால், உயில் இயற்றியவரின் இறப்பிற்குப்பின் செயலுக்கு வரும்.

சுவாதீனத்தில் அன்றி உரிமையில் சேர்ந்தடைந்த சொத்து: ஒரு நிலமானது ஆவணத்தின் வாயிலாக எ-யின் வாழ்நாள்களுக்குப் பின், பி-க்கு முழுமையாகக் கொடுக்கப்படுவதாக வைத்துக் கொண்டால், பி-யினது சொத்து எதிர்காலச் சொத்தாகும். ஏனெனில், ஆவணத் தேதிக்குப் பிறகே அது சுவாதீனமாகச் செயலுக்கு வரும். எ-இனுடைய இறப்பிற்குப் பிறகு பி-க்குச் சுவாதீனம் கிடைக்கிறது. அப்போது அது சுவாதீனத்துடன் சேர்ந்தடைந்த (Vested in Possession) சொத்து எனப்படும். ஆவணத்தேதியின் போது கூட முந்தைய சொத்து நலன் முடிவடைந்தவுடன், சுவாதீனம் எடுத்துக் கொள்ளக் கூடிய ஒரு வகை உரிமை பி-க்கு இருக்கிறது. எ-இனுடைய இறப்பு வரை பி-இன் எதிர்காலச் சொத்தானது உரிமையில் சேர்ந்தடைந்த சொத்து (Vested in interest) ஆகும். அப்போது அவருக்குச் சொத்துக்கான உரிமை இருக்கிறது. ஆனால் சுவாதீனம் மட்டும் அவரிடம் இருப்பதில்லை.

வருநிகழ்வு சார்ந்த நலன்: சில எதிர்காலச் சொத்துகள் ஆவணத்தேதியின்போது உரிமையாகச் சேர்ந்தடையாத சொத்தாக இருக்கும். அவை செயலுக்கு வருமா என்பதில் உறுதிப்பாடு இல்லாமையால் அவை வருநிகழ்வு சார்ந்தனவாக அப்போதைக்கு இருக்கின்றன. எடுத்துக்காட்டாக, எ-இன் வாழ்நாள்களுக்குப் பின்னர், பி-க்கு முழுமையாக, அவர் 21 வயதை அடைந்தபின் கொடுக்கப்படுவதாக வைத்துக் கொண்டால் பி-இன் எதிர்காலச் சொத்து உரிமையாகக் கூட அப்போது வந்தடைவதில்லை. முன்னைய சொத்து முடிவுக்கு வந்தவுடன் அதனை எடுத்துக் கொள்ளக் கூடிய உரிமை அப்போது அவருக்குக் கிடையாது. அவரது உரிமை வந்தடைவதற்கு முன், அவர் ஒரு நிபந்தனையை நிறைவேற்ற வேண்டும். அதாவது 21-ஆம் வயதினை அடைய வேண்டும். எனவே, அவரது உரிமை வருநிகழ்வு சார்ந்தது.எ இனுடைய வாழ்நாள்களில் 21-ஆம் வயதினை அடைந்தவுடன், அவருக்கு உரிமையில் சொத்து வந்தடைகிறது. முந்தைய சொத்து முடிவுக்கு வந்தவுடன் அவர் சொத்தின் சுவாதீனத்தை எடுத்துக் கொள்ளலாம். அதாவது எ இறந்தவுடன் பி-க்குச் சொத்து உரிமையில் மட்டுமன்றிச் சுவாதீனத்திலும் சொத்து வந்தடைகிறது. எதிர்காலச் சொத்தாகவும் இருப்பதில்லை.

நிகழ்காலச் சொத்து என்பது உரிமையிலும் சுவாதீனத்திலும் சேர்ந்தடைந்த சொத்தாகும். ஆனால் எதிர்காலச் சொத்தின் உரிமை கூட எதிர்காலத்தில்தான் வந்தடைகிறது.

எதிர்காலச் சொத்தினை பின்னடையுரிமை (Reversion), எஞ்சுரிமை (Remainder), நிறைவேற்ற வேண்டிய உரிமை (Executory inerest) என மூவகையாகப் பிரிக்கலாம். ஒரு சொத்திற்கு உரிமையாளராகவுள்ள எ என்பவர் தம் சொத்தினைப் பி-க்கு அவரது வாழ்நாள்களுக்கு அளிக்கிறார் என்று வைத்துக் கொண்டால், இதில் பி-இன் வாழ்நாளுக்குப் பின்னர், சொத்து எ-க்குத் திரும்பச் செல்லும். இவ்வுரிமை பின்னடையுரிமை என வழங்கப்பெறும். அடுத்து, எ என்பவர் தம் சொத்தினைக் க என்பவரின் வாழ்நாள்களுக்கு அளித்துவிட்டு பி-க்கு முழுமையாகக் கொடுக்கிறார் என்று வைத்துக் கொண்டால் இங்குப் பி-இன் உரிமை எஞ்சுரிமை என்று சொல்லப் பெறும். முதலாம் எடுத்துக்காட்டில் கூறியபடி சொத்தின் உரிமை எ-க்குத் திரும்பச் செல்லாமல், பி-இடமே தங்கிவிடுகிறது. இங்குப் பி-இடம் உரிமை அப்போது வந்தடைந்து இருப்பதால், அது சேர்ந்தடை எஞ்சுரிமை (Vested Remainder) எனச் சொல்லப்படும். சொத்து பி-க்கு 21-ஆம் வயதில் கிடைக்க வேண்டுமென்று கூறப்பட்டால், பி-இனது உரிமை வருநிகழ்வு சார்ந்ததாக இருக்கும். எனவே இது வருநிகழ்வு சார்ந்த எஞ்சுரிமை (Contingent remainder) எனப்படும். ஒவ்வொரு பின்னடை உரிமைக்கும், எஞ்சுரிமைக்கும் முன்னதாக மற்றொருவர் பேரில் முந்தைய நலன் முடிவடைந்த பிறகே, பின்னடையுரிமையும் எஞ்சுரிமையும் செயலுக்கு வரும். நிறைவேற்றப்பட வேண்டிய உரிமையும் எதிர்கால உரிமையேயாகும். இது மற்ற நிகழ்வுகளைச் சார்ந்திராமல் தானாகவே செயலுக்கு வருவதாகும். ஆ.ச.

**எதிர்கொள்பாடி**: சோழ நாட்டில் தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் திரு எதிர்கொள்பாடி ஒன்றாகும். இத்தலம் இப்போது மேலைத் திருமணஞ்

சேரி என வழங்கப்படுகிறது. தஞ்சை மாவட்டத்திலுள்ள குத்தாலத்திலிருந்து 3 கல் தொலைவிலுள்ள இத்தலத்தினை அங்கிருந்து பேருந்து வழியாகச் சென்றடையலாம். இதன் அருகில் வேள்விக்குடி என்னும் தேவாரப் பாடல் பெற்ற தலம் உள்ளது. மேலும், இத்தலத்தின் அருகில் கீதைத் திருமணஞ்சேரி என்னும் ஊரும் உள்ளது. இத்தலத்திறைவனைச் சுந்தரர் தம் தேவாரப் பதிகம் ஒன்றினால் பரவியுள்ளார். இறைவன் பெயர் ஐராவதேசுவரர். அவர் தமிழில் 'வெள்ளையானை நாதர்' எனப்படுவார். இறைவி பெயர் 'மலர்க் குழல் மாது' என்பதாகும். இது ஐராவதம் (இந்திரனது வெள்ளை யானை) வழிபட்ட இடம் எனக் கூறப்படுகிறது. ஓரிளவரசன் மணம் செய்து கொண்டு தன் மனையாளொடு தன்னூர் செல்லும்போது, அவன்தன் அம்மானைப் போலத் தோன்றி இறைவன் அவர்களை எதிர்கொண்டு அழைத்துச் சென்றமையால் இத்தலம் எதிர்கொள்பாடி எனப்பட்டது என்று இவ்வூரைப் பற்றிய பழ மரபு வரலாறு கூறுகிறது. 'இறந்த பொழுது உடன்வருவோர் எவரும் இல்லாமையால் இறைவனைச் சிந்தையுள் வைத்துப் போற்றுவதே செய்யத்தக்கது' என்னும் கருத்தினை அரசர்களை விளித்துக் கூறும் பாங்கில் 'மத்தயானை ஏறி மன்னர் சூழ வருவீர்காள், செத்தபோதில் யாருமில்லை சிந்தையுள் வைம்மின்கள்' என்று தம் பதிகப்பாடலில் சுந்தரர் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். அ.மா.ப.

**எதிர்நிலை உடைமை (அ) எதிர் அனுபோகம்**: எதிர்நிலை உடைமை அல்லது எதிர் அனுபோகம் (Adverse Possession) என்பது சொத்துரிமை பெறும் ஒரு முறையாகும். ஒருவர் தமக்கு முற்றிலுமாகச் சொந்தம் இல்லாத ஓர் அசையாச் சொத்தைப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு மேல் தொடர்ந்து எல்லாருக்கும் தெரியும்படியாக, எந்த விதக் குறுக்கீடுமின்றி அமைதியாகத் தம் உடைமையில் வைத்து அனுபவித்து வருவதன் மூலம், அச்சொத்தின் மீது அவர் உரிமை கொண்டாடலாம்.

எதிர்நிலை உடைமையின் இன்றியமையாக் கூறுகள்: 1. உடைமை உண்மையானதாக இருத்தல் வேண்டும். எதிர்நிலை உடைமை மூலம் உரிமை உண்டாவதற்கு, அச்சொத்தின் உடைமை உண்மையில் எதிர்நிலை உடைமை வேண்டுபவரிடம் இருக்க வேண்டும். இவ்வுடைமை இரு கூறுகளை உள்ளடக்கியிருத்தல் வேண்டும். அவையாவன: i) உடைமையில் உள்ளதைத் தன் ஆளுகையிலும் கட்டுப்பாட்டிலும் வைத்திருக்கும் திறமை. ii) மற்றவர்களை அவ்விதக் கட்டுப்பாடு செய்யும் நிலையிலிருந்து விலக்கும் எண்ணம். சொத்தைத் தனக்கே உரித்தாக்கிக் கொள்ளும் எண்ணம் இருத்தல் வேண்டும். அத்தகைய எண்ணம் அவருடைய செயல்கள் மூலம் வெளிப்படவேண்டும். 2. உடைமையானது ஓர் உரிமை வேண்டுகோளின்கீழ் வந்ததாக இருக்க வேண்டும். 3. எதிர்நிலை உடைமை பன்னிரண்டு ஆண்டுகளுக்குத் தொடர்ந்து நீண்டிருக்க வேண்டும்.

எதிர்நிலை உடைமை ஆகாதன: ஒருவர் அடுத்த வீட்டுக்காரரின் காலியிடத்தை அவ்வப்போது கட்டில் போடுவதற்கும் சில நிகழ்ச்சிகளுக்கும் தொடர்ந்து பயன்படுத்தி வரும்போதும், குத்தகைதாரர் குத்தகை முடிந்த பின்னரும் குத்தகையைக் கொடுக்காத போதும் எதிர்நிலை உடைமையைக் கொண்டாட முடியாது.

மெய்ப்பிக்கும் பொறுப்பு: ஒருவருக்கு ஒரு சொத்தில் எதிர்நிலை உடைமை இருப்பதாக உரிமை கொண்டாடும் போது, அவ்வுடைமை எந்த அளவுக்கு உண்மையான உரிமையாளரின் உரிமையை மறுப்பதற்கு ஆதாரமாக இருந்தது என்பதை ஐயந்திரிபற மெய்ப்பிக்க வேண்டும். ஆர்.எஸ்.

**எதிர்நிலை உரை**: ஒரே எழுவாய், பயனிலைப் பதங்களைக் கொண்ட 'ஆ', 'ஈ', 'ஐ', 'ஓ' என்னும் சார்பற்ற உரைகள் எதிர்நிலை உரைகள் எனப்படும். மக்கள் அனைவரும் இறப்பவர் ஆவர் என்ற 'ஆ' உரைக்கு மக்கள் யாவரும் இறப்பர் அல்லர் என்ற 'ஈ' உரையும், மக்கள் சிலர் இறப்பர் ஆவர் என்ற 'ஐ' உரையும் மக்கள் சிலர் இறப்பவர் அல்லர் என்ற 'ஓ' உரையும் எதிர் நிலை உரைகளாக அமைகின்றன. இவ்வாறே ஒவ்வோர் உரைக்கும் மற்ற மூன்று உரைகளும் எதிர்நிலை உரைகள் (Oppositions of Proposition) ஆம். வேற்றுமை, முரண், அடக்கம் என்பன அடிப்படையான எதிர்நிலைகள்.

வேற்றுமை: தன்மையால் மட்டும் வேறுபடும் 'ஆ', 'ஈ' எனும் நிறை உரைகளை வேற்றுமை உரைகள் என்பர். இவ்விரண்டுள் ஒன்றுக்கு மற்றது வேற்றுமை உரை எனப்படும். வேற்றுமை உரைகளுள் ஒன்று உண்மை என்றால் மற்றது பொய்; ஒன்று பொய்யென்றால் மற்றதன் உண்மை நிலையை உறுதிப்படுத்த முடியாது. 'ஐ', 'ஓ' என்னும் குறை உரைகளும் தன்மையால் மட்டுமே வேறுபடுகின்றன. இவை கீழ்வேற்றுமை உரைகள் எனப்படும். இவற்றுள் ஒன்று பொய் என்றால் மற்றது உண்மை; ஒன்று உண்மை என்றால் மற்றதன் உண்மை நிலையை உறுதிப்படுத்த முடியாது.

முரண்: அளவு, தன்மை இரண்டாலும் மாறுபடுபவை முரண் உரைகள் எனபுபடும். 'ஈ', 'ஐ'

உரைகளுக்கிடையும், 'ஆ', 'ஓ' உரைகளுக்கிடையும் முரண் நிலையைக் காணலாம். 'ஈ', 'ஐ' உரைகளுள் ஒன்றுக்கு மற்றது முரண் உரையாகும். 'ஆ', 'ஓ'உரைகளிலும் அவ்வாறேயாகும். முரண் உரைகளுள் ஒன்று உண்மை என்றால் மற்றது பொய்; ஒன்று பொய் என்றால் மற்றது உண்மை.

அடக்கம்: 'ஆ', 'ஐ' உரைகளுக்கு இடையும் 'ஈ', 'ஓ' உரைகளுக்கு இடையும் காணப்படும் எதிர்நிலையை அடக்கம் எனப் பொதுவாகக் குறிக்கலாம். மனிதர்கள் அனைவரும் இறப்பவர் ஆவார் என்ற நிறை உரையில் மனிதர்கள் சிலர் இறப்பவர் ஆவர் என்ற குறைஉரை அடங்கி இருப்பதால், 'ஆ' உரைக்கு 'ஐ' உரை அடக்க உரையாகும். ஆனால் அரசியல் வாதிகள் சிலர் ஒழுக்கமுடையவர் ஆவர் என்ற உரையின் அளவை மீறியதாக அரசியல்வாதிகள் அனைவரும் ஒழுக்கமுடையவர் 'ஆவர் என்ற உரை அமைகிறது. எனவே 'ஐ' உரைக்கு 'ஆ' உரை மேலடக்க உரையாகும். 'ஆ' உரை உண்மை எனில் 'ஐ' உரையும் உண்மை; 'ஐ' உரை பொய் எனின் 'ஆ' உரையும் பொய்யே. 'ஈ', 'ஓ' உரைகளின் தொடர்பும் இவ்வாறே. தனி உரைக்கு வேற்றுமை உரை மட்டுமே உண்டு. பிற எதிர்மறை உரைகள் கிடையா. க. நா.

**எதிர்நிலை வழக்கு**: சிறப்புக் கூறுகள் (Distinctive units) ஒரே வகைச் சூழலில் எதிர்நிற்றல் எதிர்நிலை (Contrast) எனப்படும். மொழியியல் அறிஞர்கள் மொழிக்கூறுகளின் வழக்கினை எதிர்நிலை வழக்கு (Contrastive distribution),எதிர்நிலை அல்லா வழக்கு (Non-Contrastive distribution) என இரு அடிப்படைப் பிரிவுகளாகப் பிரித்துள்ளனர். எடுத்துக் காட்டாக, மலை, மழை ஆகியஇருசொற்களில் 'லை, 'ழை' ஆகிய இரு ஒலிக்கூறுகளும் ஒரே சூழலில் அதாவது மகரத்தை அடுத்துச்சொல் இறுதியில் வந்து எதிர் நிற்றல் எதிர்நிலை ஆகும். இவ்விரண்டும் எதிர்நிலை வழக்கில் உள்ளவை என்று கருதப்படும். எதிர்நிலை வழக்கு இணைநிலை வழக்கு (Parallel distribution) என்றும் கூறப்படுவதுண்டு. ஓர் ஒலிக்கூறு வந்து நிற்கும் அதே சூழலில் மற்றொரு கூறும் அதற்கு இணையாக வந்து நிற்றலால் இது இணைநிலை வழக்கு எனவும் கூறப்படுகிறது.

எதிர்நிலை வழக்கின் அடிப்படையிலேயே ஒரு மொழியின் ஒலியன்கள் அறுதியிடப்படுகின்றன. இரு ஒலிக்கூறுகள் ஒரே சூழலில் வந்து நிற்குமாயின் அவை எதிர்நிலை இணை ஆகி இரு ஒலிகளும் இருவேறு ஒலியன்கள் என்று கருதப்படும். அதாவது, இரு ஒலிக் கூறுகள் எதிர்நிலை வழக்கில் இருக்குமாயின் அவை ஒலியன்களாகும். தமிழ் மொழியில் ர,ற ஆகிய இரு ஒலிகளும் அரம், அறம் என்னுஞ் சொற்களில் ஒரே சூழலில் எதிர்நிலையில் இருத்தலைக் காணலாம். ஆகவே, இவ்விரண்டும் இருவேறு ஒலியன்களே. ஒலிக்கூறுகள் மட்டுமன்றி உயிர்நீட்டமும் (Vowel Lengthening) குறுக்கமும் (Vowel Shortening) கூட எதிர்நிலையில் நிற்றல் உண்டு. கல், கால் ஆகிய இரு சொற்களில் உயிர்நீட்டம் எதிர்நிலையில் நிற்றலைக் காணலாம். எனவே உயிர்நீட்டமும் ஒலியனாகவே கொள்ளத்தக்கது. எம்.சு.

துணைநூல்:

**Hartmann and Stork**, Dictionary of Language and Linguistics, Applied Science Publishers Ltd, London, 1973.

**எதிர்நோக்கு இறங்குரிமை**: ஒருவர் உயிருடன் இருக்கும்போது, அவரது சொத்தினை அடுத்துப் பெறப்போகும் வாரிசுதாரரின் வாய்ப்பு அல்லது இறுதி விருப்பாவணத்தின் கீழ் (உயிலின்) உறுதி விருப்பக் கொடையைப் (Legacy) பெறும் ஓர் உறவினரின் வாய்ப்பு, எதிர்நோக்கு இறங்குரிமை (Spes Successionis) என்று சொல்லப்பெறுகிறது. இத்தகைய எதிர்நோக்கியிருக்கும் உரிமை அச்சொத்தினில் எவ்வித நலனையும் ஏற்படுத்தாது. அது சொத்துரிமை மாற்றத்தின் கருப்பொருளாகவும் அமையாது.

சொத்துரிமை மாற்றுச்சட்டத்தின் 6-ஆம் பிரிவு ஓர் உரிமை மாற்றத்தின் கருப்பொருள் (Subject matter) குறித்துக் கூறுகின்றது. மேலும், இப்பிரிவு எப்பொருளை மாற்றலாம், எப்பொருளை மாற்றக் கூடாது என்பதையும் எடுத்துரைக்கிறது. உட்பிரிவு (அ)-இன்படி எதிர்நோக்கு இறங்குரிமை மாற்ற முடியாத சொத்தாகும். இக்கருத்து ஆங்கில வழக்கொன்றின் தீர்ப்பில் நீதிபதி கே என்பவரால் பின்வருமாறு விளக்கப்பட்டுள்ளது. 'உயிருடன் இருக்கும் ஒருவரின் சொத்தில் அவரது சட்டப்படி வாரிசு என நம்பிக்கை கொண்டிருப்பவருக்கோ அடுத்த உறவினருக்கோ வருநிகழ்வு சார்ந்த மற்றவிதமான சொத்தோ சட்டப்படி அல்லது நேர்மை நெறிப்படியான நலனோ கிடையாது என்பது மறுக்க முடியாத சட்டவிதி. ஒருவர் உயிருடன் வாழும்போது யாருக்கும் அவரது சொத்தினை எதிர்பார்த்திருக்கும் அல்லது அதனை அடைய நம்பிக்கை கொண்டிருக்கும் எதிர்நோக்கு இறங்குரிமையைத் தவிர வேறு உரிமை கிடையாது'.

எதிர்நோக்கு இறங்குரிமை மாற்றப்படக்கூடிய சொத்தன்று. இது ஒரு வாய்ப்பேயன்றி வேறொன்றுமில்லை. இத்தகைய சாத்தியக்கூறு வருநிகழ்வு

சார்ந்த எஞ்சுரிமை (Contingent remainder) அல்லது எதிர்கால நலன்கள் போன்ற நலனுடன் இணைந்த தன்று.

இந்துச் சட்டத்தில் கூட, ஓர் இந்துக் கைம்பெண் இறந்தபின் எழும் எதிர்நோக்கு மரபுரிமையரின் பின்னடை உரிமை (Reversionary Heir Expectant) ஓர் எதிர்நோக்கு இறங்குரிமையாகும். இத்தகைய உரிமை 'ஒரு பெண் உரிமையாளர் தம் ஆயுள் காலத்திற்குக் கொண்டிருக்கும் சொத்தினில் அவர் உயிருடன் இருக்கும் வரை இந்துப் பின்னடையுரிமையருக்கு உரிமையோ நலனோ கிடையாது. அவரது மறைவிற்குப் பின்பே பின்னடை உரிமையருக்கு உரிமை உருப்பெறுகிறது. அதுவரை அது வெறும் எதிர்நோக்கு இறங்குரிமையே'. இதற்கான பின்னடை வாரிசின் ஒப்பந்தங்கூடச் செல்லாது.

சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் பிரிவு 2 (ஈ)-இன்படி வேறு பிரிவு முகம்மதியருக்குப் பொருந்தாது. எனினும் அச்சட்டத்திலுங்கூட எதிர்நோக்கு இறங்குரிமையை மாற்றுதல் செல்லாததாகும்.

ஆங்கிலச்சட்டத்தினில் எதிர்நோக்கியிருத்தல் மாற்றப்படக் கூடிய சொத்தாகக் கருதப்படவில்லை. எனினும் பணத்திற்காக உரிமையை மாற்றுதல் வெளிப்படையாகத் தடை செய்யப்படவில்லை. எதிர்நோக்கியிருத்தல் ஒரு நலனாக மாறும்போது, மாற்றப்படுவதற்கான ஒப்பந்தமாகச் செயற்படுகிறது. இக்கோட்பாடு முரண்தடையூட்டுக் கோட்பாடு (Feeding the grant by Extoppel) எனப்படும். இக்கோட்பாடு சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் 43-ஆம் பிரிவில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

ஓர் எதிர்நோக்கு இறங்குரிமைக்கும் வருநிகழ்வு சார்ந்த நலன் அல்லது வருநிகழ்வு சார்ந்த எஞ்சுரிமைக்கும் வேறுபாடு உண்டு. இத்தகைய வருநிகழ்வு சார்ந்த எஞ்சுரிமை அல்லது வருநிகழ்வு சார்ந்த நலன் நிகழவிருக்கும் நிகழ்ச்சியைப் பொறுத்த நலன் ஆகும். முன்பு இங்கிலாந்து நாட்டில் இயற்றாச்சட்டத்தின்படி வருநிகழ்வு சார்ந்த நலன் வெறும் சாத்தியக் கூறு எனக் கருதப்பட்டதால், மாற்றப்படமுடியாத ஒன்றாக இருந்தது. தகைமை நெறியின்படி இத்தகைய நலனை மறுபயனுடன் மாற்றுவது எதிர்கால ஒப்பந்தமாகச் செயற்படுகிறது. இப்போது ஆங்கிலச் சட்டத்தில் தகைமை நெறியில் கூறப்பட்டுள்ளவாறு வருநிகழ்வு சார்ந்த எஞ்சுரிமைகளைச் சட்டபூர்வமாக இன்று மாற்றலாம். இந்தியாவிலும் இது ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

இதைப்போலவே சேர்ந்தடை உரிமைக்கும் எதிர்நோக்கு இறங்குரிமைக்கும் வேறுபாடு உண்டு. முன்னது மாற்றப்படக்கூடிய ஒன்று; பின்னது அவ்வாறு மாற்றப்படக் கூடாதது; வெறும் சாத்தியக்கூறே. மேலும், எதிர்நோக்கு இறங்குரிமை போன்ற வேறு எந்த வெறும் சாத்தியக் கூறுகளும் மாற்றப்பட முடியாதன என்பதாகச் சொத்துரிமை மாற்றுச் சட்டம் பிரிவு 6, உட்பிரிவு (அ) கூறுகிறது. ஆ.ச.

**எதிர்ப்படு குழு**: தன்னுடையதும் பிறருடையதுமான தனித்தனியான உணர்வு நிலையினை உயர்த்துவதற்காக ஆழ்ந்த குழு விவாதம், இடைவினை (Interaction) ஆகியவற்றைப் பயன்படுத்துகிற உளவியல் முறையேகூருணர்வுத் திறப்பயிற்சி(Sensitivity Training) எனப்படுகிறது. இப்பயிற்சி முறையானது எதிர்ப்படு குழு (Encounter Group), 'T' குழு அல்லது பயிற்சிக்குழு, மானிட உறவுகள், குழு இயக்க ஆற்றல் பயிற்சி போன்ற பெயர்களில்-பல வடிவங்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது. தியானம், மருத்துவச் சிகிச்சை, உடல் அல்லது உணர்வுகளின் பெருக்கத்திற்காகச் சந்திக்கின்ற உறுப்பினர்களைக் கொண்ட பல்வேறு கூருணர்வுத் திறக் குழுவில் ஒன்றே எதிர்ப்படு குழு எனப்படுகிறது.

இக் குழுவினால் நடத்தப்படும் பயிற்சியானது குழு உள மருத்துவ (Group Psychotheraphy) முறையிலிருந்து அதிகமாக வகுக்கப்படுகிறது. இம்மருத்துவமானது இரண்டாம் உலகப் போர் நடைபெற்ற பொழுது, இராணுவத்தில் உளவியலார் தட்டுப்பாடு ஏற்பட்ட காரணத்தினால் தொடங்கப்பட்டது. இம்முறையானது பல சிக்கல்களைத் தீர்ப்பதற்கு உதவியாக இருந்ததால் பொது வாழ்க்கையிலும் ஒரு மருத்துவ முறையாக ஒப்புக் கொள்ளப்பட்டது. ஒரு சிறிய நோயாளிகள் குழுவிற்கு மருத்துவமனைச் சூழலில் நோயாளிகளின் வயது, தேவை, திறமை ஆகியவற்றிற்கேற்பவும் மருத்துவரின் தகுதிக்கேற்பவும் பயிற்சி அளிக்கப்பட்டது. இதன் மூலம் பல நோயாளிகளுக்கு ஒரே நேரத்தில் சிகிச்சை அளிக்க இயல்வதோடு, ஒரு நோயாளிக்குச் சிகிச்சையளிக்க ஒரு குழுவின் சக்தியைப் பயன்படுத்தவும் இயலுகிறது. பல மதத் தலைவர்களும் தத்துவஞானிகளும் இம் முறையைப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே பயன்படுத்தி வருகிறார்கள்.

குழு உள மருத்துவத்தைப் பயன்படுத்துகிற எதிர்ப்படு குழுவானது பெதெல், மெய்ன் போன்ற இடங்களிலுள்ள இராணுவப் பயிற்சி முகாம்களில் முதன் முதலாக உருவாயிற்று. பின்பு 1960-ஆம் ஆண்டுத் தொடங்கப்பட்ட கலிபோர்னியாவிலுள்ள எசலன் நிறுவனம் (Esalen Institute in California),

சனனான் போன்ற வளர்ச்சி மையங்களில் வளர்ந்த மாதிரிகளிலிருந்து பல குழுப் பயிற்சி முகாம்களும் நிறுவனங்களும் வாணிக நோக்கத்திலே தொடங்கப் பட்டு உலகம் முழுவதிலும் பரவின.

அமைப்பும் குறிக்கோள்களும்: எதிர்ப்படு குழுவானது வழக்கமாகச் சரியான அமைப்பில்லாமலும் சிறியதாகவும் அதற்குரிய குறிக்கோள்களைத் தானே தேர்ந்தெடுத்துக் கொண்டும் இருக்கும். பொதுவாக ஒன்று அல்லது இரண்டு குழுத் தலைவர்களையோ ஆறு முதல் பன்னிரண்டு உறுப்பினர்களையோ கொண்டதாக இருக்கலாம். கூருணர்ச்சியையும் பழக்க நடக்கைப் பயிற்சியையும் (Attitudinal Train ng) வளர்ப்பது போன்ற பல வகையான தேவைகளை மக்களின் மனத்தில் இக்குழு உருவாக்குகிறது. தங்களது சுய அறிவுடைநிலை, ஒருவருக்கொருவர் உள்ள நம்பிக்கை உணர்வு போன்றவற்றை உயர்த்துவதற்கும், அவ்வாறு பிறருடன் இடைவினை கொள்ளும் பொழுது அதிக இன்பம் அடைவதற்கும் முதிர்ந்த நிலையிலான மனத்திறனுடன் தங்களை அறிந்து கொள்வதே எதிர்ப்படு குழுவின் குறிக்கோளாகும். அதாவது, உணர்ச்சித் தொல்லைகளைப் புரிந்து, உணர்ந்து அதைச் சரியான முறையில் சமாளிக்கும் உத்திகளை அடைவதற்கு உதவப் பலமூட்டுகிற குழு அனுபவத்தை உறுப்பினர்களுக்கு அளிப்பதுதான் இதன் குறிக்கோள். இது தனிமனித உள மருத்துவத்தைக் காட்டிலும் சமூகத்தின் உண்மை நிலையினை உணர்த்துகிறது.

எதிர்ப்படு குழுத் தலைவர்களுக்கெனப் பல பொறுப்புகள் உள்ளன. அவை: 1. குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தலும் குழுக் கூட்டங்களைக் கூட்டுதலும், 2. ஒவ்வோர் உறுப்பினரும் தாம் பாதுகாப்பான சூழ்நிலையில் இருப்பதாக எண்ணித் தம்மைச் சுதந்திரமாக வெளிப்படுத்திக் கொண்டு மற்றவர்களுடன் உறவு கொள்ளப் புது வழி முறைகளைக் கடைப்பிடிக்க முயலும் சூழ்நிலையை உருவாக்குதல், 3. தன்னுடைய உணர்வுகளை வெளிப்படையாகவும் உண்மையாகவும் வெளிப்படுத்தி, மற்றவர்களின் கோபஉணர்ச்சிகளைத் தற்காப்பு முயற்சியில் பதிலளிக்காமல் அப்படியே ஏற்றுக் கொண்டு அதை ஒரு முன் மாதிரியாகக் கொள்ளுதல், 4. தன்னை அலசிப் பார்க்கும் விதத்தை விட விளக்கிப் பார்ப்பது நல்லது என அதற்கு ஊக்கமளித்தல், 5. குழு உறுப்பினர்களிடையே ஏற்படும் மோதல்களை அவர்களுக்கு உதவும் யோசனைகளாக மாறும்படி பார்த்துக் கொள்ளுதல், 6. குழுவிற்கு வழி காட்டல் தேவைப் படும்பொழுது யோசனை தரும் விவரம் அறிந்தவனாகச் செயற்படுதல் ஆகியவையாகும்.

குழுவழி முறை: குழு உறுப்பினர்கள் தங்களது கூருணர்ச்சியை வெளிப்படையாகவும், மனத்தளவிலும் வெளிப்படுத்திக் கொள்வார்கள். தன்னை மறைத்துக் கொண்டுள்ள திரையினைக் கழற்றிவிட்டுச் சுதந்திரமாகவும் உண்மையாகவும் உள்ள உணர்ச்சி வெளிப்பாடு, குழுவின் கலந்துரையாடல்களிலிருந்து வெளிப்படும் முடிவுகள் ஆகியவற்றிற்கு அழுத்தம் கொடுப்பது இந்தக்குழு மருத்துவத்தின் கொள்கையாகும். இதை அடைவதற்கு உறுப்பினர்கள் அனைவரும் தங்களுடைய உண்மையான, சமயத்திலான, நல்ல அல்லது கெட்ட உணர்வுகளை வெளிப்படுத்த வேண்டும். ஒரு சிக்கலில் உச்சக் கட்ட நிலைக்குத் தேவையான ஓர் ஆதரவும் பிரியமும் அக்குழுவிலேயே வளர்ந்துவரும். வாய்மொழியிலானதும் வாய்மொழியல்லாததுமான உத்திகளை அவர்கள் பயன்படுத்துகின்றனர். வாய் மொழியிலான உத்திகள் என்பது ஒருவர் நடுவில் அமர்ந்திருக்கச் செய்து அவரைப் பற்றிய குறை, நிறைகளை மற்றவர்கள் யோசிக்காமல் கூறுதலாகும். வாய்மொழியல்லாத உத்திகளைத் தயார்படுத்தும் சந்திப்புகளில் பயன்படுத்துகின்றனர். அவை கண்ணோடு கண், தொடுவதன் மூலம் உணர்த்துவது, நம்பவைக்கும் பயிற்சிகள், பாதி அளவிலான அல்லது முழு அளவிலான ஆடை அவிழ்த்தல் போன்றவையாகும்.

இந்த முறையில், உண்மையான பாதிப்புப் பற்றிய அறிவியற் புள்ளி விவரங்கள் இல்லாமை, குழுத் தலைவர்களுக்குப் போதுமான அளவு பயிற்சி இல்லாமை, குழு உறுப்பினர்கள் சரியான முறையில் தேர்ந்தெடுத்தல் இல்லாமை போன்றவைகளால் நடைமுறை வாழ்க்கைக்குப் பல வழிகளில் உதவாமலும் போவதற்கு வாய்ப்புள்ளது. சில சட்டதிட்டங்கள் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டால், இக்குழு மருத்துவ முறையானது மிகவும் ஏற்புடையதாக இருக்கும். மேலும், எதிர்ப்படு குழுவின் பயனை அனைவரும் தெரிந்து அதில் இணைவதற்கும் வாய்ப்பாக இருக்கும். குழுவினருக்கும் தனி மனிதர்களுக்கும் உள்ள நம்பிக்கையையும் தொடர்பையும் அதிகரிக்கச் செய்யவும், வணிகத்திலும் தொழிற்சாலையிலும் இருப்பது போன்ற பரந்த அளவிலான சமூகச் சிக்கல்களைத் தவிர்க்கவும் உதவியாகவும் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. பூ.த.

**எதிர்ப்பின்றிக்கீழ்ப்படிதற்கோட்பாடு:** ஆட்சியாளருக்குக் குடிமக்கள் எந்தக் காரணத்தைக் கொண்டும் எதிர்ப்புக் காட்டாமல் கீழ்ப்படிந்து நடத்தல் வேண்டுமென்ற ஒரு கருத்துஅல்லது கோட்பாடே எதிர்ப்பின்றிக் கீழ்ப்படிதற் கோட்பாடு (Doctrine of

Passive Obedience) எனப்படும். இக்கருத்தைப் பற்றி கி.பி. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து பதினாறாம் நூற்றாண்டுவரை பல சிந்தனையாளர்கள் ஆராய்ந்து வந்துள்ளனர்.

(அ) புனித கிரிகரியின் கருத்து: கத்தோலிக்கத் திருச்சபையின் கோட்பாடுகளை உருவாக்கிய மூன்று திருச்சபைத் தலைவர்களுள் (Fathers of the Church) ஒருவரே புனித கிரிகரி (Saint Gregory). ஏனைய இருவர் புனித அம்புரோசு, புனித அகசுட்டின் ஆகியோர் ஆவர். உலகில் நிறுவப்பட்டுள்ள அரசியலதிகாரங்களெல்லாம் கடவுளால்தான் தோற்றுவிக்கப் பட்டவை என்றும், ஒரு நியாயமான அரசு என்பது ஓர் உண்மையான சமய நெறியைப் பின்பற்றுவோரை உடையதாக இருத்தல் வேண்டுமென்றும், ஆன்மிகத் துறையில் திருச்சபைக்குச் சுயஆட்சி அதிகாரம் உண்டு என்றும், அரசாங்க அதிகாரமானது அரசு அலுவலராலும் சமய குருமாராலும் பகிர்ந்து கொள்ளப்படுகின்றது என்றும் புனித அம்புரோசும் புனித அகசுட்டினும் கூறினர். இதனால் திருச்சபையின் சுதந்திர நிலை மட்டுமன்றி, உலகியலரசாங்கம் தனக்குரிய வரம்புகளில் சுதந்திர ஆட்சி உரிமை உடையது என்ற கருத்தும் பெறப்படுகிறது. இவர்களுக்கெல்லாம் முந்தியே திருச்சபையை நிறுவிய இயேசு கிறித்துவானவர், 'அரசருக்குச் செலுத்த வேண்டிய கடமைகளை அரசருக்குச் செலுத்தி விடுங்கள்; இறைவனுக்கு உரிய கடமைகளை இறைவனுக்குச் செலுத்தி விடுங்கள்' என்று கூறி, யாவரும் உலகியலாட்சியாளருக்கும் கட்டுப்பட்டிருத்தல் வேண்டுமென்று வலியுறுத்தினார். குடிமக்கள் ஆட்சியாளருக்குக் கட்டுப்பட்டிருக்க வேண்டிய கடமையைப் புனித பால் (Saint Paul) தாம் உரோமானியருக்கு (Romans) எழுதிய கடிதத்தில் வலியுறுத்தினார். இந்தச் சூழ்நிலையில் திருச்சபையினர் குடிமை அரசாங்கத்தின் (Civil Government) சிறப்பு அதிகாரங்களில் தலையிடாமலிருந்தனர். போப்பு புனித கிரிகரி உலகியலதிகாரிகளெல்லாம் புனிதத் தன்மை உடையவர்களென்று கருதினார். மேலும், அவர் இத்தாலி நாட்டை இலாம்பர்டுகள் (Lombards) தாக்கியபோது அத்தாக்குதலினின்று நாட்டைக் காத்து, நீதியும் பாதுகாப்பும் யாவருக்கும் கிடைக்கக்கூடிய நல்ல அரசாங்கம் ஏற்படுதல் வேண்டுமென்று கூறி வந்ததனால், உரோமானியப் போப்பின் செல்வாக்கும் புகழும் ஓங்கின. அப்பொழுது அரசின் அதிகாரம் வலி குறைந்திருந்தமையால், அரசியலாட்சியாளருடைய கடமைகளையெல்லாம் போப்பே ஏற்றுக் கொள்ள வேண்டுமென அது அவரைத் தூண்டியது. 'அரசியலதிகாரமானது புனிதத் தன்மையுடையது' (Sanctity) என்று அவர் கருதியதனால், அவ்வரசியலதிகாரத்துக்கு யாவரும் எதிர்ப்புக் காட்டாமல் கீழ்ப்படிதல் வேண்டுமென்று அவர் கூறினார். அவர் தாம் எழுதிய மேய்ப்போர் ஆட்சி (Pastoral Rule) என்ற நூலில், ஒரு கொடிய ஆட்சியாளருக்கும் யாவரும் கீழ்ப்படிந்து நடக்க வேண்டிய கடமை உடையவர் என்பது மட்டுமன்றி, அத்தகைய கொடிய ஆட்சியாளரையும் எவரும் சிறிதும் எதிர்க்காமல் கீழ்ப்படிதல் வேண்டுமென்றும் கூறினார். இக்கருத்தை அவர் கூறிய அளவுக்கு வேறு எந்தத் திருச்சபைத் தலைவரும் வலியுறுத்திக் கூறவில்லை. அவருடைய கருத்தின்படி, ஆயர்கள் (Bishops) ஆன்மிக வாழ்வில் தங்களை நம்பி இருப்போரைக் (Flocks) கடுமையாக எச்சரிக்கை செய்தலாகாது. குடிகள் தங்களுடைய ஆட்சியாளருக்குக் கீழ்ப்படிதல் வேண்டுமேயன்றித் தங்கள் ஆட்சியாளர்களின் வாழ்க்கையை விசாரித்துத் தீர்ப்புக் கூறுதலோ குற்றம் காணுதலோ கூடாது.

'ஆட்சியாளருடைய செயல்கள் இடித்துரைக்கப் படத் தக்கவையே யாயினும், அவற்றை எதிர்த்து வாய்ச்சொல் என்னும் வாளினால் துன்புறுத்துதல் கூடாது. ஆயினும் எப்போதாயினும் நாத் தவறி ஒருவர் அரசரைக் குறை கூற நேர்ந்தால், அதற்காக நெஞ்சம் வருந்துதல் வேண்டும்; மக்களுக்குத் தலைவராக அமர்த்தப்பட்டவருக்கு எதிராக எவரொருவர் குறை கூறுகிறாரோ, அவர் தலைவரை அமர்த்தியவருடைய விசாரணைக்கு உட்படுவார்'. புனித கிரிகரி இவ்வாறு உலகியலதிகாரத்தின் புனிதத் தன்மையை வலியுறுத்தியதற்குக் காரணம், அக்காலத்தில் அரசாங்கங்கள் வலியற்றும் நாடுகள் குழப்பத்திலாழ்ந்தும் துன்புற்றமையேயாகும். எனவே திருச்சபையைப் பேரரசர்கள் (புனித உரோமானியப் பேரரசர்கள் – Holy Roman Emperors) கட்டுப்படுத்துவதன் இடர்ப்பாட்டை எவரும் பொருட்படுத்தவில்லை. கிரிகரி அரசியலதிகாரத்தையும் சமய அதிகாரத்தையும் ஒருங்கே கையாண்ட போதிலும், அவர் பேரரசர்களுடைய திருச்சபைச் சட்டங்களுக்கு மாறான செயல்களை எதிர்த்தாரே தவிர, அவர்களுடைய ஆணைகளுக்குக் கீழ்ப்படிய மறுக்கவில்லை. அவர் கருத்தின்படி, அரசருடைய அதிகாரம் இறைவனுடைய அதிகாரமே ஆகும்; இறைவனைத்தவிர பேரரசரினும் உயர்ந்த அதிகாரி எவரும் இலர்; ஆகையால் அரசருடைய செயல்களெல்லாம் அவர் மனச்சான்றுக்கும் இறைவனுக்கும் இடைப்பட்டவையே ஆகும்.

(ஆ) மறுப்புரைச் சீர்திருத்தக்காரர்களின் கருத்து: மார்ட்டின் லூதர்: உரோமானியப் போப்பின் கட்டுப்பாட்டில் திருச்சபை இருந்தபோது அதில் குருமார்கள் ஈடுபட்டிருந்த ஆடம்பர, தீய வாழ்க்கை, செரு

மானியத் திருச்சபையின் செல்வமெல்லாம் உரோமுக்கு எடுத்துச் செல்லப்பட்டமை, செருமானியத் திருச்சபையில் செருமானியரைத் தவிர்த்து அயலவரே அமர்த்தப்பட்டமை, போப்பின் நீதிமன்றத்தில் காணப்பட்ட முறைகேடுகள், இறுதியாகப் பாவ மன்னிப்பு என்னும் உரிமை பணத்திற்காக விற்கப் பட்டமை முதலியவற்றையெல்லாம் எதிர்த்தும், போப்பின் தலைமையை மறுத்தும், விவிலிய நூலொன்றையே கிறித்தவர்களுக்கு வழிகாட்டியாக வலியுறுத்தியும் மார்ட்டின் லூதர் என்னும் செருமானியர் மறுப்புரைக் (Protestant) கிறித்தவச் சீர்திருத்த இயக்கத்தை வட ஐரோப்பாவில் கி.பி. 1517-இல் தொடங்கினார். அவர் சுட்டிக் காட்டிய பல குறைபாடுகள் கி.பி. பதினான்காம் நூற்றாண்டிலேயே காணப்பட்டன. அவற்றைப் போக்கிச் சீர்திருத்தங்கள் செய்வதற்குத் திருச்சபை ஒரு பொதுமன்றத்தை ஏற்றுக் கொள்ளத் தவறிய காரணத்தால், எந்தத் திருச்சபைச் சீர்திருத்தமும் வெற்றியாகச் செயற்பட வேண்டுமானால், அது உலகியலாசாங்கத்தின் உதவியும் அதிகாரமும் இல்லாமல் முடியாது என்பது தெளிவாயிற்று. இங்கிலாந்தில் அரசர் எட்டாம் என்றியின் எதேச்சாதிகார ஆட்சியில் கொண்டுவரப் பட்ட சமயச் சீர்திருத்தம் அரசருடைய அதிகாரத்தைப் பெருக்கிற்று. வடசெருமனியில் மறுப்புரைச் சமய இயக்கம் அரசர்களைச் சார்ந்திருந்தது. செருமனியில் சீர்திருத்தத்தின் வெற்றி அரசர்களின் உதவியின்றிக் கிட்டாது என்பதை மார்ட்டின் லூதர் நன்கு கண்டு கொண்ட காரணத்தால், அவர் பொதுவாக அரசர்களைப் பற்றி அறிவிலிகளென்று ஒரு கருத்துக் கொண்டிருந்த போதிலும், அவர்களை விடப் பொதுமக்கள் அறிவிலும் திறமையிலும் மிகவும் தாழ்ந்தவர்களென்று அவர் கருதியதனால், அரசர்களின் ஆணைகளுக்குக் குடிகள் எதிர்ப்பு எதுவுமின்றிக் கீழ்ப்படிந்தே ஆக வேண்டுமென்று அவர் கூறினார். இங்கிலாந்திலும் வட செருமனியிலும் மறுப்புரைச் சமய இயக்கம் அரசர்களையே சார்ந்திருந்தது. செருமனியில் நடுத்தர வகுப்பாருக்கெதிராகக் குடியானவர்கள் கலகம் செய்தபோது, நடுத்தர வகுப்பாருடைய ஆதரவோடு அரசர்கள் குடியானவர்களை ஒடுக்கினர். அவ்வரசர்களுக்கு அப்போது உலூதர் ஆதரவளித்தார். சமயச் சீர்திருத்தத் தலைவர்கள் அரசர்களுடைய ஆதரவைச் சார்ந்திருந்னர். மறுப்புரைச் சமயச் சீர்திருத்த இயக்கத்தின் விளைவாகப் பல தீவிரச் சீர்திருத்த இயக்கங்களும் சமயச் சிறுபான்மையோரும் தோன்றினர். ஒவ்வொரு சிறுபான்மைக் குழுவும் சமய உரிமையைப் பெற விரும்பியதனால், அது ஓர் அரசியற் சிக்கலாக வளர்ந்தது. மெல்ல மெல்லச் சூழ்நிலையின் காரணமாகவே சமயப் பொறைஎன்ற கோட்பாடு தோன்றிற்று. இதற்குக்காரணம் பல்வேறு சமய நெறிகளை உடையோரும் ஒரு பொதுவான அரசியற் பற்றுறுதியோடு (A common Political Loyalty) இருத்தல் இயலும் என்பதையாவரும் உணர்ந்ததுதான். இத்தகைய சமயப் பொறை என்ற கருத்துத் தோன்றுவதற்கு முன்னர், அரசரைஆதரித்து நிற்றல் ஒவ்வொருவருக்குமுரிய சமயக் கடமை எனவும், தமது சொந்த சமய நெறியைக் காத்தல் என்பது வேறு சமயத்தைச் சார்ந்த தம் அரசரை எதிர்க்கும் செயலாகுமெனவும் கருதப்பட்டது.. இச்சூழ்நிலையில் குடிகள் அரசருக்கு எதிர்ப்பின்றிக் கீழ்ப்படிதல் அவர்களுடைய கடமை ஆகுமென்ற கருத்துஅக்கால அரச இறை உரிமைக் கோட்பாடாக வடிவெடுத்தது.

மார்ட்டின் லூதரும் (Martin Luther), சான் கால்வினும் (John Colvin) எந்தச் சூழ்நிலையிலும் ஆட்சியாளர்களைக் குடிகள் எதிர்த்தல் என்பது மிகவும் தீய செயலே ஆகுமென்று கருதினர். கால்வினைப் பின்பற்றியோர் பிரான்சிலும் இசுகாட்லாந்திலும் கால்வினின் கோட்பாட்டிற்கு மாறாகச் சமயச் சீர்திருத்தத்தை நிறைவேற்றுதற்கு அரசியலில் எதிர்ப்பு நியாயமானதே என்னும் ஒரு கொள்கையைப் பரப்பினர். ஒருவர் தம் சமய வாழ்க்கையில் எத்தகைய உணர்வுகளைப் பெறுகிறாரோ அவ்வுணர்வுகளே அவருக்கு நம்பிக்கையை அளிக்கின்றன என்றும், அத்தகைய உள்ளுணர்வுகளை வெளிப்படுத்தும் வடிவங்களாகவே சமய குரு செய்யும் சடங்குகள் இருத்தல் வேண்டுமென்றும் உலூதர் கூறிய கருத்துகளே அவர் வகுத்த நம்பிக்கை நியாயக் கோட்பாட்டின் (Doctrine of Justification by Faith Alone) சாரம் ஆகும். சமய எதிர்ப்பைச் சீர்தூக்கிப் பார்த்தற்கு அரசாங்கத்துக்கு அதிகாரம் இல்லை என்று கூறினாலும், ஒரு கருத்தைச் செயற்படுத்தும் நிறுவனம் அதைச் சீர்தூக்கவும் கூடுமாகையால், உலூதருடைய கருத்து தேசியத் திருச்சபையை நிறுவ உதவிற்று. அரசர்களுடைய தனித்திறமையைப் பற்றி அவருக்கு உயர்ந்த கருத்து இல்லையாயினும், சாதாரண மக்களுடைய திறமையை விட அரசபதவியிடத்தில் அவர் மிக்க நம்பிக்கையும் மதிப்பும் வைத்திருந்தார்.

உலூதர் கூறிய சில கருத்துகளாவன: 'இவ்வுலக அரசர்கள் கடவுளர்கள் ஆவர். சாதாரண மக்கள் துன்பம் செய்யும் தீய ஆவியாகிய சாத்தானே ஆவர். மக்களுடைய தீவினைக்குத் தண்டனையாகக் கடவுள் கலகத்தைத் தோற்றுவிக்குமாறு சிலவேளைகளில் சாத்தானைத் தூண்டுவதுபோலச் சாதாரண மக்களையும் தூண்டுகிறார்.'' கிறித்தவ

ராக இருப்பவர் எவரும் தம் அரசாங்கம் சரியாகச் செயலாற்றினாலும் தவறாகச் செயலாற்றினாலும் அதற்கெதிராகக் கலகம் செய்தல் அறிவுடைய செயல் அன்று... நமக்கு மேலதிகாரிகளாக இருப்பவர்களுக்குக் கீழ்ப்படிந்து அவருக்குப் பணி செய்வதை விட வேறு உயர்ந்த நற்செயல்கள் எதுவும் இருத்தல் இயலாது. கீழ்ப்படியாமை என்பது கொலை, தீய ஒழுக்கம், களவு, பொய்யுரைத்தல் முதலியவற்றை விடக் கொடிய தீவினை ஆகும்''.

உலூதர் மேற்கண்டவாறு கூறினாரேனும், அவருடைய அரசியற் கருத்துகளெல்லாம் சூழ்நிலைகளின் காரணமாகத் தோன்றியவையாகும். தாங்கள் எந்த அரசர்களைச் சார்ந்திருந்தார்களோ அந்த அரசர்களெல்லாரும், உரோமானியப் பேரரசர் வரம்புமீறித் தம் பேரரசதிகாரத்தைக் கையாண்டபோது, கீழ்ப்படியாமல் கலகம் செய்தனர். அப்போது உலூதர் அரசர்களுடைய நிலையை ஆதரித்தார். எனினும் குடிமை இயல் அரசாங்கத்தை எதிர்த்தல் என்பது எல்லாச் சூழ்நிலையிலும் நீதிவகையில் தவறு ஆகுமென்பது அவர் தம் உறுதியான கருத்து ஆகும். ஆகையால் அவருடைய சீர்திருத்த இயக்கமானது, அவர் கொண்டிருந்த நோக்கத்துக்கு மாறான விளைவையே தந்தது. சமயத் துறையில் அவர் கால்வினைவிட மிக்க தாராளப் போக்கு உடையவர். அவருடைய இயக்கத்தின் வாயிலாக, அரசாங்க ஆட்சித்துறைகளைப் போல அமைக்கப்பட்ட, அரசியல் சக்திகளின் ஆட்சிகளுகுட்பட்ட உலூதரன் அரசாங்கத் திருச்சபைகள் (Lutheran State Churches) தோன்றின, அதனால் முன்பு இருந்த உலகளாவிய திருச்சபையானது (Universal Church) பிளவுபட்டுப் போனதால், வறியோர்களுக்கு உதவி செய்து வந்த கிறித்தவ மடங்களும் (Monasteries) சமய நிறுவனங்களும் ஒழிக்கப்பட்டன. திருச்சபைச் சட்டமானது (Cannon Law) முற்றிலும் நீக்கப்பட்டது. அதன் விளைவாக முன்பு இடைக்காலத்தில் அரச அதிகாரத்துக்கு எதிராக இருந்த வலுவான தடைகள் நீக்கப்பட்டன. தூய்மையான சமய அக உணர்வை ஒவ்வொருவரும் வளர்த்துக் கொள்ளுதல் வேண்டுமென்று உலூதர் வற்புறுத்தியதன் காரணமாக, உலக அரச அதிகாரத்துக்கு யாவரும் கீழ்ப்படிந்துதான் நடத்தல் வேண்டுமெனவும் அதனை எதிர்ப்பதற்கு எவருக்கும் உரிமை இல்லை எனவும் கருதிய அவர் தம் கோட்பாடு தெளிவாக விளங்குகிறது. ஆகையால், உலூதரின் சமயச் சீர்திருத்த இயக்கத்தின் விளைவாகச் சமயத்துறையில் ஆன்மிக இயல்பு மிகவும் முக்கியமாகக் கருதப்பட்டதோடு, அரசின் அதிகாரமும் கூடுதலாக ஆயிற்று.

(இ) கால்வின் கூறிய கோட்பாடு: கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் மறுப்புரைச் சமயச் சீர்திருத்த இயக்கத்தில் முக்கிய இடம் வகித்த சான் கால்வினும் (John Colvin கி.பி. 1509-1564) உலூதரைப் போலக் குடிகள் அரசாங்கத்துக்கு எதிர்ப்பு எதுவுமின்றிக் கீழ்ப்படிய வேண்டிய கடமையை வற்புறுத்தி, அதுபற்றிய கோட்பாட்டினை வகுத்துக் கூறினார். அவர் சுவிட்சர்லாந்து நாட்டிலுள்ள செனிவா(Geneva) நகரத்தில் தமது சீர்திருத்தக் கருத்துகளை ஏற்ற கிறித்தவ மக்களை ஒரு திருச்சபையாக அமைத்து, தமது கோட்பாட்டிற்கிணங்க ஒரு திருச்சபை அரசாங்கத்தையும் அமைத்திருந்தார். அக்காலத்தில் கால்வினியத் திருச்சபைகள் ஆலந்து (Holland), இசுகாட்லாந்து (Scotland), அமெரிக்கா முதலிய நாடுகளில் ஏற்படுத்தப்பட்டிருந்தன. தொடக்கத்தில் கால்வினியக் கோட்பாடு தாராள உரிமைகளையோ அரசியலமைப்புக்கு உட்பட்ட அரசாங்க முறையையோ பிரதிநிதித்துவக் கொள்கையையோ ஆதரிக்கவில்லை. அது சமய குருமாரும் நில உடைமையாளரும் சார்ந்த, சாதாரண மக்களுக்குப் பங்கு இல்லாத ஒரு வகையான செல்வச் சிறு குடியாட்சியை (Oligarchy) ஆதரித்தது. சமயத் துறையில் அது தாராள இயல்பு இன்றிக் கட்டுப்பாடு மிகுதியும் உடையதாகி, எதிர்ப்புக்கு இடந்தரும் இயல்புடையது. அதுவே கால்வினின் செனிவாவில் நிறுவிய அரசாங்கத்தின் இயல்பாகும். மேலும், கால்வினும் அவருடைய கோட்பாட்டைப் பின்பற்றிய ஆங்கிலத் தூய்மைச் சமயத்தவரும் (Puritans) அரசாங்கத்தையும் திருச்சபையையும் இணைத்தல் கூடாதென்றும், அவ்வாறு இணைத்தால் அரசாங்கத்தின் தலைவராகிய அரசர் தேசியத் திருச்சபையின் தலைவராக ஆதல் கூடுமென்றும் கருதினர். செனிவாவிலிருந்த கால்வினின் அரசாங்கத்தைப் போன்றே, அமெரிக்காவின் ஆங்கிலத் தூய்மைச் சமயக் குடியேற்ற நாடாகிய மசாசுசெட்சிலும் ஓர் அரசாங்கம் அமைக்கப்பட்டிருந்தது. இரண்டிலும் சமயக் கோட்பாடுகளையும் ஒழுக்க நெறிகளையும் பொறுத்தவரையில் திருச்சபையே தனது விதிகளைத் தானே வகுத்துக் கொள்ளுதற்குச் சுதந்திரம் பெற்றிருந்தது. மேலும், அதனுடைய கட்டுப்பாடுகளுக்குக் கீழ்ப்படியாதாரைக் கட்டுப்படுத்துதற்கு அது உலகியல் அல்லது அரசாங்கத்தின் முழு ஆதரவையும் பெற்றது. செனிவாவில் சமயத்துக்குப் புறம்பாக்கப்பட்ட ஒரு குடிமகன் அரசாங்கத்தில் எந்த அலுவலையும் பெறுதலியலாது; மசாசுசெட்சிலோ தூய்மைச் சமயத் திருச்சபையின் உறுப்பினர்களாக இருந்த கிறித்தவர்களுக்குத்தான் குடிமை உரிமைகள் இருந்தன. தூய்மைச் சமயக் கிறித்தவர்கள் இயேசு சங்கத்தவரைப்போல, ஆன்மிக அதி

காரியாகிய திருச்சபையானது சுதந்திரமுடையதாக இருத்தல் வேண்டுமென்றும், அது ஒழுக்க இயலான கட்டுப்பாட்டை நிலை நிறுத்துதற்காக வழங்கும் தீர்ப்புகளை நிறைவேற்றுதற்கு உலகியலதிகாரத்தைப் பயன்படுத்துதல் வேண்டுமென்றும் கருதினர். கால்வினிய அரசாங்கமானது ஆன்மிக அதிகாரத்தையும் அரசியலதிகாரத்தையும் (Two Swords) திருச்சபையினிடத்திலே வைத்து, உலகியலதிகாரியை இயக்கும் பணியை உலகியலதிகாரிகளிடத்தில் அளிக்காமல் சமய குருமாரிடம் அளித்தது. இதன் விளைவு பொறுத்தற்கரிய கட்டுப்பாட்டதிகாரமுடைய ஞானிகளின் ஆட்சியே ஆகும்; இவ்வாட்சியில் யாவரையும் வேவு பார்க்கும் ஒற்றர் முறை, பொது ஒழுங்கை நிலைநிறுத்துதல், தனி வாழ்வில் ஒழுக்க முறைகளைக் கட்டுப்படுத்துதல், தூய சமயக் கோட்பாட்டையும் வழிபாட்டு முறையையும் பாதுகாத்தல் முதலியவை நிறைவேற்றப்பட்டன.

இத்தகைய கால்வினிய இறையியலோடு தேர்தல் முறையும் இறைவனருளிய ஏற்பாடு என்பதும் இணைக்கப்பட்டன. கால்வின் கூறிய இறைவனின் முன்னேற்பாடு (Predestination or Foreordination) என்ற கோட்பாட்டின்படி, கடவுள் உலகத்தின் மீதும் மக்களின் மீதும் தலைமையான அதிகாரம் உடையவர். கடவுள் வகுத்த ஒழுக்க விதிகள் ஒருவர் மீது ஒருவர் அன்பு செலுத்துதல் வேண்டுமென்று கூறாமல், ஒவ்வொருவரும் தன்னடக்கம், கட்டுப்பாடு, வாழ்க்கைப் போராட்டத்தில் ஒருவருக்கொருவர் மதிப்புச் செலுத்துதல் முதலியவற்றை வலியுறுத்துகின்றன. இவையே தூய்மைச் சமய நெறியின் தலைமையான ஒழுக்கப் பண்புகளாகும். இந்த ஒழுக்கஇயல் மறுப்புரைச் சமய நெறியின் இராணுவப் போக்கின் கூறாகும். ஆகையால் தூய இறை வணக்கத்தை நிலைநிறுத்தலும், சிலை வழிபாடு, தெய்வத்தன்மையை மாசுபடுத்துதல், தெய்வத்தை மறுத்தல், சமய எதிர்ப்பு ஆகியவற்றைக் களைதலும் அரசாங்கத்தின் முதற்கடமைகளாகும்.

'நாம் மனிதர்களிடையே வாழுமளவும் வெளிப்படையான இறைவழிபாட்டைப் பரவச் செய்தலும், ஆதரித்தலும்,மாறுதல் ஏதும் இல்லாத தூய கோட்பாட்டைக் காப்பாற்றுதலும், நிலைபெற்றுள்ள திருச்சபையைக் காப்பாற்றுதலும், மனித சமூகத்துக்கு ஏற்ப நமது வாழ்வை ஆக்குதலும், நமது நடத்தையைக் குடிமைஇயல் நீதிக்கு ஏற்ப உருவாக்குதலும், ஒருவரோடொருவர் நல்லிணக்கமாக வாழுமாறு செய்தலும், பொது அமைதியைக் காத்தலும் உலகியலாட்சியின் நோக்கமாகும்' என்று கால்வின் தமது 'கிறித்தவ நெறியின் கோட்பாடுகள்' (Institutes of Christian Religion) என்ற நூலில் கூறுகிறார். சமய நம்பிக்கையைக் கட்டாயமாக ஒருவரிடத்து அரசாங்கம் உண்டாக்க முடியாதென்றாலும், அரசு ஒப்புக்கொள்ளும் சமய நெறிக்கு ஒத்திருக்குமாறு யாவரையும் கட்டுப்படுத்துதற்கு அரசாங்கத்துக்கு வரம்பற்ற அதிகாரம் உண்டென்று கால்வின் கருதினார். ஆகையால் கோட்பாட்டைப் பொறுத்த வரையில் மிகுந்த கட்டுப்பாட்டையும், ஒழுக்க விதிகளில் தணிக்கை முறையையும் ஏற்படுத்துதல் வேண்டுமென்று கால்வினிய நெறி விரும்பிற்று. இவ்வகையாக அது குருமார்களுக்கு மிக்க அதிகாரத்தை அளித்தது. அது தான் நிறுவிய திருச்சபை அரசாங்கமுறையில், அந்நெறியைச் சேர்ந்தவர்களுக்கு உலகியல்சார் முதியோர் (Lay Elders) வாயிலாகப் பிரதிநிதித்துவம் அளித்தது. இதனால் தணிக்கை முறையைத் திறம்படக் கொண்டு வருதற்கு வழி ஏற்பட்டது. எனவே இந்த அமைப்பு குடியாட்சி முறையைத் திருச்சபையில் கொண்டு வருதற்கோ குருமாரின் அதிகாரம் வரம்புபடுத்துதற்கோ கொண்டு வரப்படவில்லை. திருச்சபையின் அதிகாரம் கிறித்தவர்களடங்கிய முழுத்தொகுதியில் இருப்பதாகக் கருதப்பட்டாலும், நடைமுறையில் குருமாரின் அதிகாரம் வரம்புக்கு உட்பட்டதன்று. செனிவாவில் திருச்சபையின் அதிகாரமானது, சமய குருமாரும் நகரமன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட 12 உலகியல்சார் முதியோருமடங்கிய ஒரு சிறிய அவையினால் (Consistory) கையாளப்பட்டது; என்றாலும் அங்கு குருமாரே (Clergy) வரம்பற்ற அதிகாரம் பெற்றிருந்தனர். கால்வினிய நெறியே இங்கிலாந்தில் எதிர்க் கட்சிகளால் ஏற்றுக் கொள்ளத்தக்க திருச்சபை அரசாங்கமாயிற்று.

கோட்பாடுகளிலும் வழிபாட்டு முறைகளிலும் அமைப்பிலும் இவ்வாறு ஒரு புதிய முறையை வகுத்த கால்வினிய நெறி, உலகியல் அதிகாரமானது மனித உய்திக்கு ஏற்ற புறக்கருவியாக இருப்பதால் ஆட்சியாளருடைய பதவி மிகவும் மதிப்புடையதென்றும், ஆட்சியாளர்இறைவர் சார்பாகப் பணி செய்யும் மத குரு (Vicar) என்றும், ஆகையால் அவரை எதிர்க்கும் செயல் இறைவனை எதிர்க்கும் செயலே ஆகுமென்றும் கூறிற்று. குடிமகனாக இருப்பவருக்கு ஆட்சி செய்யும் கடமையோ நாட்டிற்கு நல்லதென்று வாதம் செய்யும் உரிமையோ இல்லை. ஆட்சியில் ஏதேனும் திருத்தத்துக்குரிய தவறு இருந்தால், அதைக் குடிமகன் ஆட்சி அதிகாரிக்குச் சுட்டிக் காட்ட வேண்டுமே தவிரத் தன் கையாலேயே அதைத் திருத்துதல் கூடாது. ஆட்சியாளருடைய ஆணை இல்லாமல் குடிமகன் எதுவும் செய்தல் கூடாது.

கொடிய ஆட்சியாளர் மக்களுடைய தீவினைக்காக இறைவனால் அனுப்பப்பட்ட தண்டனையாவர். அவருக்கு எவ்விதக் கட்டுப்பாடுமின்றிக் கீழ்ப்படிதலே மக்களுடைய கடமை ஆகும். ஏனென்றால் கீழ்ப்படிதல்என்பதுஆட்சியாளருக்காகச் செய்யப்படுவதன்று. ஆட்சியாளருடைய அலுவல் அல்லது பதவிக்குத்தான் அது செய்யப்படுகிறது. அரசருடைய இறைநெறி உரிமையை வலியுறுத்திய கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் எல்லாச் சிந்தனையாளர்களைப் போலக் கால்வினும் மக்களுக்கு ஆட்சிப்பொறுப்பிலிருப்போர் ஆற்ற வேண்டிய கடமைகளை வலியுறுத்துகிறாரென்பது உண்மையே. அவருடைய கருத்தின்படி மாற்றப்பட இயலாத கடவுளின் சட்டம் குடிகளைக் கட்டுப்படுத்துவதைப்போல அரசர்களையும் கட்டுப்படுத்துவதாகும். தீய ஆட்சியாளர் கடவுளுக்கு எதிராகக் குற்றம் செய்தவராவார். அரசாங்கச் சட்டமானது தன்னளவில் குற்றமாக இருப்பதற்குத்தான் தண்டனை விதிக்கிறது. ஆனால் தனது கடமையைச் செய்யத் தவறிய ஆட்சியாளரைத் தண்டித்தல் என்பது கடவுளுக்கு உரிய அதிகாரமே தவிரக் குடிகளுக்கு உரிய அதிகாரம் அன்று.

இவ்வாறு ஆட்சியாளருக்கு எவ்வித எதிர்ப்புமின்றிக் குடிகள் கீழ்ப்படிய வேண்டிய கடமையை வலியுறுத்திய கால்வின், அரசின் தலைவர் கொடுங்கோலராக ஆளும்போது அவரை எதிர்ப்பதற்கும், அவரிடமிருந்து குடிகளைக் காப்பாற்றுதற்கும் கீழ்நிலை ஆட்சியாளர்க்குக் கடமையும் உரிமையும் உண்டு என்று கூறுகிறார். பண்டைய் உரோம் நகரரசில் தீர்ப்பாளர் (Tribunes) எனப்படும் கீழ்நிலை அலுவலருக்கு இத்தகைய அதிகாரமிருந்ததை மனத்தில் வைத்தே கால்வின் இவ்வாறு கூறுகிறார். நாட்டின் தலைமை அதிகாரம் எல்லா அதிகாரிகளாலும் கூட்டாகப் பெற்றிருப்பதால், அவருள் ஒருவர் அதை வரம்பு மீறிக் கையாளும்போது, அவரைத் தடுத்தல் மற்றவருடைய கடமை. கீழ்நிலை அதிகாரியின் உரிமையை இவ்வாறு கால்வின் வற்புறுத்தியதால், இதனைப் பெரியதோர் உரிமையாக்கிப் பிரான்சிலும் இசுகாட்லாந்திலும் கால்வினைப் பின்பற்றியோர் மக்களுடைய இயற்கை உரிமைக் கோட்பாட்டை வகுத்தனர். மக்களுரிமைக் கோட்பாட்டைப் பற்றிக் கால்வின் எதுவும் சொல்லவில்லை. அவருடைய கருத்தின்படி சட்டத்துக்கு உட்பட்டு ஆளும் கடமையை ஆட்சியாளர் கடவுளிடமிருந்து பெறுகிறார்; மக்களிடமிருந்து பெறவில்லை.ஆதலால், அவருடைய அதிகாரமானது வரம்புபடுத்தப்பட்டிருப்பது கடவுளின் சட்டத்தினால்தானே ஒழிய, மக்களுடைய உரிமைகளினாலன்று. ஆதலின், நாட்டின் தலைமை அதிகாரியை எதிர்ப்பதற்குரிய உரிமை ஏதேனும் ஓர் அரசியலமைப்புச் சட்டத்தில் கூறப்பட்டிருக்குமானால், அத்தகைய உரிமையும் கடவுளிடத்திலிருந்துதான் வருகிறதே தவிர,மக்களிடமிருந்து வரவில்லை.

கால்வின் கூறிய அரசியற் கருத்துகள் அவரை ஓர் உயர் குடியாட்சி (Aristocraey) ஆதரவாளராகக் காட்டுகின்றன. அவருடைய நூலிலிருந்து அவர் ஓர் உயர்குடியாட்சிக் குடியரசை (Aristocratic Republic) ஆதரித்தவரென்பதைத்தெளிவாகத் தெரியலாம்.அவர் பண்டைய கிரேக்க வரலாற்றாசிரியராகிய பாலிபியசு (Polybius)வகுத்த கலவை அரசாங்க முறையை (Mixed Government) ஆதரித்து, சிசரோவைப் போல் பரம்பரை முடியாட்சி முறையையும், பிளேட்டோவைப் போல் குற்றங்கள் நிறைந்த குடியாட்சி முறையையும் வெறுத்தார். இவ்வாறுஒருபக்கம்ஆட்சியாளரைக் குடிகள் எதிர்த்தல் தீயதென்றும், மற்றொருபக்கம் தூய சமய நெறிக் கோட்பாட்டை எடுத்துக் கூறுதற்கும், யாவர் மீதும் ஒழுக்கக் கட்டுப்பாட்டை வலியுறுத்தி உலகியலதிகாரிகளின் துணையோடு அதைச் செயற்படுத்துதற்கும் திருச்சபைக்கு உரிமை உண்டென்றும் கால்வினிய நெறி கூறுவதனால், அதில் ஒரு முரண்பாடு காணப்படுகிறது. இதன் விளைவு என்னவென்றால்,எந்த ஒரு நாட்டின் ஆட்சியாளர்கள் கால்வினியச் சமயக் கோட்பாட்டை ஒப்புக் கொள்ள மறுத்து, அந்தத் திருச்சபை விதிக்கிற கட்டுப்பாட்டைச் செயற்படுத்த மறுக்கிறார்களோ, அந்த நாட்டிலுள்ள கால்வினியத் திருச்சபையானது ஆட்சியாளருக்குக் கீழ்ப்படிதலென்ற கடமையைக் கைவிட்டு விட்டு, ஆட்சியாளரை எதிர்க்கும் உரிமையை வற்புறுத்திற்று என்பதுதான்.

**(ஈ) எதிர்ப்பின்றிக் கீழ்ப்படிதற் கோட்பாட்டைப் பற்றி கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் பிரான்சில் கூறப்பட்ட கருத்து**: பிரான்சு நாட்டில் 16-ஆம் நூற்றாண்டில் ஒருபுறம் மறுப்புரைச்சமயக் கிறித்தவர்களுக்கும், மற்றொரு புறம் பிரெஞ்சுக் கத்தோலிக்கர்கள், கத்தோலிக்க அரசர்கள் ஆகியோருக்கு மிடையே சமயப் போர்கள் நடந்தன. இப்போர்களின் வாயிலாக ஒன்றுக்கொன்று முரண்பாடான இருவகைக் கோட்பாடுகள் எதிர்ப்பின்றிக் கீழ்ப்படிதல் என்ற கருத்தைப் பற்றித் தோன்றின. ஒன்று, தேசிய ஒற்றுமையைக் காப்பதற்கு மிகவும் இன்றியமையாததாகக் கருதப்பட்ட அரசர்களின் இறை உரிமைக் கோட்பாடு; மற்றொன்று, அரசாங்கத்தை எதிர்க்கும் உரிமைக்குப் பாதுகாப்பாகவும் ஆதரவாகவும் இருக்

கும் பொருட்டுக் கொண்டு வரப்பட்ட மக்கள் உரிமைக் கோட்பாடு. இவ்விரண்டு கொள்கைகளும் பிரான்சில் அக்கால அரசியற் கொள்கைகளாகத் தோன்றின. பிரான்சில் நாட்டை இணைத்தது அரசர்களாகையால், அங்கு ஒரு புதிய முடியாட்சி தோன்றிற்று. நாட்டை இணைத்த முடியாட்சியே அங்கு அதிகாரக் குவிப்புடைய, இக்கால அரசாங்கம் தோன்றுவதற்கு ஆதாரமாகவும் அமைந்தது. இவ்வகையில் பிரான்சில் தோன்றிய புதிய முடியாட்சி இங்கிலாந்தில் தோன்றிய தியூடர் முடியாட்சியைப் போன்றிருந்தது. ஆனால் இங்கிலாந்தில் தியூடர் ஆட்சிக் காலத்தில் பாராளுமன்றத்தின் அதிகாரம் அரசரின் அதிகாரத்தால் மறைக்கப்பட்டிருந்தாலும், இறுதியில் அதுவே ஒரு தேசிய அரசாங்கமாக நிலைபெற்றது. பிரான்சிலோ பாராளுமன்ற ஆட்சி மரபு தோன்றாதவாறு, மாநிலங்களுக்கும் பிரபுக்களுக்கும் தன்னாட்சி நகரங்களுக்கும் தனிப்பட்ட சலுகைகள் இருந்த காரணத்தாலும், அவை தம் உரிமைகளின் பாதுகாப்புக்காக அரசரைச் சார்ந்திருந்தகாலும் முடியாட்சியின் எதேச்சாதிகாரமே அங்கு நெடுங் காலமாக நடைபெறவும், முடியாட்சியின் பெரியதவறுகளின் காரணமாகவே அங்கு இறுதியில் மக்கள் உரிமைக் கோட்பாடு நிலைபெறவும் ஆகிய நிலைமைகள் தோன்றின. பிரான்சில் அரசருடைய அதிகாரங்கள் பெருகியதற்குக் காரணம் அங்கு மறுப்புரைச் சமயத்தாருக்கும் கத்தோலிக்கருக்கும் இடையே நடைபெற்ற உள்நாட்டுப் போர்களே. திறமான அரசாங்கம் இன்றியமையாத தேவையாக ஆயிற்று. இந்தச் சூழ்நிலையில் அதிகாரக் குவிப்பு அரசரிடத்தில் ஏற்படுதலும் முடியாட்சி வரம்பற்றதாக ஆதலும் தவிர்க்க இயலாதனவாயிற்று. இந்தச் சூழ்நிலையில் தான் சீன் போடின் (Jean Bodin) என்னும் பிரெஞ்சு அரசியற் சிந்தனையாளர் இறைமைக் கோட்பாட்டை (Theory of Sovereignty) வகுத்தார். நாட்டிற்குத் தலைமையான அதிகாரம் தேவை என்பதை அவர் வலியுறுத்தியதே அவருடைய இறைமைக் கோட்பாட்டின் சிறப்பாகும். பிரான்சு நாட்டினுள் இரு வகைச் சமய நெறியாளருக்குமிடையே இருந்த பிளவையும் அதனால் நாட்டிற்கு அயலவரோடு உள்ள உறவுகளில் ஏற்பட்ட வலுவற்ற போக்கையும் எடுத்துக் காட்டுவதற்காகவும், அவற்றை நீக்குவதற்கு அதிகாரக் குவிப்புடைய முடியாட்சியே ஏற்றது என்ற கருத்தை வலியுறுத்துவதற்காகவும் பண்டைக் காலத்திலேயே தோன்றிய அரசரின் இறை உரிமைக் கோட்பாடு இக்காலப் புதிய வடிவத்தில் கூறப்பட்டது. அரசரின் இறை உரிமைக் கோட்பாடும், அதற்கு நேர் மாறான மக்கள் உரிமைக் கோட்பாடும் பழங்காலத்திலேயே தோன்றியவை ஆகும்.

அரசின் இறை உரிமைக் கோட்பாடும் எதிர்ப்பின்றிக் கீழ்ப்படிதற் கோட்பாடும் ஒன்றோடொன்று தொடர்புடையவை. அரசரின் இறை உரிமைக் கோட்பாட்டின்படி, ஆட்சியதிகாரமானது இறைவனிடமிருந்து தோன்றியது. அதற்குரிய ஆற்றலும் இறைவனிடமிருந்து வருவதாகும். அதற்கு ஆதாரமாக விவிலிய மறைநூலின் பதின்மூன்றாம் இயலில் புனித பால் உரோமானியருக்கு விடுத்த செய்தியில், 'எல்லா அதிகாரமும் கடவுளுடையதே ஆகும்' என்ற கருத்துச் சுட்டிக்காட்டப்படுகிறது. ஆனால், இந்தக் கருத்து அரசருடைய அதிகாரத்துக்கு மட்டுமல்லாமல், மற்றெவ்வகையான ஆட்சியாளர் செலுத்துகின்ற அதிகாரத்துக்கும் பொருத்தமாக இருப்பதும் சுட்டிக் காட்டப்படுகிறது. மேலும், அதிகாரமென்பது தெய்விக ஆதாரம் உடையதாயினும், சரியான காரணங்களுக்காகச் சட்டத்துக்கு மாறாக அதிகாரம் கையாளப்படும்போது அதனை எதிர்த்தலும் நியாயமானதே என்று கருதவும் இடம் இருக்கிறது. ஆகையால் கி.பி. 16–ஆம் நூற்றாண்டின் இறுதியில் அதிகாரம் கடவுளிடத்திலிருந்து வருகிறது என்னும் கோட்பாட்டிற்கும் அதிகாரம் மக்களிடமிருந்து வருகிறது என்னும் கோட்பாட்டிற்குமிடையே முரண்பாடு ஏதுமில்லை என்று யாவரும் உணர்ந்தனர்.

இரண்டுக்குமிடையே முரண்பாட்டைத் தோற்றுவித்தவை: முதலில், மக்கள் உரிமை (Popular Right) என்பதற்கு ஆட்சியாளரை எதிர்ப்பதற்கு உள்ள உரிமை என்ற பொருளில் கொடுக்கப்பட்டிருக்கும் விளக்கம். அடுத்து, அரசரின் இறை உரிமைக் கோட்பாடு என்பதற்குக் குடிகள் தங்களுடைய ஆட்சியாளருக்கு எவ்வித எதிர்ப்பும் இல்லாமல் கீழ்ப்படிதல் வேண்டுமென்ற பொருளில் கொடுக்கப்பட்ட விளக்கம். உலூதரும் கால்வினும் வற்புறுத்திக் கூறிய எதிர்ப்பின்றிக் கீழ்ப்படிதல் என்னும் கடமையானது, அரசரின் இறை உரிமைக் கோட்பாட்டின் வாயிலாக ஒரு தனித்த புனித இயல்பு பெற்றது. தெய்விக அரச உரிமைக் கோட்பாட்டைச் சரியானதென்று காட்டுவதற்கு உள்ள ஒரே ஆதாரம் கிறித்தவ விவிலிய நூலைத் தவிர, அதாவது நம்பிக்கையைத் தவிர வேறு எதுவும் இல்லை. ஆகையால் சமய நூல்களை அரசியலாராய்வு முறையாகக் கையாளுதல் கைவிடப்பட்டபோது, இந்தக் கோட்பாடும் கைவிடப்பட்டது.

(உ) அரசர் முதலாம் சேம்சின் கருத்து: அரசரின் இறை உரிமைக் கோட்பாட்டிற்கு கி.பி. 16–ஆம் நூற்றாண்டைய இங்கிலாந்தில் தேவையே இல்லாமற் போய்விட்டது; அதற்குக் காரணம் என்னவென்றால், கி.பி. 16–ஆம் நூற்றாண்டைய

இங்கிலாந்தில் பிரான்சைப் போன்று நாட்டின் ஒற்றுமையையோ நிலையான தன்மையையோ கொடுக்கக்கூடிய உள்நாட்டுப் போர் முதலிய சிக்கல் எதுவும் தோன்றவில்லை. தியூடர் ஆட்சியில் நாடு ஒற்றுமையும் அமைதியும் கொண்டிருந்தது. அப்போது அரசரின் இறை உரிமைக் கோட்பாட்டிற்குத் தேவை ஏற்படவில்லை. அக்கோட்பாட்டின் ஆதரவு இல்லாமலேயே தியூடர் அரசர்களுக்கு வரம்பற்ற அதிகாரம் இருந்தது. ஆனால் கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இசுடூவர்ட்டு (Stuart) அரச குடும்பம் இங்கிலாந்தின் ஆட்சிக்கு வந்து வரம்பற்ற அதிகாரத்தைக் கையாளத் தொடங்கியதும், அரசரின் தெய்விக உரிமைக் கோட்பாடும் அதற்கு எதிராக மக்கள் உரிமைக் கோட்பாடும் ஆராயப்பட்டன. இசுடூவர்ட்டு அரச குடும்பத்தின் முதலாம் ஆங்கில அரசரான முதலாம் சேம்சு (James I) கி.பி. 1603-இல் ஆங்கில நாட்டுக்கும் அவர் சொந்த நாடான இசுகாட்லாந்துக்கும் அரசரானர். அவர் கி.பி. 1598-ஆம் ஆண்டிலேயே எழுதி வெளியிட்ட 'சுதந்திர முடியாட்சிகளைப் பற்றிய மெய்யான சட்டம்' (True Law of Free Monarchies) என்ற நூலில் அரசருடைய அதிகாரத்துக்குத் தோற்றுவாய் கடவுளே என்று விவரித்து, அதிலிருந்து பல முடிவுகளை வருவிக்கிறார் (அவர் குறிப்பிடும் சுதந்திர முடியாட்சி என்பதற்கு அயல்நாட்டு அரசர்கள், உள்நாட்டுக் குழுக்கள், சிற்றரசர்கள் ஆகியோரின் கட்டுப்பாட்டிலிருந்து விடுபட்ட அரசருடைய அரசாங்கம் என்பது பொருள்):

'அரசர்கள் என்போர் நிலவுலகத்திலே மூச்சு விட்டு உயிர் வாழும் கடவுளின் சிலைகளே ஆவர்'.

'முடியாட்சியுடைய நாடே உலகில் மிகச் சிறந்த ஒன்று ஆகும். எவ்வாறெனில், அரசர்கள் நிலவுலகத்திலுள்ள கடவுளின் துணை அதிகாரிகள் மட்டுமல்லர்; அவர்கள் கடவுளின் அரியணையிலமர்ந்திருப்பவர்கள் மட்டுமல்லர்; அவர்கள் கடவுளர்களென்று கடவுளாலேயே அழைக்கப்படுபவருமாவர்'.

'அரசர் குழந்தைகளுக்குத் தந்தை போலவும், உடம்புக்குத் தலை போலவும் இருப்பவர். அவர் இல்லையேல் குடிமைச் சமூகம் இருத்தலியலாது. எவ்வாறெனில், அரசர் இல்லாத சமூகம் 'தலை இல்லாத குடும்பமே' ஆகும்; அதனால் சட்டம் செய்ய இயலாது. சட்டமென்பது மக்களுக்குச் சட்டம் வழங்குபவராக இறைவராலமர்த்தப்பட்ட அரசரிடமிருந்துதான் வருதல் இயலும். ஆகையால் மக்கள் செய்யக் கூடியதெல்லாம், தயங்காது, அவர்கள் அரசருக்குக் கீழ்ப்படிதல் வேண்டும் அல்லது முழுக் குழப்பத்தை ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும் ... ஆகையால் அரசர்கள்தாம் சட்டங்களைச் செய்பவர்கள் என்பது பெறப்படுகிறதே தவிரச் சட்டங்கள் அரசர்களை ஆக்குகின்றன என்பது பெறப்படவில்லை'.

மேலும், சேம்சு தாம் கடவுளுக்குப் பொறுப்பானவர் என்றும், தமது குடிமக்களுக்குப் பொறுப்பானவரல்லர் என்றும், ஓர் அரசர் தம் சட்டங்களுக்குத் தம் குடிமக்கள் அளிக்கும் மதிப்பை அரசரும் அளித்தல் வேண்டுமென்றும், ஆனால் அரசர் சட்டங்களுக்கு அளிக்கும் மதிப்பு தமது விருப்பத்தின் பேரில் அளிக்கும் (Voluntary Submission) மதிப்பே தவிரப் பிறருடைய கட்டாயத்தின் பேரில் அளிக்கும் மதிப்பாக இருத்தல் கூடாது என்றும் கூறுகிறார்.

சேம்சு அரசருடைய அதிகாரத்தின் தலைமையை இவ்வாறு வலியுறுத்திக் கூறியமையின், குடிகள் அரசருடைய அதிகாரத்துக்கு எவ்வித எதிர்ப்பின்றிக் கீழ்ப்படிதல் வேண்டுமென்ற கோட்பாட்டை அவர் ஆதரித்தாரென்பது நன்றாகத் தெரிகிறது. பா.சு.

துணை நூல்கள்:

**Hearnshaw, F.J.C.**, The Social and Political Ideas of some Great Thinkers of the Renaissance and the Reformation, London, 1925.

**William A. Mueller**, Church and State in Luther and Calvin, Nashville, Tennessee, 1954.

**Waring, L.H.**, The Political Theories of Martin Luther, New York, 1910.

**McIlwain, C.H.**, The Political Works of James I, Cambridge, Massachusetts, 1918.

**எதிர்ப்பு மனப்பான்மை** திரும்பத் தாக்க வேண்டும் என்ற உந்துதலோடு கூடிய நிலைத்த சினத் தன்மை ஆகும். எதிர்ப்பு மனப்பான்மை (Hostility) ஒரு சதாரண நடத்தையேயாயினும், மனவெழுச்சிக் கோளாறுகளிலும் உளப்பிறழ் நிலையிலும் இம்மனப்பான்மை பெரிதும் காணப்படும். இம்மனப்பான்மையைச் சினத்தினின்று வேறுபடுத்தி விளக்குவது கடினமே. எனினும் இது நாட்பட்ட மனமுறிவு காரணமாகவும் வாய்ப்புப் பறிக்கப்பட்டதன் காரணமாகவும் தோன்றுவதைக் கொண்டு இதனை வேறுபடுத்தலாம். சான்றாக, ஒரு குழந்தைக்கு அதிகச் சலுகை தரும்போதும் பெற்றோரால் பெரிதும் வெறுக்கப்படும்போதும் அளவுக்கதிகமாக அதனைக் குறை கூறும்போதும் அதற்கு எதிர்ப்பு மனப்பான்மை

தோன்றலாம். அது போன்றே வேலைச் சூழ்நிலைகளிலும் ஏற்படலாம். இம்மனப்பான்மை பல்வேறு வகையில் ஆற்றுப்படுத்தப்படுகின்றது. குழந்தை படுக்கையில் சிறுநீர் கழிப்பதையும், ஆடையின்றித் தெருக்களில் ஓடுகின்ற நடத்தையையும் உள்ளடங்கிய எதிர்ப்பு மனப்பான்மையின் வெளிப்பாடுகளாகக் கொள்ளலாம். ஜி.இரா.

துணை நூல்:

**Coleman, J.C., Abnormal Psychology and Modern Life, Foresmand & Co., Chicago Scott, 1960.**

**எதிர் பண்பாடு**: இக்காலச் சமுதாயங்களுள் ஒவ்வொன்றிலும் சில குழுவினர் தம் சமுதாயத்தின் அனைத்துப் பண்புகளையும் கொண்டிராமல், பல தனிப்பட்ட பண்புகளை ஏற்றுக் கொண்டு ஏனையோரிடமிருந்து விலகிக் காணப்படுகின்றனர். இக்குழுவினரின் பண்பாடு உட்பண்பாடு (Subculture) எனக் கூறப்படும். எடுத்துக்காட்டாக, வேற்று நாட்டில் குடியுரிமை பெற்று வாழும் ஒரு நாட்டவர்கள் தாம் குடியேற்றம் பெற்ற நாட்டினரின் பண்பாட்டையும் தம் தாய்நாட்டின் பண்பாட்டையும் ஒருங்கிணைத்து அந்நாட்டவரிடமிருந்து விலகி, ஒரு தனிப் பாங்கோடு வாழ்வதைக் காணலாம். இதைப் போன்றே சமுதாயத்தில் மாணவர்களின் நடத்தை முறைகள், செயல் முறைகள் முதலானவை ஒரு சமுதாயத்தின் மொத்தப் பண்புகளிலிருந்து வேறுபட்டுக் காணப்படுவதால், இவர்களின் பண்பாட்டை மாணவர் உட்பண்பாடு (Student Subculture) என்று கூறுவர். உட்பண்பாட்டின் தன்மைகளைக் குமரப் பருவப் பண்பாடு (Adolescent Culture), இராணுவ வாழ்க்கை, தொழிற் சாலைப் பண்பாடு எனப் பலவாறு பாகுபாடு செய்து விளக்கிக் கூறலாம். காண்க: உட்பண்பாடு.

ஒரு சமுதாயத்தின் முதன்மைப் பண்பாட்டில் (Dominant Culture) இயங்கும் உட்பண்பாடு தனித் தன்மையைக் கொண்டுள்ளது மட்டுமன்றி, முதன்மைப் பண்பாட்டு அமைப்புகளுக்கு நேர் எதிராகச் செயற்படும் தன்மையையும் பெற்றது. ஓர் இளங் குற்ற நடத்தைக் குழு (Delinquent Gang) தன் சமூகத்தின் நெறிமுறைகளையும் (Norms) ஒழுக்க நெறிகளையும் (Morals) மதிப்புகளையும் (Values) மீறிய நடத்தை முறைகளைக் கொண்டுள்ளது.

ஆசிய சமயக் குழுக்களைக் கடைப்பிடிக்கும் அமெரிக்கர்கள் சிலர் சைவ உணவுக் கொள்கை, நீண்ட காலத் தியானம், மனத்துறவு (Celibacy) முதலான அமெரிக்கச் சமய முறைகளுக்கு எதிரான முறைகளை ஏற்று வருகின்றனர். இது அமெரிக்காவின் முதன்மைப் பண்பாட்டிலிருந்து வேறுபடும் உட்பண்பாடாக மட்டுமல்லாமல், அப்பண்பாட்டிற்கு எதிராகச் செயற்படும் தன்மையினையும் பெற்று விடுகிறது.

எதிர் பண்பாட்டின் தன்மைகளை உட்குழுவின் நடத்தை முறைகளைக் கொண்டு விளக்குவதும் பொருந்துமென மானிடவியலாரும் சமுதாயவியலாரும் கூறுவர். தாம் சார்ந்த சமுகத்தின் செயல், அளவு, உறவு, பிணைப்பு, நோக்கம், பண்பு முதலானவற்றின் தன்மையிலிருந்து சற்று விலகி, சில குறிப்பிட்ட செயல்களுக்காகவும் நோக்கங்களுக்காகவும் தனி நிலையில் செயற்படும் குழுவினர் உட்குழுவினர் (Sub-group) ஆவர். அவர்களின் செயல்களையும் நடத்தை முறைகளையும் உட்பண்பாடாக வெளிப்படுத்துவர் பண்பாட்டியலார். இருப்பினும், எதிர்பண்பாட்டின் அனைத்துக் கூறுகளும் தாம் இயங்கும் முதன்மைப் பண்பாட்டிற்கு எதிராகச் செயற்படுவன என்று கூற முடியாது.

ஒரு சமுதாயத்தின் விதிமுறைகள், மதிப்புகள் ஆகியவற்றை முரண்படச் செய்து, சமுதாய முறைகளுக்கு எதிராகச் செயற்படுபவர்களும் அச்செயல்களில் பலரையும் ஈடுபடச் செய்யும் குழுவினரும் எதிர் பண்பாட்டு இயக்கத்தினராகக் கருதப்படுகின்றனர். இதைப் போன்றே, மேற்கத்திய நாடுகளில் வளர்ந்து வரும் போதை மருந்துகளை உட்கொள்ளுதலும் அதை விற்போரின் நடவடிக்கைகளும் மிகுந்து வருகின்றன. இம் மருந்துகளுக்கு அடிமையாகி வரும் இவர்கள் தம் பண்பாட்டின் நெறிப்படுத்தப்பட்ட மரபுகளை மீறுவதால், பொதுவாழ்க்கையின் நடைமுறைகளில் சட்ட ஒழுங்கு நிலைப்படுத்தப்படுபவர்களால் கண்காணிக்கப்படுகிறவர்களாகின்றனர். சீ.ப.

**எதிர்பார்ப்பு அட்டவணைகள்**: இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாறிகளுக்கு (Variables) இடையேயுள்ள உறவைக் காட்டும் ஓர் அமைப்பு எதிர்பார்ப்பு அட்டவணை(Expectancy Tables)ஆகும். இரண்டு மாறிகளுக்கு இடையேயுள்ள உறவின் அடிப்படையில், ஒரு மாறியின் வெவ்வேறு அளவுகளுக்கு ஏற்ற மற்றொரு மாறியின் அளவுகளை அளவீடு செய்யாமலேயே தோராய அளவில் காண இவ்அட்டவணைகள் உதவும். ஒரு மாறியின் அளவுகளை அம் மாறிக்கான முன்கூறிகள் (Predictors)மூலமாக அட்டவணைப்படுத்த இயலும். ஆய்வுகளில் ஒரு சுட்டு மாறியின் (Criterion) அளவுகளை மற்ற முன்கூறு மாறிகளின் (Predictors) மூலம் கண்டறிய எதிர்பார்ப்பு அட்டவணை உதவுகிறது. எடுத்துக்காட்டாக, மாணாக்கரின் கல்வித் தேர்ச்சித்திறன் (Educational

Achievement) அவர்களின் மனப்போக்கு, ஆர்வம், திறன், நுண்ணறிவு, பெற்றோரின் மனப்போக்குப் போன்ற பல்வகை மாறிகளைப் பொறுத்துள்ளது. கல்வித் தேர்ச்சித் திறனைச் சுட்டு மாறி எனக் கொண்டால், மேற்குறிப்பிட்ட முன்கூறு மாறிகளின் மதிப்புகளுக்கு இயைந்த கட்டுப்பாடுள்ள ஒரு பரவலைச் சுட்டு மாறியின் அளவுகள் கொண்டிருக்கும் என்பதே எதிர்பார்ப்பு அட்டவணையின் மையக் கருவாகும்.

ஒரு முன்கூறு மாறியினைக் கொண்ட எதிர்பார்ப்பு அட்டவணை, இரு முன்கூறு மாறிகளைக் கொண்ட எதிர்பார்ப்பு அட்டவணை என எதிர்பார்ப்பு அட்டவணைகளை முன்கூறு மாறிகளின் எண்ணிக்கையை ஒட்டி வகைப்படுத்தலாம்.

**ஓரளவை எதிர்பார்ப்பு அட்டவணை:** கணிதத்தில் சாதனை அடைவுத் தேர்வு (Achievement Test) மதிப்பெண்ணிற்கும், கணித நாட்டத் (Aptitude) தேர்வு மதிப்பெண்ணிற்கும் உள்ள உறவைப் பின்வரும் எதிர்பார்ப்பு அட்டவணை மூலம் விளக்கலாம்.

கீழ்க்காணும் எதிர்பார்ப்பு அட்டவணையில் கணித நாட்டத் தேர்வை முன்கூறு மாறி எனவும் கணிதச் சாதனைத் தேர்வைச் சுட்டுமாறி எனவும் கொள்ள

அட்டவணை: 1. கணிதச் சாதனை அடைவுத் தேர்வு மதிப்பெண்

| | | 20—39 | 40—50 | 60—79 | 80—100 |
|---|---|---|---|---|---|
| நாட்டத் தேர்வு | 80—100 | | .10 | .20 | .70 |
| | 60—79 | .02 | .20 | .40 | .38 |
| | 40—59 | .11 | .39 | .39 | .11 |
| | 20—39 | .48 | .43 | .06 | .03 |

(எ-டு. பன்னாட்டுக் கல்வி ஆராய்ச்சிக் கலைக்களஞ்சியம், 1985)

அட்டவணை – 2. இரு முன்கூறு மாறிகளைக் கொண்ட அட்டவணை

| | கணித நாட்டத் தேர்வு மதிப்பெண் | | | | |
|---|---|---|---|---|---|
| | கணிதச் சாதனைத் தேர்வு மதிப்பெண் | 20—39 | 40—59 | 60—79 | 80—100 |
| பெண்கள் | 80—100 | 0.05 | 0.18 | 0.45 | 0.76 |
| | 60—79 | 0.11 | 0.48 | 0.39 | 0.24 |
| | 40—59 | 0.51 | 0.30 | 0.16 | — |
| | 20—39 | 0.33 | 0.04 | — | — |
| ஆண்கள் | 80—100 | — | 0.04 | 0.29 | 0.63 |
| | 60—79 | — | 0.28 | 0.42 | 0.35 |
| | 40—59 | 0.35 | 0.49 | 0.25 | 0.02 |
| | 20—39 | 0.65 | 0.19 | 0.04 | — |

(எ-டு. பன்னாட்டுக் கல்வி ஆராய்ச்சிக் கலைக்களஞ்சியம், 1985).

லாம். மேற்கண்ட எதிர்பார்ப்பு அட்டவணை மூலம் மாணாக்கர் வழிகாட்டலுக்குத் தேவையான செய்திகளைப் பெற முடியும். அதாவது, பல்கலைக்கழக மாணாக்கர்களைக் கணிதப்பாடத்திற்குத் தெரிவு செய்தற்கு இவ்வட்டவணையைப் பயன்படுத்தலாம். மாணாக்கர்களின் நாட்டச் சோதனைத் தேர்வு மதிப்பெண்களின் அடிப்படையில், சாதனைத் தேர்வில் எவ்வாறு மதிப்பெண் பெறுவர் என்பதை ஊகிக்க முடிகின்றது. எடுத்துக்காட்டாக, 40-59 என்னும் எல்லையில் (Range) கணித நாட்டச் சோதனையில் மதிப்பெண் பெற்றோர் கணிதச் சாதனைத் தேர்வில் 60-79என்னும் எல்லையில் மதிப்பெண் பெறுதற்கான சாத்தியக் கூறு (Probability) 0.39 ஆகும்.

இவ்வெதிர்பார்ப்புப் பட்டியலில் இரு முன்கூறு மாறிகள் கொடுக்கப்பட்டுள்ளன. கணித நாட்டம் என்ற ஒரு முன்கூறு மாறியுடன் மாணாக்கரின் பாலினம் என்ற மற்றொரு முன்கூறு மாறியும் இணைக்கப்பட்டுள்ளது. இவ்விரண்டு முன்கூறு மாறிகளை இணைத்ததன் நோக்கம் நேரிய முறையில் பின் விளைவுகளை உணரும் பொருட்டாகும்.

அட்டவணை 2-இலிருந்து கணிதத்தில் சமதிறன் கொண்ட மாணவ மாணவியர்களுக்குள், மாணவிகள் மாணவர்களைவிடக் கணிதச் சோதனை அமைப்புத் தேர்வில் மதிப்பெண்கள் அதிகம் பெறுதற்கான வாய்ப்புகள் உள்ளன என்பது பெறலாகும்.

அட்டவணை இரண்டின்படி, மனுச்செய்வோரின் பாலினத்தையும் ஒரு முன்கூறியாகக் கொள்வதன் மூலம் பாடவழி முறைகளில் (Courses) வெற்றிக்கான வழிகளை இன்னும் சிறப்புப்படுத்த இயலும் என்பது துணிபு.

ஒரு மாணாக்கனின் இயல்பான மதிப்பெண்கள் முன்கூறிகளின் மூலம் கணிப்பதைவிட அதிகமாகவோ சமமாகவோ இருப்பின் எதிர்பார்க்கும் அளவீடுகள் சிறப்பாக அமையும். இவ்வட்டவணைகள் எல்லாக் குழுவினருக்கும் பொருத்தமானவையல்ல. எவ்வகையான குழுவினருக்குப் பொருத்தமாக உடையதோ அவ்வகையினருக்கு மட்டும் இவ்வட்டவணை விவரங்களைப் பயன்படுத்த வேண்டும். எஸ்.மோ.

துணை நூல்:

**Novick. M.R.and Jackson.P.H.,** Statistical Methods for Educational and Psychological Research, McGraw Hill, New York, 1974.

***எதிர்பாரா விளைவு:*** சட்டப்படியான செயலைச் சட்டப்படியான முறையில், போதிய கவனத்துடனும் விழிப்புடனும் எவ்விதக் குற்றமுறு உட்கருத்தும் இன்றிச் செய்யும்பொழுது, தற்செயலாகவோ எதிர்பாராமலோ விளையும் செயல் எதிர்பாரா விளைவு (Accident) எனப்படும். எதிர்பாரா விளைவு ஒன்றன் காரணமாக ஒருவர் மற்றொருவருக்குத் தீங்கு விளைவித்துவிடும்போது, அவரை இந்தியத் தண்டனைச் சட்டம், பிரிவு 80 குற்றப் பொறுப்பினின்று விடுவித்து மன்னிப்பு வழங்குகிறது.

மெய்ப்பிக்கவேண்டிய கூறுகள்: எதிர்பாரா விளைவு என்று ஒரு செயலைச் சட்டம் ஏற்றுக் கொள்வதற்குப் பின்வரும் கூறுகள் மெய்ப்பிக்கப்படுதல் வேண்டும். 1) செய்யப்பட்ட செயலொன்று சட்டப்படியானதாக இருத்தல் வேண்டும். 2) செயல் சட்டப்படியான முறையில் செய்யப்பட்டிருத்தல் வேண்டும். 3) போதிய கவனத்துடன் செய்யப்பட்டிருத்தல் வேண்டும். 4) குற்றமுறு உட்கருத்தின்றிச் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

எ-டு . 1) 'எ' என்பவர் கோடரி கொண்டு ஒரு மரத்தைப் பிளந்து கொண்டிருக்கிறார். 'பி' அவரது அருகில் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறார். 'எ' வெட்டிக் கொண்டிருந்த கோடரியின் தலைப்பாகம் எதிர்பாராத விதமாகக் கழன்று சென்று 'பி'-இன் மீது வீழ்ந்து அவரைக் கொன்று விடுகிறது. இப்பொழுது 'எ'-ஐப் பொறுத்தவரை தக்க கவனத்துடன் செயற்பட்டிருக்கையில், அவரது செய்கை மன்னித்தற்குரியதாகும்.

2) 'எ', 'பி' ஆகிய இருவரும் நண்பர்கள். உரிமம் பெறாத துப்பாக்கிகளை எடுத்துக் கொண்டு மிருக வேட்டைக்காகக் காட்டிற்குச் செல்கிறார்கள். இருவரும் வேட்டையைத் தனித்தனியே நடத்துவதென்று முடிவு செய்து காட்டில் தனித்தனியே பதுங்கிக் கொண்டு மிருகங்களின் வருகைக்காகக் காத்திருக்கிறார்கள். சற்று நேரத்திற்கெல்லாம் ஓசை ஒன்று எழுகிறது. 'பி' அது மிருகத்தின் காலடி ஓசையே என்று கருதி அவ்வோசை வந்த திசையை நோக்கிச் சுடுகிறார். சுட்டபிறகு சுடப்பட்டது மிருகமன்று; தம்முடன் வேட்டைக்கு வந்த தம் நண்பன் 'எ' தான் என்று தெரிகிறது. 'பி'-இன் இச்செயல் எதிர்பாரா நிலையில் தற்செயலாக நிகழ்ந்துவிட்ட ஒன்றாகும். ஆகையால், 'பி' 'எ'ஐக் கொன்ற குற்றத்திற்குப் பொறுப்பாக மாட்டார். ஆனால், சண்டை ஒன்றில் பெண்ணொருத்தி மேல் வைத்த குறி, தப்பிச் சென்று அவள் கையிலிருக்கும் குழந்தையைக் கொன்றுவிடும்

போது, குற்றவாளி அக்குற்றத்திற்குப் பொறுப்பாவார். அதை எதிர்பாரா விளைவு என்று எதிர்வாதம் செய்து இந்தியத் தண்டனைச் சட்டம், பிரிவு 80-இன் வகைகளைப் பாதுகாப்பாகக் கொண்டு தப்பிவிட முடியாது. மீ.அ.

**எதிர்மறைக் குறைஉரை** சார்பற்ற உரைகளுள் ஒருவகை. எழுவாய்ப் பதத்தின் ஒரு பகுதியைப் பயனிலைப் பதத்திலிருந்து நீக்கி உரைப்பது எதிர்மறைக் குறை உரை என்பர். சான்றாக, 'அரசியல் வாதிகள் சிலர் பண்பாளர் அல்லர்' என்பது எதிர்மறைக் குறை உரை (Particular Negative Proposition). எழுவாய்ப் பத உறுப்பினர்கள் சிலர் பயனிலைப் பத எல்லையில் இருந்து நீக்கப்படுகின்றனர். 'சிலர்' என்ற சொல் எழுவாயின் குறை அளவினையும் 'அல்லர்' என்ற சொல் 'நீக்கம்' என்ற எதிர்மறைத் தொடர்பினையும் காட்டுகின்றன.

உரை வடிவம்: எதிர்மறைக் குறைஉரையை 'ஓ' உரை என குறுக்கிக் கூறுவர். இத்தகு உரைகள் சில 'எ' 'ப' அல்ல என்ற வடிவத்திலேயே வெளியிடப்படும். எழுவாய் பயனிலைப் பதங்கள் உரைக்கு உரை மாறும். எனவே, அவற்றை மாறிகள் என்பர். 'ஓ' உரைகள் அனைத்திலும் 'சில/சிலர்', 'அன்று/அல்ல/அல்லர்' என்ற சொற்கள் இடம் பெறும். இச்சொற்கள் 'ஓ' உரையின் நிலை உறுப்புகள் எனப்படும்.

உரைப் பொருள்: எழுவாய்ப் பதத்தின் ஒரு பகுதி மட்டுமே பயனிலைப் பதத்தின் முழுமையிலிருந்து நீக்கப்படுகிறது. எனவே, 'ஓ' உரையில் எழுவாய் நிறைவு பெறாத பதமாகவும் பயனிலை நிறைவு பெற்ற பதமாகவும் இருக்கும். பயனிலைப் பதம் பண்புகளைச் சுட்டுமானால் எழுவாய்ப் பதம் சுட்டுகின்ற சிலருக்கு அப்பண்பு இல்லை எனப் பொருள் கிட்டும். எழுவாய், பயனிலைப் பதங்கள் கனங்களைக் குறிக்குமாயின், பயனிலையோடு கலவாத எழுவாய்ப் பகுதி வெற்றுக் கனம் அன்று எனப் பொருள்படும். 'பண்பாளராக இல்லாத அரசியல்வாதி' என்ற கனம் வெற்றுக் கனம் அன்று என்பது 'ஓ' உரையின் கருத்து.

குறைஉரைகள் மட்டுமே சார்பற்ற முறையில் இருப்பு நிலையைக் கூறுகின்றன. எனவே, அவற்றை இருப்பு நிலை உரைகள் என்பர். குறைந்த அளவு ஓர் உறுப்பினராகிலும் உரையின் பொருளுக்கேற்ப இருக்கின்றார் என்பதை இருப்பு நிலை உரைகள் உறுதிப்படுத்துகின்றன. 'க' என்னும் ஒருவர் அரசியல்வாதியாகவும் அதே 'க' என்பவர் பண்பாளர் அல்லாமலும் இருக்கின்றார்; குறைந்த அளவு இந்நிலையில் 'க' என்பவர் ஒருவராகிலும் உள்ளார். இக்கருத்துக்கு ஒரு பொது வடிவம் தரும்போது, ஒரு 'x' தான் இருக்கிறார்; அவர் ஓர் அரசியல்வாதி, பண்பாளர் அல்லர் என அமையும். இவ்வுரையைக் குறியீட்டளவையில் $(\exists x)$ $(Px, -Cx)$ என அமைப்பர். க.நா.

**எதிர்மறைச் சிக்கல்**: சிக்மண்டு பிராய்டு (Sigmond Freud) என்னும் உளவியலார் ஆளுமை பற்றிக் கூறும் பொழுது, ஆளுமை ஐந்து வகையான நிலைகளின் மூலம் வளர்ச்சி அடைவதாகக் கூறினார். அவற்றுள் மூன்றாவது நிலை இனப்பெருக்க உறுப்புகளின் மூலம் இன்பம் பெறும் நிலையாகக் குறிக்கப்பட்டுள்ளது. அதாவது எண்ணங்களும் செயல்களும் ஆண் பிறப்பு உறுப்புத் தொடர்பானவையாக இருக்கும். ஏறத்தாழ மூன்று வயது முதல் ஆறு வயது வரை இந்த வளர்ச்சி நிலை குழந்தைகளிடம் காணப்படும்.

இந்த வளர்ச்சி நிலையில் குழந்தைகள் எதிரினக் கவர்ச்சி மூலம் பாதிக்கப்படுகிறார்கள். ஆண் குழந்தைகள் தங்கள் தாயிடம் அதிகக் கவர்ச்சி காண்கிறார்கள். பெண் குழந்தைகள் தங்கள் தந்தையிடம் அதிகக் கவர்ச்சி காண்கிறார்கள். இந்த எதிரினக் கவர்ச்சி காரணமாக ஆண் குழந்தைகள் தங்கள் தந்தையையும், பெண் குழந்தைகள் தங்கள் தாயையும் வெறுக்கிறார்கள். அவர்கள் மீது பொறாமை கொள்கிறார்கள். தங்களுக்குக் கிடைக்கக் கூடிய அன்புக்கும் அரவணைப்புக்கும் தடையாகத் தங்களது எதிரினப் பெற்றோர்கள் குறுக்கே நிற்பது போன்று உணர்கிறார்கள். இந்த நிலையை, ஆங்கிலேயர்கள் பெண்கள் தங்கள் தந்தையை மணந்து கொள்ள எண்ணுவதாகவும் சித்திரிக்கிறார்கள். இதில் பெண்களுக்குத் தங்கள் தந்தையிடம் ஏற்படும் எதிரினக் கவர்ச்சியை எதிர்மறைச் சிக்கல் (Electra Complex) என்று குறிப்பிடுகிறார்கள்.

இது போன்ற உணர்ச்சிகளின் வெளிப்பாட்டினால் குழந்தைகள் பொறாமை உணர்ச்சியையும், சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்படாத பால் உணர்வுகளையும் பெறுகிறார்கள். அதே நேரம் குழந்தைகள் தங்கள் வயது காரணமாகவும் உலக அனுபவமின்மை காரணமாகவும் உணர்ச்சிகளைச் சரிவரக் கையாள முடிவதில்லை. எனவே, மிகவும் உணர்ச்சி வசப்பட்டும் அமைதி இழந்தும் காணப்படுவார்கள். இந்த வகையான உணர்ச்சிகளும் மெய்ப்பாடுகளும் பெரும்பாலும் ஆழ்மனத்தினால் கட்டுப்படுத்தப்படுகின்றன.

எதிர்மறைச் சிக்கல் தோன்றக் கிரேக்க இதிகாசங்களில் உள்ள ஒரு கதையைக் காரணமாகக்

கூறுவார்கள். கிரேக்க மன்னர் அகமெம்னான் (Agamemnon) என்பவர்தம் மகள் எலெக்ட்ரா (Electra), அகமெம்னான் மறைவுக்குப்பின் தன் தாயுடன் வாழ்ந்து வந்தாள். ஆயினும், தந்தையின் மறைவும் தாய் வேறொருவரிடம் காதல் வயப்பட்டிருந்ததும் காரணமாக எலெக்ட்ராவிற்குத் தன் தாய் மீது வெறுப்பு வளர்ந்தது. எலெக்ட்ரா தன் தாயான கிளைட் மென்சுட்ராவைக் (Clytemenstra) கொன்று, தந்தை மீதுள்ள பற்றையும் தாயின் மீதுள்ள வெறுப்பையும் தணித்துக் கொண்டாள். அதன் காரணமாக, இந்த மெய்ப்பாட்டுச் சிக்கல் எலெக்ட்ராவின் பெயரால் 'எலக்ட்ராச் சிக்கல்' என வழங்கி வரலாயிற்று.

எதிரினப் பெற்றோர் மீது குழந்தைகளுக்கு இருக்கும் பால் உணர்வுகள் அழுத்தமாக ஆழ்நிலை மனத்திலேயே நிறுத்தப்படுகின்றன. குழந்தைகளுக்கு எதிரினப் பெற்றோர் மீது இருக்கும் ஆத்திரமும் பொறாமை உணர்ச்சியும் நாளாக நாளாகக் குறைந்து வரும். இதே நேரம், சுய பால் சார்ந்த பெற்றோர்கள் மீது அன்பும் அவர்களோடு தங்களை ஒத்து நோக்கும் மனப்பக்குவமும் உண்டாகும். இந்த ஆழ்மனத்தில் அழுத்தி வைக்கப்பட்ட உணர்வுகளும் எண்ணங்களும் வாலிபப் பருவத்தில் செயல் வடிவம் பெறுகின்றன.

வாலிபப் பருவத்தில் எதிர் பால் இனக் கவர்ச்சி தோன்ற இந்த உணர்வுகளே பெருமளவு காரணிகளாக இருப்பதாக உளவியலார் கருதுகிறார்கள். எனவே, வாலிபப் பருவத்தில் ஆண்-பெண் இனக் கவர்ச்சி தோன்றுகிறது. எதிரினக் கவர்ச்சியால் அளவான ஈர்ப்புக் கொண்டவர்கள் வாலிபப் பருவத்தில் பால் இன உணர்வுகளில் இயல்புநிலை பிறழாமல் இருப்பதாக உளவியலார் கருதுகின்றனர். எதிரினச் சிக்கல் சரியான அளவில் பாதிப்பை ஏற்படுத்தாவிட்டால், வாலிபப் பருவத்தில் பெண்கள் ஆண்கள் பால் கொள்ளும் மையல் இயற்கை நிலை பிறழ்ந்து காணப்படும். அவ்வாறாக, சரியான அளவில் பாதிப்பை ஏற்படுத்தாத எதிரினச் சிக்கல் வாலிபத்தில் பெண்களிடத்தில் தன் இனச் சேர்க்கை அதிக அளவில் ஏற்படுவதற்குப் பெருமளவு உதவும் காரணிகளில் தலையானதாக இருக்கிறது.

வாலிபத்தில் பெண்களிடம் எதிரினப் புணர்ச்சிகள் பற்றிய அச்சத்தையும் தவறான மெய்ப்பாடுகளையும் ஏற்படுத்த இச்சிக்கல் காரணமாக இருக்கிறது. இச்சிக்கலால் பாதிக்கப்படாத பெண்கள் மேற்கூறிய உணர்ச்சிகளையும் எண்ணங்களையும் பெறுவதற்கான வாய்ப்பு அதிகமாக இருப்பதாக உளவியலார் கருதுகின்றனர். இரா.வே.

**எதிர்மறை நிறைவுரை** சார்பற்ற உரை (Catogorical) வகைகளுள் ஒன்று. எழுவாய்ப் பதம் பயனிலைப் பதத்தில் இருந்து முழுமையாக நீக்கப்பட்டிருக்கும் உரையை எதிர்மறை நிறைஉரை என்பர். சான்றாக, 'குழந்தைகள் எவரும் வாக்காளர் அல்லர்' என்ற எதிர்மறை நிறைஉரையில் (Universal Negative Proposition) எழுவாய்ப்பதம் குறிக்கும் எல்லா உறுப்பினர்களும் பயனிலைப் பத எல்லையில் இருந்து நீக்கப்படுகின்றனர். 'எவரும்' என்ற சொல் எழுவாய் பதத்தின் நிறை அளவினையும், 'அல்லர்' என்ற சொல் நீக்கம் என்ற எதிர் மறைத் தொடர்பையும் காட்டுகின்றன.

உரை வடிவம்: எதிர்மறை நிறைஉரையை 'ஈ' உரை எனச் சுருங்கச் சொல்வர். இத்தகு உரைகள் எ' எதுவும் 'ப' அல்ல என்ற வடிவத்திலேயே உரைக்கப்படும். உரைக்கு உரை மாறக் கூடிய எழுவாய், பயனிலைப் பதங்கள் 'மாறிகள்' எனப்படும். 'எதுவும்/எவரும்', 'அன்றுஅல்ல/அல்லர்'/என்பன எல்லா 'ஈ' உரைகளிலும் வரும் என்பதால் அவற்றை 'ஈ' உரையின் நிலையுறுப்புகள் என்பர்.

உரைப் பொருள்: எழுவாய் முழுவதும் பயனிலையின் முழு எல்லையில் இருந்தும் நீக்கப்படுவதால் அவ்விரு பதங்களும் நிறைவுற்ற பதங்களாகும். உரையின் பயனிலைப் பதம் பண்புகளைச் சுட்டுவதாக இருந்தால் அத்தகு பண்புடையோர் எவரும் எழுவாய்ப் பதத்தில் இல்லை எனப் பொருள்படும். எழுவாய், பயனிலைப் பதங்கள் கணங்களைக் குறிக்குமானால் இவ்விரு கணங்களும் இணைவதால் ஏற்படும் புதிய கணத்தில் உறுப்பினர் எவரும் இல்லை எனப் பொருள்படும். 'குழந்தைகள்' 'வாக்காளர்கள்' என்ற இரு கணங்கள் இணைவதால் 'குழந்தை வாக்காளர்' என்ற புதிய கணம் உருவாகிறது. இப்புதிய கணத்தில் உறுப்பினர்கள் இல்லை என்பதே உரையின் பொருள்.

இருப்புநிலைவாதிகள் நிறைஉரைகளைச் சார்புரையாக்கிப் பொருள் கொள்கின்றனர். 'க' என்னும் ஒருவர் குழந்தை எனில், அந்தக் 'க' என்பவர் வாக்காளர் அல்லர் என்பது உட்கிடை. இது 'க' இருக்கும் இனம் முழுதுக்கும் பொருந்தும். க.நா.

**எதிர்மறை வருமானவரி** என்பது ஒரு நாட்டில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மதிப்பிட்டு, பிழைப்புமட்ட நிலைக்குமேல் (Subsistence Level of Living) வாழும் மக்களிடமிருந்து வரி வசூலிக்கும் முறையாகும். அரசிடமிருந்து மறுபயன் எதிர்பாரா

மல், அரசின் பொதுச் செலவை ஈடுசெய்ய மக்கள் கட்டாயமாகச் செலுத்தும் பணம் வரி என்பதாகும். இவ்விளக்கத்திற்கு முற்றிலும் மாறுபட்ட விளக்கத்தை எதிர்மறை வருமான வரி (Negative Income Tax) என்பதில் உள்ள வரி என்னும் சொல் தருகிறது.

எதிர்மறை வருமான வரியில் குறிப்பிட்ட சராசரி வருமானத்திற்குமேல் வருமானம் பெறும் தனியாரிடமிருந்து வளர்வீத வருமான வரி (Progressive Taxation) பெறப்படும். பிழைப்பு-மட்ட நிலைக்குக் குறைந்த வருமானத்தை உடையவர்களுக்கு அரசு உதவித்தொகை (Subsidy) அளித்து, பிழைப்பு மட்ட நிலைக்கு அவர்களை உயர்த்தும். இவ்வாறு அளிக்கப்படும் உதவித்தொகையே எதிர்மறை வருமான வரியாகும். இவ்வரித் திட்டத்தின் கீழ் நலத் திட்டங்கள் (Welfare Schemes) ஒழிக்கப்படும்.

எதிர்மறை வருமான வரித் திட்டத்தினால் மக்களின் ஆக்கத்திறன், சேமிப்பு - முதலீடு நாட்டம் ஆகியன பாதிக்கப்படும். பணி விருப்பம், கடின உழைப்பு ஆகியவற்றில் மக்கள் ஊக்கம் இழந்து விடுவர். அதனால், நாட்டின் உற்பத்திப் பெருக்கம் குறையும் இவற்றின் இணை விளைவுகளால் பொருளாதாரம் பின்னிறக்க நிலையை அடையும். அரசின் உதவித் தொகையை நாடும் மக்கள் மேலும் மேலும் அதனையே சார்ந்து வாழ விரும்புவர். பொதுவாக, எதிர்மறை வருமான வரி கோட்பாட்டளவிலேயே உள்ளது. இது நடைமுறைக்குகந்ததன்று எனக் கருதப்படுகிறது.

அ.கு.சா.

**எதிர் வழக்குரை:** எதிர்வாதி அல்லது எதிர்மனுதாரர் அல்லது குற்றம் சாட்டப்பட்டவர் தமக்கெதிராகக் கொண்டு வரப்பட்டுள்ள நடவடிக்கையில் தம் மீது நடவடிக்கை எடுப்பதற்கான நியாயம் ஏதுமில்லை என்பதற்குக் காட்டும் காரணங்கள் எதிர் வழக்குரை எனப்படும். எதிர்வழக்குரையில் எதிர்வாதி தம்மீது எக்காரணங்களுக்காக நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதைத் தெளிவாகக் குறிப்பிடுவார். அதற்காக அவர் எழுத்துமூலம் எதிர்வாதுரை தாக்கல் செய்யலாம். எதிர்மனுதாரர் தம்மீது ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கு உறுதிமொழி ஆவணம் (Affidavit) ஒன்றைத் தாக்கல் செய்யலாம்.

குற்றவியற் சட்டத்தின் நான்காம் பகுதி பொது விலக்குகளைப் பற்றிக் கூறுகிறது. ஒரு செயலில் பொருண்மைத் தவறு இருந்தால் அச்செயல் புரிந்தவர் குற்றம் செய்தவர் அல்லர். அதுபோன்றே எதிர்பாரா விளைவு, சிறப்புரிமைச் செயல்கள், நீதிபதிகள் செய்யும் பணிகள், குற்றமனமில்லாமல் செய்த செயல்கள், இசைவுடன் செய்யப்படும் செயல்கள், தற்காப்புரிமையைப் பயன்படுத்துவதால் புரியப்படும் செயல்கள் ஆகியவை குற்றமாதல் இல்லை. நீதிபதி, ஒருவருக்கு ஏழாண்டுச் சிறைத் தண்டனை விதிப்பதன் மூலம் அல்லது மரண தண்டனை விதிப்பதன் மூலம் குற்றம் புரிந்தவர் ஆகமாட்டார். அதுபோலவே மரண தண்டனையை நிறைவேற்றுபவரும் குற்றம் செய்தவர் அல்லர்.

குற்றவியலில் குற்றம் சுமத்தப்பட்டவர் தூய்மையானவரெனத் துணிபு கொள்ளப்படும். குற்றம் சுமத்துபவர்தாம் குற்றம் சுமத்தப்பட்டவர் குற்றவாளியென மெய்ப்பித்தல் வேண்டும். தம்மீது நடவடிக்கை எடுக்கக் காரணம் எதுவும் இல்லையெனக் குற்றம் சுமத்தப்பட்டவர் கருதுங்கால் அதனை மெய்ப்பித்தல் அவருடைய கடமையாகும். எடுத்துக்காட்டாக, இராமன் என்பவர் செல்வன் என்பவரைக் கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்படுகிறது. இக்குற்றம் மெய்ப்பிக்கப்படும்வரை இராமன் தூய்மையானவரெனத் துணிபு கொள்ளப்படும். எனவே அரசு வழக்கறிஞர் இராமன்தான் கொலை செய்தார் என மெய்ப்பித்தல் வேண்டும். இராமன் தாம் மனநோயாளி எனவும், அதனால் தாம் செய்த செயலின் குணத்திறன் குற்றம் புரிந்த வேளையில் தமக்குத் தெரியாது எனவும் வாதுரை செய்ய விரும்பினால் அதனை மெய்ப்பித்தல் இராமனின் கடமையாகும்.

அதுபோன்றே குற்றம் சுமத்தப்பட்டவர் தம்மைப் பாதுகாக்கவே அவ்வாறு செய்ததாகவும் கூறலாம். இங்குத் தற்காப்புரிமையின் பொருட்டுக் கொலை செய்ததாக மெய்ப்பித்தல் குற்றம் சுமத்தப்பட்டவரின் கடமையாகிறது.

உரிமையியற் சட்டத்திலும் தீங்கியற் சட்டத்திலும் எதிர் வழக்குரை உண்டு. எதிர்வாதி தான் செய்த செயல் இறைமைச் செயல் எனக் கூறுங்கால் அது குறித்து எந்த நீதிமன்றத்திலும் வழக்கிட முடியாது. ஒரு நாடு தன்னுடைய இறைமை நிலையில், மற்றோர் இறைமை பெற்ற நாடு அல்லது அதன் குடிமக்களுடன் மேற்கொள்ளும் செயல் இறைமைச் செயலாகும். இச்செயல் அந்நாட்டு அரசின் நிருவாகச் செயலினின்று வேறுபட்டது. அதுபோன்றே பொருண்மைத் தவறும் உரிமையியற் சட்டத்தில் எதிர்வழக்குரையாகக் கொள்ளப்படும். மேலும், தெய்வச் செயல், சிறு தீங்கிழைத்தல், தற்காப்புரிமை, தவிர்க்க முடியாத விளைவு, இசைந்தோர்க்குத்

தீங்கிழைத்தல் முதலியனவும் எதிர்வழக்குரையாகத் தீங்கியற் சட்டத்தில் அடங்கும்.

பண வழக்குகளில் ஒருவர் தாம் மற்றவருக்குக் கடன் தந்ததாகவும் அதனை அவர் திருப்பி அளிக்க வில்லை எனவும் வழக்குத் தொடுக்கலாம். அப்போது தாம் அதனைத் திருப்பி அளித்துவிட்டதாக எதிர் வாதி பகருதல் எதிர்வழக்குரை எனப்படும். எடுத்துக் காட்டாக, எதிர்வாதி தம்மிடம் குறிப்பிட்ட நாளன்று பத்தாயிரம் உருபாய் கடன் வாங்கினார் என்று வாதி கூறலாம். மேலும், தம்மிடம் கடன் உறுதிச் சீட்டு ஒன்றை எதிர்வாதி எழுதிக் கொடுத் துள்ளார் என்றும், குறிப்பிட்ட விழுக்காட்டில் வட்டி தருவதாகவும் கூறியிருந்தாரென்றும் கூறலாம். வாதி கடனைத் திருப்பிக் கேட்டவுடன் எதிர்வாதி செலுத்தவில்லை எனவும் அத்தொகையைச் செலுத்து மாறு எதிர்வாதிக்கு நீதிமன்றம் கட்டளை பிறப்பிக்க வேண்டும் எனவும் வாதி நீதிமன்றத்திடம் முறையிட லாம். இதற்குப் பதில் தரும் முகமாகத் தாம் கடன் வாங்கியது உண்மை எனவும், கடனுறுதிச் சீட்டு எழுதிக் கொடுத்ததாகவும் மூவாயிரம் ரூபாய் திருப்பிச் செலுத்தியதாகவும் மீதி ஏழாயிரம் ரூபாய் மட்டும் திருப்பிச் செலுத்த வேண்டுமெனவும் எதிர் வாதி நீதி மன்றத்தில் உறுதிமொழி ஆவணத்தின் மூலமாகக் கூறலாம். இப்பதில் எதிர்வழக்குரை எனப்படும். மீ.அ.

**எதிராச விம்சதி**: இந்நூல் இருபது வட மொழிச் சுலோகங்களைக் கொண்டது; இராமானுச ரின் சிறப்பினைக் கூறுவது. இதனை இயற்றியவர் மணவாள மாமுனிகள் ஆவர். இதனை உரையோடு பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராச்சாரியார் சுவாமி கள் வெளியிட்டுள்ளார்.

இந்த நூலில் முதல் சுலோகம் தனியன் ஆகும். இறுதியிலும் இப்படியே ஒரு தனியன் உளது. இடையே உள்ள இருபது சுலோகங்களே 'எதிராச விம்சதி' என்னும் நூல் ஆகும். இது சொல்லாட்சி, பொருள் நுட்பம், இறை அன்பு ஆகிய அனைத்தும் சிறப்புறக் கொண்ட ஓர் அரிய நூலாகும்.

இதன்கண் அமைந்துள்ள முதல் ஐந்து சுலோகங் கள் எதிராசரின் பெருமைகளைப் பாராட்டுகின்றன; இடையில் பத்துச் சுலோகங்கள் மாமுனிகள் தம்மைத் தாம் தாழ்த்திக் கொள்ளும் நைச்சியானுசந்தானமாக அமைந்துள. இறுதியில் உள்ள ஐந்து சுலோகங்களும் எதிராசரின் பெருமை கூறி அவர் திருவடியில் ஆர அடைக்கலப் பேற்றினை மாமுனிகள் வேண்டுவதாக அமைந்துள்ளது.

திருமாலின் திருவடிகளில் எப்போதும் தொழு தெழும் மனத்தவரும், மாறன் அடிபணிந்துய்ந்த வரானவரும் அவர் திருவடிகளைப் பற்றியவர்களுக்கு எல்லாக் குற்றங்களையும் போக்கித்தருபவரும் துறவி களுக்குத் தலைவரானவருமான எம்பெருமானாரைத் தலையால் வணங்குகிறேன் என்பது முதலாம் சுலோகத்தின் பொருளாகும். அரங்கன் திருவடிகளில் அமர்ந்த அரச அன்னம் போன்றவரும், நம்மாழ்வார் திருவடித்தாமரைகளில் படர்ந்த வண்டு போலிருப்ப வரும், பெரியாழ்வார், திருமங்கையாழ்வார் முதலான ஆழ்வார்களாகிய தாமரைப்பூக்களை மலரச் செய்யும் கதிரவன் போன்றவரும், கூரத்தாழ்வான் முதலான முதலிகளுக்குத் தஞ்சமாயிருப்பவருமான எம்பெரு மானாரைத் துதிக்கிறேன் என்பது இரண்டாம் சுலோகத்தின் கருத்து.

ஆறாம் சுலோகத்தின் பொருளாவது: கரு ணைக் கடலாம் ஆச்சாரியரான எதிராசரே! அடியே னுக்குத் தங்களுடைய திருவடிகளில் சிறிதும் அன் பில்லை. மேலும், மற்ற விடய போகங்களில் ஊற் றம் நாளும் நாளும் மிகுந்து கொண்டே போகிறது. இதற்கு மூலகாரணம் என்னுடைய பாவமே. அதைத் தொலைத்தருள வேண்டும்.

ஏழாம் சுலோகத்தின் பொருளாவது: எம் பெருமானாரே! அடியேன் மனித உடலுடன் இருந் தாலும் நடத்தையில் பசுவை யொத்தவன். ஆனா லும், இவன் சாத்திரங்களில் தேறின சகல ஆத்ம குணங்களும் நிறைந்தவன்' என்று அறிவாளிகளும்என் னைப்பற்றித் தங்களுக்குள் ஆதரவோடு பேசும்படி வஞ்சகனாக இருக்கிறேன்.

நைச்சியானு சந்தானமாக அமைந்தவற்றுள் 10-ஆம் சுலோகத்தின் பொருளாவது: எம்பெருமா னாரே! மனம், மெய், சொல் இப்படிப்பட்ட முக்கர ணங்களாலும் எப்போதும் இறைக்குற்றம், இறையடி யார் குற்றம் முதலிய பலவகைக் குற்றங்களிலும் ஈடுபட்ட நான் தங்கட்கு விருப்பமில்லாச் செயல் களைச் செய்துகொண்டு, தாங்கள் உகந்தனவற்றையே செய்பவன் போலக் காலத்தைக் கழிக்கிறேன்.

இறுதியில் எதிராசர்பால் அடைக்கலம் வேண்டும் பாங்கில் அமைந்த சுலோகக் கருத்து வரு மாறு: கருணைக் கடலான எம்பெருமானாரே! தங்கள் திருவடிகளில் வழிபடும் அடியேன் தத்துவம், இதம், புருடார்த்தங்கள் பற்றிய ஞானமில்லாதவன்; ஆத்துமகுணங்கள் சிறிதுமில்லாதவன்; ஆகையால் 'இவன் நம்மைத் தவிர்த்து வேறுபுகலில்லாதவன்' என்று திருவுள்ளம் பற்றி இப்போது அடியேன் விண்

ணப்பம் செய்தவற்றைத் தலைக்கட்டியருள்வதாக ஒப்புதல் தந்தருள வேண்டும். பொன்.செள.

**எதிரிடைப் பரிமாற்றம்**: ஒருவருக்கொருவர் இடையே நிகழும் கொடுக்கல் வாங்கல் முறை பரிமாற்றம் எனப்படுகிறது. இப்பரிமாற்றத்தில் பரிமாறிக் கொள்ளப்படும் பொருள்களின் மதிப்போ சம நிலையோ கணக்கிடப்படாமல், கொடுத்ததுக்கேற்ப மாற்றுப் பொருள் பெறும் தன்மை எதிரிடைப் பரிமாற்றம் (Reciprocal Exchange) எனப்படும். இவ்வகைப் பரிமாற்றத்தில் பொருள்கள், பணம், பணி முதலானவை பெரும்பான்மையான சமுதாயங்களில் பரிமாற்றப் பொருள்களாகக் காணப்படுகின்றன. ஒருவர் கொடுக்கும் பொருள்களுக்கு ஈடாக மற்றொருவரிடமிருந்து உடனுக்குடன் பொருள்கள் கிடைக்க வேண்டுமென்பது இல்லை. எனினும், கொடுப்பவர் எப்போதாவது திரும்பப் பெறுவார் `என்னும் முறை இவ்வகைப் பரிமாற்ற முறையில் காணப்படுகிறது.

எதிரிடைப் பரிமாற்றம் உலகின் அனைத்துச் சமுதாயத்தினரின் பொருளாதார அமைப்பில் முதன்மையான பண்புகளுள் ஒன்றாகத் திகழ்கிறது. எதிரிடைப் பரிமாற்றத்தில் பரிமாறிக்கொள்ளப்படும் பொருளோ பணியோ குறிப்பிட்ட காலத்திற்குள் குறிப்பிட்ட பொருளைப் பெறவேண்டும் என்னும் நிலையில் உறவினை ஏற்படுத்திக் கொள்வதில்லை. ஒவ்வொருவரும் தம் தேவைக்கேற்ப எடுத்துக்கொண்டு விருப்பத்திற்கேற்பத் திருப்பியளிக்கின்றனர். இத்தகு பரிமாற்ற முறைக்குப் பல எடுத்துக்காட்டுகளை இனக்குழுவியலார் (Ethnographers) பல சமுதாயங்களில் கண்டுள்ளனர்.

குங் புசுமன் (Kung Bushmen) பழங்குடியினரிடையே ஒரு குழுவினர் வேட்டையாடவும் உணவுப் பொருள்களைச் சேகரிக்கவும் கூட்டமாகச் செல்கின்றனர். இவர்கள் மாலையில் தங்கள் இருப்பிடத்தை அடைந்து,சேகரித்த பொருள்களனைத்தையும் அனைவருக்கும் பரிமாறிக்கொள்கின்றனர். வேட்டையிலும் உணவு சேகரிப்பிலும் பங்கெடுத்துக் கொண்டோர் தொழிலில் ஈடுபடுகின்றனரா தூங்கிக் கழிக்கின்றனரா என்பதெல்லாம் இவர்கள் பொருட்படுத்திக் கொள்ளாமல் பொருள்களைப் பரிமாறிக் கொள்கின்றனர். மறுநாள் வேறொரு குழுவினர் தாங்கள் சேகரித்த உணவுப் பொருள்களையும் வேட்டையாடிய விலங்குகளையும், முதல் நாள் பரிமாற்றம் செய்தோரோடும் பிறருடனும் பரிமாறிக் கொள்கின்றனர். இங்ஙனம் எதிரிடைப் பரிமாற்றம் இவர்களிடையே தொடர்ந்து நடைபெறும் செயலாகக் காணப்படுகிறது.

தொழில்சாராச் சமூகங்களில், குறிப்பாக உறவுக் குழுக்களில் எதிரிடைப் பரிமாற்றம் மிகுதியாகக் காணப்படுகிறது. ஆனால், அனைத்து எதிரிடைப் பரிமாற்றங்களும் உறவுமுறையினை யொட்டி நடைபெறுகின்றன என்று கூறவியலாது. ஏனெனில், சில காலங்களில் தங்களுக்குத் தேவையான பொருள்களுக்காக உறவினர்அல்லாதாரிடமும் இத்தகு பரிமாற்ற முறை தேவையாகிறது. ஒவ்வொரு சமூகமும் தனக்குத் தேவையான அனைத்துப் பொருள்களையும் உற்பத்தி செய்யமுடியாத நிலையிலுள்ளதே இதற்குக் காரணமாகிறது. எடுத்துக்காட்டாக, வேட்டையாடி உணவு சேகரிக்கும் பழங்குடியினர் தங்களுக்குத் தேவையான சக்கிமுக்கிக்கல், ஊதுகுழல், இரும்புக் கருவிகள் போன்ற பொருள்களுக்காகத் தங்கள் உறவினர் அல்லாதாரிடம் பரிமாற்றம் செய்து கொள்கின்றனர். பழங்குடிச் சமுதாயத்தில் இரு குழுவினர்க்குள் பகைமை நிலவும்போது, பேச முடியா நிலையில் மௌனப் பரிமாற்றம் செய்துகொள்ளுகின்றனர். இம்முறையில் பரிமாற்றம் செய்து கொள்ளப்படும் பொருள்கள் ஓரிடத்தில் வைக்கப்படுகிறது. எதிர்க்குழு இப்பொருட்களைப்பார்வையிடுகின்றது. மனநிறைவு அடைந்தால் மட்டுமே இப்பொருள்களை எடுத்துக் கொண்டு, அதற்குப் பதிலாகத் தம் பொருள்களை விட்டுச் செல்கின்றனர். அங்ஙனம் இல்லையேல் பொருள் சமன்பாடு இல்லை என்பதைக் குறிக்கும் வகையில் பொருள்களை அங்கேயே விட்டுச் செல்கின்றனர். இப்பரிமாற்றத்தின் பண்புகளை எதிரிடைப் பரிமாற்றத்தின் ஒரு பகுதியாகக் கருதுவார் மர்வின் ஆரிசு (Marvin Harris) என்பார்.

இத்தூரிக் (Ituri) காடுகளைச் சார்ந்த குள்ளர்கள் வேளாண்மையினை மேற்கொண்டுள்ள பண்டுப் (Bantu) பழங்குடியினரிடம் வாழைப் பழத்தைக் கொடுத்து இறைச்சியைப் பெறுகின்றனர். இதனைப் போன்றே இலங்கையைச் சேர்ந்த வெத்தர்கள் (Veddas) இரும்புக் கருவிகளைக் கொடுத்துச் சிங்களவரிடமிருந்து தேனைப் பரிமாற்ற முறையில் பெறுகின்றனர்.

உறவுமுறைப் பிணைப்பையொட்டி அமையாமல் நடைபெறும் எதிரிடைப் பரிமாற்ற முறைக்கு மற்றோர் எடுத்துக்காட்டு, 'குலாச் சுழற்சிப் பரிமாற்றம் (Kula Ring Exchange) ஆகும். இது ஒரு சிறப்பான வியாபார உறவு முறையாகும். தங்கள் வியாபாரக் கூட்டாளிகளுடன் சங்கால் செய்யப்பட்ட ஆபரணங்களைப் பரிமாற்றம் செய்து கொள்வதில்தான் குலாப் பரிமாற்றத்தின் முக்கியத்துவமே அடங்கியுள்ளது. திரோபிரியாண்டுத் தீவினரிடையே (Trobriand Islan-

ders) இப்பரிமாற்றம் நடைபெறுகிறது. இவர்கள் தங்கள் அண்டைத் தீவான தோபுத் (Dobu) தீவினருடன் பரிமாற்றத் தொடர்பு கொண்டுள்ளனர். திரோபிரியாண்டுத் தீவினர் வாய்கியா (Vaigeia) எனப்படும் கைவளையல், கழுத்தணிகள் ஆகியவற்றைத் தென் கிழக்குப் பகுதியில் வசிக்கும் தோபுப் (Dobu) பழங்குடியினருக்குக் கொடுத்துப் பதிலாகக் கழுத்தணியினைப் பெறுகின்றனர். தென்மேற்குப் பகுதியில் வசிக்கும் மக்களுடன் பரிமாற்றம் செய்யும் போது திரோபிரியாண்டுத் தீவினர் கழுத்தணியினைக் கொடுத்து மாற்றாகக் கைப்பட்டையினைப் பெறுகின்றனர். இங்ஙனம் கைப்பட்டையும் கழுத்தணியும் எதிரெதிர் திசையில் ஒரு தீவிலிருந்து மற்றொரு தீவிற்குப் பரிமாற்றம் செய்யப்பட்டு, இறுதியாக எந்த இடத்திலிருந்து முதலில் அது பரிமாற்றம் செய்யப்பட்டதோ அவ்விடத்தை அடைகின்றது. மீண்டும் எதிரெதிர் திசையில் பரிமாற்றம் நடைபெறுகின்றது. குடும்பத்தில் நடக்கும் பரிமாற்ற முறை போலன்றி, இவர்களிடையே நடைபெறும் பரிமாற்றத்தில் பரிமாறிக் கொள்ளும் பொருள்களுக்குச் சம மதிப்புடைய பொருள்கள் உடனடியாகப் பரிமாறிக் கொள்ளப் படுவதில்லை.

குழு அளவிலான சமுதாயத்தினரிடையே (Band Society) மனைவியைப் பரிமாற்றம் செய்து கொள்ளும் முறை காணப்படுகிறது. ஒரு கணவன் தன் மனைவியைத் தனது விருந்தினருக்கு அளித்து, அதே சலுகையினை அவர்களிடமிருந்தும் எதிர்பார்க்கிறான்.

எதிரிடைப் பரிமாற்றம் என்பது பழங்குடியினரிடையே மட்டும் காணப்படுவதில்லை. இக்கால ஏனைய மக்களிடையேயும் தொழில் துறையினரிடையேயும் இம்முறை காணப்படுகிறது. திருமணங்கள், குடும்ப நிகழ்ச்சிகள் முதலான சமூக நிகழ்ச்சிகளில் ஒருவருக்கொருவர் பரிசுகளைப் பரிமாறிக் கொள்வதும் இப்பரிமாற்றத்தைக் குறிக்கிறது எனலாம். பரிமாற்றத்தின் இன்றியமையாமை தனிமனித உற்பத்தித் திறன் குறையும் போதோ உடல்நலக் குறைவு, இயலாமை அல்லது தள்ளாமை போன்ற நிலைகளின் போதோ தேவையை ஈடுகட்டும் பொருட்டுத் தோன்றியவையாகும்.

நகர்ப்புற வாழ்க்கை முறையில் உறவு முறையினையொட்டி நடைபெறும் எதிரிடைப் பரிமாற்றங்கள் மிகக் குறைவே. இதற்கு மாறான செயல், குழுவைச் சார்ந்தோரிடையேயும் கிராம மக்களிடையேயும் பரந்து காணப்படுகிறது. ஏனெனில், இங்குப் பொருள்களைக்கொடுத்தல்,வாங்கல் என்பன நம்பிக்கைகளையும், தனிப்பட்ட முக்கியத்துவத்தையும் ஒட்டியே அமைந்துள்ளன. எதிரிடைப் பரிமாற்றத்தில் பொருள்கள் அல்லது பணியினைப் பரிமாறிக் கொள்வது உறவினரிடையே நிலவும் உறவுமுறையையும் சமுதாயப் பிணைப்பினையும் வலுப்படுத்த உதவுகிறது. ம.ந.பு.

துணை நூல்கள்:

**Molinowski, B.,** Argonauts of the Western Pacific, Dutton & Co., New York, 1961.

**Nash, M.,** Primitive and Peasant Economic Systems, Chandler Publishing Co., San Francisco, 1966.

*எதிரிலாப் பெருமாள்* இரண்டாம் இராசாதிராசன் என்னும் அபிடேகப் பெயர் பூண்டு கி.பி. 1163 முதல் 1178 வரையில் 16 ஆண்டுகள் சோழ நாட்டை ஆண்ட சோழ மன்னனின் இயற்பெயரே எதிரிலாப் பெருமாள் என்பது. இவன் தந்தை இரண்டாம் இராசராச சோழனின் தாயத்தினருள் ஒருவனாகிய நெறியுடைப் பெருமாள் ஆவன். இவன் தாயின்பெயர் அறியக் கூடவில்லை. இவன் விக்கிரம சோழன் மகள் ஆளுடை நாச்சியின் பெயரன். இவனுடைய பட்டத்தரசி புவன முழுதுடையாள். உலகுடை முக்கோக்கிழான் அடிகள் என்றும் அவள் குறிக்கப் பெறுகிறாள்.

இவன் ஆட்சிக் காலத்தில் பாண்டி நாட்டிலும் இலங்கையிலும் அமைதியின்றித் தாயாதிகளிடையே அரசுரிமை பற்றிப் போர் அடிக்கடி நிகழ்ந்து கொண்டிருந்தது. பராக்கிரம பாண்டியன் ஈழத்துப் பராக்கிர பாகுவின் துணையுடன் குலசேகர பாண்டியனை எதிர்த்துத் தோற்றுப் போரில் மாண்டான். பராக்கிரமப் பாண்டியனின் மகன் வீரபாண்டியன் தப்பி ஓடி மறைந்தான்.

வெற்றி பெற்ற குலசேகர பாண்டியனை இலங்காபுரி என்னும் இலங்கைத் தளபதி எதிர்த்து இருமுறை தோற்கடித்தான். இரண்டாம் முறை குலசேகரனை மதுரையிலும், திருவில்லிபுத்தூரிலும், சாத்தனேரியிலும் தோற்கடித்துப் பின் குலசேகரன் பாளையங்கோட்டையில் தங்கியிருப்பது அறிந்து அங்கும் தொடர்ந்து வந்து தாக்கினான். அப்போது பாண்டியன் குலசேகரன் வேண்டுகோளுக்கு இணங்கி, அவன் துன்பத்தை உணர்ந்து எதிரிலாப் பெருமாள் தன் சோழப்படையைப் பெருமாள் நம்பிப் பல்லவராயன் தலைமையில் அனுப்பி ஈழப்படையை முறியடித்துப் பாண்டியனைக் காத்து மீண்டும் பாண்டி நாட்டு மன்னனாக்கினான்.

பின்னர், இலங்கைப் பராக்கிரம பாகுவின் மருமகன் சீவல்லபன் என்பான் தன் மாமனை வென்று இலங்கை அரசைக் கைப்பற்றச் சோழன் எதிரிலாப் பெருமாள் உதவியை நாடினான். அவனுக்கு உதவும் பொருட்டுத் தன் படையை ஈழத்துக்கு அனுப்பிப் போரிட்டான். அவ்வாறு அங்குச் சோழப்படை போரிட்டுக் கொண்டிருந்தபோது குலசேகர பாண்டியன் முன் தன் பகைவனாகிய இலங்கைப் பராக்கிரமப் பாகுவுடன் சேர்ந்துகொண்டு, துன்புறுகாலத்தில் தனக்குத் துணையான சோழன் எதிரிலாப் பெருமாளை எதிர்த்தான். சீற்றமுற்ற சோழன் எதிரிலாப் பெருமாள் பாண்டிய ஆட்சியிலிருந்து குலசேகரனை அகற்றி, முன்பு ஓடி மறைந்த வீரபாண்டியனை அழைத்து வந்து பாண்டி நாட்டு மன்னனாக்கினான். இப்போர்களில் இவன் பெற்ற வெற்றியை நினைவுகூர்தற் பொருட்டு 'ஈழமும் மதுரையும் கொண்டருளிய தேவன்' என இவன் பாராட்டப் பெற்றான்.

இரண்டாம் குலோத்துங்கன் (கி.பி. 1133-50) மீது தாம் பாடிய குலோத்துங்கன் பிள்ளைத்தமிழில் ஒட்டக்கூத்தர் குலோத்துங்கனை அபயன், எதிரிலாப் பெருமாள் என்று பலகால் குறிப்பிடுகிறார். ஒட்டக்கூத்தர் இங்குச் சிறப்பாகக் குறிப்பிடும் எதிரிலாப் பெருமாள் என்னும் இரண்டாம் குலோத்துங்கன் வேறு; எதிரிலாப் பெருமாள் என்னும் இயற்பெயர் கொண்ட இரண்டாம் இராசாதிராசன் வேறு. இவன் அவன் உடன்பிறந்தாள் ஆளுடைநாச்சியின் பெயரன் ஆயினமையின் அவன் சிறப்புப் பெயரை இவன் இயற்பெயராகப் பெற்றது குடி மரபே ஆகும். இவனுக்குக் கரிகாலன் என்னும் சிறப்புப் பெயர் ஒன்று இருந்ததாகவும் தெரிகிறது.

பொன்.சௌ.

**எதிரொலிச் சொற்கள்**: ஒரு சொல்லை இரண்டு முறை தொடர்ச்சியாகப் பயன்படுத்தல் உண்டு. எடுத்துக்காட்டாகப் 'பாம்பு பாம்பு என்று கத்தினான்', 'கடகட என்று சிரித்தான்' என்ற வாக்கியங்களிலுள்ள 'பாம்பு பாம்பு', 'கடகட' என்ற சொற்றொடர்களைக் கூறலாம். இந்த இரண்டு சொற்றொடர்களுள் 'பாம்பு பாம்பு' என்பது அடுக்குத்தொடர் எனவும், 'கடகட' என்பது இரட்டைக் கிளவி எனவும் கூறப்படும். இந்த இரண்டினும் வேறாக வழங்கும் 'கண்ணன் கிண்ணன்', 'தம்பி கிம்பி' என்பன போன்ற சொற்றொடர்கள் எதிரொலிச் சொற்றொடர்கள் எனப்படும். இந்த எதிரொலிச் சொற்றொடர்களிற் காணப்படும் 'கிண்ணன், கிம்பி' ஆகியவை எதிரொலிச் சொற்கள் (Echo Words) என்று சொல்லப்படும். எதிரொலிச் சொற்களின் அமைப்புப் பின்வருமாறு அமைந்துளது.

CVX → KIX மெய் உயிர் குறில் பிற → கி பிற

CVVX → KIIX மெய் உயிர் நெடில் பிற → கீ பிற

(C = மெய், V = இகரம் அல்லது ஈகாரம் தவிர்த்த உயிர்; X = முதலசையை அடுத்து வரும் ஒலிகள்)

சொல்லின் முதலசையில் இகரம் அல்லது ஈகாரம் வந்த சொற்கள் பெரும்பாலும் எதிரொலிச் சொற்களாக மாறுவதில்லை. எதிரொலிச் சொல்லுக்கு என்று சிறப்பான அகராதிப் பொருள் எதுவும் கிடையாது; 'அது போன்றது' (and/or the like) என்ற ஒரு பொதுப் பொருள்தான் உண்டு; 'மாடு கீடு' என்பது மாடு அல்லது அதுபோன்றது என்ற பொருள்படும்.

இந்தியாவிலுள்ள ஆரியம், முண்டா, திராவிடம் ஆகிய மூன்று மொழிக் குடும்பங்களிலும் எதிரொலிச் சொற்கள் காணப்படுகின்றன.

தமிழ்:

காடு — கீடு

பணம் — கிணம்

ஆனை — கீனை

மலையாளம்:

வெள்ளம் — கிள்ளம்

பழம் — கிழம்

எல்லு — கில்லு

தோடா:

நரி (nari) 'fox' — கிரி (xiri)

உப் (up) 'salt' — கிப் (xip)

காக் (Kaak) 'crow' — கீக் (kiik)

குடகு:

நரி (nari) 'fox' — கிரி (giri)

கன்னடம்:

அரி (ari) 'rice' — கிரி (giri)

உப்பு (uppu) 'salt' — கிப்பு (gippu)

தெலுங்கு:

குர்ரமு (Gurramu) 'horse' — கிர்ரமு (Girramu)

கோலாமி:

தீன் (Tiin) 'to eat' — கீன் (Giin)

மாசுர் (Maasur) 'people' — கீசுர் (Giisur)

கி அல்லது கீ முதல் எதிரொலிச் சொற்கள் மேலே உள்ளன. இவையே யன்றி வேறு விதமாக அமைந்த எதிரொலிச் சொற்களையும் இந்திய மொழிகளிற் காணலாம்.

தமிழ்:

கொஞ்சம் — நஞ்சம்

ஏழை — பாழை

கன்னடம்:

கிலி (Gili) 'Parrot' — பலி (Pali)

கோலாமி:

கூதெல் (Kuutel) 'Cows' — மூதெல் (Muutel)

பால (Baala) 'Child' — சூல (Suula)

நாய்க்கி:

அபர் (Apar) 'House' — முபர் (Mupar)

பாய் (Paay) 'Bread' — மூய் (Muuy)

பிராகூய்:

உல்லி (Ullii) 'Horse' — முல்லி (Mullii)

உரா (Uraa) 'House' — முரா (Muraa)

முண்டா மொழிகளிலும் m- முதல் எதிரொலிச் சொற்கள் உண்டென்பர். பஞ்சாபி மொழியுடன் தொடர்புடைய தோகிரி (Dogri) என்ற மொழியிலும் எதிரொலிச் சொற்கள் உள்ளன. அவை பெரும்பாலும் ஸ்,ம், உ ஆகியவற்றினுள் ஒன்றினை முதலாகக் கொண்டு அமைந்துள்ளன. மற்றும் இந்தி மொழியில் 'Jal-ul', haat-uth; வங்காள மொழியில்' Jal-tal', hat-tat; குசராத்தி மொழியில் 'Haath-bath' மராத்தி மொழியில் 'Dzal-bil,' ghoda-bida' ஆகிய எதிரொலிச் சொற்கள் உள.

வடமொழியிலும் கிரீக்கு, இலத்தீன் போன்ற ஐரோப்பிய மொழிகளிலும், குருக்கு, மால்ட்டோ, கூய், கொண்டா, கோண்டி, கதபா, பர்சி போன்ற வட, நடுத் திராவிட மொழிகளிலும் எதிரொலிச் சொற்கள் இல்லை என்று அறிஞர்கள் கூறுவார்கள்.

அ.கா.

துணை நூல்கள்:

**Emeneau,M.B.**, Echo-words in Toda, New Indian Antiquary, Vol. I, 1938.

**Gawri Sankar**, A Short Account of Dogri Dialect, Indian Linguistics, Vol.I, 1931.

**எதீந்திரப் பிரவணப் பிரபாவம்**: எதீந்திரர் என்பது இராமானுசரைக் குறிக்கும் பெயர்களுள் ஒன்று. அவர்பால் ஈடுபாடு கொண்டு அவர்தம் புகழைப் பரப்பிய மணவாள மாமுனிகள் எதீந்திரப் பிரவணர் எனப் பெறுவார். எதீந்திரப் பிரவணத்தைப் பொலியச் செய்த பாங்கினை எதீந்திரப் பிரவணப் பிரபாவம் என்று கருதலாம். எதீந்திரரின் பிரவணத்தைப் பொலியச் செய்தலில் மணவாள மாமுனிகளின் பணி என்பதாக இதனைக் கொள்ளலாம். இளையாழ்வார் என்றும், எம்பெருமானார் என்றும், உடையவர் என்றும், எதிராசர் என்றும், எதீந்திரர் என்றும் சிறப்புப் பல பெற்றவர் இராமானுசர். இவர் சிரீவைணவ மரபைத் தழைத்தோங்கச் செய்தவர்; விசிட்டாத்துவிதம் கண்டவர். இவர்தம் சமயப்பணியின் பயனாக 'நாட்டிய நீசச் சமயங்கள் மாண்டன; நாரணனைக் காட்டிய வேதம் களிப்புற்றது; தென்குருகை வள்ளல் வாட்ட மிலா வண் டமிழ்மறை வாழ்ந்தது' என்று திருவரங்கத்த முதனார் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

எம்பெருமானார் வழியில் நின்று எம்பெருமானாரே மீண்டும் அவதரித்ததுபோல வைணவத் திருப்பணி ஆற்றியவர் எதீந்திரப் பிரவணர் ஆன மணவாள மாமுனிகள் ஆவார். தாம் இயற்றிய உபதேச ரத்தினமாலையில் ஆசாரிய பரம்பரையில் எம்பெருமானாராகிய இராமானுசருக்குரிய சிறப்புகள் பலவற்றையும் விளங்கப்பாடியுள்ளார். இவர் வடமொழியில் இருபது பாடல்கள் கொண்ட எதிராச விம்சதி என்ற நூலை இயற்றி, எதிராசராகிய இராமானுசரின் சிறப்பினைப் புலப்படுத்தியுள்ளார்.

திருவரங்கத்திலும் ஆழ்வார்திருநகரியிலும் இராமானுசராகிய எதீந்திரர்பால் தமக்குள்ள ஈடுபாட்டால் அவரோடு உடனாக எழுந்தருளக் கூடாது என்றும், அங்குத் தனக்குத் தனிவிழா கூடாது என்றும், கருதித் தன் திருமேனியை வாமனன் போலச் சிறுகப் பண்ணிக் கொண்டதால் இவர்தம் எதீந்திர ஈடுபாடு நன்கு விளங்குகிறது என்பர். மணவாள மாமுனிகள் தம் இறுதிக்காலத்தில் இயற்றிய 'ஆர்த்திப் பிரபந்தத்தில்' அவர்தம் எதீந்திரர் ஈடுபாடு நன்கு விளங்குகிறது.

பொன்.சௌ.

**எதுகை:** இது தொல்காப்பியம் கூறும் செய்யுள் உறுப்புகள் முப்பத்து நான்கனுள் ஒன்றாகிய தொடை என்னும் உறுப்பின் வகையினைச் சேர்ந்ததாகும். செய்யுளடிகள் ஒன்றோடொன்று தொடுக்கப்பெறுவதால் அமையும் சிறப்பினால் அவ்வுறுப்புத் 'தொடை' எனப்பட்டது. அத்தொடை மோனை, இயைபு, எதுகை, முரண், அளபெடை, அந்தாதி, இரட்டை, செந்தொடை என்று எட்டு வகைப்படும் என்பதனை யாப்பருங்கலக் காரிகை உரையாசிரியரும் பிறரும் விளக்கியுள்ளனர். அவற்றுள், 'எதுகை' என்பது ஒரு செய்யுளில் உள்ள அடிதோறும் முதற்கண் உள்ள இரண்டாவது எழுத்து ஒன்றி வருமாறு அமைக்கப்படுவதாகும். முதல் எழுத்து மோனை எனப்படும்.

செய்யுளுக்குக் கூறப்பட்டுள்ள உறுப்புகள் பலவும் ஒவ்வொரு வகையால் சிறப்புடையனவாயினும், அவற்றுள் எதுகையும் மோனையும் ஆகிய இரண்டும் மிக்க சிறப்பினவாகும். செய்யுள் என்பது ஒலிச் சிறப்பினால் அமையும் ஓசை வடிவமாதலின், அவ்வோசை நயத்தினைச் செய்யுளில் உண்டாக்கப் பயன்படுவது எதுகை மோனையாகிய இவ்விரண்டுமேயாகும். இவற்றின் சிறப்பு அமைந்தால் உரைநடையும் செய்யுட்சாயல் கொண்டு இனிமை பயக்கும். 'எகனை மொகனை இல்லாமல் பேசுகிறான்' என்னும் பேச்சு வழக்குத் தொடரும் எதுகை மோனைகளின் சிறப்பினை உணர்த்தும்.

எதுகையினை யாப்பருங்கலம், 'இரண்டாம் எழுத்தொன்றியைவதே எதுகை' என்றும் (யாப்ப.36), யாப்பருங்கலக் காரிகை 'இரண்டாம் வழுவா எழுத்தொன்றின் (மாதே) எதுகை' என்றும் (காரிகை.16) விளக்குகின்றன. செய்யுளடிகளில் இரண்டாம் எழுத்து ஒத்து வந்தாலும் முதல் எழுத்து அளவு ஒத்து இருத்தல் வேண்டும் என்பதனை உரையாசிரியர்கள் உரையிற்கோடல் என்னும் உத்தி கொண்டு எடுத்துக்காட்டியுள்ளனர். ஒரு செய்யுளின் முதலடி கட்டு என்று அமையுமானால் இரண்டாமடியில் பட்டு, எட்டு போன்றன எதுகையாக அமையுமேயன்றிப் பாட்டு, காட்டு போன்றன அமையா; முதலடி காட்டு என்று தொடங்குமாயின், இரண்டாமடியில் பாட்டு, ஓட்டு முதலியன எதுகையாக அமையுமேயன்றிப் பட்டு, ஒட்டு முதலியன அமையா. இரண்டாம் எழுத்தாகிய எதுகை அமைவதில் முதல் எழுத்தாகிய மோனையின் மாத்திரை இன்றியமையாத காரணமாக உள்ளது.

ஒரு செய்யுளின் அடிகள்தோறும் இரண்டாம் எழுத்து ஒத்து நிற்கப் பாடுவதோடு, ஓரடியிலமைந்துள்ள சீர்கள் தோறும் உள்ள இரண்டாம் எழுத்து ஒத்து எதுகை அமையப் பாடுவதும் உண்டு. ஓரடியிலமைந்த சீர்களில் எதுகை முதலான தொடைகளைக் காண்பது பொதுவாக நாற்சீர் அடிக்கண்ணேயாகும். ஓரடிக்குள்ளே அமையும் எதுகை இணையெதுகை, பொழிப்பெதுகை, ஒரூஉ எதுகை, கூழை எதுகை, மேற்கதுவாய் எதுகை, கீழ்க்கதுவாய் எதுகை, முற்றெதுகை என ஏழுவகைப்படும். அவை அடி எதுகையோடு சேர, எதுகை எண்வகையாக அமையும்.

அடியின் முதலிரு சீர்க்கண் எதுகை அமைவது இணைஎதுகை எனப்படும். அவ்வாறே, முதற்சீர் மூன்றாஞ்சீர் ஆகியவற்றில் அமைவது பொழிப்பெதுகை என்றும், முதற்சீர் நான்காஞ்சீர் ஆகியவற்றில் அமைவது ஒரூஉ எதுகை என்றும், முதல் மூன்று சீர்க்கண்ணும் அமைவது கூழை எதுகை என்றும், ஒன்று, மூன்று, நான்கு ஆகிய சீர்க்கண் அமைவது மேற்கதுவாய் எதுகை என்றும், ஒன்று, இரண்டு, நான்கு ஆகிய சீர்க்கண் அமைவது கீழ்க்கதுவாய் எதுகை என்றும், நான்கு சீர்க்கண்ணும் அமைவது முற்றெதுகை என்றும் கூறப்படும்.

ஒரு செய்யுளின் அடிகள்தோறும் முதற்கண் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது அடி எதுகை எனப்பட்டது. அச்செய்யுளடிகளின் ஈற்றில் இரண்டாம் எழுத்து ஒன்றி வருமாறு அமைவது, 'எதுகை இயைபு' என்று கூறப்படும். எதுகையாய் அமையும் சொல் பொருள் முரண்பட அமையுமாயின் அது 'எதுகை முரண்' எனப்படும். 'இன்பம்விழையான் வினை விழைவான் தன்கேளிர், துன்பம் துடைத்தூன்றும் தூண்'(குறள். 615) என்னும் திருக்குறளினை எதுகை முரணுக்கு எடுத்துக்காட்டாக யாப்பருங்கல உரையாசிரியர் தந்துள்ளார்.

இரண்டாம் எழுத்து ஒன்றி வாராவிடினும், இரண்டாம் எழுத்தின் மேல் ஏறிய நெடிலெழுத்து ஒத்து வருதல் நோக்கிஅதனை 'நெடிலெதுகை' எனக் கொள்ளுவர். அவ்வாறே இரண்டாம் எழுத்து ஒத்து வாராவிடினும்,அவ்வெழுத்தில் உள்ள மெய்யெழுத்தின் வருக்க எழுத்து ஒத்திருப்பது கொண்டு அவை வருக்கஎதுகை என்று கொள்ளப்படும். இவ்வகையில் நீடிணர், பாடும்வண், தோட்டார், பாடமை என்னும் நான்கு சீர்களும் ஒரு நாலடிச்செய்யுளின் அடிதோறும் முதற்சீராக அமைய, வருக்க எதுகையாகக் கருதப்படுகின்றன. இரண்டாம் எழுத்தில் அமைந்துள்ள மெய் எழுத்திற்கு இனமான பிற மெய்யெழுத்துகளைக் கொண்டமைந்தாலும் அது நீக்கப்படாமல், இன எதுகை என்று கொள்ளப்படும். இவ்வகையில் வல்லின எதுகை, மெல்லின எதுகை, இடையின எதுகை என்று மூன்றுவகையாகவும் எதுகை கொள்ளப்படுகிறது. 'தக்கார்' என்னும் குறளில் (குறள்.114)'எச்சத்தால்'என்பது

வல்லின எதுகையாகவும்;'அன்பீனும்' என்னும் குறளில் (குறள்,74) 'நண்பெண்ணும்' என்பது மெல்லின எதுகை யாகவும், 'எல்லா விளக்கும்' என்னும் குறளில் (குறள். 299). 'பொய்யா' என்பது இடையின எதுகையாகவும் கொள்ளப்படுகின்றன.

ஒரு செய்யுளின் அடிதோறும் சீர் முழுவதும் ஒன்றி வருவது தலையாகுஎதுகை என்றும், அடிதோறும் இரண்டாம் எழுத்துமட்டும் ஒன்றி வருவது இடையாகு எதுகை என்றும், வருக்கஎதுகை, இன எதுகை முதலிய பிறவகையால் அமைவது கடையாகுஎதுகை என்றும் கருதப்படுகின்றன. அ.மா.ப.

**எதேச்சாதிகாரத் தலைமை**: மக்களுக்குச் சட்டமன்றத்தின் வாயிலாகப் பொறுப்போடு இல்லா மல், தம் விருப்பத்தின் பேரில் சட்டங்களை வகுத்து ஆட்சி செய்யும் முறையைக் கையாளுதலே எதேச் சாதிகாரத் தலைமை (Autocratic Leadership) என்று கூறப்படும். ஆகையால், எதேச்சாதிகார ஆட்சி என் பது தாராள இயல்புடைய குடியாட்சி முறைக்கு நேர்முரணான ஒன்று என்ற கருத்தும், அந்த எதேச் சாதிகார ஆட்சியும் தலைமை ஏற்றுள்ள ஒரு வருடைய அறிவையும் திறத்தையும் சார்ந்தே இருக் கின்றது என்ற கருத்தும் எதேச்சாதிகாரத் தலைமை என்ற தொடரிலிருந்து பெறப்படுகின்றன.

நாட்டின் அரசாங்கத் தலைமை அதிகாரத்தைக் கையாளும் ஆட்சியாளர், மக்கள் தங்களுடைய சுதந் திரமான விருப்பத்தைத் தங்களுடைய வாக்குகளின் வழியாகத் தெரிவிக்க, அவர்களுடைய தீர்ப்பின்படி ஆண்டு, நாட்டின் அடிப்படைச் சட்டமாகிய அரசிய லமைப்புச் சட்டத்தின் வரம்புகளுக்கு உட்பட்டு, அவற்றுக்கு மதிப்புக் கொடுத்து, பெரும்பாலான மக்களுடைய ஆதரவை இழக்கும்போது பதவி விலகி, மக்களுடைய பெரும்பான்மை ஆதரவைப் பெறு கின்ற வேறொருவர் பதவி ஏற்பதற்கு வழி விடுவா ராயின், அவருடைய ஆட்சி குடியாட்சி இயல்புடைய தாகும். மக்களுடைய சுதந்திரமான ஆதரவை வாக் கெடுப்பின் வழியாகப் பெறாமல், அவர்களுடைய உணர்ச்சிகளை மட்டும் தூண்டி, நாவன்மையால் அவர்கள் தம்மை நம்புமாறு செய்து, ஆட்சியைப் பெற்று, எல்லா அதிகாரங்களையும் தம்மிடம் குவித்து வைத்துக்கொண்டு, எவருக்கும் பொறுப் பில்லாமல், சட்ட வரம்புகளை மீறித் தம் விருப்பம் போல் ஆளுதலே எதேச்சாதிகாரத் தலைவரின் இயல்பு ஆகும். ஆட்சிக் கோட்பாட்டை வகுத்து முடி வெடுக்கவும் அதை நிறைவேற்றும் அலுவலரைக் கட்டுப்படுத்தி ஆட்சியைச் செவ்வனே நடத்தவும் திறமையுடைய ஒருவர் ஆட்சித் தலைமை ஏற்பது இன்றியமையாதது. இத்தகைய தலைமை குடியாட்சி முறையிலும் எதேச்சாதிகார முறையிலும் காணப் பட்டாலும், குடியாட்சி முறைத் தலைமையே விரும் பத்தக்கது. ஏனெனில், அது மக்களுடைய சுதந்திர மான தீர்ப்புக்கும் நாட்டின் அடிப்படைச் சட்டத் துக்கும் மதிப்புக் கொடுத்துப் பொறுப்புடனிருக்கும் ஆட்சியாகும்.

**எதேச்சாதிகார ஆட்சியின் இயல்புகள்**: எதேச் சாதிகார ஆட்சி முறையில் தனி ஆளின் உயிர் அவருக்கு உரிய உடைமை அன்று; அது நாட்டின் பணிக்காக நாட்டினால் அவருக்குப் பொறுப்பாக வழங்கப்பட்ட ஒன்று ஆகும். அனைத்ததிகாரமுடைய அரசு அல்லது நாடு என்பதற்குத் தத்துவ வடிவில் ஒரு விளக்கம் கொடுத்தவர் கி.பி. 19-ஆம் நூற் றாண்டில் வாழ்ந்த செருமானியச் சிந்தனையாளர் வான் பிரடரிக்கு எகல் (Von Frederick Hegal) என்பவர் ஆவர். மனித வாழ்வுக்கு அரசு என்ற சமூக அமைப்பு இன்றியமையாததாக இருப்பினும், அரசு நிலவுலகிலுள்ள கடவுளே ஆகும். அது வரலாற்றில் வீறு நடைபோடும் கடவுளே ஆகும். அறிவின் பருப் பொருள் வடிவமும் அதுவே; நடைமுறைச் சுதந், திரத்தைச் செயற்படுத்துவதும் அதுவே; தனியாட்க ளெல்லாம் அரசுக்காக வாழுகின்ற கருவிகளே தவிர அவர்கள் முடிந்த முடிபாக இருத்தல் இயலாது. அரசுதான் குறிக்கோள். அது கருவி அன்று என்று எகல் தமது அரசு பற்றிய இலட்சியக் கோட்பாட்டில் கூறினார். இக்கோட்பாட்டினின்றே அனைத்ததிகார முடைய அரசு என்ற கோட்பாட்டைக் காரல் மார்க் சும் (கி.பி. 1818–1883), பாசிசக் கோட்பாட்டை முசோ லினியும் தேசிய சம நிலைக் கோட்பாட்டை இட் லரும் வகுத்தனர். காரல் மார்க்சு தொழிலாளரின் எதேச்சாதிகாரம் என்ற கோட்பாட்டைத் தம் பொது வுடைமைக் கோட்பாட்டின் ஒரு கூறாக வைத்தார். முசோலினி, 'எல்லாம் அரசினுள் அடங்கும்; எதுவும் அரசுக்குப் புறம்பாக இருத்தலியலாது; எதுவும் அரசுக்கு முரணாக இருத்தலும் இயலாது' என்று கூறினார். நாட்டிலுள்ள மக்கள் தம் விருப்பக் குழுக் களை அமைத்துப் பல்வேறு வாழ்க்கைத் துறைகளில் வளர்தலைப் பாசிச எதேச்சாதிகாரம் தடுத்து, அவை யெல்லாம் அரசினதிகாரப் போக்கில் செயற்படுமாறு கட்டுப்படுத்தியது. எதேச்சாதிகாரத் தலைவருடைய ஆட்சி அதிகாரம், மக்களுடைய சமய நெறி, ஒழுக்க விதிகள், கல்வி முதலிய தனிவாழ்வுக்குரிய துறை களைக் கட்டுப்படுத்துகிறது. சுதந்திர அறிவு வளர்ச்சியை எதேச்சாதிகாரத் தலைமை கட்டுப் படுத்துகிறது. அது மனித உணர்வுகளுக்கும் விருப்பங் களுக்கும் முதலிடம் கொடுக்கிறது. அறிவாராய்வுக்கு முதலிடம் தருவதில்லை. அறிவாராய்வுத்திறனை

வளர்ப்பதற்கு உரியவர் எதேச்சாதிகாரத் தலைவரே ஆவர். இட்லர் தம் 'எனது போராட்டம்' (Mein Kampf) என்ற நூலில் தேசிய சமநிலைக் கோட்பாடு என்பது தூய பண்புடைய மக்கள் இனத்தவர் வாழும் நாட்டைப் பற்றிய கோட்பாடே (Nationalism is the Theory of the 'Folkish' State) என்று கூறுகிறார்.

'தூய மக்களின் நாட்டின் மிக உயர்ந்த குறிக்கோள் எது என்றால், உயர்தர மனிதரின் அழகையும் மதிப்பையும் தோற்றுவித்தலிலும், நாகரிகத்தை ஏற்படுத்துதலிலும் நாட்டம் செலுத்துதலே ஆகும். ஆகையால், மிக உயரிய சுதந்திரத்தை அடைய உதவுகின்ற கருத்துகளையும் ஆன்மிகத் திறமைகளையும் பயிற்சியின் வழியாகப் பெறவும், ஆரிய தேசிய இனத்தைப் பாதுகாக்கவும் வல்ல ஓர் அரசுதான் உயிருடனுள்ள அமைப்பு என்று ஆரியராகிய நாம் நம்புகிறோம்' என்று இட்லர் கூறினார்.

தனியாட்கள் இவ்வாறு தூய இனப்பண்பாகிய உறவின் வழியாக ஒருவரோடொருவர் பிணைக்கப்படுகின்றனர். அவர் கொண்டுள்ள ஒழுக்கவியலான மதிப்பீடுகள் பற்றிய கருத்துகளும் அழகு பற்றிய மதிப்பீடுகளும் அறிவியல் பற்றிய மதிப்பீடுகளும் அவருக்கு மற்ற ஆட்களின் தொடர்பிலிருந்தே கிடைக்கின்றன. எனவே, தனியாட்கள் திறமையிலும் மதிப்பிலும் ஒருவருக்கொருவர் சமத்துவமுடையவர் ஆகமாட்டார். அவர்களிடையே இயற்கையிலேயே உயர்ந்தவர்களும் இயற்கையிலேயே தாழ்ந்தவர்களும் இருக்கின்றனர். ஆகையால், மக்களிடையே அறிவிலும் தகுதியிலும் உள்ள ஏற்றத்தாழ்வுகளை வெளிப்படுத்துவனவாக அரசியல், சமூக நிறுவனங்கள் இருத்தல் வேண்டும். இந்நிறுவனங்களுக்கெல்லாம் நடுவில் தலைவர் இருக்கிறார். அவரைச் சுற்றி அவருக்கு அண்மையிலுள்ள ஆதரவாளரும், கடைநிலையில் அவரால் ஆளப்படுதற்குரிய, திறமைக் குறைவுடை அளவிற் பெரிய தனியாட்கள் கூட்டமும் இருக்கின்றனர். தேசிய சமநிலைச் சமூகத்திலும் அரசியலிலும் சாதாரண மக்கள், ஆளும் வல்லுநர் குழாம் (Elite), தலைவர் (Leader) ஆகிய மூன்று கூறுகள் இருக்கின்றன. தலைவருடைய வரம்பற்ற அதிகாரத்தை நியாயமானதென்று இட்லர் கூறுகிறார்.

'சாதாரண மக்களடங்கிய பெருங்கூட்டம் என்பது இயற்கையின் ஒரு பகுதியே. அவர்கள் விரும்புவனவெல்லாம் வலிமையுடையோர் வெற்றி பெறுதல், வலியற்றோர் அழிந்து படுதல் அல்லது வரம்பில்லாத கட்டுப்பாட்டுக்குள் வருதல் ஆகியவையே'.

தேசிய சமநிலை அரசின் உயர்நிலையில் தலைவர் இருக்கிறார். நாட்டின் எல்லாச் செயல்களும் அவர் பெயரால் செய்யப்படுகின்றன. அவரே எல்லாச் செயல்களுக்கும் பொறுப்புடனிருக்கிறார். ஆனால், அவருடைய செயல்களை எவரும் தட்டிக் கேட்கவியலாது. தலைவருக்கும் மக்களுக்கும் இடையேயுள்ள தொடர்பு எவருக்கும் அறிவுக்கெட்டாத வகையில் அமைந்துள்ளது. இத்தொடர்பைக் கவர்ச்சி இயல்பான தொடர்பு (Charismatic) என்று மாக்சு வெபர் (Max Weber) என்ற செருமானியச் சமூகவியலாசிரியர் கூறுகிறார். தலைவர் ஒரு மந்திர ஆற்றலுள்ள தாயத்துப் போல்பவர். அவர் மக்களிடமிருந்து முளைத்த ஒரு கிளை ஆவர். அம்மக்களினத்தில் அவருக்குள்ள ஆதாரத்திலிருந்தே அவர் தம் அதிகாரங்களை எல்லாம் பெறுகிறார். அவர் மக்களிடத்திலுள்ள உள்ளார்ந்த இயல்புகளுக்கேற்ப அவர்களை வழிநடத்துகிறார். அவரே தூய இன மக்களின் தலைவர் அல்லது பேரறிஞர் ஆவார். அவர் வெறும் கோட்பாட்டாளரல்லர்; ஒரு கல்வியாளருமல்லர். ஆனால், அவர் செயலறிவுடைய உள இயலறிஞர் (A Practical Psychologist) ஆவார். அவர் அமைப்புத் திறனுடையவர்; தம்மை எதிர்க்காமல் கீழ்ப்படியக்கூடியவர்களைப் பெருமளவில் திரட்டக்கூடிய ஆற்றல் மிக்கவர்; நாவன்மை உடையவர்; பெருங்கூட்டங்களைத் திரட்டி இரவில் உரையாற்றிப் பல அடையாளங்களைப் பயன்படுத்தி, மக்களைத் தம்பால் ஈர்க்கும் அரிய ஆற்றல் படைத்தவர்.

**எதேச்சாதிகாரத் தலைமையின் மறைவு:** இவ்வாறு எதேச்சாதிகாரத் தலைவர்கள் மக்களுடைய ஆதரவைப் பெற்று, பல நற்பணிகளைச் செய்தாலும், முடிவில் அவர்களுடைய போக்கு உலகப் போரை (1939-45) விளைவித்தமையால், எதேச்சாதிகாரத் தலைமை மறைந்தது.அரசும் தலைவர் பதவியும் தேவையே எனினும், அவையும் மக்களுக்குப் பொறுப்பின்றிச் சட்டத்துக்குக் கட்டுப்படாமல் பணி செய்தலியலா என்பதை வரலாறு காட்டுகிறது. கூடி வாழும் இயல்போடு, சுதந்திரமாக வாழும் இயல்பையும் மனிதன் உடையவன். ஆகையால், குடியாட்சித் தலைமையே சிறந்ததென வரலாறு நிறுவியுள்ளது.

பா.கு.

**துணை நூல்கள்:**

**Alan Bullock**, Hitler: A Study in Tyranny, New York, 1939.

**William Ebustin**, Rasciet Italy, New York, 1939.

**William Ebeustin,** The Nazi State, New York, 1943.

**எந்திரமயமாக்கல்:** அறிவியல் வளர்ச்சியின் விளைவாகத் தொழிற்றுறை, வேளாண்மைத் துறை, பணித் துறை ஆகியவற்றின் உற்பத்தியிலும் பணியிலும் நுட்ப முறைகளைப் பின்பற்றி, எந்திரங்களை மிகையாகப் பயன்படுத்துதல் எந்திரமயமாக்கல் (Mechanisation) எனப்படும். எந்திரங்கள் மனித உடல் உழைப்பைக் குறைத்துப் பொருளாதார முன்னேற்றத்திற்கு அடிப்படையாக விளங்குகின்றன. எந்திரமயமாக்கல் பொருளாதாரச் சமூக அமைப்பில் மாறுதல்களை உண்டாக்குவதால் தொடக்க காலத்தில் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. எனினும், நீண்ட காலத்தில் நற்பயன்கள் உண்டாகின்றன. பொருளாதார நடவடிக்கைகள் ஒன்றுக்கொன்று சார்ந்தும் பின்னிப் பிணைந்தும் செயற்படும் நிலையை எந்திரமயமாக்கல் உருவாக்குகிறது. அதனால், பொருளாதாரத் துறை விரிவடைதலின் உட்பிரிவுகள்பல சிறப்புப் புலங்களாக (Specialised Sectors) வளர்ச்சியடைகின்றன. இவற்றினிடையே சார்பு இணக்க நிலையும் (Comply), பதிலீட்டுத் தன்மையும் (Subsititutes) உருவாகின்றன. கடின உழைப்பை எந்திரங்கள் நிறைவேற்றுவதால் மனிதன் தன் முழுக்கவனத்தையும் உழைப்பையும் அறிவு வளர்ச்சியில் செலுத்த முயல்கிறான். அறிவை மேலும் மேலும் பெருக்கி அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சியில் உயர்நிலையில் மனிதன் சென்று கொண்டேயிருக்கிறான். அதனால், வசதிகள் பெருக்கமடைந்து, மனித வாழ்க்கைத் தரம் உயருகிறது.

**தொழிற்றுறையில்:** வளர்ச்சியடைந்த நாடுகள் கி.பி. 18, 19-ஆம் நூற்றாண்டுகளில் புதிய கண்டுபிடிப்புகளின் மூலம் எந்திரங்களை மிகுதியாகப் பயன்படுத்தியதைத் தொடர்ந்து, தொழிற்புரட்சி ஏற்பட்டுப் பொருளாதாரக் கோட்பாட்டிலும் குறிக்கோளிலும் பேரளவில் மாற்றங்கள் ஏற்பட்டன. குறிப்பாக, வேலைப் பகுப்பு (Division of Labour), சிறப்புத் தொழில் (Specialised Industries), பேரளவு உற்பத்தி (Mass Production) போன்றவை வளர்ச்சியடைந்தன. உற்பத்திச் செலவுகள் குறைந்தன. உழைப்பின் ஆக்கத்திறன் (Productivity of Labour) உயர்ந்தது மட்டுமன்றி, உழைப்பிற்கு அளிக்கப்பட்ட மதிப்பும் (Value of Labour) உயர்ந்தது. தொடர்ந்து ஏற்பட்ட விளைவுகளால் உற்பத்திக் காரணிகளான நிலம், முதல், உழைப்பு ஆகியவற்றுள் முதல் (Capital) தலையாய இடம் பெறுகிறது. பேரளவு உற்பத்தியினால் அக, புறச் சிக்கனங்கள் பெறப்பட்டு, வளங்கள் உச்சப் பயன்பாட்டிற்குப் பயன்படுத்தப் படுகின்றன. எந்திரங்களால் உற்பத்தியாகும் பொருள்கள் உறுதியானவையாகவும் தரமிக்கவையாகவும் உள்ளன.

பேரளவு உற்பத்தியில் மிகை உற்பத்தி (Surplus Production) ஏற்பட்டு வாணிகம் வளர்ச்சி பெறுகிறது. உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அங்காடி மையங்கள் நிறுவப்பட்டு, பன்னாட்டுத் தொடர்பும் வாணிகமும் முன்னேற்றமடைகின்றன. எந்திரங்கள் போக்குவரத்து, செய்தித் தொடர்பு ஆகிய துறைகளிலும் புரட்சியை ஏற்படுத்தியுள்ளன. எந்திரமயமாக்கலினால் உலக நாடுகளிடையே செய்தித்தொடர்பும் சமாதான உறவும் பொருளாதார ஒத்துழைப்பும் வலுப்பெற்றுள்ளன. மக்கள்தொகை பெருகும் போக்குடைய நாடுகள் எந்திரங்களின் உதவியின்றிப் பேரளவில் பொருள்களை உற்பத்தி செய்து, மக்களின் தேவையை நிறைவேற்றவும் வாழ்க்கைத் தரத்தைப் பேணவும் இயலா எனக் கருதப்படுகிறது. போர்க் கருவிகளும் செய்தித் தொடர்பு எந்திரங்களும் போர்க்களத்தில் மனித உயிரின் இடர்தாங்கல்களை எளிதாக்குகின்றன. ஏவுகணைகளும் தொலைக் கட்டுப்பாட்டு இயக்கி (Remote Control) மூலம் போரிடும் முறைகளும் மனித இழப்பைக் குறிப்பிடத்தக்க அளவில் தவிர்க்கின்றன. மருத்துவத் துறையிலும் எந்திரங்கள் மனித உடல்நலம் 'பேணும் பணியில் உறுதுணையாயுள்ளன. மாற்று எந்திர இதயம் (Artificial Heart), இரத்தத்தைச் சுத்தம் செய்து சிறுநீரைப் பிரித்தெடுக்கும் (Dialysis)) எந்திரம் போன்றவை அண்மைக்கால மருத்துவத்துறைப் புரட்சியில் காணப்படும் உயிரைப் பேணும் எந்திரங்களாகும்.

**வேளாண்மையில்:** வேளாண்மைப் புரட்சிக்கும் எந்திரமயமாக்கல் ஒரு சிறப்பு அடிப்படைக் கூறாக விளங்குகிறது. வேளாண்மை உற்பத்தியில் முன்னோடியாக விளங்கும் ஐக்கிய அமெரிக்க நாடு (USA), கனடா (Canada), இலத்தீன் அமெரிக்க நாடுகள் (Latin American Countries), ஐரோப்பிய நாடுகள் ஆகியவற்றில் பெரும்பாலான உழவுத்தொழில்கள் எந்திரங்களால் செய்யப்படுகின்றன. குறிப்பாக, எந்திரக் கலப்பை, உரமிடுதல், விதைத்தல் ஆகிய பணிகளையாற்றும் இணைப்பு எந்திரம் (Combined Drill), அறுவடை செய்து கதிரடிக்கும் இணைப்பு அறுவடைக் கருவி(Combined Harvester) போன்றவை மனிதக் கண்காணிப்புடன் குறுகிய காலத்தில் மிகையான தரமான விளைவுகளை அளிக்கின்றன.

உயர்தர எந்திரங்கள் மனித உழைப்பைப் பேரளவில் குறைப்பதால், ஏற்கனவே வேலையின்மை

மிகையாக உள்ள இந்தியா போன்ற வளரும் நாடுகளிலும் பின்தங்கிய நாடுகளிலும் பிற வேலைவாய்ப்புகளைஉருவாக்குமுன்னர், இந்த எந்திரங்களைப் புகுத்துதல் ஏற்புடைத்தன்று. இந்நாடுகளில் கடின மனித உழைப்பினால் ஆக்கத்திறன், ஊக்கம் ஆகியவற்றைப் பாதிக்கும் உழைப்பை எந்திரங்களின் மூலம் மாற்றீடு செய்வதும், பாதுகாப்புக்குத் தேவையான எந்திரங்களைப் பயன்படுத்துவதும், வேலையின்மையைப் பெருக்காத வகையில் மனித ஆக்கத்திறனையும் உற்பத்தி அளவையும் பெருக்கக்கூடிய எந்திரங்களைப் புகுத்துவதும் ஏற்புடையன. பின்தங்கிய நாடுகளுக்கு இன்றியமையாதனவாகக் கருதப்படும் வேளாண்மை எந்திரங்களாவன: நீர்ப்பாசனத்தில் பயன்படும் மின்சார நீர்விசைக் குழாய் (Pump set), எண்ணெய் எந்திரங்கள் (Oil Engines), பூச்சி மருந்தடிக்கும் தெளிப்பான் (Sprayer) கருவிகள், எந்திரக் கலப்பை (Power Tiller), வித்திடும் எந்திரங்கள் (Seed Drills), கதிரடிப்புப் பொறிகள் (Threshers), போக்குவரத்துக்குப் பயன்படும் சரக்கேற்றிச் செல்லும் ஊர்திகள் (Lorries), அழிந்து போகும் பொருள்களைப் பாதுகாக்கும் குளிரூட்டும் பெட்டிகள் (Air Conditioners) முதலியன.

சிதறிய நிலப்பகுதிகளாகவும் துண்டுநிலங்களாகவும் உள்ள சிறிய அளவு பயிரிடும் நிலங்களில் எந்திரங்களைப் பயன்படுத்துவது ஆதாயத்தை ஈட்டாது. சிறிய பண்ணைகளை ஒருங்கிணைத்தும் கூட்டுறவு முறையில் பெரிதாக்கியும் எந்திரங்களைப் பயன்படுத்தினால் உற்பத்திச் செலவு குறைந்து, உழவனின் உற்பத்தித் திறன் உயர்ந்து, உற்பத்தியும் பெருகி, மிகை விளைச்சலும் ஏற்படுவதால் வேளாண்மை வாணிகமும் வளர்ச்சியுறும். சோவியத்து உருசியா (Soviet Russia) பயிரிடும் நில அளவுகளைக் கூட்டுறவு அடிப்படையில் பெரிதாக்கி, எந்திரங்களின் மூலம் உழவுப் பணிகளை மேற்கொண்டு, வேளாண்மை உற்பத்தியை 1960-ஆம் ஆண்டு அளவில் 70 விழுக்காடு பெருக்கியது.

எந்திரமயமாக்கல் எவ்வகையான இடையூறுமின்றி வெற்றியை அளிக்கும் நாடுகளில் இயற்கையாகவே பயிரிடும் நிலங்களின் அளவு பெரிதாகவும் வேளாண்மையைச் சார்ந்திருக்கும் மக்களின் விழுக்காடு குறைவாகவும் இருக்கின்றன. இவற்றை எந்திரமயமாக்கலுக்கான காரண காரியம் (Cause & Effect) எனவும் கூறலாம். எடுத்துக்காட்டாக, அமெரிக்கா, கனடா, சோவியத்து உருசியா ஆகிய நாடுகளின் சராசரி பயிரிடும் நில அளவு முறையே 60 எக்டேர் (Hectares), 90 எக்டேர், 600 எக்டேர் ஆகும். இந்நாடுகளிலும் ஐரோப்பிய நாடுகளிலும் நிலத்தைச் சார்ந்து வாழும் மக்களின் விழுக்காடு 20 விழுக்காட்டிற்கும் 5 விழுக்காட்டிற்கும் இடையில் உள்ளது. இதுவே இந்தியாவில் 70 விழுக்காடாகவும் எகிப்தில் 50 விழுக்காடாகவும் பர்மாவில் 52 விழுக்காடாகவும் இந்தோனேசியாவில் 59 விழுக்காடாகவும் உள்ளது.

இந்நாடுகளில் ஏற்கனவே பலர் வேலையின்மையாலும், மறைமுக வேலையின்மையாலும் (Disguised Employment), குறை வேலையாலும் (Under Employment) அல்லலுறுகின்றனர். எந்திரமயமாக்கலால் இவர்களின் எண்ணிக்கை மேலும் பெருகும். எனவே, இந்தியா போன்ற நாடுகளில் சிறிய எந்திரங்களைப் பயன்படுத்துவதே நன்மை பயக்கும். மேலும், சிதறிக்கிடக்கும் நிலங்களை ஒருங்கிணைக்கவும், சிறிய பண்ணைகளின் அளவைப் பெரிதாக்கவும்எந்திரப் பயன்பாட்டைத் திட்டமிட்டுத் தீவிர மின்றிப் படிப்படியாகப் புகுத்துவது இன்றியமையாததாகும். எந்திரங்களைப் பயன்படுத்துவதால் ஏற்படும் விளைவுகளான உழவனின் ஆக்கத்திறன், வருவாய், வாழ்க்கை வசதிகள் ஆகியவற்றின் உயர்வினால் தானாகவே எந்திரமயமாக்கல் பரவிட வாய்ப்புண்டு.

எந்திரமயமாக்கலால் வேளாண்மையில் பயன்படுத்தப்படும் விலங்குகளின் ஆற்றலும் மனித ஆற்றலும் பிற பயன்களுக்காகப் பாதுகாக்கப்படுகின்றன. உழவுப்பணி முதல் விளைபொருள்களை வாணிகத்திற்கு எடுத்துச் செல்லும் வரை தேவையான ஆற்றலுக்குப் பலவகையில் மனித உழைப்பும் விலங்குகளின் உழைப்பும் பயன்படுவதை எந்திரங்கள் செய்கின்றன. நிலவளத்தைப் பேணவும் வேளாண்மைப் பணிகளைக் குறித்த காலத்தில் நிறைவேற்றவும் எந்திர ஆற்றல் தவிர்க்க இயலாததாகும். எந்திரங்களினால் நீர்ப்பாசன வசதிகள், நிலத்தைப் பண்படுத்தல், மண் அரிப்பைத் தடுத்தல் ஆகியவற்றில் இந்தியா குறிப்பிடத்தக்க அளவில் முன்னேற்றம் அடைந்துள்ளது. எந்திரங்கள் மூலம் உழுவதால் மண் நன்றாகப் பண்படுகிறது. குறுகிய காலத்தில் மிகுதியான நிலங்கள் உழப்படுகின்றன. களைகளின் வேர்கள் முற்றிலுமாக ஒழிக்கப்படுகின்றன.

ஆதாயம் பெறும் வகையில் எந்திரங்களைப் பயன்படுத்தும் படியாக அவற்றைப் புகுத்தும் தொடக்க கட்டத்தில் வேளாண்மையினருக்குக் கல்வியறிவைப் புகட்டுவது இன்றியமையாததாகும். பயன்படுத்தப்படும் எந்திரங்கள் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்பட்டுப் பழுது பார்க்கவும் தக்கவையாக இருக்க வேண்டும். அவற்றால் தொழிற்றுறை வளர்ச்சி பெறுவதுடன், எந்திர ஆற்றலால் எஞ்சும் மனித உழைப்பு தொழிற்சாலைகளிலும் எந்திரங்

களைப் பழுதுபார்க்கும் பணியிலும் ஈடுபட வாய்ப் பேற்படும்.

இந்திய வேளாண்மை வளர்ச்சியில் எந்திரமயமாக் கல் சிறப்பிடம் பெற்றுள்ளது. அட்டவணை-1 இந்தியா அடைந்துள்ள முன்னேற்றத்தைப் புள்ளி விவரங்கள் மூலம் விளக்குகிறது.

மையங்கள் நிறுவப்பட்டுக் கடன் வசதிகளும் வழங்கப் படுகின்றன. மைய அரசின் வேளாண்மை எந்திரக் கருவிகள் வாரியம் (Board of Agricultural Machinery & Implements) மாநிலங்களிலும் கிளைகளை நிறுவி, வேளாண்மைப் பொறியாளர்களின் பணிகளைப் பெறச் செய்கின்றன.

பசுமைப் புரட்சியில் முன்னோடியாகத் திகழும்

அட்டவணை—1

இந்திய வேளாண்மையில் எந்திரப் பயன்பாட்டு வளர்ச்சி

| வ.எண் | விவரம் | 1961 | 1970 | 1974 | 1980 |
|---|---|---|---|---|---|
| | | | (எக்டேர் | இலட்சத்தில்) | |
| 1 | மொத்தப் பயிரிடும் நில அளவு | 1528 | 1658 | 1646 | 1750 |
| 2 | எந்திரக்கலப்பைகள் | .31 | 1.00 | 2.25 | 4.73 |
| 3 | எண்ணெய் எந்திரங்கள் | 2.30 | — | 17.50 | 29.00 |
| 4 | மின்சார நீர்விசைக் குழாய்கள் | 2.00 | 13.54 | 24.30 | 40.00 |
| | | | (கிலோ வாட்டில்) | | |
| 5 | மின்சார நுகர்வு (ஓர் எக்டேர் பயிரிடப்பட்ட அளவுக்கு) | 5.5 | 23.0 | 38.5 | 71.0 |

இந்திய மைய அரசு 1947-இல் நிறுவிய மைய எந்திரக்கலப்பை நிறுவனம் (Central Tractor Organisation) மாநிலங்கள்தோறும் எந்திரக்கலப்பை அமைப்புகளை நிறுவி, எந்திரக்கலப்பைகளை வாடகைக்கு அளிப்பதுடன் அவற்றைத் தனியார் வாங்குவதற்கான வாணிக ஆலோசனைகளையும் கடன் வசதிகளையும் அளிக்கிறது. இந்த மைய நிறுவனம் புதர்களையும் காடுகளையும் அழித்து, பயிரிடும் நில அளவுகளைப் பெருக்கி வருகிறது. மைய அரசின் கண்காணிப்பின்கீழ் எந்திரமயமாக் கப்பட்ட பண்ணைகள் சம்மு-காசுமீரிலும் (Jammu & Kashmir) போபாலிலும் இராசசுத்தானிலும் உள்ளன.

ஐந்தாண்டுத் திட்டங்களில் வேளாண்மை எந்திரங் களின் உற்பத்தியைப் பெருக்கும் திட்டம் அடங்கு கிறது. அவற்றை உற்பத்தி செய்யும் தனியாருக்குத் தொழில்நுட்ப உதவிகளை அளிக்கவும் இரும்பு, எஃகு போன்ற மூலப் பொருள்களை அளிக்கவும் மாநில

பஞ்சாபு மாநிலத்தில் எந்திரங்கள் மிகுந்த அளவில் பயன்படுத்தப்படுகின்றன. வேளாண்மைத் தொழில் கழகம் (Agro Industries Corporation) எல்லா மாநிலங்களிலும் 1960-ஆம் ஆண்டு இறுதியில் நிறுவப் பட்டன. அவை அயல் நாட்டு எந்திரங்களைப் பெற்றுக் குறைந்த விலையில் விற்பதுடன், அவற்றை வாடகைக்கும் வழங்குகின்றன. செறிந்த பண்ணை முறைத் திட்டத்தின் மூலம் வேளாண்மை எந்திரப் பயன்பாட்டிற்கான ஆய்வு நிலையங்கள் (Research Centres), பணிமனைகள் (Workshops) போன்றவை நாடெங்கிலும் நிறுவப்பட்டுள்ளன. ஒவ்வோர் ஊர கத்திலும் ஒரு பணிமனை நிறுவத் திட்டமிடப்பட்டுச் செயற்படுத்தப்பட்டு வருகிறது. வேளாண்மைப் பல் கலைக்கழகங்களும் எந்திரமயமாக்கலைப் பரவலாக்கு கின்றன.

வேளாண்மைப் பணிகள் முழுவதையும் எந்திர மயமாக்குவது இந்தியாவின் பொருளாதார வளர்ச்

சிக்குகந்ததும் ஏற்புடையதும் அன்று. எனவே, ஊரக வேலையின்மையைக் கருத்தில் கொண்டு, சமூகப் பொருளாதாரச் சிக்கல்கள் ஏற்படாத வகையில் படிப்படியாக இன்றியமையாப் பணிகளில் எந்திரங் களைப் புகுத்தி, உழவனின் தனி ஆள் வருவாயையும் **(Per Capita Income)** நாட்டுப் பொருளாதார வளர்ச் சியையும் பெருக்குவதே இந்திய அரசின் கொள்கை யாகப் பின்பற்றப்படுகிறது. அ.கு.சா.

**எந்திர மூலதனம்**: நிலையான பண்புகளை யுடைய எந்திரங்கள், கட்டடங்கள், நிலம் ஆகிய சொத்துகளில் முதலீடு செய்வது எந்திர மூலதனம் **(Capital Equipments)** எனவும், நிலையான சொத்து கள் **(Fixed Assets)** எனவும் கூறப்படுகின்றது. நிலை யான சொத்துகள் தொழில் அல்லது வாணிகத்தின் அன்றாடத் தேவைக்கு இன்றியமையாதனவாகும். தொழில் நடவடிக்கைகளை நிறுத்தி வைத்தா லொழிய எந்திர மூலதனச் சொத்துகளை விற்க இயலாது. பொதுவாக ஓர் ஆண்டிற்கு மேலாக உற் பத்திக்குப் பயனளிக்கும் வாழ்வுடைய சொத்துகள் இதனுள் அடங்கும். நிலம் தவிர, பிற எந்திர மூல தனங்கள் அனைத்திற்கும் ஒரு குறிப்பிட்ட கால வரையறை உண்டு. அவற்றையும் தேய்மானங்களை யும் **(Depreciations)** கணக்கிட்டு வரும் மொத்தச் செலவை அவை ஆதாயம் ஈட்டும் வகையில் பயன் படும் கால ஆண்டுகளின் செலவில் பங்கீடு செய்வர். ஒரு நிறுவனத்தின் குறுகியகாலச் செலவில் எந்திர மூலதனங்களின் செலவு நிலையானதாயிருக்கும் நீண்டகால உற்பத்தியில் தேய்மானம், வட்டிவீதம், உற்பத்தி முறை, வாடகை, ஊதியம் ஆகியவற்றில் ஏற்படும் மாற்றங்களுக்கேற்ற வகையில் எந்திர மூல தனச் செலவிலும் மாற்றங்கள் ஏற்படும். அ.கு.சா.

**எந்நாட்கண்ணி** என்பது தாயுமான சுவாமி களால் பாடப்பெற்று 'எந்நாளோ' என்னும் முடி வினைக் கண்ணிதொறும் கொண்டு விளங்கும் இரு நூற்று முப்பத்திரண்டு கண்ணிகள் அடங்கிய பகுதி யாகும். இதனைச் சுவாமிகள் பதினைந்து தலைப்பு களில் விளக்கிப் பாடியுள்ளார். அத்தலைப்புகளி லிருந்தே அவ்வப் பகுதிக் கண்ணிகள் குறிப்பிடுவன யாவையென்பதைத் தெளிவாய் உணரலாம்.

முதலில் அமைந்துள்ள 'தெய்வ வணக்கப்' பகுதி யில் சிவபெருமானையும், உமையம்மையையும், யானைமுகக் கடவுளையும், குமரக் கடவுளையும், தந்தை இருதாள் துணித்துத் தம்பிரான் தாள் சேர்ந்த சண்டேசுரரையும் வணங்கிப் பாடியுள்ளார். சைவ மரபில் இவ்வைந்து மூர்த்திகளையும் 'பஞ்ச மூர்த்தி' என்று கூறுவது வழக்கம். ஆகவே, தொடக் கத்தில் பஞ்சமூர்த்தி வழிபாட்டினைச் சைவ மரபு பிறழாமல் பாடி, அம்மூர்த்திகளின் 'அருள் பெறுவது எந்நாளோ' என்று ஏங்குவதோடு அவ்வேக்கத்தினை உலகத்துயிர்களும் கொள்ள வேண்டும் என்னும் உண்மையையும் அப்பகுதியில் சுவாமிகள் அறிவுறுத்தி யுள்ளார்.

அடுத்துள்ள 'குருமரபின்' வணக்கத்தில் குரு தம் கரமலரால் சொல்லாமல் சொன்ன உண்மையாம் உபதேசப் பெருமை பற்றிக் குறிப்பிட்டுள்ளார். குருவை நந்தி என்று திருமூலர் கூறுவது போன்றே அடிகளும் கூறியுள்ளார். மேலும் மெய்கண்டார், அரு ணந்தி சிவாசாரியார், உமாபதி சிவாசாரியார் ஆகிய மூவர் வணக்கமும் உள்ளது. மௌன குரு என் னும் மகான் தம் குருவாவார் என்பதனை அப்பகுதி யின் பின் ஐந்து கண்ணிகளில் காட்டியுள்ளார்.

மூன்றாம் பகுதி 'அடியார் வணக்கத்தில்' சைவசமயாசாரியார் நால்வர் வணக்கமும், பட்டி னத்தார், பத்திரகிரியார், சிவவாக்கியர், திருமூலர், அருணகிரியார், சித்தராதியோர் வணக்கமும் கூறி யுள்ளார்.

மேலும், ஆறாம் பகுதியாகிய 'தத்துவ முறைமை' யில் தத்துவம் முப்பத்தாறும் தாத்துவிகம் அறுபதும் ஆன்மாவை அலைக்கழிக்கும் வகை கூறி, அவற்றி லிருந்து தப்பி முத்திக்கரை ஏற அருள வேண்டும் என் றும், வினை வறுத்த வித்தாக வேண்டும் என்றும், மோகம் மிகும் மாயை முடியு நாள் எந்நாளோ என்றும் கூறி வருந்தியுள்ளார். 'பொருள் இயல்பு' என்னும் ஒன்பதாம் பகுதியில் 'அவனருளாலே அவன் தாள் வணங்கி' என்னும் மணிவாசகரின் மணிவாக் குக்கு ஒப்பக் 'காட்டும் திருவருளே கண்ணாகக் கண்டு பர, வீட்டு இன்ப மெய்ப் பொருளை மேவு நாள் எந்நாளோ' என்று சுவாமிகள் ஏங்கித் துன் புறுவர். பதினான்காம் பகுதியில் பெருமான் திருவடி யில் உறைத்து நிற்கும் திடசித்தம் அருளவும்; தீது அணையாக் கர்ப்பூர தீபம் எனத் தாம் கண்ட சோதியுடன் ஒன்றித் துரிசு அறுக்கவும் வேண்டியுள் ளார். மேலும், அப்பகுதியில் தாள் தலைமேல் சூடித் தழைக்கும் நாளையும், பாலொடு நீர்போல்கலந்து பண்புறு நாளையும், தாணுவினோடு அத்துவிதம் சாரும் நாளையும் எதிர்பார்த்துப் புலம்பியுள்ளார்.

இறுதிப் பகுதியில், நிலை பிரிந்தோர் அஞ்செழுத் தின் உண்மைப் பொருளை நெஞ்சமுழுத்தி இறைவனு டன் கூடி இன்புற்றிருப்பதற்கு வழியும் கூறி, அருள் மயம் பெற்று உயிர்கள் இன்பத்தில் திளைக்க வழி வகை செய்துள்ளார். தாயுமான அடிகள் சிறந்த

அருளாளராதலின் இவ்வறிவுரைகளையெல்லாம் உலக மக்கள் உணர்ந்து உய்வதற்காகவே தம் திருப்பாடல் களில் அருளிச் செய்துள்ளார் இரா.ச.

**எப்பிக்கியூரசு (கி.மு. 341-270)** சாமாசுத் தீவில் அதீனியன் குடும்பத்தில் பிறந்தார்; சிறுவயதில் தத்துவத் துறையில் நாட்டம் செலுத்தினார்; பிளேட்டோ,தெமாகிரிட்டசு (Democritus) ஆகியவர் களைப் பின்பற்றியவர்களிடம் வாதம் செய்தார். இவர் மைதிலின் (Mytilene) என்ற இடத்தில் ஆசிரியராகப் பணிபுரிந்தார். பின்னர், இலேம்பு சாகசு (Lampsacus) நகருக்குச் சென்றார். அங்குப் பலர் இவரைப் பின்பற்றினார்கள். இவர் கி.மு. 307-306-இல் ஓர் இன்பநிலைச் சமூகத்தை உருவாக்கி னார். இந்தச் சமூகத்தில் உள்ள உறுப்பினர்களுள் பெண்களும் ஓர் அடிமையும் இருப்பார்கள். இவர்கள் பரத்தைகளை அனுமதித்தனர்.

எப்பிக்கியூரசின் தத்துவம்: இவர் தத்துவம் இன்பக்கொள்கை (Epicuranism) எனப்படும். இவர் போதனைகள் கிரேக்க மொழி பேசும் இடங்களில் எல்லாம் பரவின. நிலையில்லாத உலகத்தில் எப்பிக் கியூரசின் தத்துவம் நிலையான சில கொள்கைகளை வற்புறுத்துகிறது. எப்பிக்கியூரசு (Epicurus) ஐயக் கொள்கையையும் (Skepticism) கருத்து முதற் கொள்கையையும் (Idealism) ஏற்கவில்லை. புலனறிவு உண்மையானது; அதைத் தொடர்ந்து இன்ப துன்ப உணர்வுகள் ஏற்படுகின்றன. அவற்றின் அடிப்படை யில் நன்மையும் தீமையும் பொருளுடையனவாக அமைகின்றன.

அறிவுக் கொள்கை: இவர்தம் கோட்பாடு களைப் பின்பற்றுவோராகிய இன்பக் கொள்கை யினர் தம் அறிவுக் கொள்கைக்குத் திருச்சபை மரபு வழுவாத (Canonic) கொள்கை என்று பெயரிட்ட னர். அறிவு புலன் நுகர்வால் ஏற்படுகின்றது.மனிதன் என்னும் சொல் எல்லா மனிதர்களையும் குறிப்பிடு கின்றது. ஆனால், விலங்குகளையோ மரங்களையோ கடவுளையோ அது குறிப்பிடுவதில்லை.

மனித உடல் அணுக்களால் ஆகியது; மாற்றத்திற்குட்பட்டது. உடலும் ஆன்மாவும் ஒன்றுக் கொன்று தொடர்புடையன. ஆன்மா ஆகாயம், காற்று, வெப்பம் ஆகிய மூன்று அணுக்களோடு, பெயர் குறிப்பிடப்படுவதற்கு இயலாத நான்கா வதாகிய அணு ஒன்றையும் பெற்றுள்ளது.

ஆன்மாவின் ஒரு பகுதி உணர்வுகளை வெளிப் படுத்துகிறது. அது உடல் முழுவதும் பரவியிருக் கிறது. எண்ணுகின்ற செயலும் உணர்தலும் இதயத் தில் அமைந்திருக்கின்றன. செயலாராய்ச்சித் திற மில்லாதது ஆன்மா. மனித உறுப்புகளின் இயக்கம் அணுக்களால் அமைந்தது. காண்டல் அணுக்களா லாகிய மென்தோல் பொருள்களின் மேற்பாகத்தை மறைக்கிறதிலிருந்து விலகிக் கண்களைச் சார்கிறது. இத்தகைய மெல்லிய சவ்வு (Film) இறைவனிடமிருந்து வெளிப்பட்டுப் புலன்கருவியின் துணையில்லாமல் மனத்தைச் சார்கிறது.

அணுப் பொருள்களின் கூட்டுச் சேர்க்கையினால் மனிதன் உருவாகிறான். அவனைப் படைப்போர் இல்லை. அவனுக்கு விதியும் இல்லை. இன்பமே அவனது குறிக்கோள். பாதுகாவலுடைய வாழ்வும் எல்லையில்லா இன்பமும் பெற்று வாழ்வதே அவனது மேலான நற்பலன். கடவுள்மீதும் இறப்பின்மீதும் உள்ள அச்சம் மனிதனின் மன அமைதியைக் கெடுக் கிறது.

அறக் கொள்கைகள்: தத்துவ அறிஞர்தாம் ஒரு சிறந்த வாழ்க்கையை அடைய முடியும். இன்ப வுணர்வு, அடிப்படையில் நன்மை பயப்பதாக இருந்தா லும் நிலையில்லாதது. சில நேரங்களில் துன்பம் இன்பத்திற்கு வழிகாட்டும். நீதியும் பொறுமையும் துணிவும் இன்ப வாழ்க்கைக்குத் தேவையானவை.

தத்துவ அறிஞரின் வாழ்க்கை இன்பமுடையதாக இருக்கவேண்டும். மனத்தின் இன்பம் புலன்களில் அடங்கியிருக்கிறது. அளவுக்கு மீறிய இன்பம் துன்பத் தைக் கொடுக்கும்.உடல் இப்பொழுது மட்டுமே இருக் கிறது. ஆனால், மனம் முக்காலத்திலும் இருக்கிறது. அறிவுள்ள மனிதன் கடந்த கால இன்பங்களை நினைப்பதல்லாமல், எதிர்கால இன்பங்களையும் நினைத்துக்கொள்வான்.

பழங்காலக் கருத்துகளை எப்பிக்கியூரசு எதிர்த் தார். நிலக் கணக்கியல் (Geometry) உலகை அனுபவிப்பதுபோல் விவரிக்கமுடியாது. கலைத்திறம் வாய்ந்த சொற்பொழிவு மொழியைத் தூற்றுவது போலாகும். பெரிய பொறுப்புகளைக் கற்பனை செய்தல் கூடாது. ஆசையைக் கட்டுப்படுத்துதலும் நல்லோரிணக்கமும் கவலையில்லா இன்பமும் திரு விழாக்களில் பங்கு கொள்ளுதலும் நன்மை பயக்கும். இவை எப்பிக்கியூரசின் கருத்துகள். இரா.கோ.

**எப்பைரசு** ஐரோப்பாவில் பால்கன் முந்நீரகத் தின் வடக்கில் ஏட்ரியாட்டிக்குக் கடலின் கிழக்குக் கரையோரமாக அமைந்திருந்த ஒரு நிலப்பரப்பு. இன்றைய கிரீசு நாட்டின் வடமேற்கு மாவட்டங்

களையும், அல்பேனியாவின் தென்மாவட்டங்களையும் உள்ளடக்கியது. வடக்கில் வலோனா விரிகுடாவுக்கும் (Valona Bay), தெற்கில் அர்த்தா வளைகுடாவுக்கும்(Gulf of Bay), கிழக்கில் பிண்டசு (Pindus) மலைகளுக்கும், மேற்கில் கடலுக்கும் இடையில் எப்பைரசு (Epirus) அமைந்துள்ளது. வடமேற்கு-தென்கிழக்காக அமைந்துள்ள இப்பகுதி சுண்ணாம்புப் பாறைகள் நிறைந்த நீண்ட குன்றுகளையும் செழிப்பான பள்ளத்தாக்குகளையும் கொண்டுள்ளது. நில மட்டம் மேற்காகச் சரிந்துள்ளதால் அனைத்துச் சிறு ஆறுகளும் ஏட்ரியாட்டிக்குக் கடலை நோக்கிப் பாய்கின்றன. இங்கு மழையும் மிகுதியாகப் பொழிகிறது.

புதிய கற்காலம் முதலே மக்கள் இங்கு வாழ்ந்து வந்ததற்கான தடயங்கள் நிறைய உள்ளன. வெண்கலக்காலத்தின் தொடக்கத்தில் இவர்கள் ஆடு மேய்த்தலையும் வேட்டையாடுதலையும் தொழிலாகக் கொண்டிருந்தனர். மைசீனிய (Mycenae) நாகரித்தைத் தொடங்கிய மக்கள் எப்பைரசிலிருந்துதான் சென்றனர் என்று பலர் கருதுகின்றனர். இந்நாகரிகத்தின் சீர்குலைவுக்குப் பிறகு கி.மு. 1200–ஆம் ஆண்டளவில் தோரியக் கிரேக்கர்கள் (Dorians) இங்குக் குடிபுகுந்னர். மூன்று மாவட்டங்களில் மூன்று தோரியக் குலங்கள் (Tribes) கிராமங்களை அமைத்து வாழ்ந்து வந்தன. பின்னர், இவர்களுள் ஒரு பிரிவினர் கிரீசுக்குள் ஊடுருவிச் சென்று குடியேறி நகர அரசுகளை அமைத்தனர். கிரேக்க நாகரிகம் மேன்மேலும் வளர்ச்சியுற்று உச்சக் கட்டத்தை எய்திய காலத்திலும் எப்பைரசுத் தோரியர்கள் மிகவும் பின்தங்கிய கிராம வாழ்வேவாழ்ந்து வந்தனர். எப்பைரோட்டுகள் (Epirotes) என இவர்களைக் கிரேக்கர் அழைத்தனர். 'நாகரிகமற்றவர்கள்' என்றே இவர்களை கி.மு.5–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததுசிடைடிசு(Thucidides)குறிப்பிடுகிறார். இங்குக் குடியமர்ந்து வாழ்ந்துவந்த மூன்று கிரேக்கக் குலங்களில் மத்திய பகுதியில் வாழ்ந்த மொலோசி(Molossi)என்போர் வளம் பெற்றிருந்தனர். இவர்களின் இளவரசியான ஒலிம்பியசு என்பவரை மாசிடோனிய அரசர் இரண்டாம் பிலிப்பு மணந்து கொண்டார். இவர்களுக்கு மகனாகப் பிறந்தார் மாமன்னர் அலெக்சாந்தர். அலெக்சாந்தர் காலத்தில் மொலோசிகளின் அரசராக இருந்த அவர்தம் தாய்மாமனும் அலெக்சாந்தர் என்ற பெயர் பெற்றிருந்தார். இவர் கி.மு.331–இல் தென் இத்தாலியின்மீது படையெடுத்த போது உரோமானியரால் தோற்கடித்துக் கொல்லப் பட்டார். எப்பைரசு முழுவதும் இவரது மேலாண்மையின் கீழிருந்தது. மொலோசிய மன்னர்களுள் மிகவும் வலிமை வாய்ந்தவர் பிரசு (Pyrrhus, கி.மு. 318–272) என்பவராவர். தென் இத்தாலியின் தென் பகுதியிலிருந்த கிரேக்க நகர அரசுகளின் உதவிக்காக விரைந்து சென்று உரோமாபுரியுடன் பல ஆண்டுகள் போரிட்டுத் திரும்பினார் இம்மன்னர். மன்னர் அலெக்சாந்தரின் காலத்தில் கி.மு. 330–இல் எப்பைரசிலிருந்த அரசுகள் அனைத்தும் அவரது தலைமையின் கீழ் ஒன்று சேர்ந்து ஒரு கூட்டணி போல இயங்கின. விரைவிலேயே எப்பைரோட்டுக் குழு என்பது உருவாக்கப்பட்டு, மையத்தில் பேராளர்கள் அவையைக் கொண்ட ஒரு கூட்டரசாக ஆயிற்று.

இத்தாலி முழுவதையும் தனது ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவந்த உரோமானியக் குடியரசு, கார்த்தேசுடன் போர் புரிந்து வெற்றி பெற்றபின் மாசிடோனியாவின் மீதும் போர் தொடுத்தது. மூன்றாவது மாசிடோனியப் போரில் (கி.மு. 171–168) உரோமாபுரிக்கு எதிராகப் போரிட்ட காரணத்துக்காக மொலோசியாவையும் எப்பைரசு முழுவதையும் உரோமானியர் கி.மு. 167–இல் கைப்பற்றித் தமது பேரரசின் ஒரு மாவட்டமாக ஆக்கினர். உரோமானியப் பேரரசின் சிதைவுக்குப் பின்னர்ப் பைசாண்டியப் பேரரசின் ஒரு மாவட்டமாக கி.பி. 12–ஆம் நூற்றாண்டு வரையில் எப்பைரசு இருந்து வந்தது. பைசாண்டிய அரசகுலத்தைச் சேர்ந்த மைக்கல் ஆஞ்சலசு தூகாசு (Michael Angelus Ducas) என்பவர் கி.பி. 1204–இல் எப்பைரசில் ஒரு தனியரசை அமைத்தார். அது கி.பி. 1337 வரை நீடித்தது; பின்னர் மீண்டும் பைசாண்டியப் பேரரசினால் மீட்டுக் கொள்ளப்பட்டது. செர்பியரும் அல்பேனியரும் கி.பி. 1318–இல் எப்பைரசின்மீது படையெடுத்துப் பேரழிவினை ஏற்படுத்தினர். உதுமானியத் துருக்கியரால் (Ottoman Turks) எப்பைரசு கி.பி. 1430–இல் பிடித்துக்கொள்ளப்பட்டது. அதுவரையில் கிரேக்கக் கல்வி கேள்விகளின் சிறந்த மையமாக எப்பைரசு திகழ்ந்து வந்தது. மூன்று நூற்றாண்டுக் காலம் துருக்கிப் பேரரசின் ஒரு மாவட்டமாக இருந்தபின் அலிபாட்சா என்ற துருக்கிய-அல்பேனியர் எப்பைரசு, கிரீசு, மேற்கு மாசிடோனியா ஆகிய பிரதேசங்களைக் கைப்பற்றிக் கொண்டார். பின்னர், கி.பி. 1821–29 –இல் நடைபெற்ற கிரேக்க விடுதலைப் போரில் எப்பைரசு கிரேக்கர் பெரும்பங்கு ஏற்றனர். அதுமுதல் அதன் வட மாவட்டங்கள் கிரீசின் பகுதியாக 1913 வரை இருந்தன. எஞ்சிய மாவட்டங்கள் அல்பேனியாவில் இருந்தன. எப்பைரசை 1939-இல் முசோலினியும், அவருடைய படைகள் தோற்கடிக்கப்பட்டபின் 1940-இல் இட்லரும் கைப்பற்றினர். நேசநாட்டுப் படைகள் 1944-இல் அதனை மீட்டன. இன்று எப்பைரசு மக்களுள் சிறுபான்மையினர் அல்பேனியாவின் எல்லை மாவட்டங்களில் வாழ்கின்றனர். பெரும்பான்மையினர் கிரீசின் பகுதியினராக உள்ளனர்.

இர.ஆ.

**எபிக்டெட்டசு (கி.பி. 50-130):** மிகவும் சிறப்புடைய இன்ப துன்பச் சமநிலைக் கோட்பாட்டாளர் (Stoic). இவர் இயரபாலிசு (Heirapolis) என்னும் நகரில் பிறந்தார். எபிக்டெட்டசு (Epictetus) ஓர் அடிமைப் பெண்ணின் மகன்; பல ஆண்டுகள் அடிமை வாழ்வு வாழ்ந்தவர். நீரோ (Nero) இறந்த பின்னர், இவருக்கு 68-ஆம் வயதில் சுதந்திரம் கிடைத்தது.

இவர்தம் தலைவர் எபோபிரோடிட்டசு (Epophroditus) என்பவர். அவர் நீரோவின் அலுவலகச் செயலாளர். அவர் இளைஞர் எபிக்டெட்டசை முசோனியசு உருபசு (C. Musonius Rufus) என்ற இன்ப துன்பச் சமநிலைக் கோட்பாட்டாளரிடம் அனுப்பினார். எபிக்டெட்டசைத் தொமிசியன் (Domitian) உரோமாபுரியிலிருந்து நாடு கடத்தினார். இவர் தாம் நாடு கடத்தப்பட்ட ஊராகிய எப்பிரசில் (Epirus) ஒரு பள்ளியை நிறுவி, அங்கு அளவையியல், இயற்பியல் (Physics), இன்ப துன்பச் சமநிலைக் கோட்பாட்டு அறிவியல் முதலியவற்றைப் பல இடங்களிலிருந்து வந்தவர்களுக்குக் கற்றுக் கொடுத்தார்.

இவர் முதுமைப் பருவத்தில் ஒரு குழந்தையை வளர்ப்பதற்காகத் திருமணம் செய்து கொண்டார். இவர் இனிமையாகப் பேசுவார்; எளிய வாழ்க்கை வாழ்ந்தவர்; கருணை உள்ளமும் குழந்தைகளிடம் அன்பும் உடையவர்; சிறந்த ஒழுக்கமும் தெய்வ பக்தியுமுடையவர். இன்ப துன்பச் சமநிலையாளரின் எளிமை இவரிடம் காணப்பட்டது.

எபிக்டெட்டசு ஊனமுற்றவர்; அடிமை வாழ்வில் இழைக்கப்பட்ட கொடுமைகளின் விளைவாக இந் நிலைமையை அடைந்தார். இவருடைய சிறந்த அறிவுரை, 'பொறுமையாக இரு; பிறரையும் பொறுத்துக் கொள்' என்பதாகும். மனமிரங்காதவர்களுக்குக் கீழ்ப்படிதலும், எல்லாவற்றையும் ஒரு பரந்த மனப்பான்மையில் நோக்குவதும், எதுவும் இறைவன் செயல் என்று கருதுவதும் இவர் தம் முக்கிய கொள்கைகள். இவர் தம் காலத்தில் விளங்கிய சமய, அரசியல் கொள்கைகளைக் குற்றங்கூறாமல் ஒத்துக் கொண்டார்.

ஒவ்வொரு மனிதனும் அவன் செய்கின்ற செயல்களுக்குப் பொறுப்பு வாய்ந்தவன். அவன் சூழ்நிலைக்கு ஏற்ப நடந்து கொண்டதே அதற்குக் காரணம். ஒருவன் ஒழுக்கத்தையும் மனிதத்தன்மையையும் காக்க வேண்டும். ஒவ்வொரு மனிதனுக்கும் குணநலன்களைச் சரிப்படுத்த உரிமை உண்டு. அவன் பிறருக்குப் பயன்படும் வகையில் செயல்புரிய வேண்டும் என்பன எபிக்டெட்டசின் கருத்துகளாகும்.

இவர் உழைப்பவரோடு தொடர்புடையவர். எளிய வாழ்க்கையைப் பற்றி அடிக்கடி புகழ்ந்து பேசுவார். நல்ல குணமுடைய மனிதனின் சுதந்திர உணர்வு பற்றிப் பேசுவார். இவர் நூல்கள் எழுதவில்லை. சாக்கிரட்டிசு போன்று வகுப்புகளில் கொடுக்கின்ற பாடத்தோடு நிறுத்திக் கொண்டார். இவருடைய ஒழுக்கம் மிகுந்த வாழ்க்கையும் அமைதியான இயல்பும் மாணவர்களுக்குப் பாடப் புத்தகமாக விளங்கின. இரா.கோ.

**எபிங்காசு, எர்மன் (கி.பி.1850-1909)** மனப்பாடமாகக் கற்றல் (Rote Learning), கற்றவற்றை நினைவுகூர்தல் (Memory) ஆகியவற்றை அளப்பதற்கான சோதனை முறைகளை உருவாக்கிய செருமன் நாட்டு உளவியல் அறிஞர். எர்மன் எபிங்காசு (Hermann Ebbinghaus) 2,300 பொருளற்ற மூன்றெழுத்துச் சீர்களை (Three-letter Nonsense Syllables) உருவாக்கி, அவற்றைக் கற்கும்போது உண்டாகும் நினைவுத் திறன்களைத் தம்மையே சோதனைக்கு உட்படுத்தி ஆராய்ந்தார்; இச்சோதனையின் முடிவாக, நினைவு கூர்தல் என்பது செய்திகள் ஒழுங்காக அமைவதைப் பொறுத்தது எனக் கண்டறிந்தார். காலம் கழிவதைப் பொறுத்து மறதி அமைகிறது என்பதை 'மறுத்தல் வளைகோடு' (Forgetting Curves) மூலம் விளக்கியுள்ளார். இவர் எழுதிய புகழ் வாய்ந்த நூல்களாக, நினைவுகூர்தல் (Memory, 1913), உளவியல் விதிகள் (Principles of Psychology, 1902), உளவியல் சுருக்கம் (Summary of Psychology, 1908) ஆகியவற்றைக் குறிப்பிடலாம். பிரெடரிக்கு வில்கெம் பல்கலைக் கழகத்தில் (Friedrich Wilhelm University) கி.பி. 1894 வரை பணியாற்றிய பின்னர், இவர் பிரேசுலாப்பல்கலைக் கழகப் (University of Breslau) பேராசிரியரானார். இவர் வண்ணப் பார்வை (ColourVision), சொல் நிரப்புதல் சோதனை (Word-Completion Test) ஆகியவற்றிலும் ஆராய்ச்சி மேற்கொண்டார். இவர் பார்மன் (Barmen) நகரில் பிறந்தார்; செருமனியிலுள்ள ஆலே (Halle) நகரில் இறந்தார். எஸ்.த.

**எபிடோரசு** தொன்மையான கிரேக்க நகரம். இது சரோனிக்கு வளைகுடாவிற்குத் (Saronic Gulf) தென்மேற்கில் உள்ளது. இப்பொழுது இப்பகுதியில் ஒரு சிறு நகரமே உள்ளது. இந்நகரத்திற்குத் தென்மேற்கில் ஏசுகுலாப்பியசு (Aesculapius) என்னும் உரோமானிய மருத்துவக் கடவுளின் அழிந்துபட்ட தேவாலயத்தின் சில பகுதிகளும் அரங்கம் ஒன்றும் காணப்படுகின்றன.

எபிடோரசுவின் (Epidaurus) எல்லைகளாகக் கோரிந்து, ஆர்கோசு (Argos) போன்ற நகரங்கள்

எலனியக் கூட்டமைப்பாக கி.மு. 480, 479-ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற பாரசீகப் போரில் அமைந்தன. எபிடோரசு இசுபார்ட்டாவுடன் நட்புறவு கொண்டு பெலப்பினிசியப் போரில் (கி.மு. 431-கி.மு. 404) பங்கு பெற்றது. பின்னர் ஏக்கியன் (Achaeon League) கூட்டமைப்பில் கி.மு. 243-இல் இணைந்தது. ஏக்கியன் இன மக்கள் கூட்டத்தை உரோமானியர்கள் தோற்கடித்த பொழுது, எபிடோரசு நகர மக்களைக் கோரிந்து நகரத்தில் உரோமானியர்கள் கொன்றதாகக் கல்வெட்டொன்று கூறுகிறது.

எபிடோரசு நகரத்தில் உள்ள மருத்துவக் கடவுளின் ஆலயத்தால் இந்நகரம் புகழ்பெற்றது. இவர் ஏசுகுலாப்பியசு எனப்படுகிறார். ஏசுகுலாப்பியசு தெய்வ வழிபாடு கி.மு. 7-ஆம் நூற்றாண்டிலிருந்தே இருந்துள்ளது. இக்கடவுள் கி.மு. 5-ஆம் நூற்றாண்டளவில் முதன்மைக் கடவுளாக மாறினார். இந்நகரத்தில் உள்ள அரங்கத்தில் விளையாட்டுகள் பல அக்காலத்தில் நடத்தப்பட்டன. இசைப் போட்டிகளும் பாடல் போட்டிகளும் இங்கு நடைபெற்றன. இங்கு ஓமர் கதைகளைப் பாடல்களாகப் பாடினர். இப்போட்டிகள் ஒவ்வோராண்டும் இளவேனிற் பருவத்தில் நடைபெற்றன.



எபிடோரசு அரங்கம்

ஏசுகுலாப்பியசு கடவுள் நோய் மிக்கவர்களை நலப்படுத்தும் சக்தி வாய்ந்தவர் எனக் கருதப்பட்டார். கொடுமையான நோய்களையும் இக்கடவுள் தீர்த்ததாகப் பல கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. பல கல்வெட்டுகள் இந்நகரத்தில் நோய்கள் தீர்க்கப்பட்டதையும் அறுவை சிகிச்சைகள் சில நேரங்களில் செய்யப்பட்டதையும் தெரிவிக்கின்றன. ஏசுகுலாப்பியசு ஆலயம் கி.மு. 380-இல் கட்டப்பட்டது. இக்கோயிலில் உள்ள சிற்பம் பொன்னாலும் தந்தத்தாலும் செய்யப்பட்டது. இதனைத்திரசிமிதிசு (Thrasymedes) என்ற சிற்பி செய்தார். திமோதியசு (Timotheos) என்ற சிற்பி செய்த பல சிற்பங்கள் இவ்வாலயத்தில் காணப்பட்டன. இவ்வாலயத்தின் அருகில் வட்ட வடிவக் கட்டடம் ஒன்று காணப்படுகிறது. இக்கட்டடத்தில் பல செதுக்குச் சிற்பங்கள் காணப்படுகின்றன. பண்டைய கிரேக்கத்தின் கட்டடக் கலைத்திறனை நன்கறிய இக்கட்டடங்கள் உதவிபுரிகின்றன. அர்திமிசு கோயில் (Artemis Temple), விடுதி, உடற்பயிற்சித் திடல், குளியல் தொட்டி, அரங்கம் ஆகியவை இங்குள்ள பிற தொன்மைக் கட்டடங்கள் ஆகும். இங்குள்ள அரங்கம் கி.மு. 4-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. தேவாலயத்தின் முனையில் இது அமைந்துள்ளது. இங்குள்ள தேவாலயம் கி.பி.391-ஆம் ஆண்டு மூடப்பட்டது. சு.இரா.

**எபியால்டெசு:** ஏதென்சு நாட்டில் கி.மு. 5-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த எபியால்டெசு (Ephialtes) குடியரசுத் தலைவர்களுள் தீவிரவாதி. இவர்தம் சீர்திருத்தங்கள் அங்கே குடியரசு முறை நிறைவடைய உதவின. குடியாட்சியை விரும்பாத இசுபார்ட்டா நகர அரசை எபியால்டெசு தம் கொடிய பகை அரசாகக் கருதி அதை வெறுத்து வந்தார். இக்கொள்கையை விரும்பாத கைமன் என்ற மற்றோர் அதீனியத்தலைவர், பிரபுக்கள் உதவியுடன் எபியால்டெசுக்கு இடையூறுகள் செய்து வந்தார். அவ்வாறிருந்தும் இறுதியில் எபியால்டெசுக்கு மக்கள் ஆதரவு மிகுதியாக இருந்ததால் கைமனின் முயற்சிகள் பயனுறவில்லை. மக்களின் பேராளர் சபையான 'எக்ளீசியா' எபியால்டெசின் சீர்திருத்த முயற்சிகள் காரணமாக, ஆதிக்கநிலை எய்தி, பிரபுக்கள் சபையான ஏரியோபேகசை வலிமை குன்றச்செய்தது. பொதுமக்களுக்கு உதவும் இச்செயல்களை எதிர்த்த ஒரு சிலர், இறுதியில் எபியால்டெசைக் கொலை செய்தனர். எனினும், உயிர் நீத்த அவருடைய அரசியல் புரட்சி வெற்றி கண்டது. தெ.பா.

**எபிரேயர்கள்** செமிட்டிக்கு இனத்தைச் சார்ந்த மக்கள். ஆதியில் இவர்கள் அரேபியப் பாலை நிலப் பகுதியில் ஆடுமாடுகள் மேய்த்துப் பிழைப்பு நடத்தி வந்தனர். பிற்கால அரேபியர்களுக்கும் இவர்களுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. காலப்போக்கில் இவர்கள் ஊர்ப் (Ur) பகுதியை விட்டு நீங்கி

மேற்கு மலைப் பகுதியில் குடியேறினார்கள். ஆபிரகாம் என்பவர் இவர்களுக்குத் தலைவனாக இருந்து வழிநடத்திச் சென்றார். அவர்தம் பேரரான யாக்கோபின் தலைமையின் கீழ் ஓர் எபிரேயர் கூட்டம் பாலத்தீனத்திற்குச் சென்று அங்குக் குடியமர்ந்தது. பாலத்தீனத்தில் எபிரேயர்களின் அரசு நிறுவப்பட்டது. பாலத்தீனத்தின் வடபகுதி இசுரயேல் என்றழைக்கப் படுகிறது. இங்குச் சில செழிப்பான பள்ளத்தாக்குகள் இருந்தமையால் இங்குக் குடியேறியவர்கள் வளமுடன் விளங்கினர். தெற்குப் பகுதியூதேயாஎன அழைக்கப் படுகிறது. இங்கு மழை குறைவு. நிலம் வளமற்றது; மலைப்பாங்கானது. இப்புவியியல் வேற்றுமை காரணமாக இங்கு வாழ்ந்து வந்த மக்களின் வாழ்க்கை முறை மாறுபட்டு இருந்தது. யூதர்கள் இன்னல் சூழ்ந்த வாழ்க்கையைப் பெருமைப்படுத்திப் பேசினார்கள். மேய்ப்பனையும் ஆட்டு மந்தையையும் புகழ்ந்து பேசினர். இசுரயேலர்கள் இன்பவாழ்க்கை நடத்தினர்.

நீண்ட காலமாக இவர்களிடையே அரசியல் ஒற்றுமை ஏற்படவில்லை. இவர்கள் சற்றேறக்குறைய 12 இனக்குழுக்களாகப் பிரிந்திருந்தனர். ஒவ்வொன்றும் சுதந்திரமாக இயங்கி வந்தது. அரசர் என்ற நிறுவனம் அப்போது தோன்றவில்லை. ஒவ்வொருவனும் தனக்கு எது சரியென்று புலப்படுகிறதோ அதைச் செய்ய உரிமை கொண்டாடினான். பாலத்தீனத்தின் தென்மேற்கில் வாழ்ந்த எபிரேயர்கள், பாலத்தீனம் வருவதற்கு முன்பிருந்தே வாழ்ந்து வந்த பிலிசுதீனியர்கள் எபிரேயர்கள் ஒன்றாக இணைந்து செயற்படுவதைத் தடை செய்தனர். பிலிசுதீனியர்களுக்கும் எபிரேயர்களுக்கும் இடையறாத போராட்டம் நடந்து வந்தது. எபிரேயர்கள் போர் முறையை அவர்களிடமிருந்துதான் கற்றுக் கொண்டனர். எபிரேயர்களை முடிவில் ஒன்றாக இணைத்து ஒரே ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்தவர் சவுல் என்பவராவர். அவர் கி.மு. 1028 முதல் 1013 வரை ஆண்டு வந்தார். பிலிசுதீனியர்களிடம்அவர் அடைந்த பெருந் தோல்வியின் காரணமாக அவரது ஆட்சிக்கு எதிராக மக்கள் கிளர்ச்சி செய்தனர். அதனால், மனம்நொந்து சவுல் தற்கொலை செய்து கொண்டார். அவர்தம் மருமகன் தாவீது (David கி.மு. 1013 முதல் 973 வரை) சிதறுண்டிருந்த எபிரேயர்களை மீண்டும் ஒன்றுபடுத்தினார். தாவீது சிறந்த போர் வீரர். பிலிசுதீனியர்களைத் தோற்கடித்து எருசலேமைக் கைப்பற்றித் தம் தலைநகராக்கிக் கொண்டார். அங்கு ஒரு பெரிய கோயிலைக் கட்டத் தொடங்கினார். அவருக்குப்பின் அவர் மகனான சாலமோன் (கி.மு. 973–கி.மு. 933) பட்டம் எய்தினார். தம் மூதாதைகளின் தியாகங்களின் பலனை அவர் அனுபவித்தார். அவர் ஆட்சி மகிழ்ச்சியும் ஆடம்பரமும் நிறைந்ததொன்றாகத் திகழ்ந்தது. எபிரேயர்களின் பெருமை பல நாடுகளுக்கும் பரவியது. சூபா என்ற எத்தியோப்பிய நாட்டு அரசி அவருடைய நாட்டிற்குச் சென்று அவரது அறிவைச் சோதித்ததாகக் கூறப்படுகிறது. தந்தை தொடங்கிய கோயிலை அவர் கட்டி முடித்தார். பல மாளிகைகளை எழுப்பினார். அவற்றிற்கான கட்டிடப் பொருள்களை அயல்நாடுகளிலிருந்து தருவித்தார். முப்பதாயிரம் எபிரேயர்களைப் பினிசியாவிற்கு அனுப்பி அங்கிருந்த காடுகளிலும் சுரங்கங்களிலும் இலவசமாகப் பணிபுரிய வைத்து அதற்கு ஈடாகக் கட்டிடப் பொருள்களை அங்கிருந்து கொண்டு வந்தார் என்று கூறப்படுகிறது. சாலமோன் செலவாளி; சிற்றின்பப் பிரியர். அவரது அரண்மனையில் நாலாயிரம் குதிரைகளும் அந்தப்புரத்தில் ஆயிரம் மனைவியரும் இருந்தனர் என்று கூறுகிறார்கள்.

அவருக்குப் பின் மைய அரசு வலுவற்றுப் போயிற்று. ஆகவே, அரசு பிளவுபட்டது. வடக்கேயிருந்த 10 இனக்குழுக்கள் தனி அரசு ஒன்றை நிறுவினார்கள். தென் பகுதியினர் சாலமோனின் மகனான இரெகோபாவைத் தலைவராகவும் வடபகுதியினர் செரோமாம் என்பவரை மன்னராகவும் ஏற்றனர். எபிரேயர்கள் அரசியல் நிருவாகத்தில் வெற்றி காணவில்லை என்பது இவற்றிலிருந்து தெளிவாகும். அவர்களுடைய மைய அரசுக்கும் ஒரு சமயச் சார்பான அமைப்புக்கும் மிக்க வேறுபாடு காண இயலாது. எனவே, அவர்கள் தங்களைக் கடவுள் ஆட்சி செய்து வருவதாகக் கருதினர். கடவுள்தான் சமயத் துறைக்கு மட்டுமன்றி அரசியல் துறைக்கும் தலைவர் என்று நம்பினார்கள். அரசரைத் தவிர்க்க இயலாத ஒரு தீய சக்தியாகக் கருதினர். அமைதியை ஏற்படுத்தவும் பேச்சுரிமை வாணிகம் ஆகியவற்றைப் பெருக்கவும் தோற்றுவிக்கப்பட்ட ஒரு கருவியே அரசன் என்று எண்ணினார்கள். அதன் விளைவாகத்தான் அவர்கள் மைய அரசை வெகுவாகப் போற்றவில்லை.

நாடு பிளவுபட்ட பிறகு அதனுடைய வலிமை குறைந்துவிட்டது. அன்னியப் படையெடுப்பை முறியடிக்கும் ஆற்றலை அது இழந்துவிட்டது. அசீரியர்கள் கி.மு. 722-இல் இசுரயேலை வென்று பலரைக் கைதிகளாகத் தம் நாட்டிற்குக் கொண்டு சென்றனர். அந்நிகழ்ச்சியைக் கண்ணுற்ற யூதர்கள் தங்களுடைய கடவுள் வலிமை மிக்கவராக இருந்தமையால் தங்களை அசீரியர்கள் ஒன்றுஞ் செய்ய இயலாது போயிற்று என்று பெருமையடித்துக் கொண்டனர். அவர்களுடைய கடவுளின் பாதுகாப்பில் பத்திரமாக இருப்பதாகக் கூறினர். ஆனால், கி.மு. 586-இல் பாபிலோனிய நாட்டுக் கால்டிய மன்னரான இரண்டாம்

நெபுகாத்து நேசர் யூதேயா மீது படையெடுத்து எருச லேமைக் கைப்பற்றினார். யூதர்களுள் சிலர் கைதி களாகப் பாபிலோனியாவிற்குக் கொண்டு செல்லப் பட்டனர். ஏனையோர் எகிப்து நாட்டிற்கு ஓடிவிட்ட னர். எருசலேமும் அங்கிருந்த கோயிலும் அழிக்கப் பட்டன. எகிப்தில் வாழ்ந்து வந்த யூதர்கள் மனம் தளராதிருக்கச் எரேமியா என்ற தீர்க்கதரிசி அவர்களுக்கு நல்ல வருங்காலம் ஒன்று அமையப் போவதாகக் கூறிவந்தார். இவர்கள் மீண்டும் ஒரு பெரும் சக்தியாக விளங்குவார்கள் என்றும், முன்பு இருந்ததைவிட அதிகமான பெருமையை இவர்கள் அடைவார்கள் என்றும் கூறினார். கால்டியர்கள் மற்றும் அசீரியர்களுடைய ஆதிக்கம் வெகுநாள் நீடிக்கவில்லை. இவர்களைப் பாரசீகர்கள் தோற் கடித்துத் தங்களுடைய ஆதிக்கத்தை ஏற்படுத்திய போது எபிரேயர்கள் தங்களுடைய நாட்டிற்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர். பலர் தாயகம் திரும் பினார்கள். மிக்க அனுபவம் பெற்று வந்தனர் என்பது உண்மையேயென்றாலும் பொருட் செல்வம் அற்று இருந்தனர். ஆனால், இவர்கள் அனுபவித்த துன்பங் களும் மேற்கொண்ட பல பயணங்களும் ஒருபுதிய சம யத்தைத் தோற்றுவிக்கக் காரணங்களாக அமைந்தன. அதனுடைய அடித்தளத்தின் மீதுதான் இன்று மாபெ ரும் சக்தியாக விளங்கும் கிறித்தவ மதம் அமைக்கப் பட்டிருக்கிறது என்பதை உணரும்போது இவர்களு டைய சாதனையின் மேன்மை விளங்கும். நாடு திரும் பிய எபிரேயர்கள் எருசலேமின் மதில்களை மறுபடி யும் எழுப்பினர். புதிய வளமையுடன் எருசலேம் திகழத் தொடங்கியது. ஆனால், மீண்டும் அமைக்கப் பட்ட எபிரேய அரசு பழைய சக்தியுடன் விளங்க வில்லை. அது கி.மு. 63 வரை சுதந்திர நாடாக இருந்த தென்பது உண்மையென்றாலும் ஏதேனும் ஒரு பேர ரசின் கீழிருந்த ஒரு சார்பு நாடாகவே இருந்து வந் தது. முதலில் பாரசீகர்களிடமும், பின்னர்க் கிரேக்கர் களிடமும், அதையடுத்து உரோமானியர்களிடமும் அது அடிபணிந்திருந்தது.

சமயம்: மேலைநாட்டு நாகரிக வளர்ச்சிக்கு உதவிய மக்களுள் எபிரேயர்களே முதன்முதலாக ஒரே கடவுள் மீது நம்பிக்கை வளர்த்தவர்களாவார் கள். இவர்களுடைய சமயம் இவர்களுடைய உயரிய குறிக்கோள்கள் மற்றும் இவர்களுடைய செயல்களின் விளைவாகும். இவர்கள் தொடக் கத்தில் அரேபியப் பாலைநிலத்தில் நாடோடிகளாகத் திரிந்த காலத்தில் கடைப்பிடித்து வந்த சமயக் கொள்கைகள் அதில் இடம் பெற்றன. பின்னர், இவர் கள் சந்திக்க நேர்ந்த கானான் மக்கள், அராபிய மக் கள் போன்றவர்களின் சமயக் கருத்துகள் சிலவற்றையும் அதில் காணலாம். அதேபோன்று இவர்கள் பாபிலோ னியாவில் வாழ நேர்ந்த காலத்தில் இவர்கள் அறிந்து கொண்ட இயற்கைத் தெய்வங்களும் அதில் காணக் கிடக்கின்றன. தொடக்கத்தில் விலங்குகளை வழி பட்டனர். மந்திரங்களும் பலியிடுதலும் செல்வாக்குப் பெற்றிருந்தன. நாளடைவில் தெய்வங்களுக்கு மனித வடிவை அமைத்தனர். ஒவ்வொரு குலத்துக்கும் ஒவ் வோர் இடத்திற்கும் தனித்தனிக் கடவுளை ஏற்படுத் திக் கொண்டிருந்தனர். பின்னர்க் கடவுள் ஒரு வரே என்ற கொள்கையைக் கடைப்பிடிக்கலானார் கள். அவர் எகோவா என்றழைக்கப்பட்டார். நாடோடிகளாகத் திரிந்த காலத்தில் அவருடைய கரு ணையால்தான் இவர்கள் பாலை நிலத்தின் இன் னல்களைச் சமாளிக்க முடிந்தது என்று கருதினார்கள். கானான் மக்களுக்கு எதிராகப் போரிட்டவரும் அவரே. அசீரியக் கடவுளை ஒழிக்க அவருடைய உத வியைத்தான் எபிரேயர்கள் நாடினர். வெகுகாலம் வரை அவரைப் போர்க்கடவுளாகக் கருதி வந்தனர். அவர்தான் தாவீதுக்குக்குப் போர்ப் பயிற்சி அளித்த வர் என்று கருதப்பட்டது. யூதேயா அரசரான எசைக்கி யாவிற்கு அசீரியர்கள் பயமுறுத்தல் கடிதம் ஒன்றை எழுதியபோது, அது எகோவாவின் முன்பு படித்துக் காண்பிக்கப்பட்டது. அவருடைய யோசனையையும் அவர் கோரினார். ஒரு தனி மனிதனுக்கு இருக்கக் கூடிய பண்புகள் அனைத்தும் அத்தெய்வத்திற்கு இருப் பதாக நம்பினார்கள். மனிதனை நன்றாகப் புரிந்து கொண்டு அவனிடம் இரக்கம் காட்டும் கடவுளாக அவர் கருதப்பட்டார். எபிரேயர்களுடைய ஒவ்வொரு முன்னேற்றமும் அவருடைய செய்கையின் பிரதிபலிப் பாகக் கருதப்பட்டது. ஆகவேதான், எபிரேயர் வர லாறு சமயப் பொருள் கொண்டதாக இருப்பதைக் காணலாம். அத்தகையதொரு கடவுளைப் படைத்தது மோசசு என்பவரேயாவார். அவர் தம்மைப் பின் பற்றி வந்தவர்களைப் புனித மலையான சினாய் மலைக்கு அழைத்துச் சென்று அக்கடவுளை ஏற்றுக் கொள்ளுமாறு செய்தார். அப்போது ஓர் உடன்பாடு மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகிறது. அதா வது, எகோவாவை மட்டும் எபிரேயர்கள் வழிபடு வதற்கு இசைந்தனர். எகோவாவும் எபிரேயர் களுக்கு மட்டும் உதவி செய்வதாக வாக்களித்தார். கடவுளுடைய அன்பிற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் என்று எபிரேயர்கள் அழைக்கப்படுகின்றனர். தம் அன்பிற்குகந்த மக்களுக்குச் எகோவா பத்துக் கட்டளைகள் அளித்தார். முதலாம் கட்டளை நாட்டுக்குத் தலைவர் கடவுளேயாவார். அவர்தம் கட்டளைகளே சட்டங்களாகும். குற்றங்களுக்கேற்ற தண்டனைகளை ஏற்படுத்தியவரும் அவரே. கடவுள் நிந்தனை மன்னிக்க முடியாத மாபெரும் குற்றமாகும். இரண்டாம் கட்டளை அவரை அருவநிலையிலேயே வழிபட வேண்டும். மூன்றாம் கட்டளை எகோ

வாவைப் பயபக்தியுடன் அழைக்க வேண்டும். நான்காம் கட்டளை சனிக்கிழமையை ஓய்வுநாளாகக் கொண்டாட வேண்டும். அன்று இறைவனை வழிபடுவதில் நேரத்தைக் கழிக்க வேண்டும். ஐந்தாம் கட்டளை குடும்பத்தின் புனிதத்தன்மையையும் தந்தையின் அதிகாரத்தையும் விளக்குகிறது. ஆறாம் கட்டளை கொலை செய்வதை வன்மையாகக் கண்டிக்கிறது. ஏழாம் கட்டளை திருமணத்தின் பெருமையை விளக்குகிறது. எட்டாம் கட்டளை சொத்துரிமையின் புனிதத்தன்மையை வலியுறுத்துகிறது. ஒன்பதாம் கட்டளை சாட்சிகள் உண்மையையே கூற வேண்டும் என்று வலியுறுத்துகிறது. பொய் சாட்சிகள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். பத்தாம் கட்டளை அன்னியர் உடைமை மீது ஆசை கொள்ளக் கூடாது என்று கூறுகிறது. ஒருவன் மனைவியும் அவன் தன் அடிமையும் அவனுடைய உடைமைகளாகக் கருதப்பட்டனர்.

இவர்களுடைய சமயத்தை அறமுறை சார்ந்த சமயமாக மாற்றியமைத்தவர்கள் அவர்களிடையே தோன்றிய தீர்க்கதரிசிகளேயாவர். கடவுளுடைய விருப்பத்தை அறிந்து மக்களுக்குத் தீர்க்கதரிசிகளே எடுத்துரைத்தனர் என எபிரேயர்கள் கருதுகின்றனர். அவர்களுள் முதலில் தோன்றியவர் ஆமோசு என்பவராகும். ஓர் எளிய மேய்ப்பனாக வாழ்வு நடத்தி வந்த ஆமோசைத் தனது மந்தையை விட்டகன்று தன் கருத்துகளை மக்களிடம் பரப்புமாறு கடவுள் ஆணையிட்டதாக எபிரேயர் நம்பினர். அக் கருத்துகளாவன:- கடவுளே எல்லா வல்லமையும் படைத்தவராவார்; மனிதன் உட்பட மற்றனைத்தும் சிறப்பற்றவை; கடவுளைப் பற்றி அறிந்து அவருக்குத் தொண்டு செய்யக்கூடிய ஒரு நிலை மனிதனுக்கு மட்டுமே அளிக்கப்பட்டுள்ளது; எனினும் அவனும் கடவுளும் வெவ்வேறானவர்கள்; கடவுளை யாரும் பார்க்கவோ அவர் பேசுவதைக் கேட்கவோ அவரைத் தொட்டுப் பார்க்கவோ இயலாது; ஏனெனில் அவருக்கு உருவம் கிடையாது.

ஆமோசின் பணியினை ஏசையா தொடர்ந்தார். அவருடைய கருத்துகளாவன: 'எகோவா உலக முழுவதையும் ஆண்டு வருகிறார். உலக மக்கள் தவறான வழியில் செல்லும்போது அவர்களைத் தண்டனைக்கு உட்படுத்துகிறார்; எபிரேயர்கள் அதற்கு விலக்கு இல்லை. அவ்வாறு தண்டிக்க முற்படும் போது மக்களுள் எந்த ஒரு பகுதியாளரையும் கருவியாகப் பயன்படுத்துகிறார். எபிரேயர்களை அசீரியர்கள் தாக்கும்போது எகோவா எபிரேயர்களுக்கு உதவாமைக்கு அதுவே காரணமாகும்; தங்களை ஆபத்திலிருந்து மீட்டுக் கொள்ளும் பொறுப்பு மக்களிடமேயுள்ளது; மனிதனுடைய போர்களைக் கடவுள் செய்ய வேண்டும் என்று எண்ணுவது தவறானது. கடவுளுடைய பெருமையை நாடும் வகையில் மக்களே முயற்சி செய்ய' வேண்டும்; எபிரேயர்களுடைய துயரை நீக்க அவர்களிடையே ஓர் இரட்சகர் தோன்றுவார். அந்த இரட்சகர் மக்களிடம் அமைதியையும் சகோதரத்துவத்தையும் ஏற்படுத்துவார்.

செரிமையா என்பவர்தான் ஒரே கடவுள் வழிபாட்டைச் சூடேயர்களிடம் தோற்றுவித்தவர். எசிக்கியல் என்பவர் அறமுறையான வாழ்க்கையை ஒவ்வொருவனும் கடைப்பிடிக்க வேண்டுமெனக் கூறினார். கூட்டுப் பொறுப்புக் கோட்பாட்டில் அவருக்கு நம்பிக்கை இல்லை. தந்தை பொருட்டுத் தனயனோ, தனயன் பொருட்டுத் தந்தையோ துன்பமடைய வேண்டுவதில்லை எனக் கூறினார்.

**இலக்கியம்:** எபிரேயர்களுடைய இலக்கியப் படைப்புகள் பெரும்பாலும் அவர்களுடைய சமயத்தைப் பற்றியனவாகும். அவற்றுள் மிகச் சிறந்தது 'பழைய ஏற்பாடு' ஆகும். அது சிறந்ததொரு வரலாற்று நூலாகவும், கவிதையாகவும் விளங்குகிறது. 'புறப்பாடு பற்றிய புத்தகம்' (Book of Exodus) மோசசின் சுயசரிதையாகக் காட்சியளிக்கிறது. சோசுவாவின் புத்தகம் (Book of Joshua) ஒரு வீர காவியமாகத் திகழ்கிறது. நீதிபதிகளின் புத்தகம் (Book of Judges) சாம்சனின் கதையை விவரிக்கிறது. அரசர்களின் புத்தகங்கள் (Books of Kings) எபிரேய அரசர்களைப் பற்றிக் கூறுகின்றன. சோப்பின் புத்தகம் (Book of Job) மனிதன், சாத்தான், கடவுள் ஆகியோரை முக்கிய பாத்திரங்களாகக் கொண்டிருக்கிறது. இதில் மனிதனுக்கும் சாத்தானுக்கும் இடையே நடைபெறும் போட்டியில் அறம் எவ்வாறு முடிவில் வெற்றி பெறுகிறது என்பது விளக்கப்பட்டுள்ளது. பாசுரங்கள் புத்தகம் (Book of Psalms) நல்ல கவிதைகளை உட்கொண்டுள்ளது. எபிரேயர்களுடைய சட்டங்களும் அவற்றைப் பற்றிய விளக்கங்களும் கொண்ட நூல் 'தால்மூத்து' என அழைக்கப்படுகிறது.

இசைக் கலைக்குச் சிறப்பானதொரு தொண்டை எபிரேயர்கள் செய்துள்ளனர். சமயச் சடங்குகள் செய்யும் போது இசை அதிகமாகப் பயன்படுத்தப்பட்டது. யாழ் போன்ற இசைக் கருவிகள் வாய்ப்பாட்டுடன் இணைந்து பயன்படுத்தப்பட்டன. கோயில்களில் இசைக் குழுக்கள் அமைக்கப்பட்டன. காதற் பாட்டுகள், நடனங்கள் ஆகியவற்றைப் பற்றி ஆங்காங்கே குறிப்பிடப்பட்டுள்ளன. கட்டடக்கலை, ஓவி

யம், சிற்பக்கலை ஆகிய துறைகளில் இவர்கள் குறிப்பிடத்தக்க சாதனைகள் ஏதும் புரியவில்லை. சினகாகு (Synagogue) என்றழைக்கப்பட்ட கோயில்களைக் கட்டினர் என்றாலும் அவை யாவும் மிகச் சாதாரணமானவையாகும். ஓவியம் மற்றும் சிற்பக்கலை வளராமைக்கு இவர்களுடைய சமயம் முக்கிய காரணமாகும். சிலைகள் யாவும் உடைத்தெறியப்பட வேண்டும் என்று தீர்க்கதரிசிகள் கூறினர். உலகில் உள்ள பொருளையோ அல்லது மேல் உலகில் உள்ள பொருளையோ மையமாகக் கொண்டு சித்திரங்கள் வரையக் கூடாது என்று இவர்கள் கூறினர். அறிவியல் துறையிலும் இவர்களுடைய தொண்டு சிறக்கவில்லை. வேதியல், கணக்கியல், வானியல் போன்றவை புறக்கணிக்கப்பட்டன.

**தத்துவம்:** எபிரேயர்களின் தத்துவம் மனித வாழ்க்கையையும் விதியையும் சுற்றிப் பின்னப்பட்டுள்ளது. அறவாழ்க்கை மேற்கொள்ள வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகிறது. இவ்வுலகில் மனிதன் தானாகச் சாதிக்கக் கூடியது எதுவுமே இல்லை; எல்லாம் விதிப்பயன்; உலகம் ஒரு மாயை; செல்வம், புகழ் ஆகியவை அழியும் தன்மையுடையனவாகும்; ஆகவே, மனிதனுக்கு எது நியாயம் என்று தோன்றுகிறதோ அதையே செய்ய வேண்டும்; அப்போதுதான் அவன் மகிழ்ச்சியுடன் வாழ இயலும் என்பது இவர்களுடைய தத்துவத்தின் சிறப்புக் கூறுகளாகும்.

**சமூக வாழ்க்கை:** குடும்பமே சமுதாயத்தின் மிகச் சிறிய அலகாகும். குடும்பம் புனிதத் தன்மை வாய்ந்ததாகக் கருதப்பட்டது. குடும்பத்தின் தலைவருக்கு மிகுந்த அதிகாரங்கள் வழங்கப்பட்டன. மூத்தோர்கள் மரியாதையுடன் நடத்தப்பட்டனர். குழந்தைகளிடம் அன்பு காட்டப்பட்டது. ஏழைகளுக்கு இரக்கம் காட்டினர். வருவாயின் ஒரு பகுதி தருமத்திற்கு ஒதுக்கப்பட்டது. இல்லறமே நல்லறமாகக் கருதப்பட்டது. குழந்தைகள் பெறுவது திருமணத்தின் முக்கிய நோக்கமாகும். பெண் மகவு பிறப்பதை விரும்பவில்லை; எனினும், பிறந்த பிறகு ஆணுக்குச் சமமாக வளர்க்கப்பட்டது. பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கப்படவில்லை. விவாகரத்துக்கு வழியுண்டு. விபசாரம் செய்யும் பெண்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். அகத் தூய்மையுடன் உடல் தூய்மைக்கும் எபிரேயர்கள் சிறந்த இடமளித்தனர்.

தி.அர.இரா.

**எபிரேயம்:** இசுரேல் நாட்டில் பேசப்படுகிற மொழியாகும். இம்மொழி செமிட்டோ எமிட்டிக்குக் (Semito Hamitic) குடும்பத்தைச் சார்ந்தது; ஏறத்தாழ 3500 ஆண்டுகளுக்கு முன்னர்ப் பாலத்தீனத்தில் பேசப்பட்ட மொழியாகும். தோன்றியதிலிருந்தே அமைப்பில் எந்தவிதப் பெரிய மாற்றமுமின்றி இருந்து வருகிறது. கிறித்தவர்களின் விவிலியம் இம்மொழியிலேயே எழுதப்பட்டது.

இம்மொழி 22 எழுத்துகளைக் கொண்டுள்ளது. எல்லா எழுத்துகளும் மெய்யெழுத்துகளாகும். கிறித்தவ ஊழிக்காலத் தொடக்கத்தில் உயிரெழுத்துகள் தோன்றி மெய்யெழுத்துகளின் மேலும் கீழும் குறியிட்டு வழங்கி வருகிறது. இம்மொழி வலப்புறமாகத் தொடங்கி இடப் புறம் நோக்கி எழுதப்படுகிறது. புத்தகத்தைப் பயில்வதும் இறுதியில் தொடங்கி முன்னோக்கிச் செல்கிறது. பழைய எபிரேயத்திலுள்ள பெயர், வினை போன்ற சொல் வடிவங்கள் மூன்று மெய்யெழுத்துகள் கொண்ட வேர்ச் சொற்களாக விளங்குகின்றன. முன்னொட்டுகளும் பின்னொட்டுகளும் தொடர்புடைய சொற்பொருளைக்(Shades of Meaning) குறிக்கப் பயன்படுத்தப்படுகின்றன. வாக்கிய அமைப்பு எளிமையானதாகவும், நேர்கூற்றினதாகவும் அமைந்துள்ளது. எபிரேயம் (Hebrew) கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் மீண்டும் புத்துயிர் பெற்று வளரத் தொடங்கியது. பல மொழிகளிலிருந்தும் சொற்கள் கடன் பெறப்பட்டுப் புதிய தேவைகளுக்கேற்பத் தகுதியுடைய மொழியாக மாற்றப்பட்டது. இசுரேல் நாடு 1948-இல் தோன்றியபோது, அந்நாட்டின் தேசியமொழியாக எபிரேயம் அமைந்தது. எபிரேயம் பேசமுடியாத யூதர்கள் உத்திசு (Yiddish) மொழி பேசுகிறார்கள். இம்மொழியும் எபிரேய மொழி எழுத்துகளைப் பயன்படுத்தியே எழுதப்பட்டது. எபிரேயத்தின் சொற்களும் இம்மொழியில் அதிகம் கலந்துள்ளன. யூதர்கள் பேசிய மற்றுமொரு மொழி அராமெய்க்கு (Aramaic) என்பதாகும்.

யூதர்களின் பழைய இலக்கியம் எபிரேய மொழியிலேயே காணப்படுகிறது. வாய் மொழியாகப் பயன்படுத்தப்பட்ட பாடல்களும் கவிதைகளும் இறுதியாக எபிரேயத்தில் எழுதப்பட்டு விவிலியத்தில் இணைக்கப்பட்டன. கி.பி. 2-ஆம் நூற்றாண்டிற்கும் 6-ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட கால இடைவெளி 'தல்முடிக் காலம்' (Talmudic Period) எனப்படுகிறது. இக்காலத்தில் விவிலியச் சட்ட விளக்கங்களும் அற இலக்கியங்களும் தோன்றின. இவை பிற்காலத்தில் வந்த எழுத்தாளர்களை மிகவும் கவர்ந்தன. கவிதை கி.பி. 6-இலிருந்து 8-ஆம் நூற்றாண்டு வரையில் வளர்ச்சி அடைந்தது. சோசு பென் சோசு (Jose ben Jose), ஏனை (Janai), ஏலேசர் களீர் (Eleaser Kalir) போன்றவர்கள் கவிதை இலக்கியத்தைச் செழிக்கச் செய்தவர்கள். எபிரேய மொழியில் கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் தோன்றிய 'மொழி நூல்' என்ற நூல் அம்மொழியின் விதிகளைக் கூறுகிற

இலக்கண நூலாகும். மீண்டும், கி.பி.11-15-ஆம் நூற்றாண்டுகள் எபிரேய மொழியின் பொற்காலம் எனப்படுகின்றன.

எபிரேய மொழி கி.பி. 18, 19-ஆம் நூற்றாண்டுகளில் இலக்கியம், மதம், மெய்ப்பொருள், அறிவியல் முதலிய பிரிவுகளில் பயன்படுத்தப்பட்டது. மோசசு மென்தேல்சோகன் (Moses Mendelssohan) என்பவர் ஓர் இயக்கம் தொடங்கி யூதர்களின் பண்பாட்டையும், ஐரோப்பாவின் பண்பாட்டையும் இணைத்தோடு எபிரேய மொழியையும் புதுக்கினார். மேலும், கெய்ம் நாச்மேன் பியாலிக்கு (Chaim Nachman Bialik), ஆபிரகாம் இசுலோன்சுகி (Abraham Shlonski), ஆசர் பரசு (Asher Barash), அக்னோன் (Agnon) போன்ற அறிஞர்கள் எபிரேய மொழி இலக்கிய வரலாற்றில் மிகவும் குறிப்பிடத்தக்கவர்கள். அக்னோன் 1966-ஆம் ஆண்டில் நோபல் பரிசைப் பெற்றார். ஆ.கா.

துணை நூல்கள்:

**Kravitz, Nathaniel**, 3000 years of Hebrew Literature: from the Earliest Times Through the 20th Century, Shallow Press, 1972.

**Sonntag, Jocob (Editor)** Jewish Writing To-day, Vallentine Mitchell, 1974.

***எபீசசு***: அயோனியச் சிற்றாசியாவில் இருந்த மிகப்பழைய கிரேக்க நகரமான எபீசசு (Ephesus) வின் பண்டைப் புகழை அதன் அழிவுச் சின்னங்கள் விளக்கா நிற்கும். பண்டைக்காலத்திய ஏழு அற்புதங்களில் ஒன்றான தயானா அல்லது ஆர்ட்டிமிசு கோயில் இங்கேதான் விளங்கியது. ஏறத்தாழ கி.மு. 600-ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பெற்ற இந்நகர் நீண்டகாலம் அந்தப் பகுதியின் வாணிக வழிகளைக் கட்டுப்படுத்தி ஆட்சிபுரிந்தது. எனினும், இலிடியா நாட்டு மன்னன் குரூசசுக்கு அடங்கிச் செயலாற்ற நேரிட்டது. பிறகு பாரசீகப் பேரரசன் சைரசு அப்பகுதியைத் தன்னடிப்படுத்தினான். பாரசீகரை எதிர்த்து கி.மு. 499 முதல் 493 வரை நடைபெற்ற அயோனியர் கலகம் எபீசசை அடிப்படையாகக் கொண்டிருந்தது. பாரசீகர்களும் எபீசசின் உள்நாட்டுச் சுதந்திரத்தை மதித்து நடந்து கொண்டிருந்தனர். பாரசீகப் பேரரசர்கள் ஆர்ட்டிமிசு கோயிலுக்கு உரிய மரியாதையை எப்பொழுதும் அளித்தனர். எபீசசு கி.மு. 454 க்குப் பிறகு தாய் நாடான ஏதென்சுக்குக் கப்பம் கட்ட நேர்ந்தது. இதனால், சினமடைந்த எபீசியர் ஏதென்சின் பகை நாடான இசுபார்ட்டாவுடன் உடன்பாடு செய்து கொண்டு அதீனியரை எதிர்த்தனர். இசுபார்ட்டா மன்னன் எபீசசில் தங்கி, தன் ஆட்சியைச் சில ஆண்டுகள் நடத்தினான். இறுதியில், கி.மு. 333-இல் மகா அலெக்சாந்தர் அதைக் கைப்பற்றினார். அவருக்குப்பிறகு, பல மாசிடோனியத்தலைவர்கள் எபீசசில் ஆட்சி புரிந்தனர். எபீசசின் பல்வேறு வகைக் காசுகளைக் கொண்டு அதன் வரலாறு இப்பொழுது தெளிவாக அறியப்படுகிறது. எபீசசு கி.மு. 133-இல் உரோமானியரின் ஆட்சிக்குட்பட்டது. அதைவிடுவித்துக்கொள்ள எபீசசுசெய்த முயற்சிகள் பயனுறவில்லை. அகசுடசு உரோமப் பேரரசரானபின், தம் பேரரசின் ஆசியப் பகுதியை ஒரு மாகாணமாக்கி எபீசசை அதன் முதன் நகரமாக அறிவித்தார். பின்னர்க் கிறித்தவமதம் அங்கே பரவத் தொடங்கியது. மிலேச்ச இனத்தவரான காதியர் கி.பி. 262-இல் எபீசசையும் அதன் கோயிலையும் அடியோடு அழித்தனர். அதற்குப்பிறகு அந்நகரம் தன் பழைய சிறப்பைப் பெறவே இல்லை. உரோமப் பேரரசர் ஆர்க்கேடியசு எபீசசில் புதிய பல கட்டடங்களை எழுப்பியதுடன் தம் நினைவாக ஆர்க்கேடியன் என்று புதிய பெயரை அந்நகருக்குச் சூட்டினார். ஆனால், சிறிதுசிறிதாக எபீசசின் சிறப்புக் குறையத் தொடங்கியது. இடைக்காலத்தில் இதைத் துறைமுகமாகக் கூட யாரும் பயன்படுத்தவில்லை. இதன் பழைய பெருமை அடியோடு மறைந்தது. நகரமும் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது. இப்பகுதியில் கி.பி. 1863 முதல் 1874 வரை நடைபெற்ற புதைபொருள் ஆராய்ச்சிகளின் விளைவாகத்தான் எபீசசின் பண்டைய சிறப்பு உலகுக்குத் தெரியலாயிற்று. தெ.பா.

**எம்பார்** வைணவ ஆசிரியர்களுள் ஒருவர். இவர் இராமானுசரின் சிறிய தாயார் மைந்தராவார். இவர் திருப்பெரும்புதூருக்கு அருகிலுள்ள மழலை மங்கலத்தில் கி.பி. 1026-ஆம் ஆண்டில் (குரோதன ஆண்டு தைத் திங்கள், சோமவாரப் பூரணை நாள்) பிறந்தார். கோவிந்தராசப் பெருமாள் என்பது இவர் இயற்பெயர். கோவிந்தபட்டர் எனவும் குறிப்பிடப்படுவார். திருமலை நம்பிக்கு இவர் மருகர் ஆவார். இவர் கங்கை சென்று நீராடுகையில் ஓர் இலிங்கம் கையிலகப்பட்டது. அதனைக் கொண்டுவந்து காளத்தியில் சிவபூசை செய்துவந்தார். அப்போது இவர் தம் மாமன் திருமலை நம்பியால் ஆட்கொள்ளப் பெற்று வைணவரானார். இராமானுசருக்கு மாணவராகி, அவருடைய நிழலைப்போல நீங்காதிருந்து தொண்டு புரிந்தார். இவர் 'மாகாந்த நாராயணனார் வைகும், வகையறிந்தோர்க்கு ஏகாந்தமில்லை இருள் இல்லை' என்ற கொள்கையில் வாழ்ந்து வந்தார். உலகப் பற்றற்ற சிறந்த துறவியாகத் திகழ்ந்

தார். இராமானுசர் இவரைத் திருத்திப் பணி கொண்டு சந்நியாசம் அளித்துத் தம்முடைய திருப் பெயரையும் வழங்கினார் என்றும், அப்போது இவர் 'தங்கள் திருவடி நிழலையே பற்றியிருந்த அடி யேனுக்குத் திருநாம நிழலே போதும்' என்று வேண்டினார் என்றும், அதனால் இராமானுசர் எம் பெருமானார் என்னும் தம் பெயரின் ஆதியையும் அந்தத்தையும் இணைத்து எம்பார் என்று பெயரிட் டார் என்றும் இவர் வரலாறு கூறுகிறது. இவரது வரலாறு வைணவக் குருபரம்பரையில் ஆசாரிய வைபவங் கூறும் பகுதியில் கூறப்பட்டுள்ளது. இராமா னுசருக்கு அணுக்கத் தொண்டராகவும், மாணவராக வும் விளங்கிய இவர், அவருக்குப்பின் அடுத்த ஆசாரி யராகவும் திகழ்ந்தார். இவர் பட்டர் எனப்படும் பராசர பட்டருக்கு மந்திரங்கள் உபதேசித்தார் என் பது கூறப்பட்டுள்ளது. இவர் பெரிய திருமொழிக்கு 'எங்கள் கதியே இராமானுச முனியே' எனத் தொடங்கும் வெண்பாவைத் தனியனாக வழங்கியுள் ளார். இவர் தம் 105-ஆம் வயதில் கி.பி. 1131-இல் காலமானார். அ.மா.பா.

**எம்பிடாக்கிளிசு** ஒரு கிரேக்கத் தீர்க்கதரிசியும் இயற்கைத் தத்துவ அறிஞருமாவார். எம்பிடாக்கிளிசு (Empedocles) அக்ரகேசு என்னுமிடத்தில் கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் பிறந்தார். இவர் ஒரு சிறந்த அரசி யல் வாதி; குடியரசுத் தலைவர். ஆகையினால் இவரை நாடு கடத்தினார்கள். இவர் ஒரு சிறந்த கவிஞர். இவருடைய பாடலில் தம்மை ஓர் அழியாத தன்மையுடையவர் என்று குறிப்பிட்டார். இவரைச் சூழ்ந்திருந்து மக்கள் அறிவுரை கேட்பார்கள். நோயி லிருந்து தங்களைக் காப்பாற்ற இவரை வேண்டிக் கொள்வார்கள். இவரிடம் இயற்கை கடந்த சில சக்திகள் இருப்பதாக மக்கள் நம்பினார்கள். இவர் நெருப்பில் குதித்துத் தம்மைத் தாமே மாய்த்துக் கொண்டார் என்று கூறப்படுகிறார்.

**இயற்கைத் தத்துவம்**: பார்மினைடிசு (Parmenides) என்பவராலும் பைதாகோரிசினாலும் இவர் இயக்குவிக்கப்பட்டார். இவருடைய மதத் தொடர் பான போதனைகளில் பார்மினைடிசின் தூண்டல்கள் காணப்படுகின்றன. இவர் நான்கு கருப்பொருள் களை எல்லாவற்றிற்கும் மூலகாரணமாக ஒத்துக் கொண்டு, இயற்கையான மாற்றங்கள் அவற்றின் சேர்க்கையாலும் பிரிவினாலும் மீண்டும் சார்வதனா லும் ஏற்படுகின்றன என்று கூறுகிறார். இயற்கை மாற்றங்களைப் பிறப்பினாலோ இறப்பினாலோ விவரிக்க முடியாது. உண்மையாக நடப்பது என்ன வெனில், கலப்பதும் பிரிப்பதும் உள்ளவற்றை மீண் டும் கலப்பதுமாகும். நிறமும் வெப்பமும் ஈரமும் ஒன்று சேர்ந்தால் கிடைப்பது, ஓர் ஓவியர் நிறங் களைச் சேர்ப்பது போன்றதாகும். இத்தகைய நாலு விதச் சேர்க்கையின் கோட்பாடு பிளேட்டோவையும் (Plato) அரிசுடாட்டிலையும் (Aristotle) பலவித மாகச் செயற்படத் தூண்டியது. இந்த நான்கும் ஒரு பக்கம் அன்பும் மற்றொரு பக்கம் சச்சரவுமாகப் பின்னப்பட்டிருக்கின்றன. அன்பு அவற்றில் ஓர் ஒற்றுமையை ஏற்படுத்துகிறது. அவற்றில் பிளவு ஏற்படுவதற்குக் காரணம் சச்சரவு. ஆனால், உலகில் பார்க்கும்பொழுது இரண்டும் கூடுதலாகவும் குறை வாகவும் மாறிமாறிக் காணப்படுகிறது. ஆனால், இப் பொழுது பார்க்கும் பொழுது சச்சரவுதான் அதிக மாகக் காணப்படுகின்றது. செடிகளிலும் மிருகங்களி லும் கூட ஒற்றுமையையும் வேற்றுமையையும் எம் பிடாக்கிளிசு கண்டார்.

ஆன்மாவின் அழியாத தன்மையும் நிலையான தன்மையும் இவரால் விவரிக்கப்படுகின்றன. எம் பிடாக்கிளிசின் வாழ்க்கை தெய்விகமானது. செடி, மிருகம், மனிதன் முதலிய பிறவிகள் எடுத்து, இறுதி யில் தெய்விக மனிதனாகவும் கவியாகவும் மருத்துவ ராகவும் தலைவர்களாகவும் அவதாரம் செய்து, மனி தத் தொல்லைகளிலிருந்து விடுபட்டு, மீண்டும் இறை நிலையை இவர் அடைந்ததாக நம்பப்படுகிறார்.

எம்பிடாக்கிளிசின் கருத்துப்படி, இயற்கையும் ஆவியும் ஒன்றுக் கொன்று தொடர்புடையன. முழு முதற் கடவுளுக்கு மனித உருவம் இல்லை என்று எம்பிடாக்கிளிசிற்கு முன்பே சீனோபேனசு (Xenophanes) கூறினார். ஆனால், அவர் பருப்பொருள் சாராத தன்மையைப் பற்றிக் கூறவில்லை. அனக்ச கோரசு (Anaxagoras) என்பவர் மனத்திற்கு உடல் சார்ந்த தன்மை கிடையாது என்று கூறினார். ஆனால், அவர் அதைத் தெய்வமாகக் கருதவில்லை. எம்பிடாக் கிளிசு அனக்சகோரசின் கொள்கையும் அவருடைய சமய சித்தாந்தத்தில் புகுத்தினார். பொருள்கள் சேர்ந்த இடம், கவர்கின்ற ஆற்றல், புனித அண்டத் தின் மனம் ஆகியன எம்பிடாக்கிளிசின் சமயத்தத்து வத்தில் மூன்றுவிதமான அன்பின் சக்தி வெளிப் பாடாக அமைந்துள்ளன. இரா.கோ.

**எம்பெருமானார்**: காண்க: இராமானுசர்.

**எம்மா** புகழ்பெற்ற ஆங்கிலப் புதின ஆசிரியர் சேன் ஆசுட்டின் அம்மையார் (Jane Austen) எழுதிய புதினங்களுள் மிகவும் சிறப்பு வாய்ந்தது. இவ்வம்மை யார் இப்புதினத்தை கி.பி. 1816-இல் வெளியிட்டார். இவர்தம் நூல்கள் இங்கிலாந்தின் சிறுநகர வாழ்

வியலைத் தெளிவாகவும் சுவையாகவும் படம் பிடித்துக் காட்டுவனவாக அமைந்துள்ளன.

எம்மா என்னும் புதினத்தில் வரும் எம்மா (Emma) என்பவள் உட்அவுசு (Mr. Woodhouse) என்பவரின் மகள். இவள் தன் நண்பர்களுக்குள் திருமணங்கள் நடத்தி வைப்பதில் விருப்பம் கொண்டவள். இது இவளுக்கு ஒரு பொழுதுபோக்காகவும் அமைந்தது. முதலில் இவள் ஏரியத்து சுமித்து (Harriet Smith) என்ற ஓர் எளிய அனாதைப் பெண்ணின் பொறுப்பைத் தானே ஏற்றுக்கொண்டு அவளை நல்ல இடத்தில் மணம் முடித்து வைக்க விரும்பினாள். ஆனால், இராபெர்ட்டு மார்ட்டின் (Robert Martin) என்ற ஓர் இளைஞன் ஏரியத்தை மணக்க விருப்பம் தெரிவித்த போது, எம்மா அதனைத் தடுத்துவிட்டாள். சிறிது காலம் சென்று எல்ட்டன் (Elton) என்ற இளம் பாதிரிக்கு ஏரியத்தை மணம் முடிக்க முனைந்தாள். ஆனால், எல்ட்டன் ஏரியத்தை விரும்பவில்லை. மாறாக, அவன் எம்மாவையே மணந்துகொள்ள விரும்பினான்.

இந்நிலையில் பிராங்கு சர்ச்சில்(Frank Churchill) என்ற மற்றோர் அழகன் தோன்றுகிறான். அவனைத் தன்பால் ஈர்க்குமாறு ஏரியத்தை எம்மா தூண்டுகிறாள். ஆனால், ஏரியத்து அழகாக இருப்பினும், போதிய அறிவில்லாதவளாகவே இருந்தாள். எம்மாவின் குடும்ப நண்பரான நைட்லி (Knightly) என்பவர்கூடத் தன்மீது அக்கறை காட்டுவதாக அவள் நினைக்க ஆரம்பித்தாள். உண்மையில், எம்மாவுக்கே தன் குடும்ப நண்பரும், நிதானப்போக்குள்ளவரும், அறிவாளியுமான நைட்லியிடம் தன்னையறியாமலே ஈடுபாடு உண்டு. ஆதலால், ஏரியத்தின் போக்கு அவளுக்கு அதிர்ச்சி தந்தது. அன்றியும், பிராங்கு சர்ச்சில் என்ற இளைஞன் சேன் பேர்பேக்சு (Jane Fairfax) என்ற அழகியை மணக்க விரும்புகிறான் என்ற செய்தி கேட்டவுடன் எம்மா மேலும் வருந்தினாள். இவ்வாறு நல்லெண்ணத்துடன் தன்னோடு பழகிய இருபால் நண்பர்களுக்குள் அவரவர்களுக்கு ஏற்றவாறு திருமணம் முடித்து வைக்க வேண்டுமென்ற திருத்தொண்டினை நிறைவேற்றி மகிழமுடியாமல் எம்மா சோர்வடைந்தாள். இதுகாறும் அவள் மேற்கொண்ட முடிவுகள் எல்லாம் தோல்வியில் முடிந்தன.

இந்நிலையில் தானும் இனிமேல் மணப்பதில்லை என்று சூளுரைத்துக் கொண்டாள். இதிலும் அவள் எண்ணியபடி நடக்கவில்லை. தன் தந்தையின் குடும்ப நண்பரான நைட்லி தன்னைப் பெரிதும் விரும்புதல் அறிந்து, இறுதியில் அவரையே தன் வாழ்க்கைத் துணைவராக ஏற்றுககொள்கிறாள். ஏரியத்து சுமித்து இராபெர்ட்டு மார்ட்டினையே மணந்து கொள்கிறாள். இவ்வாறு பத்தொன்பதாம் நூற்றாண்டில் இங்கிலாந்து நாட்டின் சிறுநகர்ப்புறச் சூழலில் நிலவிய வாழ்க்கை முறைகளையும் பழக்கவழக்கங்களையும் வினயமாகவும் சுவையாகவும் கவர்ச்சியாகவும் சித்திரிக்கும் ஒரு சிறந்த புதினமே எம்மா. காண்க: ஆசுட்டின், சேன். கே.ஜி.சே.

**எமர்சன் ரால்பு வால்டோ (கி.பி. 1803-1882)**: இவர் சிறந்த அமெரிக்க எழுத்தாளர்; பேச்சாளர்; தத்துவ அறிஞர் மற்றும் கவிஞர். தனிமனிதனின் வலிமையில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்ட இவர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் அமெரிக்க மக்களிடையே பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியவராவர்.



எமர்சன், ரால்பு வால்டோ

இரால்பு வால்டோ எமர்சன் (Ralph Waldo Emerson) ஐக்கிய அமெரிக்காவில் உள்ள மசாசூசெட்சு மாநிலத்தின் தலைநகரமாகிய பாசுடனில் (Boston) திருச்சபை குரு ஒருவரின் மகனாகப் பிறந்தார். பாசுடன் நகரப் பள்ளியொன்றில் படித்த பின்னர்ப் புகழ்மிக்க ஆர்வார்டுப் பல்கலைக்கழகத்தில் படித்து கி.பி. 1821-ஆம் ஆண்டு பட்டம் பெற்றார். பின்னர் மூன்றாண்டுகள் ஒரு பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றினார். திருச்சபையில் குருவாகப் பணியாற்ற இவர் ஆர்வம் கொண்டார். எனவே, அதற்கான படிப்பை முடித்து, கி.பி. 1826-ஆம் ஆண்டு குருவாகப் பணியாற்றத் தகுதி பெற்றார். மூன்று

ஆண்டுகளுக்குப் பின்னர்ப் பாசுடன் நகரத் திருச்சபை யொன்றில் குருவாக நியமிக்கப்பட்டார். அதே ஆண்டு ஈ.எல். தக்கர் (E.L.Tucker)என்ற அழகான பெண்ணை மணந்தார். அவள் பாசுடன் நகரப் பணக்கார வணிகர் ஒருவரின் மகளாவாள். ஆனால், அவள் கி.பி.1831–இல் இறந்து விட்டாள். அவள் மூல மாக எமர்சனுக்கு அதிகமான சொத்துகள் கிடைத் தன. அதே ஆண்டு எமர்சனின் அறிவாற்றல் மிக்க இரண்டு தம்பியர் இறந்துவிட்டனர். வேறுபல தொல் லைகளும் இவருக்கு உண்டாயின. அதனால், இவரு டைய உடல்நலம் பெரிதும் பாதிக்கப்பட்டது. இறை வனிடம் சிறிது நம்பிக்கை இழந்தார். திருச்சபை குருவாகச் செயற்பட இவர் விரும்பவில்லை. எனவே, கி.பி. 1832–ஆம் ஆண்டு அப்பதவியைத் துறந்தார்.

எமர்சன் கி.பி.1833–ஆம் ஆண்டு ஐரோப்பியப் பயணத்தை மேற்கொண்டார். இத்தாலி, பிரான்சு, இங்கிலாந்து முதலான நாடுகளைக் கண்டு அவற்றின் பண்பாட்டினை அறிந்து போற்றினார். அந்நாடுகளில் பல அறிஞர்களைக் கண்டு உரையாடும் வாய்ப் பினைப் பெற்றார். குறிப்பாக இங்கிலாந்தில் தாமசு கார்லைல் (Thomas Carlyle), எசு.டி. கால்ரிட்சு(S.T. Colridge), சே.எசு. மில் (J.S.Mill)முதலான அறிஞர் களின் நட்பைப் பெற்றார். கார்லைல் எமர்சனின் மிக நெருங்கிய நண்பராக மாறினார்.

எமர்சன் கி.பி. 1834–ஆம் ஆண்டு தாயகம் திரும்பி மசாசூசெட்சு மாநிலத்தில் உள்ள கன்கார்டு நகரத்தில் குடியேறினார். இலிடியா சாக்சன் என்ற பெண்ணை மணந்து அங்கேயே தம் இறுதிக் காலம் வரை வாழ்ந்தார். சிறந்த பேச்சாளராக விளங்கிய இவர் அமெரிக்காவின் பல இடங்களில் உரையாற்றி னார். தம் உரைகளில் வாழ்க்கைத் தத்துவத்தை விளக்கினார். தனி மனிதன் வலிமையைக் கொண்டே வாழவேண்டும்; அவன் எல்லா வலிமைகளையும் பெற் றவன்; உயர்ந்தவர்களாக நல்லவர்களாக மக்கள் வாழவேண்டும் என்ற கருத்துகளை இவர் வலியுறுத் தினார். இதற்கு ஆழ்நிலைக் கொள்கை (Transcende-ntalism) என்று பெயர். இக்கொள்கைகளால் கவரப் பட்ட பலர் இவரை நாடிச் சென்றனர். கன்கார்டு நகரத்தில் அமைந்திருந்த இவருடைய வீடு அன்றைய அமெரிக்க அறிஞர்களின் புகலிடமாகவும் பட்டிமன்ற மாகவும் விளங்கியது. நதானியல் ஆதோர்ன் (Nathaniel Howthorne), என்றி தாவீது (Henry David), தொரே முதலான அறிஞர்கள் இவரோடு அங்கே சுவையான உரையாடல்களை நடத்தினார்கள்.

'இயற்கை' என்பது இவர் வெளியிட்ட முதல் நூலாகும் (1836). அந்நூலில் இவர் தம் நம்பிக்கை களையும் தத்துவங்களையும் விளக்கியுள்ளார். ஆழ் நிலைக்கொள்கை என்பது என்ன என்பதைத் தெளி வாக விளக்கியுள்ளார். கடவுள் எல்லா மனிதருள்ளும் உள்ளார். எனவே, தனிமனிதனால் எதையும் சாதிக்க முடியும் என்பதே இவருடைய தத்துவத்தின் அடிப் படைக் கொள்கையாகும்.

ஆர்வார்டுப் பல்கலைக்கழகத்தில் 'அமெரிக்க அறிஞன்' (The American Scholar) என்ற தலைப்பில் எமர்சன் ஒரு சொற் பொழிவாற்றினார் (1837). அது 'அறிஞர்களின் சுதந்திர அறிக்கையாக'க் கருதப் படுகிறது. 'கட்டுரைகள்' என்ற தொகுதியை கி.பி. 1841–ஆம் ஆண்டு வெளியிட்டார். அதன் மூலம் இவர் ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பா முழு வதும் புகழ்பெற்றார். மீண்டும் ஐரோப்பியப் பயணத்தை கி.பி. 1847–இல் மேற்கொண்டு எமர்சன் பல இடங்களில் சொற்பொழிவுகளை நிகழ்த்தினார். ஆங்கிலப் பண்பாட்டின் மீது இவருக்கு மிகுந்த மதிப்பு இருந்தது.

ஆழ்நிலைக் கொள்கையைப் பரப்ப 'தி-டயல்' (The Dial) என்ற பத்திரிக்கை நடத்தப்பட்டது. அதற்குச் சில ஆண்டுகள் எமர்சன் பதிப்பாசிரியராக இருந்தார். எமர்சனால் எழுதப்பட்டு வெளியிடப் பட்ட மற்றப்புத்தகங்கள்: கவிதைகள் (Poems-1847), ஆட்பேராளராகிய மனிதர்கள் (Representative Men-1850), ஆங்கிலப் பண்புத் திறன்கள் (English Traits-1856), வாழ்க்கை நடைமுறை (The Conduct of Life 1860), மேதினமும் மற்றவையும் (May Day and Other Pieces - 1867), சமுதாயமும் தனிமையும் (Society and Solitude - 1870) முதலானவையாகும்.

ஐக்கிய அமெரிக்காவில் இருந்த நீக்கிரோஅடிமை முறையை எமர்சன் வன்மையாகக் கண்டித்தார். அமெரிக்க உள்நாட்டுப் போர் (Civil War) நடை பெற்றபோது, குடியரசுத் தலைவராக இருந்த ஆப்ர காம் லிங்கன் அடிமை முறையை ஒழித்தார் (1863). போரின்போது மத்திய அரசுக்குச் சாதகமாகவும் அடிமை முறை ஒழிப்பைப் பாராட்டியும் பல இடங் களில் எமர்சன் உரையாற்றினார்.

இவர் வாழ்ந்து வந்த அழகிய வீடு கி.பி. 1872–ஆம் ஆண்டு தீக்கிரையானது. அதை மீண்டும் புதுப் பிக்க இவருடைய நண்பர்களும் மற்றவர்களும் பெருந்தொகை வழங்கினார்கள். எனினும், இந்த நிகழ்ச்சி இவர்தம் உடல்நலத்தைப் பாதித்தது. தம் இறுதி ஐரோப்பியப் பயணத்தை கி.பி. 1872-73–ஆம் ஆண்டுகளில் மேற்கொண்டார். எனினும், இவ ருடைய உடல் நலம் சீர்குலைந்து வந்தது. இவரு

டைய நினைவாற்றலும் மங்கத் தொடங்கியது. அமெரிக்கச் சிந்தனைச் சிற்பி எமர்சன் கி.பி. 1882 –ஆம் ஆண்டு இயற்கை எய்தினார். நா.ப.

**எமனாப் பழங்குடி** தென் அமெரிக்க இந்தியப் பழங்குடிகளுள் ஒன்று இவர்கள் யாகுவன் (Yaguan) என்றும் கூறப்படுவர். தியாரா தெல் பியூகோவின் (Tierra del Fuego) தென் கடற்கரைப் பகுதியிலும் இதன் அண்டைத்தீவுப் பகுதியிலும் எமனாப் (Yamana) பழங்குடியினர் வாழ்கின்றனர். இவர்களின் மொழி ஐந்து கிளைமொழிகளின் குழுமமாகும். ஒன்றுடன் ஒன்று தொடர்புற்ற ஐந்து கிளைமொழிகளும் ஒவ்வொரு பகுதியிலும் பேசப்படுகின்றன.

எமனாப் பழங்குடியினரின் பகுதிகளில் தொல்லியலார் பல அகழாய்வுகளை மேற்கொண்டதன் விளைவாக, இவர்களின் பண்பாட்டு வரலாறு உறுதியுடன் கணிக்கப்பட்டுள்ளது. அலகாலுபு (Alacaluf), சோனோ (Chono) முதலான அண்டைப் பழங்குடிகளைப் போன்றே எமனாக்களும் வேட்டையாடி உணவு சேகரிக்கும் பொருளாதாரத்தைக் கொண்டவர்களாவர். கிளிஞ்சல் மீன்கள், கடல் நாய், திமிங்கலம், பறவைகள், உலர்ந்த விதைகள், பூஞ்சை முதலானவற்றை இவர்கள் உணவாக உட்கொள்கின்றனர். குளிரும் மழையும் மிகுந்த கால நிலையில் வாழ்வதால் விலங்குகளின் தோலினாலான உடைகளை இவர்கள் அணிகின்றனர். வேட்டையாடுவதற்கு ஏற்ப அமைந்திருக்கும் இவர்களின் படகில் கணப்பு மூட்டும் இடத்தையும் அமைத்துக் கொள்வர்.

எமனாப் பழங்குடியினரின் வாழ்க்கை ஒருங்கமையாத தன்மையைக் கொண்டது. இவர்களிடையே எழும் சச்சரவுகளையும் சிக்கல்களையும் தீர்க்கப் பழங்குடித் தலைவனையோ ஆட்சிக் குருவையோ கொண்டிராமல் ஒவ்வொரு குடும்பமும் சமூக, பொருளாதார, சமய வாழ்க்கையில் தனித்துச் செயற்படுகின்றது. இவர்கள் ஒரு தார மணத்தைக் கொண்டவர்கள். ஒழுங்குமுறையற்ற முறையில் இடம் பெயர்ந்து வாழும் இவர்கள் அரிதாக ஒரே இடத்தில் சில நாட்களுக்கு முகாமிட்டு வேட்டையாடுவர். வேட்டைக் காலங்களில் ஒவ்வொரு நாளும் இடம் பெயர்ந்து வாழ்ந்தாலும், ஏற்புச் சடங்கினை (Initiation Ceremony) உறவினரனைவரும் ஒன்று கூடிச் சிறப்பாகக் கொண்டாடுவர்.

எமனாக்கள் அழகியற் சிந்தனை குறைந்தவர்கள்; கலைகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்கள் அல்லர். பல ஆவிகளை வழிபடும் இவர்கள் ஆவிகளோடு தொடர்புற்றுத் தமக்கு நன்மை பெறத் தெய்வத் தன்மையுற்றவன் (Shaman) மூலம் சடங்குகள் செய்கின்றனர். சீ.ப.

**எமனோ**: திராவிட மொழியியல் பேரறிஞர் டாக்டர் முர்ரே பர்ன்சன் எமனோ (Emeneau) 1904 –ஆம் ஆண்டு பிப்பிரவரித் திங்கள் 28–ஆம் நாள் உலுனென்பர்க்கு என்னுமிடத்தில் பிறந்தார். தல்லௌசிப் பல்கலைக் கழகத்தில் பி.ஏ. பட்டமும், ஆச்சுபோர்டு பல்கலைக் கழகத்தில் எம்.ஏ. பட்டமும், 1931-ஆம் ஆண்டு ஏல் பல்கலைக் கழகத்தில் டாக்டர்(பிஎச்.டி.) பட்டமும் பெற்றார். பி.ஏ. பட்டப்படிப்பிலேயே சமசுகிருதம், இலத்தீன், கிரேக்கம் முதலிய மொழிகளைப் பயின்றார். அமெரிக்க நாட்டு மானிடவியல் பேரறிஞர் சபீரிடம் 1931–35–ஆம் ஆண்டுகளில் மானிடவியலும் மொழியியலும் பயின்றார். சிகாகோப் பல்கலைக் கழகம் மதிப்பியல் டாக்டர் பட்டமான எல்.எச்.டி. (L.H.D.) பட்டத்தினை அளித்து 1968-ஆம் ஆண்டு இவரைச் சிறப்பித்தது. தல்லௌசிப் பல்கலைக் கழகமும் எல்.எல்.டி. (L.L.D.) பட்டம் அளித்துச் சிறப்பித்தது. ஏல் பட்டக் கல்லூரிக் கழகம் 1969–ஆம் ஆண்டு உலூரசியசு தங்கப் பதக்கம் அளித்துப் பாராட்டியது.

இவர் 1923-26–ஆம் ஆண்டுகளில் ஆச்சுபோர்டு பல்கலைக் கழகத்தைச் சார்ந்த பல்லியோல் கல்லூரியில் ஆய்வாளராகப் பணியாற்றினார். இந்தியாவிலிருந்து அமெரிக்கா திரும்பியவுடன், கலிபோர்னியாப் பல்கலைக் கழகத்தில் சமசுகிருதம் மற்றும் பொது மொழியியல் துறையின் துணைத் தலைவராக 1938 –ஆம் ஆண்டு பொறுப்பேற்றார். இரண்டாம் உலகப் போரின் போது, போர்ப்படை வீரர்கட்கு வியட்நாமிய மொழியைக் கற்பித்தார். அதனோடு வியட்நாமிய மொழிக்கு விளக்க இலக்கணம் ஒன்றும் எழுதினார். இவர் 1946–ஆம் ஆண்டு முதல் மொழியியல் துறையின் பேராசிரியரானார். மேலும், 1952-ஆம் ஆண்டு இந்தோ-ஐரோப்பிய ஒப்பிலக்கணப் பேராசிரியராக இருந்தார்.

இவர் 1949–ஆம் ஆண்டு அமெரிக்க மொழியியல் கழகத்தின் தலைவராகவும் 1954–55–ஆம் ஆண்டுகளில் அமெரிக்க கீழைக் கழகத்திற்குத் தலைவராகவும் இருந்தார். இவர் 1962–ஆம் ஆண்டு அமெரிக்க தத்துவ இயல் கழகத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர், 1966–ஆம் ஆண்டில் உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழகத்தின் துணைத்தலைவராக இருந்தார். 'கிரேட் பிரிட்டன் ராயல் ஆசியக் கழகத்தின்' மதிப்பியல் ஆய்வாளராகவும் இருந்தார். இவர் இந்திய மொழியியல் உலகிற்குச் செய்த தொண்டின் காரணமாக

இந்திய மொழியியல் கழகம் 1964-ஆம் ஆண்டு இவரை மதிப்பியல் உறுப்பினராகத் தேர்ந்தெடுத்தது.

இவரது வாழ்வின் திருப்பு மையம் 1935-38-ஆம் ஆண்டுகளில் இந்தியாவிற்கு வந்து, தோடா, கோத்தா, கோலாமி போன்ற திராவிடப் பழங்குடி மொழிகளைப் பற்றிக் கள ஆய்வு செய்து, ஆய்வுக் கட்டுரைகளாகவும் நூலாகவும் வெளியிட்டமையாகும். திராவிட ஒப்பு மொழியியலைப் பற்றியும் நீலகிரிப் பழங்குடி மக்கள் வாழ்வு, வரலாறு பற்றியும் இந்திய நாட்டுப் புறவியல் குறித்தும் ஆய்வுக் கட்டுரைகளும் நூல்களும் வெளியிட்டார்.

திராவிட மொழியியல் பேரறிஞர் தா.பர்ரோவுடன் இணைந்து திராவிடச் சொற்பிறப்பியல் அகராதியும் (Dravidian Etymological Dictionary, 1961) அதன் பிற்சேர்க்கைத் தொகுப்பும் (Dravidian Etymological Dictionary Supplement, 1968) வெளியிட்டார். திராவிடச் சொற்பிறப்பியல் அகராதியின் தோற்றம் திராவிட ஒப்பியல் ஆய்வில் ஒரு புதிய வரலாற்றின் தொடக்கம் என்றும், திராவிட மொழியியல் வரலாற்றின் ஒரு திருப்பு மையம் என்றும் அறிஞர் கூறுவர். இவ்விரண்டு அறிஞர்களின் கூட்டு முயற்சியின் விளைவாக இவ்வகராதி தோன்றியது.

தோடாப் பாடல்கள் (Toda Songs) என்னும் இவரது நூல் இந்திய நாட்டுப்புற இயலில் குறிப்பிடத்தக்க நூலாக அறிஞர்களால் கருதப்படுகிறது. திராவிட மொழியியல், இனவியல் சம்பந்தமாக ஐம்பதுக்கு மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் எழுதியுள்ளார். இவர் திராவிட மொழிகளின் ஒலியனியல் ஒப்பாய்வு (Gomparative Dravidian Phonology) மூலம் ஒப்பியல் ஆய்வில் தமக்கெனச் சிறந்த நெறியை வகுத்துக் கொண்டவர் என அறிஞர்கள் பலராலும் பாராட்டப்பெற்றவர். கலிபோர்னியாவில் பேசப்படும் இந்திய மொழி ஆராய்ச்சிக்கு இவரே மூல காரணமாக இருந்தவர். சமசுகிருதத்திலும் ஆய்வு நூல்கள் எழுதியுள்ளார். தோடா, பிராகுயி, கோத்தா, கோலாமி போன்ற மொழிகளை இக்கால மொழியியல் அடிப்படையில் ஆராய்ந்தார். 'இந்தியா ஒரு மொழியியல் பகுதி' (India as a Linguistic Area) என்ற இவரது கோட்பாடு இன்று வளர்ந்து வருகிற சமூக மொழியியல் வளர்ச்சிக்கு அடிப்படையாகும். திராவிட மொழியியல் தொடர்பாக இவர் செய்த ஆய்வினை நான்கு பிரிவாகப் பிரிக்கலாம்.

1. பழங்குடி மொழிகளை ஆராய்தல்
2. தனிப்பட்ட மொழிகளின் தரவு மூலம் ஒப்பாய்வு செய்தல்
3. திராவிட ஒப்பிலக்கணம்
4. கடன் பெறல் மற்றும் மொழியியல் பரப்பு அடிப்படையில் அமைந்த கோட்பாடு முதலியன.

பேராசிரியர் எமனோவின் இந்திய மொழிகள் பற்றிய படைப்புகள் கிரியர்சன், யூல்சு பிளாக்கு, தர்னர் போன்ற பேரறிஞர்களின் படைப்புகளுடன் ஒப்பிடக் கூடியவையாகும். எமனோ இந்திய மொழியியல் உலகிற்குச் செய்த தொண்டினை நினைவு கூரும் பொருட்டு அண்ணாமலைப் பல்கலைக் கழக மொழியியல் உயராய்வு மையமும் பூனா டெக்கான் கல்லூரி மொழியியல் உயராய்வு மையமும் இணைந்து மணிவிழா மலர் ஒன்றை (Studies In Indian Linguistics Prof. M.B. Emeneau Sasti Purti Volume) வெளியிட்டுச் சிறப்புச் செய்தன என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. சு.ச.

***எமிலி*** என்பது பிரெஞ்சு எழுத்தாளரான சீன் சாக்கசு உரூசோ (Jean Jacques Rousseau) எழுதிய புதினமாகும். இந்நூல் கி.பி. 1762-இல் வெளியிடப்பட்டது. இது புதினவடிவில் கல்விக் கொள்கையை வெளியிடும் ஓர் அரிய ஆய்வுரையாகும். மனிதன், இயற்கை ஆகியவை பற்றி உரூசோ கொண்ட கருத்தின் அடிப்படையில் எமிலி (Emile) அமைந்துள்ளது. மனிதன் நல்லவன் என்பதும், சமுதாயம் தான் அவனைக் கெடுக்கிறது என்பதும் உரூசோவின் கருத்துகளாகும். இயல்பான ஒரு மனிதன் சமுதாயத்தில் வாழ்வதற்கு உதவும் கல்வியினை இந்நூலில் அவர் சிறப்புற விளக்கியுள்ளார். ஒரு சிறுவன் பன்னிரண்டு வயதாகும் வரை அவன் இயற்கையோடு இயைந்து நின்றே கற்றுக் கொள்ளவேண்டும் என்றும், அப்போது புத்தகங்களைப் பயன்படுத்தலாகாது என்றும்,புத்தகப் படிப்பு தானாகச் சிந்திக்கும் ஆற்றலை நல்காது என்றும் இந்நூலில் வெளிப்படுத்தியுள்ளார். முறையான கல்விப்பயிற்சி பன்னிரண்டாம் வயதில் தொடங்குவதாகவும் அப்போது ஆசிரியர் பாடப்புத்தகங்களைத் தவிர்த்தல் வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும், அவர் கூறும் கருத்துகளிற் சில வருமாறு: உணர்ச்சிகள் பெருகத் தொடங்கும் நிலையில், சிறுவன் தன் நடத்தையினைச் செம்மை செய்வதற்கான சமய உணர்வினைப் பெறுகிறான். அவன் மீது எந்தச் சமயத்தையும் திணிக்கலாகாது. பெண்கள் நல்ல மனைவியராகவும், சிறந்த தாய்மார்களாகவும் பயிற்றுவிக்கப்படுகின்றனர். சிறுவன் மனிதனாகுமுன் குழந்தையாகவே வளரவேண்டும் என்று இயற்கை விரும்புகிறது. பொருள்களைக் காண்பதிலும் உணர்வதிலும் குழந்தை தனக்கென ஒரு தனித் தன்மையைக் கொண்டிருக்கிறது. பிற்காலத்தில் உருவாகி

யுள்ள சிறந்த கல்விக் கொள்கைகளிலும் உளவியல் கோட்பாடுகளிலும் இந்நூலின் செல்வாக்கு மிக்குள்ளது. அ.மா.ப.

**எமிலி சோலா (கி.பி. 1840-1902):** இயற்கையியலை(Naturalism)ஓர் இலக்கிய இயக்கமாகவளர்த்து அதற்கு வலுவூட்டிய பெருமை மிக்க பிரெஞ்சு எழுத்தாளர் எமிலி சோலா (Emile Zola) ஆவார். தந்தையார் ஓர் இத்தாலியப் பொறியியலறிஞராவார். பாரிசு நகரில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் பிறந்த இவர் தம் முப்பதாம் வயதில் ஓர் இதழாசிரியராகத் தொடங்கி, பின் தலைசிறந்த புதின எழுத்தாளராக (Novelist) உருவானார்.

எமிலி சோலாவின் வாழ்வும் நூல்களும் இவரது மனத்திண்மையையும் அறிவாற்றலையும் நியாயத்துக்காகப் போராடும் துணிவையும் தெற்றெனக் காட்டுகின்றன. தாம் கண்டவற்றைக் கண்டவாறே காட்டும் திறம் இவர்தம் நூல்களின் தனிச்சிறப்பாகும். தெரிசி இராக்குவின் (Therese Raquin, 1867) இவரது சிறப்புமிக்க முதற் புதினமாகும். இவர் கி.பி. 1870 -இல் முடிவுற்ற பிரெஞ்சு - பிரசியப் போருக்குப் பின் (Franco Prussian War) உரோகன் மக்கார்த்து (Rougan Macquart) என்னும் தலைப்பு வரிசையில் (Series) இருபது புதினங்களை வெளியிட்டார். அவற்றில் ஒவ்வொன்றும் பிரான்சு நாட்டின் பழம் பெரும் உரோகன் மக்கார்த்துக் குடும்பத்து உறுப்பினர்கள் ஒவ்வொருவருடைய வீரச் செயல்களை விளக்குகிறது. இந்நூல்களின் பின்னணியில் பாரிசு நகரத்தின் சமூக வரலாறு பொதிந்து கிடப்பதைக் காணலாம். எடுத்துக்காட்டாக, இவ்வரிசையில் மூன்றாம் நூலாகிய 'பாரிசின் வயிறு' (The Belly of Paris) என்னும் புதினம் பாரிசு நகரத்தின் பெரிய மையச் சந்தையை (Central Market) வருணிக்கிறது. அச் சந்தையின் அமைப்பும் அதன்கண் நடைபெறும் வாணிகமும் அங்குக் கூடும் வணிகர்களும் வாங்குவோரும் அந்நகரத்தின் சமுதாயப் பழக்க வழக்கங்களைப் படம்பிடித்துக் காட்டுகின்றன. 'மதுக்கடை' (TheGrog Shop) என்னும் நூல் பாரிசு நகர மக்களின் மதுப் பழக்கத்தையும் அதனால் அவர்களுற்ற அவலங்களையும் விளக்குகிறது. 'நானா' (Nana, 1880) என்னும் புதினம் பாரிசு நகரத்தின் விலைமகளிர் வாழ்க்கையை விவரிக்கிறது. பிரெஞ்சு மக்களிடையே இந்நூல் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. 'தோற்றுவாய்' (Germinal) எமிலி சோலாவின் தலைசிறந்த படைப்பாகக் கருதப்படுகிறது. 'அழிவு' (The Crash -1892) என்னும் நூல் கி.பி. 1870-இல் பிரான்சு நாடு செருமனியிடம் தோல்வியுற்றதை விளக்குகிறது. 'மூன்று நகரங்கள்' (The Three Cities) என்னும் தலைப்பில் வெளிவந்த இரண்டாம் வரிசைப் புதினங்கள் பிரெஞ்சு நகர மக்களின் சமூக வரலாற்றையும் சமய வாழ்க்கையையும் விவரிக்கின்றன. 'நான்கு வேதாகமங்கள்' (The Four Gospels) என்னும் மூன்றாம் வரிசை நூல்கள் முற்றுப்பெறாத நிலையிலுள்ளன.

எமிலி சோலாவின் புதினங்களில் உள்ளதை உள்ளவாறு படைத்துக் காட்டும் அறிவியல் அணுகுமுறை காணப்படுகிறது. ஆனால், இவர் அமைத்துக்கொண்ட அறிவியல் அடிப்படி ஆழமற்றதாகவும் வலுவற்றதாகவும் உள்ளதாக அறிஞர் கூறுவர். எனினும், இவரது படப்பிடிப்பு நடை (Documentary Style) கி.பி. 1860 க்கும் கி.பி. 1890க்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்த பிரெஞ்சு மக்கள் வாழ்வின் பல்வேறு கூறுபாடுகளைச் சொல்லோவியங்களாக வடித்துத் தருவதைக் காணலாம். மேலும், இவரது புதினம் ஒவ்வொன்றிலும் ஓர் உருவகம் (Symbol) மேலோங்கி நிற்பது மரபு. காட்டாகத் 'தோற்றுவாய்' (Germinal) என்னும் நூலில் சுரங்கம் ஓர் உருவகமாக அமைந்து, மனித உள்ளத்தின் அடியாழத்தில் உறங்கும் உணர்வுகளையும் உண்மைகளையும் வெளிப்படுத்துகிறது. எமிலி சோலாவின் நடையில் வருணனைத் திறம் மேலோங்கி நிற்கும். குறிப்பாக மக்கட் கூட்டத்தை வருணிப்பதில் இவரது பேனாவுக்கு விருப்பம் அதிகம் எனில் மிகையாகாது. பொதுவாக இவரது கதை மாந்தர்களின் வாழ்வில் சிக்கல்கள் அதிகம் இருப்பதில்லை. ஆனால், அவர்கள் சாவினைச் சந்திக்கும் கட்டங்களில் உணர்ச்சிப் பிழம்புகளாக உருவெடுக்கின்றனர்.

எமிலி சோலா தம் இயற்கையியல் இயக்கத்தை (Naturalistic Movement) விளக்கவும் வளர்க்கவும் கருதி மூன்று திறனாய்வு நூல்களை வெளியிட்டார். அவையாவன: 'சோதனைப் புதினம்' (The Experimental Novel, 1880),'இயற்கையியல் புதின ஆசிரியர்' (The Naturalistic Novelist, 1881). 'நாடக அரங்கில் இயற்கையியல்' (Naturalism in Theatre, 1881).எமிலி சோலாவின் கதை மாந்தர்கள் பாரம்பரியத்தாலும் சூழ்நிலையாலும் உருவாக்கப்படுகிறார்கள். அவர்கள் தங்கள் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட சூழல்களின் சதிகளுக்கு இரையாகின்றனர். இந்நிலையில் இவரது புதினங்கள் சமூகச் சீர்திருத்தவாதிகளுக்குப் படைக்கலங்களாக உதவுகின்றன.

இவரது 'இயற்கையியல்' முறையானது கற்பனைப் படைப்புகளில் அறிவியலைக் கையாள முனைகிறது. இவர் ஆன்மிக நெறிகளைப் புறக்கணித்து

விட்டு, உலகியல் வாழ்க்கைக்குக் குறிப்பாக மனிதனின் உடல் தேவைகளை நிறைவு செய்யும் வாழ்க்கைக்குப் பெரிதும் இடம்கொடுக்கிறார். இவர்தம் கொள்கைப் படி மனிதன் தன் புலன்களால் அறிவைப் பெறுகிறான். ஆகையால், ஓர் எழுத்தாளன் தன் புலன்களால் அறிந்தனவற்றை ஓர் அறிவியலாளன் சோதனைச் சாலையில் கண்டவற்றைக் கூறுதல் போல அப்படியே எழுதவேண்டும். ஒவ்வொரு மனிதனும் ஒரு குறிப்பிட்ட சூழலுக்கு உந்தப்படுவதால் அவன் அதனை ஏற்றுக்கொண்டு வாழ்வதைத் தவிரத் தான் விரும்புவனவற்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் வாய்ப்புகள் இல்லாமலிருக்கிறான் என்பது இயற்கையியலாளர் கோட்பாடு ஆகும். ஆகையால், இவர்தம் புதினங்களில் மனிதன் இன்பத்துக்காகப் போராடி, இறுதியில் தோல்வி கண்டு துன்பத்தில் உழன்று கொண்டேயிருக்கிறான். அவனது அல்லல்களைக் காணுங்கால் இரக்கமும், போராடும் பெற்றியைக் காணுங்கால் பெருமிதமும் உண்டாதல் தெளிவு.

எமிலி சோலாவுக்குப் பிறகு இவ்வியற்கையியல் இயக்கம் பால்சாக்கு (Balzac), பிளாபர்ட்டு (Flaubert) ஆகிய பிரெஞ்சு எழுத்தாளர்களாலும், இசுட்டீபன் கிரேன் (Stephen Crane), ஏம்லின் கார்லண்டு (Hamlin Garland), பிராங்கு நாரிசு (Frank Norris), தியோடர் திரெய்சர் (Theodore Dreiser) ஆகிய அமெரிக்க எழுத்தாளர்களாலும் பின்பற்றப்பட்டது. இன்று இவ்வியக்கம் செல்வாக்கிழந்துவிட்டது.

எமிலிசோலா கி.பி. 1898–ஆம் ஆண்டில் வெளியிட்ட 'குற்றச்சாட்டு' (Jaccuse) என்னும் திறந்த கடிதம் மக்களிடையே பெரும் செல்வாக்கைப் பெற்று, ஆல்பிரட்டு திரெய்பசு (Alfred Dreyfus) என்னும் இராணுவ அதிகாரிக்கு வழங்கப்பட்ட தண்டனை மறுபரிசீலனை செய்யப்படவும், மீண்டும் வழக்கு விசாரணை நடைபெற்று அவர் வெல்லவும் வழிவகுத்தது. அதன்பின்னர், எமிலி சோலாவின் மீது அவதூறு வழக்குத் தொடரப்பட்டதால் இவர் பிரான்சைவிட்டு ஓடிச்சென்று, இங்கிலாந்தில் ஓராண்டுக் காலம் கழித்து, பின் ஒரு மாவீரராகத் தாயகம் திரும்பினார். ஒருநாள் இவர் உறங்கும்போது, நிலக்கரி வாயுக் குழாய் உடைந்தமையால் அறைமுழுதும் அவ்வாயு நிரம்பியது. அந்த நச்சுவாயுத் தாக்கத்தால் இவர் இறந்தார். வி.ஆர்.அ.

**எமீலியா**: ஏறத்தாழ 8542 சதுர மைல்கள் பரப்புள்ள எமீலியா (Emilia) வடக்கு மத்திய இத்தாலியில் எட்டு மாகாணங்களைத் தன்னுட்கொண்ட ஒரு சிறந்த விவசாயப் பகுதியாகும்.

பண்டைய பெருமை வாய்ந்த உரோமின் நினைவாக எமீலியா – உரோமனா என்றும் இது அழைக்கப்பெறும். எமீலியா என்ற சொல்லும் அங்கு முன்னர்க் காணப்பட்ட உரோமர் சாலையின் பெயரே யாகும். பெயர் பெற்ற போ ஆறும் பல மலைத் தொடர்களும் இப்பகுதிக்குச் செழிப்பை அளிக்கின்றன. உயர்ந்த சர்க்கரை இங்கே உற்பத்தியாக்கப்படுகிறது. ஐரோப்பிய வரலாற்றில் காணப்பெறும் பல இத்தாலியப் போர்கள் இப்பகுதியில் நடந்தன. அடிக்கடி ஆட்சி மாற்றங்களும் ஏற்பட்டன. இவையெல்லாம் ஒருவாறு முடிவுற்று, கி.பி. 1860-இல் இது இத்தாலிய அரசுடன் இணைந்தது.

எமீலியா–உரோமனா என்னும் பெயர் 1948–ஆம் ஆண்டில்தான் இதற்குக் கிடைத்தது. இப்பொழுது தொழில், விவசாயம் முதலிய அனைத்துத் துறைகளிலும் இப்பகுதி மேலோங்கி நிற்கிறது. ஏறத்தாழ 40 இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் இங்கு வாழ்கின்றனர். தெ.பா.

**எய் லா செபேல் மாநாடு**: ஐரோப்பாக் கண்டத்தில் செருமனி நாட்டின் வடக்கில் உள்ள எய் லா செபேல் (Aix–La–Chapelle) நகரம் ஏக்கன் என்ற பெயராலும் சொல்லப்படுகிறது. ஏக்கன் என்பது தச்சு மொழிச் (Dutch) சொல். வரலாற்றுச் சிறப்புப் பெற்ற இந்நகரில் இடைக்காலக் கட்டடங்கள் பலவற்றைக் காணலாம். பிரெஞ்சு எல்லைக்கு அண்மையில் இது அமைந்திருப்பதால், இப்பகுதியைக் கைப்பற்றும் பொருட்டு ஐரோப்பிய நாடுகளிடையே பூசல்களும் போர்களும் எழுந்தன. இது கி.பி. 1815–ஆம் ஆண்டில் பிரசியாவுக்குக் கிடைத்தது. முதலாம் உலகப் போர்க் காலத்தில் சிறிது காலம் இது பெல்சியத்தின் ஆக்கிரமிப்புக்கு உட்பட்டிருந்தது. இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் நேச நாடுகளின் தாக்குதல்களுக்கு உட்பட்டுப் பல இடையூறுகளையும் பெற்றது.

இந்நகரில் கி.பி. 1668, கி.பி. 1748, கி.பி. 1818 ஆகிய ஆண்டுகளில் மூன்று மாநாடுகள் நடைபெற்றன. முதல் மாநாட்டின் தீர்மானப்படி பிரான்சுக்குப் பல சலுகைகள் கிடைத்தன. இரண்டாம் மாநாடு ஆசுத்திரிய வாரிசு உரிமைப் போரை முடிவுறச் செய்தது. மூன்றாம் மாநாட்டில் ஐரோப்பிய வல்லரசுகளின் அரசியல் உறவுகளைப் பற்றிப் பிரிட்டன், ஆசுத்திரியா, பிரசியா, உருசியா ஆகிய நான்கு நாடுகள் விவாதித்துச் சில முக்கிய முடிவுகளை எடுத்தன. ஐரோப்பிய அரசுகளிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதற்காகச் செய்யப்பெற்ற பல முயற்சிகளில்

எய் லா செபேல்மாநாடுகள் சிறப்பான இடம்பெறு கின்றன. தெ.பா.

துணை நூல்:

**Alison Phillips, W., The Confederation of Europe, London, 1919.**

**எயிற்பட்டினம்**: இது பத்துப்பாட்டால் அறிய லாகும் ஊர்களுள் ஒன்று; கடற்கரையினை அடுத்துள் ளது. சிறுபாணாற்றுப்படையின் பாட்டுடைத் தலை வனாகிய ஒய்மாநாட்டு நல்லியக்கோடனின் நாட்டில் உள்ள இவ்வூரினை அந்நூல், 'மதிலொடு பெயரிய பட்டினம்' (சிறுபாண். 153) என்று குறிப்பிடுகிறது. இதனால், இவ்வூர் மதிலால் சூழப்பட்டதென்பது புல னாகிறது. இவ்வூர் பண்டைய தொண்டைநாட்டின் இருபத்துநான்கு கோட்டங்களுள் அமைந்த ஒரு கோட்டத்தின் தலைநகராகும். கடல் அலை வீசும் மணலிடத்தில் அன்னம்போலத் தாழை மலரவும், இள வேனிற் பருவத்தில் செருந்தி பொன்போல மலரவும், கழிகளில் முள்ளிச் செடிகள் நீல மணிபோல் மலரவும், புன்னைமரங்கள் முத்துகள் போல் அரும்பவுமாக அழகுபெற்றுத் திகழ்வது என்று இவ்வூரைச் சிறு பாணாற்றுப்படை சிறப்பிக்கிறது (146-153). அதன் இறுதியலமைந்த வெண்பாக்களுள் ஒன்று இவ்வூரை 'இம்மென் முழவின் எயிற்பட்டினம்' என்று பாராட்டு கிறது. அ.மா.ப.

**எயிற்றியனார்** சங்க காலப் புலவர்களுள் ஒருவர். இவருடைய இயற்பெயர் தெரியவில்லை. மரபு காரணமாகப் பெற்ற பெயர் வரிசையில் இவர் பெயர் சேர்க்கப்பட்டுள்ளது. எயிற்றினார் என்பது இவர் பெயரென்றும் அப்பெயர் பிற்காலத்தில் ஏடு எழுதுவோரால் தவறாக எழுதப்பட்டிருக்கலாம் என் றும் சிலர் கருதுகின்றனர். இவர் பாடியதாக அமைந் துள்ள குறுந்தொகைப் பாடலில் (286) எயிற்றினைச் சிறப்பித்துப் பாடியுள்ளமையால் இப்பெயர் பெற் றார் என்றும் கூறுவர். தலைவன் கூற்றாக அமைந்த அப்பாடலில் தலைவியை அடைதற் பொருட்டு அவளை, 'முள்ளெயிற் றமிழ்தம் ஊறும்அஞ் செவ் வாய்க் கமழ் அகில் ஆரம் நாறும் அறல்போல் கூந் தல், பேரமர் மழைக்கண் கொடிச்சி' என்று பாராட் டிப் பாடியுள்ளார். அமிழ்தம் ஊறும் சிவந்த வாயி னையும் அகிற்புகையும் சந்தனப் புகையும் மணக்கின் றதும் அறல்போன்றதுமான கூந்தலையும் உடைய தலைவியை உள்ளத்தினுள்ளே எண்ணி மகிழ்வேன்' என்று தன் விருப்பத்தினைத் தலைவன் தோழிக் குரைக்கும் பாங்கில் வெளியிட்டுள்ளமை சிறப்பாக உள்ளது. வீ.சே.

**எயினந்தை மகனார் இளங்கீரனார்**: இவர் சங்ககாலப் புலவர். இவர் தந்தை எயினந்தை யார். அவர் பாடியிருப்பதாக நற்றிணை 43-ஆம் பாடல் மட்டுமே கிடைத்திருப்பினும், அவரும் சிறந்த புலவராயிருந்தமையின் அவர் பெயர் அவரது மகனா கிய இவ்விளங்கீரன் பெயரோடு சேர்த்துக் கூறப்பட் டிருக்கிறது. குறுந்தொகை 116; நற்றிணை 3,62,113 ஆகிய நான்குப் பாடல்களைப் பாடிய இளங்கீரனா ரும், அகநானூறு 3,225,239,289,299,361,371,395,399; நற்றிணை 269,308,346 ஆகிய பன்னிரண்டு பாடல் களைப் பாடிய எயினந்தை மகனார் இளங்கீரனாரும் ஒருவரே. இங்ஙனம் இவர் பெயர் இருவகையாகக் காணப்படினும் குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு ஆகியவற்றுள் காணப்படும் இவரது பாடல்களுள் பெரும்பான்மை பாலை பாடுவதாலும், பாக்களின் ஒருமித்த தன்மையாலும் இவ்விரு பெயருக்கும் உரி யார் ஒருவரே என்பது தெளிவாகிறது.

பொருள்வயிற் பிரியக் கருதிய தலைவன் தன் நெஞ்சுக்குச் சொல்லிச் செலவழுங்குவதாகவும், பிரிந்த தலைமகன் இடைச்சுரத்து அழுங்குவதாக வுமே இவரது பாடல்கள் உள்ளன. அரிதாக இவர் குறிஞ்சித் திணையில் பாடிய குறுந்தொகை 116-ஆம் பாடலில், தலைவியின் கூந்தல் சோழனின் உறந்தைப் பெருந்துறை நுண்மணல் போல் நன்னெறிப்பட்டது என இயற்கைப் புணர்ச்சிக்கண் நீங்கும் தலைவன் தன் நெஞ்சுக்குச் சொல்லியதாகப் புனைந்துள்ளார். நற்றிணை 308-ஆம் பாடலில் பொருள்வயிற் பிரியும் தலைவனது நெஞ்சம், ஈரமண்ணாலான பசுங்கலம் பெருமழைக்காற்றாது கரையும் தன்மை போன்றிருந் ததாகக் கூறுவர்.

ஒள்ளிழை மகளிர் பிறையினைத் தொழுவது, தலைவன் பிரிந்து சென்ற நாட்கணக்கைத் தலைவி சுவரில் கோடிட்டு எண்ணுவது, தேவர்க்கு அவியுணவு அளிக்கும் வேள்விக் குண்டத்தில் ஆமையை வைத்து மூடுவது போன்றன இவர்தம் பாக்களில் காணும் சிறப்புச் செய்திகள். க.இரா.

**எயினந்தையார்**: இவர் சங்ககாலப் புலவர். ஆதன் தந்தை ஆந்தை என்றாற்போல், எயினன் தந்தை எயினந்தை ஆயிற்று; ஆர் சிறப்புவிகுதி. இவர் பாடிய நற்றிணை 43-ஆம் பாடலில் 'ஒரெயில் மன்னன் போல்' என வரும் உவமையால் இவர் இப் பெயர் பெற்றார் என்று கருதுவாருமுண்டு. எயி னந்தை மகனார் இளங்கீரனார் என்பதால், இவர் இளங்கீரன் என்ற சங்ககாலப்புலவரின் தந்தை என் பது புலனாகிறது. இவர் பாடிய ஒரே பாடலாகிய

நற்றிணைப் பாடலிலும் பாலைத்திணை பற்றியே சிறப்பித்துள்ளார். இதனாலும், எயினந்தை என்ற வேட்டுவப் பெயர் பெற்றிருப்பதாலும், இவர் மகனாம் இளங்கீரனாரும் பெரிதும் பாலை பற்றியே பாடியிருப்பதாலும் இவர் வேட்டுவர் மரபினைச் சார்ந்தவர் என்று கருதவும் இடமுண்டு.

தலைவியின் துயர் கூறித் தலைவனைச் செலவழுங்கத் தோழி கூறுவதாக இவர் புனையும் நற்றிணைப் பாடல் உவமை நயமுடையது. துணையாக வந்த அரசன் கைவிட, அப்போது யானைப் படையுடன் வந்த பகையரசன் தன் மதிலை முற்றுகையிட, தன்னுடைய துன்பத்தைக் களைவாரின்றிக் கலங்கி மதில் உள்ளே சிக்கிய மன்னன் போல், தலைவி தலைவன் பிரிவால் வருந்துகிறாள் என்பது இவர் காட்டும் நயவுவமை. க.இரா.

***எயினன்***: இவன் சங்க காலத்தில் வாழ்ந்த வள்ளன்மை சான்ற கொடையாளர்களுள் ஒருவன்; வாகை என்னும் ஊர் இவனுக்குரியது. மதுரைப்படை மங்கமன்னியார் என்னும் புலவர் இவனையும் இவனது ஊரையும் தாம் பாடிய புறநானூற்றுப் பாடலில் குறிப்பிட்டுள்ளார் (351). அப்பாடலில் இவன் 'வண்கை எயினன்' எனச் சுட்டப் பெறுகிறான். தலைவியின் எழில் நலத்திற்கு இவனது வாகை என்னும் ஊரை உவமையாகப் புலவர் குறிப்பிட்டுள்ளார். அ.மா.ப.

***எர்சுகோவிட்சு, மெல்வில்லி சீன் (கி.பி. 1895-1963)***தலை சிறந்த அமெரிக்க மானிடவியலாருள் ஒருவர்; மானிடவியல் துறையில் ஆப்பிரிக்க மக்கள் பற்றிய துறை நிபுணர்; பண்பாட்டுக் கோட்பாடு பற்றிய இக்காலக் கருத்திற்குக் குறிப்பிடத்தக்க பணி செய்தவர். ஓகியோவில் (Obio) பெல்லிபாண்டெய்ன் (Bellefontaine) என்னுமிடத்தில் 1895-ஆம் ஆண்டு பிறந்தார். மெல்வில்லி சீன் எர்சுகோவிட்சு (Melville Jean Herskovits) சிக்காகோப் பல்கலைக் கழகத்தில் இளம்பட்டம் பெற்றபின், கொலம்பியாப் பல்கலைக்கழகத்தில் பிரான்சுபோவாசு (Franz Boas) என்பாரின் மேற்பார்வையின்கீழ் 1923-இல் டாக்டர் பட்டம் பெற்றார். பின்னர், அங்கு மூன்றாண்டுக் காலம் மானிடவியல் துறையில் விரிவுரையாளராகப் பணியாற்றினார்.

எர்சுகோவிட்சுவின் தொடக்க காலப் பணியில் குறிப்பிடத்தக்கது வடமேற்குப் பல்கலைக்கழகத்தில் (Northwestern University) ஆப்பிரிக்க மக்கள் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டி, நீண்ட காலத் திட்டத்தைத் தொடங்கியதேயாகும். இவர் பண்பாட்டுத் தொடர்பு (Culture Contact) பற்றியும் பண்பாட்டு மாற்றத்தின் இயக்காற்றல் (Dynamics of Culture change) பற்றியும் முதன்மையாக ஆராய்ந்தார். இதனால் பண்பாடு பற்றிய புதிய கோட்பாட்டிற்குச் சிறந்த பணி ஆற்றியவரானார்.

பொருளியல்சார் மானிடவியல் (Economic Anthropology) துறையில் இவர் பல முன்னோடி ஆய்வுகளை நிகழ்த்தி, ஆதிக்குடிகளின் தொன்மைப் பொருளாதாரத்தின் தன்மைகளைப் பொருளியல் சிந்தனையோடு புதிய அணுகு முறையில் ஆராய்ந்து, இத்துறையை மேம்பாடடையச் செய்தார். பண்பாட்டுச் சார்புடைமை (Cultural Relativism) என்னும் கோட்பாட்டின் பயன்பாட்டினை மிகுதியாக விளக்கியவர் இவர். இக்கோட்பாட்டினை விளக்கிக் கூறும்போது, பிற பண்பாட்டினை மதிப்பிடுங்கால் எந்தவொரு நிலையான குறிப்பிட்ட அளவு முறையையும் (Criterion) கொள்ள முடியாது எனக் குறிப்பிடுவார்.

எர்சுகோவிட்சு ஆப்பிரிக்க மக்கள் பற்றிய இனக்குழுவியல் (Ethnography), நாட்டுப்புறவியல் முதலான ஆய்வுகளையும் அமெரிக்கக் கறுப்பர்களின் பண்பாட்டையும் மிகுதியாக ஆய்வு செய்தார், மேற்கு ஆப்பிரிக்கா, ஆப்பிரிக்கச் சகாராப் பகுதி, அய்டி (Haiti), திரினிடாடு (Trinidad), பிரேசில் முதலான பல்வேறு நாடுகளிலும் களப்பணி மேற்கொண்டார். இவர் நூல்களுள் குறிப்பிடத்தக்கவை 'மனிதனும் அவனது செயல்களும்' (Man and His Works, 1948), 'பொருளியல்சார் மானிடவியல்' (Economic Anthropology, 1952), 'மாறும் ஆப்பிரிக்காவில் மனிதக் காரணிகள்' (The Human Factors in Changing Africa, 1962) முதலானவையாகும். அமெரிக்கக் கற்றோர் சமுதாய அவை (American Council of Learned Societies) மேற்கொள்ளும் நீக்கிரோவினர் பற்றிய ஆய்வுகளுக்குத் தலைவராக 1939 முதல் 1950 வரை இவர் இருந்தார். எர்கோவிட்சு இவான்சுடனில் (Evanston) 1963-ஆம் ஆண்டு காலமானார். சீ.ப.

***எர்சுபர்கு***: ஒரு மனிதன் ஏதேனும் ஒரு நிறுவனத்தில் சேரும் பொழுது தன்னுடன் தனது தனிப்பட்ட தேவைகளையும் இணைத்துக் கொண்டே சேர்கிறான். அவன் உடல், மனம், சமூக மதிப்பீடுகள் ஆகியவற்றைப் போன்ற தனிப்பட்ட தேவைகள் அவனது தொழிலைப் பாதிக்கக் கூடியவையாக அமைந்து விடுகின்றன. எர்சுபர்கு (Herzberg) ஊக்கமூட்டும் நிருவாகக் கூறுகளைப் பாகுபடுத்தி, வேலை

மன நிறைவிற்கான ஒரு மாதிரியைத்தோற்றுவித்தார். எர்சுபர்கு மனித ஊக்கத்தின் தொடர் தூண்டுதல் களையும் அது நிறுவன வாழ்க்கையுடன் எவ்வாறு தொடர்பு கொண்டுள்ளது என்பதையும் ஆராய்ந்தார்.

எர்சுபர்கின் ஊக்கமூட்டிக் கொள்கையின் மூலம் தனிமனிதச் செய்கைகளும், வருவதை முன்கூட்டியே உரைக்கும் தனிமனித வெளிப்பாடுகளும் மாறும் நிலைபாடுகளின்படி எவ்வாறு அமையும் என்பதை ஆய்வு ஊழியர்கள் விளக்கினார்கள். ஒருசில ஊக்க மூட்டி அல்லது தன்முயற்சிக் கொள்கையாளர்கள் தங்களுடைய முக்கிய கொள்கைகளை நிறுவன வாழ்க்கை நிலையுடன் இணைத்து மனிதனின் தன் முயற்சியை ஊக்குவித்தனர்.

எர்சுபர்கின் தன் முயற்சி, நிருவாகக் கூறு ஆகிய வற்றின் பாகுபாடு அவருடைய தன் முயற்சி அல்லது ஊக்கமூட்டிக் கொள்கைகளுக்கு ஏதுவாக இருந்தது. வேலைத்திறனும் தொழிலாளியின் செயல் திறனும் அவற்றினால் ஏற்படும் வளர்ச்சியும் வெளிப்படுத்து கைகளும் ஊக்கமூட்டிக் கொள்கைகளுடன் நேரடித் தொடர்பு கொண்டிருக்கின்றன.

எர்சுபர்கு மாசுலோவின் ஊக்கமூட்டிக் கொள்கை யினை அடிப்படையாகக் கொண்டு, 'இருகாரணக் கோட்பாட்டு வேலை மனநிறைவு' (Two Factor Theory of Job Satisfaction) என்னும் கொள்கை யினை அமைத்தார். மனநிறைவு மற்றும் மனநிறை வின்மை என்பன கட்டுப்பாடற்ற அளவுகளாகும். வேலையில் மனநிறைவின்மையை ஏற்படுத்தும் நிலை கள் மனநிறைவை ஏற்படுத்தும் நிலைகளிலிருந்து வேறுபடுகின்றன. எர்சுபர்கு மாசுலோவின் தாழ்வுத் தேவைகளையும் உயர்வுத் தேவைகளையும் ஏற்றுக் கொண்டார்; மனநிறைவாளர்களுக்கும் மனநிறை வின்மையாளர்களுக்கும் இடையே உள்ள குண வேறு பாடுகளை அறியும் முயற்சியினையும் மேற்கொண் டார். மனநிறைவின்மையாளர்களையோ மனநிறை வாளர்களையோ ஊக்குவிப்பாளர்களையோ பின் வரும் எடுத்துக்காட்டினால் விளக்கலாம். மனநிறை வுள்ள தொழிலாளிக்குக் குறைந்த மனநிறைவின்மை உள்ளது என்று கூற முடியாது. ஏனெனில் மனநிறை வின்மையும் மனநிறைவும் வேறுபட்ட ஏவும் சூழ் நிலைகளால் தூண்டப்படுகின்றன. மனநிறைவின்மை வெளிப்படையான காரணங்களாகிய ஊதியம் மேற்பார்வை, வேலைநிலை, நிருவாகக்கொள்கைகள் ஆகியவற்றால் ஏற்படுகிறது. மனநிறைவு, ஊக்கு வித்தல் ஆகியவை வெளிப்படுத்தும் திறன், நிறை வேற்றுதல், பொறுப்பு, தனிமனித வளர்ச்சி ஆகிய பல்வேறு காரணிகளின் தேவையிலிருந்து அடையப் படுகின்றன.

சுகாதாரக் காரணிகள் (Hygiene Factors) தடுப் பதையும் சுற்றுச் சூழ்நிலையின் தன்மையையும் கொண்டதாகும். ஆனால் அவை மனநிறைவிற்கு வழிகோலுவதில்லை. மாறாக, அவை மனநிறைவின் அடித்தளத்திற்குச் சென்று எதிர் ஊக்கமூட்டும் திற னைத் தடுக்கின்றன.

எர்சுபர்கு பென்சில்வேனியாவிலுள்ள பிட்சு பர்கு என்னுமிடத்தில் ஒரு தன் முயற்சி பற்றிய ஆய்வினை மேற்கொண்டார். அவருடைய ஆய்வில் 200 பொறியாளர்களும் கணக்கர்களும் பங்கு கொண் டனர். அந்த ஆய்விற்குட்பட்டவர்களிடம் எப் பொழுது தங்களுடைய வேலை அவர்களுக்கு உகந்த தாகவும் உகந்ததற்றதாகவும் தோன்றியது என்பதும் எந்தச் சூழ்நிலை அவர்களை இந்த முடிவுக்கு கொண்டு வந்தது என்பதும்கேட்கப்பட்டன. ஆய்வின முடிவில் வேலை உகந்ததில்லை என எண்ணுபவர் களது முடிவுக்கு வேலை சுற்றுச் சூழல்தான் கார ணம் என்பதும், உகந்ததே என எண்ணுபவர்களது முடிவு வேலையின் அனுபவம், வேலையின் உள்ள டக்கம் ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டுள்ளது என்பதும் கண்டறியப்பட்டன.

மேற்கூறிய ஆய்வுகளின் முடிவில் எர்சுபர்கு கீழ்க் காணும் முடிவிற்கு வந்தார். மனநிறைவாளர்கள் வேலையின் உள்ளடக்கத்துடன் தொடர்புடைய வராக உள்ளனர். மனநிறைவின்மையாளர்கள்வேலை யின் உள்ளடக்கத்திற்குத் தொடர்பற்றவர்களாக உள்ளனர். எனவே மனநிறைவாளர்களை ஊக்குவிப் பவர் என்றும் மனநிறைவின்மையாளர்களைச் சுகா தாரக் காரணிகள் என்றும் எர்சுபர்கு குறிப்பிட்டார்.

எர்சுபர்கு தம் ஆய்வில் உகந்ததும் உகந்ததற்ற துமான எண்ணங்கள் பல்வேறு நிலைகளில் எவ்வாறு மாறுபடுகின்றன என்று கண்டறிந்தார். ஒரு மனித னின் சாதனை நல்ல எண்ணத்திற்குக் காரணமா யிருந்தால், தவறான எண்ணத்திற்குச் சாதனையின் மையே காரணமாகும். முடிவாக, சில வேலை நிலை கள் தொழிலாளியின் நிறைவின்மைக்கு முதன்மை யான காரணமாக அமைந்தாலும், அந்தச் சூழ்நிலை யில்லாமல் இருந்தாலும் அவை ஒரு தொழிலாளியை ஊக்கமூட்டும் என்று கூற இயலாது எனவும் இவர் விளக்குகிறார்.

எர்சுபர்கின் 'இருகாரணக் கோட்பாடு' வேலை ஊக்குவிப்பிற்கு ஒரு வலுவான காரணியாக அமை கின்றது. எர்சுபர்கின் கோட்பாடு பணியாளர்களின் தேவைகளையும் அவை எந்த அளவிற்கு நிறைவு செய்யப்படுகின்றன என்பதையும் ஒரு நிறுவனத்தின்

விளைவு அவர்களுக்கு எந்த அளவிற்கு முக்கியத்துவம் தருகிறது என்பதையும் அறிய வழிகோலுகிறது.

சீனி.நா.&கொ.இ.

துணை நூல்கள்:

**Davis, K.,** Human Behaviour at work: Organizational Behaviour, Tata McGraw Hill, New Delhi, 1977.

**Dunnet, M.D.,** Handbook of Industrial and Organizational Psychology, Rand McNally, Chicago, 1976.

**Luthans, F.,** Organizational Behaviour: A Modern Behavioral Approach to Management, McGraw Hill, New York, 1973.

**எர்டர், சோகன் காட்பிரைடு வான்:** எர்டர் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு செருமானிய மதிப்பீட்டாளரும் தத்துவ ஆசிரியரும் உலூதரக் கிறித்தவ இறை இயலாருமாவார். இவர் தம் பரந்த புலமையின் வாயிலாகவும் நூல்களின் வாயிலாகவும் செருமானியச் சிந்தனை வரலாற்றில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தினார். அறிவு மலர்ச்சிக் காலத்தவரெல்லாம் அறிவு ஒன்றையே அளவுகோலாக வைத்து எல்லாவற்றையும் மதிப்பீடு செய்ய, எர்டர் அறிவின் வரம்புகளையும் மனத்தில் வைத்து, மனித நாகரிகத்தையும் வரலாற்றையும் புதியதொரு வகையில் ஆய்வு செய்தார்.

சோகன் காட்பிரைடு வான் எர்டர் (Johann Gott fried Von Herder) கி.பி. 1744-ஆம் ஆண்டில் கிழக்குப் பிரசியாவில் மோருங்கன் (Mohrungen) என்னுமிடத்தில் ஏழைப் பெற்றோர்களுக்குப் பிறந்தார். இவர் கோனிக்சுபர்கில் இறை இயல், தத்துவம், இலக்கியம் முதலியவற்றை ஆர்வத்துடன் கற்றார். இவர் மதிப்பீடு செய்யும் தத்துவமுறையை நிறுவிய இம்மானுவல் காண்டு (Kant), அறிவு மலர்ச்சி இயக்கத்தைச் சீர்தூக்கி மதிப்பீடு செய்த சோகன் சார்சு ஆமான் (Johann Georg Hauman) ஆகியோருடன் நெருங்கிய தொடர்பு கொண்டார். இவர் இரிகா (Riga) என்னும் நகரத்தில் சிறிது காலம் பள்ளி ஆசிரியராகவும் சமய குருவாகவும் பணி செய்த பின்னர், கி.பி. 1769-இல் நாண்டிசுக்குப் பயணம் செய்தார். பின்னர் இசுடுராசுபர்குக்குப் போனபோது அங்குப் பிற்காலத்தில் புகழுடன் விளங்கிய செருமானியக் கவிஞரான கெதே (Goethe) என்ற இளைஞரோடு தொடர்பு கொண்டு, அவரோடு ஓமர் (Homer), பிண்டார் (Pindar), சேக்சுபியர் (Shakespeare) முதலிய உலகக் கவிஞர்களைப் பற்றிக் கலந்துரையாடி, அவர்களைப் பற்றியும் இலக்கியத்தைப் பற்றியும் நாட்டுப் பாடல்களைப் பற்றியும் தம் கருத்துகளைக் கூறி, அவ்விளங் கவிஞருடைய சிந்தனைகளைக் கிளறிவிட்டார். இவர் பக்பர்கில் (Buckeburg) அரசவைச் சமய குருவாக இருந்தபோது பல நூல்களை எழுதினார். பின்னர்க் கெதே தமது செல்வாக்கைப் பயன்படுத்தி வைமார் நகரத்தில் (Weimar) எர்டருக்கு ஓர் அரசாங்க மேற்பார்வையாளர் பதவி கிடைக்குமாறு செய்தார். பின்னர்க் கெதே இவரைவிடப் புகழ்மிக்க கவிஞராக வந்தபோது, அவருக்கும் எர்டருக்கும் பிரெஞ்சுப் புரட்சி பற்றி மாறுபட்ட கருத்துகள் தோன்றின. எனவே எர்டர் முன்பு புகழ்ந்து எழுதிய செருமானியக் கவிதைகளையும் சுதந்திரக் கலை முறையின் கோட்பாடுகளையும் மறுத்தும், எல்லாக் கவிதைகளுக்கும் நீதி இயலான கருத்து இருத்தல் வேண்டுமென்று வற்புறுத்தியும் எழுதினார். வரலாறு, தத்துவம், அழகுக்கலை (Aesthetics) ஆகியவை பற்றிக் கட்டுரைகளையும், ‘மனித முன்னேற்றத்துக்குகந்த கடிதங்கள்’ என்ற கட்டுரைகளையும் இவர் எழுதினார். இவர் வைமார் நகரத்தில் கி.பி. 1803-ஆம் ஆண்டில் இறந்தார். இவர் செருமானிய மொழியில் எழுதிய நூல்கள்: அண்மைக்காலச் செருமானிய இலக்கியத்தைப் பற்றிய சில கருத்துகள் (1766), அழகைப் பற்றிய அறிவியலும் கலையும்: சிந்தனைகள் (1769), ஆண்டு 1769-இல் எனது பயணத்தைப் பற்றிய குறிப்புகள், மொழியின் தோற்றத்தைப் பற்றிய கட்டுரை (1772), மனிதவளர்ச்சி: வரலாற்றின் தத்துவம் (1774), மனித இனத்தைப் பற்றிய பண்டைய பதிவேடுகள் (1774), மனித ஆன்மாவை அறிதலும் உணர்தலும் (1778), இறை யியல் ஆய்வு பற்றிக் கட்டுரைகள் (1780), ஈப்ரு கவிதையின் இயல்பு (1782), நாட்டுப் பாடல்களின் தொகுப்பு (1778), மனித வரலாற்றின் தத்துவம் (1800) ஆகியன.

**எர்டரின் கருத்துகள்:** எர்டர் முதலில் பண்டைய உயர் தனி கிரேக்க, இலத்தீன் இலக்கியப் போக்கில் கட்டுப்பாடற்ற எண்ணங்களிலெழும் கற்பனை இலக்கியங்களைப் பாராட்டினார். ஆனால் இவ்வகையில் தம்மைவிடக் கெதே புகழ்மிக்கவராய் விளங்கியதை இவர் கண்டு, கற்பனை இலக்கிய இயல்பை மறுத்து (Romanticism), நீதி இயல்புடன் கூடிய இலக்கியப் போக்கை (Didactic) ஆதரித்தார். முதலில் உணர்ச்சிகளுக்கும் அவற்றை வெளிப்படுத்தும் மொழிக்கும் ஆதரவளித்த எர்டர், பின்னர் அறிவுக்குகந்த நீதிக்கருத்துகளடங்கிய இலக்கியங்களை ஆதரித்தார்.

வரலாறு பற்றியும் இயற்கை பற்றியும் இவர் சில கருத்துகளைக் கூறினார். இரண்டும் ஒரே

வகையான சட்டங்களுக்கு உட்பட்டவையேயாகும். மனிதன் அறிவு முதிராத நிலையில் கட்டுப்பாடின்றிச் செயற்பட்டு, இயற்கைக்கு மாறாகச் செயல் ஆற்றுகிறான். அவனிடம் ஆராயும் ஆற்றலும் நல்லெண்ணமும் வளர வளர, அவன் தான் உணருகிற உண்மைக்கு ஏற்பச் செயற்பட்டு, மனித இனம் முழுவதும் தன்னகத்தே கொண்ட சமநிலை உடைய அமைப்பில் வாழும் நிலையை அடைகிறான்.

எகல் கூறிய சில அரசியல் கருத்துகளுக்கு எர்டர் முன்னோடியாக இருத்தல்: செருமானிய அரசியல் சிந்தனையாளரான எகல், எர்டரும் இலெசிங்கு (Lessing) என்பவரும் எழுதிய கருத்துகளைப் படித்தார். எர்டர், 'உலகில் ஒன்றன்பின் ஒன்றாகப் பல சமய நெறிகள் தோன்றிய வரலாறு சமய உண்மைகள் படிப்படியாக வளர்ச்சி பெற்றதையே காட்டுகிறது' என்றார். எர்டருடைய இந்தக் கருத்து, எகல் கூறிய முற்றுக்கோள் அல்லது இணைப்பு (Synthesis) என்னும் அரசியற் கருத்துக்கு வழிகாட்டியாக இருந்தது.

சமயச் சடங்குகள் பற்றி எர்டர் கூறும்போது, 'சமய நெறிகளும் சமயச் சடங்குகளும் முழு உண்மைகளுமல்ல; முழுவதும் மூட நம்பிக்கைகளுமல்ல. ஆனால் அவையெல்லாம் ஒவ்வொன்றும் ஓர் ஆன்மிக உணர்வை எடுத்துக்காட்டும் வெளி அடையாளங்கள் அல்லது வடிவங்களே ஆகும். அவை தாம் தோன்றிய காலத்தில்தான் பயனுடையவாகவும் மதிப்புடையவையாகவுமிருக்கின்றன' என்று குறிப்பிட்டார். இதை எகல் ஏற்றுக் கிரேக்கரின் சுதந்திரச் சிந்தனை ஆற்றலும் கிறித்தவ நெறி தோற்றுவித்த ஆழ்ந்த, ஒழுக்க, சமய இயல்பும் ஒன்றாக இணைந்த ஒன்றுதான் மேலைநாட்டு நாகரிகம் என்றும், ஒவ்வொரு நாகரிகத்தின் கூறுகளிலும் சமயம், தத்துவம், கலை, ஒழுக்க இயல் முதலியவை ஒன்றையொன்று பாதிக்குமளவுக்குக் கலந்து காணப்படுகின்றன என்றும், நாகரிகத்தின் இந்தப் பல்வேறு கிளைகளும் அவற்றைத் தோற்றுவித்த மக்களினத்தவருடைய உள்ளஇயல்பை அல்லது உள்ளறிவுத் திறனை (Spirit) வெளிப்படுத்துகின்றன என்றும், ஒவ்வொரு மக்கள் கூட்டத்தாருடைய வரலாறும் அம்மக்கள் மனிதனின் நாகரிகத்துக்கு அளித்துள்ள சிறப்பான பங்கை எடுத்துக் காட்டுகின்றது என்றும் கூறி, மேலைநாட்டு நாகரிக வளர்ச்சியில் 3 நிலைகளைச் சுட்டிக் காட்டினார். அதில் முதல் நிலையாகிய முதற்கோளில் (Thesis) ஆக்க நிலையிலிருந்த கிரேக்க நகரரசும், இரண்டாம் நிலையாகிய முரண்கோளில் (Anti-Thesis) சாக்கிரட்டிசும் கிறித்தவச்சமயமும், மூன்றாம் நிலையாகிய முற்றுக்கோளில் (Synthesis) மறுப்புரைச் சமயச் சீர்திருத்தமும் செருமானிய அரசுகளும் தோன்றின. எர்டர், 'செருமனிக்கு எப்பொழுதும் ஓர் உறுதியான தேசிய அறிவுத்திறன் இருந்து வந்துள்ளது. அவ்வாறே அது எப்போதும் இருந்து வரும்' என்று கூறிய கருத்தை ஆதாரமாக வைத்தே எகல், 'முழு வல்லமையுடைய (வரம்பற்ற அதிகாரமுடைய) ஒரு செருமானிய அரசு' என்ற கோட்பாட்டை வகுத்தார். மேலும், எர்டர் கூறிய இந்தக் கருத்தே, 'மனித இனத்தின் முன்னேற்றத்துக்கு ஒவ்வொரு தேசிய அறிவுத் திறனும் அளித்துள்ள பங்கை வைத்தே அதை மதிப்பீடு செய்தல் வேண்டும்' என்ற எகலின் கருத்துக்கு வழிகாட்டியாக இருந்தது.

பாசிசத்துக்கும் நாசிச சருவாதிகாரத்துக்கும் ஆதாரமாக அமைந்துள்ள அறிவியலுக்கு மாறான கோட்பாடு (Irrationalism), செருமனியில் பிரஞ்சுப் புரட்சிக் காலத்துக்கு முன்னரே தோன்றிய மக்கள் சிந்தனை (Folk Thought) ஆகியவற்றிலுள்ள குறைபாடுகளை எர்டர் துணிச்சலுடன் சுட்டிக்காட்டி, இங்கிலாந்திலும் பிரான்சிலும் தோன்றிய அறிவு மலர்ச்சியிலுள்ள (Enlightenment) சிறப்புகளோடு அவற்றை ஒப்பிட்டுக் காட்டினார். மக்கள் சிந்தனை என்ற போக்கு தலைவனிடம் நம்பிக்கை, தியாகம், கடமை, கட்டுப்பாடு முதலியவற்றை வலியுறுத்துகிறதே தவிர, குடியாட்சிக் கருத்துகளாகிய சுதந்திரம், சமத்துவம், குடிமையியல் – அரசியலுரிமைகள் (Civil and Political Rights) ஆகியவற்றை ஆதாரமாக வுடைய அரசியலமைப்புக்குட்பட்ட பிரதிநிதித்துவ அரசாங்கம், தத்துவ இயல்புடைய அறிவியல் (Philosophical Rationalism) முதலியவற்றைக் காட்டவில்லை என்று எர்டர் கூறினார். ஆகையால் அவர் நாசிச, பாசிச சருவாதிகாரக் கோட்பாடுகளை அறிவியலுக்கு மாறானவை என்று கூறி மறுத்தாரென்பது தெளிவு. பா.சு.

துணை நூல்:

Sabine, G.H., A History of Political Theory, Oxford & I B H Publishing Co., Calcutta, 1961.

**எர்ணாகுளம்**: இந்தியாவில் தமிழ்நாட்டினை அடுத்துள்ள கேரள மாநிலத்தில் உள்ள ஒரு துறைமுகப்பட்டினமான எர்ணாகுளம், முன்பு கொச்சி இராச்சியத்தின் தலைநகராக இருந்தது. இது ஒரு கழிமுகத்தின் கரையில் இருப்பதால் படகுப் போக்குவரத்துக்கு மிகவும் ஏற்ற சூழ்நிலை அமைந்துள்ளது. இதன் மேற்குப்புறத்திலுள்ள கொச்சித் துறைமுகம் மிகவும் வளர்ச்சியுற்ற நிலையில் உளது. ஆகவே இது வாணிகத் தொடர்பு மிகுதியான ஓர் இடம். இரண்

டாம் உலகப்போர்க் காலத்தில் ஆங்கிலேயர் இப் பகுதியைச் சிறந்த இந்தியக்கப்பல் தளங்களுள் ஒன்றாக ஆக்கியிருந்தனர். பல தொழிற்சாலைகள் இங்கு உண்டு. குறிப்பாக தாட்டா (TATA) தொழிலதிபர்கள் ஏற்படுத்தியுள்ள சோப்புத் தொழில் சிறப்பாக உள்ளது. பல கல்விக்கூடங்களும் இருக்கின்றன. இது விமானப்போக்குவரத்து மூலமாகவும் பிற இடங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது. தெ.பா.

**எர்பர்ட்டு, பி. சோ.** செருமனி நாட்டுக் கல்விச் சிந்தனையாளர். இவர் கி.பி. 1776-ஆம் ஆண்டு ஓல்டன்பர்கு (Oldenburg) நகரில் பிறந்தார். இவர் தந்தை அரசாங்கத்தில் பணியாற்றிய வழக்கறிஞர். சோகன் பிரடெரிக்கு எர்பர்ட்டு (Johann Friedrich Herbart) செனாப் பல்கலைக்கழகத்தில் (University of Jena) தத்துவம் பயின்றார். தத்துவத் துறைப் பேராசிரியர் ஒருவருடன் ஏற்பட்ட தத்துவக் கருத்து மோதலின் விளைவால், தமக்கு அளிக்கவிருந்த அறிஞர் (Doctorate) பட்டத்தை வாங்காமல் மறுத்தார்.

சுவிட்சர்லாந்து நாட்டுக் கல்வியாளரான பெசுடோலொசியின் (Pestalozzi) உயர்ந்த கல்விக் கோட்பாடுகளால் ஈர்க்கப்பட்டு, எர்பர்ட்டு அவரை கி.பி. 1799-இல் சந்தித்தார். பெசுடோலொசியின் கல்விக் கோட்பாடுகளின் குறைகளைச் சுட்டிக்காட்டித் திறனாய்வுக் கட்டுரைகள் வெளியிட்டார்.

இவர் கோட்டிங்கன் பல்கலைக்கழகத்தில் (University of Gottingen) மீண்டும் கி.பி. 1802-ஆம் ஆண்டு சேர்ந்து பயின்று, பிஎச்.டி. (Ph.D.) பட்டம் பெற்றார்; அங்கு ஆசிரியராகவும் பணியேற்றார்; கோனிசுபர்குப் (Konisberg) பல்கலைக்கழகத்தில் கி.பி. 1809-இல் தத்துவத் துறைப் பேராசிரியரானார். அங்குத் தத்துவப் பேராசிரியராக இருந்த இம்மானுவல் காண்டு (Immanuel Kant) கி.பி. 1804-இல் மறைந்தமையால், அப்பதவியில் எர்பர்ட்டு அமர்த்தப்பெற்றார். அங்கு மாணவர்களுக்கு ஆசிரியர் பயிற்சி அளிப்பதற்காகக் கற்பித்தலியற் கல்லூரி (Pedagogical Seminary) ஒன்றை நிறுவ இவர் காரணமாயிருந்தார். எர்பர்ட்டு கற்பித்தல் முறைகளையும் விளக்கப் பாடங்களையும் கற்பிப்பதற்கு ஆசிரியர் பயிற்சி பெறும் மாணவர்களுக்குப் பயிற்சியளித்தார்.

புருசியன் அரசின் அடக்கு முறையைத் தாங்கிக் கொள்ள முடியாமல், கி.பி. 1833-இல் எர்பர்ட்டு கோட்டிங்கன் பல்கலைக்கழகத்திற்குத் திரும்பினார். இவர் கி.பி. 1841-இல் மறைந்தார். மறையும் வரை கல்வி, தத்துவம் ஆகிய இரு துறைகளின் வளர்ச்சிக்காகவும் பணிபுரிந்து கொண்டிருந்தார்.

கல்வியின் தலையாய நோக்கம் மாணவர்களிடம் நல்லொழுக்கத்தை (Morality) வளர்ப்பதே; நல்லொழுக்கத்தை ஒரு மாணவர் பல்வேறுபட்ட ஆர்வங்களின் வழியே பெறுகிறார்; அவ்வொழுக்கத்தின் அடிப்படையிலே உலகைப் பற்றிய அறிவு அம் மாணவருக்கு வளர்கிறது; அதன் அடிப்படையில் நல்ல முன்மாதிரிகளைப் பின்பற்றவோ தீயவற்றை ஒதுக்கித் தள்ளவோ அம்மாணவர் திறன் பெறுகிறார். இவை எர்பர்ட்டின் கல்விக் கருத்துகள். இவர்தம் சிந்தனையைப் பின்பற்றிய சில கல்வியாளர்கள் கற்றலுக்கான ஐந்து படிநிலைகள் (Five Formal Steps of Recitation) என்ற கருத்தினைக் கொண்டு வந்தனர். இக்கருத்து மாணவர்களுக்குக் குறுகிய வழியில் பாடத்தைத் திணிப்பதாக உள்ளதெனக் குறைகூறப்பட்டது. இவர்தம் கல்விக்கொள்கை செருமனி, அமெரிக்கா ஆகிய நாடுகளில் மிக வேகமாகப் பரவியது. எஸ்.த.

துணை நூல்கள்:

**Damon, W.**, The Social World of the Child, Jossey-Bass, San Francisco, California, 1977.

**Fraenkel, J.R.**, How to Teach about Values: An Analytic Approach, Prentice Hall, Englewood Cliffs, New Jersey, 1977.

**எர்மோந்திசு** எகிப்திலிருந்த தொன்மை மிக்க நகரம். நைல் நதியின் மேற்குக் கரையில் பண்டைய தீபிசு (Thebes) நகரத்திற்குத் தெற்கில் 8 கி.மீ. தொலைவில் இந்நகரம் இருந்தது. இன்று ஆர்மண்டு (Armant) என்னும் ஊர் இப்பகுதியில் அமைந்துள்ளது. எர்மோந்திசு (Hermonthis) நகரம் மாண்டு (Montu) என்னும் போர்க் கடவுளின் உறைவிடமாகத் திகழ்ந்தது. இவர் பருந்து முகத்தையுடைய மனித உருவில் காணப்படுவார். இவர் கைகளில் பல போர்க்கருவிகள் இருக்கும். இவருடன் பூச்சிசு (Buchis) என்னும் எருது இருக்கும். கிரேக்க-உரோமர் காலத்தில் கி.மு. 4-ஆம் நூற்றாண்டு வரை இக்கடவுள் மக்களின் முக்கிய தெய்வமாக வணங்கப்பட்டார். எர்மோந்திசில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத் தடயங்களும் கிடைத்துள்ளன. இங்குள்ள கோயில் சிதைவுகளில் கல்வெட்டுகள் பல கிடைத்துள்ளன. இக்கல்வெட்டுகள் 18-ஆம் அரச மரபு (கி.மு. 1554-1304) அரசர்களின் பெயர்களைக் குறிக்கின்றன. கிளியோபாட்ரா கட்டிய கோயிலொன்று இங்கு கி.பி. 1860 வரை இருந்தது. அதன் பின்னர் ஒரு சர்க்கரைச் சுத்திகரிப்பு ஆலை அமைப்பதற்காக இக்கோயில் அழிக்கப்பட்டது. சு.இரா.

***எர்மோ போலிசு மக்னா*** எகிப்திலிருந்த பண்டைய நகரம். இது கல்விக் கடவுளான தோத்து (Thoth) என்பவரின் முதன்மை நகரமாக விளங்கியது. நைல் ஆற்றின் மேற்குக் கரையில் இந்நகரம் அமைந்திருந்தது. இன்றைய கெய்ரோவிலிருந்து தெற்காக 260 கி.மீ. தொலைவில் இப்பகுதி உள்ளது. எர்மோ போலிசு மக்னா்வின் (Hermo Polis Magna) இன்றைய பெயர் எல் ஆசுமூனியன் (El Ashmunein) என்பதாகும். எகிப்தியர்கள் இந்நகரை எட்டு நகரம் (Eight town) எனக் கூறினர். உலகைப் படைக்கத் துணைநின்ற எட்டுக் கடவுள்களைப் பற்றிச் சமயச் சொற்பொழிவுகள் இந்நகரத்தில் நடைபெற்றதால் எகிப்தியர்கள் இவ்வாறு இந்நகரைக் கூறினர். எர்மசு (Hermes) என்று கிரேக்கப் புராணங்களில் கூறப்படும் சிறு தெய்வத்தின் பெயரால் இந்நகரம் எர்மோ போலிசு எனக் கிரேக்கர்களால் கூறப்பட்டது. எகிப்திய வரலாற்றில் இந்நகரம் சிறப்பிடம் மிக்க நகரமாக விளங்கியது. எகிப்தியப் பேரரசின் ஒரு பகுதியின் தலைநகரமாகவும் இந்நகரம் விளங்கியது.

சு.இரா.

***எர்னசுட்டு எமிங்வே*** 20-ஆம் நூற்றாண்டின் இணையற்ற எழுத்தாளர். எர்னசுட்டு எமிங்வே (Ernest Hemoningway) அமெரிக்கப் பெருநாடு உலகிற்களித்த சிற்ந்த எழுத்தாளர். இவர் கி.பி. 1899-ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 21-ஆம் நாள் அமெரிக்க ஐக்கிய நாட்டில் உள்ள சிகாக்கோ நகரின் புற நகராகிய இல்லினாய்சு அருகில் உள்ள ஓக்பார்க்கு (Oak Park) என்ற இடத்தில் பிறந்தார். தந்தை கிளாரன்சு எட்மன்சு எமிங்வே ஒரு மருத்துவர். தாய் கிரேசு ஆல் எமிங்வே நுண்ணிய கலையார்வம் மிக்கவர்.

எமிங்வே தமது இளமைப் பருவத்தில் எதையும் நுணுகி ஆராயும் கூர்த்த மதியுடையவராக விளங்கினார். தாம் பிறந்த இடமாகிய இல்லினாய் நகரின் பின்புலச் சூழ்நிலை மற்றும் மரபுவழி நில்லாது, மாற்றுக் கருத்தை மனங்கொள்ளத் தொடங்கினார். அந்நகரின் அரசுப் பள்ளியில் பயின்றபோதே எழுத்துத் துறையில் பற்றுக் கொண்டு எழுதத் தொடங்கினார். தாம் பிறந்தவிடமாகிய ஒக்பார்க்கு சூழலைத் தம் கதைகளின் நிலைக்களனாகக் கொள்ளாமல், தமது இளமைப் பருவத்தின் இனிய கோடை நாட்கள் இனிதே கழிந்த மிச்சிகன் நகரையும் அதன் நினைவுகளையும் ஆராக் காதலுடன் அழகுறச் சித்திரித்தார்.

பள்ளிப் படிப்பை 1913-ஆம் ஆண்டில் முடித்த எமிங்வே கான்சாசு (Kansas) என்ற நகருக்குச் சென்று நட்சத்திரம் (Star) என்ற பத்திரிகையின் செய்தியாளராகச் சேர்ந்தார். மிக்க புகழ் பெற்ற இப்பத்திரிகை இவருக்கு எழுத்துத்துறையில் ஏற்புடைப்பயிற்சியை நல்கிற்று. அக்காலை இவர் இராணுவத்தில் சேர்ந்து தொண்டு புரிய மிக விரும்பினார். ஆனால், இடையில் ஏற்பட்ட பார்வைக் கோளாறின் காரணமாகத் தேர்வுசெய்யப்படவில்லை. இருந்தும் அமெரிக்கச் செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊர்தி ஓட்டுநராகப் பணி அமர்ந்தார். தம் 19-ஆம் வயதில் 1918-ஆம் ஆண்டில் முதல் உலகப் போரில் பங்கேற்ற இவர் கடுங்காயமுற்றார். இவ்வனுபவம் மனம் மற்றும் உடல் சார்ந்த காயங்களை ஒருவன் எவ்வாறு எதிர் கொள்ளவேண்டும் என்ற சிந்தனையை இவர்தம் உள்ளத்தில் தோற்றுவித்தது.போரில் வீரம் விளைத்த எமிங்வே அரசின் வீர விருதினைப் பெற்றார். பின் மிலான் நகரில் மருத்துவ உதவி பெற்றபொழுது அங்கிருந்த ஒரு செவிலித் தாயின்மீது காதல் கொண்டார். ஆயினும் அக்காதல் கைகூடவில்லை.

பிரான்சு நாட்டுத் தலைநகராகிய பாரிசு நகரில் 1920-ஆம் ஆண்டு இசுகாட்டு, பிட்செரால்டு, எசுரா பவுண்டு, செர்ட்ரூடு இசுட்டீன் போன்ற அமெரிக்க எழுத்துலக அறிஞர்களின் சார்பில் ‘இழந்த தலைமுறை’ (Lost Generation) என்ற விரக்தியுற்ற ஓர் எழுத்தாளர் இயக்கத்தின் தலைமைத் தொடர்பாளராக விளங்கினார். ஏடிலி இரிச்சர்டுசன் (Hadley Richardson) என்ற பெண்ணை மணம்புரிந்த பின்னர், எமிங்வே பிரெஞ்சு நாட்டின் தொராண்டோ நட்சத்திரம் (Toranto Star) என்ற பத்திரிகையின் நிருபராகச் சேர்ந்தார். எழுத்தாள நண்பர்களின் தூண்டுதலால் எழுதத் தொடங்கிய இவரது முதல் புத்தகம் ஒரு சிறுகதைத் தொகுதியாக ‘நமது காலத்தில்’ (In Our Time)என்ற பெயரில் நியூயார்க்கு நகரில் 1925-ஆம் ஆண்டில் வெளிவந்தது. அதனை அடுத்து ஆண்டொன்று கழிந்த பிறகு ‘ஆதவனும் உதிக்கிறான்’ (The Sun also Rises) என்ற புதினம் வெளியாயிற்று. இது இவரது அக்கால மனநிலையைத் தெளிவாக எடுத்துக்காட்டும் வகையில் சோர்வுவாதச் (Pessimism) சிந்தனையைக் கருவாகப் பெற்றிருந்தது. இக்கதை மாந்தர்கள் உலகப் போரின் பின்னர்,தாயகம் துறந்த,தமக்குத்தாமே அந்நியமாகிப் போன ஒரு தலைமுறையினராவர். இந்நூல் எமிங்வேயைப் புகழின் உச்சிக்கு உயர்த்தியது.

போருக்குப் பிற்பட்ட பகுதியை எழுத்திலேயே கழித்த இவர் வாழ்வில் ஒரு சோதனை போல மணமுறிவு ஏற்பட்டது. மகன் சான் மட்டும் முறிந்து போன மண வாழ்வின் எச்சமாக இருந்தான். பாலின் பெயிப்பர் (Pauline Pfeiffer) என்ற பெண்ணை

மறுமணம் புரிந்தார். இரண்டாம் மணம் ஓரள விற்கு மன நிறைவைத் தந்தது. பாட்ரிக்கு, கிரிகோரி என்ற இரு ஆண் மக்கள் பிறந்தனர். பிறகு எமிங்வே பாரிசுக்குப் பயணமானார். அங்கு வேட்டையாடுதல், மீன் பிடித்தல், காளைச் சண்டை போன்ற கேளிக்கை களில் ஈடுபட்டார். இதுவே இவரது கதைகளின் அடிப்படைக் கருவாக அமைந்தது.1927-ஆம் ஆண்டில் வெளிவந்த 'மகளிர் அற்ற ஆடவர்' (Men Without Women), 1933-இல் வெளிவந்த 'வென்றவர் பெற்றது ஏதுமில்லை' (Winner take nothing) என்ற இரண்டு சிறுகதைத் தொகுதிகளும் ஆசிரியருக்குப் புகழை அள்ளித் தந்தன என்றாலும், அவரைப் புகழின் உச்சிக்கு உயர்த்தி, உலகறியச் செய்தது 1929-இல் வெளிவந்த 'படைகளுக்கு விடை கொடுப்போம்' (A Farewell to Arms) என்ற நூலே ஆகும்.

ஒரு போர் வீரனாக இவர் வாழ்ந்த இளமைக் கால வாழ்வும் அப்பருவகாலத்திற்கே உரிய காதல் உணர்வுகளும் மென்மையும் வன்மையும் இரண்டறக் கலந்து வந்த வெளிப்பாடும் இவர்தம் கதைகளின் உயி ரோட்டமாக விளங்குகின்றன. இருந்தும் போரின்மீது இருந்த விருப்பும் வேட்டையும் இலக்கிய உலகில் இவ்வாறு போனதன் விளைவாக நூல்களின் வரவு தள்ளிப்போனது அல்லது தடைப்பட்டும் போயிற்று. கேளிக்கைகளில் இவர் கொண்ட நாட்டமும் அவை எடுத்துக்கொண்ட நேரமும் சக்தியும் இலக்கியப் படைப்பை இரண்டாம் இடத்திற்குத் தள்ளிவிட்டன. இவ்வாறு இவர் இசுபெயின் தேசத்தின் மீது கொண்ட அன்பினையும் காளைச் சண்டையில் கொண்ட நேரத்தையும் 'பிற்பகல் மரணம்' (Death in the Afternoon) என்ற புதினம் வெளிப்படுத்துகிறது. இந் நூல் 1932-ஆம் ஆண்டு வெளிவந்தது. அந்த ஆண்டில் வெளியிடப்பட்ட 'ஆப்பிரிக்கப் பச்சைக் குன்றுகள்' (Green Hills of Africa) என்ற நூலில் தம் வேட்டை அனுபவங்களைப் பாசத்தோடும் ஏக்கத்தோடும் நினைவுகூர்ந்தார். 'பெறுவதற்கும் இழப்பதற்கும்' (To have and have not) 1937-இல் வெளிவந்த புதின மாகும். இதன் பின்னணி எமிங்வே சிறிது காலம் வாழ்ந்த கீ வெசுட்டு (Key West) என்ற இடமாகும்.

இக்கால கட்டத்தில் இசுபெயின் நாட்டில் உள் நாட்டுப்போர் மூண்டது. அந்நாட்டுத் தளபதி பிராங்கோவின் (General Franco) எழுச்சிக்கு எதிரி டையான குடியரசுப் படையினை எமிங்வே ஆதரித்துப் போர் நிதியும் திரட்டினார். இச்சூழலில் தான் இவரது 'ஐந்தாம்படை' (The Fifth Column, 1938) என்ற புதினம் எழுதப்பட்டது.

இசுபெயின் நாட்டுப் போரில் பெற்ற அனுபவங் கள் 'யாருக்காக மணி அடித்தது' என்ற புதினமாக வெளிவந்து, இதுவரை இவர் பெற்றிராத விற் பனையை எட்டிற்று. அது ஓர் அமெரிக்க கொரில் லாவைப் பற்றியது. தான் தகர்க்க இருக்கும் பாலம் ஒரு தோல்வி முயற்சியே என்றும் தான் அதில் மடியப் போவது திண்ணம் என்றும் நன்கறிந்தும் அச்செயலில் ஈடுபட்டு மாண்டுபோன ஒரு மாவீரனின் கதையே அது.

பின்னர் இரண்டாம் உலகப் போரிலும் பங்கு பெற வேண்டிய சூழ்நிலை தோன்றியதால், கியூபா விற்கு உளவறியும் பொருட்டு வந்த செருமானிய ஒற்றர்களைக் கண்காணிக்கும் பணியில் தம்மை ஈடு படுத்திக் கொண்டார். அதற்கென ஓர் உளவு நிறு வனத்தையும் அமைத்தார். பாதுகாப்புப் பணிக்குத் தம்மை அர்ப்பணம் செய்த எமிங்வேஎதிரிப் படகு களை அழிக்கும் செயலில் நேரடியாகவே பங்கு பெற்றார். இதைத் தொடர்ந்து 1946-ஆம் ஆண்டு இங்கிலாந்து நாட்டின் விமானப் படையில் சேர்ந்து ஆங்கிலக் கால்வாயைக் கடந்து, நார்மண்டியில் நடை பெற்ற பல்சிப் போரில் (Battle of Bulge) ஈடுபட் டார். பாரிசு நாட்டின் விடுதலைப் போரில் சிறப் பாகப் பணியாற்றிய எமிங்வே கொரில்லாப் போரி லும் போர் உத்தியிலும் வல்லவராக விளங்கினார்.

ஐரோப்பியப் போருக்குப்பின் கியூபாவிற்கு மீண்டும் வந்த இவ்வறிஞர் மேரி வெல்சு (Mary Welsh) என்ற மாதினைத் தம் நான்காம் மனைவியாக மணந்தார். இப்பெண் ஒரு பத்திரிகையாளர். இக் காலத்தில் ஆப்பிரிக்காவிற்குப் பயணம் சென்ற எமிங்வே விமான விபத்தில் சிக்கிக் காயமுற்றார். இவரது இலக்கியப்பணி 1953-ஆம் ஆண்டு அதுவரை பெறாத சிறப்பினைப் பெறக் கண்டார். அவ்வாண்டில் தான் இவர்தம் 'கிழவனும் கடலும்' (The Old man and the Sea) என்ற புதினத்திற்குப் புலிட்சர் பரிசு (Pulitzer Prize) கிடைத்தது.

1960-ஆம் ஆண்டு கியூபாவில் நிகழ்ந்த அரசியல் நிகழ்ச்சிகள் எமிங்வேயைப் பேரளவில் பாதித்தன. அந்த ஆண்டு கியூபாவை நீத்த இவர் அடுத்த ஆண்டு (1961) சூலை 2-ஆம் நாளில் தம் கைத் துப்பாக்கியால் சுட்டுக் கொண்டு மாண்டார். பல் வகை உணர்ச்சிகளுக்கும் தம்மை ஆட்படுத்திக் கொண்ட இச்சிந்தனையாளர் சில நேரங்களில் தம்மை மறந்து, செயல்களில் ஈடுபடும் பழக்கத்திற்கு ஆட்பட்டிருந்தார் என்பது திறனாய்வாளர்கள் கூற்று.

இறப்பிற்குப் பின்னர், 1964-ஆம் ஆண்டு உள் ளத்தை உருக்கக் கூடிய ஓர் ஒப்பற்ற நூலான 'நகரும்

விருந்து' (A Moveable Feast) என்பது இவரது இளமைக்கால நினைவுகளை உள்ளடக்கிய ஓர் ஒப்பற்ற புதினமாக வெளிவந்தது. இப் பேரறிஞருக்கு 1954-இல் நோபல் பரிசு வழங்கப்பட்டபோது 'சுவீடன் அக்காதெமி' என்ற இலக்கிய அமைப்பு இவர்தம் புதினங்களின் மையக் கருத்துகள் பற்றிப் பேசும்போது, கொடூரமும் சாவும் நிரம்பிய இச்சமுதாயத்தில் தைரியமும் இரக்கமும் தனிப்பட்ட செவ்விய கருத்துகளாக, நெறிகளாக எவ்வாறு விளங்குகின்றன என்பதனையும், அவற்றைப் படம் பிடித்துக் காட்டுதலுமே எமிங்வேயின் சிந்தனையாகும் என்று கூறிற்று. தமது வாழ்நாளில் இவர் கண்ட வாழ்வின் உண்மைகளை நடப்பியற் பாங்கில் இவர் எழுதினார். இவர்தம் பாத்திரங்கள் தனித்ததொரு சிந்தனை நிலையை மேற்கொள்கின்றனர். சுருங்கக் கூறின், தமது தனிப்பட்ட வாழ்வில் ஏற்பட்ட அனுபவங்களுள் கசப்பான அனுபவங்களே இவர்தம் படைப்புகளின் நிலைக்களன்கள்.

தமது கருத்துவன்மையாலும் கதை சொல்லும் பாங்காலும் ஐம்பதுகளில் இலக்கிய உலகின் புருவங்களை உயர்த்திய இவ் இலக்கியவாதி, வாழ்நாள் முழுவதும் முரண்பட்டவராகவே விளங்கினார் இருப்பினும் இவர்தம் நகைச்சுவையும் குன்றா உற்சாகமும் கண்டாரைப் பிணிக்கும் தன்மை வாய்ந்தன. தாராளச் சிந்தைக்கும் சில நேரங்களில் சுயநலத்திற்கும் சின்னமாக இருந்தார் என்ற குற்றச்சாட்டும் இவர்மேல் உண்டு. உலக இன்பம் துய்த்தலே சிறந்த நலம் என்ற கோட்பாட்டை மேற்கொண்டிருந்தார். காதல் வாழ்வில் மாறாக் காதல் கொண்டு, புலன் இன்பங்களில் நாட்டம் மிகக் காட்டினார். அதே சமயம் சாவின்மீதும் ஒரு தீவிரப் பற்று உடையவராகவும் காணப்பட்டார். சிறந்த விளையாட்டாளர்; வீரத்திரு வளர் தீரச் செயல்களின்பால் தீராப் பற்று உடையவர். இவர் தமது எழுத்தால் ஒரு புரட்சியைத் தோற்றுவித்து, தம் குண முரண்பாடுகளுக்குத் தம்மையே ஈந்து, தம்மை அழித்துக்கொண்ட இரக்கத்திற்குரிய பெருமகனாராவார்.

இவர்தம் புதினங்கள்: இவர் 'வசந்த வீச்சுகள் (The Torrents of Shring, 1926) முதலிய 8 புதினங்களையும், 'எங்கள் காலத்தில்' (In our Times, 1925) முதலிய மூன்று சிறு கதைத்தொகுதிகளையும், 'பிற்பகல் சாவு' (Death in the After noon, 1932) முதலிய நான்கு பிறவகை நூல்களையும் இயற்றியுள்ளார். ஞா.செ.

**எர்னசுட்டு பெவின்**: இங்கிலாந்து நாட்டில் அமைச்சராக இருந்து பல முக்கிய செயல்களை ஆற்றிய எர்னசுட்டு பெவின் (Ernest Bevin) கி.பி. 1881-ஆம் ஆண்டில் சாமர்செட்டுப் பகுதியில் உள்ள வின்சுபோர்டு (Winsford) நகரில் மிக எளிய குடும்பத்தில் பிறந்தார். இவர் தம் 11-ஆம் வயதிலேயே பள்ளிக் கல்வியை விட்டுவிட நேர்ந்தது. பிறகு இவர் பல பணிகளை மேற்கொண்டார். தொழிலாளர்களிடையே நெருங்கிப் பழக இவருக்கு வாய்ப்புகள் கிடைத்ததால், அவர்கள் பிரச்சினைகளை நேரில் அறிந்தும் அனுபவித்தும், அந்தத் துறையில் ஆற்றல் பெற்றார். தொழிலாளர் சங்கங்களிலும் பல பதவிகள் வகித்துப்பிறகு தலைவருமானார். அவரே ஒரு துறைமுகத் தொழிலாளர் சங்கத்தை 1910-இல் அமைத்தார். முதலாம் உலகப் போருக்குப் பிறகு, பல தொழிற்சங்கங்களை ஒன்றாக இணைத்து ஒரு மாபெரும் போக்குவரத்துப் பொது ஐக்கியச் சங்கம் ஒன்றை ஏற்படுத்திய பெருமை பெவினுக்கு உரியது. உலகிலேயே மிகப் பெரிய தொழிலாளர் சங்கமாக அது விளங்கியது. பெவின் 1940 வரை அதன் பொதுச் செயலாளராகத் தொண்டாற்றினர். இங்கிலாந்தில் 1926-ஆம் ஆண்டில் ஒரு பெரும் வேலைநிறுத்த இயக்கத்தை அமைத்ததுடன், அது முடிவுறச் செய்யவும் உதவினார். உலகப் பெருமந்தத்தின் தொடக்க காலத்தில் இங்கிலாந்தின் இராம்சே மாக்டனால்டு அமைச்சர் சபையின் (கி.பி. 1929-31)சில செயல்களை வன்மையாகக் கண்டித்தார். வேலையின்மையைப் போக்கத் தீவிர நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்பது பெவினின் வாதம். அதனால், மாக்டனால்டின் கூட்டு அமைச்சரவையை (கி.பி. 1931-35) இவர் ஆதரிக்கவில்லை. இங்கிலாந்து தனது படைகளை வலிமைப்படுத்திக் கொள்ள வேண்டுமென்று 1930-ஆம் ஆண்டுகளில் வற்புறுத்தி வந்தார். ஐரோப்பாவில் நாசி, பாசிசுட்டுக் கட்சிகளின் வளர்ச்சியை ஒடுக்க இங்கிலாந்து ஆவன செய்யவேண்டுமென்பது இவர் கருத்து. இதுபற்றி அரசியலார் உறுதியாக இருக்கவேண்டுமென்பதும் வாளா இருக்கக் கூடாது என்பதும் பெவினுடைய குறிப்பிடத்தக்க முறையீடுகளாகும்.

சர்ச்சில் 1940-ஆம் ஆண்டில் போர்க்காலக் கூட்டு அமைச்சரவைஅமைத்த பொழுது, பெவின் தொழில், தேசிய சேவை அமைச்சராகி அமைச்சுக்குழுவிலும் (Cabinet) இடம் பெற்றார். போர்க்காலமாதலால் கட்டாயமாக மக்களைப் படையில் சேர்த்துக் கொள்ளும் கொள்கை செயலாற்றப்பெற்றது.

ஆட்லி பிரபு 1945-இல் பிரதம அமைச்சராகித் தொழில்கட்சி அரசாங்கத்தை அமைத்த பொழுது, பெவின் அயல்நாட்டு மந்திரி ஆனார். வேலை நிறுத்தத்தைத் தடை செய்தார். பால்கன் தீபகற்பத்தில் உருசியாவின் ஆதரவு பெற்ற நாடுகளுக்கு அரசியல்

ஏற்பு வழங்கக் கூடாதென்பது இவர் கொள்கை. பொது உடைமைக் கொள்கையின் வளர்ச்சியைத் தடுக்க ஐரோப்பிய ஒற்றுமை வளர்வதற்கான திட்டங்கள் இவரால் தீட்டப்பெற்றன. பெல்சியம், இங்கிலாந்து, பிரான்சு, நெதர்லாந்து, இலக்சம்பர்கு ஆகிய நாடுகள் 1948-இல் பிரசல்சு உடன்படிக்கைப் படி ஒன்றுபட்டன. அதே ஆண்டில் ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டுறவு அமைப்பும் பெவினின் உதவியுடன் உருவாகியது. அடுத்த ஆண்டில் வட அட்லாண்டிக்குக் கடல் நாடுகளின் ஒப்பந்தத்திற்கு (NATO) வழிவகுத்தார். பாலத்தினியச் சிக்கலைத் தீர்க்க, யூத-அரேபிய சமட்டி முறைத் திட்டத்தை 1947-48 ஆண்டுகளில் கொணர்ந்த போதிலும், அரேபிய இசுரேலியப் போராட்டத்தின் காரணமாக அது தோல்வியுற்றது. இவர் முயற்சியால் 1950-ஆம் ஆண்டில் சீனாவின் மக்கள் குடியரசை இங்கிலாந்து அரசியல் முறையில் ஏற்றுக் கொள்ள முன்வந்தது. (இச்செயல் அமெரிக்கக் கொள்கைக்கு முரணானது). அடுத்த ஆண்டில் இவர் நோய்வாய்ப்பட்டு இறப்பதற்கு முன்பு கொழும்புத் திட்டத்தைத் தயாரித்தளித்தார். இத்திட்டம் தெற்கு, தென்கிழக்கு ஆசியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுத்தது. சிறந்த அரசியல் அறிஞரும் தொழிற்சங்கத் தலைவருமான பெவினைப் பிரிட்டன் தக்க முறையில் உயர் பதவி அளித்துப் போற்றியது. தெ.பா.

**எரடோட்டசு:** பண்டைய கிரேக்க நாட்டில் கி.மு.ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு புகழ்மிக்க கிரேக்க வரலாற்றாசிரியராகிய எரடோட்டசு(Herodotus) என்பவர் எழுதிய கிரேக்க-பாரசீகப் போர்களைப் பற்றிய 'வரலாறு'(History) என்ற நூல்தான் செய்திகளைக் கால அளவிலும் ஆய்வு முறையிலும் தருகிற பாராட்டுக்குரிய முதல் வரலாற்று நூலாகும்.



எரடோட்டசு

புகழ்மிக்க இவ்வரலாற்றாசிரியருடைய வாழ்க்கை பற்றிய நூல் எதுவும் இவருடையகாலத்திலோ இவருடைய இறப்புக்குப் பிந்திய நெடுங்காலத்திலோ எழுதப்படவில்லை. பிற்காலக் கிரேக்க ஆசிரியர்களுடைய நூல்களில் எரடோட்டசின் வாழ்க்கை பற்றிய சில செய்திகள் காணப்படுகின்றன. இவருடைய வாழ்க்கை பற்றிய செய்திகளைத் தரும் ஆதாரம் இவரெழுதிய 'வரலாறு' என்ற நூல்தான். இவர் கிரேக்கர்களால் நிறுவப்பட்ட மேற்காசிய அல்லது சிறிய ஆசியாவில் (Asia Minor) உள்ள கிரேக்க நகரரசுகளுள் ஒன்றான ஆலிகர்னாசசு (Halicarnassus) என்னும் நகரரசில் புகழ் மிக்க ஒரு குடும்பத்தில் கி.மு. 484-இல் பிறந்தாரென்று கருதப்படுகிறார். இவர் அந்நகரத்தை ஆண்ட இலிக்டாமிசு (Lygdamis) என்னும் சருவாதிகாரியின் (Tyrant) சீற்றத்துக்காளாகி நாடு கடத்தப்பட்டார். சிறிது காலம் சென்றபின் இவர் திரும்பி வந்து, அந்தச் சருவாதிகாரியைப் பதவி நீக்குவதற்கும் அரசியலமைப்புக்கு உட்பட்ட அரசாங்கத்தை மீண்டும் ஏற்படுத்துவதற்கும் உதவி செய்தார். இவர் கிரேக்கக் காப்பியப் புலவரான (Epic Poet) பானியாசிசு (Panyasis) என்பவருக்கு உறவினரென்றும், சாமோசுத் தீவில் (Samos) சில காலம் வாழ்ந்தாரென்றும், பின்னரே தமது சொந்த அரசுக்குச் சிறந்த தொண்டு செய்திருந்த போதிலும் அதன் மக்களிடையே நல்ல பெயர் பெற இயலாமற் போகவே, ஆலிகர்னாசசு நகரத்தை விட்டு நிலையாக நீங்கிச் சென்றுவிடத் தீர்மானித்தாரென்றும் கூறப்படுகிறது. பின்னர் இவர் ஏதென்சு நகரரசுக்குச் சென்று, அதன் அரசாங்கத்தால் தென் இத்தாலியில் நிறுவப்பட்ட தூரி (Thuri) என்ற குடியேற்ற நாட்டில் வாழ்ந்து, அங்கேயே இறந்து, அந்நகரின் பொது இடத்தில் (Market Place) அடக்கம் செய்யப்பட்டார். இதில் கூறப்பட்டுள்ளவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. இவர் பிறப்பிலும் வளர்ப்பிலும் ஓர் ஆசியக் கண்டத்துக் கிரேக்கர் (An Asiatic Greek) ஆவர். அயோனியதத்துவ ஆசிரியர்களிடமிருந்து இவர் அறிவியலான ஆய்வு முறைக்கு வரலாறு மிகவும் பயன்படுவதைக் கற்றறிந்தார்.

**எரடோட்டசு கையாண்ட ஆய்வு முறை:** எரடோட்டசு எந்த ஒரு வரலாற்று நிகழ்ச்சியையும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும்போது, முதலில்அந்த நிகழ்ச்சி ஏன் நடந்தது என்ற வினாவைத் தொடக்க நிலையாகக் கொண்டார். அடுத்து அக்கேள்விக்குப் பொருத்த

மான செய்திகளைத் தேடித் திரட்டினார். மூன்றாம் நிலையாகத் தாம் திரட்டிய செய்திக் குறிப்புகளிலிருந்து ஒரு முடிவை வருவித்தார். இவர் எந்த ஒரு நிகழ்ச்சிக்கும் முதற்காரணத்தைத் தெரிந்து கொள்ளுதற்காக, 'அந்நிகழ்ச்சி ஏன் நடை பெற்றது? என்ற வினாவை எழுப்பியதே இவர் ஒரு வரலாற்றாசிரியராக வளர வழி வகுத்தது; இவர் நாடு கடத்தப்பட்டு வாழ்ந்த போதும், ஏதென்சுக்குப் பயணம் செய்த போதும், இவரறிந்த செய்திகளே எதனையும் ஏன் அவை நடைபெற்றன என்று கேட்குமாறு இவரைத்தூண்டின. ஏதென்சுக்குச் சென்றிருந்த போது, 'பாரசீகருக்கும் கிரேக்கருக்குமிடையே ஏன் போர்கள் நடைப்பெற்றன? அதில் யாவரும் நினைவு கொளளுதற்குத் தக்கவாறு இரு தரப்பினராலும் செய்யப்பட்ட செயல்கள் யாவை?' என்பன போன்ற வினாக்களை எரடோட்டசு அங்குள்ள மக்களிடம் வினவினார்; அவ்வினாவிற்குரிய விடைகளையும் ஆய்வு செய்தார். ஆதலின், ' இவர் படைப்பாகிய வரலாற்று நூல் இவர் சொந்த வாழ்க்கையின் நிகழ்ச்சிகளோடு தொடர்புடையவை. அந்நிகழ்ச்சிகள் இவருடைய வரலாற்று நூலிலிருந்து வருவிக்கப் படுகின்றன.

வரலாற்றுக்கு உதவியாக இவர் தம் பயணங்கள் வாயிலாகவும், நிலவியல் நூல்களின் வாயிலாகவும் நிலவியலைப் பற்றிய தமது எண்ணங்களை வளர்த்துக் கொண்டார். மிலீட்டசு நகரத்தைச்சேர்ந்த எக்கடேயசு (Hecataeus of Miletus) என்பவர்தம் நிலவியல் நூலைப் போன்றதொரு நூலை எழுதுதற்கே எரடோட்டசு முயன்றார். அனக்சிமேண்டர் என்ற மற்றோர் ஆசிரியர் கிரேக்க உலக வரைபடத்தை வரைந்தார். எரடோட்டசு கருங்கடற் பகுதிகளையும் புராணக் கதை வீரராகிய எர்க்குலிசைப் (Hercules) பற்றியும் அறியும்பொருட்டு மேற்காசியாவிலுள்ள தயர்(Tyre)நகரத்தையும், தேசாசுத் தீவையும்(Thasos) சுற்றிப்பார்த்தார். இவர் எகிப்து நாட்டில் செய்த பயணங்கள் இவருடைய நிலவியல், வரலாற்று எண்ணங்கள் வளருதற்குக் காரணங்களாக இருந்தன. இவர் பாரசீகப்போர்களை எழுதத் தீர்மானித்தபோது, இவருக்கு எகிப்தியப் பயணச் செய்திகளே உதவி செய்தன. இவர் வரலாற்றில் இரண்டாம் பகுதியில் இவருடைய எகிப்திய ஆய்வுகளே கூறப்படுகின்றன. எகிப்தில் இவர் நைல் ஆற்றின் முகத்துவாரத்தில் மேற்குப் பக்கமாக நுழைந்து, அவ்வாற்றின் போக்கிலேயே சென்று, மெம்பிசு (Memphis), தீப்சு (Thebes) முதலிய பண்டைய நகரங்களையும் பெரிய பிரமிடுகள் பகுதியையும் கண்டு, நைல் ஆற்றில் வீழும் பல அருவிகளுள் முதலாம் அருவிவரை சென்றுவிட்டு, அதே போக்கில் திரும்பி முகத்துவாரத்தின் கிழக்குப் பக்கமாக வெளியே வந்தார். இப்பயணம் இவருக்கு வரலாற்றை எழுத மிகவும் உதவி செய்தது.

இவருடைய ஆராய்வு அறிவியலான சிந்தனையை ஒட்டி அமைந்தது. எடுத்துக்காட்டாக, இவர் ஆண்டு தோறும் நைல் ஆற்றில் ஏற்படும் வெள்ளப் பெருக்குக்குக் காரணத்தை ஆராய்ந்தார். இவருக்கு முன்பே பலர் எகிப்தில் உள்நாட்டில் கடல் வாழ் உயிரினங்கள் காணப்படுவதால், முகத்துவாரப்பகுதி நைல் ஆற்றின் வெள்ளம் கொண்டு வந்து சேர்த்த வண்டல் மண்ணால் தோன்றிற்று என்று கூறினர். எரடோட்டசு எகிப்தையும் முகத்துவாரத்தையும் நைல் கொண்டு வந்த வண்டல் மண் எவ்வளவு காலத்தில் தோற்றுவித்தது என்றும் ஆராய்ந்தார். நைல் ஆறு தனது போக்கை மாற்றிச் செங்கடலைச் சேருமானால் அது அங்கு 5000 ஆண்டுகளில் ஒரு புதிய நிலத்தைத் தோற்றுவிக்குமென்று கூறினார். இதற்கு இவர் தரும் புள்ளிவிவரங்கள் சரியாக இல்லையாயினும், இவர் பின்பற்றும் முறை அறிவியல் முறையே ஆகும். மேலும், இவர் பிரமிடுக் கோபுரங்களைக் கட்டிய எகிப்திய அரசர்கள் பழைய அரசிலிருந்தவர் களல்லர் என்றும், அவர்கள் காலம் பிந்திய காலம் என்றும், முந்திய பழைய காலத்திலே பிரமிடுகள் எழுப்பப்பட்ட நிலங்களெல்லாம், அதாவது மெம்பிசுக்கு வடக்கே உள்ள பகுதிகள் நீரிலமிழ்ந் திருத்தல் கூடுமென்றும் கூறுகின்றார். மனிதனுக்கும் அவனுடைய சுற்றுச் சூழலுக்குமுள்ள தொடர்பை முதல் முதலில் சுட்டிக்காட்டியவர் இவரேயாவர்.

மேலும்,காரண அறிவுக்கொத்த விளக்கங்களையும் காரண அறிவுக்குப் பொருந்தாத, நம்பிக்கையினடிப் படையிலெழுந்த கருத்துகளையும் எரடோட்டசு விளக்கங்களாக அளிக்கிறார். எடுத்துக்காட்டாக பாரசீக அரசன் கைரசினால் இலிடியாவின் அரசரான குரோசசு தோற்கடிக்கப்பட்டதற்குக் காரணம் அவன் தன் கூட்டாளிகளைத் தானே பிரித்தனுப்பியதும், அவன் முன்னோருள் ஒருவன் செய்த தீவினையின் காரணமாக அவன்மீது தெல்பி கோயில் தெய்வம் (Delphic Orade) வழங்கிய சாபமும் ஆகுமென்று கூறுகிறார். மேலும், சில நிகழ்ச்சிகளுக்குப் பின்னணியாகக் கனவுகள் இருப்பது போலவும் எரடோட்டசு கூறுகிறார்.

இவர் ஏதென்சிலிருக்கும்போது தாம் திரட்டிய மனித இனங்கள், நிலவியல், புராணஇயல் பற்றிய செய்திகளையெல்லாம் தொகுத்துப் பயன்படுத்தியே அவை எவ்வாறு பழைய வரலாற்றைக் காட்டுகின்றன என்று விளக்கி, அவை கிழக்குக்கும் (பாரசீகம்) மேற்குக்கும் (கிரீசு) இடையே கி.மு. 480-ஆம் ஆண்

டில் செர்க்சசு (Xerxes) பாரசீகப் படையெடுப்பை நடத்தினன் என்றும் கூறி, பாரசீகப் போர்களை விவரிக்கிறார். இவர் திராய் வரலாற்றில் காணப்படும் புராண வீரர்களைக் கற்பனையாகவே கருதி, அவர்கள் வரலாற்றில் வரும் குரோசசு, பிசிசுட்டிரேட்டசு (Peisistratus) போன்றோரினின்றும் வேறுபட்டவரென்றும் கூறுகிறார்.

எரடோட்டசு சிந்தித்த சூழ்நிலை: எரடோட்டசு ஏதென்சுக்கு வந்து தங்கியிருந்த காலமாகிய கி.மு. 5-ஆம் நூற்றாண்டு அதீனிய அரசியல் வாழ்க்கை உச்ச நிலையிலிருந்ததைக் காட்டுவதாகும். அப்போது ஏதென்சில் குடிமக்கள் யாவரும் நேரடியாகப் பங்கு கொள்ளக் கூடிய குடியாட்சி அரசியலமைப்பும் அரசாங்கமும் இருந்தன. குடிகள் தங்கள் ஆட்சி உரிமைகளைக் கையாளத் தக்கவாறு ஏதென்சுக்கு ஒரு பேரரசு (Empire) இருந்தது. ஏதென்சில் வாழ்வின் எல்லாத் துறைகளிலும் சிறந்தவர்கள் இலக்கியம், கலைகள், நுண் கலைகள் ஆகியவற்றில் புதியவற்றைப் படைத்தனர். அதீனிய மக்களுள் பெரும்பாலோர் வாய்மொழியாக, உரையாடல் வாயிலாகப் பொது நலனைப் பற்றியும்பொதுப்பணிகள் செய்யப்படும் முறையைப் பற்றியும் ஆய்வு செய்தனர். ஆராய்விலீடுபட்டவர்கள் தம் கருத்துகளை எடுத்துரைத்தனர். கிரேக்கம் முழுவதும் நகரரசுகள் என்ற தனித்தனியான சமுதாய அமைப்புகளிருந்தாலும், அவற்றிலெல்லாம் ஒரே வகையான அரசாங்க அமைப்போ அரசாங்க நிறுவனங்களோ இல்லாமல், பல தரப்பட்ட அரசியலமைப்புகளும் நிறுவனங்களுமிருந்தன. ஆகையால் அவற்றுள் எது சிறந்ததென்று அதீனியர்கள் ஒப்பிட்டு அரசாங்க ஆய்வில் ஈடுபட்டிருந்தனர். முக்கியமாக அவர்கள் முற்போக்கு இயல்புடைய அதீனிய அரசாங்கம், பழைமைப் போக்குடைய இசுபார்ட்டா (Sparta) அரசாங்கம் ஆகியவற்றின் நிறைகுறைகளை ஆராயும் இயல்போடிருந்தனர். இதைத்தவிர, எதேச்சாதிகார முடியாட்சிக்கு எடுத்துக்காட்டாக விளங்கிய பாரசீகருடைய அரசாங்க அமைப்பும், அதனுடைய வெறுக்கத்தக்க பண்புகளும் கிரேக்கருடைய மனத்தைவிட்டு அகலவே இல்லை. இப்பண்புகளையே எரடோட்டசும் பின்னணியாக வைத்து அரசாங்க நிறுவனங்களின் சிறப்பை மதிப்பிட்டார். புதிய இன மக்கள், புதுமையான சட்டங்கள், அரசியல், சமூக நிறுவனங்கள் முதலியவற்றை அறியவும், ஆய்வு செய்யவும் அக்கால மக்களுக்கு இருந்த ஆர்வத்துக்கு எரடோட்டசு ஓர் எடுத்துக்காட்டாக இருந்தார். அக்கால அதீனிய நகரரசு பல அரசியலமைப்பு மாற்றங்கள் நடைபெற்ற இடமாகவும், கட்சிப் போராட்டங்கள் நடந்த களமாகவும் இருந்ததை எரடோட்டசு அறிந்தார்.

இவர் கூறிய சில கருத்துகள்: ஒரு நாட்டின் நடைமுறை அந்நாட்டவரால் பக்தியோடு கருதப்பட,மற்ற நாட்டவரால் வெறுத்தொதுக்கப்படுகிறது. ஒவ்வொருவரும் ஏதேனுமொரு கொள்கைவழி வாழ்தல் வேண்டுமெனின், அதற்கு அவர் பக்தியோடு பற்றுதற்கு ஏதேனுமொரு வழக்கம் இருத்தல் வேண்டும். இவ்வாறு இவர் கருதி பலவகையான புதிய நடைமுறைகளைக் குறிப்பிடுகிறார். இவ்வாறு செய்யாமல், பாரசீகப் பேரரசர் காம்பீசசு (Cambyses) மற்ற இன மக்களுடைய சமயக் கருத்துகளை இகழ்ந்ததற்காக அவரை எரடோட்டசு இடித்துரைத்து, 'பழக்கமே எதனையும் தீர்மானிப்பதாகும்' என்ற புலவர் பிண்டாரின் கவிதையைத் (Pindar) தமது கருத்துக்கு மேற்கோளாகக் காட்டுகிறார்.

எரடோட்டசு தம் நூலின் இரண்டாம் பகுதியில்ஏழு பாரசீகர்கள் முடியாட்சி,உயர்குடியாட்சி, குடியாட்சி ஆகியஅரசாங்கவகைகளைப்பற்றிஆராய்வதாகக் கூறுகிறார். அரசர் சருவாதிகார ஆட்சியாளராக மாறிவிடுகிறார். குடியாட்சி எல்லோரையும் சட்டத்தின் முன் சமத்துவமுடையவர்களாக ஆக்குகிறது. ஆனால் அது கும்பலாட்சியாகவும் ஆகிவிடுகிறது. இந்நிலையில் சிறந்தோருடைய அரசாங்கம் அமைதல் விரும்பத்தக்கது. சிறந்தோருடைய ஆட்சி என்பது ஒரு சிறந்த மனிதரால்தான் அமைக்கப்படுதல் கூடும். இந்தக் கருத்து எரடோட்டசு பாரசீகரிடமிருந்து பெறாமல் கிரேக்கரிடமிருந்து பெற்ற ஒன்றாகும்.

மதிப்பீடு: கிரேக்கரிடையே தூசிடைடசு(Thucydides), செனாபன் (Xenophen), பாலிபியசு(Polybius) முதலிய வரலாற்றாசிரியர்களைப் போல எரடோட்டசும் ஒரு வரலாற்றாசிரியரென்றாலும், இவரிடத்தில் மற்றவரிடத்திலில்லாத சில தனித்தன்மைகள், நம்பிக்கையோடு கூடிய குறை காணும் மனப்பான்மை, வெறுப்பில்லாத நகைச்சுவை முதலியவை காணப்படுகின்றன. மேலும், இவர் தாம் வாழ்ந்த அகேயா, ஏதென்சு முதலிய நாடுகளின் புகழை உயர்த்துவதற்குரிய செய்திகளைத் திரட்டவோ விளக்கவோ முயலாமல், கிரேக்கர்கள் வாழ்ந்த நாடுகளனைத்தையும் பற்றிய செய்திகளை அறிவியல் கண்ணோட்டத்தில் திரட்டி விளக்கியதால், இவர் ஒரு கிரேக்க வரலாற்றாசிரியர் எனப் புகழத்தக்கவர்.

பா.சு.

துணை நூல்:

**Cornford**, F.M., Before and After Socrates, Cambridge, 1932.

**எராக்கிளிட்டசு:** அரசு, நீதி, சுதந்திரம், அரசியலமைப்புக்கு உட்பட்ட அரசாங்கம், சட்டத்துக்கு மதிப்புக் கொடுத்தல் முதலிய அரசியற் கருத்துகளைப் பற்றி முறையாகச் சிந்தித்த கி.மு. ஐந்தாம் நூற்றாண்டினராகிய கிரேக்கச் சிந்தனையாளர் பிளேட்டோவுக்குச் சற்றேறக்குறையச் சம காலத்தில் வாழ்ந்த கிரேக்க அரசியற் சிந்தனையாளர் எராக்கிளிட்டசு (Heraclitus) ஆவர். இவர் முரண்பாடுகள் நிறைந்த உலக நிகழ்ச்சிகளுக்கு ஆதாரமாக அவற்றையெல்லாம் முரண்பாடின்றி இணைக்கின்ற ஓர் ஆற்றல் அல்லது சட்டம் இருக்கிறது என்று கூறினார்.

எராக்கிளிட்டசின் வாழ்க்கை பற்றி மிகச் சில செய்திகளே கிடைக்கின்றன. இவர் சிறிய ஆசியாவிலுள்ள அனடோலியாவில் (Anatolia in Asia Minor) எபீசசு என்னும் நகரத்தில் (Ephesus) கி.மு. 540-ஆம் ஆண்டிற்கும் கி.மு. 480-ஆம் ஆண்டிற்கும் இடையில் வாழ்ந்தாரென்று கூறப்படுகிறார். இவர் எழுதியதாகக் கூறப்படும் ஒரே நூலும் முழுமையாகக் கிடைக்காமல், அதில் கூறப்படும் சில கருத்துகள் பிற்கால ஆசிரியர்களால் அவர்களின் நூல்களில் மேற்கோள்களாகக் காட்டப்படுகின்றன.

**எராக்கிளிட்டசின் கருத்துகள்:** உலகம் ஒழுங்காக அமைக்கப்பட்டிருக்கிறதென்பதும், அவ்வுலக ஒழுங்குக்கு ஆதாரமான பருப்பொருள் கொள்கை நெருப்பு என்பதும் எராக்கிளிட்டசு கூறிய உலக அமைப்புப்பற்றிய கோட்பாட்டின் சுருக்கமாகும். இவர் தம்மைச் சுற்றியுள்ள உலக நிகழ்ச்சிகளையும் அதில் வாழும் மக்களுடைய நிலைகளையும் ஆராய்ந்து விளக்க முற்படும்போது சில கருத்துகளைக் கூறியுள்ளார்.

மனிதர்கள் ஒன்றுபட்டு வாழ்ந்து சமூக ஒருமைப்பாட்டுடன் இருத்தல் வேண்டும். உலகத்தில் உள்ள எல்லாப் பொருள்களும் கிரேக்கர்களால் குறிப்பிடப்படும் காரண அறிவு (Logos or Reason) என்ற ஓர் உலக விதியின் வாயிலாக ஒன்றோடொன்று இணைக்கப்பட்டுள்ளன. இந்த விதியின் இயக்கத்தாலேயே எல்லா இயற்கை நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன. இக்காரண அறிவைப் பெரும்பாலான மனிதர்கள் அறிந்து கொள்ளாமல், உலகத்தைப் பற்றி ஒரு தவறான எண்ணத்தை வைத்துக்கொண்டு கனவு காண்போராக வாழுகின்றனர்; இப்போக்கு வருந்தத்தக்கது.

இக்காரண அறிவு என்னும் விதி, ஒன்றுக்கொன்று முரண்பாடான பொருள்களுக்கிடையே அல்லது நிலைகளுக்கிடையே உள்ள ஒரு தொடர்பின் வாயிலாக வெளிப்படுகிறது. எடுத்துக்காட்டாக, உடல் நலம் என்ற நிலைக்கு விளக்கமாக நோயும், நோய் என்ற நிலைக்கு விளக்கமாக உடல்நலம் என்ற நிலையும் இருக்கின்றன. இவ்வாறே நன்மையும் தீமையும், வெப்பமும் தண்மையும், இன்னும் மற்ற முரண்பாடுகளும் ஒன்றோடொன்று தொடர்போடிருக்கின்றன. மேலும், ஒரே பொருள் பலவேறுபட்ட வகைகளிலும் இருப்பதை எவரும் காணலாம். எடுத்துக்காட்டாக, கடல்நீர் என்ற பொருள் ஒரே சமயத்தில் தீயதாக இருப்பதையும், நன்மையாக இருப்பதையும் காணலாம். எவ்வாறெனில், கடல்நீர் மனிதர்களுக்கு உகந்ததன்று; அக் கடல்நீரே மீன்களுக்கு நன்மை தருகிறது. இவ்வாறு முரண்பாடான நிலைகளை ஒன்றோடொன்று இணைப்பதன் வாயிலாகக் குழப்பமும் வேறுபாடுகளும் நிறைந்த உலகத்தைக் கட்டுப்படுத்துதல் ஒருவருக்கு இயலும். உலக அமைப்பில் எங்கேனும் ஒரு திசையில் நடைபெறும் ஒரு மாறுதலை வேறொரு திசையில் அதனைப் போன்ற மற்றொரு மாறுதல் ஈடுசெய்து விடுகிறபடியால், உலகம் என்பது ஒன்றோடொன்று பொருந்திய பல நிலைகளைப் பெற்றுள்ளது. எல்லாப் பொருள்களுக்கு மிடையே உள்ள இணைப்பு வெளிப்படையாகத் தோன்றுவதில்லை.

நெருப்பு என்பதே எல்லாவற்றையும் இணைக்கின்ற முக்கியமான ஒரு பொருள். உலக ஒழுங்கு என்பதே எப்போதும் நெருப்பை அளவாகத் தோற்றுவித்து, அளவாக அணைத்துவிடும் செயல்முறையில் காணப்படுகிறது. நெருப்பு விறகிலும் சுடரிலும் புகையிலும் மட்டுமல்லாது, காற்று மண்டலத்திலும் காணப்படுகிறது.

மாறுதல் ஏற்பட்டாலும் ஒருமைத்தன்மையும் (Unity) தொடர்ந்து இருக்கிறது. எவ்வாறெனில் ஒரே ஆற்றில் நீரில் இறங்கி நிற்பவர்களுக்குக் கீழே, ஒவ்வொரு வினாடியும் வெவ்வேறான தண்ணீரே செல்லுகிறது. அதுபோலவே உலக நிகழ்ச்சிகளுக்கிடையே மாறுதல் இருந்தாலும், அவற்றுக்கிடையே ஒற்றுமையும் இருக்கிறது.

முரண்பாடுகளுக்கிடையே எதிர்ப்புகள் இருப்பதால்தான், அவற்றுக்கிடையே ஒன்றுபடும் இயல்பும் தோன்றுகிறது. கடவுள் எதனையும் படைப்பவருமல்லர்; முழு வல்லமை உடையவருமல்லர். ஆனால், அவர் ஒன்றுக்கொன்று மாறுபட்டவற்றை இணைத்திருப்பதையே காணுதல் வேண்டும்.

ஒருவர் தமது செயலறிவின் வாயிலாக உலக ஒற்றுமையையும் ஒழுங்கையும் காணுதல் கூடும்.

மேலும்,மனிதர்கள் தம்மையும் தம் சுற்றுப்புறத்தையும் கட்டுப்படுத்துகின்ற கொள்கைகளையும் அல்லது விதிகளையும் அறிதல் வேண்டும்.

'சூரியன் தனக்கு உரிய விரைவை விடக் கூடுதலான விரைவோடு செல்லாது; அவ்வாறு அது விதி மாறி இயங்குமாயின், அதனை விதியின் பணிப்பெண்களாகிய எரினிசு (Erinyes) கண்டுபிடித்து, ஒழுங்காகச் செல்லுமாறு செலுத்தும்'. எதுவும் அளவுக்கு மீறிப்போகாத நிலையே ஒருமையை அல்லது அளவை அல்லது நீதியைத் தோற்றுவிக்க வல்லது. அளவுக்கு மீறிய நிலை தீமையே பயக்கும். இந்த விதி உலகப் பொருள்களுக்கும் மனித சமூகத்துக்கும் பொருந்துவதாகும். இந்த அளவுக்கோட்பாடே பண்டைய கிரேக்க அரசியற் சிந்தனையின் முக்கிய இயல்பு ஆகும்.

மதிப்பீடு: எராக்கிளிட்டசு கடவுளைப் பற்றி வழக்கத்துக்கு மாறான கருத்துகளைக் கொண்டிருந்தார். மனித ஆன்மாவும் மற்றப் பொருள்களைப் போன்று நெருப்பினாலாயது என்றும், அதுவும் மற்றவைபோல மாறுதலுக்குள்ளாகி, இறப்பின்போது அழிந்து விடுகிறதென்றும் கூறியதாலும், சமயச் சடங்குகளை இகழ்ந்ததாலும் இவர்தம் காலத்தில் நன்கு மதிக்கப்படவில்லை. எல்லாப் பொருள்களும் எப்போதும் மாறுதலடைந்து வருகின்றன என்ற கருத்தைப் பிளேட்டோ விவரித்தபோது, மாறுதலுக்கிடையே ஒற்றுமை என்ற எராக்கிளிட்டசின் கருத்தையே ஆதாரமாகக் கொண்டார். உலக நிலைகளுக்காதாரமாக உள்ள ஒற்றுமை விதியை இவர் வலியுறுத்தியதால், அவற்றை மேலெழுந்த போக்கில் காணும் புலன் தரும் அறிவு உண்மை அன்று என்பது இவருடைய கருத்தாகும். மனிதர்கள் காண்பனவற்றுக்கெல்லாம் ஒரு விளக்கத்தையே இவர் அளித்தார். இவர் கூறும் அளவு அல்லது நீதிக் கோட்பாடு ஒரு நடத்தை அல்லது ஒழுக்கக் கோட்பாடு ஆகும். இயற்கையும் அதன் இயல்புகளும் விதிகளும் மாறாமலிருக்க, மற்றவை மாறுகின்றன என்ற இந்த இயற்பியல் விதி (Physical Principle) கி.மு. 5 – ஆம் நூற்றாண்டில், மாறாமலிருக்கும் அணுக்கள் (Atoms) பல்வேறு வகையாக இணைந்து, உலகத்திலுள்ள பல்வேறு வகையான பொருள்களைத் தோற்றுவிக்கின்றன என்னும் அணுக்கோட்பாடு (Atomic Theory) தோன்றுதற்கு உதவி செய்தது.

பா.சூ.

துணை நூல்கள்:

Ernest Barker, Greek Political Theory: Plato and his Predecessors, London, 1951.

Sinclair, T.A., A History of Greek Political Thought, London, 1952.

**எராக்கிளியசு** (கி.பி.575-641) என்பார் கிழக்கு உரோமானியப் பேரரசர். இவரைப் பைசாண்டியப் பேரரசர் என்றும் கூறுவர். இடைக்காலக் கிரேக்க அரசின் அடிக்கல்லை நாட்டியவர் இவரே. எராக்கிளியசு (Heraclius) அனடோலியா (Anatolia) வில் கப்பதோசியா (Cappadocia) என்னுமிடத்தில் கி.பி. 575-ஆம் ஆண்டளவில் பிறந்தார் (பிறந்த ஆண்டைத் திட்டவட்டமாகக் கூறுதல் கடினம்). இவர் தந்தையார் கார்த்தேசின் (Carthage) ஆளுநராக கி.பி.610-இல் இருந்தபோது, எராக்கிளியசு கான்சுடாண்டிநோபிளுக்கு அனுப்பப்பெற்றார்; அங்கு வல்லாட்சி செய்த போகசு (Phocas) என்பாரைத் தோற்கடித்து வருமாறு இவர்தம் தந்தையார் இவருக்குக் கட்டளையிட்டிருந்தார். எதிர்பார்த்தபடி எராக்கிளியசு வெற்றிபெற்றதுடன், கி.பி.610-இல் பேரரசராகவும் அறிவிக்கப்பட்டார்.

எராக்கிளியசு பேரரசராகப் பதவியேற்ற போது நாடு உள்நாட்டுக் குழப்பத்திற்கு ஆளாகியிருந்தது. பால்கன் பகுதியின்மீது இசுலாவுகளும், சிறிய ஆசியாவின்மீது விசுகாத்துகளும் (Visigoths) பாரசீகர்களும் தாக்கும் அஞ்சத்தக்க நிலை இருந்தது. பாரசீகர்கள் கி.பி.615-ஆம் ஆண்டு பாசுபோரசு (Bosporous) என்னும் பகுதியைக் கையகப்படுத்திக் கொண்டனர்; எகிப்தை கி.பி.619-ஆம் ஆண்டில் கைப்பற்றினர்.

எராக்கிளியசு முதன்முதலாகப் பேரரசின் உள்நாட்டு அமைப்புகளைத் திருத்தினார். பின்னர்ப் பாரசீகர்கள்மீது எதிர்த்தாக்குதலை நடத்துவான் வேண்டி கி.பி. 622-ஆம் ஆண்டில் கான்சுடாண்டிநோபிளை விட்டகன்றார். இவருடைய இராணுவச் சீர்திருத்தத்தின் பயனாக கி.பி. 627-இல் நினேவே (Nineveh) என்னுமிடத்தில் பாரசீகப்படைகள் அழிக்கப்பட்டன. தீசிபன் (Ctesiphon) கி.பி. 628-இல் பிடிக்கப்பட்டது. எராக்கிளியசு செய்த அரும்பணிகளுள் ஒன்று குறிப்பிடத்தக்கதாகும். பாரசீகர்கள் கோசுரோசு (Chosroes) என்பாரின் தலைமையில் கி.பி. 614-இல் எருசலேம் நகரத்திலிருந்து புனித சிலுவையைக் (Holy Cross) கைப்பற்றியிருந்தனர். அதைத் திரும்பவும் மீட்டார் எராக்கிளியசு.

பாரசீகப் படையெடுப்பினால் ஏற்படவிருந்த அச்சம் நீங்கியதும், அராபியர்கள் தொல்லை கொடுக்க முயன்றனர். புதிதாக ஒருங்கிணைந்த அராபியர்கள் காலிபு உமர் (Caliph Umar) என்பாரின் தலைமையில் பாரசீகர்களிடமிருந்து அண்மையில்

பறிக்கப்பட்டிருந்த பகுதிகளின்மீது படையெடுத்துக் கைப்பற்றிக் கொண்டிருந்தனர். அராபியர் சிரியாவைச் சார்ந்த யார்மக்கு (Yarmuk) என்னுமிடத்தில் கி.பி.636-ஆம் ஆண்டில் பைசாண்டியரின் படையைப் படுதோல்வி அடையச் செய்ததுடன், பாலசுத்தீனம் (Palestine), சிரியா (Syria), எகிப்து (Egypt) போன்ற பகுதிகளையும் பேரரசு இழக்கலாயிற்று. எராக்கிளியசு கி.பி.641-ஆம் ஆண்டு பிப்பிரவரி 11-ஆம் நாள் காலமானார். அதற்குள், இவருடைய சாதனைகள் அனைத்தும் சிதைந்துபோயின. எனினும், இவருடைய இராணுவ அமைப்பு முறையும், நிருவாகச் சீர்திருத்தமும் பின்னர் வந்த பைசாண்டிய அரசின் அடிப்படைகளாயின. அவற்றுள் மாநில அமைப்புகளைச் சிறப்பாகக் குறிப்பிடவேண்டும். தெ.பா.

**எராகிளியோ போலிசு** வட எகிப்திலிருந்த தொன்மை மிக்க நகரம். எராகிளியோபோலிசு (Heracleopolis) நைல் நதியின் மேற்கில் அமைந்திருந்தது. 9-ஆம் எகிப்திய மரபினரும் 10-ஆம் மரபினரும் ஆட்சி செய்த காலத்தில் (கி.மு. 2154-கி.மு. 2052) இந்நகரம் வடஎகிப்தின் தலைநகரமாக விளங்கியது. இந்நகரத்தின் அழிபாடுகள் ஏறக்குறைய 18 கி.மீ. சுற்றளவில் இன்றைய பெனி சூபு (Beni Suef) நகரத்தின் மேற்கில் காணப்படுகின்றன. சு.இரா.

**எராசிட்டியானியம்** என்பது சுவிசு மருத்துவரும் சுவிங்கிளிய இறைஇயலாருமாகிய (A Zwinglian theologian) தாமசு எராசுடசு என்பவருடைய பெயரால் தோன்றிய ஒரு கோட்பாட்டின் (Erastianism) பெயராகும். இந்தக் கோட்பாடு அரசு திருச்சபையை விட உயர்தரமான அல்லது மேலான அதிகாரமுடையதென்று கூறுகிறது. ஆனால், உண்மையில் இத்தகையதொரு கருத்தை அல்லது கொள்கையைத் தாமசு எராசுடசு (Thomas Erastus) கொண்டிருக்கவில்லை. இவர் கி.பி. 1524-ஆம் ஆண்டிற்கும் 1583-ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்தார்.

அரசு, திருச்சபை ஆகியவை பற்றி எராசுடசு கூறிய கருத்துகள்: அரசு திருச்சபையை விட மேலான அதிகாரமுடையது என்ற கருத்தை இவர் கூறவில்லை. இவர் திருச்சபையின் சில அதிகாரங்களைக் கிறித்தவ மறைநூலின் வாயிலாக ஆய்வு செய்து சில கருத்துகளைக் கூறினார். கிறித்தவத் திருச்சபையில் இருக்கும் எந்தக் கிறித்தவரையும் சமயத்துக்குப் புறம்பாக்கும் (Excommunicate) அதிகாரம் கிறித்தவச்சமய நூலுக்கு முரணானதென்றும், அதற்குப் பதிலாகச் சமயக் குற்றம் செய்த கிறித்தவர்களைக் குடிமை அரசாங்க அதிகாரிகள் (Civil Authorities) தண்டிக்கும் அதிகாரத்தைக் கையாளலாம் என்றும் இவர் கூறினார். மேலும், இவர் சில கருத்துகளைக் கூறினார். ஓர் அரசிலுள்ள எல்லா மக்களும் ஒரே சமய நெறியைச் சேர்ந்தவர்களாக இருக்கும்போது, அந்த அரசு சமய நெறி சார்ந்த குற்றங்களையும், குடிமை இயல் சார்ந்த எல்லாக் குற்றங்களையும் விசாரித்துத் தீர்ப்பு வழங்கித் தண்டனை அளிப்பதற்கு உரிமையும் கடமையும் உடையது. இவ்வாறு சமயத் துறையில் அரசின் அதிகாரம் ஒரு குறிப்பிட்ட எல்லைக்கு உட்பட்டது என்று கூறினார்.

எராசிட்டியானியக் கோட்பாட்டிற்கு முன்னோடியாகச் சில கருத்துகளை அளித்தவர்கள்: இத்தாலி நாட்டில் பாடுவா (Padua) நகரத்தைச் சேர்ந்த மார்சிலியோ (Marsilio) என்பவர் கி.பி. 13 - ஆம் நூற்றாண்டில் தாம் எழுதிய டிபென்சோர் பேசிசு (Defensor Pacis) என்னும் நூலில், தம் காலத்திய இத்தாலிய நகரரசுகளிலிருந்த அரசாங்க முறையைப் பார்த்து, உலகியல் சார்ந்த சமயச் சார்பற்ற அரசாங்கக் கோட்பாட்டை (Theory of Secular Government) வரைந்தார். போப்பினுடைய சருவாதிகாரம் திருச்சபைச் சட்டம் (Theory of Canon Law) என்ற அமைப்பை ஆதாரமாகக் கொண்டு போப்புமூன்றாம் இன்னசெண்டின் காலத்தில் நிறுவப்பட்டது. இதுவே இத்தாலியில் போப்புகளுக்கு உலகியலரசர்களின்மீது (Temporal Rulers) உயர்தர அதிகாரத்தை நிறுவி, இத்தாலியில் பூசல்களை விளைவித்து ஒற்றுமையை அழித்தது. ஆகையால், மார்சிலியோ ஆன்மிக அதிகாரியான போப்புக்கு உலகியல் சார் அரசாங்கங்களைக் கட்டுப்படுத்துவதற்கு உள்ள அதிகாரத்தை வகுத்து வரையறை செய்வதற்கே இந்நூலை எழுதினார். அவ்வாறு அவர் வகுக்கும்போது இடைக்காலத்திய மற்றெந்த ஆசிரியரையும்விடக் கிறித்தவத் திருச்சபையை அரசின் அதிகாரத்துக்கு உட்பட்ட ஒன்றாக ஆக்கிக் கட்டுப்படுத்திக் கோட்பாட்டை வெகுதுல்லியமாக வரைந்தார். இவ்வாறு அவர் செய்ததனால், அவரை முதல் எராசிட்டியானியச் சிந்தனையாளர் (First Erastian) என்று ஆசிரியர் சி.எச்.சபைன் குறிப்பிடுகிறார். மார்சிலியோ சமயவெறி என்பதை வலுவில்லாத ஒரு சொந்த சமய நம்பிக்கை என்று குறிப்பிட்டார். எராசிட்டியானியக் கோட்பாட்டை ஒட்டி கி.பி. 16 - ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சான் செல்டன் (John Selden) என்பவரும் சில கருத்துகளை எழுதினார்.

ஒழுங்கையும் பாதுகாப்பையும் நிலைநாட்டுதற்குச் செய்யப்பட்ட ஒப்பந்தங்களே அரசியலமைப்பு ஏற்பாடுகளாகும். அரசருடைய அதிகாரமும் சட்டத்தி

னால் அவருக்கு அளிக்கப்பட்ட ஒன்றுதான். நீதிமன்றங்களால் செயற்படுத்தப்படுவதே சட்டம் ஆகும். இதுபோலவே திருச்சபை நிறுவனங்களும் குருமாரின் சலுகைகளும் குடிமை இயல் அரசாங்கத்தால் (Civil Authority) தோற்றுவிக்கப்பட்டவையே. அவையெல்லாம் தெய்விக உரிமை என்று கூறுவதெல்லாம் உலகியலதிகாரிகளிடமிருந்து பணமும் அதிகாரமும் பறிப்பதற்காகக் கையாளப்படும் சூழ்ச்சியே ஆகும். சான் செல்டன் கூறிய இக்கருத்துகளெல்லாம் பிரசுபிட்டீரியப் பிரிவைச் சேர்ந்த மறுப்புரைச் சமயக் கிறித்தவர்களால் (Protestants) மிகவும் விரும்பி ஏற்றுக்கொள்ளப்பட்டன. சுருங்கக்கூறின், செல்டனின் எராசிட்டியானியக் கருத்துகள் பயன்வழிக் கோட்பாடு, உலகியலான சமயச் சார்பற்ற போக்கு, அறிவியற் கோட்பாடு ஆகிய கருத்துகளைச் சுட்டிக்காட்டின. இவை தாமசு ஆப்சினால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. பா.சூ.

துணை நூல்கள்:

**Sabine**, **G.H.**, A History of Political Theory, Oxford & IBH Publishing Co., Calcutta, 1961.

**Gooch, G.P.**, Political Thought in England From Bacon to Halifax, London, 1946.

**Gough, J.W.**, Fundamental Law in English Constitutional History, Oxford, 1955.

***எராசுமசு தெசிதேரியசு* (கி.பி. 1466-1536)** மாபெரும் அறிஞராகக் கருதப்பட்ட இவர் தச்சு (Dutch) நாட்டில் பிறந்தார். இராட்டர்டாம் நகரில் கி.பி. 1466-இல் இவர் பிறந்திருக்கக்கூடும் என்றும் கருதப்படுகிறது. இளமையிலேயே தாய்தந்தையரை இழந்தபின் அகசுடினிய மடாலயமொன்றில் துறவியாக எராசுமசை (Erasmus) உறவினர்கள் சேர்த்தனர். துறவியாக விரும்பாமல் மதிப்புக்குரிய ஆயர் (Bishop) ஒருவரின் செயலராகப் பதவி வகித்தார். பல இடங்களுக்குச் செல்லும் வாய்ப்பினை அதன் மூலம் பெற்றுப் பரந்த அறிவு பெற்று, கி.பி. 1495-இல் பாரிசுப் (Paris) பல்கலைக் கழகத்தில் சேர்ந்து தேர்ச்சி பெற்றதோடு, பல அறிஞர்களுடன் பழகும் வாய்ப்பினையும் பெற்றார். பின்னர், மாணாக்கர் பலரைப் பெற்றுப் பள்ளியொன்றினை இவர் நடத்தினார். இவர் கி.பி. 1499-இல் இங்கிலாந்து சென்று ஆக்சுபோர்டு, கேம்பிரிட்சுப் பல்கலைக் கழகங்களில் சிறிது காலம் பாடங்கற்பித்தார். தாமசு மூர் (Moor), சான் பிசர் (John Fisher), சான் கோலெட்டு (Colet) போன்ற சிறந்த மானிட தத்துவ (Humanist) அறிஞர்களோடு தொடர்பு கொண்டார். அவர்களின் புதிய பார்வையோடு விவிலியத்தின் புதிய ஏற்பாட்டினை இவர் அலசி ஆய்ந்து, தொடக்ககாலக் கிரேக்க மொழி மூலத்தை அடிப்படையாகக் கொண்ட புதிய பதிப்பு ஒன்றினை கி.பி. 1516-இல் வெளியிட்டார். கிரேக்க-உரோமானியப் பாணியைப் பின்பற்றி, அன்றைய சமய வாழ்வில் காணப்பட்ட பல சீர்கேடுகளை நகைச்சுவையோடு தாக்கிப் பல கட்டுரைகளை எழுதினார். மார்ட்டின் உலூதர் கத்தோலிக்கத் திருச்சபையினைத் தாக்கி கி.பி. 1519-முதல் போர்க்கொடி உயர்த்தியபோது, அவர்தம் சீர்திருத்தக் கருத்துகள் எராசுமசின் கருத்துகளோடு ஒத்தவையாகவே இருந்தனவெனினும், திருச்சபைக்கு விசுவாசமாக இருந்தே சீர்திருத்தத்துக்குப் பாடுபட வேண்டும் என்று இவர் கருதினார். தொடக்க காலக் கிறித்தவத் தத்துவ நூல்களைப் பதிப்பிக்கும் பணியில் இவரது இறுதி ஆண்டுகள் கழிந்தன. எராசுமசு கி.பி. 16-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மாபெரும் அறிஞர்களின் வரிசையில் குறிப்பிடத்தக்கவராவார். சமயக் கண்கொண்டு மட்டுமே உலகினைப் பார்க்கும் இடைக்கால மரபினைக் (Scholasticism) கைவிட்டுச் சமுதாயக் கண்ணோட்டத்தினை (Humanism) இவர் மேற்கொண்டார். இவர் கி.பி 1536-ஆம் ஆண்டில் சுவிட்சர்லாந்திலுள்ள பாசெல் (Basel) நகரில் காலமானார். இர.ஆ.

***எராடு-தோமார் படிவம்*** பொருளாதார வளர்ச்சிக் கோட்பாடுகளை விளக்கும் பேரினப் பொருளியல் படிவங்களுள் தனிச் சிறப்புப் பெற்றது. ஆங்கிலப் பொருளியல் வல்லுநர் இராய் எப். எராடு (Roy F. Harrod) என்பவரும் அமெரிக்க நாட்டைச் சேர்ந்த அறிஞர் எவ்சி தோமார் (Evsey Domar) என்பவரும் முறையே 1939, 1946-ஆம் ஆண்டுகளில் உருவாக்கிய பொருளியல் வளர்ச்சிப் படிவங்களின் கூறுகள் ஒத்த தன்மையுடையனவாய் இருந்தமையால், அவ்விரு படிவங்களும் இணைக்கப்பட்டு எராடு-தோமார்படிவம் (Harrod-Domar Model) எனவழங்கப்படலாயின. பொருளியலின் வரலாற்றில் பொருளாதார வளர்ச்சி மைய ஆய்வுப் பொருளாகத் தலையாய இடம்பெற்று வருகிறது. ஆடம் சுமித்து (Adam Smith), இரிக்கார்டோ (Ricardo), சே.எசு.மில் (J.S. Mill), தாமசு மால்துசு (Thomas Malthus), காரல் மார்க்சு (Karl Marx), ஆல்பிரடு மார்சல் (Alfred Marshall), சோசப் சும்பீட்டர் (Joseph Schumpeter), சே. எம். கீன்சு (J.M.Keynes) ஆகியோர் பொருளாதார வளர்ச்சிக் கோட்பாடுகளை (Theories of Economic Growth) வகுத்துள்ளனர்.

எராடு-தோமார் படிவம் இடர்ப்பாடற்ற பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான வரையறைகளை நுட்பமாகப் பகுத்தாய்கிறது. இதன் மையக்

கருத்து முதல்பெருக்கம் (Capital Accumulation) ஆகும். முதலீட்டின் செயற்பாட்டில் (Investment Process) அளிப்புப் பகுதி (Supply Side), தேவைப் பகுதி (Damand Side) ஆகியவற்றின் இயல்புகளை விளக்குவது இப்படிவத்தின் தனிச் சிறப்பியல்புக் கூறுகளாகக் கருதப்படுகிறது. தொன்மைப் பொருளியல் அறிஞர்கள் (Classical Economists) அளிப்பு அதற்கான தேவையைத் தானாகப் படைக்கும் என நம்பியதால், முதலீட்டின் அளிப்புப் பகுதியை மட்டுமே கருத்தில் கொண்டனர்; சேமிப்பை மட்டும் ஆராய்ந்து தேவைப் பகுதியைப் புறக்கணித்தனர். இதற்கு முற்றிலும் மாறாக, சே.எம். கீன்சு முதல் பெருக்கத்தை ஆராய்ந்து தேவைப் பகுதியை விளக்கி அளிப்புப் பகுதியைப் புறக்கணித்தார். எராடு-தோமார் படிவம் முதல்பெருக்கத்தின் தேவை, அளிப்பு ஆகிய இரண்டையும் தன்னுள் இணைக்கிறது.

இப்படிவ ஆய்வு பொருளாதாரத்தில் முழு வேலை நிறைவுச் சமநிலை (Full-Employment Equilibrium) நிலவுகிறது என்பதை எடுகோளாகக் (Assumption) கொண்டு தொடங்குகிறது. இச்சமநிலை நீடித்து நிலவ, முதலீட்டினால் தோன்றும் செலவுகளின் மொத்தம் முதலீட்டினால் உண்டாக்கப்படும் வளரும் வருமானப் பயன்பாட்டிற்குப் போதுமானதாயிருக்க வேண்டும். முதலீடு செலவுகளை மட்டும் உண்டாக்காமல் உற்பத்தித் திறனையும் பெருக்குகிறது. முதல் பெருக்கமும் (முதலீடு) வருமான வளர்ச்சியும் (உற்பத்தித் திறன்) ஒன்றுக்கொன்று சமமாக, சீராக (Equal to each other) அமையும்போது பொருளாதாரச் சமநிலை நிலவும். இதற்கு மாறாக, உற்பத்தித்திறனில் பெருக்கமின்றி முதலீட்டின் அளவு மட்டும் உயர்ந்தால் வேலையின்மை பெருகி, பொருளாதார வீழ்ச்சியும் மந்த நிலையும் (Depression) ஏற்படும். குறிப்பிட்ட ஓரளவு நாட்டு வருமானம் குறிப்பிட்ட ஒரு காலத்தில் வரையறுக்கப்பட்ட ஊதிய வீதத்தில் முழு வேலை நிறைவு நிலைக்குப் போதுமானதாயிருக்கும். ஆனால், அதற்கு அடுத்த கால கட்டத்தில் கூடுதல் உற்பத்தித் திறன் உண்டாக்கப்படுமாகையால் அவ்வருமானம் பற்றாக் குறையாகக் காணப்படும். கூடுதலாகத் தேவைப்படும் செலவுகளை முதல் இருப்பு (Capital Stock), அதன் வெளியீடு (Output) ஆகியவற்றின் உறவுகளின் மூலம் கணக்கிடலாம். அது முதல்/வெளியீடு விகிதம் (Capital/Output Ratio) எனப்படும். 't' என்ற காலத்தில் சமநிலையிலுள்ள நாட்டு வருமானத்தை அடையத் தேவையான முதலீட்டை இறுதிநிலைச் சேமிப்பு நாட்டம் (Marginal Propensity to Save) முடிவு செய்வதால், பொருளாதார வளர்ச்சி இறுதிநிலைச் சேமிப்பு நாட்டம், முதல்/வெளியீடு விகிதம் ஆகியவற்றின் வினைச்செயல் (Function) என்பதாகக் காணலாம். இதனைக் குறிக்கணக்கியல் (Algebraic) முறையில் விளக்கலாம்:

$Y$ = நாட்டு வருமானம்

$K$ = முதல்

$I$ = முதலீடு

$\Delta$ = குறிப்பிட்ட காலத்திலிருந்து அடுத்த கால வரையிலான இடைவெளியில் ஏற்படும் மாறுதல்கள்

$S$ = சேமிப்பு

$G$ = வளர்ச்சி வீதம்

வளர்ச்சி வீதம் $G = \Delta Y/Y$

சேமிப்பு விகிதம் $S = \dfrac{S}{Y}$ (I=S என்பதால்) $= \dfrac{I}{Y}$

முதலீடு, முதல் இருப்பில் ஏற்படும் மாற்றமாகும்.

$\Delta K = I$

$K$ = பெருகும் முதல்/வெளியீடு விகிதம்

$$k = \frac{\Delta K}{\Delta Y} = \frac{I}{\Delta Y}$$

$$\therefore \frac{\Delta Y}{Y} = \frac{I/Y}{I/\Delta Y}$$

வளர்ச்சி வீதம் $G = \dfrac{S}{k}$


சேமிப்பு வீதத்தை (S) பெருகும் முதல்/வெளியீடு விகிதத்தினால் (k) வகுத்தால் பெறும் தொகைக்கு வளர்ச்சி வீதம் (G) சமமாக (Equal) இருக்கும். இம்முறைப்படி சேமிக்கும் நாட்டு வருமான விகிதத்தைக் கூட்டியோ முதல்/வெளியீடு விகிதத்தைக் குறைத்தோ வளர்ச்சி வீதத்தைப் பெருக்கலாம். முதல்/வெளியீடு விகிதம் முதல் இருப்பு உண்டாக்கும் உற்பத்தித் திறனுக்குச் சமமாக இருக்கும்.

எராடு-தோமார் படிவம் பொருளாதாரத் திட்ட வல்லுநர்களுக்கு முதலீடு, சேமிப்பு, வளர்ச்சி வீதம் ஆகியவற்றின் தொடர்புகளைப் பயனுள்ள முறையில் கணக்கிட்டுத் திட்ட ஒதுக்கீடுகள் செய்ய உதவுகிறது.

மேலும், மொத்த வருமான வளர்ச்சி வீதத்திலிருந்து மக்கள்தொகை வளர்ச்சி வீதத்தைக் (Rate of Growth of Population) கழித்து, தனி ஆள் வருமான வளர்ச்சி வீத மதிப்பீட்டைப் (Rate of Increase in Percapita Income) பெறலாம். எனவே, சேமிப்புநாட்டம் (Savings Propensity) 12 விழுக்காடாகவும் முதல்/வெளியீடு விகிதம் 3-ஆகவும் மக்கள்தொகை வளர்ச்சி வீதம் ஆண்டொன்றுக்கு 2 விழுக்காடாகவும் இருந்தால், பொருளாதார வளர்ச்சி வீதம் = 0.12/3 - 0.02 = 0.02 அல்லது தனி ஆள் வருவாய் வீதம் 2 விழுக்காடு.

சேமிப்பு முதலீடாக மாறும்போது கூடுதல் உற்பத்தித் திறன் படைக்கப்பட்டு வருமானம் பெருகுகிறது. அதுவே முதல் பெருக்கம் அல்லது முதல்/வெளியீட்டு விகிதமாகும். குறிப்பிட்ட காலத்தில் உயரும் வருமானம் தொடரும். அடுத்த கால கட்டத்தில் சேமிப்பு, முதலீடு, முதலாக்கம் (Capital Formation), வருமானம் ஆகியவற்றினைப் பெருக்குகிறது.

எராடு-தோமார் படிவத்தின்படி, சராசரி முதல்/வெளியீட்டு விகிதமும், கூடும் முதல்/வெளியீட்டு விகிதமும் (Incremental Capital/Output Ratio) சமமாக இருக்கும். ஆனால், நடைமுறையில் முதல் குறைந்து செல் விளைவுகளுக்கு (Decreasing Returns) உட்படுகிறது. சராசரி முதல் வெளியீட்டுவிகிதமும் கூடுதல் முதல் வெளியீட்டு விகிதமும் ஒரே சீராயிரா. வரைபடம்-1 இவற்றின் தொடர்புகளை விளக்குகிறது. நாட்டு வருமானம் (Y) முதலின் (K) வினைச் செயலாகும். வளைகோடு Y(K) முதல் இருப்பின் அளவு, ஒவ்வொரு கால வெளியீடு ஆகியவற்றின் உறவுகளைக் குறிக்கிறது. முதல் பெருகப் பெருக, வெளியீட்டு வளர்ச்சி வீதம் குறைவதை வளைகோட்டின் போக்கிலிருந்து அறியலாம். S என்ற குறுக்கீட்டுப் புள்ளியில் Y (K)-இன் சராசரி முதல் வெளியீட்டு விகிதம் OT நேர்கோட்டின் சாய்வளவுக்கு ஒத்துள்ளது. கூடும் முதல் வெளியீட்டு விகிதம் மாறுபடுவனத்க் கோடுகளின் சாய்வுகள் வெளிப்படுத்துகிற வேறுபாடுகளிலிருந்து அறியலாம்.




எராடின் கவனம் பெரும்பாலும் காலம் சார்ந்த சமநிலை வருமானத்தை ஒட்டியதாகும். சேமிப்பு வருமானத்தைச் சார்ந்தது. ஆனால், முதலீடு ஒரு முடுக்கியினால் (Accelerator) முடிவு செய்யப்படுகிறது. பொருளாதாரச் செழிப்பு வருமானத்தைப் பெருக்கிச் சமநிலைக்கும் மேலான நிலைக்கு முடுக்கும். எனவே, உற்பத்தி (வெளியீடு) உச்சவரம்பை மீறும் பொருளாதார மந்தக் காலத்தில் உற்பத்தி விரைவாகக் குறைந்து, பொருளாதார வளர்ச்சி வீதம் பின்னோக்கிப் பற்றுறுதியற்ற உற்பத்தித் திறனுக்குக் (Warranted Potential) கீழ்ச் செயற்படும்.

எராடு-தோமார் படிவம் இயங்குநிலைப் பொருளியல் ஆய்வு அணுகுமுறை (Dynamic Economics) நோக்குடையது. இது உற்பத்திக் காரணிகளில் அரிதான முதல், ஒரே இனமான வெளியீடு (Homogeneous Output) ஆகியவற்றின் உறவுகளை ஆராய்கிறது. சிறப்பாக, ஒரு காலத்தின் முதலாக்கம் அடுத்த காலத்தின் உற்பத்தி என்றும், முதலீடு வருங்கால உற்பத்தித் திறனைப் பெருக்கிச் சமநிலை வருவாய், உற்பத்தி ஆகியவற்றின் அளவில் மாறுதல்களை உண்டுபண்ணுகிறது என்றும் விளக்கப்படுதல் இப்படிவம் அளிக்கும் சிறப்பு ஆய்வுக் கருத்தாகும்.

முதலை மட்டும் அரிதான உற்பத்திக் காரணியாகக் கொண்டிருத்தலால் பிற காரணிகளின் இன்றியமையாமையை உணராத படிவம் எனவும், நடைமுறைக்கொவ்வாத கோட்பாடு எனவும் அறிஞர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். கோட்பாட்டளவில் மட்டுமே இத்தகைய தனிப் படிவங்கள் சிறப்புப் பெறுகின்றன. எனினும், இவ்வணுகுமுறையின் அடிப்படையில் பிற உற்பத்திக் காரணிகளையும் ஆராய்ந்து முடிவுகளைக் காணலாம். தனிக் காரணி இயல்புகள் பகுத்தாராயப்பட்டுள்ளதால், பிற ஆய்வுகளில் காணப்படும் முழுமையற்ற புரியாத சிக்கலான கலப்புப் படிவத்தையும் கோட்பாட்டையும் இது தவிர்க்கிறது.

அ.கு.சா.

துணை நூல்:

Charles P.Kindleberger and Bruce Herrick, Economic Development, Mc Graw-Hill, Kogakusah Limited, Tokyo, 1977.

**எரிக்சன்** கோபென்கேகன் என்னுமிடத்தில் 1902–ஆம் ஆண்டு பிறந்தார். எரிக்சன் யூத இனத்தவர். தம் இனத்துப் பள்ளித் தோழர்களுடன் கல்வி கற்கும் பொழுது இன வேற்றுமையை உணர்ந்தார். அந்த வாழ்க்கைச் சூழ்நிலை இவர் ஒன்றுதல் நெருக்கடி (Identity Crisis) என்னும் கருதுகோளைத் தோற்றுவிக்க மிகுந்த வழிகாட்டியாக அமைந்தது.

வியன்னாவிலுள்ள உளப்பகுப்புக் கழகத்தில் (PsychoanalyticInstitute) 1930–ஆம்ஆண்டு பிராய்டின் (Freud) மகளான அன்னா பிராய்டிடம் பயிற்சி பெற்றார். பின்னர், இரண்டாம் உலகப் போரின் அரசியல் சூழ்நிலை காரணமாக வியன்னாவை விட்டுத் தென்மார்க்கிற்குச் (Denmark) சென்று, அங்கிருந்து பாசுடனில் உள்ள முரேயின் உளவியல் மருத்துவப் பயிற்சிச் சாலையில் வேலைக்கு அமர்ந்தார். பின்னர், கலிபோர்னியாவிலும் சிலகாலம் இருந்தார். இவர் ஐக்கிய நாட்டில் இருந்தபொழுது ஆங்கில மொழி கற்று, அதனை ஆங்கிலப் பண்பாட்டோடு ஒன்றுபடுத்த முயன்ற பொழுது, மற்றுமொருமுறை இனவேற்றுமைச் சிக்கலுக்கு ஆளானார். கலிபோர்னியாப் பல்கலைக் கழகத்திலிருந்த பேராசிரியர்கள் 1950–ஆம் ஆண்டு பற்றுறுதிக் கோட்பாட்டு ஆணையினை (Loyalty Oath) ஏற்றனர். ஆனால், இவருட்பட்ட சில பேராசிரியர்கள் மட்டும் பற்றுறுதிக் கோட்பாட்டு ஆணையினை ஏற்க மறுத்தனர். அதனால், சில பத்திரிகைகள் இவரும் இவர்தம் நண்பர்களும் எங்கிருந்து வந்தார்களோ அங்குத் திரும்பிச் செல்ல வேண்டும் என்று கூறியதன் விளைவாக, பாசுடனுக்குத் திரும்பி ஆர்வார்டுப் பல்கலைக் கழகத்தில் சேர்ந்தார்.

எரிக்சன் பிராய்டின் மாதிரியான தூண்டல் (Id), தன்னுணர்ச்சி (Ego), மேம்பட்ட தன்னுணர்ச்சி (Super Ego) போன்ற மாதிரிக் கருத்தில் வேறுபாடு கொள்ளவில்லை. மேலும், இவர் பிராய்டின் உளபால் நிலைகளின் (Psychosexual Stages) ஆளுமை முன்னேற்றத்தை ஏற்றுக் கொண்டார். இவரது ஆய்வின்படி, பிராய்டின் மூன்று நிலைகளில் ஏற்படும் வேற்றுமைக்குக் காரணம் உள சமூகத்தினால்ஏற்படுவதேயன்றிப் பால் நிலை அடக்கம் அன்று. இவர் பிராய்டின் நிலைகளின் எண்ணிக்கையினை இளமைப் பருவத்திலிருந்து (Late Adolescent) விவேகப்பருவம் (Adulthood), முதுமைப்பருவம் ஆகியவற்றிற்கு விரிவாக்கினார்.

பிராய்டின் வாய்மொழி நிலையில் (Oral Stage) ஒரு குழந்தை தன் வேற்றுமையைத் தணிக்கும் வகையைத் தன் தாயிடம் பாலருந்தும்பொழுது ஏற்படும் விளைவுகளின் மூலம் வெளிப்படுத்தும்.இதே நிலையை ஒரு குழந்தை தாயின் உத்தரவாதத்திற்கும் உத்தரவாதத் தன்மைக்கும் ஏற்ப நம்பிக்கையையோ நம்பிக்கையின்மையையோ அதனுடைய மாறும் நிலையைக் குறைத்துக் கொள்ளும் வகையில் வளர்த்துக் கொள்கிறது என்று இவர் விளக்கினார். இது இவரது முதல் நிலை ஆகும்.

இவருடைய இரண்டாம் நிலை பிராய்டின் குத நிலையினை (Anal Stage) ஒத்துள்ளது. இவர் இந்த நிலைக்கு உளச் சமூக நிலையைக் காரணமாகக் கூறுகிறார். இந்த நிலையில் ஒரு குழந்தை தன் நடத்தையைப் பல வழிகளில் சோதனை செய்கிறது. இவ்வாறு செய்வது குடல் அசைவில் முடிகிறது; பெற்றோர் தற்கட்டுப்பாட்டை வற்புறுத்துவதும் குழந்தையின் ஒரு செயலைச் செய்து முடிக்க முடியும் என்ற தன்னம்பிக்கையும் அந்தக் குழந்தைக்கு ஒரு தன்னுரிமையை ஏற்படுத்தும் என்று இவர் கூறுகிறார். ஆனால், அதற்கு மாறாகக் குழந்தைகளுக்கு அதனுடைய தன்னம்பிக்கையை இழக்கக்கூடிய சூழ்நிலைகளைப் பெற்றோர் ஏற்படுத்தினால், அதுவே அந்தக் குழந்தைகள் பால் குற்ற உணர்வையும் ஐயத்தையும் வளர்த்துவிடும்.

மூன்றாம் நிலையான பாலுறுப்பு இன்பநிலை(Phallic stage) ஒரு குழந்தை தன் 4 அல்லது 5-ஆம் வயதில் எதிர்பாலாரான பெற்றோருடன் இன்ப நுகர்வுத் தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ள முயலுகிறது. இவருடைய நான்காம் நிலை ஒரு குழந்தை வீட்டிலிருந்து பள்ளிக்குச் செல்லும் பருவத்தில் தொடங்குகிறது. இது பிராய்டின் முதிர்வுறாத நிலைக்கு (Latency stage) இணையாகவுள்ளது. இந்த நிலையில் அந்தக் குழந்தை மதிப்பினைக் கண்டுணரவும்,அதனுடைய சுற்றுப்புறத்திலுள்ள குடும்பத்திலிருப்பவர்களிடமிருந்து மதிப்பினைப் பெறவும் முயலுகிறது. மனமும் சமுதாயமும் கலந்த இந்த நிலையில் ஒரு குழந்தை சமுதாயத்தோடு இணைந்து பணிபுரியும் ஓர் உயர்ந்த மதிப்பினைப் பெறுகிறது. இல்லையெனில் தாழ்வு மனப்பான்மையை வளர்த்துக் கொள்கிறது.

ஐந்தாம் நிலை பாலுணர்வுப் பருவமடையும் காலத்தில் தொடங்குகிறது. இது பிராய்டின் முன்பாலுணர்வு நிலையினைக் குறிக்கிறது. இந்த

நிலையில் தோன்றக் கூடிய வேற்றுமைகள் தன்னைப் பற்றிய மதிப்பீட்டு நிலைக்கும் அந்த நிலையில் தோன்றக் கூடிய புரிய முடியாத மாறுபாடு களுக்கும் இடையே தோன்றுவனவாகும். இந்த நிலையில் தோன்றக் கூடிய பாதிப்பு ஒருவரைச் சரி யான பாதையில் மீட்டுச் செல்ல முடியும். மேலும், ஒருவரைச் சமுதாயத்திலிருந்து மாறுபட்டவராக அவருடைய பழக்கங்களை மாற்றக்கூடிய வாய்ப்பும் இதற்கு உண்டு. இது போன்ற வேறுபாடுகளைக் களைவதற்கு ஆறாம் நிலையில் தான் முடியும். அதாவது, ஒருவரது ஒரே உணர்வோடு இருவர் பழகக் கூடிய தன்மை வளரும்பொழுது சமுதாயத்தில் ஒருவருக்கு மற்றவரிடம் ஒரு தொடர்பினை ஏற்படுத்தும்.

இறுதியாகப் பிராய்டை விட விவேகப் பருவத்தில் இரண்டு நிலைகளை இவர் தோற்றுவித்தார். அவை மாறுபட்ட நிலைகளைத் தேர்ந்தெடுத்து, வாழ்க்கையை நன்முறையில் அமைக்க வழிவகை செய்கின்றன. இந்த இரு நிலைகளில் முதலாவது பாரம்பரியத்தை வளர்ப்பதற்குக் குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளும் நிலையையோ புதியனவற்றைக் கண்டுபிடிக்கும் நிலையையோ தேர்ந்தெடுக்க உதவு கிறது. இறுதி நிலைதன்னைப் பற்றிய ஒருங்கிணைப்பு மனநிலையைத் தோற்றுவிக்க வழி வகுக்கிறது. இந்த இறுதிநிலையைக் கடந்த ஒருவர் சாதாரணமாகத் தம் வாழ்க்கையில் ஓர் உயர்ந்த நிலையை அடைந்து, மனித வரலாற்றில் தாமும் சில சாதனைகளைச் செய்திருப்பதாகக் கருதும் உணர்வோடு இந்த உலகைவிட்டுப் பிரியும் மனநிலையில் இருக்கிறார்.

சீனி. நா. & கோ. இ.

***எரிட்ரியா***: ஏறத்தாழ 117,600 ச.கி.மீ. பரப் புள்ள எரிட்ரியா (Eritrea) மாகாணம் ஓர் இத்தாலி யக் குடியேற்ற நாடாக இருந்தது. ஆப்பிரிக்கக் கண் டத்தின் செங்கடலைச் சார்ந்த இம்மலைப் பிரதேசம் வரலாற்றில் பல மாறுதல்களுக்கு உட்பட்டது. இது கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் உதுமானியத் துருக்கிய ரின் ஆட்சியின் கீழ் வந்தது. இப்பகுதியை வசப்படுத் திக் கொள்வதற்காக, கி.பி. 17-ஆம் நூற் றாண்டு முதல் கி.பி. 19-ஆம் நூற்றாண்டு வரை உதுமானிய அரசு, எத்தியோப்பியா, இத்தாலி, எகிப்து முதலிய நாடுகள் அடிக்கடி சச்சரவிட்டுக் கொண்டிருந்தன. பிறகு, இத்தாலி அப்போட்டிகளில் வெற்றி பெற்றுத்தான் அமைத்த இத்தாலியக் கிழக்கு ஆப்பிரிக்கக் குடியேற்றப் பகுதியில், எரிட்ரியாவை ஒரு மாகாணமாக அமைத்துக் கொண்டது. இரண் டாம் உலகப்போரில் இத்தாலி அதை இழக்க நேரிட் டது. எரிட்ரியாவில் ஆங்கில ஆட்சி அமைந்தது. கூட் டரசு முறையில் உள்நாட்டுச் சுதந்திரத்துடன், அது 1952-இல் எத்தியோப்பியாவுடன் இணைந்தது. எத்தி யோப்பியப் பேரரசுக்குள்ளேயே எரிட்ரியா 1962-இல் ஒரு மாகாணமாயிற்று. எத்தியோப்பிய ஆதிக்கத்தை எதிர்த்து எரிட்ரிய மக்கள் கலகங்கள் செய்யலாயினர். கொரில்லாப் போர்முறை கையாளப்பெற்றது. கலகங் கள் அடக்கப்பெற்றன. ஏறத்தாழ 23 இலட்சம் மக் களைக் கொண்ட எரிட்ரியா எத்தியோப்பியாவின் ஒரு பகுதியாகவே விளங்குகிறது.

தெ.பா.

***எரிபொருள் நெருக்கடி***: ஒரு நாட்டின் பொருளாதார வாழ்க்கையின் வளத்திற்கும் முன் னேற்றத்திற்கும் எரிபொருள் இன்றியமையாத ஒன் றாய் விளங்குகிறது. உண்ணும் உணவைச் சுவை யுடன் சமைக்கவும், பொருள்களை உற்பத்தி செய்ய வும், மனிதனும் பொருள்களும் ஓரிடத்திலிருந்து மற் றோர் இடத்திற்கு விரைந்து செல்லவும், செய்தி களை அனுப்பவும் எரிசக்தி (Power) அடிப்படைத் தேவையாகும்.

மனிதன் கதிரவனிடமிருந்து கிடைக்கின்ற எரி சக்தியைத்தான் முதன் முதலில் பயன்படுத்தினான். கதிரவனிடமிருந்து கிடைக்கும் எரிசக்தியில் ஒளியும் வெப்பமும் கிடைக்கின்றன. தீயைக் கண்டுபிடித்த பின்னர், விறகு, நிலக்கரி, எண்ணெய் ஆகியவற்றி லிருந்து எரிசக்தியைப் பெற அறிந்து கொண்டான். மின்சாரக் கண்டுபிடிப்பு எரிபொருளில் பெரும் புரட் சியைத் தோற்றுவித்தது. நீர், கரி, அணு ஆகியவற்றி லிருந்து மின்சாரத்தைப் பெற அறிவியல்-தொழில் நுட்ப வளர்ச்சி துணை செய்கிறது. மரபு வழியில் கிடைக்கின்ற எரிபொருள் தவிர, இப்பொழுது புதிய முறைகளில் கதிரவன், காற்று, பூமிக்கடியிலிருக்கும் வெப்பம் ஆகியவற்றிலிருந்தும் எரிபொருள்களைப் பெற முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

இந்தியாவில் 1950-இல் 15 இலட்சம் மக்கள் மின் சாரத்தைப் பயன்படுத்தினர். மின்சாரத்தைப் பயன் படுத்துவோரின் எண்ணிக்கை 1978-79-இல் 263.63 இலட்சமாகக் கூடியது. சராசரி தனி ஆள் (Per Capita) மின்சார நுகர்வு 1950-இல் 18 கிலோ வாட் டாக (Kilo Watt) இருந்தது. அதுவே, 1978-79-இல் 121 கிலோ வாட்டாக உயர்ந்துள்ளது. இக்குறிப்பிட்ட காலத்தில் எரிபொருள் உற்பத்தி பத்து மடங்கு கூடி யும்கூடத் தேவை அதனைவிட மிகுந்துள்ளது. இந்தி யாவின் மொத்த மின்சாரத் தேவை 1978-79-இல் 1,08,658 மிலியன் கிலோ வாட்டு. ஆனால், அப்போது உற்பத்தி செய்த மின்சாரத்தின் அளவு 97,588 மிலி யன் கிலோ வாட்டே. பற்றாக்குறை 11,070 மிலியன் கிலோ வாட்டு, அதாவது 10.2 விழுக்காடு.

இந்தியாவில் 1971- ஆம் ஆண்டைய மொத்த ஊரகங்கள் 5,76,126. இவற்றுள் 3,68,840 ஊரகங்களுக்கு 1985-ஆம் ஆண்டு வரையில் மின்சார வசதி அளிக்கப்பட்டுள்ளது. இன்னும் 2,07,286 ஊரகங்கள் மின்சார வசதியைப்பெற வேண்டும். அதாவது 36 விழுக்காடு ஊரகங்களுக்கு மின்சாரம் வழங்குவது தேவையாகும்.

இந்தியாவில் இப்பொழுது இருப்பது போல நான்கு மடங்கு நிலக்கரி, இருமடங்கு எண்ணெய், நான்கு மடங்கு மின்சாரம் ஆகியன கி.பி.2000 ஆண்டு அளவில் தேவையாக இருக்கும். எரிபொருள் நெருக்கடி (Fuel Crisis) இந்தியாவின் பொருளாதார முன்னேற்றத்தைப் பாதிக்கிறது. உற்பத்தியைத் திட்டமிடும் அளவிற்கு உயர்த்த முடியவில்லை. இதனால், பொருள்களின் விலை கூடுகிறது. மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த இயலவில்லை. எரிபொருள் பற்றாக்குறையால் மனிதர்களின் அன்றாட வாழ்க்கையில் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன.

இருவகை எரிபொருள்கள்: இந்தியாவில் கிடைக்கின்ற எரிபொருள்களை வாணிக எரிபொருள் (Commercial Fuel), வாணிகமற்ற எரிபொருள் (Non Commercial Fuel) என்று பகுப்பதுண்டு. நிலக்கரி, பெட்ரோல், மின்சாரம் போன்றவை வாணிக எரிபொருள்களாகும். விறகு, எரு (காய்ந்த மாட்டுச் சாணம்), காய்கறிக் கழிவுகள் (Vegetable Wastages) போன்றவற்றிலிருந்து கிடைப்பது வாணிகமற்ற எரிபொருள்களாகும்.

எரிபொருள்களை அவற்றின் இயல்பை ஒட்டி, புதுப்பிக்க முடியாத (Non renewable) எரிபொருள் என்றும், புதுப்பிக்கக் கூடிய (Renewable)எரிபொருள் என்றும் வகைப்படுத்தலாம். புதுப்பிக்க முடியாத எரிபொருளை மரபு வழி எரிபொருள் (Conventional Fuel) என்றும் கூறுவதுண்டு இவை மக்கிப்போன உயிரினங்களால் பூமிக்கடியில் உருவாகிக் கிடக்கும் நிலக்கரி, பெட்ரோல், இயற்கை வாயு (Natural Gas) போன்றவையாகும். இவற்றை எடுத்துப் பயன்படுத்தும் பொழுது இவற்றின் இருப்புக் குறையும். இவற்றை மனித முயற்சியால் பெருக்க இயலாது. புதுப்பிக்கக் கூடிய எரிபொருள்களுள் நீர், மின்சாரம், காற்று, கதிரவன் ஒளி, பூமிக்கடியில் கிடைக்கும் வெப்பம், மாட்டுச் சாணம் போன்றவை அடங்கும்.

மின்சாரம்: இந்தியா 1982-83-இல் பயன்படுத்திய வாணிக எரிபொருள்களில் மின்சாரம் 29.4 விழுக்காடாகவும், நிலக்கரி 21.6 விழுக்காடாகவும், எண்ணெய் வகைகள் 49 விழுக்காடாகவும் இருந்தன. நாட்டில் கிடைக்கும் மின்சாரத்தில் 11 விழுக்காடு வீடுகளிலும், 16 விழுக்காடு வேளாண்மைத் துறையிலும், 62 விழுக்காடு தொழில் துறையிலும், 2 விழுக்காடு போக்குவரத்திலும், 9 விழுக்காடு பிற துறைகளிலும் பயன்படுத்தப்படுகின்றன.

மின்சாரத்தை மூன்று வகைகளில் உற்பத்தி செய்யலாம். நீரோட்டம், நிலக்கரி, அணுசக்தி ஆகியவை மின்சக்தியின் மூலங்களாகும். கருநாடகம், கேரளா, பஞ்சாபு, ஒரிசா, சம்மு-காசுமீர், இராசசுத்தான் ஆகிய மாநிலங்களில் மிகுதியாக நீர் மின்சாரமும் (Hydro Power); பீகார், மேற்கு வங்காளம், குசராத்து,இராசசுத்தான் ஆகிய மாநிலங்களில் பெரிதும் அனல் மின்சாரமும் (Thermal Power); மகாராட்டிரம், தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், உத்தரப் பிரதேசம், அசாம், மத்திய பிரதேசம் ஆகியவற்றில் நீர் மின்சாரமும் நிலக்கரி மின்சாரமும் கிடைக்கின்றன.

மின்சக்தி உற்பத்தியை 1984-85-ஆம் ஆண்டில் 154 பிலியன் அலகுகளாகப் (Billion Units) பெருக்குவது நாட்டின் குறியீட்டு இலக்காகும். இதில் நிலக்கரி மின்சாரம் 98.6 பிலியனாகவும், நீர் மின்சாரம் 52 பிலியனாகவும், அணு மின்சாரம் 3.4 பிலியனாகவும் இருக்கும். நீர் மின்சாரம் மிகவும் சிக்கனமாக உற்பத்தி செய்யக் கூடியது. இந்தியாவில் ஆண்டிற்கு 472.15 பிலியன் கிலோ வாட்டு நீர் மின்சாரம் உற்பத்தி செய்ய வாய்ப்புள்ளதாக மதிப்பிட்டுள்ளனர். ஆனால் இப்பொழுது ஆண்டிற்கு 49.67 பிலியன் கிலோ வாட்டு அளவு மின்சாரமே உற்பத்தி செய்யப்படுகிறது. கூடுதலாக 26.96 பிலியன் கிலோ வாட்டு மின்சாரம் உற்பத்தி செய்ய முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. எனினும், 80 விழுக்காடு நீர் மின்சாரம் இப்பொழுது வீணாகிக் கொண்டிருக்கிறது.

தாராப்பூர் அணு மின்சக்தி நிலையம் (Tarapur Atomic Power Station) 1969-இல் தொடங்கப்பட்டதைத் தொடர்ந்து, நாட்டில் அணுசக்தி உற்பத்தி பெருகி வருகிறது. இப்பொழுது இராசசுத்தான் அணுசக்தி நிலையம், சென்னை (கல்பாக்கம்) அணுசக்தி நிலையம், உத்தரப் பிரதேசத்தில் நரோரா அணுசக்தி நிலையம் ஆகியவை செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

நிலக்கரி: இந்தியாவில் 1,48,791 மிலியன் கண்டி (Tonnes) நிலக்கரி இருப்பதாக மதிப்பிட்டுள்ளனர். இதில் 60,000 மிலியன் கண்டி நிலக்கரிதான் எளிதாக எடுக்கக் கூடியதாகும். நிலக்கரி உற்பத்தி 1984-85-ஆம்

ஆண்டில் 147.45 பிலியன் கண்டியாகும். ஆண்டுக்கு 4 விழுக்காடு நிலக்கரி உற்பத்தி கூடினாலும் இன்னும் 130 ஆண்டுகளுக்குப் போதுமான அளவு நிலக்கரி வளம் இருப்பதாகக் கணக்கிட்டுள்ளனர். இந்தியாவில் கிடைக்கும் பழுப்பு நிலக்கரியில் 90 விழுக்காடு தமிழகத்தில் தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள நெய்வேலியில் கிடைக்கிறது. அங்கு மட்டும் 3,300 மிலியன் கண்டி நிலக்கரி கிடைப்பதாக மதிப்பிட்டுள்ளனர்.

உலக நிலக்கரி உற்பத்தியில் இந்தியா ஐந்தாம் இடம் பெறுகிறது. ஆனால், சராசரி தனி ஆள் நிலக்கரி உற்பத்தி 201 கண்டி. இதுவே, அமெரிக்காவில் 13,747 கண்டியாகவும், சோவியத்து உருசியாவில் 23,112 கண்டியாகவும் இருப்பது குறிப்பிடத்தக்கது.

பல்வேறு வழிகளில் எரிபொருளைப் பெற்ற போதிலும், அவற்றின் தேவை அளவிற்கு எரிபொருளை உற்பத்தி செய்ய இயலவில்லை. எரிபொருள் பற்றாக்குறை உலகெங்கும் காணப்படும் பொருளாதாரச் சிக்கலாக உள்ளது. எரிபொருள் இல்லங்களிலும் வேளாண்மையிலும் தொழில் நிறுவனங்களிலும் போக்குவரத்துகளிலும் பிற துறைகளிலும் பேரளவில் பயன்படுத்தப்படுகிறது. மக்கள் தொகைப் பெருக்கம், வேளாண்மை வளர்ச்சி, தொழில் முன்னேற்றம், விரைந்த போக்குவரத்துத் தேவை ஆகியவற்றால் எரிபொருள்களின் தேவை பலமடங்கு உயர்ந்துள்ளது.

எரிபொருள் நெருக்கடிச் சிக்கலைத் தீர்க்க ஒரு பக்கம் உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்றும் மற்றொரு பக்கம் எரிபொருளைப் பயன்படுத்துவதில் சிக்கனமாக இருக்க வேண்டுமென்றும் வலியுறுத்துகின்றனர். ஆக்கத்திறனற்ற துறைகளில் எரி பொருளைப் பயன்படுத்துவதைக் குறைக்க வேண்டும். புதுப்பிக்கக் கூடிய புதுப்பது எரிபொருள் வளத்தை ஆராய்ந்து கண்டுபிடிப்புகளைப் பெருக்கவேண்டும்.

மா.பா.கு.

துணை நூல்கள்:

Mamatha Patnakar, Economic Planning, Sultan and Sons, New Delhi, 1981.

Seventh Five-Year Plan 1985-90, Planning Commission, Government of India, New Delhi, 1985.

**எரிமலைத் தீவுகள்:** எரிமலைகளால் இயற்கை அழிபாடு ஏற்படுவதுடன் புதிய நிலப்பகுதிகளும் அமைகின்றன. எடுத்துக்காட்டாக, பசிபிக்கு மாக்கடலின் வடபுறத்தில் மூன்று தீவுகளின் தோற்றத்திற்கு எரிமலை வெடிப்பே காரணமாகும். எரிமலைத் தீவுகள் என்றே பெயர் பெறும் இம்மூன்று தீவுகளும் சப்பான் நாட்டுக்கு உரியன. சீனநாட்டுக்கும் சப்பானுக்குமிடையே இத்தீவுகளின் வடக்கு எல்லையாகப் போனின் தீவு உள்ளது. இம்மூன்று தீவுகளுள் ஒன்றில் மட்டும்தான் மக்கள் வாழ்கின்றனர். பிற இரண்டும் வாழ்க்கைக்கு உரியனவாக இல்லை. இத்தீவுகளுக்கு மகலன் தீவுக் கூட்டம் என்ற பெயரும் உண்டு.

தெ.பா.

**எரிவான்** உருசியாவில் உள்ள ஒரு நகரம். எரிவான் என்ற பெயருள்ள மாவட்டத்திற்கு இது தலைநகர். மேலும், ஆர்மினியச் சோவியத்துக் குடியரசுக்கும் இது தலைநகர். பல கைத்தொழில்கள் இங்கே வளர்ந்துள்ளன. பலவகைப் பழங்கள் உற்பத்தியாகின்றன. பருத்தி, புகையிலை, திராட்சை பயிரிடப்படுகின்றன.

தெ.பா.

**எருக்கத்தம்புலியூர்** நடுநாட்டிலுள்ள தேவாரப் பாடல்பெற்ற தலங்களுள் ஒன்று. விருத்தாசல நகருக்கு ஏழு கல் தொலைவில் அமைந்துள்ள இத்தலம், இக்காலத்தில் இராசேந்திரப் பட்டணம் என்று வழங்கப்படுகிறது. தில்லை சென்று இறைவனை வழிபட்ட ஞானசம்பந்தர் கழிப்பாலை, நெல்வாயில் முதலிய தலங்களின் வழியே சென்று, திருமுதுகுன்றம் சேரு முன்னர் இத்தலத்தினை அடைந்து பதிகம்பாடி வழிபட்டார். இத்தலத்திறைவன் பெயர் நீலகண்டேசுவரர்; இறைவி பெயர் நீலமலர்க்கண்ணி. வெள்ளெருக்கு இத்தலமரமாகக் கருதப்படுகிறது. இன்றும் திருக்கோயிலுள் ஒரு வெள்ளெருக்கஞ்செடி உள்ளது. இத்தலம் நாயன்மார் அறுபத்து மூவருள் திருநீலகண்ட யாழ்ப்பாணர் தோன்றிய சிறப்புடையது. ஞானசம்பந்தர் பாடியுள்ள இத்தலத்திருப்பதிகத்தில் பத்துப் பாடல்கள் உள்ளன.

அ.மா.ப.

**எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார்:** இப்புலவர் பெருமான் பிறந்த ஊர் எருக்காட்டூர் எனவும் 'தாயங்கண்ணன்' என்பது இயற்பெயர் எனவும் கூறுவர். புறநானூற்றுப் புலவருள் இவரும் ஒருவர். இவரது பாடல் வேறு சங்க நூல்களில் யாண்டும் இடம் பெறவில்லை. சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனை இப்புலவர் பாடியுள்ளார். குளமுற்றம் என்ற இடத்தில் இச்சோழ மன்னன் தன்னோடு பொருத பகைவர்களோடு முரணி உடன்று இறந்துபட்ட காரணத்தால் 'குளமுற்றத்துத் துஞ்சிய' என்ற அடைமொழி புணர்க்கப்பட்டான். இறந்துபட்டவர்களைத்

‘துஞ்சியவர்’ என்று கூறும் மங்கல மரபினையொட்டி இவர் இப்பெயர் பெற்றார். இப்புலவர் பெருமான் மேற்குறிப்பிட்ட சோழப் பேரரசனைப் பாடாண் திணையில் பரிசில்விடை, கடைநிலை துறையில் அமைத்து இப்புறப்பாடலைப் பாடியுள்ளார்.

இப்பாடலில் இப்புலவர் தம்மை ஒரு கிணைப் பொருநனாக உருவகித்து, இம்மன்னனை வைகறையில் துயிலெழுப்பியதாக அமைத்துப் பாடிய கருத்துச் சுவையுடையது.

இறைவனுக்குத் திருப்பள்ளி எழுச்சி பாடுதல் போல் மன்னர்கட்கும் பள்ளி எழுச்சி பாடும் முறை நிலவி இருந்ததென இப்பாடல் மூலம் அறியலாம்.

சி.கோ.

**எருகுலர்** ஆந்திரப் பிரதேசத்தில் மிகுதியான எண்ணிக்கையில் வாழும் பழங்குடிகளுள் ஒருபிரிவினர். இவர்கள் தமிழ்நாட்டிலும் கருநாடகத்திலும் குறைந்த எண்ணிக்கையில் காணப்படுகின்றனர். எருகுலரின் (Yerukular) எண்ணிக்கை 1971-ஆம் ஆண்டுக் குடிமதிப்பின்படி 1,62,560 ஆகும். இவர்களுள் 86.54 விழுக்காட்டினர் ஊரகப் பகுதிகளிலும், 13.46 விழுக்காட்டினர் நகரப் பகுதிகளிலும் வாழ்கின்றனர்.

எருகுலர் பழங்குடியினர் எருகுலா (Yerukula) என்றும் வழங்கப்படுவர். எருகுலா என்னும் சொல் எருக்கு (Yeruku) அல்லது ‘முன்னறிவு’ என்னும் பொருளைக் கொண்டதாகும். எருகுலர் பெண்கள் வருவதுரைக்கும் (குறிசொல்லும்) தொழிலைக் கொண்டவர். எருகுலர் பழங்குடியினர் பல பகுதிகளில் பல்வேறு பெயர்களால் குறிப்பிடப்படுகின்றனர். ஆந்திரப் பிரதேசத்தின் இராயலசீமாப் பகுதியில் கொரச்சா (Koracha), கொரவா (Korava) என்றும், தெலுங்கானாப் பகுதியில் கைகாடி (Kaikadi) என்றும், கருநாடக மாநிலத்தில் கொரமா (Korama) என்றும், தமிழகத்தில் எருகுலர் என்றும் கூறப்படுவர். இவர்கள் ‘எர்காலி’ (Yerkali) என்னும் கிளைமொழியைப் பேசுகின்றனர். இது தமிழுடன் தொடர்புள்ள கிளைமொழியே என்று மொழியியலார் கூறுவர்.

எருகுலர் நாடோடிகளாக வந்தவர்கள். பெரும்பான்மையான நாடோடிகளைப் போன்றே இவர்களும் ஓரிடத்தில் தங்கி வாழ முற்பட்டுள்ளனர். இவர்கள் முன்னர்க் குற்றவாளிப் பழங்குடிகளாக (Criminal Tribes) அரசால் அறிவிக்கப்பட்டவர்கள் இன்றும், அண்டை மக்களால் குற்ற உணர்வோடு எண்ணப்படுபவர்களாகவும் காவல் துறையினரால் கண்காணிக்கப்படுபவர்களாகவும் விளங்குகின்றனர்.





எருகுலர்

ஏனெனில், இவர்கள் கொள்ளையடித்தும் கிராமங்களில் திருடியும் தங்கள் வாழ்க்கையை நடத்தி வந்தனர். ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில் இந்திய அரசாங்கம் 1911-ஆம் ஆண்டு நிறைவேற்றிய குற்றவாளிப் பழங்குடிகளைக் குடியமர்த்தும் திட்டத்தில், அப்போதைய சென்னை மாநிலத்தைச் சேர்ந்த எருகுலரையும் சேர்த்தனர். இதே ஆண்டில் வட இந்தியாவில் சேவை செய்து வந்த இரட்சணிய சேனைக் (Salvation Army) குழுவினரைச் சென்னை மாநில அரசு எருகுலக் குற்றவாளிப் பழங்குடியினர்க்கு மறுவாழ்வு கொடுக்கும் பணியினை ஆந்திரப் பிரதேசத்திலும் தமிழ்நாட்டிலும் மேற்கொள்ள வேண்டியது. பின்னர், இந்திய அரசு இப்பழங்குடியினரின் குற்றப் பெயரை மாற்றி, 'கண்காணிக்கத்தக்க பழங்குடிகள்' (Notified Tribes) என்றும், பின்னர்க் குற்றமரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடிகள் (Denotified Tribes) என்றும் மாற்றியது. ஆந்திரப்பிரதேச அரசு 1982-ஆம் ஆண்டு அனைத்துக் குற்றமரபினர் பட்டியலிலிருந்தும் நீக்கப்பட்ட பழங்குடியினரைப் 'பட்டிகைப் பழங்குடியினர்' (Scheduled Tribes) பட்டியலில் சேர்த்துள்ளது.

எருகுலர் தங்கள் மரபுத் தொழிலின் அடிப்படையில் மூன்று பெரும் அகமணக் குழுக்களாகப் (Endogamous Group) பாகுபடுகின்றனர். பல கிராமங்களுக்கு நடந்து சென்று வாணிகம் செய்யும் பிரிவினர் பிதாரி (Bidari) எனவும், மூங்கில் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் தெபா (Dabba) எனவும், தூரிகை செய்பவர்கள் குஞ்சி (Kunche) எனவும் பாகுபடுகின்றனர். பிதாரி எருகுலர் கறிவேப்பிலை, புளி முதலியவற்றையும் வெள்ளாடு, செம்மறியாடு, பசு முதலிய கால்நடைகளையும் வாணிகம் செய்கின்றனர். இவர்களுள் சிலர் வேளாண் தொழிலையும் மேற்கொண்டுள்ளனர்.

எருகுலர் சமுதாயம் மிகவும் கட்டுப்பாடுடையது. இவர்கள் அனைவரும் கூட்டுணர்வுடன் வாழ்கின்றனர். இவர்களது அரசியல் ஏற்பாடு 'குலப் பஞ்சாயத்து' அமைப்பையும் எழுத்துவடிவம் பெறா மரபுசார் சட்டங்களையும் கொண்டதாகும். பஞ்சாயத்துத் தலைவர் 'பெருமொனுசா' எனக் கூறப்படுவார். பஞ்சாயத்தில் முதியோர் உறுப்பினர்களாக உள்ளனர். சிக்கல்கள் எழும்போது பஞ்சாயத்தினர் வழக்காளர்களிடம் உண்மையைப் பெறமுடியாதபோது, வழக்காளர்களைப் பல கடுந்துன்பங்களுக்கு (Ordeal) ஆளாக்குவர். கொதிக்கும் எண்ணெயில் விரலைத் தோய்ப்பதும், பழுக்கக் காய்ச்சிய கடப்பாறையை இரு கைகளாலும் தூக்கச் செய்தலும் உண்மையை அறிய மேற்கொள்ளப்படும் செயல்களுள் ஒருசிலவாகும். தவறுசெய்யாதவர்கள் துன்பத்திற்கு ஆளாகமாட்டார்கள் என்பது இவர்களின் பெரும் நம்பிக்கையாகும். பஞ்சாயத்து தண்டனை விதித்தல், பெருந்தண்டனைக்குள்ளானவர்களைத் தம் குழுவினரிடமிருந்து நீக்குதல் முதலான செயல்களையும் கொண்டுள்ளது.

திருமணமின்றி வாழ்க்கையில்லை என்பது எருகுலரின் மனப்பாங்காகும். திருமணத்தின்போது குலம் (Clan), குடும்பப் பெயர் முதலானவற்றை அடிப்படையாகக் கொண்டே மணத்துணையைத் தேர்வு செய்வர். எருகுலர் சமுதாயம் காவடி (Kavadi), சத்பாடி (Sathpadi), மேனபாடி (Menapadi) என்னும் மூன்று புறமணக் குழுக்களாகப் (Exogamous Groups) பிரிகின்றனர். இக்குழுக்கள் ஒருவழி உறவுக் (Unilateral Relative) குழுக்களாவர். ஒருவழி மரபினைக் (Unilateral Descent) கொண்ட எருகுலர் குடும்பங்களில் 'குடும்பப் பெயர்' சிறப்பிடம் பெற்றதாகும். குடும்பப் பெயர் ஒரு புறமண (Exogamous) அலகாகக் கொள்ளப்படுகிறது. எருகுலர் தந்தைவழி மரபினைக் கொண்டவர்களாதலால், ஆடவர்கள் வாழ்நாள் முழுவதும் தம் குடும்பப் பெயரையே கொண்டிருப்பர். பெண்கள் திருமணம் வரை தம் தந்தை குடும்பப் பெயரையும், திருமணமான பின்னர்த் தம் கணவரது குடும்பப் பெயரையும் கொண்டிருப்பர். ஒவ்வொரு குலத்தினரும் பல குடும்பப் பெயர்களைக் கொண்டுள்ளனர். ஒரே குடும்பப் பெயர் கொண்டுள்ளவர்களுடன் மணஉறவு கொள்ளுதலும் பாலுறவு கொள்ளுதலும் விலக்காகக் கொண்டுள்ளனர். இவர்களிடையே ஒரு துணை மண முறை (Monogamy) பெருவழக்காக உள்ளது. பல துணை மணமுறை தடுக்கப்பட்டுள்ள இவர்களிடையே கொழுந்தன் மதனிமணமும் (Junior Sororate) காணப்படுகிறது.

மணமகன் வீட்டார் மணமகள் வீட்டிற்கு 'மணப் பணம்' தரும் முறை எருகுலர் திருமண அமைப்பில் முதன்மையானது. மணமகனது தந்தை 48 ரூபாயை மணமகளது தந்தையிடம் தருவர். இருப்பினும் இப்பணம் மணமகளின் தாயின் உடன்பிறந்தாரிடம் தருவதே பெரும்பான்மை வழக்கமாகக் காணப்படுகிறது. விதவை மணம் இவர்களிடையே உண்டு. விதவை பலமுறை மணந்து கொள்ளலாம். ஆனால், ஒவ்வொரு முறை மணம் கொள்ளும்போதும் தன் கணவன் இறந்திருக்க வேண்டும் அல்லது மணவிலக்குச்செய்து மறுமணம் செய்துகொள்ள வேண்டும்.

எருகுலர் குடும்பங்களில் ஆண்குழந்தை பிறக்காதபோது தன் உடன் பிறந்தான் மகன் அல்லது புறமணக் குழுவிலிருந்து ஒருவனைக் கூட்டிக் கொள்வர். குடும்பச் சொத்தின் மரபுரிமை தந்தைவழியானது.

அதனை அனைத்து ஆண் மக்களும் சமமாகப் பகிர்ந்து கொள்வர். மணவிலக்குப் பெற்றவளின் மக்கள் மணவிலக்கடைந்த தந்தையின் குடும்பத்தில் வாழ்ந்து சொத்துரிமையைப் பெறுவர். ஆவியுலக நம்பிக்கையுள்ள சமயத்தைக் கொண்ட எருகுலர் பல ஆவிகளையும் இயற்கைப் பொருள்களையும் வழிபடுகின்றனர். தங்கள் ஆவிகளை வழிபடாதபோதும், குறித்த காலத்தில் பலியிடாதபோதும் நோய்கள், மழைகுறைதல், மண்வளம் குறைதல், விளைச்சல் குறைதல், திடீர்ச்சாவு போன்றவை நிகழ்கின்றன என நம்புகின்றனர்.

ஜே.பா.

## துணை நூல்கள்:


**Parthasarathy, Jakka**, Customary Law and Deviation: A Study with Reference to Marriage and Family among the Yerukula, Anthropological Survey of India, Calcutta, 1978.

**Simhadri, Y.C.**, The Ex-criminal Tribes of India National, New Delhi, 1979.

**Thurston, E.**, Castes and Tribes of Southern India, Madras Government Press, Madras, 1909.


**எருசலேம்**: யூத மதம், கிறித்தவம், இசுலாம் ஆகிய மூன்று மதங்களின் புனித இடமாக விளங்கி வருவது எருசலேம் நகரம் ஆகும். மத்திய தரைக் கடலையும் சாக்கடலையும் பிரிக்கிற வளைவில் இந் நகரம் அமைந்துள்ளது. எருசலேம் மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக நிலைபெற்றுத் திகழ்கிற, புனிதப் பயணிகளின் புண்ணிய இடமாகும். இந்நகர் பக்தி மார்க்கத்தைச் சார்ந்தவர்களுக்குப் புகலிடமாக விளங்கிவந்த போதிலும், அரசியற் சிக்கல் நிறைந்த இடமாகவே இருந்து வருகிறது. அன்றும் இன்றும் இந்நகர் ஆன்மிகத் துறையில் தன்னை நிலைநிறுத்திய போதிலும், வெளி ஆதிக்கச் சக்திகளின் அதிகாரத்திற்கு உட்பட்டே இருந்திருக்கிறது. எருசலேம் நகரில் மூன்று பகுதிகள் அடங்கியுள்ளன. முதற்பகுதி கி.பி. 16 ஆம் நூற்றாண்டில் மன்னர் சுலைமானால் கட்டப்பட்ட மதில்கள் சூழ்ந்த பழைய நகரம் ஆகும். இப்பகுதி விவிலியத்தில் (பைபிளில்) கூறப்பட்டுள்ள எருசலேமை உள்ளடக்கியுள்ளது. இரண்டாம் பகுதி பழைய நகரின வடக்கே ஒலிவக் குன்றின் சரிவில் அரேபியர்களின் குடியிருப்புகள் அடங்கியுள்ள இடம் ஆகும். இயேசு கிறித்து அடிக்கடி சென்று போதித்த பெத்தானியா என்ற ஊர் இப் பகுதியின் அருகில் உள்ளது. மூன்றாவது, பழைய நகரின் மேற்கிலும் தெற்கிலும் சம காலத்திய



எருசலேம்-பழைய நகரம்


ஐரோப்பிய அமெரிக்கக் கட்டடக்கலையின் பிரதிபலிப்பைக் கொண்ட கட்டடங்கள் உள்ள யூதர்களின் பகுதி. புதிய நகர நாகரிக வளர்ச்சி ஏற்பட்ட போதிலும், எருசலேம் பழைய காலத்திலிருந்ததைப் போல் கல்விக்கும் பக்திக்கும் சிறந்த நகரமாக இன்றளவும் விளங்கி வருவது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

இயேசு கிறித்து பிறப்பதற்கு 19 நூற்றாண்டுகளுக்கு முன்பு, எகிப்திய நூல்களில் எருசலேம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. எருசலேம் கி.மு. 14 ஆம் நூற்றாண்டில் ஒரு நகர நாடு என்றும், கன்னானைட்டு, இட்டைட்டு, எபுசைட்டு ஆகிய மக்கள் அந் நகரில் வாழ்ந்தனர் என்றும் 'அமர்னா' கல்வெட்டுக் குறிப்புக் கூறுகிறது.

'அமைதி', 'சாந்தம்', 'சமாதானம்' என்று கடவுளை எபிரேய மக்கள் அழைத்தனர். சுமேரிய மொழியில் எரு என்றால் நகரம் என்று பொருள்படும். சலேம் என்பது அமைதி என்று பொருள்படும். எனவே, கடவுளால் நிறுவப்பட்ட ஒரு அமைதியான நகரம் என்று எருசலேம் சொல்லப்படுகிறது.


தொடக்க காலத்திலிருந்தே எருசலேம் நகரை ஆக்கிரமித்துக் கொள்ளச் சண்டை சச்சரவுகளும், போர்களும் நிகழ்ந்த வண்ணம் இருந்துவந்துள்ளன

யூதர்கள், கிறித்தவர்கள்,அரேபியர்கள் எருசலேமைச் சொந்தமாக்கிக் கொள்ளப் போட்டியிட்டே வந்துள்ளனர். எனினும், இம்மூன்று பிரிவினர்களும் தங்களின் புனித இடங்களை எருசலேமில் நிலை நாட்டியுள்ளனர். எருசலேம் நகரில் யூதர்களின் புனித இடமாக விளங்குவது எரோட்டு என்ற ஆலயத்தின் மேல்புறச் சுவராகும். பைசாண்டியப் பேரரசு காலத்திலிருந்தே இந்தச் சுவர் யூதர்களுக்கு வழிபாட்டிடமாக இருந்து வருகிறது. அச்சுவரின் அருகில் யூதர்கள் அழுதும், அதிகமாகச் சத்தமிட்டும் வழிபாடு செய்வதால் அதற்கு 'புலம்பல் சுவர்' என்று ஐரோப்பியர்கள் பெயரிட்டுள்ளனர். 'புலம்பலின் மதில்' என்றும் வரலாற்றில் சொல்லப்படுகிறது. கலிபா அப்தல் மாலிக்கு (கி.பி. 685-கி.பி. 705) என்பவரால் கட்டப்பட்ட பாறைக் கூண்டு எருசலேமில் முகம்மதியர்களின் தொழுகை இடமாகும். புனித கல்லறை ஆலயம்



புனித கல்லறை ஆலயம்

கிறித்தவர்களின் மிக முக்கிய புண்ணிய இடமாக எருசலேமில் விளங்குகிறது. விவிலியத்தில் கூறப்பட்டுள்ள ஏசு கிறித்துவின் போதனை, அவரதுஎழுச்சி, உயிர்த்தெழுதல்(மறு தோன்றல்), கிறித்துவிண்ணுலகம் அடைதல் முதலிய முக்கிய நிகழ்ச்சிகள் எருசலேமில் நடைபெற்றதாகக் கிறித்தவர்கள் விவிலியத்தின் அடிப்படையில் நம்புகின்றனர். யூதர்கள் தங்கள் மதம், தேசியம் ஆகியவற்றின் உறைவிடமாகவும் மனித வருக்கத்தின் மீட்பிடமாகவும் எருசலேமைக் கருதுகின்றனர். முகம்மது நபி எருசலேமிலிருந்த மசூதியிலிருந்து விண்ணுலகம் அடைந்தாரென இசுலாமியர் நம்பி, எருசலேமை மிகவும் உன்னதமாகவும் புனிதமாகவும் வணக்கத்திற்குரிய இடமாகவும் கருதி, எருசலேம் நகருக்கு மிகுந்த மதிப்பினை அளிக்கின்றனர்.



இசுலாமிய மசூதி

எருசலேம் நகரை முதலில் அகப்படுத்தியவர்கள் எகிப்தியர்கள் என்பது சான்றுகளின் அடிப்படையிலான வரலாற்று உண்மை. தாவீது என்ற அரசர் கி.மு. 1,000-இல் எருசலேமைக் கைப்பற்றி இசுரேல்-யூதேயா என்ற பேரரசை ஏற்படுத்தினார். இவ்வாறாக, எருசலேம் நகரம் யூதர்களின் தலைநகராக மாறியது.

இந்நகர் கி.மு. 10-ஆம் நூற்றாண்டில், மன்னர் சாலமோன் ஆட்சிக் காலத்தில் பொருளாதார முக்கியத்தன்மை வாய்ந்த இடமாக மாற்றப்பட்டது. பொனிசியப் பகுதிக்கும், அக்காபா வளைகுடாப் பகுதியில் இருந்த இலாட்டு என்ற பகுதிக்கும், எகிப்திலிருந்து மெசபொடேமியா வரைக்கும், வாணிகச் சந்தையின் முக்கிய இடமாக, எருசலேம் நகரினைச் சாலமோன் அரசர் ஆக்கினார். சாலமோன் அரசர் எருசலேம் நகரில் தந்தை வீடு என்ற அடைமொழியினைத் தாங்கிய ஒரு தேவாலயத்தைக் கட்டினார். இந்த ஆலயம் தாவீது என்ற நகரின் வடக்குப் பகுதியில் அமைந்திருந்தது. இப்பகுதி மொறையா மலைப் பகுதி ஆகும். இங்கே தான் ஆபிரகாம் என்ற கடவுள் பக்தர் கடவுளுக்காகத் தம் மகன் ஈசாக்கைப் பலி கொடுக்கத் துணிந்தார். தந்தை வீடு என்ற தேவா

லயத்தின் அருகில், சாலமோன் மன்னர் அரண்மனையையும், வேறு பல கட்டடங்களையும் அழகுறக் கட்டினார். ஒருங்கிணைந்த இசுரேல்-யூதேயா அரசு கி.மு. 930-இல் பிரிக்கப்பட்டுத் தெற்கு யூதேயா அரசின் தலைநகராக எருசலேம் விளங்கியது.இக்காலகட்டத்தில், எருசலேம் மக்கள் அன்னிய நாட்டினர் வழிபடும் கடவுளை வணங்க ஆரம்பித்தனர். ஆனால், இந்த முறையினை ஏசாயா என்ற தீர்க்கதரிசி வன்மையாகக் கண்டித்தார். எருசலேம் நகரம் கி.மு. 602-இல் பாபிலோனியர்கள் வசமாகியது. யூதர்கள் பாபிலோனுக்குத் துரத்தியடிக்கப்பட்டனர். சுமார் 50-ஆண்டுகள் யூதர்கள் பாபிலோனியாவில் இருந்தனர். பின்னர், கி.மு. 538-இல் பாரசீகத்தை ஆண்ட மன்னர் சைரசு தம் ஆட்சியைப் பாபிலோனியா, யூதேயா நாடுகள் வரையிலும் விரிவுபடுத்தினார். சைரசு யூதர்கள் எருசலேமிற்குத் திரும்ப வழிவகுத்தார்.யூதர்கள் எருசலேமிற்குத் திரும்ப ஆணை பிறப்பித்தார். யூதர்கள் தங்கள் தேவாலயத்தைப் புதுப்பித்தனர். இவ்வாலயத்தின் புதுப்பிக்கும் பணி கி.பி. 515-இல் முடிவடைந்தது. செலுசிட்டு என்ற இனத்தவர் கி.மு. 198-இல் மூன்றாம் ஆண்டியோகசு தலைமையில் எருசலேமை வென்று கைப்பற்றினர். அதன்பின் ஆசுமோனியக் குலத்தவர் எருசலேமை ஆட்சி செய்தனர். ஆசுமோனியக் குலத்தைச் சார்ந்தவர்களின் வழித் தோன்றல்கள் எருசலேமை ஆட்சி புரிந்தபோதுதான் உரோமானியர்கள் எருசலேமிற்குள் புகுந்து அந்நகரைக் கைப்பற்றினர்.

ஏராட்டு என்ற இடுமிய இனத்தைச் சார்ந்த அரேபியரால் கி.மு.37-இல் எருசலேம் நகரம் மீண்டும் கைப்பற்றப்பட்டது. இடுமிய குலத்துப் பாண்டியசு பைலேட்டு என்ற மன்னர் காலத்தில் (கி.பி. 26 – கி.பி. 37) இயேசு கிறித்து சிலுவையில் அறையப்பட்டார். மன்னர் கான்சுடண்டைன் எருசலேம் நகரை கி.பி. 4-ஆம் நூற்றாண்டில், கிறித்தவர்களின் புனித நகரமாக மாற்றினார். புனித கல்லறை ஆலயம் இவர் காலத்தில் எழுப்பப்பட்டது. அரேபியர்கள் கி.பி. 638-இல் எருசலேமைக் கைப்பற்றிக் கிறித்தவர்களைக் கொடுமைப்படுத்தினர். பின்னர், எகிப்திய சுல்தான் சாலடின் என்பவர் கி.பி. 1187-இல் எருசலேமை ஆட்கொண்டு, யூதர்களை எருசலேமிற்குள் நுழைய அனுமதித்தார். மூன்றாம் சிலுவைப் போரின் முடிவில் ஏற்பட்ட உடன்படிக்கையின்படி கி.பி.12-ஆம் நூற்றாண்டில், கிறித்தவர்கள் எருசலேமிற்குள் ஐந்து ஆண்டுக் காலம் இருப்பதற்கு அனுமதிக்கப்பட்டனர். எகிப்திய மமுல்க்குக் குலத்தவர் கி.பி. 1260-இல் எருசலேமைக் கைப்பற்றினர். பின்னர் கி.பி. 1516-இல் எருசலேம் ஆட்டோமன் இனத்தவர்கள் வசமாகியது. இவர்களது ஆட்சிக்காலத்திலிருந்து கி.பி. 19-ஆம் நூற்றாண்டுவரை, எந்தவித மாறுதலும் முன்னேற்றமும் ஏற்படாமல் எருசலேம் நகர் இருந்தது. எருசலேமும் பாலத்தீனத்தின்மற்றப் பகுதிகளும் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் மற்ற நாடுகளோடு தொடர்புடையதாக மாறியது. இந்தியாவிற்கும் தூரக் கிழக்கு நாடுகளுக்கும் செல்லும் குறுக்கு வழியாகப் பாலத்தீனம் விளங்கியதால், ஐரோப்பிய நாடுகள் அரசியல் பொருளாதார முறையில் பாலத்தீனத்தின் மீது அக்கறை செலுத்த ஆரம்பித்தன. ஆட்டோமன் பேரரசின் கிறித்தவ மக்களையும், கிறித்தவப் புனித இடங்களையும் பாதுகாக்கும் நோக்கில் சில ஐரோப்பிய நாடுகள் பாலத்தீனத்தின் மீது மிகுந்த கவனம் செலுத்திச் சில சிறப்புரிமைகளைப் பெற்றன.

முதல் உலகப் போரில் (கி.பி. 1914- 1919) ஆட்டோமன் துருக்கியர்கள் ஆங்கிலேயரால் தோற்கடிக்கப்பட்டு, பாலத்தீனத்தை விட்டு விரட்டியடிக்கப்பட்டனர். அதன்பின், பாலத்தீனத்தில் அதிகாரம் செலுத்தும் உரிமையை ஆங்கில அரசிற்குப் பன்னாட்டுக் கழகம் வழங்கியது. இச்சமயத்தில் அரேபியர்களும் யூதர்களும் பாலத்தீனத்தைக் கைக்கொள்வதில் போட்டியிட்டனர். இவர்களின் போட்டியைத் தவிர்க்கப் பிரிவினையை அடிப்படையாக வைத்துச் சில கருத்துகள் எடுத்துரைக்கப்பட்டன. எனினும், அக்கருத்துகளை யாரும் ஏற்கவில்லை.

இரண்டாம் உலகப்போரின் முடிவில் கி.பி. 1939-1945) அரேபியர் - யூதர் பிரச்சினையைத் தீர்க்க முடியாமல், ஐக்கிய நாடுகள் மன்றத்திடம் ஆங்கிலேய அரசு ஒப்படைத்துவிட்டது. பாலத்தீனம் 1947-ஆம் ஆண்டு, நவம்பர் 27-ந் தேதியிட்ட ஐக்கிய நாடுகள் மன்றத்தின் தீர்மானத்தின்படி, அரேபியர், யூதர்களுக்கிடையே பிரிக்கப்பட்டு, எருசலேம் ஒரு சர்வதேச இடமாக விளங்க வேண்டுமென அறிவிக்கப்பட்டது. ஆனால், அத்தீர்மானத்தினை அரபு நாடுகளும், பாலத்தீன அராபியர்களும் ஏற்றுக் கொள்ளவில்லை. அரேபியர்கள் யூதர்களைத் தாக்கத் தொடங்கினர். அதன் விளைவாக இருதரப்பினரிடையே போர் மூண்டது. போரின் முடிவில் ஏற்பட்ட 1949-ஆம் ஆண்டு உடன்படிக்கையின்படி, சோர்டான் அரசிற்கும் இசுரேல் அரசிற்கும் எருசலேம் நகரம் பிரித்து வழங்கப்பட்டது. பழைய நகரும்; கிழக்கு எருசலேமும் யோர்டானுக்குக் கிடைத்தது. புதிய நகரமும், மேற்கு எருசலேமும் இசுரேல் நாட்டின் ஆட்சிக்குள் வந்தது.

சோர்டான் நாட்டின் அரசு கி.பி. 1967-ஆம் ஆண்டுவரை, 19 ஆண்டுக் காலம், எருசலேமை ஆட்சி புரிந்துவந்தது.

இசுரேலுக்கும் எகிப்திற்கும் இடையே 1967 ஆம் ஆண்டு சூன் 5 ஆம் நாள் போர் மூண்டது. இப்போரின் விளைவாக சோர்டான் மன்னர் உசேன் எருசலேம் நகரினைத் தாக்கினார். ஆயினும், இசுரேல் நாடு கிழக்கு எருசலேம் பகுதியை வென்று, 1967 சூன் 27 ஆம் தேதி இசுரேலுடன் இணைத்துக் கொண்டது.

சோர்டான் நாட்டின அரசாங்கம் அரேபியர்கள் வாழுகிற எருசலேம் பகுதியைத் தன்னுடன் இணைத்துக் கொள்ள விரும்புகிறது. பாலத்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசர் அராபது எருசலேமில் அரபியர்கள் வாழும் பகுதியை மீட்கப் போராடிக் கொண்டிருக்கிறார். இதன் காரணமாக, இசுரேல் நாட்டிற்கும் அரபு நாடுகளுக்குமிடையே எருசலேம் நகரைக் குறித்து இன்றுவரை தொடர்ந்து நடைபெற்றுவரும் சச்சரவு முடிவுகாணா நிலையிலேயே உள்ளது.

'ஆன்மிக உட்கருத்து' உள்ள அநேக இடங்கள் எருசலேமில் இன்றும் உள்ளன. சிலோவாம், பெதத்தா என்ற குளங்கள் கிறித்தவர்களின் திருமறையாம் பைபிளில் குறிக்கப்பட்டுள்ளபடி, இயேசு கிறித்து அற்புதங்கள் செய்துகாட்டிய இடங்களாகும். இவ்விடங்களுக்கும் எருசலேம் நகருக்கும் நெருங்கிய தொடர்புண்டு. எருசலேம் நகரில் வரலாற்றுப் புகழ்மிக்க பல இடங்கள் உள்ளன. 'ஓமரின் தேவாலயம்' என்ற புகழ் பெற்ற தேவாலயம் எருசலேம் நகரில் உள்ளது. எருசலேமில் உள்ள தேவாலயங்கள் இயேசு கிறித்துவின் வாழ்க்கை வரலாற்றோடு தொடர்புடையன. தாவீதின் கல்லறை எருசலேமில் உள்ளது. எருசலேமில் சரித்திரப் புகழ்பெற்ற 'கோல்டன் கேட்' (Golden Gate) என்ற இடம் உள்ளது. எருசலேமின் எல்லையில்தான் சீலோவாம் குளத்தில் இயேசு ஒரு குருடனுக்குப் பார்வை வரும்படி குணமாக்கினார். விவிலியத்தில் யோவான் ஒன்பதாம் அதிகாரத்தில் இந்நிகழ்ச்சி குறிக்கப்படுகிறது. எருசலேமின் வடகிழக்குப் பகுதியில் கெத்சமெனே தோட்டம் உள்ளது. இங்குக் காணப்படும் சில மரங்கள் இயேசுவின் காலத்திலிருந்து இருக்கின்றன. பிலாத்துவின் மண்டபம் எருசலேமில் உள்ளது. இவர்தான் இயேசுவைப் பிடித்து நியாயம் விசாரித்தவர். எருசலேமின் வடகிழக்கில் கல்வாரி என்ற மலை இருக்கிறது. இங்குத்தான் இயேசுவைச் சிலுவையில் அறைந்தனர். கல்வாரி மலைக்கு அருகிலுள்ள தோட்டம் கல்லறைத் தோட்டம் (Garden Tomb) என அழைக்கப்படுகிறது. இந்தத் தோட்டத்தில் இயேசுவை அடக்கம் பண்ணிய கல்லறை உள்ளது. இங்குத்தான் இயேசு உயிர்த்தெழுந்தார். இயேசு கிறித்து அவருடைய சீடர்களோடு திருவிருந்தில் (இராப் போசனம்) பங்கேற்ற இடத்திற்குப் பெயர் மேல்வீட்டறை. விவிலியத்தில் கூறப்பட்டிருக்கும் மிகப் பழமையான அநேக இடங்கள் இன்றும் எருசலேமில் உள்ளன.

தா.வ.

துணை நூல்கள்:


**Benvenistei, Meron**, Jerusalem: The Torn City, Univesity of Minnesota Press, 1971.

**Gray, John**, A History of Jerusalem, Praeger, 1969.

**Kellek, Teddy** and **Pearlman Moshe**, Jerusalem: A History of Forty Centuries, Random House, 1968.

**Bovis, H. Eugene.**, The Jerusalem Question: 1917, Hoover Institute Press, 1971.


***எருமை மறம்*** புறப்பொருள் வெண்பாமாலை கூறும் புறத்திணைத் துறைகளுள் ஒன்று. இது போர் நிகழ்ச்சி பற்றி விளக்கும் தும்பைத் திணையின் ஒரு துறையாக அமையும். அஞ்சிப் புறமுதுகிட்டோடும் தன் படையொடு ஓடாது, அஞ்சாது அதன் பின்னே எருமைபோலத் தனித்திருந்து, ஒருவீரன் பகைப் படையினை எதிர்த்து நிற்கும் செயலை விளக்குவது இத்துறையாகும். இதனை 'வெயர் பொடிப்பச் சினங் கடைஇப், பெயர் படைக்குப் பின்னின்றன்று' என்று புறப்பொருள் வெண்பாமாலையும் (பு.பொ.வெ. தும்பை. 13), 'உடைபடை ஒருவன் புக்கு ஒருவனைக் கூழை தாங்கிய எருமையும்' என்று தொல்காப்பியமும் (தொல். புறத். 17) குறிப்பிடுகின்றன. புறநானூற்றில் மூன்று பாடல்கள் எருமை மறம் துறையில் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றைச் சாத்தந்தையார் (புறம். 80), உலோச்சனார் (புறம். 274), ஒரூஉத்தனார் (275) ஆகிய மூன்று புலவர்களும் தனித்தனியே எழுதியுள்ளனர். இத்துறைப் பாடல்களைத் தொல்காப்பிய உரையாசிரியர்கள் வெவ்வேறு புறத் திணைகளுக்கு எடுத்துக்காட்டாகக் காட்டியுள்ளார்கள்.

அ.ம.ப.

***எருமை முல்லைத் தீவு***: சிரீலங்காவிலுள்ள யாழ்ப்பாணத்தின் பழைய பெயர். காண்க: யாழ்ப்பாணம்.

***எருமையூரன்*** சங்க காலத்தில் பெருவீரர்களாக விளங்கிய குறுநில மன்னர்களுள் ஒருவன். இவன்

வேளிர் மரபில் வந்தவன் என்று கூறுகின்றனர். இளமையில் பாண்டிய மன்னராக முடிசூடிய தலையா லங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழி யனை எதிர்த்து, அப்போது ஆட்சிபுரிந்த சேர சோழ மன்னர் இருவரும் திதியன் முதலான குறுநில மன்னர் ஐவரும் ஆக எழுவர் தலையாலங்கானம் என்னுமிடத் தில் போர்புரிந்தனர். அப்போரில் எழுவரும் தோற் றோடினர். எதிர்த்த குறுநில மன்னர் ஐவருள் எருமை யூரன் என்பவன் ஒருவனாவான். எருமையூர் இவ னது ஊராக இருத்தல் கூடும். பாண்டியன் நெடுஞ் செழியனின் தலையாலங்கானப் போர் பற்றிய குறிப்பு மதுரை நக்கீரர் பாடிய அகநானூற்றுப் பாட லில் (அகம். 36) இடம் பெற்றுள்ளது. அக்குறிப்பில் 'பன்னாடையால் அரித்துத் தூய்மை செய்யப்பட்ட நறவினை மிக்வுண்ணும் எருமையூரன்' என்னும் பெர்ருளில் 'நாரரி நறவின் எருமையூரன்' என்று இவன் கூறப்பட்டுள்ளான். அ.மா.ப.

**எருமை வெளியனார்** சங்கப் புலவருள் ஒருவர். எருமை என்பது இவரது ஊர்ப்பெயர்; வெளியன் என்பது இயற்பெயர்.

இக்காலத்தைய மைசூர்ப் பகுதியும் மைசூரும் எருமை நாடு என்றும் எருமை என்றும் பழங்காலத்தில் வழங்கப்பட்டன என்பது தமிழ், கன்னடக் கல்வெட் டுகளால் அறியப்படும் செய்தி. இவர் எருமை வெளி என்னும் ஊரினர் எனவும் கூறுவர். எருமை நாட்டில் வெளியம் என்னும் ஓர் ஊர் உள்ளது. அவ்வூரினர் எனவும் சிலர் கூறுவர். வெளியனார் என்பதைப் பெயராகக் கொண்ட வேறு புலவரும் சங்க காலத்தில் வாழ்ந்துள்ளனர். ஆதலின், இவர் ஊர் எருமை எனவும், பெயர் வெளியனார் எனவும் கொள்வதே மிகுதியும் பொருந்தும்.

இவர் மகனாகிய எருமை வெளியனார் மகனார் கடலனார் என்பவரும் புலவராக விளங்கினார்.

இவர் பாடியனவாக அகநானூற்றில் ஒரு பாட லும் (73), புறநானூற்றில் இருபாடல்களும் (273, 303) உள்ளன.

பாலைத் திணையிலமைந்த அகப்பாடல் தலைவ னது பிரிவால் வருந்திய தலைவிக்குத் தோழி கார் கால வருகையைக் காட்டி ஆறுதல் கூறும் தன்மை யில் அமைந்தது. இப்பாடலில் முத்துக்கு இருளில் விழிக்கும் காட்டுப் பூனையின் கண்ணையும், கார்கால மின்னலுக்குத் தினைப்புனம் காப்பவன் வீசும் கொள் ளிக்கடடையிலிருந்து சிதறும் தீப்பொறிகளையும் உவ மையாகக் கூறியுள்ளார்.

புறப்பாடல்கள் இரண்டும் தும்பைத் திணையில் குதிரைமறம் என்னும் துறையில் அமைந்தவை. முதற் பாடல் ஒரு மறவனின் மனைவி கூறும் பாங்கில் அமைந்தது. போருக்குச் சென்ற எல்லா வீரரர்களின் குதிரைகளும் திரும்பிவந்தன. சிறிய குடுமியை யுடைய செல்வனாகிய மகனைப் பெற்ற இவள் கணவனது குதிரை மட்டும் வரவில்லை. இரு பெரிய ஆறுகள் கூடும் கூடற்பெருக்கைக் குறுக்கிட்டுத் தடுக் கும் ஒரு பெரிய மரம் வீழ்வது போல, அவன் ஏறிப் போர்புரிந்த குதிரை வீழ்ந்தது போலும் என்று அவள் வருந்துகிறாள். பெண் உள்ளத்தின் நுட்பமான உணர்வை இப்பாடல் வெளிப்படுத்துகிறது. மற்றப் பாடல் முதல் நாட் போரில் வேந்தர்கள் காண யானைகளை வீழ்த்திய ஒரு வீரன் தன்னை நோக்கி வேலை வீசிவரும் குதிரைவீரனைக் குறித்துக் கூறும் தன்மையில் அமைந்தது. அப்பாடல் குதிரைநிலை என் னும் துறைக்கு எடுத்துக்காட்டாய் நச்சினார்க்கினிய ரால் காட்டப்பட்டது. ந.மெ.


**எருமை வெளியானார் மகனார் கடல னார்** சங்கப் புலவருள் ஒருவர். இவர் தந்தை யார் எருமை வெளியனாரும் புலவர் ஆவார்.– இவ ரது பெயர் எருமை வெளியார் மகனார் மோகனக் கடலார் எனவும், எருமை வெளியனார் மகனார் மோகனக் கடலார் எனவும், எருமை வெளியனார் மகனார் மோகமானக் கடலார் எனவும் ஏடுகளில் வேறுபடக் காணப்படுகிறது.

இவரது ஊர் இக்காலத்தில் மைசூர் என வழங்கும் எருமையூர் என்பர். எருமை நாட்டு வெளி யம் என்னும் ஊர் எனவும், எருமை வெளி என்னும் ஊர் எனவும் சிலர் கூறுவர்.

இவர் பாடியதாக அகநானூற்றுப் பாடல் ஒன்று (72) மட்டுமே காணப்படுகிறது. இரவில் தலைவியைக் காணவந்த தலைவன் கேட்குமாறு தலைவி தோழிக் குக் கூறும் இப்பாடலில், தலைவன் வரும் வழியின் அருமை மிக அழகாகக் கூறப்பட்டுள்ளது. மின்னலும் மழையும் நிரம்பிய நள்ளிரவில் மின்மினிகள் மொய்த்த புற்றை ஆண்கரடி தோண்டும்போது அம் மின்மினிகள் பறக்கும் காட்சி பழுக்கக் காய்ச்சிய இரும்பைக் கொல்லன் சம்மட்டியால் அடிக்கும்போது தீப்பொறிகள் சிதறுவது போலிருக்கும். முதலைகளை யுடைய காட்டாற்றின் வெள்ளம் ஓடக்கோலை முழு கச் செய்யத் தக்கது. சூல் கொண்ட பெண் புலியின் பசிதீர்க்க யானையைக் கொன்ற ஆண்புலி பாம்பு உமிழ்ந்த மணியின் ஒளியில் அதனை இழுத்துச் செல் லும். அத்தகைய அரிய வழியில் தனது வேலே துணையாக வந்த தலைவனும் தவறுடையவன்

அல்லன்; அன்பு கொண்டு அவனை வருவித்த தோழியும் தவறுடையவள் அல்லள். இப்பெரிய துன்பத்திற்குக் காரணமான தானே தவறுடையவள் என்னும் தலைவியின் கூற்று படிப்பவர் உள்ளத்தைத் தொடுவது. இப்பாடல் தொல்காப்பியப் பொருளதிகாரத்துக் களவியல் 20-ஆம் நூற்பாவிற்கு நச்சினார்க்கினியரால் எடுத்துக்காட்டாயக் காட்டப்பட்டுள்ளது. ந.மெ.

**எல் சால்வடார்** மத்திய அமெரிக்காவிலுள்ள மிகச் சிறிய நாடு. இது சால்வடார் எனவும் கூறப்படும். இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியல் தலையீடு காரணமாக உலக அரங்கில் பேசப்படுகின்ற நாடுகளுள் இதுவும் ஒன்றாகும். மிக நெருக்கமான மக்கள் தொகை கொண்ட நாடு எல்சால்வடார் (El-Salvador). இதன் மேற்கு எல்லையாகக் கௌதிமாலாவும் (Gautimala) இதன் வடக்கு மற்றும் கிழக்கு எல்லையாக ஆண்டுராசும் (Honduras) உள்ளன. தெற்கில் பசிபிக்குக் கடல் உள்ளது. இந்நாட்டின் பெயர் அதன் தலைநகரான சன் சால்வடார் (San Salvador) என்பதிலிருந்து வந்ததாகும். இது இசுபெயின் நாட்டவர்களின் குடியேற்றப் பகுதியாக இருந்த போது அவர்களால் இப்பெயரைப் பெற்றது. இந்திய,




எல் சால்வடார்

நீக்கிரோ மற்றும் ஐரோப்பிய இரத்தக் கலப்பினமான மக்கள் இங்குப் பெரும்பான்மையாக வாழ்கின்றனர்.



எல்சால்வடார் நாட்டின் சட்டமன்றம்

அகழாய்வு ஆராய்ச்சிகளின் முடிவுகள் இந்நாட்டின் பழமையைப் பண்டைய காலத்திற்குக் கொண்டு செல்கின்றன. பெட்ரோ டி அல்வார்டோ (Pedro-De-Alvardo) கி.பி. 1524-இல் மெக்சிகோவிலிருந்து படையெடுத்து இப்பகுதி மக்களைத் தம் ஆளுகையின்கீழ்க் கொண்டுவந்தார். சன் சால்வடார் கி.பி. 1528-இல் நிறுவப்பட்டது. பண்டைய நாளில் பீப்பில் (Pipil) என்னும் மெக்சிகோப் பகுதியிலிருந்து வந்ததாகச் சொல்லப்படும் இந்நாட்டவர், இப்போது ஐரோப்பியச் சமூகப் பண்பாட்டைப் பின்பற்றுகின்றனர். இந்நாட்டின் இக்காலப் பெயர் எல் சால்வடார்க் குடியரசு. இதன் பரப்பளவு 21,393 ச.கி.மீ. நாட்டின் உயரமான பகுதி கடல் மட்டத்திலிருந்து 2,804 மீ. உயரத்தில் உள்ளது. இசுபானிய மொழி இங்கு முக்கிய மொழியாக உள்ளது. உரோமன் கத்தோலிக்கச் சமயம் பெரும்பகுதி மக்களால் பின்பற்றப்படுகிறது. ஓரவை கொண்ட சட்டமன்றம் இங்கு இயங்குகிறது. நாட்டின் தலைவரே நிருவாகத் தலைவராகவும் சட்டத்துறைத் தலைவராகவும் உள்ளார்.

பொருளாதாரத்தில் உயர்ந்த நிலையில் இருப்போரே சமூகத்திலும் உயர்ந்த இடத்தை வகிக்கின்றனர். நடுத்தர வகுப்பினர் மிக அண்மைக்கால வளர்ச்சியின் விளைவானவர்களே. பலர் வசதியாக வாழ்ந்தாலும் பெரும்பான்மையான நடுத்தரப் பிரிவினர் வசதிக் குறைவானவர்களாகவே உள்ளனர். இலேடினோ (Ladino) எனப்படும் இந்நாட்டு ஆடவரும் பெண்டிரும் மிகக் கடினமான கிராமப்புற வாழ்க்கை வாழ்கின்றனர். இன்னும் சிலர் வேட்டையாடிப் பிழைப்பை நடத்துகின்றனர். மலைப்பாங்கான இந்நாட்டில் மண்ணியல் அடிப்படையில் (Geo-logically) இளம் எரிமலை அமைப்புகள் காணப்படுகின்றன. சில பெரிய ஏரிகளும் உண்டு. மத்தியிலுள்ள பீடபூமிப் பகுதியில் மக்கள் வாழ்கின்றனர். ஆண்டுக்குச் சுமார் 2000 மி.மீ. மழை பெறுகின்ற இந்நாட்டின் முக்கிய தொழில் விவசாயம். காப்பியும் பருத்தியும் சாகுபடியில் முக்கிய இடம் பெறுகின்றன. மத்திய அமெரிக்காவின் விலங்கு-தாவர அமைப்பியலை ஒத்த இந்நாட்டில் கனிவளம் பெருமளவில் இல்லை. மக்காச்சோளம், கரும்பு, சோயா அவரை முதலியன உணவுக்காக உற்பத்தி செய்யப்படுகின்றன. அந்நியச் செலாவணியில் 2/5 பாகம் காப்பி உற்பத்தியால் கிடைக்கிறது. போக்குவரத்து மற்றும் தொடர்புச் சாதனங்கள் போதுமான அளவிற்கு வளர்ச்சியடையவில்லை. கல்வியில் இந்நாடு பின்தங்கிய நிலையிலேயே உள்ளது. மேலைநாட்டுக் கல்வி, பண்பாடு, இசை முதலியன இந்நாட்டு மக்களிடம் செல்வாக்குப் பெற்றுள்ளன. இருப்பினும் பீப்பில் பகுதி மக்களின் நாட்டுப்புறப் பாடல்கள் இந்நாட்டு இலக்கியங்களிலும் இசையிலும் இடம் பெறுகின்றன.

இரா. அ.

**கல்வி:** ஒவ்வொரு குழந்தைக்கும் அடிப்படைக் கல்வியினை ஒன்பதாண்டுகளுக்கு இலவசமாக வழங்குதல், உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் பல்வகையான பாடங்களைக் கற்கும் வாய்ப்பினை ஏற்படுத்தித் தருதல், கல்வி நிருவாகத்தை வலுப்படுத்துதல், இலவசமாக அல்லது குறைந்த விலையில் பாடநூல்களை வழங்குதல், கல்வியைத் தொலைக்காட்சி மூலம் ஒளிபரப்புதல், ஆசிரியர் பயிற்சிக் கல்விக்கு முதலிடம் தருதல், ஊரகப்புற மக்களுக்குக் கல்வி வாய்ப்புகளை அதிகப்படுத்துதல் ஆகியன எல் சால்வடார் (El Salvador) நாட்டுக் கல்வியின் குறிக்கோள்களாகச் சொல்லப்படுகின்றன. இவை முதல் கல்வி வளர்ச்சித் திட்டம் (The First Education Development Plan, 1968-72) என்னும் அறிக்கையில் குறிக்கப்பட்டுள்ளன.

ஓராண்டு முன்பள்ளிக் கல்வியும், ஒன்பதாண்டு அடிப்படைக் கல்வியும், மூன்றாண்டு மேனிலைக் கல்வியும், ஈராண்டிலிருந்து ஆறாண்டுகள் வரையுள்ள பல்கலைக்கழகக் கல்வியும் எல் சால்வடார் நாட்டுக் கல்வி முறையுள் அடங்கும். முன்பள்ளிக் கல்வியினை 5 அல்லது 6 வயதுக் குழந்தைகள் கற்கின்றனர். ஏறத்தாழ 10 விழுக்காடுக் குழந்தைகள் முன்பள்ளிக் கல்வி பெறுகின்றனர். இவர்களுள் பெரும்பாலானோர் நகர்ப்புறக் குழந்தைகளே.

அடிப்படைக் கல்வியினை (Basic Education) மாணவர்கள் 7 வயதிலிருந்து கற்கத் தொடங்குகின்றனர். அடிப்படைக் கல்வி மூன்று நிலைகளில் ஒவ்வொன்றும் மூன்றாண்டுகளாக வழங்கப்படுகிறது. முதலிரண்டு நிலைகளிலும் 1 முதல் 6 வரையான வகுப்புகள் தொடக்கக் கல்விக்குச் (Primary Education) சமமாகக் கற்பிக்கப்படுகின்றன. மூன்றாம் நிலையில் 7 முதல் 9 வரையான வகுப்புகள் கீழ் இடைநிலைக் கல்விக்கு (Lower-Secondary) இணையானதாகக் கற்பிக்கப்படுகின்றன. அடிப்படைக் கல்வியில் நாடு முழுவதற்கும் ஒரே மாதிரியான பாடத்திட்டம் (Curriculum) உள்ளது. ஒன்பதாண்டு அடிப்படைக் கல்வியில் மாணவர் சேர்க்கை விகிதம் (1977) 75 விழுக்காடு. தொடக்கக் கல்வியில் இவ்விகிதம் 88 விழுக்காடு; கீழ்இடைநிலைக் கல்வியில் மாணவர் சேர்க்கை விகிதம் 42 விழுக்காடு.

மேனிலைக் கல்வியில் (Secondary Education) 10 முதல் 12 வரையான வகுப்புகள் உள்ளன. இங்குப்பொதுக் கல்வியுடன் தொழிற்சாலையகப் பாடங்கள் (Industrial Arts), குடும்பப் பொருளியல்,

வேளாண்மை, உணவகத் தொழில், சுற்றுலாத் தொழில், கப்பல், விமானம் ஓட்டுதற் பயிற்சி, மீன்பிடித்தல், மருத்துவப் பணி, ஆசிரியர் பயிற்சி ஆகிய பாடங்களில் பயிற்சி வழங்கப்படுகின்றது. பொதுவாக, மேனிலைப் பள்ளிகள் நகர்ப்புறங்களிலேயே அமைந்துள்ளன. மொத்தம் 2 விழுக்காடு (863 பள்ளிகளுள் 14 பள்ளிகள் மட்டும்) மேனிலைப் பள்ளிகளே ஊர்ப்புறங்களில் அமைந்துள்ளன. 1977-ஆம் ஆண்டுக் கணக்கின்படி மேனிலைப் பள்ளிகளில் 60 விழுக்காடு மாணவர்களும், 40 விழுக்காடு மாணவியரும் சேர்ந்தனர். மேனிலைப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை விகிதம் 23 விழுக்காடு மட்டுமே. இவர்கள் 16-18க்கு உட்பட்ட வயதினர்.

உயர்கல்வி இரண்டு பல்கலைக்கழகங்களிலும், சிறப்புப் பின் மேனிலைக் கல்வி நிறுவனங்களிலும் (Specialised Postsecondary Institutions) வழங்கப்படுகின்றது. எல் சால்வடார் நாட்டில் உயர் கல்வி பெறுவோர் 7 விழுக்காடு (1977) மட்டுமே. உயர்கல்வி பெறுவோர் 19-24க்கு உட்பட்ட வயதினர் ஆவர். 92 விழுக்காட்டினர் பல்கலைக்கழகங்களிலும், 8 விழுக்காட்டினர் சிறப்புப் பின் மேனிலைக் கல்வி நிறுவனங்களிலும் சேர்ந்து பயிலுகின்றனர். உயர் கல்வியில் ஆண்கள் 70 விழுக்காட்டினரும் பெண்கள் 30 விழுக்காட்டினரும் பயிலுகின்றனர். எல் சால்வடாரிலுள்ள இரண்டு பல்கலைக்கழகங்களான தேசியப் பல்கலைக் கழகம் (National University) அரசின் பொறுப்பிலும் கத்தோலிக்கர் பல்கலைக்கழகம்(Catholic University) தனியார் பொறுப்பிலும் நடந்து வருகின்றன.

எல் சால்வடார் நாட்டுக் கல்வி அமைச்சகமே (Ministry of Education) நாட்டின் அனைத்து நிலைக் கல்விக்கும் பொறுப்பேற்றுள்ளது. எல் சால்வடார் 1977-இல் 4.3 விழுக்காடு மொத்த தேசிய உற்பத்தியில் (Gross Domestic Product) கல்விக்காகச் செலவழித்தது. இந்நாடு தன் வரவு செலவுத் திட்டத்தில்(1977) 64 விழுக்காடு அடிப்படைக் கல்விக்கும், 27 விழுக்காடு உயர்கல்விக்கும், 9 விழுக்காடு மேனிலை மற்றும் முன் பள்ளிக் கல்விக்கும் ஒதுக்கியுள்ளது.

எல் சால்வடார் நாட்டிலுள்ள பள்ளிகளில் பணி செய்வதற்கு ஆசிரியர்களுக்கு 'சியூடாத்து நார்மல்' (Ciudad Normal) என்னும் நிறுவனம் பயிற்சியளிக்கிறது. அடிப்படைக் கல்வி (ஒன்பதாண்டுக் கல்வி) பயின்றோருக்கு மூன்றாண்டு ஆசிரியர் பயிற்சியும், மேனிலைக் கல்வியில் 11-ஆம் வகுப்புத் தேறியோர்க்கு ஓராண்டு ஆசிரியர் பயிற்சியும், மேனிலைக் கல்வி பெற்றவர்களுக்குக் கோடைக்காலப் பயிற்சியுடன் மூன்றாண்டுகள் ஊர்ப்புறப் பள்ளிகளிலேயே மேற்பார்வைப் படிப்பும் (Supervised Teaching) வழங்கப்படுகின்றன. இப்பயிற்சிகள் பெற்ற ஆசிரியர் தொடக்கப் பள்ளிகளில் (1-6 வகுப்பு வரை) பணியாற்றத் தகுதியுடையோராவர். வகுப்பு 7 முதல் 9 வரை பாடம் கற்பிக்கும் ஆசிரியராவதற்கு ஒருவர் முன் அனுபவம் ஏதுமின்றிப் பல்கலைக்கழகத் தகுதி மட்டும் பெற்றிருந்தால் அவருக்கு ஈராண்டு ஆசிரியர் பயிற்சியும் பல்கலைக்கழகக்கல்வித் தகுதியுடன் பணியனுபவமும் பெற்றிருந்தால் நான்கு கோடைகளில் ஆசிரியர் பயிற்சியும் தரப்படுகின்றன.

எல் சால்வடார் நாட்டுப் பள்ளிகளுக்கான பாடத்திட்டத்தினைக் கல்வி அமைச்சகத்திலுள்ள தேசியத் திட்டமிடல் மற்றும் நிறுவனப்படுத்துதல் அலுவலகம் (The National Planning and Organisation Office) தயாரித்து வருகிறது. இசுபானிய மொழியே (Spanish) பள்ளிகளில் கற்பித்தல் மொழியாக உள்ளது. மாணவர்கள் வெளியே தனியார் தயாரித்துள்ள பாட நூல்களையே வாங்கிப் பயன்படுத்தி வருகின்றனர். ஊர்ப்புறக் குழந்தைகளில் பெரும்பாலோரிடம் பாட நூல்கள் வாங்கும் வசதியில்லை. மாணவர்களுக்கு அரசே இலவசமாக அல்லது குறைந்த விலையில் பாட நூல்களைத் தயாரித்து வழங்குவதற்காக, 1975-ஆம் ஆண்டிலிருந்து பாடநூல் நிறுவனம் ஒன்று இயங்கி வருகிறது.

ஊர்ப்புற, நகர்ப்புறக் குழந்தைகளிடத்தேயுள்ள கல்வித்தர வேறுபாட்டை நீக்குதல், தொழிற்கல்விக்கு முதலிடம் தந்து ஆள் தேவையினை ஈடுகட்டுதல், எழுத்தறிவின்மையை ஒழிக்க முறைசாராக் கல்வி மையங்களை விரிவு படுத்துதல், அடிப்படைக் கல்விக்கு இணையாகப் பல்கலைக்கழகக் கல்விக்கும் பணவுதவி செய்தல் ஆகியன இந்நாட்டுக் கல்வியில் தீர்க்கப்பட வேண்டிய சிக்கல்களாகக் குறிக்கப்படுகின்றன. எஸ்.த.

துணை நூல்கள்:

**Browning, D.** El Salvador: Landscape and Society, O.U.P., 1971.

Wor Band Country Study: El Salvador, Demographic Issues and Prospects, World Bank, Washington, 1979

***எல்சிங்கி*** பின்லாந்து நாட்டின் தலைநகரமும் பெருநகரமுமாகும். இதுவே அந்நாட்டின் தலைசிறந்த துறைமுகப்பட்டினம்; வாணிகத்தலம்; பண்பாட்டு மையம். பின்லாந்து நாட்டு மக்களுள் ஏறத்தாழ

ஐந்திலொரு பகுதியினர் எல்சிங்கியிலும் (Helsinki) அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் வாழ்கிறார்கள். இந்நகரம் பின்லாந்து வளைகுடாவில் அந்நாட்டின் தென்கடற்கரையில் அமைந்துள்ளது. இந்நகரம் முந்நீரகம் ஒன்றில் அமைந்து, சுற்றிலும் பல தீவுகளால் காக்கப்படுகிறது. இங்குள்ள துறைமுகம் இயற்கைத் துறைமுகங்களிலொன்று; மிக்க அழகானதுமாகும்.

எல்சிங்கி மாநகர் பழைய பகுதியையும், இக்காலத்தில் கட்டப்பெற்ற பகுதியையும் கொண்டுள்ளது. இவ்விரு பகுதிகளின் கட்டடக் கலையைப் பார்த்தால் இவற்றின் வேறுபாடுகளை உணரலாம். பழைய எல்சிங்கி நகரத்தின் மையத்தில் ஆளவைச் சதுக்கம் (Senate Square) உள்ளது. இங்குள்ள பல கட்டடங்கள் புதிய கலைப்பாணியுடன் கட்டப்பெற்றுள்ளன. அரசு மாளிகையும் உயர்ந்த உலூதர் சமயத் திருக்கோயிலும் இதில் அடங்கும். ஆளவைச் சதுக்கத்திற்கு மேற்கில் எல்சிங்கியின் புதிய வணிக மாவட்டங்கள் எழும்பியுள்ளன. புதிய கட்டடங்கள் உள்ள பகுதியில் இக்காலக் கலைப்பாணியில் அமைக்கப்பட்ட பல அழகுறு கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. எல்சிங்கியின் மக்களுள் பெரும்பாலானோர் அறைகளில் (Apartment) வாழ்கிறார்கள். இந்நூற்றாண்டின் இடைப்பகுதியிலிருந்து அறைகள் கொண்ட பல கட்டடங்கள் அலுவலகக் கட்டடங்களாக மாற்றப்பட்டுள்ளன. பெரும் அளவிலான மக்கள் எல்சிங்கியைச் சுற்றியுள்ள அண்டைப் பகுதிகளுக்குச் சென்று குடியேறியுள்ளார்கள். இவை நல்ல நகர அமைப்பின் அடிப்படையில் கட்டப்பெற்றவையாம்.

எல்சிங்கி பல்கலைக் கழகங்களின் மையமாகும். இவற்றுள் தொழில்நுட்பப் பல்கலைக்கழகமும் எல்சிங்கிப் பல்கலைக் கழகமும் சிறப்பானவை. எல்சிங்கிப் பல்கலைக் கழகமே முதன்மையான பல்கலைக்கழகமாகும். இந்நகரத்தில் பல திரையரங்கங்களும், எண்ணற்ற கலைக்கூடங்களும், அருங்காட்சியகங்களும் உள்ளன. இதன் தீவுகளிலும் பூங்காக்களிலும் படகு ஓட்டல், பனிச்சறுக்கு விளையாட்டு, நீச்சல் குளம் போன்ற பொழுதுபோக்கு விளையாட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன.

எல்சிங்கி மாநகர மக்கள் அரசு அலுவலகங்கள், வணிகத்தலங்கள், போக்குவரத்துச் சாதனங்கள், தொண்டு நிறுவனங்கள் முதலியவற்றில் பணியாற்றுகின்றனர். நகரத்திலிருந்த தொழிற்சாலைகள் நகரத்தைச் சுற்றியுள்ள அண்டைப் பகுதிகளுக்குக் கொண்டு செல்லப்பட்டுவிட்டதால் தொழிற்சாலைப் பணியாளர்களின் எண்ணிக்கை குறைந்துவிட்டது. எனினும், எல்சிங்கியே பின்லாந்தின் முக்கிய தொழிற்சாலை நகரம் என்பதை மறுக்க முடியாது. மட்பாண்டப் பொருள்கள், ஆடை அணிகள், இயந்திரங்கள், காகிதம், ஒட்டுப்பலகை (Plywood), துப்புரவு செய்யப்பட்ட சர்க்கரை, கப்பல் போன்றவை இங்குத் தயாரிக்கப்படுகின்றன.


எல்சிங்கி கி.பி. 1550-ஆம் ஆண்டில் சுவீடனைச் சார்ந்த முதலாம் கூஸ்டவசு (Gustavas I) மன்னரால் கட்டப்பட்டது. அக்காலத்தில் பின்லாந்து சுவீடன் நாட்டுக்குட்பட்டிருந்தது. உருசியாவும் சுவீடனும் பின்லாந்தில் கி.பி. 16 முதல் 18-ஆம் நூற்றாண்டு வரை எண்ணற்ற போர்களில் மோதிக் கொண்டன. இப்போர்களின்போது இருமுறை எல்சிங்கி பெரும் அழிவிற்கு ஆளாயிற்று. இந்நகரத்தின் ஆட்சி கி.பி. 1809-ஆம் ஆண்டில் சுவீடனிடமிருந்து உருசியாவின் வசமாயிற்று. உருசியாவின் சார் மன்னரான முதலாம் அலெக்சாந்தர் கி.பி. 1812-ஆம் ஆண்டில் எல்சிங்கியைப் பின்லாந்தின் தலைநகரமாக்கினார். இங்குப் பல கட்டடங்களைத் திட்டமிட்டுக் கட்டக் காரணமானவரும் அவரேயாவார். ஆளவைச் சதுக்கத்தைச் சுற்றிலும் தென்படும் கவினுறுகட்டடங்கள் பல அக்காலத்தில் கட்டப்பட்டவையாகும். இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் எல்சிங்கி தொழிற்சாலை நகரமாக உருமாறியதால் இந்நகரத்தின் மக்கள் தொகை இலட்சத்தைத் தாண்டியது.

பின்லாந்து 1917-ஆம் ஆண்டு உருசியாவிடமிருந்து சுதந்திரம் பெற்றது. அதன் பின்னர் இந்நகரில் மக்கள்தொகை படிப்படியாகப் பெருகி வளர்ந்ததுடன் வாணிகமும் சிறப்புப் பெறலாயிற்று. இக்காலத்தில் எல்சிங்கியில் பன்னாட்டு மாநாடுகள் பல நடைபெறுகின்றன. ஒலிம்பிக்குவிளையாட்டுவிழா 1952-ஆம் ஆண்டில் இங்குக் கொண்டாடப்பட்டது. எல்சிங்கி நகர மக்கள்தொகை 4,83,051; பெருநகர் பகுதியின் மக்கள்தொகை 9,10,414 (1981). இரா.அ.

## எல்சின் சலவைக் கற்சிற்பங்கள்

இலண்டனிலுள்ள பிரிட்டன் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ள தொன்மை மிக்க கிரேக்கச் சிற்பங்கள். இவற்றை எல்சின் (Elgin) என்பவர் ஏதன்சு, அட்டிகா, பிற கிரேக்க நகரங்கள் ஆகியவற்றிலிருந்து இங்கிலாந்திற்கு எடுத்து வந்தமையால் இவை எல்சின் சலவைக் கற்சிற்பங்கள் எனக் கூறப்படுகின்றன. உதுமானியப் பேரரசில் கி.பி. 1799 முதல் கி.பி. 1803 வரை இங்கிலாந்து நாட்டின் தூதராகத் தாமசு புரூசு என்னும் ஏழாம் எல்சின் பிரபு (Thomas Bruce, 7th Lord Elgin) இருந்தார். இவர் கலைச் செல்வங்களையும் தொன்மைப் பொருள்களையும் சேகரிப்பதில் மிக்க ஆர்வங் கொண்டவர். ஏதன்சி

லுள்ள பார்த்தினான் கோயிலிலிருந்து சலவைக் கற்சிற்பங்களையும் பிற தொன்மைப் பொருள்களையும் இவர் சேகரித்து அவற்றை இங்கிலாந்திற்கு எடுத்துச் சென்றார்.



எல்சின் சலவைக் கற்சிற்பங்கள்

உதுமானியத் துருக்கியர்கள் கிரேக்க நாட்டின் பழைமையை வெறுத்தனர். எல்சின் அவர்கள் அனுமதியுடன் இக்கலைப் பொருள்களைத் தொன்மைக் கோயில்களிலிருந்து பிரித்தெடுத்தார். அவற்றைக் கப்பல்களில் கி.பி. 1802 முதல் கி.பி. 1812 வரை எடுத்துச் சென்றார். இப் பொருள்களை இவர் இங்கிலாந்தில் பார்க்லேன் (Parklane) என்னுமிடத்தில் ஒரு வீட்டில் பாதுகாத்து வந்தார். கிரேக்கக் கலைப்பொருள்களைக் கவர்ந்து அவற்றிற்கு அழிவை ஏற்படுத்தியவர் என்று இங்கிலாந்தில் இவர் மீது கண்டனக் குரல்கள் பல எழுந்தன. இது குறித்து இங்கிலாந்துப் பாராளுமன்றமும் எதிர்ப்புத் தெரிவித்தது. பைரன் பிரபுவும் (Lord Byron) தம் கவிதையில் எல்சினை வசைபாடினார். தாம் இயற்றிய 'மினர்வாவின் சாபம்' (The Curse of Minerva) என்னும் கவிதையில் எல்சினின் இச்செயலைக் கண்டித்தார். சிலர் இப்பொருள்கள் யாவும் பயனற்றவை என்றும் கூறினர்.எனவே, எல்சின் இப்பொருள்களைப் பொது மக்களின் பார்வைக்கு வைத்தார். இப் பொருள்களின் சிறப்பையும் மதிப்பையும் பார்வையிட்ட மக்கள் இப்பொருள்கள் கலைச்சிறப்பு வாய்ந்தவை என உணர்ந்தனர். அதனால், ஆங்கிலப் பாராளுமன்றம் இவற்றை அரசுடைமையாக்க விரும்பி ஒரு குழுவை நியமித்தது. அக்குழு இப் பொருள்களைப் பார்வையிட்டு அரசுடைமையாக்க ஆவன செய்தது. எல்சின் கி.பி. 1810-ஆம் ஆண்டு தம் கலையார்வத்தை எதிர்த்தவர்களைப் பெரிதும் கண்டித்தார். இறுதியாக கி.பி. 1812-ஆம் ஆண்டு இங்கிலாந்திற்கு 80 பெட்டிகளில் கலைப் பொருள்கள் கப்பல் மூலமாக வந்தன. இவை யாவற்றையும் சேர்த்து அரசு கி.பி. 1816-ஆம் ஆண்டு 35,000 பவுனுக்கு எல்சினிடமிருந்து விலைக்கு வாங்கியது. இது எல்சின் செலவிட்ட தொகையை விட மிகக் குறைந்த தொகையாகும். சு.இரா.

**எல்சின், முதலாம்:** சேம்சு புரூசு என்னும் இயற்பெயர் கொண்ட முதலாம் எல்சின், கி.பி. 1811-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் பிறந்தார். இவர் எல்சின் (Elgin) பண்ணையின் எட்டாம் கோமான் எனவும், கின்கார்டன் பண்ணையின் 12-ஆம்கோமான் எனவும் அழைக்கப்படுகிறார். இவர்தம் தந்தையாருக்கு இவர் இரண்டாம் மகனாவார். ஈட்டன் (Eton) என்னும் இடத்தில் தம் தொடக்கக் கல்வியைப் பெற்றார். பின்னர் ஆக்சுபோர்டுப் பல்கலைக் கழகத்தின் கல்லூரிகளில் ஒன்றான கிரைசுட்டு சர்ச்சில் தம் பட்டப்படிப்பினை கி.பி. 1832-ஆம் ஆண்டு வெற்றிகரமாக முடித்துக் கிரேக்க இலத்தீன் மொழிப் பாடங்களில் (Classics) முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார். சின்னாட்களிலேயே இவர் மெர்டன் கல்விக் கழகத்தின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார் (A Fellow of Merton). இந்தியாவில் இவருக்கு முன்தலைமை ஆளுநராகப் பணியாற்றிய தல்அவுசி பிரபுவும் கானிங்கு பிரபுவும் இவருடன் பயின்ற நண்பர்கள். தம் முப்பதாம் வயதில் சி.எல். குமிங்புரூசு என்பவரின் மகளை மணந்தார். அதே ஆண்டில் (கி.பி. 1841) சூலைத் திங்களில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில், மக்களவைக்குச் (House of Commons) சௌத்தாம்டன் பகுதியிலிருந்து தாராளவாத - பழைமைப்பற்றுக் கட்சியின் (Liberal Conservative) உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். எனினும், இவர் தேர்தல் செல்லாது என வழக்குமன்றத்தில் தீர்ப்பளிக்கப்பட்டமையால் மக்களவை உறுப்பினர் பதவியை இழந்தார். எனினும் தம் தந்தையாரும் மூத்த சகோதரரும் ஏற்கனவே இயற்கையெய்தியமையால் இசுகாட்சுக் கோமகன் (Earl of Scotch) பதவிக்கு உரியவரானார்.

இக் கோமகனுக்கு இவரின் ஆட்சித்திறன் ஆற்றலறிந்து அரசு கி.பி. 1842-ஆம் ஆண்டு சமைக்காவின் ஆளுநர் பதவியை வழங்கியது. இவர் பொறுப்பினை

ஏற்றபோது சமைக்கா பலவகையிலும் தாழ்வுற்றுக் கிடந்தது. அந்நாட்டின் நிலக்கிழார்கள் அடிமை வணிக ஒழிப்பினால் பெரிதும் அல்லலுற்றனர்; நிதி நிலை மிகவும் சீர்கெட்டிருந்தது; அங்கு வாழ்ந்த நீக்கிரோ மக்களின் நெறிமுறைகளும் அறிவார்ந்த பண்பும் மிகவும் இழிவாகவே இருந்தன. என்றாலும் இவருக்கு முன் ஆளுநர் பொறுப்பில் இருந்து நற்புகழ் பெற்ற சர் சார்லசு மெட்காபு ஆட்சியில் எல்லாத் துறைகளிலும் முன்னேற்றம் காணப்பட்டது.

ஆனால், பலதுறைகளில் செய்து முடிக்க வேண்டிய பணிகள் குறிப்பாக நீக்கிரோ மக்களுக்குக் கல்வி புகட்டும் பணி முற்றுப் பெறாமலேயே இருந்தது. இவற்றை மிகத்துணிவுடன் ஏற்றுத் திறமையுடன் செயற்பட்டு எல்சின் கோமகன் வெற்றி கண்டார். வேளாண்மைத்துறையில் இயந்திரக் கருவிகளைப் பயன்படுத்தும் முறையை ஊக்குவித்தார். அதனால், சமைக்காவின் வேளாண்மை ஆக்கம் பெற்றது. பொதுவாக இவர் ஆட்சி மிகவும் நிறைவுடைய ஒன்று எனப் பாராட்டப்படுகிறது.

இவர் சமைகாவை விட்டு நாடு திரும்பிய உடனே கி.பி. 1846-ஆம் ஆண்டு கனடாவின்தலைமைஆளுநராக அந்நாளில் ஆட்சி செய்த 'விக்கு' (Whig Government) அரசு இவரை நியமனம் செய்தது. அப்பொழுது இவர் மனைவி இயற்கையெய்தியதால் அடுத்த ஆண்டே தர்காம் (Durham) கோமானின் மகளான இலூயிசா மேரி லாம்டன் (Louisa Mary Lamton) என்பாரை இரண்டாம் மனைவியாக மணந்து கொண்டார். எல்சின் தம் பதவியில் இருந்து கி.பி.1855-ஆம் ஆண்டு விலகிய போது, இவர் ஆட்சி முறை முற்றிலும் வெற்றிகரமானது எனப் பல்லோராலும் பாராட்டப்பட்டது.

இதன்பின்னர் இரண்டு ஆண்டுகள் எல்சின் எவ்விதப் பொறுப்பிலும் ஈடுபாடு கொள்ளாமல் இருந்தார். ஆனால், கி.பி. 1857-ஆம் ஆண்டு சீனாவிற்கும் ஆங்கிலப் பேரரசிற்குமிடையே நிலவிய உறவில் ஏற்பட்ட சீர்கேட்டின் காரணமாக இவர் சீனாவிற்கு அரசியல் தூதுவராக அனுப்பப்பட்டார். இவருக்குத் துணையாகச் சீனாவில் போராட அனுப்பப்பட்ட படையைக் கானிங்கு பிரபுவின் வேண்டுகோளுக்கு இணங்கி, இந்தியாவிற்கு அனுப்பிவைத்தார். அதனால், சற்றுக் காலதாமதமாகவே இவர் சீனாவில் செயற்படமுடிந்தது. தமக்கெனப் பிறிதொரு படையை ஆங்கிலப் பேரரசு அனுப்பிவைத்த பின்னரே காண்டனைத் தாக்கிக் கைப்பற்றினார். அதன் விளைவாகத் தியன்சின் (Tientsin treaty) உடன்படிக்கைக்குச் சீனா இசைந்தது. எனினும், இவ்வுடன்படிக்கையில் கையொப்பமிட அந்நாட்டின் பேரரசர் தயக்கம் காட்டியதால் மீண்டும் ஒருமுறை எல்சின் சீன நாடு செல்ல வேண்டியதாயிற்று. இந்த உடன்படிக்கையினால் இங்கிலாந்தின் வணிகம் சீன மண்ணில் வளம் பெற வாய்ப்பு ஏற்பட்டது. மறுப்புரையாளர் கிறித்தவர்களுக்கும் உரோமன் கத்தோலிக்கர்களுக்கும் தக்க பாதுகாப்புத் தர சீனஅரசு உத்தரவாதம் தந்தது. தம் முதல் பயணத்தின் போதே இவர் சப்பான் நாட்டிற்குச் சென்று அந்நாட்டுடன் வணிக உடன்படிக்கை ஒன்றினைச் செய்து கொண்டார். அதனால், சில சப்பானியத் துறைமுகங்கள் பிரிட்டன் வணிகத்திற்குத் திறந்து விடப்பட்டன.

சீனாவினின்றும் தாயகம் திரும்பிய எல்சினை ஆங்கிலப் பேரரசு ஒரு மாத காலங்கூட வாளாவிட்டு வைக்கவில்லை. இந்தியாவின்தலைமைஆளுநராகவும், அரசப்பேராளராகவும் கானிங்கு பிரபுவிற்குப் பின் பொறுப்பேற்குமாறு இவர் பணிக்கப்பட்டார். இதுவே இவர் வகித்த கடைசிப் பணியாகும். தம்மை ஒரு பொல்லாங்கு சூழ்ந்துள்ளது என்ற உணர்வுடனேயே இவர் அப்பொறுப்பினை ஏற்றார் எனத் தோன்றுகிறது. இவர் கி.பி. 1862-ஆம் ஆண்டுச் சனவரி திங்கள் இறுதியில் இங்கிலாந்தைவிட்டுப் புறப்பட்டு மார்ச்சு திங்கள் 12-ஆம் நாள் கல்கத்தா வந்தடைந்தார், தம் அலுவலகப் பொறுப்பினை இவர் ஏற்றபொழுது தாம் ஒரு பெரிய போருக்குப் பின், ஒரு பெரிய மனிதருக்குப் பின், சாதாரண பணியினை மிக அடக்கத்துடன் ஆற்ற வந்துள்ளதாகக் குறிப்பிட்டார். இவர் ஓராண்டுக் காலம் கல்கத்தாவிலே தங்கி இடைவிடா உழைப்பினை நல்கித்தலைமைஆளுநர் பதவிக்கு உரிய அலுவல்கள் அனைத்தையும் நேர்த்தியுறக் கவனித்தார். பின்னர், கி.பி. 1863-ஆம் ஆண்டு சிம்லாவிற்குப் புறப்பட்டார். வழியில் வாரணாசி, ஆக்ரா, தில்லி போன்ற இடங்களில் தம் தர்பாரை இவர் நடத்தி, இந்தியாவிலுள்ள வடபுலத்துச் சிற்றரசர்கள், பிரபுக்கள் பலரின் அறிமுகத்தினையும் நட்புறவினையும் பெற்றார். இத்தகைய நல்லோர் திடீரென ஏற்பட்ட மாரடைப்பால் கி.பி. 1863 நவம்பர் 20-ஆம் நாள் தர்மசாலா என்னும் குளிர் வாசத்தலத்தில் உயிர் நீத்தார். இவர் இயற்கையெய்திய பொழுது இவரின் இல்லக் கிழத்தியும் இளையமகளும் உடன் இருந்தனர். ஓர் ஆட்சியாளரின் வாழ்வு இயற்கையின் தட்பவெப்பங்களைத் தாங்கவியலாமல், கடுமையான உழைப்பின் காரணமாக விரைந்து செயற்பட்டுத் திடீரென முடிந்து விட்டது.

எல்சின் கோமானின் பண்பு நலங்கள் இங்குள்ளோர் நெஞ்சைக் கவர்வன. தம் தாயக அரசு எந்தப் பொறுப்பினை நல்கினாலும் அதனை உடனே

ஏற்றுச் செயற்படும் பாங்கு இவர்பால் படிந்திருந்தது. செயல்முறைக்கு ஒத்த காரியங்களையே இவர் மேற்கொள்வார்; அவற்றைக் கடமையுணர்வுடன் செய்து முடிப்பார். இந்தியத் தட்பவெப்பம் தம் உடல் நிலைக்கு ஒத்துவராது என்பதை இவர் உணர்ந்திருந்தும், நீண்ட நெடுந்தொலைவில் பெரும்பொறுப்பினை வகிப்பது மிகவும் கடினம் என்பதை இவர் உள் நெஞ்சம் உரைத்த போதிலும், கடமையுணர்வால் உந்தப்பட்டே இவர் கல்கத்தாவிற்கு வந்தார் எனக் கூறலாம். இவர் பணியாற்றிய காலம் மிகக் குறைவே. இறைவன் நீண்ட ஆயுளைத் தந்திருப்பார் எனின் இந்திய ஆட்சியாளர்கள் பட்டியலில் ஒரு சிறந்த இடத்தை இவர் பெற்றிருக்கக் கூடும். இவரின் தனி வாழ்க்கை அன்பின் இலக்கியம். இவரின் கடிதங்கள் இவரின் எழுச்சிமிகு அன்பினையும், இவர் இல்லறத்தில் கொண்ட ஈடுபாட்டினையும் நன்கு புலப்படுத்தி நிற்கின்றன. சமயத் துறையில் தளர்வறியாக் கோட்பாடுகளை உடைய நேர்த்திமிகு செம்மனம் இந்நல்லோரின் மனம். எளிய நடையில் மிகக் கவர்ச்சியுடன் எழுதும் எழுத்தாளர். நினைவாற்றலுடன், பல எடுத்துக்காட்டுகளுடன் பேசும் திறன்படைத்த நாநலமிக்க பேச்சாளர். பெ.இரா.

**எல்சின், இரண்டாம்:** முதலாம் எல்சினின் மகனான இரண்டாம் எல்சின் கி.பி. 1849–ஆம் ஆண்டில் பிறந்தார். கி.பி. 1894 முதல் 1899 வரை இந்திய அரசப் பேராளராகப் பதவி வகித்தார். முற்போக்குவாதக் கட்சியைச் சேர்ந்த இவர், ஆட்சிபுரிவதில் வல்லவர் என்ற பெருமையைப் பெற்றிருந்தார். இவருடைய சாதனைகளில் பல இந்தியக் கலகங்களை அடக்கியது குறிப்பிடத்தக்கதாகும். வடமேற்கு எல்லை மாகாணத்திலிருந்த சித்ரால் என்ற சிற்றரசு ஆங்கிலேயரின் ஆதிக்கத்தை எதிர்த்து, கி.பி. 1895–இல் கலகம் விளைவித்தது. உள்நாட்டுக் கலகத்தின் விளைவாக, அந்நாட்டுச் சிற்றரசர் கொலையுண்டார். ஆங்கிலேயப் பேராளராக அங்கே இருந்த இராபர்ட்டுசன் என்பாரை நாட்டை விட்டுத் துரத்த ஏற்பாடுகள் நடந்தன. இக்கலகத்தை அடக்குவது எல்சினுக்கு எளிதாக இல்லை. இங்கிலாந்தின் அரசுக்கும் அவருக்கும் இதுபற்றி கருத்து வேற்றுமைகளும் நிலவின. சித்ரால் நாட்டை அடியோடு கைப்பற்றிவிட வேண்டுமென்ற அவர் கருத்தை, ஆங்கில அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. இறுதியில் இரண்டு படையெடுப்புகளை நிகழ்த்தி, எல்சின் கலகத்தை அடக்கினார். இவரால் அடக்கப் பெற்ற மற்றொரு கலகம் மாப்பிள்ளைமார் கலகம். கேரளப் பகுதியில் வாழ்ந்த மாப்பிள்ளைமார் என்ற இசுலாமியர், கி.பி. 1836 முதல் கி.பி. 1855 வரை இருபத்திரண்டு முறை கலகங்கள் செய்தனர். அவர்கள் கி.பி. 1852–ஆம் ஆண்டில் செய்த கலகத்தில், இந்துக்கள் பலர் கொடுமையாகக் கொலையுண்டனர். மலையாள மாவட்ட ஆட்சியாளர் கோனேலி என்பவர் கி.பி. 1855–இல் கள்ளிக்கோட்டையில் அவருடைய வீட்டிலேயே படுகொலை செய்யப்பட்டார். அக்காலங்களில் அவற்றை அடக்குவதற்கு அரசியலார் செய்த முயற்சிகள் பலனளிக்கவில்லை. மீண்டும் கி.பி. 1873 முதல் 1885 வரை பல கலகங்கள் விளைந்தன. அவர்கள் பயிரிட்டு வந்த நிலங்களிலிருந்து மாப்பிள்ளைமார் வெளியேற்றப்பட்டதால் இக்கலகங்கள் தோன்றின. இச்சிக்கல்களைத் தீர்க்க எல்சின் அரசாங்கம் தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கலகங்களை ஒருவாறு கட்டுப்படுத்தியது. வாழ்க்கையில் தாழ்ந்த நிலையில் இருந்த மாப்பிள்ளைமார்களுக்குப் பல சலுகைகள் கிடைக்கும்படி சட்டத்திருத்தங்கள் செய்யப் பெற்றன.

ஆங்கிலேய - உருசியக் குழு ஒன்று கி.பி. 1896–ஆம் ஆண்டில் பாமீர் பீடபூமிப் பகுதியில் ஆப்கானித்தானத்திற்கும் மற்ற நாடுகளுக்குமிடையே உள்ள எல்லையை வரையறுத்தது. பெ.இரா.

**எல்சுமிர்** கிரின்லாந்திற்கு வடமேற்கே உள்ளதொரு தீவு. இத்தீவு கனடாவின் பிராங்கிளின் (Franklin) மாவட்டத்திற்கு உரியது. ஆர்க்டிக்கு வட்டத்திலுள்ள தீவுக் கூட்டங்களுள் எல்சுமீர் (Ellesmere) மூன்றாவது பெரிய தீவாகும். இத்தீவின் தென்கிழக்குக் கடற்கரையை கி.பி. 1660–இல் வில்லியம் பாபின் (William Baffin) என்பவர் கண்டுபிடித்தார். சர் எட்வர்டு இங்கில்பீல்டு (Sir Edward Inglefield) என்பவர் கி.பி. 1852–ஆம் ஆண்டு இத்தீவிற்கு எல்சுமீர் முதல் கோமகனின் நினைவாக எல்சுமீர் எனப் பெயரிட்டார். இத்தீவில் உரிகா (Eureka) என்ற இடத்திலும் அலர்ட்டு (Alert) என்ற இடத்திலும் வானிலை ஆய்வு மையங்கள் உள்ளன. இத்தீவில் பல மலைகளும் பனி மூடிய பகுதிகளும் உள்ளன. தீவின் கடற்கரைப் பகுதிகளில் மிகப்பெரிய கடற்கால்கள் உள்ளன. இவற்றுள் மேற்குக் கடற்கரைப் பகுதியில் உள்ள சென் சவுண்டு – கிரிலி கடற்கால் (Sen Sound –Greely Flord) ஏறக்குறைய 320 கி.மீ. நீளமுடையது. முற்காலத்தில் இத்தீவில் எசுக்கிமோக்கள் குடிபெயர்ந்து வாழ்ந்தனர். ஆனால், நிலையாக இவர்கள் இங்குத் தங்கவில்லை. தெ.பா.

**எல்டன் மேயோ:** கலைத் துறையிலும் அறிவியல் துறையிலும் மனித உறவுகளைப் பற்றிய ஆய்வுகள் ஒரு புதிய முயற்சியே ஆயினும், அவற்றைப் பற்றிய கருத்துகள் நீண்ட காலத்திற்கு முன்பே

இருந்தன. மனிதன் தனியாகவோ சிறிய குழுவாகவோ கூடித் தொழில் மேற்கொண்டான். மனிதர்களின் வேலைத் தொடர்புகள் எளிதாகவும் நேரடியாகவும் இருந்தன. மனித உறவுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்த முன்னோடிகளுள் எல்டன் மேயோவும் (Elton Mayo) ஒருவர். எல்டன் மேயோவின் உள் ஆய்வானது, தொழில் ஆய்வின் மூலம் தொழிற்சாலையின் சூழலை அறிந்து கொள்வதாகும். இவர் தொழில் ஆய்வின் மூலம் நிறுவனம் என்பது ஓர் ஒழுங்கு முறை; அதில் தொழிலாளி ஒரு முக்கிய உறுப்பினன் என்ற கருத்திற்கு வந்தார். இவரும் இவர் உதவியாளர்களும் நடத்திய ஆய்வின் மூலம் அறிவது யாதெனின், 'தொழிலாளி என்பவன் ஒரு சாதாரண கருவி அல்லன், மாறாக அவன் ஒரு சூழ்நிலையின் இடைப்பட்ட சிக்கலான ஆளுமையாவன் என்பதாம். மேயோவின் கருத்தின்படி மனித சிக்கல்கள் ஒரு புதிய அகலமான களமாகும். மேலும், முன்னேற்றத்திற்குரிய ஒரு சூழ்நிலையுமாகும்.

மேயோ ஆசுத்திரேலியாவிலுள்ள 'அடிலெய்டு' என்னுமிடத்தில் எழுவர் உள்ள குடும்பத்தில் இரண்டாம் மகனாகப் பிறந்தார். இவர் தொழில் குடும்பத்திலிருந்து வந்தவர். இவர் தம் தொழிலைத் தேர்ந்தெடுப்பதில் மிகவும் அனுபவம் மிக்கவராக இருந்தார். முதல் உலகப் போரின் இறுதியில் மேயோ அவர்தம் உதவியாளரின் உதவியுடன் பயிற்சித் திட்டம் ஒன்றிற்கு ஏற்பாடு செய்தார். அப்பொழுது போர்த் தொல்லைகளால் அவதியுற்ற போர் வீரர்களுக்குச் சிகிச்சை அளித்தார். மேயோவின் இந்தச் செயலானது இவருக்கு 1919-ஆம் ஆண்டு குயின்சுலாந்துப் பல்கலைக்கழகத்தில் தத்துவத் துறையில் இடம் கிடைக்க ஏதுவாயிற்று.

மேயோ பென்சில்வேனியாப் பல்கலைக்கழகத்திலிருந்த பொழுது மனித உறவுகளைப் பற்றிய ஆராய்ச்சியினை ஒரு நூற்பாலையில் தொடங்கினார். இவர் 1926-ஆம் ஆண்டு ஆர்வார்டுப் (Harward) பல்கலைக் கழகத்தில் பதவி ஏற்றார். அங்கு இவர் ஆண்டர்சன். எல்.சே. (Handerson, L.J.) என்பவரின் உதவியுடன் தொழிற்சாலை ஊழியர்களின் உளவியல் பற்றியும் சமூகச் சிக்கல்கள் பற்றியும் ஆய்வினைச் செய்தார். இந்த ஆய்வு உளவியலுக்கும் சமூகச் சிக்கல்களுக்கும் வழிகாட்டியாக அமைந்திருந்தது.

மேயோ 1927-ஆம் ஆண்டு உரோத்திலசுபெர்கர் எப்.சே., திக்சன் டபிள்யூ. சே, ஒய்ட் கெடு, டி.என். ஆகியோருடன் மேலைநாட்டு மின்சார நிருவனத்தில் (Western Electric Programme) ஆதார்ன் பணிகளை (Hawthorne Works) மேற்கொண்டு அறிக்கையொன்றினை அளித்தார். அந்த அறிக்கைதான் இப்பொழுது புகழ்பெற்ற 'ஆதார்ன் ஆய்வு' (Hawthorne Studies) எனப்படுகின்றது. ஓர் அலுவலகத்திலுள்ள காரியகருத்தாக்களை ஆராய்ச்சிக் கோட்பாட்டுக்குள் எவ்வாறு ஏற்றுக் கொள்ள முடியும் என்பதை இவர் ஆராய்ந்தார். இவர் நடத்திய ஆய்வில் அந்த ஆய்வின் வரைமுறைகளுக்கும் ஆய்வின் முடிவுகளுக்கும் முக்கிய காரண கருத்தாவாக இருந்தார். முதலில் இவர் தனிமனித அனுசரிப்பில் உள்ள சிக்கல்களில் ஆர்வம் காட்டினார். நிறுவன அடிப்படையிலும் சமூக அடிப்படையிலும் தனிமனிதனின் சிக்கல்களைப் பற்றி ஆராய்ந்தார். மேலும் இவர், வார்னர், டபிள்யூ. (Warner, W.) என்பவருடன் சேர்ந்து குழுவிலும் நிறுவன அமைப்பிலும் உள்ள சிக்கல்களை அலசினார்.

சமூக அமைப்பு, தனிமனிதச் சிக்கல்கள் ஆகிய இரண்டும் மேயோவின் அடிப்படைக் கருத்துகளாக இடம் பெற்றிருந்தன. மேயோவின் ஆய்வுகள் கடுமையாகக் கருத்துரைக்கப்பட்டன. மேயோவின் தத்துவங்களில் 'வேற்றுமை'க்கு முதன்மை தரப்படவில்லை என்றும், இவர் நிறுவன ஒற்றுமையைத் தனிமனித மற்றும் குழுக்களின் விருப்பத்தினால் ஏற்படுத்த முடியும் என்றும் எண்ணுவதாகக் கூறினார்கள். மேலும், தொழிற் சங்கங்களின் பங்கினைக் கணிக்கத் தவறிவிட்டார் என்றும் கூறினார்கள். மேற்கூறிய விவாதங்களுக்கு மேயோவின் உதவியாளர்கள் பதில் கூறும் முகமாக எந்த ஒரு நிறுவனச் சமூகத்திலும் ஒற்றுமையை நிறுவுவதற்காக எந்தவித மாறுபட்ட நோக்கமும் மேயோவிற்கு இல்லை என்றும் கூறினார்கள். மேயோ மனிதச் சிக்கல்களைத் தீர்க்கும் பொருட்டு நல்ல ஆக்க வழி முறைகளை ஆராய்ந்து நோக்கும் பொழுது, தொழிற்சங்கத்தைக் குறித்து விருப்பு வெறுப்பற்ற நிலையில் இருந்தார் என்பதை அறியலாம். மேலும், இவர் மேலைநாட்டு மின்சாரத் திட்டத்தில் (Western Electric Programme) இருந்த பொழுது மிகவும் வலுவற்ற தொழிற்சங்க உறவுகளே இயங்கி வந்தன. இவர் தம் நிறுவனம் பற்றிய சிந்தனைகளில் தொழிற்சங்கத்தின் முக்கியத்துவத்தைச் செம்மையாகச் செயற்படுத்தவில்லை. இவர்தம் ஆய்வுகளுக்கு முக்கியத்துவம் ஏற்பட்டதற்குக் காரணம் இவர் தொழில் செய்யும் பொழுது மனித நடத்தைக்கு முக்கியத்துவம் கொடுத்ததமையே யாகும்.

மேயோ ஆழ்ந்த சிந்தனையும் ஆக்கத்திறன் மிக்க சமூக ஆற்றலும் கொண்டவராக விளங்கினார். சமூக ஆராய்ச்சிக்காக இவரைப் போன்று உழைத்தவர்கள் மிகவும் சிலரே. மேயோ நடைமுறை அறிவியல் என்னும் சொல் வழக்கிற்கு வருவதற்கு முன்

பாகவே நடைமுறை அறிவியலாளராக இருந்து மறைந்த பேரறிஞராவார். சீனி.நா. & கொ.இ.

துணை நூல்கள்:


**Davis, K.,** Human behaviour at work: Organizational behaviour, Tata McGraw Hill Publishing Company Ltd, New Delhi, 1977.

**French,W.L.** etal., Understanding Human behaviour in organizations, Harper and Row Publishers, Chicago, 1985.

**Luthans, F.,** A Modern behavioural approach to management, McGraw Hill Book Company, New York, 1973.


***எல்பா*** மத்திய தரைக்கடலில் தசுகனிக்(Tuscany) கடற்கரைக்குத் தென்மேற்கே ஏறத்தாழ 11 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள தீவாகும். மலைப்பாங்கான இத்தீவு இத்தாலி நாட்டில் உள்ள இலெக்கான் மாநிலத்தைச் சேர்ந்ததாகும். ஏறத்தாழ 223 சதுர கி.மீ. பரப்பளவு கொண்ட இத்தீவில் 1961 -ஆம் ஆண்டில் மக்கள் தொகை 27,602 ஆகும். முன் காலத்தில் உரோமானியர் கில்லா என்றும் கிரேக்கர் ஏதாலியா என்றும் இத்தீவை அழைத்தனர். ஏதாலியா என்றால் கிரேக்க மொழியில் 'புகை மூட்டமான இடம்' என்பது பொருள். அக்காலத்தில் இங்கு இரும்புச் சுரங்க வேலை முக்கியமான தொழிலாக இருந்தது. தாதுப் பொருளை உருக்கி உலோகத்தைப் பிரித்து எடுப்பதற்காகச் செயற்பட்டுக் கொண்டிருந்த ஊது உலைகளிலிருந்து வந்த புகை மூட்டத்தால் கிரேக்கர்கள் அவ்வாறு அழைத்திருக்கலாம். இப்போது இத்தீவின் கிழக்குக் கடற்கரையில் நான்கு இடங்களில் இருமபுச் சுரங்கங்கள் உள்ளன. ஈயம், சலவைக்கல், பளிங்குக்கல் ஆகியவையும் இங்குக் கிடைக்கின்றன.

இத்தீவில் நிலவும் குளிர்ந்த தட்பவெப்ப நிலை ஒலிவத் (Olive) தோட்டங்கள், திராட்சைத் தோட்டங்கள் ஆகியவற்றின் வளச்சிக்குப் பெரிதும் உதவுகிறது. பழவகைகள் நிறையக் கிடைக்கின்றன. மது வகைகள் தயாரிப்பது இங்கு ஒரு சிறப்பான தொழிலாகும்.

இரும்புச் சுரங்கத் தொழில் வீழ்ச்சி அடைந்ததும் சுற்றுலாத் துறை இங்கு வளர்ச்சி பெற்றுள்ளது. பியாதோலா, மார்சியானா, மரினா, மானா-டீ-காம்போ, போர்ட்டோ அசுரோ ஆகியன சிறந்த சுற்றுலா மையங்களாகும். இத்தீவின் தலைநகரமான போர்ட்டோ மெராயோ வடக்குக் கடற்கரையில் ஒரு வளைகுடாவில் அமைந்துள்ளது. நெப்போலியன் தங்கி இருந்த பிளாகினா-டீ-முலினி கடற்கரையைப் பார்த்த வண்ணம் இங்குத்தான் உள்ளது. இங்கிருந்து 6 கி.மீ. தொலைவில் நெப்போலியனுடைய கோடைக்கால இருப்பிடமாக இருந்த வில்லா-சான்-மார்ட்னோ உள்ளது. அங்கு அழகிய வண்ண ஓவியங்கள் கொண்ட அருங்காட்சியகம் ஒன்று அமைந்துள்ளது.

இடைக்காலத்தில் பைசாவின் ஆட்சியின் கீழ் எல்பா இருந்து வந்தது. பின்னர், அத்தீவு கி.பி. 1399 -இல் பியாம் பினோ பிரபுக்களின் ஆட்சியின் கீழும், கி.பி. 1548-இல் பிளாரன்சு நாட்டு முதலாம் காசிமோவின் ஆட்சியின் கீழும் வந்தது. அதன்பின் இத்தீவு கி.பி. 1596-இல் இசுபானிசு ஆட்சியின் கீழும், கி.பி. 1709-இல் நேப்பிள்சு ஆட்சியின் கீழும், கி.பி. 1802-இல் பிரான்சு ஆட்சியின் கீழும் வந்தது.

நெப்போலியன் கி.பி. 1814-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் இரண்டாம் வாரத்தில் பேரரசர் பதவியைத் துறந்தபின் எல்பாத் தீவுக்கு நாடு கடத்தப்பட்டார். ஆனால், பேரரசர் என்ற பட்டத்தை மட்டும் அவர் வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டு, எல்பாத்தீவை ஆட்சி செய்யும் உரிமையும் அளிக்கப்பெற்றார். அதற்காக அவருக்கு ஆண்டு ஒன்றுக்கு இருபது இலட்சம் பிராங்கு ஓய்வூதியம் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. கி.பி.1814 ஏப்பிரல் 20-ஆம்நாள் எல்பாத் தீவிற்குப் புறப்பட்ட நெப்போலியன் ஏறத்தாழ பத்து மாதங்கள் அங்கு ஆட்சி செய்தார். அதன்பின் கி.பி. 1815 பிப்பிரவரி 26-ஆம் நாள் அவர் 700 வீரர்களுடன் எல்பாத் தீவிலிருந்து தப்பிப் பாரிசுக்கு வந்து 'நூறு நாட்கள்' (Hundred days) ஆட்சியைத் தொடங்கினார். நெப்போலியன் வீழ்ச்சிக்குப் பின் எல்பாத்தீவு மீண்டும் தசுகனி ஆட்சியின் கீழ் வந்தது. அதன்பின் தசுகனியுடன் எல்பாத் தீவும் கி.பி. 1860 -இல் இத்தாலியுடன் இணைந்தது. அ.இரா.

***எல்பின்சுடன் ஆய்வறிக்கை:*** ஆங்கிலேயர் வருகைக்கு முன்னும், அவர்கள் வந்த பின்னர் ஆட்சியைக் கைப்பற்ற முயன்ற தொடக்க காலங்களிலும் இந்திய நாட்டில் காணப்பட்ட கல்வி முறை நாட்டுக் கல்வி (Indigenous Education) எனக் குறிக்கப்படும். நாட்டுக் கல்வி பற்றிய ஆய்வினைச் சர் தாமசு மன்றோ (Sir Thomas Monro) என்பவர் கி.பி. 1822-ஆம் ஆண்டில் சென்னை மாகாணத்தின் எல்லா மாவட்டங்களின் அப்போதைய கல்வி நிலை பற்றிய விவரக்குறிப்புகளையும் மாவட்ட அலுவலரிட

மிருந்து திரட்டினார். இவரைப் போலவே, கி.பி. 1829-ஆம் ஆண்டில் பம்பாய் மாகாண ஆளுநராக விருந்த மவுண்டு இசுடுவர்ட்டு எல்பின்சுடன் (Mount Stuart Elphinstone) அம்மாகாணத்தில் ஒரு கல்வி யாய்வினை நடத்தி ஆய்வறிக்கை வெளியிட்டார்.

எல்பின்சுடன் ஆய்வறிக்கையின்படி, கல்வி பெறுவோர் எண்ணிக்கை சென்னையை விடப் பம்பாயில் குறைவாக இருந்தது. எனினும், எல்லாச் சிற்றூர்களிலும் பள்ளிகள் இருந்தன. தொடக்கக் கல்வி பரவலாகக் கற்பிக்கப்பட்டது. கோயில்கள், தனியார் வீடுகள், ஆசிரியர் இல்லங்கள் ஆகியவற்றில் பள்ளிகள் அமைந்திருந்தன. ஒவ்வொரு பள்ளியிலும் மாணவர் எண்ணிக்கை சராசரியாக 15 ஆகும். எல்லாப் பள்ளிகளும் ஒற்றை ஆசிரியர் பள்ளிகளேயாம். பள்ளிகளில் சேரக் கட்டணம் பெறப்பட்டது. அரிசன வகுப்பு மாணவர்கள் தவிர,பிற வகுப்பினரின் குழந்தைகள் இப் பள்ளிகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். பல்வேறு வகுப்பினரும் ஆசிரியர் தொழிலில் ஈடுபட்டிருந்த போதிலும், அவர்களுள் பெரும் பான்மையானோர் அந்தணர் வகுப்பினரே. ஆசிரியர் ஊதியம் உரூ. 3/- முதல் உரூ.5/- வரையில் இருந்தது. இவ்வூதியத்துடன் பிற பொருள்களும் அன்பளிப்பும் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டன.

ஆசிரியர்களுக்கு ஊதியம் குறைந்திருப்பினும் சமுதாயத்தில் அவர்களது மதிப்பு உயர்வாக இருந்தது. கல்வி கற்ற மாணாக்கர்களுள் பெரும்பாலோர் உயர்குடி வகுப்புச் சிறுவர்களாயிருந்தனர். நாட்டுப் பள்ளிகளில் 6 முதல் 14 வரை வயதுடைய மாணவர்கள் பயின்றனர். அவர்கள் பள்ளியில் பயின்ற கால அளவு சராசரி 2 அல்லது 3 ஆண்டுகளாகும். வாசித்தல், எழுதுதல், கணக்கு ஆகியன முதன்மையாகக் கற்பிக்கப்பட்டன. அச்சிடப்பட்ட பாடநூல்கள் பொதுவாகப் பயன்படுத்தப்படவில்லை. ஆசிரியருக்குத் துணையாக வயது வந்த மாணாக்கர் கற்பிக்கும் முறையும் இருந்தது.

எல்பின்சுடன் ஆய்வு முழுமையான விவரங்களைத் தந்ததாகக் கூற முடியாது. ஏனெனில், பம்பாய்க் கல்வித்துறை கல்வியின் மேலான அக்கறைக் குறைவினால் விவரங்களைத் திரட்டுவதில் அசட்டையாக இருந்தது. எனவே, எல்பின்சுடன் ஆய்வு பம்பாயின் அன்றைய கல்வி நிலைமை பற்றி முழுமையாக உணர்த்தவில்லையென்றாலும், ஓரளவே தெளிவாக்கியது எனலாம். எஸ்.த.

## எல்பின்சுடன் மவுண்டு இசுடுவர்ட்டு

பம்பாய் மாநில ஆளுநர். இவர் கி.பி.1779-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 6-ஆம் நாள் சான் எல்பின்சுடன் பிரபுவின் நான்காம் மகனாய்ப் பிறந்தார். தம்பார்டன் வட்டத்தில் உள்ள கம்பர்னால்டு (Cumbernauld) என்னும் இடத்தில் உயர்நிலைப் பள்ளியில் தம் தொடக்கக் கல்வியைப் பெற்றார். தம் உறவினர் ஒருவரின் உதவியால் கி.பி. 1796-ஆம் ஆண்டு வங்காள ஆட்சித்துறைப் (Bengal Civil Service) பள்ளியில் சேர்ந்த எல்பின்சுடன் (Mount Stuart Elphinston) படிப்படியாக உயர்ந்து தம் ஆட்சித் திறமையை மிகத் தெளிவுற வெளிப்படுத்தினார். அந்நாளில் வில்லியம் கோட்டையில் கிழக்கிந்திய வாணிகக் குழு பணியாளர்களுக்குப் பயிற்சி தருவதற்கெனத்தொடங்கப்பட்ட கல்லூரியில்சேர்ந்து பயின்றார். இளமையில் கல்வியில் ஏற்பட்ட இழப்பினை ஈடுசெய்ய இது அவருக்குப் பெரிதும் உதவியது. சீரிய இலக்கியங்களை ஓய்வான நேரங்களில் கற்றார். தம்மை ஒரு கற்றுத்துறை போகிய அறிஞராகவும் ஆக்கிக் கொண்டார். வரலாற்று இலக்கியங்களில் தூசிடிடீசின் நூல்கள் இவரைப் பெரிதும் கவர்ந்தன.

ஆர்தர் வெல்லெசுலிக்குத் தனிச்செயலராகவும் பின்னர், கி.பி. 1804-இல் நாகபுரியில் ஆங்கிலப் பேரரசின் நிலவரத் தூதராகவும் (Resident) இவர் செயற்பட்ட பாங்கு சிறப்புடைத்து. மராத்தியப்போரில் வெல்லெசுலிப் பிரபுவின் பணியாளர் குழுவில் ஒருவராய் இருந்து திறம்படச் சேவைபுரிந்ததை அந்நாளைய ஆங்கில ஆட்சியாளர்கள் அறிவர். ஆப்கானியநாட்டு அரசவையில் ஆங்கிலப் பேரரசின் தூதராகவும் இவர் சில காலம் பணிபுரிந்தார். அந்நாளில்தான் 'காபூல் அரசின் வரலாறு' (Account of the Kingdom of Kabul) என்னும் நூலினை எழுதினார். அது கி.பி. 1815-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.

இவர்தம் ஆட்சித்திறனை அறிந்த கிழக்கிந்திய வாணிகக்குழு ஆட்சியாளர்கள் கி.பி. 1819-இல் பம்பாய் மாநிலத்தின் ஆளுநராக இவரை அமர்த்தினர். சற்றுத் தயக்கத்துடன் அப்பொறுப்பினை இவர் ஏற்றார். எனினும், தம் முத்திரையை அம்மாநிலத்தின் வரலாற்றில் தம் நல்லாட்சித் திறத்தினால் பொறிக்கத் தவறவில்லை. முதலில் தாராளக் கொள்கையுடைய (Liberal Views) ஆட்சியாளர் என்ற எண்ணத்தை மக்கள் மத்தியில் உருவாக்கினார்.

பம்பாய் மாநிலத்தில் நடைமுறையில் இருந்த சட்டத்தை ஒழுங்குபடுத்திப் பம்பாய் சட்டத் தொகுப்பு என்ற ஒன்றினை உருவாக்கினார். அத் தொகுப்பு 40 ஆண்டுக் காலம் நிலைத்து நின்றது. ஆட்சித் துறை இந்திய மயமாக்கப்பட வேண்டும் என்னும் கொள்கையை அந்நாளில் இவர் வலியுறுத்தி

னார். கல்வித்துறை முன்னேற்றத்திற்காகவும் இவர் அயராது உழைத்தார். வட்டார மொழிக் கல்வியின் ஆக்கத்திற்காக ஒரு சங்கத்தை கி.பி. 1820-ஆம் ஆண்டு நிறுவினார். இவரின் அருந்தொண்டினைப் பாராட்டும் முகத்தான் அம்மாநில மக்கள் இவரின் பெயரால் கி.பி. 1842-இல் ஒரு கல்லூரியினை அமைத்து இவர் புகழை நிறுவினர். இந்தியநாட்டின் பண்டைய ஆட்சிமுறை அமைப்புகள் குறிப்பாகப் பஞ்சாயத்து முறை இவரைப் பெரிதும் கவர்ந்தன. வருவாய்த்துறை வசூலில் பட்டேல் (Patel) பதவியை நிலைபேறு உடையதாய் ஆக்க வேண்டும் என முயன்றார். முற்போக்குச் சிந்தையும் தாராளக் கொள்கையும் மக்கள் பால் பரிவும் கொண்ட இந் நல்லாட்சியாளர் கி.பி. 1827-இல் பம்பாய் ஆளுநர் பதவியைத் துறந்து தாயகம் திரும்பினார். வில்லியம் பெண்டிங்குப் பிரபுவிற்குப் பிறகு தலைமை ஆளுநர் (Governor General) பதவியை ஏற்குமாறு கிழக் கிந்திய வாணிகக்குழுவினர் வற்புறுத்திய போதிலும் அதை ஏற்க மறுத்தார். எப்பணியும் ஏற்காமல் சில காலம் ஓய்வாகவே இருந்து கி.பி. 1856-இல் இயற்கை எய்தினார்.

ஆங்கில இந்திய வரலாற்றில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியினை ஓர் ஒளி மிகு படலமாக மாற்றிய தகைசால் ஆட்சியாளர் நால்வருள் இவரும் ஒருவராவார். ஏனையோர் மன்றோ, மால்கம், மெட்கா ஆவர். தம் 16-ஆம் வயதில் இந்தியத் துணைக் கண்டத்திற்கு வருகை புரிந்து நெடுங்காலம் இம்மண்ணில் தங்கி, எழுச்சி மிகு அன்போடு அதை நேசித்து, மக்களின் வாழ்வியல் முறையை நேரில் கண்டுணர்ந்து, அவர்கள் தம் பண்பாட்டின் பல்வேறு கூறுகளை ஆய்ந்து அதன் பின் அம்மக்களின் வரலாற்றை எழுதியவர் எல்பின்சுடன் ஆவார். இவர் தம், 'இந்து முகமதிய இந்திய வரலாறு' (History of Hindu and Muhammadan India) சமுதாயத்தின் நிலையைத் தெளிவுறப் படம் பிடித்துக் காட்டியுள்ளது. இது சேம்சு மில் எழுதிய ஆங்கில இந்திய வரலாற்றினின்றும் (History of British India) முற்றிலும் மாறுபட்ட ஒன்றாய் விளங்குகிறது. அவ்வரலாற்று நூல் மில் என்பாரின் மெய்யறிவுக் கோட்பாட்டுக்கு முரண்பாடாக இருப்பதோடு மட்டுமல்லாமல், புத்துணர்வுக் கோட்பாட்டினைச் (School of Romanticism) சார்ந்ததாகவும் விளங்குகின்றது. சேம்சுமில்லின் வரலாற்று நூல் தெளிவான விளக்கங்களைத் தருகின்ற அறிவு செறிந்த முதல் நூல் என எல்பின்சுடன் கருதினாலும், அவர்தம் கருத்துகளை மறுப்பதே இவரது முதன்மையான நோக்கமாகும். காரணம் அவர் தாம் கொண்ட கொள்கைகளுக்கு வரலாற்றினை அடிமைப்படுத்தி விட்டார் என்பதே எல்பின்சுடனின் குற்றச்சாட்டாகும். இவர் தம் முடைய நூலினை கி.பி. 1834-ஆம் ஆண்டு தொடங்கினார். ஏழாண்டுக்காலம் கடுமையாக உழைத்து அதனை எழுதி முடித்தார். எனினும், அப்பணி முற்றுப் பெறாத நிலையில் நின்றுவிட்டது. இந்திய வரலாற்றினைப் பண்டைக் காலத்தில் இருந்து தொடங்கி, இடைக் காலத்தில் முகம்மதியர்கள் ஆட்சியைப் பற்றி விரிவாக எழுதினாலும் இந்தியாவை ஆங்கிலேயர்கள் வெற்றி கொள்ளும் வரை தான் இவரால் எழுத முடிந்தது. பண்டைய, இடைக்கால, இந்திய வரலாறுறை ஆங்கிலம் அறிந்தோர் தெரிந்து கொள்ள எல்பின்சுடனின் வரலாற்று நூல் தலைசிறந்த நூலாக இன்றளவும் இலங்குகிறது. சேம்சுமில்லின் உணர்ச்சிப் பெருக்கு இவர்தம் நூலில் காணக்கிடைக்காத ஒன்று. ஆற்றொழுக்கான நடையில் தெளிவுற எழுதும் பாங்கு எல்பின்சுடனுடைய கைவந்த கலையாகும். தனி மனிதப் பண்புகளுக்கு உயிரூட்டம் கொடுத்து உணர்ச்சிச் செறிவுடன் இந்நூல் எழுதப்படவில்லையென்றாலும் சில வரலாற்று நூல்களுடன் இதனை ஒப்புநோக்கும் போது இவர்தம் நூல் உணர்ச்சிக் கொந்தளிப்பின்றி நடுநிலை பிறழாமல் வரலாற்று நிகழ்ச்சிகளுக்கு விளக்கமளித்து வடிக்கப்பட்டுள்ளது. எல்பின்சுடன் தாம் வரலாற்று நூல் எழுதும்போது தம்மைச் சார்ந்தோரையும் அப்பணியில் ஈடுபட ஏற்றதோர் சூழ்நிலையை உருவாக்கினார். மராத்தியர் வரலாற்றைத் தாம் எழுத எண்ணிய போதிலும் அவ்வெண்ணத்தை விடுத்துத் தம் கீழ்ப் பணிபுரிந்த கிராண்டு தபு (Grant Duff) என்பாரை அப்பணியினை ஏற்கச் செய்தார். அவரும் அப்பணியினைத் திறம் படச் செய்து கி.பி. 1825-ஆம் ஆண்டு மராத்திய வரலாற்றினை இரண்டு பகுதிகளாக எழுதி முடித்தார். இவ்வரிசையில் வைத்து எண்ணக் கூடியவர்கள் வில்லியம் எர்க்சுகினும் (William Erskine), சேம்சு தாடும் (James Tod) ஆவர். பெ. இரா.

**எல்பே ஆறு:** ஐரோப்பியக் கண்டத்தின் முக்கிய பெரிய ஆறுகளுள் ஒன்றான எல்பே (Elbe) செக்கோசுலோவாகியா, போலந்து நாடுகளின் எல்லைப் புறத்திலிருந்து தொடங்கி, தெற்கு நோக்கியும் மேற்கு நோக்கியும் ஓடிப் பரவிப் பொகீமியா நாட்டின் வழியே பாய்ந்து, செருமனியில் புகுந்து, பின் வடகடலில் கலக்கிறது. கிழக்குச் செருமனியையும் மேற்குச் செருமனியையும் பிரிக்கும் எல்லையின் ஒரு பகுதியாகவும் இது அமைந்துள்ளது. இந்த ஆறு 1,165கி.மீ. நீளமுள்ள எட்டுப் பெரும் துணை ஆறுகளைக் கொண்டு ஐரோப்பாவின் பல பகுதிகளைச் செழிப்பாக்கிவந்துள்ளது. இதன் பல கால்வாய்கள் மூலமாகவும் பற்பல பயன்களை

ஐரோப்பியர் அடைகின்றனர். குறிப்பாக அவை ஏற்று மதி வாணிகத்திற்கு உதவுகின்றன. மேற்குச் செருமனியின் விவசாய, பொறித் தொழில் வளர்ச்சிக்கு எல்பே மிகவும் உதவியாக இருந்து வந்திருக்கிறது. செருமனியின் 89, 493 ச.கி.மீ. பரப்புள்ள எல்பே பள்ளத்தாக்கினால் பொருள்வளங்கள் மிகப் பெருகியுள்ளன. நாவாய்ப் போக்குவரத்து குறிப்பிட்ட எல்லைகளுக்குள் தடையின்றி நடைபெறுகிறது. இவ்வாற்றின் கரையோர நகரங்களில் மிகவும் புகழ் பெற்றவை வருமாறு:- திரெசுடன், மாக்டிபர்கு, விட்டன்பர்கு, ஆம்பர்கு, குக்சுஆவன் முதலியன. ஐரோப்பாவிலேயே மிகப் பெரிய துறைமுகங்களுள் ஒன்றான ஆம்பர்கு எல்பே ஆற்றுக்குக் கடப்பாடுடையது. பல்வேறு வகையான மீன்கள் இந்த ஆற்றில் மிகுதியாக உண்டு. தெ.பா.

**எல்ருப்பு, காரல் அடால்பு** (கி.பி. 1857 –1919) என்பவர் தென்மார்க்கைச் சேர்ந்த எழுத்தாளர்; கவிஞர்; புதினவாசிரியர். நாடக ஆசிரியருமாவார். இவரும் இவர் நாட்டைச் சேர்ந்த என்ரிக்கு போண்டோப்பிடன் (Henrik Pontoppidan) என்பவரும் 1917-ஆம் ஆண்டிற்கான இலக்கியத்திற்கான நோபல் பரிசைப் பகிர்ந்துக் கொண்டனர்.

எல்ருப்பு (G. Gellerup, Karl Adoph) தென்மார்க்கைச் சேர்ந்த உரோநோல்ட்டு (Roholte) என்னும் ஊரில் கி.பி. 1857-ஆம் ஆண்டு சூன் திங்கள் இரண்டாம் நாள் பிறந்தார்; மதகுருமாருக்கான கல்வி பயின்றார். ஆனால், இளமையிலேயே சமய ஈடுபாட்டில் இருந்து விலகிச்சார்சு பிராண்டன் (George Branden) என்னும் அறிஞரின் போதனைக்குட்பட்டுச் சுதந்திரச் சிந்தனையாளராக மாறினார். கிறித்தவ மார்க்கத்திலிருந்து விடுபட்டு அவர் சிந்தனை வளர்ந்ததை அவருடைய முதலிரண்டு புதினங்கள் எடுத்துக் காட்டுகின்றன. இவர் கி.பி. 1883-ஆம் ஆண்டு சுவிட்சர்லாந்து, கிரீசு போன்ற கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப்பயணம் செய்த போது இவர் மனம் பகுத்தறிவிலிருந்து திரும்பி, கருத்து முதல் வாதத்தை அடிப்படையாகக் கொண்ட தத்துவ மார்க்கத்தில் சென்றது. அம் மனவளர்ச்சி ஏக்பார்டு (Hagbard), சைன், (Signe) மின்னா (Minna) என்ற நாடகங்களில் காணக் கிடக்கிறது. செருமானிய மாதினை மணந்த இவர் கி.பி. 1892-ஆம் ஆண்டு திரெசுடன் (Dresden) என்னும் நகரின் அருகில் கிளாட்செ (Klotzsche) என்னுமிடத்தில் தன் இறுதிக் காலம் வரை வாழ்ந்தார். இவருடைய வாழ்வின் இறுதிப் பகுதியில் அவர் மனம் கிரேக்க, செருமானிய மற்றும் கீழை நாடுகளின் இலக்கியங்களிலும் தத்துவங்களிலும் ஈடுபட்டது. குறிப்பாக வேக்னர் (Wagner), சோபன்ஏவர் (Schopen hauer) கருத்துகள், இந்திய மதங்கள் ஆகியவற்றில் ஈடுபட்டார். இவருடைய ஆன்மிக வளர்ச்சியையும் தத்துவார்த்த வளர்ச்சியையும் 'தி' பில்கிரிம் காமானிடா (The Pilgrim Kamanita – 1906) என்னும் புதினம் வெளிப்படுத்துகிறது. இவருடைய இறுதிப் புதினங்களான கடவுளின் தோழர்கள் (God's Friends –1916), பொற்கிளை (The Golden Bough–1917) ஆகியவை மீண்டும் இவர் கிறித்துவ மார்க்கம் நோக்கிச் சென்றதைக் காட்டுகின்றன. இவருடைய பல்வேறு ஈடுபாடுகளில் இந்திய ஆன்மிகத் துறையில், குறிப்பாகப் புத்த மதத்தில், இவர்க்குள்ள பிடிப்பை 'தைவெல்ட்டு வாண்டரர்'(Die Welt Wanderer–1910) என்ற நூல் விளக்குகிறது. இவருடைய நூல்கள் செருமானிய மொழியில் முதன்முதல் எழுதப்பட்டுப் பின்னர் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டன.

இவர் குறிக்கோள்வாதி (An Idealist-கி.பி. 1879) முதலிய புதினங்களையும், இராட்சியார்ன் (Rodt Jorn) –1882) என்ற கவிதைத் தொகுப்பையும், பிரினில்டு (Brynhild–1884) என்ற துன்பியல் நாடகத்தையும், தெமிகிரிசு (Thamigris–1887) முதலிய நாடகங்களையும் எழுதியுள்ளார். இவர் 1919-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 11-ஆம் நாள் இயற்கை எய்தினார். எஸ். இரா.

**எல்லப்ப நயினார்** கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர். திருவண்ணாமலைக்கு 25 கல் தொலைவிலுள்ள தாழையூர் இவரது ஊராகும். இவர் சைவ சமயத்தினர்; வன்னிய குல சத்திரிய மரபினைச் சேர்ந்தவர்; செல்லப்ப நாயக்க அரசர் காலத்தில் வாழ்ந்தவர். அம்மன்னர் திருவண்ணாமலை அருணாசலேசுவரர் கீழைக் கோபுரங் கட்டினார். இப்புலவர் பெயர் எல்லன், எல்லான், எல்லநயினான், எல்லான் காலிங்கன், எல்லபூபதி, காலிங்கராயன், காலிங்கராயன் உண்ணாமுலை எல்லப்ப நயினார் எனப் பலவாறாகச் சாசனப் பாடல்களில் வழங்கப்பட்டுள்ளது. இவர் தந்தை உண்ணாமுலை எல்லப்ப நயினார் என்பதனைக் 'காலிங்கராயன் உண்ணாமுலை எல்லப்ப நயினார்' என்னும் தொடர் அறிவிக்கிறது. இவர் வீரைக் கவிராச பண்டிதர் இயற்றிய சௌந்தரியலகரிக்குச் சிறந்த உரை எழுதியுள்ளார். திருவருணையந்தாதி முதலிய நூல்கள் இயற்றியுள்ளார். அருணாசல புராணம், திருவிரிஞ்சைப் புராணம் ஆகியவற்றையும் இவர் இயற்றினார் என்று சிலர் கூறுவர். ஆனால், அந்நூல்கள் சைவ எல்லப்ப நாவலர் இயற்றியன என்று ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். வடமொழியிலும் தென்மொழியிலும் புலமை மிக்கவர். சேறைக் கவிராசர் என்னும் ஆசுகவி

ஒருவர் இவர் காலத்தவர். சைவ எல்லப்ப நாவலர் இவருக்குப் பிற்பட்டவராவர். வீ.சே.

**எல்லப்ப நாவலர்** திருமலை நாயக்க மன்னர் காலமாகிய கி.பி.17-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தமிழ்ப்புலவர். இவரைச் சைவ எல்லப்ப நாவலர் எனவும் அழைப்பர். இவர் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த பூந்தாழை என்னும் ஊரினர் என்பர்; சிலர் இவரைத் திருவெண்காட்டையடுத்த இராதா நல்லூரினர் என்பர். இவர் திருவண்ணாமலையைச் சார்ந்தவர் என்றும், யாழ்ப்பாணத்தவர் என்றும், பிற வாறும் கூறுவாருமுளர். இவர் கார்காத்த வேளாளர் குலத்தில் காலிங்கராயன் கோத்திரத்தில் தோன்றியவர்.

எல்லப்பன் என்பது கதிரவனின் பெயர்; ஒளி நிறை கதிரவனைப்போல் பிற்காலத்தில் தன் மகன் புகழொளி பரப்பட்டும் என்ற நினைப்பில் இவரின் பெற்றோர்கள் இவ்வாறு பெயரிட்டிருக்கலாம். இவர் மரபினருக்கு இராதா நல்லூரைச் சேர்ந்த இலையமுது கூடத்து எல்லையம்மன் குலதெய்வம்; ஆதலால் அந்தத் தெய்வ நினைப்பில் எல்லையப்பன் எனப் பெற்றோர்கள் பெயரிட, அப்பெயர் “எல்லப்பன்” என மரூஉச் சொல் ஆகியிருக்கலாம்.

சைவசமயத்தில் ஆழ்ந்த பற்றும் சைவப் புலமையும் கொண்டு விளங்கியமையால் ‘சைவ’ என்னும் அடைமொழியுடன் இவர் அழைக்கப் பெற்றார். தருமபுர ஆதீனத்தலைவரால் திவ்யகவி, நாவலர் எனச் சிறப்புப் பட்டங்கள் தரப்பெற்றுப் பாராட்டப் பெற்றவர் இவர். சைவச் சான்றோர்களால் சைவகவி, சைவசிகாமணி என்றெல்லாம் போற்றப் பெற்று அருட்புலமையாளராகத் திகழ்ந்தார். இவர் மனைவியும் கல்வி கேள்விகளிலும் சைவசீலத்திலும் சிவபக்தியிலும் மிகச்சிறந்து விளங்கியவராவர்.

இவர் கி.பி. 12-ஆம் நூற்றாண்டினர் எனவும், கி.பி. 13-ஆம் நூற்றாண்டினர் எனவும், கி.பி. 17-ஆம் நூற்றாண்டினர் எனவும் ஆராய்ச்சியாளர்களால் பலவாறாகக் கூறப்படுகிற அழகிய மணவாளதாசர் என்னும் பிள்ளைப்பெருமாளையங்காரை எல்லப்ப நாவலருடன் இணைத்துப் பல நிகழ்ச்சிகளைக் கூறுவர்; எடுத்துக்காட்டாக ஒரு நிகழ்ச்சியைக் காணலாம்.

நாவலர் தருமையாதீனத்தில் மடத்துத் தலைவருடன் உரையாடிக் கொண்டிருக்கையில் புலவரொருவர் அங்கு வந்து, பிள்ளைப் பெருமாளையங்கார் பாடிய திருவரங்கக் கலம்பகத்தைக் காட்டிப் புகழ்ந்து கூறினாராம். அது கேட்ட நாவலர், ‘ஐயங்கார் தாம் எழுதிய நூலுள் அம்மானையில் அடிசறுக்கினார்’ எனக் கூறி, அன்றிரவே திருவருணைக் கலம்பகம் பாடியருளினார் என்பர். ஊன்றிப்பார்ப்பின் அம்மானைப் பாடலில் ஐயங்கார் பிழையுற்றவராகப் புலப்படவில்லை. எனவே, இச்செய்தி திருவரங்கக் கலம்பகத்தைப் போன்ற சிறப்புடைக் கலம்பகம் சைவத்திலும் தோன்ற வேண்டுமென்ற நினைப்பில் திருவருணைக் கலம்பகம் தோற்றுவிக்க அமைந்த உத்தியே இதுவெனலாம். இவ்விரு கலம்பகங்களுக்குள்ளே ஒப்புமைக் கூறுகள் பல உள்ளன. இவ்விரு கலம்பகங்களும் மிகச் சிறந்தவையெனப் புலவர்களால் பாராட்டப் பெறுகின்றன.

சிவபத்தியீடுபாட்டினால் ‘சைவ’ என்ற அடைமொழி பெற்றவரேயெனினும் முருக பக்தியும் மிகக் கொண்டவர். இவர் அருளிய திருவாரூர்க் கோவையில் காப்புச் செய்யுளில் வழக்கமாய்க் கூறும் விநாயகருடன் வானவரைக் காக்கும் மயில்வாகனனையும் புகழ்ந்து பாடுகிறார்.

நாவலர் பாடிய புராணங்களாக அருணாசல புராணம், திருவிரிஞ்சைப்புராணம், தீர்த்தகிரிப்புராணம், திருவெண்காட்டுப் புராணம், செங்காட்டங்குடிப்புராணம், செவ்வந்திப்புராணம் (சிராமலை) ஆகிய ஆறு நூல்களைக் கூறுவர். நாவலர் இவ்வாறு பாடிய தலபுராணங்கள் பிற்காலத்தே மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை தலபுராணங்கள் பலவற்றைப் பாடியருளக் காரணமாக இருந்தன எனலாம். இவர் இயற்றிய தலபுராணங்கள் அத்தலங்களின் தெய்வநலப் பெருமையை உரைப்பதுடன் கற்பார்க்கு வாழ்க்கையில் பல படிப்பினைகளையும் உணர்த்தவல்லவை; சிவபக்தியையும் சீலத்தையும் செந்தமிழறிவையும் ஊட்டவல்லவை.

எல்லப்ப நயினார் பாடிய அருணையந்தாதியை இவர் பாடியதாகச் சிலர் கருதுவர்; இவர் பாடியனவாகக் கருதப்பெறும் அருணாசலபுராணம், திருவிரிஞ்சைப் புராணம் ஆகியவை எலலப்ப நயினார் பாடியவை யென்பர். செ.வை.

**எல்லம்மன்:** இப் பெண் தெய்வம் வடஆர்க்காடு மாவட்டக் கிராமங்களில் உள்ள தேவதையாகும். இத்தெய்வம் இருக்கும் இடம் ‘படைவீடு’ எனப்படுதலால், இதனைப் படைவீட்டம்மன் என்றும் அழைப்பர். படைவேட்ட அம்மன் என்று கூறுவதுமுண்டு.

தலைப்பகுதி மட்டுமே சிலையாகக் காணப்படும். பிற்காலத்தில் முழு உருவமாகவும் வழிபடலாயினர்.

இத்தெய்வம் தலையோடு மட்டுமே காட்சிதரக் காரணம் உண்டு. சமதக்கினியின் மனைவி இரேணுகா தேவி தன் கற்புத் திறத்தால் பச்சை மண்பானை யில் தண்ணீர் எடுத்து வருவது வழக்கம். ஒருநாள் அவ்வாறு தண்ணீர் எடுக்கும்பொழுது வானத்தில் சென்ற கந்தருவனைக் கண்டு கலக்கமுற்றாள். கற் பில் மாசு ஏற்பட, பச்சை மண்பானை உடைந்து விட்டது. ஞானத்தால் இச்செயலை உணர்ந்த சமதக்கினி தம் மகன் பரசுராமனை அழைத்து மனைவியின் தலையை வெட்டச் சொல்கிறார். பரசுராமன் தன் தாயின் தலையை வெட்ட முற்படும்பொழுது புலைப் பெண்ணொருத்தி தடுக்க முனைகின்றாள். பரசுராமன் அவள் தலையையும் வெட்டி விடுகிறான். தாம் ஏவிய காரியம் முடிந்த பிறகு தம் மகன் வீரத்தைக் கண்டு மகிழ்ந்து, வரம் ஒன்று கேள் என்று சமதக்கினி கூறுகிறார். தாய்மீது பூற்றுக் கொண்ட பரசுராமன், தன் அன்னை மீண்டும் உயிர் பெறுவதையே வரமாக வேண்டினான். மந்திர நீரை அவன் கையில் கொடுத்து, ‘உடலோடு தலையைச் சேர்த்து வைத்து இந்த நீரைத் தெளி; உன் அன்னை உயிர் பெறுவாள்’ என்று கூறினார். மகிழ்ச்சியுற்ற பரசுராமன் அவசரத்தில் தன் தாயின் தலையைப் புலைச்சியின் உடம்பொடு இணைத்துத் தண்ணீர் தெளித்து விடுகிறான். பிறகுதான் தவறு தெரிந்தது. இரேணுகாதேவி பின்னர்த் தீப்பாய்ந்து உயிரை மாய்த்துக் கொள்கிறாள். அன்னையின் தலையை மட்டும் வைத்துப் பரசுராமன் வழிபட்டான். வடஆர்க்காடு மாவட்டத்தில் ஆடிமாதம் வெள்ளிக்கிழமைகளில் இத்தேவதைக்கு விழா நடைபெறும்.

பரசுராமன் பற்றிய செய்திபற்றிக் கூறுகையில் அவன் தன் தந்தையின் ஏவலின்படி தாயை வெட்டிக் கொன்ற பின், அவன் வேண்டிக் கொண்டதற்கிணங்க, சமதக்கினி இறந்தவளின் தலை மட்டிலும் உயிர் பெறுமாறு வரமளித்தார் என்றும், அத்தலை வடிவினை மட்டுமே பின்னர் ஊர் எல்லையில் வைத்து மக்கள் வழிபடுவாராயினர் என்றும் ஒருசிலர் கூறுகின்றனர். பரசுராமன் தன் தாய் கொல்லப்பட்டபின், தந்தையின் கட்டளைப்படி 16 நாட்கள் கருமச் செயல் செய்த பின்னர் ஒருநாள் கழித்து 18-ஆம் நாள் தாயை அழைக்க வேண்டியவனானான். அவன் தாயின் மீது கொண்ட பற்றின் காரணமாக 16-ஆம் நாளே அழைத்துவிட்டான். அதனால், உருவம் முற்றுப் பெறாது தலைமட்டிலும் அமைந்தது. அதனைத் தான் வழிபட்டதோடு மற்றவர்களும் வழிபடுமாறு செய்தான் என்று வேறொரு கருத்தும் இதுபற்றிக் கூறப்படுகிறது. இரா.குரு.

**எல்லன்பரோ (கி.பி. 1790-1871)**: இவர் கி.பி. 1790-இல் பிறந்தார். இவர் ஈடன் பள்ளியிலும் ஈடன் பல்கலைக் கழகத்திலும் பயின்ற பின்னர், கி.பி. 1813-இல் பாராளுமன்ற உறுப்பினரானார். இவர் மும்முறை கிழக்கிந்திய வணிகக்குழு நிருவாக அவையின் தலைவராகச் சிறப்பாகப் பணியாற்றினார். நிருவாகம், பேச்சுத்திறன் பணியாற்றல் ஆகியவற்றில் சிறந்து விளங்கினார். இவர் இந்தியாவின் தலைமை ஆளுநராக கி.பி. 1842 முதல் 1844 வரை பணியாற்றினார்.

இவர் ஆங்கிலப் படைகள் ஆப்கானிசுத்தானத்தை விட்டு வெளியேறுமாறு கட்டளையிட்டார். ஆனால், இராணுவ வீரர்கள் அதனை விரும்பவில்லை. நாட்டு என்ற தளபதி கி.பி. 1842-ஆம் ஆண்டு பிப்பிரவரியில் காந்தகாரில் தம் நிலையைப் பலப்படுத்திக் கொண்டிருந்தார். கடுமையான நில நடுக்கம் நிகழ்ந்திருந்தபோதிலும், தளபதி சேலும் படைத்தலைவர் பிராடுபுட்டும் சலாலாபாதை (Jalalabad)விடுவிக்கும் பொருட்டுப் பெசாவர்நகர் நோக்கி விரைந்தனர். ஆனால், தளபதி பாமர் மார்ச்சு மாதத்தில் கசினியில் சரணடைந்தார். இவை அனைத்தும் ஆப்கானிசுத்தானிலிருந்து ஆங்கிலேயர் வெளியேறி விடுவது சிறந்தது என்ற எண்ணத்தைத் தலைமை ஆளுநருக்கு உணர்த்தின. ஆங்கிலக் கைதிகள் அங்கு இருப்பதையும் சாசூசா (Shashuja) கொல்லப்பட்டதையும் கருத்திற் கொள்ளாமல், ஆங்கில வீரர்களே வெறுக்கும் வகையிலும் ஆங்கிலப் பேரரசுக்கு இகழ்ச்சி நேரிடும் வகையிலும் எல்லன்பரோ பிரபு நடந்து கொண்டது அனைவரையும் அதிர்ச்சியுறச் செய்தது. ஆனால், சூலையில் எல்லன்பரோ தம் கொள்கையை மாற்றிக் கொண்டார். நாட்டு, போலக்கு ஆகிய தளபதிகளுக்குத் தங்கள் விருப்பப்படி செயற்படலாமென முழுச் சுதந்திரம் அளித்தார்.

தளபதி போலக்கு சலாலாபாதை விட்டுப் புறப்பட்டு, ஆப்கானியர்களை இரண்டிடங்களில் முறியடித்து, செப்டம்பரில் காபூலில் பாலா இசா என்ற இடத்தைக் கவர்ந்துகொண்டார். இதற்கிடையில் தளபதி நாட்டு கசினியில் கோட்டைகளைத் தகர்த்து, வெற்றிவாகை சூடி, சோமநாதபுரத்துக் கதவுகளை மீட்டுக்கொண்டு, போலக்கினால் அப்போது கைப்பற்றப்பட்டிருந்த காபூலுக்கு வந்து சேர்ந்தார். ஆங்கிலக் கைதிகள் விடுவிக்கப்பட்டனர். காபூலின் மிகப்பெரிய கடைவீதிகள் தரைமட்டமாக்கப் பட்டன. ஆனால், ஆப்கானியக் கைதிகள் நன்முறையில் நடத்தப்பட்டனர்.

போலக்கும் நாட்டும் அக்டோபரில் அவ்விடத்தினின்று அகன்று, கி.பி. 1842 திசம்பரில் பெரோ

பூரை அடைந்தனர். தலைமை ஆளுநரின் ஆப்கானிய வெற்றி எங்கும் முரசறிவிக்கப்பட்டது. குறிப்பாக 'எண்ணூறு ஆண்டுகளாகக் கறைபட்டிருந்த நாட்டின் நற்பெயர் சோமநாதபுரத்துக் கதவுகளை மீட்டதன் மூலம் துடைக்கப்பட்டது' என்ற எண்ணம் எங்கும் உருவாக்கப்பட்டது. ஆனால் விரைவில் கைப்பற்றப் பட்ட கதவுகள் 'முகம்மது கசினியின் கல்லறை வாயிலின் கதவுகளேயன்றி, சோமநாதபுரத்து வாயிற் கதவுகளல்ல'என்று உறுதிசெய்யப்பட்டன.சோமநாத புரத்து வாயிற் கதவுகள் சந்தனத்தால் செய்யப் பட்டவை. ஆனால் கைப்பற்றப்பட்ட கதவுகளோ பைன் மரத்தினால் செய்யப்பட்டவை. எனவே எல்லன்பரோ சம காலத்தவர்களால் நகைப்பிற்காளா னார்.

ஆப்கானியப் போரின் காரணமாக ஆங்கிலேயர் 20,000 மக்களையும் உரூ. 15 கோடியையும் இழந்த னர். பஞ்சாபு, சிந்து வெற்றிகள் ஒருவாறு இவரின் புகழை மீட்கச் செய்தன. சிந்துவிலும் பஞ்சாபிலும் வாழ்ந்த மக்கள் ஆங்கிலேயர்மீது வெறுப்புக் கொண்டனர். சிந்து கி.பி. 1843-இல் ஆங்கில ஆட்சி யின்கீழ் வந்தது. சர் சார்லசு நேப்பியர் அதன்மீது போர் தொடுத்துத் தோற்கடித்து, அவர்களை நாடு கடத்தி அவர்களின் செல்வங்களை எல்லாம் கொள்ளை அடித்தார்; நேப்பியரும் அவருடைய வீரர் களும் செல்வர்களாயினர். எல்லன்பரோ பிரபு அவரை மிகவும் பாராட்டினார்.

இவர் ஆட்சியில் அடுத்து நடைபெற்ற மிகப் பெரிய நிகழ்ச்சி குவாலியர் படையெடுப்பாகும். 40,000 பேர் கொண்ட இவரது படை குவாலியரில் ஏற்பட்ட பெருங்கிளர்ச்சியை அடக்கி, மகராசபூர், பன்னியார் என்னும் இடங்களில் குவாலியர்ப் படை களைத் தோற்கடித்தது. இவ் வெற்றியால் செயாசி ராவு பதவி காப்பாற்றப்பட்டது. இவ்வெற்றியின் மூலம் குவாலியரை ஆங்கிலேய ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவர எல்லன்பரோ முயற்சிசெய்யவில்லை. எனினும், உள்நாட்டின் அரசியலில் இவர் தலை யிட்டதை நிருவாகக்குழு ஆதரிக்கவில்லை. இவர் திரும்ப அழைக்கப்படுவதற்கு இதுவும் காரண மாயமைந்தது. இவர் கி.பி. 1844-ஆம் ஆண்டில் தாயகம் திரும்பினார்.

இவர் கி.பி. 1843-இல் அடிமை முறையை ஒழித் தார். அடிமை முறை ஒழிக்கப்படும்போது தலைவர் களுக்கு நட்டஈடு கொடுப்பதெனவும் ஆங்கில நாடாளுமன்றத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டது.ஆனால் இந்தியாவில் அடிமை முறை ஒழிப்பு இயக்கத்திற்கு எந்தவிதமான எதிர்ப்புமில்லை. எனவே, ஈட்டுத் தொகை அளிக்கும் எண்ணமும் எழவில்லை. இவர் காலத்தில் வங்காளத்தில் காவல்துறை நன்கு திருத்தி அமைக்கப்பட்டது. தங்களின் நலன்களைப் பெருக்கிக் கொள்ள மாநிலத் தலைநகர்களில் சிலர் நடத்தி வந்த பரிசுச் சீட்டு முறை ஒழிக்கப்பட்டது.

ஆங்கிலப் பேரரசி விக்டோரியாவிடம் நல்ல செல்வாக்கிருந்தும், எல்லன்பரோ கிழக்கிந்தியக் கம்பெனி நிருவாகக் குழுவினரால் திரும்ப அழைக்கப் பட்டார். இவர் நிருவாகக் குழுவின் தலைவராக விருந்தாலும், தலைமை ஆளுநர் என்கிற முறையில் நிருவாகக் குழுவுக்குக் கட்டுப்பட்டவர் என்பதனை மறந்து செயற்படத் தொடங்கினார். அதிகாரிகளும் இவரால் நன்முறையில் நடத்தப்பெறவில்லை. இராணுவ அதிகாரிகளுக்குக் கொடுத்த சலுகைகள் இவர்மீது காழ்ப்புணர்ச்சி கொள்ளச்செய்தன. இவரின் ஆக்கிரமிப்புக் கொள்கை, ஆணவப் போக்கு, போர்க் குணம், செருக்குமிக்க கட்டளைகள் போல்வன அனைவரையும் இவர்மீது வெறுப்பு கொள்ளச் செய்தன. வெல்லெசுலி (Wellessley) பிரபு போன்று இவர் இந்தியாவில் உள்ள பகுதிகளை ஒருங்கிணைப்பதிலும், கிழக்கு இந்தியக் கம்பெனியின் நிலையினை விரிவுபடுத்துவதிலும் கருத்துச் செலுத்தி னார்.

தாயகத்திற்குத் திரும்பிய பின்னர், இவர் அங்குச் சில பதவிகளை வகித்தார். அகில உலக அரசியலில் அதிக ஆர்வம் காட்டினார். இவர் கி.பி. 1871-ஆம் ஆண்டில் மறைந்தார். இ.ந.

**எல்லிசுத்தீவு:** நியூயார்க்கு நகரில் நியூ யார்க்கு வளைகுடாவின் மேற்குப் புறத்தில் உள்ள எல் லிசுத் தீவில் (Ellis Island) முதலில்தச்சுக்காரர்கள் (Dutch) குடியேறினர். அவர்கள் இதை ஆயிசுட்டர்த் (Oyster) தீவு என்று வழங்கினர்; பக்கிங்குத் (Bucking) தீவு, கில்பட்டுத் தீவு என்ற பெயர்களும் இதற்கு உண்டு. கி.பி. 1770-இல் சாமுவேல் எல்லிசு என்பவ ருக்கு இது உரியதாக இருந்ததால், எல்லிசுத் தீவு என் றும் சொல்லப்படுகிறது. கி.பி. 1808-இல் நியூயார்க்கு அரசு இதை மத்திய கூட்டாட்சி அரசுக்குப் பத்தாயிரம் தாலர்களுக்கு (Dollars) விற்றது. பின்னர், இது ஒரு கோட்டையாகவும் வெடிமருந்துக் கிடங்காகவும் பயன்படுத்தப் பெற்றது. அரசியலார் இதனை 1954 வரை அயல் நாட்டவர் தங்குவதற்காகவும் நாடு கடத்தப்பட்டோர் வாழ்வதற்காகவும் பயன்படுத்தி னர். 1965-இல் தேசிய சுதந்திரச் சின்னத்துடன் இந்தத் தீவும் இணைக்கப்பட்டதால், பொது மக்கள்

பார்வைக்கு 1976 முதல் இத்தீவு திறக்கப்பெற்றது.

தெ.பா.

*எல்லீசர்*: இவர் இங்கிலாந்து நாட்டில் பிறந்தவர். இந்திய ஆட்சிக் கல்வியைக் கற்றுச் சிறந்த இவ் அறிஞர் கி.பி. 1796-ஆம் ஆண்டு இந்தியாவில் பணி செய்யும் பொருட்டு வந்தார். அப்போதைய ஆங்கிலேய அரசு இவரைச் சென்னை வருவாய்த் துறையின் செயலராகப் பதவி வகிக்கச் செய்தது. அறிவாற்றல் மிக்க இவர், தென்னக நிலவுடைமை முறை பற்றியும் நிலவுடைமையாளர்தம் உரிமைகள், கடமைகள் பற்றியும் அரசிற்குத் தெளிவான விளக்கங்களை எழுதினார். இவ்விளக்கங்கள் அன்றைய அரசினரை வழி நடத்திச் செல்ல நெடுங் காலத்திற்குப் பயன் பட்டன. இவர் சென்னை மாவட்ட ஆட்சித் தலைவராகவும் பணியாற்றி உள்ளார்.

பதவி வகித்த காலத்தில் இந்திய மொழிகளில் சிலவற்றைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று ஆசைப்பட்ட இவர், தமிழையும் வடமொழியையும் கற்கத் தொடங்கினார். இராமச்சந்திர கவிராயரும் சாமிநாத பிள்ளையும் இவருக்கு முறையாகத் தமிழைக் கற்பித்தனர். இவர் திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். அம்மொழி பெயர்ப்புப் பணியை இவர் முழுமையாகச் செய்ய முடியாமல் போய் விட்டது என்றாலும், இவருக்குத் தமிழைக் கற்பித்தவர்கள் எத்துணை நுணுக்கமாகக் கற்பித்துள்ளனர் என்றும், இவரும் தமிழ்மீது எத்துணை ஆழமான ஈடுபாடு கொண்டிருந்தார் என்றும் கண்டு கொள்ள அம் மொழிபெயர்ப்பு நூல் பெரிதும் உதவுகிறது. இதன்கண் காணப்பெறும் பழந்தமிழ் இலக்கிய மேற்கோள்களும் இலக்கணச் சான்றுகளும் பரிமேலழகர் உரை சார்ந்த இவரது விளக்க உரையும் வியப்பைத் தருகின்றன.

எல்லீசர் (Ellis) மொழி பெயர்ப்புத் துறையில் மட்டும் அன்றித் தமிழ் இலக்கியப் படைப்புலகிலும் ஈடுபட்டிருந்தார். இவர் எழுதியதாக நமசிவாயப் பாட்டு என்று ஐந்து பாடல்கள் மட்டும் கிடைத்துள்ளன. கிறித்தவராகிய இவர் இறைவனை நமசிவாய என்னுஞ் சொல்லால் அழைத்து வணங்கும் சிறப்பைப் பார்க்கிறபோது, இவர் தமிழைப் பற்றி மட்டும் அன்றித் தமிழ் கற்பிக்கும் சமய உணர்வு பற்றியும் தெளிந்த அறிவினைப் பெற்றிருந்தார் என்பது புலப்படுகிறது.

காலம் மண்மேடிட்டு மறைத்துக் கொண்டிருந்த தமிழ் இலக்கியப் புதையல்களை வெளி உலகிற்குக் கொண்டு வந்த பெருமையும் இவருக்கு உண்டு. பழம் இலக்கியங்களைத் தேடி, அவற்றை அச்சிட்டு அறிஞர் உலகிற்கு அறிமுகம் செய்ய முயன்றவர்க்குப் பெரும் உதவிகளைச் செய்தார். வீரமாமுனிவர் தம் கைப்பட எழுதிய தேம்பாவணிக் காப்பிய ஏட்டினைப் பெரும் பொருள் கொடுத்து வாங்கிக் காத்தவர் இவர்.

இங்கிலாந்து நாட்டிலிருந்து தென்னகத்திற்கு வந்து இந்நாட்டை ஆளும் பணியில் அமர்ந்த ஆங்கிலேயர்கள் தென்னக மொழிகளை முறையாகக் கற்றுக் கொள்வது நல்லது என்று இவர் கருதினார். இக் கருத்தை நடைமுறைப்படுத்தும் பொருட்டுச் சென்னைத் தூய சார்சு கோட்டைக்குள் கல்விக் கழகம் ஒன்றை நிறுவுவதற்கு முன்னின்று உழைத்தார். முத்துச் சாமிப்பிள்ளை போன்ற தமிழ் அறிஞர்கள் இக் கழகத்தின் நிருவாகியாக இருந்துள்ளனர்.

மொழி பெயர்ப்பு, படைப்பு, பாதுகாப்பு, பிற மொழியினர்க்குத் தமிழ்க் கல்வி என்னும் பல்துறைப் பணிகளில் ஈடுபட்டிருந்த இப்பெருமகனார் ஆய்வுப் பணியிலும் நெஞ்சத்தைப் பிணித்திருந்தார். தமிழின் தொன்மை, செம்மை பற்றி ஆய்வு செய்ய ஏராளமான சான்றுகளைத் திரட்டியிருந்தார். இச் சான்றுகளைக் கொண்டு ஓர் அரிய நூல் எழுதும் முன்னர்த் தென் மாவட்டங்களில் கள ஆய்வு செய்ய விரும்பினார். மதுரை மாநகர் இவர் மனத்தைக் கவர்ந்தது. அப்போது மதுரை மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த திரு. இராசு பெற்றி என்பவரின் பேரில்லத்தில் சில நாள் தங்கினார். பின்பு இராமநாதபுரம் சென்று தாயுமானவரின் சமாதியைப் பார்த்தார். முற்பகலில் ஊரைச் சுற்றிப் பார்த்து விட்டு நடுப்பகலில் தாம் தங்கி இருந்த அறைக்குத் திரும்பி உணவு உண்டார். அவ்வுணவு நஞ்சு கலந்த உணவாக இருந்ததை அறியாத இவர், நஞ்சினைப் போக்கும் நல்லமருத்துவர் இல்லாத அந்த ஊரில் பெரும் துன்பம் அடைந்து, கி.பி. 1819-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 10-ஆம் நாள் இறந்து போனார். மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரின் பேரில்லத்தின் ஓர் அறையில் பேணுவார் இல்லாமல் கிடந்த இவருடைய எழுத்துப் புதையல்கள் ஏலத்திற்கு வந்தன. அவற்றின் மதிப்பை அறிந்து ஏலம் எடுக்க ஆள் இல்லாமல் போனது ஆய்வுலகத்திற்குப் பேரிழப்பே. இறுதியில் அக் குறிப்புகள் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரின் இல்லச் சமையற்காரரால் அடுப்பெரிக்கப் பயன்படுத்தப்பெற்று அழிந்து போயின. இந்நாட்டை ஆள வந்து, தமிழைக் கற்றுச் சிறந்து, தமிழ் மொழிக்கு அணிகலன் பூட்டிய பிற நாட்டு நல்லறிஞருள் எல்லீசர் குறிப்பிடத்தக்கவராவர்.

சா.பா.

**எல்லை ஆறுகள்**: இரண்டு நாட்டு எல்லைகளைப் பிரிக்கும் வகையில் ஓடும் ஆறுகள் எல்லை

ஆறுகள் (Boundary Rivers) எனப்படுகின்றன. இவ்வாறு ஓடும் ஆறுகளைச் சம்பந்தப்பட்ட நாடுகள் அதனதன் பகுதியில் நதிவழிப் போக்குவரத்துப் போன்றவற்றிற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

பு. வே.

***எல்லைக்கருப்பன்***: இது ஆண் சிறு தெய்வங்களுள் ஒன்று. கேரள நாட்டில் முதன்மையாக அமைந்த இச்சிறுதெய்வ வழிபாடு தமிழகத்திலும் வந்தது. இத்தெய்வம் எல்லையில் வீற்றிருப்பதால் எல்லைக்கருப்பன் என்ற பெயர் பெற்றது. கொடுவாள் மீசையும் பெரிய கிருதாவும் கையில் பெரிய அரிவாளும் காலில் தண்டையும் பெரிய கண்களும் கொண்டு இத்தெய்வம் காட்சிதரும். சுதையால் அமைக்கப்பெற்ற இச்சிலை நின்ற கோலத்தில் அமையும். ஐயனார் கோவிலில் வடக்கு நோக்கி இச்சிலை அமைந்திருக்கும். சிற்சில இடங்களில் இந்த அஞ்சத்தக்க தோற்றத்தைக் கண்டு மக்கள் அஞ்சுவர் என்று எண்ணிப் பிறர் காணாவாறு கதவுகளால் மூடி இருப்பர். ஒரு நாளைக்கு ஒரு முறை பூசை நடைபெறும்.

சிவகணங்களுள் ஒன்றாகக் கருதப்படும் இச் சிறு தெய்வம் ஐயனாரின் தொண்டனாகக் கருதப்படுகிறது. மருளுறுவார் எல்லாரிடத்தும் ஐயனார் வருவார் என்பதில்லை. எல்லைக் கருப்பனே வருவார் என்று கூறுவர். நாட்டில் பஞ்சம், வெள்ளம், கொள்ளை நோய் போன்ற கொடுமைகளுக்குக் காரணம் இத்தெய்வத்தின் சினமே என்று மக்கள் நம்புகின்றனர். இத்தெய்வத்தின் சினந் தணிய விழா எடுத்து, உயிரினங்களைப் பலியிடுவர்.

தமிழகத்தில் இத்தெய்வம் மேல்துண்டும் இடுப்பில் வேட்டியும் தலையில் முண்டாசும் கட்டிய நிலையில் காணப்படும். மதுரை மாவட்டத்தில் இத்தெய்வச் சிலையின் மார்பில் குறுக்கும் நெடுக்குமாகச் சங்கிலி பின்னப்பட்டிருக்கும். சங்கிலிக்கருப்பன் என்ற பெயரையும் இத்தெய்வம் கொண்டு விளங்குகிறது. இத்தெய்வத்தின் கையில் சூலம் இருப்பின் சூலக் கருப்பன் என்று அழைக்கப்பெறும்.

எல்லைக் காவல் தெய்வமான எல்லைக்கருப்பன் ஐயனாரையும் காக்கக் கடமை உடையவராகக் கருதப்படுவார். விழாக்காலங்களில் இந்தக் கருப்பனைப் பல்லக்கில் வைத்து ஊர்வலமாகக் கொண்டு வருவர். சில இடங்களில் இத்தெய்வத்தின் கையிலுள்ள ஆயுதத்தை எடுத்து வருவர். ஐயனர்ரை மூலவர் என்று சொன்னால் எல்லைக் கருப்பனை உற்சவர் என்று கூறலாம்.

இரா.குரு.

***எல்லைகள்***: எல்லைகள் (Boundaries) என்பன ஒரு நாட்டின் ஆள்நில (Territory) அரசாண்மையின் சிறப்பான கூறாகத் திகழ்கின்றன. இவை நாடுகளுக்கிடையே ஏற்படுகின்ற உடன்பாட்டின் மூலமாகவோ அவ்வெல்லைகள் தொடர்புடைய நாடுகளின் ஒப்புதலினாலேயோ வரையறுக்கப்படுகின்றன.

'எல்லைகள்' என்ற சொல் சில நேரங்களில் நிலப்பரப்புகளின்மேல் வரையப்பட்ட கற்பனைக் கோடுகளைக் குறிக்கின்றன. இக்கோடுகள் ஒரு நாட்டின் ஆள் நிலத்தை ஏனைய பிற நாடுகளின் ஆள் நிலப்பரப்பிலிருந்து பிரித்துக் காட்டுவனவாக அமைகின்றன. இவற்றை மிகவும் தெளிவாக விளக்க முற்பட்ட சிலர், இது வெறும் நிலப்பரப்புகளின்மேல் வரையப்பட்ட கற்பனைக் கோடுகள் மட்டுமல்லாமல், ஒரு நாட்டின் ஆள் நிலத்தின் கோடியில் வரையப்பட்ட கோடுகளுமாகும் எனக் குறிப்பிட்டனர்.

நாடுகளிடையே இப்போது நிலவும் மிகுதியான தகராறுகள் எல்லைகள் தொடர்பான தகராறுகளே. இதுகாறும் எல்லைகள் தொடர்பான வழக்குகளை நடுவர்கள் (Arabitrators) தீர்த்து வைப்பது வழக்கமாக இருந்து வந்தது. எ-டு. அலாசுகா எல்லை வழக்கு. இருப்பினும் உலக நீதி மன்றம் தீர்வு செய்த வழக்குகளும் இல்லாமலில்லை. எல்லையோர நில வழக்கு (Frontier Lands Case), பிரிய விகார் கோயில் (Temple of Prch Vihar)வழக்கு போன்ற வழக்குகளை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

ஒரு நாட்டின் எல்லைகள் இயற்கையாக அமைந்த எல்லைகளாகவோ செயற்கையாக வரையப்பட்ட எல்லைகளாகவோ அமையலாம். சில நேரங்களில் இயற்கை எல்லைகள், செயற்கை எல்லைகள் ஆகிய இரண்டும் சேர்ந்தே ஒரு நாட்டின் எல்லை அமைந்திருக்கும்.

மலைகள், ஆறுகள், கடற்கரைகள், காடுகள், பாலைநிலங்கள் போன்றவை ஒரு நாட்டின் ஆள் நிலப்பரப்பை ஏனைய நாடுகளின் ஆள்நிலப்பரப்பினின்று பிரிக்கும்போது, அந்நாட்டின் எல்லைகளாகின்றன. இவ்வகையிலான எல்லைகளை இயற்கை எல்லைகள் எனக் கூறுவர்.

ஒரு நாட்டின் எல்லையைக் குறிக்கச் செயற்கையாக ஊன்றப்பட்டிருக்கின்ற குறியீடுகளோ பல்வகையிலான கற்பனைக் கோடுகளோ செயற்கை எல்லைகளின் பாற்படும்.

ஒரு நாட்டின் எல்லை நீர் எல்லை (Water Boundary) ஆக இருக்குமேயானால், அந்நாட்டின் ஆள்

நிலத்தை உறுதி செய்வது மிகக் கடினமான ஒன்றாகும். இவ்வகை நீர் எல்லையும் எல்லை ஆறாக (Boundary River) இருந்து விட்டால் அவ் வாற்று நீர்ப்போக்கினால் பயனடையும் நாடுகளைக் கருத்திற் கொண்டே எல்லையினைத் தீர்மானிக்க வேண்டிய அவசியத்தினை இது பெறுகிறது. எனவே இதுவும் மிகவும் கடினமான செயலே.

ஓர் எல்லை ஆறு போக்குவரத்துக்கு உகந்ததாக அமையாதபோது, பெரும்பாலும் அதன் கரையோரங் களில் அமைந்து அவ்வாற்று நீரினால் பயன்பெறும் நாடுகளுக்குகிடையே உடன்பாடு ஒன்றை எட்டுவதின் மூலம் எல்லை தீர்மானிக்கப்படுகிறது. இதுபோன்ற உடன்பாடு எதுவும் எட்டப்படாத நிலையில் எல்லை ஆற்றின் மையப் பகுதியில் வரையறுக்கப்படுகின்ற கற்பனைக் கோடு ஒரு நாட்டின் எல்லையாக அமை கிறது. இவ்வெல்லை ஆறு கிளைகளோடு இலங்கும் பொழுது அக்கற்பனைக் கோடு ஒவ்வொரு கிளையும் பிரிப்பதன் மூலம் எல்லை உண்டாக்குமாறு வரையப் பட வேண்டும். இவ்வகைக் கோட்பாட்டினை 'மையக் கோடு' என்பர்.

எல்லை ஆறு போக்குவரத்திற்கு உகந்ததாக இருக்கும் போது, எல்லை உருவாக்க வரையப்படும் மையக் கோடானது அவ்வாற்றின் ஆழமான பகுதி களை ஊடுருவிச் செல்லுமாறு வரையப்படல் வேண்டும்.

மேற்கண்ட பொது நடைமுறைக்குச் சில விதி விலக்குகளும் உண்டு. சில நேரங்களில் ஒரு நாட்டின் எல்லைக் கோடு எல்லையோர ஆற்றின் ஒரு கரையின்மேல் வரையப்பட்டிருக்கும். எல்லையோர ஆறும் அதன் படுகையும் மற்றொரு கரையும் வேறொரு நாட்டின் ஆள்நிலப் பகுதியில் அமையும். இது போன்ற விதி விலக்கான எல்லை அமைப்பு நாடுகளுக்கிடையே எட்டப்படுகின்ற உடன்பாடுகள் மூலமாகவோ ஒரு நாடு நீண்ட நெடுங்காலமாக அப்பகுதியைத் தனது அதிகாரத்தின் கீழ் வைத்திருப்பதனாலோ ஏற்படுத்தப்படலாம்.

மேற்குறிப்பிட்ட 'மையக்கோடு' வரைதல் மூலம் எல்லைகள் ஏற்படுத்துகின்ற முறை ஒரு நாட்டின் ஆள் நிலப்பரப்பு மற்ற நாட்டின் ஆள் நிலப்பரப்பிட மிருந்து ஏரியாலோ விரிகுடாக்களாலோ (Bays) கடல் இடுக்குகளாலோ (Straits) பிரிக்கப்படும் போதும் பயன்படுத்தப்படுகின்றது. எனினும் எல்லை நிருணயம் தொடர்புடைய நாடுகள் உடன்பாடு ஒன்றினை எட்டுவதின் மூலம் வேறு விதிகளைப் பின்பற்றலும் உண்டு. ம.கா.

துணை நூல்:

Starke, J. G., Introduction to International Law, Butterworths, 1984.

***எல்லைசார் மக்கள்:*** உலகிலுள்ள ஒவ் வொரு நிலப்பகுதியும் தனித் தன்மை வாய்ந்த புவி யமைப்பையும் கால நிலையையும் கொண்டுள்ளது. இதன் அடிப்படையில் உலக நிலப்பரப்பும் பல பகுதி களாகப் பகுக்கப்பட்டுள்ளது. புவியமைப்பின் தன்மை களுக்கு ஏற்ப அப்பகுதியில் வாழும் மக்களும் தகவ மைந்து வாழ வேண்டியுள்ளதால் மனிதர்கள் பல இனங்களாகப் பாகுபட்டுள்ளனர். இதனாலேயே ஒவ் வொரு நிலப் பகுதியைச் சேர்ந்த மக்களினமும் புவி யமைப்புசார் இனம் (Geographical Race) எனக் கூறப்படுகிறது. இவர்கள் பல ஒத்த உடற்பண்பு களைக் கொண்டவர்களாவர். இரு தனிப்பட்ட நிலப் பகுதியின் சேர்மப் பகுதியைச் சேர்ந்த மக்களினத்த வர்கள் தம் நிலப்பகுதியின் மையப் பகுதியிலுள்ளவர் கள் கொண்டுள்ள பண்புகளைக் காட்டிலும் குறைந்த வர்களாகக் காணப்படுவர். இவ்வாறு தம் இனப் பண்புகளிலிருந்து விலகிக் குறைந்த பண்புகளைக் கொண்டவர்களையே எல்லைசார் மக்கள் அல்லது ஒதுங்கு மக்கள் (Marginal People) எனக் கூறுவதுண்டு. எல்லைசார் மக்கள் என்பது வட்டார இனத்தின் வேறுபாடுகளைக் குறிப்பிடவும் பயன்படுத்தப்படுவ துண்டு. பொருளாதார அடிப்படையில் மக்கள் பல வகைப்பாட்டிற்கு உட்படுத்தப்படும்போது ஒதுங்கு மக்கள் என்னும் கோட்பாட்டின் பொருள் கொண்டு அவற்றின் பயன்பாட்டிற்கு ஏற்ப மாற்றியமைத்துக் கூறுவதுமுண்டு.

மானிடவியலார் மக்களினத்தைப் பிரிக்கும்போது புவியமைப்புசார் இனங்கள், வட்டார இனங்கள் (Local Raccs), நுண்ணினங்கள் (Micro-races) எனப் பல வகைப்பாடுகளைக் கையாளுவர். உலகிலுள்ள புவிசார் இனங்களைப் பொதுவாக அமெரிக்க இந்தி யர், பாலினீசியர், மைரோனீசியர், மெலனீசிய-பாப்பு வர் (Melanesian-Papuans), ஆசுத்திரேலியர் (Australians), ஆசியர் (Asiatics), இந்தியர், ஐரோப்பியர், ஆப்பிரிக்கர் என வகைப்படுத்துவர். இந்த வகைப் பாட்டைப் பல உடல்சார் மானிடவியலார் (Physical Anthropologist) வேறு முறைகளிலும் வகைப்படுத்துவ துண்டு. மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு நிலப்பகுதியினரும் உடல் சார்ந்த பண்புகளிலும் பொருள்சார்ந்த பண் பாட்டிலும் (Material Culture) தனித்தன்மை வாய்ந்தவர்களாகக் காணப்படுகின்றனர். ஒவ்வொரு பகுதியினரும் தத்தம் இனத்தின் பண்புகளைக் கொண்டிருக்கும் எண்ணிக்கையில் வேறுபடுகின்றனர். சிலர் மிகுதியான எண்ணிக்கையிலும் சிலர் குறைந்த

எண்ணிக்கையிலும் உள்ளமைக்குப் பல காரணங்கள் உண்டு. ஒவ்வொரு புவிசார் இனமும் பல வட்டார இனங்களாகப் பாகுபடுகின்றது.

ஒவ்வொரு வட்டார இனமும் பல இனப்பெருக்க மக்கள்தொகையினராகப் (Breeding Population) பாகுபடுகின்றனர். ஒருவர் தாம் மணங்கொள்ளும் போது தம் இனப்பெருக்க மக்கள் தொகையினருள் மணம்கொள்ளாமல், வேற்று வட்டார மக்களிடமோ பிற புவிசார் இனத்திலிருந்தோ மணம் கொள்கின்றனர். இவர்கள் இணைவதால் ஏற்படும் புதிய சந்ததியினர் மரபணுவின் (Gene) பண்பில் மாற்றம் கொண்டவர்களாகக் காணப்படுவர். காலப்போக்கில் பல வட்டார இனத்தவர்களிடம் ஏற்படும் இணைதலுக்கான தேர்வு (Mating Selection) தொடர்ந்து பல பண்புகளை மாற்ற வல்லது. இப்பண்புகளை ஆராய்வதில் உடல்சார் மானிடவியலாரும் மரபியலாரும் சாய்விறக்கப் பரப்பீட்டைக் (Cline Distribution) கையாளுவர். ஒரு குறிப்பிட்ட மக்கள் தொகையின் ஒரு சில பண்புகளை மாதிரியாக எடுத்துக்கொண்டு அதன் பரப்பீட்டைக் கவனிப்பர். எடுத்துக்காட்டாக, ஒரு வட்டார இனத்தவர்களின் தோலின் நிறத் தன்மையை உற்றுநோக்கும்போது தொடர்ச்சியான வேறுபாட்டினைக் காணலாம். ஒரு புவிசார் இனத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதியினர் தம் இனத்தவரின் முழு நிறத்தையும், அடுத்த பகுதியினர் சிறிது வெளிறிய நிறத்தையும், அதற்கடுத்த பகுதியினர் மேலும் வெளிறிய நிறத்தையும் கொண்ட ஒரு சாய்விறக்கப் பண்பினைக் (Cline) கொண்டவர்களாகக் காணப்படுவர். இதன் அடிப்படையிலேயே பிற பண்புகளும் கணக்கிடப்படும்.

எல்லைசார் பண்பாடு: உலகிலுள்ள ஒவ்வொரு நிலப் பகுதியும் புவியமைப்பாலும் காலநிலையாலும் மக்களினத்தவராலும் தனிப்பட்டுக் காணப்படுவது போன்றே பண்பாட்டாலும் தனிப்பட்டுக் காணப்படுகிறது. நாடு, கண்டம், தீவு எனப் பலவாறாகப் பாகுபடும் நிலப்பரப்பில், ஒத்த பண்பாடுகளைக் கொண்ட நிலப்பரப்பும் காணப்படுவதுண்டு. இப்பரப்பில் வாழும் மக்களின் குடியிருப்பு, உறைவிட அமைப்பு, உணவுப் பழக்கங்கள், கட்டிடக்கலை, ஆடை அணிகலன், போக்குவரத்து, தொழில்கள், கவின் கலைகள், சமுதாய நிறுவனங்கள், ஒப்பனை முறைகள், சமய வழிபாடுகள், தொன்மவியல் (Mythology) முதலான அனைத்து அமைப்பும் ஒன்றுபட்டுள்ளதால், இப்பரப்பினைப் பண்பாட்டுப் பரப்பு (Culture Area) எனப் பண்பாட்டியலார் குறிப்பிடுவர். ஒவ்வொரு பண்பாட்டுப் பரப்பும் தனித்தன்மை வாய்ந்தது. அடுத்தடுத்த இரு பண்பாட்டுப் பரப்புகளின் சேர்மப் பகுதியிலுள்ள மக்கள் தத்தம் பண்பாட்டின் கூறுகளைக் (Culture Traits) கொண்டிருப்பதன் அளவில் வேறுபடுகின்றனர். இவர்களின் பண்பாட்டுப் பரப்பின் மையப் பகுதியிலிருந்து விலகி, புறப்பகுதியிலோ விளிம்புப் பகுதியிலோ உள்ள இவர்களின் பண்பாடே எல்லைசார் பண்பாடு அல்லது ஒதுங்கு பண்பாடு (Marginal Culture) எனக் கூறப்படும்.

எல்லைசார் பண்பாடு என்னும் கோட்பாடு பண்பாட்டுப் பரவல் ஆய்வுகளின்போதும் பண்பாடுகளை வகைப்படுத்தும்போதும் கண்டறியப்பட்ட ஒன்று. கிளார்க் விசுலர் (Clark Wissler) என்பார் வட அமெரிக்க இந்தியரின் இனக்குழுவியல் தரவுகளைச் (Ethnogrophic Datas) சேகரித்தபோது, ஒவ்வொரு பகுதியிலும் சில தனிப்பட்ட பண்பாட்டுக் கூறுகளைக் கண்ணுற்றார். இப்பண்புகள் பிற பகுதிகளிலிருந்து வேறுபட்டிருந்தன. இதன்பின்னர், பொருள்சார் பண்பாட்டின் (Material Culture) அனைத்துக் கூறுகளையும் ஒப்பிட்டுப் பார்த்த விசுலர் வட அமெரிக்காவை10 தனித்தனியான பண்பாட்டுப் பரப்புகளாகப் பிரித்தார். ஒவ்வொரு பகுதிக்குமெனக் குறிப்பிட்ட எல்லையை வகுத்தார். இவரது இந்த ஆய்வுக்குப் பின், உலகம் முழுவதிலும் பெரும்பான்மையான நாடுகளைப் பல பண்பாட்டுப் பரப்புகளாகப் பல வல்லுநர்கள் வகுத்தனர்.

பண்பாட்டுப் பரப்புக் கோட்பாட்டின் பயன்பாட்டினை விவரிக்க முற்பட்டபோது வெளிப்பட்டதே எல்லைசார் பண்பாடாகும். ஒரு பண்பாட்டின் அனைத்துக் கூறுகளும் அப்பண்பாட்டுப் பரப்பின் அனைத்துப் பகுதியிலும் இருப்பதில்லை. அவ்வாறு அனைத்துப் பண்புகளும் உள்ள இடம் அப்பண்பாட்டின் மையம் (Culture Centre) ஆகும். இந்த மையத்திலிருந்து விலகிச் செல்லச் செல்ல, பண்பாட்டுக் கூறுகளின் எண்ணிக்கையும் குறைந்து விடுகிறது. இது அண்டைய பண்பாட்டின் தாக்கத்தினாலாகும். ஒரு பகுதியின் எல்லைசார் பண்பாட்டுத்தன்மை அப்பண்பாட்டின் மையத்திலிருந்து விலகியுள்ள தூரத்தைப் பொறுத்து அமையும். பண்பாட்டுப் பேறு (Acculturation) ஆய்வின் போதும் பண்பாட்டுப் பரவல் (Cultural Diffusion) ஆய்வின்போதும் எல்லைசார் பண்பாட்டின் தன்மையை விளக்கமாக ஆராய்ச்சியாளர்கள் ஆராய்வர். காண்க: பண்பாட்டுப் பரப்பு.

சீ.ப.

***எல்லைப்பிடாரி***: தமிழகத்துக் கிராமங்களின் எல்லையில் காணப்படும் சிறுதெய்வங்களுள் இதுவும் ஒன்று. நீண்ட கோரை முடிகள் சடை சடை

யாகப் பிடாரியில் விழக் கோரவடிவில் காட்சி தருவ தால், 'பிடாரி' என்னும் பெயர் பெற்றது. அசுரனைக் கொல்வதற்குக் காளிதேவி எடுத்த பல மாய உருவங் களுள் பிடாரியும் ஒன்றாகும். எனவே, இச் சிறுதெய் வம் காளியின் அமிசமாகக்கருதப்படும்.

கிழக்கு அல்லது வடக்குத் திசையை நோக்கி இச் சிறு தெய்வத்தின் சிலை அமைந்திருக்கும். கருவுற்ற மக்களோ விலங்குகளோ இக்கோவில் அருகே சென் றால் கருவுக்கு அழிவு ஏற்படும் என்று நம்புகின்றனர். நான்கு கைகளோடு மழுவாயுதம் ஏந்தி அமர்ந்த நிலையிலே இச்சிறு தெய்வம் காட்சி தரும். மஞ்சள் நிற ஆடையை இச்சிலையின் மேல் போர்த்தியிருப்பர். ஆடு, கோழி போன்ற உயிரினங்களை இத்தெய்வத் திற்காக வளர்த்துப் பலியிடுவர்.

நாட்பூசை நடைபெறுதல் இல்லை. மக்கள் தேவைக்கு ஏற்ப அவ்வப்போது பூசைகள் நடத்தப் படும். நாட்டில் மழை இல்லை என்றால் இத்தெய் வத்தின் தலையில் எண்ணெய் வைத்துத் திருமுழுக் காட்டுவர். அப்படியும் மழை பெய்யாது போயின் சிலையை வெயிலில் போடும் வழக்கமும் சில விடங்களில் உண்டு.

மக்களோடு மிக நெருங்கிய தொடர்புடையதாக இத்தெய்வம் கருதப்படுகிறது. கிராம மக்களுள் யாரே னும் ஒருவர்மீது இத்தெய்வம் ஆவேசிப்பது உண்டு. கிராமத்தில் ஏற்பட்ட குறைகள், துன்பத்திற்குக் கார ணம் ஆகியவற்றை மருள்வந்தவர் அல்லது தெய்வம் ஆவேசிக்கப்பெற்றவர் கூறுவதை இன்றும் காண லாம். எதிர்காலத் திட்டத்தையும் இத்தெய்வம் மருள் வந்தவர் வாயிலாகப் பேசுவதுண்டு.

ஊர் எல்லைக்கு அப்பால் இக்கோயில் அமைந் திருக்கும். தமிழகத்தில் ஒருசிலஇடங்களில்சூலத்தோடு இச்சிறுதெய்வம் காட்சிதரும். அதனைச் சூலப்பிடாரி என்றழைப்பர். சில கிராமங்களில் சிலை இல்லாமல் வெறும் மரம் மட்டுமே பிடாரி கோயிலாக அமைவ துண்டு. ஆண்டிற்கு ஒருமுறையே திருவிழா நடை பெறும். இத் தெய்வத்திற்கு ஆகம வழிப் பூசைகள் செய்யப்படுவதில்லை. இச்சிலையை எங்குவேண்டுமா னாலும்அமைத்து வழிபடலாம். மந்திரத்திற்குக் கட் டுப்படும் சிறு தெய்வமான எல்லைப்பிடாரியை ஏவலுக்குப் பயன்படுத்துவர். உடுக்கு ஓசை, தாரை, தப்பட்டை, ஊதுகுழல் ஆகிய வலிய ஓசைக்கு இத் தெய்வம் மருளாக ஒருவர்மீது வரும் என்பர். உயிர்ப் பலியிட்டுச் சாம்பிராணி புகையிட்டுச் சூடம் கொளுத்துதலே வழக்கமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. மிக்கசினம் உள்ள தெய்வமாகையால் தவறு செய்தவர்களை இக்கோயிலின்முன் நிற்கச் செய்து விசாரிப்பது இன்றும் வழக்கமாக உள்ளது.

இரா.குரு.

**எல்லையம்மன்** : இச்சிறு தெய்வம் நகர்ப்புறக் காவல் தெய்வமாகும். சக்தியின் அவதாரமாக இத னைக்கருதுவர். பொதுவாகத் தமிழகத்தில், குறிப்பாகத் தஞ்சை மாவட்டத்தில் இத்தெய்வ வழிபாட்டை மிகுதியாகக் காணலாம். இக்கோயில் உள்ள இடம் இத்தெய்வத்தின் பெயரோடு அழைக்கப்படுவதுண்டு. எல்லையம்மன் கோயில் தெரு என்று தஞ்சை நகரில் ஒரு தெரு இன்றும் இருந்து வருகிறது. பெரும்பாலும் கிழக்கு நோக்கியே அமைந்திருக்கும் இக்கோயிலில் அம்மன் திருவுருவம் சுதையால் இயற்றப்பட்டிருக்கும். அவ்வுருவம் நின்ற கோலத்தில் திகழும். மராட்டியர் களின் வழிபடு தெய்வங்களுள் எல்லையம்மனும் ஒன் றாகும். நவகாளி உருவ வழிபாட்டில் இத்தெய்வத் தையும் சேர்ப்பர்.

இத்தெய்வத்தினை வழிபடுவோர் சாத்வீக உண வையே-சைவ உணவையே படைப்பர். மஞ்சள் அல் லது பச்சை வண்ண ஆடையைப் பெரும்பாலும் இத் தெய்வத்திற்குச் சாத்துவர். பாற்குடம், கரகம் ஆகி யவை இத்தெய்வத்திற்காக எடுக்கப்படும். அருச்சகரே மந்திரங்கள் சொல்லி ஆராதனை புரிவார். கருவறைக் குள் அந்தணரல்லாதாரை அனுமதிப்பது இல்லை.

கிராம தேவதைகளின் குணமும் பண்பும் இத் தெய்வத்திற்குக் கூறுவது வழக்கில் இல்லை. தன் ஆட் சியில் உட்பட்ட இவ் எல்லையம்மனை வணங்கிய பிறகே, அரசன் நற்காரியங்களைச் செய்வான். படை யெடுப்புக்கு முன்பும் பின்பும் மன்னர்கள் இத்தெய் வத்தை வணங்கினர் எனக் கூறுவர்.

இத்தெய்வத்தோடு சமதக்கினிமுனிவரின் மனைவி யான இரேணுகாதேவியின் கதையைச் சேர்த்து, இதனை இரேணுகாதேவி அம்மன் என்று ஒருசாரார் கூறுவர். மூலப் படிவத்திற்கு முன்பாக வெறும் கழுத் தளவேயுள்ள சிலை அமைந்திருப்பதால் மேற்கண்ட கதை இத்தெய்வத்தோடு இணைந்திருக்கலாம்.

இரா.குரு.

**எல்லையோரக் கடல்**: ஒரு நாட்டின் ஆள் வரைக்கு உட்பட்ட கரையோரக் கடற்பகுதி எல்லை யோரக் கடல் (Territorial Sea) எனப்படும். எல்லை யோரக் கடலில் நாடுகள் ஆதிக்கம் செலுத்தும் தொலைவைப் பொறுத்தவரை, 1980-ஆம் ஆண் டுக்குமுன் ஒரு திட்டமான வரையறை கிடையாது. நாடுகளுக்கு நாடு கருத்து வேறுபாடு நிலவி வந்தது. சில நாடுகள் மூன்று கல் முதல் நூறு கல் வரையிலும்,

சில நாடுகள் பார்வைக்கு எட்டிய தூரம் வரையிலும் (அதாவது பதினான்கு கல் தொலைவு வரையிலும்), சில நாடுகள் பீரங்கிக் குண்டு பாயும் தூரம் வரையிலும், பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகள் ஆறு கல்தூரம் வரையிலும், வேறு சிலநாடுகள் பன்னிரண்டு கல் தூரம் வரையிலும் எனப் பல்வேறு வகையாக எல்லையோரக் கடல் ஆதிக்கத் தொலைவைக் கணக்கிட்டுள்ளன. இந்திய எல்லையோரக் கடல்ஆள்வரைச் சட்டம் 80/1976, பிரிவு 3 (2)-இன்படி இந்திய எல்லையோரக் கடல் ஆள்வரை பன்னிரு கடல் மைல்கள் (Nautical Miles) ஆகும்.

**எல்லையோரக் கடலில் ஆதிக்க நாட்டிற்குள்ள உரிமைகள்:** எல்லையோரக் கடலில் ஆதிக்க நாட்டிற்கு மீன்பிடிக்கவும், முத்துக்குளிக்கவும், வேறு நாடுகளுடன் ஒப்பந்தம் எதையும் செய்து கொள்ளாத போது அந்நாட்டவர்கள் மீன்பிடிப்பதைத் தடுக்கவும், அத்துமீறி நுழையும் அயல்நாட்டவரைக் கைது செய்யவும், அவர்கள் பயன்படுத்திய கப்பல்கள், படகுகள் போன்றவற்றைக் கைப்பற்றவும், அயல் நாட்டுக் கப்பல் போக்குவரத்தை ஒழுங்குபடுத்தவும், ஒழுங்கு தவறும் நிலையில் காவலுக்கு உட்படுத்தவும், எல்லைப் பாதுகாப்புக் கருதிக் கப்பல் வழித்தடங்களை மாற்றி விடவுமான பல உரிமைகள் உண்டு.

**தீவுகளும் எல்லையோரக் கடலும்:** எல்லையோரக் கடல் ஒரு நாட்டிற்கு இருப்பது போல், ஒரு நாட்டின் தீவுகளுக்கும் உண்டு. ஒரு நாட்டின் கப்பல், கலங்கரை விளக்கம் போன்றவை மிதக்கும் தீவுகளாகக் கருதப்படினும், அவற்றுக்கு எல்லையோரக் கடல் கிடையாது.

பு. வே.

**எல்லோர்க்கும் தொடக்கக் கல்வி:** தொடக்க நிலைக் கல்வி என்பது பொதுவாக முன்தொடக்கப் பள்ளிக் கல்விக்கு அடுத்த கல்வியைக் குறிப்பதாகும். முதல் நிலையில் முன்தொடக்கப்பள்ளிக் கல்வியும், இரண்டாம் நிலையில் தொடக்க நிலைக் கல்வியும், மூன்றாம் நிலையில் இடைநிலைக் கல்வியும், நான்காம் நிலையில் உயர் கல்வியும் அமையும். தொடக்க நிலைக் கல்வி என்பது முதல் வகுப்பிலிருந்து 7,8 ஆண்டுகளுக்கு வழங்கப்படும் கல்வியைக் குறிக்கும்.

தொடக்க நிலைக் கல்வியின் முக்கிய குறிக்கோள்களாவன: 1. எழுத்தறிவும் எண்ணறிவும் பெறுதல், 2. குடிமைப் பயிற்சி பெறுதல், 3. தேசிய ஒருமைப்பாட்டினை வளர்த்துக் கொள்ளுதல், 4. ஒழுக்கத்தையும் நல்லபழக்க வழக்கங்களையும் வளர்த்துக் கொள்ளுதல், 5. பயனுள்ள பல செயல் திறன்களைப் பெறுதல், 6. இடைநிலைக் கல்விக்கு ஆயத்தம் பெறுதல்.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டப்படி, தொடக்கநிலைக் கல்வி 6 வயது முதல் 14 வயது முடிய அனைவருக்கும் 1960-ஆம் ஆண்டுக்குள் வழங்கப்பட வேண்டியது. ஆனால் நடைமுறையில அரசினால் இவ்விலக்கினை 1960-க்குள் நிறைவேற்ற முடியவில்லை. பதினான்கு வயதுக்கு உட்பட்ட குழந்தைகளை இரண்டு பிரிவாக வகுத்து 6-இலிருந்து 11 வரையுள்ள வயதுக் குழந்தைகளுக்கு மூன்றாம் திட்ட முடிவிலும் (1965-66), அடுத்துள்ள 11 முதல் 14 வயதினருக்கு ஐந்தாம் திட்ட முடிவிலும் (1975-76) இக்கல்வித் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று 1956-ஆம் ஆண்டில் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் தீட்டும் போது முடிவு செய்யப்பட்டது. இந்த நோக்கத்திற்கான அரசின் சாதனையை இந்தியக் கல்விக்குழு 1964-66-இல் ஆய்ந்து புதிய இலக்குகளை உருவாக்கியது. ஐந்தாம் திட்ட முடிவில் 6-இலிருந்து 11 வரையுள்ள வயதுக் குழந்தைகளுக்கும், 7-ஆம் திட்ட முடிவில் 11-இலிருந்து 14 வயதுக்கு உட்பட்டவர்களுக்கும் நல்ல அடிப்படைக் கல்வியை வழங்க வேண்டும் எனப் பரிந்துரை செய்யப்பட்டது. ஏழாம் திட்டம் தயாரிக்கப்படுகின்றபோது, இவ்விலக்கினை மொத்தமாக 1990-91-க்குள் நிறைவேற்ற முடிவு செய்யப்பட்டது. இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் இடம் பெற்றுள்ள இந்தத் தலையாய இலக்கு குறித்த காலத்தில் நிறைவேற்றப்பட முடியாமல், மீண்டும் மீண்டும் காலக்கெடு ஒத்தி போடப்படுவதற்குப் பல காரணங்கள் உண்டு.

இந்திய அரசும் மாநில அரசுகளும் 'எல்லோருக்கும் தொடக்க நிலைக் கல்விக்' (Universalisation of Primary Education) கொள்கையை நிறைவேற்றுவதில் ஏராளமான ஈடுபாட்டை வெளிப்படுத்தியுள்ளன. இந்தக் கொள்கையின் இன்றியமையாமையை உணர்ந்தே மைய அரசு 1982-ஆம் ஆண்டு சனவரி 14-ஆம் நாள் இந்தியப் பிரதமரின் புதிய 20 அமிசத் திட்டத்தில் இதனை 16-ஆம் அமிசமாக அமைத்திருக்கிறது. இத்துறையில் ஏற்பட்டுள்ள சாதனைகள் குறிப்பிடத்தக்கவை. பள்ளிக்கூடங்கள் அனைவருக்கும் பயன்படுகின்ற வகையில் அணுகக்கூடியதாகக் குடியிருப்புகளுக்கு அருகாமையில் இருத்தல் வேண்டும். கல்வி வசதிகளை வழங்குவதில் 1950-ஆம் ஆண்டிலிருந்து குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை இந்தியா அடைந்துள்ளது. முதல் 5 வகுப்புகள் உள்ள தொடக்கப் பள்ளிகளும், ஆறாம் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு வரை உள்ள நடுநிலைப் பள்ளிகளும் பெருமளவில் எண்ணிக்கையில் பெருகியுள்ளன. சென்ற 1981-82-இல் 495,007 தொடக்கப் பள்ளிகளும், 116,560 நடுநிலைப் பள்ளிகளும் இருந்தன. தேசியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் நடத்திய நான்

காம் அனைத்து இந்தியக் கல்வி ஆய்வின்படி, 92.82 விழுக்காடு மக்கள்தொகைக்குத் தொடக்கப் பள்ளிகள் தம் குடியிருப்புக்கு 1 கி.மீட்டருக்குள் அமைந்துள் ளன. ஏறக்குறைய 79 விழுக்காடு மக்கள் தொகைக்கு நடுநிலைக் கல்வி வசதி குடியிருப்புக்கு 3 கி.மீட்டருக் குள் அமைந்துள்ளது.

பல மாநிலங்களும் மைய அரசின் நேரடி ஆட்சிக் குட்பட்ட மாநிலங்களும் கட்டாயத் தொடக்கக் கல்விக்கான சட்டங்களை இயற்றி, குழந்தைகள் பள்ளியில் மேலும் மேலும் சேர்வதைத் தூண்டி வரு கின்றன. முதல் 5 வகுப்புகளில் சேர்க்கை பெற்றவர் களின் எண்ணிக்கை 1950-51-இல் 19.2 மிலியனிலி ருந்து 1982-85-இல் 77.0 மிலியனாக, ஏறக்குறைய 4 மடங்கு உயர்ந்துள்ளது. இப்புள்ளி விவரத்திலிருந்து பள்ளி வயதுக் குழந்தைகள் குறிக்கத் தகுந்த வகை யில் பள்ளிகளில் சேர்ந்து பயிலுகின்றனர் எனத் தெரி கிறது. இருப்பினும் பள்ளியில் சேரும் விகிதம் சில மாநிலங்களில் குறைவாக உள்ளது. மேலும், கிராமப் பகுதிகளில் வாழும் குழந்தைகளின் பள்ளிச்சேர்க்கை விகிதம் நகர்ப்புறக் குழந்தைகளின் விகிதத்தைவிடக் குறைவாகும். அதேபோன்று, பெண்களின் சேர்க்கை விகிதம் ஆண்களை விடக் குறைவாக உள்ளது. எல்லோருக்கும் கல்வி வழங்கவேண்டும் என்ற கொள் கையை நடைமுறைப்படுத்தும்போது இவ்வாறு குறை வான பங்குபெறும் விகிதம் உள்ள பகுதியினரைப் பல செயல்திட்டங்களைக் கொண்டு ஊக்குவித்தல் இன்றியமையாததாகிறது.

கல்வி வசதிகள் வழங்குவதில் 9 மாநிலங்கள் பின் தங்கிய மாநிலங்களாகக் கருதப்படுகின்றன. அவை ஆந்திரப்பிரதேசம், அசாம், பீகார், சம்மு-காசுமீர், மத்தியபிரதேசம், ஒரிசா, இராசசுத்தான், உத்தரப் பிரதேசம், மேற்கு வங்காளம் ஆகியன.

பள்ளியைச் சேர்ந்த அனைத்துக் குழந்தைகளும் பள்ளியில் தொடர்ந்து பயிலுவதில்லை. சில குழந்தை கள் 5 ஆண்டுத்தொடக்கநிலையைச் சரிவரப் பெற்று முடிப்பதற்கு முன்பே பள்ளியைவிட்டு விலகிவிடுகின் றனர். இவ்வாறு விலகிச் செல்கின்ற குழந்தைகளில் பெண்களின் எண்ணிக்கை அதிகமாகும். மேலும், பள்ளியில் தொடர்வோர் சரிவரக் கருத்தோடு கல்வி பெறுவதில்லை. அதன் விளைவாகப் பல குழந்தைகள் ஒரே வகுப்பில் ஓர் ஆண்டிற்குமேல் தேங்கிவிடுகின்ற னர். இவ்வாறு பள்ளியில் முன்னேறாமல் தேக்கம் அடைவது பெருமளவில் விரையமாக அமைகிறது. முதல் 7அல்லது 8 ஆண்டு கல்வி பெறுகின்ற குழந்தை களை ஊக்குவிப்பதற்காக மைய, மாநில அரசுகள் பல்வேறு சிறப்புத் திட்டங்களைச் செயற்படுத்துகின் றன. அவற்றுள் சிறப்பாகக் குறிப்பிடக்கூடியவை தமிழ்நாட்டில் நண்பகல் உணவுத்திட்டம், இலவசச் சீருடைத்திட்டம், இலவசப்பாடப்புத்தகங்கள்வழங்கும் திட்டம், மாணவியர்க்கான காலவருகைப் படிப்பு உத வித்தொகை முதலியன.

பள்ளி வரும் குழந்தைகள் தரமான கல்வி பெற வேண்டும். அதற்கு அரசுத் துறைகளும் பொது மக்க ளும் பெற்றோர்களும் ஆவன செய்ய வேண்டும். பள்ளிகளுக்குப் பல்வேறு வசதிகள் தேவைப்படுகின் றன. அவற்றுள் சிறப்பாகக் கருதப்படுவன பள்ளிக் கட்டிடம், குடிநீர், கழிப்பறை, நூலகம், விளையாட் டுத்திடல், பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், இருக்கை மற்றும் தளவாடங்கள் போன்றவை. இந்தியாவின் பல பாகங்களில் இந்த வசதிகள் குறைவாக உள்ளன. நான்காம் அனைத்து இந்தியக் கல்வி ஆய்வின்படி 8 விழுக்காடு தொடக்கப்பள்ளிகளும் 2 விழுக்காடு நடு நிலைப் பள்ளிகளும் திறந்தவெளிப் பள்ளிகளாக இயங்குகின்றன. 10 விழுக்காடு தொடக்கப் பள்ளி களும் 2 விழுக்காடு நடுநிலைப் பள்ளிகளும் கூரை வேயப்பட்ட குடிசைப் பள்ளிகளில் செயற்படுகின்றன. 21 விழுக்காடு தொடக்கப் பள்ளிகளும் 11 விழுக்காடு நடுநிலைப் பள்ளிகளும் பழுதடைந்த கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. ஏறக்குறைய 41 விழுக்காடு தொடக்கப் பள்ளிகளிலும் 66 விழுக்காடு நடுநிலைப் பள்ளிகளிலும் பள்ளி வளாகத்தில் குடிநீர் வசதி இல்லை. 70 விழுக்காடு தொடக்கப் பள்ளிகளிலும் 25 விழுக்காடு நடுநிலைப்பள்ளிகளிலும் நூல்நிலைய வசதி இல்லை. 34 விழுக்காடு தொடக்கப் பள்ளிகளிலும் 23 விழுக்காடு நடுநிலைப் பள்ளிகளிலும் இருக்கை மற்றும் தளவாடங்கள் இல்லை. 38 விழுக்காடு பள்ளிகளில் கரும்பலகை இல்லை.

ஆசிரியர்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவில் அதிகமாகிய போதிலும் ஆசிரியர், மாணவர் விகிதம் மிகுந்து கொண்டிருக்கிறது. தொடக்கப்பள்ளி ஆசிரியர்களின் எண்ணிக்கை 1950-51-இல் 5.38 இலட்சமாக இருந்து 1982-83-இல் 13.89 இலட்ச மாக உயர்ந்தது. அதே காலங்களில் நடுநிலைப் பள்ளி ஆசிரியர்களின் எண்ணிக்கை 0.85 இலட்சத் திலிருந்து 8.56 இலட்சமாக உயர்ந்துள்ளது. இருப் பினும் மேற்குறிப்பிட்ட காலங்களில் தொடக்கப் பள்ளிகளில் ஆசிரியர், மாணவர் விகிதம் 34-இலிருந்து 40 ஆகவும், நடுநிலைப் பள்ளிகளில் 24-இலிருந்து 34 ஆகவும் உயர்ந்துள்ளது. மேலும், 34.7 விழுக்காடு (1978) தொடக்கப் பள்ளிகள் ஓர் ஆசிரியர் பள்ளி களாக இருத்தல் மேலும் ஒரு தனிப்பட்ட கல்விச் சிக்கலாகும். பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் விழுக் காடு அதிகரித்த போதிலும், சில மாநிலங்களில் இன்

னும் பயிற்சி பெறாத ஆசிரியர்களே மிகுதியாக உள்ளனர்.

பள்ளிக் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்காகச் சில புதிய திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன. அவற்றுள் குறிப்பாகச் சொல்லக் கூடியவை 1. முறைசாராக் கல்வித்திட்டம், 2. தேசிய கல்வி ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவனத்தினால் திட்டப்பட்ட முன்னோடித் திட்டங்கள் ஆகிய (அ) பொருள்சார்ந்த அணுகு முறைத் திட்டம், (ஆ) தொடக்கப் பள்ளிப் பாடத் தொகுதியமைப்புப் புதுப்பிக்குந் திட்டம், (இ) இளங் குழந்தைப் பருவக் கல்வித்திட்டம், (ஈ) சத்துணவு, உடல் நலம், சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புத் திட்டம், 3. எல்லோருக்கும் தேர்ச்சி, 4. வகுப்பு வாரியாகப் பிரிக்கப்படாத பள்ளிமுறை, 5. பலமுனை நுழைவிற்கான வாய்ப்புத்திட்டம் ஆகியனவாம். மேற்குறிப்பிட்ட திட்டங்களில் சிலவற்றை செயற்படுத்துவதற்காக ஐக்கியநாடுகளின் பன்னாட்டுக் குழந்தைகள் நெருக்கடிக்கால நிதி(UNICEF) நிறுவனம் பணஉதவி அளித்து வருகிறது.

அனைவருக்கும் கல்வி என்ற திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் அரசுத் துறையில் வெளிப்படுத்தப்படுகின்ற அக்கறைக்கு இணையாகப் பொதுமக்களும் பெற்றோர்களும் ஈடுபாட்டோடு ஒத்துழைப்பினை வழங்கினால்தான் இந்தத் திட்டம் முழுமையாக வெற்றி பெறும்.

மாநிலங்களிடையே தமிழகத்தின் நிலை நிறைவளிப்பதாக உள்ளது. கல்வியில் முன்னேறியுள்ள மாநிலங்களுள் ஒன்றாகத் தமிழகம் கருதப்படுகிறது. சென்ற 1984-85-இல் 6-11 வயதுக் குழந்தைகளில் 98.66 விழுக்காடும் 11-14 வயதில் 72.18 விழுக்காடும் முறையே தொடக்கப் பள்ளிகளிலும் நடுநிலைப் பள்ளிகளிலும் உள்ளனர். தமிழகத்தில் மாநில அரசு மேற்கொண்டுள்ள ஊக்குவிப்புத் திட்டங்கள் பிறமாநிலங்களில் பாராட்டுதலை பெற்றுத் தந்துள்ளன. இந்தியாவில் 1981-ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கின்படி, எழுத்தறிவு பெற்றவரின் சராசரி 36.23 விழுக்காடாகும். அதாவது இந்தியாவில் 437 மிலியன் மக்கள் எழுத்தறிவற்றவர்களாக இருந்தனர். இந்நிலை மாற வேண்டுமென்றால் ‘எல்லோருக்கும் தொடக்கக் கல்வி’ என்ற திட்டம் அடுத்த சில ஆண்டுகளிலாவது வெற்றி பெற வேண்டும். ம.இரா.சி.

துணை நூல்:

கல்வி - ஒரு சவால்: ஒரு கொள்கைத் தொலை நோக்கு & பின்னிணைப்புகள், கல்வி அமைச்சகம், இந்திய அரசு, புதுதில்லி, 1985.

எல்லோரா குடைவரைக் கோயில்களுக்குச் சிறப்புப்பெற்ற இடம். எல்லோரா மகாராட்டிர மாநிலத்தில் அவுரங்காபாதிற்கு வடமேற்காக 22



எல்லோரா - பத்தாம் குடைவரை

கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. மலையைக் குடைந்து இக்கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தியாவில் உள்ள குடைவரைக் கோயில்களுள் இது மிகப்பெரிய குடைவரைத் தொகுதியாகும். இது உலக அதிசயங்களுள் ஒன்றாகவும் கருதப்பட்டு வரு கிறது. தென்னகத்தை ஆண்டஇராட்டிரகூடர்களின் கலைப் பண்பாட்டை இக்குடைவரைகளின் மூலம் அறியலாம்.

இங்கு 34 குடைவரைக் கோயில்கள் உள்ளன. இவை அனைத்தும் தனிப்பட்ட ஒரு சமயத்தின ருக்காக மட்டும் அமைக்கப்படாமல், இந்து, புத்தம், சமணம் ஆகிய மூன்று சமயத்தினருக்கும் தனித்தனியாகக் குடைவரைகள் உள்ளன. இவற் றுள் புத்த மதத்திற்கென்று 12 குடைவரைகளும் இந்து மதத்திற்கென்று 17 குடைவரைகளும் சமணத் திற்கென்று 5 குடைவரைகளும் உள்ளன. இவை தெற்கிலிருந்து வடக்காக அமையுமாறு குடையப் பட்டுள்ளன. முதலில் புத்த மதக் குடைவரைகளும் அதைத் தொடர்ந்து இந்து மதக் குடைவரைகளும் இறுதியில் சமணக் குடைவரைகளும் அமைந்துள்ளன.

புத்தசமயக் குடைவரைகள்: முதல் குகை புத்தத் துறவிகள் தங்குவதற்காகக் குடையப்பட்டது. இத னுடைய சில பகுதிகள் இடிந்துள்ளன. இதை அடுத் துள்ள இரண்டாம் குகை நீளமானதும் அகலமானது மாகும். இது புத்தத் துறவிகளின் வழிபாட்டு அறை யாக இருந்துள்ளது. இவற்றின் வாயிலில் பெரிய துவார பாலகர் சிலைகள் செதுக்கப்பட்டுள்ளன. இவர்களின் தலைமுடி மிகவும் நீண்டு காணப்படு கிறது. இக்குகையின் முற்றத்தில் பெரிய உருவம் ஒன்று நின்ற நிலையில் உள்ளது. அதன் கையில் பூக் கொத்து உள்ளது. இதற்கு அருகில் சாமரம் வீசுபவர் களின் சிற்பங்கள் உள்ளன. இச்சிலைக்குத் தெற்காக இதனை ஒத்த உயரமுடைய பெண் உருவம் ஒன்று செதுக்கப்பட்டிருக்கிறது. மேல் பகுதியில் கந்தருவர் கள் பூமாலைகளுடன் காட்சியளிக்கின்றனர். இவ் விரண்டு சிற்பங்களும் இக்குகை குடைந்த அரசனும் அவன் தன் மனைவியுமாகும் என்று செவிவழிச் செய்திகள் கூறுகின்றன. இங்கிருந்து உள்ளே சென் றால் 48 அடி சதுரமான பகுதியை அடையலாம். அங்குப் புத்தர் போதி மரத்தினடியில் சிம்மா சனத்தில் அமர்ந்துள்ளது போன்று செதுக் கப்பட்டுள்ளார். இவருக்கருகில் கந்தருவர் களும் சாமரம் வீசுபவர்களும் உள்ளனர். அருகில் கையில் பூச்செண்டுடன் பெண் சிற்பம் ஒன்று வடிக்கப்பட்டுள்ளது; இது புத்தரின் தாய் மாயா அல்லது மனைவி யசோதரையாக இருக்கலாம் என்று ஊகிக்கப்படுகிறது.

இங்கிருந்து வடக்காகச் சென்றால் மூன்றாம் குடைவரையை அடையலாம். இது புத்தத் துறவி களின் விகாரம் (Vihara) ஆகும். 45 அடி நீளமுடைய குடைவரையில் அறைகள் பன்னிரண்டு தனித் தனியாகக் குடையப்பட்டுள்ளன. பக்கத்திற்கு 5 அறைகள் வீதம் இரண்டுபுறமும் 10 அறைகளும் முன்பகுதியில் 2 அறைகளும் குடையப்பட்டுள்ளன புத்தர் பத்மாசனத்தில் அமர்ந்த நிலையில் உள்ளார். இவருடைய தலைக்குமேல் பாம்பு ஒன்று படமெடுக் கும் நிலையில் உள்ளது. இதைத் தொடர்ந்து 5 குடை வரைகள் உள்ளன. ஒன்றில் பத்மபாணியாகப் புத்தர் பத்மாசனத்தில் அமர்ந்துள்ளார். சடை, மகுடம், கையில் செபமாலை, மலர் ஆகியவற்றைப் பெற்று இவர் விளங்குகிறார். சேடியர் இருவர் இவரது அரு கில் உள்ளனர்.

ஐந்தாம் குடைவரையான புத்த விகாரம் 117 அடி நீளமும் $58\frac{1}{2}$ அடி அகலமும் கொண்டு விளங்கு கிறது. இது 'மகர்வடா' என்று சொல்லப்படுகிறது. இதை 24 கற்றூண்கள் இரண்டு வரிசையாக நின்று தாங்கிக் கொண்டு இருக்கின்றன. இப்பகுதியில் 20 அறைகள்புத்தத் துறவிகளுக்கென்று குடைந்துள்ளனர். இது ஒரு பாடசாலையாக அமைந்துள்ளது. மாணவர் கள் அமர்வதற்கும் படிப்பதற்கும் சாய்வு மேசை களைக் கல்லில் குடைந்துள்ளனர். ஆசிரியர்களுக்கு நாற்காலிகள் உள்ளன. ஆசிரியர்களாகப் பணிபுரியும் புத்தத் துறவிகளும் இங்குத் தங்கியுள்ளனர். இக்குடை வரையின் நடுவில் புத்தர் அமர்ந்த நிலையில் செதுக் கப்பட்டுள்ளார்.


பத்தாம் குடைவரை சைத்தியமாகும். இது விசுவகர்மா (Visvarkama)குடைவரை எனப்படுகிறது. இககுடைவரைத் தூண்களின் மேற்பாகம் அரைவட்ட மாக அமைக்கப்பட்டுள்ளது. இக்குடைவரையின் நடு வில் 11 அடி உயரமுடைய புத்தர் அமர்ந்த நிலை யில் செதுக்கப்பட்டுள்ளார். இவருக்கு மேல் கூம்பு போன்ற வடிவம் செதுக்கப்பட்டுள்ளது. இவருக்கு மேல் போதிமரம் காணப்படுகிறது. இவருக்கு அருகில் பரிவார தேவதைகளும் கந்தருவர்களும் செதுக்கப் பட்டுள்ளனர். மேல்பாகத்தில் உள்ள அரைவட்ட அமைப்பிற்கு மர இணைப்புக் கொடுக்கப்பட் டுள்ளது. அதற்கு மேல் எல்லா இடங்களிலும் தேவகணங்கள் உள்ளன. இதை அடுத்துள்ள 11–ஆம் குடைவரை கி.பி. 1876-இல் தோண்டி எடுக்கப்பட்டதாகும். இதற்குத் தோதளா (Do Tala) என்று பெயர். இரண்டு அடுக்குகளுடன் காணப்படு கின்ற இக்குடைவரையை 8 சதுரத்தூண்கள் தாங்கி நிற்கின்றன. உள்ளே செல்வதற்கு 5 வாயில்கள் காணப்படுகின்றன. இரண்டாம் மாடியில் அமர்ந்த



எல்லோரா-பன்னிரண்டாம் குடைவரை

நிலையில் புத்தரின் சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. இவர்தம் இரு கைகளும் கால் மீதுள்ளன. இதற்கு முன் பெண் உருவம் ஒன்று தண்ணீர்ச் சாடியுடன் உள்ளது. அருகில் குபேரன், வச்சிரபாணி ஆகியோர் உள்ளனர்.

நிசாம்களின் காலத்தில் சுத்தம் செய்யப்பட்டுப் பாதுகாக்கப்பட்டகுடைவரை பன்னிரண்டாவதாகும். இது மூன்று தளங்களுடன் உள்ளது. எனவே தீன் தளா **(Tin Tala)** என்று கூறப்படுகிறது. இங்குப் புத்தர் அமர்ந்த நிலையில் உள்ளார். சாமரம் வீசுப வர்கள் மேல் பகுதியிலும், பத்மபாணி, வச்சிரபாணி ஆகியோர் இட, வலப் புறங்களிலும் உள்ளனர். இதற்கு மேலும் கீழும் 6 உருவங்கள் குடைந்துள்ள னர். இவை ஒவ்வொன்றும் புத்தகம், கத்தி, கொடி, மலர் போன்றவற்றைக் கையில் வைத்துள்ளது. இப்பகுதியில் மட்டுமன்றிக் குடைவரையின் பிற பகுதி களிலும் இவ்வுருவங்கள் காணப்படுகின்றன. அடுத் துள்ள கருவறையின் வாயிலில் இரண்டு துவாரபால கர்கள் உள்ளனர். கருவறையில் 11 அடி உயர முடைய புத்தர் சிலை காணப்படுகிறது. இப்பகுதியில் இதைப் போன்று 5 புத்தர் சிற்பங்கள் காணப்படு கின்றன. இதற்குக்கீழ்ப் பல வகையான சிற்பங் கள் வடிக்கப்பட்டுள்ளன. இங்குள்ள பத்மபாணி, வச் சிரபாணி, பெண் சிற்பங்கள் ஆகியவை எழிலுடன்




எல்லோரா-தூபியும் புத்தர் சிற்பமும்

காட்சி தருகின்றன. அடுத்துள்ள பகுதியில் தியான நிலையில் உள்ள புத்தர் உருவங்கள் ஏழு வடிக்கப் பட்டுள்ளன. அருகில் பெண் தெய்வங்களும் காட்சி தருகின்றன.

**இந்து சமயக் குடைவரைகள்:** குகை 14-இல் சைவ, வைணவச் சிற்பங்கள் இரண்டும் சேர்ந்து காணப்படு கின்றன. இக்குகை 54 அடி நீளமும் $55\frac{1}{2}$ அடி அகலமு முடையது. இக்குகையைச் சுற்றித் திருச்சுற்றுக் காணப்படுகிறது. இத்திருச்சுற்றில் சிற்பங்கள் வடிக் கப்பட்டிருக்கின்றன. தெற்குச்சுவரில் சைவத்தைச் சார்ந்த சிற்பங்கள் மட்டும் உள்ளன. மகிடாசூரமர்த் தினி, சிவன் பார்வதி, நடராசர் போன்ற சிற்பங்கள் கலை நுணுக்கம் வாய்ந்தவை. சிவனும் பார்வதியும் கைலாயத்தில் அமர்ந்துள்ள காட்சியும், இராவணன் தன் தோள்களால் கைலாயத்தைத் தூக்கும் காட்சி யும் செதுக்கப்பட்டுள்ளன. கைலாயத்திலுள்ள காடும் அங்கு வாழும் விலங்குகளும் உன்னதமான முறையில் செதுக்கப்பட்டுள்ளன. பைரவர் அருகில் குள்ளமான உருவச்சிற்பமும் பின்புறம் கணபதி உருவமும் பார் வைக்குக் கொடூரமான முறையில் காட்டப்பட்டுள் ளன. வடக்குப் பக்கத்தில் திருமாலும் அவருடைய அவதாரங்களும் உள்ளன. இலக்குமி, துர்க்கை, கூர்மஅவதாரம், நாகராசன், பூதேவி, திருமால் வைகுந்தத்தில் அமர்ந்துள்ள காட்சி போன்றவை இக்குகையில் உள்ள குறிப்பிடத்தக்க சிற்ப உருவங் களாகும்.

பதினைந்தாம் குடைவரை முன் பலிபீடமும் அத்துடன் சிறு கோயிலும் உள்ளன. இங்கு இரண்டு வடமொழிக் கல்வெட்டுகள் உள்ளன. இரண்டு தளங் களுடன் உள்ள இக்குடைவரையினை 14 சதுரத் தூண்கள் தாங்கி நிற்கின்றன. குடைவரைச் சுவரில் கணபதி, சிவன், பார்வதி, சூரியன், மகிடாசூர மர்த் தினி, அர்த்தநாரீசுவரர், பைரவர், காளி போன்ற சிற்பங்கள் வடிக்கப்பட்டுள்ளன. இதைத் தொடர்ந்து மேலே சென்றால் 95 அடி நீளமும் 109 அடி அகலமும் உடைய மண்டபப் பகுதியை அடையலாம். இதன் இருமருங்கிலும் சிற்பங்கள் காட்சியளிக்கின்றன. ஒரு புறம் சைவச் சிற்பங்களும் மறுபுறம் வைணவச் சிற் பங்களுமாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. சைவ வரிசை யில் பைரவர் உருவம் கோரைப்பல்லுடனும் திரிசூலம், கபாலம் ஆகியவை கொண்டுள்ள தோற்றத்துடனும் செதுக்கப்பட்டுள்ளது. அருகில் உள்ள காளி கொடூ ரத் தோற்றத்துடன் உள்ளது. மார்க்கண்டேய அனுக் கிரகமூர்த்தி, கலியாண சுந்தரர் திருக்கல்யாணம் போன்ற புராணக் கதைகளின் அமிசங்கள் மிக அழ கான முறையில் இங்குக்காணப்படுகின்றன. வைணவ



எல்லோரா-பதினைந்தாம் குடைவரை

வரிசையில் திருமால் பாற்கடலில் பள்ளி கொண்ட காட்சி, திருமால் கருடாசனத்தில் அமர்ந்த காட்சி, பூதேவி, கூர்ம அவதாரம், வாமன அவதாரம், நரசிம்ம அவதாரம் போன்ற அவதாரங்களும் இப்பகுதியில் செதுக்கப்பட்டுள்ளன.

பதினாறாம் குடைவரைக் கோயிலான கைலாசநாதர் கோயில் இந்தியக் கோயிற் கட்டடக் கலையில் ஒரு சிறந்த இடத்தைப் பெற்றுள்ளது. இது தக்காணத்தை ஆண்ட இராட்டிரகூட மன்னரான முதலாம் கிருட்டிணன் என்பவரால் குடையப்பட்டது. இவர் கி.பி. 758க்கும் கி.பி. 773க்கும் இடைப்பட்ட காலத்தில் ஆட்சி செய்தவர். இவர் பெரிய பாறையைச் செதுக்கிக் கோயிலாக்கி உள்ளார். இக்கோயில் 276 அடி நீளமும் 154 அடி அகலமும் 107 அடி உயரமும் கொண்டது. இக்கோயிலில் கருவறை, மேற்குப் புறவாயில், நந்திமண்டபம், திருச்சுற்று ஆகியவை உள்ளன. அருகில் உள்ள கோயில்கள் பிற்காலத்தில் எழுந்தவை ஆகும். இங்குள்ள சிற்பங்கள் பார்வையாளர்களை வியக்கச் செய்வனவாக அமைக்கப்பட்டுள்ளன. சிவன்கோயிலாக இருந்தாலும் திருமாலின் அவதாரங்கள் இங்குச் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன.



எல்லோரா - கைலாசநாதர் கோயில்


இக்கோயிலின் கொடிக் கம்பம் 45 அடி உயரமுடையது இதன் மேல் சிவனின் சூலம் உள்ளது. அதைத் தொடர்ந்தாற்போல் நந்தி மண்டபம் உள்ளது. இலக்குமி பத்மாசனத்தில் அமர்ந்துள்ளாள். இதன் அடிப்பாகத்தில் சில கல்வெட்டுகள் உள்ளன. இவை கி.பி. 3-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை ஆகும். கல்வெட்டு ஒன்று கி.பி. 15-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாய்ச் சிதைவுற்ற நிலையில் உள்ளது. இங்குச் சிவன் 'கால பைரவர்' வடிவத்தில் உள்ளார். பார்வைக்கு அச்சம் தரும் இச்சிற்பத்தின்கீழ் சப்த மாதர்களின் சிற்பங்கள் உள்ளன. அருகில் சிவன் யோகி வடிவத்தில் காட்சிதர முனிவர்கள், தேவர்கள் ஆகியோர் அருகில் உள்ளனர். இதையடுத்து மகாபாரதம், இராமயணக் கதைகள் செதுக்கப்பட்டுள்ளன. இதற்குக் கீழ் விலங்குகள் படுத்திருக்கும் காட்சி, பால்ஊட்டும் காட்சி போன்றவை மிக நுணுக்கமாகச் செதுக்கப்பட்டுள்ளன. இக்கோயிலின் தெற்குப் பகுதி 12 பெரிய பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு அவற்றில் பெரிய சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. அன்னபூரணி, வராகி, திருமால் கருடாசனத்தில் அமர்ந்துள்ள காட்சி, வாமன அவதாரம், நரசிம்மன், அர்த்தநாரீசுவரர் ஆகிய சிற்பங்கள் குறிப்பிடத்தக்கவை ஆகும்.

கிழக்குப் பகுதியில் கால பைரவர், கபால பைரவர், சித்தியோகினி பைரவர், பூபால பைரவர், மகாதேவி, பிரமன், சதாசிவ மூர்த்தி, வீரபத்திரர் ஆகிய சிற்பங்கள் கலை நுணுக்கத்துடன் வடிக்கப்பட்டுள்ளன. இதை அடுத்துள்ள பகுதியின் விதானத்தில் வண்ண ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. இவற்றின்மேல் மூன்று முறை வண்ணங்கள் தீட்டியுள்ளனர். இந்த ஓவியங்கள் அசந்தா ஓவியங்களை ஒத்துக் காணப்படுகின்றன. கருவறையில் சிவலிங்கம் உள்ளது. கருவறையைச் சுற்றிப் பல அறைகள் செதுக்கப்பட்டுள்ளன. தெற்குப் பகுதியிலும் பல சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இங்குள்ள தூண்களில் பெண் உருவங்கள் வடிக்கப்பட்டுள்ளன. வராகி, காளி, கணபதி, இந்திராணி, பார்வதி, சரசுவதி, வைட்ணவி போன்ற சிற்பங்கள் பெரிய அளவில் வடிக்கப்பட்டுள்ளன. இராவண அனுக்கிரமூர்த்திஇங்கும் மிக அழகான முறையில் உள்ளது. இங்குள்ள இலங்கேசுவரர் சிற்பம் மிகக் கொடூரமான அமைப்புடையது.

இருபத்தொன்றாம் குடைவரை 'இராமேசுவர' என்று சொல்லப்படுகிறது. இக்குடைவரைக்

கோயில் சிவனுக்குரியது. முன்பகுதியில் நந்தி, கணபதி, சாமரம் வீசுபவர்கள், கந்தருவர்கள் ஆகியோர் உள்ளனர். இதை அடுத்துள்ள மண்டபத்தில் சிற்பங்கள் உள்ளன. இச்சிற்பங்களுள் கணேசர், சப்தமாதர்கள், நடராசர், பார்வதி, பிருங்கி முனிவர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். வடக்குப் பகுதியில் சிவனின் திருக்கல்யாணம் காட்சி தருகின்றது. பிரமன் தீக்குண்டத்தின்முன் அமர்ந்த காட்சியும் சிவன் பார்வதியின் கையைப் பற்றியுள்ள காட்சியும் கண்களுக்கு விருந்தாகின்றன. மகிடா சுரமர்த்தினியாகக் காளி எருமை வாகனத்தில் படைக்கலங்களுடன் காட்சியளிக்கிறாள்.

95 அடி நீளமும் 27 அடி அகலமும் 13 அடி உயரமும் உடையது. 6 தூண்கள் இதைத் தாங்கி நிற்கின்றன. இதில் சூரியன் 7 குதிரைகளால் பூட்டப்பட்ட வண்டியில் அமர்ந்துள்ளார். அருகில் பெண்களும் உள்ளனர். எனவே இது சூரியனின் கோயிலாக இருக்கும் என்று கருதப்படுகிறது. இருபத்தொன்பதாம் குடைவரை பிற்காலத்தில் குடையப்பட்டதாகும். இங்கு இரண்டு பெரிய சிங்கங்களும் பல சிறிய யானைகளும் வடிக்கப்பட்டுள்ளன. நந்திக்கென்று வட்டமாக ஒருபகுதி விடப்பட்டுள்ளது. இக்கோயிலிலும் இராவண அனுக்கிரக மூர்த்தி, பைரவர், நந்தி சிற்பங்கள் ஆகியவை உள்ளன. இங்குள்ள சிவபெருமானின் திருமணக்கோலச் சிற்பம் சிறப்பு வாய்ந்த ஒன்றாகும்.



எல்லோரா – இருபத்தொன்றாம் குடைவரை

இதை அடுத்துள்ள இருபத்திரண்டாம் குடைவரை ‘நீலகண்டம்’ என்றுகூறப்படுகிறது. இக் குடைவரையில் நந்தி மண்டபம் முன் பகுதியில் உள்ளது.இம் மண்டபத்தின்சுவரில் சப்த மாதர்களின் சிற்பங்கள் காணப்படுகின்றன.மற்றச் சுவர்களில் கார்த்திகேயன், திருமால், கணேசன் ஆகிய சிற்பங்கள் அழகு செய்கின்றன. கருவறையில் பளபளப்பானஇலிங்கம் வழிபாட்டிற்காக வைக்கப்பட்டுள்ளது. சிவனின் பெயர்களுள் நீலகண்டம் என்பது ஒன்று.

இருபத்தைந்தாம் குடைவரை கும்பர்வதா (**Kumbharwada**) என்று சொல்லப்படுகின்றது. இது

காளிதாசரால் வருணிக்கப்படும் திருக் கல்யாணக் காட்சியைப் போன்றே இச்சிற்பங்கள் காணப்படுகின்றன. சிவன், பார்வதி, பிரமன், தாதிகள், தேவர்கள், தேவ கணங்கள், முனிவர்கள் போன்ற சிற்பங்கள் சிறப்பான சிற்பங்களாக இக் குகையில் உள்ளன.

இங்குள்ள குடைவரைகளுள் சிறிய கைலாசநாதர் கோயில் என்று கூறப்படுவது பிற்காலத்தில் குடையப்பட்டது. இதை ஐதராபாது அரசு கி.பி. 1877-இல் சுத்தம் செய்து பாதுகாத்துள்ளது.

இது திராவிட அமைப்புடைய கோயிலாகும். இங்கும் கருவறை, முன்மண்டபம், நந்தி மண்டபம் போன்றவை சிறிய அளவில் உள்ளன. இப்பகுதியில் கிடைத்துள்ள சிற்பங்கள் கி.பி. 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை ஆகும்.

சமண சமயக் குடைவரைகள்: சமணக் குடைவரைகளில் இந்திர சபை சிறப்பு வாய்ந்தது. இது இரு தளங்கள் கொண்டது. கிழக்கு முகமாக உள்ள கோயிலின் முன்பகுதி இந்திர சபையாகும். முன்பக்கம் இரண்டு தூண்களும் பின்பக்கம் நான்கு தூண்களும் இக் கோயிலைத் தாங்கி நிற்கின்றன. இப்பகுதியில் பார்சுவநாதர் சிற்பங்கள் வடிக்கப்பட்டுள்ளன. பார்சுவநாதருக்கு மேல் ஏழுதலை நாகம் படத்துடன் காட்சியளிக்கிறது. நிருவாணமாக உள்ள பார்சுவநாதரின் அருகில் பெண் உருவம் ஒன்று கையில் குடைபிடித்தவாறு காணப்படுகிறது. இதன் கீழே பக்தர்கள் உள்ளனர். தெற்குப் பகுதியில் கோமதீசுவரர் ஆடையின்றி நின்ற நிலையில் உள்ளார். இவருடைய கால்களைச் சுற்றிக் கொடி படர்ந்துள்ளது போல் காட்டப்பட்டுள்ளது. மகாவீரர், முதலாம் தீர்த்தங்கரர் ஆகியோர் சிற்பங்கள் மண்டபத்தில் உள்ளன. இந்திரனையும் இந்திராணியையும் பின்புறம் வடித்துள்ளனர். இந்திரன் யானையின் மேல் அமர்ந்தும் யானை படுத்த நிலையிலும் உள்ளது. இந்திரனுக்கு மேல் ஆலமரம் கிளைகளுடன் காட்டப்பட்டுள்ளது. அருகில் இரண்டு காவலர்கள் உள்ளனர். இந்திராணி மாமரத்தின் கீழ் அமர்ந்த நிலையில் காட்சி தருகிறார். சண்டிநாதராகிய 16-ஆம் தீர்த்தங்கரர் அருகில் உள்ளார். இதற்குக் கீழ் கி.பி. 8,9-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டு ஒன்று உள்ளது. திகம்பரப் பிரிவைச் சார்ந்த சோகிலா என்பவர் இந்த சண்டிநாதரைச் செய்வித்தார் என்று இக்கல்வெட்டுக் கூறுகிறது. அருகில் உள்ள சிற்பங்களில் உள்ள கல்வெட்டும் இக்காலத்தைச் சார்ந்தது. 'சிரிநாகவர்மனால் இது செய்யப்பட்டது' என்று இக்கல்வெட்டுக் குறிக்கின்றது.

இந்திர சபையை அடுத்துள்ள சகந்நாத சபை சமணமதத்தில் முக்கிய இடம் வகிக்கிறது. இதன் அருகில் கட்டுமானக்கோயில் ஒன்று அழிந்த நிலையில் உள்ளது. தொடர்ந்து நான்கு தூண்களுடன் உள்ள மண்டபம் ஒன்று உள்ளது. இதில் பார்சுவநாதர் கோமதீசுவரர், மகாவீரர் போன்ற சிற்பங்கள் காட்சி தருகின்றன. இந்திரன், இந்திராணி வடக்குப்பகுதியில் காணப்படுகின்றனர். இங்கும் சில கல்வெட்டுகள் காணக் கிடக்கின்றன. இவை கி.பி. 8-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கன்னட எழுத்துகளில் உள்ளன. இதைத் தொடர்ந்து உள்ளே உள்ள அறையின் வாயில் அரைவட்ட வடிவத்தில் அமைக்கப்பட்டுள்ளது. மேலே சென்றால் 12 தூண்கள் உள்ள மண்டபம் ஒன்றை அடையலாம். இங்குள்ள தூண்களின் அடிப்பாகம் சதுரமாகவும் மேல்பாகம் வட்டமாகவும் உள்ளன. இப்பகுதியில் மகாவீரர் சிற்பங்கள் ஏறக்குறைய ஐம்பதும் பார்சுவநாதர் சிற்பங்கள் ஏறக்குறைய பத்தும் உள்ளன. கருவரையில் சூனேந்தார் சிற்பம் உள்ளது. இவர் நான்கு சிங்கங்கள் தாங்கிய சிம்மாசனத்தில் காட்சியளிக்கிறார். இவர் தலைக்குமேல் முக்குடை உள்ளது. தலைக்குமேல் மிகப் பெரிய நாகம் நிழல் தருவது போன்று காட்சியளிக்கிறது. பார்சுவநாதருக்கு இரண்டு பக்கங்களிலும் பக்தர்கள் உள்ளனர். இவர் ஆசனத்திற்குக்கீழ்க் கல்வெட்டு ஒன்று உள்ளது. இக்கல்வெட்டு கி.பி. 1234-35-ஆம் ஆண்டைச் சார்ந்தது.

ஓவியங்கள்: எல்லோராக் குகைகளில் பல இடங்களில் ஓவியங்கள் உள்ளன. இவ்வோவியங்கள் ஒன்றின் மேல் ஒன்றாக இரண்டுமுறை தீட்டப்பட்டுள்ளன. பெரும்பாலான ஓவியங்கள் விதானத்தில் காட்சியளிக்கின்றன. திருமால், சீதேவி ஆகிய இருவரும் கருடாசனத்தில் அமர்ந்துள்ள காட்சியும் கருடனும் வித்தியாதரர்களும் வானத்தில் பறந்து செல்கின்ற காட்சியும் அழகாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன. மேகங்கள் காட்டப்பட்டுள்ள அமைப்பு கண்களைக் கவருகின்றது. இங்குள்ள ஓவியங்களின் உருவங்கள் நீண்டும் சிறியனவாகவும் தீட்டப்பட்டு, நீண்டமூக்கும் திறந்த கண்களும் பெற்றுத் திகழ்கின்றன. இரண்டுமுறை தீட்டப்பட்ட ஓவியங்களுக்குள் வேறுபாடுகள் உள்ளன. முதல் ஓவியங்களில் குறைந்த அணிகலன்களே உள்ளன. பிற்கால ஓவியத்தில் மிகுந்த அணிகலன்கள்காணப்படுகின்றன. பெரும்பாலான ஓவியங்கள் பல்லவர் காலத்து ஓவியங்களைப் போன்று காணப்படுகின்றன. எல்லோராவில் உள்ள பெரும்பாலான குடைவரைகளிலுள்ள ஓவியங்கள் இராட்டிரகூட அரசர்களின் முயற்சியால் வரையப்பட்டவை.

தி.சு.

துணை நூல்கள்:

Archaeological Remains Monuments and Museums Part I, Archaeological Survey of India, New Delhi-1964.

**Brown, P.,** Indian Architecture (Buddhist and Hindu), Bombay, 1949.

**James Burgess,** Elura Cave Temple, Indological Book House, Varanasi,1972.

**John B. Seely.** The Wonders of Elora, B.R. Publishing Corporation, Delhi, 1975.

**Krishna Chaitanya, A.,** History of Indian Painting, Mural Tradition, Abhinau Publication, New Delhi, 1976.

**எல்வெசியசு, கிளாடு அட்ரியன்:** ஐரோப்பிய அறிவு மலர்ச்சிக் காலமாகிய கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த பிரெஞ்சுத் தத்துவ ஆசிரியரே எல்வெசியசு ஆவர். எல்வெசியசு (Claude Adrien Helveties) பாரிசில் கி.பி. 1715-ஆம் ஆண்டில் சீன்கிளாடு அமரியன் எல்வெசியசு என்னும் புகழ்மிக்க மருத்துவருக்கும் செனிவிவு நோயல் என்னும் அம்மையாருக்கும் பிறந்தார். இவர்கள் குடும்பம் பண்டைக் காலத்தில்செருமானியப் பாலட்டைனிலிருந்து பிரான்சுக்குச் சென்று குடியேறிற்று. அப்போது அக்குடும்பத்தினுடைய சுவைட்சர் (Schweitzer) என்ற செருமானியப் பெயரும் எல்வெசியசு என்று இலத்தீன் பெயராக மாற்றப்பட்டது. இளமையில் எல்வெசியசு புகழ்மிக்க உலூயி லெகிராண்டு (Louis-le-grand) என்ற இயேசு சங்கத்தாருடைய கல்லூரியில் சேர்ந்து உயர் தனிச் செம்மொழி இலக்கியங்களைப் பயின்றார். பின்னர், இவர் ஆங்கில அரசியற் சிந்தனையாளர்களான தாமசு ஆப்சு, சான் இலாக்கு, பிரஞ்சுச் சிந்தனையாளர்களான மாண்டெசுகியு, வால்ட்டேர் முதலியோர்களுடைய கருத்துகளைப் பிறரிடம் கேட்டறிந்தார். இவர் அரசாங்கத்தில் வரி வாங்கும் அலுவலராக நேர்மையுடன் பணி செய்து பொருள் தேடினார். திருமணம் செய்து கொண்ட பின்னர், இவர் சிறிது காலம் பாரிசில் தங்கிச் சுயசிந்தனையாளராக வாழ்ந்தார். இவர் கி.பி. 1764-ஆம் ஆண்டில் இங்கிலாந்துக்கும் கி.பி. 1765-ஆம் ஆண்டில் பிரடரிக் மாமன்னரால் ஆளப்பட்ட பிரசியாவுக்கும் சென்றுவந்தார். இவர் வானவியல் புலவர்களோடு தொடர்பு கொண்டு, அவர்கள் யாவரும் ஒருங்கு கூடுவதற்கு ஒரு கழகம் அமைத்தார். இவர் கி.பி. 1769-ஆம் ஆண்டிற்கு முன்னரே தெ எல் ஓம் (De l, Homme) என்ற நூலை எழுதி முடித்தார். இவர் நோய்வாய்ப் பட்டுப் பாரிசில் தம் வீட்டில் கி.பி. 1771-இல் காலமானார்.

**எல்வெசியசு சிந்தித்த சூழ்நிலை:** எல்வெசியசு வாழ்ந்து, சிந்தித்த காலம் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் அறிவு மலர்ச்சிக் காலம் (Age of Enlightenment) எனப்படும். அறிவு மலர்ச்சிக் காலம் என்பது கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் நிலவிய எண்ணங்களையும் வாழ்க்கை முறையையும் குறிப்பிடுகிறது. இதில் மரபுகளும் வழக்கங்களும் ஆராயப்பட்டு, அவை தனிமனித உரிமைக்கும் செயலறிவுக்கும் அறிவியலாராய்ச்சிக்கும் உட்படாதவையாயினமையின் ஒதுக்கப்பட்டன. அறிவு மலர்ச்சிக் காலத்திய சிந்தனையாளர்கள் பண்டைய சிந்தனையாளர்களான புளூட்டார்க்கு, சிசரோ, செனக்கா முதலியோருடைய கருத்துகளிலிருந்து இயற்கையான ஒழுக்க விதிகளை (Principles of natural ethics) ஏற்றனர். சில சமயங்களில் கிறித்தவ நெறிக்கு மாறாகவும் அவர்களுடைய முடிபுகளிருந்தன. அவர்கள் அறிவியலுக்கு ஒத்த கோட்பாடு ஒன்று பெறுதற்குப் பிளேட்டோ, அரிசுட்டாட்டில் ஆகியோரையே முன்னோடிகளாக ஏற்றனர். கிறித்தவ நெறி சாராத இம்முறையின் போக்கே அறிவுமலர்ச்சி ஆகும். இச்சூழ்நிலையில் பிரான்சில் தெக்கார்ட்டே (Descartes), இங்கிலாந்தில் தாமசு ஆப்சு, (Thomas Hobbes), சாப்டசுபரி (Shaftesbury) முதலியோர் சிறப்புற்று விளங்கினர். இவர்கள் முறையே இயற்பொருள் வாதக் கோட்பாட்டையும் (Materialism), குறைகாண் கோட்பாட்டையும் (The theory of Cynicism), நம்பிக்கையும் பிறர்நலம் கருதலும் பற்றிய கோட்பாட்டையும் (Theories of Optimism and Altruism) வகுத்தனர். சான் இலாக்கு (John Locke) என்பவர், 'பொருளைப்பற்றிய மனிதக் கருத்துகள் மனிதனுடைய புலனுணர்வுகளிலிருந்து (Sense Perceptions) தோன்றுகின்றனவே தவிர, அவை தனியாக மனித மனத்தில் தோன்றவில்லை' என்ற ஒரு கோட்பாட்டை வகுத்தார். மேலும் அவர், 'மனிதனுடைய உளவியற் செயல்களெல்லாம் அவனுடைய புலனுணர்வுகளினாலேயே ஏற்படுகின்றன' என்று கூறினார். இதிலிருந்துதான் எல்வெசியசு தம் மனித இயல்பு பற்றிய கருத்துகளைக் கூறினார். ஐசக்கு நியூட்டன் (Isaac Newton) ஆராய்ந்து, 'அண்டமும் (Universe) நிலவுலகும் சாதாரண மனிதரால் அறிந்து கொள்ளக் கூடிய கணித விதிகளை ஒட்டியே இயங்குகின்றன. மனிதனிடத்தில் இன்பநாட்டம் என்ற இயல்பு மேலோங்கி இருப்பதால்தான் மனித இயல்பும் சமூக வாழ்வும் ஏற்படுகின்றன' என்று கூறினார். எல்வெசியசு தாம் எழுதிய 'மனத்தைப் பற்றிய கட்டுரைகள்' (Essays on mind, 1758) என்ற நூலில் 'ஒழுக்க விதிகளெல்லாம் தன்னலமென்ற நோக்கத்தினடிப்படையில் எழுந்தவையே' என்று கூறினார். இவர் நூல்கள் இவர் காலத்திலும் பிரெஞ்சுப்புரட்சி நடைபெற்ற காலத்திலும் இருந்த புகழ்மிக்க பல ஆசிரியர்களுக்குக் கருத்துகளை அளித்தன. இவருடைய கருத்துகளுக்குப் பிரிட்டனில்தான் மிக்க வரவேற்பு இருந்தது. அங்கிருந்த பயன்வழிக் கோட்பாட்டாளர்களான செரிமி பெந்தம் (Jeremy Bentham), சேம்சு மில் (James Mill) ஆகியோருக்கு எல்வெசியசு முன்னோடியாவார்.

எல்வெசியசின் கருத்துகள்: மனிதனுடைய மனத்தில் தோன்றும் கருத்துகளெல்லாம் புலன் உணர்வுகளின் கூறுகளே என்று பிரெஞ்சுச் சிந்தனையாளர் கோண்டிலாக்கு (Condillac) கூறினார். அவர் கி.பி. 1758-இல் வெளியிட்ட தி எல் இசுபிரிட்டு (D el' Esprit) என்ற நூலில் மன ஆற்றல் செயற்படும்வகையை ஆராய்ந்து ஒழுக்க விதிகள் சிலவற்றைக் கூறினார்.

1. மனித செயல்களெல்லாவற்றுக்கும் ஆதாரமாக இருக்கும் ஒரே நோக்கம் தன்னலமே (Self interest) ஆகும்.

2. மனிதனுடைய ஒழுக்க இயலான செயல்களிலும் கூடத் தன்னுணர்வு என்பது முக்கிய காரணியாக இருக்கிறது.

3. ஆகையால் ஒரு செயல் ஒழுக்க இயல்புடையதா என்று அறிதற்கு உதவும் அளவுகோல் எது என்றால், அது எந்த அளவுக்குச் சமூகத்துக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்பதே ஆகும்.

4. அரசாங்கம் செய்யும் சட்டங்களும், ஒவ்வொருவரும் பெறும் கல்விப் பயிற்சியும், வெகுமதிகள் வாயிலாகவும் தண்டனைகள் வாயிலாகவும் தனியாளின் தன்னலத்தைச் சமுதாய நலத்தோடு முரணின்றி இணைப்பதற்கு உதவியாக இருக்கின்றன. அவருடைய இரண்டாம் நூலாகிய 'தி எல் ஓம்' (D el' Homme) என்பது அவர் இறந்தபின் கி.பி. 1772-இல் வெளியாயிற்று. இந்நூலில் அவர் கூறிய கருத்துகளின் சுருக்கம், 'ஒரு நாட்டின் பெருமைக்கும் முன்னேற்றத்துக்கும் காரணமான அறிவு, பண்பு, திறமை முதலியவையெல்லாம் புலன் உறுப்புகளின் வேறுபாட்டால் உண்டாகவில்லை; அவையெல்லாம் கல்விப் பயிற்சியால்தான் உருவாகின்றன. கல்விப் பயிற்சியை நாட்டின் சட்டங்களும் அரசாங்க அமைப்பும் கட்டுப்படுத்துகின்றன. ஆகையால் நாடுகள் நற்பயன் பெறுதல் என்பது அவற்றின் கையிலேயே இருக்கிறது. நற்பயன் பெறுதலாகிய அச்செயல் அவை தமது கல்வி இயலைச் சீர்திருத்துவதில் காட்டும் ஆர்வத்தையே முழுவதும் சார்ந்துள்ளது' என்பதாகும்.

மதிப்பிடு: கூடுதலான அளவு இன்பத்தை நுகருதலும் குறைந்த அளவு துன்பத்தை ஏற்பதுமே மனித இயல்பும் நோக்கமும் ஆகும். ஆகையால் இதை ஆதாரமாக வைத்து எழுந்த மனித ஒழுக்க இயல் (Ethics) என்பதும் பௌதிக இயலைப்போலவே (Physics) மனிதனுடைய செயலறிவுக்கு உட்பட்ட ஓர் அறிவியலே (An empirical Science) ஆகும். எல்வெசியசின் ஒழுக்க இயல் பற்றிய இந்தக் கருத்துக்குக் கிறித்தவத் திருச்சபையின் தலைவராகிய போப்பும் பாரிசின் நீதிமன்றமும் கடும் மறுப்புத் தெரிவித்தனர். எனினும் எல்வெசியசின் இந்தக் கருத்தே 50 ஆண்டுகளுக்குப் பிரெஞ்சு ஒழுக்க இயல் சட்டத் தொகுப்பாக இருந்தது. பொருள்களின் அசைவு (motion) என்பது பௌதிக நூலில் எவ்வாறு மையக் கருத்தாக உள்ளதோ, அவ்வாறே மனித தன்னலமே ஒழுக்க இயல்களின் மையக் கருத்து. மனிதர் தமக்கு நலன் தருவனவற்றைத் தேடுவதில் ஈடுபடுதல் வேண்டும். சமூக நலனுக்கு அறிவு வளர்ச்சியே துணை செய்வதாகுமென்ற எல்வெசியசின் கருத்து அறிவியலுக்கு ஒத்தது. எல்வெசியசு பயன்வழிக் கோட்பாடாகிய ஒழுக்க நெறியைப் (Utilitarian Ethics) (அதாவது பெரும்பாலான வருக்குப் பெருமளவு இன்பம் என்ற கோட்பாட்டை) பெந்தம், பெக்காரியா முதலியோருக்கு ஒரு சீர்திருத்தக் கோட்பாடாக வகுத்தார். செயலறிவு (Empiricism) என்பதை அளவுகோலாக வைத்து இவர் ஒழுக்க இயல், நடத்தை (Behaviour), அரசாங்கம் முதலியவற்றை ஆராய்ந்தது பாராட்டத் தக்கது. மேலும், உரூசோவைப்போல எல்வெசியசும் சமூகத்தின் ஓர் உறுப்பினராக மனிதன் இருத்தல் பயன் தரும் என்று கருதினார். பா.சு.

துணை நூல்கள்:

Sabine, G.H., A History of Political Theory, — Oxford & IBH Publishing Co., Calcutta, 1961.

Frankel, Charles, The Faith of Reason: The idea of Progress in the French Enlightenment, New York, 1948.

Sampson, R.V., Progress in the Age of Reason, Cambridge, 1956.

## எலிசபெத்து, பேரட்டு பிரௌனிங்கு:

விக்டோரியாவின் காலம் என்று சொல்லப்படும் கி.பி. 19-ம் நூற்றாண்டில் ஆங்கில இலக்கிய உலகில், குறிப்பாகக் கவிதைத்துறையில் தம் இனிய எளிய கவிதைகளின் மூலம், மிகச் சிறந்த கவிஞர் என்று பெயர் பெற்றவர் எலிசபெத்து பேரட்டு பிரௌனிங்கு (Elizabeth Barret Browning) ஆவார். இப்பெண் கவிஞர் கி.பி. 1806-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 6-ஆம் நாளில் தர்காம் (Durham) என்னும் ஊரில் எட்வர்டு பேரட்டு மூல்டன் (Edward Barret Moulton) என்பாருக்கு முதல் குழந்தையாகவும் அடுத்துப் பிறந்த பத்துக் குழந்தைகளின் அன்புக்குரிய தமக்கையாகவும் தோன்றினார். இவர் தம் எட்டாம் வயதில் தொன்மை

யான கிரேக்க இலத்தீன் மொழிகளையும் மற்றும்புதிய ஐரோப்பிய மொழிகளையும் கற்றார். எழுத்தறிவை யும் ஏட்டுக் கல்வியையும் வீட்டிலேயே பெற்ற இவர் இளமையிலேயே கற்பனை வளமும் கவிதை புனையும் ஆற்றலும் ஒருங்கே பெற்றவராகத் திகழ்ந்தார்.

கி.பி. 1819–ஆம் ஆண்டில் இவரது 'மராத்தான் போர்' (The Battle of Marathon) என்னும் காவியம் இவர் தந்தையால் வெளியிடப்பெற்றது. இவர் கி.பி. 1826–ஆம் ஆண்டில் 'மனம் பற்றிய கட்டுரையும் மற்றும் கவிதைகளும்' (An Essay on Mind and other Poems) என்ற நூலை வெளியிட்டார். அக்கிலசு (Aeschylus), என்ற ஒப்பற்ற கிரேக்கக் கவிஞரின் 'கட்டுண்ட பிராமித்தியசு' (Premetheus Bound) என்ற காவியம் இவரது நெடுங்கவிதையாக ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு வெளிவந்தது. 'தேவதையும் மற்றக் கவிதைகளும்' (Seraphim and Other Poems) என்ற கவிதை நூலை கி.பி. 1838-இல் எழுதினார்.

தம் நீண்டகவிதை ஒன்றில் (Casa Guidi Windows) பிளாரன்சு மக்கள் சார்பாக அவர்கட்கு ஆதரவு வேண்டித்தம்ஆதரவையும் ஆறுதலையும் தெரிவித் தார். இந்நூல் கி.பி.1851–இல் வெளி வந்தது.'அரோ ராலே' (Aurora Leigh) என்ற நூல் கி.பி. 1856-இல் வெளிவந்தது. இது ஒரு வசன கவிதை. இளம்பெண் ஒருத்திக்கும் அவள் காதலனுக்கும் இடையில் நில விய காதலைக்கவினுற விளக்கிய இந்நூல் ஓரளவிற்கு வெற்றி பெற்றது என்றாலும், திறனாய்வாளர் அதனைக் குறையே கூறினர். இவர் கி.பி. 1861–ஆம் ஆண்டில் இவ்வுலக வாழ்க்கையை நீத்து இறையடி அடைந்தார். இறப்பிற்குப் பின்னர் 'கடைசிக் கவிதை கள் தொகுதி' (A Volume of Last Poems) 1862–இல் வெளிவந்தது.

கவிதை உலகில் கொடி கட்டிப் பறந்த இப்பெண் கவிஞர் தொடக்க கால எழுத்தில் அவ்வளவாகச் சிறப்புப் பெற்றாரில்லை. தனிமையை விரும்பித் தனி யறையில், படுக்கையில் படுத்தபடியே ஓயாது ஒழி யாது படிப்பில் ஈடுபட்டு எழுத்தும் படிப்பும் மட்டுமே தாம் கண்ட உலகமாக எண்ணித் தமக் கென ஒரு தனிமை உலகை ஏற்படுத்திக் கொண் டார். சற்றே பலவீனமான உடல் அமைப்பை உடைய இவர் ஒரு கற்பனை அச்சத்தை வளர்த்துக் கொண் டிருந்தார். வாழ்க்கையின்.எதிர்மறைக்கோண நிகழ்ச்சி களில் மட்டற்ற, ஊன்றிய கருத்து வெறி (Obsession) உடையவராக விளங்கினார். இவருக்கெனக்கவிதை உலகம் ஓர் இடத்தை கி.பி. 1844–இல் அங்கீகரித்த போது, பெருங்கவிஞன் 'இராபர்ட்டு பிரௌனிங்கு' (Robert Browning) ஒரு தந்திச் செய்தியில் இவரது கவித்துவத்தின் மகத்துவத்தை மனந்திறந்து பாராட் டினார். 'உங்கள் கவிதைகளை இதயபூர்வமாக நேசிக்கிறேன்.....உங்களையும் சேர்த்தே' என்ற அந்த வாழ்த்துச் செய்தி இவரை இன்பத்தின் உச்சிக்கு உயர்த்திற்று. தன்னம்பிக்கை இழந்து, விரக்தியின் மொத்த உருவாகச்சாவை நேசித்து வந்த இப்பெண், கவிஞன் பிரௌனிங்கைச் சந்தித்தபோது, வாழ்வில் தமக்கென ஒரு பற்றுக்கோடு உருவானதை உணர்ந் தார். தம் உடல் ஊனத்திற்கும் மாறாகத் தம்மை காதலித்துக் கடிமணம் புரிய விரும்பிய பிரௌனிங்கு, ஒரு புத்துலகைத் தமக்காக உருவாக்குவார் என்று இவர் நம்ப, விதியோ வேறு விதமாகச் சதி செய்தது. தந்தை திருமணத்திற்கு ஒப்பவில்லை. காதலைத் துறக்கவோ மனமில்லை. இறுதியில் தந்தையின் விருப்பத்திற்கு மாறாக கி.பி. 1846–இல் இரக சியத் திருமணம் புரிந்து இருவரும் இத்தா லிக்கு ஓடினர். அங்குத்தான் தம் காதல் இறவா மல் இருக்க வேண்டித்தாம் வெளியிட்ட கவிதைத் தொகுப்பு ஒன்றில் அன்புக் கணவன்பால் தாம் கொண்ட தணியாக் காதலைக் கவிதையாக வடித் தார். இவருக்கு கி.பி.1849–இல் ஒருமகன் பிறந்தான். இல்லற வாழ்வு இனிதாய் இருந்தது.

தொடக்கநிலையில் எளியநிலையில் இருந்த இவரது கவிதைகள் வளமும் செறிவும் கொண்டு நாட்பட, நாட்பட மெருகேறிப் புத்துருப் பெற்றன. அவை வெறும்கற்பனையாக மட்டும்இராமல் அறமுரைக்கும், அறிவுறுத்தும் (Didactic) தன்மையைப் பெற்றதோடு, போப்பு, பைரன் போன்ற தலைசிறந்த ஆங்கிலக் கவிஞர்களின் பாணியையும் ஒத்திருந்தன. புனைவியற் பாணியும் புத்தார்வக் கற்பனையும் (Romanticism) விரவிநின்றஇவர் தம் கவிதைகளில்இறைநிலை கலந்த ஆன்மிகச் சார்பான (Mystical) கருத்துகளும் இடம் பெற்றன. கற்பனைச் செழுமையும் கருத்தாழமும் ஆற்றொழுக்கான உணர்ச்சி ஓட்டமும் இவர்தம் கவிதைகளுக்குச் சாகாவரம் நல்கின. ஆன்மிகச் சார் புடைய இவருடைய எழுத்துகளில் அதற்கு நேரடி யான கொள்கையுடைய கவிஞன் செல்லியின் கற் பனைப் பாங்கினையும் பின்பற்றினார்.

நுண்ணிய உணர்வும் தொலைநோக்கும் உள்ள கவிதைகள் இவருக்குப் புகழைச் சேர்த்தன. ஆங்கில நாட்டின் இடைக்கால வாழ்க்கையைப்பற்றி எழுதிய கவிதைகளில், கவிஞன் கோலிரிட்சின் போக்கினைச் சார்ந்திருந்தார். தாம் வாழ்ந்த காலத்தைப் பற்றிய அவர்தம் கவிதைகள் தம் கருத்துகளைச் சுதந்திர மாக வெளிப்படுத்த இவருக்கு உதவின. அவரது வலிய கற்பனைத்திறம் கடினமான கருத்துகளையும் எளிய முறையில் வெளிக்கொணர ஏற்றதாக இருந்

தது. நெஞ்சுரமும் முடிவான துல்லிய கண்ணோட்டமும் கதைப் பொருளின் மீது ஓர் ஆன்மிகப் பரிமாணத்தை ஏற்றிக் கூறும் திறமையும் இவரது தனிப்பெரும் பண்பெனலாம். இயற்கையை இவர் உற்று நோக்கியவிதம் இவருக்கு அதன்மேல் இருந்த ஈடுபாட்டையும் தோய்வையும் காட்டியது.இவரது புனையியற்பாணி அறிவுத்திறம் சார்ந்ததாகவும் அதே அளவிற்குக் கற்பனாவாதம் கலந்ததாகவும் இருந்தது.

விக்டோரியாவின் காலத்திற்கேற்ற அனைத்துப் பண்பு நலங்களும் இக் கவிஞரிடம் இருந்தன. இவர் தம் இசைப் பாடல்கள் அவற்றின் அறிவார்ந்த தன்மையால் ஓரளவிற்கு இனிமை இழந்திருந்தன என்று திறனாய்வாளர்கள் கருதுகிறார்கள். அதே சமயம் இவரது இரங்கற்பா வகையைச் சார்ந்த ‘குழந்தைகளின் கதறல்’(Cry of Children,கி.பி.1843) ஆற்றொணாத்துயரைப் புலப்படுத்திற்று. அது சமூக அநீதிகளுக்கு எதிராக ஆர்த்தெழும் இவரது குணத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாக அமைந்தது. இங்கிலாந்தின் தொழிற்கூடங்களில் சிறுவர்களைப் பணியமர்த்தும் பழக்கத்திற்கு எதிரான ஓர் உணர்ச்சிக் காவியமாக அந்நூல் கருதப்பட்டது.

இவ்வாறு தம் கவிதைகளின் மூலம் உணர்வியல் கருத்துகளையும் துன்பியல் கருத்துகளையும் ஒருசேர உலகிற்களித்த இவ்வருங்கவிஞர், ஏறக்குறைய பதினாறு ஆண்டுகள் இல்வாழ்வின் இன்பதுன்பங்களையும் ஏற்ற இறக்கங்களையும் வீரத்துடன் எதிர்நோக்கி, இனிய குழந்தையுடனும் அன்புத் துணைவரோடும் வாழ்ந்து கி.பி. 1861–ஆம் ஆண்டு சூன் 30–ஆம் நாள் கொடுங்குளிரால் தாக்குண்டு மரணமுற்றார். தம் காலத்தில் மிகச் சிறந்த பெண்கவிஞர் என்ற பெயர் பெற்றிருந்த இவர், இன்றைய இலக்கியவாதிகளிடையில் அத்துணை போற்றற்குரிய கவிஞராக இல்லை என்பது சற்றுத் துயரினைத் தரக்கூடிய செய்தியாகும். ஞா.செ.


**எலிபண்டைன்** எகிப்தில் நைல்நதியில் உள்ளதொரு தீவு. அசுவான் நகரத்திற்கு எதிரில் இத்தீவு அமைந்துள்ளது. எலிபண்டைன் (Elephantine) தீவில் எகிப்து நாட்டை ஆண்ட பரோ அரசர்கள் கட்டிய ஒரு கோயில் உள்ளது. இக்கோயில் காணும் (Khanum) என்ற தெய்வத்திற்கு உரியது.இத்தெய்வத்தின் இரு துணைவியர் சதி(Sati), அனுகட்டு (Anuket) எனப்படுவர். எலிபண்டைனில் பல குடைவரைக் கல்லறைகள் உள்ளன. இவை பழைய அரசின் காலத்தில் வாழ்ந்த பெருமக்களின் கல்லறைகளாகும். இக்கல்லறைகள் பெரும் புகழ் பெற்றவையாகும்.எகிப்தின் பழைய அரசின் (கி.மு. 2686 – 2160) ஆட்சிக் காலத்தில் இத்தீவு எகிப்தின் தென் நுழைவாயில் எனப்பட்டது. எகிப்து நாட்டின் தென் கோடியில் இத்தீவு அமைந்திருந்ததால் இப்பெயர் பெற்றது. இதன் வழியாகத்தான் எகிப்தியர்கள் சூடான் நாட்டுடன் வாணிகம் மேற்கொண்டனர். எகிப்தின் இடை அரசுக் (கி.மு. 1991 – 1675) காலத்தில் அவர்களின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த நூபியாவின் (Nubia) தலைமை நகரமாகவும் அரசு அலுவல்கள் நடக்கும் நகரமாகவும் எலிபண்டைன் விளங்கியது. நைல்ஆற்று நீரின் உயர்வினைக் காட்டும் அளவு குறிக்கப்பட்ட உரோமானியத் தூண் ஒன்று இந்நகரின் தென்கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள கப்பல் துறையில் உள்ளது. கிரேக்க நாட்டு நிலவியலறிஞர் இசுடராபோ இத்தூணைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இப்பொழுது இத்தீவு நூபியாவின் இரண்டு சிற்றூர்களையே கொண்டுள்ளது. சு.இரா.

**எலிபெண்டா** மகாராட்டிர மாநிலம் பம்பாய்ப் பெருநகருக்கு மேற்கில் 9 கி.மீ. தொலைவில் உள்ள தீவு; குடைவரைகளுக்கும் சிற்பங்களுக்கும் பெயர் பெற்றது. பண்டைய காலத்தில் இது காராபுரி (Gharapuri) எனப்பட்டது. பம்பாய்த் துறைமுகத்திற்கருகிலிருந்தோ அப்பலோ பந்தரிலிருந்தோ கார்னகு பந்தரிலிருந்தோ படகின் மூலம் இவ்விடத்திற்குச் செல்லலாம். நாள்தோறும் சென்று வரப் போக்குவரத்து வசதிகள் பெருமளவில் செய்யப்பட்டுள்ளன. தென்மேற்குப் பருவக்காற்று விரைந்து வீசுகின்ற காலத்தில் போக்குவரத்து வசதிகள் நிறுத்தப்படுகின்றன.

எலிபெண்டா (Elephanta) மற்றும் சால்செட்டுத் தீவுகள் பகுதியில் ஏறக்குறைய 130 குடைவரைகள் உள்ளன. கி.பி. 6–ஆம் நூற்றாண்டில் செதுக்கப்பட்ட, காலத்தாலும் அழிக்கப்பெறாத, கலை நுணுக்கமுள்ள அழகிய சிற்பக் கருவூலங்களை இங்குக் காணலாம். குடைவரைகள் அமைந்துள்ள இடம் கடல் மட்டத்திலிருந்து 189 மீட்டர் உயரமுள்ளது. குன்றுகளுக்கிடையே அழகிய சமவெளியைக் கொண்டு 7 கி.மீ சுற்றளவுள்ளது எலிபெண்டாத் தீவு.

இத்தீவில் வாழும் மக்கள் தொகை மிகக் குறைவு. ஆடு மேய்த்தல், கோழி வளர்த்தல், நெல் பயிடுதல் போன்றவை இங்கு வாழும் மக்களின் முக்கிய தொழில்கள். மா, புளி, கரந்தா போன்ற மரங்களடங்கிய அடர்த்தியான காடுகளைக் கொண்ட ஒரு சிறு மலைத்தொடர் இங்கு உள்ளது. ஆங்காங்கே பனை மரங்களையும் காணலாம்.

எலிபெண்டா




எலிபெண்டாக் குடைவரைகளின் தரைப்படம்

இத்தீவுக்குச் சிறிது தூரத்திலேயே படகுகள் நின்றுவிடும். அவ்விடம் இராசக்கட்டம் (Rajghat) எனப்படும். அவ்விடத்திலிருந்து ஏறக்குறைய 2 கி.மீ. நடந்து சென்று குடை வரையை அடையவேண்டும். இங்கு முன்னர் 4 மீ. நீளமும் 2.5 மீ. உயரமும் கொண்ட யானைச் சிற்பம் ஒன்றிருந்தது. இது கி.பி. 1815–இல் சிதைவுற்றது. சிதைவுற்ற சிற்பம் கி.பி. 1865–இல் ஒன்று சேர்க்கப்பட்டுப் பம்பாய் விக்டோரியா தோட்டத்தில் மீண்டும் அமைக்கப்பட்டுள்ளது. இவ் யானைச் சிற்பத்தை வைத்தே போர்ச்சுகீசியர் எலிபெண்டா என்று கூறினர். கோட்டை நகரம் என்று பொருள் கொண்ட காராபுரி என்றும், செல்வ நகரம் என்று பொருள் கொண்ட சிரீபுரி என்றும் இத்தீவு கூறப்படுகிறது.

இப்பகுதி மௌரியர், சாளுக்கியர், அராபியர், யாதவர், இசுலாமியர், போர்ச்சுகீசியர், மராட்டியர், ஆங்கிலேயர் போன்றவர்களின் ஆட்சியிலிருந்துள்ளது. இத்தீவு குறித்துக் கிரேக்க வரலாற்றாசிரியர்கள் புகழ்ந்து உரைத்துள்ளனர். குப்தர்கள் காலத்தில் இது மிகவும் புகழோங்கிய நிலையிலிருந்தது. போர்ச்சுகீசியர் கி.பி. 1673–ஆம் ஆண்டில் இதனைக் கால்நடைகள் வாழுமிடமாகவும், தீவனங்கள் வைப்பதற்குரிய இடமாகவும் பயன்படுத்தினர். இத்தீவின் பெரும் பகுதியை கி.பி. 17–ஆம் நூற்றாண்டில் சில படை வீரர்கள் அழித்தனர். ஆங்கிலப்படை கி.பி. 1774–ஆம் ஆண்டு முதல் இங்குத் தங்கியிருந்தது. இங்கிலாந்தின் பேரரசர் ஏழாம் எட்வர்டு கி.பி. 1814 -ஆம் ஆண்டில் இங்கு விருந்தளிக்கப்பட்டார்.

இங்குள்ள சிவன் கோயிலில் உள்ள திரிமூர்த்தி என்றழைக்கப்பெறும் மகேசுவர மூர்த்தியின் சிற்பத்தை கி.பி. 1865–ஆம் ஆண்டில் அழித்தனர். இங்குள்ள தொன்மைச் சின்னங்களைப் பாதுகாக்கும் பொறுப்பினை கி.பி. 1890-இல் பொதுப்பணித்துறையினர் மேற்கொண்டனர். இது இந்தியத் தொல்லியல் பரப்பாய்வுத் துறையின் மேற்பார்வையின்கீழ் 1909–இல் கொண்டுவரப்பட்டுப் ‘பாதுகாக்கப்பட்ட

சின்னங்கள்' என்ற அமைப்பின்கீழ்ப் பராமரிக்கப் பட்டு வருகிறது.

கிறித்தவ ஆண்டிற்கு முற்பட்ட முதலாம் நூற்றாண்டில் ஆந்திரர்கள் உச்ச நிலையிலிருந்தபோது, தொடக்க காலச் சிற்பக்கலை இங்கு மிகவும் மேம்பாடான நிலையிலிருந்தது. ஆனால் அவை இன்று காணப்பெறவில்லை. தொடக்ககாலச் சிற்பங்கள் எளிமையும் செறிவும் கொண்டவை.

சைவ சமயச் சார்புடைய சிற்பங்களை இங்குக் காண்பதைப் போன்று வேறு எங்கும் காண இயலாது. எடுத்துக்காட்டாக, இங்குள்ள நடராசர், சதாசிவன் போன்ற சிற்பங்களுக்கு இணையான சிற்பங்களை வேறு எங்கும் காண்பதரிது. கல்லில் வடிக்கப்பட்டுப் பார்ப்போர் அனைவரும் உயிருள்ளதோ என்று வியக்குமளவுக்கு உருவாக்கப்பட்ட குதிரைச்சிற்பம் கி.பி. 18-ஆம் நூற்றாண்டிலிருந்து காணப்பெற வில்லை.

கிழக்குக் குன்றிற்கு அருகில் 187 மீட்டர் அடி உயரத்தில் செங்கற் கட்டட அமைப்புக் காணப்படுகிறது. அது குப்தர் காலத்தைச் சார்ந்த புத்தமதத் தூபியாக இருக்கலாமெனக் கருதப்படுகிறது. மூன்று முகங்கள் கொண்ட சதாசிவன் சிற்பம் இப்போது பம்பாய் வேல்சு இளவரசர் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது. திருமால், மகிடாசுர மர்த்தினி போன்ற சிற்பங்களும் அகற்றப்பட்டு, அவ்வருங்காட்சியகத்தில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

பெரிய குகை அல்லது முதன்மையான குடைவரை என்பது கடல் மட்டத்திலிருந்து 83 மீட்டர் உயரத்தில் மேற்கு மலைத்தொடரில் உள்ளது. அதற்கு எதிரில் திறந்தவெளி முற்றம் ஒன்றுள்ளது. இக்குடைவரைக்கு மூன்று புறமும் உள்ள திறந்த வெளிகளின் வழியாகப் போதுமான வெளிச்சம் உட்பகுதிக்குச் செல்கின்றது. இவ்விடைவெளி ஏறக்குறைய 43 மீட்டர் அகலமும் நீளமும் உடையது.

எலிபெண்டாக் குடைவரைகளின் தலைமைக் குடைவரையின் மேற்புறத்தில் செதுக்கப்பட்டுள்ள ஓவியங்கள் இப்போது மறைந்துவிட்டன. அவை பாதுகாக்கப்பட்டிருந்தால், இன்று அக்கால ஓவியத்தின் மிக உயர்ந்த நிலையை நன்கு உணர்ந்திருக்க முடியும்.

நடராசர் அமைப்பில் காணப்படும் சிவன் உருவம் சிறப்புவாய்ந்த சிற்பம். அது 3.5 மீட்டர் உயரமுடையது. எட்டுக் கரங்கள் கொண்ட நடராசர் சிதைவுண்டதால் இப்போது ஒரே கை மட்டும் உள்ளது.



எலிபெண்டா நடராசர் சிற்பம்

சிவனுக்கு இடப்பாகத்தில் 2 மீட்டர் உயரம் கொண்ட பார்வதி உருவம் உள்ளது. சிவனின் வலப்பாகத்தில் வலக்கையில் மழுவாயுதம் தாங்கியிருக்கும் கணேச சிற்பம் உள்ளது. அதற்கருகில் படைத்தளபதி முருகன் சிற்பம் உள்ளது. அதற்கு முன்னால் சிவபெருமானின் சீடனாகிய இசையாசிரியர் தந்து (தாண்டவம் என்ற நடனத்திற்கு வடிவம் கொடுத்தவர்) அமர்ந்த நிலையில் உள்ளார்.

படைக்குங் கடவுளான பிரமாவைக் காணலாம். முனிவர்களையும், பார்வதிக்கு வலப்புறத் தோளுக்கு மேல் கருடனின் மீதுள்ள திருமாலையும் பார்வதிக்கு இடப்புறத் தோளுக்குமேல் ஐராவதத்தில் செல்லும் இந்திரனையும் கொண்டுள்ள அற்புதக் காட்சி கண்டு களித்தற்குரியது.அடுத்தவரிசையில் அந்தகன் என்னும் அரக்கனைக் கொல்லும் சிவபெருமான் உள்ளார். இது மிகச் சிறந்த சிற்பங்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. 4 மீட்டர் உயரமுள்ள இச்சிற்பத்தில் சிறந்த வேலைப்பாடுகளமைந்த முடியையும், நெற்றியில் பிறையையும், நாகத்தையும் காணலாம். எட்டுக்கைகளுள் 5 கைகளும் இரண்டு கால்களும் சேதமடைந்துள்ளன. இதற்கு அருகில் சிவலிங்கத்தைக் கொண்ட ஆலயம் ஒன்றுள்ளது. கதவின் இருபுறங்களிலும் ஏறக்குறைய 5 மீட்டர் உயரமுள்ள 8 துவாரபாலகர்கள் உள்ளனர். இவை சிறந்த முறையில் அமைக்கப்பட்டுள்ள சிற்பங்கள். திருச்சுற்றில் உள்ள பீடத்தில் இலிங்கம்

வைக்கப்பட்டுள்ளது. இங்குள்ள மதிலுக்கு வெளியே தான் ஆண்டுதோறும் பிப்பிரவரி மாதத்தில் மகா சிவராத்திரி மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படு கிறது.

இதற்கு அருகில் மேற்குப் பாகத்தில் நந்தி வைப்ப தற்காக அமைக்கப்பட்டுள்ள பீடம் உள்ளது. நந்தி இப்போது காணப்படவில்லை. இதற்கருகில் ஒரு சிறு குளம் போன்ற அமைப்பு உள்ளது. இதற்கு அருகில் இலிங்கத்தைக்கொண்ட ஒரு சிறு கோயில் உள்ளது. இக்கோயிலில் நாகர்கள் தாங்கியுள்ள தாமரையில் அமர்ந்திருக்கும் சிவபெருமானைக் காணலாம். இப் பகுதிக்கு அருகில் தாண்டவமாடும் சிவபெருமானின் சிற்பத்தைக் காணலாம். ஆறு கரங்கள், முக்கண்கள், பிறைசூடிய முடி ஆகியவை அற்புதமாக வடிக்கப் பட்டுள்ளன.

முதன்மைக் குடைவரையிற் காணப்படும் மற் றொரு மிக வியக்கத்தக்க சிற்பம் கலியாணசுந்தர மூர்த்தி. பார்வதிக்கும் (3 மீட்டர்) சிவனுக்கும் (4 மீட்டர்) நடைபெறும் திருமணக்காட்சி கல்லில் வடிக்கப்பட்டுள்ளது. மற்றொரு பக்கத்தில் பார்வதி யின் தாய் மேனகையையும் காணலாம். அடுத்த பகுதியில் சிவபெருமானைக் கங்காதரன் உருவில் காணலாம். இது 4 மீட்டர் அகலமும் 6 மீட்டர் உயரமும் கொண்டது. சிவனையும் பார்வதியையும் கங்கை, யமுனை, சரசுவதி ஆகியவற்றைக் குறிக்கும் வகையில் மூன்று உருவங்களையும் பிரமாவையும் காணலாம். இங்கு 6 மீட்டர் நீளமும், 5 மீட்டர் அகலமும், 3 மீட்டர் உயரமும் கொண்ட ஒரு பகுதி காணப்படுகிறது. இது வாழுமிடமாகவோ சேமிப்பு இடமாகவோ பயன்பட்டிருக்க வேண்டும்.



எலிபெண்டா– கங்காதரன்

அடுத்த பகுதியில் திரிமூர்த்தி என்று தவறாகச் சொல்லப்படும் மகேச மூர்த்தியைக் காணலாம். இவ ருக்கு இரு பக்கங்களிலும் துவார பாலகர்களின் சிற் பங்கள் உள்ளன. நன்கு செதுக்கப்பட்ட மார்பளவுள்ள மூன்று முகங்களையுடைய 6 மீட்டர் உயரமுள்ள மகேசனின் சிற்பம் புகழ்பெற்றது. மூன்று தலைகளும் ஆக்கல், காத்தல், அழித்தல் ஆகியவற்றைக் குறிக் கும். இம்மூன்றினையும் ஒருங்கே அமையப்பெற்ற திரிமூர்த்தி உருவம் பார்ப்போர் அனைவரையும் வியப்புறச் செய்கின்றது.

அடுத்த வரிசையில் அர்த்தநாரீசுவரரின் சிற்பம் காணப்படுகிறது. 5.5 மீட்டர் உயரமுள்ள இவ்வமைப் பில் நந்தி, பிரமன், திருமால், வருணன், பார்வதி ஆகியோரின் சிற்பங்களும் உள்ளன. மேலும், கிழக்கே பார்வதியும் சிவனும் உயரிய பீடத்தில் கயிலாயத்தில் அமர்ந்திருக்கும் காட்சியும் செதுக்கப்பட்டுள்ளது.

இங்குள்ள மண்டபம் ஒன்றில் இலிங்கம் ஒன்றும் துவார பாலகர்களின் சிற்பங்களும் உள்ளன. கரு வறையை வலம் வருவதற்கும் பாதை அமைக்கப் பட்டுள்ளது. இவற்றைத் தவிர்த்துச் சிறிய பெரிய அளவிலான பல சிற்பங்கள் காணப்படுகின்றன. இராவணன் கைலாயத்தைத் தூக்க முயலும் காட்சி நினைவில் நிற்கத்தக்கது. சிவன் இறுதியாக எடுத்த இருபத்தெட்டாம் அவதாரமான 'இலகுலீசா' அவதாரமும் சிற்ப வடிவில் செதுக்கப்பட்டுள்ளது.

இவற்றைத் தவிர்த்துக் கிழக்குப் பகுதிக் குன்றில் இரண்டு சிறிய குடைவரைகள் உள்ளன. மேற்குப் பகுதியில் 4 உள்ளன. இவை முதன்மைக் குடைவரையிலிருந்து 200 மீட்டர் தொலைவில் உள்ளன. அங்கு மண்டபங்களும் கருவறையும் சிற்பங் களும் உள்ளன. இன்னும் சில இடங்களில் ஓவியங்கள் காணப்படுகின்றன. இ.ந.

துணை நூல்:

**Hiramanda Sastri,** A Guide to Elephanta, Publication Division, Govt. of India, 1934.

**எலியட்டு சார்சு (கி.பி. 1819-1880)** ஆங்கிலப் புதின ஆசிரியைகளுள் ஒருவர். மேரி ஆன் இவான்சு என்பது இவரது இயற்பெயர். இவர் இங்கிலாந்தில் வார்விக்சயர்ப் பகுதியில் கி.பி. 1819–இல் பிறந்தார். இவர் தந்தை இராபர்ட்டு இவான்சு.

எலியட்டு சார்சு (Eliot George) ஆறு வயதில் தம் அன்னையை இழந்தார். இவர் இத்தாலி, பிரெஞ்சு செருமன், கிரேக்கம், இலத்தீன் ஆகிய மொழிகளைக் கற்றறிந்தார். சேக்சுப்பியர் (Shakespeare) நாடகங் களையும் வால்டர் இசுகாட்டு (Walter Scott) எழுதிய வரலாற்றுப் புதினங்களையும் விரும்பிப் படித்தார். இவருக்கு இசையிலும் மிகுந்த ஈடுபாடு உண்டு. இவர் குழந்தைப் பருவத்தில் சமயப் பற்றும் கன்னிப்பருவத் தில் பகுத்தறிவு நாட்டமும் கொண்டு விளங்கினார்.



எலியட்டு சார்சு

எலியட்டு சார்சு புதினங்கள் எழுதுவதிலும் மொழிபெயர்ப்புக் கலையிலும் வல்லவராக விளங்கி னார். இவர் வெசுட்டுமினிசுட்டர் மதிப்பாய்வு (Westminster Review) இதழின் துணையாசிரியை யாகப் பணியாற்றினார். அப்போது சான் இசுட்டூ வர்ட்டு மில் (John Stuward Mill), தாமசு கார்லைல் (Thomas Carlyle), எர்பர்ட்டு இசுபென்சர் (Herbert Spencer), சார்லசு திக்கன்சு (Charles Dickens), ஆல் பிரடு தென்னிசன் (Alfred Tennyson) போன்ற பல் துறை அறிஞர்களோடு இவருக்கு நட்பு ஏற்பட்டது.

எலியட்டு இலீவிசு (Lewes) என்பவரை இவர் காதலித்தார். அவர் கி.பி. 1878-இல் காலமானார். பின்னர், இவர் கி.பி. 1880-இல் சான் வால்டர் கிராசு (John Walter Gross) என்னும் செல்வரை மணந்து, ஆறாம் மாதத்தில் காலமானார்.

இவர்தம் படைப்புகளுள் 'ஆடம் பீடு' (Adam Bede, 1859), 'தி மில் ஆன் தி பிளாசு' (The Mill on the Floss, 1860), 'சைலசு மார்னர்' (Silas Marner 1861), 'உரொமோலா' (Romola, 1863), 'பெலிக்சு ஒல்டு' (Felix Holt, 1866), 'மிடில் மார்ச்சு' (Middle March, 1875), 'தானியேல் தெரோண்டா' (Daniel Deronda, 1876) ஆகிய புதினங்கள் குறிப்பிடத் தக்கன.

'ஆடம்பீடு' என்னும் நீண்ட புதினம் ஆடம் (Adam), மார்ட்டின் (Martin) என்னும் இருவரின் காதலுக்கிடையில் சிக்கித் தவிக்கும் எட்டி சாரல் (Hetty Sorrel) என்னும் இளம்பெண் ஒருத்தியின் செயல்களை நயத்தோடு விவரிக்கிறது. 'தி மில் ஆன் தி பிளாசு' என்னும் புதினம் தாம் (Tom) என்பவனும் அவன் தங்கை மேக்கி (Maggie) என்பவளும் சாவின் வாயில் இருக்கும் வேளையில், தமக்குள் நெடுங்கால மாக நிலவிய பகைமையையும் உலகியல் உணர்வு களையும் மறந்து, இரத்தப் பாசத்தால் உந்தப்பட்டு நெருங்குவதாகிய உடன்பிறப்பு நேயத்திற்கு ஆளா வதை உணர்ச்சி ததும்ப விவரிக்கிறது. சார்சு எலியட் டும் அவர் அண்ணனுமே இப்புதினத்தில் உடன் பிறந்தோராக இடம் பெற்றுள்ளனர் என்னும் கருத்துத் திறனாய்வாளரிடையே நிலவுகிறது.

'சைலசு மார்னர்' என்னும் புதினம் ஒரு நெச வாளியின் வாழ்க்கையை மையமாகக் கொண்டது. உலோபியாக இருக்கும்போது தாம் சேர்த்து வைத்த பொருள் எல்லாவற்றையும் இழக்கும் நெசவாளி ஒருவன், அநாதைக் குழந்தை ஒன்றை எடுத்து வளர்த்து உதவி செய்யும் நிலையில் மீண்டும் செல் வனாக மாறுகிறான். செல்வம் பிறர்க்கு உதவும் போது நிறையும் தன்மை உடையது என்னும் அறக் கருத்தைக் குறிப்பிடும் இச்சிறு புதினம், மக்கள் நடுவில் பெரும் புகழுக்கு உரியதாகியது.

'உரொமோலா' என்னும் வரலாற்றுப் புதினம் ஓவியமும் சிற்பமும் மலிந்த இத்தாலி நாட்டுப் பிளாரன்சு நகரப் பின்னணியில் எழுதப்பட்டுள்ளது. உரொமோலா என்பது இத்தாலியிள்ள ஒரு குன்றின் பெயராகும். 'பெலிக்சு ஒல்டு' என்னும் புதினம் கி.பி. 19-ஆம் நூற்றாண்டைய இங்கிலாந்து நாட்டுத் தேர்தலைப் பின்னணியாக உடையது. 'மிடில் மார்ச்சு' என்பது உயர்ந்த இலக்கினை நோக்கிப் பயணம் செய்யும் மனிதர் தம் வாழ்க்கையில் எதிர் நோக்க வேண்டிய இன்னல்களை விவரிக்கும் புதின மாகும்.

'தானியேல் தெரோண்டா' என்பதே சார்சு எலியட்டின் கடைசிப் புதினம். இது 4 பிரிவுகள் கொண்டது. யூத மக்களின்பால் தமக்குள்ள அனுதாப

உணர்ச்சியினை ஆசிரியை இப்புதினத்தில் வெளிப்படுத்தியுள்ளார். அரசியல் சிறப்பு வாய்ந்த இப்புதினத்தில், யூதர்கள் தமக்கென்று தனிநாடு அமைத்துக் கொள்ள வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகிறது. எலியட்டு புதினங்களேயன்றிச் சிறுகதைகளும் கவிதைகளும் எழுதியுள்ளார். இக்கதைகளை வெளியிடும் போதுதான், இவர் 'எலியட்டு சார்சு' என்னும் பெயரைப் புனைந்து கொண்டார். எலியட்டின் இளமைக் கால வாழ்க்கையின் பின்னணியில் இவை எழுதப்பட்டுள்ளன. எளிய நடையில் நகைச்சுவை மிளிர அமைந்துள்ள இக்கதைகள், சார்லசு திக்கன்சு முதலிய புகழ்பெற்ற புதின ஆசிரியர்களின் பாராட்டைப் பெற்றன. ப.அ.

**எலியட்டு, டி. எஸ். (கி.பி. 1888-1965)** இருபதாம் நூற்றாண்டின் புகழ்பெற்ற ஆங்கிலக் கவிஞர்; நாடகாசிரியர்; திறனாய்வாளர். இவர் அமெரிக்காவில் மிசௌரி மாநிலத்தைச் சார்ந்த புனித லூயி (St. Louis) என்னுமிடத்தில் கி.பி. 1888-இல் பிறந்தார். இவர் தந்தையார் எலியட்டு (Henry Eliot); தாயார் சார்லி இசுட்டீர்ன்சு (Charlie Stearns).



எலியட்டு, டி. எஸ்.

தாமசு இசுட்டீர்ன்சு எலியட்டு (Thomas Stearns Eliot) பள்ளிக் கல்வி நிறைவுற்றதும் ஆர்வார்டுப் (Harward)பல்கலைக் கழகத்தில் தத்துவமும், பிரெஞ்சு நாட்டுச் சார்போன் (Sorboune) பல்கலைக் கழகத்தில் பிரெஞ்சு இலக்கியமும் கற்றார்; ஆக்சுபோர்டுப் (Oxford) பல்கலைக் கழகத்தில் கிரேக்க மொழியும் பயின்றார். பின்னர், இங்கிலாந்தில் குடியேறி, ஈராண்டுகள் பள்ளி ஆசிரியராகவும் ஆறாண்டுகள் எழுத்தராகவும் பணிபுரிந்தார். இவர் 1927-இல் கத்தோலிக்கப் பிரிவைத் துறந்து, மறுப்புரையாளர் (Protestand) பிரிவை ஏற்றார்.

எலியட்டு 'தி கிரைட்டீரியன்' (The Criterian) என்னும் இதழின் ஆசிரியராகவும் (1922-39) 'பேபர் அண்டு பேபர்' (Faber and Faber) என்னும் நூல் வெளியீட்டகத்தின் தலைவராகவும் (1925-1965) பணிபுரிந்தார். இவர் தம் இருபத்தேழாம் வயதில் விவிலியன் எய்க்வுடு என்பவரை மணந்தார். அவர் நோய்வாய்ப்பட்டு இறந்து போகவே, பத்து ஆண்டுகள் கழித்துத் தம்மிடம் செயலராகப் பணிபுரிந்த வலேரி பிளெட்சர் (Valerie Fletcher) என்பவரை மணந்தார்.

இவர்தம் எழுத்து வன்மையும் நாவன்மையும் இவருக்குப் பெரும்புகழினைத் தேடித் தந்தன. எசுரா பவுண்டு (Ezra Pound) என்னும் கவிஞர் இவரிடம் இயல்பாகவே அமைந்திருந்த கவிதை புனையும் ஆற்றலை ஊக்குவித்தார். எலியட்டு இலக்கியத்திற்கான நோபல் பரிசையும் இங்கிலாந்து அரசின் 'ஆர்டர் ஆப் மெரிட்டு' (Order of Merit) என்னும் சிறப்புப் பட்டத்தையும் 1948-ஆம் ஆண்டு பெற்றார். கொலம்பியா, எடின்பர்கு, கேம்பிரிட்சு, ஆர்வார்டு, ஏல், பிரின்சுட்டன் முதலிய பல்கலைக் கழகங்கள் மதிப்பியல் முனைவர் பட்டம் அளித்து இவரைப் பாராட்டின.

இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் இணையற்ற புகழும் பெருமையும் பெற்று விளங்கிய எலியட்டு, 1965-ஆம் ஆண்டு இலண்டன் மாநகரில் காலமானார்.

எலியட்டின் படைப்புகள்: எலியட்டு கவிதைகள், கவிதை நாடகங்கள், திறனாய்வுக் கட்டுரைகள் ஆகியவற்றை எழுதியுள்ளார். இவை மூன்றுமே ஆங்கில இலக்கிய உலகில் முன்னணியில் வைத்துப் போற்றப்படுகின்றன.

எலியட்டின் கவிதைகளுள் ஆல்பிரடு புருப்ராக்கின் காதற் பாடல் (The Love Song of Alfred Prufrock), பாழ்நிலம் (Waste Land), வெற்று மனிதர்கள் (The Hallow Men), சாம்பற் புதன்கிழமை (Ash-Wednesday) போன்றவை குறிப்பிடத் தக்கவை. இவருடைய கவிதைகளில் யாப்பமைதியும் மொழி நடைத் திண்மையும் பொருட் செறிவும் சிறப்பியல்பு

களாக வெளிப்படுகின்றன. வேதங்கள், மனுநீதி, புத்த சாதகக் கதைகள், உபநிடதங்கள், விவிலியம் போன்ற சமய நூல்களின் தாக்கத்தையும், ஆங்கில, கிரேக்க, பிரெஞ்சு இலக்கியங்களின் தத்துவக் கருத்துச் சிதறல்களையும், தம் காலச் சமுதாய அமைப்பின் சீர்கேட்டினையும் இவருடைய கவிதை கள் சிலவற்றில் காணலாம். இத்தகைய கவிதை களின் உட்பொருள்கள் புரிதற்கு அரியவாக உள்ளமை யால், இவற்றுக்குச் சிறு குறிப்புகளை எலியட்டு கொடுத்துள்ளார். பாழ்நிலம், வெற்று மனிதர்கள், சாம்பற் புதன்கிழமை என்னும் கவிதைகள் இவ் வகையைச் சார்ந்தவை.

இவருடைய கவிதைகளில் சமகாலப் பிரெஞ்சுக் கவிஞர்களின் தாக்கமும் இடம் பெற்றுள்ளது. 'ஆல் பிரட் புரூப்ராக்கின் காதற்பாடல்' என்னும் கவிதை இதற்குச் சிறந்த சான்றாகும். எலியட்டின் சிந்தனைக்கு இத்தாலியக் கவிஞர் தாந்தே (Dante), ஆங்கிலக் கவிஞர் சான்திரைடன் (John Drydon), பிரெஞ்சுக் கவிஞர் சூல்சு இலாபோர்கு (Jules Laforgue) போன்றோர் ஆதாரமாக விளங்கினர்.

எலியட்டு இயற்றிய கவிதை நாடகங்களில் அங் கதம், நையாண்டி, இரட்டுற மொழிதல் போன்றவை வெளிப்படுகின்றன. இந்த இலக்கிய உத்திகளைத் தம் காலச் சமுதாயக் குறைபாடுகளைச் சுட்டிக் காட்டும் இடங்களில் இக்கவிஞர் மிகச் சிறப்பாகக் கையாண்டுள்ளார்.

பாறை (The Rock) என்னும் கவிதை நாடகம் ஒருவன் ஒரு பாறையை மையமாகக் கொண்டு மதக் கோட்பாடுகளை வலியுறுத்தும் வகையில் அமைந்துள் ளது. 'தேவாலயத்தில் கொலை' (Murder in the Cathedral) என்னும் நாடகம் கி.பி. 12-ஆம் நூற்றாண் டின் இறுதியில் காண்டர்பரி ஆலயத்தில்கொலை செய் யப்பட்ட பேராயர்(Archbishop) தாமசு பெக்கட்டை (Thomas Becket) மையமாகக் கொண்டது. மன்ன னுக்குச் செய்ய வேண்டிய கடமைகளுக்கும் இறைவ னுக்குச் செய்ய வேண்டிய பணிகளுக்கும் இடையில் சிக்கித் தவித்த அப்பேராயரின் உணர்வுகளை இந் நாடகம் தெளிவாக வெளிப்படுத்துகின்றது. 'பிரிந்து போன குடும்பம் கூடுதல்' (The Family Reunion) என்பது நாட்டுப்புறக் குடும்பம் ஒன்றை மையமாகக் கொண்ட நாடகம். தமிழ் நாடகங்களில் வரும் கட் டியங்காரனைப் போன்ற 'கோரசு' (Chorus) என்னும் பாத்திரத்தைப் பயன்படுத்தி, ஒரு குடும்பத்தினரின் உறவு, மூதாதையரின் நல்வினை தீவினைகள், அவற் றின் பின்விளைவுகள், அவற்றிலிருந்து விடுபடுதற்குச் செய்ய வேண்டிய கழுவாய்ச் செயல்கள் போன்றவை இதில் கூறப்படுகின்றன. 'போலிச் சான்றோர் குழு' (The Cocktail Party), 'நம்பிக்கைக்குரிய எழுத்தர்' (The Confidential Clerk), 'மூத்த அரசியலறிஞர்' (The Elder Statesman) போன்றவையும் எலியட்டின் கவிதை நாடகங்களுள் குறிப்பிடத் தக்கவை.

எலியட்டு தமக்கென்று ஒரு திறனாய்வுக் கொள் கையினை வகுத்துக் கொண்டு அதன்படி செயற்பட் டார் என்று கூறுவதைவிடத் தம் கட்டுரைகளில் கவிதை, நாடகம், தத்துவம், புராணம் ஆகியவை குறித்தும் எழுத்தாளர்கள், அறிஞர்கள் குறித்தும் தமக்குத் தோன்றுகிற எண்ணங்கள், மாறுபட்ட கருத் துகள் போன்றவற்றைப் பிற இலக்கிய அறிஞர்களு டன் பகிர்ந்து கொண்டார் என்று கொள்வதே தக்க தாகும். இவருடைய கட்டுரைகள் திறனாய்வு, மதிப் புரை, சொற்பொழிவு என்னும் முறைகளில் அமைந் துள்ளன. கட்டுரைகளுள் 'மரபும் தனித்திறமையும்' (Tradition and Individual Lalent), 'அணி இலக்கண மும் கவிதை நாடகமும்' (Rhetoric and Poetic Drama) ஆகியன குறிப்பிடத் தக்கவை. திறனாய்வுக் கட்டுரைகளில் எலியட்டு ஒரு கவிஞனாகவே நின்று ஆய்வு செய்கிறார். இக்காலத்தைய கவிஞர்களிடத் தும் திறனாய்வாளரிடத்தும் புதிய எழுச்சியையும் சிந்தனைப் போக்கையும் உருவாக்கிய எலியட்டு, புதிய இலக்கிய உலகின் முன்னோடிகளுள் ஒருவராகத் திகழ்கிறார். ப.அ.

**எலியட்டு துரை கட்டியம்**: இது எட்வர்டு எலியட்டு துரையின் சிறப்பைக் கூறும் நெடும்பாட் டாகும்; அடிதோறும் ஏழு சீர்களைக் கொண்ட 245 அடிகளால் பாடப்பட்டுள்ளது. இந்நூல் இதுகாறும் அச்சுக்கு வரவில்லை. அரசினர் கீழ்த்திசைச் சுவடி கள் நூலகத்தில் ஓலைச்சுவடியாக உள்ளது. அதனின்று படியெடுக்கப்பட்ட தாட்படி ஒன்றும் உள்ளது. இந்நூல் 'எலியட்டு துரை, யென்பவர் காவல்துறை வேலைக்காகத் தஞ்சாவூரிலிருந்து வந்த நூற்று முப்பது பேர்களுள் ஒருவனான 'குற- சீனிவாசன்' சிந்தாதிரிப்பேட்டைப் பகுதியில், தன் சொந்தச் செலவிற்காக எட்டு உரூபாயைத் திருடியது, மற்றொருவனாகிய 'அப்துல் இரகிமான்' பெரிய மேட்டுச் கள்ளுக்கடையில் எட்டு உரூபாய்க்கு இனா மாகக் கள்ளைக் குடித்து விட்டது முதலாகிய பல குற்ற வழக்குகளைத் தீர விசாரித்து, அவரவர் களுக்குரிய தண்டனை விதித்ததையும் நன்கு கூறுகி றது. மேலும், எலியட்டு செய்த பல நன்மைகளையும் விவரமாகக் கூறுகிறது. இதை இயற்றியவர் செஞ் சிக்கடுத்த பொன்பற்றியூர் பஞ்சநாயகன் குமாரன்

வீராசாமி ஆவார் என்பது இந்நூலின் இறுதிச் செய்யுட்பகுதியால் ஊகித்தறியப்படுகிறது.

இப்பாடல் சுட்டும் எலியட்டு துரை என்பவர், எட்வர்டு எலியட்டு துரையே (Edward Elliot) என்பதைச் சுவடியில் வரும், 'யேட்டு வர்ட் டெல்லிட்டு துரையே சய' என்னும் அடியால் உணரலாம். இவர் பெயரில் சென்னையில் சாலை ஒன்றும் உள்ளது. இந்நூலில் எலியட்டின் விரைந்து முடிவெடுத்துச் செயலாற்றும் திறத்திற்குப் போசராசன் உவமிக்கப்படுவது குறிப்பிடத்தத்கது. இந்நூல் எலியட்டைப் புகழும் நோக்கம் கொண்டதாயினும், தேசி அய்யர், சிங்கார மதன், சர்க்கரைச் செட்டியார் போன்ற அக்காலத்திய அரசு அலுவலர் சிலரையும் வாழ்த்துகிறது. சூ.இ.

**எலியோபோலிசு** பண்டைய எகிப்திலிருந்த நகரங்களுள் ஒன்று. இரே (Re) என்னும் சூரியக் கடவுளின் முதன்மை நகரமாக இந்நகரம் விளங்கியது. எலியோபோலிசு (Heliopolis) மெம்பிசு (Memphis) என்னும் தொன்மைமிக்க நகரத்திலிருந்து வடக்காக 32 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இன்றைய கெய்ரோவிலிருந்து கிழக்கில் 8 கி.மீ. தொலைவில் இப்பகுதி உள்ளது. எலியோ போலிசு என்பதற்குச் 'சூரியனின் நகரம்' என்பது பொருள். எகிப்திய 12–ஆம் மரபு அரசர்கள் இங்குப் பல கோயில்களைக் கட்டினர். இம்மரபின் அரசரான முதலாம் சென்னுசெர்ட்டி (Senuserti) கோயில்களைக் கட்டியவர்களுள் முதன்மையானவர். இந்நகரத்தில் சிறப்பான தெய்வமாக விளங்கிய 'இரே' என்னும் சூரியக் கடவுள் எகிப்து முழுமையும் சிறப்பான தெய்வமாக எகிப்தின் ஏழாம் மரபினர் காலத்தில் கருதப்பட்டது. இந்நகரத்தில் எகிப்து அரசர்கள் மாநில நீதிமன்றம் ஒன்றையும் அமைத்தனர். காண்க: பாலிபெக்கு. சு.இரா.

**எலும்பளவையியல்**: காண்க: மானிட உடலளவையியல்.

**எவ்வி** சங்க காலத்தில் வாழ்ந்த சிறந்த வள்ளலும் வீரனும் ஆவான். இவன் வேள் எவ்வி எனவும் வழங்கப்பெற்றான் (புறம்.24). உழுவித்துண்ணும் குடியினரான வேளிர் மரபில் தோன்றிய இவன் பாணர்களை மிகவும் போற்றிப் புரந்து வந்துள்ளான். மிழலைக் கூற்றம் இவனுக்குரியதாக விளங்கியது (புறம். 24). யாழிசை சிறந்து விளங்கும் தெருவினையுடைய நீடூர் இவனுக்குச் சொந்தமானது (அகம்.266). நீழல் என்னும் ஊரும் இவனுக்கு உரியதாகும். அது கடற்கரையிலமைந்தது (அகம். 366).

ஒருகால்அன்னி என்பவன் திதியனின் காவல் மரமாகிய புன்னையை விரும்பித் திதியனொடு போர்க்கு எழுந்தான். அப்போது எவ்வி நயம்புரி நன்மொழி கூறி அன்னியை அடக்க முயன்றான் என்பதனையும், அவன் அறிவுரை கேட்டு அடங்காது செருக்குற்றுப் போர் செய்த அன்னி இறந்துபட்டான் என்பதனையும் நக்கீரர் தம் அகப்பாட்டொன்றில் குறிப்பிட்டுள்ளார் (அகம் 126).

எவ்வியை 'ஓம்பா ஈகை மாவேள் எவ்வி' என்றும் (புறம்.24), 'போரடுதானை எவ்வி' (புறம்.233) என்றும், அவனது குடிச் சிறப்பினை 'எவ்விதொல்குடி' (புறம். 202) என்றும் புலவர்கள் பாராட்டியுள்ளனர். இவன் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனால் வெல்லப்பட்டான். இவன் இறந்தமையால், தம்மைப் புரப்போரைக் காணாது பாணர் வறுமையுற்றுத் தலையில் பூச்சூடுதலை ஒழிந்தனர் (குறுந்.19). இவன் போர்க்களத்தில் விழுப்புண்பட்டு இறந்த செய்தி அறிந்து, பாணர்கள் அங்கு விரைந்து சென்று, தம் யாழ்க்கோடுகளை ஒடித்துவீசி வருந்தி இரங்கினர் என்று மாமூலனார் குறிப்பிட்டுள்ளார் (அகம்.115). தம் மார்பில் வேலால் விழுப்புண் அடைந்து இவன் இறந்தான் என்று விடியற்காலையில் மக்கள் கூறக்கேட்ட வெள்ளெருக்கிலையார், அச்செய்தி பொய்யாகுதல் வேண்டும் என்று ஏங்கிப் 'பொய்யாகியரோ பொய்யாகியரோ ....... எவ்வி மார்பின், எஃகுறு விழுப்புண் பலவென, வைகுறு விடியல் இயம்பிய குரலே' என்று கையற்றுப் பாடியுள்ளார் (புறம்.233). கபிலர், பரணர், மாமூலனார், நக்கீரர், குடவாயிற் கீரத்தனார், கல்லாடனார் ஆகிய புலவர்கள் எவ்வியைத் தங்கள் அகப்பாட்டுகளில் குறிப்பிட்டுச் சிறப்பித்துள்ளனர். அ.மா.ப.

**எவரெசுட்டு மலையுச்சி**: ஆசியக் கண்டத்தில் இந்தியாவின் வடக்கு எல்லையாக அமைந்திருக்கும் இமயமலைத்தொடரில் கிழக்கு நேப்பாளத்திற்கும் திபெத்து நாட்டிற்கும் இடையே எவரெசுட்டு மலையுச்சி அமைந்துள்ளது. திபெத்து நாட்டவர் இதை 'சோமொலுங்மா' (உலக அம்மன்) என்று கூறுகின்றனர். இச்சிகரத்தின் பெரும்பான்மையான பரப்பு தீபகற்பப் பாறைகளைப் போன்ற பழைய உருமாறிய பாறைகளால் ஆனது. இதன் தென் சரிவு வடசரிவை விட மிகவும் தாழ்ந்துள்ளது. இது ஒரு பெரிய படுக்கை மடிப்பின் முதுகிலிருந்து உண்டானது; கங்கைச் சமவெளியின் மிகப் பெரிய பள்ளத்தாக்கின் நேர் எதிரிலுள்ளது. இது ஏறத்தாழ அட்சக்கோடு 28 வடக்குப் பாகையிலும் தீர்க்கக்கோடு 87 கிழக்குப் பாகையிலும் அமைந்துள்ளது.



எவரெசுட்டு மலை

உலகிலுள்ள மிக உயரமான மலையுச்சிகளுள் பெரும்பாலானவை இமயத்தில் உள்ளன. அவற்றுள் மிக முக்கியமானவை கும்புடிசி (21785 அடி), கயிலாசம் (21982 அடி), காடுவின் ஆசுடின் (22250 அடி), சாங்குடிசி (24780 அடி), நுப்புடிசி (25726 அடி), கோசய்ந்தன் (26291அடி), அன்னபூரணா (26504 அடி), சோஒயு (26750 அடி), மனசுலு (26760 அடி), தவள கிரி (26710 அடி), மகளு (27824 அடி), உலோடிசி (27923 அடி), கஞ்சன்சங்கா (28208 அடி), எவரெசுட்டு (29028 அடி) போன்றவை. உலகத்திலேயே மிக உயர்ந்த மலையுச்சி எவரெசுட்டுதான். இது செங்குத் தான பாறைகளால் ஆனதாலும், எப்போதும் மேகங் களால் மூடப்பட்டு இருப்பதாலும், ஆண்டு முழுவதும் பனி உறைந்து கிடப்பதாலும், இடையிடையே பனி ஆறுகள் ஓடுவதாலும், பனிப் பாறைச் சரிவுகளும் பனிப்பாறைப் பிளவுகளும் இருத்தலாலும், அடிக்கடிப் புயற்காற்று வீசுவதாலும், மேலே செல்லச் செல்ல காற்று அழுத்தம் குறைவதாலும் இதனை முழுமை யாக அறிய முடியவில்லை. எனவேதான் 'மருமங்கள் நிறைந்த மலையுச்சி' என்று இதனைக் கருதுகின்றனர்.

எவரெசுட்டு ஆய்வு: மக்லாய மன்னர் அக் பருடைய அரசவைக்கு கி.பி. 1590-இல் வருகைதந்த இசுபெயின் (Spain) நாட்டுச் சமயப் பரப்பு ஊழியர் அந்தோனியா மான்சராட்டு என்பவர் புரியாத புதிராக இருந்த இமயத்தை முதன் முதலாகப் படமாக வரைந்தார். பின்னர் கி.பி. 1733-ஆம் ஆண்டில் பிரான்சு நாட்டுப் புவியியல் வல்லுநர் சீ.பா.பூ.தி. ஆரவில்லி என்பவர் மலைத் தொடரினை ஆராய வேண்டிய முறைகளை வகுத்தார். கி.பி. 1841 -ஆம் ஆண்டில் சர் சார்சு எவரெசுட்டு என்பவர் தலைமையில் இந்திய அளவாய்வுக் குழுவினர் இமய மலைச் சிகரங்களின் உயரங்களையும், இட அமைப் பையும் காணும் முயற்சியில் ஈடுபட்டனர். கி.பி. 1849 -ஆம் ஆண்டில் இக்குழுவினர் புதிய மலையுச்சி ஒன்றைக் கண்டனர். அவ்வுச்சிக்கு முதன்முதலில் 'எச்' (H) என்று பெயரிடப்பட்டது; பின்னர் 'மலை யுச்சி எண்: 15' என்று பெயரிடப்பட்டது. அதன் பின்னரே உலகத்திலுள்ள அனைத்து மலையுச்சி களைக் காட்டிலும் இது மிகவும் உயரமானது என்ற உண்மையும் புலனாயிற்று. கி.பி. 1852-ஆம் ஆண்டில் இராதாநாத இக்தார் என்ற தலைமைக் கணக்கர் இவ்வுச்சியின் உயரம் 29002 அடி என முடிவு செய் தார். இக்குழுவினர் இச்சிகரத்தை முதன் முறையாக அளவிட்டு அறிவித்த காரணத்தாலும், பிற முயற்சி யாளர்களுக்கு வழி வகுத்துத் தந்தமையாலும்

ஏற்றுக்கொள்ளத்தக்க உள்நாட்டுப் பெயர் கிடைக்காததாலும், முதல் குழுத்தலைவரின் நினைவாக இதற்கு 'எவரெசுட்டு' எனப் பெயரிடப்பட்டது. அருகில் சென்று அளக்கத்தக்க வழியேதும் இன்றி மிகத் தொலைவிலிருந்தே அளந்ததால் இவ்வுச்சியின் அளவு மிகச் சரியானதன்று. இவ்வுச்சி முழுவதும் பனிப்படலமாக இருந்ததாலும், புவி ஈர்ப்புச் சக்தி மாறுபடுகிற நிலையிலுள்ளதாலும், ஒளி விலகல் ஏற்பட்டதாலும் சரியான கணக்கு எடுப்பதில் சிரமம் ஏற்பட்டிருக்கலாம் என உணர முடிகிறது.

அரிராம் என்ற ஓர் இந்து ஆராய்ச்சியாளர் கி.பி. 1885-இல் எவரெசுட்டு மலையுச்சியின் உண்மையான உயரத்தை அளக்க முனைந்தார். இருப்பினும் 20-ஆம் நூற்றாண்டின் தொடக்க காலம் வரை யாருமே இவ்வுச்சியை ஆராய்வதற்கு அக்கறை காட்டவில்லை. நீண்ட காலமாகத் திபெத்து, நேப்பாளம் ஆகிய நாடுகள் ஆராய்ச்சியாளர்களை இம்மலையுச்சியை ஆய்வு செய்வதற்கு அனுமதிக்கவில்லை. ஆனால், திபெத்துத் தலைவர் தலைஇலாமா என்பவரின் அனுமதியுடன் 1921-ஆம் ஆண்டிலிருந்து ஆராய்ச்சிகள் நடைபெறலாயின. 1921-ஆம் ஆண்டில் 'அரசுப் புவியியல் சங்கம்', 'ஆல்பைன் சங்கம்' ஆகியவற்றின் சார்பில் பிரித்தானியக் (Britons) குழுவினர் எவரெசுட்டு உச்சிக்குச் செல்லும் வழிகளைக் காணும் முயற்சிகளில் ஈடுபட்டனர். அவர்கள் கண்டறிந்த உண்மைகளை அடிப்படையாகக் கொண்டு 1922-ஆம் ஆண்டில் சீ.சி. புரூசு என்பவரின் தலைமையில் மற்றொரு பிரித்தானியக் குழுவினர் முயற்சி செய்து தோல்வியுடன் திரும்பினர். ஆனால் மீண்டும் 1924-ஆம் ஆண்டில் மூன்றாம் முறையாகப் புரூசு குழுவினர் முயற்சி செய்தனர். இக்குழுவில் தலைமை ஏற்ற நார்த்தன் என்பவர் 28100 அடி உயரம் வரை ஏறினார். உடன் சென்ற மல்லோரி என்பவரும் ஏ.சி. இர்வின் என்பவரும் கடும் பனிக்கிடையே 28230 அடி உயரம் வரை சென்றார்கள். ஆனால், அவர்களுள் யாரும் திரும்பி வந்து சேரவே இல்லை. அவர்களுடைய சடலங்களும் கிடைக்கவில்லை. மல்லோரி தம்முடன் கொண்டு சென்ற கோடரி மட்டும் ஒன்பது ஆண்டுகளுக்குப் பின்னர், 1933-ஆம் ஆண்டில் கண்டெடுக்கப்பட்டது.

நான்காம் முயற்சியில் 1933-ஆம் ஆண்டில் வின் ஆரிசு, வேசர், சிமிதி போன்றோர் உயிரகத்தை (OX) உடன் எடுத்துச் செல்லாமலேயே 28100 அடி உயரத்தை அடைய முயற்சி செய்து தோல்வி அடைந்தனர். 1935, 1936, 1938-ஆம் ஆண்டுகளிலும் இவர்களுடைய முயற்சிகளுக்கு வெற்றி கிட்டவே இல்லை. 1951-ஆம் ஆண்டில் நேப்பாள நாடு பிரித்தானியர்களுக்கு அனுமதி வழங்கியது. எனவே பிரித்தானியர்களின் முன்னீடான ஆய்வுப்பணி எவரெசுட்டு மேற்குப் புறத்திலிருந்து தொடங்கியது. 1952-ஆம் ஆண்டில் இதே வழியைப் பின்பற்றிச் சுவிட்சர்லாந்து ஆய்வுக்காரர்களான இரேமாண்டு, இலாம்பர்து, தென்சிங்கு நார்க்கே ஆகியோர் இதன் தென்கிழக்கு உச்சியில் 28200 அடி உயரம் வரை ஏறினர். இதற்கிடையில் பி.எல். குலாட்டீ என்பவர் தலைமையில் இந்திய நில அளவாய்வாளர்கள் 1952-ஆம் ஆண்டிலிருந்து 1954-ஆம் ஆண்டு வரை விரிவான ஆராய்ச்சி செய்து, இதன் சரியான உயரம் 29028 அடி என முடிவு செய்தனர்.

பிரித்தானியர் தளபதி அண்டு என்பவரின் தலைமையில் 1953-ஆம் ஆண்டு மார்ச்சுதிங்கள் 10-ஆம் நாளன்று ஒரு குழுவினர் இதன் உச்சியைக் காணும் முயற்சியில் ஈடுபட்டனர். அக்குழுவில் நேப்பாள நாட்டில் பிறந்தவரும் இந்தியக் குடிமகனும் ஆன தென்சிங்கு நார்க்கே என்பவரும் நியூசிலாந்து நாட்டவரான எட்மண்டு இல்லாரி என்பவரும் 9 இடங்களில் கூடாரங்களை அமைத்துக் கொண்டு, இடையிடையே பனிக்கட்டிப் படிகளை வெட்டிக் கொண்டு, 1953-ஆம் ஆண்டில் மே திங்கள் 29-ஆம் நாளன்று முற்பகல் 11.30 மணியளவில் எவரெசுட்டு மலையுச்சியை அடைந்தனர். அங்கே தென்சிங்கு புத்தர்பிரானை வணங்கினார்; இல்லாரி தம்முடன் கொண்டு சென்ற ஒரு சிலுவையை நட்டு வழிபட்டார். 1953-ஆம் ஆண்டு சூன் திங்கள் 2-ஆம் நாளன்று எலிசபெத்து அரசியின் முடி சூட்டுவிழாவின்போது, இவ்வெற்றிச் செய்தி முறையாக உலக நாடுகளுக்கு அறிவிக்கப்பட்டது.

உலக நாடுகளின் முயற்சி: தக்க கருவிகளுடனும் உயிரகத்துடனும் பனிப்படலத்தைத் தாங்கக் கூடிய உடை, உணவுப் பொருள்களுடனும் யாரும் எவரெசுட்டு மலையுச்சியை அடையலாம்; மன வலியும் உடல் வலியும் திடமாக இருந்தால் போதும் என்ற எண்ணம் பிறக்கவே ஏனைய நாடுகளும் இம்முயற்சியில் ஈடுபட்டன. இவ்வுச்சிக்குச் செல்ல வேண்டிய வழியை 1965-ஆம் ஆண்டில் மூடிவிட்ட நேப்பாளமும் 1969-ஆம் ஆண்டில் தம் ஆணையைத் தளர்த்தியது. சுவிட்சர்லாந்து (1956), பொதுவுடைமைக் கொள்கைச் சீனா (1960), அமெரிக்கா (1963), இந்தியா (1965), சப்பான் (1970) ஆகிய நாடுகள் வெவ்வேறு வழியாக எவரெசுட்டு மலையுச்சியை அடைந்து, வெவ்வேறு வழியாகக் கீழிறங்கின. சப்பான் மட்டும் ஒரு பெண்மணியை இம்மலை உச்சிக்கு அனுப்பியது. இந்தியாவிலிருந்து 28 வயதான குமாரி பச்சேந்திரி பால் என்பவர் எவரெசுட்டு மலையுச்

சியை அடைந்த இரண்டாம் பெண்மணி. 1984 –ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 11–ஆம் நாளன்று காட்டுமண்டிலிருந்து புறப்பட்ட அறுவர் கொண்ட இந்தியக் குழு, மே திங்கள் 11–ஆம் நாளன்று மூன்றாம் முகாமை அடைந்தபோது, இரண்டாம் முகாமில் பனிப்படலத் தாக்குதலில் 4 பேர் பலத்த காயம் அடைந்தனர். அம்முகாமில் தங்கியிருந்த குமாரி பச்சேந்திரி பால் மட்டும் உயிர் தப்பினார். மே திங்கள் 23–ஆம் நாளன்று நண்பகல் 1.07 மணிக்கு இப்பெண் எவரெசுட்டு மலையுச்சியை அடைந்தார். இவர் ஏறத்தாழ 43 மணித்துளிகள் வரை மலையுச்சியிலேயே தங்கினார். இந்திய அரசு இப்பெண்மணிக்கு ‘தாமரைத்திரு’ (பத்மஸ்ரீ) பட்டத்தை வழங்கியது. ‘இந்திய மலை ஏறும் சங்கத்தாரும்’, ‘போட்டியில் வெற்றி’ (Competition Success) என்ற மாத இதழ் நிறுவனத்தாரும் இவருக்குத் தனித்தனியே தங்கப் பதக்கங்களை வழங்கினார்கள். இப்பெண் உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்த நாக்குரி கிராமத்தைச் சேர்ந்தவர். இவருக்கு அம்மாநிலச் சார்பில் ஓர் இலட்சம் உரூபாய் பண முடிப்பும் அளிக்கப்பட்டது.

பொன்.சு.

**எழினி**: இவன் கடையெழு வள்ளல்களுள் ஒருவனும் குறுநில மன்னனும் ஆவான்; கூரிய வேலையும் கூவிளங்கண்ணியையுமுடையவன். குதிரை மலையையுடைய இவன் போரில் பகைவரை வஞ்சிக்காமல் எதிர்நின்று கொல்லும் பல வேற்படையையுடையவன். இவனை எழினி அதியமான் என்று புறநானூற்றுப் பழைய உரைகாரர் குறிப்பிட்டுள்ளார் (புறம். 158 உரை).

இவன் கடையெழு வள்ளல்களுள் ஒருவனாக விளங்கிய தன்மையை, அவர்கள் எழுவரையும் விதந்து குறிப்பிடுங்கால் பெருஞ்சித்திரனார் தம் புறநானூற்றுப் பாடலொன்றில் ‘ஊராது ஏந்திய குதிரைக் கூர்வேல், கூவிளங் கண்ணிக் கொடும்பூணெழினியும்’ (புறம். 158) என்றும், முடத்தாமக் கண்ணியார் தம் சிறுபாணாற்றுப்படையில் ‘மால் வரை கமழ் பூஞ்சாரல் கவினிய நெல்லி, அமிழ்து விளை தீங்கனி ஔவைக்கீந்த உரவுச்சினங் கனலும் ஒளி திகழ் நெடுவேல், அரவக்கடல் தானை அதிகன்’ (99–103) என்றும் பாராட்டியுள்ளனர். இவன் பெயர் எழினி எனவும் அஞ்சி எனவும் நெடுமானஞ்சி எனவும் அதியமான் நெடுமானஞ்சி எனவும் வழங்கும். சேர மரபினனான இவன் ஔவையாருக்கு நெல்லிக்கனி ஈந்தமை போன்ற செய்திகள் ஔவையார் முதலியோரால் சிறப்பிக்கப்பட்டுள்ளன. இவன் இறந்தபொழுது ஔவையார் ‘சிறியகட்பெறினே எமக்கீயு மன்னே’ என்று பாடிய புறநானூற்றுக் கையறு நிலைச் செய்யுள் உலக மொழிகளில் அமைந்துள்ள கையறுநிலைச் செய்யுட்களுள் முதலிடம் பெறத்தக்க சிறப்பினதாகும் (புறம்-235). காண்க: அதியமான் நெடுமானஞ்சி.

**எழினி**[2] சங்க காலத்தில் வாழ்ந்த ஒரு குறுநில மன்னனும் வள்ளலும் ஆவான். பொகுட்டெழினி என்பது இவன் பெயர். அதியர் குடியில் தோன்றிய இவன் அதியமான் நெடுவமானஞ்சிக்கு மகன் ஆவான். இவனை ஔவையார் தம் புறநானூற்றுப் பாடல்களில் சிறப்பித்துப் பாடியுள்ளார் (புறம் – 96, 102, 392).

**எழினி**[3] சங்க காலக் குறுநில மன்னர்களுள் ஒருவன். இவன் சேரசோழ மன்னரோடும் திதியன் முதலிய ஐந்து குறுநில மன்னர்களோடும் சேர்ந்து, இளையவனாக விளங்கிய தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியனை எதிர்த்து ஆலங்கானம் என்னுமிடத்தில் போர் செய்தான். அப்போரில் பாண்டியனால் வலியடக்கப்பெற்றான். இச்செய்தியினை நக்கீரர் தம் அகநானூற்றுப் பாடலில் குறிப்பிட்டுள்ளார் (அகம் 36).

**எழினி**[4] சங்க காலத்தில் வாழ்ந்த குறுநில மன்னருள் ஒருவனும் சிறந்த வீரனுமாவான். இவன் தந்தை பெயர் கண்ணன் என்பதாகும். அதனால் கண்ணனுக்கு மகன் என்னும் பொருள்பட இவன் ‘கண்ணன் எழினி’ என மாமூலனாரால் குறிப்பிடப்பட்டுள்ளான். இவன் நாட்டில் முதுகுன்றம் என்னும் ஒருமலை இருந்தது. அம்முதுகுன்றத்தினைக் கடந்து தலைவன் பொருள் தேடும் பொருட்டுத் தலைவியைப் பிரிந்து சென்றாலும் உரிய காலத்தில் வாராமல் இரான் என்று தோழி கூற்றில் அமைத்து இம் மன்னனை மாமூலனார் சிறப்பித்துள்ளார் (அகம். 197).

**எழினி**[5] இவன் தகடூர் பொருது வீழ்ந்த எழினி என்று குறிக்கப்பட்டுள்ளான். இவன் சங்க காலத்தில் வாழ்ந்த சிறந்த வீரனும் வள்ளலுமாவான். இவன் மக்களும் விலங்குகளும் துன்பம் இன்றி இன்பம் எய்து மாறு பகை கடிந்து செங்கோலாட்சி செலுத்தினான். இவன் போர்க்களத்தில் இறந்துபட்டமை அறிந்த அரிசில்கிழார் கையறு நிலைத் துறையில் இரங்கிப் பாடியுள்ள பாடல் புறநானூற்றில் இடம் பெற்றுளது (புறம்.230). பதிற்றுப் பத்திலுள்ள எட்டாம் பத்தின் தலைவன் பெருஞ் சேரலிரும்பொறை அதிகமானை ஏனை இரு பெருவேந்தரோடு வென்றான் என்னும் செய்தியினை அப்பத்தின் பதிகம் குறிப்பிடு

கிறது. 'பல் வேல் தானை அதிகமானோடு இருபெரு வேந்தரையும் உடனிலை வென்று' என வரும் அப் பதிகப் பகுதியில் குறிப்பிடப்படும் அதியன் இவனாக இருத்தல் கூடும். காண்க: அதியமான் தகடூர் பொருது வீழ்ந்த எழினி.

**எழினி**[6] சோழ மன்னன் ஒருவனிடம் பணி புரிந்த படைத் தலைவன். சோழ மன்னன் யானை பிடித்து வருவதற்குத் தன் வீரர் பலரை ஏவினான். அவர்களுள் எழினி தவிர, மற்ற வீரர்கள் ஆர்வ முடன் ஈடுபட்டனர். எழினி வாராமை அறிந்து சின மடைந்த சோழ மன்னன் மத்தி என்னும் மறவனை அனுப்பி அவனைக் கொண்டு வருமாறு பணித்தான். அதையறிந்த எழினி தன் படையுடன் வந்து மத் தியை எதிர்த்தான். அப்போரில் மத்தி எழினியை வென்று அவன் பல்லைப் பறித்துக்கொண்டு வந்து, தன் நாட்டுக் கடற்கரை அருகில் அமைந்த வெண்மணி என்னுமிடத்தில் வாயில் அமைத்து அதன் பெரிய கதவில் பதித்து வைத்தான். இச்செய்தியினை மாமூல னார் தம் அகநானூற்றுப் பாடலொன்றில் குறிப் பிட்டுள்ளார் (அகம். 211). வீ.சே.

**எழுகூற்றிருக்கை** சொல்லணி வகையுள் அமைந்த ஒருவகைச் செய்யுள் ஆகும். சிறு பிள்ளை கள் விளையாடும்பொழுது, நிலத்தில் ஏழு அறைகள் வகுத்து ஓர் அறையுள் புகுந்து வெளிவருவது; பின் ஒன்று இரண்டு அறைகளின் உள்ளே புகுந்து வெளி வருவது என்னும் பாங்கில் ஏழு அறைகளிலும் முறையே புகுந்து வெளிவந்து விளையாடுவது போன்று, ஒன்றுமுதல் ஏழு எண்கள் ஏறியும் இறங்கி யும் வரும் நிலையில் பொருட்பொருத்தமுற எண்ணலங்காரம் அமையப்பாடும் பாடல் ஆகும். இவ் வெழுகூற்றிருக்கை இணைக்குறளாசிரியப்பா என்னும் யாப்பினால் பாடப்படும்.

யாப்பருங்கல விருத்தியுள் இச்செய்யுள் பற்றி, 'எழுகூற்றிருக்கையாவது ஏழு அறையாக்கி முறை யானே குறுமக்கள் முன்னின்றும் புக்கும் போந்தும் விளையாடும் பெற்றியின் வழுவாமை,ஒன்று முதலாக ஏழிறுதியாக முறையானே பாடுவது' என்னும் உரைக் குறிப்புக் காணப்படுகிறது.இதற்கு எடுத்துக்காட்டாக 'ஒரு பொருட்டு இருதுணிபுரைத்தனை' என்னும் முதலையுடைய 36 அடிகள் கொண்ட பாடலும், 'ஒருடம்பு இருவராய் ஒன்றி' என்று தொடங்கும் 60 அடிகள் கொண்ட பாடலும் காட்டப்படுகின்றன. தேவாரத்தில் திருஞானசம்பந்தர் தமது முதல் திரு முறையில் இவ்வகைச்செய்யுளைஅடிகளில் வியாழக் குறிஞ்சிப்பண் அமையப் பாடியுள்ளார். தேவாரத்தில் இது இடம் பெற்றதால் மரபு பற்றி ஓரே பாடல் கொண்ட இதனையும் பதிகம் என்றே சைவச் சான் றோர்கள் கூறுகின்றனர்.

இம்மூன்று பாடல்களைத் தவிரப் பதினோராந் திருமுறையில் நக்கீர தேவநாயனாரும், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் இயற்பா என்னும் பகுதியில் திருமங்கையாழ்வாரும் எழுகூற்றிருக்கைப் பாடல் பாடியுள்ளனர். சமயச் சார்புடைமையால் இப்பாடல் கள் திருவெழுகூற்றிருக்கை எனப்பட்டன. மேலும், மாறனலங்காரத்தில் திருக்குருகைப் பெருமாள் கவிராயர் சடகோபர் மேல் ஓர் எழுகூற்றிருக்கைப் பாடலை இயற்றியுள்ளார். அந்நூலில், 'ஒன்று முதலா ஓரேழ் ஈறாச், சென்ற எண் ஈரேழ் நிலந் தொறும் திரிதர, எண்ணுவது ஒன்றாம் எழு கூற்றிருக்கை', என்று இலக்கணமும் கூறி, அடுத்த நூற்பாவில் இச்செய்யுளை இரதபந்தம் என்னும் சித்திர கவியாக்கி அடைக்கும் வகையினையும் குறிப் பிட்டுள்ளார். 'ஒரு தனித் திகிரியின் இரு விசும்பு ஒழுக்கத்து' என்று தொடங்கும் அப்பாடல் 51 அடி களை உடையது. அப்பாடல் இரதபந்தம் என்னும் சித்திர கவிக்கு இலக்கியமாக விளங்குகிறது.


திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் தந்தையார் சிவபாத இருதயர், தம் திருமகனார் இறையருள் பெற்று அருட்பாடல்கள் அங்கங்குப்பாடி வருவதை நேரில் கண்டு, அவற்றைத் தினந்தோறும் பாடி மகிழ்ந்தே பிற கடமைகளை ஆற்றும் நியதி மேற் கொண்டிருந்தார். சம்பந்தர் பல பதிகளிலும் சென்று பாடிக்கொண்டேயிருந்ததால் பாடல்கள் மல்கின. அவற்றைப் பாராயணம் செய்த பின்னரே பிற கடமைகளை ஆற்றவேண்டும் என்ற குறிக் கோளுக்குப் பாடல்களின் மிக்க எண்ணிக்கை துன்பந் தர ஏதுவாயிற்று. இதனைக் குறிப்பால் உணர்ந்த திருஞானசம்பந்தர் இதனை அருளிச் செய்து பதிகம் முழுவதையுமே பாடிய பலனை இதனாற் பெறலாம் என்று கூறியதாகவும், அது முதல் சிவபாத இருதயர் இப்பதிகத்தை மட்டுமே ஓதிவந்தார் எனவும் ஆன் றோர் கூறுவர். இக்காலத்தும் இப்பதிகத்தைப் பாரா யணம் செய்யும் சைவச் சான்றோர் பலருள்ளனர். இதிலிருந்து இவ்வெழுகூற்றிருக்கைப் பதிகத்தினை ஓதினால் பெறும் பயன் தெளிவாய்ப் புலப்படும்.

தேவாரம் ஏழுதிருமுறைகளையும் அடங்கன் முறையாய் அச்சிட்ட முற்காலச் சான்றோர் இத்திரு வெழுகூற்றிருக்கைக்கு உரை வரைந்து உதவியுள்ள னர். அப்பதிகத்தில் காணும் கருத்தில் ஒரு பகுதி வருமாறு. 'இறைவன் ஆன்மாக்களை ஈடேற்றுவதற்

## எழுகூற்றிருக்கை - சித்திரகவி

"ஒருரு வாயினை மானாங் காரத்து
ஈரியல் பாயொரு விண்முதல் பூதலம்
ஒன்றிய இருசுடர் உம்பர்கள் பிறவும்
படைத்தளித் தழிப்பமும் மூர்த்திக ளாயினை
இருவரோ டொருவ னாகி நின்றனை
ஓரால் நீழல் உன்கழ லிரண்டும்
முப்பொழு தேத்தி நால்வர்க் கொளிநெறி
காட்டினை நாட்டம் மூன்றாகக் கோட்டினை
இருநதி அரவமொடு ஒருமதி சூடினை
ஒருதாள் ஈரயில் மூவிலைச் சூலம்
நாற்கால் மான்மறி ஐந்தலை யரவம்
ஏந்தினை காய்ந்த நால்வாய் மும்மதத்து
இருகோட் டொருகரி யீடழித் துரித்தனை .."

திருஞானசம்பந்தர் — பதி. 128




இவ்வாறு முதலேழு நிலங்களும் நிலந்தோறும் எண் ஏறியிறங்கி ஏழிறுதியேறிய பேரேற்றமும், பின்னடுத்த நிலத்து ஏழாம் நிலத்துள்ளவாறே ஏறியிறங்கிய் தன்மையுங் காண்க.

காக மனித உருத்தாங்கி, ஒருவனாய் வந்துள்ளான். அவனே சக்தியுடன் சேர்ந்து இருவேறு உலகத்தொருவனானான். உலகியல் நிகழ ஆகாயம் முதலிய பூதங்களையும் சூரியசந்திரராம் இருவரையும், மற்றையோரையும் அழிக்க மும்மூர்த்திகளானான்', என்று திருஞானசம்பந்தர் தம் எழுகூற்றிருக்கைப் பாடலில் இறைவன் பெருமைகளை எண்ணலங்காரம் அமையக் கூறியுள்ளார். இப்பாடலைப் பாடிப் பெருமானை நினைப்பவர்க்கு மேலும் பிறத்தல் இல்லை; முத்தி சித்திக்கும்' என்று பலன் கூறி முடித்துள்ளார். இவ்வாறே ஏனைய எழுகூற்றிருக்கைப் பாடல்களும் பொருள் ஆழம் பொருந்தி விளங்குகின்றன. இத்தகைய சித்திர கவிகள் மிறைக்கவிகள் எனப்பட்டன. இவை பாடியோர் ஆற்றலைப் புலப்படுத்துவனவாக விளங்கினவேயன்றித் தமிழின் வளர்ச்சிக்குப் பெருந்துணை செய்வனவாக அமையவில்லை. ஆனால் பிற்கால மன்னர்களும் புரவலர்களும் இவ்வகைச் சொல்லணிகளில் பெரிதும் ஈடுபாடுடையவர்களாக விளங்கியமையின் அவர்களை மகிழ்விக்க வேண்டிப் புலவர்கள் இத்தகைய சித்திரக் கவிகளைப் பாடுவராயினார்.

இரா.ச.

**எழுத்தச்சன், துஞ்சத்து**: இவர் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் தோன்றிய மலையாளக் கவிஞர்களுள் தலைசிறந்தவராவார். கேரள நாட்டின் தென் மலையாள மாவட்டத்திலுள்ள திருக்கண்டியூர் என்னும் ஊரில் தோன்றிய இவர்தம் இயற்பெயர், பெற்றோர் பெயர் முதலியவை அறிய இயலவில்லை. நாயர் மரபில் தோன்றிய இவருடைய பெயரில் இடம் பெற்ற 'துஞ்சத்து' என்பது குடிப்பெயராகும். எழுத்தச்சன் என்பது இவர் தம் சிறப்பால் பெற்ற பட்டப் பெயர் என்று கூறுகின்றனர். பிற நாடுகளுக்குச் சென்று தமிழ், வடமொழி போன்ற மொழிப் புலமை பெற்று மீண்ட இவர், தம் சொந்த ஊரில் பள்ளிக்கூடம் அமைத்து மாணவர்களுக்குக் கல்வி பயிற்றும் தொழில் மேற்கொண்டார். செம்பகச் சேரியாகிய அம்பலப்புழை மன்னரின் அன்பாதரவினைப் பெற்று விளங்கிய இக்கவிஞர், மேப்பத்தூர் நாராயண பட்டதரி என்ற பெருங் கவிஞரோடு நண்பராக விளங்கினார்.

மலையாளக் கவிதை உலகிற்கு ஒரு புதிய செய்தியை அறிவிப்பவராக எழுத்தச்சன் மலையாள இலக்கிய அரங்கில் தோன்றினார். இவருக்கு முற்பட்ட காலத்தில், மலையாளத்தில் வடமொழி வழி, தமிழ்வழி என்று இருநடைமுறை வழிகள் இருந்தன. அவ்விரண்டிலும் அமைந்த நல்ல சொற்களைக் கையாண்டு இவர் புதிய மலையாள மொழியினைச் சிறப்புற அமைத்தார். தூய மணிப்பிரவாளத்தை, அதாவது மலையாளத்தின் உயிர்த் தன்மை குன்றாத வடமொழிக் கலவையை அக்காலத்தில் வழக்கிலிருந்த தமிழ்ப்பாவினங்களில் அமைத்துப் புதியதொரு கவிதை மரபினைத் தோற்றுவித்து, அதில் வெற்றியும் பெற்றுத் திகழ்ந்தார். இம்மாபெரும் சாதனையால் இவர் 'புதிய மலையாள மொழியின் தந்தை' என்று சொல்லுமளவிற்குச் சிறப்பெய்தினார்.

எழுத்தச்சன் ஆழ்ந்த புலமையும்,வேத இதிகாசம் போன்ற வைதிக இலக்கியத் தோய்வும், ஆன்மானுபூதியும், ஒரு குருவிற்கு அமைய வேண்டிய மனச் செம்மைப் பயிற்சியும், சிறந்த ஒழுக்கமும் கொண்டு விளங்கினார். தம் உள்ளத்தில் நிறைந்திருந்த ஆத்திக உணர்வும், பரம்பொருளிடத்திருந்த பக்தியும் நன்கு ஒளிரும்படியானதொரு கவிதைப் பாணியை இவர் தமக்கென வகுத்துக் கொண்டார். இவர் உளமுருகிப் பாடிய பாடல்கள் இவர் பெற்ற அனுபூதியை வெளிப்படுத்துவனவாக அமைந்து கற்போர் உள்ளத்தினை மகிழ்விக்கின்றன.

இவர் காலத்திற்கு முன்னரே மலையாள மொழியில் இராம கதை பல வடிவில் இலக்கியச் சிறப்புப் பெற்றுத் திகழ்ந்துள்ளது. எனினும், அது மிகவுயர்ந்த நிலையினை அடைந்தது இவரது காலத்தில்தான் எனலாம். இவருடைய நூல்களில் கவிதைச் சுவை, பக்திச் சுவை, தத்துவச் சுவை ஆகிய மூன்றும் ஒன்றின் ஒன்று விஞ்சி நிற்கும் தன்மையைக் காணலாம். இவர்தம் அத்தியாத்தும இராமாயணக் கிளிப்பாட்டு இம் முச்சுவையும் ஒப்பத் திகழும் அரிய காவியமாகும். இது வான்மீகியின் மொழிபெயர்ப்பாக அமைக்கப்படாமல், பிறிதொரு வடமொழி இராமாயணத்தினை ஒட்டி எழுதப்பட்டதாகும். இவர் இயற்றிய மகாபாரதம் வியாசர் பாரதத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்டதாகும். இதன்கண் கவிதை உணர்வு சிறந்துள்ளது. இவர் ஸ்ரீபாகவதம் என்னும் நூலையும் எழுதியுள்ளார் என்று அறிஞர்கள் கூறுகிறார்கள். இராமன் அல்லது கிருட்டிணன் என்னும் தெய்வப் பெயர்களைக் கூறுங்கால் தனித்துக் கூறாது, அவர்கள்தம் பல பெயர்ச் சிறப்புகளையும் அடுக்கிக் கூறி இன்புறுவது இவர்தம் இயல்பாகும். தாம் நடத்திச் செல்லும் காவியக் கதையின் இடையிடையே, அமையும் இறைவன் திருவுருவ வருணனையில் இவர் பெரிதும் ஈடுபட்டு மகிழ்வார். கவிதையில் வீர உணர்ச்சியைச் சித்திரிப்பதில் இவர் காலக் கவிஞர்களுள் இவர் தலைசிறந்து விளங்கியுள்ளார்.

இவர்தம் கவிதையின் சிறப்பான கூறு ஆன்ம விசாரணை எனலாம். எனினும், இவர்தம் மகாபாரதத்தில் உலக நீதிகளும் வாழ்வியல்களும் உரிய

இடம் பெற்றுத் திகழ்கின்றன. உலகாயதத்தையும் மெய்ஞ்ஞானத்தையும் இணைத்து, உலக வாழ்க்கை, அதன் முழு வளத்தோடும் உருவத்தோடும் நடைபெறுமாறு செய்யவேண்டும் என்பது இவர்தம் கவிதைக் குறிக்கோள் ஆகும். இராமாயணம் போன்ற பெரிய நூல்களையேயன்றிச் சிறு கவிதை நூல்களையும் இவர் இயற்றியுள்ளார். அரிநாம கீர்த்தனம், சிந்தாரத்தினம், கைவல்லிய நவநீதம் ஆகிய தொகுப்பு நூல்கள் இவருடையனவாகும்.

எழுத்தச்சன் தம் இறுதிக்காலத்தில் சிற்றூர் என்னும் ஊரில் வாழ்ந்தார். இவர் காலமாகி அடங்கிய இடம் குருமடம் என்ற பெயரால் இன்றும் வழங்கப்படுகிறது. அ.மா.ப.

**எழுத்தர்பணி நாட்டச் சோதனை:** மாணவர்களின் கல்வி வழிகாட்டலிலும் பணியாளர்களின் தொழில் வழிகாட்டலிலும் எழுத்தர் பணி நாட்டச் சோதனை (Clerical Aptitude Test) பயன்படுத்தப்படுகிறது. ஒவ்வொருவருக்கும் ஒரு குறிப்பிட்ட பாடத்தையோ தொழிலையோ திறம்படச் செய்வதற்கான நாட்டம் (Aptitude) உள்ளதென்ற உளவியல் கருத்தின் அடிப்படையில், இச்சோதனை பயன்படுத்தப்படுகிறது.

சிறுசிறு விவரங்களை அறிந்து ஏற்றுக் கொள்ளும் திறமையை இச்சோதனைகள் அளவிட முற்படுகின்றன. வாசித்தல், எழுதுதல், அடையாளக் குறியிடல் ஆகிய திறன்களே முதன்மையாக இச்சோதனையில் சோதிக்கப்படுகின்றன. முதன்முதலில் 1919-இல் தர்சுடன் என்பவரால் தயாரிக்கப்பட்ட தர்சுடன் எழுத்தர் பணி நாட்டச் சோதனையில்(Thurstone Clerical Test) எழுத்துக் கூட்டுதலில் (Spelling) தவறுகள்; கூட்டல், கழித்தல் ஆகியவற்றில் பிழைகள்; எண் கணிதக் கணிப்புப் போன்றவற்றில் பயிற்சிகள் ஆகியன அடங்கியுள்ளன. அலுவலகத்தில் எழுத்தர்கள், கண்காணிப்பாளர்கள், தணிக்கை அலுவலர்கள் ஆகியோரைத் தேர்ந்தெடுக்கையில் மின்னசோட்டா எழுத்தர் பணிச் சோதனை (Minnesota Clerical Test) பயன்படுத்தப்படுகிறது. இச்சோதனையில் எண்களை ஒப்பிடுதல், பெயர்களை ஒப்பிடுதல் போன்ற திறன்கள் அளந்தறியப்படுகின்றன.

எழுத்தர் பணிக்குரிய பொதுச்சோதனை (General Clerical Test) ஒன்பது துணைச் சோதனைகளைக் கொண்ட தொகுப்பாகும். இச்சோதனையில் எழுத்தர் பணி வேகம், பிழையின்மை, எண் திறமை, சொல்லாக்கம் (Verbal Facility) ஆகிய திறன்கள் அளந்தறியப்படுகின்றன. பொறுப்புமிக்க எழுத்தர் பணி வேலைகளுக்குத் தகுதியான விண்ணப்பதாரர்களை இச்சோதனையின் உதவியால் சரியாகத் தேர்ந்தெடுக்க முடியும்.

பல்வேறுவகை நாட்டச் சோதனையும் (Differential Aptitude Test) எழுத்தர் பணித்திறனை அறிவதற்காக எழுத்தர்பணி வேகம் மற்றும் பிழையின்மை (Clerical Speed and Accuracy) என்னும் துணைச் சோதனையைச் சேர்த்துள்ளது. இதில் எண்கள், எழுத்துகள் ஆகியவற்றுக்குத் தரப்படும் துலங்கல் அல்லது பதிலின் (Response) வேகம் அளவிடப்படுகிறது. ஒரே மாதியான எண்கள், எழுத்துகள் ஆகியவற்றை இனம் கண்டு கொள்வதில் வெளிப்படுத்தும் திறனும் விரைவும் மதிப்பெண்கள் தருவதற்கு அடிப்படையாக உள்ளன. எஸ்.த.

துணை நூல்கள்:

**Travers, Robert**, **M.W.**, An Introduction to Educational Research, Macmillan, New York, 1978.

**Van Dalen, D.B.**, Understanding Educational Research, McGraw-Hill Book, New York, 1979.

**எழுத்தறிவு:** ஒருவர் தாம் பேசக்கூடிய மொழியை எழுதவும் வாசிக்கவும் அம்மொழி வாயிலாகவே அடிப்படைக் கணக்குகளைச் செய்யவும் தெரிந்து வைத்திருப்பது எழுத்தறிவு. எழுத்தறிவு ஒருவர் வாழ்க்கையில் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை எளிதில் செய்வதற்கு உதவியாக இருக்க வேண்டும்; தம் வாழ்க்கைச் செயற்பாடுகளை எழுத்து, வாசித்தல் அல்லது பேச்சு இவற்றின் வழியே வெளிப்படுத்துவதற்கும் மற்றவர்களிடமிருந்து தம் வாழ்க்கைக்குப் பயனுள்ள கருத்துகளைத் தெரிந்து கொள்வதற்கும் உதவக்கூடிய வகையில் அமைய வேண்டும்.

செயற்படும் எழுத்தறிவு: வெறும் எழுத்துகளைத் தெரிந்து வைத்திருப்பதோ ஓரிரு வார்த்தைகளை மட்டும் எழுத வாசிக்கத் தெரிந்திருப்பதோ எழுத்தறிவு ஆகாது. இதனால் எந்தவிதப் பயனுமில்லை. ஆகவேதான் கல்வி வல்லுநர்கள் செயற்படும் எழுத்தறிவை (Functional Literacy) வலியுறுத்துகின்றனர். வாழ்க்கைக்குப் பயன்படக்கூடிய காரியங்களைச் செய்ய உதவுவது செயற்படும் எழுத்தறிவாகும். சாலை விதிகளைப் படித்துத் தெரிந்து கொள்ளுதல், சிறிய கடிதங்கள் எழுதுதல், தம் நிலையை அல்லது குறையை விளக்கி அரசு அதிகாரிகளுக்கு மனுச் செய்தல் போன்ற செயல் நடவடிக்கைகள் செயற்

படும் எழுத்தறிவுக்கு எடுத்துக்காட்டுகள். இச்சூழல்களில்தான் முழுமையான எழுத்தறிவுத் திறமையை ஒருவர் செயற்படுத்த முடிகிறது. இந்த நிலையில் இருப்பவரே சராசரி எழுத்தறிவு உடையவர்.

எழுத்தறிவின் பயன்கள்: எழுத்தறிவினால் எண்ணற்ற பயன்கள் சமுதாயத்திற்கும் தனி மனிதனுக்கும் உண்டு. ஒரு நாட்டின் முன்னேற்றத்தை அளவிடுவதற்கும் எழுத்தறிவு ஓர் அளவுகோல். முன்னேற்றமடைந்த நாடுகளில் எழுத்தறிவின் நிலை பெருகியிருக்கிறது. அரசு, அரசியல் தொடர்பான உண்மையான ஈடுபாடு எழுத்தறிவு உடையவருக்குத்தான் உண்டாகும் வாய்ப்புண்டு. செய்தித்தாள்கள், நூல்கள், சிறு வெளியீடுகள் வழியே அரசின் நடவடிக்கைகளைத் தெரிந்து கொள்வதற்கும் புரிந்து கொள்வதற்கும் எழுத்தறிவு உதவுகிறது. தம்மையும் தம் சுற்றுப்புறத்தையும் அறிந்து, அதற்கு ஏற்றாற்போற் செயற்படுதற்கு எழுத்தறிவு இன்றியமையாததாக இருக்கிறது. தனி மனிதனின் சமுதாய, தேசிய முன்னேற்றங்களில் எழுத்தறிவுக்கு ஏற்புடைய பங்கு உண்டு.

எழுத்தறிவு நிலை: இந்தியாவில் (1981) எழுத்தறிவு பெற்றோரின் விழுக்காடு 35.8. இதில் ஆண்களைவிடப் பெண்கள் கல்வியில் குறைந்துள்ளார்கள். தமிழகத்தின் எழுத்தறிவு நிலை மொத்தம் 46.6 விழுக்காடாகும். ஆண்கள் 58.2 விழுக்காடு; பெண்கள் 34.9. விழுக்காடு. தமிழ்நாட்டில் தருமபுரி மாவட்டத்தில் தான் குறைந்த எண்ணிக்கையுள்ளவர்கள் எழுத்தறிவுடையவர்களாக உள்ளனர். எழுத்தறிவுடையோர் அதிக எண்ணிக்கையுள்ள மாவட்டம் சென்னை. அங்கு 68.4 விழுக்காட்டினர் எழுத்தறிவுடையவர்களாக உள்ளனர். தமிழகத்தில் தேசிய எழுத்தறிவு விழுக்காட்டைக் குறைவாகப் பெற்ற மாவட்டம் தருமபுரி.

எழுத்தறிவுத் திட்டங்கள்: இந்தியாவில் தேசிய அளவில் எழுத்தறிவு மேம்பாட்டுக்காகத் தேசிய வயது வந்தோர் கல்வித் திட்டம் (National Adult Education Programme) அக்டோபர் 2, 1978-ஆம் நாளிலிருந்து செயற்பட்டு வருகின்றது. இது 15 வயதிற்கு மேற்பட்டவர்களுக்காக நடைபெறும் திட்டம். இது தவிர, 6-14 வயதிற்குட்பட்டவர்களுக்காக நடைபெறும் எழுத்தறிவுத் திட்டந்தான் பள்ளிசாராக் கல்வித் (Non-formal Education) திட்டமாகும். மேலும், பெண்களுக்காகவும் வேளாண்மையில் ஈடுபட்டிருப்பவர்களுக்காகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் மலைவாழ் மக்களுக்காகவும் எழுத்தறிவுத் திட்டங்கள் வரையறுக்கப்பட்டுச் செயற்பட்டு வருகின்றன. இவை எல்லாவற்றின் முக்கிய நோக்கம் அடிப்படை எழுத்தறிவை மக்களுக்குப் புகட்டுவதாகும். இதனைத் தொடர்ந்து தொடர் கல்வித் திட்டத்தையும் செயற்படுத்துவதாகும். இவற்றின் மூலம் தேசிய எழுத்தறிவு நிலையை உயர்த்துவதற்கு இந்தியா செயலாற்றி வருகிறது. மக்கள் எழுத்தறிவு இயக்கம் (Mass Literacy Movement) என்ற பெயரில் எழுத்தறிவு நிலையை உயர்த்துவதற்குப் பள்ளி, கல்லூரி மாணவர்களின் மூலம் எழுத்தறிவு இயக்கம் பெரிய அளவில் செயற்பட்டு வருகிறது; எழுத்தறிவை உயர்த்துவதோடு மாணவர்களுக்குச் சமுதாய உணர்வைப் புகட்டுவதையும் முக்கிய நோக்கமாகக் கொண்டது. இவ்வாறான பல வழிகளில் தேசிய எழுத்தறிவு நிலையை 1990க்குள் குறிப்பிடத்தக்க நிலையை எட்டுவதற்குத் திட்டங்கள் தீட்டப்பட்டுச் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

எழுத்தறிவிக்கும் முறைகள்: தொன்றுதொட்டு எழுத்தறிவிக்கும் முறையாகத் தொகுத்தல் (Synthetic) அடிப்படையில் எழுத்தறிவித்தல் நடைபெற்று வந்தது. இதில் எழுத்து வடிவம், ஒலி, சொல், வாக்கியம், பத்தி என்று படிப்படியாக எழுத்திலிருந்து தொடங்கி, எழுத்தறிவு புகட்டப்பட்டு வருகிறது. பின்னர், இதனால் ஏற்பட்ட இடர்ப்பாடுகளையும் சிக்கல்களையும் உணர்ந்த மொழிவல்லுநர்கள் பகுத்தல் (Analytic) முறையைப் பயன்படுத்தி வந்தார்கள். இதில் பொருளை அடிப்படையாகக் கொண்டு எழுத்தறிவு புகட்டப்பட்டது. அதாவது எழுத்து, சொல்லை விடப் பொருளுக்கு முதலிடம் கொடுக்கப்பட்டு, அதை விளக்கும் சொற்களையும் அந்தச் சொற்களிலுள்ள எழுத்துகளையும் விளக்குவதன் மூலம் எழுத்தறிவு புகட்டப்பட்டு வருகிறது. இந்த முறையிலும் பல இடர்ப்பாடுகளும் சிக்கல்களும் ஏற்படுகின்றன. ஆகவே, மேற்சொன்ன இரண்டு முறைகளின் நல்ல கருத்துகளையும் ஒன்று சேர்த்துப் பகுத்துத் தொகுத்தல் (Eclectic) என்ற புதிய முறையில் எழுத்தறிவு புகட்டப்படுகிறது. இன்றைய நிலையில் இந்த முறையே சிறப்பான முறையாக அமைந்து வருகிறது.

எழுத்தறிவு, கல்வியறிவு வேறுபாடுகள்: ஒரு மொழியைப் பேசவும் எழுதவும் வாசிக்கவும் தெரிந்ததாலே ஒருவர் கல்வியறிவு பெற்றவராகப் பல சமுதாயங்களில் கருதப்படுகிறார். இது தவறான கருத்து. ஏனெனில், கல்வியறிவும் எழுத்தறிவும் பல நிலைகளில் வேறுபடுகின்றன. ஆனால், கல்வியறிவைப் பெறவும் மேம்படுத்தவும் எழுத்தறிவு பயன்படக்கூடிய ஒரு கருவியாக அமையுமே தவிர, எழுத்தறிவே கல்வியறிவாகாது. எழுத்தறிவின் மூலம் கல்வியறிவை மேம்படுத்த முடியும். எழுத்தறிவில்லாக் கல்வியறிவு முழு

மையுடையதாக இருக்க முடியாது. அதே நேரத்தில் எழுத்தறிவுத் திறமை இல்லாத ஒருவருக்குக் கல்வியறிவே இல்லையெனக் கூறிவிட முடியாது. இக்கருத்து ஐக்கிய நாடுகளின் கூட்டம் ஒன்றில் வலியுறுத்தப்பட்டது.

இரா.அர.

**எழுத்தறிவின்மை :** எழுத்தறிவுக்கொள்கை என்பது நோக்கங்கள், கோட்பாடுகள், முன்னுரிமைகள் முதலியவற்றைத் தன்னகத்தே கொண்டதாகும். சிறந்த எழுத்தறிவுக் கொள்கை எல்லோருக்கும் தொடக்கக் கல்வி, பள்ளியினின்றும் இடையே நீங்கியவருக்கான ஒரு கல்வித்திட்டம், எழுத்தறிவை ஊக்குவிப்பதற்காகச் சமூகப் பொருளாதார நிலைகளை வளப்படுத்துதல் போன்ற மூன்று பகுதிகளையும் பெற்று விளங்கும். எழுத்தறிவு பெற்றவர் என்று கருதப்படும் ஒருவருக்கு இயல்பான நிலையில் ஓர் எளிய சிறிய பகுதியை வாசித்துப் புரிந்து கொள்ளவும் எழுதவும் தெரிந்து இருக்க வேண்டும் என்பது எதிர்பார்க்கப்படுகிறது. இது ஐக்கிய நாட்டுக் கல்வி அறிவியல் பண்பாட்டு நிறுவனம் எழுத்தறிவு குறித்து அளிக்கும் வரையறையாகும். இவ்வரையறையில் எண்ணறிவு பற்றி எடுத்தியம்பப் படவில்லை. எனினும் வழக்கில் எழுத்தறிவு என்பது எண்ணறிவையும் உள்ளடக்கியதாகக் கருதப்படுகிறது. இந்த வரையறையின் அடிப்படையிலேயே உலக நாடுகளின் எழுத்தறிவு நிலை ஆராயப்படுகிறது.

**உலக நாடுகளில் எழுத்தறிவு நிலை:** வளர்ந்து வரும் நாடுகள் எனக் கருதப்படும் எண்பத்து நான்கு நாடுகளுள் 24 நாடுகளுடைய எழுத்தறிவு விவரங்கள் பட்டியல் படுத்தப்பட்டுக் கீழே தரப்பட்டுள்ளன.

அட்டவணை: 1.
வளரும் சில நாடுகளின் எழுத்தறிவு நிலை

| நாடு | வயது வரம்பு | ஆண்டு | எழுத்தறிவு ஆண் | விழுக்காடு பெண் |
|---|---|---|---|---|
| துனீசியா | 15 | 1980 | 66.2 | 38.9 |
| பெனின் (Benin) | 15 | 1980 | 40 | 17 |
| எத்தியோப்பியா | 10 | 1980 | 35 | 13 |
| சாம்பியா | 15 | 1980 | 29 | 12 |
| கென்யா | 15 | 1980 | 60 | 35 |
| இலைபீரியா | 15 | 1980 | 42 | 9 |
| மொரீசியசு | 15 | 1980 | 86 | 72 |
| மொசாம்பிக்கு | 15 | 1980 | 44 | 23 |
| நைசீரியா | 15 | 1980 | 46 | 23 |
| உகாண்டா | 15 | 1980 | 65 | 40 |
| ஆப்கானிசுத்தானம் | 15 | 1980 | 33 | 6 |
| சவுதி அரேபியா | 15 | 1980 | 34 | 12 |
| துருக்கி | 11 | 1980 | 83 | 53 |
| பர்மா | 15 | 1980 | 79 | 56 |
| இந்தோனேசியா | 10 | 1980 | 80 | 64 |
| சிங்கப்பூர் | 15 | 1980 | 92 | 74 |

| | | | | |
|---|---|---|---|---|
| தைவான் | — | 1982 | 95 | 85 |
| தாய்லாந்து | 10 | 1980 | 93 | 86 |
| வங்காளதேசம் | — | 1980 | 33 | 15 |
| இலங்கை | 15 | 1981 | 91 | 80 |
| மெக்சிகோ | — | 1980 | 83 | 79 |
| பனாமா | 15 | 1980 | 87 | 87 |
| பெரு | 15 | 1980 | — | 89 (பிரிக்கப்பட வில்லை) |
| இந்தியா | — | 1981 | 47 | 25 |

வளர்ந்து வரும் நாடுகளுள் பாதிக்கு மேலான நாடுகள் எழுத்தறிவில் குறைவுபட்டவை. பெரும்பான்மையான நாடுகளில் 15 வயதில்தான் குழந்தைகள் எழுத்தறிவு பெற்ற நிலையை அடைகின்றனர். எத்தியோப்பியா, துருக்கி, இந்தோனேசியா, தாய்லாந்து போன்ற நாடுகளில் குழந்தைகள் 10 அல்லது 11 வயதில் எழுத்தறிவு பெற்றநிலையை எய்துகின்றனர். ஆனால், வளர்ந்துவிட்ட நாடுகளில் எழுத்தறிவு மிக உயர்ந்த நிலையை அடைந்துள்ளது.

வளர்ந்துள்ள சில நாடுகளின் கல்வி நிலை வருமாறு:

அட்டவணை: 2.

வளர்ந்துள்ள (Developed) நாடுகளின் பள்ளிக்கல்வி நிலை

| நாடு (1) | வயது வரம்பு (2) | ஆண்டு (3) | ஆண் (4) | பெண் (5) |
|---|---|---|---|---|
| ஆசுத்திரேலியா | 12–16 | 1980 | 85 | 88 |
| கனடா | 12–17 | 1981 | 92 | 93 |
| பிரான்சு | 11–17 | 1980 | 77 | 93 |
| அயர்லாந்து | 12–16 | 1980 | 88 | 98 |
| சப்பான் | 12–17 | 1981 | 92 | 93 |
| நியுசிலாந்து | 11-17 | 1981 | 80 | 82 |
| போலந்து | 15–18 | 1981 | 75 | 79 |
| இசுபெயின் | 11–17 | 1981 | 86 | 90 |
| சுவீடன் | 13–18 | 1981 | 81 | 90 |
| இங்கிலாந்து | 11–17 | 1980 | 81 | 84 |
| அமெரிக்கா | 14–17 | 1980 | 94 | 93 |
| சோவியத்து | 12–16 | 1981 | 96 | 96 |

ஐரோப்பிய நாடுகளில் 15-ஆம் நூற்றாண்டிலிருந்து எழுத்தறிவு விரைவாக வளர்ந்து வந்திருக்கிறது. கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் நடுவில் ஏறக்குறைய 50 விழுக்காடு மக்கள் எழுத்தறிவு பெற்றவராக இருந்திருக்கின்றனர். இந்த முன்னேற்றத்திற்கு அவர்களுடைய பண்பாடு, சமூக, பொருளாதார, அறிவியல் வளர்ச்சி காரணம் எனக் கூறலாம். இலத்தீன் மொழியின் இடத்தைத் தாய்மொழி ஏற்று, எழுத்து வடிவங்கள் வளர்ந்து எழுத்தறிவு முன்னேற்றத்திற்கு உதவியது. மேலும், அரேபியர்கள் எழுதுதற்கான தாள் கண்டறிந்து வழங்கியதால், தோலில் எழுதும் நிலை நீங்கியது. பல அச்சு ஆலைகள் உருவாகி எழுத்தறிவு விரிவடையக் காரணமாக இருந்தன. இருபதாம் நூற்றாண்டில் எழுத்தறிவு பொருளாதார முன்னேற்றத்திற்கு மிக இன்றியமையாததாக அமைந்ததோடு, அறிவியல் வளர்ச்சிக்கும் பெரிதும் காரணமாக இருந்தது.

சோவியத்து நாட்டில் 1919-இல் உருசியப் புரட்சியின் விளைவாக எழுத்தறிவு பரப்பும் முயற்சி ஓர் இயக்கமாகத் தொடங்கப்பட்டது. அவர்கள் பள்ளி வயதுக் குழந்தைகளைக் கட்டாயமாகப் பள்ளியில் சேர்த்ததோடு, எழுத்தறிவற்ற வயது வந்தோர்க்கு எழுத்தறிவிக்க முனைந்து ஈடுபட்டனர். பரந்து கிடந்த 100 மிலியன் மக்களுள் 70 விழுக்காடு எழுத்தறிவற்றவராக இருந்தனர். அவர்கள் 122 மொழிகளைப் பேசி வந்தனர். இருப்பினும், 1939-இல் எழுத்தறிவு பெற்றவர் விழுக்காடு 87க்கு உயர்ந்து விட்டது. மொழிகளின் இயல்புகளை அறிந்து, ஒவ்வொரு மனிதனையும் அரசியலில் ஈடுபடுத்த வேண்டுமென்ற ஆர்வத்துடன் உழைத்து வெற்றி கண்டனர். இப்போது வளர்ந்த நாடுகள் எதிலும் எழுத்தறிவின்மைச் சிக்கல் இல்லை. வளர்ந்த உலக நாடுகளில் ஆண், பெண் பள்ளிக் கல்வி நிலையில் வேறுபாடு இல்லை. பல நாடுகளில் பெண்கள் நிலை உயர்ந்துள்ளது.

எழுத்தறிவும் பொருளாதாரமும்: பொருளாதார முன்னேற்றத்திற்கு அடிப்படை எழுத்தறிவு. எழுத்தறிவினால் ஏற்படுகின்ற அறிவு வளர்ச்சித் திறன்கள் (Cognitive Skills) பொருளாதார முன்னேற்றத்திற்கு அடிப்படை. அதே போழ்து பொருளாதார வளமின்றி எழுத்தறிவு விழுக்காட்டை முன்னேற்ற இயலாது. எழுதப் படிக்கத் தெரியாதவருக்குத் தம் வாழ்க்கையில் காணப்படும் பல வழிகளில் தமக்கு ஏற்றதைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் திறன் வளருவதில்லை.

ஆராய்ச்சி முடிவுகளால் தொடக்கக் கல்வியின் பலன் விகிதம் அதிகரித்துள்ளது என்பது தெளிவாக்கப்பட்டு உள்ளது. மேலும், பொருளாதார வளர்ச்சிக்கும் எழுத்தறிவு விழுக்காட்டிற்கும் உள்ள நேரடித் தொடர்பு நிரூபிக்கப்பட்டுள்ளது. 40 அல்லது 50 விழுக்காடு எழுத்தறிவற்றவர் உள்ள நாட்டில் பொருளாதார முன்னேற்றம் இருக்க முடியாது. பண பலம் படைத்த சவுதி அரேபியா போன்ற நாடுகளில் எழுத்தறிவு குன்றியமையால் முன்னேற்றம் தடைப்பட்டுள்ளது. எழுத்தறிவு 80 விழுக்காடு எட்டினாலன்றி ஒரு நிலையான சமூக, பொருளாதார முன்னேற்றத்தை எந்த நாடும் எய்த இயலாது என்பது ஆராய்ச்சிகளின் முடிவு.

மகளிரிடையே எழுத்தறிவின்மை: உலக நாடுகளில் எழுத்தறிவின்மை ஒரு சிக்கல் என்றால் அதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளவர் மகளிரே. அட்டவணை 1-இல் குறிப்பிட்டுள்ள 24 நாடுகளுள் 21 நாடுகளில் எழுதப்படிக்கத் தெரிந்தபெண்கள் விழுக்காடு ஆண்களை விடக்குறைவு. இவற்றுள் இந்த வேறுபாடு 50 விழுக்காடு நாடுகளில் 50 விழுக்காட்டிற்கும் அதிகமாக உள்ளது. பெண்களின் இந்நிலைக்கு உலக வல்லுநர்கள் ஐந்து காரணங்களைக் குறிப்பிடுகின்றனர். 1. பல நாடுகளில் வாழும் பெண்களின் விழுக்காடு குறைந்துள்ளது. பெண் குழந்தைகள்பலர் இறந்து விடுகின்றனர். சமூகம் பெண்களுக்குச் சம வுரிமை அளிக்கத் தயாராக இல்லை. எனவே, படிப்பிலும் சமவுரிமை கொடுக்கத் தயங்குகிறது. 2. உயர் கல்வியில் பெண்கள் விழுக்காடு மிகக் குறைவு. 3. அறிவியல், கணிதம், பொறியியல், சட்டம், மருத்துவம், கட்டடக் கலை போன்றவை ஆண்கள் மிகுதியாகச் சேரும் பாடங்களாகவும் கல்வி, கலை, மனிதவியல், செவிலியர்கலை (Nursing), வீட்டு நிருவாகம் போன்றவை பெண்கள் விரும்பிச் சேரும் பாடங்களாகவும் இருந்து வருகின்றன. 4. வாணிக நிருவாகம் (Business Administration), பொறியியல், அங்காடியியல் (Marketing) போன்ற பாடங்களில் தேர்ச்சி பெற்ற பெண்களுக்குச் சப்பான் போன்ற வளர்ந்த நாடுகளில் கூட வேலை வாய்ப்பில்லை. 5. பல நாடுகளின் பண்பாடு ஆண்களுக்கு முதன்மையான இடத்தைக் கொடுக்கிறது. பொருளாதாரப் பற்றாக்குறை பல போழ்து பெண்ணைத் தவிர்த்து ஆணுக்குக் கல்வி புகட்ட முனைகிறது. அதோடு பெண் குழந்தைகளை வெளியே அனுப்பத் தயக்கம் இன்னும் வளர்ந்து வரும் நாடுகளில் கூட இருந்து வருகிறது.

பெண்கள் ஆண்டான 1975 தொடங்கிப் பத்து ஆண்டுகள் பெண்கள் நிலை குறித்துப் பல வகை ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு, முடிவுகள் வெளி வந்துள்ளன. அவற்றுள் முக்கியமான சில வருமாறு: ஆணுக்கும் பெண்ணுக்கும் சில உடற்கூறு வேறுபாடு

கள் இருந்தபோதிலும், அவை பயிற்சியின் காரண மாக வலுப்பெறுகின்றனவே தவிரப் பெண்ணால் முடியாதது என்று ஒன்றுமில்லை. எடுத்துக்காட் டாக, நெடுந்தொலைவு நீச்சல் போட்டியில் ஆணை விட வெற்றி பெறும் வாய்ப்பு பெண்ணுக்கு அதிகம் (போதிய பயிற்சி இருந்தால்). முடியாது முடியாது என்று சொல்லிப் பெண்ணின் வளர்ச்சியைத் தடுத்து நிறுத்துவது சமூகமே. திருமணமான ஆண் திருமண மாகாத ஆணை விட வாழ்க்கை நிறைவைப் பெற்று, மிகுந்த ஊதியம் பெற்று நீண்ட நாள் வாழ்கிறான். ஆனால், திருமணமான பெண்ணோ திருமணமாகாத பெண்ணை விட நிறைவை இழந்து, ஊதியம் குறைந்து, வாழ்நாளையும் குறைத்துக் கொள்கிறாள். திருமணமாகாத பெண்ணிடம் மகிழ்ச்சி மட்டும் குறைவாக உள்ளது. பெண்கள் தங்கள் நிலையைக் குறைத்துக் கொள்ளும் நிலையும், பெண்களே பெண் களைத் தாழ்த்தும் நிலையும் மிகப்பரவலாக இருந்து வருகின்றன. பெண்களுக்குத் தாமாக எந்தச் செய லிலும் ஈடுபடும் உரிமை பெரும்பாலும் இல்லை. குழந்தையாக இருக்கும்போது தகப்பனைச் சார்ந்தும், குமரி நிலையில் கணவனைச் சார்ந்தும் வயதானபோது மகனைச் சார்ந்தும் இருக்கும் நிலை என்பது இன்னும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. கல்வியின் மூலம் பொருளாதாரச் சுதந் திரம் பெற்றால்தான், பெண் ஆணுக்குச் சரிநிகர் என்ற நிலையை அடைய முடியும் என்பது இப்போது உணரப்பட்டு வருகிறது.

**இந்தியாவில் எழுத்தறிவின்மை ஒழிப்புத் திட்டங்கள்:** இந்திய மாநிலங்களில் இப்போது எழுத்தறிவு பெற்றுள்ளவர் விவரம் வருமாறு:

அட்டவணை: 3

இந்திய மாநிலங்களில் எழுத்தறிவு விழுக்காடு

| மாநிலம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 1. ஆந்திரா | 39.26 | 20.39 | 29.94 |
| 2. பீகார் | 38.11 | 13.66 | 26.20 |
| 3. குசராத்து | 54.44 | 32.30 | 43.70 |
| 4. அரியானா | 48.20 | 22.27 | 36.14 |
| 5. இமாச்சலப் பிரதேசம் | 53.19 | 31.46 | 42.48 |
| 6. சம்மு–காசுமீர் | 36.29 | 15.88 | 26.67 |
| 7. கருநாடகம் | 48.81 | 27.71 | 38.46 |
| 8. கேரளா | 75.26 | 65.73 | 70.42 (மிக அதிகம்) |
| 9. மத்தியபிரதேசம் | 39.49 | 15.53 | 27.87 |
| 10. மகாராட்டிரம் | 58.79 | 34.79 | 47.18 |
| 11. மணிப்பூர் | 53.29 | 29.06 | 41.35 |
| 12. மேகாலயா | 37.89 | 30.08 | 34.08 |
| 13. நாகலாந்து | 50.06 | 33.89 | 42.57 |
| 14. ஒரிசா | 47.10 | 21.12 | 34.23 |
| 15. பஞ்சாபு | 47.16 | 33.69 | 40.86 |
| 16. இராசசுத்தான் | 36.30 | 11.42 | 24.38 |
| 17. சிக்கிம் | 43.95 | 22.20 | 34.05 |
| 18. தமிழ்நாடு | 58.26 | 34.99 | 46.76 |

| | | | |
|---|---|---|---|
| 19. திரிபுரா | 51.70 | 32.00 | 42.12 |
| 20. உத்தரப்பிரதேசம் | 38.76 | 14.04 | 27.16 |
| 21. மேற்கு வங்காளம் | 50.67 | 30.25 | 40.94 |
| ஒன்றிய மாநிலங்கள் (Union Territories) | | | |
| 22. அந்தமான் தீவுகள் | 58.72 | 42.14 | 51.56 |
| 23. அருணாசலப்பிரதேசம் | 28.94 | 11.32 | 20.79 (மிகக் குறைவு) |
| 24. சண்டிகார் | 69.00 | 59.31 | 64.79 |
| 25. தத்ரா நாகர் கவலி | 36.32 | 16.78 | 26.67 |
| 26. தில்லி | 68.40 | 53.07 | 61.54 |
| 27. கோவா, தையூ, தாமன் | 65.59 | 47.56 | 56.66 |
| 28. இலட்சத்தீவு | 65.24 | 44.65 | 55.07 |
| 29. மிசோராம் | 64.46 | 54.91 | 59.88 |
| 30. பாண்டிச்சேரி | 65.84 | 45.71 | 55.85 |

பள்ளிக்குச் சென்று கற்பதுதான் கல்வி என்ற நிலைமாறி, முறைசாரா (Nonformal), முறைப்படுத்தப்படாத (Informal) கல்வி முயற்சிகள் வலுப்பெற்று வருகின்றன. பள்ளி வயதில் கற்பதுதான் கல்வி என்ற கருத்து மாறி, வாழ்நாள் முழுவதும் கல்வி என்ற கருத்தும் வளர்ந்துள்ளது. செய்யும் தொழிலுடன் இணைந்த செயலறிவுக் கல்வி (Functional Literacy) வளர்ந்து வருகிறது. ஆனால் வெவ்வேறு கருத்துகளை இந்திய நாட்டின் பொருளாதாரத்திற்கேற்ப அவ்வப்போது மாற்றிக் கொள்ள வேண்டிய நிலையும் இருந்து வருகிறது. ஜோ.லூ.

துணை நூல்கள்:

**Holdaway, R.D.,** The Foundations of Literacy, Ashton Scholastic, Sydney, 1979.

**Kidd, J.R.,** How Adults Learn, Association Press, New York, 1969.

The Experimental World Literacy Programme: A Critical Assessment, UNESCO, Paris, 1976.

**Titmus, C.J.,** Terminology of Adult Education, UNESCO, Paris, 1979.

**எழுத்தன்:** ஒரு மொழியின் எழுத்து முறையில் (Writing system) அமைந்துள்ள மிகச் சிறிய தனிச் சிறப்பான கூறு எழுத்தன் (Grapheme) எனப்படும். இது பேச்சுமொழியில் அமைந்துள்ள மிகச் சிறிய கூறான ஒலியனுக்கு (Phoneme) நிகராக எழுத்து முறையில் அமைந்துள்ள கூறு. இது கோடுகள், புள்ளிகள், வளைவுகளாலான வடிவங்கள் கொண்டது. எனவே, ஒரு மொழியின் எழுத்துமுறையில் அமைந்துள்ள எழுத்து வரி வடிவங்களும் குறியீடுகளும் ஒரு மொழியின் எழுத்தன்கள் ஆகும்.

எழுத்தன்களை அவை குறிப்பிடும் குறிப்பீடுகளின் (Reference) அடிப்படையில் இருவகையாகப் பிரிக்கலாம். அவை ஒரு மொழியின் ஒலியன்களைக் குறிப்பிடும்போது அவை ஒலியன் குறிப்பீடுகளைக் (Phonemic reference) கொண்டவை என்று கருதப்படும். தமிழ் மொழியில் அ, ஆ, ப, ம, ல, ழ போன்ற எழுத்தன்கள் ஒலியன் குறிப்பீடுகளைக் கொண்டவையே. எழுத்தன்கள் ஒரு சொல்லினை அதாவது ஒரு கருத்தினைக் குறிப்பிடும்போது அவை சொற்குறிப்பீடுகளைக் (Morphemic reference) கொண்டவை என்று கருதப்படும். எடுத்துக்காட்டாக, + (கூட்டல்), — (கழித்தல்), = (சமன்) போன்ற எழுத்தன்கள் கருத்துப் பொதிந்த சொற்களைக் குறிப்பிடுவன. இவை பொருள்களைக் குறிப்பீடுகளாகக் (Ideo grapheme) கொண்ட எழுத்தன்கள்.

ஒலியன்கள் மாற்றொலிகளைக் கொண்டிருப்பது போன்ற எழுத்தன்களும் மாற்றெழுத்தன்களைக் (Allographs) கொண்டுள்ளன. எடுத்துக்காட்டாக, ஆங்கில எழுத்துகளான ɑ, A, a, ஆகியவை a என்ற எழுத்தனின் மாற்றெழுத்துகளாகும். எம்.சு.

துணை நூல்:

**Gleason, H.A.**, An Introduction to Descriptive Linguistics, Holt, Rinehart and Winston, Inc, New York, 1955.

***எழுத்தாளர் பட்டறை*** சில எழுத்தாளர்களின் முயற்சியால் 1958-ஆம் ஆண்டு கல்கத்தாவில் தொடங்கப்பட்டது. 'புதிய படைப்புகளை ஆங்கிலத்தில் எழுதுவதாலும், மொழி பெயர்ப்பதாலும் இந்திய நாட்டு இலக்கிய வளர்ச்சிக்கு உதவ முடியும்' என்ற கொள்கையை ஏற்றுக் கொண்ட எழுத்தாளர்களை உறுப்பினராகக் கொண்ட அமைப்பாக எழுத்தாளர்கள் பட்டறை (Writers' Workshop) இயங்கி வருகிறது. இந்தியாவிலும் பிற நாடுகளிலும் எழுதப்படும் புதிய படைப்புகள் பற்றி விவாதித்தலையும் அவற்றின் பெருமைகளை எடுத்துச் சொல்வதையும் தலையாய பணிகளாகக் கொண்டு இது செயற்படுகிறது.

புதிய படைப்புகள் பற்றிய விவாதங்கள் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் முற்பகல் நேரத்தில் கல்கத்தா ஏரிப் பூங்காப்பகுதியில் (Lake Gardens, Calcutta-45)அமைந்த கட்டடமொன்றில் நடைபெறுகிறது. எழுத்தாளர்கள் பட்டறையின் சிறு வெளியீடுகளின் வாயிலாகப் புதிய படைப்புகள் பற்றிய தகவல்கள் உலகுக்குப் பரப்பப்படுகின்றன. ஏறத்தாழ 200 நூல்கள் பற்றிய விவரக் குறிப்புப் பட்டியலை இப்பட்டறை வெளியிட்டுள்ளது. விவரக் குறிப்பு வேண்டுவோர் எழுத்தாளர் பட்டறையுடன் தொடர்பு கொண்டு அதை இலவசமாகப் பெறலாம்.

எழுத்தாளர்கள் பட்டறை ஆதாய நோக்கமோ அரசியல் நோக்கமோ இன்றிப் புதிய படைப்புகளையும் புதிய எழுத்தாளர்களையும் வளர்க்கும் நோக்கத்திற்காக அமைக்கப்பட்டுள்ளது. இப்பட்டறையிலிருந்து 'கதம்பம்' (The Miscellany)என்னும் மாதமிருமுறை இதழொன்று வெளிவருகிறது. இவ்விதழ் புதிய ஆக்கத்திறப் படைப்புகளை (Creative Writings) மட்டுமே தாங்கி வெளிவருகிறது. சிறந்த கற்பனை வளத்தையும் முதிர்ந்த படைப்பிலக்கிய உத்திகளையும் திறம்படக் கையாளும் இளம் எழுத்தாளர்களின் படைப்புகளுக்கே இதில் முன்னுரிமை வழங்கப்படுகிறது. இருப்பினும், இவ்விதழில் புகழ்பெற்ற எழுத்தாளர்களின் சிறந்த படைப்புகளும் ஆங்காங்கே இடம் பெறுவதுமுண்டு. இந்த இதழில் விளம்பரங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

எழுத்தாளர்கள் பட்டறையில் ஒருவர் உறுப்பினராக வேண்டுமெனில், அவர் எழுத்தாளர்கள் பட்டறைச் செயலாளருக்கு எழுத்து மூலமாக விண்ணப்பம் செய்திடல் வேண்டும். அவ்விண்ணப்பத்திற்கு இரு உறுப்பினர்கள் ஆதரவும் பெரும்பாலான உறுப்பினர்களின் ஒப்புதலும் இருத்தல் இன்றியமையாதது. இவற்றோடு, புதிய உறுப்பினர் புதிய படைப்புகளை அவ்வப்போது உருவாக்கும் தகுதி படைத்தோராகவும் இருத்தல் வேண்டும். எழுத்தாளர் பட்டறையின் முகவரி:162/92, ஏரிப்பூங்கா, கல்கத்தா-45. எஸ்.த.

***எழுத்து*** மொழிக்கு உறுப்பாகவரும் ஒலிக்கூறு. எழுத்து என்னும் தமிழ்ச்சொல் எழு என்னும் வினையுரிச் சொல்லை முதனிலையாகவும் உடைமைப் பொருள்தரும் து என்னும்இடைச்சொல்லை இறுதியாகவும் கொண்டு எழுப்புதலை உடையது என்னும் காரணப்பொருளையுடையதொரு பெயராக ஒலி வடிவை முதலிற்குறித்தது. பின்னர், எழுது கருவிகளைக் கொண்டு தீட்டப் பெறுவனவெல்லாம் எழுத்து எனப்பட்டன.

மாந்தர்தம் கருத்துகளை ஒலிக்குறியீடுகளால் உணர்த்திய காலத்தைக் கடந்து, ஓரசை ஈரசை முதலிய அசையமைந்த சொல்லுருவங்களைப் படைத்து உணர்த்தத் தொடங்கிய காலத்தே, அச்சொல்லுருவங்களை அடையாளக் குறியீடுகளால் உணர்த்த முயன்றிருப்பர். அக்குறியீடுகள் இற்றைக்கு எழுதப் பெறும் வரிவடிவங்களைப் போன்றதாக இருந்திருக்க இயலாதென்பது ஆய்வாளர் கருத்தாகும். ஏதோ ஒரு முறையில் சில அடையாளங்களைக் கையாண்டிருக்கக் கூடும் என்றும், அவை படிப்படியாக வளர்ந்து பல் வேறு மாற்றங்களைப் பெற்று இற்றைக்குள்ள நிலையை எய்தியிருக்கும் என்றும் கூறுகின்றனர்.

ஒரு காலத்தில் வரிவடிவ அடையாளங்களின்றி அவ்வப்பொருள்களையே எடுத்துக்காட்டிக் கருத்துகளை உணர்த்திய நிலையும் உண்டு என்பது எரடோட்டசு என்னும் கிரேக்க வரலாற்றாசிரியர் எழுதியுள்ள சில குறிப்புகளாற் புலனாகிறதென்றும், பின்னர்ப் பொருள்களைச் சித்திரமாக வரைந்து அவற்றையே மொழிக்குறியீடுகளாகக் கையாண்டு வந்தனர் என்றும், அந்நிலை எகிப்து தேசத்தில் காணப்பெறும் சில பழைய ஓவியங்களுக்குக் கூறப்படும் விளக்கங்களால் அறியக்கிடக்கிறதென்றும், பின்னர் ஓவியங்களைத் தனித்தனிக்குறியீடுகளாகக் கொண்டு கருத்துகளைப் புலப்படுத்தி வந்தனர் என்றும் மேலைநாட்டு ஆய்வாளர் பலர் கூறுகின்றனர்.

இனிக் கற்காலத்து வாழ்ந்த மாந்தர் தம் உணவிற்காகவும் தற்காப்பிற்காகவும் வேட்டையாடுதல், காய்கனிகளைச் சேகரித்தல், மரப்பொந்துகளையும்

மலைக்குகைகளையும் கண்டு செப்பஞ் செய்து உறைதல் முதலிய செயல்களை மேற்கொண்ட நிலையில், விலங்கு முதலியவற்றின் காலடி அடையாளங்களாலும், ஊர்வனவற்றின் சுவடுகளாலும், பறவைகளின் உதிர்ந்த சிறகுகளாலும், சினைகளாலும், பல்வேறு விலங்குகளையும் பறவைகளையும் சிறுபான்மை அவற்றின் நிலைகளையும் அறிந்த அறிவினைக் கொண்டு, அவற்றை உணர்த்த அவ்வடையாளங்களை வரையக் கற்று, அவற்றான் அவற்றைப் பிறருக்கு உணர்த்தியிருப்பர் எனக் கருதலாம். நீரிலும் நிலத்திலும் சுழன்றும் ஊர்ந்தும் வண்டுகள் செய்யும் அடையாளங்களும், மின்னற்கொடி, ஞாயிறு, திங்கள், விண்மீன்கள்ஆகியவற்றின்இயக்கங்களும், மழை, கடலலைகள் சுழற்காற்று முதலியவற்றின் இயக்கங்களும் சித்திர அடையாளங்களாக வரைந்து காட்டப் பயன்பட்டிருக்கலாம். வரிவடிவத் தோற்றங்களுக்கு இவையும் இவைபோல்வனவும் அடிப்படையாக நின்று சித்திர எழுத்துகளாக அமைந்தன எனக் கொள்ளலாம். இவ்வடிவங்களாற் பொருள்களையும் சிறுபான்மை அவற்றின் நிலைகளையும் செயல்களையும் அறிந்து கொள்ளக்கூடும். அன்றி உணர்வுகளையும் இலக்கணக் கூறுகளையும் அறிந்து கொள்ளல் அவ்வகைக் குறியீடுகளால் இயலாதென்பதில் ஐயமில்லை.

அன்றியும் அன்பு, அறிவு, நட்பு, பகை முதலாயவற்றை உணர்த்தக்கூடிய படம் இல்லாததால் நாளடைவில் பிறபொருளை உணர்த்தும் படங்களே இவற்றிற்காகப் பயன்படுத்தப்பட்டன. எடுத்துக்காட்டாகப் பல மாடுகளின் வடிவம், செல்வம் என்ற பொருள் உணர்த்துவதாகக் கொள்ளப்பட்டது. இவ்வகைக் கருத்துகளை இடமும் பொழுதும் நோக்கியே மக்கள் உணரவேண்டும்.

அடுத்தபடியாக, ஒவ்வொருபடமும் ஒவ்வொரு கருத்தினைக் குறித்து நில்லாமல் அவ்வவ் வடிவத்திற்குரிய ஒலியைக் குறிப்பதாகக் கருதப்பட்டது. இந்நிலையை ஒலியெழுத்து நிலையென்னலாம். சித்திரக் குறுக்கெழுத்துப் போட்டியிற் படிப்பது போன்றே மக்கள் இவற்றைப் படிக்கலாயினர்.

ஒவ்வோர் உருவங்காட்டும் முழுஒலியையும் கொள்ளாமல், அவ்வவ் ஒலியின் முதலசையை மாத்திரம் கருத்திற் கொள்ளத் தலைப்பட்ட மக்களும் முதலசையைக் கூட முழுதும் எடுத்துக் கொள்ளாமல், முதல் எழுத்தளவே எடுத்துக்கொண்ட மக்களும் உண்டு. ஒவ்வொரு மொழியிலும் ஒவ்வோரெழுத்தை முதலெழுத்தாகக் கொண்ட எத்தனையோ பல சொற்கள் இருப்பதும், அவற்றுள் ஒன்றன்வடிவம் மட்டும் ஏன் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்ற வினா எழுதல் இயல்பே. இதற்கு அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட சொல் அம்மொழியில் அதிகமாக வழக்காற்றில் இருந்த சொல் என்பது ஒரு காரணம். அன்றி, அதன்வடிவம் ஏனையவற்றின் வடிவங்களை விட எளிதானவடிவம் என்பதும் காரணமாகும். எடுத்துக்காட்டாக அம்மை,அப்பன்,அணில், அடவி, அருவி, அணி, அடகு ஆகியவற்றுள் ஏதாவது ஒன்றன் வடிவந்தான் பெரும்பான்மை வழக்குப்பற்றி அகரத்தின் வடிவமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நிலை எய்தியிருக்கும்.

எனவே, ஆதிகாலத்தில் மக்கள் ஓவியத்தின் வழியாகக் கதை சொல்லக் கற்றுப் பிறகு ஒவ்வொரு வடிவத்தையும் ஒவ்வொரு தனித்தனிப் பொருளைக் குறிக்கப் பயன்படுத்தினர். நாளடைவில் அவ்வடிவு பொருளைக் குறிக்காமல் ஒலியைக் குறிக்கத் தலைப்பட்டது. பின்னர் அவ்வடிவு அல்லது அவ்வடிவின் திரிபு முழு ஒலியையும் குறிப்பிடாமல் முதலசை ஒலியை மட்டும் குறிப்பிடுவதாகிப் பின்னர் முதலெழுத்தளவே நின்றுவிட்டது. இக்காலத்தில் உள்ள எழுத்துகள் எல்லாம் இம்முறைப்படி ஒருகாலத்தே பொருள்களின் ஓவியமாக இருந்தவற்றின் திரிபு வேறுபாடுகள் என்பர்.

இனி, இற்றைக்கு வழக்கிலிருக்கும் ஆயிரக்கணக்கான மொழிகளுள் இலக்கண நெறியிற் செம்மையுற்று வழங்குவனவற்றிலுள்ள வரிவடிவங்களை நோக்குங்கால், இந்தியாவின் வடபகுதிகளில் உள்ள மொழிகளின் எழுத்துகள் ஏறத்தாழ ஒற்றுமையுள்ள ஒருவகை அமைப்பினையும், தென்பகுதி மொழிகளின் எழுத்துகள் ஒருவகை அமைப்பினையும், ஐரோப்பிய மொழிகளின் எழுத்துகள் ஒருவகை அமைப்பினையும், அவ்வாறே மேற்காசிய மொழிகள், மத்திய ஆசிய மொழிகள், கிழக்காசிய மொழிகள், ஆப்பிரிக்கக் கண்டத்தில் வழங்கும் மொழிகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகை அமைப்பினையும் கொண்டிருத்தலை நோக்கின், சித்திரக் குறியீடுகளைக் கொண்டு வளர்ந்தநிலை ஒவ்வொரு மொழிக் குடும்பத்திலும் ஒருகால கட்டத்தில் மாற்றம் உடையதாகச் சிற்சில தனித்தன்மைகளொடு அவ்வம்மொழியறிஞர்களாற் படைத்துக் கொள்ளப்பட்டிருத்தல் வேண்டுமெனத் தெரிகிறது.

இன்றைய வரிவடிவங்கள் எழுத்தொலிகள் வாயினிடமாக அமைந்து வெளிப்படும் வாய் உறுப்புகளின் செயற்பாட்டின் அடிப்படையில் அமைத்துக்கொண்ட சங்கேதமான குறியீடுகளாகலாம்.

எடுத்துக்காட்டாக, வாய் அங்காத்தலால் எழும் உயிர்ப்பொலியாகிய அகரத்தைக் குறிக்கும் வரிவடிவம்

வாய் பிளந்திருக்கும் நிலையையும், இகரம் வாய் விரிந்திருக்கும் நிலையையும், உகரம் வாய் குவிந்திருக்கும் நிலையையும், மெய்யெழுத்துடன் ககரம் அடிநா அடியண்ணத்தைத் தொட்டு இணையும் நிலையையும், பகரம் மகரம் ஆகியவை வாயிதழ்களின் இணைப்பைச் சுட்டிநிற்கும் நிலையையும் கி.மு. 300 க்கும் கி.பி. 700 க்கும் இடையே தோன்றியமைந்துள்ள கல்வெட்டு எழுத்துகளில் காணலாம். (வளர்ச்சி வேறுபாடுகள் மிகச்சிறிய அளவிலேயே உள்ள தன்மையை ஒப்பிட்டு நோக்கியறியலாம்).

இன்றைக்குச் சீனமொழிக் குடும்பங்களின் எழுத்துகள் மட்டுமே பண்டைய சித்திர எழுத்துகளொடு தொடர்புடையவை எனக் கருதத்தக்கநிலையில் உள்ளன. இனிப் பேச்சுமொழியாக மட்டும் வழங்கி வந்த சிலமொழிகள் இன்றைக்கு ஐரோப்பிய மொழிகளின் வரிவடிவங்களை மிகச்சிறிய வேறுபாடுகளோடு பெற்று விளங்குகின்றன. இற்றைக்குச் சமசுகிருத மொழி தேவநாகரி எழுத்திலும் கிரந்த எழுத்திலும் எழுதப்படுகின்றது. எனவே, இற்றைநாள் சுருக்கெழுத்திற்கு அறிஞர்கள் அமைத்துக்கொண்டுள்ள குறியீடுகளைப் போலவே அவ்வக்காலங்களில் எழுதும் கருவிக்கும் எழுதப்படும் கருவிகளுக்கும் ஏற்ப வரிவடிவங்கள் அறிஞர்களால் காலந்தொறும் திருத்தம் பெற்று அமைத்துக் கொள்ளப்பட்டனவாதல் வேண்டும். ச.பா.

தமிழ் எழுத்துகள்: தமிழ் மொழியில் இன்றைக்குப் பயின்றுவரும் எழுத்துகளின் வரிவடிவங்கள் அச்சுப் பொறிக்காகச் செம்மை செய்து கொள்ளப்பட்ட வடிவங்களை ஒட்டியவையாகும்.

இன்றைய அச்செழுத்துகளை வடிவமைக்கப் பெரிதும் துணையாக அமைந்தவை பனையேடுகளில் (ஓலைச் சுவடிகளில்) முன்னோர் எழுதிப் பயின்ற வடிவங்களேயாகும். ஓலைச் சுவடிகள் விரைந்து அழியும் தன்மையனவாதலின் காலந்தொறும் அவை படியெடுத்துப் போற்றப்பட்டு வந்தன. பெயர்த்து எழுதுந்தொறும் அவ்வக் காலச்சூழலுக்கு ஏற்ப அவை சிறு சிறு மாற்றம் பெற்றுச் செம்மை பெறுதல் இயல்பே. இன்று கி.பி. 15–ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்ட ஓலைச்சுவடிகளைக் காண்பது அரிதாகும்.

எனவே, பழந்தமிழ் வரிவடிவங்களைக் கல்லிலும் செம்பிலும் பயிலப்பட்ட வடிவங்களைக் கொண்டே அறியவேண்டியுள்ளது. கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் காணப்படும் எழுத்துகளுக்கும் ஓலைச்சுவடிகளிற் காணப்படும் எழுத்துகளுக்கும் வேறுபாடுண்மையைக் காணலாம். அவ்வேறுபாடு எழுதுகருவியாலும் எழுதும் முறையாலும் ஆனதேயாம்.

கல்லிலும் செம்பிலும் எழுத்துகளைத் தனித் தனியாக வரைந்து செதுக்கியமைப்பது முறை. ஓலையில் கூரிய முள் அல்லது ஆணியைக் கொண்டு கீறியமைத்துச் செல்லவேண்டும். அதனால், ஒன்றோடொன்று சங்கிலித் தொடர்போல அமைதலன்றித் தனித்தனியாக அமைதல் அரிதாகும். ஒரெழுத்தே கல்லில் வெட்டும்போது ஒரு வடிவாகவும் கையால் எழுதும்போது ஒரு வடிவாகவும் அமையும். எடுத்துக்காட்டாக, அங்காத்தலால் எழும் அகர ஒலியைக் குறிக்கும் வரிவடிவம் ⌣| என்று கல்லெழுத்தில் அமையும், கையினால் எழுதும்பொழுது எழுத்தாணியை எடுக்காமல் முன்னுள்ள ⌣ வளை கோட்டினையும் பின்னுள்ள I நேர்கோட்டினையும் இணைத்து அ என எழுத நேரிடும். அதன் வளர்ச்சி அ→அ→அ என அமையும். அடிநா அடியண்ணத்து இயைபினால் தோன்றும் ககர உயிர்மெய்யெழுத்தினை வாயமைப்பை ஒட்டி + என வரையப்பட்ட வடிவத்தை ஆணியை எடுக்காமல் கையினால் எழுதும் பொழுது க என இவ்வாறுதான் எழுத நேரும். – அதன் வளர்ச்சி +, +, க என அமையும். எனவே, கல்வெட்டெழுத்தும் ஓலைச்சுவடி எழுத்தும் இம்முறையினால் வேறுபாடுற்றனவேயன்றி அவை வேறுவேறாக அமைக்கப் பெற்றவையல்ல என்பது விளங்கும்.

தமிழ் மக்கள் இடமிருந்து வலமாக விரைந்து எழுதும் பழக்கத்தை மேற்கொண்டமையான் எழுத்துகள் வளைந்து உருண்டு செல்லும் அமைப்பினவாக அமைவனவாயின. அவ்வாற்றான் அவை வட்டமாகக் காட்சியளித்தலான் காட்சி அளவையின் அவை வட்டெழுத்துகளெனப்படுவனவாயின எனத் தெரிகிறது.

கல்லிலும் செம்பிலும் வெட்டியமைக்குங்கால் சதுரம், கோணம், வட்டம் ஆகிய நிலைகள் செம்மையாக அமையும். இவ் இருவகையும் வேறு வேறு அல்லவாயினும் ஆய்வாளர்கள் கையெழுத்து முறையிலமைந்தவற்றைக் கோலெழுத்து வட்டெழுத்து என்றும், கல்லிலும் செம்பிலும் குயிற்றி (செதுக்கி) அமைந்தவற்றைக் குயிலெழுத்து, தாமிலி எழுத்து என்றும் கூறிவருகின்றனர்.

தொடக்ககால ஆராய்ச்சியாளர் சிலர் பழந்தமிழ்க் கல்வெட்டு எழுத்துகளைத் தமிழ் எழுத்துகளே எனக் கூற விரும்பாமல் தாமிலி – தமிலி ± தாமிழி எனக் குறியீடு செய்தனர். மேலைநாட்டாய்வாளர் பலர் அவற்றை அசோகன் காலத்து நிலவிய பிராமி எழுத்துகளின் வழியாகத் தோன்றி வளர்ந்தவை என்பர். ஒருசாரார் பிராமி எழுத்துகளுக்கு ஆதாரமாகக் கருதப்படும் பினீசிய எழுத்துகளினின்றும் தமிழர்கள்

வட்டெழுத்தினை அமைத்துக் கொண்டிருக்க வேண்டும் என்றும் கூறுவர்.

கால்டுவெல் தவிர்த்த பிற மேலைநாட்டாய்வாளருள் பலர் இந்தியாவில் வழங்கும் மொழிகள் யாவும் வடமொழியினின்றும் தோன்றியிருக்க வேண்டுமென்றும், அதற்குப்பிற்பட்டவை அல்லது உட்பட்டவையாதல் வேண்டுமென்றும் கருதினோராவர். தமிழின் தொன்மையும் தனித்தன்மையும் ஓரளவு நிலைநாட்டப் பெற்ற பின்னரும் பழங்கருத்துகளையே இன்றைக்கும் பலர் கூறி வருகின்றனர்.

வலமிருந்து இடமாக எழுதப்பட்ட பினீசிய எழுத்துகளிலிருந்து இடமிருந்து வலமாக எழுதப்பட்ட வட்டெழுத்துத் தோன்றியிருக்க முடியாது என்பது திண்ணம் எனத் தி.வை. சதாசிவபண்டாரத்தார் கூறுகிறார்.

இன்றைய ஆய்வாளர்கள் காட்சியளவையை மட்டுமே ஈான்றாகக் கொண்டமையான் அசோகன் காலத்தையும் அவன் எழுப்பிய தூண்களில் காணப்படும் எழுத்துகளையும் அடிப்படையாகக் கொண்டு, கி.மு. 2, 3-ஆம் நூற்றாண்டுகளில் அமைந்த குகைக் கல்வெட்டுகளின் எழுத்துகளையே காலத்தால் முற்பட்டவை என முடிபு கூறிச் சென்றனர். வரிவடிவ வளர்ச்சி வரலாற்றினைப் பெரும்பாலும் கருங்கற் கோயில்களில் வெட்டுவித்த பழைய சாசனங்கள், செப்பேடுகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு கூறுகின்றனர்.

தமிழ் மொழியில் கல்வெட்டுச் சாசனங்கள் பல்லவர்களின் ஆட்சிக்கால முதலாகத்தான் கிடைக்கின்றன. பாண்டிமண்டலம், சோழ மண்டலம், சேர மண்டலம், தொண்டைமண்டலம் ஆகியவற்றில் கி.பி.7-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 11-ஆம் நூற்றாண்டு வரையிலான காலத்தில் காணப்படுபவை பழைய வட்டெழுத்துகளைச் சார்ந்தவையாகக் காணப்படுகின்றன என்பர்.

பல்லவர்கள் கிரந்த எழுத்துகளிலிருந்து கல்வெட்டு எழுத்துகளை அமைத்துக் கொண்டிருக்கலாமென ஆய்வாளர் சிலர் கருதுகின்றனர். அது பொருந்தாது. பழைய வட்டெழுத்துகளினின்று அமைத்துக் கொள்ளப் பட்டவையே கிரந்த எழுத்துகள் என்றும், இன்றைய கல்வெட்டுத்துறை ஆய்வறிஞர்களும் பழைய வட்டெழுத்துகளிலிருந்தே இப்போது வழங்கும் தமிழ் எழுத்துகள் தோன்றியுள்ளன என்று கூறியிருப்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது என்றும் தி.வை. சதாசிவபண்டாரத்தார் கூறுகிறார்.

தமிழ் வரிவடிவ எழுத்துகளின் தொன்மையை ஆராயுமிடத்து கி.மு. 5000-ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் வரிவடிவம் செம்மையுற்றிருத்தல் வேண்டும் எனத் தெரிகிறது. கி.மு. வில் இலக்கணநூல் செய்த தொல்காப்பியனார் தமக்கு முன்பிருந்த ஆசிரியன்மார் செய்த பன்னூல்களை ஆராய்ந்து தம் நூலைச் செய்தார் எனத் தொல்காப்பியப்பாயிர ஆசிரியர் கூறுவதனால், அந்நூல்கள் ஏதோ ஒரு வரிவடிவத்தில் அமைந்திருத்தல் வேண்டுமென்பதில் ஐயமில்லை. அவ்வமைப்பை இன்றைக்குத் தெரிந்துகொள்ளும் வாய்ப்பில்லை.

தொல்காப்பியர் தம் நூலுள் 'அந்தரத்தெழுதிய எழுத்தின்மான வந்த குற்றம் வழிகெடஒழுகலும்' (கற்-5) எனக் கூறுதலான் செம்மையானதொரு வரிவடிவம் அவர்காலத்தில் அமைந்திருத்தல் வேண்டும். எழுத்ததிகாரத்துள் அவர் வரிவடிவம் பற்றிக் கூறவில்லையாயினும் மெய்யெழுத்துகட்கும் சார்பெழுத்துகட்கும் ஏனைய உயிர், உயிர்மெய் எழுத்தினின்றும் வேறுபாடு தெரிய அவற்றிற்குப் புள்ளியிட்டு (மேற்கீற்றிட்டு) எழுதுதல் வேண்டுமென்பதனை, 'மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்', 'ஆய்தமென்ற முப்பாற்புள்ளி', 'உட்பெறுபுள்ளி உருவாகும்மே' என ஒலி வடிவிற்கும் வரிவடிவிற்கும் ஒப்பக் கூறியுள்ளமையான் உணரலாம்.

இனி, கி.மு. 2-ஆம் நூற்றாண்டிற்கும் கி.பி. 2-ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்டவை என ஆய்வாளர் பலர் கூறும் சங்கத் தொகைப்பாக்களுள், 'விழுத்தொடை மறவர் வில்லிட வீழ்ந்தோர் எழுத்துடை நடுகல்' (அகம்-53), 'மருங்குல் நுணுகிய பேழுதிர்நடுகல், பெயர்பயம் படரத் தோன்று குயில் எழுத்து' (அகம்-297), 'நல்லமர்க் கடந்த நாணுடை மறவர், பெயரும் பீடும் எழுதி அதர்தொறும், பீலிசூட்டிய பிறங்குநிலை நடுகல்' (அகம் -67), 'ஓவுறழ் நெடுஞ்சுவர் நாள்பல எழுதிச் செவ்விரல் சிவந்த' (பதிற்-68), 'செய்குறி ஆழிவைகல்தோறெண்ணி, எழுதுசுவர் நினைந்த அழுதுவார் மழைக்கண்' (அகம்-351) என்பவை முதலாக வரும் குறிப்புகளான் மொழி எழுத்துகளேயன்றிக் கணக்கியல் எழுத்துக் குறியீடுகளும் வரிவடிவுற்றுத் திகழ்ந்தமை புலனாகிறது.

ஒன்று, இரண்டு, நூறு, ஆயிரம் முதலாகிய எண்களைக் குறிக்கும் எழுத்துக்குரிய வடிவங்களைக் 'கண்ணெழுத்து' எனவழங்கினர் என்பது, 'கண்ணெழுத்துப்படுத்த எண்ணுப்பல்பொதி' (சிலப்.

5-111), 'இருபதினாயிரம் கண்ணெழுத்துப்படுத்தன, கைபுனைசகடமும்' (சிலப். 5-136, 237) என வருவன வற்றான் விளங்குகிறது.

'கடைச்சங்க காலத்தில் சேரமண்டலத்திலும், சோழ மண்டலத்திலும் வழங்கிவந்த தமிழ் எழுத்து கள் கண்ணெழுத்துகள் என்னும் பெயருடைய வாயி ருந்தன என்றும், வட்டெழுத்துகள் போன்றிருத்த லால் கண்ணெழுத்துகள் எனவும் வட்டமாயிருத்த லால் வட்டெழுத்துகள் எனவும் வழங்கப்பட்டன வாதல் வேண்டும்' என்றும் கூறுவார் தி.வை. சதா சிவ பண்டாரத்தார்.

எழுது கருவி கொண்டு வரையும் எழுத்துகள் உருவெழுத்து, உணர்வெழுத்து என இருவகைப்படு மென்றும், அவற்றுள் உருவெழுத்தாவது, 'காணப் பட்ட உருவமெல்லாம், மாணக்காட்டும் வகைமை நாடி வழுவிலோவியன் கைவினைபோல' எழுதப் படுவதென்றும், உணர்வெழுத்தாவது, 'கொண்ட ஓர் குறியாற் கொண்டவதனை உண்டென்றுணர்வது' என்றும் யாப்பருங்கல விருத்தியுரையாசிரியர் கூறுவர். மேலும், 'அகசடதபய முதலியவாய (கோள்) எழுத் தும் அசலவ ரஙய முதலிய இராசி எழுத்தும், கார்த் திகை முதலிய நாளெழுத்தும், தோப முதலிய நால்வகை எழுத்தும், சாதி முதலிய தன்மையெழுத் தும், உச்சாடன முதலிய உக்கிர வெழுத்தும், சித்திர காரூடம் முதலிய முத்திறவெழுத்தும், பாஇயல் முதலிய நால்வகையெழுத்தும், புத்தேள் முதலிய நாற்கதியெழுத்தும், தாது முதலிய ஒளியெழுத்தும், மாகமடையம் முதலிய சங்கேத எழுத்தும், பார்ப் பான் வழக்காகிய பதின்மூன்றெழுத்தும் என்றித் தொடக்கத்தனவும் கட்டுரை எழுத்தும் வச்சிரம் முதலிய வடிவெழுத்தும் மற்றும் பலவகையாற் காட்டப்பட்டவெல்லா எழுத்தும் வல்லார் வாய்க் கேட்க' என்பார் அவர்.

அவர் கூறியவற்றுள் பல வரி வடிவம் பற்றியவை எனத் தெரிகிறது. அவற்றான் தமிழறிஞர் பல்வேறு வகையில் வரிவடிவங்களை அமைத்து எழுதி வந்தமை புலனாகிறது. சங்கேத எழுத்துகள் பற்றிப் பெருங் கதை முதலிய இலக்கியங்கள் பேசுவதையறியலாம். குறுந்தொகையுள் (செய்-156) 'எழுதாக்கற்பின் நின் சொல்லுள்ளும் பிரிந்தோர்ப்புணர்க்கும் பண்பின் மருந்தும் உண்டோ' என வருந்தொடர் சங்ககாலத் தில் வடமொழி வாய்மொழியாக வழங்கிவந்த நிலையைப் புலப்படுத்துகிறது. தமிழ் மொழியின் வட்டெழுத்துகளைப் பின்பற்றிக் கிரந்த எழுத்துகள் அமைத்துக் கொள்ளப்பட்டன என்னும் ஒருசார் ஆய்வாளர் கருத்து ஈண்டு எண்ணத்தக்கது. வேதங் கள் மட்டுமே எழுதப்படாமல் வழங்கிவந்தன என் பாரும் உண்டு.

தொடக்கத்தில் உயிர், மெய், உயிர்மெய்களின் வரிவடிவம் தனித்தனி ஒவ்வொரு வடிவாக இருந்த நிலை மாறி உயிர்மெய்யெழுத்திற்கு கா, கெ கெ (கே) கொ கொ என நான்கு குறியீடளவும் பெரு கிய நிலையை ஓலைச்சுவடிகளான் அறிய முடிகிறது.

ஓலையெழுத்தாளர் சிலர் க்கு-த்து எனவரும் இரு வடிவங்களை இணைத்து க்கு - த்து என எழுதி வந்த நிலையையும் ஒரு சொல்லுக்குரிய மூன்று நான்கு எழுத்துகளைச் சுருக்கி ஒருவடிவாக எழுதிவந்த நிலையையும் காணமுடிகிறது. எடுத்துக்காட்டாகப் பற்று வரவு என்ற சொற்கள் ௶ - ௷ எனவும் மாதம் என்பது ௴ எனவும் மேற்படி என்பது ௸ எனவும் எழுதப்பெற்றுள்ளன. இவை ஒலிவடிவச் சொற்களில் மரூஉ மொழிகள் அமைந்தமை போல வரிவடிவில் எழுந்த மரூஉ வடிவங்கள் எனலாம். இவை இக் காலத்து அருகிவிட்டன.

வரிவடிவம் காலந்தோறும் வேறுபடும் இயல்பின வாதலின் தொல்காப்பியர் வரிவடிவிற்கு இலக்கணம் கூறாது சென்றார். சில சூத்திரங்களைத் தவறாக உணர்ந்த இடைக்காலத்தார் அவர் வரிவடிவிற்கும் இலக்கணங் கூறினாரெனக் கொண்டு வரிவடிவ இலக் கணங் கூறிச் சென்றனர். அண்மையில் வாழ்ந்த அறு வகை இலக்கண நூலாசிரியர் மட்டும் இக்காலத்து வழங்கும் வரிவடிவங்களுக்கும் ஒரு சில கூட்டெழுத்து கட்கும் தம் நூலில் இலக்கணங் கூறியுள்ளார். ச.பா.

தமிழ் எழுத்தின் வளர்ச்சி: தமிழகத்தில் மிகப் பழமையானது என்று கருதப்படும் எழுத்து தமிழ் ஆகும். இதைப் 'பிராமி' எழுத்தென் றும், 'தென்னிந்திய பிராமி' எழுத்து என்றும் ஆராய்ச்சியாளர்கள் இதுவரை வழங்கி வந்தனர். இவ்வெழுத்தை வசதிக்காகப் 'பழந்தமிழ்' எழுத்து எனக் கொள்ளலாம். இவ்வெழுத்து கி.மு. 3-2-ஆம் நூற்றாண்டு முதல் தமிழகத்தில் வழங்கி வந்திருக்கி றது என்று அண்மைக்காலம் வரையில் கருதப்பட்டது. தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையால் கண்டுபிடிக்கப்பட்டுள்ள பூலாங்குறிச்சிக் கல்வெட் டால் தமிழ் எழுத்தின் பழமை மேலும் ஓரிரு நூற் றாண்டுகளுக்கு முன்பாகவே இருத்தல் வேண்டும் என்று ஊகிக்க முடிகிறது.

பூலாங்குறிச்சிக் கல்வெட்டின் காலம் அக்கல் வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள ஆண்டு சக ஆண்டு என்று எடுத்துக்கொண்டால் (192 + 78=270) கி.பி. 270 என்று ஆகிறது (இதைச் சிலர் கி.பி. 4-5-ஆம்

நூற்றாண்டைச் சேர்ந்தது என்றும் கூறுகின்றனர்). அதிலுள்ள எழுத்தமைதியின் காலம் கி.பி. 3-ஆம் நூற்றாண்டெனில், அறச்சலூர்க் கல்வெட்டின் காலம் இன்னும் சிறிது முன்னுக்குக் கொண்டு செல்லப்படுதல் வேண்டும். அறச்சலூர்க் கல்வெட்டு கி.பி. 1-2-ஆம் நூற்றாண்டென்றால் புகழியூர்க்கல்வெட்டை கி.மு. 2 முதல் கி.மு. 1-ஆம் நூற்றாண்டு வரை எனக் கூறுதல் வேண்டும். அவ்வாறாயின் சேர அரசர்களின் பரம்பரை கி.மு. 2-1-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்று கொள்ளல் வேண்டும். இந்த முடிவு முற்காலக் கல்வெட்டுகளில் காணப்பெறும் எழுத்துகளின் தன்மைக்கும் ஒற்றுமையாகக் காணப்படுகிறது.

தமிழகத்தில் காணப்பெறும் பழந்தமிழ்க் கல்வெட்டுகளைத்திரு. ஐராவதம் மகாதேவன் இரண்டு வகையாகப் பிரித்துள்ளார். முதல் வகையில் புள்ளியில்லா மெய் வடிவு மெய்யை மட்டும் குறிக்கும்; அகரம் ஏறிய மெய்யைக் குறிக்காது. அகரம் ஏறிய மெய்யைக் குறிக்க ஒரு கோடு இடப்பட்டது. இக் கோடு 'ஆ' காரத்தைக் குறிக்கவும் இடப்பட்டிருக்கிறது. இரண்டாம் வகை எழுத்தில் புள்ளியில்லா மெய்யெழுத்து அகரம் ஏறிய மெய்யெழுத்தாகக் காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார். மேலும், இக் கல்வெட்டுகளில் எகரம் ஏகாரம், ஒகரம் ஓகாரம் குறில் நெடில் பிரித்துக் காட்டுவதற்கு எவ்விதக் குறியும் இடப்படவில்லை என்றும், இக்கல்வெட்டுகளில் கூட்டெழுத்துகளே காணப்படவில்லை என்றும் தெரிவித்திருக்கிறார்.

இக்கல்வெட்டுக்களைப் பற்றி, மேலும் ஆய்வு செய்த டாக்டர் இரா. நாகசாமி, புகலூர், அறச்சலூர்க் கல்வெட்டுகளில் மெய்யைக் குறிக்கப் புள்ளியிடப்பட்டிருக்கிறது என்றும், எகர, ஒகரம் குறிக்கவும் புள்ளி இருக்கிறது என்றும் கருத்து தெரிவித்துள்ளார். இவர் குறிப்பிடும் கல்வெட்டுகள் கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 2-ஆம் நூற்றாண்டு வரையிலானவையாகும். இதற்கு முந்திய காலத்தில் எழுதப்பட்டிருப்பவற்றில் மெய்யைக் குறிக்கவும் எகர, ஒகரக் குறிலைக் குறிக்கவும் புள்ளிகாணப்படவில்லை. அவற்றில் அகரம் ஏறிய உயிர் மெய்யைக் குறிக்கச் சில இடங்களில் மெய் எழுத்துக்குப் பக்கத்தில் 'அ' கரத்தைத் தனியாக எழுதிக் காட்டியிருக்கிறார்கள். சில இடங்களில் அகரம், ஆகாரம் ஏறிய உயிரைக் குறிக்கக் கோடு இட்டிருந்தாலும், மிகப் பழைய முறையான மெய்யையும் உயிரையும் தனித் தனியாக எழுதிக் காட்டும் முறையையும் பயன்படுத்தியிருக்கிறார்கள். இம்முறை அக்கல்வெட்டுகளின் பழைமைத் தன்மையைக் காட்டா நிற்கும். அதனோடு இக்கல்வெட்டுகளில் எதிலுமே கூட்டெழுத்துகள் காணப்பெறவில்லை என்பதும் இவ்வெழுத்துகளின் மிக்க பழைமைத் தன்மைக்கு மற்றொரு சான்றாகக் கருதலாம்.

நன்றாக வளர்ச்சியடைந்த ஒரு முறையான எழுத்தை அசோகன் கல்வெட்டுகளில் காணலாம். அசோகன் கல்வெட்டுகளில் புள்ளியிடப்பட வேண்டிய இடங்கள் புள்ளியிட்டு எழுதப்பட்டிருக்கின்றன

ஆனால், தமிழ்நாட்டுக் கல்வெட்டுகளில் உயிரெழுத்துகள் பத்து தாம் எழுதப்பட்டுள்ளன. 'ஐ' காரமும் 'ஔ'காரமும் காணப்படவில்லை. தமிழிலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் அகரமும் இகரமும் சேர்ந்தும், அகரமும் யகர ஒற்றும் சேர்ந்தும் ஐகாரம் ஆகும் என்றும், 'அகர உகரம் ஔகாரம் ஆகும்' என்றும் குறிக்கப்பட்டுள்ளது. அதன்படி பார்க்கையில் அகரத்தையும் இகரத்தையும், அகரத்தையும்யகர ஒற்றையும் தனித் தனியாக எழுதி அதை ஐகாரம் எனக் கொண்டார்களென்றும், அகர உகரத்தைத் தனித்தனியாக எழுதி ஔகாரம் எனக் கருதினார்கள் என்றும் கொள்ள வேண்டியிருக்கிறது. ஆகவே, இந்த வகையில் பார்த்தாலும் தமிழகக் கல்வெட்டுகள் மிகவும் தொடக்க கட்ட நிலையிலேயே இருந்திருக்கின்றன என்று கருத வேண்டியுள்ளது.

இவ்வகையில் டி.என். சுப்பிரமணியம் கருத்து மிகவும் பொருத்தமானதாகத் தெரிகிறது. தாம் தொகுத்து வெளியிட்ட தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள், தொகுதி-3, பகுதி 2-இல் (South Indian Temple Inscriptions Vol 3, Part 2) பிராமி எழுத்து திராவிட மொழிகளுக்காகவே உருவாக்கப்பட்டது என்றும், குறிப்பாக அவற்றுள் பழமையானதான தமிழுக்காக அது தோற்றுவிக்கப்பட்டது என்றும், பின்னாளில் பிராகிருத மொழி அதனைப் பயன்படுத்திக் கொண்டது என்றும், நாளடைவில் இந்தியா முழுதும் அதுவே பழக்கத்தில் நிலவியது என்றும் கருத்துத் தெரிவித்துள்ளார்.

மௌரியப் பேரரசன் அசோகன் தன் கல்வெட்டுகளைப் பிராகிருத மொழியிலும், பாலி மொழியிலும் எழுதியபோது இவ்வெழுத்தைப் பயன்படுத்தியிருக்கிறான். பின்னர் வந்த குப்தப் பேரரசர்களும் இவ்வெழுத்தையே பயன்படுத்தியுள்ளனர்.

இகரத்திலிருந்து ஈகாரத்தை வேறுபடுத்திக் காட்டமேலும் ஒரு புள்ளியைச் சேர்த்திருக்கிறார்கள். இம்முறை தமிழ்நாட்டில் நெடிலிலிருந்து குறிலாக்கப் பயன்படுத்திய புள்ளியிடும் முறையை ஒட்டியதாகும் என்றும், ஆனால் அவர்கள் குறிலுக்குப் பதிலாக

நெடிலுக்குப் புள்ளியிட்டிருக்கின்றனர் என்றும் அவர் கூறுவது சிந்திக்கத் தக்கது.

மெய்யைப் புள்ளியிட்டுக் காட்டுவதும், எகர ஒகரத்துக்குப் புள்ளியிடுவதும் தொல்காப்பிய காலத்தில் நிகழ்ந்திருக்கிறது. அதே போன்று அறச்சலூர், புகழூர்க் கல்வெட்டுகளின் காலமான கி.மு. 2 முதல் கி.பி. 2-ஆம் நூற்றாண்டு வரை உள்ள கால கட்டத்தைச்சார்ந்ததாகத்தான் தொல்காப்பியம் இருத்தல் வேண்டும். மெய்யைக் குறிக்கப் புள்ளியிடாமல் எழுத்துகள் வழங்கி வந்த காலம் தொல்காப்பிய காலத்துக்கும் முந்தியது. தொல்காப்பியத்தில் பல இடங்களில் 'என்மனார் புலவர்', 'என்ப' என்ற சொற்கள் காணப்படுகின்றன. அவை தொல்காப்பியருக்கு முன்பிருந்த நிலைமையைக் குறிப்பதாகும். தொல்காப்பியர் காலத்திலேயே பழைய சில எழுத்து மரபுகள் வழக்கொழிந்துவிட்டன என்பது ' பெறப்படுகிறது. நன்னூல் நூற்பா (98), 'தொல்லை வடிவின எல்லா எழுத்தும்'என்று கூறுகிறது. ஆகவே தொல்காப்பியம், நன்னூல் ஆகியவற்றின் காலங்களுக்கு முன்பாகவே எழுத்துகள் ஒரு நிலையான வடிவம் பெற்று இருந்தன என்பது புலப்படுகிறது. அக்காலகட்டத்தில்தான் மாங்குளம் ஆகிய இடங்களில் உள்ள கல்வெட்டுகள் எழுதப் பெற்றிருத்தல் வேண்டும். ஆகவே, அவை காலத்தினால் முந்தியவை ஆகின்றன. ஆதலால் தான் அவை கி.மு. 5-4 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தனவாக இருக்கலாம் என்று கருத வேண்டியுள்ளது. மேலும், ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த பட்டிபுரோலுவில் கிடைத்துள்ள கல்வெட்டும் இதற்கு உறுதுணையாகிறது. அக்கல்வெட்டிலும்மெய்யைக் குறிக்கப்புள்ளியில்லை. மேலும், அகரம் ஏறிய மெய்யைக் காட்டப் பக்கக் கோடு ஒன்று இட்டும், ஆகாரம் ஏறிய மெய்யைக் குறிக்கப் பக்கக் கோட்டோடு கீழ்நோக்கிய கோடு ஒன்று இட்டும் எழுதியிருப்பது மனத்தில் கொள்ள வேண்டியதாகும். இம்முறை மாங்குளம் என்னும் இடத்தில் காணப்படும் கல்வெட்டுகளின் வளர்ச்சியைக் காண்பிப்பதாகக் கருதுதல் வேண்டும்.

தமிழகத்தில் பழந்தமிழ் எழுத்துப் பொறித்த கல்வெட்டுகள் மலைக்குகைகளில் மட்டுமல்லாமல் பானை ஓடுகள், காசுகள் ஆகியவற்றிலும் கிடைத்துள்ளன. அரிக்கமேடு, கொற்கை, உறையூர், காஞ்சீபுரம், கரூர், வல்லம், கொடுமணல் ஆகிய இடங்களில் நடைபெற்ற அகழாய்வுகளில் பானை ஓடுகளில் இவ்வெழுத்துகள் பொறிக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது. வடார்க்காடு மாவட்டம் செங்கத்துக்கு அருகில் உள்ள ஆண்டிப்பட்டியில் கிடைத்த ஈயக் காசுகளில் இவ்வெழுத்து பொறிக்கப்பட்டிருக்கிறது. இது அக்காலத்தில் மக்களிடத்தில் இவ்வெழுத்துப் பெற்றிருந்த செல்வாக்கைப் புலப்படுத்துவதாக உள்ளது. குறிப்பிட்ட ஒரு மதத்தார் தாம் இவ்வெழுத்தைப் பரப்பினர் என்ற கருத்தைத் தகர்ப்பதாக இதைக் கருதலாம். அனைத்து மக்களும் நன்கு அறிந்த ஓர் எழுத்தாக இது நிலவி வந்திருக்கிறது. அவ்வாறெனில் தொன்றுதொட்டே இது வழங்கி வந்திருத்தல் வேண்டும் என்று ஊகிக்கலாம். பானை ஓடுகளிலும் குறிப்பாகக் கறுப்பு சிவப்புப் பானை ஓடுகளில் இவ்வெழுத்து எழுதப் பெற்றிருப்பது இவ்வெழுத்துகளின் பழமை கி.மு. 5-4-ஆம் நூற்றாண்டு என்று கொள்வதற்கு மேலும் ஆதாரமாக அமைகிறது.

தமிழ்மொழிக்காக ஏற்படுத்தப்பட்ட இவ்வெழுத்தைப் பின்னாளில் பிராகிருத மொழி பயன்படுத்திக் கொண்டது என்னும் கருத்துக்குச் சான்றாகச் சாதவாகனர்களின் 'இருமொழிக் காசுகளைக்' கூறலாம். அக்காசுகளின் ஒரு பக்கத்தில் தமிழ் மொழியிலும் மற்றொரு பக்கத்தில் பிராகிருத மொழியிலும் எந்த மன்னனால் அக்காசு வெளியிடப்பட்டது என்பது குறிக்கப்பெற்றிருக்கும். இரு மொழிகளிலுமுள்ள வாசகங்கள் பழந்தமிழ் எழுத்திலேயே எழுதப்பட்டுள்ளன. ஆகவே, தமிழ் எழுத்தைப் பின்னாளில் தமிழும் பிராகிருதமும் இணைந்து பயன்படுத்தின என்பது தெளிவாகிறது.

அண்மையில் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் டாக்டர் இரா. நாகசாமி சாதவாகனர்களும் சாளுக்கியர்களும் வேளிர் வழி வந்தவர்கள் என்று கூறியிருப்பது மேலும் சில ஊகங்களை ஆய்வாளர்கள் கொள்வதற்குத் தூண்டுகோலாக அமைகிறது.

மொகஞ்சதாரோ, அரப்பா நாகரிகம் முற்காலத் திராவிடர் நாகரிகம் என்றும், அக்காலத்திய எழுத்துகள் முற்காலத் திராவிட மொழியை எழுதுவதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன என்றும் ஐ. மகாதேவன் போன்ற ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். அதனோடு அங்கு வேளிர்கள் வாழ்ந்து வந்தனர் என்றும் ஐ. மகாதேவன் கூறியுள்ளார்.

அந்நாகரிகம் அழிவுற்றதற்குக் கூறப்படும் காரணங்களுள் இந்தோ-ஆரியர் தாக்குதலையும் ஒன்றாகக் கூறுகின்றனர். அவ்வாறு அவர்கள் தாக்கியதால் வேளிர்கள் தெற்குத் திசை நோக்கி நகர்ந்திருக்கக்கூடும். அதன் காரணமாகத் தான் குசராத்து மாநிலத்திலுள்ள உலோத்தலில் அவர்கள் வாழ்ந்திருக்கிறார்கள் என்றும், அங்கும் அவர்கள் அம்மொழியையும் எழுத்தையும் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்றும் நம்புதல் கூடும்.

வேளிர்கள் தென்திசை நோக்கிச் சென்றதைத் தான் அகத்தியர் தலைமையில் ஒரு குழு தமிழ் நாட்டுக்கு வந்தாகக் கூறப்படும் கதை தெரிவிப்பதாகவும் கருதலாம். அதனோடு துவராபதியைத் தலைநகராகக் கொண்ட கண்ணனின் வழிவந்த வேளிர் 50–ஆம் தலைமுறைக்குப் பிறகு இருக்குவேளிர் என்னும் பெயருடன் தமிழ் நாட்டில் இருந்திருப்பது வேளிர் கி.மு. 1000 அளவில் தென்திசை நோக்கி வரத் தொடங்கிவிட்டனர் என்பதைக் கூறுவதாக உள்ளது. அங்ஙனம் வந்தவர்கள் தாங்கள் அறிந்திருந்த எழுத்தையும் தென்திசைக்குக் கொண்டு வந்து மேலும் வளர்ச்சியைச் செய்திருக்கின்றனர்.

அதைத்தான் பாண்டியர் செப்பேடுகள் 'அகத்தியனோடு தமிழாய்ந்து' என்று தெரிவிக்கின்றன என்று கருதலாம். அவ்வாறு ஆராய்ந்து வளப்படுத்திய எழுத்துகளே தமிழ்நாட்டுக் குகைகளிலும்,பானை ஓடுகளிலும் காசுகளிலும் காணப்பெறும் எழுத்துகள். தமிழகத்தில் வளர்ச்சியடைந்த எழுத்தாக இருக்கிற காரணத்தால்தான் அண்மை நாடான இலங்கையில் இவ்வெழுத்தில் ஆயிரக்கணக்கான கல்வெட்டுகளைக் காணமுடிகிறது.

மொகஞ்சதாரோ, அரப்பா எழுத்துகளை அறிந்திருந்த வேளிர்கள் தென்திசை நோக்கி வந்துவிட்டதாலும், மனப்பாடம் மூலமே பயின்று வந்த இந்தோ-ஆரியர் மட்டுமே இந்தியாவின் வடபகுதியில் தங்கிவிட்டதாலும், அரப்பா நாகரிகத்துக்கும் மௌரியர் காலத்துக்கும் இடைப்பட்ட காலத்தில் வடபகுதியில் எழுத்து வளரமுடியாத ஒரு நிலை ஏற்பட்டுவிட்டது என்று ஊகிக்கலாம். பிராகிருத மொழியை எழுதுவதற்குப் பயன்பட்ட இந்த எழுத்தை அசோகன் சில மாற்றம் செய்து தம் காலத்தில் பயன்படுத்திப் பல கல்வெட்டுகளைப் பொறித்திருக்கின்றான் என்று கருதலாம். மேலும், மெகசுதனிசு சந்திரகுப்த மௌரியர் காலத்தில் எழுத்துகளே வழங்கவில்லை என்று கூறியிருப்பதும் இக்கருத்துக்கு வலுவூட்டுவதாக அமைகிறது.

தமிழகத்துத் தமிழ் எழுத்தின் பழமைக்கு மற்றொருகாரணத்தையும் கூறலாம். தமிழகத்து மலைக் குகைகளில் காணப்பெறும் கல்வெட்டுகள் அனைத்தும் (மாங்குளம், புகலூர்க் கல்வெட்டைத் தவிர) ஓரிரு வரிகளிலேயே காணப்படுகின்றன. அவற்றின் மொழி கூட நல்ல வளர்ச்சியடைந்த ஒன்றாகத் தெரியவில்லை. கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. மூன்றாம் நூற்றாண்டெனச் சங்க காலத்தைக் குறிப்பிடுகிறார்கள். சங்க காலத்து இலக்கியங்களில் ஒரு பண்பட்ட மொழிநடையை நாம் காண முடிகிறது. ஆனால், மாங்குளம் போன்ற கல்வெட்டுகளில் பயிலப் பட்டுள்ள சொற்றொடர் வளர்ச்சியடைந்தஒன்றாகத் தெரியவில்லை. தொடக்க கட்டத்தில் (Primitive stage) உள்ளதாகவே தோன்றுகிறது. 'கணிநந்தாசிரியகுவன்கே தம்மம்' (மாங்குளம்) போன்ற தொடர்களை எடுத்துக்காட்டாகக் காட்டலாம்.

பிறகு நன்றாக வளர்ச்சியடைந்த நிலையில்தான், கி.மு. 2–ஆம் நூற்றாண்டளவில் இவ்வெழுத்தின் தன்மையை விளக்கி இலக்கணம் வகுக்கப்பட்டது. அதை விளக்குவதாகத்தான் தொல்காப்பியம் வழங்குகிறது. பிறகு அந்த எழுத்தில்தான் கடைச்சங்க கால இலக்கியங்கள் எழுதப்பெற்றிருத்தல் வேண்டும்.

இவ்வெழுத்தின் அடுத்த கட்ட வளர்ச்சியில் இரு வேறு வடிவான எழுத்துகள் உருவாகின்றன. ஒன்று நேர்கோடுகள் அப்படியே இருக்கப் படுக்கைக்கோடுகள் மட்டும் வளைந்து வளர்வது; மற்றது நேர் கோடுகளும்படுக்கைக்கோடுகளும் வளைந்து வளர்வது. இவ்வளர்ச்சி கி.பி. 1-2–ஆம் நூற்றாண்டில் தொடங்கி, கி.பி. 3-4–ஆம் நூற்றாண்டளவில் ஒரு கட்டத்தை அடைகிறது. அப்பொழுது ஒரு வகை எழுத்துக்கு (வளைவு வளைவாக உள்ள எழுத்துக்கு) கண்ணெழுத்து என்று பெயர் வழங்கியிருக்கிறது. இந்த வகை எழுத்தில் தான் சிலம்பு, மணிமேகலை போன்ற இலக்கியங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. இவ்வெழுத்து மக்கள் நடுவே செல்வாக்குப் பெற்றிருந்தது. இதற்கு வட்டெழுத்து என்றும் பெயர். சிலம்பும் மணிமேகலையும் மக்கள் காப்பியங்கள் என்றும், அவை முதலில் மக்களிடையே நாட்டுப்புறப் பாடல்களாகவோ நாடகங்களாகவோ வழக்கில் வழங்கி இருத்தல் வேண்டும் என்றும் கருதும் கருத்திற்கேற்ப, மக்களிடையே செல்வாக்குப் பெற்றிருந்த வட்டெழுத்தால் அவை எழுதப்பட்டிருத்தல் வேண்டும். ஆதலால், இளங்கோ அடிகளும் அக்காலத்திய எழுத்தைக் 'கண்ணெழுத்து' என்றும் அவ்வெழுத்தை எழுதுபவர்களைக் 'கண்ணெழுத்தாளர்' என்றும் கூறிப் போந்தார்.

ஆனால், அதே நேரத்தில் மன்னர்கள் அவையில் முதல் வகை எழுத்துச் செல்வாக்குப் பெற்றிருந்திருக்கிறது. இங்கு கி.பி. 2–3–ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு கி.பி. 6–ஆம் நூற்றாண்டு வரையில் ஆட்சி செய்த அரசர்கள் யாவர் என்று அறிந்து கொள்வதற்குச் சான்றுகள் ஏதும் இல்லையாதலால், அவர்கள் காலத்தில் அரசவையில் பயன்படுத்திய எழுத்தையும் அறிந்து கொள்ள இயலவில்லை. அந்தக் காலகட்டத்துச் செப்புப் பட்டயம் அல்லது காசு ஏதேனும் கிடைக்குமாயின் அதிலிருந்து தெரிந்து

கொள்ள வழி பிறக்கும். தமிழகத்தே கி.பி. 6 – ஆம் நூற்றாண்டில் பல்லவமன்னன் சிம்மவர்மனின் செப்பேட்டில் திடீரென ஓரளவு வளர்ச்சி பெற்ற முதல் வகை எழுத்தைக் காண முடிகிறது. இது எவ்வாறு இயலும்? அதற்கு முந்திய நூற்றாண்டுகளில் வளர்ச்சி பெற்றிருந்தால்தானே இவ்வாறான எழுத்தைக் காணுதல் இயலும். ஆகவே அவ்வெழுத்துகள் உள்ள கல்வெட்டுகள் செப்பேடுகள் அல்லது காசுகள் கண்டு பிடிக்கப்படல் வேண்டும்.

இந்தக் காலகட்டத்தைச் சார்ந்த பல்லவர் செப்பேடுகளைக் காணமுடிகிறது. ஆனால், அவை ஆந்திரப் பகுதியிலிருந்து வெளியிடப்பட்டவையாதலால் அவை பிராகிருத மொழியிலும் வளர்ச்சியடைந்த பழந்தமிழ் எழுத்திலும் உள்ளன. இதற்குக் காரணம் சா்தவாகனர்கள் பழந்தமிழ் எழுத்தைப் பிராகிருதம், தமிழ் ஆகிய மொழிகளை எழுதுவதற்குப் பயன் படுத்தியமையேயாகும். அவர்கள் வழி வந்த பல்லவர் களும் பழந்தமிழ் எழுத்தையே பிராகிருத மொழியை எழுதுவதற்குப் பயன்படுத்தியிருக்கிறார்கள். தமிழ் மொழியில் கி.பி. 6–ஆம் நூற்றாண்டளவில் செப்புப் பட்டயத்தை அரசவை எழுத்தான முதல்வகைத் தமிழ் எழுத்தில் எழுதியிருக்கிறார்கள். அந்த வகையில்தான் முதன் முதலில் பள்ளன்கோயில் செப்பேட்டில் முதல் வகைத் தமிழ் எழுத்தைக் காண முடிகிறது. முதல் வகைத் தமிழ் எழுத்து வளர்ச்சிக்குக் கிரந்த எழுத்தும் ஓரளவுக்குக் காரணமாக இருந்திருக்கலாம் போலத் தெரிகிறது. பல்லவர்கள் தங்கள் செப்பேடுகளில் ஒரு பகுதியைச் சமசுகிருத மொழியில் எழுதியபோது கிரந்த எழுத்தைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். மேலும், சிம்மவர்மன் காலம் முதல் இரண்டாம் நரசிம்மவர்மனான இராசசிம்மன் காலம் வரை பெரும்பாலான கோயில் கல்வெட்டுகள் கிரந்த எழுத்திலும் சமசுகிருத மொழியிலுமே எழுதப்பட்டிருக்கின்றன. அவ்வெழுத்தில் காணப்பெறும் 'த' 'ய' 'ர' போன்ற எழுத்துகளுக்கும் முதல் வகைத் தமிழ் எழுத்துகளுக்கும் மிகுந்த ஒற்றுமை காணப்படுவதை நன்றாக உணரலாம்.

ஆனால், அதே காலத்தில் பாண்டிய நாட்டுப் பகுதியில் அரசவை எழுத்தாகவும், மக்கள் எழுத்தாகவும் இரண்டாம் வகைத் தமிழ் எழுத்து (வட்டெழுத்து) நிலவியிருந்திருக்கிறது. சமசுகிருதப் பகுதியை எழுதுவதற்கு அவர்களும் கிரந்த எழுத்தைக் கையாண்டிருக்கின்றனர்.

மலையடிக்குறிச்சியில் காணப்பெறும் செழியன் சேந்தனின் கல்வெட்டு வட்டெழுத்திலும் ஓரிரு எழுத்துகள் முதல்வகைத் தமிழ் எழுத்திலும் எழுதப்பட்டிருக்கின்றன. மாறன் அரிகேசரியின் வைகைக்கரைக் கல்வெட்டு கிரந்த எழுத்திலும் வட்டெழுத்திலும் எழுதப்பட்டிருக்கிறது. முற்காலப் பாண்டியர் செப்புப் பட்டங்களிலும் கிரந்த எழுத்தையும் வட்டெழுத்தையும் தாம் காண முடிகிறது. மிகவும் குறைந்த அளவிலேயே முதல்வகைத் தமிழ் எழுத்தை அப்பகுதியில் கி.பி. 9–ஆம் நூற்றாண்டுத் தொடக்கம் வரை காணமுடிகிறது.

கொங்குப் பகுதியில் காணப்பெறும் முற்காலக் கல்வெட்டுகளில் கிரந்த எழுத்தையும் வட்டெழுத்தையும் தாம் காணமுடிகிறது.

நாமக்கல்லில் காணப்படும் அதியர் கல்வெட்டு கிரந்த எழுத்தில் உள்ளதையும் மற்றக் குறுநில மன்னர்களின் கல்வெட்டுகள் வட்டெழுத்தில் இருப்பதையும் பார்க்கலாம்.

ஆனால், இந்தக் காலகட்டத்தில் (கி.பி. 4–8 ஆம் நூற்றாண்டு வரை) சோழநாட்டுப் பகுதியில் வட்டெழுத்துக் கல்வெட்டுகளையோ முதல்வகைத் தமிழ் எழுத்துக் கல்வெட்டுகளையோ காணமுடியவில்லை. இந்த ஒரு நிலைமையே சோழநாட்டுப் பகுதியில் இக்காலகட்டத்தில் எத்தகைய அரசியல் சூழ்நிலை நிலவியிருக்கக்கூடும் என்பதை வெளிக்காட்டுவதாக உள்ளது. ஒரு நிலையான அரசாட்சி அப்பகுதியில் நிலவவில்லை என்பதையும், அப்பகுதி பல்லவர்களின் ஆட்சியிலோ பாண்டியர்களின் ஆட்சியிலோ அடங்கி இருந்திருக்க வேண்டும் என்பதையும் புலப்படுத்துகிறது.

இங்கு கி.பி. 9–10–ஆம் நூற்றாண்டில் இருந்த களப்பிர மன்னர்கள் காலத்தில் முதல் வகை எழுத்திலும் இரண்டாம் வகை எழுத்தான வட்டெழுத்திலும் கல்வெட்டுகள் எழுதப்பட்டுள்ளன. சோழர்கள் கி.பி. 9–ஆம் நூற்றாண்டில் இருந்து தம் பகுதியில் முதல் வகை எழுத்திலும், பாண்டி நாட்டுப் பகுதியிலும் சேர நாட்டுப் பகுதியிலும் இரண்டாம் வகை எழுத்திலும் (வட்டெழுத்து) எழுதியிருக்கின்றனர். கேரளப் பகுதியில் இரண்டாம்வகைத் தமிழ் தொடர்ந்து எழுதப்பட்டு வந்துள்ளது.

பிற்காலப் பாண்டியர்களும் இருவகை எழுத்துகளிலும் கல்வெட்டுகளைப் பொறித்துள்ளனர். விசய நகர மன்னர்கள் முதல்வகை எழுத்தோடு கிரந்த எழுத்தைக் கலந்து கல்வெட்டுகளில் எழுதியிருக்கின்றனர். நாயக்கர், மராட்டியர் காலங்களிலும் முதல் வகை எழுத்தே செல்வாக்குப் பெற்று வளர்ந்து வந்திருக்கிறது. இருப்பினும் இரண்டாம் வகை எழுத்தும்

கி.பி.17-18-ஆம் நூற்றாண்டு வரை தமிழகத்தின் தென்கோடிப் பகுதியில் வழக்கத்தில் இருந்துள்ளது. இன்றைக்கு எழுதப்பட்டு வரும் தமிழ் எழுத்து முதல் வகை எழுத்தின் தொடர் வளர்ச்சியாகும்.

ந.கா.

எழுத்தாக்கக் கொள்கை: எழுத்தாக்கம் என்பது எழுத்து மொழி இல்லாமல் பேச்சுமொழியாக மட்டும் உள்ள மொழிகளுக்கு எழுத்து உருவம் (வரி வடிவம்) கொடுப்பது.

மனிதன் உலகத்தில் சுமார் 500,000 ஆண்டுகளாக வாழ்ந்து வந்து கொண்டிருக்க வேண்டும் என்று தொல்லியல் ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். ஆனால் இன்றும் காடுகளிலும் மலைப் பகுதியிலும் வாழும் பழங்குடி மக்கள் என்று கருதப்படுபவர்கள் கூடப் பேச்சு மொழி உடையவர்களாகவே காணப்படுகிறார்கள். இன்னும் சொல்லப்போனால், இயற்கையாகவும் செயற்கையாகவும் ஊமையர்களாய் இருப்பவர்களைத் தவிரப் பேசத் தெரியாத மனிதனே கிடையாது. ஆனால் நகர்ப்புறங்களில் வாழ்ந்து நல்ல நாகரிகமும் பண்பாடும் உடையவர்கள் என்று கருதப்படுகிற சில சமூகங்கள் தங்கள் மொழிக்கு எழுத்து இல்லாமல் இருக்கிறார்கள். மதுரையில் பெரும்பான்மையாகவும் வேறு சில நகரங்களில் சிறுபான்மையாகவும் வாழும் நல்ல நாகரிகமுடைய சௌராட்டிர மக்கள் அண்மைக் காலத்தில்தான் தேவநாகரி எழுத்தில் தங்கள் மொழியை எழுதி வரலாயினர். அப்படியே வீரதீரத்தில் சிறப்புப் பெற்ற குடகு நாட்டில் வாழும் குடகர்கள், தங்கள் மொழியைத் தாங்கள் கருநாடகத்தில் வாழ்கிற காரணத்தால் அந்த எழுத்தை இப்பொழுது பயன்படுத்தி வருகிறார்கள்.

வரலாற்றை நோக்க மற்றோர் உண்மையும் புலனாகிறது. அதாவது, எழுத்துமொழி உடையவை கூட ஒரு காலத்தில் அதைப் பெற்றிருக்கவில்லை. இன்று கிடைக்கும் மிகப் பழமையுடைய எழுத்து மொழியான சுமேரியமொழி 5000 ஆண்டுப் பழமை உடையது. அதாவது 5000 ஆண்டுகளுக்கு முன்னால் எழுதப்பட்டமைக்குச் சான்றுகள் உள்ளன. தமிழ்மொழிக்கு இன்றைய நிலையில் கிடைக்கும் எழுத்துச் சான்று கி.மு. 3-ஆம் நூற்றாண்டு அதாவது 2300 ஆண்டுப் பழமை உடையதுதான்.

இங்ஙனம் எழுத்து மொழியானது உலக வரலாற்று நோக்கில் அண்மையில் ஏற்பட்டாலும் அது தோன்றி வளர்ந்த வரலாற்றை அறிஞர்கள் ஊகித்துள்ளார்கள். மேலும், எழுத்தாக்கம் ஒரு மொழிக்கு எழுத்து வடிவம் கொடுப்பது மட்டுமன்று; உண்மையில் அது ஒரு கூறே. அதை வரிவடிவ அமைப்பு என்று கூறலாம். மேலும், அந்த மொழிக்குரிய எழுத்து எண்ணிக்கையை அங்குள்ள ஒலியோ ஒலியனோ அதாவது ஒரு மொழிக்கூறு ஒன்றின் அடிப்படையில் வரையறுக்க வேண்டும். அதை எழுத்து எண்ணிக்கை என்று கூற வேண்டும். மற்றொரு முக்கிய சிக்கல் அந்த மொழிச் சொற்களை எப்படி எழுதுவது என்று நிருணயிப்பது. அதைச் சொல்லெழுத்து நிருணயம் என்று குறிப்பிடலாம். எனவே எழுத்தாக்கம் என்பது 1) வரிவடிவ அமைப்பு, 2) எழுத்தின் எண்ணிக்கை, 3) சொல்லெழுத்து (Spelling) நிருணயம் ஆகிய மூன்று சிறப்பான பகுதிகளை உடையது.

வரிவடிவ அமைப்பு என்பது அதனுடைய உருவத்தைக் குறிக்கும். அப்படியானால் எதற்கு உருவம் அமைப்பது, எப்படி உருவம் அமைப்பது என்ற கேள்வி உடனே எழும்.

மொழி என்பது ஒலி, ஒலியன், அசை, சொல் ஆகிய பல கூறுகளால் ஆனது. பொதுவாக எல்லா ஒலிகளுக்கும் வடிவம் கொடுக்கமாட்டார்கள். மொழி அமைப்பை ஆராயும் அறிஞர்கள் மட்டுமே முதல் நிலையில் ஒவ்வோர் ஒலிக்கும் ஒவ்வொரு வடிவம் கொடுப்பார்கள். சொல்நிலை, வாக்கிய அமைப்பு ஆகியவற்றை ஆராயப் புகும்போது அவர்களே அந்த மொழிகளில் வழங்கும் ஒலிகளில் சொற்களை வேறுபடுத்தி அறியப் பயன்படும் ஒலிகளுக்கு மட்டும் ஒலியன் என்ற பெயர் கொடுத்து, அவற்றிற்கே வரிவடிவம் கொடுப்பார்கள். பொதுவாக ஒலியன் என்பது மற்றோர் ஒலி ஒற்றுமையுள்ள ஒலியோடு துணைநிலை வழக்கில் (அதாவது ஓர் ஒலிவரும் இடத்தில் மற்றொன்று வாராமை) இருந்தால் இரண்டையும் சேர்த்து ஓர் ஒலியனாக எடுத்துக் கொள்வார்கள். சுருக்கமாகச் சொன்னால், ஒரு மொழியில் வழங்கும் ஒலியின் எண்ணிக்கையைவிட ஒலியனின் எண்ணிக்கை குறைவாக இருக்கும். கிரேக்கம், அரமைக்குப் போன்றவை இந்த வகையைச் சார்ந்தவை.

அசை என்பது தனி உயிரோ உயிரும் மெய்யும் சேர்ந்ததுவோ ஆகும். சொல் என்பது பொருளைத் தரக்கூடியது. வரிவடிவம் அமைப்பது என்பது ஒலியன், அசை, சொல் ஆகிய மூன்று கூறுகளுக்கு வரிவடிவம் கொடுப்பது.

உலக மொழிகளிலுள்ள பலவேறு மொழிகளையும், பொருள்கள் எண்ணிக்கை ஆகியவற்றைக் குறிக்கப் பயன்படுத்திய சின்னங்களையும் ஆராய்ந்த தொல்லியல் அறிஞர்கள், மொழிக்கு வரிவடிவம் முதன் முதலில் சொல்லுக்குத் தான் அதன் தன்மை அல்லது, பண்புகளுள் ஒன்றைக் குறிப்பிடும் வகையில்

எழுத்துகளைக் கொடுத்திருக்கவேண்டும். எனவே அதை ஓவிய எழுத்து (Logographic writing அல்லது Ideographic writing) என்கிறார்கள். அப்படியானால் ஒரு மொழிக்கு ஆயிரக்கணக்கான எழுத்துத் தேவைப் படும். இன்று அந்த நிலையை முழுவதும் ஒட்டி அமையாவிட்டாலும் ஓவிய எழுத்து அடிப்படையில் தான் சீனமொழி அமைந்திருக்கிறது என்று கருது கிறார்கள். அந்த மொழியில் சாதாரண எழுதப் படிக் கத் தெரிந்தவர் என்று கருதப்படுபவர் 7000 அல்லது 8000 எழுத்துகளை அறிந்திருக்க வேண்டும். மொழி அறிஞர்கள் 20,000-க்கு மேற்பட்ட எழுத்துகளைத் தெரிந்து வைத்திருப்பார்கள். சீனமொழி எழுத்து இன்று ஓவிய அடிப்படையில் முழுவதும் அமைந்திரா விட்டாலும் அதன் அடிப்படையைப் பல எழுத்துகள் புலப்படுத்துகின்றன.

ஒவ்வோர் அசைக்கும் ஒவ்வொரு வடிவம் கொடுத்து எழுதினால் அதற்கு அசைநிலை எழுத்து என்பது பெயர். எலமைட்டு(Elamite),ஈரியன் (Hurri-an) ஆகியவை இந்த அடிப்படையில் அமைந்தவை.

மூன்று வகை என்று பிரிப்பது பொதுவான அமைப்பே தவிர ஒரு மொழியிலுள்ள எழுத்துகள் நூற்றுக்கு நூறு இந்த முறையைப் பின்பற்றி அமைந் திருத்தல் இயலாது. எனவே எப்பொழுதும் பெரும் பான்மை நோக்கிலேயே பெயரிட்டு வழங்கப்படும். உண்மையில் சீனமொழி சொல்நிலை எழுத்து உடை யது என்றாலும், அந்த மொழியில் எல்லாச் சொற் களும் தனித்தனி வரிவடிவம் பெற்றன அல்ல; சில சொற்கள் இரண்டு வரி வடிவம் பெற்றிருக்கின்றன.

ஒலியன் எழுத்து முறை என்பது ஒவ்வோர் ஒலி யனுக்கும் வரிவடிவம் கொடுப்பது. ஆங்கில மொழி எழுத்துக்கு ஒலியன் எழுத்து முறை அல்லது நெடுங் கணக்கு எழுத்துமுறை என்று பெயர். ஆனால், ஆங் கில மொழியில் ஓர் எழுத்து ஒன்றுக்கு மேற்பட்ட ஒலி உடையது. சில எழுத்துகளுக்குச் சில இடங்களில் ஒலிமதிப்பே இல்லை. எனினும், பெரும்பான்மை நோக்கில் ஒலியன் எழுத்து அல்லது நெடுங்கணக்கு எழுத்து என்று வழங்கப்படுகிறது. தமிழ் எழுத்து முறை மட்டும் அல்லாமல் இந்திய மொழிகளுக்குரிய எழுத்துகள் ஒலியன் எழுத்து முறையில் ஒரு தனி வகையைச் சார்ந்ததாகக் கருதுகிறார்கள். ஏனென் றால், ஆங்கிலம் போன்ற மொழிகளில் ஒலியன் எழுத்து முறையில் உயிரையும் மெய்யையும் தனித் தனியே எழுதுகிறார்கள். தமிழிலும் பிற இந்திய மொழியிலும் உயிர்மெய் என்ற வடிவம் உள்ளது. ஆனால், அங்கு உயிரைக் குறிப்பதற்காகச் சாதாரண உயிர் எழுத்துக்குரிய வடிவங்களைக் கையாளாமல் சில குறியீடுகளைப் பயன்படுத்து கின்றனர். அதாவது, மாற்று வடிவத்தை பயன்படுத்துகின்றனர். அதனால் தான், உயிர்மெய் என்பதனைக் கூட்டெழுத்தாகக் (மெய்க்கு உரிய வடிவமும் உயிர்க்கு உரிய வடிவமும் சேர்ந்ததாக) கருத வேணடும்.

எழுத்தாக்கத்தில் கடைப்பிடிக்க வேண்டிய முக்கிய கொள்கைகளுள் முதலாவது எழுத்து வடிவத்தை அதாவது மேலே குறிப்பிட்ட மூன்று வகை எழுத்து முறைகளில் ஒன்றைத் தேர்ந்தெடுப்பதுதான். அந்த நாட்டு வரலாறும் சமூகப் பண்பாட்டுச் சூழலுமே அந்தத் தேர்வில் உதவி செய்கிறதே தவிர மக்களின் விருப்பமோ அந்த மக்கள் சமூகத்தின் அறிவுத் திறனோ அன்றுஎன்பதை உலகமொழிகள் பலவற்றின் வரலாறு காட்டுகிறது. எடுத்துக்காட்டாகத் தமிழ் மொழியில், குறிப்பாகப் பாண்டிய நாட்டில் வட் டெழுத்துத்தான் கிட்டத்தட்ட கி.பி. 10-ஆம் நூற் றாண்டுவரை பயன்படுத்தப்பட்டு வந்தது. ஆனால், முதலாம் இராசராசன் பாண்டிய நாட்டை வெற்றி பெற்றதும் இன்றைய தமிழ் எழுத்தின் மூலவடிவ மான கோலெழுத்தைப் புகுத்தினான். அதன்பிறகு பாண்டி நாட்டில் கோலெழுத்து மட்டுமே கையாளப் பட்டு வருகிறது. அது போலவே இந்தோனேசியாவில் மூன்று தடவை வரிவடிவ மாற்றம் நடைபெற்றது. முதலில் பௌத்தர்களாயும் இந்துக்களாயும் இருந்த போது ஏழாம் நூற்றாண்டில் கிடைக்கும் பல்லவ கிரந்த எழுத்தில் எழுதப்பட்ட வடமொழிக் கல் வெட்டுகளே இந்தோனேசியா நாட்டில் மிகப் பழைய எழுத்துச் சான்று. இந்தோனேசியா நாடு கி.பி. 11, 12-ம் நூற்றாண்டுகளில் இசுலாம் மதத்தைத் தழுவி யது. அதன் செல்வாக்கால் கி.பி. 11-ஆம் நூற்றாண் டின் இறுதியில் கீழைச்சாவாவில் அராபிக்கு மொழிக் கல்வெட்டுக் காணப்படுகிறது. ஆனால், கி.பி. 16-ஆம் நூற்றாண்டிலிருந்தே அராபிக்கு மொழியில் எழுதப் பட்ட மலாய்மொழிக் கல்வெட்டுக் கிடைக்கிறது. கி.பி. 19, 20-ஆம் நூற்றாண்டுகளில் தச்சுக்காரர்கள் இந்தோனேசியாவை ஆண்டதால் உரோமன் எழுத்து புகுந்தது. அந்நாடு 1945-இல் விடுதலை பெற்றபோது சுதந்திர நாடு மலாய் மொழிக்குப் பாசா இந் தோனேசியா என்று பெயர் சூட்டி, உரோமன் எழுத்தைச் சட்டபூர்வமாக ஏற்றுக்கொண்டது. எனவே மலாய் நாட்டைவிட இந்தோனேசியா நாட் டில் அம்மொழிகளுக்கு உரோமன் எழுத்தே பயன்படு கிறது. இந்த வரலாற்று நிகழ்ச்சிகள் பிற மொழியை அப்படியே எடுத்துக் கொண்டதைக் காட்டுகின்றன.

கிறித்தவப் பாதிரிமார்கள் பல மொழிகள் புதிதாக எழுத்து வடிவம் படைக்கும்போது, புதிய

வரிவடிவை உண்டாக்கினாலும் அந்த வரிவடிவங்கள் தங்களுக்குத் தெரிந்த எழுத்தின் வடிவத்தை ஒட்டியே அமைத்துள்ளனர் என்பது பின்னர் நடந்த ஆராய்ச்சியால் தெளிவாயிற்று. அதாவது, நேரடியாகக் கடன் வாங்காது, தங்களுக்குத் தெரிந்த மொழியின் வரி வடிவத்தைக் கொஞ்சம் மாற்றியும் அந்த மொழியில் வழங்கும் குறியீடுகள் அல்லது சின்னங்களைச் சேர்த்துக் கொண்டுமே புதிய வரிவடிவங்களை அமைத்துக் கொண்டுள்ளார்கள். இதனால், பிசுமன் (Fishman) என்ற மொழியியல் அறிஞர், ஒருமொழி எழுத்து வடிவம் பெற்றது என்பது பிறர் மொழி பேசும் மக்கள்தொடர்பால் – அதாவது அரசியல் தொடர்பு இல்லாது பண்பாட்டுத் தொடர்பால் ஏற்பட்டிருக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

எழுத்தாக்கக் கொள்கையில் இரண்டாம் நிலை எழுத்துகளின் எண்ணிக்கையை வரையறுப்பது. இது அந்த மொழியில் ஒலியன்களின் எண்ணிக்கையைப் பொறுத்தது. ஆனால், மேலே குறிப்பிட்டபடி எழுத்து எண்ணிக்கையும் சில சமயங்களில் கடனாளும் மொழியில் உள்ள எழுத்துகளின் எண்ணிக்கையை ஒட்டி அதிகமாகவோ குறைவாகவோ அமைவது உண்டு. எடுத்துக்காட்டாகச் சோவியத்து ஒன்றியத்தில் இருக்கும் மத்திய ஆசியாவில் பேசப்படும் தர்கிக்கு மொழிகள் உருசிய மொழி எழுதப் பயன்படும். சிரிலிக்கு எழுத்துகளை ஏற்றுக் கொண்ட போது சிரிலிக்கு எழுத்துகள் எல்லாவற்றையும் ஏற்றுக் கொண்டன. ஆனால், அந்த மொழியில் இருந்த மூன்று ஒலியன்களுக்கு எழுத்து இல்லாமல் போய் ஒலியனாக இல்லாத ஒலிகளுக்கு ஏழு எழுத்துகள் நெடுங்கணக்கில் இடம் பெற்றுள்ளன. இதற்குக் காரணம் மூல மொழியின் எழுத்து எண்ணிக்கையும் அரசியல் செல்வாக்குமேயாகும். இதைப் போலவே இந்தோனேசிய மொழியில் உரோமன் எழுத்துகளை எடுத்துக் கொண்டபோது சில மெய்யெழுத்துகளுக்குச் சிறப்பாக ஒலியனாக உள்ள மூன்று மெய்யெழுத்துகளுக்குக் கூட்டெழுத்துகளை (அதாவது இரண்டு எழுத்துகளைச் சேர்த்துக் கொள்ளுதல்) அமைத்துக் கொண்டார்கள். ங் என்ற ஒலியனை -ng என்றும் ஞி என்ற ஒலியனை ny என்றும், S என்ற ஒலியனை sy என்றும் கூட்டெழுத்தால் உணர்த்தி வருகிறார்கள். ஆனால், ஏகாரத்தில் இரண்டு ஒலியன்கள் இருந்தும் உரோமன் எழுத்தில் ஒன்று மட்டும் இருப்பதால் ஓர் எழுத்தே அமைத்துக் கொண்டுள்ளார்கள். q,x என்ற இரண்டும் இந்தோனேசிய மொழியில் தேவையில்லாமல் இருந்தும் விஞ்ஞானத் துறையில் பயன்படுத்துவதற்காகத் தங்க வைத்துக் கொண்டுள்ளார்கள்.

தமிழிலும் மிகப் பழைய எழுத்துச் சான்று அசோகன் பிராமி எழுத்துகளால் எழுதப்பட்டது என்று வரலாற்று அறிஞர்களும் மொழியியல் அறிஞர்களும் கருதுகிறார்கள். பிராமி எழுத்துகள் தமிழ் மொழி அமைப்புக்கு ஏற்பத் தழுவிக் கொள்ளப்பட்ட விதத்தைத் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் தம்முடைய தமிழ் மொழி வரலாற்றில் விளக்கியுள்ளார்கள். சுருக்கமாகச் சொன்னால், தமிழ்மொழி அமைப்புக்கு ஏற்பத் தேவையில்லாத பல எழுத்துகளை நீக்கியும் தமிழுக்கே உரிய சிறப்பு ஒலியன்களுக்கு ஒலி வேற்றுமை உடைய எழுத்துகளைக் கொஞ்சம் மாறுபாடு செய்தும் ஏற்றுக்கொண்டுள்ள தனித் தன்மையை எடுத்துக்காட்டியுள்ளார்கள். எனவே, எழுத்து எண்ணிக்கையும் மொழி அமைப்பை ஒட்டி அதாவது அந்த மொழியில் அமைந்துள்ள ஒலியன் எண்ணிக்கையை மட்டும் பொறுத்தது அல்ல என்பது தெளிவு.

எழுத்தாக்கக் கொள்கையில் கடைசிச் சிக்கல் ஒரு சொல்லை எப்படி, எந்தெந்த எழுத்தைக் கொண்டு எழுதுவது என்பதே. இதுவும் மொழியியல் நோக்கில் அந்தச் சொல்லை எப்படி உச்சரிக்கிறோம் என்பதைப் பொறுத்ததே. ஆனால், ஒரு மொழி பலவகைக் கிளைமொழிகள் கொண்டிருக்கும் என்பதும் ஒவ்வொரு கிளை மொழியிலும் ஒவ்வொரு விதமாக உச்சரிக்கப்படும் என்பதும் அறிந்த ஒன்றே. அப்படியானால், எந்தக் கிளைமொழியின் உச்சரிப்பை ஒட்டி எழுதுவது என்பது முதல் சிக்கல். இந்தச் சிக்கல் வேறு ஒரு வகையில் தீர்மானிக்கப்படுகிறது. அரசியல் முதன்மை, பண்பாட்டு நடவடிக்கைகளின் சிறப்புப் போன்ற பலவற்றால் ஒரு கிளை மொழி முதன்மை வாய்ந்ததாகக் கருதும் நிலை ஏற்படும். அதைப் பிற கிளைமொழியினரும் பின்பற்றவும் செய்வார்கள். அதனால், அந்தக் கிளைமொழியே நிலைமொழி என்று சொல்லப்படும். சொல்லின் வடிவம்–சொல்லுக்குரிய எழுத்து–சொல்லெழுத்து பெரும்பான்மையும் நிலை மொழியை ஒட்டியே அமைக்கப்படும்.

பழைய இலக்கியங்களைக் கொண்ட மொழியில் இலக்கிய மொழிச் செல்வாக்கால் அவற்றைப் பழைய இலக்கியங்களில் பயன்படுத்துவதும் உண்டு. தமிழ் எழுத்து முறை பெரும்பாலும் இடைக்காலத் தமிழ் இலக்கியத்தை ஒட்டியே அமைந்துள்ளது. அதனால் தான் மொழியியல் அறிஞர்கள் தமிழ் மொழியை இருநிலை மொழி (Diglossic language) என்று கூறுகிறார்கள். அதாவது, பேச்சு மொழியின் வடிவத்துக்கும் எழுத்து மொழியின் வடிவத்துக்கும் வேறுபாடு அதிகம் இருப்பதால் சொல்லெழுத்துகள் எந்தக் கிளைமொழிப் பேச்சை ஒட்டியும் அமையவில்லை.

ஆனால், இன்று சில சொற்களின் சொல்லெழுத்து களில் தொண்டை மண்டலத்தில் வாழும் தமிழ் அறிஞர்களின் பேச்சு மொழிச் செல்வாக்குக் காணப் படுவது குறிப்பிடத்தகுந்தது.

சுருங்கச் சொன்னால் எழுத்தாக்கக் கொள்கை என்பது பேச்சு மொழிக்கு எழுத்து உருவம் கொடுக் கும் போது வரிவடிவ அமைப்பு நிருணயம், எழுத்து எண்ணிக்கையை முடிவு செய்தல், சொல்லுக்குரிய சொல்லெழுத்தை வரையறுத்தல் ஆகிய மூன்று பற்றி யும் மொழி அமைப்பை ஒட்டியும் சமூகப் பண்பாட் டுச் சூழல் ஒட்டியும் அமைக்கப்படுவதுதான்.

எழுத்துப் பெயர்ப்பு: எழுத்து வடிவமுள்ள மொழிகள் பல வகைப்படும். ஒவ்வோர் எழுத்துகளை யும் குறிக்கும் மொழியியல் கூறுகளைக் கொண்டு ஒலி எழுத்துமுறை, ஒலியன் எழுத்துமுறை, அசை எழுத்துமுறை, சொல் அல்லது ஓவிய எழுத்துமுறை என்று பலவகைப்படுத்துவார்கள்.

ஒரே எழுத்துமுறை பல மொழிகளுக்குப் பொது வாக இருந்தாலும் ஒவ்வொரு மொழியிலும் அந்த எழுத்துகளின் ஒலி மதிப்பும் ஒலியன் மதிப்பும் மாறு படும்.

எடுத்துக்காட்டாக, C என்ற எழுத்து ஆங்கிலத்தில் Cat, Cot என்ற சொற்களில் 'க' என்ற மதிப்புப் பெறும். ஆனால், பாசா இந்தோனேசியாவில் 'ச' என்ற ஒலிப்பையே பெறும். அப்படியே ஒரு மொழிக்குள்ளும் தனி எழுத்துகளின் மதிப்புக் காலந் தோறும் மாறுபடக்கூடும்.

எடுத்துக்காட்டாக 'ற' என்ற வடிவம் பழங்காலத் தில் வல்லொலியாகவும் இடைக்காலத்தில் ஆடொ லியாகவும் வழங்கப்பட்டது. எனவே, மொழியியலா ளர்கள் மொழி ஆராய்ச்சிக்குச் சிறப்பாகப் பண்டை நூல்களையும் எழுத்து மொழியையும் ஆராயும்போது எப்பொழுதும், ஓர் எழுத்துக்கு ஒரு வடிவம் அதுவும் உரோமன் எழுத்துக் கொடுத்து எழுதுவதையே எழுத் துப் பெயர்ப்பு என்று கூறுவார்கள். உரோமன் எழுத் தின் தனிச்சிறப்பு ஒவ்வோர் ஒலிக்கும் தனித்தனி எழுத்து உண்டு என்பதாகும்.

எழுத்துப் பெயர்ப்பில் இரண்டு முக்கிய செய்திகள் குறிப்பிடத்தக்கன. ஒன்று: தனி எழுத்துகளின் ஒலி மதிப்பு மட்டுமே இங்குக் குறிக்கப்படும். மற்றொன்று அந்தச் சொல்லுக்குரிய எழுத்துகளை அப்படியே ஒலி வடிவில் எழுதிக் காட்டப்படும். அதாவது, பேச்சு மொழியில் சில ஒலிகள் இல்லாவிட்டாலும் எழுதும் போது அந்த ஒலிகள் இருந்தால் அவையும் எழுத்துப் பெயர்ப்பில் சுட்டிக்காட்டப்படும். எனவே, ஒரு மொழியில் வழங்கும் சொற்களுக்குரிய எழுத்து களை அப்படியே உரோமன் அல்லது மற்றோர் எழுத்தில் எழுதுவதே எழுத்துப் பெயர்ப்பு எனப் படும். இதனால்தான் தமிழில் 'க' என்ற வரிவடி வம் k,g,h என்ற மூன்று ஒலிகளைப் பெற்றிருந்தா லும் எழுத்துப் பெயர்ப்பில் மேலே சொன்ன கொள் கையின்படி, எப்பொழுதும் 'K' என்றே எழுதுவார் கள். உதாரணம்:

கடை 'Kaṭay' [Kadai]

அங்கு 'Aṅku' [Aṅgu]

மகன் 'Makan' [Mahan]

எனவே, எழுத்துப் பெயர்ப்பு என்பது ஒலிபெயர்ப் பிலிருந்து மாறுபட்டது. எழுத்துப்பெயர்ப்பு பெரும் பான்மையும் வரலாற்று ஆராய்ச்சிக்கும் புதிய மொழி யைக் கற்றுக்கொள்வதற்கும் பெரிதும் பயன்படும். புதிய மொழியைக் கற்கும்போது அந்த மொழியின் எழுத்துகளை உடனே சொல்லிக்கொடுக்காது, எழுத் துப் பெயர்ப்பு மூலம் சொற்களை எழுதிப் பின்னரே அந்த மொழிக்குரிய எழுத்துகளை அறிமுகப்படுத்து வார்கள்.

இதனால், பின்னால் எளிதாக வரிவடிவத்தை எவருமே கற்றுக்கொள்ளமுடியும். பொதுவாகச் சில மொழிகளில் எழுத்துப் பெயர்ப்பிலிருந்து அந்த மொழிக்குரிய எழுத்துக்கு மாற்றும்பொழுது வரிசை முறையில் சில மாற்றங்கள் ஏற்படலாம்.

எடுத்துக்காட்டாக தேவநாகிரி எழுத்துமுறையில் எழுத்தமைப்பு முழுவதும் நேர்கோட்டில் அமைவ தில்லை. மெய்ம்மயக்கங்களில் 'ர' கரம் முதல் ஒலி யாக இருந்தால் மேலே ஒரு வளைவு இட்டு அடுத்து வரும் மெய்யெழுத்து மட்டும் எழுதப்படும்.

எடுத்துக்காட்டாக 'va:rta:' என்று எழுத்துப் பெயர்ப்பில் இருப்பது, वार्ता என்று தேவநாகிரி எழுத்து முறையில் எழுதப்படும். இங்கு 'ர' கரமும் த' கரமும் ஒரே வரிசையில் அமைந்துள்ளன.

'ர' கரம் இரண்டாம் மெய்யாகுமேயானால் முதன் மெய்க்குக் கீழே ஒரு வளைவு இட்டு அல் லது சாய்வுக்கோடு இட்டுச் சுட்டிக்காட்டப்படும். umr என்பது उम्र இது போல எழுத்து மொழி யிலுள்ள பல்வகைப்பட்ட குறியீடுகளைத் தவிர்த்து எங்கும் ஒரே மாதிரியாக எழுதுவதன் மூலம்

மொழி ஆராய்ச்சியாளருக்கும் புதிய மொழியைக் கற்றுக் கொள்வோருக்கும் எழுத்துப் பெயர்ப்பு உதவியாக இருக்கிறது. செ.வை.ச.

**எழுத்துக்கூட்டல்** என்பது உச்சரித்தல் (Spelling) என்னும் பொருளில் அமைந்துள்ளது. உச்சரித்தல் என்னும் வடசொல்லிற்கு இணையான தமிழ்ச் சொல் பலுக்குதல் என்பர்.

ஒருசொல் எப்பொருளைப் பற்றிக் கூறப்படுகிறதோ அப்பொருளைப் பிழையும் திரிபுமின்றி உணர்த்துதற்குரிய எழுத்துகளை அமைத்து அச்சொல்லைப் பேசுதலும் எழுதுதலும் எழுத்துக் கூட்டல் (Spelling) எனப்படும். ஒரு சொல்லுக்குரிய எழுத்துகளைத் தனித் தனியே கூறும்போது ஒலிக்கும் முறைப்படியே அவற்றைக் கூட்டிச் சொல்லும் பொழுது பெரும்பாலும் ஒலிக்கப்படுவதில்லை. பெரும்பாலானவை ஐரோப்பிய மொழிகளில் எழுத்துகளைத் தனியே ஒலிக்கும் நிலை வேறாகவும், அவற்றைக் கூட்டி ஒலிக்கும் நிலை வேறாகவும்அமைந்துள்ளன. தென்னிந்திய மொழிகளில் உயிர் மெய்யும் உயிருமாக அமைந்த சொற்கள் இருநிலைமைகளிலும் வேறுபடுவதில்லை. மெய்யெழுத்துகள் விரவிய சொற்கள் மட்டும் சிறிது வேறுபடுகின்றன. மெய்யெழுத்துகளைத் தனியே கூறும்போது இக், இங், இன் எனக் கூறுவர்.

ஆங்கிலத்தில் Key என்னும் சொல்லில் உள்ள எழுத்துகளைத் தனித்தனியே கூறும் போது கேஇஒய் என்றும், கூட்டிச் சொல்லும் போது கீ என்றும் ஒலிப்பர். எல்லா மொழிகளிலும் பெரும்பாலும் உயிரெழுத்துகள் இருநிலைகளிலும் ஒரு முறையாகவே ஒலிக்கப்படுகின்றன. மெய்யெழுத்துகள் வேறுபடும். ‘ஆன்ட்’ (Ant) என்னும் ஆங்கிலச் சொல்லில் உயிரெழுத்து அப்படியே ஒலிக்கும். மெய்கள் என் டி என ஒலிக்கப்படும். சொல்லாகக் கூறும் பொழுது ‘ஆன்ட்’ என ஒலிப்பர். ஆங்கில மொழியில் மெய்யெழுத்துகள் யாவும் ஓரே சீராக ஒலிக்கப்படுவதில்லை. ‘P.C.T.’ என்பவை பி.சி.டி. என உயிர்மெய்யைப் போலவும், ‘L.N’. என்பவை எல்.என். என ஓர் அசையைப் போலவும், W.Z. என்பவை டபிள்யூ, இசர்ட் என ஒரு சொல்லைப் போலவும் ஒலிக்கப்படுகின்றன. சில சொற்களில் ஓரிரு எழுத்துகள் சொல்லாகச் சொல்லும் பொழுது ஒலிக்கப் பெறாமலே நிற்கும். ‘Depot’ என்பதில்T–யும், ‘Known’ என்பதில் K–யும் ஒலிப்பதில்லை. ஆதலின் ஆங்கிலம் போன்ற மொழிகட்கு எழுத்துக்கூட்டும் மரபு இன்றியமையாததாக உள்ளது.

தமிழ்மொழிக்கண் ‘இலக்கியம்’ என்னும் சொல்லைஎழுத்துக்கூட்டுமிடத்து இ–ல–இக்–கி–ய–இம் எனக் கூறுவர். இதன்கண் மெய்யெழுத்துகள் மட்டுமே ‘ஓர் இகர உயிரைச் சாரியையாகக் கொண்டு ஒலிக்கப் படுகின்றன. தமிழில் எல்லா மெய்களுக்கும் ஒரே சாரியை அமையும். தமிழில் இலக்கண முறையில் எழுத்துக்கூட்டும்பொழுது கரம், காரம், கான் என்பவற்றையும் அகரத்தையும் சாரியையாகக் கூட்டுவர். அணில் என்னும் சொல்லை அகரம் ணகர இகரம் லகரம் எனக் கூறுவர். வழக்கில் அணி இல் என்பர். தமிழில் உயிர் மெய்யைச் சாரியை இட்டுக் கூறுதல் மரபில்லை. க என்பதனைக் ககர அகரம் என்றும் கா என்பதனைக் ககர ஆகாரம் என்றும் கூறுவர். வழக்கில் சாரியை யாதுமின்றிக் க,கா,கி,கீ,கு,கூ என ஓரெழுத்தாகவே கூறுவர்.வரம்பு என்னும் சொல்லை இவ்அஇர்அஇம்இப்உ எனக் கூறுவதில்லை. வரஇம்பு என்றே பிரித்துரைப்பர். அவ்வகையில் தமிழில் எழுத்துக்கூட்டல் முறை எளிதாகவே அமைந்துள்ளமை காணலாம்.

இனிப் பேச்சுமொழியில் வெவ்வேறு பொருளுடைய சொற்கள் ஒலிவடிவில் ஒற்றுமைப்பட்டு நிற்குமிடத்து எழுத்துக்கூட்டல் முறை வேண்டப்படும். எடுத்துக் காட்டாகத் தலைவற்கு – தலைவர்க்கு, மலர்க்கொடி –மலர்கொடி என்பவை பொருள் வேறுபாடுடையவை. பண்ணினார் – பன்னினார், வெந்நீர் – வென்னீர் – வெண்ணீர், நிரை–நிறை என்றாற்போல்பவை பேச்சு மொழியில் வேறுபாடின்றி ஒலிக்கும். எழுத்து மொழியில்தான் வேறுபாட்டினைக் காணமுடியும். ‘No’, ‘Know’ எனப் பிறமொழிகளிலும் இந்நிலை உண்டு. இவ்வாறான சொற்களைப் பேசும்போது எழுத்துக்கூட்டல் முறை சொற்களைத் திரிபின்றி உணரத் துணைசெய்யும்.

இனி, பேச்சு வழக்கில் கூட்டியும் குறைத்தும் திரித்தும் வழங்கப்படும் சொற்களைத் திரிபின்றி உணரவும் எழுத்துக்கூட்டல் முறை பயன்தரும். எடுத்துக்காட்டாகப் ‘புள்ளைங்க வந்துட்டாங்க’, ‘காலேலேந்து காண்லெ’ என்பவற்றை எழுதும்போது பிள்ளைகள் வந்துவிட்டார்கள், காலையிலிருந்து ‘காணவில்லை என எழுதுவர். நூலறிவு நிரம்பாத சிலர் நேற்று, அறிஞர், வேற்கண்,வேர்ப்பலா போன்ற சொற்களை நேட்று, அறிங்ஞர், வேர்க்கண், வேற்பலா எனப் பேசுதலையும் எழுதுதலையும் காணலாம். இங்ஙனம் பிழை நேராமற் செய்ய எழுத்துக்கூட்டல் முறை துணைபுரியும்.

வடமொழி முதலிய மொழிகளில் இரண்டு, மூன்று எழுத்து ஒலிகளுக்கு ஒரே வரிவடிவம் உண்டு. அவற்றைக் கூட்டெழுத்து என்பர். இத்தகைய கூட்டு

வரிவடிவும் ஒலிவடிவும் தமிழில் இல்லை. சேர்த்தி-வாழ்த்து என மெய்யெழுத்துகள் தனித்தனியே ஒலிக்கவும் எழுதவும் பெறும். ஓலைச் சுவடி எழுத்தில் சிலர் ஒருசில ஒற்றையும் உயிர்மெய்யையும் க்கு, த்து என்பவற்றை (கு, து) என்றாற்போலச் சேர்த்து எழுதிவந்துள்ளனர். அது இலக்கணவழக்கன்மையின் மறைந்துவிட்டது.

இங்ஙனம் எழுத்துகளை ஒலிக்கும் முறையிலேயே சொற்களைப் பேசவும் எழுதவும் அமையாத நிலையில் எழுத்துக்கூட்டல் முறை மொழியைச் சிதையாமற் காக்கும் கருவியாக விளங்குவதைக் காணலாம். ச.பா.

எழுத்துக்கூட்டல்[2]: சொல்லணியுள் எழுத்துக் கூட்டல் என்னும் ஓர் அணியுண்டு. அதனை மிறைக் கவியுள் அடக்கி எழுத்துவர்த்தனம் எனக் கூறுவர். எடுத்துக்காட்டு: 'சோலையில் ஓர் எழுத்துக்கூட நீர் மலராம்; பின்னொன்று சேரப்பேராறாம்' என்றாற் போல வரும். அதாவது சோலை-கா, ஓர்எழுத்து-வி, காவி-நீலோற்பலமலர், பின்னொன்று-ரி, காவிரி-காவிரியாறு. கா-காவி-காவிரி என எழுத்துக் கூடியுள்ளது. ச.பா.

எழுத்துக் கூட்டக் கற்பித்தல்: சொல்லிலுள்ள எழுத்துகளை ஒரு குழந்தை தானே எழுத்துக் கூட்டக் கற்றுக் கொள்கிறது என்றும், முறையான கற்பித்தல் வழியே எழுத்துக் கூட்டலைக் (Spelling) கற்றுக் கொள்கிறது என்றும் இரு வேறுபட்ட கொள்கைகள் இருந்து வருகின்றன. எழுத்துக் கூட்டுதல் தானே கற்கப்படுகிறது என்னும் கொள்கையினர், குழந்தை, பாட நூல்களை வாசிக்கும் போதே எழுத்துக் கூட்டுதலைத் தற்செயலாகக் கற்றுக் கொள்கிறது எனக் கருதுவர். முறையான கற்பித்தல் வழியே எழுத்துக் கூட்டல் கற்றுக் கொள்ளப்படுகிறது என்ற கொள்கையினர், குழந்தைக்குச் சொற்பட்டியலை (Word List) முறையாகக் கற்பிப்பதால் எழுத்துக் கூட்டலை அது கற்கிறது எனக் கருதுவர்.

இரைசு (Rice), கார்ன்மேன் (Cornmann) போன்றோர் முறையாக எழுத்துக் கூட்டிக் கற்பிப்பதைக் குறை கூறுகின்றனர். எழுத்துப் பயிற்சி, வாசிப்புப் பயிற்சி வழியேதான் எழுத்துக்கூட்டுதல் தற்செயலாகக் கற்றுக் கொள்ளப்படுகின்றது என இவர்கள் கருதினர். வாலின் (Wallin) என்பவர் தற்செயலாக எழுத்துக் கூட்டுதல் கற்றுக் கொள்ளப்படுவதில்லை; அது முறையான எழுத்துக் கூட்டக் கற்பித்தல் (Systematic Spelling Instruction) மூலம் கற்பிக்கப்படுகிறது எனக் கூறினார். கிரேசு பெர்னால்சு (Grace Fernales) என்பவர் குழந்தை தன் பேச்சு, எழுத்து, வாசிப்பு ஆகிய வெளிப்பாட்டின் அடிப்படையில் தானே எழுத்துக் கூட்டக் கற்றுக் கொள்கிறது என்றார். இக்கருத்தை உண்மையாக்கும் வகையில் கைட்டு (Kyte) என்பார் நன்றாக எழுத்துக் கூட்டும் மாணவர்களை முறையாக எழுத்துக் கூட்டல் கற்பிக்கப்படும் வகுப்புகளுக்கு அனுப்பாமற் செய்து, தொடர்ந்து அம்மாணவர்களே எழுத்துக் கூட்டுதலில் மிகவும் திறமையாக இருப்பதைக் காட்டி, எழுத்துக் கூட்டுதல் தற்செயலாகக் கற்றுக் கொள்ளப்படுகிறது என நிறுவினார்.

இங்கிலாந்தில் நிசுபெட்டு (Nisbet) என்பவர் குழந்தைகள் எழுத்துக் கூட்டலைத் தாமே தற்செயலாகக் கற்ற போதிலும், 25 சொற்களுக்கு ஒரே ஒரு புதிய சொல்லைத்தான் எழுத்துக் கூட்டக் கற்றுக் கொள்ளும் எனக் கண்டறிந்தார். கில்பர்ட்டு (Gilbert) என்பவர் கல்லூரி மாணவர்களின் எழுத்துக் கூட்டல் திறன் வாசிக்கும் பழக்கத்தால் உயர்ந்ததாகக் கூறுகிறார் மேலும், எழுத்துக் கூட்டல் திறன் உயர்வது அம்மாணவர்களின் வாசிக்கும் நோக்கத்தையும், வாசித்த பொருளையும் பொறுத்து அமைவதாகக் கூறுகிறார்.

எழுத்துக் கூட்டலைக் கற்பிப்பதில் சில உத்திகள் பயன் படுத்தப்படுகின்றன. எடுத்துக் காட்டாக, இசுமித்து (Smith) என்பவர் குழந்தைகளின் உலகிற்குச் சற்றும் பொருந்தாத புதிய சொற்களைத் தொகுத்துப் பட்டியலாகத் தயாரித்துக் கற்பித்தார். இது சொற்பட்டியல் கற்றல் (List Learning) எனப்படும். சைமன் (Simon) என்பவர் எழுத்துக் கூட்டலில் குழந்தையின் பார்வைத்திறன் (Visual Factor) தலையாய காரணி எனக் கூறுவார். அச்சிடப்பட்ட சொற்களைப் பல்வேறு நிலைகளில் குழந்தை பார்த்துப் பார்த்துப் பழகுவதால் எழுத்துக் கூட்டல் வருகிறது என்று பீர்சு (Beers) கூறுவார். இசுகோனல் (Schonell) என்பார் எழுத்துக் கூட்டல் திறன் பார்வை, கேள்வி, ஒலிப்பு ஆகிய கூறுகள் எழுதும்போது பதியுமானால் வளரும் எனக் கூறுவார்.

ஒரு சொல்லைச் சிறிது நேரம் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த குழந்தை புத்தகத்தை மூடிவிட்டு, அச்சொல்லை எழுதுவதன் மூலம் அக்குழந்தை எழுத்துக் கூட்டக் கற்றுக் கொள்கிறது என்று பெர்னால்டு கூறுகிறார். இவ்வாறு பார்ப்பதால் குழந்தைக்கு அச்சொல்லின் படிமம் (Imagery) பதிந்து விடுகிறது என்று அவர் கருதுவார்.

கிப்சன் (Gibson), இலெவின் (Levin) ஆகிய இருவரும்எழுத்துக்கூட்டலைப்பொதுமைப்படுத்துதல்

(Generalisation) மூலம் குழந்தை கற்றுக் கொள்கிறது எனக் கருதுவர். ஒரு மாணவர் வாசிக்கும் போது ஒவ்வொரு சொல்லையும் பார்த்துக் கொண்டே இருப்பதில்லை; பதிலாகச் சொற்களின் பழக்கத்தால் விரைந்து பொதுமைப்படுத்தி எழுத்துக் கூட்டுகின்றனர் எனக் கருதப்படுகிறது. தொடர் பான சொற்களைக் கற்பிப்பதன் மூலம் எழுத்துக் கூட்டுதலை எளிதாக்க முடியும். எடுத்துக்காட்டாக, வனம், வானம்; பால், பல்; கால், கல் போன்ற சொல்லமைப்பில் தொடர்பான சொற்களை இணைத்துக் கற்பிக்கலாம். சோம்சுகி (Chomsky) என்பவர் சொல்லகராதி எழுத்துக் கூட்டல் (Lexical Spelling) முறையினைக் குறிப்பிடுகிறார். எடுத்துக் காட்டாக, மருந்து (Medicine), மருத்துவ (Medical), நாடு (Nation), நாட்டிற்குரிய (National) ஆகியன இம்முறையில் எழுத்துக் கூட்டப்படுகின்றன.

எஸ்.த.

துணை நூல்கள்:

**Cornman, O.P.**, Spelling in the Elementary School, Ginn, Boshon, Massachusetts, 1942.

**Frith, U.**, Cognitive Processes in Spelling, Academic Press, New York, 1980.

**Smith, H.A.**, Teaching Spelling, Henry Holt, New York, 1975.

***எழுத்துவழக்குக் கிளைமொழி***: படைப் பிலக்கிய ஆசிரியர்களால்ஒரு மொழியின் பேச்சுவழக்கு எளுத்து மொழியில் உணர்த்தப் பெறும்போது தெரிந்தோ தெரியாமலோ சுட்டப்பெறும் முரண் பாடுகளும் மிகைவெளிப்பாட்டுக் கூறுகளும் எழுத்து வழக்குக் கிளைமொழிகள் (Eye Dialects) எனப் படும்.

ஆங்கில இலக்கிய ஆசிரியர் ஒருவர் தமது படைப்பின் ஒரே பக்கத்தில் 'Yestirday', 'Yesterday' என்னும் இரண்டு வடிவங்களை ஒரே பொருளில் பயன்படுத்துகிறார். தமிழ்ப் புதின ஆசிரியர் ஒருவர் 'வர்ற்றீங்களா' என்னும் வடிவத்தினையும், பிறிதொரு சிறுகதை ஆசிரியர் பன்மை விகுதியாக (Plural Suffix) 'தலைவர்க', 'நாலுபேருக', 'பெண்கள், என்னும் வெவ்வேறு வடிவங்களையும் குறிக்கின்ற னர். இலக்கிய எழுத்துமுறையாகப் (Literary Device) பயன்படுத்தப்பெறும் இத்தகைய முரண்பாடுகளும், மிகைவெளிப்பாட்டுக் கூறுகளும் எழுத்து வழக்குக் கிளைமொழிகளாகக் கருதப்படுகின்றன.

சில இலக்கிய ஆசிரியர்கள் சொல்லின் ஒலி யமைப்பில் காணப்பெறும் ஒலியழுத்தத்தினை நீக்கி விடுவதன் வாயிலாக எழுத்துவழக்குக் கிளைமொழி யினை உருவாக்கியுள்ளனர்.

எழுத்துவழக்குக் கிளைமொழியில் செம்மை வழக்கின்கண் காணப்பெறும் ஓரினமாதல், உயிர் இணைவு, மெய்ம்மயக்கங்களின் சிதைவு போன்ற ஒலியனியல் மாற்றங்கள் நிகழப்பெறுதலுண்டு.

இலக்கியத்தில் காணப்பெறும் எழுத்துவழக்குக் கிளைமொழிகள் ஆசிரியரின் நுட்பமின்மையினைச் சுட்டும். அன்றி ஆசிரியர் ஓர் இலக்கிய எழுத்துமுறை யாக இவற்றைப் பயன்படுத்துகிறார் என்பதனை யும் சுட்டும்.

எழுத்துவழக்குக் கிளைமொழிகள் மொழியியல் ஆய்வுக்கு, குறிப்பாக ஒலியன் கண்டுபிடிப்பிற்கு உத வுவதில்லை. ஆதலின் எழுத்துவழக்குக் கிளைமொழிக் கும் பிற பேச்சுவழக்குகளுக்குமிடையே காணப்படும் வேறுபாட்டினைத் தெரிந்து எழுத்துவழக்குக் கிளை மொழியினைப் பிரித்தறிதல் வேண்டும்.

எழுத்துவழக்குக் கிளைமொழி கலையுணர்வு உருவாகுவதற்கும், நகைச் சுவையினை ஏற்படுத்து வதற்கும், குறிப்பிட்ட பாத்திரத்தின் பண்பினை விளக்குவதன் பொருட்டும் இலக்கிய எழுத்துமுறை யாகப் பெரும்பான்மையான அமெரிக்க எழுத்தாளர் களால் பயன்படுத்தப்பட்டது.

எழுத்துவழக்குக் கிளைமொழிகள் பாத்திரங்களின் பண்பினை உணர்த்துவதற்குப் பயன்படுத்தப்படு கின்றனவேயன்றிக் குறிப்பிட்ட பேச்சுவழக்கினைச் சுட்டும் வகையில் பயன்படுத்தப்பெறுவதில்லை. சில இலக்கிய ஆசிரியர்கள் எழுத்துவழக்குக் கிளைமொழி யினை வட்டார வழக்குகளுடன் இணைத்துக் கண்டனர். கோட்பாட்டு நிலையில் இவை இலக்கிய ஆசிரியர்களின் தவறுகளாகவே கருதப்பட்டன.

ஒரு பாத்திரத்தினைப் பிற பாத்திரங்களினின்று வேறுபடுத்திக் காட்டவும் வாசகர்களை மகிழ்வூட்ட வும் வேறுபட்ட வரிவடிவங்களைக் கையாளுவதாகச் சில இலக்கிய ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். இந்தக் குறையுடை வரிவடிவங்கள் (Quasi Phonetic Spelling) சில நிலைகளில் வெவ்வேறு வாசகர்களுக்கேற்ப வெவ்வேறு ஒலிப்புமுறையுடன் விளங்குகின்றன. இத் தகைய எழுத்துவழக்குக் கிளைமொழிகள் படிப்ப தற்குக் கடினமாக அமைதலுண்டு. இவை Cum (Come), Conversashun (Conversation), Mersheen (Machine) எனப்பயில்வதற்குக்கடினமாகவும் பொருட்

குழப்பத்தினைத் தருவனவாகவும் அமைந்துள்ளமையால் இக்காலத்தில் பலர் எழுத்துவழக்குக் கிளைமொழியினை ஏற்றுக்கொள்வதில்லை. ஏ.ஆ.

துணை நூல்:

**Paul Hull Bowdre, JR.**, Eye Dialect as a Literary Device, A Various Language Perspsctives on America Dialects (Ed. J.V. Williamson and V.M. Burke), Holt, Rinehart and Winston, INC., New York, 1971.

**எழுத்தொலியியல்:** எழுத்தொலி என்பது அறிவறிந்த மக்கள் தம்உணர்வினால் தூண்டப்பெற்ற ஓசைக்காற்றுத் தொண்டையினின்று வாயுறுப்புகளான் வரையறையுற்றுக் கட்புலனாக வரிவடிவு செய்துகொள்ளற்குரியதாக எழுந்து, மொழிக்கு உறுப்பாகத் தோன்றி ஒலிக்கும் ஓர் அருவுருவப் பொருளாகும்.

இன்றைய மொழியியலார் மக்களின் ஒலிப்புறுப்புகளின் இயக்கத்தால் ஏறத்தாழ ஐம்பது உயிர்ப்பிசைகளும் தொண்ணூற்றைந்து மெய்யொலிகளும் பிறக்கும் எனக் கண்டு அவற்றை அனைத்துலக மொழி எழுத்துக் குறியீடுகளாக அமைத்துள்ளனர். அவை யாவும் ஒருங்கமைந்ததொரு தனிமொழி உலகில் இல்லை. ஒவ்வொன்றும் அவற்றுள் சிலவும் பலவும் கொண்டியங்குகின்றன.


வாய், இதழ், பல், அண்ணம், நா, மூக்கறை, தொண்டை, காற்றுக்குழல், குழல்மூடி, குரல்வளை, நெஞ்சு, நுரையீரல் ஆகியவற்றை எழுத்தைத் தோற்றுவிக்கும் உறுப்புகளாகக் கூறுவர். தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியம் தலை, மிடறு, நெஞ்சு இவற்றை அமைவிட உறுப்பாகவும் நா, பல், இதழ், அண்ணம், மூக்கு இவற்றைத் தொழிலுறுப்பாகவும் கூறுகிறது. தொல்காப்பியம் கூறும் தலை என்னும் உறுப்பினை மொழியியலார் மூக்கு அறை எனக் கருதிக் கூறுவர். மேலும், அமைவிடவுறுப்பினை ஒலிப்புமுனை (Point of Articulation) என்றும், தொழிலுறுப்பினை ஒலிப்பான் (Articulator) எனவும் கூறுவர்.

எழுத்தொலிகளை மொழியியலார், உயிரொலி, அடைப்பொலி, மூக்கொலி, மருங்கொலி, உரசொலி, ஆடொலி, வருடொலி எனப்பகுத்துக் கூறுவர். தொல்காப்பியம் உயிர்ப்பிசைஒலி, ஒற்றொலி, அஃகொலி என மூன்றாக அடக்கி அவை வாயுறுப்புகளின் ஒற்றல், உறுதல், இயைதல், வருடல், கண்ணுறல், வீங்கல், பரந்துஒற்றல், அணராதல், அங்காத்தல் முதலிய தொழில்களாற் பிறக்கும் என்கிறது. (தொல்காப்பியப் பிறப்பியல் காண்க).


பொதுவாக, எழுத்தொலிகள் உந்தியினின்று எழும் இசைவளியானது உதானன் என்னும் வாயுவினால் முந்திக் கருத்துணர்விற்கிடமான தலையிற் சென்று சற்றுப்பின் மிடற்றினும் நெஞ்சினும் நிலைபெற்று, மூச்சுக் காற்றொடு மேலெழுந்து குரல்வளையிலுள்ள தசைநார்களால் ஒலிபெற்றுக் கண்டத்தினின்றும் மிடற்றுவளியாலும் மூக்குவளியாலும் (வளி-ஓசையுடன் கூடிய மூச்சுக்காற்று) நா, அண்ணம், பல், இதழ் இவற்றின் தொழில்களான் வெவ்வேறு எழுத்தொலிகளாகத் தோன்றிச் செவிப் புலனாகும், இதனை, ‘உந்திமுதலா முந்துவளி தோன்றி’ எனத் தொடங்கும் தொல்காப்பிய நூற்பாக் கூறுகிறது. வடமொழி இலக்கண நூலோரும், புத்தி மனத்தைத் தூண்ட அது உள்ளுறை அக்கினியைத் தூண்டுகிறது. அந்த அக்கினியின் உந்துதலால் நாபியிலிருந்து வாயு தூண்டப்பெற்று நாக்கு, உதடு, கன்னம், பல் ஆகியவற்றிற் பரவி அட்சரங்கள் வெளிப்படுமென்றும், அவை தொனி, தானம், கரணம், பிரயத்தனம், காலம், சுரம், தேவதை, சாதி என எட்டுத்தன்மை கொண்டிலங்கும் என்றும் கூறுவர். மக்கள் உணர்வினால்தூண்டப்பட்டுப் பேசுபவர் ஆதலின் உணர்வு நரம்புகட்கு இடனாகிய தலையை முதலுறுப்பாகக் கொண்டனர் இலக்கண நூலார். மக்களையும் இயந்திரமாகக் கருதி மொழியியலார், வளியிசை தலையிடத்துக்குச் செல்லாது, தலை என்றது மூக்கு அறையையே எனக் கூறுகின்றனர்.

செந்தமிழின்கண் முப்பத்து மூன்று எழுத்து ஒலிகள் அமைந்துள்ளன. அவை உயிர் எழுத்து 12, ஒற்றெழுத்து 18, சார்பெழுத்து 3, நன்னூல் முதலிய பின்னூல்கள் வரிவடிவையும் இடங்களையும் கணக்கிட்டுப் பலவாறாகக் கூறும். கூறினும், அடிப்படை எழுத்தொலிகளில் வேறுபாடில்லை.

உயிரெழுத்தொலிகள் பன்னிரண்டும் அகர ஒலியாகிய ஓர் எழுத்தின் பிறகோணத்தாலும் அவற்றின் கலப்பாலும் அளவாலும் விரிந்தமைந்துள்ளன. அகரம் வாய் அங்காப்பக் கண்டத்தினின்றும் மிடற்றுவளியால் ஒரு மாத்திரையளவாகப் பிறக்கும். அதுவே, அண்பல் அடிநாவிளிம்புறப் பிறக்குமிடத்து இகரமாயும், இதழ் குவியப் பிறக்குமிடத்து உகரமாயும் தோன்றும். மொழியியலார் இந்நிலையை உயிர் முக்கோணம் என்பர். வரைபடத்தில் பின்வருமாறு காட்டுவர்.




அம்முக்கோணத்துள் இகரத்திலிருந்து அகரத்தையும் உகரத்திலிருந்து அகரத்தையும் சமநிலையில் எழுப்பின் முறையே எகரமும் ஒகரமும் தோன்றும்.




இவ்வாறு ஒரு மாத்திரையளவாக அமைந்த ஐந்தும் இசைத்தமிழாக்கங் கருதி இரண்டு மாத்திரையளவாக ஒலிக்குமிடத்து ஆ, ஈ, ஊ, ஏ, ஓ என ஐந்து எழுத்து ஒலிகள் அமைகின்றன. அவை மாத்திரையளவு கருதிக் குறில் நெடில் எனப் பெயர் பெற்றன. ஐந்திசைப் பண்களே தொடக்கத்தில் தமிழில் அமைந்திருந்தன. பின்னர் இசை நரம்பினை ஏழாகப் பெருக்கிய காலத்து ஐயும், ஒளவும், அமைக்கப்பெற்றன. அவை அகரத்தினின்று இகரத்தையும் உகரத்தையும் நோக்கி அமைக்கப் பெற்றன. அகரம் அங்காந்து பின் இகரத்தோடும் உகரத்தோடும் முடிதலின் இரண்டு மாத்திரையாகவே அமைந்தன. ஆதலின், அவற்றிற்கு இனக் குறில் அமையவில்லை; இகர உகரங்களே இனக் குறிலாக அமைந்தன.

யகர வகரங்கள் அரை உயிர்த் தன்மையுடையன வாகலின் இகர உகரங்களுக்குப் போலியாக யகர வகரங்கள் அய், அவ் என வந்து ஐ, ஒள இரண்டினையும் ஒன்றரை மாத்திரையாகக் குறுகச் செய்வனவாயின. இவ்வியைபுகள் புலப்பட வேண்டி நெடுங்கணக்கு வரிசையில் ஏகாரத்தின் பின் ஐயும், ஓகாரத்தின் பின் ஒளவும் வைக்கப்பட்டன.

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஒள ஏழும் பாஓசை கருதியும் பண்இசை கருதியும் நீண்டிசைக்கும். நீண்டிசைக்கும் அவற்றைத் தமிழ்நூலோர் வேறெழுத்தாகக் கூறாமல் அளபெடை என நெட்டெழுத்தின் விகாரமாகக் கூறி அமைத்தனர். உயிர் நெட்டெழுத்துகள் ஏழும் நாடகத் தமிழுக்கும் இயைய அமைக்கப்பெற்றன வாகும்.

மெய்யெழுத்தொலிகள் ஒலியுறுப்புகளின் வரிசையையும், வளிவெளிப்பாட்டினையும் இசைத் தமிழையும் கருதிப் பதினெட்டாக அமைக்கப் பெற்றுள்ளன. மெய்யெழுத்துகள் வடிவு கொண்டபின் உயிர்த் துணையின்றித் தாமே ஒலிக்க மாட்டா. பக்கம், கொண்கன் என இடையிலும் ஈற்றிலும் புள்ளியாக ஒலிக்கும் தனி எழுத்தைச் சுட்டவேண்டின் இக் இங் இன் என ஓர் இகரத்தைச் சாரியையாகக் கொண்டு கூறவேண்டும். இலக்கண நூலார் அகரச் சாரியை சேர்த்து க ங ன எனக் கூறுவர்.

மெய்யெழுத்துகளை வல்லினம், மெல்லினம், இடையினம் என மூவகையாகக் கூறுவர், கசடதபற என்பவை நா அண்ணத்தொடும், இதழ் இதழொடும் நன்கு பொருந்தி நிற்க உயிர்ப்பொலி அத்தடையை உடைத்து நெஞ்சுவளியால் வெளிப்படுத்தலின் அவை வல்லினம் எனப்பட்டன. அவற்றைத் தடை ஒலி அல்லது வெடிப்பொலி எனக் கூறுவர். தடையுற்றவை அப்படியே மூக்குவளி இசையால் வெளிப்படின் ஙஞணநமன என மெலிந்து தோன்றும். அதனால், அவை மெல்லினம் எனப்பட்டன. நா அண்ணம் இதழ் ஆகிய உறுப்புகள் நன்கு பொருந்தாமல் வளியிசை ஊடுருவுமாறு அமைந்து வெளிப்படுதலானும் வன்மையும மென்மையுமின்றி

ஒலித்தலானும் மிடற்றுவளியால் தோன்றுதலானும் யரலவழள என்பவை இடையினம் எனப்பட்டன.

இவற்றை உறுப்பு முறையாற் கூறின், இதழ்வகை — பம; பல்-இதழ்வகை — வ; பல்-நாநுனி வகை — தந; அண்பல் அடிநாவகை — ய; அண்ணம் நாவகை — கஙசஞடண; நாமடி வகை—ரழள என்றும், ஒலிப்பு முறையாற் கூறின், தடையொலி நெஞ்சு வளி — கசடதப;சிறுதடை மூக்குவளி — ஙஞணநமன; தொடரொலி மிடற்றுவளி — ரலவழள; அடைவொலி மிடற்றுவளி — யவ; வருடொலி மிடற்றுவளி — ரழள; மருங்கொலி மிடற்றுவளி — ல; உரசொலி நெஞ்சு வளி — ற (ட்ர் என ஒலிக்க) என்றும் அமையும்.

மெய்யெழுத்துகளுள் ர,ழ இரண்டும் தவிர்ந்த ஏனைய பதினாறும் தம் முன் தாம் வரும்பொழுது சிறிது அழுத்தம் பெறும். எடுத்துக்காட்டு: பக்கம், கண்ணன், மெய்யன். வல்லெழுத்துகள் மெல்லெழுத்துகளின் பின்னும் இடையெழுத்துகளின் பின்னும் வரும்பொழுது வன்மை மாறி அவற்றின் சாயலைப் பெறும். எடுத்துக்காட்டு: பொங்கல், மஞ்சள், கொண்டல், பந்தல், கம்பன், மன்றம். செல்க, வல்சி. உயிர், உயிர் மெய்களுக்குப் பின் வரும் வல்லின உயிர்மெய்யும் சிறிது நொய்வுற்று ஒலிக்கும். அகம், முகம், ஊசல், பாடல், ஈதல், கோபம். கசதப ஆகியன முதலெழுத்தாக வரும் சொற்களோடு ஒப்பிட்டு ஒலித்து வேறுபாடு கண்டு கொள்க.

மெய்யெழுத்துக் காரணமாக ஒலிவேறுபடும் நிலையை இடைநிலை மெய்ம்மயக்கம் என இலக்கண நூலார் கூறுவர். முப்பத்து மூன்று எழுத்துகளும் சொல்லாக்க நெறியில் அமைந்து தொடரும் நிலையில் ஏறத்தாழ 957 நுண்ணிய ஒலி வேறுபாடுகளைப் பெறுகின்றன. நாடக நோக்கில் உள்ளக் குறிப்பைப் புலப்படுத்தும் நிலையில் எழுத்தொலிகள் எடுத்தல், படுத்தல், நலிதல், கம்பித்தல் முதலிய இசைக்கூறுகளை எய்தி நிற்கும். இது எல்லா மொழிகட்கும் பொதுவான முறைமையாகும்.

இனித் தமிழ் மொழிக்கே சிறப்பாக அமைந்துள்ள சார்பெழுத்தொலி மூன்றனுள் ஒற்றலும் தடையுறுதலுமின்றி, உயிர்த்தலுமின்றி இடைப்பட்டு மிடற்றினின் இசைவளி அஃகுதலால்தோன்றும் எழுத்து ஆய்தமாகும். இது, அ கு உ ஆகிய மூன்றொலியையும் தன்னுள் நுட்பமாக அடக்கி நிற்றலின் இதனை முப்பாற் புள்ளி எனத் தொல்காப்பியம் கூறுகிறது. இதனைப் பதி எழுத்து என்றும், அலி எழுத்தென்றும் கூறுவர். இது, தான் சார்ந்த வல்லெழுத்தை இடையோசையுடையதாகச் செய்யும்.

வல்லெழுத்துகள் தமிழ்மொழியின் இறுதியில் வாராமையால் அரை மாத்திரையுடை உகர ஒலியை அவற்றின் விடுப்பொலியாக அமைத்துக்கொண்ட எழுத்தொலியே குற்றியலுகரமாகும். இது, மேல் வரும் உயிரெழுத்தொலியொடு கலந்து விடுதலின் உயிரொலியாகக் கொள்ளப்படவில்லை. மெய்யெழுத்தை உணர்ந்து வருதலின் மெய்யெழுத்தாகவும் அமையாமையான் இதனைச் சார்பெழுத்து எனக் கொண்டனர். அழகு+இனிது=அழகினிது, பழுது + இல்லை = பழுதில்லை என்றும், கொக்குக் குறிது, வண்டு பறந்தது என்றும் இருநிலைமையும் கொள்ளும். குற்றியலுகரத்தின்மேல் யகர உயிர் வரும்போது உகரம் கெட்டு இகரம் ஒலிக்கும். அவ்வொலியே குற்றியலிகரமாகும். மியாஎன்பதில் மகரத்தின் மேல் நிற்கும் இகரம் அரை மாத்திரையே ஒலித்தலைக் காணலாம். குற்றியலுகரமும் குற்றியலிகரமும் சில சொற்புணர்ச்சிக்கண் அரை மாத்திரை ஒலியினின்று சுருங்கியும் ஒலிக்கும்.

வட்டார வழக்கிலும் சில சொற்களிலும் எழுத்தொலிகள் வேறுபட்டொலித்தலும் உண்டு. சகரத்தைப் பெரும்பாலும் வடமொழி 'ஸ'கரத்தைப் போலவே ஒலிக்கின்றனர். றகரம் இரட்டித்து வரும் சொற்களில் றகரப்புள்ளி டகரம் போல ஒலிக்கும். காற்று–காட்று, பற்றறை-பட்டறை என மருவியுள்ளதைக் காணலாம். தமிழுக்கே உரிய சிறப்பு ழகர ஒலியைச் சிலர் வடமொழி 'ஷ'கரம் போலவும் சிலர் யகரமாகவும் ஒலித்தலைக் காணலாம். சிற்றுக் குருவி சிட்டுக் குருவி எனவும், ஐந்து அஞ்சு எனவும், கோட்டம் கோஷ்டம் எனவும் திரிந்துள்ளன. (எழுத்தொலி மாற்றம் காண்க). மக்களின் சோம்பல், அறியாமை, அடிமைத்தன்மை முதலிய காரணங்களால் பேச்சுமொழியில் சில எழுத்தொலிகள் மாறுபட்டிசைப்பினும் எழுத்து வழக்கில் முப்பத்து மூன்று எழுத்தொலிகளும் திரியாமலும் அழியாமலும் திகழ்ந்து வருவதற்குக் காரணம் அதன் ஒப்பற்ற இலக்கணக் கட்டுக்கோப்பேயாகும். ச.பா.

**எழுதப்பட்ட, எழுதப்படாத அரசியலமைப்புகள்:** பண்டைக் காலத்தில் பிளாட்டோ (Plato), அரிசுடாட்டில் (Aristottle) முதலிய கிரேக்க அரசியற் சிந்தனையாளர்கள் அரசியலமைப்புகளை முடியாட்சி (Monarchy),உயர்குடியாட்சி(Aristocracy), மிதமான மக்களாட்சி (Moderate Democracy) என்னும் 3 தூய வடிவங்களாகவும், இவற்றுக்கு ஏற்ற சருவாதிகார ஆட்சி, செல்வச் சிறு குடியாட்சி, தீவிர குடியாட்சி (Extreme Democracy) என்னும் 3 சிதைந்த வடிவங்களாகவும் வகைப்படுத்தினர். இதனைப் பின்பற்றியே பாலிபியசு, சிசரோ முதலியோர் வகைப்படுத்தினர். இக்காலத்தில் போடின், ஆப்சு, இலாக்கு,

மாண்டசுக்யு முதலியோரெல்லாம் பெரும்பாலும் அரிசுடாட்டிலைப் பின்பற்றியே அரசியலமைப்புகளை வகைப்படுத்தினர். இக்காலத்தில் சே.ஏ.ஆர். மாரியட்டு (J.A.R. Marriott) அரசியலமைப்புகளை,

அ. ஒற்றையாட்சி, கூட்டாட்சி (Unitary and Federal) என்றும்,

ஆ. நெகிழ்ச்சியற்ற, நெகிழ்ச்சியான அரசியலமைப்புகள் (Rigid and Flexible Constitutions) என்றும்,

இ. முடியாட்சிகள், தலைவர்முறை அரசியலமைப்புகள் (Monarchical and Presidential) என்றும் வகைப்படுத்துகிறார்.

எழுதப்பட்ட, எழுதப்படாத அரசியலமைப்புகள்: எழுதப்பட்ட அரசியலமைப்பு (Written Constitution) என்பது, ஒரு நாட்டின் மக்கள் தமது விருப்பத்தின் பேரில் செய்கின்ற, கலை இயல்பான பணி ஆகுமென்றும், ஓர் அரசாங்கம் நிறுவப்படுவதற்கும், நடத்தப்படுவதற்கும் ஏற்ற அடிப்படைக் கொள்கைகளின் தொகுப்பை வகுத்தற்கான முயற்சியின் விளைவுதான் என்றும் சேமிசன் (Jameson) என்ற ஆசிரியர் கூறுகிறார். இவ்வெழுதப்பட்ட அரசியலமைப்பிலே ஓர் அரசின் அதிகாரங்களும், குடிகளின் உரிமைகளும் ஒரே பத்திரத்தில் (Document) எழுதப்பட்டுள்ளன; இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு ஐக்கிய அமெரிக்க நாட்டிற்காக கி.பி. 1789-ஆம் ஆண்டில் வரையப்பட்ட அரசியலமைப்பு ஆகும். சில அரசுகளில், அவற்றின் அரசியலமைப்புகள் பல்வேறு பத்திரங்களில் எழுத்துவடிவத்திலிருத்தலும் கூடும். எடுத்துக்காட்டாக கி.பி. 1875-ஆம் ஆண்டில் எழுதப்பட்ட பிரஞ்சு அரசியலமைப்புச் சட்டமானது பல பத்திரங்களில் எழுதி வைக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் எழுதப்பட்ட அரசியலமைப்பில், விதிகளெல்லாம் எழுத்து வடிவத்திலேயே உள்ளன என்பதுதான் முக்கியமாகக் கவனிக்கத்தக்கது. உலகில் பிரிட்டனைத் தவிர மற்றெல்லா நாடுகளுக்கும் எழுதப்பட்ட அரசியலமைப்புகளே இருக்கின்றன.

இதற்கு மாறாக எழுதப்படாத அரசியலமைப்பில் (Unwritten Constitution) அரசாங்கத்தின் அமைப்பையும் அதிகாரங்களையும் பற்றிய அடிப்படை விதிகளெல்லாம், எழுத்து வடிவத்தில் ஒரு பத்திரத்திலோ, ஒரு சில பத்திரங்களிலோ எழுதி வைக்கப்படாமல், அரசியலமைப்பின் பல்வேறு விதிகளும் வழக்காறுகளிலும் நீதிமன்றத்தீர்ப்புகளிலும் காணப்படுகின்றன. எழுதப்படாத அரசியலமைப்பில் அரசியலமைப்பு விதிகளில் பலவும் எழுத்து வடிவத்தில் இல்லாமல் வழக்கங்களில் காணப்படுகின்றன. இதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு ஆங்கிலேய அரசிலயமைப்பே ஆகும். எர்மன் பைனர் கூறுவது போல இந்த அரசியலமைப்பு பரிணாம வளர்ச்சி அரசியலமைப்பு ஆகும். இவ்வரசியலமைப்பில் மாபெரும் பட்டயம் (Magna Carta, 1215), உரிமை விண்ணப்பம், 1629, ஆட்கொணர் சட்டம், 1679, உரிமைகள் மசோதா, 1689 (Bill of Rights), ஒழுங்குபடுத்தும் சட்டம், 1701, 1832, 1867, 1885, 1911, 1918, 1929 -ஆம் ஆண்டுகளின் பாராளுமன்றச் சட்டங்கள் முதலியவை எல்லாம் ஆங்கிலேயே அரசியலமைப்பின் எழுதப்பட்ட ஒரு சில பாகங்களாகும். மற்றப்படி, அமைச்சர்கள் பொதுமக்கள் சபைக்குக் கூட்டுப் பொறுப்புடனிருக்கும்வரை பதவியிலிருத்தல், அமைச்சரவையை நம்பிக்கை இல்லாத்தீர்மானத்தின் வாயிலாகப் பொதுமக்கள் சபை பதவி நீக்குதல், அச்சட்டமன்றத்தைக் கலைத்துவிடுதலுக்குத் தலைமைஅமைச்சருக்கு அதிகாரம் இருத்தல், தலைமை அமைச்சருக்கு அமைச்சரவையில் தலைமையான நிலை இருத்தல், அமைச்சரவையில் எல்லாரும் ஒரே அரசியற் கட்சியைச் சேர்ந்தவராயிருத்தல் முதலியவையெல்லாம், எழுத்து வடிவத்திலில்லாத, ஆனால், நடைமுறையில் கடைப்பிடிக்கப்படுகிற வழக்கங்களேயாகும். பிரிட்டனைப் போலப் பாராளுமன்றவகை நிருவாக முறையை ஏற்படுத்தியுள்ள இந்தியா, கனடா, ஆசுத்திரேலியா போன்ற நாடுகளின் அரசியலமைப்புகளில் ஆங்கிலேயப் பாராளுமன்றக் குடியாட்சி முறையின் வழக்கங்களெல்லாம் எழுத்துவடிவத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

எழுதப்பட்ட அரசியலமைப்புகளின் நிறைகள்: (அ) எழுதப்பட்ட அரசியலமைப்பு தெளிவாகவும், திட்டவட்டமான வடிவிலும் அரசியலமைப்பு விதிகளைக் கூறுகிறது. அவ்வரசியலமைப்பைத் திருத்துதற்குரிய முறையும் அதிலேயே கூறப்பட்டிருக்கிறது. (ஆ) அவை நன்கு ஆராயப்பட்டபின்னர்க் கவனமாக வரையப்படுகின்றன. (இ) அவற்றை மக்களுடைய உணர்ச்சிக்கு ஏற்ப வளைக்கவோ திருத்தவோ இயலாதவாறு இருக்கின்றன. (ஈ) அவை உறுதியாகவும் நிலையாகவும் இருக்கின்றன. (உ) அவை தனியாட்களுக்குப் பாதுகப்புத் தந்து, அவர்களுடைய உரிமைகளைப் பாதுகாக்கின்றன.

குறைகள்: (அ) எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய மாறுதல்களைக் கருத்தில் கொள்ளாமல், ஒரே பத்திரத்தில் நாட்டின் எல்லா அரசியற் கருத்துகளையும் அடக்குதல் சரியன்று. (ஆ) எழுதப்பட்ட அரசியலமைப்புகளைத் திருத்துதல் எளிதன்று. மாறுதலை ஏற்காத பழைமைப் போக்கு புரட்சியைத் தோற்றுவித்தல் கூடும். (இ) எழுதப்பட்ட அரசியலமைப்புச்

சட்டவிதிகளுக்கு முரணான சட்டங்களை நீதிபதிகள் தள்ளுபடி செய்தல் கூடுமாகையால், காலப்போக்கை ஒட்டி நீதிமன்றத் தீர்ப்பு அமையாமல் போதல் கூடும்.

எழுதப்படாத அரசியலமைப்புகளின் நிறைகுறைகள்: இதற்கு மாறாக எழுதப்படாத அரசியலமைப்பு (அ) மாறுதலுக்குள்ளாகும் சமூகச் சூழலுக் கேற்றதாக ஒத்துவருகிறது. (ஆ) அதனுடைய வளைந்து கொடுக்கும் இயல்பு, அதை மீறும் இயல்பைத் தடுத்து, மக்கள் உணர்வை வெளிப்படுத்தக்கூடிய சட்ட இயலான வழிகளைத் தருகிறது. (இ) நெருக்கடி நிலைகளுக்கேற்ப அவற்றை விரிக்கவும், நெருக்கடி நீங்கியபின் அதனைச் சுருக்கவும் இயலுமாகையால், அது நிலையானது. இவை எழுதப்படாச் சட்டத்தின் நிறைகளாம். அதன் குறைகளாவன: (அ) அது நிலையில்லாமல், எப்போதும் மாறும் இயல்பினை உடையது. (ஆ) சில தனியாட்கள், கட்சிகள் ஆகியோரின் விருப்பு வெறுப்புக்கேற்ப அதைத் திருத்த இயலும். (இ) அது நீதிமன்றத்தின் விளையாட்டுக் கருவியாகப் போய்விடும். (ஈ) ஒரு சிலருடைய கருத்தின்படி இந்த அரசியலமைப்பு உயர்குடியாட்சியாளருக்குத்தான் (Aristocrats) ஏற்றதே தவிரக் குடியாட்சியாளருக்கு(Democrats)ஏற்றதன்று.

முடிவுரை: உலகத்தில் எந்த ஓர் அரசின் அரசியலமைப்பும் முற்றிலும் எழுதப்பட்டது என்றோ முற்றிலும் எழுதப்படாதது என்றோ கூறுதல் இயலாது. ஆங்கிலேய அரசியலமைப்பில் எழுதப்பட்ட பகுதிகளுமிருக்கின்றன. எழுதப்படாத, நடைமுறையிலிருக்கிறவடிவங்களும் இருக்கின்றன. அதுபோலவே எழுதப்பட்ட அரசியலமைப்புக்கு எடுத்துக்காட்டாகச் சொல்லப்படுகிற ஐக்கிய அமெரிக்க நாட்டின் அரசியலமைச் புச் சட்டத்திலும், எழுத்துவடிவத்திலில்லாத, ஆனால், நடைமுறையில் பின்பற்றப்படுகிற வழக்காறுகளும் இருக்கின்றன. எனவேதான் அரசியலமைப்புகளை எழுதப்பட்டவை என்றும், எழுதப்படாதவை என்றும் பாகுபாடு செய்தலைவிட அவற்றைத் திருத்தும் முறையை ஆதாரமாகக் கொண்டு, அவற்றை நெகிழ்ச்சியானவை (Flexible), நெகிழ்ச்சியற்றவை (Rigid) என்று பாகுபாடு செய்வதுதான் அறிவியல் சார்ந்த பாகுபாடாகுமென்று இக்காலத்தில் பிரைசு பிரபு (Lord Bryce) போன்ற அரசியலாசிரியர்கள் கூறுகின்றனர். பா.கு.

துணை நூல்கள்:

**Marriott, J.A.R.**, The Mechanism of the Modern State, Oxford, 1927.

**Strong, C.F.**, Modern Political Constitutions, Sidgwick & Jackson, 1930.

**Bryce, J.**, Studies in History and Jurisprudence, Oxford, 1901.

**Sidgwick, H.**, The Elements of Politics, Macmillan, 1908.

**எழுதுதல்**: மனிதன் தன் கருத்துகளைச் சித்திரம் மூலம் என்று வரைந்து வெளிப்படுத்தத் தொடங்கினானோ அன்றே எழுத்துக்கலை தோற்றம் பெற்றுவிட்டது எனலாம். பொழுது புலர்ந்ததும் கீழ்த்திசையில் வட்ட வடிவமான ஒரு தீப்பிழம்பைக் கண்ணுற்றான். அதை மனத்தில் கொண்டு மற்றோர்க்கு அதனைத் தெரிவிக்க எண்ணி வட்டம் ஒன்றைத் தீட்டித் தன் எண்ணத்தை வெளிப்படுத்தியுள்ளான். ஆற்றைப் பற்றி மற்றோர்க்குப் புலப்படுத்த விரும்பியவன் வளைவு ஊடே நிரம்பிய கோடுகளைத் தீட்டிக் காட்டியிருக்கிறான். மலையைக் காண்பிக்க விரும்பியவன் அரை வட்டங்கள் வரிசையாக வரைந்து அவற்றின் மேலேயே ஒன்றை ஒன்று இணைத்துக் காண்பித்திருக்கிறான். இவ்வாறு தன் மனத்தில் எண்ணியதைப் படத்தின் மூலம் மற்றவர்க்குப் புலப்படுத்தக் கையாண்ட முறையே எழுத்துகளின் தோற்றத்திற்குக் காரணமாக அமைந்தது. இந்நிலை, எண்ணத்தை ஒலி மூலம் பிறர்க்கு உணர்த்த முடியாத காலகட்டத்தில் இருந்ததாகும். தம் எண்ணத்தை ஒலி மூலம் உணர்த்தும் நிலை ஏற்பட்ட பிறகும் எழுத்துக்கலை மறையாமல் தொடர்ந்து வந்ததற்குக் காரணம், தம் கண்ணெதிரே காணாத ஒருவருக்கும், நீண்ட தொலைவில் வாழ்கிற ஒருவருக்கும் தம் எண்ணத்தைத் தெரிவிக்கப் படத்தைப் பயன்படுத்திப் பின்னர் நாளடைவில் அவ்வப்போது வளர்ச்சி பெற்ற எழுத்தைப் பயன்படுத்தி வந்தமையேயாகும்.

சித்திர எழுத்துக்கலை எவ்வாறு வளர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும் என்பதை விளக்க வந்த ஏ.சி.ஆடன் என்பார் நான்கு பெரும் மாற்றத்தைத் தெரிவிக்கிறார். அவையாவன. 1. சித்திர எழுத்து 2. கருத்தெழுத்து 3. ஒலி எழுத்து 4. வார்த்தை எழுத்து.

சித்திர எழுத்தாக இருந்த காலகட்டத்தில் ஒவ்வொரு பகுதியிலும் தனிப்பட்ட முறையில் இவ்வெழுத்து வளர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்றும், அவற்றை விளக்கிக் கூற அவ்வப்பகுதி மக்களாலேயே தான் முடிந்திருக்கும் என்றும் கருதுகிறார்.

கருத்தெழுத்தை விளக்குகையில் பல மேற்கோள்களைக் கோடிட்டுக் காட்டுகிறார். ஆமையின் உரு

வம் நிலத்தை மட்டும் குறிப்பதாக இருந்தது. அக் காலகட்டத்தில் ஒரு சீனக் குழுவின் அடையாளமாக வும் ஆகியிருக்கும் என்கிறார்.

சித்திரங்களைப்பார்த்துப் புரிந்து கொண்ட மக் கள் ஒவ்வொரு படத்துக்கும் வரையறுக்கப்பட்ட ஒரு ஒலியைப் பயன்படுத்திக் கருத்துப்பரிமாற்றம் செய்ய முற்பட்ட நிலை தான் ஒலி எழுத்து உருவான நிலை யாகும். வட்ட வடிவத்தைப் பார்த்துச்சூரியன் எனப் புரிந்து கொண்ட மனிதன், அது வெப்பம் தருவது, பகல் பொழுது அதனால் தான் ஏற்படுகிறது என்று கருத்தெழுத்துக் காலத்தில் கருதி இருப்பான். அவனே நாளடைவில் 'சூ' என்ற ஒலியை அதற்கு வரை யறுத்த காலத்தில் ஒலியெழுத்து உருவாக்கியிருக்க முடியும். இந்தக் கருத்தெழுத்து மற்றும் ஒலியெழுத்து வகையைச் சார்ந்ததுதான் அரப்பா நாகரிக எழுத்து என்று வல்லுநர் கருதுகின்றனர்.

மேலே கூறியவாறுதான் எழுத்து வளர்ச்சி பெற் றிருக்க வேண்டும் என்று உலக அறிஞர்கள் அனை வரும் இப்போது கருதுகிறார்கள். ஆனால், இதை ஆயிரம் ஆண்டுகட்கு முன்னமேயே தமிழர்கள் உணர்ந்திருக்கிறார்கள் என்பதை யாப்பருங்கலத்திற்கு உரை எழுதிய ஆசிரியர் தரும் மேற்கோளிலிருந்து உணர முடிகிறது.'வழுவிலோவியன் கைவினை போல, வெழுதப் படுவ துருவெழுத்தாகும்'. 'கொண்டவோர் குறியாற் கொண்டவதனை, யுண்டென் னுணர்வ துணர் வெழுத்தாகும்'. 'இசைப்படு புள்ளின் எழாஅல் போலச் செவிப்புலனாவ தொலியெழுத்தாகும்'.'முதற் காரணமுந் துணைக் காரணமுந் துணைக் காரணத் தொடு தொடரியவுணர்வு மற்றொடு புணர்ந்த அகத் தெழு வளியின், மிடற்றுப் பிறந் திசைப்பது தன்மை எழுத்தே' இம்மேற்கோள்கள் எழுத்தின் வளர்ச்சியை அழகாக விளக்குகின்றன. இந்த நூற்றாண்டில் அறிவார்ந்த முறையில் ஆய்ந்து அளித்திட்ட முடிவு களை ஆயிரம் ஆண்டுகட்கு முன்பாகவே தமிழர்கள் அறிந்து கொண்டிருக்கிறார்கள் என்று அறியும்போது அவர்களின் அறிவுக்கூர்மையை எண்ணி வியக்காமலி ருக்க முடியாது. எழுத்தின் ஒவ்வொரு கட்டவளர்ச் சிக்கும் அவர்கள் அளித்திருக்கின்ற பெயர் உரு வெழுத்து, உணர்வெழுத்து, ஒலியெழுத்து, தன்மை யெழுத்து என நான்கு வகையாகக் கூறப்பட்டுள்ளது.

தாம் கண்ட உருவத்தைத் தெளிவாக மற்றவர் களுக்குத் தெரியப்படுத்துவதற்காக உருவம் வரைந்து காட்டுவது உருவெழுத்து எனப்படும். எடுத்துக்காட் டாக மாட்டினைக் குறிக்க மாட்டின் உருவத்தை வரைந்து காட்டுவதாகும்.

பறவைகள் பறப்பதை அவை எழுப்பும் ஒலியால் உணர்வதைப் போன்று ஒலியால் உணர வைப்பதற்கு உணர்வெழுத்து எனப்படும். ஒலியெழுத்தாவது உரு வெழுத்து, உணர்வெழுத்து ஆகியவற்றின் வளர்ச்சி யாகும். அதற்கு அடுத்த கட்ட வளர்ச்சி தன்மை எழுத்து. இந்த எழுத்துக்கு இன்ன ஒலி என்று வரை யறுத்து எழுதப்படுவதற்குத் தன்மை எழுத்து என்று பெயர். அதாவது உணர்வும் ஒலியும் சேர்ந்து செயற் படுவது தன்மை எழுத்து. வெறும் ஒலியோடில்லாது உணர்வுபூர்வமான ஒலியாக ஒலிக்கும்போதுதான் எழுத்தின் முழுப் பொருளையும் வெளிப்படுத்துவ தாக அமையும். மாடு என்று எழுதப்பட்டுள்ள எழுத்துகளை ஒலிக்கின்றபோதே அவை மாடு என்ற உருவத்தை மனத்தால் உணரச் செய்கிறது. ஆத லால், இது தன்மையெழுத்து என்று வழங்கப் பெற் றது.

இத்தகைய வளர்ச்சி பெற்ற பிறகுதான் இலக்கி யங்களும் இலக்கணங்களும் எழுதப்படலாயின. தமிழ் மொழியின் மிகப் பழைய இலக்கண நூலான தொல் காப்பியம் எழுத்தைப் பற்றிக் கூறுகையில் 'எழுத்து எனப்படுப, அகரம் முதல் னகர இறுவாய் முப்பது என்ப' என்று கூறுகிறது. தொல்காப்பியர் காலத்தில் எழுத்துகள் மிகவும் வளர்ச்சி பெற்ற நிலையில், வரை யறுக்கப்பட்ட நிலையில், இலக்கணம் வகுக்கப்பட்ட நிலையில் காணப்பட்டவையாகும்.

நன்னூலில் 'தொல்லை வடிவின எல்லா எழுத் தும்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நன்னூல் காலத் துக்கு முன்பேயே இவ்வரையறுக்கப்பட்ட நிலை எழுத்து வளர்ச்சியில் ஏற்பட்டு விட்டது என்பதனை உணரலாம்.

வரையறுக்கப்பட்ட தன்மை ஏற்பட்டதும் இவ் வெழுத்துகளை இரு வகையாகப் பிரிக்கின்றனர் மொழியறிஞர்கள். அவை 1) அகரா வகைஎழுத்துகள், 2) உயிர் மெய் வகை எழுத்துகள் என்ற இரு வகை யாகும். அகர வகை எழுத்துகள் என்பது மெய் எழுத்துக்குப் பக்கத்தில் உயிர் எழுத்தைத் தனியாக எழுதுவது. இவ்வெழுத்து வகையில் ஆங்கில எழுத்து சாரும். ஆங்கில எழுத்தில் உயிர்மெய்யான 'க' என்பதைக் காட்டுவதற்கு K+A என்று எழுதப்படு கிறது. இதில் K என்ற மெய்யும் A என்ற உயிரும் உள்ளன. உயிர் மெய் வகை எழுத்துகள் என்பது உயிர் மெய் எழுத்தை, மெய் எழுத்து உயிர் எழுத்து என்று தனித்தனியாக எழுதாமல் உயிர் ஏறிய மெய் யாக ஒரே எழுத்தால் எழுதுவது. தமிழ் எழுத்து உயிர் மெய் வகை எழுத்தைச் சேர்ந்தது. 'க' என்று எழுதுவதற்கு க்+அ என்று எழுதாமல் உயிர் ஏறிய

மெய்யாக 'க' என்று எழுதுவது ஆகும். தமிழ் நாட்டில் காணப்பெறும் குகைக் கல்வெட்டுகளில் மிகப் பழமையாக உள்ளவற்றில் அகர வகை எழுத்துகளைக் காண முடிகிறது. நாளாக நாளாக உயிர் மெய் யெழுத்து வகை எழுத்துகள் இடம் பெற்றுள்ளன. இதைக் கருத்தில் கொண்டு பார்க்கையில் எழுத்து வளர்ச்சியில் தன்மை எழுத்துக்கு அடுத்த கட்ட வளர்ச்சியாக அகர வகை எழுத்துகளும், பின்னர் உயிர் மெய் எழுத்துகளும் வளர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும் என்றும் கருதலாம்.

இந்தியாவைப் பொறுத்த மட்டில் எழுத்துக்கலை இற்றைக்கு 4500 ஆண்டுகட்கு முன்பிருந்தே வளரத் தொடங்கிவிட்டது எனலாம். மொகஞ்சதாரோ, அரப்பா நாகரிகக் காலத்தைச் சார்ந்த முத்திரை களில் காணப்பெறும் சித்திரங்கள் எழுத்துக்கலையின் தொடக்கத்தைக் காட்டுவனவாக உள்ளன. முன்னரே குறிப்பிட்டது போன்ற இச் சித்திரங்கள் கருத் தெழுத்தையும், ஒலியெழுத்தையும் குறிப்பனவாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. இத்தகைய சித் திரங்கள் பொறித்த முத்திரைகள் இந்தியாவில் பர வலாகக் கிடைத்துள்ளன. தென் பகுதியில் குசராத்தி லுள்ள உலோத்தலில் இவை கிடைத்திருக்கின்றன. தமிழகத்தில் தென்னார்க்காடு மாவட்டம், திருக் கோயிலூருக்கருகில் உள்ள கீழ்வாலையில் காணப் படும் வரலாற்றுக் காலத்துக்கு முந்தைய ஓவியங் களில் அரப்பாக் கால முத்திரைகளில் காணப்படு வன போன்ற சில சித்திரங்கள் தீட்டப்பட்டுள்ளன. அதனால், இச்சித்திர எழுத்து ஒரு காலத்தில்இந்தியா வின் அனைத்துப் பகுதிகளிலும் பழக்கத்தில் இருந் திருக்க வேண்டும் என்று கருதலாம். மேலும், தமிழ் நாட்டில் இது பழக்கத்தில் இருந்தது என்பதற்குப் பழங்கால இலக்கியங்கள் எழுத்தைப் பற்றித் தெரி விக்கையில் 'சித்திரம்' என்று குறிப்பிடுவதிலிருந்தே தெரிந்து கொள்ளலாம். தமிழகத்தில் கிடைத்துள்ள ஒரு பானை ஓட்டில் காணப்பெறும் சித்திரம் அரப் பாக் கால முத்திரையில் உள்ள சித்திரத்தைப் போன்று காணப்படுகிறது என்று பினிசு நாட்டறி ஞர் அசுகோ பர்போலோ கூறியுள்ளதிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

அரப்பாக்காலச் சித்திரங்களும், தென்னிந்தி யாவில் கிடைக்கப்பெறும் பெருங்கற்காலப் பானை ஓடுகளில் காணப்பெறும் குறியீடுகளும் (Graffiti) ஒரே மாதிரியாக உள்ளன என்று தொல்பொருள் ஆய்வுத்துறைத் தலைமை இயக்குநராக இருந்த பி.பி. இலால் கூறியிருக்கிற கூற்றும் இங்குக் கொள்ளத் தக்கது. இக்குறியீடுகள் அரப்பாக் காலச் சித்திரங் களின் வளர்ச்சியாக இருக்கலாம் என்று கருதப்படு கிறது.

இதனை அடுத்து இந்தியாவில் காணப்பெறும் எழுத் துகள் கரோட்டி, பிராமி, தமிழ் ஆகிய எழுத்துகளா கும்.இவை இற்றைக்குச் சற்றேறக்குறைய 2400ஆண்டு கட்கு முன்பிருந்து பழக்கத்திலிருக்கின்றன. மொத் தம் 18 வகை எழுத்துகள், கிறித்து சகாப்தத்திற்கு முன்பாக வழங்கி வந்தன என்பதைச் சமண நூல்கள் தெரிவிக்கின்றன. இப்பதினெட்டு வகை எழுத்து களில் மேற்கூறப்பெற்ற மூன்று வகையான எழுத்து களும் சேர்த்துக் குறிக்கப்படுகின்றன. தமிழ் எழுத்து 'தாமிலி' என்று குறிக்கப்பட்டுள்ளது. கரோட்டி என்பது 'கழுதையின் காது' என்று பொருள்படும். கழுதையின் காது போன்ற வடிவில் இவ்வெழுத்துகள் இருந்ததால் இப்பெயர் பெற்றிருக் கலாம் என்று அறிஞர்கள் கருதுகிறார்கள். இவ் வெழுத்து இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் மட்டும்தான் வழங்கி வந்திருக்கிறது. மத்திய கிழக்கு ஆசிய மக்களின் தொடர்பால் இந்தியாவில் இவ்வெழுத்து உருவாகி வழங்கி வந்திருக்கலாம் என்பது ஊகிக்கப்படுகிறது.

மேலே குறிப்பிடப்பட்ட பதினெட்டு வகை எழுத் களில் 'இயவனாலி' அல்லது 'இயவனாவிய' என்று ஒரு வகை எழுத்துக் குறிக்கப்படுகிறது. இது கிரேக்க எழுத்தைக் குறிப்பதாகக் கொள்ளலாம். மௌரியப் பேரரசுக் காலத்தில் கிரேக்க மன்னர்கள் இந்தியா வுக்கு வந்ததும், அப்பொழுது அவர்கள் தங்கள் காசு களில் கிரேக்க எழுத்தையும் பிராமி எழுத்தையும் பொறித்து வெளியிட்டதும் வரலாற்று உண்மை. ஆதலால், அவர்களது எழுத்தைத்தான் இலக்கியங் கள் இயவனாலி எனக் குறிக்கின்றன என்று உறுதி யாகக் கூறலாம். 'தாமிலி' என்று குறிக்கப்படும் எழுத்து தமிழ்நாட்டில் வழங்கி வந்த தமிழ் எழுத்தைக் குறிக்கிறது என்று கருதப்படுகிறது. அவ் வாறெனில் மற்ற எழுத்துகளும் இந்தியாவின் பல் வேறு பகுதிகளில் வழக்கத்திலிருந்த எழுத்துகளைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.

இந்தியாவின் எல்லாப் பகுதியிலுமே, தமிழ்நாடு உட்பட ஒரே வகை எழுத்துதான் வழங்கி வந்திருக் கிறது. அதை ஒவ்வொரு பகுதி மக்களும் தனித்தனிப் பெயரிட்டு அழைத்திருக்கின்றனர். மௌரியப் பேரரசு நிலவிய பகுதியில் அதற்குப் பிராமி என்றும், தமிழ் நாட்டில் தமிழ் என்றும், பிற பகுதிகளில் வேறு பெயர்களினாலும் அழைக்கப் பட்டிருக்கிறது. சமண ஆசிரியர்கள் 'தாமிலி' எனப் பிராகிருத மொழியால் கூறியிருக்கிறார்கள். இக்கால கட்டத்தைச் சார்ந்த தாகக் காணப்பெறும் இந்தியாவின் அனைத்துப்

பகுதி எழுத்தும் ஒரே வடிவில்தான் காணப்படுகின்றன. ஒரு சில எழுத்துகளில் அவ்வப்பகுதிகளில் வழங்கி வந்த மொழிகளுக்கேற்பச் சில மாறுபட்ட எழுத்து வடிவங்களைக் காணமுடிகிறது.

'இலலித விசுதர' என்ற கி.பி. 2-3-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த புத்தமத நூல் அறுபத்து நான்கு வகையான எழுத்துகளைக் குறிப்பிடுகிறது. அது இந்தியாவின் சிறு சிறு பகுதிகளில் எல்லாம் பழக்கத்திலிருந்த அனைத்து வகை எழுத்துகளையும் குறிப்பிடுவதாகத் தெரிகிறது. அங்கலிபி, வங்கலிபி, மகதலிபி என்று ஒவ்வொரு சிறு சிறு பகுதியிலும் வழங்கிய எழுத்தைத் தெரிவிக்கிறது. இதில் தேவலிபி, நாகலிபி, யட்ச லிபி, கந்தருவ லிபி, கின்னர லிபி, அரைலிபி, கருடலிபி, மிருக சக்கரலிபி ஆகிய எழுத்துகளும் காணப்படுகின்றன. தேவர்கள் எழுத்து, நாகர்கள் எழுத்து, உட்ச எழுத்து,அசுரர் எழுத்து என்றும் இருந்ததாகக் குறிப்பிடுகிறது. இவற்றின் விளக்கம் சரியாக விளங்கவில்லை. இவ்வெழுத்துகள் பட்டியலில் பிராமி லிபி, கரோட்டி லிபி, திராவிட லிபி, தட்சிணலிபி என எழுத்துகள் காணப்படுகின்றன. ஆனால், தமிழ் எழுத்து என்று தனியாகக் குறிக்கப்படவில்லை. ஆதலால், திராவிட எழுத்து என்பதைத் தமிழ் எழுத்து என்று கொள்ளலாம் என்ற எண்ணம் ஏற்படுகிறது. தமிழ் நாட்டை வட நூலார் 'திரமிள தேசம்' என்றும் 'திராவிட தேசம்' என்றும் குறிப்பிட்டு வழங்கியிருப்பதால் தமிழ் எழுத்தைப் புத்தமத நூலும் திராவிட லிபி, என்று குறிப்பிட்டுள்ளது என்று கொள்ளலாம். இந்நூல் வடமொழியில் எழுதப்பட்டுள்ளதாலும் இது உறுதியாகிறது.

தமிழ்நாட்டைப்பொறுத்தமட்டில் தமிழ் எழுத்து மிகப் பழங்காலம் தொட்டு அதாவது கி.மு. 4-3-ஆம் நூற்றாண்டிலிருந்து பழக்கத்திலிருந்திருக்கிறது. பாண்டிச்சேரிக்கருகில் உள்ள அரிக்கமேட்டில் கிடைத்திருக்கிற தமிழ் எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ள பானை ஓடுகள் உரோமானியர் காலத்துக்கும் முந்தையது என்பது இப்பொழுது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எகிப்து நாட்டுக் கடற்கரையில் உள்ள துறைமுகம் ஒன்றில் தமிழ் எழுத்துப் பொறிக்கப் பெற்ற பானை ஓடுகள் அண்மையில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் 'சாத்தன்' 'கண்ணன்' என்று எழுதப்பட்டிருக்கின்றன. சிரீலங்காவில் உள்ள யாழ்ப்பாணப் பகுதியில் ஆனைக்கோட்டை என்னுமிடத்தில் ஒரு முத்திரையில் அரப்பாக் காலச் சித்திர எழுத்து ஒரு வரியும் தமிழ் எழுத்து ஒரு வரியும் எழுதப்பட்டுள்ளன. அவ்வாறெனில் இத்தமிழ் எழுத்து தொடர்ந்து தமிழகத்திலும், யாழ்ப்பாணப் பகுதியிலும் வழங்கி வந்திருக்கிறது என்பதை உணரலாம். இத்தமிழ் எழுத்தை வசதிக்காகப் பண்டைத் தமிழ் எழுத்து (Archaic Tamil Script) என்று கூறலாம். இந்த எழுத்தில் பல கல்வெட்டுகளைத் தமிழ் நாட்டில் பரவலாக மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம், ஈரோடு,சேலம்,தென்னார்க்காடு, செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்களில் காணலாம். இந்த எழுத்தில் தான் கி.மு. 4-3 - ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 2-3 - ஆம் நூற்றாண்டு வரை தமிழ் நாட்டில் எழுதி வந்திருக்கின்றனர். தொல்காப்பியம் போன்ற பண்டைய இலக்கண, இலக்கியங்கள் இவ்வெழுத்தில் தான் எழுதப் பெற்றிருத்தல் வேண்டும். இவ்வெழுத்து நேர்கோடுகளையும் படுக்கைக் கோடுகளையும் கொண்டு மிக எளிய வடிவில் எழுதப்பட்டுள்ளது.

இப்பண்டைத் தமிழ் எழுத்தின் வடிவம் கி.பி. 3-4 ஆம் நூற்றாண்டளவில் மாற்றம் பெறத் தொடங்குகிறது. கல்லில் உளியாலும், துகிரிகை கொண்டு வண்ணத்திலும் எழுதி வந்த தமிழர்கள் ஓலையில் எழுத்தாணி கொண்டு எழுதத் தொடங்கிய காரணத்தால் இவ்வடிவ மாற்றம் தொடங்கி இருக்கலாம் என்று கருதலாம். எழுத்தாணியால் ஓலையில் நேர்கோடுகளையும் பக்கக் கோடுகளையும் எழுதினால் ஓலை கிழிந்து விடக்கூடிய நிலை ஏற்படும். அதைத் தவிர்க்கும் நோக்குடன் நேர்கோடுகளிலும், பக்கக் கோடுகளிலும் சிறு வளைவுகளைச் சேர்த்து எழுதத் தொடங்கியிருக்கின்றனர். இம்மாற்றத்தை அரச்சலூர்,ஈரெட்டிமலை,பூலாங்குறிச்சிக் கல்வெட்டுகளில் நன்கு காண முடிகிறது. பின்னர் நாளடைவில் மேலும் மேலும் வளைவுகளைப் பெற்று 'வட்டெழுத்து' என்று அழைக்கிற அளவுக்கு மாற்றம் பெற்றுவிட்டது. முழு வட்ட வடிவம் பெற்ற தமிழ் எழுத்துகளை கி.பி.8-9- ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு காண முடிகிறது. வேள்விக்குடி, சீவரமங்கலம், சின்னமனூர்ச் செப்பேடுகளில் இவ்வெழுத்தைப் பார்க்கலாம். இவ்வெழுத்து இவ்வாறு வளைவு பெற்றதால் சில எழுத்துகள் வேறுபடுத்திப் புரிந்துகொள்ள முடியாதபடி எழுதப்பட்டுள்ளன. ப,ம,ய,வ ஆகிய எழுத்துகள் மிகச் சிறு வேறுபாட்டோடு எழுதப்பட்டுக் காணப்பெறும். அதே போன்று ண,த,ற போன்ற எழுத்துகளுக்கும் அதிக வேறுபாடு காண முடியாது. கி.பி. 17-18-ஆம் நூற்றாண்டளவில் எழுதப்பட்டிருக்கும் இவ்வெழுத்தைக் காணில் படிப்பதென்பது மிகவும் கடினம். காரணம் அனைத்து எழுத்துகளும் வடிவில் ஒன்று போன்றே தோன்றும். இவ்வெழுத்து மிகப் பிற்காலம் வரை தமிழகத்தின் தென்கோடிப் பகுதியிலும், கேரளப் பகுதியிலும் வழங்கி வந்திருந்தாலும் தமிழகத்தில் மற்றப் பகுதிகளில் இவ்வெழுத்துப் புரியாத

எழுத்தாகத் தமிழக மக்களுக்கு, கி.பி. 11-12 ஆம் நூற்றாண்டிலிருந்து ஆகியிருக்கிறது. அதற்குக் காரணம் அப்பகுதிகளில் மற்றொரு வகை எழுத்து உருவாகத் தொடங்கியதேயாகும்.

இந்த மற்றொரு வகை எழுத்தே இன்றுதமிழ் எழுத்து என்று அழைக்கப்படுகிறது. இவ்வெழுத்தும் கி.பி.3–ஆம் நூற்றாண்டளவிலேயே வளரத் தொடங்கினாலும், கி.பி. 6–7 ஆம் நூற்றாண்டில்தான் அதிக அளவில் பயன்படுத்தத் தொடங்கப்பட்டிருக்கிறது. இந்த எழுத்து உருவாவதற்கு முழு முதற் காரணம் சமசுகிருத மொழியும் கிரந்த எழுத்தும் அவற்றைக் கையாண்ட பல்லவர்களுமே ஆகும். சிம்மவர்மனின் பள்ளங்கோயில் செப்பேட்டிலும், மகேந்திரவர்மன் காலத்திய வல்லம் குடைவரைக் கோயிற் கல்வெட்டிலும், இவ்வெழுத்தை முதன் முதலில் காணலாம். மன்னர் பாண்டி நாட்டில் மலையடிக்குறிச்சியில் உள்ள சேந்தனின் கல்வெட்டில் இவ்வெழுத்தைக் காண முடிகிறது. பல்லவர்கள் தம் செப்புப் பட்டயங்களிலும், குடைவரை மற்றும் கட்டடக் கோயில்களிலும் சமசுகிருத மொழியை எழுதக் கிரந்த எழுத்தைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். அதை ஒரு பெருமையாகக் கருதிய பாண்டிய மன்னர்களும் தங்கள் செப்புப் பட்டயங்களிலும், சில குடைவரை மற்றும் தனிப்பட்ட கல்வெட்டுகளிலும் சமசுகிருத மொழியையும் கிரந்த எழுத்தையும் பயன்படுத்தியிருக்கின்றனர். எடுத்துக்காட்டாக வேள்விக் குடிச் செப்பேடு, ஆனைமலை, திருப்பரங்குன்றம் குடைவரைக் கோயிற் கல்வெட்டுகள் மற்றும் வைகைக்கரைக் கல்வெட்டு ஆகியவற்றைக் காட்டலாம். கிரந்த எழுத்தில் சிலவும், புதியனவாக உருப்பெற்ற தமிழ் எழுத்துகள் சிலவும் ஒன்று போலவே காணப்படுன்றன. அது மட்டுமல்லாமல் பாண்டிய மன்னர்கள்செப்பேடுகள் சிலவற்றில் சமசுகிருதப்பகுதியில் தமிழ்ச் சொல்லை எழுதுவதற்கு வட்டெழுத்துக் குப்பதிலாக மற்றொரு வகைத் தமிழ் எழுத்தைஎழுதியிருப்பதிலிருந்தே மற்றொரு வகைத் தமிழ் எழுத்திற்கும் கிரந்த எழுத்திற்கும் இருந்த தொடர்பைத் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

இவ்வகைத் தமிழ் எழுத்து சோழர் காலத்தில் பெரு ஆதரவைப் பெற்றது. சோழர்கள் தாங்கள் வென்ற பகுதிகளிலெல்லாம் இவ்வெழுத்தைப் பயன்படுத்த வலியுறுத்தினர். அதன் காரணமாக மற்றொரு எழுத்தான வட்டெழுத்து மறையத் தொடங்கியது. பல்லவ மன்னர்களும் சோழ மன்னர்களும் தங்கள் செப்பேடுகளில் இப்புதிய தமிழ் எழுத்தைத்தான் பயன்படுத்தியிருக்கின்றனர். அதிலிருந்தே அவர்களின் ஒருமித்த பேராதரவு இப்புதிய தமிழ் எழுத்துக்குத் தான் கிடைத்திருக்கிறதென்பது வெளிப்படை. இவ்வெழுத்தைப் பிற்காலப் பாண்டியர்களும் பயன்படுத்த வேண்டிய கட்டாயநிலை ஏற்பட்டுவிட்டது. ஏனெனில், தாங்கள் வெற்றி கண்ட சோழநாடு, தொண்டைநாட்டுப் பகுதிகளில் இப்புதிய தமிழ் எழுத்தைத்தான் பயன்படுத்த வேண்டியதாயிற்று. காரணம், இப்பகுதி மக்கள் முற்றிலும் பழைய தமிழ் எழுத்தான வட்டெழுத்தை மறந்து விட்டதே ஆகும். ‘புரியாத வட்டம் ஆகையால் அதைத் தமிழாகப் படுத்தி’ எழுதப்பட்டன என்று சில கல்வெட்டுகள் தெரிவிப்பதிலிருந்தே கி.பி. 11–12–ஆம் நூற்றாண்டளவில் வட்டெழுத்து அதாவது பழைய தமிழ் எழுத்து, மக்கள் புரிந்து கொள்ள முடியாத நிலையை எய்தி விட்டது என்பதை உணரலாம். ஆனாலும், அவர்கள் தென்பாண்டிநாட்டில் தங்கள் கல்வெட்டுகளில் வட்டெழுத்தை அதாவது பழைய தமிழ் எழுத்தைப் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

பிற்காலப் பாண்டியர்களுக்குப் பின்னர் வந்த விசயநகர மன்னர்களும் பல்லவர்களைப் போன்றே ஆந்திரப் பகுதியிலிருந்து வந்தவர்கள்; சமசுகிருத மொழிக்கும் கிரந்த எழுத்துக்கும் சிறப்பினைத் தருபவர்கள். ஆதலால், இவர்களும் புதியதமிழ் எழுத்தையே தங்கள் கல்வெட்டுகளில் பயன்படுத்தினர். அது மட்டுமல்லாமல் மற்றவர்களைக் காட்டிலும் இவர்கள் ஒரு படி மேலே போய்க் கிரந்த எழுத்தையும் புதிய தமிழ் எழுத்தையும் சேர்த்தே கல்வெட்டுகளில் எழுதலாயினர்.

அவர்களை அடுத்து வந்த நாயக்க மன்னர்களும் இப்புதிய தமிழ் எழுத்தையே பயன்படுத்தினர். ஆதலால் புதிய தமிழ் எழுத்து பொலிவோடும் வலிவோடும் தொடர்ந்து தமிழகத்தில் வழங்கி வரும் நிலை ஏற்பட்டு விட்டது. அச்சு இயந்திரம் வந்து விட்ட இந்நாளில் இனி இவ்வெழுத்து முறையில் எந்தவித மாற்றமும் ஏற்பட வாய்ப்பில்லை. ஆதலால் இத்தமிழ் எழுத்தே இனி என்றென்றும் செங்கோலோச்சும் என்று நம்பலாம். நடன.கா.

**எழுநிலை மாடம்**: மலைக் குகை மாந்தனுடைய முதல் வீடு; மரக்கிளை அவனுடைய வீடு. கிளைகளில் பரண் கட்டித் தளம் அமைத்தான். மேலே தழைத்த இலைக் கொத்துகளே கூரையாயின. இவ்வாறு கட்டி இடம் கொண்டான். கட்டு இடம் ‘கட்டிடம்’ ஆயிற்று.

நிலத்திலும் கம்புகளால் தடுப்புச் சுவர் கட்டி இலைகளால் கூரை இட்டான். இது ‘உவலைக் கூரை’ எனப்பட்டது. கூரை குரம்பை ஆகி, இலை வேயப்

பட்டு 'இலைவேய் குரம்பை' என்றும், புல் வேயப்பட்டுப் 'புல்வேய் குரம்பை' என்றும் தினைத்தட்டை வேயப்பட்டு 'இருவிக் குரம்பை என்றும் வழங்கப்பெற்றது. அடுத்து, பசுமை காய்ந்து வாடிய ஈச்சை, தெங்கு, பனை மடல்களால் கூரையிடப்பட்டது. இது பொருந்தி வாழவும், நிலைத்து வாழவும் தக்கதாகி மன்+ஐ – 'மனை' பிறந்தது.

மண்ணைச் சுட்ட செங்கற்களால் மனை எழுந்து 'சுடுமண் ஓங்கிய நெடுமனை' ஆயிற்று. அது வாழ்விற்குரிய பல்வகை மாட்சிமை உடையதாய்ப் 'பன்மாண் நல் இல்' என்றும், பொருள்கள் நிறைந்து, கண்ணுக்கினிய கலைகள் புனையப்பட்டதாய்க் 'காண்பின் நல் இல்' என்றும் 'இல்லம்' தோன்றிற்று.

காண்பின் நல் இல்லம், முன் மண்டபம், தெற்றி என்னும் திண்ணை, கூடம், தாய்க்கட்டு, அடுக்களை எனப் பலவகைப் பகுதிகள் அமையப்பெற்றது. காற்றிற்காகச் சுவரில் சிறு துளைகள் பல இடப்பட்டன. இவ்வமைப்பை 'வகைபெற எழுந்து வானம் மூழ்கிச், சில்காற் றிசைக்கும் பல்புழை நல் இல்' என்று பாடியது மதுரைக் காஞ்சி (357, 358).

இல்லத்தில் மேற்குறிக்கப்பட்ட பல்வகைப் பகுதிகளோடு கொட்டகாரம், பண்டசாலை, பள்ளியம்பலம், உரிமையிடம், கூத்தப்பள்ளி முதலிய இடப்பகுதிகள் அமைந்து விரிந்தும் பரந்தும் உயர்ந்தும் மாளிகை தோன்றிற்று. இதில் மானின்கண் வடிவத்தில் காலதர் (கால் - காற்று; அதர் – வழி) என்று காற்று வரும் சாளரங்கள் பல அமைந்தன.

வான்நோக்கி உயர்த்திக் கட்டுவதில் தமிழனது எண்ணம் வளர்ந்தது. இவ்வெண்ணத்தால் 'மாடம்' என்னும் கட்டடம் (கட்டு + அடம்) பிறந்தது. இக்காலம் இது மாடி என வழங்கப்படுகிறது. 'பன்மாண் நல் இல்' என இல்லம் மாண்புடன் குறிக்கப்பட்டது. 'மாளிகை' என்னும் சொல்லிலும் 'மாடம்' என்னும் சொல்லிலும் மாண் வேர்ப் பகுதியாக அமைந்து குடியிருப்பின் வளர்ச்சி, மாண்புடன் வளர்ந்ததைக் காட்டுகிறது.

தழையையும் புல்லையும் ஓலையையும் வேய்ந்து கட்டிய மனைகள் நிற்க ஒன்றையும் வேயாது இம்மாடம் அமைந்தது. 'கற்றை முதலியவற்றால் வேயாது சாந்திட்ட மாடம்' என்று நச்சினார்க்கினியரும், 'தட்டு ஓடு இட்டுச் சாந்து வாரப்பட்டது' என்று அரும்பதஉரைகாரும் மாடத்தை விளக்கினர். இதனை 'வேயா மாடம்' என்று சிலம்பு பாடிற்று. மாளிகையின் வாயில் சுதையாலான பல்வகைச் சிற்பங்களுடன் கோபுர அமைப்பில் கட்டப்பட்டது. 'கோபுரமின்றி வாசலை மாடமாகவும் அமைத்தலின் மாடம் என்றார்' என நச்சினார்க்கினியர் பொருள் விளக்கந்தந்தார். மாடத்தோடு அமைந்ததால் 'மாட மாளிகை' என்று பெயர் வழக்காயிற்று.

மாளிகையின் ஒரு பகுதியாக அன்றித் தனியாகவும் மாடம் கட்டப்பட்டது. இவ்வகையில் மாளிகை வேறு மாடம் வேறு. மாளிகை வாழ்விடம்; மாடம் இன்பப் பள்ளியறைகளின் அடுக்குநிலைக் கட்டிடம். மாடம் உயர்ந்து விளங்கியதால் 'நெடுநிலை மாடம்' என்றும், அடுக்கு நிலையாக அமைந்ததால் 'நிரை நிலை மாடம்' என்றும் குறிக்கப்பட்டது. நிரைநிலை மாடம் ஏழு அடுக்குக் கொண்டது. இதுவே 'எழு நிலை மாடம்'.

ஏன் ஏழு அடுக்குகளைக் கொண்டதாகக் கட்டப்பட்டது என்னும் வினாவிற்குக் கிடைக்கும் விடை தமிழரது கட்டடக் கலையின் சிறப்பையும், இன்பம் செறிந்த வளத்தோடுகூடிய வாழ்வையும் வெளிப்படுத்துகிறது.

தமிழர் ஓராண்டுக் காலத்தை இரண்டிரண்டு திங்களாகப் பகுத்து இளவேனில், முதுவேனில், கார், கூதிர், முன்பனி, பின்பனி என ஆறு பருவங்களாகக் கொண்டனர். இந்தஆறு பருவங்களிலும் இன்ப இருப்பிடமாகப் பயன்பட்டது எழுநிலை மாடம். அடித்தளம் சரக்கு அறையாகவும், பொது அறையாகவும் அமைந்தது. மேலெழுந்த ஆறு மாடங்களும் ஆறுபருவங்களுக்குரிய பள்ளியறைகளைக் கொண்டவை. எனவே, இவற்றைப் 'பருவ காலப் பள்ளியறைகள்' என்று சொல்லலாம்.

சங்க இலக்கியங்கள், சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி ஆகிய நூல்கள் தரும் கருத்துகளின் ஆய்வைக் கொண்டு எவ்வெம்மாடம் எவ்வெப் பருவத்திற்கு அமைந்தது என்பதையும், எவ்வெவ்வகையான பயன்படு பொருள்களைக் கொண்டிருந்தது என்பதையும் அறியமுடிகிறது. இவை மட்டுமன்றி அவ்வப்பருவத்திற்கு வேண்டிய தட்ப வெப்பங்களைத் தரும் அமைப்பிலும் கட்டடப்பாங்கு அமைந்திருந்தது குறிக்கத் தக்கதாகும். அறிவியற் புதுமை பொலியும் இக்காலத்து அறைகளுக்கு வேண்டிய குளிர்பதனம், வெப்பப்பதனங்கள் அறைகளில் பொருத்தப்படும் மின்பொறிகளால் கிடைக்கின்றன. அக்காலத்து எழுநிலை மாடத்தில் பள்ளியறைகளுக்கு வேண்டிய பதனங்கள் கட்டட அமைப்பாலும் கலவைச் சாந்துப் பூச்சுகளாலும் சேர்க்கப்பட்டன. இது கட்டடக் கலையில் நினைந்து பார்த்துப் பெருமைப்படக்கூடிய ஒன்று.

பின்வருமாறு பருவத்திற்கேற்ற பள்ளியறைகளையும் பயன்படு பொருள்களின் அமைப்பையும் காணலாம்.

முதல் தளம் சரக்கறை எனப்பட்டது. இரண்டாம் தளம் கார்ப்பருவப் பள்ளியறையாகும். இப்பள்ளியறையில் கார்காலத்திற்கேற்ற பொருள்கள் உள்ளன. மணிக்கால் கட்டில்; அதன்மேல் மெத்தென்ற அணை. ஒரு மூலையில் மெல்லிய அகிற்புகைச்சட்டி, மணத்தையும் கதகதப்பையும் தருவதற்கு வைக்கப்பட்டிருந்தது. விரிப்பு, அணிகலன்கள், மலர் எல்லாம் செம்மை நிறத்தனவாக இருந்தன.

மூன்றாம் தளம் கூதிர்ப்பருவப் பள்ளியறையாகும். இவ்வறையில் சாளரங்கள் குறுங்கண் கொண்டவை. இவற்றையும் அடைப்பதற்கு அடைப்பான்கள் உண்டு. இறுக மூடிக் கொள்ளும் கதவுகளைப் பெற்றது. அன்னத் தூவிகள் அடைக்கப்பட்ட அணைகள் கிடக்கும். மயிற்கம்பளங்கள், தடித்த நீல நிறப்பட்டாடைகள் இடம் பெற்றிருக்கும். கூதிர்க்கு ஏற்ற வெப்பம் ஊட்டுவதற்குச் சுடுமண்ணாலாகிய 'தடா' என்னும் 'சால்' உண்டு. அதில் சந்தன விறகால் நெருப்பு மூட்டப்படும். வெப்பம் அனலாக வாராமல் மணத்தோடு வருவதற்காகத் தடா முன்னே 'தடவுத் திரை' என்னும் ஒரு புகை வடிகட்டும் திரைச்சீலை தொங்க விடப்பட்டிருந்தது.

நான்காம் தளம் இளவேனிற் பள்ளியறையாகும். பள்ளியறையின் சுவர்கள் எல்லாம் பளிங்கால் ஆனவை; மான் கண் காலதர்கள் உள்ளவை. வீதி உலாக்களைக் காண 'நேர்வாய்க் கட்டளை' என்னும் அமைப்பு இருந்தது. கட்டடத்தின் வெளிப்புறம் புடைப்பாக, தேரின் தோற்றத்தில் அமைந்தது 'நேர்வாய்க் கட்டளை'. இப்பருவத்திற்கு ஏற்ப உருவாக்கப்பட்ட 'கச்சுக்கட்டில்' அல்லது 'வட்டக் கட்டில்' போடப்பட்டிருக்கும். ஒரு புறம் நீராடும் முற்றம் இருக்கும். அதில் நீர் ஊற்று பனி நீரைச் சிதறும். இத்தளத்தில் நிலாமுற்றம் உண்டு.

ஐந்தாம் தளம் முதுவேனிற் பள்ளியறையாகும். முதுவேனில் வெப்பம்மிக்க கோடைக்காலம் ஆகையால் சிறு சாளரங்கள் இல்லை. காற்றுப் போவதற்குத் திறந்த வழியாய், 'கால் போகு பெரு வழி' விடப்பட்டிருக்கும். பாம்புச் சட்டை போன்ற மெல்லிய ஆடைகள், முத்து, சந்தனம், ஆல வட்டம், முல்லை, மல்லிகை மாலைகள், நிலவுப் பயன் கொள்ளும் நிலா முற்றம் ஆகியவை உள்ளன.

ஆறாம் தளம் முன்பனிப் பள்ளியறை. இங்குச் சாளரம்-காலதர் இல்லை. சிறு புழைகளே உள்ளன. கணப்புக் கலத்திலிருந்து மணப்புகை வெளிவரும். இப் பள்ளியறையில் மாடத்தின் கிழக்கில் நீட்டிக் கட்டப்பெற்ற முற்றம் உண்டு. இது பனிக் காலக் குளிரைப் போக்க வெயில் காயும் முற்றமாகும்.

ஏழாம் தளம் பின்பனிப் பள்ளியறையாகும். இப்பள்ளியறை மேல் உயர்ந்திருப்பதால் பனிக் குளிரைத் தடுக்கும் காப்புச் சுதையால் சுவர் பூசப்பட்டது. செந்நெருப்புப் போன்ற எலிமயிர்க் கம்பளங்கள் கிடந்தன.

இவ்வாறாகப் பருவத்திற்கு ஏற்ற சுவர்ப் பூச்சுகள், துளைகள், சாளரங்கள், பயன்படு பொருள்கள் அமையப் பெற்றதால் இவ்வெழு நிலை மாடம் பருவ காலப் பள்ளியறை கொண்டது என்று சொல்லலாம். பூம்புகாரில் எழுந்துள்ள சிலப்பதிகாரக் கலைக்கூட முகப்பு ஓரளவில் எழுநிலை மாட அமைப்பில் கட்டப்பட்டுள்ளது. கோ. இ.

**எழுநூற்று மங்கலம்:** பாண்டி நாட்டிலுள்ள ஓரூர். மதுரைச் சொக்கநாதப் பெருமான் ஆளுடை அடிகள் எனப்படும் மாணிக்கவாசகர் பொருட்டு நிகழ்த்திய நரிபரியாக்கிய திருவிளையாடற் செய்தி அடிப்படையில் இப்பெயர் அமைந்தது என்பது கூறப்படுகிறது. பாண்டி மன்னனுக்காக, அமைச்சராக விளங்கிய மாணிக்கவாசகர் குதிரை வாங்கிவரச் சென்று, திருப்பெருந்துறையில் சிவபெருமானால் ஆட்கொள்ளப்பட்ட நிலையில், குதிரை வாங்குதற்கான செல்வமனைத்தையும் திருக்கோயிற் பணியில் செலவிட்டிருத்தலையும், குதிரைகள் வாராமையினையும் அறிந்த மன்னன் அவரைத் தண்டனைக்குட்படுத்தினான். மணிவாசகர் வேண்டுகோளை ஏற்று, அவருக்கு உதவி புரிய விரும்பிய இறைவன் காட்டிலுள்ள நரிகளையெல்லாம் உயர்ந்த குதிரைகளாக ஆக்கித் தாமே அவற்றை அரசன்பால் கொண்டு சென்றார் என்று அத்திருவிளையாடற் செய்தி கூறுகிறது. காட்டிலிருந்த எழுநூறு நரிகளைத் திரட்டி அவற்றைக் குதிரைகளாகச் செய்த இடம், அதன் காரணமாக எழுநூற்று மங்கலம் என வழங்கப்பெற்றதாகக் கூறப்படுகிறது. இவ்வூர், 'மதுரையில் ஆளுடையார் கோயிலுக்குத் தெற்கே இரு நாழிகை வழிதூரத்தில்' உள்ளது என்று குறிப்பிட்டுள்ளனர். மணிவாசகர் பொருட்டு இறைவன் நரி பரியாக்கிய வரலாற்றினை விரிவாகக் கூறும் பரஞ்சோதி திருவிளையாடற் புராணம், திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம், திருவாதவூரர் புராணம் ஆகிய நூல்களில் எழுநூற்று மங்கலம் பற்றிய குறிப்போ, அவ்விடத்தில் இறைவன் நரி பரியாக

ஆக்கியமை பற்றிய குறிப்போ இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அ.மா.ப.

**எழும்பூர்** சென்னை மாநகராட்சிப் பகுதிகளுள் முக்கியமான ஒன்றாகவும் தமிழகத்தின் தென்பகுதி களிலிருந்து வரக்கூடிய இருப்புப்பாதைகளின் சந்திப்பாகவும் உள்ளது. இது ஏறத்தாழ 250 ஆண்டு களாகவே முக்கிய பகுதியாயிருந்து வந்துள்ளது. தம் பாதுகாப்புக்கெனக் கருப்பு நகரில் (Black Town) கோட்டை கட்டிக் கொண்டபின்னர், ஆளுநர் தாமசு பிட்டு (Thomas Pitt) என்பவர் ஒரு கோட்டையைக் கட்ட முயற்சி செய்தார். ஆளுநர் பிரேசர் (Fraser) கி.பி. 1710-இல் அப்பகுதியின் மேடான தன்மை காரணமாகப் பாதுகாவல் படைகளை வைத்துக் கொள்ள 100 X 100 கச அளவில் சதுர வடிவில் ஒரு கோட்டையைக் கட்டினார். ஒரு தூள் ஆலை (Powder Mill) கி.பி. 1772-இல் 7500 பகோடா செலவில் கட்டப் பட்டது; அரசு அச்சுக்கூடம் கி.பி. 1800-இல் நிறுவப் பட்டது. ஆங்கிலக் கிழக்கிந்திய வணிக நிறுவன நெறியாளர்கள் 1900-இல் அப்பகுதியைத் தென்னிந்திய இருப்புப்பாதை நிறுவனத்திற்கு விற்றுவிட்டனர். அப்பகுதியின் வளர்ச்சிக்கும் விரிவாக்கத்திற்குமென கி.பி. 1774-ஆம் ஆண்டிலேயே 6 முதல் 15 ஏக்கர் வரையுள்ள நிலப்பகுதிகள் 4 முதல் 7 பகோடாக்கள் வரை வாடகைக்குத் தரப்பட்டன. தனிப்பட்ட செல்வர்களும் தங்கள் இல்லங்களை அப்பகுதிகளில் கட்டிக் கொண்டனர். குதிமுள் போன்ற வடிவில் அமைந்த குளம் (Spur Tank) ஒன்று வெட்டப்பட்டு, அப்பகுதியின் நீர்த்தேவை சமாளிக்கப்பட்டது. இன்றும் எழும்பூர்ப் (Egmore) பகுதி ஆவணக் காப்பகம், காவல் துறையின் போக்குவரத்துப் பிரிவு அலுவலகம் போன்ற அலுவலகங்களுடன் நெருக்கடி மிகுந்த முக்கிய பகுதியாகத் திகழ்கிறது. மா.கா.

**எழுவகைப் பருவ மகளிர்**: என்பார் பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என்போராவார். மகளிரைப் பருவ வகையாற் பிரித்துரைக்கும் வழக்கம் சங்க காலத்திலேயே தோன்றியது என்பதை, 'பேதையல்லை மேதையங் குறுமகள், பெதும்பைப் பருவத்து ஒதுங்கினை புறத்து' என்னும் அகநானூற்றுப் பகுதியால் உணரலாம். 'பேதை என்றது பருவம் பற்றியன்று, மடமை பற்றி' எனவரும் பரிமேலழகர் உரையாலும், 'மடந்தை, பருவமன்று, பெண்பாற் பெயர்' எனவரும் அடியார்க்கு நல்லார் உரையாலும், பெருங்கதையில் இடம்பெறும் எழு பருவ மகளிர் பற்றிய குறிப்புகளாலும் இப்பருவப் பெயர்கள் தொடர்ந்து இலக்கியங்களில் பேசப்பட்டன என்பதை அறியலாம்.

காப்பியத் தலைவர்கள் உலா வருவதும் அவரைக் கண்டு பல பருவ மகளிர் பாராட்டி இன்புறுவதும் சுவையுடன் எடுத்துக்கூறப்பட்டன. இவ்வாறு கண்டு பாராட்டும் மகளிருள்ளும் எழுபருவ மகளிர் அத் தலைவர்கள் அழகிலும் பிறநலங்களிலும் ஈடுபட்டார்கள் என்று கூறுவது காப்பிய மரபாகக் கருதப்பட்டது. பெருங்காப்பியங்களில் இடம்பெறும் உலா நிகழ்ச்சிகள் பிற்கால ஆசிரியர்களால் 'உலா' என்னும் தனி நூலாக இயற்றப்பட்டன. பாட்டுடைத் தலைவர்கள் வீதியில் உலா வருகையில் எழுபருவ மகளிரும் அவரைக் கண்டு காமுற்றுக் கலங்கியதாய் அவ்வுலாக்களில் புனைந்து பாடப்பட்டது.

உலாவிற் கூறப்படும் எழுபருவ மகளிரும் பொது மகளிர் என்பதை, இனி ஊரொடு தோற்றமும் பரத்தையர்க்கன்றிக் குலமகளிர்க்குக் கூறப்பட்டது அன்று என்னும் நச்சினார்க்கினியர் கூற்றால் அறியலாம். கற்புடை மகளிர் பிறரைக் கண்டு காமுறுதல் அறமன்று என்பதால் இவ்வரையறை அமைந்ததாகக் கொள்ளலாம். உதயணன் உலா வந்த காலத்தில் 'உத்தம மகளிர் ஒழிய மற்றைக் கன்னிய ரெல்லாம்' அவனைக் கண்டு காமுற்றனர் எனக் கொங்குவேளிர் கூறுவர்.

எழுபருவ மகளிரின் வயது வரையறை வருமாறு: 5 முதல் 8 வரையில் பேதைப் பருவம்; 9 முதல் 10 வரை பெதும்பை; 11 முதல் 14 வரை மங்கை; 15 முதல் 18 வரை மடந்தை; 19 முதல் 24 வரை அரிவை; 25 முதல் 29 வரை தெரிவை; 30 முதல் 36 வரை பேரிளம்பெண். இவ்வயது வரையறையில் பாட்டியல் நூல்களுள்ளும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. அவ்வப் பருவ மகளிரை வருணிக்கும்போது அவரவர்க்குரிய ஆடல்களை அம்மகளிர் பயில்வதாக அமைத்தல் உலா மரபாகும். சிற்றில், பாவை, கழங்கு அம்மானை, ஊசல், பைங்கிளி, யாழ், புனலாட்டு, பொழிலாட்டு, நன்மது நுகர்தல் போன்றனவும் பிறவும் இவர்தம் செயல்களாகப் பன்னிருபாட்டியல் கூறுகிறது.

எழுபருவ மகளிரின் இயல்புகள் உலா நூல்களுள் சிறப்புற எடுத்துக் கூறப்படுகின்றன. பேதைப் பருவம் உலகியலை அறியாத இளம் பருவம். இப்பருவத்தினர் மழலை மொழி பேசுவோர் என்றும், இவர்தம் பார்வை 'காமஞ் சாலா ஏமப் பார்வை' என்றும் கூறுப. பெதும்பைப் பருவம் உலகியலை ஒருவாறு உணர்ந்தும் உணராமலும் உள்ள பருவமாகும். அறிவும் அறியாமையும் கலந்த பருவமாதலின் இப்பருவத்தின் இயல்புகளைப் பாடுதல் அரிது என்பது பற்றிப் 'பேசும் உலாவிற் பெதும்பை புலி' என்று புலவர்

கூறுவாராயினர். இப்பருவமுடையார் காமத்துக்கு உணர்ச்சியால் தக்கவர்; பருவத்தால் தகாதவர்.

மங்கைப் பருவம் காம நுகர்ச்சிக்கு ஏற்புடைப் பருவம். இப்பருவத்தார் தம்மைக் காணும்ஆடவர்க்கு நோய் தந்து அந்நோய்க்குத் தாமே மருந்தாகி நிற்பர். மடந்தைப் பருவத்தினர் காம நுகர்ச்சியில் பயின்றவர். அரிவையரும் தெரிவையரும் காமத்துறையில் பயிற்சி மிக்குடையவராதலின் யாவரையும் எளிதில் ஈர்க்கும் தன்மையர். பேரிளம் பருவத்தினரோ முன்பு தம் ஆற்றலை வெளிப்படுத்தி ஆடவர் பலரைவென்று இப்போது அதற்கு வாய்ப்பின்றிக் காமவடக்கத்துடன் அவ்வுணர்ச்சி தளரும் நிலையினர். உலா நூல்களில் இடம்பெறும் மேற்காணும் எழுபருவ மகளிரின் செயல்களையும் மனவியல்புகளையும் விரித்துக் கூறும் பகுதி 'பின்னிலை' எனப் பெயர் பெறுகிறது. இரா.செ.

**எழுவகை மதம்** என்பது ஏழுவகைப்பட்ட கொள்கைகள் எனப் பொருள்படும். மதம் என்னும் வடமொழிச் சொல்லுக்குத் தமிழில் கொள்கை என்பதே நேர்பொருளாகும். இங்கு மதங்கள் என்பது சமயங்களைக் குறிப்பதாகாது. இலக்கணக் கொள்கைகள் பற்றி ஆசிரியர்களிடம் தோன்றும் கருத்து நிலைகளைக் குறிப்பதாகும்.

உலகில் பல்வேறு வகையான கொள்கையினர் இருக்கின்றனர். எல்லாக் கொள்கைகளும் எல்லோருக்கும் உடன்பாடுடையனவாக அமையா. அவற்றுள் சில கொள்கைகள் சிலருக்குப் பிடிக்கும்; சிலருக்குப் பிடிக்கா. இவ்வாறு வேறுபாடு தோன்றும் நிலையில் முந்தையோர் கருத்தினை ஏற்றுக் கொள்ளுதல், மறுத்தல் முதலிய வகையில் பின்னையோர் கொள்ளும் நிலையே மதம் எனவும், அத்தகைய மதங்கள் ஏழு எனவும், பிற்கால இலக்கண நூல்கள் வரையறை செய்துள்ளன.

தொல்காப்பியத்தில் எழுவகை மதம் பற்றிய குறிப்பில்லை. ஆனால், தொல்காப்பிய உரைகளில் மதம் பற்றிய கருத்துகள் ஆங்காங்குக் காணப்பெறினும் நன்னூலார் காலத்துத்தான் எழுவகை மதம் என்ற வரையறை தோன்றியது. பவணந்தியார் அதனைத் தம் நன்னூலில் இலக்கணப்படுத்தியுள்ளார். (நன். பொதுப். நூ. 11)

ஒருவர் ஒரு கருத்தைக் கூறினால் அதனை ஒப்புக்கொள்வதற்கு (1) 'உடன்படல்' என்பது பெயராகும். ஒருவர் கூறிய கருத்தை ஒப்புக் கொள்ளாது அதனைத் தக்க காரணம் காட்டி ஏற்றுக்கொள்ளத் தக்கதன்று என்று நிறுவின் அதற்கு (2) 'மறுத்தல்' என்பது பெயராகும். இரு சாரார் இருவேறு கருத்துகளைக் கூறின் அவற்றுள் ஒருசாரார் கருத்தினை ஏற்று மற்றொரு சாரார் கருத்தினை மறுத்தலுக்குப் (3) 'பிறர் தம் மத மேற்கொண்டு களைவு' என்பது பெயராகும். தானே ஒரு கொள்கையைக் கூறி அதனை வாய்ப்பு நேரும் இடங்களில் எல்லாம் மீண்டும் மீண்டும் கூறி வற்புறுத்தலுக்கு (4) 'தாஅன் நாட்டித் தனாது நிறுப்பு' என்பது பெயராகும். இரு வேறுபட்ட கருத்துகள் நிலவிய வழி அவற்றுள் ஒரு கருத்தினையே இதுதான் உண்மை, மேற்கொள்ளத் தக்கது என்று உறுதியாய்க் கொள்ளலுக்கு (5) 'இருவர் மாறுகோள் ஒருதலை துணிவு' என்பது பெயராகும். யாராவது ஒருவர் எழுதிய நூலில் காணும் குற்றங்களை மாத்திரம் எடுத்துக் கூறலுக்குப் (6) 'பிறர் நூற் குற்றங் காட்டல்' என்பது பெயராகும். இருவேறுபட்ட கருத்துகளில் உகவாத கருத்தை உடன்படாது தனக்கு உகந்த கருத்தையே மேற்கொள்வதற்குப் (7) பிறிதொரு படாஅன் தன் மதங் கொளல்' என்பது பெயராகும்.

பிற்காலத்து நன்னூலுக்குக் காண்டிகை, விருத்தி ஆகிய உரைகள் எழுதிய உரை ஆசிரியர்கள் அனைவரும் தத்தம் உரையில் 'இம்மதம் காரணமாக இவ்வாசிரியர் இவ்வாறு கூறினார்' என்று ஆங்காங்கே குறிப்பிட்டுக் காட்டியுள்ளார்கள். இரா.ச.

**எழூஉப்பன்றி நாகன் குமரனார்**: சங்க காலப் புலவர் பெருமக்களுள் ஒருவராவார். நாகன் என்பாரின் மகன் குமரனார் எழுஉப்பன்றி என்னும் அடைமொழி பெற்றமைக்கான அடிப்படை யாதென விளங்கவில்லை. எழுஉப்பன்றி என்பது ஒரூரின் பெயர் என்று கொள்ளவும், பன்றியை இவ்வாறு சிறப்பித்தவர் இப்புலவர் என்று கூறவும் சான்றுகள் இல்லை.

இவர் பாடியனவாக இன்று கிடைப்பன இரண்டு அகநானூற்றுச் செய்யுட்கள் (அகம். 138, 240) மட்டுமே. அவற்றுள் ஒன்று குறிஞ்சித் திணையைச் சார்ந்துள்ளது. மற்றொன்று நெய்தற்றிணையைச் சார்ந்துள்ளது. இவரியற்றியனவாகப் புறச்செய்யுட்கள் எவையும் கிடைக்கவில்லை.

இவருடைய நாடும் ஊரும் இன்னவையென அறியவியலவில்லை. எனினும், பாண்டியனை 'உடலுநர் உட்கும் கடலந்தானைத் திருந்திலை நெடுவேல் தென்னவன்' (அகம். 138: 6-7) எனப் பாராட்டியுள்ளமை கொண்டு, இவர் பாண்டிய நாட்டவரோ என ஐயம் நிகழ்கின்றது. இவருடைய குறிஞ்சித் திணைச் செய்யுளில் வெறியாட்டு நிகழ்ச்சி பற்றிய விளக்கம் நன்கு அமைந்துள்ளது (அகம். 138, 9-13).

இரவுப்போதில் திமிலில் விளக்கேற்றிக் கொண்டு பரதவர் மீன் பிடிக்கச் செல்வர் என்றும், கடற்றுறையில் அணங்கு உறைவதாக நம்பிக் கைதொழுது ஏத்துவது அவர்களின் வழக்கம் என்றும் இவருடைய நெய்தற்றிணைச் செய்யுள் வழி அறியலாம் (அகம். 240). நாகம் தன்பாலுள்ள திருமணியை உமிழ்ந்து அதன் ஒளியில் இரைதேடும் என்று இன்றும் தமிழரிடையே ஒருநம்பிக்கை உண்டு. அந்நம்பிக்கையை இவர் குறிப்பிட்டுள்ளார் (அகம். 138:17). நெய்தல் மலரும் கழியில் மீனருந்தும் தண்பறை நாரை சிவந்த பூக்களைக் கொண்ட ஞாழல் மரத்தின் கிளையில் தனித்திருக்கும் தன் பார்ப்பினை நினைந்து பறந்து செல்லும் என்று இவர் பாடுவது இவருடைய இயற்கையீடுபாட்டைக் காட்டுகிறது (அகம். 240:1-3). அ.த.

**எளிமையாக்கம்**: மொழியின் எளிமையாக்கம் இரண்டு வகைப்படும். ஒன்று, மொழி அமைப்பை எளிமைப்படுத்துவது. மற்றொன்று, மொழி வெளிப்பாட்டை எளிமைப்படுத்துவது. ஒரு மொழி எளிய மொழி என்னும்போது அமைப்பு எளிமையை, இலக்கண எளிமையை மனத்தில் கொள்ளப்படும். ஒருவரின் நடை எளிய நடை என்னும் போது வெளிப்பாட்டு எளிமை, புரிந்து கொள்ளும் எளிமை மனத்தில் கொள்ளப்படுகிறது.

ஒரு மொழியின் வளர்ச்சியில் ஏற்படும் பலவகை மாறுதல்களில் இலக்கணத்தின் சில கூறுகள் எளிமையாவதும் ஒன்று. இதன்படி, விதி விலக்காக இருக்கும் சில மொழிக் கூறுகள் விதிக்கு அடங்கி வரலாம். ஓர் இலக்கணக் கூற்றின் மாற்றுருவங்கள் (Alloforms) குறையலாம். தனிக்குணக் கூறுகள்(Marked features) பொதுக் குணக் கூறுகளாக (Unmarked features) ஆகலாம். இவையெல்லாம் இலக்கண எளிமையாக்கத்தின் பாற்படும். ஆயினும், மொழியின் மாற்றங்களில் எவை எளிமையாக்கத்தைச் சார்ந்தவை என்று எல்லா நேரமும் எளிதாகக் கூறிவிட முடியாது. காலப்போக்கில் ஓர் இலக்கணப் பொருளைக் குறிக்க உருபு பயன்படுத்தும் நிலையிலிருந்து (Synthetic form) சொல் பயன்படுத்தும் நிலைக்கு (Analytical from) ஒரு மொழி மாறலாம். தமிழில் எதிர்மறையைக் குறிக்க -அ- என்ற உருபு பயன்பட்டுப் பின் மாட்டு - என்ற சொல் பயன்பட்டது. (எ-டு.) செய்யான்: செய்யமாட்டான். பொருள் விளக்கத்துக்கு ஏதுவாகச் சொல் வெளிப்பட்டு நிற்பதால் இதனை எளிமையாக்கம் என்பர் சிலர். இலக்கண அமைப்பில் மாறுதல் எதுவும் இல்லாமல் இலக்கணவடிவம் மட்டுமே விரிந்துநிற்பதால் இது எளிமையாக்கம் ஆகாது என்பர் வேறு சிலர்.

இயற்கையாகக் காலப்போக்கில் ஏற்படும் மாற்றங்கள் மட்டுமன்றி இன்னொரு மொழியுடன் தொடர்பு வருவதாலும் ஒரு மொழியில் மாற்றங்கள் ஏற்படலாம். இந்த மாற்றங்களிலும் எளிமையாக்க மாற்றங்கள் இருக்கலாம். ஒருவர் மொழி மற்றவருக்குத் தெரியாத இருமொழிக் கூட்டத்தார் வியாபாரத்துக்காகவோ வேறு காரணத்துக்காகவோ உறவாடும் போது ஒருவகைச் சிதைந்த மொழி பிறக்கிறது. கடைவீதிகளிலும் புகைவண்டி நிலையங்களிலும் இந்தி பயிலாதவர்கள் பேசும் இந்தி, ஆங்கிலேயரிடம் வேலை பார்த்த இந்தியச் சமையல்காரர்கள் பேசிய ஆங்கிலம் முதலியவை இத்தகைய சிதைந்த மொழியைச் சாரும். சிதைந்த மொழியின் ஒரு தலையாய கூறு எளிமையாக்கம். சிதைந்த மொழியில், பொதுவாகத் திணை, பால், காலம் முதலிய இலக்கணக் கூறுகளின் பாகுபாடுகள் அதிகமாக இல்லாமல் குறையும். பால்வேற்றுமையே இல்லாமல் போவது, மூன்று காலம் இரண்டு காலமாவது போன்ற மாற்றங்கள் நிகழும். இலக்கண உறவுகளைக் காட்டவரும் இலக்கணச் சொற்கள் விடப்படும். ஆங்கிலத்தில் Article, Copula போன்ற இலக்கணச்சொற்கள் விடப்படுகின்றன. மனிதன் நல்லவனாக உள்ளான் என்று பொருள்படும் (The man is good) வாக்கியம் மனிதன் நல்லவன் (Man good) என்று சிதைந்த மொழியில் வரலாம். மேலும் சிதைந்த மொழியில் மாற்றுருவங்கள் குறைவாக இருக்கும். இலக்கண உருபுகளுக்கு மாறாகச் சொல்லைப் பயன்படுத்தும் நிலையும் அதிகமாக இருக்கும்.

இப்படிப்பட்ட எளிமையாக்கக் கூறுகளை, மொழியை மனமறிந்து எளிமைப்படுத்தும் சில இடங்களிலும் காணலாம். 'தந்தி' வாசகம் எழுதும்போது இப்படி மொழி எளிமைப்படுத்தப்படும். மொழி அறியாத அயலவரிடம் ஒருவன் தன் மொழியில் பேசும் போதும், குழந்தைகளிடம் பேசும்போதும் ஓரளவு மொழி எளிமைப்படுத்தப்படுகிறது.

இலக்கணப் பாரம்பரியமுடைய, இலக்கிய வரலாறுடைய மொழிகள் புதுமையாக்கப்படும்போது மொழி எளிமை செய்யப்படலாம். வடமொழியைப் பலரும் படிப்பதற்கு உதவும் வகையில் எளிமைப்படுத்த வேண்டும் என்று சொல்லும்போது அதன் இலக்கண விரிவுகளைச் (Grammatical Complexities) சுருக்குவதையே கொள்ளப்படும். இக்காலத் தமிழில் சந்தி பிரித்து எழுதுவது எளிமையாக்கத்தின் ஒரு பகுதி. புற்றரை என்பதைப் புல்தரை என்று சந்தி பிரித்து எழுதும்போது சொற்கள் வடிவம் சிதையாமல் தனித்து நிற்கின்றன. அதனால், சொற்களைப் பிரித்துப் புரிந்து கொள்வது எளிமையாகிறது. சந்தி

பிரித்தல் இலக்கணத்தை எளிமையாக்குவது மட்டுமல்லாமல், புரிந்துகொள்வதையும் (Comprehension) எளிமையாக்குகிறது.

இக் காலத் தமிழில் எழுத்துத் தமிழுக்கும் பேச்சுத் தமிழுக்கும் இடையே உள்ள இடைவெளியைக் குறைப்பதும் எளிமையாக்கத்தின் ஒரு பகுதியாகும். இந்த இடைவெளிக் குறைப்பு சொல்லிலக்கணத்திலும் தொடரிலக்கணத்திலும் அதிகமாக இருக்கிறது. சாரியை இல்லாமல் 'வீட்டிற்கு' என்பதற்குமாறாக 'வீட்டுக்கு' என்றும், 'வந்தனன்' என்பதற்குப் பதிலாக 'வந்தான்' என்றும் எழுதுவது; மாற்று வடிவங்கள் இருக்கும்போது பேச்சு வழக்கிலுள்ள வடிவத்தை அதிகமாக எழுதுவது (நடக்கின்றான் என்பதை விட நடக்கிறான் என்பது, படிப்பவன் என்பதை விடப் படிக்கிறவன் என்பது), பன்மைக்கு ஒருமை எழுதுவது (அவன் வந்து பத்து நாள் ஆகிறது; எனக்குப் பத்து நட்சத்திரம் தெரிகிறது), எதிர்மறையில் திணை, பால் வேறுபாடு இல்லாமல் எழுதுவது (இது நல்ல நடை அல்ல, இது ஆசிரியர் அல்ல) முதலியவை சொல்லிலக்கணத்தில் எழுத்து மொழி பேச்சு மொழிக்கு நெருங்கி வருவதற்குச் சில எடுத்துக்காட்டுகள். தொடரியலில் பேச்சு மொழியில் உள்ள எல்லாத் தொடரமைப்புகளும் எழுதும்போது பயன்படுத்தப்படுகின்றன. இப்படி, எழுத்து மொழி பேச்சு மொழிக் கூறுகளை ஏற்றுக் கொள்வதால் அதைச் சிறப்பு முயற்சி இல்லாமலே விளங்கிக் கொள்ள முடிகிறது. அந்த வகையில் எழுத்து மொழி எளிமையாகிறது.

திட்டமிட்டு மொழியை வளர்க்கும்போதும் எளிமையாக்கம் செய்யலாம். முக்கியமாக, எழுத்துகளை எளிமையாக்குவது (லை என்பதை லை என்று எழுதுவது போல), சொல்லின் எழுத்தமைப்பை (Spelling) எளிமையாக்குவது (ஆங்கிலத்தில் Programme என்பதை Program என்று எழுதுவது போல) கலைச் சொற்களை எளிமையாக்குவது முதலியவை திட்டமிட்ட மொழியாக்கத்தில் மிகுதியாக நிகழ்வன.

தொழில் முறையான மொழி அந்தத் தொழிலைப் பயில்பவர்களுக்கு மட்டுமே புரியும்படியாகவும், அவர்களுக்கும் அதைப் புரிந்துகொள்ளத் தனிப் பயிற்சி தேவைப்படும்படியாகவும் இருக்கும். எடுத்துக்காட்டாகச் சட்டமொழியைக் கூறலாம். இது சட்டத்தைப் பயின்றவர்களுக்கு மட்டுமே விளங்கும் படியாகக் கடினமாக இருக்கும். இதேபோல் அரசாங்க அலுவல் ஆணை, ஒப்பந்தப் பத்திரங்கள் ஆகியவற்றில் உள்ள மொழியும் கடினமாக இருக்கும். அண்மைக் காலத்தில், தொழில் முறை மொழி அது பாதிக்கும் பொதுமக்களுக்கும் புரியும்படியாக இருக்கவேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் அத்தகைய மொழிப் பயன்பாடுகள் எளிமைப் படுத்தப்பட்டு வருகின்றன.

இதேபோல இலக்கியத்திலும் பழைய இலக்கியத்தை இக்கால மக்களுக்குப் புரியும்படி எளிமைப் படுத்தி மறு படைப்புச் செய்வதும், பெரியவர்களுக்கு எழுதப்பட்டவற்றைச் சிறுவர்களுக்கு எளிமைப்படுத்திச் சொல்வதும் பெருகிவருகின்றன. இவை எல்லாமே மொழி வெளிப்பாட்டை எளிமைப் படுத்துதல் என்பதில் அடங்கும். இதில் இலக்கணக் கூறுகள் மாறுவதில்லை. இதில் ஒரே கருத்தைச் சொல்ல இருக்கும் பல இலக்கண அமைப்புகளில் எளிமையானவற்றைத் தேர்ந்தெடுத்துக் கருத்து வெளிப்படுத்தப்படுகிறது. இ.அ.

## எளிய தொடர்பு போக்குப் படிவம்:

பொருளியல் கோட்பாடுகள், விதிகள் போன்றவை பொருளியல் மாறிகளுக்கிடையே (Variables) உள்ள தொடர்பை அடிப்படையாகக் கொண்டுள்ளன. எடுத்துக்காட்டாக, தேவை விதி நுகர்வோரின் விருப்பு வெறுப்பு நிலை, நுகர்வோரின் வருமானம், பதிலிப் பொருள்களின் விலைகள் ஆகியவை மாறா திருக்கும் பொழுது, ஒரு குறிப்பிட்ட பொருளின் விலை மாற்றத்திற்கும் தேவை மாற்றத்திற்குமிடையே தலைகீழ்த் தொடர்பு (Inverse Relation) நிலவும் என்பதைக் கூறுகிறது. அதாவது விலை உயரும்பொழுது தேவை குறையும். விலை குறையும் பொழுது தேவை மிகையாகும். இத்தகைய விதிகளை உருவாக்கவும் ஆராய்ந்து பார்க்கவும் புள்ளியியல் முறைகளுள் ஒன்றான எளிய தொடர்பு போக்குப் படிவம் (Simple Regression Model) பயன்படுகிறது.


ஒன்றுக்கு மேற்பட்ட மாறிகளுக்கிடையே தொடர்பு இருக்குங்கால் செயல்முறையை அறிந்து கொள்ளுதல் இன்றியமையாததாகும். அவற்றைக் குறித்த ஆய்வுகள் வருங்காலக் கணிப்பிற்கு மட்டுமன்றி, பொருத்தமான பிற கொள்கை முடிவுகளை எடுக்கவும் உதவுகின்றன. எளிய தொடர்பு போக்குப் படிவம் என்பது இரண்டு மாறிகளுக்கிடையே உள்ள காரண விளைவுத் (Cause and Effect) தொடர்பினை அறிய, (அ) இரு மாறிகளுக்கிடையே தொடர்பிருக்கிறதா என்று கண்டறிந்து, அவ்வாறு இருந்தால் அதனை அளவிட வேண்டும்; (ஆ) நிலவுகின்ற தொடர்பு குறிப்பிடத்தக்கதா (Significant) என ஆராய்ந்து அறிய வேண்டும்; (இ) மாறிகளுக்கிடையே உள்ள காரண விளைவுத் தொடர்பினை

நிலைநாட்ட வேண்டும். மழை அளவிற்கும் வேளாண் உற்பத்தி அளவிற்கும் உள்ள தொடர்பு, குடும்ப வருமானத்திற்கும் குடும்பச் செலவிற்கு மிடையே உள்ள தொடர்பு, விற்பனை அளவிற்கும் விளம்பரச் செலவிற்குமிடையே உள்ள தொடர்பு போன்றவற்றை ஆராய இப்படிவம் பயன்படுகிறது.

எளிய தொடர்பு போக்குப் படிவம் நேர்கோட்டுத் தொடர்பு போக்குப் படிவமாகவும் (Linear Regression Model) நேர்கோடற்ற தொடர்பு போக்குப் படிவமாகவும் (Non-Linear Regression Model) அமையலாம். எளிய தொடர்பு இரு மாறிகளுக் கிடையே உள்ள தொடர்பை விளக்குவதால், அத் தொடர்பு நேரானதாகத்தான் இருக்க வேண்டுமென்ற தேவையில்லை. வளைந்து செல்லும் நேர்கோடற்ற கோடாகவும் இருக்கலாம். இரு மாறிகளுள் ஒரே வீதத்தில் ஒன்றின் மாறுதலுக்கேற்ப மற்றொன்றும் மாறுவதால் நேர்கோடு ஏற்படுகிறது. அதாவது, விலை உரூ. 4-இலிருந்து உரூ. 5-ஆக உயரும்பொழுது பண்டத்தின் தேவை 38-இலிருந்து 34-ஆகக் குறைந்தால், விலை உரூ. 6-ஆக உயரும் பொழுது தேவையும் 30-ஆகத்தான் குறைய வேண்டும். இதனை அட்டவணை-1-உம், வரைபடம்-1 -உம் விளக்குகின்றன.

அட்டவணை-1


| விலை | தேவை | மாற்ற வீதம் |
|---|---|---|
| 2 | 46 | – |
| 3 | 42 | 4 |
| 4 | 38 | 4 |
| 5 | 34 | 4 |
| 6 | 30 | 4 |




பண்டத்தின் தேவையில் ஏற்படுகின்ற மாறுதல்கள் வேறு வீதத்தில் இருக்குங்கால், எளிய தொடர்பு போக்குப் படிவம் வளைந்து செல்லும் கோடாக இருக்கும். இதனை அட்டவணை-2-உம் வரைபடம்-2-உம் தெளிவாக விளக்குகின்றன.

அட்டவணை - 2

| விலை | தேவை | மாற்ற வீதம் |
|---|---|---|
| 2 | 52 | – |
| 3 | 44 | 8 |
| 4 | 38 | 6 |
| 5 | 34 | 4 |
| 6 | 32 | 2 |




இரண்டு மாறிகளுக்கிடையே தொடர்பு இருக்குங்கால் அதனை அளவிடுதல் மட்டுமன்றி, ஒன்றுக்கு மதிப்புக் கொடுத்து மற்றதன் மதிப்பைக் கணிப்பதும் முக்கியமானதாகும். குடும்ப வருமானத்திற்கும் குடும்பச் சேமிப்பிற்கும் தொடர்பு இருக்குங்கால், கொடுக்கப்பட்ட வருவாய் நிலையில் எதிர்பார்க்கும் சேமிப்பின் அளவை முடிவு செய்யவும், அல்லது குறிப்பிட்ட சேமிப்பை எட்டிவிடக் குடும்ப வருமானத்தின் அளவை முடிவு செய்யவும் இயலும். உரமிடும் அளவிற்கும் நெல் உற்பத்திக்குமிடையே நெருங்கிய தொடர்பு இருக்குங்கால், நெல் உற்பத்தியைக் குறிப்பிட்ட அளவு பெருக்க உரத்தை எவ்வளவு பயன்படுத்த வேண்டும் என்பதையும், கையிருப்பாக இருக்கும் உரத்தின் அளவைப் பொறுத்து நெல் உற்பத்தி

எவ்வளவு இருக்கும் என்பதையும் கணிக்க இயலும். இவ்வாறு குறிப்பிட்ட மாறியின் மதிப்புகள் கொடுக்கப்பட்டிருந்தால் மற்ற மாறியின் மதிப்பைக் கணிக்கப் பயன்படும் புள்ளியியல் கருவியே போக்குப் படிவமாகும். அதில் பயன்படுத்தப்படும் முறையே எளிய தொடர்புப் போக்குப் படிவமாகும்.

சர் பிரான்சிசு கால்டன் என்பவர் கி.பி. 1877-ஆம் ஆண்டில் 'ஒட்டுறவு' (Correlation) என்ற சொல்லைப் பயன்படுத்தினார். அவர் தந்தையின் உயரத்திற்கும் மைந்தர்களின் உயரத்திற்கும் இடையே உள்ள தொடர்பினை ஆராய்வதற்கு இக்கருத்தை உருவாக்கினார். பொதுவாக, x,y என்ற இரு மாறிகளுக்கிடையே தொடர்பு இருக்குங்கால் y சார்ந்த x-இன் ஒட்டுறவு, x சார்ந்த y-இன் ஒட்டுறவு ஆகிய இரண்டு நேரான கோடுகளையோ வளைந்த கோடுகளையோ உருவாக்க முடியும். அத்தகைய கோடு மீச்சிறுபடி முறையில் (Method of Least Squares) பொருத்தப்படுகிறது. இம்முறையில் x,y-இன் பல் வேறுபட்ட மதிப்புகளைக் குறிக்கும் புள்ளிகளுக் கிடையே அவற்றிற்கு மிக அருகே அமையுமாறு நேரான கோடுகள் பெறப்படுகின்றன. அவ்வாறு அமையும் கோடுகளிலிருந்து பெறப்படும் 'y'-இன் மதிப்பு ஏற்கனவே உள்ள 'y'-இன் மதிப்புகளிலிருந்து மிகவும் வேறுபட்டிருக்கக் கூடாது. அதாவது, குறிப்பிட்ட x-இன் மதிப்பிற்கு உள்ள y-இன் மதிப்புத்தான் உருவாக்கும் கோட்டின் மூலமும் பெறப்பட வேண்டும். நடைமுறையில் y-இன் மதிப்பு வேறு பல மாறிகளின் அளவைப் பொறுத்தும் மாறுவதால், கணக்கிடும் 'y' மதிப்பு குறைந்த அளவு ஏற்கனவே உள்ள 'y' மதிப்பிலிருந்து மிகக் குறைந்த வேறுபாடே உடையதாக இருக்க வேண்டும். அதன்படி, மீச்சிறுபடி முறையில் 'y'-இன் உண்மையான மதிப்பிற்கும் கணிக்கப்படும் மதிப்பிற்கும் இடையே உள்ள வேறுபாடுகளின் கூடுதல் மீச்சிறுபடி அளவில் அமைகின்ற கோடு மூலம் பெறப்படுகிறது.

x,y என்ற இருமாறிகளுக்கிடையே தொடர்பு இருக்குங்கால் சாதாரண மீச்சிறுபடி முறையில் (OLS - Ordinary Least Squares) எளிய தொடர்புப் போக்குப் படிவமான

$y = a+bx$ (y சார்ந்த x-இன் போக்குக் கோடு)

$x = c+dy$ (x சார்ந்த y-இன் போக்குக் கோடு)

ஆகியவற்றைப் பயன்படுத்தி 'x' அல்லது 'y'-இன் மிகச் சிறந்த மதிப்புகள் பெறப்படுகின்றன. முதல் படிவத்தில் உள்ள a,b ஆகியவற்றின் மதிப்பு பின்வரும் சமன்பாடுகளுக்குத் தீர்வு காண்பதன் மூலம் பெறப்படுகிறது.

$$\Sigma y = na + b\,\Sigma x$$

$$\Sigma xy = a\Sigma x + b\,\Sigma x^2$$

n = x,y மாறிகளுக்குத் தரப்பட்டுள்ள மதிப்புகளின் எண்ணிக்கை, Σy என்பது y மதிப்புகளின் கூடுதல் தொகையைக் குறிக்கும். இந்தப் படிவத்தில் மீச்சிறு முறையில் கணக்கிடப்படும் 'a' மற்றும் 'b' என்பவை தொடர்புப் போக்குக் கெழுக்கள் எனக் கூறப்படும். a என்பது பண்டத்தின் விலை பாழாக (Zero) இருந்தால் அல்லது அந்தப் பொருள் விலையற்றதாக இருந்தால், அதற்குக் குறைந்த அளவுள்ள அளிப்பிற்குச் சமமாகும். b என்பது குறிப்பிட்ட மாறியில் ஏற்படும் மாறுதல்கள் காரணமாக அதனுடைய சார்பு நிலை மாறியில் உருவாகும் மாறுதலின் வீதத்தைக் கொடுக்கும். இதே போன்று c,d ஆகியவற்றின் மதிப்புகளைக் கணக்கிடப் பின் வரும் சமன்பாடுகளுக்குத் தீர்வு காண வேண்டும். அவை யாவன:

$$\Sigma x = nc + d\Sigma y$$

$$\Sigma xy = c\Sigma y + d\Sigma y^2$$

மீச்சிறு முறையில் கணக்கிடப்படும் a,b,c,d ஆகியவை வருங்காலக் கணிப்பிற்குப் பயன்பட வேண்டுமானால், நிகழ்தகவுப்பிழை (Standard Error of Estimate) மிகக் குறைவாக இருக்க வேண்டும். அதாவது, மாறியின் உண்மை மதிப்பிற்கும் (y) படிவத்தின் மூலம் கணிக்கப்பட்ட மதிப்பிற்குமிடையே (ye) உள்ள வேறுபாடு குறைவாக இருக்க வேண்டும். இரண்டு மாறிகளுக் கிடையே சக்தி வாய்ந்த, நெருங்கிய தொடர்பு இருக்குங்கால் இந்தப் பிழையும் குறைவாகவே இருக்கும். அத்துடன் கொடுக்கப் பட்டுள்ள புள்ளி விவரங்களை வைத்துப் படிவத்தைப் பொருத்தும் பொழுது, அது மிகச் சிறந்ததாக இருப்பதற்குப் புள்ளி விவரங்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்க வேண்டும். ஏனெனில் நிகழ்தகவுப்பிழையைக் கணக்கிட

$$Syx = \sqrt{\frac{\Sigma\,(y-ye)^2}{n}}$$

என்ற சூத்திரம் பயன்படுத்தப்படுகிறது.

இக்கருத்துகளைப் பின்வரும் அட்டவணை மூலம் புரிந்து கொள்ளலாம்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பண்டத்தின் விலை | 12 | 10 | 16 | 20 | 22 | 18 |
| பண்டத்தின் அளிப்பு | 28 | 25 | 34 | 40 | 43 | 37 |

காரண விளைவுத் தொடர்பு தெரிந்த சூழ்நிலையில் இரண்டு மாறிகளுக்கிடையே உள்ள தொடர்பினை மட்டுமே பயன்படுத்துவது தேவையாகும். பண்டத்தின் அளிப்பு அதன் விலைக்குத் தகுந்தவாறு எவ்வகையில் மாறுபடும் என்பதை அறிந்துகொள்ள $S = a+b\rho$ என்ற எளிய தொடர்பு போக்குப் படிவத்தைப் பயன்படுத்த வேண்டும். a,b இரண்டிற்கும் மதிப்பைக் கணக்கிடப் பின்வரும் அட்டவணை பயன்படுகிறது.

| $\rho$ | S | $\rho S$ | $\rho^2$ |
|---|---|---|---|
| 12 | 28 | 336 | 144 |
| 10 | 25 | 250 | 100 |
| 16 | 34 | 544 | 256 |
| 20 | 40 | 800 | 400 |
| 22 | 43 | 946 | 484 |
| 18 | 37 | 666 | 324 |
| Σ 98 | Σ 207 | Σ 3542 | Σ 1708 |

$$n = 6$$

$$b = \frac{n\ \Sigma\rho s - \Sigma s\ \Sigma\rho}{n\ \Sigma\rho^2 - (\Sigma\rho)^2}$$

$$= \frac{6(3542) - (207)(98)}{6\ (1708) - (98)^2}$$

$$= \frac{21252 - 20286}{10248 - 9604} = \frac{966}{644}$$

$$= 1.5$$

$$a = \frac{\Sigma S}{n} - b\ \frac{\Sigma\rho}{n}$$

$$= 34.5 - 1.5\ (16.33)$$

$$= 34.5 - 24.5 = 10$$

எனவே, கொடுக்கப்பட்ட அளிப்பு அட்டவணையின் மூலம் பொருத்தப்பட்ட அளிப்பின் எளிய தொடர்பு போக்குப் படிவம் $Se = 10+1.5\rho$ என்பதாகும். இதன் படி, பண்டத்தின் விலை ஓர் அலகு அதிகரிக்கப் பட்டால், அதன் அளிப்பு 1.5 அலகுகள் அதிகரிக்கும். இங்குக் குறிப்பிட்ட பண்டத்தின் குறைந்தபட்ச அளிப்பு 10 அலகுகளாகும்.

இங்குக் கொடுக்கப்பட்டுள்ள அளிப்புத் தொடர்பினை வைத்து, அட்டவணையில் கொடுக்கப்படாத விலையான $\rho=24$ மற்றும் $\rho=8$ அலகுகளில் அதன் அளிப்பான $S=10+1.5\ (24)=46$ மற்றும் $S=10+1.5\ (8)=22$ அலகுகளைக் கணிக்க முடியும். இத்தகைய கணிப்புகள் அரசின் வரிக்கொள்கை, உற்பத்திக் கொள்கை ஆகியவற்றில் பயன்படுகின்றன.

பொருத்தப்பட்டுள்ள படிவத்தில் நிகழ்தகவுப் (Probability) பிழையைக் கண்டுபிடிக்க

$$\sqrt{\frac{\Sigma\ (S-Se)^2}{n}}$$

என்பதைக் கணக்கிட வேண்டும்.

$$Se = 10 + 1.5\rho$$

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 28 | 25 | 34 | 40 | 43 | 37 |
| 28 | 25 | 34 | 40 | 43 | 37 |

எனவே, நிகழ்தகவுப் பிழை = 0 (பாழ்). எல்லாப் படிவத்திலும் இதே மாதிரி கிடைப்பதில்லை.

| முதலீடு x | ஆதாயம் y |
|---|---|
| (ஆயிரம் உருபாய்களில்) | |
| 10 | 2 |
| 20 | 6 |
| 30 | 8 |
| 40 | 10 |
| 50 | 14 |
| மொத்தம் 150 | 40 |

மீச்சிறுபடி முறையில் பெறப்படும் ஆதாய முதலீட்டுத் தொடர்புப் படிவம்

$$y = 0.4+0.28$$

$$ye = 2.4,\ 5.2,\ 8,\ 10.8,\ 14.$$

எனவே நிகழ்தகவுப் பிழை $\sqrt{\frac{1.4}{5}} = 0.53.$

பிழை பாழாக (Zero) இல்லாவிடினும் குறைவாகவே உள்ளதால், வருங்காலத்தில் முதலீடு மாறும்பொழுது ஆதாயம் எவ்வாறு மாறும் என்பதைப் பெறலாம். முதலீடு உரு. 1000 அதிகரிக்கப்பட்டால் ஆதாயம் உரு. 280 அதிகரிக்கிறது. அதனுடன் உரு. 60 ஆயிரம் முதலீடு செய்யப்பட்டால், $y = 0.4+16.8$ அதாவது உரு. 16.4 ஆயிரம் ஆதாயம் கிடைக்கும். என்.மா.தெ.

**எளியோர் வேலை விடுதி**: இங்கிலாந்தில் ஏழ்மையைப் போக்கவும், ஏழ்மையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நல்வாழ்வு அளிக்கவும் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அங்கு, கி.பி. 15, 16-ஆம் நூற்றாண்டுகளில் பல்வேறு சட்டங்கள் இயற்றப்பட்டு ஏழ்மையால் பாதிக்கப்பட்டுப் பிச்சை எடுப்போர்களுக்கு நிவாரணமளிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. மூன்றாம் எட்வர்டு அரசரின் கி.பி. 1349-ஆம் அரசியல் சட்டம், கி.பி. 1531-இல் எட்டாம் கென்றியின் ஏழ்மை ஒழிக்கும் திட்டங்கள் போன்றவை பிற்கால அரசின் கடமையை வலியுறுத்தின. இங்கிலாந்தின் பாராளுமன்றம் கி.பி. 1563-இல் ஏழ்மை நிவாரணத்திற்கு மக்கள் கட்டாயமாகப் பண உதவி செய்ய வழிவகை செய்தது. எலிசபெத்து அரசியார் கி.பி. 1572-இல் ஏழ்மை ஒழிப்புக்காக வரிவசூலிக்கப் பாராளுமன்றத்தின் மூலம் சட்டமியற்றினார். அச்சட்டத்தின் மூலம் மக்களிடமிருந்து மிகுந்த பணம் ஏழைகளின் பராமரிப்புக்காகக் குவிந்தது. பெரும்பாலும் இப்பணிகள் திருச்சபைகளின் மூலமாக நடத்தப்பட்டன.

ஏழ்மை நிவாரணப் பணியை கி.பி. 1601-ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட சட்டம் ஒழுங்குபடுத்தித் திறம்படச் செயற்பட வழிவகுத்தது. இவ் வகையில் ஏற்படுத்தப்பட்டதுவே எளியோர் வேலைவிடுதி ஆகும். அந்த இல்லத்தில் யாருடைய உதவியுமற்ற ஏழைகள், அலைந்து திரிவோர்கள், உடல் ஊனமுற்ற பிச்சைக்காரர்கள் ஆகியோர்கள் சேர்க்கப்பட்டனர். அதை ஏழைகள் இல்லம் என்றும் குறித்தனர். காரணம் இந்த இல்லங்களில் இருக்கும் ஏழைகளுக்குச் சில தொழில்களில் பயிற்சிகள் கொடுக்கப்பட்டு ஆடைகள், கைவினைப் பொருள்கள் போன்றவை உற்பத்தி செய்யப்பட்டன. அப்பொருள்கள் ஏற்றுமதி செய்யுமளவிற்கு உற்பத்தித்திறன் வளர்ச்சியடைந்தது. இதன் காரணமாக இந்த இல்லங்களுக்கு வந்து சேருவோரின் எண்ணிக்கை மிகுந்தது. ஏழைகள் தங்கள் குடும்பங்களை விட்டுவிட்டு இந்த இல்லங்களுக்கு வந்து வேலை செய்து பிழைக்க விரும்பி வந்தனர்.

வேலை செய்வதற்கு உடல்வலிமையுள்ள பிச்சைக்காரர்களுக்கு அதிக இடமளிக்கப்பட்டு வேலைகள் கொடுக்கப்பட்டன. வேலை செய்யும் உடல்வலிமை குன்றியவர்கள், நோயுற்றவர்கள், முதியோர், குருடர்கள், செவிடர்கள், ஊமைகள், நொண்டிகள், சிறு குழந்தைகளையுடைய தாய்மார்கள் போன்றவர்களுக்கு அடைக்கலம் கொடுக்கப்பட்டு அவரவர்களுக்குத் தகுந்த வேலைகள் கொடுக்கப்பட்டன. எளியோர் வேலை விடுதிச் சட்டத்தின்கீழ் கி.பி. 1669-ஆம் ஆண்டு பிரிசுடலிலும் (Bristol) பிற நகரங்களிலும் ஏற்படுத்தப்பட்ட எளியோர் வேலை விடுதிகளில் நூற்றல், நெய்தல், பின்னுதல், சணல்நார்த் துணிகள் (Linen) நெய்தல், வலை பின்னுதல் போன்றவற்றில் சிறந்த முறையில் பயிற்சிகள் தரப்பட்டன. இருப்பினும் இவ் வெளியோர் வேலை விடுதிகளில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களின் மூலம் இலாபம் பெறமுடியவில்லை. இதற்குக் காரணம் இவர்களின் திறமை மற்றப் பொதுவிடங்களிலுள்ளவர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது குறைந்ததாய் இருப்பதும் இவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்கள் வாணிகச் சந்தைகளில் போட்டியிட முடியாமல் இருப்பதுமாகும். இதனால் கி.பி. 1722-ஆம் ஆண்டில் எளியோர் வேலை விடுதி மேற்பார்வையாளர்கள் தனியார்களிடமிருந்து வேலைகளை ஒப்பந்த அடிப்படையில் பெற்று உற்பத்தி செய்து கொடுத்து அதிகப் பணம் பெற்றனர்.

இப்போக்கு, வேலை செய்யத் தகுதியுள்ள ஏழைகளை மட்டுமே எளியோர் வேலை விடுதிகளில் சேர்த்துக் கொள்ளும் நிலைக்கு வளர்த்தது. அது மட்டுமல்லாது இலாபம் ஈட்டும் நோக்கமே இதன் தன்மையாக மாறியது. இதனால், எளியோர் வேலை விடுதிகளில் வாழ்வோரின் நலன்கள் கருத்தில் கொள்ளப்படாமல் அவர்கள் உழைப்பிற்குக் குறைந்த கூலியும் கொடுக்கப்பட்டது. அவர்களுக்குச் செய்து தரவேண்டிய அடிப்படை வசதிகள் கூடச் செய்து தரப்படவில்லை. இதனால் எளியோர் வேலை விடுதிகளில் வாழ்ந்தவர்கள் தாங்கள் ஒன்றுமில்லாத ஆண்டிகளாக, வயிற்றுக்கு உணவில்லாவிட்டாலுங் கூடத் தங்கள் வீடுகளுக்குச் சென்று வாழ்வது இதை விடச் சிறந்தது என்று கருதும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். அந்த அளவிற்கு எளியோர் வேலை விடுதியின் வாழ்க்கைச் சூழல் மாறியிருந்தது.

சோனசு ஆன்வே (Jonas Hanway), சோசப்பு தவுன்செண்டு (Joseph Townsend), இரிச்சர்டு பர்ன் (Richard Burn), சான் இசுகாட்டு(John Scott), தாமசு கில்பர்ட்டு (Thomas Gilbert) போன்றவர்கள் இவ் எளியோர் வேலை விடுதிகள் இயங்கும் விதங்களைப் பற்றி மிகவும் குறை கூறினர். சோனசு ஆன்வே இவ்

எளியோர் வேலை விடுதியின் சீர்திருத்தத்திற்காகப் பாடுபாடுபட்டவர்களுள் மிக முக்கியமானவராவார். இவர் சில ஆண்டுகள் இவ் எளியோர் வேலை விடுதிகளைப்பற்றி ஆய்வு செய்து அதன் குறைகளைக் கண்டறிந்து சில சீர்திருத்தங்கள் செய்வதற்குப் பாடுபட்டார். மிகவும் குறிப்பிடத்தக்கது என்னவென்றால், குழந்தைகள் இந்த இல்லங்களில் மிகவும் பாதிக்கப்படுவதை அறிந்து, ஆறு வயதிற்குக் கீழ்ப்பட்ட குழந்தைகளை இவ் எளியோர் வேலை விடுதிகளிலிருந்து பிரித்து வேறிடங்களில் வைத்துப் பாதுகாக்க வகை செய்தார்.

தாமசு கில்பர்ட்டு என்பவர் சட்டத்துறை வல்லுநராக இருந்ததால், எளியோர் வேலை விடுதிகள் தனியாரிடமிருந்து பெறும் ஒப்பந்த வேலை முறையை ஒழிக்கச் சட்டமியற்றுமாறு அறிவுறுத்தினார். இதன்படி இயற்றப்பட்ட சட்டம் இவரது பெயரால் கில்பர்ட்டுச் சட்டம் எனப் பெயர் பெற்றது. இச்சட்டத்தின் மூலம் உழைக்கும் உடல் திறனுள்ள ஏழைகளை வேலை கிடைக்கும் வரை வீட்டிலேயே இருக்கச் செய்து அவர்கள் மறுவாழ்வுப் பணிகள் செய்ய வகை செய்யப்பட்டது. வேறு வேலைகள் கிடைத்தவுடன் அவர்கள் அவ்விடங்களுக்கு அனுப்பி வைக்கப் பட்டனர்.

இந்தியாவிலும் இதுபோன்ற வேலை விடுதிகள் குறிப்பாகப் பல நகரங்களில் ஏற்படுத்தப்பட்டுச் செயற்பட்டு வருகின்றன. இங்கிலாந்தைப் போன்று இங்குள்ள ஏழைகளுக்குச் சில தொழில்களில் பயிற்சிகள் கொடுத்துப் பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆனால், இப்பொருள்களை விற்பனை செய்வதில் தொல்லைகள் அதிகம் ஏற்படுவதால் இதில் அதிகக் கவனம் செலுத்தப்படுவதில்லை. இவ் எளியோர் வேலை விடுதிகளை இந்தியாவில் மிகுந்த அளவில் ஏற்படுத்துவதிலும் கவனம் செலுத்தப்படவில்லை. சே.கூ.

துணை நூல்

**Walter A. Friedlander**, Introduction to Social Welfare,Prentice-Hall of India Ltd., New Delhi, 1961.

**எறிஈட்டி**: பழைய கற்கால மனிதன் தொடங்கி இன்றுவரை பயன்பாட்டிலுள்ள ஈட்டி அமைப்புடைய ஒருவகை ஆயுதமே எறிஈட்டி (Harpoon) ஆகும். இந்த ஆயுதம் பல நூற்றாண்டுகளாகத் திமிங்கிலம் பெரிய மீன்கள், பிற கடல் விலங்குகள் முதலானவற்றை வேட்டையாடப் பெரிதும் பயன்படுத்தப்படுகின்றது. கற்காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த ஆயுதத்தின் பயன்பாடு மிகுந்து படிப்படியாக வளர்ச்சியடைந்துள்ளது.

எறிஈட்டியில் இருவகை உண்டு. ஒரு வகை, கழியின் முனையில் முள்வடிவிலான அமைப்புடைய அம்பைப் போன்றது. மற்றொரு வகை, முனையில் முள்ளுடைய ஈட்டி போன்றது; இதன் கைப்பிடி நீண்ட கயிற்றாலானதாகும். இரண்டுவகை எறிஈட்டிகளையும் கொண்டு மீன்களையும் கடல் விலங்குகளையும் வேட்டையாடுகின்றனர். கயிற்றைக் கொண்டு செய்யப்படும் எறிஈட்டிகளின் தலைப்பாகம் உலோகத்தால் செய்யப்பட்ட முட்கொக்கிகளைக் கொண்டது. இந்தத் தலைப்பாகம் நீண்ட கயிற்றாலோ நரம்பினாலோ ஒரு முனையில் கட்டப்படுகிறது. கயிற்றின் மறுமுனை ஒரு மரக் கொம்புடன் கட்டப்படுகிறது. இக்கொம்பு குறிபார்க்கவும் எறிஈட்டியைத் தண்ணீரில் எறியவும் உதவுகிறது. எறிஈட்டியின் தலைப்பாகம் எறிந்தவுடன் குறிதவறாமல் மீனின் உடலில் மாட்டிக் கொள்கிறது. இணைக்கப்பட்டுள்ள கயிற்றின் உதவியால் கரைக்கோ தாம் இருக்கும் படகிற்கோ மீனை இழுத்துக் கொள்வர். கல், எலும்பு முதலானவற்றால் இந்த ஆயுதம் தொடக்க காலத்



எறிஈட்டி

தில் கூர்மையான முனையுடையதாகவும் அதன் பக்கங்களில் வெட்டுகள் உள்ளனவாகவும் காணப்பட்டன. சில எறிஈட்டிகள் ஒரு பக்கம் மட்டும் வெட்டுகள் உள்ளனவாகவும், சில இரு பக்கத்திலும் வெட்டுகள் உடையனவாகவும் செய்யப்பட்டன.

இதனால் இந்த ஆயுதம் கடல் விலங்குகளின் உடலில் மிக எளிதாக உட்செல்லும் தன்மையது; வெளியே இழுப்பது கடினமாகும். பிற்காலத்தில் நீண்ட கழியில் செய்யப்பட்ட எறிஈட்டிகளில் எறிஈட்டித் தண்டின் இரு மருங்கிலும் முட்கொக்கிகள் ஒன்றிற்கொன்று நோக்கியவாறு அமைக்கப்பட்டன. சில கொக்கிகள் கோண அமைப்பையும் பெற்றிருந்தன. சில எறிஈட்டிகள் நஞ்சு தோய்க்கப்பட்டு விலங்குகளைக் கொல்லவும் பயன்படுத்தப்பட்டன. இவ்வகை எறிஈட்டிகளின் முட்கொக்கிகளில் ஒரு வித கோடு செதுக்கப்பட்டு, அக்கோட்டில் நச்சுப் பொருள்கள் தோய்க்கப்பட்டு அவை விலங்குகளைக் கொல்லப் பயன்படுத்தப்பட்டன.

ஐரோப்பியத் திமிங்கில வேட்டையாளர்கள் இரு பக்கமும் கொக்கிகளையுடைய எறிஈட்டியை கி.பி. 17-ஆம் நூற்றாண்டிலேயே பயன்படுத்தியுள்ளனர். இவ்வகை எறிஈட்டி கி.பி. 18-ஆம் நூற்றாண்டுவரை பெரும் வழக்கிலிருந்தது.பின்னர், கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் இலூவிசு தெம்பிள் (Lewis Temple) என்னும் நீக்கிரோக் கொல்லர், திமிங்கிலத்தைக் கொன்றவுடன் எலும்புத் தலையிலான எறிஈட்டி முனையை எறிஈட்டியின் கழியிலிருந்து பிரிக்க ஏதுவாய்ச் செய்தார். இது எசுக்கிமோ எறிஈட்டி (Eskimo Harpoon) எனக் கூறப்படும்.

இக்காலத்தில் திமிங்கிலத்தைப் பிடிப்பதும் பிற பெரிய கடல் உயிரினங்களை வேட்டையாடுவதும் இயந்திரமயமாக்கப்பட்டுள்ளது. அதற்கு ஏற்ப இத்தொழிலில் பயன்படுத்தப்படும் கருவிகளின் வளர்ச்சியும் பெருகியுள்ளன. இக்கருவிகளுள் குறிப்பிடத்தக்கவை எறிஈட்டித் துப்பாக்கிகள் (Harpoon Guns) ஆகும். இவை கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் இங்கிலாந்தில் கண்டுபிடிக்கப்பட்டன. கிரீனர் துப்பாக்கி (Greaner Gun) என்னும் எறிஈட்டித் துப்பாக்கிகள் கண்டுபிடிக்கப்பட்ட போதிலும், திமிங்கில வேட்டையாளர்கள் கை எறிஈட்டிகளையே மிகவும் விரும்பிப் பயன்படுத்தினர். பின்னர், கி.பி. 1840-ஆம் ஆண்டில் சக்தி வாய்ந்த பெரிய வகைத் துப்பாக்கிகள் வடிவமைக்கப்பட்டு, பயன்பாட்டுக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டன. இவ்வகைக் கருவிகளின் மிகுந்த பயன்பாட்டை அமெரிக்கத் தளபதி ஈபன் பியர்சு (Eben Pierce) என்பவர் கி.பி. 1865-ஆம் ஆண்டு தாம் மேற்கொண்ட வடதுருவத் திமிங்கில வேட்டையின்போது உலகறியச் செய்தார்.

விரைவு வேட்டைக் கப்பல்களில் எறிஈட்டித் துப்பாக்கிகளைக் கொண்டு திமிங்கிலத்தை வேட்டையாடுபவர்கள், திமிங்கிலம் காணப்பட்டவுடன் அவை சோர்வடையும் வரை அவற்றைத் துரத்திச் செல்வர். களைப்படைந்த திமிங்கலம் திரும்பவும் கடலில் மூழ்கிச் செல்ல முடியா நிலையில், சற்றேறக் குறைய இருநூறு அடிதூர இடைவெளியில் விரைவுக் கப்பலிலிருந்து வெடிநஞ்சு எறிஈட்டியால் (Explosive Harpoon) சுட்டு உயிர் இழக்கச் செய்கின்றனர். இவ்வகை வேட்டைக்குப் பயன்படுத்தப்படும் எறிஈட்டித் துப்பாக்கி நார்வே நாட்டு இசுவிண்டு பாய்ன் (Svend Foyn) என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. நே.தே.

**எறிச்சலூர் மலாடனார்**: சங்க காலப் புலவருள் ஒருவராவார். இவர் கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக் குமரனார் என்றும் அறியப்படுகின்றார். கோனாடென்பது சோழநாட்டின் உட்பகுதியில் உள்ள நாட்டுப் பகுதியாகும். இந்நாட்டகத்திருந்த எறிச்சலூரில் இவர் பல காலம் வாழ்ந்தவர் என்றும், மாடலன் என்பது குடும்பப் பெயரென்றும், குமரன் என்பது இவர் இயற்பெயரென்றும், மதுரை இவருடைய சொந்தவூரென்றும் கருதலாம்.

இவர் பாடியனவாக இன்று கிடைப்பன ஏழு செய்யுட்களேயாகும். அவை புறநானூற்றில் ஆறும் (புறம். 54, 61, 167, 180, 197, 394) திருவள்ளுவ மாலையில் ஒன்றுமாக (25) அமைந்துள்ளன. இவரியற்றியனவாக அகப்பாடல்கள் எவையும் கிட்டவில்லை.

இப்புலவர்பெருமான் சேரமான் குட்டுவன், கோதை, சோழன் இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நலங்கிள்ளி சேட்சென்னி, பெருந்திருமாவளவன், ஈர்ந்தூர் கிழான் தோயன்மாறன், ஏனாதி திருக்கிள்ளி, சோழிய ஏனாதி திருக்குட்டுவன் ஆகியோரைத் தம் பாடல்களாற் பெருமைப் படுத்தியுள்ளார்.

ஏனாதி திருக்கிள்ளியைப் பாராட்டி இவர் பாடிய செய்யுள் (புறம். 167) வஞ்சப்புகழ்ச்சியணிக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது. பொருத்தமான உவமைகளைக் கொண்டு கருத்தை விளக்கும் ஆற்றல் இவருக்குண்டு. வாள் வடு மயங்கிய உடம்பிற்கு மருந்துகொள் மரத்தையும் (புறம். 180) பகைவரால் அணுக முடியாத நாட்டிற்கு ஆட்டிடையன் அணுகமுடியாத புலிதுஞ்சும் புலத்தையும் (புறம். 54) இவர் உவமை கூறியுள்ளார். எத்தகைய கொடிய வறுமையுற்ற

ஞான்றும் புலவருலகம் உணர்ச்சியில்லாதவரின் உடைமையை உள்ளாது நல்லறிவுடையோரின் நல் குரவினையே உள்ளும் பெருமிதப் பண்பினது என்று (புறம். 197) இவர் கூறுவது பெரிதும் போற்றத்தக்க தாகும். கழனிகளிற் பணிபுரியும் வினைஞருள் பெண் பாலாரை இவர் கடைசியர் எனக் குறித்துள்ளார் (புறம். 61:1). இச்சொல் இப்பொருளில் வேறு சங்கப் புலவர் யாரும் கையாளாததாகும். அ.த.

**எறிபத்த நாயனார்** பெரியபுராணத்தில் சிறப்பிக்கப்படும் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவர். இலைமலிந்த சருக்கத்தில் இவரது வரலாறு முதலாவதாக அமைக்கப்பட்டுள்ளது. 'இலைமலிந்த வேல் நம்பி எறிபத்தர்க்கு அடியேன்' என்று இவரைச் சுந்தரர் திருத்தொண்டத் தொகையில் பாடுகிறார். எல்லையில் புகழின் மிக்க எறிபத்தர் பெருமை என் னால் சொல்ல இயலாதது; எனினும் ஆசையால் சொல்லுகின்றேன் என்று சேக்கிழார் கூறுவது இவ ரது அளவிடற்கரிய பெருமைக்குச் சான்றாம்.

மன்னியசீர் அநபாயன் ஆட்சிக்கு உட்பட்ட நகரம் கருவூர். அங்குள்ள கோயில் ஆனிலை என்றழைக்கப் படுவது. அத்திருப்பதியில் தோன்றியவர் எறிபத்தர். செஞ்சடை நாதன் தொண்டர்க்கு அடாதன செய்த வர் யாவரே ஆயினும் சிங்கம் எனக் கிளர்ந்து சென்று அது தீர்க்கும் கொள்கையுடையவர்; கையில் பரசு தாங்கிய தன்மையர்; இலைத்தொழில் அமைந்த வேல் போன்ற கூர்மை மிக்க மழுப்படையினைத் தாங்கியதால் 'இலைமலிந்த வேல்நம்பி' என்று சிறப் பிக்கப்பட்டார்.

கருவூர் ஆனிலைத் திருக்கோயில் இறைவர்க்குத் திருத்தொண்டு புரியும் சிவகாமி யாண்டார் என்னும் முதிய தொண்டர் வைகறையில் துயில் எழுந்து நீராடி, மலர் கொய்து, பூக்குடலையைத் தண்டி னால் தாங்கிக் கொண்டு திருக்கோயில் நோக்கி விரைந்தார். அன்று மகாநவமிக்கு முநதைய நாள் (அட்டமி) ஆகும். புகழ்ச் சோழனது பட்டத்து யானை நீராடிச் செருக்குடன் பாகர்க்கும் அடங் காது விரைந்து வந்தது. சிவகாமியாண்டார் கையி லிருந்த பூக்குடலையைப் பறித்துச் சிதறியது. முதிய தொண்டரோ யானையின் செயல் கண்டு, வெகுண்டு புடைக்க முற்பட்டு இடறி வீழ்ந்தார். 'சிவதா, சிவதா' என முறையிட்டு அரற்றினார். அவ்வொலி கேட்டு அங்கு வந்த எறிபத்தர் யானையைப் பின் தொடர்ந்து சென்று மழுவினால் அதன் தும்பிக்கை யைத் துணித்தார். யானையின் இருமருங்கிலும், முன்னும் செல்லும் குத்துக்கோற்காரரையும், பாகர் இருவரையும் வெட்டி வீழ்த்தினார்.

யானையும் பாகரும் இறந்துபட்ட செய்தி கேட்ட சோழ அரசர் இது பகைவர் செயலே என்றெண்ணி நால்வகைப் படைகளுடன் புறப்பட்டார். இருகை யானைபோல் நின்ற எறிபத்தரைக் கண்டார். சிவ னடியார்கள் பெரும் பிழை கண்டல்லது கொலைத் தண்டம் செய்யார் என்று உணர்ந்து குதிரையினின் றும் இறங்கி எறிபத்தரை வணங்கினார். எறிபத்தர் யானையின் சிவாபராதச் செயலையும், பாகர் அதனை விலக்காத நிலையையும் கூறினார். அத னைக் கேட்ட சோழ அரசர் 'அப்பெருங் குற்றத் திற்கு இந்தத் தண்டனை போதுமானதன்று; அக் குற்றத்திற்குக் காரணமான என்னையும் கொல்லுதல் வேண்டும். தங்களது மங்கலமான மழுவால் அத னைச் செய்தல் வேண்டாம். வாட் கருவியாகிய இதுவே ஏற்ற கருவியாம்' என்று கூறித் தம் உடை வாளை நீட்டினார்.

அதுகண்ட எறிபத்தர் சிவனடியார்பால் வேந்தர் பிரான் வைத்த அன்புக்கு எல்லையுண்டோ என எண்ணி மன்னவனது வாட்படையை வாங்கத் தயங்கி னார். இருப்பினும் மன்னர் அதனைக் கொண்டு தம் முயிரைத் துறந்து விடுவாரோ என எண்ணி அதனை ஏற்றார். 'இவ்வடியார் எனது குற்றத்தைத் தீர்க்கும் பேறு பெற்றேன்' என உள்ளுவந்த அரசர் முன்பு எறி பத்தர் 'இத்தகைய பேரன்பாளர்க்கு யான் தீங்கு நினைத்தேன்' என உள்ளம் வருந்தி அவ்வாட்படை யால் தம்முயிர் துறக்க முற்பட்டார். அந்நிலையில் புகழ்ச் சோழர் பெரியவராகிய இவர் செயல் என்னே! என விரைந்து தடுத்தார்.

அதுபோழ்து பலரும் கேட்க அருள்வாக்கு விசும் பில் கேட்டது. 'தொழத் தகும் அன்பர்களே! தொண்டர் பெருமையை மண்மேற் காட்டவே இந் நிகழ்ச்சி வேணிக் கூத்தர் அருளால் கூடிற்று' என்று கூறியது. பாகருடன் யானையும் உயிர்பெற்று எழுந் தது. எறிபத்தர் வாட்படை துறந்து புகழ்ச் சோழர் திருவடிகளை வணங்கினார். வேந்தரும் நிலமிசை நெடிது விழுந்து இறைஞ்சினார். இறையருளால் சிவகாமியாண்டாரது பூக்குடலையில் நறுமலர்கள் நிரம்பின. வேந்தனின் வேண்டுகோளின்படி எறிபத் தர் யானைமேல் அமர்ந்து அரண்மனையை அடைந் தார். இவ்வாறு அடியார்களுக்கு இடர்வரும் போதெல்லாம் முற்பட்டு நின்று தமது ஆண்மையால் இடையூறு அகற்றி வாழ்ந்த எறிபத்தர் நலமிகு கயிலை வெற்பில் சிவகணத்தார்க்குத் தலைவராக அமர்ந்தார்.

ஆளுடைத் தொண்டர் ஆண்மையும், வளவனார் பெருமையும் இவ்வரலாற்றால் உரைக்கப்பட்டன.

இத் தொண்டரைச் சேக்கிழார் 'ஆனாத காதல் அன்பர் எறிபத்தர்' எனப் போற்றி அவர்தம் திருவடி களைத் தம் முடிமேல் சூடி நின்று மகிழ்கிறார். ஜி.ஆர்.கி.

**எறும்பியப்பா** வைணவ ஆசாரியர்களுள் ஒருவரான மணவாள மாமுனிகளின் சீடர்கள் எண் மருள் ஒருவராவார். சீடர் எண்மரும் அட்டதிக் கசங்கள் என்று சிறப்பிக்கப்படுவராதலின், அந்த அட்டதிக்கசங்களுள் எறும்பியப்பாவும் ஒருவர். இவர் எறும்பி என்னும் ஊரில் பிறந்தவர். இவர்தம் தந்தை யார் பெயர் சரண்யாசாரியர்; காலம் கி.பி. 15-ஆம் நூற்றாண்டாகும். தம் குருவின் வரலாற்றினை வரவரமுனி சரிதம் என்னும் பெயரில் எழுதியுள்ளார். மேலுமிவர் தினசரிகள், சுப்பிரபாதம் ஆர்த்திப் பிரபந்தம் முதலிய நூல்களையும் செய்துள்ளார். இவர் இயற்றிய தினசரி நூலைப் பார்த்து மணவாள மாமுனிகள் மகிழ்ச்சி தெரிவித்தார் என்பது கூறப் படுகிறது. இவருக்கு அப்பா, தேவராசர் என்னும் வேறு பெயர்களும் உண்டு. மணவாள மாமுனிகள் திருவரங்கத்தில் வாழ்ந்த போது, இவரை ஒருகால் திருமடத்தில் உணவுகொள்ளுமாறு வேண்டினார் என்றும், துறவிகளின் உணவினை உண்ணலாகாது எனக் கூறி இவர் மறுத்தார் என்றும், இவர்தம் கன வில் இராமபிரான் தோன்றி நல்லறிவு புகட்டினார் என்றும் வரலாறு கூறுகிறது. அ.மா.ப.

**எறும்பியூர்** தேவாரப்பாடல் பெற்ற தலங் களுள் ஒன்று. காவிரியாற்றின் தென்பகுதியில் அமைந்து திருவெறும்பியூர் எனப்படும் இத்தலம் இக் காலத்தில் திருவறம்பூர் என்று வழங்கப்படுகிறது. திருச்சியிலிருந்து தஞ்சை செல்லும் நெடுஞ்சாலையும், புகைவண்டிப் பாதையும் குறுக்கிடும் இடத்தில் இவ் வூர் உள்ளது. திருச்சியிலிருந்து ஏறத்தாழ 8 கல் தொலைவில் உள்ள இத்தலத்தினைப் பேருந்து வழி யாகவோ புகைவண்டி வழியாகவோ சென்றடைய லாம். எறும்பு வழிபட்டமையால் இத்தலம் எறும்பி யூர் என வழங்கப்பட்டது என்று இத்தல வரலாறு கூறுகிறது. தேவர்கள் எறும்பு உருவில் இங்கு வழி பட்டனர் என்பது மரபுவழிச் செய்தியாகும். திரு மால், நான்முகன் ஆகிய தெய்வங்களும், நைமிச முனிவர்களும் இங்கு வழிபட்டுள்ளனர். பெரும்பாறை ஒன்றாலாகிய சிறுகுன்றின் மீது திருக்கோயில் அமைந் துள்ளது. தலத்து இறைவன் பெயர் எறும்பீசர்; இறைவி பெயர் நறுங்குழல்நாயகி. இத்தலத்திற்குத் திருநாவுக்கரசர் பாடிய திருக்குறுந்தொகைப் பதிகம் ஒன்றும், திருத்தாண்டகப்பதிகம் ஒன்றும் உள்ளன. இங்குள்ள இறைவன், பாறையாலாகிய சிறுமலை யின் மேல் கோயில் கொண்டிருக்கும் பாங்கினைத் 'தென் எறும்பியூர் மலைமேல் மாணிக்கத்தைச் செழுஞ்சுடரைச் சென்றடையப் பெற்றேன் நானே' என்று திருநாவுக்கரசர் தம் திருத்தாண்டகப் பாட லில் குறிப்பிட்டுள்ளார். அ.மா.ப.

**என்பீல்டு**: 'இங்கிலாந்தில் இலண்டன் மாநக ருக்கு அண்மையில் 55 சதுரக் கிலோ மீட்டர் பரப் புள்ள என்பீல்டு (Enfield) ஒரு மாகாணம். முக்கிய குடியிருப்புப் பகுதியாகிய என்பீல்டு நியூ ஆற்றினால் வளம் பெறுவது. இங்கு அமைந்துள்ள துப்பாக்கித் தொழிற்சாலை சிறப்பு வாய்ந்த ஒன்று. இங்கு கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் அமைக்கப்பட்டு விளங்கும் பொருட் கண்காட்சிச்சாலை கவர்ச்சி மிக்கது. வேறு பல சிறந்த புதிய தொழிற்சாலைகளையும் இங்கே காணலாம். இங்குள்ள பூங்காவும் பார்க்கத் தக்கது.

**என்பீல்டு²**: இங்கிலாந்திலிருந்து அமெரிக் காவுக்குக் குடியேறியவர்கள், கி.பி. 1680-ஆம் ஆண் டில், கனெக்டிகட்டு இராச்சியத்தில், தம் தாய் நாட்டிலுள்ள என்பீல்டு நகரின் நினைவுக்கு அறிகுறி யாகப் புதிய பட்டணத்தைத் தோற்றுவித்து, அந்தப் பெயரையே அதற்குச் சூட்டினர். இப்புதிய என்பீல்டு நகரின் உரிமைகோரிக் கனெக்டிகட்டுக்கும் மசாசூ சட்சுக்கும் எல்லைச் சச்சரவு ஏற்பட்டு முடிவில் கி.பி. 1749-இல் இது கனெக்டிகட்டுக்கே உரியது என்று முடிவு செய்யப்பட்டது. இங்கேயும் துப்பாக்கித் தொழிற்சாலை அமைக்கப் பெற்றது. அசார்டு என்பாரே கி.பி. 1833-இல் இதை அமைத்தவர் ஆவார். இப்பட்டினத்தின் பரப்பு 33.2 சதுர மைல் களாகும். இங்குத் தயாரிக்கப்படும் கம்பளி - சமுக் காளம் பெயர் பெற்றவை. தெ.பா.

**என்வர் பாட்சா** துருக்கி நாட்டின் அமைச்ச ராக இருந்தவர். என்வர் பாட்சா (Enver Padsha) வின் இயற்பெயர் என்வர் பே (Enver Bey) என்ப தாகும். இவர் கி.பி. 1881-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 12-ஆம் நாள் துருக்கியின் தலைநகரான கான்சுடாண்டிநோபிளில் ஒரு தாழ்நிலை அதிகாரிக்கு மகனாகப் பிறந்தார். இன்று அந்நகர் இசுதான்புல் என்று அழைக்கப்படுகிறது. என்வர் பாட்சா (Enver Padsha) பிறந்த சில காலத்திற்குள் அவருடைய குடும்பம் மாசிடோனியாவிலுள்ள (Macedonia) மொனாசுடிர் (Monastir) நகருக்குக் குடிபெயர்ந்தது. அங்கிருந்த இராணுவப் பள்ளிகளில் இவர் கல்வி கற்கத் தொடங்கினார். பின்னர்க் கான்சுடாண்டி நோபிளில் உள்ள போர்க் கல்லூரியில் (War College) சேர்ந்தார்.

இராணுவச் சேவையை இவர் மேற்கொண்டபோது இவ்ருக்கு மாசிடோனியாவில் பணிப் பொறுப்பு அளிக்கப்பட்டது. அங்கு இருந்தபோதுதான் துருக்கியப் புரட்சியாளர்கள் கழகத்தோடு இவருக்குத் தொடர்பு ஏற்பட்டது. அங்கிருந்த 'ஒற்றுமை மற்றும் முன்னேற்றக்குழு' (Committee of Union and Progress) என்ற இரகசியக் கழகத்தில் உறுப்பினராகச் சேர்ந்தார். இவர் 1908-ஆம் ஆண்டில் தொடங்கிய இளம் துருக்கியப் புரட்சியின் (Young Turk Revolution) நாயகனாக விளங்கினார். முகமது சேவ்கத்து(Muhmud Sevket)என்ற படைத்தலைவரின் கீழ்க் கான்சுடாண்டி நோபிளை நோக்கிச் சென்ற விடுதலைப் படையில் என்வர் பாட்சா சேர்ந்து கொண்டார். அப்படை துருக்கிய அல்லது உதுமானியப் (Ottoman) பேரரசரான இரண்டாம் அப்துல் அமீதைப் (Abdul Hamid II) பதவியிலிருந்து நீக்கியது. புதிய அரசியலமைப்பு ஒன்று உருவாக்கப்பட என்வர் பாட்சா பேருதவி செய்தார்.

இவர் 1911-ஆம் ஆண்டில் தொடங்கிய திரிபோலிப் போரில் (Tripolitan War) பெரும் பங்கு வகித்தார். இலிபியாவில் துருக்கியர் எதிர்ப்பை முன்னின்று நடத்தியவர் இவரேயாவர். இவர் 1912-ஆம் ஆண்டில் இவருடைய சேவையைப் பாராட்டும் வகையில் திரிபோலியின் ஒரு பகுதியான பென்காசிக்கு (Bengazi) ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

விரைவில் இவர் கான்சுடாண்டிநோபிளுக்குத் திரும்ப வேண்டியதாயிற்று. மீண்டும் 'ஒற்றுமை மற்றும் முன்னேற்றக் கழகத்தின்' அரசியல் நடவடிக்கைகளில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார். 1913-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 24-ஆம் நாள் நடத்தப் பெற்ற திடீர்ப் புரட்சிக்கு இவர் தலைமைப் பொறுப்பேற்றார்; சமாதானக் கொள்கையைக் கடைப்பிடித்து வந்த துருக்கிய அரசை வீழ்த்தினார்; தலைமைப் படைத்தலைவரைக் கொன்றார்; ஆட்சி அதிகாரத்தைத் தம் கட்சியினரிடம் ஒப்படைத்தார். ஓர் இராணுவ சருவாதிகாரி போன்று இவர் நடந்து கொண்டார். அப்போது நடைபெற்றுக் கொண்டிருந்த இரண்டாம் பால்கன் போரில் (Second Balkan War) துருக்கியப் படைக்குத் தலைமைத் தளபதியாகச் செயற்பட்டார். இவர் 1913-ஆம் ஆண்டு சூலை திங்கள் 22-ஆம் நாள் ஏட்ரியாநோபிளைப் (Adrianople) பல்கேரியர்களிடமிருந்து (Bulgars) சிரமமின்றிக் கைப்பற்றினார். அப்போரை முடிவுக்குக் கொண்டுவர வல்லரசுகள் அறிவித்த இலண்டன் உடன்பாட்டைப் பழித்துப் பேசினார். ஏட்ரியாநோபிளைப் பல்கேரியாவிற்குக் கொடுத்துவிட வேண்டும் என்ற வல்லரசுகளின் முடிவைப்புறக்கணித்து விட்டு அந்நகரைத் தம் வசம் தொடர்ந்து வைத்துக் கொண்டார். அந்நகரை மீண்டும் துருக்கியின் ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்ததன் வாயிலாகத் துருக்கிய தேசிய உணர்ச்சிக்குப் புத்தூக்கம் அளித்தார். இரண்டாம் பால்கன் போரின் விளைவாகத் துருக்கியப் படை சீரமைக்கப்பட்டது. அதன் காரணமாகத்தான் முதலாம் உலகப் போரில் துருக்கியர்கள் பயன்தரத்தக்க அளவு போரிட வாய்ப்பு ஏற்பட்டது.

பால்கன் போருக்குப் பிறகு துருக்கியப் பேரரசு என்வர், தாலாத்து (Talat), செமால் (Jemal) ஆகியோரைக் கொண்ட மூவராட்சியின்கீழ் வந்தது. 1914-ஆம் ஆண்டில் என்வர் பாட்சா போர் அமைச்சராகப் பொறுப்பேற்றார். உருசியாவிற்கு எதிராகச் செருமனியுடன் காப்பு உடன்படிக்கை (Defensive Alliance) ஒன்றை ஏற்படுத்திக் கொள்ளுவதற்கு மூல காரணமாக விளங்கியவர் இவரேயாவார். போர்க் காலத்தில் உதுமானியப் படையில் பணியாற்றி வந்த செருமானிய அதிகாரிகளின் முழு ஒத்துழைப்பையும் பெற இவர் பெரிதும் பாடுபட்டார். இவருடைய படைத்திட்டங்களுள் ஒன்று உருசியாவின் ஆட்சிக்குட்பட்டிருந்த மத்திய ஆசியாவில் வாழ்ந்து வந்த துருக்கிய மக்களையும் உதுமானியத் துருக்கியர்களையும் ஒன்றாக இணைப்பதாகும். அனைத்துத் துருக்கிய ஒற்றுமைக் (Pan-Turkic) கோட்பாட்டை இவர் வலியுறுத்தினார். போரில் துருக்கியப் படை 1914-ஆம் ஆண்டு திசம்பர் திங்களில் சரிகாமிசு (Sarikamis) என்னுமிடத்தில் தோற்கடிக்கப்பட்டது. அதனால், இவருடைய மூன்றாம் படை பெருமளவு சேதம் அடைந்தது. இவர் 1916-ஆம் ஆண்டில் கல்லிபோலிசு (Gallipolis) போரில் நேசநாடுகளை வென்று தாம் இழந்த பெருமையை மீட்டுக் கொண்டார். உருசியாவில் 1917-இல் போல்சுவிக்குப் புரட்சி ஏற்பட்டது. அதன் காரணமாக உருசியா, போரிலிருந்து விலகிக் கொண்டது. பாகு (Baku) என்ற இடத்தை என்வர் பாட்சா கைப்பற்ற அந்நிகழ்ச்சி உதவியது.

போர் நிறுத்த ஒப்பந்தம் 1918-ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் மேற்கொள்ளப்பட்டபோது என்வர் பாட்சா செருமனிக்கு ஓடினார். அங்குப் பெர்லின் நகரில் கார்ல் ராடெக்கு(Carl Radek) என்ற போல்சுவிக்குத் (Bolshevik) தலைவரைச் சந்திக்க நேர்ந்தது. அச்சந்திப்பின் பயனாக 1920-ஆம் ஆண்டில் இவர்மாசுக்கோவிற்குச் சென்றார். சோவியத்து உருசியாவின் துணையுடன் துருக்கியில் ஆதிக்கம் பெற்றிருந்த துருக்கியத் தலைவர் கமால் பாட்சாவை முறி

யடிக்க வேண்டும் என்று இவர் விரும்பினார். ஆனால், சோவியத்து உருசியா அதற்கிணங்க மறுத்துவிட்டது. அதற்குப் பதிலாகப் போல்சுவிக்கு அரசு இவரைப் புக்காராவிற்கு (Bukhara) அனுப்பி மத்திய ஆசியாவில் வாழ்ந்து வந்த இசுலாமிய மக்களை மத்திய ஆசியக் குடியரசுகளாக மாற்றி அவற்றைச் சோவியத்து அரசுடன் இணைக்கும்படியான பணியினை இவருக்களித்தது. ஆனால், 1921-இல் புக்காராவில் சோவியத்து அரசுக்கு எதிராகப் பாசுமகிப் (Basmachi) புரட்சி ஏற்பட்டபோது இவர் புரட்சியாளர்களுடன் சேர்ந்து கொண்டார். புரட்சியாளர்களுக்கும் செஞ்சேனைக்கும் (Red Army) இடையே நடைபெற்ற போரில் துருக்கித் தானத்திலுள்ள பால்டு சுவான் (Baldzhuan) என்னுமிடத்தில் 1922-ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதம் 4-ஆம் நாள் கொல்லப் பட்டார். தி.அர.இரா.

**என்றி அயர்ட்டன்:** இங்கிலாந்தில் மக்கள் இறைமைக் கோட்பாட்டை ஆதரித்த பாராளுமன்றத்துக்கும், அரசரின் இறை உரிமைக் கோட்பாட்டை ஆதரித்த அரசர் முதலாம் சார்லசுக்கும் (King Charles I) இடையே கி.பி. 1642-ஆம் ஆண்டிலிருந்து 1649-ஆம் ஆண்டு வரை நடைபெற்ற உள்நாட்டுப் போரில், பாராளுமன்றத்தின் சார்பில் சேர்ந்து போரிட்ட தீவிரஆங்கில மறுப்புரைக் கிறித்தவர்களின் (Protestants) தலைவரான ஆலிவர் கிராம்வெல் (Oliver Cromwell) என்பவரின் மருமகனே என்றி அயர்ட்டன் (Henry Ireton) ஆவர். இவர் அரசியலமைப்புப்பற்றிய சில கருத்துகளை உள்நாட்டுப் போர் முடிவுற்ற சமயம் தெரிவித்தார்.

ஆங்கிலப் படைவீரரும் அரசியலறிஞருமான என்றி அயர்ட்டன் கி.பி. 1611-இல் நாட்டிங்காம் சயரில் ஆட்டன்பரோவில் பிறந்தார். அரச ஆதரவாளருக்கும், பாராளுமன்ற ஆதரவாளருக்குமிடையே உள்நாட்டுப் போர் தொடங்கியதும், இவர் பாராளுமன்ற ஆதரவாளராக அதனுடைய படையில் சேர்ந்தார். இவர் அரசருக்கு எதிராக கி.பி. 1642-இல் எட்சுகில் (Edgehill) என்ற இடத்தில் நடைபெற்ற போரில் ஒரு குதிரைப் படையின் தலைவராக இருந்தார். இப்போரில் எக்கட்சிக்கும் வெற்றி தோல்வி கிடைக்கவில்லை. இதற்கு அடுத்த ஆண்டில் அயர்ட்டன் கிராம்வெல்லை முதல்முறையாகப் பார்த்து, அவருடைய நட்பைப் பெற்றார். கிராம்வெல் அப்போது கிழக்கு இங்கிலாந்தில் உள்ள ஒரு படைக்குத் தலைமைப் பதவியிலிருந்தார் கிராம்வெல் அயர்ட்டனை எலைதீவின் (Isle of Ely) துணை ஆளுநர் ஆக்கினார். பாராளுமன்றப் படை அர்சருடைய படைகளை கி.பி. 1644-இல் மார்சுட்டன்மூர் (Marston Moor), கி.பி. 1645-இல் நேசுபி (Naseby) முதலிய போர்களில் தோற்கடித்து வெற்றிகள் அடைந்தபோது அயர்ட்டனும் அப்போர்களில் கலந்து கொண்டார். அயர்ட்டன் கி.பி. 1646-இல் கிராம்வெல்லின் மூத்த மகள் பிரிட்செட்டைத் (Bridget) திருமணம் செய்து கொண்டார். இவர் கி.பி. 1645-இல் பாராளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். உள்நாட்டுப் போரின் முதல் கட்டத்தினிறுதியில் அரசர் தோற்று இசுகாட்லாந்தியரிடம் அடைக்கலம் புகுந்த சூழ்நிலையில், அரசருடைய கட்சி, பாராளுமன்றக் கட்சி, படைவீரர் கட்சி ஆகிய முத்தரப்பினருக்குமிடையே அடுத்துச் செய்வதைப் பற்றிப் பேச்சுகள் நடைபெற்ற போது, அயர்ட்டன் கி.பி. 1647-இல் அரசியல் திட்டத் தலைப்புகள் (Heads of Proposals) என்னுமொரு திட்டத்தை வரைந்து அரசரிடம் அளித்தார். அரசியலமைப்புக்குட்பட்ட முடியாட்சி, ஆட்சி அதிகாரங்களை அரசர், பாராளுமன்றம், படையினர் ஆகிய முத்தரப்பினரும் பகிர்ந்து கொள்ளுதல், எல்லா மறுப்புரைக் கிறித்தவர்களுக்கும் (அதாவது மித ஆங்கிலிகன்களுக்கும் கடுந்தூய்மைக் கட்சியினருக்கும்) சமயத் துறைகளில் உரிமையும் சுதந்திரமும் வழங்குதல் முதலியவை எல்லாம் அத்திட்டத்தில் கூறப்பட்டிருந்தன. பின்னர் அயர்ட்டன் கடுந்தூய்மைக் கட்சியினர் (Puritans) நிறைந்த படையோடு சேர்ந்து, உள்நாட்டுப் போரின் இரண்டாம் கட்டத்தில் அரசரைத் தோல்வியுறச் செய்து, அரச பதவியையே ஒழிப்பதற்காக மற்றப் படை அதிகாரிகளுடன் சேர்ந்தார். அரசர் சார்லசை விசாரணைக்குக் கொண்டு வருவதற்கு இவர் ஏற்பாடு செய்து, அரசருக்குக் கொலைத் தண்டனை வழங்கிய தீர்ப்பில் தானும் கையெழுத்திட்டார். கிராம்வெல்லின் ஆட்சிக்கெதிராக அயர்லாந்தில் கலகம் செய்த உரோமானியக் கத்தோலிக்கக் கிறித்தவர்களின்மீது குற்ற வழக்குகளை அயர்ட்டன் தொடுத்து, விசாரணை நடத்தித் தண்டித்தார். இவர் கி.பி. 1650-இல் அயர்லாந்தின் துணைப் (ஆளுநர்) பிரபுவாகவும் (Lord Deputy of Ireland), தலைமைத் தளபதியாகவும் அமர்த்தப்பட்டார். இவர் அயர்லாந்தில் இலிமரிக்கு (Limerick) நகரத்தை முற்றுகை இட்டபின் இறந்துபோனார்.

**அயர்ட்டனின் அரசியற் கருத்துகள்:** ஆங்கிலத் தீவிர மறுப்புரைக் கிறித்தவர்கள் எல்லோரையும் போல இவரும் அரசருடைய எதேச்சாதிகாரத்தை எதிர்த்துப் பாராளுமன்ற உரிமைகளை ஆதரித்து, இறுதியில் முடியாட்சியை ஒழித்துக் குடியரசுக் கோட்பாட்டை ஆதரித்தவராவர். முதலில் இவர் அரச பதவி பெயரளவில் இருக்க, அதிகாரமும் பொறுப்புகளும் பாராளுமன்றத்திடம் இருத்தல் வேண்டுமென்று

கூறினார். இவருடைய அரசியற் கருத்துகள் இவர் கி.பி. 1647-இல் வரைந்த அரசியல் திட்டத் தலைப்பு களிலிருந்து தெரிய வருகின்றன. அரசர், பாராளு மன்றம், கடுந்தூய்மைக் கட்சியினர் படை ஆகிய முத் தரப்புக்குமிடையே ஆதிக்கப் போட்டி ஏற்பட்ட போது, அயர்ட்டன் இந்தத் திட்டத்தை வரைந்து அரசரிடம் அளித்தார். அதன்படி முடியாட்சி நீக்கப் படமாட்டாது. ஆனால் அது அரசர் விரும்பியபடி எதேச்சாதிகாரமாக இல்லாமல், அரசியலமைப்புக்கு உட்பட்ட முடியாட்சியாக இருத்தல் (Constitutional Monarchy) வேண்டும். ஆட்சி அதிகாரம் பாராளு மன்றத்துக்குப் பொறுப்புள்ள ஒரு குழுவினிடம் (Council) ஒப்படைக்கப்படுதல் வேண்டும். ஆங்கிலிகக் கிறித்தவத் திருச்சபையானது முதலாம் எலிசபெத்து அரசியரால் நிறுவப்பட்டபடி அரசரை ஆளுநராகவும் (Governor) ஆயர்களைக் (Bishops) கண்காணிப்பாள ராகவும் கொண்டு, அதனுடைய பழைய வழிபாட்டு முறைகளையும் பின்பற்றுதற்கேற்ற சுதந்திரத்தோடு இருக்கும். கடுந்தூய்மை மறுப்புரைக் கிறித்தவர், பிரசுபிட்டீரிய மறுப்புரைக் கிறித்தவர் முதலிய எல்லா மறுப்புரைச் சமயப் பிரிவுகளைச் சேர்ந்த கிறித்தவர்களுக்கும் முழுமையான வழிபாட்டுரிமை இருக்கும். நாட்டின் படையானது முதல் பத்தாண்டு களுக்குப் பாராளுமன்றத்தால் கட்டுப்படுத்தப்பட்டுப் பின்னர் அது அரசருடைய கட்டுப்பாட்டில் வந்து சேரும்.

அயர்ட்டன் கிராம்வெல்லோடு சேர்ந்து அர சருக்கெதிராகப் புரட்சி செய்த போதிலும் இராணு வச் சருவாதிகாரத்தை ஆதரிக்கவில்லை; இவர் விரும் பியதெல்லாம் உள்நாட்டுப்போரின் முதல் கட்டம் வரை வெற்றியாக நடந்த புரட்சியின் நல்ல விளை வுகளை அரசியலமைப்புக்கு ஒப்ப எவ்வாறு பயன் படுத்திக் கொள்ளுவது என்பதுதான். முதலில் இவ ரும் கிராம்வெல்லும் எடுத்துரைத்த இக்கருத்தைப் படை அதிகாரிகள் பலரும் எதிர்த்தபோதிலும், இறு தியில் ஒப்புக் கொண்டனர்.

சட்ட ஆதாரங்களையுடைய உரிமைகளே அயர்ட்டனால் ஒப்புக் கொள்ளப்பட்டன. இவர் இயற்கையின் சட்டத்தை மறுத்து, வழக்கமென்னும் சட்டமே சரியானதென்று கூறினார். இவர் கூறியதா வது: அரசியுலுரிமைகளும் சொத்து உரிமைகளும் சட்டத்தை ஆதாரமாகக் கொண்டுதான் தோன்று கின்றன. ஆகையால் இயற்கை உரிமை என்பது (Natural Right) உரிமையே அன்று.

மதிப்பீடு: அயர்ட்டன் கூறிய உரிமை பற்றிய கருத்து எல்லாக் கடுந்தூய்மைக் கட்சியினர் கருத் தையும்போன்று இக்கால உரிமை பற்றிய கருத்தே யாகும். சட்டத்தினால் தோற்றுவிக்கப்படாவிட்டா லும், அதனால் ஒப்புக்கொள்ளப்படும் உரிமைதான் சட்டப்படியாக நீதி மன்றத்தால் காப்பாற்றப்படக் கூடியது. அரசாங்க அமைப்புப் பற்றி இவர் கூறிய அரசியலமைப்புக்கு உட்பட்டமுடியாட்சி என்ற கோட் பாடு இப்போது ஆங்கில அரசியலமைப்பில் பின்பற்றப் பட்டு வருகிறது; எதேச்சாதிகார முடியாட்சிக் கோட் பாடு மறைந்துவிட்டது. பா.கு.

துணை நூல்கள்:

**Ashley P. Maurice**, A Study of the English Republican Movement in Seventeenth Century, New Haven, Connecticut, 1947.

**William Haller (Ed.)**, Tracts on Liberty in the Puritan Revolution, 1638-1647, New york, 1934.

**என்றி மன்னர்கள்**: இங்கிலாந்திலும் பிரான் சிலும் என்றி என்னும் பெயர் கொண்ட மன்னர்கள் சிலர் ஆண்டனர். இவர்கள் வரலாற்றில் குறிப்பிடத் தக்க இடம் பெற்றுள்ளனர்.

இங்கிலாந்தில்: இங்கிலாந்து நாட்டை என்றி என்ற பெயருடைய எட்டு மன்னர்கள் வெவ்வேறு காலங்களில் ஆட்சி செய்தனர். நார்மானியர்களின் (Normans) வருகைக்கு முன்னும் தியூடர்களின் (Tudores) ஆட்சிக்குப் பின்னும் இங்கிலாந்தில் இப் பெயருடைய மன்னர் ஒருவரும் ஆட்சி செய்யவில்லை. என்றி மன்னர்கள், நார்மானியர் (முதலாம் என்றி – கி.பி.1068-1135), அஞ்சுவினர் (இரண்டாம் என்றி- கி.பி. 1133–1189, மூன்றாம் என்றி – கி.பி.1207-1272), இலங்காசுட்டிரியர்(நான்காம் என்றி –கி.பி.1366-1413, ஐந்தாம் என்றி – கி.பி. 1387–1422, ஆறாம் என்றி – கி.பி.1421–1471), தியூடர் (ஏழாம் என்றி –கி.பி. 1456-1509, எட்டாம் என்றி –கி.பி.1491–1547)என்னும் நான்கு குலங்களைச் சேர்ந்தவர்களாக உள்ளனர்.

முதலாம் என்றி (கி.பி. 1068–1135): இவர் வெற்றி வீரர் வில்லியத்தின் (William, the Conqueror) மூன் றாம் மகன். இவர்தம் மூத்த சகோதரர் இரா பெர்ட்டு (Robert) நார்மண்டிக் கோமகனாகவும் இளைய சகோதரர் இரண்டாம் வில்லியம் (William II) இங்கிலாந்தின் மன்னராகவும் இருந்து வந்தனர். வேட்டைக்குச் சென்ற இரண்டாம் வில்லியம் வாரி

சின்றி இறக்கவே, என்றி முதலில் வின்செசுட்டரில் (Winchester) உள்ள கருவூலத்தைக் கைப்பற்றி, பின்னர் இலண்டனுக்குச் சென்று கி.பி.1100-இல் மன்னராக முடிசூட்டிக் கொண்டார். இவர் மக்களுக்கும் திருச்சபைக்கும் பல நன்மைகளைப் புரிந்தார். இரண்டாம் வில்லியத்தின் தவறான ஆட்சிமுறையைக் கைவிடுவதாக உறுதி கூறி மக்களுக்குச் 'சுதந்திரச் சாசனம்' (Charter of Liberties) ஒன்றை வெளியிட்டார். பொதுமக்களின் துன்பங்களுக்குக் காரணமாயிருந்த இரானுல்பு பிளாம்பார்டை (Ranulf Flamboard) இலண்டன் கோட்டையில் சிறைவைத்தார். இவருக்கும் திருச்சபையைச் சேர்ந்த ஆன்செல்மிக்கும் (Anselm) ஏற்பட்ட 'உடன்பாட்டின்படி திருச்சபையினர் மன்னருக்கு வாக்களித்தனர். நார்மானியரான இவர் ஆங்கிலசாக்சானிய மரபைச் சேர்ந்த மாடு (Maud) என்னும் இளவரசியை மணந்து மக்கள் அன்பைப் பெற்றார். நார்மண்டியில் குழப்ப நிலை மிகாமலிருக்க இவர் தம்மை எதிர்த்த மூத்த சகோதரன் இராபர்ட்டை திஞ்செபிராய் (Tinchebray) என்னுமிடத்தில் கி.பி. 1106-இல் நடந்த போரில் முறியடித்துச் சிறையிலிட்டார். நார்மண்டியும் இவருடைய நேரடி ஆட்சியின்கீழ் வந்தது.

இவர்தம் ஒரே மகன் வில்லியம் கி.பி. 1120-இல் ஆங்கிலக் கால்வாயில் (English Channel)மூழ்கி இறந்ததும் மனமுடைந்து போனார். தமக்குப்பின் மகள் மாடில்தாவை (Matilda) இங்கிலாந்தின் அரசியாக்குமாறு பிரபுக்களிடமிருந்து வாக்குறுதி பெற்றார். இவர்கி.பி.1135-இல் இறந்தார். இவருக்குப்பின் இசுட்டீபன் மன்னராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இரண்டாம் என்றி (கி.பி. 1133-1189): இசுட்டீபன் இறந்ததும் முதலாம் என்றியின் மகள் வயிற்றுப் பேரன் இரண்டாம் என்றி (Henry II) என்ற பெயரோடு கி.பி. 1154-இல் இங்கிலாந்தின் அரசரானார். இவருக்கு இங்கிலாந்து, நார்மண்டி (Normandy), அஞ்சு (Anjou), பாயிட்டோ (Poitoau), அக்விட்டேன் (Aquitaine) ஆகிய பகுதிகள் உரியவாயிருந்தன.

இவர் இசுட்டீபன் (Stephen) ஆட்சியால் நாட்டில் விளைந்த குழப்பங்களை அறவே ஒழித்தார். அனுமதியின்றிக் கட்டப்பட்ட கோட்டைகளை அழித்தார். பிரபுக்களிடமிருந்து கேடய வரி (Scutage) என்னும் வரியை வசூலித்து, அதன்மூலம் வேற்று நாட்டு வீரர்களைத் தம் வெளிநாட்டுப் போர்களுக்குப் பயன்படுத்திக்கொண்டார். இசுகாட்டிய மன்னர் நான்காம்மால்கம் (Molcolm IV)என்பவரையும் வேல்சு மன்னர் ஓவன் என்பவரையும் தமக்குப் பணியுமாறு செய்தார். தம் பாட்டன் முதலாம் என்றியின் ஆட்சி முறைச் சீர்திருத்தங்களை யெல்லாம் இவர் மறுபடியும் நடைமுறைக்குக் கொண்டுவந்தார். காண்டர்பரித் தலைமைக் குரு தாமசு பெக்கட்டு (Thomas Becket) திருச்சபைக் குற்றவாளிகளை அரச நீதிமன்றத்தின் விசாரிக்கும் முறையை ஏற்க மறுத்தார். கிளாரண்டன் சட்டப்படி, திருச்சபை நீதிமன்றங்களில் விசாரித்துக் குற்றவாளிகள் என்று மெய்ப்பிக்கப்பட்டால், அவர்களை மன்னர் நீதிமன்றங்கள் மறுபடியும் விசாரித்து நீதி வழங்கவேண்டும் என்றார் இவர். உத்தரவு இல்லாமல் போப்பாண்டவருக்குப் பணம் அனுப்பக்கூடாது என்பதைப் பெக்கட்டு மறுத்தார். மன்னரின் சினத்தைக் கண்ட அரண்மனைக் காவலர்கள் பெக்கட்டைக் கொன்றனர்.

இவர் கி.பி. 1166-இல் கிளாரண்டன் சட்டம் (Clarendon Assize) இயற்றி, நீதிபதிகளை நாடு முழுவதும் அனுப்பி நீதி வழங்கச் செய்தார். வழக்குகளை விசாரணை செய்யச் சான்றாய முறையை (Jury System) ஏற்படுத்தினார். இவர் கி.பி. 1176-இல் இயற்றிய நார்த்தாம்டன் சட்டத்தை (Northampton Assize) மீறியவர்களுக்குக் கடும் தண்டனை விதிக்கப்பட்டது.

இவருக்கும் இவர் மனைவி எலியனார் (Eleanor) என்பவளுக்கும் நான்கு ஆண்களும் நான்கு பெண்களும் பிறந்தனர். இவர்தம் இறுதிக் காலத்தில் மனைவி மக்களின்பால் கொண்ட வெறுப்பினால் மனமுடைந்து கி.பி. 1189-இல் இறந்தார். ஆங்கில நாட்டின் தலைசிறந்த மன்னர்களின் முன்னணியில் வைத்து எண்ணக்கூடிய பெருமை வாய்ந்தவர் இரண்டாம் என்றி மன்னராவார்.

மூன்றாம் என்றி (கி.பி. 1207-1272): தம் தந்தை சான் (John) மன்னர் கி.பி. 1216-இல் இறக்கவே, ஒன்பது வயதான இவர் கி.பி. 1216-இல் இங்கிலாந்தின் மன்னரானார். இவருக்குப் பெம்பிரோக்கு பிரபு (Eral of Pembroke) காவலராக இருந்தார். இவர் இரண்டாம் என்றியிடம் பயிற்சி பெற்றிருந்த சில பிரபுக்களின் அறிவுரையுடன் சிறந்த ஆட்சி செய்தார். இவர் கி.பி. 1227-இல் தாமே ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்டார். எனினும் ஆட்சி நடத்தும் திறமையற்றவர். தீய நண்பர்களால் நாட்டின் செல்வத்தை வீணாக்கினார்; பிரபுக்களைப் பகைத்துக் கொண்டார். பிரபுக்களின் தலைவராகவும் இலீசுட்டரின் பிரபுவாகவும் இருந்த சைமன் தி மாண்பர்ட்டு (Simon de Montfort), மன்னரைச் சில மாதங்கள் சிறையில் வைத்து, அரசாங்கத்தைத் தாமே நடத்தினார். இலண்டனில் நாடாளுமன்றம் கூட்டப்பட்டது. இந்

நாடாளுமன்றத்தில் ஒவ்வொரு மாநிலம் (Shire), தன்னாட்சி பெற்ற நகரம் (Borough) ஆகியவற்றிலிருந்து பேராளர்கள் கலந்துகொண்டனர். இதுவே ஆங்கிலப் பாராளுமன்றத்தின் தொடக்கமாகும். ஈவ்சாம் (Evesham) என்னுமிடத்தில் கி.பி. 1265-இல் நடந்த போரில் அரசர் படைகளால் மாண்பர்ட்டு கொல்லப்பட்டார். என்றியின் மகன் எட்வர்டு இப் போரின் வெற்றிக்குக் காரணமானவர்.

போப்பாண்டவர் என்றியின் திறமையின்மையைப் பயன்படுத்திப் பல சலுகைகளை அடைய முயற்சி செய்ததைப் பொதுமக்கள் எதிர்த்தனர். போப் பாண்டவரின் பேராளர் ஆட்டோ (Otto) என்பவர் கி.பி. 1239-இல் நாட்டினின்றும் துரத்தப்பட்டார்.

என்றி தம் ஆட்சியின் இறுதி ஏழாண்டுக் காலத்தைத் தம் மகன் எட்வர்டு உதவியுடன் மிகச் சிறப்பாக நடத்தினார். இவர் கி.பி. 1272-இல் இறந்தார். நாட்டில் ஒற்றுமையும் அமைதியும் நிலவின.

**நான்காம் என்றி** (கி.பி. 1366-1413): இவர் மூன்றாம் எட்வர்டின் பேரனும் இலங்காசுட்டர் கோமகன் சான் காண்டின் (John of Gaunt) மகனும் ஆவார். இங்கிலாந்து மன்னர் இரண்டாம் இரிச்சர்டினால் (Richard II)இவர் நாடு கடத்தப்பட்டார். என்றியின் தந்தையார் சான் கி.பி. 1399-இல் இறக்கவே, அவருடைய சொத்துகளை இரிச்சர்டு பறிமுதல் செய்தார். இதனால் என்றி சினமடைந்து இரிச்சர்டு அயர்லாந்துக்குச் சென்றிருந்த சமயத்தில் ஒரு படையுடன் நாடு திரும்பி, அரசினைக் கைப்பற்றிக் கொண்டார். அயர்லாந்திலிருந்து திரும்பிய இரிச்சர்டு சிறைபிடிக்கப்பட்டு அரசுக் கட்டிலைத் துறந்தார் (கி.பி. 1399). அடுத்தபடியாகப் பட்டத்திற்கு வரும் உரிமையுடையவர் இரண்டாம் எட்வர்டின் மூன்றாம் மகன் இலயனல் என்பவரே. அவ்வாறிருந்தும் நான்காம் என்றி பட்டத்திற்கு வந்தது இங்கிலாந்து வரலாற்றில் ஒரு புரட்சியேயாகும். இதனை இலங்காசுட்டிரியப் புரட்சி (The Lancastrian Revolution) என்பர். அதாவது ஆங்கில ஆட்சி முறையில் குலமரபு உரிமையைக் காட்டிலும் நாடாளுமன்றத்தின் ஒப்புதல் முக்கியமாகும். எந்த மன்னராயினும் நாடாளுமன்றத்தைப் புறக்கணித்துவிட்டு ஆட்சி நடத்துவது இனி இயலாது என்பது உறுதியாக்கப்பட்டது. நாடாளுமன்றம் (கி.பி. 1399) என்றியையே அரசராக ஏற்றுக் கொண்டது.

இவர் இங்கிலாந்தின் காண்டர்பரித் தலைமைக் குருவாகத் தம் நண்பர் அருண்டேலை (Arundale) நியமித்தார். திருச்சபையை எதிர்த்த சமய எதிரிகள் கி.பி. 1401-இல் சட்டத்தால் தண்டிக்கப்பட்டனர்.

இவர் இரண்டாம் இரிச்சர்டின் ஆதரவாளர்கள் கி.பி. 1400-இல் விண்சர் (Windsor) என்னுமிடத்தில் செய்த கிளர்ச்சியை அடக்கினார். வேல்சு இளவரசர் ஓவன் கிளண்டோவரின் (Owne Glendower) தலைமையில் கிளர்ச்சி செய்த வேல்சு மக்களை அடக்கினார். நார்த்தம்பர்லாந்து பிரபு என்றி பெர்சி (Henry Percy) ஆமில்டன் குன்று (Homildon Hill) என்னுமிடத்தில் இசுகாட்டியர்களைச் (Scotts) சிறைப் படுத்தினார். நார்த்தம்பர்லாந்து கூட்டத்தினர் தங்களுக்கு எதிர்பார்த்த அளவு அதிகாரம் கிடைக்காததால் நான்காம் என்றியை எதிர்த்தனர். நார்த்தம்பர்லாந்து கூட்டத்தினர் வேல்சு கலகக்காரருடன் ஒன்று சேருவதற்குமுன், கி.பி. 1403-இல் ஓவன் கிளண்டோவரின் கூட்டாளியான ஆட்சுபர் (Hotspur)என்ற வீரரைச் சுரூசுபரி (Shrewsbury) என்ற போரில் என்றி வெற்றி கண்டார். பிராம்காம் மூர் (Bramham Moor) போரில் கி.பி. 1408-இல் நார்த்தம்பர்லாந்துபிரபு கொல்லப்பட்டார். இவர் பகைவர்களை ஒடுக்கினார். நாட்டில் அமைதி நிலவவில்லை. இவர் கி.பி. 1413-இல் இறந்தார்.

**ஐந்தாம் என்றி** (கி.பி. 1387-1422): நான்காம் என்றியின் மூத்த மகனான வேல்சு இளவரசர் ஐந்தாம் என்றி (Henry V) என்ற பட்டப்பெயரோடு கி.பி. 1413-இல் இங்கிலாந்தின் மன்னரானார். இளமைப்பருவத்தில் பொறுப்பின்றித் திரிந்தபோதிலும், தம் தந்தையாரின் ஆட்சிக்காலத்தில் நடந்த போர்களில் பெரும் பங்கேற்று வெற்றி வீரராகத் திகழ்ந்தார். இவர் தம் கோட்பாடுகளைத் திருத்தி அமைத்துக்கொண்டு ஒரு சிறந்த மன்னராக ஆட்சி செய்தார். தலைமைக் குரு அருண்டேலிடம் மட்டுமே சினத்துடன் நடந்துகொண்டார். உலோலார்டுகளின் (Lollards)சமய எதிர்ப்பாளர்களின் தலைவர் சர் சான் ஓல்டுகாசில் (Sir John Oldcastle) என்பவரைத்தீயிட்டுக் கொன்று அவர் ஆதரவாளர்களை ஒழித்தார்.

தம் பாட்டனாரின் காலத்தில் தொடங்கிய நூற்றாண்டுப் போரை இவர் தொடர்ந்து நடத்தினார். இவருடைய தலைமையில் சென்ற ஆங்கிலப்படை ஆர்பிளோர் (Harfleur) என்னும் நகரைக் கைப்பற்றி, கி.பி. 1415-இல் அசின்கோட்டு (Agincourt) என்னுமிடத்தில் நடந்த போரில் மாபெரும் பிரெஞ்சுப் படையை முறியடித்துப் புகழ்பெற்றது. இவர் நார்மண்டி முழுவதையும் வென்றார். உருவன் (Rouen) நகரைக் கைப்பற்றியது என்றியின் மாபெரும் வெற்றியாகும். திராயிசு (Troyes) என்னுமிடத்தில் கி.பி. 1420-இல் செய்துகொண்ட உடன்படிக்கையின் படி இவர் பிரெஞ்சு மன்னர் ஆறாம் சார்லசின் மகள் காதரினை (Catherine) மணப்பதென்றும்,

ஆறாம் சார்லசுக்குப் பின்னர் இவரே பிரான்சுக்கும் மன்னராவதென்றும் முடிவாயிற்று. இவருக்கும் காதரினுக்கும் கி.பி. 1421-இல் ஓர் ஆண் குழந்தை பிறந்தது.

ஐரோப்பாவில் பேரரசரான சிகிசுமண்டு (Emperor Sigismund) ஐந்தாம் என்றியின் உதவியுடன், உரோமானியத் திருச்சபையில் ஏற்பட்டிருந்த பெரும் பிளவுக்கு முடிவு காணக் கான்சுடன்சு (Constance) என்னுமிடத்தில் நடந்த கூட்டத்தில் புதிய போப்பாண்டவராக ஐந்தாம் மார்ட்டின் (Martin V) நியமிக்கப்பட்டார். என்றி கி.பி. 1422-இல் இறந்தார். ஆங்கிலேய மன்னர்களுள் இவர் பெரும்புகழ் படைத்தவர்.

ஆறாம் என்றி (கி.பி. 1421-1471): இவர் ஐந்தாம் என்றியின் மகன். தம் தந்தையார் இறக்கும்போது ஒன்பது மாதக் குழந்தையாயிருந்த இவர், ஆறாம் என்றி (Henry VI) என்ற பட்டப் பெயரோடு கி.பி. 1422-இல் இங்கிலாந்தின் மன்னரானார். இவர் இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் மன்னரானார். இவர் சிறு குழந்தையாயிருந்ததால் நாட்டை இவருடைய சிற்றப்பன்மார்களான சான் என்கிற பெட்போர்டு கோமகனும் (John-Duke of Bedford) அம்பிரி என்கிற கிளாசுட்டர் கோமகனும் (Humpery-Duke of Gloucester) காப்பாளராக நியமிக்கப்பட்டு ஆட்சி செய்தனர். பிரெஞ்சு மக்கள் என்றியை மன்னராக ஏற்றுக்கொண்டபோதிலும், உலுவார் (Loire) ஆற்றின் தெற்கிலுள்ள பிரெஞ்சுப் பகுதிகள் ஆறாம் சார்லசின் மகன் ஏழாம் சார்லசை மன்னராக ஏற்றுக்கொண்டன. பெட்போர்டு கி.பி. 1423-இல் பர்கண்டியிலுள்ள கிராவண்டிலும் (Gravant) கி.பி. 1424-இல் நார்மண்டியிலுள்ள வெர்நெயிலிலும் (Verneil) போரிட்டு வெற்றி பெற்றாலும், என்றியின் ஆட்சி இப்பகுதியில் நிலைக்கவில்லை. நூற்றாண்டுப் போர் தொடர்ந்தது.

பெட்போர்டு கட்சியினர் கி.பி. 1428-இல் ஆர்லியன்சு நகரைக் கைப்பற்ற முயன்றபோது, தோம்ரெமி (Domremy) என்னும் சிற்றூரைச் சேர்ந்த பதினெட்டு வயதான ஆர்க்கு நகர சோன் (Joan of Arc) என்பவள் பிரெஞ்சு மக்களின் நாட்டுணர்ச்சியைத் தட்டியெழுப்பி ஆங்கிலப் படையை முறியடித்தாள். நாளடைவில் பிரான்சு தான் இழந்த பகுதிகளை எல்லாம் கைப்பற்றியது. அவள் சார்லசுக்கு இரீம்சு (Reims) நகரில் முடிசூட்டினாள்.

என்றி கி.பி. 1442-இல் தாமே ஆட்சி புரியத் தொடங்கினார். சப்போக்கு பிரபு (Earl of Suffolk) ஆலோசகராக அமர்ந்தார்; பிரான்சின் அஞ்சு கோமகனின் மகள் மார்கரெட்டை என்றிக்கு மணம் செய்துவைத்தார். கி.பி. 1453-இல் காசுட்டிலோன் (Castillon) என்னும் இடத்தில் நடந்த போரில் ஆங்கிலப்படை தோற்கடிக்கப்பட்டது. இதனால் இங்கிலாந்து பிரான்சில் கலேயைத் தவிர மற்றெல்லாப் பகுதியையும் இழந்தது. நாடாளுமன்றம் சப்போக்கை நாடு கடத்தியது. அரசர் திறமையற்றவராயும் பலவீனராயும் இருந்ததால் பிரபுக்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இந்நிலையில் அரசருக்கு ஆண் வாரி சின்மையால் அடுத்த வாரிசுரிமையைப் பற்றியும் ஒரு சிக்கல் எழுந்தது.

மன்னருக்கு கி.பி. 1453-இல் மனநோய் கண்டதும் சாமர்செட்டு (Somerset) ஆட்சியை கவனித்தார். இதனை யார்க்குக் கோமகன் இரிச்சர்டு எதிர்த்தார். சில மாதங்களில் அரசி மார்கரெட்டுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அரசருக்கு மனநோய் தெளிந்தது. ஆனால் கி.பி. 1454-இல் மன்னர் மனநிலை கெட்டிருந்ததால் நாடாளுமன்றம் யார்க்குக் கோமகனைக் காப்பாளராக நியமித்தது. அவ்வாண்டிலேயே மன்னர் மனநிலை சீரடைந்தது. காப்பாளர் யார்க்குக் கோமகன் நீக்கப்பட்டு, சாமர்செட்டு ஆலோசகராக நியமிக்கப்பட்டார். யார்க்குக் கோமகனின் ஆங்கில நாட்டின் அரசராகும் கனவு வீணாயிற்று. இதனால் அரசு கட்சியினரான இலங்காசுட்ரியர்களுக்கும் யார்க்கிசுட்டுகளுக்கும் தீராப்பகை மூண்டது. பல போர்கள் நடந்தன. இப்போர்கள் உரோசாச் (Rose) சின்னப் போர்கள் எனப்படும். இவை ஏறக்குறைய 30 ஆண்டுகள் நடைபெற்றன.

மன்னர் மனநிலை கி.பி. 1456-இல் சரியாகிவிட்டதால் நேரடி ஆட்சியை மேற்கொண்டார். நார்த்தாம்டன் போரில் கி.பி. 1460-இல் என்றி சிறை செய்யப்பட்டார். ஆனால் நாடாளுமன்றம் மன்னரை வாழ்நாள் வரை ஆட்சி செலுத்தும்படி ஒப்பந்தம் செய்துகொண்டது. தவுட்டன் (Towton) போரில் கி.பி. 1461-இல் தோல்வியடைந்த என்றியும் மார்கரெட்டும் இசுகாட்லாந்து மன்னரிடம் சரணடைந்தனர். யார்க்கு வமிச நான்காம் எட்வர்டு இங்கிலாந்து மன்னரானார். இப்போர் தொடர்ந்து நடைபெற்றது. இறுதியில் கி.பி. 1464-இல் எட்சிலி மூர் (Hedgely Moor), ஏக்சுகாம் (Hexham) ஆகிய போர்களில் யார்க்கிசுட்டுகள் வென்றனர். என்றி கோபுரச் (Tower) சிறையிலடைக்கப்பட்டார். மார்கரெட்டு வாரிக் கோமகனின் உதவியுடன் இலண்டன் சென்று, கி.பி. 1470-இல் என்றியைச் சிறைமீட்டார். ஆயினும் என்றி அடுத்த ஆண்டிலேயே மறுபடியும் சிறையில் அடைக்கப்பட்டார். யார்க்கிசுட்டுகள் பார்னெட்டு (Barnet)

தியூக்சுபரி (Tewkesbury 1471) ஆகிய போர்களில் வெற்றியடைந்தனர். என்றி மகன் எட்வர்டு (வேல்சு இளவரசன்) கொல்லப்பட்டார். மார்கரெட்டைச் சிறையிலிட்டனர். என்றி கோபுரச் சிறையிலேயே உயிர் நீத்தார்.

ஏழாம் என்றி (கி.பி. 1456-1509): இவருக்குப் பிறப்பினால் இலங்காசுட்டிரிய வமிசத் தொடர்பு இருந்தது. என்றி இரிச்மண்டு (Henry Richmond) என்று அழைக்கப்பட்ட என்றி தியூடர் கி.பி. 1485-இல் ஏழாம் என்றி என்ற பெயருடன் இங்கிலாந்தின் மன்னரானார். இவர் உரோசாப்பூச் சின்னப் போர்களின் இறுதிப் போரான பாசுவர்த்தில் (Bosworth) யார்க்குவமிச அரசரைக் கொன்றார்.

இவருடன் இங்கிலாந்தில் தியூடர் ஆட்சி தொடங்கிற்று. இவருக்கெதிராகப் பலர் கிளர்ச்சி செய்தனர். அவர்களுள் இலாம்பர்ட்டு சிம்னலும் (Lambert Simnel) பெர்க்கின் வார்பெக்கும் (Perkin Warbeck) சிறப்பானவர்கள். இவர் கிளர்ச்சிக்காரர்களை எளிதாக முறியடித்தார்; தம் அரசை வலுப்படுத்தப் பல முறைகளைக் கையாண்டார். யார்க்குடன் நல்ல உறவை வைத்துக்கொள்ள யார்க்கு வமிச அரசகுமாரியை மணந்தார். அக்காலத்தில் வல்லரசாக விளங்கிய இசுபெயினின் கூட்டுறவைப் பெறுவதற்குத் தம் மகன் ஆர்தருக்கு (Arthur) இசுபானிய அரசகுமாரி காதரினை மணம்புரிவித்தார். தம் மகன் இறக்கவே இசுபெயின் நாட்டு உறவினை விட்டுக்



எட்டாம் என்றி

கொடுக்க விருப்பமில்லாத என்றி, காதரினைத் தம் இளைய மகனுக்கு மணம் செய்வித்தார். தம் மூத்த மகள் மார்கரெட்டை இசுகாட்லாந்து மன்னன் நான்காம் சேம்சுக்கு (James IV) மணம் செய்து கொடுத்தார். இவருடைய ஆட்சிக்காலத்தில் சான் காபட்டு (John Cabot) என்ற மாலுமி அமெரிக்காவுக்கு வடக்கிலுள்ள உலாபிரடார்ப் (Labrador) பகுதியையும் அவர்தம் மகன் செபசுட்டியன் காபட்டு தென் அமெரிக்கக் கீழ்க்கரையையும் ஆய்ந்தனர். இவர் வெளிநாடுகளுடன் வாணிக உடன்படிக்கை செய்து கொண்டார். இவர் கி.பி. 1509-இல் இறந்தார்.

எட்டாம் என்றி (கி.பி. 1491-1547): இவர் ஏழாம் என்றியின் இளைய மகன். இவர் தம் 18-ஆம் வயதில் (கி.பி. 1509) இங்கிலாந்தின் மன்னரானார். தம் அண்ணனுக்கு முன்பே மண முடிக்கப்பட்டிருந்த காதரின் என்னும்இசுபானிய இளவரசியைப் போப்பாண்டவரின் அனுமதி பெற்று, என்றிக்கு மணம் புரிவித்தனர். இவர்தம் முக்கிய அமைச்சர்கள் வின்செசுட்டர் குருவாக இருந்த பாக்சு (Fox) என்பவரும் சர்ரே என்பவருமாவர். என்றி செருமானிய அரசர் முதலாம் மாக்சிமிலியனுடன் (Maximilian I) சேர்ந்து கொண்டு, தெரோன் என்னும் இடத்தைக் கைப்பற்றிப் பிரெஞ்சுப்படையை முறியடித்தார். தூர்னே (Tourney) என்னும் இடமும் கைப்பற்றப்பட்டது. அதே ஆண்டில் இங்கிலாந்துமீது படையெடுத்து வந்த இசுகாட்லாந்து மன்னர் நான்காம் சேம்சைப் பிளாடன் பீல்டு (Flodden Field) என்னும் இடத்தில் ஆங்கிலத் தளபதி சர்ரே பிரபு (Earl of Surrey) தோற்கடித்தார். இசுகாட்லாந்துடன் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. ஐரோப்பாவின் வல்லரசுகளுள் ஒன்றாக இங்கிலாந்து விளங்கியது. செருமானியப் பேரரசர் ஐந்தாம் சார்லசும் (Charles V) பிரெஞ்சு மன்னர் முதலாம் பிரான்சிசும் (Francis I) என்றியின் நட்பைப் பெற விரும்பினர்.

இவர் நாடாளுமன்றத்தை கி.பி. 1515-இலிருந்து கி.பி. 1530 வரை கூட்டவில்லை. இவர் நினைத்தபடி எல்லாம் கடன் வாங்கினார். கொடுங்கோலாட்சி ஓங்கி வளர்ந்தது. நாடாளுமன்றம் மன்னர் செலவிற்கு வேண்டுமென்று கேட்ட தொகையைக் கொடுக்க மறுத்தது.

என்றி காலத்தில் கல்வி மறுமலர்ச்சியடைந்தது. அச்சடிக்கும் எந்திரம் நிறுவப்பட்டுப் பல நூல்கள் அச்சடிக்கப்பட்டன. பொதுமக்கள் கல்வியில் ஆர்வம் காட்டினர். அப்பொழுது ஐரோப்பாவில் சமயச் சீர்திருத்த இயக்கம் (Reformation) தோன்றிற்று. உரோமானியக் கத்தோலிக்க முறையிலிருந்த பல

குறைபாடுகளைச் செருமானியரான மார்ட்டின் உலூதர் (Martin Luther) வெளிப்படுத்திப்போப் பாண்டவரையும் திருச்சபையையும் எதிர்த்துப் புதியதாக மறுப்புரைச் (Protestant) சமயத்தைத் தோற்றுவித்தார். போப்பாண்டவர் என்றியின் ஆதரவையும் நல்லுறவையும் பொருட்படுத்தவில்லை. என்றி தம் மனைவி காதரினுடன் 18 ஆண்டுகள் மணவாழ்க்கையை நடத்தி ஆண்மகவு பெறாததால், அவளை மணவிலக்குச் செய்துவிட்டுத் தாம் காதலித்த ஆன் பொலீனை (Aun Boleyn) மணக்க விரும்பினார். கார்டினல் உல்சி இந்த மணவிலக்குக்குப் போப்பாண்டவர் அனுமதி வேண்டுமென்றார். காதரின் ஐந்தாம் சார்லசின் அத்தை முறையினள். ஆகவே, இசுபெயினையும் இங்கிலாந்தையும் பகைத்துக்கொள்ள விரும்பாத போப்பாண்டவர் காலங் கடத்தி வந்தார். இதனால், கோபமடைந்த என்றி இங்கிலாந்தின் திருச்சபைக்குத் தாமே தலைமை பூண்டார். கார்டினல் உல்சி பதவியிலிருந்து நீக்கப்பட்டு, அவருடைய பதவியில் தாமசு கிரான்மர் (Thomas Cranmer) நியமிக்கப்பட்டார். கிரான்மர் கி.பி. 1533-இல் காதரினுக்கும் என்றிக்கும் நடந்த மணம் சமயச் சட்டப்படி செல்லாதென்றும், அவர் ஆன்பொலீனை மணந்துகொண்டது சட்டத்திற்கு உட்பட்டது என்றும் கூறினார். நாடாளுமன்றம் 'மாபெருந் தலைமைச் சட்டம்' (The Act of Supremacy) இயற்றியது. அதன்படி, இங்கிலாந்துத் திருச்சபைமீது போப்பாண்டவரின் ஆட்சி செல்லாதது ஆயிற்று; ஆன் பொலீனை மணந்தது சட்டமுறையிலமைந்தது. என்றிக்கும் ஆன்பொலீனுக்கும் பிறந்தவளே பின்னர் இங்கிலாந்தை ஆண்ட எலிசபெத்து அரசி (Elizabeth I) ஆவார். என்றி ஒவ்வொருவராக ஆறு மனைவியரை மணந்தார்; அவர்களுள் காதரினையும் ஆன் கிளீவ்சையும் (Aune of Cleves) மணவிலக்குச் செய்தார்; ஆன்பொலினையும் காதரின் ஓவர்டையும் (Catherine Howard) கொலை செய்தார்; சேன் செய்மூர் (Jane Seymour) இயற்கையாக இறந்தார். இறுதியில் மணந்த காதரின் பார் (Catherine Parr) பல்லாண்டுகள் வாழ்ந்தார். இவருடைய ஆட்சிக் காலத்தில் நாடு வளமுடையதாக இருந்தது. இவர் கி.பி. 1547-இல் காலமானார். அ.கே.

பிரான்சில்: என்றி எனப் பெயர் கொண்ட மன்னர் நால்வர் பிரான்சு நாட்டை ஆண்டனர். முதலாம் என்றி கி.பி. 1031-இல் இருந்து கி.பி. 1060 வரையில் ஆட்சி புரிந்தார். இவர் கேபிதியன் அரச மரபைச் சேர்ந்தவர் ஆவார். இரண்டாம் என்றி கி.பி. 1547-இல் இருந்து கி.பி. 1559 வரையும், மூன்றாம் என்றி கி.பி. 1574-இல் இருந்து கி.பி. 1589 வரையிலும் ஆண்டனர். இவ்விரு மன்னர்களும் வாலோயி அரச வமிசத்தைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள். நான்காம் என்றி கி.பி. 1589-இல் இருந்து கி.பி. 1610 வரை ஆட்சி புரிந்தார். இவர் போர்போன் அரச மரபைச் சேர்ந்தவர்.

முதலாம் என்றி (கி.பி. 1008 – கி.பி. 1060): இவர் இராபர்ட்டு மன்னருக்கும் அவர் இராணியார் கான்சுடேன்சுக்கும் கி.பி. 1008-இல் பிறந்தார். இளவரசர் என்ற முறையில் இவர் கி.பி. 1027-இல் இருந்தே தந்தையோடு அரசாங்கம் நடத்தும் பேற்றுப்பினைப் பெற்றிருந்தார். இவர் தந்தை காலமான பிறகு கி.பி. 1031-இல் பிரான்சின் அரியணை ஏறினார். இதனை இவர்தம் தாயார் கான்சுடேன்சும், இளைய சகோதரர் இராபர்ட்டும் எதிர்த்தனர். ஆகவே, இவர் நார்மண்டிக் கோமகனான இரண்டாம் இராபர்ட்டிடம் அடைக்கலம் புக வேண்டியதாயிற்று. அதைத் தொடர்ந்து நடைபெற்ற உள்நாட்டுப் போரில் கி.பி. 1032-இல் என்றி வெற்றி பெற்றார். கான்சுடேன்சு இறந்தபிறகு கி.பி. 1034-இல் இராபர்ட்டைப் பர்கண்டிப் பகுதிக்குக் கோமகனாக்கினார். இதன் விளைவாக ஏறத்தாழ மூன்று நூற்றாண்டுக் காலம் பிரான்சு மன்னர்களோடு அடிக்கடி போட்டியிட்ட, ஒன்றுபட்ட கிளை மரபு தோன்றியது.

இவர் கி.பி. 1033-இல் இருந்து 1043 வரை தம்முடைய நிலப்பகுதிகளை அடுத்தாற்போல் அமைந்திருந்த நிலப்பகுதிகளின் பிரபுக்களோடு பெரும் போராட்டத்தில் ஈடுபட்டார். அப் பிரபுக்களில் குறிப்பிடத்தக்கவர்கள் பிலாய் மரபைச் சேர்ந்தவர்களும், சேம்பெய்ன் கோமான்களும் ஆவர். நார்மண்டிக் கோமகன் இராபர்ட்டு அளித்த உதவியால், இவர் இப்போராட்டத்தில் வெற்றி பெற்றார். ஆனால், இராபர்ட்டுக்குப் பிறகு வில்லியம் நார்மண்டியின் கோமகனாகப் பதவியேற்ற பின்னர், என்றி நார்மண்டியை எதிர்த்தே போர் செய்ய வேண்டியதாயிற்று. என்றி நார்மண்டி மீது கி.பி. 1055-இலும் கி.பி. 1058-இலும் ஆக இருமுறை படையெடுத்த போதிலும் வில்லியத்தை வெற்றி கொள்ள முடியவில்லை. என்றியின் ஆட்சிக்காலம் நிலமானியப் பிரபுக்களின் செல்வாக்கு உயர்நிலை எய்தியிருந்த காலமாகும். சேம்பெயின், பர்கண்டி, நார்மண்டி ஆகியவற்றின் கோமான்கள் அரசரின் அதிகாரத்தைப் பெயரளவே ஏற்றிருந்தனர்.

போப்பு ஒன்பதாம் இலியோவுக்கு எதிராகத் தன்னாட்டுத் திருச்சபைக் குருமார் தொகுதியின் உரிமைகளை நிலைநிறுத்தினார். புனித உரோ

மானியப் பேரரசர் மூன்றாம் என்றியின் கட்டுப்பாட்டில் இருந்த உலொரைன் (Lorraine) பகுதிக்கு முதலாம் என்றி உரிமை கொண்டாடினார். இவர் கி.பி. 1059-இல் தம் மூத்த மகன் பிலிப்பைப் போலந்து நாட்டின் மன்னராக முடிசூட்டினார். முதலாம் என்றி 1060-இல் காலமானபோது பிலிப்பு பிரான்சு நாட்டின் அரியணை ஏறினார்.

இரண்டாம் என்றி (கி.பி. 1519 – 1559): முதலாம் என்றி ஆட்சிக்காலம் முடிந்து சுமார் ஐந்து நூற்றாண்டுகள் கழித்து மற்றொரு என்றி மன்னர் பிரான்சை ஆண்டார். இரண்டாம் என்றி என்ற பட்டமேற்ற இவர் வலோயி அரச மரபைச் சேர்ந்தவர். மன்னர் முதலாம் பிரான்சிசுக்கும் அவர்தம் இராணியார் கிலாடுக்கும் கி.பி. 1519-இல் இரண்டாம் மகனாகப் பிறந்த என்றி, தம் ஏழாம் வயதில், அவர்தம் மூத்த சகோதரர் பட்டத்து இளவரசர் பிரான்சிசு என்பவரோடு இசுபெயின் நாட்டுக்குப் பிணயக் கைதிகளாகச் சென்றார். இருவரும் கி.பி. 1530-இல் காம்பராய் அமைதி ஒப்பந்தம் ஏற்பட்டபிறகு நாடு திரும்பினர். இளம்வயதில் இசுபெயின் நாட்டில் தங்கியிருந்ததின் விளைவாக என்றி அந்நாட்டு நடை, உடை, பாவனைகளைப் பின்பற்றுபவராக இருந்தார். இவர் கி.பி. 1533-இல் மெடிசி இளவரசி காத்தரின் என்பவரை மணந்தார். தம் மூத்த சகோதரன் கி.பி. 1536-இல் காலமானதையடுத்து இவர் பட்டத்து இளவரசர் ஆனார்.

பொதுவாக, என்றியும் மனைவி காத்தரினும் நண்பர் மாண்டு மோரென்சி கோமகன் போன்றோரின் செல்வாக்கின் கீழ் இருந்து வந்தனர். மன்னர் பிரான்சிசு, ஆர்லியன்சின் கோமகனாக இருந்த இளைய மகன் சார்லசைத் தனிப்பாசத்துக்கு உரியவராக நடத்தினார். என்றியின் நண்பர்களுக்கும், அரசரின் நண்பர்களுக்கும் இடையே போட்டி ஏற்பட்டது. ஆகவே என்றிக்கும், மன்னர் பிரான்சிசுக்கும் இடையே முன்னரே இருந்துவந்த பிளவு அதிகரித்தது. மன்னர் கி.பி. 1544-இல் இசுபெயின் நாட்டோடு கிரிபி உடன்படிக்கை செய்து கொள்வதை என்றி எதிர்த்தார். இந்நிலை நீடித்ததால், மன்னர் பிரான்சிசின் ஆட்சி முடியும்போது கூட இளவரசர் என்றி தந்தையிடமிருந்து விலகியே இருந்தார்.

என்றி கி.பி. 1547-இல் மன்னரான பிறகு அவர்தம் நண்பர்கள் மிகுந்த செல்வாக்குப் பெற்றனர். காலஞ் சென்ற மன்னரின் நண்பர்கள் பதவிகளில் இருந்து நீக்கப்பட்டனர்.

இரண்டாம் என்றி உடல் கட்டுள்ளவராக இருந்தார். வீரவிளையாட்டுகளில் அதிக நாட்டம் கொண்டிருந்தார். ஆனால், மனத்திடமோ புத்திக் கூர்மையோ இல்லாதவராகக் காணப்பட்டார். அவர் தீவிரக் கத்தோலிக்கராக இருந்ததால், சமய சீர்திருத்த ஆதரவாளர்களை மிகவும் கொடுமைப்படுத்தினார். என்றி அரச அதிகாரங்களைப் பெருக்கி, முடியாட்சியை வரையறை இல்லாததாக்கி, அளவுக்கு மிஞ்சிய வகைகளில் பணவசூல் செய்தார். தம்மை எதிர்த்தவர்களைக் கொடும் தண்டனைகளுக்கு உட்படுத்தினார். மறுப்புரையாளர் சமயத்தினருக்கு எதிராகப் புதிய விசாரணை மன்றம் ஒன்றை (Chamly Ardents) அவர் ஏற்படுத்தினார்.

வெளியுறவு: இசுபெயினின் பேரரசர் ஐந்தாம் சார்லசையும், அவர்தம் மகன் இரண்டாம் பிலிப்பையும் எதிர்த்து என்றி போரைத் தொடர்ந்து நடத்தினார். அதன் முடிவில் இரு நாடுகளுக்கிடையே 'கேடோ-காம்பிரெசசு' (Cateau-Cambresis) என்னும் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. அதனை அடுத்து இரண்டாம் என்றி இசுபெயினோடு திருமண உறவு ஏற்படுத்திக் கொண்டார். அவர் மகள் எலிசபெத்தைப் பிலிப்புக்கு மணம் செய்வித்தார். அவர் தங்கை மார்கரெட்டு செவாய்க் கோமகனை மணந்தார்.

இரண்டாம் என்றி கி.பி. 1559-இல் சூன் மாதத்தில் மாண்டு கோமரிக் கோமானுடன் ஈட்டிப் போர் விளையாட்டில் ஈடுபட்டிருந்த போது நெற்றியில் காயமடைந்து அதன் விளைவாகச் சில நாட்களில் மரணமுற்றார்.

மூன்றாம் என்றி (கி.பி. 1551-கி.பி. 1589): இவர் இரண்டாம் என்றிக்கும் அவர்தம் இராணியார் காத்தரினுக்கும் மூன்றாம் மகனாக கி.பி. 1551-இல் பிறந்தார். ஆஞ்சுப் பகுதியின் கோமகனாகப் பட்டம் வகித்தபோது இரு போர்க்களங்களில் வெற்றி பெற்றார். இவர் கி.பி. 1572-இல், புனித பார்த்தலோமியோ தினத்தன்று நடந்த படுகொலைகளின்போது தம் தாய் காத்தரினுக்கு உதவினார். இவர் காத்தரினின் தனிப் பாசத்துக்கு உரியவராய் இருந்தார். இவர் 1573-இல் போலந்து நாட்டின் அரியணைக்கான தேர்தலில் வெற்றி பெற்றார். சகோதரர் ஒன்பதாம் சார்லசு கி.பி. 1574-இல் காலமானதால், என்றி பிரான்சின் மன்னராக முடிசூட்டப்பட்டார்.

மூன்றாம் என்றி சுகபோக வாழ்க்கையில் ஈடுபட்டுக், கொடூர முறைகளையும், கையூட்டு முறைகளையும் பின்பற்றி ஆட்சி நடத்தினார். காத்தரின் அரசாங்கத்தில் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தார்.

என்றி தம் தாயாரின் ஆதிக்கக் கட்டுப்பாட்டிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ள முடியவில்லை. அவர் ஆட்சியின் போது கத்தோலிக்கர்களுக்கும் மறுப்புரை யாளர்களுக்கும் இடையே அடிக்கடி மோதல்கள் ஏற்பட்ட வண்ணமிருந்தன.

வழிமறிப்பு நாள் என்று பெயர் பெற்ற கி.பி. 1588-ஆம் ஆண்டு மே மாதம் 12-ஆம் நாள் பாரிசு நகரில் எழுந்த கலகத்தை ஒடுக்க முடியாமல் மூன் றாம் என்றி, சார்டர்சு என்னுமிடத்தில் அடைக்கலம் புகுந்தார். அதையடுத்து அவர் என்றி கைசையும், (Guise) போப்பு மன்ற உறுப்பினர் குருவாகப் பதவிவகித்த அவர் சகோதரரையும் பிலாயிசு என்னுமிடத்தில் கொலைக்கு உள்ளாக்கினார். அதற்கு அடுத்த ஆண்டு அவர் தாய் காத்தரினும் இறந்தார். அதன்பிறகுதான் என்றிக்கு உண்மை அதிகாரங்களோடு ஆட்சி நடத்தும் வாய்ப்பு ஏற்பட் டது.

என்றி மீது ஆதிக்கக் கட்டுப்பாட்டைச் செலுத் தியவர்கள் மறைந்துவிட்ட போதிலும் பாரிசு நகரம் 'கைசுக்குக்' கட்சியினரின் கட்டுப்பாட்டில் இருந்த தோடு, பல மாகாணங்களில் கலகங்களும் எழுந்தன. ஆகவே, மூன்றாம் என்றி மறுப்புரையாளர் கட்சித் தலைவரும், நாவர்ப் பகுதி மன்னருமான என்றியோடு நட்புறவு உடன்படிக்கை செய்து கொண்டார். அதன் படி இருவர் படைகளும் பாரிசு நகரினை முற்றுகை யிட்டன. கத்தோலிக்கச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள்



நான்காம் என்றி

'சேக்குவுசு கிளமெண்டு' என்னும் தீவிரத் துறவியைக் கருவியாகப் பயன்படுத்திக் கைசு கோமகன்களின் கொலைகளுக்குக் காரணமாக இருந்த மூன்றாம் என்றியைப் பழிவாங்கினர். அத்துறவி, கி.பி. 1589-ஆம் ஆண்டு ஆகசுட்டு முதல் நாள் ஒரு பேட்டியின் போது என்றியைக் கத்தியால் குத்திக்கொலை செய் தார். அவருக்கு நேரடி வாரிசு இல்லாததால் வலாயி அரசமரபு அவரோடு முடிவுற்றது.

## நான்காம் என்றி (கி.பி. 1553-கி.பி.1610):

இவர் கி.பி. 1553-இல் வான்டோமின் கோமகனாக ஆன்டோயின் டி போர்போனுக்கும், நாவர்ப் பகுதி இராணியான சியாண்டி ஆல்பெர்ட்டுக்கும் பிறந்தார். மறுப்புரையாளர் சமயத்தினராக வளர்க்கப்பட்டு கி.பி. 1557-இல் ஏமியன்சில் அரசவைக்கு அனுப்பப் பட்டார். இவர் 1561-இல் பாரிசில் காலேசு-டி-நாவ ரில் சேர்ந்து, கி.பி. 1565-இல் பேர்ன் (Bern) நகரத் திற்குத் திரும்பினார். இவர் தாயார் கி.பி. 1568 -இல் இருந்து 1570 வரை நடைபெற்ற பிரான்சின் மூன்றாம் சமயப் போரின்போது மறுப்புரையாளர் படைகளுக்குத் தலைமை தாங்கிய கேசுபர்-டி-கோலிக்னி என்பவரிடம் என்றியை அறிமுகப்படுத்திப் போரில் ஈடுபடச் செய்தார். இவர் கி.பி. 1569-இல் பர்கண்டிப் பகுதியில் நடைபெற்ற அர்னோ-லி-டக்கு என்னும் சண்டையில் புகழ் பெற்றார். என்றியின் தாயார் கி.பி. 1572-இல் இறந்தபிறகு, இவர் நாவர்ப் பகுதிக்கு மன்னரானார். அதையடுத்து, பிரான்சு மன்னர் ஒன்பதாம் சார்லசின் சகோதரி மார்கரெட்டு என்பவரை மணந்தார். மறுப்புரையாளர் சமயக் கொள்கையை மறுப்பதாகப் பாசாங்கு செய்து கி.பி. 1572-இல் புனிதர் பார்த்தலோமியோ நாளன்று நடைபெற்ற படுகொலையிலிருந்து உயிர்தப்பினார். பல முயற்சிகளுக்குப் பிறகு கி.பி. 1576-இல் அரசவை யிலிருந்து வெளியேறி மறுப்புரையாளர்களும் அரச எதிர்ப்பாளர்களும் வேறு இணைந்த படையோடு நாவரின் என்றி சேர்ந்து போரிட்டார். பியுலு உடன் படிக்கையின்படி கியன் பகுதியை ஆளும் உரிமையைப் பெற்றார். இவர் கி.பி. 1577-இல் பெர்கராக்கு உடன் படிக்கையையும் செய்துகொண்டார்.

நாவர் மன்னர் என்றி அவர்தம் மனைவியோடு பூசல் கொண்டபோது, மன்னர் மூன்றாம் என்றி தலையிட்டமையால் அவர் மீண்டும் பிரான்சில் சமயப் போரைத் தொடங்கினார். பிரான்சு வரலாற்றில் ஏழாம் சமயப் போராகக் கருதப்படும் இப்போரில் நாவர் மன்னர் என்றி கி.பி. 1580-இல் ககோர்சு என்னுமிடத்தைக் கைப்பற்றிப் பிலிக்சு உடன் படிக்கையைச் செய்துகொண்டார்.

மன்னர் மூன்றாம் என்றியின் சகோதரர் ஆஞ்செள கோமகன் கி.பி. 1584-இல் இறந்ததால் நாவர் மன்னர் என்றி பிரான்சு அரியணைக்கு வாரிசாக்கப்பட்டார். ஆனால், கி.பி. 1585-ஆம் ஆண்டில் நெமோர்சு உடன்படிக்கைப்படி அரசுரிமையிலிருந்து அவர் விலக்கப்பட்டதால் நாவர் மன்னர் என்றி 'மூன்று என்றிகளின் போர்' என்று பெயர் பெற்ற போரைத் தொடங்கிக் கௌட்ராசு என்னுமிடத்தில் கி.பி. 1587-இல் வெற்றி பெற்றார். பாரிசு நகரிலிருந்து கத்தோலிக்கச் சங்கத்தினரால் வெளியேற்றப்பட்ட மன்னர் மூன்றாம் என்றி தம் தலைநகரை மீட்க நாவர் என்றியின் துணையை நாடினார். அந்நிலையில் அவர் மீண்டும் நாவர் என்றியைத் தம்முடைய வாரிசாக ஏற்க வேண்டியதாயிற்று.

மன்னர் மூன்றாம் என்றியின் படுகொலையை அடுத்து நாவர் மன்னர் என்றி கி.பி. 1589-இல் பிரான்சின் நான்காம் என்றி என்ற பட்டத்துடன் அரியணை ஏறினார். ஆனால், கத்தோலிக்கச் சங்கத்திற்கும் இசுபெயினுக்கும் எதிராக மேலும் பத்தாண்டுக் காலம் போராடித்தம்முடைய அரச பதவியைத் தக்க வைத்துக் கொள்ளவேண்டியதாயிற்று. தீவிர கத்தோலிக்கச் சங்கம் நான்காம் என்றியை மன்னராக ஏற்றுக்கொள்ளவில்லை, கைசு கோமகன் கொல்லப்பட்டதால் அவருக்குப் பதிலாக இசுபெயின் நாட்டு இளவரசர் ஒருவரைப் பிரான்சின் அரசராக்க அது விரும்பியது. பிரான்சின் வடபகுதியும், அதன் பெரு நகரங்களும் கி.பி. 1596 வரை கத்தோலிக்கச் சங்கத்தினராலும், தென்பகுதியும் மேற்குப் பகுதியும் மறுப்புரைச்சமய ஆதரவாளர்களாலும் ஆளப்பட்டு வந்தன. பிரான்சு நாடு இரண்டாகப் பிளவுபடும் அபாயம் நிலவியது.

பிரான்சின் அரசபீடம் ஏற அவருக்கு உரிமை இருந்தபோதிலும், அவர் மறுப்புரைச் சமயத்தைச் சேர்ந்தவராக இருந்ததால் பெரும்பாலான பிரான்சு மக்கள் தம்மை அரசராக ஏற்றுக்கொள்ளவில்லை என்ற உண்மைத் தன்மையை நான்காம் என்றி உணர்ந்தார். ஆகவே, கி.பி. 1593 சூலையில் கத்தோலிக்கராக மாறுவதற்கு இசைந்தார். விரைவில் அவருக்கிருந்த எல்லா எதிர்ப்புகளும் மறைந்தன. இச்செய்கை பெரும் அரசியல் அறிவு நிறைந்தது எனச் சொல்லலாம். பாரிசு நகரம் கி.பி. 1594-மார்ச்சில் அவர் வசமாகியது. அதைத் தொடர்ந்து ஒவ்வொரு மாகாணமாக என்றியின் கட்டுப்பாட்டில் வந்தது.

பவுண்டெயின் பிரான் செய்சு போர்க்களத்தில் கி.பி.1595-இல் என்றி அடைந்த வெற்றியும், அவர் ஏமியன்சு நகரைக் கைப்பற்றியதும், இசுபெயின் நாட்டின் இரண்டாம் பிலிப்பை கி.பி. 1598-இல் வெர்வின்சு அமைதி ஒப்பந்தத்தைச் செய்து கொள்ளத் தூண்டின.

நான்காம் என்றி புதிதாகக் கத்தோலிக்கச் சமயத்தை ஏற்றுக் கொண்டபோதிலும், தம் பழைய மறுப்புரைச் சமயத்தையும் மறந்துவிடவில்லை. சமயப் பொறைக் கொள்கையை அவர் பின்பற்றினார். நான்காம் என்றி கி.பி. 1598-இல் விடுத்த நாண்டெசு (Nantes) ஆணையின்படி கத்தோலிக்கத் திருச்சபையின் உயர்வைப் பேரறிவிப்புச் செய்தபோதிலும், மறுப்புரையாளர்களின் சுதந்திரத்தையும், உரிமைகளையும் உறுதிப்படுத்தினர். அவ்வாணையின் மூலம் சமய மறுப்பாளர்களின் மீது விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டன. அவர்களுக்கும் எல்லா அரச பதவிகளும் அளிக்கப்பட்டன. நான்காம் என்றியின் சிறப்பான அமைச்சர்களுள் ஒருவரான சுல்லி ஒரு மறுப்புரைச் சமயத்தவராவார். மறுப்புரையாளர்களுக்கு அவர்களின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளுக்குச் சுயாட்சி வழங்கப்பட்டது. அவர்களுக்கெனப் பாராளுமன்ற இடங்கள் ஒதுக்கப்பட்டன. அவர்களுடைய நகரங்களும் கோட்டைகளும் அவர்களுடைய கொள்கைகளுக்கு ஏற்றவாறு ஆட்சி செய்யப்பட்டன. சமயப் போர்களினால் பெரும் இன்னல்களுக்கும் அழிவுக்கும் உட்படுத்தப்பட்ட பிரான்சு நாடானது இச்சமய அமைதி ஏற்பாட்டை ஏற்றுக் கொண்டது.

நாட்டில் அமைதி ஏற்பட்டதைத் தொடர்ந்து என்றி பொருளாதார மேன்மையை மீண்டும் ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொண்டார். போர்களின் போது ஏற்பட்ட அனுபவங்களைக் கொண்டு பிரான்சுக்கு வலிமை பொருந்திய ஒருமுகப்படுத்தப்பட்ட அரசாங்கம் தேவை என்பதை உணர்ந்து, தம் அதிகாரங்களை அவர் அதிக அளவு பெருக்கிக் கொண்டார். 'எசுடேட்சு' (Estates) என்ற அவையின் ஒப்புதல் பெறாமல் கூட வரிகளை உயர்த்தினார். நகரங்களின் ஆட்சி விவகாரங்களில் தலையிட்டு, அவற்றின் ஆட்சி அமைப்பை மாற்றியமைத்தார். தம் ஆலோசனைக் குழு அளித்த திட்டங்களை நிராகரிக்க உரிமை பெற்றிருந்தார். மேக்சிமிலியன் டி பெத்தூன், உரோசுனி பிரபு, சேலி கோமகன் போன்ற நண்பர்களின் துணைக்கொண்டு என்றி ஆட்சி நடத்தினார். நிதிநிலையைச் சீர்திருத்தி, பயனற்ற அலுவலர்களை நீக்கி, கடனைத் திருப்பிச் செலுத்தி, பெருந் தொகையைச் சேமித்து வைத்தார்.

மக்களின் இன்னல்களைப் போக்கவும் விவசாயம், தொழில் ஆகிய இரண்டையும் பெருக்கவும் எண்ணி என்றி நடவடிக்கை மேற்கொண்டார். சதுப்பு நிலங்களை விளைநிலங்களாக மாற்றத் தச்சுக்காரர்களையும் பிளாண்டர்சு நாட்டவரையும் பிரான்சில் குடியமர்த்தினார். அந்நிய சரக்குகளை இறக்குமதி செய்தலைத் தடை செய்தார். பட்டுத் தொழிலைத் தொடங்கியதோடு, துணி வகைகள் கண்ணாடி ஆகியவற்றின் உற்பத்தியையும் ஊக்குவித்தார்.

வாணிகத்தைப் பெருக்கக் கால்வாய்கள் தோண்டுவதற்குத் திட்டமிட்டார். அவற்றுள் ஒன்றான பிரியேர் கால்வாயைப் பகுதியளவு முடித்தார். துருக்கிச் சுல்தான் முதலாம் அகமத்தோடு கி.பி.1604-இல் புதிய உடன்படிக்கை செய்து கொண்டதோடு, இங்கிலாந்து, இசுபெயின், ஆலந்து ஆகிய நாடுகளோடு வாணிக ஒப்பந்தங்களையும் செய்து கொண்டார். கனடாப் பகுதியில் குடியேற்றங்களை ஏற்படுத்த கி.பி. 1604-இலும் கி.பி. 1608-இலும் முயற்சிகள் மேற்கொண்டார்.

படையைச் சீர்திருத்தி அமைத்து, என்றி வீரர்களின் ஊதியத்தையும் உயர்த்தினார்; இராணுவ அதிகாரிகளைப் பயிற்றுவிக்கவென ஒரு பள்ளியைத் தொடங்கினர்; பீரங்கிப் படைப் பிரிவை ஏற்படுத்தினார். எல்லைப்புறக் கோட்டைகளை வலிமைப் படுத்தினார்.

வலோயி மன்னர்களின் கலைத்திறன் என்றியிடம் இல்லையெனினும், பாரிசு நகரை அழகுபடுத்தினார். இலாவர் நுழைவாயில், துலிரெசு அரண்மனை, ஒட்டல் டி விட், பிலேசு ராயல், போண்ட் நியோப்பு ஆகியவற்றைக் கட்டுவித்தார்.

வெளியுறவு: இசுபெயினையும் ஆசுத்திரியாவையும் ஆண்டுவந்த ஆப்சுபர்க்கு அரச மரபுக்கு எதிரான கொள்கையைப் பின்பற்றினார். அந்நாடுகள் மீது போர் அறிவிப்புச் செய்யவில்லையென்றாலும், மற்ற அரசுகளுடன் நட்புறவு கொள்வதின் மூலமும் அரச தந்திரத்தின் மூலமும் அவற்றின் செல்வாக்கைக் கட்டுப்படுத்த முயன்றார். இத்தாலியைச் சேர்ந்த தசுகேனியின் பெரும் கோமகனின் உறவுப்பெண் மேரியை கி.பி. 1600-இல் என்றி மணந்ததின் மூலம் அவருடைய நட்பைப் பெற்றார். மாண்டுவா கோமகன்,போப்பு நான்காம் பால்,வெனிசுக் குடியரசு ஆகியோரின் நட்பையும்பெற்றார். செவாய்க் கோமகன் கி.பி. 1601-இல் என்றியுடன் இலையான்சு உடன்படிக்கைசெய்துகொண்டார், இசுபெயினை எதிர்த்துப் போராடுவதற்கு அவர் தச்சுக்காரர்களுக்குப் பண உதவி அளித்தார். செருமனியில் மறுப்புரையாளர் அரசுகளோடும், உலொரைன் கோமகனோடும், சுவிட்சர்லாந்து மாநிலங்களோடும், சுவீடனோடும் என்றி நட்புறவு ஒப்பந்தங்களைச் செய்துகொண்டார்.

பேரரசர் இரண்டாம் உருடால்பை எதிர்த்து என்றி கி.பி. 1609-இல் போர் அறிவிப்புச் செய்தார். ஆனால், அதற்கு மறு ஆண்டிலேயே உரெவெய் லாக்கு என்ற கத்தோலிக்கத் தீவிரவாதியால் படுகொலை செய்யப்பட்டார். அவர் விட்டுச் சென்ற வெளியுறவுக் கொள்கையை அவருக்குப் பின் அவர் மகன் பதின்மூன்றாம் உலூயியின் அமைச்சரான கார்டினல் இரிசலூ பின்பற்றினார். ந.வ.கே.

துணை நூல்கள்:

**Carter and Mears**, A History of Britain: 1485 to the present, Surjeet Publications, Delhi, 1981.

**Seaman, L.C.B.**, A New History of England: 410-1975, Macmillan, London, 1981.

**என்றி, மீகான் (கி.பி. 1394 - கி.பி. 1460)** போர்ச்சுகல் நாட்டைச் சார்ந்த இளவரசர். இவர் கி.பி. 15-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மேற்கு ஆப்பிரிக்கக் கடற்கரை ஆய்வுப் பயணங்களுக்குப் பேராதரவு காட்டினார். அவ்வாய்வுகளின் விளைவாக நிலநூல் கலையில் போர்ச்சுகல் ஏனைய ஐரோப்பிய நாடுகளைவிட முன்னணியில் நின்றது. கடற் பயணங்களில் இந்நாடே முதலிடம் வகித்த ஐரோப்பிய நாடாகும். என்றி ஏறத்தாழ 50 கடற் பயணங்களை அனுப்பிவைத்தார். ஆனால், இக்கடற் பயணம் ஒன்றிலாவது இவர் செல்லவில்லை.இவருக்குக் கடற்பயணங்களின்மீது இருந்த ஆர்வத்தின் காரணமாக இவரை மீகான் என்றி (Henry, the Navigator) என்றும் அழைப்பர்.

என்றி கி.பி. 1394-ஆம் ஆண்டில் அரசர் முதலாம் சான் (John I) என்பவருக்கும், அரசி பிலிப்பா (Philippa) என்பவளுக்கும் மகனாகப் பிறந்தார். இளைஞராயிருந்தபோதே இவருக்குக் கணக்கிலும், வானநூல் சாத்திரத்திலும் அடங்காக் காதல் தோன்றியது. இவர் தம்மிரு சகோதரர்களுடன் போர்ச்சுகீசியப் படையொன்றைத் திரட்டி ஆப்பிரிக்காவில் மொராக்கோவிலுள்ள சீட்டா (Ceuta) என்னும் இடத்தைக் கைப்பற்றித் தம் வீரத்தை நிரூபித்தார். இதனால், மூன்று சகோதரர்களும் வீரர் என்னும் விருதைப் பெற்றதோடு, என்றி சீட்டாவின் ஆளுநராகவும் அமர்த்தப்பட்டனர். சீட்டா சிறந்ததொரு வாணிக மையமாகும்.

சீட்டாவுக்கும் ஆப்பிரிக்காவின் உள்நாட்டுப் பகுதிகளுக்குமிடையே சென்றுவந்த வாணிகத் தடங்கள் ஆப்பிரிக்காவின் நிலநூல் ஆய்வை மேற்கொள்ள என்றியைத் தூண்டின. கணக்கிலும் வானநூல் சாத்திரத்திலும் இவருக்கிருந்த திறமையின் காரணமாக, வடமேற்கு ஆப்பிரிக்கக் கடற்கரையை ஆய்வு செய்யும் கடற்பயணங்களுக்கு இவர் ஏற்பாடு செய்தார். இவரால் அனுப்பப்பட்ட இரு போர்ச்சுகீசிய மாலுமிகள் மதீரா (Madeira) தீவுகளைச் சார்ந்த போர்ட்டோ சாண்டோ (Porto Santo) என்னும் தீவினைச் சென்றடைந்தார்கள். பின்னர் இவ்விரு மாலுமிகளும் கி.பி. 1420-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் மதீராத் தீவுக்கே சென்று அடைந்தார்கள். பின்னர்ப் போர்ச்சுகல் இத்தீவுகளில் தன் ஆதிக்கத்தை நிலைநாட்டிக் குடியேற்றங்களை நிறுவியது.

மேற்குச் சகாராவைக் கடந்துள்ள இடங்களுக்கும் ஆய்வாளர்களை அனுப்புவது என்பது என்றியின் குறிக்கோளாகும். இங்கிருந்த போசாதோர் முனை (Cape Bojador) வரைதான் ஐரோப்பியர் அறிந்திருந்தனர். பல முறைகள் முயன்று கி.பி. 1434-இல் கில் ஏனசு (Gil Eanes) என்பாரின் தலைமையில் சென்ற ஆய்வுக் குழுவினர் இம்முனையைக் கடந்து சென்றனர். ஏனசு, ரியோ டி ஓரோ (Rio de Oro) வரை ஆய்வுசெய்தார். இந்த இடமும் மேற்குச் சகாராவைச் சார்ந்ததேயாகும். என்றியின் ஆய்வாளர்களுள் ஒருவரான அனடாவோ கன்கால்வுசு (Antao Goncalves) என்பார் கி.பி. 1441-இல் சில ஆப்பிரிக்கர்களுடன் போர்ச்சுகல் திரும்பினார். இவ்வாப்பிரிக்கர்களே மேற்கு ஆப்பிரிக்காவிலிருந்து ஐரோப்பாவிற்குக் கொண்டுவரப்பட்ட முதல் அடிமைகள். இவ்வடிமைகளுள் ஒருவனான அடகு (Adahu) என்பான் என்றியிடம் இன்னும் தெற்கிலும் உள்நாட்டிலும் நிலங்கள் உள்ளன என்று கூறினான். நூபியோ திரிசுட்டாவோ (Nufio Tristao) என்பாரின் தலைமையில் சென்ற ஆய்வுக்குழு மேற்குச் சகாராவுக்கும்(Western Sahara) மாரிட்டோனியாவுக்கும் (Mauritania) சென்று அங்கிருந்து பிளாங்கு முனை வரை கடற்பயணம் சென்றது. தினிசு தயசு (Diniz Diaz) என்பார் இன்றைய செனீகல் நாட்டைச் சார்ந்த வெரிடி முனையை (Cape Verde) கி.பி. 1445-ஆம் ஆண்டு சென்றடைந்தார். என்றி கி.பி. 1460-ஆம் ஆண்டில் காலமானார். ஆனால், இவருடைய மரணத்திற்கு முன் போர்ச்சுகீசியக் கப்பல்கள் சீரா இலியோன் (Sierra Leone) கடற்கரை வரை சென்றடைந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

என்றி தம் கடற்பயணங்களைத் திட்டமிட்டதுடன், அவற்றிற்கான பொருளையும் திரட்டினார். வரைபடங்கள் தயாரிப்போர், வானநூல் வல்லுநர்கள், கணக்கியல் அறிஞர்கள் போன்றவர்கள் என்றிக்கு உறுதுணை நின்றார்கள். இவர்கள் பல இனத்தைச் சார்ந்தவர்கள். இவர்களை என்றி போர்ச்சுகல்லில் புனித வின்செண்டு முனைக்கு (Cape St. Vincent) அருகிலிருநத சாகிரசு (Sagres) என்னுமிடத்தில் ஒன்று திரட்டினார். என்றியின் கடற்பயண அறிவு அவர் மறைந்த ஐம்பதாண்டுகளுக்குப் பின்னரும் பயன்பட்டு,பல்வேறு வரலாற்றுச் சிறப்புமிக்க கடற்பயணங்களுக்கு வழிகோலியது. பார்த்தலோமியோ தயசு (Bartolomew Diaz) வாசுகோடகாமா (Vascodagama) போன்ற போர்ச்சுகீசிய மாலுமிகள் ஆப்பிரிக்காவின் தென்கோடி வரை பயணஞ் செய்ய இப்பயணங்கள் முன்னோடியாகத் திகழ்ந்தன என்பது நினைவிற் கொள்ளத் தக்கதாகும்.
தெ.பா.

**என்னயினாப் புலவர்** கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். வேலன் சின்னத்தம்பி என்பது இவருடைய வேறு பெயராகும். இவர் முத்துப்புலவர், சாமிப் புலவர், நாச்சிமுத்துப் பணிக்கர் ஆகியோரிடம் கல்வி கற்றுச் சிறந்த புலமையாளரானார்.பள்ளு நூல்களுள் சிறந்ததான முக்கூடற் பள்ளு இவரால் இயற்றப்பட்டது என்பர். அந்நூல் மருதநில மக்களாகிய பள்ளர்களின் வாழ்க்கையைச் சித்திரிப்பதாக உள்ளது. முக்கூடலில் வாழும் ஒரு பள்ளனுக்கு இரு மனைவியர் இருந்தனர். அவர்களுள் மூத்தவள் திருமாலை வழிபடுபவளாகவும் இளையவள் சிவனை வழிபடுபவளாகவும் அமைய, அவ்விருவருக்கிடையே மாறுபாடு உண்டாகிய நிலையில் நிகழும் உரையாடல் நயமாக அமைந்துள்ளது. அப்பள்ளு பலதிற மக்களும் எளிதில் பொருளுணர்ந்து பயிலும் வகையில் நாட்டுப்புற வழக்குச் சொற்கள் பல கொண்டு அமைந்துள்ளது. அந்நூலில் வரலாற்றுக் குறிப்புகள் பல காணப்படுகின்றன. சிறப்பாக, பெரிய நம்பி, திருமலைக் கொழுந்து மன்னன், வடமலைப் பிள்ளையன், அம்பலவாண நயினார் ஆகியோரைப் பற்றிய குறிப்புகள் இடம் பெற்றுள்ளன.
வீ.சே.

**எனமாமோ:** இவர்கள் மிகவும் பின்தங்கிய வாழ்க்கை முறையையும் கொடூரமான போர்ச் செயல்களையும் கொண்ட பழங்குடியினருள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் பிரேசில் நாட்டின் வடபகுதியிலும் வெனிசூலா (Venezuela) நாட்டின் தென்பகுதியிலும் வாழ்கின்றனர். சற்றேறக்குறைய 125 சிற்றூர்களில் வாழும் இவர்களின் எண்ணிக்கை 10,000 க்கும் மேற்பட்டதாகும். இவர்கள் உயரமான



அம்பு, வில் தயாரிக்க மரம் வெட்டுதல்



காட்டுப் பொருள்கள் சேகரித்தல்

வர்கள்; கட்டான உடலமைப்பைப் பெற்றவர்கள்; குறைவான ஆடை அணிபவர்கள்.

எனமாமோ (Yanomamo) மக்கள் அடர்ந்த காட்டுப் பகுதிகளில் வாழ்வதால், இவர்களின் வாழ்க்கைத் தகவமைப்பும் பிற செயல்களும் காடு சார்ந்தனவாக உள்ளன. ஒவ்வொரு சிற்றூரின் குடியிருப்புப் பகுதிகளும் மலைப்பகுதிகளில் காணப்படுகின்றன. குடியிருப்புப் பகுதிகளைத் தேர்ந்தெடுப்பதில் இவர்கள் மிகுந்த கவனம் செலுத்துகின்றனர். இவர்களது அடிப்படைப் பொருளாதாரம் தோட்டப் பயிர்கள் விளைவித்தலையும் வேட்டையாடலையும் சார்ந்துள்ளதே இதன் காரணமாகும். பெரும்பாலும் இரத்தக் குழுவினர்கள் அடுத்தடுத்துத் தோட்டப் பகுதிகளை ஏற்படுத்திக் கொள்கின்றனர். சிற்றூர்த் தலைவன் பெருமளவு காட்டை அழித்து, எல்லோரைக் காட்டிலும் பெருந் தோட்டத்தைக் கொண்டுள்ளான். மழைக்காலம் முழுவதும் ஒரே இடத்தில் வாழ வேண்டியுள்ளதால் இவர்கள் குடியிருப்புக்காகக் கட்டும் வீடுகள் வலிமையானதாகக் காணப்படுகின்றன. கோடைக் காலங்களில் வேட்டையாடவும், காட்டுப் பொருள்களைச் சேகரிக்கவும், பெரும் பரப்பைச் சுற்றிவரும்போது அங்கங்கு எளிமையான கூடாரங்களை அமைத்துக் கொள்கின்றனர்.

அவரவர் தேவைக்கேற்ப ஏற்படுத்திக் கொள்ளும் தோட்டத்தில் பலவகைப் பயிர்களை விளைவிக்கின்றனர். இவற்றுள் முதன்மையானவை ஒரு வகைப் பனையும் வாழையுமாகும். இவர்கள் பனையின் கனிகளை மிகவும்விரும்பி உண்கின்றனர். இவர்கள் பயிரிடும் வாழைவகை சற்றுப் பருமனாகவும் மாவுப் பொருள்கள் மிகுந்ததாகவும் உள்ளதால் வேகவைத்து உண்கின்றனர். இவை தவிர்த்து, மக்காச்சோளம், வள்ளிக் கிழங்கு, கரும்பு வகை, பிற கிழங்கு வகைகள் முதலானவற்றையும் விளைவிக்கின்றனர். இவர்கள் பயிரிடும் பனை, கரும்பு வகைகளிலிருந்தும் காடுகளில் தானாக வளரும் ஒருவகைப் பனையிலிருந்தும் வில், அம்பு, அம்புமுனை முதலானவற்றைச் செய்கின்றனர். தேனை மிகுதியான அளவில் சேகரிக்கின்றனர்.

மான்கள், குரங்குகள், காட்டுப் பன்றிகள் முதலானவற்றைப் பெரிதும் விரும்பி வேட்டையாடுகின்றனர். வேட்டையைப் பெரும்பாலும் தனி ஒருவராகவே மேற்கொள்கின்றனர். ஆண்டுதோறும் நடத்தும் சிறப்பு விருந்து விழாவின்போது கூட்டாகச் சென்று வேட்டையாடுவர். குழந்தைகட்கு இளம் பருவத்திலிருந்தே அம்பெறியும் கலையில் பயிற்சி கொடுக்கின்றனர்.



தறி நெய்தல்



எனமாமோ ஆண்

எனமாமோக்கள் பல கால்வழிக் குழுக்களாகப் பாகுபடுகின்றனர். இவர்கள் பெரும்பாலும் புற மணத் திருமணத்தைக் கொண்டுள்ளனர். பெண் கொடுத்துப் பெண் கொள்ளுதல் (Brother - Sister Exchange), ஒத்த கால்வழியினருள் கொள்ளும் தகாப்புணர்ச்சி மணம் (Incestuous Alliance) முத லானவையும் இவர்களிடம் காணப்படுகின்றன. குடும்பத்தில் பிறக்கும் முதல் குழந்தை ஆணாக இருக்க வேண்டும் என்பதால் முதலில் பிறக்கும் பெண் குழந்தைகளைக் கொன்று விடுகின்றனர். இவர்களது வாழ்வில் போர்ச் செயல்கள் மிகுந்துள்ள தாலும், ஆண்களின் எண்ணிக்கை மிகுதியாகத் தேவைப்படுவதாலும் பெண் குழந்தைகளைக் கொல் கின்றனர். பால் மறவா நிலையில் மேலுமொரு குழந்தை பிறப்பின், அது ஆண் குழந்தையாக இருப் பினும் கொன்று விடுகின்றனர். குழந்தைகளை வயிற்றுள் வளரும்பொழுது கொல்லும் முறையையும் இவர்கள் கொண்டுள்ளனர். இம் மக்களைப் பெரு மளவு ஆய்வு செய்த நெப்போலியன் சாக்னன் (Napoleon A. Chagnon) வயது வந்த எனமாமோக் களுள் 2 விழுக்காட்டினர் பாம்புக் கடியாலும், 54 விழுக்காட்டினர் மலேரியா நோயாலும், 24 விழுக் காட்டினர் போராலும் இறக்கின்றனர் எனக் கணக் கிட்டுள்ளார்.

இவர்களிடையே எழும் பல சச்சரவுகளைத் தீர்க்கும் பொருட்டு ஏற்படுவனவே போர்களாகும். சிற்றூர் குழுக்களுக்குள் ஏற்படும் சச்சரவுகள் பெரும் பாலும் மனைவியை மாசுபடுத்துதல், ஒரு பெண் ணைப் பலர் விரும்புதல், உணவுப் பொருள்களைத் திருடுதல் முதலியனவற்றால் ஏற்படுகின்றன. இவை அனைத்துமே கடுமையான சண்டைகளில் முடிகின் றன. சிற்றூர்களுக்கிடையில் ஏற்படும் சச்சரவுகள் நீண்டகாலப் போர்களாகக் காணப்படுகின்றன. இவை அனைத்திலும் எதிரியைக் கொல்லுதல், இரவில் சூறையாடுதல் முதலான செயல்கள் முதன் மையானவையாகின்றன. ஒவ்வொரு சிற்றூர்க்கும் உள்ள தலைவனின் பங்கு குறைவானதும் செல்வாக் கற்றதுமான அரசியலமைப்பைக் கொண்டுள்ளதால் சச்சரவுகள் எளிதாகத் தீர்க்கப்பட முடியாமற் போகின்றன.

சண்டைகள் மிகுந்துள்ள போதிலும், வேற்றுச் சிற் றூர்களிலுள்ள எதிர்குழுவினரை அழைத்து வழங்கும் விருந்து நிகழ்ச்சிகள் இவர்களிடையே நல்லெண்ணத் தைத் தோற்றுவிக்கின்றன. ஒரு வாரத்திற்கும் மேலாக நடைபெறும் விருந்தில் வாழைப்பழங்கள், அவற்றிலிருந்து பெறப்படும் ஒருவகை மது, இறைச்சி முதலானவை சிறப்பு உணவாகக் கொள்ளப்படுகின் றன. தலைவன் வீட்டில் நடத்தும் விருந்தின் இறுதிக் கட்டத்தில் மாரடித்தல் விளையாட்டு (Chest Pounding Duel) குறிப்பிடத்தக்கதாகும். இதில் விருந்தினரும் கலந்து கொள்வர். சீ.ப.

ஏ இது இகரத்தினின்றும் அடுத்த நிலையில் வெளிப்பட்ட எகரத்தின் விரிவடைந்த ஒலி ஆகும். நெடுங்கணக்கில் எகரத்திற்கு உரிய குறிப்பைப் பார்க்க.

வடிவம்: முதன் முதலில் தமிழ்நாட்டில் கல்வெட்டில் எகரமும் ஏகாரமும் ஒன்றாகவே காணப்படுகின்றன. அந்த எழுத்து முறையில் புள்ளி ஒழுங்காக இடப்படாததால் மொழி அறிவை ஒட்டியே புள்ளி பெறவேண்டிய எழுத்துகளை அவ்வாறு ஓதிக்கொள்ள வேண்டிய நிலை இருந்தது. ஆகவே ஏ என்ற எழுத்திற்குத் தனிக்குறி பலகாலம் தோன்றாமல் இருந்தது. இது ஒரு குழம்பிய நிலை என்று கருதப்பட்டதால் தமிழ்நாட்டில் கிறித்தவ சமயத் தொண்டு செய்யத் தொடங்கித் தமிழுக்கும் இலக்கிய இலக்கணத் தொண்டு ஆற்றிய பெச்கி என்ற வீரமா முனிவர் ஏகாரத்திற்குக் கீழே ஒரு கோடு இடதுபுறம் நோக்கி இழுக்கப்பட வேண்டும் என்று தம்முடைய கொடுந்தமிழ் இலக்கணத்தில் விதித்ததாகக் கூறுவர். ஆனால், அது முன்னமேயே இருந்ததாகக் கருதப்படலாம். ஆர்க்காட்டு நவாபு சந்தாசாகிப்பின் காலத்தில் திருச்சி மாவட்டத்தில் எழுந்த சில கல்வெட்டுகளில் இத்தகைய மாறுதல் நன்கு மட்டப்படுத்தப்படாத கற்களில் காணப்படுகிறது. புள்ளி விதிக்கப்பட்டும் புள்ளி போடாமல் எழுதப்பட்டதைப் போலக் கீழ்க்கோடு விதிக்கப்பட்டும் அக்கோடு போடாமலே எழுதப்பட்டு வந்திருக்கலாம். புத்தகங்களை அச்சிடும் முறை வந்தபின் அது புள்ளியைப் போலவே நிலை பெற்றிருக்கலாம் என்று கருத இடமுள்ளது.

வரலாறு: ஓரெழுத்து ஒரு மொழியாக விளங்கிய எழுத்துகளில் ஏ என்பதும் ஒன்றாகும். அதன் பொருள்கள் 1) பெருக்கம் (தொல்காப்பியம்) 2) அடுக்கு (தொல்காப்பியம்) 3) மேல்நோக்குகை (சீவகசிந்தாமணி) 4) இறுமாப்பு (பரிபாடல் 5) ஏழிசைகளில் உழையிசையின் குறி (திவாகரம்) 6) ஏவு –எய்யுந்தொழில் (புற.வெ.மாலை (7) அம்பு (சீவக சிந்தாமணி). மேலும் இவ்வெழுத்து விகுதியாக வரும் இடங்களில் பிரித்தறியவும், கேள்விக் குறியாகவும், எண்ணுக்குறியாகவும், தெளிவைக் குறிக்கவும், இசை ஒலியை நிரப்பவும், விளியாகவும் பயன்பட்டு வருகிறது.

அவ்வாறே சொல்லின் இடையில் வரும் ஏகரத்தைக் குறிக்க நீண்டநாள்வரை ‘கொம்பு’ என்று சொல்லப்படும்,’ (ெ) என்ற குறியே பயன்பட்டது. முன் கூறிய வீரமாமுனிவரே சொல்லின் இடையில் வரும் ஏகாரத்திற்கு எகரத்துக்கு உரிய குறியை உயரே நீட்டி ஒரு புள்ளி அல்லது சுழி (ே) இடப்பட வேண்டும் என்று விதித்ததாகவும் கூறுவர். கல்வெட்டுகளிலும் சுவடிகளிலும் இதுகாணப்படவில்லை. அச்சு முறை வந்த பின்னரே இது காணப்படுகிறது.

கே.ஜி.கி.

**ஏகக்குடும்பம்**: காண்க – கூட்டுக்குடும்பம் (Joint Family)

**ஏகநாதர்** புகழ்பெற்ற மராட்டியத் துறவி. இவர், ‘பெல்தான்’ எனப்படும் மகாராட்டிரப் பகுதியில் பிறந்தவர். இவர் காலம் கி.பி. 1533 முதல் 1599 வரை இருக்கலாம் என்று கூறுகின்றனர். இவர் பெற்றோர் பெயர்கள் உருக்குமணிபாய், சூரியநாராயணர் ஆகும். அவர்கள் இருவரும் ஏகநாதரின் குழவிப் பருவத்திலேயே இறந்துவிட்டனர். இளமைப்பருவத்திலேயே, ஏகநாதருக்குச் சமயநாட்டம் ஏற்பட்டது. அவரது சூழ்நிலை அதை வளர்க்க உதவியது. அவர் தம் பன்னிரண்டாம் வயதில் கேட்ட உருவிலாத ஓர் ஒலியைப் (அசரீரி) பின்பற்றி இக்காலத்தில் தௌலதாபாது எனப்படும் தேவகாட்டு என்னுமிடத்தில் வாழ்ந்த சனார்த்தன சுவாமியிடம் சமய அறி

வுரை பெற ஒருவரிடமும் சொல்லிக் கொள்ளாமல் புறப்பட்டுவிட்டார். சுவாமி, தொடக்கத்தில் ஏக நாதரைச் சில புள்ளிவிவரங்களைக் கணிக்கும் பணி யில் அமர்த்தினார். தமக்குக் கொடுக்கப்பட்ட பணியை மிகவும் பாராட்டத்தக்க முறையில் செய்த ஏகநாதர், தம் குருவின் நன்மதிப்பைப் பெற்றார். பின்னர்த் தேவகாட்டின் பின்புறம் உள்ள ஒரு குன் றில் தியானம் மேற்கொள்ளுமாறு குருவினால் பணிக் கப்பெற்றார். ஆறு ஆண்டுகள் ஏகநாதர் குருவிடம் பணிசெய்து கொண்டிருந்தார். இப்பணிக் காலத்தில் ஒரு நாள் பகைவன் ஒருவன் தேவகாட்டைத் தாக்கி னான். அவ்வமயம் சனார்த்தன சுவாமி ஆழ்நிலை தியானத்திலிருந்தார். அவர் தியானத்தைக் கலைக்க விரும்பாத ஏகநாதர் தம் குருவின் உடையை அணிந்து கொண்டு பகைவனை நோக்கிச் சென்று, முடிவில் அவன் ஓடிப் போகும்படி செய்தார். பிறகு குருவின் ஆணைப்படி ஒரு புண்ணியப் பயணத்தை மேற் கொண்டு, பெய்தானுக்குச் சென்று தம் உறவினர் களைச் சந்தித்துத் திருமணம் செய்து கொண்டு இல்ல றத்தில் தூய வாழ்க்கையை மேற்கொண்டார். குரு வின் கட்டளையைச் சிறிதளவும் மீற ஏகநாதர் விரும்ப வில்லை. குடும்ப வாழ்க்கையை மேற்கொண்ட போதிலும் இறைவனை இடையறாது சிந்திக்கும் கடப்பாட்டை ஒருபோதும் மறந்தாரில்லை. அவர் மனைவி கிரிசாபாய் ஒரு பீசப்பூர்ப் பெண்.

ஒரு நாள் ஏகநாதருக்குத் தொண்டை நோய் ஏற்பட்டது. அவ்வமயம் அவர் கனவில் ஞானேசுவர் என்ற மறைந்த ஒரு துறவி தோன்றி தம்முடைய சமாதியில் ஒரு வேர் இருப்பதாகவும் அதை எடுத்து வந்து பயன்படுத்துமாறும் கூறினாராம். அவ்வாறே செய்ய நோய் குணமாகி விட்டதாம். இதை வியந்து ஏகநாதர் அந்த ஞானேசுவரரின் வாக்குகளைப் பதிப் பித்து அந்நூலுக்கு 'ஞானேசுவரி' என்ற பெயர் கொடுத்துள்ளார். ஏகநாதர் ஒரு புகழ் பெற்ற எழுத் தாளராகவும் விளங்கியது குறிப்பிடத்தக்கது. இவர் பாகவத புராணத்தின் பதினொன்றாம் அதிகாரத் திற்கு விரிவுரையும் எழுதியிருக்கிறார். பாவார்த்த இராமாயணம் என்ற மற்றொரு சிறந்த நூலும் தம் அகத்தூண்டுதலால் இவர் இயற்றியுள்ளார். உருக்கு மணி கல்யாணம் என்ற இவரது மற்றொரு நூலில், கிருட்டிணன், உருக்குமணியின் தூய காதலைச் சிறப் பித்திருக்கிறார். இவை தவிர வேறு சில நூல்களும் இவர் புகழைப் பறைசாற்றி விளங்குகின்றன. இவர் கி.பி. 1599-இல் மரணமடைந்தார். தெ.பா.

துணை நூல்:

**Ranade**, **R.D.**, Mysticism in Maharashtra, Nagpur, 1940.

**ஏகபாதநிகண்டு:** இது தமிழ் மொழியில் அமைந்த ஒரு நிகண்டு நூல். ஏகபாதம் என்பது நான்கு அடிகள் கொண்ட செய்யுளின் முதலடியே ஏனைய மூன்றடிகளாகவும் வெவ்வேறு பொருள்படு மாறும் அமையப்பாடும் யாப்பு விசேடமாகும். வேத கிரி முதலியார் வெளியிட்ட 'இலக்கியக் களஞ்சியம்' என்னும் நூலில் இந்நிகண்டு பற்றிய குறிப்பு ஒன்று காணப்படுகிறது. அதில் அவர் இந்நூல் பற்றிக் குறிப் பிட்டு, அதிலிருந்து பின்வரும் செய்யுளை எடுத்துக் காட்டியுள்ளார். அதுவருமாறு: 'அத்திரி யொட்டகம் விண்ணுங் கருணையுமாகுமென்பர், அத்திரி மாவும் வரையுங் கழுதையு மாகுங் கண்டாய், அத்திரி திக்க யந் தன்னுட னேமிக்க வர்சனமாம், அத்திரி தானும் கறுப்புமென் றோதுவ ரான்றவரே'.

இப்பாடலில் அடிதோறும் முதற்சொல் ஒத்துள்ள தேயன்றி அடிமுழுவதும் ஒத்துக் காணப்படவில்லை.

திருஞானசம்பந்தர் அருளிய ஏகபாதப் பதிகம் (முதல் திருமுறை-12) 'பிரம புரத்துறை பெம்மா னெம்மான், பிரம புரத்துறை பெம்மா னெம்மான் பிரம புரத்துறை பெம்மா னெம்மான், பிரம புரத் துறை பெம்மா னெம்மான், என்னும் வகையில் நான் கடியும் ஒத்த நிலைபெற்று ஏகபாதம் என்னும் அமைப் பிற்கேற்ப அமைதல் காணலாம். இது போன்ற அமைப்புமேலே காட்டிய நிகண்டுப் பாடலில் இல்லை. ஏகபாதம் எனக் கருத இயலாத இவ்வகைப் பாடல் அடங்கிய ஒரு நூலை ஏகபாத நிகண்டு எனல் ஒவ் வுமோ? என்பதும் வேறு எக்காரணம் பற்றி ஆசிரியர் இப்பெயர் இட்டனரோ? என்பதும் சிந்திக்கத் தக்கனவாகும். இந்நூலைக் குறித்து வேறு ஒன்றும் அறியக் கூட வில்லை. மு.ச.

**ஏகம்பவாண முதலியார்:** இவர் மகத நாடென்னும் நடு நாட்டில் ஆற்றூரில் வாழ்ந்த வாணர் குலத் தலைவராவார். 'இலகுபுகழ் ஆறை ஏகம்பவாணன்' என்னும் தொடர் இவர் ஆறை என் னும் ஊரைச் சேர்ந்தவர் என்பதை உறுதி செய்கி றது. இந்த ஆறையூர் திருக்கோவலூர்ப் பகுதியில் தென்பெண்ணையாற்றங்கரையில் உள்ள ஆற்றூரா கும் எனத் தமிழ் நாவலர் சரிதையும் சாசனத் தமிழ்க் கவிசரிதமும் கூறுகின்றன. இவர் தந்தை குலோத் துங்க சோழன் காலத்தில் வாழ்ந்த வாணபூபதி யாவார். தாயார் ஓராண்டுக் குழந்தையிலே இவரை விட்டு மறைந்தார். அதனால், குழந்தையைக் கவ னிக்க வேறு ஆள் இல்லாமையாலும் மூப்புக் காரண மாகத் தாமும் விரைவில் இறக்கக்கூடும் என்று உணர்ந்தமையாலும் தந்தை தம் பண்ணை ஆளான ஏகனிடம் குழந்தையை ஒப்படைத்தார். விரைவி

லேயே தந்தை இறந்துவிடவே ஏகன் குழந்தையை யும், அவருடைய செல்வமனைத்தையும் பேணிக் காத்து வந்தார். குழந்தைக்குப் பள்ளி செல்லும் வயது வந்தவுடன் கம்பரிடம் அனுப்பிக் கல்வி கற்கச் செய்தார். இவரும் நன்முறையில் கற்றுத் தேர்ச்சி பெற்றார். இவருக்குப் பதினாறு வயது நிரம்பியதும் அவர்கள் குலத்தில் பெண்பார்த்துத் திருமணம் செய் வித்து, அவருக்குரிய செல்வத்தையெல்லாம் ஒப்ப டைத்து வாழ வைத்தார். இதனால் இவர் நன்றியுள் ளத்தோடு தன் பெயரின் முன்னர் ஏகன் பெயரையும் தமக்குக் கல்வி போதித்த கம்பரின் பெயரையும் அதனைஅடுத்துத் தம்மைப் பெற்றெடுத்த வாணர் பெயரையும் சேர்த்து ஏகம்பவாணர் எனத் தம் பெயரை அமைத்துக்கொண்டார்.

இவர் தந்தை இறக்கும்வேளையில் ஏகனிடம் கூறிச் சென்ற, பூமியில் மறைத்து வைக்கப் பெற்ற செல்வத்தை எடுக்கச் சென்றார். ஆனால், அதனை எடுக்கவிடாமல் அதனைக் காத்திருந்த பூதம் தடுத்து, ஒரு தாய்க்கு ஒரே மகனான ஒருவனைத் தனக்குப் பலியிட்டுப் பின் எடுக்குமாறு கூறியது. ஏகம்பவாணர் அவ்வாறு செய்ய வேண்டியதாயின் செல்வத்தை எடுக்கவேண்டா எனக் கருதித் திரும்பிவிட்டார். இச் செய்தியறிந்த ஏகன் தானே பூதத்திடம் சென்று பலியானான். பின்னர்ப் பூதம் இவரிடம் வந்து தான் விரும்பிய பலி கிடைக்கப் பெற்றமையால் செல் வத்தை எடுத்துக்கொண்டு தன்னை ஏவலாளாக ஏற் றுக்கொள்க என்று வேண்டியது. அதனைக் கேட்டு வாணர் அவ்விடத்திற்கு விரைந்தார். ஏகனின் செய லுக்கு மிகவும் வருந்தினார். அவற்குச் செய்ய வேண் டிய இறுதிச் சடங்குகளையும் தாமே முடித்தார். பின் னர்ப் பூமியில் புதைக்கப்பட்டிருந்த செல்வத்தை எடுத்துவந்து பூதத்தின் துணையையும் பெற்று வாழ்ந்து வந்தார்.

மூவேந்தர்கள் ஒருநாள் இவரைக்காண வீட்டிற்கு வந்தனர். அவ்வேளை ஏகம்பவாணர் கழனிக்குச் சென்றுள்ளதை அவர் மனைவி அவர்களுக்குத் தெரி வித்தாள். அப்போது அவர்கள் 'நாற்றுமுடி பிடுங்கப் போயினரோ' என்று செருக்குடன் கூறிச்சென்றனர். இதனைத் தம் மனைவி வாயிலாகக் கேள்வியுற்றுச் சினந்த வாணர் பூதத்தை அவர்களைக் கொண்டுவரு மாறு ஏவினார். அந்தப் பூதம் சேர சோழ அரசர் களை வென்று கைக்கொண்டு பாண்டியனிடம் வேப்ப மாலை இருந்ததால் அஞ்சித் திரும்பியது. இதனால், ஏகம்பவாணர் நான்கு பெண்களை அனுப்பி ஆடிப் பாடிப் பாண்டியனின் வேப்பமாலையைக் கொண்டு வருமாறு கூறினார். அவர்கள் மாலையைக் கொண்டு வந்த பின்னர்ப் பூதம் அவரைப் பிடித்து வாணர் முன் கொணர்ந்தது. அவர்கள் பாடியதாக அமைந்த பாடல்களில் பாண்டியன் சீவலவன் என்றும், வீர மாறன் என்றும் குறிக்கப்படுகிறான். வீரமாறன் என் பது அதிவீரராமபாண்டியன் என்னும் பொருளைத் தரு கிறது. சீவலவன் என்பது சிரீவல்லபன் என்னும் பட்டப்பெயரின் திரிபாகும். இப்பட்டம் அதிவீரராம பாண்டியனுக்குரியது. எனவே, ஏகம்பவாணர் அதி வீரராம பாண்டியன் காலத்தவர் எனத்துணியலாம்.

வாணர் பாண்டியன் நாட்டைப் பாணனுக்குப் பரிசாகத் தந்தார். பாண்டியன் மனைவி வாணரிடம் வேண்டிக்கொள்ள நாடுவேண்டின் பாணனுக்கு ஒரு கோடிப் பொன் கொடுத்துப் பெற்றுச்செல்க என்று கூறினார். வாணர் பாண்டியனுக்குப் பல பரிசுகள் தந்து அனுப்பி வைத்தார். பின்னர்த் தம் ஆசிரியரைக் காணவந்தபோது அவர், 'பாண்டியரைப் பேர் மாற்றிப் பாணர்க் கரசளித்த ஆண்டகை' யென்று பாராட்டினார் எனவும் இருவரும் சேர்ந்து உறையூர் சென்று பல பாடல்கள் பாடி மகிழ்ந்திருந்தனர் எனவும் செய்திகள் கூறப்பட்டுள்ளன. ஏகம்பவாணர் வரலாறு தமிழ் நாவலர் சரிதையில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. வீ.சே.

**ஏகம்பவாணன் மனைவி** என்பவர் குலோத் துங்க சோழன் காலத்தில் வாழ்ந்த ஏகம்பவாணன் துணைவியாவார்; முதலியார் குலத்தினைச் சேர்ந்த வர்; கல்வி கற்றுப் புலமை மிக்கவர். இவர்தம் கணவ ரொடு செல்வச் செழிப்புடன் வாழ்ந்து வந்தனர். ஒரு நாள் கணவர் இல்லாதபொழுது மூவேந்தரும் ஏகம்ப வாணரைப் பார்க்க இவருடைய இல்லத்திற்கு வந் தார்கள். முதலியார் வீட்டிலுள்ளாரா என்று பார்த் துவர ஆள் அனுப்பினார்கள். வீட்டிலிருந்த ஏகம்ப வாணரின் மனைவி முதலியார் கழனிக்குச் சென்றுள் ளாரெனக் கூறினார். அதனைக்கேட்ட வேந்தர்கள் 'முதலியார் முடிநடப் போயினரோ!' என்று அவ ரையும் அவரது தொழிலையும் கேலியாகப் பேசிச் சென்றனர். முழுப்பேச்சுகள் முதலியார் மனைவியின் காதில் விழுந்தன. அதனால் அவர் சினமடைந்தார். செய்யுள் இயற்றும் திறம் பெற்றிருந்த அம்மை யார், உடனே 'முதலியார் முடிநடுவது உண்மை தான்; ஆயினும், அவர் நாற்று முடியையா நடுவார்? சேர சோழ பாண்டியர்களாகிய மூவேந்தர்கள்தம் படைகளை அழித்துத்தொலைத்து, ஆனைகளைக் கொண்டு சேறாக்கிக் குருதியாகிய நீரை நிறைத்து அச்சேற்றில் அம்மன்னர்களின் முடிகளையன்றோ நடு வார்!' என்னும் பொருள் பொதிந்த 'சேனை தழை யாக்கிச் செங்குருதி நீர்தேக்கி' என்று தொடங்கும் பாடலை எழுதி அரசர்களிடம் அனுப்பினார். அப்

பாடலைப் படித்துப் பார்த்து விட்டு இவன் இத் தகைய வீரனா? என்று கூறிவிட்டுச் சென்றனர். வீ.சே.

**ஏகாதச ருத்திரர்**: வடமொழியில் ஏகம் என்பது ஒன்றையும் தசம் என்பது பத்தையும் குறிக்கும். எனவே ஏகாதசம் என்ற சொல் பதினொன்று எனப் பொருள்படும். 'உருத்திரர்' என்பது சிவகணத்தவரான தேவர்களைக் குறிக்கும். வானுலகில் வாழும் தேவர்கள் முப்பத்து மூன்று கோடி என்னும் தொகையினராவர். அவர்கள் நான்கு வகையாகப் பகுக்கப்படுவர். அவர்களை 'நால் எண் தேவர்' எனப் பரிபாடல் சுட்டுகிறது. 'வானத்து, நாலெண் தேவரும் நயந்து நிற் பாடுவோர்' என்பது அச்செய்யுட்பகுதியாகும் (பரி. 3: 28,29). ஆதித்தர்பன்னிருவர்; உருத்திரர் பதினொருவர்; வசுக்கள் எண்மர்; மருத்துவர் இருவர் – ஆக முப்பத்து மூவர்.

உருத்திரர்கள் ஏகாதசருத்திரர் எனப் புராணங்களிலும் ஆகமங்களிலும் குறிக்கப்படுகின்றனர். கபில நிறம் பெற்றிருத்தல் பற்றி இவர்களைக் 'கபிலர்' எனப் பரிபாடல் குறிக்கிறது. 'மாசில் எண்மரும், பதினொரு கபிலரும்' என்பது பரிபாடல் (பரி. 3:7). இவர்தம் பெயர்கள் அசைகபாத்து, அகிர், புத்நியர், பிநாகி, உருதர், பித்ரூபர், திரியம்பகர், மகேசுவரர், விருசாகபி, சம்புஉதவனர், ஈசுவரர் என அபிதான சிந்தாமணியில் கூறப்பட்டுள்ளன.

தரன் என்னும் வசுவுக்கு, மாதேவன், அரன். உருத்திரன், சங்கரன், நீலலோகிதன், ஈசானன், விசயன், வீமதேவன், பவோற்பவன், காபாலி, சௌமியன் என்னும் பதினொரு உருத்திரர்கள் பிறந்ததாக மகாபாரதம் கூறுகிறது.

'உருத்திரன்' என்ற சொல் உலக முதல்வனான சிவனுக்கு உரியது. அதன் பின்னர்ச் சிவனின் அம்சமான பிரமன், விட்டுணு, உருத்திரன் என்ற மூவருள் சங்காரமூர்த்தியான குணருத்திரனுக்கு வழங்கியது. இக்குணருத்திரனுக்கு வேறாக 'உருத்திரன்' என்றோர் அக்கினிதேவன் பேசப்படுகிறான். இவனுக்கும் வேறாக எண்ணிறந்த உருத்திரர்கள் உள்ளனர்.

மகா உருத்திரனைத் தவிர மற்ற உருத்திரர்கள் தேவகணத்தினர் ஆவர். உருத்திரர் பன்னிருவரின் தோற்றம் பற்றி இலிங்கபுராணம் கூறும் செய்தி இது; 'முன் ஒருகால் பிரமன் தன்னால் உயிர்களைச் சிருட்டிக்க முடியாமையைக் கண்டு மனம் தளர்ந்து அழுது உயிர் துறந்தான். துறந்த உயிர் பதினொரு கூறுகளாகப் பிரிந்து தேவ உருப்பெற்றது. அவ்வுருக்களே 'ஏகாதசருத்திரர்' என்னும் பெயரோடு பிரமனுக்குப்பதில் படைப்புத் தொழில் புரிந்தன'. இவர்களைப் பற்றிக் கந்த புராணம் பின்வருமாறு கூறுகின்றது: 'ஒரு கற்பத்தில் மூவுலகங்களையும் படைத்த பிரமன் ஆணவங்கொண்டு தருக்கினான். சிவபரம்பொருளை இகழ்ந்தான். அதனால் சினங் கொண்ட இறைவன் அவனிடமிருந்து தன் அருட்சக்தியை அகற்றினார். உடனே பிரமன் செயலற்றான். தன் உண்மை நிலையை உணர்ந்து வருந்திப் பிழை பொறுக்குமாறு வேண்டினான். இறைவன் மனமிரங்கி பிரமனுக்கு அபயம்தந்து, தன் நெற்றியினின்றும் பதினொருஉருத்திரர்களைத் தோற்றுவித்தார். அவர்களைப் பிரமனுக்குத் துணையாக இருந்து, படைப்புத் தொழில் புரியப் பணித்தார். அவ்வுருத்திரர்களுக்கு எனத் தனித்தனிப் புவனங்களும் நிறுவப்பட்டன. ஆ.ந.

**ஏகாதசி**: திதிகள் பதினைந்து. அவற்றுள் பதினோராம் திதி ஏகாதசி. ஏகாதசி, விரதம் அனுட்டிப்பதற்கு மிகச் சிறந்ததென ஆகமங்கள் கூறுகின்றன.

வைதிக இந்துக்கள் ஏகாதசியன்று முழுப்பட்டினி இருந்து பத்திமையோடு விரதம் காப்பர். இவ்விரதத்தால் பெரும்பயன் உண்டு என்ற நம்பிக்கை இன்றளவும் நிலவுகிறது.

ஏகாதசியின் தோற்றம் பற்றிப் புராணங்கள் கூறுகின்றன. 'முரன்' என்னும் கொடிய அசுரன் தேவர்களையும் மக்களையும் பலவாறு துன்புறுத்தி வந்தான். அவன் கொடுமை ஆற்றாமல் தேவர்கள் வேண்ட, திருமால் அவனை எதிர்த்துக் கடுமையாகப் போரிட்டார். அப்போர் ஆயிரம் ஆண்டுகள் நடைபெற்றது. இறுதியில் திருமால் களைப்புற்று ஒரு குகையை அடைந்தார். அங்கே அவரது சக்தி ஒரு பெண் வடிவமாக வெளிப்பட்டது. அச்சக்திப் பெண் தன் ஓங்காரத்தால் முரனை எதிர்த்துச் சாம்பலாக்கினாள்.

விழித்தெழுந்த திருமால் அச்சக்திக்கு 'ஏகாதசி' எனப்பெயரிட்டார். அன்றைய நாளில் ஏகாதசியை வழிபட்டு விரதம் இருப்பவர்களுக்குப் பரமபதமான வைகுண்டம் கிட்டும் எனவும் வரம் அளித்தார். தேவர்கள் மகிழ்ந்து ஏகாதசியை வணங்கி வழிபட்டனர். இது நடந்தது மார்கழித் திங்கள் பூர்வபட்சத்தில் (வளர்பிறை) ஆகும். இவ்வாறு முதல் ஏகாதசி தோன்றியது.

ஒரு திங்களில் இரண்டு ஏகாதசி வரும். ஆண்டொன்றுக்கு 25 ஏகாதசிகள் வருகின்றன. இவை

எல்லாவற்றுள்ளும் மார்கழிச் சுக்கில பட்சத்தில் வரும் ஏகாதசியே மிகச் சிறப்பானது. இதை வைகுண்ட ஏகாதசி என வழங்குகின்றனர். 'முக்கோடி ஏகாதசி' எனவும் இதனைக்குறிப் பிடுவதுண்டு. மூன்று கோடி ஏகாதசிகளில் விரதம் இருந்த பலன் ஒரு வைகுண்ட ஏகாதசியில் விரதமிருப்போர்க்குக் கிடைப்பதால் இப்பெயர் பெற்றதென்பர். திருமால் கோயில்கள் எல்லாவற்றிலும் வைகுண்ட ஏகாதசி சிறப்பாக நடைபெறுகிறது. எனினும், திருவரங்கம் திருக்கோயிலல் வைகுண்ட ஏகாதசி விழா தனிச்சிறப்புடையது.

ஏகாதசி விரதமிருந்து பயன்பெற்றோர் பலராவர். புரூரவாகு என்னும் மன்னன் ஏகாதசி விரதமிருந்து தன் விலங்குரு நீங்கப் பெற்றான். அயோத்தியை ஆண்ட உருக்குமாங்கதன் இவ்விரதப் பயனாக உலகை ஒரு குடைக்கீழ் ஆண்டு வைகுந்த பதவி பெற்றான். அம்பரீடன் என்ற மாமன்னன் ஏகாதசி நோன்பு நோற்றுப் பல வெற்றிகளைப் பெற்றுப் பரமபத மடைந்தான். 'பாற்கடலில் தோன்றிய ஆலகாலநஞ்சினைப் பரமன் உட்கொண்டு, தேவர்களைக் காத்த நாள் ஏகாதசி' எனச் சகலாகமத் திரட்டுக் கூறுகிறது. அன்று இரவு முழுவதும் தேவர்கள் விரதமிருந்து சிவனைப் பூசித்துப் பேறுபெற்றனர்.

யாழ்ப்பாணம் சுன்னாகத்தில் வாழ்ந்த வரதராச பண்டிதர் என்பவரால் ஏகாதசிப் புராணம் என்று ஒரு நூல் எழுதப்பட்டுள்ளது. அதில் பின்வருமாறு பல ஏகாதசிகள் கூறப்பட்டுள்ளன. அவை வருமாறு:-

ஏகாதசி விரதங்களின் பெயர்

| மாதம் | பூர்வபட்சம் | அமரபட்சம் |
|---|---|---|
| மார்கழி | வைகுண்ட ஏகாதசி | மோட்ச ஏகாதசி |
| தை | புத்திரதா ,, | சபல ,, |
| மாசி | சய ,, | வெட்டில ,, |
| பங்குனி | ஆமலக ,, | விசய ,, |
| சித்திரை | காமதா ,, | பாவமோசன ,, |
| வைகாசி | மோகினி ,, | வருதனி ,, |
| ஆனி | பாண்டவ ,, | அமர ,, |
| ஆடி | பதும ,, | யோகினி ,, |
| ஆவணி | நந்தன ,, | கார்மிக ,, |
| புரட்டாசி | வாமன ,, | அசா ,, |
| ஐப்பசி | பாசாங்குச ,, | இந்திர ,, |
| கார்த்திகை | பிரபோதனி ,, | இரயி ,, |

பிரபோதனி ஏகாதசி அறிதுயில் ஒழிந்து எழுந்ததாகக் கூறப்படுவதாதலின் மிக்க சிறப்புடையதாகும். இவற்றைத் தவிரப் பரம ஏகாதசி, பதுமினி ஏகாதசி, கௌசிக ஏகாதசி, கைசிக ஏகாதசி, சர்வசிவ ஏகாதசி, தத்த ஏகாதசி என்னும் ஏகாதசிகளும் உண்டு. ஆ.ந.

**ஏகாதசிப் புராணம்** என்னும் நூல் ஏகாதசி விரதச் சிறப்பினை எடுத்துக்கூறுவது. இது தென்காசிப் பாண்டியரால் இயற்றப்பட்டதென்பர். இந்த நூல் இப்பொழுது கிடைப்பது அரிதாகவுள்ளது. ஏகாதசி விரதம் இருக்கும் முறைமைகளையும் மாதந்தோறும் வருகிற ஏகாதசிகளின் சிறப்புகளையும், மார்கழி மாதம் வருகிற வைகுண்ட ஏகாதசியின் சிறப்புகளையும், உருக்கு மாங்கத மன்னன் ஏகாதசி விரதத்தால் சிறப்புற்றதையும் விரிவாக எடுத்துக் கூறி இந்நூல் முடிவடைகிறது.

உருக்குமாங்கதன் சூரியவமிசத்து அரசன்; இம்மன்னன் மனைவி சந்தியா வாணி. இம்மன்னன் பெருமையினை வசிட்டர் இந்திரன் சபையில் எடுத்துக் கூறினார். இந்திரன் அதன் உண்மையறிய நாரதரை உருக்குமாங்கதன் பேரவைக்கு அனுப்பினார். அரசன் நாரதருக்கு வேண்டிய உபசரணைகளைச் செய்து சிறந்த மாலையொன்றை அணிவித்து அனுப்பினான். இந்திரன் அம்மலர்மாலையின் மணத்தில் ஆசையுற்று உருக்குமாங்கதன் நந்தவனத்திற்குத் தேவர்களை அனுப்பித் தினமும் மலரைக் கொணர்ந்து அணிந்து மகிழ்ந்தான். மலர்கள் பிறரால் கவர்ந்து செல்லப் படுவதை அறிந்து மன்னன் மிகவும் சினமுற்றான். காவலர்கள் இரவு பகல் கவனமாகக் காவல் காத்தனர். ஒரு நாளிரவில் உயர்ந்த கத்திரிச் செடிகளின் பூண்டுகளைக் கொளுத்தினர். அப்புகை மிகுதியால் தேவ விமானத்தின் வலியடங்க, தேவர்கள் காவற்காரர் வசத்தில் அடங்கினர்.

காவலர்கள் தேவர்களை அரசனிடம் ஒப்புவித்தனர். தேவதூதர்கள், 'அரசனே கத்திரிப் பூண்டின் புகையால் தேவ விமானம் ஆகாயத்தில் செல்லும் வலிமையற்றது. ஏகாதசி விரதமிருந்தவர் அந்த விரத பலத்தில் சிறிது தருவரேல் நாங்கள் விமானத்துடன் வானுலகு அடைவோம்' என்று கூறினர். ஏகாதசியன்று தன் கணவனுடன் சண்டையிட்டு இரவு பகல் உணவு கொள்ளாமல் இருந்த ஒரு பெண் ஏகாதசி விரத பலனைப் பெற்றாள். அப்பெண்ணினுடைய ஏகாதசி விரத பலத்தை, அவள் தர, தேவர்கள் வானுலகம் அடைந்தனர். இதனை உருக்குமாங்கத

அரசன் உணர்ந்து தன் நாட்டிலுள்ளார் அனைவரையும் ஏகாதசி விரதத்தைக் கடைப் பிடிக்கச் செய்து தானும் கடைப்பிடித்தான்.

இவனிடம் ஒரு முறை துருவாச முனிவர் அதிதியாக வந்து பாரணைக்கு வருகிறேனென்று சொல்லிச் சென்றவர் தாமதித்து வந்தார். விரதகாலம் தவறாமல் இருப்பதற்காகச் சிறிது நீர் அருந்தினார்; உணவு உண்ணாது காத்திருந்தார். முனிவர் வந்து விவரமறிந்து சாபமிடத் தொடங்கினார். உருக்குமாங்கதன் திருமாலைத் துதிக்கத் திருமாலின் சக்கரம் முனிவரைத் துரத்தத் தொடங்கியது. முனிவர் அஞ்சி அரசனை அடைந்து பாராட்டி மகிழ்ந்தார். சக்கரமும் அமைதி அடைந்தது. உருக்குமாங்கதன் நாட்டில் யாவரும் தவறாது ஏகாதசி நோன்பிருந்தமையால் இயமனுக்கு வேலை இல்லாது போயிற்று.

பிரமன் அதனை அறிந்து மோகினியை உருக்குமாங்கதன் இருக்குமிடத்திற்கு அனுப்பினான். உருக்குமாங்கதன் அவளிடத்து மையல் கொண்டான். ஒரு நாள் ஏகாதசி என்று முரசு அடிப்பதைக் கேட்டு ஏகாதசி நோன்பிற்காக அவளை விட்டு விலக நினைக்கையில் அவள் தடுக்க, எவ்வரம் கேட்கினும் தருவேன் ஏகாதசி விரதம் இழக்கேன் என்று கூறினான். மோகினி அவ்வாறானால் உன் குமாரனைத் தாய் பிடிக்கக் கொலைசெய்து தருக எனக் கூற, அவ்வாறே மன்னன் செய்யப் புகுந்தபோது தேவர்கள் அரசனுக்கு வேண்டிய வரம் தந்தார்கள். இவ்வாறு ஏகாதசிப் புராணம் ஏகாதசி விரதமகிமைகளை எடுத்துக் கூறுகிறது. சு.சு.

**ஏகாதிபத்தியங்கள்**: 'ஏகாதிபதி' என்னும் சொல் ஏகம், அதிபதி என்னும் இரு வடசொற்களாலானது. அது 'தன்னிகரில்லாத (போட்டியில்லாத்) தலைவன்' என்று பொருள்படும். அதாவது, தன் விருப்பப்படி, தன்னால் ஆளப்படுவோரைக் கலவாமல், 'தன்னாட்சி' செலுத்துபவன் என்பது. ஏகாதிபத்தியம் என்பது அத்தகைய தலைவன் செலுத்தும் ஆதிபத்தியம் (Sovereignty) என்றாகும். ஒரு நாடு தான் வெற்றி பெற்ற பிற நாடுகளைத் தன் பேரரசிற்குள் அடக்கி, அவற்றைத்தன் சட்டங்களுக்கு உட்படுத்தித் தன் மொழியை ஏற்கவைத்துத் தனக்குக் கப்பம் கட்டியோ வரி செலுத்தியோ ஆட்பட வைப்பது ஏகாதிபத்தியம் ஆகும்.

ஏகாதிபத்தியம் என்பது ஒரு ஆட்சி வகையாகும். ஏகாதிபத்திய வகை அரசியல் நிறுவனத்திற்கு உலக வரலாற்றிலேயே சிறந்த எடுத்துக்காட்டு உரோமானியப் பேரரசு ஆகும். இது அரசியல் கலைஞர் ஒப்புக்கொண்டது ஒன்று. மிக அண்மைக்காலத்தில் பரந்த பேரரசு ஒன்றை நிறுவி ஆண்ட இங்கிலாந்து ஏகாதிபத்தியம் மற்றுமொரு சான்றாகும். இவற்றைப் போன்ற பிற பல ஏகாதிபத்தியங்களையும் உலக வரலாறு அறியும். ஆயினும், உரோமானியப் பேரரசும் ஆங்கிலப் பேரரசும் ஏகாதிபத்திய இலக்கணத்தினின்றும் மிகுதியும் பிறழாது ஆட்சி செய்தன.

இதனை இவ்வாறு கூறுதல் ஒரு முறை. அன்றி, 'உரோமானியப் பேரரசு வரலாற்று வற்புறுத்தல்களுக்கும் பிற சூழ்நிலைகளுக்கும் உட்பட்டு ஏதோ ஒரு வகையில் வளர்ந்து வந்து, அதன் அக்கால அரசியல் தேவைகளுக்கேற்ற நிலையங்களையும் ஆட்சி மரபுகளையும் ஆக்கிக் கொண்டது; பிற்காலத்தார் அதனை ஒரு முன்னோடியாகக் கருதி அதன் இயல்புகளைத் தொகுத்து அவற்றையே ஏகாதிபத்தியத்தின் இலக்கணம் என்று கூறினர்' என்பதும் ஒருவகை விளக்கமேயாம். இதுவே உண்மையான விளக்கம் என்றும் கூறலாம். ஏனெனில் எந்த ஓர் அரசியல் நிலையமும் தானாக வளரும்போது, ஓர் இலக்கணத்தையொட்டித் திட்டமிட்டு வளராது; அது சூழ்நிலை உந்தல்களையும் வற்புறுத்தல்களையும் ஒட்டியே உருவாகும் என்பது வரலாற்று அனுபவம். இதனால்தான், ஒவ்வோர் ஏகாதிபத்தியத்தின் தோற்றம், வளர்ச்சி, வீழ்ச்சி என்பன வெவ்வேறு முறையில் அமைகின்றன. எடுத்துக்காட்டாக, உரோமானியப் பேரரசு அழிந்ததற்கு மத்திய ஐரோப்பாவிலிருந்து வந்த செருமனியக் கூட்டம் ஒரு முக்கியமான காரணமாயிற்று. ஆனால், ஆங்கில ஏகாதிபத்தியம் மறைந்ததற்கு அதன் சொந்தக் கொள்கை முடிவுகளே முக்கியமான உடனடிக்காரணமாயின.

இனி, ஏகாதிபத்தியம் என்னும் கருத்தாராய்ச்சிக்குத் தேவையான அளவு உரோமானியப் பேரரசின் வரலாற்றைக் காண்பது பயனுடையதாகும். இப்பேரரசு உரோம் (Rome) என்னும் இத்தாலிய நகரத்தின் அரசியல் வளர்ச்சியின் முதிர்ந்த நிலையில் எழுந்த தோற்றமாகும். உரோம் நகரம் தொடக்கத்தில் ஒரு நகர அரசாக(City State)இருந்தது. அந்நகரம் தன்னாட்சி செய்து கொண்டது. ஆதியில் அதனை அரசர்கள் ஆண்டனர். பிறகு அது முடியாட்சியை நீக்கிவிட்டுக் குடியாட்சியை ஏற்படுத்திக் கொண்டது. உரோமானியர் குடியாட்சியை மக்களாட்சி (Republic) என்றனர். இக்குடியாட்சி தொடங்கின சில நூற்றாண்டுக்கால அளவில் உரோம் நகர ஆட்சி சிறிது சிறிதாக இத்தாலித் தீபகற்பம் முழுவதிலும் பரவிற்று. அதன் பிறகு அது மத்தியதரைக்கடலைச் சுற்றியுள்ள நாடுகளை ஒவ்வொன்றாக வெல்லத்

தொடங்கி நாளடைவில் ஐரோப்பாவிலேயே மிகப் பெரிய வல்லரசாகத் திகழ்ந்தது. அந்த நிலையை அது எய்துதற்கு சூல்லா (Sulla), மரியசு (Marius), பாம்பே (Pompey), சூலியசு சீசர் (Julius Caesar) போன்ற பல பெரு வீரர்களின் முயற்சி முக்கியமான காரணமாகும். சீசருக்குப் பிறகு அவர்தம் மைத்துனரான அகசுட்டசு சீசர் (Augustus Caesar) பேரரசராகி உரோமாபுரி இராச்சியத்தைப் பெயரள விலும் பேரரசாக்கினார். அவர் கிறித்தவ ஆண்டுத் தொடக்கத்தில் ஆண்டவர். அவர் காலத்திலிருந்து ஐந்து நூற்றாண்டுக் காலத்தில் அப்பேரரசு பெரும் புகழோடு திகழ்ந்தது. அது கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் இரண்டாகப் பிரிந்தது. மேலை உரோமானியப் பேரரசும், கீழை உரோமானியப்பேரரசும் கி.பி. 5-ஆம் நூற்றாண்டளவில் தம் வலுவை இழக்கத் தொடங்கி விட்டன. கீழை உரோமானியப் பேரரசு கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் துருக்கியரால் வென்று கொள்ளப் படும் வரையில் பேரரசாகத் திகழ்ந்தது.

உரோமானியப் பேரரசு ஒரு பேரரசு நிலை எய்தி மத்திய தரைக்கடலைச் சுற்றியுள்ள நாடுகளை வென்று ஓர் ஏகாதிபத்தியத்தை நிறுவுதற்கு அதற்கு உதவிய சாதனங்களும் சூழ்நிலைகளும் பல. உரோமானியருடைய நிலப்படை, கடற்படை என்பவை தவிர, அப்படைகள் விரைவில் பல இடங்களுக்கும் சென்று வர வசதியாகச் சாலைகள் அமைக்கும் கலையையும் பாலங்கள் கட்டும் பணியையும் அவர்கள் நன்றாக அறிந்திருந்தனர். அவர்களுடைய படைகள் பகைப்படைகளைவிட விரைவாக முன்னேறித் தாக்கும் வசதியை நன்கு பெற்றன. உரோமாபுரி ஏகாதிபத்தியத்தின் சிறப்புப் பண்புகள் பல உண்டு. அவற்றிற்கெல்லாம் அடிப்படையாக அமைவது, பேரரசு முழுவதும் உரோமாபுரி என்னும் அரசு மையத்தில் ஆக்கப்படும் சட்டங்களால் கட்டுப்பட வேண்டும் என்பது. அச்சட்டங்கள் உரோம் நகரத்தில் உரோமானியர்களுடைய முதியோர் அவை (Senate) என்று சொல்லப்படும் சட்ட மன்றத்தில் விதிக்கப்பட்டவை. ஆனால், அவை இசுபெயின், இங்கிலாந்து, கால் (பிரான்சு), கிரீசு, ஆசியா மைனர் ஆகிய நாடுகளிலும் எகிப்து முதலிய வட ஆப்பிரிக்க நாடுகளிலும் வாழும் மக்கள் யாவரையும் கட்டுப்படுத்தும். இவ்வாறு சட்டமியற்றும் உரிமை பெற்றிருத்தல் ஆதிபத்தியத்தின் கூறுகளுள் ஒன்று. பன்னாட்டுச் சமுதாயங்களும் வென்றடிப்படுத்தப்பட்டமையால் கீழ் நிலையிலுள்ள நாடுகள் (மாகாணங்கள் –மாநிலங்கள்) யாவற்றிற்கும் சேர்த்துச் சட்டமியற்றும் உரிமை ஏகாதிபத்திய மையத்திற்கு உண்டு.

இச்சட்டங்களால் குடிமை (Citizenship) என்னும் சட்டவியல் கருத்து உண்டாகி, உரோமானியக் ‘குடி(மை) உரிமைகள்’ பேரரசில் உள்ள எல்லாக் குடி மக்களுக்கும் உண்டு என்பதாயிற்று. இந்த ஒற்றுமை ஏகாதிபத்தியத்தை ஒன்றுபடுத்திற்று; அதற்கு வலு அளித்தது. இராணுவ, அரசியல் நிலையில் ஏகாதிபத்திய ஒற்றுமையை நிலைப்படுத்தப் பேரரசு அதிகாரிகள் உதவினர். உரோமானிய ஆட்சியில் மாநில (Provincial) ஏகாதிபத்தியப் பிரதிநிதிகளான துணை முதல்வர்கள் (Pro Consuls) என்போர் பேரரசின் ஒற்றுமையைப் பாதுகாத்தனர். அவர்கள் பிற்காலத்திலிருந்த ஆங்கில அரசப்பிரதிநிதிக்கு நிகராவர். இவற்றிற்கெல்லாம் மேலாக ஏகாதிபத்திய அலுவல்களுக்குப் பேரரசு மையத்தில் வழங்கும் மொழியே பயன்படுத்தப்படுவது ஒரு முக்கியமான ஏகாதிபத்திய மரபு. இக்கொள்கையின்படி உரோமானியப் பேரரசின் தலைநகரமான உரோமாபுரியில் பேசப்பட்ட இத்தாலிய மொழியே ஏகாதிபத்திய மொழியாயிற்று. இம்மொழியை இலத்தீனின் பிராகிருதம் எனலாம். ஆங்கில ஏகாதிபத்தியத்தில் கி.பி. 17-ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு ஆங்கில மொழி அந்நிலையை எய்தி விட்டமை கருதற்பாலது. ஆதலால், இராணுவக் கட்டுக்கோப்புத் தவிரப் பொதுச் சட்டங்கள், பொதுக் குடி உரிமைகள், பொது மொழி என்பன ஏகாதிபத்தியம் என்னும் தோல் போர்த்த என்புக் கூட்டினைப் பிணைக்கும் நரம்புகள், தசைகள், இரத்தக் குழாய்கள் போன்றவை எனலாம். இவ்வாறு பிணைக்கப்படுவதால், ஏகாதிபத்தியத்தின் மையத்திற்குப் புறம்பான பகுதிகளான மாநிலங்கள் யாவையும் தமது தனித்தன்மையை இழந்தும் மறந்தும் விடும் என்பதன்று. பேரரசு மையம் பலவீனமடையும்போது இவை தனித்துப் போக முயல்வது இயல்பு. இவ்வாறு தனித்துப் போகாமல் இருக்க இராணுவப் பலம் மிகுந்து காணப்படும்.

ஏகாதிபத்திய மையம் அதன் மாநிலங்களைப் பொருளாதார நிலையில் சுரண்டித்தான் பயன் அடைகிறது என ஏகாதிபத்தியத்தைப் பற்றி ஒரு பொதுவான கருத்து நிலவி வருகிறது. இது உண்மையே ஆயினும், அம்மாநிலங்கள் தன்னாட்சிப் பொறுப்பினின்றும் விடுபட்ட அரசியல் அல்லாத பிற பண்பாட்டுத் துறைகளில் முன்னேற அமைதியான வாய்ப்புப் பெறுதலையும், அம்மாநிலங்களைப் புறத்தார் தாக்குதல்களினின்றும் காப்பாற்றும் பொறுப்புணர்வு ஆட்சிப் பொறுப்பினையும், இராணுவச் செலவுகளையும் ஏகாதிபத்தியம் ஏற்றுக் கொள்வதையும் மறக்க இயலாது. இவ்வாறு ஏகாதிபத்தியம் தான் அடையும் பொருளாதாரம் முதலிய பலன்களுக்கு ஓரளவேனும் நிகராகச் சமுதாய அமைதி

யொன்றை அளித்தல் எல்லா ஏகாதிபத்தியங்களின் தன்மை என்று கூறமுடியாது. உரோமானியப் பேரரசும் ஆங்கிலப் பேரரசும் இவ்வாறு அமைதி நிலைமையை நிறுவியவையாகும். இவற்றுள் முந்திய தற்கு உரோமானிய அனுமதி (Pax Romana) என்றும் பிந்தியதற்குப் பிரிட்டானிய அனுமதி (Pax Britannica) என்றும் பெயர்.

முன்னோடி அல்லது 'மாதிரி' (Model) ஏகாதிபத்தியம் என்னும் முறையில் உரோமானியப் பேரரசு மேலே ஆராயப்பட்டது. உலக வரலாற்றில் பல ஏகாதிபத்தியப் பேரரசுகள் தோன்றின. இவை யாவுமே உரோமானியப் பேரரசு விதித்த அல்லது வழிகாட்டியாயிருந்த இலக்கணத்திற்கு இலக்கியங்களாக அமைந்தவை என்று கூற முடியாது. ஆயினும், ஒரு முக்கியமான சிறப்பை அப்பேரரசுகள் ஒத்திருந்ததால் அவற்றையும் ஏகாதிபத்திய வல்லரசுகள் என்று கூறுதலில் தவறொன்றுமிராது. இம்முக்கியமான சிறப்பாவது, பேரரசு மையமான தாயகம் (Mother Country) ஏகாதிபத்திய எல்லைக் குட்பட்ட எல்லா நிலையங்களிலும் தன் பண்பாட்டுக் கூறுபாடுகளுள் முக்கியமான சிலவற்றையேனும் பரப்ப வேண்டும் அல்லது பரப்ப முயற்சி செய்ய வேண்டும். இதனால்தான் உரோமானியப் பண்பாடு ஐரோப்பியப் பண்பாட்டின் அடிப்படையில் ஒன்றாகத் திகழ்வதைக் காணமுடிகிறது. இங்ஙனமே ஆங்கில ஏகாதிபத்தியமும் ஆங்கிலமொழி, பிரதிநிதித்துவ மக்களாட்சிக் கொள்கைகள், தொழிற் புரட்சியால் விளைந்த கருத்துப் புரட்சி முதலியவற்றை யாண்டும் பரப்பிற்று.

அடுத்தபடியாக, ஐரோப்பாவில் கி.பி. 9, 10–ஆம் நூற்றாண்டில் (சார்லிமேன் காலத்திலிருந்தோ அன்றி ஆட்டோ காலத்திலிருந்தோ) தொடங்கி கி.பி. 1806 வரை ஆட்சி செலுத்தி வந்த புனித உரோமானியப் பேரரசினைக் கருத வேண்டும். இது ஐரோப்பாவில் செருமானிய மொழி பேசும் ஆசுத்திரியாவில் மையம் கொண்டு, மத்திய ஐரோப்பியப் பெரும்பான்மைப் பகுதியின் மீது ஆதிக்கம் செலுத்திற்று. இதற்குப் பேரரசு என்னும் பெயர் பொருந்துமா என்பது ஒரு கேள்விக்குறி. ஆனால், இதனைப் பேரரசு என்று கூறுதல் வரலாற்று மரபாகிவிட்டது.

இதனையடுத்து ஐரோப்பாவில் சென்ற ஆயிரம் ஆண்டுக்கால அளவில் பல பேரரசுகள் தோன்றி மறைந்தவற்றைக் கருத வேண்டும். இவற்றுள் போர்பன் (Bourbon) – பிரெஞ்சு, உரோமனோவு (Romanov) – உருசிய, கேப்சுபர்கு (Habsburg) – ஆசுத்திரியா, கோகன்செல்லன் (Hohenzollern) – பிரசியா என்பன முக்கியமானவை. இவற்றுள் உருசியா ஐரோப்பாவின் கீழைப் பகுதி முழுவதிலும், வட ஆசியா முழுவதிலுமுள்ள மிகப்பரந்த பிரதேசத்தில், ஓர் ஏகாதிபத்திய வல்லரசினை உரோமனோவு அரசர்களான சார் (Czar) மன்னர்கள் காலத்திலேயே நிறுவிவிட்டது. அது சோவியத்து ஆட்சிக் காலத்திலும் தொடர்ந்தது.சிலர் சோவியத்து உருசியாவின் பேரரசினை ஏகாதிபத்தியம் என்று கூற ஒப்பமாட்டார்கள். ஆயினும் அதுவும் ஓர் ஏகாதிபத்தியமே. அங்கு மாறியுள்ளது ஆட்சி முறையும் ஆளுநர்களுமேயன்றிப் பிற நாட்டு மக்களை ஓர் ஏகாதிபத்திய மையத்தின் அரசியல் ஆதிக்கத்திற் குட்படுத்துதல் என்னும் அளவிற்கு அதற்கு ஏகாதிபத்தியத் தன்மை உண்டு. சோவியத்து அரசியல் சட்டத்தில் அப்பேரரசின் பகுதியினுக்கு அவ்வரசினின்றும் பிரிந்து செல்ல (To Secede) உரிமை வழங்கப்பட்டிருப்பினும், அவ்வுரிமையை நடைமுறைப்படுத்தும் வாய்ப்போ வன்மையோ அவை ஒன்றிற்குமில்லை என்பது தெளிவு.

வரலாற்றில் ஒரு தனிமனிதன் தனது இராணுவத் திறமையினால் தன் ஆட்சியை மிகவும் பரப்பிக் கொண்டு, அண்டை அயல் நாடுகளையெல்லாம் வென்று, பலதரப்பட்ட நாடுகளின் மக்களையும் தன் ஆட்சிக்குள் அடக்கிப் பெரும்பாலும் தனது இராணுவ வலுவாலேயே ஆளுதல் என்பதற்குப் பல எடுத்துக் காட்டுகள் காணலாம். இதற்குச் சிறந்த எடுத்துக் காட்டுகளாகச் செங்கிசுகான், தைமூர் என்போர் நிறுவிய பேரரசுகளைக் கூறலாம். அவை இராணுவ முறையில் வென்று நிறுவப்பட்டவையேயல்லாமல் வேறு எந்தப் பண்பாட்டு நோக்கமும் கொண்டவை யல்ல. தொடக்கத்தில் அந்த நோக்கங்கள் இல்லாவிடினும் பிறகு வரலாற்றுச் சூழல் வாயிலாக அந் நோக்கங்கள் பிறந்து மக்கள் அனுபவத்தின் பகுதியாகிவிட்டால் அவற்றையும் ஏகாதிபத்தியம் என்றே கூறலாம். ஆனால், ஒரு மனிதன் தன் இராணுவ பலத்தால் வென்று நிறுவிய பேரரசிற்கு ஏகாதிபத்தியப் பண்புகளும் அமைந்திருத்தலுக்கு இரண்டு முதன்மையான எடுத்துக் காட்டுகள் வருமாறு: கிரேக்க மாவீரரான அலெக்சாந்தர் பேரரசு – இப் பேரரசு உலகப் பொதுப் பண்பாடு ஒன்றை உருவாக்க வேண்டும் என்று அலெக்சாந்தர் விரும்பியதன் விளைவாதலால் இதற்கு ஒரு தனித்தன்மையுண்டு. அவ்வாறே கி.பி. 18–ஆம் நூற்றாண்டு இறுதியிலும் கி.பி. 19–ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்திலும் பிரெஞ்சுப் பேரரசராயிருந்த நெப்போலியன் நிறுவிய பிரெஞ்சுப் பேரரசு வரலாற்றில் சில நிரந்தரமான விளைவுகளுக்குக் காரணமாயிருந்தது. இதில் ஐரோப்பாவின் முக்கியமான பகுதிகள் அடங்கியிருந்

தன. அது பிரெஞ்சுப் புரட்சியின் சிறப்பான கருத்து களை ஐரோப்பா முழுவதிலும் பரப்பவும், படை மானியப் (Feudal) பண்புகளை வேரறுக்கவும், தேசியக் கொள்கைகளை உருவாக்கவும் பயன்பட்ட மையின் அதற்கும் ஏகாதிபத்தியக் கூறுகள் உண்டு.

இனி, கி.பி. 17-19 ஆகிய நூற்றாண்டுகளில் பல ஐரோப்பிய நாடுகள் பேரரசுகளை நிறுவின. அவை இசுபெயின், போர்ச்சுகல், பிரான்சு, நெதர்லாந்து, இத்தாலி, இங்கிலாந்து என்பன. அந்நாடுகளின் ஒரு பொதுத் தன்மை யாதெனில், அவற்றின் பெரும் பகுதிப் பேரரசுப் பிரதேசங்கள் கடல்கடந்து அமைந் தவை. அமெரிக்காக் கண்டம் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு மத்திய, தென் அமெரிக்கப் பகுதிகளில் இசு பானியப் பேரரசும், இந்தோனேசியாவில் தச்சுப் பேரரசும், தென்கிழக்கு ஆசியாவிலும் ஆப்பிரிக்கா விலும் பிரெஞ்சுப் பேரரசும், ஆப்பிரிக்காவில் இத் தாலியப் பேரரசும் போர்த்துகீசியப் பேரரசும், அமெரிக்கா (கனடா), ஆப்பிரிக்கா, ஆசுத்திரேலியா, நியூசிலாந்து, ஆசியாவின், பல பகுதிகள் ஆகியவற் றில் ஆங்கிலப் பேரரசும் நிறுவப்பெற்றன. இப் பேரரசுகள் கடலாதிக்கத்தில் சிறந்திருந்த ஆங்கி லப் பேரரசினைக் காட்டிலும் பெரிதாகவும் வன்மை யுடையதாகவும் திகழ்ந்தன. இந்த வகையில் இப்பேர ரசுகள் உரோமானியப் பேரரசு போல் விளங்கின. ஐரோப்பாவில் மக்கள் தொகைப் பெருக்கத்தாலும் பிற அரசியல், மத சம்பந்தமான காரணங்களா லும் பல ஐரோப்பியர்கள் வெளிநாடுகளில் குடி யேறினர். இக் குடியேற்றமும் ஏகாதிபத்தியமும் சில சமயம் சேர்ந்தாற்போல் நிகழ்ந்தன. ஆசுத்திரேலியா கனடாவில் குடியேற்றங்கள் ஏற்பட்டன. குடியேற் றம் இல்லாமல் ஏகாதிபத்தியம் மட்டும் நிகழ்ந்ததும் உண்டு. (எ-டு.) இந்தியா. இவ்வேகாதிபத்தியங்கள் உலகத்தின் மூலை முடுக்குகளில் எல்லாம் பரவிய தன்மை, உலகம் முழுவதும் ஐரோப்பியப் பண்பாடு பரவுதற்கு காரணமாயிருந்தது.

இந்திய வரலாற்றிலும் பல பேரரசுகள் பேசப் படுகின்றன. அவற்றுள் பெரும்பாலானவற்றிற்கு அகன்ற இராச்சியங்கள் (Expanded Kingdoms) என்பது பொருந்துமே தவிரப் பேரரசு, ஏகாதிபத்தியம் என் னும் சொற்கள் பொருந்தா. இதற்குச் சோழர் பேரர சும் விசயநகரப் பேரரசும் விலக்குகளாம். சோழர் பேரரசு கடல் கடந்த ஈழப் பகுதிகளை வென்று அடக்கித் தன் பண்பாட்டினை அங்குப் பரப்ப முயன் றது. விசயநகரம் தமிழகத்தில் ஏகாதிபத்திய ஆட்சி நடத்தி, இராணுவப் பலத்தால் நாட்டையாண்டு தெலுங்கு மொழியைப் பரப்பிற்று. மௌரிய, குப்த, அர்ச, இசுலாமியப் பேரரசு அகன்ற அரசுகளேயன்றி ஏகாதிபத்தியங்கள் ஆகா. ந.சு.

**ஏகாந்தராமையர்**: வீரசைவ சமயத்தைச் சார்ந்த அடியார்களுள் ஒருவர். இவரை 'அப்பாலூரி லிருந்த சிவனடியாராவார்' என்று ஆய்வாளர் குறிப் பிட்டுள்ளனர். இவர் நாடொறும் யோகம் புரிந்து வந்தாரென்றும், தாம் பெற்ற யோகசித்தியால் அங் ஙனம் யோகத்திருக்கையில் சிவபெருமானையும் சிவ னடியார்களையும் சந்தித்து மகிழ்வார் என்றும், அந் நிலையில் வீரசைவ சமயகுரவராகிய வசவரின் பெரு மையினைக் கேட்டறிந்து அவரோடு மிக்க அன்புடன் ஒழுகினார் என்றும் கூறப்படுகிறது. மேலும் ஒரு வாதில் ஈடுபட்ட போது, மன்னன் காணத் தம் தலையினை அரிந்து சிவத்தியானம் செய்யுமாறு செய் தார் என்றும் இவரைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது.
அ.மா.ப.

# பொருளடைவு



அக்குவினாசு, புனித தாமசு 781
அக்டோபர் புரட்சி 58
அகநானூறு 727
அகநோக்கு முறை 449
அகராதி உரைநடை 143
அங்காடி மதிப்பு 388
அங்காடி வகைகள் 384, 349
அட்டிலில்லாவின் வெற்றிகள் 603
அடிசு அபாபா 771
அடையாறு 28
அடைவு ஊக்கி 567
அடைவு ஊக்கிக் கோட்பாடு 567
அத்தையக உறைவிடம் 557
அதிர்ச்சி மருத்துவம் 403
அந்தோனி, ஆக்டேவியன் 178
அமெரிக்கப் பண்பாட்டுப் பகுதிகள் 238
அமைப்புநிலைக் கொள்கை 454
அயல்நாட்டுக் கடன் 352
அயோத்தி நவாபு 157
அரிசுடாட்டில் 185, 186, 331
அருண்டேல், ஜி.எஸ். 28
அல்தூசியசு 788
அலெக்சாந்தர், முதலாம் 51
அலெக்சாந்தர், இரண்டாம் 53
அவினாசிலிங்கம், தி.சு. 228
அறிவுக்கொள்கை 822
அறிவுத்திறன் சோதனைகள் 464
அனைத்து நாடுகள் சங்கம் 212
ஆக்கட்டு, சி.எப். 369
ஆக்கத்திறன் 437
ஆக்கத்திறன் சோதனைகள் 469
ஆங்கில அரசுரிமைப்போர் 309
ஆட்லர், ஆல்பிரடு 430
ஆதாரக் கல்வி 623
ஆபே அயாத்து 79
ஆர்லண்டோ 204
ஆர்வம், நாட்டம், மதிப்புச் சோதனைகள் 472
ஆளுடையபிள்ளையார் திருவுலா 286
ஆளுமை 437
ஆளுமைக் கணிப்பான்கள் 471
ஆளுமைச் சோதனைகள் 471
இக்கால உரை வகைகள் 137
இக்லூ 711
இசுடாலின் 61, 243
இசுடாலின்கிராடு வெற்றி 60
இசுலாவிக்கு இனக்குழுவினர் 36
இட்லர், அடால்பு 190, 246, 256
இட்லரின் இயக்கம் 247
இடப்பெயர்வுக்கான காரணிகள் 391
இணைப்புரை 138
இந்திய ஆட்சித் துறைப்பணி 347
இந்தியத் தரக் கட்டுப்பாடு நிறுவனம் 368
இந்தியாவில் உள்ளாட்சி முறை 377
இந்தியாவின் உள்நாட்டுக் கடன்கள் 354
இந்து சமயக் குடைவரைகள் 892
இமயமலையுச்சிகள் 907
இயற்கைத் தத்துவம் 831
இயைபுக் கோளாறு 401
இரகசியச் சமூகங்கள் 523
இரட்டை ஈர்ப்பு-தவிர்ப்பு உளப்போராட்டங்கள் 432
இரட்டைக் கூட்டு உடன்படிக்கை 250
இரவென்சுடின், இ.சி. 391
இராக்குவிசு 238
இராதா பர்னியர் 28
இருமுகப் போக்கு 401
இருவழிக் கட்டுப்பாட்டுரை 139
இல்பொருள் காட்சி 402
இல்லாரி, எட்மண்டு 908
இலடோகா ஏரி 35
இலத்தீன் மொழி 188
இலாக்கு, சான் 790
இலெனின் 58, 59, 243
இலெனின் அரசு நூலகம் 44
இளம்பூரணர் 2, 148
இளம் முன்னோடி இயக்கம் 43
இறுதிநிலை உற்பத்தித்திறன் பகுப்பாய்வு 505
இன்பதுன்பச் சமநோக்காளர் 231
இனஉறுப்பு உரை 137
இனமுறைச் சட்டம் 23
ஈர்ப்பு-ஈர்ப்பு உளப்போராட்டங்கள் 431
ஈர்ப்பு-தவிர்ப்பு உளப்போராட்டங்கள் 432
ஈரக உறைவிடம் 555
உக்ரேனியர் 36
உட்கிடையுரை 138
உடற்கூற்று உளவியல் 447
உடன்பாட்டின் வகைகள் 17
உடன்பாட்டுரை 136
உடன்பாடு 16
உடனுறை 399
உண்மை முதலீடு 361
உணர்வு மாற்றங்களின் பகுப்பாய்வு 429
உமா கேரளம் 400
உயர்நிலை உற்பத்தி அளவுகள் 516
உயர்நிலைக் கல்வி 624

உயூகோ குரோசியசு 987
உரிப்பொருள் 1
உரிமம் 3
உரிமை இழப்பு 3
உரிமை இறக்கம் 4
உரிமை இறக்க முறைகள் 4
உரிமை ஊதியம் 4
உரிமைகள் 4
உரிமைகள் சாசன உட்பிரிவுகள் 7, 8
உரிமைகள் சாசனம் 6
உரிமைகள் மகாசாசனம் 6
உரிமைகள் மசோதா 8
உரிமைத் தொகுப்பு 12
உரிமைத் தொடர்பான பொருண்மைகள் 14, 15
உரிமை மனு 13
உரிமை மாற்றம் 22
உரிமை மூலம் 14
உரிமையியல் சட்டம் 20
உரிமையியல் நடைமுறைச் சட்டத் தொகுப்பு 24
உரிமையியல் வழக்கு 25
உரிமை விரைவு 25
உருக்கு 26
உருக்குமணி கல்யாணம் 27
உருக்குமணிதேவி அருண்டேல் 27
உருக்குமாங்கத மகாராசன் திவ்விய சரித்திரம் 28
உருக்குமாங்கதன் 29
உருக்குமாங்கதன் சரித்திரம் 29
உருகுவே 29
உருச்சிதைத்தல் 32
உருசிய அரசியலமைப்பு 62
உருசிய இலக்கியம் 68
உருசிய-சப்பானியப் போர் 65
உருசியத் தத்துவம் 69
உருசிய-துருக்கிப் போர்கள் 64
உருசியப் பேரரசுத் தொடக்கம் 46
உருசிய மொழி 67
உருசிய வேளாண் வகுப்பு 66
உருசியா 33
உருசு இனம் 47
உருட்டு வண்ணம் 71
உருத்திரகோடிப் புலவர் 71
உருத்திரங்கண்ணனார், கடியலூர் 71
உருத்திரசன்மன் 72
உருத்திரதாமன், முதலாம் 72
உருத்திர பசுபதி நாயனார் 73
உருத்திரம் 73
உருத்திரமாதேவி 75
உருத்திரவர்மன் 75
உருத்திரனார் 76
உருத்திராட்சம் 76
உருது இலக்கியம் 78
உருதுமொழி 76
உருப்படி 81
உருப்படிப் பகுப்பாய்வு 81
உருபன்களின் உறுப்புகளின் உறவு அடிப்படை 86
உருபன்களின் வடிவ அடிப்படை 86
உருபன் வகைகள் 85
உருபனும் மாற்றுருபும் 89
உருபாரி 90
உருபுபுணர்ச்சி 90
உருபு மயக்கம் 91
உருபொலியன் எழுத்து 92
உருபொலியனியல் அமைப்பு 94
உருமண்ணுவா 95
உருமேனிய மொழி 95
உருமேனியா 93
உருவக் கந்தம் 103
உருவகம் 104
உருவப் ப்ஃறேர் இளஞ்சேட் சென்னி 105
உருவப்பள்ளிச் செப்பேடு 104
உருவ வழிபாடு 103
உருவாக்கப் பொருளியல் 104
உருவாண்டா 107
உருவிலா மாற்றம் 111
உருவிலா மாற்றுருபு 112
உரூசுவெல்ட்டு, எப்.டி. 112
உரூசுவெல்ட்டு, தியோடர் 116
உரூசோ அரசியற் கருத்துகள் 119, 120, 121
உரூசோ கல்விக்கொள்கை 123, 124
உரூசோ கல்வி நிறுவனம் 221
உரூடால்பு 125
உரூடால்பு ஏரி 126
உரூபர் 126
உரூபர்ட்சுலாந்து 127
உரூபர்ட்டு இளவரசர் 127
உரூபன்சு, சர் பீட்டர் பால் 128
உரூபாவதி 129
உரூர் 129
உரூர்க்கிப் பல்கலைக்கழகம் 130
உரூர்க்கேலா 131
உருவன்சோரி மலைத்தொடர் 131
உரேனசு 132
உரை 132
உரைக்கோவை 133
உரை கடிலகம் 134
உரைகள் 134
உரைச் சூத்திரம் 140

**உரைச் செய்யுள்** 140
**உரைத்தாம் என்றல்** 141
**உரைத்தும் என்றல்** 141
**உரைநடை** 141
*உரைப்பொருள்* 807, 808
**உரைபெறு கட்டுரை** 144
**உரையளவை** 145
**உரையறி நன்னூல்** 146
**உரையாசிரியர்கள்** 147
**உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்** 149
**உரையிற்கோடல்** 149
*உரை வகைகள்* 135
*உரைவடிவம்* 807, 808
**உரொக்கு இந்தியர்** 150
**உரொடீசிய மனிதன்** 150
**உரொடீசியா** 152
**உரோகிணி** 156
*உரோகில்கண்டு* 157
*உரோகில்லாக்கள்* 157
**உரோகில்லாப் போர்கள்** 156
**உரோகிலா** 158
**உரோசாக்கு எர்மன்** 158
**உரோசுடி** 158
**உரோசுபரி** 159
**உரோசெட்டாக் கல்வெட்டு** 159
**உரோட்சிப் பழங்குடி** 160
**உரோட்சு, செசில் சான்** 161
**உரோட்லர்** 162
**உரோடா** 163
**உரோடுத் தீவு** 163
**உரோடோகத்துக் கந்தரத்தனார்** 167
**உரோம்** 168
**உரோம்-பெர்லின்-தோக்கியோ அச்சு** 189
**உரோமசன்மர்** 191
**உரோமதத்தன்** 191
**உரோமபாதன்** 191
**உரோமமுனி** 192
**உரோமல், எர்வின்** 192
**உரோமனாவு மரபினர்** 193
**உரோமா** 194
*உரோமாபுரி* 173
*உரோமானிய உள்நாட்டுக் கலகம்* 175
*உரோமானியக் கட்டடக்கலை* 181
*உரோமானியச் சட்டம்* 185
*உரோமானியத் தத்துவம்* 186
*உரோமானியப் பேரரசு* 173, 179
*உரோமானியப் பொருளியல் கருத்துகள்* 184
*உரோமானியப்பாணிக் கட்டடக்கலை* 183
*உரோமானிய மொழிகள்* 187,188
**உரோமிலி, சர் சாமுவேல்** 195
**உரோலோ** 195
**உரோன் பண்பாடு** 195
**உல்சி, தாமசு** 195
**உல்சுடன், தாமசு** 198
**உல்பியன்** 198
**உல்பிரைட்டு, வால்ட்டர்** 200
**உல்பிளாசு** 201
**உல்பு, கிறிசுட்டியன்** 201
**உல்பு, சேம்சு** 202
**உல்புராம், வான் எசன்பர்கு** 203
**உல்பு, வர்சீனியா** 203
**உல்ம்** 205
**உல்ரிச்சு** 205
**உல்லாடன்** 206
**உல்லி, சர் இலியானர்டு** 208
**உலக்கைப் பாட்டு** 209
**உலக அஞ்சல் இணையம்** 209
*உலக அமெரிக்கர் தன்மை* 213
**உலக அமைதிக் கல்வி** 210
**உலக அரசாங்கம்** 212
**உலக அறவி** 212
*உலக இசுலாமியம்* 213
**உலக இடைகழி** 212
**உலக இந்தியத் தன்மை** 213
**உலக உடல்நல நிறுவனம்** 214
**உலக ஊழியனார், வீ.** 216
*உலகக் கண்டங்களில் மக்கள் தொகை* 266
**உலகக் கருவளக் கணக்கெடுப்பு** 216
**உலகக் கல்வித் திட்டமிடல் நிறுவனம்** 220
**உலகக் கல்வி நிறுவனம்** 221
**உலகக் கல்வி மதிப்பீட்டுக் கழகம்** 222
**உலகக் கல்வியடைவு மதிப்பீட்டுக் கழகம்** 223
**உலகக் கல்வியாய்வுக் கழகம்** 224
**உலகக் கல்வி வளர்ச்சிக் கழகம்** 225
**உலகச் சமுதாயம்** 262
*உலகச் செய்திப் பதிவு மையம்* 222
*உலகச் செருமானியர் பாங்கு* 213
**உலகத் தமிழ்ச் சங்கம்** 227
**உலகத் தமிழ் மாநாடுகள்** 228
*உலகத் தமிழ் மாநாடு, முதல்* 228
*உலகத் தமிழ் மாநாடு, இரண்டாம்* 228
*உலகத் தமிழ் மாநாடு, மூன்றாம்* 229
*உலகத் தமிழ் மாநாடு, நான்காம்* 229
*உலகத் தமிழ் மாநாடு, ஐந்தாம்* 227, 229
*உலகத் தமிழாராய்ச்சிக் கழகம்* 228
**உலக தருமினி** 229
**உலகந்தாதி** 230
*உலக நகரக் கோட்பாடுகள்* 231

உலக நகரத்தின் கூட்டம் 233
**உலக நகரம்** 231
உலக நாடுகளில் எழுத்தறிவு நிலை 915
**உலகநாத சுவாமி** 235
**உலகநாத பிள்ளை, எல்.** 235
**உலகநாத முனிவர்** 236
**உலக நீக்கிரோ சீர்திருத்தக் கழகம்** 236
**உலகநீதி** 237
**உலகப் பண்பாட்டுப் பகுதிகள்** 237
**உலகப் பல்கலைக் கழகங்கள் சங்கம்** 240
**உலகப் பொதுவுடைமை அமைப்பு** 241
உலகப் பொதுவுடைமை அமைப்பு, முதல் 241
உலகப் பொதுவுடைமை அமைப்பு, இரண்டாம் 241
உலகப் பொதுவுடைமை அமைப்பு, மூன்றாம் 243
உலகப் பொதுவுடைமை அமைப்பு, நான்காம் 245
**உலகப் பொருளாதார மந்தம்** 246
**உலகப்போர்** 249
உலகப்போர், முதலாம் 55, 249
உலகப்போர், இரண்டாம் 254
**உலகம்** 260
**உலக மக்கள்தொகை** 262
உலக மக்கள்தொகை வளர்ச்சி 264
**உலக மனப்பான்மைக் கல்வி** 268
**உலக மனித உரிமைப் பிரகடனம்** 271
**உலக மேம்பாட்டு ஆராய்ச்சி மையம்** 273
**உலக வங்கி** 274
உலக வங்கியின் அலுவலகங்கள் 275
உலக வங்கியின் கல்விப் பணி 276
உலக வங்கியின்கீழ் இயங்கும் நிறுவனங்கள் 276
உலக வங்கியின் வட்டார மையங்கள் 275
**உலக வயதுவந்தோர் கல்விக்கழகம்** 279
உலக விவகார ஆராய்ச்சிகள் 279
**உலக விவகார இந்தியக் கழகம்** 279
**உலகளாவிய வாக்குரிமை** 280
**உலகாயதம்** 282
**உலகுடைய நாயனார்** 283
**உலகுடைய நாயனார் கழிநெடில் ஆசிரிய விருத்தம்** 283
**உலமா (உலேமா)** 283
**உவவாக்கிழி** 284
**உலா** 285
**உலாமடல்** 287
உலுக்கிரிட்டியசு 186
உலுக்சோர் 288
**உலுசாகா** 288
**உலுசாயிப் பழங்குடி** 288
**உலுட்சென்சு** 290
**உலுட்டைட்டுக் கலவரங்கள்** 290
**உலுடன்டார்பு, எரிச்சு பிரடரிக்கு வில்கெல்ம்** 291
**உலுபே, எமிலி பிராங்கோயிசு** 292
**உலும்பினி** 195
**உலுமும்பா, பாட்ரிசு எமரி** 292
**உலுரிசுதான்** 292
**உலுவாங்கு பிரபாங்கு** 293
**உலுவாண்டா** 294
**உலுவார்** 294
**உலூகசு** 295
**உலூகுலசு உலூசியசு இலிசினசு** 295
**உலூசாசிபா** 295
**உலூசிங்டன் சார்லசு** 296
**உலூசிச் சுரங்கப்பாதை** 296
**உலூசிபர்** 296
**உலூசியசு** 297
**உலூத்துலி, ஆர்பர்டு சான்** 297
**உலூதர், மார்ட்டின்** 297
**உலூதியானா** 297
**உலூபம்பன் நுட்பம்** 298
**உலூபில்யானா** 298
**உலூபெக்கு** 298
உலூபெக்கு உடன்படிக்கை 299
**உலூமுத்தீன்** 299
உலூயி, முதலாம் 305
உலூயி, இரண்டாம் 304
உலூயி, மூன்றாம் 304
உலூயி, நான்காம் 304
உலூயி, ஐந்தாம் 304
உலூயி, ஆறாம் 304
உலூயி, ஏழாம் 305
**உலூயிசுபர்கு** 300
**உலூயி நெப்போலியன்** 300
**உலூயி பிலிப்பு** 303
**உலூயி பிலிப்பு, ஆர்லியன்சு பிரபு** 302
**உலூயி மன்னர்கள்** 303
உலூயி, பதினான்காம் 301
உலூயி, பதினைந்தாம் 311
உலூயி, பதினெட்டாம் 311
**உலூரியா நந்தன்கர்** 312
**உலூவார்** 313
**உலூனாவில்லி உடன்படிக்கை** 315
உலொரைன் பிரச்சினை 251
**உலோகச் செலாவணி** 315
**உலோகசாரங்க முனிவர்** 317
**உலோக பாலர்** 317
**உலோகாச்சாரியார்** 318
**உலோகார்னோ** 318
**உலோகியா, இராம் மனோகர்** 319
**உலோகும்–சோ–தாரோ** 319
**உலோங்காவால், அர்சந்து** 319

**உலோச்சனார்** 320
**உலோச்சு** 321
**உலோடி மரபினர்** 322
**உலோத்தால்** 322
**உலோதாப் பழங்குடி** 324
**உலோதிப் போர்** 325
**உலோபகு-டி-கொமரா** 326
**உலோபாமுத்திரை** 326
**உலோமாசு ரிசி** 326
**உலோயன்** 327
**உலோரன்சோ** 327
**உலோரென்சோ உலோட்டா** 327
**உலோவல் சோசபின் சா** 328
**உலோவி, இராபர்ட்டு ஆர்** 328
**உவகைக் கலுழ்ச்சி** 328
*உவம உருபுகள்* 329
**உவமப் போலி** 330
*உவமம்* 329
**உவமம்** 399
**உவமான சங்கிரகம்** 330
*உவமை அணி* 329
*உவமை அளவை* 330
**உவமைகள் 2-ஆம் பங்கு** 332
**உவமைச் சொல்லகராதி** 332
*உவமையின் வகைகள்* 331
**உவர்க்கண்ணூர்ப் புல்லங்கீரனார்** 332
**உவவனம்** 332
*உவாக்சாடூன்* 333
**உவாச்சீ** 333
**உழத்திப்பாட்டு** 333
**உழபுலவஞ்சி** 333
*உழவர் செயல்முறை எழுத்தறிவுத் திட்டம்* 624
**உழவர் செயல்முறைக் கல்வி** 334
**உழவர்திருநாள்** 335
*உழவர் மையங்கள்* 334
**உழவன்வென்றி** 335
**உழிஞை** 335
**உழிஞை மாலை** 336
**உழுது வித்திடுதல்** 336
**உழுந்தினைம் புலவர்** 337
**உழை** 337
**உழைக்கும் இனம்** 337
**உழைப்பாளர் குழாம்** 338
**உழைப்பாளர் மேலாண்மை** 339
*உழைப்பின் வகைகள்* 342
**உழைப்பு** 342
*உழைப்பு* 477
**உழைப்புச் செறிந்த தொழில்கள்** 343
**உழைப்பு மதிப்புக் கோட்பாடு** 343
**உள்துறை நடவடிக்கைகள் அமைச்சகம்** 346
**உள்நாட்டு அங்காடி** 348
**உள்நாட்டுக் கடன்** 351
*உள்நாட்டுக் கடன்களைத் திருப்பித் தரும் முறைகள்* 354
**உள்நாட்டுக் கொள்கை** 355
**உள்நாட்டுச் சேமிப்பு** 357
**உள்நாட்டுப் போர்** 359
**உள்நாட்டு முதலீடு** 360
**உள்நாட்டு வாணிகம்** 366
**உள்வட்டத் தொடர்** 369
**உள்ளடக்கப் பகுப்பாய்வு** 370
*உள்ளடக்கப் பகுப்பு* 370
**உள்ளடக்குநிலை மொழிகள்** 371
**உள்ளது நாற்பது** 372
**உள்ளந்தக் கரணம்** 372
**உள்ளம்** 372
**உள்ளமுடையான்** 375
**உள்ளமைப்பு** 375
**உள்ளாட்சி** 376
**உள்ளாட்சி நிதி** 381
*உள்ளாட்சி மன்றங்களின் வகைகள்* 377
**உள்ளாட்சி வரிகள்** 384
**உள்ளார்ந்த பண்பாடு** 384
**உள்ளார்ந்த மதிப்பீடு** 386
**உள்ளார்ந்த மதிப்பு** 387
**உள்ளிடப் பெயர்வு** 389
**உள்ளிவிழா** 393
**உள்வீடு-வெளியீடு ஆய்வு** 393
**உள்ளுணர்வு** 396
**உள்ளுறு புணர்ச்சி** 398
**உள்ளுறை** 396
**உள்ளுறைநலன்** 400
**உள்ளூர்ப் பரமேசுவர அய்யர்** 400
*உள அறுவை மருத்துவம்* 403
*உள இயக்கச் செயல்* 436
*உளச்சிதைவு* 438
**உளச்சிதைவு நோய்** 401
*உளச்சிதைவு வகைகள்* 402
*உளச்சோர்வின் குணங்கள்* 404
**உளச்சோர்வுக் கோளாறுகள்** 403
**உளத்திறன் குறைந்தோர் கல்வி** 406
**உளநலக் கல்வி** 409
*உளநலக் கோட்பாடுகள்* 414
*உளநலத் தத்துவம்* 410
**உளநலமற்றோர் இல்லம்** 411
**உளநலவியல்** 413
**உளநோய்** 438
*உளநோய் உளவியல்* 448

**உளநோய்ச்சமூகப்பணி** 415
**உளநோய் மருத்துவ இயல்** 419
**உளநோய் மருத்துவ மானிடவியல்** 425
உளப்பகுப்புக் கொள்கை 455
**உளப்பகுப்பு மருத்துவம்** 427
**உளப்படுத்தாத் தன்மைப் பன்மை** 431
உளப்போக்குத் தன்மைக் கோளாறு 401
உளப்போராட்டங்கள் 431
உளப்போராட்டங்களின் விளைவுகள் 432
**உளம்சார் உளவியல்** 431
**உளமுதுமையியல்** 436
**உளமொழியியல்** 439
**உளவழி ஒற்றுமை** 440
**உளவழித் தோற்றப் படிமலர்ச்சிக் கொள்கை** 441
**உளவழி நாடகம்** 442
**உளவாற்றல் குறைவு** 443
**உளவியல்** 443
உளவியல் கோட்பாடுகள் 454
**உளவியல்சார் இனக்குழுவியல்** 457
**உளவியல்சார் புள்ளியியல்** 458
**உளவியல்சார் மானிடவியல்** 460
உளவியல் பிரிவுகள் 449
உளவியல் முறைகள் 449
**உளவியல்வழிக் கற்பித்தல்** 462
**உளவியலார் ஆலோசனை** 462
**உளவியலார் நெறிமுறைகள்** 463
**உளவியற் சோதனைகள்** 464
**உற்சவ விளக்கம்** 472
**உற்பத்தி** 473
உற்பத்தி அமைப்பு 500
உற்பத்திக் கட்டுப்பாடு 502
உற்பத்திக் கடன் 489
உற்பத்திக் காரணிகள் 476
உற்பத்திக் காரணிச் செலவுகள் 480
உற்பத்திக் கோட்பாடு 496
உற்பத்திச் சார்பு 496
உற்பத்திச் சிக்கனங்கள் 486
உற்பத்திச் செலவுக் கோட்பாடு 483
உற்பத்திச் செலவு நிலைகள் 484
உற்பத்திச் செலவும் வரிநிலைப்பாடும் 483
உற்பத்திச் சமஅளவு வளைகோட்டுப் பகுப்பாய்வு 507
**உற்பத்திச் சமவிளைவு வளைகோடு** 490
**உற்பத்திச் சார்புநிலை** 496
உற்பத்தித் திட்டம் 502
**உற்பத்தித் திறனுக்கான கல்வி** 499
உற்பத்தித் தொழில் 500
உற்பத்திப் பொருள் பல்வகைமை 474
உற்பத்திப் பொருள் வேறுபடல் 475
**உற்பத்தி மிகை** 500
**உற்பத்தி மேலாண்மை** 500
உற்பத்தியற்ற கடன் 489
**உற்பத்தியாளர்** 504
உற்பத்தியாளர் சமநிலை 505, 512
உற்பத்தியாளர் பண்டம் 505
**உற்பத்தியும் அளிப்பும்** 510
உற்பத்தியும் நுகர்வும் 511
**உற்பத்தி வாய்ப்பு வளைகோடு** 513
**உற்பலாங்கி** 517
**உற்பவமாலை** 518
**உற்றுநோக்கல்** 518
உற்றுநோக்கல் முறை 450
**உறங்காப்புளி** 520
**உறங்கா வில்லிதாசர்** 520
**உறவிலிக் குழுக்கள்** 521
உறவுக் குழுக்கள் 528
உறவு நிலைகள் 524
**உறவு முறை** 523
உறவுமுறைச் சொற்கள் 525
உறவுமுறை நடத்தைக் கோலங்கள் 527
உறவுமுறையும் தகாப்புணர்ச்சியும் 530
**உறழ் கலிப்பா** 533
**உறழ்நிலை இலக்கணம்** 534
**உறித்தாபசன் கதை** 535
**உறியடித் திருநாள்** 535
**உறுத்துக் கட்டளை** 536
உறுத்துக்கட்டளை 22
**உறுதி** 536
**உறுதித் தேவைக் கோட்பாடு** 537
உறுதிநிலைக் கல்விக் கொள்கை 481
**உறுதிப்படுத்தல்** 538
**உறுதிப் பொருள் நான்கு** 540
**உறுதிமொழி** 540
**உறுப்பறை** 541
**உறுப்பி** 541
உறுப்பு 541
**உறுப்பு வழிபாடு** 542
உறுப்புவழி மூளைக்கோளாறுகள் 439
**உறுமி** 543
**உறுவை** 543
**உறைபனித்தேசம்** 543
**உறையனார்** 543
**உறையூர்** 543
**உறையூர் இளம்பொன் வாணிகன் சாத்தன்** 545
**உறையூர் இளம்பொன்வாணிகனார்** 545
**உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்** 546
**உறையூர்க் கதுவாய்ச் சாத்தனார்** 546
**உறையூர்க் காந்திமதி பிள்ளைத் தமிழ்** 546
**உறையூர்ச் சல்லியங் குமரனார்** 547

**உறையூர்ச் சிறுகந்தனார்** 547
**உறையூர்ப் பல்காயனார்** 547
**உறையூர்ப் புராணம்** 548
*உறையூர்ப் புலவர்கள்* 545
**உறையூர் மருத்துவன் தாமோதரனார்** 543
**உறையூர் முதுகண்ணன் சாத்தனார்** 549
**உறையூர் முதுகூத்தனார்** 549
**உறையூர் முதுகொற்றன்** 549
**உறைவிட அமைப்புகள்** 549
*உறைவிட வகைகள்* 550, 551, 552
**உன்கியர் இசுகேலெசி உடன்படிக்கை** 557
**உன்சூரி அபுல்காசிம் ஆசன்** 557
**உன்னகுரவயப் பாளையச் செப்பேடு** 558
**உன்னநிலை** 558
**உனசுகோ கல்வி நிறுவனம்** 559
**ஊ** 560
**ஊ – 2 தகராறு** 560
**ஊக்கத்தொகை** 561
**ஊக்கரின் கோட்பாடு** 564
**ஊக்குவித்தல்** 566
**ஊக்குவித்தல் கல்வி** 570
**ஊக்ளி** 572
**ஊக வாணிகம்** 572
**ஊகனட்டுகளின் கோட்பாடுகள்** 576
*ஊகனட்டுகளின் கோட்பாடுகள்* 784
**ஊகான்** 579
**ஊகி** 579
**ஊகி இந்தியர்** 580
**ஊகித்தல்** 581
*ஊகித்தலின் வகைகள்* 581
**ஊகோசுலேவியா** 582
**ஊச்சி இந்தியர்** 587
**ஊசல்** 587
**ஊசற் பருவம்** 588
**ஊசிமுறி** 589
**ஊசியென்** 590
**ஊஞ்சல் வனமென்னும் மொண்டிப்பாளையத்துத் தல மகத்துவம்** 590
**ஊட்ட உணவுச் சூழலமைப்பு** 590
**ஊட்டச்சத்துக் குறைவும் பஞ்சமும்** 593
**ஊட்டச்சத்துணவுக் கல்வி** 596
**ஊட்டன்,எர்னசுடு ஆல்பர்ட்டு** 598
**ஊட்டா** 599
**ஊட்டியார்** 601
**ஊடல்** 601
**ஊண்பித்தையார்** 602
**ஊணர்கன்** 602
**ஊத்துக்குழி** 604
**ஊதாண்டு** 605
*ஊதியம்* 505
**ஊதியம் வழங்கு சட்டம்** 606
**ஊதோணி** 607
**ஊப்ளி** 607
**ஊபாங்கி ஆறு** 608
**ஊமா இந்தியர்** 608
**ஊமைத்துரை** 608
**ஊயித்து** 609
**ஊர்** 609
**ஊர் கொலை** 613
**ஊர்ச்செரு** 613
**ஊர்த்துவ தாண்டவம்** 613
**ஊர்த்துவ மாயை** 614
**ஊர்த் தெய்வம்** 615
**ஊர்தி ஓட்டுநர் கல்வி** 616
**ஊர் நம்மு** 617
**ஊர்பி முகம்மது சமாலுத்தீன்** 617
**ஊர் மகமை** 617
**ஊர்மிளை** 618
**ஊர்வசி** 618
**ஊர் விருத்தம்** 618
**ஊர்வெண்பா** 619
**ஊரக்காரே இந்தியர்** 619
**ஊரகக்கடன்** 619
**ஊரகக் கல்வி** 623
*ஊரக உயர்கல்வி* 625
**ஊரகச் சமுதாயம்** 626
**ஊரகச் சமூகவியல்** 629
**ஊரகத் திருவிழாக்கள்** 632
**ஊரகம்** 636
**ஊரக வளர்ச்சித் திட்டம்** 636
**ஊரம்பலம்** 639
**ஊரல் மலைத் தொடர்** 639
*ஊரல் மலைத்தொடர்* 34
*ஊராட்சி* 380
**ஊராட்சி ஒன்றியங்கள்** 640
*ஊராட்சி ஒன்றியம்* 380
**ஊராளி** 545
**ஊரிப்பிடிசின் அரசியற் கொள்கைகள்** 646
**ஊரும் பேரும்** 648
**ஊல்யா நாவசுகு** 652
**ஊலான் ஊடே** 652
**ஊலான் பாட்டர்** 652
*ஊவர் ஆலோசனைக் குழுக்கள்* 653
**ஊவர் குழுக்கள்** 652
**ஊவரின் வரலாறு** 652
**ஊழ்வலிக் கோட்பாடு** 653
**ஊழல் அரசியல்** 654
**ஊழல் தடுப்புச் சட்டம்** 656

ஊழி 656
ஊழித்தீ 656
ஊற்றுமலைத் தனிப்பாடல் திரட்டு 657
ஊற்றுமலை மருதப்பன் 658
ஊறல் 659
ஊறு செய்யாமை 659
ஊன்பொதி பசுங்குடையார் 660
ஊனக்கண் 661
ஊனமுற்றோர் கல்வி 662
ஊனிடைட்சுப் பண்பாடு 665
எ 666
எக்காலக்கண்ணி 667
எக்குவானா 668
எக்கூய் இந்தியர் 669
எக்சீட்டர் 670
எகல் 670
எகிப்திய அருங்காட்சியகம் 697
எகிப்தியக் கலை 689
எகிப்தின் நன்கொடை 686
எகிப்திய நாகரிகம் 680
எகிப்திய மொழி 695
எகிப்து 675
எங்கல்சு 699
எங்கலின் விதி 702
எங்கன் வான் போம் பாவெர்க்கு 704
எச்சதாரர்கள் 705
எச்சதாரர்களும் சொத்துரிமை இறக்கமும் 705
எச்சரிக்கையுணர்வு 437
எச்சவினை 705
எசன் 706
எசிடியசு கொலன்னா 707
எசுக்கிமோக்கள் 709
எசுகுவாலின் 715
எசுத்தோனிய மொழி 715
எசுபராண்டோ 716
எசுர்வேதம் 74
எசெக்சு 717
எஞ்சிய ஆதாரங்கள் 717
எஞ்சுநர் உரிமை 719
எட்கர் ஆலன் போ 720
எட்டக்கரம் 721
எட்டயபுரம் 722
எட்டாம் திருமுறை 722
எட்டுக்குடிப் பிரபந்தங்கள் 724
எட்டுத்தொகை 725
எட்டுமூர்த்தி 728
எட்டெட்டந்தாதி 728
எட்ணா 728
எட்மண்டன் 729
எட்மண்டு இசுபென்சர் 729
எட்மண்டு காசு 730
எட்மண்டு பர்க்கு 731
எட்மண்டு பிளண்டன் 732
எட்ரசுக்கர் 733
எட்வர்ட்சு, சோனாதன் 737
எட்வர்டு, இலவத்து 738
எட்வர்டு, இலியர் 739
எட்வர்டு ஏரி 739
எட்வர்டு கிபன் வேக்பீல்டு 739
எட்வர்டு கோக்கு சர் 741
எட்வர்டு சபீர் 745
எட்வர்டு, தியாகி 747
எட்வர்டு, பக்தசீலர் 747
எட்வர்டு, பிட்செரால்டு 746
எட்வர்டு புல்வர் லிட்டன் பிரபு 746
எட்வர்டு மன்னர்கள் 747
எட்வர்டு, முதலாம் 748
எட்வர்டு, இரண்டாம் 749
எட்வர்டு, மூன்றாம் 750
எட்வர்டு, நான்காம் 751
எட்வர்டு, ஐந்தாம் 751
எட்வர்டு, ஆறாம் 751
எட்வர்டு, ஏழாம் 752
எட்வர்டு, எட்டாம் 753
எட்வின் ஆர்னால்டு, சர் 753
எட்வின் சாட்விக்கு 754
எடின்பரோ 755
எடின்பரோப் பல்கலைக்கழகம் 755
எடுகோள் அமைத்தல் 756
எடுத்துக்காட்டாய்வுமுறை 756
எடைகள், அளவைசார் குற்றங்கள் 760
எண்குணங்கள் 760
எண்டபீ 761
எண்டிமியன் 761
எண்ணறிவுச் சிந்தனை 761
எண்ணாயிரம் 763
எண்ணுப்பெயர் 763
எண்ணுவண்ணம் 764
எண்ணெடுப்புத் தொகுப்பளவை 764
எண்ணெய் ஏற்றுமதி நிறுவனம் 765
எண்ணெய்நெருக்கடி 766
எண்ணெய் வளங்கள் 766
எண்பேராயம் 768
எண்வகை மணம் 769
எண்வகை மாலை 777
எத்தியோப்பிய மொழிகள் 777
எத்தியோப்பியா 771
எதிர்க்கும் உரிமை 780

எதிர்காலச் சொத்துகள் 791
எதிர்கொள்பாடி 792
எதிர்நிலை உடைமை (அ) எதிர் அனுபோகம் 793
எதிர்நிலை உரை 793
எதிர்நிலை வழக்கு 794
எதிர்நோக்கு இறங்குரிமை 794
எதிர்ப்பின்றிக் கீழ்ப்படிதற் கோட்பாடு 796
எதிர்ப்புநிலைப் பகுப்பாய்வு 429
எதிர்ப்பு மனப்பான்மை 803
எதிர்படுகுழு 795
எதிர் பண்பாடு 804
எதிர்பார்ப்பு அட்டவணைகள் 804
எதிர்பாரா விளைவு 806
எதிர்மறை உரை 136, 138
எதிர்மறைக் குறைஉரை 807
எதிர்மறைச் சிக்கல் 807
எதிர்மறை வருமானவரி 808
எதிர்வழக்குரை 809
எதிராச விம்சதி 810
எதிரிடைப் பரிமாற்றம் 811
எதிரிலாப் பெருமாள் 812
எதிரெதிராணை 574
எதிரொலிச் சொற்கள் 813
எதீந்திரப் பிரணவப் பிரபாவம் 814
எதுகை 815
எதேச்சாதிகாரத் தலைமை 816
எந்திரமயமாக்கல் 818
எந்திர மூலதனம் 821
எந்நாட்கண்ணி 821
எப்பிக்கியூரசு 822
எப்பைரசு 822
எபிக்டெட்டசு 824
எபிங்காசு, எர்மன் 824
எபிடோரசு 824
எபியால்டெசு 825
எபிரேயர்கள் 825
எபிரேயம் 829
எபீசசு 830
எம்பார் 830
எம்பிடாக்கிளிசு 831
எம்பெருமானார் 831
எம்மா 831
எமர்சன், இரால்பு வால்டோ 832
எமனாப் பழங்குடி 834
எமனோ 834
எமிலி 835
எமிலிசோலோ 836
எமீலியா 837
எய்லா செபேல் மாநாடு 837
எயிற்பட்டினம் 838
எயிற்றியனார் 838
எயினந்தை மகனார் 838
எயினந்தையார் 838
எயினன் 839
எர்கோவிட்சு, மெல்வில்லி சீன் 839
எர்சுபர்கு 839
எர்டர், சோகன் காட்பிரைடு வான் 841
எர்ணாகுளம் 842
எர்பர்ட்டு, பி. சோ. 843
எர்மோந்திசு 843
எர்மோ போலிசு மக்னா 844
எர்னசுட்டு எமிங்வே 844
எர்னசுட்டு பெவின் 846
எரடோட்டசு 847
எராக்கிளிட்டசு 850
எராக்கிளியசு 851
எராக்கிளியோபோலிசு 852
எராசுமசு, தெசிதேரியசு 853
எராடு-தோமர் படிவம் 853
எரிக்சன் 856
எரிட்ரியா 857
எரிபொருள் நெருக்கடி 857
எரிமலைத் தீவுகள் 859
எரிவான் 859
எருக்கத்தம்புலியூர் 859
எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார் 859
எருகுலர் 860
எருசலேம் 862
எருமை மறம் 865
எருமை முல்லைத் தீவு 865
எருமையூரன் 865
எருமை வெளியனார் 866
எருமை வெளியனார் மகனார் கடலனார் 866
எரோடோடசு 680
எல் சால்வடார் 867
எல்சிங்கி 869
எல்சின் சலவைக் கற்சிற்பங்கள் 870
எல்சின் பிரபு 873
எல்சின், முதலாம் 871
எல்சுமிர் 873
எல்டன் மேயோ 873
எல்பா 875
எல்பின்சுடன் ஆய்வறிக்கை 875
எல்பின்சுடன் மவுண்டு இசுடுவர்ட்டு 876
எல்பே ஆறு 877
எல்ரூப்பு, காரல் அடால்பு 878
எல்லப்ப நயினார் 878
எல்லம்மன் 879

**எல்லம்பரோ** 880
**எல்லிசுத்தீவு** 881
**எல்லீசர்** 882
**எல்லை ஆறுகள்** 882
**எல்லைக்கருப்பன்** 883
**எல்லைகள்** 883
எல்லைசார் பண்பாடு 885
**எல்லைசார் மக்கள்** 884
**எல்லைப்பிடாரி** 885
**எல்லையம்மன்** 886
**எல்லையோரக் கடல்** 886
**எல்லோர்க்கும் தொடக்கக் கல்வி** 887
**எல்லோரா** 889
**எல்வெசியசு, கிளாடு ஆட்ரியம்** 896
**எலிசபெத்து, பேரட்டு பிரௌனிங்கு** 897
**எலிபண்டைன்** 899
**எலிபெண்டா** 899
**எலியட்டு, சார்சு** 902
**எலியட்டு, டி.எஸ்.** 904
**எலியட்டு துரை கட்டியம்** 905
**எலியோபோலிசு** 906
**எலும்பளவையியல்** 906
**எவ்வி** 906
**எவரெசுட்டு ஆய்வு** 907
**எவரெசுட்டு மலையுச்சி** 907
எவரெட்டு, எசு.லீ. 391
**எழினி** 909
**எழுகூற்றிருக்கை** 910
எழுச்சிக் கோளாறுகள் 439
**எழுத்தர் பணிநாட்டச் சோதனை** 913
எழுத்தறிவிக்கும் முறைகள் 914
**எழுத்தறிவின்மை** 915
எழுத்தறிவின்மை ஒழிப்புத் திட்டங்கள் 918
**எழுத்தறிவு** 913
எழுத்தறிவுத் திட்டங்கள் 914
**எழுத்தன்** 919
எழுத்தாக்கக் கொள்கை 929
**எழுத்தாளர் பட்டறை** 920
**எழுத்து** 923
**எழுத்துக் கூட்டல்** 930
எழுத்துப் பெயர்ப்பு 932
**எழுத்துவழக்குக் கிளைமொழி** 935
**எழுத்தொலியியல்** 936
**எழுதப்பட்ட, எழுதப்படாத அரசியலமைப்புகள்** 938
**எழுதுதல்** 940
**எழுநிலைமாடம்** 944
**எழுநூற்று மங்கலம்** 946
**எழும்பூர்** 947
எழுவகைப் பருவ மகளிர் 947
**எழுவகை மதம்** 948
எழுவாய் அற்ற உரை 137
எழுவாய்-பயனிலை உரை 137
**எழுஉப்பன்றி நாகன் குமரனார்** 948
**எளிமையாக்கம்** 949
**எளிய தொடர்புப் போக்குப் படிவம்** 950
**எளியோர் வேலை விடுதி** 954
**எறிஈட்டி** 955
**எறிச்சலூர் மலாடனார்** 956
**எறிபத்த நாயனார்** 957
**எறும்பியூர்** 958
**என்பீல்டு** 958
**என்வர் பாட்சா** 958
**என்றி அயர்ட்டன்** 960
**என்றிமன்னர்கள்** 961
**என்றி, மீகான்** 970
என்றி, முதலாம் 6, 961, 966
என்றி, இரண்டாம் 962, 967
என்றி, மூன்றாம் 962, 967
என்றி, நான்காம் 963, 968
என்றி, ஐந்தாம் 963
என்றி, ஆறாம் 964
என்றி, ஏழாம் 965
என்றி, எட்டாம் 965
**என்னயினாப் புலவர்** 971
**எனமாமோ** 971
**ஏ** 974
**ஏகக்குடும்பம்** 974
**ஏகநாதர்** 974
**ஏகபாத நிகண்டு** 975
**ஏகம்பவாண முதலியார்** 975
**ஏகம்பவாணன் மனைவி** 976
**ஏகாதச ருத்திரர்** 977
**ஏகாதசி** 977
**ஏகாதசிப் புராணம்** 978
**ஏகாதிபத்தியங்கள்** 979
**ஏகாந்தராமையர்** 982
ஏரல் – காசுப்பிய நிலம் 34
ஐக்கிய நாடுகள் அவை 212
ஐங்குறுநூறு 726
ஐந்தாம் திட்டங்களுக்கான நிதி வளங்கள் 357
ஐரோப்பியச் சமநிலைக் கோட்பாடு 701
ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டமைப்பு 212
ஐவான் 48
ஒத்தநிலை உரை 139
ஒப்பந்த உரிமை 5
ஒப்பந்தச் சட்டம் 22
ஒப்பந்தம் 17
ஒப்பந்தவியலின் வளர்ச்சி 19

ஒப்புமுறை உளவியல் 456
ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் 637
ஒருங்கிணைந்த கல்வித் திட்டம் 664
ஒற்றையுரை 137
ஔத்திரி தீக்கை 230
கடன் ஒழிப்புத் திட்டங்கள் 621
கடன் வகைகள் 489
கடிகக் குணகம் 81, 82, 83
கடிபோலி 76
கடைகாப்பாளர் 770
கதேகார் 156
கரணத்தியலவர் 769
கரும விதிகள் 769
கல்வி உளவியல் 448
கல்வியுரிமை 5
கலாட்சேத்திரம் 28
கலித்தொகை 727
கவனக்கோளாறு 401
கற்பனை மனவாட்டம் 438
கற்றல் 437
கனவு விளக்கமுறை 428
காக்கசசு மலைத்தொடர் 34
காசுப்பியன் கடல் 35
காண்டு, இம்மானுவல் 674
காதரீன் 51
காப்பு-தக்லசு ஆய்வு 492
காம்பியா 152
கார்பச்சாவு, மிகேயில் 62
கால்டுவெல், இராபர்ட்டு 431
கால்வின் கோட்பாடு 799
கால்வின், சான் 576
கால்வினிய நெறி 783
கிர்நார் கல்வெட்டு 72, 73, 76
கிரிசுப்பசு 232
கிரிமியப் போர் 52
கிரீன், டி.எச். 674
கிழக்காப்பிரிக்க ஒன்றியம் 773
கிறித்தவமும் உலகநகரக் கருத்தும் 233
கீமியாயெச ஆதத்து 78
கீவின் எழுச்சி 47
கீழை ஊணக்கூட்டத்தினர் 603
கீனிசியப் பொருளியலார் 351
குத்தகை 3, 4
குருதி உறவு 524
குரோசியசு 788
குழந்தை உளநோய் மருத்துவ இயல் 422
குழந்தை உளவியல் 456
குறுந்தொகை 726
குறையுரை 136
கூட்டுரை 137, 138
கூலி 481
கூலிட்சு, கால்வின் 236
கூலியின் இருப்புவிதி 481
கென்னத்து கவுண்டா 153
கைக்கூலி 656
கைலாசநாதர் கோயில் 893
கொலோசியம் 170
கோத்தாரி குழுவின் பரிந்துரைகள் 499
கோமிண்டன் 244
கோல்ட்சு, எம். 446
சட்டச் செயல்கள் 16
சமசெலவுக் கோடுகள் 507
சமநிலைப் புரட்சி 245
சமயத் தீக்கை 230
சமவருவாய்க் கோடுகள் 516
சமூக உளநோய் மருத்துவ இயல் 424
சமூக உளவியல் 446, 457
சமூகக் கல்வி 624
சமூகக் குழு உளநோய் மருத்துவ இயல் 424
சாம்சுகி, நோம் 439
சார்பற்ற உரை 135
சார்புரை 135
சார் மன்னர்கள் 53, 54
சால்மண்டு 16
சாலமன் வழியினர் ஆட்சி 774
சிசரோ, மார்க்கசு துலியசு 186
சிம்பாப்வே 154
சிவஞானமுனிவர் 148
சிறியோர் அக்டோபர் இயக்கம் 43
சீசர், அகசுடசு 178
சீசர், சூலியசு 176
சுங்கு, காரல் 430
சுட்டு 399
சுதந்திர உரிமை 5
செயல்நிலைக் கொள்கை 455
செயலுறுத்தும் கட்டளை 536
செனக்கா 187
சேம்சு, முதலாம் 802
சேன்சிசின் கொள்கை இயக்கம் 309
சைபீரியச் சமவெளி 34
சைபீரியப் பெருவழிப்பாதை 41
சொத்துரிமை 5
சொத்துரிமை மாற்றச் சட்டம் 22
சோமசுந்தர பாரதியார், ச. 2
சோலோ மனிதன் 151, 152
சோவியத்து ஒன்றியம் 33
ஞானவதித் தீக்கை 230
தக்கணி உருது 77

தங்கஉலோகத் திட்டம் 316
தங்கச் செலாவணி முறை 316
தடையுறுத்துக் கட்டளை 536
தண்டம் விதிப்பு 606
தந்தையக உறைவிடம் 553
தமிழ் எழுத்தின் வளர்ச்சி 924
தமிழ் எழுத்துகள் 922
தமிழ் வளர்ச்சிக் கழகம் 228
தல்மிடிக் காலம் 829
தவிர்ப்பு உறவுமுறை 530
தவிர்ப்பு – தவிர்ப்பு உளப்போராட்டங்கள் 432
தழுவாப் பிரிவுரை 139
தழுவும் பிரிவுரை 139
தற்காலிக உறுத்துக் கட்டளை 536
தற்சிந்தனை 401
தனியார் கடன் 351
தனியார், பொதுத்துறை முதலீடுகள் 361
தனியாள் வரலாற்றுமுறை 452
தனியுரை 137
தாம்சன், டபுள்யு. எசு. 263
தாயக உறைவிடம் 553
தார்தார்களின் படையெடுப்பு 47
தாவுத்கான் 156
திசம்பர்வாதிகள் 51
திட்டமிட்ட உள்நாட்டுப்போர் 359
திட்டமிடா உள்நாட்டுப்போர் 359, 360
திணைகள் 1
திரிபுக்காட்சி 402
திரிபுணர்வு 402
திருக்கைலாய ஞான உலா 286
திறந்த அங்காடி நடவடிக்கை 351
தீக்கை 229
தீக்கைகளின் வகைகள் 229
தீங்கியற் சட்டம் 23
துபாமரோசு இயக்கம் 30
துருக்கியர் 36
துவினியர் 36
தைபர் ஆறு 168
தைர்கானல் 9
தென் உரொடீசியா 153
தென்சிங்கு 908
தேசிய வயதுவந்தோர் கல்வித் திட்டம் 624
தேசியா 98
தொகுப்புரைகள் 135
தொடக்கக் கல்வி 623
தொடர் இயக்க இடப்பெயர்வு 390
தொடர்புரைகள் 137, 138
தொல்காப்பியம் 2
தொல்காப்பியர் 923
தொழில்கற்கும் திறன் சோதனைகள் 470
தொன்மைப் பொருளியலார் 351
தோகிரி மொழி 814
நக்கீரர் 148
நகரத்தின் சட்டம் 233
நச்சினார்க்கினியர் 148
நடத்தைக் கொள்கை 455
நடைமுறை உளவியல் 457
நத்தானியேல் வார்டு 12
நமச்சிவாயர் 230
நற்றிணை 725
நன்னூலாசிரிய விருத்தம் 146
நன்னூலார் 141
நாட்டுப்புறச் செயல்முறைக் கல்வித் திட்டம் 334
நாணயச் செலாவணி 316
நிக்கோலசு, முதலாம் 52
நிக்கோலசு, இரண்டாம் 54
நிதிக்கொள்கையின் நோக்கங்களை நிறைவேற்றும் கடன் 352
நிதி முதலீடு 361
நிருவாண தீக்கை 230
நிலையான உறுத்துக் கட்டளை 536
நிறையுரை 136
நினைத்தல் தீக்கை 230
நினைவாற்றல் 437
நுகர்வோர் எச்சம் 388
நுகர்வோர் சமநிலை 512
நுட்ப வேறுபாட்டு இடப்பெயர்வு 390
நெறிபிறழ் உளவியல் 456
நேர்கோட்டு ஓரியல்பு 497
நோக்கக் கொள்கை 455
நோய்க் காரணவியல் 421
பகுப்பு உள மருத்துவம் 430
பகுப்புரைகள் 135
பஞ்சாபு ஒப்பந்தம் 320
பண்டைத் தமிழ் எழுத்து 943
பண்டைய உரை வகைகள் 135
பணவீக்கமும் பொதுக்கடன் நிருவாகமும் 353
பதிலீடு 480
பதிற்றுப் பத்து 729
பரிசோதனை முறை 451
பரிபாடல் 727
பல்நோக்கு வயதுவந்தோர் கல்வி மையங்கள் 624
பள்ளிசாராக் கல்வி 624
பன்னாட்டு நாணய நிதியமைப்பு 275
பன்னாட்டு நிதிக் கழகம் 274
பன்னாட்டுப் பணவாக்க நெருக்கடி 247
பன்னாட்டு வளர்ச்சி நிறுவனம் 274
பாசுட்டியன், அடால்பு 440

பாலகன் பிரச்சினை 250
பால்வாடிகள் 623
பித்துவெறி எதிர்வினைகள் 438
பியாசே, சீன் 222
பியூனிச்சுப் போர்கள் 175
பிரசுனேவு, இலேனிட்டு 61, 62
பிரமஞான சபை 28
பிரமிடுகள் 690, 691
பிராய்டு, சிக்மண்டு 427, 807, 856
பிரிட்டன் உட்சு மாநாடு 274
பிரித்தானியக் கலைக் களஞ்சியம் 755
பிரிநிலை உரை 136
பிழைப்பு மட்டக் கூலிக் கோட்பாடு 346
பிளீபியர் 174
பின்னோ-உக்ரிக்கு மக்கள் 36
புசுண்டர் 192
புணர்ச்சி 92, 93
புணர்ச்சி வகைகள் 92, 93
புத்தமதக் குடைவரைகள் 890
புத்தர் பிறப்பிடம் 292
புதிய பொருளாதாரக் கொள்கை 248
புது உறைவிடம் 553, 556
புருட்டசு 178
புளும்பீல்டு 369
புளூரி 311
புறநானூறு 728
புனித தாமசு சட்டம் 783
பெட்ரீசியர் 174
பெர்க்சான், என்றி 397
பெர்ரோ, சே. ஏ. 263
பெனிடிக்கு, உருத்து 461
பைக்கால் ஏரி 35
பைசுல்லாகான் 157
பொது உளவியல் 456
பொதுக்கடன் 351
பொதுக்கடன் நிருவாகம் 352
பொருள் கட்டுப்பாடு 502
பொனுமிடோபிரீ 143
போல்சுவிக்குகள் 54, 58
மக்கள் தொகை அடர்த்தி 267
மக்கள் தொகைப் பெருக்கத்தின் விளைவுகள் 267
மகாபீட்டர் 49
மனத்திட்பக் கோளாறு 401
மனித உரிமைகள் 5
மனித வளர்ச்சி உளவியல் 448
மாமனக உறைவிடம் 553, 555
மார்க்கசு அரிலியசு 187
மார்க்சியத் தத்துவம் 69
மார்க்சு, காரல் 69, 345, 674, 700
மாவட்ட வளர்ச்சி மன்றம் 380
மாற்று உருவாக்கம் இறுநிதிலை விதிதம் 514
மான்மவுத்து 9
மில்டன், சான் 789
மின்னசோட்டா எழுத்தர்பணிச் சோதனை 913
மீடு, மார்கரெட்டு 461
முக்கூட்டு இணைப்பு 55
முக்கூட்டு உடன்படிக்கை 250
முசோலினி 256
முதல் உரிமை 14
முதலாம் என்றியின் உரிமைகள் சாசனம் 6
முதலீட்டு வரையறை 363
முழுநிலைக் காட்சிக் கொள்கை 456
முன்னறிவு 437
மூலதனம் 478
மூவருலா 286
மெய்ந்நிலை இடப்பெயர்வு 389
மென்கரின், காரல் 704
மென்சுவிக்குகள் 54
மெனலிக்கு, இரண்டாம் 775
மேற்கத்திய ஊணர்கள் 602
மொராக்கோப் பிரச்சினை 250
யாகூத்துகள் 39
யாகோபின் அறை 204
யோகதீக்கை 230
யோகன்னசு, நான்காம் 775
வட்டி 481
வயது அடிப்படைக் குழுக்கள் 522
வரன்சியர்கள் 47
வரிநிலைப்பாடு 485
வருக்கங்கள் 701
வருக்கப்போர் 701
வலிதக்னி 79
வாய்ப்புச் செலவு 483
வாரம் 481
வாரன் ஏசுடிங்சு 157
வாழ்க்கைக் கல்வி 625
வாழ்க்கைத் துணுக்கு முறை 450
வாழ்வுரிமை 5
விசுலர், கிளார்க்கு 237, 885
விசேட தீக்கை 230
வில்சன், உட்ரோ 212
விளாதிமீர் 47
வினாவரிசை முறை 452
வெள்ளை ஊணர்கள் 603
வெளிக்கடற் பயணம் 204
வெளிநாட்டு முதலீடு 362
வெளியன் தித்தன் 544
வெளிவட்டத் தொடர் 369
வெறுப்புக்கோட்பாட்டாளர் 231
வேற்றுமை முறை 453
வேறுபடுத்தும் குணகம் 81, 82, 83

# கலைச்சொற் பட்டியல்

## தமிழ் - ஆங்கிலம்

அகமணம் ... Endogamy
அகவய அணுகுமுறை ... Subjective Approach
அளவையியல் ... Logic
அளிப்பு ... Supply
அறவியல் ... Ethics
அறிஞர் புடைபெயர்ச்சி ... Brain Drain
அறிதிறன் ... Cognition
அறிவாராய்ச்சியியல் ... Epistemology
அறிவுமுதற் கொள்கை ... Rationalism
அறிவுரைகூறல் ... Counselling
ஆக்கத்திறன் ... Creativity
ஆட்சிவேண்டாக் கொள்கை ... Anarchism
ஆவியுலகக் கோட்பாடு ... Animism
ஆழ்நிலைக் கொள்கை ... Transcendentalism
ஆளுமை ... Personality
இயல்திட்ட வாதம் ... Teleology
இரட்டை உலோகச் செலாவணி ... Bimetalism
இல்பொருள் காட்சி ... Hallucination
இறைமை ... Sovereignty
இன்பக் கோட்பாடு ... Epicureanism
இன்பதுன்பச் சமநோக்குக் கோட்பாடு ... Stoicism
இனக்குழுவியல் ... Ethnography
இனம் ... Race
உட்குழு மணவுறவு ... Inbreeding
உட்பண்பாடு ... Subculture
உடலியங்கியல் ... Physiology
உயர்குடியாட்சி ... Aristocracy
உயிர்சார் பண்பாடு ... Bioculture
உயிரணு ... Cell
உயிரி ... Organism
உரசொலி ... Fricative
உரிமைக் கட்டளை .. Injunction

| | | |
|---|---|---|
| உரிமைகள் மகாசாசனம் | ... | Magna Carta |
| உரிமையியற் சட்டம் | ... | Civil Law |
| உருபன் | ... | Morpheme |
| உருபொலியன் | ... | Morphophoneme |
| உரைக்கோவை | ... | Symposium |
| உள்ளுணர்வு | ... | Intuition |
| உள இயக்கம் | ... | Psychodynamics |
| உளச்சிதைவு நோய் | ... | Schizophrenia |
| உளநோய் | ... | Psychosis |
| உளம்சார் உயிரியல் | ... | Psychobiology |
| உளமருத்துவம் | ... | Psychotherapy |
| உளமொழியியல் | ... | Psycholinguistics |
| உளவழி ஒற்றுமை | ... | Psychic Unity |
| உளவழித் தோற்றப் படிமலர்ச்சிக் கொள்கை | ... | Psychogenic Evolution |
| உளவழி நரம்புக் கோளாறு | ... | Psychoneurosis |
| உளவியல்சார் இனக்குழுவியல் | ... | Psychoethnography |
| உறவுமுறை | ... | Kinship |
| உறுதிமொழி ஆவணம் | ... | Affidavit |
| உறுப்புவழிபாடு | ... | Organolatry |
| ஊரகத்தன்மை | ... | Ruralism |
| ஊழி | ... | Epoch |
| எச்சதாரர்கள் | ... | Residuaries |
| எஞ்சுநர் உரிமை | ... | Survivorship |
| எடுகோள் | ... | Hypothesis |
| எதிர்ப்படு குழு | ... | Encounter Group |
| எதிர்மறைச் சிக்கல் | ... | Electra Complex |
| ஐயுறு கொள்கை | ... | Skepticism |
| ஒருமைக் கொள்கை | ... | Monism |
| ஒருவழிப் படிமலர்ச்சி | ... | Unilinear Evolution |
| ஒலியன் | ... | Phoneme |
| ஒலியியல் | ... | Phonology |
| ஒற்றை உலோகச் செலாவணி | ... | Monometalism |
| ஓரினமாதல் | ... | Assimilation |
| கண்ணிமையரிப்பு நோய் | ... | Trachoma |
| கருத்துமுதற் கொள்கை | ... | Idealism |
| கலப்புச் சமுதாயம் | ... | Complex Society |

குலக்குறி ... Totem
குலம் ... Clan
குழு ஆட்சி ... Oligarchy
சமநிலைச் சமுதாயக் கொள்கை ... Socialism
சான்றாயர் ... Juror
சூழலியல் ... Ecology
சொற்பொருளியல் ... Semantics
சோர்வு வாதம் ... Pessimism
தகாப்புணர்ச்சி ... Incest
தாராளக் கோட்பாடு ... Liberalism
திரிபுணர்வு ... Delusion
திருச்சபைச் சட்டம் ... Canon Law
தீர்ப்புரிமை மன்றம் ... Tribunal
தீவிரவாதம் ... Radicalism
தூக்கமின்மை நோய் ... Insomnia
தூய்மைவாதி ... Puritan
தொல்லுயிரியல் ... Palaeontology
தொன்மவியல் ... Mythology
தோல் நோய் ... Yaws
நடத்தைக் கொள்கை ... Behaviourism
நரம்புக் கோளாறு ... Neurosis
நிதிக்கொள்கை ... Fiscal Policy
நுண்பொருள் சொத்து ... Incorporeal Property
பண்பாட்டுப்பேறு ... Acculturation
பண்பாடு ... Culture
பணக்கொள்கை ... Monetary Policy
பணவீக்கம் ... Inflation
பருப்பொருள் சொத்து ... Corporeal Property
பலகணவர் மணம் ... Polyandry
பலசகோதரர் கணவர் முறை ... Fraternal Polyandry
பலசகோதரியர் மனைவி முறை ... Sororal Polygyny
பலதுணை மணம் ... Polygamy
பலமனைவி மணம் ... Polygyny
பலவழிப் படிமலர்ச்சி ... Multilinear Evolution
பழங்குடி ... Tribe
பழங்குடித் தன்மை ... Tribalism

| | |
|---|---|
| பனியாற்றுக் காலம் | ... Glacial Period |
| பாதுகாப்புக் கொள்கை | ... Protectionism |
| பிடி ஆணை | ... Warrant |
| பிடிவாதக் கொள்கை | ... Dogmatism |
| புதைபடிவம் | ... Fossil |
| புலன்கடந்த நுண்பொருளியல் | ... Metaphysics |
| புறமணம் | ... Exogamy |
| புனைவுரிமையாளர் | ... Patentee |
| பேரரசுக் கொள்கை | ... Imperialism |
| பேரூழி | .. Era |
| பொதுவுடைமைக் கொள்கை | ... Communism |
| பொருள்சார் பண்பாடு | ... Material Culture |
| பொருள்சாராப் பண்பாடு | ... Non-material Culture |
| பொருள்முதல் வாதம் | ... Materialism |
| மரபு | ... Descent |
| மாற்றுருபுகள் | ... Allomorphs |
| மாறி | ... Variable |
| முடியாட்சி | ... Monarchy |
| முதலாளித்துவம் | ... Capitalism |
| முழுநிலை உளவியல் | ... Gestalt Psychology |
| முழுமைக் கொள்கை | ... Holism |
| முற்றுரிமை | ... Monopoly |
| மூலதனம் | ... Capital |
| வகையியல் | ... Typology |
| விருப்புரிமைக் கொடை | ... Legacy |
| விலக்கு | ... Taboo |
| வெறுப்புக் கொள்கை | ... Cynicism |

## ஆங்கிலம் - தமிழ்

| | |
|---|---|
| Acculturation | ... பண்பாட்டுப் பேறு |
| Affidavit | ... உறுதிமொழி ஆவணம் |
| Allomorphs | ... மாற்றுருபுகள் |
| Anarchism | ... ஆட்சிவேண்டாக் கொள்கை |
| Animism | ... ஆவியுலகக் கோட்பாடு |
| Aristocracy | ... உயர்குடியாட்சி |
| Assimilation | ... ஓரினமாதல் |
| Behaviourism | ... நடத்தைக் கொள்கை |
| Bimetalism | ... இரட்டை உலோகச் செலாவணி |
| Bioculture | ... உயிர்சார் பண்பாடு |
| Brain Drain | ... அறிஞர் புடைபெயர்ச்சி |
| Canon Law | ... திருச்சபைச் சட்டம் |
| Capital | ... மூலதனம் |
| Capitalism | ... முதலாளித்துவம் |
| Cell | ... உயிரணு |
| Civil Law | ... உரிமையியற் சட்டம் |
| Clan | ... குலம் |
| Cognition | ... அறிதிறன் |
| Communism | ... பொதுவுடைமைக் கொள்கை |
| Complex Society | ... கலப்புச் சமுதாயம் |
| Corporeal Property | ... பருப்பொருள் சொத்து |
| Counselling | ... அறிவுரை கூறல் |
| Creativity | ... ஆக்கத்திறன் |
| Culture | ... பண்பாடு |
| Cynicism | ... வெறுப்புக் கொள்கை |
| Delusion | ... திரிபுணர்வு |
| Descent | ... மரபு |
| Dogmatism | ... பிடிவாதக் கொள்கை |
| Ecology | ... சூழலியல் |
| Electra Complex | ... எதிர்மறைச் சிக்கல் |
| Encounter Group | ... எதிர்ப்படு குழு |
| Endogamy | ... அகமணம் |
| Epicureanism | ... இன்பக் கோட்பாடு |
| Epistemology | ... அறிவாராய்ச்சியியல் |
| Epoch | ... ஊழி |

Era ... பேரூழி
Ethics ... அறவியல்
Ethnography ... இனக்குழுவியல்
Exogamy ... புறமணம்
Fiscal Policy ... நிதிக்கொள்கை
Fossil ... புதைபடிவம்
Fricative ... உரசொலி
Gestalt Psychology ... முழுநிலை உளவியல்
Glacial Period ... பனியாற்றுக் காலம்
Hallucination ... இல்பொருள் காட்சி
Holism ... முழுமைக் கொள்கை
Hypothesis ... எடுகோள்
Idealism ... கருத்துமுதற் கொள்கை
Imperialism ... பேரரசுக் கொள்கை
Inbreeding ... உட்குழு மணவுறவு
Incest ... தகாப்புணர்ச்சி
Incorporeal Property ... நுண்பொருள் சொத்து
Inflation ... பணவீக்கம்
Injunction ... உரிமைக்கட்டளை
Insomnia ... தூக்கமின்மை நோய்
Intuition ... உள்ளுணர்வு
Juror ... சான்றாயர்
Kinship ... உறவுமுறை
Legacy ... விருப்புரிமைக் கொடை
Liberalism ... தாராளக் கோட்பாடு
Logic ... அளவையியல்
Magna Carta ... உரிமைகள் மகாசாசனம்
Material Culture ... பொருள்சார் பண்பாடு
Materialism ... பொருள்முதல் வாதம்
Metaphysics ... புலன்கடந்த நுண்பொருளியல்
Monarchy ... முடியாட்சி
Monetary Policy ... பணக்கொள்கை
Monism ... ஒருமைக் கொள்கை
Monometalism ... ஒற்றை உலோகச் செலாவணி
Monopoly ... முற்றுரிமை
Morpheme ... உருபன்
Morphophoneme ... உருபொலியன்

| | | |
|---|---|---|
| Multilinear Evolution | ... | பலவழிப் படிமலர்ச்சி |
| Mythology | ... | தொன்மவியல் |
| Neurosis | ... | நரம்புக்கோளாறு |
| Non-material Culture | ... | பொருள்சாராப் பண்பாடு |
| Oligarchy | ... | குழு ஆட்சி |
| Organism | ... | உயிரி |
| Organolatry | ... | உறுப்பு வழிபாடு |
| Palaeontology | ... | தொல்லுயிரியல் |
| Patentee | ... | புனைவுரிமையாளர் |
| Personality | ... | ஆளுமை |
| Pessimism | ... | சோர்வு வாதம் |
| Phoneme | ... | ஒலியன் |
| Phonology | ... | ஒலியியல் |
| Physiology | ... | உடலியங்கியல் |
| Polyandry | ... | பலகணவர் மணம் |
| Polyandry, fraternal | ... | பலசகோதரர் கணவர் முறை |
| Polygamy | ... | பலதுணை மணம் |
| Polygyny | ... | பலமனைவி மணம் |
| Polygyny, sororal | ... | பல சகோதரியர் மனைவி முறை |
| Protectionism | ... | பாதுகாப்புக் கொள்கை |
| Psychic unity | ... | உளவழி ஒற்றுமை |
| Psychobiology | ... | உள்சார் உயிரியல் |
| Psychodynamics | ... | உள இயக்கம் |
| Psychoethnography | ... | உளவியல்சார் இனக்குழுவியல் |
| Psychogenic Evolution | ... | உளவழித்தோற்றப் படிமலர்ச்சிக்கொள்கை |
| Psycholinguistics | ... | உளமொழியியல் |
| Psychoneurosis | ... | உளவழி நரம்புக் கோளாறு |
| Psychosis | ... | உளநோய் |
| Psychotherapy | ... | உளமருத்துவம் |
| Puritan | ... | தூய்மைவாதி |
| Race | ... | இனம் |
| Radicalism | ... | தீவிரவாதம் |
| Rationalism | ... | அறிவு முதற்கொள்கை |
| Residuaries | ... | எச்சதாரர்கள் |
| Ruralism | ... | ஊரகத்தன்மை |
| Schizophrenia | ... | உளச்சிதைவு நோய் |

| | | |
|---|---|---|
| Semantics | ... | சொற்பொருளியல் |
| Skepticism | ... | ஐயுறுகொள்கை |
| Socialism | ... | சமநிலைச் சமுதாயக் கொள்கை |
| Sovereignty | ... | இறைமை |
| Stoicism | ... | இன்பதுன்பச் சமநோக்குக் கோட்பாடு |
| Subculture | ... | உட்பண்பாடு |
| Subjective Approach | ... | அகவியல் அணுகுமுறை |
| Supply | ... | அளிப்பு |
| Survivorship | ... | எஞ்சுநர் உரிமை |
| Symposium | ... | உரைக்கோவை |
| Taboo | ... | விலக்கு |
| Teleology | ... | இயல்திட்டவாதம் |
| Totem | ... | குலக்குறி |
| Trachoma | ... | கண்ணிமையரிப்பு நோய் |
| Transcendentalism | ... | ஆழ்நிலைக் கொள்கை |
| Tribalism | ... | பழங்குடித் தன்மை |
| Tribe | ... | பழங்குடி |
| Tribunal | ... | தீர்ப்புரிமை மன்றம் |
| Typology | ... | வகையியல் |
| Unilinear Evolution | ... | ஒருவழிப்படிமலர்ச்சி |
| Variable | ... | மாறி |
| Warrant | ... | பிடி ஆணை |
| Yaws | ... | தோல் நோய் |

தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.
தமிழ்நாடு
அச்சகம்